திருமுறை

VALLUVAR VALLALAR VATTAM



பன்னிருதிருமுறை

திருஞானசம்பந்தர்

முதலாம் திருமுறை - திருக்கடைக்காப்பு

தொகுப்பு: சங்கர்

சித்திரை 2017 வெளியீடு

பன்னிருதிருமுறை

முதலாம் திருமுறை - திருக்கடைக்காப்பு

திருஞானசம்பந்தர் அருளியது

1469 பாடல்கள் கொண்ட 136 பதிகங்கள்



பன்னிருதிருமுறை

திருஞானசம்பந்தர்

முதலாம் திருமுறை - திருக்கடைக்காப்பு

தொகுப்பு: சங்கர்

சித்திரை 2017 வெளியீடு

திருப்பிரமபுரம்

சீர்காழி

திருப்பிரமபுரம் ,
பண் - நட்டபாடை திருப்பிரமபுர மென்பது சீர்காழி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

தோடுடையசெவியன் விடையேறியோர்
தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென்
னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந்
தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. #1 ★★★★★

தோடணிந்த திருச்செவியை உடைய உமையம்மையை இடப்பாகத்தே உடையவனாய், விடை மீது ஏறி, ஒப்பற்ற தூய வெண்மையான பிறையை முடிமிசைச் சூடி, சுடுகாட்டில் விளைந்த சாம்பற் பொடியை உடல் முழுதும் பூசி வந்து என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன், இதழ்களை உடைய தாமரை மலரில் விளங்கும் நான்முகன், படைத்தல் தொழில் வேண்டி முன்னை நாளில் வழிபட அவனுக்கு அருள்புரிந்த பெருமை மிக்க பிரமபுரத்தில் எழுந்தருளியுள்ள பெருமானாகிய இவன் அல்லனோ!

My Notes

இதை திருக்குறள் உடன் ஒப்பிட்டு நோக்கவும்.

சீர்காழி

முற்றலாமையிள நாகமோடேன
முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென
துள்ளங்கவர்கள்வன்கற்றல்
கேட்டலுடை யார்பெரியார்கழல்
கையால் தொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. #2

வயது முதிர்ந்த ஆமையினது ஓட்டினையும், இளமையான நாகத்தையும், பன்றியினது முளை போன்ற பல்லையும் கோத்து மாலையாக அணிந்து, தசை வற்றிய பிரம கபாலத்தில் உண்பொருள் கேட்டு வந்து என் உள்ளம் கவர்ந்த கள்வன், கல்வி கேள்விகளிற் சிறந்த பெரியோர்கள் தன் திருவடிகளைக் கைகளால்தொழுது ஏத்த அவர்கட்கு அருளும் நிலையில் விடைமீது காட்சி வழங்கும் பிரமபுரத்தில் விளங்கும் பெருமானாகிய இவனல்லனோ!

<u>சீர்காழி</u>

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர்
நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரவென்
னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய
வோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. **#3**

கங்கை நீர் நிரம்பி நிமிர்ந்த சிவந்த சடைமுடி மீது ஒரு கலையை உடைய நிலவைப் பொழியும் வெள்ளிய பிறைமதியைச் சூடி வந்து விரகமூட்டிக் கைகளில் அணிந்துள்ள ஓரினமான சங்கு வளையல்கள் கழன்று விழுமாறு செய்து, என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன், மகாப்பிரளய காலத்தில் ஊர்கள் மிக்க இவ்வுலகில் அழியாது நிலை பெற்ற ஒப்பற்ற ஊர் இது என்ற புகழைப் பெற்ற பிரமபுரம் மேவிய பெருமானாகிய இவனல்லனோ!

<u>சீர்காழி</u>

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி
விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென
துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவர வம்மலர்க்கொன்றை
மலிந்தவரைமார்பில்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. **#4**

வானவெளியில் மகிழ்ச்சிச் செருக்கோடு பறந்து திரிந்த மும்மதில்களையும் கணையொன்றினால் எய்து அழித்ததுமல்லாமல், விளங்கிய பிரமகபாலமாகிய தலையோட்டில் மனமகிழ்வோடு பலியேற்க வந்து எனது உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் புற்றிடையே

வாழும் பாம்பு, கொன்றை மலர் ஆகியவற்றால் நிறைந்தவரை போன்ற மார்பின் இடப்பாகத்தே உமையம்மையை மகிழ்வுடன் கொண்டருளியவனாய்ப் பிரமபுரத்தில் எழுந்தருளிய பெருமானாகிய இவன் அல்லனோ!

சீர்காழி

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை
யூரும்மிவனென்ன
அருமையாகவுரை செய்யவமர்ந்தென
துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததொர்
காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. **#5**

ஒரு திருமேனியிலேயே உமையம்மைக்கு இடப்பாகத்தை அளித்தவன் என்றும், சடைமுடியை உடையவன் என்றும், விடையை ஊர்ந்து வருபவன் என்றும் அவனது அழகைத் தோழியர் கூற அவ்வுரைப் படியே வந்து எனது உள்ளத்தைக் கவர்ந்த கள்வன், சர்வசங்கார காலத்தில் கரிய கடல் பொங்கி வந்து உலகைக் கொண்டபோது தோணிபுரமாய் மிதந்த பெருமை பெற்ற பிரமபுரத்தில் மேவிய பெருமானாகிய இவன் அல்லனோ.

சீர்காழி

மறைகலந்தவொலி பாடலோடாடல
ராகிமழுவேந்தி
இறைகலந்தவின வெள்வளைசோரவென்
னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர்
சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. **#6**

ஒலி வடிவினதான வேதத்தைப் பாடிக் கொண்டும், ஆடிக் கொண்டும், மழுவாயுதத்தைக் கையில் ஏந்திக் கொண்டும் வந்து எனது முன் கையில் உள்ள ஓரினமான வெள்ளிய வளையல்கள் கழன்று விழ என்னை மெலிவித்து உள்ளத்தைக் கவர்ந்த கள்வன், இருள் செறிந்த, மணமுடைய பொழில்களிடத்தும் நீண்டு வளர்ந்த மரங்களை உடைய சோலைகளிடத்தும் நிலவைப் பொழியும் பிறையைச் சூடியவனாய்ப் பிரமபுரத்தில் மேவிய பெருமானாகிய இவன் அல்லனோ!

<u>சீர்காழி</u>

சடைமுயங்குபுன லன்அனலன்னெரி
வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்குமர வோடுழிதந்தென
துள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழி சூழ்குளிர்கானலம்
பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. #7

சடையில் கலந்த கங்கையை உடையவனும், திருக்கரத்தில் அனலைஉடையவனும், ஆடையின் மேல் இறுகக் கட்டிய பாம்பினனுமாய் எரிவீசி நடனமாடித் திரிந்து வந்து என் உள்ளம் கவர்ந்த கள்வன், கடலைத் தழுவிய உப்பங்கழிகளால் சூழப் பெற்றதும், குளிர்ந்த கடற்கரைச் சோலைகளையுடையதும், தம்முடைய பெடைகளை முயங்கித் திரியும் அழகிய சிறகுகளோடு கூடிய அன்னங்களை உடையதும், ஆகிய பிரமபுரத்தில் மேவிய பெருமானாகிய இவன் அல்லனோ!

<u>சீர்காழி</u>

வியரிலங்குவரை யுந்தியதோள்களை
வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென
துள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்முல கிற்பலவூழிகள்
தோன்றும் பொழுதெல்லாம்1
பெயரிலங்குபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. #8

கயிலை மலையைப் பெயர்த்துத் தனது பெருவீரத்தை வெளிப்படுத்திய புகழால் உயர்ந்த இலங்கை மன்னன் இராவணனின் வியர்வை தோன்றும் மலை போன்ற தோள்களின் வலிமையை அழித்த எனது உள்ளம்கவர் கள்வன், துயர் விளங்கும் இவ்வுலகில் பல ஊழிகள் தோன்றும் பொழுதெல்லாம் அழியாது தன் பெயர் விளங்கும் பிரமபுரம் மேவிய பெருமானாகிய இவன் அல்லனோ!

<u>சீர்காழி</u>

தாணுதல்செய்திறை காணியமாலொடு
தண்டாமரையானும்

நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென
துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளீர்முதலாகிய
வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. **#9**

திருமாலும், தாமரை மலரில் எழுந்தருளியிருக்கும் நான்முகனும், தனது தாளையும் முடியையும் சிறிதே காணுதற் பொருட்டுப் பன்றியாயும் அன்னமாயும் தேடிச் செயலற, அண்ணாமலையாய் நிமிர்ந்தவனாய், என் உள்ளம் கவர் கள்வனாய் விளங்குபவன், ஒளி பொருந்திய நுதலையும் சிவந்த நிறத்தையும் உடைய மகளிர் முதலாக உலகோர் அனைவரும் துதிக்க விரும்புதலைச் செய்யும் பிரமபுரம் மேவிய பெருமானாகிய இவன் அல்லனோ!

<u>சீர்காழி</u>

புத்தரோடுபொறி யில்சமணும்புறங்
கூறநெறிநில்லா
ஒத்தசொல்லவுல கம்பலிதேர்ந்தென
துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர்
மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. **#10**

புண்ணியம் இன்மையால் புத்தர்களும் அறிவற்ற சமணர்களும் சைவத்தைப் புறங்கூறச் சான்றோர் வகுத்த நெறியில் நில்லாது, தமக்கு ஏற்புடையவாகத் தோன்றிய பிழைபட்ட கருத்துக்களைச் சொல்லித் திரிய, உலகனைத்தும் சென்று பலி தேர்ந்து எனது உள்ளத்தைக் கவர்ந்த கள்வன், மதயானையை மருளுமாறு செய்து அதன் தோலை உரித்துப் போர்த்தது ஒரு மாயமான செயல் என்னுமாறு செய்து, பித்தனாய் விளங்கும் பிரமபுரம் மேவிய பெருமானாகிய இவன் அல்லனோ!

<u>சீர்காழி</u>

அருநெறியமறை வல்லமுனியகன்
பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய
பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம்
பந்தன்னுரைசெய்த

திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை
தீர்தல்எளிதாமே. #11
அருமையான நெறிகளை உலகிற்கு வழங்கும் வேதங்களில் வல்ல பிரமனால் படைக்கப்பட்டதும், அகன்ற மலர் வாவியில் தாமரைகளையுடையதும் ஆகிய பிரமபுரத்துள் மேவிய முத்தி நெறி சேர்க்கும் முதல்வனை, ஒருமைப்பாடு உடைய மனத்தைப் பிரியாதே பதித்து உணரும் ஞானசம்பந்தன் போற்றி உரைத்தருளிய திருநெறியாகிய அருநெறியை உடைய தமிழாம் இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர்களின் பழவினைகள் தீர்தல் எளிதாகும். ஊழ்வினை தீர்வதற்குரிய மார்க்கங்கள் பல இருப்பினும், இத்திருப்பதிகத்தை ஓதுதலே எளிமை வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

திருப்புகலூர்

திருப்புகலூர்

திருப்புகலூர்,
பண் - நட்டபாடை, காவிரி தென்கரைத் தலம், சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அக்கினீசுவரர்.
தேவியார் : கருந்தார்க்குழலியம்மை.

குறிகலந்தவிசை பாடலினான்நசை
யாலிவ்வுலகெல்லாம்
நெறிகலந்ததொரு நீர்மையனாயெரு
தேறிப்பலிபேணி
முறிகலந்ததொரு தோலரைமேலுடை
யானிடமொய்ம்மலரின்
பொறிகலந்தபொழில் சூழ்ந்தயலேபுய
லாரும்புகலூரே. **#12**

சுரத்தானங்களைக் குறிக்கும் இசையமைதியோடு கூடிய பாடல்களைப் பாடுபவன். உயிர்கள் மீது கொண்ட பெருவிருப்பால் இவ்வுலகம் முழுவதும் வாழும் அவ்வுயிர்கள் தம்மை உணரும் நெறிகளை வகுத்து அவற்றுள் கலந்து நிற்பவன். எருதின்மிசை ஏறி வந்து மக்கள் இடும்பிச்சையை விரும்பி ஏற்பவன். இடையில் மான் தோலாடையை உடுத்துபவன். அவன் விரும்பி உறையும் இடம் செறிந்த மலர்கள்மீது புள்ளிகளை உடைய வண்டுகள் மொய்த்துத் தேனுண்ணும் வானளாவிய பொழில் சூழ்ந்த புகலூராகும்.

திருப்புகலூர்

காதிலங்குகுழை யன்னிழைசேர்திரு
மார்பனனொருபாகம்
மாதிலங்குதிரு மேனியினான்கரு
மானின்னுரியாடை
மீதிலங்கவணிந் தானிமையோர்தொழ
மேவும்மிடஞ்சோலைப்
போதிலங்குநசை யால்வரிவண்டிசை
பாடும்புகலூரே. **#13**

காதில் விளங்கும் குழையை அணிந்தவன். பூணூல் அணிந்த அழகிய மார்பினன். இடப்பாகமாக உமையம்மை விளங்கும் திருமேனியன். யானையினது தோலை உரித்து மேல் ஆடையாக அணிந்தவன். அத்தகையோன் இமையவர் தொழமேவும் இடம், சோலைகளில்

தேனுண்ணும் விருப்பினால் வரிவண்டுகள் இசைபாடும் புகலூராகும்.

திருப்புகலூர்

பண்ணிலாவும்மறை பாடலினான்இறை
சேரும்வளையங்கைப்
பெண்ணிலாவவுடை யான்பெரியார்கழல்
என்றுந்தொழுதேத்த
உண்ணிலாவியவர் சிந்தையுள்நீங்கா
வொருவன்னிடமென்பர்
மண்ணிலாவும்மடி யார்குடிமைத்தொழின்
மல்கும்புகலூரே. **#14**

இசையமைதி விளங்கும் வேத கீதங்களைப் பாடுபவன் - முன்கைகளில் வளையல்கள் விளங்கும் அழகிய கைகளை உடைய உமையம்மையைத் தனது தேவியாக உடையவன். தன் திருவடிகளை என்றும் தொழுது ஏத்தும் பெரியவர்களின் உள்ளத்தே விளங்குவதோடு அவர்களின் அடிமனத்தில் என்றும் நீங்காதிருப்பவன். அத்தகையோன் விரும்பி உறையுமிடம் நிலவுலகில் வாழும் அடியவர்கள் குடும்பத்துடன் வந்து பணி செய்யும் புகலூராகும்.

திருப்புகலூர்

நீரின்மல்குசடை யன்விடையன்அடை
யார்தம்மரண்மூன்றுஞ்
சீரின்மல்குமலை யேசிலையாகமு
னிந்தானுலகுய்யக்
காரின்மல்குகடல் நஞ்சமதுண்ட
கடவுள்ளிடமென்பர்
ஊரின்மல்கிவளர் செம்மையினாலுயர்
வெய்தும்புகலூரே. **#15**

கங்கை நீரால் நிறைவுற்ற சடைமுடியை உடையவன். விடையூர்தியன். முப்புரங்களையும் சிறப்புமிக்க மேருமலையை வில்லாகக் கொண்டு முனிந்தவன். உலக உயிர்கள் உய்யக் கருநிறமுடைய கடலிடையே தோன்றிய நஞ்சை அமுதமாக உண்ட கடவுள். அத்தகையோன் விரும்பி உறையுமிடம் ஒழுக்கத்தால் உயர்ந்த மக்கள் வாழ்ந்து சிறப்பெய்தும் புகலூராகும்.

திருப்புகலூர்

செய்யமேனிவெளி யபொடிப்பூசுவர்
சேரும்மடியார்மேல்

பையநின்றவினை பாற்றுவர்போற்றிசைத்
தென்றும்பணிவாரை
மெய்யநின்றபெரு மானுறையும்மிட
மென்பரருள்பேணிப்
பொய்யிலாதமனத் தார்பிரியாது
பொருந்தும்புகலூரே. #16

சிவந்த திருமேனியில் வெண்ணிறமான திருநீற்றைப் பூசுபவர். தம்மை வந்தடையும் அடியவர்களைத் தாக்க வரும் வினைகளை நீக்குபவர். என்றும் தம்மைப் பாடிப் பணிவார்க்கு உண்மையானவர். அவர் விரும்பி உறையும் இடம், அருளையே விரும்பிப் பொய்யில்லாத மனத்தவர் நீங்காது வாழும் புகலூர் என்பர்.

<u>திருப்புகலூர்</u>

கழலினோசைசிலம் பின்னொலியோசை
கலிக்கப்பயில்கானில்
குழலினோசைகுறட் பாரிடம்போற்றக்
குனித்தாரிடமென்பர்
விழவினோசையடி யார்மிடைவுற்று
விரும்பிப்பொலிந்தெங்கும்
முழவினோசைமுந் நீரயர்வெய்த
முழங்கும்புகலூரே. #17

இரண்டு திருவடிகளிலும், விளங்கும் வீரக் கழல் சிலம்பு ஆகியன ஒலிக்கவும், குழல் முதலிய இசைக்கருவிகள் முழங்கவும், குள்ளமான பூதகணங்கள் போற்றவும், பலகாலும் பழகிய இடமாக இடுகாட்டில் முற்றழிப்பு நடனம் புரியும் இறைவனுடைய இடம், திருவிழாக்களின் ஓசையும், அடியவர் மனமகிழ்வோடு எங்கும் முழக்கும் முழவோசையும் கடலோசையைத் தளரச் செய்யும் ஒலியைத் தரும் புகலூர் என்பர்.

<u>திருப்புகலூர்</u>

வெள்ளமார்ந்துமிளிர் செஞ்சடைதன்மேல்
விளங்கும்மதிசூடி
உள்ளமார்ந்தவடி யார்தொழுதேத்த
வுகக்கும்அருள்தந்தெம்
கள்ளமார்ந்துகழி யப்பழிதீர்த்த
கடவுள்ளிடமென்பர்
புள்ளையார்ந்தவய லின்விளைவால்வளம்
மல்கும்புகலூரே. #18

கங்கைநீர் அடங்கி விளங்கும் செஞ்சடைமேல் விளக்கமான

பிறைமதியைச் சூடி, தம்மிடம் மனம் ஒன்றிய அடியவர் தொழுது ஏத்த அவர்கள் மனம் மகிழும் அருளைப் புரிந்து என்னைப் பற்றிய வினையையும் பழியையும் தீர்த்தருளிய கடவுள் உறையும் இடம், மீன் கொத்தி முதலிய பறவை இனங்கள் மீன்களைக் கவர வந்து தங்கும் வயல்களின் விளைவால் வளம் மல்கிய புகலூராகும்.

திருப்புகலூர்

தென்னிலங்கையரை யன்வரைபற்றி
யெடுத்தான்முடிதிண்டோள்
தன்னிலங்குவிர லால்நெரிவித்திசை
கேட்டன்றருள்செய்த
மின்னிலங்குசடை யான்மடமாதொடு
மேவும்மிடமென்பர்
பொன்னிலங்குமணி மாளிகைமேல்மதி
தோயும்புகலூரே. **#19**

அழகிய இலங்கை அரசனாகிய இராவணன் கயிலை மலையை இரு கரங்களாலும் பற்றி எடுத்தபோது அவனுடைய தலைகள், திண்ணிய தோள்கள் ஆகியவற்றைத் தன் கால் விரலால் நெரித்துப் பின் அவன் சாமகானம் பாடக்கேட்டு அன்று அவனுக்கு அருள் செய்தவனாகிய தாழ்ந்த சடைமுடி உடைய பெருமான் தன் தேவியோடு மேவும் இடம், மதி தோயும் அழகிய மாளிகைகள் நிறைந்த புகலூராகும்.

திருப்புகலூர்

நாகம்வைத்தமுடி யானடிகைதொழு
தேத்தும்மடியார்கள்
ஆகம்வைத்தபெரு மான்பிரமன்னொடு
மாலுந்தொழுதேத்த
ஏகம்வைத்தவெரி யாய்மிகவோங்கிய
எம்மானிடம்போலும்
போகம்வைத்தபொழி லின்னிழலான்மது
வாரும்புகலூரே. **#20**

பாம்பை முடிமிசை வைத்துள்ளவனும், தன் திருவடிகளைப் போற்றும் அடியார்கள், தம் மனத்தின்கண் வைத்துப் போற்றும் தலைவனும், பிரமனும், திருமாலும் தொழுதேத்த ஏகனாய் எரி வடிவில் மிக ஓங்கிய எம்மானுமாகிய இறைவனுக்கு மிக உகந்த இடம், பல்வகைப் பயன்களையும் தருவதோடு நிழலாற் சிறந்ததாய்த் தேன் நிறைந்து விளங்கும் பொழில் சூழ்ந்த புகலூராகும்.

திருப்புகலூர்

செய்தவத்தர்மிகு தேரர்கள்சாக்கியர்
செப்பிற்பொருளல்லாக்
கைதவத்தர்மொழி யைத்தவிர்வார்கள்
கடவுள்ளிடம்போலும்
கொய்துபத்தர்மல ரும்புனலுங்கொடு
தூவித்துதிசெய்து
மெய்தவத்தின்முயல் வாருயர்வானக
மெய்தும்புகலூரே. **#21**

எண்ணிக்கையில் மிக்கதேரர், சாக்கியர் சமணர்கள் ஆகியவர்களின் உண்மையல்லாத வஞ்சகம் நிறைந்த மொழிகளைக் கேளாதவராய், மிகுதியான தவத்தைச் செய்யும் மெய்யடியார் களின் தலைவராகிய சிவபிரானுக்கு மிக உகந்த இடம், அடியவர்கள் மலர் கொய்து வந்து தூவிப் புனலாட்டித் துதி செய்து தவநெறியில் முயன்று உயர் வானகத்தை எய்துதற்குரிய வழிபாடுகளை ஆற்றும் புகலூராகும்.

திருப்புகலூர்

புற்றில்வாழும்அர வம்மரையார்த்தவன்
மேவும்புகலூரைக்
கற்றுநல்லவவர் காழியுண்ஞானசம்
பந்தன்றமிழ்மாலை
பற்றியென்றும்இசை பாடியமாந்தர்
பரமன்னடிசேர்ந்து
குற்றமின்றிக்குறை பாடொழியாப்புக
ழோங்கிப் பொலிவாரே. **#22**

புற்றில் வாழும் பாம்புகளை இடையிலே கட்டியவனாகிய சிவபிரான் எழுந்தருளிய புகலூர்மீது இறைவனது பொருள் சேர் புகழைக் கற்று வல்லவர்கள் வாழும் சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் பாடிய தமிழ்மாலையாகிய இத்திருப்பதிகத்தை, என்றும் இசையோடு பாடி வழிபடும் மாந்தர்கள் இறைவன் திருவடி நீழலை அடைந்து குற்றம் குறைபாடு அகன்று புகழோங்கிப் பொலிவெய்துவார்கள்.

திருவலிதாயம்

திருவலிதாயம்

திருவலிதாயம்,
பண் - நட்டபாடை,
இத்தலம் தொண்டைநாட்டில் பாடியென வழங்கப்பட்டிருக்கின்றது. ,
சுவாமிபெயர் : வலிதாயநாதர்.
தேவியார் : தாயம்மை.

பத்தரோடுபல ரும்பொலியம்மலர்
அங்கைப்புனல்தூவி
ஒத்தசொல்லியுல கத்தவர்தாந்தொழு
தேத்தவுயர்சென்னி
மத்தம்வைத்தபெரு மான்பிரியாதுறை
கின்றவலிதாயம்
சித்தம்வைத்தவடி யாரவர்மேலடை
யாமற்றிடர்நோயே. **#23**

வலிதாயம் சித்தம் வைத்த அடியார்களை இடர் நோய் அடையா என வினை முடிபு கொள்க. சிவனடியார்கள், விளங்குகின்ற அழகிய மலர்களை அகங் கையில் ஏந்தி மந்திரத்தோடு நீர் வார்த்துப் பூசிக்க அவர்களோடு ஒரே இசையில் அம்மந்திரங்களைச் சொல்லி உலக மக்கள் தாமும் வெளிநின்று தொழுதேத்துமாறு ஊமத்தை மலரை முடிமிசைச் சூடிய பெருமான் பிரியாதுறையும் வலிதாயம் என்ற தலத்தைத் தம் சித்தத்தில் வைத்துள்ள அடியவர்கள் மேல் துன்பங்களோ நோய்களோ வந்தடைய மாட்டா.

திருவலிதாயம்

படையிலங்குகர மெட்டுடையான்படி
றாகக்கலனேந்திக்
கடையிலங்குமனை யிற்பலிகொண்டுணுங்
கள்வன்னுறைகோயில்
மடையிலங்குபொழி லின்னிழல்வாய்மது
வீசும்வலிதாயம்
அடையநின்றவடி யார்க்கடையாவினை
யல்லற்றுயர்தானே. **#24**

படைக் கலங்களை ஏந்திய எட்டுத் திருக்கரங்களை உடைய பெருமானும், பொய்யாகப் பலியேற்பது போலப் பிரம கபாலத்தைக் கையில் ஏந்தி வீடுகளின் வாயில்களிற் சென்று பலியேற்றுண்ணும்

கள்வனும் ஆகிய பெருமான் உறையும் கோயிலை உடையதும், நீர்வரும் வழிகள் அடுத்துள்ள பொழில்களின் நீழலில் தேன்மணம் கமழ்வதுமாகிய வலிதாயத்தை அடைய எண்ணும் அடியவர்களை வினை அல்லல் துயர் ஆகியன வந்தடைய மாட்டா.

திருவலிதாயம்

ஐயன்நொய்யன்னணி யன்பிணியில்லவ
ரென்றுந்தொழுதேத்தச்
செய்யன்வெய்யபடை யேந்தவல்லான்றிரு
மாதோடுறைகோயில்
வையம்வந்துபணி யப்பிணிதீர்த்துயர்
கின்றவலிதாயம்
உய்யும்வண்ணந்நினை மின்நினைந்தால்வினை
தீரும்நலமாமே. **#25**

வலிதாயத்தை உய்யும் வண்ணம் நினைமின்; நினைந்தால் பிணி தீரும், இன்பம் ஆம் என வினை முடிபு கொள்க. அழகன், நுண்ணியன், அருகிலிருப்பவன், செந்நிறமேனியன், நெடிய மழுவை ஏந்தும் ஆற்றலன். அவன் பாசங்கள் நீங்கிய அடியவர் எக்காலத்தும் வணங்கித் துதிக்குமாறு உமையம்மையோடு உறையும் கோயில் உலக மக்கள் அனைவரும் வந்து பணிய அவர்களின் பிணிகளைத் தீர்த்து உயரும் திருவலிதாயம் என்ற அத்தலத்தை நீர் உய்யும்வண்ணம் நினையுங்கள். நினைந்தால் வினைகள் தீரும். நலங்கள் உண்டாகும்.

திருவலிதாயம்

ஒற்றையேறதுடை யான்நடமாடியோர்
பூதப்படைசூழப்
புற்றினாகமரை யார்த்துழல்கின்றவெம்
பெம்மான்மடவாளோ
டுற்றகோயிலுல கத்தொளிமல்கிட
வுள்கும்வலிதாயம்
பற்றிவாழும்மது வேசரணாவது
பாடும்மடியார்க்கே. **#26**

அடியவர்க்கு வலிதாயத்தைப் பற்றி வாழ்வதே சரண் என முடிபு காண்க. ஒற்றை விடையை உடையவன். சிறந்த பூதப்படைகள் சூழ்ந்துவர, புற்றில் வாழும் நாகங்களை இடையில் கட்டி நடனமாடி, உழலும் எம்பெருமான், உமையம்மையோடு உறையும் கோயில் உலகின்கண் ஒளி நிலைபெற்று வாழப் பலரும் நினைந்து போற்றும் வலிதாயமாகும். அடியவர்கட்கு அத்தலத்தைப் பற்றி வாழ்வதே அரணாம்.

திருவலிதாயம்

புந்தியொன்றிநினை வார்வினையாயின
தீரப்பொருளாய
அந்தியன்னதொரு பேரொளியானமர்
கோயிலயலெங்கும்
மந்திவந்துகடு வன்னொடுங்கூடி
வணங்கும் வலிதாயஞ்
சிந்தியாதவவர் தம்மடும்வெந்துயர்
தீர்தலெளதன்றே. **#27**

வலிதாயம் கோயிலைச் சிந்தியாதவர் துயர் தீர்தல் எளிதன்று என முடிபு கொள்க. மனம் ஒன்றி நினைபவர் வினைகளைத் தீர்த்து அவர்க்குத் தியானப் பொருளாய்ச் செவ்வான் அன்ன பேரொளியோடு காட்சி தரும் இறைவன் எழுந்தருளியுள்ள கோயிலாய் அயலில் மந்தி ஆண்குரங்கோடு கூடி வந்து வணங்கும் சிறப்பை உடைய திருவலிதாயத்தைச் சிந்தியாத அவர்களைத் தாக்கும் கொடிய துன்பம், தீர்தல் எளிதன்று.

திருவலிதாயம்

ஊனியன்றதலை யிற்பலிகொண்டுல
கத்துள்ளவரேத்தக்
கானியன்றகரி யின்னுரிபோர்த்துழல்
கள்வன்சடைதன்மேல்
வானியன்றபிறை வைத்தவெம்மாதி
மகிழும்வலிதாயந்
தேனியன்றநறு மாமலர்கொண்டுநின்
றேத்தத்தெளவாமே. **#28**

வலிதாயத்திறைவனை நறுமாமலர் கொண்டு நின்றேத்தத் தெளவு ஆம் என வினை முடிபு கொள்க. ஊன் கழிந்த பிரமகபாலத்தில் பலி ஏற்று உலகத்தவர் பலரும் ஏத்தக்காட்டில் திரியும் களிற்றுயானையின் தோலை உரித்துப் போர்த்துத் திரியும் கள்வனும், சடையின்மேல் வானகத்துப் பிறைக்கு அடைக்கலம் அளித்துச் சூடிய எம் முதல்வனும் ஆகிய பெருமான், மகிழ்ந்துறையும் திருவலி தாயத்தைத் தேன் நிறைந்த நறுமலர் கொண்டு நின்று ஏத்தச் சிவஞானம் விளையும்.

திருவலிதாயம்

கண்ணிறைந்தவிழி யின்னழலால்வரு
காமன்னுயிர்வீட்டிப்

பெண்ணிறைந்தவொரு பான்மகிழ்வெய்திய
பெம்மானுறைகோயில்
மண்ணிறைந்தபுகழ் கொண்டடியார்கள்
வணங்கும்வலிதாயத்
துண்ணிறைந்தபெரு மான்கழலேத்தநம்
முண்மைக்கதியாமே. **#29**

வலிதாய நாதன் கழலை ஏத்தினால் வீட்டின்பத்தை அடையலாம் என வினை முடிபு காண்க. நெற்றி விழியின் அழலால், தேவர் ஏவலால் வந்த காமனது உயிரை அழித்துத் தனது திருமேனியின் பெண்ணிறைந்த இடப் பாகத்தால் மகிழ்வெய்திய பெருமான் உறை கோயிலாய் நிலவுல கெங்கும் நிறைந்த புகழைக்கொண்ட, அடியவர்கள் வணங்கும் திருவலிதாயத்துள் நிறைந்து நிற்கும் பெருமான் திருவடிகளை வணங்கினால் வீடு பேறு அடையலாம்.

திருவலிதாயம்

கடலினஞ்சமமு துண்டிமையோர்தொழு
தேத்தநடமாடி
அடலிலங்கையரை யன்வலிசெற்றருள்
அம்மான்அமர்கோயில்
மடலிலங்குகமு கின்பலவின்மது
விம்மும்வலிதாயம்
உடலிலங்குமுயி ருள்ளளவுந்தொழ
வுள்ளத்துயர்போமே. **#30**

உடலில் உயிர் உள்ள அளவும் தொழுவாரது மனத்துயரம் கெடும் என வினை முடிபு காண்க. திருப்பாற்கடலைக் கடைந்த போது எழுந்த நஞ்சினை அமுதமாக உண்டு தேவர்கள் தொழுது வாழ்த்த நடனம் ஆடி, வலிமை மிக்க இலங்கை மன்னனின் ஆற்றலை அழித்துப் பின் அவனுக்கு நல்லருள் புரிந்த இறைவன் எழுந்தருளிய கோயிலை உடையதும், மடல்கள் விளங்கும் கமுகு பலாமரம் ஆகியவற்றின் தேன் மிகுந்து காணப்படுவதுமாகிய திருவலிதாயத் தலத்தை நினைக்க மனத்துயர் கெடும்.

திருவலிதாயம்

பெரியமேருவரை யேசிலையாமலை
வுற்றாரெயின்மூன்றும்
எரியவெய்தவொரு வன்னிருவர்க்கறி
வொண்ணாவடிவாகும்
எரியதாகியுற வோங்கியவன்வலி

தாயந்தொழுதேத்த
உரியராகவுடை யார்பெரியாரென
வுள்கும்முலகோரே. **#31**

வலிதாயத்தை வணங்குவாரைப் பெரியார் என உலகோர் உள்குவர் என முடிபு காண்க. தேவர்களோடு மாறுபட்ட திரிபுர அசுரர்களின் கோட்டைகள் மூன்றையும், மிகப் பெரிய மேருமலையை வில்லாகக் கொண்டு எரியும்படி அழித்த ஒருவனும், திருமால் பிரமன் ஆகிய இருவராலும் அறிய ஒண்ணாத அழல் வடிவாய் உயர்ந்தோங்கியவனும் ஆகிய சிவபிரானது திருவலிதாயத்தைத் தொழுது ஏத்தலைத் தமக்குரிய கடமையாகக் கொண்ட உலக மக்கள் பலரும் பெரியார் என நினைந்து போற்றப்படுவர்.

திருவலிதாயம்

ஆசியாரமொழி யாரமண்சாக்கிய
ரல்லாதவர்கூடி
ஏசியீரமில ராய்மொழிசெய்தவர்
சொல்லைப்பொருளென்னேல்
வாசிதீரவடி யார்க்கருள்செய்து
வளர்ந்தான்வலிதாயம்
பேசுமார்வமுடை யாரடியாரெனப்
பேணும்பெரியோரே. **#32**

வலிதாயத்தின் புகழைப் பேசுபவர்க்கு யாம் அடியர் எனப் பெரியோர்கள் பேணுவர். மனமார வாழ்த்தும் இயல்பினரல்லாத சமணர் சாக்கியர் ஆகிய புறச்சமயிகள் கூடி இகழ்ந்தும் அன்பின்றியும் பேசும் சொற்களைப் பொருளாகக் கொள்ளாதீர். குற்றம் தீர, அடியவர்கட்கு அருள் செய்து புகழால் ஓங்கிய பெருமானது வலிதாயத்தின் புகழைப் பேசும் ஆர்வம் உடையவர்களே, அடியார்கள் என விரும்பப்படும் பெரியோர் ஆவர்.

திருவலிதாயம்

வண்டுவைகும்மண மல்கியசோலை
வளரும்வலிதாயத்
தண்டவாணனடி யுள்குதலாலருண்
மாலைத்தமிழாகக்
கண்டல்வைகுகடற் காழியுண்ஞானசம்
பந்தன்றமிழ்பத்துங்
கொண்டுவைகியிசை பாடவல்லார்குளிர்
வானத்துயர்வாரே. **#33**

வலிதாய நாதன்மீது பாடிய இத்திருப்பதிகத்தை இசையோடு பாடுவார் குளிர் வானத்துயர்வார் என முடிபு காண்க. வண்டுகள் மொய்க்கும் மணம் நிறைந்த சோலைகள் வளரும் திருவலிதாயத்தில் விளங்கும் அனைத்துலக நாதனின் திருவடிகளைத் தியானிப்பதால், தாழைகள் வளரும் கடற்கரையை அடுத்துள்ள சீகாழிப்பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் தமிழ் மாலையாக அருளிச் செய்த இத்திருப்பதிகத்தைச் சிறந்த தோத்திரமாகக் கொண்டு அமர்ந்திருந்து இசையோடு பாடவல்லார், குளிர்ந்த வானுலக வாழ்க்கையினும் உயர்வு பெறுவர்.

திருப்புகலியும் - திருவீழிமிழலையும்

திருவீழிமிழலை

திருப்புகலியும் - திருவீழிமிழலையும்,
பண் - நட்டபாடை, இவ்விரண்டும் சோழநாட்டிலுள்ளவை, புகலி என்பது சீகாழிக்கொருபெயர். புகலியில் சுவாமிபெயர்,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி. வீழிமிழலையில் சுவாமிபெயர்,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

மைம்மரு பூங்குழற் கற்றைதுற்ற
வாணுதன் மான்விழி மங்கையோடும்
பொய்ம்மொழி யாமறை யோர்களேத்தப்
புகலி நிலாவிய புண்ணியனே
எம்மிறை யேயிமை யாதமுக்க
ணீசவெ னேசவி தென்கொல்சொல்லாய்
மெய்ம்மொழி நான்மறை யோர்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. **#34**

கற்றையாகச் செறிந்து கருமை மருவி வளர்ந்த அழகிய கூந்தலையும், ஒளி சேர்ந்த நுதலையும், மான் விழி போன்ற விழியையும் உடைய உமையம்மையோடு, பொய் பேசாத அந்தணர்கள் ஏத்தப் புகலியில் விளங்கும் புண்ணியம் திரண்டனைய வடிவினனே, எம் தலைவனே! இமையாத முக்கண்களை உடைய எம் ஈசனே!, என்பால் அன்பு உடையவனே, வாய்மையே பேசும் நான்மறையை ஓதிய அந்தணர் வாழும் திருவீழிமிழலையில் திருமாலால் விண்ணிலிருந்து கொண்டுவந்து நிறுவப்பட்ட கோயிலில் விரும்பியுறைதற்குரிய காரணம் என்னையோ? சொல்வாயாக!

திருவீழிமிழலை

கழன்மல்கு பந்தொடம் மானைமுற்றில்
கற்றவர் சிற்றிடைக் கன்னிமார்கள்
பொழின்மல்கு கிள்ளையைச் சொற்பயிற்றும்
புகலி நிலாவிய புண்ணியனே
எழின்மல ரோன்சிர மேந்தியுண்டோ
ரின்புறு செல்வமி தென்கொல்சொல்லாய்
மிழலையுள் வேதிய ரேத்திவாழ்த்த
விண்ணிழி கோயில் விரும்பியதே. **#35**

மகளிர்க்குப் பொருந்திய கழங்கு, பந்து, அம்மானை, முற்றில் ஆகிய விளையாட்டுக்களைக் கற்ற சிற்றிடைக் கன்னிமார்கள், சோலைகளில் தங்கியுள்ள கிளிகட்குச் சொற்களைக் கற்றுக் கொடுத்துப் பேசச் செய்யும் திருப்புகலியில் விளங்கும் புண்ணியனே! அழகிய தாமரை மலரில் விளங்கும் பிரமனது தலையோட்டில் பலியேற்றுண்டு இன்புறும் செல்வனே! திருவீழிமிழலையில் வேதியர்கள் போற்றித் துதிக்க விண்ணிழி கோயிலை நீ விரும்பியதற்குக் காரணம் என்ன? சொல்வாயாக!

திருவீழிமிழலை

கன்னிய ராடல் கலந்துமிக்க
கந்துக வாடை கலந்துதுங்கப்
பொன்னியன் மாட நெருங்குசெல்வப்
புகலி நிலாவிய புண்ணியனே
இன்னிசை யாழ்மொழி யாளோர்பாகத்
தெம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய்
மின்னிய னுண்ணிடை யார்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. **#36**

கன்னிப் பெண்கள் விளையாட்டை விரும்பிப் பந்தாடுதற்குரிய தெருக்களில் கூடியாட உயர்ந்த பொன்னிறமான அழகுடன் விளங்கும் மாடங்கள் நெருங்கும் செல்வப் புகலி நிலாவிய புண்ணியனே! யாழினது இனிய இசைபோலும் மொழி பேசும் உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்ட எம் தலைவனே! மின்னல் போன்ற நுண்ணிய இடையினை உடைய அழகிய மகளிர் மருவும் திருவீழிமிழலையில் விண்ணிழி விமானத்தை நீ விரும்பியதற்குக் காரணம் என்னையோ? சொல்வாயாக!

திருவீழிமிழலை

நாகப ணந்திக ழல்குன்மல்கு
நன்னுதன் மான்விழி மங்கையோடும்
பூகவ னம்பொழில் சூழ்ந்தவந்தண்
புகலி நிலாவிய புண்ணியனே
ஏகபெ ருந்தகை யாயபெம்மா
னெம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய்
மேகமு ரிஞ்செயில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே **#37**

பாம்பின் படம் போன்று திகழும் அல்குலையும், அழகு மல்கும் நுதலையும், மான் விழி போன்ற விழியையும் உடைய பார்வதி அம்மையுடன் வளமான கமுகஞ்சோலைகள் சூழ்ந்து விளங்கும் அழகும்

தண்மையும் உடைய சீகாழிப் பதியில் விளங்கும்புண்ணியனே!
தன்னொப்பார் இன்றித் தானே முதலாய பெருமானே! எம் தலைவனே!
மேகங்கள் தோயும் மதில்கள் சூழ்ந்த திருவீழிமிழலையில் விண்ணிழி
விமானக் கோயிலை விரும்பியது ஏன்! சொல்வாயாக.

திருவீழிமிழலை

சந்தள றேறுத டங்கொள்கொங்கைத்
தையலொ டுந்தள ராதவாய்மைப்
புந்தியி னான்மறை யோர்களேத்தும்
புகலி நிலாவிய புண்ணியனே
எந்தமை யாளுடை யீசவெம்மா
னெம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய்
வெந்தவெண் ணீறணிவார்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. **#38**

சந்தனக் குழம்பு பூசிய பெரிதான தனங்களை உடைய
உமையம்மையோடு, உண்மையில் தவறாத புத்தியினை உடைய
நான்மறை அந்தணர்கள் போற்றும் புகலியில் விளங்கும் புண்ணியனே!
எம்மை அநாதியாகவே ஆளாய்க் கொண்டுள்ள ஈசனே! எம் தலைவனே!
எமக்குக் கடவுளே! வெந்த திருவெண்ணீற்றை அணிந்த அடியவர்
வாழும் திருவீழிமிழலையுள் விண்ணிழி கோயிலை நீ விரும்புதற்குக்
காரணம் என்னையோ? சொல்வாயாக!

திருவீழிமிழலை

சங்கொளி யிப்பி சுறாமகரந்
தாங்கி நிரந்து தரங்கமேன்மேற்
பொங்கொலி நீர்சுமந் தோங்குசெம்மைப்
புகலி நிலாவிய புண்ணியனே
எங்கள்பி ரானிமை யோர்கள்பெம்மா
னெம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய்
வெங்கதிர் தோய்பொழில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. **#39**

ஒளி உடைய சங்கு, முத்துச் சிப்பிகள், சுறா, மகரம் ஆகிய மீன்கள்,
ஆகிய இவற்றைத் தாங்கி வரிசை வரிசையாய் வரும் கடல் அலைகளால்
மேலும் மேலும் பொங்கும் ஒலியோடு கூடிய ஓதநீர் ஓங்கும்
செம்மையான புகலியில் விளங்கும் புண்ணியனே! எங்கள் தலைவனே!
இமையோர் பெருமானே! எம் கடவுளே! கதிரவன் தோயும்
பொழில்களாற் சூழப்பெற்ற விண்ணிழி கோயிலை விரும்பியதற்குக்
காரணம் என்னையோ! சொல்வாயாக!

திருவீழிமிழலை

காமனெ ரிப்பிழம் பாகநோக்கிக்
காம்பன தோளியொ டுங்கலந்து
பூமரு நான்முகன் போல்வரேத்தப்
புகலி நிலாவிய புண்ணியனே
ஈமவ னத்தெரி யாட்டுகந்த
வெம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
வீமரு தண்பொழில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. **#40**

மன்மதன் தீப்பிழம்பாய் எரியுமாறுகண்ணால் நோக்கி, மூங்கில் போலும் தோளினையுடைய உமையம்மையோடும் கூடி, தாமரை மலரில் விளங்கும் நான்முகன் போல்வார் போற்றப் புகலியில் விளங்கும் புண்ணியனே! சுடுகாட்டில் எரியாடலை விரும்பும் எம்பெருமானே! மலர்கள் மருவிய குளிர்ந்த பொழில்களால் சூழப் பெற்ற திருவீழிமிழலையில் விண்ணிழி கோயிலை விரும்பியதற்குக் காரணம் என்னையோ! சொல்வாயாக!

திருவீழிமிழலை

இலங்கையர் வேந்தெழில் வாய்த்ததிண்டோள்
இற்றல றவ்விர லொற்றியைந்து
புலங்களைக் கட்டவர் போற்றவந்தண்
புகலி நிலாவிய புண்ணியனே
இலங்கெரி யேந்திநின் றெல்லியாடு
மெம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய்
விலங்கலொண் மாளிகை சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. **#41**

இலங்கையர் தலைவனாகிய இராவணன் அழகிய வலிய தோள்கள் ஒடிந்து, அலறுமாறு தன் கால் விரலால் சிறிது ஊன்றி, ஐம்புல இன்பங்களைக் கடந்தவர்களாகிய துறவியர் போற்ற, அழகிய தண்மையான புகலியில் விளங்கும் புண்ணியனே! விளங்கும் தீப்பிழம்பைக் கையில் ஏந்தி இரவில் இடுகாட்டில் ஆடும் எம் தலைவனே! மலை போன்ற ஒளி பொருந்திய மாளிகைகளால் சூழப் பெற்ற திருவீழிமிழலையில் விண்ணிழி கோயிலை விரும்பியதற்குக் காரணம் என்னையோ! சொல்வாயாக.

திருவீழிமிழலை

செறிமுள ரித்தவி சேறியாறுஞ்

செற்றதில் வீற்றிருந் தானுமற்றைப்
பொறியர வத்தணை யானுங்காணாப்
புகலி நிலாவிய புண்ணியனே
எறிமழு வோடிள மான்கையின்றி
யிருந்தபி ரானிது வென்கொல்சொல்லாய்
வெறிகமழ் பூம்பொழில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. **#42**

மணம் செறிந்த தாமரைத் தவிசில் அறுவகைக் குற்றங்களையும் விலக்கி ஏறி அதில் வீற்றிருக்கும் நான்முகனும், புள்ளிகளையுடைய பாம்பினைப் படுக்கையாகக் கொண்ட திருமாலும் காண இயலாதவனாய்ப் புகலியில் விளங்கும் புண்ணியனே! பகைவரைக் கொல்லும் மழுவாயுதத்தோடு இளமான் ஆகியன கையின்கண் இன்றி விளங்கும் பெருமானே! மணம் கமழும் அழகிய பொழில்களால் சூழப்பெற்ற திருவீழிமிழலையில் விண்ணிழி கோயிலை விரும்பியதற்குக் காரணம் என்னையோ! சொல்வாயாக.

<u>திருவீழிமிழலை</u>

பத்தர்க ணம்பணிந் தேத்தவாய்த்த
பான்மைய தன்றியும் பல்சமணும்
புத்தரு நின்றலர் தூற்றவந்தண்
புகலி நிலாவிய புண்ணியனே
எத்தவத் தோர்க்குமி லக்காய்நின்ற
வெம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
வித்தகர் வாழ்பொழில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. **#43**

தன்னிடம் பத்திமையுடையோர் பணிந்து போற்றும் பான்மையோடுகூடச் சமணரும், புத்தரும் அலர் தூற்ற, அழகிய குளிர்ந்த புகலியின்கண் விளங்கும் புண்ணியனே! எவ்வகையான தவத்தை மேற்கொண்டோரும் அடைதற்குரிய இலக்காய் நின்ற எம்பெருமானே! சதுரப்பாடுடைய அறிஞர்கள் வாழும் பொழில்கள் சூழ்ந்த திருவீழிமிழலையில் விண்ணிழி கோயிலை விரும்பியதற்குக் காரணம் என்னையோ! சொல்வாயாக.

<u>திருவீழிமிழலை</u>

விண்ணிழி கோயில் விரும்பிமேவும்
வித்தக மென்கொ லிதென்றுசொல்லிப்
புண்ணிய னைப்புக லிந்நிலாவு
பூங்கொடி யோடிருந் தானைப்போற்றி

நண்ணிய கீர்த்தி நலங்கொள்கேள்வி
நான்மறை ஞானசம் பந்தன்சொன்ன
பண்ணியல் பாடல்வல் லார்களிந்தப்
பாரொடு விண்பரி பாலகரே. **#44**

விண்ணிழி கோயில் விரும்பிய புண்ணியனைப் போற்றி ஞானசம்பந்தன் சொன்ன பாடல் வல்லார்கள் பாரொடு விண்ணகத்தையும் பரிபாலனம் புரிவர். புகலிப் பதியில் விளங்கும் புண்ணியனாய், அழகிய இளங்கொடி போன்ற உமையம்மையோடு விளங்குவானைத் துதித்துத் திருவீழிமிழலையில் விண்ணிழி கோயிலை விரும்பிய வித்தகம் என்னையோ சொல்லாய் என்று கேட்டுப் புகழால் மிக்கவனும் நலம்தரும் நூற்கேள்வி உடையவனும் நான்மறை வல்லவனும் ஆகிய ஞானசம்பந்தன் பாடிய பண்ணிறைந்த இப்பதிகத் திருப்பாடல்களை ஓதுபவர் நிலவுலகத்தோடு விண்ணுலகத்தையும் ஆளும் சிறப்புடையவராவர்.

திருக்காட்டுப்பள்ளி

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

திருக்காட்டுப்பள்ளி,
பண் - நட்டபாடை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஆரணியச்சுந்தரர்.
தேவியார் : அகிலாண்டநாயகியம்மை.

செய்யரு கேபுனல் பாயவோங்கிச்
செங்கயல் பாயச் சிலமலர்த்தேன்
கையரு கேகனி வாழையீன்று
கானலெல் லாங்கமழ் காட்டுப்பள்ளிப்
பையரு கேயழல் வாயவைவாய்ப்
பாம்பணை யான்பணைத் தோளிபாகம்
மெய்யரு கேயுடை யானையுள்கி
விண்டவ ரேறுவர் மேலுலகே. **#45**

வயலின்கண் நீர் பாய, அதனால் களித்த செங்கயல்மீன்கள் துள்ள, அதனால் சில மலர்களிலிருந்து தேன் சிந்துதலானும், கைக்கெட்டும் தூரத்தில் வாழை மரங்கள் கனிகளை ஈன்று முதிர்ந்தததனானும், காடெல்லாம் தேன் மணமும் வாழைப்பழ மணமும் கமழும் திருக்காட்டுப்பள்ளியுள், நச்சுப்பையினருகே அழலும் தன்மை உடைய ஐந்து வாயையும் கூரிய நச்சுப் பற்களையும் உடைய ஆதிசேடனை அணையாகக் கொண்ட திருமாலையும் உமையம்மையையும் தனது மெய்யின் இடப்பாகமாகக் கொண்டு (அரியர்த்தர், அர்த்தநாரீசுரர்) விளங்கும் இறைவன் மீது பற்றுக்கொண்டு ஏனைய பற்றுக்களை விட்டவர், வீட்டுலகை அடைவர்.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

இப்பதிகத்தில் **2**-ம் செய்யுள் சிதைந்து போயிற்று **#46**

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

திரைகளெல் லாமல ருஞ்சுமந்து
செழுமணி முத்தொடு பொன்வரன்றிக்
கரைகளெல் லாமணி சேர்ந்துரிஞ்சிக்
காவிரி கால்பொரு காட்டுப்பள்ளி
உரைகளெல் லாமுணர் வெய்திநல்ல
வுத்தம ராயுயர்ந் தாருலகில்

அரவமெல் லாமரை யார்த்தசெல்வர்க்
காட்செய வல்ல லறுக்கலாமே. **#47**
காவிரியின் வாய்க்கால்கள் எல்லா மலர்களையும் சுமந்தும்,
செழுமையான மணிகள் முத்துக்கள் பொன் ஆகியவற்றை வாரிக்
கொண்டும் வந்து இருகரைகளிலும் அழகு பொருந்த உராய்ந்து வளம்
சேர்க்கும் திருக்காட்டுப்பள்ளியுள் பாம்புகளை இடையில் கட்டிய
செல்வராய் எழுந்தருளியிருக்கும் சிவபிரானுக்கு, வேதம் முதலான
மேம்பட்ட உரைகள் யாவற்றையும் உணர்ந்த நல்ல உத்தமராய்த்
தொண்டு செய்யின் அல்லல் அறுக்கலாம்.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

தோலுடை யான்வண்ணப் போர்வையினான்
சுண்ண வெண்ணீறு துதைந்திலங்கு
நூலுடை யானிமை யோர்பெருமான்
நுண்ணறி வால்வழி பாடுசெய்யுங்
காலுடை யான்கரி தாயகண்டன்
காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளி
மேலுடை யானிமை யாதமுக்கண்
மின்னிடை யாளொடும் வேண்டினானே. **#48**
புலித்தோலை ஆடையாக உடுத்தவன். யானைத் தோலை அழகிய
போர்வையாகப் போர்த்தவன். திருவெண்ணீறாகிய கண்ணத்தில்
செறிந்து விளங்கும் பூணூலை மார்பகத்தே உடையவன். தேவர்கட்குத்
தலைவன். பதிஞானத் தாலே அன்பர்கள் வழிபாடு செய்யும்
திருவடிகளை உடையவன். கரிய கண்டத்தை உடையவன். பலராலும்
விரும்பப் பெறும் திருக்காட்டுப்பள்ளியில் இமையாத மூன்றாவது
கண்ணை நெற்றியில் உடைய அவ்விறைவன் மின்னல் போன்ற
இடையினை உடைய உமையம்மையோடு விரும்பி
எழுந்தருளியுள்ளான்.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

சலசல சந்தகி லோடுமுந்திச்
சந்தன மேகரை சார்த்தியெங்கும்
பலபல வாய்த்தலை யார்த்துமண்டிப்
பாய்ந்திழி காவிரிப் பாங்கரின்வாய்க்
கலகல நின்றதி ருங்கழலான்
காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளிச்
சொலவல தொண்டர்க ளேத்தநின்ற
சூலம்வல் லான்கழல் சொல்லுவோமே. **#49**

சலசல என்னும் ஒலிக் குறிப்போடு சந்தனம் அகில் முதலியவற்றை அடித்துவந்து, சந்தனத்தைக் கரையில் சேர்த்துப் பற்பல வாய்க்கால்களின் தலைப்பில் ஆரவாரித்து ஓடிப் பாய்ந்து வயல்களில் இழிந்து வளம் சேர்க்கும் காவிரியின் தென்பாங்கரில் சலசல என்னும் ஓசையோடு அதிரும் கழல்களை அணிந்த இறைவனால் விரும்பப்படும் திருக்காட்டுப்பள்ளியை அடைந்து இறைவனது பொருள்சேர் புகழ் பேசும் தொண்டர்களால் துதிக்கப்படும் அச் சூல பாணியின் திருவடிப் பெருமையை நாமும் கூறித் தோத்திரிப்போம்.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

தளையவிழ் தண்ணிற நீலநெய்தல்
தாமரை செங்கழு நீருமெல்லாங்
களையவி ழுங்குழ லார்கடியக்
காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளித்
துளைபயி லுங்குழ லியாழ்முரலத்
துன்னிய வின்னிசை யாற்றுதைந்த
அளைபயில் பாம்பரை யார்த்தசெல்வர்க்
காட்செய வல்ல லறுக்கலாமே. **#50**

கட்டவிழ்ந்த குளிர்ந்த நிறத்துடன்கூடிய நீலோற்பலம், நெய்தல், தாமரை, செங்கழுநீர் ஆகிய எல்லா மலர்களையும், அவிழ்ந்து, விழும் கூந்தலை உடைய உழத்தியர் களைகளாய்ப் பிடுங்கி எறியும் வளம் உடையதும், பலராலும் விரும்பப்படுவதும் ஆகிய திருக்காட்டுப்பள்ளியில் துளைகளால் ஓசை பயிலப் பெறும் புல்லாங்குழல் யாழ் ஆகியன இடைவிடாமல் ஒலிக்கும் இன்னிசை முழக்கோடு வளையினின்றும் பிரியாத பாம்புகளை இடையிற் கட்டி எழுந்தருளிய செல்வராகிய பெருமானுக்கு ஆளாய்த் தொண்டு. செய்யின் அல்லல் அறுக்கலாம்.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

முடிகையி னாற்றொடு மோட்டுழவர்
முன்கைத் தருக்கைக் கரும்பின்கட்டி
கடிகையி னாலெறி காட்டுப்பள்ளி
காதல்செய் தான்கரி தாயகண்டன்
பொடியணி மேனியி னானையுள்கிப்
போதொடு நீர்சுமந் தேத்திமுன்னின்
றடிகையினாற்றொழ வல்லதொண்ட
ருவினை யைத்துரந் தாட்செய்வாரே. **#51**

நாற்று முடியைக் கையால் பறிக்கும் வலிய உழவர்கள் தங்கள் முன்கைத்

தினவை வெல்லக்கட்டியை உடைப்ப தால் போக்கிக் கொள்கின்ற திருக்காட்டுப்பள்ளியை விரும்பி உறை பவனும், கரிதான கண்டமுடையவனும், திருநீறணிந்த மேனியனும் ஆகிய பெருமானை நினைந்து அபிடேகநீர் மலர்கள் ஆகியவற்றை எடுத்துச் சென்று துதித்து முன்நின்று அவன் திருவடிகளைக் கையால் தொழ வல்ல தொண்டர்கள் நீக்குதற்கு அரிய வினைகளினின்றும் நீங்கி அவ்விறைவனுக்கு ஆட்செய்வர்.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

பிறையுடை யான்பெரி யோர்கள்பெம்மான்
பெய்கழ னாடொறும் பேணியேத்த
மறையுடை யான்மழு வாளுடையான்
வார்தரு மால்கடல் நஞ்சமுண்ட
கறையுடை யான்கன லாடுகண்ணாற்
காமனைக் காய்ந்தவன் காட்டுப்பள்ளிக்
குறையுடை யான்குறட் பூதச்செல்வன்
குரைகழ லேகைகள் கூப்பினோமே. **#52**

தலையில் பிறையை அணிந்தவனும், பெரியோர்கள், தலைவனும், வேதங்களை அருளியவனும் மழுவாகிய வாளை உடையவனும், நீண்ட கரிய கடலிடையே தோன்றிய நஞ்சினை உண்ட கறைக் கண்டனும், கலை சேர்ந்த நுதல்விழியால் காமனைக் காய்ந்தவனும், அன்பர்களின் குறைகளைக் கேட்டறிபவனும், குறட்பூதச் செல்வனுமாகிய, திருக்காட்டுப் பள்ளியில் உள்ள இறைவன் திருவடிகளை நாள்தோறும் விரும்பி ஏத்தி அத்திரு வடிகளையே கை கூப்பினோம்.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

செற்றவர் தம்மர ணம்மவற்றைச்
செவ்வழல் வாயெரி யூட்டிநின்றுங்
கற்றவர் தாந்தொழு தேத்தநின்றான்
காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளி
உற்றவர் தாமுணர் வெய்திநல்ல
வும்பருள் ளார்தொழு தேத்தநின்ற
பெற்றம ரும்பெரு மானையல்லாற்
பேசுவதும் மற்றொர் பேச்சிலோமே. **#53**

தேவர்க்குப் பகைவராய திரிபுரத்து அசுரர் தம் அரணங்களைச் செவ்வழலால் எரியூட்டி அழித்துப் பெருவீரத்தோடு கற்றவர்கள் தொழுதேத்த மேம்பட்டு, விளங்கும் இறைவனால் காதலிக்கப்படும் திருக்காட்டுப்பள்ளியை அடைந்து, மெய்யுணர்வு பெற்ற தேவர்கள்

பலரும் தொழுது ஏத்தும், விடைமீது ஏறி அமரும் அப்பெருமான் புகழல்லால் மற்றோர் பேச்சைப் பேசுவதிலோம்.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

ஒண்டுவ ரார்துகி லாடைமெய்போர்த்
துச்சிகொ ளாமையுண் டேயுரைக்குங்
குண்டர்க ளோடரைக் கூறையில்லார்
கூறுவதாங்குண மல்லகண்டீர்
அண்டம றையவன் மாலுங்காணா
ஆதியி னானுறை காட்டுப்பள்ளி
வண்டம ரும்மலர்க் கொன்றைமாலை
வார்சடை யான்கழல் வாழ்த்துவோமே. **#54**

நிறம் பொருந்திய காவியாடையை மேனியில் போர்த்து, உச்சிவேளையில் வயிறு கொள்ளாத அளவில் தின்று பொய் கூறும் உடல் பருத்த புத்தர், இடையில் உடையில்லாத திகம்பர சமணர் கூறுவன நற்பயனைத் தாராதன என்பதை அறிந்து கொள்ளுங்கள். உலகைப் படைத்த வேதாசாரியனான பிரமனும், மாலுங் காணாத முதல்வன் உறையும் திருக்காட்டுப்பள்ளிக்குச் சென்று வண்டு அமரும் மலர்க்கொன்றை புனைந்த வார் சடையோன் கழல்களை ஏத்தி வாழ்த்துவோம்.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

பொன்னியல் தாமரை நீலநெய்தல்
போதுக ளாற்பொலி வெய்துபொய்கைக்
கன்னியர் தாங்குடை காட்டுப்பள்ளிக்
காதல னைக்கடற் காழியர்கோன்
துன்னிய வின்னிசை யாற்றுதைந்து
சொல்லிய ஞானசம் பந்தனல்ல
தன்னிசை யாற்சொன்ன மாலைபத்துந்
தாங்கவல் லார்புகழ் தாங்குவாரே. **#55**

திருமகள் வாழும் தாமரை, நீலம், நெய்தல் ஆகிய மலர்களால் பகலும் இரவும் பொலிவெய்தும் பொய்கைகளில் கன்னிப் பெண்கள் குடைந்தாடும் திருக்காட்டுப்பள்ளியை விரும்பும் இறைவனைக் கடல் சூழ்ந்த காழி மாநகர்த் தலைவனாகிய ஞானசம்பந்தன் பொருந்திய இன்னிசை கூட்டிச் சொன்னதும், தானே தன்னிச்சையால் பாடியவும் ஆகிய இத் திருப்பதிகப் பாடல் மாலை பத்தையும் மனத்திடைத் தரிக்க வல்லவர் புகழ் எய்துவர்.

திருமருகலும் - திருச்செங்காட்டங்குடியும்

திருவிடைமருதூர்

திருமருகலும் - திருச்செங்காட்டங்குடியும்,
பண் - நட்டபாடை, இவ்விரண்டும் சோழநாட்டிலுள்ளவை.
திருமருகலில் சுவாமிபெயர்,
சுவாமிபெயர் : மாணிக்கவண்ணர்.
தேவியார் : வண்டுவார்குழலி. திருச்செங்காட்டங்குடியில் சுவாமிபெயர்,
சுவாமிபெயர் : கணபதீசுவரர்.
தேவியார் : திருக்குழல்நாயகி.

அங்கமும் வேதமும் ஓதும்நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குன் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. **#56** ★★★★★

நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் ஓதும் நாவினராகிய அந்தணர்கள் நாள்தோறும் தன் திருவடிகளை வணங்க, வானமண்டலத்திலுள்ள சந்திரன் தவழ்ந்து செல்லுதற்கு இடமாய் உயர்ந்து விளங்கும் மாடவீதிகளை உடைய திருமருகலில் எழுந்தருளியுள்ள இறைவனே! செங்கயல்கள் நிறைந்த புனல் சூழ்ந்ததும், செல்வ வளம் நிறைந்ததுமான புகழார்ந்த திருச்செங்காட்டங்குடியில் எரியைக்கையில் ஏந்தி நள்ளிருளில் நட்டம் ஆடுதற்கு இடமாய்க் கணபதியீச்சரத்தைக் காமுறுதல் ஏன்? சொல்வாயாக.

திருவிடைமருதூர்

நெய்தவழ் மூவெரி காவலோம்பும்
நேர்புரி நூன்மறை யாளரேத்த
மைதவழ் மாட மலிந்தவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செய்தவ நான்மறை யோர்களேத்துஞ்
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கைதவழ் கூரெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. **#57**

அவியாக அளிக்கப் பெறும் நெய் தவழ்ந்து எரியும் முத்தீயைப் பாதுகாப்பாக ஓம்பி வரும் நேர்மையாளரும், முப்புரி நூல் அணிந்த வேத வித்துக்களும் ஆகிய அந்தணர் ஏத்த, கரிய மேகங்கள் தவழும் மாட வீடுகள் நிறைந்த வீதிகளை உடைய திருமருகலில் எழுந்தருளிய இறைவனே! தவங்கள் பலவும் செய்யும் நான்மறையோர் போற்றும் புகழ் பொருந்திய திருச்செங்காட்டங்குடியில், திருக்கரத்தில் மிக்க தீயை ஏந்தி ஆடுதற்கு இடமாய்க் கணபதி யீச்சரத்தைக் காமுறக் காரணம் என்ன? சொல்வாயாக.

திருவிடைமருதூர்

தோலொடு நூலிழை சேர்ந்தமார்பர்
தொகுமறை யோர்கள் வளர்த்தசெந்தீ
மால்புகை போய்விம்மு மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேல்புல்கு தண்வயற் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கால்புல்கு பைங்கழ லார்க்கவாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. **#58**

மான் தோலோடு கூடிய முப்புரி நூல் அணிந்த மார்பினராய்த் திரளாய்நின்று வேதம் வல்ல அந்தணர்கள் வளர்த்த செந்தீயிலிருந்து எழுந்த கரிய புகை போய் மிகவும் மிகுதியாக வெளிப்படும் மாடங்களோடு கூடிய வீதிகளை உடைய திருமருகலில் விளங்கும் இறைவனே, சேல்கள் நிறைந்த குளிர்ந்த வயல்களை அடுத்த சோலைகளால் சூழப்பட்ட சிறப்புமிக்க திருச்செங்காட்டங் குடியில் காலில் கட்டிய கழல்கள் ஆர்க்க ஆடிக் கணபதியீச்சரத்தைக் காமுறுதற்குக் காரணம் என்ன? சொல்வாயாக.

திருவிடைமருதூர்

நாமரு கேள்வியர் வேள்வியோவா
நான்மறை யோர்வழி பாடுசெய்ய
மாமரு வும்மணிக் கோயின்மேய
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
தேமரு பூம்பொழிற் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காமரு சீர்மகிழ்ந் தெல்லியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. **#59**

நாவிற் பொருந்தியவாய்ப் பயிலப்பட்டுவரும் வேதங்களை ஓதி உணர்ந்தவர்களும், வேள்விகளை இடைவிடாமல்செய்து

வருபவர்களுமாகிய நான்மறையாளர் வழிபடச் செல்வம் மருவிய மணிக்கோயிலை உடைய மருகலில் விளங்கும் மைந்தனே! தேன் நிறைந்த அழகிய பொழில்களால் சூழப்பெற்ற சிறப்புமிக்க செங்காட்டங்குடியில் விளங்குகின்ற அழகும் பெருமையும் மிக்க கணபதியீச்சரத்தைக் காமுற்று இராப்போதில் நடனம் ஆடுதற்குக் காரணம் யாது? சொல்வாயாக.

திருவிடைமருதூர்

பாடன் முழவும் விழவுமோவாப்
பன்மறை யோரவர் தாம்பரவ
மாட நெடுங்கொடி விண்டடவும்
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேடக மாமலர்ச் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காடக மேயிட மாகவாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. **#60**

பாடலும் அதற்கிசைந்த முழவு ஒலியும், திருவிழாக்கள் ஒலியும், இடைவிடாமல் நிகழ்வதும் மாடவீடுகளில் கட்டிய கொடிகள் வானைத் தடவுவதும் ஆகிய சிறப்புக்களை உடைய திருமருகலில் வேதங்கள் பலவும் கற்ற அந்தணாளர் பரவ எழுந்தருளிய இறைவனே! உயரமான மணம் மிக்க மலர்ச் சோலைகளால் சூழப் பெற்ற சிறப்புமிக்க செங்காட்டங்குடியில், காட்டிடமே நாடக மாடுதற்கு இடமாக இருக்கவும், ஆடுதற்குரிய இடமாகக் கணபதியீச்சரத்தைக் காமுறக் காரணம் என்ன? சொல்வாயாக.

திருவிடைமருதூர்

புனையழ லோம்புகை யந்தணாளர்
பொன்னடி நாடொறும் போற்றிசைப்ப
மனைகெழு மாட மலிந்தவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சினைகெழு தண்வயற் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கனைவளர் கூரெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. **#61**

கிரியைகள் பலவற்றாலும் அழகு செய்யப் பெற்ற முத்தீயை வளர்க்கும் கைகளை உடைய அந்தணர்கள், நாள்தோறும் தன் திருவடிகளைப் போற்ற, இல்லங்களும் விளங்கும் மாடங்களும் நிறைந்த வீதிகளை உடைய திருமருகலில் விளங்கும் இறைவனே! நெற்பயிர்கள் திளைத்து

வளரும் தண் வயல்களையடுத்த சோலைகளால் சூழப்பெற்ற நீர் வளம் மிக்க செங்காட்டங்குடியில் எரியேந்திக் கணபதியீச்சரத்தைக் காமுறக் காரணம் என்ன? சொல்வாயாக.

திருவிடைமருதூர்

இப்பதிகத்தில் **7-**ம் செய்யுள் சிதைந்து போயிற்று. **#62**

திருவிடைமருதூர்

பூண்டங்கு மார்பி னிலங்கைவேந்தன்
பொன்னெடுந் தோள்வரை யாலடர்த்து
மாண்டங்கு நூன்மறை யோர்பரவ
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேண்டங்கு மாமலர்ச் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காண்டங்கு தோள்பெயர்த் தெல்லியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. **#63**

கயிலை மலையைப் பெயர்க்க முற்பட்ட அணிகலன்கள் பொருந்திய மார்பினை உடைய இலங்கை மன்னன் இராவணனின் அழகிய பெரிய தோள்களை அம்மலையாலேயே அடர்த்து, மாட்சிமை பொருந்திய நான்மறையோர் பரவத் திருமருகலில் எழுந்தருளி விளங்கும் இறைவனே! வானளாவிய மணமலர்ச் சோலைகளால் சூழப்பெற்ற சீர்மிக்க செங்காட்டங்குடியில் அழகிய உன் திருத்தோள்களை அசைத்து இரவில் நடமிடுதற்கு இடனாய்க் கணபதியீச்சரத்தைக் காமுறக் காரணம் யாதோ? சொல்வாயாக.

திருவிடைமருதூர்

அந்தமு மாதியுந் நான்முகனு
மரவணை யானு மறிவரிய
மந்திர வேதங்க ளோதுநாவர்
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செந்தமி ழோர்கள் பரவியேத்துஞ்
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கந்தம கிற்புகை யேகமழுங்
கணபதி யீச்சரங் காமுறவே. **#64**

நான்முகனும் அரவணையானும் ஆதியாய முடியையும் அந்தமாகிய அடியையும் அறிதற்கு அரியவனாய், மந்திர வடிவான வேதங்களை ஓதும் நாவினரான அந்தணர் பரவி ஏத்தத் திருமருகலில் விளங்கும் இறைவனே! செந்தமிழ் வல்லோர் பரவித்துதிக்கும் சிறப்புமிக்க

செங்காட்டங்குடியில் அகில் புகை மணமே கமழும் கணபதியீச்சரத்தைக் காமுறக் காரணம் யாதோ? சொல்வாயாக.

திருவிடைமருதூர்

இலைமரு தேயழ காகநாளும்
இடுதுவர்க் காயொடு சுக்குத்தின்னும்
நிலையமண் தேரரை நீங்கிநின்று
நீதரல் லார்தொழு மாமருகல்
மலைமக டோள்புணர் வாயருளாய்
மாசில்செங் காட்டங் குடியதனுள்
கலைமல்கு தோலுடுத் தெல்லியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. **#65**

மருத மரத்து இலையின் சாற்றினால் நிறமூட்டிய ஆடைகளை அணிந்த புத்தர், கடுக்காய், சுக்கு, இவற்றைத் தின்னும் சமணர் ஆகியோரை விடுத்து, சைவர்கள் தொழத் திருமருகலில் மலைமகளோடு உறையும் மைந்தனே! குற்றமற்ற செங்காட்டங்குடியில் மான் தோலை உடுத்தி நள்ளிருளில் ஆடுதற்கு இடனாய்க் கணபதியீச்சரத்தைக் காமுறுதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

திருவிடைமருதூர்

நாலுங் குலைக்கமு கோங்குகாழி
ஞானசம் பந்தன் நலந்திகழும்
மாலின் மதிதவழ் மாடமோங்கும்
மருகலின் மற்றதன் மேன்மொழிந்த
சேலும் கயலும் திளைத்தகண்ணார்
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
சூலம்வல் லான்கழ லேத்துபாடல்
சொல்லவல் லார்வினை யில்லையாமே. **#66**

தொங்குகின்ற குலைகளோடு பாக்கு மரங்கள் ஓங்கி வளரும் சீகாழிப் பதியினனாய ஞானசம்பந்தன், நலம் திகழ்வதும், மேகமும் பிறையும் தவழும் மாடங்கள் ஓங்கியதுமான திருமருகல் இறைவனையும், சேல் கயல் ஆகிய மீன் வகைகளை ஒத்த கண்களை உடைய மகளிர் வாழ்வதும் சிறப்பு மிக்கதும் ஆகிய செங்காட்டங் குடியில் முத்தலைச் சூலம் ஏந்தியவனாய் விளங்கும் பெருமானையும் புகழ்ந்து ஏத்திய பாடல்களைச் சொல்லித் துதிக்க வல்லார் வினைகள், இல்லையாகும்.

திருநள்ளாறும் - திருஆலவாயும்

திருநள்ளாறு

திருநள்ளாறும் - திருஆலவாயும்,
பண் - நட்டபாடை, திருநள்ளாறு சோழநாட்டிலுள்ளது, திருஆலவாய் பாண்டிநாட்டிலுள்ளது. இதுவே மதுரை. திருநள்ளாறுவில் சுவாமிபெயர்,
சுவாமிபெயர் : தெர்ப்பாரணியேசுவரர்.
தேவியார் : போகமார்த்தபூண்முலையம்மை. திருஆலவாயில் சுவாமிபெயர்,
சுவாமிபெயர் : சொக்கநாதசுவாமி.
தேவியார் : மீனாட்சியம்மை.

பாடக மெல்லடிப் பாவையோடும்
படுபிணக் காடிடம் பற்றிநின்று
நாடக மாடும்நள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
சூடக முன்கை மடந்தைமார்கள்
துணைவ ரொடுந்தொழு தேத்திவாழ்த்த
ஆடகமாடம் நெருங்குகூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. **#67**

பாடகம் என்னும் அணிகலன் அணிந்த மென்மையான அடிகளை உடைய உமையம்மையோடு, பிணக்காடாகிய இடுகாட்டைப் பற்றி நின்று நாடகம் ஆடும் நள்ளாற்று நம் பெருமானே! நீகையில் வளையல் அணிந்த மகளிர் தம் துணைவர்களோடும் கூடி வந்து வழிபடுவதும், பொன் மாளிகைகள் நிறைந்ததுமான கூடல் ஆலவாயின்கண் விரும்பி உறைதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

திருநள்ளாறு

திங்களம் போதுஞ் செழும்புனலும்
செஞ்சடை மாட்டயல் வைத்துகந்து
நங்கண் மகிழும்நள் ளாறுடைய
நம்பெருமானிது வென்கொல்சொல்லாய்
பொங்கிள மென்முலை யார்களோடும்
புனமயி லாட நிலாமுளைக்கும்
அங்கழ கச்சுதை மாடக்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. **#68**

பிறைமதி, அழகிய மலர்கள், வளமான கங்கை நதி ஆகியவற்றைத் தன்

செஞ்சடையின் மேல் அருகருகே வைத்து மகிழ்ந்து நம் கண்கள் களிக்குமாறு நள்ளாற்றின்கண் எழுந்தருளிய நம் பெருமானே! நீ, பூரித்து எழும் மென்மையான இளைய தனங்களை உடைய மடந்தையரோடு கானகத்தில் வாழும் ஆண் மயில்கள் களித்தாட, பெருமை மிக்க தமிழ்ச் சங்கத்தினையும், நிலவொளி வெளிப்படுமாறு வெண்மையான சுண்ணாம்பினால் கட்டப்பட்ட மாடங்களையும் உடைய கூடல் ஆலவாயின்கண் விரும்பி உறைதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

திருநள்ளாறு

தண்ணறு மத்தமும் கூவிளமும்
வெண்டலை மாலையும் தாங்கியார்க்கும்
நண்ணல ரியநள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
புண்ணிய வாணரும் மாதவரும்
புகுந்துட னேத்தப் புனையிழையார்
அண்ணலின் பாட லெடுக்குங்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. **#69**

குளிர்ந்த மணம் வீசும் ஊமத்தை மலர் வில்வம் ஆகியவற்றையும் வெண்மையான தலை மாலையையும் அணிந்து, திருவருள் இருந்தாலன்றி யாராலும் சென்று வழிபடற்கரிய நள்ளாற்றின்கண் எழுந்தருளிய நம் பெருமானே! நீ, புண்ணிய வாணரும் மாதவர்களும் வந்து ஏத்துவதும் அணிகலன்கள் புனைந்த மகளிர் இறைவனது புகழ் சேர்ந்த பாடல்களைப் பாடுவதுமான கூடல் ஆலவாயின்கண் விரும்பி உறைதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

திருநள்ளாறு

பூவினில் வாசம் புனலிற்பொற்புப்
புதுவிரைச் சாந்தினில் நாற்றத்தோடு
நாவினிற் பாடல்நள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
தேவர்கள் தானவர் சித்தர்விச்சா
தரர்கணத் தோடுஞ் சிறந்துபொங்கி
ஆவினில் ஐந்துகந் தாட்டுங்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. **#70**

பூக்களில் வாசனையாய், நீரில் தண்மையாய், புதிய சந்தனத்தில் மணமாய், நாவில் பாடலாய்க் கலந்து விளங்கும் நள்ளாற்று நம் பெருமானே! நீ, தேவர்களும், அசுரர்களும், சித்தர்களும்,

வித்யாதரர்களும் ஆகிய கூட்டத்தினரோடு சிறந்து விளங்குபவராய்ப் பசுவினிடம் தோன்றும் பஞ்சகவ்யங்களால் ஆட்டி வழிபடக் கூடல் ஆலவாயின்கண் விரும்பி உறைதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

திருநள்ளாறு

செம்பொன்செய் மாலையும் வாசிகையும்
திருந்து புகையும் அவியும்பாட்டும்
நம்பும் பெருமைநள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
உம்பரும் நாகரு லகந்தானும்
ஒலிகடல் சூழ்ந்த வுலகத்தோரும்
அம்புத நால்களால் நீடுங்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. **#71**

செம்பொன்னால் செய்த மாலைகள், திருவாசி ஆகியவற்றுடன் மணப்புகை நிவேதனம் தோத்திரம் ஆகியவற்றை விரும்பி ஏற்கும் பெருமை உடைய, நள்ளாற்றில் விளங்கும் நம்பெருமானே! நீ, விண்ணவரும், நாகர் உலகத்தவரும், ஒலிக்கும் கடலால் சூழப்பட்ட மண்ணுலக மக்களும் ஏத்த, நான்கு மேகங்களால் சூழப்பட்ட கூடல் ஆலவாயின்கண் விரும்பி உறைதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

திருநள்ளாறு

பாகமுந் தேவியை வைத்துக்கொண்டு
பைவிரி துத்திப் பரியபேழ்வாய்
நாகமும் பூண்டநள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
போகமும் நின்னை மனத்துவைத்துப்
புண்ணியர் நண்ணும் புணர்வுபூண்ட
ஆகமு டையவர் சேருங்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. **#72**

இடப்பாகமாக உமையம்மையை வைத்துக் கொண்டு, படமும் புள்ளிகளும் பெரிதாகப் பிளந்த வாயும் உடைய நாகத்தைப் பூண்டுள்ள நள்ளாறுடைய நம் பெருமானே! நீ, உன்னை மனத்தில் கொண்டு சிவபோகமும், புண்ணியர்களாம் அடியவர்கள் கூட்டுறவும் கொண்ட மேனியராகிய சான்றோர்கள் சேர்ந்துறையும் கூடல் ஆலவாயின்கண் அமர்ந்து உறைதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

திருநள்ளாறு

கோவண வாடையும் நீறுப்பூச்சுங்
கொடுமழு வேந்தலுஞ் செஞ்சடையும்
நாவணப் பாட்டும்நள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
பூவண மேனி யிளையமாதர்
பொன்னும் மணியும் கொழித்தெடுத்து
ஆவண வீதியி லாடுங்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. **#73**

வேதமாகிய கோவண ஆடையும் திருநீற்றுப் பூச்சும் கொடிய மழுவாயுதத்தை ஏந்தலும் சிவந்த சடையும் நாவில் பல்வேறு சந்தங்களில் பாடும் வேதப் பாட்டும் உடையவனாய் இலங்கும் நள்ளாற்றுள் எழுந்தருளிய நம் பெருமானே! நீ பூப்போலும்மெல்லிய மேனியை உடைய இளம் பெண்கள் பொன்மணி முதலியவற்றைக் கொழித்து எடுத்துக் கடைவீதியில் விளையாடும் கூடல் ஆலவாயின்கண் அமர்ந்து விளங்கக் காரணம் யாதோ? சொல்வாயாக.

திருநள்ளாறு

இலங்கை யிராவணன் வெற்பெடுக்க
வெழில்விர லூன்றி யிசைவிரும்பி
நலங்கொளச் சேர்ந்தநள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
புலன்களைச் செற்றுப் பொறியைநீக்கிப்
புந்தியி லுந்நினைச் சிந்தைசெய்யும்
அலங்க னல்லார்க ளமருங்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. **#74**

இலங்கை மன்னன் இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தபோது, தனது அழகிய கால் விரலை ஊன்றி அடர்த்துப் பின் அவனது இசையை விரும்பிக்கேட்டு அவனுக்கு நன்மைகள் பலவும் பொருந்துமாறு உளங் கொண்ட நள்ளாறுடைய நம் பெருமானே! நீ, ஐம்புல இன்பங்களை வெறுத்து அவற்றைத் தரும் ஐம்பொறிகளை மடை மாற்றிப் புந்தியில் உன்னையே சிந்தனை செய்யும் தூய வாழ்க்கையையுடைய சிவஞானிகள் வாழும் கூடல் ஆலவாயின்கண் அமர்ந்துறைதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

திருநள்ளாறு

பணியுடை மாலும் மலரினோனும்

பன்றியும் வென்றிப் பறவையாயும்
நணுகல ரியநள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
மணியொலி சங்கொலி யோடுமற்றை
மாமுர சின்னொலி யென்றுமோவா
தணிகிளர் வேந்தர் புகுதுங்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. **#75**

பாம்பணையானாகிய திருமாலும் தாமரை மலரில் எழுந்தருளிய நான்முகனும் முறையே பன்றியாயும் பறவை இனங்களில் மேம்பட்ட அன்னமாயும், அடிமுடிகளை மாறித் தேடியும் நணுக முடியாத நள்ளாறுடைய நம் பெருமானே! நீ மணி ஒலியும், சங்கொலியும், சிறந்த முரசின் ஒலியும் என்றும் இடையறவின்றிக் கேட்கும் சிறப்பினதும் மேம்பட்ட வேந்தர்கள் புகுந்து வழிபடும் பெருமையதும் ஆகிய கூடல் ஆலவாயின்கண் எழுந்தருளி விளங்கக் காரணம் யாதோ? சொல்வாயாக.

<u>திருநள்ளாறு</u>

தடுக்குடைக் கையருஞ் சாக்கியருஞ்
சாதியி னீங்கிய வத்தவத்தர்
நடுக்குற நின்றநள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
எடுக்கும் விழவும் நன்னாள்விழவும்
இரும்பலி யின்பினோ டெத்திசையும்
அடுக்கும் பெருமைசேர் மாடக்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. **#76**

ஓலைத் தடுக்கைக் கையில் ஏந்தித் திரியும் சமணர்களும் சாக்கியர்களும் மரபு நீங்கிய வீண் தவத்தராவர். அவர்கள் மெய்ந் நெறியாகிய சைவசமயத்தைக் கண்டு அச்சமயிகளின் வழிபடு கடவுளைக் கண்டு நடுக்கம் உறுமாறு திரு நள்ளாற்றுள் விளங்கும் நம் பெருமானே! நீ, நாள் விழாவும், சிறப்பு விழாவும் நன்கு நடைபெற, அவ்விழாவில் வழங்கும் பெருவிருந்தால் விளையும் மகிழ்வு எத்திசையும் பொருந்திப் பெருமை சேர்க்கும் மாடக் கூடல் ஆலவாயின் கண் மகிழ்ந்துறைதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

<u>திருநள்ளாறு</u>

அன்புடை யானை யரனைக்கூடல்
ஆலவாய் மேவிய தென்கொலென்று
நன்பொனை நாதனை நள்ளாற்றானை

நயம்பெறப் போற்றி நலங்குலாவும்
பொன்புடை சூழ்தரு மாடக்காழிப்
பூசுரன் ஞானசம் பந்தன்சொன்ன
இன்புடைப் பாடல்கள் பத்தும்வல்லார்
இமையவ ரேத்த விருப்பர்தாமே. #77

எல்லா உயிர்களிடத்தும் அன்புடையவனாம், அரனைக் கூடல் ஆலவாயில் மேவியதற்குக் காரணம் யாதெனக் கேட்டுத் தூய பொன் போன்றவனாகவும், தலைவனாகவும் விளங்கும் திருநள்ளாற்று இறைவனை நயமாகப் போற்றி, நலம் பயக்கும் செம்பொன் நிறைந்த மாட வீடுகளால் சூழப்பட்ட சீகாழிப் பதியில் தோன்றிய பூசுரனாகிய ஞானசம்பந்தன் பாடிய இனிய இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓதவல்லவர், இமையவர் ஏத்தத் தேவருலகில் விளங்குவர்.

திருஆவூர்ப்பசுபதீச்சரம்

திருஆவூர்ப்பசுபதீச்சரம்,
பண் - நட்டபாடை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பசுபதீச்சுரர்.
தேவியார் : மங்களநாயகியம்மை.

புண்ணியர் பூதியர் பூதநாதர்
புடைபடு வார்தம் மனத்தார்திங்கட்
கண்ணிய ரென்றென்று காதலாளர்
கைதொழு தேத்த விருந்தவூராம்
விண்ணுயர் மாளிகை மாடவீதி
விரைகமழ் சோலை சுலாவியெங்கும்
பண்ணியல் பாடல றாதவாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. **#78**

அன்புடை அடியவர் புண்ணியம் திரண்டனைய வடிவினர் எனவும், நிறைந்த செல்வம் உடையவர் எனவும், பூதகணங்களின் தலைவர் எனவும், அருகில் வந்து பரவுவாரின் மனத்தார் எனவும், பிறைமதிக் கண்ணியர் எனவும் கைதொழுது போற்றச் சிவபிரான் எழுந்தருளிய ஊர் ஆகிய வானளாவ உயர்ந்த மாட மாளிகைகளோடு கூடியதும், மணம் கமழும் சோலைகளால் சூழப்பெற்றதும், எங்கும் பண்ணியலோடு கூடிய பாடல்கள் இடைவிடாது கேட்கப்படுவதும் ஆகிய ஆவூர்ப்பசுபதியீச்சரத்தை, நாவே தொழுது பாடுவாயாக.

திருஆவூர்ப்பசுபதீச்சரம்

முத்தியர் மூப்பில ராப்பினுள்ளார்
முக்கணர் தக்கன்றன் வேள்விசாடும்
அத்திய ரென்றென் றடியரேத்தும்
ஐயன ணங்கொ டிருந்தவூராம்
தொத்திய லும்பொழில் மாடுவண்டு
துதைந்தெங்குந் தூமதுப் பாயக்கோயிற்
பத்திமைப் பாடல றாதவாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. **#79**

அடியவர்கள், முத்திச் செல்வத்தை உடையவர் என்றும், மூப்புஇலர் என்றும், மாட்டுத் தறியில் விளங்குபவர் என்றும், முக்கண்ணர் என்றும், தம்மை இகழ்ந்து செய்த தக்கனின் வேள்வியை அழித்தவர் என்றும்,

போற்றித் துதிக்கும் தலைவராகிய சிவபிரான் உமையம்மையாரோடு எழுந்தருளிய ஊராகிய பொழில்களில் கொத்தாக மலர்ந்த பூக்களில் வண்டுகள் தோய்தலால் எங்கும் தூயதேன்துளிகள் பாய்வதும், கோயிலில் பத்தி பூண்ட அடியவர் பாடும் பாடல் இடைவிடாது கேட்பதுமாகிய ஆவூர்ப்பசுபதியீச்சரத்தை நாவே அதனைத் தொழுது பாடுவாயாக.

திருஆவூர்ப்பசுபதீச்சரம்

பொங்கி வரும்புனல் சென்னிவைத்தார்
போம்வழி வந்திழி வேற்றமானார்
இங்குயர் ஞானத்தர் வானோரேத்தும்
இறையவ ரென்றுமி ருந்தவூராம்
தெங்குயர் சோலைசே ராலைசாலி
திளைக்கும் விளைவயல் சேரும்பொய்கைப்
பங்கய மங்கை விரும்புமாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. **#80**

சினந்து வந்த கங்கையைத் தம் திருமுடியில் வைத்தவரும், பிறவி போதற்குரிய பிறப்பான மனிதப் பிறவி எடுத்து இழிவடைதற்கும் ஏற்றம் பெறுதற்கும் உரிய மக்களும் அவருள் இப்பிறப்பில் உயர்தற்குரிய சிவஞானத்தைப் பெற்றோரும் வானவரும் துதிக்கச் சிவபிரான் எழுந்தருளிய ஊர், உயரமாக, வளர்ந்த தென்னஞ் சோலைகளும், கரும்பாலைகளும், செந்நெற்பயிர்களும் திளைத்து விளைவுதரும் வயல்களை உடையதும், பொய்கைகள் சூழ்ந்ததும், திருமகள் விரும்புவதுமாகிய வளம்சான்ற ஆவூர்ப்பசுபதீயீச்சரமாகும். நாவே அதனைப் பாடுவாயாக.

திருஆவூர்ப்பசுபதீச்சரம்

தேவியொர் கூறின ரேறதேறுஞ்
செலவினர் நல்குர வென்னைநீக்கும்
ஆவிய ரந்தண ரல்லல்தீர்க்கும்
அப்பனா ரங்கே யமர்ந்தவூராம்
பூவிய லும்பொழில் வாசம்வீசப்
புரிகுழ லார்சுவ டொற்றிமுற்றப்
பாவியல் பாடல றாதவாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. **#81**

உமாதேவியை ஒரு பாதியாக உடையவர், இடபவாகனத்தில் ஏறி வருபவர். வறுமை புகுதாது என்னைக் காப்பவர். எனக்கு உயிர் போன்றவர். கருணையர், என்துயர் போக்குதலால் எனக்குத் தந்தையாக

விளங்குபவர். அவர் எழுந்தருளிய ஊர், பூக்கள் நிறைந்த பொழில்களின் வாசனை வீசுவதும் சுருண்ட கூந்தலை உடைய மகளிர் காலாலே தாளமிட்டு ஆடித் தேர்ந்த இசையோடு பாடும் பாடல்கள் இடைவிடாது கேட்கப்படுவதுமான ஆவூர்ப்பசுபதி யீச்சரத்தை நாவே அதனைப் பாடுவாயாக.

<u>திருஆவூர்ப்பசுபதீச்சரம்</u>

இந்தணை யுஞ்சடை யார்விடையார்
இப்பிறப் பென்னை யறுக்கவல்லார்
வந்தணைந் தின்னிசை பாடுவார்பால்
மன்னினர் மன்னி யிருந்தவூராம்
கொந்தணை யுங்குழ லார்விழவிற்
கூட்ட மிடையிடை சேரும்வீதிப்
பந்தணையும் விர லார்தமாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. **#82**

திங்கள் தங்கும் சடையினரும், விடையை ஊர்தியாக உடையவரும், என்னைப் பற்றிய இப்பிறவியின் வினையை நீக்கி முத்தியளிக்க வல்லவரும், தம்மை வந்தடைந்து இன்னிசையால் பாடி வழிபடுவாரிடம் மன்னியிருப்பவரும் ஆகிய சிவபிரான், நிலைபெற்று விளங்கும் ஊர், பூங்கொத்தணிந்த கூந்தலை உடைய மங்கல மகளிர் வாழ்வதும், திருவிழாக்களில் மக்கள் கூட்டம் இடையிடையே சேரும் அகன்ற வீதிகளை உடையதும், பந்தாடும் கைவிரல்களினராகிய இளம்பெண்கள் நிறைந்ததுமாகிய ஆவூர்ப்பசுபதியீச்சரத்தை நாவே அதனைப் பாடுவாயாக.

<u>திருஆவூர்ப்பசுபதீச்சரம்</u>

குற்ற மறுத்தார் குணத்தினுள்ளார்
கும்பிடு வார்தமக் கன்புசெய்வார்
ஒற்றை விடையினர் நெற்றிக்கண்ணார்
உறைபதி யாகுஞ் செறிகொண்மாடம்
சுற்றிய வாசலின் மாதர்விழாச்
சொற்கவி பாடநி தானநல்கப்
பற்றிய கையினர் வாழுமாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. **#83**

அடியவர் செய்யும் குற்றங்களை நீக்கியவரும், நற்குணங்களை உடையோரிடம் வாழ்பவரும், தம்மைக் கும்பிடுவார்க்கு அன்பு செய்பவரும், ஓர் எருதைத் தமக்கு ஊர்தியாகக் கொண்டவரும், பிறர்க்கில்லாத நெற்றிக் கண்ணை உடையவரும் ஆகிய சிவபிரான்

உறையும் பதி, செறிந்த மாட வீடுகளைச் சார்ந்துள்ள வாசலில் விழாக் காலங்களில் பெண்கள் புகழ்ந்து கவி பாடக் கேட்டு அவ்வீடுகளில் வாழும் செல்வர்கள் பொற்காசுகள் வழங்க, அதனைப் பற்றிய கையினராய் மகளிர் மகிழ்ந்துறையும் ஆவூர்ப்பசுபதியீச்சரமாகும். நாவே அதனைத் தொழுது பாடுக.

திருஆவூர்ப்பசுபதீச்சரம்

நீறுடை யார்நெடு மால்வணங்கு
நிமிர்சடை யார்நினை வார்தமுள்ளம்
கூறுடை யாருடை கோவணத்தார்
குவலய மேத்தவி ருந்தவூராம்
தாறுடை வாழையிற் கூழைமந்தி
தகுகனி யுண்டுமிண் டிட்டினத்தைப்
பாறிடப் பாய்ந்துப யிலுமாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. **#84**

திருவெண்ணீற்றை அணிந்தவரும், திருமாலால் வணங்கப் பெறுபவரும், நிமிர்த்துக் கட்டிய சடைமுடியுடையவரும், தம்மை நினைவார் உள்ளத்தில் குடி கொண்டிருப்பவரும், கோவண ஆடை தரித்தவரும் ஆகிய சிவபிரான், மண்ணுலக மக்கள் தம்மைப் புகழ்ந்து போற்ற எழுந்தருளிய ஊர், குள்ளமான மந்தி பழுத்துள்ள வாழைத் தாற்றில் உண்ணத் தகுதியான பழங்களை வயிறார உண்டு, எஞ்சியுள்ள பழங்களை உண்ணவரும் குரங்குகளை அஞ்சுமாறு பாய்ந்து விரட்டும் தோட்டங்களை உடைய ஆவூர்ப் பசுபதியீச்சரமாகும். நாவே அதனைப் பாடுவாயாக.

திருஆவூர்ப்பசுபதீச்சரம்

வெண்டலை மாலை விரவிப்பூண்ட
மெய்யுடை யார்விற லாரரக்கன்
வண்டமர் பூமுடி செற்றுகந்த
மைந்தரி டம்வள மோங்கியெங்கும்
கண்டவர் சிந்தைக் கருத்தின்மிக்கார்
கதியரு ளென்றுகை யாரக்கூப்பிப்
பண்டலர் கொண்டு பயிலுமாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. **#85**

வெண்மையான தலைகளை மாலையாகக் கோத்துப் பிற மாலைகளுடன் அணிந்துள்ள திருமேனியை உடையவரும், வண்டுகள் மொய்க்கும் மலர்களைச் சூடிய வலிய இராவணனின் முடியை நெரித்து மகிழ்ந்த வலியரும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள இடம்,

எங்கும் வளம் ஓங்கியதும், தரிசித்தவர்கள் சித்தத்தால் உயர்ந்தவர்களாய்த் தமக்குக் கதியருள் என்று கைகளைக் கூப்பிப் பழமைதொட்டுச் சிவபெருமானுக்கு உரியனவாகிய மலர்களைச் சாத்தி வழிபடும் இயல்பினதும் ஆகிய ஆவூர்ப்பசுபதியீச்சரமாகும். நாவே அதனைப் பாடுவாயாக.

திருஆவூர்ப்பசுபதீச்சரம்

மாலு மயனும் வணங்கிநேட
மற்றவ ருக்கெரி யாகிநீண்ட
சீல மறிவரி தாகிநின்ற
செம்மையி னாரவர் சேருமூராம்
கோல விழாவி னரங்கதேறிக்
கொடியிடை மாதர்கள் மைந்தரோடும்
பாலென வேமொழிந் தேத்துமாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. **#86**

திருமாலும் பிரமனும் வணங்கித் தேட, அவர்கட்குச் சோதிப் பிழம்பாய்நீண்டு தோன்றிய, அறிதற்கு அரியராய் விளங்கும் செம்மையராகிய சிவபிரான் எழுந்தருளிய ஊர், அழகிய விழாக் காலங்களில் கொடியிடைப் பெண்கள் அரங்கின்கண் ஏறி ஆடவர்களோடு கூடிப் பால்போன்று இனிக்கும் மொழிகளால் இறைவனை ஏத்தும் ஆவூர்ப் பசுபதியீச்சரமாகும். நாவே அதனைப் பாடுவாயாக.

திருஆவூர்ப்பசுபதீச்சரம்

பின்னிய தாழ்சடை யார்பிதற்றும்
பேதைய ராஞ்சமண் சாக்கியர்கள்
தன்னிய லும்முரை கொள்ளகில்லாச்
சைவ ரிடந்தள வேறுசோலைத்
துன்னிய மாதரும் மைந்தர்தாமுஞ்
சுனையிடை மூழ்கித் தொடர்ந்த சிந்தைப்
பன்னிய பாடல் பயிலுமாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. **#87**

பின்னித் தொங்கவிடப்பட்ட சடையை உடையவராய், அறிவின்மையோடு சமணர்கள் சாக்கியர்கள் ஆகியோர் தங்களைப் பற்றியும் தாங்கள் சார்ந்த மதங்களின் சிறப்புக்களைப் பற்றியும் கூற, அவற்றை ஏலாதவராய் விளங்கும் சைவன் விரும்பி உறையும் இடம், முல்லைக் கொடி படர்ந்த சோலைகளில் மாதரும் மைந்தரும் நெருங்கிச் சுனையில் மூழ்கிச் சிவபிரானை மனம் ஒன்றிப்பாடும் ஆவூர்ப்

பசுபதியீச்சரமாகும். நாவே அதனைப் பாடுவாயாக.

திருஆவூர்ப்பசுபதீச்சரம்

எண்டிசை யாரும்வ ணங்கியேத்தும்
எம்பெரு மானையெ ழில்கொளாவூர்ப்
பண்டுரி யார்சிலர் தொண்டர்போற்றும்
பசுபதி யீச்சரத் தாதிதன் மேல்
கண்டல்கண் மிண்டிய கானற்காழிக்
கவுணியன் ஞானசம் பந்தன்சொன்ன
கொண்டினி தாவிசை பாடியாடிக்
கூடும வருடை யார்கள்வானே. **#88**

எட்டுத் திசையில் உள்ளவர்களும் வணங்கிப் போற்றும் எம் தலைவரும், அழகிய ஆவூரில் பழ அடியார்களால்போற்றப் பெறுபவரும் ஆகிய பசுபதியீச்சரத்து இறைவர்மேல் தாழை மரங்கள் நிறைந்த கடற்கரைச் சோலைகளால் சூழப்பட்ட சீகாழிப் பதியில் கவுணியர் குடியில் தோன்றிய ஞானசம்பந்தன் பாடிய பாடல்களை இசையோடு பாடி ஆடி வணங்குபவர்கள், வானகத்தைத் தமது உடைமையாகப் பெறுவர்.

திருவேணுபுரம்

சீர்காழி

திருவேணுபுரம்,
பண் - நட்டபாடை, வேணுபுரம் என்பது சீகாழிக்கொருபெயர்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

வண்டார்குழ லரிவையொடு
பிரியாவகை பாகம்
பெண்டான்மிக வானான்பிறைச்
சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை
தவளந்நெடு மாடம்
விண்டாங்குவ போலும்மிகு
வேணுபுர மதுவே. **#89**

வண்டுகள் மொய்க்கும் கூந்தலை உடைய பெண்ணாகிய உமையம்மை, தன்னிற் பிரியாதிருக்கத் தன் திருமேனியில் இடப்பாகத்தை அளித்து, அப்பாகம் முழுதும் பெண் வடிவானவனும், பிறையணிந்த திருமுடியை உடையவனும் ஆகிய பெருமானது ஊர், தாமரை மலரில் விளங்கும் திருமகள் வாழும் வெண்மையான பெரிய மாடங்கள் விண்ணைத் தாங்குவன போல உயர்ந்து விளங்கும் வேணுபுரமாகும்.

சீர்காழி

படைப்புந்நிலை யிறுதிப்பயன்
பருமையோடு நேர்மை
கிடைப்பல்கண முடையான்கிறி
பூதப்படை யானூர்
புடைப்பாளையின் கமுகின்னொடு
புன்னைமலர் நாற்றம்
விடைத்தேவரு தென்றன்மிகு
வேணுபுர மதுவே. **#90**

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் புரிவோனும், அவற்றின் முடிந்த பயனாய வீட்டின்ப வடிவாய் விளங்குவோனும், பருமை நுண்மை இவற்றிற்கோர் எல்லையாக இருப்பவனும், வேதங்களை ஓதும் கணங்களை உடையோனும், வஞ்சகமான பூதப்படைகளை உடையவனும் ஆகிய சிவபிரானது ஊர், பக்கங்களில்

வெடித்து மலர்ந்திருக்கும் கமுகம் பாளையின் மணத்தோடு புன்னை மலர்களின் மணத்தைத் தாங்கி மெல்லெனப் பெருமிதத்தோடு வரும் தென்றல் காற்று மிகுந்து வீசும் வேணுபுரம் ஆகும்.

சீர்காழி

கடந்தாங்கிய கரியையவர்
வெருவவுரி போர்த்துப்
படந்தாங்கிய வரவக்குழைப்
பரமேட்டிதன் பழவூர்
நடந்தாங்கிய நடையார்நல
பவளத்துவர் வாய்மேல்
விடந்தாங்கிய கண்ணார்பயில்
வேணுபுர மதுவே. **#91**

தாருகாவனத்து முனிவர்கள் ஏவிய மதநீர் ஒழுகும் யானையை அம்முனிவர்கள் வெருவுமாறு உரித்துப் போர்த்தவரும், படத்தோடு கூடிய பாம்பைக் குழையாக அணிந்தவரும் ஆகிய சிவபிரானது பழமையான ஊர், நடனத்துக்குரிய சதிகளோடு கூடிய நடையையும், அழகிய பவளம் போன்ற சிவந்த வாயினையும் மேலான விடத்தன்மையோடு கூடிய கண்களையும் உடைய அழகிய மகளிர் பலர் வாழும் வேணுபுரம் ஆகும்.

சீர்காழி

தக்கன்றன சிரமொன்றினை
யரிவித்தவன் றனக்கு
மிக்கவ்வர மருள்செய்தவெம்
விண்ணோர்பெரு மானூர்
பக்கம்பல மயிலாடிட
மேகம்முழ வதிர
மிக்கம்மது வண்டார்பொழில்
வேணுபுர மதுவே. **#92**

தக்கனது தலையை வீரபத்திரக் கடவுளைக் கொண்டு அரியச் செய்து, பிழையை உணர்ந்து அவன் வேண்டியபோது அவனுக்கு மிகுதியான வரங்கள் பலவற்றை அளித்தருளிய வானோர் தலைவனாகிய சிவபெருமானது ஊர், மேகங்கள் முழவாக ஒலிக்க, நாற்புறமும் மயில்கள் ஆடுவதும், மிகுதியான தேனை வண்டுகள் அருந்தும் வளமுடையதுமான பொழில்கள் சூழ்ந்த வேணுபுரமாகும்.

சீர்காழி

நானாவித வுருவானமை
யாள்வானணு காதார்
வானார்திரி புரமூன்றெரி
யுண்ணச்சிலை தொட்டான்
தேனார்ந்தெழு கதலிக்கனி
யுண்பான்றிகழ் மந்தி
மேனோக்கிநின் றிரங்கும்பொழில்
வேணுபுர மதுவே. **#93**

அன்போடு வழிபடும் நாம் எவ்வுருவில் நினைக்கின்றோமோ அவ்வுருவில்தோன்றி நம்மை ஆட்கொள்பவனும், தன்னை நணுகாதவராகிய அசுரர்களின் வானில் திரிந்த மூன்றுபுரங்கள் வெந்தழியுமாறு வில்லை வளைத்துக் கணை தொடுத்து எரியூட்டியவனும் ஆகிய சிவபிரானது ஊர், மரங்களில் அமர்ந்த மந்திகள் தேனின் சுவை பொருந்தியனவாய்ப் பழுத்துத் தோன்றிய வாழைப் பழங்களைக் கண்டு அவற்றை உண்ணுதற் பொருட்டு மேல் நோக்கியவாறே தாம் ஏறிப்பறிக்க இயலாத தம் நிலைக்கு வருந்தும் பொழில்கள் சூழ்ந்த வேணுபுரம் ஆகும். "வாழை மரத்தில் குரங்கு ஏறாதன்றோ".

சீர்காழி

மண்ணோர்களும் விண்ணோர்களும்
வெருவிம்மிக வஞ்சக்
கண்ணார்சல மூடிக்கட
லோங்கவ்வுயர்ந் தானூர்
தண்ணார்நறுங் கமலம்மலர்
சாயவ்விள வாளை
விண்ணார்குதி கொள்ளும்வியன்
வேணுபுர மதுவே. **#94**

மண்ணுலக மக்களும் விண்ணகத்தேவரும் கண்டு நடுங்கி மிகவும் அஞ்சுமாறு நிலமெல்லாம் நிறைந்த நீர் மூடிக் கடல் ஊழி வெள்ளமாய் ஓங்க, அவ்வெள்ளத்திலும் அழியாது உயர்ந்து தோணியாய்த் தோன்றுமாறு செய்த சிவபிரானது ஊர், தண்ணிய மணம் கமழும் தாமரை மலர்கள் சாயுமாறு இளவாளை மீன்கள் வானிடை எழுந்து குதிக்கும் நீர்வளம் சான்ற பெரிய வேணுபுரம் ஆகும்.

சீர்காழி

இப்பதிகத்தில் **7**-ம் செய்யுள் சிதைந்து போயிற்று. **#95**

சீர்காழி

மலையான்மக ளஞ்சவ்வரை
யெடுத்தவ்வலி யரக்கன்
தலைதோளவை நெரியச்சர
ணுகிர்வைத்தவன் றன்னூர்
கலையாறொடு சுருதித்தொகை
கற்றோர்மிகு கூட்டம்
விலையாயின சொற்றேர்தரு
வேணுபுர மதுவே. **#96**

மலையரையன் மகளாகிய பார்வதி தேவி அஞ்சுமாறு கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த வலிமை சான்ற இராவணனின் தலைகள் தோள்கள் ஆகியவை நெரியுமாறு கால்விரலை ஊன்றிய சிவபிரானது ஊர், ஆறு அங்கங்களோடு வேதங்களின் தொகுதியைக் கற்றுணர்ந்தோர் தம்முள் கூடும் கூட்டத்தில் விலை மதிப்புடைய சொற்களைத் தேர்ந்து பேசும் கல்வி நலம் சான்றவர் வாழும் வேணுபுரம் ஆகும்.

சீர்காழி

வயமுண்டவ மாலும்மடி
காணாதல மாக்கும்
பயனாகிய பிரமன்படு
தலையேந்திய பரனூர்
கயமேவிய சங்கந்தரு
கழிவிட்டுயர் செந்நெல்
வியன்மேவிவந் துறங்கும் பொழில்
வேணுபுர மதுவே. **#97**

உலகை உண்ட திருமாலும் தன் அடிகளைக் காணாது அலமருமாறு செய்தவனும், மக்கள் அடையத்தக்க பயன்களில் ஒன்றான பிரமலோகத்தை உடைய பிரமனது கிள்ளப்பட்ட தலையோட்டினை ஏந்தியவனுமாகிய சிவபிரானது ஊர்; ஆழ்ந்த நீர் நிலைகளில் வாழும் சங்குகள், கடல் தரும் உப்பங்கழியை விடுத்துச் செந்நெல் விளைந்த அகன்ற வயலில் வந்து உறங்கும் வேணுபுரமாகும்.

சீர்காழி

மாசேறிய வுடலாரமண்
குழுக்கள்ளொடு தேரர்
தேசேறிய பாதம்வணங்

காமைத்தெரி யானூர்
தூசேறிய வல்குற்றுடி
யிடையார்துணை முலையார்
வீசேறிய புருவத்தவர்
வேணுபுர மதுவே. **#98**

அழுக்கேறிய உடலினை உடையவர்களாகிய சமணர் கூட்டத்தினரோடு, புத்த மதத்தினராகிய தேரர்களும் ஒளி பொருந்திய திருவடிகளை வணங்காமையால் அவர்களால் அறியப் பெறாத சிவபிரானது ஊர்; அழகிய ஆடை தோயும் அல்குலையும், உடுக்கை போன்ற இடையையும், பருத்த தனங்களையும், ஆடவர் மேல் தம் குறிப்பு உணர்த்தி நெரியும் புருவங்களையும் உடைய அழகிய மகளிர் வாழும் வேணுபுரம் ஆகும்.

<u>சீர்காழி</u>

வேதத்தொலி யானும்மிகு
வேணுபுரந் தன்னைப்
பாதத்தினின் மனம்வைத்தெழு
பந்தன்றன பாடல்
ஏதத்தினை யில்லாவிவை
பத்தும்மிசை வல்லார்
கேதத்தினை யில்லார்சிவ
கெதியைப்பெறு வாரே. **#99**

ஞானசம்பந்தரின் ஏதம் இல்லாத இப்பத்துப் பாடல்களையும் இசையோடு பாடுவார் சிவகதி பெறுவார் என வினை முடிபு கொள்க. மங்கல ஒலிகள் பலவற்றோடு வேத ஒலியாலும் மிக்குத் தோன்றும் வேணுபுரத்துப் பெருமானின் பாதங்களை மனத்துட் கொண்டு பாடப்பெற்ற ஞானசம்பந்தரின் துன்பந்தரல் இல்லாத இப்பதிகப் பாடல்களை இசையோடு பாடவல்லவர் துயர் நீங்குவர்; முடிவில் சிவகதியைப் பெறுவர்.

திருஅண்ணாமலை

திருஅண்ணாமலை

திரு அண்ணாமலை,
பண் - நட்டபாடை,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அருணாசலேசுவரர்.
தேவியார் : உண்ணாமுலையம்மை.

உண்ணாமுலை யுமையாளொடும்
உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண்
மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ண மறுமே. #100 ★★★★★

உண்ணாமுலை என்னும் திருப்பெயருடைய உமையம்மையாரோடு உடனாக எழுந்தருளியவரும், தம் இடப்பாகம் முழுவதும் பெண்ணாகியவருமாகிய சிவபிரானது மலை, அடித்து வரும் அழகிய மணிகள் சுடர்விட மண்ணை நோக்கி வருவனவாகிய அருவிகள் பொருள் புரியாத மழலை ஒலியோடு கூடிய முழவு போல ஒலிக்கும் திருவண்ணாமலை யாகும். அதனைத் தொழுவார் வினைகள் தவறாது கெடும்.

திருஅண்ணாமலை

தேமாங்கனி கடுவன்கொள
விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுகன்மிசை
சிறுநுண்டுளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழி
லண்ணாமலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி
நினைவார்வினை யிலரே. #101

கிளைகளை வளைத்து இனிய மாங்கனிகளை உண்ட ஆண் குரங்குகள் விடுத்த அக்கொம்புகள் வேகமாகத் தீண்டப்படுதலால் தூய மழை மேகங்கள் மலைப் பாறைகளில் சிறிய நுண்ணியவான மழைத்துளிகளைச் சிதறுவதால் காட்டுப்பசுக்கள் மழை எனக் கருதி

மரநிழலை அடையும் பொழில்களை உடைய அண்ணாமலை இறைவனின், அழகிய மலர் போன்றனவும் வீரக்கழல் அணிந்தனவுமான சிவந்த திருவடிகளை நினைவார் வினை இலராவர்.

திருஅண்ணாமலை

பீலிம்மயில் பெடையோடுறை
பொழில்சூழ்கழை முத்தம்
சூலிம்மணி தரைமேனிறை
சொரியும்விரி சாரல்
ஆலிம்மழை தவழும்பொழி
லண்ணாமலை யண்ணல்
காலன்வலி தொலைசேவடி
தொழுவாரன புகழே. **#102**

தோகைகளோடு கூடிய ஆண்மயில்கள் பெண் மயில்களோடு உறையும் பொழில் சூழ்ந்ததும், மூங்கில்கள் சூல்கொண்டு உதிர்க்கும் முத்துக்கள் நிறைந்து சொரிவதும், விரிந்த மலைப் பகுதிகளில் நீர்த்துளிகளோடு கூடிய மழை மேகங்கள் தவழும் பொழில்களை உடையதுமாகிய அண்ணாமலை, இறைவனின், காலனது வலிமையைத் தகர்த்த சிவந்த திருவடிகளைத் தொழுவார் மேலன புகழ். (தொழுவார் புகழ் பெறுவர் என்பதாம்)

திருஅண்ணாமலை

உதிரும்மயி ரிடுவெண்டலை
கலனாவுல கெல்லாம்
எதிரும்பலி யுணலாகவு
மெருதேறுவ தல்லால்
முதிருஞ்சடை யிளவெண்பிறை
முடிமேல்கொள வடிமேல்
அதிருங்கழ லடிகட்கிடம்
அண்ணாமலை யதுவே. **#103**

உடலிலிருந்து பிரிக்கப்பட்ட மயிர் நீங்கிய பிரமனது வெண்மையான தலையோட்டை உண்கலனாக் கொண்டு உலகெலாம் திரிந்து ஏற்கும் பலியை உணவாகக் கொள்ளுதற்கு எருது ஏறி வருவதோடு முதிர்ந்த சடைமுடியின் மீது வெண்பிறையைச் சூடித் திருவடிகளில் அதிரும் வீரக் கழல்களோடு விளங்கும் சிவபிரானுக்குரிய இடம் திருவண்ணாமலையாகும்.

திருஅண்ணாமலை

மரவஞ்சிலை தரளம்மிகு
மணியுந்துவெள் ளருவி
அரவஞ்செய முரவம்படும்
அண்ணாமலை யண்ணல்
உரவஞ்சடை யுலவும்புன
லுடனாவது மோரார்
குரவங்கமழ் நறுமென்குழல்
உமைபுல்குதல் குணமே. **#104**

வெண் கடம்பமரம், சிலை, முத்து, மிக்க மணிகள் ஆகியவற்றை உந்திவரும் வெண்மையான அருவிகள் பறைபோல ஆரவாரம் செய்யும் திருவண்ணாமலையில் விளங்கும் அண்ணலாகிய சிவபிரான், சடையில் பாம்பும் கங்கையும் உடனாயிருந்து உலவுவதை ஓராமல், குராமணம் கமழும் மென்மையான கூந்தலை உடைய உமையம்மையாரைத் தழுவுதல் நன்றோ?

திருஅண்ணாமலை

பெருகும்புன லண்ணாமலை
பிறைசேர்கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி
யணிவாரது பருகிக்
கருகும்மிட றுடையார்கமழ்
சடையார்கழல் பரவி
உருகும்மன முடையார்தமக்
குறுநோயடை யாவே. **#105**

பெருகிவரும் அருவி நீரை உடைய திருவண்ணாமலையில் பிறைமதி தோன்றிய பாற்கடலிடைத் தோன்றிய நஞ்சை உட்கொள்ளும் அளவிற்குத் துணிபுடையவரும், அந் நஞ்சினை உண்டு கண்டம் கறுத்தவரும், திருவெண்ணீற்றை அணிந்தவரும், மணம் கமழும் சடைமுடியை உடையவரும் ஆகிய சிவபிரானின் திருவடிகளை வாழ்த்தி உருகும் மனம் உடையவர்கட்கு மிக்க நோய்கள் எவையும் வாரா.

திருஅண்ணாமலை

கரிகாலன குடர்கொள்வன
கழுதாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலை
யுதையுண்டவை யுருள
எரியாடிய விறைவர்க்கிட
மினவண்டிசை முரல

அரியாடிய கண்ணாளொடும்
அண்ணாமலை யதுவே. #106
கரிந்த கால்களை உடையனவும், குடரைப் பிடுங்கி உண்பனவும் ஆகிய பேய்கள் ஆடும் இடுகாட்டில், நரிகள் உருட்டி விளையாடும் சிரிக்கும் வெண்டலை ஓடுகள் உதைக்கப்பட்டு உருள, கையில் எரி ஏந்தி ஆடும் சிவபெருமான், வண்டுக் கூட்டங்கள் இசைபாடச் செவ்வரி பரந்த கண்களை உடைய உமையம்மையோடு எழுந்தருளிய இடம், திருவண்ணாமலை.

திருஅண்ணாமலை

ஒளிறூபுலி யதளாடையன்
உமையஞ்சுதல் பொருட்டால்
பிளிறூகுரன் மதவாரண
வதனம்பிடித் துரித்து
வெளிறூபட விளையாடிய
விகிர்தன்னிரா வணனை
அளறூபட வடர்த்தானிடம்
அண்ணாமலை யதுவே. #107
ஒளி செய்யும் புலித்தோலை ஆடையாகக் கொண்டவனும், உமையம்மை அஞ்சுமாறு பிளிறும் குரலை உடைய மதம் பொருந்திய யானையின் தலையைப் பிடித்து அதன் தோலை உரித்து எளிதாக விளையாடிய விகிர்தனும், இராவணனை மலையின்கீழ் அகப்படுத்தி இரத்த வெள்ளத்தில் அடர்த்தவனும் ஆகிய சிவபெருமானது இடம் திருவண்ணாமலை.

திருஅண்ணாமலை

விளவார்கனி படநூறிய
கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை
கேடில்புக ழோனும்
அளவாவண மழலாகிய
அண்ணாமலை யண்ணல்
தளராமுலை முறுவல்லுமை
தலைவன்னடி சரணே. #108
விள மரத்தின் கனியை உகுப்பது போல அம்மரவடிவாய் நின்ற அரக்கனை அழித்த கருங்கடல் வண்ணனாகிய திருமாலும், நீரில் கிளர்ந்து தோன்றிய தாமரை மலர்மேல் உறையும்குற்றம் அற்ற புகழாளனாகிய வேதாவும் அடிமுடிகளை அளவிட்டுக் காண

இயலாதவாறு அழல் வடிவாய் நின்ற தலைவனும், தளராத தனபாரங்களையும் மலர்ந்த சிரிப்பையும் உடைய உமையம்மையின் கணவனும் ஆகிய சிவபிரானின் திருவடிகளே நமக்குக் காப்பு.

திருஅண்ணாமலை

வேர்வந்துற மாசூர்தர
வெயினின்றுழல் வாரும்
மார்பம்புதை மலிசீவர
மறையாவரு வாரும்
ஆரம்பர்த முரைகொள்ளன்மின்
அண்ணாமலை யண்ணல்
கூர்வெண்மழுப் படையானல்ல
கழல்சேர்வது குணமே. **#109**

உடலில் வியர்வை தோன்றவும் அழுக்கேறவும் வெயிலில் நின்று உழல்வதைத் தவமாகக் கொள்வோராகிய சமணரும், மரவுரியால் மார்பை மிகவும் மறைத்து வருபவர் ஆகிய புத்தரும் போதிய பயிற்சியின்றித் தொடக்க நிலையில் உள்ளவர்கள் ஆதலின், அவர்களுடைய உரைகளைக் கொள்ளாதீர். திருவண்ணாமலையில் உறையும் தலைவனும் கூரிய வெண்மையான மழுவாயுதத்தைக் கைக் கொண்டவனும் ஆகிய சிவபெருமானது நன்மைதரும் திருவடிகளை அடைதலே மேலானகுணம்.

திருஅண்ணாமலை

வெம்புந்திய கதிரோனொளி
விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவன்
அண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ
குளிர்காழியுண் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவர்
அடிபேணுதல் தவமே. **#110**

வெம்மை மிக்க கதிரவன் ஒளிபுகாதவாறு தடுக்கும் விரிந்த சாரலை உடையதும், அம்பைச் செலுத்தி முப்புரங்களை அழித்த சிவபிரான் எழுந்தருளியதுமான அண்ணாமலையைக் கொம்பு என்னும் வாத்தியங்களின் ஒலியைக் கேட்டு குயில்கள் எதிர் ஒலிக்கும் குளிர்ந்த காழிப் பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன் பாடிய இத்திருப்பதிகத் தமிழை ஓதவல்லவர்களின் திருவடிகளை வணங்குதல் சிறந்த தவமாம்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை

திருவீழிமிழலை,
பண் - நட்டபாடை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

சடையார்புன லுடையானொரு
சரிகோவண முடையான்
படையார்மழு வுடையான்பல
பூதப்படை யுடையான்
மடமான்விழி யுமைமாதிட
முடையானெனை யுடையான்
விடையார்கொடி யுடையானிடம்
வீழிம்மிழ லையே. **#111**

சடைமுடியில் கங்கையைத் தரித்தவனும், இடையினின்று சரிந்து நழுவும் ஒப்பற்ற கோவண ஆடையை அணிந்தவனும், மழுப் படையை உடையவனும், பலவகையான பூதங்களைப் படையாகக் கொண்டவனும், மடமைத் தன்மை பொருந்திய மான்விழி போன்ற விழிகளை உடைய உமையம்மையாகிய பெண்ணை இடப்பாகத்தே கொண்டவனும், என்னை ஆளாக உடையவனும், விடைக் கொடி உடையவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய இடம் திருவீழிமிழலை.

திருவீழிமிழலை

ஈறாய்முத லொன்றாயிரு
பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு
பூதம்மவை யைந்தாய்
ஆறார்சுவை யேழோசையொ
டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானானிடம்
வீழிம்மிழ லையே. **#112**

ஊழிக் காலத்தில் அனைத்தையும் ஒடுக்குவோனாய், ஒடுங்கிய உடலைத் தானொருவனே முதற்பொருளாய் நின்று தோற்றுவிப்பவனாய், சக்தி சிவம் என இருவகைப்பட்டவனாய், முக்குண வடிவினனாய், எக்காலத்தும் மாறுபடாத நான்மறை

வடிவினனாய், ஐம்பெரும் பூதங்கள், ஆறுசுவை, ஏழு ஓசை, எட்டுத்திசை ஆகியவற்றில் நிறைந்தவனாய் உயிரோடு ஒன்றாகியும், வேறாகியும், உடனாகியும் விளங்கும் இறைவனது இடம் திருவீழிமிழலை.

திருவீழிமிழலை

வம்மின்னடி யீர்நாண்மல
ரிட்டுத்தொழு துய்ய
உம்மன்பினொ டெம்மன்புசெய்
தீசன்னுறை கோயில்
மும்மென்றிசை முரல்வண்டுகள்
கெண்டித்திசை யெங்கும்
விம்மும்பொழில் சூழ்தண்வயல்
வீழிம்மிழ லையே. **#113**

அன்றலர்ந்த மலர்களைச் சாத்தி வணங்கி உய்தி பெற அடியவர்களே வாருங்கள். உயர்ந்த உம் அன்போடு எம் அன்பையும் ஏற்றருளும் இறைவன் உறையும் கோயில், மும் என்ற ஒலிக்குறிப்போடு இசைபாடும் வண்டுகள் மலர்களைக் கிளறுவதால் திசையெங்கும் மணம் கமழும் பொழில்கள் சூழ்ந்ததும், தண்ணிய வயல்களைக் கொண்டதுமாகிய திருவீழிமிழலை.

திருவீழிமிழலை

பண்ணும்பத மேழும்பல
வோசைத்தமி ழவையும்
உண்ணின்றதொர் சுவையும்முறு
தாளத்தொலி பலவும்
மண்ணும்புன லுயிரும்வரு
காற்றுஞ்சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானானிடம்
வீழிம்மிழ லையே. **#114**

இசையும், அதற்கு அடிப்படையான ஏழு சுரங்களும் வல்லோசை, மெல்லோசை முதலியனவற்றையுடைய தமிழும் உள்ளத்துணர்வாகிய சுவையும், பொருந்திய தாள வேறு பாட்டு ஒலிகளும், மண், புனல், உயிர், காற்று, நெருப்பு, சூரியன், சந்திரன், விண் ஆகிய எண்வகை வடிவங்களும் ஆகிய இறைவனது இடம் திருவீழிமிழலை.

திருவீழிமிழலை

ஆயாதன சமயம்பல
வறியாதவன் நெறியின்

தாயானவ னுயிர்கட்குமுன்
தலையானவன் மறைமுத்
தீயானவன் சிவனெம்மிறை
செல்வத்திரு வாரூர்
மேயானவ னுறையும்மிடம்
வீழிம்மிழ லையே. **#115**

சுருதி, யுக்தி, அநுபவங்களால் ஆராய்ச்சி செய்யாத பல சமயங்களால் அறியப் பெறாதவன். அறநெறிகளின் தாயாய் விளங்குவோன். எல்லா உயிர்கட்கும் அநாதியாகவே தலைவன். வேத வேள்விகளில் முத்தீ வடிவினன். சிவன் எனும் திருப் பெயருடையவன். எங்கட்குத் தலைவன். செல்வம் நிறைந்த திருவாரூரில் எழுந்தருளியிருப்பவன். அத்தகையோன் உறையுமிடம் திருவீழிமிழலை.

திருவீழிமிழலை

கல்லானிழற் கீழாயிடர்
காவாயென வானோர்
எல்லாமொரு தேராயயன்
மறைபூட்டிநின் றுய்ப்ப
வல்லாயெரி காற்றீர்க்கரி
கோல்வாசுகி நாண்கல்
வில்லாலெயி லெய்தானிடம்
வீழிம்மிழ லையே. **#116**

சிவபிரான் கல்லால மரநிழற்கீழ் யோகியாய் வீற்றிருந்த காலத்து அசுரர்களால் இடருழந்த வானோர் காவாய் என வேண்ட, சூரிய சந்திரராகிய சக்கரம் பூட்டிய பூமியைத் தேராகக் கொண்டு நான்முகன் வேதங்களாகிய தேரிற் பூட்டிய குதிரைகளைச் செலுத்த, அக்கினிதேவனை வலிய வாயாகவும், வாயுதேவனை இறகாகவும் கொண்ட திருமால் ஆகிய அம்பை வாசுகி என்னும் பாம்பினை நாணாகப் பூட்டி மேருமலையாகிய வில்லால் செலுத்தித் திரிபுரங்களை எய்து அழித்த சிவபிரானது இடம் திருவீழிமிழலை.

திருவீழிமிழலை

கரத்தான்மலி சிரத்தான்கரி
யுரித்தாயதொர் படத்தான்
புரத்தார்பொடி படத்தன்னடி
பணிமூவர்கட் கோவா
வரத்தான்மிக வளித்தானிடம்
வளர்புன்னைமுத் தரும்பி

விரைத்தாதுபொன் மணியீன்றணி
வீழிம்மிழ லையே. **#117**

பிரமகபாலம் பொருந்திய திருக்கரத்தினன். யானையை உரித்ததால் கிடைத்ததொரு மேற்போர்வையினன். முப்புர அசுரர் அழியத் தன்னடி பணிந்த அம்முப்புரத்தலைவர் மூவர்கட்கும் மிக்க வரங்களை அளித்தவன். அப்பெருமானது இடம், வளர்ந்தோங்கிய புன்னை மரங்கள் முத்துக்கள் போல் அரும்பி மலர்ந்து பொன் தாதுக்களை ஈன்று பச்சை மணிகளைப்போல் காய்த்து அழகு செய்கின்ற திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

முன்னிற்பவ ரில்லாமுர
ணரக்கன்வட கயிலை
தன்னைப்பிடித் தெடுத்தான்முடி
தடந்தோளிற வூன்றிப்
பின்னைப்பணிந் தேத்தப்பெரு
வாள்பேரொடுங் கொடுத்த
மின்னிற்பொலி சடையானிடம்
வீழிம்மிழ லையே. **#118**

தன்னை எதிர்த்து நிற்பார் யாரும் இல்லாத வலிமை பெற்ற அரக்கனாகிய இராவணன் வடதிசையிலுள்ள கயிலாய மலையைப் பற்றித் தூக்கினான். அவன் தலைகள் தோள்கள் ஆகியன நெரிய ஊன்றி அதனால் இடருழந்த அவன் பின்னர்ப் பணிந்தேத்த அவனுக்குப் பெரிதாகிய வாள், இராவணன் என்ற பெயர் ஆகியனவற்றைக் கொடுத்தருளிய மின்னல் போலப் பொலியும் சடைமுடியை உடைய சிவபிரானது இடம் திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

பண்டேழுல குண்டானவை
கண்டானுமுன் னறியா
ஒண்டீயுரு வானானுறை
கோயின்னிறை பொய்கை
வண்டாமரை மலர்மேன்மட
வன்னந்நடை பயில
வெண்டாமரை செந்தாதுதிர்
வீழிம்மிழ லையே. **#119**

முன்னொரு காலத்து ஏழுலகையும் தன் வயிற்றில் அடக்கிக்காட்டிய திருமாலும், அவ்வுலகங்களைப் படைத்தருளிய நான்முகனும் தன்னை

அறியாதவாறு ஒளி பொருந்திய தீயுருவான சிவபிரான் உறையும் கோயில்; நீர் நிறைந்த பொய்கைகளில் பூத்த செழுமையான தாமரை மலர்மீது இள அன்னம் நடை பயில வெண் தாமரை சிவந்த தாதுக்களை உதிர்க்கும் திருவீழிமிழலையாகும். அன்னத்தின் நிறத்தால் செந்தாமரை வெண்தாமரை ஆயிற்று. அதன் கால்களின் செம்மையால் பொன்னிறத்தாதுக்கள் செந்தாதுக்கள் ஆயின.

திருவீழிமிழலை

மசங்கற்சமண் மண்டைக்கையர்
குண்டக்குண மிலிகள்
இசங்கும்பிறப் பறுத்தானிடம்
இருந்தேன்களித் திரைத்துப்
பசும்பொற்கிளி களிமஞ்ஞைகள்
ஒளிகொண்டெழு பகலோன்
விசும்பைப்பொலி விக்கும்பொழில்
வீழிம்மிழ லையே. **#120**

மயக்க உணர்வுடையவரும், பிச்சை ஏற்கும் மண்டை என்னும் பாத்திரத்தைக் கையின்கண் ஏந்தியவரும், நற்குணங்கள் இல்லாதவர்களும் ஆகிய சமணர், புத்தர்கள் நிற்கத் தன்னை வழிபடும் அன்பர்கட்கு வினைவயத்தாற் பொருந்திய பிறப்பினைப் போக்கியவன் எழுந்தருளிய இடம், மிகுதியான தேனீக்கள் தேனை உண்டு களித்து ஒலி செய்யவும், பசுமை நிறமேனியும் பொன் நிறக்காலும் உடைய கிளிகளும், களிப்புற்ற மயில்களும் நிறைந்ததும் ஒளியோடு தோன்றும் கதிரவன் இருக்கும் வான மண்டலத்தை அழகுறுத்துவதும் ஆகிய பொழில் சூழ்ந்த திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

வீழிம்மிழ லைம்மேவிய
விகிர்தன்றனை விரைசேர்
காழிந்நகர் கலைஞானசம்
பந்தன்றமிழ் பத்தும்
யாழின்னிசை வல்லார்சொலக்
கேட்டாரவ ரெல்லாம்
ஊழின்மலி வினைபோயிட
வுயர்வானடை வாரே. **#121**

வீழிமிழலையுள் எழுந்தருளிய விகிர்தனாகிய இறைவனைப்பற்றி மணம் பொருந்திய சீகாழிப் பதியில் தோன்றிய கலைவல்ல ஞானசம்பந்தன் பாடியருளிய பாடல்கள் பத்தினையும் யாழிசையில் பாட வல்லார்களும்

சொல்லக் கேட்டார்களும் ஆகிய அனைவரும் ஊழாக அமைந்த வினைகள் நீங்கச் சிவப்பேறு எய்துவர்.

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம்,
பண் - நட்டபாடை,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது, இதுவே விருத்தாசலம். ,
சுவாமிபெயர் : பழமலைநாதர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

மத்தாவரை நிறுவிக்கடல்
கடைந்தவ்விட முண்ட
தொத்தார்தரு மணிநீண்முடிச்
சுடர்வண்ணன திடமாம்
கொத்தார்மலர் குளிர்சந்தகி
லொளிர்குங்குமங் கொண்டு
முத்தாறுவந் தடிவீழ்தரு
முதுகுன்றடை வோமே. **#122**

மந்தர மலையை மத்தாக நட்டுக் கடலைக் கடைந்தபோது, கொடிது எனக் கூறப்பெறும் ஆலகால விடம் தோன்ற, அதனை உண்டவனும், பூங்கொத்துக்கள் சூடிய அழகிய நீண்ட சடை முடியினனும், எரி சுடர் வண்ணனும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளிய இடம்; மலர்க் கொத்துக்கள் குளிர்ந்த சந்தனம் அகில் ஒளிதரும் குங்கும மரம் ஆகியவற்றை அலைக்கரங்களால் ஏந்திக் கொண்டு வந்து மணிமுத்தாறு அடிவீழ்ந்து வணங்கும் திருமுதுகுன்றமாகும். அதனை அடைவோம்.

திருமுதுகுன்றம்

தழையார்வட வியவீதனில்
தவமேபுரி சைவன்
இழையாரிடை மடவாளொடும்
இனிதாவுறை விடமாம்
மழைவானிடை முழவவ்வெழில்
வளைவாளுகி ரெரிகண்
முழைவாளரி குமிறும்முயர்
முதுகுன்றடை வோமே. **#123**

தழைகளுடன் கூடிய ஆலமர நீழலில் யோகியாய் வீற்றிருந்து தவம் செய்யும் சிவபிரான், போகியாய் நூலிழை போன்ற இடையினை உடைய உமையம்மையோடு மகிழ்ந்துறையும் இடம், மேகங்கள் வானின்கண் இடித்தலைக் கேட்டு யானையின் பிளிறல் எனக்கருதி

அழகிதாய் வளைந்த ஒளி பொருந்தி விளங்கும் நகங்களையும் எரிபோலும் கண்களையும் உடையனவாய்க் குகைகளில் வாழும் சிங்கங்கள் கர்ச்சிக்கும் உயர்ந்த திருமுதுகுன்றமாகும். அதனை வழிபடச் செல்வோம்.

திருமுதுகுன்றம்

விளையாததொர் பரிசில்வரு
பசுபாசவே தனையொண்
தளையாயின தவிரவ்வருள்
தலைவன்னது சார்பாம்
களையார்தரு கதிராயிரம்
உடையவ்வவ னோடு
முளைமாமதி தவழும்முயர்
முதுகுன்றடை வோமே. **#124**

உயிர்களுடன் அநாதியாகவே வருகின்ற வேதனைகளைத் தரும் பாசங்களாகிய ஒள்ளிய தளைகள் நீங்குமாறு அருள்புரிதற்கு எழுந்தருளிய சிவபிரானது இடம், ஒளி பொருந்திய கிரணங்கள் ஆயிரத்தைக் கொண்ட கதிரவனும் முளைத்தெழுந்து வளரும் சந்திரனும் தவழும் வானளாவிய மலையாகிய திருமுதுகுன்றமாகும். அதனை அடைவோம்.

திருமுதுகுன்றம்

சுரர்மாதவர் தொகுகின்னர
ரவரோதொலை வில்லா
நரரானபன் முனிவர்தொழ
விருந்தானிட நலமார்
அரசார்வர வணிபொற்கல
னவைகொண்டுபன் னாளும்
முரசார்வரு மணமொய்ம்புடை
முதுகுன்றடை வோமே. **#125**

தேவர்களும், சிறந்த தவத்தை மேற் கொண்டவர்களும், கின்னரி மீட்டி இசை பாடும் தேவ இனத்தவரான கின்னரரும், மக்களுலகில் வாழும் மாமுனிவர்களும் தொழுமாறு சிவபிரான் எழுந்தருளிய இடம், அழகிய அரசிளங்குமாரர்கள் வர அவர்களைப் பொன் அணிகலன்கள் கொண்ட வரவேற்கும் மணமுரசு பன்னாளும் ஒலித்தலை உடைய திருமுதுகுன்றமாகும். அதனை அடைவோம்.

திருமுதுகுன்றம்

அறையார்கழ லந்தன்றனை
அயின்மூவிலை யழகார்
கறையார்நெடு வேலின்மிசை
யேற்றானிடங் கருதில்
முறையாயின பலசொல்லியொண்
மலர்சாந்தவை கொண்டு
முறையான்மிகு முனிவர்தொழு
முதுகுன்றடை வோமே. **#126**

ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்த அந்தகாசுரனைக், கூரிய மூவிலை வடிவாய் அமைந்த குருதிக் கறைபடிந்த அழகிய நீண்ட வேலின் முனையில் குத்தி ஏந்திய சிவபெருமானது இடம் யாதெனில், முனிவர்கள் பலரும் வேதங்கள் பலவும் சொல்லி நறுமலர் சந்தனம்முதலான பொருள்களைக் கொண்டு முறைப்படி சார்த்தி வழிபடுகின்ற திருமுதுகுன்றமாகும். அதனை நாம் அடைவோம்.

திருமுதுகுன்றம்

ஏவார்சிலை யெயினன்னுரு
வாகியெழில் விசயற்
கோவாதவின் னருள்செய்தவெம்
மொருவற்கிட முலகில்
சாவாதவர் பிறவாதவர்
தவமேமிக வுடையார்
மூவாதபன் முனிவர்தொழு
முதுகுன்றடை வோமே. **#127**

அம்புகள் பூட்டிய வில்லை ஏந்திய வேட உருவந்தாங்கி வந்து போரிட்டு அழகிய அருச்சுனனுக்கு அருள்செய்த எம் சிவபெருமானுக்கு உகந்த இடம், சாவாமை பெற்றவர்களும், மீண்டும் பிறப்பு எய்தாதவர்களும், மிகுதியான தவத்தைப் புரிந்தவர்களும், மூப்பு எய்தாத முனிவர் பலரும் வந்து வணங்கும் திருமுதுகுன்றமாகும். நாமும் அதனைச் சென்றடைவோம்.

திருமுதுகுன்றம்

தழல்சேர்தரு திருமேனியர்
சசிசேர்சடை முடியர்
மழமால்விடை மிகவேறிய
மறையோனுறை கோயில்
விழவோடொலி மிகுமங்கையர்
தகுமாடக சாலை

முழவோடிசை நடமுன்செயு
முதுகுன்றடை வோமே. #128

தழலை ஒத்த சிவந்த திருமேனியரும், பிறைமதி அணிந்த சடைமுடியினரும், இளமையான திருமாலாகிய இடபத்தில் மிகவும் உகந்தேறி வருபவரும், வேதங்களை அருளியவருமாகிய சிவபிரான் எழுந்தருளிய கோயில், விழாக்களின் ஓசையோடு அழகு மிகு நங்கையர் தக்க நடனசாலைகளில் முழவோசையோடு பாடி நடனம் ஆடும் திருமுதுகுன்றம் ஆகும். அதனை நாமும் சென்றடைவோம்.

<u>திருமுதுகுன்றம்</u>

செதுவாய்மைகள் கருதிவ்வரை
யெடுத்ததிற லரக்கன்
கதுவாய்கள்பத் தலறீயிடக்
கண்டானுறை கோயில்
மதுவாயசெங் காந்தண்மலர்
நிறையக்குறை வில்லா
முதுவேய்கண்முத் துதிரும்பொழின்
முதுகுன்றடை வோமே. #129

பொல்லா மொழிகளைக் கருதிக் கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த வலிய இராவணனின் வடுவுள்ள வாய்கள் பத்தும் அலறும்படி கால்விரலால் ஊன்றி அடர்த்த சிவ பிரானது கோயில் விளங்குவதும், தேன் நிறைந்த இடம் உடைய செங்காந்தள் மலர்களாகிய கைகள் நிறையும்படி முதிய மூங்கில்கள் குறைவின்றி முத்துக்களை உதிர்க்கும் பொழில்களால் சூழப்பட்டதுமாகிய திருமுதுகுன்றை நாம் அடைவோம்.

<u>திருமுதுகுன்றம்</u>

இயலாடிய பிரமன்னரி
யிருவர்க்கறி வரிய
செயலாடிய தீயாருரு
வாகியெழு செல்வன்
புயலாடுவண் பொழில்சூழ்புனற்
படப்பைத்தடத் தருகே
முயலோடவெண் கயல்பாய்தரு
முதுகுன்றடை வோமே. #130

தற்பெருமை பேசிய பிரமன் திருமால் ஆகிய இருவராலும் அறிதற்கரிய திருவிளையாடல் செய்து எரியுருவில் எழுந்த செல்வனாகிய சிவபிரான் எழுந்தருளியதும், மேகங்கள் தோயும் வளமையான பொழில்கள், நீர்வளம் மிக்க நிலப்பரப்புகள், நீர் நிலைகட்கு அருகில் வரும் முயல்கள்

ஓடுமாறு வெள்ளிய கயல் மீன்கள் துள்ளிப் பாயும் குளங்கள் இவற்றின் வளமுடையதும் ஆகிய திருமுதுகுன்றத்தை நாம் அடைவோம்.

திருமுதுகுன்றம்

அருகரொடு புத்தரவ
ரறியாவரன் மலையான்
மருகன்வரு மிடபக்கொடி
யுடையானிட மலரார்
கருகுகுழன் மடவார்கடி
குறிஞ்சியது பாடி
முருகன்னது பெருமைபகர்
முதுகுன்றடை வோமே. **#131**

சமணர்களாலும் புத்தர்களாலும் அறியப் பெறாத அரனும், இமவான் மருகனும், தோன்றும் இடபக் கொடி உடையோனும், ஆகிய சிவபிரான் எழுந்தருளிய இடம், மலர் சூடிய கரிய கூந்தலை உடைய இளம் பெண்கள் தெய்வத்தன்மை வாய்ந்த குறிஞ்சிப் பண்ணைப் பாடி முருகப் பெருமானின் பெருமைகளைப் பகரும் திருமுதுகுன்றமாகும். அதனை நாம் அடைவோம்.

திருமுதுகுன்றம்

முகில்சேர்தரு முதுகுன்றுடை
யானைம்மிகு தொல்சீர்ப்
புகலிந்நகர் மறைஞானசம்
பந்தன்னுரை செய்த
நிகரில்லன தமிழ்மாலைக
ளிசையோடிவை பத்தும்
பகரும்மடி யவர்கட்கிடர்
பாவம்மடை யாவே. **#132**

மேகங்கள் வந்து தங்கும் திருமுதுகுன்றத்தில் விளங்கும் பெருமானைப் பழமையான மிக்க புகழையுடைய புகலி நகரில் தோன்றிய மறைவல்ல ஞானசம்பந்தன் உரைத்த ஒப்பற்ற தமிழ்மாலைகளாகிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் இசையோடு பகர்ந்து வழிபடும் அடியவர்களைத் துன்பங்களும் அவற்றைத் தரும் பாவங்களும் அடையா.

திருவியலூர்

திருவியலூர்

திருவியலூர்,
பண் - நட்டபாடை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : யோகாநந்தேசுவரர்.
தேவியார் : சவுந்தரநாயகியம்மை (எ) சாந்தநாயகியம்மை.

குரவங்கமழ் நறுமென்குழல்
அரிவையவள் வெருவப்
பொருவெங்கரி படவென்றதன்
உரிவையுட லணிவோன்
அரவும்மலை புனலும்மிள
மதியும்நகு தலையும்
விரவுஞ்சடை யடிகட்கிடம்
விரிநீர்விய லூரே. **#133**

குரா மலரின் மணம் கமழ்வதும், இயற்கையிலேயே மணமுடையதுமான மென்மையான கூந்தலையுடைய உமையம்மை அஞ்ச, தன்னோடு பொருதற்கு வந்த சினவேழத்தைக் கொன்று, அதன் தோலைத் தன் திருமேனியில் போர்த்தவனும், அரவு, கங்கை, பிறை, வெண்தலை ஆகியவற்றை அணிந்த சடையை உடையவனுமாய சிவபிரானுக்குரிய இடம் நீர்வளம் மிக்க வியலூராகும்.

திருவியலூர்

ஏறார்தரு மொருவன்பல
வுருவன்னிலை யானான்
ஆறார்தரு சடையன்அனல்
உருவன்புரி வுடையான்
மாறார்புர மெரியச்சிலை
வளைவித்தவன் மடவாள்
வீறார்தர நின்றானிடம்
விரிநீர்விய லூரே. **#134**

எருதின்மேல் வருபவனும், பல்வேறு மூர்த்தங்களைக் கொண்டவனும், என்றும் நிலையானவனும், கங்கையாற்றைச் சடையில் நிறுத்தியவனும், அனல் போன்ற சிவந்த மேனியனும், அன்புடையவனும், பகைவராய் வந்த அசுரர்தம் முப்புரங்கள் எரியுமாறு வில்லை வளைத்தவனும், உமையம்மை பெருமிதம் கொள்ளப் பல்வகைச் சிறப்புக்களோடு

நிற்பவனுமாய சிவபிரானுக்குரிய இடம் நீர் வளம் மிக்க வியலூராகும்.

திருவியலூர்

செம்மென்சடை யவைதாழ்வுற
மடவார்மனை தோறும்
பெய்ம்மின்பலி யெனநின்றிசை
பகர்வாரவ ரிடமாம்
உம்மென்றெழு மருவித்திரள்
வரைபற்றிட வுரைமேல்
விம்மும்பொழில் கெழுவும்வயல்
விரிநீர்விய லூரே. **#135**

சிவந்த மென்மையான சடை தாழத் தாருகாவன முனிவர்களின் மனைவியர் வாழ்ந்த இல்லங்கள்தோறும் சென்று உணவிடுங்கள் என்று இசை பாடியவனாய சிவபிரானது இடம், உம் என்ற ஒலிக் குறிப்போடு அருவிகள் குடகு மலை முகடுகளிலிருந்து காவிரியாய் வர அந்நீர் வளத்தால் புகழோடு செழித்து வளரும் பொழில்களையும் பொருந்திய வயல்களையும் உடைய நீர்வளம் மிக்க வியலூராகும்.

திருவியலூர்

அடைவாகிய வடியார்தொழ
வலரோன்றலை யதனில்
மடவாரிடு பலிவந்துண
லுடையானவ னிடமாம்
கடையார்தர வகிலார்கழை
முத்தம்நிரை சிந்தி
மிடையார்பொழில் புடைசூழ்தரு
விரிநீர்விய லூரே. **#136**

அடியவர்கள் தத்தம் அடைவின்படி தொழப் பிரம கபாலத்தில் மகளிர் இட்ட உணவை உண்பவனாகிய சிவபிரான் விரும்பி உறையும் இடம், பள்ளர்கள் வயல்களில் நிறையவும் நிறைந்த மூங்கில்கள் முத்துக்களை வரிசையாகச் சொரியவும் ஆற்றில் வரும் அகில் மரங்களைக் கொண்டதும் நெருங்கிய மரங்களைக் கொண்ட பொழில் சூழ்ந்ததுமாகிய நீர்வளம் மிக்க வியலூராகும்.

திருவியலூர்

எண்ணார்தரு பயனாயய
னவனாய்மிகு கலையாய்ப்
பண்ணார்தரு மறையாயுயர்

பொருளாயிறை யவனாய்க்
கண்ணார்தரு முருவாகிய
கடவுள்ளிட மெனலாம்
விண்ணோரொடு மண்ணோர்தொழும்
விரிநீர்விய லூரே. **#137**

தியானத்தின் பயனாய் இருப்பவனும், நான்முகனாய் உலகைப் படைப்போனும், எண்ணற்ற கலைகளாய்த் திகழ்வோனும் சந்த இசையோடு கூடிய வேதங்களாய் விளங்குவோனும், உலகில் மிக உயர்ந்த பொருளாய் இருப்போனும், எல்லோர்க்கும் தலைவனானவனும், கண்ணிறைந்த பேரழகுடையோனும் ஆகிய கடவுளது இடம் விண்ணவராகிய தேவர்களும் மண்ணவராகிய மக்களும் வந்து வணங்கும் நீர்வளம் நிரம்பிய வியலூர் ஆகும்.

<u>திருவியலூர்</u>

வசைவிற்கொடு வருவேடுவ
னவனாய்நிலை யறிவான்
திசையுற்றவர் காணச்செரு
மலைவானிலை யவனை
அசையப்பொரு தசையாவண
மவனுக்குயர் படைகள்
விசையற்கருள் செய்தானிடம்
விரிநீர்விய லூரே. **#138**

வளைந்த வில்லை ஏந்தி வேட்டுவ வடிவம் கொண்டு வந்து, தன்னை நோக்கித் தவம் இயற்றும் விசயனின் ஆற்றலை அறிதற்பொருட்டு எண்திசையிலுள்ளோரும் காண ஒரு காலில் நின்று தவம் செய்த அவன் வருந்தும்படி, அவனோடு செருமலைந்து அவனது ஆற்றலைப் பாராட்டி அவன் அழியாதவாறு அவனுக்குப் பாசுபதம் முதலிய படைக்கலங்களை அருளியவனாகிய சிவபிரானது இடம், நீர்வளம் மிக்க வியலூராகும்.

<u>திருவியலூர்</u>

மானார்அர வுடையானிர
வுடையான்பகல் நட்டம்
ஊனார்தரு முயிரானுயர்
விசையான்விளை பொருள்கள்
தானாகிய தலைவன்னென
நினைவாரவ ரிடமாம்
மேனாடிய விண்ணோர்தொழும்
விரிநீர்விய லூரே. **#139**

தலைமையான அரவை அணிந்தவனும், தலையோட்டில் இரத்தல் தொழில் புரிகின்றவனும், பகலில் நட்டம் ஆடுபவனும், ஊனிடை உயிராய் விளங்குபவனும், உயரிய வீரம் உடையவனும், அனைத்து விளை பொருள்களாய் நிற்கும் தலைவன் என நினைத்தற்குரியவனுமாகிய சிவபிரானது இடம், புண்ணியப் பயனால் மேல் உலகை நாடிய விண்ணவர்களால் தொழப் பெறும் நீர்வளம் சான்ற வியலூராகும்.

திருவியலூர்

பொருவாரெனக் கெதிராரெனப்
பொருப்பையெடுத் தான்றன்
கருமால்வரை கரந்தோளுரங்
கதிர்நீண்முடி நெரிந்து
சிரமாயின கதறச்செறி
கழல்சேர்திரு வடியின்
விரலாலடர் வித்தானிடம்
விரிநீர்விய லூரே. **#140**

எனக்கெதிராகச் சண்டையிடுவார் யார் என்ற செருக்கால் கயிலை மலையை எடுத்த இராவணனின் வலிய பெரிய மலைபோலும் கைகள் தோள்கள் மார்பு ஆகியனவும் ஒளி பொருந்திய நீண்ட மகுடங்களுடன் கூடிய தலைகளும் நெரிதலால் அவன் கதறுமாறு, செறிந்த கழல்களுடன் கூடிய திருவடியின் விரலால் அடர்த்த சிவபிரானது இடம், நீர்வளம் மிக்க வியலூராகும்.

திருவியலூர்

வளம்பட்டலர் மலர்மேலயன்
மாலும்மொரு வகையால்
அளம்பட்டறி வொண்ணாவகை
யழலாகிய வண்ணல்
உளம்பட்டெழு தழற்றூணதன்
நடுவேயொரு வுருவம்
விளம்பட்டருள் செய்தானிடம்
விரிநீர்விய லூரே. **#141**

வளமையோடு அலர்ந்த தாமரை மலர் மேல் உறையும் நான்முகனும், திருமாலும் தமக்குள் முடி அடி காண்பவர் பெரியவர் என்ற ஒரு வகையான உடன்பாட்டால் அன்னமும் பன்றியுமாய்ருந்தி முயன்றும் அறிய வொண்ணாதவாறு அழலுருவாகி நின்ற அண்ணலும், அவ்விருவர்தம் முனைப்பு அடங்கி வேண்டத் தழல்வடிவான தூணின்

நடுவே ஓருருவமாய் வெளிப்பட்டு அருள் செய்தவனுமாகிய சிவபிரானது இடம், நீர்வளம் மிக்க வியலூராகும்.

திருவியலூர்

தடுக்காலுடன் மறைப்பாரவர்
தவர்சீவர மூடிப்
பிடக்கேயுரை செய்வாரொடு
பேணார்நமர் பெரியோர்
கடல்சேர்தரு விடமுண்டமு
தமரர்க்கருள் செய்த
விடைசேர்தரு கொடியானிடம்
விரிநீர்விய லூரே. **#142**

ஓலைப் பாயால் உடலை மறைப்பவராகிய சமண முனிவர்களுடனும், பொன்னிற ஆடையால் உடலை மூடிப்பிடகம் என்னும் நூலைத் தம் மத வேதமாக உரைக்கும் புத்த மதத் தலைவர்கள் உடனும் நம் பெரியோர் நட்புக் கொள்ளார். கடலில் தோன்றிய நஞ்சைத் தான் உண்டு, அமுதை அமரர்க்களித்தருளிய விடைக் கொடியை உடைய சிவபிரானது இடம் நீர்வளமிக்க வியலூராகும். அதனைச் சென்று வழிபடுமின்.

திருவியலூர்

விளங்கும்பிறை சடைமேலுடை
விகிர்தன்விய லூரைத்
தளங்கொண்டதொர் புகலித்தகு
தமிழ்ஞானசம் பந்தன்
துளங்கில்தமிழ் பரவித்தொழு
மடியாரவ ரென்றும்
விளங்கும்புக ழதனோடுயர்
விண்ணும்முடை யாரே. **#143**

விளங்கும் பிறையைச் சடைமேலுடைய விகிர்தனாய சிவபிரானது வியலூரை, இடமகன்ற ஊராகிய புகலியில் தோன்றிய தக்க தமிழ் ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய துளக்கமில்லாத இத்தமிழ் மாலையைப் பாடிப் பரவித் தொழும் அடியவர், எக்காலத்தும் விளங்கும் புகழோடு உயரிய விண்ணுலகையும் தமதாக உடையவராவர்.

திருக்கொடுங்குன்றம்

திருக்கொடுங்குன்றம்

திருக்கொடுங்குன்றம்,
பண் - நட்டபாடை,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கொடுங்குன்றேசுவரர் (எ) கொடுங்குன்றீசர்.
தேவியார் : அமுதவல்லியம்மை (எ) குயிலமுதநாயகி.

வானிற்பொலி வெய்தும்மழை
மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர்
சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி யைந்தும்அமர்ந்
தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு
மேயான்திரு நகரே. #144

வளைந்த பிறைமதி வானின்கண் விளங்கும் மழை மேகங்களைக் கிழித்து ஓடிச் சென்று சேரும் குளிர்ந்த சாரலை உடைய கொடுங்குன்றம், பசுவிடம் விளங்கும் பால் நெய் தயிர் கோமயம் கோசலம் ஆகிய ஐந்து பொருள்களையும் மகிழ்ந்தாடி உலகம் போற்றத் தேன்போலும் மொழியினைப் பேசும் உமையம்மையோடு சிவபிரான் மேவிய திருத்தலமாகும்.

திருக்கொடுங்குன்றம்

மயில்புல்குதண் பெடையோடுட
னாடும்வளர் சாரல்
குயிலின்னிசை பாடுங்குளிர்
சோலைக்கொடுங் குன்றம்
அயில்வேன்மலி நெடுவெஞ்சுடர்
அனலேந்திநின் றாடி
எயில்முன்பட எய்தானவன்
மேயவ்வெழில் நகரே. #145

ஆண் மயில்கள் தண்ணிய தம் பெடைகளைத் தழுவித் தோகைவிரித்தாடும் விரிந்த சாரலையும், குயில்கள் இன்னிசைபாடும் குளிர்ந்த சோலைகளையும் உடைய கொடுங்குன்றம், கூரிய வேல்போலும் நெடிய வெம்மையான ஒளியோடு கூடிய அனலைக் கையில் ஏந்தி நின்றாடி முப்புரங்களைக் கணை தொடுத்து அழித்த

சிவபிரான் எழுந்தருளிய திருத்தலமாகும்.

திருக்கொடுங்குன்றம்

மிளிரும்மணி பைம்பொன்னொடு
விரைமாமல ருந்திக்
குளிரும்புனல் பாயுங்குளிர்
சாரற்கொடுங் குன்றம்
கிளர்கங்கையொ டிளவெண்மதி
கெழுவுஞ்சடை தன்மேல்
வளர்கொன்றையும் மதமத்தமும்
வைத்தான்வள நகரே. **#146**

அருவிகள், ஒளிவீசும் மணிகள், பசும்பொன், மணமுள்ள மலர்கள் ஆகியவற்றைத் தள்ளிக்கொண்டு வந்து நீரைச் சொரிதலால், குளிர்ந்துள்ள மலைச்சாரலை உடைய கொடுங்குன்றம், பொங்கி எழும் கங்கையோடு, வெள்ளிய பிறைமதி பொருந்திய சடை முடிமேல், மணம் வளரும் கொன்றை மலரையும் மதத்தை ஊட்டும் ஊமத்தை மலரையும் அணிந்துள்ள சிவபிரானது வளமையான நகராகும்.

திருக்கொடுங்குன்றம்

பருமாமத கரியோடரி
யிழியும்விரி சாரல்
குருமாமணி பொன்னோடிழி
யருவிக்கொடுங் குன்றம்
பொருமாவெயில் வரைவில்தரு
கணையிற்பொடி செய்த
பெருமானவ னுமையாளொடு
மேவும்பெரு நகரே. **#147**

பெரிய கரிய மத யானைகளும் சிங்கங்களும் இரைதேடவும், நீர் பருகவும் இறங்கிவரும் பெரிய மலைச்சாரலையும், நிறம் பொருந்திய பெரிய மணிகளைப் பொன்னோடு சொரியும் அருவிகளையும் உடைய கொடுங்குன்றம், தன்னோடு பொரவந்த பெரிய முப்புரக் கோட்டைகளை மலை வில்லில் தொடுத்த கணையால் பொடியாக்கிய சிவபிரான் உமையம்மையோடு எழுந்தருளிய பெருநகராகும்.

திருக்கொடுங்குன்றம்

மேகத்திடி குரல்வந்தெழ
வெருவிவ்வரை யிழியும்
கூகைக்குல மோடித்திரி

சாரற்கொடுங் குன்றம்
நாகத்தொடும் இளவெண்பிறை
சூடிந்நல மங்கை
பாகத்தவ னிமையோர்தொழ
மேவும்பழ நகரே. #148
மேகத்திடம் இடிக்குரல் தோன்றக் கேட்டுக் கோட்டான் என்னும் பறவை இனங்கள் அஞ்சி மலையினின்றும் இறங்கி வந்து ஓடித் திரியும் மலைச்சாரலை உடைய கொடுங்குன்றம், நாகத்தோடு இளவெண்பிறையை முடியிற் சூடி அழகிய உமை நங்கையை ஒருபாகமாகக் கொண்டுள்ள சிவபிரான், தேவர்கள் தன்னை வணங்குமாறு எழுந்தருளும் பழமையான நகராகும்.

திருக்கொடுங்குன்றம்

கைம்மாமத கரியின்னின
மிடியின்குர லதிரக்
கொய்ம்மாமலர்ச் சோலைபுக
மண்டுங்கொடுங் குன்றம்
அம்மானென வுள்கித்தொழு
வார்கட்கருள் செய்யும்
பெம்மானவ னிமையோர்தொழ
மேவும்பெரு நகரே. #149
துதிக்கையை உடைய கரிய மதயானைகளின் கூட்டம் இடிக்குரல் அதிரக்கேட்டு அஞ்சிக் கொய்யத்தக்க மணமலர்களை உடைய சோலைகளில் புகுந்து ஒளிதற்குச் செறிந்து வரும் கொடுங்குன்றம், இவரே நம் தலைவர் என இடைவிடாது நினைந்து தொழும் அடியவர்கட்கு அருள் செய்யும் சிவபெருமான் விண்ணோர் தன்னைத் தொழ வீற்றிருந்தருளும் பெருநகராகும்.

திருக்கொடுங்குன்றம்

மரவத்தொடு மணமாதவி
மௌவல்லது விண்ட
குரவத்தொடு விரவும்பொழில்
சூழ்தண்கொடுங் குன்றம்
அரவத்தொடு மிளவெண்பிறை
விரவும்மலர்க் கொன்றை
நிரவச்சடை முடிமேலுடன்
வைத்தானெடு நகரே. #150
கடம்பு, குருக்கத்தி, முல்லை ஆகியவற்றின் நாள் அரும்புகள்

குரவமலர்களோடு விண்டு மணம் விரவும் பொழில் சூழ்ந்த தண்ணிய கொடுங்குன்றம், அரவு, வெள்ளிய இளம்பிறை, மணம் விரவும் கொன்றை மலர் ஆகியவற்றை நிரம்பத் தன் முடிமேல் அணிந்துள்ள சிவபிரானது நெடுநகராகும்.

திருக்கொடுங்குன்றம்

முட்டாமுது கரியின்னின
முதுவேய்களை முனிந்து
குட்டாச்சுனை யவைமண்டிநின்
றாடுங்கொடுங் குன்றம்
ஒட்டாவரக் கன்றன்முடி
யொருபஃதவை யுடனே
பிட்டானவ னுமையாளொடு
மேவும்பெரு நகரே. **#151**

யானைக் கூட்டங்கள் யாரும் தடுப்பார் இன்றி முதிய மூங்கில்களை உண்டு வெறுத்துப் பிறரால் அகழப்படாது இயற்கையிலேயே ஆழமாக உள்ள சுனைகளில் இறங்கிநின்று நீராடும் கொடுங்குன்றம், தன்னோடு மனம் பொருந்தாது கயிலை மலையை எடுத்த அரக்கனாகிய இராவணனின் முடியணிந்த பத்துத் தலைகளையும் அடர்த்து ஒடித்தவனாகிய சிவபெருமான் உமையம்மையோடு மேவும் பெருநகராகும்.

திருக்கொடுங்குன்றம்

அறையும்மரி குரலோசையை
யஞ்சியடு மானை
குறையும்மன மாகிம்முழை
வைகுங்கொடுங் குன்றம்
மறையும்மவை யுடையானென
நெடியானென விவர்கள்
இறையும்மறி வொண்ணாதவன்
மேயவ்வெழில் நகரே. **#152**

சிங்கத்தின் கர்ச்சனை ஓசையைக் கேட்டு அஞ்சிக் கொல்லும் தன்மையினவாகிய யானைகள் மன எழுச்சி குன்றி மலையிடையே உள்ள குகைப் பகுதிகளில் மறைந்து வைகும் கொடுங்குன்றம், வேதங்களுக்கு உரியவனாய நான்முகன் திருமால் ஆகிய இருவரும் சிறிதும் அறிய முடியாதவனாய் நின்ற சிவபிரான் மேவிய அழகிய நகராகும்.

திருக்கொடுங்குன்றம்

மத்தக்களி றாளிவ்வர
வஞ்சிம்மலை தன்னைக்
குத்திப்பெரு முழைதன்னிடை
வைகுங்கொடுங் குன்றம்
புத்தரொடு பொல்லாமனச்
சமணர்புறங் கூறப்
பத்தர்க்கருள் செய்தானவன்
மேயபழ நகரே. **#153**

மதம் பொருந்திய யானைகள் தம்மின் வலிய சிங்கம் வருதலைக் கண்டு அஞ்சி மலையைக் குத்திப் பெருமுழையாக்கி, அதனிடை வைகும் கொடுங்குன்றம், புத்தர்களும் பொல்லா மனமுடைய சமணர்களும் புறங்கூறத் தன் பக்தர்கட்கு அருள் செய்பவனாகிய சிவபிரான் மேவிய பழமையான நகராகும்.

திருக்கொடுங்குன்றம்

கூனற்பிறை சடைமேன்மிக
வுடையான்கொடுங் குன்றைக்
கானற்கழு மலமாநகர்
தலைவன்னல கவுணி
ஞானத்துயர் சம்பந்தன
நலங்கொள்தமிழ் வல்லார்
ஊனத்தொடு துயர்தீர்ந்துல
கேத்தும்மெழி லோரே. **#154**

வளைந்த பிறை மதியைச் சடைமுடிமீது அழகு மிகுமாறு அணிந்த சிவபிரானது திருக்கொடுங்குன்றைக் கடற்கரைச் சோலைகளால் சூழப்பட்ட கழுமலமாநகரின் தலைவனும் நல்ல கவுணியர் கோத்திரத்தில் தோன்றியவனுமாகிய ஞானசம்பந்தன் பாடிய தமிழ்மாலைகளை ஓதி வழிபட வல்லவர் தம்மிடமுள்ள குறைபாடுகள் நீங்கித்துன்பங்கள் அகன்று உலகம் போற்றும் புகழுடையோராவர்.

திருநெய்த்தானம்

திருநெய்த்தானம்

திருநெய்த்தானம்,
பண் - நட்டபாடை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நெய்யாடியப்பர்.
தேவியார் : வாலாம்பிகையம்மை.

மையாடிய கண்டன்மலை
மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி
யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர்
நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிடம்
நெய்த்தானமெ னீரே. **#155**

கருநிறம் அமைந்த கண்டத்தை உடையவனும், மலை மகளாகிய பார்வதியை இடப் பாகமாகக் கொண்டவனும், துதிக்கையோடு கூடியதாய்த் தன்னை எதிர்த்து வந்ததால் அழிவற்ற புகழ் பெற்ற யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்த, தன்னொப்பார் இல்லாத் தலைவனுமாகிய சிவபிரான் வயல்களில் முளைத்த குவளை மலர் போலும் கண்களை உடைய உமையம்மையோடும் நெய்யாடிய பெருமான் என்ற திருப்பெயரோடும் விளங்குமிடமாகிய நெய்த்தானம் என்ற திருப்பெயரைச் சொல்வீராக.

திருநெய்த்தானம்

பறையும்பழி பாவம்படு
துயரம் பலதீரும்
பிறையும்புன லரவும்படு
சடையெம்பெரு மானூர்
அறையும்புனல் வருகாவிரி
யலைசேர்வட கரைமேல்
நிறையும்புனை மடவார்பயில்
நெய்த்தானமெ னீரே. **#156**

காவிரி வடகரை மேல் உள்ள எம்பெருமான் ஊராகிய நெய்த்தானம் என்ற பெயரைச் சொல்லுமின் பழி பாவம் தீரும் என வினை முடிபு காண்க. ஆரவாரத்துடன் வரும் புனலின் அலைகள் சேரும் காவிரி

வடகரையில் விளங்குவதும், பிறை கங்கை அரவம் ஆகியவற்றுடன் கூடிய சடைமுடியை உடைய எம்பெருமான் எழுந்தருளியதும், மனத்தைக் கற்பு நெறியில் நிறுத்தும் நிறை குணத்துடன் தம்மை ஒப்பனை செய்து கொள்ளும் மகளிர் பயில்வதுமாகிய நெய்த்தானம் என்ற ஊரின் பெயரைச் சொல்லுமின்; பழிநீங்கும், பாவங்கள் துன்பங்கள் அனைத்தும் தீரும்.

திருநெய்த்தானம்

பேயாயின பாடப்பெரு
நடமாடிய பெருமான்
வேயாயின தோளிக்கொரு
பாகம்மிக வுடையான்
தாயாகிய வுலகங்களை
நிலைபேறுசெய் தலைவன்
நேயாடிய பெருமானிடம்
நெய்த்தானமெ னீரே. **#157**

ஊழிக் காலத்து, பேய்கள் பாட, மகா நடனம் ஆடிய பெருமானும், மூங்கில் போலத் திரண்ட தோள்களை உடைய உமை யம்மைக்குத் தனது திருமேனியின் ஒரு பாகத்தை வழங்கியவனும், அனைத்து உலகங்களிலும் வாழும் உயிர்களை நிலைபேறு செய்தருளும் தாய் போன்ற தலைவனும், அன்பர்களின் அன்பு நீரில் ஆடுபவனும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளிய நெய்த்தானம் என்ற திருப்பெயரைப் பலகாலும் சொல்வீராக.

திருநெய்த்தானம்

சுடுநீறணி யண்ணல்சுடர்
சூலம்மன லேந்தி
நடுநள்ளிருள் நடமாடிய
நம்பன்னுறை யிடமாம்
கடுவாளிள வரவாடுமிழ்
கடனஞ்சம துண்டான்
நெடுவாளைகள் குதிகொள்ளுயர்
நெய்த்தானமெ னீரே. **#158**

சுடப்பட்ட திருநீற்றை அணியும் தலைமையானவனும் ஒளி பொருந்திய சூலம் அனல் ஆகியவற்றைக் கைகளில் ஏந்தி இருள் செறிந்த இரவின் நடுயாமத்தே நடனம் ஆடும் நம்பனும், கொடிய ஒளி பொருந்திய இளைய வாசுகியாகிய பாம்பு உமிழ்ந்த நஞ்சோடு கடலில் தோன்றிய நஞ்சினை உண்டவனுமாகிய சிவபிரான் உறையும் இடமாகிய நீண்ட

வாளை மீன்கள் துள்ளி விளையாடும் நீர்வளம் மிக்க நெய்த்தானம் என்ற ஊரின் பெயரைச் சொல்வீராக.

திருநெய்த்தானம்

நுகராரமொ டேலம்மணி
செம்பொன்னுரை யுந்திப்
பகராவரு புனல்காவிரி
பரவிப்பணிந் தேத்தும்
நிகரான்மண லிடுதண்கரை
நிகழ்வாயநெய்த் தான
நகரானடி யேத்தந்நமை
நடலையடை யாவே. **#159**

நுகரத்தக்க பொருளாகிய சந்தனம், ஏலம், மணி, செம்பொன் ஆகியவற்றை நுரையோடு உந்தி விலை பகர்வது போல ஆரவாரித்து வரும் நீரை உடைய காவிரி பரவிப் பணிந்தேத்துவதும், ஒருவகையான மணல் சேர்க்கப்பெற்ற அவ்வாற்றின் தண்கரையில் விளங்குவதுமாகிய நெய்த்தானத்துக் கோயிலில் விளங்கும் சிவபிரான் திருவடிகளை ஏத்தத் துன்பங்கள் நம்மை அடையா.

திருநெய்த்தானம்

விடையார் கொடி யுடையவ்வணல்
வீந்தார்வெளை யெலும்பும்
உடையார்நறு மாலைசடை
யுடையாரவர் மேய
புடையேபுனல் பாயும்வயல்
பொழில்சூழ்ந்தநெய்த் தானம்
அடையாதவ ரென்றும்அம
ருலகம்அடை யாரே. **#160**

இடபக் கொடியை உடைய அண்ணலும், மணம் கமழும் மாலைகளைச் சடைமேல் அணிந்தவனும் ஆகிய சிவபிரான் மேவியதும், அருகிலுள்ள கண்ணிகளிலும் வாய்க்கால்களிலும் வரும் நீர்பாயும் வயல்கள் பொழில்கள் சூழ்ந்ததும் ஆகிய நெய்த்தானம் என்னும் தலத்தை அடையாதவர் எக்காலத்தும் வீட்டுலகம் அடையார்.

திருநெய்த்தானம்

நிழலார்வயல் கமழ்சோலைகள்
நிறைகின்றநெய்த் தானத்
தழலானவ னனலங்கையில்

ஏந்தியழ காய
கழலானடி நாளுங்கழ
லாதேவிட லின்றித்
தொழலாரவர் நாளுந்துய
ரின்றித்தொழு வாரே. **#161**

பயிர் செழித்து வளர்தலால் ஒளி நிறைந்த வயல்களும் மணம் கமழும் சோலைகளும் நிறைகின்ற நெய்த்தானத்தில், தழல் உருவில் விளங்குபவனும் அனலைத் தன் கையில் ஏந்தியவனும் அழகிய வீரக் கழல்களை அணிந்தவனும் ஆகிய சிவபிரானது திருவடிகளை நாள்தோறும் தவறாமலும் மறவாமலும் தொழுதலை உடைய அடியவர் எந்நாளும் துயரின்றி மற்றவர்களால் தொழத்தக்க நிலையினராவர்.

திருநெய்த்தானம்

அறையார்கட லிலங்கைக்கிறை
யணிசேர்கயி லாயம்
இறையாரமு னெடுத்தானிரு
பதுதோளிற வூன்றி
நிறையார்புனல் நெய்த்தானன்நல்
நிகழ்சேவடி பரவக்
கறையார்கதிர் வாளீந்தவர்
கழலேத்துதல் கதியே. **#162**

அழகிய கயிலாய மலையைத் தன் இருபது முன் கரங்களாலும் பெயர்த்து எடுத்த ஓசை கெழுமிய கடல் சூழ்ந்த இலங்கைக்குரிய மன்னனாகிய இராவணன் இருபது தோள்களும் நெரியுமாறு காலை ஊன்றிப் பின் அவன் புனல் நிறைந்த நெய்த்தானப் பெருமானது விளங்கும் திருவடிகளைப் பரவ அவனுக்கு முயற்கறையை உடைய சந்திரனின் பெயரைப் பெற்ற சந்திரகாசம் என்ற வாளை ஈந்த அப்பெருமான் திருவடிகளை ஏத்துதலே, ஒருவற்கு அடையத்தக்க கதியாம்.

திருநெய்த்தானம்

கோலம்முடி நெடுமாலொடு
கொய்தாமரை யானும்
சீலம்மறி வரிதாயொளி
திகழ்வாயநெய்த் தானம்
காலம்பெற மலர்நீரவை
தூவித்தொழு தேத்தும்
ஞாலம்புக ழடியாருடல்
உறுநோய்நலி யாவே. **#163**

அழகிய முடியை உடைய திருமாலும், கொய்யத்தக்க தாமரைமலர் மேல் விளங்கும் நான்முகனும் தன் இயல்பை அறிதற்கியலாத நிலையில் ஒளிவடிவாய்த் திகழ்ந்த நெய்த்தானப் பெருமானை விடியற் பொழுதிலே நீராட்டி மலர் சூட்டித் தொழுதேத்தும் உலகு புகழ் அடியவரை உடலுறும் நோய்கள் நலியா.

திருநெய்த்தானம்

மத்தம்மலி சித்தத்திறை
மதியில்லவர் சமணர்
புத்தரவர் சொன்னம்மொழி
பொருளாநினை யேன்மின்
நித்தம்பயில் நிமலன்னுறை
நெய்த்தானம தேத்தும்
சித்தம் முடை யடியாருடல்
செறுநோயடை யாவே. **#164**

சித்தத்தில் செருக்குடையவரும், சிறிதும் மதியில்லாதவரும் ஆகிய சமணர்களும், புத்தர்களும் கூறும் பொருளற்ற உரைகளை ஒரு பொருளாக நினையாதீர். நாள்தோறும் நாம் பழகி வழிபடுமாறு, குற்றமற்ற சிவபிரான் உறையும் நெய்த்தானத்தை வணங்கிப் போற்றும் சித்தத்தை உடைய அடியவர் உடலைத் துன்புறுத்தும் நோய்கள் அடையா.

திருநெய்த்தானம்

தலமல்கிய புனற்காழியுட்
டமிழ்ஞானசம் பந்தன்
நிலமல்கிய புகழான்மிகு
நெய்த்தானனை நிகரில்
பலமல்கிய பாடல்லிவை
பத்தும்மிக வல்லார்
சிலமல்கிய செல்வன்னடி
சேர்வர்சிவ கதியே. **#165**

தலங்களில் சிறந்த புனல் சூழ்ந்த காழிப்பதியுள் தோன்றிய தமிழ் ஞானசம்பந்தன் உலகெங்கும் பரவிய புகழால் மிக்க நெய்த்தானத்துப் பெருமான் மீது பாடிய ஒப்பற்ற பயன்கள் பலவற்றைத் தரும் பாடல்களாகிய இவற்றைக் கற்றுப் பலகாலும் பரவவல்லவர் சீலம் நிறைந்த செல்வன் அடியாகிய சிவகதியைச் சேர்வர்.

திருப்புள்ளமங்கை - திருஆலந்துறை

திருப்புள்ளமங்கை

திருப்புள்ளமங்கை - திரு ஆலந்துறை,
பண் - நட்டபாடை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பசுபதிநாயகர்.
தேவியார் : பால்வளைநாயகியம்மை (எ) பல்வளைநாயகியம்மை.

பாலுந்துறு திரளாயின
பரமன்பிர மன்றான்
போலுந்திற லவர்வாழ்தரு
பொழில்சூழ்புள மங்கைக்
காலன்றிற லறச்சாடிய
கடவுள்ளிடங் கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை
யடையாவினை தானே. **#166**

பாலினின்று மிதந்து வரும் வெண்ணெய்த் திரள் போல்பவரும், காலனது வலிமை முழுவதையும் அழித்தவரும், வேதப் புலமையில் நான்முகன் போன்ற அந்தணர் வாழும் பொழில்கள் சூழ்ந்த திருப்புள்ளமங்கையில் விளங்குபவரும் ஆகிய இறைவனை நினைந்து வழிபடுபவர்களை வினைகள் அடையா.

திருப்புள்ளமங்கை

மலையான்மகள் கணவன்மலி
கடல்சூழ்தரு தண்மைப்
புலையாயின களைவானிடம்
பொழில்சூழ்புள மங்கைக்
கலையான்மலி மறையோரவர்
கருதித்தொழு தேத்த
அலையார்புனல் வருகாவிரி
யாலந்துறை யதுவே. **#167**

இமவான் மகளாகிய பார்வதி தேவியின் கணவனும் நீர் நிறைந்த கடல் சூழ்ந்த குளிர்ந்த இவ்வுலகில் உடலோடு பிறக்கும் பிறப்பைக் களைபவனும் ஆகிய சிவபெருமானது இடம், கலைகள் பலவற்றை அறிந்த அறிவால் நிறைந்த மறையவர்கள் மனத்தால் கருதிக் காயத்தால் தொழுது வாயால் ஏத்தி வழிபடுவதும், பொழில் சூழ்ந்ததும் அலைகளோடு கூடி நீர்பெருகி வரும் காவிரிக் கரையிலுள்ளதும் ஆகிய

ஆலந்துறை என்னும் தலத்திலுள்ள புள்ள மங்கை என்னும் கோயிலாகும்.

திருப்புள்ளமங்கை

கறையார்மிட றுடையான்கமழ்
கொன்றைச்சடை முடிமேல்
பொறையார்தரு கங்கைப்புன
லுடையான்புள மங்கைச்
சிறையார்தரு களிவண்டறை
பொழில்சூழ்திரு வாலந்
துறையானவ னறையார்கழல்
தொழுமின்துதி செய்தே. **#168**

விடக்கறை பொருந்திய கண்டத்தை உடையவனும், மணம் கமழும் கொன்றை மலர் அணிந்த சடைமுடியின்மீது சுமையாக அமைந்த கங்கையாற்றை அணிந்தவனுமாய சிவபிரானுக்குரியது, சிறகுகளுடன் கூடிய மதுவுண்ட வண்டுகள் ஒலிக்கும் பொழில்களால் சூழப்பட்ட ஆலந்துறையிலுள்ள புள்ளமங்கை என்னும் கோயிலாகும். அக்கோயிலுக்குச் சென்று அப்பெருமானது திருவடிகளைத் துதி செய்து தொழுவீராக.

திருப்புள்ளமங்கை

தணியார்மதி யரவின்னொடு
வைத்தானிட மொய்த்தெம்
பணியாயவ னடியார்தொழு
தேத்தும்புள மங்கை
மணியார்தரு கனகம்மவை
வயிரத்திர ளோடும்
அணியார்மண லணைகாவிரி
யாலந்துறை யதுவே. **#169**

தண்ணிய பிறைமதியைப் பாம்போடு முடிமிசை வைத்துள்ள சிவபெருமானது இடம், அடியவர்கள் எமது தொண்டுகளுக்குரியவன் எனத் தொழுது ஏத்துவதும், மணிகளோடு கூடிய பொன்னை வயிரக்குவைகளோடும், அழகிய மணலோடும் கொணர்ந்து சேர்க்கும் காவிரியின் தென்கரையிலுள்ளதுமான ஆலந்துறையில் அமைந்த புள்ளமங்கையாகும்.

திருப்புள்ளமங்கை

மெய்த்தன்னுறும் வினைதீர்வகை

தொழுமின்செழு மலரின்
கொத்தின்னொடு சந்தாரகில்
கொணர்காவிரிக் கரைமேல்
பொத்தின்னிடை யாந்தைபல
பாடும்புள மங்கை
அத்தன்நமை யாள்வானிடம்
ஆலந்துறை யதுவே. **#170**

உயிர் உடலை அடுத்தற்குக் காரணமான வினைகள் நீங்கும் வகையில் பெருமானை நீவிர் வணங்குவீர்களாக. செழுமையான மலர்க் கொத்துக்களை உடைய சந்தனம், அகில் முதலியவற்றைக் கொண்டு வரும் காவிரியாற்றின் கரைமேல் உள்ளதும் பொந்துகளில் ஆந்தைகள் பல தங்கிப் பாடுவதும் ஆகிய ஆலந்துறையில் அமைந்த புள்ளமங்கை என்னும் கோயிலை இடமாகக் கொண்டுள்ள தலைவனாகிய சிவபெருமான் நம்மை ஆள்வான்.

<u>திருப்புள்ளமங்கை</u>

மன்னானவ னுலகிற்கொரு
மழையானவன் பிழையில்
பொன்னானவன் முதலானவன்
பொழில்சூழ்புள மங்கை
என்னானவ னிசையானவ
னிளஞாயிறின் சோதி
அன்னானவ னுறையும்மிடம்
ஆலந்துறை யதுவே. **#171**

உலகிற்குத் தான் ஒருவனே மன்னனாய் விளங்குபவனும், மழையாய்ப் பயிர்களை விளைவிப்பவனும், குற்றமற்ற பொன்னானவனும், உயிர்களுக்கு வாழ்முதலாக உள்ளவனும், எனக்குத் தலைவனாய் இசை வடிவாக விளங்குபவனும், இளஞாயிற்றின் ஒளியைப் போன்ற ஒளியினனுமாகிய சிவபெருமான் உறையும் இடம், ஆலந்துறையிலுள்ள புள்ளமங்கையாகும்.

<u>திருப்புள்ளமங்கை</u>

முடியார்தரு சடைமேன்முளை
யிளவெண்மதி சூடிப்
பொடியாடிய திருமேனியர்
பொழில்சூழ்புள மங்கைக்
கடியார்மலர் புனல்கொண்டுதன்
கழலேதொழு தேத்தும்

அடியார்தமக் கினியானிடம்
ஆலந்துறை யதுவே. #172
தலைமேல் விளங்கும் சடைமிசை முளை போன்ற இளம்பிறையைச் சூடி வெள்ளிய திருநீறு அணிந்த திருமேனியனாய், மணம் கமழும் மலர்களையும் நீரையும் கொண்டு தன் திருவடிகளை வணங்கி ஏத்தும் அடியார்களுக்கு இனியனாய் விளங்கும் சிவபெருமான் விரும்பி உறையும் இடம் பொழில் சூழ்ந்த ஆலந்துறையிலுள்ள புள்ளமங்கை என்னும் கோயிலாகும்.

திருப்புள்ளமங்கை

இலங்கைமனன் முடிதோளிற
வெழிலார்திரு விரலால்
விலங்கல்லிடை யடர்த்தானிடம்
வேதம்பயின் றேத்திப்
புலன்கள்தமை வென்றார்புக
ழவர்வாழ்புள மங்கை
அலங்கல்மலி சடையானிடம்
ஆலந்துறை யதுவே. #173
இலங்கை மன்னனாகிய இராவணனின் தலைகளும், தோள்களும் நெரிய, எழுச்சி பொருந்திய அழகிய கால்விரலால் கயிலை மலையிடை அகப்படுத்தி அவனை அடர்த்த சிவபெருமானது இடம், வேதங்களை முறையாகக் கற்றறிந்து ஓதித் துதித்தலோடு புலன்களை வென்ற புகழுடைய அந்தணர் வாழ்வதும் மாலை அணிந்த சடைமுடி உடைய சிவபிரானுக்கு இடமாயிருப்பதும் ஆகிய ஆலந்துறையிலுள்ள புள்ளமங்கையாகும்.

திருப்புள்ளமங்கை

செறியார்தரு வெள்ளைத்திரு
நீற்றின்றிரு முண்டப்
பொறியார்தரு புரிநூல்வரை
மார்பன்புள மங்கை
வெறியார்தரு கமலத்தயன்
மாலுந்தனை நாடி
அறியாவகை நின்றானிடம்
ஆலந்துறை யதுவே. #174
வெண்மையான திருநீறு மூன்று பட்டைகளாய்ச் செறிய உத்தம இலக்கணம் ஆகிய மூன்று வரி பொருந்திய, முப்புரிநூல் அணிந்த மலை போன்ற திண்ணிய மார்பினை உடையவனும் மணம் கமழும் தாமரை

மலர்மேல் உறையும் நான்முகன், திருமால் ஆகியோர் தன்னைத் தேடி அறியாவகை ஓங்கி நின்றவனுமாகிய சிவபெருமானுக்கு உரிய இடம், ஆலந்துறையிலுள்ள புள்ள மங்கையாகும்.

திருப்புள்ளமங்கை

நீதியறி யாதாரமண்
கையரொடு மண்டைப்
போதியவ ரோதும்முரை
கொள்ளார்புள மங்கை
ஆதியவர் கோயில்திரு
வாலந்துறை தொழுமின்
சாதிம்மிகு வானோர்தொழு
தன்மைபெற லாமே. **#175**

நீதி அறியாத அமணராகிய கீழ் மக்களும் பிச்சைப் பாத்திரத்தைக் கையில் ஏந்திப் போதிமரத்தடியில் உறையும் புத்த மதத்தினரும் கூறும் உரைகளை மெய்ம்மை எனக் கொள்ளாது எல்லாப் பொருள்கட்கும் ஆதியானவனாகிய ஆலந்துறைப் புள்ளமங்கைக் கோயிலில் உறையும் இறைவனைத் தொழுமின்; பல்வேறு பிரிவினராகிய தேவர்கள் தொழும் தன்மை பெறலாம்.

திருப்புள்ளமங்கை

பொந்தின்னிடைத் தேனூறிய
பொழில்சூழ்புள மங்கை
அந்தண்புனல் வருகாவிரி
யாலந்துறை யானைக்
கந்தம்மலி கமழ்காழியுட்
கலைஞானசம் பந்தன்
சந்தம்மலி பாடல்சொலி
யாடத்தவ மாமே. **#176**

மரப்பொந்துகளில் தேனீக்கள் சேகரித்த தேன் மிகுதியான அளவில் கிடைக்கும் பொழில்கள் சூழ்ந்ததும், அழகிய தண்மையான நீரைக் கொணர்ந்துதரும் காவிரிக்கரையில் உள்ளதும் ஆகிய ஆலந்துறைப் புள்ளமங்கை இறைவனை, மணம் நிறைந்து கமழும் காழிப் பதியில் தோன்றிய கலை நலம் உடைய ஞானசம்பந்தன் பாடிய சந்தம் நிறைந்த இத்திருப்பதிகப் பாடல்களை ஓதிப் பரவசமாய் ஆடத் தவம் கைகூடும்.

திருஇடும்பாவனம்

திருஇடும்பாவனம்

திருஇடும்பாவனம்,
பண் - நட்டபாடை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சற்குணநாதர்.
தேவியார் : மங்களநாயகியம்மை.

மனமார்தரு மடவாரொடு
மகிழ்மைந்தர்கள் மலர்தூய்த்
தனமார்தரு சங்கக்கடல்
வங்கத்திர ளுந்திச்
சினமார்தரு திறல்வாளெயிற்
றரக்கன்மிகு குன்றில்
இனமாதவ ரிறைவர்க்கிடம்
இடும்பாவன மிதுவே. **#177**

மனத்தால் விரும்பப் பெற்ற மனைவியரோடு மகிழ்ச்சிமிக்க இளைஞர்களால் மலர்தூவி வழிபட்டுச் செல்வம் பெறுதற்குரியதாய் விளங்குவதும், சங்குகளை உடைய கடலில் உள்ள கப்பல்களை அலைகள் உந்தி வந்து சேர்ப்பிப்பதும் ஆகிய இடும்பாவனம், சினம் மிக்க வலிய ஒளிபொருந்திய பற்களை உடைய இடும்பன் என்னும் அரக்கனுக்குரிய வளம்மிக்க குன்றளூர் என்னும் ஊரில் முனிவர் குழாங்களால் வணங்கப் பெறும் சிவபிரானுக்குரிய இடம் ஆகும்.

திருஇடும்பாவனம்

மலையார்தரு மடவாளொரு
பாகம்மகிழ் வெய்தி
நிலையார்தரு நிமலன்வலி
நிலவும்புக ழொளிசேர்
கலையார்தரு புலவோரவர்
காவன்மிகு குன்றில்
இலையார்தரு பொழில்சூழ்தரு
மிடும்பாவன மிதுவே. **#178**

இமவான் மகளாய் மலையிடைத் தோன்றி வளர்ந்த பார்வதி தேவியை ஒரு பாகமாகக் கொண்டு மகிழ்ந்து நிலையாக வீற்றிருந்தருளும் குற்றமற்ற சிவபிரானது வென்றி விளங்குவதும், புகழாகிய ஒளி மிக்க கலை வல்ல புலவர்கள் இடைவிடாது பயில்வதால் காவல்மிக்கு

விளங்குவதுமான குன்றளூரை அடுத்துள்ள இலைகள் அடர்ந்த பொழில் சூழ்ந்த இடும்பாவனம் இதுவேயாகும்.

திருஇடும்பாவனம்

சீலம்மிகு சித்தத்தவர்
சிந்தித்தெழு மெந்தை
ஞாலம்மிகு கடல்சூழ்தரு
முலகத்தவர் நலமார்
கோலம்மிகு மலர்மென்முலை
மடவார்மிகு குன்றில்
ஏலங்கமழ் பொழில்சூழ்தரும்
இடும்பாவன மிதுவே. **#179**

தவ ஒழுக்கத்தால் மேம்பட்ட முனிவர்களால் சிந்தித்து வணங்கப்பெறும் எம் தந்தையாகிய சிவபிரான் எழுந்தருளிய தலம், நிலப்பரப்பினும் மிக்க பரப்புடைய கடலால் சூழப்பட்ட இவ்வுலகச் சான்றோர்களும், நற்குணங்களும் அழகும் மலர்போலும் மென்மையான தனங்களும் உடைய பெண்களும் மிக்குள்ள குன்றளூரைச் சார்ந்த ஏல மணங்கமழும் பொழில் சூழ்ந்த இடும்பாவனம் எனப்படும் தலம் இதுவேயாகும்.

திருஇடும்பாவனம்

பொழிலார்தரு குலைவாழைக
ளெழிலார்திகழ் போழ்தில்
தொழிலான்மிகு தொண்டரவர்
தொழுதாடிய முன்றில்
குழலார்தரு மலர்மென்முலை
மடவார்மிகு குன்றில்
எழிலார்தரு மிறைவர்க்கிடம்
இடும்பாவன மிதுவே. **#180**

குலைகள் தள்ளிய வாழைகள் செழித்துள்ள பொழில்கள் சூழப் பெற்றதும், அழகு திகழும் காலை மாலைப் பொழுதுகளில் பணி செய்வதால் சிறப்பு மிகுந்து விளங்கும் தொண்டர்கள் தொழுது ஆடி மகிழும் முன்றிலை உடையதும் மலர் சூடிய கூந்தலை உடைய மென்முலை மடவார் சூழ்ந்துள்ளதுமானகுன்றளூரை அடுத்துள்ள இடும்பாவனம் அழகுக்கு அழகு செய்யும் இறைவர்க்குரிய இடமாகும்.

திருஇடும்பாவனம்

பந்தார்விர லுமையாளொரு
பங்காகங்கை முடிமேல்

செந்தாமரை மலர்மல்கிய
செழுநீர்வயற் கரைமேல்
கொந்தார்மலர் புன்னைமகிழ்
குரவங்கமழ் குன்றில்
எந்தாயென விருந்தானிடம்
இடும்பாவன மிதுவே. **#181**

பந்தாடும் கை விரல்களை உடைய உமையவள் பங்கனே எனவும், கங்கை அணிந்த சடைமுடியோடு செந்தாமரை மலர்கள் நிறைந்த நீர் நிரம்பிய வளமான வயல்களின் கரைமேல் கொத்துக்களாக மலர்ந்த புன்னை, மகிழ், குரா ஆகியவற்றின் மணம் கமழ்கின்ற குன்றளூரில் எழுந்தருளிய எந்தாய் எனவும், போற்ற இருந்த இறைவனது இடம், இடும்பாவனம்

திருஇடும்பாவனம்

நெறிநீர்மையர் நீள்வானவர்
நினையுந்நினை வாகி
அறிநீர்மையி லெய்தும்மவர்க்
கறியும்மறி வருளிக்
குறிநீர்மையர் குணமார்தரு
மணமார்தரு குன்றில்
எறிநீர்வயல் புடைசூழ்தரு
மிடும்பாவன மிதுவே. **#182**

தவ ஒழுக்கத்தால் சிறந்த முனிவர்கள், உயர்ந்த தேவர்கள் ஆகியோர் நினையும் நினைவுப் பொருளாகி, ஞானத்தால் தொழும் மேலான ஞானியர்கட்குத் தன்னை அறியும் அறிவை நல்கிச் சிவலிங்கம் முதலான குறிகளில் இருந்து அருள் புரிபவனாகிய சிவபெருமான் இடம், தூய சிந்தனையைத் தரும் மணம் கமழ்கின்ற குன்றளூரில் வரப்பை மோதும் நீர் நிரம்பிய வயல்கள் புடை சூழ்ந்து விளங்கும் இடும்பாவனமாகிய இத்தலமேயாகும்.

திருஇடும்பாவனம்

நீறேறிய திருமேனியர்
நிலவும்முல கெல்லாம்
பாறேறிய படுவெண்டலை
கையிற்பலி வாங்காக்
கூறேறிய மடவாளொரு
பாகம்மகிழ் வெய்தி
ஏறேறிய விறைவர்க்கிடம்

இடும்பாவன மிதுவே. #183

நீறணிந்த திருமேனியராய், விளங்கும் உலகெங்கணும் சென்று, பருந்து உண்ணவரும் தசையோடு கூடிய காய்ந்த பிரமகபாலத்தைக் கையில் ஏந்தி அன்பர்கள் இடும் உணவைப்பெற்று உமையம்மையைத் தன் மேனியின் ஒரு கூறாகிய இடப்பாகமாக ஏற்று மகிழ்ந்து விடைமீது வரும் சிவபெருமானுக்குரிய இடமாகிய இடும்பாவனம் இதுவேயாகும்.

திருஇடும்பாவனம்

தேரார்தரு திகழ்வாளெயிற்
றரக்கன்சிவன் மலையை
ஓராதெடுத் தார்த்தான்முடி
யொருபஃதவை நெரித்துக்
கூரார்தரு கொலைவாளொடு
குணநாமமுங் கொடுத்த
ஏரார்தரு மிறைவர்க்கிடம்
இடும்பாவன மிதுவே. #184

வானவெளியில் தேர்மிசை ஏறிவந்த ஒளி பொருந்திய வாளையும் பற்களையும் உடைய அரக்கனாகிய இராவணன், சிவபிரான் எழுந்தருளிய கயிலை மலையின் சிறப்பை ஓராது, தன் தேர்தடைப்படுகிறது என்ற காரணத்திற்காக மலையைப் பெயர்த்துச் செருக்கால் ஆரவாரம் செய்ய, அவன் பத்துத் தலைமுடிகளையும் நெரித்தபின் அவன் வருந்திவேண்ட, கருணையோடு கூரிய கொலைவாள், பிற நன்மைகள், இராவணன் என்ற பெயர் ஆகியவற்றைக் கொடுத்தருளிய அழகனாகிய இறைவற்கு இடம் இடும்பாவனம்.

திருஇடும்பாவனம்

பொருளார்தரு மறையோர்புகழ்
விருத்தர்பொலிமலிசீர்த்
தெருளார்தரு சிந்தையொடு
சந்தம்மலர்பலதூய்
மருளார்தரு மாயன்னயன்
காணார்மயலெய்த
இருளார்தரு கண்டர்க்கிடம்
இடும்பாவனமிதுவே. #185

தருக்கு மிகுந்த மாயனும் அயனும் காணாது மயங்கப் பொருள் நிறைந்த வேதங்களைக் கற்றுணர்ந்த அந்தணர்களால் புகழ்ந்து போற்றப் பெறும் பழமையானவரும், புகழ்மிக்க அம்மறையோர்களால் தெளந்த

சிந்தையோடு பல்வகை நிறங்களுடன் கூடிய மலர்களைத் தூவி வழிபடப் பெறுபவரும் ஆகிய அருள் நிறைந்த கண்டத்தை உடைய சிவபிரானுக்குரிய இடமாக விளங்கும் இடும்பாவனம், இதுவேயாகும்.

திருஇடும்பாவனம்

தடுக்கையுட னிடுக்கித்தலை
பறித்துச்சமண் நடப்பார்
உடுக்கைபல துவர்க்கூறைகள்
உடம்பிட்டுழல் வாரும்
மடுக்கண்மலர் வயல்சேர்செந்நெல்
மலிநீர்மலர்க் கரைமேல்
இடுக்கண்பல களைவானிடம்
இடும்பாவன மிதுவே. **#186**

பனை ஓலையால் செய்த தடுக்கைத் தம் கையில் இடுக்கிக்கொண்டு தலையிலுள்ள உரோமங்களைப் பறித்து முண்டிதமாக நடக்கும் சமணரும், உடுத்துவதற்குரிய காவியுடைகளை அணிந்து திரியும் புத்தரும் அறிய இயலாதவனாய், துன்பம் நீக்கி இன்பம் அருளும் இறைவனது இடம், தாமரை செங்கழுநீர் போன்ற மலர்களை உடைய மடுக்களும், செந்நெல் வயல்களும் சூழ்ந்த, நீர்மலர் மிக்க நீர்நிலைகளின் கரைமேல் விளங்கும் இடும்பாவனம் இதுவேயாகும்.

திருஇடும்பாவனம்

கொடியார்நெடு மாடக்குன்ற
ளூரிற்கரைக் கோல
இடியார்கட லடிவீழ்தரு
மிடும்பாவனத் திறையை
அடியாயுமந் தணர்காழியுள்
அணிஞானசம் பந்தன்
படியாற்சொன்ன பாடல்சொலப்
பறையும் வினைதானே. **#187**

கொடிகள் கட்டிய நீண்ட மாடங்களோடு கூடிய குன்றளூரில் கரைமீது இடியோசையோடு கூடிய அழகிய கடல் தன் அலைகளால் அடிவீழ்ந்து இறைஞ்சும் இடும்பாவனத்து இறைவனை, திருவடிகளையே சிந்தித்து ஆய்வு செய்யும் அந்தணர்கள் வாழும் காழிப் பதிக்கு அணியாய ஞானசம்பந்தன் முறையோடு அருளிய இப்பாடல்களை ஓத, வினைகள் நீங்கும். தானே - அசை.

திருநின்றியூர்

திருநின்றியூர்

திருநின்றியூர்,
பண் - நட்டபாடை
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : இலட்சுமியீசுவரர்.
தேவியார் : உலகநாயகியம்மை.

சூலம்படை சுண்ணப்பொடி
சாந்தஞ்சுடு நீறு
பாலம்மதி பவளச்சடை
முடிமேலது பண்டைக்
காலன்வலி காலின்னொடு
போக்கிக்கடி கமழும்
நீலம்மலர்ப் பொய்கைநின்றி
யூரின்னிலை யோர்க்கே. **#188**

முன்னொரு காலத்தில் காலனின் வலிமையைக் காலால் உதைத்துப் போக்கி, மணம் கமழும் நீல மலர்கள் மலர்ந்த பொய்கைகளை உடைய திருநின்றியூரில் நிலையாக எழுந்தருளியுள்ள இறைவற்குப் படைக்கலன் சூலம். சுண்ணப்பொடியும், சாந்தமும், திருநீறே. பால் போலும் வெண்மையான பிறைமதி அவரது செந்நிறச் சடைமுடியின் மேலது.

திருநின்றியூர்

அச்சம்மிலர் பாவம்மிலர்
கேடும்மில ரடியார்
நிச்சம்முறு நோயும்மிலர்
தாமுந்நின்றி யூரில்
நச்சம்மிட றுடையார்நறுங்
கொன்றைநயந் தாளும்
பச்சம்முடை யடிகள்திருப்
பாதம்பணி வாரே. **#189**

நஞ்சை மிடற்றிலே நிறுத்தித் தேவர்களைக் காத்தருளியவரும், மணம் கமழும் கொன்றை மலர்களை விரும்பிச் சூடியவரும், தம்மை வழிபடும் அடியவர்களை ஆட்கொண்டருளும் அன்புடையவரும் ஆகிய நின்றியூரில் விளங்கும் இறைவரது பாதம் பணிவார் அச்சம், பாவம், கேடு, நாள்தோறும் வரும் நோய் ஆகியன இலராவர்.

திருநின்றியூர்

பறையின்னொலி சங்கின்னொலி
பாங்காரவு மார
அறையும்மொலி யெங்கும்மவை
யறிவாரவர் தன்மை
நிறையும்புனல் சடைமேலுடை
யடிகள்நின்றி யூரில்
உறையும்மிறை யல்லதென
துள்ளம் உணராதே. **#190**

பறையடிக்கும் ஒலி, சங்கு முழங்கும் முழக்கம், பக்கங்களிலெல்லாம் மிகவும் ஒலிக்கும் ஏனைய ஒலிகள் ஆகியவற்றில் இறைவனது நாத தத்துவத்தை அறிவோர் உணர்வர். நிறைந்த கங்கைப் புனலைச் சடைமிசை உடையவராய் நின்றியூரில் உறையும் அவ்விறைவரை அல்லது என் உள்ளம் பிறபொருள்களுள் ஒன்றனையும் உணராது.

திருநின்றியூர்

பூண்டவ்வரை மார்பிற்புரி
நூலன்விரி கொன்றை
ஈண்டவ்வத னோடும்மொரு
பாலம்மதி யதனைத்
தீண்டும்பொழில் சூழ்ந்ததிரு
நின்றியது தன்னில்
ஆண்டகழல் தொழலல்லது
அறியாரவ ரறிவே. **#191**

அணிகலன்களைப் பூண்ட மலைபோன்ற மார்பில் முப்புரி நூலை அணிந்து, விரிந்த கொன்றை மலர் மாலையையும் அதனோடும் பொருந்தப் பால் போன்ற வெண்மையான திங்களையும்சூடி, வானத்தைத் தீண்டும் பொழில்கள் சூழ்ந்த திருநின்றியூரில் எழுந்தருளி, நம்மை ஆண்டருளிய அவ்விறைவன் திருவடிகளைத் தொழுதல் அல்லது, அவன் இயல்புகளை அடியவர் எவரும் அறியார்.

திருநின்றியூர்

குழலின்னிசை வண்டின்னிசை
கண்டுகுயில் கூவும்
நிழலின்னெழில் தாழ்ந்தபொழில்
சூழ்ந்தநின்றி யூரில்
அழலின்வல னங்கையது

வேந்தியன லாடும்
கழலின்னொலி யாடும்புரி
கடவுள்களை கண்ணே. #192
குழலிசை வண்டிசை ஆகியவற்றைக் கேட்டுக் குயில்கள் கூவுவதும், நிழலின் அழகு தங்கியதுமாகிய பொழில்களால் சூழப்பட்ட நின்றியூரிடத்து அழலை வலத் திருக்கரத்தில் ஏந்தி அனலிடை நின்று கழல்களின் ஒலிகள் கேட்குமாறு ஆடும் இறைவன் நமக்குக் களைகண் ஆவான்.

திருநின்றியூர்

மூரன்முறு வல்வெண்ணகை
யுடையாளொரு பாகம்
சாரன்மதி யதனோடுடன்
சலவஞ்சடை வைத்த
வீரன்மலி யழகார்பொழில்
மிடையுந்திரு நின்றி
யூரன்கழ லல்லாதென
துள்ளம்முண ராதே. #193
புன்முறுவலைத் தரும் வெண்மையான பற்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு, சடைமுடியில் சார்ந்துள்ள பிறைமதியோடு கங்கையை வைத்துள்ள வீரனும் அழகு மலிந்த பொழில்கள் செறிந்த திருநின்றியூரில் எழுந்தருளியவனுமாகிய சிவபிரான் திருவடிகளை அல்லாது எனது உள்ளம் வேறு ஒன்றையும் உணராது.

திருநின்றியூர்

பற்றியொரு தலைகையினி
லேந்திப்பலி தேரும்
பெற்றியது வாகித்திரி
தேவர்பெரு மானார்
சுற்றியொரு வேங்கையத
ளோடும்பிறை சூடும்
நெற்றியொரு கண்ணார்நின்றி
யூரின்னிலை யாரே. #194
பிரமனது தலைகளில் ஒன்றைப் பறித்து அதனைக் கையினில் ஏந்திப் பலிகேட்கும் இயல்பினராய்த் திரிகின்ற தேவர் தலைவரும் புலித்தோலை இடையில் சுற்றியிருப்பதோடு முடியில் பிறைமதியைச் சூடியவரும், நெற்றியில் ஒரு கண்ணை உடையவரும் ஆகிய

பெருமானார் திருநின்றியூரின்கண் நிலையாக எழுந்தருளியுள்ளார்.

திருநின்றியூர்

இப்பதிகத்தில் **8-**ம் செய்யுள் சிதைந்து போயிற்று. **#195**

திருநின்றியூர்

நல்லம்மலர் மேலானொடு
ஞாலம்மது வுண்டான்
அல்லரென வாவரென
நின்றும்மறி வரிய
நெல்லின்பொழில் சூழ்ந்தநின்றி
யூரின்னிலை யாரெம்
செல்வரடி யல்லாதென
சிந்தையுண ராதே. **#196**

நல்ல தாமரை மலர்மேல் உறையும் நான்முகனோடு உலகைத் தன் வயிற்றகத்து அடக்கிக் காட்டிய திருமாலும், சிவபிரானே முழுமுதற் பொருள் ஆவர் எனவும் அல்லர் எனவும் கூறிக்கொண்டு தேடிக் காணுதற்கரியவராய் நின்றவரும் நெல்வயல்களால் சூழப்பட்ட நின்றியூரில் நிலையாக எழுந்தருளிய எம் செல்வருமாகிய சிவபிரான் திருவடிகளை அல்லது என் சிந்தை வேறொன்றையும் உணராது.

திருநின்றியூர்

நெறியில்வரு பேராவகை
நினையாநினை வொன்றை
அறிவில்சமண் ஆதருரை
கேட்டும்மய ராதே
நெறியில்லவர் குறிகள்நினை
யாதேநின்றி யூரில்
மறியேந்திய கையானடி
வாழ்த்தும்மது வாழ்த்தே. **#197**

சமய நெறியில் பயில்வதால் பேராமலும் மறவாமலும் நினைக்கும் முழுமுதற்பொருளை அறியும் அறிவற்றசமணர்களாகிய நெறியற்ற கீழ்மக்களின் உரைகளைக் கேட்டு மயங்காமலும், தமக்கென்று உண்மை நெறியல்லாத புறச் சமயிகளின் அடையாளங்களைக் கருதாமலும் நின்றியூரில் மான் ஏந்திய கையனாய் விளங்கும் இறைவன் திருவடிகளை வாழ்த்துவதே வாழ்த்தாகும்.

திருநின்றியூர்

குன்றம்மது வெடுத்தானுடல்
தோளுந்நெரி வாக
நின்றங்கொரு விரலாலுற
வைத்தானின்றி யூரை
நன்றார்தரு புகலித்தமிழ்
ஞானம்மிகு பந்தன்
குன்றாத்தமிழ் சொல்லக்குறை
வின்றிநிறை புகழே. #198

கயிலைமலையை எடுத்த இராவணனின் உடல்தோள் ஆகியன நெரியத் தன் கால்விரல் ஒன்றால் ஊன்றியவனது நின்றியூர் மீது, நன்மைகளையே செய்யும் புகலிப் பதியில் தோன்றிய தமிழ் ஞானசம்பந்தன் உரைத்த திருவருள் நலம் குன்றாத இத்திருப்பதிகப் பாடல்களை உரைப்பதனால் குறைவின்றிப் புகழ் நிறையும்.

திருக்கழுமலம் - திருவிராகம்

சீர்காழி

திருக்கழுமலம் - திருவிராகம்,
பண் - நட்டபாடை, கழுமலம் என்பது சீகாழிக்கொருபெயர்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

பிறையணி படர்சடை முடியிடை
பெருகிய புனலுடை யவனிறை
இறையணி வளையிணை முலையவள்
இணைவன தெழிலுடை யிடவகை
கறையணி பொழினிறை வயலணி
கழுமல மமர்கன லுருவினன்
நறையணி மலர்நறு விரைபுல்கு
நலமலி கழல்தொழன் மருவுமே. **#199**

பிறை அணிந்த விரிந்த சடைமுடியின்கண் பெருகிவந்த கங்கையை உடைய இறைவனும், முன்கையில் அழகிய வளையலை அணிந்த உமையம்மையின் இரண்டு தனபாரங்களோடு இணைபவனும், அழகிய இடவகைகளில் ஒன்றான நிழல்மிக்க பொழில்கள் நிறைந்ததும் நெல் வயல்கள் அணி செய்வதுமாகிய திருக்கழுமலத்தில் எழுந்தருளியுள்ள அழல் போன்ற சிவந்த மேனியனுமாகிய சிவபிரானின் தேன்நிறைந்த மலர்களின் நறுமணம் செறிந்த அழகிய திருவடிகளைத் தொழுதல் செய்மின்கள்.

சீர்காழி

பிணிபடு கடல்பிற விகளறல்
எளிதுள ததுபெரு கியதிரை
அணிபடு கழுமல மினிதமர்
அனலுரு வினனவிர் சடைமிசை
தணிபடு கதிர்வள ரிளமதி
புனைவனை யுமைதலை வனைநிற
மணிபடு கறைமிட றனைநலம்
மலிகழ லிணைதொழன் மருவுமே. **#200**

இடைவிடாமல் நம்மைப் பிணிக்கும் கடல் போன்றபிறவிகள் நீங்குதல் எளிதாகும். அப்பிறவிக்கடல் மிகப் பெரிதாகிய துன்ப அலைகளை உடையது. ஆதலின் அழகிய கழுமலத்துள் இனிதாக அமர்கின்ற

அழலுருவினனும் விரிந்த சடைமீது குளிர்ந்த கிரணங்களை உடைய பிறைமதியைச் சூடியவனும், உமையம்மையின் மணாளனும், நீலமணிபோலும் நிறத்தினை உடைய கறைக் கண்டனும் ஆகிய சிவபிரானின் நலம் நிறைந்த திருவடிகளைத் தொழுதல் செய்மின்.

<u>சீர்காழி</u>

வரியுறு புலியத ளுடையினன்
வளர்பிறை யொளிகிளர் கதிர்பொதி
விரியுறு சடைவிரை புரைபொழில்
விழவொலி மலிகழு மலமமர்
எரியுறு நிறவிறை வனதடி
யிரவொடு பகல்பர வுவர்தம
தெரியுறு வினைசெறி கதிர்முனை
யிருள்கெட நனிநினை வெய்துமதே. **#201**

கோடுகள் பொருந்திய புலியின் தோலை ஆடையாக உடுத்தவனாய், ஒளி மிக்குத் தோன்றும் கிரணங்களையுடைய வளர்பிறையை அணிந்த சடையை உடையவனாய், மணம் பொருந்திய பொழில்கள் சூழ்ந்ததும் திருவிழாக்களின் ஒலி நிறைந்ததும் ஆகியகழுமலத்துள் அழல் வண்ணனாய் விளங்கும் இறைவன் திருவடிகளை, இரவும் பகலும் பரவுகின்றவர்களின் வருத்துகின்ற வினைகள் மிக்க ஒளியை உடைய ஞாயிற்றின் முன் இருள் போலக் கெட்டொழியும். ஆதலால், அப்பெருமான் திருவடிகளை நன்றாக நினையுங்கள்.

<u>சீர்காழி</u>

வினைகெட மனநினை வதுமுடி
கெனில்நனி தொழுதெழு குலமதி
புனைகொடியிடைபொருள் தருபடு
களிறின துரிபுதை யுடலினன்
மனைகுட வயிறுடை யனசில
வருகுறள் படையுடை யவன்மலி
கனைகட லடைகழு மலமமர்
கதிர்மதி யினனதிர் கழல்களே. **#202**

உயர்ந்த பிறை மதி, கொடி போன்ற இடையையுடைய கங்கை, மந்திரப்பொருளால் உண்டாக்கப்பட்டுத் தோன்றிய யானையின் தோல் இவற்றை உடைய உடலினனும், வீட்டுக் குடம் போலும் வயிற்றினை உடைய பூதங்கள் சிலவற்றின் படையை உடையவனும், ஆரவாரம் நிறைந்த கடற்கரையை அடுத்த கழுமலத்துள் ஞாயிறு திங்கள் ஆகியவற்றைக் கண்களாகக் கொண்டு அமர்ந்தவனுமாகிய

சிவபெருமானின் ஒலிக்கும் கழற் சேவடிகளை, வினைகள் கெடவும் மனத்தில் நினைவது முடியவும் வேண்டின் நன்கு தொழுதெழுக.

சீர்காழி

தலைமதி புனல்விட வரவிவை
தலைமைய தொருசடை யிடையுடன்
நிலைமரு வவொரிட மருளின
னிழன்மழு வினொடழல் கணையினன்
மலைமரு வியசிலை தனின்மதி
லெரியுண மனமரு வினனல
கலைமரு வியபுற வணிதரு
கழுமல மினிதமர் தலைவனே. **#203**

நல்ல கலைமான்கள் பொருந்திய சிறுகாடுகள் புறத்தே அழகு பெறச் சூழ்ந்துள்ள கழுமலத்தில் இனிதாக எழுந்தருளிய இறைவன், ஒரு நாட்பிறை, கங்கை, நஞ்சு பொருந்திய பாம்பு ஆகியவற்றுக்குத் தன் தலைமையான சடைக் காட்டின் நடுவில் ஒன்றாக இருக்குமாறு இடம் அருளியவன். ஒளி பொருந்திய மழுவோடு அழல் வடிவான அம்பினை மேருமலையாகிய வில்லில் பூட்டி எய்தலால் திரிபுரங்கள் எரியுண்ணுமாறு மனத்தால் சிந்தித்தவன்.

சீர்காழி

வரைபொரு திழியரு விகள்பல
பருகொரு கடல்வரி மணலிடை
கரைபொரு திரையொலி கெழுமிய
கழுமல மமர்கன லுருவினன்
அரைபொரு புலியத ளுடையினன்
அடியிணை தொழவரு வினையெனும்
உரைபொடி படவுறு துயர்கெட
வுயருல கெய்தலொரு தலைமையே. **#204**

மலைகளைப் பொருது இழிகின்ற அருவிகள் பலவற்றைப் பருகுகின்ற பெரிய கடலினை அடுத்துள்ள வரிகளாக அமைந்த மணற்பரப்பில் அமைந்ததும், கரையைப் பொரும் கடல் அலைகளின் ஓசை எப்போதும் கேட்கின்றதுமாகிய கழுமலத்துள் எழுந்தருளியுள்ளவனும், கனல் போலும் சிவந்த திருமேனியனும், இடையிலே கட்டிய புலித்தோலை உடையவனுமாகிய சிவபிரானின் இணை அடிகளைத்தொழின், போக்குதற்கு அரியனவாகிய வினைகள் என்னும் வார்த்தையும் பொடிபட, மிக்க துயர்கள் நீங்க உயர்ந்த உலகமாகிய வீட்டுலகத்தைப் பெறுதல் நிச்சயமாகும்.

சீர்காழி

முதிருறி கதிர்வள ரிளமதி
சடையனை நறநிறை தலைதனில்
உதிருறு மயிர்பிணை தவிர்தசை
யுடைபுலி யதளிடை யிருள்கடி
கதிருறு சுடரொளி கெழுமிய
கழுமல மமர்மழு மலிபடை
அதிருறு கழலடி களதடி
தொழுமறி வலதறி வறியமே. **#205**

மலர்கள் சூடுவதால் தேன் நிறைந்துள்ள திருமுடியில் உலகிற் பயிர்களை முதிர்விக்கும் கிரணங்கள் வளர்கின்றமதியைச் சூடிய சடையை உடையவனாய், உதிரத்தக்க மயிர் பிணைந்து தசை தவிர்ந்துள்ள புலித்தோலை உடுத்த இடையை உடையவனாய், இருளை நீக்கும் கதிரவனின் சுடரொளி பொருந்திய மழுவாகிய படையை ஏந்திக் கழுமலத்துள் அமர்கின்ற பெருமானின் கழல்கள் அணிந்த திருவடிகளைத் தொழும் அறிவல்லது பிறவற்றை அறியும் அறிவை அறியோம்.

சீர்காழி

கடலென நிறநெடு முடியவன்
அடுதிறல் தெறவடி சரணென
அடனிறை படையரு ளியபுகழ்
அரவரை யினனணி கிளர்பிறை
விடநிறை மிடறுடை யவன்விரி
சடையவன் விடையுடை யவனுமை
உடனுறை பதிகள்தன் மறுகுடை
யுயர்கழு மலவிய னகரதே. **#206**

கடல் போன்ற கரிய நிறத்தினனும், நீண்ட முடியை அணிந்தவனும் ஆகிய இராவணனின் வலிமை கெடுமாறு செய்து பின் அவன் திருவடிகளே சரண் என வேண்ட அவனுக்கு வலிமை மிக்க வாட்படை அருளிய புகழுடையவனும், பாம்பை இடையில் கட்டியவனும், அழகுமிக்க பிறையை அணிந்தவனும், விடம் தங்கிய கண்டத்தை உடையவனும், விரித்த சடையை உடையவனும், விடை ஊர்தியனும் ஆகிய பெருமான் உமையம்மையோடு உறையும் பதி, கடல் அலைகளையுடைய உயர்ந்த கழுமலம் எனப்படும் பெரிய நகராகும்.

சீர்காழி

கொழுமல ருறைபதி யுடையவன்
நெடியவ னெனவிவர் களுமவன்
விழுமையை யளவறி கிலரிறை
விரைபுணர் பொழிலணி விழவமர்
கழுமல மமர்கன லுருவினன்
அடியிணை தொழுமவ ருருவினை
எழுமையுமிலநில வகைதனில்
எளிதிமை யவர்விய னுலகமே. **#207**

செழுமையான தாமரை மலரை உறையும் இடமாகக் கொண்ட பிரமன், திருமால் ஆகிய இவர்களும் சிவபெருமானது சிறப்பைச் சிறிதும் அறியார். அப்பெருமான், மணம் பொருந்திய பொழில்கள் சூழப் பெற்றதும் அழகிய விழாக்கள் பல நிகழ்வதுமாகிய கழுமலத்துள் எழுந்தருளிய அழல் உருவினன். அப்பெருமானுடைய திருவடி இணைகளைத் தொழுபவர்களின் நீங்குதற்கரிய வினைகள் இப்பூவுலகில் ஏழு பிறப்பின்கண்ணும் இலவாகும். இமையவர்களின் பெரிய உலகத்தை அடைதல் அவர்கட்கு எளிதாகும்.

<u>சீர்காழி</u>

அமைவன துவரிழு கியதுகில்
அணியுடை யினரம ணுருவர்கள்
சமையமு மொருபொரு ளெனுமவை
சலநெறி யனவற வுரைகளும்
இமையவர் தொழுகழு மலமமர்
இறைவன தடிபர வுவர்தமை
நமையல வினைநல னடைதலில்
உயர்நெறி நனிநணு குவர்களே. **#208**

தமக்குப் பொருந்துவனவாகிய மருதந்துவர் ஊட்டின ஆடையை அணிந்தவர்களாகிய புத்தர்களும், ஆடையற்ற சமணர்களும் ஒரு பொருள் எனக்கூறும் சமய நெறிகளும் அறவுரைகளும் ஆகிய அவை வஞ்சனை மார்க்கத்தை வகுப்பன என உணர்ந்து தேவர்களால் தொழப்படுகின்ற கழுமலத்துள் எழுந்தருளிய இறைவன் திருவடிகளைப் பரவுவார்களை வினைகள் வருத்தா. நலன் அடைதலின் உயர்நெறிகளை அவர்கள் அடைவார்கள்.

<u>சீர்காழி</u>

பெருகிய தமிழ்விர கினன்மலி
பெயரவ னுறைபிணர்திரையொடு
கருகிய நிறவிரி கடலடை

கழுமல முறைவிட மெனநனி
பெருகிய சிவனடி பரவிய
பிணைமொழி யனவொரு பதுமுடன்
மருவிய மனமுடை யவர்மதி
யுடையவர் விதியுடை யவர்களே. **#209**

பரந்துபட்ட நூல்களைக் கொண்டுள்ள தமிழ்மொழியை ஆழ உணர்ந்தவனும், மிக்க புகழாளனும் ஆகிய ஞானசம்பந்தன் நீர்த்துளிகளோடு மடங்கும் அலைகளுடன் கருமை நிறம் வாய்ந்த கடலின் கரையில் விளங்கும் கழுமலம் இறைவனது உறைவிடம் என மிகவும் புகழ் பரவிய சிவபெருமானின் திருவடிகளைப் போற்றிப் பாடிய அன்பு பிணைந்த இப்பத்துப் பாடல்களையும் ஓதிமனம் பொருந்த வைக்கும் அன்பர்கள், நிறைந்த ஞானமும் நல்லூழும் உடையவராவர்.

திருவீழிமிழலை - திருவிராகம்

திருவீழிமிழலை

திருவீழிமிழலை - திருவிராகம்,
பண் - நட்டபாடை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

தடநில வியமலை நிறுவியொர்
தழலுமிழ் தருபட வரவுகொ
டடலசு ரரொடம ரர்களலை
கடல்கடை வுழியெழு மிகுசின
விடமடை தருமிட றுடையவன்
விடைமிசை வருமவ னுறைபதி
திடமலி தருமறை முறையுணர்
மறையவர் நிறைதிரு மிழலையே. **#210**

பெரியதாகிய மந்தரமலையை மத்தாக நிறுத்தி அழல் போலும் கொடிய நஞ்சை உமிழும் படத்தோடு கூடிய வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகக் கட்டி வலிய அசுரர்களோடு தேவர்கள் அலைகள் பொருந்திய திருப்பாற்கடலைக் கடைந்த விடத்துத் தோன்றிய உக்கிரமான ஆலகாலம் என்னும் நஞ்சு அடைந்த கண்டத்தை உடையவனும், விடையின்மீது வருபவனும் ஆகிய சிவபிரான் உறையும் தலம். நான்மறைகளை முறையாக ஓதி உணர்ந்த உறுதி வாய்ந்த மறையவர் நிறைந்துள்ள திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

தரையொடு திவிதல நலிதரு
தகுதிற லுறுசல தரனது
வரையன தலைவிசை யொடுவரு
திகிரியை யரிபெற வருளினன்
உரைமலி தருசுர நதிமதி
பொதிசடை யவனுறை பதிமிகு
திரைமலி கடன்மண லணிதரு
பெறுதிடர் வளர்திரு மிழலையே. **#211**

மண்ணுலகத்தோடு விண்ணுலகையும் நலிவுறுத்துகின்ற வலிமை பொருந்திய சலந்தராசுரனின் மலை போன்ற தலையை வேகமாக அறுத்து வீழ்த்திய சக்கராயுதத்தைத் திருமால் வேண்ட அவர்க்கு

அருளியவனும், புகழால் மிக்க கங்கை நதி மதி ஆகியன பொதிந்த சடைமுடியை உடையவனுமாகிய சிவபெருமான் உறையும் தலம், பெரிய அலைகளை உடைய கடற்கரை, மணலால் அழகுபெறும் மணல் மேடுகள் நிறைந்த திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

மலைமக டனையிகழ் வதுசெய்த
மதியறு சிறுமன வனதுயர்
தலையினொ டழலுரு வனகர
மறமுனி வுசெய்தவ னுறைபதி
கலைநில வியபுல வர்களிடர்
களைதரு கொடைபயில் பவர்மிகு
சிலைமலி மதிள்புடை தழுவிய
திகழ்பொழில் வளர்திரு மிழலையே. **#212**

மலைமகளாகிய பார்வதிதேவியை இகழ்ந்த அறிவற்ற அற்ப புத்தியையுடைய தக்கனுடைய தலையோடு அழலோனின் கை ஒன்றையும் அரிந்து, தன் சினத்தை வெளிப்படுத்திய சிவபிரான் உறையும் தலம், கலை ஞானம் நிரம்பிய புலவர்களின் வறுமைத்துன்பம் நீங்க நிறைந்த செல்வத்தை வழங்கும் கொடையாளர்கள்வாழ்வதும் பெரிய மதில்களால் சூழப் பெற்றதும் விளங்குகின்ற பொழில்கள் வளர்வதுமாய திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

மருவலர் புரமெரி யினின்மடி
தரவொரு கணைசெல நிறுவிய
பெருவலி யினனல மலிதரு
கரனுர மிகுபிண மமர்வன
இருளிடை யடையுற வொடுநட
விசையுறு பரனினி துறைபதி
தெருவினில் வருபெரு விழவொலி
மலிதர வளர்திரு மிழலையே. **#213**

பகைமை பாராட்டிய திரிபுராதிகளின் முப்புரங்களும் எரியில் அழியுமாறு கணை ஒன்றைச் செலுத்திய பெரு வலிபடைத்தவனும், நன்மைகள் நிறைந்த திருக்கரங்களை உடையவனும், வலிய பிணங்கள் நிறைந்த சுடுகாட்டில் நள்ளிருட்போதில் சென்று அங்குத் தன்னை வந்தடைந்த பேய்களோடு நடனமாடி இசை பாடுபவனுமாகிய பரமன் மகிழ்வோடு உறையும் பதி, தெருக்கள் தோறும் நிகழும் பெருவிழாக்களின் ஆரவாரம் நிறைந்து வளரும் திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

அணிபெறு வடமர நிழலினில்
அமர்வொடு மடியிணை யிருவர்கள்
பணிதர வறநெறி மறையொடும்
அருளிய பரனுறை விடமொளி
மணிபொரு வருமர கதநில
மலிபுன லணைதரு வயலணி
திணிபொழி றருமண மதுநுகர்
அறுபத முரல்திரு மிழலையே. **#214**

அழகிய கல்லால மரநிழலில் எழுந்தருளியிருந்து தம் திருவடி இணைகளைச் சனகர் சனந்தனர் ஆகிய இருவர் ஒருபுறமும், சனாதனர் சனற்குமாரர் ஆகிய இருவர் மறுபுறமும் பணிய அவர்கட்கு அறநெறியை வேதங்களோடும் அருளிச் செய்த சிவபிரான் உறையும் இடம், ஒளி பொருந்திய மணிகள் ஒப்பில்லாத மரகதம் ஆகியவற்றை அடித்துவரும் ஆற்றுநீர் நிலமெல்லாம் நிறைந்து வளங்களால் அணி செய்யப் பெறுவதும் செறிந்த பொழில்கள்தரும் மணத்தை நுகரும் வண்டுகள் முரல்வதுமான திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

வசையறு வலிவன சரவுரு
வதுகொடு நினைவரு தவமுயல்
விசையன திறன்மலை மகளறி
வுறுதிற லமர்மிடல் கொடுசெய்து
அசைவில படையருள் புரிதரும்
அவனுறை பதியது மிகுதரு
திசையினின் மலர்குல வியசெறி
பொழின்மலி தருதிரு மிழலையே. **#215**

குற்றமற்ற வலிய வேடர் உருவைக் கொண்டு, நினைதற்கும் அரிய கடுந்தவத்தைச் செய்யும் விசயனுடையவலிமையை உமையம்மைக்கு அறிவுறுத்தும் வகையில் அவனோடு வலிய போரைத் தன் வலிமை தோன்றச் செய்து அவ்விசயனுக்குத் தோல்வி எய்தாத பாசுபதக்கணையை வழங்கி அருள்புரிந்த சிவபிரான் உறையும் பதி, செறிந்த மரங்கள் திசைகள் எங்கும் மலர்கள் பூத்துக் குலாவும் செறிந்த பொழில்கள் நிறைந்துள்ள திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

நலமலி தருமறை மொழியொடு

நதியுறு புனல்புகை யொளிமுதல்
மலரவை கொடுவழி படுதிறன்
மறையவ னுயிரது கொளவரு
சலமலி தருமற லிதனுயிர்
கெடவுதை செய்தவ னுறைபதி
திலகமி தெனவுல குகள்புகழ்
தருபொழி லணிதிரு மிழலையே. #216

நன்மைகள் பலவும் நிறைந்த வேத மந்திரங்களை ஓதி, ஆற்று நீர், மணப்புகை, தீபம், மலர்கள் ஆகியனவற்றைக் கொண்டு பூசை புரிந்து வழிபடும் மறையவனாகிய மார்க்கண்டேயனின் உயிரைக் கவரவந்த வஞ்சகம் மிக்க இயமனின் உயிர் கெடுமாறு உதைத்தருளிய சிவபிரான் உறையும்பதி, உலக மக்கள் திலகம் எனப் புகழ்வதும் பொழில்கள் சூழ்ந்துள்ளதுமான திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

அரனுறை தருகயி லையைநிலை
குலைவது செய்ததச முகனது
கரமிரு பதுநெரி தரவிரல்
நிறுவிய கழலடி யுடையவன்
வரன்முறை யுலகவை தருமலர்
வளர்மறை யவன்வழி வழுவிய
சிரமது கொடுபலி திரிதரு
சிவனுறை பதிதிரு மிழலையே. #217

சிவபிரான் எழுந்தருளிய கயிலைமலையை நிலைகுலையச் செய்து அதனைப் பெயர்த்த பத்துத் தலைகளை உடைய இராவணனுடைய இருபது கரங்களும் நெரியுமாறு தன் கால்விரலை ஊன்றிய வீரக்கழல் அணிந்த திருவடிகளை உடையவனும், வரன் முறையால் உலகைப் படைக்கும் பூவின் நாயகனான பிரமன் வழி வழுவியதால் ஐந்தாயிருந்த அவன் சிரங்களில் ஒன்றைக் கிள்ளி எடுத்து அதன்கண் பலியேற்றுத் திரிபவனுமாகிய சிவபிரான் உறையும் பதி திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

அயனொடு மெழிலமர் மலர்மகள்
மகிழ்கண னளவிட லொழியவொர்
பயமுறு வகைதழ னிகழ்வதொர்
படியுரு வதுவர வரன்முறை
சயசய வெனமிகு துதிசெய
வெளியுரு வியவவ னுறைபதி

செயநில வியமதின் மதியது
தவழ்தர வுயர்திரு மிழலையே. **#218**

நான்முகனும் அழகிய மலர்மகள் கேள்வனாகிய கண்ணனும் அளவிடமுடியாது அஞ்சி நிற்க, ஒரு சோதிப் பிழம்பாய்த் தோன்ற அவ்விருவரும் முறையாக சயசய எனப்போற்றித் துதிசெய்யுமாறு அண்டங்கடந்த அச்சிவபிரான் உறையும் பதி, வெற்றி விளங்கும் மதில்களில் மதி தோய்ந்து செல்லுமாறு உயர்ந்து தோன்றும் திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

இகழுரு வொடுபறி தலைகொடும்
இழிதொழின் மலிசமண் விரகினர்
திகழ்துவ ருடையுடல் பொதிபவர்
கெடவடி யவர்மிக வருளிய
புகழுடை யிறையுறை பதிபுனல்
அணிகடல் புடைதழு வியபுவி
திகழ்சுரர் தருநிகர் கொடையினர்
செறிவொடு திகழ்திரு மிழலையே. **#219**

பிறரால் இகழத்தக்க உருவோடும் உரோமங்களைப் பறித்தெடுத்தலால் முண்டிதமான தலையோடும் இழி தொழில் மிகுதியாகப் புரியும் சமணர்களாகிய தந்திரசாலிகளும், விளங்கும் மருதந்துவராடையை உடலில் போர்த்துத் திரியும் சாக்கியர்களும் அழிந்தொழியத் தன் அடியவர்களுக்கு மிகவும் அருள் புரிபவனும் புகழாளனுமாகிய இறைவன் உறையும் பதி நீர்வளம் மிக்கதும் கடலாற் சூழப்பட்ட இவ்வுலகில் விளங்கும் சுரர் தருவாகிய கற்பகம் போன்ற கொடையாளர் மிக்கு விளங்குவதுமாகிய திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

சினமலி கரியுரி செய்தசிவ
னுறைதரு திருமிழ லையைமிகு
தனமனர் சிரபுர நகரிறை
தமிழ்விர கனதுரை யொருபதும்
மனமகிழ் வொடுபயில் பவரெழின்
மலர்மகள் கலைமகள் சயமகள்
இனமலி புகழ்மக ளிசைதர
இருநில னிடையினி தமர்வரே. **#220**

சினவேகத்தோடு வந்த யானையை உரித்துப் போர்த்த சிவபிரான் எழுந்தருளிய திருவீழிமிழலையை, மிக்க செல்வங்களால் நிறைந்த

மனமகிழ்வுடையவர் வாழும் சிவபுரநகரின் மன்னனும் தமிழ் விரகனுமாகிய ஞானசம்பந்தன் உரைத்த இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் மனமகிழ்வோடு பயில்பவர் அழகிய திருமகள், கலைமகள், சயமகள், அவர்க்கு இனமான புகழ் மகள் ஆகியோர் தம்பால் பொருந்த, பெரிய இவ்வுலகின்கண் இனிதாக வாழ்வர்.

திருச்சிவபுரம் - திருவிராகம்

திருச்சிவபுரம்

திருச்சிவபுரம் - திருவிராகம்,
பண் - நட்டபாடை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரிநாயகர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

புவம்வளி கனல்புனல் புவிகலை
யுரைமறை திரிகுண மமர்நெறி
திவமலி தருசுரர் முதலியர்
திகழ்தரு முயிரவை யவைதம
பவமலி தொழிலது நினைவொடு
பதுமநன் மலரது மருவிய
சிவனது சிவபுர நினைபவர்
செழுநில னினில்நிலை பெறுவரே. **#221**

விண், காற்று, தீ, நீர், மண் ஆகிய ஐம்பெரும் பூதங்களையும், எண்ணெண் கலைகளை உரைத்தருளும் வேதங்களையும், முக்குணங்களையும், விரும்பத்தக்க மார்க்கங்களையும், வானுலகில்வாழும் தேவர்கள் முதலியவர்களாய் விளங்கும் உயிர்களையும், தம்முடைய படைப் பாற்றல் நினைவோடு நல்ல தாமரை மலரில் விளங்கும் நான்முகனை அதிட்டித்து நின்று உலகைத் தோற்றுவித்தருளும் சிவபெருமானது சிவபுரத் தலத்தை நினைப்பவர் வளமையான இவ்வுலகில் நிலைபெற்று வாழ்வர்.

திருச்சிவபுரம்

மலைபல வளர்தரு புவியிடை
மறைதரு வழிமலி மனிதர்கள்
நிலைமலி சுரர் முத லுலகுகள்
நிலைபெறு வகைநினை வொடுமிகும்
அலைகட னடுவறி துயிலமர்
அரியுரு வியல்பர னுறைபதி
சிலைமலி மதிள்சிவ புரநினை
பவர்திரு மகளொடு திகழ்வரே. **#222**

மலைகள் பல வளரும் இம்மண்ணுலகில் வேத விதிகளின் படி நடக்கும் மிகுதியான மக்கள், விண்ணில் நிலைபேறுடையவராய் வாழும் தேவர்கள் ஆகியோரும் மற்றுமுள்ள உலக உயிர்களும் நிலைபெற்று

வாழ்தற்குரிய காத்தல் தொழில் நினைவோடு, மிகுந்துவரும் அலைகளை உடைய திருப்பாற்கடல் நடுவில் அறிதுயில் அமர்ந்துள்ள திருமாலை அதிட்டித்துநின்று காத்தல் தொழிலைச் செய்தருளும் சிவபிரான் உறையும் பதி, கற்களால் கட்டப்பட்ட மதில்கள் சூழ்ந்த சிவபுரமாகும். அதனை நினைப்பவர் திருமகளொடு திகழ்வர்.

திருச்சிவபுரம்

பழுதில கடல்புடை தழுவிய
படிமுதலியவுல குகள்மலி
குழுவிய சுரர்பிறர் மனிதர்கள்
குலமலி தருமுயி ரவையவை
முழுவது மழிவகை நினைவொடு
முதலுரு வியல்பர னுறைபதி
செழுமணி யணிசிவ புரநகர்
தொழுமவர் புகழ்மிகு முலகிலே. **#223**

பழுதுபடாத, கடலால் சூழப்பட்ட நிலவுலகம் முதலிய எல்லா உலகங்களையும், அவ்வுலகங்களில் நிறைவுடன் குழுமிவாழும் தேவர்கள் நரகர்கள் மற்றும் மனிதர்கள் ஏனையோர்ஆகிய அனைவர் உயிர்களையும் அழிக்கும் வகையான நினைவோடு உருத்திரனை அதிட்டித்து அவனுருவில் அழித்தலைச் செய்தருளும் சிவபிரான் உறையும் பதியாகிய செழுமையான மணிகள் அழகு செய்யும் சிவபுர நகரைத் தொழுவோரின் புகழ் உலகில் மிகும்.

திருச்சிவபுரம்

நறைமலி தருமள றொடுமுகை
நகுமலர் புகைமிகு வளரொளி
நிறைபுனல் கொடுதனை நினைவொடு
நியதமும் வழிபடு மடியவர்
குறைவில பதமணை தரவருள்
குணமுடை யிறையுறை வனபதி
சிறைபுன லமர்சிவ புரமது
நினைபவர் செயமகள் தலைவரே. **#224**

மணம் மிகுந்த சந்தனம், அரும்புகள், இதழ் விரிந்த மலர்கள், குங்கிலியம், சீதாரி முதலிய தூபம், ஒளி வளர் தீபங்கள், நிறைந்த நீர் ஆகியவற்றைக் கொண்டு நீராட்டியும், மலர் சூட்டியும் ஒளி காட்டியும் தன்னை நாள்தோறும் நினைவோடு வழிபடும் அடியவர், குறைவிலா நிறைவான சாமீபம் முதலான முத்திகளை அடைய அருள்செய்யும் குணம் உடைய இறைவன் உறையும் அழகிய பதி, நீர் நிலைகள் பலவற்றாலும் வளம்

நிரம்பி விளங்கும் சிவபுரமாகும். அதனை நினைபவர் சயமகள் தலைவராவர்.

திருச்சிவபுரம்

சினமலி யறுபகை மிகுபொறி
சிதைதரு வகைவளி நிறுவிய
மன்னுணர் வொடுமலர் மிசையெழு
தருபொரு ணியதமு முணர்பவர்
தனதெழி லுருவது கொடுவடை
தகுபர னுறைவது நகர்மதில்
கனமரு வியசிவ புரநினை
பவர்கலை மகள்தர நிகழ்வரே. **#225**

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் எனப்படும் ஆறு பகைகளையும் வென்று, மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளையும் அடக்கும் வகையில், காற்றை நிறுத்தியும் விடுத்தும் செய்யப்படும் பிராணாயாமத்தைப் புரிந்தும், தியானித்தலால் உள்ளத்தில் தோன்றியருளும் ஒளிப் பொருளாகிய சிவபெருமானை நாள்தோறும் உணர்பவராகிய யோகியர்கட்குத் தனது எழிலுருவாகிய சாரூபத்தைத் தந்தருளும் சிவபிரான் உறைந்தருளும் நகர், மேகந் தவழும் மதில்கள் சூழ்ந்த சிவபுரமாகும். அதனை நினைபவர், கலைமகள் தன் அருளைத் தரவாழ்வர்.

திருச்சிவபுரம்

சுருதிகள் பலநல முதல்கலை
துகளறு வகைபயில் வொடுமிகு
உருவிய லுலகவை புகழ்தர
வழியொழு குமெயுறு பொறியொழி
அருதவ முயல்பவர் தனதடி
யடைவகை நினையர னுறைபதி
திருவருள் சிவபுர நினைபவர்
திகழ்குல னிலனிடை நிகழுமே. **#226**

வேதங்களையும், பலவாகிய நன்மைகளைத் தரும் தலைமையான கலைகளையும், குற்றம் அறப்பயின்று, உலகியலில் பழிபாவங்களுக்கு அஞ்சித் தூய ஒழுக்க சீலராய் உலகம் புகழ விளங்கி உடலின்கண் உள்ள பொறிகள்வழி ஒழுகாது அரிய தவத்தை மேற்கொண்ட அடியவர்கள் தன் திருவடிகளை அடையும் வகை சங்கற்பிக்கும் சிவபிரான் உறையும் பதி திருவருள் தேங்கிய சிவபுரமாகும். அத்தலத்தை நினைவோர்தம் விளக்கமான குலம் உலகிடை நின்று நிகழும்.

<u>திருச்சிவபுரம்</u>

கதமிகு கருவுரு வொடுவுகி
ரிடைவட வரைகண கணவென
மதமிகு நெடுமுக னமர்வளை
மதிதிக ழெயிறத னுதிமிசை
இதமமர் புவியது நிறுவிய
வெழிலரி வழிபட வருள்செய்த
பதமுடை யவனமர் சிவபுர
நினைபவர் நிலவுவர் படியிலே. **#227**

திருமால் வராக அவதாரத்தில் சினம்மிக்க கரிய உருவோடு, தனது நகங்களிடையே வடக்கின்கண் உள்ள மேருமலை கணகண என ஒலி செய்ய, மதம் மிக்க நீண்ட அவ்வராகத்தின் முகத்திற்பொருந்திய வளைந்த பிறை போன்ற எயிற்றின் முனைக்கண் பூமி இதமாக அமர்ந்து விளங்க, அப்பூமியை உலகின்கண் அவியாதுநிறுத்திக் காத்த அழகிய திருமால் வழிபட, அவர்க்கு அருள்புரிந்த திருவடிகளை உடையவனாகிய சிவபெருமான் எழுந்தருளிய சிவபுரத்தை நினைப்பவர் உலகிற் புகழோடு விளங்குவர்.

<u>திருச்சிவபுரம்</u>

அசைவுறு தவமுயல் வினிலயன்
அருளினில் வருவலி கொடுசிவன்
இசைகயி லையையெழு தருவகை
யிருபது கரமவை நிறுவிய
நிசிசரன் முடியுடை தரவொரு
விரல்பணி கொளுமவ னுறைபதி
திசைமலி சிவபுர நினைபவர்
செழுநில னினில்நிகழ் வுடையரே. **#228**

உடல் வருத்தத்தைத் தரும் கடுமையான தவத்தைச் செய்து நான்முகன் அருளினால் வரமாகக் கிடைக்கப் பெற்ற வலிமையைக் கொண்டு சிவபிரான் எழுந்தருளிய கயிலைமலையை அது பெயரும்வகையில் இருபது கரங்களை அம்மலையின் கீழ்ச் செலுத்திய இராவணனின் பத்துத் தலைகளில் உள்ள முடிகள் சிதறுமாறு தனது ஒரு கால் விரலால் அடர்த்துத் தன் வலிமையை அவனுக்கு உணர்த்தி அவனைப் பணி கொண்டருளும் சிவபிரான் உறையும் பதி, எண் திசைகளிலும் புகழ் நிறைந்த சிவபுரமாகும். அத்தலத்தை நினைபவர் வளமான இவ்வுலகில் எஞ்ஞான்றும் வாழ்வர்.

திருச்சிவபுரம்

அடன்மலி படையரி யயனொடு
மறிவரி யதொரழன் மலிதரு
சுடருரு வொடுநிகழ் தரவவர்
வெருவொடு துதியது செயவெதிர்
விடமலி களநுத லமர்கண
துடையுரு வெளிபடு மவனகர்
திடமலி பொழிலெழில் சிவபுர
நினைபவர் வழிபுவி திகழுமே. **#229**

வலிமை மிக்க சக்கராயுதத்தைப் படைக்கலனாகக் கொண்ட திருமாலும் நான்முகனும் அறிதற்கரிய வகையில் அழல்மிக்க பேரொளிப் பிழம்பாய் வெளிப்பட்டருள அதனைக் கண்ட அவர்கள், அச்சங் கொண்டு துதி செய்த அளவில் அவர்கட்கு எதிரே விடம் பொருந்திய கண்டமும் நெற்றிக் கண்ணும் உடைய தனது உருவத்தோடு காட்சி நல்கிய சிவபிரான் எழுந்தருளிய தலம், உறுதியான மரங்கள் செறிந்த பொழில்கள்சூழ்ந்த எழில் பெற்ற சிவபுரமாகும். அதனை நினைபவரும் அவர் மரபினரும் உலகில் புகழோடு விளங்குவர்.

திருச்சிவபுரம்

குணமறி வுகணிலை யிலபொரு
ளுரைமரு வியபொருள் களுமில
திணமெனு மவரொடு செதுமதி
மிகுசம ணருமலி தமதுகை
உணலுடை யவருணர் வருபர
னுறைதரு பதியுல கினினல
கணமரு வியசிவ புரநினை
பலரெழி லுருவுடை யவர்களே. **#230**

குணங்களும் அறிவும் நிலையில்லாதன எனவும், காணப்படும் உலகப் பொருள்களும், உரைக்கும் உரையால் உணர்த்தப்படும் ஏனைய பொருள்களும், அவ்வாறே அழிந்து தோன்றுமியல்பின. இது திண்ணம் எனவும், கணபங்க வாதம் புரியும் கேட்டிற்குக் காரணமான அறிவினராகிய புத்தர்களும், தமது கையில் நிறைந்த உணவை வாங்கி உண்ணும் சமணர்களும், உணர்தற்கரிய சிவபிரான் உறையும் பதி, இவ்வுலகில் நல்லவர்கள் திரளாய் வாழும் சிவபுரமாகும். அதனை நினைபவர் அழகிய உருவோடு விளங்குவர்.

திருச்சிவபுரம்

திகழ்சிவ புரநகர் மருவிய
சிவனடி யிணைபணி சிரபுர
நகரிறை தமிழ்விர கனதுரை
நலமலி யொருபது நவில்பவர்
நிகழ்குல நிலநிறை திருவுரு
நிகரில கொடைமிகு சயமகள்
புகழ்புவி வளர்வழி யடிமையின்
மிகைபுணர் தரநல மிகுவரே. **#231**

இவ்வுலகில் புகழால் விளங்கும் சிவபுரநகரில் எழுந்தருளிய சிவபெருமானின் திருவடி இணைகளைப் பணிகின்ற சிரபுர நகர்த் தலைவனும், தமிழ் விரகனுமாகிய ஞானசம்பந்தன் பாடிய உரைச் சிறப்பு வாய்ந்த இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தினையும் ஓதி வழிபடுபவர் குலம், நிலம், நிறைந்த செல்வம், அழகிய வடிவம், ஒப்பற்ற கொடை வண்மை, மிக்க வெற்றித் திரு, இவ்வுலகிடை தொடர்ந்து வரும் சந்ததி, இறைவனடியார் என்ற பெருமிதம் ஆகியன தம்பால் விளங்க எல்லா நலங்களும் மிகப் பெறுவர்.

திருமறைக்காடு - திருவிராகம்

திருமறைக்காடு

திருமறைக்காடு - திருவிராகம்,
பண் - நட்டபாடை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மறைக்காட்டீசுரர்.
தேவியார் : யாழைப்பழித்தமொழியம்மை.

சிலைதனை நடுவிடை நிறுவியொர்
சினமலி யரவது கொடுதிவி
தலமலி சுரரசு ரர்களொலி
சலசல கடல்கடை வுழிமிகு
கொலைமலி விடமெழ வவருடல்
குலைதர வதுநுகர் பவனெழில்
மலைமலி மதில்புடை தழுவிய
மறைவன மமர்தரு பரமனே. **#232**

மந்தரமலையை மத்தாக நடுவே நிறுத்தி, சினம் மிக்க ஒப்பற்ற வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகக் கொண்டு, விண்ணுலகில் வாழும் தேவர்களும் அசுரர்களும் சலசல என்னும் ஒலி தோன்றுமாறு திருப்பாற்கடலைக் கடைந்தகாலத்துக் கொல்லும் தன்மை வாய்ந்த ஆலகால விடம் அக்கடலில் தோன்ற, அதனால் தேவாசுரர்கள் அஞ்சி நடுங்கித் தன்னை நோக்கி ஓலமிட்ட அளவில் அந்நஞ்சை உண்டு அவர்களைக் காத்தருளியவன் அழகிய மலை போன்ற மதில்களால் சூழப்பட்ட மறைவனத்தில் எழுந்தருளிய பரமன் ஆவான்.

திருமறைக்காடு

கரமுத லியவவ யவமவை
கடுவிட வரவது கொடுவரு
வரன்முறை யணிதரு மவனடல்
வலிமிகு புலியத ளுடையினன்
இரவலர் துயர்கெடு வகைநினை
யிமையவர் புரமெழில் பெறவளர்
மரநிகர் கொடைமனி தர்கள்பயில்
மறைவன மமர்தரு பரமனே. **#233**

கைகள் முதலிய அவயவங்களில், கொடிய விடம் பொருந்திய பாம்புகளைத் தொன்றுதொட்டுவரும் வரன் முறைப்படி, வளை கேயூரம் முதலியனவாக அணி செய்து கொள்பவனும், கொலைத் தொழிலில்

வல்லமை மிக்க புலியைக் கொன்று அதன் தோலை ஆடையாக அணிந்தவனுமாகிய பெருமான், இரவலர்களின் வறுமைத் துயர் போக எல்லோரும் நினைக்கும் தேவருலகம் அழகு பெற வளரும் கற்பகமரம் போன்ற கொடையாளர்கள் வாழும் மறைவனம் அமர்பரமன் ஆவான்.

திருமறைக்காடு

இழைவளர் தருமுலை மலைமகள்
இனிதுறை தருமெழி லுருவினன்
முழையினின் மிகுதுயி லுறுமரி
முசிவொடு மெழமுள ரியொடெழு
கழைநுகர் தருகரி யிரிதரு
கயிலையின் மலிபவ னிருளுறும்
மழைதவழ் தருபொழி னிலவிய
மறைவன மமர்தரு பரமனே. **#234**

அணிகலன்கள் பொருந்திய தனங்களை உடைய மலைமகள் இடப்பாகமாக இனிதாக உறையும் அழகிய திருமேனியை உடையவனும், குகைகளில் நன்கு உறங்கும் சிங்கங்கள், பசி வருதலினாலே மூரி நிமிர்ந்து எழ, தாமரை மலர்களோடு வளர்ந்து செழித்த கரும்புகளை உண்ணும் யானையினங்கள் அஞ்சி ஓடுகின்ற கயிலைமலையில் எழுந்தருளியவனும் ஆகிய பெருமான் கரிய மழை மேகங்கள் தவழும் பொழில்களை உடைய மறைவனத்தில் அமரும் பரமனாவான்.

திருமறைக்காடு

நலமிகு திருவித ழியின்மலர்
நகுதலை யொடுகன கியின்முகை
பலசுர நதிபட வரவொடு
மதிபொதி சடைமுடி யினன்மிகு
தலநில வியமனி தர்களொடு
தவமுயல் தருமுனி வர்கடம்
மலமறு வகைமன நினைதரு
மறைவன மமர்தரு பரமனே. **#235**

அணிவிப்பவர்க்கு நலம் மிகுவிக்கின்ற அழகிய கொன்றை மலர், கபாலம், ஊமத்தை, கங்கை நதி, பட அரவு, பிறை ஆகியனவற்றைச் சூடிய சடைமுடியினனாகிய பெருமான், பெரிதாய இவ்வுலகில் வாழும் மனிதர்கள், தவம் முயலும் முனிவர்கள்ஆகியோர் தன்னை வழிபட அவர்கள் மலம் அகன்று உய்யும் வகையை நினையும் மறைவனம் உறையும் பரமன் ஆவான்.

திருமறைக்காடு

கதிமலி களிறது பிளிறிட
வுரிசெய்த வதிகுண னுயர்பசு
பதியதன் மிசைவரு பசுபதி
பலகலை யவைமுறை முறையுணர்
விதியறி தருநெறி யமர்முனி
கணனொடு மிகுதவ முயல்தரும்
அதிநிபு ணர்கள்வழி படவளர்
மறைவன மமர்தரு பரமனே. **#236**

நடை அழகுடன் தன்னை எதிர்த்து வந்த களிறு அஞ்சிப் பிளிற, அதனை உரித்தருளிய மிக்க குணாளனும், உயர்ந்த பசுக்களின் நாயகனாகிய விடையின்மீது வரும் ஆருயிர்களின் தலைவனும் ஆகிய பெருமான், பல கலையும் முறையாகக் கற்று உணர்ந்தவர்களும், விதிகளாகத் தாம் கற்ற நெறிகளில் நிற்போரும் ஆகிய முனிவர் குழாங்களும், மிக்க தவத்தை மேற்கொண்டொழுகும் அதி நிபுணர்களும், தன்னை வழிபடுமாறு வளங்கள் பலவும் வளரும் மறைவனத்தில் அமர்ந்தருளும் பரமன் ஆவான்.

திருமறைக்காடு

கறைமலி திரிசிகை படையடல்
கனன்மழு வெழுதர வெறிமறி
முறைமுறை யொலிதம ருகமுடை
தலைமுகிழ் மலிகணி வடமுகம்
உறைதரு கரனுல கினிலுய
ரொளிபெறு வகைநினை வொடுமலர்
மறையவன் மறைவழி வழிபடு
மறைவன மமர்தரு பரமனே. **#237**

குருதிக் கறைபடிந்த முத்தலைச் சூலம், வருத்தும் தழல் வடிவினதாகிய மழுவாயுதம், கையினின்று எழுவது போன்ற வெறித்த கண்களை உடைய மான், முறைமுறையாக ஒலி செயும் உடுக்கை, முடைநாறும் பிரம கபாலம், முகிழ் போலும் கூரிய கணிச்சி, வடவை முகத்தீ ஆகியன உறையும் திருக்கரங்களை உடையவனும், தாமரை மலரில் எழுந்தருளிய வேதாவாகிய நான்முகனால் உலகில் உயர்ந்த புகழோடு விளங்கும் நினைவோடு வேத விதிப்படி வழிபடப் பெறுபவனுமாகிய சிவபிரான் மறை வனத்தில் உறையும் பரமன் ஆவான்.

திருமறைக்காடு

இருநில னதுபுன லிடைமடி
தரவெரி புகவெரி யதுமிகு
பெருவெளி யினிலவி தரவளி
கெடவிய னிடைமுழு வதுகெட
இருவர்க ளுடல்பொறை யொடுதிரி
யெழிலுரு வுடையவ னினமலர்
மருவிய வறுபத மிசைமுரன்
மறைவன மமர்தரு பரமனே. **#238**

பேரூழிக் காலத்தில் பெரிய இந்நிலமாகிய மண்புனலில் ஒடுங்க, நீர் எரியில் ஒடுங்க, எரி வளியில் ஒடுங்க, வளிஆகாயத்தில் ஒடுங்க, பரந்துபட்ட இவ்வுலகமும் உலகப் பொருள்களும் ஆகிய அனைத்தும் அழிய, அதுபோது பிரம விட்டுணுக்களது முழு எலும்புக் கூட்டை அணிந்து, தான் ஒருவனே தலைவன் எனத்திரியும் அழகுடையவன், வண்ண மலர்க் கூட்டங்களில் வண்டுகள் இசை முரலும் மறைவனம் அமரும் பரமன் ஆவான்.

திருமறைக்காடு

சனம்வெரு வுறவரு தசமுக
னொருபது முடியொடு மிருபது
கனமரு வியபுய நெரிவகை
கழலடி யிலொர்விர னிறுவினன்
இனமலி கணநிசி சரன்மகிழ்
வுறவருள் செய்தகரு ணையனென
மனமகிழ் வொடுமறை முறையுணர்
மறைவன மமர்தரு பரமனே. **#239**

மக்கள் அஞ்சுமாறு வருகின்ற இராவணனின் பத்துத் தலைகளோடு பெரிதாய இருபது தோள்களும் நெரியுமாறு வீரக்கழல் அணிந்த திருவடியில் உள்ளதொரு விரலை ஊன்றி அடர்த்தவன். அவன் பிழை உணர்ந்த அளவில் அரக்கர் கூட்டமுடைய அவ்இராவணன் மனம் மகிழ்வுறுமாறு பேர், வாழ்நாள், தேர், வாள் முதலியன அளித்தருளிய கருணையாளன் என நான்மறைகளை முறையாக உணர்ந்த வேதியர் மனமகிழ்வொடு புகழும் மறைவனத்தில் அமர்ந்தருளும் பரமன் ஆவான்.

திருமறைக்காடு

அணிமலர் மகள்தலை மகன்அயன்
அறிவரி யதொர்பரி சினிலெரி
திணிதரு திரளுரு வளர்தர
வவர்வெரு வுறலொடு துதிசெய்து

பணியுற வெளியுரு வியபர
னவனுரை மலிகட றிரளெழும்
மணிவள ரொளிவெயின் மிகுதரு
மறைவன மமர்தரு பரமனே. #240

அழகிய மலர்மகள் கேள்வனும், அயனும்அறிதற்கு அரியதொரு தன்மையில் அனல் செறிந்த பிழம்புருவத்தோடு தோன்ற அதனைக் கண்டு அவ்விருவரும் அஞ்சித் துதி செய்து பணிய, வானவெளியைக் கடந்த பேருருவத்தோடு காட்சி நல்கிய பரனாகிய அவன் நுரைமிக்க கடல் திரட்சியில் தோன்றும் மணிகளின் வளர் ஒளியினால் வெயிலொளி மிகுந்து தோன்றும் மறைவனத்தில் அமரும் பரமன் ஆவான்.

திருமறைக்காடு

இயல்வழி தரவிது செலவுற
வினமயி லிறகுறு தழையொடு
செயன்மரு வியசிறு கடமுடி
யடைகையர் தலைபறி செய்துதவம்
முயல்பவர் துவர்பட முடல்பொதி
பவரறி வருபர னவனணி
வயலினில் வளைவள மருவிய
மறைவன மமர்தரு பரமனே. #241

உலக இயல்பு கெடுமாறு நடை உடை பாவனைகளால் வேறுபடத் தோன்றிப் பல மயில்களின் தோகைகளைக் கொண்டு வழிகளை உயிரினங்களுக்கு ஊறு வாராதபடி தூய்மை செய்து நடத்தலைச் செய்து சிறிய குண்டிகை வைக்கப்பட்ட உறியை ஏந்திய கையராய்த் தலையைப் பறித்து முண்டிதமாக்கிக் கொண்டு தவம் முயலும் சமணர்களும், துவராடையால் உடலை மூடியவர்களாகிய புத்தர்களும் அறிதற்கரிய பரனாகிய அவன், அழகிய வயலில் சங்கீன்ற முத்துக்கள் நிறைந்துள்ள மறைவனத்தில் அமர்ந்துறையும் பரமன் ஆவான்.

திருமறைக்காடு

வசையறு மலர்மக ணிலவிய
மறைவன மமர்பர மனைநினை
பசையொடு மிகுகலை பலபயில்
புலவர்கள் புகழ்வழி வளர்தரு
இசையமர் கழுமல நகரிறை
தமிழ்விர கனதுரை யியல்வல
இசைமலி தமிழொரு பதும்வல
வவருல கினிலெழில் பெறுவரே. #242

குற்றமற்ற திருமகள் நிலவும் மறைவனத்தில் அமர்ந்துள்ள பரமனை அன்போடு நினையும் மிகுந்த கலைகளில் வல்ல புலவர்களின் புகழோடு வளரும் கழுமலநகர்த் தலைவனும் தமிழ் விரகனும் ஆகிய ஞானசம்பந்தனுடைய இயற்றமிழிலும் மேம்பட்ட இசை மலிந்த இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் வல்லவர் உலகினில் அழகெய்துவர்.

திருக்கோலக்கா

திருக்கோலக்கா

திருக்கோலக்கா,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சத்தபுரீசர்.
தேவியார் : ஓசைகொடுத்தநாயகியம்மை.

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீள்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ. **#243** ★★★★★

நீரைத் தேக்கி வெளிவிடும் மடையில் வாளை மீன்கள் துள்ளிப் பாயுமாறு பெண்கள் கையால் குடைந்து நீராடும் பொய்கைகளை உடைய திருக்கோலக்காவில் எழுந்தருளியுள்ள இறைவன், சடைமுடியையும், அதன்கண் பிறையையும், திருமேனி முழுவதும் திருநீற்றுப் பூச்சையும் இடையில் ஆடையாகக் கீள் உடையையும் கொண்ட உருவம் உடையவனாய் இருப்பது ஏனோ?

திருக்கோலக்கா

பெண்டான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டா னஞ்சை யுலக முய்யவே. **#244**

உமையம்மையைத் தன் திருமேனியில் இடப்பாதியாகக்கொண்டு, கலைகள் ஒன்றொன்றாகக் குறைந்து வந்த இளம் பிறையைச் சடைமுடி மீது ஏற்றுக் கொண்டவனாகிய சிவபிரான், கோலக்காவிலுள்ள கோயிலைத் தன் இருப்பிடமாகக் கொண்டவன். திருப்பாற்கடலில் நஞ்சு தோன்றியபோது காவாய் என அனைவரும் கைகூப்பி வணங்க உலகம் உய்யுமாறு அந்நஞ்சினை உண்டு அருளியவன்.

திருக்கோலக்கா

பூணற் பொறிகொ ளரவம் புன்சடை
கோணற் பிறையன் குழகன் கோலக்கா
மாணப் பாடி மறைவல் லானையே
பேணப் பறையும் பிணிக ளானவே. **#245**

அழகிய புள்ளிகளை உடைய பாம்பை அணிகலனாகக் கொண்டு,

சிவந்த சடையின்மேல் வளைந்த பிறைமதியைச் சூடிய, என்றும் மாறா இளமைத் தன்மை உடைய சிவபிரான் எழுந்தருளி விளங்கும் திருக்கோலக்காவை மாட்சிமை தங்கப் பாடி, வேதங்களை அருளிய அப்பெருமானைப் பேணித் தொழப் பிணிகளானவை நீங்கும்.

திருக்கோலக்கா

தழுக்கொள் பாவந் தளர வேண்டுவீர்
மழுக்கொள் செல்வன் மறிசே ரங்கையான்
குழுக்கொள் பூதப் படையான் கோலக்கா
இழுக்கா வண்ண மேத்தி வாழ்மினே. **#246**

பல்வேறு சமயங்களிலும் செய்த பாவங்கள் நீங்க வேண்டும் என்று விரும்புகின்றவர்களே! மழுவாயுதத்தைப் படைக்கலனாகக் கொண்ட செல்வனும், மானை ஏந்திய அழகிய கையை உடையவனும், பூதங்களின் குழுக்களை உடையவனும் ஆகிய சிவபிரானது கோலக்காவைத் தவறாமல் சென்று தரிசித்து வாருங்கள். நும் பாவங்கள் அகலும்.

திருக்கோலக்கா

மயிலார் சாயன் மாதோர் பாகமா
எயிலார் சாய வெரித்த வெந்தைதன்
குயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பாவமே. **#247**

ஆண்மயில் போலும் கட்புலனாகிய மென்மையை உடைய உமையம்மையை ஒரு பாகமாக உடையவனும், அசுரர்களின் முப்புரங்கள் கெடுமாறு அவற்றை எரித்தவனும் ஆகிய எம் தந்தையாகிய சிவபிரானது, குயில்கள் நிறைந்து வாழும் சோலைகளை உடைய திருக்கோலக்காவைப் பலகாலும் நினைக்கப் பாவங்கள் நீங்கும்.

திருக்கோலக்கா

வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்
கொடிகொள் விழவார் கோலக் காவுளெம்
அடிகள் பாத மடைந்து வாழ்மினே. **#248**

ஒன்றிலிருந்து பிறிதொன்று கிளைக்கும் வினைப்பகையை நீக்கிக் கொள்ள விரும்புகின்றவர்களே! மணம் பொருந்திய கொன்றை மலர் விரவிய சென்னியை உடையோனும், கொடிகள் கட்டப்பெற்று விழாக்கள் பலவும் நிகழ்த்தப்பெறும் கோலக்காவில் விளங்கும் எம் தலைவனும் ஆகிய பெருமான் திருப்பாதங்களை அடைந்து வாழ்வீர்களாக.

திருக்கோலக்கா

நிழலார் சோலை நீல வண்டினங்
குழலார் பண்செய் கோலக் காவுளான்
கழலான் மொய்த்த பாதங் கைகளால்
தொழலார் பக்கல் துயர மில்லையே. **#249**

நிழல் செறிந்த சோலைகளில் நீல நிறம் பொருந்திய வண்டினங்கள் வேய்ங்குழல் போல இசை வழங்கும் திருக்கோலக்காவில் விளங்கும் சிவபிரானுடைய வீரக்கழல் செறிந்த திருவடிகளைக் கை கூப்பித் தொழுபவர் பக்கம் துயரம் வாராது.

திருக்கோலக்கா

எறியார் கடல்சூ ழிலங்கைக் கோன்றனை
முறியார் தடக்கை யடர்த்த மூர்த்திதன்
குறியார் பண்செய் கோலக் காவையே
நெறியாற் றொழுவார் வினைகள் நீங்குமே. **#250**

அலைகள் எறியும் கடலால் சூழப்பட்ட இலங்கை மன்னனாகிய இராவணனை, அவன் நீண்ட கைகள் முரிதலைப் பொருந்துமாறு அடர்த்த சிவபிரானைச் சுரத்தானங்களைக் குறித்த பண்ணிசையால் கோலக்காவில் சிவாகம நெறிகளின்படி வழிபடுவார் வினைகள் நீங்கும்.

திருக்கோலக்கா

நாற்ற மலர்மே லயனு நாகத்தில்
ஆற்ற லணைமே லவனுங் காண்கிலாக்
கூற்ற முதைத்த குழகன் கோலக்கா
ஏற்றான் பாத மேத்தி வாழ்மினே. **#251**

மணம் பொருந்திய தாமரை மலர் மேல் விளங்கும் நான்முகனும், ஆற்றல் பொருந்திய ஆதிசேடனாகிய அணையில்உறங்கும் திருமாலும் காணுதற்கு இயலாத, இயமனை உதைத்த குழகன் ஆகிய கோலக்காவில் விளங்கும் ஆன்ஏற்றை வாகனமாகக் கொண்ட இறைவன் திருவடிகளைப் போற்றி வாழ்வீர்களாக.

திருக்கோலக்கா

பெற்ற மாசு பிறக்குஞ் சமணரும்
உற்ற துவர்தோ யுருவி லாளருங்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்காப்
பற்றிப் பரவப் பறையும் பாவமே. **#252**

நீராடாமல் தம் உடலிற் சேர்ந்த மாசுடன் தோன்றும் சமணரும், தம்

உடலிற் பொருந்திய கல்லாடையால் தம் உருவை மறைத்துக் கொள்ளும் புத்தர்களும், குற்றமுடைய சமய நெறியை மேற்கொண்டவராவர். அவர்கள் தம் தெய்வம் என்று ஏற்றுக்கொள்ளாத கோலக்கா இறைவனைப் பற்றிப் போற்றப் பாவம் தீரும்.

திருக்கோலக்கா

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோ யோங்கி வாழ்வரே. **#253**

இயற்கை நலங்கள் யாவும் நிறைந்த சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன், பண்பால் உயர்ந்த குலத்தினரைக் கொண்டுள்ள கோலக்காவில் விளங்கும் இறைவனைப் பாடிய திருவருள் வென்றியைக் கொண்ட இத்திருப்பதிகப் பாடல்களை ஓதி வழிபடவல்ல வாய்மையாளர், மலை போலும் திண்ணிய வினைகள் நீங்கப் பெற்றுச் சிறந்து வாழ்வர்.

சீகாழி

சீர்காழி

சீகாழி,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

பூவார் கொன்றைப் புரிபுன் சடையீசா
காவா யெனநின் றேத்துங் காழியார்
மேவார் புரமூன் றட்டா ரவர்போலாம்
பாவா ரின்சொற் பயிலும் பரமரே. **#254**

பாடல்களின் சொற்பொருளாய்க் கலந்து நிற்கும் பரமர், பக்தர்கள், "கொன்றைப் பூக்கள் பொருந்திய முறுக்கேறிய செஞ்சடை ஈசா காவாய்!" என நின்று துதித்துப் போற்றும் சீகாழிப் பதியினராவார். மனம் ஒன்றாத அசுரர்களின் மூன்று புரங்களை அழித்தவரும் அவரேயாவார்.

சீர்காழி

எந்தை யென்றங் கிமையோர் புகுந்தீண்டிக்
கந்த மாலை கொடுசேர் காழியார்
வெந்த நீற்றர் விமல ரவர்போலாம்
அந்தி நட்ட மாடும் மடிகளே. **#255**

அந்திக் காலத்தில் நடனம் ஆடும் அடிகளாகிய இறைவர், தேவர்கள் எந்தையே என அன்போடு அழைத்து ஆலயத்துட் புகுந்து குழுமி மணம்மிக்க மாலைகளை அணிவித்தற் பொருட்டுச் சேரும் சீகாழிப் பதியினராவார். அவரே நன்றாகச் சுட்டு எடுத்த திருநீற்றை அணிந்தவரும், குற்றம் அற்றவருமாவார்.

சீர்காழி

தேனை வென்ற மொழியா ளொருபாகங்
கான மான்கைக் கொண்ட காழியார்
வான மோங்கு கோயி லவர்போலாம்
ஆன வின்ப மாடும் மடிகளே. **#256**

முற்றிய இன்பத்தோடு ஆடுகின்ற சிவபிரான், இனிப்பில் தேனை வென்று விளங்கும் மொழிகளைப் பேசுகின்ற உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு காட்டில் திரியும் இயல்பினதாகிய மானைக்

கையின்கண் ஏந்தி விளங்கும் காழிப் பதியினராவார். அவர் வானளாவ உயர்ந்த திருக்கோயிலில் விளங்குபவர் ஆவார்.

சீர்காழி

மாணா வென்றிக் காலன் மடியவே
காணா மாணிக் களித்த காழியார்
நாணார் வாளி தொட்டா ரவர்போலாம்
பேணார் புரங்க ளட்ட பெருமானே. **#257**

தம்மைப் பேணி வழிபடாத அசுரர்களின் முப்புரங்களை அழித்த பெருமான், மாட்சிமையில்லாத வெற்றியை உடைய காலனை மடியுமாறு செய்து, தம்மையன்றி வேறொன்றையும் காணாத மார்க்கண்டேய முனிவருக்கு என்றும் பதினாறாண்டோடு விளங்கும் வரத்தை அளித்தருளிய காழிப் பதியினர் ஆவார். முப்புரங்களை அழித்தற்பொருட்டு நாணிற் பூட்டிய அம்பைத் தொடுத்த வருமாவார்.

சீர்காழி

மாடே யோத மெறிய வயற்செந்நெற்
காடே றிச்சங் கீனுங் காழியார்
வாடா மலராள் பங்க ரவர்போலாம்
ஏடார் புரமூன் றெரித்த விறைவரே. **#258**

குற்றம் பொருந்திய அசுரர்களின் புரங்கள் மூன்றையும் எரித்தருளிய இறைவர், அருகில் கடல் நீரின் அலைகள் எறிந்த சங்குகள் வயல்களில் விளைந்த செந்நெற் பயிர்களின் செறிவில் ஏறி முத்துக்களை ஈனும் சீகாழிப் பதியினர். அவர் வாடா மலர்களைச் சூடி விளங்கும் பார்வதி தேவியைத்தம் திருமேனியின் ஒரு பங்காக உடையவராவார்.

சீர்காழி

கொங்கு செருந்தி கொன்றை மலர்கூடக்
கங்கை புனைந்த சடையார் காழியார்
அங்க ணரவ மாட்டு மவர்போலாஞ்
செங்க ணரக்கர் புரத்தை யெரித்தாரே. **#259**

சிவந்த கண்களை உடைய அரக்கர் மூவரின் திரிபுரங்களை எரித்தவராகிய இறைவர், கோங்கு, செருந்தி, கொன்றை மலர் இவற்றுடன் கங்கையை அணிந்துள்ள சடைமுடியினர். அக்காழியர் தாம் அணிந்துள்ள பாம்புகளை அவ்விடத்தே தங்கி ஆட்டுபவராகவும் உள்ளார்.

சீர்காழி

கொல்லை விடைமுன் பூதங் குனித்தாடுங்
கல்ல வடத்தை யுகப்பார் காழியார்
அல்ல விடத்து நடந்தா ரவர்போலாம்
பல்ல விடத்தும் பயிலும் பரமரே. **#260**

எல்லா இடங்களிலும் நிறைந்து விளங்கும் பரமராகிய பெருமானார், முல்லை நிலத்துக்குரிய ஆன் ஏற்றை ஊர்ந்து அதன் முன்னே பூத கணங்கள் வளைந்து நௌந்து ஆடிச்செல்லக் கல்லவடம் என்னும் பறையை விரும்புபவர். அக்காழியார் தம்மை அறிந்து போற்றுநர் அல்லாதார் இடங்களிலும் தோன்றி அருள் வழங்கும் இயல்பினர்.

<u>சீர்காழி</u>

எடுத்த வரக்க னெரிய விரலூன்றிக்
கடுத்து முரிய வடர்த்தார் காழியார்
எடுத்த பாடற் கிரங்கு மவர்போலாம்
பொடிக்கொள் நீறு பூசும் புனிதரே. **#261**

பொடியாக அமைந்த திருநீற்றைப் பூசும் தூயவராகிய பெருமானார், கயிலைமலையை எடுத்த இராவணனின் முடிகள் நெரியுமாறு தம் கால் விரலை ஊன்றிச் சினந்து அவனது ஆற்றல் அழியுமாறு அடர்த்தவர். அக்காழியார் இராவணன் எடுத்த பாடலாகிய சாமகானத்துக்கு இரங்கி அருள் செய்தவராவார்.

<u>சீர்காழி</u>

ஆற்ற லுடைய வரியும் பிரமனுந்
தோற்றங் காணா வென்றிக் காழியார்
ஏற்ற மேறங் கேறு மவர்போலாங்
கூற்ற மறுகக் குமைத்த குழகரே. **#262**

வாழ்நாளைக் கூறுபடுத்திக் கணக்கிட்டு உயிர்கொள்ளும் இயமன் அஞ்சுமாறு அவனை உதைத்து, மார்க்கண்டேயர்க்கு அருள்செய்த குழகராகிய சிவபிரானார், ஆற்றல் உடைய திருமாலும் பிரமனும் தம் அடிமுடிகள் தோன்றுமிடங்களைக் காணாதவாறு வானுற ஓங்கிய வெற்றியை உடையவராய்க் காழிப்பதியில் எழுந்தருளியுள்ளார். அவர் மிக உயர்ந்த ஆன்ஏற்றில் ஏறி உலா வந்து அருள்பவராவார்.

<u>சீர்காழி</u>

பெருக்கப் பிதற்றுஞ் சமணர் சாக்கியர்
கரக்கு முரையை விட்டார் காழியார்
இருக்கின் மலிந்த விறைவ ரவர்போலாம்
அருப்பின் முலையாள் பங்கத் தையரே. **#263**

தாமரை அரும்பு போன்ற தனபாரங்களை உடைய உமையம்மையை ஒருபங்காகக் கொண்டுள்ள தலைவராகிய சிவபிரான், உண்மையின்றி மிகப் பிதற்றுகின்ற சமணர் சாக்கியர்களின் வஞ்சக உரைகளைக் கொள்ளாதவராய்க் காழியில் எழுந்தருளியுள்ளார். அவரே இருக்கு வேதத்தில் நிறைந்துள்ள இறைவரும் ஆவார்.

சீர்காழி

காரார் வயல்சூழ் காழிக் கோன்றனைச்
சீரார் ஞான சம்பந் தன்சொன்ன
பாரார் புகழப் பரவ வல்லவர்
ஏரார் வானத் தினிதா விருப்பரே. **#264**

நீர் வளத்தால் கருஞ்சேறுபட்டு விளங்கும் வயல்களால் சூழப்பட்ட சீகாழிப் பதியில் விளங்கும் கோமகனாகிய சிவபிரான்மீது, சிறப்புப் பொருந்திய ஞானசம்பந்தன் அருளிச்செய்த பாடல்களை ஓதி உலகோர் போற்றத் துதிக்க வல்லவர், அழகிய வானகத்தில் இனிதாக இருப்பர்.

திருச்செம்பொன்பள்ளி

திருச்செம்பொன்பள்ளி

திருச்செம்பொன்பள்ளி,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சொர்னபுரீசர்.
தேவியார் : சுகந்தவனநாயகியம்மை.

மருவார் குழலி மாதோர் பாகமாய்த்
திருவார் செம்பொன் பள்ளி மேவிய
கருவார் கண்டத் தீசன் கழல்களை
மருவா தவர்மேன் மன்னும் பாவமே. **#265**

மணம் பொருந்திய கூந்தலை உடையவளாகிய பார்வதிதேவியை ஒரு பாகமாக உடையவராய்த் திருமகள் வாழும் செம்பொன்பள்ளி என வழங்கும் திருத்தலக் கோயிலில் எழுந்தருளிய, கருநீலம் பொருந்திய கண்டத்தை உடைய ஈசன் திருவடிகளை வணங்கி அவற்றைத் தம் மனத்தே பொருந்த வையாதவர்களைப் பாவங்கள் பற்றும்.

திருச்செம்பொன்பள்ளி

வாரார் கொங்கை மாதோர் பாகமாய்ச்
சீரார் செம்பொன் பள்ளி மேவிய
ஏரார் புரிபுன் சடையெம்மீசனைச்
சேரா தவர்மேற் சேரும் வினைகளே. **#266**

கச்சணிந்த தனங்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாக உடையவராய், சிறப்புப் பொருந்திய செம்பொன் பள்ளியில் எழுந்தருளிய அழகிய முறுக்கேறிய சிவந்த சடைமுடியை உடைய எம் ஈசனாகிய சிவபிரானைச் சென்று வணங்கி இடைவிடாது மனத்தில் நினையாதவர்களிடம் வினைகள் சேரும்.

திருச்செம்பொன்பள்ளி

வரையார் சந்தோ டகிலும் வருபொன்னித்
திரையார் செம்பொன் பள்ளி மேவிய
நரையார் விடையொன் றூரும் நம்பனை
உரையா தவர்மே லொழியா வூனமே. **#267**

மலைகளில் செழித்து வளர்ந்த சந்தன மரங்களோடு, அகில் மரங்களையும் அடித்துக் கொண்டு வருகின்ற பொன்னி நதிக்கரையில் விளங்கும் செம்பொன்பள்ளியில் எழுந்தருளிய வெண்ணிறம்

பொருந்திய விடை ஒன்றை ஊர்ந்து வருபவனாகிய சிவபெருமான் புகழை உரையாதவர்களைப் பற்றியுள்ள குற்றங்கள் ஒழியா.

திருச்செம்பொன்பள்ளி

மழுவா ளேந்தி மாதோர்பாகமாய்ச்
செழுவார் செம்பொன் பள்ளி மேவிய
எழிலார் புரிபுன் சடையெம் மிறைவனைத்
தொழுவார் தம்மேற் றுயர மில்லையே. **#268**

மழுவாகிய வாளை ஏந்தி உமையொரு பாகனாய் வளம் பொருந்திய செம்பொன் பள்ளியில் எழுந்தருளிய அழகு பொருந்திய முறுக்கேறிய சிவந்த சடைமுடியை உடைய எம் இறைவனைத் தொழுபவர்கட்குத் துயரம் இல்லை.

திருச்செம்பொன்பள்ளி

மலையான் மகளோ டுடனாய் மதிலெய்த
சிலையார் செம்பொன் பள்ளி யானையே
இலையார் மலர்கொண் டெல்லி நண்பகல்
நிலையா வணங்க நில்லா வினைகளே. **#269**

மலையரையன் மகளாகிய பார்வதி தேவியோடு உடனாய் விளங்குபவனும், அசுரர்களின் மும்மதில்களை எய்தழித்த மலை வில்லை உடையவனுமாகிய செம்பொன் பள்ளியில் விளங்கும் சிவபிரானையே, இலைகளையும் மலர்களையும் கொண்டு இரவிலும் நண்பகலிலும் மனம் நிலைத்து நிற்குமாறு வணங்குவார் மேல் வினை நில்லா.

திருச்செம்பொன்பள்ளி

அறையார் புனலோ டகிலும் வருபொன்னிச்
சிறையார் செம்பொன் பள்ளி மேவிய
கறையார் கண்டத் தீசன் கழல்களை
நிறையால் வணங்க நில்லா வினைகளே. **#270**

பாறைகளிற் பொருந்திவரும் நீரில் அகில் மரங்களையும் அடித்துவரும் பொன்னியாற்றின் கரையில் அமைந்த செம்பொன்பள்ளியில் எழுந்தருளிய விடக்கறை பொருந்திய கண்டத்தை உடைய ஈசன் திருவடிகளை மன ஒருமைப்பாட்டோடு வணங்க வினைகள் நில்லா.

திருச்செம்பொன்பள்ளி

பையா ரரவே ரல்கு லாளொடும்
செய்யார் செம்பொன் பள்ளி மேவிய
கையார் சூல மேந்து கடவுளை

மெய்யால் வணங்க மேவா வினைகளே. **#271**
அரவின் படம் போன்ற அழகிய அல்குலை உடைய உமையம்மையோடு வயல்கள் சூழ்ந்த செம்பொன்பள்ளியில் வீற்றிருக்கின்ற கையில் பொருந்திய சூலத்தை ஏந்தி விளங்கும் கடவுளை உடம்பால் வணங்க வினைகள் மேவா.

திருச்செம்பொன்பள்ளி

வானார் திங்கள் வளர்புன் சடைவைத்துத்
தேனார் செம்பொன் பள்ளி மேவிய
ஊனார் தலையிற் பலிகொண் டுழல்வாழ்க்கை
ஆனான் கழலே யடைந்து வாழ்மினே. **#272**
வானத்தில் விளங்கும் பிறை மதியை, வளர்ந்துள்ள சிவந்த தன் சடைமீது வைத்து, இனிமை பொருந்திய செம்பொன் பள்ளியில் எழுந்தருளியவனும், புலால் பொருந்திய பிரமனது தலையோட்டில் பலியேற்று உழல்வதையே தன் வாழ்வின் தொழிலாகக்கொண்டவனும் ஆகிய சிவபிரான் திருவடிகளையே அடைந்து வாழ்மின்.

திருச்செம்பொன்பள்ளி

காரார் வண்ணன் கனக மனையானும்
தேரார் செம்பொன் பள்ளி மேவிய
நீரார் நிமிர்புன் சடையெந் நிமலனை
ஓரா தவர்மே லொழியா வூனமே. **#273**
நீலமேகம் போன்ற நிறமுடையோனாகிய திருமாலும், பொன்னிறமேனியனாகிய பிரமனும், தேடிக் காணொணாதவனும் செம்பொன்பள்ளியில் எழுந்தருளிய கங்கை அணிந்த நிமிர்த்துக் கட்டிய சிவந்த சடைமுடியை உடையவனுமாகிய குற்றமற்ற எம் இறைவனை மனம் உருகித் தியானியாதவர் மேல் உளதாகும் குற்றங்கள் நீங்கா.

திருச்செம்பொன்பள்ளி

மாசா ருடம்பர் மண்டைத் தேரரும்
பேசா வண்ணம் பேசித் திரியவே
தேசார் செம்பொன் பள்ளி மேவிய
ஈசா வென்ன நில்லா விடர்களே. **#274**
அழுக்கேறிய உடலினராகிய சமணரும், மண்டை என்னும் உண்கலத்தை ஏந்தித் திரிபவர்களாகிய புத்தரும் பேசக் கூடாதவைகளைப் பேசித் திரிய அன்பர்கள் "ஒளி பொருந்திய செம்பொன்பள்ளியில் மேவிய ஈசா!" என்று கூற அவர்களுடைய இடர்கள் பலவும் நில்லா.

திருச்செம்பொன்பள்ளி

நறவார் புகலி ஞான சம்பந்தன்
செறுவார் செம்பொன் பள்ளி மேயானைப்
பெறுமா றிசையாற் பாட லிவைபத்தும்
உறுமா சொல்ல வோங்கி வாழ்வரே. **#275**

தேன் நிறைந்த பொழில்களால் சூழப்பட்ட புகலிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் வயல்கள் சூழ்ந்த செம்பொன் பள்ளி இறைவன் அருளைப் பெறுமாறு பாடிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் இசையோடு தமக்குவந்த அளவில் ஓதவல்லவர் ஓங்கி வாழ்வர்.

திருப்புத்தூர்

திருப்புத்தூர்

திருப்புத்தூர்,
பண் - தக்கராகம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : புத்தூரீசர்.
தேவியார் : சிவகாமியம்மை.

வெங்கள் விம்மு வெறியார் பொழிற்சோலை
திங்க ளோடு திளைக்குந் திருப்புத்தூர்க்
கங்கை தங்கு முடியா ரவர்போலும்
எங்க ளுச்சி யுறையு மிறையாரே. **#276**

விரும்பத்தக்க தேன் விம்மிச் சுரந்துள்ள, மணம் பொருந்திய சோலைகள் வானளாவ உயர்ந்து, அங்குத் தவழும் திங்களோடு பழகித் திளைக்கும் வளம் உடைய திருப்புத்தூரில் எழுந்தருளிய கங்கை தங்கிய சடைமுடியினராகிய பெருமானார் எங்கள் சிரங்களின்மேல் தங்கும் இறைவர் ஆவார்.

திருப்புத்தூர்

வேனல் விம்மு வெறியார் பொழிற்சோலைத்
தேனும் வண்டுந் திளைக்குந் திருப்புத்தூர்
ஊனமின்றி யுறைவா ரவர்போலும்
ஏன முள்ளு மெயிறும் புனைவாரே. **#277**

தேவர்களின் வேண்டுகோளை ஏற்றுப் பன்றி வடிவமெடுத்த திருமால் உலகை அழிக்கத் தொடங்கிய காலத்து,அதனை அடக்கி, அதன் பல்லையும் கொம்பையும் பறித்துத் தன் மார்பில் அணிந்தவர், வேனிற் காலத்தில் வெளிப்படும் மணம் நிறைந்துள்ள பொழில்களிலும் சோலைகளிலும் வாழும் வண்டுகள் தேனை உண்டு திளைத்து ஒலி செய்யும் திருப்புத்தூரில் குறையின்றி உறையும் பெருமானார் ஆவர்.

திருப்புத்தூர்

பாங்கு நல்ல வரிவண் டிசைபாடத்
தேங்கொள் கொன்றை திளைக்குந் திருப்புத்தூர்
ஓங்கு கோயி லுறைவா ரவர்போலும்
தாங்கு திங்கள் தவழ்புன் சடையாரே. **#278**

தம்மை அடைக்கலமாக அடைந்த திங்கள் தவழும் செந்நிறச் சடைமுடியினை உடைய இறைவர், நல்ல வரிகளை உடைய வண்டுகள்

பாங்கரிலிருந்து இசைபாடத் தேன் நிறைந்த கொன்றை மலர்கள் முடிமிசைத் திளைத்து விளங்கத் திருப்புத்தூரில் ஓங்கி உயர்ந்த கோயிலில் எழுந்தருளிய பெருமானார் ஆவார். கொன்றை - திருப்புத்தூர் தல விருட்சம்.

திருப்புத்தூர்

நாற விண்ட நறுமா மலர்கவ்வித்
தேறல் வண்டு திளைக்குந் திருப்புத்தூர்
ஊறல் வாழ்க்கை யுடையா ரவர்போலும்
ஏறு கொண்ட கொடியெம் மிறையாரே. **#279**

ஆன் ஏற்றுக் கொடியைத் தனதாகக் கொண்ட எம் இறைவர், மணம் வீசுமாறு மலர்ந்த சிறந்த நறுமலர்களைத் தம் வாயால்கவ்வி வண்டுகள் தேனை உண்டு திளைக்கும் திருப்புத்தூரில் பலகாலம் தங்கிய வாழ்க்கையினை உடையவர் ஆவார்.

திருப்புத்தூர்

இசைவி ளங்கு மெழில்சூழ்ந் தியல்பாகத்
திசைவி ளங்கும் பொழில்சூழ் திருப்புத்தூர்
பசைவி ளங்கப் படித்தா ரவர்போலும்
வசைவி ளங்கும் வடிசேர் நுதலாரே. **#280**

கங்கையாகிய பெண் விளங்கும் அழகிய சென்னியினராகிய இறைவர், புகழால் விளக்கம் பெற்றதும், இயல்பாக அழகு சூழ்ந்து விளங்குவதும், நாற்றிசைகளிலும் பொழில்கள் சூழ்ந்ததுமான திருப்புத்தூரில், தம்மை வழிபடுவார்க்கு அன்பு வளருமாறு பழகும் பெருமானார் ஆவார்.

திருப்புத்தூர்

வெண்ணி றத்த விரையோ டலருந்தித்
தெண்ணி றத்த புனல்பாய் திருப்புத்தூர்
ஒண்ணி றத்த வொளியா ரவர்போலும்
வெண்ணி றத்த விடைசேர் கொடியாரே. **#281**

வெண்மை நிறமுடைய விடை உருவம் எழுதிய கொடியை உடைய இறைவர், வெள்ளிய நிறமுடையனவாய் மணம் பொருந்திய மலர்களை அடித்துக் கொண்டு தெளிந்த தன்மை உடையதாய்த் தண்ணீர் பாயும் திருப்புத்தூரில் எழுந்தருளிய ஒண்மை பொருந்திய ஒளியை உடைய பெருமானார் ஆவார்.

திருப்புத்தூர்

நெய்த லாம்பல் கழுநீர் மலர்ந்தெங்கும்

செய்கண் மல்கு சிவனார் திருப்புத்தூர்த்
தையல் பாக மகிழ்ந்தா ரவர்போலும்
மையு ணஞ்ச மருவு மிடற்றாரே. **#282**

கருமை பொருந்திய நஞ்சு மருவும் மிடற்றினராய் இறைவர், நெய்தல், ஆம்பல் செங்கழுநீர் ஆகிய மலர்கள் வயல்கள் எங்கும் மலர்ந்து நிறைந்து விளங்கும் திருப்புத்தூரில் எழுந்தருளிய உமையொரு பாகம் மகிழ்ந்த சிவனாராவார்.

திருப்புத்தூர்

கருக்க மெல்லாங் கமழும் பொழிற்சோலைத்
திருக்கொள் செம்மை விழவார் திருப்புத்தூர்
இருக்க வல்ல விறைவ ரவர்போலும்
அரக்க னொல்க விரலா லடர்த்தாரே. **#283**

இராவணனாகிய அரக்கனைக் கால்விரலால் தளர அடர்த்தவராகிய பெருமானார், மேகங்களிலும் பரவிக் கமழும் மனமுடைய பொழில்களாலும் சோலைகளாலும் சூழப்பெற்றதும், செல்வம் நிறைந்ததும், செம்மையாளர் வாழ்வதும், திருவிழாக்கள் பல நிகழ்வதுமாய திருப்புத்தூரில் எழுந்தருளியிருக்க வல்லவராய இறைவராவார்.

திருப்புத்தூர்

மருவி யெங்கும் வளரும் மடமஞ்ஞை
தெருவு தோறுந் திளைக்குந் திருப்புத்தூர்ப்
பெருகி வாழும் பெருமா னவன்போலும்
பிரமன் மாலு மறியாப் பெரியோனே. **#284**

பிரமனும் திருமாலும் அறியமுடியாத பெரியோனாகிய இறைவன், எங்கும் பொருந்தியனவாய் வளரும் இளமயில்கள் தெருக்கள் தோறும் உலவிக் களிக்கும் திருப்புத்தூரில் பெருமை பெருகியவனாய் வாழும் பெருமானாவான்.

திருப்புத்தூர்

கூறை போர்க்குந் தொழிலா ரமண்கூறல்
தேறல் வேண்டா தௌமின் றிருப்புத்தூர்
ஆறு நான்கு மமர்ந்தா ரவர்போலும்
ஏறு கொண்ட கொடியெம் மிறையாரே. **#285**

மேல் ஆடையைப் போர்த்துத் திரிதலைத் தொழிலாகக் கொண்ட பௌத்தர் சமணர் ஆகியவருடைய உரைகளை நம்பாதீர்கள். ஆனேறு எழுதிய கொடியினை உடையவராய்த் திருப்புத்தூரில் நான்கு

வேதங்களாகவும், ஆறு அங்கங்களாகவும் விளங்கும் பெருமானாராகிய அவரைத் தௌமின்.

திருப்புத்தூர்

நல்ல கேள்வி ஞான சம்பந்தன்
செல்வர் சேட ருறையுந் திருப்புத்தூர்ச்
சொல்லல் பாடல் வல்லார் தமக்கென்றும்
அல்லல் தீரு மவல மடையாவே. **#286**

நன்மை தரும் வேதங்களை உணர்ந்த ஞானசம்பந்தன், செல்வரும் உயர்ந்தவருமான சிவபெருமான் உறையும் திருப்புத்தூரை அடைந்து வழிபட்டுச் சொல்லிய பத்துப் பாடல்களையும் வல்லவர்கட்குத் துன்பங்கள் நீங்கும். எக்காலத்தும் அவலம் அவர்களை அடையா.

திருப்புன்கூர்

திருப்புன்கூர்

திருப்புன்கூர்,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சிவலோகநாதர்.
தேவியார் : சொக்கநாயகியம்மை.

முந்தி நின்ற வினைக ளவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்த மில்லா வடிக ளவர்போலும்
கந்த மல்கு கமழ்புன் சடையாரே. **#287**

நெஞ்சே! பல பிறவிகளிலும் செய்தனவாய சஞ்சித, ஆகாமிய வினைகளுள் பக்குவப்பட்டுப் பிராரத்த வினையாய்ப் புசிப்பிற்கு முற்பட்டு நின்ற வினைகள் பலவும் நீங்க, திருப்புன்கூரில் ஆதி அந்தம் இல்லாத தலைவராய், மணம் நிறைந்து கமழும் செந்நிறச் சடைமுடி உடையவராய் எழுந்தருளிய சிவபிரானாரைச் சிந்தனை செய்வாயாக.

திருப்புன்கூர்

மூவ ராய முதல்வர் முறையாலே
தேவ ரெல்லாம் வணங்குந் திருப்புன்கூர்
ஆவ ரென்னு மடிக ளவர்போலும்
ஏவி னல்லா ரெயின்மூன் றெரித்தாரே. **#288**

பகைமை பூண்டவராய அசுரர்களின் மூன்று அரண்களைக் கணையொன்றால் எரித்தழித்த இறைவர், பிரமன், மால், உருத்திரன் ஆகிய மூவராயும், அவர்களுக்கு முதல்வராயும், தேவர்கள் எல்லோரும் முறையாக வந்து வணங்குபவராயும் விளங்கும் திருப்புன்கூரில் எழுந்தருளிய அடிகள் ஆவர்.

திருப்புன்கூர்

பங்க யங்கண் மலரும் பழனத்துச்
செங்க யல்கள் திளைக்குந் திருப்புன்கூர்க்
கங்கை தங்கு சடையா ரவர்போலும்
எங்க ளுச்சி யுறையும் மிறையாரே. **#289**

எங்கள் தலைகளின் மேல் தங்கி விளங்கும் இறைவர், தாமரை மலர்கள் மலரும் வயல்களில் சிவந்த கயல் மீன்கள் திளைத்து மகிழும் திருப்புன்கூரில் எழுந்தருளியுள்ள கங்கை தங்கிய சடை முடியினராகிய

சிவபெருமானாராவர்.

திருப்புன்கூர்

கரையு லாவு கதிர்மா மணிமுத்தம்
திரையு லாவு வயல்சூழ் திருப்புன்கூர்
உரையி னல்ல பெருமா னவர்போலும்
விரையி னல்ல மலர்ச்சே வடியாரே. **#290**

மணத்தால் மேம்பட்ட தாமரைமலர் போலும் சிவந்த திருவடிகளை உடைய இறைவர், ஒளி பொருந்திய சிறந்த மாணிக்கங்கள் கரைகளில் திகழ்வதும், முத்துக்கள் நீர்த் திரைகளில் உலாவுவதும் ஆகிய வளம்மிக்க வயல்கள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளிய புகழ்மிக்க நல்ல பெருமானாராவார்.

திருப்புன்கூர்

பவள வண்ணப் பரிசார் திருமேனி
திகழும் வண்ண முறையுந் திருப்புன்கூர்
அழக ரென்னு மடிக ளவர்போலும்
புகழ நின்ற புரிபுன் சடையாரே. **#291**

உலகோர் புகழ நிலை பெற்ற, முறுக்கிய சிவந்த சடை முடியை உடைய இறைவர், பவளம் போலும் தமது திருமேனியின் செவ்வண்ணம் திகழுமாறு திருப்புன்கூரில் உறையும் அழகர் என்னும் அடிகளாவார்.

திருப்புன்கூர்

தெரிந்தி லங்கு கழுநீர் வயற்செந்நெல்
திருந்த நின்ற வயல்சூழ் திருப்புன்கூர்ப்
பொருந்தி நின்ற வடிக ளவர்போலும்
விரிந்தி லங்கு சடைவெண் பிறையாரே. **#292**

விரிந்து விளங்கும் சடைமுடியில் வெண்பிறை அணிந்த இறைவர், கண்களுக்குப் புலனாய் அழகோடு திகழும் செங்கழுநீர் மலர்ந்த வயல்களாலும், செந்நெற் கதிர்கள் அழகோடு நிறைந்து நிற்கும் வயல்களாலும் சூழப்பெற்ற திருப்புன்கூரில் எழுந்தருளியுள்ள அடிகள் ஆவார்.

திருப்புன்கூர்

பாரும் விண்ணும் பரவித் தொழுதேத்தும்
தேர்கொள் வீதி விழவார் திருப்புன்கூர்
ஆர நின்ற வடிக ளவர்போலும்
கூர நின்ற வெயின்மூன் றெரித்தாரே. **#293**

கொடியனவாய்த் தோன்றி இடர் விளைத்து நின்ற முப்புரங்களையும் எரித்தழித்த இறைவர், மண்ணக மக்களும் விண்ணகத் தேவரும் பரவித் தொழுதேத்துமாறு தேரோடும் திருவீதிகளை உடையதும், எந்நாளும் திருவிழாக்களால் சிறந்து திகழ்வதுமான திருப்புன்கூரில் பொருந்தி நின்ற அடிகளாவார்.

திருப்புன்கூர்

மலைய தனா ருடைய மதின்மூன்றும்
சிலைய தனா வெரித்தார் திருப்புன்கூர்த்
தலைவர் வல்ல வரக்கன் றருக்கினை
மலைய தனா லடர்த்து மகிழ்ந்தாரே. **#294**

வலிமை பொருந்திய இராவணன் செருக்கைப் போக்க, அவனைக் கயிலை மலையாலே அடர்த்துப்பின் அவன் வேண்ட மகிழ்ந்து அருள் வழங்கிய இறைவர், தேவர்களோடு சண்டையிட்டு அவர்களை அழிக்கும் குணம் உடையவராய அசுரர்களின் முப்புரங்களை வில்லால் எரித்தழித்தவராகிய திருப்புன்கூர்த் தலைவர் ஆவார்.

திருப்புன்கூர்

நாடவல்ல மலரான் மாலுமாய்த்
தேட நின்றா ருறையுந் திருப்புன்கூர்
ஆட வல்ல வடிக ளவர்போலும்
பாட லாடல் பயிலும் பரமரே. **#295**

பாடல் ஆடல் ஆகிய இரண்டிலும் வல்லவராய் அவற்றைப் பழகும் மேலான இறைவர், எதனையும் ஆராய்ந்தறிதலில் வல்ல நான்முகனும், திருமாலும், தேடி அறிய இயலாதவராய் ஓங்கி நின்றவர். அப்பெருமான் திருப்புன்கூரில் உறையும் ஆடல்வல்ல அடிகள் ஆவார்.

திருப்புன்கூர்

குண்டு முற்றிக் கூறை யின்றியே
பிண்ட முண்ணும் பிராந்தர் சொற்கொளேல்
வண்டு பாட மலரார் திருப்புன்கூர்க்
கண்டு தொழுமின் கபாலி வேடமே. **#296**

கீழாந்தன்மை மிகுந்து ஆடையின்றி வீதிகளில் வந்து பிச்சை கேட்டுப் பெற்று, அவ்வுணவை விழுங்கி வாழும் மயக்க அறிவினராகிய சமணர்கள் கூறும் சொற்களைக் கேளாதீர். தேனுண்ண வந்த வண்டுகள் பாடுமாறு மலர்கள் நிறைந்து விளங்கும் திருப்புன்கூர் சென்று அங்கு விளங்கும் கபாலியாகிய சிவபிரானின் வடிவத்தைக் கண்டு தொழுவீர்களாக.

<u>திருப்புன்கூர்</u>

மாட மல்கு மதில்சூழ் காழிமன்
சேடர் செல்வ ருறையுந் திருப்புன்கூர்
நாட வல்ல ஞான சம்பந்தன்
பாடல் பத்தும் பரவி வாழ்மினே. **#297**

மாடவீடுகளால் நிறையப் பெற்றதும் மதில்கள் சூழ்ந்ததுமான சீகாழிப் பதிக்குத் தலைவனாய், எதையும் நாடி ஆராய்தலில் வல்ல ஞானசம்பந்தன், பெரியோர்களும் செல்வர்களும் வாழும் திருப்புன்கூர் இறைவர்மீது பாடிய பாடல்கள் பத்தையும் பரவி வாழ்வீர்களாக.

திருச்சோற்றுத்துறை

திருச்சோற்றுத்துறை

திருச்சோற்றுத்துறை,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தொலையாச்செல்வர்.
தேவியார் : ஒப்பிலாம்பிகையம்மை.

செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்
துப்ப னென்னா தருளே துணையாக
ஒப்ப ரொப்பர் பெருமா னொளிவெண்ணீற்
றப்பர் சோற்றுத் துறைசென் றடைவோமே. **#298**

நெஞ்சே, முறையான சிற்றின்பத்தைத் தன் முனைப்போடு "யான் துய்ப்பேன்" என்னாது, "அருளே துணையாக நுகர்வேன்" என்று கூற, இறைவர் அதனை ஏற்பர். அத்தகைய பெருமானார், ஒளி பொருந்திய திருவெண்ணீறு அணிந்த மேனியராய்த் தலைவராய் விளங்கும், திருச்சோற்றுத் துறையைச் சென்றடைவோம்.

திருச்சோற்றுத்துறை

பாலு நெய்யுந் தயிரும் பயின்றாடித்
தோலு நூலுந் துதைந்த வரைமார்பர்
மாலுஞ் சோலை புடைசூழ் மடமஞ்ஞை
ஆலுஞ் சோற்றுத் துறைசென் றடைவோமே. **#299**

பாலையும் நெய்யையும் தயிரையும் விரும்பி யாடிப் புலித்தோலும் முப்புரி நூலும் பொருந்திய மலை போன்று விரிந்த மார்பினராய் விளங்கும் சிவபிரான் எழுந்தருளிய, மயக்கும் சோலைகளால் சூழப்பெற்ற, இள மயில்கள் ஆரவாரிக்கும் திருச்சோற்றுத்துறையைச் சென்றடைவோம்.

திருச்சோற்றுத்துறை

செய்யர் செய்ய சடையர் விடையூர்வர்
கைகொள் வேலர் கழலர் கரிகாடர்
தைய லாளொர் பாக மாயவெம்
ஐயர் சோற்றுத் துறைசென் றடைவோமே. **#300**

சிவந்த திருமேனியரும், செம்மை நிறமுடைய சடைமுடியினரும், விடையூர்ந்து வருபவரும், கையில் பற்றிய சூலத்தினரும், வீரக்கழல் அணிந்தவரும், இடுகாட்டில் விளங்குபவரும், உமையம்மையைத்

தன்மேனியில் ஒரு கூறாகக் கொண்டவருமான எம் தலைவராய
சிவபிரான் எழுந்தருளிய திருச்சோற்றுத்துறையைச் சென்றடைவோம்.

திருச்சோற்றுத்துறை

பிணிகொ ளாக்கை யொழியப் பிறப்புளீர்
துணிகொள் போரார் துளங்கு மழுவாளர்
மணிகொள் கண்டர் மேய வார்பொழில்
அணிகொள் சோற்றுத் துறைசென் றடைவோமே. **#301**

நோய்கட்கு இடமான இவ்வுடலுடன் பிறத்தல் ஒழியுமாறு
இப்பிறப்பைப் பயன்படுத்த எண்ணும் அறிவுடையவர்களே,
துணித்தலைச் செய்வதும், போர் செய்தற்கு உரியதுமான விளங்கும்
மழுவாயுதத்தைக் கையில் ஏந்தியவரும், நீலமணி போன்ற கண்டத்தை
உடையவருமான, சிவபெருமான் மேவிய நீண்ட பொழில்கள் சூழ்ந்த
அழகிய திருச்சோற்றுத்துறையைச் சென்றடைவோமாக.

திருச்சோற்றுத்துறை

பிறையு மரவும் புனலுஞ் சடைவைத்து
மறையு மோதி மயான மிடமாக
உறையுஞ் செல்வ முடையார் காவிரி
அறையுஞ் சோற்றுத் துறைசென் றடைவோமே. **#302**

இளம் பிறையையும் பாம்பையும் கங்கையையும் சடையில் அணிந்து,
நான்மறைகளை ஓதிக் கொண்டு, சுடுகாட்டைத் தமது இடமாகக்
கொண்டு உறையும், வீடு பேறாகிய செல்வத்தை உடைய இறைவரின்
காவிரி நீர் ஒலி செய்யும் திருச்சோற்றுத் துறையைச் சென்றடைவோம்.

திருச்சோற்றுத்துறை

துடிக ளோடு முழவம் விம்மவே
பொடிகள் பூசிப் புறங்கா டரங்காகப்
படிகொள் பாணி பாடல் பயின்றாடும்
அடிகொள் சோற்றுத் துறைசென் றடைவோமே. **#303**

உடுக்கைகள் பலவற்றோடு முழவங்கள் ஒலிக்கத் தம் மேனி மீது
திருநீற்றுப் பொடி பூசி, புறங்காடாகிய சுடுகாட்டை அரங்காகக்
கொண்டு, பொருத்தமான தாளச் சதிகளோடு பாடல்கள் பாடி ஆடும்
அடிகள் எழுந்தருளிய திருச்சோற்றுத்துறையைச் சென்று அடைவோம்.

திருச்சோற்றுத்துறை

சாடிக் காலன் மாளத் தலைமாலை
சூடி மிக்குச் சுவண்டாய் வருவார்தாம்

பாடி யாடிப் பரவு வாருள்ளத்
தாடி சோற்றுத் துறைசென் றடைவோமே. **#304**
காலன் அழியுமாறு அவனைக் காலால் உதைத்துத் தலைமாலைகளை அணிந்து, பொருத்தம் உடையவராய் வருபவரும், பாடி ஆடிப் பரவுவார் உள்ளங்களில் மகிழ்வோடு நடனம் புரிபவருமான சிவபிரான் எழுந்தருளிய திருச்சோற்றுத்துறையைச் சென்றடைவோம்.

<u>திருச்சோற்றுத்துறை</u>

பெண்ணோர் பாக முடையார் பிறைச்சென்னிக்
கண்ணோர் பாகங் கலந்த நுதலினார்
எண்ணா தரக்க னெடுக்க வூன்றிய
அண்ணல் சோற்றுத் துறைசென் றடைவோமே. **#305**
ஒருபாகமாக உமையம்மையை உடையவரும், பிறையணிந்த சென்னியரும், தமது திருமேனியில் ஒரு பாகமாக விளங்கும் நெற்றி விழியை உடையவரும், இராவணன் பின்விளையும் தீமையை எண்ணாது கயிலை மலையைப் பெயர்க்க, அவனது முனைப்பை அடக்கக் கால் விரலை ஊன்றிய தலைமைத் தன்மை உடையவருமாகிய சிவபிரானது திருச்சோற்றுத்துறையைச் சென்றடைவோம்.

<u>திருச்சோற்றுத்துறை</u>

தொழுவா ரிருவர் துயர நீங்கவே
அழலா யோங்கி யருள்கள் செய்தவன்
விழவார் மறுகில் விதியான் மிக்கவெம்
எழிலார் சோற்றுத் துறைசென் றடைவோமே. **#306**
தம் செருக்கடங்கித் தம்மைத் தொழுத திருமால் பிரமன் ஆகிய இருவர்க்கும், அழலுருவாய் ஓங்கி நின்று அருள்களைச் செய்தவன், விரும்பி உறையும் விழாக்கள் நிகழும் வீதிகளில் வேத விதியோடு வாழும் மக்களை உடைய சோற்றுத்துறையைச் சென்றடைவோம்.

<u>திருச்சோற்றுத்துறை</u>

கோது சாற்றித் திரிவா ரமண்குண்டர்
ஓது மோத்தை யுணரா தெழுநெஞ்சே
நீதி நின்று நினைவார் வேடமாம்
ஆதி சோற்றுத் துறைசென் றடைவோமே. **#307**
நெஞ்சே! குற்றங்களையே பலகாலும் சொல்லித் திரிபவராகிய சமண் குண்டர்கள் ஓதுகின்ற வேதத்தை அறிய முயலாது, சிவாகம நெறி நின்று, நினைப்பவர் கருதும் திருவுருவோடு வெளிப்பட்டருளும் முதல்வனாகிய சிவபிரானது சோற்றுத்துறையை நாம் சென்றடைவோம்.

<u>திருச்சோற்றுத்துறை</u>

அந்தண் சோற்றுத் துறையெம் மாதியைச்
சிந்தை செய்ம்மி னடியா ராயினீர்
சந்தம் பரவு ஞான சம்பந்தன்
வந்த வாறே புனைதல் வழிபாடே. **#308**

அடியவர்களாக உள்ளவர்களே! அழகு தண்மை ஆகியவற்றோடு விளங்கும் திருச்சோற்றுத்துறையில் எழுந்தருளிய எம் முதல்வனை மனத்தால் தியானியுங்கள். சந்த இசையால் ஞானசம்பந்தன் பாடிய இத்திருப்பதிகத்தைத் தமக்கு வந்தவாறு பாடி வழிபடுதலே அவ்விறைவற்கு நாம் செய்யும் வழிபாடாகும்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

திருநறையூர்ச்சித்தீச்சரம்

திருநறையூர்ச்சித்தீச்சரம்,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சித்தநாதேசர்.
தேவியார் : அழகாம்பிகையம்மை.

ஊரு லாவு பலிகொண் டுலகேத்த
நீரு லாவு நிமிர்புன் சடையண்ணல்
சீரு லாவு மறையோர் நறையூரில்
சேருஞ் சித்தீச் சரஞ்சென் றடைநெஞ்சே. **#309**

நெஞ்சே! ஊர்கள்தோறும் உலாவுவதால் கிடைக்கும் உணவைப் பெற்று, உலகம் பரவக் கங்கை நீரைத் தன் திருமுடியில் ஏற்று, அக்கங்கை நீர் உலாவும் மேல்நோக்கின சிவந்த சடைமுடியினை உடையதலைமைத் தன்மை உடைய சிவபிரான் எழுந்தருளிய, சீருடைய மறையவர் வாழும் நகரான நறையூரில் விளங்கும் சித்தீச்சரத்தைச் சென்றடைவாயாக.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

காடு நாடுங் கலக்கப் பலிநண்ணி
ஓடு கங்கை யொளிர்புன் சடைதாழ
வீடு மாக மறையோர் நறையூரில்
நீடுஞ் சித்தீச் சரமே நினைநெஞ்சே. **#310**

நெஞ்சே! காட்டின்கண் முனிவர் குடில்களிலும், நாட்டின்கண் இல்லறத்தார் வீடுகளிலும் விரும்பிப் பலியேற்று, ஓடி வரும் கங்கை தங்கிய ஒளிவீசும் சிவந்த சடைகள் தாழ, தம் உடல்களை விடுத்து, முத்திப்பேற்றை அடைய விரும்பும் அந்தணர் வாழும் நறையூரில், புகழால் நீடிய சித்தீச்சரத்தில் விளங்கும் பெருமானை நினைவாயாக.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

கல்வி யாளர் கனகம் மழன்மேனி
புல்கு கங்கை புரிபுன் சடையானூர்
மல்கு திங்கட் பொழில்சூழ் நறையூரில்
செல்வர் சித்தீச் சரஞ்சென் றடைநெஞ்சே. **#311**

நெஞ்சமே! பொன்னையும் தீயையும் ஒத்த திருமேனியராய், கங்கை தங்கும் முறுக்கேறிய சிவந்த சடையினை உடையவராய் விளங்கும்

சிவபிரானது ஊர், கல்வியாளர் நிறைந்ததாய், திங்கள் தங்கும் பொழில்கள் சூழ்ந்ததாய் விளங்கும் நறையூராகும். அவ்வூரில் செல்வர் வணங்கும் சித்தீச்சரத்தைச் சென்றடைவாயாக.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

நீட வல்ல நிமிர்புன் சடைதாழ
ஆட வல்ல வடிக ளிடமாகும்
பாடல் வண்டு பயிலு நறையூரில்
சேடர் சித்தீச் சரமே தெளநெஞ்சே. **#312**

நெஞ்சே! மேல்நோக்கிய நீண்டு வளரவல்ல செஞ்சடைகள் தாழுமாறு ஆடுதலில் வல்ல அடிகளாகிய சிவபிரானது இடம் ஆகிய பாடுதலில் வல்ல வண்டுகள் நிறைந்து வாழும் சோலைவளம் உடைய நறையூரில் பெரியோர் வணங்கித் துதிக்கும் சித்தீச்சரத்தைத் தெளவாயாக.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

உம்ப ராலு முலகின் னவராலும்
தம்பெ ருமைய ளத்தற் கரியானூர்
நண்பு லாவு மறையோர் நறையூரில்
செம்பொன் சித்தீச் சரமே தெளநெஞ்சே. **#313**

நெஞ்சே! தேவர்களாலும், உலகிடை வாழும் மக்களாலும் தனது பெருமைகளை அளவிட்டுக் கூறுவதற்கு அரியவனாகிய சிவபிரானது ஊராய், நட்புத் தன்மையால் மேம்பட்ட மறையவர்கள் வாழும் திருநறையூரில் சிவபிரான் எழுந்தருளிய செம்பொன்மயமான சித்தீச்சரத்தையே தெளவாயாக.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

கூரு லாவு படையான் விடையேறி
போரு லாவு மழுவா னனலாடி
பேரு லாவு பெருமா னறையூரில்
சேருஞ் சித்தீச் சரமே யிடமாமே. **#314**

கூர்மைமிக்க சூலப்படையை உடையவனாய், விடை மீது ஏறிப் போருக்குப் பயன்படும் மழுவாயுதத்தை ஏந்தி, அனல்மிசை நின்றாடி, ஏழுலகிலும் தன் புகழ் விளங்க நிற்கும் சிவபெருமான் திருநறையூரில் விளங்கும் சித்தீச்சரமே நாம் வழிபடற்குரிய இடமாகும்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

அன்றி நின்ற வவுணர் புரமெய்த
வென்றி வில்லி விமலன் விரும்பூர்

ன்றில் வாச மணமார் நறையூரில்
சென்று சித்தீச் சரமே தெளநெஞ்சே. **#315**
நெஞ்சே! தன்னோடு வேறுபட்டு நிற்கும் அவுணர்களின் முப்புரங்களையும் எய்தழித்த வெற்றியோடு கூடிய வில்லை உடைய குற்றமற்றவன் விரும்பும் ஊர் ஆகிய, மணம் நிலைபெற்று வீசும் பொது மன்றங்களை உடைய திருநறையூருக்குச் சென்று, அங்குப் பெருமான் எழுந்தருளிய சித்தீச்சரத்தைத் தெளந்து வழிபடுக.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

அரக்க னாண்மை யழிய வரைதன்னால்
நெருக்க வூன்றும் விரலான் விரும்புமூர்
பரக்குங் கீர்த்தி யுடையார் நறையூரில்
திருக்கொள் சித்தீச் சரமே தெளநெஞ்சே. **#316**
நெஞ்சே! இராவணனது வலிமை கெடுமாறு கயிலை மலையால் ஊன்றி அடர்த்த கால் விரலை உடைய சிவபிரான் விரும்புவது, பரவிய புகழாளர் வாழ்வது ஆகிய திருநறையூரில் விளங்கும் சிவபிரானது சித்தீச்சரத்தைத் தெளவாயாக.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

ஆழி யானு மலரி னுறைவானும்
ஊழி நாடி யுணரார் திரிந்துமேல்
சூழு நேட வெரியா மொருவன்சீர்
நீழல் சித்தீச் சரமே நினைநெஞ்சே. **#317**
நெஞ்சே! சக்கராயுதத்தை உடைய திருமாலும், தாமரை மலர்மேல் உறையும் நான்முகனும், உணராதவனாய், ஓர் ஊழிக்காலம் அளவும் திரிந்து சுற்றும் முற்றும் மேலும் கீழுமாய்த் தேட எரியுருவாய் ஓங்கி நின்ற சிவபெருமானது சிறப்புமிக்க இடமாகிய திருநறையூர்ச் சித்தீச்சரத்தை நினைவாய்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

மெய்யின் மாசர் விரிநுண் டுகிலிலார்
கையி லுண்டு கழறு முரைகொள்ளேல்
உய்ய வேண்டி லிறைவன் னறையூரில்
செய்யுஞ் சித்தீச் சரமே தவமாமே. **#318**
உடம்பின்கண் அழுக்குடையவர்களும், விரித்துக் கட்டும் நுண்ணிய ஆடைகளை அணியாதவர்களும், கைகளில் பலி ஏற்று உண்டு திரிபவர்களுமாகிய சமணர்கள் இடித்துக் கூறும் உரைகளைக் கொள்ளாதீர். நீர் இப்பிறப்பில் உய்தி பெற விரும்பினால், சிவபிரான்

எழுந்தருளிய திருநறையூரில் செய்தமைத்த சித்தீச்சரத்தைச் சென்று வழிபடுமின். அதுவே சிறந்த தவமாம்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

மெய்த்து லாவு மறையோர் நறையூரில்
சித்தன் சித்தீச் சரத்தை யுயர்காழி
அத்தன் பாத மணிஞான சம்பந்தன்
பத்தும் பாடப் பறையும் பாவமே. **#319**

வாய்மையே பேசி வாழும் மறையவர் வாழும் திருநறையூரின்கண் சித்தன் என்ற திருநாமத்தோடு விளங்கும் சிவபெருமானது சித்தீச்சரத்தை, மேலான காழி மாநகரில் விளங்கும் சிவபிரானது திருப்பாதங்களைத் தனது திருமுடிக்கு அணியாகக் கொண்ட ஞானசம்பந்தன் பாடிய இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் பாடிப்பரவப் பாவங்கள் நீங்கும்.

திருப்புகலி

சீர்காழி

திருப்புகலி,
பண் - தக்கராகம், திருப்புகலி மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

விதியாய் விளைவாய் விளைவின் பயனாகிக்
கொதியா வருகூற் றையுதைத் தவர்சேரும்
பதியா வதுபங் கயநின் றலரத்தேன்
பொதியார் பொழில்சூழ் புகலிந் நகர்தானே. **#320**

மார்க்கண்டேயருக்கு வயது பதினாறு என விதித்த விதியாகவும், அதன்காரணமாக வந்த மரணமாய், அவர் இறை வழிபாடு செய்ததன் காரணமாகத்தானே விதியின் பயனாய் வெளிப்பட்டுச் சினந்துவந்த கூற்றுவனை உதைத்தருளிய சிவபிரான் எழுந்தருளிய தலம், தாமரை மலர்கள் மலர்ந்த நீர்நிலைகளும், தேன்கூடுகள் நிறைந்த பொழில்களும் சூழ்ந்த புகலிநகராகும்.

சீர்காழி

ஒன்னார் புரமூன்று மெரித் தவொருவன்
மின்னா ரிடையா ளொடுங்கூ டியவேடந்
தன்னா லுறைவா வதுதண் கடல்சூழ்ந்த
பொன்னார் வயற்பூம் புகலிந் நகர்தானே. **#321**

பகைவராய் மாறிய அசுரர்களின் முப்புரங்களையும் எரித்தழித்த சிவபிரான் மின்னல் போன்ற இடையினை உடைய உமையம்மையோடு கூடிய திருவுருவத்தோடு எழுந்தருளிய இடம், குளிர்ந்த கடல் ஒருபுறம் சூழ, பொன் போன்ற நெல்மணிகள் நிறைந்த வயல்களை உடைய புகலிநகராகும்.

சீர்காழி

வலியின் மதிசெஞ் சடைவைத் தமணாளன்
புலியின் னதள்கொண் டரையார்த் தபுனிதன்
மலியும் பதிமா மறையோர் நிறைந்தீண்டிப்
பொலியும் புனற்பூம் புகலிந் நகர்தானே. **#322**

கலைகளாகிய வலிமை குறைந்த பிறை மதியைச் செஞ்சடைமீது வைத்துள்ள மணாளனும், புலியின் தோலை இடையிற் கட்டிய

புனிதனும் ஆகிய சிவபெருமான் விரும்பும் பதி மேம்பட்ட வேதியர் நிறைந்து செறிந்து பொலியும் நீர்வளம் சான்ற அழகிய புகலிநகராகும்.

சீர்காழி

கயலார் தடங்கண் ணியொடும் மெருதேறி
அயலார் கடையிற் பலிகொண் டவழகன்
இயலா லுறையும் மிடமெண் டிசையோர்க்கும்
புயலார் கடற்பூம் புகலிந் நகர்தானே. **#323**

கயல்மீன் போன்ற பெரிய கண்களை உடைய உமையம்மையோடும் விடைமீது ஏறி, அயலார் இல்லங்களில் பலி கொண்டருளும் அழகனாகிய சிவபிரான் எண்திசையிலுள்ளாரும் செவிசாய்த்து இடி ஓசையைக் கேட்கும் கார் மேகங்கள் தங்கும் கடலை அடுத்துள்ள அழகிய புகலிநகராகும்.

சீர்காழி

காதார் கனபொற் குழைதோ டதிலங்கத்
தாதார் மலர்தண் சடையே றமுடித்து
நாதா னுறையும் மிடமா வதுநாளும்
போதார் பொழிற்பூம் புகலிந் நகர்தானே. **#324**

காதுகளில் அணிந்துள்ள கனவிய பொன்னால் இயன்ற குழை, தோடு ஆகியன இலங்க மகரந்தம் மருவிய மலர்களைத் தண்ணிய சடையின்கண் பொருந்தச்சூடி, எல்லா உயிர்கட்கும் நாதனாக விளங்கும் சிவபிரான் உறையுமிடம் நாள்தோறும் புதிய பூக்கள் நிறைந்து விளங்கும் பொழில்கள் சூழ்ந்த புகலிநகராகும்.

சீர்காழி

வலமார் படைமான் மழுவேந் தியமைந்தன்
கலமார் கடனஞ் சமுதுண் டகருத்தன்
குலமார் பதிகொன் றைகள்பொன் சொரியத்தேன்
புலமார் வயற்பூம் புகலிந் நகர்தானே. **#325**

வெற்றி பொருந்திய சூலப்படை, மான் மழு, ஆகியவற்றை ஏந்திய வலிமையுடையோனும், மரக்கலங்கள் உலாவும் கடலிடைத் தோன்றிய நஞ்சினை அமுதாக உண்டவனும் ஆகிய சிவபிரான், அடியார் குழாத்தோடு உறையும் பதி, கொன்றை மலர்கள் பொன் போன்ற இதழ்களையும் மகரந்தங்களையும் சொரிய, தேன் நிலத்தில் பாயும் வயல்களை உடைய புகலி நகராகும்.

சீர்காழி

கறுத்தான் கனலான் மதின்மூன் றையும்வேவச்
செறுத்தான் றிகழுங் கடனஞ் சமுதாக
அறுத்தா னயன்றன் சிரமைந் திலுமொன்றைப்
பொறுத்தா னிடம்பூம் புகலிந் நகர்தானே. **#326**
மும்மதில்களும் கனலால் வெந்தழியுமாறு சினந்தவனும், கடலிடை விளங்கித் தோன்றிய நஞ்சை அமுதாக உண்டு கண்டத்தில் தரித்தவனும், பிரமனது ஐந்து தலைகளில் ஒன்றை அறுத்து அதனைக் கையில் தாங்கிய சிவபிரான் எழுந்தருளிய இடம் அழகிய புகலி நகராகும்.

<u>சீர்காழி</u>

தொழிலான் மிகுதொண் டர்கள்தோத் திரஞ்சொல்ல
எழிலார் வரையா லன்றரக் கனைச்செற்ற
கழலா னுறையும் மிடங்கண் டல்கண்மிண்டிப்
பொழிலான் மலிபூம் புகலிந் நகர்தானே. **#327**
தாம் செய்யும் பணிகளால் மேம்பட்ட தொண்டர்கள் தோத்திரம் சொல்லிப் போற்ற, அழகிய கயிலைமலையால் முன்னொரு காலத்தில் இராவணனைச் செற்ற திருவடிகளை உடைய சிவபிரான் உறையும் இடம், தாழைமரங்கள் செறிந்து விளங்கும் பொழில்கள் சூழ்ந்த புகலி நகராகும்.

<u>சீர்காழி</u>

மாண்டார் சுடலைப் பொடிபூ சிமயானத்
தீண்டா நடமா டியவேந் தல்தன்மேனி
நீண்டா னிருவர்க் கெரியா யரவாரம்
பூண்டா னகர்பூம் புகலிந் நகர்தானே. **#328**
இறந்தவர்களை எரிக்கும் சுடலையில் விளையும் சாம்பலை உடலிற் பூசிக் கொண்டு, அம்மயானத்திலேயே தங்கி நடனமாடும் தலைவரும், திருமால் பிரமர் பொருட்டுத் தம் திருமேனியை அழலுருவாக்கி ஓங்கி நின்றவரும் பாம்பை மாலையாகத் தரித்தவருமான சிவபிரானது நகர் அழகிய புகலிப் பதியாகும்.

<u>சீர்காழி</u>

உடையார் துகில்போர்த் துழல்வார் சமண்கையர்
அடையா தனசொல் லுவரா தர்களோத்தைக்
கிடையா தவன்றன் னகர்நன் மலிபூகம்
புடையார் தருபூம் புகலிந் நகர்தானே. **#329**
கீழ் உடையோடு மெல்லிய ஆடையைப் போர்த்துத் திரியும் புத்தரும்,

சமணர்களும் ஆகிய கீழ்மக்கள் பொருந்தாதவற்றைக் கூறுவார்கள். அக்கீழோரின் ஓத்திற்கு அகப்படாதவன் சிவபிரான். அப்பெருமானது நன்னகர், நன்கு செறிந்த பாக்கு மரச்சோலைகள் சூழ்ந்த புகலிநகராகும்.

சீர்காழி

இரைக்கும் புனல்செஞ் சடைவைத் தவெம்மான்றன்
புரைக்கும் பொழிற்பூம் புகலிந் நகர்தன்மேல்
உரைக்குந் தமிழ்ஞான சம்பந் தனொண்மாலை
வரைக்குந் தொழில்வல் லவர்நல் லவர்தாமே. **#330**

ஆரவாரிக்கும் கங்கை நீரைத் தமது சிவந்த சடைமீது வைத்த எம் தலைவனாகிய சிவபிரானின், உயர்ந்த சோலைகளால் சூழப்பட்ட அழகிய புகலிப் பதியைக் குறித்துத் தமிழ் ஞானசம்பந்தன் உரைத்த அழகிய இப்பதிகமாலையைத் தமதாக்கி ஓதும் தொழில் வல்லவர் நல்லவர் ஆவர்.

திருக்குரங்கணின்முட்டம்

திருக்குரங்கணின்முட்டம்,
பண் - தக்கராகம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வாலீசுவரர்.
தேவியார் : இறையார்வளையம்மை.

விழுநீர் மழுவாட் படையண் ணல்விளங்கும்
கழுநீர் குவளைம் மலரக் கயல்பாயும்
கொழுநீர் வயல்சூழ்ந் தகுரங் கணின்முட்டம்
தொழுநீர் மையர்தீ துறுதுன் பமிலரே. **#331**

பெருமைக்குரிய கங்கையை முடிமிசை அணிந்தவரும், மழுவாட்படையைக் கையில் ஏந்தியவரும் ஆகிய சிவபிரான் உறைவது கழுநீர், குவளை ஆகியன மலர்ந்து, கயல்மீன்கள் துள்ளுமாறு விளங்கும் நீர் நிலைகளை உடையதும், செழுமையான வயல்களால் சூழப்பட்டதுமாகிய திருக்குரங்கணில்முட்டம் ஆகும். இத்தலத்தைத் தொழுபவர் தீமையால் வரும் துன்பம் இலராவர்.

திருக்குரங்கணின்முட்டம்

விடைசேர் கொடியண் ணல்விளங் குயர்மாடக்
கடைசேர் கருமென் குளத்தோங் கியகாட்டில்
குடையார் புனன்மல் குகுரங் கணின்முட்டம்
உடையா னெனையா ளுடையெந் தைபிரானே. **#332**

உயர்ந்து விளங்கும் மாடங்களின் கடை வாயிலைச் சேர்ந்துள்ள கரிய மெல்லிய காட்டிடையே அமைந்த குடைந்து ஆடுதற்குரிய நீர் நிலைகள் நிறைந்த குரங்கணில்முட்டத்தை உடையானும் விடைக்கொடி அண்ணலுமாகிய சிவபிரான் என்னை ஆளாக உடைய தலைவன் ஆவான்.

திருக்குரங்கணின்முட்டம்

சூலப் படையான் விடையான் சுடுநீற்றான்
காலன் றனையா ருயிர்வவ் வியகாலன்
கோலப் பொழில்சூழ்ந் தகுரங் கணின்முட்டத்
தேலங் கமழ்புன் சடையெந் தைபிரானே. **#333**

அழகிய சோலைகளால் சூழப்பெற்ற குரங்கணில் முட்டத்தில் எழுந்தருளிய மணம்கமழும் சடைமுடியை உடையோனாகிய

எந்தைபிரான் சூலப்படையையும் விடை ஊர்தியையும் உடையவன். திருவெண்ணீறு பூசியவன். காலனின் உயிரை வவ்வியதால் காலகாலன் எனப்படுபவன்.

திருக்குரங்கணின்முட்டம்

வாடா விரிகொன் றைவலத் தொருகாதில்
தோடார் குழையா னலபா லனநோக்கி
கூடா தனசெய் தகுரங் கணின்முட்டம்
ஆடா வருவா ரவரன் புடையாரே. **#334**

வாடாது விரிந்துள்ள கொன்றை மாலையைச் சூடியவனும், வலக்காதில் குழையையும் இடக்காதில் தோட்டையும் அணிந்துள்ளவனும், நன்றாக அனைத்துயிர்களையும் காத்தலைத் திருவுளம் கொண்டு தேவர் எவரும் செய்ய முடியாத அரிய செயல்களைச் செய்பவனுமாகிய குரங்கணில்முட்டத்துள் திருநடனம் புரியும் இறைவன் எல்லோரிடத்தும் அன்புடையவன்.

திருக்குரங்கணின்முட்டம்

இறையார் வளையா ளையொர்பா கத்தடக்கிக்
கறையார் மிடற்றான் கரிகீ றியகையான்
குறையார் மதிசூ டிகுரங் கணின்முட்டத்
துறைவா னெமையா ளுடையொண் சுடரானே. **#335**

இறையார் வளையாள் என்னும் திருப்பெயர் கொண்ட உமையம்மையை ஒருபாகத்தே கொண்டவனும், நீலகண்டனும், யானையின் தோலை உரித்துப் போர்த்த கையினனும் ஆகிப் பிறைமதியை முடியில் சூடிக் குரங்கணில் முட்டத்தில் உறையும் இறைவன் எம்மை ஆளாக உடைய ஒண் சுடராவான்.

திருக்குரங்கணின்முட்டம்

பலவும் பயனுள் ளனபற் றுமொழிந்தோம்
கலவும் மயில்கா முறுபே டையொடாடிக்
குலவும் பொழில்சூழ்ந் தகுரங் கணின்முட்டம்
நிலவும் பெருமா னடிநித் தல்நினைந்தே. **#336**

தோகைகளை உடைய ஆண் மயில்கள் தாம் விரும்பும் பெண் மயில்களோடு கூடிக் களித்தாடும் பொழில்களால் சூழப்பட்ட குரங்கணில்முட்டத்தில் உறையும் பெருமான் திருவடிகளை நாள்தோறும் நினைந்து உலகப் பொருள்கள் பலவற்றிலும் இருந்த பற்றொழிந்தோம்.

திருக்குரங்கணின்முட்டம்

மாடார் மலர்க்கொன் றைவளர் சடைவைத்துத்
தோடார் குழைதா னொருகால திலிலங்கக்
கூடார் மதிலெய் துகுரங் கணின்முட்டத்
தாடா ரரவம் மரையார்த் தமர்வானே. **#337**

சிவபிரான் பொன்னையொத்த கொன்றை மலர் மாலையைச் சடைமீது அணிந்து, காதணியாகிய குழை ஒரு காதில் இலங்கத் திரிபுரத்தை எரித்தழித்து, ஆடும் பாம்பை இடையிலே வரிந்துகட்டிக் குரங்கணில்முட்டத்தில் எழுந்தருளியுள்ளான்.

திருக்குரங்கணின்முட்டம்

மையார் நிறமே னியரக் கர்தங்கோனை
உய்யா வகையா லடர்த்தின் னருள்செய்த
கொய்யார் மலர்சூ டிகுரங் கணின்முட்டம்
கையாற் றொழுவார் வினைகாண் டலரிதே. **#338**

கரிய மேனியை உடைய அரக்கர் தலைவனாகிய இராவணனைப் பிழைக்க முடியாதபடி அடர்த்துப் பின் அவனுக்கு இனிய அருளை வழங்கியவனும், அடியவர் கொய்தணிவித்த மலர் மாலைகளுடன் குரங்கணில்முட்டத்தில் எழுந்தருளியுள்ளவனுமாகிய சிவபெருமானைக் கைகளால் தொழுபவர் வினைப்பயன்களைக் காணுதல் இலராவர்.

திருக்குரங்கணின்முட்டம்

வெறியார் மலர்த்தா மரையா னொடுமாலும்
அறியா தசைந்தேத் தவோரா ரழலாகும்
குறியா னிமிர்ந்தான் றன்குரங் கணின்முட்டம்
நெறியாற் றொழுவார் வினைநிற் ககிலாவே. **#339**

மணம் கமழும் தாமரை மலரில் உறையும் நான்முகனும், திருமாலும் அடிமுடி அறிய முடியாது வருந்தி வணங்க அழல் உருவாய் ஓங்கி நின்றருளிய சிவபிரான் விளங்கும் குரங்கணில் முட்டத்தை முறையாக வணங்குவார் வினைகள் இலராவர்.

திருக்குரங்கணின்முட்டம்

கழுவார் துவரா டைகலந் துமெய்போர்க்கும்
வழுவாச் சமண்சாக் கியர்வாக் கவைகொள்ளேல்
குழுமின் சடையண் ணல்குரங் கணின்முட்டத்
தெழில்வெண் பிறையா னடிசேர் வதியல்பே. **#340**

தோய்க்கப்பட்ட துவராடையை உடலிற் போர்த்துத் திரியும் புத்தர், தம்கொள்கையில் வழுவாத சமணர் ஆகியோர் உரைகளைக் கொள்ளாதீர். மின்னல்திரள் போலத்திரண்டு உள்ள சடைமுடியை

உடையவனும், அழகிய வெண்பிறையை அணிந்தவனும் ஆகிய குரங்கணில் முட்டத்து இறைவன் திருவடிகளைச் சென்று வணங்குவதே நம் கடமையாகும்.

திருக்குரங்கணின்முட்டம்

கல்லார் மதிற்கா ழியுண்ஞான சம்பந்தன்
கொல்லார் மழுவேந் திகுரங் கணின்முட்டம்
சொல்லார் தமிழ்மா லைசெவிக் கினிதாக
வல்லார்க் கௌதாம் பிறவா வகைவீடே. **#341**

கருங்கல்லால் இயன்ற மதில்களால் சூழப்பட்ட சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன், கையில் கொல்லனது தொழில் நிறைந்த மழுவாயுதம் ஏந்திய குரங்கணில் முட்டத்து இறைவன்மீது பாடிய சொல்மாலையாகிய இத்திருப்பதிகத்தைச் செவிக்கு இனிதாக ஓதி ஏத்த வல்லார்க்குப் பிறவா நெறியாகிய வீடு எளிதாகும்.

திருவிடைமருதூர்

திருவிடைமருதூர்

திருவிடைமருதூர்,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மருதீசர்.
தேவியார் : நலமுலைநாயகியம்மை.

ஓடே கலனுண் பதுமூ ரிடுபிச்சை
காடே யிடமா வதுகல் லானிழற்கீழ்
வாடா முலைமங் கையுந்தா னுமகிழ்ந்
தீடா வுறைகின் றவிடை மருதீதோ. **#342**

உண்ணும் பாத்திரம் பிரம கபாலமாகும். அவர் உண்ணும் உணவோ ஊர் மக்கள் இடும் பிச்சையாகும், அவர் வாழும் இடமோ இடுகாடாகும். அத்தகைய சிவபிரான் கல்லால மரநிழற்கீழ் நன்முலைநாயகியும் தானுமாய் மகிழ்ந்து பெருமையோடு விளங்கும் திருத்தலமாகிய இடைமருது இதுதானோ?

திருவிடைமருதூர்

தடங்கொண்ட தொர்தாமரைப்பொன்முடிதன்மேல்
குடங்கொண் டடியார் குளிர்நீர் சுமந்தாட்டப்
படங்கொண் டதொர்பாம் பரையார்த்த பரமன்
இடங்கொண் டிருந்தான் றனிடை மருதீதோ. **#343**

தடாகங்களிற் பறித்த பெரிய தாமரை மலரைச் சூடிய அழகிய திருமுடியில், அடியவர் குடங்களைக் கொண்டு குளிர்ந்த நீரைமுகந்து சுமந்து வந்து அபிடேகிக்குமாறு, படம் எடுத்தாடும் நல்லபாம்பை இடையிலே கட்டிய பரமன் தான் விரும்பிய இடமாகக் கொண்டுறையும் இடைமருது இதுதானோ?

திருவிடைமருதூர்

வெண்கோ வணங்கொண் டொரு வெண்டலையேந்தி
அங்கோல் வளையா ளையொர்பா கமமர்ந்து
பொங்கா வருகா விரிக்கோ லக்கரைமேல்
எங்கோ னுறைகின் றவிடை மருதீதோ. **#344**

வெண்மையான கோவணத்தை அணிந்து ஒப்பற்ற வெள்ளிய பிரம கபாலத்தைக் கையில் ஏந்தி அழகியதாயத் திரண்ட வளையல்களை அணிந்த உமாதேவியை ஒருபாகமாக விரும்பி ஏற்று, பொங்கிவரும்

காவிரி நதியின் அழகிய கரைமீது எம் தலைவனாயுள்ள சிவபிரான்
எழுந்தருளிய இடைமருதூர் இதுதானோ?

திருவிடைமருதூர்

அந்தம் மறியா தவருங் கலமுந்திக்
கந்தங் கமழ்கா விரிக்கோ லக்கரைமேல்
வெந்த பொடிப்பூ சியவே தமுதல்வன்
எந்தை யுறைகின்ற விடைமரு தீதோ. **#345**

அரிய அணிகலன்களைக் கரையில் வீசி மணம் கமழ்ந்துவரும் காவிரி
நதியின் அழகிய கரைமீது திருவெண்ணீறு அணிந்தவனாய்,
முடிவறியாத வேத முதல்வனாய் விளங்கும் எம் தந்தையாகிய சிவபிரான்
உறைகின்ற இடைமருதூர் இதுதானோ?

திருவிடைமருதூர்

வாசங் கமழ்மா மலர்ச்சோ லையில்வண்டே
தேசம் புகுந்தீண் டியொர்செம் மையுடைத்தாய்ப்
பூசம் புகுந்தா டிப்பொலிந் தழகாய
ஈச னுறைகின் றவிடை மருதீதோ. **#346**

மணம் கமழும் சிறந்த மலர்களை உடைய சோலைகளில் வண்டுகளைக்
கொண்டதும், உலக மக்கள் பலரும் கூடிச் செம்மையாளராய்த்
தைப்பூசத் திருநாளில் நீராடி வணங்குவதும், பொலிவும் அழகும்
உடையவனாய் ஈசன் எழுந்தருளி விளங்குவதுமான இடைமருது
என்னும் தலம் இதுதானோ?

திருவிடைமருதூர்

வன்புற் றிளநா கமசைத் தழகாக
என்பிற் பலமா லையும்பூண் டெருதேறி
அன்பிற் பிரியா தவளோ டுமுடனாய்
இன்புற் றிருந்தான் றனிடை மருதீதோ. **#347**

வலிய புற்றுக்களில் வாழும் இளநாகங்களை இடையிலே அழகாகக்
கட்டிக் கொண்டு, எலும்பால் இயன்ற மாலைகள் பலவற்றையும்
அணிகலன்களாகப் பூண்டு, அன்பிற்பிரியாத உமையம்மையோடும்
உடனாய் எருதேறிச் சிவபிரான் இன்புற்றுறையும் இடைமருது என்பது
இதுதானோ?

திருவிடைமருதூர்

தேக்குந் திமிலும் பலவுஞ் சுமந்துந்திப்
போக்கிப் புறம்பூ சலடிப் பவருமால்

ஆர்க்குந் திரைக்கா விரிக்கோ லக்கரைமேல்
ஏற்க விருந்தான் றனிடை மருதீதோ. **#348**
தேக்கு, வேங்கை, பலா ஆகிய மரங்களைச் சுமந்து வந்து
இருகரைகளிலும், அம்மரங்களை எடுத்து வீசி, ஆரவாரித்து வரும்
அலைகளையுடையதாய காவிரி நதியின் அழகிய கரைமீது
சிவபெருமான் பொருந்த உறையும் இடைமருது என்னும் தலம்
இதுதானோ?

திருவிடைமருதூர்

பூவார் குழலா ரகில்கொண் டுபுகைப்ப
ஓவா தடியா ரடியுள் குளிர்ந்தேத்த
ஆவா வரக்கன் றனையாற் றலழித்த
ஏவார் சிலையான் றனிடை மருதீதோ. **#349**
மலர் சூடிய கூந்தலை உடைய மங்கல மகளிர் அகில் தூபம் இட,
அடியவர் இடையீடின்றித் திருவடிகளை மனம் குளிர்ந்து ஏத்த,
கண்டவர் ஆஆ என இரங்குமாறு இராவணனது ஆற்றலை அழித்த,
அம்பு பொருத்தற்கேற்ற மலைவில்லைக் கையில் கொண்ட,
சிவபெருமானின் இடைமருது என்னும் தலம் இதுதானோ?

திருவிடைமருதூர்

முற்றா ததொர்பான் மதிசூ டுமுதல்வன்
நற்றா மரையா னொடுமால் நயந்தேத்தப்
பொற்றோ ளியுந்தா னும்பொலிந் தழகாக
எற்றே யுறைகின் றவிடை மருதீதோ. **#350**
முற்றாத பால் போன்ற இளம்பிறையை முடிமிசைச் சூடிய முதல்வனாய்,
நல்ல தாமரை மலர்மேல் உறையும் நான்முகனும், திருமாலும் விரும்பித்
தொழ, உமையம்மையும் தானுமாய்ச் சிவபிரான் அழகாகப் பொலிந்து
உறைகின்ற இடைமருது என்னும் தலம் இதுதானோ?

திருவிடைமருதூர்

சிறுதே ரருஞ்சில் சமணும் புறங்கூற
நெறியே பலபத் தர்கள்கை தொழுதேத்த
வெறியா வருகா விரிக்கோ லக்கரைமேல்
எறியார் மழுவா ளனிடை மருதீதோ. **#351**
சிறுமதியாளராகிய தேரர்களும், சிற்றறிவினராகிய சமணர்களும்,
புறங்கூறித் திரிய, சிவபக்தர்கள் பலர் முறையாலே கைகளால் தொழுது
துதிக்கப் பகைவரைக் கொன்றொழிக்கும் மழுவை ஏந்திய சிவபிரான்
எழுந்தருளிய, மணம் கமழ்ந்துவரும் காவிரிநதியின் அழகிய கரைமேல்

உள்ள இடைமருது என்னும் தலம் இதுதானோ?

திருவிடைமருதூர்

கண்ணார் கமழ்கா ழியுண்ஞா னசம்பந்தன்
எண்ணார் புகழெந் தையிடை மருதின்மேல்
பண்ணோ டிசைபா டியபத் தும்வல்லார்கள்
விண்ணோ ருலகத் தினில்வீற் றிருப்பாரே. **#352**

இடமகன்றதும் மணம் கமழ்வதுமான சீகாழிப் பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன் எண்ணத்தில் நிறைந்துள்ள புகழை உடைய எம்பெருமானுடைய இடைமருது மீது பண்ணோடியன்ற இசையால் பாடிய பத்துப் பாடல்களையும் வல்லவர்கள் விண்ணோர் உலகில் வீற்றிருக்கும் சிறப்பைப் பெறுவார்கள்.

திருஅன்பிலாலந்துறை

திருஅன்பிலாலந்துறை

திரு அன்பிலாலந்துறை,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. அன்பில் என வழங்கப்பெறும். ,
சுவாமிபெயர் : சத்திவாகீசர்.
தேவியார் : சவுந்தரநாயகியம்மை.

கணைநீ டெரிமா லரவம் வரைவில்லா
இணையா வெயின்மூன் றுமெரித் தவிறைவர்
பிணைமா மயிலுங் குயில்சேர் மடவன்னம்
அணையும் பொழிலன் பிலாலந் துறையாரே. **#353**

நீண்டு எரிகின்ற தீயையும் திருமாலையும் அம்பாகக் கொண்டு பூட்டி வாசுகி என்னும் பாம்பை நாணாகக் கட்டிய மேருமலையை வில்லாக வளைத்து முப்புரங்களையும் எரித்த இறைவர், தத்தம் பெடைகளோடுகூடிய பெரிய மயில்களும், குயில்களும் சேர்ந்து வாழும் அன்னங்களும் உறையும் பொழில் சூழ்ந்த அன்பிலாலந்துறையார் ஆவார்.

திருஅன்பிலாலந்துறை

சடையார் சதுரன் முதிரா மதிசூடி
விடையார் கொடியொன் றுடையெந் தைவிமலன்
கிடையா ரொலியோத் தரவத் திசைகிள்ளை
அடையார் பொழிலன் பிலாலந் துறையாரே. **#354**

சடைமுடிகளோடு கூடிய சதுரப்பாடு உடையவராய் இளம்பிறையை முடிமிசைச் சூடி இடபக்கொடி ஒன்றை உடைய எந்தையாராகிய விமலர், வேதம் பயிலும் இளஞ்சிறார்கள் கூடியிருந்து ஓதும் வேத ஒலியைக் கேட்டு அவ்வோசையாலேயே அவற்றை இசைக்கின்ற கிளிகள் அடைதல் பொருந்திய சோலைகளால் சூழப்பட்ட அன்பிலாலந்துறை இறைவராவார்.

திருஅன்பிலாலந்துறை

ஊரும் மரவஞ் சடைமே லுறவைத்துப்
பாரும் பலிகொண் டொலிபா டும்பரமர்
நீருண் கயலும் வயல்வா ளைவராலோ
டாரும் புனலன் பிலாலந் துறையாரே. **#355**

ஊர்ந்து செல்லும் பாம்பைச் சடைமுடிமேல் பொருந்த அணிந்து உலகம்

முழுதும் சென்று பலியேற்று, இசை பாடி மகிழும் பரமராகிய பெருமானார், நீரின்வழி உணவுண்ணும் கயல் மீன்களை வயல்களிடத்துள்ள வாளை வரால் ஆகிய மீன்கள் உண்ணும் புனல்வளம் மிக்க அன்பிலாலந்துறையாராவார்.

திருஅன்பிலாலந்துறை

பிறையும் மரவும் முறவைத் தமுடிமேல்
நறையுண் டெழுவன் னியுமன் னுசடையார்
மறையும் பலவே தியரோ தவொலிசென்
றறையும் புனலன் பிலாலந் துறையாரே. **#356**

பிறைமதி, பாம்பு ஆகியவற்றைப் பகை நீக்கி ஒருங்கே பொருந்த வைத்த முடிமீது, நறுமணத்துடன் தோன்றும் வன்னித் தளிர்களும் மன்னிய சடையினர், வேதியர் பலர் வேதங்களை ஓத அவ்வொலி பல இடங்களிலும் ஒலிக்கும் நீர்வளம்மிக்க அன்பிலாலந்துறை இறைவராவார்.

திருஅன்பிலாலந்துறை

நீடும் புனற்கங் கையுந்தங் கமுடிமேல்
கூடும் மலையா ளொருபா கமமர்ந்தார்
மாடும் முழவம் மதிரம் மடமாதர்
ஆடும் பதியன் பிலாலந் துறையாரே. **#357**

முடிமேல் பெருகிவரும் நீரை உடைய கங்கை நதியையும் தங்குமாறு அணிந்து, ஒருபாகமாகத் தம்மைத் தழுவிய மலைமகளைக் கொண்டுள்ள பெருமானார், பல இடங்களிலும் முழவுகள் ஒலிக்க, இளம் பெண்கள் பலர் நடனங்கள் புரியும் அன்பிலாலந்துறை இறைவராவார்.

திருஅன்பிலாலந்துறை

நீறார் திருமே னியரூ னமிலார்பால்
ஊறார் சுவையா கியவும் பர்பெருமான்
வேறா ரகிலும் மிகுசந் தனமுந்தி
ஆறார் வயலன் பிலாலந் துறையாரே. **#358**

திருநீறு அணிந்த திருமேனியரும், குற்றம் அற்றவர்களின் உள்ளங்களில் பொருந்திய சுவையாக இனிப்பவருமாகிய தேவர் தலைவர், வேறாகப் பெயர்ந்து வரும் அகில் மரங்களையும் உயர்ந்த சந்தன மரங்களையும் அடித்துவரும் ஆற்று நீர் பாயும் வயல்களை உடைய அன்பிலாலந்துறை இறைவர் ஆவார்.

திருஅன்பிலாலந்துறை

செடியார் தலையிற் பலிகொண் டினிதுண்ட
படியார் பரமன் பரமேட் டிதன்சீரைக்
கடியார் மலரும் புனல்தூ விநின்றேத்தும்
அடியார் தொழுமன் பிலாலந் துறையாரே. **#359**

முடை நாற்றமுடைய தலையோட்டில் பலியேற்று அதனை இனிதாக உண்டருளும் தன்மையினைக் கொண்ட பரமனாகிய பரம்பொருள், மணம் பொருந்திய மலர்களையும் நீரையும் தூவி நின்று தன்புகழைத் துதிக்கும் அடியவர்களால் தொழப்படும் அன்பிலாலந்துறை இறைவராவார்.

திருஅன்பிலாலந்துறை

விடத்தார் திகழும் மிடறன் னடமாடி
படத்தா ரரவம் விரவுஞ் சடையாதி
கொடித்தே ரிலங்கைக் குலக்கோன் வரையார
அடர்த்தா ரருளன் பிலாலந் துறையாரே. **#360**

ஆலகால விடக்கறை விளங்கும் கரிய கண்டத்தினரும், நடனமாடியும், படத்தோடு கூடிய அரவம் விரவும் சடையினை உடைய முதற்கடவுளும், கொடித் தேரைக் கொண்ட இலங்கையர் குலத் தலைவனாகிய இராவணனை மலையின்கீழ் அகப்படுத்தி அடர்த்தவரும் ஆகிய சிவபிரான், அன்பர்கள் அருள் பெறுதற்குரிய இடமாக விளங்கும் அன்பில் ஆலந்துறை என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ளார்.

திருஅன்பிலாலந்துறை

வணங்கிம் மலர்மே லயனுந் நெடுமாலும்
பிணங்கி யறிகின் றிலர்மற் றும்பெருமை
சுணங்கும் முகத்தம் முலையா ளொருபாகம்
அணங்குந் நிகழன் பிலாலந் துறையாரே. **#361**

தாமரை மலர்மேல் விளங்கும் அயனும் திருமாலும், சிவபிரானின் பெருமையை வணங்கி அறியாது, தம்முட் பிணங்கித் தேடி அறியாதவராயினர். அப்பெருமான், சுணங்கு பொருந்திய முகப்பினை உடைய அழகிய தனத்தவளாய உமையம்மையை ஒருபாகத்தே அணங்காகக் கொண்டுள்ள அன்பிலாலந்துறை இறைவராவார்.

திருஅன்பிலாலந்துறை

தறியார் துகில்போர்த் துழல்வார் சமண்கையர்
நெறியா வுணரா நிலைக்கே டினர்நித்தல்
வெறியார் மலர்கொண் டடிவீ ழுமவரை
அறிவா ரவரன் பிலாலந் துறையாரே. **#362**

தறிபோல ஆடையின்றி உள்ள சமணர்கள், நெய்த ஆடையினை உடலில் போர்த்து உழலும் புத்தர்கள், பரம்பொருளை முறையாக உணராததோடு, நிலையான கேடுகளுக்கு உரியவர்களாய் உள்ளனர். அவர்களைச் சாராது நாள்தோறும் மணமலர்களைச் சூட்டித் தம் திருவடிகளில் வீழ்ந்து தொழும் அடியவர்களை நன்கறிந்தருளும் பெருமானார் அன்பிலாலந்துறை இறைவராவார்.

திருஅன்பிலாலந்துறை

அரவார் புனலன் பிலாலந் துறைதன்மேல்
கரவா தவர்கா ழியுண்ஞா னசம்பந்தன்
பரவார் தமிழ்பத் திசைபா டவல்லார்போய்
விரவா குவர்வா னிடைவீ டெளதாமே. **#363**

பாம்புகள் வாழும் நீர் வளம் உடைய அன்பில் ஆலந்துறை இறைவர்மேல் வஞ்சனையில்லாத மக்கள் வாழும் சீகாழிப் பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன் பரவிப்பாடிய இப்பத்துப் பாடல்களையும் இசையோடு பாட வல்லவர் மறுமையில் வானக இன்பங்களுக்கு உரியவர்கள் ஆவர். அவர்களுக்கு வீட்டின்பமும் எளிதாம்.

சீகாழி

சீர்காழி

சீகாழி,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

அடலே றமருங் கொடியண்ணல்
மடலார் குழலா ளொடுமன்னுங்
கடலார் புடைசூழ் தருகாழி
தொடர்வா ரவர்தூ நெறியாரே. **#364**

வலிமை பொருந்திய இடபம் பொறிக்கப்பட்ட கொடியைத்தனதாகக் கொண்ட தலைவனாகிய சிவபிரான், மலர் சூடிய கூந்தலை உடைய உமையம்மையோடு எழுந்தருளியிருப்பதும், கடலால் புடை சூழப்பட்டதுமான சீகாழிப் பதியை இடைவிடாது சென்று வழிபடுபவர் தூய நெறியில் நிற்பவராவர்.

சீர்காழி

திரையார் புனல்சூ டியசெல்வன்
வரையார் மகளோ டுமகிழ்ந்தான்
கரையார் புனல்சூழ் தருகாழி
நிரையார் மலர்தூ வுமினின்றே. **#365**

அலைகளோடு கூடிய கங்கையை முடிமிசைச் சூடிய செல்வனாகிய சிவபிரான் மலைமகளோடு மகிழ்ந்து எழுந்தருளியிருப்பதும், கரையை உடைய நீர்நிலைகளால் சூழப்பட்டதுமான சீகாழிப் பதியை வரிசையான பூக்களைக் கொண்டு நின்று தூவி வழிபடுமின்.

சீர்காழி

இடியார் குரலே றுடையெந்தை
துடியா ரிடையா ளொடுதுன்னுங்
கடியார் பொழில்சூழ் தருகாழி
அடியா ரறியா ரவலம்மே. **#366**

இடியை ஒத்த குரலையுடைய இடபத்தைத் தனது வாகனமாகக் கொண்ட எம் தந்தையாகிய இறைவன், துடி போலும் இடையினை உடைய உமையம்மையோடு எழுந்தருளியிருப்பதும், மணம் பொருந்திய பொழில்களால் சூழப்பட்டதுமான சீகாழிப் பதியை வணங்கும்

அடியவர்கள், துன்பத்தை அறியார்கள்.

சீர்காழி

ஒளியார் விடமுண் டவொருவன்
அளியார் குழன்மங் கையொடன்பாய்க்
களியார் பொழில்சூழ் தருகாழி
எளிதா மதுகண் டவரின்பே. **#367**

நீலநிற ஒளியோடு கூடிய ஆலகால விடத்தை உண்டருளிய ஒப்பற்றவனாகிய சிவபிரான், வண்டுகள் மணத்தைத் தேடி வந்து நாடும் கூந்தலை உடைய உமையம்மையோடு, அன்புடன் களிக்கும், பொழில்கள் சூழ்ந்த காழிப்பதியைக் கண்டவர்க்கு இன்பம் எளிதாம்.

சீர்காழி

பனியார் மலரார் தருபாதன்
முனிதா னுமையோ டுமுயங்கிக்
கனியார் பொழில்சூழ் தருகாழி
இனிதா மதுகண் டவரீடே **#368**

தண்மை பொருந்திய தாமரை மலர் போன்ற திருவடிகளை உடைய சிவபெருமான் உமையம்மையோடு கூடி உலகஉயிர்கட்குப் போகத்தைப் புரிந்தருளினும், தான் முனிவனாக விளங்குவோன். அத்தகையோன் எழுந்தருளியதும் கனிகள் குலுங்கும் பொழில்கள் சூழ்ந்ததுமான சீகாழிப் பதியைச் சென்று கண்டவர்க்குப் பெருமை எளிதாக வந்தமையும்.

சீர்காழி

கொலையார் தருங்கூற் றமுதைத்து
மலையான் மகளோ டுமகிழ்ந்தான்
கலையார் தொழுதேத் தியகாழி
தலையாற் றொழுவார் தலையாரே. **#369**

கொலைத் தொழில் நிறைந்த எமனை உதைத்து அழித்து மலையரையன் மகளாகிய உமையம்மையோடு மகிழ்ந்து உறைபவனாகிய சிவபெருமான் விரும்புவதும், மெய்ஞ்ஞானியர் தொழுதேத்துவதுமாகிய சீகாழிப் பதியைத் தலையால் வணங்குவார் தலையாயவராவார்.

சீர்காழி

திருவார் சிலையா லெயிலெய்து
உருவா ருமையோ டுடனானான்
கருவார் பொழில்சூழ் தருகாழி

மருவா தவர்வான் மருவாரே. #370
அழகிய வில்லால் மூவெயில்களை எய்தழித்து எழில் தவழும் உமையம்மையோடு உடனாய் விளங்கும் சிவபெருமான் எழுந்தருளியிருப்பதும், கருநிறம் பொருந்திய சோலைகளால் சூழப் பெற்றதுமான சீகாழிப் பதியை அடையாதவர் விண்ணுலக இன்பங்களை அடையாதவராவர்.

சீர்காழி

அரக்கன் வலியொல் கவடர்த்து
வரைக்கும் மகளோ டுமகிழ்ந்தான்
சுரக்கும் புனல்சூழ் தருகாழி
நிரக்கும் மலர்தூ வுநினைந்தே. #371
இராவணனது வலிமை சுருங்குமாறு அவனைத் தளர்ச்சியெய்த அடர்த்து மலைமகளோடு மகிழ்ந்த சிவபிரான் விளங்குவதும் மேலும் மேலும் பெருகிவரும் நீர் சூழ்ந்ததுமான சீகாழிப் பதியை நினைந்து வரிசையான மலர்களைத் தூவுமின்.

சீர்காழி

இருவர்க் கெரியா கிநிமிர்ந்தான்
உருவிற் பெரியா ளொடுசேருங்
கருநற் பரவை கமழ்காழி
மருவப் பிரியும் வினைமாய்ந்தே. #372
திருமால் பிரமன் ஆகிய இருவர் பொருட்டு எரிஉருவாகி நிமிர்ந்த சிவபிரான் அழகிற்சிறந்த பெரியநாயகி அம்மையோடு எழுந்தருளியிருப்பதும் கரிய நல்ல கடலின் மணம் கமழ்வதுமான சீகாழிப் பதியை மனத்தால் நினைய நம் வினைகள் மாய்ந்து பிரியும்.

சீர்காழி

சமண்சாக் கியர்தா மலர்தூற்ற
அமைந்தா னுமையோ டுடனன்பாய்க்
கமழ்ந்தார் பொழில்சூழ் தருகாழி
சுமந்தார் மலர்தூ வுதல்தொண்டே. #373
சமணர்களும் சாக்கியர்களும் புறங்கூற, உமையம்மையோடு ஒருசேர அன்பாய்ச் சிவபிரான் எழுந்தருளியிருப்பதும், மணம் கமழ்ந்து நிறையும் பொழில்கள் சூழ்ந்ததுமான சீகாழிப் பதியைத் தம் மனத்தே தியானித்து, மலர் தூவித் தொழுதலே சிறந்த தொண்டாகும்.

சீர்காழி

நலமா கியஞா னசம்பந்தன்
கலமார் கடல்சூழ் தருகாழி
நிலையா கநினைந் தவர்பாடல்
வலரா னவர்வா னடைவாரே. **#374**

நன்மையை மக்கட்கு நல்குவதும் மரக்கலங்களை உடைய கடலால் சூழப் பெற்றதுமான சீகாழிப் பதியை உறுதியாக நினைந்தவர்களும், ஞானசம்பந்தரின் பாடல்களில் வல்லவராய் ஓதி வழிபட்டவர்களும் விண்ணக இன்பங்களை அடைவர்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை

திருவீழிமிழலை,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

அரையார் விரிகோ வணவாடை
நரையார் விடையூர் திநயந்தான்
விரையார் பொழில்வீ ழிம்மிழலை
உரையா லுணர்வா ருயர்வாரே. **#375**

இடையிற் கட்டிய விரிந்த கோவண ஆடையையும், வெண்மை நிறம் பொருந்திய விடை ஊர்தியையும் விரும்பி ஏற்றுக் கொண்ட சிவபிரான் உறைவதும், மணம் பொருந்திய பொழில்களால் சூழப்பட்டதுமாகிய திருவீழிமிழலையின் புகழை நூல்களால் உணர்வார் உயர்வடைவர்.

திருவீழிமிழலை

புனைதல் புரிபுன் சடைதன்மேல்
கனைதல் லொருகங் கைகரந்தான்
வினையில் லவர்வீ ழிம்மிழலை
நினைவில் லவர்நெஞ் சமுநெஞ்சே. **#376**

மலரால் அலங்கரிக்கப்பட்ட முறுக்குக்களை உடைய சிவந்த சடைமுடி மீது ஆரவாரித்து வந்த ஒப்பற்ற கங்கை நதியை மறைத்து வைத்துள்ள சிவபிரான் உறையும், தீவினை இல்லாத மக்கள் வாழும் திருவீழிமிழலையை நினையாதவர் நெஞ்சமும் ஒரு நெஞ்சமோ?

திருவீழிமிழலை

அழவல் லவரா டியும்பாடி
எழவல் லவரெந் தையடிமேல்
விழவல் லவர்வீ ழிம்மிழலை
தோழவல் லவர்நல் லவர்தொண்டே. **#377**

அழவல்லவரும், ஆடியும் பாடியும் எழவல்லவரும் எந்தையாகிய இறைவன் திருவடிமேல் விழ வல்லவருமாய் அடியவர் நிறைந்துள்ள திருவீழிமிழலையைத் தொழ வல்லவரே நல்லவர். அவர் தொண்டே நற்றொண்டாம்.

திருவீழிமிழலை

உரவம் புரிபுன் சடைதன்மேல்
அரவம் மரையார்த் தவழகன்
விரவும் பொழில்வீ ழிம்மிழலை
பரவும் மடியா ரடியாரே. **#378**

வலிமையை வெளிப்படுத்தி நிற்கும் சிவந்த சடைமுடி மீதும் இடையிலும், பாம்பை அணிந்தும் கட்டியும் உள்ள அழகனாகிய சிவபிரான் எழுந்தருளியதும், பொழில்கள் விரவிச்சூழ்ந்ததுமான திருவீழிமிழலையைப் பரவித் துதிக்கும் அடியவரே அடியவராவர்.

திருவீழிமிழலை

கரிதா கியநஞ் சணிகண்டன்
வரிதா கியவண் டறைகொன்றை
விரிதார் பொழில்வீ ழிம்மிழலை
உரிதா நினைவா ருயர்வாரே. **#379**

கரியதாகிய நஞ்சினை உண்டு அதனை அணியாக நிறுத்திய நீலகண்டன் எழுந்தருளியதும், வரிகளை உடைய வண்டுகள் ஒலி செய்யும் கொன்றை மரங்கள் விரிந்த மாலைபோலக் கொத்தாக மலரும் சோலைகளால் சூழப்பெற்றதும் ஆகிய திருவீழிமிழலையைத் தமக்கு உரிய தலமாகக் கருதுவோர் சிறந்த அடியவராவர்.

திருவீழிமிழலை

சடையார் பிறையான் சரிபூதப்
படையான் கொடிமே லதொர்பைங்கண்
விடையா னுறைவீ ழிம்மிழலை
அடைவா ரடியா ரவர்தாமே. **#380**

சடைமிசைச்சூடிய பிறைமதியை உடையவனும், இயங்கும் பூதப் படைகளை உடையவனும், கொடிமேல் பசிய கண்களை உடைய ஒற்றை விடையேற்றை உடையவனுமாகிய சிவபெருமான் உறையும் திருவீழிமிழலையை அடைபவர்கள் சிறந்த அடியவர்கள் ஆவர். தாம், ஏ அசைநிலை.

திருவீழிமிழலை

செறியார் கழலுஞ் சிலம்பார்க்க
நெறியார் குழலா ளொடுநின்றான்
வெறியார் பொழில்வீ ழிம்மிழலை
அறிவா ரவலம் மறியாரே. **#381**

கால்களிற் செறிந்த கழல், சிலம்பு ஆகிய அணிகள் ஆர்க்கச் சுருண்ட கூந்தலை உடைய உமையம்மையோடு நின்றருளும் சிவபிரான்

எழுந்தருளியதும் மணம் கமழும் பொழிலகளால் சூழப்பெற்றதுமான திருவீழிழலையைத் தியானிப்பவர் அவலம் அறியார்.

திருவீழிமிழலை

உளையா வலியொல் கவரக்கன்
வளையா விரலூன் றியமைந்தன்
விளையார் வயல்வீ ழிம்மிழலை
அளையா வருவா ரடியாரே. **#382**

மிக வருந்திக் கயிலை மலையைப் பெயர்த்த இராவணனது வலிமை கெடுமாறு தன் காலை வளைத்து விரலால் ஊன்றிய வலிமை வாய்ந்த சிவபிரான் எழுந்தருளியதும், விளைவு மிகுந்த வயல்களை உடையதுமான திருவீழிமிழலையை நினைந்து வருபவர் சிறந்த அடியவராவர்.

திருவீழிமிழலை

மருள்செய் திருவர் மயலாக
அருள்செய் தவனா ரழலாகி
வெருள்செய் தவன்வீ ழிம்மிழலை
தெருள்செய் தவர்தீ வினைதேய்வே. **#383**

திருமால் பிரமன் ஆகிய இருவரும் அஞ்ஞானத்தினால் அடிமுடிகாணாது மயங்க, அரிய அழலுருவாய் வெளிப்பட்டு நின்று வெருட்டியவனும் பின் அவர்க்கு அருள் செய்தவனுமான சிவபிரான் எழுந்தருளிய திருவீழிமிழலையைச் சிறந்த தலம் என்று தௌந்தவர்கள் தீவினைகள் தேய்தல் உறும்.

திருவீழிமிழலை

துளங்குந் நெறியா ரவர்தொன்மை
வளங்கொள் ளன்மின்புல் லமண்டேரை
விளங்கும் பொழில்வீ ழிம்மிழலை
உளங்கொள் பவர்தம் வினையோய்வே. **#384**

தடுமாற்றமுறும் கொள்கைகளை மேற்கொண்டுள்ள அற்பமானவராய அமணர் தேரர் ஆகியோரின் சமயத்தொன்மைச் சிறப்பைக் கருதாதீர். விளங்கும் பொழில்கள் சூழ்ந்த திருவீழிமிழலையை நினைபவர்களின் வினைகள் ஓய்தலுறும்.

திருவீழிமிழலை

நளிர்கா ழியுண்ஞா னசம்பந்தன்
குளிரார் சடையா னடிகூற

மிளிரார் பொழில்வீ ழிம்மிழலை
கிளர்பா டல்வல்லார்க் கிலைகேடே. **#385**

குளிர்ந்த காழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் தண்மையான சடைமுடியை உடைய சிவபிரானுடைய திருவடிப் பெருமைகளைக் கூறத் தொடங்கி விளக்கமான பொழில்கள் சூழ்ந்த திருவீழிமிழலைப் பெருமான் புகழ்கூறும் இப்பதிகப் பாடல்களை ஓத வல்லவர்கட்குக் கேடு இல்லை.

திருஐயாறு

திருஐயாறு

திரு ஐயாறு,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.
தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை.

கலையார் மதியோ டுரநீரும்
நிலையார் சடையா ரிடமாகும்
மலையா ரமுமா மணிசந்தோ
டலையார் புனல்சே ருமையாறே. **#386**

ஒரு கலைப் பிறைமதியோடு வலிய கங்கை நீரும் நிலையாகப் பொருந்திய சடையை உடைய சிவபிரானது இடம், மலையிலிருந்து கொணர்ந்த முத்துக்கள் சிறந்த மணிகள் சந்தனம் ஆகியவற்றை அள்ளி வரும் அலைகளை உடைய காவிரிபாயும் திருவையாறு ஆகும்.

திருஐயாறு

மதியொன் றியகொன் றைவடத்தான்
மதியொன் றவுதைத் தவர்வாழ்வு
மதியின் னொடுசேர் கொடிமாடம்
மதியம் பயில்கின் றவையாறே. **#387**

பிறைமதி பொருந்திய சடையில் கொன்றை மாலையை அணிந்தவனும், தக்க யாகத்தில் வீரபத்திரரை ஏவிச் சந்திரனைக் காலால் பொருத்த உதைத்தவனுமான சிவபெருமான் வாழுமிடம், மதியோடு சேரும் கொடிகளைக் கொண்டதும் மதி தங்குமாறு உயர்ந்த மாடவீடுகளை உடையதுமான திருவையாறு ஆகும்.

திருஐயாறு

கொக்கின் னிறகின் னொடுவன்னி
புக்க சடையார்க் கிடமாகும்
திக்கின் னிசைதே வர்வணங்கும்
அக்கின் னரையா ரதையாறே. **#388**

கொக்கிறகு என்னும் மலரோடு வன்னிப் பச்சிலைகளும் பொருந்திய சடைமுடியை உடையவர்க்கு உரிய இடம், எண் திசைகளிலும் வாழும் தேவர்களால் வணங்கப் பெறுபவரும், சங்கு மணிகள் கட்டிய இடையினை உடையவருமான அப்பெருமானின் திருவையாறாகும்.

திருஐயாறு

சிறைகொண் டபுரம் மவைசிந்தக்
கறைகொண் டவர்கா தல்செய்கோயில்
மறைகொண் டநல்வா னவர்தம்மில்
அறையும் மொலிசே ருமையாறே. **#389**

சிறகுகளோடு கூடிய முப்புரங்களும் அழியச் சினந்தவராகிய சிவபிரான் விரும்பும் கோயில், மக்கள் கண்களுக்குப் புலனாகாது மறைந்து இயங்கும் நல்ல தேவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் ஒலி நிறைந்துள்ள திருவையாறு ஆகும்.

திருஐயாறு

உமையா ளொருபா கமதாகச்
சமைவா ரவர்சார் விடமாகும்
அமையா ருடல்சோர் தரமுத்தம்
அமையா வருமந் தணையாறே. **#390**

உமையம்மை ஒருபாகத்தே விளங்கப் பொருந்தியவராகிய சிவபெருமான் சாரும் இடம், மலையிடையே உள்ள மூங்கில்கள் முத்துக்களைச் சொரிய அவை காவிரியாற்றில் பொருந்தி வரும் குளிர்ந்து திருவையாறாகும்.

திருஐயாறு

தலையின் றொடைமா லையணிந்து
கலைகொண் டதொர்கை யினர்சேர்வாம்
நிலைகொண் டமனத் தவர்நித்தம்
மலர்கொண் டுவணங் குமையாறே . **#391**

தலையோட்டினால் தொகுக்கப்பட்டுள்ள மாலையை அணிந்து மானைக் கையின்கண் கொண்டவராகிய சிவபிரானது இடம், இறைவன் திருவடிக்கண் நிலைத்த மனமுடையவராகிய அடியவர் நாள்தோறும் மலர்கொண்டு தூவி வழிபாடு செய்யும் திருவையாறாகும்.

திருஐயாறு

வரமொன் றியமா மலரோன்றன்
சிரமொன் றையறுத் தவர்சேர்வாம்
வரைநின் றிழிவார் தருபொன்னி
அரவங்கொடுசே ருமையாறே. **#392**

வரங்கள் பல பெற்ற தாமரை மலர்மேல் விளங்கும் பிரமனின் தலைகளில் ஒன்றை அறுத்த சிவபிரானது இடம், மலை யினின்று

இழிந்துபெருகி வரும் காவிரி நதி ஆரவாரித்து வரும் திருவையாறு ஆகும்.

திருஜயாறு

வரையொன் றதெடுத்த தவரக்கன்
சிரமங் கநெரித் தவர்சேர்வாம்
விரையின் மலர்மே தகுபொன்னித்
திரைதன் னொடுசே ருமையாறே. **#393**

கயிலை மலையைப் பெயர்த்த இராவணனின் சிரங்களும் பிறஅங்கங்களும் சிதறுமாறு நெரித்த சிவபிரான் எழுந்தருளிய இடம். மணம் பொருந்திய மலர்களைக் கொண்டு புண்ணிய நதியாகிய காவிரி அலைகளோடு கூடிப் பாய்ந்து வளம் சேர்க்கும் திருவையாறு ஆகும்.

திருஜயாறு

சங்கக் கயனு மறியாமைப
பொங்குஞ் சுடரா னவர்கோயில்
கொங்கிற் பொலியும் புனல்கொண்டு
அங்கிக் கெதிர்காட் டுமையாறே. **#394**

சங்கத்தைக் கையின்கண் கொண்ட திருமாலும் அறியாதவாறு பொங்கி எழும் சுடராகத் தோன்றிய சிவபிரான் உறையும் கோயில், காவிரி, மகரந்தம், தேன் ஆகியன பொலியும் நீரைக் கொண்டு வந்து, அழல் வடிவான இறைவன் திருமுன் அர்க்கியமாகக் காட்டும் திருவையாறாகும்.

திருஜயாறு

துவரா டையர்தோ லுடையார்கள்
கவர்வாய் மொழிகா தல்செய்யாதே
தவரா சர்கள்தா மரையானோ
டவர்தா மணையந் தணையாறே. **#395**

துவராடை தரித்த புத்தர், ஆடையின்றித் தோலைக் காட்டும் சமணர் ஆகியவரின் மாறுபட்ட வாய்மொழிகளை விரும்பாது, தவத்தால் மேம்பட்டவர்கள், பிரமன் முதலிய தேவர்களோடு வந்தணைந்து வழிபடும் தலம் திருவையாறாகும். அதனைச் சென்று வழிபடுமின்.

திருஜயாறு

கலையார் கலிக்கா ழியர்மன்னன்
நலமார் தருஞா னசம்பந்தன்
அலையார் புனல்சூ ழுமையாற்றைச்

சொலுமா லைவல்லார் துயர்வீடே. #396
கலைவல்லவர்களின் ஆரவாரம் மிக்க சீகாழிப் பதியில் உள்ளார்க்குத் தலைவனாகிய நன்மை அமைந்த ஞானசம்பந்தன் அலைகளை உடைய காவிரியால் சூழப்பட்ட திருவையாற்றைப் போற்றிப் பாடிய இத்தமிழ் வல்லவர்களின் துயர்கள் நீங்கும்.

திருப்பனையூர்

திருப்பனையூர்

திருப்பனையூர்,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சவுந்தரேசர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

அரவச் சடைமேன் மதிமத்தம்
விரவிப் பொலிகின் றவனூராம்
நிரவிப் பலதொண் டர்கள்நாளும்
பரவிப் பொலியும் பனையூரே. **#397**

சடைமுடிமேல் அரவம், மதி, ஊமத்தம் மலர் ஆகியன கலந்து விளங்குமாறு அணிந்த சிவபெருமானது தலம் தொண்டர்கள் பலரும் கலந்து நாள்தோறும் வணங்கி மகிழ்வுறும் திருப்பனையூராகும்.

திருப்பனையூர்

எண்ணொன் றிநினைந் தவர்தம்பால்
உண்ணின் றுமகிழ்ந் தவனூராம்
கண்ணின் றெழுசோ லையில்வண்டு
பண்ணின் றொலிசெய் பனையூரே. **#398**

மனம் ஒன்றி நினைந்த அடியார்களின் உள்ளத்துள்ளே இருந்து அவர்தம் வழிபாட்டை ஏற்று மகிழ்கின்ற சிவபெருமானது தலம், தேன் பொருந்திய மலர்களோடு உயர்ந்துள்ள சோலைகளில் வண்டுகள் பண்ணொன்றிய ஒலி செய்யும் பனையூராகும்.

திருப்பனையூர்

அலரும் மெறிசெஞ் சடைதன்மேல்
மலரும் பிறையொன் றுடையானூர்
சிலரென் றுமிருந் தடிபேணப்
பலரும் பரவும் பனையூரே. **#399**

விளங்கும் எரிபோலச் சிவந்த சடைமுடிமீது வளரும் பிறையொன்றை உடைய சிவபெருமானது ஊர், அடியவர்களில் சிலர் என்றும் இருந்து திருவடிகளைப் பரவிப் பூசனை செய்து போற்றவும், பலர் பலகாலும் வந்து பரவ விளங்கும் திருப்பனையூராகும்.

திருப்பனையூர்

இடியார் கடனஞ் சமுதுண்டு
பொடியா டியமே னியினானூர்
அடியார் தொழமன் னவரேத்தப்
படியார் பணியும் பனையூரே. **#400**

கரைகளை மோதுதல் செய்யும் கடலிடைத் தோன்றிய நஞ்சை அமுதாக உண்டு, மேனி மீது திருநீற்றுப் பொடியை நிரம்பப் பூசிய சிவபெருமானது ஊர், அடியவர்கள் தொழ, மன்னவர்கள் ஏத்த உலகில் வாழும் பிற மக்கள் பணியும் திருப்பனையூராகும்.

திருப்பனையூர்

அறையார் கழன்மே லரவாட
இறையார் பலிதேர்ந் தவனூராம்
பொறையார் மிகுசீர் விழமல்கப்
பறையா ரொலிசெய் பனையூரே. **#401**

ஒலிக்கின்ற வீரக்கழல் மேல் அரவு ஆட முன்கைகளில் பலியேற்றுத் திரியும் பிட்சாடனராகிய சிவபெருமானது ஊர், மண்ணுலகில் சிறந்த புகழை உடைய திருவிழாக்கள் நிறையப் பறைகளின் ஒலி இடைவிடாது பயிலும் திருப்பனையூராகும்.

திருப்பனையூர்

அணியார் தொழவல் லவரேத்த
மணியார் மிடறொன் றுடையானூர்
தணியார் மலர்கொண் டிருபோதும்
பணிவார் பயிலும் பனையூரே. **#402**

தம்மைப் பூசனை செய்து தொழவல்ல அடியவர்கள் அண்மையில் இருப்பவராய், அருகிருந்து ஏத்துமாறு உள்ள நீலமணிபோலும் கண்டத்தை உடைய சிவபெருமானது ஊர், தன்னைப் பணியும் அடியவர் குளிர்ந்த மலர்களைக் கொண்டு இருபோதும் தூவி வழிபடும் இடமான திருப்பனையூராகும்.

திருப்பனையூர்

அடையா தவர்மூ வெயில்சீறும்
விடையான் விறலார் கரியின்றோல்
உடையா னவனெண் பலபூதப்
படையா னவனூர் பனையூரே. **#403**

தன்னை வணங்காத பகைவர்களான அசுரர்களின் மூன்று அரண்களையும் அழித்த விடையூர்தியனும், வலிய யானையை உரித்து அதன் தோலை மேல் ஆடையாகக் கொண்டவனும் எண்ணற்ற பல பூதப்

படைகளை உடையவனுமான சிவபெருமானது ஊர் திருப்பனையூராகும்.

திருப்பனையூர்

இலகும் முடிபத் துடையானை
அலல்கண் டருள்செய் தவெம்மண்ணல்
உலகில் லுயிர்நீர் நிலமற்றும்
பலகண் டவனூர் பனையூரே. **#404**

விளங்கும் முடி பத்தை உடைய இராவணனை அடர்த்து அவன்படும் அல்லல் கண்டு அவனுக்கு அருள் செய்த எம் அண்ணலும், உலகின்கண் உயிர்கட்கு நீர் நிலம் முதலான பலவற்றையும் படைத்தளித்தவனும் ஆகிய சிவபெருமானது ஊர் திருப்பனையூர்.

திருப்பனையூர்

வரமுன் னிமகிழ்ந் தெழுவீர்காள்
சிரமுன் னடிதா ழவணங்கும்
பிரமன் னொடுமா லறியாத
பரமன் னுறையும் பனையூரே. **#405**

சிவபெருமானிடம் வரங்களைப்பெறுதலை எண்ணி மகிழ்வோடு புறப்பட்டு வரும் அடியவர்களே, அப்பெருமான் திருமுன் தலை தாழ்த்தி வணங்குங்கள்; எளிதில் நல்வரம் பெறலாம். பிரமனும் திருமாலும் அறியாத அப்பரமன் உறையும் ஊர் திருப்பனையூராகும்.

திருப்பனையூர்

அழிவல் லமண ரொடுதேரர்
மொழிவல் லனசொல் லியபோதும்
இழிவில் லதொர்செம் மையினானூர்
பழியில் லவர்சேர் பனையூரே. **#406**

அழிதலில் வல்ல அமணர்களும் பௌத்தர்களும் வாய்த்திறனால் புறங்கூறிய போதும் குறைவுறாத செம்மையாளனாகிய சிவபெருமானது ஊர் பழியற்றவர் சேரும் திருப்பனையூராகும்.

திருப்பனையூர்

பாரார் விடையான் பனையூர்மேல்
சீரார் தமிழ்ஞா னசம்பந்தன்
ஆரா தசொன்மா லைகள்பத்தும்
ஊரூர் நினைவா ருயர்வாரே. **#407**

மண்ணுலகிற் பொருந்தி வாழ்தற்கு ஏற்ற விடை ஊர்தியைக் கொண்ட

சிவபெருமானது திருப்பனையூரின் மேல் புகழால் மிக்க தமிழ் ஞானசம்பந்தன் மென்மேலும் விருப்பத்தைத்தருவனவாகப் போற்றிப் பாடிய சொன்மாலைகளான இப்பத்துப் பாடல்களையும் ஒவ்வோரூரிலும் இருந்துகொண்டு நினைவார் உயர்வெய்துவர்.

திருமயிலாடுதுறை

திருமயிலாடுதுறை

திருமயிலாடுதுறை,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாயூரநாதர்.
தேவியார் : அஞ்சநாயகியம்மை.

கரவின் றிநன்மா மலர்கொண்டு
இரவும் பகலுந் தொழுவார்கள்
சிரமொன் றியசெஞ் சடையான்வாழ்
வரமா மயிலா டுதுறையே. #408

நெஞ்சிற் கரவின்றி மணம் மிக்க சிறந்த மலர்கள் பலவற்றையும் பறித்துக் கொண்டு வந்து இரவும் பகலும் தொழும் அடியார்களுக்கு, தலைமாலை பொருந்தும் செஞ்சடை உடைய சிவ பெருமான் வாழும் பதியாகிய மயிலாடுதுறை மேம்பட்ட தலமாகும். வள்ளன்மை யுடையான் உகந்தருளும் இடமுமாம்.

திருமயிலாடுதுறை

உரவெங் கரியின் னுரிபோர்த்த
பரமன் னுறையும் பதியென்பர்
குரவஞ் சுரபுன் னையும்வன்னி
மருவும் மயிலா டுதுறையே. #409

வலிமை பொருந்திய கொடிய யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்த பரமன் உறையும் பதி, குராமரம், சுரபுன்னை வன்னி ஆகிய மரங்கள் செறிந்த திருமயிலாடுதுறை என்னும் திருத்தலமாகும்.

திருமயிலாடுதுறை

ஊனத் திருணீங் கிடவேண்டில்
ஞானப் பொருள்கொண் டடிபேணும்
தேனொத் தினியா னமருஞ்சேர்
வானம் மயிலா டுதுறையே. #410

இப்பிறப்பில் நமக்குள்ள குறைபாடாகிய ஆணவம் என்னும் இருள் நம்மை விட்டு நீங்க வேண்டில், ஞானப் பொருளாய் உள்ள சிவபெருமான் திருவடிகளை வணங்குங்கள். தேனை ஒத்து இனியனாய் விளங்கும் அப்பெருமான் தனக்குச் சேர்வான மயிலாடுதுறையில் விரும்பி உறைகிறான்.

திருமயிலாடுதுறை

அஞ்சொண் புலனும் மவைசெற்ற
மஞ்சன் மயிலா டுதுறையை
நெஞ்சொன் றிநினைந் தெழுவார்மேற்
றுஞ்சும் பிணியா யினதானே. **#411**

ஐம்பொறிகளைப் பற்றும் ஒள்ளிய புலன்களாகிய அவைகளைக் கெடுத்த பெருவீரனாகிய சிவபெருமான் எழுந்தருளிய மயிலாடுதுறையை மனம் ஒன்றி நினைந்து வழிபட எழுவார் மேல்வரும் பிறவி முதலாகிய பிணிகள் அழிந்தொழியும்.

திருமயிலாடுதுறை

தணியார் மதிசெஞ் சடையான்றன்
அணியார்ந் தவருக் கருளென்றும்
பிணியா யினதீர்த் தருள்செய்யும்
மணியான் மயிலா டுதுறையே. **#412**

குளிர்ந்த பிறைமதியை அணிந்துள்ள சிவந்த சடைமுடியை உடையவனாகிய சிவபெருமானை அணுகியவருக்கு என்றும் அருள் உளதாம். பிணி முதலானவற்றைப் போக்கி அருள்புரியும் மணி போன்றவனாய் அப்பெருமான் மயிலாடுதுறையில் உள்ளான்.

திருமயிலாடுதுறை

தொண்ட ரிசைபா டியுங்கூடிக்
கண்டு துதிசெய் பவனூராம்
பண்டும் பலவே தியரோத
வண்டார் மயிலா டுதுறையே. **#413**

தொண்டர்களாயுள்ளவர்கள் கூடி இசை பாடியும், தரிசித்தும் துதிக்கும் சிவபெருமானது ஊர் முற்காலத்தும் இக்காலத்தும் வேதியர்கள் வேதங்களை ஓதித் துதிக்க, வண்டுகள் ஒலிக்கும் சோலைகள் சூழ்ந்த மயிலாடுதுறையாகும்.

திருமயிலாடுதுறை

அணங்கோ டொருபா கமமர்ந்து
இணங்கி யருள்செய் தவனூராம்
நுணங்கும் புரிநூ லர்கள்கூடி
வணங்கும் மயிலா டுதுறையே. **#414**

உமையம்மையை ஒரு பாகமாக விரும்பி ஏற்று வீற்றிருந்து அருள் புரிபவன் ஊர், முப்புரி நூல் துவளும் அந்தணர்கள் கூடி வணங்கும்

திருமயிலாடுதுறை ஆகும்.

திருமயிலாடுதுறை

சிரங்கை யினிலேந் தியிரந்த
பரங்கொள் பரமேட் டிவரையால்
அரங்கவ் வரக்கன் வலிசெற்ற
வரங்கொண் மயிலா டுதுறையே. **#415**

பிரமகபாலத்தைக் கையில் ஏந்திப் பலர் இல்லங்களிலும் சென்று இரந்த மேன்மை கொண்டவன் சிவபிரான். கயிலை மலையால் இராவணனை நெரியுமாறு அடர்த்த நன்மையாளனாகிய அப்பெருமானை அடியவர் வணங்கி நன்மைகளைப் பெறும் தலம் திருமயிலாடுதுறை.

திருமயிலாடுதுறை

ஞாலத் தைநுகர்ந் தவன்றானும்
கோலத் தயனும் மறியாத
சீலத் தவனூர் சிலர்கூடி
மாலைத் தீர்மயிலா டுதுறையே. **#416**

உலகை விழுங்கித் தன் வயிற்றகத்தே வைத்தி திருமாலும், அழகிய நான்முகனும் அறியாத தூயவனாகிய சிவபெருமானது ஊர், அடியவர் ஒருங்கு கூடி வழிபட்டுத் தம் அறியாமை நீங்கப் பெறும் சிறப்புடைய திருமயிலாடுதுறை ஆகும்.

திருமயிலாடுதுறை

நின்றுண் சமணுந் நெடுந்தேரர்
ஒன்றும் மறியா மையுயர்ந்த
வென்றி யருளா னவனூராம்
மன்றன் மயிலா டுதுறையே. **#417**

நின்றுண்பவர்களாகிய சமணர்களும் நெடிதுயர்ந்த புத்தர்களும் ஒரு சிறிதும் தன்னை அறியவாதவர்களாய் ஒழியத்தான் உயர்ந்த வெற்றி அருள் இவைகளைக் கொண்டுள்ள சிவபெருமானது ஊர் நறுமணம் கமழும் திருமயிலாடுதுறை ஆகும்.

திருமயிலாடுதுறை

நயர்கா ழியுண்ஞா னசம்பந்தன்
மயல்தீர் மயிலா டுதுறைமேல்
செயலா லுரைசெய் தனபத்தும்
உயர்வா மிவையுற் றுணர்வார்க்கே. **#418**

ஞானத்தினால் மேம்பட்டவர் வாழும் சீகாழிப் பதியுள் வாழும்

ஞானசம்பந்தன், தன்னை வழிபடுவாரின் மயக்கத்தைத் தீர்த்தருளும் மயிலாடுதுறை இறைவனைப் பற்றித் திருவருள் உணர்த்தும் செயலால் உரைத்தனவாகிய இத்திருப்பதிகப் பாடல்களாகிய இவை பத்தும் உற்றுணர்வார்க்கு உயர்வைத் தரும்.

திருவேட்களம்

திருவேட்களம்

திருவேட்களம்,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பாசுபதேசுவரர்.
தேவியார் : நல்லநாயகியம்மை.

அந்தமுமாதியு மாகியவண்ணல்
ஆரழலங்கை யமர்ந்திலங்க
மந்தமுழவ மியம்ப
மலைமகள் காணநின்றாடிச்
சந்தமிலங்கு நகுதலைகங்கை
தண்மதியம் மயலேததும்ப
வெந்தவெண் ணீறுமெய்பூசும்
வேட்கள நன்னகராரே. **#419**

உலகங்களைப் படைப்பவரும், இறுதி செய்பவருமாகிய, தலைமைத் தன்மையுடைய சிவபிரான் பிறரால் பொறுத்தற்கரிய தீகையின்கண் விளங்க, மெல்லென ஒலிக்கும் முழவம் இயம்ப, மலைமகளாகிய பார்வதிதேவி காணுமாறு திருநடம் புரிந்து, அழகு விளங்கும் கபாலமாலை, கங்கை, தண் பிறை ஆகியன தலையின்கண் விளங்க, வெந்த வெண்ணீறு மெய்யில் பூசியவராய்த் திருவேட்கள நன்னகரில் எழுந்தருளியுள்ளார்.

திருவேட்களம்

சடைதனைத்தாழ்தலு மேறமுடித்துச்
சங்கவெண்டோடு சரிந்திலங்கப்
புடைதனிற் பாரிடஞ்சூழப்
போதருமா றிவர்போல்வார்
உடைதனினால்விரற் கோவணவாடை
யுண்பதுமூரிடு பிச்சைவெள்ளை
விடைதனை யூர்திநயந்தார்
வேட்கள நன்னகராரே. **#420**

திருவேட்கள நன்னகர் இறைவன், தாழ்ந்து தொங்கும் சடைமுடியை எடுத்துக் கட்டிச் சங்கால் இயன்ற வெள்ளிய தோடு காதிற் சரிந்து விளங்கவும், அருகில் பூதங்கள் சூழ்ந்து வரவும், போதருகின்றவர். அவர்தம் உடையோ நால்விரல் அகலமுடைய கோவண ஆடையாகும்.

அவர் உண்பதோ ஊரார் இடும் பிச்சையாகும். அவர் விரும்பி ஏறும் ஊர்தியோ வெண்ணிறமுடைய விடையாகும்.

திருவேட்களம்

பூதமும்பல்கண மும்புடைசூழப்
பூமியும்விண்ணு முடன்பொருந்தச்
சீதமும்வெம்மையு மாகிச்
சீரொடுநின்றவெஞ் செல்வர்
ஓதமுங்கானலுஞ் சூழ்தருவேலை
யுள்ளங்கலந்திசை யாலெழுந்த
வேதமும்வேள்வியு மோவா
வேட்கள நன்னகராரே. **#421**

கடல்நீர்ப் பெருக்கும் சோலையும் சூழ்ந்ததும், அந்தணர்கள் மனங்கலந்து பாடும் இசையால் எழுந்த வேத ஒலியும், அவர்கள் இயற்றும் வேள்விகளும் இடையறாது நிகழும் இயல்பினதும், ஆகிய திருவேட்கள நன்னகர் இறைவர், பூதங்களும் சிவகணங்களும் அருகில் சூழ்ந்து விளங்க, விண்ணும் மண்ணும் தம்பால் பொருந்தத் தண்மையும் வெம்மையும் ஆகிப் புகழோடு விளங்கும் எம் செல்வராவார்.

திருவேட்களம்

அரைபுல்குமைந்தலை யாடலரவ
மமையவெண்கோவணத் தோடசைத்து
வரைபுல்குமார்பி லொராமை
வாங்கியணிந் தவர்தாந்
திரைபுல்குதெண்கடல் தண்கழியோதந்
தேனலங்கானலில் வண்டுபண்செய்ய
விரைபுல்குபைம்பொழில் சூழ்ந்த
வேட்கள நன்னகராரே. **#422**

இடையிற் பொருந்திய ஐந்து தலைகளை யுடையதாய், ஆடும் பாம்பை வெண்மையான கோவணத்தோடும் பொருந்தக்கட்டி, மலை போன்று அகன்ற மார்பின்கண் ஒப்பற்ற ஆமை ஓட்டை விரும்பி அணிந்தவராய் விளங்கும் சிவபெருமானார் அலைகளையுடைய தெளந்த கடல்நீர் பெருகிவரும் உப்பங்கழிகளை உடையதும், வண்டுகள் இசைபாடும் தேன்பொருந்திய கடற்கரைச் சோலைகளை உடையதும், மணம் கமழும் பைம்பொழில் சூழ்ந்ததுமாகிய திருவேட்கள நன்னகரில் எழுந்தருளி உள்ளார்.

திருவேட்களம்

பண்ணுறுவண்டறை கொன்றையலங்கல்
பால்புரைநீறுவெண் ணூல்கிடந்த
பெண்ணுறுமார்பினர் பேணார்
மும்மதிலெய்த பெருமான்
கண்ணுறுநெற்றி கலந்தவெண்டிங்கட்
கண்ணியர்விண்ணவர் கைதொழுதேத்தும்
வெண்ணிறமால்விடை யண்ணல்
வேட்கள நன்னகராரே. **#423**

திருவேட்கள நன்னகர் இறைவர், இசை பாடும் வண்டுகள் சூழ்ந்த கொன்றை மாலையை அணிந்தவராய், பால் போன்ற வெண்ணீறு பூசியவராய், முப்புரி நூலும் உமையம்மையும் பொருந்திய மார்பினராய்ப் பகைவர்களாகிய அசுரர்களின் மும்மதில்களையும் எய்து அழித்த தலைவராய், நெற்றிக் கண்ணராய், பிறைமதிக் கண்ணியராய் விண்ணவர் கைதொழுது ஏத்தும் வெண்மையான பெரிய விடை மீது ஊர்ந்து வருபவராய் விளங்கும் தலைவராவார்.

திருவேட்களம்

கறிவளர்குன்ற மெடுத்தவன்காதற்
கண்கவரைங்கணை யோனுடலம்
பொறிவள ராரழலுண்ணப்
பொங்கிய பூதபுராணர்
மறிவளரங்கையர் மங்கையொர்பங்கர்
மைஞ்ஞிறமானுரி தோலுடையாடை
வெறிவளர்கொன்றையந் தாரார்
வேட்கள நன்னகராரே. **#424**

திருவேட்கள நன்னகர் இறைவர், மிளகுக்கொடிகள் வளர்ந்து செறிந்த கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்த திருமாலின் அன்பு மகனும், அழகு மிக்கவனும், ஐங்கணை உடையவனுமாகிய மன்மதனின் உடல், பொறி பறக்கும் அரிய அழல் உண்ணும்படி சினந்த பழையோரும், மான் ஏந்திய கரத்தினரும், மங்கை பங்கரும், கருநிறமுடைய யானையின் தோலை உரித்து ஆடையாகப் போர்த்தவரும், மணங்கமழும் கொன்றை மாலையை அணிந்தவருமாவார்.

திருவேட்களம்

மண்பொடிக்கொண்டெரித் தோர்சுடலை
மாமலைவேந்தன் மகள்மகிழ
நுண்பொடிச்சேர நின்றாடி
நொய்யன செய்யலுகந்தார்

கண்பொடிவெண்டலை யோடுகையேந்திக்
காலனைக்காலாற் கடிந்துகந்தார்
வெண்பொடிச் சேர்திருமார்பர்
வேட்கள நன்னகராரே. **#425**

திருவேட்கள நன்னகர் இறைவர் மண்ணும் பொடியாகுமாறு உலகை அழித்து, ஒப்பற்ற அச்சுடலையில் சிறப்புத் தன்மையை உடைய இமவான் மகளாகிய பார்வதி தேவி கண்டு மகிழ, சுடலையின் நுண்பொடிகள் தம் உடலிற் படிய, நின்று ஆடி, அத்திருக்கூத்து வாயிலாக நுட்பமான பஞ்ச கிருத்தியங்கள் செய்தலை உகந்தவரும், கண் பொடிந்து போன வெள்ளிய தலையோட்டினைக் கையில் ஏந்தியவரும், காலனைக் காலால் கடிந்துகந்தவரும் வெள்ளிய திருநீறு சேர்ந்த அழகிய மார்பினரும் ஆவார்.

திருவேட்களம்

ஆழ்தருமால்கட னஞ்சினையுண்டார்
அமுதமமரர்க் கருளிச்
சூழ்தருபாம்பரை யார்த்துச்
சூலமோடொண் மழுவேந்தித்
தாழ்தருபுன்சடை யொன்றினைவாங்கித்
தண்மதியம்மய லேததும்ப
வீழ்தருகங்கை கரந்தார்
வேட்கள நன்னகராரே. **#426**

திருவேட்கள நன்னகர் இறைவர், ஆழமான பெரிய கடலிடத்துத் தோன்றிய அமுதத்தைத் தேவர்க்கு அளித்தருளி நஞ்சினைத் தாம் உண்டவரும், சுற்றிக்கொள்ளும் இயல்பினதாய பாம்பினை இடையிற் கட்டி, சூலம், ஒளி பொருந்திய மழு ஆகியவற்றைக் கைகளில் ஏந்தியவரும், உலகையே அழிக்கும் ஆற்றலோடு பெருகி வந்த கங்கை நீரைத் தம் பிறை அயலில் விளங்கத் தலையிலிருந்து தொங்கும் மெல்லிய சடை ஒன்றினை எடுத்து அதன்கண் சுவறுமாறு செய்தவரும் ஆவார்.

திருவேட்களம்

திருவொளிகாணிய பேதுறுகின்ற
திசைமுகனுந் திசைமேலளந்த
கருவரையேந்திய மாலுங்
கைதொழ நின்றதுமல்லால்
அருவரையொல்க வெடுத்தவரக்க
னாடெழிற்றோள்க ளாழத்தழுந்த

வெருவுறவூன்றிய பெம்மான்
வேட்கள நன்னகராரே. **#427**
திருவேட்கள நன்னகர் இறைவர், அழகிய பேரொளிப் பிழம்பைக் காணும்பொருட்டு மயங்கிய நான்முகனும், எண்திசைகளையும் அளந்தவனாய்ப் பெரிதான கோவர்த்தன மலையைக் குடையாக ஏந்திய திருமாலும், அடிமுடி காண இயலாது கைதொழுது நிற்க, கயிலைமலை தளருமாறு அதனை எடுத்த இராவணனின் வெற்றியும் அழகு மிக்க தோள்களும் ஆழத் தழுந்தவும் அவன் அஞ்சி நடுங்கவும் தம் கால் விரலை ஊன்றிய பெருமான் ஆவார்.

திருவேட்களம்

அத்தமண்டோய்துவ ரார்அமண்குண்டர்
யாதுமல்லாவுரை யேயுரைத்துப்
பொய்த்தவம் பேசுவதல்லாற்
புறனுரையாதொன்றுங் கொள்ளேல்
முத்தனவெண்முறு வல்லுமையஞ்ச
மூரிவல்லானையி னீருரிபோர்த்த
வித்தகர்வேத முதல்வர்
வேட்கள நன்னகராரே. **#428**
செந்நிறமான காவி மண் தோய்ந்த ஆடைகளை அணிந்த பௌத்தர்கள், சமண் குண்டர்கள் ஆகியோர் பொருளற்றவார்த்தைகளை உரைத்துப் பொய்த்தவம் பேசுவதோடு சைவத்தைப் புறனுரைத்துத் திரிவர். அவர்தம் உரை எதனையும் கொள்ளாதீர்.முத்துப் போன்ற வெண் முறுவல் உடைய உமையம்மை அஞ்சுமாறு வலிய யானையின் தோலை உரித்துப் போர்த்த வித்தகரும் வேத முதல் வருமாகிய வேட்கள நன்னகர் இறைவரை வணங்குமின்.

திருவேட்களம்

விண்ணியன்மாடம் விளங்கொளிவீதி
வெண்கொடியெங்கும் விரிந்திலங்க
நண்ணியசீர்வளர் காழி
நற்றமிழ் ஞானசம்பந்தன்
பெண்ணினல்லாளொரு பாகமமர்ந்து
பேணியவேட்கள மேன்மொழிந்த
பண்ணியல்பாடல் வல்லார்கள்
பழியொடு பாவமிலாரே. **#429**
விண்ணுற வோங்கிய மாட வீடுகளையும், வெண்மையான கொடிகள் எங்கும் விரிந்து விளங்கும் ஒளி தவழும் வீதிகளையும் உடையதும்,

பொருந்திய சீர்வளர்வதும் ஆகிய சீகாழிப்பதியுள் தோன்றிய நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் பெண்ணில் நல்லவளான நல்ல நாயகியை ஒரு பாகமாக விரும்பி ஏற்று எழுந்தருளியுள்ள திருவேட்களத்து இறைவர்மீது பாடியருளிய பண்பொருந்திய இப்பதிகப் பாடல்களை ஓத வல்லவர் பழி பாவம் இலராவர்.

திருவாழ்கொளிபுத்தூர்

திருவாழ்கொளிபுத்தூர்

திருவாழ்கொளிபுத்தூர்,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாணிக்கவண்ணவீசுரர்.
தேவியார் : வண்டார்பூங்குழலம்மை.

பொடியுடைமார்பினர் போர்விடையேறிப்
பூதகணம் புடைசூழக்
கொடியுடையூர்திரிந் தையங்
கொண்டு பலபலகூறி
வடிவுடைவாணெடுங் கண்ணுமைபாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமலரிட்டுக்
கறைமிடற்றானடி காண்போம். **#430**

திருநீறு அணிந்த மார்பினராய், வீரம் மிக்க விடை மீது ஏறி, பூத கணங்கள் புடை சூழ்ந்து வர, கொடிகள் கட்டிய ஊர்களில் திரிந்து பற்பல வாசகங்களைக் கூறிப் பலியேற்று, அழகிய வாள் போன்ற நெடிய கண்களையுடைய உமையொரு பாகராகிய சிவபிரானார் எழுந்தருளிய வாழ்கொளிபுத்தூர் சென்று மணம் கமழும் சிறந்த மலர்களால் அருச்சித்து அக்கறைமிடற்றார் திருவடிகளைக் காண்போம்.

திருவாழ்கொளிபுத்தூர்

அரைகெழுகோவண வாடையின்மேலோர்
ஆடரவம்மசைத் தையம்
புரைகெழுவெண்டலை யேந்திப்
போர்விடை யேறிப்புகழ
வரைகெழுமங்கைய தாகமொர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்
விரைகமழ் மாமலர்தூவி
விரிசடையானடி சேர்வோம். **#431**

இடையில் கட்டிய கோவண ஆடையின்மேல் ஆடும் அரவம் ஒன்றைக் கட்டிக் கொண்டு, துளை பொருந்திய வெண்தலையோட்டைக் கையில், ஏந்திப் பலியேற்று, சினம் பொருந்திய விடை மீது ஏறிப் பலரும் புகழ, இமவான் மகளாகிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவனாகிய சிவபிரான் எழுந்தருளிய திருவாழ்கொளிபுத்தூர்

சென்று, மணம் கமழும் சிறந்த மலர்களைத் தூவி அவ்விரிசடையான் திருவடிகளைச் சேர்வோம்.

திருவாழ்கொளிபுத்தூர்

பூணெடுநாக மசைத்தனலாடிப்
புன்றலையங்கையி லேந்தி
ஊணிடுபிச்சையூ ரையம்
முண்டியென்று பலகூறி
வாணெடுங்கண்ணுமை மங்கையொர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்த்
தாணெடு மாமலரிட்டுத்
தலைவனதாணிழல் சார்வோம். **#432**

நெடிய பாம்பை அணிகலனாகப் பூண்டு. அனலைக் கையின்கண் ஏந்தி, ஆடிக்கொண்டும், பிரமனது தலையோட்டை அழகிய கையொன்றில் ஏந்திப் பல ஊர்களிலும் திரிந்து மக்கள் உணவாகத் தரும் பிச்சையைத் தனக்கு உணவாக ஏற்றுப் பற்பலவாறு கூறிக்கொண்டும், வாள் போன்ற நீண்ட கண்களையுடைய உமையம்மையை ஒரு பாகமாக ஏற்று விளங்கும் சிவபிரான் எழுந்தருளிய திருவாழ்கொளிபுத்தூர் சென்று அப்பெருமான் திருவடிகளில் சிறந்த மலர்களைத் தூவித் தலைவனாக விளங்கும் அவன் தாள் நிழலைச் சார்வோம்.

திருவாழ்கொளிபுத்தூர்

தாரிடுகொன்றையொர் வெண்மதிகங்கை
தாழ்சடை மேலவைசூடி
ஊரிடுபிச்சைகொள் செல்வ
முண்டியென்று பலகூறி
வாரிடுமென்முலை மாதொருபாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்க்
காரிடு மாமலர்தூவிக்
கறைமிடற்றானடி காண்போம். **#433**

கொன்றை மாலையையும், வெண்மதியையும், கங்கையையும், தாழ்ந்து தொங்கும் சடைமுடியில் சூடி, ஊர் மக்கள் இடும் பிச்சையை ஏற்றுக்கொண்டு, அதுவே தனக்குச் செல்வம், உணவு என்று பலவாறு கூறிக்கொண்டு கச்சணிந்த மென்மையான தனங்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்ட சிவபிரான் எழுந்தருளிய திருவாழ்கொளிபுத்தூர் சென்று, கார்காலத்தே மலரும் சிறந்த கொன்றை மலர்களைத் தூவிக் கறைமிடற்றானாகிய அப்பெருமான் திருவடிகளைக் காண்போம்.

திருவாழ்கொளிபுத்தூர்

கனமலர்க்கொன்றை யலங்கலிலங்கக்
காதிலொர் வெண்குழையோடு
புனமலர்மாலை புனைந்தூர்
புகுதியென்றே பலகூறி
வனமுலைமாமலை மங்கையொர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்
இனமல ரேய்ந்தனதூவி
யெம்பெருமானடி சேர்வோம். **#434**

கார்காலத்து மலராகிய கொன்றை மலர்மாலை தன் திருமேனியில் விளங்க, ஒரு காதில் வெண்குழையணிந்து, முல்லை நிலத்து மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலைகளைச் சூடிப் பல ஊர்களுக்கும் சென்று பற்பல கூறிப் பலியேற்று அழகிய தனங்களையுடைய மலைமகளாகிய பார்வதியை ஒருபாகமாகக் கொண்ட எம்பிரான் எழுந்தருளிய திருவாழ்கொளிபுத்தூர் சென்று நமக்குக்கிட்டிய இனமான மலர்களைத் தூவி அவன் அடிகளைச் சேர்வோம்.

திருவாழ்கொளிபுத்தூர்

அளைவளர்நாக மசைத்தனலாடி
யலர்மிசை யந்தணனுச்சிக்
களைதலை யிற்பலிகொள்ளுங்
கருத்தனே கள்வனேயென்னா
வளையொலிமுன்கை மடந்தையொர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்த்
தளையவிழ் மாமலர்தூவித்
தலைவனதாளிணை சார்வோம். **#435**

புற்றின்கண் வாழும்பாம்பினை இடையில் கட்டி, சுடுகாட்டில் ஆடி, தாமரை மலர் மேல் உறையும் பிரமனின் உச்சித் தலையைக் கொய்து, அத்தலையோட்டில் பலிகொள்ளும் தலைவனே, நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கள்வனே என்று, வளையல் ஒலிக்கும் முன் கையையுடைய பார்வதி தேவியை ஒருபாகமாகக் கொண்ட சிவபெருமான் உறையும் திருவாழ்கொளிபுத்தூர் சென்று, மொட்டவிழ்ந்த நறுமலர்களைத்தூவி அப்பெருமானின் தாளிணைகளைச் சார்வோம்.

திருவாழ்கொளிபுத்தூர்

அடர்செவிவேழத்தி னீருரிபோர்த்து

வழிதலையங்கையி லேந்தி
உடலிடுபிச்சையோ டைய
முண்டியென்று பலகூறி
மடனெடுமாமலர்க் கண்ணியொர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்த்
தடமல ராயினதூவித்
தலைவனதாணிழல் சார்வோம். **#436**

பரந்த காதுகளையுடைய யானையைக் கொன்று, அதன் உதிரப் பசுமை கெடாத தோலை உரித்துப் போர்த்து, கிள்ளிய பிரமன் தலையோட்டைக் கையில் ஏந்தி, தாருகாவன முனிவர் மகளிர் தம் கைகளால் இட்ட பிச்சையோடு ஐயம், உண்டி, என்று பலகூறப்பலியேற்ற மடப்பம் வாய்ந்த நீண்ட நீல மலர் போன்ற கண்களையுடைய உமையொரு பாகனாக உள்ள திருவாழ்கொளிபுத்தூர் இறைவனை விரிந்த மலர்கள் பலவற்றால் அருச்சித்து அப்பெருமான் தாள்நிழலைச் சார்வோம்.

திருவாழ்கொளிபுத்தூர்

உயர்வரையொல்க வெடுத்தவரக்க
னொளிர்கடகக்கை யடர்த்து
அயலிடுபிச்சையோ டைய
மார்தலையென்றடி போற்றி
வயல்விரிநீல நெடுங்கணிபாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்ச்
சயவிரி மாமலர்தூவித்
தாழ்சடையானடி சார்வோம். **#437**

உயர்ந்த கயிலைமலையை அசையுமாறு பெயர்த்த இராவணனது ஒளி பொருந்திய கடகத்தோடு கூடிய தோள் வலிமையை அடர்த்தவனே என்றும், ஊர் மக்கள் இடும் பிச்சை, ஐயம் ஆகியவற்றை உண்ணும் தலைவனே என்றும், வயலின்கண் தோன்றி மலர்ந்த நீலமலர் போன்ற நீண்ட கண்களையுடைய உமையம்மை பாகனே என்றும் திருவாழ்கொளிபுத்தூர் இறைவனே, என்றும் வெற்றியோடு மலர்ந்த சிறந்த மலர்களைத் தூவி அத்தாழ் சடையான் அடிகளைச் சார்வோம்.

திருவாழ்கொளிபுத்தூர்

கரியவனான்முகன் கைதொழுதேத்தக்
காணலுஞ்சாரலு மாகா
எரியுருவாகியூ ரைய
மிடுபலியுண்ணியென் றேத்தி
வரியரவல்குன் மடந்தையொர்பாக

மாயவன்வாழ்கொளி புத்தூர்
விரிமல ராயினதூவி
விகிர்தனசேவடி சேர்வோம். **#438**

திருமாலும் நான்முகனும் கைகளால் தொழுதேத்திக் காணவும் சாரவும் இயலாத எரி உரு ஆகியவனே என்றும், பல ஊர்களிலும் திரிந்து ஐயம், பிச்சை ஆகியவற்றை உண்பவனே என்றும் போற்றிப் பொறிகளோடு கூடிய பாம்பின் படம் போன்ற அல்குலை உடைய உமையம்மையை ஒரு பாகமாக உடையவனாகிய வாழ்கொளிபுத்தூர் இறைவனை விரிந்த மலர்களைத் தூவி வழிபட்டு விகிர்தனாகிய அவன் சேவடிகளைச் சேர்வோம்.

திருவாழ்கொளிபுத்தூர்

குண்டமணர்துவர்க் கூறைகண்மெய்யிற்
கொள்கையினார் புறங்கூற
வெண்டலையிற்பலி கொண்டல்
விரும்பினையென்று விளம்பி
வண்டமர்பூங்குழன் மங்கையொர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்த்
தொண்டர்கண் மாமலர்தூவத்
தோன்றிநின்றானடி சேர்வோம். **#439**

கொழுத்த அமணர்களும், துவராடைகள் போர்த்த புத்தர்களும், புறம் பேசுமாறு வெண்மையான தலையோட்டின்கண் பலியேற்றலை விரும்பியவனே என்று புகழ்ந்து போற்றி, வண்டுகள் மொய்க்கும் அழகிய கூந்தலையுடைய உமையம்மையை ஒரு பாகமாக உடையவன் எழுந்தருளிய வாழ்கொளிபுத்தூர் சென்று அடியவர்கள் சிறந்த மலர்களைத் தூவி வழிபட அவர்கட்குக் காட்சி அளிப்பவனாகிய சிவனடிகளைச் சேர்வோம்.

திருவாழ்கொளிபுத்தூர்

கல்லுயர்மாக்கட னின்றுமுழங்குங்
கரைபொரு காழியமூதூர்
நல்லுயர் நான்மறை நாவின்
நற்றமிழ் ஞானசம்பந்தன்
வல்லுயர்சூலமும் வெண்மழுவாளும்
வல்லவன்வாழ்கொளி புத்தூர்ச்
சொல்லியபாடல்கள் வல்லார்
துயர்கெடுதல்லெள தாமே. **#440**

மலைபோல உயர்ந்து வரும் அலைகளை உடைய பெரிய கடல், பெரிய

கரையோடு மோதி முழங்கும் காழிப்பழம்பதியில் தோன்றிய, உயர்ந்த நான்மறைகள் ஓதும் நாவினை உடைய நற்றமிழ் ஞானசம்பந்தன், வலிதாக உயர்ந்த சூலம், வெண்மையான மழு, வாள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் வல்லவனாகிய சிவபிரான் விளங்கும் வாழ்கொளிபுத்தூரைப் போற்றிச் சொல்லிய. பாடல்களை ஓத வல்லவர் துயர் கெடுதல் எளிதாம்.

திருப்பாம்புரம்

திருப்பாம்புரம்

திருப்பாம்புரம்,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பாம்புரேசர் (எ) பாம்புரநாதர் .
தேவியார் : வண்டமர்பூங்குழலம்மை (எ) வண்டார்பூங்குழலி .

சீரணிதிகழ்திரு மார்பில்வெண்ணூலர்
திரிபுரமெரிசெய்த செல்வர்
வாரணிவனமுலை மங்கையோர்பங்கர்
மான்மறியேந்திய மைந்தர்
காரணிமணிதிகழ் மிடறுடையண்ணல்
கண்ணுதல் விண்ணவரேத்தும்
பாரணிதிகழ்தரு நான்மறையாளர்
பாம்புர நன்னகராரே. #441

விண்ணவர் போற்றும் திருப்பாம்புர நன்னகர் இறைவர் சிறந்த அணிகலன்கள் விளங்கும் அழகிய மார்பில் முப்புரி நூல் அணிந்தவர். திரிபுரங்களை எரித்த வீரச் செல்வர். கச்சணிந்த அழகிய தனங்களையுடைய உமையம்மையை ஒரு பாகமாகப் பொருந்திய நீலமணிபோலும் திகழ்கின்ற கண்டத்தையுடைய தலைவர். உலகில் அழகிய புகழோடு விளங்கும் மறைகளை அருளியவர். நெற்றிக்கண்ணர்.

திருப்பாம்புரம்

கொக்கிறகோடு கூவிளமத்தங்
கொன்றையொ டெருக்கணிசடையர்
அக்கினொடாமை பூண்டழகாக
அனலதுவாடுமெம் மடிகள்
மிக்கநல்வேத வேள்வியுளெங்கும்
விண்ணவர்விரைமலர் தூவப்
பக்கம்பல்பூதம் பாடிடவருவார்
பாம்புர நன்னகராரே. #442

திருப்பாம்புர நன்னகர் இறைவர், கொக்கிறகு என்னும் மலர், வில்வம், ஊமத்தம்பூ, கொன்றை மலர், எருக்க மலர் ஆகியவற்றை அணிந்த சடைமுடியினர். சங்கு மணிகளோடு ஆமை ஓட்டைப் பூண்டு அழகாக அனலின்கண் ஆடும் எம் தலைவர். மிக்க நல்ல வேதவேள்விகளில் விண்ணோர்கள் மணம் கமழும் மலர்கள் தூவிப் போற்ற அருகில்

பூதங்கள் பல பாடவும் வருபவர்.

திருப்பாம்புரம்

துன்னலினாடை யுடுத்ததன்மேலோர்
சூறைநல்லரவது சுற்றிப்
பின்னுவார்சடைகள் தாழவிட்டாடிப்
பித்தராய்த்திரியுமெம் பெருமான்
மன்னுமாமலர்கள் தூவிடநாளும்
மாமலையாட்டியுந் தாமும்
பன்னுநான்மறைகள் பாடிடவருவார்
பாம்புர நன்னகராரே. **#443**

திருப்பாம்புர நன்னகர் இறைவர் தைத்த கோவண ஆடையை அணிந்து அதன் மேல் காற்றை உட்கொள்ளும் நல்ல பாம்பு ஒன்றைச் சுற்றிக் கொண்டு பின்னிய நீண்ட சடைகளைத் தாழ விட்டுக் கொண்டு, பித்தராய் ஆடித் திரியும் எமது பெருமான், அவர் மணம் நிறைந்த சிறந்த மலர்களைத் தூவி நாளும் நாம் வழிபட மலையரசன் மகளாகிய பார்வதியும், தாமுமாய்ப் புகழ்ந்து போற்றும் நான் மறைகளை அடியவர் பாடிக்கொண்டு வர, நம்முன் காட்சி தருபவர்.

திருப்பாம்புரம்

துஞ்சுநாள்துறந்து தோற்றமுமில்லாச்
சுடர்விடுசோதியெம் பெருமான்
நஞ்சுசேர்கண்ட முடையவென்னாதர்
நள்ளிருள்நடஞ்செயுந் நம்பர்
மஞ்சுதோய்சோலை மாமயிலாட
மாடமாளிகைதன்மே லேறிப்
பஞ்சுசேர் மெல்லடிப் பாவையர்பயிலும்
பாம்புர நன்னகராரே. **#444**

மேகங்கள் தோயும் சோலைகளில் சிறந்த மயில்கள் ஆடவும், மாடமாளிகைகளில் ஏறி, செம்பஞ்சு தோய்த்த சிவந்த மெல்லிய அடிகளை உடைய பெண்கள் பாடவும், ஆகச் சிறந்து விளங்கும் திருப்பாம்புர நன்னகர் இறைவர், இறக்கும் நாள் இல்லாதவராய், தோற்றமும் இல்லாதவராய், ஒளி பெற்று விளங்கும் சோதி வடிவினராய்த் திகழும் எம் பெருமான், விடம் பொருந்திய கண்டத்தை உடைய எம் தலைவர், நள்ளிருளில் நடனம் புரியும் கடவுளாவார்.

திருப்பாம்புரம்

நதியதனயலே நகுதலைமாலை

நாண்மதிசடைமிசை யணிந்து
கதியதுவாகக் காளிமுன்காணக்
கானிடைநடஞ்செய்த கருத்தர்
விதியதுவழுவா வேதியர்வேள்வி
செய்தவரோத்தொலி யோவாப்
பதியதுவாகப் பாவையுந்தாமும்
பாம்புர நன்னகராரே. **#445**

விதிமுறை வழுவா வேதியர்கள், வேள்விகள் பல செய்தலால், எழும் வேத ஒலி நீங்காதபதி அது என உமையம்மையும் தாமுமாய்த் திருப்பாம்புர நன்னகரில் விளங்கும் இறைவர், சடைமுடி மீது கங்கையின் அயலே சிரிக்கும் தலைமாலை, பிறை மதி ஆகியவற்றை அணிந்து நடனத்திற்குரிய சதி அதுவே என்னும்படி காளிமுன்னே இருந்து காண இடுகாட்டுள் நடனம் செய்த தலைவர் ஆவார்.

திருப்பாம்புரம்

ஓதிநன்குணர்வார்க் குணர்வுடையொருவ
ரொளிதிகழுருவஞ்சே ரொருவர்
மாதினையிடமா வைத்தவெம்வள்ளல்
மான்மறியேந்திய மைந்தர்
ஆதிநீயருளென் றமரர்கள்பணிய
அலைகடல்கடையவன் றெழுந்த
பாதிவெண்பிறைசடை வைத்தவெம்பரமர்
பாம்புர நன்னகராரே. **#446**

திருப்பாம்புர நன்னகர் இறைவர், கல்வி கற்றுத் தெளந்த அறிவுடையோரால் அறியப்படும் ஒருவராவார். ஒளியாக விளங்கும் சோதி உருவினராவார். உமையம்மையை இடப்பாகமாகக் கொண்ட எம் வள்ளலாவார். இளமான் மறியைக் கையில் ஏந்திய மைந்தராவார். திருப்பாற்கடலைக் கடைந்த பொழுது எழுந்த ஆலகால விடத்திற்கு அஞ்சிய தேவர்கள் ஆதியாக விளங்கும் தலைவனே, நீ எம்மைக் காத்தருள் என வேண்ட, நஞ்சினை உண்டும், கடலினின்றெழுந்த பிறைமதியைச் சடையிலே வைத்தும் அருள்புரிந்த எம்மேலான தலைவராவார்.

திருப்பாம்புரம்

மாலினுக்கன்று சக்கரமீந்து
மலரவற்கொருமுக மொழித்து
ஆலின்கீழறமோர் நால்வருக்கருளி
யனலதுவாடுமெம் மடிகள்

காலனைக்காய்ந்து தங்கழலடியாற்
காமனைப்பொடிபட நோக்கிப்
பாலனுக்கருள்கள் செய்தவெம்மடிகள்
பாம்புர நன்னகராரே. **#447**

திருப்பாம்புர நன்னகர் இறைவர் முன்பு திருமாலுக்குச் சக்கராயுதம் அளித்தவர். தாமரை மலர் மேல் உறையும் பிரமனது ஐந்தலைகளில் ஒன்றைக் கொய்தவர். சனகாதி நால்வருக்குக் கல்லாலின் கீழிருந்து அறம் அருளியவர். தீயில் நடனமாடுபவர். தமது கழலணிந்த திருவடியால் காலனைக் காய்ந்தவர். காமனைப் பொடிபட நோக்கியவர். உபமன்யு முனிவருக்குப் பாற்கடல் அளித்து அருள்கள் செய்த தலைவர் ஆவார்.

<u>திருப்பாம்புரம்</u>

விடைத்தவல்லரக்கன் வெற்பினையெடுக்க
மெல்லியதிருவிர லூன்றி
அடர்த்தவன்றனக்கன் றருள்செய்தவடிக
ளனலதுவாடுமெம் மண்ணல்
மடக்கொடியவர்கள் வருபுனலாட
வந்திழியரிசிலின் கரைமேல்
படப்பையிற்கொணர்ந்து பருமணிசிதறும்
பாம்புர நன்னகராரே. **#448**

இளங்கொடி போன்ற பெண்கள் நீராட வந்து இழியும் அரிசிலாறு தோட்டங்களில் சிதறிக் கிடக்கும் பெரிய மணிகளை அடித்து வந்து கரைமேல் சேர்க்கும் திருப்பாம்புர நன்னகர் இறைவர், செருக்குற்ற வலிய இராவணன் கயிலை மலையைப் பெயர்த்து எடுத்த போது மெல்லிய திருவடி விரல் ஒன்றை ஊன்றி அவனை அடர்த்துப் பின் அவன் பிழையுணர்ந்து வருந்திப் போற்ற அருள் பல செய்த தலைவர் ஆவார்.

<u>திருப்பாம்புரம்</u>

கடிபடுகமலத் தயனொடுமாலுங்
காதலோடடிமுடி தேடச்
செடிபடுவினைக டீர்த்தருள்செய்யுந்
தீவணரெம்முடைச் செல்வர்
முடியுடையமரர் முனிகணத்தவர்கள்
முறைமுறையடிபணிந் தேத்தப்
படியதுவாகப் பாவையுந்தாமும்
பாம்புர நன்னகராரே. **#449**

முடி சூடிய அமரர்களும் முனிகணத்தவர்களும் முறையாகத் தம் திருவடிகளைப் பணிந்து ஏத்துதற்கு உரிய தகுதி வாய்ந்த இடமாகக் கொண்டு உமையம்மையும் தாமுமாய்த் திருப்பாம்புர நன்னகரில் விளங்கும் இறைவர் மணம் பொருந்திய தாமரை மலர் மேல் விளங்கும் பிரமனும் திருமாலும் அன்போடு அடிமுடி தேடத் தீவண்ணராய்க் கிளைத்த வினைகள் பலவற்றையும் தீர்த்து அருள் செய்பவராய் விளங்கும் எம் செல்வர் ஆவார்.

திருப்பாம்புரம்

குண்டர்சாக்கியருங் குணமிலாதாருங்
குற்றுவிட்டுடுக்கையர் தாமுங்
கண்டவாறுரைத்துக் கானிமிர்த்துண்ணுங்
கையர்தாமுள்ளவா றறியார்
வண்டுசேர்குழலி மலைமகணடுங்க
வாரணமுரிசெய்து போர்த்தார்
பண்டுநாஞ்செய்த பாவங்கள்தீர்ப்பார்
பாம்புர நன்னகராரே. **#450**

திருப்பாம்புர நன்னகர் இறைவர் குண்டர்களாகிய சமணர்களாலும் புத்தர்களாலும் மிகச் சிறிய ஆடையை அணிந்து, கண்டபடி பேசிக்கொண்டு நின்றுண்ணும் சமணத் துறவியராலும் உள்ளவாறு அறியப் பெறாதவர். வண்டுகள் மொய்க்கும் கூந்தலை உடைய மலைமகளாகிய பார்வதி தேவி நடுங்க யானையை உரித்துப் போர்த்தவர். முற்பிறவிகளில் நாம் செய்த பாவங்களைத் தீர்ப்பவர்.

திருப்பாம்புரம்

பார்மலிந்தோங்கிப் பருமதில்சூழ்ந்த
பாம்புரநன்னக ராரைக்
கார்மலிந்தழகார் கழனிசூழ்மாடக்
கழுமலமுதுபதிக் கவுணி
நார்மலிந்தோங்கு நான்மறைஞான
சம்பந்தன்செந்தமிழ் வல்லார்
சீர்மலிந்தழகார் செல்வமதோங்கிச்
சிவனடி நண்ணுவர்தாமே. **#451**

உலகில் புகழ் நிறைந்து ஓங்கியதும்பெரிய மதில்களால் சூழப் பெற்றதுமான திருப்பாம்புர நன்னகர் இறைவனை, மழை வளத்தால் சிறந்து அழகியதாய் விளங்கும் வயல்கள் சூழப் பெற்றதும், மாட வீடுகளை உடையதுமான, கழுமலம் என்னும் பழம் பதியில் கவுணியர் கோத்திரத்தில், அன்பிற் சிறந்தவனாய்ப் புகழால் ஓங்கி விளங்கும்

நான்மறைவல்ல ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய இச்செந்தமிழ்ப் பதிகத்தை ஓதவல்லவர், புகழும் அழகும் மிகுந்தவராய்ச் செல்வத்தால் சிறந்து வாழ்ந்து முடிவில் சிவனடியை அடைவர்.

திருப்பேணுபெருந்துறை

திருப்பேணுபெருந்துறை

திருப்பேணுபெருந்துறை,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சிவாநந்தநாதர்.
தேவியார் : மலையரசியம்மை.

பைம்மா நாகம் பன்மலர் கொன்றை
பன்றிவெண் கொம்பொன்று பூண்டு
செம்மாந் தையம் பெய்கென்று சொல்லிச்
செய்தொழில் பேணியோர் செல்வர்
அம்மா னோக்கிய வந்தளிர் மேனி
யரிவை யோர் பாக மமர்ந்த
பெம்மா னல்கிய தொல்புக ழாளர்
பேணுபெ ருந்துறை யாரே. **#452**

திருப்பேணு பெருந்துறை இறைவர், படம் பொருந்திய பெரிய நாகம், பல மலர்களோடு இணைந்த கொன்றை மலர், வெண்மையான பன்றிக் கொம்பு ஆகியவற்றை அணிந்து செம்மாப்பு உடையவராய்ப் பலர் இல்லங்களுக்கும் சென்று ஐயம் இடுகஎன்று கேட்டு, ஐயம் இட்ட கடமையாளர்களுக்குச் செல்வமாய் இருப்பவர்; அழகிய மான்விழி போன்ற விழிகளையும், தளிர் போன்ற மேனியையும் உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்ட தலைவர்; நிலைத்த பழமையான புகழையுடையவர்.

திருப்பேணுபெருந்துறை

மூவரு மாகி யிருவரு மாகி
முதல்வனு மாய்நின்ற மூர்த்தி
பாவங்கள் தீர்தர நல்வினை நல்கிப்
பல்கண நின்று பணியச்
சாவம தாகிய மால்வரை கொண்டு
தண்மதின் மூன்றுமெ ரித்த
தேவர்கள் தேவ ரெம்பெரு மானார்
தீதில்பெ ருந்துறை யாரே. **#453**

குற்றமற்ற பேணு பெருந்துறையில் விளங்கும் எம் பெருமானார், அரி அயன் அரன் ஆகிய முத்தொழில் செய்யும் மூவருமாய், ஒடுங்கிய உலகை மீளத் தோற்றும் சிவன், சக்தி ஆகிய இருவருமாய்,

அனைவர்க்கும் தலைவருமாய் நின்ற மூர்த்தி ஆவார். நம் பாவங்கள் தீர நல்வினைகளை அளித்துப் பதினெண் கணங்களும் நின்று பணிய மேரு மலையை வில்லாகக் கொண்டு, மும்மதில்களையும் எரித்தழித்த தேவதேவராவார்.

திருப்பேணுபெருந்துறை

செய்பூங் கொன்றை கூவிள மாலை
சென்னியுட் சேர்புனல் சேர்த்திக்
கொய்பூங் கோதை மாதுமை பாகங்
கூடியோர் பீடுடை வேடர்
கைபோ னான்ற கனிகுலை வாழை
காய்குலை யிற்கமு கீனப்
பெய்பூம் பாளை பாய்ந்திழி தேறல்
பில்குபெ ருந்துறை யாரே. **#454**

யானையின் கை போன்ற நீண்ட வாழைக் குலையில் பழுத்த பழங்களிலும், காய்த்த குலைகளிலும், கமுக மரங்களின் பூம்பாளைகளில் ஒழுகும் தேன் பாய்ந்து பெருகும் பெருந்துறை இறைவர், கொன்றைப்பூமாலை, கூவிளமாலை அணிந்த தலையில் கங்கையை ஏற்று, பூமாலை சூடிய உமையைத் தம் உடலின் ஒரு பாகமாகக் கொண்டு அதனால் ஒப்பற்ற அம்மையப்பர் என்ற பெருமையுடைய உருவினராவர்.

திருப்பேணுபெருந்துறை

நிலனொடு வானும் நீரொடு தீயும்
வாயுவு மாகியோ ரைந்து
புலனொடு வென்று பொய்ம்மைகள் தீர்ந்த
புண்ணியர் வெண்பொடிப் பூசி
நலனொடு தீங்குந் தானல தின்றி
நன்கெழு சிந்தைய ராகி
மலனொடு மாசு மில்லவர் வாழும்
மல்குபெ ருந்துறை யாரே. **#455**

நிலம், வானம், நீர், தீ, காற்று ஆகிய ஐம்பூதங்களின் வடிவாய், ஐந்து புலங்களை வென்றவராய், பொய்ம்மைகள் இல்லாத புண்ணியராய் வாழும் இறைவர், திருவெண்ணீறு அணிந்து நன்மையும் தின்மையும் சிவனாலன்றி வருவதில்லை என்ற நல்லுள்ளங் கொள்பவராய், மல மாசுக்கள் தீர்ந்தவராய் வாழும் அடியவர்கள் நிறைந்த பேணு பெருந்துறையார் ஆவர்.

திருப்பேணுபெருந்துறை

பணிவா யுள்ள நன்கெழு நாவின்
பத்தர்கள் பத்திமை செய்யத்
துணியார் தங்க ளுள்ளமி லாத
சுமடர்கள் சோதிப் பரியார்
அணியார் நீல மாகிய கண்டர்
அரிசிலு ரிஞ்சுக ரைமேல்
மணிவாய் நீலம் வாய்கமழ் தேறன்
மல்குபெ ருந்துறை யாரே. **#456**

அரிசிலாற்றின் அலைகள் மோதும் கரையில் அமைந்ததும், நீல மணி போலும் நிறம் அமைந்த குவளை மலர்களின் வாயிலிருந்து வெளிப்படும் தேன் கமழ்ந்து நிறைவதுமாகிய பேணு பெருந்துறை இறைவர். பணிவுடைய துதிப்பாடல்கள் பாடும் நன்மை தழுவிய நாவினையுடைய பக்தர்கள் அன்போடு வழிபட எளியர். துணிவற்றவர்களாய்த் தங்கள் மனம் பொருந்தாத அறியாமை உடையவர்களாய் உள்ளவர்கள் பகுத்தறிவதற்கு அரியவர். அழகிய நீல நிறம் பொருந்திய கண்டத்தை உடையவர்.

திருப்பேணுபெருந்துறை

எண்ணார் தங்கள் மும்மதிள் வேவ
ஏவலங் காட்டிய வெந்தை
விண்ணோர் சாரத் தன்னருள் செய்த
வித்தகர் வேத முதல்வர்
பண்ணார் பாட லாட லறாத
பசுபதி யீசனோர் பாகம்
பெண்ணா ணாய வார்சடை யண்ணல்
பேணுபெ ருந்துறை யாரே. **#457**

திருப்பேணுபெருந்துறை இறைவர் தம்மை மதியாதவரான, அசுரர்களின் முப்புரங்கள் எரிந்தழியுமாறு வில் வன்மை காட்டிய எந்தையாராவர். தேவர்கள் வழிபட அவர்கட்கு தமது அருளை நல்கிய வித்தகராவர். வேதங்களின் தலைவராவர். இசை நலம் கெழுமிய பாடல்களோடு, ஆடி மகிழும் பசுபதியாய ஈசனும் ஆவர். ஒரு பாகம் பெண்ணுமாய், ஒரு பாகம் ஆணுமாய் விளங்கும் நீண்ட சடைமுடியுடைய தலைவராவர்.

திருப்பேணுபெருந்துறை

விழையா ருள்ள நன்கெழு நாவில்
வினை கெடவேதமா றங்கம்

பிழையா வண்ணம் பண்ணிய வாற்றாற்
பெரியோ ரேத்தும் பெருமான்
தழையார் மாவின் றாழ்கனி யுந்தித்
தண்ணரி சில்புடை சூழ்ந்து
குழையார் சோலை மென்னடை யன்னங்
கூடுபெ ருந்துறையாரே. **#458**

தழைத்த மாமரத்திலிருந்து உதிர்ந்த பழங்களை உருட்டிவரும் தண்ணிய அரிசிலாற்றின் கரையருகே சூழ்ந்து விளங்கும் தளிர்கள் நிறைந்த சோலைகளில் மெல்லிய நடையையுடைய அன்னங்கள்கூடி விளங்கும் திருப்பேணுபெருந்துறை இறைவர், விருப்பம் பொருந்திய உள்ளத்தோடு நன்மை அமைந்த நாவின்கண் தம் வினைகெட, நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் பிழையின்றி முன்னோர் ஓதிவரும் முறையில் பெரியோர் ஓதி ஏத்தும் பெருமானார் ஆவர்.

திருப்பேணுபெருந்துறை

பொன்னங் கானல் வெண்டிரை சூழ்ந்த
பொருகடல் வேலி யிலங்கை
மன்ன னொல்க மால்வரை யூன்றி
மாமுர ணாகமுந் தோளும்
முன்னவை வாட்டிப் பின்னருள் செய்த
மூவிலை வேலுடை மூர்த்தி
அன்னங் கன்னிப் பேடை யொடாடி
யணவுபெ ருந்துறை யாரே. **#459**

ஆண் அன்னம் கன்னிமையுடைய பெண் அன்னத்தோடு ஆடியும், கூடியும் மகிழும் பேணு பெருந்துறை இறைவர், அழகிய கடற்கரைச் சோலைகளும், வெண்மையான கடல் அலைகளும் சூழ்ந்துள்ளதும், நாற்புறங்களிலும் கடலையே வேலியாக உடையதுமான இலங்கை மாநகர் மன்னனாகிய இராவணன் தளர்ச்சி அடையுமாறு பெரிய கயிலை மலையைக் கால் விரலால் ஊன்றி, அவனுடைய சிறந்த வலிமையுடைய, மார்பும், தோள்களும் வலிமை குன்றுமாறு செய்து பின் அவனுக்கு அருள்கள் பல செய்த மூவிலை வேலையுடைய மூர்த்தியாவார்.

திருப்பேணுபெருந்துறை

புள்வாய் போழ்ந்து மாநிலங் கீண்ட
பொருகடல் வண்ணனும் பூவின்
உள்வா யல்லி மேலுறை வானு
முணர்வரி யானுமை கேள்வன்

முள்வாய் தாளின் தாமரை மொட்டின்
முகமலரக் கயல் பாயக்
கள்வாய் நீலங் கண்மல ரேய்க்குங்
காமர்பெ ருந்துறை யாரே. **#460**

முட்களையுடைய தண்டின்மேல் தாமரை மொட்டு இனிய முகம்போல் மலர, அதன்கண் கயல்மீன் பாயத் தேனையுடைய நீல மலர் கண்மலரை ஒத்துள்ளதால், இயற்கை, மாதர்களின் மலர்ந்த முகங்களைப் போலத் தோற்றந்தரும் பேணுபெருந்துறையில் உள்ள இறைவர், கொக்கு வடிவங் கொண்ட பகாசுரனின் வாயைப் பிளந்தும், நிலவுலகைத் தோண்டியும் விளங்கும் கடல் வண்ணனாகிய திருமாலும், தாமரை மலரின் அக இதழ்கள் மேல் உறையும் நான் முகனும் உணர்ந்து அறிதற்கரியவர்; உமையம்மையின் கணவர்.

திருப்பேணுபெருந்துறை

குண்டுந் தேருங் கூறைக ளைந்துங்
கூப்பிலர் செப்பில ராகி
மிண்டும் மிண்டர் மிண்டவை கண்டு
மிண்டு செயாது விரும்பும்
தண்டும் பாம்பும் வெண்டலை சூலந்
தாங்கிய தேவர் தலைவர்
வண்டுந் தேனும் வாழ்பொழிற் சோலை
மல்குபெ ருந்துறை யாரே. **#461**

இறைவரைக் குண்டர்களாகிய சமணர்களும், தேரர்களாகிய புத்தர்களும் தம் ஆடைகளைக் களைந்தும் பல்வகை விரதங்களை மேற்கொண்டும் கைகூப்பி வணங்காதவர்களாய்த் திருப்பெயர்களைக் கூறாதவர்களாய், வம்பு செய்யும் இயல்பினராய் வீண்தவம் புரிகின்றனர். அவர்களின் மாறான செய்கைகளைக் கண்டு அவற்றை மேற்கொள்ளாது சிவநெறியை விரும்புமின். யோக தண்டம், பாம்பு, தலைமாலை, சூலம் ஆகியவற்றை ஏந்திய தேவர் தலைவராகிய நம் இறைவர், வண்டுகளும், தேனும் நிறைந்து வாழும் பொழில்களும், சோலைகளும் நிறைந்த பேணுபெருந்துறையில் உள்ளார்.

திருப்பேணுபெருந்துறை

கடையார் மாட நன்கெழு வீதிக்
கழுமல வூரன் கலந்து
நடையா ரின்சொல் ஞானசம் பந்தன்
நல்லபெ ருந்துறை மேய
படையார் சூலம் வல்லவன் பாதம்

பரவிய பத்திவை வல்லார்
உடையா ராகி உள்ளமு மொன்றி
உலகினின் மன்னுவர் தாமே. **#462**

வாயில்களையுடைய மாட வீடுகள் நன்கமைந்த வீதிகளையுடைய கழுமலம் என்னும் ஊரில் தோன்றியவனும், அன்பொடு கலந்து இன்சொல் நடையோடு பாடுபவனுமாகிய ஞானசம்பந்தன் நல்ல பேணுபெருந்துறை மேவிய வலிய சூலப்படையுடைய இறைவன் திருவடிகளைப் பரவிப் போற்றிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓதுபவர், எல்லா நன்மைகளும் உடையவராய் மனம் ஒன்றி உலகில் நிலையான வாழ்வினைப் பெறுவர்.

திருக்கற்குடி

திருக்கற்குடி

திருக்கற்குடி,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முத்தீசர்.
தேவியார் : அஞ்சனாட்சியம்மை.

வடந்திகழ் மென்முலை யாளைப்
பாகம தாக மதித்துத்
தடந்திரை சேர்புனன் மாதைத்
தாழ்சடை வைத்த சதுரர்
இடந்திகழ் முப்புரி நூலர்
துன்பமொ டின்பம தெல்லாம்
கடந்தவர் காதலில் வாழுங்
கற்குடி மாமலை யாரே. **#463**

திருக்கற்குடி மாமலையை விரும்பி அதன்கண் வாழும் இறைவர், முத்துவடம் விளங்கும் மெல்லிய தனங்களை உடைய உமையம்மையை மதித்து இடப்பாகமாகக் கொண்டு பெரிய அலைகள் வீசும் கங்கை நங்கையைத் தாழ்கின்ற சடைமிசை வைத்துள்ள சதுரப்பாடுடையவர்: திருமேனியின் இடப்பாகத்தே விளங்கும் முப்புரிநூலை அணிந்தவர். இன்ப துன்பங்களைக் கடந்தவர்.

திருக்கற்குடி

அங்கமொ ராறுடை வேள்வி
யான வருமறை நான்கும்
பங்கமில் பாடலோ டாடல்
பாணி பயின்ற படிறர்
சங்கம தார்குற மாதர்
தங்கையின் மைந்தர்கள் தாவிக்
கங்குலின் மாமதி பற்றுங்
கற்குடி மாமலை யாரே. **#464**

சங்கு வளையல்கள் அணிந்த குறப் பெண்களின் கைகளில் விளங்கும் பிள்ளைகள் இரவு நேரத்தில் தாவிப்பெரிய மதியைக் கைகளால் பற்றும் திருக்கற்குடி மாமலை இறைவர் வேள்விகட்குரிய விதிகளை விளக்கி ஆறு அங்கங்களுடன் கூடிய, அரிய வேதங்கள் நான்காகிய குற்றமற்ற பாடல், ஆடல், தாளச் சதிகள் ஆகியவற்றைப் பழகியவர்.

திருக்கற்குடி

நீரக லந்தரு சென்னி
நீடிய மத்தமும் வைத்துத்
தாரகை யின்னொளி சூழ்ந்த
தண்மதி சூடிய சைவர்
போரக லந்தரு வேடர்
புனத்திடை யிட்ட விறகில்
காரகி லின்புகை விம்முங்
கற்குடி மாமலை யாரே. **#465**

போர் செய்தற்கு ஏற்ற அகலமான மார்பினைக் கொண்டுள்ள வேடர்கள் காடுகளிலிருந்து வெட்டிக் கொணர்ந்து எரிக்கும் விறகுகளில் கரிய அகிலின் புகை மணம் வீசும் திருக்கற்குடி மாமலை இறைவர் பரந்து விரிந்து வந்த கங்கை நீரை உடைய முடி மீது நீண்டு மலர்ந்த ஊமத்தை மலரை அணிந்து விண்மீன்களின் ஒளி சூழ்ந்து விளங்கும் குளிர்ந்த பிறை மதியைச் சூடிய சைவராவர். அம்மலையில் மரமானவை அகிலன்றிப் பிறிதில்லை என்பதாம்.

திருக்கற்குடி

ஒருங்களி நீயிறை வாவென்
றும்பர்க ளோல மிடக்கண்
டிருங்கள மார விடத்தை
யின்னமு துண்ணிய ஈசர்
மருங்களி யார்பிடி வாயில்
வாழ்வெதி ரின்முளை வாரிக்
கருங்களி யானை கொடுக்குங்
கற்குடி மாமலை யாரே. **#466**

மதம் கொண்ட கரிய களிறு அருகில் அன்பு காட்டி வரும் பெண் யானையின் வாயில், பசுமையோடு முளைத்து வரும் மூங்கில் முளைகளை வாரிக்கொடுத்து ஊட்டும் திருக்கற்குடி மாமலை இறைவர், தேவர்கள் பெருமானே, அனைவரையும் ஒருங்கு காத்தளிப்பாயாக என ஓலமிடுவதைக் கேட்டுப் பாற்கடலிடை எழுந்த நஞ்சைத் தமது மிடறு கருமைக்கு இடமாகுமாறு இனிய அமுதமாகக் கருதி உண்டு காத்த ஈசராவார்.

திருக்கற்குடி

போர்மலி திண்சிலை கொண்டு
பூதக ணம்புடை சூழப்

பார்மலி வேடுரு வாகிப்
பண்டொரு வர்க்கருள் செய்தார்
ஏர்மலி கேழல் கிளைத்த
வின்னொளி மாமணி எங்கும்
கார்மலி வேடர் குவிக்குங்
கற்குடி மாமலை யாரே. **#467**

அழகிய பன்றிகள் நிலத்தைக் கிளைத்தலால் வெளிப்பட்ட இனிய ஒளியோடு கூடிய சிறந்த மணிகளைக் கரிய நிறமுடைய வேடர்கள் பல இடங்களிலும் குவித்துள்ள திருக்கற்குடி மாமலை இறைவர், போர் செய்யத்தக்க வலிய வில்லைக் கையில் கொண்டு, பூத கணங்கள் புடை சூழ்ந்து வர மண்ணுலகில் தாமொரு வேடர் உருத் தாங்கி, முற்காலத்தில் அருச்சுனருக்கு அருள் செய்தவராவார்.

<u>திருக்கற்குடி</u>

உலந்தவ ரென்ப தணிந்தே
ஊரிடு பிச்சைய ராகி
விலங்கல்வில் வெங்கன லாலே
மூவெயில் வேவ முனிந்தார்
நலந்தரு சிந்தைய ராகி
நாமலி மாலையி னாலே
கலந்தவர் காதலில் வாழுங்
கற்குடி மாமலை யாரே. **#468**

நன்மை அமைந்த மனமுடையவராய் நாவினால் புகழும் சொல் மாலைகளாகிய தோத்திரங்களினாலே இறைவன் திருவருளில் கலந்த மெய்யடியார்கள் அன்போடு வாழும் திருக்கற்குடி மாமலை இறைவர், இறந்தவர்களின் எலும்பை அணிந்து, ஊர் மக்கள் இடும் பிச்சையை ஏற்கும் பிட்சாடனராய் மேருமலையாகிய வில்லிடைத் தோன்றிய கொடிய கனலால் முப்புரங்களும் வெந்தழியுமாறு முனிந்தவர்.

<u>திருக்கற்குடி</u>

மானிட மார்தரு கையர்
மாமழு வாரும் வலத்தர்
ஊனிடை யார்தலை யோட்டி
லுண்கல னாக வுகந்தார்
தேனிடை யார்தரு சந்தின்
திண்சிறை யாற்றினை வித்திக்
கானிடை வேடர் விளைக்குங்
கற்குடி மாமலை யாரே. **#469**

தேனடைகள் பொருந்திய சந்தன மரங்களுக்கிடையே வலிய கரைகளைக் கட்டி, தினைகளை விதைத்துக் கானகத்தில் வேடர்கள் தினைப்பயிர் விளைக்கும் திருக்கற்குடி மாமலை இறைவர் மானை இடக் கையிலும், மழுவை வலக் கையிலும் தரித்தவர். ஊன் பொருந்திய தலையோட்டை உண்கலனாக உகந்தவர்.

திருக்கற்குடி

வாளமர் வீர நினைந்த
விராவணன் மாமலை யின்கீழ்த்
தோளமர் வன்றலை குன்றத்
தொல்விர லூன்று துணைவர்
தாளமர் வேய்தலை பற்றித்
தாழ்கரி விட்ட விசைபோய்க்
காளம தார்முகில் கீறுங்
கற்குடி மாமலை யாரே. **#470**

அடிமரத்தோடு கூடிய மூங்கிலினது தழையைப் பற்றி வளைத்து உண்ட களிறு, அதனை வேகமாக விடுதலால் அம்மூங்கில், விசையோடு சென்று, கரிய நிறம் பொருந்திய மேகங்களைக் கீறும், திருக்கற்குடி மாமலை இறைவர், வாட்போரில் வல்ல தனது பெருவீரத்தை நினைந்த இராவணனைப் பெருமை பொருந்திய கயிலை மலையின்கீழ் அவன் தோள்களும், வலிய தலைகளும் நெரியுமாறு தமது பழம்புகழ் வாய்ந்த கால் விரலால் ஊன்றிய துணைவராவார்.

திருக்கற்குடி

தண்டமர் தாமரை யானுந்
தாவியிம் மண்ணை யளந்து
கொண்டவ னும்மறி வொண்ணாக்
கொள்கையர் வெள்விடையூர்வர்
வண்டிசை யாயின பாட
நீடிய வார்பொழில் நீழல்
கண்டமர் மாமயி லாடுங்
கற்குடி மாமலை யாரே. **#471**

வண்டுகள் இசை பாட, நீண்ட பொழிலின் நீழலைக் கண்டு மகிழும் சிறந்த மயில்கள் ஆடும் திருக்கற்குடி மாமலை இறைவர் குளிர்ந்த தாமரை மலர்மேல் உறையும் நான்முகனாலும் உயர்ந்த இவ்வுலகை அளந்த திருமாலாலும் அறிய ஒண்ணாத இயல்பினர். வெண்ணிறமான விடையை ஊர்ந்து வருபவர்.

திருக்கற்குடி

மூத்துவ ராடையி னாரும்
மூசு கடுப்பொடி யாரும்
நாத்துவர் பொய்ம்மொழி யார்கள்
நயமில ராமதி வைத்தார்
ஏத்துயர் பத்தர்கள் சித்தர்
இறைஞ்ச வவரிட ரெல்லாம்
காத்தவர் காமரு சோலைக்
கற்குடி மாமலை யாரே. **#472**

காவியாடையணிந்த புத்தர்களும், கடுக்காய்ப் பொடியை நிரம்ப உண்ணும் சமணர்களும், நாவிற்கு வெறுப்பை உண்டாக்கும் பொய்ம்மொழி பேசுபவராய் நேயமற்ற அறிவுடையவராய் இருப்போராவர். அவர்களை விடுத்துத் தம்மை ஏத்தி வாழ்த்தி உயரும் பக்தர்களும், சித்தர்களும் வணங்க அவர்கட்கு வரும் இடர்களை அகற்றிக் காத்தவர், அழகிய சோலைகள் சூழ்ந்த திருக்கற்குடி மாமலை இறைவர்.

திருக்கற்குடி

காமரு வார்பொழில் சூழுங்
கற்குடி மாமலை யாரை
நாமரு வண்புகழ்க் காழி
நலந்திகழ் ஞானசம் பந்தன்
பாமரு செந்தமிழ் மாலை
பத்திவை பாடவல் லார்கள்
பூமலி வானவ ரோடும்
பொன்னுல கிற்பொலி வாரே. **#473**

அழகிய நீண்ட பொழில்களால் சூழப்பட்ட திருக்கற்குடி மாமலை இறைவரை, நாவிற் பொருந்திய வண்புகழால் போற்றப்பெறும் சீகாழிப் பதியில் தோன்றிய நன்மையமைந்த ஞானசம்பந்தன் பாடிய செந்தமிழ் மாலையாகிய இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓத வல்லவர்கள். பொலிவுடன் கூடிய தேவர்களோடும் பொன்னுலகின்கண் பொலிவோராவர்.

திருப்பாச்சிலாச்சிராமம்

திருப்பாச்சிலாச்சிராமம்

திருப்பாச்சிலாச்சிராமம்,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாற்றறிவரதர்.
தேவியார் : பாலசுந்தரநாயகியம்மை. முயலகன் என்பது ஒருவித வலிநோய். இது கொல்லி மழவனின் மகளுக்குக் கண்டிருந்து இந்தத் திருப்பதிகம் ஓதியருளினவளவில் தீர்ந்தது.

துணிவளர்திங்கள் துளங்கிவிளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ்செய்துபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர்கண்டரோ மங்கையைவாட
மயல்செய்வதோ விவர்மாண்பே. **#474**

முழுமதியினது கீற்றாக விளங்கும் பிறைமதியை விளங்கித் திகழுமாறு அதனைத் தம் ஒளி பொருந்திய சடையினைச் சுற்றிக் கட்டி, பாம்புகளை அணிந்தவராய்ப் பூதங்கள் தம்மைச்சூழ எல்லோரிடமும் சென்று பலியேற்பவராய், அழகிய தோற்றத்துடன் விளங்கும் திருப்பாச்சிலாச்சிராமத்தில் உறைகின்ற நீலமணி போலும் கண்டத்தவராகிய இறைவர், கொல்லி மழவன் மகளாகிய இப்பெண்ணை மயல் செய்வது மாண்பாகுமோ?

திருப்பாச்சிலாச்சிராமம்

கலைபுனைமானுரி தோலுடையாடை
கனல்சுட ராலிவர்கண்கள்
தலையணிசென்னியர் தாரணிமார்பர்
தம்மடிகள் ளிவரென்ன
அலைபுனல்பூம்பொழில் சூழ்ந்தமர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
இலைபுனைவேலரோ வேழையைவாட
விடர்செய்வதோ விவரீடே. **#475**

மான்தோலை இடையில் ஆடையாகப் புனைந்து, கனல், ஞாயிறு, திங்கள் ஆகியன கண்களாக விளங்கத் தலையோடு அணிந்த

முடியினராய், மாலை அணிந்த மார்பினராய், உயிர்கட்குத் தலைவரிவர் என்று சொல்லத் தக்கவராய், நீர்வளம் நிரம்பிய பொழில்கள் சூழ்ந்த பாச்சிலாச்சிராமத்தில் உறைகின்ற இலை வடிவமான வேலை ஏந்திய இறைவர், இம்மழவன் மகளை வாடுமாறு இடர்செய்தல் இவர் பெருமைக்குப் பொருந்துவதாமோ?

திருப்பாச்சிலாச்சிராமம்

வெஞ்சுடராடுவர் துஞ்சிருண்மாலை
வேண்டுவர்பூண்பது வெண்ணூல்
நஞ்சடைகண்டர் நெஞ்சிடமாக
நண்ணுவர் நம்மைநயந்து
மஞ்சடைமாளிகை சூழ்தருபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
செஞ்சுடர்வண்ணரோ பைந்தொடிவாடச்
சிதைசெய்வதோ விவர்சீரே. **#476**

உலகமெல்லாம் அழிந்தொழியும் ஊழிக் காலத்து இருளில் கொடிய தீயில் நடனம் ஆடுபவரும், தலைமாலை முதலியவற்றை விரும்புபவரும், வெண்ணூல் பூண்பவரும், நஞ்சுடைய கண்டத்தவரும், அன்போடு தம்மை நினைத்த நம்மை விரும்பி நம் நெஞ்சை இடமாகக் கொண்டு எழுந்தருள்பவரும், மேகங்கள் தோயும் மாளிகைகள் சூழ்ந்த திருப்பாச்சிலாச்சிராமத்து எழுந்தருளிய செந்தீவண்ணரும் ஆகிய சிவபெருமான் பைந்தொடி அணிந்த மழவன் மகளாகிய இப்பெண்ணை வருத்துவது இவர் புகழுக்குப் பொருந்துவதோ?

திருப்பாச்சிலாச்சிராமம்

கனமலர்க்கொன்றை யலங்கலிலங்கக்
கனறரு தூமதிக்கண்ணி
புனமலர்மாலை யணிந்தழகாய
புனிதர்கொ லாமிவரென்ன
வனமலிவண்பொழில் சூழ்தருபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மனமலிமைந்தரோ மங்கையைவாட
மயல்செய்வதோ விவர்மாண்பே. **#477**

கார்காலத்தில் மலரும் கொன்றை மலரால் இயன்ற மாலை திருமேனியில் விளங்க, பிரிந்தவர்க்குக் கனலைத் தரும் தூய பிறைமதியைக் கண்ணியாகச் சூடி, வனங்களில் மலர்ந்த மலர்களால் ஆகிய மாலையைச் சூடி, அழகிய புனிதர் என்று சொல்லும்படி எழிலார்ந்த வண்பொழில்கள் சூழ்ந்த திருப்பாச்சிலாச்சிராமத்து

அடியவருக்கு, மனநிறைவு தருபவராய் உறையும் சிவபெருமான், இம்மங்கையை வாடும்படி செய்து மயக்குறுத்துவது மாண்பாகுமோ?

திருப்பாச்சிலாச்சிராமம்

மாந்தர்தம்பானறு நெய்மகிழ்ந்தாடி
வளர்சடை மேற்புனல்வைத்து
மோந்தைமுழாக்குழல் தாளமொர்வீணை
முதிரவோர் வாய்மூரிபாடி
ஆந்தைவிழிச்சிறு பூதத்தர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சாந்தணிமார்பரோ தையலைவாடச்
சதுர்செய்வதோ விவர்சார்வே. **#478**

மண்ணுலகில் அடியவர்கள் ஆட்டும் பால் நறுநெய் ஆகியவற்றை விரும்பியாடி, வளர்ந்த சடைமுடிமேல் கங்கையைச் சூடி, மொந்தை, முழா, குழல், தாளம், வீணை ஆகியன முழங்க வாய்மூரி பாடி ஆந்தை போன்ற விழிகளையுடைய சிறு பூதங்கள் சூழ்ந்தவராய்த் திருப்பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற சந்தனக் கலவையை அணிந்த மார்பினையுடைய சிவபிரான் இத்தையலை வாடும்படி செய்து இப்பெண்ணிடம் தம் சதுரப்பாட்டைக் காட்டல் ஏற்புடையதோ?

திருப்பாச்சிலாச்சிராமம்

நீறுமெய்பூசி நிறைசடைதாழ
நெற்றிக்கண் ணாலுற்றுநோக்கி
ஆறதுசூடி யாடரவாட்டி
யைவிரற் கோவணவாடை
பாறருமேனியர் பூதத்தர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
ஏறதுவேறிய ரேழையைவாட
விடர்செய்வதோ விவரீடே. **#479**

திருநீற்றை உடல் முழுதும் பூசியவராய், நிறைந்த சடைகள் தாழ்ந்து விளங்க, தமது நெற்றி விழியால் மறக்கருணை காட்டிப் பாவம் போக்கி, கங்கையைத் தலையில் அணிந்து, ஆடுகின்ற பாம்பைக் கையில் எடுத்து விளையாடிக் கொண்டு, ஐவிரல் அளவுள்ள கோவண ஆடை அணிந்து, பால் போன்ற வெள்ளிய மேனியராய், பூத கணங்கள் தம்மைச் சூழ்ந்தவராய்த் திருபாச்சிலாச்சிராமத்தில் உறைகின்ற விடை ஊர்தியராகிய சிவபிரான் இப்பெண்ணை வாடுமாறு செய்து இவளுக்கு இடர் செய்வது பெருமை தருவது ஒன்றா?

திருப்பாச்சிலாச்சிராமம்

பொங்கிளநாகமொ ரேகவடத்தோ
டாமைவெண் ணூல்புனைகொன்றை
கொங்கிளமாலை புனைந்தழகாய
குழகர்கொ லாமிவரென்ன
அங்கிளமங்கையோர் பங்கினர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சங்கொளிவண்ணரோ தாழ்குழல்வாடச்
சதிர்செய்வதோ விவர்சார்வே. **#480**

சினம் பொங்கும் இளநாகத்தைப் பூண்டு, ஒற்றையாடை அணிந்து, ஆமை ஓட்டையும், வெண்மையான பூணூலையும் அணிந்து, தேன்நிறைந்த புதிய கொன்றை மலர்மாலை அணிந்த அழகிய இளைஞர் இவர் என்று சொல்லும்படி இளநங்கையான உமையம்மையை ஒருபாகமாக உடைய திருப்பாச்சிலாச்சிராமத்து உறையும் சங்கொளி போல நீறு அணிந்த திருமேனியை உடைய இறைவரோ இத்தாழ்குழலாள் வருந்தச் சாமர்த்தியமான செயல் செய்வது. இது இவர் பெருமைக்குப் பொருத்தப்படுவதோ?

திருப்பாச்சிலாச்சிராமம்

ஏவலத்தால்விச யற்கருள்செய்து
இராவண னையீடழித்து
மூவரிலும்முத லாய்நடுவாய
மூர்த்தியை யன்றிமொழியாள்
யாவர்களும்பர வும்மெழிற்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
தேவர்கள்தேவரோ சேயிழைவாடச்
சிதைசெய்வதோ விவர்சேர்வே. **#481**

அம்பின் வலிமையால் விசயனோடு போரிட்டு வென்று அவனுக்குப் பாசுபதாஸ்திரம் வழங்கி, அருள் செய்தவரும் இராவணன் பெருவீரன் என்ற புகழை அழித்தவரும், மும்மூர்த்திகளுக்கும் தலைவராய் அவர்கட்கு நடுவே நின்று படைத்தல், காத்தல், அழித்தல் தொழிலைப் புரிபவராய் எல்லோராலும் துதிக்கப் பெறும் திருப்பாச்சிலாச்சிராமத்தில் உறையும் மகாதேவராய சிவபிரான் திருப்பெயரையன்றி வேறு வார்த்தைகள் பேசுவதறியாத இப்பெண்ணை வாடச் சிதைவு செய்தல் இவருடைய தொடர்புக்கு அழகிய செயல் ஆகுமோ?

திருப்பாச்சிலாச்சிராமம்

மேலதுநான்முக னெய்தியதில்லை
கீழது சேவடிதன்னை
நீலதுவண்ணனு மெய்தியதில்லை
யெனவிவர் நின்றதுமல்லால்
ஆலதுமாமதி தோய்பொழிற்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பாலதுவண்ணரோ பைந்தொடிவாடப்
பழிசெய்வதோ விவர்பண்பே. **#482**

மேலே உள்ள திருமுடியை நான்முகன் தேடிக் கண்டான் இல்லை: கீழே உள்ள திருவடியை நீல நிறத்தை உடைய திருமால் தேடி அடைந்ததுமில்லை என்று உலகம் புகழுமாறு ஓங்கி அழலுருவாய் நின்றவரும், பெரிய முழுமதியை ஆலமரங்கள் சென்று தோயும் பொழில்கள் சூழ்ந்த திருப்பாச்சிலாச்சிராமத்து உறையும் பால் வண்ணருமாகிய சிவபிரான் இப்பைந்தொடியாள் வாடுமாறு வஞ்சித்தல் இவர் பண்புக்கு ஏற்ற செயல் ஆகுமோ?

திருப்பாச்சிலாச்சிராமம்

நாணொடுகூடிய சாயினரேனு
நகுவ ரவரிருபோதும்
ஊணொடுகூடிய வுட்குநகையா
லுரைக ளவைகொளவேண்டா
ஆணொடுபெண்வடி வாயினர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பூணெடுமார்பரோ பூங்கொடிவாடப்
புனைசெய்வதோ விவர்பொற்பே. **#483**

நாணத்தொடு கூடிய செயல்களை இழந்து ஆடையின்றித் திரிதலால் எல்லோராலும் பரிகசிக்கத் தக்கவராகிய சமணரும், இருபொழுதும் உண்டு அஞ்சத்தக்க நகையோடு திரியும் புத்தரும், ஆகிய புறச் சமயத்தவர் உரைகளை மெய்யெனக் கொள்ள வேண்டா. அன்பர்கள் வழிபடும் திருப்பாச்சிலாச்சிராமத்தில் மாதொருபாகராய் அணிகலன்கள் பூண்ட திருமார்பினராய் விளங்கும் இறைவர் இப்பூங்கொடியாளை வாடச் செய்து பழிப்புரை கொள்ளல் இவரது அழகுக்கு ஏற்ற செயலா?

திருப்பாச்சிலாச்சிராமம்

அகமலியன்பொடு தொண்டர்வணங்க
வாச்சிரா மத்துறைகின்ற
புகைமலிமாலை புனைந்தழகாய
புனிதர்கொ லாமிவரென்ன

நகைமலிதண்பொழில் சூழ்தருகாழி
நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலிதண்டமிழ் கொண்டிவையேத்தச்
சாரகி லாவினைதானே. **#484**

உள்ளம் நிறைந்த அன்போடு தொண்டர்கள் வழிபட ஆச்சிராமம் என்னும் ஊரில் உறைகின்றவரும், அன்பர் காட்டும் நறுமணப்புகை நிறைந்த மாலைகளைச் சூடியவரும், அழகும் தூய்மையும் உடையவருமான சிவபெருமானை, மலர்ந்த தண்பொழில்கள் சூழ்ந்த சீகாழிப் பதியில் தோன்றிய நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய, நோய்தீர்க்கும் மேன்மை மிக்கதும் உள்ளத்தைக் குளிர்விப்பதுமான இத்தமிழ் மாலையால், ஏத்திப் பரவி வழிபடுவோரை வினைகள் சாரா.

திருப்பழையனூர் - திருஆலங்காடு

திருவாலங்காடு

திருப்பழையனூர் - திரு ஆலங்காடு,
பண் - தக்கராகம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஊர்த்ததாண்டவேசுரர்.
தேவியார் : வண்டார்குழலியம்மை.

துஞ்சவருவாருந் தொழுவிப்பாரும்
வழுவிப்போய்
நெஞ்சம்புகுந்தென்னை நினைவிப்பாரு
முனைநட்பாய்
வஞ்சப்படுத்தொருத்தி வாணாள்கொள்ளும்
வகைகேட்
டஞ்சும்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. **#485**

உறங்கும்போது கனவிடை வருபவரும், தம்மைத் தொழுமாறு செய்பவரும், முனைப்புக் காலத்து மறைந்து, அன்பு செய்யும் காலத்து என் நெஞ்சம் புகுந்து நின்று, நினையுமாறு செய்பவரும் ஆகிய இறைவர், முற்பிறவியில் நட்பாய் இருப்பதுபோலக் காட்டித் தன்னை வஞ்சனை செய்து கொன்ற கணவனை மறுபிறப்பில் அடைந்து அவனது வாழ்நாளைக் கவர்ந்த பெண்ணின் செயலுக்குத் துணைபோன வேளாளர்கள் அஞ்சி உயிர்த்தியாகம் செய்த திருவாலங்காட்டில் உறையும் எம் அடிகளாவார்.

திருவாலங்காடு

கேடும்பிறவியு மாக்கினாருங்
கேடிலா
வீடுமாநெறி விளம்பினாரெம்
விகிர்தனார்
காடுஞ்சுடலையுங் கைக்கொண்டெல்லிக்
கணப்பேயோ
டாடும்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. **#486**

பிறப்பு இறப்புக்களை உயிர்கட்குத் தந்தருளியவரும், அழிவற்ற வீட்டு நெறியை அடைதற்குரிய நெறிகளை உயிர்கட்கு விளம்பியவரும் ஆகிய நம்மின் வேறுபட்ட இயல்பினராகிய சிவபிரான், இடுபாடு சுடலை

ஆகியவற்றை இடமாகக் கொண்டு இராப்போதில் பேய்க்கணங்களோடு நடனமாடும் பழையனூரைச் சேர்ந்த திருவாலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

திருவாலங்காடு

கந்தங்கமழ்கொன்றைக் கண்ணிசூடிக்
கனலாடி
வெந்தபொடிநீற்றை விளங்கப்பூசும்
விகிர்தனார்
கொந்தண்பொழிற்சோலை யரவிற்றோன்றிக்
கோடல்பூத்
தந்தண்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. **#487**

மணம் கமழும் கொன்றை மலர் மாலை சூடிக் கனலிடை நின்று ஆடி சுடுகாட்டில் வெந்த சாம்பலை உடல் முழுதும் விளங்கப் பூசும் வேறுபட்ட இயல்பினராகிய சிவபிரான், கொத்துக்கள் நிறைந்த பொழில்களிலும் சோலைகளிலும் பாம்பின் படம் போலக் காந்தள் மலர் மலரும் அழகிய குளிர்ந்த பழையனூரைச் சேர்ந்த திருவாலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

திருவாலங்காடு

பாலமதிசென்னி படரச்சூடி
பழியோராக்
காலனுயிர்செற்ற காலனாய
கருத்தனார்
கோலம்பொழிற்சோலைப் பெடையோடாடி
மடமஞ்ஞை
ஆலும்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. **#488**

இளம்பிறையை முடிமீது பொருந்தச் சூடி, தனக்கு வரும் பழியை நினையாத காலனது உயிரைச் செற்ற காலகாலராய இறைவர் அழகிய பொழில்களிலும் சோலைகளிலும் இள மயில்கள்பெண் மயில்களோடு கூடிக் களித்து ஆரவாரிக்கும் பழையனூரைச் சேர்ந்த திருவாலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

திருவாலங்காடு

ஈர்க்கும்புனல்சூடி யிளவெண்திங்கள்
முதிரவே

பார்க்குமரவம்பூண் டாடிவேடம்
பயின்றாரும்
கார்க்கொள்கொடிமுல்லை குருந்தமேறிக்
கருந்தேன்மொய்த்
தார்க்கும்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. **#489**

ஈர்த்துச் செல்லுதலில் வலிய கங்கை நீரை முடிமிசைத் தாங்கி, இளம்பிறையை விழுங்க அதனது வளர்ச்சி பார்த்திருக்கும் பாம்பை அணிகலனாகப் பூண்டு, நடனம் ஆடிப் பல்வேறு வேடங்களில் தோன்றி அருள்புரிபவர், கார்காலத்தே மலரும் முல்லைக் கொடிகள் குருந்த மரங்களில் ஏறிப் படர அம்மலர்களில் உள்ள தேனை உண்ணவரும் கரிய வண்டுகள் மலரை மொய்த்து ஆரவாரிக்கும் பழையனூரைச் சேர்ந்த திருவாலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

திருவாலங்காடு

பறையுஞ்சிறுகுழலும் யாழும்பூதம்
பயிற்றவே
மறையும்பலபாடி மயானத்துறையும்
மைந்தனார்
பிறையும்பெரும்புனல்சேர் சடையினாரும்
பேடைவண்
டறையும்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. **#490**

பறை, சிறுகுழல், யாழ் முதலிய கருவிகளைப் பூதங்கள் ஒலிக்க வேதங்களைப் பாடிக் கொண்டு மயானத்தில் உறையும் மைந்தராய், பிறை, பெருகி வரும் கங்கை ஆகியவற்றை அணிந்த சடை முடியினர் ஆகிய சிவபெருமான் பெடைகளோடு கூடிய ஆண் வண்டுகள் ஒலிக்கும்சோலைகள் சூழ்ந்த பழையனூரைச் சேர்ந்த திருவாலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

திருவாலங்காடு

நுணங்குமறைபாடி யாடிவேடம்
பயின்றாரும்
இணங்குமலைமகளோ டிருகூறொன்றா
யிசைந்தாரும்
வணங்குஞ்சிறுத்தொண்டர் வைகலேத்தும்
வாழ்த்துங்கேட்
டணங்கும்பழையனூ ராலங்காட்டெம்

அடிகளே. #491

நுட்பமான ஒலிக் கூறுகளை உடைய வேதங்களைப் பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் பல்வேறு திருவுருவங்களைக் கொள்பவரும், தம்மோடு இணைந்த பார்வதி தேவியுடன் இருவேறு உருவுடைய ஓருருவாக இசைந்தவரும், ஆகிய பெருமானார் தம்மை வணங்கும் அடக்கமுடைய தொண்டர்கள் நாள்தோறும் பாடும் வாழ்த்துக்களைக் கேட்டு தெய்வத் தன்மை மிகுந்து தோன்றும் பழையனூரைச் சேர்ந்த திருவாலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

திருவாலங்காடு

கணையும்வரிசிலையு மெரியுங்கூடிக்
கவர்ந்துண்ண
இணையிலெயின்மூன்று மெரித்திட்டாரெம்
மிறைவனார்
பிணையுஞ்சிறுமறியுங் கலையுமெல்லாங்
கங்குல்சேர்ந்
தணையும்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. #492

அம்பு வில் நெருப்பு ஆகியன கூடிக் கவர்ந்து உண்ணுமாறு ஒப்பற்ற முப்புரங்களை எரித்தவராகிய எம் இறைவர், பெண் மான் ஆண்மான் அவற்றின் குட்டிகள் ஆகியன இரவிடைச் சென்றணையும் பழையனூரைச் சேர்ந்த ஆலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

திருவாலங்காடு

கவிழமலைதரளக் கடகக்கையா
லெடுத்தான்தோள்
பவழநுனைவிரலாற் பையவூன்றிப்
பரிந்தாரும்
தவழுங்கொடிமுல்லை புறவஞ்சேர
நறவம்பூத்
தவிழும்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. #493

கயிலை மலை நிலை குலையுமாறு முத்துக்கள் பதித்த வீரக் கடகம் அணிந்த தன் கைகளால் எடுத்த இராவணனின் தோள் வலியைத் தம் பவழம் போன்ற கால்விரல் நுனியால் மெல்ல ஊன்றி அடர்த்துப் பின் அவனுக்கு இரங்கி அருள் புரிந்த சிவபிரானார். முல்லைக்கொடிகள் முல்லை நிலத்தின்கண் தவழ்ந்து படர நறவக் கொடிகள் மலர்களைப் பூத்து விரிந்து நிற்கும் பழையனூரைச் சேர்ந்த ஆலங்காட்டு எம் அடிகள்

ஆவார்.

திருவாலங்காடு

பகலுமிரவுஞ்சேர் பண்பினாரும்
நண்போரா
திகலுமிருவர்க்கு மெரியாய்த்தோன்றி
நிமிர்ந்தாரும்
புகலும்வழிபாடு வல்லார்க்கென்றுந்
தீயபோய்
அகலும்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. **#494**

பகல் இரவு போன்ற வெண்மை கருமை நிறங்களைக் கொண்ட நான்முகனும் திருமாலும் தங்களிடையே உள்ள உறவு முறையையும் கருதாது யார் தலைவர் என்பதில் மாறுபட்டு நிற்க அவ்விருவர்க்கும் இடையே எரியுருவாய்த் தோன்றி ஓங்கி நின்றவரும் ஆகம நூல்கள் புகலும் வழிபாடுகளில் தலை நிற்கும் அடியவர்க்குத் தீயன போக்கி அருள்புரிபவரும் ஆகிய பெருமான் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

திருவாலங்காடு

போழம்பலபேசிப் போதுசாற்றித்
திரிவாரும்
வேழம்வருமளவும் வெயிலேதுற்றித்
திரிவாரும்
கேழல்வினைபோகக் கேட்பிப்பாருங்
கேடிலா
ஆழ்வர்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. **#495**

மாறுபட்ட சொற்களைப் பேசியும், காலத்துக்கு ஏற்றவாறு உண்மையல்லாதவைகளைச் சொல்லியும் திரியும் புறச்சமயத்தவரும், நன்மையல்லாதவற்றை உபதேசங்களாகக் கூறுபவரும், யானைத் தீ வரும் அளவும் வெயிலிடை உண்டு திரியும் மதவாதிகளுமாகிய புறச்சமயிகளைச் சாராது தம்மைச் சார்ந்த அடியவர்களைப் பற்றிய வினைகள் அகலுமாறு அவர்கட்கு உபதேசங்களைப் புரியச் செய்பவராகிய அழிவற்ற ஆளுமையுடையவர் ஆலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

திருவாலங்காடு

சாந்தங்கமழ்மறுகிற் சண்பைஞான
சம்பந்தன்
ஆந்தண்பழையனூ ராலங்காட்டெம்
மடிகளை
வேந்தனருளாலே விரித்தபாட
லிவைவல்லார்
சேர்ந்தவிடமெல்லாந் தீர்த்தமாகச்
சேர்வாரே. **#496**
சந்தனம் கமழும் திருவீதிகளை உடைய சண்பைப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் அழகிய தண்ணிய ஆலங்காட்டு வேந்தனாக விளங்கும் அவ்விறைவன் திருவருளாலே போற்றி விரித்தோதிய இத்திருப்பதிகப் பாடல்களை வல்லவர்கள் சேர்ந்த இடங்களெல்லாம் புனிதமானவைகளாகப் பொருந்தப் பெறுவர்.

திருஅதிகைவீரட்டானம்

திருஅதிகைவீரட்டானம்

திரு அதிகைவீரட்டானம்,
பண் - தக்கராகம்,
இத்தலம் நடுநாட்டில் கெடிலநதிக்கு வடபாலுள்ளது. ,
சுவாமிபெயர் : அதிகைநாதர் (எ) வீரட்டானேசுவரர்.
தேவியார் : திருவதிகைநாயகி.

குண்டைக் குறட்பூதங் குழும வனலேந்திக்
கெண்டைப் பிறழ்தெண்ணீர்க் கெடில வடபக்கம்
வண்டு மருள்பாட வளர்பொன் விரிகொன்றை
விண்ட தொடையலா னாடும்வீரட் டானத்தே. **#497**

பருத்த குள்ளமான பூத கணங்கள் தன்னைச் சூழ்ந்து நிற்கக் கையில் அனலை ஏந்தியவனாய், வண்டுகள் மருளிந்தளப் பண்பாட, பொன் போன்று விரிந்து மலர்ந்த கொன்றை மலர் மாலை அணிந்தவனாய்ச் சிவபிரான் கெண்டை மீன்கள் பிறழ்ந்து விளையாடும் தெளந்த நீரை உடைய கெடில நதியின் வடகரையில் உள்ள திருவதிகை வீரட்டானத்து ஆடுவான்.

திருஅதிகைவீரட்டானம்

அரும்புங் குரும்பையு மலைத்த மென்கொங்கைக்
கரும்பின் மொழியாளோ டுடன்கை யனல்வீசிச்
சுரும்புண் விரிகொன்றைச் சுடர்பொற் சடைதாழ
விரும்பு மதிகையு ளாடும்வரரட் டானத்தே. **#498**

சிவபிரான் தாமரை அரும்பு, குரும்பை ஆகியவற்றை அழகால் வென்ற மென்மையான தனங்களையும், கரும்புபோன்ற இனிய மொழிகளையும் உடைய உமையம்மையோடு கூடிக் கையில் அனல் ஏந்தி வீசிக் கொண்டு, வண்டுகள் தேனுண்ணும் இதழ் விந்த கொன்றை மாலை அணிந்த ஒளி மயமான பொன் போன்ற சடைகள் தாழத் தன்னால் பெரிதும் விரும்பப்படும் அதிகை வீரட்டானத்து ஆடுவான்.

திருஅதிகைவீரட்டானம்

ஆடலழனாக மரைக்கிட் டசைத்தாடப்
பாடன் மறைவல்லான் படுதம் பலிபெயர்வான்
மாட முகட்டின்மேன் மதிதோ யதிகையுள்
வேடம் பலவல்லா னாடும்வரரட் டானத்தே. **#499**

வென்றியையும் அழல் போலும் கொடிய தன்மையையும் கொண்ட

நாகத்தை இடையில் பொருந்தக் கட்டி ஆடுமாறு செய்து, பாடப்படும் வேதங்களில் வல்லவனாய், படுதம் என்னும் கூத்தினை ஆடிக்கொண்டு, பலி தேடித் திரிபவனாய சிவபிரான் மதி தோய்ந்து செல்லுமாறு உயர்ந்த மாடவீடுகளை உடைய திருவதிகையிலுள்ள வீரட்டானத்தில் பல்வேறு கோலங்களைக் கொள்ளுதலில் வல்லவனாய் ஆடுவான்.

திருஅதிகைவீரட்டானம்

எண்ணா ரெயிலெய்தா னிறைவ னனலேந்தி
மண்ணார் முழவதிர முதிரா மதிசூடிப்
பண்ணார் மறைபாடப் பரம னதிகையுள்
விண்ணோர் பரவநின் றாடும்வீரட் டானத்தே. **#500**

பகைவரது திரிபுரங்களை எய்து அழித்த இறைவன் அனலைக் கையில் ஏந்தி மார்ச்சனை இடப்பட்ட முழவு முழங்க இளம் பிறையை முடியில் சூடிப் பண்ணமைப்புடைய வேதங்களை அந்தணர் ஓதத் திருவதிகை வீரட்டானத்தே தேவர்கள் போற்ற நின்று ஆடுவான்.

திருஅதிகைவீரட்டானம்

கரிபுன் புறமாய கழிந்தா ரிடுகாட்டில்
திருநின் றொருகையாற் றிருவா மதிகையுள்
எரியேந் தியபெருமா னெரிபுன் சடைதாழ
விரியும் புனல்சூடி யாடும்வீரட் டானத்தே. **#501**

கரிந்த புல்லிய ஊர்ப்புறமாய இறந்தவர்களை எரிக்கும் சுடுகாட்டில், ஒரு திருக்கரத்தில் எரி ஏந்தி ஆடும் பெருமான் திருமகள் நிலைபெற்ற திருவதிகையில் உள்ள வீரட்டானத்தில் எரி போன்று சிவந்த தன் சடைகள் தாழ்ந்து விரிய தலையில் கங்கை சூடி ஆடுவான்.

திருஅதிகைவீரட்டானம்

துளங்குஞ் சுடரங்கைத் துதைய விளையாடி
இளங்கொம் பனசாய லுமையோ டிசைபாடி
வளங்கொள் புனல்சூழ்ந்த வயலா ரதிகையுள்
விளங்கும் பிறைசூடி யாடும்வீரட் டானத்தே. **#502**

அசைந்து எரியும் அனலை அழகிய கையில் பொருந்த ஏந்தி விளையாடி, இளங்கொம்பு போன்ற உமையம்மையோடு இசை பாடி, வளமை உள்ள புனல் சூழ்ந்த வயல்களை உடைய திருவதிகையில் வீரட்டானத்தே முடிமிசை விளங்கும் பிறைசூடி ஆடுவான்.

திருஅதிகைவீரட்டானம்

பாதம் பலரேத்தப் பரமன் பரமேட்டி

பூதம் புடைசூழப் புலித்தோ லுடையாகக்
கீத முமைபாடக் கெடில வடபக்கம்
வேத முதல்வன்நின் றாடும்வீரட் டானத்தே. **#503**
பரம்பொருளாகிய பரமன் தன் திருவடிகளைப் பலரும் பரவி ஏத்தி வணங்கவும், பூத கணங்கள் புடை சூழவும், புலித்தோலை உடுத்து, உமையம்மை கீதம் பாடக் கெடில நதியின் வடகரையில் வேதமுதல்வனாய் வீரட்டானத்தே ஆடுவான்.

திருஅதிகைவீரட்டானம்

கல்லார் வரையரக்கன் றடந்தோள் கவின்வாட
ஒல்லை யடர்த்தவனுக் கருள்செய் ததிகையுள்
பல்லார் பகுவாய நகுவெண் டலைசூடி
வில்லா லெயிலெய்தா னாடும்வீரட் டானத்தே. **#504**
கற்கள் பொருந்திய கயிலை மலையை எடுத்த இராவணனின் பெரிய தோள்களின் அழகு வாடுமாறு அடர்த்துப் பின் அவனுக்கு அருள் பல செய்தும், முப்புரங்களை வில்லால் எய்து, அழித்தும், தனது பெருவீரத்தைப் புலப்படுத்திய இறைவன் பற்கள் பொருந்திய பிளந்தவாயை உடைய வெள்ளிய தலைமாலையைச் சூடித்திருவதிகை வீரட்டானத்தே ஆடுவான்.

திருஅதிகைவீரட்டானம்

நெடியா னான்முகனு நிமிர்ந்தானைக் காண்கிலார்
பொடியாடு மார்பானைப் புரிநூ லுடையானைக்
கடியார் கழுநீலம் மலரும் மதிகையுள்
வெடியார் தலையேந்தி யாடும்வீரட் டானத்தே. **#505**
பேருருக் கொண்ட திருமாலும், நான்முகனும் அழலுருவாய் ஓங்கி நிமிர்ந்தவனை, திருநீறணிந்த மார்பினனை, முப்புரி நூல் அணிந்தவனைக் காண்கிலார்: அப்பெருமான் மணம் கமழும் நீலப்பூக்கள் மலரும் திருவதிகையிலுள்ள வீரட்டானத்தே முடைநாற்றமுடைய தலை ஓட்டைக் கையில் ஏந்தி ஆடுகின்றான்.

திருஅதிகைவீரட்டானம்

அரையோ டலர்பிண்டி மருவிக் குண்டிகை
சுரையோ டுடனேந்தி யுடைவிட் டுழல்வார்கள்
உரையோ டுரையொவ்வாதுமையோடுடனாகி
விரைதோ யலர்தாரா னாடும்வீரட் டானத்தே. **#506**
அரச மரத்தையும் தழைத்த அசோக மரத்தையும் புனித மரங்களாகக் கொண்டு குண்டிகையாகச் சுரைக்குடுக்கையை ஏந்தித் திரியும்

புத்தர்கள், ஆடையற்றுத் திரியும் சமணர்கள் ஆகியவர்களின் பொருந்தாத வார்த்தைகளைக் கேளாதரர். மணம் கமழும் மாலை அணிந்த சிவபிரான் உமையம்மையோடு உடனாய் அதிகை வீரட்டானத்தே ஆடுவான். அவனை வணங்குங்கள்.

திருஅதிகைவீரட்டானம்

ஞாழல் கமழ்காழி யுண்ஞான சம்பந்தன்
வேழம் பொருதெண்ணீ ரதிகைவீரட் டானத்துச்
சூழுங் கழலானைச் சொன்ன தமிழ்மாலை
வாழுந் துணையாக நினைவார் வினையிலரே. **#507**

ஞாழற் செடிகளின் மலர்கள் மணம் கமழும் சீகாழியுள் தோன்றிய ஞானசம்பந்தன், நாணல்களால் கரைகள் அரிக்கப்படாமல் காக்கப்படும் தெளிந்த நீர்வளம் உடைய திருவதிகை வீரட்டானத்தில், ஆடும் கழல் அணிந்த அடிகளை உடைய சிவபிரானைப் போற்றிப் பாடிய இத்தமிழ் மாலையை, வாழ்வுத் துணையாக நினைபவர் வினையிலராவர்.

திருச்சிரபுரம்

சீர்காழி

திருச்சிரபுரம்,
பண் - பழந்தக்கராகம், சிரபுரமென்பதும் சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

பல்லடைந்த வெண்டலையிற்
பலிகொள்வ தன்றியும்போய்
வில்லடைந்த புருவநல்லாண்
மேனியில் வைத்தலென்னே
சொல்லடைந்த தொன்மறையோ
டங்கங் கலைகளெல்லாஞ்
செல்லடைந்த செல்வர்வாழுஞ்
சிரபுர மேயவனே. **#508**

பொருள் பொதிந்த சொற்கள் நிரம்பிய பழமையான வேதங்களையும், அவற்றின் அங்கங்களையும், பிற கலைகளையும் கற்றுணர்ந்த செல்வர்கள் வாழும் சிரபுரம் என்னும் சீகாழிப் பதியுள் எழுந்தருளிய இறைவனே! பற்கள் பொருந்திய வெண்மையான தலையில் பல இடங்களுக்கும் போய்ப் பலியேற்பதோடு வில் போன்ற புருவத்தை உடைய உமையம்மையை உன் திருமேனியில் கொண்டுள்ள காரணம் யாதோ?

சீர்காழி

கொல்லைமுல்லை நகையினாளோர்
கூறதுவன் றியும்போய்
அல்லல்வாழ்க்கைப் பலிகொண்டுண்ணு
மாதரவென் னைகொலாஞ்
சொல்லநீண்ட பெருமையாளர்
தொல்கலை கற்றுவல்லார்
செல்லநீண்ட செல்வமல்கு
சிரபுர மேயவனே. **#509**

சொல்லச் சொல்ல நீண்டு செல்லும் பெருமையாளரும், பழமையான கலைகளைக் கற்று வல்லவர்களுமாகிய அறிஞர்கள் வாழ்வதும், வழங்கத் தொலையாத செல்வ வளத்தை உடையதுமான சிரபுரம் மேவிய இறைவனே! முல்லை நிலத்தே தோன்றிய முல்லை யரும்பு

போன்ற பற்களை உடைய உமையம்மை ஓர் கூற்றில் விளங்கவும் சென்று அல்லற்படுவோர் ஏற்கும் பலி உணவை ஏற்று உண்ணுதலில் விருப்பம் கொள்வது ஏனோ?

சீர்காழி

நீரடைந்த சடையின்மேலோர்
நிகழ்மதி யன்றியும்போய்
ஊரடைந்த வேறதேறி யுண்பலி
கொள்வதென்னே
காரடைந்த சோலைசூழ்ந்து
காமரம் வண்டிசைப்பச்
சீரடைந்த செல்வமோங்கு
சிரபுர மேயவனே. **#510**

வண்டுகள் சீகாமரம் என்னும் பண்ணைப் பாடி மகிழ்ந்துறைவதும், மேகங்கள் தவழும் சோலைகளால் சூழப்பெற்றதும், அறநெறியில் விளைந்த செல்வம் பெருகி விளங்குவதுமாகிய சிரபுரம் மேவிய இறைவனே! கங்கையை அணிந்த சடைமுடியின் மேல் விளங்கும் பிறைமதி ஒன்றை அணிந்து, பல ஊர்களையும் அடைதற்கு ஏதுவாய ஆனேற்றில் ஏறிச் சென்று, பலரிடமும் பலி கொள்வது ஏனோ?

சீர்காழி

கையடைந்த மானினோடு
காரர வன்றியும்போய்
மெய்யடைந்த வேட்கையோடு
மெல்லியல் வைத்தலென்னே
கையடைந்த களைகளாகச்
செங்கழு நீர்மலர்கள்
செய்யடைந்த வயல்கள்சூழ்ந்த
சிரபுர மேயவனே. **#511**

களையெடுப்போர் கைகளில், மிக அதிகமான களைகளாகச் செங்கழுநீர் மலர்கள் வந்தடையும் அழகிய வயல்களால் சூழப்பட்ட சிரபுரம் மேவிய இறைவனே! கைகளில் மான், கரிய பாம்பு ஆகியவற்றைக் கொண்டு உனது திருமேனியில் பெரு விருப்போடு உமையம்மையை இடப்பாகமாகக் கொண்டுள்ளது ஏனோ?

சீர்காழி

புரமெரித்த பெற்றியோடும்
போர்மத யானைதன்னை

கரமெடுத்துத் தோலுரித்த
காரண மாவதென்னே
மரமுரித்த தோலுடுத்த
மாதவர் தேவரோடுஞ்
சிரமெடுத்த கைகள் கூப்புஞ்
சிரபுர மேயவனே. **#512**

மரத்தை உரித்ததால் ஆன மரவுரி என்னும் ஆடையை அணிந்த முனிவர்களும் தேவர்களும் கைகளைத் தலைமிசைக் கூப்பி வணங்கும் சிரபுரம் மேவிய இறைவனே! திரிபுரங்களை எரித்தழித்த பெரு வீரத்தோடு போர் செய்ய வந்த மத யானையைக் கையால் தூக்கி அதன் தோலை உரித்துப் போர்த்த, காரணம் யாதோ?

<u>சீர்காழி</u>

கண்ணுமூன்று முடையதன்றிக்
கையினில் வெண்மழுவும்
பண்ணுமூன்று வீணையோடு
பாம்புடன் வைத்தலென்னே
எண்ணுமூன்று கனலுமோம்பி
யெழுமையும் விழுமியராய்த்
திண்ணமூன்று வேள்வியாளர்
சிரபுர மேயவனே. **#513**

ஆகவனீயம், காருகபத்தியம், தக்ஷணாக்கினி என்று எண்ணப்படும் முத்தீயையும் வேட்பதுடன் எழு பிறப்பிலும் தூயவராய் உறுதிப்பாட்டுடன் தேவ யாகம், பிதிர் யாகம், இருடி யாகம் ஆகிய மூன்று வேள்விகளையும் புரியும் அந்தணாளர் வாழும் சிரபுரம் மேவிய இறைவனே; முக்கண்களை உடையவனாய்க் கைகளில் வெண் மழு, பண் மூன்றுடைய வீணை, பாம்பு ஆகியன கொண்டுள்ள காரணம் யாதோ?

<u>சீர்காழி</u>

குறைபடாத வேட்கையோடு
கோல்வளை யாளொருபாற்
பொறைபடாத வின்பமோடு
புணர்தரு மெய்ம்மையென்னே
இறைபடாத மென்முலையார்
மாளிகை மேலிருந்து
சிறைபடாத பாடலோங்கு
சிரபுர மேயவனே. **#514**

சிறிதும் சாயாத மெல்லிய தனங்களை உடைய இளமகளிர் மாளிகைகளின் மேல் இருந்து குற்றமற்ற பாடல்களைப் பாடும் மகிழ்ச்சி மிகுந்துள்ள சிரபுரம் மேவிய இறைவனே, குன்றாத வேட்கையோடு திரண்ட கை வளைகளை உடைய உமையம்மையை ஒரு பாகமாக அளவற்ற இன்பத்துடன் புணர்தற்குக் காரணம் என்னையோ.

சீர்காழி

மலையெடுத்த வாளரக்க
னஞ்சவொ ருவிரலால்
நிலையெடுத்த கொள்கையானே
நின்மல னேநினைவார்
துலையெடுத்த சொற்பயில்வார்
மேதகு வீதிதோறுஞ்
சிலையெடுத்த தோளினானே
சிரபுர மேயவனே. **#515**

கயிலை மலையை எடுத்த வாள்வலி உடைய இராவணன் அஞ்சுமாறு கால் விரல் ஒன்றினால் அடர்த்துத் தன் நிலையை எடுத்துக் காட்டிய செயலைப் புரிந்தவனே, குற்றமற்றவனே, தன்னை நினைவாரும் இருவினையொப்புடன் தோத்திரிக்கும் அன்பர்களும் மேன்மை மிக்க வீதி தொறும் வாழ விசயனுக்காக வில்லைச் சுமந்த தோளினை உடையவனே! சிரபுரம் மேவியவனே! கொள்கையனே என்று பாடம் இருக்கலாம். நிலை எடுத்த கொள்கை என்னே என்று பொருள் கொள்ளின் ஏனைய திருப்பாடல்களுடன் ஒக்கும்.

சீர்காழி

மாலினோடு மலரினானும்
வந்தவர் காணாது
சாலுமஞ்சப் பண்ணிநீண்ட
தத்துவ மேயதென்னே
நாலுவேத மோதலார்கள்
நந்துணை யென்றிறைஞ்சச்
சேலுமேயுங் கழனிசூழ்ந்த
சிரபுர மேயவனே. **#516**

நான்கு வேதங்களையும் ஓதும் அந்தணர்கள் நம் துணைவனே என்று போற்றி இறைஞ்சச் சேல் மீன்கள் மேயும் வயல்கள் சூழ்ந்த சிரபுரம் மேவிய இறைவனே! தாமே பெரியர் என வந்த திருமாலும் தாமரை மலரில் உறையும் நான்முகனும் இயலாது மிகவும் அஞ்சுமாறு செய்து மிக நீண்ட திருவுருவைக் கொண்டது ஏன்?

சீர்காழி

புத்தரோடு சமணர்சொற்கள்
புறனுரை யென்றிருக்கும்
பத்தர்வந்து பணியவைத்த
பான்மைய தென்னைகொலாம்
மத்தயானை யுரியும்போர்த்து
மங்கையொடும்முடனே
சித்தர்வந்து பணியுஞ்செல்வச்
சிரபுர மேயவனே. **#517**

மதம் பொருந்திய யானையின் தோலைப் போர்த்து உமையம்மையாருடன் சித்தர்கள் பலரும் பணியச் செல்வச் சிரபுரநகரில் மேவிய இறைவனே! புத்தர்கள் சமணர்கள் ஆகியபுறச்சமயிகளின் வார்த்தைகள் புறனுரை என்று கருதும் பத்தர் வந்து பணியுமாறு செய்த பான்மையாதோ? உரியும் - உம்மை இசைநிறை.

சீர்காழி

தெங்குநீண்ட சோலைசூழ்ந்த
சிரபுர மேயவனை
அங்கநீண்ட மறைகள்வல்ல
வணிகொள்சம் பந்தனுரை
பங்கநீங்கப் பாடவல்ல
பத்தர்கள் பாரிதன்மேற்
சங்கமோடு நீடிவாழ்வர்
தன்மையி னாலவரே. **#518**

தென்னைகள் நீண்டு வளர்ந்து பயன்தரும் சோலைகள் சூழ்ந்த சிரபுரம் மேவிய இறைவனை ஆறு அங்கங்களுடன் விரிந்துள்ள வேதங்களை அறிந்துணர்ந்த அழகிய ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய இப்பதிக வாசகங்களைத் தம் குற்றங்கள் நீங்கப் பாடவல்ல பக்தர்கள் இவ்வுலகில் அடியவர் கூட்டங்களோடு வாழும் தன்மையினால் வாழ்நாள் பெருகி வாழ்வர்.

திருச்சேய்ஞலூர்

திருச்சேய்ஞலூர்

திருச்சேய்ஞலூர்,
பண் - பழந்தக்கராகம், சோழநாட்டில் சுப்பிரமணியசுவாமியினா
லுண்டான தலம். ,
சுவாமிபெயர் : சத்தகிரீசுவரர்.
தேவியார் : சகிதேவிநாயகியம்மை.

நூலடைந்த கொள்கையாலே
நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க
நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழன்மேவி
யருமறை சொன்னதென்னே
சேலடைந்த தண்கழனிச்
சேய்ஞலூர் மேயவனே. #519

சேல் மீன்கள் நிறைந்த குளிர்ந்த வயல்களால் சூழப்பட்ட திருச்சேய்ஞலூரில் மேவிய இறைவனே! வேதம் முதலிய நூல்களில் விதிக்கப்பட்ட முறைகளினால் உன் திருவடிகளை அடைதற்கு முயன்றும் அஞ்ஞானம் நீங்காமையால் சனகாதி முனிவர்களாகிய நால்வர் உன்னை அடைந்து உண்மைப் பொருள் கேட்க, அவர்கள் தெளவு பெறுமாறு கல்லால மரநிழலில் வீற்றிருந்து அருமறை நல்கிய நல்லறத்தை எவ்வாறு அவர்கட்கு உணர்த்தியருளினாய்? கூறுவாயாக.

திருச்சேய்ஞலூர்

நீறடைந்த மேனியின்க
ணேரிழை யாளொருபால்
கூறடைந்த கொள்கையன்றிக்
கோல வளர்சடைமேல்
ஆறடைந்த திங்கள்சூடி
யரவம ணிந்ததென்னே
சேறடைந்த தண்கழனிச்
சேய்ஞலூர் மேயவனே. #520

சேறு மிகுந்த குளிர்ந்த வயல்களால் சூழப்பட்ட திருச்சேய்ஞலூரில் எழுந்தருளிய இறைவனே! திருநீறணிந்த தன் திருமேனியின்கண் உமையம்மை ஒருபால் விளங்க அழகியதாய் நீண்டு வளர்ந்த சடைமேல் கங்கையையும் தன்னைச் சரணாக அடைந்த திங்களையும் சூடிப்

பாம்பையும் அணிந்துள்ள காரணம் யாதோ?

திருச்சேய்ஞலூர்

ஊனடைந்த வெண்டலையி
னோடுப லிதிரிந்து
கானடைந்த பேய்களோடு
பூதங்க லந்துடனே
மானடைந்த நோக்கிகாண
மகிழ்ந்தெரி யாடலென்னே
தேனடைந்த சோலைமல்கு
சேய்ஞலூர் மேயவனே. **#521**

வண்டுகள் நிறைந்த சோலைகள் செறிந்த திருச்சேய்ஞலூரில் எழுந்தருளிய இறைவனே! ஊன்பொருந்திய வெண்மையான தலையோட்டைக் கையில் ஏந்தி, உண் பலிக்குத் திரிந்து காட்டில் வாழும் பேய்களோடு பூதகணங்களும் கலந்து சூழ, மான் போன்ற கண்ணை உடைய உமையம்மை காண மகிழ்வோடு இடுகாட்டில் எரியாடுவது ஏன்?

திருச்சேய்ஞலூர்

வீணடைந்த மும்மதிலும்
வின்மலை யாவரவின்
நாணடைந்த வெஞ்சரத்தா
னல்லெரி யூட்டலென்னே
பாணடைந்த வண்டுபாடும்
பைம்பொழில் சூழ்ந்தழகார்
சேணடைந்த மாடமல்கு
சேய்ஞலூர் மேயவனே. **#522**

பண்ணிசையோடு வண்டுகள் பாடும் பசுமையான பொழில் சூழ்ந்ததும், அழகியதாய் உயர்ந்த மாட வீடுகள் நிறைந்ததுமான திருச்சேய்ஞலூரில் எழுந்தருளிய இறைவனே! மும்மதில்களும் வீணடையுமாறு மலையை வில்லாகவும் அரவை அவ்வில்லின் நாணாகவும் கொண்டு கொடிய அம்பால் பெரிய எரியை அம்முப்புரங்களுக்கு ஊட்டியது ஏன்?

திருச்சேய்ஞலூர்

பேயடைந்த காடிடமாப்
பேணுவ தன்றியும்போய்
வேயடைந்த தோளியஞ்ச
வேழமுரி த்ததென்னே

வாயடைந்த நான்மறையா
றங்கமோ டைவேள்வித்
தீயடைந்த செங்கையாளர்
சேய்ஞலூர் மேயவனே. **#523**

வாயினால் ஓதப்பெற்ற நான்மறைகளோடு ஆறு அங்கங்களையும் கற்று, ஐவகை வேள்விகளை இயற்றி, தரப் பொருந்திய சிவந்த கையினராய் விளங்கும் அந்தணர் வாழும் சேய்ஞலூர் மேயவனே! சுடுகாட்டை இடமாகக் கொண்டு ஆடி உகப்பதோடு அன்றியும் சென்று மூங்கில் போன்ற தோளினை உடைய உமையம்மை அஞ்ச யானையை உரித்தது ஏனோ?

<u>திருச்சேய்ஞலூர்</u>

காடடைந்த வேனமொன்றின்
காரண மாகிவந்து
வேடடைந்த வேடனாகி
விசயனொ டெய்ததென்னே
கோடடைந்த மால்களிற்றுக்
கோச்செங்க ணாற்கருள்செய்
சேடடைந்த செல்வர்வாழுஞ்
சேய்ஞலூர் மேயவனே. **#524**

கோடுகளோடு கூடிய பெரிய யானைப் படைகளை உடைய கோச்செங்கட் சோழனுக்கு அருள் செய்தவனும், பெருமை பொருந்திய செல்வர்கள் வாழும் திருச்சேய்ஞலூரில் மேவியவனுமாகிய இறைவனே! வில்லடிபட்டுக் காட்டுள் சென்று பதுங்கிய பன்றி ஒன்றின் காரணமாக, தான் வேடன் உருத்தாங்கி வந்து அருச்சுனனோடு போர் புரிந்தது ஏனோ?

<u>திருச்சேய்ஞலூர்</u>

பீரடைந்த பாலதாட்டப்
பேணாத வன்றாதை
வேரடைந்து பாய்ந்ததாளை
வேர்த்தடிந் தான்றனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித்
தலைமைவ குத்ததென்னே
சீரடைந்த கோயின்மல்கு
சேய்ஞலூர் மேயவனே. **#525**

சிறப்புமிக்க மாடக் கோயிலாய் விளங்கும் திருச்சேய்ஞலூரில் விளங்கும் இறைவனே! பசுவின் முலைக்காம்பின் வழிச் சுரந்து நின்ற பாலைச்

சண்டீசர் மணலால் தாபித்த இலிங்கத்துக்கு ஆட்டி வழிபட, அதனை விரும்பாது சினந்து பாற்குடத்தை இடறிய தன் தந்தையின் காலைத் தடிந்த சண்டீசரின் பக்தியை மெச்சி உன் தாரையும் மாலையையும் சூட்டி அவரைச் சிவகணங்களின் தலைவர் ஆக்கியது ஏனோ?

திருச்சேய்ஞலூர்

மாவடைந்த தேரரக்கன் வலி
தொலை வித்தவன்றன்
நாவடைந்த பாடல்கேட்டு
நயந்தருள் செய்ததென்னே
பூவடைந்த நான்முகன்போற்
பூசுரர் போற்றிசெய்யும்
சேவடைந்த வூர்தியானே
சேய்ஞலூர் மேயவனே. **#526**

தாமரை மலரில் விளங்கும் நான்முகன் போன்ற அந்தணர்கள் போற்றும், விடையை ஊர்தியாகக் கொண்டவனே! திருச்சேய்ஞலூரில் மேவிய இறைவனே! குதிரைகள் பூட்டப்பட்ட தேரை உடைய இராவணனது வலிமையை அழித்து அவன் நாவினால் பாடிய பாடலைக் கேட்டு விரும்பி அவனுக்கு அருள்கள் பல செய்தது ஏனோ?

திருச்சேய்ஞலூர்

காரடைந்த வண்ணனோடு
கனகம னையானும்
பாரடைந்தும் விண்பறந்தும்
பாதமு டிகாணார்
சீரடைந்து வந்துபோற்றச்
சென்றருள் செய்ததென்னே
தேரடைந்த மாமறுகிற்
சேய்ஞலூர் மேயவனே. **#527**

தேர் ஓடும் அழகிய வீதிகளை உடைய திருச்சேய்ஞலூர் மேவிய சிவனே! கருமை நிறம் பொருந்திய திருமால் பொன்வண்ணனாகிய பிரமன் ஆகியோர் உலகங்களை அகழ்ந்தும் பறந்தும் சென்று அடிமுடிகளைக் காணாராய்த் தம் தருக்கொழிந்து பின் அவர்கள் போற்ற அவர்பால் சென்று அருள் செய்தது ஏனோ?

திருச்சேய்ஞலூர்

மாசடைந்த மேனியாரு
மனந்திரி யாதகஞ்சி

நேசடைந்த வூணினாரு
நேசமிலாததென்னே
வீசடைந்த தோகையாட
விரைகம ழும்பொழில்வாய்த்
தேசடைந்த வண்டுபாடுஞ்
சேய்ஞலூர் மேயவனே. **#528**

வீசி ஆடுகின்ற தோகைகளை உடைய மயில்கள் ஆடுவதும், மணம் கமழும் பொழில்களில் ஒளி பொருந்திய வண்டுகள் பாடுவதும் செய்யும் திருச்சேய்ஞலூரில் மேவிய இறைவனே! அழுக்கேறிய உடலினரும், மனத்தில் வெறுப்பின்றிக் கஞ்சியை விரும்பி உணவாகக் கொள்வோரும் ஆகிய சமண புத்தர்கள் உன்பால் நேசம் இலாததற்குக் காரணம் யாதோ?

<u>திருச்சேய்ஞலூர்</u>

சேயடைந்த சேய்ஞலூரிற்
செல்வன சீர்பரவித்
தோயடைந்த வண்வயல்சூழ்
தோணிபு ரத்தலைவன்
சாயடைந்த ஞானமல்கு
சம்பந்தனின்னுரைகள்
வாயடைந்து பாடவல்லார்
வானுல காள்பவரே. **#529**

முருகப் பெருமான் வழிபட்ட சிறப்பினதாகிய திருச்சேய்ஞலூரில் விளங்கும் செல்வனாகிய சிவபிரானது புகழைப் போற்றி நீர்வளம் சான்ற, வளமையான வயல்களால் சூழப்பட்ட தோணிபுரத்தின் தலைவனும், நுட்பமான ஞானம் மிக்கவனுமாகிய சம்பந்தனுடைய இன்னுரைகளை வாயினால் பாடி வழிபட வல்லவர் வானுலகு ஆள்வர்.

திருநள்ளாறு

திருநள்ளாறு

திருநள்ளாறு,
பண் - பழந்தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ள சப்த தியாகர் தலங்களிலொன்று. ,
சுவாமிபெயர் : தெர்ப்பாரணியர்.
தேவியார் : போகமார்த்தபூண்முலையம்மை.

போகமார்த்த பூண்முலையாள்
தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள்
ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன்
கோவண வாடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான்
மேயது நள்ளாறே. **#530** ★★★★★

இன்பத்துக்கு நிலைக்களனாயுள்ளனவும் அணிகலன்கள் பொருந்தியனவுமான தனங்களை உடைய உமையம்மையைத் தன்னோடு அழகிய திருமேனியின் இடப் பாகமாக ஒன்றாக இருக்கச் செய்தவனும், பசிய கண்களையும் வெண்மையான நிறத்தையும் உடைய ஆனேற்றைத் தனது ஊர்தியாகக் கொண்ட தலைவனும், மேலானவனும், திருமேனியின் மேல் போர்த்த தோலாடையுடையவனும், இடையிற் கட்டிய கோவண ஆடையின் மேல் நாகத்தைக் கச்சாக அணிந்தவனுமான நம் பெருமான் எழுந்தருளி இருக்கும் தலம் திருநள்ளாறு.

திருநள்ளாறு

தோடுடைய காதுடையன்
தோலுடை யன்தொலையாப்
பீடுடைய போர்விடையன்
பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோ
டேழ்கட லுஞ்சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான்
மேயது நள்ளாறே. **#531**

அம்மை பாகத்தே உள்ள இடச் செவியில் தோடணிந்த காதினை உடையவனும் தோலை ஆடையாகக் கொண்டவனும், குன்றாப்புகழ்

உடையதும் போர் செய்தலில் வல்லதுமான விடை ஊர்தியனும் மலைமகளை ஒரு பாகமாகக் கொண்டவனும், அடுக்குகளாக அமைந்த மேல் உலகங்களோடு ஏழ்கடலாலும் சூழப்பட்ட நாடு என்னும் இந்நிலவுலகமும் உடையவனுமாகிய, எம்பெருமான் விரும்பிய தலம் திருநள்ளாறு ஆகும்.

திருநள்ளாறு

ஆன்முறையா லாற்றவெண்ணீ
றாடி யணியிழையோர்
பான்முறையால் வைத்தபாதம்
பத்தர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவுஞ்
சூலமும் பற்றியகை
நான்மறையான் நம்பெருமான்
மேயது நள்ளாறே. **#532**

பசுவிடமிருந்து முறையாக எடுக்கப்பட்ட திரு வெண்ணீற்றை மேனி முழுதும் பூசி அழகிய அணிகலன்களைப் புனைந்த உமையம்மையை ஒரு பாகமாக வைத்துள்ள, தன் திருவடிகளைப் பக்தர்கள் பணிந்து போற்ற, இளமான், வெண்மையான மழு, சூலம் ஆகியவற்றை ஏந்திய கையினனாய் நான்மறைகளையும் அருளிய நம் பெருமான் மேவிய தலம் திருநள்ளாறு ஆகும்.

திருநள்ளாறு

புல்கவல்ல வார்சடைமேற்
பூம்புனல் பெய்தயலே
மல்கவல்ல கொன்றைமாலை
மதியோ டுடன்சூடிப்
பல்கவல்ல தொண்டர்தம்பொற்
பாதநி ழற்சேர
நல்கவல்ல நம்பெருமான்
மேயது நள்ளாறே. **#533**

பொருந்திய நீண்ட சடையின் மேல் கங்கையை அணிந்து, அதன் அருகில் கொன்றை மாலையையும் பிறைமதியையும் ஒருசேரச் சூடித் தன்னைச் சார்ந்து வாழும் தொண்டர்கட்குத் தனது திருவடி நிழலைச் சேரும் பேற்றை நல்கும் பெருமான் மேவிய தலம் திருநள்ளாறு ஆகும்.

திருநள்ளாறு

ஏறுதாங்கி யூர்திபேணி

யேர்கொள் இளமதியம்
ஆறுதாங்குஞ் சென்னிமேலோர்
ஆடர வஞ்சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த
மார்பினில் நிரைகொன்றை
நாறுதாங்கு நம்பெருமான்
மேயது நள்ளாறே. **#534**

ஆன்ஏற்றைக் கொடியாகத் தாங்கியும் அதனையே ஊர்தியாக விரும்பி ஏற்றும் அழகிய இளம்பிறை கங்கை ஆகியன பொருந்திய சடைமுடியின்மேல் ஆடும் பாம்பைச் சூடியும் திருநீறு பூசிப் பூணூலோடு விளங்கும் மார்பில் கொன்றை மாலையின் மணம் கொண்டவனுமான நம் பெருமான் மேவிய தலம் திருநள்ளாறு ஆகும்.

<u>திருநள்ளாறு</u>

திங்களுச்சி மேல்விளங்குந்
தேவன் இமையோர்கள்
எங்களுச்சி யெம்மிறைவன்
என்றடி யேயிறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்குந்
தன்னடி யார்கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான்
மேயது நள்ளாறே. **#535**

திங்கள் திருமுடியின் உச்சி மீது விளங்கும் தேவனாய், தேவர்கள் எங்கள் உச்சியாய் உள்ள எம் பெருமானே! என்று அடிபரவவும், தலையால் தன்னை வணங்கும் அடியவர்களும் எங்கள் முடிமீது விளங்கும் நம் பெருமான் என்று போற்றவும் விளங்கும் சிவபிரான் மேவிய தலம் திருநள்ளாறு ஆகும்.

<u>திருநள்ளாறு</u>

வெஞ்சுடர்த்தீ யங்கையேந்தி
விண்கொண் முழவதிர
அஞ்சிடத்தோ ராடல்பாடல்
பேணுவ தன்றியும்போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள்சூடித்
திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான்
மேயது நள்ளாறே. **#536**

கொடிய ஒளி பொருந்திய நெருப்பைக் கையில் ஏந்தி விண்ணளவும்

ஒலிக்கும் முழவு முழங்கப் பலரும் அஞ்சும் சுடுகாட்டில் ஆடல் பாடலுடன் ஓர் இளம்பிறையைச் சூடி, விளங்கும் கண்டத்தில் நஞ்சினை நிறுத்திய நம் பெருமான் மேவிய தலம் திருநள்ளாறு ஆகும்.

திருநள்ளாறு

சிட்டமார்ந்த மும்மதிலுஞ்
சிலைவரைத் தீயம்பினால்
சுட்டுமாட்டிச் சுண்ணவெண்ணீ
றாடுவ தன்றியும்போய்ப்
பட்டமார்ந்த சென்னிமேலோர்
பான்ம தியஞ்சூடி
நட்டமாடும் நம்பெருமான்
மேயது நள்ளாறே. **#537**

பெருமை மிக்க முப்புரங்களையும் வரை சிலையில் பொருந்திய தீயாகிய அம்பினால் சுட்டு அழித்து, திருவெண்ணீற்றுப் பொடியில் திளைத்து ஆடி, பட்டம் என்னும் அணிகலன் கட்டியசென்னியின் மேல் பால் போலும் நிறமுடையதொரு பிறைமதியைச் சூடி நடனம் ஆடும் நம்பெருமான் மேவிய தலம் திருநள்ளாறு ஆகும்.

திருநள்ளாறு

உண்ணலாகா நஞ்சுகண்டத்
துண்டுடனே யொடுக்கி
அண்ணலாகா வண்ணல்நீழல்
ஆரழல் போலுருவம்
எண்ணலாகா வுள்வினையென்
றெள்க வலித்திருவர்
நண்ணலாகா நம்பெருமான்
மேயது நள்ளாறே. **#538**

யாராலும் உண்ணமுடியாத நஞ்சினை உண்டு அதனைத் தம் கண்டத்தில் நிறுத்தியவரும், யாராலும் அணுக இயலாத தலைவரும் ஒளி பொருந்திய அழல் போன்ற திருவுருவினரும் அநாதியாகவே உள்ள வினையால் எண்ண இயலவில்லையே என மனம் வருந்திய திருமால் பிரமர்களால் நணுக முடியாதவருமான நம் பெருமான் மேவிய தலம் திருநள்ளாறு ஆகும்.

திருநள்ளாறு

மாசுமெய்யர் மண்டைத் தேரர்
குண்டர்கு ணமிலிகள்

பேசும்பேச்சை மெய்யென்றெண்ணி
யந்நெறி செல்லன்மின்
மூசுவண்டார் கொன்றைசூடி
மும்மதிளும் முடனே
நாசஞ்செய்த நம்பெருமான்
மேயது நள்ளாறே. **#539**

அழுக்கேறிய உடலினராகிய சமணரும், கையில் மண்டை என்னும் உண்கலத்தை ஏந்தித் திரியும் புத்தர்களும் ஆகிய குண்டர்களும் நற்குணம் இல்லாதவர்கள். அவர்கள் பேசும் பேச்சை மெய்யென்று எண்ணி அவர்கள் சமயங்களைச் சாராதீரர். வண்டுகள் மொய்த்துப் பொருந்தும் கொன்றை மலர் மாலையைச் சூடி மும்மதில்களையும் ஒருசேர அழித்துத் தேவர்களைக் காத்தருளிய நம் பெருமான் மேவிய திருநள்ளாற்றைச் சென்று வழிபடுமின்.

திருநள்ளாறு

தண்புனலும் வெண்பிறையுந்
தாங்கிய தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழி
ஞானசம் பந்தன்நல்ல
பண்புநள்ளா றேத்துபாடல்
பத்தும் இவைவல்லார்
உண்புநரங்கி வானவரோ
டுலகில் உறைவாரே. **#540**

நட்புக்கு ஏற்ற நல்லோர் வாழும் சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன், குளிர்ந்த கங்கையையும் வெண்மையான பிறையையும் தாங்கிய தாழ்ந்த சடைமுடியை உடைய சிவபிரான் எழுந்தருளிய, நல்லியல்பு வாய்ந்தோர் வாழும் திருநள்ளாற்றைப் போற்றிப் பாடிய இத்திருப்பதிகப்பாடல்கள் பத்தையும் ஓத வல்லவர் பிராரத்த கன்ம வலிமை குறையப் பெற்று வானவர்களோடு தேவருலகில் வாழ்வர்.

திருவலிவலம்

திருவலிவலம்

திருவலிவலம்,
பண் - பழந்தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மனத்துணைநாதர்.
தேவியார் : வாளையங்கண்ணியம்மை.

ஒல்லையாறி யுள்ளமொன்றிக்
கள்ளமொழிந் துவெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து
காமவினை யகற்றி
நல்லவாறே யுன்றனாமம்
நாவில்நவின் றேத்த
வல்லவாறே வந்துநல்காய்
வலிவலமே யவனே. **#541**

திருவலிவலம் மேவிய இறைவனே! பரபரப்பு அடங்கி, மனம் ஒன்றி, வஞ்சம் வெஞ்சொல் தவிர்ந்து தூய்மையோடு, காமம் முதலிய குற்றங்களைக் கடிந்து, நல்ல முறையில் உன் நாமமாகிய திருவைந்தெழுத்தை என் வல்லமைக்குத் தக்கவாறு நான் ஓதி வழிபடுகின்றேன், வந்து அருள்புரிவாயாக.

திருவலிவலம்

இயங்குகின்ற விரவிதிங்கண்
மற்றுநற் றேவரெல்லாம்
பயங்களாலே பற்றிநின்பாற்
சித்தந்தெள கின்றிலர்
தயங்குசோதீ சாமவேதா
காமனைக்காய்ந் தவனே
மயங்குகின்றேன் வந்துநல்காய்
வலிவலமே யவனே. **#542**

வானவெளியில் இயங்குகின்ற ஞாயிறு, திங்கள் மற்றும் நல்ல தேவர்கள் எல்லோரும் அச்ச மேலீட்டினால் உன்னைப் பரம் பொருள் என்று தம் சித்தம் தெளயாதவராயுள்ளனர். விளங்கும் சோதி வடிவினனே, சாம வேதம் பாடி மகிழ்பவனே, காமனைக் காய்ந்தவனே, எவ்வாறு உன்னைத் தெளவது என்று யானும் மயங்குகின்றேன். வந்து அருள்புரிவாயாக.

திருவலிவலம்

பெண்டிர்மக்கள் சுற்றமென்னும்
பேதைப்பெருங் கடலை
விண்டுபண்டே வாழமாட்டேன்
வேதனைநோய் நலியக்
கண்டுகண்டே யுன்றனாமங்
காதலிக்கின்ற துள்ளம்
வண்டுகிண்டிப் பாடுஞ்சோலை
வலிவலமே யவனே. **#543**

வண்டுகள் தேனுண்ணற் பொருட்டு மலர்களைக் கிண்டி இசை பாடும் சோலைகள் சூழ்ந்த திருவலிவலத்துள் மேவிய இறைவனே, மனைவி மக்கள் சுற்றம் முதலான பாசப் பெருங்கடலை இளைய காலத்திலேயே கடந்து வாழ்ந்தேன் அல்லேன். வேதனை. நோய் ஆகியன நலிய உலகியற் பாசங்கள் துன்பம் தருவன என்பதைக் கண்டு உன் திருநாமம் சொல்வதொன்றே இன்பமாவது என்பதைக் கண்டு அதனை ஓத உள்ளம் விரும்புகிறது. அருள் புரிவாயாக.

திருவலிவலம்

மெய்யராகிப் பொய்யைநீக்கி
வேதனையைத் துறந்து
செய்யரானார் சிந்தையானே
தேவர்குலக் கொழுந்தே
நைவனாயே னுன்றனாமம்
நாளும்நவிற் றுகின்றேன்
வையமுன்னே வந்துநல்காய்
வலிவலமே யவனே. **#544**

பொய்மையை விலக்கி, உண்மையை மேற்கொண்டு பந்த பாசங்களாகிய வேதனைகளைத் துறந்து செம்மையான மனமுடையோராய் வாழும் அன்பர்களின் சிந்தையுள் இருப்பவனே, தேவர்களின் குலக்கொழுந்தே! நான் வருந்தி நிற்கிறேன். உன்றன் திருநாமத்தை நாள்தோறும் ஓதி வருகிறேன். வலிவலம் மேவிய இறைவனே. வையகத்தே பலரும் காண வந்து அருள்புரிவாயாக.

திருவலிவலம்

துஞ்சும்போதுந் துற்றும்போதுஞ்
சொல்லுவனுன் றிறமே
தஞ்சமில்லாத் தேவர்வந்துன்

றாளிணைக்கரழ்ப் பணிய
நஞ்சையுண்டாய்க் கென்செய்கேனோ
நாளும்நினைந் தடியேன்
வஞ்சமுண்டென் றஞ்சுகின்றேன்
வலிவலமே யவனே. **#545**

திருவலிவலம் மேவிய இறைவனே, உறங்கும்போதும் உண்ணும்போதும் உன்றன் புகழையே சொல்லுவேன். தேவர்கள் வேறு புகலிடம் இல்லாது உன்பால் வந்து உன் தாளிணைகளின் கீழ்ப் பணிய அவர்களைக் காத்தற்பொருட்டு நஞ்சை உண்ட உன் கருணையை நாளும் நினைதலையன்றி வேறு என் செய வல்லேன்? உன் அருள் பெறுதற்குத் தடையாக என்பால் வஞ்சம் உண்டென்று அஞ்சுகின்றேன். அதனைப் போக்கி எனக்கு அருள்.

<u>திருவலிவலம்</u>

புரிசடையாய் புண்ணியனே
நண்ணலார்மூ வெயிலும்
எரியவெய்தா யெம்பெருமா
னென்றிமையோர் பரவும்
கரியுரியாய் காலகாலா
நீலமணி மிடற்று
வரியரவா வந்துநல்காய்
வலிவலமே யவனே. **#546**

திருவலிவலம் மேவிய இறைவனே, முறுகிய சடையை உடையவனே, புண்ணிய வடிவினனே! பகைவர் தம் முப்புரங்களும் எரியுமாறு அம்பெய்தவனே என்று தேவர்கள்பரவும், யானையின் தோலை அணிந்தவனே, காலனுக்குக் காலனே! நீலமணி போலும் கண்டத்தையும் வரிந்து கட்டப் பெற்ற பாம்பினையும் உடையவனே! என்பால் வந்து அருள்புரிவாயாக.

<u>திருவலிவலம்</u>

தாயும்நீயே தந்தைநரயே
சங்கரனே யடியேன்
ஆயும்நின்பா லன்புசெய்வா
னாதரிக்கின் றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னு
ளைவர்நின்றொன் றலொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன்
வலிவலமே யவனே. **#547**

திருவலிவலம் மேவிய இறைவனே! சங்கரனே எனக்குத் தாயும் தந்தையும் நீயேயாவாய். அடியேன் உள்ளம் சிவஞானிகளால் ஆய்ந்துணரப்படும் நின்பால் அன்பு செய்ய விரும்புகின்றது. எனக்குப் படைத்தளிக்கப்பட்ட இவ்வுடலிடைப் பொருந்திய ஐம்பொறிகள் உன்னைப் பொருந்தவொட்டாமல் தடுக்கின்றன. இம்மாயத்தைக் கண்டு யான் அஞ்சுகின்றேன். அருள்புரிவாயாக.

திருவலிவலம்

நீரொடுங்குஞ் செஞ்சடையாய்
நின்னுடையபொன் மலையை
வேரொடும்பீழ்ந் தேந்தலுற்ற
வேந்தனிரா வணனைத்
தேரொடும்போய் வீழ்ந்தலறத்
திருவிரலா லடர்த்த
வாரொடுங்குங் கொங்கைபங்கா
வலிவலமே யவனே. **#548**

திருவலிவலம் மேவிய இறைவனே தருக்கி வந்த கங்கை செயல் இழந்து ஒடுங்கிய செஞ்சடையை உடையவனே, உன்னுடைய பொன்மயமான கயிலை மலையை வேரோடும் பிடுங்கி ஏந்தத்தொடங்கிய இலங்கை வேந்தன் இராவணனைத் தேரோடும் வீழ்ந்து அலறுமாறு உன் கால் திருவிரலால் அடர்த்தவனே, கச்சு அணிந்த பெருத்த தனங்களை உடைய உமைபங்கனே! வந்து நல்காய்.

திருவலிவலம்

ஆதியாய நான்முகனும்
மாலுமறி வரிய
சோதியானே நீதியில்லேன்
சொல்லுவனின் றிறமே
ஓதிநாளு முன்னையேத்து
மென்னைவினை யவலம்
வாதியாமே வந்துநல்காய்
வலிவலமே யவனே. **#549**

திருவலிவலம் மேவிய இறைவனே! உலகங்களைப் படைத்துக் காத்தலில் ஆதியானவர்களாகிய நான்முகனும், திருமாலும் அறிதற்கரிய சோதிப் பிழம்பாய்த் தோன்றியவனே! யான் நீதியில்லாதேன் ஆயினும் உன் புகழையே சொல்லுகின்றேன். நாள்தோறும் உன்புகழையே ஓதி உன்னையே ஏத்தும் என்னை வினைகளும் அவற்றின் பயனாய துன்பங்களும் வந்து தாக்காமல் வந்து அருள் புரிவாயாக.

திருவலிவலம்

பொதியிலானே பூவணத்தாய்
பொன்றிகழுங் கயிலைப்
பதியிலானே பத்தர்சித்தம்
பற்றுவிடா தவனே
விதியிலாதார் வெஞ்சமணர்
சாக்கியரென் றிவர்கள்
மதியிலாதா ரென்செய்வாரோ
வலிவலமே யவனே. **#550**

திருவலிவலம் மேவிய இறைவனே, பொதிய மலையைத் தனக்கு இடமாகக் கொண்டவனே, திருப்பூவணம் என்னும் தலத்தில் உறைபவனே, தன்பால் பக்தி செய்யும் அன்பர்களின் சித்தங்களில் எழுந்தருளி இருப்பவனே, கொடிய சமணர்களும் சாக்கியர்களும் உன்னை அடையும் புண்ணியம் இல்லாதவர்கள். அறிவற்ற அவர்கள் தங்கள் சமய நெறியில் என்ன பயனைக் காண்பார்களோ?.

திருவலிவலம்

வன்னிகொன்றை மத்தஞ்சூடும்
வலிவலமே யவனைப்
பொன்னிநாடன் புகலிவேந்தன்
ஞானசம்பந்தன் சொன்ன
பன்னுபாடல் பத்தும்வல்லார்
மெய்த்தவத்தோர் விரும்பும்
மன்னுசோதி யீசனோடே
மன்னியிருப் பாரே. **#551**

வன்னி கொன்றை மலர், ஊமத்தை மலர் ஆகியவற்றைச் சூடும் திருவலிவலம் மேவிய இறைவனைக் காவிரி நாட்டிலுள்ள புகலி என்னும் சரகாழிப் பதிக்கு வேந்தனாய ஞானசம்பந்தண் புகழ்ந்து ஓதியனவும் எக்காலத்தும் ஓதத்தக்கனவும் ஆகிய இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓத வல்லவர், உண்மைத் தவமுடையோர் விரும்பும் நிலை பெற்ற, சோதி வடிவான ஈசனோடு மன்னியிருப்பர்.

திருச்சோபுரம்

திருச்சோபுரம்

திருச்சோபுரம்,
பண் - பழந்தக்கராகம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சோபுரநாதர்.
தேவியார் : சோபுரநாயகியம்மை.

வெங்கணானை யீருரிவை
போர்த்துவிளங் கும்மொழி
மங்கைபாகம் வைத்துகந்த
மாண்பதுவென் னைகொலாம்
கங்கையோடு திங்கள்சூடிக்
கடிகமழுங் கொன்றைத்
தொங்கலானே தூயநீற்றாய்
சோபுரமே யவனே. **#552**

கங்கை திங்கள் ஆகியவற்றை முடிமிசைச் சூடி மணம் கமழும் கொன்றை மலர் மாலையை அணிந்து தூய திருநீறு பூசித் திருச்சோபுரத்தில் விளங்கும் இறைவனே! கொடிய யானையை உரித்து அதன் தோலைப் போர்த்திய, விளக்கமான மொழிகளைப் பேசும் மலைமங்கையை இடப்பாகத்தே கொண்டு மகிழும் உனது செயலின் மாண்பு எத்தகையதோ?.

திருச்சோபுரம்

விடையமர்ந்து வெண்மழுவொன்
றேந்திவிரிந் திலங்கு
சடையொடுங்கத் தண்புனலைத்
தாங்கியதென் னைகொலாம்
கடையுயர்ந்த மும்மதிலுங்
காய்ந்தனலுள் ளழுந்தத்
தொடைநெகிழ்ந்த வெஞ்சிலையாய்
சோபுரமே யவனே. **#553**

வாயில்களாற் சிறந்த முப்புரங்களும் அனலுள் அழுந்துமாறு சினத்தோடு அம்பு செலுத்திய கொடிய மலை வில்லை உடையவனே! திருச்சோபுரம் மேவிய இறைவனே! விடைமரது அமர்ந்து வெண்மையான மழு ஒன்றைக் கையில் ஏந்தி விரிந்து விளங்கும் சடையின்கண் ஒடுங்குமாறு குளிர்ந்த நீரைத் தடுத்துத் தாங்கி இருத்தற்குக் காரணம் என்னையோ?.

திருச்சோபுரம்

தீயராய வல்லரக்கர்
செந்தழலுள் ளழுந்தச்
சாயவெய்து வானவரைத்
தாங்கியதென் னைகொலாம்
பாயும்வெள்ளை யேற்றையேறிப்
பாய்புலித்தோலுடுத்த
தூயவெள்ளை நீற்றினானே
சோபுரமே யவனே. **#554**

பாய்ந்து செல்லும் வெண்ணிறமான விடையேற்றின் மரது ஏறி, பாயும் புலியினது தோலை உடுத்துத் தூய வெண்ணீற்றை அணிந்துள்ளவனே! திருச்சோபுரம் மேவிய இறைவனே! கொடியவர்களாகிய வலிய அரக்கர் சிவந்த அழலுள் அழுந்துமாறு கணை எய்து தேவர்களை வாழ்வித்தது என்ன காரணம் பற்றியோ?

திருச்சோபுரம்

பல்லிலோடு கையிலேந்திப்
பல்கடையும் பலிதேர்ந்
தல்லல்வாழ்க்கை மேலதான
வாதரவென் னைகொலாம்
வில்லைவென்ற நுண்புருவ
வேனெடுங்கண் ணியொடும்
தொல்லையூழி யாகிநின்றாய்
சோபுரமே யவனே. **#555**

வில்லை வென்ற வளைந்த நுண்புருவத்தையும், வேல் போன்ற நீண்ட கண்ணையும் உடைய உமையம்மையோடும், பழமையான பல ஊழிக்காலங்களாக நிற்பவனே! திருச்சோபுரம் மேவிய இறைவனே! பல் இல்லாத மண்டை யோட்டைக் கையிலேந்திப் பலர்இல்லங்களுக்கும் சென்று பலி ஏற்கும் அல்லல் பொருந்திய வாழ்க்கையின்மேல் நீ ஆதரவு காட்டுதற்குக் காரணம் என்னவோ?

திருச்சோபுரம்

நாற்றமிக்க கொன்றைதுன்று
செஞ்சடைமேன் மதியம்
ஏற்றமாக வைத்துகந்த
ஊற்றமிக்க காலன் றன்னை
யொல்கவுதைத் தருளி

தோற்றமீறு மாகிநின்றாய்
சோபுரமே யவனே. **#556**

வலிமை பொருந்திய காலனை அழியுமாறு உதைத்தருளி, எல்லாப் பொருள்கட்கும் தோற்றமும் ஈறுமாகி நிற்பவனே! திருச்சோபுரம் மேவிய இறைவனே! மணம் மிக்க கொன்றை மலர்கள் நிறைந்த செஞ்சடையின்மேல் பிறைமதியை அழகு பெற வைத்து மகிழ்தற்குக் காரணம் என்னையோ?

<u>திருச்சோபுரம்</u>

கொன்னவின்ற மூவிலைவேற்
கூர்மழுவாட் படையன்
பொன்னைவென்ற கொன்றைமாலை
சூடும்பொற்பென் னைகொலம்
அன்னமன்ன மென்னடையாள்
பாகமமர்ந் தரைசேர்
துன்னவண்ண ஆடையினாய்
சோபுரமே யவனே. **#557**

அன்னம் போன்ற மெல்லிய நடையினையுடைய உமையம்மையை ஒரு பாகமாகப் பொருந்தி, இடையில் அழகிய கோவண ஆடையை அணிந்தவனே! திருச்சோபுரம் மேவிய இறைவனே! கொல்லும் தொழில் பொருந்திய மூவிலை வேலையும் தூய மழுவாட் படையையும் உடையவனே! நிறத்தால் பொன்னை வென்ற கொன்றை மாலையை நீ விரும்பிச் சூடுதற்குரிய காரணம் என்னையோ?

<u>திருச்சோபுரம்</u>

குற்றமின்மை யுண்மைநீயென்
றுன்னடியார் பணிவார்
கற்றகேள்வி ஞானமான
காரணமென் னைகொலாம்
வற்றலாமை வாளரவம்
பூண்டயன்வெண் டலையில்
துற்றலான கொள்கையானே
சோபுரமே யவனே. **#558**

ஊன் வற்றிய ஆமை ஓட்டையும், ஒளி பொருந்திய பாம்பையும் அணிகலனாகப்பூண்டு, பிரமனின் வெண்மையான தலையோட்டில் பலியேற்று உண்ணும் கொள்கையனே! திருச்சோபுரம் மேவிய இறைவனே! குணமும் குற்றமும் நீயே என்று பணியும் உன் அடியவர்கட்குத் தாங்கள் கற்ற கல்வியும், கேள்வியும், அதனால்

விளையும் ஞானமுமாக நீயே விளங்குதற்குக் காரணம் என்னவோ?

திருச்சோபுரம்

விலங்கலொன்று வெஞ்சிலையாக்
கொண்டுவிற லரக்கர்
குலங்கள்வாழு மூரெரித்த
கொள்கையிதென் னைகொலாம்
இலங்கைமன்னு வாளவுணர்
கோனையெழில் விரலால்
துலங்கவூன்றி வைத்துகந்தாய்
சோபுரமே யவனே. **#559**

இலங்கையில் நிலைபெற்று வாழும், வாட்போரில் வல்ல அவுணர் தலைவனாகிய இராவணனைத் தனது அழகிய கால் விரலால் நடுங்குமாறு ஊன்றிப் பின் அவன் வேண்ட மகிழ்ந்து அருள் புரிந்தவனே! திருச்சோபுரம் மேவிய இறைவனே! மேரு மலையைக் கொடியதொரு வில்லாகக் கொண்டு வலிமை பொருந்திய அரக்கர் குலங்கள் வாழ்கின்ற திரிபுரங்களாகிய ஊர்களை எரித்து அழித்தற்குக் காரணம் என்னவோ?.

திருச்சோபுரம்

விடங்கொணாக மால்வரையைச்
சுற்றிவிரி திரைநீர்
கடைந்தநஞ்சை யுண்டுகந்த
காரணமென் னைகொலாம்
இடந்துமண்ணை யுண்டமாலு
மின்மலர்மே லயனும்
தொடர்ந்துமுன்னங் காணமாட்டாச்
சோபுரமே யவனே. **#560**

மண்ணுலகை அகழ்ந்து உண்ட திருமாலும், இனிய தாமரை மலர்மேல் விளங்கும் பிரமனும், முற்காலத்தே உன்னைத் தொடர்ந்து அடிமுடி காணமாட்டாராய் நின்றொழியத் திருச்சோபுரத்தில் மேவி விளங்கும் இறைவனே! தேவர்கள் விடத்தையுடைய வாசுகி என்னும் பாம்பை மந்தரம் என்னும் பெரிய மலையைச் சுற்றிக் கட்டி, விரிந்த அலைகளையுடைய கடல்நரரைக் கடைந்தபோது, அதனிடை எழுந்த நஞ்சை உண்டு மகிழ்தற்குக் காரணம் என்னையோ?

திருச்சோபுரம்

புத்தரோடு புன்சமணர்

பொய்யுரையே யுரைத்துப்
பித்தராகக் கண்டுகந்த
பெற்றிமையென் னைகொலாம்
மத்தயானை யீருரிவை
போர்த்துவளர் சடைமேல்
துத்திநாகஞ் சூடினானே
சோபுரமே யவனே. **#561**

மதம் பொருந்திய யானையை உரித்து அதன் தோலைப் போர்த்து, நீண்ட சடையின் மேல் புள்ளிகளையுடைய நாகப்பாம்பைச்சூடியவனே! திருச்சோபுரம் மேவிய இறைவனே! புத்தர்களும், சமணர்களும் பொய்யுரைகளையே பேசிப் பித்தராகத் திரிதலைக் கண்டு நீ மகிழ்தற்குக் காரணம் என்னையோ?.

<u>திருச்சோபுரம்</u>

சோலைமிக்க தண்வயல்சூழ்
சோபுரமே யவனைச்
சீலமிக்க தொல்புகழார்
சிரபுரக்கோன் நலத்தான்
ஞாலமிக்க தண்டமிழான்
ஞானசம்பந்தன் சொன்ன
கோலமிக்க மாலைவல்லார்
கூடுவர்வா னுலகே. **#562**

சோலைகள் மிகுந்ததும், குளிர்ந்தவயல்களால் சூழப்பட்டதுமான திருச்சோபுரம் மேவிய இறைவனைச் சீலத்தால் மிக்க, பழமையான புகழை உடைய அந்தணர்கள் வாழும் சிரபுரம் என்னும் சீகாழிப் பதியின் தலைவனும். நன்மைகளையே கருதுபவனும், உலகில் மேம்பட்ட தண் தமிழ் பாடியவனுமாகிய ஞானசம்பந்தன் பாடிய அழகுமிக்க இத்தமிழ் மாலையை ஓதவல்லவர் வானுலகை அடைவர்.

திருநெடுங்களம்

திருநெடுங்களம்

திருநெடுங்களம்,
பண் - பழந்தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நித்தியசுந்தரர்.
தேவியார் : ஒப்பிலாநாயகியம்மை.

மறையுடையாய் தோலுடையாய்
வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே
யென்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றமோராய்
கொள்கையினா லுயர்ந்த
நிறையுடையா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. **#563** ★★★★★

திருநெடுங்களம் மேவிய இறைவனே, வேதங்களைத் தனக்கு உடைமையாகக் கொண்டவனே, தோல் ஆடை உடுத்தவனே, நீண்ட சடை மேல் வளரும் இளம் பிறையைச் சூடியவனே, தலைக்கோலம் உடையவனே, என்று உன்னை வாழ்த்தினாலல்லது குறை உடையவர்களின் குற்றங்களை மனத்துக் கொள்ளாத நீ, மனத்தினால் உன்னையன்றி வேறு தெய்வத்தை நினையாத கொள்கையில் மேம்பட்ட நிறையுடைய அடியவர்களின் இடர்களை நீக்கி அருள்வாயாக.

திருநெடுங்களம்

கனைத்தெழுந்த வெண்டிரைசூழ்
கடலிடைநஞ் சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த
திருந்தியதே வநின்னை
மனத்தகத்தோர் பாடலாடல்
பேணியிராப் பகலும்
நினைத்தெழுவா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. **#564**

திருநெடுங்களம் மேவிய இறைவனே, ஆரவாரித்து எழுந்த, வெண்மையான அலைகளால் சூழப்பட்ட கடல் நஞ்சினைத் தினையளவாகச் செய்து உண்டு கண்டத்தே நிறுத்திய மேம்பட்ட தேவனே, நின்னை மனத்தகத்தே நிறுவியவர்களின் ஆடல், பாடல்களை

விரும்பி, இரவும் பகலும் நின்னையே நினைத்து எழும் அடியவர்களின் இடர்களை நீக்கி அருளுக.

திருநெடுங்களம்

நின்னடியே வழிபடுவான்
நிமலாநினைக் கருத
என்னடியா னுயிரைவவ்வே
லென்றடற்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும்
பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. **#565**

திருநெடுங்களம் மேவிய இறைவனே, குற்ற மற்றவனே, நின் திருவடிகளையே வழிபடும் மார்க்கண்டேயன் நின்னையே கருதிச் சரண் புக அவனைக் கொல்லவந்த வலிமைபொருந்திய கூற்றுவனைச் சினந்து, என் அடியவன் உயிரைக் கவராதே என்று உதைத்தருளிய உன் பொன்னடிகளையே வழிபட்டு, நாள்தோறும் பூவும், நீரும் சுமந்து வழிபடும் உன் அடியவர்களின் இடர்களைக் களைந்தருள்வாயாக.

திருநெடுங்களம்

மலைபுரிந்த மன்னவன்றன்
மகளையோர்பான் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கு
மவிர்சடையா ரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய்
தலைவநின்றா ணிழற்கீழ்
நிலைபுரிந்தா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. **#566**

திருநெடுங்களம் மேவிய இறைவனே, இமவான்மகளாகிய பார்வதி தேவியைத் தன் திருமேனியின் ஓர் பாதியாகக் கொண்டு மகிழ்பவனே, அலைகள் வீசும் கங்கை நீரைத் தாங்கிய விரிந்த சடையினையுடைய திருவாரூர் இறைவனே, தலையோட்டை விரும்பி ஏந்தி அதன்கண் பலியேற்று மகிழ்பவனே, தலைவனே, நினது திருவடி நீழற்கீழ் நிற்றலையே விரும்பும் அடியவர்களின் இடர்களைப் போக்கி அருள்வாயாக.

திருநெடுங்களம்

பாங்கினல்லார் படிமஞ்செய்வார்

பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு
தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா அன்பினோடுந்
தலைவநின்றா ணிழற்கீழ்
நீங்கிநில்லா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. **#567**

திருநெடுங்களம் மேவிய இறைவனே, குணங்களால் நல்லவர்களும், தவ வேடம் தாங்கியவர்களும் பாரிடை வாழும் மக்களும் பலருடைய இல்லங்களிலும் பலிதேரும் உனது செயல்களில் மனம் ஒன்றி நல்லோர் பாடும் பாடல்களோடு தொழத்தக்க உன் திருவடி வணங்கிக் கரை கடந்த அன்போடு தலைவனாகிய உனது திருவடிகளை நிழலை நீங்கி நில்லாதவர்களாகிய அடியவர்களின் இடர்களைக் களைந்தருள்வாயாக.

திருநெடுங்களம்

விருத்தனாகிப் பாலனாகி
வேதமோர்நான் குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக்
கமழ்சடைமேற் கரந்தாய்
அருத்தனாய வாதிதேவ
னடியிணையே பரவும்
நிருத்தர்கீத ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. **#568**

திருநெடுங்களம் மேவிய இறைவனே, மூத்த வேடந்தாங்கியும், இளமை வடிவங் கொண்டும், வேதங்கள் நான்கையும் நன்குணர்ந்த தலைவனாய் கங்கை நங்கையை மணம் கமழும் சடைமிசைக் கரந்துள்ள பெருமானே, கலை ஞானங்கள் மெய்ஞானங்களின் பொருளான முதற்கடவுளாய் உன் அடி இணைகளைப் பரவி ஆடியும் பாடியும் போற்றும் அடியவர்களின் இடர்களைப் போக்கியருள்வாயாக.

திருநெடுங்களம்

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக்
கூட்டியோர்வெங் கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த
மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென்
றெம்பெருமா னணிந்த
நீறுகொண்டா ரிடர்களையாய்

நெடுங்களமே யவனே. #569

திருநெடுங்களம் மேவிய இறைவனே, உமையம்மையைத் திருமேனியின் ஒரு கூறாகக் கொண்டவனே, அரி, எரி, காற்று ஆகிய மூன்றையும் ஒன்றாகக் கூட்டிய ஒப்பற்ற கொடிய அம்பினால் வேதவழக்கோடு பகை கொண்ட அசுரர்களின் முப்புரங்களையும் எரித்தழித்த மன்னவனே, கொடி மீது இடபத்தை இலச்சினையாகக் கொண்டவனே, இதுவே மணம் பொருந்திய சந்தனமாகும் என்று எம்பெருமானே நீ அணிந்துள்ள திருநீற்றை விரும்பி அணியும் அடியவர்களின் இடரை நீக்கியருள்வாயாக.

<u>திருநெடுங்களம்</u>

குன்றினுச்சி மேல்விளங்குங்
கொடிமதில்சூ ழிலங்கை
அன்றிநின்ற வரக்கர்கோனை
யருவரைக்கீ ழடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியா
லேத்தியிராப் பகலும்
நின்றுநைவா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. #570

திருநெடுங்களம் மேவிய இறைவனே, மேருமலையின் சிகரங்கள் மூன்றில் ஒன்றாகிய குன்றின்மேல் விளங்குவதும் கொடிகள் கட்டப்பட்ட மதில்களால் சூழப்பட்டதுமான இலங்கை நகர் மன்னனும், உன்னோடு மாறுபட்டுக் கயிலை மலையைப் பெயர்த்தவனுமான அரக்கர் தலைவனாகிய இராவணனை அரிய அம்மலையின் கீழே அடர்த்தவனே! என்றெல்லாம் நல்ல தோத்திரங்களைக் கூறி இரவும் பகலும் உன்னையே ஏத்தி நின்று மனம் நையும் அடியவர்களின் இடர்களைப் போக்கியருளுவாயாக.

<u>திருநெடுங்களம்</u>

வேழவெண்கொம் பொசித்தமாலும்
விளங்கியநான் முகனுஞ்
சூழவெங்கு நேடவாங்கோர்
சோதியுளா கிநின்றாய்
கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான்
கேடிலாப்பொன் னடியின்
நீழல்வாழ்வா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. #571

திருநெடுங்களம் மேவிய இறைவனே, கஞ்சனால் ஏவப் பட்டுத்

தன்னைக் கொல்ல வந்த குவலயாபீடம் என்ற யானையின் கொம்புகளை ஒடித்த திருமாலும், புகழ்பெற்ற நான்முகனும், தங்களைச் சூழ்ந்துள்ள இடமெங்கும் தேடுமாறு இருவருக்கும் இடையே சோதிப் பிழம்பாய்த் தோன்றி நின்றவனே, பன்றியினதுகொம்பை அணிகலனாக அணிந்த பெருமானே, அழிவற்ற உன் பொன் போன்ற திருவடி நீழலில் வாழும் அடியவர்களின் இடர்களைக் களைந்தருள்வாய்.

திருநெடுங்களம்

வெஞ்சொற்றஞ்சொல் லாக்கிநின்ற
வேடமிலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியருந்
தத்துவமொன் றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால்
தோத்திரநின் னடியே
நெஞ்சில்வைப்பா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. **#572**

கொடுஞ் சொற்களையே தம் சொற்களாக்கிக் கொண்டு தமது வேடத்திற்குப் பொருந்தாமல் ஒழுகும் சமணரும் நற்சார்பில்லாத புத்தர்களும் சைவசமயம் கூறும் உண்மைப் பொருளை ஒரு சிறிதும் உணராதவர்கள். அவர்களை விடுத்து, திருநெடுங்களம் மேவிய இறைவனே! அழியாப் புகழுடைய வேதங்களோடு, தோத்திரங்களால் நின்னைப் பரவி நின் திருவடிகளை நெஞ்சில் கொண்டு வாழும் அடியவர்களின் இடர்களைப் போக்கியருளுவாயாக.

திருநெடுங்களம்

நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழு மாமறுகிற் சிரபுரக்கோன் நலத்தால்
நாடவல்ல பனுவன்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம்ப றையுமே. **#573**

மேலும் மேலும் நீண்டு வளரத்தக்க சடைமுடியை உடைய சிவபிரான் எழுந்தருளிய திருநெடுங்களத்தை, பெரியோர் பலர் வாழும் பெரிய வீதிகளை உடைய சிரபுரம் என்னும் சீகாழிப் பதியின் தலைவனாகிய ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய, நன்மைப் பொருளால் ஆராய்ந்து உணரத்தக்க இப்பாடல்கள் பத்தையும் பாட வல்லவர்களின் பாவங்கள் விலகும்.

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம்,
பண் - பழந்தக்கராகம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது - இதுவே விருத்தாசலம். ,
சுவாமிபெயர் : பழமலைநாதர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

தேவராயு மசுரராயுஞ்
சித்தர்செழு மறைசேர்
நாவராயும் நண்ணுபாரும்
விண்ணெரிகால் நீரும்
மேவராய விரைமலரோன்
செங்கண்மால் ஈசனென்னும்
மூவராய முதலொருவன்
மேயதுமு துகுன்றே. **#574**

தேவர், அசுரர், சித்தர், செழுமையான வேதங்களை ஓதும் நாவினராகிய அந்தணர், நாம் வாழும் மண், விண், எரி, காற்று, நீர் ஆகிய ஐம்பூதங்கள், மணம் மிக்க தாமரை மலர் மேல் உறையும் நான் முகன், சிவந்த கண்களை உடைய திருமால், உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகள் ஆகிய எல்லாமாகவும் அவர்களின் தலைவராகவும் இருக்கின்ற சிவபிரான் எழுந்தருளியிருப்பது திருமுதுகுன்றத் தலமாகும்.

திருமுதுகுன்றம்

பற்றுமாகி வானுளோர்க்குப்
பல்கதிரோன் மதிபார்
எற்றுநீர்தீக் காலுமேலை
விண்ணியமா னனோடு
மற்றுமாதோர் பல்லுயிராய்
மாலயனும் மறைகள்
முற்றுமாகி வேறுமானான்
மேயதுமு துகுன்றே. **#575**

தேவர்கட்குப் பற்றுக் கோடாகியும், பல வண்ணக் கதிர்களை உடைய ஞாயிறு, திங்கள் மண், கரையை மோதும் நீர், தீ, காற்று, மேலே உள்ள ஆகாயம், உயிர் ஆகிய அட்ட மூர்த்தங்களாகியும் எல்லா உயிர்களாகியும் திருமால், பிரமன் வேதங்கள் முதலான அனைத்துமாகியும் இவற்றின் வேறானவனும் ஆகிய சிவபிரான்

எழுந்தருளியிருக்கும் தலம் திருமுதுகுன்றம் ஆகும்.

திருமுதுகுன்றம்

வாரிமாகம் வைகுதிங்கள்
வாளரவஞ் சூடி
நாரிபாக நயந்துபூமேல்
நான்முகன்றன் தலையில்
சீரிதாகப் பலிகொள்செல்வன்
செற்றலுந்தோன் றியதோர்
மூரிநாகத் துரிவைபோர்த்தான்
மேயதுமு துகுன்றே. **#576**

கங்கை, வானகத்தே வைகும் திங்கள், ஒளி பொருந்திய பாம்பு ஆகியவற்றை முடிமிசைச் சூடி உமையம்மையை ஒரு பாகமாக விரும்பி ஏற்று, தாமரை மலரில் உறையும் பிரமனது தலைகளில் ஒன்றைக் கொய்து அத்தலையோட்டில் பலி ஏற்கச் செல்பவனும், தன்னைச் சினந்து வந்த வலிய யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்தியவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய தலம் திருமுதுகுன்றம்.

திருமுதுகுன்றம்

பாடுவாருக் கருளுமெந்தை
பனிமுதுபௌ வமுந்நீர்
நீடுபாரு முழுதுமோடி
யண்டர்நிலை கெடலும்
நாடுதானு மூடுமோடி
ஞாலமுநான் முகனும்
ஊடுகாண மூடும்வெள்ளத்
துயர்ந்ததுமு துகுன்றே. **#577**

தன்னைப் பாடிப் பரவுவார்க்கு அருள் செய்யும் எந்தையாகிய சிவபிரான் எழுந்தருளிய தலம், குளிர்ந்த பழமையான கடல் நீண்ட மண் உலகிலும் தேவர் உலகிலும் பரவி, அவர்தம் இருப்பிடங்களை அழித்ததோடு நாடுகளிலும் அவற்றின் இடையிலும் ஓடி, ஞாலத்துள்ளாரும் நான்முகன் முதலிய தேவரும் உயிர் பிழைக்க வழி தேடும்படி, ஊழி வெள்ளமாய்ப் பெருகிய காலத்திலும் அழியாது உயர்ந்து நிற்பதாகிய, திருமுதுகுன்றமாகும்.

திருமுதுகுன்றம்

வழங்குதிங்கள் வன்னிமத்த
மாசுணமீ சணவிச்

செழுங்கல்வேந்தன் செல்விகாணத்
தேவர்திசை வணங்கத்
தழங்குமொந்தை தக்கைமிக்க
பேய்க்கணம்பூ தஞ்சூழ
முழங்குசெந்தீ யேந்தியாடி
மேயதுமு துகுன்றே. #578

வானத்தில் சஞ்சரிக்கும் திங்கள், வன்னியிலை ஊமத்தம் மலர், பாம்பு, ஆகியவற்றைத் திருமுடிமீது நெருக்கமாகச் சூடி, இமவான் மகளாகிய உமையவள் காணத் தேவர்கள் எல்லாத் திசைகளிலும் நின்று வணங்க, மொந்தை, தக்கை, ஆகியன அருகில் ஒலிக்க, பேய்க்கணங்கள் பூதங்கள் சூழ்ந்து விளங்க, முழங்கும் செந்தீயைக் கையில் ஏந்தி ஆடும் சிவபெருமான் மேவிய தலம் திருமுதுகுன்றமாகும்.

திருமுதுகுன்றம்

சுழிந்தகங்கை தோய்ந்ததிங்கட்
டொல்லராநல் லிதழி
சழிந்தசென்னிச் சைவவேடந்
தான்நினைந் தைம்புலனும்
அழிந்தசிந்தை யந்தணாளர்க்
கறம்பொருளின் பம்வீடு
மொழிந்தவாயான் முக்கணாதி
மேயதுமு துகுன்றே. #579

சுழிகளோடு கூடிய கங்கை, அதன்கண் தோய்ந்த திங்கள், பழமையான பாம்பு, நல்ல கொன்றை மலர் ஆகியன நெருங்கிய சென்னியை உடைய முக்கண் ஆதியாகிய சிவபிரானுடைய சைவவேடத்தை விருப்புற்று நினைத்து, ஐம்புலன்களும் மனமும் அழிந்த சிந்தையினராகிய சனகர் முதலிய அந்தணாளர்கட்கு அறம் பொருள் இன்பம் வீடு ஆகியவற்றை உபதேசித்த திருவாயினனாய் எழுந்தருளியிருப்பது திருமுதுகுன்றம் ஆகும். தாள் நினைத்து, தாள் இணைத்து என்பவும் பாடம்.

திருமுதுகுன்றம்

இப்பதிகத்தின் 7-ம் செய்யுள் சிதைந்து போயிற்று. #580

திருமுதுகுன்றம்

மயங்குமாயம் வல்லராகி
வானினொடு நீரும்
இயங்குவோருக் கிறைவனாய
விராவணன்றோ ணெரித்த

புயங்கராக மாநடத்தன்
புணர்முலைமா துமையாள்
முயங்குமார்பன் முனிவரேத்த
மேயதுமு துகுன்றே. **#581**

அறிவை மயங்கச் செய்யும் மாயத்தில் வல்லவராய் வான், நீர் ஆகியவற்றிலும் சஞ்சரிக்கும் இயல்பினராய அரக்கர் களுக்குத் தலைவனாகிய இராவணனின் தோளை நெரித்த வலிமையோடு பாம்பு நடனத்தில் விருப்புடையவனும், செறிந்த தனபாரங்களை உடைய உமையம்மையைத் தழுவிய மார்பினனும் ஆகிய சிவபிரான் முனிவர்கள் ஏத்த எழுந்தருளி விளங்கும் தலம் திருமுதுகுன்றமாகும்.

திருமுதுகுன்றம்

ஞாலமுண்ட மாலுமற்றை
நான்முகனும் மறியாக்
கோலமண்டர் சிந்தைகொள்ளா
ராயினுங்கொய் மலரால்
ஏலவிண்டை கட்டிநாம
மிசையவெப்போதுமேத்தும்
மூலமுண்ட நீற்றர்வாயான்
மேயதுமு துகுன்றே. **#582**

உலகங்களை உண்ட திருமாலும், நான்முகனும் அறிய முடியாத இறைவனது திருக்கோலத்தைத் தேவர்களும் அறியாதவர் ஆயினர். நாள்தோறும் கொய்த மலர்களைக் கொண்டு இண்டை முதலிய மாலைகள் தொடுத்துத் தன் திருப்பெயரையே எப்போதும் மனம் பொருந்தச் சொல்பவரும், மூலமலத்தை அழிக்கும் திருநீற்றை மெய்யிற் பூசுபவருமாகிய அடியவர்களின் வாயில், நாம மந்திரமாக உறைந்தருளுகின்ற அப்பெருமான் மேவிய தலம் திருமுதுகுன்றமாகும்.

திருமுதுகுன்றம்

உறிகொள்கையர் சீவரத்த
ருண்டுழன்மிண் டர்சொல்லை
நெறிகளென்ன நினைவுறாதே
நித்தலுங்கை தொழுமின்
மறிகொள்கையன் வங்கமுந்நீர்ப்
பொங்குவிடத் தையுண்ட
முறிகொண்மேனி மங்கைபங்கன்
மேயதுமு துகுன்றே. **#583**

குண்டிகையை உறியில் கட்டித் தூக்கிய கையினரும், காவியாடையைத்

தரித்தவரும், உண்டு உழல்பவரும் ஆகிய சமண புத்தர்கள் கூறுவனவற்றை நெறிகள் எனக் கருதாது, நாள்தோறும், சென்று வணங்குவீராக. மானை ஏந்திய கையினனும், கப்பல்கள் ஓடும் கடலிடைப் பொங்கி எழுந்த விடத்தை உண்டவனும், தளிர் போலும் மேனியளாகிய உமையம்மையை ஒருகூறாக உடையவனுமாகிய சிவபிரான் மேவியுள்ளது திருமுதுகுன்றமாகும். அத்திருத்தலத்தை வணங்குவீராக.

திருமுதுகுன்றம்

மொய்த்துவானோர் பல்கணங்கள்
வணங்குமு துகுன்றைப்
பித்தர்வேடம் பெருமையென்னும்
பிரமபுரத் தலைவன்
.... #584

தேவர் கணங்கள் பலவும் நிறைந்து செறிந்து வணங்கும் திருமுதுகுன்றத்திறைவனை, பித்தர் போலத் தன் வயம் இழந்து திரிவாரின் தவவேடம் பெருமை தருவதாகும் எனக் கருதும் பிரமபுரத்தலைவனான ஞானசம்பந்தன்...

திருஓத்தூர்

திருஓத்தூர்

திருஓத்தூர்,
பண் - பழந்தக்கராகம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வேதநாதர்.
தேவியார் : இளமுலைநாயகியம்மை.

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே. **#585**

திருஓத்தூரில் அழகிய கையில் ஒளி பொருந்திய மழுவாகிய வாளை ஏந்தியவராய் எழுந்தருளிய கூத்தரே, ஆராயுமிடத்து பூசைக்குரிய நறுமலர்களைத் தேர்ந்து பறித்தும் ஏனைய உபகரணங்களைச் சேகரித்துக் கொண்டு, உம் குணநலங்களைப் போற்றி பொன் போன்ற திருவடிகளை ஏத்தி, வணங்காதார் இல்லை.

திருஓத்தூர்

இடையீர் போகா விளமுலை யாளையோர்
புடையீ ரேபுள்ளி மானுரி
உடையீ ரேயும்மை யேத்துது மோத்தூர்ச்
சடையீ ரேயும தாளே. **#586**

திருஓத்தூரில் சடைமுடியோடு விளங்கும் இறைவரே, ஈர்க்கு இடையில் செல்லாத நெருக்கமான இளமுலைகளை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவரே, புள்ளிமான் தோலை ஆடையாக உடுத்தியவரே, உம் திருவடிகளை நாங்கள் வணங்குகிறோம்.

திருஓத்தூர்

உள்வேர் போல நொடிமையி னார்திறம்
கொள்வீ ரல்குலோர் கோவணம்
ஒள்வா ழைக்கனி தேன்சொரி யோத்தூர்க்
கள்வீ ரேயும காதலே. **#587**

ஒளிசிறந்த வாழைக் கனிகள் தேன் போன்ற சாற்றைச் சொரியும் திருவோத்தூரில் அரையிற் கோவணம் உடுத்தியவராய் விளங்கும் கள்வரே, உம் காதல் மிக நன்று. பொய் பேசும் இயல்பினராய் அடியார்களை நினைப்பவரைப் போலக் காட்டி அவரை ஏற்றுக்

கொள்வீர்.

திருஓத்தூர்

தோட்டீ ரேதுத்தி யைந்தலை நாகத்தை
ஆட்டீ ரேயடி யார்வினை
ஓட்டீ ரேயும்மை யேத்துது மோத்தூர்
நாட்டீ ரேயரு ணல்குமே. **#588**

செங்காந்தட்பூவை அணிந்தவரே! படப்பொறிகளை உடைய ஐந்து தலை நாகத்தை ஆட்டுபவரே! அடியவர் வினைகளை ஓட்டுபவரே! திருவோத்தூர் நாட்டில் எழுந்தருளியவரே! உம்மைத் துதிக்கின்றோம்; அருள்புரிவீராக.

திருஓத்தூர்

குழையார் காதீர் கொடுமழு வாட்படை
உழையாள் வீர்திரு வோத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடிநின் றாடுவார்
அழையா மேயரு ணல்குமே. **#589**

குழையணிந்த காதினை உடையவரே, கொடிய மழு என்னும் வாட்படையை ஒருபாலுள்ள கரத்தில் ஏந்தி ஆள்பவரே, திருவோத்தூரில் பிழை நேராதபடி வண்ணப் பாடல்கள் பல பாடி நின்று ஆடும் அடியார்க்கு அழையாமலே வந்து அருள் நல்குவீராக.

திருஓத்தூர்

மிக்கார் வந்து விரும்பிப் பலியிடத்
தக்கார் தம்மக்க ளீரென்
றுட்கா தாருள ரோதிரு வோத்தூர்
நக்கீ ரேயரு ணல்குமே. **#590**

திருவோத்தூரில் மகிழ்ந்து உறையும் இறைவரே, நீர் பலி கொள்ள வருங்காலத்து, உம் திருமுன் அன்பு மிக்கவராய் விரும்பி வந்து பலியிடுதற்குத் தம் மக்களுள் மகளிரை அனுப்புதற்கு அஞ்சாத தந்தை தாயர் உளரோ? எவ்வாறேனும் ஆக, அவர் தமக்கு அருள் நல்குவீராக.

திருஓத்தூர்

தாதார் கொன்றை தயங்கு முடியுடை
நாதா வென்று நலம்புகழ்ந்
தோதா தாருள ரோதிரு வோத்தூர்
ஆதீ ரேயரு ணல்குமே. **#591**

திருவோத்தூரில் முதற்பொருளாக விளங்குபவரே! மகரந்தம் பொருந்திய

கொன்றை மலர் விளங்கும் திருமுடியை உடைய தலைவரே! என்றழைத்து உமது அழகினைப்புகழ்ந்து ஓதாதவர் உளரோ? அருள் நல்குவீராக.

திருஓத்தூர்

என்றா னிம்மலை யென்ற வரக்கனை
வென்றார் போலும் விரலினால்
ஒன்றார் மும்மதி லெய்தவ னோத்தூர்
என்றார் மேல்வினை யேகுமே. **#592**

இக்கயிலைமலை எம்மாத்திரம் என்று கூறிய இராவணனைக் கால்விரலால் வென்றவரும், தம்மோடு மனம் பொருந்தாத திரிபுரத்தசுரர்தம் மும்மதில்களைக் கணையால் எய்து அழித்தவருமாகிய சிவபிரானது திருவோத்தூர் என்று ஊர்ப் பெயரைச் சொன்ன அளவில் சொல்லிய அவர்மேல் உள்ள வினைகள் போகும்.

திருஓத்தூர்

நன்றா நான்மறை யானொடு மாலுமாய்ச்
சென்றார் போலுந் திசையெலாம்
ஒன்றா யொள்ளெரி யாய்மிக வோத்தூர்
நின்றீ ரேயுமை நேடியே. **#593**

திருவோத்தூரில் விளங்கும் இறைவரே! நல்லன செய்யும் நான்கு வேதங்களை ஓதுபவனாகிய பிரமன், திருமால் ஆகியோர் எரியுருவாய் நீர் ஒன்றுபட்டுத் தோன்றவும், அறியாராய் திசையனைத்தும் தேடித் திரிந்து எய்த்தனர் அவர்தம் அறிவுநிலையாதோ?

திருஓத்தூர்

கார மண்கலிங் கத்துவ ராடையர்
தேரர் சொல்லவை தேறன்மின்
ஓரம் பாலெயி லெய்தவ னோத்தூர்ச்
சரீ வன்கழல் சேர்மினே. **#594**

கரிய நிறத்தவராகிய சமணர்களும், கலிங்க நாட்டுத்துவர் ஏற்றிய ஆடையை அணிந்த புத்தத் துறவியரும் கூறும் பொய் மொழிகளை நம்பாதீர். முப்புரங்களை ஓரம்பினால் எய்து அழித்தவனாகிய, திருவோத்தூரில் விளங்கும் சிறப்பு மிக்க சிவபிரானின் கழல்களைச் சேர்வீர்களாக.

திருஓத்தூர்

குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்

அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்பு கலியுண் ஞானசம்பந் தன்சொல்
விரும்பு வார்வினை வீடே. **#595**

திருவோத்தூரில், ஆண் பனைகள் குரும்பைக் குலைகளை ஈனும் அற்புதத்தைச் செய்தருளிய கொன்றை அரும்பும் சடைமுடி உடைய இறைவரைப் பெருமை மிக்க திருப்புகலி என்னும் பெயருடைய சீகாழிப் பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன் போற்றியுரைத்த இப்பாமாலையை விரும்பும் அன்பர்களின் வினைகள் அழியும்.

திருமாற்பேறு

திருமாற்பேறு

திருமாற்பேறு,
பண் - பழந்தக்கராகம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மால்வணங்குமீசர்.
தேவியார் : கருணைநாயகியம்மை.

ஊறி யார்தரு நஞ்சினை யுண்டுமை
நீறு சேர்திரு மேனியர்
சேறு சேர்வயற் றென்றிரு மாற்பேற்றின்
மாறி லாமணி கண்டரே. **#596**

சேற்று வளம் நிறைந்த வயல்கள் சூழ்ந்த அழகிய திருமாற்பேற்றில் ஒப்பற்ற நீலமணி போன்ற கண்டத்தை உடைய இறைவர், கடலிடத்தே ஊறிப் பொருந்திவந்த நஞ்சினை உண்டு உமையம்மையோடு கூடியவராய்த் திருநரறு பூசிய திருமேனியராய் விளங்குகிறார்.

திருமாற்பேறு

தொடையார் மாமலர் கொண்டிரு போதும்மை
அடைவா ராமடி கள்ளென
மடையார் நீர்மல்கு மன்னிய மாற்பே
றுடையீ ரேயுமை யுள்கியே. **#597**

வாய்க்கால் மடைகளில் நீர் நிறைந்து விளங்கும் நிலையான திருமாற்பேற்றைத் தமது இருப்பிடமாக உடையவரே, உம்மை நினைந்து சிறந்த மாலைகளைத் தொடுத்து ஏந்திய கையின ராய்க் காலை, மாலை இருபோதும் உம்மைத் தலைவராக எண்ணி அடியவர் அடைகின்றனர்.

திருமாற்பேறு

பையா ரும்மர வங்கொடு வாட்டிய
கையா னென்று வணங்குவர்
மையார் நஞ்சுண்டு மாற்பேற் றிருக்கின்ற
ஐயா நின்னடி யார்களே. **#598**

கருநிறம் பொருந்திய நஞ்சை உண்டு தேவர்களைக் காத்தருளிய நீலகண்டராய்த் திருமாற்பேற்றில் வீற்றிருக்கின்ற தலைவரே, உம் அடியவர்கள் படம் பொருந்திய பாம்பைப் பிடித்து ஆட்டும் கைகளை உடையவர் என்று உம்மை வணங்குவார்கள்.

திருமாற்பேறு

சால மாமலர் கொண்டு சரணென்று
மேலை யார்கள் விரும்புவர்
மாலி னார்வழி பாடுசெய் மாற்பேற்று
நீல மார்கண்ட நின்னையே. **#599**

திருமால் வழிபாடு செய்து அருள் பெற்றதால் திருமாற்பேறு என வழங்கும் இத்தலத்தில் விளங்கும் நீலநிறம் பொருந்திய கண்டத்தை உடையவரே, நும்மை மேன்மை மிக்க பெரியோர்கள் மிகுதியான நறுமலர்களைக்கொண்டு அர்ச்சித்து உம்மையே சரண் என்று விரும்பி வழிபடுவர்.

திருமாற்பேறு

மாறி லாமணி யேயென்று வானவர்
ஏற வேமிக வேத்துவர்
கூற னேகுல வுந்திரு மாற்பேற்றின்
நீற னேயென்று நின்னையே. **#600**

உமையம்மையை ஒரு கூற்றாகக் கொண்டவரே, விளங்கும் திருமாற்பேற்றில் வெண்ணீறு பூசி விளங்குபவரே, ஒப்பற்ற மாணிக்கமணியே என்று உம்மையே வானவர் மிகமிக ஏத்தி மகிழ்வர்.

திருமாற்பேறு

உரையா தாரில்லை யொன்றுநின் றன்மையைப்
பரவா தாரில்லை நாள்களும்
திரையார் பாலியின் றென்கரை மாற்பேற்
றரையா னேயரு ணல்கிடே. **#601**

அலைகள் பொருந்திய பாலியாற்றின் தென்கரையில் விளங்கும் திருமாற்பேற்றில் விளங்கும் அரசனே, பொருந்திய நின் பெருந்தன்மையை வியந்து உரையாதார் இல்லை. நாள்தோறும் உன் பெருமைகளைப் பரவாதவர் இல்லை. அருள் நல்குவீராக.

திருமாற்பேறு

இப்பதிகத்தின் **7**-ம் செய்யுள் சிதைந்து போயிற்று. **#602**

திருமாற்பேறு

அரச ளிக்கு மரக்க னவன்றனை
உரைகெ டுத்தவ னொல்கிட
வரமி குத்தவெம் மாற்பேற் றடிகளைப்

பரவி டக்கெடும் பாவமே. **#603**

இலங்கை நாட்டை ஆளும் இராவணனின் புகழை மங்கச் செய்து, பின் அவன் பிழை உணர்ந்து வேண்டிய அளவில் அவனுக்கு வரங்கள் பலவற்றையும் மிகுதியாக அளித்தருளிய எமது திரு மாற்பேற்று அடிகளைப் பரவப் பாவம் கெடும்.

திருமாற்பேறு

இருவர் தேவருந் தேடித் திரிந்தினி
ஒருவ ராலறி வொண்ணிலன்
மருவு நீள்கழன் மாற்பேற் றடிகளைப்
பரவு வார்வினை பாறுமே. **#604**

திருமால் பிரமன் ஆகிய இருவரும் அடிமுடி காணத்தேடித் திரிந்தும் ஒருவராலும் அறிய ஒண்ணாத இயல்பினனாகிய, திருமாற்பேற்றுள் விளங்கும் சிவபிரானுடைய பெருமை விரிந்த திருவடிகளைப் பரவித் துதிப்பார் வினைகள் கெடும்.

திருமாற்பேறு

தூசு போர்த்துழல் வார்கையிற் றுற்றுணும்
நீசர் தம்முரை கொள்ளெலும்
தேச மல்கிய தென்றிரு மாற்பேற்றின்
ஈச னென்றெடுத் தேத்துமே. **#605**

ஆடையை மேனிமேற் போர்த்து உழல்வோரும், கைகளில் உணவை ஏற்று உண்ணும் இழிந்தோருமாகிய புத்த, சமணர்களின் உரைகளை மெய்யெனக் கொள்ளாதீர். புகழ் பொருந்திய அழகிய திருமாற்பேற்றுள் விளங்கும் ஈசன் என்று பெருமானைப் புகழ்ந்து போற்றுமின்.

திருமாற்பேறு

மன்னி மாலொடு சோமன் பணிசெயும்
மன்னு மாற்பேற் றடிகளை
மன்னு காழியுண் ஞானசம் பந்தன்சொல்
பன்ன வேவினை பாறுமே. **#606**

திருமாலும் சந்திரனும் தங்கியிருந்து பணிசெய்து வழிபட்ட நிலைபேறுடைய திருமாற்பேற்றுள் விளங்கும் இறைவனை நிலைத்த காழி மாநகருள் தோன்றிய ஞானசம்பந்தன் பாடிய இத்திருப்பதிகத்தை ஓதினால் வினைகள் கெடும்.

திருப்பாற்றுறை

திருப்பாற்றுறை

திருப்பாற்றுறை,
பண் - பழந்தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருமூலநாதர்.
தேவியார் : மோகாம்பிகையம்மை.

காரார் கொன்றை கலந்த முடியினர்
சீரார் சிந்தை செலச்செய்தார்
பாரார் நாளும் பரவிய பாற்றுறை
யாரா ராதி முதல்வரே. **#607**

உலக மக்கள் நாள்தோறும் வந்து வழிபட்டுப் போற்றும், ஆத்தி மலர் அணிந்த திருப்பாற்றுறையில் விளங்கும் ஆதிமுதல்வராகிய பெருமானார் கார்காலத்தே மலரும் கொன்றை மலர் மாலை சூடிய திருமுடியினராய் அன்பு கனிந்த நம் சிந்தையைத் தம்மிடமே செல்லச் செய்தார்.

திருப்பாற்றுறை

நல்லா ரும்மவர் தீய ரெனப்படும்
சொல்லார் நன்மலர் சூடினார்
பல்லார் வெண்டலைச் செல்வரெம் பாற்றுறை
எல்லா ருந்தொழு மீசரே. **#608**

பற்கள் பொருந்திய வெண்மையான தலையோட்டை அணிந்தவரும், எல்லாராலும் தொழப்படுபவருமாகிய எம் திருப்பாற்றுறைச் செல்வராகிய ஈசர், நல்லவருக்கு நல்லவராவர். தீயை ஏந்தியதால் தீயர் எனவும் படுவார். அவர் நல்ல மலரைச் சூடியவர்.

திருப்பாற்றுறை

விண்ணார் திங்கள் விளங்கு நுதலினர்
எண்ணார் வந்தெ னெழில்கொண்டார்
பண்ணார் வண்டினம் பாடல்செய் பாற்றுறை
உண்ணா ணாளு முறைவரே. **#609**

இயற்கையில் பண்ணிசை போல முரலும் வண்டினங்கள் பாடும் திருப்பாற்றுறையுள் எக்காலத்தும் உறைபவரும், விண்ணகத்தே தவழும் திங்கள் விளங்கும் திருமுடியினரும் ஆகிய இறைவர் என் இதயத்தில் இருப்பவராய் வந்து என் எழில்நலம் அனைத்தையும் கவர்ந்தார்.

<u>திருப்பாற்றுறை</u>

பூவுந் திங்கள் புனைந்த முடியினர்
ஏவி னல்லா ரெயிலெய்தார்
பாவந் தீர்புனன் மல்கிய பாற்றுறை
ஓவென் சிந்தை யொருவரே. **#610**

மூழ்கியவருடைய பாவங்களைப் போக்கும் தீர்த்த நலம் உடைய திருப்பாற்றுறையுள் மலர்களையும் பிறைமதியையும் புனைந்த திருமுடியினராய்க் கணையொன்றால் பகைவராய் வந்தடைந்த அசுரர்களின் முப்புரங்களை அழித்த இறைவரே என் மனம் பிறவற்றில் செல்லாது ஓவுதல் செய்த ஒருவராவர்.

<u>திருப்பாற்றுறை</u>

மாகந் தோய்மதி சூடி மகிழ்ந்தென
தாகம் பொன்னிற மாக்கினார்
பாகம் பெண்ணு முடையவர் பாற்றுறை
நாகம் பூண்ட நயவரே. **#611**

தம் திருமேனியின் ஒருபாதியாய்ப் பெண்ணைக் கொண்டுள்ளவரும், நாகத்தை அணிகலனாகப் பூண்டவரும் ஆகிய, திருப்பாற்றுறை இறைவர், வானகத்தே தோயும் பிறைமதியை முடியிற் சூடி மகிழ்ந்து வந்து எனது உடலைப் பொன்னிறமான பசலை பூக்கச் செய்தவராவார்.

<u>திருப்பாற்றுறை</u>

போது பொன்றிகழ் கொன்றை புனைமுடி
நாதர் வந்தெ னலங்கொண்டார்
பாதந் தொண்டர் பரவிய பாற்றுறை
வேத மோதும் விகிர்தரே. **#612**

தொண்டர்கள் தம் திருவடிகளைப் பரவத் திருப்பாற்றுறையுள் விளங்கும் வேதங்களை அருளிய விகிர்தரும், பொன்போல் திகழும் கொன்றை மலர்களைப் புனைந்த திருமுடியினை உடைய தலைவருமாகிய சிவபிரானாரே என்பால் வந்து என் அழகினைக் கவர்ந்தவராவார்.

<u>திருப்பாற்றுறை</u>

வாடல் வெண்டலை சூடினர் மால்விடை
கோடல் செய்த குறிப்பினார்
பாடல் வண்டினம் பண்செயும் பாற்றுறை
ஆட னாக மசைத்தாரே. **#613**

பாடல்கள் பலவற்றைப் பாடும் வண்டினங்கள் சிறந்த பண்களை

மிழற்றும் திருப்பாற்றுறையுள், ஆடுதலில் வல்ல நாகப்பாம்பைத் திருமேனியில் பல இடங்களிலும் கட்டியுள்ள இறைவர், உலர்ந்த வெள்ளிய தலையோடுகளை மாலையாகச் சூடியவராவர். பெரிய இடபத்தின் மேல் ஏறி வந்து என் அழகைக் கவர்ந்து செல்லும் குறிப்பினர்.

திருப்பாற்றுறை

வெவ்வ மேனிய ராய்வெள்ளை நீற்றினர்
எவ்வஞ் செய்தெ னெழில்கொண்டார்
பவ்வ நஞ்சடை கண்டரெம் பாற்றுறை
மவ்வல் சூடிய மைந்தரே. **#614**

கடலிடைத் தோன்றிய நஞ்சடைந்த கண்டரும், முல்லை மலர் சூடிய மைந்தரும் ஆகிய எம் திருப்பாற்றுறை இறைவர் விரும்பத்தக்க திருமேனியராய், வெண்மையான திருவெண்ணீறு அணிந்தவராய் வந்து, என் எழிலைக் கொண்டு பின் பிரிவுத்துன்பம் தந்தவராவர்.

திருப்பாற்றுறை

ஏன மன்னமு மானவ ருக்கெரி
ஆன வண்ணத்தெ மண்ணலார்
பான லம்மலர் விம்மிய பாற்றுறை
வான வெண்பிறை மைந்தரே. **#615**

நீலோற்பல மலர்கள் நிறைந்த நீர் நிலைகளோடு கூடிய திருப்பாற்றுறையுள் வானகத்தே விளங்கும் வெண்மையான பிறை மதியைச் சூடி எழுந்தருளியுள்ள மைந்தராகிய இறைவர், பன்றியும், அன்னமுமாய் அடிமுடி தேடிய திருமால், பிரமன் ஆகியோருக்கு அழலுருவமாய் ஓங்கி நின்ற அண்ணலார் ஆவார்.

திருப்பாற்றுறை

வெந்த நீற்றினர் வேலினர் நூலினர்
வந்தெ னன்னலம் வௌவினார்
பைந்தண் மாதவி சூழ்தரு பாற்றுறை
மைந்தர் தாமோர் மணாளரே. **#616**

பசுமையான குளிர்ந்த குருக்கத்திக் கொடிகள் சூழ்ந்துள்ள திருப்பாற்றுறையுள் எழுந்தருளியுள்ள மைந்தராகிய இறைவர், மேனி மீது வெந்த நீறு பூசியவராய், கையில் வேலேந்தியவராய், மார்பில் பூணூல் அணிந்தவராய் வந்து என் அழகினை வவ்விச் சென்றார். அவர் முன்னரே மலைமகளை மணந்த மணாளர் ஆவார்.

<u>திருப்பாற்றுறை</u>

பத்தர் மன்னிய பாற்றுறை மேவிய
பத்து நூறு பெயரனைப்
பத்தன் ஞானசம் பந்தன தின்றமிழ்
பத்தும் பாடிப் பரவுமே. **#617**

அடியவர்கள் நிறைந்துள்ள திருப்பாற்றுறையுள் எழுந்தருளிய ஆயிரம் திருநாமங்களையுடைய இறைவனை, பக்தனாகிய ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய இனிய தமிழ்ப் பாடல்களாகிய இப்பத்தையும் பாடிப் பரவுமின்.

திருவேற்காடு

திருவேற்காடு

திருவேற்காடு,
பண் - பழந்தக்கராகம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வேற்காட்டீசுவரர்.
தேவியார் : வேற்கண்ணியம்மை.

ஒள்ளி துள்ளக் கதிக்கா மிவனொளி
வெள்ளி யானுறை வேற்காடு
உள்ளி யாருயர்ந் தாரிவ் வுலகினில்
தெளளி யாரவர் தேவரே. **#618**

மிகவும் சிறந்த மெய்ப்பொருளை அன்போடு எண்ணினால் அவ்வெண்ணம் நற்கதிக்கு வாயிலாம். அத்தகைய மெய்ப்பொருளாய் வெண்மையான ஒளி வடிவினனாய் திருவேற்காட்டில் எழுந்தருளியுள்ள இவ்விறைவனை நினைந்தவர்கள் இவ்வுலகினில் உயர்ந்தவர் ஆவர். அவனைக் கண்டு தெளந்த அவர்கள் தேவர்களாவர்.

திருவேற்காடு

ஆட னாக மசைத்தள வில்லதோர்
வேடங் கொண்டவன் வேற்காடு
பாடி யும்பணிந் தாரிவ் வுலகினில்
சேட ராகிய செல்வரே. **#619**

ஆடுதற்குரிய பாம்பினை இடையிற் கட்டிய, அளவற்ற பல்வேறு வடிவங்களைக் கொண்டருளிய திருவேற்காட்டு இறைவனைப் பாடிப் பணிந்தவர்கள், இவ்வுலகினில் பெருமை பொருந்திய செல்வர்கள் ஆவர்.

திருவேற்காடு

பூதம் பாடப் புறங்காட் டிடையாடி
வேத வித்தகன் வேற்காடு
போதுஞ் சாந்தும் புகையுங் கொடுத்தவர்க்
கேத மெய்துத லில்லையே. **#620**

பூதகணங்கள் பாட, சுடுகாட்டின்கண் நடனம் ஆடி, வேதங்களை அருளிய வித்தகனாக விளங்கும் திருவேற்காட்டு இறைவற்கு மலர்களும், சந்தனமும், நறும்புகை தரும் பொருள்களும் கொடுத்தவர்களுக்குத் துன்பங்கள் வருதல் இல்லையாம்.

திருவேற்காடு

ஆழ்க டலெனக் கங்கைக ரந்தவன்
வீழ்ச டையினன் வேற்காடு
தாழ்வு டைமனத் தாற்பணிந் தேத்திடப்
பாழ் படும்மவர் பாவமே. **#621**

ஆழமான கடல் என்று சொல்லத்தக்க கங்கை நதியை மறைத்துக்கொண்ட, விழுது போன்ற சடைமுடியினை உடைய திருவேற்காட்டு இறைவனைப் பணிவான மனத்தோடு வணங்கித்துதிப்பவர்களின் பாவங்கள் அழிந்தொழியும்.

திருவேற்காடு

காட்டினாலு மயர்த்திடக் காலனை
வீட்டி னானுறை வேற்காடு
பாட்டி னாற்பணிந் தேத்திட வல்லவர்
ஓட்டி னார்வினை யொல்லையே. **#622**

மார்க்கண்டேயர், சிவனே முழுமுதல்வன் எனக் காட்டினாலும், அதனை உணராது மயங்கி அவர் உயிரைக் கவர வந்த அக்காலனை அழித்த சிவபிரான் உறையும் திருவேற்காட்டைப் பாடல்கள் பாடிப் பணிந்து வழிபட வல்லவர் தம் வினைகளை விரைவில் ஓட்டியவர் ஆவர்.

திருவேற்காடு

தோலி னாலுடை மேவவல் லான்சுடர்
வேலி னானுறை வேற்காடு
நூலி னாற்பணிந் தேத்திட வல்லவர்
மாலி னார்வினை மாயுமே. **#623**

தான் கட்டியும் போர்த்தும் உள்ள ஆடைகளைத் தோலினால் அமைந்தனவாகக் கொண்டுள்ள இறைவன் ஒளி பொருந்திய வேலோடு உறையும் திருவேற்காட்டை, ஆகம நூல்களில் விதித்தவாறு வழிபட்டுத் துதிக்க வல்லவர்களாகிய ஆன்மாக்களைப் பற்றிய மயங்கச் செய்யும் வினைகள், மாய்ந்தொழியும்.

திருவேற்காடு

மல்லன் மும்மதின் மாய்தர வெய்ததோர்
வில்லி னானுறை வேற்காடு
சொல்ல வல்ல சுருங்கா மனத்தவர்
செல்ல வல்லவர் தீர்க்கமே. **#624**

வளமை பொருந்திய முப்புரங்களும் அழிந்தொழியுமாறு கணை எய்த

ஒப்பற்ற மேரு வில்லை ஏந்திய சிவபிரான் உறையும் திருவேற்காட்டைப் புகழ்ந்து சொல்ல வல்லவர்கள் சுருங்கா மனத்தினராவர். அங்குச் சென்று தரிசிக்க வல்லவர் நீண்ட ஆயுள் பெறுவர்.

திருவேற்காடு

மூரல் வெண்மதி சூடுமுடியுடை
வீரன் மேவிய வேற்காடு
வார மாய்வழி பாடுநி னைந்தவர்
சேர்வர் செய்கழல் திண்ணமே. **#625**

மிக இளைய வெண்மையான பிறைமதியைச் சூடும் திருமுடியை உடைய வீரனாகிய சிவபிரான் எழுந்தருளியுள்ள திருவேற்காட்டை, அன்போடு வழிபட நினைந்தவர். அப்பெருமானின் சிவந்த திருவடிகளைத் திண்ணமாகச் சேர்வர்.

திருவேற்காடு

பரக்கி னார்படு வெண்டலை யிற்பலி
விரக்கி னானுறை வேற்காட்டூர்
அரக்க னாண்மை யடரப்பட் டானிறை
நெருக்கி னானை நினைமினே. **#626**

பிரமனின் தலையோட்டில் பலியேற்கின்ற சமர்த்த னாகிய சிவபிரான் உறையும் திருவேற்காட்டில் அரக்கன் ஆகிய இராவணனின் ஆண்மையை அடர்த்துக் கால்விரலால் சிறிதே ஊன்றி நெருக்கிய அவனை நினைமின்கள்.

திருவேற்காடு

மாறி லாமல ரானொடு மாலவன்
வேற லானுறை வேற்காடு
ஈறிலாமொழி யேமொழி யாவெழில்
கூறி னார்க்கில்லை குற்றமே. **#627**

ஒப்பற்ற தாமரை மலர் மேல் உறையும் நான்முகன், திருமால் ஆகியவர்களை வெற்றி கொள்வானாகிய சிவன் உறையும் திருவேற்காட்டு இறைவனைப் பற்றிய மொழியை ஈறிலா மொழியாக, அப்பெருமானுடைய அழகிய நலங்களைக் கூறுபவர்களுக்குக் குற்றமில்லை.

திருவேற்காடு

விண்ட மாம்பொழில் சூழ்திரு வேற்காடு
கண்டு நம்பன் கழல்பேணிச்

சண்பை ஞானசம் பந்தன் செந்தமிழ்
கொண்டு பாடக் குணமாமே. **#628**

விரிந்த மலர்களையுடைய மாஞ்சோலைகள் சூழ்ந்த திருவேற்காட்டை அடைந்து, அங்கெழுந்தருளியுள்ள இறைவன் திருவடிகளைப் பரவி, சீகாழிப் பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன் உரைத்த இப்பதிகச் செந்தமிழ் கொண்டு பாடிப் போற்றுவார்க்கு நன்மைகள் விளையும்.

திருக்கரவீரம்

திருக்கரவீரம்

திருக்கரவீரம்,
பண் - பழந்தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கரவீரேசுவரர்.
தேவியார் : பிரத்தியட்சமின்னாளம்மை.

அரியு நம்வினை யுள்ளன வாசற
வரிகொண் மாமணி போற்கண்டம்
கரிய வன்றிக ழுங்கர வீரத்தெம்
பெரிய வன்கழல் பேணவே. **#629**

வரிகள் அமைந்த சிறந்த நீலமணி போலக் கண்டம் கறுத்தவனாய், விளங்கும் திருக்கரவீரத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானாகிய இறைவன் திருவடிகளைத் துதித்தால் நம் வினைகளாக உள்ளன யாவும் முற்றிலும் கழியும்.

திருக்கரவீரம்

தங்கு மோவினை தாழ்சடை மேலவன்
திங்க ளோடுடன் சூடிய
கங்கை யான்றிக ழுங்கர வீரத்தெம்
சங்க ரன்கழல் சாரவே. **#630**

தாழ்ந்து தொங்கும் சடைமுடிகளை உடைய உயர்ந்தோனாய் இளம்பிறையோடு கங்கையை உடனாகச் சூடிய, திருக் கரவீரத்தில் விளங்கும் சங்கரன் திருவடிகளை வழிபட்டால் நம்மைப் பற்றிய வினைகள் தங்கா.

திருக்கரவீரம்

ஏதம் வந்தடை யாவினி நல்லன
பூதம் பல்படை யாக்கிய
காத லான்றிக ழுங்கர வீரத்தெம்
நாதன் பாத நணுகவே. **#631**

நல்லனவாகிய பூத கணங்களைப் பல்வகைப் படைகளாக அமைத்துக் கொண்டுள்ள அன்பு வடிவினனும் விளங்கும் திருக்கரவீரத்தில் எழுந்தருளிய எம் நாதனுமான சிவபெருமான் திருவடிகளை அடைவோரைத் துன்பங்கள் வந்தடையமாட்டா.

திருக்கரவீரம்

பறையு நம்வினை யுள்ளன பாழ்பட
மறையு மாமணி போற்கண்டம்
கறைய வன்றிக ழுங்கர வீரத்தெம்
இறைய வன்கழ லேத்தவே. **#632**

நீலமணி போலக் கண்டத்தில் கறையுடையவனும், விளங்கும் திருக்கரவீரத்தில் உறையும் எம் இறைவனுமாகிய பெருமான் திருவடிகளை ஏத்த நம் வினைகள் நீங்கும். சஞ்சிதமாக உள்ளவும் மறையும்.

<u>திருக்கரவீரம்</u>

பண்ணி னார்மறை பாடல னாடலன்
விண்ணி னார்மதி லெய்தமுக்
கண்ணி னானுறை யுங்கர வீரத்தை
நண்ணு வார்வினை நாசமே. **#633**

சந்த இசையமைப்புடன் கூடிய வேதங்களைப் பாடியும் ஆடியும் மகிழ்பவரும், வானகத்தில் சஞ்சரித்த மும்மதில் களையும் எய்தழித்த மூன்றாம் கண்ணை உடையவரும் ஆகிய சிவபிரானார் எழுந்தருளிய திருக்கரவீரத்தை அடைவார் வினைகள் நாசமாம்.

<u>திருக்கரவீரம்</u>

நிழலி னார்மதி சூடிய நீள்சடை
அழலி னாரழ லேந்திய
கழலி னாருறை யுங்கர வீரத்தைத்
தொழவல் லார்க்கில்லை துக்கமே. **#634**

ஒளி பொருந்திய பிறைமதியைச்சூடிய நீண்ட சடைமுடியினரும், அழலைக் கையில் ஏந்தியவரும் வீரக்கழலை அணிந்தவரும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளிய திருக்கரவீரத்தைத் தொழவல்லவர்கட்குத் துக்கம் இல்லை.

<u>திருக்கரவீரம்</u>

வண்டர் மும்மதின் மாய்தர வெய்தவன்
அண்ட னாரழல் போலொளிர்
கண்ட னாருறை யுங்கரவீ ரத்துத்
தொண்டர் மேற்றுயர் தூரமே. **#635**

தீயவர்களாகிய அசுரர்களின் முப்புரங்களும் அழிந்தொழியுமாறு கணை எய்தவரும், அனைத்து உலகங்களின் வடிவாக விளங்குபவரும், விடம் போல ஒளிவிடும் கண்டத்தை உடைய வரும் ஆகிய சிவபிரான் எழுந்தருளியுள்ள திருக்கரவீரத்துத் தொண்டர்களைப் பற்றிய துயரங்கள்

தூர விலகும். அழல் - தீப்போன்ற கொடிய விடம்.

திருக்கரவீரம்

புனலி லங்கையர் கோன்முடி பத்திறச்
சினவ லாண்மை செகுத்தவன்
கனல வன்னுறை கின்ற கரவீரம்
எனவல் லார்க்கிட ரில்லையே. **#636**

கடலால் சூழப்பட்ட இலங்கை மக்களின் தலைவனாகிய இராவணனின் தலைகள் பத்தும் நெரியுமாறு செய்து, கோபத்தோடு கூடிய அவனது ஆண்மையை அழித்தவனாய், எரிபோலும் உருவினன் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய கரவீரம் என்று சொல்ல வல்லார்க்கு இடர் இல்லை.

திருக்கரவீரம்

வெள்ளத் தாமரை யானொடு மாலுமாய்த்
தெளளத் தீத்திர ளாகிய
கள்ளத் தானுறை யுங்கர வீரத்தை
உள்ளத் தான்வினை யோயுமே. **#637**

நீரில் தோன்றும் தாமரை மலர் மேல் உறையும் நான் முகனோடு திருமாலும் உண்மையைத் தெளயுமாறு ஒளிப் பிழம்பாகத் தோன்றி அவர்கள் அறியாவாறு கள்ளம் செய்தவனாகிய சிவபிரான் உறையும் திருக்கரவீரத்தை நினைந்து போற்ற வினைகள் நீங்கும்.

திருக்கரவீரம்

செடிய மண்ணொடு சீவரத் தாரவர்
கொடிய வெவ்வுரை கொள்ளேன்மின்
கடிய வன்னுறை கின்ற கரவீரத்
தடிய வர்க்கில்லை யல்லலே. **#638**

முடைநாற்றம் வீசும் அமணர்களோகாவியாடை அணிந்து திரியும் புத்தர்கள் ஆகியோர்தம் கொடிய வெம்மையான உரைகளை மெய்யெனக் கொள்ளாதீர். அனைத்துலகையும் காத்தருள் கின்றவனாகிய சிவபிரான் உறைகின்ற திருக்கரவீரத்து அடியவர்க்கு அல்லல் இல்லை.

திருக்கரவீரம்

வீடி லான்விளங் குங்கர வீரத்தெம்
சேடன் மேற்கசி வாற்றமிழ்
நாடு ஞானசம் பந்தன சொல்லிவை
பாடு வார்க்கில்லை பாவமே. **#639**

அழிவில்லாதவனாக விளங்கும் திருக்கரவீரத்துப் பெரியோன் மேல் அன்புக்கசிவால் தமிழை விரும்பும் ஞானசம்பந்தன் சொல்லிய இத்திருப்பதிகப் பாடல்களாகிய இவற்றைப் பாடுவோர்க்குப் பாவம் இல்லை.

திருத்தூங்கானைமாடம்

திருத்தூங்கானைமாடம்

திருத்தூங்கானைமாடம்,
பண் - பழந்தக்கராகம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சுடர்க்கொழுந்தீசர்.
தேவியார் : கடந்தைநாயகியம்மை.

ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை
யுடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம்
அடங்கும் மிடங்கருதி நின்றீரெல்லாம்
அடிக ளடிநிழற்கீ ழாளாம்வண்ணம்
கிடங்கும் மதிலுஞ் சுலாவியெங்குங்
கெழுமனைக டோறு மறையின்னொலி
தொடங்குங் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. **#640**

வெளிப்படுதற்குரிய காலம் வருந்துணையும் ஒடுங்கியிருக்கும் நோய் இனிவரும் பிறப்புகள், துன்பங்கள் ஆகியனவாய இவைகளை உடைய இவ்வாழ்க்கை நீங்கத்தவம் புரிதற்குரிய இடத்தை விரும்பி நிற்கும் நீவிர் எல்லீரும் அகழும் மதிலும் சூழ்ந்து எல்லா இடங்களிலும் உள்ள வீடுகள் தோறும் வேதங்களின் ஒலிகள் ஒலிக்கும் கடந்தை என்னும் ஊரில் உறையும் அடிகளாகிய சிவபெருமானின் அடிநிழலின்கீழ் அவருக்கு ஆளாகுமாறு அவர் கோயிலாகிய திருத்தூங்கானைமாடம் செல்வீராக.

திருத்தூங்கானைமாடம்

பிணிநீர சாதல் பிறத்தலிவை
பிரியப் பிரியாத பேரின்பத்தோ
டணிநீர மேலுலக மெய்தலுறில்
அறிமின் குறைவில்லை யானேறுடை
மணிநீல கண்ட முடையபிரான்
மலைமக ளுந்தானு மகிழ்ந்துவாழும்
துணிநீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. **#641**

பிணிகளின் தன்மையினை உடைய சாதல் பிறத்தல் ஆகியன நீங்க, எக்காலத்தும் நீங்காத பேரின்பத்தோடு கூடிய அழகிய தன்மை வாய்ந்த, மேலுலகங்களை நீவிர் அடைய விரும்பினால், விடையேற்றை ஊர்தியாகவும், கொடியாகவும் உடையவனும், நீலமணி போன்ற

கண்டத்தினைக் கொண்டவனும் ஆகிய சிவபிரான் மலைமகளும் தானுமாய் மகிழ்ந்து வாழும், தௌந்த நீரை உடைய கடந்தையில் ஒளியோடு கூடிய திருத்தூங்கானைமாடக் கோயிலை அறிந்து தொழுவீராக. உங்கட்கு யாதும் குறைவில்லை.

திருத்தூங்கானைமாடம்

சாநாளும் வாழ்நாளுந் தோற்றமிவை
சலிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
ஆமா றறியா தலமந்துநீர்
அயர்ந்துங் குறைவில்லை யானேறுடைப்
பூமா ணலங்க லிலங்குகொன்றை
புனல்பொதிந்த புன்சடையி னானுறையும்
தூமாண் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. **#642**

இறக்கும் நாளும், வாழும் நாளும், பிறக்கும் நாளும் ஆகிய இவற்றோடு கூடிய சலிப்பான வாழ்க்கை நீங்கச் செய்யும் தவம் யாதென அறியாது நீவிர் மறந்ததனாலும் யாதும்குறைவில்லை. விடையேற்றை ஊர்தியாகக்கொண்டு மலர்களில் மாட்சிமையுற்று விளங்கும் கொன்றை மாலையும், கங்கையும் தங்கிய சிவந்த சடையினை உடைய சிவபிரான் உறையும் தூய்மையான, மாண்புடைய கடம்பைநகரில் விளங்கும் பெரிய கோயிலாக அமைந்த திருத்தூங்கானை மாடத்தைத் தொழுவீராக. அது ஒன்றே தவத்தின் பயனைத் தரப்போதுமானதாகும்.

திருத்தூங்கானைமாடம்

ஊன்றும் பிணிபிறவி கேடென்றிவை
யுடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம்
மான்று மனங்கருதி நின்றீரெல்லாம்
மனந்திரிந்து மண்ணின் மயங்காதுநீர்
மூன்று மதிலெய்த மூவாச்சிலை
முதல்வர்க் கிடம்போலு முகில்தோய்கொடி
தோன்றுங் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. **#643**

நிலையானநோய், பிறப்பு, இறப்பு, துன்பம் இவற்றை உடைய வாழ்க்கை நீங்கவும், நிலையான வீடு பேற்றைப் பெறவும், தவம் செய்ய விரும்பி மயங்கி நிற்கும் நீவிர் எல்லீரும் மனம் வேறுபட்டு உலகில் மயங்காது, திரிபுரங்களை எய்த அழியாத வில்லை ஏந்தியவரும், உலகின் தலைவருமாகிய சிவபிரானது இடமாக விளங்குவதாய், வானளாவிய கொடிகள் தோன்றும் கடந்தை நகரில் உள்ள பெரிய

கோயிலாக அமைந்த திருத்தூங்கானை மாடத்தைத் தொழுவீர்களாக.

திருத்தூங்கானைமாடம்

மயறீர்மை யில்லாத தோற்றம்மிவை
மரணத்தொ டொத்தழியு மாறாதலால்
வியறீர மேலுலக மெய்தலுறின்
மிக்கொன்றும் வேண்டா விமலனிடம்
உயர்தீர வோங்கிய நாமங்களா
லோவாது நாளும் அடிபரவல்செய்
துயர்தீர் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. **#644**

மயக்கம் நீங்காத பிறப்பிறப்புக்கள் அழியும் வழிகள் ஆதலால் அவற்றின் நீங்கி மேலுலகம் எய்த நீவிர் விரும்பினால் பெரிதாய முயற்சி எதுவும் வேண்டா. எளிய வழியாகச் சிவபிரானது இடமாக விளங்குவதும் நம் துயர்களைத் தீர்ப்பதும் ஆகிய கடந்தை நகரில் உள்ள பெரிய கோயிலாகிய திருத்தூங்கானைமாடத்தை அடைந்து அப்பெருமானுடைய மிக உயர்ந்த திருப்பெயர்களைக் கூறி இடைவிடாது அவன் திருவடிகளைத் தொழுவீர்களாக.

திருத்தூங்கானைமாடம்

பன்னீர்மை குன்றிச் செவிகேட்பிலா
படர்நோக் கிற்கண் பவளந்நிற
நன்னீர்மை குன்றித் திரைதோலொடு
நரைதோன் றுங்கால நமக்காதன்முன்
பொன்னீர்மை துன்றப் புறந்தோன்றுநற்
புனல்பொதிந்த புன்சடையி னானுறையும்
தொன்னீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. **#645**

புலன் நுகர்ச்சிக்குரிய பலதன்மைகளும் குறைந்து காதுகள் கேளாமல் கண்களில், சென்று பற்றும் பார்வைகுன்றிப் பவளம் போன்ற உடல்நிறம் குன்றிச் சுருங்கிய தோலோடு நரை தோன்றும் மூப்புக் காலம் நம்மை வந்து அணுகுமுன் பொன் போன்ற நிறம் பொருந்திய கங்கை தங்கிய செஞ்சடையினையுடைய சிவபிரான் உறையும், பழமையான புகழையுடைய கடம்பை நகர்த் தடங்கோயிலாகிய திருத்தூங்கானை மாடத்தைத் தொழுவீர்களாக.

திருத்தூங்கானைமாடம்

இறையூண் டுகளோ டிடுக்கணெய்தி

யிழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
நிறையூண் நெறிகருதி நின்றீரெல்லா
நீள்கழ லேநாளு நினைமின்சென்னிப்
பிறைசூ ழலங்க லிலங்குகொன்றை
பிணையும் பெருமான் பிரியாதநீர்த்
துறைசூழ் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. **#646**

குறைந்த உணவோடு பல்வகைத் துன்பங்களையும் எய்தி வருந்தும் இழிந்த வாழ்க்கை நீங்க, தவமாகிய நிறைந்த உணவைப் பெரும் வழியாதென மயங்கி நிற்கும் நீவிர் அனைவீரும்.முடியில் பிறை சூடியவரும், கொன்றை மாலை அணிந்தவரும் ஆகிய பெருமான் பிரியாது உறைவதாய், நீர்த்துறைகள் சூழ்ந்த கடந்தை நகரிலுள்ள தடங்கோயிலாகிய தூங்கானைமாடத்தை நாளும் நினைந்து தொழுவீர்களாக.

திருத்தூங்கானைமாடம்

பல்வீழ்ந்து நாத்தளர்ந்து மெய்யில்வாடிப்
பழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
இல்சூ ழிடங்கருதி நின்றீரெல்லா
மிறையே பிரியா தெழுந்துபோதும்
கல்சூ ழரக்கன் கதறச்செய்தான்
காதலியுந் தானுங் கருதிவாழும்
தொல்சீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. **#647**

பல்வீழ்ந்து பேச்சுத் தளர்ந்து, உடல் வாடிப் பலராலும் பழிக்கப்படும் இவ்வுலக வாழ்க்கை நீங்கத் தவம் புரியும் இடம் யாதெனக் கருதி நிற்கும் நீவிர் அனைவீரும் சிறிதும் காலம் தாழ்த்தாது எழுந்துவருவீர்களாக. கயிலைமலையைப் பெயர்த்த இராவணனைக் கதறுமாறு அடர்த்த சிவபிரான் மலைமகளும் தானுமாய்க் கருதி வாழும் பழமையான புகழையுடைய கடம்பை நகரில் உள்ள பெருங்கோயிலாகிய தூங்கானைமாடத்தைத் தொழுவீர்களாக.

திருத்தூங்கானைமாடம்

நோயும் பிணியு மருந்துயரமு
நுகருடைய வாழ்க்கை யொழியத்தவம்
வாயு மனங்கருதி நின்றீரெல்லா
மலர்மிசைய நான்முகனு மண்ணும்விண்ணும்
தாய வடியளந்தான் காணமாட்டாத்

தலைவர்க் கிடம்போலுந் தண்சோலைவிண்
தோயுங் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. **#648**

உடலை வருத்தும் நோய்களும், மனத்தை வருத்தும் கவலைகளும் அவற்றால் விளையும் துன்பங்களும் ஆகியவற்றை நுகர்தற்குரிய இவ்வாழ்க்கை நீங்கத் தவம்புரியும் எண்ணத்துடன் நிற்கும் நீவிர் அனைவீரும் தாமரை மலர்மேல் உறையும் நான்முகனும், மண்ணையும், விண்ணையும் அடியால் அளந்த திருமாலும் காண மாட்டாத தலைவனாகிய சிவபிரானுக்குரிய இடமாகிய விண் தோயும் சோலைகளால் சூழப்பட்ட கடந்தை நகரிலுள்ள திருத்தூங்கானை மாடப்பெருங்கோயிலைத் தொழுவீர்களாக.

திருத்தூங்கானைமாடம்

பகடூர் பசிநலிய நோய்வருதலாற்
பழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
முகடூர் மயிர்கடிந்த செய்கையாரும்
மூடுதுவ ராடையரு நாடிச்சொன்ன
திகடீர்ந்த பொய்ம் மொழிகள் தேறவேண்டா
திருந்திழையுந் தானும் பொருந்திவாழும்
துகடீர் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. **#649**

பெரும்பசி நலிய, நோய்கள் வருத்துவதால். பழிக்கத்தக்க இவ்வாழ்க்கை நீங்கத் தவம் செய்ய விரும்பும் நீவிர் தலையை முண்டிதமாக்கித் திரிபவரும், உடலைத் துவராடையால் போர்த்தவரும் ஆகிய சமண புத்தர்களின் ஞானம் நீங்கிய பொய்மொழிகளைத் தெளயாது இறைவன் இறைவியோடு பொருந்தி வாழும் குற்றமற்ற கடந்தை நகர்த் தடங் கோயிலாகிய திருத்தூங்கானை மாடத்தைத் தொழுவீர்களாக.

திருத்தூங்கானைமாடம்

மண்ணார் முழுவதிரு மாடவீதி
வயற்காழி ஞானசம் பந்தனல்ல
பெண்ணா கடத்துப் பெருங்கோயில்சேர்
பிறையுரிஞ்சுந் தூங்கானை மாடமேயான்
கண்ணார் கழல்பரவு பாடல்பத்துங்
கருத்துணரக் கற்றாருங் கேட்டாரும்போய்
விண்ணோ ருலகத்து மேவிவாழும்
விதியதுவே யாகும் வினைமாயுமே. **#650**

மார்ச்சனையோடு கூடிய முழவு ஒலி செய்யும் மாட வீதிகளைக்

கொண்டுள்ள வயல்கள் சூழ்ந்த சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தர் பெண்ணாகடத்தில் பெருங்கோயிலாக விளங்கும் வானளாவிய திருத்தூங்கானைமாடத்து இறைவன் திருவடிகளைப் பரவிப் பாடிய பாடல்கள் பத்தையும் கற்றவரும், கேட்டவரும் விண்ணவர் உலகத்தை மேவி வாழ அப்பாடல்களே தவப்பயன்தரும்; வினைகள் மாயும்.

திருத்தோணிபுரம்

சீர்காழி

திருத்தோணிபுரம்,
பண் - பழந்தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தோணியப்பர்.
தேவியார் : திருநிலைநாயகியம்மை.

வண்டரங்கப் புனற்கமல
மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்டரங்க விசைபாடு
மளியரசே யொளிமதியத்
துண்டரங்கப் பூண்மார்பர்
திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்னிலைமை
பரிந்தொருகாற் பகராயே. **#651**

வளமையான அலைகளோடு கூடிய நீர் நிலைகளில், மலர்ந்த தாமரை மலர்களின் விளைந்த தேனை வயிறார உண்டு, தன் பெண் வண்டோடு களித்து, சிறந்த அலைபோல மேலும் கீழுமாய் அசையும் நடையில் இசைபாடும் அரச வண்டே! என் மேல் பரிவு கொண்டு, ஒளிபொருந்திய இளம்பிறையை முடியிற் சூடியவரும், எலும்பு மாலைகளை அணிகலனாகப் பூண்ட மார்பினருமாகிய, திருத்தோணிபுரத்தில் பண்டரங்கக் கூத்து ஆடும் பரமரைக் கண்டு, அவரிடம் எனது பிரிவாற்றாத நிலையை ஒரு முறையேனும் பகர்வாயாக.

சீர்காழி

எறிசுறவங் கழிக்கான
லிளங்குருகே யென்பயலை
அறிவுறா தொழிவதுவு
மருவினையேன் பயனன்றே
செறிசிறார் பதமோதுந்
திருத்தோணி புரத்துறையும்
வெறிநிறார் மலர்க்கண்ணி
வேதியர்க்கு விளம்பாயே. **#652**

எதிர்ப்பட்டனவற்றைக் கொல்லும் இயல்பினவாகிய சுறா மீன்கள் நிறைந்த உப்பங் கழிகளை அடுத்துள்ள கடற்கரைச் சோலைகளில் வாழும் இளங்குருகே! என்னுடைய பசலைத் துன்பத்தை நீ அறியாமல்

இருப்பதும் நீக்குதற்கரிய என் வினைப்பயன் அன்றோ? அந்தணச் சிறுவர்கள் பலர் கூடி, பத மந்திரங்களை ஓதிப் பயிலும் திருத்தோணிபுரத்தில் எழுந்தருளியவரும் முடிமீது மணமும் நிறமும் பொருந்திய மலர்க்கண்ணி சூடியவருமான சிவபிரானாருக்கு என் நிலைமையைக் கூறுவாயாக.

<u>சீர்காழி</u>

பண்பழனக் கோட்டகத்து
வாட்டமிலாச் செஞ்சூட்டுக்
கண்பகத்தின் வாரணமே
கடுவினையே னுறுபயலை
செண்பகஞ்சேர் பொழில்புடைசூழ்
திருத்தோணி புரத்துறையும்
பண்பனுக்கென் பரிசுரைத்தாற்
பழியாமோ மொழியாயே. **#653**

பண்படுத்தப்பட்ட வயல்களின் கரைகளில் முளைத்த சம்பங்கோரைகளின் இடையே வாட்டமின்றி மகிழ்வோடு வாழும் சிவந்த உச்சிக் கொண்டையை உடைய கோழியே! சண்பகமரங்கள் நிறைந்த பொழில்களால் சூழப்பட்ட திருத்தோணிபுரத்தில் எழுந்தருளிய இனிய இயல்பினன் ஆகிய இறைவனிடம் மிக்க வினைகளின் பயனாய் அவனைப் பிரிந்து மிகுதியான பசலையால் வருந்தி வாழும் என் நிலைமையை உரைத்தால் உனக்குப் பழி விளையுமோ? மொழிவாயாக.

<u>சீர்காழி</u>

காண்டகைய செங்காலொண்
கழிநாராய் காதலாற்
பூண்டகைய முலைமெலிந்து
பொன்பயந்தா ளென்றுவளர்
சேண்டகைய மணிமாடத்
திருத்தோணி புரத்துறையும்
ஆண்டகையாற் கின்றேசென்
றடியறிய வுணர்த்தாயே. **#654**

உப்பங்கழியில் வாழும் அழகுமிக்க சிவந்த கால்களை உடைய நாரையே! 'காதல் மிக்கூர்தலால் அணிகலன்களைப் பொருந்திய அழகிய தனங்கள் மெலிந்து பசலை நோய் பூக்கப் பெற்று உன் அடியவள் வருந்துகிறாள் என்று வானோங்கி வளர்ந்துள்ள அழகிய மாடவீடுகளைக் கொண்டுள்ள திருத்தோணிபுரத்தில் எழுந்தருளியுள்ள ஆண்மக்களில் சிறந்தவராய் விளங்கும் சிவபிரானை இன்றே சென்று

அடைந்து என் மெலிவுக்குரிய காரணத்தை அவர் அறியுமாறு உணர்த்துவாயாக.

சீர்காழி

பாராரே யெனையொருகாற்
றொழுகின்றேன் பாங்கமைந்த
காராருஞ் செழுநிறத்துப்
பவளக்காற் கபோதங்காள்
தேராரு நெடுவீதித்
திருத்தோணி புரத்துறையும்
நீராருஞ் சடையாருக்
கென்னிலைமை நிகழ்த்தீரே. **#655**

அழகியதாய் அமைந்துள்ள கருமை நிறைந்த செழுமையான நிறத்தினையும் பவளம் போன்ற கால்களையும் உடைய புறாக்களே! உம்மைத் தொழுகின்றேன். வண்டு முதலியவற்றிடம் என் நிலைமை கூறியும் அவை என்னை ஒருமுறையேனும் பாராவாயின. நீவிர் தேரோடும் அகலமான வீதிகளை உடைய திருத்தோணிபுரத்தில் எழுந்தருளிய கங்கை தங்கிய சடையினை உடைய சிவபிரானிடம் சென்று என் பிரிவாற்றாத நிலையைக் கூறுவீர்களாக.

சீர்காழி

சேற்றெழுந்த மலர்க்கமலச்
செஞ்சாலிக் கதிர்வீச
வீற்றிருந்த வன்னங்காள்
விண்ணோடு மண்மறைகள்
தோற்றுவித்த திருத்தோணி
புரத்தீசன் றுளங்காத
கூற்றுதைத்த திருவடியே
கூடுமா கூறீரே. **#656**

வளமான சேற்றிடை முளைத்து மலர்ந்த தாமரை மலர்மேல் நெற்பயிர்கள் தம் கதிர்களையே சாமரையாகவீச, அரச போகத்தில் வீற்றிருக்கும் அன்னங்களே! விண்ணுலகம் மண்ணுலகம் ஆகியவற்றையும் நான்கு வேதங்களையும் தோற்றுவித்த திருத்தோணி புரத்தில் உறையும் சிவபிரானாருடைய யாராலும் அசைத்தற்கு இயலாத இயமனை உதைத்தழித்த திருவடிகளை யாம் அடையும் வழிகளைக் கூறுவீர்களாக.

சீர்காழி

முன்றில்வாய் மடற்பெண்ணைக்
குரம்பைவாழ் முயங்குசிறை
அன்றில்காள் பிரிவுறுநோ
யறியாதீர் மிகவல்லீர்
தென்றலார் புகுந்துலவுந்
திருத்தோணி புரத்துறையுங்
கொன்றைவார் சடையார்க்கென்
கூர்பயலை கூறீரே. **#657**

வீடுகளின் வாயிற்பகுதியில் மடல்களை உடைய பனைமரங்களில் கட்டிய கூடுகளில் வாழ்ந்து தம் பெடைகளைத் தழுவும் சிறகுகளோடு கூடிய அன்றிற் பறவைகளே! நீவிர் பிரிவுத் துன்பத்தை அறியமாட்டீர் ஆயினும் நேசிப்பதில் மிக வல்லவர்களாயுள்ளீர்கள். தென்றல் காற்று தவழ்ந்து வரும் திருவீதிகளை உடைய திருத்தோணிபுரத்தில் எழுந்தருளிய கொன்றை மாலை அணிந்த சடை முடியினை உடைய சிவபிரானுக்கு என்பால் மிகுந்துள்ள பசலை நோயின் இயல்பை எடுத்துரைப்பீர்களாக.

<u>சீர்காழி</u>

பானாறு மலர்ச்சூதப்
பல்லவங்க ளவைகோதி
ஏனோர்க்கு மினிதாக
மொழியுமெழி லிளங்குயிலே
தேனாரும் பொழில்புடைசூழ்
திருத்தோணி புரத்தமரர்
கோனாரை யென்னிடைக்கே
வரவொருகாற் கூவாயே. **#658**

பால்மணம் கமழும் மலர்களைக் கொண்ட மாமரத்தின் தளிர்களைக் கோதி உண்டு, எல்லோர்க்கும் இனிதாகக் கூவும் அழகிய இளமையான குயிலே! தேன் நிறைந்த பொழில்கள் புடைசூழ்ந்து விளங்கும் திருத்தோணிபுரத்தில் எழுந்தருளிய தேவர் தலைவனாகிய சிவபிரான் என்னிடம் வருமாறு ஒருமுறையேனும் கூவுவாயாக.

<u>சீர்காழி</u>

நற்பதங்கண் மிகவறிவாய்
நானுன்னை வேண்டுகின்றேன்
பொற்பமைந்த வாயலகிற்
பூவைநல்லாய் போற்றுகின்றேன்
சொற்பதஞ்சேர் மறையாளர்

திருத்தோணி புரத்துறையும்
விற்பொலிதோள் விகிர்தனுக்கென்
மெய்ப்பயலை விளம்பாயே. **#659**
அழகமைந்த வாயாகிய அலகினை உடைய நாகண வாய்ப் பறவையே! நான் உன்னைத் துதித்துப் போற்றுகிறேன். தலைவனிடம் முறையிடுதற்குரிய செவ்விகளை நீ மிகவும் நன்கறிவாய் ஆதலால், இம்முறையீட்டை உன்பால் தெரிவிக்கிறேன். சொற்களால் அமைந்த பதம் என்னும் இசையமைப்புடைய வேதங்களில் வல்லமறையவர் வாழும் திருத்தோணிபுரத்தில் எழுந்தருளிய வில்லாற்பொலியும் தோளை உடைய விகிர்தனுக்கு என் உடலில் தோன்றிய பசலை நோயை உரைப்பாயாக.

<u>சீர்காழி</u>

சிறையாரு மடக்கிளியே
யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன்
மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி
புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் திருநாமம்
எனக்கொருகாற் பேசாயே. **#660**
அழகிய சிறகுகளை உடைய இளங்கிளியே! என்பால் வருவாயாக. நான் உனக்குத் தேனையும் பாலையும் மாறி மாறி உண்ணத் தருவேன். நீ செறிந்த பவளங்களையும் முத்துக்களையும் கரைகளில் சேர்ப்பிக்கும் கடல் அருகில் உள்ள திருத்தோணிபுரத்தில் உறையும் இளம்பிறை சூடிய பெருமானின் திருநாமத்தை 'ஒரு முறை என் செவி குளிரப் பேசுவாயாக.

<u>சீர்காழி</u>

போர்மிகுத்த வயற்றோணி
புரத்துறையும் புரிசடையெங்
கார்மிகுத்த கறைக்கண்டத்
திறையவனை வண்கமலத்
தார்மிகுத்த வரைமார்பன்
சம்பந்த னுரைசெய்த
சீர்மிகுந்த தமிழ்வல்லார்
சிவலோகஞ் சேர்வாரே. **#661**
தூற்றாப் பொலிகளை மிகுதியாகக் கொண்ட வயல்கள் சூழ்ந்த திருத்தோணிபுரத்தில் எழுந்தருளிய முறுக்கேறிய சடையினையும்

கருமை நிறைந்த விடக்கறை பொருந்திய கழுத்தையும் உடைய சிவபிரானை, வளமையான தாமரை மலர் மாலையைச் சூடிய மலை போன்ற மார்பினனாகிய ஞானசம்பந்தன் போற்றி உரைத்த புகழ் பொருந்திய இத்தமிழ்த் திருப்பதிகத்தை ஓதி நினைய வல்லவர் சிவலோகம் சேர்வர்.

திருச்செங்காட்டங்குடி

திருச்செங்காட்டங்குடி

திருச்செங்காட்டங்குடி,
பண் - பழந்தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கணபதீசுவரர்.
தேவியார் : திருக்குழல்மாதம்மை.

நறைகொண்ட மலர்தூவி
விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார்
முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ்
செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான்
கணபதீச் சரத்தானே . **#662**

அடியவர்கள் நாள்தோறும் விதிப்படி தேன் பொருந்திய நாண்மலர்களைத் தூவி மணம் கமழச் செய்வித்துத் தவறாமல் நின்று பணி செய்து வழிபட, விடக்கறை பொருந்திய கண்டத்தினனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கோயில் சிறகுகளை உடைய வண்டினங்கள் ஒலிக்கும் திருச்செங்காட்டங் குடியில் விளங்கும் கணபதீச்சரமாகும்.

திருச்செங்காட்டங்குடி

வாரேற்ற பறையொலியுஞ்
சங்கொலியும் வந்தியம்ப
ஊரேற்ற செல்வத்தோ
டோங்கியசீர் விழவோவாச்
சீரேற்ற முடைத்தாய
செங்காட்டங் குடியதனுள்
காரேற்ற கொன்றையான்
கணபதீச் சரத்தானே. **#663**

கார்காலத்தே மலரும் கொன்றை மலரை அணிந்த சிவபிரான், வாரால் இழுத்துக் கட்டப்பட்ட பறைகளின் ஒலியும், சங்குகளின் ஒலியும் வந்திசைக்க ஊர் முழுதும் நிறைந்த செல்வ வளங்களோடு பரவிய புகழை உடைய திருவிழாக்கள் இடைவிடாது நிகழும் திருச் செங்காட்டங்குடியில் விளங்கும் கணபதீச்சரம் என்னும் கோயிலில்

எழுந்தருளியுள்ளான்.

திருச்செங்காட்டங்குடி

வரந்தையான் சோபுரத்தான்
மந்திரத்தான் தந்திரத்தான்
கிரந்தையான் கோவணத்தான்
கிண்கிணியான் கையதோர்
சிரந்தையான் செங்காட்டங்
குடியான்செஞ் சடைச்சேரும்
கரந்தையான் வெண்ணீற்றான்
கணபதீச் சரத்தானே. **#664**

கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ள இறைவன், வரந்தை, சோபுரம் ஆகிய தலங்களில் எழுந்தருளியிருப்பவன். வேதாகமங்களை அருளிச் செய்தவன். கோவணம் அணிந்தவன். காலிற் கிண்கிணி அணிந்தவன். கையில் உடுக்கை ஒன்றை ஏந்தியவன். சிவந்த சடைமுடிமீது கரந்தை சூடியவன். திருவெண்ணீறு அணிந்தவன். அப்பெருமான் திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளான்.

திருச்செங்காட்டங்குடி

தொங்கலுங் கமழ்சாந்து
மகிற்புகையுந் தொண்டர்கொண்
டங்கையாற் றொழுதேத்த
வருச்சனைக்கன் றருள்செய்தான்
செங்கயல்பாய் வயலுடுத்த
செங்காட்டங் குடியதனுள்
கங்கைசேர் வார்சடையான்
கணபதீரச் சரத்தானே. **#665**

மணம் கமழும் மாலைகளும் சந்தனமும், அகில் புகையும் கொண்டு தொண்டர்கள் தம் அழகிய கைகளால் தொழுது போற்றி வணங்கி அருச்சிக்க அவர்கட்கு உடனே அருள் செய்த பெருமானும் கங்கை தங்கிய நீண்ட சடைமுடியை உடையவனுமாகிய சிவபிரான். சிவந்த கயல் மீன்கள் பாயும் வளமான வயல்கள் புறமாகச் சூழ்ந்த திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளான்.

திருச்செங்காட்டங்குடி

பாலினால் நறுநெய்யாற்
பழத்தினாற் பயின்றாட்டி
நூலினான் மணமாலை

கொணர்ந்தடியார் புரிந்தேத்தச்
சேலினார் வயல்புடைசூழ்
செங்காட்டங் குடியதனுள்
காலினாற் கூற்றுதைத்தான்
கணபதீச் சரத்தானே. #666

தனது இடத் திருவடியால் இயமனை உதைத்தருளிய இறைவன், அடியவர்கள் ஆகம விதிப்படி பாலினாலும் மணம் கமழும் நெய்யாலும், பழவர்க்கங்களாலும் விரும்பி அபிடேகித்து மணமாலைகளைக் கொண்டு வந்து சூட்டி அன்போடு வழிபடுமாறு சேல்மீன்கள் நிறைந்த வளமான வயல்கள் புடை சூழ்ந்துள்ள திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளான்.

திருச்செங்காட்டங்குடி

நுண்ணியான் மிகப்பெரியான்
நோவுளார் வாயுளான்
தண்ணியான் வெய்யான்நந்
தலைமேலான் மனத்துளான்
திண்ணியான் செங்காட்டங்
குடியான்செஞ் சடைமதியக்
கண்ணியான் கண்ணுதலான்
கணபதீச் சரத்தானே. #667

திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் நுண்ணியன யாவற்றினும் மிக நுண்ணியன். பருமையான பொருள்கள் யாவற்றிலும் மிகப் பருமையானவன். நோய் முதலியவற்றால் வருந்துவோர் தம் வாயினால் துதிக்கப் பெறுபவன். தண்மையானவன். புறச்சமயிகட்கு வெய்யவன். நமதுமுடிமீதும் மனத்தின் கண்ணும் உறைபவன். உறுதியானவன். தனது சிவந்த சடைமீது பிறைமதிக் கண்ணியைச் சூடியவன். நெற்றியில் கண்ணுடையவன்.

திருச்செங்காட்டங்குடி

மையினார் மலர்நெடுங்கண்
மலைமகளோர் பாகமாம்
மெய்யினான் பையரவ
மரைக்கசைத்தான் மீன்பிறழச்
செய்யினா ரகன்கழனிச்
செங்காட்டங் குடியதனுட்
கையினார் கூரெரியான்

கணபதீரச் சரத்தானே. **#668**
கருங்குவளை மலர் போன்ற நீண்ட கண்களை உடைய மலைமகளாகிய பார்வதிதேவியை ஒரு பாகமாகக் கொண்டுள்ள திருமேனியனும், படம் பொருந்திய பாம்பை இடையிலே கட்டியவனும், கையின்கண் மிகுந்துள்ள தீயை ஏந்தியவனுமாகிய சிவபிரான், மீன்கள் விளங்கித் திரியும் வயல்களாலும் அகன்ற கழனிகளாலும் சூழப்பட்ட திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளான்.

திருச்செங்காட்டங்குடி

தோடுடையான் குழையுடையா
னரக்கன்றன் றோளடர்த்த
பீடுடையான் போர்விடையான்
பெண்பாக மிகப்பெரியான்
சேடுடையான் செங்காட்டங்
குடியுடையான் சேர்ந்தாடும்
காடுடையா னாடுடையான்
கணபதீச் சரத்தானே. **#669**

திருச்செங்காட்டங்குடியில் விளங்கும் கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ள இறைவன், ஒரு காதில் தோட்டினை அணிந்தவன். பிறிதொரு காதில் குழை அணிந்தவன். கயிலையைப் பெயர்த்த இராவணனின் தோள்களை நெரித்த பெருமை உடையவன், போரிடும் காளையை உடையவன். பெண்ணை ஒரு பாகமாகக் கொண்டவன். மிகவும் பெரியவன். பெருமைகட்கு உரியவன். பூதகணங்களோடு சேர்ந்தாடும் சுடுகாட்டைத் தனக்குரிய இடமாகக் கொண்டவன். நாடுகள் பலவற்றிலும் கோயில் கொண்டு அருள்புரிபவன்.

திருச்செங்காட்டங்குடி

ஆனூரா வுழிதருவா
னன்றிருவர் தேர்ந்துணரா
வானூரான் வையகத்தான்
வாழ்த்துவார் மனத்துளான்
தேனூரான் செங்காட்டங்
குடியான்சிற் றம்பலத்தான்
கானூரான் கழுமலத்தான்
கணபதீச் சரத்தானே. **#670**

விடைமிசை ஏறி அதனை ஊர்ந்து பல இடங்களிலும் திரிபவன். முன்னொரு காலத்தே திருமால் பிரமன் ஆகிய இருவர் அடிமுடிகளைத் தேர்ந்து உணர முடியாதவாறு வானளாவ ஓங்கி நின்றவன். இவ்வுலகில்

சிற்றம்பலத்திலும் தேனூரிலும் கானூரிலும் கழுமலத்திலும் விளங்குபவன். அவ்விறைவன் திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளான்.

திருச்செங்காட்டங்குடி

செடிநுகருஞ் சமணர்களுஞ்
சீவரத்த சாக்கியரும்
படிநுகரா தயருழப்பார்க்
கருளாத பண்பினான்
பொடிநுகருஞ் சிறுத்தொண்டர்க்
கருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான்
கணபதீச் சரத்தானே. **#671**

முடைநாற்றத்தை நுகரும் சமணர்களும், காவியாடை கட்டிய புத்தர்களும் எம்பெருமானுடைய இயல்புகளை அறிந்துணராது துன்புறுபவர்கள். அவர்கட்கு அருள்புரியாத இயல்பினனாகிய சிவபிரான் திருநீற்று மணத்தையே நுகரும் சிறுத்தொண்டர்க்கு அருள்செய்யும் பொருட்டுத் திருச்செங்காட்டங்குடியை விளங்கிய தலமாகக் கொண்டு அங்குள்ள கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளான்.

திருச்செங்காட்டங்குடி

கறையிலங்கு மலர்க்குவளை
கண்காட்டக் கடிபொழிலின்
நறையிலங்கு வயற்காழித்
தமிழ்ஞான சம்பந்தன்
சிறையிலங்கு புனற்படப்பைச்
செங்காட்டங் குடிசேர்த்தும்
மறையிலங்கு தமிழ்வல்லார்
வானுலகத் திருப்பாரே. **#672**

கருமை பரவி விளங்கும் மலராகிய குவளை கண்போல் மலர்ந்து விளங்குவதும் மணம் கமழும் சோலைகளிலுள்ள தேனின் மணம் வீசுவதுமான, வயல்களால் சூழப்பட்ட சீகாழிப் பதியில் தோன்றிய தமிழ் வல்ல ஞானசம்பந்தன் கரைகளோடு கூடி நீர்நிறைந்து தோன்றும் வயல்கள் சூழ்ந்த திருச்செங்காட்டங்குடியில் விளங்கும் கணபதீச்சரத்து இறைவர் மீது பாடிய வேதப் பொருள் நிறைந்த இத் திருப்பதிகத் தமிழ் மாலையை ஓதவல்லவர் வானுலகில் வாழ்வர்.

திருக்கோளிலி

திருக்கோளிலி

திருக்கோளிலி,
பண் - பழந்தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கோளிலியப்பர்.
தேவியார் : வண்டமர்பூங்குழலம்மை.

நாளாய போகாமே
நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய வன்புசெய்வோ
மடநெஞ்சே யரனாமம்
கேளாய்நங் கிளைகிளைக்குங்
கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன
கோளிலியெம் பெருமானே. **#673**

அறியாமையை உடைய மனமே! உலகில் உயிர் வாழும் நாள்கள் பல போவதற்கு முன்னரே நீலகண்டனாய சிவபிரானுக்கே அடியவராக விளங்கி அவனிடத்து அன்பு செய்வோம். அவ்வரனது திருநாமங்களைப் பலகாலும் கேட்பாயாக. அவ்வாறு கேட்பின் நம் சுற்றத்தினரும் கிளைத்து இனிது வாழ்வர். துன்பங்கள் நம்மைத் தாக்காதவாறு அருள்புரிந்து நம் மனமாறுபாடுகளையும் அவன் தீர்த்து அருள்வான். அவ்விறைவன் திருக்கோளிலி என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ளான்.

திருக்கோளிலி

ஆடரவத் தழகாமை
யணிகேழற் கொம்பார்த்த
தோடரவத் தொருகாதன்
துணைமலர்நற் சேவடிக்கே
பாடரவத் திசைபயின்று
பணிந்தெழுவார் தம்மனத்தில்
கோடரவந் தீர்க்குமவன்
கோளிலியெம் பெருமானே. **#674**

படம் எடுத்து ஆடும் இயல்புடைய பாம்பை நாணாகக் கொண்டு அதில் அழகிய ஆமை ஓட்டையும் பன்றிக் கொம்பையும் கோத்து அணிந்தவனும், தோடாகப் பாம்பையே கொண்டவனும் ஆகிய சிவபிரானது இரண்டு மலர் போன்ற சிவந்த நல்ல திருவடிகளையே

பாடலால் வரும் இசையினால் பாடிப் பழகிப் பணிந்து வணங்குபவர்களின் மனக்கோணலைத் தீர்த்தருள்பவன் திருக்கோளிலி எம்பெருமானாவான்.

திருக்கோளிலி

நன்றுநகு நாண்மலரால்
நல்லிருக்கு மந்திரங்கொண்
டொன்றிவழி பாடுசெய
லுற்றவன்ற னோங்குயிர்மேல்
கன்றிவரு காலனுயிர்
கண்டவனுக் கன்றளித்தான்
கொன்றைமலர் பொன்றிகழுங்
கோளிலியெம் பெருமானே. **#675**

அழகிதாக மலர்ந்த புதிய பூக்களைக் கொண்டு இருக்கு வேத மந்திரங்களைக் கூறி மன ஒருமையோடு வழிபாடு செய்த மார்க்கண்டேயனின் உயர்ந்த உயிரைக் கவரச் சினந்து வந்த இயமனது உயிரைப் போக்கி அம்மார்க்கண்டேயனுக்கு அன்றே என்றும் பதினாறாண்டாக இருக்கும் வரமளித்தவன், பொன் போல் விளங்கும் கொன்றை மலரைச் சூடிய எம் திருக்கோளிலிப் பெருமானாவான்.

திருக்கோளிலி

வந்தமண லால்இலிங்கம்
மண்ணியின்கட் பாலாட்டும்
சிந்தைசெய்வோன் றன்கருமந்
தேர்ந்துசிதைப் பான்வருமத்
தந்தைதனைச் சாடுதலுஞ்
சண்டீச னென்றருளிக்
கொந்தணவு மலர்கொடுத்தான்
கோளிலியெம் பெருமானே. **#676**

மண்ணியாறு கொண்டுவந்த மணலால் அவ்வாற்றின் கரையில் இலிங்கம் அமைத்து மேய்ச்சலுக்குக் கொண்டு வந்த பசுவின் பாலை அபிடேகித்து வழிபட்ட விசாரசருமனது செயலைக் கண்டு அச்சிவபூசையைச் சிதைக்க முற்பட்ட அவன் தந்தையின் காலை அவன் தடிய, அதனைக் கண்டு அவ்விசாரசருமனுக்குச் சண்டீசப் பதவி அருளித் தான் உண்ட கலத்தொடு சூடிய மலர் மாலைகளைச் சூடிக்கொள்ளும் சிறப்பை அளித்தவன், திருக்கோளிலியில் விளங்கும் எமது பெருமான் ஆவான்.

திருக்கோளிலி

வஞ்சமனத் தஞ்சொடுக்கி
வைகலுநற் பூசனையால்
நஞ்சமுது செய்தருளும்
நம்பியென வேநினையும்
பஞ்சவரிற் பார்த்தனுக்குப்
பாசுபத மீந்துகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சணவுங்
கோளிலியெம் பெருமானே. **#677**

வஞ்சகமான மனத்தைத் திருத்தி ஐம்பொறிகளை ஒடுக்கி நாள்தோறும் நல்ல பூசையை இயற்றி, நஞ்சினை அமுதாக உண்டருளிய நம்பியே என நினையும் சிவபக்தனும், பாண்டவர் ஐவரில் ஒருவனுமான அருச்சுனனுக்குப் பாசுபதம் என்னும் அத்திரம் வழங்கி மகிழ்ந்தவன். கொஞ்சும் கிளிகள் வானவெளியில் பறக்கும் திருக்கோளிலியில் விளங்கும் எம் பெருமான் ஆவான்.

திருக்கோளிலி

தாவியவ னுடனிருந்துங்
காணாத தற்பரனை
ஆவிதனி லஞ்சொடுக்கி
யங்கணனென் றாதரிக்கும்
நாவியல்சீர் நமிநந்தி
யடிகளுக்கு நல்குமவன்
கோவியலும் பூவெழுகோற்
கோளிலியெம் பெருமானே. **#678**

மூவுலகங்களையும் தாவி அளந்த திருமால் தன்னோடு உடனிருந்தும் திருவடிகளைக் காண இயலாதவாறு சிறந்து நின்ற தற்பரனாகிய சிவபிரானை, ஐம்புலன்களையும் ஒடுக்கிக் கருணையாளனாக உயிர்க்குயிராய்க் காதலித்து வழிபடும் நாவால் புகழத்தக்க பெரியவராகிய நமிநந்தி அடிகளுக்கு அருள் புரிந்தவன். தலைமை சான்றமலர் மரங்களை உடைய திருக்கோளிலியில் விளங்கும் எம் பெருமானாவான்.

திருக்கோளிலி

கன்னவிலு மால்வரையான்
கார்திகழு மாமிடற்றான்
சொன்னவிலு மாமறையான்

றோத்திரஞ்செய் வாயினுளான்
மின்னவிலுஞ் செஞ்சடையான்
வெண்பொடியா னங்கையினில்
கொன்னவிலுஞ் சூலத்தான்
கோளிலியெம் பெருமானே. **#679**

கற்கள் செறிந்த பெரிய கயிலாய மலையில் எழுந்தருளியிருப்பவன். கருமை விளங்கும் பெரிய மிடற்றை உடையவன். புகழ் பொருந்திய வேதங்களை அருளிச் செய்தவன். தன்னைத் தோத்திரிப்பாரின் வாயின்கண் உள்ளவன். மின்னல் போன்ற சிவந்த சடையினை உடையவன். திருவெண்ணீறு அணிந்தவன். அழகிய கையில் கொல்லும் தொழிலில் பழகிய சூலப்படையை ஏந்தியவன். இத்தகையோனாகி விளங்குவோன் திருக்கோளிலியின்கண் விளங்கும் எம்பெருமானாவான்.

<u>திருக்கோளிலி</u>

அந்தரத்திற் றேரூரு
மரக்கன்மலை யன்றெடுப்பச்
சுந்தரத்தன் றிருவிரலா
லூன்றஅவன் உடல்நெரிந்து
மந்திரத்த மறைபாட
வாளவனுக் கீந்தானும்
கொந்தரத்த மதிச்சென்னிக்
கோளிலியெம் பெருமானே. **#680**

ஆகாய வெளியிலே தேரை ஊர்ந்து வரும் இராவணன் கயிலை மலையைப் பெயர்த்த போது அழகிய தனது கால் விரலால் சிறிதே ஊன்றிய அளவில், அவன் உடல் நெரிந்து, மந்திரமாக விளங்கும் வேத கீதங்களைப் பாடிப் போற்றச் சந்திரஹாசம் என்னும் வாளை ஈந்து அருள் செய்தவன், கொத்துப் போல இரண்டு முனைகளை உடைய பிறை மதியைச் சூடிய சடையினனாகிய திருக்கோளிலி எம்பெருமானாவான்.

<u>திருக்கோளிலி</u>

நாணமுடை வேதியனும்
நாரணனும் நண்ணவொணாத்
தாணுவெனை யாளுடையான்
தன்னடியார்க் கன்புடைமை
பாணனிசை பத்திமையாற்
பாடுதலும் பரிந்தளித்தான்
கோணலிளம் பிறைச்சென்னிக்

கோளிலியெம் பெருமானே. #681
ஐந்து தலைகளில் ஒன்றை இழந்ததால் நாணமுற்ற வேதியனாகிய பிரமனும், திருமாலும் அணுக முடியாத நிலைத்த பொருள் ஆனவனும் என்னை அடிமையாக உடையவனும், தன் அடியவர்கட்கு அன்பு வடிவானவனும், பாணபத்திரன் பத்திமையோடு பாடப் பரிவோடு அவனுக்கு அருள் புரிந்தவனுமான வளைந்த பிறை மதியைச் சென்னியில் சூடிய சிவபிரான், திருக்கோளிலி எம்பெருமான் ஆவான்.

திருக்கோளிலி

தடுக்கமருஞ் சமணரொடு தர்க்கசாத் திரத்தவர்சொல்
இடுக்கண்வரு மொழிகேளா தீசனையே யேத்துமின்கள்
நடுக்கமிலா வமருலகம் நண்ணலுமா மண்ணல்கழல்
கொடுக்ககிலா வரங்கொடுக்குங் கோளிலியெம் பெருமானே. #682
தடுக்கை உடையாக விரும்பும் சமணரும், தர்க்க சாத்திரங்களில் வல்ல புத்தர்களும் கூறுகின்ற இடுக்கண் வளரும் மொழிகளைக் கேளாது ஈசனையே ஏத்துமின்கள். துளங்காது அமரர் வாழும் வானுலகத்தை அடைதலும் கூடும். அப்பெருமான் திருவடிகள், வேறுயாராலும் தர இயலாத வரங்கள் பலவற்றையும் தரும். அவ்விறைவன் திருக்கோளிலி எம்பெருமான் ஆவான்.

திருக்கோளிலி

நம்பனைநல் லடியார்கள்
நாமுடைமா டென்றிருக்கும்
கொம்பனையாள் பாகனெழிற்
கோளிலியெம் பெருமானை
வம்பமருந் தண்காழிச்
சம்பந்தன் வண்டமிழ்கொண்
டின்பமர வல்லார்கள்
எய்துவர்க ளீசனையே. #683
அடியவர்கள் நம்முடைய செல்வம் என நம்பியிருப்பவனாய்ப், பூங்கொம்பு போன்ற அழகிய உமையம்மையின் கணவனாய், அழகிய திருக்கோளிலியில் விளங்கும் எம் பெரு மானை, மணம் விரியும் தண்ணிய சீகாழிப் பதியுள் தோன்றிய ஞான சம்பந்தன் பாடிய இத்தமிழ்ப் பதிகத்தால் இன்பம் பொருந்தப் பாட வல்லவர்கள் அப்பெருமானையே அடைவர்.

திருப்பிரமபுரம் - பல்பெயர்ப்பத்து

சீர்காழி

திருப்பிரமபுரம் - பல்பெயர்ப்பத்து,
பண் - தக்கேசி, திருப்பிரமபுர மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

எரியார்மழுவொன் றேந்தியங்கை
யிடுதலை யேகலனா
வரியார்வளையா ரையம்வவ்வாய்
மாநலம் வவ்வுதியே
சரியாநாவின் வேதகீதன்
தாமரை நான்முகத்தன்
பெரியான்பிரமன் பேணியாண்ட
பிரம புரத்தானே. **#684**

உச்சரிப்பு தவறாதவாறு நாவினால் வேத கீதங்களைப் பாடுபவனும், தாமரை மலர்மேல் விளங்குவோனும் ஆகிய நான்கு திருமுகங்களை உடைய பெரியவனாகிய பிரமன் விரும்பி வழிபட்டு ஆட்சிபுரிந்த பிரமபுரத்தில் விளங்கும் இறைவனே! எரியும் மழு ஆயுதத்தைக் கையில் ஏந்தி அழகிய கையில் பிரமனது ஐந்து தலைகளில் ஒன்றைக் கொய்து கொண்ட மண்டை ஓட்டையே உண்கல னாகக் கொண்டு வீதிகள்தோறும் பலி ஏற்பது போல் வந்து வரிகளை உடைய வளையல்களை அணிந்த இளம் பெண்கள் தரும் பிச்சையை ஏலாது அவர்களது மிக்க அழகைக் கவர்ந்து செல்கின்றாயே! இது நீதிதானா?

சீர்காழி

பெயலார்சடைக்கோர் திங்கள்சூடிப்
பெய்பலிக் கென்றயலே
கயலார்தடங்க ணஞ்சொனல்லார்
கண்டுயில் வவ்வுதியே
இயலானடாவி யின்பமெய்தி
யிந்திரனாண் மண்மேல்
வியலார்முரச மோங்குசெம்மை
வேணு புரத்தானே. **#685**

இந்திரன் விண்ணுலகை இழந்து மண்ணுலகம் வந்து முறைப்படி ஆட்சி நடத்தி மகிழ்வெய்தி வழிபட்டு வாழ்ந்த சிறப்பினதும், பெரிதாய

முரசுகள் ஓங்கி ஒலிப்பதும் நீதி நிலை பெற்றதும் ஆகிய வேணுபுரத்தில் எழுந்தருளிய இறைவனே, கங்கை தங்கிய சடைமுடியில் ஒரு திங்களைச் சூடி மகளிர்இடும் பலியை ஏற்பதற்கு என்றே வந்து அதனின் வேறாய் மீன் போன்ற தடங்கண்களையும் அழகிய சொற்களையும் உடைய இளம்பெண்களின் கண்கள் துயில் கொள்வதைக் கவர்ந்து அவர்களை விரக நோய்ப் படுத்தல் நீதியோ?

<u>சீர்காழி</u>

நகலார்தலையும் வெண்பிறையு
நளிர்சடை மாட்டயலே
பகலாப்பலிதேர்ந் தையம்வவ்வாய்
பாய்கலை வவ்வுதியே
அகலாதுறையு மாநிலத்தில்
அயலின்மை யாலமரர்
புகலான்மலிந்த பூம்புகலி
மேவிய புண்ணியனே. **#686**

இம்மாநிலத்தில் தம்மை அடைக்கலமாக ஏற்போர் பிறர் இன்மையால் தேவர்கள் தமக்குப் புகலிடமாய் வந்தடைந்த சிறப்பினதும், அவர்கள் அகலாது உறைவதுமாகிய அழகிய புகலி நகரில் மேவிய புண்ணியனே! சிரிக்கும் தலையோட்டையும் வெண்மையான பிறை மதியையும் குளிர்ந்த சடையில் அணிந்து பகற்போதில் பலி ஏற்பது போல் வந்து, மகளிர்தரும் பிச்சைப் பொருள் கொள்ளாது அவர்கட்கு விரகதாபம் அளித்து, அதனால் அவர்கள் அணிந்துள்ள ஆடை முதலியன, நெகிழும்படி செய்து போதல் நீதியோ?

<u>சீர்காழி</u>

சங்கோடிலங்கத் தோடுபெய்து
காதிலொர் தாழ்குழையன்
அங்கோல்வளையா ரையம்வவ்வா
யானலம் வவ்வுதியே
செங்கோனடாவிப் பல்லுயிர்க்குஞ்
செய்வினை மெய்தெரிய
வெங்கோத்தருமன் மேவியாண்ட
வெங்குரு மேயவனே. **#687**

கொடிய அரசன் எனப்படும் எமதருமராசன் தானும் குருவாகிச் செங்கோல் ஆட்சியை நடத்தித் தான் செய்யும் செயல்கள் நீதிநெறிக்கு உட்பட்டவை என்ற உண்மை எல்லோர்க்கும் தெரியுமாறு செங்கோல் முறைகளை வந்து கற்று அருள் புரிந்து ஆண்ட வெங்குரு என்னும்

தலத்தில் எழுந்தருளியவனே! சங்கக் குண்டலத்தோடு விளங்குமாறு தோடணிந்தும் ஒரு காதில் தாழும் குழையணிந்தும் பலி ஏற்பதற்கென்று வந்து அழகிய திரண்ட வளையல்களை அணிந்த இளம் பெண்களின் அழகினைக் கவர்ந்து செல்லல் நீதியோ?

சீர்காழி

தணிநீர்மதியஞ் சூடிநீடு
தாங்கிய தாழ்சடையன்
பிணிநீர்மடவா ரையம்வவ்வாய்
பெய்கலை வவ்வுதியே
அணிநீருலக மாகியெங்கு
மாழ்கட லாலழுங்கத்
துணிநீர்பணியத் தான்மிதந்த
தோணி புரத்தானே. **#688**

மண்ணுலகம் அழகிய நீருலகம் ஆகி, அனைத்திடங்களும் ஆழமான கடலால் மூழ்கி வருந்தும் அவ்வேளையில், அச்சம் தரும் அக்கடல் பணியுமாறு தான் மட்டும் அவ்வூழி வெள்ளத்தில் அழியாது மிதந்த தோணிபுரத்து இறைவனே! தன்னை வந்து பணிந்த மதியைச் சூடி அம்மதியை நெடிது நாள் காத்தருளிய, தாழ்ந்து தொங்கும் சடைமுடியை உடையவனாய், காமநோயால் வருந்தும் மகளிர் பால் சென்று அவர்கள் தரும் பிச்சையை ஏலாது அவர்களின் ஆடைகளை நிலைகுலையச் செய்தல் நீதியாகுமா ?

சீர்காழி

கவர்பூம்புனலுந் தண்மதியுங்
கமழ்சடை மாட்டயலே
அவர்பூம்பலியோ டையம்வவ்வா
யானலம் வவ்வுதியே
அவர்பூணரையர்க் காதியாய
வடன்மன்ன னாண்மண்மேல்
தவர்பூம்பதிக ளெங்குமெங்குந்
தங்கு தராயவனே. **#689**

அணிகலன்களை அணிந்த அரசர்களாகிய அவர்க்கெல்லாம் தலைவனாகிய வலிமை பொருந்திய மன்னனாகிய திருமால் வராக அவதாரத்தில் இரண்ய கசிபுவைக் கொன்ற பழி நீங்கப் பூசித்து ஆட்சி செய்த இம்மண்ணுலகில் உள்ளதும், தவமுனிவர்கள் எல்லா இடங்களிலும் தங்கும் சிறப்பினதும், ஆகிய பூந்தராயில் எழுந்தருளியவனே, இம்மண்ணுலகைக் கவர வந்த அழகிய

கங்கையையும் தண்ணிய மதியையும் மணம் கமழும் சடைமிசைச் சூடி மகளிர் அருகருகே இடும் சுவைமிக்க பலியாகிய உணவை ஏலாது அவர்களின் அழகை வவ்வுகின்றாயே; இது நீதியோ?

<u>சீர்காழி</u>

முலையாழ்கெழுவ மொந்தைகொட்ட
முன்கடை மாட்டயலே
நிலையாப்பலிதேர்ந் தையம்வவ்வாய்
நீநலம் வவ்வுதியே
தலையாய் கிடந்திவ் வையமெல்லாந்
தன்னதொ ராணைநடாய்ச்
சிலையான்மலிந்த சீர்ச்சிலம்பன்
சிரபுர மேயவனே. **#690**

கரவாக அமுதுண்டதால் திருமாலால் வெட்டப்பெற்றுத் தலைமாத்திரமாய் நின்ற வில்வீரனாகிய சிலம்பன் என்னும் இராகு வழிபட்டு இவ்வையகமெல்லாவற்றையும் தன் ஆணைவழி நடத்தி ஆட்சி புரிந்த சிரபுரம் என்னும் நகரில் எழுந்தருளிய இறைவனே! முல்லையாழை மீட்டி மொந்தை என்னும் பறை ஒலிக்கச் சென்று வீட்டின் முன் கடையின் அயலே நின்று உண்பதற்காக அன்றிப் பொய்யாகப் பிச்சை கேட்டு மகளிர் தரும் உணவைக் கொள்ளாது நீ அவர்தம் அழகினைக் கவர்வது நீதியோ?

<u>சீர்காழி</u>

எருதேகொணர்கென் றேறியங்கை
யிடுதலை யேகலனாக்
கருதேர்மடவா ரையம்வவ்வாய்
கண்டுயில் வவ்வுதியே
ஒருதேர்கடாவி யாரமரு
ளொருபது தேர்தொலையப்
பொருதேர்வலவன் மேவியாண்ட
புறவமர் புண்ணியனே. **#691**

ஒரு தேரைச் செலுத்திய அரிய போரில் பத்துத் தேர்களை அழியுமாறு சண்டையிடும் தேர் வல்லவன் ஆகிய சிபிச் சக்கரவர்த்தி வீற்றிருந்து அரசாண்ட சிறப்பினதும் அவனை வஞ்சித்துப் புறாவின் எடைக்கு எடை தசைகேட்ட பாவம் தீரத் தீக்கடவுள் வழிபட்டதுமான புறவம் என்னும் சீகாழிப் பதியில் விளங்கும் இறைவனே! தனது எருது ஊர்தியைக் கொணர்க என ஆணையிட்டு அதன்மிசை ஏறித்தனது அழகிய கையில் ஏந்திய பிரமகபாலத்தையே உண்கலனாகக் கொண்டு விரும்பும்

அழகுடைய மகளிரிடும் பலியைக் கொள்ளாது அவர்களின் உறக்கம் கெடுமாறு விரகதாபம் செய்து வருதல் நீதியோ?

சீர்காழி

துவர்சேர்கலிங்கப் போர்வையாருந்
தூய்மை யிலாச்சமணுங்
கவர்செய்துழலக் கண்டவண்ணங்
காரிகை வார்குழலார்
அவர்பூம்பலியோ டையம்வவ்வா
யானலம் வவ்வுதியே
தவர்செய்நெடுவேற் சண்டனாளச்
சண்பை யமர்ந்தவனே. **#692**

உடலைத் துளைக்கும் நீண்ட வேலை உடைய இயமனை அடக்கி ஆளச் சண்பையில் எழுந்தருளிய இறைவரே! காவி நிறம் சேர்ந்த ஆடையைப் போர்த்த புத்தரும், தூய்மையற்ற சமணரும் மனம் திரிந்து உழலுமாறு செய்து, பிச்சையேற்கும் கோலத்தவராய் மகளிர் வாழும் இல்லங்களை அடைந்து, நீண்ட கூந்தலை உடைய அம்மகளிர் கண்ட அளவில் மனம் திரிந்து நிற்க, அவர்கள் இடவந்த இனிய உணவாகிய பிச்சையை ஏலாது அவர்தம் அழகினைக் கவர்ந்து செல்கின்றீரே; இது நீதியோ?

சீர்காழி

நிழலான்மலிந்த கொன்றைசூடி
நீறுமெய் பூசிநல்ல
குழலார்மடவா ரையம்வவ்வாய்
கோல்வளை வவ்வுதியே
அழலாயுலகங் கவ்வைதீர
வைந்தலை நீண்முடிய
கழனாகரையன் காவலாகக்
காழி யமர்ந்தவனே. **#693**

உலகம் அழலாக வெதும்பி வருந்திய துன்பம் தீருமாறு ஐந்து தலைகளையும் நீண்ட முடியையும் வீரக் கழலையும் அணிந்த நாகங்களின் தலைவனாகிய காளிதன் என்னும் பாம்பு காவல் புரிந்த காழிப் பதியில் அமர்ந்த தலைவனே! ஒளி நிறைந்த கொன்றை மலர் மாலையைச் சூடி, திருமேனியில் நீற்றினைப் பூசிக் கொண்டு பிச்சையேற்பவர் போல மகளிர் வாழும் வீதிகளில் சென்று அழகிய கூந்தலினை உடைய மகளிர்தரும் பிச்சையை ஏலாது அவர்களை விரகதாபத்தினால் மெலியச் செய்து அவர்தம் திரண்ட வளையல்களை வவ்வுகின்றீரே; இது நீதியோ?

சீர்காழி

கட்டார்துழாயன் றாமரையா
னென்றிவர் காண்பரிய
சிட்டார்பலிதேர்ந் தையம்வவ்வாய்
செய்கலை வவ்வுதியே
நட்டார்நடுவே நந்தனாள
நல்வினை யாலுயர்ந்த
கொட்டாறுடுத்த தண்வயல்சூழ்
கொச்சை யமர்ந்தவனே. **#694**

ஆற்றின் நடுவே பராசரமுனிவன் மச்சகந்தியைக் கூடிய பழி போகும்படி; அம்முனிவன் செய்த பூசனையால், அம்முனிவர் அடையுமாறு அப்பெண்ணுக்கு மணத்தையும் நல்லொழுக்கத்தையும் அளித்து அம்முனிவனை வாழச் செய்த சிறப்பினதாகிய குளிர்ந்த வயல்களால் சூழப்பட்ட கொச்சைவயம் என்னும் இத்தலத்தில் எழுந்தருளிய இறைவனே! கட்டப்பட்ட துளசி மாலையை அணிந்த திருமால் நான்முகன் என்ற இவர்களாலும் காண்டற்கரிய மேன்மையனாகிய நீ பிச்சை ஏற்கச் சென்று மகளிர் தரும் பலியை ஏலாது அவர் தம் அழகிய ஆடைகளை வவ்வுதல் நீதியோ?

சீர்காழி

கடையார்கொடிநன் மாடவீதிக்
கழுமலர்வூர்க் கவுணி
நடையார்பனுவன் மாலையாக
ஞானசம் பந்தன்நல்ல
படையார்மழுவன் மேன்மொழிந்த
பல்பெயர்ப் பத்தும்வல்லார்க்
கடையாவினைகள் உலகில்நாளும்
அமருல காள்பவரே. **#695**

வாயில்களிற் பொருந்திய கொடிகளோடு கூடிய மாடவீடுகளை உடைய வீதிகள் சூழ்ந்த கழுமலம் என்னும் சீகாழிப் பதியில் கவுணியர் குலத்தில் தோன்றிய ஞானசம்பந்தன் சந்தநடைகளோடு கூடிய இலக்கிய மாலையாக மழுப்படையை உடைய சீகாழி இறைவர்மேற் பாடிய பல் பெயர்ப்பத்து என்னும் இத்திருப்பதிகத்தை ஓதி வழிபட வல்லவர்களை இவ்வுலகில் துன்புறுத்தும் வினைகள் ஒருநாளும் வந்து அடையா. மறுமையில் அவர்கள் அமரருலகினை ஆள்வர்.

திருப்பூவணம்

திருப்பூவணம்

திருப்பூவணம்,
பண் - தக்கேசி,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பூவணநாதர்.
தேவியார் : மின்னாம்பிகையம்மை.

அறையார்புனலு மாமலரு
மாடரவார் சடைமேல்
குறையார்மதியுஞ் சூடிமாதோர்
கூறுடையா னிடமாம்
முறையார்முடிசேர் தென்னர்சேரர்
சோழர்கள்தாம் வணங்கும்
திறையாரொளிசேர் செம்மையோங்குந்
தென்றிருப் பூவணமே. **#696**

ஆரவாரித்து வரும் கங்கையும், ஆத்தி மலரும், ஆடும் பாம்பும் பொருந்திய சடையின் மேல், ஒரு கலையாய்க் குறைந்த பிறை மதியையும் சூடி மாதொர் பாகனாக விளங்கும் சிவபிரான் எழுந்தருளிய இடம், நீதியோடு கூடியவராய் முடிசூடி ஆளும் பாண்டியர், சேரர், சோழர் ஆகிய மூவேந்தர்களும் வணங்குவதும், வையை ஆற்றின் அலைகள் வீசுவதும், புகழோடு கூடியதும், வயல் வளம் மிக்கதுமாகிய அழகிய திருப்பூவணமாகும்.

திருப்பூவணம்

மருவார்மதின்மூன் றொன்றவெய்து
மாமலையான் மடந்தை
ஒருபால்பாக மாகச்செய்த
வும்பர்பிரா னவனூர்
கருவார்சாலி யாலைமல்கிக்
கழன்மன்னர் காத்தளித்த
திருவான்மலிந்த சேடர்வாழுந்
தென்றிருப் பூவணமே. **#697**

பகைவர்களாகிய திரிபுர அசுரர் மதில்கள் மூன்றையும் ஒருசேர எய்து அழித்தோனும், மலையரையன் மகளாகிய பார்வதி தேவியை ஒருபால் கொண்டு தேவர்கள் தலைவனாக விளங்குவோனும் ஆகிய சிவபிரானது ஊர்; கருக்கொண்ட நெற்பயிர்கள் கரும்புகள் ஆகியன நிறைந்ததும்

வீரக் கழல் புனைந்த மன்னர்கள் காப்பாற்றிக் கொடுத்த செல்வ வளத்தால் சிறந்த மேலானவர்கள் வாழ்வதுமான அழகிய பூவண நகராகும்.

திருப்பூவணம்

போரார்மதமா வுரிவைபோர்த்துப்
பொடியணி மேனியனாய்க்
காரார்கடலி னஞ்சமுண்ட
கண்ணுதல் விண்ணவனூர்
பாரார்வைகைப் புனல்வாய்பரப்பிப்
பன்மணி பொன்கொழித்துச்
சீரார்வாரி சேரநின்ற
தென்றிருப் பூவணமே. **#698**

போர்ப் பயிற்சியுடைய மதம் பொருந்திய யானையின் தோலை உரித்துப் போர்த்து, திருநீற்றுப் பொடி அணிந்த மேனியனாய், கருநிறம் பொருந்திய கடலிடைத் தோன்றிய நஞ்சினை உண்டவனாய், நுதல் விழி உடையவனாய் விளங்கும் சிவனது ஊர், நிலவுலகை வளம் செய்வதற்கு வந்த வையையாறு வாய்க்கால் வழியே பரப்பிப்பலவகை மணிகளையும் பொன்னையும் கொழித்து வளம் செய்யும் அழகிய திருப்பூவணமாகும்.

திருப்பூவணம்

கடியாரலங்கற் கொன்றைசூடிக்
காதிலொர் வார்குழையன்
கொடியார்வெள்ளை யேறுகந்த
கோவணவன் னிடமாம்
படியார்கூடி நீடியோங்கும்
பல்புகழாற் பரவச்
செடியார்வைகை சூழநின்ற
தென்றிருப் பூவணமே. **#699**

மணம் பொருந்திய கொன்றை மலர் மாலையைச் சூடி ஒரு காதில் நீண்ட குழை அணிந்தவனாய், வெண்மையான விடைக் கொடியைத் தனக்குரியதாகக் கொண்டவனாய், கோவணம் அணிந்தவனாய் விளங்கும் சிவபிரானது இடம், நிலவுலக மக்கள் ஒருங்கு கூடி நீண்டு விரிந்த தன் புகழைக் கூறி வணங்கப் புதர்கள் நிறைந்த வைகை யாறு சூழ்ந்துள்ள அழகிய திருப்பூவணமாகும்.

திருப்பூவணம்

கூரார்வாளி சிலையிற்கோத்துக்
கொடிமதில் கூட்டழித்த
போரார்வில்லி மெல்லியலாளோர்
பான்மகிழ்ந் தானிடமாம்
ஆராவன்பிற் றென்னர்சேரர்
சோழர்கள் போற்றிசைப்பத்
தேரார்வீதி மாடநீடுந்
தென்றிருப் பூவணமே. **#700**

கூர்மை பொருந்திய அம்பை வில்லில் பூட்டி, கொடிகள் கட்டிப் பறந்த மும்மதில்களின் கூட்டுக்களையும் ஒருசேர அழித்த போர்வல்ல வில் வீரனும், மெல்லியலாகிய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டு மகிழ்பவனுமாகிய சிவபிரானது இடம், குன்றாத அன்போடு பாண்டியர் சேரர் சோழர் ஆகிய மூவேந்தர்கள் போற்றத் தேரோடும் திருவீதியையும் மாட வீடுகளையும் உடைய அழகிய திருப்பூவணமாகும்.

திருப்பூவணம்

நன்றுதீதென் றொன்றிலாத
நான்மறை யோன்கழலே
சென்றுபேணி யேத்தநின்ற
தேவர்பிரா னிடமாம்
குன்றிலொன்றி யோங்கமல்கு
குளிர்பொழில் சூழ்மலர்மேல்
தென்றலொன்றி முன்றிலாருந்
தென்றிருப் பூவணமே. **#701**

நன்மை தீமை என்பனவற்றுள் ஒன்றும் இல்லாதவனும், நான்கு வேதங்களை அருளியவனும், தேவர்களின் தலைவனுமான சிவபிரான் தன் திருவடிகளை அடைந்து அன்பர்கள் போற்றி அருள் பெறுமாறு நின்ற இடம், பொதிய மலையில் பொருந்தி அங்கு நிறைந்த ஓங்கிய குளிர் பொழில்களில் உள்ள மலர்களிற் படிந்து வந்து தென்றல் முன்றில்களில் தங்கி மகிழ்விக்கும் அழகிய திருப்பூவணமாகும்.

திருப்பூவணம்

பைவாயரவ மரையிற்சாத்திப்
பாரிடம் போற்றிசைப்ப
மெய்வாய்மேனி நீறுபூசி
யேறுகந் தானிடமாம்
கைவாழ்வளையார் மைந்தரோடுங்
கலவியி னாலெருங்கிச்

செய்வார்தொழிலின் பாடலோவாத்
தென்றிருப் பூவணமே. #702

படம் பொருந்திய வாயினை உடைய பாம்பை இடையில் கட்டிக்கொண்டு, பூதகணங்கள் போற்றிப் பாட, மேனி முழுதும் மெய்மை வடிவான திருநீற்றைப் பூசி, விடையேற்றை ஊர்ந்துவரும் சிவபிரானது இடம், கைகளில் வளையல்களை அணிந்துள்ள இளமகளிர் தம் காதலர்களோடு புணர்ச்சி விருப்புடையராய் நெருங்கிச் செய்யப்படும் கலவி பற்றிய பாடல்களின் ஓசை நீங்காத அழகிய திருப்பூவணமாகும்.

திருப்பூவணம்

மாடவீதி மன்னிலங்கை
மன்னனை மாண்பழித்துக்
கூடவென்றி வாள்கொடுத்தாள்
கொள்கையி னார்க்கிடமாம்
பாடலோடு மாடலோங்கிப்
பன்மணி பொன்கொழித்து
ஓடிநீரால் வைகைசூழு
முயர்திருப் பூவணமே. #703

மாடவீதிகள் நிலைபெற்ற இலங்கை மன்னன் இராவணன் பெருவீரன் என்று மக்கள் பாராட்டிய சிறப்பை அழித்து, அவன் பிழை உணர்ந்து பாடி வேண்டிய அளவில் உடன் வெற்றி நல்கும் வாளைக் கொடுத்து ஆளும் அருட்கொள்கையாளனாகிய சிவ பிரானுக்குரிய இடம், ஆடல் பாடல்களால் மிக்க சிறப்புடையதும், பல்வகை மணிகளையும் பொன்னையும் அடித்து ஓடிவரும் நீரோடு வைகையாறு சூழ்ந்ததுமான உயர்ந்த திருப்பூவணமாகும்.

திருப்பூவணம்

பொய்யாவேத நாவினானும்
பூமகள் காதலனும்
கையாற்றொழுது கழல்கள்போற்றக்
கனலெரி யானவனூர்
மையார்பொழிலின் வண்டுபாட
வைகைமணி கொழித்துச்
செய்யார்கமலந் தேனரும்புந்
தென்றிருப் பூவணமே. #704

என்றும் பொய்யாகாத வேதங்களை ஓதும் நாவினன் ஆகிய நான்முகனும், மலர்மகள் கணவனாகிய திருமாலும், தம் கைகளால் தன் திருவடிகளைத் தொழுது போற்ற, சிவந்த எரி உருவான சிவபிரானது

ஊர், கருநிறம் பொருந்திய சோலைகளில் வண்டுகள் பாடுவதும், வைகை ஆறு மணி கொழித்து வளம் சேர்ப்பதும், சிவந்த தாமரை மலர்களில் தேன் அரும்பி நிற்பதுமான அழகிய திருப்பூவணமாகும்.

திருப்பூவணம்

அலையார்புனலை நீத்தவருந்
தேரருமன்பு செய்யா
நிலையாவண்ண மாயம்வைத்த
நின்மலன் றன்னிடமாம்
மலைபோற்றுன்னி வென்றியோங்கு
மாளிகை சூழ்ந்தயலே
சிலையார்புரிசை பரிசுபண்ணுந்
தென்றிருப் பூவணமே. **#705**

அலைகள் வீசும் நீரில் நீராடாது அதனைத் துறந்த சமணரும் புத்தரும் புண்ணியப் பேறு இன்மையால் அன்பு செய்து வழிபாட்டில் நிலைத்திராது அவர்கட்கு மாயத்தை வைத்த குற்றமற்ற சிவபிரானுக்குரிய இடம், வெற்றி மிக்க மாளிகைகள் மலைபோல் நெருங்கி அமைய அவற்றைச் சூழ்ந்து கருங்கல்லால் ஆகிய மதில்கள் அழகு செய்யும் அழகிய திருப்பூவணமாகும்.

திருப்பூவணம்

திண்ணார்புரிசை மாடமோங்குந்
தென்றிருப் பூவணத்துப்
பெண்ணார்மேனி யெம்மிறையைப்
பேரிய லின்றமிழால்
நண்ணாருட்கக் காழிமல்கு
ஞானசம்பந்தன் சொன்ன
பண்ணார்பாடல் பத்தும்வல்லார்
பயில்வது வானிடையே. **#706**

வலிமை பொருந்திய மதில்களும் மாடவீடுகளும் நிறைந்த அழகிய திருப்பூவணத்தில் பெண்ணொரு பாகனாம் திருமேனியோடு விளங்கும் எம் தலைவனாகிய சிவபிரானைப் பெருமை பொருந்திய இனிய தமிழால் பகைவராய புறச் சமயத்தவர் அஞ்சுமாறு சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் சொல்லிய இவ்விசைத் தமிழ்ப் பாடல்கள் பத்தினையும் ஓத வல்லவர் வாழ்வது வான் உலகமாகும்.

காவிரிப்பூம்பட்டினத்துப்பல்லவனீச்சரம்

காவிரிப்பூம்பட்டினத்துப்பல்லவனீச்சரம்

காவிரிப்பூம்பட்டினத்துப்பல்லவனீச்சரம்,
பண் - தக்கேசி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பல்லவனேசர்.
தேவியார் : சவுந்தராம்பிகையம்மை.

அடையார்தம் புரங்கண்மூன்று
மாரழலில் லழுந்த
விடையார்மேனி யராய்ச்சீறும்
வித்தகர் மேயவிடங்
கடையார்மாட நீடியெங்கும்
கங்குல் புறந்தடவப்
படையார்புரிசைப் பட்டினஞ்சேர்
பல்லவ னீச்சரமே. **#707**

பகைவராய அசுரர்களின் திரிபுரங்கள் தாங்குதற்கரிய அழலில் அழுந்துமாறு விடைமிசை ஏறிவரும் திருமேனியராய்ச் சென்று சினந்த வித்தகராகிய சிவபிரான் மேவிய இடம், வாயில்களோடு கூடிய மாடவீடுகள் எங்கும் உயர்ந்து விளங்குவதும், வானவெளியைத் தடவும் மதில்களால் சூழப்பட்டதும் ஆகிய காவிரிப்பூம்பட்டினத்தைச் சேர்ந்த திருப்பல்லவனீச்சரமாகும்.

காவிரிப்பூம்பட்டினத்துப்பல்லவனீச்சரம்

எண்ணாரெயில்கண் மூன்றுஞ்சீறு
மெந்தைபிரா னிமையோர்
கண்ணாயுலகங் காக்கநின்ற
கண்ணுதல் நண்ணுமிடம்
மண்ணார்சோலைக் கோலவண்டு
வைகலுந் தேனருந்திப்
பண்ணார்செய்யும் பட்டினத்துப்
பல்லவ னீச்சரமே. **#708**

பகைவராய அசுரர்களின் கோட்டைகளாய திரிபுரங்களைச் சினந்தழித்த எந்தையாகிய பெருமானும், தேவர்களின் கண்களாய் விளங்குவோனும், இவ்வுலகைக் காக்கின்ற கண்ணுதலும் ஆகிய சிவபிரான் மேவிய இடம், நன்கு அமைக்கப்பட்ட சோலைகளில் அழகிய வண்டுகள் நாள்தோறும் தேனுண்டு இசை பாடும் காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரமாகும்.

காவிரிப்பூம்பட்டினத்துப்பல்லவனீச்சரம்

மங்கையங்கோர் பாகமாக
வாணில வார்சடைமேற்
கங்கையங்கே வாழவைத்த
கள்வ னிருந்தவிடம்
பொங்கயஞ்சேர் புணரியோத
மீதுயர் பொய்கையின்மேற்
பங்கயஞ்சேர் பட்டினத்துப்
பல்லவ னீச்சரமே. **#709**

உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு ஒளி பொருந்திய பிறை தங்கிய சடையின்மேல் கங்கை நங்கையையும் வாழ வைத்துள்ள கள்வனாகிய சிவபிரான் எழுந்தருளிய இடம், மிக்க ஆழமான கடலினது வெள்ள நீரால் தானும்மேலே உயர்ந்துள்ள நீர் நிலையாகிய பொய்கைகளில் தாமரை மலர்கள் பூத்துள்ள காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனரச்சரமாகும்.

காவிரிப்பூம்பட்டினத்துப்பல்லவனீச்சரம்

தாரார்கொன்றை பொன்றயங்கச்
சாத்திய மார்பகலம்
நீரார்நீறு சாந்தம்வைத்த
நின்மலன் மன்னுமிடம்
போரார்வேற்கண் மாதர்மைந்தர்
புக்கிசை பாடலினாற்
பாரார்கின்ற பட்டினத்துப்
பல்லவ னீச்சரமே. **#710**

மாலையாகக் கட்டிய கொன்றை மலர்கள் பொன் போல் விளங்குமாறு சூட்டியுள்ள மார்பின் பரப்பில், நீரில் குழைத்த சாம்பலைச் சந்தனத்தைப் போலப் பூசியுள்ள குற்றமற்ற சிவபிரான் எழுந்தருளிய இடம், போர் செய்யத் தகுதியான கூரிய வேல் போலும் கண்களையுடைய மாதர்களும் இளைஞர்களும் கூடி இசை பாடுதலால் அதனைக் கேட்க மக்கள் வெள்ளம்போல் திரண்டுள்ள காவிரிப் பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரமாகும்.

காவிரிப்பூம்பட்டினத்துப்பல்லவனீச்சரம்

மைசேர்கண்ட ரண்டவாணர்
வானவ ருந்துதிப்ப
மெய்சேர்பொடிய ரடியாரேத்த

மேவி யிருந்தவிடங்
கைசேர்வளையார் விழைவினோடு
காதன்மை யாற்கழலே
பைசேரரவா ரல்குலார்சேர்
பல்லவ னீச்சரமே. **#711**

கருமை நிறம் பொருந்திய கண்டத்தினை உடையவரும், மண்ணக மக்களும் விண்ணகத் தேவரும் துதிக்க மேனிமிசைத் திருநீறு பூசியவனும் ஆகிய நிமலன், அடியவர் புகழ மேவியிருந்தருளும் இடம், கைகளில் மிகுதியான வளையல்களை அணிந்தபாம்பின் படம் போன்ற அல்குலை உடைய இளமகளிர் விழைவோடும் காதலோடும் திருவடிகளை வழிபடச் சேர்கின்ற திருப்பல்லவனீச்சரமாகும்.

<u>காவிரிப்பூம்பட்டினத்துப்பல்லவனீச்சரம்</u>

குழலினோசை வீணைமொந்தை
கொட்ட முழவதிரக்
கழலினோசை யார்க்கவாடுங்
கடவு ளிருந்தவிடஞ்
சுழியிலாருங் கடலிலோதந்
தெண்டிரை மொண்டெறியப்
பழியிலார்கள் பயில்புகாரிற்
பல்லவ னீச்சரமே. **#712**

குழலோசைக்கு ஏற்ப வீணை, மொந்தை ஆகியன முழங்கவும், முழவு ஒலிக்கவும், காலில் அணிந்துள்ள வீரக்கழல் நடனத்துக்கு ஏற்பச் சதங்கை போல இசைக்கவும் ஆடும் கடவுளாகிய சிவபிரான் எழுந்தருளிய இடம், சுழிகள் பொருந்திய கடலில் காவிரி வெள்ளநீர் தெளந்த நீரை முகந்து எறியுமாறு விளங்குவதும், பழியற்ற நன்மக்கள் வாழ்வதுமான புகார் நகரிலுள்ள பல்லவனீச்சரமாகும்.

<u>காவிரிப்பூம்பட்டினத்துப்பல்லவனீச்சரம்</u>

வெந்தலாய வேந்தன்வேள்வி
வேரறச்சாடி விண்ணோர்
வந்தெலாமுன் பேணநின்ற
மைந்தன் மகிழ்ந்தவிடம்
மந்தலாய மல்லிகையும்
புன்னைவளர் குரவின்
பந்தலாரும் பட்டினத்துப்
பல்லவ னீச்சரமே. **#713**

தகுதி இல்லாத மிக்க கூட்டத்தை உடைய தக்கன் என்னும் வேந்தன்

செய்த வேள்வியை அடியோடு அழித்துத் தேவர்கள் எல்லோரும் வந்து தன்னை விரும்பி வழிபட நின்ற பெருவீரனாகிய சிவபிரானது இடம், மென்மையான மல்லிகை, வளர்ந்து பரவியுள்ள புன்னை குராமரம் ஆகியவற்றில் படர்ந்துள்ள, காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரமாகும்.

காவிரிப்பூம்பட்டினத்துப்பல்லவனீச்சரம்

தேரரக்கன் மால்வரையைத்
தெற்றி யெடுக்கவவன்
றாரரக்குந் திண்முடிக
ளூன்றிய சங்கரனூர்
காரரக்குங் கடல்கிளர்ந்த
காலமெலா முணரப்
பாரரக்கம் பயில்புகாரிற்
பல்லவ னீச்சரமே. **#714**

சிறந்த தேரை உடைய இராவணன் பெருமை மிக்க கயிலை மலையைக் கைகளைப்பின்னி அகழ்ந்து எடுக்க, மாலைகள் அழுத்தும் அவனது திண்ணிய தலைகள் பத்தையும் கால் விரலால் ஊன்றி நெரித்த சங்கரனது ஊர், மேகங்கள் வந்து அழுந்தி முகக்கும் கடல், கிளர்ந்து எழும் காலங்களிலும் அழியாது உணரப்படும் சிறப்பினதும், மக்கள் அக்குமணிமாலை பூண்டு போற்றி வாழும் பெருமையுடையதுமாகிய, புகார் நகரைச் சேர்ந்த பல்லவனரச்சரமாகும்.

காவிரிப்பூம்பட்டினத்துப்பல்லவனீச்சரம்

அங்கமாறும் வேதநான்கு
மோதுமய னெடுமால்
தங்கணாலு நேடநின்ற
சங்கரன் றங்குமிடம்
வங்கமாரு முத்தமிப்பி
வார்கட லூடலைப்பப்
பங்கமில்லார் பயில்புகாரிற்
பல்லவ னீச்சரமே. **#715**

ஆறு அங்கங்களையும், நான்கு வேதங்களையும், முறையே ஓதும் பிரமனும், திருமாலும் தம் கண்களால் தேருமாறு உயர்ந்து நின்ற சங்கரன் தங்கும் இடம், மரக்கலங்களை உடைய கடல் முத்துக்களையும் சங்கங்களையும் அலைக்கரங்களால் அலைத்துத் தருவதும், குற்றமற்றோர் வாழ்வதுமாய புகாரில் அமைந்துள்ள பல்லவனீச்சரம் ஆகும்.

<u>காவிரிப்பூம்பட்டினத்துப்பல்லவனீச்சரம்</u>

உண்டுடுக்கை யின்றியேநின்
றூர்நக வேதிரிவார்
கண்டுடுக்கை மெய்யிற்போர்த்தார்
கண்டறி யாதவிடந்
தண்டுடுக்கை தாளந்தக்கை
சார நடம்பயில்வார்
பண்டிடுக்கண் டீரநல்கும்
பல்லவ னீச்சரமே. **#716**

அளவுக்கு மீறி உண்டு ஆடையின்றி ஊரார் சிரிக்கத் திரியும் சமணர்களும், அவர்களைக் கண்டு தாமும் அவ்வாறு திரியாது ஆடையை மெய்யில் போர்த்து உழலும் புத்தர்களும் கண்டு அறியாத இடம், தண்டு, உடுக்கை, தாளம், தக்கை இவை பொருந்த நடனம் புரிபவராய், அடியவர் இடக்கண்களைப் பண்டு முதல் தீர்த்தருளிவரும் பரமனார் எழுந்தருளிய பல்லவனீச்சரமாகும்.

<u>காவிரிப்பூம்பட்டினத்துப்பல்லவனீச்சரம்</u>

பத்தரேத்தும் பட்டினத்துப்
பல்லவ னீச்சரத்தெம்
அத்தன்றன்னை யணிகொள்காழி
ஞானசம் பந்தன்சொற்
சித்தஞ்சேரச் செப்புமாந்தர்
தீவினை நோயிலராய்
ஒத்தமைந்த வும்பர்வானி
லுயர்வினொ டோங்குவரே. **#717**

பக்தர்கள் போற்றும் காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரத்தில் விளங்கும் எம் தலைவனாகிய இறைவனை அழகிய சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் பாடிய இப்பதிகச் செழுந்தமிழை மனம் ஒன்றிச் சொல்லி வழிபடும் மக்கள், தீ வினையும் நோயும் இல்லாதவராய், அமைந்த ஒப்புடையவர் என்று கூறத் தேவர் உலகில் உயர்வோடு ஓங்கி வாழ்வர்.

திருச்சண்பைநகர்

சீர்காழி

திருச்சண்பைநகர்,
பண் - தக்கேசி

பங்கமேறு மதிசேர்சடையார்
விடையார் பலவேதம்
அங்கமாறு மறைநான்கவையு
மானார் மீனாரும்
வங்கமேவு கடல்வாழ்பரதர்
மனைக்கே நுனைமூக்கின்
சங்கமேறி முத்தமீனுஞ்
சண்பை நகராரே. **#718**

மீன்கள் நிறைந்ததும், கப்பல்களை உடையதும் ஆன கடலிடையே வாழும் பரதவர்கள் வீட்டு முற்றங்களில் கூரிய மூக்கினை உடைய சங்குகள் முத்துக்களை ஈனுகின்ற கடற்கரை ஊராகிய சண்பை நகரில் மேவிய இறைவர் கலை குறைந்த பிறை மதி சேர்ந்த சடையினர். விடைஊர்தியர், பலவாய் விரிந்த நான்கு வேதங்களாகவும் ஆறு அங்கங்களாகவும் விளங்குபவர்.

சீர்காழி

சூதகஞ்சேர் கொங்கையாளோர்
பங்கர் சுடர்க்கமலப்
போதகஞ்சேர் புண்ணியனார்
பூத கணநாதர்
மேதகஞ்சேர் மேகமந்தண்
சோலையில் விண்ணார்ந்த
சாதகஞ்சேர் பாளைநீர்சேர்
சண்பை நகராரே. **#719**

வானகத்தே திரிந்து வாழும் சாதகப் பறவைகள் உண்ணுமாறு மேன்மை பொருந்திய மேகங்கள் பெய்த மழை நீர் அழகிய குளிர்ந்த சோலைகளில் விளங்கும் தெங்கு கமுகு இவற்றின் பாளைகளில் சேரும் சண்பை நகர் இறைவர். சூது ஆடு கருவி போன்ற தனபாரங்களை உடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டவர். ஒளி பொருந்திய தாமரை மலரைச் சூடிய புண்ணிய வடிவினர். பூதகணங்களின் தலைவர்.

சீர்காழி

மகரத்தாடு கொடியோனுடலம்
பொடிசெய் தவனுடைய
நிகரொப்பில்லாத் தேவிக்கருள்செய்
நீல கண்டனார்
பகரத்தாரா வன்னம்பகன்றில்
பாதம் பணிந்தேத்தத்
தகரப்புன்னை தாழைப்பொழில்சேர்
சண்பை நகராரே. **#720**

எல்லோரும் புகழத்தாரா அன்னம் அன்றில் முதலிய பறவைகள் தம் திருவடிகளை வணங்கிப் போற்றுமாறு தகரம் புன்னை தாழை முதலிய மரங்களின் பொழில்கள் சூழ்ந்த சண்பை நகரில் விளங்கும் இறைவர், மகர மீன் வடிவு எழுதப்பட்டு ஆடும் கொடியை உடைய மன்மதனது உடலை நீங்குமாறு செய்து, அழகில் தன்னொப்பில்லாத அவனுடைய மனைவி வேண்ட அவள் கண்களுக்கு மட்டும் மன்மதனைப் புலனாகுமாறு அருள் செய்த நீலகண்டர் ஆவார்.

<u>சீர்காழி</u>

மொய்வல்லசுரர் தேவர்கடைந்த
முழுநஞ் சதுவுண்ட
தெய்வர்செய்ய வுருவர்கரிய
கண்டர் திகழ்சுத்திக்
கையர்கட்டங் கத்தர்கரியி
னுரியர் காதலாற்
சைவர்பாசு பதர்கள்வணங்குஞ்
சண்பை நகராரே. **#721**

அன்போடு சைவர்களும் பாசுபதர்களும் வழிபடும் சண்பை நகர் இறைவர். வலிமை செறிந்த அசுரர்களும் தேவர்களும் கடலைக் கடைந்தபோது எழுந்த நஞ்சு முழுவதையும் உண்டருளிய தெய்வமாவார். அவர் சிவந்த திருமேனி உடையவர். கருநிறம் பொருந்திய கண்டத்தினர். சுத்தியைக் கொண்டகையினர். மழுவினர் - யானைத் தோலைப் போர்த்தியவர்.

<u>சீர்காழி</u>

கலமார்கடலுள் விடமுண்டமரர்க்
கமுத மருள்செய்த
குலமார்கயிலைக் குன்றதுடைய
கொல்லை யெருதேறி
நலமார்வெள்ளை நாளிகேரம்

விரியா நறும்பாளை
சலமார்கரியின் மருப்புக்காட்டுஞ்
சண்பை நகராரே. **#722**

மக்கட்கு நன்மை தரும் மரமாகிய தென்னையிலிருந்து வெண்மை நிறத்தோடு வெளிவரும் மணம் மிக்க பாளை கபடம் மிக்க யானையின் மருப்புப் போலத் தோன்றும் சோலை வளம் மிக்க சண்பைநகர் இறைவர் மரக்கலங்கள் நிறைந்த கடலிடையே தோன்றிய விடத்தை உண்டு அமரர்கட்கு அமுதம் அருள் செய்தவர். மலைக் குலங்களில் மேம்பட்ட கயிலை மலைக்கு உரியவர். முல்லை நிலத்து ஆனேற்றை ஊர்ந்து வருபவர்.

<u>சீர்காழி</u>

மாகரஞ்சே ரத்தியின்றோல்
போர்த்து மெய்ம்மாலான
சூகரஞ்சே ரெயிறுபூண்ட
சோதியன் மேதக்க
ஆகரஞ்சே ரிப்பிமுத்தை
யந்தண் வயலுக்கே
சாகரஞ்சேர் திரைகளுந்துஞ்
சண்பை நகராரே. **#723**

கடலில் வாழும் சிப்பிகள் தந்த முத்துக்களை அழகியதாய்க் குளிர்ந்த வயல்களுக்குக் கடல் அலைகள் உந்தி வந்து சேர்க்கும் சண்பை நகர் இறைவன் நீண்ட கையினை உடைய யானையின் தோலை உரித்துப் போர்த்துள்ள திருமேனியில் திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றான பன்றியின் பல்லை அணிகலனாகப் பூண்ட ஒளி வடிவினன்.

<u>சீர்காழி</u>

இப்பதிகத்தின் **7-**ம் செய்யுள் சிதைந்து போயிற்று**. #724**

<u>சீர்காழி</u>

இருளைப்புரையு நிறத்திலரக்கன்
றனையீ டழிவித்து
அருளைச்செய்யு மம்மானேரா
ரந்தண் கந்தத்தின்
மருளைச்சுரும்பு பாடியளக்கர்
வரையார் திரைக்கையாற்
றரளத்தோடு பவளமீனுஞ்
சண்பை நகராரே. **#725**

அழகிய மணத்தோடு மருள் என்னும் பண்ணை வண்டுகள் பாட, கடல் மலை போன்ற அலைக் கைகளால் முத்துக்களையும் பவளங்களையும் கொணர்ந்து சேர்க்கும் சண்பைநகர் இறைவன் இருள் போன்ற கரிய நிறத்தினன் ஆகிய இராவணனின் வீரத்தை அழித்து அவன் உணர்ந்து வருந்த அருள் செய்த தலைவன்.

சீர்காழி

மண்டான்முழுது முண்டமாலு
மலர்மிசை மேலயனும்
எண்தானறியா வண்ணநின்ற
விறைவன் மறையோதி
தண்டார்குவளைக் கள்ளருந்தித்
தாமரைத் தாதின்மேற்
பண்டான்கொண்டு வண்டுபாடுஞ்
சண்பை நகராரே. **#726**

தண்டிலே மலர்ந்த குவளை மலர்களின் தேனை உண்டு தாமரை மலர்களில் நிறைந்துள்ள மகரந்தங்களில் தங்கி வண்டுகள் பண்பாடும் சண்பை நகர் இறைவன் உலகங்கள் முழுவதையும் உண்ட திருமால் தாமரை மலர் மேல் விளங்கும் நான்முகன் ஆகியோர் மனத்தாலும் அறிய ஒண்ணாதவாறு நின்றவன் வேதங்களை ஓதி வெளிப்படுத்தியவன்.

சீர்காழி

போதியாரும் பிண்டியாரும்
புகழல சொன்னாலும்
நீதியாகக் கொண்டங்கருளு
நிமல னிருநான்கின்
மாதிசித்தர் மாமறையின்
மன்னிய தொன்னூலர்
சாதிகீத வர்த்தமானர்
சண்பை நகராரே. **#727**

அணிமா முதலிய எண்வகைச் சித்திகளில் வல்ல சித்தர், பழமையான நூல்களாகிய வேதப் பொருள்களில் நிலைபெற்று நிற்பவர், சகாரம் முதலாகப் பாடப்படும் பாட்டில் நிலைத்திருப்பவர் ஆகிய சண்பை நகரார், புத்தர்களும் சமணர்களும் புகழ் அல்லவற்றைக் கூறினாலும் அவற்றைப் புகழ் மொழிகளாகக் கொண்டருளும் நிமலர்.

சீர்காழி

வந்தியோடு பூசையல்லாப்

போழ்தின் மறைபேசிச்
சந்திபோதிற் சமாதிசெய்யுஞ்
சண்பை நகர்மேய
அந்திவண்ணன் றன்னையழகார்
ஞானசம் பந்தன்சொற்
சிந்தைசெய்து பாடவல்லார்
சிவகதி சேர்வாரே. **#728**

அடியவர்கள் வந்தனையோடு பூசை செய்யும் காலங்கள் அல்லாத ஏனைய பொழுதுகளில் வேதப் பொருள்களைப் பேசியும், மூன்று சந்தியா காலங்களிலும் தியானம் சமாதி நிலையில் நின்று வழிபடும் சண்பைநகர்மேய, மாலைக்காலம் போன்ற செம்மேனியனாகிய இறைவனை, ஞானசம்பந்தன் அருளிய அழகிய இப்பதிகப் பொருளை மனத்தில் நிறுத்திப் பாடவல்லவர் சிவகதி சேர்வர்.

திருப்பழனம்

திருப்பழனம்

திருப்பழனம்,
பண் - தக்கேசி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஆபத்சகாயர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

வேதமோதி வெண்ணூல்பூண்டு
வெள்ளை யெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார்
புலியி னுரிதோலார்
நாதாவெனவு நக்காவெனவு
நம்பா வெனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார்
பழன நகராரே. **#729**

நாதனே எனவும், நக்கனே நம்பனே எனவும் கூறி நின்று தம் திருவடிகளைப்பரவும் அடியவர்களின் பாவங்களைத் தீர்த்தருளும் திருப்பழனத்து இறைவர் வேதங்களை ஓதிக் கொண்டு மார்பில் வெண்மையான பூணூலையணிந்து கொண்டு வெண்மையான எருதின் மிசை ஏறிப் பூதகணங்கள் புடைசூழப் புலியின் தோலை அணிந்து பொலிவு பெற வருவார்.

திருப்பழனம்

கண்மேற்கண்ணுஞ் சடைமேற்பிறையு
முடையார் காலனைப்
புண்ணாறுதிர மெதிராறோடப்
பொன்றப் புறந்தாளால்
எண்ணாதுதைத்த வெந்தைபெருமா
னிமவான் மகளோடும்
பண்ணார்களிவண் டறைபூஞ்சோலைப்
பழன நகராரே. **#730**

மது உண்ட வண்டுகள் பண்பாடி ஒலி செய்யும் அழகிய சோலைகள் சூழ்ந்த திருப்பழன நகரில் இமவான் மகளாகிய பார்வதி தேவியோடு எழுந்தருளிய இறைவர் இயல்பாக உள்ள இரண்டு கண்களுக்கு மேலாக நெற்றியில் ஒரு கண்ணையும், சடைமுடிமேல் பிறையையும் உடையவர். காலனை உதைத்து, அவன் உடலில் தோன்றிய புண்களிலிருந்து குருதி

வெள்ளம் ஆறாக ஓடுமாறு, அவனை ஒரு பொருளாக மதியாது புறந்தாளால் அவன் அழிய உதைத்த எந்தை பெருமானார் ஆவார்.

திருப்பழனம்

பிறையும்புனலுஞ் சடைமேலுடையார்
பறைபோல் விழிகட்பேய்
உறையுமயான மிடமாவுடையா
ருலகர் தலைமகன்
அறையுமலர்கொண் டடியார்பரவி
யாடல் பாடல்செய்
பறையுஞ்சங்கும் பலியுமோவாப்
பழன நகராரே. **#731**

அடியவர்கள் உயர்ந்தனவாகப் போற்றப்படும் நறுமலர்களைக் கொண்டுவந்து சாத்தி, பரவி, ஆடல் பாடல்களைச் செய்தும் பறை, சங்கு ஆகியவற்றை முழக்கியும், பணிந்தும் இடைவிடாது வழிபடும் திருப்பழனநகர் இறைவர் சடைமேல் பிறையையும், கங்கையையும் உடையவர். பறை வாய் போன்ற வட்டமான, விழிகளையுடைய பேய்கள்வாழும் மயானத்தைத் தமக்கு இடமாகக்கொண்டவர். அனைத்துலக மக்கட்கும் தலைவர்.

திருப்பழனம்

உரமன்னுயர்கோட் டுலறுகூகை
யலறு மயானத்தில்
இரவிற்பூதம் பாடவாடி
யெழிலா ரலர்மேலைப்
பிரமன்றலையி னறவமேற்ற
பெம்மா னெமையாளும்
பரமன்பகவன் பரமேச்சுவரன்
பழன நகராரே. **#732**

திருப்பழன நகர் இறைவர் வலிமை பொருந்திய உயரமான மரக்கிளைகளில் அமர்ந்து ஒலி செய்யும் கூகைகள் அலறும் மயானத்தே நள்ளிருளில் பூதங்கள் பாட ஆடியும் அழகிய தாமரை மலர்மேல் உறையும் பிரமனது தலையோட்டில் பலியேற்றும் திருவிளையாடல் புரியும் பெருமானார் எம்மை ஆளும் பரமர் ஆவார். அவர் பகவன், பரமேச்சுவரன் என்பனவாகிய பெயர்களை உடையவர்.

திருப்பழனம்

குலவெஞ்சிலையான் மதின்மூன்றெரித்த

கொல்லே றுடையண்ணல்
கலவமயிலுங் குயிலும்பயிலுங்
கடல்போற் காவேரி
நலமஞ்சுடைய நறுமாங்கனிகள்
குதிகொண் டெதிருந்திப்
பலவின்கனிக டிரைமுன்சேர்க்கும்
பழன நகராரே. **#733**

தோகைகளையுடைய மயில்கள், குயில்கள் வாழ்வதும், கடல்போல் பரந்து விரிந்த காவிரி ஆற்றின் அலைகள் மாங்கனிகளையும், பலாவின் கனிகளையும் ஏந்திக் குதித்து உந்தி வந்து கரையிற் சேர்ப்பதுமாகிய திருப்பழன நகர் இறைவர், உயர்ந்த கொடிய மலை வில்லால் அசுரர்களின் முப்புரங்களையும் எரித்தவர். பகைவரைக் கொல்லும் ஆனேற்றையுடைய அண்ணல் ஆவார்.

<u>திருப்பழனம்</u>

வீளைக்குரலும் விளிச்சங்கொலியும்
விழவின் னொலியோவா
மூளைத்தலைகொண் டடியாரேத்தப்
பொடியா மதிளெய்தார்
ஈளைப்படுகி லிலையார்தெங்கிற்
குலையார் வாழையின்
பாளைக்கமுகின் பழம்வீழ்சோலைப்
பழன நகராரே. **#734**

ஈரத்தன்மையுடைய ஆற்றுப் படுகைகளில் வளர்ந்த பசுமையான மட்டைகளோடு கூடிய தென்னை மரங்களின் குலைகளில் விளைந்த தேங்காயும், வாழை மரத்தில் பழுத்த வாழைப் பழங்களும், பாளைகளையுடைய கமுகமரங்களில் பழுத்த பாக்குப் பழங்களும் விழுகின்ற சோலைகளால் சூழப்பட்ட திருப்பழன நகர் இறைவர். அழைக்கும் சீழ்க்கை ஒலியும் அழைக்கும் சங்கொலியும், விழவின் ஆரவாரங்களும் ஓயாத ஊரகத்தே சென்று மூளை பொருந்திய தலையோட்டில் பலியேற்பவர். அடியவர்கள் போற்றி வாழ்த்த முப்புரங்களையும் அழித்தவராவார்.

<u>திருப்பழனம்</u>

பொய்யாமொழியார் முறையாலேத்திப்
புகழ்வார் திருமேனி
செய்யார்கரிய மிடற்றார்வெண்ணூல்
சேர்ந்த வகலத்தார்

கையாடலினார் புனலான்மல்கு
சடைமேற் பிறையோடும்
பையாடரவ முடனேவைத்தார்
பழன நகராரே. **#735**

திருப்பழனநகர் இறைவர் பொய் கூறாத அடியவர்களால் முறைப்படி ஏத்திப் புகழப் பெறுவர். சிவந்த திருமேனி உடையவர். கரிய கண்டம் உடையவர். முப்புரிநூல் அணிந்த மார்பினை உடையவர். கைகளை வீசி ஆடல் புரிபவர். கங்கை சூடிய சடை முடி மீது பிறையையும், படப்பாம்பையும் ஒருசேர வைத்தவர்.

திருப்பழனம்

மஞ்சோங்குயர முடையான்மலையை
மாறா யெடுத்தான்றோள்
அஞ்சோடஞ்சு மாறுநான்கு
மடர வூன்றினார்
நஞ்சார்சுடலைப் பொடிநீணிந்த
நம்பான் வம்பாரும்
பைந்தாமரைகள் கழனிசூழ்ந்த
பழன நகராரே. **#736**

மணம்கமழும் புதிய தாமரை மலர்களையுடைய. வயல்களால் சூழப்பட்ட திருப்பழன நகர் இறைவர், வானகத்தே விளங்கும் மேகங்கள் அளவு உயர்ந்த தோற்றம் உடைய இராவணன் தனக்கு எதிராகக் கயிலை மலையைப் பெயர்க்க அவனுடைய இருபது தோள்களும் நெரியுமாறு கால்விரலை ஊன்றியவர். நச்சுத் தன்மை பொருந்திய சுடலையில் எரிந்த சாம்பலை அணிந்த பெருமானாகிய சிவனார் ஆவார்.

திருப்பழனம்

கடியார்கொன்றைச் சுரும்பின்மாலை
கமழ்புன் சடையார்விண்
முடியாப்படிமூ வடியாலுலக
முழுதுந் தாவிய
நெடியானீடா மரைமேலயனு
நேடிக் காணாத
படியார்பொடியா டகலமுடையார்
பழன நகராரே. **#737**

திருப்பழன நகர் இறைவர் மணங்கமழ்வதும் வண்டுகள் மொய்ப்பதுமான கொன்றை மாலை கமழ்கின்ற சிவந்த சடைமுடியையுடையவர். விண்ணளாவிய திருமுடியோடு இவ்வுலகம்

முழுவதையும் மூவடியால் அளந்த நெடியோனாகிய திரு மாலும், நீண்ட தண்டின்மேல் வளர்ந்த தாமரை மலர்மேல் விளங்கும் நான்முகனும் தேடிக் காணமுடியாத தன்மையை யுடையவர். திருநீற்றுப் பொடியணிந்த மார்பினையுடையவர்.

திருப்பழனம்

கண்டான்கழுவா முன்னேயோடிக்
கலவைக் கஞ்சியை
உண்டாங்கவர்க ளுரைக்குஞ்சிறுசொல்
லோரார் பாராட்ட
வண்டாமரையின் மலர்மேனறவ
மதுவாய் மிகவுண்டு
பண்டான்கெழும வண்டியாழ்செய்யும்
பழன நகராரே. **#738**

வண்டுகள் வளமையான தாமரை மலர்மேல் விளங்கும் தேனாகிய மதுவை வாயால் மிக உண்டு பண்பொருந்த யாழ்போல் ஒலி செய்யும் கழனிகளையுடைய திருப்பழன நகர் இறைவர், கண்களைக் கூடக் கழுவாமல் முந்திச் சென்று கலவைக் கஞ்சியை உண்பவர்களாகிய சமணர்கள் உரைக்கும் சிறு சொல்லைக் கேளாத அடியவர்கள் பாராட்ட விளங்குபவராவார்.

திருப்பழனம்

வேய்முத்தோங்கி விரைமுன்பரக்கும்
வேணுபுரந் தன்னுள்
நாவுய்த்தனைய திறலான்மிக்க
ஞான சம்பந்தன்
பேசற்கினிய பாடல்பயிலும்
பெருமான் பழனத்தை
வாயிற்பொலிந்த மாலைபத்தும்
வல்லார் நல்லாரே. **#739**

மூங்கில் மரங்கள் முத்துக்களோடு ஓங்கி வளர்ந்து மணம் பரப்பும் வேணுபுர நகரில் உள்ள, நாவினால் வல்ல திறன் மிக்க ஞானசம்பந்தன் திருப்பழனப் பெருமான் மீது, பேசற்கினிய பாடல்களாய்த் தன் வாயால் பாடிய இப்பதிகப் பாமாலை பத்தையும், இசையுடன் பாடவல்லவர் நல்லவர் ஆவார்.

திருக்கயிலாயம்

திருக்கயிலாயம்

திருக்கயிலாயம்,
பண் - தக்கேசி,
இத்தலம் இமயமலையிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கயிலாயநாதர்.
தேவியார் : பார்வதியம்மை.

பொடிகொளுருவர் புலியினதளர்
புரிநூல் திகழ்மார்பில்
கடிகொள்கொன்றை கலந்தநீற்றர்
கறைசேர் கண்டத்தர்
இடியகுரலா லிரியுமடங்கல்
தொடங்கு முனைச்சாரல்
கடியவிடைமேற் கொடியொன்றுடையார்
கயிலை மலையாரே. **#740**

மேகங்களின் இடிக்குரல் கேட்டு அஞ்சிய சிங்கங்கள், நிலைகெட்டு ஓடத்தொடங்கும் சாரலை உடைய கயிலை மலையில் வாழும் இறைவர், திருநீறு பூசிய திருமேனியை உடையவர். புலியின் தோலை உடுத்தவர். முப்புரி நூல் விளங்கும் மார்பில் மணம் கமழும் கொன்றை மாலையோடு திருநீற்றையும் அணிந்தவர். விடக்கறை பொருந்திய கண்டத்தை உடையவர். விரைந்து செல்லும் விடை மீது ஏறி அவ்விடை எழுதிய கொடி ஒன்றையே தம் கொடியாகக் கொண்டவர்.

திருக்கயிலாயம்

புரிகொள்சடைய ரடியர்க்கெளியார்
கிளிசேர் மொழிமங்கை
தெரியவுருவில் வைத்துகந்த
தேவர் பெருமானார்
பரியகளிற்றை யரவுவிழுங்கி
மழுங்க விருள்கூர்ந்த
கரியமிடற்றர் செய்யமேனிக்
கயிலை மலையாரே. **#741**

பெரிய களிற்றி யானையை மலைப்பாம்பு விழுங்கி மறையும் இருள் மிக்க கயிலை மலையில் விடம் உண்ட கரிய கண்டராய்ச் சிவந்த திருமேனியராய் விளங்கும் இறைவர் வளைத்துக்கட்டிய சடைமுடியை உடையவர். அடியவர்க்கு எளிமையானவர். கிளி போன்ற மெல்லிய

மொழி பேசும் உமை மங்கையைப் பலருக்கும் தெரியுமாறு ஒரு பாகமாகக் கொண்டு மகிழ்ந்த தேவர் தலைவராவார்.

திருக்கயிலாயம்

மாவினுரிவை மங்கைவெருவ
மூடி முடிதன்மேல்
மேவு மதியு நதியும்வைத்த
விறைவர் கழலுன்னும்
தேவர்தேவர் திரிசூலத்தர்
திரங்கன் முகவன்சேர்
காவும்பொழிலுங் கடுங்கற்சுனைசூழ்
கயிலை மலையாரே. **#742**

திரங்கிய தோலை உடைய குரங்குகள் வாழும் காடுகளும் பொழில்களும் மலையிடையே இயற்கையாக அமைந்தசுனைகளும் சூழ்ந்த கயிலைமலைப் பெருமானார் உமையம்மை அஞ்சயானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டு முடிமீது பிறை கங்கை ஆகியவற்றைக் கொண்ட இறைவர், தம் திருவடிகளை நினைந்து போற்றும் தேவர்களின் தேவர். முத்தலைச் சூலத்தை உடையவர்.

திருக்கயிலாயம்

முந்நீர்சூழ்ந்த நஞ்சமுண்ட
முதல்வர் மதனன்றன்
தென்னீருருவ மழியத்திருக்கண்
சிவந்த நுதலினார்
மன்னீர்மடுவும் படுகல்லறையி
னுழுவை சினங்கொண்டு
கன்னீர்வரைமே லிரைமுன்றேடுங்
கயிலை மலையாரே. **#743**

இயற்கையாகத் தோன்றிய மலைக் குகைகளில் வாழும் புலிகள், பசியினால் சினமடைந்து கல்லால் இயன்ற மலை மிசை உணவாதற்குரிய இரைகளையும், அருந்துவதற்கு நிலைபெற்ற நீரையுடைய மடுக்களையும் தேடும் கயிலை மலையில் உறையும் தலைவர், கடலில் பரவித் தோன்றிய நஞ்சினைத் திரட்டி உண்டவர் மன்மதனின் அழகிய உருவம் அழியக் கண் சிவந்த நுதலை உடையவர்.

திருக்கயிலாயம்

ஒன்றும்பலவு மாயவேடத்
தொருவர் கழல்சேர்வார்

நன்றுநினைந்து நாடற்குரியார்
கூடித் திரண்டெங்கும்
தென்றியிருளிற் றிகைத்தகரிதண்
சாரல் நெறியோடிக்
கன்றும்பிடியு மடிவாரஞ்சேர்
கயிலை மலையாரே. #744

இரவில் சிதறித் தனிமைப்பட்ட யானைகள் குளிர்ந்த மலைச் சாரலின் வழிகளில் விரையச் சென்று கன்றும் பிடியுமாய் இணையும் கயிலை மலைக்குரிய இறைவர். ஒருவராக இருந்தே பற்பல வடிவங்களைக் கொண்ட ஒப்பற்ற பரம்பொருளாவார். தம் திருவடிகளை அடைய எண்ணும் அடியவர்கள் பேரின்பத்தை அடையும் விருப்போடு நாடுதற்குரியவர்.

திருக்கயிலாயம்

தாதார் கொன்றை தயங்குமுடியர்
முயங்கு மடவாளைப்
போதார்பாக மாகவைத்த
புனிதர் பனிமல்கும்
மூதாருலகின் முனிவருடனா
யறநான் கருள்செய்த
காதார்குழையர் வேதத்திரளர்
கயிலை மலையாரே. #745

கயிலைமலை இறைவர், மகரந்தம் நிறைந்த கொன்றைமாலை விளங்கும் முடியினை உடையவர். தம்மைத் தழுவிய உமையம்மையை மென்மையான இடப்பாகமாக ஏற்ற தூயவர். குளிர்ந்த இவ்வுலகின்கண் வயதால் முதிர்ந்த சனகர் முதலிய முனிவர்களுக்கு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் அருளிச் செய்தவர். வலக் காதில் குழை அணிந்தவர். வேத வடிவாய் விளங்குபவர்.

திருக்கயிலாயம்

இப்பதிகத்தின் 7-ம் செய்யுள் சிதைந்து போயிற்று. #746

திருக்கயிலாயம்

தொடுத்தார் புரமூன் றெரியச்சிலைமே
லெரியொண் பகழியார்
எடுத்தான்திரள்தோள் முடிகள்பத்து
மிடிய விரல்வைத்தார்
கொடுத்தார்படைகள் கொண்டாராளாக்

குறுகிவருங் கூற்றைக்
கடுத்தாங்கவனைக் கழலாலுதைத்தார்
கயிலை மலையாரே. **#747**

கயிலைமலை இறைவர் முப்புரங்களை மேருவில்லை வளைத்து எரியாகிய ஒளி பொருந்திய அம்பைத் தொடுத்து எரித்து அழித்தவர். கயிலை மலையைப் பெயர்த்த இராவணனின் திரண்ட தோள்கள் பத்துத் தலைகள் ஆகியன நெரியுமாறு கால்விரலை ஊன்றியவர். அவன் பிழையுணர்ந்து வருந்த அவனை அடிமையாக ஏற்று வாள் முதலிய படைகள் கொடுத்தவர். மார்க்கண் டேயனின் உயிரைக் கவர அவன்மேல் நெருங்கி வந்த எமனைச் சினந்து அவனைக் காலால் உதைத்தவர்.

<u>திருக்கயிலாயம்</u>

ஊணாப்பலிகொண் டுலகிலேற்றா
ரிலகு மணிநாகம்
பூணாணார மாகப்பூண்டார்
புகழு மிருவர்தாம்
பேணாவோடி நேடவெங்கும்
பிறங்கு மெரியாகிக்
காணாவண்ண முயர்ந்தார்போலுங்
கயிலை மலையாரே. **#748**

கயிலை மலை இறைவர் உலகில் மகளிர் இடும் பலியை உணவாகக் கொண்டு அதனை ஏற்றவர். விளங்கும் மணி களைக் கொண்டுள்ள நாகங்களை அணிகலனாகப் பூண்டவர். எல்லோராலும் புகழப்பெறும் திருமால் பிரமர்கள் அடிமுடி காண விரும்பிச் சென்று தேட எங்கும் விளங்கும் எரியுருவோடு அவர்கள் காணாதவாறு உயர்ந்து நின்றவர்.

<u>திருக்கயிலாயம்</u>

விருதுபகரும் வெஞ்சொற்சமணர்
வஞ்சச் சாக்கியர்
பொருதுபகரு மொழியைக்கொள்ளார்
புகழ்வார்க் கணியராய்
எருதொன்றுகைத்திங் கிடுவார்தம்பால்
இரந்துண் டிகழ்வார்கள்
கருதும்வண்ண முடையார்போலுங்
கயிலை மலையாரே. **#749**

தாம் பெற்ற விருதுகளைப் பலரிடமும் சொல்லிப் பெருமை கொள்ளும் இயல்புடைய கொடுஞ்சொல் பேசும் சமணரும் வஞ்சனையான

மனமுடைய சாக்கியரும் பிற சமயத்தவரோடு சண்டையிட்டுக் கூறும் சொற்களைக் கேளாதவராய், புகழ்ந்து போற்றுவார்க்கு அணிமையானவராய் விடை ஒன்றைச் செலுத்தி உணவிடுவார்பால் இரந்து உண்பவராய் இகழ்பவரும் தம் பெருமையை நினைந்து போற்றும் இயல்பினராய் விளங்குபவர் கயிலைமலை இறைவர்.

திருக்கயிலாயம்

போரார்கடலிற் புனல்சூழ்காழிப்
புகழார் சம்பந்தன்
காரார்மேகங் குடிகொள்சாரற்
கயிலை மலையார்மேல்
தேராவுரைத்த செஞ்சொன்மாலை
செப்பு மடியார்மேல்
வாராபிணிகள் வானோருலகின்
மருவு மனத்தாரே. **#750**

கரையோடு போர் செய்யும் கடலினது நீரால் சூழப்பட்ட சீகாழிப் பதியில் தோன்றிய புகழ் பொருந்திய ஞானசம்பந்தன், கரிய மேகங்கள் நிலையாகத் தங்கியுள்ள சாரலை உடைய கயிலைமலை இறைவர்மேல் தெளிந்துரைத்த இச்செஞ்சொல் மாலையாகிய திருப்பதிகத்தை ஓதும் அடியவர்பால் பிணிகள்வாரா. அவர்கள் வானோர் உலகில் மருவும் மனத்தினராவர்.

திரு அண்ணாமலை

திருஅண்ணாமலை

திரு அண்ணாமலை,
பண் - தக்கேசி, இது நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அருணாசலேசுவரர்.
தேவியார் : உண்ணாமுலையம்மை.

பூவார்மலர்கொண் டடியார்தொழுவார்
புகழ்வார் வானோர்கள்
மூவார்புரங்க ளெரித்தவன்று
மூவர்க் கருள்செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித்
தொறுவின் னிரையோடும்
ஆமாம்பிணைவந் தணையுஞ்சாரல்
அண்ணா மலையாரே. #751

நீர்த்துளிகளைத் தூவும் கரிய மேகங்கள் வானத்தில் நின்றவாறு இடி முழக்கத்தைச்செய்ய, அதனைக் கேட்டு அஞ்சியகாட்டுப் பசுக்களின் மந்தைகளான வரிசைகள் வந்து ஒருங்கிணையும் அடிவாரத்தை உடைய திருவண்ணாமலை இறைவர், அடியவர்கள் பொலிவுமிக்க நறுமலர்களைத் தூவி வழிபடவும், வானோர்கள் புகழ்ந்து போற்றவும், அழியா வரம் பெற்ற அசுரர்களின் முப்புரங்களை எரித்து அழித்து அவ்வசுரர்களில் மூவர்க்கு அருளையும் வழங்கிய பெருமையுடையவர்.

திருஅண்ணாமலை

மஞ்சைப்போழ்ந்த மதியஞ்சூடும்
வானோர் பெருமானார்
நஞ்சைக்கண்டத் தடக்குமதுவு
நன்மைப் பொருள்போலும்
வெஞ்சொற்பேசும் வேடர்மடவா
ரிதண மதுவேறி
அஞ்சொற்கிளிக ளாயோவென்னும்
அண்ணா மலையாரே. #752

குத்து வெட்டு முதலிய கொடிய சொற்களையே பேசும் வேடர்களின் பெண்கள் தினைப்புனங்களில் பரண்மீது ஏறியிருந்து தினைகவர வரும் அழகிய சொற்களைப் பேசும் கிளிகளை ஆயோ என ஒலியெழுப்பி ஓட்டும் திருவண்ணாமலை இறைவர், மேகங்களைக் கிழித்துச் செல்லும் பிறைமதியை முடியிற்சூடும் வானவர் தலைவர். கடலிடைத் தோன்றிய

நஞ்சையுண்டு கண்டத்தில் அடக்கியவர். இச்செயல் உலகத்தை அழியாது காக்கும் நன்மை கருதியதேயாகும்.

திருஅண்ணாமலை

ஞானத்திரளாய் நின்றபெருமா
னல்ல வடியார்மேல்
ஊனத்திரளை நீக்குமதுவு
முண்மைப் பொருள்போலும்
ஏனத்திரளோ டினமான்கரடி
யிழியு மிரவின்கண்
ஆனைத்திரள்வந் தணையுஞ்சாரல்
அண்ணா மலையாரே. **#753**

இராப்போதில் பன்றிகளின் கூட்டமும், மான் இனங்களும், கரடிகளும், ஒருங்கே இறங்கிவரும் மலைச்சாரலில் யானைகளின் கூட்டமும் வந்தணையும் திருவண்ணாமலை இறைவர், ஞானப் பிழம்பாய் நிற்பவர். நன்மைகளையே கருதும் அடியவர்கள் ஊனுடலோடு பிறக்கும் பிறவிகளை நீக்குபவர். இவ்வருட்செயல் வேதாகம நூல்கள் உணர்த்தும் உண்மைப் பொருளாகும்.

திருஅண்ணாமலை

இழைத்தவிடையா ளுமையாள்பங்க
ரிமையோர் பெருமானார்
தழைத்தசடையார் விடையொன்றேறித்
தரியார் புரமெய்தார்
பிழைத்தபிடியைக் காணாதோடிப்
பெருங்கை மதவேழம்
அழைத்துத்திரிந்தங் குறங்குஞ்சாரல்
அண்ணா மலையாரே. **#754**

தன்னைவிட்டுப் பிரிந்த பெண் யானையைக் காணாத பெரிய கையை உடைய மதம் பொருந்திய ஆண் யானை, குரல் கொடுத்து அழைத்துத் திரிந்து அலுத்து உறங்கும் சாரலை உடைய திருவண்ணாமலை இறைவர், நூல் போன்று நுண்ணிய இடையினை உடைய உமையம்மையை ஒருபாகமாக உடையவர். விடைமீது ஏறிச் சென்று பகைவரின் முப்புரங்களை எரித்தவர்.

திருஅண்ணாமலை

உருவிற்றிகழு முமையாள்பங்க
ரிமையோர் பெருமானார்

செருவில்லொருகால் வளையவூன்றிச்
செந்தீ யெழுவித்தார்
பருவிற்குறவர் புனத்திற்குவித்த
பருமா மணிமுத்தம்
அருவித்திரளோ டிழியுஞ்சாரல்
அண்ணா மலையாரே. **#755**

பெரிய வில்லை ஏந்திய குறவர்கள் விளைநில வரப்புக்களில் குவித்து வைத்திருந்த பெரிய முத்துக்களும் மணிகளும் அருவித்திரள்களின் வழியே நிலத்தில் வந்து இழியும் திருவண்ணாமலை இறைவர், உருவத்தால் அழகிய உமையவளை ஒருபாகமாகக் கொண்டவர். இமையவர்கட்குத் தலைவர். பெரிய போர்வில்லை ஒரு காலால் ஊன்றிக்கொண்டு வளைத்துக் கணை எய்து முப்புரங்களும் செந்தீயால் அழிந்து விழுமாறு செய்தவர்.

திருஅண்ணாமலை

எனைத்தோரூழி யடியாரேத்த
விமையோர் பெருமானார்
நினைத்துத்தொழுவார் பாவந்தீர்க்கும்
நிமல ருறைகோயில்
கனைத்தமேதி காணாதாயன்
கைம்மேற் குழலூத
அனைத்துஞ்சென்று திரளுஞ்சாரல்
அண்ணா மலையாரே. **#756**

மலைச்சாரலில் புல் மேய்க்கச் சென்ற ஆயன்கனைத்து மேய்ந்த தம் எருமைகளைக் காணாதவனாய்த் தன் கையிலிருந்த வேய்ங்குழலை ஊத அவ்வளவில் அனைத்தெருமைகளும் வீடு திரும்பும் விருப்போடு ஒன்று திரளும் அடிவாரத்தை உடைய திருவண்ணாமலை, அடியவர்கள் தன்னைத் துதிக்க இமையவர் தலைவனாய்ப் பல்லூழிக் காலங்களைக் கண்ட பழையோனாய் விளங்கும் தன்னை நினைத்துத் தொழும் அன்பர்களின் பாவங்களைத் தீர்த்தருளும் நிமலனாய் விளங்கும் அப்பெரியோனின் கோயிலாக விளங்குவது ஆகும்.

திருஅண்ணாமலை

வந்தித்திருக்கு மடியார்தங்கள்
வருமேல் வினையோடு
பந்தித்திருந்த பாவந்தீர்க்கும்
பரம னுறைகோயில்
முந்தியெழுந்த முழவினோசை

முதுகல் வரைகண்மேல்
அந்திப்பிறைவந் தணையுஞ்சாரல்
அண்ணா மலையாரே. #757

விழா நிகழ்ச்சிகளை முன்னதாக அறிவித்தெழும் முழவின் ஓசை இடையறாது கேட்பதும், பழமையான மலைப் பாறைகளுக்கு இடையே அந்திக்காலத்துப் பிறை வந்து அணைவதுமாகிய திருவண்ணாமலையில் விளங்கும் இறைவன் தன்னை வழிபட்டு வேறு நினைவின்றி இருக்கும் அடியவர்களின் ஆகாமிய வினைகளோடு அவர்களைப் பந்தித்திருக்கும் பாவங்களையும் போக்கியருளும் பரமனாவான். அவனது கோயில் திருவண்ணாமலையாகும்.

திருஅண்ணாமலை

மறந்தான்கருதி வலியைநினைந்து
மாறா யெடுத்தான்றோள்
நிறந்தான்முரிய நெரியவூன்றி
நிறைய வருள்செய்தார்
திறந்தான்காட்டி யருளாயென்று
தேவ ரவர்வேண்ட
அறந்தான்காட்டி யருளிச்செய்தார்
அண்ணா மலையாரே. #758

தனது வலிமையை வெளிப்படுத்தித் திரிபுர அசுரர்களை அழித்து அருள்புரியுமாறு தேவர்கள் வேண்ட, தீயவரை ஒறுப்பது அறநெறியின் பாற்பட்டதாதலை உணர்த்தும் நிலையில் அசுரர்களை அழித்துத் தேவர்கட்கு அருள்செய்த பெருமானாகிய திருவண்ணாமலை இறைவன், தன் வலிமையையும், பெற்ற வெற்றிகளையும் பெரிதாக எண்ணியவனாய்த் தனக்கு மாறாகத் தான் உறையும் கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த இராவணனின் மார்பு தோள் ஆகியனவற்றை நெரியுமாறு காலை ஊன்றிப் பின் அவ்விராவணன் வேண்ட அவனுக்கு அருள் செய்த மேம்பாடுடையவனாவன்.

திருஅண்ணாமலை

தேடிக்காணார் திருமால்பிரமன்
றேவர் பெருமானை
மூடியோங்கி முதுவேயுகுத்த
முத்தம் பலகொண்டு
கூடிக்குறவர் மடவார்குவித்துக்
கொள்ள வம்மினென்
றாடிப்பாடி யளக்குஞ்சாரல்

அண்ணா மலையாரே. #759
மலையை மூடி ஓங்கி வளர்ந்த பழமையான மூங்கில் மரங்கள் உகுத்த முத்துக்கள் பலவற்றைக் குறவர்குலப் பெண்கள் ஓரிடத்தே குவித்து வைத்து அவற்றை வாங்கிட வருக என மக்களை அழைத்து ஆடிப்பாடி அவர்களுக்கு அளந்து அளிக்கும் திருவண்ணாமலை இறைவனாகிய தேவர் பெருமானைத் திருமால் பிரமன் ஆகிய இருவர் தேடிக் காணாதவராயினர்.

திருஅண்ணாமலை

தட்டையிடுக்கித் தலையைப்பறித்துச்
சமணே நின்றுண்ணும்
பிட்டர்சொல்லுக் கொள்ளவேண்டா
பேணித் தொழுமின்கள்
வட்டமுலையா ளுமையாள்பங்கர்
மன்னி யுறைகோயில்
அட்டமாளித் திரள்வந்தணையும்
அண்ணா மலையாரே. #760

தடுக்கை அக்குளில் இடுக்கிக் கொண்டு தலை மயிரை ஒன்றொன்றாகப் பறித்த முண்டிதராய் ஆடையின்றி நின்றுண்ணும் சமணர்களாகிய பித்தர்களின் சொற்களைப் பொருளெனக் கொள்ளல் வேண்டா. வட்டமான தனங்களைக் கொண்ட உமையம்மையின் பங்கராய், மலைச்சாரல்களில் சிங்க ஏறுகள் கூட்டமாய் வந்தணையும் திருவண்ணாமலையில் வீற்றிருந்தருளும் பெருமான் நிலையாக எழுந்தருளி உறையும் கோயிலை விரும்பித் தொழுவீராக.

திருஅண்ணாமலை

அல்லாடரவ மியங்குஞ்சாரல்
அண்ணா மலையாரை
நல்லார்பரவப் படுவான்காழி
ஞான சம்பந்தன்
சொல்லான்மலிந்த பாடலான
பத்து மிவைகற்று
வல்லாரெல்லாம் வானோர்வணங்க
மன்னி வாழ்வாரே. #761

இரவு வேளைகளில் படம் எடுத்தாடும் பாம்புகள் இயங்கும் சாரலை உடைய திருவண்ணாமலையில் உறையும் இறைவரை, நல்லவர்களால் போற்றப்படுபவனாகிய, சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய அருஞ்சொல்லமைப்புக்கள் நிறைந்த இப்பதிகப்

பாடல்கள் பத்தையும் கற்று வல்லவர் அனைவரும் வானோர் வணங்க நிலைபெற்று வாழ்வர்.

திரு ஈங்கோய்மலை

திரு ஈங்கோய்மலை

திரு ஈங்கோய்மலை,
பண் - தக்கேசி

வானத்துயர்தண் மதிதோய்சடைமேன்
மத்த மலர்சூடித்
தேனொத்தனமென் மொழிமான்விழியாள்
தேவி பாகமாக்
கானத்திரவி லெரிகொண்டாடுங்
கடவு ளுலகேத்த
ஏனத்திரள்வந் திழியுஞ்சாரல்
ஈங்கோய் மலையாரே. #762

வானத்தில் உயர்ந்து விளங்கும் குளிர்ந்த சந்திரன் தோயும் சடைமுடிமேல் ஊமத்தம் மலர்களைச் சூடித் தேன் போன்ற இனிய மொழிகளையும் மான் விழிபோலும் கண்களையுமுடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டு சுடுகாட்டில் இரவில் எரியேந்தி ஆடும் இறைவர் உலக மக்கள் உணர்ந்து போற்றுமாறு பன்றிகள் பலகூடி இறங்கிவரும் சாரலையுடைய திருவீங்கோய்மலையில் எழுந்தருளியுள்ளார்.

திரு ஈங்கோய்மலை

சூலப்படையொன் றேந்தியிரவிற்
சுடுகா டிடமாகக்
கோலச்சடைக டாழக்குழல்யாழ்
மொந்தை கொட்டவே
பாலொத்தனைய மொழியாள்காண
வாடும் பரமனார்
ஏலத்தொடுநல் லிலவங்கமழும்
ஈங்கோய் மலையாரே. #763

முத்தலைச் சூலம் ஒன்றைத்தமது படைக்கலனாக ஏந்தி இரவில் சுடுகாட்டை இடமாகக் கொண்டு அழகிய சடைகள் தாழ்ந்து தொங்கவும், குழல் யாழ்மொந்தை ஆகிய இசைக் கருவிகள் முழங்கவும், பால் போன்று இனிய மொழியினை உடைய பார்வதி தேவி காண ஆடும் பரமர் ஏலம் நல்ல இலவங்கம் முதலியன கமழும் திருவீங்கோய்மலையின்கண் எழுந்தருளியுள்ளார்.

திரு ஈங்கோய்மலை

கண்கொணுதலார் கறைகொண்மிடற்றார்
கரியி னுரிதோலார்
விண்கொண்மதிசேர் சடையார்விடையார்
கொடியார் வெண்ணீறு
பெண்கொள்திருமார் பதனிற்பூசும்
பெம்மா னெமையாள்வார்
எண்குமரியுந் திரியுஞ்சாரல்
ஈங்கோய் மலையாரே. #764

கண் ஒன்றைக்கொண்ட நுதலினரும், விடக்கறை பொருந்திய கண்டத்தினரும், யானையின் தோலை உரித்துப் போர்த்த வரும், வானில் விளங்கும் மதியைச் சூடிய சடையினரும், விடைக்கொடியினரும், ஒருபாகமாக உமையம்மையைக் கொண்டுள்ளவரும் திருவெண்ணீற்றைத் திருமேனியின் மார்பகத்தே பூசுபவரும் ஆகிய எமை ஆள்பவராகிய பெருமான் கரடிகளும், சிங்கங்களும் திரியும் சாரலை உடைய திருவீங்கோய் மலையில் எழுந்தருளியுள்ளார்.

திரு ஈங்கோய்மலை

மறையின்னிசையார் நெறிமென்கூந்தன்
மலையான் மகளோடும்
குறைவெண்பிறையும் புனலுந்நிலவுங்
குளிர்புன் சடைதாழப்
பறையுங்குழலுங் கழலுமார்ப்பப்
படுகாட் டெரியாடும்
இறைவர்சிறைவண் டறைபூஞ்சாரல்
ஈங்கோய் மலையாரே. #765

சிறகுகளையுடைய வண்டுகள் ஒலிக்கும் அழகிய சாரலை உடைய திருவீங்கோய் மலை இறைவர் வேதங்களை இனிய இசையோடு பாடுபவர். வளைவுகளோடு கூடிய மென்மையான கூந்தலையுடைய மலையரையன் மகளாகிய பார்வதி தேவியோடு, கலைகள் குறைந்த வெண்மையான பிறையும் கங்கையும் விளங்கும் குளிர்ந்த மென்மையான சடைகள் தாழ, பறை குழல் இவற்றோடு காலிற் கட்டிய கழலும் ஆரவாரிக்கப் பிணங்களை எரிக்கும் சுடுகாட்டுள் எரியேந்தி ஆடுபவராவார்.

திரு ஈங்கோய்மலை

நொந்தசுடலைப் பொடிநீறணிவார்
நுதல்சேர் கண்ணினார்
கந்தமலர்கள் பலவுந்நிலவு
கமழ்புன் சடைதாழப்
பந்தண்விரலாள் பாகமாகப்
படுகாட் டெரியாடும்
எந்தம்மடிகள் கடிகொள்சாரல்
ஈங்கோய் மலையாரே. **#766**

நறுமணங்களைக் கொண்டுள்ள சாரலையுடைய திருவீங்கோய்மலை இறைவர், இறந்தார் உடலை எரிக்கும் சுடலையில் விளைந்த சாம்பற் பொடியைத் திருநீறாக அணிந்தவர். நெற்றியைச் சார்ந்துள்ள விழியையுடையவர். மணம் பொருந்திய மலர்கள் பலவும் விளங்கும் மணங்கமழ் செஞ்சடைகள் தாழ்ந்து தொங்கப் பந்து சேரும் கைவிரல்களையுடைய உமையம்மை ஒரு பாகமாக விளங்கச் சுடுகாட்டில் எரியாடுபவர்.

<u>திரு ஈங்கோய்மலை</u>

நீறாரகல முடையார்நிரையார்
கொன்றை யரவோடும்
ஆறார்சடையா ரயில்வெங்கணையா
லவுணர் புரமூன்றும்
சீறாவெரிசெய் தேவர்பெருமான்
செங்க ணடல்வெள்ளை
ஏறார்கொடியா ருமையாளோடும்
ஈங்கோய் மலையாரே. **#767**

உமையம்மையோடு திருவீங்கோய்மலையில் எழுந்தருளியுள்ள இறைவர் திருநீறு அணிந்த மார்பினையுடையவர். சரஞ்சரமாக வரிசையாய் மலரும் கொன்றை மாலை பாம்பு கங்கை ஆகியவற்றை அணிந்த சடைமுடியை உடையவர். கூரிய கொடிய கணையால் அசுரர்களின் முப்புரங்களையும் சினந்து எரித்த தேவர் தலைவர். சிவந்த கண்களையும் வலிமையையும் உடைய வெண்மையான விடையேற்றுக் கொடியினை உடையவர்.

<u>திரு ஈங்கோய்மலை</u>

வினையாயினதீர்த் தருளேபுரியும்
விகிர்தன் விரிகொன்றை
நனையார்முடிமேன் மதியஞ்சூடு
நம்பான் நலமல்கு

தனையார்கமல மலர்மேலுறைவான்
தலையோ டனலேந்தும்
எனையாளுடையா னுமையாளோடும்
ஈங்கோய் மலையாரே. **#768**

உமையம்மையோடு திருவீங்கோய்மலையில் எழுந்தருளி விளங்கும் இறைவர், வினைகளானவற்றைத் தீர்த்து அருளையே வழங்கும் விகிர்தர். விரிந்து தழைத்த கொன்றை அரும்புகள் சூடிய முடிமீது பிறைமதியையும் சூடும் நம்பர். அழகு நிறைந்ததும் தலைமை உடையதுமான தாமரை மலர்மேல் உறையும் பிரமனின் தலையோட்டுடன் அனலையும் ஏந்தி என்னை அடிமையாகக் கொண்டருளுபவர்.

திரு ஈங்கோய்மலை

பரக்கும்பெருமை யிலங்கையென்னும்
பதியிற் பொலிவாய
அரக்கர்க்கிறைவன் முடியுந்தோளு
மணியார் விரல்தன்னால்
நெருக்கியடர்த்து நிமலாபோற்றி
யென்று நின்றேத்த
இரக்கம்புரிந்தா ருமையாளோடும்
ஈங்கோய் மலையாரே. **#769**

உமையம்மையாரோடு எழுந்தருளியுள்ள ஈங்கோய்மலை இறைவர், எங்கும் பரவிய பெருமையை உடைய இலங்கை என்னும் நகரில் புகழோடு விளங்கிய அரக்கர்களுக்குத் தலைவனாகிய இராவணன் தலைகளையும் தோள்களையும் தமது அழகு பொருந்திய கால் விரலால் நெருக்கி அடர்த்து, பின் அவன் நிமலா போற்றி என்று ஏத்த இரக்கம் காட்டி அருள்புரிந்தவராவார்.

திரு ஈங்கோய்மலை

வரியார்புலியி னுரிதோலுடையான்
மலையான் மகளோடும்
பிரியாதுடனா யாடல்பேணும்
பெம்மான் றிருமேனி
அரியோடயனு மறியாவண்ண
மளவில் பெருமையோ
டெரியாய்நிமிர்ந்த வெங்கள்பெருமான்
ஈங்கோய் மலையாரே. **#770**

ஈங்கோய்மலை இறைவர் வரிகளோடு கூடிய புலித்தோலை

உடையாகக் கட்டியவர். மலையரையன் மகளாகிய பார்வதி தேவியோடு பிரியாது அவளுடனாக இருந்து ஆடுதலை விரும்பும் தலைமை சான்றவர். தம் திருமேனியின் அடிமுடிகளைத் திருமாலும் நான்முகனும் அறியாதபடி அளவற்ற பெருமை உடையவராய் எரி உருவத்தோடு ஓங்கிநின்ற எங்கள் பெருமான் ஆவார்.

திரு ஈங்கோய்மலை

பிண்டியேன்று பெயராநிற்கும்
பிணங்கு சமணரும்
மண்டைகலனாக் கொண்டுதிரியு
மதியில் தேரரும்
உண்டிவயிறா ருரைகள்கொள்ளா
துமையோ டுடனாகி
இண்டைச்சடையா னிமையோர்பெருமான்
ஈங்கோய் மலையாரே. **#771**

அருகதேவன் வீற்றிருக்கும் அசோகமரம் என அம்மரத்தின் பெருமை கூறிப்பெயர்ந்து செல்லும் மாறுபட்ட சமயநெறியில் நிற்கும் சமணர்களும், பிச்சை ஏற்கும் மண்டை என்னும் பாத்திரத்தைக்கையில் ஏந்தித் திரியும் அறிவற்ற புத்தரும் உண்டு பருத்த வயிற்றினராய்க் கூறும் உரைகளைக் கொள்ளாது, உமையம்மையாரோடு உடனாய், இண்டை சூடிய சடைமுடியினனாய், இமையோர் தலைவனாய், ஈங்கோய் மலையில் எழுந்தருளியுள்ள எம்பெருமானைச் சென்று வழிபடுவீராக.

திரு ஈங்கோய்மலை

விழவாரொலியு முழவுமோவா
வேணு புரந்தன்னுள்
அழலார்வண்ணத் தடிகளருள்சே
ரணிகொள் சம்பந்தன்
எழிலார்சுனையும் பொழிலும்புடைசூழ்
ஈங்கோய்மலையீசன்
கழல்சேர்பாடல் பத்தும்வல்லார்
கவலை களைவாரே. **#772**

திருவிழாக்களின் ஓசையும் முழவின் ஓசையும் நீங்காத வேணுபுரம் என்னும் சீகாழிப் பதியில் அழல் வண்ணனாகிய சிவபிரானின் அருள்சேரப் பெற்ற அழகிய ஞானசம்பந்தன் எழிலார்ந்த சுனையும் பொழிலும் புடைசூழ்ந்து விளங்கும் திருவீங்கோய்மலை ஈசனின் திருவடிகளைப் பரவிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓதவல்லவர்கள் கவலைகள் நீங்கப் பெறுவர்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

திருநறையூர்ச்சித்தீச்சரம்

திருநறையூர்ச்சித்தீச்சரம்,
பண் - தக்கேசி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சித்தநாதேசர்.
தேவியார் : அழகாம்பிகையம்மை.

பிறைகொள்சடையர் புலியினுரியர்
பேழ்வாய் நாகத்தர்
கறைகொள்கண்டர் கபாலமேந்துங்
கையர் கங்காளர்
மறைகொள்கீதம் பாடச்சேடர்
மனையின் மகிழ்வெய்திச்
சிறைகொள்வண்டு தேனார்நறையூர்ச்
சித்தரச் சரத்தாரே. #773

பெருமை உடைய மறையவர் தங்கள் இல்லங்களில் வேதப்பொருள்களை உள்ளடக்கிய பாடல்களைப் பாட, அதனைக் கேட்டுச் சிறகுகளைக் கொண்ட வண்டுகள் மகிழ்வெய்திப் பாடித் தேனை உண்ணுகின்ற நறையூரில் விளங்கும் சித்தீச்சரத்து இறைவர், பிறைசூடிய சடையர் புலித்தோலை உடுத்தவர். பிளந்த வாயினை உடைய பாம்பினை அணிந்தவர். விடக் கறை பொருந்திய கழுத்தை உடையவர். பிரமனது தலையோட்டை ஏந்திய கையினை உடையவர். எலும்பு மாலை அணிந்தவர்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

பொங்கார்சடையர் புனலரனலர்
பூதம் பாடவே
தங்காதலியுந் தாமுமுடனாய்த்
தனியோர் விடையேறிக்
கொங்கார்கொன்றை வன்னிமத்தஞ்
சூடிக் குளிர்பொய்கைச்
செங்காலனமும் பெடையுஞ்சேருஞ்
சித்தீச் சரத்தாரே. #774

தழைத்த சடையினராய், கங்கை அணிந்தவராய், அனல் ஏந்தியவராய், பூதகணங்கள் பாடத் தம் காதலியாகிய உமையம்மையும் தாமும் உடனாய், ஒப்பற்றதொரு விடைமீது, தேன்பொருந்திய கொன்றை மலர்,

வன்னியிலை, ஊமத்தை மலர் ஆகியவற்றைச் சூடிக் கொண்டு குளிர்ந்த பொய்கைகளில் சிவந்த கால்களை உடைய ஆண் அன்னமும் பெண் அன்னமும் கூடிக் களிக்கும் சித்தீச்சரத்தில் எழுந்தருளியுள்ளார்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

முடிகொள்சடையர் முளைவெண்மதியர்
மூவா மேனிமேல்
பொடிகொணூலர் புலியினதளர்
புரிபுன் சடைதாழக்
கடிகொள்சோலை வயல்சூழ்மடுவிற்
கயலா ரினம்பாயக்
கொடிகொண்மாடக் குழாமார்நறையூர்ச்
சித்தீச் சரத்தாரே. **#775**

முடியாகச் சடையினை உடையவராய், ஒரு கலையோடு தோன்றும் வெண்மையான மதியை அணிந்தவராய், மூப்படையாத தம் திருமேனியின்மேல் திருநீற்றையும் முப்புரி நூலையும் அணிந்தவராய், புலித்தோலை உடுத்தவராய், முறுக்கப்பட்ட சடைகள் தாழ்ந்து தொங்க மணம் கமழும் சோலைகளும் வயல்களும் சூழ்ந்த நீர்நிலைகளில் கயல் மீன்களின் இனங்கள் பாய்ந்து விளையாடக் கொடிகள் கட்டிய மாடவீடுகளின் கூட்டங்கள் நிறைந்த நறையூரில் உள்ள சித்தீச்சரத்தில் எழுந்தருளியுள்ளார்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

பின்றாழ்சடைமே னகுவெண்டலையர்
பிரமன் றலையேந்தி
மின்றாழுருவிற் சங்கார்குழைதான்
மிளிரு மொருகாதர்
பொன்றாழ்கொன்றை செருந்திபுன்னை
பொருந்து செண்பகம்
சென்றார்செல்வத் திருவார்நறையூர்ச்
சித்தீச் சரத்தாரே. **#776**

பூசைக்குகந்த பொன் போன்ற கொன்றை, செருந்தி, புன்னை, ஏற்புடையதான செண்பகம் ஆகியன வானுறப் பொருந்தி வளரும் செல்வச் செழுமையுடைய அழகிய நறையூரில் விளங்கும் சித்தீச்சரத்து இறைவர், பின்புறம் தாழ்ந்து தொங்கும் சடைமுடிமேல், விளங்கும் வெண்மையான தலை மாலையை அணிந்தவர். பிரமனது தலையோட்டைக் கையில் ஏந்தி மின்னலைத் தாழச் செய்யும் ஒளி உருவினர். சங்கக் குழையணிந்த காதினை உடையவர்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

நீரார்முடியர் கறைகொள்கண்டர்
மறைக ணிறைநாவர்
பாரார்புகழாற் பத்தர்சித்தர்
பாடி யாடவே
தேரார்வீதி முழவார்விழவி
னொலியுந் திசைசெல்லச்
சீரார்கோலம் பொலியுநறையூர்ச்
சித்தீச் சரத்தாரே. **#777**

உலகில் பரவிய தமது புகழ் மொழிகளைப் பக்தர்களும் சித்தர்களும் பாடி ஆடத் தேரோடும் வீதிகளில் முழவின் ஒலி, விழா ஒலியோடு பெருகி எண் திசையும் பரவ, புகழ் பொருந்திய அழகோடு விளங்கும் நறையூர்ச் சித்தீச்சரத்தில் உறையும் இறைவர், கங்கையை அணிந்த சடைமுடியினர். கறை பொருந்திய கண்டத்தை உடையவர். வேதங்கள் நிறைந்த நாவினர்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

நீண்டசடையர் நிரைகொள்கொன்றை
விரைகொண் மலர்மாலை
தூண்டுசுடர்பொன் னொளிகொள்மேனிப்
பவளத் தெழிலார்வந்
தீண்டுமாட மெழிலார்சோலை
யிலங்கு கோபுரம்
தீண்டுமதியந் திகழுநறையூர்ச்
சித்தீச் சரத்தாரே. **#778**

ஒன்றோடு ஒன்று வந்து பொருந்தும் மாட வீடுகளையும், அழகிய சோலைகளையும், மதியைத் தீண்டும் உயரமாக விளங்கிய கோபுரங்களையும் உடைய நறையூரில் உள்ள சித்தீச்சரத்து இறைவர், நரண்ட சடைமுடியை உடையவர். பூச்சரங்களைக் கொண்ட கொன்றையினது மலரால் தொடுத்த மாலையை அணிந்தவர். ஒளி மிகுந்து தோன்றும் பொன்போன்ற ஒளி உருவம் உடையவர். பவளம் போன்ற அழகிய செந்நிறத்தை உடையவர்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

குழலார்சடையர் கொக்கினிறகர்
கோல நிறமத்தம்
தழலார்மேனித் தவளநீற்றர்

சரிகோ வணக்கீளர்
எழிலார்நாகம் புலியினுடைமே
லிசைத்து விடையேறிக்
கழலார்சிலம்பு புலம்பவருவார்
சித்தீச் சரத்தாரே. **#779**

அழகு பொருந்திய பாம்பினைப் புலித்தோல் ஆடை மேல் பொருந்தக் கட்டிக் கொண்டு விடைமீது ஏறி, கழலும் சிலம்பும் கால்களில் ஒலிக்க வருபவராகிய நறையூர்ச் சித்தீச்சரத்து இறைவர், மாதொரு பாகராதலின் கூந்தலும் சடையும் அமைந்த திருமுடியினர். கொக்கின் இறகை அணிந்தவர். அழகிய நிறம் அமைந்த ஊமத்தம் மலர் சூடித் தழல் போலச் சிவந்த திருமேனியில் வெண்ணிறமான திருநீற்றை அணிந்தவர்.

<u>திருநறையூர்ச்சித்தீச்சரம்</u>

கரையார்கடல்சூ ழிலங்கைமன்னன்
கயிலை மலைதன்னை
வரையார்தோளா லெடுக்கமுடிகள்
நெரித்து மனமொன்றி
உரையார்கீதம் பாடநல்ல
வுலப்பி லருள்செய்தார்
திரையார்புனல்சூழ் செல்வநறையூர்ச்
சித்தீச் சரத்தாரே. **#780**

அலைகளோடு கூடிய நீர் நிலைகளால் சூழப்பட்ட செல்வ வளம் மிக்க நறையூரில் விளங்கும் சித்தீச்சரத்துறையும் இறைவர், கரைகளை வந்து பொருந்தும் கடல் நாற்புறமும் சூழ்ந்துள்ள இலங்கை மன்னன் இராவணன், கயிலை மலையை, மலை போன்ற தன்தோளால் பெயர்க்க முற்பட்டபோது, தலைகளைக் கால் விரலால் நெரிக்க, அவன்தன் பிழை உணர்ந்து நல் உரைகளால் இயன்ற பாடல்களைப் பாடிப் போற்ற, அளவிடமுடியாத நல்லருளை வழங்கியவர்.

<u>திருநறையூர்ச்சித்தீச்சரம்</u>

நெடியான்பிரம னேடிக்காணார்
நினைப்பார் மனத்தாராய்
அடியாரவரு மருமாமறையு
மண்டத் தமரரும்
முடியால்வணங்கிக் குணங்களேத்தி
முதல்வா வருளென்னச்
செடியார்செந்நெற் றிகழுநறையூர்ச்
சித்தீச் சரத்தாரே. **#781**

திருமாலும் பிரமனும் தேடிக் காண இயலாதவராய் விளங்கிய சிவபெருமான் தம்மை நினைப்பவரின் மனத்தில் விளங்கித் தோன்றுபவராய், அடியவர்களும், அரிய புகழ்மிக்க வேதங்களும், மேலுலகில் வாழும் தேவர்களும், தம் முடியால் வணங்கிக் குணங்களைப் போற்றி முதல்வா அருள் என்று வழிபடுமாறு செந்நெற் பயிர்கள் புதர்களாய்ச் செழித்துத் திகழும் திருநறையூர்ச் சித்தீச்சரத்தில் எழுந்தருளியுள்ளார்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

நின்றுண்சமண ரிருந்துண்டேரர்
நீண்ட போர்வையார்
ஒன்றுமுணரா வூமர்வாயி
லுரைகேட் டுழல்வீர்காள்
கன்றுண்பயப்பா லுண்ணமுலையிற்
கபால மயல்பொழியச்
சென்றுண்டார்ந்து சேருநறையூர்ச்
சித்தீச் சரத்தாரே. **#782**

நின்றுண்ணும் சமணர்களும், இருந்துண்ணும் புத்தர்களும் சித்தாந்த சைவச் சிறப்பொன்றையும் அறியாத ஊமர்கள். அவர்கள் தம் வாயால் கூறும் உரைகளைக் கேட்டு உழல் பவரே! எளிதில் அருள் நல்கும் சிவபிரான், கன்று விருப்போடு உண்ண, முலைக் காம்பில் சுரந்த பால் பாத்திரத்தில் நிறைந்து அயலினும் பொழிவதைக் கண்டு பால் போதுமென மீண்டும் கன்றை அவிழ்த்துவிட அக் கன்றுகள் சென்று உண்டு கொட்டிலை அடையும் நறையூர்ச் சித்தீச்சரத்தில் எழுந்தருளி உள்ளார். சென்று தொழுமின்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

குயிலார்கோல மாதவிகள்
குளிர்பூஞ் சுரபுன்னை
செயிலார் பொய்கை சேருநறையூர்ச்
சித்தரச் சரத்தாரை
மயிலார்சோலை சூழ்ந்தகாழி
மல்கு சம்பந்தன்
பயில்வார்க்கினிய பாடல்வல்லார்
பாவ நாசமே. **#783**

குயில்கள் வாழும் அழகிய மாதவிகளும், குளிர்ந்த அழகிய சுரபுன்னைகளும் வயல்களில் நீரைச் செலுத்தும் பொய்கைகளும் நிறைந்த நறையூர்ச் சித்தீச்சரத்து இறைவரை மயில்கள் வாழும்

சோலைகள் சூழ்ந்த சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் பயில்பவர்க்கு இனியவாய்ப் போற்றிப்பாடிய இப்பதிகப் பாடல்களை ஓத வல்லவர்களின் பாவம் நாசமாம்.

திருக்குடந்தைக்காரோணம்

திருக்குடந்தைக்காரோணம்

திருக்குடந்தைக்காரோணம்,
பண் - தக்கேசி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சோமநாதர்.
தேவியார் : தேனார்மொழியம்மை.

வாரார்கொங்கை மாதோர்பாக
மாக வார்சடை
நீரார்கங்கை திங்கள்சூடி
நெற்றி யொற்றைக்கண்
கூரார்மழுவொன் றேந்தியந்தண்
குழகன் குடமூக்கில்
காரார்கண்டத் தெண்டோளெந்தை
காரோ ணத்தாரே. **#784**

திருக்குடமூக்கில் விளங்கும் காரோணத்தில் கருமை பொருந்திய கண்டத்தராய், எட்டுத் தோள்களோடு விளங்கும் எந்தையாராகிய இறைவர், கச்சணிந்த கொங்கைகளை உடைய பார்வதி தேவியை ஒருபாகமாக் கொண்டு, நீண்ட சடைமிசை நீர் மயமான கங்கை, பிறை ஆகியவற்றைச் சூடி, இயல்பான இருவிழிகளோடு நெற்றியில் ஒற்றைக் கண்ணுடையவராய் கூரிய மழு என்னும் ஓர் ஆயுதத்தை ஏந்தி, அழகிய தண்ணளி செய்யும் குழகராய் விளங்குகின்றார்.

திருக்குடந்தைக்காரோணம்

முடியார்மன்னர் மடமான்விழியார்
மூவுலகும் மேத்தும்
படியார்பவள வாயார்பலரும்
பரவிப் பணிந்தேத்தக்
கொடியார்விடையார் மாடவீதிக்
குடந்தைக் குழகாரும்
கடியார்சோலைக் கலவமயிலார்
காரோ ணத்தாரே. **#785**

மாட வீதிகளை உடைய குடந்தை என்னும் திருத்தலத்தில் உள்ளதும், மணம் கமழும் சோலைகளில் தோகைகளோடு கூடிய மயில்கள் விளங்குவதும் ஆகிய காரோணத்தில், இளமை பொருந்தியவராய் இலங்கும் இறைவர், முடிமன்னர்கள், இளைய மான் போன்ற

விழியினை உடைய மகளிர், மேல் கீழ் நடு என்னும் மூவுலக மக்கள், தேவர், முனிகணங்கள், பவளம் போன்ற வாயினை உடைய அரம்பையர் முதலானோர் பலரும் பரவிப் பணிந்து போற்ற விடைக்கொடியோடு விளங்குபவராவார்.

திருக்குடந்தைக்காரோணம்

மலையார்மங்கை பங்கரங்கை
யனலர் மடலாரும்
குலையார்தெங்கு குளிர்கொள்வாழை
யழகார் குடமூக்கில்
முலையாரணிபொன் முளைவெண்ணகையார்
மூவா மதியினார்
கலையார்மொழியார் காதல்செய்யுங்
காரோ ணத்தாரே. **#786**

மட்டைகளோடும் குலைகளோடும் கூடிய தென்னைகளும் குளிர்ந்த வாழைகளும் சூழ்ந்த அழகமைந்த குடமூக்கு என்னும் திருத்தலத்தில், பொன்னணிகள் விளங்கும் தனங்களையும் மூங்கில் முளை போன்ற வெண்மையான பற்களையும் இளம் பிறை போன்ற நெற்றியையும் இசைக்கலை சேர்ந்த மொழியையும் உடைய மகளிர் பலரால் விரும்பப்படும் காரோணத்து இறைவர் மலை மங்கை பங்கர்; அழகிய கையில் அனல் ஏந்தியவர்.

திருக்குடந்தைக்காரோணம்

போதார்புனல்சேர் கந்தமுந்திப்
பொலியவ் வழகாரும்
தாதார்பொழில்சூழ்ந் தெழிலார்புறவி
லந்தண் குடமூக்கில்
மாதார்மங்கை பாகமாக
மனைகள் பலிதேர்வார்
காதார்குழையர் காளகண்டர்
காரோ ணத்தாரே. **#787**

நீர் நிலைகளில் தோன்றும் தாமரை கழுநீர் குவளை முதலிய பூக்களின் வாசனை முற்பட்டுப் பொலிவெய்த, அழகு நிரம்பிய மகரந்தம் நிறைந்த சோலைகளாலும் எழிலார்ந்த காடு களாலும் சூழப்பெற்றதாய் விளங்கும் அழகிய தண்மையான குட மூக்கில் விளங்கும் காரோணம் எனப் பெயர் பெறும் கோயிலில் எழுந்தருளிய இறைவர், காதல் நிறைந்த உமையம்மை பாகராக மனைகள் தோறும் பலி ஏற்பவர். காதில் குழை அணிந்தவர். காளம் என்னும் நஞ்சினைக் கண்டத்தே கொண்டவர்.

திருக்குடந்தைக்காரோணம்

பூவார்பொய்கை யலர்தாமரைசெங்
கழுநீர் புறவெல்லாம்
தேவார்சிந்தை யந்தணாளர்
சீராலடி போற்றக்
கூவார்குயில்க ளாலுமயில்க
ளின்சொற் கிளிப்பிள்ளை
காவார்பொழில்சூழ்ந் தழகார்குடந்தைக்
காரோ ணத்தாரே. **#788**

சிவபிரான், தெய்வத்தன்மை நிறைந்த மனத்தினராகிய அந்தணர்கள் அழகிய பொய்கைகளில் பூத்த தாமரை செங்கழுநீர் ஆகியவற்றையும் முல்லை நிலங்களில் பூத்த மல்லிகை முல்லை முதலிய மணமலர்களையும் கொண்டு தனது புகழைக் கூறித் திருவடிகளைப் போற்ற, கூவும் குயில்கள் ஆடும் மயில்கள், இன்சொல் பேசும் கிளிப்பிள்ளைகள் ஆகிய பறவைகளை உடையதும், பணியாளர்களால் காக்கப் பெறுவதுமாகிய பொழிலால் சூழப்பெற்ற அழகிய குடந்தைக் காரோணத்தில் எழுந்தருளியுள்ளார்.

திருக்குடந்தைக்காரோணம்

மூப்பூர்நலிய நெதியார்விதியாய்
முன்னே யனல்வாளி
கோப்பார்பார்த்த னிலைகண்டருளுங்
குழகர் குடமூக்கில்
தீர்ப்பாருடலி லடுநோயவலம்
வினைகள் நலியாமைக்
காப்பார்கால னடையாவண்ணங்
காரோ ணத்தாரே. **#789**

குடமூக்கிலுள்ள காரோணத்து இறைவர் மூப்பு ஊர்ந்துவந்து நலிய நியதி தத்துவத்தின் வழியே நெறியாய் நின்று நம்மைக் காப்பவர். முற்காலத்தில் அனலையே அம்பாக வில்லில் கோத்து முப்புரங்களை அழித்தவர். அருச்சுனன் செய்த தவத்தின் நிலை கண்டு இரங்கிப் பாசுபதக் கணை வழங்கியருளிய குழகர். நம் உடலை வருத்தும் நோய்கள், நம்மைப் பற்றிய வினைகள், மனத்தை வருத்தும் துன்பங்கள் ஆகியவற்றைத் தீர்ப்பவர். காலன் அடையா வண்ணம் காப்பவர்.

திருக்குடந்தைக்காரோணம்

ஊனார்தலைகை யேந்தியுலகம்

பலிதேர்ந் துழல்வாழ்க்கை
மானார்தோலார் புலியினுடையார்
கரியின் னுரிபோர்வை
தேனார் மொழியார் திளைத்தங்காடித்
திகழுங் குடமூக்கில்
கானார்நட்ட முடையார்செல்வக்
காரோ ணத்தாரே. **#790**

விளங்கும் குடமூக்கில் உள்ள செல்வவளம் மிக்க காரோணத்து இறைவர், ஊன் பொருந்திய தலையோட்டைக் கையில் ஏந்தி, உலகம் முழுதும் திரிந்து பலி ஏற்று உழலும் வாழ்க்கையர், மான் தோலைப் பூணநூலில் அணிந்தவர். தேனார் மொழி அம்மையோடு குடமூக்கில் கூடி மகிழ்ந்து சுடுகாட்டில் நடனம் புரிபவர்.

<u>திருக்குடந்தைக்காரோணம்</u>

வரையார்திரடோண் மதவாளரக்க
னெடுப்ப மலைசேரும்
விரையார்பாத நுதியாலூன்ற
நெரிந்து சிரம்பத்தும்
உரையார்கீதம் பாடக்கேட்டங்
கொளிவாள் கொடுத்தாரும்
கரையார்பொன்னி சூழ்தண்குடந்தைக்
காரோ ணத்தாரே. **#791**

கரைகளோடு கூடிய காவிரியாற்று நீர் சூழ்ந்த தண்மையான குடந்தை மாநகரில் அமைந்த காரோணத்து இறைவர் மலை போன்ற திரண்ட தோள்களை உடைய மதம் மிக்க வாட்போரில் வல்ல இராவணன் கயிலைமலையைப் பெயர்க்க, அவ்வளவில் தம் மணம் கமழும் திருவடி நுனிவிரலால் அம்மலையில் சேர்த்து ஊன்றி, அவ்விராவணன் தலை பத்தும் நெரித்துப் புகழ்மிக்க சாம கானத்தைப் பாடக் கேட்டு, அப்பொழுதே அவனுக்கு ஒளிபொருந்திய சந்திரஹாசம் என்னும் வாளைக் கொடுத்தவர் ஆவார்.

<u>திருக்குடந்தைக்காரோணம்</u>

கரியமாலுஞ் செய்யபூமே
லயனுங் கழறிப்போய்
அரியவண்டந் தேடிப்புக்கு
மளக்க வொண்கிலார்
தெரியவரிய தேவர்செல்வந்
திகழுங் குடமூக்கில்

கரியகண்டர் காலகாலர்
காரோ ணத்தாரே. #792
செல்வம் விளங்கும் குடமூக்கில் உள்ள காரோணத்து இறைவர் கருநிறம் பொருந்திய திருமாலும் சிவந்த தாமரை மலர் மேல் விளங்கும் நான்முகனும் ஒருவரோடு ஒருவர் மாறுபடப் பேசியவராய் அரிய உலகங்கள் அனைத்தும் தேடிச் சென்றும் அடி முடிகளை அளக்க ஒண்ணாதவராய் உயர்ந்து நின்ற பெரியவர். முனைப்புடையவரால் காணுதற்கு அரியவர். கருநிறம் பொருந்திய கண்டத்தினர். கால காலர்.

திருக்குடந்தைக்காரோணம்

நாணாரமணர் நல்லதறியார்
நாளுங் குரத்திகள்
பேணார்தூய்மை மாசுகழியார்
பேசே லவரோடும்
சேணார்மதிதோய் மாடமல்கு
செல்வ நெடுவீதிக்
கோணாகரமொன் றுடையார்குடந்தைக்
காரோ ணத்தாரே. #793
சமணர்கள் நாணம் இல்லாதவர்கள். நல்லதை அறியாதவர்கள். நாள்தோறும் பெண்பால் குருமார்களும், தூய்மை பேணாதவர்கள். உடல் மாசை நீராடிப் போக்கிக் கொள்ளாதவர்கள். அவர்களோடு பேசவும் செய்யாதீர்கள். வான் அளாவிய மதியினைத் தோயும் மாட வீடுகளைக் கொண்ட செல்வச் செழுமை உடைய வீதிகளோடு கூடிய காரோணமாகிய இருப்பிடத்தை உடையவர் சிவபெருமானார். அவரைச் சென்று வழிபடுவீர்களாக.

திருக்குடந்தைக்காரோணம்

கருவார்பொழில்சூழ்ந் தழகார்செல்வக்
காரோ ணத்தாரைத்
திருவார்செல்வ மல்குசண்பைத்
திகழுஞ் சம்பந்தன்
உருவார்செஞ்சொன் மாலையிவைபத்
துரைப்பா ருலகத்துக்
கருவாரிடும்பைப் பிறப்பதறுத்துக்
கவலை கழிவாரே. #794
அடர்த்தியால் கருநிறம் பெற்ற பொழில்கள் சூழ்ந்த அழகிய செல்வக் காரோணத்து இறைவரைத் தெய்வ நலத்தால் விளைந்த செல்வம் நிறைந்த சண்பை என்னும் சீகாழிப் பதியில் விளங்கும் ஞானசம்பந்தன்

பாடிய செஞ்சொல் மாலையாகிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் உரைப்பவர், இவ்வுலகில் மீளக் கருவுற்று இடர்ப்படும் பிறப்பினை எய்தாது கவலைகள் நீங்கப் பெறுவர்.

திருக்கானூர்

திருக்கானூர்

திருக்கானூர்,
பண் - தக்கேசி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்மேனிநாயகர்.
தேவியார் : சிவயோகநாயகியம்மை.

வானார்சோதி மன்னுசென்னி
வன்னி புனங்கொன்றைத்
தேனார்போது தானார்கங்கை
திங்க ளொடுசூடி
மானேர்நோக்கி கண்டடங்குவப்ப
மாலையாடுவார்
கானூர்மேய கண்ணார்நெற்றி
யானூர் செல்வரே. **#795**

திருக்கானூரில் மேவிய கண்பொருந்திய நெற்றியினை உடையவரும், ஆனேற்றை ஊர்ந்து வருபவருமாகிய செல்வர், வானத்தில் ஒளியோடு விளங்கும் சூரிய சந்திரர் போன்ற ஒளி மன்னும் சென்னியில் வன்னி, காடுகளில் பூத்த தேன் பொருந்திய கொன்றை மலர், தானே வந்து தங்கிய கங்கை, திங்கள் ஆகியவற்றைச் சூடி, மான் போன்ற மருண்ட கண்களையுடைய உமையம்மை கண்டு மகிழ மாலைக் காலத்தில் நடனம் புரிபவராவர்.

திருக்கானூர்

நீந்தலாகா வெள்ளமூழ்கு
நீள்சடை தன்மேலோர்
ஏய்ந்தகோணற் பிறையோடரவு
கொன்றை யெழிலாரப்
போந்தமென்சொ லின்பம்பயந்த
மைந்தரவர் போலாம்
காந்தள்விம்மு கானூர்மேய
சாந்த நீற்றாரே. **#796**

காந்தள் செடிகள் தழைத்து வளர்ந்து பூத்து மணம் பரப்பும் கானூரில் மேவிய சந்தனமும் திருநீறும் பூசிய இறைவர், தடுக்க முடியாதபடி பெருகிவந்த கங்கையினது வெள்ளம் மூழ்கி மறைந்துபோன நீண்ட சடைமுடிமேல் பொருந்த வளைந்த பிறை மதியோடு, பாம்பு,

கொன்றைமலர் ஆகியன அழகுதர வீதியுலா வந்து அழகிய மென் சொற்களால் இன்பம் தந்த மைந்தர் ஆவார்.

திருக்கானூர்

சிறையார்வண்டுந் தேனும்விம்மு
செய்ய மலர்க்கொன்றை
மறையார்பாட லாடலோடு
மால்விடை மேல்வருவார்
இறையார்வந்தெ னில்புகுந்தென்
னெழினல முங்கொண்டார்
கறையார்சோலைக் கானூர்மேய
பிறையார் சடையாரே. **#797**

கருநிறமான சோலைகள் சூழ்ந்த கானூரில் மேவிய பிறை பொருந்திய சடையினராகிய இறைவர், சிறகுகளோடு கூடிய வண்டுகளும் அவற்றால் உண்ணப்பெறும் தேனும் நிறைந்து செவ்விதாக மலர்ந்த கொன்றை மலர்களைச் சூடியவராய் வேதப்பாடல்களைப் பாடி ஆடுபவராய்ப் பெரிய விடைமேல் வருவார். அவ்வாறு வரும் இறைவர் என் இல்லத்தே புகுந்து என் அழகையும் நலத்தையும் கவர்ந்து சென்றார், இது முறையோ?.

திருக்கானூர்

விண்ணார்திங்கட் கண்ணிவெள்ளை
மாலை யதுசூடித்
தண்ணாரக்கோ டாமைபூண்டு
தழைபுன் சடைதாழ
எண்ணாவந்தெ னில்புகுந்தங்
கெவ்வ நோய்செய்தான்
கண்ணார்சோலைக் கானூர்மேய
விண்ணோர் பெருமானே. **#798**

இடம் அகன்ற சோலைகள் சூழ்ந்த திருக்கானூரில் மேவிய விண்ணோர் தலைவராகிய சிவபிரானார் வானகத்தில் பொருந்திய பிறை மதியைக் கண்ணியாகச்சூடி, வெண்ணிறமான மாலையை அணிந்து, குளிர்ந்த என்புமாலை, ஆமையோடு ஆகியவற்றைப் புனைந்து தழைத்த சிவந்த சடைகள் தொங்க, என்னை அடைய எண்ணி வந்து என் இல்லம் புகுந்து, எனக்கு மிக்க விரக வேதனையைத் தந்து சென்றார். இது முறையோ?

திருக்கானூர்

தார்கொள்கொன்றைக் கண்ணியோடுந்

தண் மதியஞ்சூடி
சீர்கொள்பாட லாடலோடு
சேட ராய்வந்து
ஊர்கள்தோறு மையமேற்றென்
னுள்வெந் நோய்செய்தார்
கார்கொள்சோலைக் கானூர்மேய
கறைக்கண் டத்தாரே. **#799**

கருநிறம் பொருந்திய சோலைகள் சூழ்ந்த கானூரில் மேவிய கறைக்கண்டர், கொன்றை மலர்களால் இயன்ற கண்ணி தார் ஆகியவற்றை அணிந்தவராய்க் குளிர்ந்த பிறைமதியை முடியில் சூடி, சிறப்புமிக்க ஆடல் பாடல்களோடு பெருமைக்குரியவராய் வந்து ஊர்கள்தோறும் திரிந்து, பலியேற்று, என் மனத்தகத்தே கொடிய விரக வேதனையைத் தந்து சென்றார்.

<u>திருக்கானூர்</u>

முளிவெள்ளெலும்பு நீறுநூலு
மூழ்கு மார்பராய்
எளிவந்தார்போ லையமென்றெ
னில்லே புகுந்துள்ளத்
தெளவுநாணுங் கொண்டகள்வர்
தேற லார்பூவில்
களிவண்டியாழ்செய் கானூர்மேய
வொளிவெண் பிறையாரே. **#800**

தேன் பொருந்திய மலரில் கள்ளுண்டு களித்த வண்டுகள் யாழ்போல ஒலி செய்யும் திருக்கானூரில் மேவிய ஒளிபொருந்திய வெண்பிறையை முடியிற் சூடிய இறைவர், காய்ந்த வெண்மையான எலும்பும் திருநீறும் முப்புரி நூலும் பொருந்திய மார்பினராய் எளிமையாக வந்தவர் போல வந்து, 'ஐயம் இடுக' என்று கூறிக் கொண்டே என் இல்லத்தில் புகுந்து உள்ளத் தெளவையும் நாணத்தையும் கவர்ந்து சென்ற கள்வர் ஆவார்.

<u>திருக்கானூர்</u>

மூவாவண்ணர் முளைவெண்பிறையர்
முறுவல் செய்திங்கே
பூவார்கொன்றை புனைந்துவந்தார்
பொக்கம் பலபேசிப்
போவார்போல மால்செய்துள்ளம்
புக்க புரிநூலர்
தேவார்சோலைக் கானூர்மேய

தேவ தேவரே. **#801**

தெய்வத்தன்மை வாய்ந்த சோலைகள் சூழ்ந்த கானூரில் மேவிய தேவதேவராகிய சிவபிரானார், மூப்பு அடையாத அழகினர். ஒரு கலையோடு முளைத்த வெண்மையான பிறையை அணிந்தவர். அவர் கொன்றை மாலை சூடியவராய்க் காமக் குறிப்புத் தோன்றும் புன்சிரிப்புடன் என் இல்லம் நோக்கி வந்து, பொய் கலந்த வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருந்து போவாரைப்போல் காட்டி என்னை மயக்கி என் உள்ளத்தில் புக்கொளித்த புரிநூலர் ஆவார்.

திருக்கானூர்

தமிழினீர்மை பேசித்தாளம்
வீணை பண்ணிநல்ல
முழவமொந்தை மல்குபாடல்
செய்கை யிடமோவார்
குமிழின்மேனி தந்தகோல
நீர்மை யதுகொண்டார்
கமழுஞ்சோலைக் கானூர்மேய
பவள வண்ணரே. **#802**

மணம் கமழும் சோலைகள் சூழ்ந்த திருக்கானூரில் மேவிய பவளம் போன்ற நிறத்தினை உடைய பரமர், தமிழ்போன்று இனிக்கும் இனிய வார்த்தைகளைப் பேசி, தாளத்தோடு வீணையை மீட்டி, முழவம் மொந்தை ஆகிய துணைக் கருவிகளுடன் கூடிய பாடல்களைப் பாடி எனது இல்லத்தை அடைந்து, அதனை விட்டுப் பெயராதவராய் எனக்குக் குமிழம்பூப் போன்ற பசலை நிறத்தை அளித்து என் அழகைக் கொண்டு சென்றார்.

திருக்கானூர்

அந்தமாதி யயனுமாலு
மார்க்கு மறிவரியான்
சிந்தையுள்ளு நாவின்மேலுஞ்
சென்னியு மன்னினான்
வந்தென்னுள்ளம் புகுந்துமாலை
காலையாடுவான்
கந்தமல்கு கானூர்மேய
வெந்தை பெம்மானே. **#803**

மணம் நிறைந்த திருக்கானூரில் எழுந்தருளிய எந்தையாராகிய பெருமானார், அந்தத்தைச் செய்பவரும், யாவர்க்கும் ஆதியாய் இருப்பவரும் ஆவார். அயன், மால் முதலிய அனைவராலும்

அறிதற்கரியவர். என் சிந்தையிலும் சென்னியிலும் நாவிலும் நிலைபெற்றிருப்பவர். அத்தகையோர் யான் காண வெளிப்பட்டு வந்து என் உள்ளம் புகுந்து மாலையிலும் காலையிலும் நடனம் புரிந்தருளுகின்றார்.

திருக்கானூர்

ஆமையரவோ டேனவெண்கொம்
பக்கு மாலைபூண்
டாமோர்கள்வர் வெள்ளர்போல
வுள்வெந் நோய்செய்தார்
ஓமவேத நான்முகனுங்
கோணா கணையானும்
சேமமாய செல்வர்கானூர்
மேய சேடரே. **#804**

வேள்விகள் இயற்றும் முறைகளைக் கூறும் வேதங்களை ஓதும் நான்முகனும், வளைந்த பாம்பணையில் பள்ளி கொள்ளும் திருமாலும் தங்கள் பாதுகாப்புக்குரியவராகக் கருதும் செல்வராகிய கானூர் மேவிய பெருமானார், ஆமை, அரவு, பன்றியின் வெண்மையான கொம்பு என்புமாலை ஆகியவற்றைப் பூண்ட ஓர்கள்வராய் வெள்ளை உள்ளம் படைத்தவர் போலக் கருதுமாறு நல்லவர் போல வந்து எனக்கு மன வேதனையைத் தந்தார்.

திருக்கானூர்

கழுதுதுஞ்சுங் கங்குலாடுங்
கானூர் மேயானைப்
பழுதின்ஞான சம்பந்தன்சொற்
பத்தும் பாடியே
தொழுதுபொழுது தோத்திரங்கள்
சொல்லித் துதித்துநின்
றழுதுநக்கு மன்புசெய்வார்
அல்ல லறுப்பாரே. **#805**

பேய்களும் தூங்கும் நள்ளிரவில் நடனம் ஆடும் கானூர் மேவிய இறைவனைக் குற்றமற்ற ஞானசம்பந்தன் போற்றிச் சொன்ன சொல்மாலையாகிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் பாடித்தொழுது முப்பொழுதும் தோத்திரங்களைச் சொல்லித் துதித்து நின்று அழுதும் சிரித்தும் அன்பு செய்பவர்கள் அல்லலை அறுப்பார்கள்.

திருப்புறவம்

சீர்காழி

திருப்புறவம்,
பண் - தக்கேசி, திருப்புறவம் என்பது சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

நறவநிறைவண் டறைதாக்கொன்றை
நயந்து நயனத்தாற்
சுறவஞ்செறிவண் கொடியோனுடலம்
பொடியா விழிசெய்தான்
புறவமுறைவண் பதியாமதியார்
புரமூன் றெரிசெய்த
இறைவன்அறவ னிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. **#806**

தேன் நிறைந்த வண்டுகள் ஒலிக்கும் கொன்றை மாலையை விரும்பிச் சூடி, சுறாமீன் எழுதப்பட்ட கொடியை உடைய, உயிர்கட்கு எல்லாம் இன்ப நலம் தரும் வள்ளன்மை உடைய, மன்மதனைப் பொடியாகுமாறு நெற்றிக்கண்ணால் விழித்து அழித்த, சிவபிரான் உறையும் பதி புறவம் எனப்பெறும் சீகாழியாம். தன்னை மதியாத அசுரர்களின் முப்புரங்களை எரித்தழித்த அவ்விறைவனாகிய அறவன் இமையவர் ஏத்தித் துதிக்க அப்பதியிடை உமையம்மையோடு வீற்றிருந்தருள்கிறான்.

சீர்காழி

உரவன்புலியி னுரிதோலாடை
யுடைமேற் படநாகம்
விரிவிவிரிபூங் கச்சாவசைத்த
விகிர்த னுகிர்தன்னாற்
பொருவெங்களிறு பிளிறவுரித்துப்
புறவம் பதியாக
இரவும்பகலு மிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. **#807**

மிக்க வலிமையை உடையவனும், புலியினது தோல் ஆடையாகிய உடை மேல், படம் பொருந்திய நாகத்தைக் கச்சாகக் கட்டிய விகிர்தனும், தனது கைவிரல் நகத்தால் போர் செய்யும் கொடிய யானை பிளிற அதன் தோலை உரித்துப் போர்த்தவனுமாகிய இறைவன், புறவம் என்னும்

சீகாழியையே தான் உறையும் பதியாகக் கொண்டு அதன்கண் இரவும் பகலும் தேவர்கள் பலரும் வந்து வணங்க உமையம்மையோடு எழுந்தருளியிருக்கின்றான்.

சீர்காழி

பந்தமுடைய பூதம்பாடப்
பாதஞ் சிலம்பார்க்கக்
கந்தமல்கு குழலிகாணக்
கரிகாட் டெரியாடி
அந்தண்கடல்சூழ்ந் தழகார்புறவம்
பதியா வமர்வெய்தி
எந்தம்பெருமா னிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. **#808**

எம்முடைய தலைவனாகிய இறைவன், உதரபந்தத்தை அணிந்துள்ள பூதங்கள் பாடவும், பாதங்களில் சிலம்புகள் ஒலிக்கவும், மணம் நிறைந்த கூந்தலையுடைய உமையம்மை காணச் சுடுகாட்டில் எரியேந்தி ஆடி, அழகிய குளிர்ந்த கடலால் சூழப்பட்ட எழில்மிக்க புறவம் என்னும் சீகாழியையே இருப்பிடமாகக் கொண்டு, எழுந்தருளி இமையோர்கள் தன்னையேத்த உமையம்மையோடு வீற்றிருந்தருள்கிறான்.

சீர்காழி

நினைவார்நினைய வினியான்பனியார்
மலர்தூய் நித்தலுங்
கனையார்விடையொன் றுடையான்கங்கை
திங்கள் கமழ்கொன்றை
புனைவார்சடையின் முடியான்கடல்சூழ்
புறவம் பதியாக
எனையாளுடையா னிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. **#809**

என்னை ஆளாக உடைய இறைவன், நாள்தோறும் குளிர்ந்த மலர்களைத் தூவித் தன்னை நினையும் அடியவர்களின் நினைப்பிற்கு இனியவனாய், கனைக்கும் விடை ஒன்றை ஊர்தியாக உடையவனாய், கங்கை, திங்கள், மணங்கமழும் கொன்றை ஆகியவற்றைச் சூடிய அழகிய நீண்ட சடைமுடியை உடையவனாய், கடலால் சூழப்பட்ட புறவம் என்னும் சீகாழிப் பதியை இடமாகக் கொண்டு இமையவர் ஏத்த உமையம்மையோடு வீற்றிருந்தருள்கிறான்.

சீர்காழி

செங்கணரவு நகுவெண்டலையு
முகிழ்வெண் டிங்களுந்
தங்குசடையன் விடையனுடையன்
சரிகோ வணவாடை
பொங்குதிரைவண் கடல்சூழ்ந்தழகார்
புறவம் பதியாக
எங்கும்பரவி யிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. **#810**

சிவபிரான், சிவந்த கண்களையுடைய பாம்பும், சிரிப்பதுபோல வாய்விண்டு தோன்றும் வெள்ளிய தலையோடும், இளைய வெண்பிறையும் தங்கும் சடைமுடியன். விடை ஊர்தியன். சரியும் கோவண ஆடையை உடையாகக் கொண்டவன். அப்பெருமான் பொங்கி எழும் அலைகளையுடைய வளம் பொருந்திய கடலால் சூழப்பட்ட அழகிய புறவம் என்னும் சீகாழியைத் தனக்குரிய பதியாகக் கொண்டு இமையோர் எங்கும் பரவி நின்று ஏத்த உமையம்மையோடு வீற்றிருந்தருள்கின்றான்.

சீர்காழி

பின்னுசடைகள் தாழக்கேழ
லெயிறு பிறழப்போய்
அன்னநடையார் மனைகடோறு
மழகார் பலிதேர்ந்து
புன்னைமடலின் பொழில்சூழ்ந்தழகார்
புறவம் பதியாக
என்னையுடையா னிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. **#811**

என்னை அடிமையாக உடைய இறைவன், முறுக்கி விடப்பட்ட சடைகள் தாழ்ந்து தொங்க மாலையாகக் கோத்தணிந்த பன்றியின் பற்கள் விளங்கச் சென்று, அன்னம் போன்ற நடையினையுடைய மகளிரின் இல்லங்கள்தோறும் அழகு பொருந்தப் பலியேற்று, புன்னை தாழை முதலியன நிறைந்த பொழிலால் சூழப்பட்ட அழகிய புறவம் என்னும் சீகாழியைத் தனது பதியாகக்கொண்டு உமையம்மையோடு வீற்றிருந்தருள்கின்றான்.

சீர்காழி

உண்ணற்கரிய நஞ்சையுண்
டொருதோ ழந்தேவர்
விண்ணிற்பொலிய வமுதமளித்த

விடைசேர் கொடியண்ணல்
பண்ணிற்சிறைவண் டறைபூஞ்சோலைப்
புறவம் பதியாக
எண்ணிற்சிறந்த விமையோரேத்த
வுமையோ டிருந்தானே. **#812**

யாராலும் உண்ண முடியாத நஞ்சைத் தான் உண்டு, ஒரு தோழம் என்ற எண்ணிக்கையில் தேவர்கள் விண்ணுலகில் மகிழ்வுற்று வாழ, கடலிடைத் தோன்றிய அமுதை வழங்கிய விடை எழுதிய கொடியையுடைய அண்ணல். சிறகுகளையுடைய வண்டுகள் பண்ணோடு ஒலிக்கும் பூஞ்சோலைகளால் சூழப்பட்ட புறவம் என்னும் சீகாழியைத் தன் பதியாகக் கொண்டு எண்ணற்ற இமையோர் தன்னை ஏத்தி வணங்க உமையம்மையோடு வீற்றிருந்தருள்கிறான்.

சீர்காழி

விண்டானதிர வியனார்கயிலை
வேரோ டெடுத்தான்றன்
றிண்டோளுடலு முடியுநெரியச்
சிறிதே யூன்றிய
புண்டானொழிய வருள்செய்பெருமான்
புறவம் பதியாக
எண்டோளுடையா னிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. **#813**

எட்டுத் தோள்களையுடைய சிவபிரான் விண் அதிரும்படியாகப் பெரிய கயிலை மலையை வேரோடு பெயர்த்து எடுத்த இராவணனின் வலிமை பொருந்திய தோள்கள், உடல், முடி ஆகியன நெரியுமாறு கால் விரலால் சிறிதே ஊன்றிப் பின் அவன் வருந்திய அளவில் உடலில் தோன்றிய புண்கள் நீங்க அவன் வேண்டும் வரங்கள் பலவற்றைத் தந்த பெருமானாவான். அவ்விறைவன் புறவம் என்னும் சீகாழியைத் தனக்குரிய பதியாகக் கொண்டு இமையோர் ஏத்த உமையம்மையோடு வீற்றிருந்தருள்கிறான்.

சீர்காழி

நெடியானீடா மரைமேலயனும்
நேடிக் காண்கில்லாப்
படியாமேனி யுடையான்பவள
வரைபோற் றிருமார்பிற்
பொடியார்கோல முடையான்கடல்சூழ்
புறவம் பதியாக

இடியார்முழவா ரிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. #814
திருமாலும், நீண்டு வளர்ந்த தாமரை மலர் மேல்உறையும் நான்முகனும் தேடிக் காண இயலாத தன்மையை உடைய திருமேனியன். பவளமலை போன்ற திருமார்பின்கண் திருநீறு அணிந்த அழகினையுடையவன். அவ்விறைவன், கடல் நீரால் சூழப்பட்டதும் இடி போன்ற முழக்கத்தையுடைய முழா ஒலிப்பதும் ஆகிய புறவம் என்னும் சீகாழியைத் தனக்குரிய பதியாகக் கொண்டு, இமையவர் ஏத்த உமையம்மையோடு வீற்றிருந்தருள்கின்றான்.

சீர்காழி

ஆலும்மயிலின் பீலியமண
ரறிவில் சிறுதேரர்
கோலும்மொழிக ளொழியக்குழுவுந்
தழலு மெழில்வானும்
போலும்வடிவு முடையான்கடல்சூழ்
புறவம் பதியாக
ஏலும்வகையா லிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. #815
ஆடுகின்ற மயிலின் தோகையைக் கையில் ஏந்திய அமணர்களும், அறிவில் குறைந்த புத்தர்களும், புனைந்து பேசும் மொழிகளைத் தாழுமாறு செய்பவனாய், கூடி எரியும் தழலும், அழகிய வானமும் போன்ற செவ்வண்ணம் உடைய சிவன், கடல் நீர் சூழ்ந்த புறவம் என்னும் சீகாழியைத் தனது பதியாகக் கொண்டு இமையோர் பொருந்தும் வகையால் போற்ற உமையம்மையோடு வீற்றிருந்தருள்கிறான்.

சீர்காழி

பொன்னார்மாட நீடுஞ்செல்வப்
புறவம் பதியாக
மின்னாரிடையா ளுமையாளோடு
மிருந்த விமலனைத்
தன்னார்வஞ்செய் தமிழின்விரக
னுரைத்த தமிழ்மாலை
பன்னாள்பாடி யாடப்பிரியார்
பரலோ கந்தானே. #816
அழகு பொருந்திய உயர்ந்த மாட வீடுகளை உடையதும், செல்வச் செழுமை வாய்ந்ததும் ஆகிய புறவம் என்னும் சீகாழிப் பதியில், மின்னல்

போன்ற இடையினையுடைய உமையம்மையாரோடு எழுந்தருளியுள்ள குற்றமற்ற இறைவனைத் தன் அன்பால் தமிழ் விரகனாகிய ஞானசம்பந்தன் போற்றி உரைத்த இத்தமிழ் மாலையைப் பல நாள்களும் பாடி ஆடுவோர், மேலுலகத்தில் பிரியாது உறைவர்.

திருவெங்குரு

சீர்காழி

திருவெங்குரு,
பண் - குறிஞ்சி, திருவெங்குரு என்பது சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

காலைநன்மாமலர் கொண்டடிபரவிக்
கைதொழுமாணியைக் கறுத்தவெங்காலன்
ஓலமதிடமுன் னுயிரொடுமாள
வுதைத்தவனுமையவள் விருப்பனெம்பெருமான்
மாலைவந்தணுக வோதம்வந்துலவி
மறிதிரைசங்கொடு பவளமுனுந்தி
வேலைவந்தணையுஞ் சோலைகள்சூழ்ந்த
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. #817

வைகறைப் பொழுதில், சிறந்தனவாகிய நல்ல மலர்களைப் பறித்துவந்து சாத்தித் தன் திருவடிகளைப் பரவி, கைகளால் தொழும் மார்க்கண்டேயன் உயிரைக் கவரச் சினந்து வந்த கொடிய காலனை ஓலமிட்டு அலறித் தனக்கு முன்னே உயிரோடு மாளுமாறு உதைத்தருளியவனும், உமையம்மைக்கு விருப்பமானவனும் ஆகிய எம்பெருமான், மாலைக் காலம் வரக் கடல் வெள்ள நீர் வந்து உலவிச் சூழ்ந்து வரும் அலைகளால் சங்கு, பவளம் ஆகியவற்றை உந்திவந்து கரையிற் சேர்க்கும் சோலைகள் சூழ்ந்த வெங்குரு என்னும் சீகாழியில் மேவி வீற்றிருந்தருள்கின்றான்.

சீர்காழி

பெண்ணினைப்பாக மமர்ந்துசெஞ்சடைமேற்
பிறையொடுமரவினை யணிந்தழகாகப்
பண்ணினைப்பாடி யாடிமுன்பலிகொள்
பரமரெம்மடிகளார் பரிசுகள்பேணி
மண்ணினைமூடி வான்முகடேறி
மறிதிரைகடன்முகந் தெடுப்பமற்றுயர்ந்து
விண்ணளவோங்கி வந்திழிகோயில்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. #818

உமையம்மையை இடப்பாகமாக விரும்பி ஏற்று, செஞ்சடைமேல் பிறை பாம்பு ஆகியவற்றை அணிந்து, பண் வகைகளை அழகாகப் பாடி

ஆடியவராய்ச் சென்று, மகளிரிடம் பலியேற்கும் பரமராகிய எம் அடிகளார், ஊழிக் காலத்தில் உலகை மூடி வான்முகடு வரை உயர்ந்து சுருண்டு விழும் அலைகடல் நீரில் மிதந்து உயர்ந்து வான் உற ஓங்கி மீள நிலவுலகிற்கு வந்திழிந்த கோயிலாகிய வெங்குரு என்னும் சீகாழிப்பதியுள், வீற்றிருந்தருள்கிறார்.

சீர்காழி

ஓரியல்பில்லா வுருவமதாகி
யொண்டிறல்வேடன துருவதுகொண்டு
காரிகைகாணத் தனஞ்சயன்றன்னைக்
கறுத்தவற்களித்துடன் காதல்செய்பெருமான்
நேரிசையாக வறுபதமுரன்று
நிரைமலர்த் தாதுகண் மூசவிண்டுதிர்ந்து
வேரிகளெங்கும் விம்மியசோலை
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. **#819**

தம் இயல்பிற்குப் பொருத்தமற்ற உருவமாய் மிக்க வலிமையுடைய வேடர் உருத்தாங்கி வந்து உமையம்மை காண அருச்சுனனோடு ஒரு காரணங்காட்டிச் சண்டையிட்டு அவனுக்கு வேண்டும் பொருள்களை வழங்கி அன்பு செய்த பெருமானாகிய சிவபிரான், வண்டுகள் நேரிசைப் பண்பாடி முரன்று வரிசையாக மலர்ந்த மலர்களின் மகரந்தங்களில் புரள, அதனால் மலர்கள் விரிந்து தேன் உதிருவதால் தேன் எங்கும் விம்மி வழியும் சோலைகள் சூழ்ந்த வெங்குரு என்னும் சீகாழிப்பதியில் வீற்றிருந்தருள்கிறான்.

சீர்காழி

வண்டணைகொன்றை வன்னியுமத்த
மருவியகூவிள மெருக்கொடுமிக்க
கொண்டணிசடையர் விடையினர்பூதங்
கொடுகொட்டிகுடமுழாக் கூடியுமுழவப்
பண்டிகழ்வாகப்பாடி யொர்வேதம்
பயில்வர்முன்பாய்புனற் கங்கையைச்சடைமேல்
வெண்பிறைசூடி யுமையவளோடும்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. **#820**

வண்டுகள் சூழும் கொன்றை மலர், வன்னி இலை, ஊமத்தம் மலர், வில்வம், எருக்கம்பூ ஆகியனவற்றை மிகுதியாகக் கொண்டு அணிந்த சடையினரும், விடை ஊர்தியரும், பூத கணங்கள் கொடுகொட்டி குடமுழா முழவு முதலியவற்றை முழக்கப் பண் விளங்க ஒப்பற்ற வேதங்களைப் பாடிப் பழகியவரும், தமக்கு முன்னே பாய்ந்து வந்த

கங்கை வெள்ளத்தை வெண்பிறையோடு சடையில் அணிந்தவரும் ஆகிய சிவபிரானார் உமையம்மையாரோடு வெங்குரு எனப்படும் சீகாழிப் பதியில் வீற்றிருந்தருள்கிறார்.

சீர்காழி

சடையினர்மேனி நீறதுபூசித்
தக்கைகொள்பொக்கண மிட்டுடனாகக்
கடைதொறும்வந்து பலியதுகொண்டு
கண்டவர்மனமவை கவர்ந்தழகாகப்
படையதுவேந்திப் பைங்கயற்கண்ணி
யுமையவள்பாகமு மமர்ந்தருள்செய்து
விடையொடுபூதஞ் சூழ்தரச்சென்று
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. **#821**

சடைமுடியினராய்த் திருமேனியில் வெண்ணீறு பூசியவராய், தக்கை என்னும் இசைக் கருவியை வைத்துக் கட்டியுள்ள துணிமூட்டையைத் தோளில் தொங்கவிட்டுக் கொண்டு வீடுகள் தோறும் வந்து பலியேற்று, தம்மைக் கண்ட மகளிரின் மனங்களைக் கவர்ந்து அழகிய கோலத்தோடு மழுப்படையைக் கையில் ஏந்தியவராய் விளங்கும் பெருமானார், பசிய கயல் போன்ற கண்களை உடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டு அமர்ந்து அருள் செய்யும் குறிப்பினராய், விடையூர்தியோடு பூத கணங்கள் சூழ வெங்குரு என்னும் சீகாழிப் பதியில் வந்து வீற்றிருந்தருள்கிறார்.

சீர்காழி

கரைபொருகடலிற் றிரையதுமோதக்
கங்குல்வந்தேறிய சங்கமுமிப்பி
உரையுடைமுத்த மணலிடைவைகி
யோங்குவானிருளறத் துரப்பவெண்டிசையும்
புரைமலிவேதம் போற்றுபூசுரர்கள்
புரிந்தவர் நலங்கொளா குதியினினிறைந்த
விரைமலிதூபம் விசும்பினைமறைக்கும்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. **#822**

கரையை அலைக்கும் கடலின் திரைகள் மோதுதலால் இரவிடைக் கரையில் வந்து ஏறிய சங்குகளும் சிப்பிகளும் முத்துக்களை ஈனப் புகழ்பெற்ற அம்முத்துக்கள் மணல் இடையே தங்கி ஓங்கிய வானத்தின் இருளை முற்றிலும் துரத்தி ஒளி செய்ய, எண் திசைகளிலும் பரவி நிறைந்த வேதங்களைப் போற்றும் அந்தணர்கள் நன்மை விளைக்கும் வேள்விகளைப் புரிய, அவ்வேள்விகளின் ஆகுதியால் எழும் மணம் மிக்க

புகை வானை மறைத்துத் தோன்றும் வெங்குரு என்னும் சீகாழிப்பதியில் பெருமான் உமையம்மையாரோடு வீற்றிருந்தருள்கின்றார்.

சீர்காழி

வல்லிநுண்ணிடையா ளுமையவடன்னை
மறுகிடவருமத களிற்றினைமயங்க
ஒல்லையிற்பிடித்தங் குரித்தவள்வெருவல்
கெடுத்தவர்விரிபொழின் மிகுதிருவாலில்
நல்லறமுரைத்து ஞானமோடிருப்ப
நலிந்திடலுற்று வந்தவக்கருப்பு
வில்லியைப்பொடிபட விழித்தவர்விரும்பி
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. **#823**

கொடி போன்று நுண்ணிய இடையினை உடைய உமையம்மை அஞ்சுமாறு வந்த மதகளிற்றை அது மயங்குமாறு விரைந்து பிடித்து அதனை உரித்து அம்மையின் அச்சத்தைப் போக்கியவரும், விரிந்த பொழிலிடையே அமைந்த அழகிய ஆலமரத்தின் அடியில் அமர்ந்து சனகாதியர்க்கு நல்லறங்களை உரைத்து, யோக நிலையில் ஞானமாத்திரராய் வீற்றிருக்க, திருமால் பிரமர் தம் கடுஞ்சொற்களால் நலிவுற்று மலர்க்கணை தொடுத்து யோக நிலையைக் கலைக்க வந்த கரும்பு வில்லையுடைய காமன் எரிந்து பொடிபடுமாறு விழித்தவரும் ஆகிய சிவபிரானார் விரும்பி வெங்குரு என்னும் சீகாழிப் பதியில் எழுந்தருளியுள்ளார்.

சீர்காழி

பாங்கிலாவரக்கன் கயிலையன்றெடுப்பப்
பலதலைமுடியொடு தோளவைநெரிய
ஓங்கியவிரலா லூன்றியன்றவற்கே
யொளிதிகழ்வாளது கொடுத்தழகாய
கோங்கொடுசெருந்தி கூவிளமத்தங்
கொன்றையுங்குலாவிய செஞ்சடைச்செல்வர்
வேங்கைபொன்மலரார் விரைதருகோயில்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. **#824**

நற்குணங்கள் இல்லாத அரக்கனாகிய இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தெடுத்தபோது அவன் முடிகள் அணிந்த பல தலைகளையும் தோள்களையும் கால்விரலை ஊன்றி நெரித்த வரும், அவன் பிழை உணர்ந்து வருந்திப் பாடிய அளவில் அப்பொழுதே அவனுக்கு ஒளிபொருந்திய வாளை வழங்கியருளியவரும், அழகிய கோங்கு, செருந்தி, வில்வம், ஊமத்த மலர், கொன்றை ஆகியன விளங்கும் சிவந்த

சடைமுடிச் செல்வரும் ஆகிய சிவபிரானார் வேங்கை மரங்களின் பொன்போன்ற மலர்களின் மணம் கமழும் வெங்குரு என்னும் சீகாழித் திருக்கோயிலில் வீற்றிருந்தருள்கிறார்.

சீர்காழி

ஆறுடைச்சடையெம் மடிகளைக்காண
வரியொடுபிரமனு மளப்பதற்காகிச்
சேறிடைத்திகழ்வா னத்திடைபுக்குஞ்
செலவறத்தவிர்ந்தனரெழிலுடைத்திகழ்வெண்
ணீறுடைக்கோல மேனியர்நெற்றிக்
கண்ணினர்விண்ணவர் கைதொழுதேத்த
வேறெமையாள விரும்பியவிகிர்தர்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. **#825**

கங்கை நதியைச் சடையிற் சூடிய எம் தலைவராகிய சிவபிரானாரின் அடிமுடிகளை அளந்து காணுதற்குத் திருமால் பிரமர்கள் சேற்று நிலத்தைப் பன்றியாய் அகழ்ந்து சென்றும், முடியினைக் காண அன்னமாய்ப் பறந்து சென்றும் தம் செயல் அழிந்தனர். அழகு விளங்கும் வெண்ணீறு பூசிய திருமேனியரும், நெற்றிக்கண்ணரும், விண்ணவர் கைகளால் தொழுது ஏத்த அவர்களை விடுத்து எம்மைச் சிறப்பாக ஆள விரும்பியவரும் ஆகிய அவ்விகிர்தர் வெங்குரு என்னும் சீகாழிப் பதியில் எழுந்தருளியுள்ளார்.

சீர்காழி

பாடுடைக்குண்டர் சாக்கியர்சமணர்
பயிறருமறவுரை விட்டழகாக
ஏடுடைமலராள் பொருட்டுவன்றக்க
னெல்லையில்வேள்வியைத்தகர்த்தருள்செய்து
காடிடைக்கடிநாய் கலந்துடன்சூழக்
கண்டவர்வெருவுற விளித்து வெய்தாய
வேடுடைக்கோலம் விரும்பியவிகிர்தர்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. **#826**

துன்பங்களைத் தாங்குதலே தவத்தின் அடையாளம் எனக் கருதும் குண்டர்களாகிய சமணர்களும் சாக்கியர்களும் கூறும் அறவுரைகளைக் கருதாது, அழகிய இதழ்களோடு கூடிய தாமரைமலர் போன்றவளாகிய தாட்சாயணியின் பொருட்டு வலிய தக்கன் இயற்றிய அளவிட முடியாத பெரிய வேள்வியை அழித்துப் பின் தக்கனுக்கும் அருள்புரிந்து, காட்டில் காவல் புரியும் நாய்கள் சூழ்ந்து வரவும், கண்டவர் அஞ்சவும், வேடர் பயிலும் சொற்களால் விலங்குகளை விளித்து வேட்டுவக் கோலத்தை

விரும்பி ஏற்ற விகிர்தர் வெங்குரு என்னும் சீகாழிப் பதியில் வீற்றிருந்தருள்கின்றார்.

சீர்காழி

விண்ணியல்விமானம் விரும்பியபெருமான்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரை
நண்ணியநூலன் ஞானசம்பந்த
னவின்றவிவ்வாய்மொழி நலமிகுபத்தும்
பண்ணியல்பாகப் பத்திமையாலே
பாடியுமாடியும் பயிலவல்லோர்கள்
விண்ணவர்விமானங் கொடுவரவேறி
வியனுலகாண்டுவீற் றிருப்பவர்தாமே. **#827**

வானளாவிய விமானத்தை விரும்பி, வெங்குரு என்னும் சீகாழிப் பதியுள் வீற்றிருந்தருளும் பெருமானைப் பற்றி அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றைத் தெரிவிக்கும் நல்ல நூல்களை அறிந்த ஞானசம்பந்தன் அருளிய இவ்வுண்மை மொழிகளாகிய நன்மைகளைத் தரும் இப்பதிகப் பாடல்கள் பத்தையும், பண்ணிசையோடும், பக்தியோடும் பாடி ஆடிக் கூற வல்லவர்கள், தேவர்கள் விமானம் கொண்டுவர அதன்மிசை ஏறி, அகன்ற அத்தேவருலகை அடைந்து அரசு புரிந்து, அதன்கண் வீற்றிருப்பர்.

திரு இலம்பையங்கோட்டூர்

திரு இலம்பையங்கோட்டூர்

திரு இலம்பையங்கோட்டூர்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சந்திரசேகரர்.
தேவியார் : கோடேந்துமுலையம்மை.

மலையினார்பருப்பதந் துருத்திமாற்பேறு
மாசிலாச்சீர்மறைக் காடுநெய்த்தானம்
நிலையினானெனதுரை தனதுரையாக
நீறணிந்தேறுகந் தேறியநிமலன்
கலையினார்மடப்பிணை துணையொடுந்துயிலக்
கானலம்பெடைபுல்கிக் கணமயிலாலும்
இலையினார்பைம்பொழி லிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில் கொள்வதியல்பே. **#828**

கயிலாய மலையை இடமாகக் கொண்டுறையும் இறைவன், சீபருப்பதம், துருத்தி, மாற்பேறு, குற்றமற்ற சிறப்புடைய திருமறைக்காடு, நெய்த்தானம் ஆகிய தலங்களில் நிலையாக எழுந்தருளியிருப்பவன். தன் உரைகளை என் உரைகளாக வெளிப்படுத்தி அருள்புரிபவன். திருநீறு அணிந்து ஆனேற்றில் மகிழ்வோடு ஏறி வரும் நிமலன். அத்தகையோன் ஆண்மான்கள் தம் இளைய பெண்மான்களோடு துயில்வதும், சோலைகளில் வாழும் ஆண் மயில்கள் பெடைகளைத் தழுவி அகவுவதுமாய இலைகள் நிறைந்த பசிய பொழில்கள் சூழ்ந்த இலம்பையங்கோட்டூரைத் தனது இருப்பிடமாகக் கொண்டு என் அழகினைக் கவர்ந்து செல்வது முறையோ?

திரு இலம்பையங்கோட்டூர்

திருமலர்க்கொன்றையா னின்றியூர்மேயான்
றேவர்கடலைமகன் றிருக்கழிப்பாலை
நிருமலனெனதுரை தனதுரையாக
நீறணிந்தேறுகந் தேறியநிமலன்
கருமலர்க்கமழ்சுனை நீண்மலர்க்குவளை
கதிர்முலையிளையவர் மதிமுகத்துலவும்
இருமலர்த்தண்பொய்கை யிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. **#829**

அழகிய கொன்றை மலர் மாலையை அணிந்தவன். திருநின்றியூரில்

எழுந்தருளியிருப்பவன். தேவர்கட்குத் தலைவன். திருக்கழிப்பாலையில் குற்றமற்றவனாய் உறைபவன். தன்னுடைய உரைகளை என்னுடைய உரைகளாக வெளிப்படுத்தி அருள் புரிபவன். திருநீறு அணிந்து ஆனேற்றில் மகிழ்வோடு ஏறிவரும் நிமலன். அத்த கையோன் பெரிய தாமரை மலர்களால் மணம் கமழும் சுனைகளில் உள்ள நீண்ட குவளை மலர்கள் இளம் பெண்களின் மதி போன்ற முகத்தில் உலவும் பெரிய கண்களை நிகர்க்கும் இலம்பையங் கோட்டூரைத் தனது இருப்பிடமாகக் கொண்டு என் அழகைக் கவர்ந்து செல்லுதல் முறையோ?

திரு இலம்பையங்கோட்டூர்

பாலனாம்விருத்தனாம் பசுபதிதானாம்
பண்டுவெங்கூற்றுதைத் தடியவர்க்கருளும்
காலனாமெனதுரை தனதுரையாகக்
கனலெரியங்கையி லேந்தியகடவுள்
நீலமாமலர்ச்சுனை வண்டுபண்செய்ய
நீர்மலர்க்குவளைக டாதுவிண்டோங்கும்
ஏலநாறும்பொழி லிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப் பேணியென்னெழில் கொள்வதியல்பே. **#830**

பால வடிவோடும், விருத்த வடிவோடும் வரும் பசுபதி எனப் பெறுபவன். முற்காலத்தில் கொடிய கூற்றுவனை உதைத்து மார்க்கண்டேயருக்கு அருள்புரிந்த காலகாலன். தன்னுடைய உரைகளை என் உரைகளாக வெளிப்படுத்தியவன். கையில் விளங்கும் எரியை ஏந்திய கடவுள். அத்தகைய இறைவன் நீல நிறம் பொருந்திய சிறந்த மலர்கள் பூக்கும் சுனையில் வண்டுகள் பாட நீரில் பூக்கும் குவளை மலர்கள் மகரந்தம் விண்டு மணம் பரப்புவதும், ஏலமணம் கமழும் பொழில்கள் சூழ்ந்ததுமான இலம்பையங்கோட்டூரைத் தனது இருப்பிடமாகக் கொண்டு அவனைத் தரிசிக்க வந்த என் எழிலைக் கொள்வது முறையோ?

திரு இலம்பையங்கோட்டூர்

உளங்கொள் வாருச்சியார் கச்சியேகம்ப
னொற்றியூருறையுமண் ணாமலையண்ணல்
விளம்புவானெனதுரை தனதுரையாக
வெள்ளநீர்விரிசடைத் தாங்கியவிமலன்
குளம்புறக்கலைதுள மலைகளுஞ்சிலம்பக்
கொழுங்கொடியெழுந்தெங்குங் கூவிளங்கொள்ள
இளம்பிறைதவழ்பொழிலிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப் பேணியென் னெழில்கொள்வதியல்பே. **#831**

உள்ளத்தில் தியானிப்பவர்களின் முடிமீது விளங்குபவன் கச்சியேகம்பன். ஒற்றியூர், திருவண்ணாமலை ஆகிய தலங்களில் விளங்கும் தலைவன். என்னுடைய உரைகளாகத் தன்னுரைகளை வெளியிடுபவன். கங்கை வெள்ளத்தைத் தனது விரிந்த சடைமிசைத் தாங்கிய விமலன். அத்தகையோன். கலைமான்கள் குளம்புகள் நிலத்தில் பதியுமாறு கால்களை அழுத்தித் துள்ளவும், மலைகள் அவ்விடங்களில் எழும்பும் ஒலிகளை எதிரொலிக்கவும், வளமையான கொடிகள் வளர்ந்த வில்வ மரங்கள் முழுதும் படியவும் அமைந்துள்ள, இளம்பிறை தவழும் வான் அளவிய பொழில்கள் சூழ்ந்த இலம்பையங்கோட்டூரைத் தனது இருப்பிடமாகக் கொண்டு அவனைத் தரிசிக்க வந்த என் எழிலைக் கவர்ந்து கொள்வது நீதியோ!

திரு இலம்பையங்கோட்டூர்

தேனுமாயமுதமாய்த் தெய்வமுந்தானாய்த்
தீயொடுநீருடன் வாயுவாந்தெரியில்
வானுமாமெனதுரை தனதுரையாக
வரியராவரைக்கசைத் துழிதருமைந்தன்
கானமான்வெருவுறக் கருவிரலூகங்
கடுவனோடுகளுமூர் கற்கடுஞ்சாரல்
ஏனமானுழிதரு மிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. **#832**

தேன், அமுது ஆகியன போல இனிப்பவனாய். தெய்வம் தானேயானவன். தீ, நீர், வாயு, வான், மண் ஆகிய ஐம்பூத வடிவினன். தன் உரைகளை என் உரைகளாக வெளிப்படுத்தியவன். உடலில் வரிகளை உடைய பாம்பைத் தன் இடையிலே கட்டிக் கொண்டு திரிபவன். மான்கள் அஞ்சும்படி கரிய விரல்களை உடைய பெண் கருங்குரங்கு ஆண் குரங்கோடு காட்டில் உகளும் பாறைகளையுடைய கடுமையான மலைச்சாரலில் பன்றிகளும் காட்டுப் பசுக்களும் திரியும் இலம்பையங்கோட்டூரைத் தன் இருப்பிடமாகக் கொண்டு தன்னை வழிபட வந்த என் அழகைக் கவர்ந்து கொள்ளல் முறையோ?

திரு இலம்பையங்கோட்டூர்

மனமுலாமடியவர்க் கருள்புரிகின்ற
வகையலாற்பலிதிரிந் துண்பிலான்மற்றோர்
தனமிலானெனதுரை தனதுரையாகத்
தாழ்சடையிளமதி தாங்கியதலைவன்
புனமெலாமருவிக ளிருவிசேர்முத்தம்
பொன்னொடுமணிகொழித் தீண்டிவந்தெங்கும்

இனமெலாமடைகரை யிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப் பேணியென் னெழில்கொள்வதியல்பே. **#833**
தங்கள் மனங்களில் இறைவனை உலாவச் செய்யும் அடியவர்க்கு அருள்புரிதற் பொருட்டே பலியேற்றுத் திரிபவனேயன்றி உண்ணும்பொருட்டுப் பலி ஏலாதவன். வீடு பேறாகிய செல்வமன்றி வேறு செல்வம் இல்லாதவன். தன்னுடைய உரைகளை என்னுடைய உரைகளாக வெளிப்படுத்தியவன். தாழ்ந்து தொங்கும் சடைமீது இளம் பிறையைத் தாங்கியுள்ள தலைவன். அத்தகையோன் தினைப்புனங்களில் பாய்ந்து வரும் அருவிகள் அரிந்த தினைத்தாள்களில் ஒதுங்கிய முத்து பொன் மணி முதலியவற்றைக் கொழித்துக் கொண்டு வந்து எல்லா இடங்களிலும் சேர்க்கும் கரைகளோடு கூடிய வயல்களை உடைய இலம்பையங்கோட்டூரைத் தனது இருப்பிடமாகக் கொண்டு என் எழிலைக் கொள்வது முறையோ?

<u>திரு இலம்பையங்கோட்டூர்</u>

நீருளான்றீயுளா னந்தரத்துள்ளா
னினைப்பவர்மனத்துளா னித்தமாவேத்தும்
ஊருளானெனதுரை தனதுரையாக
வொற்றைவெள்ளேறுகந் தேறியவொருவன்
பாருளார்பாடலோ டாடலறாத
பண்முரன்றஞ்சிறை வண்டினம்பாடும்
ஏருளார்பைம்பொழி லிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. **#834**
நீர், தீ, ஆகாயம் ஆகியவற்றுள் இருப்பவன். நினைப்பவர் மனத்தில் உறைபவன். நாள்தோறும் அடியவர்கள் வந்து வணங்கும் ஊர்களை இடமாகக் கொண்டவன். தன்னுடைய உரைகளை என்னுடையனவாக வெளிப்படுத்தியவன். தனித்த ஒரு வெள்ளேற்றை உகந்து ஏறி வருபவன். அத்தகையோன், மண்ணக மக்களின் பாடல் ஆடல்கள் இடையறாது நிகழ்வதும், அழகிய சிறகுகளை உடைய வண்டுகள் பண்ணிசை போல ஒலி செய்து பாடும் அழகிய பொழில்கள் சூழ்ந்ததுமான இலம்பையங்கோட்டூரைத் தனது இருப்பிடமாகக் கொண்டு என் எழிலைக் கவர்தல் முறையாகுமோ?

<u>திரு இலம்பையங்கோட்டூர்</u>

வேருலாமாழ்கடல் வருதிரையிலங்கை
வேந்தனதடக்கைக ளடர்த்தவனுலகில்
ஆருலாமெனதுரை தனதுரையாக
வாகமோரரவணிந் துழிதருமண்ணல்

வாருலாநல்லன மாக்களுஞ்சார
வாரணமுழிதரு மல்லலங்கானல்
ஏருலாம்பொழிலணி யிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. **#835**

நிலத்தின் வேர் வரை உலாவுகின்ற ஆழ்ந்த கடலின் அலைகள் தவழ்கின்ற இலங்கை வேந்தனாகிய இராவணனின் நீண்ட கைகள் இருபதையும் நெரித்தவன். உலகின்கண் நிறைந்து விளங்கும் தன்னுடைய உரைகளை என் உரைகளாக வெளிப்படுத்தியவன். தன்னுடைய மார்பில் பெரியதொரு பாம்பினை அணிந்து திரியும் தலைவன். அத்தகையோன், கழுத்தில் வார் கட்டப்பட்ட நல்ல வளர்ப்பு விலங்குகளும், யானைகளும் திரியும் வளமான காடுகளும் அழகிய பொழில்களும் சூழ்ந்த இலம்பையங்கோட்டூரைத் தனது இருப்பிடமாகக்கொண்டு என் எழிலைக் கவர்தல் முறையோ?

<u>திரு இலம்பையங்கோட்டூர்</u>

கிளர்மழைதாங்கினா னான்முகமுடையோன்
கீழடிமேன்முடி தேர்ந்தளக்கில்லா
உளமழையெனதுரை தனதுரையாக
வொள்ளழலங்கையி லேந்தியவொருவன்
வளமழையெனக்கழை வளர்துளிசோர
மாசுணமுழிதரு மணியணிமாலை
இளமழைதவழ்பொழி லிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. **#836**

ஆயர்பாடியை அழித்தற்கெனக் கிளர்ந்தெழுந்த மழையைக் கோவர்த்தனம் என்னும் மலையால் தடுத்த திருமாலும், நான்முகனும், கீழே அகழ்ந்து சென்று அடியையும், மேலே பறந்து சென்று முடியையும் அளந்தறியமுடியாதவாறு அழலுருவாய் ஓங்கி நின்றவன். மனத்தால் அழைத்தற்குரியனவாய் அமைந்த தன்னுடைய உரைகளை என்னுடையவாக வெளிப்படுத்தியவன். அழகிய கையில் ஒளி பொருந்திய அழலை ஏந்திய ஒப்பற்ற தலைவன். அத்தகையோன், வளமான மழை போல, மூங்கிலில் தேங்கிய பனி நீர், காற்றால் பொழிவதும், மலைப் பாம்புகள் ஊர்வதும், அழகிய மணிகள் மாலை போல நிறைந்து தோன்றுவதும், மேகக் கூட்டங்கள் தவழும் பொழில் சூழ்ந்ததுமான இலம்பையங்கோட்டூரைத் தனது இருப்பிடமாகக் கொண்டு என் எழிலைக் கவர்ந்தான். இது முறையோ?

<u>திரு இலம்பையங்கோட்டூர்</u>

உரிஞ்சனகூறைக ளுடம்பினராகி

யுழிதருசமணருஞ் சாக்கியப்பேய்கள்
பெருஞ்செல்வனெனதுரை தனதுரையாகப்
பெய்பலிக்கென்றுழல் பெரியவர்பெருமான்
கருஞ்சினைமுல்லைநன் பொன்னடைவேங்கை
களிமுகவண்டொடு தேனினமுரலும்
இருஞ்சுனைமல்கிய விலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. **#837**

ஆடைகளை உரிந்துவிட்டாற் போன்ற அம்மண உடம்பினராய்த் திரியும் சமணர்களும், சாக்கியர்களாகிய பேய்களும் அறிய இயலாத பெரிய வைப்பு நிதியாய் விளங்குவோன். தன்னுடைய உரைகளை என் உரைகளாக வெளிப்படுத்தியவன். ஊரார் இடும் பலியை ஏற்பதற்கெனப் பிட்சாடனனாய்த் திரிபவன். பெரியோர்களுக்கெல்லாம் தலைவன். அத்தகையோன், பெரிதான அரும்புகளை உடைய முல்லையும், பொன் போன்று மலரும் வேங்கையும், மகிழ்ச்சி நிறைந்த முகத்தோடு வண்டுகளும், தேனீக்களும் முரலும் பெரிய சுனைகளும், நிறைந்து காணப்படும் இலம்பையங்கோட்டூரைத் தனது இருப்பிடமாகக் கொண்டு, என் எழிலைக் கவர்தல் முறையோ?

<u>திரு இலம்பையங்கோட்டூர்</u>

கந்தனைமலிகனை கடலொலியோதங்
கானலங்கழிவளர் கழுமலமென்னும்
நந்தியாருறைபதி நான்மறைநாவ
னற்றமிழ்க்கின்றுணை ஞானசம்பந்தன்
எந்தையார்வளநக ரிலம்பையங்கோட்டூ
ரிசையொடுகூடிய பத்தும்வல்லார்போய்
வெந்துயர்கெடுகிட விண்ணவரோடும்
வீடுபெற்றிம்மையின் வீடௌதாமே. **#838**

மணம் நிரம்பியதும், கடல் ஒலியோடு அதன் வெள்ளம் பெருகிக் கடற்கரைச் சோலைகள் உப்பங்கழிகள் ஆகியன நிரம்புவதும் ஆகிய கழுமலம் என்னும் சிவன் உறை பதியாகிய சீகாழியில் தோன்றிய நான்மறை ஓதும் நாவினனும் நற்றமிழ்க்கு இனிய துணையாயிருப்பவனுமாகிய ஞானசம்பந்தன் எந்தையார் உறையும் வளநகராகிய இலம்பையங்கோட்டூரில் வீற்றிருந்தருளும் இறைவன் மீது பாடிய இசையொடும் கூடிய பத்துப் பாடல்களையும் ஓத வல்லவர்கள் தம் கொடிய துயர்கள் ஓடிக்கெட விண்ணவரோடும் வீற்றிருந்து பின் விண்ணிலிருந்து விடுபட்டு வீடு பேற்றையும் இப்பிறப்பு ஒன்றாலேயே எளிதாகப் பெறுவார்கள்.

திருஅச்சிறுபாக்கம்

திருஅச்சிறுபாக்கம்

திருஅச்சிறுபாக்கம்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பாக்கபுரேசர்.
தேவியார் : சுந்தரமாதம்மை.

பொன்றிரண்டன்ன புரிசடைபுரளப்
பொருகடற்பவளமொ டழனிறம்புரையக்
குன்றிரண்டன்ன தோளுடையகலங்
குலாயவெண்ணூலொடு கொழும்பொடியணிவர்
மின்றிரண்டன்ன நுண்ணிடையரிவை
மெல்லியலாளையோர் பாகமாப்பேணி
அன்றிரண்டுருவ மாயவெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. **#839**

அச்சிறுபாக்கத்தைத் தான் ஆட்சிபுரியும் இடமாகக் கொண்டுள்ள இறைவர், தமது, முறுக்கேறிய பொன் திரண்டாற் போன்ற சடை, அலைகள் பெருங்கடலில் தோன்றும் பவளக் கொடியையும், தீ வண்ணத்தையும் ஒத்துப் புரள, குன்றுகள் போன்ற இரண்டு தோள்களோடு கூடிய மார்பகத்தில் விளங்கும் வெண்மையான முப்புரி நூலோடு வளமையான திருநீற்றையும் அணிந்து, மின்னல் போன்ற நுண்ணிய இடையினையுடைய மென்மைத் தன்மை வாய்ந்த அரிவையாகிய பார்வதி தேவியை ஒரு பாகமாக விரும்பி ஏற்று, ஓருருவில் ஈருருவாய்த் தோன்றும் அடிகளாவார்.

திருஅச்சிறுபாக்கம்

தேனினுமினியர் பாலனநீற்றர்
தீங்கரும்பனையர்தந் திருவடிதொழுவார்
ஊனயந்துருக வுவகைகடருவா
ருச்சிமேலுறைபவ ரொன்றலாதூரார்
வானகமிறந்து வையகம்வணங்க
வயங்கொளநிற்பதோர் வடிவினையுடையார்
ஆனையினுரிவை போர்த்தவெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. **#840**

அச்சிறுபாக்கத்தை, தான் ஆட்சிபுரியும் இடமாகக் கொண்டுள்ள இறைவர், தேனினும் இனியவர். பால் போன்ற நீறணிந்தவர். இனிய

கரும்பு போன்றவர். தம் திருவடிகளை மெய்யுருகி வணங்கும் அன்பர்கட்கு உவகைகள் தருபவர். அவர்களின் தலைமேல் விளங்குபவர். இடபவாகனமாகிய ஓர் ஊர்தியிலேயே வருபவர். வானுலகைக் கடந்து மண்ணுலகை அடைந்து அங்குத் தம்மை வழிபடும் அன்பர்கள் நினைக்கும் செயலை வெற்றி பெறச் செய்து நிற்கும் வடிவினை உடையவர். யானையின் தோலைப் போர்த்தியவர். அவர் எம் தலைவராவர்.

திருஅச்சிறுபாக்கம்

காரிருளுருவ மால்வரைபுரையக்
களிற்றினதுருவுகொண் டரிவைமேலோடி
நீருருமகளை நிமிர்சடைத்தாங்கி
நீறணிந்தேறுகந் தேறியநிமலர்
பேரருளாளர் பிறவியிற்சேரார்
பிணியிலர்கேடிலர் பேய்க்கணஞ்சூழ
ஆரிருண்மாலை யாடுமெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. **#841**

அச்சிறுபாக்கத்தைத் தாம் ஆட்சிபுரியும் இடமாகக் கொண்டுள்ள இறைவர், உமையம்மை பெண் யானை வடிவு கொள்ளத் தாம் காரிருளும், பெரிய மலையும் போன்ற களிற்றுயானை வடிவம் தாங்கிச் சென்று அவளோடு கூடியவர். நீர்வடிவமான கங்கையை மேல்நோக்கிய சடைமிசைத் தாங்கியவர். நீறுபூசி விடையேற்றில் மகிழ்ந்து ஏறிவரும் புனிதர். பேரருளாளர். பிறப்பிறப்பிற் சேராதவர். பிணி, கேடு இல்லாதவர். பேய்க்கணங்கள் சூழச் சுடுகாட்டில் முன்மாலை யாமத்தில் நடனம் புரியும் எம் அடிகளாவார்.

திருஅச்சிறுபாக்கம்

மைம்மலர்க்கோதை மார்பினரெனவு
மலைமகளவளொடு மருவினரெனவும்
செம்மலர்ப்பிறையுஞ் சிறைபணிபுனலுஞ்
சென்னிமேலுடையரெஞ்சென்னிமேலுறைவார்
தம்மலரடியொன் றடியவர்பரவத்
தமிழ்ச்சொலும்வடசொலுந் தாணிழற்சேர
அம்மலர்க்கொன்றை யணிந்தவெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. **#842**

அச்சிறுபாக்கத்தில் ஆட்சி கொண்டுள்ள இறைவர் குவளை மலர்களால் இயன்ற மாலையைச் சூடிய மார்பினர் எனவும், மலைமகளாகிய பார்வதி தேவியை இடப்பாகமாகக் கொண்டுள்ளவர் எனவும், சிவந்த மலர்

போலும் பிறையையும், தேங்கியுள்ள கங்கை நீரையும் தம் சடைமுடி மீது உடையவர் எனவும், எம் சென்னி மேல் உறைபவர் எனவும், தம் மலர் போன்ற திருவடிகளை மனத்தால் ஒன்றி நின்று அடியவர்கள் பரவவும் தமிழ்ச்சொல், வடசொற்களால் இயன்ற தோத்திரங்கள் அவர்தம் திருவடிகளைச் சாரவும் அழகிய கொன்றை மலர் மாலையை அணிந்தவராய் விளங்கும் அடிகள் ஆவார்.

திருஅச்சிறுபாக்கம்

விண்ணுலாமதியஞ் சூடினரெனவும்
விரிசடையுள்ளது வெள்ளநீரெனவும்
பண்ணுலாமறைகள் பாடினரெனவும்
பலபுகழல்லது பழியிலரெனவும்
எண்ணலாகாத விமையவர்நாளு
மேத்தரவங்களோ டெழில்பெறநின்ற
அண்ணலானூர்தி யேறுமெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. **#843**

அச்சிறுபாக்கத்தில் ஆட்சி கொண்டுள்ள இறைவர் வானிலே உலாவும் திங்களைச் சூடியவர் எனவும், அவர்தம் விரிந்த சடைமுடியில் கங்கை நீர் வெள்ளம் தங்கி உள்ளது எனவும், இசை அமைதியோடு கூடிய நான்கு வேதங்களைப் பாடியவர் எனவும், பலவகையான புகழையே உடையவர் எனவும், பழியே இல்லாதவர் எனவும் எண்ணற்ற தேவர்கள் நாள்தோறும் தம்மை ஏத்த அரவாபரணங்களோடு, மிக்க அழகும் தலைமையும் உடையவராய் ஆனேறு ஏறிவரும் எம் அடிகள் ஆவார்.

திருஅச்சிறுபாக்கம்

நீடிருஞ்சடைமே லிளம்பிறைதுலங்க
நிழறிகழ்மழுவொடு நீறுமெய்பூசித்
தோடொருகாதினிற் பெய்துவெய்தாய
சுடலையிலாடுவர் தோலுடையாகக்
காடரங்காகக் கங்குலும்பகலுங்
கழுதொடுபாரிடங் கைதொழுதேத்த
ஆடரவாட வாடுமெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. **#844**

அச்சிறுபாக்கத்தில் ஆட்சி கொண்டுள்ள இறைவர் தமது நீண்ட பெரிய சடைமேல் இளம்பிறை விளங்க, ஒளிபொருந்திய மழுவோடு, திருநீற்றை மேனிமேல் பூசி, ஒரு காதில் தோடணிந்து கொடிய சுடலைக்காட்டில் ஆடுபவர். புலித்தோலை உடையாக அணிந்து இரவும், பகலும் பேய்க்கணங்களும், பூதகணங்களும் கைகளால் தொழுதேத்தப்

படமெடுத்தாடும் பாம்புகள் தம் மேனிமேல் பொருந்தி ஆடச்
சுடுகாட்டைத் தமது அரங்கமாகக் கொண்டு ஆடும் எம் அடிகள் ஆவார்.

திருஅச்சிறுபாக்கம்

ஏறுமொன்றேறி நீறுமெய்பூசி
யிளங்கிளையரிவையொ டொருங்குடனாகிக்
கூறுமொன்றருளிக் கொன்றையந்தாருங்
குளிரிளமதியமுங் கூவிளமலரும்
நாறுமல்லிகையு மெருக்கொடுமுருக்கு
மகிழிளவன்னியு மிவைநலம்பகர
ஆறுமோர்சடைமே லணிந்தவெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. **#845**

அச்சிறுபாக்கத்தில் ஆட்சிகொண்டுள்ள இறைவர், ஆனேறு ஒன்றில் ஏறித்தம் திருமேனிமேல் நீறுபூசி இளைய கிளி போன்ற அழகிய பார்வதி தேவியாருக்குத் தம் உடலில் ஒரு கூறு அருளி இருவரும் ஒருவராய் இணைந்து திருமுடிமேல் கொன்றை மாலை, குளிர்ந்த இளமதி, வில்வம், பிற நறுமலர்கள் மணங்கமழும் மல்லிகை, எருக்கு, முருக்கு, மகிழ், இளவன்னி இலை ஆகிய இவை மணம் பரப்ப, கங்கையாற்றைச் சடைமேல் அணிந்துள்ள எம் அடிகள் ஆவார்.

திருஅச்சிறுபாக்கம்

கச்சுமொள்வாளுங் கட்டியவுடையர்
கதிர்முடிசுடர்விடக் கவரியுங்குடையும்
பிச்சமும்பிறவும் பெண்ணணங்காய
பிறைநுதலவர்தமைப் பெரியவர்பேணப்
பச்சமும்வலியுங் கருதியவரக்கன்
பருவரையெடுத்ததிண் டோள்களையடர்வித்
தச்சமுமருளுங் கொடுத்தவெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. **#846**

அச்சிறுபாக்கத்தில் ஆட்சி கொண்டுள்ள இறைவர் ஒளி பொருந்திய வாளைக் கச்சிலே பொருத்தி இடையில் ஆடையாகக் கட்டியுள்ளவர். ஒளி பொருந்திய முடி சுடர்விடக்கவரி, குடை, பீலிக்குஞ்சம் முதலியவற்றோடு பெண்களைக் கவரும் பிறை மதியை முடியிற் சூடி விளங்குபவர். பெருமை உடைய அடியவர் தம்மை விரும்பி வழிபடுமாறு, தம் அன்பு வலிமை ஆகியவற்றைக் கருதித் தன்னைப் பெரியவனாக எண்ணிப் பெரிய கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த இராவணனின் தோள்களை அடர்த்து அவனுக்குத் தம்பால் அன்பையும் அருளையும் கொடுத்த எம் அடிகள் ஆவார்.

திருஅச்சிறுபாக்கம்

நோற்றலாரேனும் வேட்டலாரேனு
நுகர்புகர்சாந்தமொ டேந்தியமாலைக்
கூற்றலாரேனு மின்னவாறென்று
மெய்தலாகாததொ ரியல்பினையுடையார்
தோற்றலார்மாலு நான்முகமுடைய
தோன்றலுமடியொடு முடியுறத்தங்கள்
ஆற்றலாற்காணா ராயவெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. **#847**

அச்சிறுபாக்கத்தில் ஆட்சிகொண்டுள்ள இறைவர் தவம் செய்யாராயினும், அன்பு செய்யாராயினும் நுகரத்தக்க உணவு, சந்தனம், கையில் ஏந்திய மாலை இவற்றின் கூறுகளோடு வழிபாடு செய்யாராயினும் இத்தகையவர் என்று அறிய முடியாத தன்மையும் அடைய முடியாத அருமையும் உடைய இயல்பினராய் மாலும் நான்முகனும் பன்றியும் அன்னமுமாய்த் தோன்றி அடியையும் முடியையும் தங்கள் ஆற்றலால் காண இயலாதவாறு உயர்ந்து நின்ற எம்அடிகள் ஆவார். எனவே நோற்பவருக்கும் அன்பு செய்பவருக்கும் வழிபடுவோருக்கும் அவர் எளியர் என்பது கருத்து.

திருஅச்சிறுபாக்கம்

வாதுசெய்சமணுஞ் சாக்கியப்பேய்க
ணல்வினைநீக்கிய வல்வினையாளர்
ஓதியுங்கேட்டு முணர்வினையிலாதா
ருள்கலாகாததோ ரியல்பினையுடையார்
வேதமும்வேத நெறிகளுமாகி
விமலவேடத்தொடு கமலமாமதிபோல்
ஆதியுமீறு மாயவெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. **#848**

அச்சிறுபாக்கத்தில் ஆட்சி கொண்டுள்ள எம் அடிகள் நல்வினைகளைச் செய்யாது வல்வினைகள் புரிபவரும் ஓதியும் கேட்டும் திருந்தாத உணர்வோடு தர்க்கவாதம் புரிபவருமாகிய சமணர்களும் சாக்கியப் பேய்களும் நினைத்தும் அறிய முடியாத இயல்பினை உடையவர். வேதமும் வேத நெறிகளும் ஆகியவர். தம்மை வழிபடுவார் மலங்களை நீக்கும் வேடம் உடையவர். தாமரை மலரும் திங்களும் போன்ற அழகும், தண்மையும் உடையவர். உலகின் முதலும் முடிவும் ஆனவர்.

திருஅச்சிறுபாக்கம்

மைச்செறிகுவளை தவளைவாய்நிறைய
மதுமலர்ப்பொய்கையிற் புதுமலர்கிழியப்
பச்சிறவெறிவயல் வெறிகமழ்காழிப்
பதியவரதிபதி கவுணியர்பெருமான்
கைச்சிறுமறியவன் கழலலாற்பேணாக்
கருத்துடைஞானசம் பந்தனதமிழ்கொண்
டச்சிறுபாக்கத் தடிகளையேத்து
மன்புடையடியவ ரருவினையிலரே. #849

பொருந்திய குவளை மலர்கள் தவளைகளின் வாய் நிறையுமாறு தேனைப் பொழியும் மலர்கள் நிறைந்த பொய்கைகளும், புதுமலர்களின் இதழ்கள் கிழியுமாறு பசிய இறால் மீன்கள் துள்ளி விழும் பொய்கைகளை அடுத்துள்ள வயல்களும் மணம் கமழும் சீகாழிப் பதியினர்க்கு அதிபதியாய் விளங்கும் கவுணியர் குலத் தலைவனும், கையின்கண் சிறிய மானை ஏந்திய சிவன் திருவடிகளையன்றிப் பிறவற்றைக் கருதாத கருத்தினை உடையவனும் ஆகிய ஞானசம்பந்தன் பாடிய இப்பதிகத்தைக் கொண்டு அச்சிறுபாக்கத்து அடிகளை ஏத்தும் அன்புடை அடியவர் நீக்குதற்கரிய வினைகள் இலராவர்.

திருஇடைச்சுரம்

திருஇடைச்சுரம்

திருஇடைச்சுரம்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : இடைச்சுரநாதர்.
தேவியார் : இமயமடக்கொடியம்மை.

வரிவளரவிரொளி யரவரைதாழ
வார்சடைமுடிமிசை வளர்மதிசூடிக்
கரிவளர்தருகழல் கால்வலனேந்திக்
கனலெரியாடுவர் காடரங்காக
விரிவளர்தருபொழி லிளமயிலால
வெண்ணிறத்தருவிக டிண்ணெனவீழும்
எரிவளரினமணி புனமணிசார
லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. **#850**

மரங்கள் வளர்ந்த விரிந்த பொழில்களில் இளமயில்கள் ஆடுவதும், வெண்மையான நிறத்துடன் அருவிகள் திண்ணென்ற ஒலிக் குறிப்போடு வீழ்வதும், எரி போன்று ஒளிரும் ஓரினமான மணிகள் காடுகளில் அழகுற விளங்குவதுமாய மலைச் சாரலை உடைய திருஇடைச்சுரத்தில், வரிகளையும் ஒளியையும் உடைய பாம்பை இடையிலே கட்டி, நீண்ட சடைமுடிமீது வளரும் பிறை மதியைச் சூடி யானை உருவம் பொறித்த வீரக் கழலைக்காலின்கண் வெற்றி பெறச் சூடிச் சுடுகாட்டைத் தமது அரங்காகக் கொண்டு ஆடும் இவ்விறைவரது இயல்பு யாதோ?

திருஇடைச்சுரம்

ஆற்றையுமேற்றதோ ரவிர்சடையுடைய
ரழகினையருளுவர் குழகலதறியார்
கூற்றுயிர்செகுப்பதோர் கொடுமையையுடையர்
நடுவிருளாடுவர் கொன்றையந்தாரார்
சேற்றயன்மிளிர்வன கயலிளவாளை
செருச்செயவோர்ப்பன செம்முகமந்தி
ஏற்றையொடுழிதரு மெழிறிகழ்சார
லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. **#851**

வயல்களில் உள்ள சேற்றில் விளங்கும் கயல் மீன்களும் வாளை மீன்களும் தம்மோடு சண்டையிடுவதைக் கூர்ந்து நோக்கும் சிவந்த முகத்தையுடைய பெண் குரங்கோடு ஆண் குரங்கு கூடித் திரியும் அழகிய

மலைச் சாரலை உடைய திருஇடைச்சுரத்தில், கங்கை நதியையும் ஏற்றருளிய விரிந்த சடையை உடையவராய், அழகும் இளமையும் உடையவராய், கூற்றுவன் உயிரை மாய்க்கும் பெருவிரல் உடையவராய், நள்ளிருளில் திருநடம்புரிபவராய், கொன்றை மலர் மாலை சூடியவராய் விளங்கும் இவ்விறைவர்தம் இயல்பு யாதோ?

திருஇடைச்சுரம்

கானமுஞ்சுடலையுங் கற்படுநிலனுங்
காதலர்தீதிலர் கனன்மழுவாளர்
வானமுநிலமையு மிருமையுமானர்
வணங்கவுமிணங்கவும் வாழ்த்தவும்படுவார்
நானமும்புகையொளி விரையொடுகமழ
நளிர்பொழிலிளமஞ்ஞை மன்னியபாங்கர்
ஏனமும்பிணையலு மெழிறிகழ்சார
லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. **#852**

தூவி எரிக்கும் புழுகு, சந்தனம், அகில் முதலியவற்றின் புகையும் அவை எரிதலால் விளங்கும் ஒளியும் மணம் வீசச் செறிந்த பொழில்களிடையே இளமயில்கள் நிறைந்துள்ளதும், அருகில் பன்றிகளும் மானினங்களும் வாழ்வதுமான அழகிய மலைச் சாரலை அடுத்துள்ள திருஇடைச்சுரத்தில் காட்டையும், சுடலையையும், கற்கள் நிரம்பிய மலையிடங்களையும் விரும்புபவரும், தீமையில்லாதவரும், அழல் போன்ற வெம்மையான மழுவாயுதத்தை ஏந்தியவரும், தீமையில்லாதவரும், மறுமை இம்மை ஆகிய இருமை இன்பங்களையும் தருபவரும் வணங்குதற்கும் பழகுதற்கும் வாழ்த்துதற்கும் உரிமையானவருமாகிய இவ்விறைவரின் இயல்பு யாதோ?

திருஇடைச்சுரம்

கடமணிமார்பினர் கடறனிலுறைவார்
காதலர்தீதிலர் கனன்மழுவாளர்
விடமணிமிடறினர் மிளிர்வதோரரவர்
வேறுமோர்சரிதையர் வேடமுமுடையர்
வடமுலையயலன கருங்குருந்தேறி
வாழையின்றீங்கனி வார்ந்துதேனட்டும்
இடைமுலையரிவைய ரெழிறிகழ்சார
லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. **#853**

அசையும் ஆலமரத்தினருகே விளங்கும் கரிய குருந்த மரங்களில் ஏறி வாழைக் கனிகளின்மீது ஒழுகுமாறு தேன் அடைகளை எடுத்துப் பிழியும், இடங்கொண்டு வளர்ந்த முலைகளை உடைய பெண்கள்

வாழும் அழகிய மலைச்சாரலை உடைய திருஇடைச்சுரத்தில், மலைச்சாரல்களில் விளைந்த மணிகளை அணிந்த மார்பினரும் கடலில் உறைபவரும், அன்புடையவரும் தீமையில்லாதவரும், கனலும் மழுவை ஏந்தியவரும் விடத்தை அடக்கிய மணிமிடற்றினரும், பாம்பை அணிகலனாகப் பூண்டவரும் வேறு வேறான ஒழுக்க நெறிகளை உடையவரும் பல்வேறு தோற்றங்களையுடைய வருமாய் எழுந்தருளிய இவ்விறைவரின் இயல்பு யாதோ?

<u>திருஇடைச்சுரம்</u>

கார்கொண்டகடிகமழ் விரிமலர்க்கொன்றைக்
கண்ணியர்வளர்மதி கதிர்விடக்கங்கை
நீர்கொண்டசடையினர் விடையுயர்கொடியர்
நிழறிகழ்மழுவின ரழறிகழ்நிறத்தர்
சீர்கொண்டமென்சிறை வண்டுபண்செய்யும்
செழும்புனலனையன செங்குலைவாழை
ஏர்கொண்டபலவினொ டெழிறிகழ்சார
லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. **#854**

கார்காலத்தே உண்டான மணம் கமழும் விரிந்த கொன்றை மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்தவரும், வளரும் பிறைமதி ஒளிவிடக் கங்கை நீரை ஏற்ற சடையினரும், விடை எழுதிய உயர்ந்த கொடியை உடையவரும், ஒளி விளங்கும் மழுப்படையை ஏந்தியவரும், அழல்போலும் சிவந்த நிறத்தினரும் ஆய், சிறப்புமிக்க மெல்லிய இறகுகளை உடைய வண்டுகள் இசை பாடுவதும் வளவிய புனல் போலும் தண்ணிய செவ்வாழைக் குலைகள் அழகுமிக்க பலாக்கனிகளோடு விளங்கி அழகு செய்வதும் ஆகிய சாரலை உடைய இடைச்சுரத்தில் எழுந்தருளியிருக்கும் இவரது தன்மை யாதோ?

<u>திருஇடைச்சுரம்</u>

தோடணிகுழையினர் சுண்ணவெண்ணீற்றர்
சுடலையினாடுவர் தோலுடையாகப்
பீடுயர்செய்ததோர் பெருமையையுடையர்
பேயுடனாடுவர் பெரியவர்பெருமான்
கோடல்களொழுகுவ முழுகுவதும்பி
குரவமுமரவமு மன்னியபாங்கர்
ஏடவிழ்புதுமலர் கடிகமழ்சார
லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. **#855**

தோடணிந்த காதினராய்த் திருவெண்ணீறாகிய சுண்ணப் பொடி பூசியவரும், தோலை உடுத்திச் சுடுகாட்டில் நடனம் ஆடுபவரும், பீடு

என்னும் சொல் பெருமை உறுமாறு மிக்க பெருமையை உடையவரும் பேய்க் கணங்களோடு ஆடுபவரும், பெரியவர் எனப் போற்றத் தக்கவர்கட்குத் தலைவருமாய்ச் செங்காந்தட் பூக்கள் தேனைச் சொரிய அவற்றின்கண் முழுகும் வண்டுகளை உடையதும் குரவம் கடம்ப மரம் ஆகியன நிறைந்துள்ள சோலைகளில் பூத்த புதுமலர்களின் மணம் வீசப் பெறுவதுமாகிய சாரலை உடைய இடைச்சுரத்தில் எழுந்தருளியுள்ள சிவபிரானது இயல்பு யாதோ?

திருஇடைச்சுரம்

கழன்மல்குகாலினர் வேலினர்நூலர்
கவர்தலையரவொடு கண்டியும்பூண்பர்
அழன்மல்குமெரியொடு மணிமழுவேந்தி
யாடுவர்பாடுவ ராரணங்குடையர்
பொழின்மல்குநீடிய மரவமுமரவ
மன்னியகவட்டிடைப் புணர்குயிலாலும்
எழின்மல்குசோலையில் வண்டிசைபாடு
மிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. **#856**

வீரக்கழல் அணிந்த திருவடியினரும், கையில் வேலை ஏந்தியவரும், முப்புரிநூல் அணிந்தவரும் ஐந்தாகக் கிளைத்த தலைகளை உடைய பாம்போடு உருத்திராக்க மாலை அணிந்துள்ளவரும், சுவாலைவிட்ட எரியோடு அழகிய மழுவை ஏந்தி ஆடுபவரும், பாடுபவரும், பிறரை வருத்தும் அழகுடையவருமாய்ப் பொழில்களில் நிறைந்து உயர்ந்துள்ள மராமரங்களில் பொருந்திய கிளைகளில் ஆண்பெண் குயில்கள் இணைந்து பாடுவதும் அழகிய சோலைகளில் வண்டுகள் இசை பாடுவதும் ஆகிய சாரலை உடைய இடைச்சுரத்தில் விளங்கும் சிவபிரானது இயல்பு யாதோ?

திருஇடைச்சுரம்

தேங்கமழ்கொன்றையந் திருமலர்புனைவார்
திகழ்தருசடைமிசைத் திங்களுஞ்சூடி
வீந்தவர்சுடலைவெண் ணீறுமெய்பூசி
வேறுமோர்சரிதையர் வேடமுமுடையர்
சாந்தமுமகிலொடு முகில்பொதிந்தலம்பித்
தவழ்கனமணியொடு மிகுபளிங்கிடறி
ஏந்துவெள்ளருவிக ளெழிறிகழ்சார
லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. **#857**

தேன் மணம் கமழும் அழகிய கொன்றை மலர் மாலையைச் சூடுபவரும், விளங்கும் சடைமுடியில் பிறை மதியைச் சூடி இறந்தவர்களை எரிக்கும்

சுடுகாட்டுச் சாம்பலைத் தம் திருமேனி மீது பூசி, வேறுபடும் புராண வரலாறுகளை உடையவரும் அவ்வாறே வேறுபடும் பல வேடங்களுடன் காட்சி தருபவருமாய், சந்தனம் அகில் ஆகியவற்றின் மணம் பொதிந்து இடித்துப் பொழியும் மழையாள் உருண்டுவரும் பெரிய மணிகளையும் பளிங்குகளையும் அடித்து வருவனவாகிய உயர்ந்த வெண்மையான அருவிகள் விளங்கும் மலைச் சாரலை உடைய இடைச்சுரத்தில் விளங்கும் பெருமானது இயல்பு யாதோ?

திருஇடைச்சுரம்

பலவிலமிடுபலி கையிலொன்றேற்பர்
பலபுகழல்லது பழியிலர்தாமும்
தலையிலங்கவிரொளி நெடுமுடியரக்கன்
றடக்கைகளடர்த்ததோர் தன்மையையுடையர்
மலையிலங்கருவிகண் மணமுழவதிர
மழைதவழிளமஞ்ஞை மல்கியசாரல்
இலையிலவங்கமு மேலமுங்கமழு
மிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. **#858**

பலர் இல்லங்களுக்கும் சென்று மகளிர் இடும் உணவைக் கைகளில் ஏற்பவரும், பலவாய் விரிந்த புகழ் அல்லது பழி எதுவும் இல்லாதவரும், விட்டு விளங்கும் ஒளியை உடைய நீண்ட மகுடங்களைத் தரித்த பத்துத் தலைகளையுடைய இராவணனின் நீண்ட கைகளை நெரித்த வலிமையை உடையவருமாய், மலையில் விளங்கும் அருவிகள் மணமுழாப் போல் ஒலியோடு இழிவதும், இளமயில்கள் நிறைந்ததும், மேகங்கள் தவழும் சாரலை உடையதும், இலைகளை உடைய இலவங்கம் ஏலம் கமழ்வதுமான திருஇடைச்சுரத்தில் எழுந்தருளிய இப்பெருமானது இயல்பு யாதோ?

திருஇடைச்சுரம்

பெருமைகடருக்கியோர் பேதுறுகின்ற
பெருங்கடல்வண்ணனும் பிரமனுமோரா
அருமையரடிநிழல் பரவிநின்றேத்து
மன்புடையடியவர்க் கணியருமாவர்
கருமைகொள்வடிவொடு சுனைவளர்குவளைக்
கயலினம்வயலிள வாளைகளிரிய
எருமைகள்படிதர விளவனமாலு
மிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. **#859**

பெருமைகளால் செருக்குற்றுப் பேதைமை உறுகின்ற கடல் நிற வண்ணனாகிய திருமாலும் பிரமனும் அறிய முடியாத அருமையை

உடையவரும், தம் திருவடி நிழலை நின்று பரவிப் போற்றும் அன்புடைய அடியவர்கட்கு அணிமையானவருமாய், சுனைகளில் கரிய நிறவடிவோடு பூத்து வளர்ந்த குவளை மலர்களையும் கயலினங்களையும் உடையதும் வயல்களில் வாளைமீன்களும் கயல் மீன்களும் அஞ்சித் துள்ளுமாறு எருமைகள் படிய அதனைக் கண்டு இளைய அன்னங்கள் ஆரவாரிப்பதுமாகிய திருஇடைச்சுரத்தில் எழுந்தருளிய சிவபிரானாராகிய இவர்தம் இயல்பு யாதோ?

திருஇடைச்சுரம்

மடைச்சுரமறிவன வாளையுங்கயலு
மருவியவயறனில் வருபுனற்காழிச்
சடைச்சுரத்துறைவதோர் பிறையுடையண்ணல்
சரிதைகள்பரவிநின் றுருகுசம்பந்தன்
புடைச்சுரத்தருவரைப் பூக்கமழ்சாரற்
புணர்மடநடையவர் புடையிடையார்ந்த
இடைச்சுரமேத்திய விசையொடுபாட
லிவைசொலவல்லவர் பிணியிலர்தாமே. **#860**

நீர் மடைகளில் துள்ளுவனவாகிய வாளை மீன்களும் கயல் மீன்களும் வயல்களிடத்து வரும் நீர் வளம் மிக்க காழி நகரில், சடைக்காட்டில் உறையும் பிறை மதியை உடைய சிவபிரானின் வரலாறுகளைப் பரவி உருகும் ஞானசம்பந்தன், அருகருகே வெற்றிடங்களை உடைய மலையின் பூக்கமழ் சாரலில் அழகிய மட நடையினை உடைய மகளிர் பல இடங்களில் தங்கி அழகு செய்வதாகிய இடைச்சுரத்தைப் போற்றிப் பாடிய இப்பதிகப் பாடலை இசையோடு சொல்ல வல்லவர், பிணிகள் இன்றி வாழ்வர்.

திருக்கழுமலம்

சீர்காழி

திருக்கழுமலம்,
பண் - குறிஞ்சி, கழுமலம் என்பது சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

அயிலுறுபடையினர் விடையினர்முடிமே
லரவமுமதியமும் விரவியவழகர்
மயிலுறுசாயல் வனமுலையொருபான்
மகிழ்பவர்வானிடை முகில்புல்குமிடறர்
பயில்வுறுசரிதைய ரெருதுகந்தேறிப்
பாடியுமாடியும் பலிகொள்வர்வலிசேர்
கயிலையும்பொதியிலு மிடமெனவுடையார்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. **#861**

கூர்மை பொருந்திய சூலப் படையை உடையவரும், விடை ஊர்தியினரும், முடிமேல் அரவு மதி ஆகியன விரவிய அழகுடையவரும், ஆண்மயில் போலும் கட்புலனாகிய மென்மையையும், அழகிய தனபாரங்களையும் உடைய உமையம்மையை ஒரு பாலாகக் கொண்டு மகிழ்பவரும், வானகத்தே பொருந்திய மேகம் போன்ற கரிய மிடற்றினரும், எல்லோராலும் போற்றப்படும் புராண வரலாறுகளை உடையவரும், இடபத்தில் மகிழ்ந்தேறிப் பாடியும் ஆடியும் சென்று பலியேற்பவரும், வலிமை சேர்ந்த கயிலை, பொதியில் போன்ற அழகிய மலைகளைத் தம் இடங்களாக உடையவரும் ஆகிய சிவபெருமான் உறையும் கழுமலத்தை நினைய நம்வினைத் தீமை அறும்.

சீர்காழி

கொண்டலுநீலமும் புரைதிருமிடறர்
கொடுமுடியுறைபவர் படுதலைக்கையர்
பண்டலரயன்சிர மரிந்தவர்பொருந்தும்
படர்சடையடிகளார் பதியதனயலே
வண்டலும்வங்கமுஞ் சங்கமுஞ்சுறவு
மறிகட ற்றிரைகொணர்ந் தெற்றியகரைமேற்
கண்டலுங்கைதையு நெய்தலுங்குலவுங்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. **#862**

மேகம் நீல மலர் ஆகியன போன்ற அழகிய மிடற்றை உடையவரும்,

கயிலைச் சிகரத்தில் உறைபவரும், உயிரற்ற தலையோட்டைக் கையில் ஏந்தியவரும், முற்காலத்தில் தாமரை மலர் மேல் உறையும் பிரமனின் தலைகளில் ஒன்றைக் கொய்தவரும், அழகுறப் பொருந்தும் விரிந்த சடைமுடியை உடையவரும் ஆகிய சிவபிரானதுபதி, பக்கலின் சுருண்டு விழும் கடல் அலைகள் வண்டல் மண், இலவங்கம், சங்குகள் சுறா ஆகியனவற்றைக் கொணர்ந்து வீசும் கரை மேல் நீர்முள்ளி தாழை நெய்தல் ஆகியன பூத்து விளங்கும் கழுமல நகராகும். அதனை நினைய நம் வினைகளின் தீமைகள் நீங்கும்.

சீர்காழி

எண்ணிடையொன்றின ரிரண்டினருருவ
மெரியிடைமூன்றினர் நான்மறையாளர்
மண்ணிடையைந்தின ராறினரங்கம்
வகுத்தனரேழிசை யெட்டிருங்கலைசேர்
பண்ணிடையொன்பது முணர்ந்தவர்பத்தர்
பாடிநின்றடிதொழ மதனனைவெகுண்ட
கண்ணிடைக்கனலினர் கருதியகோயில்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. **#863**

எண்ணத்தில் ஒன்றாயிருப்பவர், சிவம் சக்தி என உருவத்தால் இரண்டாயிருப்பவர். நெருப்பில் மூன்றாயிருப்பவர். நான்கு மறைகளை அருளியவர். மண்ணிடைச் சுவை ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து தன்மையர். வேதத்தின் ஆறு அங்கங்களாக இருப்பவர். ஏழிசைகளை வகுத்தவர். எண்வகைக் கலைகளில் ஒன்றாய இசைத்துறையில் ஒன்பான் கலையையும் உணர்ந்தவர். பக்தர்கள் பாடி நின்று திருவடிகளை வணங்க வீற்றிருப்பவர். மன்மதனைக் கண்ணிடைத் தோன்றிய கனலால் வெகுண்டவர். அத்தகைய பெருமான் விரும்பி உறையும் கழுமலத்திலுள்ள கோயிலை நினைய நம் வினைகளின் தீமை முற்றிலும் நீங்கும்.

சீர்காழி

எரியொருகரத்தின ரிமையவர்க்கிறைவ
ரேறுகந்தேறுவர் நீறுமெய்பூசித்
திரிதருமியல்பின ரயலவர்புரங்க
டீயெழவிழித்தனர் வேய்புரைதோளி
வரிதருகண்ணிணை மடவரலஞ்ச
மஞ்சுறநிமிர்ந்ததோர் வடிவொடும்வந்த
கரியுரிமருவிய வடிகளுக்கிடமாங்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. **#864**

ஒருகரத்தில் எரி ஏந்தியவர். தேவர்கட்குத் தலைவர். விடையை விரும்பி ஊர்பவர். திருநீற்றை மெய்யிற் பூசித் திரியும் இயல்பினர். பகைமை பூண்டவர்களாய அசுரர்களின் மூன்று புரங்களும் தீயில் அழியுமாறு விழித்தவர். மூங்கில் போன்ற திரண்ட தோள்களையும், வரி பரந்த கண்களையும் உடைய உமையம்மை அஞ்சுமாறு மேகம் திரண்டு நிமிர்ந்து வந்தாற் போன்ற கரிய வடிவோடு தம்பால் வந்த யானையின் தோலை உரித்து அதனை அணிந்தவர். அத்தகைய பெருமானுக்கு இடமாக விளங்கும் கழுமலத்தை நினைய நம் வினைத்தீமை நீங்கும்.

<u>சீர்காழி</u>

ஊரெதிர்ந்திடுபலி தலைகலனாக
வுண்பவர்விண்பொலிந் திலங்கியவுருவர்
பாரெதிர்ந்தடிதொழ விரைதருமார்பிற்
படவரவாமையக் கணிந்தவர்க்கிடமாம்
நீரெதிர்ந்திழிமணி நித்திலமுத்த
நிரைசுரிசங்கமொ டொண்மணிவரன்றிக்
காரெதிர்ந்தோதம்வன் றிரைகரைக்கெற்றுங்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. **#865**

ஊர்மக்கள் வரவேற்று இடும் பலியைத் தலையோட்டில் ஏற்று உண்பவர். வானத்தில் பொலிவோடு இலங்கும் திருவுருவினர். மண்ணுலக மக்கள் விரும்பி வந்து தம் திருவடிகளை வணங்க மணம் கமழும் மார்பகத்தே படப்பாம்பு ஆமைஓடு உருத்திராக்கம் ஆகியன அணிந்தவர். அவர் தமக்கு இடமாய் உள்ளதால், மேகங்கள் படியும் வெண்மையான வலிய கடல் அலைகள் மிகுதியான நீருடன் இழிந்துவரும் மணிகள், முத்துக்கள், ஒழுங்குற நிறைந்த வளைந்த சங்குகள், ஒளி பொருந்திய பவளமணி ஆகியவற்றைக் கரையில் கொணர்ந்து வீசும் கழுமலத்தை நினைய நம் வினைத் தீமை நீங்கும்.

<u>சீர்காழி</u>

முன்னுயிர்த்தோற்றமு மிறுதியுமாகி
முடியுடையமரர்க ளடிபணிந்தேத்தப்
பின்னியசடைமிசைப் பிறைநிறைவித்த
பேரருளாளனார் பேணியகோயில்
பொன்னியனறுமலர் புனலொடுதூபஞ்
சாந்தமுமேந்திய கையினராகிக்
கன்னியர்நாடொறும் வேடமேபரவுங்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. **#866**

உயிர்கட்கு முதலில் தோற்றத்தையும் பின்னர் இறுதியையும்

வழங்குவோராய், முடியணிந்த தேவர் கணங்கள் தம் திருவடிகளைப் பணிந்து போற்ற, வட்டமாக, முறுக்கிய சடையின் மேல் பிறையைச் சூடிய பெருங் கருணையாளராகிய சிவபிரான் விரும்பிய கோயிலை உடையதும், பொன் போன்ற மணம் பொருந்திய மலர்கள் புனல் தூபம் சந்தனம் முதலியன ஏந்திய கையினராய்க் கன்னியர்கள் நாள்தோறும் வந்து இறைவர் கொண்டருளிய வடிவங்களைப் போற்றி வழிபடுவதுமாய கழுமலத்தை நினைய நம் வினைத் தீமைகள் நீங்கும்.

சீர்காழி

கொலைக்கணித்தாவரு கூற்றுதைசெய்தார்
குரைகழல்பணிந்தவர்க் கருளியபொருளின்
நிலைக்கணித்தாவர நினையவல்லார்தந்
நெடுந்துயர்தவிர்த்தவெந் நிமலருக்கிடமாம்
மலைக்கணித்தாவர வன்றிரைமுரல
மதுவிரிபுன்னைகண் முத்தெனவரும்பக்
கலைக்கணங்கானலி னீழலில்வாழுங்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. **#867**

மார்க்கண்டேயர் உயிரைக் கொல்லுதற்கு அணித்தாக வந்த கூற்றுவனை உதைத்தவர். ஒலிக்கின்ற கழல் அணிந்த தமது திருவடியைப் பணிந்தவர்கட்கு உரியதாக அருளிச் செய்த வீட்டின்பமாகிய நிலை அணியதாக வரவும் அவர்தம் நெடுந்துயர் போகவும் நினைக்கும் எம் நிமலர். அவர்க்கு இடமாக விளங்குவதும், தோணிமலைக்கு அருகில் வரும் வலிய அலைகள் ஒலிப்பதும், தேன் நிறைந்த புன்னைகள் முத்தென அரும்பவும் கடற்கரைச் சோலைகளின் நீழலில் மானினங்கள் வாழ்வதுமாய கழுமல நகரை நினைய நம் வினைக் குற்றங்கள் நீங்கும்.

சீர்காழி

புயம்பலவுடையதென் னிலங்கையர்வேந்தன்
பொருவரையெடுத்தவன் பொன்முடிதிண்டோள்
பயம்பலபடவடர்த் தருளியபெருமான்
பரிவொடுமினிதுறை கோயிலதாகும்
வியன்பலவிண்ணினு மண்ணினுமெங்கும்
வேறுவேறுகங்களிற் பெயருளதென்னக்
கயம்பலபடக்கடற் றிரைகரைக்கெற்றுங்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. **#868**

தோள்கள் பலவற்றை உடைய தென்னிலங்கை மன்னனாகிய இராவணன் கயிலை மலையைப் பெயர்க்க அவன் பொன் முடிகளையும்,

வலிய தோள்களையும் அச்சம் பல உண்டாகுமாறு அடர்த்தருளிய பெருமான் விருப்போடு மகிழ்ந்துறையும் கோயிலை உடையதும் அகன்ற விண்ணுலகிலும் மண்ணுலகிலும் வேறுவேறு யுகங்களில் வேறுவேறு பெயர்களுடையதாய் விளங்குவதும் நீர்த்துளி பலவாகத் தோன்ற கடல் அலைகள் தொடர்ந்து வந்து கரையில் வீசுவதுமாய கழுமலத்தை நினைய நம் வினைகளின் தீமைகள் நீங்கும்.

சீர்காழி

விலங்கலொன்றேந்திவன் மழைதடுத்தோனும்
வெறிகமழ்தாமரை யோனுமென்றிவர்தம்
பலங்களானேடியு மறிவரிதாய
பரிசினன்மருவிநின் றினிதுறைகோயில்
மலங்கிவன்றிரைவரை யெனப்பரந்தெங்கு
மறிகடலோங்கிவெள் ளிப்பியுஞ்சுமந்து
கலங்கடன்சரக்கொடு நிரக்கவந்தேறுங்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. **#869**

கோவர்த்தனத்தைக் குடையாகக் கவித்துக் கொடிய மழையைத் தடுத்த திருமாலும், மணம்கமழ் தாமரையில் தோன்றிய பிரமனும் ஆகிய இவர்கள் தம் வலிமையினால் தேடியும் அறிய முடியாத தன்மையனாகிய சிவபெருமான், விரும்பி வந்து மகிழ்வாக உறையும் கோயில், வெள்ளிய அலைகள் ஒன்றோடொன்று கலந்து மலைகளைப் போலப் பரவி எங்கும் கரையில் மோதி மீளும் கடலில் பெருமிதத்துடன் கப்பல்கள் தம் சரக்கொடு வெள்ளிய முத்துச் சிப்பிகளையும் சுமந்து கரையை நோக்கி வரும் கழுமலமாகும் அதனை நினைய நும்வினைத் தீமை நீங்கும்.

சீர்காழி

ஆம்பலதவமுயன் றறவுரைசொல்லு
மறிவிலாச்சமணருந் தேரருங்கணிசேர்
நோம்பலதவமறி யாதவர்நொடிந்த
மூதுரைகொள்கிலா முதல்வர்தம்மேனிச்
சாம்பலும்பூசிவெண் டலைகலனாகத்
தையலாரிடுபலி வையகத்தேற்றுக்
காம்பனதோளியொ டினிதுறைகோயில்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. **#870**

இயன்ற பலவகையான தவங்களை மேற்கொண்டு பிறர்க்கு அறவுரை கூறும் அறிவற்ற சமணரும் புத்தரும், எண்ணத்தக்க வருத்தத்தைத் தரும் தவம் பலவற்றை அறியாதவராய்க் கூறும் பழமொழிகளை ஏற்று அருளாத தலைவர், தம் மேனி மீது திருநீற்றைப் பூசிக் கொண்டு

வெண்டலையை உண்கலனாக் கொண்டு மகளிர் இடும் பலியை
உலகில் ஏற்று மூங்கில் போலும் தோள்களை உடைய
உமையம்மையோடு இனிதாக உறையும் கோயிலை உடைய
கழுமலத்தை நினைய நம் வினைக்குற்றம் தீரும்.

<u>சீர்காழி</u>

கலிகெழுபாரிடை யூரெனவுளதாங்
கழுமலம்விரும்பிய கோயில்கொண்டவர்மேல்
வலிகெழுமனமிக வைத்தவன்மறைசேர்
வருங்கலைஞானசம் பந்தனதமிழின்
ஒலிகெழுமாலையென் றுரைசெய்தபத்து
முண்மையினானினைந் தேத்தவல்லார்மேல்
மெலிகெழுதுயரடை யாவினைசிந்தும்
விண்ணவராற்றலின் மிகப்பெறுவாரே. **#871**

ஆரவாரம் மிக்க உலகில் ஊர் எனப் போற்ற விளங்கும் கழுமலத்தை
விரும்பிக் கோயில் கொண்டுள்ள இறைவரிடம் உறுதியோடு தன்
மனத்தை வைத்தவனும், வேதங்களிலும் கலைகளிலும் வல்லவனுமாகிய
ஞானசம்பந்தன், இசையோடு பாடிய மாலையாகிய இப்பதிகப்
பாடல்கள் பத்தையும், உண்மையோடு நினைந்து ஏத்த வல்லவரை,
மெலிவைத் தரும் துன்பங்கள் சாரா. வினைகள் நீங்கும், விண்ணவரினும்
மேம்பட்ட ஆற்றலை அவர்கள் பெறுவார்கள்.

கோயில்

கோயில்

கோயில்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருமூலத்தானநாயகர் (எ) சபாநாதர்.
தேவியார் : சிவகாமியம்மை.

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. **#872**

வேதம் முதலிய நூல்களைக் கற்று அவற்றின்கண் ஓதிய நெறியிலே நின்று, வேள்விகளைச் செய்து, இவ்வுலகில் வறுமையை வாராமல் ஒழிக்கும் அந்தணர்கள் வாழும் தில்லையிலுள்ள சிற்றம் பலத்தில் எழுந்தருளியவனும் இளமையான வெள்ளிய பிறை மதியைச் சூடியவனும் ஆகிய முதல்வனது திருவடிகளைப் பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்பவர்களைப் பாவம் பற்றா.

கோயில்

பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மைய றீர்வாரே. **#873**

பல இடங்களிலும் வேள்விச் சாலைகளை அமைத்து, ஆன்ம போதத்தைக் கொன்று, எரியோம்பும் சிறப்புடைய அந்தணர்கள் வாழும் தில்லையில் உள்ள சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ளவனும், தாயின் வயிற்றில் தங்கிப் பிறத்தல் இல்லாதவனும், பின்புறம் தாழ்ந்து தொங்கும் சடாபாரம் உடையவனும் ஆகிய பெருமானை மறவாதவர் மயக்க உணர்வு நீங்கப் பெறுவர்.

கோயில்

மையா ரொண்கண்ணார் மாட நெடுவீதிக்
கையாற் பந்தோச்சுங் கழிசூழ் தில்லையுட்
பொய்யா மறைபாடல் புரிந்தா னுலகேத்தச்
செய்யா னுறைகோயில் சிற்றம் பலந்தானே. **#874**

மைதீட்டப் பெற்ற ஒளி பொருந்திய கண்களை உடைய பெண்கள்,

நீண்ட வீதிகளிலுள்ள மாட வீதிகளில் தம் கைகளால் பந்தோச்சி விளையாடும் அழகுடையதும், உப்பங்கழிகள் சூழ்ந்ததுமான தில்லையுள், என்றும் பொய்யாத வேதப் பாடல்களை விரும்பும் சிவந்த திருமேனியை உடைய சிவபிரான், உலக மக்கள் தன்னை ஏத்த உறையும் கோயிலை உடையது சிற்றம்பலமாகும்.

கோயில்

நிறைவெண் கொடிமாட நெற்றி நேர்தீண்டப்
பிறைவந் திறைதாக்கும் பேரம் பலந்தில்லைச்
சிறைவண் டறையோவாச் சிற்றம் பலமேய
இறைவன் கழலேத்து மின்ப மின்பமே. **#875**

மாடவீடுகளில் நிறைந்துள்ள வெண்மையான கொடிகள் வானத்திலுள்ள பிறையின் நெற்றியை நேரே தீண்டுமாறு வந்து சிறிதே தாக்கும் தில்லைப் பதியில் சிறகுகளை உடைய வண்டுகள் எப்போதும் ஒலிக்கும் பேரம்பலத்தை அடுத்துள்ள சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் திருவடிகளைப் பரவுவதே இன்பம் ஆகும்.

கோயில்

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே. **#876**

செல்வ வளம்மிக்க பெரிய மாடவீடுகள் வானளாவ ஓங்கி உயர்ந்து அழகிய மதியினைத் தோயப் பல்வகை அழகு நலன்களும் உயர்ந்து விளங்கிவருவதும், ஞானச் செல்வர்கள் பலர் வாழ்வதுமாகிய தில்லையிலுள்ள சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள, வீடுபேறாகிய செல்வத்திற்குரிய பெருமான் திருவடிகளை வாழ்த்தும் செல்வமே, ஒருவருக்குச் செல்வமாம்.

கோயில்

வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாந்
திருமாந் தில்லையுட் சிற்றம் பலமேய
கருமா னுரியாடைக் கறைசேர் கண்டத்தெம்
பெருமான் கழலல்லாற் பேணா துள்ளமே. **#877**

புதிதாக மரத்தின்கண் இருந்து வெளிவரும் மாந்தளிர் போன்ற மேனியளாகிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு, திருமகள் விளங்கும் தில்லை மாநகருள் சிற்றம்பலத்தின் கண் எழுந்தருளியவரும், யானைத் தோலை உரித்து ஆடையாகப் போர்த்தவரும் நீலமணி

போன்ற கண்டத்தை உடையவருமாகிய எம் பெருமான் திருவடிகளை அல்லது என் உள்ளம் வேறொன்றையுமே விரும்பாது.

கோயில்

அலையார் புனல்சூடி யாகத் தொருபாகம்
மலையான் மகளோடு மகிழ்ந்தா னுலகேத்தச்
சிலையா லெயிலெய்தான் சிற்றம் பலந்தன்னைத்
தலையால் வணங்குவார் தலையா னார்களே. **#878**

அலைகள் வீசும் கங்கை நதியை முடியிற்சூடித் தன் திருமேனியில் ஒருபாகமாக மலையரையன் மகளாகிய பார்வதி தேவியோடு மகிழ்ந்திருப்பவனும் உலகம் போற்ற மேருமலையாகிய வில்லால் முப்புரங்களை எய்து அழித்தவனும் ஆகிய சிற்றம்பலத்துப்பெருமானைத் தலைதாழ்த்தி வணங்குவார் தலைமைத் தன்மையோடு விளங்குவார்.

கோயில்

கூர்வா ளரக்கன்றன் வலியைக் குறைவித்துச்
சீரா லேமல்கு சிற்றம் பலமேய
நீரார் சடையானை நித்த லேத்துவார்
தீரா நோயெல்லாந் தீர்த றிண்ணமே. **#879**

கூரிய வாளை உடைய அரக்கனாகிய இராவணனின் வலிமையை அழித்துச் சிறந்த புகழ் மல்கிய சிற்றம்பலத்தின் கண் எழுந்தருளிய கங்கையைத் தரித்த சடையினை உடைய இறைவனை நாள்தோறும் ஏத்துபவருக்குத் தீராத நோய்கள் எல்லாம் தீர்தல் திண்ணம்.

கோயில்

கோணா கணையானுங் குளிர்தா மரையானுங்
காணார் கழலேத்தக் கனலா யோங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேத்த
மாணா நோயெல்லாம் வாளா மாயுமே. **#880**

வளைந்து சுற்றிய பாம்பணையில் பள்ளிகொள்ளும் திருமாலும், குளிர்ந்த தாமரை மேல் விளங்கும் நான்முகனும், அடிமுடிகளைக் காணாதவராய்த் தன் திருவடிகளைப் பரவ, அழல் வடிவில் ஓங்கி நின்றவனும், உயர்ந்தோர் பலர் வாழும் தில்லைப் பதியுள் சிற்றம்பலத்தின்கண் எழுந்தருளியவனுமாகிய பெருமானைப் போற்ற, நோய்களில் மாட்சிமை உள்ள கொடிய நோய்கள் எல்லாமும் பயன்தாராது கழியும்.

கோயில்

பட்டைத் துவராடைப் படிமங் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
நட்டப் பெருமானை நாளுந் தொழுவோமே. **#881**
மரப்பட்டையின் சாயம் ஏற்றிய ஆடையை உடுத்த புத்தரும் நோன்புகள்
பலவற்றை மேற்கொண்டு திரியும் சமணர்களும் மொழியும்
அறியாமையோடு கூடிய உரைகளைக் கேளாது ஒழுக்கத்தால்
மேம்பட்டவர் வாழும் தில்லையில் சிற்றம்பலத்தில் எழுந்தருளிய
நடராசப் பெருமானை நாள்தோறும் நாம் தொழுவோம்.

கோயில்

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே. **#882**
உலகில் உயர்ந்து விளங்கும் சீகாழிப் பதியில் தோன்றிய
ஞானசம்பந்தன், ஒழுக்க சீலர்களாலே புனிதமாகக் கொண்டு போற்றப்
பெறும் தில்லைச் சிற்றம்பலத்தே எழுந்தருளிய, சூலப்படையுடைய
பெருமான் மீது பாடிய, இத்தமிழ் மாலையாகிய திருப்பதிகத்தை.
அழகுறப் பாட வல்லவர் நல்லவர் ஆவர்.

சீர்காழி

சீர்காழி

சீர்காழி,
பண் - குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

நல்லார் தீமேவுந் தொழிலார் நால்வேதஞ்
சொல்லார் கேண்மையார் சுடர்பொற் கழலேத்த
வில்லாற் புரஞ்செற்றான் மேவும் பதிபோலுங்
கல்லார் மதில்சூழ்ந்த காழிந் நகர்தானே. **#883**

நல்லவர்களும், நாள்தோறும் வேள்விகளைச் செய்பவர்களும், நான்கு வேதங்களை ஓதுபவர்களும், அன்புடையவர்களும் ஆகிய அந்தணர்கள், ஒளி பொருந்திய அழகிய தன் திருவடிகளைப் போற்ற, மேருவில்லால் முப்புரங்களை அழித்த சிவபெருமான் எழுந்தருளிய தலம், மலை போன்ற மதில்களால் சூழப்பட்ட சீகாழி நகராகும்.

சீர்காழி

துளிவண் டேன்பாயு மிதழி தூமத்தந்
தெளிவெண் டிங்கண்மா சுணநீர் திகழ்சென்னி
ஒளிவெண் டலைமாலை யுகந்தா னூர்போலுங்
களிவண் டியாழ்செய்யுங் காழிந் நகர்தானே. **#884**

வளமான தேன் துளிபாயும் கொன்றை மலர், தூய ஊமத்தம் மலர், தெளிந்த வெண்மையான பிறை மதி, பாம்பு, கங்கை ஆகியன விளங்கும் சென்னிக்கண், ஒளி பொருந்திய வெள்ளிய தலை மாலையை விரும்பிச் சூடிய சிவபிரானது ஊர், கள்ளுண்டு களித்த வண்டுகள், யாழ்போல ஒலிக்கும், சீகாழி நகராகும்.

சீர்காழி

ஆலக் கோலத்தி னஞ்சுண் டமுதத்தைச்
சாலத் தேவர்க்கீந் தளித்தான் றன்மையாற்
பாலற் காய்நன்றும் பரிந்து பாதத்தாற்
காலற் காய்ந்தானூர் காழிந் நகர்தானே. **#885**

பாற்கடலில் தோன்றிய ஆலகாலம் எனப்படும் அழகிய நஞ்சினை உண்டு, அமுதம் முழுவதையும் தேவர்களுக்கு ஈந்தருளிய தன்மையை உடையவனாய் மார்க்கண்டேயன் பொருட்டுத் தன் பாதத்தால் காலனை

உதைத்த சிவபிரானது ஊர், சீகாழி நகராகும்.

சீர்காழி

இப்பதிகத்தின் **4**-ம் செய்யுள் சிதைந்து போயிற்று. **#886**

சீர்காழி

இப்பதிகத்தின் **5**-ம் செய்யுள் சிதைந்து போயிற்று. **#887**

சீர்காழி

இப்பதிகத்தின் **6**-ம் செய்யுள் சிதைந்து போயிற்று. **#888**

சீர்காழி

இப்பதிகத்தின் **7**-ம் செய்யுள் சிதைந்து போயிற்று. **#889**

சீர்காழி

இரவிற் றிரிவோர்கட் கிறைதோ ளிணைபத்தும்
நிரவிக் கரவாளை நேர்ந்தா னிடம்போலும்
பரவித் திரிவோர்க்கும் பானீ றணிவோர்க்குங்
கரவிற் றடக்கையார் காழிந் நகர்தானே. **#890**

இரவில் திரியும் நிசாசரராகிய அசுரர்களுக்குத் தலைவனாகிய இராவணனின் இருபது தோள்களையும் நெரித்து, பின் அவன் வருந்திய அளவில் கைகளில் ஏந்தும் வாள் வழங்கிய சிவபிரானது இடம், இறைவனைப் பரவித் திரியும் அடியவர்கட்கும், பால் போன்ற திருநீற்றை அணிபவர்கட்கும், ஒளியாமல் வழங்கும் நீண்ட கைகளையுடைய, வள்ளன்மை மிக்க அடியார் வாழும், சீகாழிப் பதியாகும்.

சீர்காழி

மாலும் பிரமனு மறியா மாட்சியான்
றோலும் புரிநூலுந் துதைந்த வரைமார்பன்
ஏலும் பதிபோலு மிரந்தோர்க் கெந்நாளுங்
காலம் பகராதார் காழிந் நகர்தானே. **#891**

திருமால், பிரமன் ஆகியோர் அறிய முடியாத மாட்சிமையை உடையவனும் மான்தோலும், முப்புரி நூலும் பொருந்திய மலை போன்ற மார்பினனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளும் பதி, தம்பால் இரந்தவர்களுக்கு எந்நாளும் பிறிதொரு நாளையோ, நேரத்தையோ குறிக்காது உடனே பொருள் வழங்கும் செல்வர்கள் வாழ்கின்ற சீகாழி நகராகும்.

சீர்காழி

தங்கை யிடவுண்பார் தாழ்சீ வரத்தார்கள்
பெங்கை யுணராதே பேணித் தொழுமின்கள்
மங்கை யொருபாக மகிழ்ந்தான் மலர்ச்சென்னிக்
கங்கை தரித்தானூர் காழிந் நகர்தானே. **#892**

உணவளிப்போர் தங்கள் கைகளிலே தர, அதனை வாங்கி உண்ணும் சமணர்களும் தாழ்ந்த சீவரம் என்னும் கல்லாடையை உடுத்திய புத்தர்களும் ஆகியவர்களின் தீயொழுக்கத்தை மனத்துக் கொள்ளாமல், உமையம்மையை ஒரு பாகமாக மகிழ்ந்து ஏற்றவனும், மலரணிந்த சென்னியில் கங்கையைத் தரித்தவனுமாகிய சிவபெருமான் எழுந்தருளிய காழி நகரைப் பேணித் தொழுவீர்களாக.

சீர்காழி

வாசங் கமழ்காழி மதிசெஞ் சடைவைத்த
ஈசன் னகர்தன்னை யிணையில் சம்பந்தன்
பேசுந் தமிழ்வல்லோர் பெருநீ ருலகத்துப்
பாசந் தனையற்றுப் பழியில் புகழாரே. **#893**

பிறைமதியைச் செஞ்சடையில் வைத்த சிவபிரானது மணங்கமழ்கின்ற சீகாழிப் பதியாகிய நகரை, ஒப்பற்ற ஞானசம்பந்தன் போற்றிப் பேசிய இத்திருப்பதிகத் தமிழில் வல்லவர்கள் கடல் சூழ்ந்த இவ்வுலகில் பாசங்களை நீக்கிப் பழியற்ற புகழோடு வாழ்வர்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை

திருவீழிமிழலை,
பண் - குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

இரும்பொன் மலைவில்லா வெரியம் பாநாணில்
திரிந்த புரமூன்றுஞ் செற்றா னுறைகோயில்
தெரிந்த வடியார்கள் சென்ற திசைதோறும்
விரும்பி யெதிர்கொள்வார் வீழி மிழலையே. **#894**

பெரிய பொன்மயமான மேருமலையை வில்லாக வளைத்து, அனலை அம்பாக அவ்வில் நாணில் பூட்டி வானில் திரிந்து கொண்டிருந்த முப்புரங்களையும் அழித்தவனாகிய சிவபிரான் உறையும் கோயில், கற்றுணர்ந்த அடியவர்கள் செல்லும் திசைகளில் எல்லாம் விரும்பி அவர்களை எதிர்கொள்ளும் மக்கள் வாழும் திருவீழிமிழலை ஆகும்.

திருவீழிமிழலை

வாதைப் படுகின்ற வானோர் துயர்தீர
ஓதக் கடனஞ்சை யுண்டா னுறைகோயில்
கீதத் திசையோடுங் கேள்விக் கிடையோடும்
வேதத் தொலியோவா வீழி மிழலையே. **#895**

துன்புறும் தேவர்களின் துயர்தீர, வெள்ள நீரொடு கூடிய கடலின்கண் எழுந்த நஞ்சினை உண்ட சிவபிரான் உறையும் கோயில், இசையமைப்போடு கூடியதும் சுருதி என்பதற்கேற்ப ஒருவர் ஓதக்கேட்டு ஓதப்பட்டு வருவதும் ஆகிய வேத பாராயணத்தின் ஒலி நீங்காமல் ஒலிக்கின்ற திருவீழிமிழலை ஆகும்.

திருவீழிமிழலை

பயிலும் மறையாளன் றலையிற் பலிகொண்டு
துயிலும் பொழுதாடுஞ் சோதி யுறைகோயில்
மயிலும் மடமானும் மதியும் மிளவேயும்
வெயிலும் பொலிமாதர் வீழி மிழலையே. **#896**

வேதங்களை ஓதிய பிரமனின், தலையோட்டில் பலியேற்று அனைவரும் துயிலும் நள்ளிரவில் ஆடும் ஒளிவடிவினனாகிய சிவபிரான் உறையும் கோயில், மயில், மடப்பம் பொருந்திய மான், மதி, இள மூங்கில், வெயில்

ஆகியனவற்றைப் போன்று கண்ணுக்கு இனிய மென்மையும், மருளும் விழி, முகம், தோள்கள், உடல்ஒளி இவற்றால் பொலியும் மகளிர் வாழும் திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

இரவன் பகலோனு மெச்சத் திமையோரை
நிரவிட் டருள்செய்த நிமலன் னுறைகோயில்
குரவஞ் சுரபுன்னை குளிர்கோங் கிளவேங்கை
விரவும் பொழிலந்தண் வீழி மிழலையே. **#897**

தக்கன் செய்த யாகத்தில் சந்திரன், சூரியன் ஏனைய தேவர்கள் ஆகியோரை, வீரபத்திரரை அனுப்பித் தண்டம் செய்து செம்மைப்படுத்தி அருள்செய்த சிவபிரான் உறையும் கோயில் குரா, சுரபுன்னை, குளிர்ந்த கோங்கு, இளவேங்கை ஆகியன விரவிய பொழில்கள் சூழ்ந்த அழகிய தட்பமுடைய வீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

கண்ணிற் கனலாலே காமன் பொடியாகப்
பெண்ணுக் கருள்செய்த பெருமா னுறைகோயில்
மண்ணிற் பெருவேள்வி வளர்தீப் புகைநாளும்
விண்ணிற் புயல்காட்டும் வீழி மிழலையே. **#898**

நெற்றி விழியில் தோன்றிய கனலால் காமனைப் பொடி செய்து, இரதிதேவிவேண்ட அவள் கண்களுக்கு மட்டும் புலனாகுமாறு அருள் செய்த பெருமான் உறையும் கோயில் மண்ணில் செய்யும் பெரிய வேள்விகளில் வளரும் தீப்புகை நாள்தோறும் விண்ணகத்தே மழை மேகங்களை உருவாக்கும் திருவீழிமிழலை யாகும்.

திருவீழிமிழலை

மாலா யிரங்கொண்டு மலர்க்கண் ணிடவாழி
ஏலா வலயத்தோ டீந்தா னுறைகோயில்
சேலா கியபொய்கைச் செழுநீர்க் கமலங்கள்
மேலா லெரிகாட்டும் வீழி மிழலையே. **#899**

திருமால் ஆயிரம் தாமரைப் பூக்களைக் கொண்டு அருச்சித்தபோது ஒன்று குறையக் கண்டு, தன், மலர் போன்ற கண்ணைஇடந்து சாத்திய அளவில் பிறர் சுமக்கலாற்றாத சக்கராயுதம் ஆகிய ஆழியை அவனுக்கு ஈந்தருளிய பெருமான் உறையும் கோயில், சேல்மீன்கள் பொருந்திய செழுநீர்ப் பொய்கைகளில் முளைத்த தாமரை மலர்கள் தீப்பிழப்பு போலக் காணப்படும் திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

மதியால் வழிபட்டான் வாணாள் கொடுபோவான்
கொதியா வருகூற்றைக் குமைத்தா னுறைகோயில்
நெதியான் மிகுசெல்வர் நித்த நியமங்கள்
விதியா னிற்கின்றார் வீழி மிழலையே. **#900**

மெய்யறிவால் தன்னை வழிபட்ட மார்க்கண்டேயனின் வாழ்நாளைக் கையகப் படுத்தச் சினந்து வந்த கூற்றுவனை அழித்த சிவபிரானது கோயில், நிதியால் மிகுந்த செல்வர்கள் நாள்தோறும் செய்யும் நியமங்களை விதிப்படி செய்து வாழும் திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

எடுத்தான் றருக்கினை யிழித்தான் விரலூன்றிக்
கொடுத்தான் வாளாளாக் கொண்டா னுறைகோயில்
படித்தார் மறைவேள்வி பயின்றார் பாவத்தை
விடுத்தார் மிகவாழும் வீழி மிழலையே. **#901**

கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த இராவணனின் செருக்கினைத் தன் கால்விரலை ஊன்றி அழித்தவனும், பின்அவன் பிழையுணர்ந்து வேண்ட, வாள் முதலியன கொடுத்து, அவனை அடிமையாக ஏற்றுக் கொண்டருளியவனுமாகிய சிவபிரான் உறையும் கோயில், வேதங்களைப் பயின்றவர்களும், வேள்விகள் பலவற்றைச் செய்பவர்களும், பாவங்களை விட்டவர்களுமாகிய அந்தணர்கள் மிகுதியாக வாழும், திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

கிடந்தா னிருந்தானுங் கீழ்மேல் காணாது
தொடர்ந்தாங் கவரேத்தச் சுடரா யவன்கோயில்
படந்தாங் கரவல்குற் பவளத் துவர்வாய்மேல்
விடந்தாங் கியகண்ணார் வீழி மிழலையே. **#902**

பாம்பணையில் துயிலும் திருமாலும், தாமரை மலரில் உறையும் நான்முகனும் அடிமுடிகளைக் காணாது திரும்பித் தொடர்ந்து ஏத்த அழலுருவாய் நின்ற சிவபிரானது கோயில். அரவின் படம் போன்ற அல்குலையும், பவளம் போன்ற வாயினையும் விடம் பொருந்திய கண்களையும் உடைய மகளிர் மிகுதியாக வாழும் திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

சிக்கார் துவராடைச் சிறுதட் டுடையாரும்

நக்காங் கலர்தூற்றுந் நம்பா னுறைகோயில்
தக்கார் மறைவேள்வித் தலையா யுலகுக்கு
மிக்கா ரவர்வாழும் வீழி மிழலையே. **#903**
சிக்குப் பிடித்த காவி உடையையும் சிறிய ஓலைத் தடுக்குக்களையும் உடைய புத்தரும் சமணர்களும் ஏளனம் செய்துசிரித்துப் பழிதூற்றும் நம் இறைவர் தங்கும் கோயில், தக்கவராய், வேதவேள்விகள் செய்வதில் தலையாயவராய், உலகில் மேம்பட்டவராய் விளங்கும் மறையவர் வாழும் வீழிமிழலை ஆகும்.

<u>திருவீழிமிழலை</u>

மேனின் றிழிகோயில் வீழி மிழலையுள்
ஏனத் தெயிற்றானை யெழிலார் பொழிற்காழி
ஞானத் துயர்கின்ற நலங்கொள் சம்பந்தன்
வாய்மைத் திவைசொல்ல வல்லோர் நல்லோரே. **#904**
விண்ணிலிருந்து இழிந்து வந்துள்ள வீழிமிழலைக் கோயிலில், பன்றிப்பல் சூடியவனாய் எழுந்தருளி விளங்கும் சிவபிரானை, அழகிய பொழில்கள் சூழ்ந்த காழிப் பதியில் தோன்றிய ஞானத்தால் மேம்பட்ட அழகிய ஞானசம்பந்தன், உண்மையை உடையவனாய் ஓதிய இப்பதிகத்தைச் சொல்ல வல்லவர் நல்லவர் ஆவர்.

திரு அம்பர்மாகாளம்

திருஅம்பர்த்திருமாகாளம்

திரு அம்பர்மாகாளம்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காளகண்டேசுவரர்.
தேவியார் : பட்சநாயகியம்மை.

அடையார் புரமூன்று மனல்வாய் விழவெய்து
மடையார் புனலம்பர் மாகா ளம்மேய
விடையார் கொடியெந்தை வெள்ளைப் பிறைசூடும்
சடையான் கழலேத்தச் சாரா வினைதானே. **#905**

பகைவராகிய அசுரர்களின் மூன்று கோட்டைகளும் அனலிடைப்பட்டு அழியுமாறு கணை எய்தவனும், நீரைத் தேக்கும் மடைகளையுடைய புனல் வளம் நிறைந்த அம்பர் மாகாளத்தில் எழுந்தருளிய விடை எழுதிய கொடியை உடைய எம் தந்தையும், வெண்மையான பிறை மதியை அணிந்த சடையினனும் ஆகிய பெருமான் திருவடிகளை ஏத்துவாரை வினைகள் சாரா.

திருஅம்பர்த்திருமாகாளம்

தேனார் மதமத்தந் திங்கள் புனல்சூடி
வானார் பொழிலம்பர் மாகா ளம்மேய
ஊனார் தலைதன்னிற் பலிகொண் டுழல்வாழ்க்கை
ஆனான் கழலேத்த வல்ல லடையாவே. **#906**

தேன் பொருந்திய செழுமையான ஊமத்தம் மலர், பிறைமதி, கங்கை ஆகியவற்றை முடியில் சூடி, வானளாவிய பொழில்சூழ்ந்த அம்பர் மாகாளத்தில் எழுந்தருளிய ஊன் பொருந்திய தலையோட்டில் பலியேற்றுத் திரியும் வாழ்க்கையை மேற்கொண்ட பெருமான் திருவடிகளைப் போற்றத் துன்பங்கள் நம்மை அடையா.

திருஅம்பர்த்திருமாகாளம்

திரையார்புனலோடு செல்வ மதிசூடி
விரையார் பொழிலம்பர் மாகா ளம்மேய
நரையார் விடையூரு நம்பான் கழனாளும்
உரையா தவர்கண்மே லொழியா வூனம்மே. **#907**

அலைகள் பொருந்திய கங்கை நதியோடு, கண்டாரை மகிழ்விக்கும் சிறப்பு வாய்ந்த பிறைமதியை முடியில் சூடி, மணம் கமழும் பொழில்

சூழ்ந்த அம்பர் மாகாளத்தில் எழுந்தருளிய வெண்மையான விடையை ஊர்ந்து வரும் சிவபிரான் திருவடிப் புகழை நாள்தோறும் உரையாதவர்கள் பால் பழிபாவங்கள் நீங்கா.

திருஅம்பர்த்திருமாகாளம்

கொந்தண் பொழிற்சோலைக் கோல வரிவண்டு
மந்தம் மலியம்பர் மாகா ளம்மேய
கந்தங் கமழ்கொன்றை கமழ்புன்சடை வைத்த
எந்தை கழலேத்த விடர்வந் தடையாவே. **#908**

பூங்கொத்துக்கள் நிறைந்த பொழில்களிலும் சோலைகளிலும் அழகிய வரி வண்டுகள் பாடும் மந்தச் சுருதி இசை நிறைந்து விளங்கும் இயற்கை எழில் வாய்ந்த அம்பர் மாகாளத்தில் எழுந்தருளிய, மணம் கமழும் கொன்றை மலர்களை இயல்பாக மணம் வீசும் தனது சிவந்த சடைமிசை வைத்துள்ள எம் தந்தையாகிய சிவபிரானின் திருவடிகளை ஏத்தினால் இடர்கள் நம்மை வந்தடைய மாட்டா.

திருஅம்பர்த்திருமாகாளம்

அணியார் மலைமங்கை யாகம் பாகமாய்
மணியார் புனலம்பர் மாகா ளம்மேய
துணியா ருடையினான் றுதைபொற் கழனாளும்
பணியா தவர்தம்மேற் பறையா பாவம்மே. **#909**

அழகு பொருந்திய மலைமங்கையாகிய பார்வதிதேவியைத் தனது உடலின் இடப்பாகமாய்க் கொண்டவனாய் மணிகளோடு கூடிய புனல் வளம் உடைய அம்பர் மாகாளத்தில் எழுந்தருளிய, துணிக்கப்பட்ட கோவண உடையினன் ஆகிய சிவபெருமானின் பொன்னிறம் துதைந்த திருவடிகளை நாள்தோறும் பணியாதவரைப் பாவம் நீங்கா.

திருஅம்பர்த்திருமாகாளம்

பண்டாழ் கடனஞ்சை யுண்டு களிமாந்தி
வண்டார் பொழிலம்பர் மாகா ளம்மேய
விண்டார் புரம்வேவ மேருச் சிலையாகக்
கொண்டான் கழலேத்தக் குறுகா குற்றம்மே. **#910**

முற்காலத்தில் ஆழ்ந்த கடலிடைத் தோன்றிய நஞ்சினை உண்டு, களிப்புற்று வண்டுகள் மொய்க்கும் சோலைகள் சூழ்ந்த அம்பர்மாகாளத்தில் எழுந்தருளியிருப்பவனும், பகைவராகிய அசுரர்களின் முப்புரங்களும் வெந்தழியுமாறு மேருமலையை வில்லாகக் கொண்டருளியவனுமான சிவபெருமான், திருவடிகளைப் போற்ற, குற்றங்கள் நம்மைக் குறுகா.

திருஅம்பர்த்திருமாகாளம்

மிளிரும் மரவோடும் வெள்ளைப் பிறைசூடி
வளரும் பொழிலம்பர் மாகா ளம்மேய
கிளரும் சடையண்ணல் கேடில் கழலேத்தத்
தளரும் முறுநோய்கள் சாருந் தவந்தானே. **#911**

விளங்குகின்ற பாம்போடு வெள்ளை நிறமுடைய பிறையை முடியிற்சூடி, வளர்கின்ற பொழில்கள் சூழ்ந்த அம்பர் மாகாளத்தில் எழுந்தருளியிருக்கும், விளங்குகின்ற சடைமுடியை உடைய தலைமையாளனாகிய சிவபிரானுடைய குற்றமற்ற திருவடிகளை ஏத்தினால், மிக்க நோய்கள் தளர்வுறும்; தவம் நம்மை வந்து அடையும்.

திருஅம்பர்த்திருமாகாளம்

கொலையார் மழுவோடு கோலச் சிலையேந்தி
மலையார் புனலம்பர் மாகா ளம்மேய
இலையார் திரிசூலப் படையான் கழனாளும்
நிலையா நினைவார்மே னில்லா வினைதானே. **#912**

கொல்லும் தொழிலில் வல்ல மழுவாயுதத்தோடு, அழகிய வில்லையும் கையில் ஏந்தி, கரையோடு மோதும் நீர் நிரம்பிய அம்பர் மாகாளத்தில் எழுந்தருளியிருக்கும், இலை வடிவமான முத்தலைச் சூலத்தைப் படையாகக் கொண்ட சிவபெருமான் திருவடிகளை நாள்தோறும் நிலையாக நினைவார்பால் வினைகள் சாரா.

திருஅம்பர்த்திருமாகாளம்

சிறையார் வரிவண்டு தேனுண் டிசைபாட
மறையார் நிறையம்பர் மாகா ளம்மேய
நறையார் மலரானும் மாலும் காண்பொண்ணா
இறையான் கழலேத்த வெய்தும் மின்பம்மே. **#913**

சிறகுகளை உடைய வரி வண்டுகள் தேனுண்டு இசைபாட, வேதம் ஓதும் அந்தணர் நிறைந்த அம்பர் மாகாளத்தில்எழுந்தருளியிருப்பவனும், தேன் நிறைந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகனும் திருமாலும் காண ஒண்ணாத தலைமையாளனுமாய சிவபிரான் திருவடிகளை ஏத்தினால் இன்பம் கிடைக்கும்.

திருஅம்பர்த்திருமாகாளம்

மாசூர் வடிவின்னார் மண்டை யுணல்கொள்வார்
கூசா துரைக்குஞ்சொற் கொள்கை குணமல்ல
வாசார் பொழிலம்பர் மாகா ளம்மேய

ஈசா வென்பார்கட் கில்லை யிடர்தானே. **#914**
அழுக்கடைந்த மேனியரும், துன்ப வடிவினராகி, மண்டை என்னும் பாத்திரத்தில் உணவு கொள்பவருமாய புத்தரும், சமணரும் மனம் கூசாமல் கூறும் பொய்யுரைகளை ஏற்றுக் கொள்ளல் நன்மை தாராது. மணம் கமழும் பொழில் சூழ்ந்த அம்பர் மாகாளத்தில் எழுந்தருளியுள்ள ஈசனே என்று கூறுபவர்கட்கு இடர் வாராது.

<u>திருஅம்பர்த்திருமாகாளம்</u>

வெரிநீர் கொளவோங்கும் வேணு புரந்தன்னுள்
திருமா மறைஞான சம்பந் தனசேணார்
பெருமான் மலியம்பர் மாகா ளம்பேணி
உருகா வுரைசெய்வா ருயர்வா னடைவாரே. **#915**
அஞ்சத்தக்க ஊழி வெள்ளம். உலகத்தை மூட, அவ்வெள்ளத்தே ஓங்கிமேல் மிதந்த வேணுபுரம் என்னும் சீகாழிப் பதியுள் தோன்றிய அழகியனவும் சிறந்தனவுமான வேதங்களில் வல்ல ஞானசம்பந்தனுடைய இத்திருப்பதிகப் பாடல்களை, விண்ணோர் தலைவனாகிய சிவபிரான் எழுந்தருளியுள்ள அம்பர் மாகாளத்தை விரும்பித் தொழுது உருகி உரை செய்பவர் உயர்ந்த வானோர் உலகத்தை அடைவார்கள்.

திருக்கடனாகைக்காரோணம்

திருக்கடனாகைக்காரோணம்

திருக்கடனாகைக்காரோணம்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காயாரோகணேசுவரர்.
தேவியார் : நீலாயதாட்சியம்மை.

புனையும் விரிகொன்றைக் கடவுள் புனல்பாய
நனையுஞ் சடைமேலோர் நகுவெண்டலைசூடி
வினையில் லடியார்கள் விதியால் வழிபட்டுக்
கனையுங் கடனாகைக் காரோ ணத்தானே. **#916**

விரிந்த கொன்றை மலர் மாலையைப் புனையும் கடவுளாய சிவபிரான், கங்கை நீரைத் தாங்கியதால் நனைந்துள்ள சடையின்மேல், வாய் விரித்துச் சிரிப்பது போன்ற வெள்ளியதொரு தலை மாலையைச் சூடி, வினை நீங்கிய அடியவர்கள் விதிப்படி வழிபடச் செறிந்துள்ள கடற்கரையை அடுத்த நாகைக் காரோணத்தில் எழுந்தருளியுள்ளார்.

திருக்கடனாகைக்காரோணம்

பெண்ணா ணெனநின்ற பெம்மான் பிறைச்சென்னி
அண்ணா மலைநாட னாரூ ருறையம்மான்
மண்ணார் முழவோவா மாடந் நெடுவீதிக்
கண்ணார் கடனாகைக் காரோ ணத்தானே. **#917**

பெண்ணும் ஆணுமாய் ஒருருவில் விளங்கும் பெருமானும், பிறை சூடிய சென்னியனாய் அண்ணாமலை ஆரூர் ஆகிய ஊர்களில் எழுந்தருளிய தலைவனும் ஆகிய சிவபிரான் மார்ச்சனை பொருந்திய முழவின் ஒலி இடைவிடாமல் கேட்கும், மாட வீடுகளுடன் கூடிய நெடிய வீதிகளை உடைய அகன்ற இடப் பரப்புடைய கடலையடுத்த நாகைக் காரோணத்தில் எழுந்தருளி யுள்ளான்.

திருக்கடனாகைக்காரோணம்

பாரோர் தொழவிண்ணோர் பணியம் மதின்மூன்றும்
ஆரா ரழலூட்டி யடியார்க் கருள்செய்தான்
தேரார் விழவோவாச் செல்வன் றிரைசூழ்ந்த
காரார் கடனாகைக் காரோ ணத்தானே. **#918**

மண்ணக மக்கள் தொழவும், விண்ணவர் பணியவும் அனைவர்க்கும் நெருங்குதற்கரிய அழலை ஊட்டி அழித்து அடியவர்க்கு அருள் செய்து,

தேரோட்டமாகிய சிறப்பு விழா இடைவிடாது நிகழும் சிறப்பினை ஏற்றருளும் செல்வன் ஆகிய சிவபெருமான், அலைகள் நிரம்பிய, மேகங்கள் பொருந்திய கடலின் கரையில் விளங்கும் நாகைக் காரோணம் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ளான்.

திருக்கடனாகைக்காரோணம்

மொழிசூழ் மறைபாடி முதிருஞ் சடைதன்மேல்
அழிசூழ் புனலேற்ற வண்ணல் லணியாய
பழிசூழ் விலராய பத்தர் பணிந்தேத்தக்
கழிசூழ் கடனாகைக் காரோ ணத்தானே. **#919**

பொருள் பொதிந்த சொற்கள் நிரம்பிய வேதங்களைப் பாடிக் கொண்டு, முதிர்ந்த தன் சடைமுடி மேல் உலகை அழிக்க எண்ணி வந்த கங்கை நதியை ஏற்றருளிய தலைவனாகிய சிவபெருமான், அழகிய செயல்களோடு பழி பாவங்களை மனத்திலும் கருதாதவர்களாகிய அடியவர்கள் பணிந்து போற்ற உப்பங்கழிகள் சூழ்ந்த கடற்கரையை அடுத்துள்ள நாகைக் காரோணத்தில் எழுந்தருளியுள்ளான்.

திருக்கடனாகைக்காரோணம்

ஆணும் பெண்ணுமா யடியார்க் கருணல்கிச்
சேணின் றவர்க்கின்னஞ் சிந்தை செயவல்லான்
பேணி வழிபாடு பிரியா தெழுந்தொண்டர்
காணுங் கடனாகைக் காரோ ணத்தானே. **#920**

ஆணும் பெண்ணுமான வடிவோடு காட்சி தந்து, அடியவர்களுக்கு அருள் வழங்கி, வானுலகில் வாழும் தேவர்கட்கு மேலும் அருள் புரிய விரும்பும் மனத்தை உடையனாய் விளங்கும் சிவபிரான் அன்புடன் வழிபாடு செய்து பிரியாது வாழும் தொண்டர்கள் காணும் வண்ணம் கடற்கரையில் விளங்கும் நாகைக் காரோணத்தில் எழுந்தருளியுள்ளான்.

திருக்கடனாகைக்காரோணம்

ஏனத் தெயிறோடும் மரவ மெய்பூண்டு
வானத் திளந்திங்கள் வளருஞ் சடையண்ணல்
ஞானத் துரைவல்லார் நாளும் பணிந்தேத்தக்
கானற் கடனாகைக் காரோ ணத்தானே. **#921**

பன்றியின் பல், பாம்பு ஆகியவற்றை மெய்யிற் பூண்டு, வானகத்தே இயங்கும் இளம்பிறை தங்கும் சடைமுடியை உடைய தலைமையாளனாகிய சிவபெருமான், மெய்யறிவு மயமான சொற்களைப் பேசவல்ல அடியவர்கள் நாள்தோறும் பணிந்து போற்றச் சோலைகள் சூழ்ந்த கடற்கரையை அடுத்துள்ள நாகைக்காரோணத்தில்

எழுந்தருளியுள்ளான்.

திருக்கடனாகைக்காரோணம்

அரையா ரழனாக மக்கோ டசைத்திட்டு
விரையார் வரைமார்பின் வெண்ணீ றணியண்ணல்
வரையார் வனபோல வளரும் வங்கங்கள்
கரையார் கடனாகைக் காரோ ணத்தானே. **#922**

இடையில் அழல்போலும் கொடிய நாகத்தைச் சங்கு மணிகளோடு இணைத்துக் கட்டிக் கொண்டு, மணம் கமழும் மலை போன்ற மார்பில் திருவெண்ணீறு அணிந்துள்ள தலைமையாளனாகிய சிவபெருமான், மலைகள் மிதந்து வருவன போலக் கப்பல்கள் கரையைச் சாரும் கடலை அடுத்துள்ள நாகைக் காரோணத்தில் எழுந்தருளியுள்ளான்.

திருக்கடனாகைக்காரோணம்

வலங்கொள் புகழ்பேணி வரையா லுயர்திண்டோள்
இலங்கைக் கிறைவாட வடர்த்தங் கருள்செய்தான்
பலங்கொள் புகழ்மண்ணிற் பத்தர் பணிந்தேத்தக்
கலங்கொள் கடனாகைக் காரோ ணத்தானே. **#923**

மேலும் மேலும் வெற்றிகளால் பெற்ற புகழால் தருக்கி, மலை போன்று உயர்ந்த திண்ணிய தோளால் கயிலை மலையை எடுத்த இராவணனை வாடுமாறு அடர்த்துப்பின் அவனுக்கு அருள்செய்த சிவபிரான், வாழ்வின் பயனாகக் கொள்ளத் தக்க புகழை உடையவர்களாகிய அடியவர்கள் மண்ணுலகில் தன்னைப் பணிந்து ஏத்த மரக்கலங்கள் பொருந்திய கடற்கரையை அடுத்து விளங்கும் நாகைக்காரோணத்தில் எழுந்தருளியுள்ளான்.

திருக்கடனாகைக்காரோணம்

திருமா லடிவீழத் திசைநான் முகனேத்தப்
பெருமா னெனநின்ற பெம்மான் பிறைச்சென்னிச்
செருமால் விடையூருஞ் செல்வன் றிரைசூழ்ந்த
கருமால் கடனாகைக் காரோ ணத்தானே. **#924**

திருமால் தன் திருவடியில் விழுந்து வணங்கவும், நான்முகன் ஏத்தவும், தானே முழுமுதற் பரம்பொருள் என உணர்ந்து அழலுருவாய் ஓங்கி நின்ற பெருமானும், பிறை மதியை முடியிற்சூடிப் பகைவரை எதிர்க்க வல்ல விடையேற்றை ஊர்ந்து வரும் செல்வனும் ஆகிய சிவபெருமான், அலைகளால் சூழப்பட்ட கரிய பெரிய கடற்கரையில் விளங்கும் நாகைக் காரோணத்தில் எழுந்தருளி யுள்ளான்.

திருக்கடனாகைக்காரோணம்

நல்லா ரறஞ்சொல்லப் பொல்லார் புறங்கூற
அல்லா ரலர்தூற்ற வடியார்க் கருள்செய்வான்
பல்லார் தலைமாலை யணிவான் பணிந்தேத்தக்
கல்லார் கடனாகைக் காரோ ணத்தானே. **#925**

நல்லவர்கள் அறநெறிகளைப் போதிக்கவும், பொல்லாதவர்களாகிய சமணர்கள் புறங்கூறவும், நல்லவரல்லாத புத்தர்கள் பழி தூற்றவும், தன் அடியவர்க்கு அருள்புரியும் இயல்பினன் ஆகிய இறைவன் சுடுகாட்டில் கிடக்கும் பலர் தலையோடுகளை மாலைகளாகக் கோத்து அணிந்தவனாய்ப் பலரும் பணிந்து ஏத்த, கல் என்னும் ஒலியோடு கூடிய கடற்கரையில் விளங்கும் நாகைக் காரோணத்தில் எழுந்தருளியுள்ளான்.

திருக்கடனாகைக்காரோணம்

கரையார் கடனாகைக் காரோ ணம்மேய
நரையார் விடையானை நவிலுஞ் சம்பந்தன்
உரையார் தமிழ்மாலை பாடும் மவரெல்லாம்
கரையா வுருவாகிக் கலிவா னடைவாரே. **#926**

இடைவிடாது ஒலி செய்யும் கடலின் கரையில் விளங்கும் நாகைக் காரோணத்தில் எழுந்தருளிய வெண்மை நிறம் பொருந்திய விடை ஊர்தியைக் கொண்டுள்ள இறைவனை ஞானசம்பந்தன் பரவிப் போற்றிய புகழ்பொருந்திய இத்தமிழ் மாலையைப் பாடிப் பரவுபவர் அனைவரும் அழியாத வடிவத்தோடு ஆரவாரம் மிக்க வானுலகை அடைவார்கள்.

திருநல்லம்

திருநல்லம்

திருநல்லம்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : உமாமகேசுவரர்.
தேவியார் : மங்களநாயகியம்மை.

கல்லா னிழன்மேய கறைசேர் கண்டாவென்
றெல்லா மொழியாலு மிமையோர் தொழுதேத்த
வில்லா லரண்மூன்றும் வெந்து விழவெய்த
நல்லா னமையாள்வா னல்ல நகரானே. **#927**

இமையவர்கள் கல்லால மர நிழலில் எழுந்தருளிய கறை பொருந்திய கண்டத்தை உடையவனே என்று தமக்குத் தெரிந்த அனைத்து மொழிகளாலும் தோத்திரம் செய்து தொழுது ஏத்த, மேரு வில்லால் அசுரர்தம் மூன்று அரண்களும் வெந்து விழுமாறு செய்தருளிய பெரியவனாகிய சிவபிரான் நம்மையாட்கொள்ளுதற் பொருட்டு நல்லம் என்னும் நகரில் எழுந்தருளியுள்ளான்.

திருநல்லம்

தக்கன் பெருவேள்வி தன்னி லமரரைத்
துக்கம் பலசெய்து சுடர்பொற் சடைதாழக்
கொக்கின் னிறகோடு குளிர்வெண் பிறைசூடும்
நக்கன் னமையாள்வா னல்ல நகரானே. **#928**

தன்னை இகழ்ந்து தக்கன் செய்த பெரிய வேள்விக்குச் சென்ற அமரர்களை, அவ்வேள்விக் களத்திலேயே பலவகையான துக்கங்களை அடையச் செய்தவனும், ஒளிவிடும் பொன்போன்ற சடைகள் தாழ்ந்து தொங்கக் கொக்கின் இறகோடு குளிர்ந்த வெண்மையான பிறையைச் சூடியிருப்பவனும் திகம்பரனுமாய இறைவன் நம்மை ஆளுதற்பொருட்டு நல்லம் என்னும் நகரில் எழுந்தருளியுள்ளான்.

திருநல்லம்

அந்தி மதியோடு மரவச் சடைதாழ
முந்தி யனலேந்தி முதுகாட் டெரியாடி
சிந்தித் தெழவல்லார் தீரா வினைதீர்க்கும்
நந்தி நமையாள்வா னல்ல நகரானே. **#929**

மாலைக் காலத்தில் தோன்றும் பிறை மதியோடு பாம்பையும் அணிந்த

சடைமுடி தாழ்ந்து தொங்க, முற்பட்ட ஊழிக் காலத்தில் கையில் அனலேந்திப் பழமையான சுடுகாட்டகத்தே எரியில் நின்றாடித் தன்னைச் சிந்தித்தே எச்செயலையும் தொடங்கும் அன்பர்களின் தீராத வினைகள் எல்லாவற்றையும் தீர்த்தருளும் நந்தியாகிய சிவபெருமான், நம்மை ஆட்கொண்டருளுதற் பொருட்டு நல்லம் என்னும் நகரில் எழுந்தருளியுள்ளான்.

திருநல்லம்

குளிரும் மதிசூடிக் கொன்றைச் சடைதாழ
மிளிரும் மரவோடு வெண்ணூ றிகழ்மார்பில்
தளிருந் திருமேனித் தையல் பாகமாய்
நளிரும் வயல்சூழ்ந்த நல்ல நகரானே. **#930**

குளிர்ந்த பிறை மதியைச் சூடி, கொன்றை மலர்களை அணிந்துள்ள சடைகள் தாழ்ந்து தொங்க விளங்கும் பாம்போடு பூணநூல் திகழும் மார்பினாய்த் தளிர் போன்ற திருமேனியை உடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்ட சிவபிரான் குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த நல்லம் என்னும் நகரில் எழுந்தருளியுள்ளான்.

திருநல்லம்

மணியார் திகழ்கண்டம் முடையான் மலர்மல்கு
பிணிவார் சடையெந்தை பெருமான் கழல்பேணித்
துணிவார் மலர்கொண்டு தொண்டர் தொழுதேத்த
நணியா னமையாள்வா னல்ல நகரானே. **#931**

நீல மணி போன்ற விளங்கிய கண்டத்தினை உடையவனும், மலர்கள் நிறைந்த வளைத்துக் கட்டப்பட்ட நீண்ட சடைமுடியினனும், எமக்குத் தந்தையானவனும் ஆகிய பெருமான் மனத்துணிவோடு மலர் கொண்டு தன் திருவடிகளை விரும்பித் தொழுதேத்தவும் நம்மை ஆட்கொண்டருளவும் நண்ணிய நிலையினனாய் நல்லம் நகரில் எழுந்தருளியுள்ளான்.

திருநல்லம்

வாசம் மலர்மல்கு மலையான் மகளோடும்
பூசுஞ் சுடுநீறு புனைந்தான் விரிகொன்றை
ஈசன் னெனவுள்கி யெழுவார் வினைகட்கு
நாசன் னமையாள்வா னல்ல நகரானே. **#932**

மணம் கமழ்கின்ற மலர்களைச் சூடிய மலையரையன் மகளாகிய பார்வதி தேவியோடும், பூசத்தக்கதாய்ச் சுட்டெடுத்த திருநீறு அணிந்தவனாய், இதழ் விரிந்த கொன்றை மாலையைப் புனைந்தவனாய், ஈசன் எனத்

தன்னை நினைந்தேத்துபவர்களின் வினைகளைப் பொடி செய்பவனாய், விளங்கும் இறைவன், நம்மை ஆட்கொண்டருள நல்லம் என்னும் நகரில் எழுந்தருளியுள்ளான்.

திருநல்லம்

அங்கோல் வளைமங்கை காண வனலேந்திக்
கொங்கார் நறுங்கொன்றை சூடிக் குழகாக
வெங்கா டிடமாக வெந்தீ விளையாடும்
நங்கோ னமையாள்வா னல்ல நகரானே. **#933**

அழகிய திரண்ட வளையல்களை அணிந்த உமையம்மை காணக் கையில் அனல் ஏந்தி, தேன் நிறைந்த மணமுடைய கொன்றை மலர்மாலை சூடி, இளமைக் கோலத்தில் சுடுகாட்டை அரங்காகக் கொண்டு எரியாடும் நம் தலைவனாகிய சிவபிரான், நம்மை ஆட்கொள்ளுதற் பொருட்டு நல்லம் என்னும் நகரில் எழுந்தருளியுள்ளான்.

திருநல்லம்

பெண்ணார் திருமேனிப் பெருமான் பிறைமல்கு
கண்ணார் நுதலினான் கயிலை கருத்தினால்
எண்ணா தெடுத்தானை யிறையே விரலூன்றி
நண்ணார் புரமெய்தா னல்ல நகரானே. **#934**

உமையம்மையைத் திருமேனியின் ஒரு கூற்றிலே கொண்டுள்ள பெருமானும், பிறை மதியை முடியில் சூடிக் கண்பொருந்திய நுதலினனாய் விளங்குவோனும், இறைவனது வரம் பிலாற்றலை மனத்தால் எண்ணாது கயிலை மலையை எடுத்த இராவணனைச் சிறிதே விரலூன்றி அடர்த்தவனும், பகைவர்தம் முப் புரங்களை எய்தழித்தவனுமாகிய சிவபிரான், நம்மை ஆட்கொண்டருள, நல்லம் என்னும் நகரில் எழுந்தருளியுள்ளான்.

திருநல்லம்

நாகத் தணையானு நளிர்மா மலரானும்
போகத் தியல்பினாற் பொலிய வழகாகும்
ஆகத் தவளோடு மமர்ந்தங் கழகாரும்
நாகம் மரையார்த்தா னல்ல நகரானே. **#935**

பாம்பணையில் துயிலும் திருமாலும், தண்ணிய, தாமரை மலர்மேல் எழுந்தருளியுள்ள நான்முகனும், திருமகள்கலைமகளிரோடு போகம் பொருந்தி வாழ, தானும் மலை மகளோடு கூடிப் போகியாய் இருந்து அருள் செய்த, அழகு பொருந்திய பாம்பை இடையில் அரைநாணாகக்

கட்டிக் கொண்டிருப்பவன் ஆகிய சிவபிரான், நம்மை ஆள நல்லம் என்னும் நகரிடை எழுந்தருளியுள்ளான்.

திருநல்லம்

குறியில் சமணோடு குண்டர் வண்டேரர்
அறிவில் லுரைகேட்டடங் கவமே கழியாதே
பொறிகொள் ளரவார்த்தான் பொல்லா வினைதீர்க்கும்
நறைகொள் பொழில்சூழ்ந்த நல்ல நகரானே. **#936**

குறிக்கோள் இல்லாத சமணர்களும் புத்தரும் கூறும் அறிவற்ற சொற்களைக் கேட்டு நாள்களைப் பயனற்றனவாய்ப் போக்காதீர், புள்ளிகளோடு கூடிய பாம்பினை இடையிற் கட்டிய பரமன், நம் பொல்லா வினைகளைத் தீர்க்கும் நிலையில் தேன் நிறைந்த பொழில்கள் சூழ்ந்த நல்லம் என்னும் நகரிடை எழுந்தருளியுள்ளான்.

திருநல்லம்

நலமார் மறையோர்வாழ் நல்ல நகர்மேய
கொலைசேர் மழுவானைக் கொச்சை யமர்ந்தோங்கு
தலமார் தமிழ்ஞான சம்பந் தன்சொன்ன
கலைக ளிவைவல்லார் கவலை கழிவாரே. **#937**

நன்மைகள் நிறைந்த வேதங்களை ஓதும் அந்தணர்கள் வாழும் நல்லம் நகரில் எழுந்தருளிய, கொல்லும் தொழில் வல்ல மழுவைக் கையில் ஏந்திய சிவபிரானை, கொச்சை வயம் என்னும் புகழுடைய தலத்தில் வாழ்ந்த தமிழ் ஞானசம்பந்தன், போற்றிப் பாடிய கலை நலம் வாய்ந்த இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர், கவலைகள் நீங்கப் பெறுவர்.

திருநல்லூர்

திருநல்லூர்

திருநல்லூர்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பெரியாண்டேசுவரர்.
தேவியார் : திரிபுரசுந்தரியம்மை.

கொட்டும் பறைசீராற் குழும வனலேந்தி
நட்டம் பயின்றாடு நல்லூர்ப் பெருமானை
முட்டின்றிருபோது முனியா தெழுந்தன்பு
பட்ட மனத்தார்க ளறியார் பாவமே. **#938**

பறை கொட்டும் சீருக்கு ஏற்பப் பூதகணங்கள் முதலியன சூழக் கையின்கண் அனலேந்தி விருப்போடு நடனம் ஆடும் நல்லூர்ப் பெருமானைக் காலை மாலை இருபொழுதும் தவறாமல் வெறுப்பின்றி எழுச்சியோடு வணங்கி அன்பு பூண்ட மனத்தார்களைப் பாவம் அணுகாது.

திருநல்லூர்

ஏறி லெருதேறு மெழிலா யிழையோடும்
வேறும் முடனுமாம் விகிர்த ரவரென்ன
நாறும் மலர்ப்பொய்கை நல்லூர்ப் பெருமானைக்
கூறும் மடியார்கட் கடையா குற்றமே. **#939**

ஊர்தியாக எருது ஒன்றிலேயே ஏறுபவனும், அழகிய உமையம்மையோடு ஒன்றாகவும் வேறாகவும் விளங்கும் தன்மையை உடையவனுமாகிய சிவபெருமான், அன்பர்கள் எண்ணுமாறு மணங்கமழும் மலர்ப் பொய்கை சூழ்ந்த நல்லூரில் விளங்குகின்றான். அப்பெருமான் புகழைக் கூறும் அடியவர்களைக் குற்றங்கள் அடையா.

திருநல்லூர்

சூடு மிளந்திங்கட் சுடர்பொற் சடைதாழ
ஓடுண் கலனாக வூரு ரிடுபிச்சை
நாடுந் நெறியானை நல்லூர்ப் பெருமானைப்
பாடும் மடியார்கட் கடையா பாவமே. **#940**

இளம்பிறை, முடியிற்சூடி, ஒளி விடுகின்ற பொன் போன்ற சடைகள் தாழ, தலையோட்டையே உண்கலனாகக் கொண்டு, ஒவ்வோர் ஊரிலும் மகளிர் இடும் பிச்சையை நாடிச் செல்லும் அறநெறியாளனாகிய

நல்லூர்ப் பெருமானைப் பாடும் அடியவர்களைப் பாவங்கள் அடையா.

திருநல்லூர்

நீத்த நெறியானை நீங்காத் தவத்தானை
நாத்த நெறியானை நல்லூர்ப் பெருமானைக்
காத்த நெறியானைக் கைகூப் பித்தொழு
தேத்து மடியார்கட் கில்லை யிடர்தானே. **#941**

உலகியல் நெறி முறைகளைத் தான் பின்பற்றாது நீத்தவனும், நீங்காத தவத்தை உடையவனும், கட்டுப்பாடுகளுடைய நெறிகளை வகுத்து அளித்தவனும், அந்நெறி நிற்பாரைக் காத்தருள்பவனும் ஆகிய நல்லூர்ப் பெருமானைக் கைகுவித்துத் தொழுதேத்தும் அடியவர்கட்கு இடரில்லை.

திருநல்லூர்

அகத் துமைகேள்வ னரவச் சடைதாழ
நாகம் மசைத்தானை நல்லூர்ப் பெருமானைத்
தாகம் புகுந்தண்மித் தாள்கள் தொழுந்தொண்டர்
போக மனத்தராய்ப் புகழத் திரிவாரே. **#942**

தனது திருமேனியில், கூறாகக் கொண்டுள்ள உமையம்மையின் கணவனும் பாம்பணிந்த சடைகள் தாழ்ந்து தொங்க, இடையில் பாம்பைக் கச்சாகக் கட்டியவனும் ஆகிய நல்லூர்ப் பெருமானை, வேட்கை மிக்கவராய் அணுகி அவன் திருவடிகளைத் தொழும் தொண்டர்கள் இன்பம் பொருந்திய மனத்தவராய்ப் பலரும் புகழ உலகில் வாழ்வார்.

திருநல்லூர்

கொல்லுங் களியானை யுரிபோர்த் துமையஞ்ச
நல்ல நெறியானை நல்லூர்ப் பெருமானைச்
செல்லு நெறியானைச் சேர்ந்தா ரிடர்தீரச்
சொல்லு மடியார்க ளறியார் துக்கமே. **#943**

தன்னைக் கொல்ல வந்த மதம் பொருந்திய யானையை, உமையம்மை அஞ்சுமாறு கொன்று, அதன் தோலைப் போர்த்த நல்ல நெறியாளனாய், நல்லூர்ப் பெருமானாய், எல்லோரும் அடையத்தக்க முத்திநெறியாளனாய் விளங்கும் சிவபிரானை அடைந்து, தங்களது அரிய துன்பங்கள் தீருமாறு புகழ்ந்து போற்றும் அடியவர்கள், துக்கம் அறியார்.

திருநல்லூர்

எங்கள் பெருமானை யிமையோர் தொழுதேத்தும்

நங்கள் பெருமானை நல்லூர் பிரிவில்லாத்
தங்கை தலைக்கேற்றி யாளென் றடிநீழல்
தங்கு மனத்தார்கள் தடுமாற் றறுப்பாரே. **#944**
எங்கள் தலைவனும், தேவர்களால் தொழுது போற்றப்படும் நம் பெருமானும், நல்லூரில் பிரிவின்றி எழுந்தருளியிருக்கும் தலைவனுமாய இறைவனை அடைந்து, தம் கைகளை உச்சி மேல் குவித்து, நாங்கள் உனக்கு அடிமை என்று கூறி, அவனது திருவடி நீழலில் ஒன்றி வாழும் மனத்தவர்கள் தடுமாற்றம் இலராவர்.

<u>திருநல்லூர்</u>

காம னெழில்வாட்டிக் கடல்சூ ழிலங்கைக்கோன்
நாம மிறுத்தானை நல்லூர்ப் பெருமானை
ஏம மனத்தாரா யிகழா தெழுந்தொண்டர்
தீப மனத்தார்க ளறியார் தீயவே. **#945**
மன்மதனது உருவ அழகை அழித்துக் கடல் சூழ்ந்த இலங்கை மன்னனாகிய இராவணனது புகழைக் கெடுத்து, விளங்கும் நல்லூரில் எழுந்தருளிய பெருமானை, பாதுகாப்புக் கொண்ட மனத்தவர்களாய் இகழாது அவனைக் காண எழும் தொண்டர்கள், தீபம் போன்ற ஞானஒளி நிலைத்த மனம் உடையவராவர். தீயனவற்றை அவர்கள் அறியார்.

<u>திருநல்லூர்</u>

வண்ண மலரானும் வைய மளந்தானும்
நண்ண லரியானை நல்லூர்ப் பெருமானைத்
தண்ண மலர்தூவித் தாள்க டொழுதேத்த
எண்ணு மடியார்கட் கில்லை யிடுக்கணே. **#946**
செந்தாமரையில் விளங்கும் பிரமனும், உலகை அளந்த திருமாலும், நண்ணுதற்கு அரியவனாய் விளங்கும் நல்லூர்ப் பெருமானை, குளிர்ந்த மலர்களைத்தூவி, அவன் திருவடிகளைத் தொழுது வணங்க எண்ணும் அடியவர்களுக்கு, இடுக்கண் இல்லை.

<u>திருநல்லூர்</u>

பிச்சக் குடைநீழற் சமணர் சாக்கியர்
நிச்ச மலர்தூற்ற நின்ற பெருமானை
நச்சு மிடற்றானை நல்லூர்ப் பெருமானை
எச்சு மடியார்கட் கில்லை யிடர்தானே. **#947**
மயிற்பீலியாலாகிய குடை நீழலில் திரியும் சமணர்களும், புத்தர்களும் நாள்தோறும் பழி தூற்றுமாறு நின்ற பெருமானாய், நஞ்சு பொருந்திய

கண்டத்தை உடைய நல்லூர்ப்பெருமானாய் விளங்கும் சிவபிரானை, ஏத்தும் அடியவர்களுக்கு இடரில்லை.

திருநல்லூர்

தண்ணம் புனற்காழி ஞான சம்பந்தன்
நண்ணும் புனல்வேலி நல்லூர்ப் பெருமானை
வண்ணம் புனைமாலை வைக லேத்துவார்
விண்ணுந் நிலனுமாய் விளங்கும் புகழாரே. **#948**

குளிர்ந்த நீரால் சூழப்பட்ட சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன், பொருந்திய நீரை வேலியாக உடைய நல்லூரில் விளங்கும் பெருமான் இயல்புகளைப் புனைந்து பாடிய இத்திருப்பதிகத்தை நாள்தோறும் சொல்லித் துதிப்பவர் விண்ணும் மண்ணும் விளங்கும் புகழாளர் ஆவர்.

திருவடுகூர்

திருவடுகூர்

திருவடுகூர்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வடுகேசுவரர்.
தேவியார் : வடுவகிர்க்கண்ணியம்மை.

சுடுகூ ரெரிமாலை யணிவர் சுடர்வேலர்
கொடுகூர் மழுவாளொன் றுடையார் விடையூர்வர்
கடுகூர் பசிகாமங் கவலை பிணியில்லார்
வடுகூர் புனல்சூழ்ந்த வடுகூ ரடிகளே. **#949**

சுடும் தன்மை மிக்க தீப மாலையை அணிபவரும், ஒளி பொருந்திய சூலத்தினரும், கொடிய மழுவாயுதம் ஒன்றைக் கையில் உடையவரும், விடையை ஊர்ந்து வருபவரும், நீர் வளம் மிக்க வடுகூர் இறைவர் ஆவார். மிக்க பசி காமம் கவலை பிணி ஆகியன இல்லாதவரும் ஆவர்.

திருவடுகூர்

பாலுந் நறுநெய்யுந் தயிரும் பயின்றாடி
ஏலுஞ் சுடுநீறு மென்பு மொளிமல்கக்
கோலம் பொழிற்சோலைக் கூடி மடவன்னம்
ஆலும் வடுகூரி லாடும் மடிகளே. **#950**

பால், நறுமணம் மிக்க நெய், தயிர் ஆகியவற்றை விரும்பி ஆடி, பொருந்துவதான வெண்ணீறு, எம்புமாலை ஆகியவற்றை ஒளி மல்க அணிந்து அழகிய பொழில்களிலும் சோலைகளிலும். வாழும் அன்னங்கள் கூடி ஆரவாரிக்கும் வடுகூரில் நம் அடிகளாகிய இறைவர் மகிழ்வோடு ஆடுகின்றார்.

திருவடுகூர்

சூடு மிளந்திங்கட் சுடர்பொற் சடைதன்மேல்
ஓடுங் களியானை யுரிபோர்த் துமையஞ்ச
ஏடு மலர்மோந்தங் கெழிலார் வரிவண்டு
பாடும் வடுகூரி லாடும் மடிகளே. **#951**

ஒளி பொருந்திய பொன் போன்ற சடைமுடிமேல் இளந்திங்களைச் சூடி, மதம் கொண்டு தன்பால் ஓடிவந்த யானையை, உமையம்மை அஞ்சக் கொன்று, அதன் தோலைப் போர்த்து, அழகு பொருந்திய வரி வண்டுகள் இதழ்களோடு கூடிய மலர்களை முகர்ந்து தேனுண்டு பாடும் வடுகூரில்,

அடிகள் நடனம் ஆடுவர்.

திருவடுகூர்

துவரும் புரிசையுந் துதைந்த மணிமாடம்
கவர வெரியோட்டிக் கடிய மதிலெய்தார்
கவரு மணிகொல்லைக் கடிய முலைநல்லார்
பவரும் வடுகூரி லாடும் மடிகளே. **#952**

செந்நிறமும், மதிலும் செறிந்த அழகிய மாடங்களை அழிக்குமாறு தீயைச் செலுத்தி அம்மதில்கள் அழியுமாறு அம்பு எய்த சிவபெருமானார், காவல் பொருந்திய முலையாராகிய பெண் கொடிகள் முல்லைநிலத்தில் கைகளால் இரத்தினங்களைப் பொறுக்கி எடுக்கும் வடுகூரில் நடம்பயிலும் அடிகளாவர்.

திருவடுகூர்

துணியா ருடையாடை துன்னி யரைதன்மேல்
தணியா வழனாகந் தரியா வகைவைத்தார்
பணியா ரடியார்கள் பலரும் பயின்றேத்த
அணியார் வடுகூரி லாடும் மடிகளே. **#953**

துணிக்கப் பெற்றதாகிய கோவண ஆடையை இடையிலே தரித்து அதன்மேல் தீப்போன்ற விட வெம்மை தணியாத நாகத்தை அழகுறத் தரித்தவராகிய அடிகள் அடியவர் பலரும் பணிந்து பரவி வாழ்த்த அழகிய வடுகூரில் ஆடியருள்கின்றார்.

திருவடுகூர்

தளருங் கொடியன்னா டன்னோ டுடனாகிக்
கிளரு மரவார்த்துக் கிளரு முடிமேலோர்
வளரும் பிறைசூடி வரிவண் டிசைபாட
ஒளிரும் வடுகூரி லாடும் மடிகளே. **#954**

சுமை பொறுக்காது தள்ளாடும் கொடி போன்றவளாகிய உமையம்மையோடு கூடி, விளங்கும் பாம்பினை இடையிலே கட்டிக்கொண்டு விளக்கம் பொருந்திய முடிமேல் வளரும் பிறைமதி ஒன்றைச் சூடி, வரிகள் பொருந்திய வண்டுகள் இசைபாட பலராலும் நன்கறியப்பட்ட வடுகூரில் அடிகளாகிய பெருமான் ஆடியருள்கின்றார்.

திருவடுகூர்

நெடியர் சிறிதாய நிரம்பா மதிசூடும்
முடியர் விடையூர்வர் கொடியர் மொழிகொள்ளார்
கடிய தொழிற்காலன் மடிய வுதைகொண்ட

அடியர் வடுகூரி லாடும் மடிகளே. #955
வடுகூரில் ஆடும் அடிகள் பேருருவம் கொள்பவர். சிறிதான கலைநிரம்பாத பிறை மதியைச் சூடும் முடியை உடையவர். விடையை ஊர்ந்து வருபவர். கொடியவர் மொழிகளை ஏற்றுக் கொள்ளாதவர். கொல்லும் தொழிலைச் செய்யும் காலன் மடியுமாறு உதைத்தருளிய திருவடியினர்.

திருவடுகூர்

பிறையு நெடுநீரும் பிரியா முடியினார்
மறையும் பலபாடி மயானத் துறைவாரும்
பறையு மதிர்குழலும் போலப் பலவண்டாங்
கறையும் வடுகூரி லாடும் மடிகளே. #956
அதிர்கின்ற பறையும் வேய்ங்குழலும் போலப் பல வண்டுகள் ஒலிக்கும் சோலைகளை உடைய வடுகூரில் ஆடும் அடிகள், இளம் பிறை, பெருகிய கங்கை நீர் ஆகியன பிரியாத திருமுடியை உடையவர் வேதங்களில் உள்ள சந்தங்கள் பலவற்றையும் பாடிக்கொண்டு இடுகாட்டில் உறைபவர்.

திருவடுகூர்

சந்தம் மலர்வேய்ந்த சடையின் னிடைவிம்மு
கந்தம் மிகுதிங்கட் சிந்து கதிர்மாலை
வந்து நயந்தெம்மை நன்று மருள்செய்வார்
அந்தண் வடுகூரி லாடும் மடிகளே. #957
அழகு தண்மை ஆகியவற்றை உடைய வடுகூரில் ஆடும் அடிகள் அழகிய மலர்கள் வேய்ந்த சடையின்கண் பெருகி எழும் மணம் மிகும் பிறை மதி வெளியிடும் கிரணங்களை உடையமாலை நேரத்தில் வந்து விரும்பி எமக்கு நன்றாக அருள் செய்வார்.

திருவடுகூர்

திருமா லடிவீழத் திசைநான் முகனாய
பெருமா னுணர்கில்லாப்பெருமா னெடுமுடிசேர்
செருமால் விடையூருஞ் செம்மான் றிசைவில்லா
அருமா வடுகூரி லாடும் மடிகளே. #958
எட்டுத் திசைகளிலும் ஒளி பரவுமாறு அரிய பெரிய வடுகூரில் நடனம் ஆடும் அடிகள். திருமால் தம் அடியை விரும்பித் தோண்டிச் செல்லவும், திசைக்கு ஒரு முகமாக நான்கு திருமுகங்களைக் கொண்ட பிரமனாகிய தலைவனும் அறிய முடியாத பெரிய முடியினை உடைய இறைவர், போர் செய்யத் தக்க விடைமீது எழுந்தருளிவரும் சிவந்த நிறத்தினர்.

திருவடுகூர்

படிநோன் பவையாவர் பழியில் புகழான
கடிநா ணிகழ் சோலை கமழும் வடுகூரைப்
படியா னசிந்தை மொழியார் சம்பந்தன்
அடிஞா னம்வல்லா ரடிசேர் வார்களே. **#959**

இவ்வுலகில் கூறப்படும் நோன்புகள் பலவற்றுக்கும் உரியவராய் விளங்கும் சிவபிரான் எழுந்தருளியதும், குற்றமற்ற புகழோடு கூடிய மணம் கமழும் சோலைகளால் மணம் பெறுவதுமான வடுகூரில் மேவிய இறைவன் திருவடிகளில் படிந்த மனத்தோடு ஞானசம்பந்தன் பாடிய இப்பதிகத் தமிழை ஓதி, அடிசேர்ஞானம் பெற்றார், திருவடிப்பேறு பெறுவர்.

திரு ஆப்பனூர்

திரு ஆப்பனூர்

திரு ஆப்பனூர்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஆப்பனூரீசுவரர்.
தேவியார் : அம்பிகையம்மை.

முற்றுஞ் சடைமுடிமேன் முதிரா விளம்பிறையன்
ஒற்றைப் படவரவ மதுகொண் டரைக்கணிந்தான்
செற்றமில் சீரானைத் திருவாப்ப னூரானைப்
பற்று மனமுடையார் வினைப்பற் றறுப்பாரே. **#960**

முடியைச் சூழ்ந்துள்ள சடையின்மேல் வளராத இளம் பிறையைச் சூடியவனும், ஒருதலைப் படத்தோடு கூடிய பாம்பை இடையில் கட்டியுள்ளவனும், வெறுத்தற்கியலாத புகழானும் ஆகிய திருஆப்பனூர் இறைவனைப் பற்றும் உள்ளமுடையோர் வினைத்தொடர்ச்சி நீங்கப் பெறுவர்.

திரு ஆப்பனூர்

குரவங் கமழ்குழலாள் குடிகொண்டு நின்றுவிண்ணோர்
விரவுந் திருமேனி விளங்கும் வளையெயிற்றின்
அரவ மணிந்தானை யணியாப்ப னூரானைப்
பரவு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. **#961**

குராமலர் மணம் கமழும் கூந்தலையுடைய உமையம்மை விளங்கும் திருமேனியோடு தேவர்கள் கூடி வணங்கத் திருஆப்பனூரில் விளங்கும் சிவபிரானைப் பரவும் மனம் உடையவர் வினைத் தொடர்ச்சி நீங்கப் பெறுவர்.

திரு ஆப்பனூர்

முருகு விரிகுழலார் மனங்கொ ளநங்கனைமுன்
பெரிது முனிந்துகந்தான் பெருமான் பெருங்காட்டின்
அரவ மணிந்தானை யணியாப்ப னூரானைப்
பரவு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. **#962**

மணம் கமழும் கூந்தலை உடைய மகளிரால் நினைக்கப் பெறும் காமனை, முற்காலத்தில் பெரிதும் சினந்து, பின் அவனுக்கு வாழ்வு தந்த பெருமானும், பெரிய காட்டகத்தே வாழும் அரவத்தை அணிந்தவனும், அழகிய ஆப்பனூரில் எழுந்தருளியவனுமாகிய இறைவனைப் பரவும்

மனம் உடையவர் வினைத் தொடர்ச்சி நீங்கப் பெறுவர்.

திரு ஆப்பனூர்

பிணியும் பிறப்பறுப்பான் பெருமான் பெருங்காட்டில்
துணியி னுடைதாழச் சுடரேந்தி யாடுவான்
அணியும் புனலானை யணியாப்ப னூரானைப்
பணியு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. **#963**

உடலைப் பற்றிய நோய்களையும் உயிரைப் பற்றிய பிறவி நோயையும் அறுத்தருளும் பெருமானும், சுடுகாட்டகத்தே கோவண ஆடையோடு அழலேந்தி ஆடுபவனும், கங்கையை முடியில் அணிந்தவனும் ஆகிய அழகிய ஆப்பனூர் இறைவனைப் பணியும் மனம் உடையவர் வினைத் தொடர்ச்சி நீங்கப் பெறுவர்.

திரு ஆப்பனூர்

தகர மணியருவித் தடமால் வரைசிலையா
நகர மொருமூன்று நலங்குன்ற வென்றுகந்தான்
அகர முதலானை யணியாப்ப னூரானைப்
பகரு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. **#964**

தகரம் எனப்படும் மணப் பொருளும் மணிகளும் கலந்து விழும் அருவிகளை உடைய மிகப் பெரிய மலையை, வில்லாகவளைத்து, அசுரர்களின் நகரங்களாக விளங்கிய முப்புரங்களும் பொடி படச் செய்து மகிழ்ந்தவனும், எல்லா எழுத்துக்களிலும் கலந்து நிற்கும் அகரம் போல எப்பொருள்களிலும் கலந்து நிற்பவனும், அழகிய ஆப்பனூரில் எழுந்தருளியிருப்பவனுமாகிய சிவபிரான் புகழைக் கூறும் மனம் உடையவர்கள் வினை மாசுகளினின்று நீங்கப் பெறுவர்.

திரு ஆப்பனூர்

ஓடுந் திரிபுரங்க ளுடனே யுலந்தவியக்
காட திடமாகக் கனல்கொண்டு நின்றிரவில்
ஆடுந் தொழிலானை யணியாப்ப னூரானைப்
பாடு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. **#965**

பறந்து திரியும் முப்புரங்களையும் ஒரு நொடியில் அழித்து, பொடிபடச் செய்து, சுடுகாட்டைத் தனது இடமாகக் கொண்டு, கனல் ஏந்தி நின்று, இரவில் திருநடனம் புரிவதைத் தொழிலாகக் கொண்டவனும், அழகிய ஆப்பனூரில் விளங்குபவனுமாகிய இறைவனைப் பாடும் மனம் உடையவர் வினைத் தொடர்ச்சி நீங்கப் பெறுவர்.

திரு ஆப்பனூர்

இயலும் விடையேறி யெரிகொண் மழுவீசிக்
கயலி னிணைக்கண்ணா ளொருபாற் கலந்தாட
இயலு மிசையானை யெழிலாப்ப னூரானைப்
பயிலு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. **#966**

மனம் போல் இயங்கும் விடைமிசை ஏறி, எரிதலைக் கொண்ட மழுவைச் சுழற்றிக் கொண்டு, கயல் போன்ற இரு விழிகளைக் கொண்ட உமையம்மை திருமேனியின் ஒருபால் இணைந்து மகிழ, இசை பாடி மகிழ்பவனாய் அழகிய ஆப்பனூரில் எழுந்தருளியுள்ள இறைவனைப் பாடுவதைத் தம் இயல்பாகக் கொண்ட மனம் உடையவர், வினை மாசு தீர்வர்.

<u>திரு ஆப்பனூர்</u>

கருக்கு மணிமிடறன் கதநாகக் கச்சையினான்
உருக்கு மடியவரை யொளிவெண் பிறைசூடி
அரக்கன் றிறலழித்தா னணியாப்ப னூரானைப்
பருக்கு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. **#967**

கரிதான நீலமணி போன்ற கண்டத்தை உடையவனும், சினம் பொருந்திய பாம்பைக் கச்சையாக அணிந்தவனும், அடியவர்களை மனம் உருகச் செய்பவனும், ஒளிபொருந்திய வெண்பிறையைச் சூடியவனும், இராவணனின் வலிமையை அழித்தவனும் ஆகிய அழகிய ஆப்பனூரில் எழுந்தருளிய இறைவனை, சுவைக்கும் மனம் உடையவர் வினை மாசு நீங்கப் பெறுவர்.

<u>திரு ஆப்பனூர்</u>

கண்ணன் கடிக்கமல மலர்மே லினிதுறையும்
அண்ணற் களப்பரிதாய் நின்றங் கடியார்மேல்
எண்ணில் வினைகளைவா னெழிலாப்ப னூரானைப்
பண்ணின் னிசைபகர்வார் வினைபற் றறுப்பாரே. **#968**

திருமால், மணம் பொருந்திய தாமரை மலர் மேல் இனிதாய் உறையும் பிரமன் ஆகியோரால், அளத்தற்கரியவனாய் நின்றவனும், அடியவர் மேல் வரும் எண்ணற்ற வினைகள் பலவற்றையும் களைபவனும் ஆகிய அழகிய ஆப்பனூரில் விளங்கும் இறைவனைப் பண் பொருந்த இசை பாடிப் போற்றுவார் வினை மாசு நீங்கப் பெறுவர்.

<u>திரு ஆப்பனூர்</u>

செய்ய கலிங்கத்தார் சிறுதட் டுடையார்கள்
பொய்யர் புறங்கூறப் புரிந்த வடியாரை
ஐய மகற்றுவா னணியாப்ப னூரானைப்

பைய நினைந்தெழுவார் வினைபற் றறுப்பாரே. **#969**
சிவந்த காவி ஆடை உடுத்த புத்தர்களும், சிறு தடுக்கை ஆடையாக உடுத்துக் கொண்டு திரியும் சமணர்களும் பொய்பேசிப் புறம் பேச, தன்னை விரும்பிய அடியவர்களின் விபரீத ஞானத்தைப் போக்கி, மெய்யுணர்வு நல்கும் அழகிய ஆப்பனூரில் விளங்கும் இறைவனை மெல்ல உள்குவார்களின் வினை மாசுகள் நீங்கும்.

திரு ஆப்பனூர்

அந்தண் புனல்வைகை யணியாப்ப னூர்மேய
சந்த மலர்க்கொன்றை சடைமே லுடையானை
நந்தி யடிபரவு நலஞான சம்பந்தன்
சந்த மிவைவல்லார் தடுமாற் றறுப்பாரே. **#970**
அழகிய குளிர்ந்த நீர் நிறைந்த வைகைக் கரையில் விளங்கும் அழகிய ஆப்பனூரில் எழுந்தருளிய அழகிய கொன்றை மலர் மாலையைச் சடைமேல் அணிந்துள்ள இறைவனை, சிவன் திருவடிகளையே பரவும் நல்ல ஞானசம்பந்தன் பாடிய சந்த இசையோடு கூடிய இத்திருப்பதிகப் பாடல்களை ஓதவல்லவர் நிலையான மெய்யறிவு பெறுவார்கள்.

திரு எருக்கத்தம்புலியூர்

திரு எருக்கத்தம்புலியூர்

திரு எருக்கத்தம்புலியூர்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நீலகண்டேசுரர்.
தேவியார் : நீலமலர்க்கண்ணம்மை.

படையார் தருபூதப் பகடா ருரிபோர்வை
உடையா னுமையோடு முடனா யிடுகங்கைச்
சடையா னெருக்கத்தம் புலியூர்த் தகுகோயில்
விடையா னடியேத்த மேவா வினைதானே. **#971**

படைகளாக அமைந்த பூத கணங்களை உடையவனும், யானையின் தோலைப் போர்வையாகக் கொண்டவனும், உமையம்மையோடு உடனாய் விளங்குபவனும், வந்து பொருந்திய கங்கையை ஏற்ற சடையை உடையவனும் ஆகிய எருக்கத்தம்புலியூரில் விளங்கும் தகுதி வாய்ந்த கோயிலில் எழுந்தருளிய விடை ஏற்றை உடைய பெருமான் திருவடிகளை ஏத்துவாரை, வினைகள் வந்து சாரா.

திரு எருக்கத்தம்புலியூர்

இலையார் தருசூலப் படையெம் பெருமானாய்
நிலையார் மதின்மூன்று நீறாய் விழவெய்த
சிலையா னெருக்கத்தம் புலியூர்த் திகழ்கோயில்
கலையா னடியேத்தக் கருதா வினைதானே. **#972**

இலை வடிவமாக அமைந்த சூலப்படையை உடையவனும், எம் பெருமானும், நிலைபெற்ற முப்புரங்களையும் நீறாய்ப் பொடிபடுமாறு கணை எய்த வில்லை உடையவனும், எருக்கத்தம்புலியூரில் விளங்கும் கோயிலில் மேவியிருப்பவனும் ஆகிய கலைகளின் வடிவான சிவபிரானின் திருவடிகளை ஏத்தி வாழ்த்துவோரை, வினைகள் கருதா.

திரு எருக்கத்தம்புலியூர்

விண்ணோர் பெருமானே விகிர்தா விடையூர்தீ
பெண்ணா ணலியாகும் பித்தா பிறைசூடீ
எண்ணா ரெருக்கத்தம் புலியூ ருறைகின்ற
அண்ணா வெனவல்லார்க் கடையா வினைதானே. **#973**

விண்ணவர் தலைவனே. வேறுபட்ட வடிவும் பண்பும் உடையவனே, விடைமீது ஏறிவருபவனே! பெண், ஆண், அலி என்னும் திணை பால்

பாகுபாடுகளைக் கடந்துள்ளவனே, பித்தனே, பிறை சூடியவனே, எல்லோராலும் எண்ணத்தகும் எருக்கத்தம் புலியூரில் உறைகின்ற தலைவனே என்றுரைத்துப் போற்ற வல்லவரை, வினைகள் அடையா.

திரு எருக்கத்தம்புலியூர்

அரையார் தருநாக மணிவா னலர்மாலை
விரையார் தருகொன்றை யுடையான் விடையேறி
வரையா னெருக்கத்தம் புலியூர் மகிழ்கின்ற
திரையார் சடையானைச் சேரத் திருவாமே. **#974**

இடையிலே பாம்பைப் பொருந்துமாறு அணிந்துள்ளவனும், மணம் கமழும் கொன்றை மலர் மாலையை அணிந்துள்ளவனும், விடைமீது ஏறி வருபவனும், கயிலை மலையைத் தனக்குரிய இடமாகக் கொண்டவனும், எருக்கத்தம்புலியூரில் மகிழ்ந்து உறைபவனும் ஆகிய அலைகள் வீசும் கங்கை நதியை, சடைமிசைத் தரித்த சிவபிரானைச் சேர்வோர்க்குச் செல்வங்கள் வந்து சேரும்.

திரு எருக்கத்தம்புலியூர்

வீறார் முலையாளைப் பாக மிகவைத்துச்
சீறா வருகாலன் சினத்தை யழிவித்தான்
ஏறா னெருக்கத்தம் புலியூ ரிறையானை
வேறா நினைவாரை விரும்பா வினைதானே. **#975**

வேறொன்றற்கில்லா அழகினை உடைய தனங்களைக் கொண்ட உமையம்மையை, இடப்பாகமாக சிறப்புடன் வைத்துக் கொண்டருளியவனும், சீறி வந்த காலனின் சினம் அடங்கச் செய்தவனும், இடப ஊர்தியை உடையவனும், எருக்கத்தம்புலியூரில் எழுந்தருளியுள்ள இறைவனும் ஆகிய சிவபிரானைத் தனித்திருந்து தியானிப்பவரை வினைகள் விரும்பா.

திரு எருக்கத்தம்புலியூர்

நகுவெண் டலையேந்தி நானாவிதம் பாடிப்
புகுவா னயம்பெய்யப் புலித்தோல் பியற்கிட்டுத்
தகுவா னெருக்கத்தம் புலியூர்த் தகைந்தங்கே
தொகுவான் கழலேத்தத் தொடரா வினைதானே. **#976**

சிரிக்கும் வெள்ளிய தலையோட்டைக் கையில் ஏந்திப் பலவிதமாகப் பாடிக் கொண்டு மகளிர் இடும் பிச்சையை ஏற்கப் புகுபவனாய்ப் புலித்தோலைத் தோளில் இட்டுக்கொண்டு தகுதிவாய்ந் தவனாய் எருக்கத்தம்புலியூரில் தங்கி அங்கே நிலைத்திருப்பவனாகிய இறைவன் கழல்களை ஏத்த வினைகள் தொடரா.

திரு எருக்கத்தம்புலியூர்

இப்பதிகத்தின் **7-**ம் செய்யுள் சிதைந்து போயிற்று. **#977**

திரு எருக்கத்தம்புலியூர்

ஆவா வெனவரக்க னலற வடர்த்திட்டுத்
தேவா வெனவருளார் செல்வங் கொடுத்திட்ட
கோவே யெருக்கத்தம் புலியூர் மிகுகோயில்
தேவே யெனவல்லல் தீர்தல் திடமாமே. **#978**

ஆ ஆ என்ற இரக்கக் குறிப்போடு இராவணன் அலறுமாறு அவனை அடர்த்து, பின் தேவா என அவன் வேண்ட அருள் நிறைந்த செல்வங்கள் பலவற்றை வழங்கியருளிய தலைவனே, எருக்கத்தம்புலியூரில் விளங்கும் சிறப்புமிக்க கோயிலில் எழுந்தருளும் தேவனே என்று போற்ற, நம் அல்லல்கள் தீர்தல் உறுதியாகும்.

திரு எருக்கத்தம்புலியூர்

மறையா னெடுமால்காண் பரியான் மழுவேந்தி
நிறையா மதிசூடி நிகழ்முத் தின்தொத்தே
இறையா னெருக்கத்தம் புலியூ ரிடங்கொண்ட
கறையார் மிடற்றானைக் கருதக் கெடும்வினையே. **#979**

வேதங்களை ஓதும் நான்முகனும், நெடுமாலும் காணுதற்கு அரியவனே, மழுவைக் கையில் ஏந்தியவனே, கலை நிறையாத பிறை மதியைச் சூடியவனே, முத்துக்களின் கொத்துப் போன்ற இறையோனே என்று போற்றி, எருக்கத்தம்புலியூரை இடமாகக் கொண்ட கறைமிடற்று அண்ணலை நினைந்தால், வினை கெடும்.

திரு எருக்கத்தம்புலியூர்

புத்த ரருகர்தம் பொய்கள் புறம்போக்கிச்
சுத்தி தரித்துறையுஞ் சோதி யுமையோடும்
நித்த னெருக்கத்தம் புலியூர் நிகழ்வாய
அத்த னறவன்றன் னடியே யடைவோமே. **#980**

புத்தர் சமணர் ஆகியோர்தம் பொய்யுரைகளை விலக்கித் தூய்மையைத் தழுவி விளங்கும் ஒளி வடிவினனாய், உமையம்மையாருடன் நித்தம் மணாளனாக விளங்குவோனாய், எருக்கத்தம்புலியூரில் விளங்கிக் கொண்டிருக்கும் அறவடிவினனாகிய தலைவன் அடிகளை, நாம் அடைவோம்.

திரு எருக்கத்தம்புலியூர்

ஏரா ரெருக்கத்தம் புலியூ ருறைவானைச்
சீரார் திகழ்காழித் திருவார் சம்பந்தன்
ஆரா வருந்தமிழ் மாலையிவை வல்லார்
பாரா ரவரேத்தப் பதிவா னுறைவாரே. **#981**

அழகிய எருக்கத்தம்புலியூரில் விளங்கும் இறைவனை, சீர்மிகு காழிப்பதியில் தோன்றிய திருவார் சம்பந்தன் அருளிய சுவை குன்றாத அருந்தமிழ் மாலையாகிய இத்திருப்பதிகப் பாடல்களை ஓதுபவர்கள் உலகவர் ஏத்த வானகம் எய்துவர்.

திருப்பிரமபுரம் - திருவிருக்குக்குறள்

சீர்காழி

திருப்பிரமபுரம் - திருவிருக்குக்குறள்,
பண் - குறிஞ்சி, திருப்பிரமபுர மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

அரனை யுள்குவீர், பிரம னூருளெம்
பரனையே மனம், பரவி யுய்ம்மினே. **#982**
சிவபிரானைச் சிந்தித்துப் போற்ற விரும்பும் அன்பர்களே, பிரமனூரில் விளங்கும் பரனையே மனத்தால் பரவிப் போற்றி உய்வீர்களாக.

சீர்காழி

காண வுள்குவீர், வேணு நற்புரத்
தாணு வின்கழல், பேணி யுய்ம்மினே. **#983**
சிவபிரானைக் கண்டு தொழ எண்ணும் அன்பர்களே, வேணுபுரத்தில் விளங்கும் தாணுவின் திருவடிகளைப் பேணி உய்வீர்களாக.

சீர்காழி

நாத னென்பிர்காள், காத லொண்புகல்
ஆதி பாதமே, ஓதி யுய்ம்மினே. **#984**
சிவபெருமானை எம் தலைவன் எனக் கூறும் அன்பர்களே! அன்போடு ஒளி விளங்கும் புகலிப் பதியில் விளங்கும் ஆதியின் திருவடிப் பெருமைகளை ஓதி உய்வீர்களாக.

சீர்காழி

அங்க மாதுசேர், பங்க மாயவன்
வெங்குரு மன்னும், எங்க ளீசனே. **#985**
அருள் வழங்கும் குறிப்போடு உமையம்மையைத் தனது திருமேனியின் ஒரு பாகமாகக் கொண்டுள்ளவன், வெங்குருவில் நிலையாக உள்ள எங்கள் ஈசன் ஆவான்.

சீர்காழி

வாணி லாச்சடைத், தோணி வண்புரத்
தாணி நற்பொனைக், காணு மின்களே. **#986**
ஒளி பொருந்திய, பிறைமதி பொருந்திய சடைமுடி உடையவனாய்த் தோணிபுரத்தில் விளங்கும் ஆணிப் பொன் போன்ற இறைவனைக்

கண்டு தொழுவீர்களாக.

சீர்காழி

பாந்த ளார்சடைப், பூந்த ராய்மன்னும்
ஏந்து கொங்கையாள், வேந்த னென்பரே. **#987**
பாம்பு பொருந்திய சடைமுடியோடு பூந்தராயில் விளங்கும் பெருமானை, ஏந்திய தனபாரங்களை உடைய உமையம்மையின் கணவன் என்று கூறுவார்கள்.

சீர்காழி

கரிய கண்டனைச், சிரபு ரத்துளெம்
அரசை நாடொறும், பரவி யுய்ம்மினே. **#988**
கருமை பொருந்திய கண்டத்தை உடையவனாய்ச், சிரபுரத்துள் எழுந்தருளிய அரசனை நாள்தோறும் பரவி உய்வீர்களாக.

சீர்காழி

நறவ மார்பொழிற், புறவ நற்பதி
இறைவ னாமமே, மறவ னெஞ்சமே. **#989**
தேன் பொருந்திய சோலைகளை உடைய புறவமாகிய நல்ல ஊரில் எழுந்தருளிய இறைவன் திருநாமங்களை, நெஞ்சமே! நீ மறவாதே.

சீர்காழி

தென்றி லரக்கனைக், குன்றிற் சண்பைமன்
அன்று நெரித்தவா, நின்று நினைமினே. **#990**
தென் திசையிலுள்ள இலங்கை மன்னனாம் இராவணனாகிய அரக்கனைச் சண்பை மன்னனாகிய சிவபிரான் கயிலை மலையிடைப்படுத்து அன்று நெரித்த வரலாற்றை நின்று நினைத்துப் போற்றுவீர்களாக.

சீர்காழி

அயனு மாலுமாய், முயலுங் காழியான்
பெயல்வை யெய்திநின், றியலு முள்ளமே. **#991**
பிரமனும் திருமாலும் அடிமுடி தேடி முயலும் பரம்பொருளாகிய சீகாழிப் பதியில் விளங்கும் இறைவனது கருணைப் பொழிவைச் சார்ந்து நின்று நினைக்கும் என் உள்ளம்.

சீர்காழி

தேர ரமணரைச், சேர்வில் கொச்சைமன்

நேரில் கழனிநைந், தோரு முள்ளமே. **#992**
புத்தர் சமணர் ஆகியோரை அணுகாத, கொச்சை வயத்து மன்னனாகிய சிவபிரானின் ஒப்பற்ற திருவடிகளை நினைந்து தியானிக்கும் என் உள்ளம்.

<u>சீர்காழி</u>

தொழும னத்தவர், கழும லத்துறை
பழுதில் சம்பந்தன், மொழிகள் பத்துமே. **#993**
கழுமலத்தில் உறையும் குற்றமற்ற ஞான சம்பந்தன் அருளிய மொழிகளாகிய, இத்திருப்பதிகப் பாடல்களை ஓதி, பெருமானைத் தொழும் மனத்தவர் ஆகுக.

திருஆரூர் - திருவிருக்குக்குறள்

திருவாரூர்

திருஆரூர் - திருவிருக்குக்குறள்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வன்மீகநாதர்.
தேவியார் : அல்லியங்கோதையம்மை.

சித்தந் தெளவீர்காள், அத்த னாரூரைப்
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே. **#994**

சித்தம் மாசு நீங்கித் தெளவடைய விரும்புகின்றவர்களே, அனைவர்க்கும் தலைவனாய் ஆரூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானைப் பக்தியோடு மலர் தூவி வாழ்த்துங்கள். சித்தத் தெளவோடு முக்தி கிடைக்கும்.

திருவாரூர்

பிறவி யறுப்பீர்காள், அறவ னாரூரை
மறவா தேத்துமின், துறவி யாகுமே. **#995**

பிறப்பினை அறுத்துக் கொள்ள விரும்புபவர்களே, அறவடிவினனாகத் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் இறைவனை மறவாது ஏத்துங்கள் பிறப்பிற்குக் காரணமான ஆசைகள் நீங்கித் துறவு நிலை எய்தலாம்.

திருவாரூர்

துன்பந் துடைப்பீர்காள், அன்ப னணியாரூர்
நன்பொன் மலர்தூவ, இன்ப மாகுமே. **#996**

துன்பங்களைத் துடைத்துக் கொள்ள விரும்புகின்றவர்களே, அழகிய ஆரூரில் எழுந்தருளிய அன்பு வடிவான இறைவனை நல்ல பொலிவுடைய மலர்களைத் தூவி வழிபடுங்கள். துன்பம் நீங்குவதோடு இன்பம் உளதாம்.

திருவாரூர்

உய்ய லுறுவீர்காள், ஐய னாரூரைக்
கையி னாற்றொழ, நையும் வினைதானே. **#997**

உலக வாழ்க்கையிலிருந்து கடைத்தேற விரும்புகின்றவர்களே, ஆரூரில் எழுந்தருளிய தலைவனாகிய இறைவனைக் கைகளைக் கூப்பி வணங்குங்கள். உங்கள் வினைகள் மெலிவடையும். உய்தி பெறலாம்.

திருவாரூர்

பிண்ட மறுப்பீர்காள், அண்ட னாரூரைக்

கண்டு மலர்தூவ, விண்டு வினைபோமே. **#998**
மீண்டும் பிறவா நிலையைப் பெற விரும்புகின்றவர்களே, ஆரூரில் எழுந்தருளிய அனைத்துலக நாயகனாகிய இறைவனைச் சென்று கண்டு மலர் தூவி வழிபடுங்கள். பிறப்புக்குக் காரணமான வினைகள் விண்டுபோம். பிறவா நிலை எய்தலாம்.

<u>திருவாரூர்</u>

பாச மறுப்பீர்காள், ஈச னணியாரூர்
வாச மலர்தூவ, நேச மாகுமே. **#999**
உயிரோடு பிணைந்துள்ள பாசம் அகல வேண்டுமென விரும்புகின்றவர்களே, அழகிய ஆரூரில் எழுந்தருளியுள்ள ஈசனை மணம் பொருந்திய மலர்களைத் தூவி வழிபடுங்கள். உம்பால் அவனது நேசம் உளதாகும். பாசம் அகலும்.

<u>திருவாரூர்</u>

வெய்ய வினைதீர, ஐய னணியாரூர்
செய்ய மலர்தூவ, வைய முமதாமே. **#1000**
கொடிய வினைகள் தீர வேண்டுமென விரும்புகின்றவர்களே, அழகிய ஆரூரில் எழுந்தருளிய அனைத் துயிர்க்கும் தலைவனாகிய இறைவனைச் செம்மையான மலர்களைத் தூவி வழிபடுங்கள். உலகம் உம்முடையதாகும்.

<u>திருவாரூர்</u>

அரக்க னாண்மையை, நெருக்கி னானாரூர்
கரத்தி னாற்றொழத், திருத்த மாகுமே. **#1001**
அரக்கர் தலைவனாகிய இராவணனின் ஆற்றலைக் கால்விரல் ஒன்றால் நெருக்கி அடர்த்து அழித்து ஆரூரில் எழுந்தருளிய இறைவனைக் கைகளால் தொழுவீர்களாக. உமது மனக்கோணல் நீங்கும், திருத்தம் பெறலாம்.

<u>திருவாரூர்</u>

துள்ளு மிருவர்க்கும், வள்ள லாரூரை
உள்ளு மவர்தம்மேல், விள்ளும் வினைதானே. **#1002**
செருக்குற்றுத்துள்ளிய திருமால் பிரமரின் செருக்கு அடக்கி அருள் செய்த, ஆரூரில் எழுந்தருளிய வள்ளற் பெருமானை மனத்தால் நினைத்து வழிபட வல்லவர்களின் வினைகள் நீங்கும்.

<u>திருவாரூர்</u>

கடுக்கொள்சீவரை, அடக்கி னானாரூர்
எடுத்து வாழ்த்துவார், விடுப்பர் வேட்கையே. #1003
கடுக்காயைத் தின்று துவர் ஆடை போர்த்துத் திரியும் சமண புத்தர்களை அடக்கியவனாகிய ஆரூர் இறைவனே பரம் பொருள் எனச் சிறப்பித்து வாழ்த்துவார், வேட்கை என்னும் ஆசையை விடுப்பர்.

திருவாரூர்

சீரூர் சம்பந்தன், ஆரூ ரைச்சொன்ன
பாரூர் பாடலார், பேரா ரின்பமே. #1004
சிறப்புப் பொருந்திய ஞானசம்பந்தன் ஆரூர் இறைவன்மீது பாடிய உலகம் முழுதும் பரவிய பாடல்களைப் பாடி வழிபட வல்லவர் இன்பத்தினின்று நீங்கார்.

திருவீழிமிழலை - திருவிருக்குக்குறள்

திருவீழிமிழலை

திருவீழிமிழலை - திருவிருக்குக்குறள்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை. இது படிக்காசு சுவாமியருளியபோது வட்டந்தீர ஓதியது.

வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏச லில்லையே. **#1005** ★★★★★
குற்றம் அற்ற வீழிமிழலையில் எழுந்தருளியுள்ள இறைவரே, அடியேனுக்கு வழங்கியருளும் காசில் உள்ள உயர்வு தாழ்வு நீங்குமாறு செய்து அக்காசினை நல்குக. அதனால் உமக்குப் பழிப்பு இல்லை.

திருவீழிமிழலை

இறைவ ராயினீர், மறைகொண் மிழலையீர்
கறைகொள் காசினை, முறைமை நல்குமே. **#1006**
எல்லோருக்கும் இறைவராக விளங்கும் பெருமானீரே, வேதங்களின் ஒலி நிறைந்த திருவீழிமிழலையில் எழுந்தருளியிருப்பவரே, கறை படிந்ததாக அளிக்கப்படும் காசில் உள்ள அக்கறையை நீக்கி முறையாக அளித்தருளுக.

திருவீழிமிழலை

செய்ய மேனியீர், மெய்கொண் மிழலையீர்
பைகொ ளரவினீர், உய்ய நல்குமே. **#1007**
சிவந்த திருமேனியை உடையவரே, மெய்ம்மையாளர் வாழும் திருவீழிமிழலையில் எழுந்தருளியிருப்பவரே, படம் எடுக்கும் பாம்பை அணிகலனாகப் பூண்டுள்ளவரே, அடியேங்கள் உய்யுமாறு வாசியில்லாததாகக் காசு அருளுக.

திருவீழிமிழலை

நீறு பூசினீர், ஏற தேறினீர்
கூறு மிழலையீர், பேறு மருளுமே. **#1008**
திருவெண்ணீற்றை அணிந்தவரே, ஆனேற்றில் ஏறி வருபவரே, பலராலும் புகழப்பெறும் திருவீழிமிழலையில் எழுந்தருளியவரே, காசு அருளுவதோடு எமக்கு முத்திப் பேறும் அருளுவீராக.

திருவீழிமிழலை

காமன் வேவவோர், தூமக் கண்ணினீர்
நாம மிழலையீர், சேம நல்குமே. **#1009**
காமனை எரிந்து அழியுமாறு செய்த புகை பொருந்திய அழல் விழியை
உடையவரே! புகழ் பொருந்திய திருவீழிமிழலையில் எழுந்தருளியவரே!
எமக்குச் சேமத்தை அருளுவீராக.

திருவீழிமிழலை

பிணிகொள் சடையினீர், மணிகொண் மிடறினீர்
அணிகொண் மிழலையீர், பணிகொண்டருளுமே. **#1010**
கட்டப்பட்ட சடையை உடையவரே, நீலமணி போன்ற கண்டத்தை
உடையவரே, அழகு பொருந்திய திருவீழிமிழலையில்
எழுந்தருளியிருப்பவரே, எம்மைப் பணி கொண்டு அருளுவீராக.

திருவீழிமிழலை

மங்கை பங்கினீர், துங்க மிழலையீர்
கங்கை முடியினீர், சங்கை தவிர்மினே. **#1011**
உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவரே, உயர்வுடைய
திருவீழிமிழலையில் உறைபவரே, கங்கை சூடிய திருமுடியை
உடையவரே, எங்களது ஐயுறவைப் போக்கியருளுக.

திருவீழிமிழலை

அரக்க னெரிதர, இரக்க மெய்தினீர்
பரக்கு மிழலையீர், கரக்கை தவிர்மினே. **#1012**
இராவணன் கயிலை மலையின் கீழ் அகப்பட்டு நெரிய இரக்கம்
காட்டியருளியவரே, எங்கும் பரவிய புகழ் உடைய திருவீழிமிழலையில்
உறைபவரே, எமக்கு அளிக்கும் காசில் உள்ள குறையைப்
போக்கியருளுக.

திருவீழிமிழலை

அயனு மாலுமாய், முயலு முடியினீர்
இயலு மிழலையீர், பயனு மருளுமே. **#1013**
நான்முகனும் திருமாலும் அடிமுடி காண முயலும் பேருருவம்
கொண்டருளியவரே, எல்லோரும் எளிதில் வழிபட இயலுமாறு
திருவீழிமிழலையில் எழுந்தருளியவரே, எமக்கு வீட்டின் பத்தையும்
அருளுவீராக.

திருவீழிமிழலை

பறிகொள் தலையினார், அறிவ தறிகிலார்
வெறிகொள் மிழலையீர், பிறிவ தரியதே. **#1014**
ஒன்றொன்றாக மயிர் பறித்த தலையினை உடைய சமணர்கள் அறிய வேண்டுபவராகிய உம்மை அறியாது வாழ்கின்றனர். மணம் கமழும் திருவீழிமிழலையில் உறைபவரே, அடியேங்கள் உம்மைப் பிரிந்து வாழ்தல் இயலாது.

<u>திருவீழிமிழலை</u>

காழி மாநகர், வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல், தாழு மொழிகளே. **#1015**
இத்திருப்பதிகம் சீகாழிப் பதியாகிய பெரிய நகருள் தோன்றி வாழும் ஞானசம்பந்தன் திருவீழிமிழலை இறைவர் மேல் தாழ்ந்து பணிந்து போற்றிய மொழிகளைக் கொண்டதாகும்.

திருமுதுகுன்றம் - திருவிருக்குக்குறள்

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம் - திருவிருக்குக்குறள்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது - இதுவே விருத்தாசலம். ,
சுவாமிபெயர் : பழமலைநாதர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

நின்று மலர்தூவி, இன்று முதுகுன்றை
நன்று மேத்துவீர்க், கென்று மின்பமே. **#1016**
இன்றே திருமுதுகுன்றம் சென்று, அங்குள்ள இறைவரை மலரால் அருச்சித்து நின்று நல்லமுறையில் துதிப்பீராயின் உமக்கு எக்காலத்தும் இன்பம் உளதாம்.

திருமுதுகுன்றம்

அத்தன் முதுகுன்றைப், பத்தி யாகிநீர்
நித்த மேத்துவீர்க், குய்த்தல் செல்வமே. **#1017**
நீர் திருமுதுகுன்றத்துத் தலைவனாய் விளங்கும் இறைவன்மீது பக்தி செலுத்தி நாள்தோறும் வழிபட்டு வருவீராயின் உமக்குச் செல்வம் பெருகும்.

திருமுதுகுன்றம்

ஐயன் முதுகுன்றைப், பொய்கள் கெடநின்று
கைகள் கூப்புவீர், வைய முமதாமே. **#1018**
திருமுதுகுன்றத்துள் விளங்கும் தலைவனாகிய சிவபிரானை நீர் பலவகையான பொய்கள் இன்றி மெய்மையோடு நின்று கைகளைக் கூப்பி வழிபடுவீர்களாயின் உலகம் உம்முடையதாகும்.

திருமுதுகுன்றம்

ஈசன் முதுகுன்றை, நேச மாகிநீர்
வாச மலர்தூவப், பாச வினைபோமே. **#1019**
திருமுதுகுன்றத்து ஈசனை நீர் அன்போடு மணம் பொருந்திய மலர்களால் அருச்சித்துவரின் உம் பாசங்களும் அவற்றால் விளைந்த வினைகளும் நீங்கும்.

திருமுதுகுன்றம்

மணியார் முதுகுன்றைப், பணிவா ரவர்கண்டீர்
பிணியா யினகெட்டுத், தணிவா ருலகிலே. **#1020**

அழகிய திருமுதுகுன்றத்து இறைவரைப் பணிபவர்கள், பிணிகளிலிருந்து விடுபட்டு உலகில் அமைதியோடு வாழ்வார்கள்.

திருமுதுகுன்றம்

மொய்யார் முதுகுன்றில், ஐயா வெனவல்லார்
பொய்யா ரிரவோர்க்குச், செய்யா ளணியாளே. **#1021**

அன்பர்கள் நெருங்கித் திரண்டுள்ள திருமுதுகுன்றத்து இறைவனை, நீர், ஐயா என அன்போடு அழைத்துத் துதிக்க வல்லீர்களாயின் இரப்பவர்க்கு இல்லை என்னாத நிலையில் திருமகள் நிறை செல்வத்தோடு உமக்கு அணியள் ஆவாள்.

திருமுதுகுன்றம்

விடையான் முதுகுன்றை, இடையா தேத்துவார்
படையா யினசூழ, உடையா ருலகமே. **#1022**

திருமுதுகுன்றத்து விடை ஊர்தியை உடைய சிவபிரானை இடையீடுபடாது ஏத்துகின்றவர், படைகள் பல சூழ உலகத்தை ஆட்சிசெய்யும் உயர்வை உடையவராவர்.

திருமுதுகுன்றம்

பத்துத் தலையோனைக், கத்த விரலூன்றும்
அத்தன் முதுகுன்றை, மொய்த்துப் பணிமினே. **#1023**

பத்துத் தலைகளை உடைய இராவணனை அவன் கதறி அழுமாறு கால் விரலை ஊன்றி அடர்த்த திருமுதுகுன்றத்துத் தலைவனாகிய சிவபிரானை நெருங்கிச் சென்று பணிவீராக.

திருமுதுகுன்றம்

இருவ ரறியாத, ஒருவன் முதுகுன்றை
உருகி நினைவார்கள், பெருகி நிகழ்வோரே. **#1024**

திருமால் பிரமர்களாகிய இருவரும் அறியவொண்ணாத திருமுதுகுன்றத்தில் விளங்கும் பெருமானை மனம் உருகி நினைப்பவர் பெருக்கத்தோடு வாழ்வர்.

திருமுதுகுன்றம்

தேர ரமணரும், சேரும் வகையில்லான்
நேரில் முதுகுன்றை, நீர்நின் றுள்குமே. **#1025**

புத்தர் சமணர் ஆகியோர்க்குத் தன்னை வந்தடையும் புண்ணியத்தை அளிக்காத சிவபெருமானுடைய திருமுதுகுன்றத்தை வாய்ப்பு நேரின் நீர் நின்று உள்குவீராக.

திருமுதுகுன்றம்

நின்று முதுகுன்றை, நன்று சம்பந்தன்
ஒன்று முரைவல்லார், என்று முயர்வோரே. **#1026**
திருமுதுகுன்றம் சென்று நின்று பெருமை உடையவனாகிய
ஞானசம்பந்தன் ஒன்றி உரைத்த இப்பதிகப் பாடல்களை ஓத வல்லவர்
எக்காலத்தும் உயர்வு பெறுவர்.

திருஆலவாய் - திருவிருக்குக்குறள்

திருஆலவாய்

திருஆலவாய் - திருவிருக்குக்குறள்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. இதுவே மதுரை. ,
சுவாமிபெயர் : சொக்கநாதசுவாமி.
தேவியார் : மீனாட்சியம்மை.

நீல மாமிடற், றால வாயிலான்
பால தாயினார், ஞால மாள்வரே. **#1027**
நீலநிறம் பொருந்திய கண்டத்தினை உடைய திரு ஆலவாய் இறைவனைச் சென்று தொழுது மனத்தால் அவன் அருகில் இருப்பதாக உணர்பவர்கள், இவ்வுலகை ஆள்வர்.

திருஆலவாய்

ஞால மேழுமாம், ஆல வாயிலார்
சீல மேசொலீர், காலன் வீடவே. **#1028**
எமபயம் இன்றி வாழ, ஏழுலகங்களிலும் எழுந்தருளியிருக்கும் ஆலவாய் இறைவனது மெய்ப்புகழையே உரையால் போற்றி வருவீர்களாக.

திருஆலவாய்

ஆல நீழலார், ஆல வாயிலார்
கால காலனார், பால தாமினே. **#1029**
கல்லால மர நிழலில் வீற்றிருப்பவரும், காலனுக்குக் காலனாய் அவனை அழித்தருளிய பெருவீரரும் ஆகிய ஆலவாய் இறைவரை மனத்தால் அணுகியிருப்பீர்களாக.

திருஆலவாய்

அந்த மில்புகழ், எந்தை யாலவாய்
பந்தி யார்கழல், சிந்தை செய்ம்மினே. **#1030**
ஆலவாய்க் கோயிலிலுள்ள எந்தையாகிய சிவபெருமானுடைய அழிவில்லாத புகழுக்கு இருப்பிடமான திருவடிகளை மனங்கொள்ளுங்கள்.

திருஆலவாய்

ஆட லேற்றினான், கூட லாலவாய்
பாடி யேமனம், நாடி வாழ்மினே. **#1031**
வெற்றியோடு கூடிய ஆனேற்றினானது நான்மாடக்கூடல் என்னும்

ஆலவாயின் புகழைப் பாடி மனத்தால் அவ்விறைவனையே நாடி வாழ்வீர்களாக.

திருஆலவாய்

அண்ண லாலவாய், நண்ணி னான்றனை
எண்ணி யேதொழத், திண்ண மின்பமே. **#1032**

தலைமையாளனும் ஆலவாய் என்னும் மதுரைப் பதியின் கோயிலைப் பொருந்தியிருப்பவனுமாகிய சோமசுந்தரப் பெருமானையே எண்ணித் தொழுதுவரின் இன்பம் பெறுவது திண்ணமாகும்.

திருஆலவாய்

அம்பொ னாலவாய், நம்ப னார்கழல்
நம்பி வாழ்பவர், துன்பம் வீடுமே. **#1033**

அழகிய பொன்மயமான ஆலவாய்த் திருக்கோயிலில் விளங்கும் இறைவனுடைய திருவடிகளே நமக்குச் சார்வாகும் என நம்பி வாழ்பவரின் துன்பம் நீங்கும்.

திருஆலவாய்

அரக்க னார்வலி, நெருக்க னாலவாய்
உரைக்கு முள்ளத்தார்க், கிரக்க முண்மையே. **#1034**

அரக்கனாகிய பெருவலிபடைத்த இராவணனைக் கால் விரலால் நெரித்தருளிய ஆலவாய் அரன் புகழை உரைக்கும் உள்ளத்தார்க்கு அவனது கருணை உளதாகும்.

திருஆலவாய்

அருவ னாலவாய், மருவி னான்றனை
இருவ ரேத்தநின், றுருவ மோங்குமே. **#1035**

அருவனாய் விளங்கும் இறைவன் திருவாலவாயில் திருமால் பிரமர் ஆகிய இருவர் போற்றும் உருவனாய் மருவி ஓங்கி நிற்கின்றான்.

திருஆலவாய்

ஆர நாகமாம், சீர னாலவாய்த்
தேர மண்செற்ற, வீர னென்பரே. **#1036**

பாம்பாகிய ஆரத்தை அணிந்தவனாய், ஆலவாயில் பெரும் புகழாளனாய் விளங்கும் இறைவன், புத்தரையும் சமணரையும் அழித்த பெருவீரன் ஆவான் என்று அடியவர்கள் அவனைப் புகழ்ந்து போற்றுவார்கள்.

திருஆலவாய்

அடிக ளாலவாய்ப், படிகொள் சம்பந்தன்
முடிவி லின்றமிழ், செடிக ணீக்குமே. #1037
ஆலவாயில் எழுந்தருளிய அடிகளாகிய இறைவனது திருவருளில்
தோய்ந்த ஞானசம்பந்தனின் அழிவற்ற இனிய இத்தமிழ் மாலை நமக்கு
வரும் வினைகளைப் போக்குவதாகும்.

திருவிடைமருதூர் - திருவிருக்குக்குறள்

திருவிடைமருதூர்

திருவிடைமருதூர் - திருவிருக்குக்குறள்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மருதீசர்.
தேவியார் : நலமுலைநாயகியம்மை.

தோடொர் காதினன், பாடு மறையினன்
காடு பேணிநின், றாடு மருதனே. **#1038**

திருவிடைமருதூர் இறைவன் தோட்டை, இடத் திருச்செவியில் அணிந்தவனாய் நான்கு வேதங்களைப் பாடுபவனாய், சுடுகாட்டை விரும்பி அதன்கண் நின்று ஆடுகின்றவனாவான்.

திருவிடைமருதூர்

கருதார் புரமெய்வர், எருதே யினிதூர்வர்
மருதே யிடமாகும், விருதாம் வினைதீர்ப்பே. **#1039**

தம்மைக் கருதாதவராகிய அசுரர்களின் முப்புரங்களை எய்து அழித்தவரும், எருதை வாகனமாகக் கொண்டு இனிதாக ஊர்பவரும் ஆகிய இறைவர்க்குத் திருவிடை மருதூரே விரும்பி உறையும் இடமாகும். அவரைத் தொழுதால் புகழ் சேரும். வினைகள் தீர்தலை உடையனவாகும்.

திருவிடைமருதூர்

எண்ணு மடியார்கள், அண்ணன் மருதரைப்
பண்ணின் மொழிசொல்ல, விண்ணுந் தமதாமே. **#1040**

மனத்தால் எண்ணி வழிபடும் அன்பர்கள் தலைமையாளராய் விளங்கும் மருதவாணரைப் பண்ணிசையோடு அவர்தம் புகழைப் போற்ற, விண்ணுலகமும் அவர்கள் வசமாகும்.

திருவிடைமருதூர்

விரியார் சடைமேனி, எரியார் மருதரைத்
தரியா தேத்துவார், பெரியா ருலகிலே. **#1041**

விரிந்த சடைமுடியை உடையவரும், எரிபோன்ற சிவந்த மேனியருமாகிய மருதவாணரைத் தாமதியாது துதிப்பவர் உலகில் பெரியவர் எனப் போற்றப்படுவர்.

திருவிடைமருதூர்

பந்த விடையேறும், எந்தை மருதரைச்
சிந்தை செய்பவர், புந்தி நல்லரே. **#1042**
கட்டுத்தறியில் கட்டத்தக்க விடையை ஊர்ந்து வரும் எந்தையாராகிய மருதவாணரை மனத்தால் தியானிப்பவர்கள் அறிவால் மேம்பட்டவராவர்.

<u>திருவிடைமருதூர்</u>

கழலுஞ் சிலம்பார்க்கும், எழிலார் மருதரைத்
தொழலே பேணுவார்க், குழலும் வினைபோமே. **#1043**
ஒரு காலில் கழலும், பிறிதொரு காலில் சிலம்பும் ஒலிக்கும் உமைபாகராகிய அழகிய மருதவாணரை விரும்பித் தொழுவதை நியமமாகக் கொண்டவர்க்கு வருத்துதற்கு உரிய வினைகள் துன்புறுத்தா; அகலும்.

<u>திருவிடைமருதூர்</u>

பிறையார் சடையண்ணல், மறையார் மருதரை
நிறையால் நினைபவர், குறையா ரின்பமே. **#1044**
பிறை பொருந்திய சடைமுடியினை உடைய தலைமையாளரான வேதங்களை அருளிய மருதவாணரை நிறைந்த மனத்தால் நினைப்பவர் இன்பம் குறையப் பெறார்.

<u>திருவிடைமருதூர்</u>

எடுத்தான் புயந்தன்னை, அடுத்தார் மருதரைத்
தொடுத்தார் மலர்சூட்ட, விடுத்தார் வேட்கையே. **#1045**
கயிலை மலையை எடுத்த இராவணனின் தோள்களை நெரித்த மருதவாணருக்குச் சூட்டுவதற்கு மலர் தொடுத்தவர்கள், பிறவிக்குக் காரணமான ஆசையை விடுத்தவர்களாவர்.

<u>திருவிடைமருதூர்</u>

இருவர்க் கெரியாய, உருவ மருதரைப்
பரவி யேத்துவார், மருவி வாழ்வரே. **#1046**
திருமால் பிரமர் அடிமுடி அறிய முடியாதவாறு எரி உருவமாய் நின்ற மருதவாணரைப் புகழ்ந்து ஏத்தித் துதிப்பவர் எல்லா நலன்களோடும் மருவி வாழும் வாழ்க்கையைப் பெறுவர்.

<u>திருவிடைமருதூர்</u>

நின்றுண் சமண்தேரர், என்று மருதரை
அன்றி யுரைசொல்ல, நன்று மொழியாரே. **#1047**

நின்றுண்ணும் சமணரும், புத்தரும் எக்காலத்தும் இடைமருது இறைவனாகிய சிவபெருமானை மாறுபட்ட உரைகளால் கூறுவதால் அவர் எக்காலத்தும் நல்லனவே கூறார்.

திருவிடைமருதூர்

கருது சம்பந்தன், மருத ரடிபாடிப்
பெரிதுந் தமிழ்சொல்லப், பொருத வினைபோமே. **#1048**

இறைவன் திருவருளையே கருதும் ஞானசம்பந்தன் மருதவாணரின் திருவடிகளைப் பெரிதும் போற்றிப் பாடிய இத்தமிழ் மாலையை ஓதுபவர்க்குத் துன்புறுத்திய வினைகள் போகும்.

திரு அன்னியூர் - திருவிருக்குக்குறள்

திருஅன்னியூர்

திரு அன்னியூர் - திருவிருக்குக்குறள்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஆபத்சகாயர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

மன்னி யூரிறை, சென்னி யார்பிறை
அன்னி யூரமர், மன்னு சோதியே. **#1049**
திருஅன்னியூரில் எழுந்தருளிய நிலைபெற்ற ஒளி வடிவினனாகிய சிவன், பிறை சூடிய திருமுடியோடு பல தலங்களிலும் எழுந்தருளியிருந்து, ஆங்காங்குள்ள மக்கட்குத் தலைவனாய் விளங்குபவன்.

திருஅன்னியூர்

பழகுந் தொண்டர்வம், அழக னன்னியூர்க்
குழகன் சேவடி, தொழுது வாழ்மினே. **#1050**
இறைவன்பால் மனம் ஒன்றிப் பழகும் தொண்டர்களே வாருங்கள். அன்னியூரில் அழகனாகவும் இளமைத் தன்மை உடையவனாகவும் எழுந்தருளியுள்ள சிவபிரானின் செம்மையான திருவடிகளைத் தொழுது வாழ்வீர்களாக.

திருஅன்னியூர்

நீதி பேணுவீர், ஆதி யன்னியூர்ச்
சோதி நாமமே, ஓதி யுய்ம்மினே. **#1051**
நீதியைப் போற்றி அதன்படி வாழ்கின்றவர்களே. அன்னியூரில் விளங்கும் ஒளி வடிவினனாகிய சிவபிரான் திருநாமங்களையே ஓதி உய்வீர்களாக.

திருஅன்னியூர்

பத்த ராயினீர், அத்த ரன்னியூர்ச்
சித்தர் தாள் தொழ, முத்த ராவரே. **#1052**
இறைவனிடம் பத்திமை பூண்டவர்களே, தலைமையாளனாய் அன்னியூரில் விளங்கும் ஞானவடிவினனின் திருவடிகளைத் தொழுதலால் வினை மாசுகளிலிருந்து விடுபட்டவராவீர்.

திருஅன்னியூர்

நிறைவு வேண்டுவீர், அறவ னன்னியூர்

மறையு ளான்கழற், குறவு செய்ம்மினே. #1053
மனநிறைவுடன் வாழ விரும்புகின்றவர்களே, அற வடிவினனாய் நான்கு வேதங்களிலும் பரம்பொருளாகக் கூறப்பட்டுள்ள அன்னியூர்ப் பெருமான் திருவடிகளுக்கு அன்பு செய்து அவனோடு உறவு கொள்வீர்களாக.

திருஅன்னியூர்

இன்பம் வேண்டுவீர், அன்ப னன்னியூர்
நன்பொ னென்னுமின், உம்பராகவே. #1054
உலக வாழ்க்கையில் இன்பங்களை எய்த விரும்பும் அடியவர்களே, அன்பனாக விளங்கும் அன்னியூர் இறைவனை நல்ல பொன்னே என்று கூறுமின், தேவர்களாகலாம்.

திருஅன்னியூர்

அந்த ணாளர்தம், தந்தை யன்னியூர்
எந்தை யேயெனப், பந்த நீங்குமே. #1055
அந்தணர்களின் தந்தையாக விளங்கும் அன்னியூர் இறைவனை எந்தையே என அழைக்க மலமாயைகள் நீங்கும்.

திருஅன்னியூர்

தூர்த்த னைச்செற்ற, தீர்த்த னன்னியூர்
ஆத்த மாவடைந், தேத்தி வாழ்மினே. #1056
காமாந்தகனாகிய இராவணனைத் தண்டித்த புனிதனாகிய அன்னியூர் இறைவனை அடைந்து அன்புக்குரியவனாக அவனைப் போற்றி வாழுங்கள்.

திருஅன்னியூர்

இருவர் நாடிய, அரவ னன்னியூர்
பரவு வார்விண்ணுக், கொருவ ராவரே. #1057
திருமால் பிரமர்களால் அடிமுடி தேடப்பட்ட அரவை அணிகலனாகப் பூண்ட அன்னியூர் இறைவனைப் பரவித் துதிப்பவர் தேவருலகில் இந்திரராவர்.

திருஅன்னியூர்

குண்டர் தேரருக்கு, அண்ட னன்னியூர்த்
தொண்டு ளார்வினை, விண்டு போகுமே. #1058
சமணர்களாலும் புத்தர்களாலும் அணுக முடியாதவனாகிய அன்னியூர் இறைவனுக்குத் தொண்டு செய்பவர்களின் வினைகள் விண்டு போகும்.

திருஅன்னியூர்

பூந்த ராய்ப்பந்தன், ஆய்ந்த பாடலால்
வேந்த னன்னியூர், சேர்ந்து வாழ்மினே. **#1059**
பூந்தராய் என்னும் சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் ஆய்ந்து சொல்லிய பாடல்களைப் பாடி அன்னியூர் வேந்தனாகிய சிவபிரானைச் சேர்ந்து வாழ்வீர்களாக.

திருப்புறவம்

சீர்காழி

திருப்புறவம்,
பண் - குறிஞ்சி, திருப்புறவம் என்பது சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

எய்யாவென்றித் தானவரூர்மூன்
றெரிசெய்த
மையார்கண்டன் மாதுமைவைகுந்
திருமேனிச்
செய்யான் வெண்ணீறணிவான் றிகழ்பொற்
பதிபோலும்
பொய்யாநாவி னந்தணர்வாழும்
புறவம்மே. **#1060**

பொய் கூறாத நாவினை உடைய அந்தணர்கள் வாழும் திருப்புறவம் என்னும் சீகாழிப்பதி, இளையாத வெற்றியை உடைய அசுரர்களின் முப்புரங்களை எரித்த நீலகண்டன், உமையம்மையை ஒருகூறாகக் கொண்டு எழுந்தருளும், செய்ய திருமேனியனாய் வெண்ணீறு அணிந்தவனாய் விளங்கும் அழகிய பதியாகும்.

சீர்காழி

மாதொருபாலு மாலொருபாலும்
மகிழ்கின்ற
நாதனென்றேத்து நம்பரன்வைகுந்
நகர்போலும்
மாதவிமேய வண்டிசைபாட
மயிலாடப்
போதலர்செம்பொன் புன்னைகொடுக்கும்
புறவம்மே. **#1061**

குருக்கத்தியில் மேவிய வண்டுகள் இசைபாடவும் மயில்கள் ஆடவும், அவற்றிற்குப் பரிசிலாகப் புன்னை மரங்கள் விரிந்த மலர்களின் மகரந்தங்களைப் பொன்னாக அளிக்கும் இயற்கைவளம் சான்ற புறவம் என்னும் பதி, உமையம்மையை ஒரு பாகமாகவும் திருமாலை ஒரு பாகமாகவும் கொண்டு மகிழ்கின்ற நம் மேலான தலைவன் வைகும் நகராகும்.

சீர்காழி

வற்றாநதியும் மதியும் பொதியுஞ்
சடைமேலே
புற்றாரரவின் படமாடவுமிப்
புவனிக்கோர்
பற்றாயிடுமின் பலியென்றடைவார்
பதிபோலும்
பொற்றாமரையின் பொய்கைநிலாவும்
புறவம்மே. **#1062**

என்றும் நீர் வற்றாத கங்கையும், பிறையும் பொருந்திய சடையின்மேல் புற்றை இடமாகக் கொண்ட பாம்பு படத்துடன் ஆட, இவ்வுலகிற்கு ஒரு பற்றுக்கோடாகி, எனக்குப் பலி இடுமின் என்று பல ஊர்களுக்கும் செல்லும் சிவபிரானது பதி, அழகிய தாமரைகள் மலர்ந்துள்ள பொய்கை விளங்கும் புறவம் என்னும் பதியாகும்.

சீர்காழி

துன்னார்புரமும் பிரமன்சிரமுந்
துணிசெய்து
மின்னார்சடைமே லரவும்மதியும்
விளையாடப்
பன்னாளிடுமின் பலியென்றடைவார்
பதிபோலும்
பொன்னார்புரிநூ லந்தணர்வாழும்
புறவம்மே. **#1063**

பகைவர்களாகிய திரிபுர அசுரர்களின் முப்புரங்களையும், பிரமனின் தலைகளில் ஒன்றையும் அழித்து, மின்னல் போல் ஒளி விடும் சடைமுடி மேல் பாம்பும் மதியும் பகை நீங்கி விளையாடுமாறு சூடிப் பல நாள்களும் சென்று பலியிடுமின் என்று கூறித் திரிவானாகிய சிவபிரானது பதி, பொன்னாலியன்ற முப்புரி நூலை அணிந்த அந்தணர்கள் வாழும் புறவமாகும்.

சீர்காழி

தேவாவரனே சரணென்றிமையோர்
திசைதோறுங்
காவாயென்று வந்தடையக்கார்
விடமுண்டு
பாவார்மறையும் பயில்வோருறையும்

பதிபோலும்
பூவார்கோலச் சோலைசுலாவும்
புறவம்மே. **#1064**

பாற்கடலைக் கடைந்தபோது எழுந்த விடத்தின் கொடுமை தாங்காது, தேவர்கள் திசைதோறும் சூழ்ந்து நின்று தேவனே! அரனே! உனக்கு அடைக்கலம் எங்களைக் காவாய் எனச் சரண் அடைய, அக்கடலில் தோன்றிய கரிய விடத்தை உண்டு, பாடல்களாக அமைந்த வேதங்களைப் பயிலும் சிவபெருமான் வாழும் பதி, மலர்கள் நிறைந்த அழகிய சோலைகள் சூழ்ந்த புறவம் என்னும் பதியாகும்.

<u>சீர்காழி</u>

கற்றறிவெய்திக் காமன்முன்னாகும்
முகவெல்லாம்
அற்றர னேநின் னடிசரணென்னு
மடியோர்க்குப்
பற்றதுவாய பாசுபதன்சேர்
பதியென்பர்
பொற்றிகழ்மாடத் தொளிகள் நிலாவும்
புறவம்மே. **#1065**

மெய்ந்நூல்களைக் கற்று, அதனால் நல்லறிவும் பெற்று, காமனாகிய மன்மதனின் குறிப்பினால் ஆகும் காமவிருப்பமெல்லாம் அற்று, அரனே! நின் திருவடிகளே சரண் என்று கூறும் அடியவர்கட்குப் பற்றுக்கோடாய்ப் பாசுபதன் எழுந்தருளிய பதி, பொன் நிறைந்து விளங்கும் மாடவீடுகளின் ஒளி சூழ்ந்த புறவம் என்னும் பதியாகும் என்பர்.

<u>சீர்காழி</u>

எண்டிசையோரஞ் சிடுவகைகார்சேர்
வரையென்னக்
கொண்டெழுகோல முகில்போற்பெரிய
கரிதன்னைப்
பண்டுரிசெய்தோன் பாவனைசெய்யும்
பதியென்பர்
புண்டரிகத்தோன் போன்மறையோர்சேர்
புறவம்மே. **#1066**

எண்திசையில் உள்ளாரும் அஞ்சிடுமாறு கரிய மலைபோலவும், நீரை முகந்து கொண்டெழுந்த அழகிய கரிய மேகம் போலவும் வந்த பெரிய களிற்று யானையை முற்காலத்தில் கொன்று அதன் தோலை உரித்துப்

போர்த்த சிவபிரான் விரும்பியிருக்கும் பதி,தாமரை மலர் மேல் உறையும் நான்முகன் போல வேதங்களில் வல்ல அந்தணர்கள் வாழும் புறவமாகும்.

சீர்காழி

பரக்குந்தொல்சீர்த் தேவர்கள்சேனைப்
பௌவத்தைத்
துரக்குஞ்செந்தீப் போலமர்செய்யுந்
தொழின்மேவும்
அரக்கன்றிண்டோ ளழிவித்தானக்
காலத்திற்
புரக்கும்வேந்தன் சேர்தருமூதூர்
புறவம்மே. **#1067**

எங்கும் பரவிய பழமையான புகழை உடைய தேவர்களின் கடல் போன்ற படையை, ஊழித் தீப் போன்று அழிக்கும் தொழிலில் வல்ல இராவணனின் வலிய தோள் வலியை அக்காலத்தில் அழித்தருளி, அனைத்து உலகங்களையும் புரந்தருளும் வேந்தனாக விளங்கும் சிவபிரான் எழுந்தருளிய பழமையான ஊர் புறவமாகும்.

சீர்காழி

மீத்திகழண்டந் தந்தயனோடு
மிகுமாலும்
மூர்த்தியை நாடிக் காணவொணாது
முயல்விட்டாங்
கேத்தவெளிப்பா டெய்தியவன்ற
னிடமென்பர்
பூத்திகழ்சோலைத் தென்றலுலாவும்
புறவம்மே. **#1068**

மேலானதாக விளங்கும் உலகங்களைப் படைத்த பிரமனும், புகழால் மேம்பட்ட திருமாலும் அழலுருவாய் வெளிப்பட்ட சிவமூர்த்தியின் அடிமுடிகளைக்காண இயலாது தமது முயற்சியைக் கைவிட்டு ஏத்த, அவர்கட்குக் காட்சி தந்தருளிய சிவபிரானது இடம், மலர்கள் நிறைந்த சோலைகளில் தென்றல் வந்து உலாவும் புறவமாகும்.

சீர்காழி

வையகநீர்தீ வாயுவும்விண்ணும்
முதலானான்
மெய்யலதேர ருண்டிலையென்றே

நின்றேதங்
கையினிலுண்போர் காணவொணாதான்
நகரென்பர்
பொய்யகமில்லாப் பூசுரர்வாழும்
புறவம்மே. **#1069**

மண், நீர், தீ, காற்று, விண் ஆகிய ஐம்பூதங்களில் நிறைந்து, அவற்றின் முதலாக விளங்கும் இறைவனாய், உண்மையல்லாதவற்றைப் பேசி உண்டு இல்லை என்ற உரைகளால் அத்தி நாத்தி எனக் கூறிக் கொண்டு தம் கைகளில் உணவேற்று உண்போராய சமணரும், புத்தரும் காண ஒண்ணாத சிவபிரானின் நகர், நெஞ்சிலும் பொய்யறியாத பூசுரர் வாழும் புறவமாகும்.

சீர்காழி

பொன்னியம்மாடப் புரிசைநிலாவும்
புறவத்து
மன்னியவீசன் சேவடிநாளும்
பணிகின்ற
தன்னியல்பில்லாச் சண்பையர்கோன்சீர்ச்
சம்பந்தன்
இன்னிசையீரைந் தேத்தவல்லோர்கட்
கிடர்போமே. **#1070**

பொன்னால் இயன்ற மாடங்களின் மதில்கள் சூழ்ந்த, புறவம் என்னும் பதியில் நிலைபெற்று விளங்கும் சிவபிரானின் சேவடிகளை, நாள்தோறும் பணிந்து, சீவபோதம் அற்றுச் சிவபோதம் உடையவனாய்ப் போற்றும் சண்பையர் தலைவனாகிய புகழ்மிக்க ஞானசம்பந்தன், இன்னிசையோடு பாடிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் பாடி ஏத்தவல்லவர்கட்கு, இடர் போகும்.

திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி,
பண் - குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தாயுமானேசுவரர்.
தேவியார் : மட்டுவார்குழலம்மை.

நன்றுடையானைத் தீயதிலானை
நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக
முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச்
சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங்
குளிரும்மே. #1071 ★★★★★

நன்மைகளையே தனக்கு உடைமையாகக் கொண்டவனை, தீயது ஒன்றேனும் இல்லாதவனை, மிக வெண்மையான ஆனேற்றைத் தனக்கு ஊர்தியாகக் கொண்டவனை, பார்வதியை ஒரு பாகமாக உடையவனை, அவனது அருளாலன்றிச் சென்றடைய முடியாத வீடு பேறாகிய செல்வத்தை உடையவனை, சிராப்பள்ளிக் குன்றில் எழுந்தருளியுள்ளவனைப் போற்ற என் உள்ளம் குளிரும்.

திருச்சிராப்பள்ளி

கைம்மகவேந்திக் கடுவனொடூடிக்
கழைபாய்வான்
செம்முகமந்தி கருவரையேறுஞ்
சிராப்பள்ளி
வெம்முகவேழத் தீருரிபோர்த்த
விகிர்தாநீ
பைம்முகநாகம் மதியுடன்வைத்தல்
பழியன்றே. #1072

சிவந்த முகம் உடைய பெண் குரங்கு தனது ஆண் குரங்கோடு ஊடல் கொண்டு மூங்கில் புதரில் பாய்ந்து தன் உயிரை மாய்த்துக் கொள்ளுதற்காகத் தனது குட்டியையும் ஏந்திக் கொண்டு கரிய மலை மீது ஏறும் சிராப்பள்ளியில் எழுந்தருளியவனும் கொடிய முகத்தோடு கூடிய யானையின் தோலைப் போர்த்துள்ள விகிர்தனும் ஆகிய நீ

படத்தோடு கூடிய முகத்தினை உடைய நாகப்பாம்பை அதன் பகைப்பொருளாகிய பிறை மதியுடன் முடிமிசை அணிந்திருத்தல் பழிதரும் செயல் அன்றோ?

<u>திருச்சிராப்பள்ளி</u>

மந்தம்முழவம் மழலைததும்ப
வரைநீழல்
செந்தண்புனமுஞ் சுனையுஞ்சூழ்ந்த
சிராப்பள்ளிச்
சந்தம்மலர்கள் சடைமேலுடையார்
விடையூரும்
எந்தம்மடிக ளடியார்க்கல்ல
லில்லையே. **#1073**

மந்த சுருதியினை உடைய முழவு மழலை போல ஒலி செய்ய, மலை அடிவாரத்தில் செவ்விய தண்ணிய தோட்டங்களையும் சுனைகளையும் கொண்டுள்ள சிராப்பள்ளியில் எழுந்தருளிய அழகிய மலர்களைச் சடைமேற் சூடியவரும், விடையேற்றை ஊர்ந்து வருபவரும் ஆகிய எம் தலைவராகிய செல்வரை வணங்கும் அடியார்களுக்கு அல்லல் இல்லை.

<u>திருச்சிராப்பள்ளி</u>

துறைமல்குசாரற் சுனைமல்குநீலத்
திடைவைகிச்
சிறைமல்குவண்டுந் தும்பியும்பாடுஞ்
சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன் கனலெரியாடுங்
கடவுள்ளெம்
பிறைமல்குசென்னி யுடையவனெங்கள்
பெருமானே. **#1074**

பலவாகிய வழிகளைக் கொண்டுள்ள மலையடிவாரத்தில் விளங்கும் சுனைகளில் நெருங்கிப் பூத்த நீல மலர்களில் தங்கிச் சிறகுகளை உடைய வண்டுகளும் தும்பியும் இசைபாடும் சிராப்பள்ளியில் எங்கள் பெருமானாகிய சிவபிரான் கறை பொருந்திய கண்டத்தை உடையவனாய்க் கனலும் எரியைக் கையில் ஏந்தி ஆடும் எம் கடவுளாய்ப் பிறை பொருந்திய சென்னியை உடையவனாய் விளங்கியருள்கின்றான்.

<u>திருச்சிராப்பள்ளி</u>

கொலைவரையாத கொள்கையர்தங்கண்

மதின்மூன்றும்
சிலைவரையாகச் செற்றனரேனுஞ்
சிராப்பள்ளித்
தலைவரை நாளுந் தலைவரல்லாமை
யுரைப்பீர்காள்
நிலவரைநீல முண்டதும்வெள்ளை
நிறமாமே. **#1075**

பலவாகிய வழிகளைக் கொண்டுள்ள கொல்லும் தொழிலைக் கைவிடாத கொள்கை யினராகிய அவுணர்கள் மும்மதில்களையும் மேரு மலையை வில்லாகக் கொண்டு அழித்தவராயினும் சிராப்பள்ளியின் தலைவராகிய அப்பெருமானாரைத் தலைவரல்லர் என்று நாள் தோறும் கூறிவரும் புறச் சமயிகளே! நிலவுலகில் நீலம் உண்டதுகிலின் நிறத்தை, வெண்மை நிறமாக மாற்றல் இயலாதது போல நீவிர் கொண்ட கொள்கையையும் மாற்றுதல் இயலுவதொன்றோ?

திருச்சிராப்பள்ளி

வெய்யதண்சாரல் விரிநிறவேங்கைத்
தண்போது
செய்யபொன்சேருஞ் சிராப்பள்ளிமேய
செல்வனார்
தையலொர்பாக மகிழ்வர்நஞ்சுண்பர்
தலையோட்டில்
ஐயமுங்கொள்வ ராரிவர்செய்கை
யறிவாரே. **#1076**

எல்லோராலும் விரும்பத்தக்க குளிர்ந்த மலைச்சாரலில் விரிந்த தண்ணிய பொன்னிறமான வேங்கை மலர்கள்சிவந்த பொன் போன்ற நிறத்தனவாய் உதிரும் சிராப்பள்ளி மலையில் வீற்றிருக்கும் செல்வராகிய சிவபிரான் உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு மகிழ்வர். நஞ்சினை உண்பர். தலையோட்டில் பலி ஏற்பர். வேறுபட்ட இவர்தம் செயல்களின் உண்மையை யார் அறியவல்லார்.

திருச்சிராப்பள்ளி

வேயுயர்சாரற் கருவிரலூகம்
விளையாடும்
சேயுயர்கோயிற் சிராப்பள்ளிமேய
செல்வனார்
பேயுயர்கொள்ளி கைவிளக்காகப்
பெருமானார்

தீயுகந்தாடல் திருக்குறிப்பாயிற்
றாகாதே. #1077
கரிய விரல்களை உடைய கருங்குரங்குகள் விளையாடும் மூங்கில் மரங்கள் உயர்ந்து வளர்ந்துள்ள சாரலை உடைய சிராப்பள்ளியில் நெடிதாக உயர்ந்துள்ள கோயிலில் மேவிய செல்வராகிய பெருமானார் பேய்கள் உயர்த்திப் பிடித்த கொள்ளிகளைக் கைவிளக்காகக் கொண்டு. சுடுகாட்டில் எரியும் தீயில் மகிழ்ந்து நடனம் ஆடும் திருக்குறிப்பு யாதோ? அஃது அவரை அடைய விரும்பும் மகளிர்க்குப் புலனாகாததாக உள்ளதே.

திருச்சிராப்பள்ளி

மலைமல்குதோளன் வலிகெடவூன்றி
மலரோன்றன்
தலைகலனாகப் பலிதிரிந்துண்பர்
பழியோரார்
சொலவலவேதஞ் சொலவலகீதஞ்
சொல்லுங்கால்
சிலவலபோலுஞ் சிராப்பள்ளிச்சேடர்
செய்கையே. #1078
மலைபோன்ற திண்மை நிரம்பிய தோள்களை உடைய இராவணனின் வலிமை கெடுமாறு ஊன்றி அழித்துத் தாமரை மலர் மேல் உறைபவனாகிய பிரமனது தலையோட்டை உண்கலனாகக் கொண்டு திரிந்து அவ்வோட்டில் பலியேற்று உண்ணுவதால் தமக்குப் பழி வருமே என்று நினையாதவராய், இசையோடு ஓதத் தக்க வேதங்களையும் கீதங்களையும் அன்பர்கள் ஓதுமிடத்துச் சில பிழைபட்டன என்றாலும் அவற்றையும் ஏற்று மகிழ்பவர் சிராப்பள்ளி மேவிய பெருமைக்குரிய சிவனார். இவர்தம் செய்கைகளின் உட்பொருள் யாதோ?

திருச்சிராப்பள்ளி

அரப்பள்ளியானு மலருறைவானு
மறியாமைக்
கரப்புள்ளிநாடிக் கண்டிலரேனுங்
கல்சூழ்ந்த
சிரப்பள்ளிமேய வார்சடைச்செல்வர்
மனைதோறும்
இரப்புள்ளீரும்மை யேதிலர்கண்டா
லிகழாரே. #1079
பாம்பணையில் பள்ளி கொள்ளும் திருமாலும், தாமரை மலர்மேல்

உறையும் பிரமனும் அறியாதவாறு அடிமுடி கரந்துஉயர்ந்து நின்றதை அவர்கள் தேடிக் கண்டிலர் என்ற பெருமை உமக்கு உளதாயினும் மலையகத்துள்ள சிராப்பள்ளியில் எழுந்தருளிய நீண்ட சடையினை உடைய செல்வராகிய சிவபிரானே நீர் வீடுகள் தோறும் சென்று இரப்பதைக் கருதுகின்றீர். அயலவர் கண்டால் இதனை இகழாரோ?

திருச்சிராப்பள்ளி

நாணாதுடைநீத் தோர்களுங்கஞ்சி
நாட்காலை
ஊணாப்பகலுண் டோதுவோர்க
ளுரைக்குஞ்சொல்
பேணாதுறுசீர் பெறுதுமென்பீரெம்
பெருமானார்
சேணார்கோயில் சிராப்பள்ளிசென்று
சேர்மினே. **#1080**

நாணாது உடையின்றித் திரியும் திகம்பர சமணரும், காலையிலும் நண்பகலிலும் கஞ்சியை மட்டும் உணவாக உண்டு வாழும் புத்தரும் கூறும் பழிப்புரைகளைக் கருதாது நாம் சிறப்படைய வேண்டுமென்று விரும்பும் நீர் எம்பெருமான் உறையும் வானளாவிய கோயிலை உடைய சிராப்பள்ளியைச் சென்று அடைவீர்களாக.

திருச்சிராப்பள்ளி

தேனயம்பாடுஞ் சிராப்பள்ளியானைத்
திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங் கழுமலவூரிற்
கவுணியன்
ஞானசம்பந்த னலமிகுபாட
லிவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடுமன்னி
வாழ்வாரே. **#1081**

தேனுண்ணும் வண்டுகள் இனிய இசைபாடும் சிராப்பள்ளியில் விளங்கும் இறைவனை, அலைகளிற் பொருந்திவந்த சங்குகள் சோலைகளில் ஏறி உலாவும் கடலை அடுத்துள்ள கழுமல ஊரில் கவுணியர் கோத்திரத்தில் தோன்றிய ஞானசம்பந்தன் பாடிப் போற்றிய, நன்மைகள் மிக்க இப்பதிகப் பாடல்களை ஓதவல்லவர் வானுலகிற் சம்பந்தமுடையவராகத் தேவர்களோடு நிலைபெற்று வாழ்வர்.

திருக்குற்றாலம்

திருக்குற்றாலம்

திருக்குற்றாலம்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : குறும்பலாவீசுவரர்.
தேவியார் : குழல்வாய்மொழியம்மை.

வம்பார்குன்றம் நீடுயர்சாரல்
வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக் கோலவண்டியாழ்செய்
குற்றாலம்
அம்பானெய்யோ டாடலமர்ந்தா
னலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர்போலும்
நமரங்காள். **#1082**

நம்மவர்களே! காணுந்தோறும் புதுமையைப் பயக்கும் குன்றங்களையும், நீண்டுயர்ந்த மலைச்சாரலையும், அழகிய வண்டுகள் யாழ் போல் ஒலிக்கும் வளர்ந்த வேங்கை மரங்களின் கிளைகள் அடர்ந்த சோலைகளையும் உடைய குற்றாலம், இனிய பால் நெய் ஆகியவற்றோடு நீராடலை விரும்புபவனாய் விரிந்த கொன்றை மலர்களைச் சூடிய நம்பனாகிய சிவபெருமான் எழுந்தருளிய நன்னகராகும்.

திருக்குற்றாலம்

பொடிகள்பூசித் தொண்டர்பின்செல்லப்
புகழ்விம்மக்
கொடிகளோடுந் நாள்விழமல்கு
குற்றாலம்
கடிகொள்கொன்றை கூவிளமாலை
காதல்செய்
அடிகண்மேய நன்னகர்போலும்
மடியீர்காள். **#1083**

அடியவர்களே! திருநீறு பூசித் தொண்டர்கள் பின்னே வரவும், புகழ் சிறக்கவும், கொடிகளை ஏந்தியவர்களாய் அன்பர்கள் முன்னால் செல்லவும், நாள்தோறும் விழாக்கள் நிகழும் நகர் குற்றாலமாகும். இவ்வூர் மணம் கமழும் கொன்றை வில்வமாலை ஆகியவற்றை விரும்பும்

அடிகளாகிய சிவபிரானார் எழுந்தருளிய நன்னகராகும்.

திருக்குற்றாலம்

செல்வமல்கு செண்பகம்வேங்கை
சென்றேறிக்
கொல்லைமுல்லை மெல்லரும்பீனுங்
குற்றாலம்
வில்லினொல்க மும்மதிலெய்து
வினைபோக
நல்கும்நம்பா னன்னகர்போலுந்
நமரங்காள். **#1084**

நம்மவர்களே! செல்வம் நிறைந்ததும், செண்பகம் வேங்கை ஆகிய மரங்களில் தாவிப் படர்ந்து முல்லைக் கொடி அரும்புகளை ஈனுவதும் ஆகிய குற்றாலம், வில்லின் நாண் அசைய அதன்கண் தொடுத்த கணையை விடுத்து மும்மதில்களையும் எய்து அழித்துத் தன்னை வழிபடும் அன்பர்களின் வினை மாசுகள் தீர அருள் புரியும் சிவபிரான் எழுந்தருளியுள்ள நன்னகராகும்.

திருக்குற்றாலம்

பக்கம்வாழைப் பாய்கனியோடு
பலவின்தேன்
கொக்கின்கோட்டுப் பைங்கனிதூங்குங்
குற்றாலம்
அக்கும்பாம்பு மாமையும்பூண்டோ
ரனலேந்தும்
நக்கன்மேய நன்னகர்போலும்
நமரங்காள். **#1085**

மலையின் பக்கங்களில் எல்லாம் முளைத்த வாழை மரத்தின் கனிகளோடு தேன் ஒழுகும் பலாவின் பழங்களும் மாமரக் கிளைகளில் பழுத்த புத்தம் புதிய நறுங்கனிகளும் ஆய முக்கனிகளும் அவ்வம்மரங்களில் தொங்கும் குற்றால நகர், என்புமாலை, பாம்பு, ஆமை ஆகியவற்றைப் பூண்டு கையில் அனலை ஏந்தி விளங்கும் சிவபிரான் மேவிய நன்னகராகும்.

திருக்குற்றாலம்

மலையார்சாரன் மகவுடன்வந்த
மடமந்தி
குலையார்வாழைத் தீங்கனிமாந்துங்

குற்றாலம்
இலையார்சூல மேந்தியகையா
னெயிலெய்த
சிலையான்மேய நன்னகர்போலுஞ்
சிறுதொண்டீர். **#1086**

இறைவனுக்குக் கைத்தொண்டு புரியுமவர்களே! தன் குட்டிகளோடு மலையின் சாரலுக்கு வந்த மடமந்தி வாழை மரக் குலைகளில் பழுத்த இனிய கனிகளை வயிறு புடைக்கத் தின்னும்குற்றாலம். இலை வடிவமான சூலத்தை ஏந்திய கையினனும், மும்மதில்களையும் எய்து அழித்த வில்லாளனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளியுள்ள நன்னகராகும்.

திருக்குற்றாலம்

மைம்மாநீலக் கண்ணியர்சாரன்
மணிவாரிக்
கொய்ம்மாவேன லுண்கிளியோப்புங்
குற்றாலம்
கைம்மாவேழத் தீருரிபோர்த்த
கடவுள்ளெம்
பெம்மான்மேய நன்னகர்போலும்
பெரியீர்காள். **#1087**

பெரியீரே! மிகக் கரிய பெரிய நீலமலர் போன்ற கண்களை உடைய குறமகளிர், மலைச்சாரல்களில் விளைந்த தினைப் புனங்களில் கொய்யத்தக்க பருவத்திலுள்ள பெரிய தினைக்கதிர்களை உண்ண வரும் கிளிகளை அங்குள்ள மணிகளை வாரி வீசியோட்டும் குற்றாலம், கைம்மா எனப்பெறும் யானையின் தோலைப் போர்த்த கடவுளும் எம் தலைவனுமாகிய சிவபிரான் எழுந்தருளியுள்ள நன்னகராகும்.

திருக்குற்றாலம்

நீலநெய்தல் தண்சுனைசூழ்ந்த
நீள்சோலைக்
கோலமஞ்ஞை பேடையொடாடுங்
குற்றாலம்
காலன்றன்னைக் காலாற்காய்ந்த
கடவுள்ளெம்
சூலபாணி நன்னகர்போலுந்
தொழுவீர்காள். **#1088**

தொழுது வணங்கும் அடியவர்களே! நீலமலரும் நெய்தல் மலரும் பூத்த

தண்ணியவான சுனைகள் சூழ்ந்ததும், நீண்டுவளர்ந்துள்ள சோலைகளில் அழகிய ஆண் மயில்கள் தத்தம் பெண் மயில்களோடு களித்தாடுவதுமாகிய குற்றாலம், காலனைக் காலால் கடிந்த கடவுளும் சூலத்தைக் கையில் ஏந்தியவனுமாகிய எம் சிவபிரான் எழுந்தருளியுள்ள நன்னகராகும்.

திருக்குற்றாலம்

போதும்பொன்னு முந்தியருவி
புடைசூழக்
கூதன்மாரி நுண்துளிதூங்குங்
குற்றாலம்
மூதூரிலங்கை முட்டியகோனை
முறைசெய்த
நாதன்மேய நன்னகர்போலுந்
நமரங்காள். **#1089**

நம்மவர்களே! அருவிகள் மலர்களையும் பொன்னையும் உந்திவந்து இரு புறங்களிலும் குளிர்ந்த மழை போல் நுண்மையான துளிகளை உதிர்க்கும் குற்றாலம், தன் தகுதிக்கு மேலே செயற்பட்ட இலங்கை நகரின் புகழ் பெருக்கி ஆளும் அரசனாகிய இராவணனைத் தண்டித்த சிவபிரான் எழுந்தருளிய நல்ல நகராகும்.

திருக்குற்றாலம்

அரவின்வாயின் முள்ளெயிறேய்ப்ப
வரும்பீன்று
குரவம்பாவை முருகமர்சோலைக்
குற்றாலம்
பிரமன்னோடு மாலறியாத
பெருமையெம்
பரமன்மேய நன்னகர்போலும்
பணிவீர்காள். **#1090**

பணியும் தொண்டர்களே! பாம்பின் வாயில் அமைந்த வளைந்த கூரிய பற்களை ஒப்ப அரும்பீன்று குரவ மரங்கள் பூத்துள்ள பாவை போன்ற மலர்களின் மணம் தங்கியுள்ள குற்றாலம், பிரமன் மால் அறியாப் பெரியோனாகிய எம் பரமன் மேவியுள்ள நன்னகராகும்.

திருக்குற்றாலம்

பெருந்தண்சாரல் வாழ்சிறைவண்டு
பெடைபுல்கிக்

குருந்தம்மேறிச் செவ்வழிபாடுங்
குற்றாலம்
இருந்துண்டேரு நின்றுண்சமணு
மெடுத்தார்ப்ப
அருந்தண்மேய நன்னகர்போலு
மடியீர்காள். **#1091**

அடியவர்களே! பெரிய தண்ணிய மலைச்சாரலில் வாழ்கின்ற சிறகுகளை உடைய வண்டு தன் பெண் வண்டை விரும்பிக் கூடி குருந்த மரத்தில் ஏறிச் செவ்வழிப் பண்பாடும் குற்றாலம், இருந்துண்ணும் புத்தர்களும், நின்று உண்ணும் சமணர்களும் புறங்கூற அரிய தண்ணியோனாகிய சிவபிரான் எழுந்தருளிய நன்னகராகும்.

<u>திருக்குற்றாலம்</u>

மாடவீதி வருபுனற்காழி
யார்மன்னன்
கோடலீன்று கொழுமுனைகூம்புங்
குற்றாலம்
நாடவல்ல நற்றமிழ்ஞான
சம்பந்தன்
பாடல்பத்தும் பாடநம்பாவம்
பறையுமே. **#1092**

மாடவீதிகளையுடையதும் ஆற்று நீர்வளம் மிக்கதுமான சீகாழிப் பதிக்கு மன்னனும் பலராலும் நாட வல்லவனுமான நற்றமிழ் ஞானசம்பந்தன் செங்காந்தள் மலர்களை ஈன்று அவற்றின் கொழுவிய முனையால் கை குவிக்கும் குற்றாலத்து இறைவர் மேல் பாடிய பாடல்கள் பத்தையும் பாடப் பாவம் நீங்கும்.

திருப்பரங்குன்றம்

திருப்பரங்குன்றம்

திருப்பரங்குன்றம்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பரங்கிரிநாதர்.
தேவியார் : ஆவுடைநாயகியம்மை.

நீடலர்சோதி வெண்பிறையோடு
நிரைகொன்றை
சூடலனந்திச் சுடரெரியேந்திச்
சுடுகானில்
ஆடலனஞ்சொ லணியிழையாளை
யொருபாகம்
பாடலன்மேய நன்னகர்போலும்
பரங்குன்றே. **#1093**

நீண்டு விரிந்த ஒளிக்கதிர்களை உடைய வெண்பிறையோடு வரிசையாகத் தொடுத்த கொன்றை மாலையைச் சூடுதலை உடையவன். அந்திப் போதில் ஒளியோடு கூடிய எரியை ஏந்திச் சுடுகாட்டில் ஆடுபவன். அழகிய சொற்களைப் பேசும் அணிகலன்களோடு கூடிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு பாடுபவன். அத்தகைய பெருமானது நல்லநகர் பரங்குன்று.

திருப்பரங்குன்றம்

அங்கமொராறும் மருமறைநான்கும்
மருள்செய்து
பொங்குவெண்ணூலும் பொடியணிமார்பிற்
பொலிவித்துத்
திங்களும்பாம்புந் திகழ்சடைவைத்தோர்
தேன்மொழி
பங்கினன்மேய நன்னகர்போலும்
பரங்குன்றே. **#1094**

நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் அருளிச் செய்து, திருநீறு அணிந்த மார்பில் அழகுமிக்க வெண்ணூலைப் பொலிவுற அணிந்து, பிறை பாம்பு ஆகியவற்றை விளங்கும் சடைமீது சூடித் தேன் போன்ற மொழியினளாகிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவனாய்ச் சிவபிரான் விளங்கும் நன்னகர் திருப்பரங்குன்றம்.

திருப்பரங்குன்றம்

நீரிடங்கொண்ட நிமிர்சடைதன்மே
னிரைகொன்றை
சீரிடங்கொண்ட வெம்மிறைபோலுஞ்
சேய்தாய
ஓருடம்புள்ளே யுமையொருபாக
முடனாகிப்
பாரிடம்பாட வினிதுறைகோயில்
பரங்குன்றே. **#1095**

கங்கை சூடிய நிமிர்ந்த சடைமுடிமேல் வரிசையாகத் தொடுத்த கொன்றை மாலையைச் சிறப்புற அணிந்துள்ள எம் இறைவன் மிக உயர்ந்துள்ள தனது திருமேனியின் ஒரு பாகமாகக்கொண்டுள்ள உமையம்மையோடும் உடனாய்ப் பூதகணங்கள் பாட இனிதாக உறையும் கோயில் திருப்பரங்குன்றம்.

திருப்பரங்குன்றம்

வளர்பூங்கோங்க மாதவியோடு
மல்லிகைக்
குளிர்பூஞ்சாரல் வண்டறைசோலைப்
பரங்குன்றம்
தளிர்போன்மேனித் தையனல்லாளோ
டொருபாகம்
நளிர்பூங்கொன்றை சூடினன்மேய
நகர்தானே. **#1096**

வளர்ந்துள்ள கோங்கு முதலிய மரங்களும், மணம் தரும் மாதவி முதலிய செடிகளும், மல்லிகை முதலிய கொடிகளும் நிறைந்துள்ள வண்டுகள் முரலும் சோலைகள் சூழ்ந்த சாரலை உடைய திருப்பரங்குன்றம், ஒரு பாகமாகிய தளிர் போன்ற மேனியளாகிய தையல் நல்லாளோடு பொருந்திக் கொத்தாகச் செறிந்த பூக்களைக் கொண்ட கொன்றை மலர் மாலையை அணிந்தவனாகிய சிவபிரானது நகராகும்.

திருப்பரங்குன்றம்

பொன்னியல்கொன்றை பொறிகிளர்நாகம்
புரிசடைத்
துன்னியசோதி யாகியவீசன்
றொன்மறை
பன்னியபாட லாடலன்மேய

பரங்குன்றை
உன்னியசிந்தை யுடையவர்க்கில்லை
யுறுநோயே. #1097

பொன் போன்ற கொன்றை மலர், பொறிகள் விளங்கும் பாம்பு ஆகியவற்றை அணிந்துள்ள முறுக்கேறிய சடைமுடியோடுபொருந்திய ஒளி வடிவினனாகிய ஈசனும், பழமையான வேதங்களில் அமைந்துள்ள பாடல்களைப் பாடி ஆடுபவனுமாகிய சிவபிரான் எழுந்தருளிய திருப்பரங்குன்றை எண்ணிய சிந்தை உடையவர்க்கு மிக்க நோய்கள் எவையும் இல்லை.

திருப்பரங்குன்றம்

கடைநெடுமாடக் கடியரண்மூன்றுங்
கனன்மூழ்கத்
தொடைநவில்கின்ற வில்லினனந்திச்
சுடுகானில்
புடைநவில்பூதம் பாடநின்றாடும்
பொருசூலப்
படைநவில்வான்ற னன்னகர்போலும்
பரங்குன்றே. #1098

வாயிலை உடைய காவல் பொருந்திய அசுரர்களின் மூன்று கோட்டைகளும் கனலில் மூழ்குமாறு அம்பினை எய்த வில்லினனும், அந்திக் காலத்தில் சுடுகாட்டில் அருகில் தன்னொடு பழகிய பூதகணங்கள் பாட நின்றாடுபவனும் போர்க்கருவியாகிய சூலப்படையை ஏந்தியவனுமாகிய சிவபிரானது நன்னகர் திருப்பரங்குன்றம்.

திருப்பரங்குன்றம்

அயிலுடைவேலோ ரனல்புல்குகையி
னம்பொன்றால்
எயில்படவெய்த வெம்மிறைமேய
விடம்போலும்
மயில்பெடைபுல்கி மாநடமாடும்
வளர்சோலைப்
பயில்பெடைவண்டு பாடலறாத
பரங்குன்றே. #1099

கூரிய வேற்படையை உடையவனும், அனல் தழுவிய கை அம்பு ஒன்றால் மூவெயில்களை எய்து அழித்தவனும் ஆகிய எம் இறைவன் மேவிய இடம், ஆண் மயில்கள் பெண் மயில்களைத் தழுவிச் சிறந்த

வகையில் நடனம் ஆடும் வளர்ந்த சோலைகளில் பெண் வண்டுகளோடு கூடிய ஆண் வண்டுகள் இடையறாது இசை பாடும் சிறப்புடைய திருப்பரங்குன்றாகும்.

திருப்பரங்குன்றம்

மைத்தகுமேனி வாளரக்கன்றன்
மகுடங்கள்
பத்தினதிண்டோ ளிருபதுஞ்செற்றான்
பரங்குன்றைச்
சித்தமதொன்றிச் செய்கழலுன்னிச்
சிவனென்று
நித்தலுமேத்தத் தொல்வினை நம்மேல்
நில்லாவே. **#1100**

மை எனத்தக்க கரிய மேனியனாகிய வாட் போரில் வல்ல இராவணனின் மகுடம் பொருந்திய பத்துத் தலைகளையும் இருபது தோள்களையும் அடர்த்த சிவபிரான் எழுந்தருளிய திருப்பரங்குன்றை ஒன்றிய மனத்துடன் அங்குள்ள பெருமானின்சேவடிகளைச் சிந்தித்துச் சிவனே என்று நித்தலும் ஏத்தித் துதிக்க, வினைகள் நம் மேல் நில்லா.

திருப்பரங்குன்றம்

முந்தியிவ்வையந் தாவியமாலு
மொய்யொளி
உந்தியில்வந்திங் கருமறையீந்த
வுரவோனும்
சிந்தையினாலுந் தெரிவரிதாகித்
திகழ்சோதி
பந்தியலங்கை மங்கையொர்பங்கன்
பரங்குன்றே. **#1101**

மாவலியிடம் மூன்றடி மண் கேட்டு அவன் தந்த அளவில் முந்திக் கொண்டு இவ்வுலகை ஓரடியால் அளந்ததுடன் வானுலகங்களையும் ஓரடியால் அளந்த திருமாலும், அத்திருமாலின் ஒளி நிறைந்த உந்திக் கமலத்தில் தோன்றி அரிய மறைகளை ஓதும் நான் முகனும் மனத்தாலும் அறிய முடியாதவாறு பேரொளிப் பிழம்பாய் நின்ற சோதி வடிவினனும், விளையாடும் பந்து தங்கிய அழகிய கையை உடைய மங்கையை ஒரு பாகமாகக் கொண்டவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய தலம் திருப்பரங்குன்று.

திருப்பரங்குன்றம்

குண்டாய்முற்றுந் திரிவார்கூறை
மெய்போர்த்து
மிண்டாய்மிண்டர் பேசியபேச்சு
மெய்யல்ல
பண்டானீழன் மேவியவீசன்
பரங்குன்றைத்
தொண்டாலேத்தத் தொல்வினை நம்மேல்
நில்லாவே. **#1102**

பருத்த உடலினராய் எங்கும் திரியும் சமணரும், ஆடையை உடலிற் போர்த்துத் திரியும் புத்தரும் தர்க்க வாதத்துடன்மிடுக்காய்ப் பேசும் பேச்சுக்கள் எவையும் உண்மையல்ல. முற்காலத்தில் கல்லால மர நிழலில் வீற்றிருந்து அறம் நால்வர்க்கருளிய ஈசனது பரங்குன்றைத் தொண்டு செய்து ஏத்தினால் நம் தொல்வினை நம்மேல் நில்லாது கழியும்.

<u>திருப்பரங்குன்றம்</u>

தடமலிபொய்கைச் சண்பைமன்ஞான
சம்பந்தன்
படமலிநாக மரைக்கசைத்தான்றன்
பரங்குன்றைத்
தொடைமலிபாடல் பத்தும்வல்லார்தந்
துயர்போகி
விடமலிகண்ட னருள்பெறுந்தன்மை
மிக்கோரே. **#1103**

பரப்புமிக்க பொய்கையை உடைய சண்பை என்னும் சீகாழிப் பதியின் மன்னனாகிய ஞானசம்பந்தன் படத்தோடு கூடிய பாம்பை இடையில் கட்டிய பரங்குன்றிறைவர் மீது பாடிய தொடை நயம் மிக்க பாடல்கள் பத்தையும் ஓதி வழிபட வல்லவர் தம் துன்பம் நீங்கி விடமுண்ட கண்டனாகிய சிவபிரானின் அருள்பெறும் தகுதியில் மேம்பட்டவராவர்.

திருக்கண்ணார்கோயில்

திருக்கண்ணார்கோயில்

திருக்கண்ணார்கோயில்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கண்ணாயிரேசுவரர்.
தேவியார் : முருகுவளர்கோதையம்மை.

தண்ணார்திங்கட் பொங்கரவந்தாழ்
புனல்சூடிப்
பெண்ணாணாய பேரருளாளன்
பிரியாத
கண்ணார்கோயில் கைதொழுவோர்கட்
கிடர்பாவம்
நண்ணாவாகுந் நல்வினையாய
நணுகும்மே. #1104

குளிர்ந்த திங்கள், சினம் மிக்க பாம்பு, ஆகாயத்திலிருந்து தாழ்ந்துவந்த கங்கை ஆகியவற்றை முடியில் சூடி, பெண்ணும் ஆணுமாய கோலத்தில் விளங்கும் பெருங்கருணையாளனாகிய சிவபிரான் பிரியாமல் எழுந்தருளியிருக்கும் திருக்கண்ணார் கோயிலைக் கைகளால் தொழுது வணங்குவாரைத் துன்பங்களும் பாவங்களும் நண்ணா. நல்வினைகளும் அவற்றின் பயனான இன்பங்களும் நண்ணும்.

திருக்கண்ணார்கோயில்

கந்தமர்சந்துங் காரகிலுந்தண்
கதிர்முத்தும்
வந்தமர்தெண்ணீர் மண்ணிவளஞ்சேர்
வயன்மண்டிக்
கொந்தலர்சோலைக் கோகிலமாடக்
குளிர்வண்டு
செந்திசைபாடுஞ் சீர்திகழ்கண்ணார்
கோயிலே. #1105

மணம் பொருந்திய சந்தனம், கரிய அகில், குளிர்ந்த ஒளி பொருந்திய முத்து ஆகியன பொருந்தியதாய் வரும் தெளிந்த நீரையுடைய மண்ணியாற்றால் வளம் பெறும் வயல்களால் சூழப்பட்டு, கொத்துக்களாக விரிந்த மலர்களை உடைய சோலைகளில் குயில்கள் ஆடச் செவிகளைக் குளிர்விக்கும் வண்டுகள் செவ்வழிப் பண்பாடும்

சீரோடு திகழ்வது, சிவபிரானது திருக்கண்ணார் கோயிலாகும்.

திருக்கண்ணார்கோயில்

பல்லியல்பாணிப் பாரிடமேத்தப்
படுகானின்
எல்லிநடஞ்செய் யீசனெம்மான்றன்
னிடமென்பர்
கொல்லையின்முல்லை மல்லிகைமௌவற்
கொடிபின்னிக்
கல்லியலிஞ்சி மஞ்சமர்கண்ணார்
கோயிலே. **#1106**

பலவாக இயலும் தாளங்களை இசைத்துப் பூதகணங்கள் ஏத்த, பிணங்கள் இடப்படும் சுடுகாட்டில் நள்ளிராப்போதில் திருநடம்புரியும் ஈசனாகிய எம்பெருமானது இடம், காடுகளில் முல்லையும், மல்லிகையும் காட்டு மல்லிகையோடு பின்னி விளங்குவதும், கல்லால் இயன்ற வானளாவிய மதில்களில் மேகங்கள் அமர்ந்திருப்பதுமாகிய கண்ணார்கோயில் என்னும் தலமாகும் என்பர்.

திருக்கண்ணார்கோயில்

தருவளர்கானந் தங்கியதுங்கப்
பெருவேழம்
மருவளர்கோதை யஞ்சவுரித்து
மறைநால்வர்க்
குருவளரால நீழலமர்ந்தீங்
குரைசெய்தார்
கருவளர்கண்ணார் கோயிலடைந்தோர்
கற்றோரே. **#1107**

மரங்கள் செழித்து வளர்ந்துள்ள காட்டில் வாழ்ந்த உயர்ந்த பெரிய யானையை, மணம் பொருந்திய மலர் மாலையை அணிந்துள்ள உமையம்மை அஞ்சுமாறு உரித்தவரும், அடர்ந்த பசுமை நிறம் பொருந்தி உயர்ந்து வளர்ந்துள்ள கல்லால மர நிழலில் அமர்ந்து வேதங்களின் உட்பொருளைச் சனகாதி முனிவர்க்கு இவ்வுலகத்தே உரை செய்து உணர்த்தியவருமாகிய சிவபெருமான் கருவறையில் தங்கியிருக்கின்ற கோயிலை அடைந்தவர்கள் முழுமையான கல்வியறிவின் பயனை அடைந்தோராவர்.

திருக்கண்ணார்கோயில்

மறுமாணுருவாய் மற்றிணையின்றி

வானோரைச்
செறுமாவலிபாற் சென்றுலகெல்லா
மளவிட்ட
குறுமாணுருவன் றற்குறியாகக்
கொண்டாடும்
கறுமாகண்டன் மேயதுகண்ணார்
கோயிலே. **#1108**

வஞ்சகம் பொருந்திய மனத்தோடு பெரிய உருவம் உடையவனாய், தனக்கு ஒப்பார் இல்லாதவனாய், தேவர்களைத் துன்புறுத்திய மாவலி என்ற அரக்கர் குல மன்னனிடம் சென்று அவனிடம் மூன்றடி மண் கேட்டு எல்லா உலகங்களையும் தனக்கே உரியவாய் அளவிட்டு அளந்த குள்ளமான பிரமசாரிய வடிவுடைய வாமனன், சிவபெருமானது வடிவாகத் தாபித்து வழிபட, அவனுக்கு அருள் செய்த நீல மறுப் பொருந்திய கண்டனாகிய சிவபிரான் மேவிய ஊர், கண்ணார் கோயிலாகும்.

<u>திருக்கண்ணார்கோயில்</u>

விண்ணவருக்காய் வேலையுணஞ்சம்
விருப்பாக
உண்ணவனைத்தே வர்க்கமுதீந்தெவ்
வுலகிற்கும்
கண்ணவனைக்கண் ணார்திகழ்கோயிற்
கனிதன்னை
நண்ணவல்லோர்கட் கில்லைநமன்பால்
நடலையே. **#1109**

விண்ணவர்களைக் காத்தற் பொருட்டுக் கடலுள் தோன்றிய நஞ்சினை விருப்போடு உண்டவனை, தேவர்களுக்கு அமுதம் அளித்து எவ்வுலகிற்கும் பற்றுக்கோடாய் விளங்குபவனை, விளக்கமான கண்ணார் கோயிலுள் விளங்கும் கனி போல்பவனை நண்ணிவழிபட வல்லவர்கட்கு, நமனால் வரும் துன்பங்கள் இல்லை.

<u>திருக்கண்ணார்கோயில்</u>

முன்னொருகாலத் திந்திரனுற்ற
முனிசாபம்
பின்னொருநாளவ் விண்ணவரேத்தப்
பெயர்வெய்தித்
தன்னருளாற்கண் ணாயிரமீந்தோன்
சார்பென்பர்

கன்னியர்நாளுந் துன்னமர்கண்ணார்
கோயிலே. #1110
முன்னொரு காலத்தில் கெளதம முனிவரால் விளைந்த சாபத்தால் உடல் எங்கும் பெண் குறிகளோடு வருந்தித் தன்னை வழிபட்ட இந்திரனுக்குப் பின்னொரு நாளில் தேவர்கள் புகழ்ந்து போற்றுமாறு தண்ணருளோடு அச்சாபத்தைப் போக்கி அவற்றை ஆயிரம் கண்களாகத் தோன்றுமாறு அருள் செய்த சிவபிரான் எழுந்தருளிய இடம், கன்னியர்கள் நாள்தோறும் கூடி வந்து வழிபடும் தலமாகிய கண்ணார் கோயில் என்பர்.

திருக்கண்ணார்கோயில்

பெருக்கெண்ணாத பேதையரக்கன்
வரைக்கீழால்
நெருக்குண்ணாத்தன் னீள்கழனெஞ்சில்
நினைந்தேத்த
முருக்குண்ணாதோர் மொய்கதிர்வாள்தேர்
முன்னீந்த
திருக்கண்ணாரென் பார்சிவலோகஞ்
சேர்வாரே. #1111
அன்போடு வழிபட்டால் ஆக்கம் பெறலாம் என்று எண்ணாத அறிவிலியாகிய இராவணன் கயிலையைப் பெயர்த்த போது அதன்கீழ் அகப்பட்டு நெருக்குண்டு நல்லறிவு பெற்று விரிந்த புகழை உடைய தன் திருவடிகளை அவன் நெஞ்சினால் நினைந்து போற்றிய அளவில் அவனுக்கு அழிக்கமுடியாத, ஒளியினை உடைய வாளையும் தேரையும் முற்காலத்தில் வழங்கியருளிய சிவபிரான் வீற்றிருக்கும் தலமாகிய திருக்கண்ணார் கோயில் என்று கூறுவார் சிவலோகம் சேர்வர்.

திருக்கண்ணார்கோயில்

செங்கமலப்போ திற்றிகழ்செல்வன்
றிருமாலும்
அங்கமலக்கண் ணோக்கரும்வண்ணத்
தழலானான்
தங்கமலக்கண் ணார்திகழ்கோயில்
தமதுள்ளம்
அங்கமலத்தோ டேத்திடவண்டத்
தமர்வாரே. #1112
செந்தாமரைப் போதில் வீற்றிருக்கும் பிரமனும் திருமாலும் அழகிய தங்கள் கமலம் போன்ற கண்களால் நோக்கிக் காணுதற்கரிய

அழலுருவாய் நின்ற பெருமான் தன் கருணை நிறைந்த கமலக் கண்களோடு வீற்றிருக்கும் தலமாகிய கண்ணார் கோயிலை அடைந்து அங்குத் தம் உள்ளத்தில் மலம் நீங்கப் பெற்றவராய் ஏத்திடுவோர் வானுலகில் இனிது உறைபவராவர்.

திருக்கண்ணார்கோயில்

தாறிடுபெண்ணைத் தட்டுடையாருந்
தாமுண்ணும்
சோறுடையார்சொற் றேறன்மின்வெண்ணூல்
சேர்மார்பன்
ஏறுடையன்பர னென்பணிவானீள்
சடைமேலோர்
ஆறுடையண்ணல் சேர்வதுகண்ணார்
கோயிலே. **#1113**

குலைகளை ஈனும் பனை மரத்தின் ஓலைகளால் வேயப்பட்ட தடுக்கை உடையாக உடுத்தித் திரியும் சமணரும், தாம் உண்ணும் சோற்றையே பெரிதெனக் கருதும் புத்தரும் கூறும் அறிவுரைகளைக் கேளாதீர். வெண்மையான பூநூல் அணிந்த மார்பினனும், ஆனேற்றை ஊர்தியாக உடையவனும், மேலானவனும், என்பு மாலை அணிபவனும், நீண்ட சடைமுடி மேல் கங்கையை அணிந்துள்ளவனுமாகிய தலைமைத் தன்மை உடைய சிவபிரான் எழுந்தருளி விளங்கும் தலம் கண்ணார் கோயிலாகும். அதனைச் சென்று தொழுமின்.

திருக்கண்ணார்கோயில்

காமருகண்ணார் கோயிலுளானைக்
கடல்சூழ்ந்த
பூமருசோலைப் பொன்னியன்மாடப்
புகலிக்கோன்
நாமருதொன்மைத் தன்மையுண்ஞான
சம்பந்தன்
பாமருபாடல் பத்தும்வல்லார்மேற்
பழிபோமே. **#1114**

அழகிய திருக்கண்ணார் கோயில் என்னும் தலத்துள் விளங்கும் சிவபெருமானை, கடல் ஒரு புடைசூழ்ந்ததும், பூக்கள் நிறைந்த சோலைகளை உடையதும் அழகியதாய் அமைந்த மாட வீடுகளைக் கொண்டதுமான புகலிப் பதியின் தலைவனும், பழமையான இறை புகழை, நாவினால் மருவிப் போற்றுபவனும் ஆகிய ஞான சம்பந்தன் பாடிப் பரவிய ஓசையோடு திகழும் இப்பதிகப் பாடல்கள் பத்தினாலும்

போற்றி வழிபட வல்லவர்கள், தம் மேல் வரும் பழிகள் நீங்கப் பெறுவர்.

சீகாழி

சீர்காழி

சீகாழி,
பண் - குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

உரவார்கலையின் கவிதைப்புலவர்க்
கொருநாளுங்
கரவாவண்கைக் கற்றவர்சேருங்
கலிக்காழி
அரவாரரையா வவுணர்புரமூன்
றெரிசெய்த
சரவாவென்பார் தத்துவஞானத்
தலையாரே. **#1115**

ஞானம் நிறைந்த கலை உணர்வோடு, கவிதைகள் பாடும் புலவர்களுக்கு ஒரு நாளும் கரவாத வள்ளன்மை மிக்க கைகளை உடைய கற்றவர்கள் வாழும் ஒலி மிக்க காழி மாநகரில் விளங்கும் பாம்பை இடையில் அணிந்துள்ள பரமனே! அசுரர்களின் முப்புரங்களையும் எரித்த அம்பை ஏந்தியவனே! என்று போற்றுபவர், தத்துவ ஞானத்தில் தலையானவராவர்.

சீர்காழி

மொய்சேர்வண்டுண் மும்மதநால்வாய்
முரண்வேழக்
கைபோல்வாழை காய்குலையீனுங்
கலிக்காழி
மைசேர்கண்டத் தெண்டோண்முக்கண்
மறையோனே
ஐயாவென்பார்க் கல்லல்களான
வடையாவே. **#1116**

சூழ்ந்து மொய்த்தலை உடைய வண்டுகள் தங்கி உண்ணும் மும்மதங்களையும், தொங்குகின்ற வாயையும், முரண்படுதலையும் உடைய களிற்று யானையின் கை போல வாழை மரங்கள்காய்களை ஈனும் ஒலி நிறைந்த காழிப் பதியில், நீலகண்டனாய் எட்டுத் தோள்களையும் மூன்று கண்களையும் உடையவனாய் விளங்கும்

மறையோனே! தலைவனே! என்பவர்களை அல்லல்கள் அடையா.

<u>சீர்காழி</u>

இளகக்கமலத் தீன்களியங்குங்
கழிசூழக்
களகப்புரிசைக் கவினார்சாருங்
கலிக்காழி
அளகத்திருநன் னுதலிபங்கா
வரனேயென்
றுளகப்பாடு மடியார்க்குறுநோ
யடையாவே. **#1117**

முறுக்கவிழ்ந்த தாமரை மலர்கள் பிலிற்றிய தேன் ஓடுகின்ற கழிகள் சூழப் பெற்றதும், சுண்ணாம்பினால் இயன்ற அழகு பொருந்திய மதில்களை உடையதுமான, ஆரவாரம் மிக்க காழிப்பதியில் அழகிய கூந்தலையும் நல்ல நெற்றியையும் உடைய உமையம்மையின் கணவனே, அரனே! என்று மனம் உருகிப்பாடும் அடியவர்களை மிக்க துன்பங்கள் எவையும் அடையா.

<u>சீர்காழி</u>

எண்ணார்முத்த மீன்றுமரகதம்
போறகாய்த்துக்
கண்ணார்கமுகு பவளம்பழுக்குங்
கலிக்காழிப்
பெண்ணோர்பாகா பித்தாபிரானே
யென்பார்க்கு
நண்ணாவினைகள் நாடொறுமின்பம்
நணுகும்மே. **#1118**

அழகிய கமுக மரங்கள், எண்ணத்தில் நிறையும் அழகிய முத்துக்களைப் போல அரும்பி மரகதம் போலக் காய்த்துப் பவளம் போலப் பழுக்கும் ஆரவாரம் மிக்க காழிப் பதியில் விளங்கும் பெண்ணோர் பாகனே! பித்தனே! பிரானே! என்பவர்களை வினைகள் நண்ணா. நாள்தோறும் அவர்கட்கு இன்பங்கள் வந்து சேரும்.

<u>சீர்காழி</u>

மழையார்சாரற் செம்புனல்வந்தங்
கடிவருடக்
கழையார்கரும்பு கண்வளர்சோலைக்
கலிக்காழி

உழையார்கரவா வுமையாள்கணவா
வொளிர்சங்கக்
குழையாவென்று கூறவல்லார்கள்
குணவோரே. **#1119**
மேகங்கள் தங்கிய குடதிசை மலைச் சாரல்களிலிருந்து சிவந்த நிறமுடைய தண்ணீர் வந்து அடிகளை வருட, அதனால்மூங்கில் போன்று பருத்த கரும்புகளில் கணுக்கள் வளரும் சோலைகளை உடைய ஒலிமிக்க சீகாழிப் பதியில் எழுந்தருளிய மானேந்திய கையனே, உமையம்மையின் கணவனே! ஒளி பொருந்திய சங்கக் குழையை அணிந்தவனே என்று கூறிப் போற்ற வல்லவர்கள் குணம் மிக்கவராவர்.

<u>சீர்காழி</u>

குறியார்திரைகள் வரைகணின்றுங்
கோட்டாறு
கறியார்கழிசம் பிரசங்கொடுக்குங்
கலிக்காழி
வெறியார்கொன்றைச் சடையாவிடையா
வென்பாரை
அறியாவினைக ளருநோய்பாவம்
மடையாவே. **#1120**
தாள ஒலிக் குறிப்போடு கூடிய அலைகளை உடைய, மலைகளிலிருந்து வரும் அருவிகள் இரு கரைகளுக்கும் உள்ளடங்கிய ஆறாக அடித்துக் கொண்டு வரும் மிளகின் கொடித் தண்டுகளின் சுவையைத் தன் தண்ணீருக்கு வழங்கும். ஆரவாரம் மிக்க காழிப் பதியில் எழுந்தருளிய மணம் கமழும் கொன்றை மலர் மாலையை அணிந்த சடையினனே! விடையை ஊர்ந்து வருபவனே! என்று கூறுபவரை வினைகள் அறியாது அகலும். அவர்களை அரிய நோய்கள் பாவங்கள் அடைய மாட்டா.

<u>சீர்காழி</u>

இப்பதிகத்தின் **7**-ம் செய்யுள் சிதைந்து போயிற்று. **#1121**

<u>சீர்காழி</u>

உலங்கொள்சங்கத் தார்கலியோதத்
துதையுண்டு
கலங்கள் வந்து கார்வயலேறுங்
கலிக்காழி
இலங்கைமன்னன் றன்னையிடர்கண்
டருள்செய்த

சலங்கொள்சென்னி மன்னாவென்னத்
தவமாமே. **#1122**
வலிய சங்குகளை உடைய கடலினது வெள்ளத்தால் மோதப்பட்டுத் தோணிகள் வந்து கரிய வயலின்கண் சேரும் ஒலி மிக்க சீகாழியில் எழுந்தருளிய, இலங்கை மன்னன் இராவணனை முதலில் துன்புறுத்திப்பின் அருள் செய்த, கங்கை சூடிய திருமுடியினை உடைய மன்னவனே! என்று சிவபிரானைப் போற்றத்தவம் கைகூடும்.

சீர்காழி

ஆவிக்கமலத் தன்னமியங்குங்
கழிசூழக்
காவிக்கண்ணார் மங்கலமோவாக்
கலிக்காழிப்
பூவிற்றோன்றும் புத்தேளொடுமா
லவன்றானும்
மேவிப்பரவு மரசேயென்ன
வினைபோமே. **#1123**
ஓடைகளில் உள்ள தாமரை மலர்களில் வாழும் அன்னங்கள் நடமாடும் உப்பங்கழிகள் சூழ்ந்திருப்பதும், நீலமலர் போன்ற கண்களை உடைய மகளிரது மங்கல ஒலி ஓவாது கேட்பதுமாகிய செழிப்புமிக்க சீகாழியில் தாமரை மலர் மேல் உறையும் பிரமனும் திருமாலும் வந்துபரவும் அரசனாக விளங்கும் பெருமானே என்று சொல்ல நம் வினைகள் போகும்.

சீர்காழி

மலையார்மாட நீடுயரிஞ்சி
மஞ்சாருங்
கலையார்மதியஞ் சேர்தருமந்தண்
கலிக்காழித்
தலைவாசமணர் சாக்கியர்க்கென்று
மறிவொண்ணா
நிலையாயென்னத் தொல்வினையாய
நில்லாவே. **#1124**
மலை போலுயர்ந்த மாட வீடுகளின், மேகங்கள் தவழும் நீண்டுயர்ந்த மதில்களில் கலைகள் நிறைந்த மதி வந்து தங்கும் அழகிய குளிர்ந்த ஒலிமிக்க காழிப் பதியின் தலைவனே! சமண புத்தர்களால் என்றும் அறிய ஒண்ணாத நிலையினனே! என்று போற்ற நம் தொல்வினைகள் நில்லா.

சீர்காழி

வடிகொள்வாவிச் செங்கழுநீரிற்
கொங்காடிக்
கடிகொள்தென்றல் முன்றினில்வைகுங்
கலிக்காழி
அடிகள்தம்மை யந்தமின்ஞான
சம்பந்தன்
படிகொள்பாடல் வல்லவர் தம்மேற்
பழிபோமே. **#1125**

தேன் மணங் கொண்ட வாவியில் மலர்ந்த செங்கழு நீர்ப் பூவின் மகரந்தங்களில் படிந்து அவற்றின் மணத்தைக்கொண்ட தென்றல், முன்றிலில் வந்து உலாவும் ஒலிமிக்க காழிப் பதியில் வீற்றிருக்கும் அடிகளை, முடிவற்ற புகழை உடைய ஞான சம்பந்தன் இவ்வுலகிடைப் போற்றிப் பாடிய பாடல்களை வல்லவர்கள் மேல் வரும் பழிகள் போகும்.

திருக்கழுக்குன்றம்

திருக்கழுக்குன்றம்

திருக்கழுக்குன்றம்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வேதகிரீசுவரர்.
தேவியார் : பெண்ணினல்லாளம்மை.

தோடுடையானொரு காதிற்றூய
குழைதாழ
ஏடுடையான் றலைகலனாக
விரந்துண்ணும்
நாடுடையா னள்ளிருளேம
நடமாடும்
காடுடையான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே. **#1126**

ஒரு காதில் தோடும் பிறிதொரு காதில் தூய குழையும் தாழ்ந்து தொங்கத், தாமரை மலரில் தங்கும் பிரமனின் தலையோட்டை உண்கலனாகக் கொண்டு இரந்துண்ணும் நாடுகளை உடையவன். நள்ளிருள் யாமத்தில் மகிழ்வோடு சுடுகாட்டில் நடனம் ஆடுபவன். அத்தகையோன் விரும்பி உறையும் கோயில் திருக்கழுக் குன்றமாகும்.

திருக்கழுக்குன்றம்

கேணவல்லான் கேழல்வெண்கொம்பு
குறளாமை
பூணவல்லான் புரிசடைமேலொர்
புனல்கொன்றை
பேணவல்லான் பெண்மகள்தன்னை
யொருபாகம்
காணவல்லான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே. **#1127**

திருமாலாகிய பன்றியினது வெண்மையான கொம்பை அகழ்ந்து அணிய வல்லவன். வாமனனாக அவதரித்த திருமாலின் கூர்மாவதார ஆமையோட்டினை அணிகலனாகக் கோத்துப் பூண வல்லவன். முறுக்கிய சடைமுடிமேல் ஒப்பற்ற கங்கை, கொன்றை மாலை ஆகியவற்றை விரும்பி அணிபவன். பெண்ணின் நல்லவளான உமையம்மையைத் தன் திருமேனியின் ஒரு பாகமாகக் காணுமாறு

செய்தருளியவன். அத்தகையோன் காதல் செய்யும் கோயில் திருக்கழுக்குன்றமாகும்.

திருக்கழுக்குன்றம்

தேனகத்தார் வண்டதுவுண்ட
திகழ்கொன்றை
தானகத்தார் தண்மதிசூடித்
தலைமேலோர்
வானகத்தார் வையகத்தார்கள்
தொழுதேத்தும்
கானகத்தான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே. **#1128**

தேனை அகத்தே இருந்து வண்டுகள் உண்ட, விளங்கிய கொன்றை மாலையைச் சூடிய தலையில் மதியைச் சூடி, வானகத்தவரும், வையகத்தவரும் தொழுதேத்தும் வண்ணம் சுடுகாட்டைத் தனக்கு இடமாகக் கொண்ட இறைவன் விரும்பி உறையும் கோயில் திருக்கழுக்குன்றம்.

திருக்கழுக்குன்றம்

துணையல்செய்தான் றூயவண்டியாழ்செய்
சுடர்க்கொன்றை
பிணையல்செய்தான் பெண்ணினல்லாளை
யொருபாகம்
இணையல்செய்யா விலங்கெயின்மூன்று
மெரியுண்ணக்
கணையல்செய்தான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே, **#1129**

வண்டுகள் யாழ்போல் ஒலித்து மொய்க்கும் தூய ஒளி நிறைந்த கொன்றை மாலையை அணிந்தவனும், பெண்ணின் நல்லவளான உமையம்மையைக்கூடி அவளைத்தன் உடலில் ஒரு பாகமாகப் பிணைத்திருப்பவனும், தன்னோடு இணைந்து வாராத புரங்கள் மூன்றையும் எரி உண்ணுமாறு கணையை விடுத்தவனுமாகிய சிவபிரான் காதல் செய்யும் கோயில், கழுக்குன்றம் ஆகும்.

திருக்கழுக்குன்றம்

பையுடைய பாம்பொடுநீறு
பயில்கின்ற
மெய்யுடையான் வெண்பிறைசூடி

விரிகொன்றை
மையுடைய மாமிடற்றண்ணன்
மறிசேர்ந்த
கையுடையான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே. **#1130**
நச்சுப் பையையுடைய பாம்போடு திருநீறு அணிந்த திருமேனியை உடையவனும், வெண்பிறையையும், விரிந்த கொன்றையையும் முடியில் சூடியவனும், விடம் பொருந்திய மிடற்றினை உடைய தலைமையாளனும், மானேந்திய கையை உடையவனுமாகிய சிவபிரான் விரும்பி உறையும் கோயில் கழுக்குன்றம் ஆகும்.

திருக்கழுக்குன்றம்

வெள்ளமெல்லாம் விரிசடைமேலோர்
விரிகொன்றை
கொள்ளவல்லான் குரைகழலேத்துஞ்
சிறுத்தொண்டர்
உள்ளமெல்லா முள்கிநின்றாங்கே
யுடனாடும்
கள்ளம்வல்லான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே. **#1131**
விரிந்த சடைமுடியின்மேல் வெள்ளமாகப் பெருகி வந்த கங்கையின் அனைத்து நீரையும் விரிந்த கொன்றை மாலையோடு சூடியிருப்பவனும், தனது ஒலிக்கின்ற கழல் அணிந்த திருவடிகளை ஏத்தித் துதிக்கும் சிறிய தொண்டர்களின் உள்ளமெல்லாம் நிறைந்து, அவர்கள் தியானித்து நின்று ஆடத் தானும் உடன் ஆடும் கள்ளம் வல்லவனுமாகிய, சிவபிரான் காதல் செய்யும் கோயில் கழுக்குன்றம் ஆகும்.

திருக்கழுக்குன்றம்

இப்பதிகத்தின் **7-**ம் செய்யுள் சிதைந்து போயிற்று**. #1132**

திருக்கழுக்குன்றம்

ஆதல்செய்தா னரக்கர்தங்கோனை
யருவரையின்
நோதல்செய்தா னொடிவரையின்கண்
விரலூன்றிப்
பேர்தல்செய்தான் பெண்மகள்தன்னோ
டொருபாகம்
காதல்செய்தான் காதல்செய்கோயில்

கழுக்குன்றே. **#1133**
அரக்கர் கோனை அரிய கயிலை மலையின்கீழ் அகப்படுத்தி, நொடிப்பொழுதில் கால் விரலை ஊன்றி, அவனை நோதல் செய்தவனும், பிறகு அவனுக்கு ஆக்கம் வழங்கியவனும், பெண்மகளாகிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு காதல் செய்தவனுமாகிய சிவபிரான் காதல் செய்யும் கோயில் கழுக்குன்றம் ஆகும்.

திருக்கழுக்குன்றம்

இடந்தபெம்மா னேனமதாயு
மனமாயும்
தொடர்ந்தபெம்மான் றூமதிசூடி
வரையார்தம்
மடந்தைபெம்மான் வார்கழலோச்சிக்
காலனைக்
கடந்தபெம்மான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே. **#1134**
அடிமுடி காணப் பன்றி உருவோடு நிலத்தை அகழ்ந்து சென்ற திருமாலும், அன்னமாய்ப் பறந்து சென்ற நான்முகனும், தொடர்ந்த பெருமானாய், தூய மதியை முடியிற் சூடியவன், மலைமகளின் தலைவன், வார்கழலணிந்த திருவடியை உயர்த்திக் காலனைக் காய்ந்தவன் ஆகிய சிவபிரான் காதல் செய்யும் கோயில் கழுக்குன்றம் ஆகும்.

திருக்கழுக்குன்றம்

தேயநின்றான் றிரிபுரங்கங்கை
சடைமேலே
பாயநின்றான் பலர்புகழ்ந்தேத்த
வுலகெல்லாம்
சாயநின்றான் வன்சமண்குண்டர்
சாக்கீயர்
காயநின்றான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே. **#1135**
முப்புரங்களை அழியுமாறு செய்தவனும், பெருகி வந்த கங்கை தன் சடை மேல் பாய நின்றவனும், பலரும் புகழ்ந்து போற்ற உலகனைத்தும் ஊழி இறுதியில் அழியுமாறு நின்றவனும், வலிய சமண் குண்டர்களும், புத்தர்களும் கெடுமாறு நின்றவனும் ஆகிய சிவபிரான் காதல் செய்யும் கோயில் கழுக்குன்றமாகும்.

திருக்கழுக்குன்றம்

கண்ணுதலான் காதல்செய்கோயில்
கழுக்குன்றை
நண்ணியசீர் ஞானசம்பந்தன்
றமிழ்மாலை
பண்ணியல்பாற் பாடியபத்து
மிவைவல்லார்
புண்ணியராய் விண்ணவரோடும்
புகுவாரே. **#1136**

நெற்றியில் கண்ணுடையவனாகிய சிவபிரான் காதல் செய்யும் கோயிலாகிய திருக்கழுக்குன்றத்தைப் புகழ் பொருந்திய ஞானசம்பந்தன் பண் அமைதியோடு பாடிய தமிழ் மாலையாகிய பத்துப் பாடல்களையும் பாடிப் போற்றுபவர் புண்ணியராய்த் தேவர்களோடு வானுலகம் புகுவர்.

திருப்புகலி

சீர்காழி

திருப்புகலி,
பண் - வியாழக்குறிஞ்சி, திருப்புகலி என்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

ஆட லரவசைத்தா னருமாமறை தான்விரித்தான் கொன்றை
சூடிய செஞ்சடையான் சுடுகா டமர்ந்தபிரான்
ஏடவிழ் மாமலையா ளொருபாக மமர்ந்தடியா ரேத்த
ஆடிய வெம்மிறையூர் புகலிப் பதியாமே. **#1137**

படம் எடுத்து ஆடும் பாம்பினை இடையில் கட்டியவனும், அரிய பெரிய வேதங்களை அருளிச் செய்தவனும், கொன்றை மலர் மாலையைச் சூடிய செஞ்சடை முடியை உடையவனும், சுடுகாட்டைத் தனது இருப்பிடமாகக் கொண்டு உறைபவனும், இதழ் அவிழும் மலர்கள் பூத்த பெரிய இமய மலை அரசனின் புதல்வியாகிய பார்வதி தேவியை ஒரு பாகமாக விரும்பி ஏற்று அடியவர் போற்ற நடனம் ஆடியவனும் ஆகிய எம் இறைவனது ஊர் புகலிப் பதியாகும்.

சீர்காழி

ஏல மலிகுழலா ரிசைபாடி யெழுந்தருளாற் சென்று
சோலை மலிசுனையிற் குடைந்தாடித் துதிசெய்ய
ஆலை மலிபுகைபோ யண்டர்வானத்தை மூடிநின்று நல்ல
மாலை யதுசெய்யும் புகலிப் பதியாமே. **#1138**

மயிர்ச் சாந்தணிந்த கூந்தலினை உடைய மகளிர் காலையில் எழுந்து இசை பாடிக் கொண்டு இறையருள் பெறும் வேட்கையோடு சென்று சோலையின்கண் விளங்கும் சுனையில் துளைந்து நீராடித் துதி செய்ய, கரும்பு ஆலைகளில் நிறைந்தெழுந்த புகை சென்று தேவர்கள் உறையும் வானகத்தை மூடி நின்று காலையை நல்ல மாலைப் போதாகச் செய்வது புகலிப் பதியாம். மகளிர் நீராடித் துதி செய்ய விளங்குவது புகலிப் பதி என முடிவு காண்க.

சீர்காழி

ஆறணி செஞ்சடையா னழகார்புர மூன்றுமன்று வேவ
நீறணி யாகவைத்த நிமிர்புன்சடை யெம்மிறைவன்
பாறணி வெண்டலையிற் பகலேபலி யென்றுவந்து நின்ற

வேறணி கோலத்தினான் விரும்பும் புகலியதே. **#1139**
கங்கை சூடிய செஞ்சடையினை உடையவனும், அழகமைந்த முப்புரங்களைத் தீயால் வேவச் செய்தவனும், திருநீற்றைத் தன் திருமேனியில் அழகாகப் பூசியவனும், மேல்நோக்கிய சிவந்த சடையை உடைய எம் இறைவனும், பருந்து சூழும் வெள்ளிய தலையோட்டை ஏந்திப் பகலில் பலி இடுக என்று வந்து நிற்பவனும் வேறுபாடு உடையனவாய்ப் புனையப் பெற்ற கோலத்தினனும் ஆகிய சிவபிரான் விரும்பும் தலம் புகலியாகும்.

<u>சீர்காழி</u>

வெள்ள மதுசடைமேற் கரந்தான் விரவார்புரங்கண் மூன்றுங்
கொள்ள வெரிமடுத்தான் குறைவின்றி யுறைகோயில்
அள்ளல் விளைகழனி யழகார்விரைத் தாமரைமே லன்னம்
புள்ளினம் வைகியெழும் புகலிப் பதிதானே. **#1140**
பெருகி வந்த கங்கை வெள்ளத்தைச் சடைமேல் கரந்தவனும், பகைவர்களாகிய அசுரர்களின் புரங்கள் மூன்றையும் எரிமடுத்தவனும் ஆகிய சிவபிரான் குறைவிலா நிறைவோடு உறையும் கோயில், சேறு நிறைந்த வயல்களில் முளைத்த அழகிய மணங்கமழும் தாமரை மலர்கள் மேல் அன்னமும் பிற பறவைகளும் வந்து தங்கிச் செல்லும் புகலிப் பகுதியாகும்.

<u>சீர்காழி</u>

சூடு மதிச்சடைமேற் சுரும்பார்மலர்க் கொன்றைதுன்ற நட்டம்
ஆடு மமரர்பிரா னழகாருமை யோடுமுடன்
வேடு படநடந்த விகிர்தன் குணம்பரவித் தொண்டர்
பாட வினிதுறையும் புகலிப் பதியாமே. **#1141**
மதி சூடிய சடையின் மீது வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலர்களைப் பொருந்துமாறு அணிந்து நடனம் ஆடும் தேவர் பிரானும், அழகிய உமையம்மையோடு உடனாய் வேட்டுவக்கோலத்தோடு தோன்றி அருச்சுனற்கு அருள்புரிய நடந்த வேறுபாடுடையவனும் ஆகிய சிவபிரானின் குணங்களைப் போற்றித் தொண்டர்கள் பாட அப்பெருமான் இனிதுறையும் பதி புகலியாகும்.

<u>சீர்காழி</u>

மைந்தணி சோலையின்வாய் மதுப்பாய்வரிவண்டினங்கள் வந்து
நந்திசை பாடநடம் பயில்கின்ற நம்பனிடம்
அந்திசெய் மந்திரத்தா லடியார்கள் பரவியெழ விரும்பும்
புந்திசெய் நான்மறையோர் புகலிப் பதிதானே. **#1142**

இளமை குன்றாத மரங்களை உடைய அழகிய சோலையின்கண் மலர்ந்த பூக்களின் தேனில் பரவிய வரி வண்டுகள் வந்து வளரும் இசையைப் பாட நடம் பயிலும் பெருமானது இடம், அந்திக் காலங்களில் செய்யும் சந்தியாவந்தன மந்திரங்களால் அடியார்களாய்ப் போற்றுவதற்கு நான்கு வேதங்களிலும் வல்ல அந்தணர் விருப்போடு தமது புந்தியில் நினைக்கும் புகலிப் பதியாகும்.

சீர்காழி

மங்கையோர் கூறுகந்த மழுவாளன் வார்சடைமேற் றிங்கள்
கங்கை தனைக்கரந்த கறைக்கண்டன் கருதுமிடஞ்
செங்கயல் வார்கழனி திகழும் புகலிதனைச் சென்றுதம்
அங்கையி னாற்றொழுவா ரவலம் மறியாரே. **#1143**

உமையம்மையைத் தனது திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு மகிழ்பவனும், மழுவாயுதத்தைக் கையில் ஏந்தியவனும், நீண்ட சடைமேல் திங்களையும் கங்கையையும் அணிந்தவனும், விடக் கறை பொருந்திய மிடற்றினனும் ஆகிய சிவபிரான் கருதி உறையும் இடமாகிய சிவந்த கயல் மீன்கள் திகழும் நீண்ட வயல்களோடு விளங்கும் திருப்புகலிக்குச் சென்று தம் அழகிய கைகளைக் குவித்து வணங்குபவர் துன்பங்கள் நீங்கப் பெறுவர்.

சீர்காழி

வில்லிய நுண்ணிடையாளுமையாள் விருப்பனவ னண்ணும்
நல்லிட மென்றறியா னலியும் விறலரக்கன்
பல்லொடு தோணெரிய விரலூன்றிப் பாடலுமே கைவாள்
ஒல்லை யருள்புரிந்தா னுறையும் புகலியதே. **#1144**

ஒளி பொருந்திய நுண்ணிய இடையினை உடைய உமையவளிடம் பெருவிருப்பினனாகிய சிவபிரான் எழுந்தருளிய மேம்பட்ட இடம் என்று கருதாது கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த வலிய அரக்கனாகிய இராவணனின் பற்களும் தோள்களும் நெரியுமாறு கால்விரலை ஊன்றி அடர்த்த அளவில் அவன் தன்னைப்புகழ்ந்து பாடக் கேட்டுக் கையில் ஏந்திப் போர் செய்யும் வாளை விரைந்து அருள்புரிந்தவனாகிய சிவபிரான் உறையுமிடம் திருப்புகலியாகும்.

சீர்காழி

தாதலர் தாமரைமே லயனுந் திருமாலுந் தேடி
ஓதியுங் காண்பரிய வுமைகோ னுறையுமிடம்
மாதவி வான்வகுள மலர்ந்தெங்கும் விரைதோய வாய்ந்த
போதலர் சோலைகள்சூழ் புகலிப் பதிதானே. **#1145**

மகரந்தம் விரிந்த தாமரை மலர் மேல் உறையும் பிரமனும் திருமாலும் தேடியும் புகழ்ந்தும் காண்டற்கு அரியவனாய் நின்ற உமை மணவாளனாம் சிவன் உறையுமிடம், மாதவி, வானளாவ உயர்ந்த மகிழமரம் ஆகியன மலர்ந்து எங்கும் மணம் பரப்புமாறு பொருந்திய மலர் விரிந்த சோலைகள் சூழ்ந்த புகலிப் பதியாகும்.

<u>சீர்காழி</u>

வெந்துவர் மேனியினார் விரிகோவண நீத்தார் சொல்லும்
அந்தர ஞானமெல்லா மவையோர் பொருளென்னேல்
வந்தெதி ரும்புரமூன் றெரித்தா னுறைகோயில் வாய்ந்த
புந்தியி னார்பயிலும் புகலிப் பதிதானே. **#1146**

கொடிய மருதத் துவராடை உடுத்த மேனியினராகிய புத்தர்களும் விரிந்த கோவணம் உடுப்பதையும் துறந்த திகம்பர சமணரும் சொல்லும் அழிவுதரும் ஞானங்களாகிய அவற்றை ஒரு பொருளாகக் கொள்ளாதீர். தம்மை வந்தெதிர்த்த திரிபுரங்களை எரித்தவனாகிய சிவபிரான் உறையும் கோயில், பொருந்திய அறிவு உடையவர் வாழும் புகலிப் பதியாகும். அதனைச் சென்று தொழுமின்.

<u>சீர்காழி</u>

வேதமோர் கீதமுணர் வாணர்தொழு தேத்த மிகுவாசப்
போதனைப் போன்மறையோர் பயிலும் புகலிதன்னுள்
நாதனை ஞானமிகு சம்பந்தன் றமிழ்மாலை நாவில்
ஓதவல் லாருலகி லுறுநோய் களைவாரே. **#1147**

வேத கீதங்களை உணர்ந்து வாழ்பவர் தொழுது ஏத்தவும், மிக்க மணமுடைய தாமரை மலர் மேல் உறையும் நான்முகனைப் போல விளங்கும் மறையவர் போற்றவும், விளங்கும் புகலியுள் உறையும் சிவபிரானை ஞானம் மிகும் சம்பந்தன் பாடிய இத்தமிழ் மாலையை நாவினால் ஓதி - வழிபட வல்லவர் மேம்பட்ட பிறவிப் பிணியை நீக்கிவிடுவர்.

திருஆரூர்

திருவாரூர்

திருஆரூர்,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வன்மீகநாதர்.
தேவியார் : அல்லியங்கோதையம்மை.

பாடல னான்மறையன் படிபட்ட
கோலத்தன் றிங்கள்
சூடலன் மூவிலைய
சூலம் வலனேந்திக்
கூடலர் மூவெயிலும்மெரியுண்ணக்
கூரெரிகொண் டெல்லி
ஆடல னாதிரையன்
ஆரூ ரமர்ந்தானே. **#1148**

திருவாரூரின்கண் எழுந்தருளிய இறைவன் பாடப்படும் நான்கு வேதங்களை அருளியவன். ஒப்பற்ற தோற்றத்தை உடையவன். திங்களை முடியிற் சூடியவன். இலை வடிவமான முத்தலைச் சூலத்தை வலக் கரத்தே ஏந்தித் தன் பகைவராக இருந்த அசுரர்களின் முப்புரங்களையும் எரியுண்ணச் செய்தவன். மிக்க எரியைக் கையில் ஏந்தி நள்ளிரவில் நடம் புரிபவன். திருவாதிரை நாளை உகந்தவன்.

திருவாரூர்

சோலையில் வண்டினங்கள் சுரும்போ
டிசைமுரலச் சூழ்ந்த
ஆலையின் வெம்புகைபோய்
முகில்தோயும் ஆரூரில்
பாலொடு நெய்தயிரும் பயின்றாடும்
பரமேட்டி பாதம்
காலையு மாலையும்போய்ப்
பணிதல் கருமமே. **#1149**

சோலைகளில் வண்டுகளும், சுரும்புகளும் இசை முரலவும், சூழ்ந்துள்ள கரும்பாலைகளில் தோன்றும் விரும்பத்தக்க புகை மேல் நோக்கிச் சென்று வானத்திலுள்ள முகில்களில் தோய்வதுமான திருவாரூரில் பால், நெய், தயிர் ஆகியவற்றை விரும்பி ஆடும் மேலான இறைவன் திருவடிகளைக் காலை மாலை ஆகிய இரு போதுகளிலும் சென்று

பணிவது நாம் செய்யத்தக்க கருமமாகும்.

திருவாரூர்

உள்ளமோ ரிச்சையினா லுகந்தேத்தித்
தொழுமின்றொண்டீர் மெய்யே
கள்ள மொழிந்திடுமின்
கரவா திருபொழுதும்
வெள்ளமோர் வார்சடைமேற்கரந்திட்ட
வெள்ளேற் றான்மேய
அள்ள லகன்கழனி
ஆரூர் அடைவோமே. **#1150**

தொண்டர்களே! நீவிர் உள்ளத்தால் ஆராய்ந்தறிந்த விருப்போடு மகிழ்ந்து போற்றித் தொழுவீர்களாக. மறைக்காமல் உண்மையாகவே உம் நெஞ்சத்திலுள்ள கள்ளங்களை ஒழிப்பீர்களாக! காலை மாலை இருபோதுகளிலும் கங்கை வெள்ளத்தை ஒப்பற்ற நீண்ட தன் சடைமேல் மறையும்படி செய்தவனும், வெண்மையான ஆனேற்றை உடையவனுமான சிவபிரான் எழுந்தருளிய சேற்று வளம் மிக்க அகன்ற வயல்களால் சூழப்பெற்ற திருவாரூரை வழிபடுதற் பொருட்டு நாம் செல்வோம்.

திருவாரூர்

வெந்துறு வெண்மழுவாட் படையான்
மணிமிடற்றா னரையின்
ஐந்தலை யாடரவ
மசைத்தா னணியாரூர்ப்
பைந்தளிர்க் கொன்றையந்தார்ப் பரமன்
னடிபரவப் பாவம்
நைந்தறும் வந்தணையும்
நாடொறும் நல்லனவே. **#1151**

அடியவர்களின் வினைகளை வெந்தறுமாறு செய்யும் வெண்மையான மழுவாளைக் கையில் ஏந்தியவனும், நீலமணி போன்ற கண்டத்தை உடையவனும், இடையில் ஐந்து தலையுடையதாய் ஆடும் பாம்பினைக் கட்டியவனும், அழகிய திருவாரூரில் பசுந்தளிர்களோடு கட்டிய கொன்றை மாலையை அணிந்தவனுமாகிய பரமனுடைய அடிகளைப் பரவ நம் பாவங்கள் நைந்து இல்லையாகும். நாள்தோறும் நமக்கு நல்லனவே வந்தணையும்.

திருவாரூர்

வீடு பிறப்பெளதா மதனை
வினவுதிரேல் வெய்ய
காடிட மாகநின்று
கனலேந்திக் கைவீசி
ஆடு மவிர்சடையா னவன்மேய
வாரூரைச் சென்று
பாடுதல் கைதொழுதல்
பணிதல் கருமமே. **#1152**

வீடு பேற்றை அடைதல் நமக்கு எளிதாகும். அதற்குரிய வழிகளை நீர் கேட்பீராயின் கூறுகிறேன். கொடிய சுடுகாட்டைத் தனக்குரிய இடமாகக் கொண்டு கனலை ஏந்திக் கைகளை வீசிக்கொண்டு ஆடுகின்ற விளங்கிய சடைமுடியை உடையவனாகிய சிவபிரான் எழுந்தருளிய திருவாரூரை அடைந்து பாடுதல், கைகளால் தொழுதல், பணிதல் ஆகியனவற்றைச் செய்தலே அதற்குரிய வழிகளாகும்.

திருவாரூர்

கங்கையோர் வார்சடைமேற் கரந்தான்
கிளிமழலைக் கேடில்
மங்கையோர் கூறுடையான்
மறையான் மழுவேந்தும்
அங்கையி னானடியே பரவி
யவன்மேய வாரூர்
தங்கையி னாற்றொழுவார்
தடுமாற் றறுப்பாரே. **#1153**

கங்கையை ஒப்பற்ற தனது நீண்ட சடை முடி மேல் கரந்தவனும், கிளி போன்ற மழலை மொழி பேசும் கேடில்லாத உமை மங்கையை ஒரு பாகமாக உடையவனும், மழுவாயுதத்தை அழகியகையில் ஏந்தியவனும் ஆகிய இறைவன் திருவடிகளையே பரவி அவன் எழுந்தருளிய திருவாரூரைத் தம் கைகளால் தொழுபவர் தடுமாற்றங்கள் தவிர்வர்.

திருவாரூர்

நீறணி மேனியனாய் நிரம்பா
மதிசூடி நீண்ட
ஆறணி வார்சடையான்
ஆரூர் இனிதமர்ந்தான்
சேறணி மாமலர்மேற் பிரமன்
சிரமரிந்த செங்கண்
ஏறணி வெல்கொடியா

னவனெம் பெருமானே. #1154
திருநீறு அணிந்த திருமேனியனாய்த் திருமுடியில் இளம்பிறையைச் சூடி, கங்கை விளங்கும் அழகிய நீண்ட சடைமுடியை உடையவனாய், திருவாரூரின் கண் மகிழ்வோடு எழுந்தருளி விளங்குபவனும், சேற்றின்கண் அழகியதாய்த் தோன்றி மலர்ந்த தாமரை மலர்மேல் விளங்கும் பிரமனது சிரங்களில் ஒன்றைக் கொய்த, சிவந்த கண்களை உடைய விடையேற்றை வெற்றிக் கொடியாகக் கொண்டவனுமாகிய சிவபெருமானே எம் தலைவனாவான்.

திருவாரூர்

இப்பதிகத்தின் 8-ம் செய்யுள் சிதைந்து போயிற்று. #1155

திருவாரூர்

வல்லியந் தோலுடையான் வளர்திங்கட்
கண்ணியினான் வாய்த்த
நல்லிய னான்முகத்தோன்
றலையின் னறவேற்றான்
அல்லியங் கோதைதன்னை யாகத்
தமர்ந்தருளி யாரூர்ப்
புல்லிய புண்ணியனைத்
தொழுவாரும் புண்ணியரே. #1156
வலிய புலியினது தோலை உடுத்தவனும், வளர்தற்குரிய பிறைமதியைக் கண்ணியாகச் சூடியவனும், நல்லியல்புகள் வாய்ந்த பிரமனது தலையில் பலியேற்று உண்பவனும், அல்லியங்கோதை என்ற பெயருடைய அம்மையைத் தனது திருமேனியின் ஒரு பாகமாகக் கொண்டவனும் ஆகிய திருவாரூரில் விளங்கும் புண்ணியனைத் தொழுபவர்களும் புண்ணியராவர்.

திருவாரூர்

செந்துவ ராடையினா ருடைவிட்டு
நின்றுழல்வார் சொன்ன
இந்திர ஞாலமொழிந்
தின்புற வேண்டுதிரேல்
அந்தர மூவெயிலும் அரணம்
மெரியூட்டி யாரூர்த்
தந்திர மாவுடையா
னவனெந் தலைமையனே. #1157
செந்துவர் ஊட்டப்பட்ட ஆடையை உடுத்தவரும், ஆடையின்றித்

திகம்பரராய்த் திரிபவரும் ஆகிய புத்த சமணர்கள் கூறிய மாயப் பேச்சுக்களைக் கேளாது விடுத்து, இன்புற்று வாழ விரும்புவீராயின் வானத்தில் திரியும் மூவெயில்களாகிய கோட்டைகளை எரியூட்டி அழித்தவனும் திருவாரூரைத் தனக்கு நிலையான இடமாகக் கொண்டவனுமாகிய சிவபிரானே எம் தலைவன் என்று வழிபடுவீர்களாக.

திருவாரூர்

நல்ல புனற்புகலித் தமிழ்ஞான
சம்பந்தன் நல்ல
அல்லி மலர்க்கழனி
ஆரூர் அமர்ந்தானை
வல்லதோ ரிச்சையினால் வழிபாடிவை
பத்தும் வாய்க்கச்
சொல்லுதல் கேட்டல்வல்லார்
துன்பந் துடைப்பாரே. **#1158**

தூயதான நீர்வளத்தை உடைய புகலியில் தோன்றிய தமிழ் ஞானசம்பந்தன் அக இதழ்களையுடைய நல்ல தாமரை முதலிய மலர்கள் பூத்த கழனிகளால் சூழப்பட்ட திருவாரூரில் எழுந்தருளிய இறைவனைத் தனக்கியன்ற வல்லமையால் அன்போடு பாடிய வழிபாட்டுப் பாடல்களாகிய இப்பதிகத்தைப் பொருந்தச் சொல்லுதல் கேட்டல் வல்லவர்கள் துன்பம் துடைப்பவர்களாவர்.

திருஊறல்

திருஊறல்

திருஊறல்,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. தக்கோலமென வழங்குகின்றது. ,
சுவாமிபெயர் : உமாபதீசுவரர்.
தேவியார் : உமையம்மை.

மாறி லவுணரரணம் மவைமாயவோர்
வெங்கணையா லன்று
நீறெழ வெய்தவெங்கள்
நிமல னிடம்வினவில்
தேற லிரும்பொழிலுந் திகழ்செங்கயல்
பாய்வயலுஞ் சூழ்ந்த
ஊற லமர்ந்தபிரா
னொலியார்கழ லுள்குதுமே. **#1159**

தமக்கு ஒப்பாரில்லாத வலிய அவுணர்களின் அரணங்களாக விளங்கிய முப்புரங்களை மறையுமாறு முற்காலத்தில் ஒரு வெங்கணையால் நீறுபடச் செய்தழித்த எங்கள் நிமலன் ஆகிய சிவபிரான் எழுந்தருளியுள்ள இடம், யாதென வினவில், தேன் நிறைந்த பெரிய பொழில்களும், விளங்கிய செங்கயல்கள் பாயும் வயல்களும், சூழ்ந்துள்ள திருவூறலாகும். அப்பெருமானுடைய ஒலிக்கின்ற கழலணிந்த திருவடிகளை நாம் தியானிப்போம்.

திருஊறல்

மத்த மதக்கரியை மலையான்மக
ளஞ்சவன்று கையால்
மெத்த வுரித்தவெங்கள்
விமலன் விரும்புமிடம்
தொத்தல ரும்பொழில்சூழ் வயல்சேர்ந்தொளிர்
நீலநாளுந் நயனம்
ஒத்தல ருங்கழனித்
திருவூறலை யுள்குதுமே. **#1160**

மதம் பொருந்திய பெரிய தலையையுடைய யானையை மலைமகள் அஞ்ச, முற்காலத்தில் தன் கைகளால் மெல்ல உரித்த எங்கள் விமலனாகிய சிவபெருமான் விரும்பும் இடம் யாதெனவினவில், பூங்கொத்துக்கள் விரிந்துள்ள பொழில்கள் சூழ்ந்ததும், வயல்களில்

நாள்தோறும் முளைத்து விளங்கிய நீல மலர்கள் மங்கையரின் கண்களையொத்து மலரும் வயல்வளங்களை உடையதுமான திருவூறலாகும். அத்தலத்தை நாம் நாள்தோறும் நினைவோமாக.

திருஊறல்

ஏன மருப்பினொடு மெழிலாமையும்
பூண்டழகார் நன்றும்
கானமர் மான்மறிக்கைக்
கடவுள் கருதுமிடம்
வான மதிதடவும் வளர்சோலைகள்
சூழ்ந்தழகார் நம்மை
ஊன மறுத்தபிரான்
றிருவூறலை யுள்குதுமே. **#1161**

பன்றிக் கொம்புகளோடு ஆமையோட்டையும் அணிகலனாக அழகுறப் பூண்டு, நல்ல காட்டில் வாழும் மான்கன்றைத் தன் கையில் ஏந்தியுள்ள கடவுளாகிய சிவபெருமான் விரும்புமிடம், வானத்தின் கண் உள்ள மதி தோயுமாறு வளர்ந்துள்ள சோலைகளால் அழகுறச் சூழப்பட்டு நமது பிறவிப் பிணியைப் போக்க வல்லவனாய்ச் சிவபிரான் எழுந்தருளிய திருவூறலாகும். அதனை நாம் நாள்தோறும் நினைவோமாக.

திருஊறல்

நெய்யணி மூவிலைவே னிறைவெண்மழு
வும்மனலு மன்று
கையணி கொள்கையினான்
கடவுள் ளிடம்வினவில்
மையணி கண்மடவார் பலர்வந்
திறைஞ்சமன்னி நம்மை
உய்யும் வகைபுரிந்தான்
றிருவூறலை யுள்குதுமே. **#1162**

நெய் பூசப்பெற்ற மூவிலை வேல், ஒளிநிறைந்த வெண்மழு, அனல் ஆகியவற்றைத் தன் கைகளில் அணியும் கோட்பாட்டினை உடைய கடவுள் விரும்பும் இடம் யாதென வினவுவீராயின், மை பூசப் பெற்ற கண்களையுடைய மடவார் பலர் வந்து வழிபட நிலையாகத் தங்கி, நாம் உய்யும் வகையில் எழுந்தருளி அருள்புரியும் திருவூறலாகும். அத்தலத்தை நாம் நாள்தோறும் நினைவோமாக.

திருஊறல்

எண்டிசை யோர்மகிழ வெழின்மாலையும்

போனகமும் பண்டு
சண்டி தொழவளித்தான்
அவன்றாழு மிடம்வினவில்
கொண்டல்கள் தங்குபொழிற் குளிர்பொய்கைகள்
சூழ்ந்து நஞ்சை
உண்டபி ரானமருந்
திருவூறலை யுள்குதுமே. **#1163**

எட்டுத் திசைகளில் உள்ளாரும் கண்டு மகிழுமாறு தன்னைத் தொழுத சண்டீசர்க்கு அழகிய மாலை, உணவு முதலியவற்றை முற்காலத்தே அளித்தருளியவனும், கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு தேவர்களைக் காத்தவனுமாகிய சிவபிரான் விரும்பி உறையும் இடம் யாதென வினவில், மேகங்கள் தங்கும் பொழில்களும், குளிர்ந்த பொய்கைகளும் சூழ்ந்து விளங்கும் திருவூறலாகும். அதனை நாம் நாள்தோறும் நினைவோமாக.

திருஊறல்

இப்பதிகத்தின் **6**-ம் செய்யுள் சிதைந்து போயிற்று. **#1164**

திருஊறல்

இப்பதிகத்தின் **7**-ம் செய்யுள் சிதைந்து போயிற்று. **#1165**

திருஊறல்

கறுத்த மனத்தினொடுங் கடுங்காலன்வந்
தெய்துதலுங் கலங்கி
மறுக்குறு மாணிக்கருள
மகிழ்ந்தா னிடம்வினவில்
செறுத்தெழு வாளரக்கன் சிரந்தோளு
மெய்யுந்நெரிய வன்று
ஒறுத்தருள் செய்தபிரான்
றிருவூறலை யுள்குதுமே. **#1166**

சினம் பொருந்திய மனத்தோடு கூடிய கொடிய காலன் தம் வாழ்நாளைக் கவர வந்து அடைதலைக் கண்டு கலங்கி மயங்கிய மார்க்கண்டேயனுக்கு அருள் புரிந்தவனும், தன்னை மதியாது சினந்து வந்த வாள்வல்ல இராவணனின் தலை, தோள், உடல் ஆகியனவற்றை முற்காலத்தில் நெரித்து அருள் செய்தவனுமாகிய சிவபிரான் விரும்பி உறையும் இடம் யாதென வினவில் திருவூறலாகும். அதனை நாம் நாள்தோறும் நினைவோமாக.

திருஊறல்

நீரின் மிசைத்துயின்றோ னிறைநான்
முகனுமறியா தன்று
தேரும் வகை நிமிர்ந்தான்
அவன்சேரு மிடம்வினவில்
பாரின் மிசையடியார் பலர்வந்
திறைஞ்சமகிழ்ந் தாகம்
ஊரு மரவசைத்தான்
றிருவூறலை யுள்குதுமே. **#1167**

கடல்நீரின் மேல் துயில் கொள்வோனாகிய திருமாலும் ஞானத்தினால் நிறைவுபெற்ற நான்முகனும் அறிய முடியாமல் தேடி ஆராயுமாறு நிமிர்ந்து நின்றவனும், மண்ணுலகில் அடியவர் பலரும் வந்து வணங்க மகிழ்ந்து ஊரும் பாம்பினை இடையில் கட்டியவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய இடம் யாதென வினவில் திருவூறலாகும். அதனை நாமும் உள்குவோமாக.

திருஊறல்

பொன்னியல் சீவரத்தார் புளித்தட்டையர்
மோட்டமணர் குண்டர்
என்னு மிவர்க்கருளா
வீசனிடம் வினவில்
தென்னென வண்டினங்கள் செறியார்பொழில்
குழ்ந்தழகார் தன்னை
உன்ன வினைகெடுப்பான்
றிருவூறலை யுள்குதுமே. **#1168**

பொன்போன்ற மஞ்சட் காவியுடை அணிந்த புத்தர்கள், புளிப்பேறிய காடியைத் தட்டில் இட்டு உண்பவர்கள் ஆகியஅறியாமையை உடைய சமண் குண்டர்கள் என்னும் இவர்கட்கு அருள் புரியாதவனும், தன்னை நினைவார்களின் வினைகளைக் கெடுப்பவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய இடம் யாதென வினவில் வண்டு இனங்கள் தென்னென்ற ஓசையோடு செறிந்த பொழில்கள் சூழ்ந்த அழகிய திருவூறலாகும். அதனை நாமும் நினைவோமாக.

திருஊறல்

கோட லிரும்புறவிற் கொடிமாடக்
கொச்சையர்மன் மெச்ச
ஓடு புனல்சடைமேற்

கரந்தான் றிருவூறல்
நாட லரும்புகழான் மிகுஞானசம்
பந்தன்சொன்ன நல்ல
பாடல்கள் பத்தும்வல்லார்
பரலோகத் திருப்பாரே. **#1169**
செங்காந்தட் செடிகள் நிறைந்த பெரிய புதர்கள் விளங்குவதும் கொடிகள் கட்டிய மாட வீடுகளைக் கொண்டதுமான கொச்சையம்பதிக்குத் தலைவனும், பெருகிவரும் கங்கையைச் சடைமிசைக் கரந்தவனுமாகிய சிவபிரானது திருவூறலைப் பற்றி நாடற்கரிய புகழால் மிக்க ஞானசம்பந்தன் பாடிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் வல்லவர் பரலோகத்திருப்பர்.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

திருக்கொடிமாடச்செங்குன்றூர்,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் கொங்கு நாட்டிலுள்ளது. திருச்செங்கோடு என வழங்குகின்றது. ,
சுவாமிபெயர் : அர்த்தநாரீசுவரர்.
தேவியார் : அர்த்தநாரீசுவரி.

வெந்தவெண் ணீறணிந்து விரிநூல்
திகழ்மார்பில் நல்ல
பந்தண வும்விரலா
ளொருபாக மமர்ந்தருளிக்
கொந்தண வும்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
அந்தண னைத்தொழுவார்
அவல மறுப்பாரே. #1170

விரிக்கப் பெற்ற பூணநூல் திகழும் திருமார்பினனாய், நன்றாக வெந்த திருவெண்ணீற்றை அணிந்து, பந்து பொருந்திய கைவிரல்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு, பூங்கொத்துக்கள் நிறைந்த பொழில் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூரில் எழுந்தருளிய அழகிய தண்ணளியை உடைய சிவபெருமானைத் தொழுவார் துன்பங்கள் நீங்கப் பெறுவர்.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

அலைமலி தண்புனலோ டரவஞ்
சடைக்கணிந் தாகம்
மலைமகள் கூறுடையான்
மலையா ரிளவாழைக்
குலைமலி தண்பாழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
தலைமக னைத்தொழுவார்
தடுமாற் றறுப்பாரே. #1171

அலைகள் நிறைந்த குளிர்ந்த கங்கை நதியோடு பாம்பினையும், சடையின்கண் அணிந்து, தனது திருமேனியில் மலைமகளை ஓர் பாகமாகக் கொண்டுள்ளவனும், மலையின்கண் வளரும் குலைகள் நிறைந்துள்ள இளவாழை மரங்களை உடைய குளிர்ந்த பொழில்கள்

சூழ்ந்து விளங்கும் கொடிமாடச் செங்குன்றூரில் எழுந்தருளிய தலைவனுமாகிய சிவபிரானைத் தொழுவார் தடுமாற்றம் தவிர்வர்.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

பாலன நீறுபுனை திகழ்மார்பிற்
பல்வளைக்கை நல்ல
ஏல மலர்க்குழலா
ளொருபாக மமர்ந்தருளிக்
கோல மலர்ப்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் மல்கும்
நீலநன் மாமிடற்றான்
கழலேத்தல் நீதியே. **#1172**

பால் போன்று வெள்ளிய திருநீற்றைப் புனைந்து விளங்கிய மார்பினோடு பல்வகை வளையல்களையும் பாங்குறப் புனைந்த கையினளாய், மணம் கமழும் நறுமலர்களைச் சூடிய கூந்தலினளாகிய உமையம்மை ஒரு பாகமாக அமைந்த கோலத்தோடு அழகிய மலர்கள் பூத்த பொழில்கள் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூரில் எழுந்தருளிய நீல நன்மாமிடற்றானின் கழலணிந்த திருவடிகளை ஏத்துதலே நீதியாகும்.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

வாருறு கொங்கைநல்ல மடவாள்
திகழ்மார்பி னண்ணும்
காருறு கொன்றையொடுங்
கதநாகம் பூண்டருளிச்
சீருறு மந்தணர்வாழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
நீருறு செஞ்சடையான்
கழலேத்தல் நீதியே. **#1173**

கச்சணிந்த தனங்களை உடைய அழகிய உமையம்மை விளங்கும் திருமார்பின்கண் கார்காலத்தே மலரும் கொன்றை மலர் மாலையோடு சினம் பொருந்திய பாம்பை அணிகலனாகப் பூண்டு சிறப்புப் பொருந்திய அந்தணர்கள் வாழும் கொடிமாடச் செங்குன்றூரில் எழுந்தருளிய கங்கையணிந்த செஞ்சடையனாய் விளங்கும் சிவபிரானின் கழலணிந்த திருவடிகளை ஏத்துதல் நீதியாகும்.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

பொன்றிக ழாமையொடு புரிநூல்
திகழ்மார்பி னல்ல

பன்றியின் கொம்பணிந்து
பணைத்தோளியோர் பாகமாகக்
குன்றன மாளிகைசூழ் கொடிமாடச்
செங்குன்றூர் வானில்
மின்றிகழ் செஞ்சடையான்
கழலேத்தல் மெய்ப்பொருளே. **#1174**

திருமகள் விளங்கும் திருமாலாகிய ஆமையினது ஓட்டினோடு முப்புரிநூல் திகழும் மார்பின்கண் நல்ல பன்றியின் கொம்புகளையும் அணிந்து மூங்கில் போன்ற தோளினளாகிய உமையம்மை ஒரு பாகமாக விளங்கக் குன்றுகள் போன்ற மாளிகைகள் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூரில் வானில் திகழும் மின்னல் போன்று விளங்கும் செஞ்சடையானின் கழலணிந்த திருவடிகளை ஏத்துதலே மெய்ப் பொருளாகும்.

<u>திருக்கொடிமாடச்செங்குன்றூர்</u>

ஓங்கிய மூவிலைநற் சூல
மொருகையன் சென்னி
தாங்கிய கங்கையொடு
மதியஞ் சடைக்கணிந்து
கோங்கண வும்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் வாய்ந்த
பாங்கன தாள்தொழுவார்
வினையாய பற்றறுமே. **#1175**

மேம்பட்ட மூவிலை வடிவான நல்ல சூலத்தை ஒரு கையில் ஏந்தியவனாய்த் திருமுடியில் தடுத்த கங்கையோடு, பிறையையும் சடையின்கண் அணிந்து, தேன் பொருந்திய பொழில்கள் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூரில் பொருந்திய தோழனாய் விளங்கும் சிவபெருமானின் திருவடிகளைத் தொழுபவர்களின் வினைகள் வேர்ப்பற்றோடு நீங்கும்.

<u>திருக்கொடிமாடச்செங்குன்றூர்</u>

நீடலர் கொன்றையொடு நிமிர்புன்
சடைதாழ வெள்ளை
வாட லுடைதலையிற்
பலிகொள்ளும் வாழ்க்கையனாய்க்
கோடல் வளம்புறவிற் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
சேடன தாள்தொழுவார்

வினையாய தேயுமே. #1176
கொத்தாக நீண்டு மலர்கின்ற கொன்றை மலர்களோடு நிமிர்ந்து தோன்றும் சிவந்த சடைகள் தாழ்ந்து தொங்க, வெண்மையான புலால் நீங்கிய தலையோட்டில் பலி ஏற்றுண்ணும் வாழ்க்கையனாய், வெண்காந்தள் மலர்ந்த புதர்களை உடைய வளமான முல்லை நிலங்களால் சூழப்பட்ட கொடிமாடச் செங்குன்றூரில் எழுந்தருளிய பெருமை உடையோனின் திருவடிகளைத் தொழுபவர்களின் வினைகள் தேய்ந்தொழியும்.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

மத்தநன் மாமலரும் மதியும்வளர்
கொன்றையுடன் துன்று
தொத்தலர் செஞ்சடைமேல்
துதைய வுடன்சூடிக்
கொத்தலர் தண்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் மேய
தத்துவ னைத்தொழுவார்
தடுமாற் றறுப்பாரே. #1177
செஞ்சடைமீது நல்ல ஊமத்த மலரையும் இளமதியையும் கொத்தாக அலரும் கொன்றை மலருடன் ஒருசேரநெருங்கச் சூடிப் பூங்கொத்துக்கள் அலரும் தண்ணிய பொழில் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூரில் எழுந்தருளிய தத்துவனைத் தொழுவார் தடுமாற்றங்கள் இலராவர்.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

செம்பொனின் மேனியனாம் பிரமன்றிரு
மாலுந்தேட நின்ற
அம்பவ ளத்திரள்போ
லொளியாய வாதிபிரான்
கொம்பண வும்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் மேய
நம்பன தாடொழுவார்
வினையாய நாசமே. #1178
சிவந்த பொன்போன்ற மேனியினன் ஆகிய பிரமனும் திருமாலும் தேடுமாறு பவளத் திரள் போல ஒளி வடிவினனாய் ஓங்கிநின்ற மூல காரணனும், கொம்புகளாகக் கிளைத்து நெருங்கிய மரங்கள் நிறைந்த பொழில் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூரில் எழுந்தருளியவனுமாகிய சிவபிரானின் திருவடிகளைத் தொழுபவர்களின் வினைகள் நாசமாகும்.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

போதியர் பிண்டியரென் றிவர்கள்
புறங்கூறும் பொய்ந்நூல்
ஓதிய கட்டுரைகேட்
டுழல்வீர் வரிக்குயில்கள்
கோதிய தண்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
வேதிய னைத்தொழநும்
வினையான வீடுமே. **#1179**

போதி மரத்தை வழிபடும் புத்தர், அசோக மரத்தை வழிபடும் சமணர் ஆகியோர் பொய்ந்நூல்களை மேற்கோள்களாகக்காட்டிக் கூறும் புனைந்துரைகளைக் கேட்டு அவற்றை மெய்யெனக் கருதி உழல்பவர்களே!, இசை பாடும் குயில்கள் கோதிய தளிர்களோடு கூடிய தண்பொழில் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூரில் எழுந்தருளிய வேதம் விரித்த சிவபிரானைத் தொழுமின்; நம் வினைகள் யாவும் அழியும்.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

அலைமலி தண்புனல்சூழ்ந் தழகார்
புகலிந்நகர் பேணும்
தலைமக னாகிநின்ற
தமிழ்ஞான சம்பந்தன்
கொலைமலி மூவிலையான் கொடிமாடச்
செங்குன்றூ ரேத்தும்
நலமலி பாடல்வல்லார்
வினையான நாசமே. **#1180**

அலைகள் மிகுந்த குளிர்ந்த நீரால் சூழப்பட்ட அழகிய புகலி நகரை விரும்பும் தலைமகனாகிய தமிழ் ஞானசம்பந்தன், கொல்லும் தொழிலில் வல்ல மூன்று இலை வடிவான சூலத்தைக் கையில் ஏந்தியவனாய சிவபிரான் எழுந்தருளிய கொடிமாடச் செங்குன்றூரைப் போற்றிப் பாடிய, நலம் மிக்க, இப்பதிகப் பாடல்களை ஓத, வல்லவர்களின் வினைகள் நாசமாகும்.

திருப்பாதாளீச்சரம்

திருப்பாதாளீச்சரம்

திருப்பாதாளீச்சரம்,
பண் - வியாழக்குறிஞ்சி

மின்னியல் செஞ்சடைமேல் விளங்கும்மதி
மத்தமொடு நல்ல
பொன்னியல் கொன்றையினான்
புனல்சூடிப் பொற்பமரும்
அன்ன மனநடையா ளொருபாகத்
தமர்ந்தருளி நாளும்
பன்னிய பாடலினா
னுறைகோயில் பாதாளே. **#1181**

மின்னல் போன்ற செஞ்சடைமேல் விளங்கும் மதி, ஊமத்தமலர் பொன் போன்ற நல்ல கொன்றை ஆகியவற்றோடு கங்கையையும் சூடி, அழகு விளங்கும் அன்னம் போன்ற நடையினளாகிய உமையம்மை ஒரு பாகமாக விளங்க, நாள்தோறும் வேத கீதங்களைப் பாடியவனாய்ச் சிவபெருமான் உறையும் கோயில் பாதாளீச்சரமாகும்.

திருப்பாதாளீச்சரம்

நீடலர் கொன்றையொடு நிரம்பா
மதிசூடி வெள்ளைத்
தோடமர் காதினல்ல குழையான்
சுடுநீற்றான்
ஆடர வம்பெருக வனலேந்திக்
கைவீசி வேதம்
பாடலி னாலினியா
னுறைகோயில் பாதாளே. **#1182**

கொத்தாக நீண்டு அலர்கின்ற கொன்றையோடு கலைநிறையாத இளம் பிறையை முடியில் சூடி, ஒரு காதில் வெள்ளைத் தோட்டுடன் மறு காதில் நல்ல குழையையுடையவனாய் விளங்குவோனும், சுட்ட திருநீற்றை மெய்யில் பூசியவனும், ஆடும் பாம்பு அணிகலனாகப் பெருகித் தோன்ற அனல் ஏந்திக் கைவீசி வேதப் பாடல்களைப் பாடுதலில் இனியனாய் விளங்குவோனும் ஆகிய சிவபெருமான் உறையும் கோயில் திருப்பாதாளீச்சரமாகும்.

திருப்பாதாளீச்சரம்

நாகமும் வான்மதியுந் நலமல்கு
செஞ்சடையான் சாமம்
போகநல் வில்வரையாற்
புரமூன்றெரித்துகந்தான்
தோகைநன் மாமயில்போல்
வளர்சாயற் றூமொழியைக் கூடப்
பாகமும் வைத்துகந்தா
னுறைகோயில் பாதாளே. **#1183**

பாம்பு, வானில் விளங்கும் மதி ஆகியனவற்றைச் சூடிய அழகுமிக்க செஞ்சடையை உடையவனும், உரிய காலம் கழிய நல்ல மேருவில்லால் முப்புரங்களை எரித்துகந்தவனும், தோகையை உடைய நல்ல ஆண்மயில் போன்று வளர்கின்ற கட்புலனாய மென்மையை உடைய தூய மொழி பேசும் உமையம்மையைத் தன்னோடு உடனாக இடப்பாகமாகக் கொண்டு மகிழ்ந்தவனும் ஆகிய சிவபிரான் மகிழ்ந்துறையும் கோயில் பாதாளீச்சரமாகும்.

<u>திருப்பாதாளீச்சரம்</u>

அங்கமு நான்மறையும் அருள்செய்
தழகார்ந்த வஞ்சொல்
மங்கையோர் கூறுடையான்
மறையோ னுறைகோயில்
செங்கய னின்றுகளுஞ் செறுவிற்
றிகழ்கின்ற சோதிப்
பங்கய நின்றலரும்
வயல்சூழ்ந்த பாதாளே. **#1184**

பேய்கள் பலவும் உடன் சூழ, சுடுகாட்டை அரங்காக எண்ணி நின்று, தீ, மான்கன்று மழு ஆகியவற்றைக் கைகளில் விளங்குவித்து, தேய்ந்த பிறையும் பாம்பும் விளங்கிய கொன்றை மலரும் உடைய தன் சடைமேல் பாய்ந்து வரும் கங்கையையும் உடையவனாகிய சிவபிரான் உறையும் கோயில் பாதாளீச்சரமாகும்.

<u>திருப்பாதாளீச்சரம்</u>

பேய்பல வுந்நிலவப் பெருங்காடரங் காகவுன்னி நின்று
தீயொடு மான்மறியும் மழுவுந் திகழ்வித்துத்
தேய்பிறை யும்மரவும் பொலிகொன்றைச் சடைதன்மேற் சேரப்
பாய்புன லும்முடையா னுறைகோயில் பாதாளே. **#1185**

பேய்கள் பலவும் உடன் சூழ, சுடுகாட்டை அரங்காக எண்ணி நின்று, தீ, மான்கன்று மழு ஆகியவற்றைக் கைகளில் விளங்குவித்து, தேய்ந்த

பிறையும் பாம்பும் விளங்கிய கொன்றை மலரும் உடைய தன் சடைமேல் பாய்ந்து வரும் கங்கையையும் உடையவனாகிய சிவபிரான் உறையும் கோயில் பாதாளீச்சரமாகும்.

திருப்பாதாளீச்சரம்

கண்ணமர் நெற்றியினான் கமழ்கொன்றைச்
சடைதன்மே னன்று
விண்ணியன் மாமதியும்
முடன்வைத் தவன்விரும்பும்
பெண்ணமர் மேனியினான் பெருங்கா
டரங்காக வாடும்
பண்ணியல் பாடலினா
னுறைகோயில் பாதாளே. **#1186**

கண் பொருந்திய நெற்றியை உடையவனும், சடைமுடி மீது மணம் கமழும் கொன்றை மலரோடு, அழகு பொருந்த வானின்கண் உலாவும் சிறந்த பிறைமதியையும் உடனாக வைத்தவனும், தன்னால் விரும்பப் பெற்ற உமை மங்கை பொருந்திய திருமேனியனும், சுடுகாட்டை அரங்காகக் கொண்டு பண்ணொடு கூடிய பாடல்களுடன் ஆடுபவனுமாகிய சிவபிரான் உறையும் கோயில் பாதாளீச்சரமாகும்.

திருப்பாதாளீச்சரம்

விண்டலர் மத்தமொடு மிளிரும்மிள
நாகம்வன் னிதிகழ்
வண்டலர் கொன்றைநகு
மதிபுல்கு வார்சடையான்
விண்டவர் தம்புரமூன் றெரிசெய்துரை
வேதநான் கும்மவை
பண்டிசை பாடலினா
னுறைகோயில் பாதாளே. **#1187**

தளையவிழ்ந்து மலர்ந்த ஊமத்த மலரோடு, புரண்டு கொண்டிருக்கும் இளநாகம், வன்னிஇலை, வண்டுகளால் மலர்த்தப் பெறும் கொன்றை, பிறைமதி ஆகியன பொருந்திய நீண்ட சடை உடையவனும், பகைவரான அசுரர்களின் முப்புரங்களையும் எரித்தவனும், நான்கு வேதங்களையும் உரைத்தலோடு அவற்றைப் பண்டைய இசை மரபோடு பாடி மகிழ்பவனுமான சிவபிரான் உறையும் கோயில் பாதாளீச்சரமாகும்.

திருப்பாதாளீச்சரம்

மல்கிய நுண்ணிடையா ளுமைநங்கை
மறுகவன்று கையால்
தொல்லை மலையெடுத்த
வரக்கன்றலை தோணெரித்தான்
கொல்லை விடையுகந்தான் குளிர்திங்கள்
சடைக் கணிந்தோன்
பல்லிசை பாடலினா
னுறைகோயில் பாதாளே. **#1188**

செறிந்த நுண்மையான இடையினை உடைய உமையம்மை அஞ்ச அன்று கையால் பழமையான கயிலை மலையைப் பெயர்த்த இராவணனின் தலைகளையும் தோள்களையும் நெரித்தவனும், முல்லை நிலத் தெய்வமான திருமாலாகிய விடையை உகந்தவனும், குளிர்ந்த திங்களைச் சடையின்கண் அணிந்தவனும் பல்வகையான இசைப் பாடல்களைப் பாடுபவனும் ஆகிய சிவபிரான் உறையும் கோயில் பாதாளீச்சரமாகும்.

<u>திருப்பாதாளீச்சரம்</u>

தாமரை மேலயனும் மரியுந்தம
தாள்வினையாற் றேடிக்
காமனை வீடுவித்தான்
கழல்காண்பில ராயகன்றார்
பூமரு வுங்குழலா ளுமைநங்கை
பொருந்தியிட்ட நல்ல
பாமரு வுங்குணத்தா
னுறைகோயில் பாதாளே. **#1189**

மன்மதனை எரித்த சிவபிரான் திருவடிகளைத் தாமரை மலரின்மேல் எழுந்தருளிய அயனும், திருமாலும் தமது முயற்சியால் தேடிக்காண இயலாது நீங்கினர். மலர்கள் சூடிய கூந்தலை உடைய உமைநங்கை ஒரு பாகமாகப் பொருந்தியவனும் வேதப் பாடல்களைப் பாடும் நல்ல குணத்தினனும் ஆகிய அப்பெருமான் உறையும் கோயில் பாதாளீச்சரமாகும். அங்குச் சென்றால் அவன் கழலடி காணலாம் என்பது குறிப்பெச்சம்.

<u>திருப்பாதாளீச்சரம்</u>

காலையி லுண்பவருஞ் சமண்கையருங்
கட்டுரை விட்டன்
றால விடநுகர்ந்தா னவன்
றன்னடி யேபரவி

மாலையில் வண்டினங்கண் மதுவுண்
டிசைமுரல வாய்த்த
பாலையாழ்ப் பாட்டுகந்தா
னுறைகோயில் பாதாளே. **#1190**

காலையில் சோறுண்ணும் புத்தரும், சமண சமயக் கீழ் மக்களும் கூறும் மெய்போன்ற பொய்யுரைகளை விடுத்து, ஆலகால விடமுண்டு அமரர்களைக் காத்தவனும் மாலைக் காலத்தில்வண்டினங்கள் மதுவுண்டு இசை முரல ஏற்புடையதான பாலைப் பண்ணையாழில் பாடக் கேட்டு மகிழ்பவனும் ஆகிய சிவபிரான் உறையும் கோயில் பாதாளீச்சரமாகும்.

திருப்பாதாளீச்சரம்

பன்மலர் வைகுபொழில் புடைசூழ்ந்த
பாதாளைச் சேரப்
பொன்னியன் மாடமல்கு
புகலிந்நகர் மன்னன்
தன்னொளி மிக்குயர்ந்த தமிழ்ஞான
சம்பந்தன் சொன்ன
இன்னிசை பத்தும்வல்லா
ரெழில்வானத் திருப்பாரே. **#1191**

பலவகையான மலர்களும் பூத்துள்ள பொழில் புடை சூழ்ந்த பாதாளீச்சரத்தைச் சென்று தரிசிக்குமாறு, பொன்னால் இயன்ற மாட வீடுகள் நிறைந்த புகலி நகர் மன்னனும், தன்புகழ் உலகெங்கும் பரவி விளங்குமாறு உயர்ந்தவனுமாகிய தமிழ் ஞானசம்பந்தன் பாடிய இன்னிசை பொருந்திய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் வல்லவர் அழகிய வானுலகின்கண் இருப்பர்.

திருச்சிரபுரம்

சீர்காழி

திருச்சிரபுரம்,
பண் - வியாழக்குறிஞ்சி, சிரபுரமென்பதும் சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

வாருறு வனமுலை மங்கைபங்கன்
நீருறு சடைமுடி நிமலனிடங்
காருறு கடிபொழில் சூழ்ந்தழகார்
சீருறு வளவயற் சிரபுரமே. **#1192**

கச்சணிந்த அழகிய தனபாரங்களை உடைய உமையம்மையின் கணவனும், கங்கையை அணிந்த சடைமுடியை உடைய நிமலனுமாகிய சிவபிரான் விரும்பி உறையும் இடம், மேகங்கள் தோயுமாறு வானளாவிய மணம் கமழும் பொழில் சூழ்ந்த அழகிய சிறப்புப் பொருந்திய வளமையான வயல்களை உடைய சிரபுரம் ஆகும்.

சீர்காழி

அங்கமொ டருமறை யருள்புரிந்தான்
திங்களொ டரவணி திகழ்முடியன்
மங்கையொ டினிதுறை வளநகரஞ்
செங்கயன் மிளிர்வயற் சிரபுரமே. **#1193**

ஆறங்கங்களோடு அரிய வேதங்கள் நான்கையும் அருளிச் செய்தவனும், திங்கள் பாம்பு ஆகியவற்றை அணிந்து விளங்கிய முடியினனும் ஆகிய சிவபெருமான் உமைமங்கையோடு மகிழ்வாக உறையும் வளமையான நகரம் செங்கயல்கள் துள்ளி விளையாடும் வயல்கள் சூழ்ந்த சிரபுரம் ஆகும்.

சீர்காழி

பரிந்தவன் பன்முடி யமரர்க்காகித்
திரிந்தவர் புரமவை தீயின்வேவ
வரிந்தவெஞ் சிலைபிடித் தடுசரத்தைத்
தெரிந்தவன் வளநகர் சிரபுரமே. **#1194**

பல்வகையான முடிகளைச் சூடிய அமரர்களிடம் மிக்க பரிவுடையவனாகி வானவெளியில் திரிந்த அவுணர்களின் முப்புரங்களும் தீயில் வேகுமாறு வரிந்து கட்டிய கொடிய வில்லைப்

பிடித்துக் கொல்லும் அம்பினை ஆராய்ந்து தொடுத்த பெருமானது வளநகர் சிரபுரமாகும்.

சீர்காழி

நீறணி மேனிய னீண்மதியோ
டாறணி சடையின னணியிழையோர்
கூறணிந் தினிதுறை குளிர்நகரஞ்
சேறணி வளவயற் சிரபுரமே. **#1195**

திருநீறு அணிந்த திருமேனியை உடையவனும், வளைவாக நீண்ட பிறை மதியோடு கங்கையை அணிந்த சடையினை உடையவனும் ஆகிய சிவபிரான், அழகிய அணிகலன்களைப் பூண்ட உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு இனிதாக உறையும் குளிர்ந்த நகரம் சேற்றால் அழகிய வளமான வயல்கள் சூழ்ந்த சிரபுரமாகும்.

சீர்காழி

அருந்திற லவுணர்க ளரணழியச்
சரந்துரந் தெரிசெய்த சங்கரனூர்
குருந்தொடு கொடிவிடு மாதவிகள்
திருந்திய புறவணி சிரபுரமே. **#1196**

வெல்லுதற்கரிய வலிமையினையுடைய அசுரர்களின் முப்புரங்களும் அழியுமாறு கணையைத் தொடுத்து எரித்த சங்கரனாகிய சிவபெருமானது ஊர், குருந்தமரம் கொடிகளாகப்படரும் மாதவி எனும் குருக்கத்தி ஆகியன நிறைந்த அழகிய புதர்களால் சூழப் பட்ட சிரபுரம் என்னும் நகரமாகும்.

சீர்காழி

கலையவன் மறையவன் காற்றொடுதீ
மலையவன் விண்ணொடு மண்ணுமவன்
கொலையவன் கொடிமதில் கூட்டழித்த
சிலையவன் வளநகர் சிரபுரமே. **#1197**

கலைகளாக விளங்குபவனும், வேதங்களை அருளியவனும் காற்று, தீ, மலை, விண், மண் முதலியனவாகத் திகழ்பவனும் கொடிகள் கட்டப்பெற்ற அசுரர்களின் முப்புரங்களை அவற்றின் மதில்களோடு கூட்டாக அழித்த மேருவில் ஏந்திய கொலையாளனும் ஆகிய சிவபெருமானது வளநகர் சிரபுரமாகும்.

சீர்காழி

வானமர் மதியொடு மத்தஞ்சூடித்

தானவர் புரமெய்த சைவனிடங்
கானமர் மடமயில் பெடைபயிலுந்
தேனமர் பொழிலணி சிரபுரமே. **#1198**
வானத்தில் உலவும் பிறை மதியையும், ஊமத்த மலரையும் முடியிற் சூடி, அசுரர்களின் முப்புரங்களை எய்தழித்த சைவன் இடம், காடுகளில் வாழும் இள ஆண் மயில்கள் பெண் மயில்களோடு கூடி மகிழ்வதும் இனிமை நிறைந்து விளங்குவதுமான சிரபுரமாகும்.

<u>சீர்காழி</u>

மறுத்தவர் திரிபுர மாய்ந்தழியக்
கறுத்தவன் காரரக் கன்முடிதோள்
இறுத்தவ னிருஞ்சினக் காலனைமுன்
செறுத்தவன் வளநகர் சிரபுரமே. **#1199**
தன்னோடு உடன்பாடு இல்லாது மாறுபட்டு ஒழுகிய அசுரர்களின் முப்புரங்களும் கெட்டு அழியுமாறு சினந்தவனும், கரிய அரக்கனாகிய இராவணனின் தலை தோள் ஆகியவற்றை நெரித்தவனும், மிக்க சினம் உடைய இயமனை அழித்தவனுமான சிவபிரானது வளநகர் சிரபுரமாகும்.

<u>சீர்காழி</u>

வண்ணநன் மலருறை மறையவனுங்
கண்ணனுங் கழல்தொழக் கனலுருவாய்
விண்ணுற வோங்கிய விமலனிடம்
திண்ணநன் மதிலணி சிரபுரமே. **#1200**
செவ்வண்ணமுடைய நல்ல தாமரை மலர் மேல் உறையும் நான்முகனும், திருமாலும் தன் திருவடிகளைத் தொழுது நிற்குமாறு கனல் உருவாய் விண்ணுற ஓங்கி நின்ற விமலனாகிய சிவபிரானது இடம் உறுதியான நல்ல மதில்களால் அழகுறும் சிரபுர வளநகராகும்.

<u>சீர்காழி</u>

வெற்றரை யுழல்பவர் விரிதுகிலார்
கற்றில ரறவுரை புறனுரைக்கப்
பற்றலர் திரிபுர மூன்றும்வேவச்
செற்றவன் வளநகர் சிரபுரமே. **#1201**
ஆடையில்லாத இடையோடு திரிந்துழல்வோரும், விரித்த ஆடையைப் போர்வையாகப் போர்த்தியுள்ளவரும், மெய் நூல்களைக் கல்லாதவரும் ஆகிய சமண பௌத்தர்கள் அறவுரை என்ற பெயரில் புறம்பான உரைகளைக் கூறக்கேட்டு அவற்றைப் பொருட்படுத்தாதவனாய்ப்

பகைவராகிய அவுணர்களின் முப்புரங்களும் தீயில் வேகுமாறு அழித்தருளிய சிவபிரான் எழுந்தருளிய வளநகர் சிரபுரமாகும்.

சீர்காழி

அருமறை ஞானசம் பந்தனந்தண்
சிரபுர நகருறை சிவனடியைப்
பரவிய செந்தமிழ் பத்தும்வல்லார்
திருவொடு புகழ்மல்கு தேசினரே. **#1202**

அரிய மறைகளை ஓதாது உணர்ந்த ஞானசம்பந்தன் அழகிய தண்ணளியை உடைய சிரபுர நகரில் எழுந்தருளிய சிவபெருமான் திருவடிகளைப் பரவிப் போற்றிய இப்பதிகச் செந்தமிழ் பத்தையும் ஓத வல்லவர் செல்வத்துடன் புகழ் நிறைந்து ஒளியுடன் திகழ்வர்.

திருவிடைமருதூர்

திருவிடைமருதூர்

திருவிடைமருதூர்,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மருதீசர்.
தேவியார் : நலமுலைநாயகியம்மை.

மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவினொ டிறவுமானான்
அருந்தவ முனிவரொ டால்நிழற்கீழ்
இருந்தவன் வளநக ரிடைமருதே. **#1203**

பிறவி நோய் தீர்க்கும் மருந்தாக விளங்குபவனும், தேவர்கட்கும் அசுரர்கட்கும் தலைவனாய் விளங்குபவனும், உயிர்களின் பிறப்பு இறப்பிற்குக் காரணமானவனும், அரிய தவம் உடைய சனகாதி முனிவர்களோடு கல்லால மர நிழலில் எழுந்தருளியிருந்து அறம் உரைத்தருளியவனுமான சிவபிரானது வளநகர் இடைமருதாகும்.

திருவிடைமருதூர்

தோற்றவன் கேடவன் றுணைமுலையாள்
கூற்றவன் கொல்புலித் தோலசைத்த
நீற்றவ னிறைபுன னீள்சடைமேல்
ஏற்றவன் வளநக ரிடைமருதே. **#1204**

உயிர்களின் தோற்றத்திற்கும் கேட்டிற்கும் காரணமானவனும், இணையான தனங்களை உடைய உமையம்மையை ஒருகூறாகக் கொண்டவனும், கொல்லும் தொழிலில் வல்ல புலியினது தோலை இடையில் கட்டியவனும், மெய்யெலாம் திருநீறு அணிந்தவனும், பெருகிவந்த கங்கையை நீண்ட சடைமுடிமேல் ஏற்று உலகைக் காத்தவனுமான சிவபிரானது வளநகர் இடைமருதாகும்.

திருவிடைமருதூர்

படையுடை மழுவினன் பால்வெண்ணீற்றன்
நடைநவி லேற்றினான் ஞாலமெல்லாம்
உடைதலை யிடுபலி கொண்டுழல்வான்
இடைமரு தினிதுறை யெம்மிறையே. **#1205**

மழுவைத் தனக்குரிய ஆயுதமாகக் கொண்டவனும், பால் போன்று வெள்ளிய திருநீற்றை மேனிமேல் பூசியவனும், இனிய நடையைப்

பழகுகின்ற விடை ஏற்றை உடையவனும், உடைந்த தலையோட்டில் பலி கொண்டு உலகெலாம் திரிந்துழல்பவனும் ஆகிய எம் தலைவனாகிய சிவபெருமான் இனிது உறையும் நகர் இடைமருதாகும்.

திருவிடைமருதூர்

பணைமுலை யுமையொரு பங்கனொன்னார்
துணைமதிண் மூன்றையுஞ் சுடரின்மூழ்கக்
கணைதுரந் தடுதிறற் காலற்செற்ற
இணையிலி வளநக ரிடைமருதே. **#1206**

பருத்த தனங்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவனும், பகைவராகிய அசுரர்கட்குத் துணையாக இருந்த மூன்று அரணங்களையும் தீயில் மூழ்கி அழியுமாறு கணையைச் செலுத்தி அழித்தவனும், காலனைச் செற்ற ஒப்பிலியும் ஆகிய சிவ பெருமானது வளநகர் இடைமருது ஆகும்.

திருவிடைமருதூர்

பொழிலவன் புயலவன் புயலியக்கும்
தொழிலவன் றுயரவன் துயரகற்றும்
கழலவன் கரியுரி போர்த்துகந்த
எழிலவன் வளநக ரிடைமருதே. **#1207**

ஏழ் உலகங்களாக இருப்பவனும், மேகங்களாகவும் அவற்றை இயக்கி மழையைப் பெய்விக்கும் தொழிலைப் புரிவோனாக இருப்பவனும், துன்பங்களைத் தருபவனாகவும் அவற்றைப் போக்கும் கழலணிந்த திருவடிகளை உடையவனாக விளங்குபவனும், யானையின் தோலைப் போர்த்து மகிழ்ந்து அழகனாக விளங்குபவனும் ஆகிய சிவபெருமானது வளநகர் இடைமருதாகும்.

திருவிடைமருதூர்

நிறையவன் புனலொடு மதியும்வைத்த
பொறையவன் புகழவன் புகழநின்ற
மறையவன் மறிகட னஞ்சையுண்ட
இறையவன் வளநக ரிடைமருதே. **#1208**

குறைவற்ற நிறைவாக விளங்குபவனும், கங்கையோடு திங்களைத் திருமுடியில் வைத்துச் சுமக்கும் சுமையை உடையவனும், புகழ் வடிவினனாக விளங்குபவனும், எல்லோராலும் புகழப்படும் வேதங்களாக விளங்குபவனும், சுருண்டு விழும் அலைகளை உடைய கடலின்கண் தோன்றிய நஞ்சினை உண்ட தலைவனும் ஆகிய சிவபிரானது வளநகர் இடைமருதாகும்.

திருவிடைமருதூர்

நனிவளர் மதியொடு நாகம்வைத்த
பனிமலர்க் கொன்றையம் படர்சடையன்
முனிவரொ டமரர்கண் முறைவணங்க
இனிதுறை வளநக ரிடைமருதே. **#1209**

நாள்தோறும் ஒரு கலையாக நன்றாக வளர்தற்குரிய பிறை மதியோடு பாம்பையும் உடனாக வைத்துள்ளவனும் குளிர்ந்த கொன்றை மலர்மாலை சூடிய விரிந்த சடைமுடியை உடையவனும் ஆகிய சிவபிரான் முனிவர்களும் தேவர்களும் முறையாக வணங்க இனிதாக உறையும் வளநகர் இடைமருதாகும்.

திருவிடைமருதூர்

தருக்கின வரக்கன தாளுந்தோளும்
நெரித்தவ னெடுங்கைமா மதகரியன்
றுரித்தவ னொன்னலர் புரங்கண்மூன்றும்
எரித்தவன் வளநக ரிடைமருதே. **#1210**

செருக்குற்ற அரக்கனாகிய இராவணனின் தாள்களையும், தோள்களையும் நெரித்தவனும், நீண்ட கையை உடைய பெரிய மத யானையை அக்காலத்தில் உரித்துப் போர்த்தவனும், பகைவர்களாகிய அசுரர்களின் புரங்கள் மூன்றையும் எரித்தவனும் ஆகிய சிவபெருமானது வளநகர் இடைமருதாகும்.

திருவிடைமருதூர்

பெரியவன் பெண்ணினொ டாணுமானான்
வரியர வணைமறி கடற்றுயின்ற
கரியவ னலரவன் காண்பரிய
எரியவன் வளநக ரிடைமருதே. **#1211**

எல்லோரினும் பெரியவனும், பெண் ஆண் வடிவாக விளங்குபவனும், வயிற்றிடையே கீற்றுக்களாகிய கோடுகளை உடைய பாம்பணைமேல் கடலிடையே துயிலும் கரியவனாகியதிருமால் தாமரை மலர்மேல் உறையும் நான்முகன் ஆகியோர் காணுதற்கரிய எரியுருவாய் ஓங்கி நின்றவனும் ஆகிய சிவபெருமானது வளநகர் இடைமருதாகும்.

திருவிடைமருதூர்

சிந்தையில் சமணொடு தேரர்சொன்ன
புந்தியி லுரையவை பொருள்கொளாதே
அந்தண ரோத்தினொ டரவமோவா

எந்தைதன் வளநக ரிடைமருதே. **#1212**
சிந்திக்கும் திறனற்ற சமணர்களும், புத்தர்களும் கூறிய அறிவற்ற உரைகளைப் பொருளுடைய உரைகளாகக் கொள்ளாதீர். அந்தணர்களின் வேத ஒலியோடு விழவொலி நீங்காத வளநகர் ஆகிய இடைமருது எந்தையாகிய சிவபிரான் உறையும் இடமாகும் என்று அறிந்து சென்று வழிபடுமின்.

திருவிடைமருதூர்

இலைமலி பொழிலிடை மருதிறையை
நலமிகு ஞானசம்பந்தன்சொன்ன
பலமிகு தமிழிவை பத்தும்வல்லார்
உலகுறு புகழினொ டோங்குவரே. **#1213**
இலைகள் நிறைந்த பொழில்கள் சூழ்ந்த இடைமருதில் உறையும் சிவபிரானை, அருள்நலம் மிகுந்த ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய பயன்மிகு தமிழ்ப் பாடல்களாலியன்ற இப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓதி வழிபட வல்லவர் உலகில் நிறைந்து விளங்கும் புகழ்கள் அனைத்தையும் பெற்று ஓங்கி வாழ்வர்.

திருக்கடைமுடி

திருக்கடைமுடி

திருக்கடைமுடி,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கடைமுடியீசுவரர்.
தேவியார் : அபிராமியம்பிகை.

அருத்தனை யறவனை யமுதனைநீர்
விருத்தனைப் பாலனை வினவுதிரேல்
ஒருத்தனை யல்லதிங் குலகமேத்தும்
கருத்தவன் வளநகர் கடைமுடியே. **#1214**

வேதப் பொருளாய் விளங்குபவனும், அறவடிவினனும், அமுதம்போல இனியவனும், மூத்தவனும், இளையோனும், உலக மக்கள் பலராலும் இவ்வொருவனையன்றித் துணையில்லை என்று கருதி வழிபடும் முடிந்த பொருளாயுள்ளவனும், ஆகிய பெருமான் எவ்விடத்தான் என நீர் வினவுவீராயின் அவன் எழுந்தருளிய வளநகர் கடைமுடி என்னும் தலமாகும். சென்று வழிபடுவீராக.

திருக்கடைமுடி

திரைபொரு திருமுடி திங்கள்விம்மும்
அரைபொரு புலியத ளடிகளிடம்
திரையொடு நுரைபொரு தெண்சுனைநீர்
கரைபொரு வளநகர் கடைமுடியே. **#1215**

ஒளியால் விம்மித் தோன்றும் பிறைமதி, அலைகள் ஒன்றோடு ஒன்று மோதும் கங்கை ஆகியவற்றை உடைய திருமுடியை உடையவரும், இடையில் புலித்தோலைப் பொருந்த அணிந்தவருமாகிய அடிகள் எழுந்தருளிய இடம், அலைகளோடு நுரைகள் பொருந்திய தெளிந்த சுனைநீர் கரைகளில் வந்து மோதும் வளநகராகிய கடை முடியாகும்.

திருக்கடைமுடி

ஆலிள மதியினொ டரவுகங்கை
கோலவெண் ணீற்றனைத் தொழுதிறைஞ்சி
ஏலநன் மலரொடு விரைகமழும்
காலன வளநகர் கடைமுடியே. **#1216**

கல்லால மர நீழலில் இளமதி அரவு கங்கை ஆகியன சூடிய சடைமுடியுடனும், அழகிய திருவெண்ணீற்றுடனும், நறுமலர்

ஆகியனவற்றால் மணம் பொருத்தமாகக் கமழும் திருவடிகளை உடையவனாக விளங்கும் இறைவனைத் தொழுது இறைஞ்சுதற்குரிய வளநகராக விளங்குவது கடைமுடியாகும்.

திருக்கடைமுடி

கொய்யணி நறுமலர்க் கொன்றையந்தார்
மையணி மிடறுடை மறையவனூர்
பையணி யரவொடு மான்மழுவாள்
கையணி பவனிடங் கடைமுடியே. **#1217**

கொய்யப் பெற்ற அழகிய மணம் கமழும் கொன்றை மலர்மாலை அணிந்தவனாய் விடம் பொருந்திய கண்டத்தை உடையவனாய், படம் பொருந்திய பாம்பையும், மான் மழு வாள் ஆகியவற்றையும் கையின்கண் அணிந்தவனாய் விளங்கும் மறை முதல்வனது ஊர் கடைமுடியாகும்.

திருக்கடைமுடி

மறையவ னுலகவன் மாயமவன்
பிறையவன் புனலவ னனலுமவன்
இறையவ னெனவுல கேத்துங்கண்டம்
கறையவன் வளநகர் கடைமுடியே. **#1218**

வேதங்களை அருளியவனும், அனைத்துலகங்களும் ஆகியவனும், மாயை வடிவினனும், சடைமுடியில் பிறை கங்கை ஆகியவற்றை அணிந்தவனும், கையில் அனல் ஏந்தியவனும் உலக மக்கள் இறைவன் எனப் போற்றும் நீல கண்டனுமான சிவபிரானது வளநகர் கடைமுடியாகும்.

திருக்கடைமுடி

படவர வேரல்குற் பல்வளைக்கை
மடவர லாளையொர் பாகம்வைத்துக்
குடதிசை மதியது சூடுசென்னிக்
கடவுள்தன் வளநகர் கடைமுடியே. **#1219**

அரவின் படம் போன்ற அழகிய அல்குலையும் பலவகையினவான வளையல்களை அணிந்த கைகளையும் உடைய உமை யம்மையை ஒரு பாகமாக வைத்து, மேற்குத் திசையில் தோன்றும் பிறை மதியைச் சூடிய சடைமுடியினனாய் விளங்கும் கடவுளின் வளநகர் கடைமுடியாகும்.

திருக்கடைமுடி

பொடிபுல்கு மார்பினிற் புரிபுல்குநூல்

அடிபுல்கு பைங்கழ லடிகளிடம்
கொடிபுல்கு மலரொடு குளிர்சுனைநீர்
கடிபுல்கு வளநகர் கடைமுடியே. **#1220**

திருநீறு அணிந்த மார்பின்கண் முறுக்கேறிய பூணூலை அணிந்தவராய், திருவடிகளில் பொருந்திய அழகிய கழல்களை உடையவராய் விளங்கும் அடிகள் இடம் கொடிகளில் பூத்த மலர்களோடு குளிர்ந்து சுனை நீரின் மணம் கமழும் வளநகராகிய கடை முடியாகும்.

திருக்கடைமுடி

நோதல்செய் தரக்கனை நோக்கழியச்
சாதல்செய் தவனடி சரணெனலும்
ஆதர வருள்செய்த வடிகளவர்
காதல்செய் வளநகர் கடைமுடியே. **#1221**

இராவணனைத் துன்புறுமாறு செய்து, அவன் மீது முதலில் கருணை நோக்கம் செய்யாமல் வலிமை காட்டிப்பின் அவன் திருவடியே சரண் எனக் கூறிய அளவில் அவனுக்கு ஆதரவு காட்டி அருள்செய்த அடிகளாகிய சிவபிரானார் விரும்பும் வளநகர் கடைமுடியாகும்.

திருக்கடைமுடி

அடிமுடி காண்கில ரோரிருவர்
புடைபுல்கி யருளென்று போற்றிசைப்பச்
சடையிடைப் புனல்வைத்த சதுரனிடம்
கடைமுடியதனயல் காவிரியே. **#1222**

அடிமுடி காணாதவராகிய திருமால் பிரமர் அருகிற்சென்று அருள்புரிக எனப் போற்றி செய்து வழிபடுமாறு, சடைமிசையே கங்கையை அணிந்த சதுரப்பாடுடைய சிவபிரானது இடமாக விளங்குவது காவிரியின் அயலிலே உள்ள கடைமுடியாகும்.

திருக்கடைமுடி

மண்ணுதல் பறித்தலு மாயமிவை
எண்ணிய காலவை யின்பமல்ல
ஒண்ணுத லுமையையொர் பாகம்வைத்த
கண்ணுதல் வளநகர் கடைமுடியே. **#1223**

நீரிற் பல கால் மூழ்கலும் மயிர் பறித்தலும் ஆகிய புத்த சமண விரத ஒழுக்கங்கள் பொய்யானவை; ஆராயுமிடத்து இவை இன்பம் தாரா. ஒளி பொருந்திய நுதலினளாகிய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டுள்ள கண்ணுதலோனின் வளநகர் கடைமுடியாகும்.

<u>திருக்கடைமுடி</u>

பொன்றிகழ் காவிரிப் பொருபுனல்சீர்
சென்றடை கடைமுடிச் சிவனடியை
நன்றுணர் ஞானசம் பந்தன்சொன்ன
இன்றமி ழிவைசொல வின்பமாமே. **#1224**

பொன்துகள் திகழும் காவிரியாற்றின் அலைகளின் நீர் முறையாகச் சென்று அடையும் கடைமுடியில் விளங்கும் சிவபிரான் திருவடிப் பெருமைகளை நன்குணர்ந்த ஞானசம்பந்தன் சொன்ன இனிய தமிழாகிய இத்திருப்பதிகப் பாடல்களை ஓதி வழிபட இன்பம் ஆகும்.

திருச்சிவபுரம்

திருச்சிவபுரம்

திருச்சிவபுரம்,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரிநாயகர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

இன்குர லிசைகெழும் யாழ்முரலத்
தன்கர மருவிய சதுரனகர்
பொன்கரை பொருபழங் காவிரியின்
தென்கரை மருவிய சிவபுரமே. **#1225**

இனிய ஒலியும் இசையும் பொருந்திய யாழ் முரலுமாறு தனது கரத்தின்கண்ணே அதனை ஏந்தி விளங்கும் சதுரனது நகர், அழகிய கரையினை மோதும் பழமையான காவிரியாற்றின் தென்கரையில் விளங்கும் சிவபுரமாகும்.

திருச்சிவபுரம்

அன்றடற் காலனைப் பாலனுக்காய்ப்
பொன்றிட வுதைசெய்த புனிதனகர்
வென்றிகொ ளெயிற்றுவெண் பன்றிமுன்னாள்
சென்றடி வீழ்தரு சிவபுரமே. **#1226**

முற்காலத்தில் மார்க்கண்டேயன் பொருட்டு வலிய காலனைக் காலால் அழியுமாறு உதைத்தருளிய புனிதனதுநகர், தனது கோரைப் பல்லால் வெற்றி பெறும் வெள்ளைப் பன்றியாகத் திருவவதாரம் கொண்ட திருமால், முற்காலத்தில் வந்து திருவடியைப் பணிந்து வழிபாடு செய்த தலமாகிய சிவபுரமாகும். (திருமால் வெண்ணிறப் பன்றியாகத் திரு அவதாரம் செய்த செய்தி தேவாரத்திலேயே உள்ளது. திவ்வியப் பிரபந்தத்தில் இல்லை.)

திருச்சிவபுரம்

மலைமகண் மறுகிட மதகரியைக்
கொலைமல்க வுரிசெய்த குழகனகர்
அலைமல்கு மரிசிலி னதனயலே
சிலைமல்கு மதிளணி சிவபுரமே. **#1227**

மலைமகளாகிய பார்வதி தேவி அஞ்சுமாறு மதம் பொருந்திய யானையைக் கொன்று, அதன் தோலை உரித்துப் போர்த்த குழகனது

நகர், அலைகள் நிரம்பிய அரிசிலாற்றின் கரையருகே விளங்குவதும் மலை போன்ற மதில்களை உடையதுமான சிவபுரமாகும்.

திருச்சிவபுரம்

மண்புன லனலொடு மாருதமும்
விண்புனை மருவிய விகிர்தனகர்
பண்புனை குரல்வழி வண்டுகிண்டிச்
செண்பக மலர்பொழிற் சிவபுரமே. **#1228**

மண், புனல், அனல், காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களாய்ப் பொருந்தி விளங்கும் விகிர்தனது நகர், பண் பொருந்திய குரலோடு வண்டுகள் சூழ்ந்து கிளர மலரும் செண்பகப் பூக்களோடு கூடிய பொழில்கள் சூழ்ந்து சிவபுரமாகும்.

திருச்சிவபுரம்

வீறுநன் குடையவள் மேனிபாகம்
கூறுநன் குடையவன் குளிர்நகர்தான்
நாறுநன் குரவிரி வண்டுகிண்டித்
தேறலுண் டெழுதரு சிவபுரமே. **#1229**

அழகால் தனிப் பெருமை பெற்ற உமையம்மையைத் தன் திருமேனியின் ஒரு பாகமாக உடையவனாகிய சிவ பிரானது குளிர்ந்த நகரம், மணம் வீசும் நல்ல குராமலரை வண்டுகள் கிண்டித் தேனை உண்டு மகிழ்ந்து எழும் பொழில் சூழ்ந்த சிவபுரமாகும்.

திருச்சிவபுரம்

மாறெதிர் வருதிரி புரமெரித்து
நீறது வாக்கிய நிமலனகர்
நாறுடை நடுபவ ருழவரொடும்
சேறுடை வயலணி சிவபுரமே. **#1230**

பகைமை உணர்வோடு மாறுபட்டுத் தன்னை எதிர்த்துவந்த அசுரர்களின் திரிபுரங்களை எரித்து நீறாக்கிய நிமலனது நகர், உழவர்களோடு நாற்றுநடும் மகளிர் பலரைக் கொண்ட சேற்று வளம் மிக்க வயல்களால் அழகு பெறுவதாகிய சிவபுரமாகும்.

திருச்சிவபுரம்

ஆவிலைந் தமர்ந்தவ னரிவையொடு
மேவிநன் கிருந்ததொர் வியனகர்தான்
பூவில்வண் டமர்தரு பொய்கையன்னச்
சேவல்தன் பெடைபுல்கு சிவபுரமே. **#1231**

பகைமை உணர்வோடு மாறுபட்டுத் தன்னை எதிர்த்துவந்த அசுரர்களின் திரிபுரங்களை எரித்து நீறாக்கிய நிமலனது நகர், உழவர்களோடு நாற்றுநடும் மகளிர் பலரைக் கொண்ட சேற்று வளம் மிக்க வயல்களால் அழகு பெறுவதாகிய சிவபுரமாகும்.

திருச்சிவபுரம்

எழின்மலை யெடுத்தவல் லிராவணன்றன்
முழுவலி யடக்கிய முதல்வனகர்
விழவினி லெடுத்தவெண் கொடிமிடைந்து
செழுமுகி லடுக்கும்வண் சிவபுரமே. **#1232**

அழகிய கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த வலிய இராவணனின் முழுமையான வல்லமையை அடக்கிய முதல்வனாகிய சிவபிரானது நகர், விழாக் காலங்களில் எடுக்கப்பட்ட வெண்மையான கொடிகள் நிறைந்து கரிய மேகங்களை நெருங்கிச் செறியும் வளமையான சிவபுரமாகும்.

திருச்சிவபுரம்

சங்கள வியகையன் சதுர்முகனும்
அங்கள வறிவரி யவனகர்தான்
கங்குலும் பறவைகள் கமுகுதொறும்
செங்கனி நுகர்தரு சிவபுரமே. **#1233**

சங்கேந்திய கையினனாகிய திருமாலும் நான்முகனும் முற்காலத்தில் அடிமுடி தேடி அளந்தறியப் பெறாத சிவபிரானது நகர், இரவிலும் பறவைகள், கமுக மரங்கள் தோறும் தங்கிச் செங்கனிகளை நுகரும் வளம் மிக்க சிவபுரமாகும்.

திருச்சிவபுரம்

மண்டையிற் குண்டிகை மாசுதரும்
மிண்டரை விலக்கிய விமலனகர்
பண்டமர் தருபழங் காவிரியின்
தெண்டிரை பொருதெழு சிவபுரமே. **#1234**

உண்கலன் குண்டிகை ஆகியனவற்றை ஏந்தியவராய், மாசேறிய உடலினராய்த் தருக்கொடு திரியும் சமணர்களை வெறுக்கும் சிவபிரானது நகர், பழமையான காலந்தொட்டே ஓடி வந்து வளம் சேர்க்கும் பழங்காவிரியின் அலைகள் வந்து பொருந்தும் சிவபுரமாகும்.

திருச்சிவபுரம்

சிவனுறை தருசிவ புரநகரைக்

கவுணியர் குலபதி காழியர்கோன்
தவமல்கு தமிழிவை சொல்லவல்லார்
நவமொடு சிவகதி நண்ணுவரே. **#1235**

சிவபெருமான் எழுந்தருளிய சிவபுர நகரைப் போற்றிக் கவுணியர் குலபதியாகிய காழியர் தலைவன் ஞானசம்பந்தன் பாடிய தவத்தைத் தருவனவாகிய இப்பதிகத் தமிழை ஓத வல்லவர் புதுமைகள் பலவும் பெற்று முடிவில் சிவகதி சேர்வர்.

திருவல்லம்

திருவல்லம்

திருவல்லம்,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வல்லநாதர்.
தேவியார் : வல்லாம்பிகையம்மை.

எரித்தவன் முப்புர மெரியின்மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்சடைமேல்
விரித்தவன் வேதங்கள் வேறுவேறு
தெரித்தவ னுறைவிடந் திருவல்லமே. **#1236**

அவுணர்களின் முப்புரங்களையும் எரியில் மூழ்குமாறு செய்து அழித்தவனும், தாழ்ந்து தொங்கும் சடைமுடிமீது கங்கையைத் தரித்தவனும், வேதங்களை அருளிச் செய்தவனும், அவற்றின் பொருள்களை ஆறு அங்கங்களுடன் தெளயச் செய்தவனும் ஆகிய சிவபிரான் உறையும் இடம் திருவல்லமாகும்.

திருவல்லம்

தாயவ னுலகுக்குத் தன்னொப்பிலாத்
தூயவன் றூமதி சூடியெல்லாம்
ஆயவ னமரர்க்கு முனிவர்கட்கும்
சேயவ னுறைவிடந் திருவல்லமே. **#1237**

உலக உயிர்கட்குத் தாய் போன்றவனும், தனக்கு யாரையும் உவமை சொல்ல முடியாத தூயவனும், தூய மதியை முடியில் சூடியவனும், எல்லாப் பொருள்களுமாக ஆனவனும், போகிகள் ஆன அமரர், மானசீலரான முனிவர் முதலானோர்க்குச் சேயவனும் ஆன சிவபிரானது உறைவிடம் திருவல்லமாகும்.

திருவல்லம்

பார்த்தவன் காமனைப் பண்பழியப்
போர்த்தவன் போதகத் தின்னுரிவை
ஆர்த்தவன் நான்முகன் றலையையன்று
சேர்த்தவ னுறைவிடந் திருவல்லமே. **#1238**

மன்மதனின் அழகு கெடுமாறு நெற்றி விழியால் பார்த்து அவனை எரித்தவனும், யானையின் தோலை உரித்துப் போர்த்தவனும், தன்முனைப்போடு ஆரவாரித்த பிரமனின் ஐந்து தலைகளில் ஒன்றைக்

கொய்து அத்தலையினது ஓட்டைக் கையில் உண்கலன் ஆகச்
சேர்த்துள்ளவனும் ஆகிய சிவபிரானது உறைவிடம் திருவல்லமாகும்.

திருவல்லம்

கொய்தவம் மலரடி கூடுவார்தம்
மைதவழ் திருமகள் வணங்கவைத்துப்
பெய்தவன் பெருமழை யுலகமுய்யச்
செய்தவ னுறைவிடந் திருவல்லமே. **#1239**

அன்பர்களால் கொய்து அணியப்பெற்ற அழகிய மலர் பொருந்திய
திருவடிகளைச் சேர்பவர்களைப் பலரிடத்தும் மாறி மாறிச் செல்லும்
இயல்பினளாகிய திருமகளை வணங்குமாறு செய்விப்பவனும்,
பெருமழை பெய்வித்து உலகை உய்யுமாறு செய்பவனுமாய
சிவபிரானது உறைவிடம் திருவல்லமாகும்.

திருவல்லம்

சார்ந்தவர்க் கின்பங்கள் தழைக்கும்வண்ணம்
நேர்ந்தவ னேரிழை யோடுங்கூடித்
தேர்ந்தவர் தேடுவார் தேடச்செய்தே
சேர்ந்தவ னுறைவிடந் திருவல்லமே. **#1240**

தன்னைச் சார்ந்தவர்கட்கு இன்பங்கள் தழைக்குமாறு நேரிய
அணிகலன்களைப் பூண்டுள்ள உமையம்மையாரோடு அருள் வழங்க
இசைந்துள்ளவனும் தன்னைச் சேர்ந்த சிவஞானியர்க்கும் பிறவாறு
தேடுபவர்க்கும் அவர்களைத் தேடுமாறு செய்து அவர்கட்கு உள்ளிருந்து
அருள் செய்பவனுமாகிய சிவபெருமானது உறைவிடம் திருவல்லமாகும்.

திருவல்லம்

பதைத்தெழு காலனைப் பாதமொன்றால்
உதைத்தெழு மாமுனிக் குண்மைநின்று
விதிர்த்தெழு தக்கன்றன் வேள்வியன்று
சிதைத்தவ னுறைவிடந் திருவல்லமே. **#1241**

சினந்து வந்த எமனை இடக்காலால் உதைத்துத் தன்னை வணங்கி
எழுந்த மார்க்கண்டேயனுக்கு உண்மைப் பொருளாய் எதிர்நின்று அருள்
செய்தவனும், விதிர்த்தெழு கோபத்தால் படபடத்துத் திட்டமிட்டுச்
செயற்பட்ட தக்கனது வேள்வியை முற்காலத்தில் சிதைத்தவனும் ஆகிய
சிவபிரானது இடம் திருவல்லமாகும்.

திருவல்லம்

இப்பதிகத்தின் **7**-ம் செய்யுள் சிதைந்து போயிற்று. **#1242**

<u>திருவல்லம்</u>

இகழ்ந்தரு வரையினை யெடுக்கலுற்றாங்
ககழ்ந்தவல் லரக்கனை யடர்த்தபாதம்
நிகழ்ந்தவர் நேடுவார் நேடச்செய்தே
திகழ்ந்தவ னுறைவிடந் திருவல்லமே. **#1243**

இகழ்ந்து அரிய கயிலை மலையை எடுத்து அப்புறப்படுத்தற் பொருட்டு அகழ்ந்த வலிய இராவணனை அடர்த்த திருவடியை உடையவனும், அத்திருவடியையே நிகழ் பொருளாகக் கொண்ட அன்பர்கள் தேடி வருந்திய அளவில் அவர்கள் உள்ளத்திலேயே திகழ்ந்து விளங்குபவனும் ஆகிய சிவபிரான் உறையுமிடம் திருவல்லமாகும்.

<u>திருவல்லம்</u>

பெரியவன் சிறியவர் சிந்தைசெய்ய
அரியவ னருமறை யங்கமானான்
கரியவ னான்முகன் காணவொண்ணாத்
தெரியவன் வளநகர் திருவல்லமே. **#1244**

எல்லோரினும் பெரியவனும், அறிவிற் சிறியவர்கள் சிந்தித்து உணர்தற்கு அரியவனும், அரிய வேதங்களும் அவற்றின் அங்கங்களும் ஆனவனும், திருமால் பிரமர்கள் காண ஒண்ணாதவனாய் அன்பிற் சிறந்தார்க்குத் தெரிய நிற்பவனும் ஆன சிவபிரானது வளநகர் திருவல்லமாகும்.

<u>திருவல்லம்</u>

அன்றிய வமணர்கள் சாக்கியர்கள்
குன்றிய வறவுரை கூறாவண்ணம்
வென்றவன் புலனைந்தும் விளங்கவெங்கும்
சென்றவ னுறைவிடந் திருவல்லமே. **#1245**

கொள்கைகளால் மாறுபட்ட சமணர்களும் புத்தர்களும் அறம் குன்றிய உரைகளைக் கூறாவாறு, ஐம்புலன்களையும் வென்றவனும், எங்கும் விளங்கித் தோன்றுபவனும் ஆகிய சிவபிரான் உறைவிடம் திருவல்லமாகும்.

<u>திருவல்லம்</u>

கற்றவர் திருவல்லங் கண்டுசென்று
நற்றமிழ் ஞானசம் பந்தன்சொன்ன
குற்றமில் செந்தமிழ் கூறவல்லார்
பற்றுவ ரீசன்பொற் பாதங்களே. **#1246**

கற்றவர்கள் வாழும் திருவல்லத்தைத் தரிசித்துச் சென்று நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன் பாடிய குற்றமற்ற இச்செந்தமிழ்ப் பதிகத்தைக் கூற வல்லவர்கள் சிவபிரானுடைய அழகிய திருவடிகளை அடைவர்.

திருமாற்பேறு

திருமாற்பேறு

திருமாற்பேறு,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மால்வணங்குமீசர்.
தேவியார் : கருணைநாயகியம்மை.

குருந்தவன் குருகவன் கூர்மையவன்
பெருந்தகை பெண்ணவ னாணுமவன்
கருந்தட மலர்க்கண்ணி காதல்செய்யும்
மருந்தவன் வளநகர் மாற்பேறே. #1247

குருத்தாக, தளிராக, மொட்டு, காய் ஆதியனவாக விளங்குபவனும், பெருந்தகையாய்ப் பெண் ஆண் வடிவோடு விளங்குபவனும், தடாகத்தில் பூக்கும் கருநீல மலர் போன்ற கண்களை உடைய உமையம்மையால் விரும்பப்படுபவனும்; அரிய மருந்தாய் விளங்குபவனும் ஆகிய சிவபெருமானது வளநகர் மாற்பேறு.

திருமாற்பேறு

பாறணி வெண்டலை கையிலேந்தி
வேறணி பலிகொளும் வேட்கையனாய்
நீறணிந் துமையொரு பாகம் வைத்த
மாறிலி வளநகர் மாற்பேறே. #1248

பருந்தால் நெருங்கப்பட்ட புலால் நீங்கிய அழகிய வெள்ளிய தலையோட்டைக் கையில் ஏந்தி, உலகியலில் வேறுபட்ட அழகுடன் சென்று பலியேற்கும் வேட்கையனாய் மேனி முழுதும் நீறுபூசி உமையம்மையை ஒருபாகமாக வைத்துள்ளவனும், தனக்கு ஒப்பு இல்லாதவனும் ஆகிய சிவபிரானது வளநகர், மாற்பேறு.

திருமாற்பேறு

கருவுடை யாருல கங்கள்வேவச்
செருவிடை யேறியுஞ் சென்றுநின்று
உருவிடை யாளுமை யாளுந்தானும்
மருவிய வளநகர் மாற்பேறே. #1249

பிறப்புடைய ஆன்மாக்களுக்குப் படைக்கப் பட்ட உலகங்களை ஊழிக் காலத்தில் அழியுமாறு செய்பவனும், போரில் வல்ல விடைமீது ஏறிவருபவனும் ஆகிய சிவபிரான் மணம் புரிந்த அழகிய இடையினை

உடைய உமையாளும் தானுமாய்ச் சென்று நின்று பொருந்தி விளங்கும் வளநகர் மாற்பேறாகும்.

திருமாற்பேறு

தலையவன் றலையணி மாலைபூண்டு
கொலைநவில் கூற்றினைக் கொன்றுகந்தான்
கலைநவின் றான்கயி லாயமென்னும்
மலையவன் வளநகர் மாற்பேறே. **#1250**

எல்லோரினும் மேம்பட்டவனும், அழகிய தலைமாலையைப் பூண்டு உயிரைக் கொல்லும் விருப்பொடுவந்த கூற்றுவனைக் கொன்று மகிழ்ந்தவனும், பல கலைகளையும் உலகிற்கு அருளியவனும், கயிலாய மலையாளனுமாகிய சிவபிரானது வளநகர் மாற்பேறாகும்.

திருமாற்பேறு

துறையவன் றொழிலவன் றொல்லுயிர்க்கும்
பிறையணி சடைமுடிப் பெண்ணொர்பாகன்
கறையணி மிடற்றண்ணல் காலற்செற்ற
மறையவன் வளநகர் மாற்பேறே. **#1251**

பல்வேறு நெறிகளாய் விளங்குபவனும், பழமையாக வரும் உயிர்களின் பொருட்டு ஐந்தொழில்களைப் புரிபவனும், பிறையணிந்த சடைமுடியனும், உமை நங்கையை ஒருபாகமாகக் கொண்டவனும், விடக்கறை பொருந்திய மிடற்றினை உடைய தலைமையாளனும், காலனைச் செற்றுகந்த மறையவனுமான சிவபிரானது வளநகர், மாற்பேறாகும்.

திருமாற்பேறு

பெண்ணினல் லாளையோர் பாகம்வைத்துக்
கண்ணினாற் காமனைக் காய்ந்தவன்றன்
விண்ணவர் தானவர் முனிவரொடு
மண்ணவர் வணங்குநன் மாற்பேறே. **#1252**

பெண்களிற் பேரழகினளாகிய உமையம்மையை ஒரு பாகமாக வைத்திருந்தும் தனது நெற்றிக் கண்ணால் காமனை நீறாக்கி அழித்தவனும், தேவர்கள், அசுரர்கள் முனிவர்கள், மண்ணுலக மக்கள் ஆகியோரால் வணங்கப் பெறுபவனுமாய சிவபிரானது வளநகர், மாற்பேறாகும்.

திருமாற்பேறு

இப்பதிகத்தின் **7-**ம் செய்யுள் சிதைந்து போயிற்று**. #1253**

திருமாற்பேறு

தீதிலா மலையெடுத் தவ்வரக்கன்
நீதியால் வேதகீ தங்கள்பாட
ஆதியா னாகிய வண்ணலெங்கள்
மாதிதன் வளநகர் மாற்பேறே. **#1254**

குற்றமற்ற கயிலை மலையைப் பெயர்த்த அரக்கனாகிய இராவணனை முதலில் கால்விரலால் அடர்த்துப் பின் அவன் பிழை உணர்ந்து முறையோடு வேத கீதங்களைப் பாட அருள்புரிந்த ஆதியானாகிய அண்ணலும் மாதினை இடப்பாகமாக உடைய எங்கள் தலைவனுமாய சிவபிரானது வளநகர், மாற்பேறாகும்.

திருமாற்பேறு

செய்யதண் டாமரைக் கண்ணனொடும்
கொய்யணி நறுமலர் மேலயனும்
ஐயனன் சேவடி யதனையுள்க
மையல்செய் வளநகர் மாற்பேறே. **#1255**

சிவந்த தண் தாமரை மலர் போன்ற கண்களை உடைய திருமாலும், கொய்து அணியத்தக்க தாமரை மலர்மேல் விளங்கும் பிரமனும், தலைவனாகிய சிவபிரானின் சேவடிகளை விருப்போடு நினைந்து வழிபட அருள்புரியும் சிவபிரான் எழுந்தருளிய வளநகர், மாற்பேறாகும்.

திருமாற்பேறு

குளித்துணா வமணர்குண் டாக்கரென்றும்
களித்துநன் கழலடி காணலுறார்
முளைத்தவெண் மதியினொ டரவஞ்சென்னி
வளைத்தவன் வளநகர் மாற்பேறே. **#1256**

குளித்துப்பின் உண்ணாத இயல்பினராகிய அமணர்களும், பருத்த உடலினராகிய புத்தர்களும், களிப்போடு சிவபிரான் திருவடிகளைக் காணப் பெறார். ஒரு கலைப் பிறையாக முளைத்த வெள்ளிய பிறை மதியையும் பாம்பையும் முடிமீது சூடியவனாகிய சிவபிரானது வளநகர், மாற்பேறாகும்.

திருமாற்பேறு

அந்தமின் ஞானசம் பந்தன்சொன்ன
செந்திசை பாடல்செய் மாற்பேற்றைச்
சந்தமின் றமிழ்கள்கொண் டேத்தவல்லார்
எந்தைதன் கழலடி யெய்துவரே. **#1257**

ஞானசம்பந்தன் செவ்விய இசையால் பாடிப் போற்றிய மாற்பேற்றைத் தரிசித்துச் சந்த இசையோடு கூடிய அழிவற்ற இனிய இத்திருப்பதிகப் பாடல்களைக் கொண்டு ஏத்தி வழிபட வல்லவர் எந்தையாகிய சிவபிரானின் கழலணிந்த திருவடிகளை எய்துவர்.

திரு இராமனதீச்சரம்

திரு இராமனதீச்சரம்,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : இராமநாதேசுவரர்.
தேவியார் : சரிவார்குழலியம்மை.

சங்கொளிர் முன்கையர் தம்மிடையே
அங்கிடு பலிகொளு மவன்கோபப்
பொங்கர வாடலோன் புவனியோங்க
எங்கும னிராமன தீச்சரமே. **#1258**

சங்கு வளையல்கள் அணிந்த முன்கைகளை உடைய முனி பன்னியர் வாழும் வீதிகளிடையே சென்று அங்கு அவர்கள் இடும் பலியை மகிழ்வோடு கொள்பவனும், சினம் பொங்கும் அரவைப் பிடித்து ஆட்டுபவனும், உலக மக்கள் உயர்வுபெற எங்கும் நிறைந்திருப்பவனுமாகிய சிவபிரானது தலம் இராமனதீச்சரம்.

திரு இராமனதீச்சரம்

சந்தநன் மலரணி தாழ்சடையன்
தந்தம தத்தவன் றாதையோதான்
அந்தமில் பாடலோ னழகனல்ல
எந்தவ னிராமன தீச்சரமே. **#1259**

அழகிய நல்ல மலர்களை அணிந்து தாழ்ந்து தொங்கும் சடையினை உடையவனும், தந்தத்தையும் மதத்தையும் உடைய விநாயகப் பெருமானின் தந்தையும், முடிவற்ற இசைப்பாடல்களைப் பாடுபவனும், அழகனும், எங்கள் தவப்பேறாய் விளங்கும் நல்லவனுமாய சிவபிரானது தலம், இராமனதீச்சரம்.

திரு இராமனதீச்சரம்

தழைமயி லேறவன் றாதையோதான்
மழைபொழி சடையவன் மன்னுகாதில்
குழையது விலங்கிய கோலமார்பின்
இழையவ னிராமன தீச்சரமே. **#1260**

தழைத்த பீலியோடு கூடிய மயில்மீது ஏறிவரும் முருகனது தந்தையும். உலகிற்கு நீர்வளந்தரும் கங்கை பாயும் சடையினை உடையவனும், காதில் நிலைபெற்று விளங்கும் குழையை அணிந்தவனும், அழகிய

மார்பில் குறுக்காக முப்புரிநூல் அணிந்தவனுமாகிய சிவபிரானது தலம் இராமனதீச்சரம்.

திரு இராமனதீச்சரம்

சத்தியு ளாதியோர் தையல்பங்கன்
முத்திய தாகிய மூர்த்தியோதான்
அத்திய கையினி லழகுசூலம்
வைத்தவ னிராமன தீச்சரமே. **#1261**

சத்திகளில் முதல்வியாக விளங்கும் உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவனும், உயிர்கட்கு முத்திப்பேறாக விளங்கும் கடவுளும், தீயேந்திய கையில் அழகிய சூலத்தைத் தாங்கியவனுமாகிய சிவபிரானது தலம் இராமனதீச்சரம்.

திரு இராமனதீச்சரம்

தாழ்ந்தகு ழற்சடை முடியதன்மேல்
தோய்ந்த விளம்பிறை துலங்குசென்னிப்
பாய்ந்தகங் கையொடு படவரவம்
ஏய்ந்தவ னிராமன தீச்சரமே. **#1262**

தலையில், தாழ்ந்த கூந்தலால் இயன்ற சடை முடியின்மேல், அழகு தோய்ந்த இளம்பிறை, பாய்ந்துவரும் கங்கை, படம் பொருந்திய அரவம் ஆகியவற்றைச் சூடிய சிவபிரானது தலம் இராமனதீச்சரம்.

திரு இராமனதீச்சரம்

சரிகுழ லிலங்கிய தையல்காணும்
பெரியவன் காளிதன் பெரியகூத்தை
அரியவ னாடலோ னங்கையேந்தும்
எரியவ னிராமன தீச்சரமே. **#1263**

பிடரியின்மேல் விளங்கும் சுருண்ட கூந்தலினளாகிய உமையம்மை அருகிலிருந்து காணும் பெரியவனும், காளியின் பெரிய கூத்தோடு போட்டியிட்டு அவளால் அறிதற்கு அரியவனாய், நடனமாடுபவனும், அழகிய கையில் எரி ஏந்தி விளங்குபவனுமாகிய சிவபிரானது தலம் இராமனதீச்சரம்.

திரு இராமனதீச்சரம்

மாறிலா மாதொரு பங்கன்மேனி
நீறது வாடலோ னீள்சடை மேல்
ஆறது சூடுவா னழகன்விடை
ஏறவ னிராமன தீச்சரமே. **#1264**

தனக்கு ஒப்பாரில்லாத அழகிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவனும், திருமேனியில் திருநீற்றை அணிந்தவனும், நீண்ட சடைமுடியின்மேல் கங்கையைச் சூடியவனும் அழகனும், விடையின்மேல் ஏறி வருபவனுமாகிய சிவபிரானது தலம் இராமனதீச்சரம்.

திரு இராமனதீச்சரம்

தடவரை யரக்கனைத் தலைநெரித்தோன்
படவர வாட்டிய படர்சடையன்
நடமது வாடலா னான்மறைக்கும்
இடமவ னிராமன தீச்சரமே. **#1265**

பெரிய கயிலை மலையால் இராவணனின் தலையை நெரித்தவனும், படம் பொருந்திய பாம்பை ஆட்டி மகிழ்பவனும், விரிந்த சடைமுடியை உடையவனும், நடனம் புரிபவனும், நான்கு வேதங்கட்கும் இடமாக விளங்குபவனும் ஆகிய சிவபிரானது தலம் இராமனதீச்சரம்.

திரு இராமனதீச்சரம்

தனமணி தையல்தன் பாகன்றன்னை
அனமணி யயனணி முடியுங்காணான்
பனமணி வரவரி பாதங்காணான்
இனமணி யிராமன தீச்சரமே. **#1266**

அழகிய தனபாரங்களையுடைய உமையம்மையின் கேள்வனும், அன்னமாகத் தன்னை மாற்றிக் கொண்டு, அழகிய முடியைக் காணாது திரும்பிய நான்முகன், திருவடியைக் காணாத, படங்களில் மணிகளையுடைய ஆதிசேடனாகிய அணையில் துயிலும் திருமால் ஆகியோர் வணங்க அருள் புரிந்தவனுமாகிய சிவபிரானது தலம் பல்வகையான மணிக்குவைகளையுடைய இராமனதீச்சரம் ஆகும்.

திரு இராமனதீச்சரம்

தறிபோலாஞ் சமணர்சாக் கியர்சொற்கொளேல்
அறிவோரா னாம மறிந்துரைமின்
மறிகையோன் றன்முடி மணியார்கங்கை
எறிபவ னிராமன தீச்சரமே. **#1267**

மரத்தால் இயன்ற தடிபோன்ற அறிவற்ற சமண புத்தருடைய சொற்களைக் கேளாதீர். மெய்ஞ்ஞானியர்கள் வாயினால் இறைவன் திருப்பெயரை அறிந்து சொல்வீர்களாக. அப்பெருமான் மான் இளங்கன்றை ஏந்திய கையனாய்த் தனது முடியில், மணிகளோடு கூடிய கங்கை நதி அலை, மோதுபவனாய், இராமனதீச்சரத்தில்

எழுந்தருளியுள்ளான். சென்று வழிபடுக.

திரு இராமனதீச்சரம்

தேன்மலர்க் கொன்றையோன்

* * * * * * * * * * * **#1268**

தேன் பொருந்திய கொன்றை மாலையைச் சூடியவன்.

திரு நீலகண்டம்

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

திரு நீலகண்டம்,
பண் - வியாழக்குறிஞ்சி, இது திருக்கொடிமாடச் செங்குன்றூரில்
அடியார்களுக்குக் கண்ட சுரப்பிணிநீங்க வோதியருளியது.

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு
மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக்
கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும்
நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம். **#1269** ★★★★★

நாம் முற்பிறவிகளிற் செய்த வினைகளுக்கேற்பவே, இப்பிறவியில் வினைகளைச் செய்து அவற்றாலாய பயன்களை நுகர்கிறோம் என்று சொல்லப் பெறுவதை நீங்கள் அறிவீர்கள். இவற்றிலிருந்து விடுதிபெறும் வழியை நீவிர் தேடாதிருப்பது உமக்குக் குறையன்றோ? நாம் அனைவரும் சிவபிரானுக்கு அடியவர்கள் ஆவோம். அவ்விறைவனை நோக்கிச் சரியை, கிரியை முதலான சிவப்பணிகளைச் செய்து அவ்விறைவன் கழலைப் போற்றுவோம். அவ்வாறு செய்யின் நாம் செய்த பழவினைகள் நம்மை வந்து அணுகா. இது திருநீலகண்டத்தின் மேல் ஆணை.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங்
கனிமனத்தால்
ஏவினை யாலெயின் மூன்றெரித் தீரென்
றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும்
நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம். **#1270**

நாம் சிவனுக்கு அடியவர்கள் ஆவோம் அல்லமோ? நந்தவனம் சோலை முதலியவற்றை வளர்த்தும் குளங்கள் பல தோண்டியும் நல்லறங்கள் பலவற்றைச் செய்து, கனிந்த மனத்தோடு கணையொன்றால் முப்புரங்களை எரித்தவனே என்று காலை மாலை இருபொழுதும்

பூக்களைக் கொய்து வந்து அணிவித்துச் சிவபிரானுடைய மலர்போலும் திருவடிகளைப் போற்றுவோம். அவ்வாறு செய்யின் கொடிய பழவினைகள் நம்மைத் தீண்டமாட்டா. இது திருநீலகண்டத்தின்மேல் ஆணை.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

முலைத்தட மூழ்கிய போகங் களுமற்
றெவையுமெல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட
விரிசடையீர்
இலைத்தலைச் சூலமுந் தண்டு மழுவு
மிவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெறாதிரு
நீலகண்டம். **#1271**

நாம் சிவனுக்கு அடியவர்கள் ஆவோம் அல்லமோ? அவ்விறைவனை நோக்கி மகளிர் இன்பத்தில் திளைத்து மகிழ்தல் முதலான உலக நுகர்வுகள் எல்லாம் நம்மை விலையாகக் கொண்டு, அலைக்காதவாறு சிவபெருமானாரை எம்மை ஆட்கொண்டருளிய விரிந்த சடையை உடையவரே முத்தலைச் சூலம், தண்டாயுதம், மழு முதலியவற்றைப் படைக்கலங்களாக உடையவரே! எனப் போற்றுவோமாயின், பழைய தீவினைகள் ஆரவாரித்து வந்து நம்மைத் தீண்டமாட்டா. இது திருநீலகண்டத்தின்மேல் ஆணை.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும்
வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும்
புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீருங்
கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம். **#1272**

நாம் சிவனுக்கு அடியவர்கள் ஆவோம் அல்லமோ? அவ்விறைவனை நோக்கி, விண்ணுலகை ஆளுகின்ற வித்யாதரர்களும், வேதியர்களும் புண்ணிய வடிவமானவர் என்று காலை மாலை இருபோதும் துதித்துத் தொழப்படும் புண்ணியரே. இமையாத முக்கண்களை உடையவரே! உம் திருவடிகளைப் புகலாக அடைந்தோம் எனப் போற்றுவோமாயின் பழையதான வலிய தீவினைகள் நம்மை வந்து தீண்டமாட்டா. இது

திருநீலகண்டத்தின் மேல் ஆணை.

<u>திருக்கொடிமாடச்செங்குன்றூர்</u>

மற்றிணை யில்லா மலைதிரண் டன்னதிண்
டோளுடையீர்
கிற்றெமை யாட்கொண்டு கேளா தொழிவதுந்
தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடி
யேயடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம். **#1273**

நாம் சிவனுக்கு அடியவர்கள் ஆவோம் அல்லமோ? அப்பெருமானை நோக்கி ஒப்பற்ற மலைபோல் திரண்ட திண்மையான தோள்களை உடையவரே!. எம்மைப் பெருவலிமை கொண்டு ஆட்கொண்டும் சிறிதேனும் எம்குறையைக் கேளாதொழிவது உமது பெருமைக்கு ஏற்புடையதாமோ?. இல்லற வாழ்க்கைக்குச் சொல்லப்படும் எல்லாத் துணைகளையும் விடுத்து உம் திருவடிகளையே சரணாக அடைந்தோம் எனப் போற்றுவோமாயின், நாம் முற்பிறவியில் செய்த தீவினைகள் பெருவலிமை கொண்டு வருத்தி நம்மை வந்து அடையமாட்டா. இது திருநீலகண்டத்தின் மேல் ஆணை.

<u>திருக்கொடிமாடச்செங்குன்றூர்</u>

மறக்கு மனத்தினை மாற்றியெம் மாவியை
வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் றிருந்தடிக் கீழ்ப்பிழை
யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை யேத்தும்
பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம். **#1274**

நாம் சிவனுக்கு அடியவர்கள் ஆவோம் அல்லமோ? அவ்விறைவனை நோக்கி மறக்கும் இயல்பை உடைய நம் மனத்தை மாற்றி மலமறைப்பால் தடுமாறும் உயிரை வற்புறுத்திப் பிறப்பற்ற பெருமானாகிய அச்சிவபெருமானுடைய அழகிய திருவடியின் கீழ் தவறாதவாறு மனத்தை நிறுத்தி அப்பொழுது பறித்த மலர்களைக்கொண்டு பூசித்து உம்மை ஏத்தும் பணியை உடைய அடியவர் நாங்கள் எனக் கூறி வழிபட்டுவரின் சிறப்பற்ற தீய பழவினைகள் நம்மைத் தீண்ட மாட்டா. இது திருநீலகண்டத்தின் மேல்

ஆணை.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

இப்பதிகத்தின் **7-**ம் செய்யுள் சிதைந்து போயிற்று**. #1275**

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்துங்
கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை யேத்துதும்
நாமடியோம்
செருவி லரக்கனைச் சீரி லடர்த்தருள்
செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம்**. #1276**

நாம் சிவனுக்கு அடியவர்கள் ஆவோம் அல்லமோ! பிறவியை அறுத்து உலக வாழ்க்கையை வெறுத்து அவன் திருவடிக்கண் நல்லமலர்களைக் கொண்டு அருச்சித்துப் போற்றித் 'தன்னை எதிர்ப்பாரில்லாத வலிய இராவணனைப் பலரும் போற்ற அடர்த்துப்பின் அருள் செய்த பெருமானே! என உருகிப் போற்றுவோமாயின் சிவனடிவழுத்தும் செல்வத்தைப் போக்கும் இந்தப் பழைய தீவினைகள் நம்மை வந்து தீண்டமாட்டா. இது திருநீலகண்டத்தின் மேல் ஆணை. கழலடிக்கே - கே - ஏழன் உருபு. திருவிலித் தீவினை - சிவஞானச் செல்வத்தை இல்லதாக்கும் தீவினை.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

நாற்ற மலர்மிசை நான்முக னாரணன்
வாதுசெய்து
தோற்ற முடைய வடியு முடியுந்
தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குதும்
நாமடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம்**. #1277**

நாம் சிவபிரானுக்கு அடியவர்கள் ஆவோம் அல்லமோ? அப்பெருமானை நோக்கி, மணங்கமழும் தாமரை மலர்மேல் விளங்கும் நான்முகனும், திருமாலும் தங்களுக்குள் யார் பெரியவர் என வாது செய்தபோது, அவர்கட்கு எதிரே கட்புலனாகத் தோன்றி, அவர்களால் அடியும் முடியும் அறியப்பெறாத் தன்மையை உடையவரே!, என்று அழைத்து, நாம்

காணத்தோன்றுதலையும் செய்யும் அவ்விறைவனை நாம் தொழுது வணங்குவோம். அவ்வாறு வழிபடின், சினந்துவரும் பழவினைகள் நம்மைத் தீண்டமாட்டா. இது திரு நீலகண்டத்தின்மேல் ஆணை.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

சாக்கியப் பட்டுஞ் சமணுரு வாகி
யுடையொழிந்தும்
பாக்கிய மின்றி யிருதலைப் போகமும்
பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை யீரடி
போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம். **#1278**

நாம் சிவபிரானுக்கு அடியவர்கள் ஆவோம் அல்லமோ? சிலர் புத்த மதத்தைச் சார்ந்தும், சமண சமயத்தைச் சார்ந்து ஆடையின்றித் திரிந்தும் சிவபிரானை வணங்கும் பாக்கியமின்றி இம்மை மறுமை இன்பங்களையும் அவற்றைப் பெறும் பற்றையும் விட்டுப் பயனற்றவராயினர். நாம் அவ்விறைவனை நோக்கிக் கொன்றை மலர் மணக்கும் சடையை உடையவரே! உம் திருவடிகளைப் போற்றுகின்றோம் எனக் கூறிச் செயற்படின் தீக்குழி போலக் கனலும் பழைய தீவினைகள் நம்மைத் தீண்ட மாட்டா. இது திருநீலகண்டத்தின் மேல் ஆணை.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன்
கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகி லிமையவர்
கோனடிக்கண்
திறம்பயின் ஞானசம் பந்தன செந்தமிழ்
பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங்
கூடுவரே. **#1279**

மக்கட் பிறப்பெடுத்த இப்பிறவியிலேயே சிவ பிரான் திருவடிகளை விரும்பி வழிபடின் முத்திப்பேறு அடையலாம். மீண்டும் பழவினைகளால் பிறப்பு உளதாயின், தேவர்களின் தலைவனாகிய சிவபிரான் திருவடிகளின் பெருமைகளை அறிந்த ஞானசம்பந்தன் அருளிய இத்திருப்பதிகச் செந்தமிழ்ப் பாடல்கள் பத்தையும் ஓதவல்லவர்களாயின், அவர்கள் இமையவர்கள் நிறைந்த வானுலகில்

அவ்வானவர் கோனொடும் கூடி மகிழும் பதவியைப் பெற்று இன்புறுவர்.

திருப்பிரமபுரம் - மொழிமாற்று

சீர்காழி

திருப்பிரமபுரம் - மொழிமாற்று,
பண் - வியாழக்குறிஞ்சி, திருப்பிரமபுர மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

காட தணிகலங் காரர வம்பதி
காலதனில்
தோட தணிகுவர் சுந்தரக் காதினிற்
றூச்சிலம்பர்
வேட தணிவர் விசயற் குருவம்
வில்லுங்கொடுப்பர்
பீட தணிமணி மாடப் பிரம
புரத்தரரே. **#1280**

பெருமைபெற்ற மணிகள் இழைத்த மாட வீடுகளை உடைய பிரமபுரத்து அரனார் இடுகாட்டைப் பதியாகக் கொள்வர். கரிய அரவினை அணிகலனாகப் பூண்டவர். கால்களில் தூய சிலம்பை அணிந்தவர். அழகிய காதில் தோடணிந்தவர். வேட்டுவ உருவம் தாங்கி அருச்சுனனுக்குப் பாசுபதக் கணை அருளியவர்.

சீர்காழி

கற்றைச் சடையது கங்கண முன்கையிற்
றிங்கள்கங்கை
பற்றித்து முப்புரம் பார்படைத் தோன்றலை
சுட்டதுபண்
டெற்றித்துப் பாம்பை யணிந்தது கூற்றை
யெழில்விளங்கும்
வெற்றிச் சிலைமதில் வேணு புரத்தெங்கள்
வேதியரே. **#1281**

கருங்கல்லால் அழகு விளங்குவதாய் அமைக்கப்பட்ட வெற்றித் திருமதில் சூழ விளங்கும் வேணுபுரத்துள் உறையும் எங்கள் வேதியராகிய இறைவர் கற்றையான சடையின்கண் திங்களையும் கங்கையையும் கொண்டவர். முன்கையில் பாம்பைக் கங்கணமாக அணிந்தவர். கையில் உலகைப் படைத்த பிரமனது தலையோட்டை உண்கலமாகப் பற்றியிருப்பவர். முப்புரங்களைச் சுட்டெரித்தவர்.

முற்காலத்தில் மார்க்கண்டேயர் பொருட்டு எமனை உதைத்தவர். பாம்பை அணிகலனாகப் பூண்டவர்.

சீர்காழி

கூவிளங் கையது பேரி சடைமுடிக்
கூட்டத்தது
தூவிளங் கும்பொடிப் பூண்டது பூசிற்றுத்
துத்திநாகம்
ஏவிளங் குந்நுத லாளையும் பாக
முரித்தனரின்
பூவிளஞ் சோலைப் புகலியுண் மேவிய
புண்ணியரே. **#1282**

இனிய பூக்களை உடைய இளஞ்சோலைகளால் சூழப்பட்ட புகலியுள் மேவிய புண்ணியராகிய இறைவர், அடர்த்தியான சடைமுடியில் வில்வம் அணிந்தவர். கையில் பேரி என்னும் தோற் பறையை உடையவர். தூய்மையோடு விளங்கும் திருநீற்றுப் பொடியைப் பூசியவர். படப் பொறிகளோடு கூடிய நாகத்தைப் பூண்டவர். அம்பொடு கூடிய வில் போன்று வளைந்த நெற்றியை உடைய உமையம்மையை ஒரு பாகத்தே கொண்டவர். ஆனையை உரித்தவர்.

சீர்காழி

உரித்தது பாம்பைஎயுடன்மிசை யிட்டதோ
ரொண்களிற்றை
எரித்ததொ ராமையை யின்புறப் பூண்டது
முப்புரத்தைச்
செருத்தது சூலத்தை யேந்திற்றுத் தக்கனை
வேள்விபன்னூல்
விரித்தவர் வாழ்தரு வெங்குரு வில்வீற்
றிருந்தவரே. **#1283**

பல நூல்களைக் கற்றுணர்ந்து விரித்துரைக்கும் புலவர்கள் வாழும் வெங்குருவில் வீற்றிருக்கும் இறைவர் ஒப்பற்ற சிறந்த களிற்றை உரித்தவர். பாம்பைத் தம் திருமேனிமேல் அணிந்தவர். முப்புரங்களை எரித்தவர். ஆமையோட்டை மகிழ்வுறப் பூண்டவர். தக்கனை வேள்வியில் வெகுண்டவர். சூலத்தைக் கையில் ஏந்தியவர்.

சீர்காழி

கொட்டுவ ரக்கரை யார்ப்பது தக்கை
குறுந்தாளன

விட்டுவர் பூதங் கலப்பில ரின்புக
ழென்புலவின்
மட்டுவ ருந்தழல் சூடுவர் மத்தமு
மேந்துவர்வான்
தொட்டுவ ருங்கொடித் தோணி புரத்துறை
சுந்தரரே. **#1284**

வானைத் தொடுமாறு உயர்ந்துள்ள கொடிகளைக் கொண்ட தோணிபுரச் சுந்தரராகிய இறைவர் தக்கை என்னும் வாத்தியத்தைக் கொட்டுபவர். இடையிலே சங்கு மணிகளைக் கட்டியவர். குறுகிய தாளை உடைய பூதகணங்களைக் கலத்தல் இல்லாதவர். இனிய புகழை ஈட்டுபவர். எலும்பையும், உலவுகின்ற இனிய தேன்மணம் வெளிப்படும் ஊமத்தம் பூவையும் சூடுபவர். தீயை ஏந்துபவர். ஈட்டுவர் - இட்டுவர் என எதுகை நோக்கிக் குறுகிற்று.

சீர்காழி

சாத்துவர் பாசந் தடக்கையி லேந்துவர்
கோவணந்தங்
கூத்தவர் கச்சுக் குலவிநின் றாடுவர்
கொக்கிறகும்
பேர்த்தவர் பல்படை பேயவை சூடுவர்
பேரெழிலார்
பூத்தவர் கைதொழு பூந்தராய் மேவிய
புண்ணியரே. **#1285**

தவமுனிவர்கள் பூக்களைத் தூவி, கைகளால் தொழும் பூந்தராய் என்ற தலத்தில் எழுந்தருளிய புண்ணிய வடிவினர், கோவணம் உடுத்தவர். நீண்ட கையில் பாசத்தை ஏந்தியவர். தமக்கே உரித்தான கூத்தினை உடையவர். கச்சணிந்து ஆடுபவர். கொக்கிறகு சூடுபவர். பல்வகைப் படைகளாகிய பேய்க் கணங்களை அடி பெயர்த்து ஆடல் செய்தவர். மிக்க அழகுடையவர்.

சீர்காழி

காலது கங்கை கற்றைச் சடையுள்ளாற்
கழல்சிலம்பு
மாலது வேந்தன் மழுவது பாகம்
வளர்கொழுங்கோட்
டாலது வூர்வ ரடலேற் றிருப்ப
ரணிமணிநீர்ச்
சேலது கண்ணியொர் பங்கர் சிரபுர

மேயவரே. #1286

அழகிய நீலமணியின் நிறத்தையும் சேல்மீன் போன்ற பிறழ்ச்சியையும் கொண்ட கண்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவரும் சிரபுரத்தில் எழுந்தருளியவரும் ஆகிய சிவபிரான், கழலையும் சிலம்பையும் காலில் சூடியவர். கற்றைச் சடையில் கங்கையை உடையவர். திருமாலைப் பாகமாகக் கொண்டவர். மழுவை ஏந்தியவர். கொழுமையான கிளைகளைக் கொண்ட ஆலமரத்தின் கீழ் இருப்பவர். அடல் ஏற்றினை ஊர்பவர்.

சீர்காழி

நெருப்புரு வெள்விடை மேனிய ரேறுவர்
நெற்றியின்கண்
மருப்புறு வன்கண்ணர் தாதையைக் காட்டுவர்
மாமுருகன்
விருப்புறு பாம்புக்கு மெய்த்தந்தை யார்விறன்
மாதவர்வாழ்
பொருப்புறு மாளிகைத் தென்புற வத்தணி
புண்ணியரே. #1287

வீரர்களாகிய மிக்க தவத்தினை உடைய தவமுனிவர்கள் வாழ்வதும் மலை போன்ற மாளிகைகளை உடையதுமான அழகிய புறவ நகருக்கு அணிசேர்க்கும் புண்ணியராகிய இறைவர் நெருப்புப் போலச் சிவந்த மேனியை உடையவர். வெண்மையான விடைமீது ஏறி வருபவர். நெற்றியின் கண், விழி உடையவர். தந்தத்தை உடையவராகிய விநாயகருக்குத் தந்தையாராவார். பாம்புக்குத் தம் மெய்யில் இடம் தந்து அதனைச் சூடுபவர். சிறப்புக்குரிய முருகனுக்கு உகப்பான தந்தையார் ஆவார்.

சீர்காழி

இலங்கைத் தலைவனை யேந்திற் றிறுத்த
திரலையின்னாள்
கலங்கிய கூற்றுயிர் பெற்றது மாணி
குமைபெற்றது
கலங்கிளர் மொந்தையி னாடுவர் கொட்டுவர்
காட்டகத்துச்
சலங்கிளர் வாழ்வயற் சண்பையுண் மேவிய
தத்துவரே. #1288

நீர் நிறைந்து விளங்கும் வயல்களை உடைய சண்பைப் பதியில் எழுந்தருளிய இறைவர் இலங்கைத் தலைவனாகிய இராவணனை

நெரித்தவர். மானைக் கையில் ஏந்தியவர். கலக்கத் தோடு வந்த கூற்றுவனைக் குமைத்தவர். வாழ்நாள் முடிவுற்ற மார்க்கண்டேயருக்கு உயிர் கொடுத்துப் புது வாழ்வருளியவர். வாத்தியமாக இலங்கும் மொந்தை என்ற தோற்கருவியைக் கொட்டுபவர். இடு காட்டின்கண் ஆடுபவர்.

சீர்காழி

அடியிணை கண்டிலன் றாமரை யோன்மான்
முடிகண்டிலன்
கொடியணி யும்புலி யேறுகந் தேறுவர்
தோலுடுப்பர்
பிடியணி யுந்நடை யாள்வெற் பிருப்பதோர்
கூறுடையர்
கடியணி யும்பொழிற் காழியுண் மேய
கறைக்கண்டரே. **#1289**

மணம் பொருந்திய பொழில்கள் சூழ்ந்த சீகாழிப்பதியுள் விளங்கும் கறைக் கண்டராகிய சிவபெருமானின் அடி இணைகளைத் திருமால் கண்டிலன். தாமரை மலரில் எழுந்தருளியுள்ள பிரமன்முடியைக் கண்டிலன். அவ்விறைவன் கொடிமிசை இலச்சினையாகவுள்ள ஏற்றினை உகந்து ஏறுவர். புலித்தோலை உடுத்தவர். பிடி போன்ற அழகிய நடையினை உடைய உமையம்மையை ஒரு கூறாகக் கொண்டவர். அவர் இருப்பதோ கயிலை மலையாகும்.

சீர்காழி

கையது வெண்குழை காதது சூல
மமணர் புத்தர்
எய்துவர் தம்மை யடியவ ரெய்தாரெ
ரேனக்கொம்பு
மெய்திகழ் கோவணம் பூண்ப துடுப்பது
மேதகைய
கொய்தலர் பூம்பொழிற் கொச்சையுண் மேவிய
கொற்றவரே. **#1290**

சிறந்தனவாய்க் கொய்யக் கொய்ய மலர்வனவாய அழகிய பொழில்கள் சூழ்ந்த கொச்சையுள் எழுந்தருளிய கொற்றவராகிய சிவபிரான் கையில் சூலமும் காதில் வெண்குழையும் கொண்டவர். அப்பெருமானை அமணர் புத்தர் எய்தார். அடியவர் எய்துவர். பன்றியின் கொம்பை அவர் திருமேனிமேல் விளங்கப் பூண்பவர், கோவணம் உடுத்தவர்.

<u>சீர்காழி</u>

கல்லுயர் கழுமல விஞ்சியுண் மேவிய
கடவுடன்னை
நல்லுரை ஞானசம் பந்தன்ஞா னத்தமிழ்
நன்குணரச்
சொல்லிடல் கேட்டல்வல் லோர்தொல்லை வானவர்
தங்களொடும்
செல்குவர் சீரரு ளாற்பெற லாஞ்சிவ
லோகமதே. **#1291**

உயர்ந்த மதில்களை உடைய கழுமலக் கோயிலுள் விளங்கும் கடவுளை நல்லுரைகளால் ஞானசம்பந்தன் பாடிய ஞானத்தமிழை நன்குணர்ந்து சொல்லவும் கேட்கவும் வல்லவர் பழமையான தேவர்களோடும் அமருலகம் சென்று சிவலோகத்தைப் பெறுவர்.

திருப்பருப்பதம்

திருப்பருப்பதம்

திருப்பருப்பதம்,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் வடதேசத்திலுள்ளது. ஸ்ரீசைலமென்றும் மல்லிகார்ச்சுன மென்றும் வழங்குகின்றது. ,
சுவாமிபெயர் : பருப்பதேசுவரர்.
தேவியார் : பருப்பதமங்கையம்மை.

சுடுமணி யுமிழ்நாகஞ்
சூழ்தர வரைக்கசைத்தான்
இடுமணி யெழிலானை
யேறல னெருதேறி
விடமணி மிடறுடையான்
மேவிய நெடுங்கோட்டுப்
படுமணி விடுசுடரார்
பருப்பதம் பரவுதுமே. **#1292**

மிக்க ஒளியைத் தரும் மாணிக்க மணியை உமிழும் பாம்பை இடையில் பொருந்தக் கட்டியவனும், இரு புறங்களிலும் மணிகள் தொங்கவிடப்பட்ட அழகிய யானையை ஊர்தியாகக் கொண்டு அதன்மிசை ஏறாது ஆனேற்றில் ஏறி வருபவனும், நஞ்சணிந்த மிடறுடையவனும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளிய நீண்ட சிகரங்களை உடையதும் ஆங்காங்கே தோன்றும் மணிகள் உமிழ்கின்ற ஒளியினை உடையதுமான திருப்பருப்பதத்தை நாம் பரவுவோம்.

திருப்பருப்பதம்

நோய்புல்கு தோறிரைய
நரைவரு நுகருடம்பில்
நீபுல்கு தோற்றமெல்லா
நினையுள்கு மடநெஞ்சே
வாய்புல்கு தோத்திரத்தால்
வலஞ்செய்து தலைவணங்கிப்
பாய்புலித் தோலுடையான்
பருப்பதம் பரவுதுமே. **#1293**

அறியமையுள் மூழ்கித் திளைக்கும் நெஞ்சே! நீ போக நுகர்ச்சிக்குரிய இவ்வுடம்பில் இளமை முதல் மாறிவரும் தோற்ற மெல்லாவற்றையும், நோய்கள் தழுவும் தோல் சுருங்கி நரை தோன்றும் நிலையையும்

நினைந்து சிந்திப்பாயாக. மூப்பு வருமுன் வாய் நிறைந்த தோத்திரங்களைப் பாடி, வலம் வந்து, தலையால் வணங்கிப் பாயும் புலியின் தோலை உடுத்த பெருமான் எழுந்தருளிய திருப்பருப்பதத்தைப் பரவுவோம்; வருக.

திருப்பருப்பதம்

துனியுறு துயர்தீரத்
தோன்றியோர் நல்வினையால்
இனியுறு பயனாத
லிரண்டுற மனம்வையேல்
கனியுறு மரமேறிக்
கருமுசுக் கழையுகளும்
பனியுறு கதிர்மதியான்
பருப்பதம் பரவுதுமே. **#1294**

நெஞ்சே! வருத்தத்தைத் தரும் பிறவித் துயர்தீரத் தோன்றிய நீ, நல் வினைகள் செய்து அப்புண்ணியத்தால் தேவர் உலக இன்பங்களை நுகர்தல், வீடு பேறாகிய விழுமிய பயனை எய்துதல் ஆகிய இரண்டிலும் பற்றுக் கொள்ளாதே. கரிய குரங்குகள் கனி நிறைந்த மரத்தில் ஏறி அதனை விடுத்து மூங்கில் மரங்களில் தாவி உகளும், குளிர்ந்த ஒளியோடு கூடிய பிறைமதியைச் சூடிய சிவபெருமானின் திருப்பருப்பதத்தை வணங்குவோம்; வருக. மனிதமனம் ஒன்றை விட்டு ஒன்று பற்றும் நிலையை இப்பாடலின் வருணனை தெரிவிக்கிறது.

திருப்பருப்பதம்

கொங்கணி நறுங்கொன்றைத்
தொங்கலன் குளிர்சடையான்
எங்கணோ யகலநின்றா
னெனவரு ளீசனிடம்
ஐங்கணை வரிசிலையா
னநங்கனை யழகழித்த
பைங்கண்வெள் ளேறுடையான்
பருப்பதம் பரவுதுமே. **#1295**

தேன் நிறைந்ததாய் மணம் கமழும் கொன்றை மலர்மாலையைச் சூடியவன், குளிர்ந்த சடைமுடியை உடையவன், எங்கள் துன்பங்களைப் போக்க எழுந்தருளியவன் என்று அடியவர் போற்ற அவர்கட்கு அருள்புரியும் ஈசனது இடம், ஐவகை மலர்களையும் வரிந்த கரும்பு வில்லையும் உடைய மன்மதனின் அழகினை அழித்து அவனை எரித்துப் பசிய கண்களை உடைய வெள்ளேற்றை உடையவனாய் அப்பெருமான்

எழுந்தருளிய பதி திருப்பருப்பதம். அதனைப் பரவுவோம்.

திருப்பருப்பதம்

துறைபல சுனைமூழ்கித்
தூமலர் சுமந்தோடி
மறையொலி வாய்மொழியால்
வானவர் மகிழ்ந்தேத்தச்
சிறையொலி கிளிபயிலுந்
தேனின மொலியோவாப்
பறைபடு விளங்கருவிப்
பருப்பதம் பரவுதுமே. **#1296**

கிளிகள் சிறகுகளால் எழுப்பும் ஓசையோடு வாயால் எழுப்பும் மெல்லிய அழைப்பொலியும், வண்டுகளின் ஒலியும் நீங்காததாய்ப் பறை போல ஒலிக்கும் அருவிகளை உடையதாய் விளங்குவதும், தேவர்கள் துறைகள் பலவற்றை உடைய சுனைகளில் மூழ்கித் தூய மலர்களைச் சுமந்து விரைந்து வந்து வேத கீதங்களைத் தம் வாய்மொழியாக ஓதி மகிழ்வோடு வழிபடுமாறு சிவபெருமான் விளங்குவதுமாகிய திருப்பருப்பதத்தைப் பரவுவோம்.

திருப்பருப்பதம்

சீர்கெழு சிறப்போவாச்
செய்தவ நெறிவேண்டில்
ஏர்கெழு மடநெஞ்சே
யிரண்டுற மனம்வையேல்
கார்கெழு நறுங்கொன்றைக்
கடவுள திடம்வகையால்
பார்கெழு புகழோவாப்
பருப்பதம் பரவுதுமே. **#1297**

அழகிய மடநெஞ்சே! பெருமை மிக்க சிறப்புக்கள் அகலாததாய் நாம் மேற்கொள்ளத்தக்க தவநெறியை நீ பின்பற்ற விரும்புவாயாயின், வேண்டுமா வேண்டாவா என இரண்டுபட எண்ணாமல் உறுதியாக ஒன்றை நினைந்து நெறியின் பயனாய் விளங்கும், கார்காலத்தே மலரும் மணம் மிக்க கொன்றை மலர்மாலை சூடியவனாய் எழுந்தருளியுள்ள அக்கடவுளது இடமாய் உலகிற் புகழ்மிக்க தலமாய் விளங்கும் திருப்பருப்பதத்தைப் பரவுவோம்.

திருப்பருப்பதம்

புடைபுல்கு படர்கமலம்

புகையோடு விரைகமழத்
தொடைபுல்கு நறுமாலை
திருமுடி மிசையேற
விடைபுல்கு கொடியேந்தி
வெந்தவெண் ணீறணிவான்
படைபுல்கு மழுவாளன்
பருப்பதம் பரவுதுமே. **#1298**

ஓடைகளின் புறத்தே நிறைந்து வளர்ந்த விரிந்த தாமரை மலர்கள் அந்தணர் வேட்கும் யாகப் புகையோடு மணம் கமழுமாறு தொடுக்கப் பெற்ற நறுமாலை திருமுடியின்மேல் விளங்க, விடைக் கொடியைக் கையில் ஏந்தி, மேனியில் திருவெண்ணீறு அணிந்து மழுப்படை ஏந்தியவனாய் விளங்கும் சிவபெருமானது பருப்பதத்தை நாம் பரவுவோம்.

<u>திருப்பருப்பதம்</u>

நினைப்பெனு நெடுங்கிணற்றை
நின்றுநின் றயராதே
மனத்தினை வலித்தொழிந்தே
னவலம்வந் தடையாமைக்
கனைத்தெழு திரள்கங்கை
கமழ்சடைக் கரந்தான்றன்
பனைத்திரள் பாயருவிப்
பருப்பதம் பரவுதுமே. **#1299**

நினைப்பு என்னும் ஆழமான கிணற்றின் அருகில் இடையறாது நின்று சோர்வுபடாமல், மனம் என்னும் கயிற்றைப் பற்றி இழுத்து, எண்ணங்கள் ஈடேறாமல் அயர்வுற்றேன். ஆதலின் இதனைக் கூறுகின்றேன். துன்பங்கள் நம்மை அடையா வண்ணம் காத்துக்கொள்ளுவதற்கு இதுவே வழி. ஆரவாரித்து எழுந்த பரந்துபட்ட வெள்ளமாக வந்த கங்கை நீரைத் தனது மணம் கமழும் சடையிலே தாங்கி மறையச் செய்தவன் ஆகிய சிவபிரானது பனைமரம் போல உருண்டு திரண்டு ஒழுகும் அருவி நீரை உடைய திருப்பருப்பதத்தை நாம் பரவுவோம்.

<u>திருப்பருப்பதம்</u>

மருவிய வல்வினைநோ
யவலம்வந் தடையாமல்
திருவுரு வமர்ந்தானுந்
திசைமுக முடையானும்
இருவரு மறியாமை

யெழுந்த தோரெரிநடுவே
பருவரை யுறநிமிர்ந்தான்
பருப்பதம் பரவுதுமே. **#1300**

பலபிறவிகள் காரணமாக நம்மைத் தொடரும் வலிய வினைகளின் பயனாகிய துன்பங்கள் நம்மை வந்து அடையாமல் இருக்கத் திருமகளைத் தன் மார்பில் கொண்ட திருமால், நான்முகன் ஆகிய இருவரும் அறியமுடியாதவாறு எழுந்த எரியின் நடுவே பெரிய மலையாய் ஓங்கி நின்ற சிவபிரான் எழுந்தருளிய திருப்பருப்பதத்தை நாம் வணங்குவோம்.

<u>திருப்பருப்பதம்</u>

சடங்கொண்ட சாத்திரத்தார்
சாக்கியர் சமண்குண்டர்
மடங்கொண்ட விரும்பியராய்
மயங்கியோர் பேய்த்தேர்ப்பின்
குடங்கொண்டு நீர்க்குச்செல்வார்
போதுமின் குஞ்சரத்தின்
படங்கொண்ட போர்வையினான்
பருப்பதம் பரவுதுமே. **#1301**

அறியாமை வயப்பட்ட சாத்திரங்களை ஓதும் புத்தர்களும், சமணராகிய இழிந்தோரும் குண்டர்களும் கூறும் மடமையை விரும்பியவராய் மயங்கியோர் சிலர், கானல் நீரை முகக்கக் குடத்தை எடுத்துச் செல்வார் போன்றவராவர். அவ்வாறு சென்றவர் செல்லட்டும். யானைத் தோலைப் போர்வையாகப் போர்த்த சிவபிரான் எழுந்தருளிய திருப்பருப்பதத்தை நாம் சென்று பரவுவோம்.

திருக்கள்ளில்

திருக்கள்ளில்

திருக்கள்ளில்,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சிவானந்தேசுவரர்.
தேவியார் : ஆனந்தவல்லியம்மை.

வெண்செநெல் விளைகழனி
விழவொலி கழுமலத்தான்
பண்செலப் பலபாட
லிசைமுரல் பருப்பதத்தை
நன்சொலி னாற்பரவு
ஞானசம் பந்தனல்ல
ஒண்சொலி னிவைமாலை
யுருவெணத் தவமாமே. **#1302**

வெண்ணெல், செந்நெல் ஆகிய இருவகை நெற்பயிர்களும் விளைவுதரும் வயல்களையுடையதும் விழாக்களின் ஆரவாரம் மிகுந்து தோன்றுவதுமாகிய கழுமலத்தில் அவதரித்தவனாய்ப் பண்ணோடு பொருந்திய பாடல்கள் பலவற்றால் இசைபாடி இறைவனைப் பரவிவரும் ஞானசம்பந்தன், திருப்பருப்பதத்தை நல்ல சொற்கள் அமைந்த பாடலால் பாடிய ஒளி பொருந்திய இத்திருப்பதிகப் பாமாலையைப் பலகாலும் எண்ணிப் பரவ, அதுவே தவமாகிப் பயன்தரும்.

திருக்கள்ளில்

முள்ளின்மேன் முதுகூகை முரலுஞ் சோலை
வெள்ளின்மேல் விடுகூறைக் கொடி விளைந்த
கள்ளின்மே யவண்ணல் கழல்க ணாளும்
உள்ளுமே லுயர்வெய்த லொரு தலையே. **#1303**

முள்ளுடைய மரங்களின்மேல் இருந்து முதிய கூகைகள் ஒலிக்கும் சோலைகள் சூழ்ந்ததும், விளமரங்களின்மேல் படர்ந்த கூறைக் கொடிகள் விளைந்து தோன்றுவதுமாய கள்ளில் என்னும் இத்தலத்தில் எழுந்தருளிய சிவபிரான் திருவடிகளை நாள்தோறும் நினைவோமானால் உயர்வெய்துதல் உறுதியாகும்.

திருக்கள்ளில்

ஆடலான் பாடலா னரவங்கள் பூண்டான்
ஓடலாற் கலனில்லா னுறை பதியால்
காடலாற் கருதாத கள்ளின் மேயான்
பாடெலாம் பெரியார்கள் பரசு வாரே. **#1304**

ஆடல் பாடல்களில் வல்லவனும், பாம்புகள் பலவற்றை அணிந்தவனும், தலையோட்டையன்றி வேறு உண்கலன் இல்லாதவனும், சுடுகாட்டைத் தவிர வேறோர் இடத்தைத் தனது இடமாகக் கொள்ளாதவனும் ஆகிய சிவபிரான், பெரியோர்கள் அருகிலிருந்து அவன் புகழைப் பரவக் கள்ளில் என்னும் தலத்தைத் தான் உறையும் பதியாகக் கொண்டுள்ளான்.

<u>திருக்கள்ளில்</u>

எண்ணார்மும் மதிலெய்த விமையா முக்கண்
பண்ணார்நான் மறைபாடும் பரம யோகி
கண்ணார்நீ றணிமார்பன் கள்ளின் மேயான்
பெண்ணாணாம் பெருமானெம் பிஞ்ஞ கனே. **#1305**

பகைவர்களாகிய அசுரர்களின் மும்மதில்களை எய்து அழித்தவனும், இமையாத மூன்று கண்களை உடையவனும் இசையமைப்போடு கூடிய நான்மறைகளைப் பாடி மகிழும் மேலான யோகியும், கண்களைக் கவரும் வண்ணம் திருநீறு அணிந்த மார்பினனும், பெண் ஆண் என இருபாலாகக் கருதும் உமைபாகனும் ஆகிய பெருமான், கள்ளில் என்னும் இத்தலத்தில் எழுந்தருளியுள்ளான்.

<u>திருக்கள்ளில்</u>

பிறைபெற்ற சடையண்ணல் பெடைவண் டாலும்
நறைபெற்ற விரிகொன்றைத் தார்ந யந்த
கறைபெற்ற மிடற்றண்ணல் கள்ளின் மேயான்
நிறைபெற்ற வடியார்கள் நெஞ்சு ளானே. **#1306**

பிறை சூடிய சடையை உடைய அண்ணலும், பெண்வண்டுகளோடு ஆண் வண்டுகள் கூடி ஒலிக்கும் தேன் நிறைந்த விரிந்த கொன்றை மாலையை விரும்பிச் சூடிய, விடக்கறை பொருந்திய கண்டத்தை உடையவனும், மனநிறைவு பெற்ற அடியவர்களின் நெஞ்சங்களில் நிறைந்து நிற்பவனுமாகிய சிவபிரான், கள்ளில் என்னும் இத்தலத்தே எழுந்தருளியுள்ளான்.

<u>திருக்கள்ளில்</u>

விரையாலு மலராலும் விழுமை குன்றா
உரையாலு மெதிர்கொள்ள வூரா ரம்மாக்

கரையார்பொன் புனல்வேலிக் கள்ளின் மேயான்
அரையார்வெண் கோவணத்த வண்ணல் தானே. **#1307**
இடையில் வெண்ணிறமான கோவணத்தை உடுத்த சிவபிரான் மணம் கமழும் ஐவகை மணப் பொருள்களாலும் மலர்களாலும் சீர்மை குன்றாத புகழுரைகளாலும் ஊர் மக்கள் எதிர்கொள்ள, அழகியவும் பெரியவுமான கரைகளை உடைய பொன்னி நதியின் கிளையாறு சூழ்ந்துள்ள கள்ளில் என்னும் இத்தலத்தே எழுந்தருளியுள்ளான்.

<u>திருக்கள்ளில்</u>

நலனாய பலிகொள்கை நம்பா னல்ல
வலனாய மழுவாளும் வேலும் வல்லான்
கலனாய தலையோட்டான் கள்ளின் மேயான்
மலனாய தீர்த்தெய்து மாதவத் தோர்க்கே. **#1308**
மக்கட்கு நன்மைகள் உண்டாகத் தான் பலியேற்கும் கொள்கையனாகிய நம்பனும், அழகிய வெற்றியைத் தரும் மழு வாள் வேல் ஆகியவற்றில் வல்லவனும், உண்கலனாகிய தலை யோட்டை உடையவனும் ஆகிய சிவபிரான், தன்னை எய்தும் மாதவத் தோர்க்கு மும்மலங்களைத் தீர்த்து அருள்பவனாய்க் கள்ளில் என்னும் இத்தலத்தில் எழுந்தருளியுள்ளான்.

<u>திருக்கள்ளில்</u>

பொடியார்மெய் பூசினும் புறவி னறவம்
குடியாவூர் திரியினும் கூப்பி டினும்
கடியார்பூம் பொழிற்சோலைக் கள்ளின் மேயான்
அடியார்பண் பிகழ்வார்க ளாதர் களே. **#1309**
மணம் கமழும் அழகிய பொழில்களும் சோலைகளும் சூழ்ந்த கள்ளிலில் எழுந்தருளிய இறைவன் அடியவர்கள் திருநீற்றுப் பொடியை உடலில் பூசினும், சோலைகளில் எடுத்த தேனைஉண்டு திரியினும் பலவாறு பிதற்றினும் அவர்கள் மனம் இறைவன் திருவருளிலேயே அழுந்தியிருக்குமாதலின் அடியவர்களின் குணம் செயல்களை இகழ்பவர்கள் அறியாதவர்களாவர்.

<u>திருக்கள்ளில்</u>

திருநீல மலரொண்கண் டேவி பாகம்
புரிநூலுந் திருநீறும் புல்கு மார்பில்
கருநீல மலர்விம்மு கள்ளி லென்றும்
பெருநீல மிடற்றண்ணல் பேணு வதே. **#1310**
அழகிய நீலமலர் போன்ற ஒளி பொருந்திய கண்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு, முப்புரி நூலும் திருநீறும்

பொருந்திய மார்பினனாய் விளங்கும் கரிய மிடற்று அண்ணலாகிய சிவபிரான் என்றும் விரும்புவது கருநீலமலர்கள் மிகுந்து பூத்துள்ள கள்ளில் என்னும் தலமாகும்.

திருக்கள்ளில்

வரியாய மலரானும் வையந் தன்னை
உரிதாய வளந்தானு முள்ளு தற்கங்
கரியானு மரிதாய கள்ளின் மேயான்
பெரியானென் றறிவார்கள் பேசு வாரே. **#1311**

சிவந்த வரிகளைக் கொண்ட தாமரை மலர்மேல் உறையும் பிரமனும், உலகங்களைத் தனக்கு உரியதாகுமாறு அளந்த திருமாலும், நினைத்தற்கும் அரியவனாய் விளங்கும் பெரியோனாகிய இறைவன், அரியதலமாய் விளங்கும் கள்ளிலில் எழுந்தருளி உள்ளான். அறிந்தவர்கள் அவனையே பெரியோன் எனப் போற்றிப் புகழ்வர்.

திருக்கள்ளில்

ஆச்சியப் பேய்களோ டமணர் குண்டர்
பேச்சிவை நெறியல்ல பேணு மின்கள்
மாச்செய்த வளவயன் மல்கு கள்ளில்
தீச்செய்த சடையண்ணல் திருந்த டியே. **#1312**

பரிகசிக்கத்தக்க பேய்கள் போன்றவர்களாகிய அமணர்களும், புத்தர்களும், கூறும் உரைகள் உண்மையான நெறிகளை மக்கட்கு உணர்த்தாதவை. எனவே அவர்தம் உரைகளைக் கேளாது விடுத்து, பெருமைக்குரிய வள வயல்கள் நிறைந்த கள்ளிலில் விளங்கும் தீத்திரள் போன்ற சடைமுடியை உடைய சிவபிரானுடைய அழகிய திருவடிகளையே பேணுவீர்களாக.

திருக்கள்ளில்

திகைநான்கும் புகழ்காழிச் செல்வ மல்கு
பகல்போலும் பேரொளியான் பந்த னல்ல
முகைமேவு முதிர்சடையன் கள்ளி லேத்தப்
புகழோடும் பேரின்பம் புகுது மன்றே. **#1313**

நாற்றிசை மக்களாலும் புகழப்பெறும் சீகாழிப் பதியில் செல்வவளம் நிறைந்த பகல் போன்ற பேரொளியினனாகிய ஞான சம்பந்தன், நறுமணம் கமழும் மலர் அரும்புகள் நிறைந்த, முதிர்ந்த சடைமுடி உடையவனாகிய சிவபிரானது கள்ளிலைப் போற்றிப் பாடிய இத்திருப்பதிகத்தைப் பாடி ஏத்தினால், புகழோடு பேரின்பம் அடையலாம்.

திருவையாறு - திருவிராகம்

திருஐயாறு

திருவையாறு - திருவிராகம்,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.
தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை.

பணிந்தவ ருருவினை பற்றறுத் தருள்செயத்
துணிந்தவன் தோலொடு நூல்துதை மார்பினில்
பிணிந்தவ னரவொடு பேரெழி லாமைகொண்
டணிந்தவன் வளநக ரந்தணை யாறே. **#1314**

தன்னை வணங்கும் அடியவர்களின் நீக்குதற்கரிய வினைகளை அடியோடு அழித்து அவர்கட்கு அருள் வழங்கத் துணிந்திருப்பவனும், மார்பின்கண் மான்தோலோடு விளங்கும் முப்புரி நூல் அணிந்தவனும், பாம்போடு பெரிய அழகிய ஆமை ஓட்டைப் பூண்டவனும், ஆகிய சிவபிரானது வளநகர் அழகிய குளிர்ந்த ஐயாறாகும்.

திருஐயாறு

கீர்த்திமிக் கவனகர் கிளரொளி யுடனடப்
பார்த்தவன் பனிமதி படர்சடை வைத்துப்
போர்த்தவன் கரியுரி புலியத ளரவரை
ஆர்த்தவன் வளநக ரந்தணை யாறே. **#1315**

புகழ்மிக்கவனும், பகைவர்களாகிய அவுணர்களின் முப்புரங்களைப் பேரொளி தோன்ற எரியுமாறு அழிந்தொழிய நெற்றி விழியால் பார்த்தவனும், குளிர்ந்த திங்களை விரிந்த சடைமுடிமீது வைத்துள்ளவனும், யானையின் தோலை உரித்துப் போர்த்தவனும், புலித்தோலைப் பாம்போடு இடையில் கட்டியவனும் ஆகிய சிவபிரானது வளநகர் அழகிய குளிர்ந்த ஐயாறாகும்.

திருஐயாறு

வரிந்தவெஞ் சிலைபிடித் தவுணர்தம் வளநகர்
எரிந்தற வெய்தவ னெழில்திகழ் மலர்மேல்
இருந்தவன் சிரமது விமையவர் குறைகொள
அரிந்தவன் வளநக ரந்தணை யாறே. **#1316**

இருமுனைகளும் இழுத்துக் கட்டடப்பட்ட கொடிய வில்லைப் பிடித்து, அசுரர்களின் வளமையான முப்புரங்கள் எரிந்து அழியுமாறு கணை

எய்தவனும், தேவர்கள் வேண்ட அழகிய தாமரை மலர்மேல் எழுந்தருளிய பிரமன் தலைகளில் ஒன்றைக் கொய்தவனுமாகிய சிவபிரானது வளநகர் அழகும் தண்மையும் உடைய ஐயாறாகும்.

திருஐயாறு

வாய்ந்தவல் லவுணர்தம் வளநக ரெரியிடை
மாய்ந்தற வெய்தவன் வளர்பிறை விரிபுனல்
தோய்ந்தெழு சடையினன் தொன்மறை யாறங்கம்
ஆய்ந்தவன் வளநக ரந்தணை யாறே. **#1317**

வலிமை வாய்ந்த அவுணர்களின் வளமையான முப்புரங்களும் தீயிடை அழிந்தொழியுமாறு கணை எய்தவனும், வளரத்தக்க பிறை, பரந்து விரிந்து வந்த கங்கை ஆகியன தோய்ந்தெழும் சடையினனும், பழமையான நான்கு வேதங்கள் ஆறு அங்கங்கள் ஆகியவற்றை நன்கு ஆய்வு செய்தருளியவனும் ஆகிய சிவபிரானது நகர் அழகும் தண்மையும் உடைய திருவையாறாகும்.

திருஐயாறு

வானமர் மதிபுல்கு சடையிடை யரவொடு
தேனமர் கொன்றையன் திகழ்தரு மார்பினன்
மானன மென்விழி மங்கையொர் பாகமும்
ஆனவன் வளநக ரந்தணை யாறே. **#1318**

வானின்கண் விளங்கும் பிறைமதி பொருந்திய சடையின்மேல் பாம்பையும், தேன் நிறைந்த கொன்றையையும் அணிந்தவனும், விளங்கும் மார்பினை உடையவனும், மான்போன்ற மென்மையான விழிகளை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவனுமாகிய சிவபிரானது நகர் அழகும் தண்மையும் உடைய திருவையாறாகும்.

திருஐயாறு

முன்பனை முனிவரோ டமரர்க ளடிதொழும்
இன்பனை யிணையில விறைவனை யெழ்ல்திகழ்
என்பொனை யேதமில் வேதியர் தாந்தொழும்
அன்பன வளநக ரந்தணை யாறே. **#1319**

வலிமையுடையவனும் முனிவர்களும் அமரர்களும் தொழும் திருவடிகளை உடைய இன்ப வடிவினனும், ஒப்பற்ற முதல்வனும், அழகு விளங்கும் என் பொன்னாக இருப்பவனும், குற்றமற்ற வேதியர்களால் தொழப்பெறும் அன்பனும் ஆகிய சிவபிரானது வளநகர் அழகும் தண்மையும் உடைய ஐயாறாகும்.

திருஐயாறு

வன்றிற லவுணர்தம் வளநக ரெரியிடை
வெந்தற வெய்தவன் விளங்கிய மார்பினில்
பந்தமர் மெல்விரல் பாகம தாகிதன்
அந்தமில் வளநக ரந்தணை யாறே. **#1320**

பெருவலி படைத்த அவுணர்களின் வளமையான முப்புர நகர்களும் தீயிடையே வெந்தழியுமாறு கணை எய்தவனும், விளங்கிய மார்பகத்தே பந்தணை மெல் விரலியாகிய உமையம்மையைப் பாகமாகக் கொண்டவனும் ஆகிய சிவபிரானது அழிவற்ற வளநகர் அழகும் தண்மையுமுடைய ஐயாறாகும்.

திருஐயாறு

விடைத்தவல் லரக்கனல் வெற்பினை யெடுத்தலும்
அடித்தலத் தாலிறை யூன்றிமற் றவனது
முடித்தலை தோளவை நெரிதர முறைமுறை
அடர்த்தவன் வளநக ரந்தணை யாறே. **#1321**

செருக்கோடு வந்த வலிய இராவணன் நல்ல கயிலை மலையைப் பெயர்த்த அளவில் தனது அடித்தலத்தால் சிறிது ஊன்றி, அவ்விராவணனின் முடிகள் அணிந்த தலைகள், தோள்கள் ஆகியவற்றை முறையே நெரித்தருளிய சிவபிரானது வளநகர் அழகும் தண்மையும் உடைய ஐயாறாகும்.

திருஐயாறு

விண்ணவர் தம்மொடு வெங்கதி ரோனல்
எண்ணிலி தேவர்க ளிந்திரன் வழிபடக்
கண்ணனும் பிரமனும் காண்பரி தாகிய
அண்ணல்தன் வளநக ரந்தணை யாறே. **#1322**

வானகத்தே வாழ்வார் தம்மோடு, சூரியன், அக்கினி, எண்ணற்ற தேவர்கள், இந்திரன் முதலானோர் வழிபட, திருமால் பிரமர்கள் காணுதற்கு அரியவனாய் நின்ற தலைவனாகிய சிவபிரானது வளநகர், அழகும் தண்மையும் உடைய ஐயாறாகும். வெங்கதிரோன் அனல் என்று பாடம் ஓதுவாரும் உளர்.

திருஐயாறு

மருளுடை மனத்துவன் சமணர்கண் மாசறா
இருளுடை யிணைத்துவர்ப் போர்வையி னார்களும்
தெருளுடை மனத்தவர் தேறுமின் திண்ணமா

அருளுடை யடிகள்தம் அந்தணை யாறே. **#1323**
தெளந்த மனத்தினை உடையவர்களே! மருட்சியை உடைய மனத்தவர்களாகிய வலிய சமணர்களும், குற்றம் நீங்காத இரண்டு துவர்நிற ஆடைகளைப் பூண்ட புத்தர்களும் கூறுவனவற்றைத் தெளயாது சிவபிரானை உறுதியாகத் தெளவீர்களாக. கருணையாளனாக விளங்கும் சிவபிரானது இடம் அழகும் தண்மையும் உடைய ஐயாறாகும்.

திருஐயாறு

நலமலி ஞானசம் பந்தன தின்றமிழ்
அலைமலி புனல்மல்கு மந்தணை யாற்றினைக்
கலைமலி தமிழிவை கற்றுவல் லார்மிக
நலமலி புகழ்மிகு நன்மையர் தாமே. **#1324**
அலைகள் வீசும் ஆறு குளம் முதலிய நீர் நிலைகளால் சூழப்பட்ட ஐயாற்று இறைவனை, நன்மைகள் நிறைந்த ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய இன்தமிழால் இயன்ற கலைநலம் நிறைந்த இத்திருப்பதிகத்தைக் கற்று வல்லவராயினார் நன்மை மிக்க புகழாகிய நலத்தைப் பெறுவர்.

திருவிடைமருதூர் - திருவிராகம்

திருவிடைமருதூர்

திருவிடைமருதூர் - திருவிராகம்,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மருதீசர்.
தேவியார் : நலமுலைநாயகியம்மை.

நடைமரு திரிபுர
மெரியுண நகைசெய்த
படைமரு தழலெழ
மழுவல பகவன்
புடைமரு திளமுகில்
வளமமர் பொதுளிய
இடைமரு தடையநம்
மிடர்கெட லெளதே. **#1325**

இயங்குதலைப் பொருந்திய திரிபுரங்களை எரியுண்ணுமாறு சிரித்தருளித் தனது படைக்கலத்தால் தீ எழும்படி செய்தருளிய வெற்றி மழுவேந்திய பகவனாகிய சிவபிரான் எழுந்தருளியதும் அருகில் வளர்ந்துள்ள மருத மரங்களில் இளமேகங்கள் தவழ்ந்து மழை வளத்தை நிரம்பத் தருவதுமான திருஇடைமருதூரை அடைந்தால் நம் இடர்கெடல் எளிதாகும்.

திருவிடைமருதூர்

மழைநுழை மதியமொ
டழிதலை மடமஞ்ஞை
கழைநுழை புனல்பெய்த
கமழ்சடை முடியன்
குழைநுழை திகழ்செவி
யழகொடு மிளிர்வதொர்
இழைநுழை புரியண
லிடமிடை மருதே. **#1326**

மேகங்களிடையே நுழைந்து செல்லும் பிறை மதியோடு தசை வற்றிய தலையோடு ஆகியவற்றையும், மடமயில்கள் மூங்கிலிடையே நுழைந்து செல்லும் மலையில் தோன்றிய தேவ கங்கை நதியையும்; கமழுமாறு சடைமுடியில் சூடியவனும், குழை நுழைந்து விளங்கும் செவியழகோடு இழையாகத் திரண்ட முப்புரிநூலை விரும்பி அணிபவனுமாகிய

அண்ணல் எழுந்தருளிய இடம் திரு விடைமருதூராகும்.

திருவிடைமருதூர்

அருமைய னௌமைய
னழல்விட மிடறினன்
கருமையி னொளிபெறு
கமழ்சடை முடியன்
பெருமையன் சிறுமையன்
பிணைபெணொ டொருமையின்
இருமையு முடையண
லிடமிடை மருதே. **#1327**

அன்பில்லாதவர்க்கு அரியவனும், அன்புடை அடியவர்க்கு எளியவனும், அழலும் தன்மையுடைய விடத்தை உண்டு நிறுத்திய கண்டத்தினனும், பெரியனவற்றுக்கெல்லாம் பெரியவனும், சிறியன யாவற்றினும் சிறியவனும், தன்னோடு பிணைந்துள்ள உமையம்மையோடு ஒருருவில் இருவடிவாய்த் தோன்றுபவனுமாகிய சிவபிரானுக்குரிய இடம் திருவிடைமருதூர் ஆகும்.

திருவிடைமருதூர்

பொரிபடு முதுகுற
முளிகளி புடைபுல்கு
நரிவளர் சுடலையு
ணடமென நவில்வோன்
வரிவளர் குளிர்மதி
யொளிபெற மிளிர்வதொர்
எரிவளர் சடையண
லிடமிடை மருதே. **#1328**

நன்கு காய்ந்து பொரிந்த முதுகினை உடைய நரிகள் களிப்போடு அருகில் மிகுந்து தோன்ற, சுடலைக் காட்டில் நடம் நவில்பவனும், கோடாகத் தோன்றிப் பின்வளரும் குளிர்ந்த பிறைமதியை ஒளிபெற அணிந்த எரிபோன்று வளரும் சடைமுடியை உடையவனும் ஆகிய தலைமையாளனாகிய சிவபிரானது இடம் இடைமருதாகும்.

திருவிடைமருதூர்

வருநல மயிலன
மடநடை மலைமகள்
பெருநல முலையிணை
பிணைசெய்த பெருமான்

செருநல மதிலெய்த
சிவனுறை செழுநகர்
இருநல புகழ்மல்கு
மிடமிடை மருதே. **#1329**

அழகோடு அசைந்து வரும் மயில் போன்ற மடநடையினளாகிய மலையரையன் மகளும், பெரு நல முலையாள் என்ற திருப்பெயருடையவளுமாகிய அம்மையின் இருதன பாரங்களைக் கூடியவனும், போர் செய்தற்குரிய தகுதியோடு விளங்கிய அவுணர்களின் மும்மதில்களை எய்தழித்தவனும் ஆகிய சிவபிரான் உறையும் இடமாகிய செழுமையான நகர் விரிந்த புகழால் நிறைந்த திருஇடைமருதூர் ஆகும்.

திருவிடைமருதூர்

கலையுடை விரிதுகில்
கமழ்குழ லகில்புகை
மலையுடை மடமகள்
தனையிட முடையோன்
விலையுடை யணிகல
னிலனென மழுவினோ
டிலையுடை படையவ
னிடமிடை மருதே. **#1330**

மேகலை சூழ்ந்த விரிந்த ஆடையுடன் அகிற் புகையின் மணம் கமழும் கூந்தலை உடைய மலையரையனின் மடமகளாகிய பார்வதி தேவியை இடப்பாகமாக உடையவனும் விலை மதிப்புடைய அணிகலன்கள் எவையும் இல்லாதவன் என்னுமாறு என்பு முதலியன பூண்டு மழு இலைவடிவான சூலம் இவற்றைப் படைக்கலனாகக் கொண்டவனுமாகிய சிவபிரானது இடம் இடைமருதாகும்.

திருவிடைமருதூர்

வளமென வளர்வன
வரிமுரல் பறவைகள்
இளமண லணைகரை
யிசைசெயு மிடைமரு
துளமென நினைபவ
ரொலிகழ லிணையடி
குளமண லுறமூழ்கி
வழிபடல் குணமே. **#1331**

இது வளமான இடமாகும் என வளர்வனவாகிய வரிப் பாடல்களைப்

பாடும் வண்டுகள் இளமணல் அணைந்த கரையில் தங்கி முரலும் இடைமருதை மனமார நினைபவர் அந்நகரை அடைந்து ஆங்குள்ள தீர்த்தத்தில் நன்கு மூழ்கி ஒலிக்கின்ற கழலணிந்த மருத வாணனை வழிபடுதலைப் பண்பாகக் கொள்க.

திருவிடைமருதூர்

மறையவ னுலகவன்
மதியவன் மதிபுல்கு
துறையவ னெனவல
வடியவர் துயரிலர்
கறையவன் மிடறது
கனல்செய்த கமழ்சடை
இறையவ னுறைதரு
மிடமிடை மருதே. #1332

வேதங்களை அருளியவனும் அனைத்துலகங்களாய் விளங்குபவனும், திங்களாகத் திகழ்பவனும், அறிவொடுபட்ட கலைத் துறைகளாக விளங்குபவனும் சிவபிரானேயாவன் என்று போற்ற வல்ல அடியவர் துயரிலராவர். மிடற்றிற் கறையுடையவனும் கனல்போல் விளங்கும் சடையினனும் எல்லோர்க்கும் தலைவனும் ஆய அப்பெருமான் உறையும் இடம் இடைமருதாகும்.

திருவிடைமருதூர்

மருதிடை நடவிய
மணிவணர் பிரமரும்
இருதுடை யகலமொ
டிகலின ரினதெனக்
கருதிட லரியதொ
ருருவொடு பெரியதொர்
எருதுடை யடிகள்தம்
இடமிடை மருதே. #1333

மருதமரங்களின் இடையே கட்டிய உரலோடு தவழ்ந்த நீலமணிபோன்ற நிறத்தை உடைய திருமாலும், பிரமனும் மிக்க பெருமையுடையவர் யார் எனத் தம்முள் மாறுபட்டவராய் நிற்க அவர்கள் இன்னதெனக் கருதற்கரிய பெரிய ஒளி உருவோடு தோன்றிய பெரிய விடையூர்தியனாகிய சிவபிரானது இடம் இடைமருதாகும்.

திருவிடைமருதூர்

துவருறு விரிதுகி

லுடையரு மமணரும்
அவருறு சிறுசொலை
நயவன்மி னிடுமணல்
கவருறு புனலிடை
மருதுகை தொழுதெழும்
அவருறு வினைகெட
லணுகுதல் குணமே. #1334

துவர் ஏற்றிய விரிந்த ஆடையினை உடுத்தும் போர்த்தும் திரியும் புத்தரும் சமணரும் கூறும் சிறு சொல்லை விரும்பாதீர். காவிரி பல கிளைகளாகப் பிரிந்து செல்லும் வாய்க்கால்களை உடைய இடைமருதைக் கைகளால் தொழுபவர்க்கு வினைகள் கெடுதலும் நல்ல குணங்கள் உண்டாதலும் கூடும்.

திருவிடைமருதூர்

தடமலி புகலியர்
தமிழ்கெழு விரகினன்
இடமலி பொழிலிடை
மருதினை யிசைசெய்த
படமலி தமிழிவை
பரவவல் லவர்வினை
கெடமலி புகழொடு
கிளரொளி யினரே. #1335

நீர்நிலைகள் பலவற்றை உடைய புகலிப் பதியில் தோன்றியவனும், தமிழ் விரகனுமாகிய ஞானசம்பந்தன் விரிந்த பொழில்களால் சூழப்பட்ட இடைமருதீசனை இசையால் பரவிய சொல்லோவியமாகிய இத்திருப்பதிகத் தமிழைப் பாடிப் பரவ வல்லவர்தம் வினைகள் கெட்டொழிய அவர்கள் புகழோடும் விளங்கும் ஒளியோடும் திகழ்பவராவர்.

திருவிடைமருதூர்

திருவிடைமருதூர் - திருவிராகம்,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மருதீசர்.
தேவியார் : நலமுலைநாயகியம்மை.

விரிதரு புலியுரி விரவிய வரையினர்
திரிதரு மெயிலவை புனைகணை யினிலெய்த
எரிதரு சடையின ரிடைமரு தடைவுனல்

புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே. #1336
விரிந்த புலித்தோலை ஆடையாக உடுத்த இடையினரும், வானகத்தில் திரிந்து இடர் செய்த முப்புரங்களை ஆற்றல் பலவும் அமைந்த கணையால் எய்தழித்தவரும் எரிபோன்ற சிவந்த சடையினருமாகிய சிவபிரானார் உறையும் இடைமருதை அடைய எண்ணும் மனம் உடையவர்க்குப் புகழ் மிக உளதாகும்.

திருவிடைமருதூர்

மறிதிரை படுகடல் விடமடை மிடறினர்
எறிதிரை கரைபொரு மிடைமரு தெனுமவர்
செறிதிரை நரையொடு செலவில ருலகினில்
பிறிதிரை பெறுமுடல் பெறுகுவ தரிதே. #1337
சுருண்டு விழும் அலைகள் உண்டாகும் கடலிடைத் தோன்றிய விடம் சேர்ந்த மிடற்றினர் உறைவதும், காவிரியாற்று அலைகள் கரைகளைப் பொருவதுமான இடைமருது என்னும் தலத்தின் பெயரைச் சொல்லுவோர் உடலிடை அலைபோலத் தோன்றும் தோலின் சுருக்கம், மயிரின் நரை ஆகியன நீங்குவர். மீண்டும் இவ்வுலகில் உணவு உண்ணும் உடலோடு கூடிய பிறவியை எய்தார்.

திருவிடைமருதூர்

சலசல சொரிபுனல் சடையினர் மலைமகள்
நிலவிய வுடலினர் நிறைமறை மொழியினர்
இலரென விடுபலி யவரிடை மருதினை
வலமிட வுடனலி விலதுள வினையே. #1338
சலசல என்னும் ஒலிக்குறிப்போடு சொரியும் கங்கை ஆற்றைச் சடைமிசை அணிந்தவரும், மலைமகளை ஒருபாகமாகக் கொண்ட உடலினரும், நிறைவான வேதங்களை மொழிபவரும், உணவின்மையால் பசியோடுள்ளார் என மகளிர் இடும் பலியை ஏற்பவருமான சிவபிரான் உறையும் இடைமருதை வலம்வருபவர்க்கு வினைகளால் ஆகும் உடல் நலிவு இல்லையாம்.

திருவிடைமருதூர்

விடையினர் வெளியதொர் தலைகல னெனநனி
கடைகடை தொறுபலி யிடுகென முடுகுவர்
இடைவிட லரியவ ரிடைமரு தெனுநகர்
உடையவ ரடியிணை தொழுவதெம் முயர்வே. #1339
விடையூர்தியை உடையவரும், வெண்மையான தலையோட்டை உண்கலன் எனக் கொண்டு பலகாலும் வீடுகள்தோறும் சென்று பலி

இடுக என விரைந்து செல்பவரும், ஒருமுறை அன்பு செய்யின் விடுதற்கு அரியவரும், இடைமருது என்னும் நகரை உடையவரும் ஆகிய சிவபிரான் திருவடிகளைத் தொழுவதே எமக்கு உயர்வைத் தரும்.

திருவிடைமருதூர்

உரையரு முருவின ருணர்வரு வகையினர்
அரைபொரு புலியத ளுடையின ரதன்மிசை
இரைமரு மரவின ரிடைமரு தெனவுளம்
உரைகள துடையவர் புகழ்மிக வுளதே. **#1340**

சொல்லுதற்கரிய அழகரும், உணர்வதற்கரிய தன்மையரும், இடையில் பொருந்திய புலித்தோல் ஆடையினரும் அதன்மேல் இரையை விழுங்கும் பாம்பைக் கச்சையாகக் கட்டியவரும் ஆகிய சிவபிரானது இடைமருதைப் பலகாலும் புகழ்ந்து போற்றுவார்க்கு மிகுதியான புகழ் உளதாகும்.

திருவிடைமருதூர்

ஒழுகிய புனன்மதி யரவமொ டுறைதரும்
அழகிய முடியுடை யடிகள தறைகழல்
எழிலின ருறையிடை மருதினை மலர்கொடு
தொழுதல்செய் தெழுமவர் துயருற லிலரே. **#1341**

வழிந்தொழுகும் கங்கை நதி, இளம்பிறை, பாம்பு ஆகியன உறையும் அழகிய சடைமுடியை உடையவரும், ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்துள்ள அழகரும் ஆகிய அடிகளது இடைமருதை அடைந்து மலர் கொண்டு போற்றித் தொழுது எழுவார் துன்புறுதல் இலராவர்.

திருவிடைமருதூர்

கலைமலி விரலினர் கடியதொர் மழுவொடும்
நிலையினர் சலமக ளுலவிய சடையினர்
மலைமகண் முலையிணை மருவிய வடிவினர்
இலைமலி படையவ ரிடமிடை மருதே. **#1342**

வீணையை மீட்டி இன்னிசைக் கலையை எழுப்பும் விரலை உடையவரும், கொடிய மழுவாயுதத்தோடு விளங்கும் நிலையினரும், கங்கை உலாவும் சடைமுடியினரும் மலைமகளின் முலைத்தழும்பு பொருந்திய வடிவினரும், இலைவடிவான சூலத்தை ஏந்தியவருமாய சிவபிரானார் இடம் இடைமருதாகும்.

திருவிடைமருதூர்

செருவடை யிலவல செயல்செயத் திறலொடும்

அருவரை யினிலொரு பதுமுடி நெரிதர
இருவகை விரனிறி யவரிடை மருததது
பரவுவ ரருவினை யொருவுதல் பெரிதே. **#1343**

போரில் முறையற்ற செயல்களைச் செய்யும் இராவணன் தன்னிடமும் அவ்வாறு திறலோடும் செய்தலைக் கண்டு அரிய கயிலைமலையின்கீழ் அகப்படுத்தி அவனுடைய பத்துத் தலைகளும் நெரியுமாறு சினம் கருணை ஆகிய இருவகைக் குறிப்போடு கால் விரலை ஊன்றியவராகிய சிவபிரானது இடைமருதைப் பரவுவார் அருவினைகள் பெரிதும் நீங்கும்.

<u>திருவிடைமருதூர்</u>

அரியொடு மலரவ னெனவிவ ரடிமுடி
தெரிவகை யரியவர் திருவடி தொழுதெழ
எரிதரு முருவர்த மிடைமரு தடைவுறல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே. **#1344**

திருமால் பிரமர்களாகிய இருவரும் அடிமுடி காணமுயன்றபோது அவர்கட்கு அரியவராய்த் தோன்றி அவர்கள் தம்மைத் தொழுது எழுந்தபோது அழலுருவாய்க் காட்சி தந்த சிவபிரானாரது இடைமருதினை அடைய விரும்புவார்க்குப் புகழ் மிக உளதாகும்.

<u>திருவிடைமருதூர்</u>

குடைமயி லினதழை மருவிய வுருவினர்
உடைமரு துவரினர் பலசொல வுறவிலை
அடைமரு திருவினர் தொழுதெழு கழலவர்
இடைமரு தெனமன நினைவது மெழிலே. **#1345**

குடையையும் மயிற்பீலியையும் கையில் ஏந்திய வடிவினை உடைய சமணர்களும், மருதந்துவர் ஏற்றிய ஆடையை உடுத்த புத்தர்களும் பலவாறு கூற அவர்களோடு நமக்கு உறவில்லை என ஒதுக்கிச் செல்வங்கள் யாவும் தம்மை வந்தடைந்தவராய் விளங்கும் அடியவர்களால் தொழப் பெறும் திருவடிகளை உடைய சிவபிரானது இடைமருது என மனத்தால் நினைவது அழகைத் தரும்.

<u>திருவிடைமருதூர்</u>

பொருகட லடைதரு புகலியர் தமிழொடு
விரகினன் விரிதரு பொழிலிடை மருதினைப்
பரவிய வொருபது பயிலவல் லவரிடர்
விரவிலர் வினையொடு வியனுல குறவே. **#1346**

கரையைப் பொரும் கடலை அணித்தாக உடைய புகலிப் பதியில் தோன்றியவனும், தமிழ் விரகனுமாகிய ஞானசம்பந்தன் விரிந்த

பொழில்களால் சூழப்பட்ட இடைமருதில் விளங்கும் பெருமானைப் பரவிய இத்திருப்பதிகத்தின் பத்துப் பாடல்களையும் பயில வல்லவர் வினைகளும் இடர்களும் இலராவர். அகன்ற வீட்டுலகம் அவர்கட்குச் சொந்தமாகும்.

திருவலிவலம் - திருவிராகம்

திருவலிவலம்

திருவலிவலம் - திருவிராகம்,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மனத்துணைநாதர்.
தேவியார் : வாளையங்கண்ணியம்மை.

பூவியல் புரிகுழல் வரிசிலை நிகர்நுதல்
ஏவியல் கணைபிணை யெதிர்விழி உமையவள்
மேவிய திருவுரு வுடையவன் விரைமலர்
மாவியல் பொழில்வலி வலமுறை யிறையே. **#1347**

மணம் கமழும் மலர்களையும், அவற்றில் தேனுண்ணும் வண்டுகளையும், உடைய பொழில் சூழ்ந்த வலிவலத்தில் உறையும் இறைவன், மலர்கள் அணிந்த சுருண்ட கூந்தலையும், வரிந்து கட்டப்பெற்ற வில்போன்ற நுதலையும், செலுத்துதற்கு உரிய கணை, மான் ஆகியன போன்ற கண்களையும் பெற்றுடைய உமையம்மையோடு கூடிய திருமேனியை உடையவன்.

திருவலிவலம்

இட்டம தமர்பொடி யிசைதலி னசைபெறு
பட்டவிர் பவளநன் மணியென வணிபெறு
விட்டொளிர் திருவுரு வுடையவன் விரைமலர்
மட்டமர் பொழில்வலி வலமுறை யிறையே. **#1348**

மணம் கமழ்கின்ற மலர்கள் தேனோடு விளங்கும் பொழில் சூழ்ந்த வலிவலத்தில் உறையும் இறைவன், விருப்பத்தோடு அணியப் பெற்ற திருநீறு பொருந்தி இருத்தலின் பட்டோடு விளங்கும் பவளமணி போல் ஒளிவிடுகின்ற அழகிய ஒளி வீசும் திருமேனியை உடையவனாகத் தோன்றுகின்றான்.

திருவலிவலம்

உருமலி கடல்கடை வுழியுல கமருயிர்
வெருவுறு வகையெழு விடம்வெளி மலையணி
கருமணி நிகர்கள முடையவன் மிடைதரு
மருவலி பொழில்வலி வலமுறை யிறையே. **#1349**

மிகுதியான மணம் நிறைந்து விளங்கும் பொழில் சூழ்ந்த வலிவலத்தில் உறையும் இறைவன், தேவர்கள் அஞ்சத்தக்க கடலைக் கடைந்தபோது

உலகில் உள்ள அனைத்துயிர்களும் அஞ்சத்தக்க வகையில் எழுந்த விடத்தை உண்டு, திருநீறு சண்ணித்த திருமேனி வெள்ளி மலை போல விளங்க அதனிடை நீலமணி பதித்தாற்போல் கரிய கண்டம் உடையவனாய் விளங்குபவன் ஆவான்.

திருவலிவலம்

அனனிகர் சடையழ லவியுற வெனவரு
புனனிகழ் வதுமதி நனைபொறி யரவமும்
எனநினை வொடுவரு மிதுமெல முடிமிசை
மனமுடை யவர்வலி வலமுறை யிறையே. **#1350**

வலிவலம் உறை இறைவன், அனல் போன்ற சடையழலை அவிப்பதற்கென வருவது போன்ற கங்கையையும், பிறையையும், பூ மொட்டுப் போன்ற படப்புள்ளிகளை உடைய பாம்பையும் முடிமிசை உடையவன் என்னும் நினைவோடு வரும் மனமுடைய அடியவர் வாழும் சிறப்பினை உடையது வலிவலமாகும்.

திருவலிவலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே. **#1351**

மிகுதியாக வழங்கும் கொடையே தமக்கு அழகைத் தரும் என நினையும் வள்ளற் பெருமக்கள் வாழும் வலிவலத்தில் உறையும் இறைவன், உமையம்மை பெண் யானை வடிவு கொள்ள, தான் ஆண் யானையின் வடிவு கொண்டு தன் திருவடியை வணங்கும் அடியவர்களின் இடர்களைக் கடியக் கணபதியைத் தோற்றுவித்தருளினான்.

திருவலிவலம்

தரைமுத லுலகினி லுயிர்புணர் தகைமிக
விரைமலி குழலுமை யொடுவிர வதுசெய்து
நரைதிரை கெடுதகை யதுவரு ளினனெழில்
வரைதிகழ் மதில்வலி வலமுறை யிறையே. **#1352**

அழகிய மலைபோலத் திகழும் மதில் சூழ்ந்த வலிவலத்தில் உறையும் இறைவன், மண் முதலிய அனைத்து அண்டங்களிலும் வாழும் உயிர்கள் ஆணும் பெண்ணுமாய்க் கூடிப் போகம் நுகருமாறு மணம் மிக்க கூந்தலை உடைய உமையம்மையோடு கூடியவனாய் விளங்கித் தன்னை வழிபடும் அடியவர்க்கு நரை தோலின் சுருக்கம் என்பன கெடுமாறு செய்து என்றும் இளமையோடு இருக்க

அருள்புரிபவனாவான்.

திருவலிவலம்

நலிதரு தரைவர நடைவரு மிடையவர்
பொலிதரு மடவர லியர்மனை யதுபுகு
பலிகொள வருபவ னெழின்மிகு தொழில்வளர்
வலிவரு மதில்விலி வலமுறை யிறையே. **#1353**

அழகுமிக்கக் கவின் கலை முதலான தொழில்கள் வளரும் வலிமை மிக்க மதில்களால் சூழப்பட்ட வலிவலத்தில் உறையும் இறைவன், மண்ணை மிதிப்பதற்கே அஞ்சும் மென்மையான பாதங்களையும், அசையும் இடையினையும் உடைய அழகிய தாருகாவன மகளிர் உறையும் மனைகள் தோறும் சென்று புகுந்து பலி ஏற்கப்பிட்சாடனனாய் வருபவன்.

திருவலிவலம்

இரவண நிருபது கரமெழின் மலைதனின்
இரவண நினைதர வவன்முடி பொடிசெய்து
இரவண மமர்பெய ரருளின னகநெதி
இரவண நிகர்வலி வலமுறை யிறையே. **#1354**

தன்னை வழிபட்டு இரக்கும் தன்மையாளர்களாகிய அடியவர்கட்குத் தன் மனத்தில் தோன்றும் கருணையாகிய நிதியை வழங்கும் வலிவலத்தில் உறையும் இறைவன், இராவணனின் இருபது கரங்களையும் அவனுடைய பத்துத் தலைகளையும் அழகிய கயிலை மலையின்கீழ் அகப்படுத்திப் பொடி செய்து பின் அவன் இரந்துவேண்டி நினைத்த அளவில் அவனுக்கு வேண்டுவன அளித்து இராவணன் என்ற பெயரையும் அருளியவன்.

திருவலிவலம்

தேனமர் தருமல ரணைபவன் வலிமிகும்
ஏனம தாய்நில மகழரி யடிமுடி
தானணை யாவுரு வுடையவன் மிடைகொடி
வானணை மதில்வலி வலமுறை யிறையே. **#1355**

வானத்தைச் சென்றடையுமாறு நெருக்கமாகக் கட்டப்பட்ட கொடிகளைக் கொண்ட மதில்களால் சூழப்பட்ட வலிவலத்தில் உறையும் இறைவன், தேன் நிறைந்த தாமரை மலர்மேல் உறையும் நான்முகன், வலிமைமிக்க பன்றியுருவினனாய் நிலத்தை அகழும் திருமால் ஆகியோர் முடியையும் அடியையும் காண முடியாதவாறு ஓங்கி உயர்ந்த திருவுருவை உடையவன்.

திருவலிவலம்

இலைமலி தரமிகு துவருடை யவர்களும்
நிலைமையி லுணலுடை யவர்களு நினைவது
தொலைவலி நெடுமறை தொடர்வகை யுருவினன்
மலைமலி மதில்வலி வலமுறை யிறையே. **#1356**

மலை போன்ற மதில்களால் சூழப்பட்ட வலிவலத்தில் உறையும் இறைவன், மிகுதியான மருதந்துவர் இலைகளால் பிழியப்பட்ட மிக்க துவர்நிறம் உடைய ஆடைகளை அணிந்த புத்தர்களும் நின்றுண்ணும் இயல்பினர்களாகிய சமணர்களும் நினைப்பதை அழித்துப் பொருட்டன்மையால் வலியவான பெருமை மிக்க வேதங்கள் தன்னைத் தொடருமாறு செய்தருளும் உருவினை உடையவனாய் உள்ளான்.

திருவலிவலம்

மன்னிய வலிவல நகருறை யிறைவனை
இன்னியல் கழுமல நகரிறை யெழின்மறை
தன்னியல் கலைவல தமிழ்விர கனதுரை
உன்னிய வொருபது முயர்பொருள் தருமே. **#1357**

நிலைபேறுடைய வலிவல நகரில் உறையும் இறைவன்மீது இனிமையான இயல்பினை உடைய கழுமல நகருக்குத் தலைவனும் அழகிய வேதங்களையும் கலைகளையும் ஓதாமல் தானே உணர்ந்த தமிழ் விரகனுமாகிய ஞானசம்பந்தன் எண்ணி உரைத்த இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தும் உயர்வான வீடு பேறாகிய செல்வத்தை அளிக்கும்.

திருவீழிமிழலை - திருவிராகம்

திருவீழிமிழலை

திருவீழிமிழலை - திருவிராகம்,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

அலர்மகண் மலிதர வவனியி னிகழ்பவர்
மலர்மலி குழலுமை தனையிட மகிழ்பவர்
நலமலி யுருவுடை யவர்நகர் மிகுபுகழ்
நிலமலி மிழலையை நினையவ லவரே. **#1358**

மலர் நிறைந்த கூந்தலை உடைய உமையம்மையை இடப்பாகமாகக் கொண்டு மகிழ்பவரும், அழகிய திருமேனியை உடையவரும் ஆகிய சிவபிரானது நிலவுலகத்தே நிறைந்த புகழை உடைய மிழலை நகரை நினைய வல்லவர் திருமகளின் கருணையால் செல்வம் நிறையப் பெற்று உலகில் வாழ்வர்.

திருவீழிமிழலை

இருநில மிதன்மிசை யெழில்பெறு முருவினர்
கருமலி தருமிகு புவிமுத லுலகினில்
இருளறு மதியின ரிமையவர் தொழுதெழு
நிருபமன் மிழலையை நினையவ லவரே. **#1359**

எண்ணற்ற உயிரினங்கள் வாழும் மண் முதலிய அனைத்துலகங்களிலும் இருளைப் போக்கும் மதி போல ஒளியும் தண்ணளியும் செய்பவரும், தேவர்களால் தொழப் பெறும் தன்னொப்பார் இல்லாதவரும் ஆகிய சிவபிரானது மிழலையை நினைப்பவர்கள் பரந்து விரிந்த இவ்வுலகில் அழகிய உருவோடு விளங்குபவர் ஆவர்.

திருவீழிமிழலை

கலைமக டலைமக னிவனென வருபவர்
அலைமலி தருபுன லரவொடு நகுதலை
இலைமலி யிதழியு மிசைதரு சடையினர்
நிலைமலி மிழலையை நினையவ லவரே. **#1360**

அலைகள் நிறைந்த கங்கை நதி, பாம்பு, தலையோடு, வில்வஇலை, மிக்க கொன்றை ஆகியன பொருந்திய சடை முடியினனாகிய சிவபிரான் உறையும் நிலைபேறு உடைய திருவீழிமிழலையை நினைய வல்லவர்

கலைமகளின் தலைவன் இவன் என்னும் ஒவ்வொருவரும் சொல்லத்தக்க தகுதியை உடையவராய்க் கல்வி நலம் வாய்க்கப் பெறுவர்.

திருவீழிமிழலை

மாடமர் சனமகிழ் தருமன முடையவர்
காடமர் கழுதுக ளவைமுழ வொடுமிசை
பாடலி னவில்பவர் மிகுதரு முலகினில்
நீடமர் மிழலையை நினையவ லவரே. **#1361**

இடுகாட்டில் வாழும் பேய்கள் ஒலிக்க முழவு முதலிய கருவிகள் ஒலிக்க இசைபாடி நடம் நவில்பவனாகிய சிவபிரான் இனிதாக எழுந்தருளியதும் இவ்வுலகிடைப் பெருமையோடு நீண்ட காலமாக விளங்குவதுமாகிய திருவீழிமிழலையை நினைய வல்லவர்கள் அருகில் விரும்பி உறையும் சுற்றத்தினர் மகிழும் மனம் உடையவராவர்.

திருவீழிமிழலை

புகழ்மகள் துணையினர் புரிகுழ லுமைதனை
இகழ்வுசெய் தவனுடை யெழின்மறை வழிவளர்
முகமது சிதைதர முனிவுசெய் தவன்மிகு
நிகழ்தரு மிழலையை நினையவ லவரே. **#1362**

சுருண்ட கூந்தலை உடைய உமையம்மையை இகழ்ந்த தக்கனுடைய அழகிய வேத நெறிகளை ஓதி வளர்க்கும் தலையைச் சினந்து சிதைத்தருளியவனாகிய சிவபிரானது புகழ் பொருந்திய திரு வீழிமிழலையை நினைய வல்லவர் புகழ்மகளைப் பொருந்துவர்.

திருவீழிமிழலை

அன்றின ரரியென வருபவ ரரிதினில்
ஒன்றிய திரிபுர மொருநொடி யினிலெரி
சென்று கொள் வகைசிறு முறுவல்கொ டொளிபெற
நின்றவன் மிழலையை நினையவ லவரே. **#1363**

தவம் செய்து அரிதாகப் பெற்ற ஒன்று பட்ட முப்புரங்களைத் தேவர்கள் வேண்டுகோட்படி ஒருநொடிப் பொழுதில் எரி உண்ணுமாறு சிறுமுறுவல் செய்து புகழ் பெற்றவனாகிய சிவபிரானது திருவீழிமிழலையைநினைய வல்லவர் பகைவர்கட்குச் சிங்க ஏறு போன்ற வன்மை உடையவராவர்.

திருவீழிமிழலை

கரம்பயில் கொடையினர் கடிமல ரயனதொர்
சிரம்பயில் வறவெறி சிவனுறை செழுநகர்

வரம்பயில் கலைபல மறைமுறை யறநெறி
நிரம்பினர் மிழலையை நினையவ லவரே. **#1364**
மணங்கமழும் தாமரை மலர்மேல் உறையும் பிரமனுடைய தலைகளில் ஒன்றை அவனது உடலில் பொருந்தா வண்ணம் கொய்த சிவபிரான் உறையும் செழுமையான நகராய். மேன்மை மிக்க கலைகள் பலவற்றோடு வேத விதிகளையும், அறநெறிகளையும் அறிந்தவர்கள் நிரம்பிய திருவீழிமிழலையை நினைய வல்லவர்தம் கைகளால் பலகாலும் கொடுக்கும் வள்ளன்மையோடு கூடிய உள்ளத்தைப் பெறுவர்.

<u>திருவீழிமிழலை</u>

ஒருக்கிய வுணர்வினொ டொளிநெறி செலுமவர்
அரக்கனன் மணிமுடி யொருபது மிருபது
கரக்கன நெரிதர மலரடி விரல்கொடு
நெருக்கினன் மிழலையை நினையவ லவரே. **#1365**
இராவணனுடைய மணிமுடி தரித்த பத்துத் தலைகளும், இருபது கரங்களும் நெரியுமாறு தன்மலர் போன்ற திருவடியின் விரலைக் கொண்டு நெரித்தருளியவனாகிய சிவபிரானது திருவீழிமிழலையை நினைய வல்லவர் ஒன்றுபட்ட உணர்வோடு ஒளி நெறியாகிய ஞானமார்க்கத்தில் செல்லுபவராவர்.

<u>திருவீழிமிழலை</u>

அடியவர் குழுமிட வவனியி னிகழ்பவர்
கடிமல ரயனரி கருதரு வகைதழல்
வடிவுரு வியல்பினொ டுலகுக ணிறைதரு
நெடியவன் மிழலையை நினையவ லவரே. **#1366**
மணம் மிக்க தாமரை மலர்மேல் விளங்கும் பிரமனும், திருமாலும் நினைதற்கு அரிய வகையில் தழல் வடிவோடு எல்லா உலகங்களிலும் நிறைந்தருளிய பெரியோனாகிய சிவபிரானது திருவீழிமிழலையை நினைய வல்லவர்கள், அடியவர் பலர் தம்மைச் சூழ இவ்வுலகில் இனிது வாழ்வர்.

<u>திருவீழிமிழலை</u>

மன்மத னெனவொளி பெறுமவர் மருதமர்
வன்மலர் துவருடை யவர்களு மதியிலர்
துன்மதி யமணர்க டொடர்வரு மிகுபுகழ்
நின்மலன் மிழலையை நினையவ லவரே. **#1367**
மருதத்தினது வலிய மலரால் துவர் ஏற்றிய காவி ஆடையை உடுத்த

புத்தர்களும் அறிவற்றவர். சமணர்களும் துன்மதியாளர்கள். இவர்கள் இருவராலும் அறிதற்கு அரிய மிக்க புகழினை உடைய நின்மலனாகிய சிவபிரானின் மிழலையை நினைப்பவர்கள் மன்மதன் போன்ற அழகினைப் பெறுவார்கள்.

திருவீழிமிழலை

நித்திலன் மிழலையை நிகரிலி புகலியுள்
வித்தக மறைமலி தமிழ்விர கனமொழி
பத்தியில் வருவன பத்திவை பயில்வொடு
கற்றுவல் லவருல கினிலடி யவரே. **#1368**

முத்துப் போன்றவனாகிய சிவபிரானது திருவீழிமிழலையை ஒப்பற்ற புகலிப் பதியில் வாழும் சதுரப்பாடுகளோடு வேதங்களிலும் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் வல்லவன் ஆகிய ஞானசம்பந்தனது பத்தியால் விளைந்த இப்பதிகப் பாடல்கள் பத்தையும் பயின்று கற்று வல்லவர் உலகினில் சிறந்த அடியவராய் விளங்குவர்.

திருச்சிவபுரம் - திருவிராகம்

திருச்சிவபுரம்

திருச்சிவபுரம் - திருவிராகம்,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரிநாயகர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

கலைமலி யகலல்கு லரிவைத னுருவினன்
முலைமலி தருதிரு வுருவம துடையவன்
சிலைமலி மதில்பொதி சிவபுர நகர்தொழ
இலைநலி வினையிரு மையுமிடர் கெடுமே. **#1369**

மேகலை பொருந்திய அகன்ற அல்குலை உடைய உமையம்மை இடப்பாகமாகப் பொருந்திய திருவுருவினனும், அதனால் ஒரு கூற்றில் நகில் தோன்றும் திருவுருவை உடையவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய கருங்கற்களால் இயன்ற மதில்களால் பொதியப் பட்டுள்ள சிவபுர நகரைத் தொழுதால் நம்மை நலியும் வினைகள் இல்லை. இருமையிலும் இடர கெடும்.

திருச்சிவபுரம்

படரொளி சடையினன் விடையினன் மதிலவை
சுடரெரி கொளுவிய சிவனவ னுறைபதி
திடலிடு புனல்வயல் சிவபுர மடையநம்
இடர்கெடு முயர்கதி பெறுவது திடனே. **#1370**

ஒளி விரிந்த சடையினனும், விடை ஊர்தியனும் அசுரர்களின் மும்மதில்களை விளங்கும் எரி கொள்ளுமாறு செய் தழித்தவனுமாகிய சிவன் உறையும் பதி ஆகிய, இடையிடையே திடலைக் கொண்ட நீர் சூழ்ந்த வயல்களை உடைய சிவபுரத்தை அடைந்து தொழுதால் நம் இடர் கெடும். உயர்கதி பெறுவது உறுதி.

திருச்சிவபுரம்

வரைதிரி தரவர வகடழ லெழவரு
நுரைதரு கடல்விட நுகர்பவ னெழில்திகழ்
திரைபொரு புனலரி சிலதடை சிவபுரம்
உரைதரு மடியவ ருயர்கதி யினரே. **#1371**

மந்தரமலை மத்தாகச் சுழல அதில் கயிறாகச் சுற்றிய வாசுகி என்னும் பாம்பின் வயிற்றிலிருந்து அழலாகத் தோன்றி, நுரையுடன் வெளிப்பட்ட

விடம், கடலில் பொருந்த, ஆலகாலம் என்னும் அந்நஞ்சினை உண்டவனுடைய, அழகு விளங்கக் கரையில் மோதும் நீர் நிறைந்த அரிசிலாற்றங்கரையில் விளங்கும் சிவபுரத்தின் பெயரைக் கூறுபவர் உயர்கதிகளைப் பெறுவர்.

திருச்சிவபுரம்

துணிவுடை யவர்சுடு பொடியின ருடலடு
பிணியடை விலர்பிற வியுமற விசிறுவர்
தணிவுடை யவர்பயில் சிவபுர மருவிய
மணிமிட றனதடி யிணைதொழு மவரே. **#1372**

அடக்கமுடைய மக்கள் வாழும் சிவபுரத்தில் எழுந்தருளிய நீலமணிபோலும் மிடற்றினை உடைய சிவபிரானுடைய திருவடிகளை வணங்குவோர் துணிபுடையவராவர். திருநீறு பூசும் அடியவர் ஆவர். உடலை வருத்தும் பிணிகளை அடையார். பிறவியும் நீங்கப் பெறுவர்.

திருச்சிவபுரம்

மறையவன் மதியவன் மலையவ னிலையவன்
நிறையவ னுமையவண் மகிழ்நட நவில்பவன்
இறையவ னிமையவர் பணிகொடு சிவபுரம்
உறைவென வுடையவ னெமையுடை யவனே. **#1373**

தேவர்கள் செய்யும் பணிவிடைகளை ஏற்றுச் சிவபுரத்தைத் தனது உறைவிடமாகக் கொண்டவனும் எம்மை அடிமையாகக் கொண்டவனுமாகிய சிவபிரான் வேதங்களை அருளியவன். பிறை சூடியவன். கயிலை மலையைத் தனது இடமாகக் கொண்டவன். நிலைபேறு உடையவன். எங்கும் நிறைந்தவன். உமையம்மை கண்டு மகிழும் நடனத்தைப் புரிபவன். எல்லோர்க்கும் தலைவன்.

திருச்சிவபுரம்

முதிர்சடை யிளமதி நதிபுனல் பதிவுசெய்
ததிர்கழ லொலிசெய வருநட நவில்பவன்
எதிர்பவர் புரமெய்த விணையிலி யணைபதி
சதிர்பெறு முளமுடை யவர்சிவ புரமே. **#1374**

முதிர்ந்த சடையின்மீது இளம்பிறை, கங்கை நதி ஆகியவற்றைப் பொருந்த அணிந்து, காலில் அசையும் கழல்கள் ஒலிக்குமாறு அரிய நடனம் புரிபவனும், தன்னை எதிர்த்த அசுரர்களின் முப்புரங்களை எய்தழித்த ஒப்பற்றவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய தலம், திறமையான மனம் உடைய அடியவர் வாழும் சிவபுரமாகும்.

திருச்சிவபுரம்

வடிவுடை மலைமகள் சலமக ளுடனமர்
பொடிபடு முழையதள் பொலிதிரு வுருவினன்
செடிபடு பலிதிரி சிவனுறை சிவபுரம்
அடைதரு மடியவ ரருவினை யிலரே. **#1375**

அழகிய வடிவினைக் கொண்ட மலைமகள் நீர்மகளாகிய கங்கை ஆகியோருடன் புள்ளி பொருந்திய மானினது தோல் விளங்கும் அழகிய உருவத்தைக் கொண்டவனும், தீ நாற்றம் வீசும் மண்டையோட்டில் பிச்சையை ஏற்றுத் திரிபவனுமாகிய சிவபிரான் உறையும் சிவபுரத்தை அடையும் அடியவர் நீங்குதற்கரிய வினைகள் இலராவர்.

திருச்சிவபுரம்

கரமிரு பதுமுடி யொருபது முடையவன்
உரநெரி தரவரை யடர்வுசெய் தவனுறை
பரனென வடியவர் பணிதரு சிவபுர
நகரது புகுதனம் முயர்கதி யதுவே. **#1376**

இருபது கைகளையும், பத்துத் தலைகளையும் உடையவனாகிய இராவணனின் மார்பு நெரியுமாறு கயிலை மலையால் அடர்த்தருளிய சிவபிரான் உறைவதும், மேலான பரம் பொருள் இவனேயாவான் என அடியவர் வழிபாடு செய்வதும் ஆகிய சிவபுரத்தை அடைதல் நமக்கு உயர் கதியைத் தரும்.

திருச்சிவபுரம்

அன்றிய வுருவுகொ ளரியய னெனுமவர்
சென்றள விடலரி யவனுறை சிவபுரம்
என்றிரு பொழுதுமுன் வழிபடு மவர்துயர்
ஒன்றிலர் புகழொடு முடையரிவ் வுலகே. **#1377**

தங்கள் செயலுக்கு மாறுபட்ட தன்மையொடு கூடிய பன்றி அன்னம் ஆகிய வடிவங்களைக் கொண்ட திருமால் பிரமன் ஆகியோர் சென்று அளவிடுதற்கு அரியவனாய் ஓங்கிசிவபிரான் உறையும் சிவபுரம் என்று இருபொழுதுகளிலும் நினைத்து வழிபடும் அடியவர் ஒரு துன்பமும் இலராவர். இவ்வுலகில் புகழோடும் பொருந்தி வாழ்வர்.

திருச்சிவபுரம்

புத்தரொ டமணர்க ளறவுரை புறவுரை
வித்தக மொழிகில விடையுடை யடிகடம்
இத்தவ முயல்வுறி லிறைவன சிவபுரம்

மெய்த்தக வழிபடல் விழுமிய குணமே. #1378
புத்தர்களும் சமணர்களும் கூறுவன அறவுரைக்குப் புறம்பான உரைகளாகும், அவை அறிவுடைமைக்கு ஏற்ப மொழியாதவை. அவற்றை விடுத்து விடையூர்தியை உடையதலைவனாகிய சிவபிரானை நோக்கிச் செய்யும் இத்தவத்தைச் செய்யும் முயற்சியை மேற்கொள்வீராயின் அவ்விறைவனது சிவபுரத்தைச் சென்றடைந்து வழிபடுதல் சிறந்த குணங்களை உங்கட்குத் தரும்.

திருச்சிவபுரம்

புந்தியர் மறைநவில் புகலிமன் ஞானசம்
பந்தன தமிழ்கொடு சிவபுர நகருறை
எந்தையை யுரைசெய்த விசைமொழி பவர்வினை
சிந்திமு னுறவுயர் கதிபெறு வர்களே. #1379
அறிவுடையவர்கள் ஓதும் வேதங்களை ஓதி உணர்ந்த புகலி மன்னனாகிய ஞானசம்பந்தன் தமிழைக் கொண்டு சிவபுர நகரில் உறையும் எந்தையைப் போற்றி உரை செய்த இவ்விசை மாலையை ஓதி வழிபடுபவர் வினைகள் முற்பட்டு நீங்க உயர்கதி பெறுவார்கள்.

திருக்கழுமலம் - திருத்தாளச்சதி

சீர்காழி

திருக்கழுமலம் - திருத்தாளச்சதி,
பண் - வியாழக்குறிஞ்சி, கழுமலம் என்பது சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்ற வும்பரப்
பாலேசேர்வா யேனோர்கான் பயில்கண முனிவர்களுஞ்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின்மங்கை தன்னொடுஞ்
சேர்வார்நாணா ணீள்கயிலைத் திகழ்தரு பரிசதெலாஞ்
சந்தித்தே யிந்தப்பார் சனங்கணின்று தங்கணாற்
றாமேகாணா வாழ்வாரத் தகவுசெய்த வனதிடங்
கந்தத்தா லெண்டிக்குங் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார்பூவார் சீர்மேவுங் கழுமல வளநகரே. **#1380**

வினைவயத்தால் மண்ணுலகம் வந்து எல்லா இடங்களிலும் பொருந்தி
அவ்விடங்களே தமக்கு இருப்பிடமாய் வாழும் தேவர்களும்,
மற்றவர்களாகிய கானகங்களில் வாழும் முனிவர்களும், மனத்தால்
சிந்தித்து வழிபட்டு உய்தி பெறுமாறு, மலையரையன் மகளாகிய
பார்வதி தேவியாரோடு சேர்ந்தவராய், நாளும் நாளும் நீண்டுயர்ந்த
கயிலைமலையில் விளங்கும் திருவோலக்கச் சிறப்புக்கள்
எல்லாவற்றையும் இந்த உலகில் வாழும் மக்கள் தங்கள் கண்களால்
தாமே கண்டு வாழ்பவராகப் பெருங்கருணையோடு காட்சி நல்குபவனது
இடம் எட்டுத் திசைகளிலும் மணம் கமழ்ந்து விளங்கும் மலர்களோடு
கூடிய சந்தன மரக்காடுகள் சிறந்து வளர்ந்து செழிக்கும் கழுமல
நகராகும்.

சீர்காழி

பிச்சைக்கே யிச்சித்துப் பிசைந்தணிந்தவெண்பொடிப்
பீடார்நீடார் மாடாரும் பிறைநுத லரிவையொடும்
உச்சத்தா னச்சிப்போ றொடர்ந்தடர்ந்த வெங்கணே
றூராவூரா நீள்வீதிப் பயில்வொடு மொலிசெயிசை
வச்சத்தா னச்சுச்சேர் வடங்கொள்கொங்கை மங்கைமார்
வாராநேரே மாலாகும் வசிவல வவனதிடங்
கச்சத்தான் மெச்சிப்பூக் கலந்திலங்கு வண்டினங்
காரார்காரார் நீள்சோலைக் கழுமல வளநகரே. **#1381**

பிச்சை ஏற்பதை விரும்பி நீரில் குழைத்தணிந்த வெண்பொடியினராய்ப் பெருமை பொருந்தியவரும் புகழால் விரிந்தவருமாய், அருகில் விளங்கும் பிறை போன்ற நெற்றியினளாகிய உமையம்மையோடு உச்சிப்போதினை விரும்பித் தன்னை எதிர்ப்பவரைத் தொடர்ந்து கொல்லும் தறுகண்மையை உடைய விடையேற்றின் மீதமர்ந்து, ஊர்ந்து ஊர்ந்து நீண்ட தெருக்களில் விருப்பத்தோடு பாடுவதால், நச்சுதலுக்குரியனவும் முத்துவடங்கள் அணிந்தனவுமாகிய கொங்கைகளை உடைய மகளிர் அவ்விசையைக் கேட்டு வந்து தமக்கு முன்னே விரக மயக்கம் கொள்ளுமாறு வசீகரிக்கும் வன்மை பொருந்திய சிவபிரானது இடம். மேலைக் காற்றினால் அல்லது ஒற்றுமையோடு பூக்களைக் கலந்து விளங்கும் வண்டினங்களோடு கருமை நிறம் பொருந்திய மேகங்கள் தவழும் நீண்ட சோலைகளை உடைய கழுமல வளநகராகும்.

<u>சீர்காழி</u>

திங்கட்கே தும்பைக்கே திகழ்ந்திலங்கு மத்தையின்
சேரேசேரே நீராகச் செறிதரு சுரநதியோ
டங்கைச்சேர் வின்றிக்கே யடைந்துடைந்த வெண்டலைப்
பாலேமேலே மாலேயப் படர்வுறு மவனிறகும்
பொங்கப்பேர் நஞ்சைச்சேர் புயங்கமங்கள் கொன்றையின்
போதார்தாரே தாமேவிப் புரிதரு சடையனிடங்
கங்கைக்கே யும்பொற்பார் கலந்துவந்த பொன்னியின்
காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே. **#1382**

திங்கள், தும்பை, விளங்கித் தோன்றும் ஊமத்தமலர் ஆகியவற்றைச் சேர்த்துச் செறிந்த நீராகிய கங்கை நதி, அழகிய கையில் விளங்குவதையன்றி உடைந்த கபாலம், முடிகாண மயக்க உணர்வுடையனாய் மேலே பறந்து சென்ற பிரமனாகிய அன்னத்தின் இறகு, நஞ்சு பொங்கும் பாம்பு, கொன்றை மாலை ஆகியவற்றை அணிந்து, வளைத்துக் கட்டிய சடையை உடைய சிவபிரானது இடம்; கங்கைக்கு நிகரான அழகோடு கலந்து வந்த பொன்னி நதியின் வாய்க்கால்கள் பாய்ந்து வளஞ் சேர்க்கும் கழுமல வளநகராகும்.

<u>சீர்காழி</u>

அண்டத்தா லெண்டிக்கு மமைந்தடங்கு மண்டலத்
தாறேவேறே வானாள்வா ரவரவ ரிடமதெலாம்
மண்டிப்போய் வென்றிப்போர் மலைந்தலைந்த வும்பரு
மாறேலாதார் தாமேவும் வலிமிகு புரமெரிய
முண்டத்தே வெந்திட்டே முடிந்திடிந்த விஞ்சிசூழ்

மூவாமூதூர் மூதூரா முனிவுசெய்த வனதிடங்
கண்டிட்டே செஞ்சொற்சேர் கவின்சிறந்த மந்திரக்
காலேயோவா தார்மேவுங் கழுமல வளநகரே. **#1383**

இம்மண்ணுலகில் இருந்துகொண்டே எண் திசைகளையும் உள்ளடக்கிய அனைத்துலகங்களுக்கும் சென்று வெற்றி கொண்டு வான் உலகை ஆளும் தேவர்களையும் நெருங்கிச் சென்று வெற்றிப்போர் செய்து, அத்தேவர்களாலும் எதிர்க்க இயலாதவர்களாய் விளங்கிய அவுணர்களின் வலிமை மிக்க முப்புரங்களைத் தன்நெற்றி விழியால் வெந்து முடியுமாறு செய்து அவ் இஞ்சி சூழ்ந்த அழியாத பழமையான மூன்று ஊர்களும் முதுமை உடையவாய் அழியுமாறு சினந்த சிவபிரானது இடம், செஞ்சொற்களைக் கண்டு தேர்ந்து தொகுத்த அழகிய மந்திரங்களை மூச்சுக் காற்றாகக் கொண்டு உருவேற்றி வருவோர் வாழும் கழுமலமாகிய வளநகராகும்.

<u>சீர்காழி</u>

திக்கிற்றே வற்றற்றே திகழ்ந்திலங்கு மண்டலச்
சீறார்வீறார் போரார்தா ரகனுட லவனெதிரே
புக்கிட்டே வெட்டிட்டே புகைந்தெழுந்த சண்டத்தீப்
போலேபூநீர் தீகான்மீப் புணர்தரு முயிர்கடிறஞ்
சொக்கத்தே நிர்த்தத்தே தொடர்ந்தமங்கை செங்கதத்
தோடேயாமே மாலோகத் துயர்களை பவனதிடங்
கைக்கப்பேர் யுக்கத்தே கனன்றுமிண்டு தண்டலைக்
காடேயோடா வூரேசேர் கழுமல வளநகரே. **#1384**

எட்டுத் திசைகளுக்கும் காவலர்களாகிய தெய்வங்கள் அங்கங்கே இருந்து காவல் செய்து விளங்கும் இம் மண்ணுலகைச் சீறி அழித்தற்கு வந்த வலிய போர்வல்ல தாருகன் உடலை அவன் எதிரிலேயே புகுந்து வெட்டி வீழ்த்தி, புதைந்தெழுந்து வந்த ஊழித் தீப்போலத் தோன்றி மண் நீர் தீ கால் விண் ஆகிய ஐம்பூத வடிவாய் விளங்கும் இவ்வுலகில் வாழும் உயிர்களை அழிக்கச் சிவந்த கோபத்தோடு சொக்கநிருத்தத்தில் நடனமாடி வந்த காளியின் கோபத்தை அவளோடு எதிர் நடனம் ஆடி வென்று பெரிதான இவ்வுலக உயிர்களின் துயரைக் களைந்தவன் ஆகிய சிவபிரானது இடம் பலரும் வெறுக்கக் கனன்று வந்த பேரூழிக் காலத்தும் செறிந்த சோலைகளாகிய காடுகளோடு அழியாத ஊராக விளங்கும் கழுமல வளநகராகும்.

<u>சீர்காழி</u>

செற்றிட்டே வெற்றிச்சேர் திகழ்ந்ததும்பி மொய்ம்புறுஞ்
சேரேவாரா நீள்கோதைத் தெரியிழை பிடியதுவாய்

ஒற்றைச்சேர் முற்றற்கொம் புடைத்தடக்கை முக்கண்மிக்
கோவாதேபாய் மாதானத் துறுபுகர் முகவிறையைப்
பெற்றிட்டே மற்றிப்பார் பெருத்துமிக்க துக்கமும்
பேராநோய்தா மேயாமைப் பிரிவுசெய்த வனதிடங்
கற்றிட்டே யெட்டெட்டுக் கலைத்துறைக் கரைச்செலக்
காணாதாரே சேராமெய்க் கழுமல வளநகரே **#1385**

சலந்தரன், திரிபுரத்தசுரர் முதலானவர்களைக் கொன்று வெற்றி பெற்று விளங்கும் வலிமை பொருந்திய ஆண் யானை வடிவு கொண்ட தன்னைச் சேர்தற் பொருட்டு வரும் நீண்ட மலர்மாலை அணிந்த உமையம்மை பெண் யானை வடிவு கொண்டு வந்து கூட முற்றிய ஒரு கொம்பையும் நீண்ட கையையும் மூன்று கண்களையும், இடைவிடாது மிகுந்து பொழியும் மதநீரையும் புள்ளிகளோடு கூடிய முகத்தையும் உடைய விநாயகனைப் பெற்றெடுத்து இவ்வுலகில் வாழும் மக்கட்குப் பெரிய துன்பங்களும் நோய்களும் வந்து பொருந்தாதவாறு செய்து காத்தருளிய சிவபிரானது இடம், அறுபத்து நான்கு கலைகளையும் முற்றக் கற்றுக் கரை கண்டு அவற்றின் வழி ஒழுகுவோர் சேர்ந்துறைவதும், அவ்வாறு ஒழுகாதார் அடைய முடியாததுமாகிய கழுமல வளநகராகும்.

சீர்காழி

பத்திப்பேர் வித்திட்டே பரந்தவைம் புலன்கள்வாய்ப்
பாலேபோகா மேகாவாப் பகையறும் வகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக் குணங்கள்வாய்
மூடாவூடா நாலந்தக் கரணமு மொருநெறியாய்ச்
சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தானாகச் செயுமவ னுறையுமிடங்
கத்திட்டோர் சட்டங்கங் கலந்திலங்கு நற்பொருள்
காலேயோவா தார்மேவுங் கழுமல வளநகரே. **#1386**

அன்பாகிய விதையை ஊன்றி, பரந்துபட்ட சுவை முதலிய ஐம்புலன்கள் வழி ஒழுகாது தம்மைக் காத்துக் காமம் முதலிய பகைகளைக் கடிந்து முத்திக்கு இடையூறாகும் முக்குணங்களின்வழி ஒழுகாது அந்தக்கரணங்கள் நான்கையும் ஒரு நெறிப்படுத்திச் சிந்தனையில் செலுத்தி விளங்கும், மெய்ப்பரம்பொருளாகிய தன்னையே எண்ணுபவர்களைத் தானாகச் செய்யும் சிவபெருமான் உறையும் இடம், ஆறு அங்கங்களையும் கற்றுணர்ந்தோர் தம்மோடு கலந்து விளங்கும் சிவபரம் பொருளின் திருவடிகளை இடைவிடாது தியானித்து வாழும் கழுமல வளநகராகும்.

சீர்காழி

செம்பைச்சே ரிஞ்சிச்சூழ் செறிந்திலங்கு பைம்பொழிற்
சேரேவாரா வாரீசத் திரையெறி நகரிறைவன்
இம்பர்க்கே தஞ்செய்திட் டிருந்தரன் பயின்றவெற்
பேரார்பூநே ரோர்பாதத் தெழில்விர லவணிறுவிட்
டம்பொற்பூண் வென்றித்தோ ளழிந்துவந்த னஞ்செய்தாற்
காரார்கூர்வாள் வாணாளன் றருள்புரி பவனதிடங்
கம்பத்தார் தும்பித்திண் கவுட்சொரிந்த மும்மதக்
காரார்சேறார் மாவீதிக் கழுமல வளநகரே. **#1387**

செம்பினால் இயன்ற மதில்களால் சூழப்பெற்றுச் செறிந்து விளங்குவதும், பசுமையான பொழில்கள் சேர்ந்ததும், நீண்ட கடல்களின் அலைகளால் மோதப் பெறுவதுமாகிய இலங்காபுரி நகருக்கு இறைவனாகிய இராவணன், இவ்வுலக மக்கட்குத் துன்பங்கள் செய்து வாழ்ந்ததோடு சிவபிரான் உறையும் கயிலை மலையைப் பெயர்க்க முற்பட்டபோது அழகிய மலர் போன்ற ஓர் திருவடி விரல் ஒன்றை ஊன்றி அழகிய பொன்னணிகலன்கள் பூண்ட அவனது வெற்றி நிறைந்த தோள் வலிமையை அழித்து அவன் பிழை உணர்ந்து வந்தனம் செய்த அளவில் அவனுக்கு அரிய கூரிய வாளையும் நீண்ட வாழ்நாளையும் அப்பொழுதே அருள் புரிந்தருளிய சிவபெருமானது இடம்; கம்பங்களில் கட்டிய யானைகளின் வலி கன்னங்கள் முதலியன பொழிந்த மும்மதங்களால் நிலம் கரிய சேறாகும் வீதிகளை உடைய கழுமலநகராகும்.

சீர்காழி

பன்றிக்கோ லங்கொண்டிப் படித்தடம் பயின்றிடப்
பானாமாறா னாமேயப் பறவையி னுருவுகொள
ஒன்றிட்டே யம்புச்சே ருயர்ந்தபங் கயத்தவ
னோதானோதா னஃதுணரா துருவின தடிமுடியுஞ்
சென்றிட்டே வந்திப்பத் திருக்களங்கொள் பைங்கணின்
றேசால்வேறோ ராகாரந் தெரிவுசெய் தவனதிடங்
கன்றுக்கே முன்றிற்கே கலந்திலந் நிறைக்கவுங்
காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே. **#1388**

திருமால் பன்றி உருவம் எடுத்து இவ்வுலகைப் பிளந்து சென்று பாதாளம் வரைத் தேடியும், நீரில் தோன்றிய தாமரை மலரில் உறையும் நான்முகன் வேதங்களை ஓதுபவனாக இருந்தும் அதன் உண்மைப் பொருளை உணராது அன்னப்பறவை வடிவம் எடுத்து வான வெளியில் பறந்து சென்று தேடியும் தம் எதிரே தோன்றிய வடிவினது அடிமுடிகளைக்

காணாது அயர்த்துச் சென்று வழிபட அவர்களின் பசுமையான கண்களுக்கு அழகிய நீலகண்டத்தோடு தனது வல்லமையால் வேறோர் வடிவம் தெரியச் செய்தவனது இடம் ஆன் கன்றுகள் முன்றிலில் நிறைந்து கலந்து நின்று இல்லத்தை நிறைக்கவும் வாய்க்கால்கள் வந்து மேல் ஏறிப் பாயவும் வளத்தால் நிறைந்து விளங்கும் கழுமல வளநகராகும்.

சீர்காழி

தட்டிட்டே முட்டிக்கைத் தடுக்கிடுக்கி நின்றுணாத்
தாமேபேணா தேநாளுஞ் சமணொடு உழல்பவரும்
இட்டத்தா லத்தந்தா னிதன்றதென்று நின்றவர்க்
கேயாமேவா யேதுச்சொல் லிலைமலி மருதம்பூப்
புட்டத்தே யட்டிட்டுப் புதைக்குமெய்க்கொள் புத்தரும்
போல்வார்தாமோ ராமேபோய்ப் புணர்வுசெய் தவனதிடங்
கட்டிக்கால் வெட்டித்தீங் கரும்புதந்த பைம்புனற்
காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே. **#1389**

தட்டைக் கையில் ஏந்தி வளைந்த கையில் தடுக்கை இடுக்கி நின்று உண்டு ஆடைகளால் தம்மைப் பேணாது நாள்தோறும் வருந்தித் திரியும் சமணர்களும், தம் விருப்பப்படி கேட்பவர்க்குத் தெளவு ஏற்படாதவாறு பொருள் இது அன்று அதுதான் என்று வாய்க்கு வந்தபடி காரணம் கூறுபவரும், இலைகள் நெருங்கிய மருதமரத்தின் பூவை அரைத்துப் பின்புறத்தே, பூசிச் சாயமூட்டிய ஆடையைத் தம் உடலின் பின்பாகத்தே சுற்றிக்கொண்டு உடலை மறைப்போரும் ஆகிய புத்தர்களும் போல்பவர் கண்டறியாதவாறு சென்று எழுந்தருளியுள்ள சிவபிரானது இடம் வெல்லக்கட்டிகளைத் தரும் இனிய கரும்பை வெட்டியதால் அக்கரும்பு தந்த இனிய சாறு வாய்க்கால் வழியே வந்து மேல் ஏறிப் பாயும் வளமுடைய கழுமல வளநகராகும்.

சீர்காழி

கஞ்சத்தே னுண்டிட்டே களித்துவண்டு சண்பகக்
கானேதேனே போராருங் கழுமல நகரிறையைத்
தஞ்சைச்சார் சண்பைக்கோன் சமைத்தநற் கலைத்துறை
தாமேபோல்வார் தேனேரார் தமிழ்விர கனமொழிகள்
எஞ்சத்தேய் வின்றிக்கே யிமைத்திசைத்த மைத்தகொண்
டேழேயேழே நாலேமூன் றியலிசை யிசையியல்பா
வஞ்சத்தேய் வின்றிக்கே மனங்கொளப் பயிற்றுவோர்
மார்பேசேர்வாள் வானோர்சீர் மதிநுதன் மடவரலே. **#1390**

தாமரை மலரிலுள்ள தேனைக் குடித்துக் களித்த வண்டுகள் சண்பக

மரச்சோலைகளில் உள்ள தேன் வண்டுகளோடு போரிடும் கழுமல வளநகர் இறைவனைத் தஞ்சமாகச் சார்ந்துள்ள சண்பை நகர்த் தலைவனும் தமிழ் விரகனுமாகிய ஞானசம்பந்தன் குறைவின்றிப் பாடியமைத்த தேனுக்கு நிகரான இப்பதிகப் பாடல்களை நல்ல கலைகளில் துறைபோய்த் தமக்குத் தாமே நிகராய் இருபத்தொரு பண்முறையினால் இயல்பாக வஞ்சனையின்றி மனம் பொருந்தப் பாடுபவர்களின் மார்பினில் தேவர்களால் போற்றப் பெறும் சிறப்புமிக்க பிறை போன்ற நெற்றியினை உடைய திருமகள் சேர்வாள்.

சீகாழி - திருஏகபாதம்

சீர்காழி

சீகாழி - திருஏகபாதம்,
பண் - வியாழக்குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான். **#1391**

ஞானாகாசமாகிய பராசத்தியான பரிபூரணத்தை மிகுதியாக வியந்து அந்தப் பராசத்திக்கு அதீதமாகிய சுகமே வடிவாய் முதல் நடு இறுதி காணப்படாத வஸ்து எந்தப் பெரியோன். மேல்நிலமாகிய ஆகாசத்தின்கண்ணே யோடா நின்ற கங்காதேவியை விரும்பித் திருமுடியிலே வைத்தவன், எம்மை நீங்காத நிலைமையையுடைய எமது உயிர். பிரமரூபத்திலே எண்ணப்பட்ட என்னை முத்தியிலே விடுகைக்கு அமையாத விருப்பமுள்ளவனாய் என்னை ஒக்கவந்தவன். பிரமபுரம் என்கின்ற சீகாழிப்பதியிலே வீற்றிராநின்ற கர்த்தாவானவன் என்னுடைய சுவாமி. பெரியோனும் எனக்கு உயிரானவனும் என்னை யொக்கவந்தவனும் சீகாழிப்பதியில் வீற்றிருக்கும் கடவுள் எனக் கூட்டிப் பொருள் கொள்க.

சீர்காழி

விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன். **#1392**

அஷ்டகுல பர்வதங்களும் ஒலிசிறந்த தரிசு மணியாகவும், அகில லோகங்களையும் உள்ளே அகப்படுத்தும் தன்மையவாயும், பெரிதாயும் உள்ள திருச்சிலம்பினைத் தரித்துள்ளவன். நூபுரம் எனற்பாலது நுபுரம் எனக் குறுகிநின்றது. விஷ்ணுவின் புறனுரையாகிய சிவதூஷணத்தை அரசமரத்தினீழலில் அவனுடன் இருந்து விரும்பியுள்ள முப்புரங்களைச் சங்கரித் துள்ளவன். அண்ணி எனற்பாலது அணி என இடைக்குறையாய் நின்றது. தேவர்கள் கற்பகப் பூஞ்சோலை மலர்களால் அர்ச்சிக்கப் படுகின்ற தேவேந்திரனுடைய. எணு எனற்பாலது ஏணு என நீண்டது.

புரந்தரன் எனற்பாலது புரத்தரன் என வலித்து நின்றது. இதழ்கள் விண்டு மலர்கின்ற சோலை சூழ்ந்த சீகாழிப்பதிக்குக் கர்த்தாவாயுள்ளவன். தேவேந்திரன் மூங்கில் வழியாகவந்து பூசித்ததால் வேணுபுரம் என்னும் பெயர்பெற்றது. சிலம்பினைத் தரித்துள்ளவரும், முப்புரத்தை எரித்தவரும், தேவேந்திரனுடைய சோலைசூழ்ந்த வேணுபுரத்தில் வீற்றிருக்கும் இறைவர் எனக் கூட்டி உரைத்துக் கொள்க.

சீர்காழி

புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே. **#1393**

இதயகமலத்திலிருந்து இடையறாத ஆனந்தம் பொழியப்பட்டு என்னை மலபோதத்தில் தள்ளாமல் எனக்கு அடைக்கலப் பொருளாயுள்ளவன். ஆன்மாக்களுக்கு இரக்ஷயாக முண்டம்போலிருந்த திருநீற்றை அணியப்பட்ட மிக்க கருணையானவனே யான்பாடும் பாடலை உவந்துள்ளவன். புலிக்காலும் புலிக்கையும் பெற்றுள்ள வியாக்கிரபாத முனிவருக்கு ஞானானந்தமாகிய நாடகத்தைக் கனகசபையிலே ஆடல்செய்யும் பரத வித்தையைக் கற்றுள்ளான். வியம் எனற்பாலது விய எனக் கடைகுறைந்து நின்றது. கீழ்ச்சொன்ன லீலைகளெல்லாம் செய்கின்ற சிவன் தனது இச்சையால் பொருந்தியிருக்கும் ஊர் பிரமா பூசித்த புகலி என்னும் திருப்பதி.

சீர்காழி

விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன். **#1394**

கன்று குணிலாக எறிந்து விளவின் கனியைக் கொண்ட நாரணனைப் பிரகாசஞ்செய்யப்பட்டு நின்மலமாயிருந்துள்ள தனது பெரிய திருமேனியிலே ஒன்று பாதியாக வைத்துள்ளான் என்க. தீ எனற்பாலது தி எனக் குறுகிநின்றது. கழுதரு எனற்பாலது கழ்தரு என நின்றது. மாறுபாடாய்க் கதறப்பட்ட புத்தனது தலையிலே அக்கினியைச் சொரிந்து மிக்க பயத்தோடும் விழுகின்ற இடியை விழும்படி ஏவிப் புத்தரை வேரறுத்தானும் தானேயன்றியானன்றாகும். தீ எனற்பாலது தி எனவும், காழ்தரு எனற்பாலது கழ்தரு எனவும், ஏங்கு எனற்பாலது எங்கு எனவும் குறுகிநின்றன. தனது பரிபூரணத்திலே தன்னையிழந்து

இரண்டாய் விசுவமுருகித் தான் விஷமாகத் தூஷணப்பட்டு நிற்கின்ற எனக்கும் குருமூர்த்தியாய் வந்து என் பிறவியை ஒழித்துத் தனது பேரின்பமாகிய பரிபூரணத்திலே எனது அடிமை குலையாமல் இரண்டறவைத்தவன். கீழ்ச்சொல்லிப் போந்த செய்திகளெல்லாமுடையன் எத்தன்மையனோ என்னில் எங்கும் பிரகாசியாநின்ற கீர்த்தியினால் சிறக்கப்பட்டுள்ள இயமனால் பூசிக்கப்பட்ட வெங்குரு என்னும் திருப்பதியை விரும்பியுள்ளான். வெங்குரு என்பதும் சீகாழி.

சீர்காழி

சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன். **#1395**

சுடுநிலமாகிய மயானத்தை நடமாடும் இடமாகக் கொண்டும், முப்புரங்களையும் நகைசெய்து சுடப்பட்ட வெற்றிப் போரையுடைய தும்பைமாலைக் கடவுள். சூடார் எனற்பாலது சுடர் எனவும், ஈமம் எனற்பாலது இம் எனவும் குறுகி நின்றன. துரோணம் எனற்பாலது தோணி என மருவிற்று. என் உச்சிக்குச் சூடாமணியுமாய் என்மேல்வைத்த மாலினையுடையனுமாய் யாகத்தின் கண் வந்த யானையை வடிவொழித்துப் போர்க்கும் தன்மையை உடையவன். சூடாமணி எனற்பாலது சுடர்மணி எனவும், மாலி எனற்பாலது மாளி எனவும், தோல் எனற்பாலது தோள் எனவும் நின்றன. மாலையுடையவன் - மாலி. தோல் - யானை. சூரியனுடைய களங்கத்தைக் கழுவப்பட்ட சமுத்திரம் போன்ற செனனக்கடலிலே கீழ்ப்பட்டழுந்திக் கெடாநின்ற ஆன்மாக்களுக்குக் கைப்பற்றிக் கரையேறும் தெப்பமாகப் பிரணவம் என்கிற மந்திரத்தை அவரது செவியின் கண்ணே உண்டாக்கா நின்றவன். மண்ணி என்பது மணி என இடை குறைந்து நின்றது. புரந்தவன் எனற்பாலது புரத்தவன் என வலித்தல் விகாரமாயிற்று. விளக்கத்தையுடைய நவரத்தினங்களாலே அலங்கரிக்கப்பட்ட மாளிகை சூழ்ந்த திருத்தோணிபுரத்திலே வீற்றிருக்கும் சிவன் இத்தன்மையன்.

சீர்காழி

பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி. **#1396**

பூமியிலுள்ளாரையும் தேவகணங்களாய உள்ளாரையும் தனது நாபிக் கமலத்திலே தோற்றுவிக்கப்பட்ட பிர்மா விஷ்ணுவினது போதத்திலே கண்ணாடியும் நிழலும் போலப் பிரதிவிம்பியா நின்றவன். ஆடி என்பது அடி எனக் குறுகிநின்றது. மலத்திரயங்களைக் கழுவப்பட்ட சிவஞானிகள் கூட்டம் பொலிவு பெறத்தக்க வனப்பையுடைய ஆனந்தநிருத்தம் செய்தருள்பவன். சர்வாங்கமும் உத்தூளனம் பண்ணின மார்பை உடைய சிவஞானிகளும், புண்ணியபாவக்கட்டையரிந்து விசுவத்தைத் தள்ளப்பட்ட சிறப்பையுடையருமாயிரா நின்றவர்களுக்கு மிகுதியான மூலமாயுள்ளவன். உந்தராய் என்பது, ஊந்தராயென நீண்டது. மறுவிலா மறையோர் வாழ்கின்ற திருப்பூந்தராய் என்னும் திருப்பதியின்கண் வீற்றிராநின்ற சிவனது அழகிய திருவடித் தாமரை என்னை ஆண்டிடுவதாக, பூந்தராய் என்பது சீகாழி.

சீர்காழி

செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில். **#1397**

தனது திருவடிப்பிரசாதமில்லாதார்க்கு மல மயக்கத்தின் மேலீட்டைக்கெடாத சிவனுக்கு விசுவாதீதமான இருப்பிடம் எனது சைதன்னியமே. சத்தாதிகளஞ்சும் சேரப்பட்ட உலகத்தைத் தன் வாயினிடமாகவுடைய விஷ்ணுவின் களேபரத்தைத் திருமேனியிலே தரித்துள்ளான். சேர் எனற்பாலது செர் எனவும், சீர் எனற்பாலது சிர் எனவும் குறுகிநின்றன. ஆத்தும விகாரமாகிய கர்மத்தினாலே இந்திரியங்களுக்கு விடயமாகிய சுவர்க்கத்திலிச்சை யுடையானுக்கு அந்தச் சுவர்க்கம் மெய்யாக விசேடித்திருக்குமன்றே. இந்திரிய வன்மையாகிய யுத்தத்துக்கு இளையாமல் அந்த இந்திரியமாகிய பாணங்கள் தனது அறிவுக்குள் தைக்கப்படான். ஒருகால் சிரபுரம் என்று சொன்ன விடத்துப் பஞ்சேந்திரியங்களையும் அவியப்பொருது சிவனுடைய திருவடியிலே அடையாநிற்பன் என்பதாம்.

சீர்காழி

பொன்னடி மாதர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதர் சேர்புற வத்தவன். **#1398**

பொலிவினையுடைய மாயாநிருத்தம் புரிகின்ற பத்திரகாளியும் பூதபசாசும் பொருந்திய மயானமே திருக்கோயிலாக உள்ளவன்.

சுத்தமான வழியைத் தரப்பட்ட மகாரிஷிகள் திரண்டு தவம் பண்ணாநிற்கும் ஆரணியத்தில் தனித்துத் தவம் புரியாநிற்கும் தபோதனன். அழகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள இலக்குமியையொத்த இருடிபத்தினிகள் பிச்சையிடவந்து அணையுமிடத்துத் தனக்குள்ள நிருவாணத்தை அவர்களுக்குக் கொடுத்தவன். பொன்னாற் செய்யப்பட்ட பாடக நூபுராதிகளைப் பாதங்களிலே யணிந்துள்ள கன்னியர் திரண்டு விளையாடும் புறவம் என்னும் திருப்பதியில் வாழ்கின்ற சிவன். புறவம் என்பதும் சீகாழி.

சீர்காழி

தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான். **#1399**

ஆத்துமாக்களிடத்துக் கருணைபிறக்கும் இடமாயுள்ளவன். அக்கினி வீசப்பட்டுத் திருவரையிலே அழுந்தச் சாத்தியுள்ள விரிந்த படத்தினையுடைய பாம்பை அரைஞாணாகவுடையான். எல்லாம் இறந்து அந்தமாயுள்ள சிவஞானிகள் குழாத்துக்கு நேரிதாகிய சூனியமாயுள்ள பொருளைத் தோற்றுவித்துள்ளானுமாய்ப் புலியினது ஊன்பொருந்திய தோலாடையைத் திருவரையிலே விரித்துடுத்தவன். நேரி எனற்பாலது நெரி எனக் குறுகிநின்றது. தரக்கு எனற்பாலது தர எனக் குறைந்தது. தூசு எனற்பாலது துசு எனக் குறுகிநின்றது. பாயான் எனற்பாலது பையானெனக்குறுகிப் போலியாயிற்று. ஆத்தும விகாரமான அகங்காரம் போம்படி என்னறிவில் எதிர்ப்பட்டவன் கயிலாயமலையைத் திருவுள்ளத்தடைத்து எழுந்தருளியிருந்து ஆத்துமாக்களை இரக்ஷயாநின்ற விசேஷத்தையுடையவனென்றேத்தும் சட்சமயங்களுக்கும் அவரவர்கொண்ட பயனாயுள்ளவன். நேரி எனற்பாலது நெரி எனக் குறுகிநின்றது. பத்துத்தலையுள்ள இராவணன் முரியும்படி திருவிரலாலடர்த்தவன் யாரென்னில், சண்பை என்னும் திருப்பதியிலே வீற்றிருக்கும் கடவுள்.

சீர்காழி

காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே. **#1400**

நிலைபெற்றுநின்ற நின்மலமாகிய சித்தத்தையுடைய பத்தரிடத்துச் சத்தியப்பொருள் விளையும்பொருட்டு ஞானநாட்டத்திலே அவர்களைக்

கடாக்ஷிக்கின்றவன். திருமிடற்றில் களங்கமுடையானது கருணையை நினைத்து ஞானநாட்டத்தையுடைய சிவஞானிகள் சிவனுக்கிச்சை தன்னடியார்க்கே ஆங்காரத்தைத் தடுக்குமதே பணியெனத் தமதறிவிலே கருதாநிற்பர். விஷ்ணுவும் பிர்மாவும், திருமுடியும் திருவடியும் காணும் பொருட்டு வராகமும் அன்னமுமாகக் கருதி வடிவுகொண்டார். ஐயோ! உள்ளபடி கருதிச் சிவனைப்பெறாமல் அவர்கருதியதேது எனில், அன்னியமே கண்டனர். கண் எனற்பாலது காண் என நீண்டது. என்பொருட்டால் காழி என்னும் திருப்பதியைப் படைத்தானை, என் ஐயனை, எனது ஆசையை, கீழ்ச் சொன்ன இருவர்களும் தாங்கள் தேடும் தேட்டப் பிரிவில் மயக்கத்திலே தேட்டமழித்துத் தோன்றா நிற்பவனைத் தேடி மறத்தலொழிந்து எவ்வாறு காண்பர்.

<u>சீர்காழி</u>

கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே. **#1401**

ஆணவமலத்தோடு கூடியுள்ள மயக்கத்துடன் மாறுபட்டோர்கள் மாயாதனுவாலும் மந்திரதனுவாலும் மறைக்கப்படார்கள். மூடார் எனற்பாலது மூடர் எனக் குறுகிநின்றது. புலால் நாற்றத்தைப் பொருந்திய அழுக்குமெய்யைப் பொய்யென்று மனங்கொள்ளமாட்டாமல் அதுவே தமது நிலைபெற்றவுருவாக நினைத்துத் துவராடையாலே உடம்பைச் சூழப்பட்ட பௌத்தரும், பேதைத் தன்மையையுடைய மச்சியகந்தியினுடைய நலத்தைக் கொள்ளும் பொருட்டு அவளது சரீரம் எல்லாம் சுகந்தமொய்க்கும்படி அவளுடனே பொருந்திய பராசரனாகிய மகாவிருடிவந்து சிவனைப் பொருந்தி அருச்சிக்கப்படுதலால். பராசரமுனிவரால் பூசிக்கப்பட்டு அவன்பெயரால் பெயர்பெற்றுள்ள கொச்சை நகரம் என்னும் திருப்பதியிலே எழுந்தருளியிராநின்ற தலைமையோனை உள்ளபடி தரிசனம் பண்ணி வழிபடமாட்டார்களது நினைவு எவ்வாறிருக்கும் என்னில், மழைக்காலிருளும் வெளிதென இருண்ட மயக்கத்தையுடைய ஆணவ போதமாயிருக்கும்.

<u>சீர்காழி</u>

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை. **#1402**

மிகுதிப்பட்ட தோஷமாயுள்ள சுக்கில சுரோணிதமாகிய இருவகை நீரின்கண்ணே சிரமுதலாகிய அவயவமாகத் தோன்றிப் பூமியின்கண் செனித்துப் பரிணமித்துப் பின்பு தேய்ந்து மரிக்கின்ற சென்மத்தையும் பரிணமித்தல் - வேறுபடுதல். கீழ்ச் சொல்லிப்போந்த சென்மத்தையும் கழுவி மலத்திரயங்களையும் கழுவாநிற்கும். தனது பாதியாகிய திருவருளினாலே என்னை அகப்படுத்திக் கவளிகரித்துக் கொண்டு அந்த அருள்வழியாக எனதிடத்தில் இடையறாமல் வாழும் தன்னை எனக்குத்தந்த அடிமை குலையாமல் எக்கண்ணும் விட்டு விளங்கும் கர்த்தர். பாதி எனற்பாலது பதி எனக் குறுகி நின்றது. மாயா மயக்கத்தின்கண்ணே மயங்கி பெத்த முத்தி இரண்டும் தெரியாமல் திண்டாடப்பட்ட மலபோதர்க்கு அமுதம் போன்று அரிதாயுள்ளவனுமாய் விட்டு விளங்கப்படாநின்ற பொன்னுருவையுடையவனாய்ச் சிருஷ்டிக்குக் கர்த்தாவாகிய பிரமனது சிரக்கபாலத்திலே பிச்சைகொண்டு நுகரும் கருணை யாளனே! திருக்கழுமலம் என்னும் மூவாப் பழங்கிழமைப் பன்னிரு பெயர்பெற்ற அனாதிமூலமாகிய பதியிடத்துக் கவுணிய கோத்திரத்திலே தோன்றப்பட்ட யான் நிவேதிக்கப்படும் காட்டாகிய இப்பாடலைக் கீழ்ச்சொன்னவற்றிலும் மலத்திரயங்களிலும் அழுந்தாநின்ற ஒருத்தராகிலும் பலராகிலும் உரை செய்வார் உயர்ந்தாரேயாதலால் இப்பாடலை இடைவிடாமல் உரைசெய்வீராக. காட்டு என்பது கட்டு எனக் குறுகிநின்றது.

திருவெழுகூற்றிருக்கை

திருவெழுகூற்றிருக்கை

திருவெழுகூற்றிருக்கை,
பண் - வியாழக்குறிஞ்சி

ஓருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை
ஓரா னீழ லொண்கழ லிரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்ட மூன்றாகக் கோட்டினை
இருநதி யரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்
நாற்கான் மான்மறி யைந்தலை யரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு விருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானில மஞ்சக்
கொன்று தலத்துற வவுணரை யறுத்தனை
ஐம்புல னாலா மந்தக் கரணம்
முக்குண மிருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை யோதி யைவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேன் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா விருநிதி
வாய்ந்த பூந்தரா யேய்ந்தனை
வரபுர மொன்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த விருதிற லரக்கன்

விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோ னான்முக னறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை
ஐயுறு மமணரு மறுவகைத் தேரரும்
ஊழியு முணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமு மைந்தமர் கல்வியும்
மறைமுத னான்கும்
மூன்று காலமுந் தோன்ற நின்றனை
இருமையி னொருமையு மொருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணிய னறியும்
அனைய தன்மையை யாதலி னின்னை
நினைய வல்லவ ரில்லைநீ ணிலத்தே. **#1403**

சொரூப நிலையில் விளங்கும் பரசிவம் ஆகிய நீ உனது இச்சையால் ஐந்தொழில்களை நிகழ்த்த வேண்டி எடுத்துக் கொண்ட ஓருருவமாகிய திருமேனியை உடையை ஆயினை, உன் சக்தியைக் கொண்டு அவ் ஐந்தொழில்களை நடத்தும் திருவுளக் குறிப்போடு சத்தி சிவம் என்னும் இரு உருவாயினை, விண் முதலிய பூதங்களையும் சந்திர சூரியர்களையும் தேவர்கள் மக்கள் முதலியோரையும் படைத்துக் காத்து அழிக்க அயன் அரி அரன் என்னும் மும்மூர்த்திகள் ஆயினை, பிரமன் திருமால் ஆகிய இருவரையும் வலத்திலும் இடத்திலும் அடக்கி ஏக மூர்த்தியாக நின்றாய், ஒப்பற்ற கல்லால மர நிழலில் உனது இரண்டு திருவடிகளை முப்பொழுதும் ஏத்திய சனகர், சனந்தனர் முதலிய நால்வர்க்கு ஒளி நெறியைக் காட்டினாய். சூரியன் சந்திரன் அக்கினி ஆகியோரை மூன்று கண்களாகக் கொண்டு உலகை விழுங்கிய பேரிருளை ஓட்டினாய். கங்கையையும் பாம்பையும் பிறைமதியையும் முடிமிசைச் சூடினாய், ஒரு தாளையும் ஈருகின்ற கூர்மையையும் முத்தலைகளையும் உடைய சூலத்தையும் நான்கு கால்களையும் உடைய மான் கன்று, ஐந்து தலை அரவம் ஆகியவற்றையும் ஏந்தினாய், சினந்து வந்த, தொங்கும் வாயையும் இரு கோடுகளையும் கொண்ட ஒப்பற்ற யானையை அதன் வலி குன்றுமாறு அழித்து அதன் தோலை உரித்துப் போர்த்தாய்.

திருக்கழுமலம்

சீர்காழி

திருக்கழுமலம்,
பண் - மேகராகக்குறிஞ்சி, கழுமலம் என்பது சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

சேவுயருந் திண்கொடியான் றிருவடியே
சரணென்று சிறந்தவன்பால்
நாவியலு மங்கையொடு நான்முகன்றான்
வழிபட்ட நலங்கொள்கோயில்
வாவிதொறும் வண்கமல முகங்காட்டச்
செங்குமுதம் வாய்கள்காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டுங் கழுமலமே. **#1404**

விடை வடிவம் எழுதி உயர்த்திய வலிமையான கொடியை உடைய சிவபிரானின் திருவடிகளே நமக்குச் சரண் என்று நாவின்கண் பொருந்திய கலைமகளோடு வந்து நான்முகன் சிறந்த அன்போடு வழிபட்ட அழகிய கோயில்; வாவிகள்தோறும் மலரும் வளவிய தாமரை மலர்கள் மகளிர்தம் முகங்களையும் செங்கழுநீர் மலர்கள் வாய்களையும், காவி மலர்கள், கருங்குவளை மலர்கள், கரிய நெய்தல் மலர்கள் ஆகியன கண்களையும் போலத் தோன்றி மலரும் கழுமலத்தின்கண் விளங்குவதாகும்.

சீர்காழி

பெருந்தடங்கண் செந்துவர்வாய்ப் பீடுடைய
மலைச்செல்வி பிரியாமேனி
அருந்தகைய சுண்ணவெண்ணீ றலங்கரித்தா
னமரர்தொழ வமருங்கோயில்
தருந்தடக்கை முத்தழலோர் மனைகள்தொறு
மிறைவனது தன்மைபாடிக்
கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப்
பாட்டயருங் கழுமலமே. **#1405**

அகன்ற விழிகளையும், பவளம் போலச் சிவந்த வாயையும் உடைய பெருமை மிக்க மலைமகளாகிய உமையம்மை பிரியாத திருமேனியில், அருமையான திருவெண்ணீற்றுப் பொடியை அழகுறப் பூசிய சிவபிரான்

தேவர்கள் தன்னை வணங்க எழுந்தருளி யுள்ள திருக்கோயில், வள்ளன்மையோடு விளங்கும் நீண்ட கைகளை உடைய முத்தீ வேட்கும் அந்தணர்களின் வீடுகள்தோறும் கரியவான பெரிய கண்களை உடைய மகளிர் இறைவனுடைய இயல்புகளைக் கூறிக்கொண்டு கழற்சிக்காய் அம்மானை பந்து ஆகியன ஆடி மகிழும் கழுமல நகரின் கண் உள்ளது.

சீர்காழி

அலங்கன்மலி வானவருந் தானவரு
மலைகடலைக் கடையப்பூதங்
கலங்கவெழு கடுவிடமுண் டிருண்டமணி
கண்டத்தோன் கருதுங்கோயில்
விலங்கலமர் புயன்மறந்து மீன்சனிபுக்
கூன்சலிக்குங் காலத்தானுங்
கலங்கலிலா மனப்பெருவண் கையுடைய
மெய்யர்வாழ் கழுமலமே. **#1406**

மலர்மாலை அணிந்த தேவர்களும் அசுரர்களும் கூடி அலைகள் பொருந்திய திருப்பாற்கடலைக் கடைந்தபோது பூதங்களும் கலங்குமாறு எழுந்த கொடிய நஞ்சை, அவர்களைக் காத்தற்பொருட்டுத் தான் உண்டு. கரிய மணி போன்ற மிடற்றினன் ஆகிய சிவபிரான் தனது உறைவிடம் என்று மகிழ்வோடு நினையும் கோயில்; மலைகள் மீது தங்கி மழை பொழியும் மேகங்கள் மழை பொழிவதை மறத்தற்குரியதான மகர ராசியில் சனி புகுந்து உணவு கிடைக்காமல் மக்கள் உடல் இளைக்கும் பஞ்ச காலத்திலும் மனம் கலங்காது பெரிய வள்ளன்மையோடு மக்களைக் காக்கும் உண்மையாளர் வாழும் கழுமலத்தின்கண் உள்ளது.

சீர்காழி

பாரிதனை நலிந்தமரர் பயமெய்தச்
சயமெய்தும் பரிசுவெம்மைப்
போரிசையும் புரமூன்றும் பொன்றவொரு
சிலைவளைத்தோன் பொருந்துங்கோயில்
வாரிசைமென் முலைமடவார் மாளிகையின்
சூளிகைமேன் மகப்பாராட்டக்
காரிசையும் விசும்பியங்குங் கணங்கேட்டு
மகிழ்வெய்துங் கழுமலமே. **#1407**

மண்ணுலக மக்களை வருத்தியும், தேவர்களை அஞ்சுமாறு செய்தும், வெற்றி பெறும் இயல்பினராய்க் கொடிய போரை நிகழ்த்தும் அவுணர்களின் முப்புரங்களும் அழிய ஒப்பற்ற வில்லை வளைத்த சிவபிரான் உறையும் கோயில்; கச்சணிந்த மென்மையான தனங்களை

உடைய மகளிர் மாடவீடுகளின் உச்சியில் நின்று தம் குழந்தைகளைப் பாடிப் பாராட்டும் இசையை மேகங்கள் உலாவும் வானவெளியில் உலாவும் கந்தருவர்கள் கேட்டு மகிழும் கழுமல நகரில் உள்ளதாகும்.

சீர்காழி

ஊர்கின்ற வரவமொளி விடுதிங்க
ளொடுவன்னி மத்தமன்னும்
நீர்நின்ற கங்கை நகு வெண்டலைசேர்
செஞ்சடையா னிகழுங் கோயில்
ஏர்தங்கி மலர்நிலவி யிசைவெள்ளி
மலையென்ன நிலவிநின்ற
கார்வண்டின் கணங்களாற் கவின்பெருகு
சுதைமாடக் கழுமலமே. **#1408**

ஊர்ந்து செல்லும் அரவு. ஒளிவிடும் திங்கள், வன்னி, ஊமத்த மலர், நீர்வடிவான கங்கை, நகும் வெண்டலை ஆகியன சேர்ந்த செஞ்சடையை உடைய சிவபிரான் எழுந்தருளியுள்ள கோயில்; அழகு பொருந்திய வெள்ளி மலைகள் போல விளங்கி நிற்பனவும் மலர்களால் அலங்கரிக்கப்பெற்று அவற்றை மொய்க்கும் கரிய வண்டுகளின் கணங்களால் சூழப்பெற்றுக் கவின்மிகுவனவுமாய வெண்மையான சுதையால் அமைந்த மாட வீடுகள் நிறைந்த கழுமல நகரில் உள்ளது.

சீர்காழி

தருஞ்சரதந் தந்தருளென் றடிநினைந்து
தழலணைந்து தவங்கள்செய்த
பெருஞ்சதுரர் பெயலர்க்கும் பீடார்தோ
ழமையளித்த பெருமான்கோயில்
அரிந்தவய லரவிந்த மதுவுகுப்ப
வதுகுடித்துக் களித்துவாளை
கருஞ்சகட மிளகவளர் கரும்பிரிய
வகம்பாயுங் கழுமலமே. **#1409**

மெஞ்ஞானியர்க்குத் தரும் உண்மை ஞானத்தை எங்கட்கும் தந்தருள் என்று திருவடிகளை நினைந்து, தீ நடுவில் நின்று தவம் செய்யும் பெரிய சதுரப்பாடு உடையவர்கட்கும் மழை நீரில் நின்று தவமியற்றுபவர்கட்கும் பெருமை மிக்க தோழமையை வழங்கியருளும் சிவபிரான் உறையும் கோயில்; நெல்லறுவடை செய்த வயலில் முளைத்த தாமரை மலர்கள் தேனைச் சொரிய, அதனைக் குடித்துக் களித்த வாளை மீன்கள் வயற்கரைகளில் நிற்கும் பெரிய வண்டிகள் நிலைபெயரவும் கரும்புகள் ஒடியவும் துள்ளிப்பாயும் கழுமல வளநகரில் உள்ளதாகும்.

சீர்காழி

புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய்
நிலனைந்தாய்க் கரண நான்காய்
அவையவைசேர் பயனுருவா யல்லவுரு
வாய்நின்றா னமருங்கோயில்
தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு
கொம்புதைப்பக் கொக்கின்காய்கள்
கவணெறிகற் போற்சுனையிற் கரைசேரப்
புள்ளிரியுங் கழுமலமே. **#1410**

மண், புனல் முதலிய பூதங்கள் ஐந்து. சுவை ஒளி முதலிய புலன்கள் ஐந்து. அவற்றுக்கு இடமாகிய மெய், வாய் முதலிய பொறிகள் ஐந்து. வாக்கு பாதம் முதலிய செய் கருவிகள் ஐந்து. மனம் புத்தி முதலிய உட்கருவிகள் நான்கு ஆகிய ஆன்ம தத்துவங்களாகவும் அவற்றின் பயனாகவும், உருவமாகவும் அருவமாகவும் நிற்கின்ற சிவபிரான் எழுந்தருளிய கோயில், தவம் செய்ய முயல்வோர் இறைவனை அருச்சிக்க மரங்களில் பூத்த மலர்களைப் பறித்துக் கொண்டு விடுத்த கொம்புகள் நிமிர்ந்து தாக்குதலால் மாமரத்தில் காய்த்த காய்கள் விண்டு கவணிலிருந்து வீசப்பட்ட கல்போல சுனைகளில் வீழ ஆங்குறைந்த பறவைகள் அஞ்சி அகலும் வளமான கழுமல வளநகரில் உள்ளதாகும்.

சீர்காழி

அடல்வந்த வானவரை யழித்துலகு
தெழித்துழலு மரக்கர்கோமான்
மிடல்வந்த விருபதுதோ ணெரியவிரற்
பணிகொண்டோன் மேவுங்கோயில்
நடவந்த வுழவரிது நடவொணா
வகைபரலாய்த் தென்றுதுன்று
கடல்வந்த சங்கீன்ற முத்துவயற்
கரைகுவிக்குங் கழுமலமே. **#1411**

வலிமை பொருந்திய தேவர்கள் பலரை அழித்து உலகை அச்சுறுத்தித் திரிந்த அரக்கர் தலைவனாகிய இராவணனின் வலிமைமிக்க இருபது தோள்களையும் கால் விரலால் நெரிய ஊன்றி அவனைப் பணிகொண்ட சிவபிரான் எழுந்தருளியுள்ள கோயிலை உடையது, நாற்று நடவந்த உழவர்கள் இவை நாற்று நடுவதற்கு இடையூறாய்ப் பரற்கற்கள் போலத் தோன்றுகின்றனவே என்று கூறுமாறு கடலின்கண் இருந்துவந்த சங்குகள் முத்துக்களை வயல்களில் ஈன்று குவிக்கும் கழுமலமாகும்.

சீர்காழி

பூமகள்தன் கோனயனும் புள்ளினொடு
கேழலுரு வாகிப்புக்கிட்
டாமளவுஞ் சென்றுமுடி யடிகாணா
வகைநின்றா னமருங்கோயில்
பாமருவுங் கலைப்புலவோர் பன்மலர்கள்
கொண்டணிந்து பரிசினாலே
காமனைகள் பூரித்துக் களிகூர்ந்து
நின்றேத்துங் கழுமலமே. **#1412**

திருமகளின் கேள்வனாகிய திருமாலும், நான்முகனும் பன்றி உருவம் எடுத்தும், அன்னப்பறவை வடிவ மெடுத்தும், தேடப் புகுந்து தம்மால் ஆமளவும் சென்று அடிமுடி காணாதவராய்த் தோற்று நிற்க, அழலுருவாய் ஓங்கி நின்ற சிவபிரான் எழுந்தருளிய கோயிலையுடையது. பல்வகைப் பாக்களில் அமைந்துள்ள அருங்கலைகளை அறிந்த புலவர்கள் பல மலர்களைக் கொண்டு அருச்சித்து முறையோடு விருப்பங்கள் நிறைவேறக்கண்டு களிகூர்ந்து போற்றும் கழுமல நகராகும்.

சீர்காழி

குணமின்றிப் புத்தர்களும் பொய்த்தவத்தை
மெய்த்தவமாய் நின்றுகையில்
உணன்மருவுஞ் சமணர்களு முணராத
வகைநின்றா னுறையுங்கோயில்
மணமருவும் வதுவையொலி விழவினொலி
யிவையிசைய மண்மேற்றேவர்
கணமருவு மறையினொலி கீழ்ப்படுக்க
மேற்படுக்குங் கழுமலமே. **#1413**

நற்குணங்கள் இல்லாத புத்தர்களும், பொய்த்தவத்தை மெய்த்தவமாய் எண்ணிக் கையில் உணவேற்று உண்டு வாழும் சமணர்களும், அறிய முடியாதவாறு நின்ற சிவபிரான் உறையும் கோயிலை உடையது, ஆடவர் பெண்டிரை மணக்கும் திருமணத்தில் எழும் ஆரவாரமும், திருவிழாக்களின் ஓசையும், பூசுரர்களாகிய அந்தணர்கள் ஓதும் வேத ஒலியை அடங்குமாறு செய்து மிகுந்து ஒலிக்கும் கழுமல நகராகும்.

சீர்காழி

கற்றவர்கள் பணிந்தேத்துங் கழுமலத்து
ளீசன்றன் கழன்மேனல்லோர்

நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்
பந்தன்றா னயந்துசொன்ன
சொற்றுணையோ ரைந்தினொடைந் திவைவல்லார்
தூமலராள் துணைவராகி
முற்றுலக மதுவாண்டு முக்கணா
னடிசேர முயல்கின்றாரே. **#1414**

கற்றவர்களாலே பணிந்து வழிபடப்பெறும் கழுமலத்துள் விளங்கும் இறைவருடைய திருவடிகளின் மேல், நல்லோர்க்கு நற்றுணையாகும் பெருந்தன்மையையுடைய ஞானசம்பந்தன் விரும்பிப் போற்றிப் பாடிய, ஓதுவார்களுக்குத் துணையாய் அமைந்த சொற்களையுடைய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் வல்லவர், திருமகள் கேள்வராய் இவ்வுலகம் முழுவதையும் அரசாண்டு சிவனடி கூடும் முயற்சியைச் செய்கின்றவராவர்.

திருவையாறு

திருஜயாறு

திருவையாறு,
பண் - மேகராகக்குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.
தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக வஞ்சேலென்
றருள்செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே. #1415 ★★★★★

ஐம்புலன்களும் தத்தம் பொறிகளை விட்டு வழிமாறி அறிவழிந்து, கபம் மேற்பட மனம் சுழன்று வருந்தும் இறுதிக் காலத்து, 'அஞ்சேல் என்றுரைத்து அருள் செய்பவனாகிய சிவபிரான் அமரும் கோயிலை உடையது, நடனக்கலையில் வெற்றியுற்ற பெண்கள் நடனம் ஆட, அவ்வாடலுக்கேற்ற கூத்தொலிகளை எழுப்பும் முழவுகள் அதிர, அவற்றைக் கண்டு அஞ்சிய சிலமந்திகள் வானத்தில் கேட்கும் இடியோசை என்றஞ்சி மனம் சுழன்று மரங்களில் ஏறி மேகங்களைப் பார்க்கும் திருவையாறாகும்.

திருஜயாறு

விடலேறு படநாக மரைக்கசைத்து
வெற்பரையன் பாவையோடும்
அடலேறொன் றதுவேறி யஞ்சொலீர்
பலியென்னு மடிகள்கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியி
னுடன்வந்து கங்குல்வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தங்
கீன்றலைக்குந் திருவையாறே. #1416

கொல்லுதலாகிய குற்றம் பொருந்திய படத்தினையுடைய நாகத்தை இடையிற் கட்டி, மலையரையன் மகளாகிய பார்வதி தேவியோடு வலிமை பொருந்திய விடையேற்றின் மேல் ஏறி, அழகிய சொற்களைப்

பேசும் மகளிரே! பிச்சையிடுங்கள் என்று கேட்டுச் சென்ற சிவபிரானது கோயிலையுடையது. வளைந்த மூக்கினையுடைய கடற்சங்குகள் கடலினின்றும் அலை வழியாக அதில் பாயும் காவிரியோடு வந்து இரவின்கண் திடலில் ஏறித் தங்கிச் செழுமையான முத்துக்களை ஈன்று சஞ்சரிக்கும் திருவையாறாகும்.

திருஐயாறு

கங்காளர் கயிலாய மலையாளர்
கானப்பே ராளர்மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலுங்கோயில்
கொங்காளப் பொழினுழைந்து கூர்வாயா
லிறகுலர்த்திக் கூதனீங்கிச்
செங்கானல் வெண்குருகு பைங்கான
லிரைதேருந் திருவையாறே. **#1417**

சிறந்த பிரமன், திருமால் ஆகியோரின் முழு எலும்புக்கூட்டை அணிந்தவரும், கயிலாய மலையில் உறைபவரும், கானப்பேர் என்னும் தலத்தில் எழுந்தருளியவரும், மங்கை பங்கரும் முத்தலைச் சூலப்படை ஏந்தியவரும், விடை ஊர்தியை உடையவரும் ஆகிய சிவபிரானார் எழுந்தருளிய கோயிலை உடையது, சிவந்த கால்களையுடைய வெண்ணிறக் குருகுகள் தேன் நிறைந்த சோலைகளில் நுழைந்து கூரிய தம் அலகுகளால் தம் இறகுகளைக் கோதிக் குளிர் நீங்கிப் பசுமையான சோலைகளில் தமக்கு வேண்டும் இரைகளைத் தேடும் திருவையாறாகும்.

திருஐயாறு

ஊன்பாயு முடைதலைகொண் டூருரின்
பலிக்குழல்வா ருமையாள்பங்கர்
தான்பாயும் விடையேறுஞ் சங்கரனார்
தழலுருவர் தங்குங்கோயில்
மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய் மடுக்கள்தோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல
மொட்டலருந் திருவையாறே. **#1418**

புலால் பொருந்தியதாய், முடைநாற்றமுடைத்தாய் உள்ள தலையோட்டைக் கையில் ஏந்தி, ஊர்கள்தோறும் பலியேற்று உழல்பவரும், உமை பாகரும், பாய்ந்து செல்லும் விடையேற்றை உடையவரும், நன்மைகளைச் செய்வதால் சங்கரன் என்ற பெயரை உடையவரும், தழல் உருவினருமாகிய சிவபிரான் எழுந்தருளிய

கோயிலையுடையது, மான் துள்ளித் திரிய, வயலருகே உள்ள மரங்களில் ஏறி மந்திகள் பாய்வதால் மடுக்களில் தேன் பாய, அதனால் மீன்கள் துள்ளவும் செழுமையான தாமரை மொட்டுக்கள் அலரவும், விளங்குவதாகிய திருவையாறாகும்.

<u>திருஐயாறு</u>

நீரோடு கூவிளமு நிலாமதியும்
வெள்ளெருக்கு நிறைந்தகொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த
தத்துவனார் தங்குங்கோயில்
காரோடி விசும்பளந்து கடிநாறும்
பொழிலணைந்த கமழ்தார்வீதித்
தேரோடு மரங்கேறிச் சேயிழையார்
நடம்பயிலுந் திருவையாறே. **#1419**

கங்கைநதி, வில்வம், பிறைமதி, வெள்ளெருக்கு, கொன்றை மலர் நிறைந்த மாலை, குளிர்ந்த கரந்தை ஆகியவற்றைச் சடையின்கண் அணிந்த தத்துவனாகிய சிவபிரான் தங்கியுள்ள கோயிலையுடையது, மேகமண்டலம் வரை உயர்ந்து சென்று வானத்தை அளந்து மணம் பரப்பும் பொழில்கள் சூழ்ந்ததும், மணம் வீசும் வீடுகளை உடைய தேரோடும் வீதிகளில் அரங்குகளில் ஏறி அணிகலன்கள் புனைந்த இளம் பெண்கள் நடனம் ஆடுவதுமாகிய திருவையாறாகும்.

<u>திருஐயாறு</u>

வேந்தாகி விண்ணவர்க்கு மண்ணவர்க்கு
நெறிகாட்டும் விகிர்தனாகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த
புண்ணியனார் நண்ணுங்கோயில்
காந்தார மிசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார்வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே. **#1420**

அனைத்துலகங்களுக்கும் வேந்தனாய், விண்ணவர்களுக்கும், மண்ணவர்களுக்கும் வழி காட்டும் வள்ளலாய், மணங்கமழும் கொன்றை மாலையைச் சடையின்மிசை அணிந்தவனாய் புண்ணிய வடிவினனாய் விளங்கும் சிவபிரான் எழுந்தருளிய கோயிலையுடையது. மகளிர் காந்தாரப் பண்ணமைத்து இசைபாட அழகிய வீதிகளில் அமைந்த அரங்கங்களில் ஏறி அணிகலன்கள் பூண்ட இளம் பெண்கள் தேம், தாம் என்ற ஒலிக் குறிப்போடு நடனம் ஆடும் திருவையாறாகும்.

திருஐயாறு

நின்றுலா நெடுவிசும்பு னெருக்கிவரு
புரமூன்று நீள்வாயம்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி
மலையாளி சேருங்கோயில்
குன்றெலாங் குயில்கூவக் கொழும்பிரச
மலர்பாய்ந்து வாசமல்கு
தென்றலா ரடிவருடச் செழுங்கரும்பு
கண்வளருந் திருவையாறே. **#1421**

நீண்ட வானவெளியில் நின்று உலவி, தேவர்கள் வாழ்விடங்களை அழித்துவந்த முப்புரங்களையும், நீண்ட கூரிய அம்பு சென்று உலவும்படி கணை தொடுத்த வில்லாளியும், கயிலைமலை ஆளியுமாகிய சிவபிரான் சேர்ந்துறையும் கோயிலையுடையது, சிறுமலைகளில் குயில்கள் கூவவும், செழுமையான தேன் நிறைந்த மலர்களைத் தீண்டி மணம் மிகுந்து வருவதாகிய தென்றல் காற்று அடிவருடவும், அவற்றால் செழுமையான கரும்புகள் கண் வளரும் வளமுடைய திருவையாறாகும்.

திருஐயாறு

அஞ்சாதே கயிலாய மலையெடுத்த
வரக்கர்கோன் றலைகள்பத்தும்
மஞ்சாடு தோணெரிய வடர்த்தவனுக்
கருள்புரிந்த மைந்தர்கோயில்
இஞ்சாய லிளந்தெங்கின் பழம்வீழ
விளமேதி யிரிந்தங்கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல
வயல்படியுந் திருவையாறே. **#1422**

அஞ்சாமல் கயிலை மலையை எடுத்த அரக்கர் தலைவனாகிய இராவணனின் தலைகள் பத்தையும் வலிமை பொருந்திய அவன் தோள்களோடு நெரியுமாறு அடர்த்துப் பின் அவனுக்கு அருள் புரிந்த சிவபிரான் எழுந்தருளிய கோயிலை உடையது. இனிய தோற்றத்தையுடைய இளந்தென்னையில் காய்த்த நெற்று விழ, அதனைக் கண்டு அஞ்சிய எருமை இளங்கன்று அஞ்சி ஓடி செந்நெற்கதிர்களைக் காலால் மிதித்துச் செழுமையான தாமரைகள் களையாகப் பூத்த வயல்களில் படியும் திருவையாறாகும்.

திருஐயாறு

மேலோடி விசும்பணவி வியனிலத்தை

மிகவகழ்ந்து மிக்குநாடும்
மாலோடு நான்முகனு மறியாத
வகைநின்றான் மன்னுங்கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தினின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே. **#1423**

அன்னமாய் மேலே பறந்து சென்று வானத்தைக் கலந்தும், அகன்ற நிலத்தை ஆழமாக அகழ்ந்தும் முயற்சியோடு தேடிய நான்முகன், திருமால் ஆகியோர் அறிய முடியாதவாறு ஓங்கி நின்ற சிவபிரான் உறையும் கோயிலையுடையது. கூத்தர்கள் கையில் வைத்து ஆட்டும் அபிநயக் கோலுடன் திரண்ட வளையல்களை அணிந்த மகளிர் கூத்தாட, திரண்ட தனங்களையுடைய அச்சேயிழையார் முகத்தில் கண்களாகிய சேல் மீன்கள் பிறழவும், வில் போன்ற புருவங்கள் மேலும் கீழும் செல்லவும், நடனமாடும் திருவையாறாகும்.

திருஜயாறு

குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு
சாக்கியருங் குணமொன்றில்லா
மிண்டாடு மிண்டருரை கேளாதே
யாளாமின் மேவித்தொண்டீர்
எண்டோளர் முக்கண்ண ரெம்மீச
ரிறைவரினி தமருங்கோயில்
செண்டாடு புனற்பொன்னிச் செழுமணிகள்
வந்தலைக்குந் திருவையாறே. **#1424**

இழிசெயல்களில் ஈடுபடுவோராய்ச் சிறிய ஆடையினராய்த் திரியும் சமணர்களும், சாக்கியர்களும் கூறும் நன்மை பயவாத சொற்களையும், வஞ்சனை பொருந்திய உரைகளையும், கேளாமல், தொண்டர்களே! நீவிர் சிவபிரானை அடைந்து அவருக்கு ஆட்படுவீர்களாக. எட்டுத் தோள்களையும், முக்குணங்களையும் உடைய எம் ஈசனாகிய இறைவன் இனிதாக எழுந்தருளியிருக்கும் கோயிலையுடையது, பூக்களைச் செண்டுகள் போல் உருட்டி ஆட்டிக் கொண்டு வரும் நீர் நிறைந்த காவிரி செழுமையான மணிகளைக் கரையில் கொண்டு வந்து சேர்க்கும் திருவையாறு என்னும் தலமாகும்.

திருஜயாறு

அன்னமலி பொழில்புடைசூ ழையாற்றெம்
பெருமானை யந்தண்காழி

மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான
சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையா லிவைபத்து மிசையுங்கா
லீசனடி யேத்துவார்கள்
தன்னிசையோ டமருலகிற் றவநெறிசென்
றெய்துவார் தாழாதன்றே. **#1425**

அன்னப் பறவைகள் நிறைந்த பொழில்கள் புடைசூழ்ந்து விளங்கும் திருவையாற்றுப் பெருமானை, அழகிய தண்மையான சீகாழிப் பதியில் வாழும் சிறப்பு மிக்க, வேதங்கள் பயிலும் நாவினன் ஆகிய புகழ் வளரும் ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய பாடல்களாகிய இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓதி, ஈசனடியை ஏத்துபவர்கள் புகழோடு தவநெறியின் பயனாக விளங்கும் அமரர் உலகத்தைத் தாழாமல் பெறுவர்.

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம்,
பண் - மேகராகக்குறிஞ்சி,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது - இதுவே விருத்தாசலம். ,
சுவாமிபெயர் : பழமலைநாதர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

மெய்த்தாறு சுவையுமே ழிசையுமெண்
குணங்களும் விரும்புநால்வே
தத்தாலு மறிவொண்ணா நடைதெளயப்
பளிங்கேபோ லரிவைபாகம்
ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன்
கருதுமூ ருலவுதெண்ணீர்
முத்தாறு வெதிருதிர நித்திலம்வா
ரிக்கொழிக்கு முதுகுன்றமே. **#1426**

மெய்யினால் அறியத்தக்கதாகிய ஆறு சுவைகள் ஏழிசைகள், எண் குணங்கள், எல்லோராலும் விரும்பப் பெறும் நான்கு வேதங்கள் ஆகியவற்றால் அறிய ஒண்ணாதவனும், அன்போடு நடத்தலால் தெளயப் பெறுபவனும், பளிங்கு போன்றவனும், உமையம்மையை ஒரு பாகமாக உடையவனும், ஆறு சமயங்களாலும் மாறுபாடின்றி ஏற்றுக் கொள்ளப் பெறும் ஒரே தலைவனும் ஆகிய சிவபிரான் விரும்பும் ஊர், தெளந்த நீர் நிறைந்த மணிமுத்தாறு மலையின்கண் உள்ள மூங்கில்கள் உதிர்க்கும் முத்துக்களை வாரிக் கொணர்ந்து கரையிற் கொழிக்கும் திருமுதுகுன்றமாகும்.

திருமுதுகுன்றம்

வேரிமிகு குழலியொடு வேடுவனாய்
வெங்கானில் விசயன்மேவு
போரின்மிகு பொறையளந்து பாசுபதம்
புரிந்தளித்த புராணர்கோயில்
காரின்மலி கடிபொழில்கள் கனிகள்பல
மலருதிர்த்துக் கயமுயங்கி
மூரிவளங் கிளர்தென்றல் திருமுன்றிற்
புகுந்துலவு முதுகுன்றமே. **#1427**

தேன் மணம் மிகும் கூந்தலையுடைய உமையம்மையோடு வேட்டுவ உருவந்தாங்கி அருச்சுனன் தவம் புரியும் கொடிய கானகத்திற்குச்

சென்று அவனோடு போர் உடற்றி அவன் பொறுமையை அளந்து அவனுக்குப் பாசுபதக் கணையை விரும்பி அளித்த பழையோனாகிய சிவபிரான் உறையும் கோயில், மழையால் செழித்த மணமுடைய சோலைகளில் கனிகளையும் பல மலர்களையும் உதிர்த்து, நீர் நிலைகளைப் பொருந்தி வலிய வளமுடைய தென்றல் காற்று அழகிய வீடுகள் தோறும் புகுந்து உலவும் திருமுதுகுன்றமாகும்.

<u>திருமுதுகுன்றம்</u>

தக்கனது பெருவேள்விச் சந்திரனிந்
திரனெச்ச னருக்கனங்கி
மிக்கவிதா தாவினொடும் விதிவழியே
தண்டித்த விமலர்கோயில்
கொக்கினிய கொழும்வருக்கை கதலிகமு
குயர்தெங்கின் குலைகொள்சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா
நீள்வயல்சூழ் முதுகுன்றமே. **#1428**

தக்கன் செய்த பெருவேள்வியில் சந்திரன், இந்திரன், எச்சன், சூரியன், அனலோன், பிரமன், முதலியவர்களை வீரபத்திரனைக் கொண்டு தண்டித்த விமலனாகிய சிவபெருமான் உறையும் கோயில், இனிய மாங்கனிகள், வளமான பலாக்கனிகள், வாழைக் கனிகள் ஆகிய முக்கனிகளின் சாறு ஒழுகிச் சேறு உலராத நீண்ட வயல்களும் குலைகளையுடைய கமுகு, தென்னை ஆகிய மரங்கள் நிறைந்த சோலைகளும் சூழ்ந்த திருமுதுகுன்றமாகும்.

<u>திருமுதுகுன்றம்</u>

வெம்மைமிகு புரவாணர் மிகைசெய்ய
விறலழிந்து விண்ணுளோர்கள்
செம்மலரோ னிந்திரன்மால் சென்றிரப்பத்
தேவர்களே தேரதாக
மைம்மருவு மேருவிலு மாசுணநா
ணரியெரிகால் வாளியாக
மும்மதிலு நொடியளவிற் பொடிசெய்த
முதல்வனிட முதுகுன்றமே. **#1429**

கொடுமை மிகுந்து முப்புரங்களில் வாழும் அவுணர்கள் தீங்கு செய்ய அதனால் தங்கள் வலிமை அழிந்து தேவர்களும், பிரமனும், இந்திரனும், திருமாலும் சென்று தங்களைக் காத்தருளுமாறு வேண்ட, தேவர்களைத் தேராகவும், மேகங்கள் தவழும் உயர்ச்சியையுடைய மேருமலையை வில்லாகவும், வாசுகி என்னும் பாம்பை நாணாகவும், திருமால்,

அனலோன், வாயுவாகிய முத்தேவர்களையும் அம்பாகவும் கொண்டு அவுணர்களின் மும்மதில்களையும் ஒரு நொடிப் பொழுதில் பொடி செய்த தலைவனாகிய சிவபிரானது இடம், திருமுதுகுன்றமாகும்.

திருமுதுகுன்றம்

இழைமேவு கலையல்கு லேந்திழையா
ளொருபாலா யொருபாலெள்கா
துழைமேவு முரியுடுத்த வொருவனிருப்
பிடமென்ப ரும்பரோங்கு
கழைமேவு மடமந்தி மழைகண்டு
மகவினொடும் புகவொண்கல்லின்
முழைமேவு மால்யானை யிரைதேரும்
வளர்சாரன் முதுகுன்றமே. **#1430**

மேகலை என்னும் அணிகலன் பொருந்திய அல்குலையும், அழகிய முத்துவடம் முதலியன அணிந்த மேனியையும் உடையவளாகிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு தனக்குரியதான ஒரு பாகத்தே மான்தோலை இகழாது உடுத்த ஒப்பற்றவனாகிய சிவபிரானது இருப்பிடம், ஊரின் நடுவே உயர்ந்த மூங்கில்மேல் ஏறி அமர்ந்த மடமந்தி, மழை வருதலைக் கண்டு அஞ்சித் தன் குட்டியோடும் ஒலி சிறந்த மலைக்குகைகளில் ஒடுங்குவதும், பெரிய யானைகள் இரை தேர்ந்து திரிவதும் நிகழும் நீண்ட சாரலையுடைய திருமுதுகுன்றமாகும்.

திருமுதுகுன்றம்

நகையார்வெண் டலைமாலை முடிக்கணிந்த
நாதனிடம் நன்முத்தாறு
வகையாரும் வரைப்பண்டங் கொண்டிரண்டு
கரையருகு மறியமோதித்
தகையாரும் வரம்பிடறிச் சாலிகழு
நீர்குவளை சாயப்பாய்ந்து
முகையார்செந் தாமரைகண் முகமலர
வயல்தழுவு முதுகுன்றமே. **#1431**

சிரித்தலைப் பொருந்திய வெண்மையான தலைமாலையை முடியில் அணிந்துள்ள நாதனாகிய சிவபிரானது இடம், நல்ல மணிமுத்தாறு வகை வகையான மலைபடு பொருள்களைக் கொண்டு நெல், கழுநீர், குவளை ஆகியன சாயுமாறு பாய்ந்து வந்து, தாமரை மொட்டுக்கள் முகம் மலரும்படி வயலைச் சென்றடையும் திருமுதுகுன்றமாகும்.

திருமுதுகுன்றம்

அறங்கிளரு நால்வேத மாலின்கீ
ழிருந்தருளி யமரர்வேண்ட
நிறங்கிளர்செந் தாமரையோன் சிரமைந்தி
னொன்றறுத்த நிமலர்கோயில்
திறங்கொண்மணித் தரளங்கள் வரத்திரண்டங்
கெழிற்குறவர் சிறுமிமார்கள்
முறங்களினாற் கொழித்துமணி செலவிலக்கி
முத்துலைப்பெய் முதுகுன்றமே. **#1432**

அறநெறி விளங்கித் தோன்றும் நான்கு வேதங்களை ஆலின்கீழ் இருந்து சனகாதியர்க்கு அருளி, தேவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, செந்நிறம் விளங்கும் தாமரையில் எழுந்தருளிய பிரமனின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கொய்த நிமலனாகிய சிவபிரானது கோயில், முற்றிய மாணிக்கங்கள். முத்துக்கள் ஆகியன ஆற்றில் வருதலைக் கண்டு அழகிய குறவர் குடிப் பெண்கள் திரண்டு சென்று அவற்றை முறங்களால் வாரி மணிகளை விலக்கிப் புடைத்து முத்துக்களை அரிசியாக உலையில் பெய்து சிற்றில் இழைத்து விளையாடி மகிழும் திருமுதுகுன்றமாகும்.

<u>திருமுதுகுன்றம்</u>

கதிரொளிய நெடுமுடிபத் துடையகட
லிலங்கையர்கோன் கண்ணும்வாயும்
பிதிரொளிய கனல்பிறங்கப் பெருங்கயிலை
மலையைநிலை பெயர்த்தஞான்று
மதிலளகைக் கிறைமுரல மலரடியொன்
றூன்றிமறை பாடவாங்கே
முதிரொளிய சுடர்நெடுவாண் முன்னீந்தான்
வாய்ந்தபதி முதுகுன்றமே. **#1433**

கதிரவன் போன்ற ஒளியுடைய நீண்ட மகுடங்களைச் சூடிய பத்துத் தலைகளையுடைய இராவணன் கண்களும், வாயும், ஒளிபரவும் தீ வெளிப்படச் சினங்கொண்டு பெரிய கயிலாய மலையை நிலைபெயர்த்த காலத்து, மதில்கள் சூழ்ந்த அளகாபுரிக்கு இறைவனாகிய குபேரன் மகிழுமாறு, மலர்போன்ற தன் திருவடி ஒன்றை ஊன்றி அவ் இராவணனைத் தண்டித்துப் பின் அவன் மறைபாடித் துதித்த அளவில் அவனுக்கு மிக்க ஒளியுள்ள நீண்ட வாளை முற்படத் தந்த சிவபிரான் எழுந்தருளிய பதி திருமுதுகுன்றமாகும்.

<u>திருமுதுகுன்றம்</u>

பூவார்பொற் றவிசின்மிசை யிருந்தவனும்
பூந்துழாய் புனைந்தமாலும்

ஓவாது கழுகேன மாயுயர்ந்தாழ்ந்
துறநாடி யுண்மைகாணாத்
தேவாருந் திருவுருவன் சேருமலை
செழுநிலத்தை மூடவந்த
மூவாத முழங்கொலிநீர் கீழ்தாழ
மேலுயர்ந்த முதுகுன்றமே. **#1434**

தாமரை மலராகிய அழகிய தவிசின்மிசை விளங்கும் பிரமனும், அழகிய துளசிமாலை அணிந்த திருமாலும், அன்னமாகவும், பன்றியாகவும் உருமாறி வானில் பறந்தும், நிலத்தை அகழ்ந்தும் இடைவிடாது தேடியும் உண்மை காண இயலாத தெய்வ ஒளி பொருந்திய திருவுருவை உடையவனாகிய சிவபிரான் எழுந்தருளிய மலை, ஊழிக் காலத்து உலகத்தை மூடுமாறு முழங்கி வந்த கடல்நீர் கீழ்ப்படத் தான் மேல் உயர்ந்து தோன்றும் திருமுதுகுன்றமாகும்.

<u>திருமுதுகுன்றம்</u>

மேனியிற்சீ வரத்தாரும் விரிதருதட்
டுடையாரும் விரவலாகா
ஊனிகளா யுள்ளார்சொற் கொள்ளாது
முள்ளுணர்ந்தங் குய்மின்றொண்டீர்
ஞானிகளா யுள்ளார்க ணான்மறையை
முழுதுணர்ந்தைம் புலன்கள்செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
தவம்புரியு முதுகுன்றமே. **#1435**

உடம்பில் துவராடை புனைந்த புத்த மதத்தினரும், விரிந்த ஓலைத் தடுக்கை உடையாகப் பூண்ட சமணர்களும், நட்புச் செய்து கோடற்கு ஏலாதவராய்த் தங்கள் உடலை வளர்த்தலையே குறிக்கோளாக உடைய ஊனிகளாவர். அவர்கள் சொற்களைக் கேளாது ஞானிகளாக உள்ளவர்களும், நான்மறைகளை உணர்ந்தவர்களும், ஐம்புலன்களை வென்ற மௌனிகளும், முனிவர்களாகிய செல்வர்களும், தனித்திருந்து தவம் புரியும் திருமுதுகுன்றை உள்ளத்தால் உணர்ந்து, தொண்டர்களே! உய்வீர்களாக.

<u>திருமுதுகுன்றம்</u>

முழங்கொலிநீர் முத்தாறு வலஞ்செய்யு
முதுகுன்றத் திறையைமூவாப்
பழங்கிழமைப் பன்னிருபேர் படைத்துடைய
கழுமலமே பதியாக்கொண்டு
தழங்கெரிமூன் றோம்புதொழிற் றமிழ்ஞான

சம்பந்தன் சமைத்தபாடல்
வழங்குமிசை கூடும்வகை பாடுமவர்
நீடுலக மாள்வர்தாமே. **#1436**
ஆரவாரத்தோடு நிறைந்துவரும் மணிமுத்தாறு வலஞ்செய்து இறைஞ்சும் திருமுதுகுன்றத்து இறைவனை, முதுமையுறாததாய்ப் பழமையாகவே பன்னிரு பெயர்களைக் கொண்டுள்ள கழுமலப் பதியில் முத்தீ வேட்கும் தொழிலையுடைய தமிழ் ஞானசம்பந்தன் இயற்றிய இப்பதிகப் பாடல்களைப் பொருந்தும் இசையோடு இயன்ற அளவில் பாடி வழிபடுபவர் உலகத்தை நெடுங்காலம் ஆள்வர்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை

திருவீழிமிழலை,
பண் - மேகராகக்குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங்
கீரிருவர்க் கிரங்கிநின்று
நேரியநான் மறைப்பொருளை யுரைத்தொளிசேர்
நெறியளித்தோ னின்றகோயில்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோது மோசைகேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருட்சொல்லு மிழலையாமே. **#1437**

அழகிய வடவால மரத்தின்கீழ் வீற்றிருந்து சனகாதி முனிவர்களுக்குக் கருணையோடு நேரிய நால்வேதங்களின் உண்மைப் பொருளை உரைத்து அவர்கட்குச் சிவஞானநெறி காட்டியருளிய சிவபிரானது கோயில், நிலவுலகில் வாழும் வேதப் புலவர்கள் பல நாள்களும் தம்மிடம் பயிலும் மாணவர்களுக்கு வேதம் பயிற்றுவிப்பதைக் கேட்டுத் தேன் நிறைந்த பொழில்களில் வாழும் கிளிகள் நாள்தோறும் வேதங்களுக்குப் பொருள் சொல்லும் சிறப்பினதாய திருவீழிமிழலை ஆகும்.

திருவீழிமிழலை

பொறியரவ மதுசுற்றிப் பொருப்பேமத்
தாகப்புத் தேளிர்கூடி
மறிகடலைக் கடைந்திட்ட விடமுண்ட
கண்டத்தோன் மன்னுங்கோயில்
செறியிதழ்த்தா மரைத்தவிசிற் றிகழ்ந்தோங்கு
மிலைக்குடைக்கீழ்ச் செய்யார் செந்நெல்
வெறிகதிர்ச்சா மரையிரட்ட விளவன்னம்
வீற்றிருக்கும் மிழலையாமே. **#1438**

தேவர்கள் அனைவரும் கூடி மந்தரமலையை மத்தாக நாட்டி உடலில் புள்ளிகளை உடைய வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகச் சுற்றிச் சுருண்டு விழும் அலைகளை உடைய கடலைக் கடைந்த காலத்து எழுந்த நஞ்சினை உண்ட கண்டத்தை உடையவனாகிய சிவபிரான் உறையும்

கோயில், செறிந்த இதழ்களை உடைய தாமரை மலராகிய இருக்கையில் விளங்கும், தாமரை இலையாகிய குடையின்கீழ் உள்ள இள அன்னம், வயலில் விளையும் செந்நெற்கதிர்களாகிய சாமரம் வீச வீற்றிருக்கும் திருவீழிமிழலை யாகும்.

திருவீழிமிழலை

எழுந்துலகை நலிந்துழலு மவுணர்கடம்
புரமூன்று மெழிற்கணாடி
உழுந்துருளு மளவையினொள் ளெரிகொளவெஞ்
சிலைவளைத்தோ னுறையுங்கோயில்
கொழுந்தரளம் நகைகாட்டக் கோகநகம
முகங்காட்டக் குதித்துநீர்மேல்
விழுந்தகயல் விழிகாட்ட விற்பவளம்
வாய்காட்டும் மிழலையாமே. **#1439**

வானத்திற் பறந்து திரிந்து உலக மக்களை நலிவு செய்து உழன்ற அசுரர்களின் முப்புரங்களையும் அழகிய கண்ணாடியில், உளுந்து உருளக்கூடிய கால அளவிற்குள் ஒளி பொருந்திய தீப்பற்றி எரியுமாறு கொடிய வில்லை வளைத்தவனாகிய சிவபிரான் உறையும் கோயில், செழுமையான முத்துக்கள் மகளிரின் பற்களையும், தாமரைகள் முகங்களையும் துள்ளிக்குதித்து நீர்மேல் விழும் கயல்கள் கண்களையும், ஒளி பொருந்திய பவளங்கள் வாய்களையும் காட்டும் திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

உரைசேரு மெண்பத்து நான்குநூ
றாயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா
யங்கங்கே நின்றான்கோயில்
வரைசேரு முகின்முழவ மயில்கள்பல
நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள்
கையேற்கு மிழலையாமே. **#1440**

நூல்களில் உரைக்கப் பெறும் எண்பத்துநான்கு லட்சம் பிறப்பு வேறுபாடுகளையும் முறையாகப் படைத்து, அவ்வவற்றின் உயிர்கட்கு உயிராய் அங்கங்கே விளங்கி நிற்போனாகிய சிவபிரான் உறையும் கோயில், மலைகளில் தங்கியுள்ள மேகங்கள் எழுந்து வந்து முழவுபோல ஒலிக்க, ஆண்மயில்கள் பல நடனமாட, வண்டுகள் பாட, பரிசிலாகக் கொன்றை மரங்கள் மணம் பொருந்திய மலர் இதழ்களாகிய

பொன்னைத் தர மெல்லிய காந்தள் மலர்கள் கை போல விரிந்து அதனை ஏற்கும் திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

காணுமா றரியபெரு மானாகிக்
காலமாய்க் குணங்கண்மூன்றாய்ப்
பேணுமூன் றுருவாகிப் பேருலகம்
படைத்தளிக்கும் பெருமான்கோயில்
தாணுவாய் நின்றபர தத்துவனை
யுத்தமனை யிறைஞ்சீரென்று
வேணுவார் கொடிவிண்ணோர் தமைவிளிப்ப
போலோங்கு மிழலையாமே. **#1441**

காண்டற்கரிய கடவுளாய், மூன்று காலங்களாய், மூன்று குணங்களாய் எல்லோராலும் போற்றப் பெறும் அரி, அயன், அரன் ஆகிய மும்மூர்த்திகளாய், பெரிதாகிய இவ்வுலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களைப் புரியும் சிவபிரான் உறையும் கோயில், மூங்கில்களிற் கட்டிய நெடிய கொடிகள் நிலை பேறு உடையவனாய் நிற்கும் மேலான சிவபிரானாகிய, உத்தமனை, வந்து வழிபடுவீர்களாக என்று தேவர்களை அழைப்பனபோல, அசைந்து ஓங்கி விளங்கும் திருவீழிமிழலையாகும். மூன்று உருவுக்கு ஏற்ப அழித்தல் வருவிக்கப்பட்டது.

திருவீழிமிழலை

அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற்
றைம்புலனு மடக்கிஞானம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர்கோயில்
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கந்திகழச் சலசத்தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட
மணஞ்செய்யு மிழலையாமே. **#1442**

உள்ளத்தில் பொருந்திய அன்புடையவராய், காமம் முதலிய அறுபகைகளையும் கடிந்து, சுவை ஒளி முதலிய ஐம்புலங்களை அடக்கிச் சிவஞானத்தில் திளைத்திருப்பவர்களாகிய துறவிகளின் இதயத் தாமரையில் எழுந்தருளி விளங்கும் பழையோனாகிய சிவபிரான் உறையும் கோயில், மணிகளும் சங்கினங்களும் விளங்கும் தூயதான நீர் நிலைகளில் முளைத்த தாமரை மலராகிய தீயில் மிகுதியாக வளர்ந்த புன்க மரங்கள் பொரி போல மலர்களைத் தூவி, திருமண நிகழ்ச்சியை

நினைவுறுத்திக் கொண்டிருப்பதாகிய திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

ஆறாடு சடைமுடிய னனலாடு
மலர்க்கைய னிமயப்பாவை
கூறாடு திருவுருவன் கூத்தாடுங்
குணமுடையோன் குளிருங்கோயில்
சேறாடு செங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்தவண்டு
வேறாய வுருவாகிச் செவ்வழிநற்
பண்பாடும் மிழலையாமே. **#1443**

கங்கையணிந்த சடைமுடியை உடையவனும், மலர் போன்ற கரத்தில் அனலை ஏந்தியவனும், இமவான் மகளாகிய பார்வதிதேவி தன் ஒரு கூறாக விளங்கத் திகழும் திருமேனியை உடையவனும், கூத்தாடும் குணமுடையவனும், ஆகிய சிவபிரான் மனங் குளிர்ந்து எழுந்தருளியிருக்கும் கோயில், சேற்றில் முளைத்த செங்கழுநீர் மலர்களின் மகரந்தங்களில் படிந்து தேனையுண்டு, தன் இயல்பான நிறம் மாறிச் சிவந்த நிறம் உடையதாய்த் தோன்றும் வண்டு செவ்வழிப் பண்ணைப் பாடிக் களிக்கும் திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

கருப்பமிகு முடலடர்த்துக் காலூன்றிக்
கைமறித்துக் கயிலையென்னும்
பொருப்பெடுக்க லுறுமரக்கன் பொன்முடிதோள்
நெரித்தவிரற் புனிதர்கோயில்
தருப்பமிகு சலந்தரன்ற னுடல்தடிந்த
சக்கரத்தை வேண்டியீண்டு
விருப்பொடுமால் வழிபாடு செய்யவிழி
விமானஞ்சேர் மிழலையாமே. **#1444**

கர்வம் மிகுந்த உடலை வருத்தி நெருங்கிச் சென்று காலை ஊன்றிக் கைகளை வளைத்துக் கயிலை என்னும் மலையைப் பெயர்த்தெடுக்க முற்பட்ட அரக்கனாகிய இராவணனின் பொன்முடி தரித்த தலைகளையும் தோள்களையும் நெரித்து அடர்த்த கால் விரலையுடைய தூயவராகிய சிவபிரானார் உறையும் கோயில், செருக்கு மிக்க சலந்தரன் என்னும் அவுணனது உடலைத் தடிந்த சக்கராயுதத்தைப் பெற விரும்பிப் பெருவிருப்போடு இவ்வுலகில் திருமால் வழிபாடு செய்ததும், வானிலிருந்து இழிந்த விமானத்தை உடையதுமாகிய திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

செந்தளிர்மா மலரோனுந் திருமாலும்
ஏனமோ டன்னமாகி
அந்தமடி காணாதே யவரேத்த
வெளிப்பட்டோ னமருங்கோயில்
புந்தியினான் மறைவழியே புற்பரப்பி
நெய்சமிதை கையிற்கொண்டு
வெந்தழலின் வேட்டுலகின் மிகவளிப்போர்
சேரூமூர் மிழலையாமே. **#1445**

சிவந்த இதழ்களையுடைய பெரிய தாமரை மலரின்மேல் உறையும் பிரமனும், திருமாலும் அன்னமாகியும் பன்றியாகியும் முடியடிகளைக் காணாது தம் செருக்கழிந்து வழிபட அவர்கட்குக் காட்சி அளித்தோனாகிய சிவபிரான் அமரும் கோயில், தாங்கள் பெற்ற அறிவால் வேத விதிப்படி தருப்பைப் புற்களைப் பரப்பி நெய், சமித்து ஆகியவற்றைக் கையில் கொண்டு அழல் வளர்த்து வேள்வி செய்து உலகைக் காப்பவர்களாகிய அந்தணர்கள் சேரும் ஊராகிய திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

எண்ணிறந்த வமணர்களு மிழிதொழில்சேர்
சாக்கியரு மென்றுந்தன்னை
நண்ணரிய வகைமயக்கித் தன்னடியார்க்
கருள்புரிய நாதன்கோயில்
பண்ணமரு மென்மொழியார் பாலகரைப்
பாராட்டு மோசைகேட்டு
விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்தோ
டும்மிழியும் மிழலையாமே. **#1446**

எண்ணற்ற சமணர்களும், இழிதொழில் புரியும் சாக்கியர்களும், எக்காலத்தும் தன்னை நெருங்க இயலாதவாறு அவர்கள் அறிவை மயக்கித் தன் அடியவர்களுக்கு அருள் புரியும் சிவபிரான் எழுந்தருளிய கோயில், பண்ணிசை போலும் மென்மொழி பேசும் மகளிர் தாங்கள் பெற்ற புதல்வர்களைப் பாராட்டும் தாலாட்டு ஓசை கேட்டு வியந்து, தேவர்கள் விமானங்களோடு வந்து இறங்கும் திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

மின்னியலு மணிமாட மிடைவீழி
மிழலையான் விரையார்பாதம்

சென்னிமிசைக் கொண்டொழுகுஞ் சிரபுரக்கோன்
செழுமறைகள் பயிலுநாவன்
பன்னியசீர் மிகுஞான சம்பந்தன்
பரிந்துரைத்த பத்துமேத்தி
இன்னிசையாற் பாடவல்லா ரிருநிலத்தி
லீசனெனு மியல்பினோரே. **#1447**

மின்னல் போலும் ஒளியுடைய மணிகள் இழைத்த மாட வீடுகள் செறிந்த திருவீழிமிழலை இறைவனின் மணம் கமழ்கின்ற திருவடிகளைச் சென்னிமிசைக் கொண்டு ஒழுகும் இயல்புடைய சிரபுரநகரின் தலைவனும், செழுமறை பயின்ற நாவினனும் பலர் போற்றும் சிறப்பு மிக்கவனுமாகிய ஞானசம்பந்தன் அன்பு கொண்டு பாடி இப்பதிகப் பாடல்கள் பத்தையும் போற்றி இன்னிசையோடு பாடவல்லவர்கள் பெரிதான இந்நிலவுலகில் ஈசன் என்று போற்றும் இயல்புடையோராவர்.

திருவேகம்பம்

திருஏகம்பம்

திருவேகம்பம்,
பண் - மேகராகக்குறிஞ்சி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஏகாம்பரநாதர்.
தேவியார் : காமாட்சியம்மை.

வெந்தவெண் பொடிப்பூசு மார்பின்விரி
நூலொருபால் பொருந்தக்
கந்தமல்கு குழலியோடுங் கடிபொழிற்
கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தா ரவர்போற்ற
வணங்கினொ டாடல்புரி
எந்தை மேவிய வேகம்பந்
தொழுதேத்த விடர்கெடுமே. **#1448**

அனலிடை நன்றாக வெந்த வெண்மையான திருநீற்றைப் பூசியுள்ள மார்பின்கண் விரிந்த பூணூல் ஒருபால் விளங்கித் தோன்ற, மணங்கமழும் கூந்தலினையுடைய உமையம்மையோடும், விளங்கும் பொழில்களால் சூழப்பட்ட கச்சி என்னும் தலத்துள் எல்லையற்ற குணங்களையுடைய அடியவர்கள் போற்ற நடனம் செய்யும் எந்தையாகிய சிவபெருமான் எழுந்தருளிய ஏகம்பம் என்னும் திருக்கோயிலைத் தொழுது போற்ற நம் இடர் கெடும்.

திருஏகம்பம்

வரந்திகழு மவுணர் மாநகர்மூன்
றுடன்மாய்ந் தவியச்
சரந்துரந் தெரிசெய்த தாழ்சடைச்
சங்கரன் மேயவிடம்
குருந்த மல்லிகை கோங்குமா
தவிநல்ல குராமரவம்
திருந்துபைம் பொழிற்கச்சி யேகம்பஞ்
சேர விடர்கெடுமே. **#1449**

வரம்பெற்ற அவுணர்களின் பெருநகராக விளங்கிய முப்புரங்களும் ஒருசேர மாய்ந்து கெடுமாறு கணை எய்து எரித்தழித்த, தாழ்ந்து தொங்கும் சடைகளையுடைய சங்கரன் எழுந்தருளிய இடமாகிய, குருந்தம், மல்லிகை, கோங்கு, மாதவி, நல்லகுரா, கடம்பமரம்

ஆகியனவற்றால் சிறந்து விளங்கும் பசுமையான பொழில் சூழ்ந்த கச்சிமாநகரிலுள்ள திருஏகம்பத்தை அடைந்து தொழ, நம் இடர்கெடும்.

திருஏகம்பம்

வண்ணவெண் பொடிப்பூசு மார்பின்
வரியர வம்புனைந்து
பெண்ணமர்ந் தெரியாடல் பேணிய
பிஞ்ஞகன் மேயவிடம்
விண்ணமர் நெடுமாட மோங்கி
விளங்கிய கச்சிதன்னுள்
திண்ணமாம் பொழில்சூழ்ந்த வேகம்பஞ்
சேர விடர்கெடுமே. **#1450**

வெண்மைநிறம் அமைந்த திருநீறு பூசிய மார்பின்கண் உடலில் வரிகளையுடைய பாம்பை அணிந்து, உமையம்மையை விரும்பியேற்று, சுடுகாட்டில் எரியாடல் புரியும் தலைக்கோலம் உடையவனாகிய சிவபிரான் மேவிய இடமாகிய விண்ணளாவிய நீண்ட மாட வீடுகள் ஓங்கி விளங்குவதும், என்றும் நிலை பெற்ற பொழில்களால் சூழப்பட்டதுமாகிய கச்சிமாநகரில் உள்ளதுமாகிய திருஏகம்பத்தைச் சென்று வணங்க நம் இடர் கெடும்.

திருஏகம்பம்

தோலுநூ லுந்துதைந்த வரைமார்பிற்
சுடலைவெண் ணீறணிந்து
காலன்மாள் வுறக்காலாற் காய்ந்த
கடவுள் கருதுமிடம்
மாலைவெண் மதிதோயு மாமதிற்
கச்சி மாநகருள்
ஏலநாறிய சோலைசூ ழேகம்ப
மேத்த விடர்கெடுமே. **#1451**

மான்தோலும் பூணூலும் பொருந்திய மலை போன்ற மார்பின்கண் சுடலையில் எடுத்த வெண்மையான திருநீற்றை அணிந்து மார்க்கண்டேயர்க்காகக் காலன் மாயும்படி காலால் அவனை உதைத்தருளிய கடவுளாகிய சிவபிரான் விரும்புமிடமாகிய, மாலைக் காலத்தில் தோன்றும் வெண்மையான மதி தோயுமாறு உயர்ந்த பெரிய மதில்களை உடைய பெரிய காஞ்சிபுர நகரில் மணம் வீசும் சோலைகளால் சூழப்பட்ட ஏகம்பம் என்னும் திருக்கோயிலை ஏத்த, நம் இடர் கெடும்.

திருஏகம்பம்

தோடணிம் மலர்க்கொன்றை சேர்சடைத்
தூமதி யம்புனைந்து
பாடனான் மறையாகப் பல்கணப்
பேய்க ளவைசூழ
வாடல்வெண் டலையோ டனலேந்தி
மகிழ்ந்துட னாடல்புரி
சேடர்சேர் கலிக்கச்சி யேகம்பஞ்
சேர விடர்கெடுமே. **#1452**

அழகிய இதழ்களோடு கூடிய கொன்றை மலர்மாலை சூடிய சடையின்மேல் தூய பிறை மதியை அணிந்து நான்மறைகளைப் பாடல்களாகக் கொண்டு பேய்க் கணங்கள் பல சூழப், புலால் வற்றிய வெண்தலையோட்டையும், அனலையும் கையிலேந்தி மகிழ்வோடு உமையம்மையுடன் ஆடல் புரிகின்ற பெரியோனாகிய சிவபிரான் எழுந்தருளிய ஆரவாரமுடைய கச்சியில் விளங்கும் திருஏகம்பத்தை நினைக்க, நம் இடர் கெடும்.

திருஏகம்பம்

சாகம்பொன் வரையாகத் தானவர்
மும்மதில் சாயவெய்து
ஆகம்பெண் ணொருபாக மாக
வரவொடு நூலணிந்து
மாகந்தோய் மணிமாட மாமதிற்
கச்சி மாநகருள்
ஏகம்பத் துறையீசன் சேவடி
யேத்த விடர்கெடுமே. **#1453**

மேரு மலையை வில்லாகக் கொண்டு அசுரர்களின் முப்புரங்களை அழியுமாறு கணைதொடுத்துத் தன் திருமேனியில் உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு மார்பில் பாம்பையும், முப்புரி நூலையும் அணிந்து விண்ணளாவிய அழகிய மாடங்களையும், பெரிய மதிலையும் உடைய கச்சிமாநகரில் விளங்கும் திருஏகம்பத்தில் உறையும் ஈசன் திருவடிகளை ஏத்த நம் இடர் கெடும்.

திருஏகம்பம்

இப்பதிகத்தின் **7-**ம் செய்யுள் சிதைந்து போயிற்று. **#1454**

திருஏகம்பம்

வாணிலா மதிபுல்கு செஞ்சடை
வாளர வம்மணிந்து
நாணிடத் தினில்வாழ்க்கை பேணி
நகுதலையிற் பலிதேர்ந்
தேணிலா வரக்கன்ற னீண்முடி
பத்து மிறுத்தவனூர்
சேணுலாம் பொழிற்கச்சி யேகம்பஞ்
சேர விடர்கெடுமே. **#1455**

ஒளி விளங்கும் பிறைமதி பொருந்திய செஞ்சடையில் ஒளி பொருந்திய பாம்பினை அணிந்து இடப்பாகத்தே நாணோடு கூடியவளாகிய இல்வாழ்க்கைக்குரிய உமையம்மையை விரும்பியேற்றுச் சிரிக்கும் தலையோட்டில் பலியேற்று, மன உறுதி படைத்தவனாகிய இராவணனின் நீண்ட முடிகள் பத்தையும் நெரித்தவனாகிய சிவபிரானது, வானளாவிய பொழில்களையுடைய கச்சிமா நகரிலுள்ள திருஏகம்பத்தை அடைந்து தொழ நம் இடர் கெடும்.

<u>திருஏகம்பம்</u>

பிரமனுந் திருமாலுங் கைதொழப்
பேரழ லாயபெம்மான்
அரவஞ் சேர்சடை யந்தண
னணங்கினொ டமருமிடம்
கரவில்வண் கையினார்கள் வாழ்கலிக்
கச்சி மாநகருள்
மரவஞ்சூழ் பொழிலேகம் பந்தொழ
வல்வினை மாய்ந்தறுமே. **#1456**

பிரமனும், திருமாலும் தம் கைகளால் தொழுது வணங்கப் பெரிய அனலுருவாகி நின்ற பெருமானும், பாம்பணிந்த சடையை யுடைய அந்தணனும் ஆகிய சிவபிரான் தன் தேவியோடு அமரும் இடமாகிய, வஞ்சகம் இல்லாத வள்ளன்மை பொருந்திய கையினை உடையவர்கள் வாழ்கின்ற ஆரவாரமுடைய கச்சி மாநகரில் குங்கும மரங்கள் பொருந்திய சோலைகளால் சூழப்பட்டு விளங்கும் திருஏகம்பத்தைத் தொழ நம் வல்வினைகள் மாய்ந்து கெடும்.

<u>திருஏகம்பம்</u>

குண்டுபட் டமணா யவரொடுங்
கூறைதம் மெய்போர்க்கும்
மிண்டர் கட்டிய கட்டுரை
யவைகொண்டு விரும்பேன்மின்

விண்டவர் புரமூன்றும் வெங்கணை
யொன்றினா லவியக்
கண்டவன் கலிக்கச்சி யேகம்பங்
காண விடர்கெடுமே. **#1457**

பருமையான உடலோடு ஆடையின்றித் திரியும் சமணர்களோடு ஆடையைத் தம் உடலில் போர்த்து வலியவராய்த் திரியும் புத்தர்களும் புனைந்து கூறும் உரைகளைப் பொருளுரையாகக் கருதி விரும்பாதீர்கள். பகைவர்களாகிய அவுணர்களின் மூன்று புரங்களையும் கொடிய கணை ஒன்றை எய்து எரித்தழித் தவனாகிய சிவபிரான் எழுந்தருளிய கச்சியின்கண் உள்ள திரு ஏகம்பத்தைச் சென்று காண, நம் இடர் கெடும்.

<u>திருஏகம்பம்</u>

ஏரினார் பொழில்சூழ்ந்த கச்சி
யேகம்ப மேயவனைக்
காரினார் மணிமாட மோங்கு
கழுமல நன்னகருள்
பாரினார் தமிழ்ஞான சம்பந்தன்
பரவிய பத்தும்வல்லார்
சீரினார் புகழோங்கி விண்ணவ
ரோடுஞ் சேர்பவரே. **#1458**

அழகு நிறைந்த பொழில்கள் சூழ்ந்த கச்சியேகம் பத்துள் விளங்கும் இறைவனை மேகங்கள் தவழும் அழகிய மாடங்கள் ஓங்கும் கழுமல நன்னகருள் தோன்றிய தமிழ்வல்ல ஞானசம்பந்தன் பரவிப் போற்றிய பத்துப் பாடல்களையும் ஓத வல்லவர் இவ்வுலகின்கண் சிறந்த புகழால் ஓங்கி விளங்கிப் பின் விண்ணவர்களோடும் சேர்ந்து வாழும் நிலையைப் பெறுவர்.

திருப்பறியலூர் - திருவீரட்டம்

திருப்பறியலூர்

திருப்பறியலூர் - திருவீரட்டம்,
பண் - மேகராகக்குறிஞ்சி, -,
சுவாமிபெயர் : -.
தேவியார் : -.

கருத்தன் கடவுள் கனலேந் தியாடும்
நிருத்தன் சடைமே னிரம்பா மதியன்
திருத்த முடையார் திருப்பறி யலூரில்
விருத்த னெனத்தகும் வீரட்டத் தானே. **#1459**

திருந்திய மனமுடையவர்கள் வாழும் திருப்பறியலூரில் தொன்மையானவனாய் விளங்கும் வீரட்டானத்து இறைவன் அனைத்துலகங்களுக்கும் தலைவனும், கடவுளுமாக இருப்பவன். கையில் கனலேந்தி நடனம் புரிபவன். சடைமுடி மீது இளம்பிறை அணிந்தவன்.

திருப்பறியலூர்

மருந்த னமுதன் மயானத்துண் மைந்தன்
பெருந்தண் புனற்சென்னி வைத்த பெருமான்
திருந்து மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்த மலர்ச்சோலை வீரட்டத் தானே. **#1460**

ஒழுக்கத்திற் சிறந்த அந்தணர்கள் வாழும் விரிந்த மலர்ச் சோலைகளையுடைய திருப்பறியலூரில் விளங்கும் வீரட்டானத்து இறைவன், பிணி தீர்க்கும் மருந்தாவான். உயிர் காக்கும் அமுதமாவான். மயானத்துள் நின்றாடும் வலியோனாவான். மிகப் பெரியதாகப் பரந்து வந்த குளிர்ந்த கங்கையைத் தன் சென்னியில் தாங்கி வைத்துள்ள பெருமானாவான்.

திருப்பறியலூர்

குளிர்ந்தார் சடையன் கொடுஞ்சிலை விற்காமன்
விளிந்தா னடங்க வீந்தெய்தச் செற்றான்
தெளிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
மிளிர்ந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. **#1461**

அறிவில் தெளிந்த மறையோர்கள் வாழும் மலர்ச்சோலைகளால் சூழப்பட்ட திருப்பறியலூரில் விளங்கும் வீரட்டானத்து இறைவன் குளிர்ந்த சடைமுடியை உடையவன். கொடிய வில்லை வளைத்து

மலர்க்கணை தொடுத்த மன்மதனை எரித்து இறக்குமாறு செய்து, இரதி தேவி வேண்ட அவனைத் தோற்றுவித்தவன்.

திருப்பறியலூர்

பிறப்பாதி யில்லான் பிறப்பார் பிறப்புச்
செறப்பாதி யந்தஞ் செலச்செய்யுந் தேசன்
சிறப்பா டுடையார் திருப்பறி யலூரில்
விறற்பா ரிடஞ்சூழ வீரட்டத் தானே. **#1462**

சிறப்புடையவர்கள் வாழ்கின்ற திருப்பறியலூரில் வலிமை பொருந்திய பூதகணங்கள் தன்னைச் சூழ விளங்கும் வீரட்டானத்து இறைவன், பிறப்பும் இறப்பும் இல்லாதவன். இவ்வுலகில் பிறவி எடுக்கும் உயிர்கள் அடையும் பிறப்புக்கும், சிறப்புக்கும் முதலும் முடிவும் காணச் செய்யும் ஒளி வடிவினன்.

திருப்பறியலூர்

கரிந்தா ரிடுகாட்டி லாடுங்க பாலி
புரிந்தார் படுதம் புறங்காட்டி லாடும்
தெரிந்தார் மறையோர் திருப்பறிய லூரில்
விரிந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. **#1463**

நான்கு வேதங்களையும் ஆராய்ந்தறிந்த மறையவர்கள் வாழும் விரிந்த மலர்ச்சோலைகளையுடைய திருப்பறியலூரில் விளங்கும் வீரட்டானத்து இறைவர், இறந்தவர்களைக் கரிந்தவர்களாக எரிக்கும் சுடுகாட்டில் ஆடும் கபாலி.

திருப்பறியலூர்

அரவுற்ற நாணா வனலம்ப தாகச்
செருவுற் றவர்புரந் தீயெழச் செற்றான்
தெருவிற் கொடிசூழ் திருப்பறி யலூரில்
வெருவுற் றவர்தொழும் வீரட்டத் தானே. **#1464**

தெருக்களில் நடப்பட்ட கொடிகளால் சூழப்பெற்ற திருப்பறியலூரில், பிறவிப் பிணிக்கு அஞ்சுபவர்களால் தொழப்படும் வீரட்டானத்து இறைவன், வாசுகி என்னும் பாம்பை மேருவில்லில் நாணாக இணைத்து அனலை அம்பாகக் கொண்டு தன்னோடு போரிட்டவரின் முப்புரங்களைத் தீ எழுமாறு செய்து அழித்தவன்.

திருப்பறியலூர்

நரையார் விடையா னலங்கொள் பெருமான்
அரையா ரரவம் மழகா வசைத்தான்

திரையார் புனல்சூழ் திருப்பறி யலூரில்
விரையார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. #1465
அலைகளையுடைய நீர்க்கால்களால் சூழப்பட்டதும், மணம் பொருந்திய மலர்ச் சோலைகளை உடையதுமான திருப்பறியலூர் வீரட்டத்தில் விளங்கும் இறைவன், வெண்மை நிறம் பொருந்திய விடையேற்றை உடையவன். நன்மைகளைக் கொண்டுள்ள தலைவன், இடையில் பாம்பினைக் கச்சாக அழகுறக் கட்டியவன்.

திருப்பறியலூர்

வளைக்கும் மெயிற்றின் னரக்கன் வரைக்கீழ்
இளைக்கும் படிதா னிருந்தேழை யன்னம்
திளைக்கும் படுகர்த் திருப்பறி யலூரில்
விளைக்கும் வயல்சூழ்ந்த வீரட்டத் தானே. #1466
பெண் அன்னங்கள் ஆண் அன்னங்களோடு கூடித்திளைக்கும் ஆழமான மடுக்களை உடையதும், மிகுதியான நெல்விளைவைத் தரும் வயல்களால் சூழப்பட்டதுமான திருப்பறியலூர் வீரட்டானத்து இறைவன், வளைந்த பற்களையுடைய இராவணனைக் கயிலைமலையின்கண் அகப்படுத்தி அவனை வலிமை குன்றியவனாகும்படி கால்விரலால் அடர்த்து எழுந்தருளி இருப்பவனாவான்.

திருப்பறியலூர்

விளங்கொண் மலர்மே லயனோத வண்ணன்
துளங்கும் மனத்தார் தொழத்தழ லாய்நின்றான்
இளம்கொம் பனாளோ டிணைந்தும் பிணைந்தும்
விளங்குந் திருப்பறியல் வீரட்டத் தானே. #1467
இளைய பூங்கொம்பு போன்றவளாகிய உமையம்மையோடு இணைந்தும், இடப்பாகமாக அவ்வம்மையைக் கொண்டும் விளங்குபவனாகிய திருப்பறியல்வீரட்டத்து இறைவன், ஒளி விளங்கும் தாமரை மலர்மேல் உறையும் பிரமனும் கடல்வண்ணனாகிய திருமாலும் அச்சத்தால் நடுங்கிய மனத்தை யுடையவராய்த் தன்னைத் தொழத் தழல் உருவாய் நின்றவனாவான்.

திருப்பறியலூர்

சடையன் பிறையன் சமண்சாக் கியரோ
டடையன் பிலாதா னடியார் பெருமான்
உடையன் புலியி னுரிதோ லரைமேல்
விடையன் றிருப்பறியல் வீரட்டத் தானே. #1468

திருப்பறியல் வீரட்டத்தில் உறையும் இறைவன், சடையில் பிறை அணிந்தவன். சமணர், புத்தர் ஆகியோர்க்கு அருள்புரிதற்கு உரிய அன்பிலாதவன். புலியின் தோலை இடைமேல் ஆடையாக உடுத்தவன். விடையேற்றினை உடையவன்.

திருப்பறியலூர்

நறுநீ ருகுங்காழி ஞானசம் பந்தன்
வெறிநீர்த் திருப்பறியல் வீரட்டத் தானைப்
பொறிநீ டரவன் புனைபாடல் வல்லார்க்
கறுநீ டவல மறும்பிறப் புத்தானே. **#1469**

நல்ல நீர் பாயும் சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன், மணங்கமழும் நீர்வளமுடைய திருப்பறியல் வீரட்டானத்து உறையும் புள்ளிகளையுடைய நீண்ட பாம்பினை அணிந்த இறைவனைப் புனைந்து போற்றிய இப்பதிகப் பாடல்களை வல்லவர்கட்குப் பெரிய துன்பங்களும் பிறப்பும் நீங்கும்.

திருப்பராய்த்துறை

திருப்பராய்த்துறை

திருப்பராய்த்துறை,
பண் - மேகராகக்குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருப்பராய்த்துறைநாதர்.
தேவியார் : பசும்பொன்மயிலம்மை.

நீறுசேர்வதொர் மேனியர்நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடை யண்ணலே. **#1470**

திருப்பராய்த்துறையில், கங்கையை அணிந்த சடையினராய் விளங்கும் இறைவர், திருநீறு அணிந்த திருமேனியை உடையவர். அணிகலன்கள் பல புனைந்த உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்ட கோலத்தினர். பருந்துகள் தொடரத் தக்கதாய்ப் புலால் நாற்றம் கூடிய பிரமனது தலையோட்டைக் கையில் கொண்டவர்.

திருப்பராய்த்துறை

கந்தமாமலர்க் கொன்றைகமழ்சடை
வந்தபூம்புனல் வைத்தவர்
பைந்தண்மாதவி சூழ்ந்தபராய்த்துறை
அந்தமில்ல வடிகளே. **#1471**

பசுமையான குளிர்ந்த குருக்கத்திக் கொடிகள் சூழ்ந்த திருப்பராய்த்துறையில் விளங்கும் அழிவற்றவராகிய இறைவர், மணங்கமழும் சிறந்த மலர்களும், கொன்றையும் மணக்கும் சடைமுடியின்மேல் பெருக்கெடுத்து வந்த கங்கை நதியை வைத்துள்ளவர்.

திருப்பராய்த்துறை

வேதர்வேதமெல் லாமுறையால்விரித்
தோதநின்ற வொருவனார்
பாதிபெண்ணுரு வாவர்பராய்த்துறை
ஆதியாய வடிகளே. **#1472**

திருப்பராய்த்துறையில் எல்லா உலகங்களுக்கும் ஆதியாக விளங்குபவராய் எழுந்தருளியுள்ள இறைவர், வேதங்களை அருளிச் செய்தவர். எல்லா வேதங்களையும் முறையாக விரித்துப் பொருள்

விளக்கம் அருளிய ஒப்பற்றவர். தம் திருமேனியில் பாதிப் பெண்ணுருவாக விளங்குபவர்.

திருப்பராய்த்துறை

தோலுந்தம்மரை யாடைசுடர்விடு
நூலுந்தாமணி மார்பினர்
பாலுநெய்பயின் றாடுபராய்த்துறை
ஆலநீழ லடிகளே. **#1473**

திருப்பராய்த்துறையில் ஆலநீழலில் எழுந்தருளிப் பால், நெய் முதலியவற்றை விரும்பி ஆடும் இறைவர், புலித்தோலைத் தம் இடையிலே ஆடையாக உடுத்தவர். ஒளி பொருந்திய பூணூல் அணிந்த மார்பினை உடையவர்.

திருப்பராய்த்துறை

விரவிநீறுமெய் பூசுவர்மேனிமேல்
இரவினின்றெரி யாடுவர்
பரவினாரவர் வேதம்பராய்த்துறை
அரவமார்த்த வடிகளே. **#1474**

திருப்பராய்த்துறையில் பாம்பை இடையில் கட்டியவராய் விளங்கும் பரமர், திருநீற்றைத் தம் மேனிமேல் விரவப்பூசியவர். நள்ளிரவில் சுடுகாட்டுள் நின்று எரி ஆடுபவர். வேதங்களால் பரவப் பெற்றவர்.

திருப்பராய்த்துறை

மறையுமோதுவர் மான்மறிக்கையினர்
கறைகொள்கண்ட முடையவர்
பறையுஞ்சங்கு மொலிசெய்பராய்த்துறை
அறையநின்ற வடிகளே. **#1475**

பறை, சங்கு முதலியன முழங்கும் திருவிழாக்கள் நிகழும் திருப்பராய்த்துறையில் எல்லோரும் புகழ்ந்து போற்ற எழுந்தருளிய இறைவர், வேதங்களை ஓதுபவர். மான் கன்றைக் கையின்கண் உடையவர், விடக்கறை கொண்ட கண்டத்தையுடையவர்.

திருப்பராய்த்துறை

விடையுமேறுவர் வெண்பொடிப்பூசுவர்
சடையிற்கங்கை தரித்தவர்
படைகொள்வெண்மழு வாளர்பராய்த்துறை
அடையநின்ற வடிகளே. **#1476**

திருப்பராய்த்துறையிற் பொருந்தி விளங்கும் இறைவர்,

விடையேற்றினை ஊர்ந்து வருபவர். வெண்மையான திருநீற்றைப் பூசுபவர். சடையின்மேல் கங்கையைத் தரித்தவர். வெண்மையான மழுவைப் படைக்கருவியாகக் கொண்டவர்.

திருப்பராய்த்துறை

தருக்கின்மிக்க தசக்கிரிவன்றனை
நெருக்கினார்விர லொன்றினால்
பருக்கினாரவர் போலும்பராய்த்துறை
அருக்கன்றன்னை யடிகளே. **#1477**

திருப்பராய்த்துறையில் எழுந்தருளிய இறைவர், வலிமைமிக்க பத்துத் தலைகளை உடைய இராவணனைத் தம் கால்விரல் ஒன்றினால் நெரித்தவர். தக்கன் வேள்வியில் கதிரவனின் பற்களைத் தகர்த்தவர்.

திருப்பராய்த்துறை

நாற்றமாமல ரானொடுமாலுமாய்த்
தோற்றமும்மறி யாதவர்
பாற்றினார்வினை யானபராய்த்துறை
ஆற்றன்மிக்க வடிகளே. **#1478**

திருப்பராய்த்துறையில் ஆற்றல் மிக்கவராய் விளங்கும் அடிகள், மணம் பொருந்திய தாமரை மலரில் விளங்கும் பிரமன், திருமால் ஆகியோரால் அடிமுடி அறியப் பெறாத தோற்றத்தினை உடையவர். தம்மை வழிபடுபவர்களின் வினைகளைப் போக்குபவர்.

திருப்பராய்த்துறை

திருவிலிச்சில தேரமணாதர்கள்
உருவிலாவுரை கொள்ளேலும்
பருவிலாலெயி லெய்துபராய்த்துறை
மருவினான்றனை வாழ்த்துமே. **#1479**

புண்ணியமில்லாத சிலராகிய புத்தர்களும், சமணர்களாகிய, கீழ்மக்களும், கூறும் பொருளற்ற அறவுரைகளைக் கேளாதீர். பெரிய மேருமலையாகிய வில்லால் முப்புரங்களை எய்தழித்து உலகைக் காத்துத் திருப்பராய்த்துறையில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வாழ்த்துவீர்களாக.

திருப்பராய்த்துறை

செல்வமல்கிய செல்வர்பராய்த்துறைச்
செல்வர்மேற்சிதை யாதன
செல்வன்ஞானசம் பந்தனசெந்தமிழ்

செல்வமாமிவை செப்பவே. **#1480**
பொருட் செல்வங்களால் நிறைந்து விளங்கும் சிவஞானச் செல்வர்கள் வாழும் திருப்பராய்த்துறையில் எழுந்தருளிய, வீடுபேறாகிய செல்வத்தையுடைய, இறைவன்மீது, அருட்செல்வனாக விளங்கும் ஞானசம்பந்தன் அருளிய, அழிவற்ற இச்செந்தமிழ்ப் பாடல்களை ஓதினால், ஓதின அவர்கட்கு எல்லாச் செல்வங்களும் உண்டாகும்.

திருத்தருமபுரம்

திருத்தருமபுரம்

திருத்தருமபுரம்,
பண் - யாழ்மூரி, -,
சுவாமிபெயர் : -.
தேவியார் : -.

மாதர்ம டப்பிடியும் மட வன்னமு மன்னதோர்
நடையுடைம் மலைமக டுணையென மகிழ்வர்
பூதவி னப்படைநின் றிசைபாடவு மாடுவ
ரவர்படர் சடைந்நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங் கும லர்ச்சிறைவண்டறை
யெழில் பொழில் குயில் பயில்தருமபு ரம்பதியே. **#1481** ★★★★★

விரும்பத்தக்க இளம்பிடியையும், இள அன்னத்தையும் போன்ற நடையினை உடையவளாகிய பார்வதி தேவியைத் தம் துணைவியாகக் கொண்டு மகிழ்பவரும், பூதப்படைகள் நின்று இசை பாட ஆடுபவரும், விரிந்த சடைகளையுடைய நீண்ட முடிமீது கங்கையை அணிந்தவரும் வேதங்களையும், ஏழிசைகளையும் பாடுபவரும் ஆகிய இறைவர்தம் இடமாக விளங்குவது ஆழ்ந்த கடலின் வெண்மையான அலைகள் ஆரவாரித்து நுரைகளோடு கரையைப் பொருது விளங்கவும், அதன் அயலில் புன்னை மரங்களில் பூத்த மகரந்தம் பொருந்திய மலர்களில் வண்டுகள் ஒலிக்கவும். அழகிய பொழில்களில் குயில்கள் பாடவும் விளங்கும் திருத்தருமபுரம் என்னும் நகராகும்.

திருத்தருமபுரம்

பொங்குந டைப்புகலில் விடை யாமவ ரூர்திவெண்
பொடி யணிதடங் கொண்மார் புபூணநூல் புரள
மங்குலி டைத்தவழும் மதி சூடுவ ராடுவர்
வளங் கிளர் புனலர வம்வைகிய சடையர்
சங்குக டற்றிரையா லுதை யுண்டுச ரிந்திரிந்
தொசிந் தசைந்திசைந் துசே ரும்வெண்மணற் குவைமேல்
தங்குக திர்ம்மணிநித் தில மெல்லிரு ளொல்கநின்
றிலங் கொளிந் நலங் கெழிற் றருமபு ரம்பதியே. **#1482**

சினம் பொங்கிய நடையினை உடையதாய், உவமை சொல்லுதற்கு வேறொன்று இல்லாததாய் விளங்கும் விடையை ஊர்தியாகக்

கொண்டவரும், திருநீறு அணிந்த அகன்ற மார்பின்கண் பூணூல் புரள வானத்தில் தவழும் பிறைமதியைச் சூடி ஆடுபவரும், வளமைகளைத் தருவதாகிய கங்கை, அரவம் ஆகியன தங்கிய சடையினருமாகிய சிவபிரானாரது இடம், கடல் அலைகளால் அலைக்கப் பெற்ற சங்குகள் சரிந்து இரிந்து, ஒசிந்து, அசைந்து, இசைந்து வெண்மணற் குவியலின் மேல் ஏறித் தங்கி ஈனும் ஒளி பொருந்திய முத்துமணிகளால் மெல்லிய இருள் விலகி ஒளி சிறந்து தோன்றும் அழகிய திருத்தருமபுரமாகிய நகரமாகும்.

திருத்தருமபுரம்

விண்ணுறு மால்வரைபோல் விடை யேறுவ ராறுசூ
டுவர் விரி சுரியொளி கொடோடுநின் றிலங்கக்
கண்ணுற நின்றொளிருங் கதிர் வெண்மதிக் கண்ணியர்
கழிந் தவ ரிழிந் திடும் முடைதலை கலனாப்
பெண்ணுற நின்றவர்தம் முரு வம்மயன் மாறொழவ்
வரி வையைப் பிணைந் திணைந் தணைந்ததும் பிரியார்
தண்ணிதழ் முல்லையொடெண் ணிதழ் மௌவன்ம ருங்கலர்
கருங் கழிந் நெருங் குநற் றருமபு ரம்பதியே. **#1483**

வானளாவிய பெரிய மலை போன்ற விடையின் மேல் ஏறி வருபவரும், கங்கையை அணிந்தவரும், விரிந்து சுருண்டு ஒளிதரும் தோடு விளங்கக் கண்ணைக் கவரும் ஒளிதரும் பிறைமதியாகிய கண்ணியை முடியிற் சூடியவரும், முடை நாறும் தலையோட்டை உண்கலனாகக் கொண்டவரும், உமையம்மையைக் கூடிப் பிணைந்து இணைந்து அணைத்துத் தம் திருமேனியில் ஒரு பாதியாகக் கொண்டவரும், தமது உருவத்தை அயனும் மாலும் தொழ நின்றவருமாகிய சிவபிரானாரது இடம், குளிர்ந்த இதழ்களையுடைய முல்லை மலர்களோடு எட்டு இதழ்களையுடைய காட்டு மல்லிகை மலர்கள் மலர்ந்து மணம் வீசுவதும், கரிய உப்பங்கழிகள் நிறைந்ததுமாகிய திருத்தருமபுரம் என்னும் நன்னகராகும்.

திருத்தருமபுரம்

வாருறு மென்முலைநன் னுத லேழையொ டாடுவர்
வளங் கிளர் விளங் குதிங் கள்வைகிய சடையர்
காருற நின்றலரும் மலர்க் கொன்றையங் கண்ணியர்
கடுவ் விடை கொடி வெடி கொள்காடுறை பதியர்
பாருற விண்ணுலகம் பர வப்படு வோரவர்
படு தலைப் பலி கொளல் பரிபவந் நினையார்
தாருறு நல்லரவம் மலர் துன்னிய தாதுதிர்

தழை பொழின் மழைந் நுழை தருமபு ரம்பதியே. **#1484**
கச்சணிந்த மென்மையான தனங்களையுடைய உமையம்மையோடு கூடி நடனம் ஆடுபவரும், உலகிற்கு வளம் சேர்க்கும் நிலவொளியைத் தரும் மதி சூடிய சடையினரும், கார்காலத்தே மலரும் கொன்றை மாலையைச் சூடியவரும், விரைந்து செல்லும் விடையைக் கொடியாகக் கொண்டவரும், அச்சந்தரும் சுடுகாட்டைத் தமக்குரிய இடமாகக் கொண்டவரும், மண்ணுலகத்தினர், விண்ணுலகத்தினர்களால் போற்றப்படுபவரும், அவமானம் எனக் கருதாது அழிந்துபட்ட தலையோட்டில் பலிகொள்பவரும், பாம்பை மாலையாக அணிந்தவரும் ஆகிய சிவபிரானார் எழுந்தருளிய பதி. மகரந்தங்களை உதிர்க்கும் மலர்கள் நிறைந்த, தழைகள் செறிந்த, மேகங்கள் தவழும் பொழில்கள் சூழ்ந்த திருத்தருமபுரம் என்னும் நகரமாகும்.

திருத்தருமபுரம்

நேரும வர்க்குணரப் புகி லில்லைநெ டுஞ்சடைக்
கடும் புனல் படர்ந் திடம் படுவ்வதொர் நிலையர்
பேரும வர்க்கெனையா யிர முன்னைப்பி றப்பிறப்
பிலா தவ ருடற் றடர்த் தபெற்றியா ரறிவார்
ஆரம வர்க்கழல்வா யதொர் நாகம ழஃகுறவ்
வெழுஃகொழும் மலர் கொள்பொன் னிதழிநல் லலங்கல்
தாரம வர்க்கிமவான் மக ளூர்வது போர்விடை
கடிபடு செடி பொழிற் றருமபு ரம்பதியே. **#1485**
ஆராயுமிடத்து அவருக்கு உவமையாகச் சொல்லத்தக்கவர் யாரும் இல்லை. கடிதாக வந்த கங்கைக்குத் தம் நீண்ட சடையை இடமாகக் கொடுத்த நிலையினர் அவர். அவருக்குப் பெயர்களோ பல ஆயிரம். முன்தொட்டு அவருக்குப் பிறப்பு இறப்பு இல்லை. தம்மை எதிர்த்தவர்களோடு சினந்து அவர்களைக் கொன்ற அவரது பெருவலியை யார் அறிவார்? தீயின் தன்மையுடைய நஞ்சினைக் கொண்ட நாகம் அவருக்கு ஆரம். செழுமையான பொன்போன்ற கொன்றை மலர், அவருக்கு மாலையாகும். இமவான் மகளாகிய பார்வதி அவருக்கு மனைவி. அவர் ஊர்ந்து செல்வது போர்ப் பயிற்சி உடைய இடபம். அவர் தங்கியுள்ள இடம் மணம் பொருந்திய ஒளிகளையுடைய பொழில்களால் சூழப்பட்ட தருமபுரம் என்னும் பதியாகும்.

திருத்தருமபுரம்

கூழையங் கோதைகுலா யவ டம்பிணை புல்கமல்
குமென் முலைப் பொறி கொள்பொற் கொடியிடைத் துவர்வாய்
மாழையொண் கண்மடவா ளையொர் பாகம கிழ்ந்தவர்

வலம் மலிபடை விடை கொடிகொடும் மழுவ்வாள்
யாழையும் மெள்கிடவே ழிசை வண்டுமு ரன்றினந்
துவன் றிமென் சிறஃகறை யுறந்நறவ்வி ரியுந்நல்
தாழையு ஞாழலுந்நீ டிய கானலி னள்ளலி
சைபுள்ளினந் துயில் பயி றருமபு ரம்பதியே. **#1486**

மலர்மாலை சூடிய கூந்தலையும், தன் கணவரால் தழுவப்பெறும் மெல்லிய தனங்களையும், தேமல்களோடு கூடிய மேனியினையும், கொடி போன்ற இடையையும், பவளம் போன்ற வாயையும், மாவடு போன்ற ஒளி விளங்கும் கண்களையும் உடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டு மகிழ்ந்தவரும், வெற்றியைத்தரும் படைக்கலனாக மழுவாளைக் கொண்டவரும் விடையைக் கொடியாகக் கொண்டவரும் ஆகிய சிவபிரான் உறையும் பதி, யாழிசையையும் வெல்லுமாறு வண்டுகள் ஏழிசை முரன்று மெல்லிய சிறகுகளால் ஒலித்துச் சூழும் தேன்நிறைந்த நல்ல தாழை மரங்களும், புலிநகக் கொன்றையும் நிறைந்த கடற்கரைச் சோலைகளிலுள்ள சேற்று நிலங்களில் இசைபாடும் பறவையினங்கள் துயில்கொள்ளும் தலமாகிய தருமபுரமாகும்.

திருத்தருமபுரம்

தேமரு வார்குழலன் னந டைப்பெடை மான்விழித்
திருந் திழை பொருந் துமே னிசெங்கதிர் விரியத்
தூமரு செஞ்சடையிற் றுதை வெண்மதி துன்றுகொன்
றைதொல்புனல் சிரங் கரந் துரித்ததோ லுடையர்
காமரு தண்கழிநீ டிய கானல கண்டகங்
கடல் லடை கழி யிழி யமுண்டகத் தயலே
தாமரை சேர்குவளைப் படு கிற்கழு நீர்மலர்
வெறி கமழ் செறிவ் வயற் றருமபு ரம்பதியே. **#1487**

இனிமையும், மணமும் பொருந்திய நீண்ட கூந்தல், அன்னம் போன்ற நடை, பெண்மான் போன்ற விழி இவற்றை உடையவளும் திருத்தம் பெற்ற அணிகலன்கள் பூண்டவளும் ஆகிய உமையம்மை ஒருபாலாகப் பொருந்திய மேனியனும், செவ்வொளி விரியும் தூய செஞ்சடையில் வெண்மையான பிறைமதி, நிறைந்த கொன்றை மலர், பழமையான கங்கை நீர், தலைமாலை ஆகியவற்றை மறைத்துச் சூடி, உரித்து உடுத்த தோல்களை உடையாகக் கொண்டவனும் ஆகிய இறைவனது பதி அழகிய குளிர்ந்த உப்பங்கழிகளை அடுத்துள்ள கடற்கரைச் சோலைகளில் தாழை மரங்களும், கடலினிடத்திருந்து பெருகிவரும் உப்பங்கழிகளிடத்து நீர்முள்ளிகளும், நீர் நிலைகளில் தாமரை, குவளை,

செங்கழுநீர் ஆகியவற்றின் மலர்களும் மணம் வீசுவதும், வயல்கள் செறிந்ததுமாகிய தருமபுரமாகும்.

திருத்தருமபுரம்

தூவண நீறகலம் பொலி யவ்விரை புல்கமல்
குமென் மலர் வரை புரை திரள்புயம் மணிவர்
கோவண மும்முழையின் னத ளும்முடை யாடையர்
கொலைம் மலி படை யொர்சூ லமேந்திய குழகர்
பாவண மாவலறத் தலை பத்துடை யவ்வரக்
கனவ் வலி யொர்கவ் வைசெய் தருள்புரி தலைவர்
தாவண வேறுடையெம் மடி கட்கிடம் வன்றடங்
கடல் லிடுந் தடங் கரைத் தருமபு ரம்பதியே. **#1488**

தூய வெண்ணிறம் பொருந்திய திருநீறு மார்பின் கண் விளங்க, மலை போலத் திரண்ட தோள்களில் மணம் நிறைந்து செறிந்த மென்மையான மலர்மாலையை அணிவர். கோவணத்தையும் மான் தோலையும் ஆடைகளாக உடையவர். கொல்லும் தொழிலில் வல்ல ஆயுதமாக ஓர் சூலத்தை ஏந்திய இளையர். பத்துத் தலைகளை உடைய அரக்கனாகிய இராவணன், பாடல்கள் பாடி அலறுமாறு அவனது வலிமையைச் செற்றுப் பின் அருள் புரிந்த தலைவர். தாவிச் செல்லும் இயல்புடைய ஆனேற்றைத் தம் ஊர்தியாகக் கொண்டவர். அவ்அடிகட்கு இடம், வலிய பெரிய கடலின் அலைகள் சேர்ந்த பெரிய மணற்கரையில் விளங்கும் தருமபுரம் என்னும் பதியாகும்.

திருத்தருமபுரம்

வார்மலி மென்முலைமா தொரு பாகம தாகுவர்
வளங் கிளர் மதி யர வம்வைகிய சடையர்
கூர்மலி சூலமும்வெண் மழு வும்மவர் வெல்படை
குனி சிலைதனிம் மலை யதேந்திய குழகர்
ஆர்மலி யாழிகொள்செல் வனு மல்லிகொ டாமரைம்
மிசை யவன் னடிம் முடி யளவுதா மறியார்
தார்மலி கொன்றையலங் கலு கந்தவர் தங்கிடந்
தடங் கடல் லிடுந் திரைத் தருமபு ரம்பதியே. **#1489**

கச்சணிந்த மென்மையான தனங்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவர். பிறைமதி, பாம்பு ஆகியவை தங்கும் சடையினர். கூரிய சூலமும், வெண்ணிறமான மழுவும் அவர் வெற்றி கொள்ளுதற்குரிய படைக்கலங்களாகும். ஒப்பற்ற மேரு மலையை வளைத்து வில்லாக ஏந்திய இளைஞர். ஆரக்கால் பொருந்திய சக்கராயுதத்தைக் கொண்ட திருமாலும், அகஇதழ்களை உடைய தாமரை

மலரில் உறையும் பிரமனும் தம்முடைய அடிமுடிகளின் அளவுகளைத் தாம் அறியாவாறு அயரும்படி செய்தவர் அவர். கொத்தாகப் பூக்கும் கொன்றை மலரால் தொடுத்த மாலையை விரும்புபவர். அப்பெருமானார் தங்கியுள்ள இடம், பெரிய கடலின் அலைகள் வந்து தழுவிச் செல்லும் தருமபுரம் என்னும் பதியாகும்.

திருத்தருமபுரம்

புத்தர்க டத்துவர்மொய்த் துறி புல்கிய கையர்பொய்ம்
மொழிந் தழி வில்பெற் றியுற் றநற்றவர் புலவோர்
பத்தர்க ளத்தவமெய்ப் பயனாக வுகந்தவர்
நிகழ்ந் தவர் சிவந் தவர் சுடலைப்பொடி யணிவர்
முத்தன வெண்ணகையொண் மலை மாதுமை பொன்னணி
புணர்ம் முலை யிணை துணை யணைவதும் பிரியார்
தத்தரு வித்திரளுந் திய மால்கட லோதம்வந்
தடர்ந் திடுந் தடம்பொழிற் றருமபு ரம்பதியே. **#1490**

புத்தர்களாகிய தத்துவாதிகளும், உறிகளை ஏந்திய கையினராய்த் திரியும் சமணர்களும் கூறும் பொய் மொழிகளினின்று நீங்கிய நல்ல தவத்தை உடையவர்களும், புலவர்கள் பக்தர்கள் ஆகியோரின் தவத்தை மெய்ப் பயனாக உகந்தவரும், அன்புக்கு நெகிழ்பவரும், வன்புக்குச் சினப்பவரும் சுடலைப் பொடி அணிபவரும், முத்துப் போன்ற வெண்மையான பற்களை உடைய ஒளி பொருந்திய மலை மாதாகிய பார்வதி தேவியாரின் ஒன்றோடு ஒன்று செறிந்த தனங்கள் இரண்டையும் துணையாகக் கொண்டு அவற்றைப் பிரியாதவரும் ஆகிய சிவபிரானாரது பதி, தவழும் அலைகளை உடைய பெரிய கடலின் ஓதநீர் வந்து பொருந்தும் தருமபுரம் ஆகும்.

திருத்தருமபுரம்

பொன்னெடு நன்மணிமா ளிகை சூழ்விழ வம்மலீ
பொரூஉம் புன றிரூஉவமர் புகல்லியென் றுலகில்
தன்னொடு நேர்பிறவில் பதி ஞானசம் பந்தனஃ
துசெந் தமிழ்த் தடங் கடற் றருமபுரம் பதியைப்
பின்னெடு வார்சடையிற் பிறை யும்மர வும்முடை
யவன் பிணை துணை கழல் கள்பேணுத லுரியார்
இன்னொடு நன்னுலகெய் துவ ரெய்திய போகமும்
முறு வர்கள் ளிடர் பிணி துயரணைவ் விலரே. **#1491**

பொன்னால் இயன்ற நெடிய நல்ல மணிகள் இழைத்த மாளிகைகள் சூழ்ந்ததும், திருவிழாக்கள் மலிந்ததும், கரைகளை மோதும் நிறைந்த நீர்வளம் உடையதும், திருமகள் உறைவதுமான புகலி என்னும், தனக்கு

உவமை சொல்ல இயலாத பதியின் மன்னனாகிய ஞானசம்பந்தனுடைய பரந்து விரிந்து கடல் போன்ற செந்தமிழாகிய பாமாலைகளால், ஒன்றோடு ஒன்று பின்னி நீண்டுள்ள சடைமுடியில் பிறையையும் பாம்பையும் அணிந்துள்ளவனாகிய சிவபிரானுடைய பிணைந்துள்ள இரண்டு திருவடிகளையும் போற்றி அன்பு செய்பவர், இனிய பெரிய நல்லுலகை எய்துவர், அடையத் தக்கனவாய போகங்களையும் பெறுவர். இடர் செய்யும் பிணி துயர் முதலியன நீங்கி என்றும் இன்பம் உறுவர்.

முதல் திருமுறை முற்றும்.

முதலாம் திருமுறை - திருக்கடைக்காப்பு முற்றும்



பன்னிருதிருமுறை

திருஞானசம்பந்தர்

இரண்டாம் திருமுறை - திருக்கடைக்காப்பு

தொகுப்பு: சங்கர்

சித்திரை 2017 வெளியீடு

பன்னிருதிருமுறை

இரண்டாம் திருமுறை - திருக்கடைக்காப்பு

திருஞானசம்பந்தர் அருளியது

1331 பாடல்கள் கொண்ட 122 பதிகங்கள்

பன்னிருதிருமுறை

திருஞானசம்பந்தர்

இரண்டாம் திருமுறை - திருக்கடைக்காப்பு

தொகுப்பு: சங்கர்

சித்திரை 2017 வெளியீடு

திருப்பூந்தராய்

சீர்காழி

திருப்பூந்தராய்,
பண் - இந்தளம்

செந்நெ லங்கழ னிப்பழ னத்தய லேசெழும்
புன்னை வெண்கிழி யிற்பவ ளம்புரை பூந்தராய்
துன்னி நல்லிமை யோர்முடி தோய்கழ லீர்சொலீர்
பின்னு செஞ்சடை யிற்பிறை பாம்புடன் வைத்ததே. #1

செந்நெல் விளையும் அழகிய வயல்களை உடைய சோலைகளின் அயலிடங்களில் வளமையான புன்னை மரங்கள் உதிர்த்த பூக்கள், வெண்மையான துணியிற் பவளங்கள் பரப்பினாற் போல விளங்கும் திருப்பூந்தராய் என்னும் சீகாழிப் பதியில், நல்ல தேவர்கள் நெருங்கிவந்து, தங்களின் முடிகளைத் தோய்த்து வணங்கும் திருவடிகளை உடைய இறைவரே! பின்னிய உமது செஞ்சடையில் இளம்பிறையை அதற்குப் பகையாகிய பாம்போடு வைத்துள்ளது ஏனோ? சொல்வீராக.

சீர்காழி

எற்று தெண்டிரை யேறிய சங்கினொ டிப்பிகள்
பொற்றி கழ்கம லப்பழ னம்புகு பூந்தராய்ச்
சுற்றி நல்லிமை யோர்தொழு பொற்கழ லீர்சொலீர்
பெற்றம் ஏறுதல் பெற்றிமை யோபெரு மானிரே. #2

எறிகின்ற தெளிந்த கடல் அலைகளில் ஏறிவந்த சங்குகளும் இப்பிகளும் பொன்போல் விளங்கும் தாமரைகள் மலர்ந்த வயல்களில் வந்து புகும் பூந்தராய் என்னும் சீகாழிப்பதியில், நல்ல தேவர்கள் சூழ்ந்து தொழும் அழகிய திருவடிகளை உடைய இறைவரே! அயிராவணம் முதலிய ஊர்திகள் இருக்க விடையேறி வருதல் உமக்கு ஏற்ற தன்மைத் தாகுமோ? சொல்வீராக.

சீர்காழி

சங்கு செம்பவ ளத்திரண் முத்தவை தாங்கொடு
பொங்கு தெண்டிரை வந்தலைக் கும்புனற் பூந்தராய்த்
துங்க மால்களிற் றின்னுரி போர்த்துகந் தீர்சொலீர்
மங்கை பங்கமும் அங்கத்தொ டொன்றிய மாண்பதே. #3

பொங்கி வரும் தெளிந்த கடல் அலைகள் சங்கு செம்பவளம் முத்து ஆகியவற்றைக் கொண்டு வந்து வீசும் நீர்வளம் சான்ற பூந்தராய்

என்னும் சீகாழிப் பதியில் உயரிய பெரிய களிற்று யானையை உரித்து அதன் தோலைப் போர்த்து மகிழ்ந்துறையும் இறைவரே! உமது திருமேனியின் இடப்பாகமாக உமையம்மையை ஓருடம்பில் ஒன்றுவித்துள்ள மாண்புயாதோ? சொல்வீராக.

சீர்காழி

சேம வன்மதில் பொன்னணி மாளிகை சேணுயர்
பூம ணங்கம ழும்பொழில் சூழ்தரு பூந்தராய்ச்
சோம னும்மர வுந்தொடர் செஞ்சடை யீர்சொலீர்
காமன் வெண்பொடி யாகக் கடைக்கண் சிவந்ததே. **#4**

பாதுகாவலாக அமைந்த வலிய மதில்களும் பொன்னால் அழகுறுத்தப்பெற்ற அழகிய மாளிகைகளும், மிக உயர்ந்து மலர்மணம் கமழும் சோலைகளும் சூழ்ந்துள்ள பூந்தராய் என்னும் சீகாழிப்பதியில், திங்களும் பாம்பும் தங்கிய செஞ்சடையுடையவராய் எழுந்தருளிய இறைவரே! உயிர்கட்குப் போகத்தின் மேல் அவாவினை விளைக்கும் மன்மதன் வெண்பொடியாகுமாறு அவனைக் கடைக்கண் சிவந்து அழித்தது ஏனோ? சொல்வீராக.

சீர்காழி

பள்ள மீனிரை தேர்ந்துழ லும்பகு வாயன
புள்ளு நாடொறுஞ் சேர்பொழில் சூழ்தரு பூந்தராய்த்
துள்ளு மான்மறி யேந்திய செங்கையி னீர்சொலீர்
வெள்ள நீரொரு செஞ்சடை வைத்த வியப்பதே. **#5**

நீர்ப்பள்ளங்களில் இருக்கும் மீன்களை இரையாகத் தேர்ந்துகொள்ளுதற்குத் திரியும் பிளந்த வாயை உடைய நாரைப் பறவைகள், நாள்தோறும், பல இடங்களிலிருந்தும் வந்து தங்கும் பொழில்கள் சூழ்ந்த பூந்தராய் என்னும் சீகாழிப்பதியில், துள்ளுகின்ற மான் கன்றை ஏந்திய செங்கையை உடைய சிவபிரானே பெருகி வந்த கங்கை வெள்ளத்தைச் சிவந்த சடையில் தடுத்து நிறுத்தித் தாங்கிய வியத்தகு செயலுக்குக் காரணம் யாதோ? சொல்வீராக.

சீர்காழி

மாதி லங்கிய மங்கைய ராட மருங்கெலாம்
போதி லங்கம லம்மது வார்புனற் பூந்தராய்ச்
சோதி யஞ்சுடர் மேனிவெண் ணீறணி வீர்சொலீர்
காதி லங்குழை சங்கவெண் டோடுடன் வைத்ததே. **#6**

அழகிய பெண்கள் ஆங்காங்கே நடனம் ஆடுவதும், ஊர் மருங்கெலாம் பூத்துள்ள அழகிய தாமரை மலர்கள் தம்மிடம் நிறைந்துள்ள தேனை

ஒழுக விடுவதும் ஆகிய நீர்வளம் மிக்க பூந்தராய் என்னும் சீகாழிப்பதியில், ஒளிமிக்க அழகிய தமது திருமேனியில் வெண்ணீறு அணிந்து எழுந்தருளிய இறைவரே! காதுகள் இரண்டனுள் ஒன்றில் குழையையும் ஒரு காதில் சங்கத் தோட்டையும் அணிதற்குக் காரணம் யாதோ? சொல்வீராக.

சீர்காழி

வருக்க மார்தரு வான்கடு வன்னொடு மந்திகள்
தருக்கொள் சோலை தருங்கனி மாந்திய பூந்தராய்த்
துரக்கு மால்விடை மேல்வரு வீர்அடி கேள்சொலீர்
அரக்கன் ஆற்றல் அழித்தருளாக்கிய ஆக்கமே. **#7**

இனங்களோடு கூடிய ஆண் குரங்குகள், பெண் குரங்குகளோடு கூடி, மரங்கள் நிறைந்துள்ள சோலைகள் தரும் கனிகளை வயிறார உண்டு மகிழும் பூந்தராய் என்னும் சீகாழிப் பதியில் எழுந்தருளியிருந்து, செலுத்தக்க மாலாகிய இடபத்தின் மேல் காட்சிதரும் அடிகளே! இராவணனின் தருக்கினை அழித்து உடன் அவனுக்கு அருள் வழங்கிய ஆக்கத்திற்குக் காரணம் யாதோ? சொல்வீராக.

சீர்காழி

வரிகொள் செங்கயல் பாய்புனல் சூழ்ந்த மருங்கெலாம்
புரிசை நீடுயர் மாடநி லாவிய பூந்தராய்ச்
சுருதி பாடிய பாணியல் தூமொழி யீர்சொலீர்
கரிய மால்அயன் நேடிஉ மைக்கண்டி லாமையே. **#8**

மருங்கெலாம் வரிகளைக் கொண்டுள்ள செவ்விய கயல்மீன்கள் பாயும் நீர் நிலை சூழ்ந்ததும், மதில்கள் சூழ்ந்து நீண்டு உயர்ந்த மாடமாளிகைகள் விளங்குவதுமான பூந்தராய் என்னும் சீகாழிப்பதியில், வேதங்களைப் பாடியும், இசைப்பாடல் போன்ற இனிய மொழிகளைப் பேசியும் எழுந்தருளி விளங்கும் இறைவரே! கரிய திருமாலும் பிரமனும் உம்மைத் தேடிக் காண இயலாமைக்குரிய காரணம் யாதோ? சொல்வீராக.

சீர்காழி

வண்டலங்கழ னிம்மடை வாளைகள் பாய்புனற்
புண்ட ரீகம லர்ந்தும துத்தரு பூந்தராய்த்
தொண்டர் வந்தடி போற்றிசெய் தொல்கழ லீர்சொலீர்
குண்டர் சாக்கியர் கூறிய தாங்குறி யின்மையே. **#9**

வளம்மிக்க வண்டல் மண்ணை உடைய வயல்களின் மடைகளில் வாளை மீன்கள் பாயும் நீர் நிலைகளில் தாமரைமலர்கள் மலர்ந்து

தேனைத்தரும் புந்தராய் என்னும் சீகாழிப் பதியில், தொண்டர்கள் வந்து வணங்கும் கழல் அணிந்த பழமையான திருவடிகளை உடைய இறைவரே! சமணர்களும் சாக்கியர்களும் உம்மைக் கூறும் பொருளற்ற பழிமொழிகட்குக் காரணம் யாதோ? சொல்வீராக.

சீர்காழி

வார்கடல் வந்தண வும்மணற் கானல்வாய்ப்
புகலி ஞானசம் பந்தன்எ ழில்மிகு பூந்தராய்ப்
பகவ னாரைப்ப ரவுசொன் மாலைபத் தும்வல்லார்
அகல்வர் தீவினை நல்வினை யோடுட னாவரே. #10

சுறா மீன்களை உடைய பெரிய கடல் நீர் வந்து சேரும் மணல் நிறைந்த கடற்கரைச் சோலைகளைக் கொண்டுள்ள புகலிப்பதியில் தோன்றிய ஞானசம்பந்தன், அழகுமிக்க பூந்தராயில் எழுந்தருளிய இறைவரைப் பரவிப்பாடிய இப்பதிகப் பாடல் பத்தையும் ஓதவல்லவர் தீவினை அகல்வர். அவர்கள் நல்வினை உடையவர் ஆவர்.

திருவலஞ்சுழி

திருவலஞ்சுழி

திருவலஞ்சுழி,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காப்பகத்தீசுவரர்.
தேவியார் : மங்களநாயகியம்மை.

விண்டெ லாமல ரவ்விரை
நாறுதண் டேன்விம்மி
வண்டெ லாம்நசை யால்இசை
பாடும்வ லஞ்சுழித்
தொண்டெ லாம்பர வுஞ்சுடர்
போல்ஒளி யீர்சொலீர்
பண்டெ லாம்பலி தேர்ந்தொலி
பாடல்ப யின்றதே. #11

மலர்கள் எல்லாம் விண்டு மணம் வீசவும், அம்மலர்களில் நிறைந்துள்ள தண்ணிய தேனை உண்ணும்விருப்பினால் வண்டுகள் இசைபாடவும், விளங்கும் சோலைகள் சூழ்ந்த திருவலஞ்சுழியில் தொண்டர்கள் பரவச் செஞ்சுடர் போன்ற ஒளியினை உடையவராய் எழுந்தருளிய இறைவரே! முன்னெல்லாம் நீர் ஒலியோடு பாடல்களைப் பாடிக்கொண்டு பலி ஏற்பதற்குக் காரணம் யாதோ? சொல்வீராக.

திருவலஞ்சுழி

பாரல் வெண்குரு கும்பகு
வாயன நாரையும்
வாரல் வெண்டிரை வாயிரை
தேரும்வ லஞ்சுழி
மூரல் வெண்முறு வல்நகு
மொய்யொளி யீர்சொலீர்
ஊரல் வெண்டலை கொண்டுல
கொக்கவு ழன்றதே. #12

நீண்ட கழுத்தினை உடைய வெள்ளிய கொக்குகளும், பிளந்த வாயை உடைய நாரைகளும், ஓடுகின்ற தண்ணீரின் வெண்மையான அலைகளில் இரை தேடுகின்ற திருவலஞ்சுழியில் புன்னகையோடு வெள்ளி பற்கள் விளங்க, செறிந்த ஒளிப்பிழம்பினராய் எழுந்தருளிய இறைவரே! முடியில் வெண்மையான தலை மாலை பொருந்தியவராய்

உலகம் முழுவதும் சென்று திரிந்து பலி ஏற்கக் காரணம் யாதோ? சொல்வீராக.

திருவலஞ்சுழி

கிண்ண வண்ணமல ருங்கிளர்
தாமரைத் தாதளாய்
வண்ண நுண்மணன் மேலனம்
வைகும்வ லஞ்சுழிச்
சுண்ண வெண்பொடிக் கொண்டுமெய்
பூசவல் லீர்சொலீர்
விண்ண வர்தொழ வெண்டலை
யிற்பலி கொண்டதே. **#13**

கிண்ணம் போல் வாய் விரிந்து செவ்வண்ணம் பொருந்தியதாய் மலர்ந்து விளங்கும் தாமரை மலர்களின் தாதுகளை அளாவி அழகிய நுண்மணற் பரப்பின் மேல் அன்னங்கள் வைகும் திருவலஞ்சுழியில், உடலிற்பூசும் சுண்ணமாகத் திருநீற்றுப் பொடியை மேனிமேற் பூசுதலில் வல்லவராய் விளங்கும் இறைவரே! தேவர்கள் எல்லாம் உம்மை வந்து வணங்கும் தலைமைத்தன்மை உடையவராயிருந்தும் வெள்ளிய தலையோட்டில் பலிகொண்டு திரிதற்குக் காரணம் யாதோ? சொல்வீராக.

திருவலஞ்சுழி

கோடெ லாநிறை யக்குவ
ளைம்மல ருங்குழி
மாடெ லாமலி நீர்மண
நாறும்வ லஞ்சுழிச்
சேடெ லாமுடை யீர்சிறு
மான்மறி யீர்சொலீர்
நாடெ லாமறி யத்தலை
யில்நற வேற்றதே. **#14**

கரைகளெல்லாம் நிறையுமாறு குழிகளில் பூத்த குவளை மலர்கள் எல்லா இடங்களிலும் நிறைந்திருத்தலால் அங்குள்ள தண்ணீர், குவளை மலரின் மணத்தை வீசும் திருவலஞ்சுழியில் விளங்கும் பெருமைகள் எல்லாம் உடையவரே! சிறிய மான் கன்றைக் கையில் ஏந்தியவரே! நாடறியத் தலையோட்டில் பிச்சை ஏற்றல் ஏனோ? சொல்வீராக.

திருவலஞ்சுழி

கொல்லை வென்றபுனத் திற்குரு
மாமணி கொண்டுபோய்

வல்லை நுண்மணன் மேலனம்
வைகும்வ லஞ்சுழி
முல்லை வெண்முறு வன்னகை
யாளொளி யீர்சொலீர்
சில்லை வெண்டலை யிற்பலி
கொண்டுழல் செல்வமே. **#15**

முல்லை நிலத்தைப் போன்ற காடுகளில் கிடைக்கும் நிறம் பொருந்திய மணிகளை எடுத்துச்சென்று விரைவில் அன்னங்கள் நுண்ணிய மணற் பரப்பின்மேல் தங்கி வாழும் திருவலஞ்சுழியில் எழுந்தருளிய, முல்லை அரும்பு போன்ற வெண்மையான முறுவலோடு புன்சிரிப்பையுடைய உமாதேவியை ஆளும் ஒளி வடிவுடையவரே! சிறுமையைத்தரும் வெண்டலையோட்டில் பலிகொண்டுழல்வதைச் செல்வமாகக் கருதுதல் ஏனோ? சொல்வீராக.

<u>திருவலஞ்சுழி</u>

பூச நீர்பொழி யும்புனற்
பொன்னியிற் பன்மலர்
வாச நீர்குடை வாரிடர்
தீர்க்கும்வ லஞ்சுழித்
தேச நீர்திரு நீர்சிறு
மான்மறி யீர்சொலீர்
ஏச வெண்டலை யிற்பலி
கொள்வ திலாமையே **#16**

நீர் பெருகி வரும் காவிரியில் பூச நன்னாளில் பல மலர்களோடு கூடி மணம் கமழ்ந்துவரும் நீரில் மூழ்குபவர்களின் இடர்களைத் தீர்த்தருளும் திருவலஞ்சுழித் தேசரே! அழகிய சிறிய மான்கன்றைக் கையில் ஏந்தியவரே! பலரும் இகழ வெண்டலையில் நீர் பலிகொள்வது செல்வம் இல்லாமையினாலோ? சொல்வீராக.

<u>திருவலஞ்சுழி</u>

கந்த மாமலர்ச் சந்தொடு
காரகி லுந்தழீஇ
வந்த நீர்குடை வாரிடர்
தீர்க்கும்வ லஞ்சுழி
அந்த நீர்முத னீர்நடு
வாமடி கேள்சொலீர்
பந்த நீர்கரு தாதுல
கிற்பலி கொள்வதே. **#17**

மணம் பொருந்திய சிறந்த மலர்களையும் சந்தன மரங்களையும், கரிய அகில் மரங்களையும் தாங்கிவந்த காவிரிநீரில் குளிப்பவர்களின் இடர்களைத் தீர்க்கும் திருவலஞ்சுழியில் எழுந்தருளி உலகிற்கு ஆதியும் நடுவும் அந்தமுமாகி விளங்கும் அடிகளே! உலகிற்பற்றை விளைப்பது என்று மக்களை போலக் கருதாமல் பலிகொள்வது ஏனோ! சொல்வீராக.

<u>திருவலஞ்சுழி</u>

தேனுற் றநறு மாமலர்ச்
சோலையில் வண்டினம்
வானுற் றநசை யாலிசை
பாடும்வ லஞ்சுழிக்
கானுற் றகளிற் றின்னுரி
போர்க்கவல் லீர்சொலீர்
ஊனுற் றதலை கொண்டுல
கொக்கவு ழன்றதே. **#18**

தேன் பொருந்திய பெரிய மலர்ச்சோலையில் வண்டுகள் தேனுண்ணும் நசையால் உயரிய இசையைப் பாடும் திருவலஞ்சுழியில் எழுந்தருளிக் கொல்லவந்த காட்டு யானையின் தோலை உரித்துப் போர்த்த வலிமையை உடைய இறைவரே! ஊன் பொருந்திய தலையோட்டைக் கையில் கொண்டு உலகெங்கும் உழன்றது ஏனோ? சொல்வீராக.

<u>திருவலஞ்சுழி</u>

தீர்த்த நீர்வந் திழிபுனற்
பொன்னியிற் பன்மலர்
வார்த்த நீர்குடை வாரிடர்
தீர்க்கும்வ லஞ்சுழி
ஆர்த்து வந்தவ ரக்கனை
அன்றடர்த் தீர்சொலீர்
சீர்த்த வெண்டலை யிற்பலி
கொள்வதுஞ் சீர்மையே. **#19**

புனிதமான நீர் வந்து செல்லும் காவிரி ஆற்றில் பன்மலர்களைத் தூவி அவ்வாற்று நீரில் மூழ்குவோரது இடர்களைப் போக்கியருள்பவராய்த் திருவலஞ்சுழியில் மேவி, தன் வலிமையைப் பெரிது எனக் கருதி ஆரவாரித்து வந்த இராவணனை அக்காலத்தில் அடர்த்தவரே! சீர்மை பொருந்திய வெள்ளிய தலையோட்டில் பலி ஏற்றுண்பது உம் பெருமைக்கு அழகோ? சொல்வீராக.

<u>திருவலஞ்சுழி</u>

உரம னுஞ்சடை யீர்விடை
யீரும தின்னருள்
வரம னும்பெற லாவது
மெந்தைவ லஞ்சுழிப்
பிரம னுந்திரு மாலும
ளப்பரி யீர்சொலீர்
சிரமெ னுங்கல னிற்பலி
வேண்டிய செல்வமே. **#20**

பெருமை பொருந்திய சடையினை உடையவரே! விடையை ஊர்ந்து வருபவரே! நிலையான வரம் பெறுதற்குரிய இடமாய் உள்ள வலஞ்சுழியில் விளங்கும் எந்தையே! பிரமன் திருமால் ஆகியோரால் அளத்தற்கு அரியரானவரே, நீர் தலையோடாகிய உண் கலனில் பலியைச் செல்வமாக ஏற்றதற்குக் காரணம் யாதோ? சொல்வீராக.

<u>திருவலஞ்சுழி</u>

வீடும் ஞானமும் வேண்டுதி
ரேல்விர தங்களால்
வாடின் ஞானமென் னாவது
மெந்தைவ லஞ்சுழி
நாடி ஞானசம் பந்தன
செந்தமிழ் கொண்டிசை
பாடும் ஞானம்வல் லாரடி
சேர்வது ஞானமே. **#21**

வீடும் அதற்கு ஏதுவாய ஞானமும் பெறவிரும்பு வீராயின், விரதங்களை மேற்கொண்டு உடல் வாடுவதனால் ஞானம் வந்துறுமோ? திருவலஞ்சுழியை அடைந்து ஞான சம்பந்தர் ஓதி யருளிய செந்தமிழை இசையோடு பாடும் ஞானம் வாய்க்கப் பெற்றவர்களின் திருவடிகளை வழிபடுவதொன்றே ஞானத்தைத் தருவதாகும்.

திருத்தெளிச்சேரி

திருத்தெளிச்சேரி

திருத்தெளிச்சேரி,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பார்வதீசுவரர்.
தேவியார் : சத்தியம்மாளம்மை.

பூவ லர்ந்தன கொண்டுமுப் போதுமும் பொற்கழல்
தேவர் வந்து வணங்கு மிகுதெளச் சேரியீர்
மேவ ருந்தொழி லாளொடு கேழற்பின் வேடனாம்
பாவ கங்கொடு நின்றது போலுநும் பான்மையே. **#22**

அலர்ந்தனவாய பூக்களைக் கொண்டு மூன்று வேளைகளிலும் அருச்சித்துத் தேவர்கள் வந்து வழிபடும் புகழ்மிக்க திருத் தெளச்சேரியில் விளங்கும் இறைவரே! யாவராலும் செய்தற்கரிய செயல்களைப்புரியும் உமையம்மையோடு பன்றியின் பின் வேடனாகப் பொய் வேடந்தரித்து நின்றது உம் பெருமைக்கு ஏற்ற செயல்போலும்!

திருத்தெளிச்சேரி

விளைக்கும் பத்திக்கு விண்ணவர் மண்ணவ ரேத்தவே
திளைக்குந் தீர்த்த மறாத திகழ்தெளச் சேரியீர்
வளைக்குந் திண்சிலை மேலைந்து பாணமுந் தானெய்து
களிக்குங் காமனை யெங்ஙன நீர்கண்ணிற் காய்ந்ததே. **#23**

பக்தியை விளைத்தலால் விண்ணவரும் மண்ணவரும் உம்மை வழிபடற்பொருட்டு, திளைத்து முழுகும் தீர்த்தம் விளங்கும் திருத்தெளச்சேரியில் எழுந்தருளிய இறைவரே! உம்மீது வளைந்த வலிய வில்லில் ஐந்து மலர்களைப் பாணமாக எய்து களிப்புற்ற மன்மதனை, நீர் நெற்றிக் கண்ணினால் காய்ந்தது எங்ஙனம்?

திருத்தெளிச்சேரி

வம்ப டுத்த மலர்ப்பொழில் சூழ மதிதவழ்
செம்ப டுத்த செழும்புரி சைத்தெளச் சேரியீர்
கொம்ப டுத்ததொர் கோல விடைமிசைக் கூர்மையோ
டம்ப டுத்தகண் ணாளொடு மேவ லழகிதே. **#24**

மணம் பொருந்திய மலர்களை உடைய பொழில்களால் சூழப் பெற்றதும், செம்பினை உருக்கி வார்த்துச் செய்த மதில்கள் சூழ்ந்து விளங்குவதுமான திருத்தெளச்சேரியில் எழுந்தருளிய இறைவரே!

கொம்புகளை உடைய அழகிய விடைமீது கூரிய அம்பு போன்ற கண்களை உடைய உமையம்மையோடு மேவி வருவது அழகுதரும் செயலோ?

திருத்தெளிச்சேரி

காரு லாங்கட லிப்பிகண் முத்தங் கரைப்பெயும்
தேரு லாநெடு வீதிய தார்தெளச் சேரியீர்
ஏரு லாம்பலிக் கேகிட வைப்பிட மின்றியே
வாரு லாமுலை யாளையொர் பாகத்து வைத்ததே. **#25**

நீர் முகந்து செல்லும் மேகங்கள் உலாவும் கடல், முத்துச்சிப்பிகளையும், முத்துக்களையும் அலைகளால் கரையில் கொண்டுவந்து பெய்வதும் தேர்உலாவும் நீண்ட வீதிகளை உடையதுமான திருத்தௌச்சேரியில் விளங்கும் இறைவரே! எழுச்சி மிக்கவராய்ப் பலியேற்கச் செல்கின்ற நீர் கச்சணிந்த தனபாரங்களையுடைய உமையம்மையைப் பாதுகாப்பாக வைத்துச் செல்லுதற்கு இடமின்றியோ உமது திருமேனியின் ஒரு பாகமாக வைத்துக் கொண்டுள்ளீர்!

திருத்தெளிச்சேரி

பக்க நுந்தமைப் பார்ப்பதி யேத்திமுன் பாவிக்கும்
செக்கர் மாமதி சேர்மதில் சூழ்தெளச் சேரியீர்
மைக்கொள் கண்ணியர் கைவளை மால்செய்து வௌவவே
நக்க ராயுல கெங்கும் பலிக்கு நடப்பதே. **#26**

ஒரு பாகமாக உள்ள பார்வதிதேவி உம்மைத் துதித்து, தன் உள்ளத்தே பாவித்து வழிபடுகின்ற, செம்மதிசேரும், மதில் சூழும் திருத்தௌச்சேரியில் எழுந்தருளிய இறைவரே! ஆடையின்றிப் பல இடங்களுக்கும் நடந்து சென்று பலியேற்றற்குக் காரணம் மைபூசப் பெற்ற இளம் பெண்களை மயக்கி அவர்களின் கை வளையல்களைக் கவர்தற்குத்தானோ? சொல்லீர்

திருத்தெளிச்சேரி

தவள வெண்பிறை தோய்தரு தாழ்பொழில் சூழநல்
திவள மாமணி மாடந் திகழ்தெளச் சேரியீர் குவளை
போற்கண்ணி துண்ணென வந்து குறுகிய
கவள மால்கரி யெங்ஙன நீர்கையிற் காய்ந்ததே. **#27**

வெண்மையான பிறைதோயும் தழைகள் தாழ்ந்த பொழில் சூழ்ந்ததும், அசைகின்ற அழகிய ஒளியினையுடைய மணிகள் இழைக்கப்பட்ட மாடவீடுகள் திகழ்வதுமான திருத்தௌச்சேரியில் உறையும் இறைவரே! குவளை மலர் போன்ற கண்களை உடைய உமை யம்மை நடுங்குமாறு

உம்மைக்கொல்ல வந்து அடைந்த கவளம் கொள்ளும் பெரிய யானையை எவ்வாறு நீர் கைகளால் சினந்தழித்தீர்?.

திருத்தெளிச்சேரி

கோட டுத்த பொழிலின் மிசைக்குயில் கூவிடும்
சேட டுத்த தொழிலின் மிகுதெளச் சேரியீர்
மாட டுத்தமலர்க் கண்ணினாள் கங்கை நங்கையைத்
தோட டுத்த மலர்ச்சடை யென்கொல்நீர் சூடிற்றே. **#28**

மரக்கோடுகள் நிறைந்த பொழிலின்கண் இசைபாடும் குயில்கள் இருந்து கூவுவதும், பெருமைமிக்க தொழிலின்கண் ஈடுபட்டோர் மிகுதியாக வாழ்வதுமான திருத்தெளச்சேரியில் எழுந்தருளிய இறைவரே! செல்வம் நிறைந்தவளும் மலர்போலும் கண்ணினளும் ஆகிய கங்கை நங்கையை இதழ்கள் பொருந்திய கொன்றை மலர் அணிந்த சடையின்கண் சூடியது ஏனோ? கூறுவீர்.

திருத்தெளிச்சேரி

கொத்தி ரைத்த மலர்க்குழ லாள்குயில் கோலஞ்சேர்
சித்தி ரக்கொடி மாளிகை சூழ்தெளச் சேரியீர்
வித்த கப்படை வல்ல வரக்கன் விறற்றலை
பத்தி ரட்டிக் கரநெரித் திட்டதும் பாதமே. **#29**

வண்டுகள் விரிந்த மலர்க் கொத்துக்களைச் சூடிய கூந்தலினள் ஆகிய பார்வதிதேவி குயில் வடிவு கொண்டு வழிபட்டதும், ஓவியம் எழுதப்பட்ட கொடிகள் கட்டப்பட்ட மாளிகைகள் சூழ்ந்ததும் ஆகிய திருத்தெளச்சேரியில் வாழும் இறைவரே! தவத்தால் பெற்ற வாட் போரில் வல்லவனும் வலிய தலைகள் பத்து, கைகள் இருபது ஆகியவற்றைக் கொண்டவனுமாகிய இராவணனைக் கால் விரலால் நெரித்தது உம்பாதம் அன்றோ? சொல்வீராக.

திருத்தெளிச்சேரி

காலெ டுத்த திரைக்கை கரைக்கெறி கானல்சூழ்
சேல டுத்த வயற்பழ னத்தெளச் சேரியீர்
மால டித்தல மாமல ரான்முடி தேடியே
ஓல மிட்டிட வெங்ஙன மோருருக் கொண்டதே. **#30**

காற்றால் எடுத்துக்கொணரப்பெறும் கடலின் திரைகளாகிய கைகள் கரையின்கண் வீசப் பெறுவதும், கடற்கரைச் சோலைகள் சூழ்ந்ததும், சேல் மீன்கள் தவழும் வயல்களை உடைய மருத நிலம் பொருந்தியதும் ஆகிய திருத்தெளச்சேரியில் உறையும் இறைவரே! திருமால் அடியையும், தாமரை மலரில் உறையும் நான் முகன் முடியையும்

தேடமுற்பட்டுக் காணாது ஓலம் இட, நீர் எவ்வாறு ஒப்பற்ற பேருருக் கொண்டீர்? உரைப்பீராக.

<u>திருத்தெளிச்சேரி</u>

மந்தி ரந்தரு மாமறை யோர்கள் தவத்தவர்
செந்தி லங்கு மொழியவர் சேர்தெளச் சேரியீர்
வெந்த லாகிய சாக்கிய ரோடு சமணர்கள்
தந்தி றத்தன நீக்குவித் தீரோர் சதிரரே. **#31**

மந்திரங்கள் ஓதும் மறையோர்களும் தவத்தை உடையவர்களும், செந்து என்ற பண் போன்று இனிய மொழி பேசும் மகளிரும், வாழும் திருத்தெளச்சேரியில் உறையும் ஒப்பற்ற சதுரரே! கருநிறங்கொண்ட சாக்கியர்களும் சமணர்களும் பேசும் சமய சிந்தனைகளை எவ்வாறு நீக்கியருளினீர்?.

<u>திருத்தெளிச்சேரி</u>

திக்கு லாம்பொழில் சூழ்தெளச் சேரியெஞ் செல்வனை
மிக்க காழியுண் ஞானசம் பந்தன் விளம்பிய
தக்க பாடல்கள் பத்தும்வல் லார்கள் தடமுடித்
தொக்க வானவர் சூழ விருப்பவர் சொல்லிலே. **#32**

எட்டுத் திசைகளிலும் பொழில் சூழ்ந்து இலங்கும் திருத்தெளச் சேரியில் உறையும் எம் செல்வன்மீது புகழ்மிக்க காழிப் பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய தக்க பாடல்கள் பத்தையும் வேதமுறைப்படி ஓத வல்லவர்கள் அடையும் பயனைக் கூறின், பெரிய முடிகளைச் சூடிய வானவர்கள் சூழ அவர்கள் இருப்பர் எனலாம்.

திருவான்மியூர்

திருவான்மியூர்

திருவான்மியூர்,
பண் - இந்தளம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மருந்தீசுவரர்.
தேவியார் : சுந்தரமாது (அ) சொக்கநாயகி.

கரையு லாங்கட லிற்பொலி சங்கம்வெள் ளிப்பிவன்
றிரையு லாங்கழி மீனுக ளுந்திரு வான்மியூர்
உரையு லாம்பொரு ளாயுல காளுடை யீர்சொலீர்
வரையு லாமட மாதுட னாகிய மாண்பதே. #33

கடலின்கண் விளங்கும் சங்குகளும் வெண்ணிறமான இப்பிகளும் கரையில் வந்துலாவுமாறு அலைகள் வீசுவதும், அவ்வலைகளை உடைய கழிகளில் மீன்கள் பிறழ்வதுமான திருவான்மியூரில், எல்லோராலும் புகழப்படும் பொருளாய் உலகனைத்தையும் ஆட்சி புரிபவராய் விளங்கும் இறைவரே! மலைமாது எனப்படும் உமையம்மையை ஒருடம்பில் உடனாகக்கொண்டுள்ள மாண்பிற்குக் காரணம் யாதோ? சொல்வீராக.

திருவான்மியூர்

சந்து யர்ந்தெழு காரகில் தண்புனல்கொண்டுதம்
சிந்தை செய்தடி யார்பர வுந்திரு வான்மியூர்ச்
சுந்த ரக்கழன் மேற்சிலம் பார்க்கவல் லீர்சொலீர்
அந்தி யின்னொளி யின்னிற மாக்கிய வண்ணமே. #34

அடியவர்கள் சந்தனம், உயர்ந்து வளர்ந்த கரிய அகில், குளிர்ந்த நீர் ஆகியவற்றைக் கொண்டு வந்து ஆட்டித் தமது சிந்தையால் நினைந்து பரவும் திருவான்மியூரில் வலக்காலில் விளங்கும் அழகிய கழல், இடக்காலில் விளங்கும் சிலம்பு ஆகியன ஆரவாரிக்கும் திருவடிகளை உடையவரே! மாலையந்தியின் ஒளி போன்ற செவ்வண்ணத்தை உம் நிறமாகக் கொண்ட காரணம் யாதோ? சொல்வீராக.

திருவான்மியூர்

கான யங்கிய தண்கழி சூழ்கட லின்புறம்
தேன யங்கிய பைம்பொழில் சூழ்திரு வான்மியூர்த்
தோன யங்கம ராடையி னீரடி கேள்சொலீர்
ஆனையங் கவ்வுரி போர்த்தன லாட வுகந்ததே. #35

காடு, பள்ளமான கழி ஆகியன சூழ்ந்த கடலின் புறத்தே தேன் சொரியும் பசுமையான பொழில்கள் சூழ்ந்து விளங்கும் திருவான்மியூரில், புலித்தோலை ஆடையாகக் கொண்டு எழுந்தருளிய அடிகளே, நீர், யானையின் தோலை உரித்துப் போர்த்தி அனலாடலை விரும்பியது ஏனோ? சொல்வீராக.

திருவான்மியூர்

மஞ்சு லாவிய மாடம திற்பொலி மாளிகைச்
செஞ்சொ லாளர்கள் தாம்பயி லுந்திரு வான்மியூர்த்
துஞ்சு வஞ்சிரு ளாட லுகக்கவல் லீர்சொலீர்
வஞ்ச நஞ்சுண்டு வானவர்க் கின்னருள் வைத்ததே. **#36**

மேகங்கள் உலாவும் மாடங்களையும் மதில்களையும் அழகிய மாளிகைகளையும் உடையதால், இனிய சொற்களைப் பேசுவோர் வாழ்வதாய் விளங்கும் திருவான்மியூரில், எல்லோரும் உறங்கும் கரிய இருட்போதில் ஆடலை விரும்பி மேற்கொள்ளும் வன்மையை உடையவராய் இலங்கும் இறைவரே!, கரிய விடத்தை நீர் உண்டு தேவர்களுக்கு இனிய அருள் வழங்கியது ஏனோ? சொல்வீர்.

திருவான்மியூர்

மண்ணி னிற்புகழ் பெற்றவர் மங்கையர் தாம்பயில்
திண்ணெ னப்புரி சைத்தொழி லார்திரு வான்மியூர்த்
துண்ணெ னத்திரி யுஞ்சரி தைத்தொழி லீர்சொலீர்
விண்ணி னிற்பிறை செஞ்சடை வைத்த வியப்பதே. **#37**

உலகோரால் புகழப்பெறும் குணநலங்களை உடைய மகளிரையும், உறுதியான வேலைப்பாடுகள் பொருந்திய மதில்களையும் உடைய திருவான்மியூரில் எல்லோரும் வியப்படையும் வண்ணம் பலியேற்கும் தொழிலை மேற்கொண்டு உறைபவரே, நீர் வானத்தில் விளங்கும் வெண்பிறையை உம் செஞ்சடை மேல் வைத்துள்ள வியப்புடைச் செயலை ஏன் செய்தீர்? சொல்வீராக.

திருவான்மியூர்

போது லாவிய தண்பொழில் சூழ்புரி சைப்புறம்
தீதி லந்தண ரோத்தொழி யாத்திரு வான்மியூர்ச்
சூது லாவிய கொங்கையொர் பங்குடை யீர்சொலீர்
மூதெ யில்லொரு மூன்றெரி யூட்டிய மொய்ம்பதே. **#38**

மலர்கள் நிறைந்த குளிர்ந்த பொழில்கள் சூழ்ந்ததும், மதில்களைப் புறத்தே உடையதும், குற்றமற்ற அந்தணர்கள் வேதம் ஓதுதலை இடையறாது உடையதுமாகிய திருவான்மியூரில் சூதாடு கருவி போன்ற

வடிவுடைய தனங்களைக் கொண்ட உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு எழுந்தருளியிருப்பவரே! பழமையான முப்புரங்களை எரிசெய்து அழித்த உமது வீரச் செயலுக்குக் காரணம் யாதோ? சொல்வீர்.

திருவான்மியூர்

வண்டி ரைத்த தடம்பொழி லின்னிழற் கானல்வாய்த
தெண்டி ரைக்கட லோதமல் குந்திரு வான்மியூர்த்
தொண்டி ரைத்தெழுந் தேத்திய தொல்கழ லீர்சொலீர்
பண்டி ருக்கொரு நால்வர்க்கு நீருரை செய்ததே. **#39**

வண்டுகள் ஒலிக்கும் பெரிய சோலைகளின் நிழலிலும் கானலிலும் தெளந்த அலைகளை உடைய திருவான்மியூரில் அடியவர்கள் சிவநாமங்களைச் சொல்லித் துதிக்கும், பழமையான கழல்களை அணிந்துள்ள இறைவரே! முற்காலத்தே நீர் சிவஞானத்தைச் சனகாதியர் நால்வர்க்கு மட்டும் உபதேசித்தது ஏனோ? கூறுவீர்.

திருவான்மியூர்

தக்கில் வந்த தசக்கிரி வன்றலை பத்திறத்
திக்கில் வந்தல றவ்வடர்த் தீர்திரு வான்மியூர்த்
தொக்க மாதொடும் வீற்றிருந் தீரரு ளென்சொலீர்
பக்க மேபல பாரிடம் பேய்கள் பயின்றதே. **#40**

தகுதியற்ற நெறியில் வந்த இராவணன் கயிலை மலையைப் பெயர்க்க முற்பட்டுத் தன் தலைகள் பத்தும் பல திசைகளிலும் வெளிப்பட்டு அவன் அலறுமாறு அவனை அடர்த்தவரே! திருவான்மியூரில் தன் திருமேனியோடு இணைந்த உமையம்மையாரோடும் வீற்றிருந்தருளியவரே!! பல பூதகணங்களும், பேய்க்கணங்களும் உம்மைச் சூழ்ந்து பயிலக் காரணம் யாதோ? சொல்வீராக.

திருவான்மியூர்

பொருது வார்கட லெண்டிசை யுந்தரு வாரியால்
திரித ரும்புகழ் செல்வமல் குந்திரு வான்மியூர்ச்
சுருதி யாரிரு வர்க்கு மறிவரி யீர்சொலீர்
எருது மேல்கொ டுழன்றுகந் தில்பலி யேற்றதே. **#41**

பெரிய கடல் அலைகள் எட்டுத் திசைகளிலிருந்தும் கொண்டு வந்து தரும் முத்து பவளம் முதலிய வளங்களால் பரவிய புகழ், செல்வம் ஆகியன நிறைந்த திருவான்மியூரில் வேதங்களை ஓதி மகிழும் திருமால், பிரமன் ஆகிய இருவர்க்கும் அறிதற் கரியவராய் விளங்கும் இறைவரே! எருதின்மேல் ஏறி உழன்று பல இடங்கட்கும் மகிழ்வோடு சென்று

பலியேற்றற்குரிய காரணத்தைக் கூறுவீராக.

திருவான்மியூர்

மைத ழைத்தெழு சோலையின் மாலைசேர் வண்டினம்
செய்த வத்தொழி லாரிசை சேர்திரு வான்மியூர்
மெய்த வப்பொடி பூசிய மேனியி னீர்சொலீர்
கைத வச்சமண் சாக்கியர் கட்டுரைக் கின்றதே. **#42**

கருநிறம் மிக்குத்தோன்றும் சோலையின்கண் மாலைக்காலத்தில் வண்டுகள் குழுமித் தவஞ்செய்யும் தொழிலையுடைய அந்தணர் ஓதும் வேதாகமம் போல் இசைபாடிச் சேர்கின்ற திருவான்மியூரில், மேனிமீது மிகுதியாக வெண்பொடியணிந்த திருமேனியை உடையவரே! வஞ்சனையை உடைய சமணர் சாக்கியர் உம்மீது பொய்யுரை கூறிப் பழித்துரைக்கக் காரணம் யாதோ? கூறீர்.

திருவான்மியூர்

மாதொர் கூறுடை நற்றவ னைத்திரு வான்மியூர்
ஆதி யெம்பெரு மானருள் செய்ய வினாவுரை
ஓதி யன்றெழு காழியுண் ஞானசம் பந்தன்சொல்
நீதி யானினை வார்நெடு வானுல காள்வரே. **#43**

உமையம்மையை ஒரு கூறாக உடைய நல்ல தவத்தின் வடிவாய் திருவான்மியூரில் உறையும் ஆதியாகிய எம்பெருமான் அருள் செய்தற்பொருட்டு வினாவிய இதனை ஓதி, ஊழி முடிவாகிய அக்காலத்தே மிதந்து எழுந்த காழிப்பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன்தன் சொல்லால் எழுந்த இப்பதிகத்தை முறையோடு நினைபவர் நீண்ட வானுலகை ஆள்வர்.

திருவனேகதங்காபதம்

திருவனேகதங்காபதம்,
பண் - இந்தளம்,
இத்தலம் வடதேசத்திலுள்ளது. ,
சுவாமிபெயர் : அருள்மன்னர்.
தேவியார் : மனோன்மணியம்மை.

நீடன் மேவுநிமிர் புன்சடை மேலொர் நிலாமுளை
சூடன் மேவுமறை யின்முறை யாலொர் சுலாவழல்
ஆடன் மேவுமவர் மேயவ னேகதங் காவதம்
பாடன் மேவுமனத் தார்வினை பற்றறுப் பார்களே. **#44**

நீண்டுயர்ந்த சடைமுடிமீது பிறைமதியைச் சூடியவராய் வேத விதிப்படி வளர்க்கப்பெற்றுச் சுழன்றெரியும் தீயில் ஆடு தலை விரும்பும் இறைவர் உறையும் அனேகதங்காவதம் என்னும் தலத்தைப் பாடுதலை விரும்பும் மனத்தினராய பக்தர்கள் வினைகளையும் அவற்றால் விளையும் பற்றுக்களையும் அறுப்பர்.

திருவனேகதங்காபதம்

சூல முண்டுமழு வுண்டவர் தொல்படை சூழ்கடல்
ஆல முண்டபெரு மான்ற னனேகதங் காவதம்
நீல முண்டதடங் கண்ணுமை பாகநிலாயதோர்
கோல முண்டள வில்லை குலாவிய கொள்கையே. **#45**

சூலத்தையும் மழுவையும் படைக்கலங்களாகக் கொண்டு, உலகைச் சூழ்ந்துள்ள ஆழமான கடலில் தோன்றிய விடத்தை உண்டு உலகைக் காத்தருளிய பெருமான், அனேகதங்காவதத்தில் நீலநிறம் பொருந்திய பெரிய கண்களையுடைய உமையம்மை ஒரு பாகமாக விளங்கும் அழகினராய்,அவ்வம்மையோடு குலாவும் செயல்களுக்கு அளவில்லை.

திருவனேகதங்காபதம்

செம்பி னாருமதின் மூன்றெரி யச்சின வாயதோர்
அம்பி னாலெய்தருள் வில்லி யனேகதங் காவதம்
கொம்பி னேரிடை யாளொடுங் கூடிக்கொல் லேறுடை
நம்ப னாமநவி லாதன நாவென லாகுமே. **#46**

செம்பினால் இயன்ற ஒப்பற்ற மும்மதில்களும் எரியச் சினத்தை முனையிலே உடைய ஓர் அம்பினால் எய்து தேவர்கட்கு அருள்புரிந்த வில்லாளியும், அனேகதங்காவதத்தில் பூங்கொம்பு போன்ற

இடையினை உடைய உமையம்மையோடு கூடிக் கொல்லேற்றைத் தனது ஊர்தியாகக் கொண்ட நம்பனுமாகிய பெருமான் திருப்பெயரைச் சொல்லாதவை நாக்கள் எனல் ஆகுமோ?

திருவனேகதங்காபதம்

தந்தத் திந்தத்தட மென்றரு வித்திரள் பாய்ந்துபோய்ச்
சிந்த வெந்தகதி ரோனொடு மாசறு திங்களார்
அந்த மில்லவள வில்ல வனேகதங் காவதம்
எந்தை வெந்தபொடி நீறணி வார்க்கிட மாவதே. **#47**

'தந்தத் திந்தத் தடம்' என்ற ஒலிக்குறிப்போடு அருவிகள் பாய்ந்து சென்று ஒழுக, வெம்மையான கதிர்களை உடைய கதிரவன் ஒளியும், குற்றமற்ற திங்களின் ஒளியும் பரவ, முடிவு அற்ற அளவுபடுத்த முடியாத அனேகதங்காவதம், எந்தையாகிய, திருநீற்றைப் பூசி மகிழும் சிவபெருமானுக்கு இடமாக உள்ளது.

திருவனேகதங்காபதம்

பிறையு மாசில்கதி ரோனறி யாமைப் பெயர்ந்துபோய்
உறையுங் கோயில் பசும்பொன் னணியா ரசும்பார்புனல்
அறையு மோசை பறைபோலு மனேகதங் காவதம்
இறையெம் மீச னெம்மா னிடமாக வுகந்ததே. **#48**

திங்களும் ஞாயிறும் உயர்ச்சியை அறிய முடியாது, பக்கத்தே விலகிச் சென்று உறையும் வானளாவிய கோயிலை உடைய தாய்ப் பசும்பொன் போன்ற அழகிய நீர்த்துளிகளை உடையவாய்ப் பறை போன்று ஒலித்து ஒழுகும் அருவிகளை அடுத்துள்ளது ஆகிய அனேகதங்காவதத்தை, எம் ஈசனாகிய இறைவன் தனது இடமாகக் கொண்டு உகந்தருளுகின்றான்.

திருவனேகதங்காபதம்

தேனை யேறுநறு மாமலர் கொண்டடி சேர்த்துவீர்
ஆனை யேறுமணி சார லனேகதங் காவதம்
வானை யேறுநெறி சென்றுண ருந்தனை வல்லிரேல்
ஆனை யேறுமுடி யானருள் செய்வதும் வானையே. **#49**

தேனை மிகுதியாகப் பெற்ற மணம் கமழும் சிறந்த மலர்களைப் பறித்து இறைவன் திருவடிகளில் சேர்ப்பிக்கும் அடியவர்களே! வீடுபேறு அடைதற்குப் பின்பற்றும் சரியை, கிரியை முதலான நெறிகளில் நின்று அவனை உணர நீவிர் வல்லீராயின் யானைகள் ஏறி உலாவும் அழகிய சாரலை உடைய அனேகதங்காவதத்துள் விளங்கும் ஆன் ஐந்தாடும் முடியானாகிய சிவபிரான் உங்கட்கு அவ்வானுலகப் பேற்றினை வழங்கியருளுவான்.

திருவனேகதங்காபதம்

வெருவி வேழமிரி யக்கதிர் முத்தொடு வெண்பளிங்
குருவி வீழவயி ரங்கொழி யாவகி லுந்திவெள்
அருவி பாயுமணி சாரல னேகதங் காவதம்
மருவி வாழும்பெரு மான்கழல் சேர்வது வாய்மையே. **#50**

யானைகள் அஞ்சி ஓடுமாறு ஒலித்துப்பாய்வனவும், ஒளிபொருந்திய முத்துக்கள், வெண்பளிங்கு ஆகியன நீரை ஊடுருவி வீழ்வனவும், வயிரங்களைக் கொழித்து அகில்மரங்களை உந்திக்கொண்டு வருவனவும் ஆகிய வெண்மையான அருவிகள் பாயும் அழகிய சாரலை உடைய அனேகதங்காவதத்தை அடைந்து அங்கு வாழும் பெருமான் திருவடிகளை அடைவதே மெய்ந்நெறியாகும்.

திருவனேகதங்காபதம்

ஈர மேதுமில னாகி யெழுந்த விராவணன்
வீர மேதுமில னாக விளைத்த விலங்கலான்ஆரம்
பாம்ப தணிவான்ற னனேகதங் காவதம்
வார மாகிநினை வார்வினை யாயின மாயுமே. **#51**

அன்பு ஒருசிறிதும் இன்றித் தன் வலிமையைப் பெரிது என எண்ணி எழுந்த இராவணனை வீரம் அற்றவனாகச் செய்தருளிய, கயிலை மலைக்குரியவனும், ஆரமாகப் பாம்பை அணிபவனும் ஆகிய சிவபிரானின் அனேகதங்காவதத்தை அன்போடு நினைபவர் வினைகள் மாயும்.

திருவனேகதங்காபதம்

கண்ணன் வண்ணமல ரானொடுங் கூடியோர்க் (கையமாய்
எண்ணும் வண்ணமறி யாமை யெழுந்ததோ ராரழல்
அண்ண னண்ணுமணி சாரல னேகதங் காவதம்
நண்ணும் வண்ணமுடை யார்வினை யாயின நாசமே. **#52**

திருமால் நான்முகனோடு கூடி அடிமுடி அறிய முற்பட்டபோது அவர்கள் அறிய முடியுமா என எண்ணி ஐயுறும் வண்ணம் அவர்கட்கு இடையே எழுந்ததோர் அழற்பிழம்பாகிய சிவபெருமான் எழுந்தருளிய அழகிய சாரலை உடைய அனேகதங்காவதத்தை நண்ணும் இயல்புடையார் வினைகள் நாசமாகும்.

திருவனேகதங்காபதம்

மாப தம்மறி யாதவர் சாவகர் சாக்கியர்
ஏப தம்பட நின்றிறு மாந்துழல் வார்கள்தாம்

ஆப தம்மறி வீருளி ராகில னேகதங்
காப தம்மமர்ந் தான்கழல் சேர்தல் கருமமே. **#53**
சிறந்த சிவபதத்தை அறியாதவராகிய சமண புத்தர்கள் ‘ஏஏ’ என
இகழத்தக்கவர்களாய் இறுமாப்புடையவர்களாய் உழல்கின்றவர் ஆவர்.
நாம் அடையத்தக்கது ஆகிய சிவபதத்தை அறியும் அவா உடையீராயின்
அனேகதங்காவதத்துள் எழுந்தருளிய சிவபிரான் திருவடிகளை
ஆராய்ந்துணர்தல நீவிர் செய்யத்தக்க கருமம் ஆகும்.

திருவனேகதங்காபதம்

தொல்லையூ ழிப்பெயர் தோன்றிய தோணிபு ரத்திறை
நல்லகேள் வித்தமிழ் ஞானசம் பந்தனல் லார்கண்முன்
அல்லல் தீரவுரை செய்த வனேகதங் காவதம்
சொல்ல நல்லவடை யும்மடை யாசுடு துன்பமே. **#54**
பழமையான ஊழிக்காலத்தே தோணியாய் மிதந்த காரணத்தால்
அப்பெயர் பெற்ற தோணிபுரம் என்னும் சீகாழிப்பதியின் தலைவனும்,
நல்ல நூற்கேள்வியை உடையவனும் ஆகிய தமிழ் ஞானசம்பந்தன்
நல்லோர்கள் திருமுன்னர், அல்லல்தீர உரைத்தருளிய
அனேகதங்காவதத்தைப் புகழ்ந்து போற்றின், நல்லன வந்துறும்.
நம்மைச் சுடும் துன்பங்கள் நம்மை அடைய மாட்டா.

திருவையாறு

திருஐயாறு

திருவையாறு,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.
தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை.

கோடல்கோங் கங்குளிர் கூவிள மாலை
குலாயசீர்
ஓடுகங் கையொளி வெண்பிறை சூடு
மொருவனார்
பாடல் வீணைமுழ வங்குழன் மொந்தைபண்
ணாகவே
ஆடு மாறுவல் லானுமை யாறுடை
யையனே. **#55**

வெண்காந்தள், கோங்கம் குளிர்ந்த வில்வ மாலை சீர்மிகு கங்கை, ஒளி வெண்பிறை ஆகியனவற்றை முடியிற் சூடிய ஒருவனும் பாடற்குரிய வீணை, முழவம், குழல், மொந்தை ஆகியன தாளத்தோடு ஒலிக்க ஆடுதலில் வல்லவனும் ஆகிய இறைவன் ஐயாறுடைய ஐயனாவான்.

திருஐயாறு

தன்மை யாருமறி வாரிலை தாம்பிற
ரௌகவே
பின்னு முன்னுஞ்சில பேய்க்கணஞ் சூழத்
திரிதர்வர்
துன்ன வாடை யுடுப்பர் சுடலைப்பொடி
பூசுவர்
அன்னமா லுந்துறை யானுமை யாறுடை
யையனே. **#56**

அன்னங்கள் ஒலிக்கும் ஐயாறுடைய ஐயனின் தன்மையை அறிபவர் எவரும் இல்லை. அத்தகைய இறைவர் பிறர் எள்ளுமாறு சில பேய்க்கணங்கள் பின்னும் முன்னும் சூழத் திரிவார். கந்தலான ஆடையை இடையிலே கட்டியிருப்பார். இடுகாட்டின் சாம்பலை மேனிமேல் பூசுவர்.

திருஐயாறு

கூறு பெண்ணுடை கோவண முண்பது
வெண்டலை மாறி லாருங்கொள் வாரிலை மார்பில்
அணிகலம் ஏறு மேறித் திரி வ ரிமை யோர்தொழு
தேத்தவே ஆறு நான்குஞ்சொன் னானுமை யாறுடை
யையனே. **#57**

ஐயாறுடைய ஐயன், ஒரு கூறாக உமையம்மையைக் கொண்டவர்: கோவண ஆடை உடுத்தவர்: வெள்ளிய தலையோட்டில் பிச்சையேற்று உண்பவர். மார்பில் அணிந்துள்ள அணிகலன்களோ பண்டமாற்றாகப் பிறகொள்வார் இல்லாத ஆமை யோடு, பன்றிக்கொம்பு, பாம்பு முதலானவை. இடபத்தில் ஏறித்திரிபவர். தேவர் பலரும் வணங்க நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் அருளியவர்.

<u>திருஐயாறு</u>

பண்ணி னல்லமொழி யார்பவ ளத்துவர்
வாயினார்
எண்ணி னல்லகுணத் தாரிணை வேல்வென்ற
கண்ணினார்
வண்ணம் பாடிவலி பாடித்தம் வாய்மொழி
பாடவே
அண்ணல் கேட்டுகந் தானுமை யாறுடை
யைய னே. **#58**

பண்ணிசையினும் இனிய மொழி பேசுபவரும், பவளம் போன்று சிவந்த வாயினை உடையவரும் எண்ணற்ற நல்ல குணங்களை உடையவரும், வேல் இணை போன்ற விழியினரும் ஆகிய இளமகளிர், தம் தன்மைகளையும், வலிய வீரச் செயல்களையும் தம் வாய் மொழியால் பாடி வணங்க அவற்றைக் கேட்டு உகந்தருளுபவர், ஐயாறுடைய ஐயன்.

<u>திருஐயாறு</u>

வேன லானை வெருவவுரி போர்த்துமை
யஞ்சவே
வானை யூடறுக் கும்மதி சூடிய
மைந்தனார்
தேனெய் பாறயிர் தெங்கிள நீர்கரும்
பின்றெளி
ஆனஞ் சாடுமுடி யானுமை யாறுடை
யையனே. **#59**

கொடிய யானையைப் பலரும் வெருவுமாறும் உமையம்மை அஞ்சுமாறும் கொன்று, அதன் தோலை உரித்துப் போர்த்தவரும்,

வானத்தைக் கிழித்துச் செல்லும் மதியை முடியில் சூடிய வலியரும், தேன், நெய், பால், தயிர், இளநீர், கரும்பின் சாறு, ஆனைந்து ஆகியவற்றை ஆடும் முடியினரும் ஆகிய பெருமைகட்கு உரியவர் ஐயாறுடைய ஐயன் ஆவார்.

திருஜயாறு

எங்கு மாகிநின் றானு மியல்பறி
யப்படா
மங்கை பாகங்கொண் டானு மதிசூடு
மைந்தனும்
பங்க மில்பதி னெட்டொடு நான்குக்
குணர்வுமாய்
அங்க மாறுஞ்சொன் னானுமை யாறுடை
யையனே. **#60**

எங்கும் நிறைந்தவனும் பிறர் அறியவாராத இயல்பினனும், உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டவனும் மதிசூடிய மைந்தனும் குற்றமற்ற பதினெண் புராணங்கள், நான்கு வேதங்கள் அவற்றை அறிதற்குதவும் ஆறு அங்கங்கள் ஆகியவற்றை உரைத் தருளியவனும் ஆய பெருமான், ஐயாறுடைய ஐயனாவான்.

திருஜயாறு

ஓதி யாருமறி வாரிலை யோதி
யுலகெலாம்
சோதி யாய்நிறைந் தான்சுடர்ச் சோதியுட்
சோதியான்
வேதி யாகிவிண் ணாகிமண் ணோடெரி
காற்றுமாய்
ஆதி யாகிநின் றானுமை யாறுடை
யைய னே. **#61**

யாவராலும் ஓதி அறிதற்கு அரியவனும், உயிர்கள்தாமே அறிதற்கு இயலாதவனாயினும் அவனே ஓதுவித்தும் உணர்வித்தும் சோதியாக நிறைந்துள்ளவனும், சுடர்ச் சோதியுட் சோதியாக விளங்குபவனும், வேத வடிவினனும் விண், மண், எரி, காற்று ஆகிய உலகின் முதல்வனாய் விளங்குபவனும் ஆகி பெருமான் ஐயாறுடைய ஐயனாவான்.

திருஜயாறு

குரவ நாண்மலர் கொண்டடி யார்வழி
பாடுசெய்

விரவு நீறணி வார்சில தொண்டர்
வியப்பவே
பரவி நாடொறும் பாடநம்
பாவம் பறைதலால்
அரவ மார்த்துகந் தானுமை
யாறுடை யையனே. **#62**

ஐயாறுடைய ஐயன் அடியவர் அன்றலர்ந்த குரா மலர்களைக் காண்டு வழிபடவும், திருநீற்றை மேனியெங்கும் விரவிப் பூசிய தொண்டர்கள் வியந்து போற்றவும், அரவாபரணனாய் எழுந்தருளியுள்ளான். நம் பாவங்கள் அவனை வழிபட நீங்குவதால், நாமும் நாளும் அவனைப் பரவி ஏத்துவோம்.

<u>திருஜயாறு</u>

உரைசெய் தொல்வழி செய்தறி யாவிலங்
கைக்குமன்
வரைசெய் தோளடர்த் துமதி சூடிய
மைந்தனார்
கரைசெய் காவிரி யின்வட பாலது
காதலான்
அரைசெய் மேகலை யானுமை யாறுடை
யையனே. **#63**

வேதங்கள் உரைத்த பழமையான நெறியை மேற்கொள்ளாத இலங்கைமன்னன் இராவணனைக் கயிலை மலைக்கீழ் அகப்படுத்தி அவனது தோள் வலிமையை அடர்த்தவரும், மதிசூடிய மைந்தரும் காவிரி வடகரையில் விளங்கும் ஐயாற்றில் மகிழ்வோடு இடையில் மேகலாபரணம் புனைந்து உறைபவரும் ஆகிய பெருமானார், ஐயாறுடைய ஐயன் ஆவார்.

<u>திருஜயாறு</u>

மாலுஞ் சோதி மலரானு
மறிகிலா வாய்மையான்
காலங் காம்பு வயிரங்
கடிகையன் பொற்கழல்
கோல மாய்க்கொழுந் தீன்று
பவளந் திரண்டதோர்
ஆல நீழலு ளானுமை
யாறுடை யையனே. **#64**

ஐயாறுடைய ஐயன் திருமாலும் நான்முகனும் அறிய இயலாத சத்திய

வடிவானவன். அவனது கால் போலத் திரண்ட அழகிய காம்பினையும் கழல் போன்ற கொழுந்தினையும் பவளம் போன்ற பழங்களையும் ஈன்ற திரண்ட கல்லால மரநிழலில் எழுந்தருளியுள்ளான்.

திருஐயாறு

கையி லுண்டுழல் வாருங்
கமழ்துவ ராடையான்
மெய்யைப் போர்த்துழல் வாரு
முரைப்பன மெய்யல
மைகொள் கண்டத்தெண்டோண்முக்க ணான்கழல்
வாழ்த்தவே
ஐயந் தேர்ந்தளிப் பானுமை யாறுடை
யையனே. **#65**

கையில் உணவை வாங்கி உண்டு உழலும் சமணரும், நாற்றம் அடிக்கும் துவராடையால் உடலைப் போர்த்துத்திரியும் புத்தரும் கூறும் உரைகள் மெய்யல்ல என்பதை அறிந்து, நீலகண்டமும் எண் தோளும் மூன்று கண்களும் உடைய சிவனே பரம்பொருள் எனத் தேர்ந்து வாழ்த்த, ஐயந்தேரும் ஐயாறுடைய ஐயன் நம்மைக் காத்தருளுவான்.

திருஐயாறு

பலிதி ரிந்துழல் பண்டங்கன் மேயவை
யாற்றினைக்
கலிக டிந்தகை யான்கடற் காழியர்
காவலன்
ஒலிகொள் சம்பந்த னொண்டமிழ் பத்தும்வல்
லார்கள்போய்
மலிகொள் விண்ணிடை மன்னிய சீர்பெறு
வார்களே. **#66**

பலி ஏற்று உழல்பவனாய், பாண்டரங்கக் கூத்தாடும் பெருமான் எழுந்தருளிய திருவையாற்றினை உலகில் கலிவாராமல் கடியும் வேள்வி செய்தற்கு உரிமை பூண்ட திருக்கரங்களை உடைய, கடலை அடுத்துள்ள காழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் இசையொலி கூடிய சிறந்த தமிழால் பாடிய இப்பதிகப் பாடல்களை வல்லவர்கள் புகழ் மலிந்த வானுலகில் நிலையான சிறப்பைப் பெறுவார்கள்.

திருவாஞ்சியம்

திருவாஞ்சியம்

திருவாஞ்சியம்,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வாஞ்சியநாதர்.
தேவியார் : வாழவந்தநாயகியம்மை.

வன்னி கொன்றைமத மத்த
மெருக்கொடு கூவிளம்
பொன்னி யன்றசடை யிற்பொலி
வித்தபு ராணனார்
தென்ன வென்றுவரி வண்டிசை
செய்திரு வாஞ்சியம்
என்னை யாளுடை யானிட
மாக வுகந்ததே. **#67**

வன்னியிலை கொன்றைமலர் ஊமத்தம் மலர் வில்வம் ஆகியவற்றைப் பொன்போன்ற தம் சடையில் சூடிய பழமையாளரும், என்னை அடிமையாகக் கொண்டவரும் ஆகிய சிவபிரான் தமது இருப்பிடமாகக் கொண்டு விரும்பிய ஊர், வரிவண்டுகள் ‘தென்ன’ என்ற ஒலிக் குறிப்போடு இசைபாடும் திருவாஙசியமாகும்.

திருவாஞ்சியம்

கால காலர்கரி கானிடை
மாநட மாடுவர்
மேலர் வேலைவிட முண்டிருள்
கின்ற மிடற்றினர்
மாலை கோலமதி மாடமன்
னுந்திரு வாஞ்சியம்
ஞாலம் வந்து பணியப்பொலி
கோயில் நயந்ததே. **#68**

காலனுக்குக் காலர்; கரிந்த இடுகாட்டில் சிறந்த நடனம் புரிபவர்; எப்பொருட்கும் எல்லா உயிர்கட்கும் மேலானவர்; கடலிடைத்தோன்றிய நஞ்சினை உண்டு இருள்கின்ற கண்டத்தை உடையவர்; அச்சிவபிரான், மாலைக்காலத்தே தோன்றும் அழகிய மதி உச்சியில் பொருந்தும் மாடவீடுகள் நிறைந்த திருவாஞ்சியத்தில் உள்ள அழகிய கோயிலை, உலகோர் வந்து தம்மைப் பணிந்து அருள் பெறுமாறு விரும்பி

விற்றிருந்தருளுகின்றார்.

திருவாஞ்சியம்

மேவி லொன்றர் விரிவுற்ற
விரண்டினர் மூன்றுமாய்
நாவி னாலருட லஞ்சின
ராறரே ழோசையர்
தேவி லெட்டர்திரு வாஞ்சிய
மேவிய செல்வனார்
பாவந் தீர்ப்பர்பழி போக்குவர்
தம்மடி யார்கட்கே. **#69**

விரும்பி வழிபடின் நீ நான் என்ற வேற்றுமை யின்றி அந்நியம் ஆவர். ஒன்றாய் அரும்பிய அவர் பலவாய் விரியுமிடத்து, சிவம் சத்தி என இரண்டாவர். ஒன்றாய் வேறாய் உடனாய் மூன்றாவர். நாவினால் நான்கு வேதங்களை அருளியவர். பரை ஆதி இச்சை ஞானம் கிரியை என்னும் ஐவகைச் சத்தியாகிய திருவுருவை உடையவர். ஆறுகுணங்களை உடையவர். ஏழு ஓசை வடிவினர். அட்டமூர்த்தங்களாய் விளங்குபவர். இத்தகையவராய்த் திருவாஞ்சியத்தில் எழுந்தருளியுள்ள செல்வனார் தம் அடியவர்களின் பாவங்களைத் தீர்ப்பர். அவர் அடியவர்கட்கு வரும் பழியைப் போக்குபவர்.

திருவாஞ்சியம்

சூல மேந்திவளர் கையினர்
மெய்சுவண் டாகவே
சால நல்லபொடிப் பூசுவர்
பேசுவர் மாமறை
சீல மேவுபுக ழாற்பெரு
குந்திரு வாஞ்சியம்
ஆல முண்டவடி கள்ளிடம்
ஆக வமர்ந்ததே. **#70**

சூலம் ஏந்திய நீண்ட கையினை உடையவர்; தம் திருமேனிக்குப் பொருத்தமாக நல்ல திருநீற்றை மிகுதியாகப் பூசுபவர்; சிறந்த வேத வசனங்களைப் பேசுபவர். ஆலகாலம் உண்டருளிய அவ்விறைவர், ஒழுக்கத்தால் சிறந்தோர் வாழ்வதால் புகழ்பெற்ற திருவாஞ்சியத்தை இடமாகக் கொண்டு அமர்ந்துள்ளார்.

திருவாஞ்சியம்

கையி லங்குமறி யேந்துவர்
காந்தளம் மெல்விரல்
தையல் பாகமுடை யாரடை
யார்புரஞ் செற்றவர்
செய்ய மேனிக்கரி யமிடற்
றார்திரு வாஞ்சியத்
தையர் பாதமடை வார்க்கடை
யாவரு நோய்களே. **#71**

கையின்கண், விளங்கும் மான் கன்றை ஏந்தியவர்; காந்தள் இதழ் போன்ற மெல்லிய விரல்களை உடைய பார்வதி தேவியைத் தமது பாகமாகக கொண்டவர்; பகைவராகிய திரிபுரத்து அசுரரின் முப்புரங்களை அழித்தவர்; சிவந்த திருமேனியையும் கரிய மிடற்றையும் உடையவர்; இத்தகையோராய்த் திருவாஞ்சியத்துள் எழுந்தருளிய தலைவராகிய சிவபிரான் திருவடிகளை அடைபவர்களைப் போக்கற்கு அரிய நோய்கள் எவையும் அடையா.

<u>திருவாஞ்சியம்</u>

அரவம் பூண்பரணி யுஞ்சிலம்
பார்க்க வகந்தொறும்
இரவி னல்லபலி பேணுவர்
நாணிலர் நாமமே
பரவு வார்வினை தீர்க்கநின்
றார்திரு வாஞ்சியம்
மருவி யேத்தமட மாதொடு
நின்றவெம் மைந்தரே. **#72**

அரவை அணிகலனாகப் பூண்பவர்; காலில் அணியும் சிலம்பு ஆரவாரிக்க வீடுகள் தோறும் நாணிலராய் இரவிற் சென்று நல்ல பலியைப் பெறுபவர்; தம் திருப் பெயர்களைக் கூறிப் பரவுவார் வினைகளைத் தீர்க்கத் திருவாஞ்சியத்துள் நாம் சென்று வழிபடுமாறு உமையம்மையாரோடு எழுந்தருளியுள்ளார்.

<u>திருவாஞ்சியம்</u>

விண்ணி லானபிறை சூடுவர்
தாழ்ந்து விளங்கவே
கண்ணி னாலநங் கன்னுட
லம்பொடி யாக்கினார்
பண்ணி லானவிசை பாடன்மல்
குந்திரு வாஞ்சியத்

தண்ணலார் தம்மடி போற்றவல்
லார்க்கில்லை யல்லலே. #73

வானகத்தே தோன்றிய பிறைமதியைத் தம் திருமுடியில் தங்கி விளங்குமாறு சூடியவர்; நெற்றிக் கண்ணால் மன்மதனின் உடலை நீறாக்கியவர். பண்களில் பொருந்திய இசையோடு பாடும் புகழ்பொருந்திய திருவாஞ்சியத்துள் விளங்கும் அவ்வண்ணலாரின் திருவடியைப் போற்றவல்லார்க்கு அல்லல் இல்லை.

திருவாஞ்சியம்

மாட நீடுகொடி மன்னிய
தென்னிலங் கைக்குமன்
வாடியூ டவரை யாலடர்த்
தன்றருள் செய்தவர்
வேட வேடர்திரு வாஞ்சிய
மேவிய வேந்தரைப்
பாட நீடுமனத் தார்வினை
பற்றறுப் பார்களே. #74

நீண்ட கொடிகள் நிலைத்துள்ள மாட வீடுகளைக் கொண்ட தென்னிலங்கைக்கு அரசனாகிய இராவணன் வாடி வருந்தக் கயிலை மலையால் அவனை அடர்த்துப்பின் அருள்செய்தவர்; அருச்சுனன் பொருட்டு வேட்டுவக் கோலம் தாங்கியவர். திருவாஞ்சியத்துள் எழுந்தருளிய வேந்தர். அவ்விறைவரைப்பாட எண்ணுவார், வினை, பற்று ஆகியன நீங்கப் பெறுவர்.

திருவாஞ்சியம்

செடிகொ ணோயினடை யார்திறம்
பார்செறு தீவினை
கடிய கூற்றமுங் கண்டக
லும்புகல் தான்வரும்
நெடிய மாலொடய னேத்தநின்
றார்திரு வாஞ்சியத்
தடிகள் பாதமடைந் தாரடி
யாரடி யார்கட்கே. #75

நீண்டுயர்ந்த திருமாலும் பிரமனும் தம்மை வணங்குமாறு ஓங்கிநின்ற திருவாஞ்சியத்து அடிகளாகிய சிவபிரான் திருவடிகளை அடைந்த அடியவர்களின் திருவடிகளை அடைந்தவர்கள், துன்பம் தரும் நோய்களை அடையார். துன்புறுத்தும் தீவினைகளால் மாறுபடார். கொடிய கூற்றுவனும் அவர்களைக்கண்டு அஞ்சி அகல்வான். சிவகதி

அவர்களைத் தேடி வரும்.

திருவாஞ்சியம்

பிண்ட முண்டுதிரி வார்பிரி
யுந்துவ ராடையார்
மிண்டர் மிண்டுமொழி மெய்யல
பொய்யிலை யெம்மிறை
வண்டு கெண்டிமரு வும்பொழில்
சூழ்திரு வாஞ்சியத்
தண்ட வாணனடி கைதொழு
வார்க்கில்லை யல்லலே. **#76**

பிறர் திரட்டித்தந்த சோற்றை உண்டு திரியும் சமணரும், செந்நிற ஆடையைப் போர்த்துழலும், அவரின் வேறுபட்ட புத்தரும் ஆகிய மிண்டர்கள் வலிந்துகூறும் உரைகள் மெய்யல்ல. பொய்யிலியாகிய எம் இறைவன் வண்டுகள் கிளறி உண்ணும் தேன் நிறைந்த மலர்களை உடைய பொழில் சூழ்ந்த திருவாஞ்சியத்துள் எழுந்தருளியுள்ளான். அண்டம் முழுவதும் வாழும் அவன் திருவடிகளைக் கைகளால் தொழுது வணங்குவார்க்கு அல்லல் இல்லை.

திருவாஞ்சியம்

தென்றல் துன்றுபொழில் சென்றணை
யுந்திரு வாஞ்சியத்
தென்று நின்றவிறை யானை
யுணர்ந்தடி யேத்தலால்
நன்று காழிமறை ஞானசம்
பந்தன செந்தமிழ்
ஒன்று முள்ளமுடை யாரடை
வாருயர் வானமே. **#77**

தென்றல், பொழிலைப் பொருந்தி அதன் மணத்துடன் சென்று வீசும் திருவாஞ்சியத்துள் என்றும் நீங்கா துறையும், இறைவனியல்பை உணர்ந்து அவனடிகளை ஏத்தித் துதித்தலால், நன்மை தரும் காழிப்பதியுள் மறைவல்லவனாய்த் தோன்றிய ஞானசம்பந்தனின் இச்செந்தமிழ்ப் பாடல்களில் ஈடுபடும் மனம் உடையவர்கள், உயரிய வீடு பேற்றை அடைவர்.

திருச்சிக்கல்

திருச்சிக்கல்

திருச்சிக்கல்,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நவநீதநாதர்.
தேவியார் : வேனெடுங்கண்ணியம்மை.

வானு லாவுமதி வந்துல
வும்மதின் மாளிகை
தேனு லாவுமலர்ச் சோலைமல்
குந்திகழ் சிக்கலுள்
வேனல் வேளைவிழித் திட்டவெண்
ணெய்ப்பெரு மானடி
ஞான மாகநினை வார்வினை
யாயின நையுமே. #78

வானத்தே உலாவும் மதிவந்து பொருந்தும் மதில்கள் சூழ்ந்த மாளிகைகளும், தேன்பொருந்திய மலர்களை உடைய சோலைகளும் நிறைந்து விளங்கும் திருச்சிக்கல் என்னும் தலத்தில், வேனிற் காலத்துக் குரியவனாகிய மன்மதனை நெற்றி விழியால் எரித்தழித்த வெண்ணெய்ப் பெருமான் திருவடிகளை அவனருளால் விளைந்த பதி ஞானத்தாலே நினைபவர் வினைகள் நைந்துஅறும்.

திருச்சிக்கல்

மடங்கொள் வாளைகுதி கொள்ளு
மணமலர்ப் பொய்கைசூழ்
திடங்கொண் மாமறை யோரவர்
மல்கிய சிக்கலுள்
விடங்கொள் கண்டத்துவெண் ணெய்ப்பெரு
மானடி மேவியே
அடைந்து வாழும்மடி
யாரவ ரல்ல லறுப்பரே. #79

இளமை பொருந்திய வாளைமீன்கள் துள்ளிக் குதித்துக் களிக்கும் மணம் பொருந்திய மலர்கள் நிறைந்த பொய்கைகள் சூழ்ந்ததும் மனஉறுதியுடைய சிறந்த மறையவர்கள் நிறைந்துள்ளதுமான சிக்கலில் எழுந்தருளிய, விடம் தங்கிய கண்டத்தினை உடைய வெண்ணெய்ப் பெருமான் திருவடிகளை மனத்தால் விரும்பியவராய் அடைந்து வாழும்

அடியவர்கள் அல்லல்கள் நீங்குவர்.

திருச்சிக்கல்

நீல நெய்தனில விம்மல
ருஞ்சுனை நீடிய
சேலுமா லுங்கழ னிவ்வளம்
மல்கிய சிக்கலுள்
வேலொண் கண்ணியி னாளையொர்
பாகன்வெண் ணெய்ப்பிரான்
பாலவண் ணன்கழ லேத்தநம்
பாவம் பறையுமே. **#80**

நீலநிறம் பொருந்திய நெய்தல் மலர்கள் விளங்கி மலரும் சுனைகள் பலவற்றைக் கொண்டதும், சேல்மீன்கள் துள்ளும் வயல் வளம் நிறைந்ததுமான சிக்கல் என்னும் திருப்பதியில் வேல் போன்ற ஒளிநிறைந்த கண்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்ட வெண்ணெய்ப் பிரானாகிய பால்வண்ண நாதனின் திருவடிகளை ஏத்தின் நம் பாவங்கள் நீங்கும்.

திருச்சிக்கல்

கந்த முந்தக் கைதைபூத்துக் கமழ்ந்துசே ரும்பொழிற்
செந்துவண் டின்னிசைப் பாடன்மல் குந்திகழ் சிக்கலுள்
வெந்தவெண் ணீற்றண்ணல் வெண்ணைய்ப் பிரான்விரை யார்கழல்
சிந்தைசெய் வார்வினை யாயின தேய்வது திண்ணமே. **#81**

மணம் முற்பட்டுச் சென்று பரவுமாறு தாழைகள் பூத்துக் கமழும் பொழில்களில் வண்டுகள் செந்து என்னும் ஒருவகைப் பண்ணோடு பாடும் பாடல்களைக் கொண்டு விளங்கும் சிக்கல் என்னும் தலத்தில், கற்பம் செய்தமைத்த திருவெண்ணீற்றை அணிந்த தலைமையாளனாகிய வெண்ணெய்ப்பிரானின் மணம் பொருந்திய திருவடிகளை நினைபவர் வினைகள் தேய்வது திண்ணம்.

திருச்சிக்கல்

மங்குல்தங் கும்மறை
யோர்கண்மா டத்தய லேமிகு
தெங்குதுங் கப்பொழிற் செல்வமல்
குந்திகழ் சிக்கலுள்
வெங்கண்வெள் ளேறுடை
வெண்ணெய்ப்பி ரானடி மேவவே
தங்கு மேற்சர தந்திரு

நாளுந் தகையுமே. **#82**
மேகங்கள் தங்கும் மறையவரின் மாடவீடுகளையும் அவற்றின் அருகே உயர்ந்து வளர்ந்துள்ள தென்னைகளை உடைய சோலைகளையும் கொண்டு செல்வம் நிறைந்துவிளங்கும் சிக்கல் என்னும் தலத்தில் சினம்மிக்க கண்களை உடைய வெள்ளேற்று ஊர்தியை உடைய வெண்ணெய்ப் பெருமான் திருவடிகளை அடையின், மேலான கதி கிடைத்தல் உறுதி. செல்வம் நாள்தோறும் பெருகும்.

திருச்சிக்கல்

வண்டி ரைத்துமது விம்மிய
மாமலர்ப் பொய்கைசூழ்
தெண்டி ரைக்கொள்புனல் வந்தொழு
கும்வயற் சிக்கலுள்
விண்டி ரைத்தலம ராற்றிகழ்
வெண்ணெய்ப் பிரானடி
கண்டி ரைத்துமன மேமதி
யாய்கதி யாகவே. **#83**

வண்டுகள் ஒலிசெய்து சூழத் தேனை மிகுதியாகச் சொரியும் பெரிய மலர்களைக் கொண்டுள்ள பொய்கைகள் சூழ்ந்ததும் தண்ணீர் பெருகி ஓடும் வயல்களை உடையதுமான சிக்கற் பதியில், திருமால் பூசித்த மலர்களால் திகழும் வெண்ணெய்ப் பெருமான் திருவடிகளைத் தரிசித்துத் துதிசெய்து நற்கதி பெற ‘மனமே மதித்துப் போற்றுவாயாக’.

திருச்சிக்கல்

முன்னுமா டம்மதின் மூன்றுட
னேயெரி யாய்விழத்
துன்னுவார் வெங்கணை யொன்று
செலுத்திய சோதியான்
செந்நெலா ரும்வயற் சிக்கல்வெண்
ணெய்ப்பெரு மானடி
உன்னிநீ டம்மன மேநினை
யாய்வினை யோயவே. **#84**

மனமே! வானவெளியில் முற்பட்டுச் செல்லும் பெரிய அரக்கர்களின் கோட்டைகள், எரியில் அழிந்து விழுமாறு விரைந்து செல்வதும் நீண்டதும் கொடியதுமான கணை ஒன்றைச் செலுத்தி அழித்த ஒளிவடிவினனாகிய செந்நெல்பொருந்திய வயல்கள் சூழ்ந்த சிக்கல் என்னும் பதியில் விளங்கும் வெண்ணெய்ப் பெருமான் திருவடிகளைப் பலகாலும் எண்ணி அழுந்தி நம் வினைகள் தேய்ந்தொழிய

நினைவாயாக.

<u>திருச்சிக்கல்</u>

தெற்ற லாகிய தென்னிலங்
கைக்கிறை வன்மலை
பற்றி னான்முடி பத்தொடு
தோள்கணெ ரியவே
செற்ற தேவனஞ் சிக்கல்வெண்
ணெய்ப்பெரு மானடி
உற்று நீநினை யாய்வினை
யாயின வோயவே. **#85**

தெளந்த அறிவினை உடைய தென்இலங்கைக்கு இறைவனாகிய இராவணன் ஈசன் எழுந்தருளிய கயிலைமலையைப் பெயர்க்க முற்பட்டுப் பற்றிய அளவில் அவன் முடிகள் பத்தோடு இருபது தோள்களும் நெரியுமாறு செற்ற தேவனாகிய நம் சிக்கல் வெண்ணெய்ப் பெருமான் திருவடிகளை, மனமே! வினைகள் யாவும் தேய்ந்தொழிய நீ உற்று நினைவாயாக.

<u>திருச்சிக்கல்</u>

மாலி னோடரு மாமறை
வல்ல முனிவனும்
கோலி னார்குறு கச்சிவன்
சேவடி கோலியும்
சீலந் தாமறி யார்திகழ்
சிக்கல்வெண் ணெய்ப்பிரான்
பாலும் பன்மலர் தூவப்
பறையுநம் பாவமே. **#86**

திருமாலும் அரியமறை வல்ல நான்முகனும் சிவபிரானின் அடிமுடிகளைக் காண ஏனமும் அன்னமுமாய வடிவெடுத்து முயன்றனர். முயன்றும் அப்பெருமானின் உண்மைத்தன்மையை உணராராயினர். அவ்விறைவன் சிக்கலில் வெண்ணெய்ப் பிரான் என்ற திருப்பெயரோடு வீற்றிருந்தருளுகின்றான். அவனைப் பாலபிடேகம்புரிந்து பல மலர்களைத்தூவி வழிபடின் நம் பாவங்கள் நீங்கும்.

<u>திருச்சிக்கல்</u>

பட்டை நற்றுவ ராடையி
னாரொடும் பாங்கிலாக்
கட்ட மண்கழுக் கள்சொல்

லினைக்கரு தாதுநீர்
சிட்டன் சிக்கல்வெண் ணெய்ப்பெரு
மான்செழு மாமறைப்
பட்டன் சேவடி யேபணி
மின்பிணி போகவே. #87

நல்ல மருதந்துவர்ப்பட்டையின் சாறு ஊட்டப் பட்ட ஆடையை அணிந்த சாக்கியரும், முறையற்ற பண்புகளைக் கொண்ட உடற்கட்டுடைய கழுவேறுதற்குரிய சமணர்களும் சொல்லும் பொய்யுரைகளைக் கருதாது நீர் மேலானவனும், சிக்கலில் வெண்ணெய்ப் பெருமானாக விளங்குபவனும் ஆகிய செழுமையான சிறந்த வேதங்களில் வல்ல புலவனாகிய சிவபிரான் சேவடிகளையே பிணிகள் தீரப்பணிவீர்களாக.

திருச்சிக்கல்

கந்த மார்பொழிற் காழியுண்
ஞானசம் பந்தன்நல்
செந்தண் பூம்பொழிற் சிக்கல்வெண்
ணெய்ப்பெரு மானடிச்
சந்த மாச்சொன்ன செந்தமிழ்
வல்லவர் வானிடை
வெந்த நீறணியும்பெரு
மானடி மேவரே. #88

மணம் பொருந்திய சோலைகள் சூழ்ந்த காழிப் பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன் செவ்விய தண்மையான அழகிய பொழில்கள் சூழ்ந்த சிக்கலில் விளங்கும் வெண்ணெய்ப் பெருமான் திருவடிகளைப் போற்றி இசையோடு பாடிய இச்செந்தமிழ்ப் பதிகத்தை ஓதவல்லவர் சிவலோகத்தில் கற்பமுறையில் உண்டான திருவெண்ணீற்றை அணிந்துள்ள சிவபெருமான் திருவடிகளை மேவுவர்.

திருமழபாடி

திருமழபாடி

திருமழபாடி,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வச்சிரத்தம்பேசுவரர்.
தேவியார் : அழகாம்பிகையம்மை.

களையும் வல்வினை யஞ்சனெஞ் சேகரு தார்புரம்
உளையும் பூசல்செய் தானுயர் மால்வரை நல்விலா
வளைய வெஞ்சரம் வாங்கியெய் தான்மதுத் தும்பிவண்
டளையுங் கொன்றையந் தார்மழ பாடியு ளண்ணலே. **#89**

உயர்ந்ததும் பெரியதுமான மேருமலையை நல்ல உயர்ந்த வில்லாக வளைத்து அசுரர்களின் திரிபுரங்களை அவ்வசுரர் வருந்துமாறு போர்செய்தவனாய், வண்டினங்கள் தேனை உண்ணத் துழாவுகின்ற கொன்றை மலர்மாலை அணிந்த மழபாடியுள் விளங்கும் அண்ணல், நம் வல்வினைகளைக் களைவான். நெஞ்சே! அஞ்ச வேண்டா.

திருமழபாடி

காச்சி லாதபொன் னோக்குங் கனவயி ரத்திரள்
ஆச்சி லாதப ளிங்கின னஞ்சுமு னாடினான்
பேச்சி னாலுமக் காவதென் பேதைகாள் பேணுமின்
வாச்ச மாளிகை சூழ்மழ பாடியை வாழ்த்துமே. **#90**

அறிவற்றவர்களே! அவப்பேச்சால் உமக்கு விளையும் பயன் யாது? காய்ச்சப் பெறாமலே இயற்கையாக ஒளி விடும் பொன் போன்றவளாகிய, உமையம்மையால் நோக்கப்பெறும் வயிரம் போன்ற திரண்ட பெரிய தோள்களை உடையவனும், தன் பாற்பட்டதை நுணுக்காது அப்படியே காட்டும் பளிங்கு போன்ற ஒளியினனும், முற்காலத்தே நஞ்சை உண்டவனும் ஆகிய பெருமானைப் பேணுங்கள். இலக்கணம் அமைந்த மாளிகைகளால் சூழப்பட்ட மழபாடியை வாழ்த்துங்கள்.

திருமழபாடி

உரங்கெ டுப்பவ னும்பர்க ளாயவர் தங்களைப்
பரங்கெ டுப்பவ னஞ்சையுண் டுபக லோன்றனை
முரண்கெ டுப்பவன் முப்புரந் தீயெழச் செற்றுமுன்
வரங்கொ டுப்பவன் மாமழ பாடியுள் வள்ளலே. **#91**

சிறந்த மழபாடியுள் எழுந்தருளிய வள்ளலாகிய பெருமான் தக்கன் வேள்வியில் அவியுண்ணச் சென்ற தேவர்களின் வலிமையை அழித்ததோடு அவர்களது தெய்வத்தன்மையையும் போக்கியவன். கடலிடை எழுந்த நஞ்சினை உண்டவன். மாறுபட்ட கதிரவனின் பற்களைத் தகர்த்து, பின் அருள் புரிந்தவன். முப்புரங்களையும் தீயெழச்செய்து அழித்தவன்.

திருமழபாடி

பள்ள மார்சடை யிற்புடை யேயடை யப்புனல்
வெள்ள மாதரித் தான்விடை யேறிய வேதியன்
வள்ளன் மாமழ பாடியுண் மேய மருந்தினை
உள்ள மாதரி மின்வினை யாயின வோயவே. **#92**

நடுவே பள்ளம் அமைந்த சடைமுடியில் வந்துதங்குமாறு கங்கை வெள்ளத்தைத் தரித்தவனும், விடை ஏறிவரும் வேதியனும் வள்ளலும் ஆகிய சிறந்த மழபாடியில் விளங்கும் அரிய மருந்து போல்வானை, வினைகள் நீங்குமாறு உள்ளத்தால் நினைந்து அன்பு செய்யுங்கள்.

திருமழபாடி

தேனு லாமலர் கொண்டுமெய்த் தேவர்கள் சித்தர்கள்
பானெ யஞ்சுட னாட்டமுன் னாடிய பால்வணன்
வான நாடர்கள் கைதொழு மாமழ பாடியெங்
கோனை நாடொறுங் கும்பிட வேகுறி கூடுமே. **#93**

மெய்த்தேவர்களும் சித்தர்களும் தேன் பொருந்திய மலர்களைக் கொண்டு அர்ச்சித்துப் பால், நெய், முதலிய ஆனைந்து ஆட்ட, அவற்றுள் மூழ்கித்திளைக்கும் பால் வண்ணனும், வானவர்கள் கைகளால் தொழுது வணங்கும் மழபாடியில் விளங்கும் எம்தலைவனும் ஆகிய சிவபிரானை நாள்தோறும் வணங்கிவரின், அவன் நம் மோடு கூடுவான்.

திருமழபாடி

தெரிந்த வன்புர மூன்றுடன் மாட்டிய சேவகன்
பரிந்து கைதொழு வாரவர் தம்மனம் பாவினான்
வரிந்த வெஞ்சிலை யொன்றுடை யான்மழ பாடியைப்
புரிந்து கைதொழு மின்வினை யாயின போகுமே. **#94**

எல்லாம் அறிந்தவனும், வலிய முப்புரங்களையும் அழித்த வீரனும், அன்போடு தன்னை வழிபடுபவரின் மனத்தில்பரவி விளங்குபவனும், வரிந்து கட்டப்பட்ட வலியவில்லை ஏந்தியவனும் ஆகிய மழபாடி இறைவனை விரும்பிக் கைதொழுபவர்களின் வினைகள் போகும்.

திருமழபாடி

சந்த வார்குழ லாளுமை தன்னொரு கூறுடை
எந்தை யானிமை யாதமுக் கண்ணின னெம்பிரான்
மைந்தன் வார்பொழில் சூழ்மழ பாடிம ருந்தினைச்
சிந்தி யாவெழு வார்வினை யாயின தேயுமே. **#95**

அழகிய நீண்ட கூந்தலை உடைய உமையம்மையைத் தன் திருமேனியில் ஒருகூறாக உடைய எந்தையும், இமையாத மூன்று கண்களை உடையவனும், எம் தலைவனும், பெருவீரனும் ஆகிய, நீண்ட பொழில் சூழ்ந்த மழபாடியுள் விளங்கும் அரிய மருந்து போல்வானைச் சித்திப்பவர்களின் வினைகள் தேய்ந்துகெடும்.

திருமழபாடி

இரக்க மொன்று மிலானிறை யான்றிரு மாமலை
உரக்கை யாலெடுத் தான்றன தொண்முடி பத்திற
விரற்ற லைந்நிறு வியுமை யாளொடு மேயவன்
வரத்தை யேகொடுக் கும்மழ பாடியுள் வள்ளலே. **#96**

நெஞ்சில் இரக்கம் ஒருசிறிதும் இல்லாத இராவணன், திருக்கயிலை மலையை, தனது வலிய கைகளால் பெயர்க்க முற்பட்டபோது அவன் ஒளிபொருந்திய தலைகள் பத்தும் நெரியுமாறு கால்விரலின் நுனியை ஊன்றி, உமையவளோடு மகிழ்ந்து வீற்றிருக்கும் சிவபிரான், மழபாடியில் வரத்தைக் கொடுக்கும் வள்ளலாக வீற்றிருந்தருளுகின்றான்.

திருமழபாடி

ஆல முண்டமு தம்மம ரர்க்கரு ளண்ணலார்
கால னாருயிர் வீட்டிய மாமணி கண்டனார்
சால நல்லடி யார்தவத் தார்களுஞ் சார்விட
மால யன்வணங் கும்மழ பாடியெம் மைந்தனே. **#97**

நஞ்சினைத் தாம் உண்டு அமுதத்தை, தேவர்க்கு அளித்த தலைமையாளரும், காலன் உயிரை அழித்த நீலமணி போன்ற கண்டத்தினரும், திருமாலும் பிரமனும் வணங்கும் மழபாடியில் எழுந்தருளிய வீரரும் ஆகிய சிவபிரான் மிகுதியான அடியவர்களும் தவத்தவர்களும் தம்மைச் சாரும் புகலிடமாய் விளங்குபவர்.

திருமழபாடி

கலியின் வல்லம ணுங்கருஞ் சாக்கியப் பேய்களும்
நலியு நாள்கெடுத் தாண்டவென் னாதனார் வாழ்பதி

பலியும் பாட்டொடு பண்முழ வும்பல வோசையும்
மலியு மாமழ பாடியை வாழ்த்தி வணங்குமே. **#98**

துன்பம் தரும் வலிய சமணர்களும், கரிய சாக்கியப் பேய்களும் உலகை நலிவு செய்யும் நாளில் அதனைத் தடுத்துச் சைவத்தை மீண்டும் நிலைபெறச் செய்யுமாறு என்னை ஆண்டருளிய என் நாதனார் வாழும் பதி, உணவிடுதலும், பாட்டும், தாளத்தொடு, கூடிய முழவொலியும் பிற மங்கல ஓசைகளும். நிறைந்து சிறந்த மழபாடி அதனை வாழ்த்திவணங்குவோம்.

<u>திருமழபாடி</u>

மலியு மாளிகை சூழ்மழ பாடியுள் வள்ளலைக்
கலிசெய் மாமதில் சூழ்கடற் காழிக் கவுணியன்
* * * * * * * **#99**

(இப்பாடலின் பின் இரண்டு அடிகள் கிடைத்தில) மாளிகைகள் பலவும் சூழ்ந்த மழபாடியுள் விளங்கும் வள்ளலை, வலியவாகச் செய்யப் பெற்ற மதில்கள் சூழ்ந்த, கடற்கரையை அடுத்துள்ள காழிப்பதியுள் கவுணியர் கோத்திரத்தில் தோன்றிய ஞானசம்பந்தன்.........

திருமங்கலக்குடி

திருமங்கலக்குடி

திருமங்கலக்குடி,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : புராணவரதேசுவரர்.
தேவியார் : மங்களநாயகியம்மை.

சீரி னார்மணி யும்மகில் சந்துஞ் செறிவரை
வாரி நீர்வரு பொன்னி வடமங் கலக்குடி
நீரின் மாமுனி வன்னெடுங் கைகொடு நீர்தனைப்
பூரித் தாட்டியர்ச் சிக்க விருந்த புராணனே, **#100**

மலையிலிருந்து புகழ்மிக்க மணிகள், அகில், சந்தனம் ஆகியனவற்றை வாரிக்கொண்டு வரும் நீரை உடைய பொன்னி நதியின் வடபால் விளங்கும் திருமங்கலக்குடியில், அக்காவிரி நீரினைப் பெருமைமிக்க முனிவர் ஒருவர், தமது வலிமை மிக்க நீண்ட கையால் கோயிலில் இருந்தவாறே நீட்டி எடுத்து நிறைத்து இறைவனுக்கு அபிடேகம் புரிந்து அர்ச்சிக்க பழையவனாகிய பெருமான் மகிழ்ந்து அதனை ஏற்று வீற்றிருந்தருள்கின்றான்.

திருமங்கலக்குடி

பணங்கொ ளாடர வல்குனல் லார்பயின் றேத்தவே
மணங்கொண் மாமயி லாலும் பொழின்மங் கலக்குடி
இணங்கி லாமறை யோரிமை யோர்தொழு தேத்திட
அணங்கி னோடிருந் தானடி யேசர ணாகுமே. **#101**

ஆடும் அரவினது படம் போன்ற அல்குலை உடைய மகளிர் பலகாலும் சொல்லி ஏத்த, மணம் பொருந்தியனவும் பெரிய மயில்கள் ஆடுவனவுமான பொழில்கள் சூழ்ந்த மங்கலக் குடியில் தம்முள் மாறுபடும் செய்திகளைக் கூறும் வேதங்களை வல்ல அந்தணர்களும் இமையவர்களும் வணங்கிப்போற்ற உமையம்மையாரோடு எழுந்தருளியிருக்கும் பெருமான் திருவடிகளே நமக்குப் புகலிடமாகும்.

திருமங்கலக்குடி

கருங்கை யானையி னீருரி போர்த்திடு கள்வனார்
மருங்கெ லாமண மார்பொழில் சூழ்மங் கலக்குடி
அரும்பு சேர்மலர்க் கொன்றையி னானடி யன்பொடு
விரும்பி யேத்தவல் லார்வினை யாயின வீடுமே. **#102**

கரிய துதிக்கையை உடைய யானையை உரித்த தோலைப் போர்த்த கள்வரும், அயலிடமெல்லாம் மணம் பரப்பும் பொழில்கள் சூழ்ந்த மங்கலக்குடியில் அரும்புகளோடு கூடிய கொன்றை மலர் மாலையை அணிந்தவரும் ஆகிய சிவபிரான் திருவடிகளை அன்போடு விரும்பி ஏத்த வல்லவர் வினைகள் நீங்கும்.

திருமங்கலக்குடி

பறையி னோடொலி பாடலு மாடலும் பாரிடம்
மறையி னோடியன் மல்கிடு வார்மங் கலக்குடிக்
குறைவி லாநிறை வேகுண மில்குண மேயென்று
முறையி னால்வணங் கும்மவர் முன்னெறி காண்பரே. **#103**

பறையொலியோடு பாடல் ஆடல்புரியும் பூதகணங்கள் சூழ, வேத ஒழுக்கத்தோடு நிறைந்து வாழும் அந்தணர் வாழும் திருமங்கலக்குடியில் விளங்கும் இறைவனை, குறைவிலா நிறைவே என்றும், பிறர்க்கு இல்லாத எண்குணங்களை உடையவனே என்றும் முறையோடு வணங்குவோர், முதன்மையான சிவநெறியை அறிவார்கள்.

திருமங்கலக்குடி

ஆனி லங்கிள ரைந்தும விர்முடி யாடியோர்
மானி லங்கையி னான்மண மார்மங் கலக்குடிஊனில் வெண்டலைக்
கையுடை யானுயர் பாதமே ஞான மாகநின் றேத்தவல் லார்வினை
நாசமே. **#104**

பசுவிடம் விளங்கும் பால், தயிர் முதலான ஐந்து தூயபொருள்களிலும் மூழ்கி, மானை ஏந்திய அழகிய கையினராய், மணம் பொருந்திய மங்கலக்குடியில், தசைவற்றிய வெள்ளிய பிரமகபாலத்தைக் கையின்கண் உடையவராய் விளங்கும் பெருமானார் திருவடி அடைதலே ஞானத்தின் பயனாவது என்பதை அறிந்து அவற்றை ஏத்த வல்லவர் வினைகள் நாசமாகும்.

திருமங்கலக்குடி

தேனு மாயமு தாகிநின் றான்றெளி சிந்தையுள்
வானு மாய்மதி சூடவல் லான்மங் கலக்குடி
கோனை நாடொறு மேத்திக் குணங்கொடு கூறுவார்
ஊன மானவை போயறு முய்யும் வகையதே. **#105**

தேனும் அமுதமும் போல இனியவனும், தெளிந்த சிந்தையில் ஞானவொளியாக நிற்பவனும், பிறைமதியை முடியிற் சூடவல்லவனும் ஆகிய திருமங்கலக்குடிக்கோனை நாள்தோறும் வணங்கி, அவன் குணங்களைப் புகழ்பவர்களின் குறைகள் நீங்கும். உய்யும் வழி அதுவே

யாகும்.

திருமங்கலக்குடி

வேள்ப டுத்திடு கண்ணினன் மேருவில் லாகவே
வாள ரக்கர் புரமெரித் தான்மங் கலக்குடி
ஆளு மாதிப் பிரானடி கள்ளடைந் தேத்தவே
கோளு நாளவை போயறுங் குற்றமில் லார்களே. **#106**

மன்மதனை அழித்த நுதல் விழியினனும், மேரு மலையை வில்லாகக் கொண்டு வாட்படை உடைய அரக்கர்களின் முப்புரங்களை எரித்தவனும் ஆகிய, திருமங்கலக்குடியை ஆளும் முதற்பிரானாகிய சிவபிரான் திருவடிகளை அடைந்து, அவனை ஏத்துவார் நாள், கோள் ஆகியவற்றால் வரும் தீமைகள் அகல்வர். குற்றங்கள் இலராவர்.

திருமங்கலக்குடி

பொலியு மால்வரை புக்கெடுத் தான்புகழ்ந் தேத்திட
வலியும் வாளொடு நாள்கொடுத் தான்மங் கலக்குடிப்
புலியி னாடையி னானடி யேத்திடும் புண்ணியர்
மலியும் வானுல கம்புக வல்லவர் காண்மினே. **#107**

விளங்கித் தோன்றும் பெரிய கயிலைமலையைப் பெயர்த்து எடுத்த இராவணனை முதலில் அடர்த்துப் பின் அவன் புகழ்ந்து ஏத்திய அளவில் அவனுக்கு வலிமை, வாள், நீண்ட ஆயுள் முதலியனவற்றைக் கொடுத்தருளியவனும், புலித்தோல் ஆடை உடுத்தவனும் ஆகிய மங்கலக்குடிப் பெருமானை வணங்கி, அவன் திருவடிகளை ஏத்தும் புண்ணியர் இன்பம் மிகப் பெறுவர். சிவலோகம் சேர வல்லவர் ஆவர். காண்மின்.

திருமங்கலக்குடி

ஞால முன்படைத் தானளிர் மாமலர் மேலயன்
மாலுங் காணவொ ணாவெரி யான்மங் கலக்குடி
ஏல வார்குழ லாளொரு பாக மிடங்கொடு
கோல மாகிநின் றான்குணங் கூறுங் குணமதே. **#108**

உலகைப் படைத்தவனாகிய குளிர்ந்த தாமரை மலர் மேல் உறையும் பிரமனும் திருமாலும் அறிதற்கரிய நிலையில் எரி உரு வானவனும், திருமங்கலக்குடியில் மண மயிர்ச்சாந்தணிந்த குழலினளாயஉமையம்மையை இடப்பாகமாகக் கொண்ட அழகிய வடிவினனுமாகியசிவபிரானின் குணத்தைக் கூறுங்கள். அதுவே உங்களைக் குணமுடையவராக்கும்.

திருமங்கலக்குடி

மெய்யின் மாசினர் மேனி விரிதுவ ராடையர்
பொய்யை விட்டிடும் புண்ணியர் சேர்மங் கலக்குடிச்
செய்ய மேனிச் செழும்புனற் கங்கை செறிசடை
ஐயன் சேவடி யேத்தவல் லார்க்கழ காகுமே. **#109**

அழுக்கேறிய மேனியராகிய சமணர்கள், மேனி மீது விரித்துப் போர்த்த துவராடையராகிய சாக்கியர் ஆகியோர்களின் பொய்யுரைகளை விட்டுச் சைவ சமய உண்மைகளை உணரும் புண்ணியர்கள் வாழும் திருமங்கலக்குடியில், சிவந்த திருமேனியனாய்ச் செழுமையான கங்கை நதி செறிந்த சடையினனாய் விளங்கும் தலைவன் சேவடிகளை ஏத்த வல்லார்க்கு, அழகிய பேரின்ப வாழ்வு அமையும்.

திருமங்கலக்குடி

மந்த மாம்பொழில் சூழ்மங் கலக்குடி மன்னிய
எந்தை யையெழி லார்பொழிற் காழியர் காவலன்
சிந்தை செய்தடி சேர்த்திடு ஞானசம் பந்தன்சொல்
முந்தி யேத்தவல் லாரிமை யோர்முத லாவரே. **#110**

தென்றற் காற்றைத்தரும் பொழில்கள் சூழ்ந்த திருமங்கலக்குடியில் நிலைபெற்றுள்ள எம் தந்தையாகிய சிவபிரானை அழகிய பொழில் சூழ்ந்த காழிப்பதியின் தலைவனாகிய ஞானசம்பந்தன், சிந்தித்து அவன் திருவடிகளைச் சேர்க்கவல்லதாகப் பாடிய இத்திருப்பதிக வாய்மொழியை அன்புருக ஏத்த வல்லவர், இமையோர் தலைவர் ஆவர்.

சீகாழி

சீர்காழி

சீகாழி,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

நல்லானை நான்மறை யோடிய லாறங்கம்
வல்லானை வல்லவர் பான்மலிந் தோங்கிய
சொல்லானைத் தொன்மதிற் காழியே கோயிலாம்
இல்லானை யேத்தநின் றார்க்குள தின்பமே. **#111**

நன்மையே வடிவானவன். நான்கு மறைகள், அவற்றோடுஇயலும் ஆறு அங்கங்கள் ஆகியனவற்றில் வல்லவன். அவற்றைக் கற்றுணர்ந்த அந்தணர்பால் நிறைந்து அவர்கள் ஓதும் துதிகளைத் தன் வடிவாகக் கொண்டவன். பழமையான மதில்கள் சூழ்ந்த காழிப்பதியில் விளங்கும் கோயிலைத் தனது வீடாகக் கொண்டவன். அத்தகை யோனை ஏத்துவோர்க்கு இன்பம் உண்டாம்.

சீர்காழி

நம்மான மாற்றிந மக்கரு ளாய்நின்ற
பெம்மானைப் பேயுட னாடல்பு ரிந்தானை
அம்மானை யந்தணர் சேரும ணிகாழி
எம்மானை யேத்தவல் லார்க்கிட ரில்லையே. **#112**

நம் குற்றங்களைத் தீர்த்து நமக்குக் கருணை காட்டும் தலைவன். பேய்களோடு ஆடல் புரிபவன். அரிய வீரன். அந்தணர்கள் வாழும் அழகிய காழிப்பதியில் விளங்கும் எம் கடவுள். அத்தகையோனைஏத்துவார்க்கு இடர் இல்லை.

சீர்காழி

அருந்தானை யன்புசெய் தேத்தகில் லார்பாற்
பொருந்தானைப் பொய்யடி மைத்தொழில் செய்வாருள்
விருந்தானை வேதிய ரோதி மிடைகாழி
இருந்தானை யேத்துமி னும்வினை யேகவே. **#113**

தன்னிடம் அன்பு செய்து ஏத்தாதார் அளிக்கும் படையலை உண்ணாதவன். பொய்யாக அடிமை செய்வாரிடம் பொருந்தாதவன். புதுமைக்கும் புதியவன். நான்குவேதங்களை ஓதும் வேதியர் நிறைந்த

காழிப் பதியில் இருப்பவன். அத்தகையோனை நும் இடர்போக ஏத்துவீராக.

சீர்காழி

புற்றானைப் புற்றர வம்மரை யின்மிசைச்
சுற்றானைத் தொண்டுசெய் வாரவர் தம்மொடும்
அற்றானை யந்தணர் காழிய மர்கோயில்
பற்றானைப் பற்றிநின் றார்க்கில்லை பாவமே. **#114**

புற்று வடிவானவன். புற்றில் வாழும் பாம்பினைத் தன் அரைமீது சுற்றியவன். தனக்குத் தொண்டு செய்பவர்களோடு தன் பெருமைகளை விடுத்துப் பழகி யருள்பவன். அந்தணர்கள் நிறைந்த காழிப்பதி மீது பற்றுடையவன். அவனைப் பற்றி நிற்பவர்கட்குப் பாவம் இல்லை.

சீர்காழி

நெதியானை நெஞ்சிடங் கொள்ளநி னைவார்தம்
விதியானை விண்ணவர் தாம்வியந் தேத்திய
கதியானைக் காருல வும்பொழிற் காழியாம்
பதியானைப் பாடுமி னும்வினை பாறவே. **#115**

நமக்கு நிதியாக விளங்குவோன். தம் நெஞ்சில் அவன் எழுந்தருளுமாறு நினைப்பவர்க்கு நன்னெறி காட்டுபவன். மேகங்கள் உலாவும் பொழில் சூழ்ந்த சீகாழியைத்தன் ஊராகக் கொண்டவன். அத்தகையோனை நும் வினை நீங்கப் பாடுவீராக.

சீர்காழி

செப்பான மென்முலை யாளைத்தி கழ்மேனி
வைப்பானை வார்கழ லேத்திநி னைவார்தம்
ஒப்பானை யோதமு லாவுக டற்காழி
மெய்ப்பானை மேவிய மாந்தர்வி யந்தாரே. **#116**

செப்புப் போன்ற மென்மையான தனங்களைக் கொண்ட உமையம்மை திருமேனியின் இடப்பாகமாக வைத்துள்ளவன். தன் திருவடிகளை நினைபவர்களிடம் ஒப்பப் பழகுபவன். ‘கடல் நீர் உலாவுவதும், கடற்கரையை அடுத்துள்ளதுமான காழிப்பதியில் மெய்ப்பொருளாக விளங்குபவன். அத்தகையோனை விரும்பி வழிபட்ட மக்கள் பிறரால் வியந்துபோற்றப்படும் புகழ் உடையோர் ஆவர்.

சீர்காழி

துன்பானைத் துன்பம ழித்தரு ளாக்கிய
இன்பானை யேழிசை யின்னிலை பேணுவார்

அன்பானை யணிபொழிற் காழிந கர்மேய
நம்பானை நண்ணவல் லார்வினை நாசமே. **#117**
நம்மைத் திருத்துமாறு துன்பங்களைத் தருபவன். நாம் துயர் உறும் போது, அத்துன்பங்களைத் தீர்த்து அருளைப்புரியும் இன்ப வடிவாய் இருப்பவன். ஏழிசையின் கூறுகளை அறிந்து பாடிப் போற்றுவாரிடம் அன்பு செய்பவன். அழகிய பொழில் சூழ்ந்த காழி நகரில் நம்மால் விரும்பப்படுபவனாய் எழுந்தருளி யிருப்பவன். அத்தகையோனை அடைந்து போற்ற வல்லாரின் வினைகள் அழியும்.

சீர்காழி

குன்றானைக் குன்றெடுத் தான்புய நாலைந்தும்
வென்றானை மென்மல ரானொடு மால்தேட
நின்றானை நேரிழை யாளொடுங் காழியுள்
நன்றானை நம்பெரு மானைந ணுகுமே. **#118**
மலைகளைத் தன் இருப்பிடமாகக் கொண்டவன். தான் எழுந்தருளிய கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த இராவணனின் இருபது தோள்களையும் வென்றவன். மெல்லிய தாமரை மலரில் வாழும் நான்முகனும் மாலும் தேட ஓங்கி நின்றவன். உமையம்மையோடு காழிப்பதியுள் நன்மைகளைச் செய்பவனாய் வீற்றிருப்பவன். அத்தகைய நம் பெருமானை அடைந்து வழிபடுவீர்களாக.

சீர்காழி

சாவாயும் வாதுசெய் சாவகர் சாக்கியர்
மேவாத சொல்லவை கேட்டுவெகு ளேன்மின்
பூவாய கொன்றையி னானைப் புனற்காழிக்
கோவாய கொள்கையி னானடி கூறுமே. **#119**
தம் கொள்கைக்கு அழிவு வந்தபோதும் விடாதுவாது செய்யும் சமணர் சாக்கியர்களின் பொருந்தாத உரைகளைக் கேட்டு அவர்களையோ சைவத்தையோ, வெகுளாது கொன்றைப்பூ வணிந்தவனும், புனல் சூழ்ந்த காழி நகரின் தலைவனாய் மேலான சிவநெறிக்கு உரியவனும் ஆகிய சிவபெருமான் திருவடிகளைப் புகழ்ந்து போற்றுவீர்களாக.

சீர்காழி

கழியார்சீ ரோதமல் குங்கடற் காழியுள்
ஒழியாது கோயில்கொண் டானையு கந்துள்கித்
தழியார்சொன் ஞானசம் பந்தன்ற மிழார
மொழிவார்கண் மூவுல கும்பெறு வார்களே. **#120**
கழிகளின் வழியே வரும் மிக்க கடல்நீர் நிறைந்ததும் கடற்கரையை

அடுத்துள்ளதுமான காழிப்பதியுள்கோயில் கொண்டு நீங்காது உறையும் இறைவனை, நினைந்து மகிழ்ந்து அவனைப் பொருந்தியவனாய், ஞானசம்பந்தன் பாடிய தமிழை மனம் பொருந்த மொழிந்து போற்றுபவர்கள் மூவுலகையும் பெறுவார்கள்.

திருவேகம்பம்

திருஏகம்பம்

திருவேகம்பம்,
பண் - இந்தளம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஏகாம்பரநாதர்.
தேவியார் : காமாட்சியம்மை.

மறையானை மாசிலாப் புன்சடை மல்குவெண்
பிறையானைப் பெண்ணொடா ணாகிய பெம்மானை
இறையானை யேர்கொள்கச் சித்திரு வேகம்பத்
துறைவானை யல்லதுள் காதென துள்ளமே. **#121** ★★★★★

வேதவடிவினன், குற்றமற்ற சிவந்த சடையிற் பொருந்திய வெண்பிறையினன். பெண்ணும் ஆணுமாகிய பெருமான் எல்லாப் பொருள்களிலும் உறைபவன். அழகிய கச்சிப்பதியில் திருஏகம்பம் என்னும் கோயிலில் உறைபவன். அத்தகையோனை அல்லது என் உள்ளம் பிறவற்றை நினையாது.

திருஏகம்பம்

நொச்சியே வன்னிகொன் றைமதி கூவிளம்
உச்சியே புனைதல்வே டம்விடை யூர்தியான்
கச்சியே கம்பம்மே யகறைக் கண்டனை
நச்சியே தொழுமின்நும் மேல்வினை நையுமே. **#122**

நொச்சியிலை, வன்னிஇலை, கொன்றை மலர் பிறைமதி, வில்வம் ஆகியவற்றை முடியிற்புனைந்துள்ளமை அவன் அடையாளமாகும். விடைஊர்தியை உடையவன் அவன். கச்சியில் திருவேகம்பத்தில் எழுந்தருளிய அக்கறைக்கண்டனை விரும்பித் தொழுவீர்களாக. உம்மேல் வரும் வினைகள் மெலியும்.

திருஏகம்பம்

பாராரு முழவமொந் தைகுழல் யாழொலி
சீராலே பாடலா டல்சிதை வில்லதோர்
ஏரார்பூங் கச்சியே கம்பனை யெம்மானைச்
சேராதா ரின்பமா யந்நெறி சேராரே. **#123**

உலகிற் பொருந்திய முழவம், மொந்தை, குழல், யாழ் ஆகியவற்றின் ஒலியோடு முறையான பாடலும் ஆடலும் குறையாத அழகிய கச்சி ஏகம்பத்து எம்மானைச் சேராதவர் இன்பமான நெறிகளைச் சேராதவர்

ஆவர். நும் வினை-உங்கள் கர்மம், மேல்வினை-ஆகாமியம்.

திருஏகம்பம்

குன்றேய்க்கு நெடுவெண்மா டக்கொடி கூடிப்போய்
மின்றேய்க்கு முகில்கள்தோ யும்வியன் கச்சியுள்
மின்றேய்க்கு மல்குசீ ரான்மலி யேகம்பம்
சென்றேய்க்குஞ் சிந்தையார் மேல்வினை சேராவே. **4 #124**

குன்றுகள் போன்று உயர்ந்த சுதைமாடங்களில் கட்டிய கொடிகள் கூடிச் சென்று மின்னல்கள் உராயும் முகில்களைத் தோயும் விரிந்த கச்சிப்பதியில் பலவாறு மன்றுகளில் புகழப்படும் சீர்மையை உடையவன் எழுந்தருளிய திருஏகம்பத்தை அடைந்து மனம் பொருந்த வழிபாடு செய்யும் அடியவர்கள்மேல் வினைகள் சேரா.

திருஏகம்பம்

சடையானைத் தலைகையேந் திப்பலி தருவார்தம்
கடையேபோய் மூன்றுங்கொண் டான்கலிக் கச்சியுள்
புடையேபொன் மலருங்கம் பைக்கரை யேகம்பம்
உடையானை யல்லதுள் காதென துள்ளமே. **#125**

சடைமுடியை உடையவனும், தலையோட்டைக் கையில் ஏந்திப் பலியிடுவார் இல்லங்களுக்குச் சென்று அவர்களின் உடல் பொருள் ஆவி ஆகியவற்றைக் கொண்டவனும் ஆகிய ஆரவாரம் நிறைந்த கச்சிப் பதியில் பொன்னிறமலர்கள் மலரும் கம்பை நதிக்கரையில் விளங்கும் திருஏகம்பம் உடையானை அல்லது பிறரை எனது உள்ளம் விரும்பாது.

திருஏகம்பம்

மழுவாளோ டெழில்கொள்சூ லப்படை வல்லார்தங்
கெழுவாளோ ரிமையாருச் சியுமை யாள்கங்கை
வழுவாமே மல்குசீ ரால்வள ரேகம்பம்
தொழுவாரே விழுமியார் மேல்வினை துன்னாவே. **#126**

மழுவாள் அழகிய சூலம் ஆகிய படைகளை ஏந்தியவர். தம்மிடம் பொருந்திய ஒளியுடையவர். இமயமலையின் உச்சியில் உறைபவர். உமையம்மை கங்கை ஆகியோருடன் கூடி அவர் எழுந்தருளிய பெருகும் புகழ் பொருந்திய ஏகம்பத்தைத் தொழுபவரே விழுமியோர் ஆவர். அவரை வினைகள் அணுகா.

திருஏகம்பம்

விண்ணுளார் மறைகள்வே தம்விரித் தோதுவார்
கண்ணுளார் கழலின்வெல் வார்கரி காலனை

நண்ணுவா ரெழில்கொள்கச் சிநக ரேகம்பத்
தண்ணலா ராடுகின் றவலங் காரம்மே. **#127**
வானகத்தில் உறைபவர். மறைகளாகிய வேதங்களை விரித்து
ஓதுபவர்களின் கண்களின் ஒளிர்பவர். கருநிறம் உடைய காலனை
வீரக்கழல் அணிந்த திருவடியால் உதைத்து வென்றவர். தம்மைச்
சரணாக அடைபவர்களின் எழிலைக் கொள்ளும், கச்சி நகரில் விளங்கும்
திருஏகம்பத்துத்தலைவர் ஆடுகின்ற ஆடல் மிக்க அழகுடையது.

திருஏகம்பம்

தூயானைத் தூயவா யம்மறை யோதிய
வாயானை வாளரக் கன்வலி வாட்டிய
தீயானைத் தீதில்கச் சித்திரு வேகம்பம்
மேயானை மேவுவா ரென்றலை மேலாரே. **#128**
தூயவன். தூயனவாகிய மறைகளை ஓதியவாயினன். ஒளி பொருந்திய
வாளினை உடைய இராவணனின் வலிமையை அடர்த்த,
தீயேந்தியவன். குற்றமற்ற திருக்கச்சி ஏகம்பத்தில்
எழுந்தருளியிருப்பவன். அவனை அடைந்து துதிப்பவர் என் தலைமேல்
கொள்ளத்தக்கவர்.

திருஏகம்பம்

நாகம்பூ ணேறதே றல்நறுங் கொன்றைதார்
பாகம்பெண் பலியுமேற் பர்மறை பாடுவர்
ஏகம்ப மேவியா டுமிறை யிருவர்க்கும்
மாகம்ப மறியும்வண்ணத்தவ னல்லனே. **#129**
நாகம் அவனது அணிகலன். அவனது ஊர்தி விடை. மணம் கமழும்
கொன்றை அவனதுமாலை. ஒருபாகத்தில் பெண்ணைக் கொண்டவன்.
பிச்சையும் ஏற்பவன். மறைகளைப் பாடுபவன். கச்சித்திரு ஏகம்பத்தில்
எழுந்தருளிய மகிழ்வோடு ஆடும் இறைவன். திருமால் பிரமர்க்குப்
பெரிய நடுக்கத்தைத் தருவதோடு அவர்களால் அறியத் தக்க
வண்ணத்தவன் அல்லன்.

திருஏகம்பம்

போதியார் பிண்டியா ரென்றிவர் பொய்ந்நூலை
வாதியா வம்மினம் மாவெனுங் கச்சியுள்
ஆதியார் மேவியா டுந்திரு வேகம்பம்
நீதியாற் றொழுமினும் மேல்வினை நில்லாவே. **#130**
போதிமரநிழலில் அமர்ந்த புத்தனை வணங்குவோரும், அசோகமர
நிழலில் அமர்ந்த அருகனை வணங்குவோரும் ஆகிய புத்தமண

மதத்தினரின் பொய்ந்நூல்களை ஆராய்வதை விடுத்து, வாருங்கள். அழகிய மாமர நிழலில் விளங்கும் தலைவனாகிய சிவபிரான் ஆடும் கச்சியுள் விளங்கும் திருஏகம்பத்தை விதிப்படி வழிபடுங்கள். நும் மேல் வரும் வினைகள் நில்லா.

திருஏகம்பம்

அந்தண்பூங் கச்சியே கம்பனை யம்மானைக்
கந்தண்பூங் காழியூ ரன்கலிக் கோவையால்
ப சந்தமே பாடவல் லதமிழ் ஞானசம்
பந்தன்சொற் பாடியா டக்கெடும் பாவமே. **#131**

அழகும் தண்மையும் பொலிவும் உடைய கச்சிஏகம்பத்தில் விளங்கும் தலைவனைப்பற்றி, நீர் வளமும் தண்மையும் அழகும் உடைய சீகாழிப் பதியுள் தோன்றியவனாய் ஒலிமாலை எனப்படும் திருப்பதிகங்களால் இசைத்தமிழில் பாடவல்ல ஞானசம்பந்தன்பாடிய இப்பதிகப் பாடல்களைப் பாடி ஆடிப் போற்றப் பாவம்கெடும்.

திருக்கோழம்பம்

திருக்கோழம்பம்

திருக்கோழம்பம்,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கோகுலேசுவரர்.
தேவியார் : சவுந்தரியம்மை.

நீற்றானை நீள்சடை மேனிறை வுள்ளதோர்
ஆற்றானை யழகமர் மென்முலை யாளையோர்
கூற்றானைக் குளிர்பொழிற் கோழம்ப மேவிய
ஏற்றானை யேத்துமின் நும்மிட ரேகவே. **#132**

திருநீறு அணிந்தவன். நீண்ட சடைமுடி மீது பெருகி வந்த கங்கை ஆற்றைத் தாங்கியவன். அழகமைந்த மெல்லிய தனங்களைக் கொண்ட உமையம்மையைத் தன் திருமேனியின் ஒரு கூறாகக் கொண்டவன். அத்தகையோன் பொழில் சூழ்ந்த கோழம்பம் என்னும் தலத்தில் விடை யூர்தியனாய் உள்ளான். ‘நும் துன்பங்கள் நீங்க வேண்டு மாயின் அவனை ஏத்துங்கள்’.

திருக்கோழம்பம்

மையான கண்டனை மான்மறி யேந்திய
கையானைக் கடிபொழிற் கோழம்ப மேவிய
செய்யானைத் தேனெய்பா லுந்திகழ்ந் தாடிய
மெய்யானை மேவுவார் மேல்வினை மேவாவே. **#133**

கருமைநிறம் பொருந்திய கண்டத்தினன். மான் கன்றை ஏந்திய கையினன். மணம் கமழும் பொழில் சூழ்ந்த கோழம்பத்தில் விளங்கும் செம்மையன். தேன், நெய், பால் முதலியவற்றை ஆடிய மெய்யினன். அவனை இடைவிடாது நினைப்பவர் மேல் வினைகள் மேவா.

திருக்கோழம்பம்

ஏதனை யேதமி லாவிமை யோர்தொழும்
வேதனை வெண்குழை தோடுவி ளங்கிய
காதனைக் கடிபொழிற் கோழம்ப மேவிய
நாதனை யேத்துமின் நும்வினை நையவே. **#134**

நாம் செய்யும் குற்றங்கட்குக் காரணமானவன். குற்றம் அற்ற இமையா நாட்டமுடைய யோகியர்களால் வழிபடப் பெறும் வேதவடிவினன். வெண்குழையும் தோடும் அணிந்த செவிகளை உடையவன்.

விளக்கமான பொழில்கள் சூழ்ந்த கோழம்பம் மேவிய தலைவன். அவனை உம் வினைகள் நைந்து கெடுமாறு ஏத்துமின்.

திருக்கோழம்பம்

சடையானைத் தண்மல ரான்சிர மேந்திய
விடையானை வேதமும் வேள்வியு மாயநன்
குடையானைக் குளிர்பொழில் சூழ்திருக் கோழம்பம்
உடையானை யுள்குமின் உள்ளங் குளிரவே. **#135**

சடைமுடியை உடையவன். குளிர்ந்த தாமரை மலரில் விளங்கும் பிரமனின் தலையோட்டைக் கையில் ஏந்திய விடை ஊர்தியன். வேதமும் வேள்வியுமாய நன்மைகளை உடையவன். குளிர்ந்த பொழில் சூழ்ந்த திருக்கோழம்பத்தைத் தனக்கு ஊராக உடையவன். உள்ளங்குளிர அவனை நினைவீர்களாக.

திருக்கோழம்பம்

காரானைக் கடிகமழ் கொன்றையம் போதணி
தாரானைத் தையலொர் பான்மகிழ்ந் தோங்கிய
சீரானைச் செறிபொழிற் கோழம்ப மேவிய
ஊரானை யேத்துமின் நும்மிட ரொல்கவே. **#136**

மேகமாக இருந்து மழை பொழிபவன். மணம் கமழும் கொன்றை மலரால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்தவன். உமையம்மையை ஒருபாலாகக் கொண்டு மகிழ்ச்சி மிக்கவனாய் விளங்கும் புகழினன். செறிந்த பொழில்கள் சூழ்ந்த திருக்கோழம்பத்தைத் தன் ஊராகக் கொண்டு அதன்கண் உறைபவன். நும் இடர்கள் நீங்க அவனை ஏத்துங்கள்.

திருக்கோழம்பம்

பண்டாலின் னீழலா னைப்பரஞ் சோதியை
விண்டார்கள் தம்புர மூன்றுட னேவேவக்
கண்டானைக் கடிகமழ் கோழம்பங் கோயிலாக்
கொண்டானைக் கூறுமி னுள்ளங் குளிரவே. **#137**

முற்காலத்தே ஆலின் நிழலில் இருந்து அறம் உரைத்தவன். மேலான ஒளிவடிவினன். பகைவராகிய அசுரர்களின் முப்புரங்களும் ஒருசேர வெந்தழியுமாறு செய்தவன். மணம் கமழும் திருக்கோழம்பத்தைக் கோயிலாகக் கொண்டவன். உள்ளம் குளிர அவன் புகழைக் கூறுங்கள்.

திருக்கோழம்பம்

சொல்லானைச் சுடுகணை யாற்புர மூன்றெய்த

வில்லானை வேதமும் வேள்வியு மானானைக்
கொல்லானை உரியானைக் கோழம்ப மேவிய
நல்லானை யேத்துமி னும்மிடர் நையவே. **#138**

எல்லோராலும் புகழப்படுபவன். அனல் வடிவான கணையைத் தொடுத்து முப்புரங்களை எய்தழித்த வில்லை உடையவன். வேதமும் வேள்வியும் ஆனவன். தன்னைக் கொல்ல வந்த யானையை உரித்து அதன் தோலைப் போர்த்தவன். திருக்கோழம்பத்தில் எழுந்தருளிய மங்கல வடிவினன். நும் இடர் கெட அவனை ஏத்துவீராக.

<u>திருக்கோழம்பம்</u>

விற்றானை வல்லாரக் கர்விறல் வேந்தனைக்
குற்றானைத் திருவிர லாற்கொடுங் காலனைச்
செற்றானைச் சீர்திக ழுந்திருக் கோழம்பம்
பற்றானைப் பற்றுவார் மேல்வினை பற்றாவே. **#139**

விற்படையை உடைய வலிய இராக்கதர்களின் வலிய வேந்தனாகிய இராவணனைத் தன் அழகிய கால் விரலால் நசுக்கியவன். கொடிய காலனைச் செற்றவன். புகழ் விளங்கும் திருக்கோழம்பத்திற் பற்றுதல் உடையவன். அவன்மீது பற்றுக் கொள்வாரை வினைகள் பற்றா.

<u>திருக்கோழம்பம்</u>

நெடியானோ டயனறி யாவகை நின்றதோர்
படியானைப் பண்டங்க வேடம் பயின்றானைக்
கடியாருங் கோழம்ப மேவிய வெள்ளேற்றின்
கொடியானைக் கூறுமின் உள்ளங் குளிரவே. **#140**

நீண்ட வடிவெடுத்த திருமாலும் பிரமனும் அறியமுடியாத வகையில் ஓங்கி நின்ற உருவத்தை உடையவன். பாண்டரங்கம் என்னும் கூத்தை ஆடும் கோலம் பூண்டவன். மணம் கமழும் திருக்கோழம்பம் மேவிய இடபக் கொடியினன். உள்ளம் குளிர அவன் புகழைக் கூறுங்கள்.

<u>திருக்கோழம்பம்</u>

புத்தருந் தோகையம் பீலிகொள் பொய்ம்மொழிப்
பித்தரும் பேசுவ பேச்சல்ல பீடுடைக்
கொத்தலர் தண்பொழிற் கோழம்ப மேவிய
அத்தனை யேத்துமின் அல்லல் அறுக்கவே. **#141**

புத்த சமயத்தினரும், மயில் தோகையாலாகிய பீலியைக் கையில் கொண்டுள்ள பொய்ம்மொழி பேசும் பித்தர்களாகிய சமணர்களும் பேசுவன பயன்தரும் உண்மையான அறவுரைகளாகா. பெருமை பொருந்திய பூங்கொத்துக்கள் அலரும் குளிர்ந்த பொழில் சூழ்ந்த

திருக்கோழம்பம் மேவிய அத்தனை அல்லல்கள் அகலப் போற்றுங்கள்.

திருக்கோழம்பம்

தண்புன லோங்குதண் ணந்தராய் மாநகர்
நண்புடை ஞானசம் பந்தனம் பானுறை
விண்பொழிற் கோழம்ப மேவிய பத்திவை
பண்கொளப் பாடவல் லார்க்கில்லை பாவமே. **#142**

குளிர்ந்த நீர் மிகுந்த தண்ணிதான அழகிய தராய் என்னும் மாநகரில் தோன்றிய, எல்லோரிடமும் நட்புக்கொண்டு ஒழுகும் ஞானசம்பந்தன் சிவபிரான் உறையும் வானளாவிய பொழில் சூழ்ந்த கோழம்பத்தைப் புகழ்ந்து போற்றிய இப்பதிகப்பாடல்கள் பத்தையும் இசைபொருந்தப் பாடவல்லவர்கட்குப் பாவம் இல்லை.

திருவெண்ணியூர்

திருவெண்ணி

திருவெண்ணியூர்,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வெண்ணிநாயகர்.
தேவியார் : அழகியநாயகியம்மை.

சடையானைச் சந்திர னோடுசெங் கண்ணரா
உடையானை யுடைதலை யிற்பலி கொண்டூரும்
விடையானை விண்ணவர் தாந்தொழும் வெண்ணியை
உடையானை யல்லதுள் காதென துள்ளமே. **#143**

சடையின்மேல் சந்திரனையும் சிவந்த கண்களை உடைய பாம்பையும் உடையவன். உடைந்த தலையோட்டில் பலிஏற்று, ஊர்ந்து செல்லும் விடைமீது ஏறி வருபவன். தேவர்களால் வணங்கப்படும் திருவெண்ணி என்னும் தலத்தைத் தனக்கு ஊராக உடையவன். அவனையன்றிப் பிறரை நினையாது என் உள்ளம்.

திருவெண்ணி

சோதியைச் சுண்ணவெண் ணீறணிந் திட்டவெம்
ஆதியை யாதியு மந்தமு மில்லாத வேதியை வேதியர் தாந்தொழும் வெண்ணியில்
நீதியை நினையவல் லார்வினை நில்லாவே. **#144**

ஒளி வடிவினன் வெண்ணீற்றைச் சுண்ணமாக அணிந்த எம் தலைவன். முதலும் முடிவும் இல்லாத மறையோன். வேதியர்களால் வணங்கப்பெறும் திருவெண்ணியில் விளங்கும் நீதி வடிவினன். அவனை நினைய வல்லவர்களின் வினைகள் நில்லாது அகலும்.

திருவெண்ணி

கனிதனைக் கனிந்தவ ரைக்கலந் தாட்கொள்ளும்
முனிதனை மூவுல குக்கொரு மூர்த்தியை
நனிதனை நல்லவர் தாந்தொழும் வெண்ணியில்
இனிதனை யேத்துவ ரேதமி லாதாரே. **#145**

கனியாய் இனிப்பவன். மனம் கனிந்து வழிபடுவோரைக் கலந்து ஆட்கொள்ளும் முனிவன். மூவுலகங்கட்கும் தானே தலைவன் ஆனவன். மேம்பட்டவன். நல்லவர்களால் வணங்கப்பெறும் வெண்ணியில் எழுந்தருளிய இன்ப உருவினன். அவனை ஏத்துவார் குற்றம் இலராவர்.

திருவெண்ணி

மூத்தானை மூவுல குக்கொரு மூர்த்தியாய்க்
காத்தானைக் கனிந்தவ ரைக்கலந் தாளாக
ஆர்த்தானை யழகமர் வெண்ணியம் மான்றன்னை
ஏத்தாதா ரென்செய்வா ரேழையப் பேய்களே. **#146**

எல்லாப் பொருள்கட்கும் முன்னே தோன்றிய பழையோன். மூவுலகங்கட்கும் தலைவனாய் விளங்கிக் காப்பவன். தன்னை வழிபட்டு நெகிழ்ந்தவர்களோடு கலந்து அவர்களைப் பிணிப்பவன். அழகிய வெண்ணி நகரில் விளங்கும் தலைவன். அவனை ஏத்தாதவர் என்ன பயனைக் காணவல்லார்? அவர்கள் மனிதரே ஆயினும் பேய்களையே ஒப்பர்.

திருவெண்ணி

நீரானை நிறைபுனல் சூழ்தரு நீள்கொன்றைத்
தாரானைத் தையலொர் பாகமு டையானைச்
சீரானைத் திகழ்தரு வெண்ணி யமர்ந்துறை
ஊரானை யுள்கவல் லார்வினை யோயுமே. **#147**

நிறைந்த நீரைக் கொண்ட கங்கையை முடிமிசைத் தரித்தவன். அதனைச் சூழக் கொன்றை மாலையைப் புனைந்துள்ளவன். உமையம்மையை ஓர்பாகமாக உடையவன். புகழ் பொருந்தியவன். விளங்கும் வெண்ணியை விரும்பி உகந்த ஊராகக் கொண்டு எழுந்தருளியிருப்பவன். அவனை நினைவார் வினைகள் நீங்கும்.

திருவெண்ணி

முத்தினை முழுவயி ரத்திரண் மாணிக்கத்
தொத்தினைத் துளக்கமி லாதவி ளக்காய
வித்தினை விண்ணவர் தாந்தொழும் வெண்ணியில்
அத்தனை யடையவல் லார்க்கில்லை யல்லலே. **#148**

முத்துப் போன்றவன். முழுமையான வயிரத்திரள் போன்றவன். மாணிக்கக் கொத்துப் போன்றவன். அசைவற்ற சுடராய் உலகத் தோற்றத்துக்கு வித்தாய் விளங்குபவன். தேவர்களால் தொழுது வணங்கப்பெறும் வெண்ணியில் விளங்கும் தலைவனாவான். அவனை அடைய வல்லவர்கட்கு அல்லல் இல்லை.

திருவெண்ணி

காய்ந்தானைக் காமனை யுஞ்செறு காலனைப்
பாய்ந்தானைப் பரியகை மாவுரித் தோன்மெய்யில்

மேய்ந்தானை விண்ணவர் தாந்தொழும் வெண்ணியில்
நீந்தானை நினையவல் லார்வினை நில்லாவே. **#149**

மன்மதனை எரித்தவன். கொல்லும் தொழிலுடைய எமனைச் சினந்து உதைத்தவன். பெரிய கையை உடைய யானையை உரித்து அதன் தோலை மேனிமீது போர்த்தவன். தேவர்கள் வந்து வணங்கும் திருவெண்ணியில் விளங்கும் அக்கடவுளை நினைப்பவர்களின் வினைகள் நீங்கும்.

திருவெண்ணி

மறுத்தானை மாமலை யைமதி யாதோடிச்
செறுத்தானைத் தேசழி யத்திகழ் தோண்முடி
இறுத்தானை யெழிலமர் வெண்ணியெம் மானெனப்
பொறுத்தானைப் போற்றுவா ராற்றலு டையாரே. **#150**

பகைமை பூண்டவனாய்ப் பெருமை மிக்க கயிலை மலையைப் பொருட்படுத்தாது விரைந்து அதனைச் சினந்து சென்று எடுத்த இராவணனது பெருமை அழியுமாறு அவனுடைய விளங்கும் தோள்கள் முடிகள் ஆகியவற்றை முரித்தவன். அழகமைந்த வெண்ணியில் உறையும் எம் தலைவன் என வழிபடுபவர் குற்றங்களைப் பொறுப்பவன். அவனைப் போற்றுவார் ஆற்றல் உடையவர் ஆவர்.

திருவெண்ணி

மண்ணினை வானவ ரோடும னிதர்க்கும்
கண்ணினைக் கண்ணனும் நான்முக னுங்காணா
விண்ணினை விண்ணவர் தாந்தொழும் வெண்ணியில்
அண்ணலை யடையவல் லார்க்கில்லை யல்லலே. **#151**

ஐம்பூதங்களில் மண் வடிவாக விளங்குபவன். வானவர்க்கும் மக்களுக்கும் கண் போன்றவன். திருமால் பிரமன் காண இயலாத விண் வடிவானவன். தேவர்களால் வழிபடப் பெறும் திருவெண்ணியில் விளங்கும் தலைமையாளன். அவனை அடைய வல்லவர்கட்கு அல்லல் இல்லை.

திருவெண்ணி

குண்டருங் குணமிலா தசமண் சாக்கிய
மிண்டர்கண் மிண்டவை கேட்டுவெகு ளன்மின்
விண்டவர் தம்புர மெய்தவன் வெண்ணியில்
தொண்டரா யேத்தவல் லார்துயர் தோன்றாவே. **#152**

குண்டர்களாகிய சமண புத்த மதத்தைச் சேர்ந்த மிடுக்குடையோரின் மிடுக்கான உரைகளைக்கேட்டு நம் சமய நெறிகளை வெறாதீர்கள்.

பகைவர் முப்புரங்களை எய்தவனாகிய திருவெண்ணியில் உறையும் இறைவனுக்குத் தொண்டு பூண்டு அவனை அடைய வல்லார்க்குத் துயர்கள் தோன்றா.

திருவெண்ணி

மருவாரு மல்குகா ழித்திகழ் சம்பந்தன்
திருவாருந் திகழ்தரு வெண்ணிய மர்ந்தானை
உருவாரு மொண்டமிழ் மாலையி வைவல்லார்
பொருவாகப் புக்கிருப் பார்புவ லோகத்தே. **#153**

மணம் பொருந்தியதும் பெரியோர் நிறைந்ததுமான காழிப்பதியில் தோன்றி விளங்கும் ஞானசம்பந்தன், செல்வம் நிறைந்து திகழும் திருவெண்ணியில் அமர்ந்த இறைவனைப் போற்றிப் பாடிய ஞானவடிவாக விளங்கும் இத்தமிழ் மாலையை ஓதவல்லவர் மண்ணுலகினும் மேம்பட்ட சிவலோகத்தை அடைந்து இனிது வாழ்வர்.

திருக்காறாயில்

திருக்காறாயில்

திருக்காறாயில்,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கண்ணாயிரநாதர்.
தேவியார் : கயிலாயநாயகியம்மை.

நீரானே நீள்சடை மேலொர்நி ரைகொன்றைத்
தாரானே தாமரை மேலயன் றான்றொழும்
சீரானே சீர்திக ழுந்திருக் காறாயில்
ஊரானே யென்பவ ரூனமி லாதாரே. **#154**

நீண்ட சடைமுடிமீது ஒப்பற்ற கங்கையை அணிந்தவன். வரிசையாகத் தொடுக்கப்பட்ட கொன்றை மாலையைச் சூடியவன். தாமரை மலரில் எழுந்தருளிய பிரமனால் வணங்கப்படும் புகழாளன் சீர் விளங்கும் திருக்காறாயில் எனப்படும் ஊரினன். இவ்வாறு அவனைப் போற்றிக் கூறுவார் குற்றம் இலராவர்.

திருக்காறாயில்

மதியானே வரியர வோடுடன் மத்தஞ்சேர்
விதியானே விதியுடை வேதியர் தாந்தொழும்
நெதியானே நீர்வயல் சூழ்திருக் காறாயிற்
பதியானே யென்பவர் பாவமிலாதாரே. **#155**

பிறைமதியைச் சூடியவன். வரிகளை உடைய பாம்போடு ஊமத்தம் மலர் முதலியவற்றை அணிந்து நமக்கு ஊழை அமைப்பவன். விதிமுறைகளைப் பின்பற்றும் வேதியர்கள் வணங்கும் நிதியானவன். நீர்வளம் மிக்க வயல்களால் சூழப்பட்ட திருக்காறாயில் எனப்படும் ஊரினன் என்று அவனைப் போற்றுவார் பாவம் இலராவர்.

திருக்காறாயில்

விண்ணானே விண்ணவ ரேத்திவி ரும்புஞ்சீர்
மண்ணானே மண்ணிடை வாழுமு யிர்க்கெல்லாம்
கண்ணானே கடிபொழில் சூழ்திருக் காறாயில்
எண்ணானே யென்பவ ரேதமி லாதாரே. **#156**

வீட்டுலகுக்கு உரியவன். தேவர்களாலும் போற்றி விரும்பப் பெறுமாறு மண்ணுலகில் வாழ்பவன். நிலவுலகில் வாழ்வோர்க்குக் கண் போன்றவன். மணம் கமழும் பொழில் சூழ்ந்த திருக்காறாயிலில் நாம்

எண்ணுதற்கு ஏற்றவாறு எளிவந்திருப்பவன். இவ்வாறு அவன்புகழ் கூறுவோர் ஏதம் இலராவர்.

திருக்காறாயில்

தாயானே தந்தையு மாகிய தன்மைகள்
ஆயானே யாயநல் லன்பர்க் கணியானே
சேயானே சீர்திக ழுந்திருக் காறாயில்
மேயானே யென்பவர் மேல்வினை மேவாவே. **#157**

நமக்குத் தாயும் தந்தையும் ஆகி அவ்விருவர் செய்யும் கடமைகளையும் புரிபவன். தன்மீது நல்லன்பு செலுத்துவோர்க்கு மிக அணிமையில் இருந்து அருள்பவன். அல்லாதவர்க்குச் சேய்மையில் இருப்பவன். புகழ் விளங்கும் திருக்காறாயில் என்னும் தலத்தில் மேவி இருப்பவன் என இவ்வாறு போற்றுபவர் மீது வினைகள் மேவா.

திருக்காறாயில்

கலையானே கலைமலி செம்பொற் கயிலாய
மலையானே மலைபவர் மும்மதின் மாய்வித்த
சிலையானே சீர்திக ழுந்திருக் காறாயில்
நிலையானே யென்பவர் மேல்வினை நில்லாவே. **#158**

எண்ணெண் கலைகளின் வடிவாய் விளங்குபவன். கலைகளின் பயனாய்ச் சிறந்த சிவந்த பொன்மயமான கயிலாய மலைக்கு உரியவன். தன்னோடு மலைந்த அசுரர்களின் முப்புரங்களைமாய்த்த வில்லை உடையவன். புகழ் மிகுந்த திருக்காறாயில் என்னும் தலத்தை நிலையாகக் கொண்டவன் என்று இவ்வாறு போற்றுபவர் மேல் வினைகள் நில்லா.

திருக்காறாயில்

ஆற்றானே யாறணி செஞ்சடை யாடர
வேற்றானே யேழுல கும்மிமை யோர்களும்
போற்றானே பொழில்திக ழுந்திருக் காறாயில்
நீற்றானே யென்பவர் மேல்வினை மேவாவே. **#159**

‘நெறிகளின் வடிவாய் விளங்குபவன். கங்கையை அணிந்த செஞ்சடைமீது ஆடும் பாம்பு ஒன்றை ஏற்றவன். ஏழுலகில் வாழ்வோராலும் தேவர்களாலும் போற்றப்படுபவன். பொழில் விளங்கும் திருகாறாயிலில் நீறு பூசிய கோலத்தோடு விளங்குபவன். என்று இவ்வாறு கூறிப் போற்றுபவர் மேல் வினைகள் நில்லா.

திருக்காறாயில்

சேர்த்தானே தீவினை தேய்ந்தறத் தேவர்கள்
ஏத்தானே யேத்துநன் மாமுனி வர்க்கிடர்
காத்தானே கார்வயல் சூழ்திருக் காறாயில்
ஆர்த்தானே யென்பவர் மேல்வினை யாடாவே. **#160**
தீவினைகள் தேய்ந்து அறுமாறு செய்து நம்மை அவனோடு சேர்ப்பவன், தேவர்களால போற்றப்படுபவன் நன்மா முனிவர்கட்கு இடர் வாராது காப்பவன். மழைநீர் நிறைந்த வயல்கள் சூழ்ந்த திருக்காறாயிலில் நிறைந்தவன். இவ்வாறு அவனைப் போற்றுவாரை வினைகள் வெல்லா.

<u>திருக்காறாயில்</u>

கடுத்தானே காலனைக் காலாற் கயிலாயம்
எடுத்தானை யேதமா கம்முனி வர்க்கிடர்
கெடுத்தானே கேழ்கிள ருந்திருக் காறாயில்
அடுத்தானே யென்பவர் மேல்வினை யாடாவே. **#161**
காலனைக் காலால் கடிந்தவன். கயிலாயத்தைப் பெயர்த்த இராவணனுக்கு ஏதம் வருமாறும், முனிவர்கட்கு இடர் கெடு மாறும் செய்தவன். விளக்கமான திருக்காறாயிலில் எழுந்தருளியிருப்பவன் என இவ்வாறு போற்றுவாரை வினைகள் வெல்லா.

<u>திருக்காறாயில்</u>

பிறையானே பேணிய பாடலொ டின்னிசை
மறையானே மாலொடு நான்முகன் காணாத
இறையானே யெழில்திக ழுந்திருக் காறாயில்
உறைவானே யென்பவர் மேல்வினை யோடுமே. **#162**
இளம் பிறையைச் சூடியவன். தன்னை விரும்பிப் பாடப் பெறும் இன்னிசைப் பாடல் வடிவில் அமைந்த சாமகானமாகிய மறை மொழியை ஏற்றருள்பவன். திருமாலும் நான்முகனும் தேடி அறிய முடியாத இறைவன். அழகிய திருக்காறாயிலில் உறைபவன் என்று போற்றுபவர் மேல் வரும் வினைகள் ஓடும்.

<u>திருக்காறாயில்</u>

செடியாரும் புன்சமண் சீவரத் தார்களும்
படியாரும் பாவிகள் பேச்சுப் பயனில்லை
கடியாரும் பூம்பொழில் சூழ்திருக் காறாயில்
குடியாருங் கொள்கையி னார்க்கில்லை குற்றமே. **#163**
உலகில் வாழும் முடைநாற்றம் வீசும் சமணரும், சீவரம் என்னும் துவர் ஊட்டிய ஆடையை அணிந்த புல்லிய புத்தர் என்ற பாவிகளு கூறும் பேச்சுக்களைக் கேட்பதால் விளையும் பயன் ஏதும் இல்லை. மணம்

கமழும் திருக்காறாயில் என்னும் தலத்தைக் குடியாகக் கொண்டு அங்கு எழுந்தருளிய இறைவனை வழிபட்டு வாழ்வோர்க்குக் குற்றம் ஏதும் இல்லை.

திருக்காறாயில்

ஏய்ந்தசீ ரெழில்திக ழுந்திருக் காறாயில்
ஆய்ந்தசீ ரானடி யேத்திய ருள்பெற்ற
பாய்ந்தநீர்க் காழியுண் ஞானசம் பந்தன்சொல்
வாய்ந்தவா றேத்துவார் வானுல காள்வாரே. **#164**

புகழ் பொருந்தியதும் அழகு நிறைந்ததுமான திருக்காறாயிலில் எழுந்தருளிய, ஆராய்ந்து கூறப்படும் புகழ் மொழிக்குப் பொருளான இறைவன் திருவடிகளை ஏத்தி, அவன் அருள்பெற்ற, நீர் பாய்ந்து. வளம் செய்யும் காழிப்பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன் அருளிய இத்திருப்பதிகத்தை இயன்ற அளவில் இசையோடு பாடி ஏத்துவார் வானுலகு ஆள்வர்.

திருமணஞ்சேரி

திருமணஞ்சேரி

திருமணஞ்சேரி,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மணவாளநாயகர்.
தேவியார் : யாழ்மொழியம்மை.

அயிலாரு மம்பத னாற்புர மூன்றெய்து
குயிலாரு மென்மொழி யாளொரு கூறாகி
மயிலாரு மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றிநின் றார்க்கில்லை பாவமே. **#165**

கூரிய அம்பினால் முப்புரங்களையும் எய்து அழித்து, குயில் போலும் இனிய மென்மையான மொழிபேசும் உமையம்மையை ஒரு கூற்றில் உடையவனாகி, மயில்கள் வாழும் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருமணஞ்சேரியில் எழுந்தருளிய இறைவனைப் பற்றி நின்றார்க்குப் பாவம் இல்லை.

திருமணஞ்சேரி

விதியானை விண்ணவர் தாந்தொழு தேத்திய
நெதியானை நீள்சடை மேனிகழ் வித்தவான்
மதியானை வண்பொழில் சூழ்ந்த மணஞ்சேரிப்
பதியானைப் பாடவல் லார்வினை பாறுமே. **#166**

நீதி நெறிகளின் வடிவினன். தேவர்கள் வணங்கித் தமது நிதியாகக் கொள்பவன். நீண்ட சடைமீது வானத்து மதியைச் சூடியவன். வளமான பொழில்கள் சூழ்ந்த திருமணஞ்சேரியைத் தனது பதியாகக் கொண்டவன். அவனைப் பாடவல்லார் வினைகள் அழியும்.

திருமணஞ்சேரி

எய்ப்பானார்க் கின்புறு தேனளித் தூறிய
இப்பாலா யெனையு மாள வுரியானை
வைப்பான மாடங்கள் சூழ்ந்த மணஞ்சேரி
மெய்ப்பானை மேவிநின் றார்வினை வீடுமே. **#167**

வறுமையால் இளைத்தவர்க்குப் பெருகிய இன்பம் தரும் தேன் அளித்து இவ்வுலகத்துள்ளோனாய் அருள்புரிபவன். என்னையும் ஆட்கொண்டருளும் உரிமையன். செல்வங்களாக உள்ள மாடவீடுகள் சூழ்ந்த திருமணஞ்சேரியில் உண்மைப்பொருளாய் விளங்குபவன்.

அவனை மேவி வழிபடுவார் வினைகள் நீங்கும்.

திருமணஞ்சேரி

விடையானை மேலுல கேழுமிப் பாரெலாம்
உடையானை யூழிதோ றூழி யுளதாய
படையானைப் பண்ணிசை பாடு மணஞ்சேரி
அடைவானை யடையவல் லார்க்கில்லை யல்லலே. **#168**

விடை ஊர்தியன். மேலே உள்ள ஏழு உலகங்களையும் இம்மண்ணுலகையும் தன் உடைமையாகக் கொண்டவன். பல்லூழிக்காலங்களாய் விளங்கும் படைகளை உடையவன். அடியவர் பண்ணிசை பாடி வழிபடும் திருமணஞ்சேரியை அடைந்து வாழ்பவன். அவனை அடையவல்லார்க்கு அல்லல் இல்லை.

திருமணஞ்சேரி

எறியார்பூங் கொன்றையி னோடு மிளமத்தம்
வெறியாருஞ் செஞ்சடை யார மிலைத்தானை
மறியாருங் கையுடை யானை மணஞ்சேரிச்
செறிவானைச் செப்பவல் லார்க்கிடர் சேராவே. **#169**

ஒளிபொருந்திய கொன்றைமலர்களோடு புதிய ஊமத்தம் மலர்களை மணம் கமழும் தன் செஞ்சடை மீது பொருந்தச் சூடியவன். மான் கன்றை ஏந்திய கையினன். திருமணஞ்சேரியில் செறிந்து உறைபவன். அவனைப் புகழ்ந்து போற்ற வல்லவர்களை இடர்கள் அடையா.

திருமணஞ்சேரி

மொழியானை முன்னொரு நான்மறை யாறங்கம்
பழியாமைப் பண்ணிசை யான பகர்வானை
வழியானை வானவ ரேத்து மணஞ்சேரி
இழியாமை யேத்தவல் லார்க்கெய்து மின்பமே. **#170**

முற்காலத்தே நான்மறைகளையும், ஆறு அங்கங்களையும் அருளியவன். அவற்றைப் பண்ணிசையோடு பிறர் பழியாதவாறு பகர்பவன். வேதாகம விதிகளைப் பின்பற்றி, வானவர்கள் வந்து துதிக்குமாறு திருமணஞ்சேரியில் விளங்குபவன். அத்தலத்தை இகழாமல் போற்ற வல்லவர்க்கு இன்பம் உளதாம்.

திருமணஞ்சேரி

எண்ணானை யெண்ணமர் சீரிமை யோர்கட்குக்
கண்ணானைக் கண்ணொரு மூன்று முடையானை
மண்ணானை மாவயல் சூழ்ந்த மணஞ்சேரிப்

பெண்ணானைப் பேசநின் றார்பெரி யோர்களே. **#171**
யாவராலும் மனத்தால் எண்ணி அறியப் படாதவன். தம் உள்ளத்தே வைத்துப்போற்றும் புகழ்மிக்க சிவஞானிகட்குக் கண் போன்றவன். மூன்று கண்கள் உடையவன். அட்டமூர்த்தங்களில் மண் வடிவானவன். சிறந்த வயல்களால் சூழப்பட்ட திருமணஞ்சேரியில் உமையம்மையோடு கூடியவனாய் விளங்கும் அவ்விறைவன் புகழைப் பேசுவோர் பெரியோர் ஆவர்.

திருமணஞ்சேரி

எடுத்தானை யெழின்முடி யெட்டு மிரண்டுந்தோள்
கெடுத்தானைக் கேடிலாச் செம்மை யுடையானை
மடுத்தார வண்டிசை பாடு மணஞ்சேரி
பிடித்தாரப் பேணவல் லார்பெரி யோர்களே. **#172**
கயிலைமலையைப் பெயர்த்து எடுத்த இராவணனின் அழகிய பத்துத் தலைகளையும் இருபது தோள்களையும் அடர்த்தவன். மாறுபாடற்ற செம்மை நிலையை உடையவன். வண்டுகள் தேனை மடுத்து உண்ணுதற்கு இசைபாடிச் சூழும் திருமணஞ்சேரியில் உறையும் அவ்விறைவன் திருவடிகளைப் பற்றுக்கோடாகக் கொள்வார் பெரியார்கள்.

திருமணஞ்சேரி

சொல்லானைத் தோற்றங்கண் டானு நெடுமாலும்
கல்லானைக் கற்றன சொல்லித் தொழுதோங்க
வல்லார்நன் மாதவ ரேத்து மணஞ்சேரி
எல்லாமா மெம்பெரு மான்கழ லேத்துமே. **#173**
வேதாகமங்களைச் சொல்லியவன். உலகைப் படைக்கும் நான்முகன் திருமால் ஆகியோர்களாற் கற்றுணரப்படாத பெருமையன். தாம் அறிந்தவற்றைச் சொல்லித் தொழுது உயர்வுறும் அன்பர்களும் பெரிய தவத்தினை உடையவர்களும் தொழுது வணங்கும் திருமணஞ்சேரியில் உலகப் பொருள்கள் எல்லாமாக வீற்றிருக்கும் அப் பெருமான் திருவடிகளை ஏத்துவோம்.

திருமணஞ்சேரி

சற்றேயுந் தாமறி வில்சமண் சாக்கியர்
சொற்றேயும் வண்ணமொர் செம்மை யுடையானை
வற்றாத வாவிகள் சூழ்ந்த மணஞ்சேரி
பற்றாக வாழ்பவர் மேல்வினை பற்றாவே. **#174**
சிறிதேனும் தாமாக அறியும் அறிவு இல்லாத சமண புத்தர்களின்

உரைகள் பொருளற்றனவாய் ஒழியும் வண்ணம் ஒப்பற்ற செம்பொருளாய் விளங்கும் சிவபெருமானை வற்றாத நீர்நிலைகள் சூழ்ந்த திருமணஞ்சேரியை அடைந்து வழிபட்டு அவனையே பற்றுக் கோடாகக் கொண்டு வாழ்பவர்களை வினைகள் பற்றா.

திருமணஞ்சேரி

கண்ணாருங் காழியர் கோன்கருத் தார்வித்த
தண்ணார்சீர் ஞானசம் பந்தன் றமிழ்மாலை
மண்ணாரு மாவயல் சூழ்ந்த மணஞ்சேரி
பண்ணாரப் பாடவல்லார்க் கில்லை பாவமே. **#175**

கண்களுக்கு விருந்தாய் அமையும் சீகாழிப் பதியில் விளங்கும் சிவபிரானின் திருவுள்ளத்தை நிறைவித்த இனிய புகழ்பொருந்திய ஞானசம்பந்தன் பாடிய இத்தமிழ்மாலையை, வளம் நிறைந்த மண்சேர்ந்த வயல்களால் சூழப்பட்ட திருமணஞ்சேரியை அடைந்து பண் பொருந்தப்பாடிப் போற்றுவார்க்குப் பாவம் இல்லை.

திருவேணுபுரம்

சீர்காழி

திருவேணுபுரம்,
பண் - இந்தளம், திருவேணுபுரம் என்பது சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

நிலவும் புனலும் நிறைவா ளரவும்
இலகுஞ் சடையார்க் கிடமா மெழிலார்
உலவும் வயலுக் கொளியார் முத்தம்
விலகுங் கடலார் வேணு புரமே. **#176**

பிறை, கங்கை, மிகக் கொடிய நாகம் ஆகியன விளங்கும் சடையினை உடைய சிவபெருமானுக்கு இடம், அழகிய மகளிர் உலாவுவதும், ஒளிபொருந்திய முத்துக்கள் வயல்களில் விளங்குவதும், விலகி உள்ள கடற்கரையை அடுத்துள்ளதுமான வேணுபுரம் ஆகும்.

சீர்காழி

அரவார் கரவன் னமையார் திரள்தோள்
குரவார் குழலா ளொருகூ றனிடங்
கரவா தகொடைக் கலந்தா ரவர்க்கு
விரவா கவல்லார் வேணு புரமே. **#177**

பாம்பைக் கையில் கங்கணமாக அணிந்தவனும், மூங்கில் போன்று திரண்ட தோளினையும் குராமலர் அணிந்த கூந்தலினையும் உடைய உமையம்மையை ஒருகூறாக உடையவனும் ஆகிய சிவபிரானுக்கு இடம், மறையாதகொடையாளரும், தம்மோடு பழகியவர்களை நட்புக் கொண்டு ஒழுகுபவர்களும் ஆகிய நல்லோர் வாழும் வேணுபுரம் ஆகும்.

சீர்காழி

ஆகம் மழகா யவள்தான் வெருவ
நாகம் முரிபோர்த் தவன்நண் ணுமிடம்
போகந் தருசீர் வயல்சூழ் பொழில்கண்
மேகந் தவழும் வேணு புரமே. **#178**

அழகிய மேனியை உடைய உமையம்மை வெருவுமாறு யானையை உரித்துப் போர்த்த சிவபிரான் உறையும் இடம். மக்கட்கு விளைபொருள்களாகிய பயனைத்தரும் வயல்கள் சூழ்ந்துள்ள உயரிய பொழில்களில் மேகங்கள் தவழும் வேணுபுரம் ஆகும்.

சீர்காழி

காசக் கடலில் விடமுண் டகண்டத்
தீசர்க் கிடமா வதுவின் னறவ
வாசக் கமலத் தனம்வன் றிரைகள்
வீசத் துயிலும் வேணு புரமே. #179

முத்து பவளம் ஆகிய மணிகளை உடைய கடலில் எழுந்த நஞ்சினை உண்ட கண்டத்தை உடைய ஈசனுக்கு இடமாவது; இனிய தேன் நிறைந்ததும் மணம் நிறைந்ததுமான தாமரை மலரில் அன்னம் அலைகள் காற்று வீசத் துயில் கொள்ளும் வளம் நிறைந்த வேணுபுரம் ஆகும்.

சீர்காழி

அரையார் கலைசே ரனமென் னடையை
உரையா வுகந்தா னுறையும் மிடமாம்
நிரையார் கமுகின் னிகழ்பா ளையுடை
விரையார் பொழில்சூழ் வேணு புரமே. #180

இடையில் மேகலை அணிந்தவளும், அன்னம் போன்ற நடையினளும் ஆகிய உமையம்மையைப் புகழ்ந்து உரைத்து, சிவபிரான் மகிழ்வுடன் உறையும் இடம், வரிசையாக வளர்ந்துள்ள கமுக மரங்களின் பாளைகள் உடைதலால் மணம் பொருந்தித் தோன்றும் பொழில்கள் சூழ்ந்த வேணுபுரம் ஆகும்.

சீர்காழி

ஒளிரும் பிறையும் முறுகூ விளவின்
றளிருஞ் சடைமே லுடையா னிடமாம்
நளிரும் புனலின் நலசெங் கயல்கள்
மிளிரும் வயல்சூழ் வேணு புரமே. #181

ஒளிதரும் பிறையையும், வில்வத்தளிர்களையும் சடைமிசை உடையவனாகிய சிவபெருமானுக்குரிய இடம், குளிர்ந்த நீரில் நல்ல செங்கயல்மீன்கள் விளங்கும் வயல்கள் சூழ்ந்த வேணுபுரம் ஆகும்.

சீர்காழி

ஏவும் படைவேந் தனிரா வணனை
ஆவென் றலற அடர்த்தா னிடமாந்
தாவும் மறிமா னொடுதண் மதியம்
மேவும் பொழில்சூழ் வேணு புரமே. #182

இலக்குத் தவறாது செல்லும் கணைகளொடுகூடிய விற்படையை உடைய இராவணனை 'ஆ' என்று அலறுமாறு அடர்த்தருளிய

சிவபிரானுக்குரிய இடம், தாவிச்செல்லும் மான்கன்றுகளை உடையதும், குளிர்ந்த பொழில்கள் சூழ்ந்ததுமான வேணுபுரம் ஆகும்.

சீர்காழி

கண்ணன் கடிமா மலரிற் திகழும்
அண்ணல் லிருவர் அறியா இறையூர்
வண்ணச் சுதைமா ளிகைமேற் கொடிகள்
விண்ணில் திகழும் வேணு புரமே. **#183**

திருமாலும், மணம் பொருந்திய சிறந்த தாமரை மலரில் உறையும் நான்முகனும் ஆகிய இருவரும் அறியாதவாறு உயர்ந்து நின்ற இறைவனது இடம், அழகிய சுதை தீட்டப்பட்ட மாளிகைகளின்மேல் கட்டப்பட்ட கொடிகள் வானத்தில் திகழும் வேணுபுரம் ஆகும்.

சீர்காழி

போகம் அறியார் துவர்போர்த் துழல்வார்
ஆகம் அறியா அடியார் இறையூர்
மூகம் அறிவார் கலைமுத் தமிழ்நூல்
மீகம் அறிவார் வேணு புரமே. **#184**

சிவபோகத்தின் சிறப்பை அறியாதவர்களும், துவராடை போர்த்துத்திரிபவர்களும் ஆகிய சமண புத்தர்களின் உடலை ஏறெடுத்தும் பாராத சிவனடியார்களுக்குத் தலைவனாகிய சிவபிரானது ஊர், மௌனத்தின் சிறப்பை அறிந்தவர்களும், கலைகளையும் முத்தமிழ் நூல்களையும் கற்றமேலான அறிவுடையவர்களும் வாழும் வேணுபுரம் ஆகும்.

சீர்காழி

கலமார் கடல்போல் வளமார் தருநற்
புலமார் தருவே ணுபுரத் திறையை
நலமார் தருஞா னசம்பந் தன்சொன்ன
குலமார் தமிழ்கூ றுவர் கூர் மையரே. **#185**

மரக்கலங்களையுடைய கடல் போல் பரவிய வளங்களை உடையதும், நன்செய் நிலங்கள் நிறைந்ததும் ஆகிய வேணுபுரத்து இறைவனை, நன்மைகள் நிறைந்த ஞானசம்பந்தன் போற்றிச் சொன்ன மேன்மைமிக்க இத்தமிழ் மாலையை அன்போடு பாராயணம் புரிவோர் மதிநுட்பமும் திருவருட்பெருக்கமும் உடையவர் ஆவர்.

திருமருகல்

திருமருகல்

திருமருகல்,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாணிக்கவண்ணர்.
தேவியார் : வண்டுவார்குழலி.

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால்வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உண் மெலிவே. **#186**

நீர்நிலைகளில் குவளை மலர்கள் மலர்ந்து மணம் செய்யும் திருமருகலைத் தனக்குரிய ஊராக உடைய பெருமானே! இப்பெண், சடையாய் என்றும் விடையாய் என்றும் நீயே எனக்குப் புகலிடம் என்றும் கூறி அஞ்சி மயங்கிவிழுகின்றாள். உன்னையே நினைந்து புலம்பும் இவள் மன வருத்தத்தைப் போக்காதிருத்தல் உன்பெருமைக்குத் தக்கதோ?

திருமருகல்

சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள்ஏ சறவே. **#187**

பூங்கொத்துக்கள் குவளை மலர் ஆகியன மலர்ந்து மணம் பரப்பும் திருமருகலில் எழுந்தருளிய எம் தந்தையே! இவள் உன்னை நினைந்து, “சிந்தையில் நிறைந்துள்ளவனே! என்றும் சிவனே என்றும், எல்லோர்க்கும் முற்பட்டவனே என்றும், முதல்வனே” என்றும் புலம்பி நைகின்றாள். இவள் துன்பத்தைப் போக்காதிருத்தல் உன் பெருமைக்குத் தக்கதோ?

திருமருகல்

அறையார் கழலும் அழல்வா யரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வா யிவளை
இறையார் வளைகொண் டெழில்வவ் வினையே. **#188**

ஒலிக்கின்ற வீரக்கழலையும், கொடிய விடம் பொருந்திய வாயினை

உடைய பாம்பையும் பிறையணிந்த சடையினையும் உடையவனே! பெருமைக்குரிய வேதங்களைக் கற்றுணர்ந்த மறையவர் வாழும் திருமருகலில் மகிழ்ந்து உறைபவனே! இப்பெண்ணை அவள் முன்கையில் அணிந்திருந்த வளையல்களைக் கவர்ந்ததோடு அழகையும் கவ ந்தாயே! இது தகுமோ?

திருமருகல்

ஒலிநீர் சடையிற் கரந்தா யுலகம்
பலிநீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகல் மகிழ்வா யிவளை
மெலிநீர் மையளாக் கவும்வேண் டினையே. **#189**

முழங்கிவந்த கங்கையைத் தன் சடைமிசை மறைத்தவனே! உலகெங்கணும் சென்று பலியேற்றுத் திரிபவனே! குற்றம் அற்ற புகழாளனே! நீர் நிறைந்த திருமருகலைத் தனது இடமாகக் கொண்டு மகிழ்பவனே! இப்பெண்ணை மெலியும் நீர்மையள் ஆக்கவும் விரும்பினையோ?

திருமருகல்

துணிநீ லவண்ணம் முகில்தோன் றியன்ன
மணிநீ லகண்டம் உடையாய் மருகல்
கணிநீ லவண்டார் குழலாள் இவள்தன்
அணிநீ லவொண்கண் அயர்வாக் கினையே. **#190**

தெளந்த நீல நிறம் பொருந்திய மேகம் தோன்றினாற் போன்ற அழகிய நீலகணட்த்தை உடையவனே! திருமருகலை வந்தடைந்த, நீலவண்டுகளின் தொகுதியோ எனக் கருதக் கூடிய கூந்தலை உடைய இளைய இப்பெண்ணின் ஒளிபொருந்திய கண்கள் கலங்குமாறு இவளுக்கு அயர்வை உண்டாக்கி விட்டாயே. இது தகுமோ?

திருமருகல்

பலரும் பரவப் படுவாய் சடைமேல்
மலரும் பிறையொன் றுடையாய் மருகல்
புலருந் தனையுந் துயிலாள் புடைபோந்
தலரும் படுமோ அடியா ளிவளே. **#191**

பலராலும் பரவிப் போற்றப் படுபவனே! சடையின் மேல் விளங்கித் தோன்றும் பிறை ஒன்றை உடையவனே! திருமருகலை வந்தடைந்த இப்பெண் விடியும் அளவும் துயிலாதவளாய்த் துயருறுகிறாள்.அடியவளாகிய இவள்மீது பழிமொழி வருவது தக்கதோ?

திருமருகல்

வழுவாள் பெருமான் கழல்வாழ் கவெனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவா ளுடையாய் மருகற் பெருமான்
தொழுவா ளிவளைத் துயராக் கினையே. **#192**

மழுப்படையை உடையவனே! மருகற் பெருமானே! தவறாமல் ‘பெருமான் திருவடிகள் வாழ்க’ என்று கூறிக் கொண்டே துயில் எழுந்து இரவும் பகலும் உன்னையே நினைந்து தொழுபவளாகிய இவளைத் துயருக்குரியவள் ஆக்கினையே! இது தகுமோ?

திருமருகல்

இலங்கைக் கிறைவன் விலங்கல் எடுப்பத்
துலங்கவ் விரலூன் றலுந்தோன் றலனாய்
வலங்கொள் மதில்சூழ் மருகற் பெருமான்
அலங்கல் இவளை அலராக் கினையே. **#193**

இலங்கைக்கு அரசனாகிய இராவணன் கயிலைமலையைப் பெயர்த்த போது, அவனது ஆற்றல் அழியுமாறு, விளங்கும் தனது காற்பெருவிரலை ஊன்றிய அளவில் அவன் செய்வதறியாது இடர்ப்பட்டு மீண்டு, வலமாக வந்து பணிந்து வரம் கொண்ட மருகற்பெருமானே! மாலைசூடி மணம் கொள்ள இருந்த இவளுக்குத் துன்பம் வரச்செய்தனையே! இது தக்கதோ?

திருமருகல்

எரியார் சடையும் அடியும் இருவர்
தெரியா ததொர்தீத் திரளா யவனே
மரியார் பிரியா மருகற் பெருமான்
அரியாள் இவளை அயர்வாக் கினையே. **#194**

நெருப்புப் போலச் சிவந்த சடையையும், அடியையும் திருமால் பிரமன் ஆகிய இருவர் அறியமுடியாதவாறு ஒளிப்பிழம்பாய் உயர்ந்து தோன்றியவனே! பிறவி நீங்கிய முக்தர்கள் வாழும் திருமருகலில் விளங்கும் பெருமானே! அரியவளாக இத்தலத்துக்குவந்த இவளைத் துன்புறச்செய்தாயே! இது தக்கதோ?

திருமருகல்

அறிவில் சமணும் அலர்சாக் கியரும்
நெறியல் லனசெய் தனர்நின் றுழல்வார்
மறியேந் துகையாய் மருகற் பெருமான்

நெறியார் குழலி நிறைநீக் கினையே. **#195**
அறிவற்ற சமணர்களும் எங்கும் பரவி வாழும் சாக்கியர்களும் நெறியல்லனவற்றைச் செய்து நின்று உழல்பவராவர். மான்கன்றை ஏந்திய கையை உடையவனே! மருகற் பெருமானே! உன்னை நினையும் அடர்ந்த கூந்தலினளாய இப்பெண்ணின் மனத்தைச் சிதறுண்ணச்செய்தீரே, இது தகுமோ?

<u>திருமருகல்</u>

வயஞா னம்வல்லார் மருகற் பெருமான்
உயர்ஞா னமுணர்ந் தடியுள் குதலால்
இயன்ஞா னசம்பந் தனபா டல்வல்லார்
வியன்ஞா லமெல்லாம் விளங்கும் புகழே. **#196**
தன்மயமாக்கும் திருவருள் ஞானம் பெற்றார் வாழும் மருகற் பெருமான் திருவடிகளை உயர்ஞானம் உணர்ந்து நினைதலால் பதி இயல்புற்ற ஞானசம்பந்தன் அருளிய இப்பதிகப் பாடல்களைப் பாடவல்லார் புகழ், அகன்ற இவ்வுலக மெல்லாம் விளங்கித் தோன்றும்.

திருநெல்லிக்கா

திருநெல்லிக்கா

திருநெல்லிக்கா,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நெல்லிவனேசுவரர்.
தேவியார் : மங்களநாயகியம்மை.

அறத்தா லுயிர்கா வலமர்ந் தருளி
மறத்தான் மதின்மூன் றுடன்மாண் பழித்த
திறத்தால் தெரிவெய் தியதீ வெண்திங்கள்
நிறத்தா நெல்லிக்கா வுள்நிலா யவனே. **#197**

நெல்லிக்காவுள் விளங்கும் இறைவன், உயிர்களைக் காத்தலாகிய அறத்தை மேற் கொண்டருளி, அறநெறிக்கு மாறாக நடந்த அசுரர்களின் மும்மதில்களின் பெருமைகளை அழித்த திறத்தால் பலராலும் நன்கறியப்பட்டு வெண்திங்கள் போன்ற வெள்ளிய திருநீற்றைப் பூசிய அழல் போலும் வண்ணனாய் விளங்குபவன்.

திருநெல்லிக்கா

பதிதா னிடுகா டுபைங்கொன் றைதொங்கல்
மதிதா னதுசூ டியமைந் தனுந்தான்
விதிதான் வினைதான் விழுப்பம் பயக்கும்
நெதிதான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. **#198**

நெல்லிக்காவுள் எழுந்தருளிய இறைவன் இடுகாட்டைவாழும் இடமாகவும், கொன்றைமலரைத் தான் விரும்பும் மாலையாகவும் கொண்டவன், மதிசூடிய வீரன், விதியாகவும் வினையாகவும் மேன்மையளிக்கும் நிதியாகவும் விளங்குபவன்.

திருநெல்லிக்கா

நலந்தா னவன்நான் முகன்தன் தலையைக்
கலந்தா னதுகொண் டகபா லியுந்தான்
புலந்தான் புகழா லெரிவிண் புகழும்
நிலந்தான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. **#199**

நெல்லிக்காவுள் எழுந்தருளிய இறைவன், நன்மைகளைத் தருபவன். நான்முகனின் தலையை உண்கலனாகக் கொண்டு கபாலி எனப் பெயர் பெற்றவன். ஞானமே வடிவமானவன். புகழால் விளங்கும் வானோர் போற்றும் வீட்டுலகாக விளங்குபவன்.

திருநெல்லிக்கா

தலைதா னதுஏந் தியதம் மடிகள்
கலைதான் திரிகா டிடம்நா டிடமா
மலைதா னெடுத்தான் மதின்மூன் றுடைய
நிலைதான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. #200

நிலையாக நெல்லிக்காவுள் எழுந்தருளிய சிவபெருமான், பிரமனது தலையோட்டைக் கையில் ஏந்திய தலைவன், தான் விரும்பும் இடமாக மான்கள் திரியும் காட்டைக் கொண்டவன், முப்புரங்களும் அழிய மேருமலையை வில்லாக எடுத்தவன்.

திருநெல்லிக்கா

தவந்தான் கதிதான் மதிவார் சடைமேல்
உவந்தான் சுறவேந் தனுரு வழியச்
சிவந்தான் செயச்செய் துசெறுத் துலகில்
நிவந்தான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. #201

நெல்லிக்காவுள் விளங்கும் சிவபெருமான், நாம் செய்யத்தக்க தவமாகவும், அடையத்தக்க கதியாகவும் விளங்குபவன். நீண்ட சடைமுடி மீது பிறை மதியை உவந்து சூடியவன். மீனக்கொடியை உடைய மன்மதனைச் சினந்தழித்தவன். உலக மக்கள் செயற்படத்தான் ஐந்தொழில்களைச் செய்து அனைத்தையும் அழித்து வீடருள்பவனாய் உயர்ந்து தோன்றுபவன்.

திருநெல்லிக்கா

வெறியார் மலர்க்கொன் றையந்தார் விரும்பி
மறியார் மலைமங் கைமகிழ்ந் தவன்றான்
குறியாற் குறிகொண் டவர்போய்க் குறுகும்
நெறியான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. #202

நெல்லிக்காவுள் நிலவும் இறைவன், மணம் கமழும் கொன்றைமாலையை விரும்புபவன். மான்கள் விளையாடும் மலையினிடம் தோன்றிய உமையம்மையை மணங்கொண்டு மகிழ்ந்தவன். குரு ஆனவர் காட்டும் குறியைத் தியானித்து நாம் போய் அடையும் வீட்டுநெறியை உடையவன்.

திருநெல்லிக்கா

பிறைதான் சடைச்சேர்த் தியஎந் தைபெம்மான்
இறைதான் இறவாக் கயிலைம் மலையான்
மறைதான் புனலொண் மதிமல் குசென்னி

நிறைதான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. **#203**
நெல்லிக்காவுள் நிலாவிய இறைவன், சடையின் கண் இளம் பிறையை அணிந்து எம் தந்தையாக விளங்கும் பெருமான் சிறிதும் அழிவற்ற கயிலை மலையில் உறைபவன். மறைந்துறையும் கங்கையோடு ஒளி பொருந்திய மதி நிறைந்த சென்னியை உடைய பூரணன்.

<u>திருநெல்லிக்கா</u>

மறைத்தான் பிணிமா தொருபா கந்தன்னை
மிறைத்தான் வரையா லரக்கன் மிகையைக்
குறைத்தான் சடைமேற் குளிர்கோல் வளையை
நிறைத்தான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. **#204**
நெல்லிக்காவுள் நிலாவிய சிவபெருமான் உமையம்மையை ஒருபாகமாகப் பிணித்துத் தன்னோடு இணைத்துக் கொண்டவன். இராவணன் கயிலை மலைமீது பறந்து சென்ற குற்றத்திற்காக அக்கயிலை மலையைக் கொண்டே வருத்தி அவன் வலிமையைக் குறைத்தவன். குளிர்ந்த திரண்ட வளையல்களை அணிந்த கங்கையைச் சடைமேல் அடக்கியவன்.

<u>திருநெல்லிக்கா</u>

தழல்தா மரையான் வையந்தா யவனும்
கழல்தான் முடிகா ணியநா ணொளிரும்
அழல்தான் அடியார்க் கருளாய்ப் பயக்கும்
நிழல்தான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. **#205**
நெல்லிக்காவுள் எழுந்தருளிய இறைவன் தழல் போலச் சிவந்த தாமரைமலர் உறையும் பிரமனும், உலகனைத்தையும் அளந்த திருமாலும் திருவடி திருமுடி அகியவற்றைக் காணமுயன்று நாண, ஒளிரும் அழல் வடிவாய் நின்றவன். அடியவர்கட்கு அருளைத்தரும் ஒளி வடிவினன்.

<u>திருநெல்லிக்கா</u>

கனத்தார் திரைமாண் டழற்கான் றநஞ்சை
எனத்தா வெனவாங் கியதுண் டகண்டன்
மனத்தாற் சமண்சாக் கியர்மாண் பழிய
நினைத்தான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. **#206**
நெல்லிக்காவுள் எழுந்தருளிய இறைவன், மேகங்களால் உண்ணப்படும் அலைகளோடு கூடிய பெரிய கடலில் பெருகி எழுந்து அழலை உமிழ்ந்த நஞ்சைக் கண்டு அஞ்சிய தேவர்கள் ‘என் அத்தனே காப்பாற்று’ என வேண்ட, அந்நஞ்சினை எடுத்து வரச்செய்து அதனை வாங்கி உண்ட

கண்டத்தினன். சமணபுத்தர்களின் செல்வாக்கு நாட்டில் அழியுமாறு மனத்தால் நினைத்தவன்.

திருநெல்லிக்கா

புகரே துமிலா தபுத்தே ளுலகில்
நிகரா நெல்லிக்கா வுள்நிலா யவனை
நகரா நலஞா னசம்பந் தன்சொன்ன
பகர்வா ரவர்பா வமிலா தவரே. **#207**

குற்றமற்ற தேவர்கள் உலகில் யாவரும் தனக்கு ஒப்பாகாதவனாய் விளங்கி, இம்மண்ணுலகை வாழ்விக்க நெல்லிக்காவுள் எழுந்தருளிய இறைவனைப் பற்றி அழிவற்ற நன்மைகளைக் கொண்ட ஞானசம்பந்தன் அருளிய இப்பாமாலையைப்பாடித் தொழுபவர் பாவம் அற்றவர் ஆவர்.

திருஅழுந்தூர்

திருஅழுந்தூர்

திருஅழுந்தூர்,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வேதபுரீசுவரர்.
தேவியார் : சவுந்தராம்பிகையம்மை.

தொழுமா றுவல்லார் துயரதீ ரநினைந்
தெழுமா றுவல்லார் இசைபா டவிம்மி
அழுமா றுவல்லார் அழுந்தை மறையோர்
வழிபா டுசெய்மா மடம்மன் னினையே. **#208**

தொழும் வகையிலும், பிறவித்துயர் தீர நினைந்தெழும் வகையிலும், பிறர் இசைபாட விம்மி அழும் வகையிலும் வல்லவராய மறையவர் வழிபாடு செய்ய, 'பெருமானே நீ அழுந்தையில் சிறந்துள்ள மடம் எனப் பெயரிய கோயிலில் எழுந்தருளியுள்ளாய்'.

திருஅழுந்தூர்

கடலே றியநஞ் சமுதுண் டவனே
உடலே உயிரே உணர்வே யெழிலே
அடலே றுடையாய் அழுந்தை மறையோர்
விடலே தொழமா மடமே வினையே. **#209**

'கடலின்கண் எழுந்த நஞ்சை அமுதாக உண்டவனே! உடல், உயிர், உணர்வாக இருப்பவனே! அழகனே! வலிமை பொருந்திய ஆனேற்றை உடையவனே! அழுந்தையில் வாழும் மறையவர் தலைவனே'! எனத் தொழ, 'பெருமானே! நீ சிறந்த மடம் எனப் பெயரிய கோயிலில் எழுந்தருளியுள்ளாய்'.

திருஅழுந்தூர்

கழிகா டலனே கனலா டலினாய்
பழிபா டிலனே யவையே பயிலும்
அழிபா டிலராய் அழுந்தை மறையோர்
வழிபா டுசெய்மா மடமன் னினையே. **#210**

'பலரும் வெறுக்கும் சுடுகாட்டில் உறைபவனே! கனலில் நின்று ஆடுபவனே! பிறரால் பழிக்கப்படும் இயல்புகள் இல்லாதவனே'! எனப்பலவாறு உன்புகழையே பலகாலும் சொல்லும் அழிவுபாடற்ற அந்தணர் வழிபாடு செய்யும் அழுந்தை என்னும் தலத்தில், பெருமானே!

நீ எழுந்தருளியுள்ளாய்.

திருஅழுந்தூர்

வானே மலையே யெனமன் னுயிரே
தானே தொழுவார் தொழுதாள் மணியே
ஆனே சிவனே அழுந்தை யவரெம்
மானே யெனமா மடமன் னினையே. **#211**

அன்பர்கள் ‘வானே! மலையே!’ என்று கூற மன்னிய உயிரே! தாமே வணங்குவார் வணங்குதற்குரிய திருவடிகளை உடைய மணியே! ஆன் (பசு) வடிவாக விளங்குபவனே! சிவனே! அழுந்தை என்னும் பதியில் வாழும் மறையவர் எம் தலைவனே’ எனப் போற்றப், ‘பெருமானே! நீ மடம் எனப் பெயரிய கோயிலுள் விளங்குகின்றாய்’.

திருஅழுந்தூர்

அலையார் புனல்சூழ் அழுந்தைப் பெருமான்
நிலையார் மறியுந் நிறைவெண் மழுவும்
இலையார் படையும் மிவையேந் துசெல்வ
நிலையா வதுகொள் கெனநீ நினையே. **#212**

அலைகள் வீசும் ஆறுகள் சூழ்ந்த அழுந்தைப் பதியில் உறையும் பெருமானை அவன் கையில் ஏந்திய நிலையான மான், கையில் ஏந்திய வெண்மையான மழு, இலைவடிவமான சூலம் ஆகியவற்றோடு, உள்ளத்தில் ஏந்துதலே நிலையான செல்வம் எனக் கொள்க. அவனையே நீ நினைக.

திருஅழுந்தூர்

நறவார் தலையின் நயவா வுலகில்
பிறவா தவனே பிணியில் லவனே
அறையார் கழலாய் அழுந்தை மறையோர்
மறவா தெழமா மடமன் னினையே. **#213**

அடியவர் கட்டிய மலர்களால் தலையில் தேன் பொருந்திய நயம் உடையவனே! உலகில் பிறவாதவனே! நோயற்றவனே! ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்தவனே! அழுந்தையில் வாழும் மறையவர் மறவாது எழுந்து தொழ, அங்குள்ள சிறந்த மடம் எனப் பெயரிய கோயிலில் உள்ளாய்.

திருஅழுந்தூர்

தடுமாறு வல்லாய் தலைவா மதியம்
சுடுமாறு வல்லாய் சுடரார் சடையில்

அடுமாறு வல்லாய் அழுந்தை மறையோர்
நெடுமா நகர்கை தொழநின் றனையே. **#214**
உன்னை உணர்வதில் தடுமாற்றத்தை விளைப்பவனே! தலைவனே! காதல் வயப்பட்ட மகளிரை நீ சூடிய மதியால் சுடும் படி செய்பவனே! ஒளிபொருந்திய சடையின்மேல் உலகை அடவந்த கங்கையாற்றைச் சூடியவனே! அழுந்தையில் மறையவர் கைகளால் தொழ நீண்டுயர்ந்த பெரிய கோயிலில் எழுந்தருளியுள்ளாய்.

திருஅழுந்தூர்

பெரியாய் சிறியாய் பிறையாய் மிடறு
கரியாய் கரிகா டுயர்வீ டுடையாய்
அரியாய் ஒளியாய் அழுந்தை மறையோர்
வெரியார் தொழமா மடம்மே வினையே. **#215**
பெரியவனே! நுண்ணியனே! பிறை சூடியவனே! கண்டம் கரியவனே! சுடுகாட்டை உயர்ந்த வீடாகக் கொண்டவனே! அறிதற்கு அரியவனே! அன்பர்க்கு எளியவனே! அழுந்தையில் பழிபாவங்கட்கு அஞ்சும் மறையவர் வணங்க நீ சிறந்த மடம் என்னும் கோயிலில் விளங்குகின்றாய்.

திருஅழுந்தூர்

மணிநீள் முடியான் மலையை அரக்கன்
தணியா தெடுத்தான் உடலம் நெரித்த
அணியார் விரலாய் அழுந்தை மறையோர்
பணிமா மடம்மன் னியிருந் தனையே. **#216**
மணிகள் இழைத்த நீண்ட மகுடம் சூடியமுடியனாகிய இராவணன் கயிலைமலையைப் பொறுமையின்றி எடுத்தபோது, அவனது உடலை நெரித்த அழகிய கால் விரலை உடையவனே! அழுந்தைப் பதியில் மறையவர் போற்ற அழகிய மடம் என்னும் கோயிலில் நீ நிலையாக எழுந்தருளியுள்ளாய்.

திருஅழுந்தூர்

முடியார் சடையாய் முனம்நா ளிருவர்
நெடியான் மலரான் நிகழ்வா லிவர்கள்
அடிமே லறியார் அழுந்தை மறையோர்
படியால் தொழமா மடம்பற் றினையே. **#217**
சடைமுடியை உடையவனே! முற்காலத்தே திருமால் பிரமன், ஆகிய இருவர் தம்முள் செருக்கி உன் அடிமுடிகளை அறிய முற்பட்டு அறியாதவர் ஆயினர். அழுந்தைப்பதியுள் மறையவர் விதிமுறைப்படி

வழிபட வணங்கிப் போற்ற, சிறந்த மடம் எனப்பெயரிய கோயிலில் நீ விளங்குகின்றாய்.

திருஅழுந்தூர்

அருஞா னம்வல்லார் அழுந்தை மறையோர்
பெருஞா னமுடைப் பெருமா னவனைத்
திருஞா னசம்பந் தனசெந் தமிழ்கள்
உருஞா னமுண்டாம் உணர்ந்தார் தமக்கே. **#218**

எய்தற்கரிய திருவருள் ஞானம் பெற்றவர்களாகிய மறையவர் வணங்கிப் போற்ற அழுந்தைப் பதியில் விளங்கும் பெரிய ஞானமே வடிவாக உடைய பெருமானை, திருஞானசம்பந்தன் திருச்சிற்றம்பலம் போற்றிப் பாடியதான இத்திருப்பதிகத்தை ஓதி உணர்ந்தவர்க்கு உண்மை உணர்வு உண்டாகும்.

திருக்கழிப்பாலை

திருக்கழிப்பாலை

திருக்கழிப்பாலை,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பால்வண்ணநாதர்.
தேவியார் : வேதநாயகியம்மை.

புனலா டியபுன் சடையா யரணம்
அனலா கவிழித் தவனே யழகார்
கனலா டலினாய் கழிப்பா லையுளாய்
உனவார் கழல்கை தொழுதுள் குதுமே. **#219**

கங்கை நீரில் மூழ்கிய சடையை உடையவனே! முப்புரங்களையும் அழலெழுமாறு விழித்து எரித்தவனே! அழகிய நெருப்பில் நின்று ஆடல் புரிபவனே! கழிப்பாலையுள் எழுந்தருளியவனே! உன்னுடைய நீண்ட திருவடிகளைக் கைகளால் தொழுது நினைகின்றோம்.

திருக்கழிப்பாலை

துணையா கவொர்தூ வளமா தினையும்
இணையா கவுகந் தவனே யிறைவா
கணையால் எயிலெய் கழிப்பா லையுளாய்
இணையார் கழலேத் தஇடர் கெடுமே. **#220**

தனக்குத் துணையாகுமாறு தூய அழகிய உமையம்மையையும் உன்திருமேனியின் ஒருபாகமாக இணைத்துக்கொண்டு மகிழ்ந்தவனே! இறைவனே! முப்புரங்களைக் கணையால் எய்து கழிப்பாலையில் மேவி இருப்பவனே! உன் இரண்டு திருவடிகளை ஏத்த இடர் கெடும்.

திருக்கழிப்பாலை

நெடியாய் குறியாய் நிமிர்புன் சடையின்
முடியாய் சுடுவெண் பொடிமுற் றணிவாய்
கடியார் பொழில்சூழ் கழிப்பா லையுளாய்
அடியார்க் கடையா அவலம் அவையே. **#221**

மிகவும் பெரியவனே! நுண்ணியனே! நிமிர்த்துக் கட்டப்பட்ட சடையாகிய முடியை உடையவனே! திருநீற்றைத் திருமேனி முழுதும் அணிந்தவனே! மணம் கமழும் பொழில் சூழ்ந்த கழிப் பாலையில் எழுந்தருளியிருப்பவனே! உன் அடியவர்களை அவலங்கள் அடையமாட்டா.

திருக்கழிப்பாலை

எளியாய் அரியாய் நிலம்நீ ரொடுதீ
வளிகா யமென வெளிமன் னியதூ
ஒளியாய் உனையே தொழுதுன் னுமவர்க்
களியாய் கழிப்பா லையமர்ந் தவனே. **#222**

அன்பர்க்கு எளியவனே! அல்லாதார்க்கு அரியவனே! நிலம், நீர், தீ, காற்று ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களில் வெளிப் படையாக விளங்கும் தூய ஒளியோனே! உன்னையே வணங்கி நினைப்பவர் பால் அன்பு செய்பவனே! கழிப்பாலையில் விளங்குபவனே!

திருக்கழிப்பாலை

நடநண் ணியொர்நா கமசைத் தவனே
விடநண் ணியதூ மிடறா விகிர்தா
கடல்நண் ணுகழிப் பதிகா வலனே
உடல்நண் ணிவணங் குவனுன் னடியே **#223**

நடனத்தை விரும்பி ஒப்பற்ற பாம்பைக் கச்சாகக் கட்டியவனே! விடம் பொருந்திய தூயமிடற்றினனே! வேறுபட்ட பல வடிவங்களைக் கொண்டவனே! கடலை அடுத்துள்ள கழியில் விளங்கும் தலத்தில் விளங்குபவனே! என்உடல் உறுப்புக்கள் நிலத்தில் பொருந்த வணங்குவது உன் திருவடிகளையாகும்.

திருக்கழிப்பாலை

பிறையார் சடையாய் பெரியாய் பெரிய
மறையார் தருவாய் மையினா யுலகிற்
கறையார் பொழில்சூழ் கழிப்பா லையுளாய்
இறையார் கழலேத் தஇடர் கெடுமே. **#224**

பிறையணிந்த சடையினனே! பெரியோனே! பெருமை பொருந்திய வேதங்கள் கூறும் உண்மைப் பொருளாய் உள்ளவனே! மண்ணுலகில் கருநிறம் பொருந்திய பொழில் சூழ்ந்த கழிப் பாலையில் எழுந்தருளியவனே! எங்கும் தங்கும் உன் திருவடிகளை ஏத்த இடர்கெடும்.

திருக்கழிப்பாலை

முதிருஞ் சடையின் முடிமேல் விளங்குங்
கதிர்வெண் பிறையாய் கழிப்பா லையுளாய்
எதிர்கொள் மொழியால் இரந்தேத் துமவர்க்
கதிரும் வினையா யினஆ சறுமே. **#225**

முதிர்ந்த சடைமுடியின் மேல் விளங்கும் வெண்மையான ஒளிக்கதிர்களை உடைய பிறையைச் சூடியவனே! கழிப்பாலையில் எழுந்தருளியவனே! முன்னிலைப்பரவல் என்னும் வகையில் எதிர்நின்று பரவி இரங்கி உன்னைத் துதிக்கும் அடியவர்க்கு நடுக்கத்தைத்தரும் வினைகளாகிய குற்றங்கள் அகலும்.

திருக்கழிப்பாலை

எரியார் கணையால் எயிலெய் தவனே
விரியார் தருவீழ் சடையாய் இரவிற்
கரிகா டலினாய் கழிப்பா லையுளாய்
உரிதா கிவணங் குவனுன் னடியே. **#226**

தீக்கடவுள் பொருந்திய கணையால் முப்புரங்களை அழித்தவனே! விரிந்து விழும் சடைக்கற்றையை உடையவனே! இரவில் கரிந்த சுடுகாட்டில் ஆடுபவனே! கழிப்பாலையில் விளங்குபவனே! உன் திருவடிகளை எனக்கு உரியவாகக் கொண்டு வணங்குவேன்.

திருக்கழிப்பாலை

நலநா ரணன்நான் முகன்நண் ணலுறக்
கனலா னவனே கழிப்பா லையுளாய்
உனவார் கழலே தொழுதுன் னுமவர்க்
கிலதாம் வினைதான் எயிலெய் தவனே. **#227**

நன்மைகளைப் புரியும் திருமால், நான்முகன் இருவரும் அடிமுடி காண்போம் என்று உன்னை நண்ணியபோது கனல்வடிவோடு ஓங்கி நின்றவனே! கழிப்பாலையில் எழுந்தருளியவனே! முப்புரங்களை எய்து எரித்தவனே! உன்னுடைய நீண்டதிருவடிகளையே தொழுது நினைவார்க்கு வினைகள் இல்லையாகும்.

திருக்கழிப்பாலை

தவர்கொண் டதொழிற் சமண்வே டரொடுந்
துவர்கொண் டனர்நுண் துகிலா டையரும்
அவர்கொண் டனவிட் டடிகள் உறையும்
உவர்கொண் டகழிப் பதியுள் குதுமே. **#228**

தவத்தினராகிய வேடங்கொண்டு திரிவதைத் தொழிலாகக் கொண்ட போலியான சமண்துறவி வேடத்தினரும் பழுப்பு நிறம் ஏற்றிய நுண்ணிய ஆடையைப் போர்த்துத்திரியும் புத்தர்களும் ஆகிய அவர்கள் கொண்ட கொள்கைகள் உண்மையானவை அல்ல எனவிடுத்துத் தலைமைக்கடவுளாக விளங்கும் சிவபிரான் உறைவதும், உவர் நீரையுடைய உப்பங்கழிகளை உடையதும் ஆகிய கழிப்பாலையை நாம்

நினைத்துப் போற்றுவோம்.

திருக்கழிப்பாலை

கழியார் பதிகா வலனைப் புகலிப்
பழியா மறைஞா னசம்பந் தனசொல்
வழிபா டிவைகொண் டடிவாழ்த் தவல்லார்
கெழியா ரிமையோ ரொடுகே டிலரே. **#229**

உப்பங்கழிகள் பொருந்திய தலமாகிய கழிப் பாலைத்தலைவனாகிய சிவபிரானை, புகலிப்பதிக்குரியவனாய் மறை நெறிவளரத் தோன்றிய ஞானசம்பந்தன் போற்றிப் பரவிய இத்திருப்பதிகத்தை ஓதுவதையே வழிபாடாகக் கொண்டு போற்றவல்லவர் வானோர்களோடு பொருந்தி விளங்குவர். கேடு முதலியன இல்லாதவர் ஆவர்.

திருக்குடவாயில்

திருக்குடவாயில்,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கோணேசுவரர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

திகழுந் திருமா லொடுநான் முகனும்
புகழும் பெருமான் அடியார் புகல
மகிழும் பெருமான் குடவாயின் மன்னி
நிகழும் பெருங்கோ யில்நிலா யவனே. **#230**

குடவாயில் என்னும் தலத்தில் நிலைபெற்று விளங்கும் பெருங்கோயிலில் எழுந்தருளிய பெருமான், எல்லோராலும் அறியப்பெறும் திருமால், பிரமன் ஆகியோரால் புகழ்ந்து போற்றப்படும் தலைவனும், அடியவர்கள் தன்னைத் துதித்துப் போற்ற மகிழும் பெருமானும் ஆவான்.

திருக்குடவாயில்

ஓடுந் நதியும் மதியோ டுரகம்
சூடுஞ் சடையன் விடைதொல் கொடிமேல்
குழகன் குடவா யில்தனில்
நீடும் பெருங்கோ யில்நிலா யவனே. **#231**

குடவாயிலில் நீடி விளங்கும் பெருங்கோயிலில் எழுந்தருளிய பெருமான் பெருகி ஓடி வந்த கங்கையையும், பிறைமதியையும், பாம்பையும் சூடிய சடையை உடையவன். பழமையான தனது கொடியில் விடை இலச்சினை பொருந்தியவன். இளமைத் தோற்றம் உடையவன்.

திருக்குடவாயில்

கலையான் மறையான் கனலேந் துகையான்
மலையா ளவள்பா கம்மகிழ்ந்த பிரான்
கொலையார் சிலையான் குடவா யில்தனில்
நிலையார் பெருங்கோ யில்நிலா யவனே. **#232**

குடவாயில் என்னும் தலத்தில் நிலைத்து விளங்கும் பெருங்கோயிலில் எழுந்தருளிய பெருமான், பீதாம்பர ஆடையணிந்த திருமால், வேதங்களை ஓதும் நான்முகன் என்பவராகவும், கனலைக் கையில் ஏந்திய உருத்திரனாகவும், அறக்கருணைபுரியும் மலைமகள்

பாகனாகவும் மறக்கருணைபுரிய, கொலைத் தொழிலுக்குரிய வில்லை ஏந்தியவனாகவும் விளங்குபவன்.

திருக்குடவாயில்

சுலவுஞ் சடையான் சுடுகா டிடமா
நலமென் முலையாள் நகைசெய் யநடம்
குலவுங் குழகன் குடவா யில்தனில்
நிலவும் பெருங்கோ யில்நிலா யவனே. **#233**

குடவாயிலில் விளங்கும் பெருங்கோயிலில் எழுந்தருளிய பெருமான், சுற்றிய சடைக் கற்றையை உடைய முடியன், அழகிய தனபாரங்களை உடைய உமையம்மை கண்டு மகிழச் சுடுகாட்டை ஆடுகளமாகக்கொண்டு நடம்புரியும் இளையோன்.

திருக்குடவாயில்

என்றன் உளமே வியிருந் தபிரான்
கன்றன் மணிபோல் மிடறன் கயிலைக்
குன்றன் குழகன் குடவா யில்தனில்
நின்ற பெருங்கோ யில்நிலா யவனே. **#234**

குடவாயிலில் பலரும் அறியப்படுவதாய் நிற்கும் பெருங்கோயிலில் நிலவும் பெருமான், என் உள்ளத்தில் விரும்பி உறையும் தலைவன் ஆவான். ஒளி குன்றிய நீலமணி போன்ற மிடற்றினன். கயிலாய மலையில் உறைபவன்.

திருக்குடவாயில்

அலைசேர் புனலன் அனலன் அமலன்
தலைசேர் பலியன் சதுரன் விதிரும்
கொலைசேர் படையன் குடவா யில்தனில்
நிலைசேர் பெருங்கோ யில்நிலா யவனே. **#235**

குடவாயிலில் நிலையாக விளங்கும் பெருங்கோயிலில் எழுந்தருளிய இறைவன்: அலைகள் வீசும் கங்கையை அணிந்தவன்: அனல் ஏந்தியவன்: தலையோட்டில் பலி பெறுபவன்: சதுரப்பாடு உடையவன்: நடுங்கத்தக்க கொலைக்கருவியாகிய சூலத்தை ஏந்தியவன்.

திருக்குடவாயில்

அறையார் கழலன் அழலன் இயலின்
பறையாழ் முழவும் மறைபா டநடம்
குறையா அழகன் குடவா யில்தனில்
நிறையார் பெருங்கோ யில்நிலா யவனே. **#236**

குடவாயிலில் நிறைவாக அமைந்த பெருங் கோயிலில் விளங்கும் இறைவன், ஒலிக்கின்ற வீரக் கழலை அணிந்தவன்: அழல் ஏந்தியவன்: இசைமரபுடன் கூடிய பறை, யாழ் முழவுடன் வேதங்கள் பாட நடனமாடும் அழகன்.

திருக்குடவாயில்

வரையார் திரள்தோள் அரக்கன் மடியவ்
வரையா ரவொர்கால் விரல்வைத் தபிரான்
வரையார் மதில்சூழ் குடவா யில்மன்னும்
வரையார் பெருங்கோ யில்மகிழ்ந் தவனே. **#237**

மலை போன்றுயர்ந்த மதில்கள் சூழ்ந்த குடவாயிலில் நிலைபெற்ற கயிலைமலை போன்ற பெருங்கோயிலில் மகிழ்ந்துறையும் இறைவன், மலை போன்று திரண்ட தோள்களை உடைய இராவணன் மடியுமாறு அவன் பெயர்த்த கயிலைமலை அவன்மீது அழுந்திப் பொருந்தத் தன் கால் விரலை ஊன்றிய பெருமான் ஆவான்.

திருக்குடவாயில்

பொன்னொப் பவனும் புயலொப் பவனும்
தன்னொப் பறியாத் தழலாய் நிமிர்ந்தான்
கொன்னற் படையான் குடவா யில்தனில்
மன்னும் பெருங்கோ யில்மகிழ்ந் தவனே. **#238**

குடவாயிலில் நிலை பெற்ற பெருங்கோயிலில் மகிழ்ந்துறையும் பெருமான், பொன்னிறத்தினனாகிய பிரமனும், புயல் நிறத்தினனாகிய திருமாலும் தனக்கு உவமையாகாதவனாய்த் தழலுருவில் உயர்ந்து தோன்றியவன், கொல்லும் தொழில் புரியும் நல்ல படைக்கலன்களை ஏந்தியவன்.

திருக்குடவாயில்

வெயிலின் நிலையார் விரிபோர் வையினார்
பயிலும் முரையே பகர்பா விகள்பால்
குயிலன் குழகன் குடவா யில்தனில்
உயரும் பெருங்கோ யிலுயர்ந் தவனே. **#239**

குடவாயிலில் உயர்ந்துள்ள பெருங்கோயிலில் உயர்ந்தோனாய் விளங்கும் இறைவன், வெயிலில் காய்பவராகிய சமணர்கள், விரித்துப் போர்த்த போர்வையினராகிய புத்தர்கள் ஆகிய சொன்னவற்றையே மீண்டும் மீண்டும் கூறும் பாவிகள்பால் பதியாதவன்; இளமையான தோற்றத்தை உடையவன்.

<u>திருக்குடவாயில்</u>

கடுவாய் மலிநீர் குடவா யில்தனில்
நெடுமா பெருங்கோ யில்நிலா யவனைத்
தடமார் புகலித் தமிழார் விரகன்
வடவார் தமிழ்வல் லவர்நல் லவரே. **#240**

வேகம் வாய்ந்த ஆற்றுநீரின் வளம் உடைய குடவாயில் நகரில் விளங்கும் நீண்டுயர்ந்த சிறந்த பெருங்கோயிலில் விளங்கும் இறைவனை, நீர் நிலைகளோடு கூடிய புகலிப் பதியின னாகிய தமிழ் வல்ல ஞானசம்பந்தன் அருளிய மாலையாக அமைந்த இப்பதிகத்தை ஓதவல்லவர் நன்மைகளை அடைவர்.

திருவானைக்கா

திருவானைக்கா

திருவானைக்கா,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சம்புகேசுவரர்.
தேவியார் : அகிலாண்டநாயகியம்மை.

மழையார் மிடறா மழுவா ளுடையாய்
உழையார் கரவா உமையாள் கணவா
விழவா ரும்வெண்நா வலின்மே வியஎம்
அழகா எனும்ஆ யிழையாள் அவளே. **#241**

நுண்ணிய வேலைப்பாடமைந்த அணிகலன் பூண்ட என் மகள், “மேகம் போன்ற கரிய மிடற்றினனே, மழுவாகிய படைக் கலனை உடையவனே, மான் ஏந்திய கரத்தினனே, உமையாள் கணவனே, விழாக்கள் பல நிகழும் வெண்ணாவல் ஈச்சுரம் என்னும் திருவானைக்காவில் மேவிய எம் அழகனே! அருள்புரி”, என்று உன்னையே நினைந்து கூறுகின்றாள்.

திருவானைக்கா

கொலையார் கரியின் உரிமூ டியனே
மலையார் சிலையா வளைவித் தவனே
விலையா லெனையா ளும்வெண்நா வலுளாய்
நிலையா அருளா யெனுநே ரிழையே. **#242**

அவயவங்கட்கு ஏற்ற அணிகலன்கள் பூண்ட என் மகள், ‘கொல்ல வந்த யானையின் தோலை உரித்துப் போர்த்தவனே, மலையை வில்லாக வளைத்தவனே, தன்னைத்தந்து என்னைக் கொள்ளும் விலையால் என்னை அடிமையாக ஆளும் வெண்ணாவல் என்னும் தலத்தில் விளங்குபவனே! நிலையாக என்னை ஆண்டருள்’ எனக் கூறுகின்றாள்.

திருவானைக்கா

காலா லுயிர்கா லனைவீ டுசெய்தாய்
பாலோ டுநெய் யாடிய பால்வணனே
வேலா டுகையா யெம்வெணா வலுளாய்
ஆலார் நிழலா யெனுமா யிழையே. **#243**

என் ஆயிழையாள், ‘காலால் காலன் உயிரைப் போக்கியவனே, பால், நெய் முதலியவற்றை ஆடும் பால்வண்ணனே, வேல் ஏந்திய கையனே,

வெண்ணாவலின் கீழ் விளங்குபவனே கல்லால மரநிழலின் கீழ் வீற்றிருந்து அறம் அருளியவனே! என்று பலவாறு கூறிகின்றாள். அருள்புரி.

திருவானைக்கா

சுறவக் கொடிகொண் டவன்நீ றதுவாய்
உறநெற் றிவிழித் தஎம் உத் தமனே
விறன்மிக் ககரிக் கருள்செய் தவனே
அறமிக் கதுவென் னுமென் ஆயிழையே. **#244**

என் ஆயிழையாள், ‘மீன் கொடியை உடைய மன்மதன் எரிந்து நீறாகுமாறு நுதல் விழியைத் திறந்த எங்கள் உத்தமனே, வலிமை மிக்க யானைக்கு அருள் செய்தவனே, நீ அருள் செயாதிருப்பதைக் கண்டு அறம் தவறுடையது’ என்று கூறுவாள்.

திருவானைக்கா

செங்கட் பெயர்கொண் டவன்செம் பியர்கோன்
அங்கட் கருணை பெரிதா யவனே
வெங்கண் விடையா யெம்வெண்நா வலுளாய்
அங்கத் தயர்வா யினள்ஆ யிழையே. **#245**

ஆராய்ந்து எடுத்த அணிகலன்களைப் பூண்ட என் மகள், ‘செங்கண்ணான் எனப் பெயர் பூண்ட சோழமன்னனுக்கு அழகிய கண்களால் கருணை பெரிதாகப் புரிந்தருளியவனே, கொடிய கண்களை உடைய விடையூர்தியை உடையவனே, எமது வெண்ணாவல் என்னும் பெயரிய திருஆனைக்காக் கோயிலில் உறைபவனே!’ என்று பலவாறு நைந்து கூறி உடல் சோர்வுற்றாள்.

திருவானைக்கா

குன்றே யமர்வாய் கொலையார் புலியின்
தன்தோ லுடையாய் சடையாய் பிறையாய்
வென்றாய் புரமூன் றைவெண்நா வலுளாய்
நின்றா யருளா யெனும்நே ரிழையே. **#246**

தன் உடல் உறுப்பிற்கு ஏற்ற அணிகலன்களைப் பூண்ட என் மகள், “கயிலைமலையில் வீற்றிருப்பவனே, கொல்லும் தொழில் வல்ல புலியினது தோலை உடுத்தவனே, சடைமுடியினனே, பிறை சூடியவனே, முப்புரங்களை அழித்து அவற்றின் தலைவர்களை வென்றவனே, வெண்ணாவல் என்னும் தலத்துள் எழுந்தருளியவனே! அருளாய்!” என்று அரற்றுகின்றாள்.

திருவானைக்கா

மலையன் றெடுத்த அரக்கன் முடிதோள்
தொலையவ் விரலூன் றியதூ மழுவா
விலையா லெனையா ளும்வெண்நா வலுளாய்
அலசா மல்நல்காய் எனும்ஆ யிழையே. **#247**

ஆராய்ந்து பூண்ட அணிகலன்களை உடைய என் மகள், 'கயிலைமலையை அன்று எடுத்த இராவணனின் முடி, தோள் ஆகியன அழியுமாறு கால் விரலை ஊன்றிய தூய மழுவாளனே! என்னைக் கொண்டு தன்னைத்தரும் விலையால் என்னை ஆண்டருளும் வெண்ணாவல் தலத்தில் வீற்றிருப்பவனே! என்னை அலைக்காமல் அருள்புரிவாய்' என்று கூறுகிறாள்.

திருவானைக்கா

திருவார் தருநா ரணன்நான் முகனும்
மருவா வெருவா அழலாய் நிமிர்ந்தாய்
விரையா ரும்வெண்நா வலுள்மே வியஎம்
அரவா எனும்ஆ யிழையா ளவளே. **#248**

ஆராய்ந்தெடுத்த அணிகளைப் பூண்ட என் மகள், 'திருமகள் மார்பிடை மருவிய திருமாலும், நான்முகனும் அடிமுடி காண மருவி வெருவுமாறு அழலுருவாய் நிமிர்ந்தவனே, மணம் கமழும் வெண்ணாவலுள் மேவிய எம் அரவாபரணனே! என்று கூறுகின்றாள்.

திருவானைக்கா

புத்தர் பலரோ டமண்பொய்த் தவர்கள்
ஒத்தவ் வுரைசொல் லிவையோ ரகிலார்
மெய்த்தே வர்வணங் கும்வெண்நா வலுளாய்
அத்தா அருளாய் எனும் ஆயிழையே. **#249**

ஆராய்ந்து பூண்ட அணிகலன்களை உடைய என் மகள் 'புத்தர்கள் பலரோடு, பொய்யான தவத்தைப் புரியும் சமணர்கள், தமக்குள் ஒத்த உரைகளைக்கூறி உன்னை அறியாதவராயினர். உண்மைத் தேவர்கள் வந்து வணங்கும் வெண்ணாவலுள் வீற்றிருக்கும் இறைவனே, அத்தனே, அருளாய்'! என்று கூறுவாள்.

திருவானைக்கா

வெண்நா வலமர்ந் துறைவே தியனைக்
கண்ணார் கமழ்கா ழியர்தந் தலைவன்
பண்ணோ டிவைபா டியபத் தும்வல்லார்

விண்ணோ ரவரேத் தவிரும் புவரே. **#250**
வெண்ணாவலின் கீழ் அமர்ந்துறையும் வேதங்களை அருளிய இறைவனை, கண்களில் நிலைத்து நிற்பதும் மணம் கமழ்வதுமான சீகாழிப் பதிக்குத் தலைவனாகிய ஞானசம்பந்தன், பண்ணோடு பாடிய இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓதவல்லார் விண்ணோர்களால் ஏத்தி விரும்பப்படுபவர் ஆவர்.

திருநாகேச்சரம்

திருநாகேச்சரம்

திருநாகேச்சரம்,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செண்பகாரணியேசுவரர்.
தேவியார் : குன்றமுலைநாயகியம்மை.

பொன்நேர் தருமே னியனே புரியும்
மின்நேர் சடையாய் விரைகா விரியின்
நன்னீர் வயநா கேச்சுர நகரின்
மன்னே யெனவல் வினைமாய்ந் தறுமே. **#251**

பொன்னை யொத்த மேனியனே, வளைத்துக் கட்டப்பட்ட மின்னல் போன்ற சடையினை உடையவனே, மணத்துடன் வரும் காவிரி நதியின் நல்ல நீரால் வளம் பெறும் வயல்களை உடைய நாகேச்சுரத் திருக்கோயிலில் விளங்கும் மன்னவனே என்று ஏத்த, வலிய வினைகள் அழிந்து கெடும்.

திருநாகேச்சரம்

சிறவார் புரமூன் றெரியச் சிலையில்
உறவார் கணையுய்த் தவனே உயரும்
நறவார் பொழில்நா கேச்சுர நகருள்
அறவா எனவல் வினையா சறுமே. **#252**

சிறவாதவராகிய அசுரர்களின் முப்புரங்கள் எரியுமாறு வில்லிற் பொருந்திய நீண்ட கணையைச் செலுத்தியவனே, உயர்ந்த தேன் பொருந்திய மலர்ச்சோலைகள் சூழ்ந்த திருநாகேச்சுரக் கோயிலில் விளங்கும் அறவடிவினனே! என்று கூறி ஏத்த, வலிய வினைக்குற்றங்கள் அழிந்து கெடும்.

திருநாகேச்சரம்

கல்லால் நிழல்மே யவனே கரும்பின்
வில்லான் எழில்வே வவிழித் தவனே
நல்லார் தொழுநா கேச்சுர நகரில்
செல்வா எனவல் வினைதேய்ந் தறுமே. **#253**

கல்லால மரநிழலில் எழுந்தருளியவனே, கரும்பு வில்லை ஏந்திய மன்மதனின் அழகிய உடல் வேகுமாறு விழித்தவனே, நல்லவர்களால் வணங்கப்பெறும் நாகேச்சுரத்திருக்கோயிலில் விளங்கும் செல்வனே

என்று கூறி ஏத்த வலிய வினைகள் தேய்ந்து கெடும்.

திருநாகேச்சரம்

நகுவான் மதியோ டரவும் புனலும்
தகுவார் சடையின் முடியாய் தளவம்
நகுவார் பொழில்நா கேச்சுர நகருள்
பகவா எனவல் வினைபற் றறுமே. **#254**

விளங்குகின்ற வானத்தில் ஊரும் திங்கள், பாம்பு, கங்கை ஆகியன பொருந்திய தக்க நீண்ட சடையை உடையவனே, 107 முல்லை மலர்கள் விளங்கும் நீண்ட பொழில்கள் சூழ்ந்த நாகேச்சுரத்திருக்கோயிலில் விளங்கும் பெருமானே என்று கூறி ஏத்த வலிய வினைகளின் தொடக்கு அறும்.

திருநாகேச்சரம்

கலைமான் மறியுங் கனலும் மழுவும்
நிலையா கியகை யினனே நிகழும்
நலமா கியநா கேச்சுர நகருள்
தலைவா எனவல் வினை தா னறுமே. **5 #255**

மான்கன்று, அழல், மழு ஆகியன நிலையாக விளங்கும் கைகளை உடையவனே, நன்மை விளையும் தலமாகிய நாகேச்சுரக் கோயிலில் விளங்கும் தலைவனே! என்று கூறி ஏத்த வலியவினைகள் கெடும்.

திருநாகேச்சரம்

குரையார் கழலா டநடங் குலவி
வரையான் மகள்கா ணமகிழ்ந் தவனே
நரையார் விடையே றுநாகேச் சுரத்தெம்
அரைசே யெனநீங் குமருந் துயரே. **#256**

மலைமகளாகிய பார்வதி தேவி கண்டு மகிழ, கால்களில் ஒலிக்கின்ற வீரக்கழல்கள் ஆடநடனம் ஆடி மகிழ்பவனே, வெண்ணிறமான விடையின்மீது ஏறி நாகேச்சுரத்துள் விளங்கும் அரசனே! என்று கூறி ஏத்த, நீங்குதற்கு அரியவாய் வரும் துன்பங்கள் கெடும்.

திருநாகேச்சரம்

முடையார் தருவெண் டலைகொண் டுலகில்
கடையார் பலி கொண் டுழல்கா ரணனே
நடையார் தருநா கேச்சுர நகருள்
சடையாவென வல்வினை தானறுமே. **#257**

முடை நாற்றம் பொருந்திய வெள்ளிய தலையோட்டை ஏந்தி உலகில்

பலர் வீட்டு வாயில்களிலும் பலி கொண்டு உழலும் உலகக் காரணனே, நாகேச்சுரக் கோயிலுள் எழுந்தருளிய சடையனே! என்று கூறி ஏத்த, வலிய வினைகள் கெடும்.

திருநாகேச்சரம்

ஓயா தவரக் கனொடிந் தலற
நீயா ரருள்செய் துநிகழ்ந் தவனே
வாயா ரவழுத் துவர்நா கேச்சுரத்
தாயே யெனவல் வினைதா னறுமே. **#258**

தன் வலிமையால் இடைவிடாது போர்புரியும் இராவணன் மனம் உடைந்து அலற நீ அவனுக்கு அரிய அருளைச் செய்து மனம் இளகுதலாகிய உன் நடை முறையைக் காட்டியவன், என்று உன்னைப் பலரும் வாயார வாழ்த்துவர். நாகேச்சுரத்தில் எழுந்தருளிய இறைவனே! என உன்னை நினைந்து போற்றுவார் வலிய வினைகள் கெடும்.

திருநாகேச்சரம்

நெடியா னொடுநான் முகன்நே டலுறச்
சுடுமா லெரியாய் நிமிர்சோ தியனே
நடுமா வயல்நா கேச்சுர நகரே
இடமா வுறைவா யெனஇன் புறுமே. **#259**

திருமாலும், பிரமனும் அடிமுடி தேடலை மேற்கொள்ளச் சுடுகின்ற பெரிய தீப்பிழம்பாய் எழுந்து நின்ற ஒளி வடிவினனே, நாற்று நடத்தக்க பெரிய வயல்களைக் கொண்டுள்ள நாகேச்சுரத்துக் கோயிலை உனக்குரிய கோயிலாகக் கொண்டு உறைபவனே என்று போற்ற அவன் இன்புறுவான்.

திருநாகேச்சரம்

மலம்பா வியகை யொடுமண் டையதுண்
கலம்பா வியர்கட் டுரைவிட் டுலகில்
நலம்பா வியநா கேச்சுர நகருள்
சிலம்பா வெனத்தீ வினைதேய்ந் தறுமே. **10 #260**

அழுக்கேறிய கையினராய் உணவுகொள்ள மண்டை முதலான உண்கலங்களைப் பயன்படுத்தும் சமண, புத்தர்களின் பொய்மொழிகளை விடுத்து, உலகின்கண் நன்மைகள் வளர நாகேச்சுரக்கோயிலுள் எழுந்தருளிய கயிலை மலையானே! எனப் போற்றுவார் தீவினைகள் தேய்ந்து கெடும்.

திருநாகேச்சரம்

கலமார் கடல்சூழ் தருகா ழியர்கோன்
தலமார் தருசெந் தமிழின் விரகன்
நலமார் தருநா கேச்சுரத் தரனைச்
சொலமா லைகள்சொல் லநிலா வினையே. **11 #261**

மரக்கலங்கள் பல நிறைந்த கடல் சூழ்ந்த தலங்களில் சிறந்த காழிப்பதிக்குத் தலைவனும் செந்தமிழ் விரகனும் ஆகிய ஞானசம்பந்தன் நன்மைகள் நிறைந்த நாகேச்சுரத்து அரனைப் போற்றிச் சொன்ன பாமாலைகளாகிய இப்பதிகத்தை இசையுடன் ஓத வினைகள் நில்லா.

திருப்புகலி

சீர்காழி

திருப்புகலி,
பண் - இந்தளம், திருப்புகலி மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

உகலி யாழ்கட லோங்கு பாருளீர்
அகலி யாவினை யல்லல் போயறும்
இகலி யார்புர மெய்த வன்னுறை
புகலி யாம்நகர் போற்றி வாழ்மினே. **#262**

“தாவிச்செல்லும் அலைகளை உடைய ஆழ்ந்த கடலால் சூழப்பட்ட உலகின்கண் வாழ்பவர்களே, தன்னோடு மாறுபட்ட அசுரர்களின் முப்புரங்களை எய்தழித்த சிவபிரான் உறையும் புகலி என்ப்பெயர் பெற்ற சீகாழிப்பதியைப் போற்றி வழிபடுங்கள்”. வினைகள் பெருகாமல் ஒழியும். அல்லல் போகும்.

சீர்காழி

பண்ணி யாள்வதோ ரேற்றர் பான்மதிக்
கண்ணி யார்கமழ் கொன்றை சேர்முடிப்
புண்ணி யன்னுறை யும்பு கலியை
நண்ணு மின்னல மான வேண்டிலே. **#263**

நன்மைகள் பலவும் உங்களை அடைய வேண்டுமாயின், அலங்கரித்து ஊர்ந்து ஆளும் விடையை உடையவனும், பால் போன்ற வெண்மையான பிறை மதியைக் கண்ணியாகப் புனைந்தவனும், மணம் கமழும் கொன்றை மாலைசேர்ந்த முடியினனும் ஆகிய புண்ணிய மூர்த்தியாகிய சிவபிரான் உறையும் புகலியை அடைந்து வழிபடுங்கள்.

சீர்காழி

வீசு மின்புரை காதன் மேதகு
பாச வல்வினை தீர்த்த பண்பினன்
பூசு நீற்றினன் பூம்பு கலியைப்
பேசு மின்பெரி தின்ப மாகவே. **#264**

இன்பம் பெரிதாக விளையவேண்டின், ஒளிவீசும் மின்னல் போன்ற அணிபூண்ட காதினனும், பற்றுக்கள், வலிய வினைகள் ஆகியவற்றைப் போக்கிய மேதகு பண்பினனும், திருநீறு பூசியவனும் ஆகிய சிவபிரான்

எழுந்தருளிய புகலிப்பதியை அடைந்து அவனைப்புகழ்ந்து பேசுங்கள்.

சீர்காழி

கடிகொள் கூவிளம் மத்தம் வைத்தவன்
படிகொள் பாரிடம் பேசும் பான்மையன்
பொடிகொள் மேனியன் பூம்பு கலியுள்
அடிக ளையடைந் தன்பு செய்யுமே. **#265**

மணம் கமழும் வில்வம், ஊமத்தைமலர் ஆகியவற்றை முடிமிசைச் சூடியவனும், பெரிதான இவ் வுலகில் உள்ளோர் புகழ்ந்து போற்றும் தன்மையாளனும், திருநீற்றுப்பொடி பூசிய மேனியனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய அழகிய புகலிப்பதியை அடைந்து அங்கு மேவிய பெருமானிடம் அன்பு செய்யுங்கள்.

சீர்காழி

பாதத் தாரொலி பல்சி லம்பினன்
ஓதத் தார்விட முண்ட வன்படைப்
பூதத் தான்புக லிந்ந கர்தொழ
ஏதத் தார்க்கிட மில்லை யென்பரே. **#266**

பாதங்களில் பொருந்தி ஒலிக்கும் பல சிலம்புகளை அணிந்தவனும், பாற்கடலிற் பொருந்தி எழுந்த விடத்தை உண்டவனும், பூதப்படைகளை உடையவனும் ஆகிய சிவபிரானது புகலிப் பதியை அடைந்து தொழ, துன்பங்கள் வருவதற்கு இடம் இல்லை யாகும்.

சீர்காழி

மறையி னான்ஒலி மல்கு வீணையன்
நிறையி னார்நிமிர் புன்ச டையனெம்
பொறை யினானுறை யும்பு கலியை
நிறையி னால்தொழ நேச மாகுமே. **#267**

வேதங்களை அருளியவனும், ஒலி நிறைந்த வீணையை உடையவனும், பூரணனாய் நிமிர்த்துக் கட்டிய சிவந்த சடைமுடியை உடையவனும், எமது பொறுமையை மலராகக் கொள்பவனும், ஆகிய சிவபிரான் உறையும் புகலியையே குறிக்கொண்டு தொழ, அதுவே அன்பு வழிபாடாக அமையும்.

சீர்காழி

கரவி டைமனத் தாரைக் காண்கிலான்
இரவி டைப்பலி கொள்ளும் எம்மிறை
பொருவி டையுயர்த் தான்பு கலியைப்

பரவி டப்பயில் பாவம் பாறுமே. **#268**

வஞ்சகம் பொருந்திய மனத்தாரைக் காண விரும்பாதவனும், இரவில் பலியேற்கும் இயல்பினனும், எம் இறைவனும், போர் வல்ல விடைபொறித்த கொடியினனும் ஆகிய சிவபிரானது புகலியைப் பரவ நாம் செய்த பாவங்கள் அழியும்.

சீர்காழி

அருப்பி னார்முலை மங்கை பங்கினன்
விருப்பி னான்அரக் கன்னு ரஞ்செகும்
பொருப்பி னான்பொழி லார்பு கலியூர்
இருப்பி னானடி யேத்தி வாழ்த்துமே. **#269**

தாமரை அரும்பை ஒத்த தனங்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவனும், தன்மீது விருப்பினன் ஆயினும் செருக்குற்ற காரணத்தால் இராவணனது வலிமையை அடர்த்த கயிலைமலையினனும், பொழில் சூழ்ந்த புகலியூரைத்தன் இருப்பிடமாகக் கொண்டவனும் ஆகிய சிவபிரானுடைய திருவடிகளை ஏத்தி வாழ்த்துங்கள்.

சீர்காழி

மாலும் நான்முகன் தானும் வார்கழற்
சீல மும்முடி தேட நீண்டெரி
போலும் மேனியன் பூம்பு கலியுட்
பால தாடிய பண்பன் நல்லனே. **#270**

திருமால் நான்முகன் ஆகியோர் நீண்ட திருவடிப் பெருமையையும், திருமுடியையும் தேட எரி போலும் மேனியனாய் நீண்டவனும், அழகிய புகலியுள் பால் முதலியவற்றை ஆடி உறைபவனும் ஆகிய பண்பினன் நமக்கு நன்மைகள் செய்பவன்.

சீர்காழி

நின்று துய்ப்பவர் நீசர் தேரர்சொல்
ஒன்ற தாகவை யாஉ ணர்வினுள்
நின்ற வன்நிக ழும்பு கலியைச்
சென்று கைதொழச் செல்வ மாகுமே. **#271**

நின்று உண்பவராகிய இழிந்த சமணர்கள், தேரர்களாகிய பௌத்தர்கள் உரைகளை ஒருபொருளாகக் கொள்ளாத அன்பர்களின் உணர்வினுள் நிற்கும் சிவபிரான் எழுந்தருளிய புகலியைச் சென்று கைதொழச் செல்வங்கள் உளவாம்.

<u>சீர்காழி</u>

புல்லம் மேறிதன் பூம்பு கலியை
நல்ல ஞானசம் பந்தன் நாவினாற்
சொல்லு மாலையீ ரைந்தும் வல்லவர்க்
கில்லை யாம்வினை யிருநி லத்துளே. **#272**

விடைமீது ஏறி வருபவனாகிய சிவபிரானது அழகிய புகலியை நன்மை செய்யும் ஞானசம்பந்தன் தன் நாவினால் போற்றிச் சொல்லிய தமிழ் மாலையாகிய இப்பதிகப்பாடல்கள் பத்தையும் வல்லவர்க்கு அகன்ற இந்நிலவுலகத்தில் வினைகள் இல்லை.

திருநெல்வாயில்

திருநெல்வாயில்

திருநெல்வாயில்,
பண் - இந்தளம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அரத்துறைநாதர்.
தேவியார் : ஆனந்தநாயகியம்மை.

புடையி னார்புள்ளி கால்பொ ருந்திய
மடையி னார்மணி நீர்நெல் வாயிலார்
நடையி னால்விரற் கோவ ணந்நயந்
துடையி னாரெம துச்சி யாரே. **#273**

வயற்பக்கங்களில் நண்டுகளை உடையதும், வாய்க்கால்களை அடுத்துள்ள நீர்மடையில் நீலமணி போன்று தெளந்த நீரை உடையதுமான நெல்வாயில் இறைவர் ஒழுக்கத்திற்குக்காட்டாக நால்விரல் அளவுள்ள கோவண ஆடையை உடையவர். அவர் எம் முடிமேல் திகழும் மாண்பினர்.

திருநெல்வாயில்

வாங்கி னார்மதிண் மேற்க ணைவெள்ளந்
தாங்கி னார்தலை யாய தன்மையர்
நீங்கு நீரநெல் வாயி லார்தொழ
ஓங்கி னாரெம துச்சி யாரே. **#274**

முப்புரங்கள் மீது கணை தொடுக்க வில்லினை, வளைத்தவர். பெருகிவந்த கங்கைநீரைச் சடைமிசைத் தாங்கியவர். மேலான தன்மைகளை உடையவர். ஓடும் நீரினைஉடைய நெல்வாயில் என்னும் தலத்தினர். நாம் தொழுமாறு புகழால் ஓங்கி விளங்குபவர். அவர் எம்முடிமேல் விளங்கும் மாண்பினர்.

திருநெல்வாயில்

நிச்ச லேத்துநெல் வாயி லார்தொழ
இச்சை யாலுறை வாரெம் ஈசனார்
கச்சை யாவதோர் பாம்பி னார்கவின்
இச்சை யாரெம துச்சி யாரே. **#275**

நாள்தோறும் நாம் ஏத்தவும் தொழவும் நெல் வாயிலில் இச்சையோடு விளங்குபவர். எம் ஈசர். பாம்பைக் கச்சையாக அணிந்தவர். உயிர்கட்கு இச்சை உண்டாதற் பொருட்டு, தான் இச்சா சக்தியோடு விளங்குபவர்.

அவர் எம் உச்சியில் விளங்கும் மாண்பினர்.

திருநெல்வாயில்

மறையி னார்மழு வாளி னார்மல்கு
பிறையி னார்பிறை யோடி லங்கிய
நிறையி னாரநெல் வாயிலார் தொழும்
இறைவ னாரெம துச்சி யாரே. **#276**

வேதங்களை அருளியவர். மழுவாகிய வாளினை உடையவர். சடைமுடியில் பொருந்திய பிறையினை உடையவர். வானளாவ வளர்ந்து, நிறைந்து விளங்கும் நெற்பயிர் விளையும் வயல்களை வாயிலில் உடையதால், நெல்வாயில் எனப்பெற்ற தலத்தில் எழுந்தருளியிருப்பவர். நம்மால் தொழத்தகும் இறைவர். அவர் எமது முடிமிசைத் திகழ்பவர்.

திருநெல்வாயில்

விருத்த னாகிவெண் ணீறு பூசிய
கருத்த னார்கன லாட்டு கந்தவர்
நிருத்த னாரநெல் வாயின் மேவிய
ஒருத்த னாரெம துச்சி யாரே. **#277**

முதியவராய்த் திருவெண்ணீறு அணிந்துள்ள தலைவர். தீயில் ஆடுதலை உகந்தவர். நடனம் புரிபவர். நெல்வாயில் என்னும் தலத்தில் விளங்கும் ஒருவர் என்னும் பெயருக்கு உரியவர். அவர் எமது உச்சியில் விளங்குபவர்.

திருநெல்வாயில்

காரி னார்கொன்றைக் கண்ணி யார்மல்கு
பேரி னார்பிறை யோடி லங்கிய
நீரி னாரநெல் வாயி லார்தொழும்
ஏரி னாரெம துச்சி யாரே. **#278**

கார்காலத்தில் மலரும் கொன்றைமலரால் இயன்ற கண்ணியைச் சூடியவர். நிறைந்த புகழை உடையவர். பிறைசூடி விளங்கும் இயல்பினர். நெல் வாயிலில் உறைபவர். நாம் தொழத்தகும் அழகர். அவர் எமது உச்சியில் விளங்குபவர்.

திருநெல்வாயில்

ஆதி யாரந்த மாயி னார்வினை
கோதி யார்மதில் கூட்ட ழித்தவர்
நீதி யாரநெல் வாயி லார்மறை

ஓதி யாரெம துச்சி யாரே. **#279**

உலகிற்கு ஆதிஅந்தமாக விளங்குபவர். குரோதமான செயல்களைப் புரிந்த அசுரர்களின் மதில் கூட்டங்களை அழித்தவர். நீதியை உடையவர். நெல் வாயிலில் எழுந்தருளியிருப்பவர். மறைகளை ஓதியவர். அவர் எமது உச்சியில் உறைபவர்.

திருநெல்வாயில்

பற்றி னானரக் கன்க யிலையை
ஒற்றி னாரொரு கால்வி ரலுற
நெற்றி யாரநெல் வாயி லார்தொழும்
பெற்றி யாரெம துச்சி யாரே. **#280**

கயிலைமலையைப் பற்றி எடுத்த இராவணனை ஒருகால் விரலைப் பொருத்தி அவன் தலைகள் முழுவதும் அடர ஒற்றியவர். நெல்வாயிலில் விளங்குபவர். நாம் தொழும் தன்மையர். அவர் எமது உச்சியில் உறைபவர்.

திருநெல்வாயில்

நாடி னார்மணி வண்ண னான்முகன்
கூடி னார்குறு காத கொள்கையர்
நீடி னாரநெல் வாயி லார்தலை
ஓடி னாரெம துச்சி யாரே. **#281**

நீலமணி போன்ற நிறத்தினனாகிய திருமாலும், நான்முகனும் கூடித் தேடிக்குறுக முடியாத இயல்பினராய் எரி உருவொடு நீடியவர். நெல்வாயிலில் எழுந்தருளி யிருப்பவர். தலை ஓட்டைக் கையில் உடையவர். அவர் எமது உச்சியில் உறைபவர்.

திருநெல்வாயில்

குண்ட மண்டுவர்க் கூறை மூடர்சொற்
பண்ட மாகவை யாத பண்பினர்
விண்ட யங்குநெல் வாயி லார்நஞ்சை
உண்ட கண்டரெம் முச்சி யாரே **#282**

குண்டர்களாகிய சமணர்களும், துவர் ஏற்றிய ஆடையை அணிந்த மூடர்களாகிய புத்தர்களும் கூறும் சொற்களைப் பொருளாகக் கொள்ளாத பண்பினர். வானளாவ உயர்ந்துள்ள நெற்பயிர்கள் நிறைந்த நெல் வாயில் என்னும் தலத்தில் விளங்குபவர். அவர் எமது உச்சியார்.

திருநெல்வாயில்

நெண்ப யங்குநெல் வாயில் ஈசனைச்

சண்பை ஞானசம் பந்தன்சொல் லிவை
பண்ப யன்கொளப் பாட வல்லவர்
விண்ப யன்கொளும் வேட்கை யாளரே. **#283**

நெல்வாயில் என்னும் தலத்தில் நட்புக்கொண்டு விளங்கும் ஈசனை, சண்பைப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் பாடிய சால்மாலையாகியஇத்திருப்பதிகத்தைப் பண்ணின்பயன் கொள்ளுமாறு பாடி வழிபட வல்லவர், வீட்டுலக இன்பத்தை அடையும் வேட்கையினர் ஆவர்.

திருஇந்திரநீலப்பருப்பதம்

திருஇந்திரநீலப்பருப்பதம்

திருஇந்திரநீலப்பருப்பதம்,
பண் - இந்தளம்,
இத்தலம் வடதேசத்திலுள்ளது. ,
சுவாமிபெயர் : நீலாசலநாதர்.
தேவியார் : நீலாம்பிகையம்மை.

குலவு பாரிடம் போற்ற வீற்றிருந்
திலகு மான்மழு வேந்து மங்கையர்
நிலவு மிந்திர நீலப் பர்ப்பதத்
துலவி னானடி யுள்க நல்குமே. **#284**

விளங்கும் மான் மழுஏந்திய அகங்கையாளனாய்த் தன்னிடம் அன்பு செய்யும் பூதகணங்கள் போற்ற, விளங்கித் தோன்றும் இந்திர நீலப்பர்வதத்து வீற்றிருந்து உலாவுகின்ற சிவபிரான் தன் திருவடிகளை நினைவார்க்கு அருள் புரிவான்.

திருஇந்திரநீலப்பருப்பதம்

குறைவி லார்மதி சூடி யாடல்வண்
டறையு மாமலர்க் கொன்றை சென்னிசேர்
இறைவ னிந்திர நீலப் பர்ப்பதத்
துறைவி னான்றனை யோதி யுய்ம்மினே. **#285**

மேலும் குறைதல் இன்றி என்றும் ஒரு கலையாய் நிறைவுபெறும் பிறையை, வண்டுகள் இசைக்கும் சிறந்த கொன்றை மலர் சூடிய சென்னியில் சேர்த்துள்ள இறைவனும்,இந்திரநீலப் பருவதத்து உறைபவனுமாகிய சிவபிரானைப் போற்றி உய்யுங்கள்.

திருஇந்திரநீலப்பருப்பதம்

என்பொ னென்மணி யென்ன வேத்துவார்
நம்ப னான்மறை பாடு நாவினான்
இன்ப னிந்திர நீலப் பர்ப்பதத்
தன்பன் பாதமே யடைந்து வாழ்மினே. **#286**

என் பொன்னே என்மணியே என்று புகழ்ந்து போற்றுவாரை விரும்புபவன், நான்கு மறைகளையும் பாடும் நாவினை உடையவன், இன்பவடிவினன், இந்திரநீலப் பர்வதத்து அன்பு உடையவன் ஆகிய சிவபிரான் திருவடிகளையே சரணாக அடைந்து வாழுங்கள்.

திருஇந்திரநீலப்பருப்பதம்

நாச மாம்வினை நன்மை தான்வரும்
தேச மார்புக ழாய செம்மையெம்
ஈச னிந்திர நீலப் பர்ப்பதம்
கூசி வாழ்த்துதுங் குணம தாகவே. **#287**

நம் வினைகள் நாசமாகவும், நன்மைகளே வந்தெய்தவும், உலகளாவிய புகழுடைய செம்மையாளனாகிய எம் ஈசனும் இந்திரநீலப் பருவதத்து உறைவோனுமாகிய சிவபிரானை, நும் சிறுமையையும் அவன் பெருமையையும் எண்ணி நற்குணங்கள் பலவும் அமைய வாழ்த்துங்கள்.

திருஇந்திரநீலப்பருப்பதம்

மருவு மான்மட மாதொர் பாகமாய்ப்
பரவு வார்வினை தீர்த்த பண்பினான்
இரவ னிந்திர நீலப் பர்ப்பதத்
தருவி சூடிடு மடிகள் வண்ணமே. **#288**

இந்திர நீலப்பருவதத்து இறைவனது இயல்பு அருவிகளை மாலையாகச் சூடி மகிழ்வதோடு தன்னைமருவிய மான்போன்ற கண்ணளாகிய உமையம்மை ஒருபாகமாக விளங்க, தன்னைப் பரவுவார் வினைகளைப் போக்குவதாகும்.

திருஇந்திரநீலப்பருப்பதம்

வெண்ணி லாமதி சூடும் வேணியன்
எண்ணி லார்மதி லெய்த வில்லினன்
அண்ண லிந்திர நீலப் பர்ப்பதத்
துண்ணி லாவுறு மொருவ னல்லனே. **#289**

வெண்மையான நிலவைத் தரும் மதியைச் சூடும் சடையினனும் பகைவரின் திரிபுரங்களை அழித்த வில்லினனும், தலைமையாளனும் ஆகிய இறைவன், இந்திரநீலப்பருவதத்துள் விளங்கும் ஒருவன் அல்லனோ?.

திருஇந்திரநீலப்பருப்பதம்

கொடிகொள் ஏற்றினர் கூற்று தைத்தவர்
பொடிகொள் மேனியிற் பூண்ட பாம்பினர்
அடிகள் இந்திர நீலப் பர்ப்பதம்
உடைய வாண னுகந்த கொள்கையே. **#290**

கொடியில் கொண்ட விடையை உடையவர். எமனை உதைத்தவர். பொடியணிந்த மேனியில் பாம்பினை அணிந்தவர், தலைவர். இந்திரநீலப் பருவதத்துள் வாழும் இறைவனின்இயல்புகள் இவையாகும்.

திருஇந்திரநீலப்பருப்பதம்

எடுத்த வல்லரக் கன்க ரம்புயம்
அடர்த்த தோர்விர லானவ னையாட்
படுத்த னிந்திர நீலப் பர்ப்பதம்
முடித்த லம்முற முயலு மின்பமே. **#291**

கயிலை மலையை எடுத்த இராவணனின் கைகள் தோள்கள் ஆகியவற்றை அடர்த்த விரலால் அவ்விராவணனை ஆட்படுத்தியவன் உறையும் இந்திர நீலப்பருவதத்தை முடிகளால் வணங்க இன்பம் எளிதின் வாய்க்கும்.

திருஇந்திரநீலப்பருப்பதம்

பூவி னானொடு மாலும் போற்றுறும்
தேவ னிந்திர நீலப் பர்ப் பதம்
பாவி யாவெழு வாரைத் தம்வினை
கோவி யாவருங் கொல்லுங் கூற்றமே. **#292**

தாமரை மலரில் எழுந்தருளிய பிரமனோடு திருமால் போற்றி வணங்கும் தேவனாகிய இந்திரநீலப் பருவதத்துள் உறையும் இறைவனை நினையாதவரை வினைகள் சினக்கும். கூற்றம்கொல்லும்.

திருஇந்திரநீலப்பருப்பதம்

கட்டர் குண்டமண் டேரர் சீரிலர்
விட்ட ரிந்திர நீலப் பர்ப்பதம்
எட்ட னைநினை யாத தென்கொலோ
சிட்ட தாயுறை யாதி சீர்களே. **#293**

கட்டானவும் பருமையானவுமான உடலினராகிய சமண புத்தர்கள் சிறப்பற்றவர். நம்மால் விட்டொழியத் தக்கவர். அவர்களை விடுத்து இந்தி லப் பருவதத்து உறையும் மேலான ஆதியின் சீர்களை எள்ளளவும் நினையாதிருப்பது ஏனோ?.

திருஇந்திரநீலப்பருப்பதம்

கந்த மார்பொழில் சூழ்ந்த காழியான்
இந்தி ரன்றொழு நீலப் பர்ப்பதத்
தந்த மில்லியை யேத்து ஞானசம்
பந்தன் பாடல்கொண் டோதி வாழ்மினே. **#294**

மணம் கமழும் பொழில் சூழ்ந்த காழிப் பதியானாகிய ஞானசம்பந்தன் இந்திரனால் வழிபடப் பெற்ற நீலமலையில் விளங்கும் அந்தம் இல்லாத பெருமானை ஏத்திய பாடல்களை ஓதி வழிபட்டு வாழுங்கள்.

திருக்கருவூரானிலை

திருக்கருவூரானிலை

திருக்கருவூரானிலை,
பண் - இந்தளம்,
இத்தலம் கொங்குநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பசுபதீசுவரர்.
தேவியார் : கிருபாநாயகியம்மை.

தொண்டெ லாமலர் தூவி யேத்தநஞ்
சுண்ட லாருயி ராய தன்மையர்
கண்ட னார்கரு வூரு ளானிலை
அண்ட னாரரு ளீயு மன்பரே. **#295**

தொண்டர்கள் மலர் தூவி ஏத்த நஞ்சினை உண்டவரும், அரிய உயிர் போன்றவரும், கற்கண்டு போல் இனிப்பவருமாய இறைவர், கருவூர் ஆனிலையில் விளங்கும் தேவராவார். அருள் வழங்கும் அன்புடையவர் அவர்.

திருக்கருவூரானிலை

நீதி யார்நினைந் தாய நான்மறை
ஓதி யாரொடுங் கூட லார்குழைக்
காதி னார்கரு வூரு ளானிலை
ஆதி யாரடி யார்த மன்பரே. **#296**

நீதியின் வடிவானவர். நினைந்து ஆராயத்தக்கதாய நான்கு மறைகளை ஓதும் அந்தணர்களோடு கூடியவர். குழை அணிந்த திருச்செவியர். கருவூர் ஆனிலையில் விளங்கும் முதல்வர். அடியார் களுக்கு அன்பர்.

திருக்கருவூரானிலை

விண்ணு லாமதி சூடி வேதமே
பண்ணு ளார்பர மாய பண்பினர்
கண்ணு ளார்கரு வூரு ளானிலை
அண்ண லாரடி யார்க்கு நல்லரே. **#297**

வானத்தில் உலாவும் மதியைச் சூடியவர். வேத இசையாக விளங்குபவர். மேலான பண்பினர். கூத்தர். கருவூர் ஆனிலையில் விளங்கும் தலைவர். அடியவர்கட்கு நல்லவர்.

திருக்கருவூரானிலை

முடியர் மும்மத யானை யீருரி

பொடியர் பூங்கணை வேளைச் செற்றவர்
கடியுளார் கரு வூரு ளானிலை
அடிகள் யாவையு மாய ஈசரே. **#298**

சடைமுடியை உடையவர். மும்மதங்களை உடைய யானையை உரித்தவர். வெண்பொடி பூசியவர். மன்மதனைச் செற்ற வர். சிறப்புடையவர். கருவூர் ஆனிலையில் விளங்கும் தலைவர். அவர் எல்லாமாய் விளங்கும் ஈசராவார்.

திருக்கருவூரானிலை

பங்க யம்மலர்ப் பாதர் பாதியோர்
மங்கை யர்மணி நீல கண்டர்வான்
கங்கை யார்கரு வூரு ளானிலை
அங்கை யாடர வத்தெம் மண்ணலே. **#299**

தாமரை போன்ற திருவடியர். தம் திருமேனியில் பாதியாக உமையம்மையைக் கொண்டவர். நீல மணி போன்ற கண்டத்தினர். ஆகாய கங்கையைத் தாங்கியவர். அழகிய கைகளின் மேல் ஆடும் பாம்பை உடையவர், அவர் கருவூர் ஆனிலையில் விளங்கும் தலைவராவார்.

திருக்கருவூரானிலை

தேவர் திங்களும் பாம்புஞ் சென்னியின்
மேவர் மும்மதி லெய்த வில்லியர்
காவ லர்கரு வூரு ளானிலை
மூவ ராகிய மொய்ம்ப ரல்லரே. **#300**

தேவர்கட்கு எல்லாம் தேவர். திங்கள், பாம்பு ஆகியவற்றை முடிமேல் சூடியவர். மும்மதில்களை எய்த வில்லை உடையவர். எல்லோரையும் காப்பவர். கருவூர் ஆனிலையில் விளங்கும் இவர் அயன், அரி, அரன் ஆகிய மும்மூர்த்திகளுக்கும் சக்தி வழங்கியவர் அல்லரோ?.

திருக்கருவூரானிலை

பண்ணி னார்படி யேற்றர் நீற்றர்மெய்ப்
பெண்ணி னார்பிறை தாங்கு நெற்றியர்
கண்ணி னார்கரு வூரு ளானிலை
நண்ணி னார்நமை யாளு நாதரே. **#301**

பண்களின் வடிவாய் இருப்பவர். படிந்து ஏறுதற்கு உரிய விடையூர்தியர. நீறணிந்தவர். திருமேனியில் உமை அம்மையைக் கொண்டுள்ளவர். பிறை சூடிய திருமுடியர். நெற்றியில் கண்ணுடையவர். கருவூர் ஆனிலையில் எழுந்தருளியிருப்பவர். நம்மை ஆளும் நாதர் அவர்.

திருக்கருவூரானிலை

கடுத்த வாளரக் கன்க யிலையை
எடுத்த வன்றலை தோளுந் தாளினால்
அடர்த்த வன்கரு வூரு ளானிலை
கொடுத்த வன்னருள் கூத்த னல்லனே. **#302**

வாளோடு சினந்து வந்து கயிலையைப் பெயர்த்த இராவணனின் தலை தோள் ஆகியவற்றைத் தாளினால் அடர்த்தவன். பின் அவனுக்கு அருள் கொடுத்தவன். கூத்தன். அவன் கருவூர் ஆனிலையில் விளங்கும் பெரியவன்.

திருக்கருவூரானிலை

உழுது மாநிலத் தேன மாகிமால்
தொழுது மாமல ரோனுங் காண்கிலார்
கழுதி னான்கரு வூரு ளானிலை
முழுது மாகிய மூர்த்தி பாதமே. **#303**

எல்லாமாய் விளங்கும் இறைவனின் பாதங்களைப் பன்றி வடிவெடுத்துப் பெரிய நிலத்தை உழுது சென்று முயன்ற திருமால், பிரமன் ஆகியோர் தொழுதும் காண்கிலர். அத்தகைய பெருமான் கருவூர் ஆனிலையில் நாம் எளிதின் வணங்க எழுந்தருளியுள்ளான்.

திருக்கருவூரானிலை

புத்தர் புன்சம ணாதர் பொய்யுரைப்
பித்தர் பேசிய பேச்சை விட்டுமெய்ப்
பத்தர் சேர்கரு வூரு ளானிலை
அத்தர் பாத மடைந்து வாழ்மினே. **#304**

புத்தர்களும் புன்மையான அறிவற்ற பொய்யுரைகளைக் கூறும் பித்தர்களாகிய சமணர்களும் பேசும் பேச்சுக்களை விட்டு உண்மையான பக்தர்கள் சேரும் கருவூர் ஆனிலையில் விளங்கும் மேலான இறைவனின் திருவடிகளை அடைந்து வாழுங்கள்.

திருக்கருவூரானிலை

கந்த மார்பொழிற் காழி ஞானசம்
பந்தன் சேர்கரு வூரு ளானிலை
எந்தை யைச்சொன்ன பத்தும் வல்லவர்
சிந்தை யிற்றுய ராய தீர்வரே. **#305**

மணம் பொருந்திய பொழில்கள் சூழ்ந்த சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் கருவூர் ஆனிலையை அடைந்து எம் தந்தையாகிய

இறைவன் மேல் பாடிய இப்பதிகப்பாடல் பத்தையும் ஓத வல்லவர் மனத்துயர் தீர்வர்.

திருப்புகலி

சீர்காழி

திருப்புகலி,
பண் - இந்தளம், திருப்புகலி மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

முன்னிய கலைப்பொருளு மூவுலகில் வாழ்வும்
பன்னிய வொருத்தர்பழ வூர்வினவின் ஞாலந்
துன்னியிமை யோர்கள்துதி செய்துமுன் வணங்குஞ்
சென்னியர் விருப்புறு திருப்புகலி யாமே. **#306**

பொருந்திய கலைகளின் பொருளையும் மூவுலக வாழ்வையும் உயிர்கட்கு ஆராய்ந்து அளித்துக் காக்கும் ஒருவராக விளங்கும் சிவபிரானின் பழமையான ஊர் யாதென வினவின், தேவர்கள் மண்ணுலகை அடைந்து துதி செய்து வணங்கும் சென்னியில் உள்ளவராகும் இறைவர் எழுந்தருளிய திருப்புகலி என்னும் தலமாகும்.

சீர்காழி

வண்டிரை மதிச்சடை மிலைத்தபுனல் சூடிப்
பண்டெரிகை யாடுபர மன்பதிய தென்பர்
புண்டரிக வாசமது வீசமலர்ச் சோலைத்
தெண்டிரை கடற்பொலி திருப்புகலி யாமே. **#307**

வளமையான அலைகளோடு கூடிய கங்கையை மதி சூடிய சடையின்மேல் தாங்கிப் பழமையான தீயைக் கையின்கண் ஏந்தி ஆடும் பரமனது பதி தாமரை மலரின் மணம் வீசப் பெறுவதும் சோலைகள் சூழ்ந்ததும், தெளந்த அலைகளை உடைய கடலில் தோணியாக மிதந்து பொலிந்ததும் ஆகிய திருப்புகலியாகும்.

சீர்காழி

பாவணவு சிந்தையவர் பத்தரொடு கூடி
நாவணவு மந்தணன் விருப்பிடம தென்பர்
பூவணவு சோலையிருண் மாலையெதிர் கூரத்
தேவண விழாவளர் திருப்புகலி யாமே. **#308**

இறைவன் புகழான பாடல்கள் பாடும் சிந்தையை உடையவர்கள், பத்தர்களோடு கூடிப்பரவ, அவர்தம் நாவில் உறையும் அந்தணனாக விளங்கும் பெருமானுக்கு விருப்பமான இடம், பூக்கள் நிறைந்த

சோலையில் இருளைத்தரும் மாலைப்போதுவர தெய்வத்தொடர்பான விழாக்கள் நிகழும் திருப்புகலி எனக்கூறுவர்.

சீர்காழி

மைதவழு மாமிடறன் மாநடம தாடி
கைவளையி னாளொடு கலந்தபதி யென்பர்
செய்பணி பெருத்தெழு முருத்திரர்கள் கூடித்
தெய்வம திணக்குறு திருப்புகலி யாமே. **#309**

கருமை நிறம் பொருந்திய மிடற்றினை உடைய சிவபிரான் மகிழ்ச்சியால் சிறந்த நடனங்கள் ஆடி, கைகளில் வளையல் அணிந்த உமையம்மையோடு கலந்துறையும் பதி, உருத்திரர்கள் பெரிதான இறைத்தொண்டுகளைப்புரிந்து பெருமானோடு இணங்கி நிற்கும் திருப்புகலியாகும்.

சீர்காழி

முன்னமிரு மூன்றுசம யங்களவை யாகிப்
பின்னையருள் செய்தபிறை யாளனுறை கோயில்
புன்னைய மலர்ப்பொழில்க ளக்கினொளி காட்டச்
செந்நெல்வய லார்தரு திருப்புகலி யாமே. **#310**

முன்னமே அறுவகைச் சமயங்களாய் விளங்கி அவரவரும் மேற்கொண்ட கொள்கைகளுக்கு ஏற்ப அருள் செய்த பிறையாளன் உறையும் கோயில், சங்குகள் ஒளிவிடும் புன்னைமலர்ச் சோலைகளை உடையதும் செந்நெல்விளையும் வயல்கள் பொருந்தியதுமான திருப்புகலியாகும்.

சீர்காழி

வங்கமலி யுங்கடல் விடத்தினை நுகர்ந்த
அங்கண னருத்திசெய் திருக்குமிட மென்பர்
கொங்கண வியன்பொழிலின் மாசுபனி மூசத்
தெங்கணவு தேன்மலி திருப்புகலி யாமே. **#311**

மரக்கலங்கள் நிறைந்து தோன்றும் திருப்பாற்கடலில் தோன்றிய விடத்தினை உண்ட அழகிய கருணையாளன் ஆகிய சிவபிரான் மிகவிரும்பி இருக்கும் இடம், மணம் நிறையுமாறு பனிபடர்ந்த மாசுடன் விளங்கும் பொழில்களை உடையதும் இனிய தென்னைமரங்கள் சூழ்ந்ததுமான திருப்புகலியாகும்.

சீர்காழி

நல்குரவு மின்பமும் நலங்களவை யாகி
வல்வினைகள் தீர்த்தருளு மைந்தனிட மென்பர்

பல்குமடி யார்கள்படி யாரவிசை பாடிச்
செல்வமறை யோருறை திருப்புகலி யாமே. **#312**
வறுமை இன்பவாழ்வு நலங்கள் ஆகியன வற்றைத் தருபவராய்த் தம்மை வழிபடுவாரின் வலிய வினைகளைத் தீர்த்தருளும் பெருவீரராய் விளங்கும் பெருமானாருடைய இடம், பெருகிய அடியார்கள் நிலமிசை இசைபாடி வாழ்த்துவதும், செல்வம் நிரம்பிய மறையவர்கள் நிறைந்துள்ளதுமான திருப்புகலியாகும்.

<u>சீர்காழி</u>

பரப்புறு புகழ்ப்பெருமை யாளன்வரை தன்னால்
அரக்கனை யடர்த்தருளு மண்ணலிட மென்பர்
நெருக்குறு கடற்றிரைகண் முத்தமணி சிந்தச்
செருக்குறு பொழிற்பொலி திருப்புகலி யாமே. **#313**
பரவியபுகழாளரும், கயிலைமலையால் இராவணனை அடர்த்தருளிய தலைவருமான சிவபெருமானது இடம், நெருங்கிவரும் கடல் அலைகள் முத்துக்களையும் மணிகளையும் சிந்துதலால் பெருமை பெற்ற பொழில்கள் பொலியும் திருப்புகலிப் பதியாகும்.

<u>சீர்காழி</u>

கோடலொடு கூன்மதி குலாயசடை தன்மேல்
ஆடரவம் வைத்தருளு மப்பனிரு வர்க்கும்
நேடவெரி யாகியிரு பாலுமடி பேணித்
தேடவுறை யுந்நகர் திருப்புகலி யாமே. **#314**
காந்தள் மலர்களோடு வளைந்த பிறைமதி குலாவும் சடையின்மேல் ஆடும் பாம்பினையும் வைத்தருளிய தலைவரும், திரு மால், பிரமர் தேட எரியுருவமாய்த் தோன்றி அவர்கள்கீழும், மேலும் அடி முடிகளைத் தேட நின்ற வருமான சிவபிரான் உறையும் நகர் திருப்புகலியாகும்.

<u>சீர்காழி</u>

கற்றமண ருற்றுலவு தேரருரை செய்த
குற்றமொழி கொள்கைய திலாதபெரு மானூர்
பொற் றொடிமடந்தையரும் மைந்தர்புல னைந்துஞ்
செற்றவர் விருப்புறு திருப்புகலி யாமே. **#315**
கல்வி கற்ற அமணர்களும், நூலறிவில் தேர்ந்துலவும் புத்தர்களும் மெய்ப்பொருள் அறியாது கூறும் குற்றம் பொருந்திய கொள்கைகளை ஏலாதவனது ஊர், பொன்னால் இயன்ற வளையல்களை அணிந்த மகளிரும் மைந்தர்களும், ஐம்புலன்களையும் வென்றஞானியரும் விரும்பும் திருப்புகலியாகும்.

<u>சீர்காழி</u>

செந்தமிழ் பரப்புறு திருப்புகலி தன்மேல்
அந்தமுத லாகிநடு வாயபெரு மானைப்
பந்தனுரை செய்தமிழ்கள் பத்துமிசை கூர
வந்தவண மேத்துமவர் வானமுடை யாரே. **#316**

செந்தமிழ் மொழிபரவி வளரும் திருப் புகலியில் எழுந்தருளிய ஆதி, அந்தம், நடு எனப்படும் மூவகையாகவும் விளங்கும் பெருமான்மீது, ஞானசம்பந்தன் உரைத்தருளிய இத்திருப்பதிகப் பாடல்களைக் கொண்டு இசையோடு இயலும் வகையில் பாடிப் பரவுவார், வீடு பேற்றுக்கு உரியவர் ஆவர்.

திருப்புறம்பயம்

திருப்புறம்பயம்

திருப்புறம்பயம்,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சாட்சிவரதநாதர்.
தேவியார் : கரும்பன்னசொல்லம்மை.

மறம்பய மலைந்தவர் மதிற்பரி சறுத்தனை
நிறம்பசுமை செம்மையொ டிசைந்துனது நீர்மை
திறம்பய னுறும்பொரு டெரிந்துணரு நால்வர்க்
கறம்பய னுரைத்தனை புறம்பயம் அமர்ந்தோய். **#317**

புறம்பயம் அமர்ந்தவனே! வீரமும் பயமும் கொண்டு தன்னோடு போர்மலைந்த அசுரர்களின் முப்புரங்களின் வலிமையை அறுத்தாய். உனது தன்மை பசுமை நிறமும் செம்மையும் கலந்தது. ஆகமங்களின் பயனாகச் சொல்லத்தக்க பொருளைத் தெரிந்துணர விரும்பிய முனிவர் நால்வர்க்கு அறமாகிய பயனை உணர்த்தியருளினாய்.

திருப்புறம்பயம்

விரித்தனை திருச்சடை யரித்தொழுகு வெள்ளம்
தரித்தனை யதன்றியு மிகப்பெரிய காலன்
எருத்திற வுதைத்தனை யிலங்கிழையொர் பாகம்
பொருத்துதல் கருத்தினை புறம்பயம் அமர்ந்தோய். **#318**

புறம்பயத்தில் எழுந்தருளியவனே! சடையை விரித்து பெருகி வந்த கங்கை வெள்ளத்தைத் தாங்கினாய்; அஃதன்றியும் மிகப்பெரிய காலனின் பிடரி வருந்துமாறு உதைத்தாய். விளங்கும் அணிகலன் பூண்ட உமையம்மையை மேனியின் ஒரு பாகமாகப் பொருத்தி யுள்ளாய்.

திருப்புறம்பயம்

விரிந்தனை குவிந்தனை விழுங்குயி ருமிழ்ந்தனை
திரிந்தனை குருந்தொசி பெருந்தகையு நீயும்
பிரிந்தனை புணர்ந்தனை பிணம்புகு மயானம்
புரிந்தனை மகிழ்ந்தனை புறம்பயம் அமர்ந்தோய். **#319**

புறம்பயம் அமர்ந்த பெருமானே! எல்லாமாக விரிந்து நின்றாய்; நுண்ணியனாகக் குவிந்துள்ளாய்; ஊழிக் காலத்தில் விழுங்கிய உயிர்களை வினைப்போகத்திற்காக மீண்டும் உடலோடு உலவவிட்டாய்; உன் நிலையை விடுத்துப் பல்வகை வடிவங்கள்

எடுத்துத் திரிந்தாய். குருந்தொசித்த திருமால் மோகினியாக வர அவரோடு கூடிப் பிரிந்தும் புணர்ந்தும் விளையாடினாய்; பிணம்புகும் சுடுகாட்டை விரும்பிமகிழ்ந்தாய்.

திருப்புறம்பயம்

வளங்கெழு கடும்புன லொடுஞ்சடை யொடுங்கத்
துளங்கம ரிளம்பிறை சுமந்தது விளங்க
உளங்கொள வளைந்தவர் சுடுஞ்சுடலை நீறு
புளங்கொள விளங்கினை புறம்பயம் அமர்ந்தோய். **#320**

புறம்பயம் அமர்ந்த பெருமானே! வளமை பொருந்தியதாய்க் கடுமையாகப் பெருகி வந்த கங்கையொடு கூடிய சடையசைய விளங்கும் இளம்பிறையை கலங்கத்தாங்கி மனம் நெகிழ்ந்து வணங்கும் அடியவர்க்குச் சுடுகாட்டில் விளைந்த நீற்றொடு தோன்றும் உன் கோலத்தை அறிவிற் காட்டி விளங்குகின்றாய்.

திருப்புறம்பயம்

பெரும்பிணி பிறப்பினொ டிறப்பிலையொர் பாகம்
கரும்பொடு படுஞ்சொலின் மடந்தையை மகிழ்ந்தோய்
சுரும்புண வரும்பவிழ் திருந்தியெழு கொன்றை
விரும்பினை புறம்பயம் அமர்ந்தவிறை யோனே. **#321**

புறம்பயம் அமர்ந்த இறைவனே! நீ பெரிதாகப் பற்றிய நோய், பிறப்பு இறப்பு, இல்லாதவன். கரும்படு சொல்லி என்னும் பெயருடைய உமையம்மையுடன் மகிழ்ந்தவன். வண்டுகள் தேனுண்ண அதனால் அழகுற அவிழும் கொன்றைமலர்களை விரும்பியவன்.

திருப்புறம்பயம்

அனற்படு தடக்கையவ ரெத்தொழில ரேனும்
நினைப்புடை மனத்தவர் வினைப் பகையும் நீயே தனற்படு
சுடர்ச்சடை தனிப்பிறையொ டொன்றப்
புனற்படு கிடக்கையை புறம்பயம் அமர்ந்தோய். **#322**

புறம்பயம் அமர்ந்த பெருமானே! தீ வளர்க்கும் நீண்டகையை உடைய அந்தணர்கள் உன்னை நினையும் மனத்தவ ராயின் அவர் எத்தொழிலை மேற்கொண்டவர் ஆயினும் அவர்தம் தீவினைகட்குப் பகையாயிருந்து தீர்ப்பவன்நீ. தீக் கொழுந்து போன்ற ஒளி பொருந்திய சடையில் தனித்த பிறையோடு பொருந்தக் கங்கை கிடக்குமாறு செய்துள்ளவன், நீ.

திருப்புறம்பயம்

மறத்துறை மறுத்தவர் தவத்தடிய ருள்ளம்

அறத்துறை யொறுத்துன தருட்கிழமை பெற்றோர்
திறத்துள திறத்தினை மதித்தகல நின்றும்
புறத்துள திறத்தினை புறம்பயம் அமர்ந்தோய். **#323**
புறம்பயம் அமர்ந்தோய்! பாவமான செயல்களை விரும்பாத தவத்தைப்புரியும் அடியவர் உள்ளங்களில் அறநெறிப் பயனையும் அடைய விரும்பாத வாறு அதனைக் கடிந்து, உன் அருள் உரிமையைப் பெற்றோர் திறத்தினுக்கு ஏற்ப அருள் வழங்கும் தன்மையனாய் வேறாய் நின்றும் அருள் புரிபவன் நீ.

<u>திருப்புறம்பயம்</u>

இலங்கைய ரிறைஞ்சிறை விலங்கலின் முழங்க
உலங்கெழு தடக்கைக ளடர்த்திடலு மஞ்சி
வலங்கொள வெழுந்தவ னலங்கவின வஞ்சு
புலங்களை விலங்கினை புறம்பயம் அமர்ந்தோய். **#324**
புறம்பயம் அமர்ந்தவனே! இலங்கை மக்கள் வணங்கும் தலைவனாகிய இராவணன் மலையின் கீழ் அகப்பட்டு முழங்க அவன் வலிய தலைகளோடு கைகளை அடர்த்து அவன் அஞ்சிப் போற்ற வாளும், நாளும் அளித்து அவனுக்கு வெற்றி உண்டாக அருள் புரிந்தவன் நீ. நன்மைகள் உண்டாக ஐந்து புலன்களை வென்றவன் நீ.

<u>திருப்புறம்பயம்</u>

வடங்கெட நுடங்குண விடந்தவிடை யல்லிக்
கிடந்தவ னிருந்தவ னளந்துணர லாகார்
தொடர்ந்தவ ருடம்பொடு நிமிர்ந்துடன் வணங்கப்
புடங்கருள்செய் தொன்றினை புறம்பயம மர்ந்தோய். **#325**
புறம்பயம் அமர்ந்தவனே! ஆல் இலையில் துயின்ற திருமாலும் அவனது கொப்பூழாகிய தாமரையில் இருந்துதோன்றிய பிரமனும் உன்னை அளந்தறிய இயலாத வரா(யி)னார். பின் அவர்கள் தொடர்ந்து பழைய உருவோடு வணங்க அவர்கட்கு கருடப்புள், அன்னப்புள் ஆகியவற்றை ஊர்தியாகக் கொண்டு படைத்தல், காத்தல் ஆகிய தொழில்களைச் செய்யுமாறு அருள்புரிந்தாய்.

<u>திருப்புறம்பயம்</u>

விடக்கொருவர் நன்றெென விடக்கொருவர் தீதென
உடற்குடை களைந்தவ ருடம்பினை மறைக்கும்
படக்கர்கள் பிடக்குரை படுத்துமை யொர்பாகம்
அடக்கினைபுறம்பய மமர்ந்தவுர வோனே. **#326**
புறம்பயம் அமர்ந்த வலியவனே! ஊன் உண்டல் நன்றென்று கூறும்

தேரர்கள், தீதென்று கூறும் சமணர்கள், உடலில் உடையின்றித் திரியும் திகம்பரர்கள் உடலைப் போர்த்தித் திரியும் புத்தர்கள் ஆகியோர் கூறும் பிடகநூல் முதலியவற்றின் உரைகளைக் கொள்ளாது உமை யம்மையை ஒரு பாகமாகக் கொண்டு விளங்குகின்றாய்.

திருப்புறம்பயம்

கருங்கழி பொருந்திரை கரைக்குலவு முத்தம்
தருங்கழு மலத்திறை தமிழ்க்கிழமை ஞானன்
சுரும்பவிழ் புறம்பய மமர்ந்ததமிழ் வல்லார்
பெரும்பிணி மருங்கற வொருங்குவர் பிறப்பே. **#327**

கரிய உப்பங்கழிகள், பெரிய அலைகளால், விளங்கும் முத்துக்களைததந்து உலவும் கழுமலத்தார்க்குத் தலைவனும் தமிழுக்கு உரிமை பூண்டவனுமாகிய ஞான சம்பந்தன், வண்டுகள் ஒலி செய்யும் புறம்பயம் அமர்ந்த பிரானை விரும்பிப் பாடிய இப்பதிகத்தமிழை வல்லவர்கள் காலங்காலமாக வரும் பெரும் பிணியாகிய பிறப்பு நீங்கப் பெறுவர்.

திருக்கருப்பறியலூர்

திருக்கருப்பறியலூர்

திருக்கருப்பறியலூர்,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : குற்றம்பொறுத்தநாதர்.
தேவியார் : கோல்வளையம்மை.

சுற்றமொடு பற்றவை துயக்கற வறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடுமடி யார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக்
கற்றவ னிருப்பது கருப்பறிய லூரே. **#328**

சுற்றம், பற்று ஆகியவற்றை முற்றிலும் அறுத்துக் குற்றமற்ற நல்ல குணங்களோடு கூடி விளங்கும் அடியவர்களைத் தேவர்கள் வாழும் வானுலகம் ஏற்றலைச் செய்யும் சிவபிரான் இருக்குமிடம் கருப்பறியலூர்.

திருக்கருப்பறியலூர்

வண்டணைசெய் கொன்றையது வார்சடைகண்மேலே
கொண்டணைசெய் கோலமது கோளரவி னோடும்
விண்டணைசெய் மும்மதிலும் வீழ்தரவொ ரம்பால்
கண்டவ னிருப்பது கருப்பறிய லூரே. **#329**

வண்டுகள் அணைதலைச் செய்கின்ற கொன்ய நீண்ட சடைமுடிமீது அணிந்து, துன்பம் செய்யும் பாம்பு அணைதலைச் செய்யும் கோலம் பூண்டவராய், மும்மதில்களும் உடைந்து நிலத்தினை அடையுமாறு ஓரம்பால் எய்தழித்தவர் இருப்பது கருப்பறியலூர்.

திருக்கருப்பறியலூர்

வேதமொடு வேதியர்கள் வேள்விமுத லாகப்
போதினொடு போதுமலர் கொண்டுபுனை கின்ற
நாதனென நள்ளிருண்மு னாடுகுழை தாழும்
காதவ னிருப்பது கருப்பறிய லூரே. **#330**

வேதியர்கள் வேதங்களை ஓதுவதோடு வேள்வி முதலியனவற்றைச் செய்து, காலம் பெற அரும்புகளையும் மலர்களையும் சாத்தி வழிபடும் தலைவராக நள்ளிருளில் அசைகின்ற குழைதாழ ஆடும் காதினை உடையவராகிய சிவபிரான் இருப்பது கருப்பறியலூர்.

திருக்கருப்பறியலூர்

மடம்படு மலைக்கிறைவன் மங்கையொரு பங்கன்
உடம்பினை விடக்கருதி நின்றமறை யோனைத்
தொடர்ந்தணவு காலனுயிர் காலவொரு காலால்
கடந்தவ னிருப்பது கருப்பறிய லூரே. **#331**

மலையரசனின் மகளாகிய மடப்பம் பொருந்திய மையொருபாகனும், உடலைவிட்டு உயிர் செல்லும் காலம் வருவதை அறிந்து தொழுது நின்ற மார்க்கண்டேயன் உயிரைக் கவர வந்த காலனின் உயிர் நீங்குமாறு தனது ஒரு காலினால் உதைத்தவனும் ஆகிய பெருமான் வீற்றிருக்கும் தலம் கருப்பறியலூர்.

திருக்கருப்பறியலூர்

ஒருத்தியுமை யோடுமொரு பாகமது வாய
நிருத்தனவ னீதியவ னித்தனெறி யாய
விருத்தனவன் வேதமென வங்கமவை யோதும்
கருத்தவ னிருப்பது கருப்பறிய லூரே. **#332**

ஒருபாகமாக ஒப்பற்றவளாகிய உமையம்மையோடு கூடி விளங்கும் கூத்தனும், நீதியின் வடிவானவனும், அழியாதவனும், நெறிகாட்டும் முதியோனும், வேதங்கள், ஆறு அங்கங்கள் ஆகியவற்றை ஓதும் தலைவனும் ஆகிய சிவபிரான் விளங்குவது கருப்பறியலூர்.

திருக்கருப்பறியலூர்

விண்ணவர்கள் வெற்பரசு பெற்றமகண் மெய்த்தேன்
பண்ணமரு மென்மொழியி னாளையணை விப்பான்
எண்ணிவரு காமனுடல் வேவவெரி காலும்
கண்ணவ னிருப்பது கருப்பறிய லூரே. **#333**

இமவான் பெற்ற மகளும், தேன்சுவை, பண்ணிசை ஆகியன போன்ற மொழியினாளும் ஆகிய உமையம்மையை, சிவபிரானது திருமேனியோடு சேர்ப்பிக்குமாறு விண்ணவர்கள் ஏவ வந்த காமனது உடல் வெந்தழியுமாறு எரிகாலும் நெற்றிக்கண்ணை உடைய சிவபிரான் எழுந்தருளியிருப்பது கருப்பறியலூர்.

திருக்கருப்பறியலூர்

ஆதியடி யைப்பணிய வப்பொடு மலர்ச்சேர்
சோதியொளி நற்புகை வளர்க்குவடு புக்குத்
தீதுசெய வந்தணையு மந்தக னரங்கக்
காதின னிருப்பது கருப்பறிய லூரே. **#334**

உலகின் ஆதியாய் விளங்கும் தன்னை வழிபட நீர், மலர், ஒளிதரும் விளக்கு, நறுமணப்புகை ஆகியவற்றுடன் கட்டுமலையாய் உயரமாக

அமைந்த ஆலயத்தை அடைந்து வழிபட்ட மார்க்கண்டேயனின் உயிரைக் கவர வந்தணைந்த காலன் அழியுமாறு உதைத்த சிவபிரான் எழுந்தருளியிருப்பது கருப்பறியலூர்.

திருக்கருப்பறியலூர்

வாய்ந்தபுகழ் விண்ணவரு மண்ணவரு மஞ்சப்
பாய்ந்தமர்செ யுந்தொழிலி லங்கைநகர் வேந்தற்
கேய்ந்தபுய மத்தனையு மிற்றுவிழ மேனாள்
காய்ந்தவ னிருப்பது கருப்பறிய லூரே. **#335**

புகழ் வாய்ந்த தேவர்களும் மக்களும் அஞ்சுமாறு ஓடிச் சென்று போர் உடற்றும் தொழிலினை உடைய இலங்கை மன்னனுக்கு அமைந்த இருபது தோள்களும் ஒடிந்து விழுமாறு முன்னாளில் சினந்தவனாகிய சிவபிரான் வீற்றிருப்பது கருப்பறியலூர்.

திருக்கருப்பறியலூர்

பரந்தது நிரந்துவரு பாய்திரைய கங்கை
கரந்தொர்சடை மேன்மிசை யுகந்தவளை வைத்து
நிரந்தர நிரந்திருவர் நேடியறி யாமல்
கரந்தவ னிருப்பது கருப்பறிய லூரே. **#336**

வரிசையாகப் பரவிப் பெருகி வந்த அலைவீசும் கங்கை சுவறுமாறு ஒருசடைமேல் ஏற்று அந்நதித் தெய்வமாகிய கங்கையை மகிழ்வுடன் முடிமிசை வைத்து, திருமால் பிரமர் தேடிஅறியாதவாறு எப்போதும்அவர்களால் அறியப்பெறாதவனாய் ஒளித்திருக்கும் சிவபிரான்எழுந்தருளியிருக்கும் ஊர் கருப்பறியலூர்.

திருக்கருப்பறியலூர்

அற்றமறை யாவமண ராதமிலி புத்தர்
சொற்றமறி யாதவர்கள் சொன்னசொலை விட்டுக்
குற்றமறி யாதபெரு மான்கொகுடிக் கோயில்
கற்றென விருப்பது கருப்பறிய லூரே. **#337**

மறைக்கவேண்டிய உறுப்பை மறையாது ஆடையின்றித் திரியும் சமணர்களும், அறிவற்ற புத்தர்களும் சொல்லும் திறன் அறியாதவர்கள்.அவர்கள் சொல்லை விடுத்துக் குற்றம் அறியாத பெருமான் கொகுடிக் கோயிலையே உறுதியானதாகக் கருதி எழுந்தருளிய ஊர் கருப்பறியலூர்.

திருக்கருப்பறியலூர்

நலந்தரு புனற்புகலி ஞானசம்பந்தன்

கலந்தவர் கருப்பறியன் மேயகட வுள்ளைப்
பலந்தரு தமிழ்க்கிளவி பத்துமிவை கற்று
வலந்தரு மவர்க்குவினை வாடலெள தாமே. **#338**

நன்மைகளைத்தரும் நீர் வளம் மிக்க புகலிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன், தன்னோடு உடன் கலந்தவனாய கருப்பறியலில் மேவிய கடவுளைப்பாடிய பயன்தரும் தமிழ்ச் செய்யுளாகிய இப்பதிகப்பாடல்கள் பத்தையும் கற்று வன்மை உற்றோர்க்கு வினைகள் வாடுதல் எளிதாம்.

திருவையாறு

திருஐயாறு

திருவையாறு,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.
தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை.

திருத்திகழ் மலைச்சிறுமி யோடுமிகு தேசர்
உருத்திக ழெழிற்கயிலை வெற்பிலுறை தற்கே
விருப்புடைய வற்புதரி ருக்குமிட மேரார்
மருத்திகழ் பொழிற்குலவு வண்டிருவை யாறே. **#339**

அழகிய மலைமகளோடு மிக்க ஒளிவடிவினராய சிவபிரான் வெண்மை உருவுடைய அழகிய கயிலைமலையில் உறைவதற்கு விருப்புடைய மேன்மையர். அவர் இருக்குமிடம் மணம் கமழும் பொழில் சூழ்ந்ததும் வண்மையாளர் வாழ்வதுமாய திருவையாறாகும்.

திருஐயாறு

கந்தமர வுந்துபுகை யுந்தலில் விளக்கேர்
இந்திரனு ணர்ந்துபணி யெந்தையிட மெங்கும்
சந்தமலி யுந்தருமி டைந்தபொழில் சார
வந்தவளி நந்தணவு வண்டிருவை யாறே. **#340**

பற்றுக் கோடாக விளங்கும் சிவபிரானைப் பொருந்துமாறு புகை இல்லாத விளக்கொளி போன்ற அச்செம்பொற்சோதியை இந்திரன் உணர்ந்து வழிபடும் இடம் எங்கும் அழகு விளங்கும் மரம் நிறைந்த பொழிலைச் சார்ந்து வரும் குளிர்ந்த காற்று தங்கிக் கலந்துள்ளதும் வள்ளன்மையோர் வாழ்வதுமான திருவையாறு ஆகும்.

திருஐயாறு

கட்டுவட மெட்டுமுறு வட்டமுழ வத்தில்
கொட்டுகர மிட்டவொலி தட்டும்வகை நந்திக்
கிட்டமிக நட்டமவை யிட்டவ ரிடஞ்சீர்
வட்டமதி லுட்டிகழும் வண்டிருவை யாறே. **#341**

எட்டு வடங்களால் கட்டப்பட்ட வட்டமான முழவத்தை நந்திதேவர் தம் கரங்களால் கொட்ட, அம்முழவொலிக்கும் தாளச்சதிக்கும் ஏற்ப அவர்க்குப் பெருவிருப்பம் உண்டாகுமாறு நடனமாடிய சிவபிரானது இடம், அழகிய வட்டமான மதில்களுள் விளங்குவதும்,

வள்ளன்மையோர் வாழ்வதுமான திருவையாறு ஆகும்.

திருஐயாறு

நண்ணியொர் வடத்தினிழல் நால்வர்முனி வர்க்கன்
றெண்ணிலி மறைப்பொருள்விரித்தவ ரிடஞ்சீர்த்
தண்ணின்மலி சந்தகிலொ டுந்திவரு பொன்னி
மண்ணின்மிசை வந்தணவு வண்டிருவை யாறே. **#342**

கல்லால மரநிழலை அடைந்து சனகாதியர் நால்வருக்கு அக்காலத்தில் வேதப் பொருளை விரித்துரைத்த சிவபிரானது 110 இடம்; குளிர்ந்த சந்தனம், அகில் ஆகிய மரங்களை அடித்து வருகின்ற பொன்னியாற்றின் கரையின்மேல் வந்து பொருந்தியதும் வள்ளன்மையோர் வாழ்வதுமான திருவையாறு ஆகும்.

திருஐயாறு

வென்றிமிகு தாருகன தாருயிர் மடங்கக்
கன்றிவரு கோபமிகு காளிகத மோவ
நின்றுநட மாடியிட நீடுமலர் மேலால்
மன்றன்மலி யும்பொழில்கொள் வண்டிருவை யாறே. **#343**

வெற்றிகள் பல பெற்ற தாருகன் உயிர் போகுமாறு சினந்து அவனை அழித்த கோபம்மிக்க காளிதேவியின் சினம் அடங்க அவளோடு நடனமாடிய சிவபிரானது இடம், பெரிய மலர்மணம் நிறையும் பொழில்களைக் கொண்டுள்ளதும், வள்ளன்மையயோர் வாழ்வதுமான திருவையாறு ஆகும்.

திருஐயாறு

பூதமொடு பேய்கள்பல பாடநட மாடிப்
பாதமுதல் பையரவு கொண்டணி பெறுத்திக்
கோதைய ரிடும்பலி கொளும்பர னிடம்பூ
மாதவி மணங்கமழும் வண்டிருவை யாறே. **#344**

பூதங்களும் பேய்களும் பாட நடனமாடி அடி முதல் முடிவரை பாம்புகளை அழகுடன் பூண்டு மகளிர் இடும் பலியைக் கொள்ளும் சிவபிரானது இடம், குருக்கத்திச் செடிகளின் மணம் கமழ்வதும் வள்ளன்மையுடையோர் வாழ்வதுமான திருவையாறு ஆகும்.

திருஐயாறு

துன்னுகுழன் மங்கையுமை நங்கைசுளி வெய்தப்
பின்னொரு தவஞ்செய்துழல் பிஞ்ஞகனு மங்கே
என்னசதி யென்றுரைசெ யங்கணனி டஞ்சீர்

மன்னுகொடை யாளர்பயில் வண்டிருவை யாறே. **#345**
செறிந்த கூந்தலையுடைய உமைமங்கை சினம் கொள்ளுமாறு பின்னும் ஒரு தவத்தைச் செய்ய, 'உமையே! நீ சினம் கொள்ளக் காரணம் யாதென' வினவி, அவளை மணந்துறையும் கருணை நிரம்பிய கண்களை உடைய சிவபிரானது இடம், வள்ளன்மை நிரம்பிய கொடையாளர் வாழும் திருவையாறு ஆகும்.

திருஐயாறு

இரக்கமில்கு ணத்தொடுல கெங்குநலி வெம்போர்
அரக்கன்முடி யத்தலை புயத்தொடும டங்கத்
துரக்கவிர லிற்சிறிது வைத்தவரி டஞ்சீர்
வரக்கருணை யாளர்பயில் வண்டிருவை யாறே. **#346**

இரக்கமற்ற குணத்தோடு உலகெங்கும் வாழ்வோரை நலிவு செய்யும் கொடிய போரைச் செய்துவந்த இராவணனின் தலைகள், தோள்கள் ஆகியன அழியுமாறு கால்விரலால் செற்ற சிவபிரானது இடம் புகழ் உண்டாகுமாறு பொருள் வழங்கும் கருணையாளர் வாழும் திருவையாறு ஆகும்.

திருஐயாறு

பருத்துருவ தாகிவிண் அடைந்தவனொர் பன்றிப்
பெருத்துருவ தாயுல கிடந்தவனு மென்றும்
கருத்துரு வொணாவகை நிமிர்ந்தவனி டங்கார்
வருத்துவகை தீர்கொள்பொழில் வண்டிருவை யாறே. **#347**

பருந்து உருவமாய் விண்ணிற்சென்று தேடிய பிரமன், பெரிய பன்றி உருவமாய் நிலத்தை அகழ்ந்து சென்று அடிமுடி தேடிய திருமால் ஆகியோர் மனங்கட்கு எட்டாதவாறு ஓங்கி உயர்ந்து நின்ற சிவபிரானது இடம், வெம்மையைப் போக்கும் பொழில்கள் சூழ்ந்ததும் வள்ளன்மை உடையோர் வாழ்வதுமான திருவையாறு ஆகும்.

திருஐயாறு

பாக்கியம தொன்றுமில் சமண்பதகர் புத்தர்
சாக்கியர்க ளென்றுடல் பொதிந்துதிரி வார்தம்
நோக்கரிய தத்துவ னிடம்படியின் மேலால்
மாக்கமுற நீடுபொழில் வண்டிருவை யாறே. **#348**

நல்லூழ் இல்லாத சமண் பாதகர்கள், புத்தராகிய சாக்கியர்கள் என்று உடலைப் போர்த்தித் திரிவோரின் பார்வைக்கு அகப்படாத மெய்ப்பொருளாகிய சிவபிரானது இடம் உலகில் நீண்டு வளர்ந்த சோலைகள் சூழ்ந்ததும், வள்ளன்மையோர் வாழ்வதுமான திருவையாறு

ஆகும்.

திருஜயாறு

வாசமலி யும்பொழில்கொள் வண்டிருவை யாற்றுள்
ஈசனை யெழிற்புகலி மன்னவன்மெய்ஞ் ஞானப்
பூசுரன் உரைத்ததமிழ் பத்துமிவை வல்லார்
நேசமலி பத்தரவர் நின்மலன் அடிக்கே. **#349**

மணம் நிறைந்த பொழில்களைக் கொண்டுள்ள வளமான திருவையாற்றுள் எழுந்தருளிய சிவபிரானை, அழகிய புகலி மன்னனும், உண்மை ஞானம் பெற்ற அந்தணனும் ஆகிய ஞான சம்பந்தன் போற்றி உரைத்த இப்பதிகப்பாடல்கள் பத்தையும் வல்லவர், சிவபிரான் திருவடிக்கண் மிக்க அன்புடையவராவர்.

திருநள்ளாறு

திருநள்ளாறு

திருநள்ளாறு,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ள சப்த தியாகர் தலங்களிலொன்று. ,
சுவாமிபெயர் : தெர்ப்பாரணியர்.
தேவியார் : போகமார்த்தபூண்முலையம்மை.

ஏடுமலி கொன்றையர விந்துவிள வன்னி
மாடவல செஞ்சடையெ மைந்தனிட மென்பர்
கோடுமலி ஞாழல்குர வேறுசுர புன்னை
நாடுமலி வாசமது வீசியநள் ளாறே. **#350**

இதழ்கள் நிறைந்த கொன்றைமலர், பாம்பு, திங்கள், வன்னிஇலை ஆகியவற்றை அணிந்த செஞ்சடையை உடைய சிவபிரானது இடம் கிளைகளோடு கூடிய ஞாழல், குரவு. சுரபுன்னை முதலிய மரங்களின் மணம் வீசும் திருநள்ளாறு ஆகும்.

திருநள்ளாறு

விண்ணியல் பிறைப்பிள வறைப்புனன் முடித்த
புண்ணிய னிருக்குமிட மென்பர்புவி தன்மேல்
பண்ணிய நடத்தொடிசை பாடுமடி யார்கள்
நண்ணிய மனத்தின்வழி பாடுசெய்நள் ளாறே. **#351**

வானில் இயங்கும் பிறைமதியோடு கங்கையையும் முடியில் சூடிய புண்ணியனாகிய சிவபிரான் இருக்குமிடம், உலகில் ஆடிப்பாடி அடியவர்கள் மனம் பொருந்த வழிபாடு செய்யும் திருநள்ளாறு ஆகும்.

திருநள்ளாறு

விளங்கிழை மடந்தைமலை மங்கையொரு பாகத்
துளங்கொள விருத்திய வொருத்தனிட மென்பர்
வளங்கெழுவு தீபமொடு தூபமலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழி பாடுசெய்நள் ளாறே. **#352**

விளங்கும் அணிகலன்களைப் பூண்டுள்ள மலைமங்கையைமேனியின் ஒருபாகமாக இருத்தியுள்ள ஒப்பற்றவனாகிய சிவபிரான் இருக்கும் இடம், நளன் வந்து தங்கி நாள்தோறும் தூபதீபங்களுடன் மலர்தூவி வழிபட்டுக் கலி நீங்கப்பெற்ற திருநள்ளாறு ஆகும்.

திருநள்ளாறு

கொக்கரவர் கூன்மதியர் கோபர்திரு மேனிச்
செக்கரவர் சேருமிட மென்பர்தட மூழ்கிப்
புக்கரவர் விஞ்சையரும் விண்ணவரு நண்ணி
நக்கரவர் நாமநினை வெய்தியநள் ளாறே. **#353**
திருக்குளத்தில் மூழ்கி நாகலோகத்தவரும், வித்யாதரர்களும்,
தேவர்களும், திகம்பரராய சிவபெருமான்திருவைந்தெழுத்தை நினைந்து
வழிபடும் திருநள்ளாறு, கொக்கிற்கு அணிந்தவர். வளைந்த
பிறைமதியைச் சூடியவர், கோபம் உடையவர், சிவந்த திருமேனியர்
ஆகிய சிவபெருமான் சேரும் இடம், என்பர்.

திருநள்ளாறு

நெஞ்சமிது கண்டுகொ ளுனக்கென நினைந்தார்
வஞ்சம தறுத்தருளு மற்றவனை வானோர்
அஞ்சமுது காகியவர் கைதொழ வெழுந்த
நஞ்சமுது செய்தவனி ருப்பிடநள் ளாறே. **#354**
மனமே! இதுவே நீ உய்தற்குரிய நெறி எனத் தம் மனத்துக்கு அறிவுறுத்தி
நினைந்தவர்களின் குற்றங்களைப் போக்கி யருள் பவரும், தேவர்கள்
கடலிடைத் தோன்றிய நஞ்சைக் கண்டு அஞ்சி, புறமுதுகிட்டு ஓடிவந்து,
தன்னை வந்து கைதொழுத அளவில், அந்நஞ்சினை அமுதாக
உண்டவரும் ஆகிய சிவபிரானது இருப்பிடம் திருநள்ளாறு.

திருநள்ளாறு

பாலனடி பேணவவ னாருயிர் குறைக்குங்
காலனுடன் மாளமு னுதைத்தவர னூராம்
கோலமலர் நீர்க்குட மெடுத்துமறை யாளர்
நாலின்வழி நின்றுதொழில் பேணியநள் ளாறே. **#355**
மார்க்கண்டேயர் தம் திருவடிகளை வணங்கும் வேளையில் அவர்
உயிரைக் கவர்தற்கு வந்த காலன் உடனே மாளுமாறு உதைத்தருளிய
சிவபிரானது ஊர். மறையவர் அழகிய மலர்கள், நீர் நிரம்பிய குடங்கள்
ஆகியவற்றை எடுத்து வந்து நால்வேத நெறிநின்று நீராட்டி, அருச்சித்து
வழிபடும் திருநள்ளாறு ஆகும்.

திருநள்ளாறு

நீதியர் நெடுந்தகையர் நீண்மலையர் பாவை
பாதியர் பராபரர் பரம்பர ரிருக்கை
வேதியர்கள் வேள்வியொழி யாதுமறை நாளும்
ஓதியர னாமமு முணர்த்திடுநள் ளாறே. **#356**
நீதி வடிவினர். மேலான குணங்களை உடையவர். புகழ் விரிந்த

கயிலைமலைக்கு உரியவர். உமையொரு கூறர். மேலானவர். அவரது இருப்பிடம் அந்தணர்கள் நாள்தோறும் வேள்வி செய்து வேதங்களை ஓதித் திருவைந்தெழுத்தின் சிறப்பை உணர்த்தி வரும் திருநள்ளாறு ஆகும்.

திருநள்ளாறு

கடுத்துவ லரக்கன்மு னெருக்கிவரை தன்னை
எடுத்தவன் முடித்தலைகள் பத்துமிகு தோளும்
அடர்த்தவர் தமக்கிடம தென்பர்அளிபாட
நடத்தகல வைத்திரள்கள் வைகியநள் ளாறே. **#357**

சினந்து வந்த கயிலைமலையை அடைந்து அதனை எடுத்தவனாகிய வலிய இராவணனின் முடியணிந்த தலைகள் பத்தையும், வலிமிகுந்த இருபது தோள்களையும் அடர்த்தவனாகிய சிவபிரானது இடம். வண்டுகள் இசைபாட மக்கள் நடைமுறையில் பயன்படுத்தும் மணப் பொருள்களின் மணம் நிறைந்த திருநள்ளாறு ஆகும்.

திருநள்ளாறு

உயர்ந்தவ னுருக்கொடு திரிந்துலக மெல்லாம்
பயந்தவ னினைப்பரிய பண்பனிட மென்பர்
வியந்தமரர் மெச்சமலர் மல்குபொழி லெங்கும்
நயந்தரும வேதவொலி யார்திருநள் ளாறே. **#358**

உயர்ந்த உருவம் கொண்டு திரிந்த திருமால், உலகங்கள் அனைத்தையும் படைத்த பிரமன் ஆகியோர் நினைப்பதற்கும் அரிய பண்புகளை உடைய சிவபிரானது இடம் தேவர்கள் வியந்து போற்ற மலர்கள் நிறைந்த பொழில்கள் சூழ்ந்து விளங்குவதும் எல்லா இடங்களிலும் அறநெறியின் வடிவான வேதங்களின் ஒலி நிறைந்துள்ளதுமான திருநள்ளாறு என்பர்.

திருநள்ளாறு

சிந்தைதிரு கற்சமணர் தேரர்தவ மென்னும்
பந்தனை யறுத்தருள நின்றபர மன்னூர்
மந்தமுழ வந்தரு விழாவொலியும் வேதச்
சந்தம்விர விப்பொழின் முழங்கியநள் ளாறே. **#359**

மனம் மாறுபட்ட சமணர் தேரர்கள் செய்யும் தவம் என்னும் கட்டுப்பாடுகளை விலக்கி, தன்னை வழிபடும் அன்பர்க்கு அருள்புரிய நின்ற பரமனது ஊர், மந்த இசையொடு முழவம் முழங்கும்விழாக்களின் ஒலியும், வேதவொலியும் கலந்து நிறைந்து பொழிலில் முழங்கும் திருநள்ளாறு ஆகும்.

திருநள்ளாறு

ஆடலர வார்சடைய னாயிழைதன் னோடும்
நாடுமலி வெய்திட விருந்தவனள் ளாற்றை
மாடமலி காழிவளர் பந்தனது செஞ்சொல்
பாடலுடை யாரையடை யாபழிகள் நோயே. **#360**

ஆடுகின்ற அரவினை அணிந்த சடையினனாகிய சிவபிரான் உமையம்மையோடு உலகம் மகிழ்ச்சியால் நிறையுமாறு எழுந்தருளியுள்ள திருநள்ளாற்றை, மாடவீடுகள் நிறைந்த சீகாழியில் வாழும் ஞானசம்பந்தன் பாடிய செஞ்சொற்களாலியன்ற இப்பதிகப் பாடல்களைப் பாடி வழிபடுபவரைப் பழிகளும் நோய்களும் அடையா.

திருப்பழுவூர்

திருப்பழுவூர்

திருப்பழுவூர்,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வடவனநாதர்.
தேவியார் : அருந்தவநாயகியம்மை.

முத்தன்மிகு மூவிலைநல் வேலன்விரி நூலன்
அத்தனெமை யாளுடைய வண்ணலிட மென்பர்
மைத்தழை பெரும்பொழிலின் வாசமது வீசப்
பத்தரொடு சித்தர்பயில் கின்றபழு வூரே. **#361**

இயல்பாகவே பாசங்களில் நீங்கியவன், மூவிலை வடிவானவேலை உடையவன், விரிந்த வேதங்களை அருளியவன். தலைவன் எம்மை ஆளாக உடைய முதல்வன். அவனது இடம் கரிய தழைகளை உடைய பெரிய பொழிலின் மணம் கமழ்வதும், பத்தர் சித்தர் பயில்வதுமான பழுவூர் என்பர்.

திருப்பழுவூர்

கோடலொடு கோங்கவை குலாவுமுடி தன்மேல்
ஆடரவம் வைத்தபெரு மானதிட மென்பர்
மாடமலி சூளிகையி லேறிமட வார்கள்
பாடலொலி செய்யமலி கின்றபழு வூரே. **#362**

வெண்காந்தள் மலரும் கோங்கமலரும் சூடிய, முடிமேல் ஆடும் அரவினையும் அணிந்துள்ள, பெருமானின் இடம், பெண்கள் மாடங்களின் உச்சியில் ஏறிப்பாடும் ஒலி நிறைந்துள்ள பழுவூர் என்பர்.

திருப்பழுவூர்

வாலிய புரத்திலவர் வேவவிழி செய்த
போலிய வொருத்தர்புரி நூலரிட மென்பர்
வேலியின் விரைக்கமல மன்னமுக மாதர்
பாலென மிழற்றிநட மாடுபழு வூரே. **#363**

பெரிய முப்புரங்களைத் தமது இல்லமாகக் கொண்ட அவுணர் வெந்தழியுமாறு கண் விழித்த கோலத்தைக் கொண்ட ஒப்பற்றவரும், முப்புரி நூலணிந்தவருமான சிவபெருமானது இடம், வயல்களில் முளைத்த தாமரைமலர் போன்ற முகத்தினராய மகளிர் பால் போல இனிய சொற்களால் பாடல் பாடி நடம் புரியும் பழுவூர் என்பர்.

திருப்பழுவூர்

எண்ணுமொ ரெழுத்துமிசை யின்கிளவி தேர்வார்
கண்ணுமுத லாயகட வுட்கிடம தென்பர்
மண்ணின்மிசை யாடிமலை யாளர்தொழு தேத்திப்
பண்ணினொலி கொண்டுபயில் கின்ற பழுவூரே. **#364**

எண், எழுத்து, இசை இவற்றை ஆராய்வளர் கருதும் முதற்பொருளாய கடவுளின் இடம், மலையாள அந்தணர் உலகில் பாடியாடித் தொழுது ஏத்திப்பாடி வழிபடும் பழுவூர் என்பர்.

திருப்பழுவூர்

சாதல்புரி வார்சுடலை தன்னில்நட மாடும்
நாதனமை யாளுடைய நம்பனிட மென்பர்
வேதமொழி சொல்லிமறை யாளரிறை வன்றன்
பாதமவை யோதநிகழ் கின்றபழு வூரே. **#365**

இறந்தவர்களை எரிக்கும் சுடலையில் நடனமாடும் நாதனும் நம்மை ஆளாக உடைய நம்பனும் ஆகிய சிவபெருமானது இடம் மறையாளர் வேதங்களை ஓதி இறைவனின் திருவடிப் பெருமைகளைப்பாடும் பழுவூர் என்பர்.

திருப்பழுவூர்

மேவயரு மும்மதிலும் வெந்தழல் விளைத்து
மாவயர வன்றுரிசெய் மைந்தனிட மென்பர்
பூவையை மடந்தையர்கள் கொண்டுபுகழ் சொல்லிப்
பாவையர்கள் கற்பொடு பொலிந்தபழு வூரே. **#366**

தங்கள் மீது மேவுதலால் துயர் செய்வனவாகிய மும்மதில்களையும் வெந்தழலால் அழித்தும், யானையை அயருமாறு செய்து அதன் தோலை உரித்துப் போர்த்தும் வீரம் விளைவித்த சிவபிரானது இடம், நாகண வாய்ப் பறவைக்கு இறைவன் புகழைக் கற்பித்துப் பேச வைக்கும் பெண்கள் கற்பொடு விளங்கும் பழுவூர் என்பர்.

திருப்பழுவூர்

மந்தண மிருந்துபுரி மாமடிதன் வேள்வி
சிந்தவிளை யாடுசிவ லோகனிட மென்பர்
அந்தணர்க ளாகுதியி லிட்டவகின் மட்டார்
பைந்தொடிநன் மாதர்சுவ டொற்றுபழு வூரே. **#367**

இரகசிய ஆலோசனைகளுடன் மாமனாகிய தக்கன் செய்த வேள்வி அழியுமாறு செய்த சிவபெருமானது இடம், அந்தணர்கள் செய்த

வேள்விகளால் அகிலின் மணம் கமழ்வதும் அணிகலன்கள் அணிந்த அழகிய பெண்களின் காலடிச் சுவடுகள் உடையதுமான பழூவூர் என்பர்.

திருப்பழுவூர்

உரக்கடல் விடத்தினை மிடற்றிலுற வைத்தன்
றரக்கனை யடர்த்தருளு மப்பனிட மென்பர்
குரக்கினம் விரைப்பொழிலின் மீதுகனி யுண்டு
பரக்குறு புனற்செய்விளை யாடுபழு வூரே. **#368**

வலிய கடலிடை எழுந்த நஞ்சினை மிடற்றிடை வைத்துள்ளவனும், அக்காலத்தில் இராவணனை அடர்த்து அருள் செய்த தந்தையும் ஆகிய சிவபிரானது இடம், குரங்குகள் மணமுடைய பொழிலின் மீது ஏறிக் கனிவகைகளை உண்டு நீர் பரவிய வயல்களில் விளையாடும் பழுவூர் என்பர்.

திருப்பழுவூர்

நின்றநெடு மாலுமொரு நான்முகனும் நேட
அன்றுதழ லாய்நிமிரு மாதியிட மென்பர்
ஒன்றுமிரு மூன்றுமொரு நாலுமுணர் வார்கள்
மன்றினி லிருந்துடன் மகிழ்ந்தபழு வூரே. **#369**

உயர்ந்து நின்ற திருமாலும் நான்முகனும் தேடுமாறு அன்று அழலுருவாய் ஓங்கி நிமிர்ந்த தலைவனது இடம், சிவபரம் பொருளாகிய ஒருவனையும், நால்வேதங்களையும் ஆறு அங்கங் களையும் உணர்ந்தவர்கள் பொது இடங்களிலிருந்து மகிழ்ந்துறையும் ஊராகிய பழுவூர் என்பர்.

திருப்பழுவூர்

மொட்டையம ணாதர்துகின் மூடுவிரி தேரர்
முட்டைகண் மொழிந்தமுனி வான்றனிட மென்பர்
மட்டைமலி தாழையிள நீரதிசை பூகம்
பட்டையொடு தாறுவிரி கின்றபழு வூரே. **#370**

முண்டிதமான தலையை உடைய அமணர்களாகிய அறிவிலிகளும் ஆடையைவிரித்து உடலைப் போர்த்த தேரர்களும் ஆகிய குற்ற முடையோர் கூறுவனவற்றை ஏலாத இறைவனது இடம், மட்டைகள் நிறைந்த தென்னையினது இளநீர்களும் கமுக மரங்களின் பாக்குப் பட்டைகளோடு கூடிய பாக்குக் குலைகளும் நிறைந்த பழுவூர் என்பர்.

திருப்பழுவூர்

அந்தணர்க ளானமலை யாளரவ ரேத்தும்

பந்தமலி கின்றபழு வூரரனை யாரச்
சந்தமிகு ஞானமுணர் பந்தனுரை பேணி
வந்தவண மேத்துமவர் வானமுடை யாரே. **#371**

மலையாள அந்தணர்கள் ஏத்தும் அருளுறவு நிறைந்த பழுவூர் இறைவனை ஞானசம்பந்தன் மனம் ஆரச் சந்த இசையால் பாடிய இப்பாடல்களை விரும்பித் தமக்கு இயன்ற இசையோடு ஏத்தித் தொழுபவர் சிவலோகம் பெறுவர்.

திருக்குரங்காடுதுறை

திருக்குரங்காடுதுறை

திருக்குரங்காடுதுறை,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : குலைவணங்குநாதர்.
தேவியார் : அழகுசடைமுடியம்மை.

பரவக் கெடும்வல் வினைபா ரிடஞ்சூழ
இரவிற் புறங்காட் டிடைநின் றெரியாடி
அரவச் சடையந் தணன்மே யவழகார்
குரவப் பொழில்சூழ் குரங்கா டுதுறையே. **#372**

பூதகணங்கள் சூழ இரவில் சுடுகாட்டில் நின்று எரி ஆடுபவனும், அரவணிந்த சடையினை உடைய அந்தணனும் ஆகிய சிவபிரானது குராமரப் பொழில் சூழ்ந்த குரங்காடுதுறையைப் பரவ வலிய வினைகள் கெட்டொழியும்.

திருக்குரங்காடுதுறை

விண்டார் புரமூன்று மெரித்த விமலன்
இண்டார் புறங்காட் டிடைநின்றெரி யாடி
வண்டார் கருமென் குழன்மங் கையொர்பாகம்
கொண்டா னகர்போல் குரங்கா டுதுறையே. **#373**

தன்னோடு பகை பூண்டவராகிய அசுரர்களின் முப்புரங்களையும் எரித்தழித்த விமலனும், இண்டங்கொடிகள் படர்ந்த சுடுகாட்டில் நின்று எரியாடுபவனும், வண்டுகள் மொய்க்கும் மெல்லிய கூந்தலை உடையவளாகிய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டவனுமாகிய சிவபிரானது நகர் குரங்காடுதுறை.

திருக்குரங்காடுதுறை

நிறைவில் புறங்காட்டிடைநே ரிழையோடும்
இறைவில் லெரியான் மழுவேந் திநின்றாடி
மறையின் னொலிவா னவர்தா னவரேத்தும்
குறைவில் லவனூர் குரங்கா டுதுறையே. **#374**

நிறைதல் இல்லாத சுடுகாட்டுள் நின்று அழிவற்ற எரியைக் கையில் உடையவனாய் மழு ஏந்தி உமையம்மையோடு ஆடுபவனும், வேத ஒலியால் தேவர், அசுரர் ஆகியோரால் தொழப்படும் குறைவற்றவனும் ஆகிய சிவபிரானது ஊர், குரங்காடுதுறை.

திருக்குரங்காடுதுறை

விழிக்குந் நுதன்மே லொருவெண் பிறைசூடித்
தெழிக்கும் புறங்காட் டிடைச்சேர்ந் தெரியாடிப்
பழிக்கும் பரிசே பலிதேர்ந் தவனூர்பொன்
கொழிக்கும் புனல்சூழ் குரங்கா டுதுறையே. **#375**

விழியை உடைய நெற்றியின்மேல் தலையின் முன்பாகத்தில் பிறைசூடி, ஒலிக்கும் சுடுகாட்டை அடைந்து எரியாடி, எல்லோரும் பழித்துரைக்கப் பலியேற்றுத்திரியும் சிவபிரானது ஊர் பொன் கொழிக்கும் காவிரி நீரால் சூழப்பட்ட குரங்காடுதுறையாகும்.

திருக்குரங்காடுதுறை

நீறார் தருமே னியனெற் றியொர்கண்ணன்
ஏறார் கொடியெம் மிறையீண் டெரியாடி
ஆறார் சடையந் தணனா யிழையாளோர்
கூறா னகர்போல் குரங்கா டுதுறையே. **#376**

நீறு பூசிய மேனியன். நெற்றிக் கண்ணன். விடைக்கொடியை உடைய எம் தலைவன் மிகுதியான தீயில் நின்று ஆடுபவன். கங்கை சூடிய சடையினை உடைய கருணையாளன். உமையொருபாகன். அவனது நகர் குரங்காடுதுறை.

திருக்குரங்காடுதுறை

நளிரும் மலர்க்கொன் றையுநா றுகரந்தைத்
துளிருஞ் சுலவிச் சுடுகாட் டெரியாடி மிளிரும்
மரவார்த் தவன்மே வியகோயில் குளிரும்
புனல்சூழ் குரங்கா டுதுறையே. **#377**

குளிர்ந்த கொன்றைமலர், மணம் வீசும் சிவகரந்தைத் தளிர் ஆகியவற்றைக் கலந்தணிந்து சுடுகாட்டில் எரியில் நின்றாடும் அழகனாய், விளங்கும் பாம்பை இடையில் கட்டியவன் ஆகிய சிவபிரான் மேவிய கோயிலைக் கொண்டது குளிர்ந்த நீரால் சூழப்பட்ட குரங்காடுதுறை.

திருக்குரங்காடுதுறை

பழகும் வினைதீர்ப் பவன்பார்ப் பதியோடும்
முழவங் குழன்மொந் தைமுழங் கெரியாடும்
அழகன் னயின்மூ விலைவேல் வலனேந்தும்
குழகன் னகர்போல் குரங்காடு துறையே. **#378**

பிறவிதோறும் பழகிய வினைகளைத் தீர்ப்பவன். பார்வதி தேவியோடு

முழவு, குழல், மொந்தை ஒலிக்க இடுகாட்டுள் முழங்கும் தீயில் நின்று எரியாடும் அழகன். கூரிய மூவிலைவேலை வெற்றிக்கு அடையாளமாக ஏந்தும் இளையோன் ஆகிய சிவபிரானது நகர் குரங்காடுதுறை.

திருக்குரங்காடுதுறை

வரையார்த் தெடுத்தவ் வரக்கன் வலியொல்க
நிரையார் விரலா னெரித்திட் டவனூராம்
கரையார்ந் திழிகா விரிக்கோ லக்கரைமேல்
குரையார் பொழில்சூழ் குரங்காடு துறையே. **#379**

கயிலைமலையை ஆரவாரித்துப் பெயர்த்த இராவணனின் வலிமை கெடுமாறு காலிலமைந்த விரலால் நெரித்தவனாகிய சிவபிரானது ஊர், கரையைப் பொருந்தி ஓடிவரும் காவிரியாற்றின் அழகிய கரைமேல் ஒலி பொருந்திய பொழில் சூழ்ந்திலங்கும் குரங்காடுதுறையாகும்.

திருக்குரங்காடுதுறை

நெடியா னொடுநான் முகனுந் நினைவொண்ணாப்
படியா கியபண்டங்கனின் றெரியாடி
செடியார் தலையேந் தியசெங்கண் வெள்ளேற்றின்
கொடியா னகர்போல் குரங்கா டுதுறையே. **#380**

திருமால், பிரமர்கள் நினையவும் ஒண்ணாத இயல்பினன். பாண்டரங்கக் கூத்தை ஆடியவன். எரியில் நின்று ஆடு பவன். முடை நாற்றம் வீசும் தலையோட்டை ஏந்தியவன். சிவந்த கண்களை உடைய திருமாலாகிய வெள்விடையைக் கொடியாக உடையவன். அவனது நகர் குரங்காடுதுறை.

திருக்குரங்காடுதுறை

துவரா டையர்வே டமலாச் சமண்கையர்
கவர்வாய் மொழிகா தல்செய்யா தவனூராம்
நவையார் மணிபொன் னகில்சந் தனமுந்திக்
குவையார் கரைசேர் குரங்கா டுதுறையே. **#381**

துவராடை அணிந்த புத்தர்களும், வேட மல்லாத வேடம் பூண்ட சமணர்களாகிய கீழோரும் பேசும் ஐய உரைகளை விரும்பாத சிவபிரானது ஊர், மலைகளிலிருந்து சிதைந்து வந்த மணிகள், பொன், அகில், சந்தனம் ஆகியவற்றை உந்திவந்து குவியலாகக்கரையில் சேர்க்கும் காவிரியின் கரையில் உள்ள குரங்காடுதுறையாம்.

திருக்குரங்காடுதுறை

நல்லார் பயில்காழி யுண்ஞான சம்பந்தன்

கொல்லே றுடையான் குரங்கா டுதுறைமேல்
சொல்லார் தமிழ்மாலை பத்துந் தொழுதேத்த
வல்லா ரவர்வா னவரோ டுறைவாரே. **#382**
நல்லவர்கள் வாழும் காழியுள் தோன்றிய ஞான சம்பந்தன்
கொல்லேற்றை ஊர்தியாக உடைய சிவபிரான் எழுந்தருளிய
குரங்காடுதுறைமேல் பாடிய தமிழ்மாலை பத்தையும் பாடித்தொழ
வல்லவர், வானவரோடு உறைவர்.

திருஇரும்பூளை

திருஇரும்பூளை

திருஇரும்பூளை,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காசியாரண்ணியேசுவரர்.
தேவியார் : ஏலவார்குழலம்மை.

சீரார் கழலே தொழுவீ ரிதுசெப்பீர்
வாரார் முலைமங் கையொடும் முடனாகி
ஏராரி ரும்பூ ளையிடங் கொண்டவீசன்
காரார் கடனஞ் சமுதுண் டகருத்தே. **#383**

சீர் பொருந்திய இறைவன் திருவடிகளையே பணியும் அடியவர்களே! கச்சணிந்த தனங்களைக் கொண்ட உமையம்மையோடும் உடனாய் அழகிய இரும்பூளையை இடமாகக் கொண்டுறையும் ஈசன் கரிய கடலில் எழுந்த நஞ்சினை அமுதாக உண்டதற்குக் காரணம் யாதோ? இதனைச் சொல்வீராக.

திருஇரும்பூளை

தொழலார் கழலே தொழுதொண் டர்கள்சொல்லீர்
குழலார் மொழிக்கோல் வளையோடு டனாகி
எழிலா ரிரும்பூ ளைஇடங் கொண்டவீசன்
கழல்தான் கரிகா னிடையா டுகருத்தே. **#384**

வணங்குதற்குரிய திருவடிகளையே தொழும் தொண்டர்களே! வேய்ங்குழல் போன்ற இனிய மொழியையும் திரண்ட வளையல்களையும் உடைய அம்மையோடு உடனாய் அழகிய இரும்பூளையை இடமாகக் கொண்டுள்ள ஈசன் தன் திருவடிகளால் கரிந்த சுடுகாட்டில் ஆடுதற்குக் காரணம் யாதோ? சொல்வீராக.

திருஇரும்பூளை

அன்பா லடிகை தொழுவீ ரறியீரே
மின்போன் மருங்குன் மடவா ளொடுமேவி
இன்பா யிரும்பூ ளையிடங் கொண்டவீசன்
பொன்போற் சடையிற் புனல்வைத்த பொருளே. **3 #385**

அன்பால் இறைவன் திருவடிகளைக் கைகளால் தொழும் அடியவர்களே! மின்னல் போன்ற இடையினை உடைய உமைமடவாளோடு கூடி மகிழ்வாய் இரும்பூளையை இடமாகக் கொண்டுறையும் ஈசன் பொன்

போன்ற தன் சடைமீது கங்கையை வைத்துள்ளதன் கருத்து யாது? அறிவீர்களோ!

திருஇரும்பூளை

நச்சித் தொழுவீர் கணமக் கிதுசொல்லீர்
கச்சிப் பொலிகா மக்கொடி யுடன்கூடி
இச்சித் திரும்பூ ளையிடங் கொண்டவீசன்
உச்சித் தலையிற் பலிகொண் டுழலூணே. **#386**

சிவபிரானை விரும்பித்தொழும் அடியவர்களே! காஞ்சி மாநகரில் கோயில் கொண்டு விளங்கும் காமாட்சியாகிய வல்லிக்கொடியுடன் கூடி இச்சை கொண்டு இரும்பூளையை இடமாகக் கொண்டுள்ள ஈசன் தலையோட்டில் பலியேற்று உணவின் பொருட்டு உழலக் காரணம் யாதோ? நமக்குக் கூறுவீராக.

திருஇரும்பூளை

சுற்றார்ந் தடியே தொழுவீ ரிதுசொல்லீர்
நற்றாழ் குழனங் கையொடும் முடனாகி
எற்றே யிரும்பூ ளையிடங் கொண்டவீசன்
புற்றா டரவோ டென்புபூண் டபொருளே. **#387**

சூழ்ந்தும், நிறைந்தும், சிவபிரான் திருவடிகளையே தொழும் அன்பர்களே! அழகியதாய்த் தொங்குகின்ற கூந்தலை உடைய உமையம்மையோடும் உடனாய் இரும்பூளையை இடமாகக் கொண்டுள்ள ஈசன் புற்றில் வாழும் ஆடுகின்ற பாம்பையும் எலும்பையும் அணிகலனாகப் பூண்டுள்ளதன் காரணம் யாதோ? சொல்வீராக.

திருஇரும்பூளை

தோடார் மலர்தூய்த் தொழுதொண் டர்கள்சொல்லீர்
சேடார் குழற்சே யிழையோ டுடனாகி
ஈடாய் இரும்பூ ளையிடங் கொண்டவீசன்
காடார் கடுவே டுவனா னகருத்தே. **#388**

இதழ் நிறைந்த மலர்களைத் தூவித்தொழும் தொண்டர்களே! திரண்ட கூந்தலையும் செவ்விய அணிகலன்களையும் கொண்டுள்ள அம்மையோடும் உடனாய், பெருமையோடு இரும்பூளையில் உறையும் ஈசன் காட்டில் வாழும் கடுமையான வேடனாய் வந்தது ஏனோ? சொல்வீராக.

திருஇரும்பூளை

ஒருக்கும் மனத்தன் பருள்ளீ ரிதுசொல்லீர்

பருக்கை மதவே ழுரித் துமையோடும்
இருக்கை இரும்பூ ளையிடங் கொண்டவீசன்
அரக்கன் னுரந்தீர்த் தருளாக் கியவாறே. **#389**
ஒருமைப்பாடு கொண்ட மனத்தினராகிய அன்பர் கூட்டத்தைச் சார்ந்த அடியவர்களே! நீண்ட கையையும் மதத்தையும் உடைய யானையை உரித்து உமையம்மையோடு இரும்பூளையை இடமாகக் கொண்ட ஈசன் இராவணனின் வலிமையை அழித்துப் பின் அருள் செய்தது ஏனோ? சொல்வீராக.

திருஇரும்பூளை

துயரா யினநீங் கித்தொழுந் தொண்டர்சொல்லீர்
கயலார் கருங்கண் ணியொடும் முடனாகி
இயல்பா யிரும்பூ ளையிடங் கொண்டவீசன்
முயல்வா ரிருவர்க் கெரியா கியமொய்ம்பே. **#390**
துன்பம் நீங்கித் தொழும் தொண்டர்களே! கயல் போன்ற கரிய கண்ணினளாகிய அம்மையோடும் உடனாய் இயல்பான இடமாக இரும்பூளையைக் கொண்டுறையும் ஈசன் காணமுயன்ற திருமால், பிரமர்க்கு அரியனாய் எரியுருவில் நின்ற ஆற்றல் எத்தகையதோ? சொல்வீராக.

திருஇரும்பூளை

துணைநன் மலர்தூய்த் தொழுந்தொண் டர்கள்சொல்லீர்
பணைமென் முலைப்பார்ப் பதியோ டுடனாகி
இணையில் லிரும்பூ ளையிடங் கொண்டவீசன்
அணைவில் சமண்சாக் கியமாக் கியவாறே. **#391**
திருவடிக்கு ஒப்புடைய மலர்களைத்தூவித் தொழும் தொண்டர்களே! பருத்த தனபாரங்களைக் கொண்டுள்ள பார்வதி தேவியோடு உடனாய் இணையற்ற தலமான இரும்பூளையை இடமாகக் கொண்டுள்ள ஈசன், அணைந்து வழிபடுதல் இல்லாத சமணபௌத்த மதங்களைப் படைத்தது ஏனோ? கூறுவீராக.

திருஇரும்பூளை

எந்தை யிரும்பூ ளையிடங் கொண்டவீசன்
சந்தம் பயில்சண் பையுண்ஞா னசம்பந்தன்
செந்தண் டமிழ்செப் பியபத் திவைவல்லார்
பந்தம் மறுத்தோங் குவர்பான் மையினாலே. **#392**
எம் தந்தையும் இரும்பூளையை இடமாகக் கொண்டுள்ள ஈசனும் ஆகிய பெருமானை வதங்களை உணர்ந்த சண்பைப் பதிக்குரிய

ஞானசம்பந்தன் செவ்விய தண்டமிழால் செப்பிய இப்பதிகப்பாடல்கள் பத்தையும் ஓத வல்லவர் மலபந்தம் நீங்கி உயர்ந்த தன்மையைப் பெறுவர்.

திருமறைக்காடு

திருமறைக்காடு

திருமறைக்காடு,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வேதாரணியேசுவரர்.
தேவியார் : யாழைப்பழித்தமொழியம்மை.

சதுரம் மறைதான் றுதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய் கவெனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே. **#393**

இனிய பொழில்கள் சூழ்ந்த திருமறைக்காட்டில் வேதங்கள் நான்கும் துதி செய்து வணங்க வீற்றிருக்கும் வலியோனே! உன் திருக்கோயில் கதவுகள் முன் உள்ளவாறே திருக்காப்புக் கொள்ளும் கருத்தோடு வினவிய இக்கேள்விகளுக்கு எனக்கு நல்லவண்ணம் விடை அருள்வாயாக.

திருமறைக்காடு

சங்கந் தரளம் மவைதான் கரைக்கெற்றும்
வங்கக் கடல்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
மங்கை யுமைபா கமுமா கவிதென்கொல்
கங்கை சடைமே லடைவித் தகருத்தே. **#394**

சங்குகளையும் முத்துக்களையும் அலைக்கரங்களால் கரையில் எறியும் மரக்கலங்களை உடைய கடல் சூழ்ந்த மறைக்காட்டில் உறையும் மைந்தனே! உமைமங்கை ஒருபாகமாக இருக்க நீ கங்கையைச் சடைமீது கொண்டுள்ள கருத்தின் காரணம் யாதோ?

திருமறைக்காடு

குரவங் குருக்கத் திகள்புன் னைகண்ஞாழல்
மருவும் பொழில்சூழ் மறைக் காட் டுறைமைந்தா
சிரமும் மலருந் திகழ்செஞ் சடைதன்மேல்
அரவம் மதியோ டடைவித் தலழகே. **#395**

குரா, குருக்கத்தி, புன்னை, புலிநகக்கொன்றை ஆகியன மருவிய பொழில் சூழ்ந்த மறைக்காட்டில் உறையும் மைந்தனே! தலைமாலையும் மலர்மாலையும் திகழும் உன் செஞ்சடைமேல் தம்முள் பகை உடைய பாம்பையும் மதியையும் உடன் வைத்துள்ளதற்குக் காரணம் யாதோ?

திருமறைக்காடு

படர்செம் பவளத் தொடுபன் மலர்முத்தம்
மடலம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
உடலம் முமைபங் கமதாகியு மென்கொல்
கடனஞ் சமுதா வதுவுண் டகருத்தே. **#396**

படர்ந்த செம்பவளக் கொடிகள், பல்வகையான மலர்கள், முத்துக்கள், மடல்கள் அவிழ்ந்த மலர்ப் பொழில்கள் ஆகியன சூழ்ந்து விளங்கும் மறைக்காட்டில் உறையும் மைந்தனே! உன் திருமேனியில் ஒருபாகமாக உமையம்மையைக் கொண்டவனாயிருந்தும் கடலில் எழுந்த நஞ்சினை அமுதம்போல உண்டதன் கருத்து யாதோ?

திருமறைக்காடு

வானோர் மறைமா தவத்தோர் வழிபட்ட
தேனார் பொழில்சூழ் மறைக்காட் டுறைசெல்வா
ஏனோர் தொழுதேத் தவிருந் தநீயென்கொல்
கானார் கடுவே டுவனா னகருத்தே. **#397**

தேவர்கள், வேதங்களை உணர்ந்த பெரிய தவத்தினர் ஆகியோர் வழிபட்ட தேன் நிறைந்த பொழில் சூழ்ந்த திருமறைக்காட்டில் உறையும் செல்வனே! தன்னையல்லாத ஏனையோர் அனைவராலும் தொழுது போற்றப்பெறும் பெருமையோடு இருந்த நீ காட்டுள் வாழும் வேடுவனாய் உருக்கொண்ட காரணம் யாதோ?

திருமறைக்காடு

பலகா லங்கள்வே தங்கள்பா தங்கள்போற்றி
மலரால் வழிபாடு செய்மா மறைக்காடா
உலகே முடையாய் கடைதோறு முன்னென்கொல்
தலைசேர் பலிகொண் டதிலுண் டதுதானே. **#398**

பலகாலங்கள் வேதங்கள் பாதங்களைப் போற்றி மலரால் வழிபாடு செய்யும் மறைக்காட்டுள் எழுந்தருளி விளங்கும் இறைவனே! ஏழுலகங்களையும் தன் உடைமையாகக் கொண்டுள்ளவனே! நீ பலர் வீடுகளுக்கும் சென்று தலையோட்டில் பலியேற்று அதில் உண்டருளியதற்குக் காரணம் யாதோ! சொல்வாயாக.

திருமறைக்காடு

வேலா வலயத் தயலே மிளிர்வெய்தும்
சேலார் திருமா மறைக்காட் டுறைசெல்வா
மாலோ டயனிந் திரனஞ் சமுனென்கொல்

காலார் சிலைக்கா மனைக்காய்ந் தகருத்தே. **#399**
விளங்கும் சேல்மீன்களைக் கொண்டுள்ள கடலின் அயலே உள்ள திருமா மறைக்காட்டில் உறையும் செல்வனே! முற்காலத்தில் திருமால், பிரமன், இந்திரன் ஆகியோர் அஞ்சுமாறு காலில் வைத்து மிதித்துக் கணை பூட்டும் வில்லை ஏந்திய காமனை எரித்ததன் கருத்து யாதோ?

<u>திருமறைக்காடு</u>

கலங்கொள் கடலோ தமுலாவு கரைமேல்
வலங்கொள் பவர்வாழ்த் திசைக்கும் மறைக்காடா
இலங்கை யுடையா னடர்ப்பட் டிடரெய்த
அலங்கல் விரலூன் றியருள் செய்தவாறே. **#400**
மரக்கலங்களைக் கொண்டுள்ள கடலின் ஓதம் உலாவுகின்ற கரைமீது வலம் வருபவர் வாழ்த்தி இசைத்துப் போற்றுமாறு விளங்கும் மறைக்காட்டில் விளங்கும் பெருமானே! இலங்கை மன்னன் இராவணன் அடர்க்கப்பட்டு இடர் எய்துமாறு அசையும் உன் திருவடி விரலால் ஊன்றிப் பின் அவனுக்கு அருள் செய்த காரணம் யாதோ?

<u>திருமறைக்காடு</u>

கோனென் றுபல்கோ டியுருத் திரர்போற்றும்
தேனம் பொழில்சூழ் மறைக்காட் டுறைசெல்வா
ஏனங் கழுகா னவருன் னைமுனென்கொல்
வானந் தலமண் டியுங்கண் டிலாவாறே. **#401**
பலகோடி உருத்திரர்கள் தலைவன் என்று போற்றும், தேன் பொருந்திய அழகிய பொழில்கள் சூழ்ந்த மறைக்காட்டில் உறையும் செல்வனே! பன்றியும் கழுகும் ஆன திருமால், பிரமர் உன்னை முற்காலத்தே நிலத்தை அகழ்ந்து சென்றும், வானத்தில் பறந்து சென்றும் கண்டிலர். அதற்குக் காரணம் யாதோ?

<u>திருமறைக்காடு</u>

வேதம் பலவோ மம்வியந் தடிபோற்ற
ஓதம் முலவும் மறைக்காட் டிலுறைவாய்
ஏதில் சமண்சாக் கியர்வாக் கிவையென்கொல்
ஆத ரொடுதா மலர்தூற் றியவாறே. **#402**
வேதங்கள் பலவும் வேள்விகள் செய்து வியந்து உன் திருவடிகளைப் போற்ற, கடல்நீர் உலவும் மறைக்காட்டில் உறைகின்ற பெருமானே! வைதிக நெறியினர்க்கு அயலவராகிய சமணர் சாக்கியர்களாகிய அறிவற்றவர்கள் உரைகளால் உம்மை அலர் தூற்றுதற்குக் காரணம் யாதோ?

திருமறைக்காடு

காழிந் நகரான் கலைஞான சம்பந்தன்
வாழிம் மறைக்கா டனைவாய்ந் தறிவித்த
ஏழின் னிசைமாலை யீரைந் திவைவல்லார்
வாழி யுலகோர் தொழவா னடைவாரே. **#403**

காழி நகரில் தோன்றிய கலைகளில் வல்ல ஞான சம்பந்தன்
வாழ்த்துதற்குரிய மறைக்காட்டில் உறையும் ஈசனைத் தரிசிக்கும் பேறு
வாய்த்து அறிவித்த ஏழிசை பொருந்திய இப்பதிகப் பாமாலையை ஓதி
வழிபட வல்லவர், வாழும் இவ்வுலகோர் தொழவான் அடைவர்.

திருச்சாய்க்காடு

திருச்சாய்க்காடு

திருச்சாய்க்காடு,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சாயாவனேசுவரர்.
தேவியார் : குயிலுநன்மொழியம்மை.

நித்த லுந்நிய மஞ்செய்து நீர்மலர் தூவிச்
சித்த மொன்றவல் லார்க்கரு ளுஞ்சிவன் கோயில்
மத்த யானையின் கோடும்வண் பீலியும் வாரித்
தத்துநீர்ப் பொன்னி சாகர மேவுசாய்க் காடே. **#404**

நாள்தோறும் நியமமாக நீரையும் மலரையும் தூவி மனம் ஒன்றி வழிபடுவார்க்கு அருள்புரியும் சிவபிரான் உறையும் கோயில், மதயானைகளின் தந்தங்களையும், மயிலினது வளமான பீலிகளையும் வாரித்தவழ்ந்துவரும் நீரினை உடைய காவிரியாறு கடலிடைக் கலக்கும் இடத்தே அமைந்துள்ளதிருச்சாய்க்காடு ஆகும்.

திருச்சாய்க்காடு

பண்ட லைக்கொண்டு பூதங்கள் பாடநின் றாடும்
வெண்ட லைக்கருங் காடுறை வேதியன் கோயில்
கொண்ட லைத்திகழ் பேரிமு ழங்கக் குலாவித்
தண்ட லைத்தட மாமயி லாடுசாய்க் காடே. **#405**

பண்ணிசையோடு பூதங்கள் பாட நின்று ஆடுகின்றவனும் வெண்மையான தலையோடுகளை உடைய கரிய காட்டில் உறைபவனும் ஆகிய வேதியன் கோயில், மேகங்களைப் போலப் பேரிகைகள் முழங்கச் சோலைகளில் பெரிய மயில்கள் குலாவிஆடும் திருச்சாய்க்காடு ஆகும்.

திருச்சாய்க்காடு

நாறு கூவிள நாகிள வெண்மதி யத்தோ
டாறு சூடு மமரர் பிரானுறை கோயில்
ஊறு தேங்கனி மாங்கனி யோங்கிய சோலைத்
தாறு தண்கத லிப்புதன் மேவுசாய்க் காடே. **#406**

மணம்வீசும் வில்வம். மிக இளையபிறை ஆகியவற்றோடு கங்கையையும் முடியில் சூடும் அமரர்தலைவனாகிய சிவபிரான் உறையும் கோயில், சுவை ஊறுகின்ற தெங்கின் காய் மாங்கனி ஆகியன

ஓங்கிய சோலைகளும், குளிர்ந்த பழத்தாறுகளை உடைய வாழைப்புதர்களும் பொருந்திய சாய்க்காடு ஆகும்.

திருச்சாய்க்காடு

வரங்கள் வண்புகழ் மன்னிய வெந்தை மருவார்
புரங்கள் மூன்றும் பொடிபட வெய்தவன் கோயில்
இரங்க லோசையு மீட்டிய சரக்கொடு மீண்டித்
தரங்க நீள்கழித் தண்கரை வைகுசாய்க் காடே. **#407**

வரங்கள் பலவும் தரும் வளமையான புகழ் பொருந்திய எந்தையும். பகைவரின் முப்புரங்கள் பொடியாகுமாறு கணைஎய்து அழித்தவனும் ஆகிய சிவபிரான் உறையும் கோயில், நெய்தல் நிலத்துக்குரிய இரங்கல் ஓசையைக் கொண்டதும் வணிகர்கள் சேர்த்த சரக்குகளைக் கொண்டுவந்து சேர்ப்பதும் ஆகிய கடலினது நீண்ட கழியின் குளிர்ந்த கரையில் அமைந்த திருச்சாய்க்காடு ஆகும்.

திருச்சாய்க்காடு

ஏழை மார்கடை தோறு மிடுபலிக் கென்று
கூழை வாளர வாட்டும் பிரானுறை கோயில்
மாழை யொண்கண் வளைக்கை நுளைச்சியர்வண்பூந்
தாழை வெண்மடற் கொய்துகொண் டாடுசாய்க்காடே. **#408**

மகளிர் வாழும் இல்லங்கள் தோறும் சென்று அவர்கள் இடும் பலிக்காகக் கூழையான ஒளிபொருந்திய பாம்பை ஆடச்செய்து மகிழ்விக்கும் பரமன் உறையும் கோயில், பொன் போன்ற ஒண்கண்ணையும், வளையணிந்த கையையும் உடைய நுளைச்சியர் வளமையான தாழை மரத்தில் பூத்துள்ள மலரின் வெண்மடல்களைக் கொய்து மகிழும் திருச்சாய்க்காடு ஆகும்.

திருச்சாய்க்காடு

துங்க வானவர் சூழ்கடல் தாங்கடை போதில்
அங்கொர் நீழ லளித்தவெம் மானுறை கோயில்
வங்க மங்கொளி ரிப்பியு முத்து மணியுஞ்
சங்கும் வாரித் தடங்கட லுந்துசாய்க் காடே. **#409**

உயர்வுடைய தேவர்கள், உலகைச் சூழ்ந்துள்ள கடலைத்தாங்கள் கடையும் பொழுது எழுந்த நஞ்சினை உண்டு அவர்கட்கு அருள் நிழல் தந்த எம்தலைவன் உறையும் கோயில், பெரிதான கடல், மரக்கலங்களையும், அதன்கண் ஒளிர்கின்ற இப்பி, முத்து, மணி, சங்கு ஆகியவற்றையும் வாரி வந்து சேர்க்கும் திருச்சாய்க்காடு ஆகும்.

திருச்சாய்க்காடு

வேத நாவினர் வெண்பளிங் கின்குழைக் காதர்
ஓத நஞ்சணி கண்ட ருகந்துறை கோயில்
மாதர் வண்டுதன் காதல்வண் டாடிய புன்னைத்
தாது கண்டு பொழின்மறைந் தூடுசாய்க் காடே. **#410**

வேதங்களை அருளிய நாவினர். வெண்மையான பளிங்கால் இயன்ற குழையணிந்த காதினர். கடலிடை எழுந்த நஞ்சினை நிறுத்திய கண்டத்தை உடையவர். அத்தகைய சிவபிரானார் எழுந்தருளிய கோயில், பெண் வண்டு தன்மீது காதல் உடைய ஆண்வண்டோடு புன்னை மலர்த்தாதில் ஆடி மகிழ்ந்து பின் பொழிலிடை மறைந்து ஊடும் சாய்க்காடாகும்.

திருச்சாய்க்காடு

இருக்கு நீள்வரை பற்றி யடர்த்தன் றெடுத்த
அரக்கன் ஆகம் நெரித்தருள் செய்தவன் கோயில்
மருக்கு லாவிய மல்லிகை சண்பகம் வண்பூந்
தருக்கு லாவிய தண்பொழி னீடுசாய்க் காடே. **#411**

தான்வீற்றிருக்கும் நீண்ட கயிலைமலையைப் பற்றிப் பெயர்த்து எடுத்த இராவணனின் உடலை நெரித்துப் பின் அருள்செய்த சிவபிரானது கோயில், மணம் பொருந்திய மல்லிகை, சண்பகம் ஆகிய வளமான பூக்களைக்கொண்ட மரங்கள் விளங்கும் தண்பொழில்களை உடைய சாய்க்காடாகும்.

திருச்சாய்க்காடு

மாலி னோடயன் காண்டற் கரியவர் வாய்ந்த
வேலை யார்விட முண்டவர் மேவிய கோயில்
சேலி னேர்விழி யார்மயி லாலச் செருந்தி
காலை யேகன கம்மலர் கின்றசாய்க் காடே. **#412**

திருமால் பிரமர்களால் காணுதற்கு அரியவனும் பொருந்திய கடலிடை எழுந்த விடத்தை உண்டவனும், ஆகிய சிவபெருமான் உறையும் கோயில், சேல்மீன் போன்றகண்களைக் கொண்ட மகளிர் வாழ்வதும், தோகையை விரித்து மயில்கள் ஆடுவதும் செருந்திமரங்கள் செம்பொன் போலக் காலையில் மலர்ந்து மணம் பரப்புவதுமான சாய்க்காடு ஆகும்.

திருச்சாய்க்காடு

ஊத்தை வாய்ச்சமண் கையர்கள் சாக்கியர்க் கென்றும்
ஆத்த மாக வறிவரி தாயவன் கோயில்

வாய்த்த மாளிகை சூழ்தரு வண்புகார் மாடே
பூத்த வாவிகள் சூழ்ந்து பொலிந்தசாய்க் காடே. **#413**
அழுக்கேறிய வாயினை உடைய சமணர்களாகிய கீழ் மக்களுக்கும் சாக்கியர்களுக்கும் எக்காலத்தும் அன்புடையனாதலின்றி அறிதற்கும் அரிதாயிருப்பவனது கோயில், ஏற்புடைய மாளிகைகள் சூழ்ந்த புகார் நகரின் அருகே பூத்துள்ள மலர் வாவிகள் சூழ்ந்து பொலியும் சரய்க்காடாகும்.

<u>திருச்சாய்க்காடு</u>

ஏனை யோர்புகழ்ந் தேத்திய வெந்தைசாய்க் காட்டை
ஞான சம்பந்தன் காழியர் கோனவில் பத்தும்
ஊன மின்றி யுரைசெய வல்லவர் தாம்போய்
வான நாடினி தாள்வரிம் மானிலத் தோரே. **#414**
சமண பௌத்தர்கள் அன்றி ஏனையோர் புகழ்ந்து ஏத்தும் எம்தந்தையாகிய இறைவர் விளங்கும் சாய்க்காட்டை, காழியர் கோனாகிய ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய இப்பதிகப்பாடல்கள் பத்தையும் குற்றமற்றவகையில் உரைசெய்து வழிபட வல்ல இம்மாநிலத்தோர் வான நாடு சென்று இனிதாக அரசாளுவர்.

திருக்ஷேத்திரக்கோவை

திருக்ஷேத்திரக்கோவை,
பண் - இந்தளம், இப்பதிகத்தில் வரும் குன்றியூர், இடைப்பள்ளி, மாட்டூர்,
வாதவூர், வாரணாசி, கோட்டூர், குணவாயில், நெற்குன்றம், நற்குன்றம்,
நெடுவாயில், உஞ்சேனைமாகாளம், குத்தங்குடி, குருந்தேவன்குடி,
மத்தங்குடி, திருவண்குடி இவைகட்குத் தனித்தனித் தேவார
மில்லாமையால் வைப்புத்தலமென்று சொல்லப்படும்.

ஆரூர்தில்லை யம்பலம் வல்லந்நல்லம்
வடகச்சியு மச்சிறு பாக்கநல்ல
கூரூர்குட வாயில் குடந்தைவெண்ணி
கடல்சூழ்கழிப் பாலைதென் கோடிபீடார்
நீரூர்வய னின்றியூர் குன்றியூருங்
குருகாவையூர் நாரையூர் நீடுகானப்
பேரூர்நன் னீள்வய னெய்த்தானமும்
பிதற்றாய்பிறை சூடிதன் பேரிடமே. **#415**

பிறைசூடிய பெருமானின் பெருந்தலங்களாய ஆரூர் தில்லையம்பலம் முதலானதலங்களின் பெயர்களைப் பலகாலும் சொல்லிக் கொண்டிரு. உனக்குப் பெரும் பயன் விளையும்.

திருக்ஷேத்திரக்கோவை

அண்ணாமலை யீங்கோயு மத்திமுத்தா
றகலாமுது குன்றங் கொடுங்குன்றமுங்
கண்ணார்கழுக் குன்றங் கயிலை கோணம்
பயில்கற்குடி காளத்தி வாட்போக்கியும்
பண்ணார்மொழி மங்கையோர் பங்குடையான்
பரங்குன்றம் பருப்பதம் பேணிநின்றே
எண்ணாயிர வும்பகலு
மிடும்பைக்கட னீந்தலாங் காரணமே. **#416**

அண்ணாமலை ஈங்கோய்மலை முதலான தலங்களை விரும்பி இரவும் பகலும் எண்ணின் துன்பக்கடலை நீந்தற்குக் காரணமாய் அமையும்.

திருக்ஷேத்திரக்கோவை

அட்டானமென் றோதிய நாலிரண்டு
மழகன்னுறை காவனைத் துந்துறைகள்
எட்டாந்திரு மூர்த்தியின் காடொன்பதுங்

குளமூன்றுங் களமஞ்சும் பாடிநான்கும்
மட்டார்குழ லாண்மலை மங்கைபங்கன்
மதிக்கும்மிட மாகிய பாழிமூன்றும்
சிட்டானவன் பாசூரென் றேவிரும்பா
யரும்பாவங்க ளாயின தேய்ந்தறவே. **#417**
இறைவனின் எட்டு வீரட்டங்களையும் அழகனாகிய அப்பெருமானுறையும் காடு, துறை, நாடு, குளம், களம், பாடி, பாழி என முடியும் தலங்களையும் அரிய பாவங்கள் தேய்ந்தொழிதற் பொருட்டு விரும்புவாயாக.

திருக்ஷேத்திரக்கோவை

அறப்பள்ளி யகத்தியான் பள்ளிவெள்ளைப்
பொடிப்பூசி ஆறணிவானமர் காட்டுப்பள்ளி சிறப்பள்ளி சிராப்பள்ளி செம்பொன்பள்ளி
திருநனிபள்ளி சீர் மகேந்திரத்துப் பிறப்பில்லவன் பள்ளிவெள் ளச்சடையான்
விரும்பும்மிடைப் பள்ளிவண் சக்கரமால்
உறைப்பாலடி போற்றக் கொடுத்தபள்ளி
யுணராய்மட நெஞ்சமே யுன்னிநின்றே. **#418**
நெஞ்சமே! கோயில் எனப் பொருள் தரும் பள்ளி என முடிவன வாய கொல்லி அறைப்பள்ளி அகத்தியான் பள்ளி முதலான தலங்களை உன்னி உணர்வாயாக, உனக்குப் பயன்பல விளையும்.

திருக்ஷேத்திரக்கோவை

ஆறைவட மாகற லம்பரையா
றணியார்பெரு வேளூர் விளமர்தெங்கூர்
சேறைதுலை புகலூ ரகலா
திவைகாதலித் தானவன் சேர்பதியே. **#419**
சிவபிரான் காதலித்து உறையும் பதிகள் பழையாறை மாகறல் முதலான தலங்களாகும். அவற்றைச் சென்று தொழுவீர்களாக.

திருக்ஷேத்திரக்கோவை

மனவஞ்சர்மற் றோடமுன் மாதராரு
மதிகூர் திருக்கூடலி லாலவாயும்
இனவஞ்சொ லிலாவிடை மாமருது
மிரும்பைப்பதி மாகாளம் வெற்றியூரும்
கனமஞ்சின மால்விடை யான்விரும்புங்
கருகாவூர் நல்லூர் பெரும்புலியூர்

தனமென்சொலிற் றஞ்சமென் றேநினைமின்
றவமாமல மாயின தானறுமே. **#420**
வஞ்சமனத்தவர் போயகல மதிகூர் மாதர்கள் வாழும் ஆலவாய்
இடைமருது முதலான தலங்கள் நமக்குப் புகலி டமாவன எனநினைமின்.
அதுவே தவமாகும். மும்மலங்களும் அற்று ஒழியும்.

திருசேஷத்திரக்கோவை

மாட்டூர்மடப் பாச்சி லாச்சிராம
மயிண்டீச்சரம் வாதவூர் வாரணாசி
காட்டூர்கடம் பூர்படம் பக்கங்கொட்டுங்
கடலொற்றியூர் மற்றுறை யூரவையும்
கோட்டூர்திரு வாமாத்தூர் கோழம்பமுங்
கொடுங்கோ வலூர்திருக் குணவாயில்
* * * * * * * * **#421**
மாட்டூர் பாச்சில் ஆச்சிராமம் முதலியன இறைவன் உறையும் சிறந்த
தலங்கள்.

திருசேஷத்திரக்கோவை

குலாவுதிங்கட்சடையான் குளிரும் பரிதிநியமம்
போற்றூரடி யார்வழி பாடொழியாத்தென்
புறம்பயம் பூவணம் பூழியூரும்
காற்றூர்வரை யன்றெடுத் தான்முடிதோ
ணெரித்தானுறை கோயிலென்றென் றுநீகருதே. **#422**
திருப்பரிதிநியமம், திருப்புறம்பயம் முதலான தலங்கள் கயிலை
மலையைப் பெயர்த்தெடுத்த இராவணனின் முடி, தோள் ஆகியவற்றை
நெரித்த சிவபிரான் உறையும் கோயில்கள் என நீ கருதுக.

திருசேஷத்திரக்கோவை

நெற்குன்றமோத் தூர்நிறை நீர்மருக
னெடுவாயில் குறும்பலா நீடுதிரு
நற்குன்றம் வலம்புரந் நாகேச்சுர
நளிர்சோலையுஞ் சேனைமா காளம்வாய்மூர்
கற்குன்றமொன் றேந்தி மழைதடுத்த
கடல்வண்ணனு மாமல ரோனுங்காணாச்
சொற்கென்றுந் தொலைவிலா தாழனுறையுங்
குடமூக்கென்று சொல்லிக் குலாவுமினே. **#423**
நெற்குன்றம், ஓத்தூர் முதலியதலங்களை எண்ணி மகிழ்வாயாக.

திருக்ஷேத்திரக்கோவை

குத்தங்குடி வேதி குடிபுனல்சூழ்
குருந்தங்குடி தேவன் குடிமருவும்
அத்தங்குடி தண்டிரு வண்குடியு
மலம்புஞ்சலந் தன்சடை வைத்துகந்த
நித்தன்னிம லனுமை யோடுங்கூட
நெடுங்கால முறைவிட மென்று சொல்லாப்
புத்தர்புறங் கூறிய புன்சமணர்
நெடும்பொய் களைவிட்டு நினைந்துய்மினே. **#424**

குத்தங்குடி, வேதிகுடி முதலான குடிஎன முடியும் தலங்கள் சிவபிரான் உமையம்மையாருடன் கூடி நெடுங்காலம் வீற்றிருப்பன என்று எண்ணி வழிபடாப் பௌத்தர் சமணர்கூறும் பொய்மொழி களை விட்டு அத்தலங்களை நினைந்துய்மின்.

திருக்ஷேத்திரக்கோவை

அம்மானை யருந்தவ மாகிநின்ற
வமரர்பெரு மான்பதியான வுன்னிக்
கொய்ம்மாமலர்ச் சோலை குலாவுகொச்சைக்
கிறைவன் சிவஞானசம் பந்தன் சொன்ன
இம்மாலையீ ரைந்து மிருநிலத்தி
லிரவும்பக லுந்நினைந் தேத்திநின்று
விம்மாவெரு வாவிரும்பும் மடியார்
விதியார் பிரியார் சிவன்சேவடிக்கே. **#425**

தலைவனும் அரிய தவவடிவாக விளங்கும் தேவர் முதல்வனும் ஆகிய சிவபெருமான் உறையும் திருத்தலங்களை நினைந்து கொய்யத் தக்கனவான நறுமண மலர்களைக் கொண்டுள்ள சோலைகள் செறிந்த கொச்சையம் பதிக்குத் தலைவனாகிய சிவஞான சம்பந்தன் பாடிய இப்பதிகப்பாமாலையை நிலவுலகில் இரவும் பகலும் நினைந்து விம்மியும் அஞ்சியும் விரும்பிப் போற்றும் அடியவர், நிறைந்த நல்லூழ் உடையவராவர். மறுமையில் சிவன் சேவடிகளைப் பிரியாதவராவர்.

திருப்பிரமபுரம்

சீர்காழி

திருப்பிரமபுரம்,
பண் - சீகாமரம், திருப்பிரமபுர மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

எம்பிரா னெனக்கமுதம்
ஆவானுந் தன்னடைந்தார்
தம்பிரா னாவானுந்
தழலேந்து கையானுங்
கம்பமா கரியுரித்த
காபாலி கறைக்கண்டன்
வம்புலாம் பொழிற்பிரம
புரத்துறையும் வானவனே. **#426**

எமக்குத் தலைவன், எனக்கு அமுதம் போல இனிப்பவன், தன்னை அடைபவர்களுக்குத் தம்பிரான், தழல்ஏந்திய கையான், அசையும் இயல்புடைய பெரிய யானையை உரித்துப் போர்த்த கபாலி, இத்தகையோன் மணம் உலாவும் பொழில் சூழ்ந்த பிரமபுரத்தில் உறையும் வானவனே யாவான்.

சீர்காழி

தாமென்றும் மனந்தளராத்
தகுதியரா யுலகத்துக்
காமென்று சரண்புகுந்தார்
தமைக்காக்குங் கருணையினான்
ஓமென்று மறைபயில்வார்
பிரமபுரத் துறைகின்ற
காமன்றன் னுடலெரியக்
கனல்சேர்ந்த கண்ணானே. **#427**

உலகில் வாழ்வோர்க்கு அடைக்கலம் தருபவன் இவனேயாம் என்று எக்காலத்தும் மனம் தளராத தன்மையராய்த் தன்னைச் சரண் அடைந்தவர்களைக் காக்கும் கருணையாளன்யாவன் எனில் ஓம் எனக்கூறி நான் மறைகளைப் பயிலும் அந்தணர் வாழும் பிரமபுரத்தில் விளங்குகின்ற காமனின் உடலை எரியச் செய்த கண்ணுதலோனே யாவான்.

சீர்காழி

நன்னெஞ்சே யுனையிரந்தேன்
நம்பெருமான் றிருவடியே
உன்னஞ்செய் திருகண்டாய்
உய்வதனை வேண்டுதியேல்
அன்னஞ்சேர் பிரமபுரத்
தாரமுதை யெப்போதும்
பன்னஞ்சீர் வாயதுவே
பார்கண்ணே பரிந்திடவே. **#428**

நல்ல நெஞ்சே! உன்னை இரந்து வேண்டுகின்றேன். நீ கடைத்தேற நினைவாயானால் நமது தலைவனாகிய சிவபிரான் திருவடிகளையே எக்காலத்தும் சிந்தித்திரு. வாயே! அன்னங்கள் பயிலும் பிரமபுரத்தில் விளங்கும் அரிய அமுது போல்வான் புகழைப் பேசு. கண்ணே! அவன் நம் மேல் பரிவு கொண்டு அருள்செய்ய அவனையே பார்.

சீர்காழி

சாநாளின் றிம்மனமே
சங்கைதனைத் தவிர்ப்பிக்குங்
கோனாளுந் திருவடிக்கே
கொழுமலர்தூ வெத்தனையுந்
தேனாளும் பொழிற்பிரம
புரத்துறையுந் தீவணனை
நாநாளு நன்னியமஞ்
செய்தவன்சீர் நவின்றேத்தே. **#429**

மனமே! சாகும் நாள் இன்றி, இனிது வாழவும் மனத்தில் எழும் ஐயங்களைப் போக்கவும் வல்லனாய தலைவனின் திருவடிகளிலேயே நாள்தோறும் நல்ல மலர்களை எவ்வளவிலேனும் தூவி வருவாயாக. நாவே, தேன் நிறைந்த பொழில் சூழ்ந்த பிரமபுரத்துறையும் தீவண்ணனை நல்ல நியமத்துடன் இருந்து அவன் புகழை நவின்று ஏத்துவாயாக.

சீர்காழி

கண்ணுதலான் வெண்ணீற்றான்
கமழ்சடையான் விடையேறி
பெண்ணிதமா முருவத்தான்
பிஞ்ஞகன்பேர் பலவுடையான்
விண்ணுதலாத் தோன்றியசீர்ப்

பிரமபுரந் தொழவிரும்பி
எண்ணுதலாஞ் செல்வத்தை
யியல்பாக வறிந்தோமே. **#430**

நுதல் விழியனும், வெண்ணீறு அணிந்தவனும் மணம் கமழும் சடையினனும், விடையேறி வருபவனும், இனிய பெண்ணொடு கூடிய உருவத்தினனும், பிஞ்ஞகனும், பேர் பல உடையவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய விண்ணோரால் கருதப்படுமாறு தோன்றியபுகழ் உடைய பிரமபுரத்தைத் தொழவிரும்பும் நாம் இயல்பாக அறிந்துள்ள புண்ணியம் பெற்றுள்ளோம்.

<u>சீர்காழி</u>

எங்கேனும் யாதாகிப்
பிறந்திடினுந் தன்னடியார்க்
கிங்கேயென் றருள்புரியும்
எம்பெருமா னெருதேறிக்
கொங்கேயு மலர்ச்சோலைக்
குளிர்பிரம புரத்துறையுஞ்
சங்கேயொத் தொளிர்மேனிச்
சங்கரன்றன் றன்மைகளே. **#431**

தேன் பொருந்திய மலர்ச்சோலை சூழ்ந்து தண்ணிதாக விளங்கும் பிரமபுரத்துள் சங்குபோன்ற வெண்ணிற மேனியனாய் விளங்கும் சங்கரன்தன் தன்மைகள், தன் அடியவர் அவ்விடத்து எப்பிறப்பை எய்தினாலும் எம்பெருமானாகிய அவ்விறைவன் எருதேறிச்சென்று அவற்றுக்கு ஏற்ற வகையில் அங்கங்கே தோன்றி இங்கே என அருள் புரியும் செயல்களாகும்.

<u>சீர்காழி</u>

சிலையதுவெஞ் சிலையாகத்
திரிபுரமூன் றெரிசெய்த
இலைநுனைவேற் றடக்கையன்
ஏந்திழையா ளொருகூறன்
அலைபுனல்சூழ் பிரமபுரத்
தருமணியை யடிபணிந்தால்
நிலையுடைய பெருஞ்செல்வம்
நீடுலகிற் பெறலாமே. **#432**

மேருமலையைக் கொடிய வில்லாகக் கொண்டு திரிபுரங்களை எரித்து அழித்தவனும், மூவிலை வடிவாகக் கூரிய முனையோடு அமைந்த வேல் ஏந்திய நீண்ட கையினனும், உமையொரு பாகனும் ஆகிய கடல்

சூழ்ந்திலங்கும் பிரமபுரத்துள் அரிய மணி போல் வானாய் விளங்கும் சிவபிரான் திருவடிகளை வணங்கினால் வானோர்க்குயர்ந்த உலகில் வீடுபேறாகிய பெருஞ்செல்வம் எய்தலாம்.

சீர்காழி

எரித்தமயிர் வாளரக்கன்
வெற்பெடுக்கத் தோளொடுதாள்
நெரித்தருளுஞ் சிவமூர்த்தி
நீறணிந்த மேனியினான்
உரித்தவரித் தோலுடையான்
உறைபிரம புரந்தன்னைத்
தரித்தமன மெப்போதும்
பெறுவார்தாந் தக்காரே. **#433**

எரிபோலும் தலைமயிரை உடைய, வாள் ஏந்திய அரக்கனாகிய இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க, அவன் தோளையும் தாளையும் நெரித்தருளிய சிவமூர்த்தியும், நீறணிந்த மேனியனும், யானையை உரித்து அதன் தோலைப் போர்வையாகக் கொண்டவனும் ஆகிய சிவபிரானது பிரமபுரத்தை எண்ணுவார் எப்போதும் தக்கார் என்னும் பெயரைப் பெறுவர்.

சீர்காழி

கரியானும் நான்முகனுங்
காணாமைக் கனலுருவாய்
அரியானாம் பரமேட்டி
அரவஞ்சே ரகலத்தான்
றெரியாதா னிருந்துறையுந்
திகழ்பிரம புரஞ்சேர
உரியார்தா மேழுலகும்
உடனாள வுரியாரே. **#434**

திருமால் பிரமர் காணாதவாறு எரிஉருவாய் நீண்டு அவர்க்கு அரியன் ஆனவனும், மேலான நிலையினனும், பாம்பணிந்த மார்பினனும், காணுதற்குத் தெரியாதவனும் ஆகிய பெருமான் எழுந்தருளியுள்ள பிரமபுரத்தைச் சேர்ந்தார் ஏழு உலகங்களையும் அரசாளுதற்கு உரிமை உடையோராவர்.

சீர்காழி

உடையிலார் சீவரத்தார்
தன்பெருமை யுணர்வரியான்

முடையிலார் வெண்டலைக்கை
மூர்த்தியாந் திருவுருவன்
பெடையிலார் வண்டாடும்
பொழிற்பிரம புரத்துறையுஞ்
சடையிலார் வெண்பிறையான்
தாள்பணிவார் தக்காரே. **#435**

உடையற்றவர்களும் சீவரம் அணிந்தவர்களுமாய சமணர் புத்தர்களால் தன்பெருமைகள் உணர இயலாதவனும், நாற்றம் பொருந்திய வெண்ணிறத் தலையோட்டைக் கையில் ஏந்திய மூர்த்தி எனப்பெறும் திருவுருவினனும், சடையில் பிறையணிந்தவனும் ஆகிய பெண் வண்டுகளோடு ஆண் வண்டுகள் கூடி விளையாடும் பொழில்சூழ்ந்த பிரமபுரத்துப் பெருமானின் திருவடிகளைப் பணிவோர் தக்கோர் எனப் பெயர் பெறுவர்.

சீர்காழி

தன்னடைந்தார்க் கின்பங்கள்
தருவானைத் தத்துவனைக்
கன்னடைந்த மதிற்பிரம
புரத்துறையுங் காவலனை
முன்னடைந்தான் சம்பந்தன்
மொழிபத்து மிவைவல்லார்
பொன்னடைந்தார் போகங்கள்
பலவடைந்தார் புண்ணியரே. **#436**

தன்னை அடைந்த அன்பர்க்கு இன்பங்கள் தருபவனும் மெய்ப்பொருளாக விளங்குவோனும், கல்லாலியன்ற மதில் சூழ்ந்த பிரமபுரத்துள் விளங்கிக் காப்பவனும் ஆகிய பெருமானின் அருளை மிக இளைய காலத்திலேயே பெற்ற ஞானசம்பந்தன் பாடிய இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓதவல்லவர்கள், பொன்னையும் போகங்கள் பலவற்றையும் அடைந்த புண்ணியர் ஆவர்.

திருச்சாய்க்காடு

திருச்சாய்க்காடு

திருச்சாய்க்காடு,
பண் - சீகாமரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சாயாவனேசுவரர்.
தேவியார் : குயிலுநன்மொழியம்மை.

மண்புகார் வான்புகுவர்
மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார்
கற்றாருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா
வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந்
தலைவன்றாள் சார்ந்தாரே. **#437**

வெண்மாடங்களைக் கொண்ட நீண்ட வீதியினை உடைய தண்மையான புகாரில் விளங்கும் சாய்க்காட்டுள் மேவிய எம் தலைவன் தாளைச்சார்ந்து அவன் புகழைக்கற்றவரும் கேட்டவரும் நில உலகில் பிறவார், பேரின்ப உலகம் பெறுவர். மனச்சோர்வாலும் பசியாலும் இடுக்கண் அடையார். நோய் உறார்.

திருச்சாய்க்காடு

போய்க்காடே மறைந்துறைதல்
புரிந்தானும் பூம்புகார்ச்
சாய்க்காடே பதியாக
வுடையானும் விடையானும்
வாய்க்காடு முதுமரமே
யிடமாக வந்தடைந்த
பேய்க்காடல் புரிந்தானும்
பெரியோர்கள் பெருமானே. **#438**

இடுகாட்டுள் மறைந்து உறைதலை விரும்புபவனும், பூம்புகாரை அடுத்துள்ள சாய்க்காட்டைப் பதியாக உடையவனும், விடையூர்தியனும், காட்டில் உள்ள முதிய ஆலமரத்தை இடமாகக்கொண்ட பேயின் பாடலுக்கு ஏற்ப ஆடுபவனும் ஆகிய சிவபிரான் பெரியோர்களின் தலைவன் ஆவான்.

திருச்சாய்க்காடு

நீநாளு நன்னெஞ்சே
நினைகண்டா யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ்
சாய்க்காட்டெம் பெருமாற்கே.
பூநாளுந் தலைசுமப்பப்
புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப்
பெறலாமே நல்வினையே. **#439**

நல்லநெஞ்சமே! நீ நாள்தோறும் அவனை நினைவாயாக. சாகும் நாளையும் உயிர்வாழும் நாளையும் யார் அறிவார்கள். ஆதலின் சாய்க்காட்டை அடைந்து அங்குள்ள எம்பெருமானுக்கு நாளும் பூக்களைத் தலையில் சுமந்து சென்று அருச்சித்தும் செவிகளால் அவன் புகழ் மொழிகளைக்கேட்டும், நாள்தோறும் நாவினால் அவன் திருப்பெயரை நவின்றேத்தியும் செயற்படின் நல்வினைப்பயன் பெறலாம்.

திருச்சாய்க்காடு

கட்டலர்த்த மலர்தூவிக்
கைதொழுமின் பொன்னியன்ற
தட்டலர்த்த பூஞ்செருந்தி
கோங்கமருந் தாழ்பொழில்வாய்
மொட்டலர்த்த தடந்தாழை
முருகுயிர்க்குங் காவிரிப்பூம்
பட்டினத்துச் சாய்க்காட்டெம்
பரமேட்டி பாதமே. **#440**

பொன்தட்டுப் போல மலர்ந்த செருந்தி, கோங்கு முதலிய மரங்கள் பொருந்திய தாழ்ந்த பொழிலிடத்துத் தாழைமலர்கள் மொட்டுக்களை விரித்து மணம் பரப்பும் காவிரிப்பூம்பட்டினத்துச் சாய்க்காட்டுப் பரமேட்டியின் பாதங்களை வண்டுகளால் கட்டவிழ்க்கப்பட்ட மலர்களைத்தூவிக் கைகூப்பி வணங்குமின்.

திருச்சாய்க்காடு

கோங்கன்ன குவிமுலையாள்
கொழும்பணைத்தோட் கொடியிடையைப்
பாங்கென்ன வைத்துகந்தான்
படர்சடைமேற் பான்மதியந்

தாங்கினான் பூம்புகார்ச்
சாய்க்காட்டான் தாள்நிழற்கீழ்
ஓங்கினா ரோங்கினா
ரெனவுரைக்கு முலகமே. **#441**

கோங்கரும்பு போன்ற தனங்களையும், செழுமையான மூங்கில் போன்ற தோள்களையும் கொடிபோன்ற இடையினையும் உடைய உமையம்மையைத் தன் பாகமாக வைத்து மகிழ்பவனும், தன் திருமுடிமேல் பால்போன்ற வெள்ளிய மதியைச்சூடியவனுமான பூம்புகார்ச் சாய்க்காட்டு இறைவனின் திருவடி நீழலில் ஓங்கி நின்றவரே ஓங்கினார் எனப்படுவார்.

திருச்சாய்க்காடு

சாந்தாக நீறணிந்தான்
சாய்க்காட்டான் காமனைமுன்
தீந்தாக மெரிகொளுவச்
செற்றுகந்தான் றிருமுடிமேல்
ஓய்ந்தார மதிசூடி
யொளிதிகழு மலைமகடோள்
தோய்ந்தாகம் பாகமா
வுடையானும் விடையானே. **#442**

சந்தனம் போலத்திருநீற்றை உடல் முழுவதும் அணிந்தவன். சாய்க்காட்டில் உறைபவன். காமனின் உடல் தீயுமாறு எரிகொளுவச் செய்தவன். திருமுடியில் நுணுகிய மதியைச் சூடியவன். ஒளிதிகழும் மலைமகள் தோளைத் தோய்ந்து அவளைப் பாகமாகக் கொண்டவன். விடையூர்தியன்.

திருச்சாய்க்காடு

மங்குல்தோய் மணிமாட
மதிதவழு நெடுவீதிச்
சங்கெலாங் கரைபொருது
திரைபுலம்புஞ் சாய்க்காட்டான்
கொங்குலா வரிவண்டின்
னிசைபாடு மலர்கொன்றைத்
தொங்கலா னடியார்க்குச்
சுவர்க்கங்கள் பொருளலவே. **#443**

மேகங்களைத் தோயுமாறு உயர்ந்து விளங்கும் அழகியமாட வீடுகளின் வெண்ணிற ஒளியை உடைய வீதிகளைக் கொண்டதும், சங்குகளைக் கரையில் கொண்டு வந்து சேர்க்கும் அலைகளின் ஆரவாரம்

கேட்பதுமாய சாய்க்காட்டு இறைவன், தேன் உண்ணவந்த வரிவண்டுகள் இன்னிசைபாடும் மலர் மாலைகளை அணிந்தவன். அப்பெருமானை அடைந்த அடியவர்க்குச் சுவர்க்கங்கள் பொருள் எனத்தோன்றா.

திருச்சாய்க்காடு

தொடலரிய தொருகணையாற்
புரமூன்று மெரியுண்ணப்
படவரவத் தெழிலாரம்
பூண்டான்பண் டரக்கனையுந்
தடவரையாற் றடவரைத்தோ
ளூன்றினான் சாய்க்காட்டை
இடவகையா வடைவோமென்
றெண்ணுவார்க் கிடரிலையே. **#444**

தொடற்கரிய வெம்மையையுடைய ஒருகணையால் முப்புரங்களையும் எரியுண்ணச் செய்தவனும் படப்பாம்பை அணிகலனாகப் பூண்டவனும், முற்காலத்தே இராவணனைக் கயிலை மலையால் பெரிய தோள்களை ஊன்றி நெரித்தவனும் ஆகிய சிவபிரானது சாய்க்காட்டைச் சிறந்த ஒரு தலம் எனக் கருதி அடைவோர்க்கு இடர் இல்லை.

திருச்சாய்க்காடு

வையநீ ரேற்றானு
மலருறையு நான்முகனும்
ஐயன்மா ரிருவர்க்கு
மளப்பரிதா லவன்பெருமை
தையலார் பாட்டோவாச்
சாய்க்காட்டெம் பெருமானைத்
தெய்வமாப் பேணாதார்
தெளவுடைமை தேறோமே. **#445**

இவ்வுலகை நீர்வார்த்துத்தர ஏற்ற திருமாலும், தாமரை மலரில் உறையும் நான்முகனும் ஆகிய இருதலைமைத் தேவர்க்கும் அவன் பெருமை அளந்து காணுதற்கு அரியதாகும். மகளிர் பாடும் இசைப்பாடல் ஓவாதே கேட்கும் சாய்க்காட்டு எம்பெருமானைத் தெய்வமாக விரும்பாதார் ஞானம்பெறார்.

திருச்சாய்க்காடு

குறங்காட்டு நால்விரலிற்
கோவணத்துக் கோலோவிப்போய்

அறங்காட்டுஞ் சமணருஞ்
சாக்கியரு மலர்தூற்றுந்
திறங்காட்டல் கேளாதே
தௌவுடையீர் சென்றடைமின்
புறங்காட்டி லாடலான்
பூம்புகார்ச் சாய்க்காடே. **#446**

தொடைகளில் அடையும் நால்விரல் கோவண ஆடையோடு உலாவித்திரிந்து அறம் போலக் கூறும் சமண் சாக்கியர்கள் பழித்துரை கூறும் திறங்களைக் கேளாது, சுடுகாட்டில் நடனம் ஆடும் பூம்புகார்ச்ர்க்காட்டு இறைவன் திருவடிகளைச் சென்று அடைவீர்களாக.

<u>திருச்சாய்க்காடு</u>

நொம்பைந்து புடைத்தொல்கு
நூபுரஞ்சேர் மெல்லடியார்
அம்பந்தும் வரிக்கழலு
மரவஞ்செய் பூங்காழிச்
சம்பந்தன் றமிழ்பகர்ந்த
சாய்க்காட்டுப் பத்தினையும்
எம்பந்த மெனக்கருதி
யேத்துவார்க் கிடர்கெடுமே. **#447**

பந்து நோகுமாறு அதனைப் புடைத்துக்கொண்டு பாதங்களில் அணிந்த நூபுரம் ஒலிக்க அழகிய பந்துகளும் கழற் சிக்காய்களும் கொண்டு விளையாடி மகளிர் ஆரவாரிக்கும் அழகிய காழிப்பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன் பாடிய தமிழ்ப்பாடல்கள் பத்தையும் எமக்குப் பற்றுக் கோடு எனக்கருதிச் சாய்க்காட்டு இறைவனை ஏத்து வார்க்கு இடர்கள் கெடும்.

திருஆக்கூர்

திருஆக்கூர்

திருஆக்கூர்,
பண் - சீகாமரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சுயம்புநாதேசுவரர்.
தேவியார் : கட்கநேத்திரவம்மை.

அக்கிருந்த வாரமும்
ஆடரவும் ஆமையும்
தொக்கிருந்த மார்பினான்
தோலுடையான் வெண்ணீற்றான்
புக்கிருந்த தொல்கோயில்
பொய்யிலா மெய்ந்நெறிக்கே
தக்கிருந்தார் ஆக்கூரிற்
றான்றோன்றி மாடமே. **#448**

என்புமாலை, ஆடும் பாம்பு, ஆமைஒடு, ஆகியனவற்றை ஒருசேர அணிந்த மார்பினனும், திருவெண்ணீறு அணிந்தவனும், ஆகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள பழமை யான கோயில், பொய்யில்லாத மெய்ந் நெறியாகிய சைவ சமயத்தைச் சார்ந்தொழுகுவார் பலர் வாழும் ஆக்கூரில் விளங்கும் தான்தோன்றி மாடம் ஆகும்.

திருஆக்கூர்

நீரார வார்சடையான்
நீறுடையா னேறுடையான்
காரார்பூங் கொன்றையினான்
காதலித்த தொல்கோயில்
கூராரல் வாய்நிறையக்
கொண்டயலே கோட்டகத்தில்
தாராமல் காக்கூரிற்
றான்றோன்றி மாடமே. **#449**

கங்கை தங்கிய நீண்ட சடையினனும், திருநீறு அணிந்தவனும் விடையேற்றை ஊர்தியாகக் கொண்ட வனும், கார் காலத்தே மலரும் கொன்றை மலரைச் சூடியவனும் ஆகிய சிவபெருமான் விரும்பிய பழமையான கோயில் நாரைப் பறவைகள் மிகுதியான ஆரல்மீன்களை வாய் நிறைய எடுத்துக்கொண்டு நீர்க்கரைகளில் மிகுதியாக வாழும் ஆக்கூரில் விளங்கும் தான் தோன்றிமாடமாகும்.

திருஆக்கூர்

வாளார்கண் செந்துவர்வாய்
மாமலையான் றன்மடந்தை
தோளாகம் பாகமாப்
புல்கினான் தொல்கோயில்
வேளாள ரென்றவர்கள்
வள்ளன்மையான் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரிற்
றான்றோன்றி மாடமே. **#450**

ஒளி பொருந்திய கண்களையும், சிவந்தபவளம் போன்ற வாயினையும் உடையவனாய் இமவான் மகளாகிய பார்வதியை தன் திருமேனியின் ஒரு பாகமாகக் கொண்டு அவள் தோளைத் தழுவிய சிவபெருமானது பழமையான கோயில், வள்ளன்மை உடைய, பிறர்க்கு உபகாரியாக விளங்கும் ஊக்கமுடைய வேளாளர்கள் மிகுந்து வாழும் ஆக்கூரில் விளங்கும் தான்தோன்றி மாடம் ஆகும்.

திருஆக்கூர்

கொங்குசேர் தண்கொன்றை
மாலையினான் கூற்றடரப்
பொங்கினான் பொங்கொளிசேர்
வெண்ணீற்றான் பூங்கோயில்
அங்கமா றோடும்
அருமறைகள் ஐவேள்வி
தங்கினார் ஆக்கூரிற்
றான்றோன்றி மாடமே. **#451**

தேன் பொருந்திய குளிர்ந்த கொன்றை மாலையைச் சூடியவனும் இயமனை வருத்தச் சினந்தவனும் ஒளிமிக்க திருவெண்ணீற்றை அணிந்தவனும் ஆகிய சிவபெருமானது அழகிய கோயில், அரிய நான்கு வேதங்களோடு ஆறு அங்கங்களையும் கற்றுணர்ந்து ஐவகை வேள்விகளையும் புரியும் அந்தணர்கள் வாழும் ஆக்கூரில் உள்ள தான் தோன்றி மாடமாகும்.

திருஆக்கூர்

வீக்கினா னாடரவம்
வீழ்ந்தழிந்தார் வெண்டலையென்
பாக்கினான் பலகலன்கள்
ஆதரித்துப் பாகம்பெண்

ஆக்கினான் தொல்கோயில்
ஆம்பலம்பூம் பொய்கைபுடை
தாக்கினார் ஆக்கூரிற்
றான்றோன்றி மாடமே. **#452**

ஆடுகின்ற பாம்பைக் கச்சாக்கட்டியவரும், இறந்து அழிந்தவருடைய வெண்டலைகளையும், என்புகளையும் பல அணிகலன்களாக அணிந்தவரும், விரும்பி ஒருபாகமாகப் பெண்ணைக் கொண்டவரும் ஆகிய சிவபிரானது பழமையான கோயில் ஆம்பல் பூக்கள் மலரும் அழகிய பொய்கைக்கரையை உயர்த்திக் கட்டிய உழவர்கள் வாழும் ஆக்கூரில் உள்ள தான்தோன்றிமாடம் ஆகும்.

<u>திருஆக்கூர்</u>

பண்ணொளிசேர் நான்மறையான்
பாடலினோ டாடலினான்
கண்ணொளிசேர் நெற்றியினான்
காதலித்த தொல்கோயில்
விண்ணொளிசேர் மாமதியந்
தீண்டியக்கால் வெண்மாடம்
தண்ணொளிசேர் ஆக்கூரிற்
றான்றோன்றி மாடமே. **#453**

பண்ணமைதியும், அறிவொளியும் அமைந்த நான்கு வேதங்களையும் அருளியவனும், பாடலிலும் ஆடலிலும் வல்லவனும், ஒளிசெறிந்த கண்பொருந்திய நெற்றியினனும் ஆகிய சிவபெருமான் காதலித்த பழமையான கோயில், வானவெளியில் உலாவும் பெரிய மதியொளி சேர்தலால் வெண்மையான மாடவீடுகள் குளிர்ந்த ஒளியைப் பெறும் ஆக்கூரில் விளங்கும் தான் தோன்றிமாடம் ஆகும்.

<u>திருஆக்கூர்</u>

வீங்கினார் மும்மதிலும்
வில்வரையால் வெந்தவிய
வாங்கினார் வானவர்கள்
வந்திறைஞ்சுந் தொல்கோயில்
பாங்கினார் நான்மறையோ
டாறங்கம் பலகலைகள்
தாங்கினார் ஆக்கூரிற்
றான்றோன்றி மாடமே. **#454**

பெருமை மிக்கவரும், மும்மதில்களையும் வெந்து அழியுமாறு மலைவில்லை வளைத்தவரும், தேவர்களால் வந்து

வணங்கப்படுபவருமாகிய சிவபெருமான் எழுந்தருளிய பழமையான கோயில், பல பிரிவுகளுடன் கூடிய நான்மறைகளையும் ஆறு அங்கங்களையும் பலகலைகளையும் கற்றுணர்ந்த அந்தணர்கள் வாழும் ஆக்கூரில் உள்ள தான்தோன்றி மாடமாகும்.

திருஆக்கூர்

கன்னெடிய குன்றெடுத்தான்
தோளடரக் காலூன்றி
இன்னருளா லாட்கொண்ட
வெம்பெருமான் தொல்கோயில்
பொன்னடிக்கே நாடோறும்
பூவோடு நீர்சுமக்கும்
தன்னடியார் ஆக்கூரிற்
றான்றோன்றி மாடமே. **#455**

கற்கள் நிரம்பிய நீண்ட கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த இராவணனின் தோள்கள் நெரியுமாறு கால் விரலை ஊன்றிப் பின் அவன் வருந்தி வேண்ட அவனுக்கு இனிய கருணை காட்டி ஆட்கொண்ட எம்பெருமானின் பழமையான கோயில், சிவபிரானின் பொன்போன்ற திருவடிகளுக்கு நாள்தோறும் பூவும் நீரும் சுமக்கும் சிவனடியார்கள் பலர் வாழும் ஆக்கூரில் விளங்கும் தான் தோன்றிமடம் ஆகும்.

திருஆக்கூர்

நன்மையா னாரணனும்
நான்முகனுங் காண்பரிய
தொன்மையான் தோற்றங்கே
டில்லாதான் தொல்கோயில்
இன்மையாற் சென்றிரந்தார்க்
கில்லையென்னா தீந்துவக்குந்
தன்மையார் ஆக்கூரிற்
றான்றோன்றி மாடமே. **#456**

நன்மைகள் செய்பவனாகிய திருமாலும் நான்முகனும் காணுதற்கு அரிய பழமையோனும், பிறப்பிறப்பு இல்லாதவனும் ஆகிய சிவபிரானது பழமையான கோயில், இன்மையால் வந்து இரந்தவர்கட்கு இல்லை யென்று கூறாது ஈந்து மகிழும் தன்மையார் வாழும் ஆக்கூரில் விளங்கும் தான் தோன்றிமாடம் ஆகும்.

திருஆக்கூர்

நாமருவு புன்மை
நவிற்றச் சமண்டேரர்
பூமருவு கொன்றையினான்
புக்கமருந் தொல்கோயில்
சேன்மருவு பைங்கயத்துச்
செங்கழுநீர் பைங்குவளை
தாமருவு மாக்கூரிற்
றான்றோன்றி மாடமே. **#457**

சமணபௌத்தர்கள் நாவிற் பொருந்திய புன்மை மொழிகளால் அறியாது பிதற்றித்திரிய, கொன்றைப் பூக்கள் பொருந்திய சடைனினாகிய சிவபிரான் எழுந்தருளி அமரும் கோயில், சேல்மீன்கள் பொருந்திய நீர்நிலைகளில் செங்கழுநீர் பசுமையான குவளை மலர்கள் ஆகியன வளரும் வளமையைக் கொண்ட ஆக்கூரில் விளங்கும் தான் தோன்றிமாடம் ஆகும்.

<u>திருஆக்கூர்</u>

ஆட லமர்ந்தானை யாக்கூரிற் றான்றோன்றி
மாட மமர்ந்தானை
மாடஞ்சேர் தண்காழி
நாடற் கரியசீர்
ஞானசம் பந்தன்சொல்
பாட லிவைவல்லார்க்
கில்லையாம் பாவமே. **#458**

திருக்கூத்து ஆடுவதை விரும்புபவனாய், ஆக்கூரில் தான்தோன்றிமாடத்து எழுந்தருளிய சிவபிரானை ஏத்தி மாட வீடுகள் நிரம்பிய சீகாழிப்பதியில் தோன்றிய அறிதற்கரிய புகழினனாகிய ஞானசம்பந்தன் பாடிய இப்பதிகப்பாடல்கள் வல்லவர்கட்குப் பாவம் இல்லை.

திருப்புள்ளிருக்குவேளூர்

திருக்கடவூர்மயானம்

திருப்புள்ளிருக்குவேளூர்,
பண் - சீகாமரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது,
சுவாமிபெயர் : வைத்தியநாதர்.
தேவியார் : தையல்நாயகியம்மை.

கள்ளார்ந்த பூங்கொன்றை
மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம்
பெருமானா ருறையுமிடந்
தள்ளாய சம்பாதி
சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம்
புள்ளிருக்கு வேளூரே. **#459** ★★★★★

தேன்நிறைந்த அழகிய கொன்றைமலர், கடுநாற்றத்தை உடைய ஊமத்தைமலர், ஒளிபொருந்திய திங்கள் ஆகியன உள்ளே அமைந்து விளங்கும் சடையினனும், தள்ளத்தகாத பறவைப் பிறப்படைந்து சம்பாதி சடாயு எனப்பெயரிய இருவர் வழிபட அவர்கட்கு அரசனும் ஆகிய சிவபிரான் உறையும் இடம் புள்ளிருக்குவேளூர்.

திருக்கடவூர்மயானம்

தையலா ளொருபாகஞ்
சடைமேலா ளவளோடும்
ஐயந்தேர்ந் துழல்வாரோ
ரந்தணனா ருறையுமிடம்
மெய்சொல்லா விராவணனை
மேலோடி யீடழித்துப்
பொய்சொல்லா துயிர்போனான்
புள்ளிருக்கு வேளூரே. **#460**

ஒருபாகத்தே விளங்கும் தையல்நாயகியோடும் சடையின் மேல் பொருந்திய கங்கை நங்கையோடும் சென்று ஐயம் ஏற்று உழலும் அழகிய கருணையாளனும், உண்மை புகலாத இராவணனைப் பறந்து சென்று வலிமையை அழித்து அவனால் தாக்குண்டு, இராமனுக்கு நடந்த உண்மைகளைப் புகன்று உயிர்விட்ட சடாயுவால் வழிபடப்பட்டவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய இடம் புள்ளிருக்கு வேளூர்.

<u>திருக்கடவூர்மயானம்</u>

வாசநலஞ் செய்திமையோர்
நாடோறு மலர்தூவ
ஈசனெம் பெருமானார்
இனிதாக வுறையுமிடம்
யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங்
கொருநாளு மொழியாமே
பூசனைசெய் தினிதிருந்தான்
புள்ளிருக்கு வேளூரே. **#461**

தேவர்கள் தலவாசம் செய்து நாள்தோறும் தீர்த்த நீராடி நறு மலர்தூவி வழிபட விளங்கும் ஈசனும், எம் தலைவனும், யோசனை தூரம் சென்று மலர்பறித்து வந்து ஒருநாளும் தவறாமல் சம்பாதியால் பூசிக்கப்பட்டவனும் ஆகிய சிவபிரான் இனிதாக உறையும் இடம் புள்ளிருக்குவேளூர்.

<u>திருக்கடவூர்மயானம்</u>

மாகாயம் பெரியதொரு
மானுரிதோ லுடையாடை
ஏகாய மிட்டுகந்த
வெரியாடி யுறையுமிடம்
ஆகாயந் தேரோடு
மிராவணனை யமரின்கண்
போகாமே பொருதழித்தான்
புள்ளிருக்கு வேளூரே. **#462**

பெரிய தனது திருமேனியில் பெரியதொரு யானையினை உரித்து அதன்தோலை உடைவகையில் ஒன்றான மேலாடையாகப் போர்த்து மகிழ்ந்தவனும், எரியில் நின்று ஆடுபவனும், சீதையைக் கவர்ந்து வானில் தேரோடு விரைந்து சென்ற இராவணனோடு போரிட்டுத் தாக்கி அவனைப் போகாதவாறு செய்ய முயன்ற சடாயுவால் பூசிக்கப்பட்டவனும் ஆகிய சிவபிரான் உறையுமிடம் புள்ளிருக்குவேளூர்.

<u>திருக்கடவூர்மயானம்</u>

கீதத்தை மிகப்பாடு
மடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற
பரஞ்சோதி பயிலுமிடம்

வேதத்தின் மந்திரத்தால்
வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான்
புள்ளிருக்கு வேளூரே. **#463**

வேதகீதங்களை மிகுதியாகப் பாடும் அடியார்கள் கூடியிருந்து திருவடிகளைத் தொழுமாறு விளங்கி நிற்கும் ஒளி வடிவினனும், வெண்மணலைச் சிவலிங்கமாகத் திரட்டி வேதமந்திரங்களை ஓதி சடாயுவால் ஞானத்தோடு வழிபடப்பட்டவனுமாகிய சிவபிரான் எழுந்தருளிய இடம் புள்ளிருக்குவேளூர்.

<u>திருக்கடவூர்மயானம்</u>

திறங்கொண்ட வடியார்மேற்
றீவினைநோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்ம
முரைத்தபிரா னமருமிடம்
மறங்கொண்டங் கிராவணன்றன்
வலிகருதி வந்தானைப்
புறங்கண்ட சடாயென்பான்
புள்ளிருக்கு வேளூரே. **#464**

சைவத்திறம் மேற்கொண்ட அடியவர்மீது தீவினைகளால் வரும் துன்பங்கள் வாராமே செய்பவனும், சிவதன்மங்களாகிய அறநெறிகளை ஆலின் கீழ் இருந்து அருளியவனும் தனது வீரத்தையே பெரிதெனக்கருதி வந்த இராவணனை மறத்தொடு போரிட்டுப் புறங்கண்ட சடாயுவால் வழிபடப்பட்டவனுமாகிய சிவபிரான் அமரும் இடம் புள்ளிருக்குவேளூர்.

<u>திருக்கடவூர்மயானம்</u>

அத்தியினீ ருரிமூடி
யழகாக வனலேந்திப்
பித்தரைப்போற் பலிதிரியும்
பெருமானார் பேணுமிடம்
பத்தியினால் வழிபட்டுப்
பலகாலந் தவஞ்செய்து
புத்தியொன்ற வைத்துகந்தான்
புள்ளிருக்கு வேளூரே. **#465**

யானையை உரித்த தோலால் உடலை மூடிக்கொண்டு அழகாகக் கையில் அனலை ஏந்தி, பித்தர் போலப் பலியேற்றுத் திரியும் பெருமானும், பத்தியோடு வழிபட்டுப் பலகாலம் தவஞ்செய்து தன்

அறிவை இறை உணர்வொடு பொருந்தவைத்து மகிழ்ந்த சடாயுவால் வழிபடப்பட்டவனும் ஆகிய சிவபிரான் விரும்பும் இடம் புள்ளிருக்குவேளூர்.

திருக்கடவூர்மயானம்

பண்ணொன்ற இசைபாடு
மடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும்
மணிகண்டன் மருவுமிடம்
எண்ணின்றி முக்கோடி
வாணாள துடையானைப்
புண்ணொன்றப் பொருதழித்தான்
புள்ளிருக்கு வேளூரே. **#466**

பண்பொருந்த இசைபாடும் அடியவர்கள் குடியாக இருந்து வழிபட உலகியல் இன்பங்களை மட்டுமல்லாமல் விண்ணுலக இன்பங்களையும் அருளும் நீலமணி மிடற்றோனும், கணக்கில் அடங்காத மூன்று கோடி ஆண்டுகளை வாழ் நாளாகப் பெற்ற இராவணனொடு போரிட்டுப் புண்படும்படி செய்து அவன் வலிமையை அழித்த சடாயுவால் பூசிக்கப்பட்டவனுமாகிய சிவபிரான் மருவும் இடம் புள்ளிருக்கு வேளூர்.

திருக்கடவூர்மயானம்

வேதித்தார் புரமூன்றும்
வெங்கணையால் வெந்தவியச்
சாதித்த வில்லாளி
கண்ணாளன் சாருமிடம்
ஆதித்தன் மகனென்ன
வகன்ஞாலத் தவரோடும்
போதித்த சடாயென்பான்
புள்ளிருக்கு வேளூரே. **#467**

தன்னோடு பேதம் உற்ற அசுரர்களின் முப்புரங்களும் கொடிய கணையால் வெந்தவியுமாறு செய்த வில்லாளியும், கருணைக்கண்ணாளனும், ஆதித்தன் மகனாய் அகன்ற இந்நிலவுலக மக்களோடு பறவைவடிவாய்த் தோன்றி அறநெறி போதித்து வந்த சடாயுவால் வழிபடப்பட்டவனுமாகிய சிவபெருமான் சாரும் இடம் புள்ளிருக்குவேளூர்.

திருக்கடவூர்மயானம்

கடுத்துவருங் கங்கைதனைக்

கமழ்சடையொன் றாடாமே
தடுத்தவரெம் பெருமானார்
தாமினிதா யுறையுமிடம்
விடைத்துவரு மிலங்கைக்கோன்
மலங்கச்சென் றிராமறகாப்
புடைத்தவனைப் பொருதழித்தான்
புள்ளிருக்கு வேளூரே. **10 #468**

சினந்துவந்த கங்கையைத்தனது மணம்கமழும் சடை ஒன்றில் அதுவும் முற்றிலும் நனையாதவாறு தடுத்துத் தாங்கியவராகிய எம் தலைவரும், சீறிவந்த இராவணன் மயங்குமாறு சென்று இராமனுக்காக அவனைப்புடைத்து அவனோடு போரிட்டுத்தடுத்த சடாயுவால் வழிபடப்பெற்றவரும் ஆகிய சிவபெருமான் உறையுமிடம் புள்ளிருக்குவேளூர்.

<u>திருக்கடவூர்மயானம்</u>

செடியாய வுடல்தீர்ப்பான்
தீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமைசெய்த
புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக்
கவுணியன்சம் பந்தன்சொல்
மடியாது சொல்லவல்லார்க்
கில்லையாம் மறுபிறப்பே. **#469**

குணமில்லாத இவ்வுடலொடு பிறக்கும் பிறப்பை நீக்கியருளுவானும், தீவினை காரணமாகவரும் நோய்களுக்கு மருந்தாக இருந்து அருள்பவனும், மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியனும் ஆகிய சிவபெருமானுக்கு அடித்தொண்டு பூண்ட மணம் கமழும் பொழில் சூழ்ந்த காழிப்பதியுள் தோன்றிய கவுணியர்கோன் ஆகிய ஞானசம்பந்தன் பாடிய இப்பதிகச் சொல்மாலையைச் சோம்பியிராமல் சொல்லி வழிபடவல்லவர் கட்கு மறு பிறப்பு இல்லை.

திருஆமாத்தூர்

திருஆமாத்தூர்

திருஆமாத்தூர்,
பண் - சீகாமரம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அழகியநாதேசுவரர்.
தேவியார் : அழகியநாயகியம்மை.

துன்னம்பெய் கோவணமுந் தோலு முடையாடை
பின்னஞ் சடைமேலோர் பிள்ளை மதிசூடி
அன்னஞ்சேர் தண்கான லாமாத்தூ ரம்மான்றன்
பொன்னங் கழல்பரவாப் பொக்கமும் பொக்கமே. **#470**

தைத்தல் அமைந்த கோவணத்தை உடையாகவும், யானைத் தோலைமேல் ஆடையாகவும் கொண்டு பின்னிய சடைமீது இளம்பிறையைச் சூடி, அன்னங்கள் வாழும் குளிர்ந்த சோலைகளைக் கொண்டுள்ள திருஆமாத்தூரில் விளங்கும் இறைவனின் பொன் போன்ற அழகிய திருவடிகளைப் பரவாதவர் பொலிவு பொலிவாகுமா?

திருஆமாத்தூர்

கைம்மாவின் றோல்போர்த்த காபாலி வானுலகில்
மும்மா மதிலெய்தான் முக்கணான் பேர்பாடி
அம்மா மலர்ச்சோலை யாமாத்தூ ரம்மானெம்
பெம்மானென் றேத்தாதார் பேயரிற் பேயரே. **#471**

யானைத் தோலைப் போர்த்துள்ள காபாலியும், வானுலகில் திரிந்து இடம் விளைத்த முப்புரங்களை எய்தழித்தவனும், முக்கண்ணனும் ஆகிய சிவபிரானின் புகழைப்பாடி அழகிய பெரிய மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த ஆமாத்தூர் அம்மானே எம் தலைவன் என்று ஏத்தாதார் பேயர்களினும் பேயராவர்.

திருஆமாத்தூர்

பாம்பரைச் சாத்தியோர் பண்டரங்கன் விண்டதோர்
தேம்ப லிளமதியஞ் சூடிய சென்னியான்
ஆம்பலம்பூம் பொய்கை யாமாத்தூ ரம்மான்றன்
சாம்ப லகலத்தார் சார்பல்லாற் சார்பிலமே. **#472**

பாம்பை இடையில் கட்டியவன். ஒப்பற்ற பாண்டரங்கம் என்னும் திருக்கூத்தை ஆடியவன். வாய்பிளந்து மெலிந்ததோர் இளமதியைச் சூடிய சென்னியன். ஆம்பல் பூக்கள் மலர்ந்த பொய்கைகளை உடைய

ஆமாத்தூரில் எழுந்தருளியவன். சாம்பல் பூசிய மார்பினனாய அப்பெருமானின் அடியவர்களின் சார்பு அல்லால் பிறிதொரு சார்பு நமக்கு இல்லை.

திருஆமாத்தூர்

கோணாகப் பேரல்குற் கோல்வளைக்கை மாதராள்
பூணாகம் பாகமாப் புல்கி யவளோடும்
ஆணாகங் காதல்செய் ஆமாத்தூ ரம்மானைக்
காணாத கண்ணெல்லாங் காணாத கண்களே. **#473**

வலிய நாகத்தின் படம் போன்ற பெரிய அல்குலையும், திரண்ட வளையல்கள் அணிந்த கைகளையும் உடைய பார்வதி தேவியின் அணிகலன்கள் அணிந்த திருமேனியைத் தனது இடப்பாகமாகக் கொண்டு அவ்வம்மையோடு ஆண் உடலோடு விளங்கும் தான் காதல் செய்து மகிழும் ஆமாத்தூர் அம்மானைக் காணாத கண்கள் எல்லாம் குருட்டுக் கண்களேயாகும்.

திருஆமாத்தூர்

பாடனெறிநின்றான் பைங்கொன்றைத் தண்டாரே
சூடனெறிநின்றான் சூலஞ்சேர் கையினான்
ஆடனெறிநின்றா னாமாத்தூ ரம்மான்றன்
வேடநெறிநில்லா வேடமும் வேடமே. **#474**

பாடும் நெறி நிற்பவனும், பசிய தண்மையான கொன்றை மாலையைச் சூடும் இயல்பினனும், சூலம் பொருந்திய கையினனும் ஆடும் நெறி நிற்போனும் ஆகிய ஆமாத்தூர் அம்மான் கொண்டருளிய மெய்வேடங்களாகிய மார்க்கங்களைப் பின்பற்றாதார் மேற்கொள்ளும் வேடங்கள் பொய்யாகும்.

திருஆமாத்தூர்

சாமவரை வில்லாகச் சந்தித்த வெங்கணையால்
காவன் மதிலெய்தான் கண்ணுடை நெற்றியான்
யாவருஞ் சென்றேத்து மாமாத்தூ ரம்மானத்
தேவர் தலைவணங்குந் தேவர்க்குந் தேவனே. **#475**

பொன்மயமான மேருமலையை வில்லாகக் கொண்டு அதன்கண் பொருந்திய கொடியகணையால் காவலை உடைய மும்மதில்களை எய்து அழித்தவனும், நெற்றிக்கண்ணனும் எல்லோரும் சென்று வணங்கிப் போற்றும் ஆமாத்தூர் அம்மானும் ஆகிய சிவபிரான் தேவர்கள் தலை வணங்கும் இந்திரனுக்கும் தேவன் ஆவன்.

திருஆமாத்தூர்

மாறாத வெங்கூற்றை மாற்றி மலைமகளை
வேறாக நில்லாத வேடமே காட்டினான்
ஆறாத தீயாடி யாமாத்தூ ரம்மானைக்
கூறாத நாவெல்லாங் கூறாத நாக்களே. **#476**

யாவராலும் ஒழிக்கப் படாத கூற்றுவனை ஒழித்து, மலைமகளைத் தனித்து வேறாக நில்லாது தன் திருமேனியிலேயே ஒரு பாதியை அளித்து மாதொரு பாகன் என்ற வடிவத்தைக் காட்டியவனும், ஆறாத தீயில் நின்று ஆடுபவனும் ஆகிய ஆமாத்தூர் இறைவன் புகழைக் கூறாத நாக்குடையவர் நாவிருந்தும் ஊமையர் எனக் கருதப்படுவர்.

திருஆமாத்தூர்

தாளா லரக்கன்றோள் சாய்த்த தலைமகன்றன்
நாளா திரையென்றே நம்பன்ற னாமத்தால்
ஆளானார் சென்றேத்து மாமாத்தூ ரம்மானைக்
கேளாச் செவியெல்லாங் கேளாச் செவிகளே. **#477**

தோல்வி உறாத இராவணனின் தோள் வலிமையை அழித்த தலைவனாகிய சிவபெருமானுக்கு உகந்த நாள் திருவாதிரையாகும் எனக்கருதித் தங்கள் விருப்புக்கு உரியவனாகிய, அடியவர் சென்று வழிபடும் ஆமாத்தூர் அம்மான் புகழைக் கேளாச்செவிகள் எல்லாம் செவிட்டுச் செவிகள் ஆகும்.

திருஆமாத்தூர்

புள்ளுங் கமலமுங் கைக்கொண்டார் தாமிருவர்
உள்ளு மவன்பெருமை யொப்பளக்குந் தன்மையதே
அள்ளல் விளைகழனி யாமாத்தூ ரம்மானெம்
வள்ளல் கழல்பரவா வாழ்க்கையும் வாழ்க்கையே. **#478**

கருடப்பறவை தாமரை ஆகியவற்றை இடமாகக் கொண்ட திருமால் பிரமன் ஆகிய இருவரால் தியானிக்கப்படும் சிவபிரானது பெருமை அளவிடற்கு உரியதோ? சேறாக இருந்து நெற்பயிர் விளைக்கும் கழனிகள் சூழ்ந்த ஆமாத்தூர் அம்மானாகிய எம் வள்ளலின் திருவடிகளை வணங்காத வாழ்க்கையும் வாழ்க்கை யாமோ?

திருஆமாத்தூர்

பிச்சை பிறர்பெய்யப் பின்சாரக் கோசாரக்
கொச்சை புலானாற வீருரிவை போர்த்துகந்தான்
அச்சந்தன் மாதேவிக் கீந்தான்ற னாமாத்தூர்

நிச்ச னினையாதார் நெஞ்சமு நெஞ்சமே. **#479**
மகளிர் பிச்சையிட்டுப் பின்னே வர, தன்தலைமைத்தன்மை கெடாதபடி, உமையம்மை அஞ்ச இழிவான புலால் மணம் வீசும் யானைத் தோலைப் போர்த்து அழியாது மகிழ்ந்தவனாகிய சிவபிரானது ஆமாத்தூரை நாள்தோறும் நினையாதார் நெஞ்சம் நெஞ்சாகுமா?.

<u>திருஆமாத்தூர்</u>

ஆட லரவசைத்த வாமாத்தூ ரம்மானைக்
கோட லிரும்புறவிற் கொச்சை வயத்தலைவன்
நாட லரியசீர் ஞானசம் பந்தன்றன்
பாட லிவைவல்லார்க் கில்லையாம் பாவமே. **#480**
படம் விரித்து ஆடும் பாம்பை இடையில் கட்டிய ஆமாத்தூர் அம்மானைக் காந்தள் மலரும் கரிய காடுகளைக் கொண்ட கொச்சைவயம் என்னும் சீகாழிப் பதிக்குத் தலைவனாகிய நாடற்கு அரிய புகழை உடைய ஞானசம்பந்தன் பாடியருளிய இப்பாடல்களை வல்லவர்க்குப் பாவம் இல்லை.

திருக்கைச்சினம்

திருக்கைச்சினம்

திருக்கைச்சினம்,
பண் - சீகாமரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கைச்சினநாதர்.
தேவியார் : வேள்வளையம்மை.

தையலோர் கூறுடையான்
தண்மதிசேர் செஞ்சடையான்
மையுலா மணிமிடற்றான்
மறைவிளங்கு பாடலான்
நெய்யுலா மூவிலைவேல்
ஏந்தி நிவந்தொளிசேர்
கையுடையான் மேவியுறை
கோயில் கைச்சினமே. **#481**

மாதொருபாகனும், குளிர்ந்த பிறைமதி சூடிய செஞ்சடையினனும் கருமை விரவிய நீலமணி மிடற்றானும், வேதப்பாடல்களைப் பாடுவோனும், நெய் பூசப் பெற்ற மூவிலை வடிவமான சூலத்தை ஏந்திப் பெருகி ஒளிர்கின்ற கையை உடையோனும் ஆகிய சிவபிரான் மேவி உறையும் கோயில் கைச்சினமாகும்.

திருக்கைச்சினம்

விடமல்கு கண்டத்தான்
வெள்வளையோர் கூறுடையான்
படமல்கு பாம்பரையான்
பற்றாதார் புரமெரித்தான்
நடமல்கு மாடலினான்
நான்மறையோர் பாடலினான்
கடமல்கு மாவுரியான்
உறைகோயில் கைச்சினமே. **#482**

விடம் பொருந்திய கண்டத்தினனும், வெண்மையான வளையல்களை உடைய உமையம்மையை ஒருபாகமாக உடையவனும், படம் எடுத்தாடும் பாம்பினை அரையில் கட்டியவனும், பகைவரின் முப்புரங்களை எரித்தவனும், நடனம் ஆடுபவனும், நான்மறைகளைப் பாடுபவனும், மதயானையை உரித்த தோலினனும் ஆகிய சிவபிரான் உறையும் கோயில் கைச்சினம்.

திருக்கைச்சினம்

பாடலார் நான்மறையான்
பைங்கொன்றை பாம்பினொடும்
சூடலான் வெண்மதியந்
துன்று கரந்தையொடும்
ஆடலா னங்கை
யனலேந்தி யாடரவக்
காடலான் மேவியுறை
கோயில் கைச்சினமே. **#483**

பாடல்களோடு கூடிய நான்மறைகளை அருளியவனும், பசிய கொன்றையைப் பாம்போடு சூடியவனும், வெண்மையான பிறைமதி, செறிந்த கரந்தைத்தளிர் ஆகியன சூடி ஆடுபவனும், அழகிய கையில் அனல் ஏந்தி, ஆடும் அரவுடன் இடுகாட்டில் உறைபவனும் ஆகிய சிவபிரான் மேவி உறையும் கோயில் கைச்சினம்.

திருக்கைச்சினம்

பண்டமரர் கூடிக்
கடைந்த படுகடல்நஞ்
சுண்டபிரா னென்றிறைஞ்சி
யும்பர் தொழுதேத்த
விண்டவர்கள் தொன்னகர
மூன்றுடனே வெந்தவியக்
கண்டபிரான் மேவியுறை
கோயில் கைச்சினமே. **#484**

முற்காலத்தே தேவர்கள் கூடித்திருப்பாற் கடலைக் கடைந்த போது தோன்றிய நஞ்சினை உண்ட தலைவன் என்ற நன்றி உணர்வோடு தேவர்கள் தொழுது ஏத்தப், பகைவருடைய பழமையான முப்புரங்களையும் வெந்தழியுமாறு செய்தவனாகிய சிவபிரான் மேவி உறையும் கோவில் கைச்சினம்.

திருக்கைச்சினம்

தேய்ந்துமலி வெண்பிறையான்
செய்யதிரு மேனியினான்
வாய்ந்திலங்கு வெண்ணீற்றான்
மாதினையோர் கூறுடையான்
சாய்ந்தமரர் வேண்டத்
தடங்கடனஞ்சுண்டநங்கைக்

காய்ந்தபிரான் மேவியுறை
கோயில் கைச்சினமே. **#485**
தேய்ந்து வளரும் வெண்பிறையை அணிந்தவனும், சிவந்த திருமேனியினனும், பொருந்த விளங்கும் வெண்ணீற்றினனும், மாதொருகூறனும், வருந்தி அமரர் வேண்டப் பெரியகடலிடைத் தோன்றிய நஞ்சினை உண்டவனும், மன்மதனை எரித்தவனும் ஆகிய சிவபெருமான் மேவி உறையும் கோயில் கைச்சினம்.

<u>திருக்கைச்சினம்</u>

மங்கையோர் கூறுடையான்
மன்னு மறைபயின்றான்
அங்கையோர் வெண்டலையா
னாடரவம் பூண்டுகந்தான்
திங்களொடு பாம்பணிந்த
சீரார் திருமுடிமேல்
கங்கையினான் மேவியுறை
கோயில் கைச்சினமே. **#486**
மாதொரு கூறனும், நிலையான வேதங்களை ஓதுபவனும், அழகிய கையில் வெள்ளியதொரு தலையோட்டை ஏந்தியவனும், ஆடும் பாம்பினைப் பூண்டு மகிழ்ந்தவனும், முடியில் திங்கள், பாம்பு, கங்கை ஆகியவற்றைச் சூடியவனும் ஆகிய சிவபெருமான் மேவி உறையும் கோயில் கைச்சினம்.

<u>திருக்கைச்சினம்</u>

வரியரவே நாணாக
மால்வரையே வில்லாக
எரிகணையான் முப்புரங்க
ளெய்துகந்த வெம்பெருமான்
பொரிசுடலை யீமப்
புறங்காட்டான் போர்த்ததோர்
கரியுரியான் மேவியுறை
கோயில் கைச்சினமே. **#487**
வரிகளை உடைய பாம்பினை நாணாகவும், பெரிய மலையை வில்லாகவும் கொண்டு எரிபொருந்திய கணையால் முப்புரங்களை எய்து அழித்து மகிழ்ந்த எமது பெருமானும், நெற் பொறியைத் தூவும் சுடலையாகிய ஈமப்புறங்காட்டில் ஆடுபவனும், கரியுரி போர்த்தவனும் ஆகிய சிவபெருமான் மேவி உறையும் கோயில் கைச்சினம்.

திருக்கைச்சினம்

போதுலவு கொன்றை
புனைந்தான் றிருமுடிமேல்
மாதுமையா ளஞ்ச
மலையெடுத்த வாளரக்கன்
நீதியினா லேத்த
நிகழ்வித்து நின்றாடும்
காதலினான் மேவியுறை
கோயில் கைச்சினமே. **#488**

உமைமாது அஞ்சக் கயிலை மலையைப் பெயர்த்த வாளரக்கனாகிய இராவணன் முறையோடு துதி அவனை முன்போல விளங்கச் செய்து திருமுடிமேல் கொன்றைமலர் மாலையைப் புனைந்தவனும், இடுகாட்டில் நின்று ஆடுவதில் விருப்பமுடையவனும் ஆகிய சிவபெருமான் மேவி உறை கோயில் கைச்சினம்.

திருக்கைச்சினம்

மண்ணினைமுன் சென்றிரந்த
மாலும் மலரவனும்
எண்ணறியா வண்ண
மெரியுருவ மாயபிரான்
பண்ணிசையா லேத்தப்
படுவான்றன் னெற்றியின்மேல்
கண்ணுடையான் மேவியுறை
கோயில் கைச்சினமே. **#489**

மாவலியிடம் மூன்றடி மண் இரந்த திருமாலும், தாமரைமலர் மேல் உறையும் நான்முகனும் எண்ணவும் இயலாதவாறு எரியுருவாய் நீண்ட பிரானும், அடியவர்களால் பண்ணிசையோடு ஏத்தப்படுபவனும், நெற்றிக் கண்ணனும் ஆகிய சிவபிரான் மேவி உறையும் கோயில் கைச்சினம்.

திருக்கைச்சினம்

தண்வயல்சூழ் காழித்
தமிழ்ஞான சம்பந்தன்
கண்ணுதலான் மேவியுறை
கோயில் கைச்சினத்தைப்
பண்ணிசையா லேத்திப்
பயின்ற விவைவல்லார்

விண்ணவரா யோங்கி
வியனுலகம் ஆள்வாரே. #490
குளிர்ந்த வயல்களால் சூழப்பட்ட காழிப்பதியில் தோன்றிய தமிழ் ஞானசம்பந்தன் நுதல் விழிநாட்டத்து இறையோன் மேவி உறையும் கோயிலைக் கொண்டுள்ள கைச்சினத்தைப் பண்ணிசையோடு ஏத்திப்பாடிய இப்பதிகத்தை ஓத வல்லவர் விண்ணவராய் உயர்ந்து அகன்ற அவ்வுலகை ஆட்சிபுரிவர்.

திருநாலூர்த்திருமயானம்

திருநாலூர்த்திருமயானம்

திருநாலூர்த்திருமயானம்,
பண் - சீகாமரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பலாசவனேசுவரர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

பாலூரு மலைப்பாம்பும்
பனிமதியு மத்தமும்
மேலூருஞ் செஞ்சடையான்
வெண்ணூல்சேர் மார்பினான்
நாலூர் மயானத்து
நம்பான்ற னடிநினைந்து
மாலூருஞ் சிந்தையர்பால்
வந்தூரா மறுபிறப்பே. **#491**

பக்கத்தே ஊர்ந்து செல்லும் மலைப்பாம்பு, குளிர்ந்த மதி, ஊமத்தை மலர் ஆகியனமேலே பொருந்தப் பெற்ற செஞ்சடையினனும், வெண்மையான பூணநூல் சேர்ந்த மார்பினனும் ஆகிய நாலூர் மயானத்து இறைவன் திருவடிகளை நினைந்து மயங்கும் மனமுடையார்க்கு மறுபிறப்பு வந்து பொருந்தாது.

திருநாலூர்த்திருமயானம்

சூடும் பிறைச்சென்னிச்
சூழ்கா டிடமாக
ஆடும் பறைசங்
கொலியோ டழகாக
நாடுஞ் சிறப்போவா
நாலூர் மயானத்தைப்
பாடுஞ் சிறப்போர்பாற்
பற்றாவாம் பாவமே. **#492**

பிறை சூடிய சென்னியுடன், காடு சூழ்ந்த சுடுகாட்டில் பறை சங்கு ஒலிகளுடன் அழகாக ஆடுபவன் எழுந்தருளிய, பலராலும் நாடும் சிறப்புக்குன்றாத நாலூர் மயானத்தைப் பாடும் சிறப்புடையோரைப் பாவம் பற்றா.

திருநாலூர்த்திருமயானம்

கல்லா னிழன்மேவிக்
காமுறுசீர் நால்வர்க்கன்
றெல்லா வறனுரையும்
இன்னருளால் சொல்லினான்
நல்லார் தொழுதேத்தும்
நாலூர் மயானத்தைச்
சொல்லா தவரெல்லாஞ்
செல்லாதார் தொன்னெறிக்கே. **#493**

கல்லால மரநிழலில் எழுந்தருளியிருந்து, விரும்பி வந்த புகழ் உடையவராகிய சனகாதி நால்வர்க்கு அன்று எல்லா அறவுரைகளையும் இன்னருளால் சொன்னவனாய் எழுந்தருளிய நல்லவர் தொழுது ஏத்தும் நாலூர் மயானத்து இறைவன் புகழைச் சொல்லாதவர் சைவநெறிக்கண் செல்லாதவர் ஆவர்.

<u>திருநாலூர்த்திருமயானம்</u>

கோலத்தார் கொன்றையான்
கொல்புலித்தோ லாடையான்
நீலத்தார் கண்டத்தான்
நெற்றியோர் கண்ணினான்
ஞாலத்தார் சென்றேத்தும்
நாலூர் மயானத்தில்
சூலத்தா னென்பார்பாற்
சூழாவாந் தொல்வினையே. **#494**

அழகால் நிறைந்த கொன்றைமாலையைச் சூடியவன், கொல்லும் புலியினது தோலை ஆடையாக உடுத்தவன், நீலநிறம் பொருந்திய கண்டத்தினன். நெற்றிக்கண்ணன், உலகோர் சென்று பரவிப்புகழும் நாலூர் மயானத்தில் விளங்கும் சூலத்தினன் என்பாரைத் தொல்வினை சூழா.

<u>திருநாலூர்த்திருமயானம்</u>

கறையார் மணிமிடற்றான்
காபாலி கட்டங்கன்
பிறையார் வளர்சடையான்
பெண்பாக னண்பாய
நறையார் பொழில்புடைசூழ்
நாலூர் மயானத்தெம்
இறையானென் றேத்துவார்க்
கெய்துமா மின்பமே. **#495**

விடக்கறை பொருந்திய நீலமணி போன்ற மிடற்றினன். கையில் கபாலம் ஏந்தியவன். மழுஏந்தியவன். பிறை வளரும் சடைமுடியினன். தன்பால் நட்புக்கொண்ட பெண்பாகன். தேன் பொருந்திய பொழில்கள் புடையே சூழ்ந்துள்ள நாலூர் மயானத்து இறைவன் என்று அவனை ஏத்துபவர்க்கு இன்பம் வந்துறும்.

திருநாலூர்த்திருமயானம்

கண்ணார் நுதலான்
கனலா டிடமாகப்
பண்ணார் மறைபாடி
ஆடும் பரஞ்சோதி
நண்ணார் புரமெய்தான்
நாலூர் மயானத்தை
நண்ணா தவரெல்லாம்
நண்ணாதார் நன்னெறியே. **#496**

கண்பொருந்திய நுதலினனும், கனலை ஆடும் களமாகக் கொண்டவனும் பண்ணமைதியுடைய வேதங்களைப் பாடுவோனும், நடனம் ஆடும் பரஞ்சோதியும், பகைவருடைய முப்புரங்களை எய்தவனும் ஆகிய சிவபெருமான் உறையும் நாலூர் மயானத்தை நண்ணாதவர் எல்லாம் நன்னெறியைச் சாரார்.

திருநாலூர்த்திருமயானம்

கண்பாவு வேகத்தாற்
காமனைமுன் காய்ந்துகந்தான்
பெண்பாவு பாகத்தான்
நாகத்தோ லாகத்தான்
நண்பார் குணத்தோர்கள்
நாலூர் மயானத்தை
எண்பாவு சிந்தையார்க்
கேலா விடர்தானே. **#497**

நெற்றிக் கண்ணிலிருந்து பரவிய வெம்மை வேகத்தால் மன்மதனைக் காய்ந்து உகந்தவனும், மாதொருபாகனும் யானைத் தோல் போர்த்த மார்பினனும் ஆகிய சிவபெருமான் உறை வதும் நட்புக்குணம் அமைந்தோர் வாழ்வதுமான நாலூர் மயானத்தைத் தியானிக்கும் சிந்தையை உடையார்க்கு இடர் வாரா.

திருநாலூர்த்திருமயானம்

பத்துத் தலையோனைப்

பாதத் தொருவிரலால்
வைத்து மலையடர்த்து
வாளோடு நாள்கொடுத்தான்
நத்தி னொலியோவா
நாலூர் மயானத்தென்
அத்த னடிநினைவார்க்
கல்ல லடையாவே. **#498**

பத்துத்தலைகளை உடைய இராவணனைப் பாதத்து ஒரு விரலால் மலையின் கீழ் அகப்படுத்தி அடர்த்து, பின் அவனுக்கு வாளும் நாளும் கொடுத்தவனும், சங்கொலி முழங்கும் நாலூர் மயானத்தில் விளங்கும் என் தலைவனுமான சிவபெருமான் திருவடிகளை நினைவாரை அல்லல்கள் அடையா.

<u>திருநாலூர்த்திருமயானம்</u>

மாலோடு நான்முகனும்
நேட வளரெரியாய்
மேலோடு கீழ்காணா
மேன்மையான் வேதங்கள்
நாலோடு மாறங்கம்
நாலூர் மயானத்தெம்
பாலோடு நெய்யாடி
பாதம் பணிவோமே. **#499**

திருமாலும் நான்முகனும் தேடிமேலொடு கீழ் காணாவகையில் வளர் எரியாய் நின்ற மேன்மையாளனும் நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் அருளியவனும் நாலூர் மயானத்துப் பாலும் நெய்யும் ஆடி மகிழ்பவனும் ஆய எம்பெருமானின் பாதங்களைப் பணிவோம்.

<u>திருநாலூர்த்திருமயானம்</u>

துன்பாய மாசார்
துவராய போர்வையார்
புன்பேச்சுக் கேளாதே
புண்ணியனை நண்ணுமின்கள்
நண்பாற் சிவாயவெனா
நாலூர் மயானத்தே
இன்பா யிருந்தானை
யேத்துவார்க் கின்பமே. **#500**

துன்பமாகிய அழுக்குடையவர்களும், பழுப்பாகிய போர்வையை அணிந்தவர்களுமான சமணபௌத்தர்களின் பொருளற்ற பேச்சுக்களைக்

கேளாது புண்ணியத்தின் வடிவாய் விளங்கும் பெருமானை நட்போடு 'சிவாய' என்னும் மந்திரத்தைக் கூறிக்கொண்டு நண்ணுங்கள். அப்பெருமான் நாலூர் மயானத்தில் இன்பவடிவினனாய் இருந்தருளுகின்றான். அவனை ஏத்துவார்க்கு இன்பம் விளையும்.

திருநாலூர்த்திருமயானம்

ஞாலம் புகழ்காழி
ஞானசம் பந்தன்றான்
நாலு மறையோதும்
நாலூர் மயானத்தைச்
சீலம் புகழாற்
சிறந்தேத்த வல்லாருக்
கேலும் புகழ்வானத்
தின்பா யிருப்பாரே. **#501**

உலகம்புகழும் காழிப்பதியில் தோன்றிய ஞான சம்பந்தன், நான்மறைகளை அந்தணர் ஓதும் நாலூர் மயானத்தில் விளங்கும் பெருமானின் சீலத்தையும் புகழையும் போற்றிப்பாடிய இப்பதிகத்தைச் சிறந்தமுறையில் ஓதிவழிபட வல்லவர்க்கு உயரிய புகழ் கூடும். வான் உலகில் இன்பம் ஆர்ந்து இருத்தல் இயலும்.

திருமயிலாப்பூர்

திருமயிலாப்பூர்

திருமயிலாப்பூர்,
பண் - சீகாமரம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கபாலீசுவரர்.
தேவியார் : கற்பகவல்லியம்மை. இது எலும்பு பெண்ணாக ஓதியருளிய பதிகம்.

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். **#502** ★★★★★

பூம்பாவாய்! தேன்பொருந்திய அழகிய. புன்னை மரச் சோலைகள் சூழ்ந்ததும், இளமயில்கள் ஆரவாரிப்பதுமான ஊரில் உள்ள கபாலீச்சரம் என்னும் கோயிலில் விருப்பத்தோடு அமர்ந்தவன் மீது நெருக்கமான அன்புடைய மாகேசுரர்களுக்குத் திருவிழாக்காலங்களில் அன்பர்கள் அமுது செய்விக்கும் காட்சிகளைக் காணாது செல்வது முறையோ?

திருமயிலாப்பூர்

மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
ஐப்பசி யோண விழாவு மருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய். **#503**

பூம்பாவாய்! மைபூசப்பெற்ற ஒளிநிறைந்த கண்களை உடைய இளமகளிர் வாழும் திருமயிலையில் கபாலீச்சரம் என்னும் கோயிலில் கைமேல் பயன்தரும் திருநீற்றை அணிந்தவனாய் அமர்ந்துள்ள பெருமானுக்கு நிகழ்த்தும் ஐப்பசி ஓண விழாவையும் அருந்தவமுனிவர் அமுதுண்ணும் காட்சிகளையும் காணாது செல்வது முறையோ?

திருமயிலாப்பூர்

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான்றொல் கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய். **#504**

பூம்பாவாய்! வளையல்கள் அணிந்த இளமகளிர் வாழும் வளமான தெருக்களைக் கொண்டுள்ள மாமயிலையில் விளங்கும், தளர்வற்ற

கபாலீச்சரம் என்னும் கோயிலில் விளங்கும் பெருமானைக் கார்த்திகைத் திங்களில் நிகழும் விழாக்களின்போது சாந்தணிந்த இள நகில்களைக் கொண்ட மகளிர் திருவிளக்குகள் ஏற்றிக் கொண்டாடும் காட்சியைக் காணாது செல்வது முறையோ?

<u>திருமயிலாப்பூர்</u>

ஊர்திரை வேலை யுலாவு முயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
ஆர்திரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய். **#505**

பூம்பாவாய்! ஊர்ந்து வரும் அலைகள் வந்து உலாவும் கடலை அடுத்துள்ள உயர்ந்த மயிலாப்பூரில், கூரிய வேலால் மீன்களைக் கொல்வதில் வெற்றிகாணும் நெய்தற்சேரியில் மழைவளம் தந்ததால் வளர்ந்த சோலைகள் சூழ்ந்த கபாலீச்சரம் என்னும் கோயிலில் விளங்கும் பெருமானுக்குத் திருவாதிரை நாளில் நிகழ்த்தும் விழாவைக் காணாது செல்வது முறையோ?

<u>திருமயிலாப்பூர்</u>

மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்ப்பூசுமொண்புழுக்கனேரிழையார்கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய். **#506**

பூம்பாவாய்! மைபூசிய ஒளிநிறைத் கண்களை உடைய இளமகளிர் வாழும் சிறந்த மயிலாப்பூரில் உள்ள கபாலீச்சரம் என்னும் கோயிலில் கைகளில் நீறுபூசியவனாய் அமர்ந்துள்ள பெருமானுக்கு அணிகலன் பூண்டுள்ள மகளிர் நெய்யொழுகும் சிறந்த பொங்கல் படைத்துக் கொண்டாடும் தைப்பூச விழாவைக் காணாது செல்வது முறையோ?

<u>திருமயிலாப்பூர்</u>

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
அடலானே றூரு மடிக ளடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய். **#507**

பூம்பாவாய்! மடல்கள் நிறைந்த தென்னைமரங்கள் மிகுந்த மயிலாப்பூரில் மாசிமகநாளில் கடலாட்டுக் கொண்ட களிப்பொடு கபாலீச்சரம் என்னும் கோயிலில் எழுந்தருளியிருப்பவனும், வலிமை பொருந்திய ஆனேற்றில் ஊர்ந்து வருபவனும் ஆகிய இறைவன் புகழ் பரவி அப்பெருமானது நடனமாடும் காட்சியைக் காணாது செல்வது

முறையோ?

திருமயிலாப்பூர்

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்தரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய். **#508**

பூம்பாவாய்! இளம் பெண்கள் வாழும் விழாக்கள் நிறைந்த வீதிகளைக் கொண்ட பெரிய மயிலையில் எழுச்சியை விளைவிக்கும் திருவிழாக்களைக் கண்டு அங்குள்ள கபாலீச்சரம் என்னும் கோயிலில் அமர்ந்தானது பலி அளிக்கும் விழாவாகப் பங்குனி உத்தரநாளில் நிகழும் ஆரவாரமான விழாவைக் காணாது செல்வது முறையோ?

திருமயிலாப்பூர்

தண்ணா வரக்கன்றோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச் சரமமர்ந்தான்
பண்ணார் பதினெண் கணங்கடம் மட்டமிநாள்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய். **#509**

பூம்பாவாய்! வெம்மையான இயல்புடைய இராவணனின் தோள்களை நெரித்துகந்த திருவடிகளை உடையவனாய், கண்களுக்கு நிறைவு தரும் மயிலையில் உள்ள கபாலீச்சரத்தில் அமர்ந்துள்ளவனுக்கு, பண்ணோடு பாடும் பதினெண்கணத்தினரும் ஏத்தும் வகையில் சித்திரை அட்டமியில் நிகழும் விழாவைக் கண்ணாரக் கண்டுமகிழாது செல்வது முறையோ?

திருமயிலாப்பூர்

நற்றா மரைமலர்மே னான்முகனு நாரணனும்
முற்றாங் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்க ளேத்துங் கபாலீச் சரமமர்ந்தான்
பொற்றாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய். **#510**

பூம்பாவாய்! நல்ல தாமரைமலர் மேல் உறையும் நான்முகனும் திருமாலும் முழுவதும் அறியாதவாறு அழலுருவாய் ஓங்கிய, மூர்த்தி தன் திருவடிகளைக் கற்றவர்பரவக் கபாலீச்சரம் அமர்ந்து உறைவோன். அப்பெருமானுக்கு நிகழும் ஊஞ்சலாட்டுத் திருவிழாவைக் காணாது செல்லல் முறையோ?

திருமயிலாப்பூர்

உரிஞ்சாய வாழ்க்கை யமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப நாட்டில்

கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரத்தான்றன்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய். **#511**
பூம்பாவாய்! உடை ஒழிந்தவராய் வாழும் சமணர், உடையைப் போர்த்துத் திரியும் கரிய சாக்கியர் தம் வாய்க்கு வந்தவாறு பிதற்ற மண்ணுலகில் கரிய சோலை சூழ்ந்த கபாலீச்சுரத்தானுக்கு நிகழும் நல்ல பெருஞ்சாந்தி விழாவைக் காணாது செல்வது முறையோ?

<u>திருமயிலாப்பூர்</u>

கானமர் சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்த னலம்புகழ்ந்த பத்தும்வல்லார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே. **#512**
மணம் பொருந்திய சோலைகள் சூழ்ந்த மயிலையில் விளங்கும் கபாலீச்சரம் என்னும் கோயிலில் எழுந்தருளிய இறைவன்மீது, தேன் பொருந்திய பூவில் உறையும் பாவையை விளிக்கும் பாட்டாகச் செந்தமிழால் ஞானசம்பந்தன் இறைவனது நலம்புகழ்ந்து பாடிய இப்பத்துப்பாடல்களையும் ஓதவல்லவர் வீடுபெற்ற சிவகணத்தவரோடு கூடி நிலைத்து வாழ்வர்.

திருவெண்காடு

திருவெண்காடு

திருவெண்காடு,
பண் - சீகாமரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சுவேதாரணியேசுவரர்.
தேவியார் : பிரமவித்தியாநாயகியம்மை.

கண்காட்டு நுதலானுங்
கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும்
பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும்
பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும்
விடைகாட்டுங் கொடியானே. #513 ★★★★★

வெண்காட்டில் உறையும் பெருமான், நுதலிடைக் கண் கொண்டவன்; கையில் கனல் ஏந்தியவன்; உமையம்மையை ஒரு கூறாகக் கொண்ட திருமேனியன் பிறையணிந்த சடைமுடியினன்; பண்ணில் இறைவடிவானவன்; பயிரை வளர்க்கும் மேகமானவன்; விடைஏந்திய கொடியை உடையவன்.

திருவெண்காடு

பேயடையா பிரிவெய்தும்
பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ
ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன்
வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத்
தோயாவாந் தீவினையே. #514

மூங்கில் போன்ற திரண்ட தோளினை உடைய உமையம்மை பங்கன் எழுந்தருளிய திருவெண்காட்டை அடைந்து அங்குள்ள முக்குளநீரில் மூழ்கி எழுந்து வழிபடுவாரைப் பேய்கள் சாரமாட்டா. பேய் பிடித்திருந்தாலும் விலகும். மகப்பேறு வாய்க்கும். மனவிருப்பங்கள் ஈடேறுவதை இறைவர்பால் அவர் பெறுவர். சிறிதும் சந்தேகம் வேண்டா.

திருவெண்காடு

மண்ணொடுநீ ரனல்காலோ
டாகாய மதியிரவி
எண்ணில்வரு மியமான
னிகபரமு மெண்டிசையும்
பெண்ணினொடாண் பெருமையொடு
சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர்கோன் வழிபடவெண்
காடிடமா விரும்பினனே. **#515**

மண், நீர், அனல், காற்று, ஆகாயம், மதி, இரவி, எண்ணற்றனவாயுள்ள உயிர்கள் ஆகிய எட்டு மூர்த்தங்களுடன் இம்மை, மறுமை, எண்திசை, பெண், ஆண் ஆகியனவாகவும் பெரியதில் பெருமை, சிறியதில் சிறுமை ஆகியனவாகவும் விளங்கும் புகாளனாகிய சிவபிரான், இந்திரன் வழிபடத்திருவெண்காட்டைத் தனது இருப்பிடமாகக்கி கொண்டு எழுந்தருளியுள்ளான்.

திருவெண்காடு

விடமுண்ட மிடற்றண்ணல்
வெண்காட்டின் றண்புறவின்
மடல்விண்ட முடத்தாழை
மலர் நிழலைக் குருகென்று
தடமண்டு துறைக்கெண்டை
தாமரையின் பூமறையக்
கடல்விண்ட கதிர்முத்தம்
நகைகாட்டுங் காட்சியதே. **#516**

நஞ்சுண்ட கண்டனாகிய சிவபிரான் எழுந்தருளிய வெண்காட்டை அடுத்துள்ள தண்காட்டில் மடல்விரிந்த வளைந்த தாழைமலர் நிழலைக் குருகு என்றெண்ணி நீர்நிலையில் வாழும் கெண்டைமீன்கள் தாமரைப்பூவின் அடியில் மறைய அதனைக்கண்ட கடல்முத்துக்கள் நகைப்பது போல ஒளி விடும் காட்சியால் புலப்படுகிறது.

திருவெண்காடு

வேலைமலி தண்கானல்
வெண்காட்டான் றிருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால்
வழிபடுநன் மறையவன்றன்
மேலடர்வெங் காலனுயிர்

விண்டபினை நமன் றூதர்
ஆலமிடற் றானடியா
ரென்றடர வஞ்சுவரே. **#517**

கடல்நீர் நிரம்பிய குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த வெண்காட்டு இறைவன் திருவடிகளை மாலைகளாலும் நிறைந்த வளமையான சந்தனத்தாலும் வழிபட்ட மறையவராகிய சுவேதகேதுவின் உயிரைக் கவரவந்த இயமனை அச்சிவன் உதைத்து அழித்ததால் அந்த இயமனுடைய தூதர்கள் சிவபிரான் அடியவர் என்றால் அஞ்சி விலகுவர்.

<u>திருவெண்காடு</u>

தண்மதியும் வெய்யரவுந்
தாங்கினான் சடையினுடன்
ஒண்மதிய நுதலுமையோர்
கூறுகந்தா னுறைகோயில்
பண்மொழியால் அவன்நாமம்
பலவோதப் பசுங்கிள்ளை
வெண்முகில்சேர் கரும்பெணைமேல்
வீற்றிருக்கும் வெண்காடே. **#518**

தனது சடைமுடியோடு தண்மதியையும் வெய்ய அரவையும் தாங்கியவனும் ஒளி பொருந்திய மதி போன்ற நுதலை உடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டவனும் ஆகிய சிவபிரான், உறையும் கோயில், பசிய கிளிகள் இனிய குரலால் இறைவன் திருப்பெயர்களை ஓதிக் கொண்டு வெண்முகில் சேரும் உயரிய கரியபனை மீது வீற்றிருக்கும் வெண்காடாகும்.

<u>திருவெண்காடு</u>

சக்கரமாற் கீந்தானுஞ்
சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமே லசைத்தானும்
அடைந்தயிரா வதம்பணிய
மிக்கதனுக் கருள்சுரக்கும்
வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளநன் குடையானு
முக்கணுடை யிறையவனே. **#519**

திருமாலுக்குச் சக்கராயுதம் அளித்தவனும், சலந்தராசுரனைப் பிளந்து அழித்தவனும், இடையில் எலும்புமாலை அணிந்துள்ளவனும், தன்னை அடைந்து ஐராவதம் பணிய அதற்கு மிகுதியான அருளைச் சுரப்பவனும், வினைகளைப் போக்கும் முக்குளங்களை உடையவனும்

திருவெண்காட்டில் எழுந்தருளிய முக்கண்ணனாகிய இறையவனே ஆவான்.

திருவெண்காடு

பண்மொய்த்த வின்மொழியாள்
பயமெய்த மலையெடுத்த
உன்மத்த னுரநெரித்தன் றருள்செய்தா
னுறைகோயில்
கண்மொய்த்த கருமஞ்ஞை நடமாடக்
கடன் முழங்க
விண்மொய்த்த பொழில்வரிவண்
டிசைமுரலும் வெண்காடே. **#520**

பண்ணிசை போலும் இனிய மொழியினளாகிய பார்வதிதேவி அஞ்சுமாறு கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த பித்தனாகிய இராவணனின் மார்பை நெரித்துப்பின் அருள் செய்த சிவபிரான் உறையும் கோயில், கண்கள் பொருந்திய தோகையைக் கொண்ட நீலமயில்கள் நடனமாடவும், கடல் முழங்கவும், வானளாவிய பொழிலில் வரிவண்டுகள் இசைபாடவும் விளங்கும் திருவெண்காடாகும்.

திருவெண்காடு

கள்ளார்செங் கமலத்தான்
கடற்கிடந்தா னெனவிவர்கள்
ஒள்ளாண்மை கொளற்கோடி
யுயர்ந்தாழ்ந்து முணர்வரியான்
வெள்ளானை தவஞ்செய்யு
மேதகுவெண் காட்டானென்
றுள்ளாடி யுருகாதா
ருணர்வுடைமை யுணரோமே. **#521**

தேன் பொருந்திய செந்தாமரையில் எழுந்தருளிய நான்முகன் கடலிடைத் துயிலும் திருமால் ஆகியோர் தன்முனைப்பு நீங்கிச் சிறந்த அடியவர் ஆதற் பொருட்டு மிக உயர்ந்தும் ஆழ்ந்தும் அவர்கள் உணர்தற்கு அரியவனாகிய சிவபிரான் வெள்ளானை தவஞ் செய்து வழிபடும் நிலையில் சிறந்த திருவெண்காட்டில் எழுந்தருளியுள்ளான் என்று மனங்கசிந்து உருகாதவரின் ஞானத்தை மதியோம்.

திருவெண்காடு

போதியர்கள் பிண்டியர்கள்
மிண்டுமொழி பொருளென்னும்

பேதையர்க ளவர்பிறிமின்
அறிவுடையீ ரிதுகேண்மின்
வேதியர்கள் விரும்பியசீர்
வியன்றிருவெண் காட்டானென்
றோதியவர் யாதுமொரு
தீதிலரென் றுணருமினே. **#522**

போதிமரத்தின் அடியில் தவம் செய்யும் புத்தர்கள், அசோக மரநிழலில் தவம் செய்யும் சமணர்கள் கூறும் வன்புரை களைப்பொருளாகக் கருதும் பேதையர்களைப் பிரிவீர்களாக. அறிவுடையவரே! இதனைக் கேளுங்கள். வேதியர்கள் விரும்பும் புகழுடைய பெரிய திருவெண்காட்டில் உறையும் ஈசன் பெயர்களை ஓதியவர் ஒரு தீங்கும் இலராவர் என்று உணருமின்.

திருவெண்காடு

தண்பொழில்சூழ் சண்பையர்கோன்
றமிழ்ஞான சம்பந்தன்
விண்பொலிவெண் பிறைச்சென்னி
விகிர்தனுறைவெண்காட்டைப்
பண்பொலிசெந் தமிழ்மாலை
பாடியபத் திவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர்போய்
வான் பொலியப் புகுவாரே. **#523**

குளிர்ந்த பொழிலால் சூழப்பட்ட சண்பை நகர்த் தலைவனாகிய தமிழ்ஞானசம்பந்தன், விண்ணிற் பொலியும் பிறை மதி சேர்ந்த சென்னியினை உடைய விகிர்தன் உறையும் திருவெண்காட்டைப் பண்ணிசை பொலியப்பாடிய இச்செந்தமிழ் மாலைபத்தையும் வல்லவர், மண்பொலிய வழ்வதோடு வான்பொலியவும் சென்று வாழ்வர்.

சீகாழி

சீர்காழி

சீகாழி,
பண் - சீகாமரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

பண்ணி னேர்மொழி மங்கை மார்பலர்
பாடி யாடிய வோசை நாடொறுங்
கண்ணி னேரயலே
பொலியுங் கடற்காழிப்
பெண்ணி னேரொரு பங்கு டைப்பெரு
மானை யெம்பெரு மானென் றென்றுன்னும்
அண்ண லாரடியார்
அருளாலுங் குறைவிலரே. **#524**

பண்ணிசை போலும் மொழிபேசும் மங்கையர் பலர் பாடி ஆடிய ஓசை கண்ணெதிரே அமைந்து விளங்கும் கடலை அடுத்துள்ள காழிப்பதியில் பெண்பாகனாக விளங்கும் பெருமானையே எம்தலைவன் என்று பலகாலும் கூறும் சிவனடியார்கள் பொருளோடு அருளாலும் குறைவிலர்.

சீர்காழி

மொண்ட லம்பிய வார்தி ரைக்கடல்
மோதி மீதெறி சங்க வங்கமுங்
கண்டலம் புடைசூழ்
வயல்சேர் கலிக்காழி
வண்ட லம்பிய கொன்றை யானடி
வாழ்த்தி யேத்திய மாந்தர் தம்வினை
விண்ட லங்கௌதாம்
அதுநல் விதியாமே. **#525**

நீரை முகந்து ஒலித்து வரும் நீண்ட திரைகள் மரக்கலங்களை மோதிக் கடலிலிருந்து எறியும் சங்குகள் தாழைமரங்கள் சூழ்ந்த வயல்களைச் சென்றடையும் பெருமைமிக்க காழிப்பகுதியில் வண்டுகள் ஒலிக்கும் கொன்றை மாலை சூடிய சிவபிரானின் திருவடிகளை வாழ்த்தித் துதிக்கும் மக்களின் வினைகள் நீங்குதல் எளிதாம். அதுவே நல்லூழையும் தருவதாகும்.

சீர்காழி

நாடெ லாமொளி யெய்த நல்லவர்
நன்று மேத்தி வணங்கு வார்பொழிற்
காடெ லாமலர்
தேன்துளிக்குங் கடற்காழித்
தோடு லாவிய காது ளாய்சுரி
சங்க வெண்குழை யானென் றென்றுன்னும்
வேடங் கொண்டவர்கள்
வினை நீங்கலுற்றாரே. **#526**

நாடுமுழுவதும் சிறக்க வேண்டுமென்று நல்லவர்கள் நன்முறையில் ஏத்தி வணங்குவதும், நீண்ட சோலைகளில் எல்லாம் மலர்கள் தேன் துளித்து விளங்குவதுமான கடற்காழியுள் தோடணிந்த காதினர், வளைந்த சங்கவெண்குழைக் காதினர் என்று பலகாலும் சொல்லி நினையும் சிவவேடம் தரித்தவர்கள் வினை நீங்கப் பெறுவர்.

சீர்காழி

மையி னார்பொழில் சூழ நீழலில்
வாச மார்மது மல்க நாடொறும்
கையி னார்மலர்
கொண்டெழுவார் கலிக்காழி
ஐய னேயர னேயென் றாதரித்
தோதி நீதியு ளேநி னைப்பவர்
உய்யு மாறுலகில்
உயர்ந்தாரி னுள்ளாரே. **#527**

கரிய பொழில் சூழ்ந்ததும், நிழலில் மணம் கமழும் தேன் ஒழுகி நிறைவதும், அடியவர் கைகள் நிரம்ப மலர் பறித்துக் கொண்டு எழுவதுமான பெருமையால் மிக்க காழிப்பதியை அடைந்து ஐயனே ‘அரனே’ என்று ஆதரித்து முறையாக நினைப்பவர் உலகில் உயர்ந்தாரில் உள்ளவராவர்.

சீர்காழி

மலிக டுந்திரை மேனி மிர்ந்தெதிர்
வந்து வந்தொளிர் நித்திலம் விழக்
கலிக டிந்தகையார்
மருவுங் கலிக்காழி
வலிய காலனை வீட்டி மாணிதன்
இன்னு யிரளித் தானை வாழ்த்திட

மெலியுந் தீவினைநோய்
அவைமேவுவார் வீடே. #528
நிறைந்து விரைந்து வரும் வரும் அலைகளில் எதிர் வந்து ஒளிரும் முத்துக்கள் விழுந்து நிறைவதும், வறுமை நீங்கப் பொருள் பொழியும் கையினராகிய வள்ளன்மையுடையோர் வாழ்வதுமான காழியில் வலிய காலனை அழித்து மார்க்கண்டேயர்க்கு இன்னுயிர் அளித்த இறைவனை வாழ்த்தத் தீவினைகள் மெலியும். வீட்டின்பம் வந்துறும்.

<u>சீர்காழி</u>

மற்று மிவ்வுல கத்து ளோர்களும்
வானு ளோர்களும் வந்து வைகலுங்
கற்ற சிந்தையராய்க்
கருதுங் கலிக்காழி
நெற்றி மேலமர் கண்ணி னானை
நினைந்தி ருந்திசை பாடு வார்வினை
செற்றமாந் தரெனத்
தெளமின்கள் சிந்தையுளே. #529
இவ்வுலகில் உள்ளோரும் வானுலகில் வாழ்வோரும் வைகலும் வந்து கற்றறிந்த மனம் உடையவராய்க் கருதி வழிபடும் காழிப்பதியில் நெற்றிக் கண்ணனாகிய பெருமானை நினைந்து இருந்து இசைபாடுவோர் வினைகளைக் போக்கிக்கொண்ட மாந்தர் ஆவர் எனச் சிந்தையில் தெளவீர்களாக.

<u>சீர்காழி</u>

தான லம்புரை வேதிய ரொடு
தக்க மாதவர் தாந்தொ ழப்பயில்
கானலின் விரைசேர
விம்முங் கலிக்காழி
ஊனு ளாருயிர் வாழ்க்கை யாயுற
வாகி நின்றவொ ருவனே யென்றென்
றானலங் கொடுப்பார்
அருள்வேந்த ராவாரே. #530
நன்மையும் பெருமையும் அமைந்த வேதியர்களோடு தக்க மாதவர்களும் தொழுது வணங்க, சோலைகளின் மணம் சேர்ந்து விம்மும் காழிப் பதியுள் ஊனுடம்புடையோர் உயிர் வாழ்தற்குப் பயனாய் அவர்க்கு உறவாகிநின்ற ஒருவனே என்று வாழ்ததினால் நலம் கொடுக்கும் பெருமான் விளங்குகின்றான். அவனைத் தொழுவோர் அருள் வேந்தர் ஆவர்.

சீர்காழி

மைத்த வண்டெழு சோலை யாலைகள்
சாலி சேர்வய லார வைகலுங்
கத்து வார்கடல் சென்
றுலவுங் கலிக்காழி
அத்த னேயர னேய ரக்கனை
யன்ற டர்த்துகந் தாயு னகழல்
பத்தராய்ப் பரவும்
பயனீங்கு நல்காயே. **#531**

வண்டுகள் இசைக்கும் கரிய சோலைகள், கரும்பு ஆலைகள் நெற்பயிர் வளரும் வயல்முதலியன நிறையுமாறு வைகலும் ஒலிக்கும் கடல் நீர் சென்றுலவும் காழிப்பதியுள் விளங்கும் தலைவனே அரனே இராவணனை அன்று அடர்த்து உகந்தவனே உன் திருவடிகளைப் பத்தராய்ப்பரவும் பயனை எங்கட்கு இம்மையிலேயே அருள்வாயாக.

சீர்காழி

பரும ராமொடு தெங்கு பைங்கத
லிப்ப ருங்கனி யுண்ண மந்திகள்
கருவரா லுகளும்
வயல்சூழ் கலிக்காழித்
திருவி னாயக னாய மாலொடு
செய்ய மாமலர்ச் செல்வ னாகிய
இருவர் காண்பரியா
னெனவேத்துத லின்பமே. **#532**

பருத்த கடப்ப மரங்களோடு தென்னை ஆகியன செறிந்தனவும் பசிய வாழையினது பெரிய கனிகளைக் குரங்குகள் உண்பனவுமான சோலைகளும், கரிய வரால் மீன்கள் துள்ளும் வயல்களும் சூழ்ந்துள்ள காழிப்பதியுள் விளங்கும் இறைவனைத் திருமகள் நாயகனான திருமால் செந்தாமரை மலரோனாகிய நான்முகன் ஆகிய இருவரும் காண்பரியானாய் விளங்குவோன் என ஏத்துதல் இன்பம் தரும்.

சீர்காழி

பிண்ட முண்டுழல் வார்க ளும்பிரி
யாது வண்டுகி லாடை போர்த்தவர்
கண்டு சேரகிலார்
அழகார் கலிக்காழித்
தொண்டை வாயுமை யோடு கூடிய

வேட னேசுட லைப்பொ டியணி
அண்டவா ணனென்பார்க்
கடையா வல்லல்தானே. **#533**

சோற்றுத் திரளை உண்டு திரிபவர்களும், சற்றும் நீங்காது வளவிய நூலாடையைப் போர்த்துழல்பவரும் ஆகிய புறச்சமயத்தினர், கண்டு சேரும் நல்லூழ் அற்றவர். "அழகிய பெருமிதத்துடன் விளங்கும் காழிப்பதியில் கோவைக்கனி போலச் சிவந்த வாயினை உடைய உமையம்மையோடு கூடியவனே, வேட்டுவக் கோலம்கொண்டவனே சுடலைப் பொடிபூசி உலகெங்கும் நிறைந்தவனே" என்பாரை அல்லல்கள் அடையா.

சீர்காழி

பெயரெ னும்மிவை பன்னி ரண்டினு
முண்டெ னப்பெயர் பெற்ற வூர்திகழ்
கயலுலாம் வயல்சூழ்ந்
தழகார் கலிக்காழி
நயன டன்கழ லேத்தி வாழ்த்திய
ஞான சம்பந்தன் செந்த மிழுரை
உயருமா மொழிவார்
உலகத் துயர்ந்தாரே. **#534**

பன்னிரண்டு பெயர்களை உடைய ஊர் எனப்புகழ் பெற்றதும், கயல்மீன்கள் உலாவும் வயல்சூழ்ந்து அழகு பெற்றதும் ஆகிய காழிப்பதியில் அழகிய நடனம்புரிந்து உறைவோனாகிய பெருமானின் திருவடிகளைப் போற்றி வாழ்த்திய ஞானசம்பந்தனின் இவ்வுரைமாலையை உயர்வு பெறுமாறு கருதி ஓதியவர் உலகத்தில் உயர்ந்தோர் ஆவர்.

திருஆமாத்தூர்

திருஆமாத்தூர்

திருஆமாத்தூர்,
பண் - சீகாமரம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அழகியநாதேசுவரர்.
தேவியார் : அழகியநாயகியம்மை.

குன்ற வார்சிலை நாண ராவரி
வாளி கூரெரி காற்றின் மும்மதில்
வென்றவா றெங்ஙனே
விடையேறும் வேதியனே
தென்ற லார்மணி மாட மாளிகை
சூளி கைக்கெதிர் நீண்ட பெண்ணைமேல்
அன்றில் வந்தணையும்
ஆமாத்தூ ரம்மானே. **#535**

தென்றல் ஆர்கின்ற அழகிய மாட மாளிகைகளின் சூளிகைக்கு மேலாக நீண்டுயர்ந்த பனை மரத்தில் அன்றில் பறவை வந்து தங்கி மகிழும் ஆமாத்தூர் இறைவனே! விடைமீது ஏறிவரும் வேதியனே! மேருமலையை நீண்ட வில்லாகவும் வரிகளைஉடைய பாம்பை நாணாகவும், மிக்க எரியை அம்பாகவும், காற்றை ஈர்க்காகவும் கொண்டு முப்புரங்களை வென்றது எவ்வாறு?.

திருஆமாத்தூர்

பரவி வானவர் தான வர்பல
ருங்க லங்கிட வந்த கார்விடம்
வெருவ வுண்டுகந்த
அருளென்கொல் விண்ணவனே
கரவின் மாமணி பொன்கொ ழித்திழி
சந்து காரகி றந்து பம்பைநீர்
அருவி வந்தலைக்கும்
ஆமாத்தூ ரம்மானே. **#536**

மறைவில்லாமல் சிறந்த மணிகளையும் பொன்னையும் கொழித்துக் கொண்டு, தன்பால் வீழ்ந்த சந்தனம் கரிய அகில் ஆகியவற்றை அடித்துக்கொண்டு வரும் பம்பையாற்று நீர் ஒழுக்கு வந்து அலைக்கும் ஆமாத்தூர் அம்மானே! விண்ணவனே! தேவர்களும் அசுரர்களும் கலங்கும்படித் தோன்றிய கரியவிடத்தைக் கண்டு வெருவிப்பரவ

அவ்விடத்தை நீர் உண்டு மகிழ்ந்த கருணைக்குக் காரணம் யாதோ?

திருஆமாத்தூர்

நீண்ட வார்சடை தாழ நேரிழை
பாட நீறுமெய் பூசி மாலயன்
மாண்ட வார்சுடலை
நடமாடு மாண்பதுவென்
பூண்ட கேழன் மருப்ப ராவிரி
கொன்றை வாள்வரி யாமை பூணென
ஆண்ட நாயகனே
ஆமாத்தூ ரம்மானே. **#537**

பன்றிக் கொம்பு, பாம்பு, விரிந்த கொன்றை மலர் மாலை, ஒளியும் வரியும் பொருந்திய ஆமை ஓடு ஆகியவற்றை அணிகலனாகப் பூண்டு ஆட்கொள்ளும் தலைவனே! ஆமாத்தூர் இறைவனே! நீண்ட சடை அவிழ்ந்து தொங்க, உமையம்மை பாட, திருநீற்றை மெய்யில்பூசித் திருமால் பிரமன் முதலானோர் மாண்ட கடைஊழியில் நீண்ட சுடலையில் நடமாடும் மாட்சிக்குக் காரணம் யாதோ?

திருஆமாத்தூர்

சேலின் நேரன கண்ணி வெண்ணகை
மான்வி ழித்திரு மாதைப் பாகம்வைத்
தேல மாதவ
நீமுயல்கின்ற வேடமிதென்
பாலி னேர் மொழி மங்கை மார்நட
மாடி யின்னிசை பாட நீள்பதி
ஆலை சூழ்கழனி
ஆமாத்தூர் ரம்மானே. **#538**

பாலையொத்த இனிய மொழிபேசும் மங்கையர் நடனம் ஆடி இன்னிசைபாட, கரும்பு ஆலைகள் சூழ்ந்த வயல் வளம் உடைய நீண்ட பதியான ஆமாத்தூர் அம்மானே! சேல்போன்ற கண்ணையும் வெண்ணகையையும் மான்போன்ற விழியையும் உடைய அழகிய உமையவளைப் பாகமாக வைத்துக் கொண்டு இயன்ற பெரியதவத்தை மேற்கொண்டுள்ள உன் வேடம் பொருந்துமாறு எங்ஙனம்?

திருஆமாத்தூர்

தொண்டர் வந்து வணங்கி மாமலர்
தூவி நின்கழ லேத்து வாரவர்
உண்டியால் வருந்த

விரங்காத தென்னைகொலாம்
வண்ட லார்கழ னிக்க லந்தும
லர்ந்த தாமரை மாதர் வாண்முகம்
அண்டவாணர் தொழும்
ஆமாத்தூ ரம்மானே. **#539**
வண்டல் மண்பொருந்திய வயல்களில் நெற்பயிரோடு கலந்து மலர்ந்துள்ள தாமரைகள் மாதர்களின் ஒளிபொருந்திய முகத்தைப் போலப் பூக்கும் ஆமாத்தூரில் அண்டங்களில் வாழும் தேவர் முதலியோரால் வணங்கப்பெறும் இறைவனே! மாமலர் தூவி நின் திருவடிகளை வணங்கிப் போற்றும் தொண்டர்கள் உணவின்மையால் வருந்தவும்,அதற்கு இரங்காததற்குக் காரணம் யாதோ?

<u>திருஆமாத்தூர்</u>

ஓதி யாரண மாயநுண் பொருள்
அன்று நால்வர்முன் கேட்க நன்னெறி
நீதி யாலநீழல்
உரைக்கின்ற நீர்மையதென்
சோதி யேசுட ரேசுரும்பமர்
கொன்றை யாய்திரு நின்றி யூருறை
ஆதியே யரனே
ஆமாத்தூ ரம்மானே. **#540**
சோதியே! சுடரே! வண்டுகள் மொய்க்கும் கொன்றை மாலையை அணிந்தவனே! திருநின்றியூரில் விளங்கும் முதல்வனே! அரனே! ஆமாத்தூர் இறைவனே! வேதங்களை ஓதி அவற்றின் நுண் பொருள்அறியாது மயங்கிய சனகாதியர் அன்று ஐயம் கேட்க அவர் கட்கு ஞானமார்க்கத்தை முறையோடு ஆல் நிழலிலிருந்து உரைத்தருளிய உன் தகைமைக்குக் காரணம் யாதோ?

<u>திருஆமாத்தூர்</u>

மங்கை வாணுதன் மான்ம னத்திடை
வாடி யூடம ணங்க மழ்சடைக்
கங்கையா ளிருந்த
கருத்தாவ தென்னைகொலாம்
பங்க யமது வுண்டு வண்டிசை
பாட மாமயி லாட விண்முழ
வங்கையா லதிர்க்கும்
ஆமாத்தூ ரம்மானே. **#541**
தாமரை மலரிலுள்ள தேனை உண்டு வண்டுகள் இசைபாடப் பெரிய

மயில்கள் நடனம் ஆட, விண் மேகங்களாகிய முழவை அழகிய கையால் ஒலிக்கும் இயற்கை அழகுடைய ஆமாத்தூர் அம்மானே! மங்கையாகிய ஒளிநுதலை உடைய மான்போன்ற பார்வதிதேவி வாடி ஊட மணம் கமழும் சடையில் கங்கையாளை வைத்துள்ளதன் காரணம் யாதோ?

திருஆமாத்தூர்

நின்ற டர்த்திடு மைம்பு லன்னிலை
யாத வண்ண நினைந்து ளத்திடை
வென்றடர்த் தொருபான்
மடமாதை விரும்புதலென்
குன்றெ டுத்தநி சாச ரன்திரள்
தோளி ருபது தானெ ரிதர
அன்றடர்த் துகந்தார்
ஆமாத்தூ ரம்மானே. **#542**

அன்று கயிலையைப் பெயர்த்தெடுத்த இராவணனின் திரண்ட இருபதுதோள்களும் நெரியுமாறு அடர்த்துப் பின் அவன்பால் கருணை காட்டியவனே! ஆமாத்தூர் இறைவனே! மாறிநின்று மயக்கும் ஐம்புலன்களை மனத்தால் வென்று அவித்தும் ஒருபாகத்தே இளம்பெண்ணை விரும்பி ஏற்றுள்ளது யாது காரணத்தாலோ?

திருஆமாத்தூர்

செய்ய தாமரை மேலி ருந்தவ
னோடு மாலடி தேட நீண்முடி
வெய்ய வாரழலாய்
நிமிர்கின்ற வெற்றிமையென்
தைய லாளொடு பிச்சைக் கிச்சை
தயங்கு தோலரை யார்த்த வேடங்கொண்
டைய மேற்றுகந்தார்
ஆமாத்தூ ரம்மானே. **#543**

உமையம்மையோடு பிச்சையேற்பதற்கு இச்சையுடையராய் விளங்கும், தோலாடையை இடையில் கட்டிய வேடம் மேற்கொண்டு மாதரார் இல்லங்களில் ஐயம் ஏற்று உகந்தவனே! ஆமாத்தூர் இறைவனே! செந்தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் நான்முகன், திருமால் ஆகியோர் முடியையும் அடியையும்தேட அவர்கட்கு ஒளிக்கும் வகையில் கொடிய அழலுருவாய் நிமிர்ந்த வெற்றிக்குக் காரணம் யாதோ?

திருஆமாத்தூர்

புத்தர் புன்சம ணாதர் பொய்ம்மொழி

நூல்பி டித்தலர் தூற்ற நின்னடி
பத்தர் பேணநின்ற
பரமாய பான்மையதென்
முத்தை வென்ற முறுவ லாளுமை
பங்க னென்றிமை யோர்ப ரவிடும்
அத்தனே யரியார்
ஆமாத்தூ ரம்மானே. **#544**

முத்தைவென்ற முறுவலை உடைய உமையம்மை பங்கனே! என்று தேவர்கள் பரவிப் போற்றும் தலைவனே! காண்டற்கு அரியவனே! ஆமாத்தூர் இறைவனே! புத்தர்களும் புல்லிய சமணர்களாகிய அறிவிலிகளும் பொய்ம் மொழியும் நூல்களைப் பிடித்துக் கொண்டு பழிக்கவும், அவற்றைப் பொருட்படுத்தாது பத்தர்களால் விரும்பப்படும் மேலாந்தன்மை உடையன் அதற்குக் காரணம் யாதோ?

<u>திருஆமாத்தூர்</u>

வாடல் வெண்டலை மாலை யார்த்தும
யங்கி ருள்ளெரி யேந்தி மாநடம்
ஆடன் மேயதென்னென்
ஆமாத்தூ ரம்மானைக்
கோட னாக மரும்பு பைம்பொழிற்
கொச்சை யாரிறை ஞான சம்பந்தன்
பாடல் பத்தும்வல்லார்
பரலோகஞ் சேர்வாரே. **#545**

தசைவாடிய வெண்டலை மாலையைக் கட்டிக் கொண்டு நள்ளிருளில் எரிஏந்தி ஆடுவதன் காரணம் யாதோ என்று ஆமாத்தூர் இறைவனைக் காந்தள் நாகம் போல அலரும் பசிய பொழில் சூழ்ந்த கொச்சை வயத்தலைவனாகிய ஞானசம்பந்தன் போற்றிப்பாடிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓதவல்லவர் மேலான வீட்டுலகம் அடைவர்.

திருக்களர்

திருக்களர்,
பண் - சீகாமரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : களர்முளையீசுவரர்.
தேவியார் : அழகேசுவரியம்மை.

நீரு ளார்கயல் வாவி சூழ்பொழில்
நீண்ட மாவய லீண்டு மாமதில்
தேரினார் மறுகில்
விழாமல்கு திருக்களருள்
ஊரு ளாரிடு பிச்சை பேணும்
ஒருவ னேயொளிர் செஞ்ச டைம்மதி
ஆரநின் றவனே
அடைந்தார்க் கருளாயே. **#546**

நீருட் பொருந்திய கயல் மீன்களோடு திகழும் வாவிகளும், பொழிலும், நீண்ட வயல்களும் நெருங்கிய மதில்களும் தேரோடும் வீதிகளும் சூழ்ந்துள்ள, விழாக்கள் பல நிகழும் திருக்களரில் ஊரவர் இடும் பிச்சையை விரும்பி ஏற்பவனாய் விளங்கும் இறைவனே! ஒளிபொருந்திய பிறைமதியைச் செஞ்சடை மீது பொருந்த அணிந்து நிற்பானே! உன்னை அடைந்த அன்பர்க்கு அருள் புரிவாயாக.

திருக்களர்

தோளின் மேலொளி நீறு தாங்கிய
தொண்டர் வந்தடி போற்ற மிண்டிய
தாளினார் வளருந்
தவமல்கு திருக்களருள்
வேளி னேர்விச யற்க ருள்புரி
வித்த காவிரும் பும்ம டியாரை
ஆளுகந் தவனே
அடைந்தார்க் கருளாயே. **#547**

தோளின்மேல் ஒளிநீறு பூசிய தொண்டர்கள் அடிபோற்றப் பெருமிதம் கொண்ட திருவடி உடையவனாய்த் திருக்களருள் எழுந்தருளியவனே! முருகவேட்கு நிகரான அருச்சுனனுக்கு அருள் புரிந்த வித்தகனே! தன்னை விரும்பும் அடியவரை ஆளாகக் கொண்டு உகந்தவனே! உன்னை அடைந்த அன்பர்க்கு அருள் புரிவாயாக.

<u>திருக்களர்</u>

பாட வல்லநன் மைந்த ரோடு
பனிம லர்பல கொண்டு போற்றிசெய்
சேடர்வாழ் பொழில்சூழ்
செழுமாடத் திருக்களருள்
நீட வல்ல நிமல னேயடி
நிரைக ழல்சிலம் பார்க்க மாநடம்
ஆடவல் லவனே
அடைந்தார்க் கருளாயே **#548**

பாடவல்ல நன்மக்களோடு நறுமலர்கொண்டு போற்றும் உயர்ந்தோர் வாழும் பொழில் சூழ்ந்த செழுமையான மாட வீடுகளைக்கொண்டுள்ள திருக்களருள் பலகாலமாக எழுந்தருளியுள்ள நிமலனே! கழலும் சிலம்பும் ஆரவாரிக்க நடம் புரியவல்ல பெருமானே! உன்னைச் சரணாக அடைந்தவர்க்கு அருள்புரிவாயாக.

<u>திருக்களர்</u>

அம்பி னேர்தடங் கண்ணி னாருடன்
ஆட வர்பயில் மாட மாளிகை
செம்பொ னார் பொழில்
சூழ்ந்தழகாய திருக்களருள்
என்பு பூண்டதோர் மேனி யெம்மிறைவா
விணையடி போற்றி நின்றவர்க்
கன்பு செய்தவனே
அடைந்தார்க் கருளாயே. **#549**

வாள் போன்று கூரிய விசாலமான கண்களை உடைய மகளிரோடு ஆடவர் மகிழும் செம்பொன் நிறைந்த மாட மாளிகைகளோடு பொழில் சூழ்ந்து அழகுற விளங்கும் திருக்களருள் என்புமாலை பூண்ட மேனியை உடைய எம் இறைவனே! உன் திருவடிகளைப் போற்றி நிற்பாரிடம் அன்பு செய்பவனே! உன்னை அடைந்தார்க்கு அருள் புரிவாயாக.

<u>திருக்களர்</u>

கொங்கு லாமலர்ச் சோலை வண்டினங்
கெண்டி மாமது வுண்டி சைசெயத்
தெங்கு பைங்கமுகம்
புடைசூழ்ந்த திருக்களருள்
மங்கை தன்னொடுங் கூடிய மண
வாள னேபிணை கொண்டொர் கைத்தலத்

தங்கை யிற்படையாய்
அடைந்தார்க் கருளாயே. **#550**
தேன்நிறைந்த மலர்ச்சோலைகளில் வண்டினங்கள் மகரந்தங்களைக் கெண்டி மது உண்டு இசை பாட, தென்னை பசிய கமுகுகள் புடைசூழ்ந்து விளங்கும் திருக்களருள் எழுந்தருளிய மங்கையொடும் கூடிய மணவாளனே! மானையும் மழுவையும் அழகிய கைகளில் கொண்டுள்ளவனே! உன்னை அடைந்தார்க்கு அருள் புரிவாயாக.

<u>திருக்களர்</u>

கோல மாமயில் ஆலக் கொண்டல்கள்
சேர்பொ ழிற்குல வும்வ யலிடைச்
சேலிளங் கயலார்
புனல்சூழ்ந்த திருக்களருள்
நீலம் மேவிய கண்ட னேநிமிர்
புன்ச டைப்பெரு மானெ னப்பொலி
ஆல நீழலுளார்
அடைந்தார்க் கருளாயே. **#551**
அழகிய மயில்கள் ஆட மேகங்கள் தங்கிய பொழில் சூழ்ந்து விளங்குவதும் வயல்களில் சேலும் கயலும் சேர்ந்த நீர் சூழ்ந்ததும் ஆன திருக்களருள் எழுந்தருளிய நீலகண்டனே! நிமிர்ந்த சடையை உடைய பெருமானே! என்று அடியவர் போற்ற ஆல நீழலில் எழுந்தருளியவனே! அடைந்தார்க்கு அருள்புரிவாயாக.

<u>திருக்களர்</u>

தம்ப லம்மறி யாத வர்மதில்
தாங்கு மால்வரை யாலழ லெழத்
திண்பலங் கெடுத்தாய்
திகழ்கின்ற திருக்களருள்
வம்ப லர்மலர் தூவி நின்னடி
வானவர் தொழக் கூத்து கந்துபேர்
அம்பலத் துறைவாய்
அடைந்தார்க் கருளாயே. **#552**
தங்கள் பலத்தை அறியாத அசுரர்களின் முப்புரங்களை, உலகைத் தாங்கும் மேருமலையாகிய வில்லால் அழல் எழுமாறு செய்து அப்புரங்களின் திண்ணிய பலத்தைக் கெடுத்தவனே! திகழ்கின்ற திருக்களருள் புதிய மலர்களைத் தூவி வானவர் நின் திருவடிகளைப் போற்றப்பேரம்பலத்தில் உறையும் பெருமானாய் விளங்குபவனே! உன்னை அடைந்தார்க்கு அருள்புரிவாயாக.

திருக்களர்

குன்ற டுத்தநன் மாளி கைக்கொடி
மாட நீடுயர் கோபு ரங்கண் மேல்
சென்ற டுத்துயர்வான்
மதிதோயுந் திருக்களருள்
நின்ற டுத்துயர் மால்வ ரைத்திரள்
தோளி னாலெடுத் தான்றன் நீள்முடி
அன்றடர்த் துகந்தாய்
அடைந்தார்க் கருளாயே. **#553**

மலைபோன்றுயர்ந்த நல்ல மாளிகைகளில் கட்டப்பட்ட கொடிகள் மாடங்களினும் நீண்டுயர்ந்த கோபுரங்களையும் கடந்து மேற்சென்றுயர்ந்து வானிலுள்ள மதியைப் பொருந்தும் திருக்களருள்,நிலையாக நின்று பொருந்தி உயர்ந்த பெரிய கயிலை மலையைத் திரண்ட தோள் வலியால் எடுத்த இராவணனின் நீண்ட முடிகளை அன்று அடர்த்துப் பின் அவனை உகந்து விளங்கும் பெருமானே! உன்னை அடைந்தார்க்கு அருள்புரிவாயாக.

திருக்களர்

பண்ணி யாழ்பயில் கின்ற மங்கையர்
பாட லாடலொ டார வாழ்பதி
தெண்ணி லாமதியம்
பொழில்சேருந் திருக்களருள்
உண்ணி லாவிய வொருவ னேயிரு
வர்க்கு நின்கழல் காட்சி யாரழல்
அண்ண லாயவெம்மான்
அடைந்தார்க் கருளாயே. **#554**

யாழில் இசைகூட்டிப் பயில்கின்ற மங்கையர் பாடியும் ஆடியும் மகிழ்கின்ற பதியாய்த், தெளந்த நிலவைத் தரும் மதியைத் தோயுமாறு உயர்ந்த பொழில் சூழ்ந்த திருக்களருள் விளங்கும் ஆலயத்துள் எழுந்தருளிய ஒப்பற்றவனே! திருமால், பிரமர் நீண்ட திருவடி,திருமுடி தேடுமாறு அரிய அழலாய் நின்ற எம்மானே! அடைந்தவர்க்கு நின் திருவடித் தொண்டினை அருள் புரிவாயாக.

திருக்களர்

பாக்கி யம்பல செய்த பத்தர்கள்
பாட்டொ டும்பல பணிகள் பேணிய
தீக்கியல் குணத்தார்

சிறந்தாருந் திருக்களருள்
வாக்கின் நான்மறை யோதி னாயமண்
தேரர் சொல்லிய சொற்க ளானபொய்
ஆக்கி நின்றவனே
யடைந்தார்க் கருளாயே. **#555**

நல்வினைகள் பல செய்த பத்தர்கள் பாடல்கள் பலபாடுவதோடு பணிகள் பலவற்றை விரும்பிச் செய்யவும், எரியோம்பும் இயல்பினரான அந்தணருட் சிறந்தார் வாழவும் விளங்கும் திருக்களருள் வாக்கினால் வேதங்களை அருளியவனே! சமணர் புத்தர் சொல்லும் உரைகளைப் பொய்யாக்கி எழுந்தருளி விளங்கு பவனே! அடைந்தார்க்கு அருள்புரிவாயாக.

<u>திருக்களர்</u>

இந்து வந்தெழு மாட வீதியெ
ழில்கொள் காழிந் நகர்க் கவுணியன்
செந்து நேர்மொழியார்
அவர்சேருந் திருக்களருள்
அந்தி யன்னதொர் மேனி யானை
அமரர் தம்பெரு மானை ஞானசம்
பந்தன் சொல்லிவை
பத்தும்பாடத் தவமாமே. **#556**

திங்களைத் தோய்ந்தெழும் மாடங்களைக் கொண்ட வீதியினை உடைய அழகிய காழி நகரில் கவுணியர் குடியில் தோன்றிய ஞானசம்பந்தன், செந்து என்ற பண்ணை ஒத்த மொழி பேசும் மகளிர் பலர் வாழும் திருக்களருள் அந்தி வானம் போன்ற செம்மேனியனை, அமரர் தலைவனைப்பாடிய இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் பாடத் தவம் சித்திக்கும்.

திருக்கோட்டாறு

திருக்கோட்டாறு

திருக்கோட்டாறு,
பண் - சீகாமரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஐராபதேசுவரர்.
தேவியார் : வண்டமர்பூங்குழலம்மை.

கருந்த டங்கண்ணின் மாத ராரிசை
செய்யக் காரதிர் கின்ற பூம்பொழிற்
குருந்த மாதவியின்
விரைமல்கு கோட்டாற்றில்
இருந்த எம்பெரு மானை யுள்கி
இணைய டிதொழு தேத்தும் மாந்தர்கள்
வருந்து மாறறியார்
நெறிசேர்வர் வானூடே. **#557**

கரிய பெரிய கண்களை உடைய மகளிர் இசை பாடவும், அதற்கேற்ப மேகங்கள் முழவொலிபோல ஒலிக்கவும், அழகிய பொழிலிலுள்ள குருந்தம் மாதவி ஆகியவற்றின் மணம் நிறையவும் விளங்கும் கோட்டாற்றில் வீற்றிருந்த பெருமானை நினைந்து அவருடைய இணையடி தொழுதேத்தும் மாந்தர்கள் வருந்தார். விண்வழியாக வீட்டுநெறியை எய்துவர்.

திருக்கோட்டாறு

நின்று மேய்ந்து நினைந்து மாகரி
நீரொ டும்மலர் வேண்டி வான்மழை
குன்றி னேர்ந்துகுத்திப்
பணிசெய்யுங் கோட்டாற்றுள்
என்றும் மன்னிய எம்பி ரான்கழல்
ஏத்தி வானர சாள வல்லவர்
பொன்று மாறறியார்
புகழார்ந்த புண்ணியரே. **#558**

பெரிய யானை நின்று மேய்ந்து நினைந்து நீர் மலர் வேண்டி வான்மழை பெறுதற் பொருட்டு மலைபோல எழுந்து, மேகங்களைக் குத்திப் பணிசெய்யும் கோட்டாற்றுள் என்றும் நிலை பெற்றிருக்கும் எம்பிரான் திருவடிகளை ஏத்தி வானுலகை அரசாளவல்லவர் அழியார். அவர்புகழ் வாய்ந்த புண்ணியர் ஆவார்.

திருக்கோட்டாறு

விரவி நாளும் விழா விடைப்பொலி
தொண்டர் வந்து வியந்து பண்செயக்
குரவ மாரு
நீழற்பொழின்மல்கு கோட்டாற்றில்
அரவ நீள்சடை யானை யுள்கிநின்
றாத ரித்துமுன் அன்பு செய்தடி
பரவு மாறுவல்
லார்பழிபற் றறுப்பாரே. **#559**

நாள்தோறும் நடைபெறும் விழாக்களில் கலந்துகொண்டு பொலிவு எய்தும் தொண்டர் புகழ்ந்து பாட, குரா மரங்களின் பொழில் நீழலில் அமைந்த கோட்டாற்றில் விளங்கும் பாம்பு அணிந்த நீண்ட சடையுடையவனை நினைந்து, ஆதரவுடன் அன்பு செய்து பரவுவார், பழியும் பற்றும் நீங்கப் பெறுவர்.

திருக்கோட்டாறு

அம்பி னேர்விழி மங்கை மார்பலர்
ஆட கம்பெறு மாட மாளிகைக்
கொம்பி னேர்துகி
லின்கொடியாடு கோட்டாற்றில்
நம் பனேநட னேந லந்திகழ்
நாதனே யென்று காதல் செய்தவர்
தம்பி னேர்ந்தறி
யார்தடுமாற் றவல்வினையே. **#560**

அம்புபோன்ற விழியை உடைய மங்கையர் ஆடுமிடமாகக்கொண்ட மாடமாளிகைகளில் கொம்பிற் கோத்து உயர்த்திய துகிற்கொடிகள் ஆடும் கோட்டாற்றில் விளங்கும் நம்பனே! நடனம் புரிபவனே! நன்மைகள் பலவும் வாய்ந்த நாதனே! என்று அன்பு செய்தவர், தமக்குப் பின் தடுமாற்றம் வல்வினைகள் வருவதை அறியார்.

திருக்கோட்டாறு

பழைய தம்மடி யார்து திசெயப்
பாரு ளோர்களும் விண்ணு ளோர்தொழக்
குழலு மொந்தை
விழாவொலி செய்யுங்கோட்டாற்றில்
கழலும் வண்சிலம் பும்மொ லிசெயக்
கானி டைக்கண மேத்த வாடிய

அழக னென்றெழுவார்
அணியாவர் வானவர்க்கே. **#561**

பழமையான தம் அடியவர் துதிசெய்யவும், மண்ணுளோர், விண்ணுளோர் தொழவும் குழல் மொந்தை முதலியன விழாஒலி செய்யவும் விளங்கும் கோட்டாற்றில் கழலும் வளமான சிலம்பும் ஒலிக்கக் கானகத்தே பேய்க்கணம் ஏத்த ஆடிய அழகன் என்று சிவபெருமானை வணங்கப் போதுவார், வானவர்க்கு அணியாவர்.

<u>திருக்கோட்டாறு</u>

பஞ்சின் மெல்லடி மாத ராடவர்
பத்தர் சித்தர்கள் பண்பு வைகலும்
கொஞ்சி யின்மொழியால்
தொழின்மல்கு கோட்டாற்றில்
மஞ்ச னேமணி யேம ணிமிடற்
றண்ண லேயென வுண்ணெ கிழ்ந்தவர்
துஞ்சு மாறறியார்
பிறவாரித் தொன்னிலத்தே. **#562**

பஞ்சு போன்ற மெல்லிய அடிகளை உடைய மாதர்கள், ஆடவர்கள், பத்தர்கள், சித்தர்கள் ஆகியோர் இறைவனுடைய பண்புகளை நாள்தோறும் இன்மொழியால் தொழுகின்ற கோட்டாற்றில் மைந்தனே! மணியே ! மணிமிடற்று அண்ணலே என்று உள்நெகிழ்ந்து வணங்குவோர் இனி இறத்தல் பிறத்தல் இலராவர்.

<u>திருக்கோட்டாறு</u>

கலவ மாமயி லாளொர் பங்கனைக்
கண்டு கண்மிசை நீர்நெ கிழ்த்திசை
குலவு மாறுவல்லார்
குடிகொண்ட கோட்டாற்றில்
நிலவு மாமதி சேர்ச டையுடை
நின்ம லாவென வுன்னு வாரவர்
உலவு வானவரின்
உயர்வாகுவ துண்மையதே. **#563**

தோகையை உடைய மயில் போன்றவளாகிய பார்வதிதேவியின் பங்கனைக் கண்டு கண்ணீர் நெகிழ்ந்து இசையோடு தோத்திரம் சொல்லுவார் குடி கொண்டுள்ள கோட்டாற்றில், நில வொளி வீசும் பிறைமதிபோன்ற சடையை உடைய நின்மலனே! என அவனை நினைவார் வானில் உலவுகின்ற வானவர்களினும் உயர்வாகுவது உண்மை.

திருக்கோட்டாறு

வண்ட லார்வயற் சாலி யாலைவ
ளம்பொ லிந்திட வார்பு னற்றிரை
கொண்ட லார்கொணர்ந்
தங்குலவுந்திகழ் கோட்டாற்றில்
தொண்டெ லாந்து திசெய்ய நின்ற
தொழில னேகழ லால ரக்கனை
மிண்டெ லாந்தவிர்த்
தென்னுகந்திட்ட வெற்றிமையே. **#564**

வண்டல் மண் பொருந்திய நெல்வயல்களும் கரும்பாலைகளும் வளம் பொலிய மிக்க தண்ணீரை மேகங்கள் கொண்டு வந்து தரும் கோட்டாற்றில் தொண்டர்களெல்லாம் துதிக்க ஐந்தொழில் புரிபவனே! திருவடியால் இராவணனின் வலிமையைக் கெடுத்துப் பின் அவனை உகந்திட்ட வெற்றிமை யாதோ?

திருக்கோட்டாறு

கருதி வந்தடி யார்தொ ழுதெழக்
கண்ண னோடயன் றேடவானையின்
குருதி மெய்கலப்ப
உரிகொண்டு கோட்டாற்றில்
விருதி னான்மட மாது நீயும்வி
யப்பொ டுமுயர் கோயில் மேவிவெள்
எருதுகந் தவனே
யிரங்காயுன தின்னருளே. **#565**

அடியவர் கருதி வந்து தொழுது எழவும், கண்ணனோடு பிரமன் தேடவும், ஆனையின் குருதி மெய்யில் கலக்குமாறு அதன் தோலைப் போர்த்துக் கோட்டாற்றில் உயரிய புகழுரைகளோடு உமையம்மையும் நீயும் வியப்போடு உயரிய கோயிலில் எழுந்தருளி வெள்ளிய எருதை வாகனமாக உகந்த பெருமானே! உனது இனிய அருளை வழங்க இரங்குவாயாக.

திருக்கோட்டாறு

உடையி லாதுழல் கின்ற குண்டரும்
ஊண ருந்தவத் தாய சாக்கியர்
கொடையி லாமனத்தார்
குறையாருங் கோட்டாற்றில்
படையி லார்மழு வேந்தி யாடிய

பண்ப னேயிவ ரென்கொ லோநுனை
அடைகி லாதவண்ணம்
அருளாயுன் னடியவர்க்கே. **#566**

உடை உடுத்தாது திரியும் சமணரும், ஊண் அருந்தாத தவத்தைப் புரியும் புத்தரும் உலோபியின் மனம் போன்றவர். அவர்கள் கூறும் குறை உரைபொருந்தக் கோட்டாற்றில் படைக்கலமாக மழுவை ஏந்தி ஆடிய பண்பனே! சமண பௌத்தர்கள் உன்னை அடையாமைக்குரிய காரணம் யாது? அதனை அடியவர்க்குக் கூறியருளுக.

திருக்கோட்டாறு

கால னைக்கழ லாலு தைத்தொரு
காம னைக்கன லாகச் சீறிமெய்
கோல வார்குழலாள்
குடிகொண்ட கோட்டாற்றில்
மூல னைமுடி வொன்றி லாதவெம்
முத்த னைப்பயில் பந்தன் சொல்லிய
மாலை பத்தும்வல்லார்க்
கௌிதாகும் வானகமே. **#567**

காலனைக் கழலணிந்த காலால் உதைத்தும், காமனை நெற்றிக் கண்ணால் கனலாகுமாறு சீறியும், மேனியின் ஒரு பாதியில் அழகிய நீண்ட கூந்தலை உடைய உமையம்மையோடு கூடிக்குடிகொண்டுள்ள கோட்டாற்றில், எல்லாப் பொருள்கட்கும் மூலகாரணனை முடிவில்லாத முத்தனை ஞானசம்பந்தன் போற்றிப்பாடிய இத்தமிழ் மாலைபத்தையும் வல்லவர்க்கு வானகம் எளிதாகும்.

திருப்புறவார்

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

திருப்புறவார்,
பண் - சீகாமரம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பனங்காட்டீசுவரர்.
தேவியார் : திருப்புருவமின்னாளம்மை.

விண்ண மர்ந்தன மும்ம தில்களை
வீழ வெங்கணை யாலெய் தாய்விரி
பண்ணமர்ந் தொலிசேர்
புறவார் பனங்காட்டூர்ப்
பெண்ண மர்ந்தொரு பாக மாகிய
பிஞ்ஞ காபிறை சேர்நு தலிடைக்
கண்ணமர்ந் தவனே
கலந்தார்க் கருளாயே. **#568**

வானில் உலவும் வன்மை உடைய முப்புரங்களைக் கொடிய கணையால் எய்து வீழ்த்தினாய். இசைபாடுவோரின் விரிந்த பண்ணிசையொலி சேர்ந்துள்ள புறவார் பனங்காட்டூரில் உமையொருபாகனாக வீற்றிருக்கும் பிஞ்ஞகா! பிறைசேரும் நெற்றியில் கண் பொருந்தியவனே! உன்னை நேசித்தவர்கட்கு அருள்வாயாக.

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

நீடல் கோடல் அலரவெண் முல்லை
நீர்ம லர்நிரைத் தாத ளஞ்செயப்
பாடல் வண்டறையும்
புறவார் பனங்காட்டூர்த்
தோடி லங்கிய காத யன்மின்
துளங்க வெண்குழை துள்ள நள்ளிருள்
ஆடுஞ் சங்கரனே
அடைந்தார்க் கருளாயே. **#569**

நீண்ட காந்தள் மலரவும், வெண்முல்லை நீர்மலர் ஆகியனவற்றிலுள்ள மகரந்தங்களை வரிசையாகச் சென்று உண்ணும் மலர்களின் மகரந்தங்களை அளம் போலக் குவித்து வண்டுகள் இசை பாடும்புறவார் பனங்காட்டூரில், தோடணிந்த காதின் அயலே மின்னொளிதரும் வெண்குழை ஒளிவிட நள்ளிருளில் ஆடும் சங்கரனே! உன்னை அடைந்தார்க்கு அருள்புரிவாயாக.

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

வாளை யுங்கய லும்மிளிர் பொய்கை
வார்பு னற்கரை யருகெ லாம்வயற்
பாளை யொண்கமுகம்
புறவார் பனங்காட்டூர்ப்
பூளை யுந்நறுங் கொன்றை யும்மத
மத்த மும்புனை வாய்க ழலிணைத்
தாளையே பரவுந்
தவத்தார்க் கருளாயே. **#570**

வாளையும் கயலும் மிளிரும் பொய்கைகளையும் நீண்ட வயல்களின் நீர்க்கரைகளிலெல்லாம் பாளைகளை உடைய சிறந்த கமுக மரங்களையும் கொண்டுள்ள புறவார் பனங்காட்டூரில், பூளைப்பூ, நறுங்கொன்றை, ஊமத்தம் மலர் ஆகியவற்றை அணிந்து உறைபவனே! உன்னை அடைந்தார்க்கு அருள்புரிவாயாக.

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

மேய்ந்தி ளஞ்செந்நென் மென்க திர்கவ்வி
மேற்ப டுகலின் மேதி வைகறை
பாய்ந்த தண்பழனப்
புறவார் பனங்காட்டூர்
ஆய்ந்த நான்மறை பாடி யாடும்
அடிக ளென்றென் றரற்றி நன்மலர்
சாய்ந்தடி பரவுந்
தவத்தார்க் கருளாயே. **#571**

வைகறைப் போதில் எருமைகள் இளஞ்செந்நெல் மென் கதிர்களை மேய்ந்து வயிறுநிறைதலால் தண்ணிய நீர்நிலைகளில் சென்று குளிக்கும் புறவார் பனங்காட்டூரில் ஆராய்ந்து கூறிய நான்மறைகளைப் பாடி ஆடும் அடிகளே! என்று பலமுறை சொல்லி நல்ல மலர்களைத்தூவி வீழ்ந்து அடி பரவும் தவத்தினர்க்கு அருள்புரிவாயாக.

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

செங்க யல்லொடு சேல்செ ருச்செயச்
சீறி யாழ்முரல் தேனி னத்தொடு
பங்கயம் மலரும்
புறவார் பனங்காட்டூர்க்
கங்கை யும்மதி யுங்க மழ்சடைக்
கேண்மை யாளொடுங் கூடி மான்மறி

அங்கை யாடலனே
அடியார்க் கருளாயே. **#572**
செங்கயல் சேல் இரண்டும் போரிட, சீறியாழ் போல ஒலிசெயும் வண்டுகளோடு தாமரை மலரும் புறவார்பனங்காட்டூரில் கங்கையும் மதியும் கமழ்கின்ற சடையினனாய் உமையம்மையோடு கூடி மான்கன்றைக்கையில் ஏந்திய அழகிய கையோடு ஆடுபவனே! என்று போற்றும் அடியார்க்கு அருள் புரிவாயாக.

<u>திருவன்பார்த்தான்பனங்காட்டூர்</u>

நீரி னார்வரை கோலி மால்கடல்
நீடி யபொழில் சூழ்ந்து வைகலும்
பாரினார் பிரியாப்
புறவார் பனங்காட்டூர்க்
காரி னார்மலர்க் கொன்றை தாங்கு
கடவு ளென்றுகை கூப்பி நாடொறும்
சீரினால் வணங்குந்
திறத்தார்க் கருளாயே. **#573**
பெரிய கடலை எல்லையாகக்கோலி நீண்ட பொழில் சூழ்ந்து விளங்கும் இவ்வுலகில் விளங்கும் அடியவர் நாள்தோறும் பிரியாது வணங்கும் புறவார் பனங்காட்டூரில் கார்காலத்தே மலரும் கொன்றையை அணிந்தகடவுளே! என்று கை குவித்து நாள்தோறும் சிறப்போடு வழிபடும் அடியவர்கட்கு அருள் புரிவாயாக.

<u>திருவன்பார்த்தான்பனங்காட்டூர்</u>

கைய ரிவையர் மெல்வி ரல்லவை
காட்டி யம்மலர்க் காந்த ளங்குறி
பையரா விரியும்
புறவார் பனங்காட்டூர்
மெய்ய ரிவையொர் பாக மாகவும்
மேவி னாய்கழ லேத்தி நாடொறும்
பொய்யிலா வடிமை
புரிந்தார்க் கருளாயே. **#574**
மகளிரின் மெல்லிய கைவிரல்களைக் காட்டிப் படம் பொருந்திய பாம்பு போல் காந்தள் செடி விரிந்து மலரும் புறவார் பனங்காட்டூரில் உமையம்மையைத் தனது மெய்யில் ஒரு பாகமாகக் கொண்டு எழுந்தருளியிருப்பவனே! எனக்கூறித் திருவடிகளைப் பரவி நாள்தோறும் மெய்த்தொண்டு புரியும் அடியவர்க்கு அருள் புரிவாயாக.

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

தூவி யஞ்சிறை மெல்ந டையன
மல்கி யொல்கிய தூமலர்ப் பொய்கைப்
பாவில் வண்டறையும்
புறவார் பனங்காட்டூர்
மேவி யந்நிலை யாய ரக்கன
தோள டர்த்தவன் பாடல் கேட்டருள்
ஏவியெம் பெருமான்
என்பவர்க் கருளாயே. **#575**

அழகிய சிறகுகளோடு மென்மையான நடையை உடைய அன்னப்பறவைகள் செறிந்த தூய மலர்ப் பொய்கைகளின் பரப்பில் வண்டுகள் ஒலிசெயும் புறவார்பனங்காட்டூரில் நிலையாக மேவியவனாய் இராவணனின் தோள்களை அடர்த்து அவன் பாடல் கேட்டு அருள் வழங்கிய பெருமானே! எனப்போற்றும் அடியவர்க்கு அருள்புரிவாயாக.

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

அந்தண் மாதவி புன்னை நல்ல
அசோக மும்மர விந்தம் மல்லிகை
பைந்தண் ஞாழல்கள்
சூழ்புறவார் பனங்காட்டூர்
எந்தி ளம்முகில் வண்ணன் நான்முகன்
என்றி வர்க்கரி தாய்நி மிர்ந்ததொர்
சந்தம் ஆயவனே
தவத்தார்க் கருளாயே. **#576**

அழகும் தண்மையும் உடைய மாதவி, புன்னை, நல்ல அசோகு, தாமரை, மல்லிகை, பசுமையும் தண்மையும் கொண்ட ஞாழல் ஆகியன சூழ்ந்த புறவார் பனங்காட்டூரில் இளமையை ஏந்திய முகில்வண்ணன் நான்முகன் என்ற இருவரும் அறிய இயலாதவனாய் அழகிய உருக்கொண்டு நிமிர்ந்து நின்றவனே! தவத்தினராய அடியவர்க்கு அருள்புரிவாயாக.

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

நீண மார்முரு குண்டு வண்டினம்
நீல மாமலர் கவ்வி நேரிசை
பாணில் யாழ்முரலும்
புறவார் பனங்காட்டூர்

நாண ழிந்துழல் வார்ச மணரும்
நண்பில் சாக்கிய ரும்ந கத்தலை
ஊணுரி யவனே
உகப்பார்க் கருளாயே. #577

வண்டுகள், பெருகி நிரம்பிய தேனை உண்டு நீலமலரைக் கவ்வி நேரிசைப்பண்ணில் யாழிசைபோல முரலும் புறவார்பனங்காட்டூரில், நாணமின்றித் திரியும் சமணர்களும் அன்பற்ற புத்தர்களும் நகுமாறு, தலையோட்டில் ஊணைக் கொள்ளுதற்கு உரியவனே! உன்னைக் கண்டு மகிழ்வார்க்கு அருள்புரிவாயாக.

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

மையி னார்மணி போல்மி டற்றனை
மாசில் வெண்பொடிப் பூசும் மார்பனைப்
பைய தேன்பொழில்சூழ்
புறவார் பனங்காட்டூர்
ஐய னைப்புக ழான காழியுள்
ஆய்ந்த நான்மறை ஞான சம்பந்தன்
செய்யுள் பாடவல்லார்
சிவலோகஞ் சேர்வாரே. #578

கருநிறம் பொருந்திய நீலமணி போன்ற மிடற்றனை, குற்றமற்ற திருவெண்ணீற்றைப் பூசும் மார்பினனை, தேன் நிறைந்த பசுமையான பொழில்களால் சூழப்பட்ட புறவார். பனங்காட்டூர் ஐயனை, காழியுள் தோன்றிய நான்மறை வல்ல ஞானசம்பந்தன் பாடிய இப்பதிகச் செய்யுளைப் பாடவல்லவர் சிவலோகம் சேர்வர்.

திருப்புகலி

சீர்காழி

திருப்புகலி,
பண் - சீகாமரம், திருப்புகலி மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

உருவார்ந்த மெல்லியலோர்
பாகமுடையீர் அடைவோர்க்குக்
கருவார்ந்த வானுலகங்
காட்டிக்கொடுத்தல் கருத்தானீர்
பொருவார்ந்த தெண்கடலொண்
சங்கந்திளைக்கும் பூம்புகலித்
திருவார்ந்த கோயிலே
கோயிலாகத் திகழ்ந்தீரே. **#579**

அழகிய உமையம்மையை ஒரு பாகத்தே கொண்டவரே! தம்மை அடைவோர்க்கு அருள்நிறைந்த வானுலகை வழங்கும் கருத்தால் நீர் கரையோடு பொரும் தெண்கடற்சங்கம் வந்து மகிழும் பூம்புகலியில் உள்ள அழகிய கோயிலை உமது இருப்பிடமாகக் கொண்டீர் போலும்.

சீர்காழி

நீரார்ந்த செஞ்சடையீர்
நிரையார்கழல்சேர் பாதத்தீர்
ஊரார்ந்த சில்பலிய
ருழைமானுரிதோ லாடையீர்
போரார்ந்த தெண்டிரைசென்
றணையுங்கானற் பூம்புகலிச்
சீரார்ந்த கோயிலே
கோயிலாகச் சேர்ந்தீரே. **#580**

கங்கை சூடிய செஞ்சடையீர்! வரிசையாய் அமைந்த கழல்களை அணிந்த பாதத்தை உடையவரே! ஊர்தோறும் சிலவாக இடும் பலியை ஏற்பவரே! உழையாகிய மான் தோலை ஆடையாகப் பூண்டவரே! போர் போன்றுயர்ந்து வரும் அலைகள் சென்றணையும் கடற்சோலைகளைக் கொண்ட அழகிய புகலியில் உள்ள சிறப்புமிக்க கோயிலை உமது இருப்பிடமாகக் கொண்டு விளங்குகின்றீர்.

சீர்காழி

அழிமல்கு பூம்புனலு
மரவுஞ்சடைமே லடைவெய்த
மொழிமல்கு மாமறையீர்
கறையார்கண்டத் தெண்டோளீர்
பொழின்மல்கு வண்டினங்க
ளறையுங்கானற் பூம்புகலி
எழின்மல்கு கோயிலே
கோயிலாக விருந்தீரே. **#581**

மிகுதியாக நிறைந்துள்ள அழகிய கங்கையும் பாம்பும் சடைமீது பொருந்தச் சொற்கள் மிகுந்த நான்மறைகளை ஓதியவரே! கறைக்கண்டமும் எண்தோளும் உடையவரே! பொழில்களில் நிறைந்த வண்டுகள் இன்னிசைபாடும் பூம்புகலியுள் எழில் விளங்கும் கோயிலை உம் இருப்பிடமாகக் கொண்டுள்ளீர்.

சீர்காழி

கையிலார்ந்த வெண்மழுவொன்
றுடையீர்கடிய கரியின்றோல்
மயிலார்ந்த சாயன்மட
மங்கைவெருவ மெய்போர்த்தீர்
பயிலார்ந்த வேதியர்கள்
பதியாய்விளங்கும் பைம்புகலி
எயிலார்ந்த கோயிலே
கோயிலாக விசைந்தீரே. **#582**

கையில் வெண்மழு ஒன்றை உடையவரே! மயில் போன்ற சாயலை உடைய உமையம்மை அஞ்ச யானையின் தோலை மெய்யில் போர்த்தவரே! மறை பயின்ற வேதியர்களின் பதியாய் விளங்கும் அழகிய புகலியுள் மதில்களால் சூழப்பட்ட கோயிலை உம் இருப்பிடமாகக் கொண்டுள்ளீர்.

சீர்காழி

நாவார்ந்த பாடலீர்
ஆடலரவம் அரைக்கார்த்தீர்
பாவார்ந்த பல்பொருளின்
பயன்களானீ ரயன்பேணும்
பூவார்ந்த பொய்கைகளும்
வயலுஞ்சூழ்ந்த பொழிற்புகலித்

தேவார்ந்த கோயிலே
கோயிலாகத் திகழ்ந்தீரே. **#583**

நாவிற்பொருந்திய, பாடலைப் பாடுகின்றவரே! ஆடும்பாம்பை இடையிற்கட்டியவரே! பாடலில் பொருந்திய பொருளும் பயனும் ஆனவரே! நான்முகனால் விரும்பப்பெறும் பூக்கள் நிறைந்த பொய்கைகளும் வயல்களும் சூழ்ந்துள்ள பொழில் சூழ்ந்த புகலியில் தெய்வத்தன்மை பொருந்திய கோயிலையே உம் கோயிலாகக் கொண்டு திகழ்கின்றீர்.

<u>சீர்காழி</u>

மண்ணார்ந்த மண்முழவந்
ததும்பமலையான் மகளென்னும்
பெண்ணார்ந்த மெய்மகிழப்
பேணியெரிகொண் டாடினீர்
விண்ணார்ந்த மதியமிடை
மாடத்தாரும் வியன்புகலிக்
கண்ணார்ந்த கோயிலே
கோயிலாகக் கலந்தீரே. **#584**

மார்ச்சனை ஊட்டப்பட்ட (முகப்பு-வலந்தரை) மண்ணாலான (கொட்டு என்பவற்றோடு கூடிய) முழவம் (மிருதங்கம்) ஒலிக்க-இமவான் மகளாகிய பார்வதி தேவி திருமேனியிற் பொருந்தி விளங்க, விரும்பிக் கையில் அனல் கொண்டு ஆடுபவரே! வானத்திற் பொருந்திய மதிமிடையும் மாடங்களைக் கொண்டுள்ள விரிந்த புகலியில் கண்களுக்கு மகிழ்வு தரும் கோயிலை உம் கோயிலாகக் கொண்டு கலந்துள்ளீர்.

<u>சீர்காழி</u>

களிபுல்கு வல்லவுண
ரூர்மூன்றெரியக் கணைதொட்டீர்
அளிபுல்கு பூமுடியீர்
அமரரேத்த வருள்செய்தீர்
தெளபுலகு தேனினமு
மலருள்விரைசேர் திண்புகலி
ஒளிபுல்கு கோயிலே
கோயிலாக வுகந்தீரே. **#585**

களிப்புமிக்க வலிய அவுணர்களின் மூன்று ஊர்கள் எரியுமாறு கணை எய்தவரே! வண்டுகள் சூழும் மலர்முடியை உடைய 120 வரே! தேவர்கள் வழிபட அருள் புரிந்தவரே! வண்டுகள் சூழும் தெளந்த தேன் நிறைந்த

மலருட் பொருந்திய மணம் கமழும் புகலியில் உள்ள ஒளி பொருந்திய கோயிலை உம் கோயிலாகக் கொண்டு மகிழ்கின்றீர்.

சீர்காழி

பரந்தோங்கு பல்புகழ்சே
ரக்கர்கோனை வரைக்கீழிட்
டுரந்தோன்றும் பாடல்கேட்
டுகவையளித்தீ ருகவாதார்
புரந்தோன்று மும்மதிலு
மெரியச்செற்றீர் பூம்புகலி
வரந்தோன்று கோயிலே
கோயிலாக மகிழ்ந்தீரே. **#586**

பரவிய பல்புகழை உடைய இராவணனைக் கயிலை மலைக்கீழ் அகப்படுத்திப் பொருள்நிறைந்த அவன் பாடலைக் கேட்டு மகிழ்ந்து வாழ்நாள் அருளியவரே! தம்மோடு மகிழ்வில்லாத அசுரர்களின் மும்மதில்களையும் எரியச் செய்தவரே! அழகிய புகலியில் அருள் நலம் தோன்றும் கோயிலை உம் கோயிலாகக் கொண்டு மகிழ்கின்றீர்.

சீர்காழி

சலந்தாங்கு தாமரைமே
லயனுந்தரணி யளந்தானுங்
கலந்தோங்கி வந்திழிந்துங்
காணாவண்ணங் கனலானீர்
புலந்தாங்கி யைம்புலனுஞ்
செற்றார்வாழும் பூம்புகலி
நலந்தாங்கு கோயிலே
கோயிலாக நயந்தீரே. **#587**

நீரிற்பொருந்திய தாமரை மேல் உறையும் பிரமனும், உலகை அளந்த திருமாலும் கூடி உயர்ந்து சென்றும் அகழ்ந்து சென்றும் காண இயலாதவாறு கனல் உருவம் கொண்டவரே! மெய்யுணர்வு பெற்று ஐம்புலன்களையும் செற்றவர் வாழும் அழகிய புகலியுள் நன்மைகளைக் கொண்ட கோயிலை உம் கோயிலாகக் கொண்டுள்ளீர்.

சீர்காழி

நெடிதாய வன்சமணு
நிறைவொன்றில்லாச் சாக்கியருங்
கடிதாய கட்டுரையாற்
கழறமேலோர் பொருளானீர்

பொடியாரு மேனியினீர்
புகலிமறையோர் புரிந்தேத்த
வடிவாருங் கோயிலே
கோயிலாக மகிழ்ந்தீரே. #588

காலம் நீட்டித்துச் சொல்லும் வலிய சமணர்களும், நிறைவாக ஒன்றைக் கூறாத சாக்கியரும் கடுமையான சொற்களால் பழித்துப் பேச, மேலானதொரு மெய்ப் பொருளாக விளங்குபவரே! பொடிபூசியவரே! புகலிப்பதியுள் மறையவர் விரும்பி ஏத்த அங்குள்ள அழகிய கோயிலையே உம் கோயிலாகக் கொண்டு மகிழ்ந்துள்ளீர்.

சீர்காழி

ஒப்பரிய பூம்புகலி
யோங்குகோயின் மேயானை
அப்பரிசிற் பதியான
அணிகொண்ஞான சம்பந்தன்
செப்பரிய தண்டமிழாற்
றெரிந்தபாட லிவைவல்லார்
எப்பரிசி லிடர்நீங்கி
யிமையோருலகத் திருப்பாரே. #589

ஒப்பில்லாத அழகிய புகலிப்பதியுள் ஓங்கிய கோயிலுள் மேவிய இறைவனை மேலாம் தகைமை உடைய புகலியுள் தோன்றிய ஞானசம்பந்தன் சொல்லுதற்கு அருமையாக விளங்கும் தண்டமிழால் ஆராய்ந்துரைத்த பாடல்களாகிய இவற்றை ஓதவல்லவர் எவ்வகையிலும் இடர்கள் நீங்கி இமையோருலகில் நிலைத்து இருப்பார்கள்.

திருத்தலைச்சங்காடு

திருத்தலைச்சங்காடு

திருத்தலைச்சங்காடு,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செங்கணாயகேசுவரர்.
தேவியார் : சௌந்தரியம்மை.

நலச்சங்க வெண்குழையுந்
தோடும்பெய்தோர் நால்வேதம்
சொலச்சங்கை யில்லாதீர்
சுடுகாடல்லாற் கருதாதீர்
குலைச்செங்காய்ப் பைங்கமுகின்
குளிர்கொள்சோலைக் குயிலாலும்
தலைச்சங்கைக் கோயிலே
கோயிலாகத் தாழ்ந்தீரே. **#590**

அழகிய சங்கவெண்குழையையும் தோட்டையும் அணிந்து ஒப்பற்ற நால்வேதங்களை ஐயம் இன்றி அருளியவரே! சுடுகாடல்லாமல் வேறோர் இடத்தைத் தாம் ஆடுதற்கு இடமாகக் கருதாதவரே! நீர்க் குலைகளாகக் காய்த்துள்ள சிவந்த காய்களை உடைய பசுமையான கமுக மரச்சோலைகளில் குயில்கள் ஆலும் சிறப்புடைய தலைச்சங்கைக் கோயிலை நீர் இருக்கும் கோயிலாகக் கொண்டுள்ளீர்.

திருத்தலைச்சங்காடு

துணிமல்கு கோவணமுந்
தோலுங்காட்டித் தொண்டாண்டீர்
மணிமல்கு கண்டத்தீர்
அண்டர்க்கெல்லா மாண்பானீர்
பிணிமல்கு நூன்மார்பர்
பெரியோர்வாழுந் தலைச்சங்கை
அணிமல்கு கோயிலே
கோயிலாக அமர்ந்தீரே. **#591**

துணியால் இயன்ற கோவணத்தையும் தோல் ஆடையையும் உடுத்த கோலம் காட்டி ஆட்கொண்டவரே! நீல மணி போன்ற கண்டத்தை உடையவரே! தேவர்களுள் மாட்சிமை உடையவரே! நீர், முறுக்கிய பூணூல் மார்பினராகிய அந்தணர் வாழும் தலைச் சங்கையில் விளங்கும் அழகிய கோயிலை உமது கோயிலாகக் கொண்டு அமர்ந்துள்ளீர்.

திருத்தலைச்சங்காடு

சீர்கொண்ட பாடலீர்
செங்கண்வெள்ளே றூர்தியீர்
நீர்கொண்டும் பூக்கொண்டு
நீங்காத்தொண்டர் நின்றேத்தத்
தார்கொண்ட நூன்மார்பர்
தக்கோர்வாழுந் தலைச்சங்கை
ஏர்கொண்ட கோயிலே
கோயிலாக விருந்தீரே. **#592**

சிறப்புமிக்க பாடல்களைப் பாடுபவரே! சிவந்த கண்ணையுடைய திருமாலாகிய வெள்ளேற்றை ஊர்தியாகக் கொண்டவரே! நீரையும் பூவையும் கொண்டு உம்மை நீங்காத தொண்டர் நின்று வழிபட மாலையையும் பூணூலையும் அணிந்த மார்பினை உடையவரே! நீர், தக்கோர் வாழும் தலைச்சங்கையிலுள்ள அழகிய கோயிலை இடமாகக் கொண்டுள்ளீர்.

திருத்தலைச்சங்காடு

வேடஞ்சூழ் கொள்கையீர்
வேண்டிநீண்ட வெண்டிங்கள்
ஓடஞ்சூழ் கங்கையும்
உச்சிவைத்தீர் தலைச்சங்கைக்
கூடஞ்சூழ் மண்டபமுங்
குலாயவாசற் கொடித்தோன்றும்
மாடஞ்சூழ் கோயிலே
கோயிலாக மகிழ்ந்தீரே. **#593**

தாமே விரும்பிப் பற்பல வடிவங்களோடு வரும் இயல்பினரே! நீண்ட வெண்டிங்களாகிய ஓடம் செல்லும் கங்கையாற்றை உச்சியில் வைத்துள்ளவரே! நீர், தலைச் சங்கையில் கூடம், மண்டபம் வாயிலில் கொடி தோன்றும் மாடம் ஆகிய வீடுகள் சூழ்ந்த கோயிலை இருப்பிடமாகக் கொண்டுள்ளீர்.

திருத்தலைச்சங்காடு

சூலஞ்சேர் கையினீர்
சுண்ணவெண்ணீ றாடலீர்
நீலஞ்சேர் கண்டத்தீர்
நீண்டசடைமே லீரேற்றீர்
ஆலஞ்சேர் தண்கான

லன்னமன்னுந் தலைச்சங்கைக்
கோலஞ்சேர் கோயிலே
கோயிலாகக் கொண்டீரே. **#594**
சூலம் ஏந்திய கையை உடையவரே! பொடியாகிய வெண்ணீற்றைப்பூசி ஆடுபவரே! நீலகண்டரே! நீண்ட சடைமேல் கங்கையை ஏற்றுள்ளவரே! நீர், வளம் சேர்ந்த குளிர்ந்த சோலைகளில் அன்னங்கள் பொருந்தி வாழும் தலைச் சங்கையில் உள்ள அழகிய கோயிலை உமது கோயிலாகக் கொண்டுள்ளீர்.

திருத்தலைச்சங்காடு

நிலிநீரொ டாகாச
மனல்காலாகி நின்றைந்து
புலநீர்மை புறங்கண்டார்
பொக்கஞ்செய்யார் போற்றோவார்
சலநீத ரல்லாதார்
தக்கோர்வாழுந் தலைச்சங்கை
நலநீர கோயிலே
கோயிலாக நயந்தீரே. **#595**
நிலம், நீர், ஆகாயம், அனல், காற்று ஆகிய ஐம்பூத வடிவாய் நின்று ஐம்புலன்களை வென்று நிற்பவரே! பொய்யிலாரது வழிபாட்டை ஏற்பவரே! நீர், வஞ்சகமும் இழிசெயல்களும் இல்லாத தக்கோர் வாழும் தலைச் சங்கையில் அழகிய கோயிலை உமது கோயிலாகக் கொண்டுள்ளீர்

திருத்தலைச்சங்காடு

அடிபுல்கு பைங்கழல்கள்
ஆர்ப்பப்பேர்ந்தோர் அனலேந்திக்
கொடிபுல்கு மென்சாயல்
உமையோர் பாகங்கூடினீர்
பொடிபுல்கு நூன்மார்பர்
புரிநூலாளர் தலைச்சங்கைக்
கடிபுல்கு கோயிலே
கோயிலாகக் கலந்தீரே. **#596**
திருவடியிற் பொருந்திய கழல் ஆர்க்க அனல் ஏந்தி நடனம் ஆடி, கொடி போன்ற மென்மையான சாயலை உடைய உமை யம்மையை ஒருபாகமாகக் கொண்டுள்ளவரே! நீர், வெண்பொடி பூசிப்பூணநூல் அணிந்த மார்பினராய் முப்புரி நூலணிந்த அந்தணர் வாழும் தலைச்சங்கையில் விளங்கும் மணம் கமழும் கோயிலையே

உம்கோயிலாகக் கொண்டுள்ளீர்.

திருத்தலைச்சங்காடு

திரையார்ந்த மாகடல்சூழ்
தென்னிலங்கைக் கோமானை
வரையார்ந்த தோளடர
விரலாலூன்று மாண்பினீர்
அரையார்ந்த மேகலையீ
ரந்தணாளர் தலைச்சங்கை
நிரையார்ந்த கோயிலே
கோயிலாக நினைந்தீரே. **#597**

திரைகளோடு கூடிய பெரிய கடல்சூழ்ந்த இலங்கை மன்னனை, அவனுடைய மலைபோன்ற தோள்கள் நெரியுமாறு கால் விரலால் ஊன்றும் பெருவீரம் உடையவரே! இடையில் மேகலையை உடுத்த அம்மையின் பாகத்தைக் கொண்டவரே! நீர் அந்தணாளர் பல்கி வாழும் தலைச் சங்கையில் முறையாக அமைந்த கோயிலை உமது இருப்பிடமாகக் கொண்டுள்ளீர்.

திருத்தலைச்சங்காடு

பாயோங்கு பாம்பணைமே
லானும்பைந்தா மரையானும்
போயோங்கிக் காண்கிலார்
புறநின்றோரார் போற்றோவார்
தீயோங்கு மறையாளர்
திகழுஞ்செல்வத் தலைச்சங்கைச்
சேயோங்கு கோயிலே
கோயிலாகச் சேர்ந்தீரே. **#598**

பாயாக அமைந்த பாம்பணைமேல் பள்ளிகொள்ளும் திருமாலும் பசிய தாமரைமலர் மேல் உறையும் நான்முகனும் சென்று காண இயலாதவரே! புறச்சமயங்களில் நில்லாத அகச்சமயிகளால் அறிந்து போற்றப் படுபவரே! முத்தீ வளர்க்கும் நான்மறையாளர் வாழும் செல்வச் செழிப்புள்ள தலைச்சங்கையில் உயர்ந்து திகழும் கோயிலை உம் கோயிலாகக் கொண்டுள்ளீர்.

திருத்தலைச்சங்காடு

அலையாரும் புனல்துறந்த
அமணர்குண்டர் சாக்கியர்
தொலையாதங் கலர்தூற்றத்

தோற்றங்காட்டி யாட்கொண்டீர்
தலையான நால்வேதந்
தரித்தார்வாழுந் தலைச்சங்கை
நிலையார்ந்த கோயிலே
கோயிலாக நின்றீரே. **#599**

அலைகளை உடைய நீரில் குளியாத அமணர், குண்டர், சாக்கியர் இடைவிடாது அலர்தூற்ற, தம்மை வழிபடுவார்க்குக் காட்சி தந்து ஆட்கொள்பவரே! நீர், நிலையான நால்வேதங் களை ஓதி உணர்ந்த அந்தணர் வாழும் தலைச்சங்கையில் நிலையாக உள்ள கோயிலை உம் கோயிலாகக் கொண்டுள்ளீர்.

<u>திருத்தலைச்சங்காடு</u>

நளிரும் புனற்காழி
நல்லஞான சம்பந்தன்
குளிருந் தலைச்சங்கை
யோங்குகோயின் மேயானை
ஒளிரும் பிறையானை
யுரைத்தபாட வலிவைவல்லார்
மிளிருந் திரைசூழ்ந்த
வையத்தார்க்கு மேலாரே. **#600**

குளிர்ந்த நீரால் வளம் பெறும் காழியில் தோன்றிய நன்மை கருதும் ஞானசம்பந்தன், தண்மையான தலைச்சங்கையில் ஓங்கிய கோயிலில் விளங்கும் இறைவனை, ஒளிரும் பிறையை அணிந்தவனை, போற்றி உரைத்த இப்பதிகப் பாடல்களை ஓதவல்லவர் விளங்கும் கடலால் சூழப்பட்ட மண் உலகினர்க்கு மேலான விண் உலகத்தினராவர்.

திருவிடைமருதூர்

திருவிடைமருதூர்

திருவிடைமருதூர்,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மருதீசர்.
தேவியார் : நலமுலைநாயகியம்மை.

பொங்குநூன் மார்பினீர்
பூதப்படையீர் பூங்கங்கை
தங்குசெஞ் சடையினீர்
சாமவேத மோதினீர்
எங்குமெழிலார் மறையோர்கண்
முறையாலேத்த விடைமருதில்
மங்குல்தோய் கோயிலே
கோயிலாக மகிழ்ந்தீரே. **#601**

திருமேனியில் விளங்கித் தோன்றும் பூணூல் அணிந்தமார்பினரே! பூதப்படைகளை உடையவரே! அழகிய கங்கை தங்கும் செஞ்சடையை உடையவரே! சாமவேதத்தைப் பாடுபவரே! நீர் அழகிய மறைகளைக் கற்றுணர்ந்த மறையவர்; எல்லா இடங்களிலும் முறையால் ஏத்த இடைமருதூரில் வானளாவிய கோயிலை உம்கோயிலாகக் கொண்டு மகிழ்ந்துள்ளீர்.

திருவிடைமருதூர்

நீரார்ந்த செஞ்சடையீர்
நெற்றித்திருக்கண் நிகழ்வித்தீர்
போரார்ந்த வெண்மழுவொன்
றுடையீர் பூதம்பாடலீர்
ஏரார்ந்த மேகலையாள்
பாகங்கொண்டீ ரிடைமருதில்
சீரார்ந்த கோயிலே
கோயிலாகச் சேர்ந்தீரே. **#602**

கங்கை ஆர்ந்த செஞ்சடையை உடையவரே! நெற்றியில் அழகிய கண்ணைக் கொண்டுள்ளவரே! போர்க் கருவி யாகிய வெண்மழு ஒன்றை ஏந்தியவரே! பூதங்கள் பாடுதலை உடையவரே! அழகிய மேகலை அணிந்த பார்வதி தேவியைப் பாகமாகக் கொண்டவரே! நீர், இடைமருதில் உள்ள சிறப்புமிக்க கோயிலை உம் கோயிலாகக்

கொண்டு எழுந்தருளியுள்ளீர்.

திருவிடைமருதூர்

அழன்மல்கு மங்கையில்
ஏந்திப்பூத மவைபாடச்
சுழன்மல்கு மாடலீர்
சுடுகாடல்லாற் கருதாதீர்
எழின்மல்கு நான்மறையோர்
முறையாலேத்த விடைமருதில்
பொழில்மல்கு கோயிலே
கோயிலாகப் பொலிந்தீரே. **#603**

நிறைந்த தீயை, அழகிய கையில் ஏந்திப் பூதங்கள் பாடச் சுழன்று ஆடுபவரே! சுடுகாடல்லால் பிறவிடத்தை நினையாதவரே! நீர், அழகிய நான் மறையோர் முறையால் ஏத்தி வழிபட இடைமருதில் உள்ள சோலைகள் சூழ்ந்த கோயிலை உம் இருப்பிடமாகக் கொண்டு பொலிந்துள்ளீர்.

திருவிடைமருதூர்

பொல்லாப் படுதலையொன்
றேந்திப்புறங்காட் டாடலீர்
வில்லாற் புரமூன்றும்
எரித்தீர் விடையார் கொடியினீர்
எல்லாக் கணங்களும்
முறையாலேத்த விடைமருதில்
செல்வாய கோயிலே
கோயிலாகச் சேர்ந்தீரே. **#604**

பொலிவற்ற, தசைவற்றிய தலையோட்டை ஏந்திச் சுடுகாட்டில் ஆடுபவரே! வில்லால் முப்புரங்களை எரித்தவரே! விடைக்கொடி உடையவரே! நீர், எல்லாக்கணத்தினரும் முறையால் போற்ற இடைமருதில் உள்ள செல்வம் ஆன கோயிலையே உம் இருப்பிடமாகக் கொண்டுள்ளீர்.

திருவிடைமருதூர்

வருந்திய மாதவத்தோர்
வானோரேனோர் வந்தீண்டிப்
பொருந்திய தைப்பூச
மாடியுலகம் பொலிவெய்தத்
திருந்திய நான்மறையோர்

சீராலேத்த விடைமருதில்
பொருந்திய கோயிலே
கோயிலாகப் புக்கீரே. **#605**

பெருமானே! நீர், விரதங்களால் மெய்வருந்திய மாதவத்தோர் வானவர் ஏனோர் வந்து கூடித் தைப்பூச நாளில் காவிரியில் பொருந்தி நீராடி உலகவரோடு தாமும் மகிழுமாறும் திருத்தமான நான்மறைவல்ல அந்தணர்கள் முறையால் ஏத்தவும் இடைமருதில் பொருந்தியுள்ள கோயிலையே இருப்பிடமாகக் கொண்டுள்ளீர்.

திருவிடைமருதூர்

சலமல்கு செஞ்சடையீர்
சாந்தநீறு பூசினீர்
வலமல்கு வெண்மழுவொன்
றேந்திமயானத் தாடலீர்
இலமல்கு நான்மறையோ
ரினிதாவேத்த விடைமருதில்
புலமல்கு கோயிலே
கோயிலாகப் பொலிந்தீரே. **#606**

பெருமானே! கங்கை தங்கிய செஞ்சடையீரே! சாந்தமும் நீறும் பூசியவரே! வெற்றி, பொருந்திய வெண்மழு ஒன்றை ஏந்தி மயானத்தில் ஆடுபவரே! இல்லங்களில் தங்கியுள்ள நான்மறையோர் வழிபாட்டுக் காலங்களில் வந்து இனிதாகப் போற்ற இடைமருதில் ஞானமயமான கோயிலை நீர் இருப்பிடமாகக் கொண்டுள்ளீர்.

திருவிடைமருதூர்

புனமல்கு கொன்றையீர்
புலியினதளீர் பொலிவார்ந்த
சினமல்கு மால்விடையீர்
செய்யீர்கரிய கண்டத்தீர்
இனமல்கு நான்மறையோ
ரேத்துஞ்சீர்கொ ளிடைமருதில்
கனமல்கு கோயிலே
கோயிலாகக் கலந்தீரே. **#607**

காடுகளில் வளரும் கொன்றையினது மலர்களைச் சூடியவரே! புலித்தோலை உடுத்தியவரே! அழகிய சினம்மிக்க வெள் விடையை உடையவரே! சிவந்த மேனியரே! கரிய கண்டத்தைக் கொண்டவரே! நீர், திரளாகப் பொருந்திய நான்மறையோர் ஏத்தும் சிறப்பு மிக்க இடைமருதில் மேகங்கள் தவழும் உயரிய கோயிலை நுமது

இருப்பிடமாகக் கொண்டுள்ளீர்.

திருவிடைமருதூர்

சிலையுய்த்த வெங்கணையாற்
புரமூன்றெரித்தீர் திறலரக்கன்
தலைபத்துந் திண்டோளு
நெரித்தீர் தையல்பாகத்தீர்
இலைமொய்த்த தண்பொழிலும்
வயலுஞ்சூழ்ந்த விடைமருதில்
நலமொய்த்த கோயிலே
கோயிலாக நயந்தீரே. **#608**

மேருமலையாகிய வில்லில் செலுத்திய கொடிய கணையால் முப்புரங்களை எரித்தவரே! வலிமை பொருந்திய இராவணனின் பத்துத்தலைகளையும் தோள்களையும் நெரித்தவரே! மாதொரு கூறரே! இலைகள் அடர்ந்த பொழில்களும் வயல்களும் சூழ்ந்த இடைமருதில் உள்ள அழகு நிறைந்த கோயிலை நுமது இருப்பிடமாகக் கொண்டுள்ளீர்.

திருவிடைமருதூர்

மறைமல்கு நான்முகனு
மாலுமறியா வண்ணத்தீர்
கறைமல்கு கண்டத்தீர்
கபாலமேந்து கையினீர்
அறைமல்கு வண்டினங்க
ளாலுஞ்சோலை யிடைமருதில்
நிறைமல்கு கோயிலே
கோயிலாக நிகழ்ந்தீரே. **#609**

வேதங்களை ஓதும் நான்முகனும் திருமாலும் அறிய இயலாத தன்மையீர்! கறைக் கண்டத்தீர்! கபாலம் ஏந்தும் கையினை உடையீர்! இசைமிழற்று வண்டுகள் பாடும் சோலைகள் சூழ்ந்த இடைமருதில் உள்ள நிறைவான கோயிலை நும் இருப்பிடமாகக் கொண்டுள்ளீர்.

திருவிடைமருதூர்

சின்போர்வைச் சாக்கியரும்
மாசுசேருஞ் சமணரும்
துன்பாய கட்டுரைகள்
சொல்லி யல்லல்தூற்றவே
இன்பாய வந்தணர்க

ளேத்துமேர்கொ ளிடைமருதில்
அன்பாய கோயிதேல
கோயிலாக வமர்ந்தீரே. **#610**

பெருமானே! நீர், அற்பமான போர்வை அணிந்த சாக்கியரும், அழுக்கு ஏறிய உடலினராகிய சமணரும் துன்பமயமான கட்டுரைகள் சொல்லித்தூற்ற, இன்பம் கருதும் அந்தணர்கள் ஏத்தும் அழகிய இடைமருதில் அன்பு வடிவான கோயிலையே நும் கோயிலாகக் கொண்டுள்ளீர்.

திருவிடைமருதூர்

கல்லின் மணிமாடக்
கழுமலத்தார் காவலவன்
நல்ல அருமறையான்
நற்றமிழ் ஞானசம்பந்தன்
எல்லி யிடைமருதில்
ஏத்துபாட லிவைபத்தும்
சொல்லு வார்க்குங்
கேட்பார்க்குந் துயரம்இல்லையே. **#611**

கல்லால் இயன்ற அழகிய மாடவீடுகளைக் கொண்ட கழுமலத்தார் தலைவனாகிய நன்மைதரும் அருமறைவல்ல நற்றமிழ் ஞானசம்பந்தன் இராப்போதில் இடைமருதை அடைந்து ஏத்திய பாடல் இவை பத்தையும் சொல்லுவார்க்கும் கேட்பார்க்கும் துயரம் இல்லை.

திருநல்லூர்

திருநல்லூர்

திருநல்லூர்,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பெரியாண்டேசுவரர்.
தேவியார் : திரிபுரசுந்தரியம்மை.

பெண்ணமருந் திருமேனி
யுடையீர் பிறங்குசடைதாழப்
பண்ணமரும் நான்மறையே
பாடியாடல் பயில்கின்றீர்
திண்ணமரும் பைம்பொழிலும்
வயலுஞ்சூழ்ந்த திருநல்லூர்
மண்ணமருங் கோயிலே
கோயிலாக மகிழ்ந்தீரே. **#612**

உமையம்மை பொருந்திய திருமேனியை உடையவரே! விளங்கும் சடைகள் தாழ்ந்து தொங்க இசை அமைதி உடைய நான்மறைகளைப்பாடி ஆடல்புரிகின்றவரே! நீர் உறுதியான பசிய பொழில்களும் வயல்களும் சூழ்ந்த திருநல்லூரில் மண்ணுலக மக்களால் விரும்பப்படும் கோயிலையே நும் கோயிலாகக் கொண்டுள்ளீர்.

திருநல்லூர்

அலைமல்கு தண்புனலும்
பிறையுஞ்சூடி யங்கையில்
கொலைமல்கு வெண்மழுவு
மனலுமேந்துங் கொள்கையீர்
சிலைமல்கு வெங்கணையாற்
புரமூன்றெரித்தீர் திருநல்லூர்
மலைமல்கு கோயிலே
கோயிலாக மகிழ்ந்தீரே. **#613**

அலைகள் நிறைந்த குளிர்ந்த கங்கையையும், பிறையையும் முடியிற்சூடி அழகிய கைகளில் கொல்லும் தன்மை வாய்ந்த வெண்மழு அனல் ஆகியவற்றை ஏந்திய தன்மையீர்! வில்லிற் பொருந்திய கொடிய கணையால் முப்புரங்களை எரித்தீர்! நீர் திருநல்லூரில் மலையமைப்புடைய கோயிலையே நும் கோயிலாகக் கொண்டு மகிழ்கின்றீர்.

திருநல்லூர்

குறைநிரம்பா வெண்மதியஞ்
சூடிக்குளிர்புன் சடைதாழப்
பறைநவின்ற பாடலோ
டாடல்பேணிப் பயில்கின்றீர்
சிறைநவின்ற தண்புனலும்
வயலுஞ்சூழ்ந்த திருநல்லூர்
மறைநவின்ற கோயிலே
கோயிலாக மகிழ்ந்தீரே. **#614**

என்றும் குறைநிரம்பாத வெண்மதியத்தைச்சூடி, குளிர்ந்த மென்மையான சடைகள் தாழப் பறவைகள் ஒலிக்கப் பாடலோடு ஆடலை விரும்பிப் பழகும் இயல்பினரே! மடையில் நிரம்பிய குளிர்ந்த புனலோடு கூடிய வயல்கள் சூழ்ந்த திருநல்லூரில் வேதங்கள் ஒலிக்கும் கோயிலையே நும் கோயிலாக விரும்பி மகிழ்ந்து உறைகின்றீர்.

திருநல்லூர்

கூனமரும் வெண்பிறையும்
புனலுஞ்சூடுங் கொள்கையீர்
மானமரு மென்விழியாள்
பாகமாகு மாண்பினீர்
தேனமரும் பைம்பொழிலின்
வண்டுபாடுந் திருநல்லூர்
வானமருங் கோயிலே
கோயிலாக மகிழ்ந்தீரே. **#615**

வளைந்த வெண்பிறையையும் கங்கையையும் முடியிற்சூடுபவரே! மான் போன்ற மென்மையான விழியினை உடைய உமையம்மை பாகமாக விளங்கும் மாண்புடையவரே! தேன் நிறைந்த பசிய பொழிலில் வண்டுபாடும் திருநல்லூரில் விளங்கும் வானளாவிய கோயிலையே நும் கோயிலாகக் கொண்டு மகிழ்கின்றீர்.

திருநல்லூர்

நிணங்கவரு மூவிலையு
மனலுமேந்தி நெறிகுழலாள்
அணங்கமரும் பாடலோ
டாடன்மேவு மழகினீர்
திணங்கவரு மாடரவும்
பிறையுஞ்சூடித் திருநல்லூர்

மணங்கமழுங் கோயிலே
கோயிலாக மகிழ்ந்தீரே. **#616**

நிணம் பொருந்திய மூவிலைவேலையும், அனலையும் கைகளில் ஏந்தி நெறிப்புடைய கூந்தலினளாகிய உமையம்மையோடு கூடிப் பாடல் ஆடல் விரும்பும் அழகுடையவரே! உறுதியாகப் பிற உயிர் கவரும் பாம்பையும் பிறையையும் சூடித் திருநல்லூரில் மணங்கமழும் கோயிலையே நும் இருப்பிடமாகக் கொண்டு மகிழ்கின்றீர்.

<u>திருநல்லூர்</u>

கார்மருவு பூங்கொன்றை
சூடிக்கமழ் புன்சடைதாழ
வார்மருவு மென்முலையாள்
பாகமாகு மாண்பினீர்
தேர்மருவு நெடுவீதிக்
கொடிகளாடுந் திருநல்லூர்
ஏர்மருவு கோயிலே
கோயிலாக விருந்தீரே. **#617**

கார்காலத்தைப் பொருந்திமலரும் கொன்றைப் பூவைச் சூடி மணம் கமழும் புன்சடை தாழக் கச்சணிந்த மென்மையான தனங்களை உடைய உமையம்மை பாகமாக விளங்கும் மாண்புடையவரே! கொடிகள் அசைந்தாடும் தேர் ஓடும் நீண்ட வீதியினை உடைய திருநல்லூரில் அழகு விளங்கும் கோயிலையே நும் இருப்பிடமாகக் கொண்டு உறைகின்றீர்.

<u>திருநல்லூர்</u>

ஊன்றோயும் வெண்மழுவு
மனலுமேந்தி யுமைகாண
மீன்றோயுந் திசைநிறைய
வோங்கியாடும் வேடத்தீர்
தேன்றோயும் பைம்பொழிலின்
வண்டுபாடுந் திருநல்லூர்
வான்றோயுங் கோயிலே
கோயிலாக மகிழ்ந்தீரே. **#618**

ஊன்தோயும் வெண்மழுவையும் அனலையும் கையில் ஏந்தி உமையம்மை காண விண்மீன்கள் பொருந்திய வானத்தைத் தொடும் எல்லாத் திசைகளும் நிறையும்படி ஓங்கி ஆடும் நடனக் கோலத்தைக் கொண்டவரே! தேன் பொருந்திய அழகிய பொழிலின் கண் வண்டுகள் இசைபாடும் திருநல்லூரில் உள்ள வானளாவிய கோயிலையே நும்

கோயிலாக மகிழ்ந்து உறைகின்றீர்.

திருநல்லூர்

காதமரும் வெண்குழையீர்
கறுத்தவரக்கன் மலையெடுப்ப
மாதமரு மென்மொழியாண்
மறுகும் வண்ணங் கண்டுகந்தீர்
தீதமரா வந்தணர்கள்
பரவியேத்துந் திருநல்லூர்
மாதமருங் கோயிலே
கோயிலாக மகிழ்ந்தீரே. **#619**

காதில் பொருந்திய வெண்குழையை உடையவரே! சினந்து வந்த இராவணன் கயிலையைப் பெயர்க்கக் காதல் விளைக்கும் மெல்லிய மொழியினை உடையாளாகிய உமையம்மை கலங்க, அதனைக் கண்டு உகந்தவரே! தீயசெயல்களை விரும்பாத அந்தணர்கள் பரவிப் போற்றும் திருநல்லூரில் உள்ள பெருமை பொருந்திய கோயிலையே நும் கோயிலாகக் கொண்டு மகிழ்கின்றீர்.

திருநல்லூர்

போதின்மே லயன்றிருமால்
போற்றியும்மைக் காணாது
நாதனே யிவனென்று
நயந்தேத்த மகிழ்ந்தளித்தீர்
தீதிலா அந்தணர்கள்
தீமூன்றோம்புந் திருநல்லூர்
மாதரா ளவளோடு
மன்னுகோயில் மகிழ்ந்தீரே. **#620**

தாமரை மலர் மேல் உறையும் நான்முகனும், திருமாலும் போற்றியும் உம்மைக் காணாது பின் இவனே பரம்பொருள் என்று விரும்பி ஏத்த மகிழ்ந்து, அவர்கட்கு அருள் செய்தவரே! தீதில்லாத அந்தணர்கள் முத்தீயோம்பும் திருநல்லூரில் மன்னும் கோயிலில் உமையம்மையரோடு மகிழ்ந்து உறைகின்றீர்.

திருநல்லூர்

பொல்லாத சமணரொடு
புறங்கூறுஞ் சாக்கியரொன்
றல்லாதா ரறவுரைவிட்
டடியார்கள் போற்றோவா

நல்லார்க ளந்தணர்கள்
நாளுமேத்துந் திருநல்லூர்
மல்லார்ந்த கோயிலே
கோயிலாக மகிழ்ந்தீரே. **#621**
பொல்லாத சமணர்களோடு புறங்கூறும் சாக்கியர் என்ற ஒன்றிலும் சேராதார் கூறும் அறவுரைகளை விட்டு அடியவர்கள் வந்து வழிபடுதல் நீங்காததும், நல்லவர்களாகிய அந்தணர்கள் நாளும் வந்து வழிபடுவதும் ஆகிய திருநல்லூரில் மலையில் விளங்கும் கோயிலையே தன் கோயிலாகக் கொண்டு மகிழ்கின்றீர்.

<u>திருநல்லூர்</u>

கொந்தணவும் பொழில்புடைசூழ்
கொச்சைமேவு குலவேந்தன்
செந்தமிழின் சம்பந்தன்
சிறைவண்புனல்சூழ் திருநல்லூர்ப்
பந்தணவு மெல்விரலாள்
பங்கன்றன்னைப் பயில்பாடல்
சிந்தனையா லுரைசெய்வார்
சிவலோகஞ்சேர்ந் திருப்பாரே. **#622**
பூங்கொத்துக்கள் செறிந்த பொழில்புடை சூழ்ந்த கொச்சைவயம் என்னும் சீகாழியில் உயர் குலத்தில் தோன்றிய தலைவனாகிய செந்தமிழ் வல்ல ஞானசம்பந்தன் மடையில் சிறைப்படுத்திய வண்புனல் சூழ்ந்த திருநல்லூரில் பந்து பொருந்தும் மெல்விரலாள் பங்கனைப் போற்றிப் பாடிய இப்பதிகப் பாடல்களைச் சிந்தையோடு ஒன்றி உரைப்பவர் சிவலோகம் சேர்ந்து இனிதிருப்பர்.

திருக்குடவாயில்

திருக்குடவாயில்

திருக்குடவாயில்,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கோணேசுவரர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

கலைவாழு மங்கையீர்
கொங்கையாருங் கருங்கூந்தல்
அலைவாழுஞ் செஞ்சடையி
லரவும்பிறையு மமர்வித்தீர்
குலைவாழை கமுகம்பொன்
பவளம்பழுக்குங் குடவாயில்
நிலைவாழுங் கோயிலே
கோயிலாக நின்றீரே. **#623**

மான் வாழும் கையினை உடையவரே! மணம் பொருந்திய கரிய கூந்தலை உடைய கங்கை தங்கிய செஞ்சடையில் பாம்பையும் பிறையையும் அணிந்தவரே! வாழை, குலைகளைத் தந்தும், கமுகு பொன்னையும் பவளத்தையும் போலப் பழுத்தும் பயன் தந்தும் வளம் செய்யும் குடவாயிலில் நிலைத்து விளங்கும் கோயிலை நீர் விரும்பும் கோயிலாகக் கொண்டுள்ளீர்.

திருக்குடவாயில்

அடியார்ந்த பைங்கழலுஞ்
சிலம்புமார்ப்ப வங்கையில்
செடியார்ந்த வெண்டலையொன்
றேந்தியுலகம் பலிதேர்வீர்
குடியார்ந்த மாமறையோர்
குலாவியேத்துங் குடவாயில்
படியார்ந்த கோயிலே
கோயிலாகப் பயின்றீரே. **#624**

திருவடிகளில் கட்டிய புதிய கழலும் சிலம்பும், ஆர்ப்ப, அகங்கையில் முடைநாற்றம் பொருந்திய வெண்டலை ஒன்றையேந்தி உலகம் முழுதும் திரிந்து பலிஏற்பவரே! குடியாக உள்ள சிறந்த மறையோர் கொண்டாடி ஏத்தும் குடவாயிலில் படிகள் அமைந்த உயர்ந்த மாடக் கோயிலை நீர் விரும்பும் கோயிலாகக் கொண்டுள்ளீர்.

திருக்குடவாயில்

கழலார்பூம் பாதத்தீ
ரோதக்கடலில் விடமுண்டன்
றழலாருங் கண்டத்தீ
ரண்டர்போற்று மளவினீர்
குழலார வண்டினங்கள்
கீதத்தொலிசெய் குடவாயில்
நிழலார்ந்த கோயிலே
கோயிலாக நிகழ்ந்தீரே. **#625**

கழல் அணிந்த அழகிய திருவடியை உடையவரே! முற்காலத்தே நீர் பெருகிய கடலில் தோன்றிய விடத்தை உண்டு அவ்விடத்தை அழல்போன்று வெம்மை செய்யும் நிலையில் கண்டத்தில் நிறுத்தியவரே! தேவர்களால் போற்றப்பெறும் தன்மையினரே! மகளிர் கூந்தலில் பொருந்தி வண்டுகள் இசைஒலி செய்யும் குடவாயிலில் ஒளிபொருந்திய கோயிலை நுமது இடமாகக் கொண்டுள்ளீர்.

திருக்குடவாயில்

மறியாருங் கைத்தலத்தீர்
மங்கைபாக மாகச்சேர்ந்
தெறியாரு மாமழுவு
மெரியுமேந்துங் கொள்கையீர்
குறியார வண்டினங்கள்
தேன்மிழற்றுங் குடவாயில்
நெறியாருங் கோயிலே
கோயிலாக நிகழ்ந்தீரே. **#626**

மான் பொருந்திய கையினரே! உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டவராய் நெருப்பின் தன்மை கொண்ட மழுவையும் அனலையும் ஏந்தும் இயல்பினரே! வண்டினங்கள் மலர்களை அலர்த்தித் தேன் உண்ணும் குறிப்போடு இசை மிழற்றும் குடவாயிலில் உள்ள, முறையாக அமைந்த கோயிலையே நும் கோயிலாகக் கொண்டு வாழ்கின்றீர்.

திருக்குடவாயில்

இழையார்ந்த கோவணமுங்
கீளுமெழிலா ருடையாகப்
பிழையாத சூலம்பெய்
தாடல்பாடல் பேணினீர்

குழையாரும் பைம்பொழிலும்
வயலுஞ்சூழ்ந்த குடவாயில்
விழவார்ந்த கோயிலே
கோயிலாக மிக்கீரே. **#627**

நூலிழையால் இயன்ற கோவணம் கீள் ஆகியவற்றை அழகிய உடைகளாகப் பூண்டு, கையில் தப்பாத சூலம் ஏந்தி ஆடல் பாடல்களை விரும்புபவரே! தளிர்கள் நிறைந்த பசிய பொழில் களும் வயலும் சூழ்ந்த குடவாயிலில் விழாக்கள் பலநிகழும் கோயிலையே நும் இருப்பிடமாகக் கொண்டு பெருமிதம் உற்றீர்.

திருக்குடவாயில்

அரவார்ந்த திருமேனி
யானவெண்ணீ றாடினீர்
இரவார்ந்த பெய்பலிகொண்
டிமையோரேத்த நஞ்சுண்டீர்
குரவார்ந்த பூஞ்சோலை
வாசம்வீசுங் குடவாயில்
திருவார்ந்த கோயிலே
கோயிலாகத் திகழ்ந்தீரே. **#628**

பாம்புகளைப் பூண்டுள்ள திருமேனியில் நன்கு அமைந்த திருநீற்றை அபிடேகமாகக் கொண்டவரே! இரத்தலை மேற்கொண்டு பிறர் இடும்பிச்சை ஏற்று இமையோர் பரவ நஞ்சுண்டவரே! குராமரங்கள் நிறைந்துள்ள பூஞ்சோலையின் மணம் வீசும் குடவாயிலில் உள்ள அழகு பொருந்திய கோயிலையே நும் கோயிலாகக் கொண்டு விளங்குகின்றீர்.

திருக்குடவாயில்

பாடலார் வாய்மொழியீர்
பைங்கண்வெள்ளே றூர்தியீர்
ஆடலார் மாநடத்தீ
ரரிவைபோற்று மாற்றலீர்
கோடலார் தும்பிமுரன்
றிசைமிழற்றுங் குடவாயில்
நீடலார் கோயிலே
கோயிலாக நிகழ்ந்தீரே. **#629**

வேதப் பாடல்களில் அமைந்த உண்மை வாசகங்களாக விளங்குபவரே! பசிய கண்களைக் கொண்ட வெள்ளேற்றை ஊர்தியாக உடையவரே! ஆடலாக அமைந்த சிறந்த நடனத்தைப் புரிபவரே! உமையம்மை போற்றும் ஆற்றலை உடையவரே! காந்தள் மலரிற் பொருந்திய

வண்டுகள் முரன்று இசைபாடும் குடவாயிலில் நீண்டுயர்ந்த கோயிலை நும் கோயிலாகக் கொண்டு விளங்குகின்றீர்.

திருக்குடவாயில்

கொங்கார்ந்த பைங்கமலத்
தயனுங்குறளாய் நிமிர்ந்தானும்
அங்காந்து தள்ளாட வழலாய்
நிமிர்ந்தீ ரிலங்கைக்கோன்
தங்காதன் மாமுடியுந்
தாளுமடர்த்தீர் குடவாயில்
பங்கார்ந்த கோயிலே
கோயிலாகப் பரிந்தீரே. **#630**

தேன் பொருந்திய பசிய தாமரையில் மேவும் பிரமனும், குறள் வடிவாய்ச் சென்றிருந்து பின் உயர்ந்த திருமாலும் வாய் திறந்து தளர்ச்சியுற அழலுருவாய் நிமிர்ந்தவரே! இராவணனின் பெரிய முடிகளையும் அடிகளையும் அடர்த்தவரே! குடவாயிலின் ஒரு பகுதியாக விளங்கும் கோயிலை நும் கோயிலாகக் கொண்டு அறம் உரைத்தீர்.

திருக்குடவாயில்

இப்பதிகத்தின் **9-**ம் செய்யுள் சிதைந்து போயிற்று**. #631**

திருக்குடவாயில்

தூசார்ந்த சாக்கியருந்
தூய்மையில்லாச் சமணரும்
ஏசார்ந்த புன்மொழிநீத்
தெழில்கொண்மாடக் குடவாயில்
ஆசாரஞ் செய்மறையோ
ரளவிற்குன்றா தடிபோற்றத்
தேசார்ந்த கோயிலே
கோயிலாகச் சேர்ந்தீரே. **#632**

அழுக்கேறிய உடையினராகிய சாக்கியரும் தூய்மையில்லாத சமணர்களும் கூறும் ஏசுதல் நிறைந்த புன் மொழிகளை வெறுத்து அழகிய மாடவீடுகளைக் கொண்டுள்ள குடவாயிலில், தூய்மையாளர்களாகிய அந்தணர் நல்லொழுக்கமாகிய அளவில் குறையாதவராய் அடியிணைகளை ஏத்த, ஒளிநிறைந்த கோயிலையே நும் கோயிலாகக் கொண்டு சேர்ந்துள்ளீர்.

திருக்குடவாயில்

நளிர்பூந் திரைமல்கு
காழிஞான சம்பந்தன்
குளிர்பூங் குடவாயிற்
கோயின்மேய கோமானை
ஒளிர்பூந் தமிழ்மாலை
யுரைத்தபாட லிவைவல்லார்
தளர்வான தானொழியத்
தகுசீர்வானத் திருப்பாரே. **#633**
தண்மையான நீரால் சூழப்பட்ட காழிப்பதியினனாகிய ஞானசம்பந்தன் குளிர்ந்த அழகிய குடவாயிற் கோயிலில் மேவிய இறைவனை, விளங்கும் தமிழ் மாலையாக உரைத்த பாடல்களாகிய இவற்றைவல்லவர் தளர்ச்சிகள் தாமே நீங்கத் தக்க புகழுடைய வானுலகில் இருப்பர்.

சீகாழி

சீர்காழி

சீகாழி,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

நலங்கொண் முத்து மணியும் அணியுந்
திரளோதங்
கலங்கள் தன்னிற் கொண்டு கரைசேர்
கலிக்காழி
வலங்கொண் மழுவொன் றுடையாய் விடையா
யெனவேத்தி
அலங்கல் சூட்ட வல்லார்க் கடையா
அருநோயே. **#634**

அழகிய முத்துக்கள், மணிகள் அணிகலன்கள் ஆகியவற்றை நீர்ப் பெருக்குடைய கடலின் மரக்கலங்கள் கொண்டு வந்து கரையில் சேர்க்கும் ஆரவாரமுடைய காழிப்பதியில் வெற்றிவிளைக்கும் மழு ஒன்றை ஏந்தியவனே! விடையூர்தியனே! என ஏத்தி மலர்மாலை முதலியன சூட்டி வழிபட வல்லாரைத் தீர்தற்கரிய நோய்கள் அடையா.

சீர்காழி

ஊரா ருவரிச் சங்கம் வங்கங்
கொடுவந்து
காரா ரோதங் கரைமே லுயர்த்துங்
கலிக்காழி
நீரார் சடையாய் நெற்றிக் கண்ணா
வென்றென்று
பேரா யிரமும் பிதற்றத் தீரும்
பிணிதானே. **#635**

ஊர்தலை உடைய கடற் சங்குகளை மரக்கலங்கள் கடல் ஓதநீர் வழியே கொண்டு வந்து கரையில் சேர்க்கும் கலிக்காழியில் எழுந்தருளிய கங்கை தங்கிய சடையனே! நெற்றிக்கண்ணா! என்று பல முறையும் அவனது பேர் ஆயிரமும் பிதற்றப் பிணிகள் தீரும்.

சீர்காழி

வடிகொள் பொழிலின் மழலை வரிவண்
டிசைசெய்யக்
கடிகொள் போதிற் றென்ற லணையுங்
கலிக்காழி
முடிகொள் சடையாய் முதல்வா வென்று
முயன்றேத்தி
அடிகை தொழுவார்க் கில்லை யல்ல
லவலமே. **#636**

திருத்தமான சோலைகளில் மழலையாய் வரி வண்டுகள் இசை பாட மணம் கமழும் மலர்களில் படிந்து தென்றல் 122 வீதிகளை அடைந்து மணம் பரப்பி இதம் செய்யும் கலிக்காழியில் எழுந்தருளிய முடிகொள் சடையாய்! முதல்வா என்று தவம் முயன்று ஏத்தி அவன் அடிகளைத் தொழுவார்க்கு அல்லல் அவலம் ஆகியன இல்லை.

<u>சீர்காழி</u>

மனைக்கே யேற வளஞ்செய் பவளம்
வளர்முத்தங்
கனைக்குங் கடலு ளோத மேறுங்
கலிக்காழிப்
பனைக்கைப் பகட்டீ ருரியாய் பெரியா
யெனப்பேணி
நினைக்க வல்ல வடியார் நெஞ்சி
னல்லாரே. **#637**

ஆரவாரிக்கும் கடலின் ஓதம் பவளங்களையும் முத்துக்களையும் வீடுகளில் கொண்டு வந்து சேர்த்து வளம் செய்யும் கலிக் காழிப்பதியுள் எழுந்தருளிய, பனை போன்ற கையை உடைய யானையை ஈர்ந்து அதன் தோலைப் போர்த்தவனே! பெரியாய் என விரும்பிப் பேணி நினைக்க வல்ல நெஞ்சினை உடையார் நன்னெஞ்சுடையார் ஆவர்.

<u>சீர்காழி</u>

பரிதி யியங்கும் பாரிற் சீரார்
பணியாலே
கருதி விண்ணோர் மண்ணோர் விரும்புங்
கலிக்காழிச்
சுருதி மறைநான் கான செம்மை
தருவானைக்
கருதி யெழுமின் வழுவா வண்ணந்
துயர்போமே. **#638**

கதிரவன் உலாவரும் உலகின்கண், சிறப்புமிக்க தொண்டுகளோடு சுருதிகளை அறிந்த விண்ணோரும் மண்ணோரும் விரும்பி வழிபடும் கலிக்காழியுள் மேவிய செவிவழியாகக் கேட்டு ஓதப்பெறும் நான்கு வேதங்களான செம்மையைத் தருபவனை நினைந்து, அவனை வழிபட, எழுந்தால் தவறாது உங்கள் துன்பங்கள் தீரும்.

சீர்காழி

மந்த மருவும் பொழிலி லெழிலார்
மதுவுண்டு
கந்த மருவ வரிவண் டிசைசெய்
கலிக்காழிப்
பந்த நீங்க வருளும் பரனே
யெனவேத்திச்
சிந்தை செய்வார் செம்மை நீங்கா
திருப்பாரே. **#639**

தென்றல் தவழும் பொழிலின்கண் எழுச்சியோடு தேனை உண்டு மணம் பொருந்தியனவாய் வரி வண்டுகள் இசை செய்யும் கலிக்காழியில் விளங்கும், பந்தங்கள் நீங்க அருளும் பரனே! என ஏத்தி அவனைச் சிந்தையில் நினைவார், செம்மை நீங்காதிருப்பர்.

சீர்காழி

புயலார் பூமி நாம மோதிப்
புகழ்மல்கக்
கயலார் கண்ணார் பண்ணா ரொலிசெய்
கலிக்காழிப்
பயில்வான் றன்னைப் பத்தி யாரத்
தொழுதேத்த
முயல்வார் தம்மேல் வெம்மைக் கூற்ற
முடுகாதே. **#640**

மேகங்களால் வளம் பெறும் மண்ணுலகில் வாழும் கயல் போலும் விழிகளை உடைய பெண்கள் இறைவன் திருப்பெயர்களைப் புகழ் பொருந்த இசையோடு ஓதி ஒலி செய்யும் கலிக்காழியுள் விளங்கும் அப்பெருமானை அன்பு மேலிடத் தொழுது ஏத்த முயல்வார் மேல் கொடிய கூற்றுவன் வந்தடையான்.

சீர்காழி

அரக்கன் முடிதோள் நெரிய வடர்த்தா
னடியார்க்குக்

கரக்க கில்லா தருள்செய் பெருமான்
கலிக்காழிப்
பரக்கும் புகழான் றன்னை யேத்திப்
பணிவார்மேற்
பெருக்கு மின்பந் துன்பமான
பிணிபோமே. **#641**

இராவணனின் முடி, தோள் ஆகியன நெரிய அடர்த்தருளிய, தன் அடியவர்கட்கு மறைக்காமல் அருளைச் செய்யும் பெருமான் எழுந்தருளிய கலிக்காழியை அடைந்து உலகம் முழுதும் பரவிய அப்புகழாளனை ஏத்திப் பணிவார்க்கு இன்பங்கள் பெருகும், துன்பந்தரும் பிணிகள் போம்.

<u>சீர்காழி</u>

மாணா யுலகங் கொண்ட மாலு
மலரோனுங்
காணா வண்ண மெரியாய் நிமிர்ந்தான்
கலிக்காழிப்
பூணார் முலையாள் பங்கத்தானைப்
புகழ்ந்தேத்திக்
கோணா நெஞ்ச முடையார்க் கில்லைக்
குற்றமே. **#642**

பிரமசாரி வடிவினனாகி உலகை அளந்து கொண்ட திருமாலும் நான்முகனும் காணா வண்ணம் எரியுருவாய் நிமிர்ந்தான் உறையும் கலிக்காழியை அடைந்து அணிகலன்பூண்ட தனங்களைக் கொண்ட அம்பிகை பாகனைப் புகழ்ந்து போற்றித் திருகல் இல்லாத மனமுடைய அடியவர்க்குக் குற்றம் இல்லை.

<u>சீர்காழி</u>

அஞ்சி யல்லல் மொழிந்து திரிவா
ரமணாதர்
கஞ்சி காலை யுண்பார்க் கரியான்
கலிக்காழித்
தஞ்ச மாய தலைவன் றன்னை
நினைவார்கள்
துஞ்ச லில்லா நல்ல வுலகம்
பெறுவாரே. **#643**

அச்சத்துடன் துன்பம் தரும் பேச்சுக்களை மொழிந்து திரியும் சமணர்களாகிய அறிவிலிகளுக்கும் காலையில் கஞ்சியையுண்டு திரியும்

தேரர்களுக்கும் அறிதற்கு அரியவன் உறையும் கலிக்காழியை அடைந்து தஞ்சமாக அடைதற்குரிய அத்தலைவனை நினைபவர்கள் இறப்பும் பிறப்பும் வாராத பேரின்ப உலகம் பெறுவர்.

சீர்காழி

ஊழி யாயபாரி லோங்கு
முயர்செல்வக்
காழி யீசன் கழலே பேணுஞ்
சம்பந்தன்
றாழு மனத்தா லுரைத்த தமிழ்க
ளிவைவல்லார்
வாழி நீங்கா வானோ ருலகின்
மகிழ்வாரே. **#644**

உலக முடிவில் அழிவதான இம்மண்ணுலகில் அழியாது மிதந்த உயர் செல்வம் உடைய காழியில் எழுந்தருளிய ஈசனின் திருவடிகளைப் பேணும் ஞானசம்பந்தன் பணிவான உள்ளத்தோடு உரைத்த தமிழ் மாலையாகிய இப்பதிகப் பாடல்களை ஓதவல்லவர் நிலையான வாழ்வுடைய வானோர் உலகில் மகிழ்ந்துறைவர்.

திருப்பாசூர்

திருப்பாசூர்

திருப்பாசூர்,
பண் - காந்தாரம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பாசூர்நாதர்.
தேவியார் : பசுபதிநாயகியம்மை.

சிந்தை யிடையார் தலையின் மிசையார்
செஞ்சொல்லார்
வந்து மாலை வைகும் போழ்தென்
மனத்துள்ளார்
மைந்தா மணாளா வென்ன மகிழ்வா
ரூர்போலும்
பைந்தண் மாதவி சோலை சூழ்ந்த
பாசூரே. **#645**

மனத்திலும் தலையின்மேலும் வாக்கிலும் உறைபவர், மாலைக்காலம் வரும்போது வந்து என் மனத்தில் விளங்குபவர், மைந்தா! மணாளா! என்று அழைக்க மகிழ்பவர். அவரது ஊர் பசுமையான மாதவி படர்ந்த சோலைகள் சூழ்ந்த பாசூர் ஆகும்.

திருப்பாசூர்

பேரும் பொழுதும் பெயரும் பொழுதும்
பெம்மானென்
றாருந் தனையு மடியா ரேத்த
வருள்செய்வார்
ஊரு மரவ முடையார் வாழு
மூர்போலும்
பாரின் மிசையார் பாட லோவாப்
பாசூரே. **#646**

இடம் விட்டுச்செல்லும் போதும், வரும்போதும் பெம்மானே என்று மனம் நிறைவுறும் அளவும் அடியவர் ஏத்த அருள் செய்பவர். ஊர்ந்து செல்லும் படப்பாம்பை அணிந்தவர். அவர் வாழும் ஊர் உலக மக்களின் பாடல்கள் ஓவாது கேட்கும் பாசூர் ஆகும்.

திருப்பாசூர்

கையாற் றொழுது தலைசாய்த் துள்ளங்

கசிவார்கண்
மெய்யார் குறையுந் துயருந் தீர்க்கும்
விகிர்தனார்
நெய்யா டுதலஞ் சுடையார் நிலாவு
மூர்போலும்
பைவாய் நாகங் கோடலீனும்
பாசூரே. **#647**

கைகளால் தொழுதும், தலையைத்தாழ்த்தியும், உள்ளம் உருகி வழிபடும் அடியவர்களின் உடற்குறைகளையும் துன்பங்களையும் தவிர்த்தருளும் விகிர்தன். நெய் முதலிய ஆனைந்தும் ஆடுதல் உடையவன், அவன் எழுந்தருளிய ஊர், பாம்பின் படம் போலக் காந்தள் பூக்கள் மலர்ந்துள்ள பாசூராகும்.

திருப்பாசூர்

பொங்கா டரவும் புனலுஞ் சடைமேற்
பொலிவெய்தக்
கொங்கார் கொன்றை சூடியென் னுள்ளங்
குளிர்வித்தார்
தங்கா தலியுந் தாமும் வாழு
மூர்போலும்
பைங்கான் முல்லை பல்லரும் பீனும்
பாசூரே. **#648**

சினந்து படம் எடுத்தாடும் பாம்பும், கங்கையும் சடையின் மேல் விளங்கித்தோன்ற, தேன் நிறைந்த கொன்றை மலரைச் சூடி என் உள்ளம் குளிர் வித்தவர். அவர் தம் காதலியாரோடு தாமும் வாழும் ஊர் பசிய காலோடு கூடிய முல்லைக் கொடிகள் பற்கள் போல அரும்புகள் ஈனும் பாசூராகும்.

திருப்பாசூர்

ஆடற் புரியு மைவா யரவொன்
றரைச்சாத்தும்
சேடச் செல்வர் சிந்தையு ளென்றும்
பிரியாதார்
வாடற் றலையிற் பலிதேர் கையா
ரூர்போலும்
பாடற் குயில்கள் பயில்பூஞ் சோலைப்
பாசூரே. **#649**

ஆடும் ஐந்து தலைப்பாம்பை இடையிலே கட்டிக் கொண்டுள்ள மேலான

செல்வர். நினைப்பவர் சிந்தையினின்றும் பிரியாதவர். ஊன்வாடியதலையோட்டில் பலிதேரும் கையினர். அவரது ஊர், பாடும் குயில்கள் வாழும் பூஞ்சோலைகளை உடைய பாசூர் ஆகும்.

திருப்பாசூர்

கானின் றதிரக் கனல்வாய் நாகங்
கச்சாகத்
தோலொன் றுடையார் விடையார் தம்மைத்
தொழுவார்கள்
மால்கொண் டோட மையல் தீர்ப்பா
ரூர்போலும்
பால்வெண் மதிதோய் மாடஞ் சூழ்ந்த
பாசூரே. **#650**

திருவடி ஊன்றித் தாளம் இட நாகத்தைக் கச்சாக இடையில் கட்டிக்கொண்டு தோலைஆடையாக உடுத்தவர். விடை ஊர்தியர். தம்மைத்தொழுபவர்கள் அன்பு கொண்டு தம்மைத் தொழ அவர்களின் மயக்கங்களைத் தீர்ப்பவர். அவரது ஊர் பால் போன்ற வெண்மதிதோயும் மாட வீடுகள் சூழ்ந்த பாசூர் ஆம்.

திருப்பாசூர்

கண்ணி னயலே கண்ணொன் றுடையார்
கழலுன்னி
எண்ணுந் தனையு மடியா ரேத்த
வருள்செய்வார்
உண்ணின் றுருக வுகவை தருவா
ரூர்போலும்
பண்ணின் மொழியார் பாட லோவாப்
பாசூரே. **#651**

இரு கண்களுக்கு அயலே நெற்றியில் மூன்றாவதாக ஒரு கண்ணை உடையவர். தம் திருவடிகளை நினைந்து எண்ணும் போதெல்லாம் உவகைகள் தருபவர். அவரது ஊர் பண்ணிசைபோல மொழிகள் பேசும் பெண்கள் பாடும் ஓசை நீங்காத பாசூராகும்.

திருப்பாசூர்

தேசு குன்றாத் தெண்ணீ ரிலங்கைக்
கோமானைக்
கூச வடர்த்துக் கூர்வாள் கொடுப்பார்
தம்மையே

பேசிப் பிதற்றப் பெருமை தருவா
ரூர்போலும்
பாசித் தடமும் வயலுஞ் சூழ்ந்த
பாசூரே. **#652**

புகழ்குன்றாத தௌந்த நீரை உடைய கடலால் சூழப்பட்ட இலங்கை மன்னன் இராவணனை மனம் கூசுமாறு அடர்த்துக் கூரிய வாளைப் பரிசாகக் கொடுத்தவர். தம்மையே பலகாலம் பேசிப் பிதற்றும் அடியவர்கட்குப் பெருமை தருபவர். அவரது ஊர் பசுமையான நீர் நிலைகளும், வயல்களும் சூழ்ந்த பாசூராகும்.

<u>திருப்பாசூர்</u>

நகுவாய் மலர்மே லயனு நாகத்
தணையானும்
புகுவா யறியார் புறநின் றோரார்
போற்றோவார்
செகுவா யுகுபற் றலைசேர் கையா
ரூர்போலும்
பகுவாய் நாரை யாரல் வாரும்
பாசூரே. **#653**

விரிந்த தாமரை மலர் மேல் உறையும் நான்முகனும், நாகணையில் பள்ளிகொள்ளும் திருமாலும் புகு மிடம் அறியாதவராகவும் புறம்பே நின்று அறிய இயலாதவராகவும் போற்றுதலை ஓவாதவராகவும் நிற்க அழிந்தவாயிற் பல்லுலுடைய தலையோடு சேர்ந்தகையினை உடையவர். சிவபெருமான் அவரது ஊர் பிளந்த வாயினை உடைய நாரைகள் ஆரல் மீன்களை வௌவி உண்ணும் பாசூராகும்.

<u>திருப்பாசூர்</u>

தூய வெயினின் றுழல்வார் துவர்தோ
யாடையார்
நாவில் வெய்ய சொல்லித் திரிவார்
நயமில்லார்
காவல் வேவக் கணையொன் றெய்தா
ரூர்போலும்
பாவைக் குரவம் பயில்பூஞ் சோலைப்
பாசூரே. **#654**

நல்ல வெயிலில் நின்று உழல்பவரும், துவர் தோய்ந்த ஆடையை அணிந்தவருமாகிய சமண புத்தர்கள் நாவினால் வெய்ய சொற்களைச் சொல்லித்திரியும் நீதி அற்றவர்கள் காவல் புரியும்

முப்புரங்களும்வெந்தழியுமாறு கணை ஒன்றை எய்த சிவபிரானது ஊர் பாவை போல மலரும் குராமரங்கள் செறிந்த சோலைகள் சூழ்ந்த பாசூர் ஆகும்.

<u>திருப்பாசூர்</u>

ஞான முணர்வான் காழி ஞான
சம்பந்தன்
தேனும் வண்டு மின்னிசை பாடுந்
திருப்பாசூர்க்
கானம் முறைவார் கழல்சேர் பாட
லிவைவல்லார்
ஊன மிலரா யும்பர் வானத்
துறைவாரே. **#655**

கலைஞானம் சிவஞானம் ஆகியவற்றை உணர்ந்தவனாகிய காழி ஞானசம்பந்தன் தேனும், வண்டும் இன்னிசை பாடும் திருப்பாசூர் என்னும் காடுகள் நிறைந்த ஊரில் உறையும் இறைவனின் திருவடிகளில் சேர்ப்பிக்கும் பாடல்களாகிய இப்பதிகப் பாடல்களை ஓத வல்லவர் குற்றம் அற்றவராய் வானுலகில் உறைவர்.

திருவெண்காடு

திருவெண்காடு,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சுவேதாரணியேசுவரர்.
தேவியார் : பிரமவித்தியாநாயகியம்மை.

உண்டாய் நஞ்சை யுமையோர் பங்கா
வென்றுள்கித்
தொண்டாய்த் திரியு மடியார் தங்கள்
துயரங்கள்
அண்டா வண்ண மறுப்பா னெந்தை
யூர்போலும்
வெண்டா மரைமேற் கருவண் டியாழ்செய்
வெண்காடே. **#656**

நஞ்சை உண்டவனே! உமைபங்கா! என்று கூறி மனத்தில் தியானித்துத் தொண்டராகிப் பணிகள் புரியும் அடியவர்களைத் துயரங்கள் நெருங்காவண்ணம் அவற்றை அறநத்தீர்த்தருளும் எந்தையினது ஊர், வெண்டாமரை மலர்களில் கருவண்டுகள் யாழ் போல ஒலித்துத் தேனுண்ணும் திருவெண்காடாகும்.

திருவெண்காடு

நாத னம்மை யாள்வா னென்று
நவின்றேத்திப்
பாதம் பன்னாள் பணியு மடியார்
தங்கண்மேல்
ஏதந் தீர விருந்தான் வாழு
மூர்போலும்
வேதத் தொலியாற் கிளிசொற் பயிலும்
வெண்காடே. **#657**

நாதனாகிய பெருமான் நம்மை ஆள்வான் என்று அவன் பெயரைப் பல முறையும் கூறி ஏத்திப் பல நாள்கள் திருவடிகளைப் பரவும் அடியவர்க்கு வரும் குற்றங்களைத் தீர்த்தருள எழுந்தருளியிருப்பவனது ஊர், வேதஒலிகளைக் கிளிகள் பேசும் திருவெண்காடாகும்.

திருவெண்காடு

தண்முத் தரும்பத் தடமூன் றுடையான்
றனையுன்னிக்
கண்முத் தரும்பக் கழற்சே வடிகை
தொழுவார்கள்
உண்முத் தரும்ப வுவகை தருவான்
ஊர்போலும்
வெண்முத் தருவிப் புனல்வந் தலைக்கும்
வெண்காடே. **#658**

குளிர்ந்த முத்துக்கள் அரும்பும் முக்குளங்களைத் தீர்த்தங்களாகக் கொண்டுள்ளவனை நினைந்து கண்களில் முத்துக்கள் போல நீர் அரும்ப அவனுடைய கழலணிந்த சேவடிகளைக் கைதொழுவார்களின் உள்ளங்களில் முத்துக்கள் போன்று தூய நன்மை தோன்ற உவகைதரும் இறைவனது ஊர் வெண்மையான முத்துக்கள் போன்ற அருவியின் புனல் வந்து அலைக்கும் திருவெண்காடாகும்.

<u>திருவெண்காடு</u>

நரையார் வந்து நாளுங் குறுகி
நணுகாமுன்
உரையால் வேறா வுள்கு வார்கள்
உள்ளத்தே
கரையா வண்ணங் கண்டான்மேவு
மூர்போலும்
விரையார் கமலத் தன்ன மருவும்
வெண்காடே. **#659**

தலையில் நரை வந்து உடல் நாளுக்கு நாள் குறுகி மூப்பு நணுகுதற்குமுன, உரை வேறாகாது நினைபவர் உள்ளத்தே மெலிந்து கரைந்து ஒழியாதவாறு தன்னைத் தோற்றுவிப்பவனது ஊர், மணம் கமழும் தாமரை மலரில் அன்னங்கள் தங்கிமகிழும் திருவெண்காடாகும்.

<u>திருவெண்காடு</u>

பிள்ளைப் பிறையும் புனலுஞ் சூடும்
பெம்மானென்
றுள்ளத் துள்ளித் தொழுவார் தங்க
ளுறுநோய்கள்
தள்ளிப்போக வருளுந் தலைவ
னூர்போலும்
வெள்ளைச் சுரிசங் குலவித் திரியும்
வெண்காடே. **#660**

இளம்பிறையையும் கங்கையையும் முடியிற் சூடிய பெருமான் என்று மனத்தில் நினைந்து தொழுபவர்களின் பெருகிய நோய்களைத் தள்ளிப் போகுமாறு செய்தருளும் தலைவனது ஊர், வெண்ணிறமான உள்கோடுகளை உடைய சங்குகள் உலவித்திரியும் திருவெண்காடாகும்.

திருவெண்காடு

ஒளிகொண் மேனி யுடையா யும்ப
ராளீயென்
றளிய ராகி யழுதுற் றூறு
மடியார்கட்
கெளயா னமரர்க் கரியான் வாழு
மூர்போலும்
வெளிய வுருவத் தானை வணங்கும்
வெண்காடே. **#661**

ஒளி கொண்ட திருமேனியை உடையவனே! உம்பர்களை ஆள்பவனே! என்று அன்புடையவராய் அழுது பொருந்தும் அடியவர்க்கு எளியவன். தேவர்களுக்கு அரியவன் ஆகிய சிவபிரானது ஊர் வெண்ணிறமுடைய ஐராவதம் வணங்கி அருள் பெற்ற திருவெண் காடாகும்.

திருவெண்காடு

கோள்வித் தனைய கூற்றந் தன்னைக்
குறிப்பினான்
மாள்வித் தவனை மகிழ்ந்தங் கேத்த
மாணிக்காய்
ஆள்வித் தமர ருலக மளிப்பா
னூர்போலும்
வேள்விப் புகையால் வான மிருள்கூர்
வெண்காடே. **#662**

உயிர்கவர்வதில் வித்துப் போல்பவனாகிய கூற்றுவனை, சிவபிரானை நினையும் குறிப்பினால் மாள்வித்து அச்சிவபிரானை மகிழ்வொடு ஏத்திய சுவேத கேது முனிவரை அமருலகம் ஆளச் செய்து அணி செய்தவனது ஊர் வேள்விப்புகையால் வானம் இருள்கூர்கின்ற திருவெண்காடு ஆகும்.

திருவெண்காடு

வளையார் முன்கை மலையாள் வெருவ
வரையூன்றி
முளையார் மதியஞ் சூடி யென்று

முப்போதும்
இளையா தேத்த விருந்தா னெந்தை
யூர்போலும்
விளையார் கழனிப் பழனஞ் சூழ்ந்த
வெண்காடே. **#663**

வளையலணிந்த முன்கையை உடைய பார்வதி அஞ்சுமாறு பெயர்த்தகயிலை மலையைக் கால்விரல் ஊன்றி நெரித்து. முளைமதிசூடிய இறைவனே என அடியவர் முப்போதும் தளராது ஏத்துமாறு எழுந்தருளிய எந்தையாகிய சிவபெருமானது ஊர், விளைவைக் கொண்ட வயல்கள் சூழ்ந்த திருவெண்காடாகும்.

திருவெண்காடு

கரியா னோடு கமல மலரான்
காணாமை
எரியாய் நிமிர்ந்த வெங்கள் பெருமா
னென்பார்கட்
குரியா னமர்க் கரியான் வாழு
மூர்போலும்
விரியார் பொழிலின் வண்டு பாடும்
வெண்காடே. **#664**

கரிய திருமாலும் கமலமலரில் உறையும் நான்முகனும் அடி முடி காண இயலாதவாறு எரியுருவாய் நிமிர்ந்த எங்கள் பெருமானே! என்பார்கட்கு உரியவனும் அமரர்க்கு அரியவனுமான சிவபிரானது ஊர், வண்டுகள் பாடும் விரிந்த பொழில்கள் சூழ்ந்த திருவெண்காடாகும்.

திருவெண்காடு

பாடு மடியார் பலருங் கூடிப்
பரிந்தேத்த
ஆடு மரவம சைத்த பெருமா
னறிவின்றி
மூட முடைய சமண்சாக் கியர்க
ளுணராத
வேட முடைய பெருமான் பதியாம்
வெண்காடே. **#665**

பாடுகின்ற அடியவர் பலரும் கூடிப் பரிவுடன் ஏத்த ஆடும் பாம்பை இடையிற்கட்டியுள்ளவனாகி, அறிவற்ற மூடர்களாகிய சமண் சாக்கியர்கள் உணர இயலாத வேடம் கொண்ட பெருமானது பதி வெண்காடாகும்.

திருவெண்காடு

விடையார் கொடியான் மேவி யுறையும்
வெண்காட்டைக்
கடையார் மாடங் கலந்து தோன்றுங்
காழியான்
நடையா ரின்சொல் ஞானசம் பந்தன்
தமிழ்வல்லார்க்
கடையா வினைக ளமர லோகம்
ஆள்வாரே. **#666**

விடைக் கொடியைக் கொண்ட சிவபிரான் மேவி உறையும் வெண்காட்டை. கடைவாயிலை உடைய மாடவீடுகள் கலந்து விளங்கும் காழிப்பதியானாகிய ஞானசம்பந்தன் ஒழுக்கநெறியும் இன்சொல்லும் கலந்ததாக அமைத்த இப்பதிகத் தமிழை ஓத வல்லவர்களை வினைகள் அடையா. அவர் அமரலோகம் ஆள்வர்.

திருமீயச்சூர்

திருமீயச்சூர்

திருமீயச்சூர்,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முயற்சிநாதேசுவரர்.
தேவியார் : சுந்தரநாயகியம்மை.

காயச் செவ்விக் காமற் காய்ந்து
கங்கையைப்
பாயப் படர்புன் சடையிற் பதித்த
பரமேட்டி
மாயச் சூரன் றறுத்த மைந்தன்
றாதைதன்
மீயச் சூரே தொழுது வினையை
வீட்டுமே. **#667**

அழகிய உடலை உடைய காமனைக் காய்ந்து, கங்கையை விரிந்த புன்சடையிற் பாயுமாறு செய்து, பதித்த பரமேட்டியும் சூரபன்மன் மாயும்படி அழித்த முருகப்பெருமானின் தந்தையும் ஆகிய சிவபிரானது மீயச்சூரைத் தொழுது வினையைத் தீர்த்தொழியுங்கள்.

திருமீயச்சூர்

பூவார் சடையின் முடிமேற் புனல
ரனல்கொள்வர்
நாவார் மறையர் பிறையர் நறவெண்
டலையேந்தி
ஏவார் மலையே சிலையாக் கழியம்
பெரிவாங்கி
மேவார் புரமூன் றெரித்தார் மீயச்
சூராரே. **#668**

திருமீயச்சூர் இறைவர் மலர் அணிந்துள்ள சடைமுடியில் கங்கையைச் சூடியவர். கையில் அனலைக் கொண்டவர். நாவால் வேதங்களை அருளியவர். பிறைசூடியவர். நாற்றமுடைய வெள்ளிய தலையோட்டை ஏந்தியவர். பெருமை பொருந்திய மேருமலையாகிய வில்லில் திருமாலைக் கழியம்பாகவும் அக்கினியை அம்பின் முனையாகவும் கொண்டு வில்லை வளைத்துப் பகைவரின் முப்புரங்களை எரித்தவர்.

<u>திருமீயச்சூர்</u>

பொன்னேர் கொன்றை மாலை புரளு
மகலத்தான்
மின்னேர் சடைக ளுடையான் மீயச்
சூரானைத்
தன்னேர் பிறரில் லானைத் தலையால்
வணங்குவார்
அந்நே ரிமையோ ருலக மெய்தற்
கரிதன்றே. **#669**

பொன்போன்ற கொன்றை மாலைபுரளும் மார்பினனும், மின்னல் போன்ற சடைகளை உடையவனும் தனக்கு ஒப்பார் பிறர் இல்லாதவனும் ஆகிய மீயச்சூர் இறைவனைத் தலையால் வணங்குவார் அழகும் நேர்மையும் உடைய தேவர் உலகத்தை எய்துதல் அரிதன்று.

<u>திருமீயச்சூர்</u>

வேக மதநல் லியானை வெருவ
வுரிபோர்த்துப்
பாக முமையோ டாகப் படிதம்
பலபாட
நாக மரைமே லசைத்து நடமா
டியநம்பன்
மேக முரிஞ்சும் பொழில்சூழ் மீயச்
சூரானே. **#670**

வேகமும் மதமும் உடைய நல்லயானையை வெருவுமாறு கொன்று அதன் தோலை உரித்துப் போர்த்து உமைபாகராக அவ்வம்மையார் பாடப் பாம்பை இடையின் மேல் கச்சாகக் கட்டிக் கொண்டு நடனமாடிய பெருமான் மேகந்தோயும் பொழில்சூழ்ந்த மீயச்சூர் இறைவன் ஆவான்.

<u>திருமீயச்சூர்</u>

விடையார் கொடியார் சடைமேல் விளங்கும்
பிறைவேடம்
படையார் பூதஞ் சூழப் பாட
லாடலார்
பெடையார் வரிவண் டணையும் பிணைசேர்
கொன்றையார்
விடையார் நடையொன் றுடையார் மீயச்
சூராரே. **#671**

திருமீயச்சூர் இறைவர், விடைக்கொடியை உடையார். சடைமேல் விளங்கும் பிறைவேடத்தை உடையவர். படைகளாக அமைந்தபூதங்கள் சூழப்பாடியும் ஆடியும் மகிழ்பவர். பெடைகளோடு கூடி ஆண் வண்டுகள் அணையும் கொன்றைமாலையை அணிந்தவர். காளைபோன்ற நடையை உடையவர்.

திருமீயச்சூர்

குளிருஞ் சடைகொண் முடிமேற் கோல
மார்கொன்றை
ஒளிரும் பிறையொன் றுடையா னொருவன்
கைகோடி
நளிரும் மணிசூழ் மாலை நட்ட
நவினம்பன்
மிளிரும் மரவ முடையான் மீயச்
சூரானே. **#672**

திருமீயச்சூர் இறைவன் குளிர்ந்த சடைகளைக் கொண்டுள்ள முடிமீது அழகிய கொன்றைமாலை, விளங்கும் பிறை ஆகியவற்றைச் சூடியவன். ஒப்பற்றவன். மணிகள் அமைந்த மாலையுடன் கைகளைவளைத்து நடனம் புரிபவன்: விளங்குபவனும் அரவினை அணிந்தவன்.

திருமீயச்சூர்

நீல வடிவர் மிடறு நெடியர்
நிகரில்லார்
கோல வடிவு தமதாங் கொள்கை
யறிவொண்ணார்
காலர் கழலர் கரியி னுரியர்
மழுவாளர்
மேலர் மதியர் விதியர் மீயச்
சூராரே. **#673**

திருமீயச்சூர் இறைவர் நீலகண்டர். நீண்டவர். ஒப்பில்லாதவர். அழகிய பலபல வடிவங்கள் தம்முடையனவாகக் கொண்டு அறிதற்கு அரியராயிருப்பவர். காலிற் கழல் அணிந்தவர்.யானையின்தோலைப் போர்த்தவர். மழுவேந்தியவர். மேன்மையானவர். மதியை அணிந்தவர். உலகைப் படைப்பவர்.

திருமீயச்சூர்

புலியி னுரிதோ லாடை பூசும்
பொடிநீற்றர்

ஒலிகொள் புனலோர் சடைமேற் கரந்தா
ருமையஞ்ச
வலிய திரடோள் வன்க ணரக்கர்
கோன்றன்னை
மெலிய வரைக்கீ ழடர்த்தார் மீயச்
சூராரே. **#674**

திருமீயச்சூர் இறைவர் புலியின் தோலாகிய ஆடையையும் பூசும் திருநீற்றுப் பொடியையும் அணிந்தவர். ஆரவாரித்து வந்த கங்கையை ஓர் சடைமேற் கரந்தவர். உமையம்மை அஞ்ச வலிமையான திரண்ட தோள்களையும் வன்கண்மையையும் உடைய அரக்கர்கோனை மெலியுமாறு மலையின் கீழ் அடர்த்தவர்.

திருமீயச்சூர்

காதின் மிளிருங் குழையர் கரிய
கண்டத்தார்
போதி லவனு மாலுந் தொழப்பொங்
கெரியானார்
கோதி வரிவண் டறைபூம் பொய்கைப்
புனல்மூழ்கி
மேதி படியும் வயல்சூழ் மீயச்
சூராரே. **#675**

வரிவண்டுகள் மலர்களைக் கோதி ஒலிசெய்யும் பூம்பொய்கைப் புனலில் எருமைகள் மூழ்கி வயல் கரைகளில் சென்று படுக்கும் திருமீயச்சூரில் மேவும் இறைவர், காதில் விளங்கும் குழையை அணிந்தவர: கரிய கண்டத்தினர்: தாமரையோனாகிய பிரமனும் திருமாலும் தொழப் பொங்கிய எரிவடிவாய் நின்றவர்.

திருமீயச்சூர்

கண்டார் நாணும் படியார் கலிங்க
முடைபட்டைக்
கொண்டார் சொல்லைக் குறுகா ருயர்ந்த
கொள்கையார்
பெண்டான் பாக முடையார் பெரிய
வரைவில்லா
விண்டார் புரமூன் றெரித்தார் மீயச்
சூராரே. **#676**

கண்டவர் நாணும்படியாக ஆடையின்றித் திரியும் சமணர், கலிங்கமாகிய பட்டாடையை உடுத்த தேரர் ஆகியோர் கூறுவனவற்றை

உயர்ந்த சிவநெறிக் கொள்கையர் குறுகார். திருமீயச்சூர் இறைவர் பெண்ணைப் பாகமாக உடையவர். பெரிய மலையாகிய வில்லால் பகைவரின் முப்புரங்களை எரித்தவர்.

திருமீயச்சூர்

வேட முடைய பெருமா னுறையு
மீயச்சூர்
நாடும் புகழார் புகலி ஞான
சம்பந்தன்
பாட லாய தமிழீ ரைந்து
மொழிந்துள்கி
ஆடு மடியா ரகல்வா னுலகம்
அடைவாரே. **#677**

பற்பல வடிவங்களைக் கொண்டருளிய பெருமான் உறையும் திருமீயச்சூரை விரும்பும் புகழார்ந்த புகலி ஞானசம்பந்தன் அருளிய பாடலாகிய தமிழ் ஈரைந்தையும் மொழிந்தும் நினைத்தும் ஆடும் அடியவர் அகன்றவானுலகை அடைவர்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

திருஅரிசிற்கரைப்புத்தூர்

திருஅரிசிற்கரைப்புத்தூர்,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழ நாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : படிக்காசளித்தவீசுவரர்.
தேவியார் : அழகம்மை.

மின்னுஞ் சடைமே லிளவெண் டிங்கள்
விளங்கவே
துன்னுங் கடனஞ் சிருடோய் கண்டர்
தொன்மூதூர்
அன்னம் படியும் புனலா ரரிசில்
அலைகொண்டு
பொன்னும் மணியும் பொருதென்
கரைமேற் புத்தூரே. **#678**

மின்னல் போல ஒளிரும் சடைமேல் இளம்பிறை விளங்கக் கடலில் பொருந்திய நஞ்சினது கருமை தோய்ந்த கண்டத்தராய் விளங்கும் பெருமானது பழமையான ஊர் அன்னங்கள் படிந்து ஆடும் நீரை உடைய அரிசிலாற்றின் அலை பொன்னையும் மணியையும் கொண்டு வீசும் தென்கரையின் மேல் விளங்கும் புத்தூராகும்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

மேவா வசுரர் மேவெயில் வேவ
மலைவில்லால்
ஏவா ரெரிவெங் கணையா லெய்தா
னெய்துமூர்
நாவா னாத னாம மோதி
நாடோறும்
பூவா னீராற் பூசுரர் போற்றும்
புத்தூரே. **#679**

பொருந்தாத அசுரர் வாழும் மூன்று கோட்டைகளும் வெந்து அழியுமாறு மலைவில்லால் அம்பாகப் பொருந்திய எரியாகிய கொடிய கணையால் எய்தவனது ஊர், பூசுரர்கள் நாவினால் நாதன் நாமங்களை நாடொறும் ஓதிப் பூவாலும் நீராலும் போற்றி வழிபடும் புத்தூர் ஆகும்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

பல்லார் தலைசேர் மாலை சூடிப்
பாம்பும்பூண்
டெல்லா விடமும் வெண்ணீ றணிந்தோ
ரேறேறிக்
கல்லார் மங்கை பங்க ரேனுங்
காணுங்கால்
பொல்லா ரல்ல ரழகியர் புத்தூர்ப்
புனிதரே. **#680**

புத்தூர்ப்புனிதர், பற்களோடு கூடிய தலைமாலையைச் சூடிப் பாம்பையும் அணிந்து உடல் முழுதும் வெண்ணீறு அணிந்து ஒப்பற்ற விடைமீது ஏறி இமவான் மகளாகிய பார்வதி பங்கராக இருப்பவர். ஆராயுமிடத்து அவர் பொல்லாதவர் அல்லர். அழகியவர்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

வரியேர் வளையா ளரிவை யஞ்ச
வருகின்ற
கரியே ருரிவை போர்த்த கடவுள்
கருதுமூர்
அரியேர் கழனிப் பழனஞ் சூழ்ந்தங்
கழகாய
பொரியேர் புன்கு சொரிபூஞ் சோலைப்
புத்தூரே. **#681**

வரிகளும் அழகும் பொருந்திய வளையல்களை அணிந்த அம்பிகை அஞ்சுமாறு வந்த யானையின் தோலை உரித்துப் போர்த்த கடவுள் கருதும் ஊர், நெல்லரிகளைக் கொண்ட வயல்கள் சூழ்ந்து அழகிய நெற் பொரிகள் போல புன்கமரங்கள் பூக்களைச் சொரியும் சோலைகள் சூழ்ந்த புத்தூர் ஆகும்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

என்போ டரவ மேனத் தெயிறோ
டெழிலாமை
மின்போற் புரிநூல் விரவிப் பூண்ட
மணிமார்பர்
அன்போ டுருகு மடியார்க் கன்ப
ரமருமூர்
பொன்போ தலர்கோங் கோங்கு சோலைப்
புத்தூரே. **#682**

எலும், பாம்பு, பன்றிப்பல், அழகிய ஆமை ஓடு ஆகியவற்றை மின்னல்

போன்ற பூணநூலோடு மாலையாகக் கலந்தணிந்த அழகிய மார்பினர். அன்போடு உருகி வழிபடும் அடியவர்கட்கு அன்பர். அவர் எழுந்தருளிய ஊர் பொன் போல மலரும் கோங்கமலர்கள் ஓங்கிய சோலைகளை உடைய புத்தூர் ஆகும்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

வள்ளி முலைதோய் குமரன் றாதை
வான்றோயும்
வெள்ளி மலைபோல் விடையொன்
றுடையான் மேவுமூர்
தெள்ளி வருநீ ரரிசிற் றென்பால்
சிறைவண்டும்
புள்ளு மலிபூம் பொய்கை சூழ்ந்த
புத்தூரே. **#683**

வள்ளி மணாளனாகிய முருகனின் தந்தையாய் வான்தோயும் கயிலைமலை போன்ற வெள்விடையை உடையவன் எழுந்தருளிய ஊர், தெளவாக வரும் நீரை உடைய அரிசிலாற்றின் தென்கரையில் சிறைவண்டும் பறவைகளும் நிறைந்து வாழும் அழகிய பொய்கைகள் சூழ்ந்த புத்தூர் ஆகும்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

நிலந்த ணீரோ டனல்கால் விசும்பி
னீர்மையான்
சிலந்தி செங்கட் சோழனாகச்
செய்தானூர்
அலந்த வடியா னற்றைக் கன்றோர்
காசெய்திப்
புலர்ந்த காலை மாலை போற்றும்
புத்தூரே. **#684**

நிலம், தண்ணீர், அனல், காற்று, விசும்பு ஆகிய ஐம்பூதங்களின் இயல்பை உடையவன். சிலந்தியைக் கோச்செங்கட் சோழனாகப் பிறக்கச் செய்தவன். அவனது ஊர் வறுமையுற்ற புகழ்த் துணையார் என்னும் சிவமறையவர் அன்றைக்கன்று ஒரு காசினை அருளப் பெற்றுப் புலர்ந்த காலையிலும் மாலையிலும் போற்றி வழிபட்ட புத்தூராகும்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

இத்தே ரேக விம்மலை பேர்ப்ப
னென்றேந்தும்

பத்தோர் வாயான் வரைக்கீ ழலறப்
பாதந்தான்
வைத்தா ரருள்செய் வரதன் மருவும்
மூரான
புத்தூர் காணப் புகுவார் வினைகள்
போகுமே. **#685**

இந்தத் தேர் செல்லுதற்குத் தடையாக உள்ள இந்த மலையைப் பெயர்ப்பேன் என்று கூறிச் சிவபிரான் எழுந்தருளிய திருக்கயிலையைப் பெயர்த்து ஏந்திய பத்து வாய்களை உடைய இராவணன் மலைக்கீழ் அகப்பட்டு அலறுமாறு தம் பாதத்தைச் சிறிது ஊன்றி அடர்த்துப் பின் அவனுக்கு அருள் செய்யும் வரதனாகிய சிவபிரான் மருவும் ஊரான புத்தூரைத் தரிசிக்கச் செல்வார் வினைகள் போகும்.

<u>திருஅரிசிற்கரைப்புத்தூர்</u>

முள்ளார் கமலத் தயன்மான் முடியோடு
அடிதேட
ஒள்ளா ரெரியா யுணர்தற் கரியா
னூர்போலும்
கள்ளார் நெய்தல் கழுநீ ராம்பல்
கமலங்கள்
புள்ளார் பொய்கைப் பூப்பல தோன்றும்
புத்தூரே. **#686**

முட்கள் பொருந்திய தண்டினை உடைய தாமரை மலரின் மேல் உறையும் நான்முகன், திருமால் ஆகியோர் முடியோடு அடி தேட, ஒளி பொருந்திய எரி உருவினனாய், உணர்தற்கு அரியவனாய் விளங்கிய சிவபிரானது ஊர், தேன் பொருந்திய நெய்தல், கழு நீர், ஆம்பல், தாமரை ஆகியவற்றை உடைய பறவைகள் நிறைந்த பொய்கைகளில் பூக்கள் நிறைந்து தோன்றும் புத்தூர் ஆகும்.

<u>திருஅரிசிற்கரைப்புத்தூர்</u>

கையார் சோறு கவர்குண் டர்களுந்
துவருண்ட
மெய்யார் போர்வை மண்டையர் சொல்லு
மெய்யல்ல
பொய்யா மொழியா லந்தணர் போற்றும்
புத்தூரில்
ஐயா வென்பார்க் கையுறவின்றி
யழகாமே. **#687**

கையில் வாங்கிச் சோற்றை உண்ணும் குண்டர்களும், துவர்நிறம் ஊட்டிய ஆடையை மெய்யிற் போர்த்தி மண்டையில் உணவு வாங்கி உண்ணும் தேரர்களும் கூறும் சொற்கள் உண்மையல்லாதவை. மெய்ம்மொழியால் அந்தணர்கள் போற்றும் புத்தூரில் எழுந்தருளிய தலைவனே! என்று போற்றுவார்க்கு ஐயுறவு இன்றி அழகு உண்டாம்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

நறவங் கமழ்பூங் காழி ஞான
சம்பந்தன்
பொறிகொ ளரவம் பூண்டா னாண்ட
புத்தூர்மேல்
செறிவண் டமிழ்செய் மாலை செப்ப
வல்லார்கள்
அறவன் கழல்சேர்ந் தன்போ டினப
மடைவாரே. **#688**

தேன் மணம் கமழும் அழகிய காழி நகரில் தோன்றிய ஞானசம்பந்தன், புள்ளிகளைக்கொண்ட பாம்பினைப் பூண்ட சிவபிரான் ஆட்சிபுரியும் புத்தூர் மேல் வளமை செறிந்த தமிழால் செய்த இம்மாலையைச் செப்ப வல்லவர்கள் அறவடிவினனான சிவபிரான் திருவடிகளை அடைந்து அன்பும் இன்பமும் அடைவார்கள்.

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம்,
பண் - காந்தாரம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது - இதுவே விருத்தாசலம். ,
சுவாமிபெயர் : பழமலைநாதர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

தேவா சிறியோம் பிழையைப் பொறுப்பாய்
பெரியோனே
ஆவா வென்றங் கடியார் தங்கட்
கருள்செய்வாய்
ஓவா வுவரிகொள்ள வுயர்ந்தா
யென்றேத்தி
மூவா முனிவர் வணங்குங் கோயின்
முதுகுன்றே. **#689**

அழிவற்ற முனிவர்கள், தேவனே! பெரியோனே! சிறியோமாகிய எங்கள் பிழையை பொறுத்தருளுவாயாக. அடியவர் துன்புற நேரின், ஆ! ஆ! எனக்கூறி இரங்கி அவர்கட்கு அருள்புரிபவனே! ஒழியாது கடல் பெருகி உலகைக் கொள்ள முற்பட்டபோது உயர்ந்தவனே! என்று ஏத்தி வணங்கும் கோயிலை உடையது முதுகுன்றாகும்.

திருமுதுகுன்றம்

எந்தை யிவனென் றிரவி முதலா
விறைஞ்சுவார்
சிந்தை யுள்ளே கோயி லாகத்
திகழ்வானை
மந்தி யேறி யினமா மலர்கள்
பலகொண்டு
முந்தித் தொழுது வணங்குங் கோயின்
முதுகுன்றே. **#690**

எமக்குத் தந்தையாவான் இவனே என்று, சூரிய பூசையை முதலிற்கொண்டு சிவபூசை செய்து வழிபடும் அடியவர்களின் சிந்தையைக் கோயிலாகக் கொண்டு அதன் உள்ளே திகழ்பவனைக் குரங்குகள் கூட்டமாய் மரங்களில் ஏறிப் பல மலர்களைக் கொண்டு முற்பட்டுத் தொழுது வணங்கும் கோயிலை உடையது முதுகுன்றாகும்.

திருமுதுகுன்றம்

நீடு மலரும் புனலுங் கொண்டு
நிரந்தரம்
தேடு மடியார் சிந்தை யுள்ளே
திகழ்வானைப்
பாடுங் குயிலி னயலே கிள்ளை
பயின்றேத்த
மூடுஞ் சோலை முகிறோய் கோயின்
முதுகுன்றே. **#691**

மிகுதியான மலர்களையும் தண்ணீரையும் கொண்டு எப்பொழுதும் பூசித்துத் தேடும் அடியவர் சிந்தையுள்ளே விளங்கும் இறைவனை, பாடும் குயில்களும் அயலே கிள்ளைகளும் பழகி ஏத்தச் சோலைகளும் முகில்களும் தோய்ந்து மூடும் கோயிலை உடையது முதுகுன்றாகும்.

திருமுதுகுன்றம்

தெரிந்த வடியார் சிவனே யென்று
திசைதோறும்
குருந்த மலருங் குரவி னலருங்
கொண்டேந்தி
இருந்து நின்று மிரவும் பகலு
மேத்துஞ்சீர்
முரிந்து மேகந் தவழுஞ் சோலை
முதுகுன்றே. **#692**

அறிந்த அடியவர்கள் சிவனே என்று திசைதோறும் நின்று குருந்த மலர்களையும் குரா மலர்களையும் கொண்டு பூசித்து ஏத்தி அமர்ந்தும் நின்றும் இரவும் பகலும் ஏத்தும் சீரையுடையதும் விட்டு விட்டு மேகங்கள் தவழும் உயர்ந்த கோயிலை உடையதும் முதுகுன்றாகும்.

திருமுதுகுன்றம்

வைத்த நிதியே மணியே யென்று
வருந்தித்தம்
சித்த நைந்து சிவனே யென்பார்
சிந்தையார்
கொத்தார் சந்துங் குரவும் வாரிக்
கொணர்ந்துந்து
முத்தா றுடைய முதல்வர் கோயின்
முதுகுன்றே. **#693**

சேம வைப்பாக வைக்கப்பெற்ற நிதி போன்றவனே! மணி போன்றவனே! என்று கூறி, போற்றாத நாள்களுக்கு வருந்தித் தம் சிந்தை நைந்து சிவனே என்று அழைப்பவரின் சிந்தையில் உறைபவர் சிவபெருமான். சந்தனக் கொத்துக்களையும் குரா மரங்களையும் வாரிக் கொணர்ந்து கரையில் சேர்ப்பிக்கும் மணிமுத்தாற்றை உடைய அம்முதல்வரின் கோயில் முதுகுன்றாகும்.

திருமுதுகுன்றம்

வம்பார் கொன்றை வன்னி மத்த
மலர்தூவி
நம்பா வென்ன நல்கும் பெருமா
னுறைகோயில்
கொம்பார் குரவு கொகுடி முல்லை
குவிந்தெங்கும்
மொய்ம்பார் சோலை வண்டு பாடு
முதுகுன்றே. **#694**

மணமுடைய கொன்றை மலர், வன்னியிலை, ஊமத்த மலர் ஆகியவற்றைத்தூவி நம்பனே! என்று அழைக்க அருள் நல்கும் பெருமான் உறைகோயில், கொம்புகளை உடைய குராமரம், கொகுடிவகை முல்லை ஆகிய மரம் கொடி முதலியவை செறிந்து மொய்ம்புடையவாய் விளங்கும் சோலைகளை உடைய முது குன்றாகும்.

திருமுதுகுன்றம்

வாசங் கமழும் பொழில்சூ ழிலங்கை
வாழ்வேந்தை
நாசஞ் செய்த நங்கள் பெருமா
னமர்கோயில்
பூசைசெய்து வடியார் நின்று
புகழ்ந்தேத்த
மூசி வண்டு பாடுஞ் சோலை
முதுகுன்றே. **#695**

மணம் கமழும் பொழில் சூழ்ந்த இலங்கை வாழ் வேந்தனாகிய இராவணனின் வலிமையை அழித்த நம்பெருமான் அமர்கின்ற கோயில், அடியவர் பூசை செய்து நின்று புகழ்ந்து போற்ற விளங்குவதும், வண்டுகள் மொய்த்துப்பாடும் சோலைகளை உடையதுமான முதுகுன்றாகும்.

திருமுதுகுன்றம்

அல்லி மலர்மே லயனு மரவின்
அணையானும்
சொல்லிப் பரவித் தொடர வொண்ணாச்
சோதியூர்
கொல்லை வேடர் கூடி நின்று
கும்பிட
முல்லை யயலே முறுவல் செய்யும்
முதுகுன்றே. **#696**

அக இதழ்களை உடைய தாமரை மலர்மேல் உறையும் பிரமனும், பாம்பணையிற் பள்ளி கொள்ளும் திருமாலும் தோத்திரம் சொல்லி வாழ்த்தித் தொடர, அவர்களால் அறிய ஒண்ணாத சோதியாய் நின்றவனது ஊர், முல்லை நிலத்தில் வேடர்கள் கூடிநின்று கும்பிட அதனைக் கண்டு முல்லைக்கொடிகள் அருகில் இருந்துகண்டு, அரும்புகளால் முறுவல் செய்யும் முதுகுன்றாகும்.

திருமுதுகுன்றம்

கருகு முடலார் கஞ்சி யுண்டு
கடுவேதின்
றுருகு சிந்தை யில்லார்க்கயலா
னுறைகோயில்
திருகல் வேய்கள் சிறிதே வளையச்
சிறுமந்தி
முருகின் பணைமே லிருந்து நடஞ்செய்
முதுகுன்றே. **#697**

கரிய உடலினராய், கஞ்சி உண்டு கடுக்காய் தின்று இரக்கமற்ற மனமுடையவராய்த் திரியும் சமண புத்தர்கட்கு அயலானாய் விளங்கும் சிவபிரான் உறையும் கோயில், கோணலை உடைய மூங்கில்கள் சிறிதே வளைந்திருக்கச் சிறிய மந்திகள் அகில் மரங்களின் கிளைகளின் மேல் நின்று நடனம்புரியும் முதுகுன்றமாகும்.

திருமுதுகுன்றம்

அறையார் கடல்சூ ழந்தண் காழிச்
சம்பந்தன்
முறையான் முனிவர் வணங்குங் கோயின்
முதுகுன்றைக்
குறையாப் பனுவல் கூடிப் பாட
வல்லார்கள்
பிறையார் சடையெம் பெருமான் கழல்கள்

பிரியாரே. #698

ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்ட அழகும் தண்மையும் வாய்ந்த
சீகாழிப்பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் முனிவர்கள் முறையால்
வணங்கும் திருமுதுகுன்றத்துக் கோயிலை நிறைவாகப் பாடிய
இப்பனுவலைக் கூடிப்பாட வல்லவர்கள் பிறை பொருந்திய சடையினை
உடைய எம்பெருமானின் திருவடிகளைப் பிரியார்.

திருப்பிரமபுரம்

சீர்காழி

திருப்பிரமபுரம்,
பண் - காந்தாரம், திருப்பிரமபுர மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

கறையணி வேலிலர் போலுங்
கபாலந் தரித்திலர் போலும்
மறையு நவின்றிலர் போலு
மாசுண மார்த்திலர் போலும்
பறையுங் கரத்திலர் போலும்
பாசம் பிடித்திலர் போலும்
பிறையுஞ் சடைக்கிலர் போலும்
பிரம புரமமர்ந் தாரே. **#699**

பிரமபுரம் அமர்ந்த பெருமான் சொரூப நிலையில் எல்லாம் அற்றவராக இருப்பினும், தடத்த நிலையில் கறை பொருந்திய வேலை உடையவர். கபாலம் தரித்தவர். வேதங்களை அருளியவர். பாம்புகளை இடையில் கட்டியவர் உடுக்கைப்பறை ஏந்திய கரத்தினர். கயிற்றைக்கையில் பிடித்தவர். பிறையணிந்த சடைமுடியினர். போலும் என்பதனை வினாப்பொருளதாகக் கொண்டு இங்குக் கூறிய செய்திகள் யாவும் உறுதிப் படுமாற்றை உணரலாம்.

சீர்காழி

கூரம் பதுவிலர் போலுங்
கொக்கி னிறகிலர் போலும்
ஆரமும் பூண்டிலர் போலு
மாமை யணிந்திலர் போலுந்
தாருஞ் சடைக்கிலர் போலுஞ்
சண்டிக் கருளிலர் போலும்
பேரும் பலவிலர் போலும்
பிரம புரமமர்ந் தாரே. **#700**

பிரமபுரம் அமர்ந்த பெருமான் கூரிய அம்பினை உடையவர். கொக்கின் இறகை அணிந்தவர். ஆரங்கள் பூண்டவர். ஆமையோட்டைத் தரித்தவர். சடைமுடியில் மாலை அணிந்தவர். சண்டேசுரருக்கு அருள்புரிந்தவர். பலபெயர்களை உடையவர்.

சீர்காழி

சித்த வடிவிலர் போலுந்
தேசந் திரிந்திலர் போலுங்
கத்தி வருங்கடுங் காளி
கதங்கள் தவிர்த்திலர் போலும்
மெய்த்த நயன மிடந்தார்க்
காழி யளித்திலர் போலும்
பித்த வடிவிலர் போலும்
பிரம புரமமர்ந் தாரே. **#701**

பிரமபுரம் அமர்ந்த பெருமான், சித்தர் வடிவம் போன்ற உருவினர், பலதேசங்களுக்கும் சென்று திரிந்தவர், சத்தமிட்டு வந்த காளியின் கோபாவேசத்தைத் தவிர்த்தவர், தன் உடம்பிலுள்ள கண்களில் ஒன்றைப் பெயர்த்தணிவித்த திருமாலுக்குச் சக்கராயுதம் அளித்தவர். பித்தர் வடிவம் போன்ற வடிவினர்.

சீர்காழி

நச்சர வாட்டிலர் போலு
நஞ்ச மிடற்றிலர் போலுங்
கச்சுத் தரித்திலர் போலுங்
கங்கை தரித்திலர் போலு
மொய்ச்சவன் பேயிலர் போலு
முப்புர மெய்திலர் போலும்
பிச்சை யிரந்திலர் போலும்
பிரம புரமமர்ந் தாரே. **#702**

பிரமபுரம் அமர்ந்த பெருமான் நஞ்சினை உடைய பாம்பைப் பிடித்து ஆடச் செய்பவர். நஞ்சினை மிடற்றில் உடையவர். பாம்பைக் கச்சாக அணிந்தவர். கங்கையை முடியில் தரித்தவர். சூழ்ந்துள்ள வலியபேய்க் கணங்களை உடையவர். முப்புரங்களை எய்து எரித்தவர். பிச்சை இரப்பவர்.

சீர்காழி

தோடு செவிக்கிலர் போலுஞ்
சூலம் பிடித்திலர் போலும்
ஆடு தடக்கை வலிய
யானை யுரித்திலர் போலும்
ஓடு கரத்திலர் போலு
மொள்ளழல் கையிலர் போலும்

பீடு மிகுத்தெழு செல்வப்
பிரம புரமமர்ந் தாரே. **#703**
பீடுமிகுந்த செல்வப் பிரமபுரம் அமர்ந்த பெருமான் ஒருசெவியில் தோடணிந்தவர். கையில்சூலம் பிடித்தவர். அசைகின்ற நீண்ட கையை உடைய யானையை உரித்தவர். தலையோட்டைக் கையில் ஏந்தியவர். ஒளிபொருந்திய அழலைக் கையில் உடையவர்.

சீர்காழி

விண்ணவர் கண்டிலர் போலும்
வேள்வி யழித்திலர் போலும்
அண்ண லயன்றலை வீழ
வன்று மறுத்திலர் போலும்
வண்ண வெலும்பினொ டக்கு
வடங்க டரித்திலர் போலும்
பெண்ணின மொய்த்தெழு செல்வப்
பிரம புரமமர்ந் தாரே. **#704**
மகளிர் கூட்டம் சூழ்ந்து போற்றும் பிரமபுரம் அமர்ந்த பெருமான், தேவர்களால் அறியப்பெறாதவர். தக்கன் செய்த வேள்வியை அழித்தவர். தலைமைத் தன்மையுடைய பிரமன் தலைகளில் ஒன்றைக் கொய்தவர். அழகிய எலும்புகளோடு உருத்திராக்க வடங்கள் தரித்தவர்.

சீர்காழி

பன்றியின் கொம்பிலர் போலும்
பார்த்தற் கருளிலர் போலுங்
கன்றிய காலனை வீழக்
கால்கொடு பாய்ந்திலர் போலுந்
துன்று பிணஞ்சுடு காட்டி
லாடித் துதைந்திலர் போலும்
பின்றியும் பீடும் பெருகும்
பிரம புரமமர்ந் தாரே. **#705**
பிற்காலத்தும் பெருமைகள் பெருகும் பிரமபுரம் அமர்ந்த பெருமான், பன்றியின் கொம்பைத் தரித்தவர். பார்த்தனுக்குப் பாசுபதம் அளித்து அருள் புரிந்தவர். சினந்துவந்த காலன் வீழுமாறு கால்கொடு பாய்ந்தவர். பிணங்கள் செறிந்த சுடுகாட்டில் ஆடித்திளைப்பவர்.

சீர்காழி

பரசு தரித்திலர் போலும்
படுதலை பூண்டிலர் போலும்

அரச னிலங்கையர் கோனை
யன்று மடர்த்திலர் போலும்
புரைசெய் புனத்திள மானும்
புலியி னதளிலர் போலும்
பிரச மலர்ப்பொழில் சூழ்ந்த
பிரம புரமமர்ந் தாரே. **#706**

தேன் பொருந்திய மலர்கள் செறிந்த பொழில் சூழ்ந்த பிரமபுரம் அமர்ந்த பெருமான், கையில் மழுவைத் தரித்தவர். வீழ்ந்து பட்ட பிரமனது தலையோட்டைக் கையில் ஏந்தியவர். இலங்கையர் தலைவனாக விளங்கிய இராவணனை அக்காலத்தே அடர்த்தவர். பரண் அமைத்துக் காக்கும் புனத்தில் வரும் இளமான் புலி ஆகியவற்றின் தோல்களை உடுத்தவர்.

சீர்காழி

அடிமுடி மாலயன் றேட
வன்று மளப்பிலர் போலுங்
கடிமல ரைங்கணை வேளைக்
கனல விழித்திலர் போலும்
படிமலர்ப் பாலனுக் காகப்
பாற்கட லீந்திலர் போலும்
பிடிநடை மாதர் பெருகும்
பிரம புரமமர்ந் தாரே. **#707**

பெண்யானை போன்ற நடையினை உடைய மாதர்கள் பெருகிய பிரமபுரம் அமர்ந்த பெருமான், அன்று திருமால் பிரமர்கள் அடிமுடிதேடி அளக்கலாகாத திருவுருவம் கொண்டவர். மணம் கமழும் மலர்கள் ஐந்தினைக் கணைகளாகக் கொண்ட மன்மதன் எரியுமாறு விழித்தவர். மண்ணுலகில் தந்தையிடம் பால்கேட்ட மலர்போன்ற மென்மையான இளம் பாலகனுக்குப் பாற்கடல் ஈந்தவர்.

சீர்காழி

வெற்றரைச் சீவரத் தார்க்கு
வெளிப்பட நின்றிலர் போலும்
அற்றவ ரானிழ னால்வர்க்
கறங்க ளுரைத்திலர் போலும்
உற்றல ரொன்றிலர் போலு
மோடு முடிக்கிலர் போலும்
பெற்றமு மூர்ந்திலர் போலும்
பிரம புரமமர்ந் தாரே. **#708**

பிரமவுரம் பெருமான், வெற்றுடலோடும், சீவரம் அணிந்தும் திரியும் சமண புத்தர்கட்குப் புலனாகாதவர். ஆல் நிழற் கீழ்ப் பற்றற்றவர்களாகிய சனகாதிமுனிவர் நால்வர்க்கு அறங்கள் உரைத்தவர். எதனையும் சார்ந்து நில்லாதவர். ஒன்றுமில்லாதாரைப் போலத் தோன்றுபவர். தலையோட்டை முடியில் தரித்தவர். விடை ஊர்ந்துவருபவர்.

சீர்காழி

பெண்ணுரு வாணுரு வல்லாப்
பிரம புரநகர் மேய
அண்ணல்செய் யாதன வெல்லா
மறிந்து வகைவகை யாலே
நண்ணிய ஞானசம் பந்த
னவின்றன பத்தும்வல் லார்கள்
விண்ணவ ரோடினி தாக
வீற்றிருப் பாரவர் தாமே. **#709**

பெண்ணுருவமும் ஆணுருவமும் அல்லாத (மாதொருபாகராக) பிரமபுரநகரில் உகந்தருளிய தலைமையை உடைய சிவபிரான் செய்யாத செயல்களைச் செய்தனபோலக் கூறும் இயல்புகளையெல்லாம் அறிந்து வகை வகையாக விரும்பிய ஞானசம்பந்தன் நவின்ற இப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓதவல்லவர்கள் விண்ணவர்களோடு இனிதாக வீற்றிருப்பர்.

திருஆலவாய்

திருஆலவாய்

திருஆலவாய்,
பண் - காந்தாரம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. இதுவே மதுரை. ,
சுவாமிபெயர் : சொக்கநாதசுவாமி.
தேவியார் : மீனாட்சியம்மை.

மந்திர மாவது நீறு
வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு
துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு
சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்
திருவால வாயான் திருநீறே. **#710** ★★★★★

சிவந்த பவளம் போன்ற வாயினை உடைய உமைபங்கன் ஆகிய திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானது திருநீறு. மந்திரம் போல நினைப்பவரைக் காப்பது. வானவர் தம் மேனிமேல் பூசிக்கொள்ளப்படுவது. அழகு தருவது. எல்லா நூல்களாலும் புகழப்படுவது. ஆகமங்களில் புகழ்ந்து சொல்லப்படுவது. சிவமயத்தில் நிலைத்துள்ளது.

திருஆலவாய்

வேதத்தி லுள்ளது நீறு
வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு
புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு
வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த
திருவால வாயான் திருநீறே. **#711**

குளிர்ந்த நீர் நிரம்பிய வயல்கள் சூழ்ந்த திரு ஆலவாயிலில் விளங்கும் சிவபிரானது திருநீறு, வேதங்களில் புகழ்ந்து ஓதப் பெறுவது. கொடிய துயர்களைப் போக்குவது. சிவ ஞானத்தைத் தருவது. அறியாமை முதலியவற்றைப் போக்குவது. புகழ்ந்து போற்றத் தக்கது. உண்மையாக நிலைபெற்றிருப்பது.

திருஆலவாய்

முத்தி தருவது நீறு
முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு
தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு
பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு
திருவால வாயான் திருநீறே. **#712**

திரு ஆலவாயான் திருநீறு வீடுபேறு அளிப்பது. முனிவர்களால் அணியப் பெறுவது. நிலையாக எப்போதும் உள்ளது. தக்கோர்களால் புகழப்படுவது. இறைவனிடம் பக்தியை விளைப்பது. வாழ்த்த இனியது. எண்வகைச் சித்திகளையும் தரவல்லது.

திருஆலவாய்

காண வினியது நீறு
கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம்
பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு
மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு
திருவால வாயான் திருநீறே. **#713**

திரு ஆலவாயான் திருநீறு கண்களுக்கு இனிமை தருவது. அழகைக் கொடுப்பது. விரும்பி அணிவார்க்குப் பெருமை கொடுப்பது. இறப்பைத் தடுப்பது. அறிவைத் தருவது. உயர்வு அளிப்பது.

திருஆலவாய்

பூச வினியது நீறு
புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு
பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு
அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு
திருவால வாயான் திருநீறே. **#714**

திரு ஆலவாயான் திருநீறு, பூசுதற்கு இனிமையானது. புண்ணியத்தை

வளர்ப்பது. பேசுதற்கு இனியது. பெருந்தவம் செய்யும் முனிவர்கட்கு ஆசையை அறுப்பது. முடிவான பேரின்ப நிலையை அளிப்பது. உலகோரால் புகழப்படுவது.

திருஆலவாய்

அருத்தம தாவது நீறு
அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு
வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு
புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த
திருவால வாயான் திருநீறே. **#715**

அழகிய மாளிகைகள் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறு செல்வமாக இருப்பது. துன்பம் போக்குவது. மன வருத்தத்தைத் தணிப்பது. துறக்க இன்பத்தை அளிப்பது. எல்லோருக்கும் பொருத்தமாக இருப்பது. புண்ணியரால் பூசப்பெறுவது.

திருஆலவாய்

எயிலது வட்டது நீறு
விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு
பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு
சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்
திருவால வாயான் திருநீறே. **#716**

கூர்மைக்கு விளக்கம் தருகின்ற சூலப்படையினை ஏந்திய திருஆலவாயான் திருநீறு, திரிபுரங்களை எரிக்கச் செய்தது. இம்மை மறுமை இன்பம் தர இருப்பது. பிறரோடு பழகும் பயன் அளிப்பது. செல்வமாக விளங்குவது. உறக்கநிலையைத் தடுப்பது. தூய்மையை அளிப்பது.

திருஆலவாய்

இராவணன் மேலது நீறு
வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு
பாவ மறுப்பது நீறு

தராவண மாவது நீறு
தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி
யால வாயான் றிருநீறே. **#717**

பாம்புகள் வளைந்து தவழும் திருமேனியனாகிய திருஆலவாயான் திருநீறு., இராவணன் பூசிப் பயன் பெற்றது. நல்லவர்களால் எண்ணத்தக்கது. பராசக்தி வடிவமானது. பாவம் போக்குவது. தத்துவங்களாக இருப்பது. மெய்ப்பொருளை உணர்த்துவது.

திருஆலவாய்

மாலொ டயனறி யாத
வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கண்
மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு
மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம்
மால வாயான் றிருநீறே. **#718**

நஞ்சுண்ட கண்டனாகிய திருஆலவாயான் திருநீறு, திருமால் பிரமர்களால் அறியப் பெறாத தன்மையை உடையது. வானுலகில் வாழும் தேவர்கள் தங்கள் மேனிகளில் பூசிக்கொள்வது. பிறவியாகிய இடரைத் தவிர்த்து நிலையான இன்பம் அளிப்பது.

திருஆலவாய்

குண்டிகைக் கையர்க ளோடு
சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு
கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா
ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து
மால வாயான் றிருநீறே. **#719**

மேல் உலகில் வாழ்வோர் பணிந்து போற்றும் திருஆலவாயான் திருநீறு, குண்டிகை ஏந்திய கையர்களாகிய சமணர்கள் சாக்கியர்களின் கண்களைத் திகைக்கச் செய்வது. தியானிக்க இனியது. எட்டுத் திசைகளிலும் வாழும் மெய்ப்பொருளுணர்வுடையோரால் ஏத்தப்பெறும் தகைமைப்பாடு உடையது.

<u>திருஆலவாய்</u>

ஆற்ற லடல்விடை யேறு
மால வாயான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும்
பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற
தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும்
வல்லவர் நல்லவர் தாமே. **#720**

ஆற்றலும், பிறரைக் கொல்லும் வலிமையும் உடைய விடையின்மீது ஏறிவரும் ஆலவாயான் திருநீற்றைப் போற்றிப் புகலியில் விளங்கும் பூசுரனாகிய ஞானசம்பந்தன் சைவத்தின் பெருமையைத் தெளவித்துப் பாண்டியன் உடலில் பற்றிய தீமை விளைத்த பிணி தீருமாறு சாற்றிய இப்பதிகப்பாடல்கள் பத்தையும் ஓதவல்லவர் நல்லவராவார்.

திருப்பெரும்புலியூர்

திருப்பெரும்புலியூர்

திருப்பெரும்புலியூர்,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வியாக்கிரபுரீசுவரர்.
தேவியார் : சவுந்தராம்பிகையம்மை.

மண்ணுமோர் பாக முடையார்
மாலுமோர் பாக முடையார்
விண்ணுமோர் பாக முடையார்
வேத முடைய விமலர்
கண்ணுமோர் பாக முடையார்
கங்கை சடையிற் கரந்தார்
பெண்ணுமோர் பாக முடையார்
பெரும்புலி யூர்பிரி யாரே. **#721**

திருப்பெரும்புலியூரைப் பிரியாதுறையும் இறைவர், தாம் கொண்டருளிய பேருருவில் மண்விண் ஆகிய உலகங்களை ஒவ்வொரு பாகமாகக் கொண்டவர். திருமாலை ஒருபாகமாக ஏற்றவர். உமையம்மையை இடப்பாகமாகக் கொண்டவர். வேதங்களை உடையவர். விமலர். உமையம்மைக்குத் தம்முடலில் ஒருபாகத்தை அளித்ததால் கண்களிலும் ஒருபாதியையே பெற்றவர். கங்கையைச் சடையில் கரந்தவர்.

திருப்பெரும்புலியூர்

துன்னு கடற்பவ ளஞ்சேர்
தூயன நீண்டதிண் டோள்கள்
மின்னு சுடர்க்கொடி போலும்
மேனியி னாளொரு கங்கைக்
கன்னி களின்புனை யோடு
கலைமதி மாலை கலந்த
பின்னு சடைப்பெரு மானார்
பெரும்புலி யூர்பிரி யாரே. **#722**

கடலில் பொருந்திய பவளம் போன்ற தூயனவாகிய நீண்ட தோள்களையும், மின்னுகின்ற ஒளி பொருந்திய கொடிபோன்ற மேனியையும் உடைய கங்கையைப், பிற நதிக்கன்னியரின் நீரோடு, கலை வளரும் மாலைபோன்ற பிறைமதியைப் புனைந்த பின்னிய சடையை உடைய பெருமான் பெரும்புலியூரில் பிரியாது உறைகின்றார்.

திருப்பெரும்புலியூர்

கள்ள மதித்த கபாலங்
கைதனி லேமிக வேந்தித்
துள்ள மிதித்துநின் றாடுந்
தொழில ரெழின்மிகு செல்வர்
வெள்ள நகுதலை மாலை
விரிசடை மேன்மிளிர் கின்ற
பிள்ளை மதிப்பெரு மானார்
பெரும்புலி யூர்பிரி யாரே. **#723**

கள்ளங்கருதிய பிரமனது கபாலத்தைக் கையில் ஏந்தித் துள்ளி மிதித்து நின்றாடும் தொழிலராகிய அழகிய செல்வரும், கங்கை சிரிக்கும் தலைமாலை ஆகியன மிளிர்கின்ற விரிசடைமேல் பிள்ளைமதியையும் புனைந்துள்ளவரும் ஆகிய பெருமான் பெரும்புலியூரில் பிரியாது உறைகின்றார்.

திருப்பெரும்புலியூர்

ஆடலிலைய முடையார்
அருமறை தாங்கியா றங்கம்
பாடலிலைய முடையார்
பன்மை யொருமைசெய் தஞ்சும்
ஊடலிலைய முடையார்
யோகெனும் பேரொளி தாங்கிப்
பீடலிலைய முடையார்
பெரும்புலி யூர்பிரி யாரே. **#724**

நடனலயம் உடையவர். அரிய நான்கு மறைகளைத் தாங்கிப் போற்றும் ஆறு அங்கங்களாகிய இலயம் உள்ள பாடல்களைப் பாடுபவர். பன்மையும் ஒருமையுமாகிய கோலத்தைச் செய்து, ஐம்புலனடக்கம் இன்மையால் நாம் ஐயுறுமாறு இருப்பவர். யோகம் என்னும் ஒளிநெறியை மேற்கொண்டு பெருமை பொருந்திய நள் இரவில் நடனம் புரிபவர். அவர் பெரும்புலியூரைப் பிரியாது உறைகின்றார்.

திருப்பெரும்புலியூர்

தோடுடை யார்குழைக் காதிற்
சுடுபொடி யாரன லாடக்
காடுடை யாரெரி வீசுங்
கையுடை யார்கடல் சூழ்ந்த
நாடுடை யார்பொரு ளின்ப

நல்லவை நாளு நயந்த
பீடுடை யார்பெரு மானார்
பெரும்புலி யூர்பிரி யாரே. #725

பெரும்புலியூரைப் பிரியாதுறையும் இறைவர். ஒரு காதில் தோட்டையும் ஒருகாதில் குழையையும் உடையவர். சாம்பலைப் பூசியவர். அனலில் நின்று ஆடுதற்கு இடுகாட்டை இடமாக உடையவர். எரிவீசும் கையுடையார். கடலால் சூழப்பட்ட நாடுகள் அனைத்தையும் உடையவர். பொருள் இன்பம் ஆகிய நல்லனவற்றை நாள்தோறும் விரும்பிய பெருமை உடையவர். எல்லோர்க்கும் தலைவராயிருப்பவர். அவர் பெரும்புலியூரைப் பிரியாது உறைகிறார்.

திருப்பெரும்புலியூர்

கற்ற துறப்பணி செய்து
காண்டுமென் பாரவர் தங்கண்
முற்றி தறிதுமென் பார்கண்
முதலியர் வேதபு ராணர்
மற்றி தறிதுமென் பார்கண்
மனத்திடை யார்பணி செய்யப்
பெற்றி பெரிது முகப்பார்
பெரும்புலி யூர்பிரி யாரே. #726

கல்வி கற்றதன் பயனை அறிந்த பணி செய்து கடவுளைக் காண்போம் என்பார்க்குக் கண்ணாயிருப்பவர். இதனை முற்றும் அறிவோம் என்பார்க்கு முதல்வராய் இருப்பவர். வேத புராணங்களாய் விளங்குபவர். இதனைப் பின் அறிவோம் என்பார் மனத்தில் இருப்பவர். தொண்டர்களைப் பெரிதும் உகப்பவர். அவர் பெரும்புலியூரைப் பிரியாது உறைகின்றார்.

திருப்பெரும்புலியூர்

மறையுடை யாரொலி பாடன்
மாமலர்ச் சேவடி சேர்வார்
குறையுடை யார்குறை தீர்ப்பார்
குழக ரழகர்நஞ் செல்வர்
கறையுடை யார்திகழ் கண்டங்
கங்கை சடையிற் கரந்தார்
பிறையுடை யார்சென்னி தன்மேற்
பெரும்புலியூர்பிரி யாரே. #727

வேதம் ஓதுகின்றவர்கள், ஒலிக்கின்ற பாடல்களால் திருவடிகளை இடைவிடாது நினைப்பவர். மனக்குறை உடையவர் ஆகியோர்

குறைகளைத் தீர்ப்பவர். இளமைத்தன்மையர், அழகர். நம் செல்வராயிருப்பவர். கண்டத்தில் விடக்கறை உடையவர். கங்கையைச் சடையில் கரந்தவர். சென்னியின்மேல் பிறை உடையவர்.

திருப்பெரும்புலியூர்

உறவியு மின்புறு சீரு
மோங்குதல் வீடௌ தாகித்
துறவியுங் கூட்டமுங் காட்டித்
துன்பமு மின்பமுந் தோற்றி
மறவியஞ் சிந்தனை மாற்றி
வாழவல் லார்தமக் கென்றும்
பிறவி யறுக்கும் பிரானார்
பெரும்புலி யூர்பிரி யாரே. **#728**

உறவும் இன்பமும் ஓங்குமாறு செய்து வீட்டின்பத்தை எளிதாகத் தந்து துறவுள்ளமும் பற்றுள்ளமும் காட்டித் துன்ப இன்பங்களைத் தந்து மறத்தலுடைய சிந்தனையை மாற்றி மறவாமையுடன் வாழவல்லார்; பிறவியைப் போக்கும் பிரானார் பெரும்புலியூரை பிரியாதுறைகின்றார்.

திருப்பெரும்புலியூர்

சீருடை யாரடி யார்கள்
சேடரொப் பார்சடை சேரும்
நீருடை யார்பொடிப் பூசு
நினைப்புடை யார்விரி கொன்றைத்
தாருடை யார்விடை யூர்வார்
தலைவரைந் நூற்றுப்பத் தாய
பேருடை யார்பெரு மானார்
பெரும்புலி யூர்பிரி யாரே. **#729**

புகழுடைய அடியவர்களுக்குப் பெரியோரைப் போல்வர். சடையில் கங்கையை உடையவர். திருநீறுபூசும் நினைவுடையவர். விரிந்த கொன்றைமாலையைச் சூடியவர். விடையை ஊர்ந்து வருபவர். தலைமைத்தன்மை உடையவர். அழகிய ஆயிரம் பெயருடையவர். பெருமானாக விளங்குபவர். அவ்விறைவர் பெரும்புலி யூரைப் பிரியாது உறைகின்றார்.

திருப்பெரும்புலியூர்

உரிமை யுடையடி யார்கள்
உள்ளுற வுள்கவல் லார்கட்
கருமை யுடையன காட்டி

யருள்செயு மாதி முதல்வர்
கருமை யுடைநெடு மாலுங்
கடிமல ரண்ணலுங் காணாப்
பெருமை யுடைப்பெரு மானார்
பெரும்புலி யூர்பிரி யாரே. **#730**

உரிமையுடைய அடியவர்கட்கும், மனம் பொருந்த நினைப்பவர்கட்கும் காண இயலாதனவற்றைக் காட்டி அருள் செய்யும், ஆதிக்கும் ஆதியாய முதல்வர். கரிய திருமாலும் மணமுடைய தாமரை மலர் மேலுறையும் நான்முகனும் காணாப் பெருமை யுடைய பெருமான். அவ்விறைவர் பெரும் புலியூரில் பிரியாது உறைகின்றார்.

திருப்பெரும்புலியூர்

பிறைவள ரும்முடிச் சென்னிப்
பெரும்புலி யூர்ப்பெரு மானை
நறைவள ரும்பொழிற் காழி
நற்றமிழ் ஞானசம் பந்தன்
மறைவள ருந்தமிழ் மாலை
வல்லவர் தந்துயர் நீங்கி
நிறைவளர் நெஞ்சின ராகி
நீடுல கத்திருப் பாரே. **#731**

பிறைவளரும் முடியினை உடைய சென்னிப் பெரும்புலியூர்ப் பெருமானை, தேன் பெருகும் பொழில் சூழ்ந்தகாழிப் பதியில் தோன்றிய நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் போற்றி அருளிய வேதமாக வளரும் இத்தமிழ்மாலையால் பரவவல்லவர்கட்குத் துயர் நீக்கமும் நெஞ்சு வளர் நிறையும் உளவாம். அவர்கள் நீடிய பேரின்ப உலகில் வாழ்வார்கள்.

திருக்கடம்பூர்

திருக்கடம்பூர்

திருக்கடம்பூர்,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அமுதகடேசுவரர்.
தேவியார் : சோதிமின்னம்மை.

வானமர் திங்களு நீரு
மருவிய வார்சடை யானைத்
தேனமர் கொன்றையி னானைத்
தேவர் தொழப்படு வானைக்
கானம ரும்பிணை புல்கிக்
கலைபயி லுங்கடம் பூரில்
தானமர் கொள்கையி னானைத்
தாள்தொழ வீடெள தாமே. **#732**

வானிற் பொருந்திய திங்களும் கங்கையும் மருவிய நீண்ட சடையை உடையவனும், தேன்பொருந்திய கொன்றை மாலையைச் சூடியவனும், தேவர்களால் தொழப்படுபவனும், காடுகளில் பெண்மானைத் தழுவி ஆண்மான்கள் மகிழும் கடம்பூரில் எழுந்தருளிய இயல்பினனும் ஆகிய பெருமான் திருவடிகளைத் தொழின் வீடு எளிதாகும்.

திருக்கடம்பூர்

அரவினொ டாமையும் பூண்டு
வந்துகில் வேங்கை யதளும்
விரவுந் திருமுடி தன்மேல்
வெண்டிங்கள் சூடி விரும்பிப்
பரவுந் தனிக்கடம் பூரிற்
பைங்கண்வெள் ளேற்றண்ணல் பாதம்
இரவும் பகலும் பணிய
வின்ப நமக்கது வாமே. **#733**

பாம்பு, ஆமையோடு, ஆகியவற்றைப் பூண்டு, அழகிய ஆடையாகப் புலித்தோலை உடுத்து அழகிய முடிமீது பொருந்திய வெண்பிறையைச்சூடிப் பலராலும் விரும்பிப் பரவப் பெறும் சிறந்த கடம்பூரில் எழுந்தருளிய பசிய கண்களை உடைய வெள்ளேற்று அண்ணலின் திருவடிகளை இரவும் பகலும் பணிய நமக்கு இன்பம் உளதாம்.

திருக்கடம்பூர்

இளிபடு மின்சொலி னார்க
ளிருங்குழன் மேலிசைந் தேறத்
தெளபடு கொள்கை கலந்த
தீத்தொழி லார்கடம் பூரில்
ஒளிதரு வெண்பிறை சூடி
யொண்ணுத லோடுட னாகிப்
புலியத ளாடை புனைந்தான்
பொற்கழல் போற்றுது நாமே. #734

இளி என்னும் இசை இனிமையும் சொல்லினிமையும் உடைய மகளிர் தம் கரிய கூந்தலில் புகை படியுமாறு அந்தணர் ஆகுதி வேட்கும் கடம்பூரில் ஒளிபொருந்திய வெண்பிறைசூடி உமையம்மையோடு உடனாய்ப் புலித்தோலுடுத்து எழுந்தருளியுள்ள இறைவனின் பொற்கழலை நாம் போற்றுவோம்.

திருக்கடம்பூர்

பறையொடு சங்க மியம்பப்
பல்கொடி சேர்நெடு மாடம்
கறையுடை வேல்வரிக் கண்ணார்
கலையொலி சேர்கடம் பூரில்
மறையொலி கூடிய பாடன்
மருவிநின் றாடன் மகிழும்
பிறையுடை வார்சடை யானைப்
பேணவல் லார்பெரி யோரே. #735

பறை சங்கம் முதலிய ஒலிக்கப் பலவகையான கொடிகள் கட்டிய மாடவீடுகளில் மகளிர் ஆடும் ஒலி நிறைந்த கடம்பூரில் வேதஒலியோடு கூடிய பாடல்கள் பாடி ஆடி மகிழும் பிறைசூடிய நீண்ட சடையை உடைய பெருமானைப் பேண வல்லவர் பெரியோர் ஆவர்.

திருக்கடம்பூர்

தீவிரி யக்கழ லார்ப்பச்
சேயெரி கொண்டிடு காட்டில்
நாவிரி கூந்தனற் பேய்கள்
நகைசெய்ய நட்ட நவின்றோன்
காவிரி கொன்றை கலந்த
கண்ணுத லான்கடம் பூரில்
பாவிரி பாடல் பயில்வார்

பழியொடு பாவ மிலாரே. **#736**

தீப்போலும் சடைவிரியக் கழல்கள் ஆர்க்கக் கையில் அனல் ஏந்திச் சுடுகாட்டில் பேய்க்கணம் நகைக்க நடனம் ஆடுபவனும் கொன்றை மாலை அணிந்த நுதல்விழியானும் ஆகிய சிவபெருமானது கடம்பூரை அடைந்து ஓசையின்பம் உடைய பாடல்களைப் பாடிப் போற்றுவார் பழிபாவங்கள் இலராவர்.

<u>திருக்கடம்பூர்</u>

தண்புன னீள்வய றோறுந்
தாமரை மேலனம் வைகக்
கண்புணர் காவில்வண் டேறக்
கள்ளவி ழுங்கடம் பூரில்
பெண்புனை கூறுடை யானைப்
பின்னு சடைப்பெரு மானைப்
பண்புனை பாடல் பயில்வார்
பாவமி லாதவர் தாமே. **#737**

குளிர்ந்த நீர்நிறைந்த வயல்களில் முளைத்த தாமரைகள் தோறும் அன்னங்கள் வைகிமகிழவும், கண்கவரும் சோலைகளில் வண்டுகள் மொய்க்க மலர்கள் தேன்பிலிற்றவும் அமைந்த கடம்பூரில் மாதொருபாகனாய்ப் பின்னிய சடையினனாய் விளங்கும் பெருமானைப் பண்ணமைந்த பாடல்கள் பாடிப்பரவுவார் பாவம் இல்லாதவராவர்.

<u>திருக்கடம்பூர்</u>

பலிகெழு செம்மலர் சாரப்
பாடலொ டாட லறாத
கலிகெழு வீதி கலந்த
கார்வயல் சூழ்கடம் பூரில்
ஒலிதிகழ் கங்கை கரந்தா
னொண்ணுத லாளுமை கேள்வன்
புலியத ளாடையி னான்றன்
புனைகழல் போற்றல் பொருளே. **#738**

சிவபூசகர்கள் பூசைக்கு வேண்டு செம்மையான மலர்களைக் கொய்து, பாடியும் ஆடியும் மகிழும் ஒலிநிறைந்த வீதிகளையும் நீர் நிரம்பிய வயல்களையும் உடைய கடம்பூரில் கங்கையை முடியில் மறைத்தவனாய், உமைபாகனாய், புலித்தோல் உடுத்தவனாய் விளங்கும் பெருமான் புகழைப் போற்றுதலே பொருள் உடைய செயலாகும்.

<u>திருக்கடம்பூர்</u>

பூம்படு கிற்கயல் பாயப்
புள்ளிரி யப்புறங் காட்டில்
காம்படு தோளியர் நாளுங்
கண்கவ ருங்கடம் பூரில்
மேம்படு தேவியொர் பாக
மேவியெம் மானென வாழ்த்தித்
தேம்படு மாமலர் தூவித்
திசைதொழத் தீய கெடுமே, **#739**

அழகிய நீர் நிலைகளில் கயல்கள் பாய, அதனால் பறவை இரிந்தோட விளங்கும் கடம்பூரில் மூங்கில் போன்ற தோள்களை உடைய மகளிர் மனங்கவரும் இயல்பினனாய் விளங்குவோனும் புறங்காட்டில் ஆடுபவனுமாகிய பெருமானது கடம்பூரை அடைந்து மாதொருபாகனே! எம்மானே! எனக்கூறி மலர்தூவித் தொழத் தீயனகெடும.

திருக்கடம்பூர்

திருமரு மார்பி லவனுந்
திகழ்தரு மாமல ரோனும்
இருவரு மாயறி வொண்ணா
வெரியுரு வாகிய வீசன்
கருவரை காலி லடர்த்த
கண்ணுத லான்கடம் பூரில்
மருவிய பாடல் பயில்வார்
வானுல கம்பெறு வாரே. **#740**

திருமகள் மருவிய மார்பினனாகிய திருமாலும், தாமரை மலர்மேல் விளங்கும் நான்முகனும் ஆகிய இருவரும் அறிய முடியாதவாறு எரியுருவான ஈசனும் கரியமலைபோன்ற இராவணனைக் காலால் அடர்த்தவனும் ஆகிய பெருமானது கடம்பூரை அடைந்து, பொருந்திய பாடல்களைப் பாடிப்போற்றுவார் வானுலகம் பெறுவர்.

திருக்கடம்பூர்

ஆடை தவிர்த்தறங் காட்டு
மவர்களு மந்துவ ராடைச்
சோடைக ணன்னெறி சொல்லார்
சொல்லினுஞ் சொல்லல கண்டீர்
வேடம் பலபல காட்டும்
விகிர்தனம் வேத முதல்வன்
காடதனிடை மாடுங்
கண்ணுத லான்கடம் பூரே. **#741**

ஆடையின்றி அறங்கூறும் அமணர்களும், துவராடை உடுத்து அறநெறிபோதிக்கும் பதர்களாகிய புத்தர்களும் நன்னெறிகூறிச் சொன்னாலும் அவை மெய்ச்சொற்களல்ல. பல்வேறு வடிவங்களைக் கொண்டருளும் சிவபிரானும், நம் வேதமுதல்வனும் சுடுகாட்டுள் நடனமாடும் கண்ணுதலோனுமாகிய பெருமான் எழுந்தருளியிருப்பது கடம்பூராகும்.

திருக்கடம்பூர்

விடைநவி லுங்கொடி யானை
வெண்கொடி சேர்நெடு மாடம்
கடைநவி லுங்கடம் பூரிற்
காதல னைக்கடற் காழி
நடைநவின் ஞானசம் பந்தன்
நன்மையா லேத்திய பத்தும்
படைநவில் பாடல் பயில்வார்
பழியொடு பாவ மிலாரே. **#742**

விடைச்சின்னத்தை அறிவிக்கும் கொடியை உடையவனை, வெண்கொடிகள் சேர்ந்த உயரிய வாயில்களைக் கொண்ட மாடவீடுகளை உடைய கடம்பூரில் விருப்புடையவனை, கடலை அடுத்துள்ள காழிமாநகரில் தோன்றிய நன்னடை உடைய ஞானசம்பந்தன் நன்மை அருளுமாறு வேண்டிப்பாடிய சாதனமாகிய பாடல்களை ஓதுவார் பழிபாவம் இலாராவர்.

திருப்பாண்டிக்கொடுமுடி

திருப்பாண்டிக்கொடுமுடி

திருப்பாண்டிக்கொடுமுடி,
பண் - காந்தாரம்,
இத்தலம் கொங்குநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கொடுமுடிநாதேசுவரர்.
தேவியார் : பண்மொழியம்மை.

பெண்ணமர் மேனியி னாரும்
பிறைபுல்கு செஞ்சடை யாருங்
கண்ணமர் நெற்றியி னாருங்
காதம ருங்குழை யாரும்
எண்ணம ருங்குணத் தாரு
மிமையவ ரேத்தநின் றாரும்
பண்ணமர் பாடலி னாரும்
பாண்டிக் கொடுமுடி யாரே. **#743**

பாண்டிக்கொடுமுடி இறைவர் மாதொரு கூறர். பிறைசூடிய சடையார். கண் பொலிந்த நெற்றியர். காதில் குழை அணிந்தவர். எண்குணத்தவர். இமையவர் போற்ற நிற்பவர். இசையமைதியோடு கூடிய பாடல்களைப் பாடுபவர்.

திருப்பாண்டிக்கொடுமுடி

தனைக்கணி மாமலர் கொண்டு
தாள்தொழு வாரவர் தங்கள்
வினைப்பகை யாயின தீர்க்கும்
விண்ணவர் விஞ்சையர் நெஞ்சில்
நினைத்தெழு வார்துயர் தீர்ப்பார்
நிரைவளை மங்கை நடுங்கப்
பனைக்கைப் பகட்டுரி போர்த்தார்
பாண்டிக் கொடுமுடி யாரே. **#744**

பாண்டிக்கொடுமுடி இறைவர், தம்மைக் கொன்றை மலர் கொண்டு பூசித்து வணங்குபவர்களின் பகையாய்த்துயர் செய்யும் வினைகளைத் தீர்த்தருளும் மேலானவர். ஞானவடிவினர். நெஞ்சில் நினைத்து வணங்க எழும் அன்பர்களின் துயரங்களைத் தீர்ப்பவர். உமையம்மை அஞ்சப் பனை போன்ற கையை உடைய யானையை உரித்துப் போர்த்தவர்.

திருப்பாண்டிக்கொடுமுடி

சடையமர் கொன்றையி னாருஞ்
சாந்தவெண் ணீறணிந் தாரும்
புடையமர் பூதத்தி னாரும்
பொறிகிளர் பாம்பசைத் தாரும்
விடையம ருங்கொடி யாரும்
வெண்மழு மூவிலைச் சூலப்
படையமர் கொள்கையி னாரும்
பாண்டிக் கொடுமுடி யாரே. **#745**

பாண்டிக்கொடுமுடி இறைவர், சடையில் கொன்றை தரித்தவர். சந்தனமாக வெண்ணீற்றை அணிந்தவர். பூதப்படைகளை உடையவர். புள்ளிளைக் கொண்ட பாம்பை இடையில் கட்டியவர். விடைக்கொடி உடையவர். வெண்மழு, மூவிலைச் சூலம் ஆகியவற்றைப் படைக்கலன்களாக உடையவர்.

<u>திருப்பாண்டிக்கொடுமுடி</u>

நறைவளர் கொன்றையி னாரு
ஞாலமெல் லாந்தொழு தேத்தக்
கறைவளர் மாமிடற் றாருங்
காடரங் காக்கன லேந்தி
மறைவளர் பாடலி னோடு
மணமுழ வங்குழன் மொந்தை
பறைவளர் பாடலி னாரும்
பாண்டிக் கொடுமுடி யாரே. **#746**

பாண்டிக்கொடுமுடி இறைவர், தேன் பொருந்திய கொன்றைமலர் மாலையை அணிந்தவர். உலகமெல்லாம் வணங்க நஞ்சுண்டு கறுத்த கண்டத்தை உடையவர். இடுகாட்டை அரங்கமாகக் கொண்டு கையில் கனலேந்தி வேதப்பாடல்களோடு முழவம், குழல், மொந்தை, பறை ஒலிக்கப்பாடி ஆடுபவர்.

<u>திருப்பாண்டிக்கொடுமுடி</u>

போகமு மின்பமு மாகிப்
போற்றியென் பாரவர் தங்கள்
ஆகமு றைவிட மாக
வமர்ந்தவர் கொன்றையி னோடும்
நாகமுந் திங்களுஞ் சூடி
நன்னுதன் மங்கைதன் மேனிப்
பாகமு கந்தவர் தாமும்
பாண்டிக் கொடுமுடி யாரே. **#747**

பாண்டிக்கொடுமுடி இறைவர், போகமும் அதனால் எய்தும் இன்பமும் ஆனவர். போற்றி என்று கூறுவார் உடலை உறைவிடமாகக்கொண்டு அமர்பவர். கொன்றை, பாம்பு, திங்கள் ஆகியன வற்றை முடியில் சூடி உமைபாகம் உகந்தவர்.

திருப்பாண்டிக்கொடுமுடி

கடிபடு கூவிள மத்தங்
கமழ்சடை மேலுடை யாரும்
பொடிபட முப்புரஞ் செற்ற
பொருசிலை யொன்றுடை யாரும்
வடிவுடை மங்கைதன் னோடு
மணம்படு கொள்கையி னாரும்
படிபடு கோலத்தி னாரும்
பாண்டிக் கொடுமுடி யாரே. **#748**

பாண்டிக்கொடுமுடி இறைவர், மணம் பொருந்திய வில்வம், ஊமத்தை ஆகியவற்றைச் சடையின்மேல் உடையவர். முப்புரங்களைப் பொடிபடுமாறு செய்த வில்லினை உடையவர். அழகிய பார்வதி தேவியாரை மணம் புரிந்தவர். உலக உயிர்கள் வடிவம் கொள்ளுதற்கு முன்படிவமாக விளங்குபவர்.

திருப்பாண்டிக்கொடுமுடி

ஊனமர் வெண்டலை யேந்தி
யுண்பலிக் கென்றுழல் வாரும்
தேனம ரும்மொழி மாது
சேர்திரு மேனியி னாரும்
கானமர் மஞ்ஞைக ளாலுங்
காவிரிக் கோலக் கரைமேல்
பானல நீறணி வாரும்
பாண்டிக் கொடுமுடி யாரே. **#749**

பாண்டிக்கொடுமுடி இறைவர், ஊன் பொருந்திய வெண்தலையை ஏந்திப் பலியேற்கத் திரிபவர். தேன்மொழி மாதாகிய பார்வதியம்மை சேர்ந்த திருமேனியர். காடுகளில் வாழும் மயில்கள் ஆடும் காவிரியின் அழகிய கரைமேல் பால் போன்ற திருநீறு அணிந்து திகழ்பவர்.

திருப்பாண்டிக்கொடுமுடி

புரந்தரன் றன்னொடு வானோர்
போற்றியென் றேத்தநின் றாரும்
பெருந்திறல் வாளரக் கன்னைப்

பேரிடர் செய்துகந் தாரும்
கருந்திரை மாமிடற் றாருங்
காரகில் பன்மணி யுந்திப்
பரந்திழி காவிரிப் பாங்கர்ப்
பாண்டிக் கொடுமுடி யாரே. #750

பாண்டிக்கொடுமுடி இறைவர், இந்திரனோடு ஏனைய தேவர் பலரும் போற்றி என்று ஏத்த நிற்பவர். மிக்க வலிமையை உடைய இராவணனை முதலில் அடர்த்துப் பின் அருள் செய்தவர். கரிய கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு நிறுத்திய கண்டத்தினர். கரிய அகில், பல்வகைமணிகள் ஆகியவற்றை அடித்துக்கொண்டு பரந்து கிழிந்து வரும் காவிரியின் அருகில் உறைபவர்.

திருப்பாண்டிக்கொடுமுடி

திருமகள் காதலி னானுந்
திகழ்தரு மாமலர் மேலைப்
பெருமக னும்மவர் காணாப்
பேரழ லாகிய பெம்மான்
மருமலி மென்மலர்ச் சந்து
வந்திழி காவிரி மாடே
பருமணி நீர்த்துறை யாரும்
பாண்டிக் கொடுமுடி யாரே. #751

திருமகள் கேள்வனும், தாமரை மலர்மேல் உறையும் நான்முகனும் காணாதவாறு பேரழற்பிழம்பாய் எழுந்து நின்ற பெருமானார், மணம் கமழும் மென்மலர்கள், சந்தனம் ஆகியவற்றுடன் வரும் காவிரித்துறையில் விளங்கும் பாண்டிக்கொடுமுடி இறைவராவார்.

திருப்பாண்டிக்கொடுமுடி

புத்தரும் புந்தியி லாத
சமணரும் பொய்ம்மொழி யல்லான்
மெய்த்தவம் பேசிட மாட்டார்
வேடம் பலபல வற்றால்
சித்தருந் தேவருங் கூடிச்
செழுமலர் நல்லன கொண்டு
பத்தர்கள் தாம்பணிந் தேத்தும்
பாண்டிக் கொடுமுடி யாரே. #752

புத்தர் சமணர் ஆகியோர் பொய்மொழியல்லால் உண்மைத்தவநெறிகளைப் பேசிடமாட்டார். அவருடைய பலப்பல திருவடிவங்களைச் சித்தர் தேவர் முதலியோருடன் பத்தர்கள் நல்ல

செழுமையான மலர் கொண்டு பணிந்தேத்த விளங்குபவர் பாண்டிக்கொடுமுடி இறைவர்.

திருப்பாண்டிக்கொடுமுடி

கலமல்கு தண்கடல் சூழ்ந்த
காழியுண் ஞானசம் பந்தன்
பலமல்கு வெண்டலை யேந்தி
பாண்டிக் கொடுமுடி தன்னைச்
சொலமல்கு பாடல்கள் பத்துஞ்
சொல்லவல் லார்துயர் தீர்ந்து
நலமல்கு சிந்தைய ராகி
நன்னெறி யெய்துவர் தாமே. **#753**

மரக்கலங்களைக் கொண்டுள்ள குளிர்ந்த கடல் சூழ்ந்த காழிப்பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன், உயிர்கட்குப் பயன் நல்க வெண்தலையைக் கையில் ஏந்தி விளங்கும் இறைவனின் கொடுமுடிநகரைப் பரவிய பாடல்கள் பத்தையும் சொல்ல வல்லவர்கள், துயர் தீர்ந்து நன்மை நிரம்பிய சிந்தையராய் நன்னெறி எய்துவர்.

திருப்பிரமபுரம்

சீர்காழி

திருப்பிரமபுரம்,
பண் - காந்தாரம், திருப்பிரமபுர மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி. இது பாண்டியராசனுடைய சுரப்பிணிதீர்க்கச்சென் றாசனத்திலிருந்தபோது அவ்வரசன் சுவாமிகளை நோக்கி எந்தவூரென்று வினவ, நாமின்னவூரென்று திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகம்.

பிரமனூர் வேணுபுரம் புகலி வெங்குருப்
பெருநீர்த் தோணி
புரமன்னு பூந்தராய் பொன்னஞ் சிரபுரம்
புறவஞ் சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சைவய முள்ளிட்டங்
காதி யாய
பரமனூர் பன்னிரண்டாய் நின்றதிருக் கழுமலநாம்
பரவு மூரே. #754

இத்திருப்பதிகம் சீகாழியின் பன்னிருதிருப் பெயர்களைத் தனித்தனியே முதலிற் கொண்டு பன்னிரு பாடல்களாக அமைந்துள்ளது. கழுமலத்தின் பெயரை மட்டும் பெரும்பாலும் முடிவாகக் கொண்டுள்ளது. நாம் பரவும் ஊர் பிரமனூர் முதலாகக் கொச்சைவயம் உள்ளிட்ட பன்னிரண்டு திருப்பெயர்களை உடைய கழுமலமாகும்.

சீர்காழி

வேணுபுரம் பிரமனூர் புகலிபெரு வெங்குரு
வெள்ளத் தோங்குந்
தோணிபுரம் பூந்தராய் தூநீர்ச் சிரபுரம்
புறவங் காழி
கோணிய கோட்டாற்றுக் கொச்சை வயஞ்சண்பை
கூருஞ் செல்வங்
காணிய வையகத்தா ரேத்துங் கழுமலநாங்
கருது மூரே. #755

நாம் கருதும் ஊர் வேணுபுரம் முதலாக சண்பை உள்ளிட்ட பன்னிரு திருப்பெயர்களைக் கொண்டு செல்வம் கருதிய வையகத்தார் ஏத்தும் கழுமலமாகும்.

<u>சீர்காழி</u>

புகலி சிரபுரம் வேணுபுரஞ் சண்பை
புறவங் காழி
நிகரில் பிரமபுரங் கொச்சைவய நீர்மேல்
நின்ற மூதூர்
அகலிய வெங்குருவோ டந்தண் டராயமரர்
பெருமாற் கின்பம்
பகரு நகர்நல்ல கழுமலநாங் கைதொழுது
பாடு மூரே. **#756**

நாம் கைதொழுது பாடும் ஊர் புகலி முதலாக பூந்தராய் உள்ளிட்ட பன்னிரு திருப்பெயர்களைக்கொண்ட, சிவபெருமானுக்கு இன்பம் தரும் நல்ல கழுமலமாகும்.

<u>சீர்காழி</u>

வெங்குருத் தண்புகலி வேணுபுரஞ் சண்பை
வெள்ளங் கொள்ளத்
தொங்கிய தோணிபுரம் பூந்தராய் தொகுபிரம
புரந்தொல் காழி
தங்கு பொழிற்புறவங் கொச்சை வயந்தலைபண்
டாண்ட மூதூர்
கங்கை சடைமுடிமே லேற்றான் கழுமலநாங்
கருது மூரே. **#757**

நாம் கருதும் ஊர் வெங்குரு முதலாக சிரபுரம் உள்ளிட்ட பன்னிரு திருப்பெயர்களை உடையதும், கங்கையணிந்த சடைமுடியினை உடைய சிவபிரான் எழுந்தருளியதும் ஆகிய கழுமலமாகும்.

<u>சீர்காழி</u>

தொன்னீரிற் றோணிபுரம் புகலி வெங்குருத்
துயர்தீர் காழி
இன்னீர வேணுபுரம் பூந்தராய் பிரமனூர்
எழிலார் சண்பை
நன்னீர பூம்புறவங் கொச்சை வயஞ்சிலம்பன்
நகரா நல்ல
பொன்னீர புன்சடையான் பூந்தண் கழுமலநாம்
புகழு மூரே. **#758**

நாம் புகழும் ஊர், கடல்மேல் மிதந்த தோணிபுரம் முதலாகச் சிரபுரம் உள்ளிட்ட பன்னிரு பெயர்களைக்கொண்டதும், நல்ல பொன் போன்ற

சடையினை உடையான் எழுந்தருளியதுமான பொலிவுடைய கழுமலமாகும்.

சீர்காழி

தண்ணந் தராய்புகலி தாமரையா னூர்சண்பை
தலைமு னாண்ட
வண்ண னகர்கொச்சை வயந்தண் புறவஞ்சீர்
அணியார் காழி
விண்ணியல்சீர் வெங்குருநல் வேணுபுரந் தோணிபுர
மேலா லேந்து
கண்ணுதலான் மேவியநற் கழுமலநாங் கைதொழுது
கருது மூரே. **#759**

நாம் கைதொழுது கருதும் ஊர், தண்மையான பூந்தராய் முதலாகத் தோணிபுரம் உள்ளிட்ட பன்னிரு திருப் பெயர்களை உடைய இருகண்களுக்கு மேல் நெற்றியில் நிமிர்ந்துள்ள கண்ணை உடையோனாகிய சிவபிரான் மேவிய கழுமலமாகும்.

சீர்காழி

சீரார் சிரபுரமுங் கொச்சைவயஞ் சண்பையொடு
புறவ நல்ல
ஆராத் தராய்பிரம னூர்புகலி வெங்குருவொ
டந்தண் காழி
ஏரார் கழுமலமும் வேணுபுரந் தோணிபுர
மென்றென் றுள்கிப்
பேரா னெடியவனு நான்முகனுங் காண்பரிய
பெருமா னூரே. **#760**

சீர் பொருந்திய சிரபுரம் முதலாகத் தோணிபுரம் நிறைவாய்ப் பன்னிரு திருப்பெயர்களை நினைந்து இவ்வூரைப் பிரியாதவனாய், திருமாலும் பிரமனும் வழிபட்டும் காண் பரிய பெருமானாய் உள்ள சிவபிரானது ஊர் கழுமலம்.

சீர்காழி

புறவஞ் சிரபுரமுந் தோணிபுரஞ் சண்பைமிகு
புகலி காழி
நறவ மிகுசோலைக் கொச்சை வயந்தராய்
நான்முகன் றனூர்
விறலாய வெங்குருவும் வேணுபுரம் விசயன்
மேலம் பெய்து

திறலா லரக்கனைச் செற்றான்றன் கழுமலநாஞ்
சேரு மூரே. #761
நாம் சேர்வதற்குரிய ஊர் புறவம் முதலாக வேணுபுரம் உள்ளிட்ட பன்னிரு திருப்பெயர்களைக் கொண்டது. அது அருச்சுனனோடு விற்போர் செய்தவனும் இராவணனை அடர்த்தவனும் ஆகிய சிவபிரானது கழுமலமாகும்.

சீர்காழி

சண்பை பிரமபுரந் தண்புகலி வெங்குருநற்
காழி சாயாப்
பண்பார் சிரபுரமுங் கொச்சை வயந்தராய்
புறவம் பார்மேல்
நண்பார் கழுமலஞ்சீர் வேணுபுரந் தோணிபுர
நாணி லாத
வெண்பற் சமணரொடு சாக்கியரை வியப்பழித்த
விமல னூரே. #762
நாணமற்ற வெண்பற்களைக்கொண்ட சமணர்கள், சாக்கியர்கள் ஆகியோரின் பெருமைகளை அழித்த விமலனது ஊர், சண்பை முதலாகத் தோணிபுரம் ஈறாகப் பன்னிரு பெயர்களைக்

சீர்காழி

செழுமலிய பூங்காழி புறவஞ் சிரபுரஞ்சீர்ப்
புகலி செய்ய
கொழுமலரா னன்னகரந் தோணிபுரங் கொச்சைவயஞ்
சண்பை யாய
விழுமியசீர் வெங்குருவொ டோங்குதராய் வேணுபுர
மிகுநன் மாடக்
கழுமலமென் றின்னபெயர்பன்னிரண்டுங் கண்ணுதலான்
கருது மூரே. #763
செழுமையான அழகிய காழி முதலாக வேணுபுரம் ஈறாகப் பன்னிருபெயர்களைக் கொண்டது கண்ணுதலான் கருதும் ஊராகும்.

சீர்காழி

கொச்சை வயம்பிரம னூர்புகலி வெங்குருப்
புறவங் காழி
நிச்சல் விழவோவா நீடார் சிரபுரநீள்
சண்பை மூதூர்
நச்சினிய பூந்தராய் வேணுபுரந் தோணிபுர

மாகி நம்மேல்
அச்சங்கள் தீர்த்தருளு மம்மான் கழுமலநாம்
அமரு மூரே. **#764**

நாம் விரும்பும் ஊர், கொச்சைவயம் முதலாகத் தோணிபுரம் உள்ளிட்ட பன்னிரு பெயர்களைக்கொண்டதும் நம்மேல் வரும் அச்சங்கள் தீர்த்தருளும் அம்மான் எழுந்தருளியிருப்பதுமான கழுமலமாகும்.

<u>சீர்காழி</u>

காவி மலர்புரையுங் கண்ணார் கழுமலத்தின்
பெயரை நாளும்
பாவியசீர்ப் பன்னிரண்டு நன்னூலாப் பத்திமையாற்
பனுவன் மாலை
நாவி னலம்புகழ்சீர் நான்மறையான் ஞானசம்
பந்தன் சொன்ன
மேவியிசை மொழிவார் விண்ணவரி லெண்ணுதலை
விருப்பு ளாரே. **#765**

குவளை மலர் போலும் கண்களை உடைய மகளிர் வாழும் கழுமலத்தின் பெயர்களை நாள்தோறும் புகழ்மிக்க பன்னிரு நூல்கள் போல நாவினால் நலம் புகழ்ந்து ஞானசம்பந்தன் பாடிய இப்பனுவல்மாலையை இசையோடு மொழிபவர் விண்ணவர்களில் ஒருவராக எண்ணப்பெறும் மேலான விருப்புடையவர் ஆவர்.

திருக்குறும்பலா

திருக்குற்றாலம்

திருக்குறும்பலா,
பண் - காந்தாரம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. இதுவே திருக்குற்றாலம். ,
சுவாமிபெயர் : குறும்பலாநாதர்.
தேவியார் : குழன்மொழியம்மை.

திருந்த மதிசூடித் தெண்ணீர் சடைக்கரந்து
தேவிபாகம்
பொருந்திப் பொருந்தாத வேடத்தாற் காடுறைதல்
புரிந்தசெல்வர்
இருந்த விடம்வினவி லேலங்கமழ் சோலையின
வண்டியாழ்செய்
குருந்த மணநாறுங் குன்றிடஞ்சூழ் தண்சாரற்
குறும்பலாவே. **#766**

பிறைமதியை அழகுறப் புனைந்து, கங்கையைச் சடையில் கரந்து உமாதேவியை இடப்பாகமாக கொண்டு, பொருந்தாத வேடத்தோடு இடுகாட்டில் உறைதலை விரும்பிய செல்வர் எழுந்தருளியுள்ள இடம் யாதென வினவில், ஏல மணம் கமழ்வதும், சோலைகளில் வண்டுகள் யாழிசை போல ஒலிக்கக் குருந்தமரம் மணம் வீசும், குன்றுகள் அருகே சூழ்ந்துள்ளதுமான குளிர்ந்த சாரலை உடைய குறும்பலாவாகும்.

திருக்குற்றாலம்

நாட்பலவுஞ் சேர்மதியஞ் சூடிப் பொடியணிந்த
நம்பானம்மை
ஆட்பலவுந் தானுடைய வம்மா னிடம்போலும்
அந்தண்சாரல்
கீட்பலவுங் கீண்டுகிளை கிளையன் மந்திபாய்ந்
துண்டுவிண்ட
கோட்பலவின் றீங்கனியை மாக்கடுவ னுண்டுகளுங்
குறும்பலாவே. **#767**

பதினாறுகலைகளும் வளர்தற்குரிய பிறைமதியை முடியில் சூடித் திருநீற்றுப் பொடியணிந்த நம்மேல் விருப்புடைய இறைவன், நம்பால் வந்து நம்மை அடிமையாகக் கொண்டருளும் அம்மான். அவனது இடம், அழகிய குளிர்ந்த மலைச் சாரலில் கீளத்தக்க பலவின் கனிகளை மந்திகள் கீறித்தம் கிளைகள் பலவற்றோடு உண்டு வீழ்த்திய சுவையான

பலவின் இனிய சுளைகளை ஆண்குரங்குகள் உண்டு மகிழும் குறும்பலாவாகும்.

திருக்குற்றாலம்

வாடற் றலைமாலை சூடிப் புலித்தோல்
வலித்துவீக்கி
ஆடலரவசைத்த வம்மா னிடம்போலும்
அந்தண்சாரல்
பாடற் பெடைவண்டு போதலர்த்தத் தாதவிழ்ந்து
பசும்பொனுந்திக்
கோடன் மணங்கமழுங் குன்றிடஞ்சூழ் தண்சாரற்
குறும்பலாவே. **#768**

ஊன் வாடிய தலைமாலையைச் சூடிப் புலித்தோலை உடுத்து ஆடும் பாம்பை அறையில் கட்டிய அம்மானது இடம், அழகிய குளிர்ந்த சாரலில் பாடும் பெண்வண்டுகள் அரும்புகளைப் போதாக அலர்த்த மகரந்தப் பொடிகள் பசும்பொன் போல உதிரக் காந்தள் மலர்ந்து மணம் பரப்பும் குன்றுகள் சூழ்ந்த குறும்பலாவாகும்.

திருக்குற்றாலம்

பால்வெண் மதிசூடிப் பாகத்தோர் பெண்கலந்து
பாடியாடிக்
கால னுடல்கிழியக் காய்ந்தா ரிடம்போலுங்
கல்சூழ்வெற்பில்
நீல மலர்க்குவளை கண்டிறக்க வண்டரற்றும்
நெடுந்தண்சாரல்
கோல மடமஞ்ஞை பேடையொ டாட்டயருங்
குறும்பலாவே. **#769**

பால் போன்ற வெண்மையான மதியை முடியிற் சூடி, ஒருபாகத்தே உமையம்மையைக் கூடிநின்று ஆடிப்பாடி, மார்க்கண்டேயர் பொருட்டுக்காலனின் உடல் கிழியும் படி அவனைச் சினந்த பெருமானது இடம், கற்கள் சூழ்ந்த வெற்பிலுள்ள சுனைகளில் கருங்குவளைகள் கண் போல மலரவும், வண்டுகள் இசைபாடவும் நெடிய குளிர்ந்த சாரலில் அழகிய மயில்கள் பெண் மயில்களோடு ஆடி மகிழும் குறும்பலாவாகும்.

திருக்குற்றாலம்

தலைவாண் மதியங் கதிர்விரியத் தண்புனலைத்
தாங்கித்தேவி
முலைபாகங் காதலித்த மூர்த்தி யிடம்போலும்

முதுவேய்சூழ்ந்த
மலைவா யசும்பு பசும்பொன் கொழித்திழியும்
மல்குசாரல்
குலைவாழைத் தீங்கனியு மாங்கனியுந் தேன்பிலிற்றுங்
குறும்பலாவே. #770
தலையில் ஒளிவிரியும் வெண்மையான பிறையையும் கங்கையையும் தாங்கி, உமாதேவியைக் காதலித்து ஒரு பாகமாகக் கொண்டுள்ள சிவமூர்த்தியின் இடம், முதிய மூங்கில் சூழ்ந்துள்ள மலையிடத்து நீர்க் கசிவுகள் பேரருவியாகப் பொன் கொழித்து ஒழுகுவதும் பொருந்திய சாரலகத்தே வாழைக்குலையும் மாங்கனிகளும் தேன் பிலிற்றுவதுமான குறும்பலா என்னும் கோயிலாகும்.

திருக்குற்றாலம்

நீற்றே துதைந்திலங்கு வெண்ணூலர் தண்மதியர்
நெற்றிக்கண்ணர்
கூற்றேர் சிதையக் கடிந்தா ரிடம்போலுங்
குளிர்சூழ் வெற்பில்
ஏற்றேன மேன மிவையோ டவைவிரவி
யிழிபூஞ்சாரற்
கோற்றே னிசைமுரலக் கேளாக் குயில்பயிலுங்
குறும்பலாவே. #771
திருநீற்றைப் பொருந்தி விளங்கும் முப்புரிநூலை அணிந்தவரும் தண்மதியரும் நெற்றிக்கண்ணரும் காலனைக் கடிந்த வரும் ஆகிய சிவபிரானது இடம், குளிர்ந்த மலையின்கண் ஆண்பன்றி, பெண்பன்றியோடு கலந்து கீழிறங்கும் சாரலின்கண் கொம்புத் தேன் சேகரிக்கும் வண்டுகள் இசைபாட அதனைக் கேட்டுக் குயில் கூவும் குறும்பலாவாகும்.

திருக்குற்றாலம்

பொன்றொத்த கொன்றையும் பிள்ளை மதியும்
புனலுஞ்சூடிப்
பின்றொத்த வார்சடையெம் பெம்மா னிடம்போலும்
பிலயந்தாங்கி
மன்றத்து மண்முழவ மோங்கி மணிகொழித்து
வயிரமுந்திக்
குன்றத் தருவி யயலே புனறதும்புங்
குறும்பலாவே. #772
பொன் போன்ற கொன்றை மலர்க் கொத்துக்களையும் இளமதியையும்

கங்கையையும் சூடி, பின்னே கொத்தாக அமைந்த நீண்ட சடையை உடைய எம்பெருமானது இடம், பிரளய வெள்ளம் போலப் பெருகி மன்றத்தே அடிக்கப்படும் முழவம் போல ஒலித்து, மணி, வயிரம் முதலியவற்றுடன் சொரியும் அருவியின் புனல்ததும்பும் குறும்பலாவாகும்.

திருக்குற்றாலம்

ஏந்து திணிதிண்டோ ளிராவணனை மால்வரைக்கீழ்
அடரவூன்றிச்
சாந்தமென நீறணிந்த சைவ ரிடம்போலுஞ்
சாரற்சாரல்
பூந்தணறு வேங்கைக் கொத்திறுத்து மத்தகத்திற்
பொலியவேந்திக்
கூந்தற் பிடியுங் களிறு முடன்வணங்குங்
குறும்பலாவே. **#773**

உயர்ந்த திண்ணிய தோள்களை உடைய இராவணனைக் கயிலைமலையின் கீழ் அடர்த்தவரும், சாந்த மெனத் திருநீற்றை விரவப்பூசியவருமாகிய சைவரது இடம், மழைச் சாரலை உடைய மலைச்சாரலில் வேங்கைப்பூங்கொத்துக்களை ஒடித்து மத்தகத்தே அழகுற ஏந்திப் பெண் யானையோடு ஆண் யானைகள் சேர்ந்து வணங்கும் குறும்பலாவாகும்.

திருக்குற்றாலம்

அரவி னணையானு நான்முகனுங் காண்பரிய
அண்ணல்சென்னி
விரவி மதியணிந்த விகிர்தர்க் கிடம்போலும்
விரிபூஞ்சாரல்
மரவ மிருகரையு மல்லிகையுஞ் சண்பகமு
மலர்ந்துமாந்தக்
குரவ முறுவல்செய்யுங் குன்றிடஞ்சூழ் தண்சாரற்
குறும்பலாவே. **#774**

பாம்பணையானாகிய திருமாலும், நான்முகனும் காணுதற்கு அரியவராக விளங்கிய தலைவரும், முடியில் பொருந்த இளம் பிறையைச் சூடியவரும் ஆகிய விகிர்தருக்கு உரிய இடம். விரிந்த பூக்களை உடைய மலைச்சாரலில் மரவம், மல்லிகை, சண்பகம் ஆகியன மலர்ந்து நிற்க அவற்றின் தேனை உண்ணக் குரவமலர்ப் பாவை முறுவல் செய்வது போல மலரும் குன்றினை அடுத்துள்ள குறும்பலாவாகும்.

திருக்குற்றாலம்

மூடிய சீவரத்தர் முன்கூறுண் டேறுதலும்
பின்கூறுண்டு
காடி தொடுசமணைக் காய்ந்தா ரிடம்போலுங்
கல்சூழ்வெற்பில்
நீடுயர் வேய்குனியப் பாய்கடுவ னீள்கழைமேல்
நிருத்தஞ்செய்யக்
கூடிய வேடுவர்கள் குய்விளியாக் கைமறிக்குங்
குறும்பலாவே. **#775**

உடலைமூடிய சீவரம் என்னும் ஆடையை அணிந்தவர்களும் முன்னால் அறுசுவை உணவுண்டு பின்னால் காடியைக் கூறாக்கி உண்போரும் ஆகிய சமணர்களை வெறுத்த சைவராகிய சிவபிரானது இடம் கற்கள் நிறைந்த மலையகத்தே நீண்ட மூங்கில்கள் வளைந்து நிற்க, அவற்றில் குரங்குகள் நின்றுஆட, வேடர்கள் குய் என்று ஒலிக்குறிப்போடு கூவிக் கை குவிக்கும் குறும்பலாவாகும்.

திருக்குற்றாலம்

கொம்பார் பூஞ்சோலைக் குறும்பலா மேவிய
கொல்லேற்றண்ணல்
நம்பா னடிபரவு நான்மறையான் ஞானசம்
பந்தன்சொன்ன
இன்பாய பாட லிவைபத்தும் வல்லார்
விரும்பிக்கேட்பார்
தம்பால தீவினைகள் போயகல நல்வினைகள்
தளராவன்றே. **#776**

பூங்கொம்புகளைக் கொண்ட மலர்ச் சோலைகளைக் கொண்ட குறும்பலாவில் மேவிய கொல்லேற்றுத் தலைவனும், நம்மால் விரும்பப்படுபவனுமாகிய சிவபெருமானின் திருவடிகளைப் பரவும் நான்மறைவல்ல ஞானசம்பந்தன் அருளிய இன்பம் தரும் இப்பதிகப் பாடல்களை ஓதவல்லவரும் விரும்பிக்கேட்பவரும் தம்பால் உள்ள தீவினைகள் நீங்கப் பெற்று நல்வினைப் பயன்களைத் தளராது பெறுவர்.

திருநணா

திருநணா

திருநணா,
பண் - காந்தாரம்,
இத்தலம் கொங்குநாட்டிலுள்ளது. இது பவானி நதி காவிரியுடன் சேருமிடமாதலால், பவானிகூடலெனப் பெயர் வழங்கப்படுகின்றது. ,
சுவாமிபெயர் : சங்கமுகநாதேசுவரர்.
தேவியார் : வேதமங்கையம்மை.

பந்தார் விரன்மடவாள் பாகமா நாகம்பூண்
டேறதேறி
அந்தா ரரவணிந்த வம்மா னிடம்போலும்
அந்தண் சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில்
வண்டுபாடச்
செந்தேன் றெளியொளிரத் தேமாங் கனியுதிர்க்குந்
திருநணாவே. #777

பந்தாடும் விரலைஉடைய உமையம்மை ஒரு பாகமாக விளங்க, பாம்பை அணிகலனாகப் பூண்டு, எருதேறி, அழகிய மாலையாக அரவத்தைப் பூண்டுள்ள சிவபிரானது இடம், அழகிய குளிர்ந்த மலைச்சாரலின் அருகே மந்திகள் நடனமாடவும் பூம்பொழிலில் வண்டுகள் பாடவும் செந்தேனின் தெளவில் தோய்ந்த மாங்கனிகள் உதிரும் வளமுடைய திருநணாவாகும்.

திருநணா

நாட்டம் பொலிந்திலங்கு நெற்றியினான் மற்றொருகை
வீணையேந்தி
ஈட்டுந் துயரறுக்கு மெம்மா னிடம்போலும்
இலைசூழ்கானில்
ஓட்டந் தருமருவி வீழும் விசைகாட்ட
முந்தூழோசைச்
சேட்டார் மணிக ளணியுந் திரைசேர்க்குந்
திருநணாவே. #778

அழகியதொரு கண் பொலிந்து விளங்கும் நெற்றியினரும், ஒருகையில் வீணை ஏந்தியவரும், பழவினைத் தொகுப்பினைத் தீர்த்தருள்பவரும் ஆகிய எம் இறைவனது இடம், இலைகள் அடர்ந்த காட்டில் மலை அருவி இசைகாட்ட, மூங்கில்கள் உராய்ந்து ஓசை எடுப்ப உயர்ந்த

மணிகளைவாரி அலைகள் கரைகளில் சேர்க்கும் திருநணாவாகும்.

திருநணா

நன்றாங் கிசைமொழிந்து நன்னுதலாள் பாகமாய்
ஞாலமேத்த
மின்றாங்கு செஞ்சடையெம் விகிர்தர்க் கிடம்போலும்
விரைசூழ் வெற்பில்
குன்றோங்கி வன்றிரைகண் மோத மயிலாலுஞ்
சாரற்செவ்வி
சென்றோங்கி வானவர்க ளேத்தி யடிபணியுந்
திருநணாவே. **#779**

திருத்தமான இசையுடன் வேதங்களை அருளி, உமையொரு பாகராய் மின்னல் போன்ற செஞ்சடையினராய் விளங்கும் சிவபிரான் உலகம் ஏத்த விளங்கும் இடம், மணம் கமழும் மலை யகத்தே குன்றுகள் போல அருவியின் திரைகள் எழுந்து மோத மயில்கள் ஆட வானவர்கள் சாரலை அடைந்து ஏத்தி வணங்கும் சிறப்பினதாகிய திருநணாவாகும்.

திருநணா

கையின் மழுவேந்திக் காலிற் சிலம்பணிந்து
கரித்தோல்கொண்டு
மெய்யின் முழுதணிந்த விகிர்தர்க்கிடம்போலு
மிடைந்துவானோர்
ஐய வரனே பெருமா னருளென்றென்
றாதரிக்கச்
செய்ய கமலம் பொழிதே னளித்தியலுந்
திருநணாவே. **#780**

கையின் மழுவை ஏந்தி, காலில் சிலம்பை அணிந்து, யானையின் தோலைப் போர்த்து விளங்கும் விகிர்தனுக்குரிய இடம், தேவர்கள் கூடிநின்று ‘ஐயனே! அரனே! பெருமானே! அருள்புரிக, என்று விரும்பிப் போற்றுவதும், செந்தாமரை மலர்கள் தேனைத் தருவதுமாகிய திருநணாவாகும்.

திருநணா

முத்தேர் நகையா ளிடமாகத் தம்மார்பில்
வெண்ணூல்பூண்டு
தொத்தேர் மலர்சடையில் வைத்தா ரிடம்போலுஞ்
சோலைசூழ்ந்த
அத்தே னளியுண் களியா லிசைமுரல

ஆலத்தும்பி
தெத்தே யெனமுரலக் கேட்டார் வினைகெடுக்குந்
திருநணாவே. **#781**
முத்துப் போன்ற பற்களை உடைய உமையம்மை ஒருபாகமாக விளங்கத் தம் மார்பில் வெண்ணூல் பூண்டு பூங்கொத்துக்களைச் சடைமிசைச்சூடியுள்ள சிவபிரானது இடம், சோலைகளில் சூழ்ந்த வண்டுகள் தேனுண்ணும் விருப்பினால் இசைபாடி ஆட, தும்பிகள் 'தெத்தே' என்ற ஒலிக்குறிப்போடு முரலல் விளங்கும் அழகுடையதும் பெயர் சொல்லக் கேட்டார் வினைகளைக் கெடுப்பதும் ஆகிய திருநணாவாகும்.

<u>திருநணா</u>

வில்லார் வரையாக மாநாக நாணாக
வேடங்கொண்டு
புல்லார் புரமூன் றெரித்தார்க் கிடம்போலும்
புலியுமானும்
அல்லாத சாதிகளு மங்கழன்மேற் கைகூப்ப
அடியார்கூடிச்
செல்லா வருநெறிக்கே செல்ல வருள்புரியுந்
திருநணாவே. **#782**
மேருமலை வில்லாகப் பொருந்த, வாசுகி என்னும் பெரிய பாம்பு நாணாக அமைய, தான் பெருவீரனாக வேடம்புனைந்து அவுணர்தம் முப்புரங்களையும் எரித்தவனது இடம், புலி மான் இவையும் அல்லாத பிறவிலங்கினங்கள் யாவும் திருவடிகளைக் கைகூப்பி வணங்க, அடியவர்கூடி வழிபடுவதும், யாரும் செல்ல இயலாத வீட்டு நெறிக்குச் செல்ல இறைவன் அருள் புரிவதும் ஆகிய திருநணாவாகும்.

<u>திருநணா</u>

கானார் களிற்றுரிவை மேன்மூடி யாடரவொன்
றரைமேற்சாத்தி
ஊனார் தலையோட்டி லூணுகந்தான் றானுகந்த
கோயிலெங்கும்
நானா விதத்தால் விரதிகணன் னாமமே
யேத்திவாழ்த்தத்
தேனார் மலர்கொண்டடியா ரடிவணங்குந்
திருநணாவே. **#783**
காட்டில் வாழும் யானையின் தோலால் உடலை மூடி, ஆடும்பாம்பினை அரைமேல் கட்டி, ஊன் பொருந்திய தலையோட்டில் பலி ஏற்று

உகப்பவராகிய சிவபிரான் உவப்புடன் மேவும் கோயில் தவவிரதிகள் எங்கும் பல்வேறு வகைகளில் திருப்பெயர் களைச் சொல்லி வாழ்த்த அடியவர் தேன்சிறந்த மலர்களைக் கொண்டு மகிழ்ந்து அடி வணங்குவதாகிய திருநணாவாகும்.

திருநணா

மன்னீரிலங்கையர்தங் கோமான் வலிதொலைய
விரலாலூன்றி
முந்நீர்க் கடனஞ்சை யுண்டார்க் கிடம்போலு
முனைசேர்சீயம்
அன்னீர் மைகுன்றி யழலால் விழிகுறைய
வழியுமுன்றிற்
செந்நீர் பரப்பச் சிறந்து கரியொளிக்குந்
திருநணாவே. **#784**

பெருகிய கடல் நீரால் சூழப்பட்ட இலங்கை மன்னன் இராவணனின் வலிமை அழியுமாறு கால் விரலை ஊன்றி அடர்த்தவரும், கடலிடையே தோன்றிய நஞ்சினை உண்டவருமாகிய சிவபெருமானுக்குரிய இடம், மலைக் குகையில் வாழும் சிங்கம் தன் தன்மைக்குன்றி அழல் பொழியும் தன் விழி குறைய அதனோடு போரிட்டு முன்றிலில் படிந்த அதனது குருதியைக் கண்டு தன் வலிமையில் பெருமை பெற்ற யானை சென்று மறையும் திருநணாவாகும்.

திருநணா

மையார் மணிமிடறன் மங்கையோர் பங்குடையான்
மனைகடோறும்
கையார் பலியேற்ற கள்வ னிடம்போலுங்
கழல்கணேடிப்
பொய்யா மறையானும் பூமிய ளந்தானும்
போற்றமன்னிச்
செய்யா ரெரியா முருவ முறவணங்குந்
திருநணாவே. **#785**

கரிய நீலமணிபோன்ற மிடற்றினனும், உமைபாகனும் வீடுகள் தோறும் பலியேற்றுப் பலியிடுவார் உள்ளங்களைக் கவரும் கள்வனும் ஆகிய சிவபெருமானது இடம் திருமுடி திருவடிகளைத் தேடி வேதங்களை ஓதும் நான்முகனும் நிலம் அளந்த திருமாலும் போற்ற நிலைபேறுடைய செந்தீயுருவாய் உருவம் பெற அவர்கள் இருவரும் அப்பெருமானது அடிமுடி காணல் ஆற்றாது வந்து வழிபடும் திருநணாவாகும்.

திருநணா

ஆடை யொழித்தங் கமணே திரிந்துண்பார்
அல்லல்பேசி
மூடுருவ முகந்தா ருரை யகற்று
மூர்த்திகோயில்
ஓடு நதிசேரு நித்திலமு மொய்த்தகிலுங்
கரையிற்சாரச்
சேடர் சிறந்தேத்தத் தோன்றி யொளிபெருகுந்
திருநணாவே. **#786**

ஆடையின்றி அம்மணமாகத் திரிந்து இரந்து உண்பவரும் துன்பமான செய்திகளைப் பேசி உடலைப் போர்த்தித் திரிபவரும் ஆகிய அமணர், பத்தர்களின் உரைகளைச் செவி மடுக்காத சிவமூர்த்தியின் கோயில், பெருகி ஓடும் நதி, முத்து, அகில் முதலியவற்றைக் கரையில் சேர்ப்பதும், பெரியோர் சிறப்புடன் வந்து வழிபடுவதும், கட்புலனாய் ஒளிபெருகி விளங்குவதுமாகிய திருநணாவாகும்.

திருநணா

கல்வித் தகத்தாற் றிரைசூழ் கடற்காழிக்
கவுணிசீரார்
நல்வித் தகத்தா லினிதுணரு ஞானசம்
பந்தனெண்ணும்
சொல்வித் தகத்தா லிறைவன் றிருநணா
வேத்துபாடல்
வல்வித் தகத்தான் மொழிவார் பழியிலரிம்
மண்ணின்மேலே. **#787**

கரையை அகழும் வித்தகத்தோடு அலைகள் சூழும் கடலை அடுத்துள்ள காழிப்பதியில் கவுணியர் குலத்தில் தோன்றி நல்ல ஞானத்தால் எல்லாவற்றையும் இனிதுணரும் ஞானசம்பந்தன் கருதிச் சொல் வித்தகத்துடன் இறைவனது திருநணாவை ஏத்திய இப்பதிகப்பாடல்களை மேம்பட்ட இசைத் திறமையால் பாடிப் போற்றுவார் இவ்வுலகில் பழியிலராவர்.

திருப்பிரமபுரம்

சீர்காழி

திருப்பிரமபுரம்,
பண் - காந்தாரம், திருப்பிரமபுர மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

விளங்கியசீர்ப் பிரமனூர் வேணுபுரம்
புகலிவெங் குருமேற்சோலை
வளங்கவருந் தோணிபுரம் பூந்தராய்
சிரபுரம்வண் புறவமண்மேல்
களங்கமிலூர் சண்பைகமழ் காழிவயங்
கொச்சைகழு மலமென்றின்ன
விளங்குமரன் றன்னைப்பெற் றிமையவர்தம்
பகையெறிவித் திறைவனூரே. **#788**

இத்திருப்பதிகம் சீகாழியின் பன்னிருதிருப் பெயர்களை மாறிமாறிவரப் பாடியருளியது. இளங்குமரனாகிய முருகக்கடவுளைப் பெற்றுத் தேவர்களின் பகைவர்களாகிய சூரபன்மன் முதலானோரை அழியச் செய்தருளிய சிவபிரானது ஊர், விளங்கிய புகழை உடைய பிரமனூர் வேணுபுரம் முதலான பன்னிரு பெயர்களை உடைய சீகாழிப் பதியாகும்.

சீர்காழி

திருவளருங் கழுமலமே கொச்சை
தேவேந்திரனூர் அயனூர்தெய்வத்
தருவளரும் பொழிற்புறவஞ் சிலம்பனூர்
காழிதகு சண்பையொண்பா
வுருவளர்வெங் குருப்புகலி யோங்குதராய்
தோணிபுர முயர்ந்ததேவர்
வெருவவளர் கடல்விடம துண்டணிகொள்
கண்டத்தோன் விரும்புமூரே. **#789**

பாற்கடலைக் கடையும்காலத்து உயர்ந்த தேவர்கள் அஞ்சப் பெருகி எழுந்த நஞ்சினை உண்டு அழகிய கண்டத்தோனாகிய சிவபிரான் விரும்பும் ஊர், திருமகள் வளரும் கழுமலம் முதலான பன்னிருபெயர்களைப் பெற்ற சீகாழிப்பதியாகும்.

சீர்காழி

வாய்ந்தபுகழ் மறைவளருந் தோணிபுரம்
பூந்தராய் சிலம்பன்வாழூர்
ஏய்ந்தபுற வந்திகழுஞ் சண்பையெழிற்
காழியிறை கொச்சையம்பொன்
வேய்ந்தமதிற் கழுமலம்விண் ணோர்பணிய
மிக்கயனூர் அமரர்கோனூர்
ஆய்ந்தகலை யார்புகலி வெங்குருவ
தரனாளும் அமருமூரே. **#790**

சிவபிரான் நாள்தோறும் எழுந்தருளிய ஊர், புகழ் பெற்றதும் வேதங்கள் வளர்வதுமான தோணிபுரம் முதலான பன்னிரு திருப்பெயர்களைப் பெற்ற சீகாழிப் பதியாகும்.

<u>சீர்காழி</u>

மாமலையாள் கணவன்மகிழ் வெங்குருமாப்
புகலிதராய் தோணிபுரம்வான்
சேமமதில் புடைதிகழுங் கழுமலமே
கொச்சைதேவேந் திரனூர்சீர்ப்
பூமகனூர் பொலிவுடைய புறவம்விறற்
சிலம்பனூர் காழிசண்பை
பாமருவு கலையெட்டெட் டுணர்ந்தவற்றின்
பயன்நுகர்வோர் பரவுமூரே. **#791**

பாக்களில் பொருந்திய அறுபத்து நான்கு கலைகளையும் உணர்ந்து அவற்றின் பயனை நுகரும் அறிஞர்கள் போற்றும் ஊர், மலையான் மகளாகிய பார்வதி தேவியாரின் கணவராகிய பெருமானார் விரும்பும் வெங்குரு முதலான பன்னிரு பெயர்களைப் பெற்ற சீகாழிப் பதியாகும்.

<u>சீர்காழி</u>

தரைத்தேவர் பணிசண்பை தமிழ்க்காழி
வயங்கொச்சை தயங்குபூமேல்
விரைச்சேருங் கழுமலமெய் யுணர்ந்தயனூர்
விண்ணவர்தங் கோனூர்வென்றித்
திரைச்சேரும் புனற்புகலி வெங்குருச்
செல்வம்பெருகு தோணிபுரஞ்சீர்
உரைச்சேர்பூந் தராய்சிலம்ப னூர்புறவ
முலகத்தி லுயர்ந்தவூரே. **#792**

உலகின்கண் உயர்ந்தஊர், தரைத்தேவராகிய அந்தணர் பணியும் சண்பை முதலான பன்னிருபெயர்களைப் பெற்ற சீகாழிப்பதியாகும்.

சீர்காழி

புண்டரிகத் தார்வயல்சூழ் புறவமிகு
சிரபுரம்பூங் காழிசண்பை
எண்டிசையோ ரிறைஞ்சியவெங் குருப்புகலி
பூந்தராய் தோணிபுரஞ்சீர்
வண்டமரும் பொழின்மல்கு கழுமலநற்
கொச்சைவா னவர்தங்கோனூர்
அண்டயனூ ரிவையென்ப ரருங்கூற்றை
யுதைத்துகந்த வப்பனூரே. **#793**

வெல்லுதற்கு அரிய கூற்றுவனை உதைத்து உகந்த சிவபெருமானது ஊர், தாமரை மலர்களால் நிறைந்த வயல்கள் சூழ்ந்த புறவம் முதலான பன்னிரு திருப்பெயர்கள் பெற்ற சீகாழிப் பதியாகும்.

சீர்காழி

வண்மைவளர் வரத்தயனூர் வானவர்தங்
கோனூர்வண் புகலியிஞ்சி
வெண்மதிசேர் வெங்குருமிக் கோரிறைஞ்சு
சண்பைவியன் காழிகொச்சை
கண்மகிழுங் கழுமலங்கற் றோர்புகழுந்
தோணிபுரம் பூந்தராய்சீர்ப்
பண்மலியுஞ் சிரபுரம்பார் புகழ்புறவம்
பால்வண்ணன் பயிலுமூரே. **#794**

வெண்ணீறு பூசிப் பால் போன்ற நிறமுடையோனாகிய சிவபெருமான் எழுந்தருளிய ஊர், கொடைத்தன்மை நிரம்பியோர் வாழும் மேன்மையான பிரமபுரம் முதலான பன்னிரு திருப்பெயர்களைப் பெற்ற சீகாழிப் பதியாகும்.

சீர்காழி

மோடிபுறங் காக்குமூர் புறவஞ்சீர்ச்
சிலம்பனூர் காழிமூதூர்
நீடியலுஞ் சண்பைகழு மலங்கொச்சை
வேணுபுரங் கமலநீடு
கூடியவ னூர்வளர்வெங் குருப்புகலி
தராய்தோணி புரங்கூடப்போர்
தேடியுழ லவுணர்பயி றிரிபுரங்கள்
செற்றமலைச் சிலையனூரே. **#795**

போர் உடற்றத்தேடித் திரிந்த அவுணர்வாழும் திரிபுரங்களைச் செற்ற

சிவபிரானது ஊர், துர்க்கையால் காவல் செய்யப் பெறும் புறவம் முதலான பன்னிரு பெயர்களைப் பெற்ற சீகாழிப் பதியாகும்.

சீர்காழி

இரக்கமுடை யிறையவனூர் தோணிபுரம்
பூந்தராய் சிலம்பன்றன்னூர்
நிரக்கவரு புனற்புறவ நின்றதவத்
தயனூர்சீர்த் தேவர்கோனூர்
வரக்கரவாப் புகலிவெங் குருமாசி
லாச்சண்பை காழிகொச்சை
அரக்கன்விற லழித்தருளி கழுமலமந்
தணர்வேத மறாதவூரே. **#796**

அந்தணர்களால் ஓதப்பெறும் வேதம் இடையறவு படாத ஊர், கருணையே வடிவான சிவபிரானது தோணிபுரம் முதலான பன்னிரு பெயர்களைப் பெற்ற சீகாழிப் பதியாகும்.

சீர்காழி

மேலோதுங் கழுமலமெய்த் தவம்வளருங்
கொச்சையிந் திரனூர்மெய்மை
நூலோது மயன்றனூர் நுண்ணறிவார்
குருப்புகலி தராய்தூநீர்மேல்
சேலோடு தோணிபுரந் திகழ்புறவஞ்
சிலம்பனூர் செருச்செய்தன்று
மாலோடு மயனறியான் வண்காழி
சண்பைமண்ணோர் வாழ்த்துமூரே. **#797**

உலகினுள்ளோர் வாழ்த்தும் ஊர், மேலானதாக ஓதப் பெறும் கழுமலம் முதலான பன்னிரு பெயர்களைப் பெற்ற சீகாழிப் பதியாகும்.

சீர்காழி

ஆக்கமர்சீ ரூர்சண்பை காழியமர்
கொச்சைகழு மலமன்பானூர்
ஓக்கமுடைத் தோணிபுரம் பூந்தராய்
சிரபுரமொண் புறவநண்பார்
பூக்கமலத் தோன்மகிழூர் புரந்தரனூர்
புகலிவெங் குருவுமென்பர்
சாக்கியரோ டமண்கையர் தாமறியா
வகைநின்றான் றங்குமூரே. **#798**

சாக்கியர் சமணர்களால் அறியப் பெறாதவனாகிய சிவபிரான் தங்கும்

ஊர், ஆக்கம் மிக்க ஊராகிய சண்பை முதலான பன்னிரு பெயர்களைப் பெற்ற சீகாழிப் பதியாகும்.

சீர்காழி

அக்கரஞ்சேர் தருமனூர் புகலிதராய்
தோணிபுர மணிநீர்ப்பொய்கை
புக்கரஞ்சேர் புறவஞ்சீர்ச் சிலம்பனூர்
புகழ்க்காழி சண்பைதொல்லூர்
மிக்கரஞ்சீர்க் கழுமலமே கொச்சைவயம்
வேணுபுர மயனூர்மேலிச்
சக்கரஞ்சீர்த் தமிழ்விரகன் றான்சொன்ன
தமிழ்தரிப்போர் தவஞ்செய்தோரே. **#799**

புகழ்மிக்க தமிழ் விரகனாகிய ஞானசம்பந்தன் திருவருளில் திளைத்துச் சக்கரமாகச் சொன்ன இத்தமிழ் மாலையைப் போற்றி நாவில் தரிப்போர் தவஞ்செய்தோர் ஆவர்.

சீர்காழி

திருப்பிரமபுரம்,
பண் - காந்தாரம், திருப்பிரமபுர மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

பூமகனூர் புத்தேளுக் கிறைவனூர்
குறைவிலாப் புகலிபூமேன்
மாமகளூர் வெங்குருநற் றோணிபுரம்
பூந்தராய் வாய்ந்தவிஞ்சிச்
சேமமிகு சிரபுரஞ்சீர்ப் புறவநிறை
புகழ்ச்சண்பை காழிகொச்சை
காமனைமுன் காய்ந்தநுதற் கண்ணவனூர்
கழுமலநாங் கருதுமூரே. **#800**

நாம் கருதும் ஊர் பிரமபுரம் முதலான பன்னிரு பெயர்களையுடைய கழுமலமாகும்.

சீர்காழி

கருத்துடைய மறையவர்சேர் கழுமலமெய்த்
தோணிபுரங் கனகமாட
உருத்திகழ்வெங் குருப்புகலி யோங்குதரா
யுலகாருங் கொச்சைகாழி

திருத்திகழுஞ் சிரபுரந்தே வேந்திரனூர்
செங்கமலத் தயனூர்தெய்வத்
தருத்திகழும் பொழிற்புறவஞ் சண்பைசடை
முடியண்ணல் தங்குமூரே. #801
சடைமுடியை உடைய அண்ணலாகிய சிவபிரான் தங்கும் ஊர் நல்ல, எண்ணமுடைய மறையவர் வாழும் கழுமலம் முதலான பன்னிரு பெயர்களை உடைய காழிப்பதியாகும்.

சீர்காழி

ஊர்மதியைக் கதுவவுயர் மதிற்சண்பை
யொளிமருவு காழிகொச்சை
கார்மலியும் பொழில்புடைசூழ் கழுமலமெய்த்
தோணிபுரங் கற்றோரேத்துஞ்
சீர்மருவு பூந்தராய் சிரபுரமெய்ப்
புறவமய னூர்பூங்கற்பத்
தார்மருவு மிந்திரனூர் புகலிவெங்
குருக்கங்கை தரித்தோனூரே. #802
கங்கையைச் சடையில் தரித்த சிவபிரானது ஊர் விண்ணில் ஊர்ந்து செல்லும் மதியைத் தொடுமாறு உயர்ந்த மதில்களை உடைய சண்பை முதலிய பன்னிருபெயர்களைக் கொண்ட சீகாழிப் பதியாகும்.

சீர்காழி

தரித்தமறை யாளர்மிகு வெங்குருச்சீர்த்
தோணிபுரந் தரியாரிஞ்சி
எரித்தவன்சேர் கழுமலமே கொச்சைபூந்
தராய்புகலி யிமையோர்கோனூர்
தெரித்தபுகழ்ச் சிரபுரஞ்சீர் திகழ்காழி
சண்பைசெழு மறைகளெல்லாம்
விரித்தபுகழ்ப் புறவம்விரைக் கமலத்தோ
னூருலகில் விளங்குமூரே. #803
உலகில் விளங்கும் ஊர், வேதங்களை நாவில் தரித்த அந்தணர்கள் மிகுந்த வெங்குரு முதலிய பன்னிரு பெயர்களைக் கொண்ட சீகாழிப்பதியாகும்.

சீர்காழி

விளங்கயனூர் பூந்தராய் மிகுசண்பை
வேணுபுர மேகமேய்க்கும்
இளங்கமுகம் பொழிற்றோணி புரங்காழி

யெழிற்புகலி புறவமேரார்
வளங்கவரும் வயற்கொச்சை வெங்குருமாச்
சிரபுரம்வன் னஞ்சமுண்டு
களங்கமலி களத்தவன்சீர்க் கழுமலங்கா
மன்னுடலங் காய்ந்தோனூரே. **#804**
காமன் உடலைக் காய்ந்த சிவபிரானது ஊர், விளங்கும் பிரமபுரம் முதலிய பன்னிரு பெயர்களைக் கொண்ட சீகாழிப் பதியாகும்.

<u>சீர்காழி</u>

காய்ந்துவரு காலனையன் றுதைத்தவனூர்
கழுமலமாத் தோணிபுரஞ்சீர்
ஏய்ந்தவெங் குருப்புகலி யிந்திரனூ
ரிருங்கமலத் தயனூரின்பம்
வாய்ந்தபுற வந்திகழுஞ் சிரபுரம்பூந்
தராய்கொச்சை காழிசண்பை
சேந்தனைமுன் பயந்துலகிற் றேவர்கடம்
பகைகெடுத்தோன் றிகழூரே. **#805**
முருகப்பெருமானைப் பெற்றெடுத்து உலகில் தேவர்களின் பகைவனாகிய சூரபன்மனை அழித்தருளியவனும் சினந்துவந்த காலனை அன்று உதைத்தவனும் ஆகிய சிவபிரானது 130. ஊர், கழுமலம் முதலிய பன்னிரு பெயர்களைக் கொண்ட சீகாழிப் பதியாகும்.

<u>சீர்காழி</u>

திகழ்மாட மலிசண்பை பூந்தராய்
பிரமனூர் காழிதேசார்
மிகுதோணி புரந்திகழும் வேணுபுரம்
வயங்கொச்சை புறவம்விண்ணோர்
புகழ்புகலி கழுமலஞ்சீர்ச் சிரபுரம்வெங்
குருவெம்போர் மகிடற்செற்று
நிகழ்நீலி நின்மலன்றன் னடியிணைகள்
பணிந்துலகி னின்றவூரே. **#806**
கொடியபோரில் மகிடாசுரனைக் கொன்று விளங்கும் நீலியாகிய துர்க்கை சிவபிரான் அடியிணைகளைப் பணிந்து தனது கொலைப் பழியைப் போக்கிக் கொண்டு நின்ற ஊர், விளங்கும் மாடவீடுகளைக் கொண்ட சண்பை முதலிய பன்னிரு பெயர்களை உடைய சீகாழிப் பதியாகும்.

<u>சீர்காழி</u>

நின்றமதில் சூழ்தருவெங் குருத்தோணி
புரநிகழும் வேணுமன்றில்
ஒன்றுகழு மலங்கொச்சை யுயர்காழி
சண்பைவளர் புறவமோடி
சென்றுபுறங் காக்குமூர் சிரபுரம்பூந்
தராய்புகலி தேவர்கோனூர்
வென்றிமலி பிரமபுரம் பூதங்க
டாங்காக்க மிக்கவூரே. **#807**

பூதங்களால் தாங்கப் பெறும் ஆக்கம் மிக்க ஊர், நிலைத்துநின்ற மதில்களால் சூழப்பட்ட வெங்குரு முதலான பன்னிரு பெயர்களை உடைய சீகாழிப் பதியாகும்.

சீர்காழி

மிக்ககம லத்தயனூர் விளங்குபுற
வஞ்சண்பை காழிகொச்சை
தொக்கபொழிற் கழுமலந்தூத் தோணிபுரம்
பூந்தராய் சிலம்பன்சேரூர்
மைக்கொள்பொழில் வேணுபுர மதிற்புகலி
வெங்குருவல் லரக்கன் றிண்டோள்
ஒக்கவிரு பதுமுடிக ளொருபதுமீ
டழித்துகந்த வெம்மானூரே. **#808**

வலிய அரக்கனாகிய இராவணனின் திண்ணிய தோள்கள் இருபது, முடிகள் பத்து ஆகியவற்றின் பெருமையை அழித்த எம்தலைவனாகிய சிவபிரானது ஊர், அழகு மிக்க தாமரை மலர்மேல் உறையும் பிரமனது தலம் என்பது முதலான பன்னிரு பெயர்களைக் கொண்ட சீகாழிப்பதியாகும்.

சீர்காழி

எம்மான்சேர் வெங்குருச்சீர்ச் சிலம்பனூர்
கழுமலநற் புகலியென்றும்
பொய்ம்மாண்பி லோர்புறவங் கொச்சைபுரந்
தரனூர்நற் றோணிபுரம் போர்க்
கைம்மாவை யுரிசெய்தோன் காழியய
னூர்தராய் சண்பைகாரின்
மெய்ம்மால்பூ மகனுணரா வகைதழலாய்
விளங்கியவெம் மிறைவனூரே. **#809**

மேகம் போன்ற கரிய மேனியனாகிய திருமால், தாமரைமலர் மேல் உறையும் நான்முகன் ஆகியோர் உணராத வகையில் தழல் உருவாய்

நின்ற இறைவனது ஊர், எம் தலைவனாகிய சிவபிரான் எழுந்தருளிய வெங்குருமுதலான பன்னிரு பெயர்களை உடைய சீகாழிப் பதியாகும்.

சீர்காழி

இறைவனமர் சண்பையெழிற் புறவமய
னூரிமையோர்க் கதிபன்சேரூர்
குறைவில்புகழ்ப் புகலிவெங் குருத்தோணி
புரங்குணமார் பூந்தராய்நீர்ச்
சிறைமலிநற் சிரபுரஞ்சீர்க் காழிவளர்
கொச்சைகழு மலந்தேசின்றிப்
பறிதலையோ டமண்கையர் சாக்கியர்கள்
பரிசறியா வம்மானூரே. **#810**

ஒளியின்றி மயிரைப் பறித்தெடுத்த முண்டிதராய அமண் கீழோர் சாக்கியர் ஆகியோரால் அறியமுடியாத தலைவராகிய சிவபெருமானது ஊர், இறைவனமர் சண்பை முதலான பன்னிரு பெயர்களை உடைய சீகாழிப் பதியாகும்.

சீர்காழி

அம்மான்சேர் கழுமலமாச் சிரபுரம்வெங்
குருக்கொச்சை புறவமஞ்சீர்
மெய்ம்மானத் தொண்புகலி மிகுகாழி
தோணிபுரந் தேவர்கோனூர்
அம்மான்மன் னுயர்சண்பை தராயயனூர்
வழிமுடக்கு மாவின்பாச்சல்
தம்மானொன் றியஞான சம்பந்தன்
றமிழ்கற்போர் தக்கோர்தாமே. **#811**

அம்மானாகிய சிவபிரான் எழுந்தருளிய கழுமலம் முதலான பன்னிரு திருப்பெயர்களைக் கொண்ட சீகாழிப் பதியின் மீது வழியில் மாறிமாறி பாய்ந்துள்ள கோமூத்திரியின் அமைப்பில் அங்குள்ள சிவபிரான் மேல் ஒன்றிய மனமுடைய ஞானசம்பந்தன் அருளிய இத்தமிழ் மாலையைக் கற்போர் தக்கவராவர்.

சீர்காழி

சீகாழி,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

விண்ணியங்கு மதிக்கண்ணி யான்விரி யுஞ்சடைப்
பெண்ணயங்கொள் திருமேனி யான்பெரு மானனற்
கண்ணயங்கொள் திருநெற்றி யான்கலிக் காழியுண்
மண்ணயங்கொண் மறையாள ரேத்துமலர்ப் பாதனே. **#812**

ஆரவாரம் நிறைந்த காழிப்பதியுள், உலகம் நலம் பெற மறைவல்ல அந்தணர் ஏத்தும் மலர்போன்ற திருவடிகளை உடைய இறைவன், விண்ணில் இயங்கும் பிறைமதிக் கண்ணியன்; விரியும் சடையோடு பெண்ணொரு பாகங்கொண்ட மேனியன்: பெரியோன்: அனல் விழியைக் கொண்ட நெற்றியன்.

சீர்காழி

வலிய காலனுயிர் வீட்டினான்மட வாளொடும்
பலிவி ரும்பியதொர் கையினான்பர மேட்டியான்
கலியை வென்றமறை யாளர்தங்கலிக் காழியுள்
நலிய வந்தவினை தீர்த்துகந்தவெந் நம்பனே. **#813**

வறுமை முதலியவற்றைத் தவிர்க்க வேள்வி முதலியன செய்யும் மறையவர் வாழும் சீகாழிப்பதியுள் நம்மை நலிய வரும் வினைகளைத் தீர்த்து மகிழும் நம்பனாகிய இறைவன், வலிய காலன் உயிரைப் போக்கியவன்; உமையம்மையோடு கூடியிருப்பவன்: பலியேற்கும் கையினை உடையவன்: மேலானவன்.

சீர்காழி

சுற்ற லாநற்புலித்தோலசைத்தயன் வெண்டலைத்
துற்ற லாயதொரு கொள்கையான்சுடு நீற்றினான்
கற்றல் கேட்டலுடை யார்கள்வாழ்கலிக் காழியுண்
மற்ற யங்குதிர டோளெம்மைந்தனவ நல்லனே. **#814**

கல்வி கேள்விகளில் வல்ல பெரியோர் வாழும் காழிப்பதியுள் மற்போர் செய்யத்தக்க திரண்ட தோள்களை உடைய வலியோனாகிய சிவபிரான் நல்லன். புலித்தோலை இடையிற்சுற்றிப் பிரமனது தலையோட்டில்

உண்பலிதேரும் இயல்பினன்.

சீர்காழி

பல்ல யங்குதலை யேந்தினான்படு கானிடை
மல்ல யங்குதிர டோள்களாரநட மாடியுங்
கல்ல யங்குதிரை சூழநீள்கலிக் காழியுட்
தொல்ல யங்குபுகழ் பேணநின்றசுடர் வண்ணனே. **#815**

கற்களையும் அசையச்செய்யும் கடல் அலை நீர் சூழும் காழிப்பதியுள் பழமையாகப் பரவிய புகழ் விரும்பிச்சேர்தற்கு உரிய ஒளி வண்ணனாகிய சிவபிரான், பற்கள் விளங்கும் தலையோட்டை ஏந்தியவன்: பலரும் இறந்தபின் எரிக்கப்படும் சுடுகாட்டில், மற்போருடற்ற வல்ல திரண்ட தோள்கள் அசைய நடனம் ஆடுபவன்.

சீர்காழி

தூநயங்கொடிரு மேனியிற் பொடிப்பூசிப்போய்
நாநயங்கொண்மறை யோதிமா தொருபாகமாக்
கானயங்கொள்புனல் வாசமார் கலிக்காழியுட்
டேனயங்கொண்முடி யானைந்தாடிய செல்வனே. **#816**

மாதொருபாகனாய், காடுகளில் படிந்துவரும் மணம்மிக்க நீர் சூழ்ந்த காழிப்பதியுள் தேன் மணம் கமழும் திருமுடியில் ஆனைந்தாடிய செல்வனாகிய சிவபிரான், தூய அழகிய திருமேனியில் திருநீறு பூசியவன்; நாநயம் பெற வேதங்களை அருளியவன்.

சீர்காழி

சுழியி லங்கும்புனற் கங்கையாள்சடை யாகவே
மொழியி லங்கும்மட மங்கைபாக முகந்தவன்
கழியி லங்குங்கடல் சூழுந்தண்கலிக் காழியுட்
பழியிலங்குந்துய ரொன்றிலாப் பரமேட்டியே. **#817**

உப்பங்கழிகளோடு கூடிய கடல் சூழ்ந்திலங்கும் குளிர்ந்த காழிப்பதியுள் பிறர் பழிக்கும் துன்பம் ஒன்றுமில்லாத மேன்மையோனாகிய சிவபிரான், சுழிகளைக் கொண்ட கங்கையைச் சடையில் கொண்டுள்ளதன் மேலும் இனிய மொழியினளாகிய உமைமங்கையை ஒரு பாகமாக உகந்தவன்.

சீர்காழி

முடியி லங்கும்முயர் சிந்தையான்முனி வர்தொழ
வடியி லங்குங்கழ லார்க்கவேயன லேந்தியுங்
கடியி லங்கும்பொழில் சூழுந்தண்கலிக் காழியுட்
கொடியி லங்கும்மிடை யாளொடுங்குடி கொண்டதே. **#818**

முடியின் மேலிடத்தில் சிந்தையைச் செலுத்தும் முனிவர்கள் தொழ, நன்றாக வடிக்கப்பெற்று விளங்கும் கழல் காலில் ஆர்க்க அனலைக் கையில் ஏந்தி ஆடும் இறைவன், மணம் பொருந்திய பொழில்கள் சூழ்ந்த காழிப்பதியுள் கொடிபோலும் இடை யினளாகிய பார்வதிதேவியோடு குடி கொண்டுள்ளான்.

சீர்காழி

வல்ல ரக்கன்வரை பேர்க்கவந் தவன்றோண்முடி
கல்ல ரக்கிவ்விறல் வாட்டினான்கலிக் காழியுள்
நல்லொ ருக்கியதொர் சிந்தையார்மலர் தூவவே
தொல்லி ருக்கும்மறை யேத்துகந்துடன் வாழுமே. **#819**

கயிலைமலையைப் பெயர்க்க வந்த வலிய அரக்கனாகிய இராவணனின் தோள் முடி ஆகியவற்றை அம்மலையாலேயே அடர்த்து அவனது வலிமையைச் செற்ற சிவபிரான், ஒருமைப்பாடுடைய நற்சிந்தையார் மலர்தூவிப் போற்றவும் தொன்மையான இருக்கு வேத மொழிகளைப் பாடி வழிபடவும் மகிழ்ந்து உமையம்மையோடு விளங்குகின்றான்.

சீர்காழி

மருவு நான்மறை யோனுமாமணி வண்ணனும்
இருவர் கூடியிசைந் தேத்தவேயெரி யான்றனூர்
வெருவ நின்றதிரை யோதம்வார்வியன் முத்தவை
கருவை யார்வயற் சங்குசேர்கலிக் காழியே. **#820**

பொருந்திய நான்மறைகளை ஓதுபவனாகிய பிரமன், நீலமணி போன்ற நிறத்தினை உடைய திருமால் ஆகிய இருவரும் கூடி ஏத்த எரிஉருவாய் நின்ற சிவபிரானது ஊர், அஞ்சுமாறு வரும் கடல் அலைகளையும் அதனால் பெருகும் ஓதநீரையும் பெரியமுத்துக்கள், சங்குகள் சேரும் கரிய வைக்கோலைக் கொண்டுள்ள வயல்களையும் உடைய காழியாகும்.

சீர்காழி

நன்றியொன்றுமுண ராதவன் சமண்சாக்கியர்
அன்றியங்கவர் சொன்னசொல் லவைகொள்கிலான்
கன்றுமேதியிளங் கானல்வாழ்கலிக் காழியுள்
வென்றி சேர்வியன் கோயில்கொண்ட விடையாளனே. **#821**

கன்றும் அதன் தாயாகிய எருமையும் இளங்கானலில் வாழும் காழிப்பதியுள் வெற்றி பொருந்திய பெரிய கோயிலை இடமாகக் கொண்ட விடையூர்தியானாகிய சிவபிரான் நன்மையைச் சிறிதும் உணராத வலிய சமணர்களும் சாக்கியர்களும் தம்முள் மாறுபட்டுப்

பேசும் பேச்சுக்களைக் கொள்ளாதவன்.

<u>சீர்காழி</u>

கண்ணு மூன்றுமுடை யாதிவாழ்கலிக் காழியுள்
அண்ண லந்தண்ணருள் பேணிஞானசம் பந்தன்சொல்
வண்ண மூன்றுந்தமி ழிற்றெரிந்திசை பாடுவார்
விண்ணு மண்ணும்விரி கின்றதொல்புக ழாளரே. **#822**

மூன்று கண்களை உடைய முதலோனாகிய சிவபிரான் வாழும் காழிப்பதியுள் அத்தலைவனின் தண்ணருளைப் பேணி ஞானசம்பந்தன் சொல்லிய இப்பாடல்களை மூவகை வண்ணங்களையும் தெரிந்து இசையோடு பாடுவார் விண்ணுலகும் மண்ணுலகும் விரிகின்ற புகழாளர் ஆவர்.

திருஅகத்தியான்பள்ளி

திருஅகத்தியான்பள்ளி

திருஅகத்தியான்பள்ளி,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அகத்தீசுவரர்.
தேவியார் : மங்கைநாயகியம்மை.

வாடிய வெண்டலை மாலைசூடி மயங்கிருள்
நீடுயர் கொள்ளி விளக்குமாக நிவந்தெரி
ஆடிய வெம்பெரு மானகத்தியான் பள்ளியைப்
பாடிய சிந்தையி னார்கட்கில்லை யாம்பாவமே. **#823**

தசைவற்றிய வெண்டலை மாலையைச் சூடிச் செறிந்த இருளில், பெருகி உயர்கின்ற தீக்கொள்ளி விளக்காக உயர்ந்த இடுகாட்டு எரியில் நின்றாடிய எம்பெருமானது அகத்தியான் பள்ளியை மனம் ஒன்றிப் பாடுவோர்க்குப் பாவம் இல்லை.

திருஅகத்தியான்பள்ளி

துன்னங்கொண்ட வுடையான் றுதைந்தவெண் ணீற்றினான்
மன்னுங்கொன்றை மதமத்தஞ் சூடினான் மாநகர்
அன்னந்தங்கு பொழில்சூழ் அகத்தியான் பள்ளியை
உன்னஞ்செய்தமனத்தார்கள் தம் வினையோடுமே. **#824**

தைத்த உடையை அணிந்தவன். வெண்மை செறிந்த திருநீற்றைப் பூசியவன். பொருந்திய கொன்றை, ஊமத்தை மலர்களைச் சூடியவன். அப்பெருமான் எழுந்தருளியதும் அன்னங்கள் வாழும் பொழில்கள் சூழ்ந்ததுமான அகத்தியான்பள்ளியை நினையும் மனம் உடையவர்களின் வினைகள் நீங்கும்.

திருஅகத்தியான்பள்ளி

உடுத்ததுவும் புலித்தோல் பலி திரிந் துண்பதுங்
கடுத்துவந்த கழற்காலன் தன்னையுங் காலினால்
அடுத்ததுவும்பொழில்சூழ் அகத்தியான் பள்ளியான்
றொடுத்தது வுஞ்சர முப்புரந் துகளாகவே. **#825**

உடுத்துள்ளது புலித்தோல். உண்பது பலியேற்றுத் திரிந்து. கொன்றது சினந்து வந்த கழலணிந்த காலனைக் காலினால். அவ்விறைவன் வாழ்வது பொழில்கள் சூழ்ந்த அகத்தியான்பள்ளி. சரம் தொடுத்தது துகளாகுமாறு திரிபுரங்களை.

திருஅகத்தியான்பள்ளி

காய்ந்ததுவு மன்றுகாமனை நெற்றிக் கண்ணினால்
பாய்ந்ததுவுங் கழற்காலனைப் பண்ணி னான்மறை
ஆய்ந்ததுவும் பொழில்சூழ் அகத்தியான் பள்ளியான்
ஏய்ந்ததுவு மிமவான் மகளொரு பாகமே. **#826**

அன்று நெற்றிக்கண்ணால் சினந்தது காமனை. பாய்ந்து கொன்றது கழலணிந்த காலனை. பண்களோடு ஆராய்ந்தது வேதங்களை. ஒரு பாகத்தே ஏய்ந்து கொண்டது இமவான் மகளை. அத் தகையோன் அகத்தியான்பள்ளி இறைவன் ஆவான்.

திருஅகத்தியான்பள்ளி

போர்த்ததுவுங் கரியின் னுரிபுலித் தோலுடை
கூர்த்ததோர் வெண்மழு வேந்திக்கோளர வம்மரைக்
கார்த்ததுவும் பொழில்சூழ் அகத்தியான் பள்ளியான்
பார்த்ததுவும் அரணம் படரெரி மூழ்கவே. **#827**

போர்த்துள்ளது யானைத்தோல். உடுத்துள்ளது புலித்தோல். ஏந்தியுள்ளது கூரிய வெண்மழு. அரையில் கட்டியுள்ளது பாம்பு. பரந்த எரியுள் மூழ்குமாறு பார்த்தது முப்புரம். அத்தகையோன் அகத்தியான்பள்ளி இறைவன் ஆவான்.

திருஅகத்தியான்பள்ளி

தெரிந்ததுவுங் கணையொன்று முப்புரஞ் சென்றுடன்
எரிந்ததுவும் முன்னெழிலார் மலருறை வான்றலை
அரிந்ததுவும் பொழில்சூழ் அகத்தியான் பள்ளியான்
புரிந்ததுவும் உமையாளொர் பாகம் புனைதலே. **#828**

தெரிவு செய்தது கணை ஒன்று. அக்கணை சென்று உடன் எரியச்செய்தது முப்புரங்களை. முற்காலத்தில் அரிந்தது அழகிய தாமரைமலர் மேல் உறையும் பிரமனின் தலையை. விரும்பி ஒரு பாகமாகப் புனைந்தது உமையவளை. அத்தகையோன் பொழில்கள் சூழ்ந்த அகத்தியான்பள்ளி இறைவன் ஆவான்.

திருஅகத்தியான்பள்ளி

ஓதியெல்லாம் உலகுக்கொர் ஒண்பொரு ளாகிமெய்ச்
சோதியென்று தொழுவார் அவர்துயர் தீர்த்திடும்
ஆதியெங்கள் பெருமான் அகத்தியான் பள்ளியை
நீதியாற் றொழுவார் அவர்வினை நீங்குமே. **#829**

வேதங்களை ஓதியவனே! உலகுக்கெல்லாம் ஒண்பொருளாகி

விளங்குபவனே! நிலையான சோதி வடிவினனே! என்று கூறித் தொழுவாரவர் துயர் தீர்த்திடும் முதல்வனாகிய எங்கள் தலைவன் விளங்கும் அகத்தியான்பள்ளியை முறையாகத் தொழுபவர் வினைகள் நீங்கும்.

திருஅகத்தியான்பள்ளி

செறுத்ததுவுந் தக்கன் வேள்வியைத் திருந்தார்புரம்
ஒறுத்ததுவும் மொளிமா மலருறை வான்சிரம்
அறுத்ததுவும்பொழில்சூழ் அகத்தி யான்பள்ளியான்
இறுத்ததுவும் அரக்கன்றன் தோள்கள் இருபதே. **#830**

சினந்து அழித்தது தக்கன் வேள்வியை. ஒறுத்து எரித்தது பகைவர்தம் திரிபுரங்களை. அறுத்தது ஒளி பொருந்திய சிறந்த தாமரைமலர் மேலுறையும் பிரமனின் தலையை. நெரியச் செய்தது இராவணனின் இருபது தோள்களை. அத்தகையோன் அகத்தியான் பள்ளி இறைவன் ஆவான்.

திருஅகத்தியான்பள்ளி

சிரமுநல்ல மதிமத்த முந்திகழ் கொன்றையும்
அரவுமல்குஞ் சடையான் அகத்தியான் பள்ளியைப்
பிரமனோடு திருமாலுந் தேடிய பெற்றிமை
பரவவல்லார் அவர்தங்கள் மேல்வினை பாறுமே. **#831**

தலைமாலையையும், பிறையையும், ஊமத்தை மலரையும், விளங்கும் கொன்றை மலரையும் பாம்பையும் அணிந்துள்ள சடையினனாகிய அகத்தியான்பள்ளியில் உறையும் இறைவனைப் பிரமனும் திருமாலும் தேடிக்காண முடியாத தன்மையைக் கூறிப் பரவ வல்லவர் தங்கள் மேல்வரும் வினைகள் அழியும்.

திருஅகத்தியான்பள்ளி

செந்துவ ராடையினாரும் வெற்றரை யேதிரி
புந்தியி லார்களும் பேசும்பேச்சவை பொய்ம்மொழி
அந்தணன் எங்கள்பிரான் அகத்தியான் பள்ளியைச்
சிந்திமின் நும்வினை யானவைசிதைந் தோடுமே. **#832**

சிவந்த துவராடையை அணிந்து, ஆடையின்றி வெற்றுடல்களோடு திரியும் அறிவற்றவர்களாகிய சமண புத்தர்கள் பேசும் பேச்சுக்கள் பொய்மொழிகளாகும். அவற்றை விடுத்து அழகிய கருணையாளனும் எங்கள் தலைவனும் ஆகிய அகத்தியான்பள்ளி இறைவனைச் சிந்தியுங்கள். வினைகள் சிதைந்து ஓடும்.

<u>திருஅகத்தியான்பள்ளி</u>

ஞாலம் மல்குந்தமிழ் ஞானசம்பந்தன் மாமயில்
ஆலுஞ்சோலை புடைசூழ் அகத்தியான் பள்ளியுள்
சூல நல்லபடையான் அடிதொழு தேத்திய
மாலைவல்லா ரவர்தங்கண் மேல்வினை மாயுமே. **#833**

உலகம் முழுதும் பரவிய புகழாளனாகிய ஞானசம்பந்தன் சிறந்த மயில்கள் ஆடும் சோலைகள் சூழ்ந்த அகத்தியான்பள்ளியுள் விளங்கும் நல்ல சூலப்படையானின் திருவடிகளைத் தொழுது போற்றிப்பாடிய இத்தமிழ்மாலையை ஓத வல்லவர்கள் மேல்வரும் வினைகள் மாயும்.

திருஅறையணிநல்லூர்

திருஅறையணிநல்லூர்

திருஅறையணிநல்லூர்,
பண் - காந்தாரம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அறையணிநாதேசுவரர்.
தேவியார் : அருள்நாயகியம்மை.

பீடினாற்பெரி யோர்களும்
பேதைமைகெடத் தீதிலா
வீடினாலுயர்ந் தார்களும்
வீடிலாரிள வெண்மதி
சூடினார்மறை பாடினார்
சுடலைநீறணிந் தாரழல்
ஆடினாரறை யணிநல்லூர்
அங்கையாற்றொழு வார்களே. **#834**

அழிவற்றவரும், இளவெண்பிறையைச் சூடியவரும், வேதங்களை அருளியவரும், சுடலைப்பொடி பூசியவரும், அழலின் கண் நின்று ஆடுபவரும் ஆகிய அறையணிநல்லூர் இறைவரைத் தம் அம் கையால் தொழுபவர் பீடினால் பெரியோர் ஆவர். பாசங்கள் கெடப் பற்றற்றவராய் உயர்ந்தவர்கள் ஆவர்.

திருஅறையணிநல்லூர்

இலையினார்சூல மேறுகந்
தேறியேயிமை யோர்தொழ
நிலையினாலொரு காலுறச்
சிலையினான்மதி லெய்தவன்
அலையினார் புனல்சூடிய
அண்ணலாரறை யணிநல்லூர்
தலையினாற்றொழு தோங்குவார்
நீங்குவார்தடு மாற்றமே. **#835**

இலைவடிவமான முத்தலைச் சூலத்தை ஏந்தி, ஆன் ஏற்றில் விரும்பி ஏறி வருபவன். இமையவர் வேண்ட நிலைத்த ஒரு திருவடியால் வில்லை ஊன்றித் திரிபுரங்களை எய்தவன். அலைகளோடு கூடிய கங்கையை முடிமிசைச் சூடிய தலைவன். அப்பெருமான் எழுந்தருளிய அறையணிநல்லூர் சென்று அவனைத் தலையினால் தொழும் பெருமை மிக்கவர் தடுமாற்றம் நீங்குவர்.

திருஅறையணிநல்லூர்

என்பினார்கனல் சூலத்தார்
இலங்குமாமதி யுச்சியான்
பின்பினாற்பிறங் குஞ்சடைப்
பிஞ்ஞகன்பிறப் பிலியென்று
முன்பினார்மூவர் தாந்தொழு
முக்கண்மூர்த்திதன் றாள்களுக்
கன்பினாரறை யணிநல்லூர்
அங்கையாற்றொழு வார்களே. **#836**

என்பு மாலை அணிந்தவர். கனலும் சூலத்தை ஏந்தியவர். விளங்கும் சிறந்த பிறைமதியை உச்சியில் சூடியவர். பின்னே தாழ்ந்து தொங்கும் சடையினர். தலைக்கோலம் உடையவர். பிறப்பற்றவர் என்று அறையணிநல்லூர் இறைவரைக் கைகூப்பித் தொழுபவரே வலிமைமிக்க மும்மூர்த்திகளும் தொழுது வணங்கும் முக்கண்மூர்த்தன் திருவடிகளில் அன்புடையவர் ஆவர்.

திருஅறையணிநல்லூர்

விரவுநீறுபொன் மார்பினில்
விளங்கப்பூசிய வேதியன்
உரவுநஞ்சமு தாகவுண்
டுறுதிபேணுவ தன்றியும்
அரவுநீள்சடைக் கண்ணியார்
அண்ணலாரறை யணிநல்லூர்
பரவுவார்பழி நீங்கிடப்
பறையுந்தாஞ்செய்த பாவமே. **#837**

அழகிய மார்பில் திருநீற்றை விரவப்பூசிய வேதியனும், வலிய நஞ்சினை அமுதாக உண்டு உலகிற்கு அழியாமை தந்தவனும், பாம்பை நீண்ட சடைக்கு முடிக்கண்ணியாகக் கொண்டவனும் ஆகிய அண்ணல் உறையும் அறையணிநல்லூரைப் பரவுவார் பழி பாவங்கள் நீங்கப் பெறுவர்.

திருஅறையணிநல்லூர்

தீயினார்திகழ் மேனியாய்
தேவர்தாந்தொழு தேவன்நீ
ஆயினாய்கொன்றை யாயன
லங்கையாயறை யணிநல்லூர்
மேயினார்தம தொல்வினை

வீட்டினாய்வெய்ய காலனைப்
பாயினாயதிர் கழலினாய்
பரமனேயடி பணிவனே. **#838**

தீப்போல விளங்கும் செம்மேனியனே! தேவர்களால் தொழப்பெறும் தேவனாக நீயே ஆனவனே! கொன்றை மலர் அணிந்தவனே! அனலைக்கையில் ஏந்தியவனே! அறையணிநல்லூரை அடைந்து வழிபடுபவரின் பழவினைகளைத் தீர்ப்பவனே! கொடிய காலனைக் காய்ந்தவனே! ஒலிக்கும் கழலணிந்தவனே! பரமனே உன் திருவடிகளைப் பணிகின்றேன்.

<u>திருஅறையணிநல்லூர்</u>

விரையினார்கொன்றை சூடியும்
வேகநாகமும் வீக்கிய
அரையினாரறை யணிநல்லூர்
அண்ணலாரழ காயதோர்
நரையினார்விடை யூர்தியார்
நக்கனார்நறும் போதுசேர்
உரையினாலுயர்ந் தார்களு
முரையினாலுயர்ந் தார்களே. **#839**

மணம் கமழும் கொன்றை மாலையைச் சூடியவர். சினம் மிக்க பாம்பினை அரையில் கட்டியவர். அறையணிநல்லூரில் விளங்கும் தலைமையாளர். அழகிய வெண்ணிறமான விடையை ஊர்தியாக உடையவர். திகம்பரர். அப்பெருமானை மலர்தூவி உரையினால் போற்றுபவர் புகழாளர் ஆவர்.

<u>திருஅறையணிநல்லூர்</u>

வீரமாகிய வேதியர்
வேகமாகளி யானையின்
ஈரமாகிய வுரிவைபோர்த்
தரிவைமேற்சென்ற வெம்மிறை
ஆரமாகிய பாம்பினார்
அண்ணலாரறை யணிநல்லூர்
வாரமாய்நினைப் பார்கள்தம்
வல்வினையவை மாயுமே. **#840**

ஞானமே வடிவான வேதியர். சினந்து வந்த பெரிய களிற்று யானையின் ஈரம் உடைய தோலைப் போர்த்து உமையம்மையார் பாற் சென்றவர். பாம்பினை ஆரமாகக் கொண்டவர். அறையணி நல்லூரில் விளங்கும் தலைமையாளர். அவரை அன்போடு நினைப்பவர்களின் வலிய

வினைகள் மாயும்.

திருஅறையணிநல்லூர்

தக்கனார்பெரு வேள்வியைத்
தகர்த்துகந்தவன் றாழ்சடை
முக்கணான்மறை பாடிய
முறைமையான்முனி வர்தொழ
அக்கினோடெழி லாமைபூண்
அண்ணலாரறை யணிநல்லூர்
நக்கனாரவர் சார்வலால்
நல்குசார்விலோம் நாங்களே. **#841**

தக்கனது பெருவேள்வியைத் தகர்த்துகந்தவர். தாழ்ந்து தொங்கும் சடைகளையும் மூன்று கண்களையும் உடையவர். முனிவர்கள் தொழ வேதங்களை முறையோடு அருளியவர். என்பு மாலைகளையும் அழகிய ஆமை ஓட்டினையும் அணிந்த தலைமையாளர். அறையணிநல்லூரில் விளங்கும் திகம்பரர். நாங்கள் அவரது சார்பன்றி நலம் செய்யும் வேறு சார்பிலோம்.

திருஅறையணிநல்லூர்

வெய்யநோயிலர் தீதிலர்
வெறியராய்ப்பிறர் பின்செலார்
செய்வதேயலங் காரமா
மிவையிவைதேறி யின்புறில்
ஐயமேற்றுணுந் தொழிலரா
மண்ணலாரறை யணிநல்லூர்ச்
சைவனாரவர் சார்வலால்
யாதுஞ்சார்விலோம் நாங்களே. **#842**

வெம்மையான நோய்கள் எவையும் இல்லாதவர். வெறிபிடித்தவர் போலப் பிறர் பின் செல்லாதவர். அவர் செய்வதே அலங்காரம் ஆகும். இவற்றை முறையே தெளிந்து இன்புறவேண்டின் ஐயமேற்றுண்ணும் தொழிலரும் தலைமையாளரும் ஆகிய அறையணி நல்லூர்ச் சைவராகிய சிவபெருமானே நமக்குச் சார்வு ஆவார்: வேறு எதனையும் நாம் சாரோம் என்று எண்ணுக.

திருஅறையணிநல்லூர்

வாக்கியஞ்சொல்லி யாரொடும்
வகையலாவகை செய்யன்மின்
சாக்கியஞ்சம ணென்றிவை

சாரேலும்மர ணம்பொடி
ஆக்கியம்மழு வாட்படை
யண்ணலாரறை யணிநல்லூர்ப்
பாக்கியங்குறை யுடையீரேற்
பறையுமாஞ்செய்த பாவமே. **#843**

நீண்ட தொடர்களைப் பேசி யாரோடும் வகையல்லாதவற்றைச் செய்யாதீர். சாக்கியர் சமணர் நெறிகளைச் சாராதீர். திரிபுரங்களைப் பொடியாகச் செய்த மழுவாட்படை அண்ணலார் உறைகின்ற அறையணிநல்லூரை அடைந்து பாக்கியமாகிய தேவையை நிறைவு செய்துகொள்ள விரும்புவீராயின் அதனை அடைதலே அன்றிப் பாவங்களும் கழியப்பெறுவீர்.

<u>திருஅறையணிநல்லூர்</u>

கழியுலாங்கடற் கானல்சூழ்
கழுமலம்அமர் தொல்பதிப்
பழியிலாமறை ஞானசம்
பந்தனல்லதோர் பண்பினார்
மொழியினாலறை யணிநல்லூர்
முக்கண்மூர்த்திதன் றாள்தொழக்
கெழுவினாரவர் தம்மொடுங்
கேடில்வாழ்பதி பெறுவரே. **#844**

உப்பங்கழிகள் உலாவும் கடற்சோலைகள் சூழ்ந்த தொல்பதியாகிய கழுமலத்தில் தோன்றிய குற்றமற்ற மறை வல்ல ஞானசம்பந்தன் அருளிய பதிகத்தை ஓதும் நற்பண்பினராய் அறையணி நல்லூரை அடைந்து முக்கண் மூர்த்தியாகிய சிவபிரான் திருவடிகளைத் தொழுது போற்றப் பொருந்தியவர்கள் குற்றமற்றவர் வாழும் சிவலோகத்தை அடைவர்.

திருவிளநகர்

திருவிளநகர்

திருவிளநகர்,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : துறைகாட்டும்வள்ளநாதர்.
தேவியார் : தோழியம்மை.

ஒளிரிளம்பிறை சென்னிமேல்
உடையர்கோவண வாடையர்
குளிரிளம்மழை தவழ்பொழிற்
கோலநீர்மல்கு காவிரி
நளிரிளம்புனல் வார்துறை
நங்கைகங்கையை நண்ணினார்
மிளிரிளம்பொறி யரவினார்
மேயதுவிள நகரதே. **#845**

விளங்குகின்ற இளம்பிறை சென்னிமேல் உடையவர். கோவண ஆடை உடுத்தவர். கங்கை நங்கையை விரும்பியவர். ஒளியும் புள்ளிகளும் பொருந்திய இளநாகம் அணிந்தவர். அவ்விறைவர் விரும்பி உறையும் தலம், தண்ணிய மழை பொழியத்தக்க மேகங்கள் தவழும் பொழில்களைக் கொண்டதும், அழகிய நீர் நிறைந்ததும் குளிர்ந்த புதிய புனலைக் கொண்டு நீண்ட துறையுடன் விளங்குவதுமான விளநகராகும்.

திருவிளநகர்

அக்கரவ்வணி கலனென
அதனொடார்த்ததொ ராமைபூண்
டுக்கவர்சுடு நீறணிந்
தொளிமல்குபுனற் காவிரிப்
புக்கவர்துயர் கெடுகெனப்
பூசுவெண்பொடி மேவிய
மிக்கவர்வழி பாடுசெய்
விளநகரவர் மேயதே. **#846**

எலும்பையும் பாம்பையும் அணிந்து, அவ்வணிகலனோடு ஆமை ஓட்டையும் பூண்டு இறந்தவரை எரித்த சுடுகாட்டு நீற்றை அணிந்து விளங்கும் பெருமான் மேவிய தலம் ஒளி நிறைந்த நீரை உடைய காவிரியில் மூழ்கிய அடியவர் துயர் கெடுமாறு நீறு பூசியவராய்

வழிபாடு செய்கின்ற விளநகராகும்.

திருவிளநகர்

வாளிசேரடங் கார்மதி
தொலையநூறிய வம்பின்வேய்த்
தோளிபாகம் அமர்ந்தவர்
உயர்ந்ததொல்கட னஞ்சுடன்
காளமல்கிய கண்டத்தர்
கதிர்விரிசுடர் முடியினர்
மீளியேறுகந் தேறினார்
மேயதுவிள நகரதே. **#847**

அம்பினைச் சேர்ப்பித்துப் பகைவரின் முப்புரங்களை அழியுமாறு செய்தவரும், புதிய மூங்கில் போலும் தோள்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாக விரும்பி ஏற்றவரும், உயர்ந்த பழமையான கடலின்கண் தோன்றிய நஞ்சினை உண்டதோடு அதன் கரிய நிறம் மல்கிய கண்டத்தை உடையவரும், ஒளிவிரிந்த தழல்போலும் சடையினரும், வலிய விடையேற்றை உகந்து ஏறி வருபவரும் ஆன சிவபிரான் மேவியது விளநகர்.

திருவிளநகர்

கால்விளங்கெரி கழலினார்
கையிலங்கிய வேலினார்
நூல்விளங்கிய மார்பினார்
நோயிலார்பிறப் பும்மிலார்
மால்விளங்கொளி மல்கிய
மாசிலாமணி மிடறினார்
மேல்விளங்குவெண் பிறையினார்
மேயதுவிள நகரதே. **#848**

காலில் விளங்கும் கழலணிந்தவர். கையில் விளங்கும் சூலத்தை உடையவர். பூணநூல் விளங்கும் மார்பினர். துன்புறும் நோயும் பிறத்தலும் இல்லாதவர். கருமை விளங்கும் ஒளி நிரம்பிய குற்ற மற்ற நீல மணி போலும் கண்டத்தினர். வானவெளியில் விளங்கும் வெள்ளிய பிறையைச் சூடியவர். அவ்விறைவர் மேயது விளநகர்.

திருவிளநகர்

பன்னினார்மறை பாடினார்
பாயசீர்ப்பழங் காவிரித்
துன்னுதண்டுறை முன்னினார்

தூநெறிபெறு வாரெனச்
சென்னிதிங்களைப் பொங்கராக்
கங்கையோடுடன் சேர்த்தினார்
மின்னுபொன்புரி நூலினார்
மேயதுவிள நகரதே. **#849**

வேதங்களை அருளியவர். அவ்வேதங்களைப் பாடுபவர். முடியில் திங்கள், சினம்மிக்க பாம்பு, கங்கை ஆகியவற்றைச் சூடியவர். மின்னுகின்ற பொன்போலும் முப்புரிநூலை அணிந்தவர். அவ்விறைவர் அன்பர்கள் வணங்கித் தூநெறி பெறும் பொருட்டு எழுந்தருளியிருக்குமிடம் பரவிய புகழையுடைய காவிரியின் துறைகளை உடைய கரையில் அமைந்த விளநகராகும்.

<u>திருவிளநகர்</u>

தேவரும்மம ரர்களுந்
திசைகண்மேலுள தெய்வமும்
யாவரும்மறி யாததோ
ரமைதியாற்றழ லுருவினார்
மூவரும்மவ ரென்னவும்
முதல்வரும்மிவ ரென்னவும்
மேவரும்பொரு ளாயினார்
மேயதுவிள நகரதே. **#850**

தேவரும், அமரரும், திசைக்காவல் தெய்வங்களும் முதலான யாவராலும் அறிதற்கரிய இயல்பினர். தழல் போலும் உருவினர். திருமால், பிரமன், உருத்திரன் ஆகிய மூவரும் இவரே என்று கூறுமாறும் அவர்களின் தலைவராய் விளங்குவார் இவரே என்னுமாறும் பொருந்த அரிய பொருளாய் விளங்குபவர். அவ்விறைவர் மேவிய இடம் விளநகராகும்.

<u>திருவிளநகர்</u>

சொற்றருமறை பாடினார்
சுடர்விடுஞ்சடை முடியினார்
கற்றருவடங் கையினார்
காவிரித்துறை காட்டினார்
மற்றருதிர டோளினார்
மாசில்வெண்பொடிப் பூசினார்
விற்றருமணி மிடறினார்
மேயதுவிள நகரதே. **#851**

எழுதி உணர்த்தாது சொல்லப்பட்டே வரும் வேதங்களை அருளியவர். ஒளிவிடும் சடைமுடியை உடையவர். செபமணி மாலையைக் கையில்

கொண்டவர். மற்போர் செய்தற்கு ஏற்ற திரண்ட தோள்களை உடையவர். குற்றமற்ற வெண்மையான திருநீற்றுப்பொடி பூசியவர். ஒளி தரும் நீலமணி போலும் மிடறுடையவர். அவ்விறைவர் மேவியது காவிரித்துறையில் அமைந்த விளநகராகும்.

திருவிளநகர்

படர்தருஞ்சடை முடியினார்
பைங்கழலடி பரவுவார்
அடர்தரும்பிணி கெடுகென
அருளுவார்அர வரையினார்
விடர்தரும்மணி மிடறினார்
மின்னுபொன்புரி நூலினார்
மிடறரும்படை மழுவினார்
மேயதுவிள நகரதே. **#852**

பரவிய சடைமுடியை உடையவர். தம் கழல் அடிகளைப்பரவும் அடியவர்களை வருத்தும் பிணிகள் கெடுவனவாக என அருள் செய்பவர். பாம்பினை இடையில் கட்டியவர். மலைப் பிளவில் இருந்து கிட்டும் நீலமணி போலும் மிடற்றை உடையவர். மின்னுகின்ற பொன் போன்ற முப்புரி நூலை அணிந்தவர். வலிய படைக்கலனாக மழுவை ஏந்தியவர். அவ்விறைவர் மேவியது விளநகராகும்.

திருவிளநகர்

கையிலங்கிய வேலினார்
தோலினார்கரி காலினார்
பையிலங்கர வல்குலாள்
பாகமாகிய பரமனார்
மையிலங்கொளி மல்கிய
மாசிலாமணி மிடறினார்
மெய்யிலங்குவெண் ணீற்றினார்
மேயதுவிள நகரதே. **#853**

கையில் விளங்கும் சூலத்தை உடையவர். தோலாடை உடுத்தவரமுற்றழிப்புக் காலத்தில் தாம் ஒருவரே அழியாது நிற்பவர். பாம்பின் படம் போலும் அல்குலை உடைய உமையம்மையை இடப்பாகமாக உடைய பரமர்கரிய ஒளி நிறைந்த குற்றமற்ற நீலமணி போன்ற மிடற்றினை உடையவர். திருமேனியில் விளங்கும் திருவெண்ணீற்றை அணிந்தவர். அவ்விறைவர் மேவியிருப்பது விளநகர் ஆகும்.

திருவிளநகர்

உள்ளதன்றனைக் காண்பன்கீ
ழென்றமாமணி வண்ணனும்
உள்ளதன்றனைக் காண்பன்மே
லென்றமாமலர் அண்ணலும்
உள்ளதன்றனைக் கண்டிலார்
ஒளியார் தருஞ்சடை முடியின்மேல்
உள்ளதன்றனைக் கண்டிலா
வொளியார் விளநகர் மேயதே. **#854**

கீழ் உள்ள திருவடியை யான் காண்பேன் என்று சென்ற கரிய மணிவண்ணனாகிய திருமாலும், மேல் உள்ள திருமுடியை யான் காண்பேன் என்று சென்ற தாமரை மலர்மேல் உறையும் நான்முகனும் உள்பொருளாய் விளங்கும் சிவபிரானைக் கண்டிலர். ஒளி பொருந்திய சடைமுடியின் மேல் விளங்கும் பிறை முதலியவற்றை யாரும் காண இயலாத சோதிப் பிழம்பாய்த் தோன்றும் அப்பெருமானார் தம்மை அன்பர்கள் கண்டு வழிபட விளநகரில் எழுந்தருளியுள்ளார்.

திருவிளநகர்

மென்சிறைவண் டியாழ்முரல்
விளநகர்த்துறை மேவிய
நன்பிறைநுத லண்ணலைச்
சண்பைஞானசம் பந்தன்சீர்
இன்புறுதமி ழாற்சொன்ன
ஏத்துவார்வினை நீங்கிப்போய்த்
துன்புறுதுய ரம்மிலர்
தூநெறிபெறு வார்களே. **#855**

மெல்லிய சிறகுகளை உடைய வண்டுகள் யாழ் போல முரலும் விளநகரில் காவிரித்துறையில் எழுந்தருளிய பிறைசூடிய பெருமானை, சண்பைப்பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் சிறப்பும் இனிமையும் பொருந்திய தமிழால் புனைந்த இப்பாடல்களைக் கூறி ஏத்துகின்றவர் வினைகள் நீங்கித் துன்பமும் துயரமும் அடைதல் இலர். தூய வீட்டு நெறியைப் பெறுவார்கள்.

திருவாரூர்

திருவாரூர்

திருவாரூர்,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

பவனமாய்ச் சோடையாய் நாவெழாப் பஞ்சுதோய்ச்
சட்ட வுண்டு
சிவனதாட் சிந்தியாப் பேதைமார் போலநீ
வெள்கி னாயே
கவனமாய்ப் பாய்வதோ ரேறுகந் தேறிய
காள கண்டன்
அவனதா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச னெஞ்சே. **#856**

பெருமூச்சு வாங்கும் நிலையை அடைந்து வறட்சி நிலை எய்தி, நா எழாதுலர்ந்து பிறர் பஞ்சில் தேய்த்துப்பால் முதலியவற்றைப் பிழிய உண்டு மரணமுறுங்காலத்தில் சிவபெருமானின் திருவடிகளைச் சிந்தியாது இறக்கும் அஞ்ஞானியரைப் போல நமக்கும் இந்நிலை வருமா என நெஞ்சே நீ நாணுகின்றாய். கவனத்தோடு பாய்ந்து செல்லும் விடை ஏற்றில் ஏறிவரும் நீலகண்டனாகிய சிவபிரானது ஆரூரைச் சென்று தொழுதால் உய்யலாம். மையல் கொண்டு அஞ்சாதே!

திருவாரூர்

தந்தையார் போயினார் தாயாரும் போயினார்
தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்
கொண்டுபோவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியா
லேழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச னெஞ்சே. **#857**

ஏழை நெஞ்சே! தந்தை தாயர் இறந்தனர். தாமும் ஒருநாள் இறக்கத்தான் போகின்றார். இயம தூதர்கள் வேலைக் கையில் கொண்டு குத்தி உயிர் போக்கப் பார்த்துக் கொண்டுள்ளனர். இப்படி வாழ்க்கை நிலையாமையில் இருத்தலால் நெஞ்சே இறவாமல் வாழ்வதற்கு எந்த

நாள் மனம் வைப்பாய்? ஆரூர் இறைவனைத் தொழுதால் நீ உய்யலாம். மையல்கொண்டு அஞ்சாதே!

திருவாரூர்

நிணங்குடர் தோனரம் பென்புசே ராக்கைதா
னிலாய தன்றால்
குணங்களார்க் கல்லது குற்றநீங் காதெனக்
குலுங்கி னாயே
வணங்குவார் வானவர் தானவர் வைகலு
மனங்கொ டேத்தும்
அணங்கனா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச னெஞ்சே. **#858**

நிணம், குடல், தோல், நரம்பு, என்பு இவற்றால் இயன்ற ஆக்கை நிலையானது அன்று. நல்ல குணங்கள் உடையார்க் கன்றித் தீய குணங்கள் உடையார்க்கு உளதாகும் குற்றங்கள் நீங்கா. நீயோ நடுங்கிநின்றாய். தேவர் அசுரர் முதலானோர் அனைவரும் வந்து வணங்கி மனம் கொண்டு வழிபடும் ஆரூர் இறைவனைத் தொழுதால் உய்யலாம். மையல் கொண்டு அஞ்சாதே!

திருவாரூர்

நீதியால் வாழ்கிலை நாள்செலா நின்றன
நித்த நோய்கள்
வாதியா வாதலா னாளுநா ளின்பமே
மருவி னாயே
சாதியார் கின்னரர் தருமனும் வருணர்க
ளேத்து முக்கண்
ஆதியா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச னெஞ்சே. **#859**

நெஞ்சே! நீ நீதிவழியே வாழவில்லை. வாழ் நாள்கள் பல செல்லா நின்றன. நாள்தோறும் நோய்கள் பல துன்பம் செய்யாவாய் உள்ளன. ஆதலால் ஒவ்வொரு நாளும் நீ இன்பத்தையே கருதி நிற்கின்றாய். நற்குலத்தில் தோன்றிய கின்ன. தருமன், வருணன் முதலியோர் வழிபட்டுப் போற்றும் ஆரூர் ஆதி முதல்வனாய முக்கண் மூர்த்தியைத் தொழுதால் நோய்கள் செய்ய உள்ள துயர்களிலிருந்து உய்யலாம். மையல் கொண்டு அஞ்சாதே!

திருவாரூர்

பிறவியால் வருவன கேடுள வாதலாற்

பெரிய வின்பத்
துறவியார்க் கல்லது துன்பநீங் காதெனத்
தூங்கி னாயே
மறவனீ மார்க் மே நண்ணினாய் தீர்த்தநீர்
மல்கு சென்னி
அறவனா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச னெஞ்சே. **#860**
நெஞ்சே! பிறவியால் கேடுகளே விளையும். பெரிய இன்பத்தை அடைய விரும்பும் துறவியர்க்கு அல்லது துன்பம் நீங்காது என மனம் சோர்கின்றாய். இறைவனை ஒருபோதும் மறவாதே! பெரியோர் கூறிய நல்வழிகளையே நீ பின்பற்றி வாழ்கின்றாய், புனிதமான கங்கை தங்கிய சடையினனாகிய அறவாழி அந்தணன் ஆரூர் சென்று தொழுதால் உய்யலாம். மையல் கொண்டு அஞ்சாதே!

திருவாரூர்

செடி கொள்நோ யாக்கையைம் பாம்பின் வாய்த்
தேரைவாய்ச்சிறு பறவை
கடிகொள்பூந் தேன்சுவைத் தின்புற லாமென்று
கருதி னாயே
முடிகளால் வானவர் முன்பணிந் தன்பரா
யேத்து முக்கண்
அடிகளா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச னெஞ்சே. **#861**
முடைநாற்றம் கொண்ட உடலகத்தே ஐம்பாம்பின் வாயில் அகப்பட்ட தேரையின் வாயில் அகப்பட்ட வண்டு, மணம் கமழும் பூந்தேனைச் சுவைத்து இன்புறக் கருதுவது போல உலகியல் இன்பங்களை நுகரக் கருதுகின்றாய். தேவர்கள் முடிதாழ்த்திப் பணிந்து அன்பராய்ப் போற்றும் ஆரூர் முக்கண் அடிகளைத் தொழுதால் உய்யலாம். மையல் கொண்டு அஞ்சாதே!

திருவாரூர்

ஏறுமால் யானையே சிவிகையந் தளகமீச்
சோப்பி வட்டின்
மாறிவா ழுடம்பினார் படுவதோர் நடலைக்கு
மயங்கி னாயே
மாறிலா வனமுலை மங்கையோர் பங்கினர்
மதியம் வைத்த
ஆறனா ரூர்தொழு துய்யலா மையல்கொண்

டஞ்ச னெஞ்சே. **#862**
நெஞ்சே! உலாவரும் பெரிய யானை, சிவிகை, கவசம், விருது முதலியவற்றை ஆடைகளை மாற்றுவது போல மாற்றப்படும் பல பிறவிகள் எடுக்கும் உடலை உடையார் தற்காலிகமாகப் பெறும் துன்பமயமான வாழ்வைக்கண்டு மயங்குகின்றாய். ஒப்பற்ற அழகிய தனபாரங்களைக் கொண்ட உமையம்மை பங்கினரும், பிறைமதியையும் கங்கையையும் சூடிய முடியினரும் ஆகிய ஆரூர் இறைவரைத் தொழுதால் உய்யலாம். மையல் கொண்டு அஞ்சாதே!

<u>திருவாரூர்</u>

என்பினாற் கழிநிரைத் திறைச்சிமண் சுவரெறிந்
திதுநம் மில்லம்
புன்புலா னாறுதோல் போர்த்துப்பொல் லாமையான்
முகடு கொண்டு
முன்பெலா மொன்பது வாய்தலார் குரம்பையின்
மூழ்கி டாதே
அன்பனா ரூர்தொழ துய்யலா மையல்கொண்
டஞ்ச னெஞ்சே. **#863**
நெஞ்சே! எலும்புகளாய கழிகளைக் கட்டி இறைச்சியாகிய மண் சுவர் எழுப்பி, அற்பமான புலால் மணம் கமழும் தோலைப் போர்த்துப் பொல்லாமையாகிய முகடுவேய்ந்தமைத்தது நம் இல்லமாகிய உடல். பண்டு தொட்டு ஒன்பது வாயில்களை உடைய நம் உடலைப் பேணுதலாகிய முயற்சியிலேயே மூழ்கிவிடாமல் நம்மேல் அன்புடையனாய ஆரூர் இறைவனை வணங்கினால் உய்தி பெறலாம். மையல் கொண்டு அஞ்சாதே!

<u>திருவாரூர்</u>

தந்தைதாய் தன்னுடன் றோன்றினார் புத்திரர்
தார மென்னும்
பந்தநீங் காதவர்க் குய்ந்துபோக் கில்லெனப்
பற்றி னாயே
வெந்தநீ றாடியா ராதியார் சோதியார்
வேத கீதர்
எந்தையா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச னெஞ்சே. **#864**
நெஞ்சே! தந்தை, தாய், உடன் பிறந்தார், புத்திரர், மனைவி ஆகிய பந்தங்களிலிருந்து விடுபடாதவர்க்கு உய்தி அடையும் உபாயம் இல்லை எனத் தெளந்து, வெந்த வெண்பொடி பூசியவரும், ஆதியான வரும்

சோதியரும் வேதப்பாடல்களைப் பாடுபவரும், எந்தையும் ஆகிய ஆரூர் இறைவனைத் தொழுதால் உய்யலாம். மையல் கொண்டு அஞ்சாதே!

திருவாரூர்

நெடியமால் பிரமனு நீண்டுமண் ணிடந்தின்ன
நேடிக் காணாப்
படியனார் பவளம்போல் உருவனார் பனிவளர்
மலையாள் பாக
வடிவனார் மதிபொதி சடையனார் மணியணி
கண்டத் தெண்டோள்
அடிகளா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச னெஞ்சே. **#865**

நெஞ்சே! நெடிய உருவெடுத்த திருமால், பன்றி உருவெடுத்து மண்ணிடந்தும், பிரமன் அன்னவடிவெடுத்துப் பறந்து சென்றும் இன்றுவரை தேடிக் காணாத நிலையில் தன்மையால் உயர்ந்தவரும், பவளம் போன்ற உருவினரும் இமவான் மகளாகிய பார்வதி தேவியைப் பாகமாகக் கொண்ட வடிவினரும், பிறையணிந்த தலை முடியினரும் நீலமணிபோன்ற அழகிய கண்டத்தினரும் எட்டுத் தோள்களைக் கொண்டுள்ளவருமாகிய ஆரூர் அடிகளைத் தொழுதால் உய்யலாம். மையல் கொண்டு அஞ்சாதே!

திருவாரூர்

பல்லிதழ் மாதவி யல்லிவண் டியாழ்செயுங்
காழி யூரன்
நல்லவே நல்லவே சொல்லிய ஞானசம்
பந்த னாரூர்
எல்லியம் போதெரி யாடுமெம் மீசனை
யேத்து பாடல்
சொல்லவே வல்லவர் நீதிலா ரோதநீர்
வைய கத்தே. **#866**

பலவாகிய இதழ்களையுடைய மாதவி மலரின், அக இதழ்களில் வண்டுகள் யாழ் போல ஒலி செய்து தேனுண்டு மகிழும் காழிப் பதியூரனும் நல்லனவற்றையே நாள்தோறும் சொல்லிவருபவனும் ஆகிய ஞானசம்பந்தன் இராப்போதில் எரியில் நின்று ஆடும், ஆரூரில் எழுந்தருளிய எம் ஈசனை ஏத்திப் போற்றிய இப்பதிகப் பாடல்களைச் சொல்லி வழிபட வல்லவர்கள் கடல் நீரால் சூழப்பட்ட இவ்வையத்தில் தீதிலர்.

திருக்கடவூர்மயானம்

திருக்கடவூர்மயானம்

திருக்கடவூர்மயானம்,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசுவரர்.
தேவியார் : மலர்க்குழல்மின்னம்மை.

வரியமறையார் பிறையார்
மலையோர்சிலையா வணக்கி
எரியமதில்கள் எய்தார்
எறியுமுசலம் உடையார்
கரியமிடறு முடையார்
கடவூர்மயான மமர்ந்தார்
பெரியவிடைமேல் வருவார்
அவரெம்பெருமா னடிகளே. **#867**

இசைப்பாடல்களாக அமைந்த வேதங்களை அருளியவர். பிறையணிந்தவர். மலையை ஒருவில்லாக வளைத்து முப்புரங்கள் எரியுமாறு கணைதொடுத்தவர். பகைவரை அழிப்பதற்கு எறியப்படும் உலக்கை ஆயுதத்தை உடையவர். கரிய மிடற்றை உடையவர். கடவூர் மயானத்தில் எழுந்தருளியிருப்பவர். பெரிய விடைமீது ஏறிவருபவர். அவர் எம்பிரானாராகிய அடிகள் ஆவார்.

திருக்கடவூர்மயானம்

மங்கைமணந்த மார்பர்
மழுவாள்வலனொன் றேந்திக்
கங்கைசடையிற் கரந்தார்
கடவூர்மயான மமர்ந்தார்
செங்கண்வெள்ளே றேறிச்
செல்வஞ்செய்யா வருவார்
அங்கையேறிய மறியார்
அவரெம்பெருமா னடிகளே. **#868**

உமையம்மையை ஒருபாகமாகக் கொண்ட மார்பினர். மழுவாகிய வாள் ஒன்றை வலக்கரத்தில் ஏந்தியவர். கங்கையைச் சடையின் மீது மறைத்துள்ளவர். கடவூர் மயானத்தில் எழுந்தருளியிருப்பவர். சிவந்த கண்களை உடைய வெள்ஏற்றில் ஏறிச் செல்வர் போல் அருட்காட்சி தருபவர். அழகிய கையில் மானை ஏந்தியவர். அவர் எம்

பெருமானாராகிய அடிகள் ஆவார்.

திருக்கடவூர்மயானம்

ஈடலிடப மிசைய
வேறிமழுவொன் றேந்திக்
காடதிடமா வுடையார்
கடவூர்மயான மமர்ந்தார்
பாடலிசைகொள் கருவி
படுதம்பலவும் பயில்வார்
ஆடலரவ முடையார்
அவரெம்பெருமா னடிகளே. **#869**

ஒப்பற்ற இடபத்தின் மேல் ஏறி, மழு ஒன்றை ஏந்தி, சுடுகாட்டை இடமாகக் கொண்டவர். அவர், கடவூர் மயானத்தில் எழுந்தருளியுள்ளார். பாடல் இசைக்கருவிகளோடு கூத்தாடுதல் பலவற்றையும் புரிபவர்; ஆடும் பாம்பை அணிகலனாக உடையவர். அவர் எம் பெருமான் அடிகள் ஆவார்.

திருக்கடவூர்மயானம்

இறைநின் றிலங்கு வளையா
ளிளையாளொருபா லுடையார்
மறைநின் றிலங்கு மொழியார்
மலையார்மனத்தின் மிசையார்
கறைநின் றிலங்கு பொழில்சூழ்
கடவூர்மயான மமர்ந்தார்
பிறைநின் றிலங்கு சடையார்
அவரெம்பெருமா னடிகளே. **#870**

முன் கையில் நின்று விளங்கும் வளையல்களை அணிந்த இளமைத் தன்மை உடைய உமையம்மையை ஒருபாகமாகக் உடையவர். வேத வசனங்கள் திகழும் மொழியினை உடையவர். தெளிந்த ஞானிகளின் மனத்தின்கண் வந்து தங்குபவர். கருமை விளங்கும் பொழில் சூழ்ந்த கடவூர் மயானத்தே எழுந்தருளியிருப்பவர். பிறை விளங்கும் சடைமுடியினர். அவர் எம் பெருமானாராகிய அடிகள் ஆவார்.

திருக்கடவூர்மயானம்

வெள்ளையெருத்தின் மிசையார்
விரிதோடொருகா திலங்கத்
துள்ளுமிளமான் மறியார்
சுடர்பொற்சடைகள் துளங்கக்

கள்ளநகுவெண் டலையார்
கடவூர்மயான மமர்ந்தார்
பிள்ளைமதிய முடையார்
அவரெம்பெருமா னடிகளே. **#871**

வெண்மை நிறமுடைய எருதின் மேல் வருபவர். ஒளிவிரியும் தோடு ஒருகாதில் விளங்க, துள்ளும் இளமான் கன்றைக் கையில் ஏந்தியவர். ஒளிவிடும் பொன்னிறமான சடை விளங்க 132 அதன்மிசைக் கள்ளமாக நகும் வெண்மையான தலைமாலையைச் சூடியவர். கடவூர் மயானத்தில் எழுந்தருளியிருப்பவர். இளம்பிறையைச் சூடியவர். அவர் எம் பெருமானாராகிய அடிகள் ஆவர்.

திருக்கடவூர்மயானம்

பொன்றாதுதிரு மணங்கொள்
புனைபூங்கொன்றை புனைந்தார்
ஒன்றாவெள்ளே றுயர்த்த
துடையாரதுவே யூர்வார்
கன்றாவினஞ்சூழ் புறவிற்
கடவூர்மயான மமர்ந்தார்
பின்றாழ்சடைய ரொருவர்
அவரெம்பெருமா னடிகளே. **#872**

பொன்னிறமான மகரந்தம் உதிரும் மணம் பொருந்திய அழகிய கொன்றைமாலையை அணிந்தவர். சிறப்புடைய வெள்ளேற்றினைக் கொடியாக உயர்த்தவர். அதனையே ஊர்தியாகவும் கொண்டவர். கன்றுகளோடு கூடிய பசுக்கள் மேயும் காடுகளை உடைய கடவூர் மயானத்தில் எழுந்தருளியிருப்பவர். பின்னால் தாழ்ந்து தொங்கும் சடைமுடியினை உடையவர். ஒப்பற்றவர். அவர் பெருமானாராகிய அடிகள் ஆவார்.

திருக்கடவூர்மயானம்

பாசமான களைவார்
பரிவார்க்கமுத மனையார்
ஆசைதீரக் கொடுப்பா
ரலங்கல்விடைமேல் வருவார்
காசைமலர்போன் மிடற்றார்
கடவூர்மயான மமர்ந்தார்
பேசவருவா ரொருவர்
அவரெம்பெருமா னடிகளே. **#873**

பாசங்களைப் போக்குபவர். அன்பர்க்கு அமுதம் போல இனிப்பவர்.

ஆசை அகலுமாறு அருள் கொடுப்பவர். மாலையணிந்த விடைமீது வருபவர். காயாமலர்போலும் மிடற்றினை உடையவர். கடவூர் மயானத்தில் எழுந்தருளியிருப்பவர். அவரது புகழைப் பலரும் பேசி வணங்க வரும், ஒப்பற்றவர். அவர் எம் பெருமானாராகிய அடிகள் ஆவார்.

திருக்கடவூர்மயானம்

செற்றவரக்க னலறத்
திகழ்சேவடிமெல் விரலாற்
கற்குன்றடர்த்த பெருமான்
கடவூர்மயான மமர்ந்தார்
மற்றொன்றிணையில் வலிய
மாசில் வெள்ளி மலைபோல்
பெற்றொன்றேறி வருவார்
அவரெம்பெருமா னடிகளே. **#874**

சினம் மிக்க இராவணன் அலறுமாறு, விளங்கும் தம் சேவடி விரலால் கயிலைமலையின் கீழ் அவனை அகப்படுத்தி அடர்த்தவர். கடவூர் மயானத்தில் எழுந்தருளியிருப்பவர். உவமையாகச் சொல்லுவதற்கு வேறொரு பொருள் இல்லாத குற்றமற்ற வெள்ளிமலை போன்ற விடைமீது ஏறி வருபவர். அவர் எம் பெருமானாராகிய அடிகள் ஆவார்.

திருக்கடவூர்மயானம்

வருமாகரியி னுரியார்
வளாபுன்சடையார் விடையார்
கருமானுரிதோ லுடையார்
கடவூர்மயான மமர்ந்தார்
திருமாலொடுநான் முகனுந்
தேர்ந்துங்காணமுன் னொண்ணாப்
பெருமானெனவும் வருவார்
அவரெம்பெருமா னடிகளே. **#875**

தம்மைக் கொல்ல வந்த பெரிய யானையின் தோலை உரித்துப் போர்த்தவர். நீண்டு வளர்ந்த மென்மையான சடையினை உடையவர். விடை ஊர்தியை உடையவர். கரிய மானின் தோலை உடையாக அணிந்தவர். கடவூர் மயானத்தில் எழுந்தருளியிருப்பவர். திருமாலும் நான்முகனும் தேடியும் காண ஒண்ணாத பெருமான் எனவும் பேசுமாறு வருபவர். அவர் எம்பெருமானாராகிய அடிகள் ஆவார்.

திருக்கடவூர்மயானம்

தூயவிடைமேல் வருவார்
துன்னாருடைய மதில்கள்
காயவேவச் செற்றார்
கடவூர்மயான மமர்ந்தார்
தீயகருமஞ் சொல்லுஞ்
சிறுபுன்றேர ரமணர்
பேய்பேயென்ன வருவார்
அவரெம்பெருமா னடிகளே. **#876**

தூய விடைமீது வருபவர். பகைவர் தம் முப் புரங்களும் காய்ந்து வேகுமாறு சினந்தவர். கடவூர் மயனத்தில் எழுந்தருளியிருப்பவர். தீய செயல்களைச் செய்யுமாறு சொல்லும் சிறுமையாளராகிய தேரர் அமணர்கள் தம்மைப் பேய் என்று பயந்து ஒதுங்க வருபவர். அவர் எம் பெருமான் அடிகள் ஆவார்.

திருக்கடவூர்மயானம்

ரவம்பொழில்சூழ் கடவூர்
மன்னுமயான மமர்ந்த
அரவமசைத்த பெருமா
னகலமறிய லாகப்
பரவுமுறையே பயிலும்
பந்தன்செஞ்சொன் மாலை
இரவும்பகலும் பரவி
நினைவார்வினைக ளிலரே. **#877**

குங்கும மரங்கள் செறிந்த பொழில் சூழ்ந்த கடவூரை அடுத்த மயானத்தில் விளங்கும், அரவணிந்த பெருமானின் பெருமைகள் முழுவதையும் அறியலாகாதெனினும் இயன்றவரை கூறிப் பரவுமாறு ஞானசம்பந்தன் சொல்லும் இப்பதிகச் செஞ்சொல் மாலையை இரவும் பகலும் ஓதிப்பரவி நினைபவர் வினைகள் இலராவர்.

திருவேணுபுரம்

சீர்காழி

திருவேணுபுரம்,
பண் - காந்தாரம், திருவேணுபுரம் என்பது சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

பூதத்தின் படையினீர்
பூங்கொன்றைத் தாரினீர்
ஓதத்தி னொலியொடு
மும்பர்வா னவர்புகுந்து
வேதத்தி னிசைபாடி
விரைமலர்கள் சொரிந்தேத்தும்
பாதத்தீர் வேணுபுரம்
பதியாகக் கொண்டீரே. #878

பூதப்படைகளை உடையவரே! கொன்றை மலர் மாலை அணிந்தவரே! கடல் ஒலியோடு உம்பரும் வானவரும் வந்து வேதகீதம் பாடி மணம் பொருந்திய மலர்களைத் தூவி வழிபடும் திருவடிகளை உடையவரே! நீர் வேணுபுரத்தைப் பதியாகக் கொண்டுள்ளீர்.

சீர்காழி

சுடுகாடு மேவினீர்
துன்னம்பெய் கோவணந்தோல்
உடையாடை யதுகொண்டீ
ருமையாளை யொருபாகம்
அடையாள மதுகொண்டீ
ரங்கையினிற் பரசுவெனும்
படையாள்வீர் வேணுபுரம்
பதியாகக் கொண்டீரே. #879

சுடுகாட்டில் எழுந்தருளியிருப்பவரே, நைந்த கோவணத்துடன் புலித்தோலை உடுத்தும் ஆடையாகக் கொண்டவரே, அருள் வழங்கும் அடையாளமாக உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டவரே, அழகிய கையில் மழுப்படையை உடையவரே, நீர் வேணுபுரத்தைப் பதியாகக் கொண்டுள்ளீர்.

சீர்காழி

கங்கைசேர் சடைமுடியீர்
காலனைமுன் செற்றுகந்தீர்
திங்களோ டிளவரவந்
திகழ்சென்னி வைத்துகந்தீர்
மங்கையோர் கூறுடையீர்
மறையோர்க ணிறைந்தேத்தப்
பங்கயஞ்சேர் வேணுபுரம்
பதியாகக் கொண்டீரே. **#880**

கங்கையணிந்த சடைமுடியை உடையவரே காலனைச் செற்றுப்பின் உகந்து அருள் செய்தவரே, திங்களையும் பாம்பையும் பகை நீக்கித்திகழும் முடிமீது வைத்து மகிழ்பவரே, உமையம்மையை ஒருகூறாக உடையவரே, நீர் மறைவல்ல அந்தணர்கள் நிறைந்து ஏத்தத் தாமரை பூத்த தடாகங்களும் வயல்களும் சூழ்ந்த வேணுபுரத்தைப் பதியாகக் கொண்டுள்ளீர்.

<u>சீர்காழி</u>

நீர்கொண்ட சடைமுடிமே
னீண்மதியம் பாம்பினொடும்
ஏர்கொண்ட கொன்றையினோ
டெழின்மத்த மிலங்கவே
சீர்கொண்ட மாளிகைமேற்
சேயிழையார் வாழ்த்துரைப்பக்
கார்கொண்ட வேணுபுரம்
பதியாகக் கலந்தீரே. **#881**

கங்கையணிந்த சடைமுடிமேல் இருமுனையாக நீண்ட பிறை, பாம்பு, அழகிய கொன்றை மலர், எழிலுடைய ஊமத்தை மலர் ஆகியன இலங்க, நீர் அணிகலன் புனைந்த மகளிர் மாளிகைகளின்மேல் ஏறி வாழ்த்த மேகம் தவழும் மூங்கிலைத் தலமரமாகக் கொண்ட வேணுபுரத்தைப் பதியாகக் கொண்டு எழுந்தருளியுள்ளீர்.

<u>சீர்காழி</u>

ஆலைசேர் தண்கழனி
யழகாக நறவுண்டு
சோலைசேர் வண்டினங்க
ளிசைபாடத் தூமொழியார்
காலையே புகுந்திறைஞ்சிக்
கைதொழமெய் மாதினொடும்
பாலையாழ் வேணுபுரம்

பதியாகக் கொண்டீரே. #882

கரும்பாலைகளைக் கொண்ட தண்ணிய கழனிகளை உடையதும், சோலைகளில் வண்டுகள் தேனுண்டு இசை பாடி மகிழ்விப்பதும், காலை நேரங்களில் இனிய மொழிகள் பேச்சுமகளிர் ஆலயம் வந்து கைகூப்பித் தொழ, பாலையாழ் ஒலிக்கும் சிறப்பினது மாகிய வேணுபுரத்தை நீர் உமையம்மையோடு கூடிய திருமேனியராய் எழுந்தருளும் பதியாகக் கொண்டுள்ளீர்.

<u>சீர்காழி</u>

மணிமல்கு மால்வரைமேன்
மாதினொடு மகிழ்ந்திருந்தீர்
துணிமல்கு கோவணத்தீர்
சுடுகாட்டி லாட்டுகந்தீர்
பணிமல்கு மறையோர்கள்
பரிந்திறைஞ்ச வேணுபுரத்
தணிமல்கு கோயிலே
கோயிலாக வமர்ந்தீரே. #883

மணிகள் பதித்த பெரிய திருத்தோணிமலை மீது உமையம்மை யோடு மகிழ்ந்து உறைபவரே, கிழித்த கோவண ஆடையை உடுத்தவரே, சுடுகாட்டில் ஆடுவதை மகிழ்வாகக் கொள்பவரே, நீர் தொண்டில் விருப்புடைய அந்தணர்கள் அன்புடன் வணங்க வேணுபுரத்தில் விளங்கும் தண்மை மிக்க கோயிலே நுமக் குரிய கோயில் எனக் கொண்டு அமர்ந்துள்ளீர்.

<u>சீர்காழி</u>

நீலஞ்சேர் மிடற்றினீர்
நீண்டசெஞ் சடையினீர்
கோலஞ்சேர் விடையினீர்
கொடுங்காலன் றனைச்செற்றீர்
ஆலஞ்சேர் கழனி
யழகார்வேணு புரமமருங்
கோலஞ்சேர் கோயிலே
கோயிலாக்கொண்டீரே. #884

நீல நிறம் சேர்ந்த கண்டத்தை உடையவரே, நீண்டு சிவந்துள்ள சடைகளைக் கொண்டவரே, அழகிய விடையூர்தியை உடையவரே, கொடிய காலனை அழித்தவரே, நீர், தண்ணீர் நிரம்பிய கழனிகளை உடைய அழகிய வேணுபுரத்தில் உள்ள வேலைப்பாடுகளால் விளங்கித் தோன்றும் கோயிலையே நுமக்குரிய கோயில் எனக் கொண்டு

அமர்ந்துள்ளீர்.

சீர்காழி

இரைமண்டிச் சங்கேறுங்
கடல்சூழ்தென் னிலங்கையர்கோன்
விரைமண்டு முடிநெரிய
விரல்வைத்தீர் வரைதன்னிற்
கரைமண்டிப் பேரோதங்
கலந்தெற்றுங் கடற்கவினார்
விரைமண்டு வேணுபுர
மேயமர்ந்து மிக்கீரே. **#885**

சங்குகள் இரைகளை மிகுதியாக உண்டு கரைகளில் ஏறி இளைப்பாறும் கடலால் சூழப்பட்ட தென்திசையிலுள்ள இலங்கையர் மன்னனாகிய இராவணனின் மணம் மிக்க முடிகள் பத்தும் நெரியுமாறு கயிலைமலையின் கீழ் அகப்படுத்திக் கால் விரலை ஊன்றி அடர்த்தவரே, நீர் ஓதம் பெருகி கரையை அலைக்கும் கடலை அடுத்துள்ள அழகிய மணம் மிக்க வேணுபுரத்தையே நுமக்குரிய பதியாகக் கொண்டு அமர்ந்து பெருமையால் சிறந்து விளங்குகின்றீர்.

சீர்காழி

தீயோம்பு மறைவாணர்க்
காதியாந் திசைமுகன்மால்
போயோங்கி யிழிந்தாரும்
போற்றரிய திருவடியீர்
பாயோங்கு மரக்கலங்கள்
படுதிரையான் மொத்துண்டு
சேயோங்கு வேணுபுரஞ்
செழும்பதியாத் திகழ்ந்தீரே. **#886**

முத்தீயோம்பும் அந்தணர்கட்கு முதல்வனாகிய பிரமன், திருமால் ஆகியோர் வானில்பறந்தும், நிலத்தை அகழ்ந்தும் காணுதற்கு அரிய திருமுடி திருவடிகளை உடையவரே!, நீர், அலைகளால் மோதப் பெறும் பாய்மரக்கலங்களைக் கொண்ட கடலை அடுத்துள்ளதும் நீண்டு வளர்ந்த மூங்கிலைத்தலமரமாகக் கொண்டுள்ளதுமாகிய வேணுபுரத்தையே நுமக்குரிய வளமையான பதியாகக் கொண்டு விளங்குகின்றீர்.

சீர்காழி

நிலையார்ந்த வுண்டியினர்

நெடுங்குண்டர் சாக்கியர்கள்
புனலயானா ரறவுரையைப்
போற்றாதுன் பொன்னடியே
நிலையாகப் பேணீநீ
சரணென்றார் தமையென்றும்
விலையாக வாட்கொண்டு
வேணுபுரம் விரும்பினையே. **#887**

பெருமானே! நீர், நின்றுண்ணும் இயல்பினராய இழிந்த சமணர்கள் சாக்கியர்கள் கூறும் அறிவுரைகளைப் பொருட் படுத்தாது உம் பொன்னடிகளை விரும்பி நீயே சரண் என்று அடைந்தவர்களை எப்பொழுதும் நும்மைத் தந்து அவர்களைக் கொள்ளும் விலையீட்டில் ஆட்கொள்ள வேணுபுரத்தைத் நுமக்குரிய தலமாக விரும்பியுள்ளீர்.

திருத்தேவூர்

திருத்தேவூர்

திருத்தேவூர்,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தேவகுருநாதர்.
தேவியார் : தேன்மொழியம்மை.

பண்ணி லாவிய மொழியுமை
பங்கனெம் பெருமான் விண்ணில்
வானவர் கோன்விம
லன்விடை யூர்தி
தெண்ணி லாமதி தவழ்தரு
மாளிகைத் தேவூர்
அண்ணல் சேவடி யடைந்தன
மல்லலொன் றிலமே. **#888**

இனிய மொழியினளாகிய உமையம்மை பங்கனும், எம்தலைவனும், விண்ணுலகில் வாழும் வானவர் தலைவனும், குற்றமற்றவனும், விடையூர்தியும், ஆகிய, தெளிந்த நிலவொளியைத் தரும் மதிதவழும் மாளிகைகளைக் கொண்ட தேவூரில் விளங்கும் அண்ணலின் சேவடிகளை நாம் அடைந்துள்ளோம். ஆதலால் நாம் அல்லல்கள் இலராயினோம்.

திருத்தேவூர்

ஓதி மண்டலத் தோர்முழு
துய்யவெற் பேறு
சோதி வானவன் றுதிசெய
மகிழ்ந்தவன் றாநீர்த்
தீதில் பங்கயந் தெரிவையர்
முகமலர் தேவூர்
ஆதி சேவடி யடைந்தன
மல்லலொன் றிலமே. **#889**

நிலவுலகில் வாழ்வோர் ஓதிஉய்ய, உதயகிரியில் ஏறிவரும் கதிரவனால் வழிபடப்பட்ட வானவர் தலைவனாய் விளங்குவோனும், தன்னைத் துதிப்பாரைக் கண்டு மகிழ்ந்து உடனே அருள் புரிபவனும், ஆகிய குற்றமற்ற தாமரை மலர்கள் மகளிர்முகம் போல மலரும் சிறப்பினதாகிய தேவூரில் விளங்கும் முழுமுதற் கடவுளின் திருவடிகளை நாம்

அடைந்துள்ளோம். ஆதலால் நாம் அல்லல்கள் சிறிதும் இலராயினோம்.

திருத்தேவூர்

மறைக ளான்மிக வழிபடு
மாணியைக் கொல்வான்
கறுவு கொண்டவக் காலனைக்
காய்ந்தவெங் கடவுள்
செறுவில் வாளைகள் சேலவை
பொருவயற் றேவூர்
அறவன் சேவடி யடைந்தன
மல்லலொன் றிலமே. **#890**

வேதவிதிப்படி மிக்க வழிபாடுகளை இயற்றிய மார்க்கண்டேயான் உயிரைக் கவர்தற்குச் சினந்து வந்த காலனைக் காய்ந்த கடவுளும், சேற்றில் வாழும் வாளைமீன்களும் சேல்களும் சண்டையிடுகின்ற வயல்களை உடைய தேவூரில் விளங்கும் அறவனும் ஆகிய சிவபிரான் திருவடிகளை நாம் அடைந்துள்ளோம். ஆதலால் நாம் அல்லல்கள் சிறிதும் இலராயினோம்.

திருத்தேவூர்

முத்தன் சில்பலிக் கூர்தொறு
முறைமுறை திரியும்
பித்தன் செஞ்சடைப் பிஞ்ஞகன்
றன்னடி யார்கள்
சித்தன் மாளிகை செழுமதி
தவழ்பொழிற் றேவூர்
அத்தன் சேவடி யடைந்தன
மல்லலொன் றிலமே. **#891**

பாசங்களின் இயல்பாகவே விடுபட்டவனும், சிலவாக இடும் உணவுக்கு ஊர்கள் தோறும் முறையாகப் பலியேற்கும் பித்தனும், சிவந்தசடையைக் கொண்டுள்ள பிஞ்ஞகனும், தன் அடியவர்களின் சித்தத்தில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய மாளிகைகளையும், மதிதவழும் பொழில்களையும் உடைய தேவூர்ப்பெருமான் திருவடிகளை நாம் அடைந்துள்ளோம். ஆதலால் அல்லல்கள் சிறிதும் இலரானோம்.

திருத்தேவூர்

பாடு வாரிசை பல்பொருட்
பயனுகந் தன்பால்
கூடு வார்துணைக் கொண்டதம்

பற்றறப் பற்றித்
தேடு வார்பொரு ளானவன்
செறிபொழிற் றேவூர்
ஆடு வானடி யடைந்தன
மல்லலொன் றிலமே. **#892**

இசைபாடுபவர்க்கும், பல்பொருள் பயனாக அவன் இருத்தலை அறிந்துணர்ந்து அன்போடு கூடுவார்க்கும், உலகில் துணையாகக் கொண்டுள்ளவர்கள் மேல் செலுத்தும் பற்றுக்களை விட்டு அவனையே பற்றித் தேடுவார்க்கும் பொருளாயிருப்பவனும், செறிந்த பொழில்களை உடைய தேவூரில் நடனம் புரிபவனுமாகிய சிவபிரான் திருவடிகளை அடைந்தோம். ஆதலால் அல்லல்கள் இலரானோம்.

திருத்தேவூர்

பொங்கு பூண்முலைப் புரிகுழல்
வரிவளைப் பொருப்பின்
மங்கை பங்கினன் கங்கையை
வளர்சடை வைத்தான்
திங்கள் சூடிய தீநிறக்
கடவுடென் றேவூர்
அங்க ணன்றனை யடைந்தன
மல்லலொன் றிலமே. **#893**

கிளர்ந்து எழுந்த அணிகலன் பூண்டுள்ள தனங்களையும், நெறிந்த கூந்தலையும், வரிவளையல்களையும் கொண்டுள்ள மலைமங்கை பங்கினனும், கங்கையை வளர்ந்த சடைமீது வைத்தவனும், திங்கள் சூடியவனும், தீப்போன்ற செந்நிறமுடைய கடவுளும் ஆகிய, அழகிய தேவூரில் எழுந்தருளிய அழகிய கருணை யாளனை அடைந்தோம். ஆதலால் அல்லல்கள் சிறிதும் இலரானோம்.

திருத்தேவூர்

வன்பு யத்தவத் தானவர்
புரங்களை யெரியத்
தன்பு யத்துறத் தடவரை
வளைத்தவன் றக்க
தென்ற மிழ்க்கலை தெரிந்தவர்
பொருந்திய தேவூர்
அன்பன் சேவடி யடைந்தன
மல்லலொன் றிலமே. **#894**

வலியதோள்களை உடைய அவுணர்தமபுரங்கள் எரியுமாறு

தன்தோள்களால் பெரிய மேருமலையை வில்லாகப் பொருந்த வளைத்தவனும், தென்தமிழ்க் கலைகளை நன்குணர்ந்தவர் வாழும் தேவூரில் விளங்கும் அன்பனுமாகிய சிவபிரானின் சேவடிகளை அடைந்தோம். ஆதலால் அல்லல்கள் சிறிதும் இலரானோம்.

திருத்தேவூர்

தருவு யர்ந்தவெற் பெடுத்தவத்
தசமுக னெரிந்து
வெருவ வூன்றிய திருவிர
னெகிழ்த்துவாள் பணித்தான்
தெருவு தோறுநற் றென்றல்வந்
துலவிய தேவூர்
அரவு சூடியை யடைந்தன
மல்லலொன் றிலமே. **#895**

சிறப்புடைய மரங்கள் உயர்ந்து வளர்ந்த கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த பத்துத் தலைகளை உடைய இராவணன் நெரிந்து வெருவுமாறு ஊன்றிய கால்விரலை, அவன் பாடல் கேட்டு நெகிழச்செய்து அவனுக்கு வாள் முதலியவற்றை வழங்கியவனும், தெருக்கள் தோறும் நல்ல தென்றல் வந்துலவும் தேவூரில் பாம்பணிந்தவனாய் விளங்குவோனுமாகிய சிவபிரானைச் சரணாக அடைந்தோம். ஆதலால் அல்லல்கள் இலரானோம்.

திருத்தேவூர்

முந்திக் கண்ணனு நான்முக
னும்மவர் காணா
எந்தை திண்டிற லிருங்களி
றுரித்தவெம் பெருமான்
செந்தி னத்திசை யறுபத
முரறிருந் தேவூர்
அந்தி வண்ணனை யடைந்தன
மல்லலொன் றிலமே. **#896**

திருமால் பிரமர்கள் அடிமுடிகாண்போம் என முற்பட்டுத் தேடிக் காணாது தொழுத எந்தையும், திண்ணிய வலிமை பொருந்திய பெரிய யானையை உரித்த எம்பெருமானும், செந்து என்னும் இசைவகையை இசைத்து வண்டுகள் முரலும் தேவூரில் விளங்கும் அந்திவண்ணனும் ஆகிய சிவபிரானைச் சரணாக அடைந்தோம். ஆதலால் அல்லல்கள் இலரானோம்.

திருத்தேவூர்

பாறு புத்தருந் தவமணி
சமணரும் பலநாள்
கூறி வைத்ததோர் குறியினைப்
பிழையெனக் கொண்டு
தேறி மிக்கநஞ் செஞ்சடைக்
கடவுடென் றேவூர்
ஆறு சூடியை யடைந்தன
மல்லலொன் றிலமே. **#897**

ஓடித் திரியும் ‘புத்தர்களும், தவத்தை மேற்கொண்ட சமணரும் பலநாள்களாகக் கூறிவரும் இலக்குப் பிழையானது எனத் தெளவுற்று, எங்கும் மிகுந்து தோன்றும் நம் செஞ்சடைக் கடவுள் எழுந் தருளிய தேவூரை அடைந்து கங்கையை அணிந்துள்ள சிவபிரானைச் சரணாக அடைந்தோம். ஆதலால் அல்லல்கள் சிறிதும் இலரானோம்.

திருத்தேவூர்

அல்ல லின்றிவிண் ணாள்வர்கள்
காழியர்க் கதிபன்
நல்ல செந்தமிழ் வல்லவன்
ஞானசம் பந்தன்
எல்லை யில்புகழ் மல்கிய
வெழில்வளர் தேவூர்த்
தொல்லை நம்பனைச் சொல்லிய
பத்தும்வல் லாரே. **#898**

காழிவாழ் மக்களுக்குத்தலைவனும், நல்ல செந்தமிழ் வல்லவனும் ஆகிய ஞானசம்பந்தன் எல்லையற்ற புகழ் பொருந்திய அழகிய தேவூரில் விளங்கும் பழமையான இறைவனைப் போற்றிப் பாடிய இப்பதிகப்பாடல்கள் பத்தையும் ஓதவல்லவர் துன்பங்கள் இன்றி விண்ணுலகை ஆள்வர்.

திருக்கொச்சைவயம்

சீர்காழி

திருக்கொச்சைவயம்,
பண் - பியந்தைக்காந்தாரம்

நீலநன் மாமிடற்ற னிறைவன் சினத்தன்
நெடுமா வுரித்த நிகரில்
சேலன கண்ணிவண்ண மொருகூறுருக்கொள்
திகழ்தேவன் மேவு பதிதான்
வேலன கண்ணிமார்கள் விளையாடு மோசை
விழவோசை வேத வொலியின்
சாலநல் வேலையோசை தருமாட வீதி
கொடியாடு கொச்சை வயமே. **#899**

நீல நிறம் பொருந்திய கண்டத்தினனும், வலிமை நிறைந்த சினம் மிக்க பெரிய யானையை உரித்தவனும், சேல்மீன் போன்ற கண்ணினளாகிய ஒப்பற்ற உமையம்மையை ஒரு கூற்றாகக் கொண்ட வடிவினனும் ஆகிய சிவபிரான் மேவிய பதி, வேல்போன்ற கண்களைக் கொண்ட அழகிய பெண்கள் விளையாடும் ஒலியும், விழாக்களின் ஆரவாரமும், வேத ஒலியும், கடல் ஓசையும் நிறைந்த, கொடி ஆடும் மாட வீதிகளைக் கொண்டுள்ள கொச்சைவயமாகும்.

சீர்காழி

விடையுடை யப்பனொப்பி னடமாட வல்ல
விகிர்தத் துருக்கொள் விமலன்
சடையிடை வெள்ளெருக்க மலர்கங்கை திங்கள்
தகவைத்த சோதி பதிதான்
மடையிடை யன்னமெங்கும் நிறையப் பரந்து
கமலத்து வைகும் வயல்சூழ்
கொடையுடை வண்கையாளர் மறையோர்க ளென்றும்
வளர்கின்ற கொச்சை வயமே. **#900**

விடையை ஊர்தியாகக் கொண்ட தந்தையும், ஒப்பற்ற நடனங்கள் புரிபவனும், பல்வேறு வடிவங்களைக் கொண்ட விமலனும், சடையில் வெள் எருக்கமலர் கங்கை திங்கள் ஆகியவற்றைப் பொருந்தச் சூடிய ஒளிவடிவினனும் ஆகிய சிவபிரானது பதி, மடைகளில் அன்னப்பறவைகள் நிறைந்து பரவித் தாமரைமலர்கள் மேல் தங்கும் வயல்கள் சூழ்ந்ததும், கொடை வள்ளல்களாய் மறையவர்கள் வாழ்வதுமாகிய கொச்சை வயமாகும்.

<u>சீர்காழி</u>

படவர வாடுமுன்கை யுடையா னிடும்பை
களைவிக்கும் எங்கள் பரமன்
இடமுடை வெண்தலைக்கை பலிகொள்ளும்இன்பன்
இடமாய வேர்கொள் பதிதான்
நடமிட மஞ்ஞைவண்டு மதுவுண்டு பாடு
நளிர்சோலை கோலு கனகக்
குடமிடு கூடமேறி வளர்பூவை நல்ல
மறையோது கொச்சை வயமே. **#901**

படம் பொருந்திய பாம்பு ஆடும் முன்கையை உடையவனும், துன்பங்களைப் போக்கும் எம் தலைவனும், அகன்ற வெள்ளிய தலையோட்டைக் கையில் ஏந்திப் பலிகொள்ளும் இன்பனும் ஆகிய சிவபிரானுக்கு இடமாக விளங்கும் அழகிய தலம், மயில்கள் நடனமாட வண்டுகள் மது உண்டு பாடும் குளிர்ந்த சோலைகள் சூழ்ந்ததும், பொற்கலசம் பொருந்திய கூடங்களில் நாகணவாய்ப்பறவைகள் வேதங்களை ஓதுவதுமாகிய கொச்சை வயமாகும்.

<u>சீர்காழி</u>

எண்டிசை பாலரெங்கு மிகலிப் புகுந்து
முயல்வுற்ற சிந்தை முடுகிப்
பண்டொளி தீபமாலை யிடுதூப மோடு
பணிவுற்ற பாதர் பதிதான்
மண்டிய வண்டன்மிண்டி வருநீர பொன்னி
வயல்பாய வாளை குழுமிக்
குண்டகழ் பாயுமோசை படைநீட தென்ன
வளர்கின்ற கொச்சை வயமே. **#902**

எண்டிசைப் பாலகர்களாகிய இந்திரன் முதலானோர் எங்கும் சூழ்ந்து புகுந்து மன எழுச்சியோடு விளக்குகளை வரிசையாக ஏற்றித்தூபம் இட்டு வழிபடும் திருவடிகளை உடைய சிவபிரானது பதி, செறிந்த வண்டல் மணலோடு வரும் பொன்னி நதியின் நீர் வயல்களில் பாய வாளை மீன்கள் கூடி ஆழமான இடங்களில் பாய்ந்து விளையாடும் ஓசை, படைகள்வரும் ஓசைபோல வளர்கின்ற கொச்சைவயமாகும்.

<u>சீர்காழி</u>

பனிவளர் மாமலைக்கு மருகன் குபேர
னொடுதோழ மைக்கொள் பகவன்
இனியன வல்லவற்றை யினிதாக நல்கும்

இறைவ னிடங்கொள் பதிதான்
முனிவர்கள் தொக்குமிக்க மறையோர்க ளோமம்
வளர் தூம மோடி யணவிக்
குனிமதி மூடிநீடு முயர்வான் மறைத்து
நிறைகின்ற கொச்சை வயமே. #903
பனிபடர்ந்த மலைக்கு மன்னாகிய இமவானின் மருமகனும், குபேரனோடு தோழமை கொண்ட பகவனும், இனியன அல்லாதவற்றையும் இனிதாக ஏற்று அருள் நல்குபவனுமாகிய இறைவன் இடமாகக் கொண்டருளும் தலம், முனிவர் குழாங்களோடு அந்தணர்கள் வளர்க்கும் வேள்விப்புகை சென்று பரவி வளைந்த பிறையையும் வானையும் மறைத்து நிறையும் கொச்சை வயமாகும்.

சீர்காழி

புலியதள் கோவணங்க ளுடையாடை யாக
வுடையா னினைக்கு மளவில்
நலிதரு முப்புரங்க ளெரிசெய்த நாத
னலமா விருந்த நகர்தான்
கலிகெட வந்தணாளர் கலைமேவு சிந்தை
யுடையார் நிறைந்து வளரப்
பொலிதரு மண்டபங்க ளுயர்மாட நீடு
வரைமேவு கொச்சை வயமே. #904
புலித்தோலையும் கோவணத்தையும், தான் பெற்றுடைய ஆடையாகக் கொண்டவனும், நினைக்கும் ஒருநொடிப் பொழுதில் உலகை நலிவு செய்து வந்த முப்புரங்களை எரிசெய்தழித்த நாதனும் ஆகிய சிவபிரான் மகிழ்வோடு விளங்கும் தலம், கலிகெட வேள்வி செய்யும் அந்தணர்களும் கலையுள்ளம் கொண்டவர்களும் நிறைந்து வாழ்வதும் அழகிய மண்டபங்களும் உயர்ந்த மாடங்களும் நீண்ட மலைகள் போலத் தோன்றுவதுமாய கொச்சைவயமாகும்.

சீர்காழி

இப்பதிகத்தின் 7-ம் செய்யுள் சிதைந்து போயிற்று. #905

சீர்காழி

மழைமுகில் போலுமேனி யடல்வா ளரக்கன்
முடியோடு தோள்க ணெரியப்
பிழைகெட மாமலர்ப்பொன் னடிவைத்த பேயொ
டுடனாடி மேய பதிதான்
இழைவள ரல்குன்மாத ரிசைபாடி யாட

விடுமூச லன்ன கமுகின்
குழைதரு கண்ணிவிண்ணில் வருவார் கடங்க
ளடிதேடு கொச்சை வயமே. **#906**
மழைமுகில் போன்ற கரிய மேனியையும் வலிய வாளையும் உடைய அரக்கனாகிய இராவணன் தன் தலைகளோடு தோள்களும் நெரியவும், அவனது பிழை நீங்கவும் சிறந்த மலர்போன்ற திருவடியைச் சிறிதே ஊன்றியவனும், பேய்களோடு உடனாடி மகிழ்பவனும் ஆய சிவபிரான் எழுந்தருளியபதி, மேகலையணிந்த அல்குலை உடைய மகளிர் இசைபாடி ஆட, வானளாவ உயர்ந்த கமுக மரத்தழைகள் விண்ணில் செல்வார் அடிகளை வருடுமாறு உயர்ந்துள்ள கொச்சைவயமாகும்.

சீர்காழி

வண்டமர் பங்கயத்து வளர்வானும் வைய
முழுதுண்ட மாலு மிகலிக்
கண்டிட வொண்ணுமென்று கிளறிப் பறந்து
மறியாத சோதி பதிதான்
நண்டுண நாரைசெந்நெல் நடுவே யிருந்து
விரைதேர போது மதுவிற்
புண் ரி கங்களோடு குமுதம் மலர்ந்து
வயன்மேவு கொச்சை வயமே. **#907**
வண்டுகள் மொய்க்கும் தாமரை மலர்மேல் எழுந்தருளிய பிரமனும், உலகம் முழுவதையும் உண்ட திருமாலும் தம்முள் மாறுபட்டு அடி முடிகளைக் காண்போம் என்று திருமால் பன்றியாய் நிலத்தைக் கிளறியும் பிரமன் அன்னமாய்ப் பறந்து சென்றும் அறிய முடியாதவாறு சோதிவடிவாய் நின்ற சிவபிரானது பதி, நண்டு உண்ணவும் நாரைகள் செந்நெல் நடுவே இருந்து இரைதேட, நிரம்பிய தேனுடன் தாமரை மலரோடு குவளை மலர்கள் வயலிடையே மலரும் கொச்சைவயமாகும்.

சீர்காழி

கையினி லுண்டுமேனி யுதிர்மாசர் குண்ட
ரிடுசீவ ரத்தி னுடையார்
மெய்யுரை யாதவண்ணம் விளையாட வல்ல
விகிர்தத் துருக்கொள் விமலன்
பையுடை நாகவாயில் எயிறார மிக்க
குரவம் பயின்று மலரச்
செய்யினில் நீலமொட்டு விரியக்கமழ்ந்து
மணநாறு கொச்சை வயமே. **#908**
கையில் உணவை ஏற்று உண்டு உடலினின்று உதிரும் அழுக்கினரும்,

குண்டர்களும், சீவர உடையினராகிய ஆகிய சமணரும், புத்தரும் மெய்யுரையாதவாறு செய்து விளையாடவல்ல வேறுபட்ட பல்வகை உருக்கொண்டருளும் பரமனாகிய திருச்சிற்றம்பலம் சிவபிரானது பதி, படப் பாம்பின் எயிறு போன்று குரவம் மலர, வயல்களில் நீல மலர்கள் அலர, இவற்றால் மணம் சிறந்து விளங்கும் கொச்சைவயமாகும்.

சீர்காழி

இறைவனை ஒப்பிலாத வொளிமேனி யானை
யுலகங்க ளேழு முடனே
மறைதரு வெள்ளமேவி வளர்கோயின் மன்னி
யினிதா விருந்த மணியைக்
குறைவில ஞானமேவு குளிர்பந்தன் வைத்த
தமிழ்மாலை பாடுமவர் போய்
அறைகழ லீசனாளு நகர்மேவி யென்றும்
அழகா விருப்ப தறிவே. **#909**

எங்கும் நிறைந்தவனை, ஒப்பில்லாத ஒளி மயமான திருமேனியனை, ஏழுலகங்களையும் மறைக்குமாறு ஊழி வெள்ளம் பரவியகாலத்தும் அழியாது மிதந்து வளர்ந்த திருத்தோணி மலைக் கோயிலில் மன்னி இனிதாக இருந்த மாணிக்கத்தைக் குறைவற்ற ஞானம்பெற்ற இனிய ஞானசம்பந்தன் பாடிப்பரவிய தமிழ் மாலைப் பத்தையும் பாடிப் போற்றுபவர் ஒலிக்கின்ற கழல் அணிந்த ஈசன் ஆட்சி செய்யும் சிவலோகத்தை அடைந்து இனிதாக ஞான வடிவினராய் வீற்றிருப்பர்.

திருநனிபள்ளி

திருநனிபள்ளி

திருநனிபள்ளி,
பண் - பியந்தைக்காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நற்றுணையப்பர்.
தேவியார் : பர்வதராசபுத்திரி.

காரைகள் கூகைமுல்லை களவாகை யீகை
படர்தொடரி கள்ளி கவினிச்
சூரைகள் பம்மிவிம்மு சுட கா டமர்ந்த
சிவன்மேய சோலை நகர்தான்
தேரைக ளாரைசாய மிதிகொள்ள வாளை
குதிகொள்ள வள்ளை துவள
நாரைக ளாரல்வாரி வயன்மேதி வைகும்
நனிபள்ளி போலும் நமர்காள். **#910**

நமர்காள்! காரை, கூகை, முல்லை, களவாகை, ஈகை, படர்ந்த தொடரி, கள்ளி ஆகிய தாவரங்கள் அழகுச் செய்யச் சூரை செறிந்த சுடுகாட்டை விரும்பும் சிவபிரான் எழுந்தருளிய, சோலைகள் சூழ்ந்த நகர், தேரைகள் ஆரைக்கொடிகளை மிதித்துத்துள்ள, அதனைக் கண்ட வாளைமீன்கள் துள்ள, அதனால் வள்ளைக் கொடிகள் துவள, நாரைகள் ஆரல் மீன்களை வாரி உண்ணுமாறு அமைந்த வயல்களில் எருமைகள் படிந்து மகிழும் நனிபள்ளியாகும்.

திருநனிபள்ளி

சடையிடைப் புக்கொடுங்கி யுளதங்கு வெள்ளம்
வளர்திங்கள் கண்ணி அயலே
இடையிடைவைத்ததொக்கு மலர்தொத்து மாலை
யிறைவன் னிடங்கொள் பதிதான்
மடையிடை வாளைபாய முகிழ்வாய் நெரிந்து
மணநாறு நீலம் மலரும்
நடையுடை யன்னம்வைகு புனலம் படப்பை
நனிபள்ளி போலும் நமர்காள் **#911**

சடையிடைப்புக்கு ஒடுங்கியுள்ளதாய்த் தங்கிய கங்கையையும், வளரும் பிறையாகிய கண்ணியையும், இடையிடையே விரவிய கொத்தாகிய மாலையையும் உடைய இறைவன் இடங்கொண்டருளும் பதி, மடையிடையே வாளைமீன்கள் துள்ள, முகிழ்த்துள்ள வாய் விரிந்து

மணம் வீசும் குவளைமலர்களுடையன வாய் நடையில் சிறந்த அன்னங்கள் வாழும் நீர்நிலைகளை உடைய தோட்டங்கள் சூழ்ந்த நனிபள்ளியாகும்.

திருநனிபள்ளி

பெறுமலர் கொண்டுதொண்டர் வழிபாடு செய்யல்
ஒழிபா டிலாத பெருமான்
கறுமலர் கண்டமாக விடமுண்ட காளை
யிடமாய காதல் நகர்தான்
வெறுமலர் தொட்டுவிட்ட விசைபோன கொம்பின்
விடுபோ தலர்ந்த விரைசூழ்
நறுமல ரல்லிபுல்லி யொலிவண் டுறங்கு
நனிபள்ளி போலும் நமர்காள். **#912**

அடியவர்கள் தங்களுக்குக் கிடைத்த மலர்களைக் கொண்டு வழிபட அதனை ஒழியாது ஏற்றருளும் தலைவனும், கருங்குவளைமலர் போலத் தனது கண்டம் நிறம் உறுமாறு விடத்தை உண்ட காளையும் ஆகிய சிவபிரான் விரும்பி உறையும் இடம், வண்டுகள் தங்கித் தேன் உண்டு விட்ட வெறுமலர்களோடு கூடி விசைத்து எழும் கொம்புகளில் விரியும் பருவத்துள்ள மணம் பொருந்திய மலர்களின் தேன் உண்டு அகஇதழ்களில் வண்டுகள் உறங்கும் பொழில்களை உடைய நனிபள்ளியாகும்.

திருநனிபள்ளி

குளிர்தரு கங்கைதங்கு சடைமா டிலங்கு
தலைமாலை யோடு குலவி
ஒளிர்தரு திங்கள்சூடி யுமைபாக மாக
வுடையா னுகந்த நகர்தான்
குளிர்தரு கொம்மலோடு குயில்பாடல் கேட்ட
பெடைவண்டு தானும் முரல
நளிர்தரு சோலைமாலை நரைகுருகு வைகு
நனிபள்ளி போலும் நமர்காள். **#913**

குளிர்ந்த கங்கை தங்கிய சடையின்கண் விளங்கிய தலைமாலையோடு கூடி, ஒளிதரும் திங்களைச் சூடி, உமையம்மையை ஒருபாகமாக உடைய பெருமான் உகந்து எழுந்தருளிய நகர், குளிர்ந்த, கொம்பு என்னும் இசைக்கருவியின் பாடல்களோடு குயில் கூவும் இசையையும் கேட்ட பெடை வண்டு தானும் முரல நண்ணிய சோலைகளில் வரிசையாக நாரைகளும் குருகுகளும் வைகும் நனிபள்ளியாகும்.

திருநனிபள்ளி

தோடொரு காதனாகி யொருகா திலங்கு
சுரிசங்கு நின்று புரளக்
காடிட மாகநின்று கனலாடும் எந்தை
யிடமாய காதல் நகர்தான்
வீடுடன் எய்துவார்கள் விதியென்று சென்று
வெறிநீர் தெளப்ப விரலால்
நாடுட னாடுசெம்மை யொலிவெள்ள மாரு
நனிபள்ளி போலும் நமர்காள். **#914**

ஒருகாதில் தோடணிந்தவனாய், ஒருகாதில் வளைந்த சங்கைக் குழைதாழ நின்று புரளுமாறு அணிந்தவனாய்ச் சுடுகாட்டைத் தனது இருப்பிடமாகக் கொண்டு அனலிடை ஆடும் எந்தையாகிய சிவபிரானது பதி, வீடு அடைய விரும்பும் அடியவர்கள் விதிமுறையிது என்று தெரிந்து நீராடி மணம் பொருந்திய நீரை விரலால் தெளத்து அர்க்கியம்தர, ஒலியோடு பெருவெள்ளமாய்ப் பெருகி நாடுமுழுதும் பரவி வரும் காவிரியின் கரையில் விளங்கும் நனிபள்ளியாகும்.

திருநனிபள்ளி

மேகமொ டோடுதிங்கண் மலரா அணிந்து
மலையான் மடந்தை மணிபொன்
ஆகமொர் பாகமாக அனலாடும் எந்தை
பெருமான் அமர்ந்த நகர்தான்
ஊகமொ டாடுமந்தி யுகளுஞ் சிலம்ப
அகிலுந்தி யொண்பொன் இடறி
நாகமொ டாரம்வாரு புனல்வந் தலைக்கு
நனிபள்ளி போலும் நமர்காள். **#915**

மேகங்களோடு ஓடும் திங்களைக் கண்ணியாகச் சூடி, மலைமகளை அழகிய பொன்மயமான திருமேனியின் ஒருபாகமாகக் கொண்டு அழலின்கண் நின்று ஆடும் எந்தையாகிய பெருமான் எழுந்தருளிய நகர். கருங்குரங்குகளும், மந்திகளும் விளையாடும் மலையின்கண் உள்ள அகில் மரங்களையும் ஒளி பொருந்திய பொன்னையும் நாகமரம் சந்தன மரம் ஆகியவற்றையும் புரட்டியும் எற்றியும் ஓடிவரும் காவிரிநீர் வந்து அலைக்கும் நனிபள்ளியாகும்.

திருநனிபள்ளி

தகைமலி தண்டுசூலம் அனலுமிழு நாகங்
கொடுகொட்டிவீணை முரல

வகைமலி வன்னிகொன்றை மதமத்தம் வைத்த
பெருமான் உகந்த நகர்தான்
புகைமலி கந்தமாலை புனைவார்கள் பூசல்
பணிவார்கள் பாடல் பெருகி
நகைமலி முத்திலங்கு மணல்சூழ் கிடக்கை
நனிபள்ளி போலும் நமர்காள். **#916**
பெருமை பொருந்திய தண்டு, சூலம், அனல் உமிழும் நாகம்
ஆகியவற்றை உடையவராய், வகையாக அமைந்த வன்னி கொன்றை
ஊமத்தை ஆகியவற்றை அணிந்து கொடுகொட்டி என்னும்
திருக்கூத்தியற்றிய பெருமான் உகந்த நகர், புகையாக எழுந்த
மணத்துடன் மாலை புனைவார்கள் புகழும் ஓசையும், பணிந்து
போற்றுவார் பாடும் பாடல் ஓசையும் பெருகி ஒளிவீசும் முத்துக்கள்
இலங்கும் மணல் சூழபடப்பைகளை உடைய நனிபள்ளியாகும்.

திருநனிபள்ளி

வலமிகு வாளன்வேலன் வளைவா ளெயிற்று
மதியா வரக்கன் வலியோ
டுலமிகு தோள்கள்ஒல்க விரலா லடர்த்த
பெருமான் உகந்த நகர்தான்
நிலமிகு கீழுமேலு நிகராது மில்லை
யெனநின்ற நீதி யதனை
நலமிகு தொண்டர்நாளும் அடிபரவல் செய்யும்
நனிபள்ளி போலும் நமர்காள். **#917**
வலிமை மிக்க வாள் வேல் ஆகியவற்றையும் வளைந்த ஒளி மிக்க
பற்களையும் உடைய மதியா அரக்கனாகிய இராவணன் உடல்
வலிமையோடு கற்றூண் போன்ற தோள் வலியும் இழக்குமாறு கால்
விரலால் அடர்த்த பெருமான் உகந்த நகர், கீழுலகிலும் மேலுலகிலும்
தனக்கு நிகர் யாருமில்லை என்கின்ற நீதிவடிவினனாகிய அவனை
நன்மைமிக்க தாண்டர்கள் நாளும் திருவடிகளைப் பரவும்
நனிபள்ளியாகும்.

திருநனிபள்ளி

நிறவுரு வொன்றுதோன்றி யெரியொன்றி நின்ற
தொருநீர்மை சீர்மை நினையார்
அறவுறு வேதநாவன் அயனோடுமாலு
மறியாத அண்ணல் நகர்தான்
புறவிரி முல்லைமௌவல் குளிர்பிண்டி புன்னை
புனைகொன்றை துன்று பொதுளி

நறவிரி போதுதாது புதுவாச நாறும்
நனிபள்ளி போலும் நமர்காள். **#918**

நிறம் பொருந்தியதொரு எரிவடிவம் தோன்றித் தங்களிடையே நிற்க அதன் நீர்மை சீர்மை ஆகியவற்றை நினையாதவராய் அறம்பொருந்திய வேதங்களை ஓதும் நாவினனாகிய பிரமனும் திருமாலும் முடி அடிகளைத் தேடமுயன்று அறியாதவராய் நின்ற தலைவனது நகர், முல்லை நிலத்தில் விரிந்த முல்லை, மல்லிகை, அசோகு, புன்னை, கொன்றை ஆகியன செறிந்த சோலைகளில் புத்த மலர்களில் புதுமணம் கமழும் நனிபள்ளியாகும்.

திருநனிபள்ளி

அனமிகு செல்குசோறு கொணர்கென்று கையில்
இடவுண்டு பட்ட அமணும்
மனமிகு கஞ்சிமண்டை யதிலுண்டு தொண்டர்
குணமின்றி நின்ற வடிவும்
வினைமிகு வேதநான்கும் விரிவித்த நாவின்
விடையான் உகந்த நகர்தான்
நனமிகு தொண்டர்நாளும் அடிபரவல் செய்யு
நனிபள்ளி போலும் நமர்காள். **#919**

அன்னமாக, வயிற்றுக்குட் செல்லும் சோறு கொணர்க எனக் கேட்டுக் கையில் இட உண்டு திரியும் அமணரும், மனம் விரும்பிக் கஞ்சியைப் பனைமட்டையாலியன்ற மண்டையில் ஏற்றுண்டு தொண்டர்க்குரிய குணமின்றி நிற்கும் புத்தரும் கூறுவனவற்றைக் கொள்ளாது கிரியைகள் மிகுந்த வேதங்கள் நான்கையும் ஓதிய நாவினை உடைய விடையூர்தியான் விரும்பிய நகர், தௌந்த ஞானமுடைய தொண்டர்கள் நாள்தோறும் திருவடிகளைப் பரவிப் போற்றும் நனிபள்ளியாகும்.

திருநனிபள்ளி

கடல்வரை யோதமல்கு கழிகானல் பானல்
கமழ்காழி யென்று கருதப்
படுபொரு ளாறுநாலும் உளதாக வைத்த
பதியான ஞான முனிவன்
இடுபறை யொன்றவத்தர் பியன்மே லிருந்தின்
இசையா லுரைத்த பனுவல்
நடுவிரு ளாடுமெந்தை நனிபள்ளி யுள்க
வினை கெடுதலாணை நமதே. **#920**

கடல் எல்லையில் உள்ள வெள்ளம் மிக்க கழிகளையும் சோலைகளையும் உடையதாய்க் குவளைமலரின் மணம் கமழும் காழி என்று கருதப்படும்

பதியின்கண் நால்வேத, ஆறங்கங்களை அறிந்துணர்ந்தவனாய்த் தோன்றிய ஞானமுனிவன் தந்தையார் தோள்மேல் இருந்து இன்னிசையோடு உரைத்த இப்பதிகத்தை ஓதிப்பறை ஓசையோடு நள்ளிருளில் நடனமாடும் எந்தை நனிபள்ளியை உள்க வினைகள் கெடும் என்பது நமது ஆணையாகும்.

கோளாறு திருப்பதிகம்

கோளாறு திருப்பதிகம்

கோளாறு திருப்பதிகம்,
பண் - பியந்தைக்காந்தாரம், இப்பதிகம் பாண்டிநாட்டுக் கெழுந்தருளியபோது அருளிச்செய்தது.

வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறுநல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. #921 ★★★★★

மூங்கில்போன்ற தோளினை உடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டவனும் விடம் உண்ட கண்டனும் ஆகிய சிவபிரான் திங்கள் கங்கை ஆகியவற்றை முடிமேல் அணிந்தவனாய் மகிழ்ச்சியுற்ற நிலையில் வீணையைமீட்டிக்கொண்டு என் உளம் புகுந்து தங்கியுள்ள காரணத்தால் ஞாயிறு, திங்கள் முதலான ஒன்பான் கோள்களும் குற்றம் அற்ற நலத்தைச் செய்வனவாம். அவை அடியார்களுக்கு மிகவும் நல்லனவே செய்யும்.

கோளாறு திருப்பதிகம்

என்பொடு கொம்பொடாமை யினவமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. #922

என்பு, பன்றிக்கொம்பு, ஆமையோடு ஆகியன மார்பின்கண் இலங்கப் பொன்போன்ற மகரந்தம் பொருந்திய ஊமத்தைமலர்மாலை, கங்கை ஆகியவற்றை முடிமேல் சூடி உமையம்மையாரோடு எருதேறி வந்து என் உளம் புகுந்து எழுந்தருளியிருத்தலால், அசுவினி முதலாக உள்ள நாள்களில் ஆகாதனவாகிய ஒன்பது, பத்து, பதினாறு, பதினெட்டு, ஆறு ஆகிய எண்ணிக்கையில் வருவனவும் பிறவுமான நட்சத்திரங்கள்

அன்போடு மிக நல்லனவே செய்யும். அடியவர்கட்கும் மிக நல்லனவே செய்யும்.

<u>கோளாறு திருப்பதிகம்</u>

உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கண் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. **#923**

அழகிய பவளம் போன்ற திருமேனியில் ஒளி பொருந்திய திருவெண்ணீற்றை அணிந்து மணம் பொருந்திய கொன்றை, திங்கள் ஆகியவற்றை முடிமேல் அணிந்து சிவபிரான் உமையம்மையாரோடு வெள்ளை விடைமீது ஏறிவந்து என் உளம் புகுந்துள்ள காரணத்தால் திருமகள், துர்க்கை, செயமகள், நிலமகள், திசைத் தெய்வங்கள் ஆன பலரும் அரிய செல்வங்களையே நல்லனவாகத் தரும் அடியாரவர்கட்கும் மிகவும் நல்லனவாகவே தரும்.

<u>கோளாறு திருப்பதிகம்</u>

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. **#924**

பிறைபோன்ற நுதலை உடைய உமையம்மையாரோடு ஆலின்கீழ் இருந்து வேதங்களை அருளிய எங்கள் பரமன் கங்கை, கொன்றைமாலை ஆகியனவற்றை முடிமேல் அணிந்து என் உளம் புகுந்துள்ள காரணத்தால், சினம் மிக்க காலன், அக்கினி, யமன், யமதூதர், கொடியநோய்கள் முதலிய அனைத்தும் மிக்க குணமுடையனவாய் நல்லனவே செய்யும். அடியவர்களுக்கும் மிகவும் நல்லனவே செய்யும்.

<u>கோளாறு திருப்பதிகம்</u>

நஞ்சணி கண்டன்எந்தை மடவாள்த னோடும்

விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடு உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்லநல்ல வவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. **#925**

நஞ்சணிந்த கண்டனும், எந்தையும், உமையம்மையாரோடு விடையேறி வரும் எம் தலைவனுமாகிய சிவபிரான், இருள் செறிந்தவன்னிஇலை, கொன்றைமாலை ஆகியவற்றை முடிமேல் அணிந்து என் உளம் புகுந்துள்ள காரணத்தால் கொடிய சின முடைய அவுணர், இடி, மின்னல், செருக்குடைய பூதங்கள் ஆகியன நம்மைக் கண்டு அஞ்சி நல்லனவே செய்யும். அடியவர்கட்கும் மிக நல்லனவே செய்யும்.

<u>கோளாறு திருப்பதிகம்</u>

வாள்வரிய தளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடு உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. **#926**

ஒளியும் வரியும் பொருந்திய புலித்தேலாடையை உடுத்து வரிந்து கட்டிய கோவண ஆடையராய் உள்ள பெருமானார் உமையம்மையாரோடும் உடனாய் அன்றலர்ந்த மலர்கள், வன்னி, கொன்றை, கங்கை ஆகியவற்றை முடிமிசைச் சூடிவந்து என் உளத்தின் கண் புகுந்துள்ள காரணத்தால் வலியகுரங்கு, புலி., கொலையானை, பன்றி, கொடிய பாம்பு, கரடி, சிங்கம் ஆகியன நமக்கு நல்லனவே செய்யும்! அடியார் கட்கும் மிக நல்லனவே செய்யும்.

<u>கோளாறு திருப்பதிகம்</u>

செப்பிள முலைநன்மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா

அப்படி நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. **#927**

செப்புப் போன்ற இள நகில்களை உடைய உமைநங்கை ஒருபாகத்தே விளங்க விடையேறிவரும் செல்வனாகிய சிவபிரான் தன்னை அடைந்த இளமதியையும், கங்கையையும் முடிமேல் அணிந்தவனாய், என் உள்ளத்தின்கண் புகுந்து எழுந்தருளிய காரணத்தால், வெம்மை தண்மை வளி மிகுந்த பித்தம் வினைகள் இவற்றால் வரும் துன்பங்கள் நம்மை வந்து நலியா. அடியார்களுக்கும் அவை நல்லனவே செய்யும்.

<u>கோளாறு திருப்பதிகம்</u>

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள் தனோடு உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. **#928**

மன்மதன் அழியுமாறு நெற்றி விழியைத்திறந்து எரித்து விடைமீது உமைமங்கையோடும் உடனாய் இருந்து, முடிமிசை ஒளிபொருந்திய பிறை, வன்னி, கொன்றைமலர் ஆகியனவற்றைச் சூடிச் சிவபெருமான் வந்து என் உளம்புகுந்துள்ள காரணத்தால் ஏழ்கடல்களால் சூழப்பட்ட இலங்கை மன்னன் இராவணனாலும் பிறராலும் வரும் இடர்கள் நம்மை வந்து நலியா; ஆழ்ந்த கடலும் நமக்கு நல்லனவே செய்யும். அடியார்களுக்கும் அவை நல்லனவே புரியும்.

<u>கோளாறு திருப்பதிகம்</u>

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. **#929**

பல்வேறு கோலங்கொண்டருளும் தலைவனும், உமைபாகனும், எருதேறிவரும் எங்கள் பரமனுமாகிய சிவபிரான், முடிமீது கங்கை, எருக்கமலர் ஆகியவற்றை அணிந்து வந்து என் உளம் புகுந்துள்ள

காரணத்தால் தாமரைமலர்மேல் உறையும் பிரமன், திருமால், வேதங்கள் தேவர்கள் ஆகியோராலும், கெட்ட காலங்கள், அலைகடல், மேரு ஆகியவற்றாலும் வரும் தீமைகள் எவையாயினும் நமக்கு நல்லனவாகவே அமையும். அடியார்களுக்கும் அவை மிகவும் நல்லனவே செய்யும்.

கோளாறு திருப்பதிகம்

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதில் அழிவிக்கும்அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. **#930**

பூங்கொத்துக்கள் அணிந்த கூந்தலினளாகிய உமையம்மையாரோடு சென்று குணம் காட்டி அருச்சுனனுக்கு அருள்புரிந்த வேடவடிவம் கொண்ட சிவபிரான் முடிமேல் ஊமத்தை மலர், பிறை, பாம்பு ஆகியவற்றை அணிந்து, என் உளம் புகுந்துள்ள காரணத்தால், புத்தர்களையும் அமணர்களையும் அவ்வண்ணலின் திருநீறு வாதில் தோற்றோடச் செய்யும். நமக்கு வரும் அத்தகைய தீமைகள் நல்லனவற்றையே செய்யும். அடியார்களுக்கும் அவ்வாறே நல்லனவே செய்யும்.

கோளாறு திருப்பதிகம்

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. **#931**

தேன் பொருந்திய பொழில்களைக் கொண்டதும், கரும்பு, விளைந்த செந்நெல் ஆகியன நிறைந்துள்ளதும், வளரும் செம்பொற்குவியல் எங்கும் நிறைந்திருப்பதும், நான்முகனால் முதன்முதல் படைக்கப்பட்டதுமான பிரமாபுரத்துத் தோன்றி மறைஞானம் பெற்ற ஞான முனிவன் ஆகிய ஞானசம்பந்தன் வினைப்பயனால் தாமே

வந்துறும் கோளும் நாளும் பிறவும் அடியவரை வந்து நலியாத வண்ணம் பாடிய சொல்லான் இயன்ற மாலையாகிய இப்பதிகத்தை ஓதும் அடியவர்கள் வானுலகில் அரசு புரிவர். இது நமது ஆணை.

திருநாரையூர்

திருநாரையூர்

திருநாரையூர்,
பண் - பியந்தைக்காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சௌந்தரேசர்.
தேவியார் : திரிபுரசுந்தரியம்மை.

உரையினில் வந்தபாவ முணர்நோய்களும்ம
செயறீங்கு குற்ற முலகில்
வரையினி லாமைசெய்த வவைதீரும் வண்ண
மிகவேத்தி நித்த நினைமின்
வரைசிலை யாகவன்று மதின்மூன் றெரித்து
வளர்கங்குல் நங்கை வெருவத்
திரையொலி நஞ்சமுண்ட சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. #932

மேருமலையை வில்லாகக் கொண்டு முப்புரங்களைச் செற்று, வளரும் கங்குலில் உமையம்மை அஞ்சக் கடல் நஞ்சினை உண்ட சிவன் மேவிய செல்வத் திருநாரையூரைக் கையால் தொழுதால் வாக்கு; மனம் காயம் ஆகியவற்றால் விளைந்த பாவங்கள் தீரும். அங்குள்ள பெருமானை அவ்வாறு தீருமாறு மிக ஏத்தி நித்தமும் நினைவீராக.

திருநாரையூர்

ஊனடை கின்றகுற்ற முதலாகி யுற்ற
பிணிநோ யொருங்கு முயரும்
வானடை கின்றவெள்ளை மதிசூடு சென்னி
விதியான வேத விகிர்தன்
கானிடை யாடிபூதப் படையா னியங்கு
விடையா னிலங்கு முடிமேல்
தேனடை வண்டுபாடு சடையண்ணல் நண்ணு
திருநாரை யூர்கை தொழவே. #933

உயரிய வானத்தில் விளங்குகின்ற வெள்ளிய மதியைச் சூடிய சென்னியினளனும், விதிகளைக் கூறும் வேதங்களை அருளிய விகிர்தனும், இடுகாட்டில் பூதப் படையோடு ஆடுபவனும், இயங்கும் விடையூர்தியினனும், விளங்கும் தலைமீது வண்டு பாடும் தேனடைந்த மலர்களைச் சூடிய சடையினனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய திருநாரையூரைக் கைகளால் தொழுதால் உடலால் செய்யப்பெறும்

குற்றம் முதலானவும், அவ்வுடலைப் பற்றிய பிணி நோய்களும் கெடும்.

திருநாரையூர்

ஊரிடை நின்றுவாழும் உயிர்செற்ற காலன்
றுயருற்ற தீங்கு விரவிப்
பாரிடை மௌளவந்து பழியுற்ற வார்த்தை
யொழிவுற்ற வண்ண மகலும்
போரிடை யன்றுமூன்று மதிலெய்த ஞான்று
புகழ்வானு ளோர்கள் புணரும்
தேரிடை நின்றவெந்தை பெருமா னிருந்த
திருநாரை யூர்கை தொழவே. **#934**

திரிபுரத்தசுரரோடு போர் செய்து மும்மதில்களைக் கணையால் எய்த காலத்தில் புகழ்பெற்ற தேவர்கள் கூடியமைத்த தேரில் நின்ற எந்தை பெருமான் எழுந்தருளிய திருநாரையூரைக் கைகளால் தொழுதால், ஊரின் கண் நின்று வாழ்ந்த உயிர் கவரும் காலனால் வரும் தீங்கும், உலகவர் கூடி மௌளப் பழித்துரைக்கும் வார்த்தைகளும் ஒழிவுறும்.

திருநாரையூர்

தீயுறு வாயவாக்கை யதுபற்றி வாழும்
வினைசெற்ற வுற்ற வுலகின்
தாயுற தன்மையாய தலைவன்றன் நாமம்
நிலையாக நின்று மருவும்
பேயுற வாயகானில் நடமாடி கோல
விடமுண்ட கண்டன் முடிமேல்
தேய்பிறை வைத்துகந்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவ. **#935**

இடுகாட்டில் பேய்களோடு உறவுகொண்டு நடனமாடுபவனும் விடமுண்ட அழகியகண்டத்தினனும் முடிமேல் தேய்ந்த பிறையைச் சூடியவனும் ஆகிய சிவபிரான் மேவிய திருநாரையூரை வணங்கினால் தீவினையால் உலகிற் பிறந்து அடையும் துன்பங்கள் அகலும். தாயாய்த் தலையளி செய்யும் அவன் நாமங்கள் நும் உள்ளத்தில் மருவும்.

திருநாரையூர்

வசையப ராதமாய வுவரோதம் நீங்குந்
தவமாய தன்மை வரும்வான்
மிசையவ ராதியாய திருமார் பிலங்கு
விரிநூலர் விண்ணு நிலனும்
இசையவ ராசிசொல்ல விமையோர்க ளேத்தி

யமையாத காத லொடுசேர்
திசையவர் போற்றநின்ற சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. **#936**
மேலான வீட்டுலகில் இருப்பவர். எல்லார்க்கும் முன்னே தோன்றியவர். அழகிய மார்பில் இலங்கும் முப்புரிநூலர். விண்ணும் மண்ணும் நிறைந்தவர். இமையவர்கள் ஏத்த அவர்கட்கு ஆசி சொல்பவர். அன்போடு திசைப்பாலகர் போற்ற நிற்பவர் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய திருநாரையூரைத் தொழின் கடலளவு பெருகிய பழிகள் இடையூறுகள் நீங்கும். தவம் வரும்.

திருநாரையூர்

உறைவள ரூனிலாய வுயிர்நிற்கும் வண்ணம்
உணர்வாக்கும் உண்மை யுலகில்
குறைவுள வாகிநின்ற குறைதீர்க்கு நெஞ்சில்
நிறைவாற்று நேசம் வளரும் மறைவளர்
நாவன்மாவி னுரிபோர்த்த மெய்யன்
அரவார்த்த வண்ணல் கழலே
திறைவளர் தேவர்தொண்டி னருள்பேண நின்ற
திருநாரை யூர்கை தொழவே. **#937**
வேதம் வளரும் திருநாவினன் யானைத் தோலை மெய்யில் போர்த்தவன். பாம்பைக் கச்சையாகக் கட்டியவன். தலைமைத் தன்மை உடையோன் அப்பெருமான் திருவடிகளையே திறைப்பொருளாக வளர்கின்ற தேவர்கள் தம் தொண்டால் அவன் அருளைப் பெற நிற்கும் திருநாரையூரைத் தொழுதால் உறையாக நிற்கும் உடலில் விளங்கும் உயிர் நிலை பெறும். நல் உணர்வைத்தரும். குறைகளைப் போக்கும். நெஞ்சில் நிறைவைத் தரும. நேசம் வளரும்.

திருநாரையூர்

தனம்வரு நன்மையாகுந் தகுதிக் குழந்து
வருதிக் குழன்ற வுடலின்
இனம்வள ரைவர்செய்யும் வினயங்கள் செந்று
நினைவொன்று சிந்தை பெருகும்
முனமொரு காலமூன்று புரம்வெந்து மங்கச்
சரமுன் றெரிந்த அவுணர்
சினமொரு காலழித்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. **#938**
முன்னொரு காலத்தில் முப்புரங்கள் அழியுமாறு சரம் விடுத்து அவுணரின் சினத்தை அழித்த சிவபெருமான் மேவிய செல்வத்

திருநாரையூரைக் கைகளால் தொழுதால் தனம் வரும். நன்மையாகும். பெருமை பெறுதற்குத் திசைதோறும் அலைந்து உழன்று உடலின்கண் பொருந்திய ஐம்பொறிகளால் ஆகும் வஞ்சகங்களை அழித்துப் பெருமான் திருவடிகளில் நினைவு ஒன்றும் சிந்தை உண்டாகும்.

திருநாரையூர்

உருவரை கின்றநாளி லுயிர்கொள்ளுங் கூற்ற
நனியஞ்சு மாத லுறநீர்
மருமலர் தூவியென்றும் வழிபாடு செய்ம்மின்
இழிபா டிலாத கடலின்
அருவரை சூழிலங்கை யரையன்றன் வீரம்
மழியத் தடக்கை முடிகள்
திருவிரல் வைத்துகந்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. **#939**

அழிவில்லாத கடலாலும் அரிய மலைகளாலும் சூழப்பட்ட இலங்கை மன்னன் இராவணனின் வீரம் அழியவும், நீண்ட கைகள் முடிகள் நெரியவும், திருவிரலை ஊன்றி, உகந்த சிவன் மேவிய திருநாரையூரைக் கைகளால் தொழ உடல் நீங்கும் காலத்தில் உயிர் கொள்ள வரும் இயமன் மிகவும் அஞ்சுவான். ஆதலின் நீர் மணமலர்களைத் தூவி அப்பெருமானை வழிபாடு செய்வீர்களாக.

திருநாரையூர்

வேறுயர் வாழ்வுதன்மை வினைதுக்க மிக்க
பகைதீர்க்கு மேய வுடலில்
தேறிய சிந்தைவாய்மை தெளிவிக்க நின்ற
கரவைக் கரந்து திகழும்
சேறுயர் புவின்மேய பெருமானும் மற்றைத்
திருமாலு நேட எரியாய்ச்
சீறிய செம்மையாகுஞ் சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. **#940**

சேற்றில் உயர்ந்து தோன்றும் தாமரை மலரில் விளங்கும் நான்முகனும், திருமாலும் தேடச் சிவந்த எரியுருவாய்ச் சீறி எழுந்த சிவபிரான் மேவிய திருநாரையூரைக் கையால் தொழப் பிறப்பு இறப்பற்ற தன்மை கிடைக்கும். வினையாகிய துக்கம், மிக்க பகை இவற்றைத் தீர்க்கும். தெளந்த சிந்தையில் வாய்மை விளங்கித்திகழ மறைந்து நிற்கும் சிவனது வெளிப்பாடு கிடைக்கும்.

திருநாரையூர்

மிடைபடு துன்பமின்ப முளதாக்கு முள்ளம்
வெளியாக்கு முன்னி யுணரும்
படையொரு கையிலேந்திப் பலிகொள்ளும் வண்ண
மொலிபாடி யாடி பெருமை
உடையினை விட்டுளோரு முடல்போர்த்து ளோரும்
உரைமாயும் வண்ண மழியச்
செடிபட வைத்துகந்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. **#941**

சூலப்படையைக் கையில் ஏந்திப் பலியேற்கும் தன்மையனாய் இசைபாடி ஆடிச் செல்லும் இறைவனது பெருமையை உடையின்றியும் உடை போர்த்தும் திரியும் சமண் சாக்கியர் கூறுவன மாயுமாறு செய்து காக்கும் சிவன் மேவிய செல்வத் திருநாரையூரைக் கை தொழத் துன்பம் நீங்கும். இன்பம் உளதாகும். உள்ளம் ஒளியாக்கும. ஆதலின் அத்தலத்தை உன்னி உணருங்கள்.

<u>திருநாரையூர்</u>

எரியொரு வண்ணமாய வுருவானை யெந்தை
பெருமானை யுள்கி நினையார்
திரிபுர மன்றுசெற்ற சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழுவான்
பொருபுனல் சூழ்ந்தகாழி மறைஞான பந்தன்
உரைமாலை பத்து மொழிவார்
திருவளர் செம்மையாகி யருள்பேறு மிக்க
துளதென்பர் செம்மை யனிரே. **#942**

தீயைப் போலச் சிவந்த நிறத்தை உடையவனாய், எம் தந்தையாகிய பெருமானாய் மனமுருகி நினையாத அசுரர்களின் திரிபுரத்தை அக்காலத்தில் அழித்துக் காத்த சிவபிரான் எழுந்தருளிய திருநாரையூரைக் கை தொழுது நீர் வளம் நிறைந்த காழி மறைஞான சம்பந்தன் உரைத்த இத்தமிழ்மாலையை மொழிபவர் திருவளரும் திருவருட்பேற்றுடன் செம்மையினராவர்.

திருநறையூர்

திருநறையூர்ச்சித்தீச்சரம்

திருநறையூர்,
பண் - பியந்தைக்காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சித்தநாதேசர்.
தேவியார் : அழகாம்பிகையம்மை.

நேரிய னாகுமல்ல னொருபாலு மேனி
யரியான்மு னாய வொளியான்
நீரியல் காலுமாகி நிறைவானு மாகி
யுறுதீயு மாய நிமலன்
ஊரியல் பிச்சைபேணி யுலகங்க ளேத்த
நல்குண்டு பண்டு சுடலை
நாரியொர் பாகமாக நடமாட வல்ல
நறையூரின் நம்பனவனே. **#943**

ஊர்கள் தோறும் சென்று, பிச்சையேற்று உலகங்கள் போற்ற நல்குவதை உண்டு. முற்காலத்தே சுடலையில் மாதொருபாகனாக நடனமாடவல்ல, நறையூரில் விளங்கும் நம்பனாகிய சிவபெருமான், நுண்ணியன். பேருருவினன். தன்னொரு பாகத்தை அளித்த திருமால்முன் சோதிப்பிழம்பு ஆனவன். நீர், காற்று, முதலான ஐம்பூத வடிவினன்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

இடமயி லன்னசாயன் மடமங்கை தன்கை
யெதிர்நாணி பூண வரையில்
கடும்அயி லம்புகோத்து எயில்செற் றுகந்து
வமரர்க் களித்த தலைவன்
மடமயில் ஊர்திதாதை யெனநின்றுதொண்டர்
மனநின்ற மைந்தன் மருவும்
நடமயி லாலநீடு குயில்கூவு சோலை
நறையூரின் நம்பனவனே. **#944**

பொருந்திய மயில்கள் நடனம் ஆடி அகவவும், புகழ் நீடிய குயில்கள் கூவவும், விளங்கும் சோலை சூழ்ந்த நறையூரில் விளங்கும் நம்பனாகிய அப்பெருமான், இடப்பாகத்தே மயிலன்ன சாயலுடன் விளங்கும் மலைமங்கையோடு தன் கையில் உள்ள மலைவில்லில் அரவு நாணைப் பூட்டிக் கடிதானகூரிய அம்பினைக் கோத்து, மூவெயில்களைச் செற்று மகிழ்ந்து தேவர்கட்கு வாழ்வளித்த தலைவன். இளைய மயிலூர்தியைக்

கொண்ட முருகனின் தந்தை என்று தொண்டர் எதிர்நின்று போற்ற அவர்கள் மனத்திலே எழுந்தருளும் மைந்தன் ஆவான்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

சூடக முன்கைமங்கை யொருபாக மாக
வருள்கார ணங்கள் வருவான்
ஈடக மானநோக்கி யிடுபிச்சை கொண்டு
படுபிச்ச னென்று பரவத்
தோடக மாயொர்காதும் ஒருகா திலங்கு
குழைதாழ வேழ வுரியன்
நாடக மாகவாடி மடவார்கள் பாடும்
நறையூரின் நம்ப னவனே. **#945**

இளம் பெண்கள் நாட்டியம் ஆடிப்பாடிப் போற்றும் நறையூரில் எழுந்தருளிய நம்பனாகிய அப்பெருமான் வளையல் அணிந்தமுன் கைகளை உடைய மலைமங்கை ஒரு பாகமாக விளங்க அருள்புரிய வருபவன். பெரிய வீடுகளை நோக்கிச் சென்று அவர்கள் இடும் பிச்சையை ஏற்று, மிக்க ஈடுபாடு உடையவன் என்று அடியவர் பரவி ஏத்த, இரு காதுகளிலும் தோடும் குழையும் அணிந்து யானையின் தோலைப் போர்த்துள்ளவன்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

சாயனன் மாதொர்பாகன் விதியாய சோதி
கதியாக நின்ற கடவுள்
ஆயக மென்னுள்வந்த வருளாய செல்வன்
இருளாய கண்ட னவனித்
தாயென நின்றுகந்த தலைவன் விரும்பு
மலையின்கண் வந்து தொழுவார்
நாயக னென்றிறைஞ்சி மறையோர்கள் பேணும்
நறையூரின் நம்ப னவனே. **#946**

தாங்கள் விரும்பிய மலையின்கண் இருந்து தவம் முயலும் சித்தர்கள் இறங்கி வந்து வழிபடுகின்ற, சித்தர்கட்கு ஈசுவரன் என்று மறையவரால் போற்றிப் பேணும் நறையூர்ச் சித்தீச்சரத்து இறைவனாகிய அவன், அழகிய மலைமாதினை ஒரு பாகமாகக் கொண்டவன். எல்லோர்க்கும் ஊழை வரையறுக்கும் சோதி. சிவகதியாக நிற்கும் கடவுள். என் மனத்திடை வந்து அருள் புரியும் செல்வன். இருண்ட கண்டத்தினன். தாயெனத் தலையளி செய்யும் தலைவன்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

நெதிபடு மெய்யெமைய னிறைசோலை சுற்றி
நிகழம்ப லத்தின் நடுவே
அதிர்பட ஆடவல்ல வமரர்க் கொருத்தன்
எமர்சுற்ற மாய இறைவன்
மதிபடு சென்னிமன்னு சடைதாழ வந்து
விடையேறி யில்பலி கொள்வான்
நதிபட வுந்திவந்து வயல்வாளை பாயும்
நறையூரின் நம்ப னவனே. **#947**

வளைமீன்கள் நதி வழியாக நீந்தி வந்து வயல்களிற் பாயும் நறையூரில் எழுந்தருளிய இறைவன், சேமநிதியாகக் கருதப்படும் மெய்ப்பொருள் எமக்குத் தலைவன் நிறைந்த சோலைகள் சூழ்ந்த அம்பலத்தில் அதிர்பட ஆடுபவன் அமரர்க்குத் தலைவன். அடியவர்க்குச் சுற்றமாய் விளங்குபவன். பிறை பொருந்திய சடை தாழ்ந்து தொங்க விடைஏறி வந்து வீடுகள் தோறும் பலி ஏற்பவன்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

கணிகையொர் சென்னிமன்னு மதுவன்னி கொன்றை
மலர்துன்று செஞ் சடையினான்
பணிகையின் முன்னிலங்க வருவேட மன்னு
பலவாகி நின்ற பரமன்
அணுகிய வேதவோசை யகலங்க மாறின்
பொருளான ஆதி யருளான்
நணுகிய தொண்டர்கூடி மலர்தூவி யேத்து
நறையூரின் நம்ப னவனே. **#948**

அருள் பெறத் தன்னை நண்ணிய தொண்டர்கள் மலர் தூவி ஏத்த நறையூரில் விளங்கும் இறைவன். கங்கை தங்கிய முடி மீது வன்னி, கொன்றைமலர் முதலின பொருந்திய சடையினை உடையவன். வணங்குதற்கு முன்னரே அவர்கள் விரும்பும் வடிவங்கள் பலவாகத் தோன்றி அருள்புரிபவன். தன்னை அணுகிய வேதங்களின் ஓசை, அகன்ற ஆறு அங்கங்களின் பொருளாக விளங்கும் கருணையாளன்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

ஒளிர்தரு கின்றமேனி யுருவெங்கு மங்க
மவையார ஆட லரவம்
மிளிர்தரு கையிலங்க வனலேந்தி யாடும்
விகிர்தன் விடங்கொண் மிடறன்
துளிதரு சோலையாலை தொழின்மேவ வேத
மெழிலார வென்றி யருளும்

நளிர்மதி சேருமாட மடவார்க ளாரு
நறையூரின் நம்ப னவனே. **#949**
தேன் துளிக்கும் சோலைகளையும், கரும்பினைப் பிழிந்து வெல்லம் ஆக்கும் தொழிலையும் வேதமுழக்கங்களின் எழுச்சியையும், வெற்றி வழங்கும் செல்வவளம் உடைய வானளாவிய, மடவார்கள் வாழும் மாடவீடுகளையும் உடைய நறையூரில் எழுந்தருளிய இறைவன் ஒளிதரும் தன்திருமேனியிலுள்ள அங்கங்கள் எங்கும் அரவுகள் ஆட, கையில் விளங்கும் அனலை ஏந்தி ஆடும் விகிர்தன். விடம் பொருந்திய கண்டத்தினன்.

<u>திருநறையூர்ச்சித்தீச்சரம்</u>

அடலெரு தேறுகந்த வதிருங் கழற்கள்
ளெதிருஞ் சிலம்பொ டிசையக்
கடலிடை நஞ்சமுண்டு கனிவுற்ற கண்டன்
முனிவுற் றிலங்கை யரையன் உடலொடு
தாளனைத்து முடிபத் திறுத்தும்
இசைகேட் டிரங்கி யொருவாள்
நடலைகள் தீர்த்துநல்கி நமையாள வல்ல
நறையூரின் நம்ப னவனே. **#950**
இலங்கை மன்னனாகிய இராவணனின் உடல் தோள் பத்துத் தலைகள் ஆகியவற்றை நெரித்துப் பின் அவனது இசையைக் கேட்டு இரங்கி அவன் துன்பங்களைத் தவிர்த்து ஒப்பற்ற வாளைத் தந்து கருணை காட்டியவனாய் நம்மை ஆளுதற்பொருட்டு நறையூரில் எழுந்தருளிய இறைவன் வலிய எருதினை உகந்தவன். அதிரும் கழல்களோடு ஒருபாதியில் சிலம்பு ஒலிக்க வருபவன். கடலிடையே தோன்றிய நஞ்சினை உண்டு கனிவு பொருந்தக் கண்டத்தில் நிறுத்தியோன்.

<u>திருநறையூர்ச்சித்தீச்சரம்</u>

குலமலர் மேவினானும் மிகுமாய னாலும்
எதிர்கூடி நேடி நினைவுற்
றிலபல வெய்தொணாமை யெரியா யுயர்ந்த
பெரியா னிலங்கு சடையன்
சிலபல தொண்டர்நின்று பெருமைக்கள் பேச
வருமைத் திகழ்ந்த பொழிலின்
நலமலர் சிந்தவாச மணநாறு வீதி
நறையூரின் நம்ப னவனே. **#951**
சிலபல தொண்டர்கள் நின்று பெருமைகள் பேசிப் பரவக் கரியமேகங்கள் விளங்கும் பொழிலின் நல்ல மலர்கள் சிந்துதலால் மணம் வீசும்

வீதிகளை உடைய நறையூரில் எழுந்தருளிய நம்பனாகிய இறைவன் மலர்களிற் சிறந்த தாமரைமலர் மேல் விளங்கும் பிரமனும் புகழ்மிக்க திருமாலும், எதிர்கூடித் தேடியும் அவர்கள் நினைப்பில் உற்றிலாத பல சிறப்பினனாய் அவர்கள் காணமுடியாத படி, தீயாய் ஓங்கிய பெரியோன், விளங்கும் சடைமுடியை உடையவன்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

துவருறுகின்ற ஆடை யுடல்போர்த் துழன்ற
அவர்தாமும் அல்ல சமணும்
கவருறு சிந்தையாள ருரைநீத் துகந்த
பெருமான் பிறங்கு சடையன்
தவமலி பத்தர்சித்தர் மறையாளர் பேண
முறைமாதர் பாடி மருவும்
நவமணி துன்றுகோயி லொளிபொன்செய் மாட
நறையூரின் நம்ப னவனே. **#952**

தவம் நிறைந்த பத்தர்கள், சித்தர்கள், மறைவல்லோர் விரும்பி வழிபடவும், மாதர்கள் முறையாகப் பாடி அடையவும், நவமணிகள் செறிந்த கோயிலையும் ஒளிதரும் பொன்னால் இயன்ற மாடவீடுகளையும் கொண்டுள்ள நறையூரில் விளங்கும் இறைவன், துவர் ஏற்றிய ஆடையை உடலில் போர்த்துத் திரியும் தேரரும் அவரல்லாத சமணர்களும் ஆகிய மாறுபட்ட மனம் உடையோர் உரைகளைக் கடந்து நிற்கும் பெருமான் ஆவன். அவன் விளங்கும் சடைமுடி உடையோன்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

கான லுலாவி ஓதம் எதிர்மல்கு காழி
மிகுபந்தன் முந்தி யுணர
ஞான முலாவுசிந்தை அடிவைத் துகந்த
நறையூரின் நம் னவனை
ஈனமி லாதவண்ணம் இசையா லுரைத்த
தமிழ்மாலை பத்து நினைவார்
வானநி லாவவல்லர் நிலமெங்கு நின்று
வழிபாடு செய்யு மிகவே. **#953**

ஓதநீர் கடற்கரைச் சோலைகளைக் கடந்து வந்து நிறையும் காழிப்பதியில் தோன்றிய புகழ் மிகு ஞானசம்பந்தன் இளமையில் உணரும் வண்ணம் ஞானம் உலாவுகின்ற மனத்தில் தன் திருவடிகளைப் பதிய வைத்து உகந்த நறையூரில் விளங்கும் இறைவனை, குற்றமற்றவகையில் இசையால் உரைத்த தமிழ்மாலையாகிய இப்பத்துப் பாடல்களையும் உணர வல்லவர் நிலவுலகம் நின்று வழிபடுமாறு

வானம் நிலாவ வல்லவர் ஆவர்.

திருமுல்லைவாயில்

திருமுல்லைவாயில்

திருமுல்லைவாயில்,
பண் - பியந்தைக்காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனநாதர்.
தேவியார் : கோதையம்மை.

துளிமண்டி யுண்டு நிறம்வந்த கண்டன்
நடமன்னு துன்னு சுடரோன்
ஒளிமண்டி யும்பர் உலகங் கடந்த
உமைபங்கன் எங்க ளரனூர்
களிமண்டு சோலை கழனிக் கலந்த
கமலங்கள் தங்கு மதுவிற்
தௌமண்டி யுண்டு சிறைவண்டு பாடும்
திருமுல்லை வாயி லிதுவே. **#954**

விடத்தினை விரும்பி உண்டு அதனால் கருமை நிறம் பெற்ற கண்டத்தினனும், நடனமாடும் ஒளி பொருந்திய வடிவினனும் பேரொளிப் பிழம்பாய் உம்பர் உலகத்தைக் கடந்த உமைபங்கனும் ஆகிய எங்கள் அரனது ஊர், களிப்புத்தரும் சோலையை அடுத்துள்ள வயல்களில் மலர்ந்த தாமரைகளில் தங்கிய மதுவின் தெளவை வயிறார உண்டு சிறை வண்டுகள் பாடும் திருமுல்லை வாயிலாகிய இத்தலம் ஆகும்.

திருமுல்லைவாயில்

பருவத்தில் வந்து பயனுற்ற பண்பன்
அயனைப் படைத்த பரமன்
அரவத் தொடங்க மவைகட்டி யெங்கு
மரவிக்க நின்ற வரனூர்
உருவத்தின் மிக்க வொளிர்சங்கொ டிப்பி
யவையோத மோத வெருவித்
தெருவத்தில் வந்து செழுமுத் தலைக்கொள்
திருமுல்லை வாயி லிதுவே. **#955**

பக்குவம் வந்த காலத்தில் வந்து பேரின்பப் பயன் அருளவல்ல பண்பினனும், அயனைப்படைத்த பரமனும், பாம்பினை உடல் முழுதும் கட்டிக் கொண்டு எல்லோராலும் போற்றிப் புகழப் படுவோனுமாகிய அரனது ஊர், உருவத்தால் பெரிய சங்குகளும் சிப்பிகளும் ஓத நீர்

மோதுவதைக் கண்டுவெருவித் தெருவில் வந்து செழுமையான முத்துக்களைப்பல இடங்களிலும் ஈனும் திருமுல்லை வாயிலாகிய இத்தலமாகும்.

திருமுல்லைவாயில்

வாராத நாடன் வருவார்தம் வில்லின்
உருமெல்கி நாளு முருகில்
ஆராத வின்ப னகலாத அன்பன்
அருண்மேவி நின்ற வரனூர்
பேராத சோதி பிரியாத மார்பின்
அலர்மேவு பேதை பிரியாள்
தீராத காத னெதிநேர நீடு
திருமுல்லை வாயி யிதுவே. **#956**

மீண்டும் வாராத பேரின்ப நாடுடையவன், உலகிற் பிறந்தோர் வானவில் போன்று விரைவில் தோன்றி மறையும். இவ்வுடல் மெலியுமாறு உருகி வழிபடில் ஆராத இன்பன் அருள் பவன் அகலாத அன்புடையவன் அத்தகைய அரன் அருள் செய்ய எழுந்தருளியுள்ள ஊர், நீங்காத ஒளியுடைய திருமால் மார்பை விடுத்துப் பிரியாத திருமகளின் அன்புடன் செல்வம் தழைத்தோங்கும் பெருமை மிக்க திருமுல்லை வாயிலாகிய இத்தலமேயாகும்.

திருமுல்லைவாயில்

ஒன்றொன்றொ டொன்று மொருநான்கொ டைந்து
மிருமூன்றொ டேழு முடனாய்
அன்றின்றொ டென்று மறிவான வர்க்கும்
அறியாமை நின்ற வரனூர்
குன்றொன்றொ டொன்று குலையொன்றொ டொன்று
கொடியொன்றொ டொன்று குழுமிச்
சென்றொன்றொ டொன்று செறிவா னிறைந்த
திருமுல்லை வாயி லிதுவே. **#957**

ஆன்ம தத்துவங்கள் இருபத்துநான்கு. புருடதத்துவம் இருபத்தைந்தாவது தத்துவம். இவ்விருபத்தைந்து தத்துவங்கட்கும் வேறாய் நிற்பவன் இறைவன். இதனை அறியாதார் இருபத்தைந்தாவதாய் உள்ள உயிரையே பதி என மயங்குவர். இவ்வாறு தத்துவ ஆராய்ச்சியாளர்கள் அறியாது தடுமாறுகின்ற நிலையில் விளங்கும் அரனது ஊர், குன்றுகள் ஒன்றோடு ஒன்று இணைவன போலும் மாடவீடுகளும், குலைகளும் கொடிகளும் ஒன்றோடு ஒன்று குழுமிச் செறிவால் நிறைந்துள்ள திருமுல்லை வாயிலாகிய இத்தலமேயாகும்.

திருமுல்லைவாயில்

கொம்பன்ன மின்னி னிடையாளொர் கூறன்
விடைநாளு மேறு குழகன்
நம்பன்னெ மன்பன் மறைநாவன் வானின்
மதியேறு சென்னி யரனூர்
அம்பன்ன வொண்க ணவரா டரங்கின்
அணிகோ புரங்க ளழகார்
செம்பொன்ன செவ்வி தருமாட நீடு
திருமுல்லை வாயி லிதுவே. **#958**

பூங்கொம்பு போன்றவளும் மின்னல் போலும் இடையினளும் ஆகிய உமையம்மையை ஒரு கூற்றாகக் கொண்டவன். நாள்தோறும் விடைமீது ஏறிவரும் இளையோன். நம் மேல் அன்புடையோன். மறையோதும் நாவினன். வானில் செல்லும் மதி பொருந்திய சென்னியை உடைய அவ்வரனது ஊர், அம்பு போன்ற ஒளி பொருந்திய கண்ணினை உடைய குலமகளிர், ஆடும் அரங்குகளும், அழகிய கோபுரங்களும் உடையதாய்ச் செம் பொன்னின் அழகைத்தரும் மாடவீடுகள் கொண்ட திருமுல்லை வாயிலாகிய இத் தலமேயாகும்.

திருமுல்லைவாயில்

ஊனேறு வேலி னுருவேறு கண்ணி
யொளியேறு கொண்ட வொருவன்
ஆனேற தேறி யழகேறு நீறன்
அரவேறு பூணு மரனூர்
மானேறு கொல்லை மயிலேறி வந்து
குயிலேறு சோலை மருவித்
தேனேறு மாவின் வளமேறி யாடு
திருமுல்லை வாயி லிதுவே. **#959**

ஊன் பொருந்திய வேல் போன்ற கண்ணினள் ஆகிய உமையம்மையின் கருநிறஒளியைப் பெற்றவன். ஆனேற்றின் மிசை ஏறி, அழகுதரும் திருநீற்றை அணிந்தவன். பாம்பினை அணிகலனாகப் பூண்டவன். அவ்வரனது ஊர், மான்கள் துள்ளி ஆடும் முல்லை நிலத்தையும், மயிலும் குயிலும் வாழும் சோலைகளையும் தேனைப் பொருந்திய வண்டுகளைக் கொண்ட வளத்தையும் உடைய திருமுல்லை வாயிலாகிய இத்தலமேயாகும்.

திருமுல்லைவாயில்

நெஞ்சார நீடு நினைவாரை மூடு

வினைதேய நின்ற நிமலன்
அஞ்சாடு சென்னி அரவாடு கையன்
அனலாடு மேனி யரனூர்
மஞ்சாரு மாட மனைதோறும் ஐயம்
உளதென்று வைகி வரினுஞ்
செஞ்சாலி நெல்லின் வளர்சோ றளிக்கொள்
திருமுல்லை வாயி லிதுவே. **#960**
மனம் பொருந்த நீடு நினையும் அடியவர்களின் வினைகளைப் போக்கியருள்பவன். ஆனைந்தாடுபவன். அரவு ஆடும் கையன். அனல்போன்றமேனியன் அவ் அவனது ஊர், மேகங்கள் தங்கும் உயரிய மாடங்களைக் கொண்ட மனைகள் தோறும் பிச்சையேற்க யார்வரினும் செந்நெற் சோறளித்து மகிழ்வோர் வாழும் திருமுல்லை வாயிலாகிய இத்தலமேயாகும்.

<u>திருமுல்லைவாயில்</u>

வரைவந் தெடுத்த வலிவா ளரக்கன்
முடிபத்து மிற்று நெரிய
உரைவந்த பொன்னி னுருவந்த மேனி
உமைபங்க னெங்க ளரனூர்
வரைவந்த சந்தொ டகிலுந்தி வந்து
மிளிர்கின்ற பொன்னி வடபால்
திரைவந்து வந்து செறிதேற லாடு
திருமுல்லை வாயி லிதுவே. **#961**
கயிலைமலையை வந்தெடுத்த வலிய வாளை உடைய அரக்கனாகிய இராவணனின் முடிகள் பத்தையும் நெரியச் செய்தவனும், உரைத்துக்காணப் பெறும் பொன்போலும் மேனிய ளாகிய உமையம்மை பங்கனும் ஆகிய எங்கள் அரனது ஊர், மலையிலிருந்து சந்தனம் அகில் ஆகியவற்றை அடித்து வந்து விளங்கும் பொன்னியாற்றின் திரைகள் வீசும் வடகரையில் செறிந்த தேன் அடைகள் ஆடும் திருமுல்லை வாயிலாகிய இத்தலமேயாகும்.

<u>திருமுல்லைவாயில்</u>

மேலோடி நீடு விளையாடல் மேவு
விரிநூலன் வேத முதல்வன்
பாலாடு மேனி கரியானு முன்னி
யவர்தேட நின்ற பரனூர்
காலாடு நீல மலர்துன்றி நின்ற
கதிரேறு செந்நெல் வயலிற்

சேலோடு வாளை குதிகொள்ள மல்கு
திருமுல்லை வாயி லிதுவே. **#962**

திருமேனி நீண்டு ஓடிவிளையாடலைப் பொருந்திய முப்புரிநூலை உடையவன். வேதமுதல்வன். பிரமனும் திருமாலும் தேடிக்காணாது திகைக்குமாறு உயர்ந்து நின்றோன். அவனது ஊர், காற்றில் அசையும் நீலமலர்கள் நிறைந்து நிற்பதாய், கதிர் மிகுந்த செந்நெல் வயல்களில் சேலும் வாளையும் குதிகொள்ளும் திருமுல்லைவாயிலாகிய இத்தலமேயாகும்.

திருமுல்லைவாயில்

பனைமல்கு திண்கை மதமா வுரித்த
பரமன்ன நம்பன் அடியே
நினைவன்ன சிந்தை யடையாத தேரர்
அமண்மாய நின்ற வரனூர்
வனமல்கு கைதை வகுளங்க ளெங்கு
முகுளங்ளெங்கு நெரியச்
சினைமல்கு புன்னை திகழ்வாச நாறு
திருமுல்லை வாயி லிதுவே. **#963**

பனைபோன்ற திண்ணிய துதிக்கையை உடைய மதயானையை உரித்த பரமன். நம்பால் அன்புடையவன். தன் திருவடியை நினையாத சமண தேரர் ஆகியோர் அழிந்தொழிய நிற்பவன். அப்பெருமானது ஊர், வனங்களில் தாழை மரங்கள், மகிழ மரங்கள் ஆகியன எங்கும் நிறைந்த மொட்டுக்களைத்தரவும், அரும்புகளை உடைய புன்னை மரங்களின் மணம் வீசவும் விளங்கும் திருமுல்லை வாயிலாகிய இத்தலமேயாகும்.

திருமுல்லைவாயில்

அணிகொண்ட கோதை யவணன்று மேத்த
வருள்செய்த வெந்தை மருவார்
திணிகொண்ட மூன்று புரமெய்த வில்லி
திருமுல்லை வாயி லிதன்மேல்
தணிகொண்ட சிந்தை யவர்காழி ஞான
மிகுபந்தன் ஒண் தமிழ்களின்
அணிகொண்ட பத்து மிசைபாடு பத்தர்
அகல்வானம் ஆள்வர் மிகவே. **#964**

அணிகொண்ட கோதை என்ற திருப்பெயருடைய இத்தலத்து அம்பிகை மிகவும் ஏத்தி வழிபட அவளுக்கு அருள் செய்த எந்தையாவர். பகைமை கொண்ட அசுரர்களின் வலிய முப்புரங்களை எய்தழித்த வில்லை உடையவர். அப்பெருமான் எழுந்தருளிய திருமுல்லை வாயிலாகிய

இத்தலத்தின் மீது தணித்த சிந்தை உடையவனும் காழிப்பதியில் தோன்றியவனுமாகிய ஞானம் மிக்க சம்பந்தன் பாடிய ஒண் தமிழ்ப் பாடல்களின் மாலையாக அமைந்த இப்பதிகப் பாடல்கள் பத்தையும் இசையோடு பாடும் பக்தர்கள் அகன்ற வானுலகை மிகவும் அரசாள்வர்.

திருக்கொச்சைவயம்

சீர்காழி

திருக்கொச்சைவயம்,
பண் - பியந்தைக்காந்தாரம்

அறையும் பூம்புன லோடும்
ஆடர வச்சடை தன்மேற்
பிறையுஞ் சூடுவர் மார்பிற்
பெண்ணொரு பாக மமர்ந்தார்
மறையி னொல்லொலி யோவா
மந்திர வேள்வி யறாத
குறைவி லந்தணர் வாழுங்
கொச்சை வயமமர்ந் தாரே. **#965**

வேதம் ஓதுவதால் உண்டாகும் ஒல்லென்னும் ஒலி நீங்காத மந்திரங்களோடு கூடிய வேள்விகள் நிகழ்வதும் குறைவற்ற அந்தணர்கள் வாழ்வதுமாய கொச்சை வயத்தில் எழுந்தருளியுள்ள இறைவர், ஒலிக்கின்ற அழகிய கங்கையோடு ஆடும் பாம்பையும் அணிந்துள்ள சடைமேல், பிறையையும் சூடியிருப்பவர். திருமேனியில் உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவர்.

சீர்காழி

சுண்ணத்தர் தோலொடு நூல்சேர்
மார்பினர் துன்னிய பூதக்
கண்ணத்தர் வெங்கன லேந்திக்
கங்குனின் றாடுவர் கேடில்
எண்ணத்தர் கேள்விநல் வேள்வி
யறாதவர் மாலெரி யோம்பும்
வண்ணத்த வந்தணர் வாழுங்
கொச்சை வயமமர்ந் தாரே. **#966**

வேதங்களை உணர்ந்தவர்களும், நல்லவேள்விகளைத் தவறாது செய்பவரும், மேம்பட்ட எரியோம்பும் தன்மையர் என்று சொல்லத் தக்கவருமாகிய அந்தணர் வாழும் கொச்சை வயத்தில் எழுந்தருளிய இறைவர், திருநீறு அணிந்தவர். மான்தோலோடு முப்புரிநூலை அணிந்த மாபினர். சூழ்ந்த பூதகணங்களை உடையவர். கொடிய கனலைக் கையில் ஏந்தி இரவில் நடனம் புரிபவர். குற்றமற்ற மனத்தில் உறைபவர்.

சீர்காழி

பாலை யன்னவெண் ணீறு
பூசுவர் பல்சடை தாழ
மாலை யாடுவர் கீத
மாமறை பாடுதன் மகிழ்வர்
வேலை மால்கட லோதம்
வெண்டிரை கரைமிசை விளங்குங்
கோல மாமணி சிந்துங்
கொச்சை வயமமர்ந் தாரே. **#967**

வேலை எனப்படும் பெரிய கடல் நீரின் வெள்ளமாகப் பெருகிய ஓதத்தின் அலைகள் அழகிய சிறந்தமணிகளைக் கரைமிசைச் சிந்தும் கொச்சை வயத்தில் எழுந்தருளிய இறைவர், பால் போன்ற திருவெண்ணீற்றைப் பூசியவர். சடைகள் பலவும் தாழ்ந்து தொங்க, மாலைக் காலத்தே நடனம் புரிபவர். வேதகீதங்கள் பாடுதலை விரும்புபவர்.

சீர்காழி

கடிகொள் கூவிள மத்தங்
கமழ்சடை நெடுமுடிக் கணிவர்
பொடிகள் பூசிய மார்பிற்
புனைவர்நன் மங்கையொர் பங்கர்
கடிகொ ணீடொலி சங்கி
னொலியொடு கலையொலி துதைந்து
கொடிக ளோங்கிய மாடக்
கொச்சை வயமமர்ந் தாரே. **#968**

மணவீடுகளில் நீண்டு ஒலிக்கும் சங்குகளின் ஒலியோடு, கலைகள் பலவற்றின் ஒலிகளும் சேர்ந்து ஒலிப்பதும் நீண்ட கொடிகள் விளங்கும் மாடங்களை உடையதுமான கொச்சை வயத்தில் விளங்கும் இறைவர், வில்வம், ஊமத்தை ஆகியவற்றின் மணம் கமழ்கின்ற சடையின்கண் நீண்ட கண்ணி சூடியவர். திருநீறு அணிந்துள்ள மார்பின்கண் கொண்டுள்ள உமையம்மைக்குத்தம் திருமேனியில் பாதியை வழங்கியவர்.

சீர்காழி

ஆடன் மாமதி யுடையார்
ஆயின பாரிடஞ் சூழ
வாடல் வெண்டலை யேந்தி

வையக மிடுபலிக் குழல்வார்
ஆடன் மாமட மஞ்ஞை
யணிதிகழ் பேடையொ டாடிக்
கூடு தண்பொழில் சூழ்ந்த
கொச்சை வயமமர்ந் தாரே. **#969**

ஆடும் இளமயில்கள் அழகிய தம் பெண்ணினத்தோடு மகிழ்ந்து கூடும் தண்ணிய பொழில்கள் சூழ்ந்த கொச்சைவயத்தில் அமர்ந்துள்ள பெருமான், வானவெளியில் திரியும் சிறந்த மதியைச் சூடியவர். பொருந்திய பூதகணங்கள் சூழ ஊன்வற்றிய வெண்டலையைக் கையில் ஏந்தி உலகில் மகளிர் இடும் பிச்சைக்கு உழல்பவர்.

<u>சீர்காழி</u>

மண்டு கங்கையும் அரவும்
மல்கிய வளர்சடை தன்மேற்
றுண்ட வெண்பிறை யணிவர்
தொல்வரை வில்லது வாக
விண்ட தானவ ரரணம்
வெவ்வழ லெரிகொள விடைமேற்
கொண்ட கோலம துடையார்
கொச்சை வயமமர்ந் தாரே. **#970**

கொச்சைவயத்தில் அமர்ந்துள்ள பெருமான் நீர் செறிந்த கங்கையும் பாம்பும் தங்கிய நீண்ட சடைமுடியில், வெள்ளிய பிறைத் துண்டத்தை அணிந்தவர். பழமையான மேருமலையை வில்லாகக் கொண்டு பகைகொண்ட அசுரர்தம் மூவரணங்களும் கொடிய எரியில் வெந்தழியுமாறு செய்து, விடைமீது அருள் புரியும் கோலத்துடன் காட்சி தருபவர்.

<u>சீர்காழி</u>

அன்ற வானிழ லமர்ந்து
வறவுரை நால்வர்க் கருளிப்
பொன்றி னார்தலை யோட்டில்
உண்பது பொருகட லிலங்கை
வென்றி வேந்தனை யொல்க
வூன்றிய விரலினர் வான்றோய்
குன்ற மன்னபொன் மாடக்
கொச்சை வயமமர்ந் தாரே. **#971**

வானில் தோயும் மலை போன்ற அழகிய மாட வீடுகளைக் கொண்ட கொச்சை வயத்தில் அமர்ந்துள்ள இறைவர், அக்காலத்தில் ஆல்நிழற்கீழ்

இருந்து நால்வர்க்கு அறம் அருளியவர். இறந்த பிரமனது தலையோட்டில் உண்பவர். கடல் பொரும் இலங்கை மன்னன் இராவணனை வலியழியுமாறு ஊன்றிய கால் விரலினர்.

சீர்காழி

சீர்கொண் மாமல ரானுஞ்
செங்கண்மா லென்றிவ ரேத்த
ஏர்கொள் வெவ்வழ லாகி
எங்கும் உறநிமிர்ந் தாரும்
பார்கொள் விண்ணழல் கானீர்ப்
பண்பினர் பான்மொழி யோடுங்
கூர்கொள் வேல்வல னேந்திக்
கொச்சை வயமமர்ந் தாரே. **#972**

பால்போன்று இனிய மொழி பேசுபவளாகிய உமையம்மையாரோடு கையில் கூரிய வேலை வெற்றிபெற ஏந்தியவராய்க் கொச்சை வயத்தில் விளங்கும் பெருமானார், சிறப்பமைந்த தாமரை மலர் மேல் உறையும் நான்முகனும் செங்கண் மாலும் போற்றித் துதிக்க அழகிய கொடிய அழலுருவாகி நிமிர்ந்தவர். நிலம் விண்முதலான ஐம் பூத வடிவினர்.

சீர்காழி

குண்டர் வண்டுவ ராடை
போர்த்ததொர் கொள்கை யினார்கள்
மிண்டர் பேசிய பேச்சு
மெய்யல மையணி கண்டன்
பண்டை நம்வினை தீர்க்கும்
பண்பின ரொண்கொடி யோடுங்
கொண்டல் சேர்மணி மாடக்
கொச்சை வயமமர்ந் தாரே. **#973**

குண்டர்களாகிய சமணர்களும், செறிந்த துவர் ஊட்டப்பட்ட ஆடையைப் போர்த்துள்ள தனிக்கொள்கையுடைய புத்தர்களுமாகிய வலியர்கள் பேசும் பேச்சுக்கள் மெய்யல்லாதவை. அவற்றைக் கருதாதவர்க்கு அருள்புரிபவர். நீலமணி போன்ற கண்டத்தை உடையவர். நாம் செய்த பழவினைகளைத் தீர்த்தருளும் பண்பினர். ஒளிபொருந்திய கொடி போன்ற உமையம்மையாரோடு மேகங்கள் தவழும் மணி மாடங்களை உடைய கொச்சை வயத்தில் எழுந்தருளியிருப்பவர்.

சீர்காழி

கொந்த ணிபொழில் சூழ்ந்த
கொச்சை வயநகர் மேய
அந்த ணன்அடி யேத்தும்
அருமறை ஞானசம் பந்தன்
சந்த மார்ந்தழ காய
தண்டமிழ் மாலைவல் லோர்போய்
முந்தி வானவ ரோடும்
புகவலர் முனைகெட வினையே. **#974**

கொத்தாக மலர்ந்த பூக்களுடன் கூடிய அழகிய பொழில் சூழ்ந்த கொச்சை வயம் என்னும் நகரில் மேவிய அந்தணனாகிய இறைவன் திருவடிகளை ஏத்தும் அருமறைவல்ல ஞானசம்பந்தன் பாடிய சந்தம் பொருந்திய அழகிய இத்தமிழ் மாலையை ஓதிப் பரவ வல்லவர், வினைகள் கெட முற்படச் சென்று வானவர்களோடு அவர்கள் உலகில் புகவல்லவர் ஆவர்.

திருநெல்வாயில்

திருநெல்வாயில்

திருநெல்வாயில்,
பண் - பியந்தைக்காந்தாரம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அரத்துறைநாதர்.
தேவியார் : ஆனந்தநாயகியம்மை. இது முத்துச்சிவிகை - முத்துச்சின்ன முதலியவை பெற்றபோதருளிச்செய்தது.

எந்தை யீசனெம் பெருமான்
ஏறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற்
சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக்
கடும்புன னிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில்
அரத்துறை அடிகள்தம் அருளே. **#975**

மணம் பொருந்திய மலர்களை உந்திக்கொண்டு பெருகிவரும் நீரை உடைய நிவாநதிக்கரைமேல் அழகிய குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த திருநெல்வாயில் அரத்துறை அடிகளின் திருவருள், எம் தந்தை, ஈசன், பெரியோன், ஆனேற்றை ஏறிவருவோன் என்று அவன் பெயர்களைப் பலமுறை சொல்லி ஏத்தி மனம் பொருந்தி வழிபடவல்லவர்கட்கு அல்லால், ஏனையோர்க்குக் கைகூடாதது.

திருநெல்வாயில்

ஈர வார்சடை தன்மேல்
இளம்பிறை யணிந்தவெம் பெருமான்
சீருஞ் செல்வமு மேத்தாச்
சிதடர்கள் தொழச்செல்வ தன்றால்
வாரி மாமல ருந்தி
வருபுன னிவாமல்கு கரைமேல்
ஆருஞ் சோலை நெல்வாயில்
அரத்துறை அடிகள்தம் அருளே. **#976**

சிறந்த மலர்களை வாரிக்கொண்டு உந்திவரும் நீரை உடைய நிவாநதிக்கரைமேல் பொருந்திய சோலைகள் சூழ்ந்த நெல்வாயில் அரத்துறையில் விளங்கும் அடிகளின் திருவருள், குளிர்ந்த நீண்ட சடைமேல் இளம்பிறை அணிந்த எம்பெருமானே என்று கூறி அவன்

சீரையும் செல்வத்தையும் ஏத்தாத பேதையர்கள் தொழுது பெறுதற்கு இயலாதது.

திருநெல்வாயில்

பிணி கலந்தபுன் சடைமேற்
பிறையணி சிவனெனப் பேணிப்
பணி கலந்துசெய் யாத
பாவிகள் தொழச்செல்வ தன்றால்
மணி கலந்துபொன் னுந்தி
வருபுன னிவாமல்கு கரைமேல்
அணி கலந்தநெல் வாயில்
அரத்துறை அடிகள்தம் அருளே. **#977**

மணிகளையும் பொன்னையும் உந்திக் கொண்டு வரும் நீரை உடைய நிவாநதிக் கரைமேல் அழகுற அமைந்த நெல்வாயில் அரத்துறை அடிகள் தம் திருவருள் பிணிப்போடு அமைந்த மென்மையான சடைமீது பிறையணிந்துள்ள சிவனே எனப் பக்தி செய்து அவன் திருத்தொண்டுகளை அன்போடு செய்யாத பாவிகள் தொழுது பெறுதற்கு இயலாதது.

திருநெல்வாயில்

துன்னவாடை யொன் றுடுத்துத்
தூயவெண் ணீற்றின ராகி
உன்னி நைபவர்க் கல்லால்
ஒன்றுங்கை கூடுவ தன்றால்
பொன்னு மாமணி யுந்திப்
பொருபுன னிவாமல்கு கரைமேல்
அன்ன மாருநெல் வாயில்
அரத்துறை அடிகள்தம் அருளே. **#978**

பொன்னையும் சிறந்த மணிகளையும் உந்திக் கொண்டு வரும் நீரைஉடைய நிவா நதிக்கரைமேல் அன்னங்கள் தங்கி மகிழும் நெல்வாயில் அரத்துறை அடிகள் தம் திருவருள், தைத்த கோவண ஆடை ஒன்றைக் கட்டிக் கொண்டு தூய வெண்ணீறணிந்து திகழும் அவன் பெருமைகளை எண்ணி நைந்துருகுபவர்கட்கு அல்லால் ஏனையோருக்குக் கைகூடுவதன்று.

திருநெல்வாயில்

வெருகு ரிஞ்சுவெங் காட்டில்
ஆடிய விமலனென் றுள்கி

உருகி நைபவர்க் கல்லால்
ஒன்றுங்கை கூடுவ தன்றால்
முருகு ரிஞ்சுபூஞ் சோலை
மொய்ம்மலர் சுமந்திழி நிவாவந்
தருகு ரிஞ்சுநெல் வாயில்
அரத்துறை அடிகள்தம் அருளே. #979

மணம் தவழும் பூஞ்சோலைகளில் பூத்த மணம் மொய்க்கும் மலர்களைச் சுமந்து ஓடிவரும் நிவா நதி அருகில் வந்து பொருந்திச் செல்லும் நெல்வாயில் அரத்துறையில் விளங்கும் அடிகளின் திருவருள், காட்டுப்பூனைகள்வாழும் கொடிய சுடுகாட்டில் ஆடும் விமலனே! என்று அழைத்து அவன் பெருமைகளை எண்ணி மனம் உருகுபவர்கட்கு அல்லால் ஏனையோர்க்கு ஒரு சிறிதும் கைகூடாதது.

திருநெல்வாயில்

உரவு நீர்சடைக் கரந்த
வொருவனென் றுள்குளிர்ந் தேத்திப்
பரவி நைபவர்க் கல்லாற்
பரிந்துகை கூடுவ தன்றால்
குரவ நீடுயர் சோலைக்
குளிர்புனல் நிவாமல்கு கரைமேல்
அரவ மாருநெல் வாயில்
அரத்துறை அடிகள்தம் அருளே. #980

குராமரங்கள் நீண்டுயர்ந்த சோலைகளில் ஓடிவரும் குளிர்ந்த நீரை உடைய நிவா நதிக்கரைமேல் விளங்கும் நீர்ப்பாம்புகள் இளைப்பாறி மகிழ்வதான நெல்வாயில் அரத்துறை அடிகளின் திரு வருள், வலிமை பொருந்திய கங்கை வெள்ளத்தைத் தன் சடைமிசை ஒளித்த ஒப்பற்றவனே என்று மனம் குளிர்ந்து ஏந்தி வணங்கி மனம் உருகுபவர்க்கு அல்லால் ஏனையோரிடத்து அவன் அன்புகாட்டுவதில்லை ஆதலின் கை கூடாதது.

திருநெல்வாயில்

நீல மாமணி மிடற்று
நீறணி சிவனெனப் பேணும்
சீல மாந்தர்கட் கல்லாற்
சென்றுகை கூடுவ தன்றால்
கோல மாமல ருந்திக்
குளிர்புன னிவாமல்கு கரைமேல்
ஆலுஞ் சோலைநெல் வாயில்

அரத்துறை அடிகள்தம் அருளே. **#981**

அழகிய மலர்களை உந்திக் கொண்டு ஓடிவரும் குளிர்ந்த நீரை உடைய நிவாநதிக் கரைமேல் ஆரவாரிக்கும் சோலைகள் சூழ்ந்த நெல்வாயில் அரத்துறை அடிகள் தம் திரு அருள், நீலமணி போன்ற கண்டத்தினன், நீறணிந்த சிவன், என விரும்பி வழிபடும் சிவஞானியர்க்கு அல்லால் ஏனையோர்க்குக் கைகூடுவது அரிது.

திருநெல்வாயில்

செழுந்தண் மால்வரை யெடுத்த
செருவலி யிராவண னலற
அழுந்த வூன்றிய விரலான்
போற்றியென் பார்க்கல்ல தருளான்
கொழுங்கனிசுமந் துந்திக்
குளிர்புன னிவாமல்கு கரைமேல்
அழுந்துஞ் சோலைநெல் வாயில்
அரத்துறை அடிகள்தம் அருளே. **#982**

கொழுமையான கனிகளைச் சுமந்து உந்திவரும் குளிர்ந்த நீரைஉடைய நிவாநதிக்கரைமேல் அழுந்திய சோலைகள் சூழ்ந்த நெல்வாயில் அரத்துறை அடிகள்தம் திருவருளை, செழுமையான குளிர்ந்த பெரிய கயிலைமலையைப் பெயர்த்த போர் வலிமிக்க இராவணன் அலறுமாறு அழுந்த ஊன்றிய விரலை உடையவர் என்று போற்ற வல்லார்க்கு அல்லாமல் ஏனையோர்க்குத் தாரார்.

திருநெல்வாயில்

நுணங்கு நூலயன் மாலும்
இருவரும் நோக்கரி யானை
வணங்கி நைபவர்க் கல்லால்
வந்துகை கூடுவ தன்றால்
மணங்க மழ்ந்துபொன் னுந்தி
வருபுன னிவாமல்கு கரைமேல்
அணங்குஞ் சோலைநெல் வாயில்
அரத்துறை அடிகள்தம் அருளே. **#983**

மணம் கமழ்ந்து பொன்னுந்தி வரும் நீரை உடைய நிவாநதிக்கரைமேல் அழகு செய்யும் சோலைகள் சூழ்ந்த நெல்வாயில் அரத்துறை அடிகள் தம் திருவருள், நுட்பமான நூல்களை அறிந்துணர்ந்த பிரமன் மால் ஆகிய இருவராலும் காணுதற்கு அரிய பொருளாய் இருப்பவனை வணங்கி நைந்து வழிபடுவார்க்கு வாய்க்குமேயன்றி ஏனையோர்க்குக் கைகூடாதது.

திருநெல்வாயில்

சாக்கி யப்படு வாருஞ்
சமண்படு வார்களும் மற்றும்
பாக்கி யப்பட கில்லாப்
பாவிகள் தொழச்செல்வ தன்றால்
பூக்க மழ்ந்துபொன் னுந்திப்
பொருபுன னிவாமல்கு கரைமேல்
ஆர்க்குஞ் சோலைநெல் வாயில்
அரத்துறை அடிகள்தம் அருளே. **#984**

மலர்களின் மணம் கமழ்ந்து பொன்னுந்திக் கரையை பொருது வரும் நீரை உடைய நிவா நதிக் கரைமேல் ஒலிக்கின்ற சோலைகளால் சூழப்பெற்று விளங்கும் நெல் வாயில் அரத்துறை அடிகள்தம், திருவருள் சாக்கிய மதத்தில் விழுபவர்களும் சமண சமயத்தைச் சார்பவரும் மற்றும் புறப்புறச் சமயங்களைத் தழுவுவார்களும் ஆகிய, சைவ நெறி சாரும் பாக்கியம் இல்லாத பாவிகளால், தொழுது பெறுவதற்கு இயலாதது.

திருநெல்வாயில்

கறையி னார்பொழில் சூழ்ந்த
காழியுண் ஞானசம் பந்தன்
அறையும் பூம்புனல் பரந்த
அரத்துறை அடிகள்தம் அருளை
முறைமை யாற்சொன்ன பாடல்
மொழியும் மாந்தர்தம் வினைபோய்ப்
பறையு மையுற வில்லைப்
பாட்டிவை பத்தும்வல் லார்க்கே. **#985**

கருமை நிறம் அமைந்த பொழில்கள் சூழ்ந்துள்ள சீகாழிப்பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன், ஒலிக்கின்ற அழகிய புனல் பரவிய நெல்வாயில் அரத்துறை அடிகளின் திருவருளைப் பெறுதற்குரிய நெறிகளை முறையோடு தெரிவித்துள்ள இப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓதவல்லவர்கட்கு ஐயுறவின்றி வினைகள் நீங்கும். இஃது உறுதி.

திருமறைக்காடு

திருமறைக்காடு,
பண் - பியந்தைக்காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வேதாரணியேசுவரர்.
தேவியார் : யாழைப்பழித்தமொழியம்மை.

பொங்கு வெண்மணற் கானற்
பொருகடற் றிரைதவழ் முத்தம்
கங்கு லாரிருள் போழுங்
கலிமறைக் காடமர்ந் தார்தாம்
திங்கள் சூடின ரேனுந்
திரிபுர மெரித்தன ரேனும்
எங்கு மெங்கள் பிரானார்
புகழல திகழ்பழி யிலரே. **#986**

பொங்கியது போன்ற வெண்மையான மணற்பரப்பில் அமைந்துள்ள சோலையில் கரையைப் பொரும் கடல் அலைகளில் தவழ்ந்து வரும் முத்துக்கள் கங்குலில் செறிந்த இருளைப் போழ்ந்து ஒளிதரும், ஒலிமிகுந்த திருமறைக்காட்டில் எழுந்தருளிய இறைவர் திங்கள் சூடினரேனும் திரிபுரத்தை எரித்தனரேனும் எவ்விடத்தும் எங்கள் பிரானார்க்குப் புகழ் ஆகுமேயொழிய, இகழும் பழி உளவாதல் இல்லை.

திருமறைக்காடு

கூனி ளம்பிறை சூடிக்
கொடுவரித் தோலுடை யாடை
ஆனி லங்கிள ரைந்தும்
ஆடுவர் பூண்பது மரவம்
கான லங்கழி யோதங்
கரையொடு கதிர்மணி ததும்பத்
தேன லங்கமழ் சோலைத்
திருமறைக் காடமர்ந் தாரே. **#987**

கடற்கரைச் சோலைகளில் உப்பங்கழிகளின் வெள்ளம் கரையோடு மோதுதலால் ஒளிதரும் மணிகள் சுடர்விட, தேனின் மணம் கமழும் சோலைகள் சூழ்ந்துள்ள திருமறைக்காட்டில் எழுந்தருளியுள்ள ஈசர் வளைந்த பிறைமதியைச் சூடி வளைந்த கோடுகளைக் கொண்ட புலித்தோலை ஆடையாக உடுத்து ஆனைந்து ஆடி மகிழ்பவர். அவர்

அணிகலனாகப் பூண்டுள்ளது பாம்பாகும்.

திருமறைக்காடு

நுண்ணி தாய்வெளி தாகி
நூல்கிடந் திலங்குபொன் மார்பில்
பண்ணி யாழென முரலும்
பணிமொழி யுமையொரு பாகன்
தண்ணி தாயவெள் ளருவி
சலசல நுரைமணி ததும்பக்
கண்ணி தானுமொர் பிறையார்
கலிமறைக் காடமர்ந் தாரே. **#988**

ஆரவாரம் மிக்க திருமறைக்காட்டில் எழுந்தருளிய இறைவர், நுண்மையான வெள்ளிய நூல் விளங்கும் அழகிய மார் பினை உடையவர். இசைதரும் யாழ் போல அடக்கமான இனிய மொழிபேசும் உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவர். தண்மையான வெள்ளிய அருவி சலசல என்னும் ஒலியோடு பாய்வதால் பெருகிய கங்கை நுரைத்து மணிகள் ததும்புமாறு சடையிற் கொண்டதோடு இளம் பிறையாகிய முடிமாலையையும் சூடியிருப்பவர் ஆவார்.

திருமறைக்காடு

ஏழை வெண்குரு கயலே
யிளம்பெடை தனதெனக் கருதித்
தாழை வெண்மடற் புல்குந்
தண்மறைக் காடமர்ந் தார்தாம்
மாழை யங்கய லொண்கண்
மலைமகள் கணவன தடியின்
நீழ லேசர ணாக
நினைபவர் வினைநலி விலரே. **#989**

அறியாமையை உடைய வெண் குருகு அயலே விளங்கும் தாழை வெண்மடலைத்தன் துணைப் பேடை எனக் கருதிப் புல்கும் தண்ணிய திருமறைக்காட்டில் எழுந்தருளிய இறைவர் இளமையையும், கயல் போன்ற கண்களையும் உடைய மலைமகளின் கணவராவார். அவர் திருவடி நீழலையே சரணாக நினைபவர் வினைகளால் வரும் துன்பங்கள் இலராவர்.

திருமறைக்காடு

அரவம் வீக்கிய அரையும்
அதிர்கழல் தழுவிய அடியும்

பரவ நாஞ்செய்த பாவம்
பறைதர வருளுவர் பதிதான்
மரவ நீடுயர் சோலை
மழலைவண் டியாழ்செயு மறைக்காட்
டிரவு மெல்லியும் பகலும்
ஏத்துதல் குணமென லாமே. **#990**

பாம்பைக் கச்சாகக் கட்டிய இடையையும், ஒலிக்கின்ற கழல் அணிந்த திருவடிகளையும், நாம் பரவினால் நாம் செய்த பாவங்கள் நீங்க அருள் புரியும் சிவபெருமான் எழுந்தருளிய பதி, குங்கும மரங்கள் நீண்டுயர்ந்த சோலைகளில் வண்டுகள் யாழ் போல இசைதரும் திருமறைக்காடாகும். அங்குள்ள பெருமானை இரவும் பகலும் ஏத்துதலே குணமாகும்.

திருமறைக்காடு

பல்லி லோடுகை யேந்திப்
பாடியு மாடியும் பலிதேர்
அல்லல் வாழ்க்கைய ரேனும்
அழகிய தறிவரெம் மடிகள்
புல்ல மேறுவர் பூதம்
புடைசெல வுழிதர்வர்க் கிடமாம்
மல்கு வெண்டிரை ஓத
மாமறைக் காடது தானே. **#991**

பல்லில்லாத தலையோட்டைக் கையில் ஏந்திப் பாடியும் ஆடியும் பலிதேரும் அல்லல் பொருந்திய வாழ்க்கையை உடையவர் ஆயினும் அவருக்கு அது அழகியதேயாகும். அதனையும் அவரே அறிவார். எருதேறிவருவார். பூதங்கள் அருகேபுடைசூழ்ந்து வரத்திரிவார். அத்தகைய பெருமானாருக்கு இடமாக விளங்குவது நிறைந்த வெண்மையான திரைகளை உடைய ஓத நீர் சூழ்ந்த திருமறைக்காடாகும்.

திருமறைக்காடு

நாகந் தான்கயி றாக
நளிர்வரை யதற்குமத் தாகப்
பாகந் தேவரொ டசுரர்
படுகட லளறெழக் கடைய
வேக நஞ்செழ வாங்கே
வெருவொடு மிரிந்தெங்கு மோட
ஆகந் தன்னில்வைத் தமிர்தம்
ஆக்குவித் தான்மறைக் காடே. **#992**

வாசுகி என்னும் பாம்பு கயிறாகவும் செறிவான மந்தரமலை மத்தாகவும் கொண்டு, தலைவால் பாகங்களாகப் பகுத்துக் கொண்டு தேவாசுரர் ஆழமான கடலை அளறு எழுமாறு கடைந்த போது கொடிய நஞ்சு வெளிப்பட, அதனைக் கண்டு அவர்கள் அஞ்சி ஓடியபோது அந்நஞ்சை உண்டு தன் திருமேனிமிடற்றில் நிறுத்தி அமிர்தமாகக் கொண்டவன் எழுந்தருளிய தலம் திருமறைக்காடாகும்.

திருமறைக்காடு

தக்கன் வேள்வியைத் தகர்த்தோன்
தனதொரு பெருமையை யோரான்
மிக்கு மேற்சென்று மலையை
யெடுத்தலு மலைமகள் நடுங்க
நக்குத் தன்றிரு விரலால்
ஊன்றலும் நடுநடுத் தரக்கன்
பக்க வாயும்விட் டலறப்
பரிந்தவன் பதிமறைக் காடே. **#993**

தக்கன் வேள்வியைத் தகர்த்தோனாகிய சிவபிரானது ஒப்பற்ற பெருமையை உணராத அரக்கனாகிய இராவணன் செருக்குடன் சென்று கயிலை மலையைப் பெயர்த்த அளவில் மலைமகள் அஞ்ச, பெருமான் அவனது அறியாமைக்குச் சிரித்துத்தன் கால் விரலை ஊன்றிய அளவில் நடுநடுங்கி அனைத்து வாய்களாலும் அவன் அலறி அழ அதனைக் கண்டு பரிந்து அருள் செய்தவனாகிய சிவபிரானது பதி மறைக்காடாகும்.

திருமறைக்காடு

விண்ட மாமல ரோனும்
விளங்கொளி யரவணை யானும்
பண்டுங் காண்பரி தாய
பரிசின னவனுறை பதிதான்
கண்ட லங்கழி யோதங்
கரையொடு கதிர்மணி ததும்ப
வண்ட லங்கமழ் சோலை
மாமறைக் காடது தானே. **#994**

விரிந்த தாமரை மலரில் மேவிய பிரமனும், விளங்கும் ஒளியுடைய பாம்பணையில் துயிலும் திருமாலும், முற்காலத்தும் காணுதற்கு அரியனாய தன்மையனாகிய சிவபிரான் உறையும் பதி, தாழைமரங்கள் அடுத்துள்ள கழிகளில் பெருகிய ஓதநீர் ஒளிதரும் மணிகளோடு ததும்ப வண்டல் மண்ணில் மணம் கமழ்ந்து வளரும் சோலைகள் சூழ்ந்த சிறந்த

திருமறைக்காடாகும்.

திருமறைக்காடு

பெரிய வாகிய குடையும்
பீலியும் அவைவெயிற் கரவாக்
கரிய மண்டைகை யேந்திக்
கல்லென வுழிதருங் கழுக்கள்
அரிய வாகவுண் டோது
மவர்திற மொழிந்துநம் மடிகள்
பெரிய சீர்மறைக் காடே
பேணுமின் மனமுடை யீரே. **#995**

பெரிய குடையும் மயிற்பீலியும் வெயிலை மறைக்க, கரிதான மண்டை என்னும் உண்கலன் ஏந்திக் கல் என்ற ஆரவாரத்துடன் பலி ஏற்கும் கழுக்களாகிய சமண புத்தர்கள் உண்டாம் இல்லையாம் என ஓதித்திரிய அச்சமயத்தவரின் நீங்கி, நல்ல மனம் உடையவர்களே! நம் தலைவராக விளங்கும் பெருமைமிக்க திருமறைக்காட்டு இறைவனை வழிபடுவீர்களாக.

திருமறைக்காடு

மையு லாம்பொழில் சூழ்ந்த
மாமறைக் காடமர்ந் தாரைக்
கையி னாற்றொழு தெழுவான்
காழியுண் ஞானசம் பந்தன்
செய்த செந்தமிழ் பத்துஞ்
சிந்தையுட் சேர்க்கவல் லார்போய்ப்
பொய்யில் வானவ ரோடும்
புகவலர் கொளவலர் புகழே. **#996**

மேகங்கள் உலாவும் பொழில் சூழ்ந்த சிறந்த திருமறைக்காட்டில் எழுந்தருளிய இறைவரைக் கைகளால் தொழுது எழுவோனாகிய காழிப்பதிவாழ் ஞானசம்பந்தன் செய்த இச்செந்தமிழ் பத்தையும் சிந்தையில் பதித்துப் போற்றவல்லவர் பொய்மையற்ற வானவர் உலகில் அவரோடும் புகவல்லவர் ஆவர். புகழே கொள்ள வல்லவராய் விளங்குபவர்.

திருப்புகலூர்

திருப்புகலூர்

திருப்புகலூர்,
பண் - பியந்தைக்காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வர்த்தமானீசுவரர்.
தேவியார் : கருந்தார்க்குழலியம்மை.

பட்டம் பால்நிற மதியம்
படர்சடைச் சுடர்விடு பாணி
நட்டம் நள்ளிரு ளாடும்
நாதன் நவின்றுறை கோயில்
புட்டன் பேடையொ டாடும்
பூம்புக லூர்த்தொண்டர் போற்றி
வட்டஞ் சூழ்ந்தடி பரவும்
வர்த்தமா னீச்சரத் தாரே. **#997**

ஆண் பறவைகள் தன்பிணையோடு கூடி மகிழும் அழகிய புகலூரில் அடியவர்கள் வட்டமாகச் சூழ்ந்து திருவடிகளைப் போற்றிப் பரவும் வர்த்தமானீச்சரத்து இறைவர் திருமேனிமேல் உத்தரீயமும் விரிந்த சடைமேல் வெண்மதி ஒளிதரும் கங்கை ஆகியவற்றையும் கொண்டு நள்ளிருளில் நட்டமாடும் தலைவர் ஆவார்.அவர் கோயில் திருப்புகலூர்வர்த்தமானீச்சரம் ஆகும்.

திருப்புகலூர்

முயல்வ ளாவிய திங்கள்
வாண்முகத் தரிவையில் தெரிவை
இயல்வ ளாவிய துடைய
வின்னமு தெந்தையெம் பெருமான்
கயல்வ ளாவிய கழனிக்
கருநிறக் குவளைகள் மலரும்
வயல்வ ளாவிய புகலூர்
வர்த்தமா னீச்சரத் தாரே. **#998**

கயல்கள் நிறைந்த கழனிகளில் கரிய நிறக் குவளைகள் மலரும் வயல்களை உடைய புகலூர் வர்த்தமானீச்சரத்து இறைவர், முயற்கறை பொருந்திய திங்கள் போன்ற ஒளிபொருந்திய முகத்தினை உடைய மங்கையரில் மேம்பட்ட தெரிவையாகிய உமையம்மையைப் பாகமாக உடைய இனிய அமுதம் போன்றவர். எமக்குத் தந்தையாகவும்

தலைவராகவும் விளங்குபவர்.

திருப்புகலூர்

தொண்டர் தண்கய மூழ்கித்
துணையலுஞ் சாந்தமும் புகையும்
கொண்டு கொண்டடி பரவிக்
குறிப்பறி முருகன்செய் கோலம்
கண்டு கண்டுகண் குளிரக்
களிபரந் தொளிமல்கு கள்ளார்
வண்டு பண்செயும் புகலூர்
வர்த்தமா னீச்சரத் தாரே. **#999**

தொண்டர்கள் குளிர்ந்த நீர் நிலைகளில் மூழ்கி மலர் மாலை சாந்து, மணப்புகை கொண்டு திருவடிப்பரவி வழிபடக் கண்டு அவர்தம் குறிப்பறிந்து அவர்கட்கு உதவும் முருகநாயனார் தாமும் அவ்வாறே இறைவனை அலங்கரித்துக் கண்குளிரக் கண்டு மகிழுமாறு வண்டுகள் கள்ளுண்டு பண்செய்யும் ஒலிபோல ஒலிக்கும். வர்த்த மானீச்சரத்துள் சிவபெருமான் உகந்தருளியுள்ளார்.

திருப்புகலூர்

பண்ண வண்ணத்த ராகிப்
பாடலொ டாடல றாத
விண்ண வண்ணத்த ராய
விரிபுக லூரரொர் பாகம்
பெண்ண வண்ணத்த ராகும்
பெற்றியொ டாணிணை பிணைந்த
வண்ண வண்ணத்தெம் பெருமான்
வர்த்தமா னீச்சரத் தாரே. **#1000**

விரிந்த பரப்புடைய புகலூர் வர்த்தமானீச்சரத்து இறைவர், பாடல் ஆடல்களில் பயிலும் பண்ணிசை மயமானவரும், ஆகாய வடிவினராய் விளங்குபவரும், பெண்ணொர் பாகமான வடிவினரும், ஆணொடு இணைந்த அரி அர்த்த வடிவினரு மானவர்.

திருப்புகலூர்

ஈச னேறமர் கடவுள்
இன்னமு தெந்தையெம் பெருமான்
பூசு மாசில்வெண் ணீற்றர்
பொலிவுடைப் பூம்புக லூரில்
மூசு வண்டறை கொன்றை

முருகன்முப் போதுஞ்செய் முடிமேல்
வாச மாமல ருடையார்
வர்த்தமா னீச்சரத் தாரே. **#1001**

அழகிய புகலூரில் முருகநாயனார் வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலர் கொண்டு மூன்று பொழுதிலும் வழிபட அம் மண மலர்களோடு விளங்கும் வர்த்தமானீச்சரத்து இறைவர் எல்லோர்க்கும் தலைவர். விடையேறு உடையவர். இனிய அமுதம் போன்றவர். எந்தை, எம்பெருமான் குற்றம் அற்ற வெண்ணீறு பூசியவர்.

திருப்புகலூர்

தளிரி ளங்கொடி வளரத்
தண்கய மிரியவண் டேறிக்
கிளரி ளம்முழை நுழையக்
கிழிதரு பொழிற்புக லூரில்
உளரி ளஞ்சுனை மலரு
மொளிதரு சடைமுடி யதன்மேல்
வளரி ளம்பிறை யுடையார்
வர்த்தமா னீச்சரத் தாரே. **#1002**

குளிர்ந்த நீர் நிலைகளை அடுத்து வளரும் இளங்கொடிகளின் தளிர்கள் கிழியுமாறு வண்டுகள் சரேலென எழுந்து முழைகள்தோறும் செல்லும் பொழில்கள் சூழ்ந்த புகலூரில் வாழ்பவர் சுனை நீரில் பூத்த மலர்கள் விளங்கும் சடைமுடியில் பிறை சூடியவராகிய வர்த்தமானீச்சரத்து இறைவர்.

திருப்புகலூர்

தென்சொல் விஞ்சமர் வடசொற்
றிசைமொழி யெழினரம் பெடுத்துத்
துஞ்சு நெஞ்சிரு ணீங்கத்
தொழுதெழு தொல்புக லூரில்
அஞ்ச னம்பிதிர்ந் தனைய
வலைகடல் கடையவன் றெழுந்த
வஞ்ச நஞ்சணி கண்டர்
வர்த்தமா னீச்சரத் தாரே. **#1003**

அடியவர் தமிழிலும் வடமொழியிலும் திசை மொழிகளிலும் அழகிய யாழ் நரம்பை மீட்டித் தங்கள் மனத்திருள் நீங்கப்பாடித் தொழும் புகலூரில், அன்று அலைகடலைக் கடந்த போது, மை பிதிர்ந்தாற்போல எழுந்த வஞ்ச நஞ்சினை உண்ட அழகிய கண்டத்தினராய் விளங்குபவர் வர்த்தமானீச்சரத்து இறைவர்.

திருப்புகலூர்

சாம வேதமொர் கீத
மோதியத் தசமுகன் பரவும்
நாம தேயம துடையார்
நன்குணர்ந் தடிகளென் றேத்தக்
காம தேவனை வேவக்
கனலெரி கொளுவிய கண்ணார்
வாம தேவர்தண் புகலூர்
வர்த்தமா னீச்சரத் தாரே. **#1004**

தண்மையான புகலூரில் விளங்கும் வர்த்தமானீச்சரத்து இறைவர். இராவணன் சாம வேதம் பாடிப் பரவும் பெயரையும் ஊரையும் உடையவர். நன்குணர்ந்து அடிகள் என்றேத்தும் பெயர்களை உடையவர். காமதேவனை எரித்த கண்ணையுடையவர்.

திருப்புகலூர்

சீர ணங்குற நின்ற
செருவுறு திசைமுக னோடு
நார ணன்கருத் தழிய
நகைசெய்த சடைமுடி நம்பர்
ஆர ணங்குறு முமையை
யஞ்சுவித் தருளுதல் பொருட்டால்
வார ணத்துரி போர்த்தார்
வர்த்தமா னீச்சரத் தாரே. **#1005**

வர்த்தமானீச்சரத்து இறைவர், சிறந்த தெய்வத் தன்மை உடையவர்களாய் யார் தலைவர் என்பதில் மாறுபட்டவர்களாய்த் தம்முட் செருச்செய்த திருமால் பிரமர்களின் கருத்தழியுமாறு அவர்களிடையே தோன்றி நகை செய்தவர். உமையம்மையை அஞ்சுவிக்கும்பொருட்டு அவள் எதிரே யானையை உரித்தவர்.

திருப்புகலூர்

கையி லுண்டுழல் வாருங்
கமழ்துவ ராடையி னால்தம்
செய்யைப் போர்த்துழல் வாரு
முரைப்பன மெய்யென விரும்பேல்
மெய்யில் வாளைக ளோடு
செங்கயல் குதிகொளும் புகலூர்
மைகொள் கண்டத்தெம் பெருமான்

வர்த்தமா னீச்சரத் தாரே. **#1006**

வாளைமீன்களோடு கயல்கள் குதித்து விளையாடும் வயல்களைக் கொண்ட புகலூரால் நீல கண்டராய் விளங்கும் வர்த்தமானீச்சரத்து இறைவர் புகழே மெய்ம்மமையானவை. கையில் உணவு ஏற்று உண்ணும் சமணரும் துவராடை போர்த்த புத்தரும் கூறும் உரைகளை மெய்யெனக் கருதேல்.

<u>திருப்புகலூர்</u>

பொங்கு தண்புனல் சூழ்ந்து
போதணி பொழிற்புக லூரில்
மங்குன் மாமதி தவழும்
வர்த்தமா னீச்சரத் தாரைத்
தங்கு சீர்திகழ் ஞான
சம்பந்தன் றண்டமிழ் பத்தும்
எங்கு மேத்தவல் லார்கள்
எய்துவ ரிமையவ ருலகே. **#1007**

மிகுதியான தண்ணிய நீராலும், மலர்பூத்த பொழில்களாலும் சூழப்பெற்று விளங்கும் புகலூரில் வானளாவிய வர்த்தமானீச்சரத் திருக்கோயிலில் விளங்கும் இறைவரைப் புகழ்மிக்க ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய பாடல்கள் பத்தையும் எவ்விடத்தும் பாடி ஏத்துவார் இமையவர் உலகம் எய்துவர்.

திருத்தெங்கூர்

திருத்தெங்கூர்

திருத்தெங்கூர்,
பண் - பியந்தைக்காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வெள்ளிமலையீசுவரர்.
தேவியார் : பெரியாம்பிகையம்மை.

புரைசெய் வல்வினை தீர்க்கும்
புண்ணியர் விண்ணவர் போற்றக்
கரைசெய் மால்கடல் நஞ்சை
உண்டவர் கருதலர் புரங்கள்
இரைசெய் தாரழ லூட்டி
யுழல்பவ ரிடுபலிக் கெழில்சேர்
விரைசெய் பூம்பொழில் தெங்கூர்
வெள்ளியங் குன்றமர்ந் தாரே. **#1008**

மணம் கமழும் அழகிய பொழில் சூழ்ந்த தெங்கூரில் வெள்ளியங்குன்று எனப்பெறும் கோயிலில் அமர்ந்த இறைவர் துன்பம் தரும் வலிய வினைகளைப் போக்கும் புண்ணியர். விண்ணவர் போற்றக் கடலில் தோன்றிய நஞ்சினை உண்டவர். முப்புரம் எரித்தவர். இடுபலிக்கு உழல்பவர்.

திருத்தெங்கூர்

சித்தந் தன்னடி நினைவார்
செடிபடு கொடுவினை தீர்க்கும்
கொத்தின் றாழ்சடை முடிமேற்
கோளெயிற் றரவொடு பிறையன்
பத்தர் தாம்பணிந் தேத்தும்
பரம்பரன் பைம்புனல் பதித்த
வித்தன் தாழ்பொழில் தெங்கூர்
வெள்ளியங் குன்றமர்ந் தாரே. **#1009**

தாழ்ந்த பொழில் சூழ்ந்து விளங்கும் தெங்கூரில் வெள்ளியங்குன்றமர்ந்த இறைவர், மனம் ஒன்றி நினைக்கும் அடியவர்களின் கொடுவினைகளைத் தீர்ப்பவர். கொத்தாக விளங்கும் சடைமுடிமேல் அரவோடு பிறையைச் சூடியவர். பக்தர்கள் பணிந்தேத்தும் பரம்பரர். நீரில் பதித்த விதை போன்றவர்.

திருத்தெங்கூர்

அடையும் வல்வினை யகல
அருள்பவ ரனலுடை மழுவாட்
படையர் பாய்புலித் தோலர்
பைம்புனற் கொன்றையர் படர்புன்
சடையில் வெண்பிறை சூடித்
தார்மணி யணிதரு தறுகண்
விடையர் வீங்கெழில் தெங்கூர்
வெள்ளியங் குன்றமர்ந் தாரே. **#1010**

அழகுமிக்க தெங்கூரில் வெள்ளியங்குன்றில் விளங்கும் பெருமானார், நம்மை அடையும் வலிய வினைகளைத் தீர்ப்பவர். அனல்போன்ற மழுப்படையை உடையவர். புலித்தோல் உடுத்தவர். கொன்றையணிந்த சடைமேல் பிறைசூடி மணி கட்டிய விடைமீது வருபவர்.

திருத்தெங்கூர்

பண்டு நான்செய்த வினைகள்
பறையவோர் நெறியருள் பயப்பார்
கொண்டல் வான்மதி சூடிக்
குரைகடல் விடமணி கண்டர்
வண்டு மாமல ரூதி
மதுவுண விதழ்மறி வெய்தி
விண்ட வார்பொழில் தெங்கூர்
வெள்ளியங் குன்றமர்ந் தாரே. **#1011**

மது உண்ண வந்த வண்டுகளால் விரிந்த மலர்களை உடைய பொழில் சூழ்ந்த தெங்கூரில் வெள்ளியங்குன்றில் விளங்கும் இறைவர், முற்பிறவிகளில் நான்செய்த பழவினைகளைத் தீர்த்து நல்நெறியையும் அருளையும் தருபவர். வானத்து இளம்பிறையைச் சூடியவர். கடலில் தோன்றிய விடத்தை உண்ட நீலமணி போன்ற கண்டம் உடையவர்.

திருத்தெங்கூர்

சுழித்த வார்புனற் கங்கை
சூடியொர் காலனைக் காலால்
தெழித்து வானவர் நடுங்கச்
செற்றவர் சிறையணி பறவை
கழித்த வெண்டலை யேந்திக்
காமன துடல்பொடி யாக
விழித்த வர்திருத் தெங்கூர்

வெள்ளியங் குன்றமர்ந் தாரே. #1012
திருத்தெங்கூர் வெள்ளியங்குன்று அமர்ந்த இறைவர் கங்கையை முடிமிசைச் சூடி வானவர் நடுங்கக் காலனைக் காலால் செற்றவர். அன்னப் பறவையாய் வடிவெடுத்த பிரமனது தலை யோட்டைக் கையில் தரித்தவர். காமனின் உடல் பொடியாகுமாறு விழித்தவர்.

திருத்தெங்கூர்

தொல்லை வல்வினை தீர்ப்பார்
சுடலைவெண் பொடியணி சுவண்டர்
எல்லி சூடிநின் றாடும்
இறையவ ரிமையவ ரேத்தச்
சில்லை மால்விடை யேறித்
திரிபுரந் தீயெழச் செற்ற
வில்லி னார்திருத் தெங்கூர்
வெள்ளியங் குன்றமர்ந் தாரே. #1013
திருத்தெங்கூர் வெள்ளியங்குன்றமர்ந்த இறைவர், பழவினை தீர்ப்பவர். சுடலைப் பொடி பூசியவர். திங்களை முடியில்சூடி நின்று ஆடுபவர். இமையவர் ஏத்த விடை மீது ஏறிச் சென்று திரிபுரம் எரித்த வில்லினர்.

திருத்தெங்கூர்

நெறிகொள் சிந்தைய ராகி
நினைபவர் வினைகெட நின்றார்
முறிகொண் மேனிமுக் கண்ணர்
முளைமதி நடுநடுத் திலங்கப்
பொறிகொள் வாளர வணிந்த
புண்ணியர் வெண்பொடிப் பூசி
வெறிகொள் பூம்பொழில் தெங்கூர்
வெள்ளியங் குன்றமர்ந் தாரே. #1014
வெண்ணீறணிந்தவராய் மணம் கமழும் பொழில் சூழ்ந்த திருத்தெங்கூரில் வெள்ளியங்குன்றில் எழுந்தருளிய இறைவர், நெறியான மனம் உடையவராய் நினைபவர் வினைகளைத் தீர்ப்பவர். தளிர்போலும் திருமேனியையும் மூன்று கண்களையும் உடையவர். பிறைகண்டு அஞ்சுமாறு சடைமிசைப் பாம்பைச் சூடிய புண்ணியர்.

திருத்தெங்கூர்

எண்ணி லாவிறல் அரக்கன்
எழில்திகழ் மால்வரை யெடுக்கக்
கண்ணெ லாம்பொடிந் தலறக்

கால்விர லூன்றிய கருத்தர்
தண்ணு லாம்புனற் கண்ணி
தயங்கிய சடைமுடிச் சதுரர்
விண்ணு லாம்பொழில் தெங்கூர்
வெள்ளியங் குன்றமர்ந் தாரே. **#1015**

விண்ணளாவிய பொழில் சூழ்ந்த தெங்கூரில் விளங்கும் வெள்ளியங்குன்றமர்ந்த இறைவர், அளவற்ற ஆற்றல் படைத்த இராவணன் கயிலை மலையை எடுக்க முற்பட்டபோது அவன் கண்களெல்லாம் பொடியாய், அவன் அலறி விழுமாறு கால் விரலால் ஊன்றிய தலைவர். தண்ணிய கங்கையாகிய கண்ணியைச் சூடியவர்.

திருத்தெங்கூர்

தேடித் தானயன் மாலுந்
திருமுடி யடியிணை காணார்
பாடத் தான்பல பூதப்
படையினர் சுடலையிற் பலகால்
ஆடத் தான்மிக வல்லர்
அருச்சுனற் கருள்செயக் கருதும்
வேடத் தார்திருத் தெங்கூர்
வெள்ளியங் குன்றமர்ந் தாரே. **#1016**

திருத்தெங்கூரில், அயனும் மாலும் முறையே திருமுடியையும் திருவடியையும் தேடிக் காணப்பெறாதவர். பூதப் படைகள் பாடச் சுடலையில் பலகாலும் ஆடும் இயல்பினர். அருச்சுனனுக்கு அருள் செய்யும் வேடத்தினர்.

திருத்தெங்கூர்

சடங்கொள் சீவரப் போர்வைச்
சாக்கியர் சமணர்சொற் றவிர
இடங்கொள் வல்வினை தீர்க்கும்
ஏத்துமி னிருமருப் பொருகைக்
கடங்கொண் மால்களிற் றுரியர்
கடல்கடைந் திடக்கனன் றெழுந்த
விடங்கொள் கண்டத்தர் தெங்கூர்
வெள்ளியங் குன்றமர்ந் தாரே. **#1017**

திருத்தெங்கூரில் வெள்ளியங்குன்றமர்ந்த பெருமான் உடலிற்போர்த்திய சீவரப் போர்வையை உடைய சாக்கியர் சமணர் சொற்களை வெறுத்துச் சைவ நெறிசார்வோரின் வல்வினைகளைத் தீர்த்தருள் புரிபவர். இருமருப்புக்களையும் ஒருகையையும் உடைய யானையின் தோலைப்

போர்த்தியவர். கடல் கடைந்த போதெழுந்த விடம் பொருந்திய கண்டத்தினர்.

திருத்தெங்கூர்

வெந்த நீற்றினர் தெங்கூர்
வெள்ளியங் குன்றமர்ந் தாரைக்
கந்த மார்பொழில் சூழ்ந்த
காழியுண் ஞானசம் பந்தன்
சந்த மாயின பாடல்
தண்டமிழ் பத்தும்வல் லார்மேல்
பந்த மாயின பாவம்
பாறுதல் தேறுதல் பயனே. **#1018**

வெந்த வெண்ணீறணிந்த தெங்கூர் வெள்ளியங் குன்றமர்ந்த இறைவரை மணம் பொருந்திய பொழில் சூழ்ந்த காழி ஞானசம்பந்தன் பாடிய சந்தப்பாடல்கள் பத்தையும் ஓத வல்லவர் மேல் பந்தமாக அமைந்த பாவங்கள் நீங்கும். அவர்கள் தெளவு பெறுதல் வந்துறும் பயனாகும்.

திருவாழ்கொளிபுத்தூர்

திருவாழ்கொளிபுத்தூர்

திருவாழ்கொளிபுத்தூர்,
பண் - பியந்தைக்காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாணிக்கவண்ணநாதர்.
தேவியார் : வண்டமர்பூங்குழலம்மை.

சாகை யாயிர முடையார்
சாமமு மோதுவ துடையார்
ஈகை யார்கடை நோக்கி
யிரப்பதும் பலபல வுடையார்
தோகை மாமயி லனைய
துடியிடை பாகமு முடையார்
வாகை நுண்டுளி வீசும்
வாழ்கொளி புத்தூ ருளாரே. **#1019**

வாகை மரங்கள் நுண் துளி சொரியும் வாழ்கொளிபுத்தூர் இறைவர் வேதப்பிரிவுகளான சாகைகள் பலவற்றை அருளியவர். சாமகானம் பாடுபவர். கொடுப்பவர் இல்லங்கட்குச் சென்று இரக்கும் வேடங்கள் கொள்பவர். மயில் போன்ற சாயலையும் துடி போன்ற இடையையும் உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவர்.

திருவாழ்கொளிபுத்தூர்

எண்ணி லீரமு முடையா
ரெத்தனை யோரிவ ரறங்கள்
கண்ணு மாயிர முடையார்
கையுமொ ராயிர முடையார்
பெண்ணு மாயிர முடையார்
பெருமையொ ராயிர முடையார்
வண்ண மாயிர முடையார்
வாழ்கொளி புத்தூ ருளாரே. **#1020**

வாழ்கொளிபுத்தூர் இறைவர், எண்ணற்ற வகைகளில் அன்பு காட்டுபவர். இவர் அறங்களைப் பெற்றோர் பலராவர். இவர் ஆயிரங்கண், கைகளை உடையவர். சக்தியின் அம்சமாகப் பலவற்றை உடையவர். பெருமைகள் பல உடையவர். இவர் வண்ணமும் பலவகைப்படுவனவாகும்.

திருவாழ்கொளிபுத்தூர்

நொடியொ ராயிர முடையார்
நுண்ணிய ராமவர் நோக்கும்
வடிவு மாயிர முடையார்
வண்ணமு மாயிர முடையார்
முடியு மாயிர முடையார்
மொய்குழ லாளையு முடையார்
வடிவு மாயிர முடையார்
வாழ்கொளி புத்தூ ருளாரே. **#1021**

வாழ்கொளிபுத்தூர் இறைவர், நுட்பமான கால அளவுகளாய் விளங்குபவர். மிகவும் நுண்மையயானவர். அவர் பார் வையும் பலவேறு வகைப்பட்டவை. பல்வேறு வண்ணங்கள் கொண்டவர். பல்வாய முடிகளை உடையவர், உமையம்மையை இடப்பாகமாகக் கொண்டவர். பல்வேறு வடிவங்கள் கொண்டவர்.

திருவாழ்கொளிபுத்தூர்

பஞ்சி நுண்டுகி லன்ன
பைங்கழற் சேவடி யுடையார்
குஞ்சி மேகலை யுடையார்
கொந்தணி வேல்வல னுடையார்
அஞ்சும் வென்றவர்க் கணியார்
ஆனையி னீருரி யுடையார்
வஞ்சி நுண்ணிடை யுடையார்
வாழ்கொளி புத்தூ ருளாரே. **#1022**

வஞ்சிக்கொடி போன்ற நுண்ணிய இடையினை உடைய மகளிர் வாழும் வாழ்கொளிபுத்தூர் இறைவர், பஞ்சினால் இயன்ற துகில் போன்ற சேவடிகளை உடையவர். சடைமுடியில் ஆடையைத்தரித்தவர். பூங்கொத்துக்கள் சூடிய வேலை வெற்றிக்கு அடையாளமாகக் கொண்டவர். ஐம்பொறிகளை வென்றவர்க்கு அணிமையில் இருப்பவர். ஆனைத்தோல் போர்த்தவர்.

திருவாழ்கொளிபுத்தூர்

பரவு வாரையு முடையார்
பழித்திகழ் வாரையு முடையார்
விரவு வாரையு முடையார்
வெண்டலைப் பலிகொள்வ துடையார்
அரவம் பூண்பது முடையார்

ஆயிரம் பேர்மிக வுடையார்
வரமு மாயிர முடையார்
வாழ்கொளி புத்தூ ருளாரே. **#1023**

வாழ்கொளிபுத்தூர் இறைவர் பரவுவாரையும் பழித்து இகழும் புறச் சமயத்தவரையும் உடையவர். தம்மோடு அன்பு கலந்து ஒன்றாகுபவரையும் உடையவர். பிரமனது வெள்ளிய தலையோட்டில் பலிகொள்பவர். அரவம் பூண்டவர். ஆயிரம் பேருடையவர். வரங்கள் பல அருள்பவர்.

திருவாழ்கொளிபுத்தூர்

தண்டுந் தாளமுங் குழலுந்
தண்ணுமைக் கருவியும் புறவில்
கொண்ட பூதமு முடையார்
கோலமும் பலபலவுடையார்
கண்டு கோடலு மாயார்
காட்சியு மரியதொர் கரந்தை
வண்டு வாழ்பதி யுடையார்
வாழ்கொளி புத்தூ ருளாரே **#1024**

கரந்தைப் பூவில் வண்டுகள் வாழும் வளம் உடைய பதியான வாழ்கொளிபுத்தூர் இறைவர் தண்டு, தாளம், குழல், தண்ணுமை ஆகியவற்றுடன் காட்டில் வாழும் பூதப்படைகளையும் கொண்டவர். பல்வேறு கோலங்கள் கொண்டவர். காணுதற்கும் காட்சிக்கும் அரியவர்.

திருவாழ்கொளிபுத்தூர்

மான வாழ்க்கைய துடையார்
மலைந்தவர் மதிற்பரி சறுத்தார்
தான வாழ்க்கைய துடையார்
தவத்தொடு நாம்புகழ்ந் தேத்த
ஞான வாழ்க்கைய துடிடயார்
நள்ளிருண் மகளிர்நின் றேத்த
வான வாழ்க்கையை துடையார்
வாழ்கொளி புத்தூ ருளாரே. **#1025**

வாழ்கொளிபுத்தூர் இறைவர், பெருமை பொருந்திய வாழ்க்கையர். தம்மோடு மலைந்த அசுரர்களின் மும்மதில்களை அழித்தவர். அருட் கொடை வழங்கும் இயல்புடையவர். தவத்தோடு நாம் பரவ ஞானவாழ்வு அருள்பவர். நள்ளிருளில் அரமகளிர் நின்று ஏத்த வானநாட்டு வாழ்வினை உடையவர்.

திருவாழ்கொளிபுத்தூர்

ஏழு மூன்றுமொர் தலைகள்
உடையவ னிடர்பட வடர்த்து
வேழ்வி செற்றதும் விரும்பி
விருப்பவர் பலபல வுடையார்
கேழல் வெண்பிறை யன்ன
கெழுமணி மிடறுநின் றிலங்க
வாழி சாந்தமு முடையார்
வாழ்கொளி புத்தூ ருளாரே. **#1026**

வாழ்கொளிபுத்தூர் இறைவர், பத்துத்தலைகளை உடைய இராவணனைத் துன்புறுமாறு அடர்த்தவர். தக்கன் செய்த வேள்வியைச் செற்றவர். பலப்பல விருப்புடையவர். வெண்பிறை போன்ற பன்றிக் கொம்பை மணி மிடற்றில் தரித்தவர். சாந்தம் அணிந்தவர்.

திருவாழ்கொளிபுத்தூர்

வென்றி மாமல ரோனும்
விரிகடற் றுயின்றவன் றானும்
என்று மேத்துகை யுடையார்
இமையவர் துதிசெய விரும்பி
முன்றின் மாமலர் வாச
முதுமதி தவழ்பொழிற் றில்லை
மன்றி லாடல துடையார்
வாழ்கொளி புத்தூ ருளாரே. **#1027**

வாழ்கொளிபுத்தூர் இறைவர், தாமரை மலர் மேலுறையும் நான்முகனும் விரிந்த கடலிடைத்துயிலும் திருமாலும் நாள்தோறும் துதித்து வணங்கப் பெறுபவர். இமையவர் துதித்தலை விரும்பி வானளாவிய மலர் மணம் கமழும் சோலைகள் சூழ்ந்த தில்லைமன்றில் ஆடுபவர்.

திருவாழ்கொளிபுத்தூர்

மண்டை கொண்டுழல் தேரர்
மாசுடை மேனிவன் சமணர்
குண்டர் பேசிய பேச்சுக்
கொள்ளன்மின் திகழொளி நல்ல
துண்ட வெண்பிறை சூடிச்
சுண்ணவெண்பொடியணிந் தெங்கும்
வண்டு வாழ்பொழில் சூழ்ந்த
வாழ்கொளி புத்தூ ருளாரே. **#1028**

மண்டை என்னும் உண் கலன் ஏந்தித் திரியும் தேரர், அழுக்கேறிய உடலினராகிய சமணர்களாகிய குண்டர்கள் பேசும் பேச்சுக்களைக் கொள்ளாதீர். ஒளிமிக்க பிறை சூடி, திருநீற்றுப் பொடி பூசி வண்டுகள் வாழும் பொழில் சூழ்ந்த வாழ்கொளிபுத்தூர் இறைவனைப் போற்றுவீராக.

<u>திருவாழ்கொளிபுத்தூர்</u>

நலங்கொள் பூம்பொழிற் காழி
நற்றமிழ் ஞானசம் பந்தன்
வலங்கொள் வெண்மழு வாளன்
வாழ்கொளி புத்தூ ருளானை
இலங்கு வெண்பிறை யானை
ஏத்திய தமிழிவை வல்லார்
நலங்கொள் சிந்தைய ராகி
நன்னெறி யெய்துவர் தாமே. **#1029**

நன்மை நிறைந்த அழகிய பொழில் சூழ்ந்த சீகாழியில் தோன்றிய நற்றமிழ் ஞானசம்பந்தன் வெற்றிதரும் வெண்மழுவை ஏந்தி விளங்கும் வாழ்கொளிபுத்தூர் இறைவனாகிய பிறை சூடிய பெருமானை ஏத்திப் பாடிய இத்தமிழ் மாலையை ஓதவல்லவர் நலந்தரும் சிந்தையராய் நன்னெறி எய்துவர்.

திருஅரைசிலி

திருஅரைசிலி

திருஅரைசிலி,
பண் - பியந்தைக்காந்தாரம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அரைசிலிநாதர்.
தேவியார் : பெரியம்மை.

பாடல் வண்டறை கொன்றை
பான்மதி பாய்புனற் கங்கை
கோடல் கூவிள மாலை
மத்தமுஞ் செஞ்சடைக் குலாவி
வாடல் வெண்டலை மாலை
மருவிட வல்லியந் தோண்மேல்
ஆடன் மாசுண மசைத்த
அடிகளுக் கிடமர சிலியே. **#1030**

செஞ்சடையில், இசைபாடும் வண்டுகள் சென்று சூழும் கொன்றை மலர், பால்போலும் பிறைமதி, பாய்ந்து வரும் புனலை உடைய கங்கை, வெண் காந்தள், வில்வ மாலை, ஊமத்தம் பூ ஆகியன குலவி விளங்க, கழுத்தில் தசை உலர்ந்த வெண்டலை மாலை மருவ, இடையில் புலித் தோலை உடுத்தித் தோள்மேல் பாம்பைச்சுற்றிக் கொண்டுள்ள அடிகளாகிய சிவபிரானுக்கு உகந்த இடம் அரசிலியேயாகும்.

திருஅரைசிலி

ஏறு பேணிய தேறி
யிளமதக் களிற்றினை யெற்றி
வேறு செய்தத னுரிவை
வெண்புலால் கலக்கமெய் போர்த்த
ஊறு தேனவ னும்பர்க்
கொருவன்நல் லொளிகொளொண் சுடராம்
ஆறு சேர்தரு சென்னி
அடிகளுக் கிடமர சிலியே. **#1031**

விடையேற்றினை விரும்பி ஏறி, இளமையும் மதமும் உடையதாய்த் தம்மை எதிர்த்து வரும் யானையை உதைத்துக் கொன்று அதன் தோலை வெண்புலால் உடலிற் கலக்குமாறு மேனிமீது போர்த்தவரும், அடியார் சிந்தனையுள் ஊறும் தேனாக விளங்குபவரும், தேவர்களால் போற்றப்படும் ஒருவரும், ஒளி பொருந்திய சுடராகத் திகழ்பவரும்,

கங்கை சூடிய சென்னியரும் ஆகிய சிவபிரானுக்கு உகந்த இடம் அரசிலியேயாகும்.

திருஅரைசிலி

கங்கை நீர்சடை மேலே
கதமிகக் கதிரிள வனமென்
கொங்கை யாளொரு பாகம்
மருவிய கொல்லைவெள் ளேற்றன்
சங்கை யாய்த்திரி யாமே
தன்னடி யார்கருள் செய்து
அங்கை யாலன லேந்து
அடிகளுக் கிடமர சிலியே. **#1032**

வேகத்தோடு வந்த கங்கை நீரைச் சடைமேல் தாங்கி ஒளியும் இளமையும் அழகும் பொருந்திய தனபாரங்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவரும் ‘முல்லை’ நிலத்துக்குரிய விடையேற்றை உடையவரும், ஐயுறவு கொண்டு வீண்பொழுது போக்காத தம்மடியவர்கட்கு அருள்புரிபவரும், அழகிய கையில் அனல் ஏந்தியவருமாகிய சிவபிரானுக்கு உகந்த இடம் திரு அரசிலியேயாகும்.

திருஅரைசிலி

மிக்க காலனை வீட்டி
மெய்கெடக் காமனை விழித்துப்
புக்க வூரிடு பிச்சை
யுண்பது பொன்றிகழ் கொன்றை
தக்க நூல்திகழ் மார்பில்
தவளவெண் ணீறணிந் தாமை
அக்கி னாரமும் பூண்ட
அடிகளுக் கிடமர சிலியே. **#1033**

அறநெறியோடு உயிர்களைக் கவரும் எமனை அழித்துக் காமன் உடல் நீறாகும்படி விழித்து ஊரார் இடும் பிச்சையை ஏற்று உண்டு, மார்பில் பொன்போலத் திகழும் கொன்றை மாலை, பூணூல் ஆகியவற்றையும், திருவெண்ணீற்றையும் அணிந்து ஆமையோடு, என்புமாலை ஆகியவற்றைச் சூடிய வரும் சிவபிரானுக்கு உகந்த இடம் திரு அரசிலியேயாகும்.

திருஅரைசிலி

மானஞ் சும்மட நோக்கி

மலைமகள் பாகமு மருவித்
தானஞ் சாவரண் மூன்றுந்
தழலெழச் சரமது துரந்து
வானஞ் சும்பெரு விடத்தை
யுண்டவன் மாமறை யோதி
ஆனஞ் சாடிய சென்னி
அடிகளுக் கிடமர சிலியே. **#1034**

மானும் கண்டு அஞ்சும் மடநோக்கினை உடைய மலை மகளை ஒருபாகமாக மருவியவரும் அஞ்சாது தன்னை எதிர்த்த முப்புரங்களைத் தழல் எழுமாறு அம்பெய்து அழித்தவரும், வானவரும் அஞ்சும் ஆலகாலப் பெருவிடத்தை உண்டருளியவரும், ஆனைந்தாடும் திருமுடியினருமாகிய சிவபிரானுக்கு உகந்த இடம் திருஅரசிலியேயாகும்.

<u>திருஅரைசிலி</u>

பரிய மாசுணங் கயிறாப்
பருப்பத மதற்குமத் தாகப்
பெரிய வேலையைக் கலங்கப்
பேணிய வானவர் கடையக்
கரிய நஞ்சது தோன்றக்
கலங்கிய வவர்தமைக் கண்டு
அரிய வாரமு தாக்கும்
அடிகளுக் கிடமர சிலியே. **#1035**

அமுதை விரும்பிய வானவர் வாசுகி என்னும் பெரிய பாம்பைக் கயிறாகக் கொண்டு மந்தரம் என்னும் மலையை மத்தாக நாட்டிப் பெரிய கடலைக் கலங்குமாறு கடைந்த போது அதனிடை, கருநிறமான ஆலகால விடம் தோன்றக் கண்டு அஞ்சிய அவர்களைக் கண்டு இரங்கி அதனை எடுத்துவரச் செய்து அரிய அமுதாக உண்டு வானவரைக் காத்தருளிய அடிகளுக்கு உகந்த இடம் திரு அரசிலியேயாகும்.

<u>திருஅரைசிலி</u>

வண்ண மால்வரை தன்னை
மறித்திட லுற்றவல் லரக்கன்
கண்ணுந் தோளுநல் வாயும்
நெரிதரக் கால்விர லூன்றிப்
பண்ணின் பாடல்கைந் நரம்பாற்
பாடிய பாடலைக் கேட்டு
அண்ண லாயருள் செய்த

அடிகளுக் கிடமர சிலியே. **#1036**
அழகிய கயிலை மலையைக் கீழ் மேலாகுமாறு புரட்ட முற்பட்ட வலிய அரக்கனாகிய இராவணனின் கண்களும் தோள்களும் வாய்களும் நெரியுமாறு அவனைக் கால்விரலை ஊன்றி அடர்த்துப் பின் அவன் கைநரம்பால் வீணை செய்து பண்ணொடு கூடிய பாடல்களைப் பாட அதனைக் கேட்டுப் பெருந்தன்மையோடு அவனுக்கு அருள்கள் பலவும் செய்த அடிகளுக்கு உகந்த இடம் திருஅரசிலியேயாகும்.

திருஅரைசிலி

குறிய மாணுரு வாகிக்
குவலய மளந்தவன் றானும்
வெறிகொள் தாமரை மேலே
விரும்பிய மெய்த்தவத் தோனும்
செறிவொ ணாவகை யெங்குந்
தேடியுந் திருவடி காண
அறிவொ ணாவுரு வத்தெம்
அடிகளுக் கிடமர சிலியே. **#1037**
குள்ளமான உருவமுடைய வாமனராய்த் தோன்றிப்பின் பேருரு எடுத்து உலகை அளந்த திருமாலும், மணம் கமழும் தாமரை மலரை விரும்பிய நான்முகனும் எங்கும் தேடியும் திருவடிகளை அடைய முடியாதவாறும் அறியமுடியாதவாறும் அழலுருவாய் ஓங்கி நிமிர்ந்த திருவுருவத்தைக் கொண்டருளிய எம் அடிகளுக்கு உகந்த இடம் திரு அரசிலியேயாகும்.

திருஅரைசிலி

குருளை யெய்திய மடவார்
நிற்பவே குஞ்சியைப் பறித்துத்
திரளை கையிலுண் பவருந்
தேரருஞ் சொல்லிய தேறேல்
பொருளைப் பொய்யிலி மெய்யெம்
நாதனைப் பொன்னடி வணங்கும்
அருளை யார்தர நல்கும்
அடிகளுக் கிடமர சிலியே. **#1038**
இளமையான மகளிர் இருப்ப அவரோடு கூடிவாழாது தலைமயிரைப் பறித்து முண்டிதராய்ச் சோற்று உருண்டைகளைக் கையில் இரந்துண்டு பெற்று உண்பவர்களாகிய சமணரும் புத்தரும் சொல்லும் அவர்தம் சமயக் கொள்கைகளைக் கொள்ளல் வேண்டா. அடையத்தக்க பொருளானவரும், பொய்மையில்லாதவரும் உண்மையின் வடிவானரும், தம் பொன்னடிகளை வணங்குவார்க்கு அருளை நிரம்ப

நல்குபவரும் ஆகிய சிவபிரானுக்குகந்த இடம் திரு அரசிலியே யாகும். அத்தலத்தை எய்தி வழிபடுங்கள்.

திருஅரைசிலி

அல்லி நீள்வயல் சூழ்ந்த
அரசிலி அடிகளைக் காழி
நல்ல ஞானசம் பந்தன்
நற்றமிழ் பத்திவை நாளும்
சொல்ல வல்லவர் தம்மைச்
சூழ்ந்தம ரர்தொழு தேத்த
வல்ல வானுல கெய்தி
வைகலு மகிழ்ந்திருப் பாரே. **#1039**

நீர்ப் பூக்களை உடைய நீண்ட வயல்கள் சூழ்ந்த திரு அரசிலி இறைவனைப் போற்றிச் சீகாழிப் பதியில் தோன்றிய நல்ல ஞானசம்பந்தர் பாடியருளிய இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் நாள்தோறும் சொல்லி வழிபடவல்லவர். வானுலகெய்தி அமரர்கள் தொழுது ஏத்த வைகலும் மகிழ்ந்து வாழ்வர்.

சீகாழி

சீர்காழி

சீகாழி,
பண் - பியந்தைக்காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

பொங்கு வெண்புரி வளரும்
பொற்புடை மார்பனெம் பெருமான்
செங்க ணாடர வாட்டுஞ்
செல்வனெஞ் சிவனுறை கோயில்
பங்க மில்பல மறைகள்
வல்லவர் பத்தர்கள் பரவுந்
தங்கு வெண்டிரைக் கானல்
தண்வயற் காழிநன் னகரே. **#1040**

வெண்மை மிக்க முப்புரிநூல் புரளும் அழகிய மார்பினனாகிய எம் பெருமானும், சிவந்த கண்களை உடைய ஆடும் பாம்பினைப் பிடித்து ஆட்டுபவனும், செல்வனும், ஆகிய எம் சிவபிரான் உறையும் கோயிலை உடையது தோல்வியுறாத வேதங்களில் வல்லவர்களும் பத்தர்களும் பரவுவதும், வெண்மையான அலைகள் வீசும் கடற்கரைச்சோலைகளையும் வயல்களையும் உடையதும் ஆகிய சீகாழி நன்னகர் ஆகும்.

சீர்காழி

தேவர் தானவர் பரந்து
திண்வரை மால்கட னிறுவி
நாவ தாலமிர் துண்ண
நயந்தவ ரிரிந்திடக் கண்டு
ஆவ வென்றரு நஞ்ச
முண்டவ னமர்தரு மூதூர்
காவ லார்மதில் சூழ்ந்த
கடிபொழில் காழிநன் னகரே. **#1041**

தேவர்களும், அசுரர்களும் கூடி, நாவினால் அமிர்தம் பெற்றுண்ணப் பெரிய கடலில் வலிய மந்தர மலையை மத்தாக நட்டுக் கடைந்த போது எழுந்த அரிய நஞ்சினைக் கண்டு ஆஆ என அலறி ஓடிச் சரண் அடைய, அந்நஞ்சினைத் திரட்டித் தானுண்டு தேவர்களைக் காத்தருளிய

சிவபிரான் அமர்ந்தருளிய மூதூர், காவலாக அமைந்த மதில்கள் சூழ்ந்ததும் மணம் பொருந்திய பொழில்களை உடையதுமான சீகாழி நன்னகர் ஆகும்.

சீர்காழி

கரியின் மாமுக முடைய
கணபதி தாதைபல் பூதந்
திரிய வில்பலிக் கேகுஞ்
செழுஞ்சுடர் சேர் தரு மூதூர்
சரியின் முன்கைநன் மாதர்
சதிபட மாநட மாடி
உரிய நாமங்க ளேத்தும்
ஒலிபுனற் காழிநன் னகரே. **#1042**

யானைமுகத்தோனாகிய கணபதியின் தந்தையும், பூதங்கள் பல சூழ்ந்து வர மனைகள் தோறும் உண் பலியேற்றுத் திரிபவரும், செழுமையான சுடர் போன்றவருமான சிவபிரான் எழுந்தருளிய மூதூர், வளையல்கள் அணிந்த முன்கைகளை உடைய அழகிய மகளிர் காலில் தாளத்தட்டு நிற்கச் சிறந்த நடனத்தை ஆடிக்கொண்டு உரிய சிவநாமங்களை ஓதிப்போற்றும் ஒலிபுனல் சூழ்ந்த காழி நகராகும்.

சீர்காழி

சங்க வெண்குழைச் செவியன்
தண்மதி சூடிய சென்னி
அங்கம் பூணென வுடைய
வப்பனுக் கழகிய வூராந்
துங்க மாளிகை யுயர்ந்த
தொகுகொடி வானிடை மிடைந்து
வங்க வாண்மதி தடவு
மணிபொழில் காழிநன் னகரே. **#1043**

சங்கவெண்குழை அணிந்த செவியினனும், தண்மதி சூடிய சென்னியனும், எலும்புகளை மாலையாகக் கோத்து அணிந்த தலைவனுமாகிய சிவபிரானுக்கு அழகிய ஊராக விளங்குவது, உயர்வான மாளிகைகளில் கட்டிய உயரிய கொடிகளின் தொகுதிகள் வானத்தில் சென்று, வெள்ளி போலத் திகழும் ஒளி பொருந்திய மதியைத் தடவும் அணி பொழில் காழி நன்னகராகும்.

சீர்காழி

மங்கை கூறமர் மெய்யான்

மான்மறி யேந்திய கையான்
எங்க ளீசனென் றெழுவார்
இடர்வினை கெடுப்பவற் கூராஞ்
சங்கை யின்றிநன் னியமந்
தாஞ்செய்து தகுதியின் மிக்க
கங்கை நாடுயர் கீர்த்தி
மறையவர் காழிநன் னகரே. **#1044**

உமையம்மை ஒரு பாதியாக அமைந்த திரு மேனியனும், மான்மறி ஏந்திய கையினனும், எங்கள் ஈசன் என்று எழுவார் துன்பங்கள் அவற்றுக்குக் காரணமான வினைகள் ஆகியவற்றைத் தீர்ப்பவனும் ஆகிய சிவபிரானுக்கு உரிய ஊர், ஐயம் இன்றி நல்ல நியமங்களை முறையே செய்து தகுதியால் கங்கை நாடு வரை பரவிய புகழுடைய மறையவர் வாழும் காழி நன்னகர் ஆகும்.

<u>சீர்காழி</u>

நாறு கூவிள மத்த
நாகமுஞ் சூடிய நம்பன்
ஏறு மேறிய ஈசன்
இருந்தினி தமர்தரு மூதூர்
நீறு பூசிய வுருவர்
நெஞ்சினுள் வஞ்சமொன் றின்றித்
தேறு வார்கள்சென் றேத்துஞ்
சீர்திகழ் காழிநன் னகரே. **#1045**

மணம்வீசும் வில்வம், ஊமத்தை ஆகியவற்றோடு பாம்பையும் முடியில் சூடிய நம்பனும், விடை ஏற்றினை விரும்பி ஏறும் ஈசனும் ஆகிய சிவபிரான் மேவிய ஊர், திருநீறு பூசிய உருவினராய், நெஞ்சினில் வஞ்சம் சிறிதும் இன்றித் தெளவு பெற்ற அடியவர்கள் சென்று தொழும் சீகாழிப் பதியாகும்.

<u>சீர்காழி</u>

நடம தாடிய நாதன்
நந்திதன் முழவிடைக் காட்டில்
விடம மர்ந்தொரு காலம்
விரித்தற முரைத்தவற் கூராம்
இடம தாமறை பயில்வார்
இருந்தவர் திருந்தியம் போதிக்
குடம தார்மணி மாடங்
குலாவிய காழிநன் னகரே. **#1046**

நந்தி மத்தளம் வாசிக்கச் சுடலையில் நடனம் ஆடிய தலைவனும், விடத்தை விரும்பி உண்டு முன் ஒரு காலத்தில் அறம் விரித்துச் சனகாதியர்க்கு உரைத்தருளியவனும் ஆகிய சிவ பிரானுக்கு உகந்த ஊர், விரிந்த மறைகளைப் பயின்ற அந்தணர்கள் வாழ்வதும் அழகிய பொதிகையில் குடம் அமைந்தது போன்ற உறுப்புக்கள் திகழும் மணிமாடங்கள் விளங்குவதுமாகிய காழி நகராகும்.

சீர்காழி

கார்கொண் மேனியவ் வரக்கன்
றன்கடுந் திறலினைக் கருதி
ஏர்கொண் மங்கையு மஞ்ச
வெழின்மலை யெடுத்தவ னெரியச்
சீர்கொள் பாதத்தொர் விரலாற்
செறுத்தவெஞ் சிவனுறை கோயில்
தார்கொள் வண்டினஞ் சூழ்ந்த
தண்வயல் காழிநன் னகரே. **#1047**

கரியமேனியனாகிய இராவணன் தன் வலிமையைப் பெரிதெனக் கருதி அழகிய உமைநங்கை அஞ்சுமாறு அழகிய கயிலை மலையை எடுத்தபோது அவன் நெரியுமாறு சிறப்புமிகு பாதத்தில் அமைந்த ஒரு சிறு விரலால் செற்ற சிவபிரான் உறையும் கோயில், மலர்களில் பொருந்திய தேனை உண்ண வண்டுகள் சூழ்ந்து விளங்குவதும் தண்வயல்களை உடையதுமான காழி நன்னகர் ஆகும்.

சீர்காழி

மாலு மாமல ரானும்
மருவிநின் றிகலிய மனத்தாற்
பாலுங் காண்பரி தாய
பரஞ்சுடர் தன்பதி யாகுஞ்
சேலும் வாளையுங் கயலுஞ்
செறிந்துதன் கிளையொடு மேய
ஆலுஞ் சாலிநற் கதிர்கள்
அணிவயற் காழிநன் னகரே. **#1048**

திருமாலும் பிரமனும் கூடி நின்று யார் பெரியர் என்று தம்முள் மாறுபட்ட மனத்தினராய் நிற்க, அவர்களிடையே தனது பக்கத்தையும் காண மாட்டாத வகையில் தோன்றி நின்ற பரஞ்சுடராகிய சிவபிரானது பதி, சேல், வாளை, கயல் ஆகியன தம் கிளையொடு செறிந்து வாழ்வதும், ஆலும் நெற்கதிர்களைக் கொண்டது மான அணிவயல்களை உடைய காழி நன்னகராகும்.

சீர்காழி

புத்தர் பொய்மிகு சமணர்
பொலிகழ லடியிணை காணுஞ்
சித்த மற்றவர்க் கிலாமைத்
திகழ்ந்தநற் செழுஞ்சுடர்க் கூராஞ்
சித்த ரோடுநல் லமரர்
செறிந்தநன் மாமலர் கொண்டு
முத்த னேயரு ளென்று
முறைமைசெய் காழிநன் னகரே. **#1049**

அழகிய கழலணிந்த திருவடிகளைக் காணும் மனமற்ற பொய்மைமிக்க புத்தர், சமணர் ஆகியவர்க்கு இல்லாதவாறு திகழ்கின்ற நற்செழுஞ்சுடர்க்கு ஊர், சித்தர்களும், அமரர்களும் முறையோடு செறிந்த நல்ல மலர்களைக் கொண்டு அருச்சித்து "முத்தனே அருள்" என வேண்டி நிற்கும் காழி நன்னகராகும்.

சீர்காழி

ஊழி யானவை பலவு
மொழித்திடுங் காலத்தி லோங்கு.
* * * * * * * * **#1050**

பல ஊழிக்காலங்கள் மாறிமாறி வந்துறும் காலங்களிலும் அழியாது ஓங்கி நிற்கும் சீகாழி.

சீர்காழி

சீகாழி,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

நம்பொருள் நம்மக்களென்று
நச்சியிச்சை செய்துநீர்
அம்பர மடைந்துசால
அல்லலுய்ப்ப தன்முனம்
உம்பர்நாத னுத்தமன்
ஒளிமிகுந்த செஞ்சடை
நம்பன்மேவு நன்னகர்
நலங்கொள்காழி சேர்மினே. **#1051**

நம் பொருள், நம் மக்கள் என்று பற்றுச் செய்து நீர் அழிந்தொழிந்து

அல்லல் உறுதற்குமுன்னரே, தேவர் தலைவன், உத்தமன், ஒளிமிக்க செஞ்சடையை உடைய நம்பன் எழுந்தருளிய நன்னகராகிய அழகிய காழிப்பதியை அடைவீர்களாக.

சீர்காழி

பாவமேவு முள்ளமோடு
பத்தியின்றி நித்தலும்
ஏவமான செய்துசாவ
தன்முனம்மி சைந்துநீர்
தீவமாலை தூபமுஞ்
செறிந்தகைய ராகிநம்
தேவதேவன் மன்னுமூர்
திருந்துகாழி சேர்மினே. **#1052**

பாவங்களைச் செய்யும் உள்ளத்தோடு இறைவனிடம் பக்தி இன்றி நாள்தோறும் பயனற்றன செய்து இறப்பதன் முன்னம், நீர் சிவபிரானிடம் அன்பு கொண்டு தீபம், மாலை, தூபம் முதலியன ஏந்திய கையராகித் தேவர் தலைவனாகிய அவ் விறைவன் எழுந்தருளிய ஊராகிய அழகிய காழிப்பதியை அடை வீர்களாக.

சீர்காழி

சோறுகூறை யின்றியே
துவண்டுதூர மாய்நுமக்
கேறுசுற்ற மௌகவே
இடுக்கணுய்ப்ப தன்முனம்
ஆறுமோர் சடையினான்
ஆதியானை செற்றவன்
நாறுதேன் மலர்ப்பொழில்
நலங்கொள்காழி சேர்மினே. **#1053**

உணவும், உடையும் இன்றித் துவண்டு, உற்ற சுற்றத்தினர் விலகிச்செல்லத் துன்பம் உறுவதன் முன்னம், கங்கை தங்கிய சடையினனும், நான்முகன் தலையைக், கொய்தவனும் ஆகிய சிவபெருமான் உகக்கும் தேன் மணம் கமழும் மலர்ப்பொழில் சூழ்ந்த அழகிய காழிப் பதியை அடைவீர்களாக.

சீர்காழி

நச்சிநீர் பிறன்கடை
நடந்துசெல்ல நாளையும்
உச்சிவம் மெனும்முரை

உணர்ந்துகேட்ப தன்முனம்
பிச்சர்நச் சரவரைப்
பெரியசோதி பேணுவார்
இச்சைசெய்யு மெம்பிரான்
எழில்கொள்காழி சேர்மினே. **#1054**

பொருளை விரும்பிப் பிறர் மனைவாயிலை நடந்து சென்று அடையக்கண்டும் அச்செல்வர் ‘நாளை நண்பகற்போதில் வருக ‘எனக் கூறும் உரையைக் கேட்டு வருந்துவதன் முன்னம் நம் மேல் ஈடுபாடுடையவரும், விடம் பொருந்திய பாம்பை அரையில் கட்டிய பெரிய ஒளி வடிவினரும் வழிபடுவாரிடம் அன்பு செய்யும் எம்பிரானாரும் ஆகிய சிவபிரானது அழகிய காழிப்பதியை அடைவீர்களாக.

<u>சீர்காழி</u>

கண்கள்காண் பொழிந்துமேனி
கன்றியொன்ற லாதநோய்
உண்கிலாமை செய்துநும்மை
யுய்த்தழிப்ப தன்முனம்
விண்குலாவு தேவருய்ய
வேலைநஞ் சமுதுசெய்
கண்கள்மூன் றுடையவெம்
கருத்தர்காழி சேர்மினே. **#1055**

கண்கள் காட்சி தவிர்ந்து உடல் கன்றி ஒன்றல்லாத பல நோய்கள் நும்மைத் தாக்கி அழிப்பதற்கு முன்னமே விண்ணகத்தேவர் உய்யக் கடலிடைத் தோன்றிய நஞ்சினை உண்ட முக்கண்ணராகிய எம் தலைவர் விளங்கும் காழிப்பதியை அடைவீர்களாக.

<u>சீர்காழி</u>

அல்லல்வாழ்க்கை யுய்ப்பதற்
கவத்தமேபிறந்துநீர்
எல்லையில் பிணக்கினிற்
கிடந்திடா தெழும்மினோ
பல்லில்வெண் டலையினிற்
பலிக்கியங்கு பான்மையான்
கொல்லையேற தேறுவான்
கோலக்காழி சேர்மினே. **#1056**

துன்பமயமான வாழ்க்கையை நடத்துதற்கு வீணாகப் பிறந்து, நீர் எல்லையில்லாத மாறுபாடுகளில் கிடந்திடாது புறப்படுவீர்களாக.

பல்லில்லாத வெண்டலையில் பலியேற்கத் திரிதற்கு முல்லை நிலத்து ஆனேற்றில் ஏறிச் செல்வோனாகிய சிவபிரானது அழகிய காழிப்பதியை அடைவீர்களாக.

சீர்காழி

பொய்மிகுத்த வாயராய்ப்
பொறாமையோடு சொல்லுநீர்
ஐமிகுத்த கண்டரா
யடுத்திரைப்ப தன்முனம்
மைமிகுத்த மேனிவா
ளரக்கனை நெரித்தவன்
பைமிகுத்த பாம்பரைப்
பரமர்காழி சேர்மினே. **#1057**

மிகுதியாகப் பொய் பேசும் வாயினராய்ப் பொறாமையோடு பேசும் நீர், கோழைமிகுந்த கண்டத்தினராய் இரைப்பு அடைதற்கு முன்னரே, கரிய மேனியனாகிய இராவணனை மலையின் கீழ் நெரித்தவனும், படம் பொருந்திய பாம்பினை அரையில் கட்டிய பரமனும் ஆகிய சிவபிரானது காழியை அடைவீர்களாக

சீர்காழி

காலினோடு கைகளுந்
தளர்ந்துகாம நோய்தனால்
ஏலவார் குழலினா
ரிகழ்ந்துரைப்ப தன்முனம்
மாலினோடு நான்முகன்
மதித்தவர்கள் காண்கிலா
நீலமேவு கண்டனார்
நிகழ்ந்தகாழி சேர்மினே. **#1058**

கைகால்கள் தளர்ந்து, விரும்பி உடலைப் பற்றிய நோயினால் அன்பொடு போற்றிய அழகிய மனைவியரும் இகழ்ந்து பேசுதற்கு முன்னமே, திருமால் பிரமர்கள் மதித்துக் காண ஒண்ணாத நீலகண்டர் எழுந்தருளிய காழிப்பதியை அடைவீர்களாக.

சீர்காழி

நிலைவெறுத்த நெஞ்சமோடு
நேசமில் புதல்வர்கள்
முலைவெறுத்த பேர்தொடங்கி
யேமுனிவ தன்முனந்

ப தலைபறித்த கையர்தேரர்
தாந்தரிப் பரியவன்
சிலைபிடித் தெயிலெய்தான்
திருந்துகாழி சேர்மினே. **#1059**

பலநாள்கள் நோயிற் கிடத்தலால் தந்தை என்ற முன்நிலையை வெறுத்த அன்பு அற்ற புதல்வர்கள், மனைவி முதலானோர் முனிவு கொள்ளுதற்கு முன்னரே, தலைபறித்து வாழும் சமணர், தேரர் ஆகியோர் நினைதற்கும் அரியவனும், சிலைபிடித்து முப்புரம் எரித்தவனும் ஆகிய சிவபிரானது அழகிய காழியை அடைவீர்களாக.

<u>சீர்காழி</u>

தக்கனார் தலையரிந்த
சங்கரன் தனதரை
அக்கினோ டரவசைத்த
வந்திவண்ணர் காழியை
ஒக்கஞான சம்பந்தன்
உரைத்தபாடல் வல்லவர்
மிக்கவின்ப மெய்திவீற்
றிருந்துவாழ்தன் மெய்ம்மையே. **#1060**

தக்கன் தலையை அரிந்தவனும், சங்கரனும், தனது இடையில் என்புமாலையுடன் பாம்பு அணிந்த அந்தி வண்ணனும் ஆகிய சிவபிரானது காழிப்பதியைப் பொருந்துமாறு ஞானசம்பந்தன் உரைத்த இப்பதிகப்பாடல்களை வல்லவர்கள் மிக்க இன்பம் எய்தி வீற்றிருந்து வாழ்தல் உண்மையாகும்.

திருத்துருத்தி

திருத்துருத்தி

திருத்துருத்தி,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வேதேசுவரர்.
தேவியார் : முகிழாம்பிகையம்மை.

வரைத்தலைப் பசும்பொனோ
டருங்கலன்க ளுந்திவந்
திரைத்தலைச் சுமந்துகொண்
டெறிந்திலங்கு காவிரிக்
கரைத்தலைத் துருத்திபுக்
கிருப்பதே கருத்தினாய்
உரைத்தலைப் பொலிந்துனக்
குணர்த்துமாறு வல்லமே. **#1061**

மலைகளிலிருந்து பொன்னையும், அரிய அணிகளையும் உந்தி ஆரவாரம் செய்து அலை வீசி வரும் காவிரிக் கரையிலுள்ள திருத்துருத்தியில் எழுந்தருளும் விருப்புடைய இறைவனே! சொன்னவாற றிதலில் உனக்கு யாம் உணர்த்தும் வன்மை உடையோமோ?

திருத்துருத்தி

அடுத்தடுத்த கத்தியோடு
வன்னிகொன்றை கூவிளம்
தொடுத்துடன் சடைப்பெய்தாய்
துருத்தியாயோர் காலனைக்
கடுத்தடிப் புறத்தினா
னிறத்துதைத்த காரணம்
எடுத்தெடுத் துரைக்குமாறு
வல்லமாகில் நல்லமே. **#1062**

சடையில் அகத்திப்பூ, வன்னி, வில்வம் கொன்றை மலர் என்பவற்றை அடுத்தடுத்துத் தொடுத்தணிந்தவனே! திருத்துருத்தியில் எழுந்தருளியவனே! நீ காலனைச் சினந்து திருவடியால் அவன் மார்பில் உதைத்தழித்த காரணத்தைப் பலகாலும் எடுத்து எடுத்து உரைத்தலில் வல்லமை உடையோமாயின் நாங்கள் நன்மை உறுவோம்.

திருத்துருத்தி

கங்குல்கொண்ட திங்களோடு
கங்கைதங்கு செஞ்சடைச்
சங்கிலங்கு வெண்குழை
சரிந்திலங்கு காதினாய்
பொங்கிலங்கு பூணநூ
லுருத்திரா துருத்திபுக்
கெங்குநின் னிடங்களா
அடங்கிவாழ்வ தென்கொலோ. **#1063**

கங்குலில் ஒளி வீசுதலைக் கொண்ட திங்களோடு கங்கையும் தங்கிய செஞ்சடையையும், சங்கால் இயன்று விளங்கும் வெண்குழை தொங்கும் காதினையும், பொங்கி விளங்கும் பூணநூலையும் உடைய உருத்திரமூர்த்தியே! எல்லா இடங்களும் உன் இடங்களாக இருக்க, திருத்துருத்தி என்ற இத்தலத்தில் புக்கு அடங்கி வாழ்தற்குக் காரணம் யாதோ?

திருத்துருத்தி

கருத்தினாலொர் காணியில்
விருத்தியில்லை தொண்டர்தம்
அருத்தியாற்றம் மல்லல்சொல்லி
யையமேற்ப தன்றியும்
ஒருத்திபால் பொருத்திவைத்
துடம்புவிட்டு யோகியாய்
இருத்திநீ துருத்திபுக்
கிதென்னமாய மென்பதே. **#1064**

கருதுமிடத்து ஒரு காணி நிலத்தில் பயிரிட்டு வரும் வருவாயும் உனக்கு இல்லை. தொண்டர்கள்மேல் உள்ள ஆசையால் தம் அல்லல் சொல்லி ஐயம் ஏற்கின்ற தன்றி, ஒரு பெண்ணைத் தன் உடம்பின் ஒரு பாகத்தே கொண்டிருந்தும் உடம்பின்மேல் உளதாம் பற்றை விடுத்து யோகியாய் இருந்து திருத்துருத்தியில் புகுந்து எழுந்தருளி யிருத்தற்குரிய மாயம் யாதோ?

திருத்துருத்தி

துறக்குமா சொலப்படாய்
துருத்தியாய் திருந்தடி
மறக்குமா றிலாதவென்னை
மையல்செய்திம் மண்ணின்மேல்

பிறக்குமாறு காட்டினாய்
பிணிப்படு முடம்புவிட்
டிறக்குமாறு காட்டினாய்க்
கிழுக்குகின்ற தென்னையே. **#1065**

திருத்துருத்தியில் எழுந்தருளிய இறைவனே! பகலில் யோகியாய்த் திருத்துருத்தியிலும், இரவில் மணவாளக் கோலத்தோடு வேள்விக் குடியிலும் எழுந்தருளியுள்ள நீ, துறக்கும் உபாயத்தைக் கூறினீர் இல்லை. அழகிய திருவடியின்பத்தில் திளைத்து அதனை மறவாதிருந்த என்னை மயக்குறுத்திடும் மண்ணுலகில் பிறக்குமாறும், நோய்க்கு இடமான இவ்வுடம்பை விடுத்து இறக்குமாறும் செய்தருளினாய். யான் உனக்குச் செய்த இழுக்கு யாதோ? சொல்வாயாக.

<u>திருத்துருத்தி</u>

வெயிற்கெதிர்ந் திடங்கொடா
தகங்குளிர்ந்த பைம்பொழில்
துயிற்கெதிர்ந்த புள்ளினங்கள்
மல்குதண் துருத்தியாய்
மயிற்கெதிர்ந் தணங்குசாயன்
மாதொர்பாக மாகமூ
வெயிற்கெதிர்ந் தொரம்பினால்
எரித்தவில்லி யல்லையே. **#1066**

வெயிலை எதிர்த்து அதற்கு இடம் கொடாது அகம் குளிர்ந்த பைம் பொழிலில் துயிலாதனவாய்ப் பறவை இனங்கள் நிறைந்து வாழும் தண்மையான திருத்துருத்தியில் எழுந்தருளிய இறைவனே! மயிலொடு மாறுபட்டு அழகால் அதனை வருந்தச் செய்யும் அழகினை உடைய உமைபாகராக மூவெயில்களை எதிர்த்து அவற்றை ஓரம்பினால் எரித்த சிறந்த வில்லாளி யல்லையோ நீ!

<u>திருத்துருத்தி</u>

கணிச்சியம் படைச்செல்வா
கழிந்தவர்க் கொழிந்தசீர்
துணிச்சிரக் கிரந்தையாய்
கரந்தையாய் துருத்தியாய்
அணிப்படுந் தனிப்பிறைப்
பனிக்கதிர்க் கவாவுநல்
மணிப்படும்பை நாகநீ
மகிழ்ந்தவண்ண லல்லையே. **#1067**

மழுப்படையினை உடைய செல்வரே! பல்லூழிக் காலங்களில்

அழிந்தொழிந்த சிறப்பினராகிய திருமால் பிரமர்களுடைய தலையோடுகளைக் கட்டிய முடிச்சுடையவரே! கரந்தை சூடியவரே, திருத்துருத்தியில் உறைபவரே! அழகியதும் ஒப்பற்றதுமான இளம்பிறையின் குளிர்ந்த நிலவொளியை அவாவும், நல்ல மணியை உடைய படப்பாம்பை ஒருங்கே அணிந்த தலைமையாளர் அல்லிரோ நீர்.

<u>திருத்துருத்தி</u>

சுடப்பொடிந் துடம்பிழந்
தநங்கனாய மன்மதன்
இடர்ப்படக் கடந்திடந்
துருத்தியாக வெண்ணினாய்
கடற்படை யுடையவக்
கடலிலங்கை மன்னனை
அடற்பட வடுக்கலில்
லடர்த்தவண்ண லல்லையே. **#1068**

நெற்றிவிழி சுடுதலால் பொடியாய் உடம்பு அழிந்த மன்மதன் இடர்ப்பட, அவனை வென்று தமக்கு இடமாகத் திருத்துருத்தியைக் கொண்டவரே! கடற்படையை உடைய இலங்கை மன்னன் இராவணன் துன்புறுமாறு மலையின் கீழ் அகப்படுத்தி அடர்த்த தலைமையாளர் அல்லிரோநீர்.

<u>திருத்துருத்தி</u>

களங்குளிர்ந் திலங்குபோது
காதலானு மாலுமாய்
வளங்கிளம்பொ னங்கழல்
வணங்கிவந்து காண்கிலார்
துளங்கிளம்பி றைச்செனித்
துருத்தியாய் திருந்தடி
உளங்குளிர்ந்த போதெலா
முகந்துகந் துரைப்பனே. **#1069**

தேன் உடையதாய்க் குளிர்ந்து இலங்கும் தாமரைப் போதில் எழுந்தருளிய பிரமனும் திருமாலும் வந்து வணங்கி அழகிய திருவடிகளைக் காணாதவராயினர். ஒளி துளங்கும் இளம்பிறையைச் சூடிய சென்னியினராய திருத்துருத்தி இறைவரே! உம் திருவடிப் பெருமைகளை உளம் குளிர்ந்த போதெல்லாம் உவந்து உரைத்து மகிழ்கிறேன்.

<u>திருத்துருத்தி</u>

புத்தர்தத் துவமிலாச்
சமணுரைத்த பொய்தனை
உத்தம மெனக்கொளா
துகந்தெழுந்து வண்டினம்
துத்தநின்று பண்செயுஞ்
சூழ்பொழில் துருத்தியெம்
பித்தர்பித்த னைத்தொழப்
பிறப்பறுத்தல் பெற்றியே. **#1070**

புத்தர்களும் தத்துவங்கள் அற்ற நெறியாகிய சமணமதத்தினரும் உரைத்த பொய்களை உண்மை எனக் கொள்ளாது, வண்டினங்கள் மகிழ்வோடு எழுந்து, துத்தம் என்னும் சுருதியில் பாடும் பைம்பொழில் சூழ்ந்த திருத்துருத்தியில் விளங்கும் பக்தர்களிடம் அன்பு செய்யும் பரமனைத் தொழப் பிறப்பறுத்தல் பயனாய் விளையும்.

திருத்துருத்தி

கற்றுமுற்றி னார்தொழுங்
கழுமலத் தருந்தமிழ்
சுற்றுமுற்று மாயினா
னவன்பகர்ந்த சொற்களால்
பெற்றமொன் றுயர்த்தவன்
பெருந்துருத்தி பேணவே
குற்றமுற்று மின்மையிற்
குணங்கள்வந்து கூடுமே. **#1071**

கல்விகற்று நிறைவு பெற்றவர்களால் தொழப் பெறும் கழுமலத்துள் தோன்றிய, அருந்தமிழை முற்றிலுமாக அறிந்துணர்ந்த ஞானசம்பந்தன் அருளிய இப்பதிகப் பாடல்களால் விடைக்கொடியை ஏந்திய சிவபிரானது திருத்துருத்தியை விரும்பி வழிபடுவோர் குற்றமற்றவர் ஆவர். அவரிடம் நற்குணங்கள் வந்து பொருந்தும்.

திருக்கோடிகா

திருக்கோடிகா

திருக்கோடிகா,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கோடீசுவரர்.
தேவியார் : வடிவாம்பிகையம்மை.

இன்றுநன்று நாளைநன்
றென்றுநின்ற விச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப்
போகவிட்டுப் போதுமின்
மின்றயங்கு சோதியான்
வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான்
கோடிகாவு சேர்மினே. #1072

இன்றையநாள் நல்லது. நாளைய நாள் நல்லது என்று இச்சையால் காலங் கடத்திப் பெருமானை வழிபடாது அழிந்தொழியும் வாழ்க்கையைப் போக்கி மெய் வாழ்வினை அடைய வாருங்கள். மின்னல் போன்ற ஒளியினனும், வெண்மதி, கங்கை, கொன்றை ஆகியவற்றை முடியில் சூடியவனுமாகிய சிவபிரான் உறையும் திருக்கோடிகாவைச் சென்றடைவீர்களாக.

திருக்கோடிகா

அல்லன்மிக்க வாழ்க்கையை
யாதரித் திராதுநீர்
நல்லதோர் நெறியினை
நாடுதுந் நடம்மினோ
வில்லையன்ன வாணுதல்
வெள்வளையொர் பாகமாங்
கொல்லைவெள்ளை யேற்றினான்
கோடிகாவு சேர்மினே. #1073

அல்லல் மயமான வாழ்க்கையை விரும்பியிராது நீர் நற்கதியை அடையும் நெறியை நாடுதற்குப் புறப்படுவீர்களாக. வில் போன்ற ஒளி பொருந்திய நுதலை உடையவளும், வெண்மையான வளையல்களை அணிந்தவளுமாகிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு, முல்லை நிலத்து வெள்ளை ஆனேற்றை ஊர்தியாகக் கொண்ட

சிவபெருமானுடைய திருக்கோடிகாவை அடைவீர்களாக.

திருக்கோடிகா

துக்கமிக்க வாழ்க்கையின்
சோர்வினைத் துறந்துநீர்
தக்கதோர் நெறியினைச்
சார்தல்செய்யப் போதுமின்
அக்கணிந் தரைமிசை
யாறணிந்த சென்னிமேல்
கொக்கிற கணிந்தவன்
கோடிகாவு சேர்மினே. **#1074**

துக்கம்மிகுந்த வாழ்க்கையினால் வரும் இளைப்பை நீக்கி, நீர் தக்கதொரு நெறியை அடைய வாருங்கள். அரைமிசை என்பு மாலையை அணிந்தவனாய், கங்கை சூடிய சடைமுடியில் கொக்கிறகு அணிந்துள்ள சிவபிரான் உறையும் திருக்கோடிகாவைச் சேருங்கள்.

திருக்கோடிகா

பண்டுசெய்த வல்வினை
பற்றறக் கெடும்வகை
உண்டுமக் குரைப்பனா
னொல்லை நீ ரெழுமினோ
மண்டுகங்கை செஞ்சடை
வைத்துமாதொர் பாகமாக்
கொண்டுகந்த மார்பினான்
கோடிகாவு சேர்மினே. **#1075**

முற்பிறவிகளில் செய்த வலிய வினைகள் முழுவதும் அழிந்தொழிதற்குரிய வழி ஒன்றுண்டு அதனை உங்கட்குக் கூறுகிறேன். விரைந்து நீங்கள் புறப்படுவீர்களாக. செஞ்சடையில் கங்கையைச் சூடி உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டுள்ள மார்பினனாய சிவபிரானது திருக்கோடிகாவை அடைவீர்களாக.

திருக்கோடிகா

முன்னைநீர்செய் பாவத்தான்
மூர்த்திபாதஞ் சிந்தியா
தின்னநீரி டும்பையின்
மூழ்கிறீ ரெழும்மினோ
பொன்னைவென்ற கொன்றையான்
பூதம்பாட வாடலான்

கொன்னவிலும் வேலினான்
கோடிகாவு சேர்மினே. #1076

முற்பிறவியில் நீர், செய்த பாவத்தால் சிவமூர்த்தியின் திருவடிகளை நினையாது இன்னமும் நீங்கள் துன்பங்களில் மூழ்கித் துயருறுகின்றீர்களே, புறப்படுவீர்களாக. பொன்னையும் வென்ற அழகிய கொன்றைசூடியவனாய்ப் பூதங்கள் பாட ஆடும் இயல்பினனும், கொல்லும் தன்மை வாய்ந்த வேலிகனை உடையவனும் ஆகிய சிவபிரான் உறையும் திருக்கோடிகாவை அடைவீர்களாக.

திருக்கோடிகா

ஏவமிக்க சிந்தையோ
டின்பமெய்த லாமெனப்
பாவமெத் தனையுநீர்
செய்தொரு பயனிலைக்
காவன்மிக்க மாநகர்
காய்ந்துவெங் கனல்படக்
கோவமிக்க நெற்றியான்
கோடிகாவு சேர்மினே. #1077

பெருமையற்ற உலகவாழ்க்கையை இன்பம் உடையது என்று நினைத்திருந்து நீர் மாண்பு அற்ற மூப்பினால் வருந்துதற்கு முன்னரே வருவீர்களாக. வெண்மையான என்பு மாலையை அணிகலனாகப் பூண்டு, பொன் போலத் திகழும் சடைமுடியில் வளைந்த வெண்பிறையைச் சூடிய சிவபிரானின் திருக்கோடிகாவை அடைவீர்களாக.

திருக்கோடிகா

ஏணழிந்த வாழ்க்கையை
யின்பமென் றிருந்துநீர்
மாணழிந்த மூப்பினால்
வருந்தன்முன்னம் வம்மினோ
பூணல்வெள் ளெலும்பினான்
பொன்றிகழ் சடைமுடிக்
கோணல்வெண் பிறையினான்
கோடிகாவு சேர்மினே. #1078

பெருமையற்ற உலக வாழ்க்கையை இன்பம் உடையது என்று நினைத்திருந்து நீர் மாண்பு அற்ற மூப்பினால் வருந்துதற்கு முன்னரே வருவீர்களாக. வெண்மையான என்புமாலையை அணிகலனாகப் பூண்டு, பொன்போலத் திகழும் சடைமுடியில் வளைந்த

வெண்பிறையைச் சூடிய சிவபிரானின் திருக்கோடிகாவை அடைவீர்களாக.

திருக்கோடிகா

மற்றிவாழ்க்கை மெய்யெனும்
மனத்தினைத் தவிர்ந்துநீர்
பற்றிவாழ்மின் சேவடி
பணிந்துவந் தெழுமினோ
வெற்றிகொள் தசமுகன்
விறல்கெட விருந்ததோர்
குற்றமில் வரையினான்
கோடிகாவு சேர்மினே. **#1079**

இவ்வாழ்க்கையை மெய்யென்று கருதும் எண்ணத்தை விடுத்துச் சிவபிரான் திருவடிகளைப் பணிந்து பற்றி வாழ்வீர்களாக. வெற்றியையே பெற்று வந்த இராவணனின் வலிமையை அழித்த குற்றமற்ற கயிலை மலைக்கு உரியவனாகிய அச்சிவபிரானின் திருக்கோடிகாவை அடைவீர்களாக.

திருக்கோடிகா

மங்குநோ யுறும்பிணி
மாயும்வண்ணஞ் சொல்லுவன்
செங்கண்மால் திசைமுகன்
சென்றளந்துங் காண்கிலா
வெங்கண்மால் விடையுடை
வேதியன் விரும்புமூர்
கொங்குலாம் வளம்பொழிற்
கோடிகாவு சேர்மினே. **#1080**

வாழ்வை மங்கச் செய்யும் நோய்க்குக் காரணமான வினைகள் அழிதற்குரிய உபாயம் ஒன்றைச் சொல்லுவேன் கேளுங்கள். செங்கண் மாலும் நான்முகனும் சென்று அளந்தும் காணுதற்கியலாத பெருமையனும், வெவ்விய கண்களைக் கொண்ட பெரிய விடையூர்தியை உடைய வேதியனுமாகிய சிவபிரான் விரும்பும் தேன் நிறைந்த பொழில் சூழ்ந்த திருக்கோடிகாவை அடைவீர்களாக.

திருக்கோடிகா

தட்டொடு தழைமயிற்
பீலிகொள் சமணரும்
பட்டுடை விரிதுகிலி

னார்கள்சொற் பயனிலை
விட்டபுன் சடையினான்
மேதகும் முழவொடும்
கொட்டமைந்த வாடலான்
கோடிகாவு சேர்மினே. **#1081**

தட்டோடு, தழைத்த மயிற் பீலியை ஏந்தித்திரியும் சமணர்களும், பட்டால் ஆகிய விரிந்த ஆடையைப் போர்த்த புத்தர்களும் சொல்வன பயனற்ற சொற்களாகும். தொங்க விட்ட சடையினனாய் மேதகு முழவு கொட்ட ஆடுபவனாய் விளங்கும் சிவபிரானின் கோடிகாவை அடைவீர்களாக.

<u>திருக்கோடிகா</u>

கொந்தணி குளிர்பொழிற்
கோடிகாவு மேவிய
செந்தழ லுருவனைச்
சீர்மிகு திறலுடை
அந்தணர் புகலியு
ளாயகேள்வி ஞானசம்
பந்தன தமிழ்வல்லார்
பாவமான பாறுமே. **#1082**

பூங்கொத்துக்களை உடைய குளிர்ந்த பொழில் சூழ்ந்த திருக்கோடிகாவில் எழுந்தருளிய செந்தழல் உருவனை, சிறப்புமிக்க திறனுடைய அந்தணர்கள் வாழும் புகலியுள் தோன்றிய வேதங்களில் வல்ல ஞானசம்பந்தன் பாடிய இப்பதிகத்தமிழை வல்லவர்களின் பாவங்கள் நீங்கும்.

திருக்கோவலூர் வீரட்டம்

திருக்கோவலூர்வீரட்டம்

திருக்கோவலூர் வீரட்டம்,
பண் - நட்டராகம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : சிவானந்தவல்லியம்மை.

படைகொள்கூற்றம் வந்துமெய்ப்
பாசம்விட்ட போதின்கண்
இடைகொள்வா ரெமக்கிலை
யெழுகபோது நெஞ்சமே
குடைகொள்வேந்தன் மூதாதை
குழகன்கோவ லூர்தனுள்
விடையதேறுங் கொடியினான்
வீரட்டானஞ் சேர்துமே. **#1083**

படைகளைக் கொண்ட கூற்றுவன் வந்து உடலைப் பிரித்து உயிரைக் கொள்வதற்குப் பாசக்கயிற்றை வீசும் நேரத்தில் இடையில் வந்து தடுப்பார் எவரும் எமக்கு இல்லை. நெஞ்சே! எழுக. என்னோடு போதுக. வெண்கொற்றக்குடையைக் கொண்ட மலையமானின் முதிய தாதையாக விளங்கும் குழகனும் விடைக் கொடியினனுமாய்க் கோவலூரில் விளங்கும் சிவபிரானது வீரட்டானத்தை அடைவோம்.

திருக்கோவலூர்வீரட்டம்

கரவலாளர் தம்மனைக்
கடைகடோறுங் கானிமிர்த்
திரவலாழி நெஞ்சமே
யினியதெய்த வேண்டிநீ
குரவமேறி வண்டினங்
குழலொடியாழ்செய் கோவலூர்
விரவிநாறு கொன்றையான்
வீரட்டானஞ் சேர்துமே. **#1084**

நெஞ்சே! கரப்பவர் இல்லங்கள் தோறும் சென்று இரவாதே. இனியதை நீ எய்த வேண்டின், வண்டினங்கள் குரா மரங்களில் ஏறிக் குழலும் யாழும் போல ஒலிசெய்யும் கோவலூரில் மணம் விரவி வீசும் கொன்றைமாலையை அணிந்த சிவபிரானது வீரட்டானத்தை அடைவோம்.

திருக்கோவலூர்வீரட்டம்

உள்ளத்தீரே போதுமின்
னுறுதியாவ தறிதிரேல்
அள்ளற்சேற்றிற் காலிட்டிங்
கவலத்துள் ளழுந்தாதே
கொள்ளப்பாடு கீதத்தான்
குழகன்கோவ லூர்தனுள்
வெள்ளந்தாங்கு சடையினான்
வீரட்டானஞ் சேர்துமே. **#1085**

நல்ல உள்ளம் உடையவர்களே! உயிருக்கு உறுதியானதை நீர் அறிய விரும்புவீராயின் நரகத்தில் அழுந்தித் துயருறாமல், செவி ஏற்கும் பாடல்களைப் பாடுபவனும் குழகனும் கோவலூரில் கங்கை தங்கிய சடையினனாக விளங்குவோனும் ஆகிய பெருமான் உறையும் வீரட்டானத்தை அடைவோம். வருக.

திருக்கோவலூர்வீரட்டம்

கனைகொளிருமல் சூலைநோய்
கம்பதாளி குன்மமும்
இனையபலவு மூப்பினோ
டெய்திவந்து நலியாமுன்
பனைகளுலவு பைம்பொழிற்
பழனஞ்சூழ்ந்த கோவலூர்
வினையைவென்ற வேடத்தான்
வீரட்டானஞ் சேர்துமே. **#1086**

மூப்புக் காலத்தில் கணைத்தலைக் கொண்ட இருமல், சூலை நோய், நடுக்கம், குன்மம் முதலியன வந்து நலிவு செய்தற்கு முன்னே, பனைகள் மிக்க பசிய பொழில் வயல் ஆகியன சூழ்ந்த கோவலூரில், இருவினைகளும் அற்ற வடிவினனாய் விளங்கும் சிவபிரானது வீரட்டானத்தை அடைவோமாக.

திருக்கோவலூர்வீரட்டம்

உளங்கொள்போக முய்த்திடா
ருடம்பிழந்த போதின்கண்
துளங்கிநின்று நாடொறுந்
துயரலாழி நெஞ்சமே
வளங்கொள்பெண்ணை வந்துலா
வயல்கள்சூழ்ந்த கோவலூர்

விளங்குகோவ ணத்தினான்
வீரட்டானஞ் சேர்துமே. #1087

ஆழமான சிந்தனையை உடைய நெஞ்சமே! உடலற்ற காலத்தில் மனத்தால் விரும்பியவற்றை எய்துதல் இயலாது. நாள் தோறும் துளங்கித் துயருறாதே. வளமான பெண்ணையாறு வந்து பாயும் வயல்கள் சூழ்ந்த கோவலூரில், விளங்கிய கோவணத்தினனாய்ச் சிவபிரான் வீற்றிருந்தருளும் வீரட்டானத்தை அடைவோம்.

திருக்கோவலூர்வீரட்டம்

கேடுமூப்புச் சாக்காடு
கெழுமிவந்து நாடொறும்
ஆடுபோல நரைகளா
யாக்கைபோக்க தன்றியும்
கூடிநின்று பைம்பொழிற்
குழகன்கோவ லூர்தனுள்
வீடுகாட்டு நெறியினான்
வீரட்டானஞ் சேர்துமே. #1088

நம் உடல் நரையுடையதாய், ஆடுபோல அலைதலால் கேடு, முதுமை, சாக்காடு ஆகியன நெருங்கி வந்து அழிதலை உடையது. பசுமையான பொழில்கள் செறிந்து நின்று அணி செய்யும் கோவலூரில் விளங்கும் குழகனும், வீடுகாட்டும் நெறியினனும் ஆகிய சிவபிரானது வீரட்டானத்தை அடைவோம். நெஞ்சே! வருக.

திருக்கோவலூர்வீரட்டம்

உரையும்பாட்டுந் தளர்வெய்தி
யுடம்புமூத்த போதின்கண்
நரையுந்திரையுங் கண்டெள்கி
நகுவர் நமர்க ளாதலால்
வரைகொள்பெண்ணை வந்துலா
வயல்கள்சூழ்ந்த கோவலூர்
விரைகொள்சீர்வெண் ணீற்றினான்
வீரட்டானஞ் சேர்துமே. #1089

பேச்சும், பாட்டும் தளர்ந்து நம் உடல் மூத்த போதில் நம் உறவினர் நரைதிரை கண்டு இகழ்ந்து சிரிப்பர். ஆதலால், மலையிலிருந்து இழிந்து வரும் பெண்ணையாறு பாய்ந்துலாவும் வயல்கள் சூழ்ந்த கோவலூரில் மணம் கமழும் சிறப்புமிக்க வெண்ணீறணிந்தவனாய் விளங்கும் சிவபிரானின் வீரட்டானத்தைச் சென்றடைவோம்.

திருக்கோவலூர்வீரட்டம்

ஏதமிக்க மூப்பினோ
டிருமலீளை யென்றிவை
ஊதலாக்கை யோம்புவீ
ருறுதியாவ தறிதிரேல்
போதில்வண்டு பண்செயும்
பூந்தண்கோவலூதனுள்
வேதமோது நெறியினான்
வீரட்டானஞ் சேர்துமே. **#1090**

துன்பம்மிக்க மூப்போடு இருமல் ஈளை ஆகியவற்றுக்கு இடனாய பருத்த உடலைப் பேணித் திரிபவர்களே! உயிர்க்கு உறுதியாவதை அறிவீராயின், மலர்களில் வண்டுகள் பண் பாடும் அழகிய கோவலூரில், வேதங்களை ஓதும் நெறியினன் ஆகிய சிவபிரானது வீரட்டானத்தை அடைவோம். வருக.

திருக்கோவலூர்வீரட்டம்

ஆறுபட்ட புன்சடை
அழகனாயி ழைக்கொரு
கூறுபட்ட மேனியான்
குழகன்கோவ லூர்தனுள்
நீறுபட்ட கோலத்தான்
நீலகண்ட னிருவர்க்கும்
வேறுபட்ட சிந்தையான்
வீரட்டானஞ் சேர்துமே. **#1091**

கங்கை தங்கிய மென்மையான சடைகளை உடைய அழகனும், உமையம்மைக்குத் தன் மேனியில் ஒரு கூற்றை அளித்தவனும் ஆகிய குழகன் விளங்கும் கோவலூரில் நீறணிந்த கோலத்தினனாய், நீலகண்டனாய், திருமால் பிரமர்க்கு வேறான சிந்தையனாய் விளங்கும் சிவபிரானின் வீரட்டானத்தை அடைவோம் வருக.

திருக்கோவலூர்வீரட்டம்

குறிகொளாழி நெஞ்சமே
கூறைதுவரிட் டார்களும்
அறிவிலாத வமணர்சொல்
லவத்தமாவ தறிதிரேல்
பொறிகொள்வண்டு பண்செயும்
பூந்தண்கோவ லூர்தனுள்

வெறிகொள்கங்கை தாங்கினான்
வீரட்டானஞ் சேர்துமே. #1092

ஆழமாகப்பலவற்றை எண்ணும் நெஞ்சமே! துவரூட்டிய ஆடையினர்களாகிய புத்தர்களும் அறிவிலாத சமணர்களும் கூறும் சொற்கள் பயனற்றவை ஆதலை உணர்வாயேயானால், பொறிகளை உடைய வண்டுகள் இசைபாடும் அழகிய கோவலூரில் மணம் கமழும் கங்கையை அணிந்த சடையினனாகிய சிவபிரானது வீரட்டானத்தை அடைவோம் வருக.

திருக்கோவலூர்வீரட்டம்

கழியொடுலவு கானல்சூழ்
காழிஞான சம்பந்தன்
பழிகள்தீரச் சொன்னசொற்
பாவநாச மாதலால்
அழிவிலீர்கொண் டேத்துமின்
அந்தண்கோவ லூர்தனுள்
விழிகொள்பூதப் படையினான்
வீரட்டானஞ் சேர்துமே. #1093

வீணே அழிதல் இல்லாதவர்களே! உப்பங்கழிகளோடு கூடிய கடற்கரைச் சோலைகள் சூழ்ந்த காழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன், பழிகள் நீங்கப்பாடிய இப்பதிகச் செஞ்சொல், பாவங்களை நீக்கும் தன்மையன ஆதலின் இவற்றை ஓதி வழிபடுங்கள். அழகிய தண்ணிய கோவலூரில் பெரிய விழிகளைக் கொண்ட பூதப்படைகளை உடைய சிவபிரானது வீரட்டானத்தை அடைவோம். வருக.

திருவாரூர்

திருவாரூர்

திருவாரூர்,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

பருக்கையானை மத்தகத்
தரிக்குலத் துகிர்ப்புக
நெருக்கிவாய நித்திலந்
நிரக்குநீள் பொருப்பனூர்
கருக்கொள்சோலை சூழநீடு
மாடமாளி கைக்கொடி
அருக்கன்மண்ட லத்தணாவு
மந்தணாரு ரென்பதே. **#1094**

பருத்த கையை உடைய யானையோடு போரிடும் சிங்கத்தின் கை நகங்கள் அதன் மத்தகத்தைக் கீறலால், மத்தகம் முத்துக்களைச் சிந்தும் கயிலைமால்வரையைத் தனக்கு இடமாகக் கொண்ட சிவபிரானது ஊர் பசுமையான சோலைகளால் சூழப்பெற்றுக் கதிரோன் மண்டலத்தைக் கிட்டும் கொடிகள் கட்டப்பட்ட மாடமாளிகைகளை உடைய திருவாரூர்.

திருவாரூர்

விண்டவெள் ளெருக்கலர்ந்த
வன்னிகொன்றை மத்தமும்
இண்டைகொண்ட செஞ்சடை
முடிச்சிவ னிருந்தவூர்
கெண்டைகொண் டலர்ந்தகண்ணி
னார்கள்கீத வோசைபோய்
அண்டரண்ட மூடறுக்கு
மந்தணாரு ரென்பதே. **#1095**

'மலர்ந்த வெள்ளெருக்குமலர், விரிந்தவன்னியிலை, கொன்றைமலர், ஊமத்தம் மலர் ஆகிய இவற்றால் இயன்ற இண்டை மாலையைச் சூடிய செஞ்சடை முடியினை உடைய சிவனது ஊர், கெண்டைமீன் போன்ற விரிந்த கண்களை உடைய மகளிர் பாடும் கீத ஒலி மேலுலகைச் சென்றளாவும் திருவாரூர்.

திருவாரூர்

கறுத்தநஞ்ச முண்டிருண்ட
கண்டர்கால னின்னுயிர்
மறுத்தமாணி தன்றனாகம்
வண்மைசெய்த மைந்தனூர்
வெறித்துமேதி யோடிமூசு
வள்ளைவெள்ளை நீள்கொடி
அறுத்துமண்டி யாவிபாயு
மந்தணாரு ரென்பதே. #1096

கொடிய ஆலகால விடத்தை உண்டு இருண்ட கண்டத்தை உடையவரும், காலன் உயிரைக் கவரவந்த போது மார்க்கண்டேயரைக் காத்து அவரது உடல் என்றும் இளமையோடு திகழும் பேற்றை வழங்கியவருமான இளமையும் வலிமையும் உடைய சிவன் ஊர், எருமைகள் மயங்கியோடி வெள்ளியவள்ளைக் கொடிகளை அறுத்துக் குளங்களில் பாயும் குளிர்ந்த திருவாரூர்.

திருவாரூர்

அஞ்சுமொன்றி யாறுவீசி
நீறுபூசி மேனியில்
குஞ்சியார வந்திசெய்ய
வஞ்சலென்னி மன்னுமூர்
பஞ்சியாரு மெல்லடிப்
பணைத்தகொங்கை நுண்ணிடை
அஞ்சொலார் அரங்கெடுக்கு
மந்தணாரூ ரென்பதே. #1097

காமம், குரோதம் முதலிய அறுபகைகளை விடுத்து, ஐம்புலன்களும் ஒன்றிநிற்கத் தலையாரக் கும்பிட்டு வழிபடும் அடியவர்களுக்கு அஞ்சாதீர் என்று அபயமளிக்கும் சிவன் மன்னிய ஊர், பஞ்சுபோன்ற மென்மையான அடிகளையும், பருத்த தனங்களையும், நுண்ணியடையையும், அழகிய இனிய சொற்களையும் உடைய மகளிர் அரங்கில் ஏறிநடஞ்செயும் ஆரூர்.

திருவாரூர்

சங்குலாவு திங்கள்சூடி
தன்னையுன்னு வார்மனத்
தங்குலாவி நின்றவெங்க
ளாதிதேவன் மன்னுமூர்

தெங்குலாவு சோலைநீடு
தேனுலாவு செண்பகம்
அங்குலாவி யண்டநாறு
மந்தணாரூ ரென்பதே. **#1098**

சங்கு போன்ற வெண்மையான பிறைமதியைத் தலையில் சூடி, தன்னை நினைப்பவர் மனத்தில் நிறைந்துநிற்கும் எங்கள் ஆதிதேவன் மன்னிய ஊர், தென்னஞ்சோலைகளையும், வானுலகம் வரை மணம் வீசும் உயர்ந்த செண்பக மரங்களையும் உடைய திருவாரூர்.

<u>திருவாரூர்</u>

கள்ளநெஞ்ச வஞ்சகக்
கருத்தைவிட் டருத்தியோ
டுள்ளமொன்றி யுள்குவா
ருளத்துளா னுகந்தவூர்
துள்ளிவாளை பாய்வயற்
சுரும்புலாவு நெய்தல்வாய்
அள்ளல்நாரை யாரல்வாரு
மந்தணாரு ரென்பதே. **#1099**

கள்ள நெஞ்சத்தையும் அது காரணமாகச் செய்யும் வஞ்சகச் செயல்களையும். தீய எண்ணங்களையும் கைவிட்டு, அன்போடு மனமொன்றி வழிபடும் அடியவர் உள்ளத்தில் விளங்கும் இறைவன் ஊர், வாளை மீன்கள் துள்ளிப்பாயும் வயல்களையும், சுரும்புகள் உலாவும் நெய்தல் மலர்களையும், நாரைகள் ஆரல் மீன்களைக் கவர்ந்து உண்ணும் சேற்று நிலங்களையும் உடைய ஆரூர்.

<u>திருவாரூர்</u>

கங்கைபொங்கு செஞ்சடைக்
கரந்தகண்டர் காமனை
மங்கவெங்க ணால்விழித்த
மங்கைபங்கன் மன்னுமூர்
தெங்கினூடு போகிவாழை
கொத்திறுத்து மாவின்மேல்
அங்கண்மந்தி முந்தியேறு
மந்தணாரூ ரென்பதே. **#1100**

பொங்கி வந்த கங்கையைச் சடையிற் கரந்த சருவவியாபகரும், காமன் பொடிபட அனற்கண்ணைத் திறந்த வரும், மங்கைபங்கரும் ஆகிய சிவன் மன்னிய ஊர், அழகிய கண்களை உடைய மந்திகள் தென்னை மரத்தின் வழியே ஏறி வாழைக்குலைகளை ஒடித்து மாமரத்தின் மேல்

ஏறும் சோலை வளம் சான்றதிருவாரூர்.

திருவாரூர்

வரைத்தலம் மெடுத்தவன்
முடித்தலம் முரத்தொடும்
நெரித்தவன் புரத்தைமுன்
னெரித்தவன் னிருந்தவூர்
நிரைத்தமாளி கைத்திருவி
னேரனார்கள் வெண்ணகை
அரத்தவாய் மடந்தைமார்க
ளாடுமாரூ ரென்பதே. **#1101**

திருக்கயிலைமலையை எடுத்த இராவணனுடைய தலைகளையும் மார்பினையும் நெரித்தவனும், திரிபுரங்களை எரித்தவனும் ஆகிய, சிவபிரான் ஊர், வரிசையாயமைந்த மாளிகைகளில் திருமகளை ஒத்த அழகும், வெண்ணகையும் செவ்வாயுமுடைய மகளிர் நடனமாடி மகிழும் ஆரூர்.

திருவாரூர்

இருந்தவன் கிடந்தவன்
னிடந்துவிண் பறந்துமெய்
வருந்தியு மளப்பொணாத
வானவன் மகிழ்ந்தவூர்
செருந்திஞாழல் புன்னைவன்னி
செண்பகஞ் செழுங்குரா
அரும்புசோலை வாசநாறு
மந்தணாரூ ரென்பதே. **#1102**

தாமரைமலரில் இருந்த நான்முகனும், பாம்பணையில் கிடந்த திருமாலும் விண்பறந்தும் மண்ணிடந்து வருந்தியும் அளந்துகாணமுடியாத முடியையும் அடியையும் உடைய பெருமான் விரும்பி எழுந்தருளியிருக்கும் ஊர், செருந்தி, ஞாழல், புன்னை, வன்னி, செண்பகம், குரா ஆகியன மலர்ந்து மணம்வீசும் சோலைகள் உடைய திருவாரூர்.

திருவாரூர்

பறித்தவெண் டலைக்கடுப்
படுத்தமேனி யார்தவம்
வெறித்தவேடன் வேலைநஞ்ச
முண்டகண்டன் மேவுமூர்

மறித்துமண்டு வண்டல்வாரி
மிண்டுநீர் வயற்செந்நெல்
அறுத்தவா யசும்புபாயு
மந்தணாரூ ரென்பதே. **#1103**

பறித்த வெள்ளிய தலையையும், கடுக்காய்ப் பொடிபூசிய மேனியையும், உடைய சமணர், மெய்யில்லாத தவம் மேற்கொண்டு கண்டு அஞ்சும் வேடமுடையவனும், நஞ்சுண்ட கண்டனும் ஆகிய சிவபெருமான் மேவும் ஊர், மீண்டும், மீண்டும் தோன்றும் வண்டலை வாரி நீரைத்தடுத்து, செந்நெல்லை அறுத்த வயல்களில் ஊற்று வழியே நீர்ப்பொசிவு தோன்றும், மண்வளமும், நீர்வளமும் உடைய திருவாரூர்.

திருவாரூர்

வல்லிசோலை சூதநீடு
மன்னுவீதி பொன்னுலா
அல்லிமா தமர்ந்திருந்த
வந்தணாரூ ராதியை
நல்லசொல்லு ஞானசம்
பந்தன்நாவின் இன்னுரை
வல்லதொண்டர் வானமாள
வல்லர்வாய்மை யாகவே. **#1104**

கொடிகள் அடர்ந்த சோலைகளால் சூழப்பெற்று மாமரங்களைக் கொண்டு விளங்கும் திருவீதிகளை உடைய அழகு பொருந்திய அல்லியங்கோதையம்மையோடு எழுந்தருளி விளங்கும் ஆரூர் இறைவனை ஞானநெறிகளை உணர்த்தும் சொற்களைக்கூறும் ஞானசம்பந்தன் நாவினால் பாடிப் போற்றிய இன்னுரைகளை ஓதும் தொண்டர்கள் வானம் ஆள்வர்; இஃது உண்மை.

திருச்சிரபுரம்

சீர்காழி

திருச்சிரபுரம்,
பண் - நட்டராகம், சிரபுரமென்பதும் சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

அன்ன மென்னடை யரிவையோ டினிதுறை
யமரர்தம் பெருமானார்
மின்னு செஞ்சடை வெள்ளெருக் கம்மலர்
வைத்தவர் வேதந்தாம்
பன்னு நன்பொருள் பயந்தவர் பருமதிற்
சிரபுரத் தார்சீரார்
பொன்னின் மாமல ரடிதொழு மடியவர்
வினையொடும் பொருந்தாரே. **#1105**

அன்னம் போன்ற மெல்லிய நடையினை உடைய உமையம்மையோடு இனிதாக உறையும் அமரர் தலைவரும், ஒளி விடும் செஞ்சடையில் வெள்ளெருக்கமலர் சூடியவரும். வேதங்களின் முடிபாய் விளங்கும் உபநிடதங்கள் வழியே நன் பொருள்களை அருளியவரும் பெரியமதில்களால் சூழப்பட்ட சிரபுரத்தில் எழுந்தருளியிருப்பவரும் ஆகிய புகழாளர்தம் அழகிய மலர் போன்ற திருவடிகளைத் தொழுது எழும் அடியவர் வினையொடும் பொருந்தார்.

சீர்காழி

கோல மாகரி யுரித்தவ ராவொடு
மேனக்கொம் பிளவாமை
சாலப் பூண்டுதண் மதியது சூடிய
சங்கர னார்தம்மைப்
போலத் தம்மடி யார்க்குமின் பளிப்பவர்
பொருகடல் விடமுண்ட
நீலத் தார்மிடற் றண்ணலார் சிரபுரந்
தொழவினை நில்லாவே. **#1106**

அழகிய பெரிய யானையை உரித்தவரும், பாம்பு, பன்றிப்பல், இளஆமையோடு இவற்றைமிகுதியாகப் புனைந்து தண்மதி சூடிய சங்கரனாரும், தம்மைப் போலத் தம் அடியார்க்கும் இன்பம் அளிப்பவரும், பெரிய கடலிடைத் தோன்றிய விடத்தை உண்ட

நீலகண்டரும் ஆகிய சிரபுரத்து இறைவனைத் தொழ வினைகள் நாசமாகும்.

சீர்காழி

மானத் திண்புய வரிசிலைப் பார்த்தனைத்
தவங்கெட மதித்தன்று
கானத் தேதிரி வேடனா யமர்செயக்
கண்டருள் புரிந்தார்பூந்
தேனைத் தேர்ந்துசேர் வண்டுகள் திரிதருஞ்
சிரபுரத் துறையெங்கள்
கோனைக் கும்பிடு மடியரைக் கொடுவினை
குற்றங்கள் குறுகாவே. **#1107**

பெருமைமிக்க தோள்வலிமையோடு வில்திறனில் சிறந்திருந்த அருச்சுனனை அவன்தவம் கெடுமாறு செய்து அவனை மதித்துக் கானகத்தில் ஒரு வேடனாய்ச் சென்று அவனை எதிர்த்து அமர் செய்யும் அவன் ஆற்றலைக் கண்டு அருள்புரிந்தவரும், வண்டுகள் பூந்தேனைத் தேர்ந்து திரியும் மலர்மனம் சூழ்ந்த சிரபுரத்துறை எங்கள் தலைவரும் ஆகிய பெருமானாரைக் கும்பிடும் அடியவரைக் கொடுவினைக்குற்றங்கள் குறுகா.

சீர்காழி

மாணி தன்னுயிர் மதித்துண வந்தவக்
காலனை யுதைசெய்தார்
பேணி யுள்குமெய் யடியவர் பெருந்துயர்ப்
பிணக்கறுத் தருள்செய்வார்
வேணி வெண்பிறை யுடையவர் வியன்புகழ்ச்
சிரபுரத் தமர்கின்ற
ஆணிப் பொன்னினை யடிதொழு மடியவர்க்
கருவினை யடையாவே. **#1108**

மார்க்கண்டேயர் உயிரை மதித்துத் தானே கவர வந்த தென்திசைக்கோனாகிய காலனை உதைத்தவரும், தம்மை விரும்பி நினையும் மெய்யடியார் படும் பெருந்துயர்ப்பிணக்கை நீக்கி அருள் புரிபவரும், சடையில் வெண்பிறை அணிந்தவரும் ஆகிய விரிந்த புகழை உடைய சிரபுரத்தில் அமர்கின்ற மாற்றுயர்ந்த ஆணிப்பொன் போன்றவரை அடிதொழும் அடியவர்களை அருவினைகள் அடையா.

சீர்காழி

பாரு நீரொடு பல்கதி ரிரவியும்

பனிமதி யாகாசம்
ஓரும் வாயுவு மொண்கனல் வேள்வியிற்
றலைவனு மாய்நின்றார்
சேருஞ் சந்தன மகிலொடு வந்திழி
செழும்புனற் கோட்டாறு
வாருந் தண்புனல் சூழ்சிர புரந்தொழு
மடியவர் வருந்தாரே. **#1109**

மண், நீர், பல கதிர்களை உடைய இரவி, தண்மதி, ஆகாயம், வாயு, ஒளிபொருந்திய கனல் வேள்வித் தலைவனாகிய உயிர் ஆகிய அட்டமூர்த்தங்களாய் விளங்குபவர் எழுந்தருளிய, ஆற்றுநீர் கொணரும் சந்தனம் அகில் ஆகியவற்றோடு வந்திழியும் செழும்புனலை உடைய கோட்டாறுபாயும் தண்புனல் சூழ்ந்த சிரபுரத்தைத் தொழும் அடியவர்கள் வருந்தார்.

சீர்காழி

ஊழி யந்தத்தி லொலிகட லோட்டந்திவ்
வுலகங்க ளவைமூட
ஆழி யெந்தையென் றமரர்கள் சரண்புக
வந்தரத் துயர்ந்தார்தாம்
யாழி னேர்மொழி யேழையோ டினிதுறை
யின்பனெம் பெருமானார்
வாழி மாநகர்ச் சிரபுரந் தொழுதெழ
வல்வினை யடையாவே. **#1110**

ஊழி முடிவில் ஒலிக்கும் கடல்அலைகள் ஓடிவந்து உலகங்களை மூடிய காலத்தில் அமரர்கள் ஓடிவந்து “அருட்கடலே! எந்தையே” என்று சரண்புக அதுபோது ஊழி வெள்ளத்தில் தோணிபுரத்தை மிதக்கச் செய்து அமரரைக்காத்தருளிய, யாழ்போலும் மொழியினை உடைய உமையம்மையோடு இனிதாக உறையும் இன்பனும் எம்பெருமானும் ஆகிய சிவபிரானின் மாநகராகிய சிரபுரம் தொழுதெழ வல்வினைகள் அடையா.

சீர்காழி

பேய்கள் பாடப்பல் பூதங்கள் துதிசெயப்
பிணமிடு சுடுகாட்டில்
வேய்கொள் தோளிதான் வெள்கிட மாநட
மாடும்வித் தகனாரொண்
சாய்க டான்மிக வுடையதண் மறையவர்
தகுசிர புரத்தார்தாந்

தாய்க ளாயினார் பல்லுயிர்க் குந்தமைத்
தொழுமவர் தளராரே. **#1111**
பேய்கள் பாடவும், பலபூதங்கள் துதிக்கவும், பிணங்கள் எரிக்கும் சுடுகாட்டில், மூங்கில் போலும் தோளினை உடைய காளி நாண மாநடம் ஆடும் வித்தகனாரும் புகழ்மிகவுடைய மறையவர் வாழும் தக்க சிரபுரத்தில் உறைபவரும், பல்வகை உயிர்கட்கும் அவ்வற்றிற்குரிய தாய்களாக விளங்குபவரும் ஆகிய சிவபிரானைத் தொழுபவர் தளர்ச்சியுறார்.

<u>சீர்காழி</u>

இலங்கு பூண்வரை மார்புடை யிராவண
னெழில்கொள்வெற் பெடுத்தன்று
கலங்கச் செய்தலுங் கண்டுதங் கழலடி
நெரியவைத் தருள்செய்தார்
புலங்கள் செங்கழு நீர்மலர்த் தென்றன்மன்
றதனிடைப் புகுந்தாருங்
குலங்கொண் மாமறை யவர்சிர புரந்தொழு
தெழவினை குறுகாவே. **#1112**
விளங்கிய அணிகலன்களைப் பூண்டவனாய் மலைபோலும் மார்பினனாய் விளங்கும் இராவணன் அழகியகயிலை மலையை நிலைகுலையச் செய்து பெயர்த்தபோது அதனைக் கண்டு தம் திருவடிவிரலால் நெரியச் செய்து பின் அவன் தன் பிழைக்கு வருந்திய போது அருள்செய்தவர் ஆகிய சிவபெருமான் வீற்றிருப்பதும் வயல்களில் முளைத்த செங்கழுநீர் மலர் மணத்துடன் தென்றல் மன்றினிடைப்புகுந்து இளைப்பாற்றும் சிறப்புடையதும் உயர்குலத்தில் தோன்றிய மறையவர் வாழ்வதுமான சிரபுரத்தைத் தொழ வினைகள் குறுகா.

<u>சீர்காழி</u>

வண்டு சென்றணை மலர்மிசை நான்முகன்
மாயனென் றிவரன்று
கண்டு கொள்ளவோ ரேனமோ டன்னமாய்க்
கிளறியும் பறந்துந்தாம்
பண்டு கண்டது காணவே நீண்டவெம்
பசுபதி பரமேட்டி
கொண்ட செல்வத்துச் சிரபுரந் தொழுதெழ
வினையவை கூடாவே. **#1113**
வண்டுகள் மொய்க்கும் தாமரைமலர்மிசை விளங்கும் நான்முகனும்

திருமாலும் ஆகிய இருவரும் சிவபிரானைக் கண்டறியும் முயற்சியில் முறையே அன்னமாகவும் பன்றியாகவும் பறந்தும் கிளறியும் தேடியபோது அவர்கள் முன்பு கண்ட அத்துணை அளவே காணுமாறு அழலுருவாய் நீண்ட எம் பசுபதியும், பரமேட்டியும் ஆகிய சிவபிரான் விளங்கும் செல்வவளம் உடைய சிரபுரம் தொழுதுஎழ வினைகள் கூடா.

சீர்காழி

பறித்த புன்றலைக் குண்டிகைச் சமணரும்
பார்மிசைத் துவர்தோய்ந்த
செறித்த சீவரத் தேரருந் தேர்கிலாத்
தேவர்கள் பெருமானார்
முறித்து மேதிகள் கரும்புதின் றாவியின்
மூழ்கிட விளவாளை
வெறித்துப் பாய்வயற் சிரபுரந் தொழவினை
விட்டிடு மிகத்தானே. **#1114**

மயிர் பறித்த புன்தலையையும் குண்டிகை ஏந்திய கையையும் உடைய சமணரும், உலகில் துவர் தோய்ந்த சீவரம் என்னும் ஆடையை அணிந்த தேரரும், அறியமுடியாத தேவர் தலைவர் எழுந்தருளிய, எருமைகள் கரும்பை முறித்துத்தின்று குளங்களில் மூழ்க அதனைக்கண்டு அங்குள்ள இள வாளைகள் வெறித்துப்பாயும் வயல்கள் சூழ்ந்த சிரபுரம் தொழ மிகுதியான வினைகள் நீங்கும்.

சீர்காழி

பரசு பாணியைப் பத்தர்க ளத்தனைப்
பையர வோடக்கு
நிரைசெய் பூண்டிரு மார்புடை நிமலனை
நித்திலப் பெருந்தொத்தை
விரைசெய் பூம்பொழிற் சிரபுரத் தண்ணலை
விண்ணவர் பெருமானைப்
பரவு சம்பந்தன் செந்தமிழ் வல்லவர்
பரமனைப் பணிவாரே. **#1115**

மழுவேந்திய கையனை, பக்தர்கள் தலைவனை, படப்பாம்பு, என்புமாலை ஆகியன அணிந்த அழகிய மார்புடைய நிமலனை, முத்துக்களின் கொத்தாக விளங்குவோனை, மணம் தரும் மலர்களை உடைய பொழில் சூழ்ந்த சிரபுரத்து அண்ணலை, தேவர் பெருமானைப் பரவிய ஞானசம்பந்தனின் செந்தமிழ்ப்பாடல்கள் பத்தையும் வல்லவர் பரமனைப்பணிபவர் ஆவார்.

திருஅம்பர்த்திருமாகாளம்

திருஅம்பர்த்திருமாகாளம்

திருஅம்பர்த்திருமாகாளம்,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காளகண்டேசுவரர்.
தேவியார் : பட்சநாயகியம்மை.

புல்கு பொன்னிறம் புரிசடை நெடுமுடிப்
போழிள மதிசூடிப்
பில்கு தேனுடை நறுமலர்க் கொன்றையும்
பிணையல்செய் தவர்மேய
மல்கு தண்டுறை யரிசிலின் வடகரை
வருபுனன் மாகாளம்
அல்லு நண்பக லுந்தொழு மடியவர்க்
கருவினை யடையாவே. #1116

பொன்னிறம் பொருந்திய சடைமுடியில் இளம் பிறையையும் தேன் பொருந்திய கொன்றைமலரையும் பிணைத்துச் சூடிய பெருமான் எழுந்தருளிய அரிசிலாற்றின் வடகரையில் உள்ள அம்பர் மாகாளத்தை இரவும் பகலும் தொழும் அடியவர்களை அருவினைகள் அடையா.

திருஅம்பர்த்திருமாகாளம்

அரவ மாட்டுவ ரந்துகில் புலியதள்
அங்கையி லனலேந்தி
இரவு மாடுவ ரிவையிவர் சரிதைகள்
இசைவன பலபூதம்
மரவந்தோய்பொழி லரிசிலின் வடகரை
வருபுனன் மாகாளம்
பரவி யும்பணிந் தேத்தவல் லாரவர்
பயன்றலைப் படுவாரே. #1117

பாம்பினைப் பிடித்து ஆட்டுபவர், புலித்தோலை ஆடையாக உடுப்பவர். அழகிய கையில் அனலேந்தி இரவுப் பொழுதில் ஆடுபவர், அவர்தம் சரிதைகளாகிய இவற்றைப் பல பூதங்கள் பாடித்துதிக்கின்றன. வெண்கடம்ப மரச்சோலைகளை உடையதும் அரிசிலாற்றின் வடகரையிலுள்ளதுமாகிய திருமாகாளத்தில் உறையும் அப்பெருமானைப் பரவிப் பணிந்து ஏத்த வல்லவர் விழுமிய பயனை அடைவர்.

<u>திருஅம்பர்த்திருமாகாளம்</u>

குணங்கள் கூறியுங் குற்றங்கள் பரவியுங்
குரைகழ லடிசேரக்
கணங்கள் பாடவுங் கண்டவர் பரவவுங்
கருத்தறிந் தவர்மேய
மணங்கொள் பூம்பொழி லரிசிலின் வடகரை
வருபுனன் மாகாளம்
வணங்கு முள்ளமோ டணையவல் லார்களை
வல்வினை யடையாவே. **#1118**

அவன் குணங்களைக் கூறியும் தம் குற்றங்களை எடுத்துரைத்தும் அவன் திருவடிகளை அடைய முற்படின், பூதகணங்கள் பாடவும், அன்பர்கள் பரவித்துதிக்கவும் வீற்றிருக்கும் அப்பெருமான்நம், கருத்தறிந்து அருள் செய்யும் இயல்பினனாவான். அவ்விறைவன் மேவிய திருமாகாளத்தை வணங்கும் உள்ளத்தோடு அத்தலத்திற்குச் செல்லவல்லவர்களை வல்வினைகள் அடையா.

<u>திருஅம்பர்த்திருமாகாளம்</u>

எங்கு மேதுமோர் பிணியிலர் கேடிலர்
இழைவளர் நறுங்கொன்றை
தங்கு தொங்கலுந் தாமமுங் கண்ணியுந்
தாமகிழ்ந் தவர்மேய
மங்குல் தோய்பொழி லரிசிலின் வடகரை
வருபுனன் மாகாளம்
கங்கு லும்பக லுந்தொழு மடியவர்
காதன்மை யுடையாரே. **#1119**

மேகங்கள் தோயும் பொழில் சூழ்ந்ததும், அரிசிலாற்றின் வடகரையில் உள்ளதும் ஆகிய திருமாகாளத்தில் இழையால் கட்டிய மணம் கமழும் கொன்றைமாலை, தாமம், கண்ணி ஆகியவற்றை அணிந்த இறைவரை இரவும் பகலும் தொழும் அன்புடை அடியவர் எவ்விடத்தும் ஒருசிறிதும் பிணியிலராவர்.

<u>திருஅம்பர்த்திருமாகாளம்</u>

நெதிய மென்னுள போகமற் றென்னுள
நிலமிசை நலமாய
கதிய மென்னுள வானவ ரென்னுளர்
கருதிய பொருள்கூடில்
மதியந் தோய்பொழி லரிசிலின் வடகரை

வருபுனன் மாகாளம்
புதிய பூவொடு சாந்தமும் புகையுங்கொண்
டேத்துதல் புரிந்தோர்க்கே. **#1120**

திங்கள் தோயும் பொழில்களால் சூழப்பெற்றதும், அரிசிலாற்றின் வடகரையில் விளங்குவதுமாகிய திருமாகாளத்து இறைவரைப் பூக்கள் சந்தனம் நறுமணப் புகைகளைக் கொண்டு ஏத்தி வழிபடும் சிவபுண்ணியம் உடையோருக்கு அச்சிவபூசையால் எய்தும் திருவருளினும் வேறுநிதியம், சுகபோகம் அடையத்தக்க வேறுகதிகள் உலகில் உண்டோ?

<u>திருஅம்பர்த்திருமாகாளம்</u>

கண்ணு லாவிய கதிரொளி முடிமிசைக்
கனல்விடு சுடர்நாகம்
தெண்ணி லாவொடு திலதமு நகுதலை
திகழவைத் தவர்மேய
மண்ணு லாம்பொழி லரிசிலின் வடகரை
வருபுனன் மாகாளம்
உண்ணி லாநினைப் புடையவ ரியாவரிவ்
வுலகினி லுயர்வரே. **#1121**

கதிரொளி பொருந்திய முடிமிசைப் பாம்பு திங்கள் தலைமாலை ஆகியவற்றை அணிந்த பெருமான் எழுந்தருளிய பொழில் சூழ்ந்த அரிசிலாற்று வடகரையில் விளங்கும் திருமாகாளத்தை உள்ளத்தே கொண்டு வழிபடுபவர் யாவரோ? அவர் இவ்வுலகில் உயர்வெய்துவர்.

<u>திருஅம்பர்த்திருமாகாளம்</u>

தூசு தானரைத் தோலுடைக் கண்ணியஞ்
சுடர்விடு நறுங்கொன்றை
பூசு வெண்பொடிப் பூசுவ தன்றியும்
புகழ்புரிந் தவர்மேய
மாசு லாம்பொழி லரிசிலின் வடகரை
வருபுனன் மாகாளம்
பேசு நீர்மையரி யாவரிவ் வுலகினிற்
பெருமையைப் பெறுவாரே. **#1122**

தோலே அவர் இடையில் கட்டியுள்ள ஆடையாகும். கொன்றையே அவர்தம் கண்ணி, பூசுவது வெண்பொடி. புகழை விரும்புபவர். அவர்தம் திருமாகாளத்தைப் பேசும் தன்மையர் யாவரோ அவர் இவ்வுலகில் பெருமையைப் பெறுவர்.

திருஅம்பர்த்திருமாகாளம்

பவ்வ மார்கட லிலங்கையர் கோன்றனைப்
பருவரைக் கீழூன்றி
எவ்வந் தீரவன் றிமையவர்க் கருள்செய்த
விறையவ னுறைகோயில்
மவ்வந் தோய்பொழி லரிசிலின் வடகரை
வருபுனன் மாகாளம்
கவ்வை யாற்றொழு மடியவர் மேல்வினை
கனலிடைச் செதிளன்றே. **#1123**

கடல் சூழ்ந்த இலங்கைமன்னன் இராவணனைக் கயிலை மலையின்கீழ் அகப்படுத்தி அடர்த்து, இமையவர்க்குத் துன்பங்கள் தீர அருள் செய்தவர். அவ்விறைவர் உறையும் கோயில் அம்பர் மாகாளம். அத்தலத்தைத் தோத்திர ஆரவாரத்தோடு வழிபடும் அடியவர்களின் வினைகள் அழலிற்பட்ட தூசுபோலக்கெடும்.

திருஅம்பர்த்திருமாகாளம்

உய்யுங் காரண முண்டென்று கருதுமி
னொளிகிளர் மலரோனும்
பைகொள் பாம்பணைப் பள்ளிகொ ளண்ணலும்
பரவநின் றவர்மேய
மையுலாம்பொழி லரிசின் வடகரை
வருபுனன் மாகாளம்
கையி னாற்றொழு தவலமும் பிணியுந்தங்
கவலையுங் களைவாரே. **#1124**

கடைத்தேறுதற்கு ஒருவழி உண்டென்று கருதுங்கள். நான்முகனும் திருமாலும் பரவ நின்றவராகிய இறைவர் பொழில்சூழ்ந்த அரிசிலாற்றின் கரையில் உள்ள திருமாகாளத்தில் உள்ளார். அவரைக் கையினால் தொழுவாரே அவலமும் பிணியும் கவலையும் இலராவர்.

திருஅம்பர்த்திருமாகாளம்

பிண்டி பாலரு மண்டைகொ டேரரும்
பீலிகொண் டுழல்வாரும்
கண்ட நூலருங் கடுந்தொழி லாளருங்
கழறநின் றவர்மேய
வண்டு லாம்பொழி லரிசிலின் வடகரை
வருபுனன் மாகாளம்
பண்டு நாஞ்செய்த பாவங்கள் பற்றறப்

பரவுதல் செய்வோமே. **#1125**
மாவுக்கஞ்சி உண்டு தம்மைப் பசியிலிருந்து காப்பவரும், மண்டை என்னும் பிச்சைப்பாத்திரத்தை ஏந்தி நிற்பவரும், பீலிகொண்டு உழல்வோரும், கண்டநூல்களை வேதங் களாகக் கொண்டு கூறுவோரும், கடுந்தொழில்புரிவோரும் ஆகிய சமணர் புத்தர் ஆகியோர் புறங்கூறும் பொய்யுரைகளைக் கேளாது மாகாளம் மேவிய பெருமானை முற்பிறவிகளில் நாம் செய்தபாவங்களின் தொடர்ச்சி நீங்கப் பரவுதல் செய்வோம்.

<u>திருஅம்பர்த்திருமாகாளம்</u>

மாறு தன்னொடு மண்மிசை யில்லது
வருபுனன் மாகாளத்
தீறு மாதியு மாகிய சோதியை
யேறமர் பெருமானை
நாறு பூம்பொழிற் காழியுண் ஞானசம்
பந்தன தமிழ்மாலை
கூறு வாரையுங் கேட்கவல் லாரையுங்
குற்றங்கள் குறுகாவே. **#1126**

இவ்வுலகில் தன்னொடு ஒப்புக்கூறத்தக்க தலம் ஒன்றும் இல்லாத மாகாளத்தில் உறையும் ஆதியும் அந்தமும் இல்லாத சோதியை, விடை ஏறும் பெருமானை, ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய தமிழ்மாலையைக் கூறி வழிபடுவோரையும், கேட்போரையும் குற்றங்கள் குறுகா.

திருக்கடிக்குளம்

திருக்கடிக்குளம்

திருக்கடிக்குளம்,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கற்பகேசுவரர்.
தேவியார் : சவுந்தரநாயகியம்மை.

பொடிகொண் மேனிவெண் ணூலினர் தோலினர்
புலியுரி யதளாடை
கொடிகொ ளேற்றினர் மணிகிணி னெனவரு
குரைகழல் சிலம்பார்க்கக்
கடிகொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத்
துறையுங்கற் பகத்தைத்தம்
முடிகள் சாய்த்தடி வீழ்தரும் அடியரை
முன்வினை மூடாவே. **#1127**

திருநீறணிந்த மேனியராய், வெண்ணூல் அணிந்தவராய், புலித்தோலுடுத்தவராய், யானைத்தோலைப் போர்த்தியவராய், விடைக்கொடி உடையவராய், கட்டப்பட்ட மணிகள் கிணின் என ஒலிக்கக், கால்களில் சுழல் சிலம்பு ஆகிய ஒலிக்க மணம் கமழும் அழகிய பொழில் சூழ்ந்தன கடிக்குளத்தில் உறையும் கற்பகத்தைத் தம் முடிசாய்த்து அடிகளில் வீழ்ந்து வணங்கும் அடியவரைப் பழவினைகள் தொடரா.

திருக்கடிக்குளம்

விண்க ளார்தொழும் விளக்கினைத் துளக்கிலா
விகிர்தனை விழவாரும்
மண்க ளார்துதித் தன்பரா யின்புறும்
வள்ளலை மருவித்தம்
கண்க ளார்தரக் கண்டுநங் கடிக்குளத்
துறைதரு கற்பகத்தைப்
பண்க ளார்தரப் பாடுவார் கேடிலர்
பழியிலர் புகழாமே. **#1128**

தேவர்கள் தொழும் திருவிளக்கை, தளர்ச்சியுறாத விகிர்தனை, விழாக்கள் பலவும் நிகழ்த்தும் மண்ணுலகில் உள்ளார் துதித்து அன்புடையவர்களாய் மகிழும் வள்ளலை, சென்றடைந்து தம் கண்களாரக் கண்டு மகிழும் நம் கடிக்குளத்து உறையும் கற்பகத்தை,

பண்களோடு பாடல்களைப் பாடிப் போற்றுவார் கேடிலர். பழியிலர். அவரைப் புகழ்வந்தடையும்.

திருக்கடிக்குளம்

பொங்கு நற்கரி யுரியது போர்ப்பது
புலியத ளழனாகம்
தங்க மங்கையைப் பாகதுடையவர்
தழல்புரை திருமேனிக்
கங்கை சேர்தரு சடையினர் கடிக்குளத்
துறைதரு கற்பகத்தை
எங்கு மேத்திநின் றின்புறு மடியரை
யிடும்பைவந் தடையாவே. **#1129**

சினந்துவந்த நல்ல யானையின் தோலைப் போர்த்து, புலித்தோலை உடுத்து, கொடிய பாம்பு திருமேனியில் விளையாட, உமை நங்கையைப் பாகமாகக் கொண்டு, தழல் போன்ற சிவந்த திருமேனியராய்க் கங்கை சேர்ந்த சடையினராய் விளங்கும் கடிக்குளத்து உறையும் கற்பகத்தை எவ்விடத்தும் ஏத்தி நின்று இன்புறும் அடியாரைத் துன்பம் வந்து அடையமாட்டா.

திருக்கடிக்குளம்

நீர்கொ ணீள்சடை முடியனை நித்திலத்
தொத்தினை நிகரில்லாப்
பார்கொள் பாரிடத் தவர்தொழும் பவளத்தைப்
பசும்பொனை விசும்பாரும்
கார்கொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத்
துறையுங்கற் பகந்தன்னைச்
சீர்கொள் செல்வங்க ளேத்தவல் லார்வினை
தேய்வது திணமாமே. **#1130**

கங்கைதங்கிய நீண்ட சடைமுடியினனை, முத்துக்களின் கொத்தாய் விளங்குவோனை, உலகில் பல இடங்களிலும் உள்ள மக்கள் வந்து தொழும் பவளத்தை, பசும் பொன்னை, வானளாவிய மேகங்கள் தங்கியவாய் விளங்கும் அழகிய பொழில்கள் சூழ்ந்த கடிக்குளத்தில் உறையும் கற்பகத்தின் சிறப்புமிக்க அருட்செல்வங்களை ஏத்த வல்லவர்களின் வினைகள் தேய்வது திண்ணம்.

திருக்கடிக்குளம்

சுரும்பு சேர்சடை முடியினன் மதியொடு
துன்னிய தழனாகம்

அரும்பு தாதவிழ்ந் தலர்ந்தன மலர்பல
கொண்டடி யவர்போற்றக்
கரும்பு கார்மலி கொடிமிடை கடிக்குளத்
துறைதரு கற்பகத்தை
விரும்பு வேட்கையொ டுளமகிழ்ந் துரைப்பவர்
விதியுடையவர்தாமே. **#1131**

வண்டுகள் மொய்க்கும் மலர்களை அணிந்த சடையினனும், கொடிய பாம்பினை மதியோடு பகை நீக்கிப் பொருத்திவைத்த முடியினனும், அரும்புகளையும் மகரந்தம் விரிந்து அலர்ந்த மலர்களையும் கொண்டு அடியவர் போற்ற, கரும்புகளும் உயர்ந்து வளர்ந்த கொடிகளும் பின்னி வளர்ந்த கடிக்குளத்தில் உறையும் கற்பகத்தை அன்போடு விரும்பி உளம்மகிழ்ந்து போற்றுபவர் நல்லூழ் உடையவர் ஆவர்.

திருக்கடிக்குளம்

மாதி லங்கிய பாகத்தன் மதியமொ
டலைபுன லழனாகம்
போதி லங்கிய கொன்றையு மத்தமும்
புரிசடைக் கழகாகக்
காதி லங்கிய குழையினன் கடிக்குளத்
துறைதரு கற்பகத்தின்
பாதங் கைதொழு தேத்தவல் லார்வினை
பற்றறக் கெடுமன்றே. **#1132**

உமைமாது விளங்கும் பாகத்தினனும், திங்கள், கங்கை, சினம் மிக்க பாம்பு, கொன்றைமலர், ஊமத்தை மலர் ஆகியனவற்றை வளைந்த சடையின் மேல், அழகுறச் சூடியவனும் காதிலங்கு குழையினனும், ஆகிய கடிக்குளத்தில் உறையும் கற்பகத்தின் பாதங்களைக் கைகளால் தொழுது ஏத்த வல்லார் வினைகள் அடியோடு கெடும்.

திருக்கடிக்குளம்

குலவு கோலத்த கொடிநெடு மாடங்கள்
குழாம்பல குளிர்பொய்கை
புலவு புள்ளின மன்னங்க ளாலிடும்
பூவைசே ருங்கூந்தல்
கலவை சேர்தரு கண்ணியன் கடிக்குளத்
துறையுங்கற் பகத்தைச்சீர்
நிலவி நின்றுநின் றேத்துவார் மேல்வினை
நிற்ககில் லாதானே. **#1133**

விளங்கும் அழகினை உடையனவான கொடிகள் கட்டப்பட்ட உயரிய

மாடவீடுகளையும் மகளிர் குழாம் நீராடும் குளிர்ந்த பொய்கைகளையும் உடையதும் புலாலுண்ணும் நாரை முதலிய பறவைகளும் அன்னங்களும் விளையாடும் சிறப்பினதுமான கடிக்குளத்தில் மலர்கள் பொருந்திய கூந்தலினளாகிய உமையம்மையோடு கூடிக் கண்ணிமிலைந்து விளங்கும் கற்பகத்தைப் புகழ்ந்து போற்றி ஏத்துவார்மேல் வினைநில்லா.

திருக்கடிக்குளம்

மடுத்த வாளரக் கன்னவன் மலைதன்மேன்
மதியிலா மையிலோடி
எடுத்த லும்முடி தோள்கர நெரிந்திற
விறையவன் விரலூன்றக்
கடுத்து வாயொடு கையெடுத் தலறிடக்
கடிக்குளந் தனின்மேவிக்
கொடுத்த பேரருட் கூத்தனை யேத்துவார்
குணமுடை யவர்தாமே. **#1134**

பகைவரைக் கொல்லும் வாட்படையை உடைய இராவணன் அறிவின்றிக் கயிலைமலையைப் பெயர்த்த அளவில் அவனுடைய முடி தோள் கை ஆகியன நெரிந்து அழியுமாறு சிவபிரான் கால் விரலை ஊன்றிய அளவில், அவன் தன் குற்றத்திற்கு வருந்தி கை கூப்பி அலற, பேரருள் கொடுத்த ஆனந்தக் கூத்தனைக் கடிக்குளத்தை அடைந்து ஏத்துபவர் நல்ல குணமுடையவர் ஆவர்.

திருக்கடிக்குளம்

நீரினார் கடற் றுயின்றவ னயனொடு
நிகழடி முடிகாணார்
பாரி னார்விசும் புறப்பரந் தெழுந்ததோர்
பவளத்தின் படியாகிக்
காரினார் பொழில் சூழ்தரு கடிக்குளத்
துறையுங்கற் பகத்தின்றன்
சீரினார்கழ லேத்தவல் லார்களைத்
தீவினை யடையாவே. **#1135**

நீர் நிறைந்த கடலிடைத் துயிலும் திருமாலும், பிரமனும் அடிமுடி காணாராய் எய்த்தகாலத்து, மண்ணுலகில் அடித்தளம், விசும்பின் எல்லைவரை எழுந்து பவளம் போன்றநிறம் உடையவராய்த் தோன்றி, மேகம்தவழும் பொழில் சூழ்ந்த கடிக்குளத்தில் உறையும் கற்பகத்தின் சிறப்புமிக்க திருவடிகளை ஏத்த வல்லார்களைத் தீவினை அடையா.

திருக்கடிக்குளம்

குண்டர் தம்மொடு சாக்கியர் சமணருங்
குறியினி னெறிநில்லா
மிண்டர் மிண்டுரை கேட்டவை மெய்யெனக்
கொள்ளன்மின் விடமுண்ட
கண்டர் முண்டநன் மேனியர் கடிக்குளத்
துறைதரு மெம்மீசர்
தொண்டர் தொண்டரைத் தொழுதடி பணிமின்கள்
தூநெறி யெளதாமே. **#1136**

குண்டர்களாகிய சாக்கியர் சமணர்கள் ஆகியோர் தாம் கூறும் குறிகளின் நெறிநில்லாமிண்டர்கள். அவர்தம் பொய்யுரைகளைக் கேட்டு அவற்றை மெய்யெனக் கருதாதீர். விடம் உண்டகண்டரும் திரிபுண்டரம் அணிந்த நன்மேனியரும் ஆகிய கடிக்குளத்தில் உறையும் எம் ஈசர்தம் தொண்டர் தொண்டரைத் தொழுது அடிபணிமின் தூய சிவநெறி எளிதாம்.

திருக்கடிக்குளம்

தனமலி புகழ் தயங்குபூந் தராயவர்
மன்னன்நற் சம்பந்தன்
மனமலி புகழ் வண்டமிழ் மாலைகள்
மாலதாய் மகிழ்வோடும்
கனமலி கட லோதம் வந்துலவிய
கடிக்குளத் தமர்வானை
இனம லிந்திசை பாடவல் லார்கள்போ
யிறைவனோ டுறைவாரே. **#1137**

செல்வவளம் மிக்க புகழ் விளங்கும் பூந்தராய் மக்களின் மன்னனாகத்திகழும் ஞானசம்பந்தன் மனநிறைவோடு புகழ்ந்துரைத்த வண்டமிழ் மாலைகள் மீது அன்பு கொண்டு, மகிழ்வோடு, கடல்ஓதம் வந்துலவும் கடிக்குளத்து அமரும் இறைவனை அடியவர்களோடு கூடி அவற்றை இசையோடு பாடவல்லார்கள் போய் இறைவனோடு உறைவார்கள்.

திருக்கீழ்வேளூர்

திருக்கீழ்வேளூர்

திருக்கீழ்வேளூர்,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அட்சயலிங்கநாதர்.
தேவியார் : வனமுலைநாயகியம்மை.

மின்னு லாவிய சடையினர் விடையினர்
மிளிர்தரு மரவோடும்
பன்னு லாவிய மறையொலி நாவினர்
கறையணி கண்டத்தர்
பொன்னு லாவிய கொன்றையந் தாரினர்
புகழ்மிகு கீழ்வேளூர்
உன்னு லாவிய சிந்தையர் மேல்வினை
யோடிட வீடாமே. **#1138**

ன்னலைப்போல ஒளிவிடும் சடையினரும், விடைஊர்தியரும், அரவாபரணரும் இசையமைப்புடைய வேதங்களை ஓதிய நாவினரும், நீலகண்டரும் பொன்போன்ற கொன்றைத் தாரினரும் ஆகிய புகழ்மிக்க கீழ்வேளூர் இறைவரை நினைக்கும் நெஞ்சினர்க்கு வினைகள் நீங்க வீடு கிட்டும்.

திருக்கீழ்வேளூர்

நீரு லாவிய சடையிடை யரவொடு
மதிசிர நிரைமாலை
வாரு லாவிய வனமுலை யவளொடு
மணிசிலம் பவையார்க்க
ஏரு லாவிய விறைவன துறைவிட
மெழில்திகழ் கீழ்வேளூர்
சீரு லாவிய சிந்தைசெய் தணைபவர்
பிணியொடு வினைபோமே. **#1139**

கங்கை சூடிய சடையின்கண், அரவு, மதி, தலைமாலை ஆகியவற்றை அணிந்து, கச்சணிந்த தனங்களை உடைய உமையம்மையோடு கூடி அழகிய சிலம்புகள் ஆர்க்க விளங்கும் இறைவனது உறைவிடம் கீழ்வேளூராகும். இத்தலத்தைச் சிந்திப்பவர்கட்குப் பிணிகளும் வினைகளும் போகும்.

திருக்கீழ்வேளூர்

வெண்ணி லாமிகு விரிசடை யரவொடு
வெள்ளெருக் கலர்மத்தம்
பண்ணி லாவிய பாடலோ டாடலர்
பயில்வுறு கீழ்வேளூர்ப்
பெண்ணி லாவிய பாகனைப் பெருந்திருக்
கோயிலெம் பெருமானை
உண்ணி லாவிநின் றுள்கிய சிந்தையா
ருலகினி லுள்ளாரே. **#1140**

வெள்ளிய நிலவைத்தரும் பிறையை அணிந்த விரிசடையில் அரவு, வெள்ளெருக்க மலர் ஊமத்தை ஆகியவற்றை அணிந்து, இசைப்பாடல்களைப் பாடியும் ஆடியும் மகிழ்வுறும் மக்கள் நிறைந்த கீழ்வேளூர்ப் பெருந்திருக்கோயிலில் விளங்கும் பெண்ணொருபாகனை உள்கும் பயிற்சி உடையார் உலகில் நிலைபெற்றிருப்பர்.

திருக்கீழ்வேளூர்

சேடு லாவிய கங்கையைச் சடையிடைத்
தொங்கவைத் தழகாக
நாடு லாவிய பலிகொளு நாதனார்
நலமிகு கீழ்வேளூர்ப்
பீடு லாவிய பெருமையர் பெருந்திருக்
கோயிலுட் பிரியாது
நீடு லாவிய நிமலனைப் பணிபவர்
நிலைமிகப் பெறுவாரே. **#1141**

பெருமைமிக்க கங்கையை முடியில் சூடி, மிக அழகாக நாடு முழுதும் சென்று பலியேற்கும் நாதரும் நன்மைகள் நிறைந்த கீழ்வேளூர்ப் பெருந்திருக்கோயிலுள் வலிமைமிக்க பெருமையோடு திகழ்பவருமாகிய சிவபிரானை இடைவிடாது வழிபடுவோர் நிலையான பேரின்ப வாழ்வு பெறுவர்.

திருக்கீழ்வேளூர்

துன்று வார்சடைச் சுடர்மதி நகுதலை
வடமணி சிரமாலை
மன்று லாவிய மாதவ ரினிதியன்
மணமிகு கீழ்வேளூர்
நின்று நீடிய பெருந்திருக் கோயிலின்
நிமலனை நினைவோடும்

சென்று லாவிநின் றேத்தவல் லார்வினை
தேய்வது திணமாமே. **#1142**
நெருக்கமாக நீண்டு வளர்ந்த சடையில் திங்கள், பிரம கபாலம், கயிறு, மணிகள், தலைமாலை முதலியவற்றை அணிந்து, மன்றத்தில் மாதவத்தோர் உலாவும் சிறப்புமிக்க கீழ்வேளூர்ப் பெருந்திருக்கோயிலுள் விளங்கும் நிமலனை நினைவோடு சென்று ஏத்த வல்லவரின் வினைகள் தேய்வது திண்ணம்.

<u>திருக்கீழ்வேளூர்</u>

கொத்து லாவிய குழல்திகழ் சடையனைக்
கூத்தனை மகிழ்ந்துள்கித்
தொத்து லாவிய நூலணி மார்பினர்
தொழுதெழு கீழ்வேளூர்ப்
பித்து லாவிய பத்தர்கள் பேணிய
பெருந்திருக் கோயின்மன்னு
முத்து லாவிய வித்தினை யேத்துமின்
முடுகிய விடர்போமே. **#1143**
பூங்கொத்துக்கள் அணிந்துள்ள சடைமுடியனும், கூத்தனும், நூலணிந்த அந்தணர் பக்தர்கள் ஆகியோர் நினைந்துருகி வழிபடும் கீழ்வேளூர்ப் பெருந்திருக்கோயிலில் விளங்குபவனும், முத்துப் போல்பவனும் எல்லாவற்றுக்கும் வித்தாகத் திகழ்பவனும் ஆகிய பெருமானை ஏத்துமின். வலிந்துவரும் இடர்போகும்.

<u>திருக்கீழ்வேளூர்</u>

பிறைநி லாவிய சடையிடைப் பின்னலும்
வன்னியுந் துன்னாரும்
கறைநி லாவிய கண்டரெண் டோளினர்
காதல்செய் கீழ்வேளூர்
மறைநி லாவிய வந்தணர்மலிதரு
பெருந்திருக் கோயின்மன்னு
நிறைநி லாவிய வீசனை நேசத்தால்
நினைபவர் வினைபோமே. **#1144**
பிறையணிந்த சடைமுடியில் கங்கை, வன்னி ஆகியவற்றை அணிந்தவனும், கறைக் கண்டனும், எண்தோளினனும் ஆகிய இறைவன் விரும்புவதும் மறைவல்ல அந்தணர் நிறைந்ததும் ஆகிய கீழ்வேளூர்ப் பெருந்திருக்கோயிலில் குறைவிலா நிறைவினனாய் விளங்கும் ஈசனை அன்போடு நினைபவர் வினைகள் போகும்.

திருக்கீழ்வேளூர்

மலைநி லாவிய மைந்தன்அம் மலையினை
யெடுத்தலு மரக்கன்றன்
தலையெ லாம்நெரிந் தலறிட வூன்றினான்
உறைதரு கீழ்வேளூர்க்
கலைநி லாவிய நாவினர்கா தல்செய்
பெருந்திருக் கோயிலுள்
நிலைநி லாவிய வீசனை நேசத்தா
னினையவல் வினைபோமே. **#1145**

திருக்கயிலாய மலையில் விளங்கும் பெருவீரனும், அம்மலையை எடுத்த இராவணன் தலை நெரிந்து அலறக் கால் விரலை ஊன்றியவனும் ஆகிய சிவபெருமான் உறைவதும், கலைகள் அனைத்தையும் ஓதிய நாவினர் அன்பு செய்வதும் ஆகிய கீழ்வேளூர்ப் பெருந்திருக்கோயிலில் நிலைபெற்று விளங்கும் ஈசனை நினைய வல்வினைபோகும்.

திருக்கீழ்வேளூர்

மஞ்சு லாவிய கடற்கிடந் தவனொடு
மலரவன் காண்பொண்ணாப்
பஞ்சு லாவிய மெல்லடிப் பார்ப்பதி
பாகனைப் பரிவொடும்
செஞ்சொலார்பலர் பரவிய தொல்புகழ்
மல்கிய கீழ்வேளூர்
நஞ்சு லாவிய கண்டனை நணுகுமின்
நடலைகள் நணுகாவே. **#1146**

மேகங்கள் உலாவும் கடலில் துயில்கொள்ளும் திருமாலும், தாமரைமலரில் உறையும் நான்முகனும் காண இயலாதவனும், பஞ்சு போன்ற மென்மையான அடிகளை உடைய பார்வதி பாகனும், செஞ்சொற் புலவோர் பரவும் புகழ்மிக்க கீழ் வேளூரில் விளங்கும் நஞ்சணிந்த கண்டனும் ஆகிய பெருமானைச் சென்றடையுங்கள். துன்பங்கள் நம்மை அடையா.

திருக்கீழ்வேளூர்

சீறு லாவிய தலையினர் நிலையிலா
வமணர்கள் சீவரார்
வீறி லாதவெஞ் சொற்பல விரும்பன்மின்
சுரும்பமர் கீழ்வேளூர்
ஏறு லாவிய கொடியனை யேதமில்

பெருந்திருக் கோயின்மன்னு
பேறு லாவிய பெருமையன் றிருவடி
பேணுமின் தவமாமே. **#1147**

மழித்த தலையினரும், நிலையற்ற சொல் செயல் உடையவரும் துவரூட்டிய ஆடையரும் ஆகிய சமண புத்தர்களின் பெருமையற்ற சொற்களை விரும்பாதீர்; வண்டுகள் ஒலிக்கும் சோலைகள் சூழ்ந்த கீழ்வேளூர்ப் பெருங்கோயிலில் விடைக்கொடியனாய் விளங்குபவனும் அந்தமில்லாத ஆனந்தத்தை அருளும் பெரியவனுமாகிய சிவபெருமான் திருவடிகளை வழிபடுங்கள். அதுவே சிறந்த தவமாகும்.

திருக்கீழ்வேளூர்

குருண்ட வார்குழற் சடையுடைக் குழகனை
யழகமர் கீழ்வேளூர்த்
திரண்ட மாமறை யவர்தொழும் பெருந்திருக்
கோயிலெம் பெருமானை
இருண்ட மேதியி னினமிகு வயன்மல்கு
புகலிமன் சம்பந்தன்
தெருண்ட பாடல்வல் லாரவர் சிவகதி
பெறுவது திடமாமே. **#1148**

கடைசுருண்ட சடையினனும், இளைஞனும் அழகிய கீழ்வேளூர்ப் பெருங்கோயிலில் விளங்குபவனும் ஆகிய பெருமான் மீது கரிய எருமைகள் மிக்கதும், வயல்கள் நிறைந்ததுமாகிய புகலியின்மன்னன் ஞானசம்பந்தன் அருளிய தெளந்த பாடல்களை ஓதுவர் சிவகதி பெறுதல் உறுதி.

திருவலஞ்சுழி

திருவலஞ்சுழி

திருவலஞ்சுழி,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சித்தீசநாதர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
யிருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும்
வழிபடு மதனாலே. #1149 ★★★★★

முழுமையான மணிகளும், முத்துக்களும் நிறைந்த நிலையான காவிரியாறு சூழ்ந்த திருவலஞ்சுழி இறைவனைப் போற்றியும், அன்பு செய்தும், பாடியும் வழிபடும் வாய்ப்புக் கிடைத்திருத்தலால், கடல் சூழ்ந்த இவ்வுலகத்து நாம் செய்த நல்வினைப் பயன்களில், நெஞ்சே! நீ! எத்தகைய புண்ணியத்தைச் செய்துள்ளாய்?

திருவலஞ்சுழி

விண்டொ ழிந்தன நம்முடை வல்வினை
விரிகடல் வருநஞ்சம்
உண்டி றைஞ்சுவா னவர்தமைத் தாங்கிய
விறைவனை யுலகத்தில்
வண்டு வாழ்குழன் மங்கையொர் பங்கனை
வலஞ்சுழி யிடமாகக்
கொண்ட நாதன்மெய்த் தொழில்புரி தொண்டரோ
டினிதிருந் தமையாலே. #1150

கடலிடைத்தோன்றிய நஞ்சை உண்டு அமரர்களைக் காத்தருளிய இறைவனை, உமைகேள்வனை, இவ்வுலகில் வலஞ்சுழியை இடமாகக் கொண்டு விளங்கும் இறைவனை வணங்கி அவ்விறைவனின் உண்மைத் தொண்டு புரியும் தொண்டர்களோடு கூடி உறையும் பேறு பெற்றதால் நிச்சயம் நம் வினைகள் விண்டொழிந்தனவாகும்.

திருவலஞ்சுழி

திருந்த லார்புரந் தீயெழச் செறுவன
விறலின்கண் அடியாரைப்
பரிந்து காப்பன பத்தியில் வருவன
மத்தமாம் பிணிநோய்க்கு
மருந்து மாவன மந்திர மாவன
வலஞ்சுழி யிடமாக
இருந்த நாயக னிமையவ ரேத்திய
விணையடித் தலந்தானே. **#1151**

திருவலஞ்சுழியை இடமாகக் கொண்டு எழுந்தருளியுள்ளவனும், இமையவர் ஏத்தும் பெருமையாளனும் ஆகிய பெருமான் திருவடிகள் பகைவரான அசுரர்களின் முப்புரங்களைத் தீஎழச் செய்து அழித்தன. அடியவர்களை அன்புடன் காப்பன. பக்தி செய்வார்க்குக் காட்சி தருவன. உன்மத்தம் முதலான நோய்களுக்கு மருந்தும் மந்திரமும் ஆவன.

திருவலஞ்சுழி

கறைகொள் கண்டத்தர் காய்கதிர் நிறத்தினர்
அறத்திற முனிவர்க்கன்
றிறைவ ராலிடை நீழலி லிருந்துகந்
தினிதருள் பெருமானார்
மறைக ளோதுவர் வருபுனல் வலஞ்சுழி
யிடமகிழ்ந் தருங்கானத்
தறைக ழல்சிலம் பார்க்கநின் றாடிய
வற்புத மறியோமே. **#1152**

நீலகண்டரும், செம்மேனியரும் அன்று ஆலின் கீழ் இருந்து நால்வர்க்கு அறம் உபதேசித்தவரும் வேதங்களை அருளியவரும் ஆகிய இறைவர் திருவலஞ்சுழியை இடமாகக் கொண்டு சிலம்பு ஆர்க்க நின்று ஆடும் அற்புதத்தையாம் இன்னதென அறியேம்.

திருவலஞ்சுழி

மண்ணர் நீரர்விண் காற்றின ராற்றலா
மெரியுரு வொருபாகம்
பெண்ண ராணெனத் தெரிவரும் வடிவினர்
பெருங்கடற் பவளம்போல்
வண்ண ராகிலும் வலஞ்சுழி பிரிகிலார்
பரிபவர் மனம்புக்க

எண்ண ராகிலு மெனைப்பல வியம்புவ
ரிணையடி தொழுவாரே. **#1153**

சிவபிரான் மண், விண் முதலான ஐம்பூதங்களின் வடிவினராயிருப்பவர். பெண்ணும், ஆணும் கலந்த திருவுருவினர். கடற் பவளம்போலும் திருமேனியர். வலஞ்சுழியில் நீங்காது உறைபவர். தம்மை வழிபடும் அடியவர்களின் மனத்தில் புகுந்து எண்ணத்தில் நிறைபவர் அவர்தம் இணையடி தொழபவர் இவ்வாறானபல பெருமைகளை இயம்புவர்.

திருவலஞ்சுழி

ஒருவ ராலுவ மிப்பதை யரியதோர்
மேனியர் மடமாதர்
இருவ ராதரிப் பார்பல பூதமும்
பேய்களு மடையாளம்
அருவ ராததோர் வெண்டலை கைப்பிடித்
தகந்தொறும் பலிக்கென்று
வருவ ரேலவர் வலஞ்சுழி யடிகளே
வரிவளை கவர்ந்தாரே. **#1154**

அகப்பொருட்டுறை; தலைவி கூற்று. ஒருவராலும் உவமிக்க ஒண்ணாததொரு திருமேனியர். உமை, கங்கை இருவர் பால் அன்பு செய்பவர். பூதங்களும் பேய்களும் பாடி ஆட வெண்டலையைக் கையில் ஏந்தி வீடுகள் தோறும் பலி ஏற்க வருபவர். வலஞ்சுழியில் வாழும் அவரே என் வரிவளைகளைக்கவர்ந்தவர்.

திருவலஞ்சுழி

குன்றி யூர்குட மூக்கிடம் வலம்புரங்
குலவிய நெய்த்தானம்
என்றிவ் வூர்களி லோமென்று மியம்புவ
ரிமையவர் பணிகேட்பார்
அன்றி யூர்தமக் குள்ளன வறிகிலோம்
வலஞ்சுழி யரனார்பால்
சென்ற வூர்தனிற் றலைப்பட லாமென்று
சேயிழை தளர்வாமே. **#1155**

அகப்பொருட்டுறை; தோழி கூற்று. குன்றியூர் குடமூக்கு முதலிய தலங்களைத் தமது ஊர் எனச்சொல் வருபவர். இமையவர் அவர்தம் ஏவலைக் கேட்கின்றனர். மேற்குறித்த ஊர்களைத் தவிர அவர் வாழும் ஊர் யாதென அறிகிலோம். பல ஊர் களுக்கும் உரிய அவரைத் திருவலஞ்சுழி சென்றால் சேரலாம் என்று கூறித் தலைவி தளர்கின்றாள்.

திருவலஞ்சுழி

குயிலி னேர்மொழிக் கொடியிடை வெருவுறக்
குலவரைப் பரப்பாய
கயிலை யைப்பிடித் தெடுத்தவன் கதிர்முடி
தோளிரு பதுமூன்றி
மயிலி னேரன சாயலோ டமர்ந்தவன்
வலஞ்சுழி யெம்மானைப்
பயில வல்லவர் பரகதி காண்பவர்
அல்லவர் காணாரே. **#1156**

குயில் மொழியும் கொடியிடையும், மயிலின் சாயலும் உடைய உமை வெருவக் கயிலைமலையைப் பெயர்த்த இராவணனின் இருபது தோள்களையும் ஊன்றி அடர்த்து அம்மையோடு உடனுறையும் வலஞ்சுழி எம்மானைப் பாடிப் பழக வல்லவர் பரகதி பெறுவர். அல்லவர் காணார்.

திருவலஞ்சுழி

அழல தோம்பிய வலர்மிசை யண்ணலு
மரவணைத் துயின்றானும்
கழலுஞ் சென்னியுங் காண்பரி தாயவர்
மாண்பமர் தடக்கையில்
மழலை வீணையர் மகிழ்திரு வலஞ்சுழி
வலங்கொடு பாதத்தால்
சுழலு மாந்தர்கள் தொல்வினை யதனொடு
துன்பங்கள் களைவாரே. **#1157**

நான்முகனும், திருமாலும் திருமுடியையும், திருவடிகளையும் காண இயலாதவாறு சோதிப்பிழம்பாய் நின்றவர் சிவபெருமான். மழலைபோல இனிய இசைதரும் வீணையைக் கையில் ஏந்தியவர். அவர் எழுந்தருளிய திருவலஞ்சுழியை அடைவார் தொல்வினைகளும் துன்பங்களும் நீங்கப்பெறுவர்.

திருவலஞ்சுழி

அறிவி லாதவன் சமணர்கள் சாக்கியர்
தவம்புரிந் தவஞ்செய்வார்
நெறிய லாதன கூறுவர் மற்றவை
தேறன்மின் மாறாநீர்
மறியு லாந்திரைக் காவிரி வலஞ்சுழி
மருவிய பெருமானைப்

பிறிவி லாதவர் பெறுகதி பேசிடி
லளவறுப் பொண்ணாதே. **#1158**
அறிவில்லாத சமணரும் சாக்கியரும் தவம் புரிந்து கொண்டே அவம்பல செய்கின்றனர். அவர் கூறும் நெறியலா உரைகளைக் கேளாதீர். வலஞ்சுழி இறைவனைப் பிரியாத அடியவர் பெறும் கதிகளைப் பேசினால் வரும் பயன்கள் அளத்தற்கு அரியனவாகும்.

<u>திருவலஞ்சுழி</u>

மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய
மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம் பந்தன்வாய்
நவிற்றிய தமிழ்மாலை
ஆத ரித்திசை கற்றுவல் லார்சொலக்
கேட்டுகந் தவர்தம்மை
வாதி யாவினை மறுமைக்கும் இம்மைக்கும்
வருத்தம்வந் தடையாவே. **#1159**
மாதொருகூறனை, திருவலஞ்சுழியில் விளங்கும் மருந்து போல்வானை, காழி ஞானசம்பந்தன் பாடி ஏத்திய இத்திருப்பதிகத்தை அன்போடு இசைகூட்டிப் பாடுவார். அதனைக் கேட்பார் ஆகிய அடியவர்களை வினைகள் சாரா. இம்மை, மறுமை எப்போதும் வருத்தம் வந்து அவர்களை அணுகா.

திருக்கேதீச்சரம்

திருக்கேதீச்சரம்,
பண் - நட்டராகம்,
இத்தலம் ஈழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கேதீச்சுவரர்.
தேவியார் : கௌரிநாயகியம்மை.

விருது குன்றமா மேருவில் நாணர
வாஅனல் எரிஅம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே. **#1160**

வெற்றிக்கு அடையாளமாக, பெரிய மேருமலையை வில்லாகக் கொண்டு அரவை நாணாகப்பூட்டி அனல் எரியை அம்பாகக் கொண்டு பொருது முப்புரங்களை எரித்த சிவபிரான் பற்றிநின்று உறையும் பதியாக அடியவர் எந்நாளும் கருதுகின்ற ஊர், ஆரவாரிக்கின்ற கடலால் சூழப்பட்ட, மணம் கமழும் பொழில்கள் அணிசெய்யும் மாதோட்டத்தில் பலரும் கருதி வழிபாடு செய்யாநின்ற திருக்கேதீச்சரமாகும். அதனைக் கைதொழின் கடுவினைகள் நம்மை அடையா.

திருக்கேதீச்சரம்

பாடல் வீணையர் பலபல சரிதையர்
எருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது விருங்கடற் கரையினில்
எழில்திகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே. **#1161**

வீணையை மீட்டிக்கொண்டு பாடுபவர். பற்பலவான புராண வரலாறுகளைக் கொண்டவர். எருது உகைத்து அரிய நடனங்களாகிய ஆடல்களைப் புரிபவர். அமரர் வேண்ட நஞ்சினை உண்டு இருண்ட கண்டத்தினை உடையவர். அவருக்குரிய இடம், கரிய கடற்கரையில்

உள்ள அழகிய மாதோட்டம் என்னும் ஊரின்கண் விளங்கும் கேடில்லாத கேதீச்சரம் ஆகும். அதனைத் தொழ இடர்வினைகெடும்.

திருக்கேதீச்சரம்

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையினர்
அறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவர்
அகந்தொறும் இடுபிச்சைக்
குண்ண லாவதோர் இச்சையி னுழல்பவர்
உயர்தரு மாதோட்டத்
தண்ணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க்
கருவினை யடையாவே. **#1162**

உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டவர். பிறை தவழ் சடையின. திருநீற்றை விரும்பிப்பூசி. கழலும் சிலம்பும் ஆர்க்க ஆடுபவர். பாடுபவர், உண்ணும் இச்சை உடையவர் போல வீடுகள்தோறும் இடும் பிச்சைக்கு உழல்பவர். அவ்விறைவர் எழுந்தருளிய உயரிய மாதோட்டத்தில் விளங்கும் கேதீச்சரத்தை அடைபவரை இருவினைகள் அடையா.

திருக்கேதீச்சரம்

பொடிகொள் மேனியர் புலியத ளரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடல் மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம்
பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல்
மொய்த்தெழும் வினைபோமே. **#1163**

திருநீறணிந்த திருமேனியர். புலித்தோலை உடுத்தவர். விரிந்த கையினில் ஏந்திய கூரிய முத்தலைச்சூலத்தை உடையவர். முப்புரி நூல் அணிந்தவர். மறித்துவரும் அலைகளைக் கொண்ட கடல் சூழ்ந்த மாதோட்ட நகரில் எழுந்தருளி விளங்கும் அடிகள். அவர் விரும்பி எழுந்தருளிய கேதீச்சரத்தை அன்புகொண்ட மனத்தராய் வணங்கும் அடியவர்மேல் பற்றித் திரண்டு வரும் வினைகள் நீங்கிப்போகும்.

திருக்கேதீச்சரம்

நல்ல ராற்றவும் ஞானநன் குடையர் தம்
மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்

மலிகடல் மாதோட்டத்
தெல்லை யில்புக ழெந்தைகே தீச்சரம்
இராப்பகல் நினைந்தேத்தி
அல்லல் ஆசறுத் தரனடி யிணைதொழும்
அன்பராம் அடியாரே. **#1164**

மிகவும் நல்லவர். ஞானம் நன்கு உடையவர். தம்மை அடைந்தவர்கட்கு அருளிய வல்லவர். மண்ணுலகிலும் விண்ணுலகிலும் பிறத்தல் இறத்தல் இல்லாதவர. நீர் நிறைந்த கடலால் சூழப்பட்ட மாதோட்டத்து எல்லையில்லாத புகழை உடைய எந்தையாகிய அவரது கேதீச்சரத்தை இரவும் பகலும் நினைந்து போற்றித் துன்பம் குற்றம் அற்றவர்களாய் அவ் அரனடியினை தொழும் அன்புடையவரே அடியவர் ஆவர்.

திருக்கேதீச்சரம்

பேழை வார்சடைப் பெருந்திரு மகள்தனைப்
பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபா லருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழின் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீள் மார்பர்கே
தீச்சரம் பிரியாரே. **#1165**

பெருமை பொருந்திய நீண்ட சடையின்கண் பெருந்திருவினளாகிய கங்கையை மறைத்து வைத்து, தம் திருமேனியின் ஒரு பாகமாகிய அழகிய கயல் போலும் கண்ணினள் ஆகிய உமையம்மைபால் கருணை காட்டும் இயல்பினராகிய இறைவர் வாழைத் தோட்டங்களில் பழுத்த பழங்களை உண்ண மந்திகள் களிப்புற்று மருவிய மாதோட்டத்தில், பன்றியின் வெண்மையான கொம்பினை அணிந்துள்ள அகன்ற மார்பினராய்க் குடி கொண்டு வாழும் இடமாகக் கொண்டு கேதீச்சரத்தில் பிரியாது உறைகின்றார்.

திருக்கேதீச்சரம்

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல்
லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய்கே

தீச்சர மதுதானே. #1166
முற்காலத்தில் நால்வர்க்கு அறம் உரைத்தருளிப் பல உலகங்களிலும் பிறந்துள்ள உயிர்களின் வாழ்க்கைக்குரிய ஊழை அமைத்தருளிய நாதனார், கடல் சூழ்ந்த இவ்வுலகிலுள்ளோர் கண்டு கைதொழுமாறு விரும்பி உறையும் கோயில், வண்டுகள் பண்ணிசைக்கும், சிறந்த மலர்கள் நிறைந்த பொழில்களில் மயில்கள் நடனமாடும் மாதோட்டத்தின்கண் தொண்டர்கள் நாள்தோறும் துதிக்க அருள் புரியும் கேதீச்சரமாகும்.

திருக்கேதீச்சரம்

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடிதிண்தோள்
தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்செய்த
தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடு அடியவ ரிறைஞ்சுகே
தீச்சரத் துள்ளாரே. #1167
தென்னிலங்கை மன்னனாகிய இராவணன் கயிலைமலையை நெருக்கி எடுத்தபோது அவன்முடி, தோள் ஆகியன அழகிழக்குமாறு அடர்த்துப் பின் அவனது பாடல்கேட்டு அருள்செய்த தலைவனார், பொன், முத்து, மாணிக்கம், மணிகள் நிறைந்த மாதோட்ட நன்னகரை அடைந்து அன்பர்கள் இறைஞ்சி வழிபடும் கேதீச்சரத்து உள்ளார்.

திருக்கேதீச்சரம்

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும்
புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் அடியிணை காண்கிலா
வித்தக மென்னாகும்
மாவும் பூகமுங் கதலியும் நெருங்குமா
தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத்
திருந்தஎம் பெருமானே. #1168
மா, கமுகு, வாழை ஆகியன செறிந்த மாதோட்ட நன்னகரில் நிலையாக, தேவியோடும் அழகிய கேதீச்சரத்து விளங்கும் எம்பெருமானே! தாமரை மலரில் உறையும் நான்முகனும், கடல் வண்ணனாகிய திருமாலும் நிலத்தை அகழ்ந்து சென்றும் வானில் பறந்து ஓடியும் உன் திருவடி இணைகளைக் காணாதவாறு உயர்ந்து நின்ற உன் திறமை யாதோ?

இஃது எதிர் நிரல் நிறை.

திருக்கேதீச்சரம்

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர்
புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய
ஏழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட வுரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே
தீச்சரம் அடைமின்னே. **#1169**

புனையப்பட்ட துகிலை உடையவராய்ப் புறம் பேசும் புத்தர்களாகிய அறிவிலாரும், ஏமாற்றும் இயல்பினராய் நின்றுண்ணும் மரபினர்களாகிய சமணரும், கூறும் அறியாமை உரைகளைக் கேளாதீர். மதம் பொருந்திய யானையை அஞ்சுமாறு செய்து அதன் தோலை உரித்துப் போர்த்தவர் ஆகிய, மாதோட்டத்துள் பாலாஒவியின் கரைமேல் விளங்கும் கேதீச்சரத்து அத்தரை அடையுங்கள்.

திருக்கேதீச்சரம்

மாடெ லாமண முரசெனக் கடலின
தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை யண்ணல் கேதீச்சரத்
தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொல்
நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின்ப த்தர்கள்
பரகதி பெறலாமே. **#1170**

அருகிலெல்லாம் மணமுரசு ஒலிப்பதுபோலக் கடல் ஒலி நிரம்பப் பெற்றமாதோட்டத்தில், வலிய ஏற்றினை உடைய தலைவராகிய கேதீச்சரத்துப் பெருமானை அழகிய காழி நாட்டினர்க்குத் தலைவனாகிய ஞானசம்பந்தன் சொல் நவின்றதால் தோன்றிய இப்பாமாலையைப் பக்தர்களே! பாடி வழிபடுமின். பரகதி பெறலாம்.

திருவிற்குடிவீரட்டானம்

திருவிற்குடிவீரட்டானம்

திருவிற்குடிவீரட்டானம்,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : மைவார்குழலியம்மை.

வடிகொள் மேனியர் வானமா மதியினர்
நதியினர் மதுவார்ந்த
கடிகொள் கொன்றையஞ் சடையினர் கொடியினர்
உடைபுலி யதளார்ப்பர்
விடைய தேறும்எம் மானமர்ந் தினிதுறை
விற்குடி வீரட்டம்
அடிய ராகிநின் றேத்தவல் லார்தமை
அருவினை யடையாவே. **#1171**

தௌவான திருமேனியினரும், வானத்துப்பிறை மதியைச் சூடியருவம், கங்கையை அணிந்தவரும் தேன் நிறைந்த மணமுடைய கொன்றை மலரைச் சூடிய சடையினரும், கொடிபோன்ற உமையம்மை மணாளரும் புலித்தோலை உடுத்தவரும் ஆகிய விடை ஏறும் எம்பெருமான் இனிதாக அமர்ந்துறையும் விற்குடி வீரட்டத்தை அடியவராய் நின்று ஏத்தவல்லார்களை அரியவினைகள் அடையா.

திருவிற்குடிவீரட்டானம்

களங்கொள் கொன்றையுங் கதிர்விரி மதியமுங்
கடிகமழ் சடைக்கேற்றி
உளங்கொள் பத்தர்பால் அருளிய பெருமையர்
பொருகரி யுரிபோர்த்து
விளங்கு மேனியர் எம்பெரு மானுறை
விற்குடி வீரட்டம்
வளங்கொள் மாமல ரால்நினைந் தேத்துவார்
வருத்தம தறியாரே. **#1172**

களர் நிலத்துப்பூக்கும் கொன்றை மலரையும், கதிர்விரியும் மதியத்தையும், மணம் கமழும் சடையில் ஏற்றி, மனம் பொருந்த வழிபடும் அன்பர்கட்கு அருள் செய்துவரும் பெருமையரும், யானையை உரித்து அதன் தோலைப் போர்த்து விளங்கும் திருமேனியை உடையவரும் ஆகிய எம்பெருமானார் உறையும் விற்குடி வீரட்டத்தைச்

செழுமையான மலர்களைக் கொண்டு தூவி நினைந்து ஏத்துவார் வருத்தம் அறியார்.

திருவிற்குடிவீரட்டானம்

கரிய கண்டத்தர் வெளியவெண் பொடியணி
மார்பினர் வலங்கையில்
எரியர் புன்சடை யிடம்பெறக் காட்டகத்
தாடிய வேடத்தர்
விரியும் மாமலர்ப் பொய்கைசூழ் மதுமலி
விற்குடி வீரட்டம்
பிரிவி லாதவர் பெருந்தவத் தோரெனப்
பேணுவ ருலகத்தே. **#1173**

கரிய கண்டத்தினரும், வெண்மையான திருநீற்றை அணிந்த மார்பினரும், வலக்கையில் எரியேந்தியவரும், மெல்லிய சடைகள் நிலத்தில் புரளச் சுடுகாட்டகத்தே ஆடிய கோலத்தினரும், ஆகிய சிவபிரான் உறையும் மலர்ப்பொய்கைசூழ்ந்த விற்குடி வீரட்டத்தைப் பிரியாது தொழுபவரைப் பெருந்தவத்தோர் என உலகில் பேணுவர்.

திருவிற்குடிவீரட்டானம்

பூதஞ் சேர்ந்திசை பாடலர் ஆடலர்
பொலிதர நலமார்ந்த
பாதஞ் சேரிணைச் சிலம்பினர் கலம்பெறு
கடலெழு விடமுண்டார்
வேதம் ஓதிய நாவுடை யானிடம்
விற்குடி வீரட்டம்
சேரு நெஞ்சினர்க் கல்லதுண் டோபிணி
தீவினை கெடுமாறே. **#1174**

பூதகணங்களோடு சேர்ந்து பாடுபவர், ஆடுபவர், அழகுபொலிந்த திருவடிகளைச் சேர்ந்த சிலம்புகளை அணிந்தவர். மரக்கலங்கள் உலாவும் கடலிடையே தோன்றிய விடத்தை உண்டவர். வேதம் ஓதும் நாவினர். அப்பெருமானுக்குரிய இடமாக விளங்கும் விற்குடி வீரட்டத்தைச் சேரும் நெஞ்சினர்க் கன்றிப் பிறருக்குத் தீவினை, பிணி கெடும் வழி உண்டோ?

திருவிற்குடிவீரட்டானம்

கடிய ஏற்றினர் கனலன மேனியர்
அனலெழ வூர்மூன்றும்
இடிய மால்வரை கால்வளைத் தான்றன

தடியவர் மேலுள்ள
வெடிய வல்வினை வீட்டுவிப் பானுறை
விற்குடி வீரட்டம்
படிய தாகவே பரவுமின் பரவினாற்
பற்றறும் அருநோயே. **#1175**

விரைந்து செல்லும் விடைஏற்றை உடையவர். கனல்போன்ற மேனியர். திரிபுரங்களில் அனல் எழுமாறு பெரிய மேருமலையைக் கால் ஊன்றி வளைத்தவர். தம் அடியவர் மேலுள்ள தீய வல்வினைகளைப் போக்குபவர். அவரது உறைவிடமாகிய விற்குடி வீரட்டத்தைப் பண்போடு பரவுமின், பரவினால் அரிய நோய்கள் பற்றறும்.

திருவிற்குடிவீரட்டானம்

பெண்ணொர் கூறினர் பெருமையர் சிறுமறிக்
கையினர் மெய்யார்ந்த
அண்ண லன்புசெய் வாரவர்க் கெளயவர்
அரியவர் அல்லார்க்கு
விண்ணி லார்பொழின் மல்கிய மலர்விரி
விற்குடி வீரட்டம்
எண்ணி லாவிய சிந்தையி னார்தமக்
கிடர்கள்வந் தடையாவே. **#1176**

மாதொருபாகத்தர். பெருமை உடையவர். சிறியமான் கன்றை ஏந்திய கையினர். உண்மையான தலைவர். அன்பு செய்பவர்க்கு எளியவர். அல்லாதவர்க்கு அரியவர். அவர் உறையும் இடமாகிய, விண்ணுறஓங்கிய மலர்மல்கிய பொழில்கள் சூழ்ந்த விற்குடி வீரட்டத்தை எண்ணிய சிந்தையர்க்கு இடர்கள் வந்தடையா.

திருவிற்குடிவீரட்டானம்

இடங்கொள் மாகடல் இலங்கையர் கோன்தனை
யிகலழி தரவூன்று
திடங்கொள் மால்வரை யானுரை யார்தரு
பொருளினன் இருளார்ந்த
விடங்கொள் மாமிட றுடையவ னுறைபதி
விற்குடி வீரட்டம்
தொடங்கு மாறிசை பாடிநின் றார்தமைத்
துன்பநோ யடையாவே. **#1177**

இடமகன்ற பெரிய கடலால் சூழப்பட்ட இலங்கையர் மன்னனை அவனது பகைமை அழியுமாறு ஊன்றிய திடமான பெரிய கயிலாய மலைக்கு உரியவர். சொற்களின் பொருளாய் விளங்குபவர். இருளார்ந்த

விடமுண்ட கண்டத்தர். அவர் உறையும் பதியாகிய விற்குடி வீரட்டத்தை எண்ணும் வகையில் இசைபாடி நிற்பவர்களைத் துன்பம் நோய்கள் அடையா.

திருவிற்குடிவீரட்டானம்

செங்கண் மாலொடு நான்முகன் தேடியுந்
திருவ டியறியாமை
எங்கு மாரெரி யாகிய இறைவனை
யறைபுனன் முடியார்ந்த
வெங்கண் மால்வரைக் கரியுரித் துகந்தவன்
விற்குடி வீரட்டம்
தங்கை யால்தொழு தேத்தவல் லாரவர்
தவமல்கு குணத்தாரே. **#1178**

திருமாலும் நான்முகனும் தேடியும் திருவடி மற்றும் திருமுடியைக்காண இயலாதவாறு எரியுருவாக நின்ற இறைவனை, கங்கை சூடிய முடியோடு, சினம் மிக்க யானையின் தோலினை உரித்துப் போர்த்து உகந்தவனை, விற்குடி வீரட்டத்துள் கண்டு தம்கையால் தொழுது ஏத்த வல்லவர்கள் தவம் மல்கு குணத்தோர் ஆவர்.

திருவிற்குடிவீரட்டானம்

பிண்ட முண்டுழல் வார்களும் பிரிதுவ
ராடைய ரவர்வார்த்தை
பண்டு மின்றுமோர் பொருளெனக் கருதன்மின்
பரிவுறு வீர்கேண்மின்
விண்ட மாமலர்ச் சடையவ னிடமெனில்
விற்குடி வீரட்டம்
கண்டு கொண்டடி காதல்செய் வாரவர்
கருத்துறுங் குணத்தாரே. **#1179**

அன்புடையவர்களே! கேளுங்கள்: சோற்றுத்திரளை உண்டு திரியும் சமணர்களையும் துவர் ஆடை உடுத்த புத்தர்களையும், பண்டும் இன்றும் ஒருபொருள் எனக்கருதாதீர். விரிந்த மலர்களைச் சூடிய சடைகளை உடைய சிவபிரான் உறையும் இடம் எது எனில் விற்குடி வீரட்டமாகும். அதனைக்கண்டு காதல் செய்வார் கருதத்தக்க குணமுடையோர் ஆவர்.

திருவிற்குடிவீரட்டானம்

விலங்க லேசிலை யிடமென வுடையவன்
விற்குடி வீரட்டத்
திலங்கு சோதியை யெம்பெரு மான்றனை

எழில்திகழ் கழல்பேணி
நலங்கொள் வார்பொழிற் காழியுள் ஞானசம்
பந்தனற் றமிழ்மாலை
வலங்கொ டேயிசை மொழியுமின் மொழிந்தக்கால்
மற்றது வரமாமே. **#1180**

மேருமலையேவில். கயிலாய மலையே தங்குமிடம் எனக்கொண்ட விற்குடி வீரட்டத்தில் விளங்கும் சோதியை, எம்பெருமானை, அவனது அழகிய திருவடிகளை விரும்பி அழகிய சோலைகள் சூழ்ந்த காழிப்பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன் அருளிய நற்றமிழ் மாலையை உறுதியாகப் பற்றி இசையோடு மொழியுங்கள், மொழிந்தால் அதுவே நன்மைகளைத் தரும்.

திருக்கோட்டூர்

திருக்கோட்டூர்

திருக்கோட்டூர்,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கொழுந்தீசுவரர்.
தேவியார் : தேன்மொழிப்பாவையம்மை.

நீல மார்தரு கண்டனே நெற்றியோர்
கண்ணனே யொற்றைவிடைச்
சூல மார் தரு கையனே துன்றுபைம்
பொழில்கள் சூழ்ந்தழகாய
கோல மாமலர் மணங்கமழ் கோட்டூர்நற்
கொழுந்தேயென் றெழுவார்கள்
சால நீடல மதனிடைப் புகழ்மிகத்
தாங்குவர் பாங்காவே. **#1181**

நீலகண்டனே, நெற்றிக்கண்ணனே, ஒற்றைவிடை மீது ஏறி வருபவனே, முத்தலைச்சூலம் ஏந்திய கையனே, செறிந்த பொழில்களால் சூழப்பட்டதும் அழகிய மலர்களின் மணம் கமழ்வதுமாகிய கோட்டூரில் விளங்கும் கொழுந்தே என்றுகூறி அவனை வணங்க எழுபவர் மிகப்பெரிதாய சிவலோகத்தில் பெருமானுக்கு அருகில் புகழ் பெறத் தங்குவர்.

திருக்கோட்டூர்

பங்க யம்மலர்ச் சீறடிப் பஞ்சுறு
மெல்விர லரவல்குல்
மங்கை மார்பலர் மயில்குயில் கிளியென
மிழற்றிய மொழியார்மென்
கொங்கை யார்குழாங் குணலைசெய் கோட்டூர்நற்
கொழுந்தேயென் றெழுவார்கள்
சங்கை யொன்றில ராகிச்சங் கரன்திரு
அருள்பெறல் எளிதாமே. **#1182**

தாமரைமலர் போன்ற அழகிய சிறியகால்களையும் பஞ்சுபோன்ற மென்மையான விரல்களையும், அரவு போன்ற அல்குலையும் உடையவரும். மயில் குயில் கிளி போன்ற மொழியினரும், மென்மையான தனங்களையுடையாருமாகிய மங்கையர் குணலைக்கூத்து ஆடிமகிழும் கோட்டூரில் விளங்கும் நற்கொழுந்தே

என்று கூறிச் சங்கரனை வணங்க எழுவார் ஐயமின்றி அவன் திருவருளைப் பெறுவர்.

திருக்கோட்டூர்

நம்ப னார்நல மலர்கொடு தொழுதெழும்
அடியவர் தமக்கெல்லாம்
செம்பொ னார்தரும் எழில்திகழ் முலையவர்
செல்வமல் கியநல்ல
கொம்ப னார்தொழு தாடிய கோட்டூர்நற்
கொழுந்தே யென்றெழுவார்கள்
அம்பொ னார்தரு முலகினில் அமரரோ
டமர்ந்தினி திருப்பாரே. **#1183**

நல்ல மலர்களைக்கொண்டு தொழுது எழும் அடியவர்கட்கு நம்பனாரும், செம்பொன்போன்ற மேனியையும் அழகிய நகில்களையும் உடைய பூங்கொம்பு போன்ற மகளிர் ஆடிப் பாடித் தொழுபவரும், செம்மைமல்கிய கோட்டூரில் விளங்குபவரு மாகிய இறைவரைக் கொழுந்தீசரே என்று வணங்கிட எழுவார் பொன்னுலகில் தேவரோடும் இனிதிருப்பர்.

திருக்கோட்டூர்

பலவு நீள்பொழில் தீங்கனி தேன்பலா
மாங்கனி பயில்வாய
கலவ மஞ்ஞைகள் நிலவுசொற் கிள்ளைகள்
அன்னஞ்சேர்ந் தழகாய
குலவும் நீள்வயற் கயலுகள் கோட்டூர்நற்
கொழுந்தே யென்றெழுவார்கள்
நிலவு செல்வத்த ராகிநீள் நிலத்திடை
நீடிய புகழாரே. **#1184**

அடியாவர் தமக்கு எல்லாம் நம்பனார் பொன்னுலகில் தேவரோடும் குனிதிருப்பர் பாலச்சுளை, மாங்கனி முதலிய தீங்கனிகளையும் தேனையும் உண்ட தோகைமயில்களும் கிளிகளும் அன்னங்களும் விளையாடும் மரஞ்செடி கொடிகள் பலவும் நிறைந்த பொழில்களையும், கயல்கள் உகளும் அழகிய வயல்களையும் உடைய கோட்டூரில் விளங்கும் நற்கொழுந்தே என்று போற்றியவர் அழியாத செல்வமுடையவராய் இவ்வுலகில் புகழோடு வாழ்வர்.

திருக்கோட்டூர்

உருகு வாருள்ளத் தொண்சுடர் தனக்கென்றும்

அன்பராம் அடியார்கள்
பருகும் ஆரமு தெனநின்று பரிவொடு
பத்திசெய் தெத்திசையும்
குருகு வாழ்வயல் சூழ்தரு கோட்டூர்நற்
கொழுந்தேயென் றெழுவார்கள்
அருகு சேர்தரு வினைகளும் அகலும்போய்
அவனருள் பெறலாமே. **#1185**

உள்ளம் உருகுவார்க்கு ஒண்சுடராகவும், என்றும் தன்மேல் அன்புடையடியார்க்கு ஆரமுதாகவும் விளங்குபவனே என்றும் கூறிப் பரிவும் பக்தியும் செய்து, குருகுகள் வாழும் கோட்டூர் நற்கொழுந்தே என்று விளித்து வழிபடப்புகும் அடியவர்களின் வினைகள் நீங்கும். அவனது திருவருளைப் பெறலாம்.

<u>திருக்கோட்டூர்</u>

துன்று வார்சடைத் தூமதி மத்தமுந்
துன்னெருக் கார்வன்னி
பொன்றி னார்தலைக் கலனொடு பரிகலம்
புலியுரி யுடையாடை
கொன்றை பொன்னென மலர்தரு கோட்டூர்நற்
கொழுந்தே யென்றெழுவாரை
என்று மேத்துவார்க் கிடரிலை கேடிலை
ஏதம்வந் தடையாவே. **#1186**

நெருங்கி நீண்டு வளர்ந்த சடைமுடியில் பிறைமதி, ஊமத்தை, வெள்எருக்கமலர், வன்னியிலை, ஆகியவற்றைச் சூடியும், தலைமாலைகளை மேனியில் அணிந்தும், கையில் கபாலத்தை உண்கலனாக ஏந்தியும், புலித்தோலை இடையில் உடுத்தும், கொன்றை மரங்கள் பொன்போல மலரும் கோட்டூரில் எழுந்தருளி விளங்கும் கொழுந்தீசரின் திருப்பெயரை விளித்து அவரை வழிபட எழும் அடியவரை என்றும் வழிபடுவார்க்கு இடம், கேடும் ஏதமும் இல்லை.

<u>திருக்கோட்டூர்</u>

மாட மாளிகை கோபுரங் கூடங்கண்
மணியரங் கணிசாலை
பாடு சூழ்மதிற் பைம்பொன்செய் மண்டபம்
பரிசொடு பயில்வாய
கூடு பூம்பொழில் சூழ்தரு கோட்டூர்நற்
கொழுந்தேயென் றெழுவார்கள்
கேட தொன்றில ராகிநல் லுலகினிற்

கெழுவுவர் புகழாலே. **#1187**
மாடமாளிகை, கூடகோபுரம், மணிஅரங்கம், அழகியசாலை, புகழ்தற்குரியமதில், பொன் மண்டபம் ஆகியவற்றோடு, அழகிய பொழில்கள் சூழ்ந்த கோட்டூரில் விளங்கும் நற்கொழுந்தே, என்று எழுவார் கேடில்லாதவராய் உலகலொம் விளங்கிய புகழ் உடையவராவர்.

திருக்கோட்டூர்

ஒளிகொள் வாளெயிற் றரக்கனவ் வுயர்வரை
யெடுத்தலும் உமையஞ்சிச்
சுளிய வூன்றலுஞ் சோர்ந்திட வாளொடு
நாளவற் கருள்செய்த
குளிர்கொள் பூம்பொழில் சூழ்தரு கோட்டூர்நற்
கொழுந்தினைத் தொழுவார்கள்
தளிர்கொள் தாமரைப் பாதங்கள் அருள்பெறுந்
தவமுடை யவர்தாமே. **#1188**

ஒளியும் கூர்மையுமுடைய பற்களைக் கொண்ட இராவணன் கயிலைமலையை எடுத்தபோது உமையம்மை அஞ்ச, இறைவன் தனது திருக்கால் பெருவிரலைச் சிறிதே சுளித்து ஊன்றிய அளவில் அவ்விராவணன் நெரிந்து வருந்தி வேண்ட, அவனுக்கு வாளும் நாளும் அருள் செய்தருளிய, பொழில் சூழ்ந்த கோட்டூர்க் கொழுந்தீசனைத் தொழுவார் இறைவன் திருவடித் தாமரைகளை அடையும் தவமுடையவராவர்.

திருக்கோட்டூர்

பாடி யாடும்மெய்ப் பத்தர்கட் கருள்செய்யும்
முத்தினைப் பவளத்தைத்
தேடி மாலயன் காணவொண் ணாதவத்
திருவினைத் தெரிவைமார்
கூடி ஆடவர் கைதொழு கோட்டூர்நற்
கொழுந்தேயென் றெழுவார்கள்
நீடு செல்வத்த ராகியிவ் வுலகினில்
நிகழ்தரு புகழாரே. **#1189**

பாடி ஆடுகின்ற உண்மை அடியார்க்கு அருளும் முத்தும் பவளமும் போன்றவனை, திருமாலும், நான்முகனும் தேடியறிய முடியாத திருவை, மகளிரும் ஆடவரும் கூடித்தொழும் கோட்டூரில் விளங்கும் கொழுந்தை வழிபட எழுபவர் நீடிய செல்வமும், உலகெலாம் நிகழும் புகழும் அடைவர்.

திருக்கோட்டூர்

கோணல் வெண்பிறைச் சடையனைக் கோட்டூர்நற்
கொழுந்தினைச் செழுந்திரளைப்
பூணல் செய்தடி போற்றுமின் பொய்யிலா
மெய்யன்நல் லருளென்றும்
காண லொன்றிலாக் காரமண் தேரர்குண்
டாக்கர்சொற் கருதாதே
பேணல் செய்தர னைத்தொழும் அடியவர்
பெருமையைப் பெறுவாரே. **#1190**

வளைந்த வெண்பிறையை அணிந்த சடைமுடியராகிய கோட்டூரில் விளங்கும் கொழுந்திதுசராகிய, செழுமையின் திரட்சியை, மலர்களால் அலங்கரித்து அவர்தம் திருவடிகளைப் போற்றுமின். பொய்யில்லாத மெய்யராகிய அவர்தம் நல்லவருளைக் காணும் நல்லூழில்லாத சமண புத்தர்களின் உரைகளைக்கேளாது அவ்விறைவரை விரும்பித்தொழும் அடியவர் பெருமையைப் பெறுவர்.

திருக்கோட்டூர்

பந்து லாவிரற் பவளவாய்த் தேன்மொழிப்
பாவையோ டுருவாரும்
கொந்து லாமலர் விரிபொழிற் கோட்டூர்நற்
கொழுந்தினைச் செழும்பவளம்
வந்து லாவிய காழியுள் ஞானசம்
பந்தன்வாய்ந் துரைசெய்த
சந்து லர்ந்தமிழ் மாலைகள் வல்லவர்
தாங்குவர் புகழாலே. **#1191**

பந்தாடும் மெல் விரலையும், பவளவாயையும் தேன்மொழியையும் உடைய உமையம்மையோடு அழகிய மலர்கள் நிறைந்த பொழில்களால் சூழப்பட்ட கோட்டூரில் விளங்கும் கொழுந்தீசரை, கடல் அலைகள் பவளங்களைக் கொண்டு வந்து சேர்க்கும் காழியில் தோன்றிய திருஞானசம்பந்தர் போற்றிப் பாடிய இச்செந்தமிழ்மாலையை ஓதவல்லவர் புகழ்பெறுவர்.

திருமாந்துறை

திருமாந்துறை

திருமாந்துறை,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஐராவணேசுவரர்.
தேவியார் : அழகாயமர்ந்தநாயகியம்மை.

செம்பொ னார்தரு வேங்கையும் ஞாழலுஞ்
செருந்திசெண் பகமானைக்
கொம்பும் ஆரமும் மாதவி சுரபுனை
குருந்தலர் பரந்துந்தி
அம்பொன் நேர்வரு காவிரி வடகரை
மாந்துறை யுறைகின்ற
எம்பி ரானிமை யோர்தொழு பைங்கழல்
ஏத்துதல் செய்வோமே. **#1192**

வேங்கை, ஞாழல், செருந்தி, செண்பக மலர்களையும் ஆனைக் கொம்பையும், சந்தனமரம், மாதவி மலர், சுரபுன்னை மலர், குருந்து மலர் ஆகியவற்றையும் உந்திவரும் காவிரி வடகரையில் உள்ள மாந்துறையில் உறையும் எம்பிரானின் இமையோர் வணங்கும் திருவடிகளை ஏத்துவோம்.

திருமாந்துறை

விளவு தேனொடு சாதியின் பலங்களும்
வேய்மணி நிரந்துந்தி
அளவி நீர்வரு காவிரி வடகரை
மாந்துறை யுறைவானத்
துளவ மான்மக னைங்கணைக் காமனைச்
சுடவிழித் தவனெற்றி
அளக வாணுதல் அரிவைதன் பங்கனை
யன்றிமற் றறியோமே. **#1193**

விள முதலிய பயன்தரும் மரங்களின் பழங்களோடு முத்துக்களையும் அடித்துவரும் காவிரி வடகரையில் உள்ள மாந்துறையில், மால் மகனாகிய காமனைக் கனல் விழியால் எரித்து விளங்கும் இறைவனை, அம்பிகைபாகனை அன்றி உலகில் வேறொன்றையும் அறியோம்.

திருமாந்துறை

கோடு தேன்சொரி குன்றிடைப் பூகமுங்
கூந்தலின் குலைவாரி
ஓடு நீர்வரு காவிரி வடகரை
மாந்துறை யுறைநம்பன்
வாடி னார்தலை யிற்பலி கொள்பவன்
வானவர் மகிழ்ந்தேத்தும்
கேடி லாமணி யைத்தொழல் அல்லது
கெழுமுதல் அறியோமே. **#1194**

தேன் சொரியும் குன்றிடைத் தோன்றிக் கமுகு முதலிய மரங்களின் இலைகளை வாரிவரும் காவிரி வடகரையில் மாந்துறையில் விளங்கும் கேடிலாமணியைத் தொழுதலையல்லது வேறொருவரைத் தொழுதல் அறியோம்.

<u>திருமாந்துறை</u>

இலவ ஞாழலும் ஈஞ்சொடு சுரபுன்னை
யிளமரு திலவங்கம்
கலவி நீர்வரு காவிரி வடகரை
மாந்துறை யுறைகண்டன்
அலைகொள் வார்புனல் அம்புலி மத்தமும்
ஆடர வுடன்வைத்த
மலையை வானவர் கொழுந்தினை அல்லது
வணங்குதல் அறியோமே. **#1195**

இலவம் முதலிய மரங்களை அடித்துவரும் காவிரி வடகரையில் உள்ள மாந்துறை உறை தலைவனும் கங்கை, பிறை, அரவு முதலியவற்றைத் தலையில் சூடியவனும் ஆகிய வானோர் தலைவனையன்றி வணங்குதலறியோம்.

<u>திருமாந்துறை</u>

கோங்கு செண்பகங் குருந்தொடு பாதிரி
குரவிடை மலருந்தி
ஓங்கி நீர்வரு காவிரி வடகரை
மாந்துறை யுறைவானைப்
பாங்கி னாலிடுந் தூபமும் தீபமும்
பாட்டவி மலர்சேர்த்தித்
தாங்கு வாரவர் நாமங்கள் நாவினில்
தலைப்படுந் தவத்தோரே. **#1196**

கோங்கு, செண்பகம் முதலிய மரங்களை அடித்துவரும் காவிரி வடகரை மாந்துறையில் உறைவானை, தூபம் தீபம் தோத்திரம் நிவேதனம்

ஆகியவற்றால் மலர்தூவி வழிபட்டு அவன் திருநாமங்களைச் சொல்லுவார் மேலான தவமுடையோராவர்.

திருமாந்துறை

பெருகு சந்தனங் காரகில் பீலியும்
பெருமரம் நிமிர்ந்துந்திப்
பொருது காவிரி வடகரை மாந்துறைப்
புனிதனெம் பெருமானைப்
பரிவி னாலிருந் திரவியும் மதியமும்
பார்மன்னர் பணிந்தேத்த
மருத வானவர் வழிபடு மலரடி
வணங்குதல் செய்வோமே. **#1197**

சந்தனம் அகில் முதலிய மரங்களை அடித்துவரும் காவிரி வடகரை மாந்துறைப் புனிதனின் இரவி, மதி, மன்னர்கள், மருத்துக்கள் அன்போடு வழிபடும் திருவடிகளை வணங்குவோம்.

திருமாந்துறை

நறவம் மல்லிகை முல்லையும் மௌவலும்
நாண்மல ரவைவாரி
இறவில் வந்தெறி காவிரி வடகரை
மாந்துறை யிறையன்றங்
கறவ னாகிய கூற்றினைச் சாடிய
அந்தணன் வரைவில்லால்
நிறைய வாங்கி வலித்தெயி லெய்தவன்
நிரைகழல் பணிவோமே. **#1198**

மல்லிகை முல்லை முதலிய மலர்களை மிகுதியாக வாரி வரும் காவிரி வடகரை மாந்துறை இறைவனும் காலனைக் காய்ந்தவனும், மேருவில்லால் முப்புரம் எரித்தவனும் ஆகிய பெருமானின் திருவடிகளைப் பணிவோம்.

திருமாந்துறை

மந்த மார்பொழின் மாங்கனி மாந்திட
மந்திகள் மாணிக்கம்
உந்தி நீர்வரு காவிரி வடகரை
மாந்துறை யுறைவானை
நிந்தி யாளடுத் தார்த்தவல் லரக்கனை
நெரித்திடு விரலானைச்
சிந்தி யாமனத் தாரவர் சேர்வது

தீநெறி யதுதானே. #1199
மந்திகள் மாங்கனிகளை உண்டு மகிழுமாறு அடர்ந்து வளர்ந்த மாமரங்களை உடைய மாந்துறையில் எழுந்தருளிய இறைவனை, நிந்தித்து அவனை மலையோடு எடுத்து ஆரவாரித்த இராவணனைக் கால் விரலால் நெரித்தவனைச் சிந்தியாதவர் தீநெறி சேர்வர்.

திருமாந்துறை

நீலமாமணி நித்திலத் தொத்தொடு
நிரைமலர் நிரந்துந்தி
ஆலி யாவரு காவிரி வடகரை
மாந்துறை யமர்வானை
மாலும் நான்முகன் தேடியுங் காண்கிலா
மலரடி யிணைநாளும்
கோல மேத்திநின் றாடுமின் பாடுமின்
கூற்றுவன் நலியானே. #1200
நீல மணிகளையும், முத்துக்களையும், மலர்களையும் அடித்து வரும் காவிரி வடகரை மாந்துறையில் திருமாலும் பிரமனும் தேடிக் காணமுடியாதவாறு எழுந்தருளிய இறைவனின் திருவடிகளைப் பாடி வழிபடுங்கள். நம்மைக் கூற்றுவன் நலியான்.

திருமாந்துறை

நின்று ணுஞ்சமண் தேரரும் நிலையிலர்
நெடுங்கழை நறவேலம்
நன்று மாங்கனி கதலியின் பலங்களு
நாணலின் நுரைவாரி
ஒன்றி நேர்வரு காவிரி வடகரை
மாந்துறை யொருகாலம்
அன்றி யுள்ளழிந் தெழும்பரி சழகிது
அதுவவர்க் கிடமாமே. #1201
சமணரும் தேரரும் நிலையற்ற உரையினராவர். நீண்ட மூங்கில், தேன் பொருந்திய வேலமரம், மாங்கனி, வாழைக்கனி, நாணலின் நுரையை அடித்துக் கொண்டு வரும் காவிரியின் வடகரையிலுள்ள திருமாந்துறை இறைவனை எக்காலத்தும் நெஞ்சுருகி வழிபடும் பரமானந்த நிலையே மேலானது.

திருமாந்துறை

வரைவ ளங்கவர் காவிரி வடகரை
மாந்துறை யுறைவானைச்

சிரபு ரம்பதி யுடையவன் கவுணியன்
செழுமறை நிறைநாவன்
அரவெ னும்பணி வல்லவன் ஞானசம்
பந்தன்அன் புறுமாலை
பரவி டுந்தொழில் வல்லவர் அல்லலும்
பாவமும் இலர்தாமே. **#1202**

மலைவளங்களைக் கொணர்ந்து தரும் காவிரி வடகரையில் - மாந்துறையில் உறைபவன் மீது கவுணிய கோத்திரத்தனாய், சிறந்த வேதங்கள் நிறைந்த நாவினனும் சிவனுக்குத் திருத்தொண்டு செய்வதில் வல்லவனுமான காழி ஞானசம்பந்தன் பாடிய அன்புறு பாமாலைகளை ஓதி வழிபடுவோர் அல்லல் பாவம் ஆகியன நீங்கப் பெறுவர்.

திருவாய்மூர்

திருவாய்மூர்

திருவாய்மூர்,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வாய்மூரீசுவரர்.
தேவியார் : பாலினுநன்மொழியம்மை.

தளிரிள வளரென வுமைபாடத்
தாளம் மிடவோர் கழல்வீசிக்
கிளரிள மணியர வரையார்த்
தாடும் வேடக் கிறிமையார்
விளரிள முலையவர்க் கருணல்கி
வெண்ணீ றணிந்தோர் சென்னியின்மேல்
வளரிள மதியமொ டிவராணீர்
வாய்மூ ரடிகள் வருவாரே. **#1203**

தளிர்களோடு கூடிய இளங்கொம்புபோல, உமையம்மை அருகிருந்து பாடவும், தாளம் இடவும் ஒப்பற்ற தழலை உடைய கையை வீசி, விளங்கும் மாணிக்க மணியை உடைய பாம்பை இடையிலே கட்டி ஆடும் பொய்வேடத்தை உடையவர். தம்மை விரும்பும் பருத்த தனபாரங்களை உடைய மகளிர்க்கு அருள் நல்கித் திருநீறுபூசி, முடிமேல் பிறையணிந்து காட்சி தருபவர். வாய்மூரடிகளாகிய அவர் வருவார் காணீர்.

திருவாய்மூர்

வெந்தழல் வடிவினர் பொடிப்பூசி
விரிதரு கோவண வுடைமேலோர்
பந்தஞ்செய் தரவசைத் தொலிபாடிப்
பலபல கடைதொறும் பலிதேர்வார்
சிந்தனை புகுந்தெனக் கருள்நல்கிச்
செஞ்சுடர் வண்ணர்தம் அடிபரவ
வந்தனை பலசெய இவராணீர்
வாய்மூ ரடிகள் வருவாரே. **#1204**

தழல் போன்ற திருமேனியராய், திருநீறுபூசி, விரித்தணிந்த கோவண ஆடை மீது பாம்பை அரைநாணாகக் கட்டிக் கொண்டு வேதஒலி இசைத்துக் கொண்டு பலபல வீடுகளுக்கும் சென்று பலியேற்பவர். செஞ்சுடர் வண்ணராகிய வாய்மூரடிகள் என் சிந்தனை புகுந்து எனக்கு

அருளை நல்கி ப்புறத்தே தம் அடியைப் பரவி வழிபாடு செய்யுமாறு வருவார் காணீர்.

திருவாய்மூர்

பண்ணிற் பொலிந்த வீணையர்
பதினெண் கணமு முணராநஞ்
சுண்ணப் பொலிந்த மிடற்றினார்
உள்ளம் உருகில் உடனாவார்
சுண்ணப் பொடிநீ றணிமார்பர்
சுடர்பொற் சடைமேற் றிகழ்கின்ற
வண்ணப் பிறையோ டிவராணீர்
வாய்மூ ரடிகள் வருவாரே. **#1205**

பண்ணிசை பொருந்திய வீணைய உடையவர். பதினெட்டுத் தேவர் கணத்தினரும் உணராத வகையில் நஞ்சுண்டு விளங்கும் திருமிடற்றை உடையவர். திருநீற்றுச் சுண்ணம் அணிந்த மார்பினர். அழகிய சடைமீது இளம்பிறை சூடியவர். வாய்மூரில் விளங்கும் அவ்அடிகள் வருவார் காணீர்.

திருவாய்மூர்

எரிகிளர் மதியமொ டெழினுதன்மேல்
எறிபொறி யரவினொ டாறுமூழ்க
விரிகிளர் சடையினர் விடையேறி
வெருவவந் திடர்செய்த விகிர்தனார்
புரிகிளர் பொடியணி திருவகலம்
பொன்செய்த வாய்மையர் பொன்மிளிரும்
வரியர வரைக்கசைத் திவராணீர்
வாய்மூ ரடிகள் வருவாரே. **#1206**

சடைமுடி மீது நெருப்புப்போல விளங்கும் பிறை மதியையும், அழகிய நுதலின் மேற்பகுதியில் பாம்பையும், கங்கையையும் அணிந்து விடையேறி வந்து மகளிராகிய எங்கட்கு இடர் செய்த விகிர்தர். திருநீறணிந்த மார்பினர். சத்திய வடிவினர். வாய்மூரில் விளங்கும் அவ்வடிகள் அழகியதொரு அரவை அரைக்கசைத்து வருவார். காணீர்.

திருவாய்மூர்

அஞ்சன மணிவணம் எழில்நிறமா
வகமிட றணிகொள வுடல்திமில
நஞ்சினை யமரர்கள் அமுதமென
நண்ணிய நறுநுதல் உமைநடுங்க

வெஞ்சின மால்களி யானையின்தோல்
வெருவுறப் போர்த்ததநிறமு மஃதே
வஞ்சனை வடிவினொ டிவராணீர்
வாய்மூரடிகள் வருவாரே. **#1207**
நஞ்சினைக்கண்டு தேவர்கள் உடல் நடுங்கி வேண்டியபோது
நீலமணிபோலும் அழகிய நிறத்தினைப் பெறவும் கழுத்திடம்
அழகுபெறவும் அமுதம்போல அதனை உண்டவரும் நறு நுதலை
உடைய உமையம்மை நடுங்க யானையின் தோலைக் கண்டோர்
அஞ்சுமாறு உரித்துப் போர்த்தவரும் ஆகிய வாய்மூர் அடிகள்
பெண்களின் மனம் கவர வஞ்சனைவடிவோடு வருவார். அவரைக்
காணீர்.

திருவாய்மூர்

அல்லிய மலர்புல்கு விரிகுழலார்
கழலிணை யடிநிழ லவைபரவ
எல்லியம் போதுகொண் டெரியேந்தி
யெழிலொடு தொழிலவை யிசையவல்லார்
சொல்லிய அருமறை யிசைபாடிச்
சூடிள மதியினர் தோடுபெய்து
வல்லியந் தோலுடுத் திவராணீர்
வாய்மூ ரடிகள் வருவாரே. **#1208**
அடுக்கடுக்கான இதழ்களை உடைய மலர்களைச் சூடிய விரிந்த
கூந்தலை உடைய மகளிர் தம் திருவடிகளைப் பரவ இராப்போதில்
எரியேந்தி ஆடும் அவ்விறைவர் அம் மகளிரது பரவு தலை
ஏற்றருளுபவர். வேதங்களைப் பாடிக்கொண்டு, இளமதி சூடி ஒருகாதில்
தோடணிந்து புலித்தோலுடுத்துவருவார். அவ்வாய்மூர் இறைவரைக்
காணீர்.

திருவாய்மூர்

கடிபடு கொன்றைநன் மலர்திகழுங்
கண்ணியர் விண்ணவர் கனமணிசேர்
முடிபில்கும் இறையவர் மறுகின்நல்லார்
முறைமுறை பலிபெய முறுவல்செய்வார்
பொடியணி வடிவொடு திருவகலம்
பொன்னென மிளிர்வதொர் அரவினொடும்
வடிநுனை மழுவினொ டிவராணீர்
வாய்மூ ரடிகள் வருவாரே. **#1209**
மணம் கமழும் கொன்றை மலர் மாலையைத் தலையில் அணிந்தவர்.

தேவர்கள் தலையில் சூடிய முடிகளில் பதித்த முழு மணிகளின் ஒளி சிதறும் திருவடியினர். வீதிகளில் பெண்கள் பலியிடலைக் கண்டு முறுவல் செய்பவர். திருநீறு அணிந்த வடிவோடும், பொன்போல் மிளிரும் பாம்பணிந்த மார்போடும், கூரிய மழுவை ஏந்தி அவ்வாய்மூர் இறைவர் வருவார். காணீர்.

திருவாய்மூர்

கட்டிணை புதுமலர்க் கமழ்கொன்றைக்
கண்ணியர் வீணையர் தாமுமஃதே
எட்டுணை சாந்தமொ டுமைதுணையா
இறைவனா ருறைவதோர் இடம்வினவில்
பட்டிணை யகலல்குல் விரிகுழலார்
பாவையர் பலியெதிர் கொணர்ந்துபெய்ய
வட்டணை யாடலொ டிவராணீர்
வாய்மூ ரடிகள் வருவாரே. **#1210**

இணை இணையாகக் கட்டப்பட்ட புதிய கொன்றை மலர் மாலையைத் தலையில் அணிந்தவர். வீணை வாசிப்பவர். அவ்விறைவர் சந்தனமணிந்து உமையம்மை துணையாக உறையுமிடம் வாய்மூராகும். பட்டாடை அணிந்த தாருகாவன மகளிரிடம் பலி கேட்டு அவர்களை மயங்குமாறு செய்து தாளமிட்டுச் சதிராடும் வாய்மூர் இறைவராகிய அப்பெருமானார் வருவார். காணீர்.

திருவாய்மூர்

ஏனருப்பினொ டெழிலாமை
யிசையப் பூண்டோ ரேறேறிக்
கானம திடமா வுறைகின்ற
கள்வர் கனவிற் றுயர்செய்து
தேனுண மலர்கள் உந்திவிம்மித்
திகழ்பொற் சடைமேல் திகழ்கின்ற
வானநன் மதியினொ டிவராணீர்
வாய்மூ ரடிகள் வருவாரே. **#1211**

பன்றிக் கொம்போடு ஆமைஓட்டையும் அணிந்து எருதேறிக் காட்டை இடமாகக் கொண்டு உறையும் இவர் நம் உள்ளங்களைக் கவரும் கள்வராவர். கனவிடைத் தோன்றி நமக்குத் துயர் விளைத்துத் தேன்பொருந்திய மலர்களை அணிந்த அழகிய சடைமீது பிறையணிந்து அவ்வாய்மூர் இறைவர் வருவார். காணீர்.

திருவாய்மூர்

சூடல்வெண் பிறையினர் சுடர்முடியர்
சுண்ணவெண் ணீற்றினர் சுடர்மழுவர்
பாடல்வண் டிசைமுரல் கொன்றையந்தார்
பாம்பொடு நூலவை பசைந்திலங்கக்
கோடனன் முகிழ்விரல் கூப்பிநல்லார்
குறையுறு பலியெதிர் கொணர்ந்துபெய்ய
வாடல்வெண் டலைபிடித் திவராணீர்
வாய்மூ ரடிகள் வருவாரே. **#1212**
பிறைசூடியவராய், சுடர்முடியவராய், திருநீறு பூசியவராய்
மழுவேந்தியவராய், கொன்றைமாலை சூடியவராய், பாம்பும் முப்புரி
நூலும் அணிந்தவராய், காந்தள் போன்று முகிழ்த்த கையினராகி,
தாருகாவன முனி பன்னியர் பலிபெய்யுமாறு பிரமகபாலத்தை
ஏந்தியவராய் வாய்மூர் இறைவர் வருவார். காணீர்.

<u>திருவாய்மூர்</u>

திங்களொ டருவரைப் பொழிற்சோலைத்
தேனலங் கானலந் திருவாய்மூர்
அங்கமொ டருமறை யொலிபாடல்
அழல்நிற வண்ணர்தம் மடிபரவி
நங்கள்தம் வினைகெட மொழியவல்ல
ஞானசம் பந்தன் தமிழ்மாலை
தங்கிய மனத்தினால் தொழுதெழுவார்
தமர்நெறி யுல்குக்கோர் தவநெறியே. **#1213**
சந்திரனைச் சென்று தொடும் மதில்களையும் சோலைகளையும்
உடையதிருவாய்மூரிலுள்ள, வேதங்கள், வேதாங்கங்கள் ஆகிய
பாடல்களின் பொருளாயுள்ள தீ வண்ணரின் திருவடிகளைப் பரவி
நம்வினை கெடுமாறு ஞானசம்பந்தன் மொழிந்த இத்தமிழ் மாலை
தங்கிய மனத்தோடு அவரைத் தொழும் அடியவர் நெறி, உலகில்
மேலான தவநெறியாகும்.

திருஆடானை

திருஆடானை

திருஆடானை,
பண் - நட்டராகம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஆதிரத்தினேசுவரர்.
தேவியார் : அம்பாயிரவல்லியம்மை.

மாதோர்கூறுகந் தேறதேறிய
ஆதியானுறை யாடானை
போதினாற்புனைந் தேத்துவார்தமை
வாதியாவினை மாயுமே. **#1214**

அம்பிகையை ஒருபாகமாக உகந்து கொண்டு விடைமேல் ஏறியருளும் முதல்வன் எழுந்தருளிய திருவாடானையை அடைந்து அவ்விறைவனை மலர்களால் அலங்கரித்தும் அர்ச்சித்தும் வழிபடுபவர்களின் வினைகள் அவர்களை வருத்தமாட்டாதனவாய் மாய்ந்துவிடும்.

திருஆடானை

வாடல்வெண்டலை யங்கையேந்திநின்
றாடலானுறை யாடானை
தோடுலாமலர் தூவிக்கைதொழ
வீடுநுங்கள் வினைகளே. **#1215**

உலர்ந்த பிரமகபாலத்தைக் கையில் ஏந்தி நின்று ஆடுதலை உடைய சிவபிரானது திருவாடானையை அடைந்து அவ்விறைவனை மலர்தூவித் தொழுதால் உங்கள் வினைகள் யாவும் அழியும்.

திருஆடானை

மங்கைகூறினன் மான்மறியுடை
அங்கையானுறை யாடானை
தங்கையாற்றொழு தேத்தவல்லவர்
மங்குநோய்பிணி மாயுமே. **#1216**

மங்கை பங்கனும் மான் கன்றைக் கையில் ஏந்தியவனுமாகிய சிவபிரான் உறையும் திருவாடானையை அடைந்து அவ்விறைவனைத் தம் கைகளைக் கூப்பிப் போற்றவல்லவர்களின் நோய்கள் கெடும் பிணிகள் (வினைகள் மாயும்).

திருஆடானை

சுண்ணநீறணி மார்பிற்றோல்புனை
அண்ணலானுறை யாடானை
வண்ணமாமலர் தூவிக்கைதொழ
எண்ணுவாரிட ரேகுமே. **#1217**
சந்தனச் சுண்ணமும் திருநீறும் அணிந்த மார்பில் பூணநூலின்கண்
மான்தோலைப் புனைந்துள்ள தலைமைக் கடவுளாகிய
சிவபிரானுறையும் திருவாடானையை அடைந்து, அவ்விறைவனை
அழகும் மணமும் கூடிய மலர்களைத்தூவிக் கைதொழ
எண்ணுபவர்களின் இடர் ஏகும்.

திருஆடானை

கொய்யணிம்மலர்க் கொன்றைசூடிய
ஐயன்மேவிய வாடானை
கையணிம்மல ரால்வணங்கிட
வெய்யவல்வினை வீடுமே. **#1218**
கொய்யப் பெற்றதும் அழகியதுமாகிய கொன்றை மலர் மாலையைச்
சூடிய தலைவன் எழுந்தருளிய திருவாடானையை அடைந்து
அவ்விறைவனைக் கைகளால் மலர்தூவித்தொழுது வணங்குபவர்களின்
கொடிய வல்வினைகள் அவர்களை விட்டொழியும்.

திருஆடானை

வானிளம்மதி மல்குவார்சடை
ஆனஞ்சாடல னாடானை
தேனணிம்மலர் சேர்த்தமுன்செய்த
ஊனமுள்ள வொழியுமே. **#1219**
வானில் விளங்கும் இளம்பிறையைத் தமது திருமுடியில் சூடியவரும்
நீண்ட சடைமுடியை உடையவரும், பஞ்ச கௌவியத்தை விரும்பி
ஆடுபவருமாகிய சிவபெருமான் எழுந்தருளிய திரு ஆடானையை
அடைந்து அவ்விறைவர் திருவடிகளில் தேன் பொருந்திய அழகிய
மலர்களைச் சேர்ப்பவர்களின் முன் வினைகளாக உள்ளனயாவும்
ஒழியும்.

திருஆடானை

துலங்குவெண்மழு வேந்திச்சூழ்சடை
அலங்கலானுறை யாடானை
நலங்கொண்மாமலர் தூவிநாடொறும்
வலங்கொள்வார்வினை மாயுமே. **#1220**
விளங்குகின்ற வெண்மழுவைக் கையில் ஏந்தி, சுற்றிய சடைமுடிமீது

கொன்றை வில்வமாலைகளை அணிந்துள்ள 148 சிவபெருமான் உறையும் திருவாடானையை அடைந்து அவ்விறைவனை அழகும் மணமும் கொண்ட மலர்களைத் தூவித் தொழுது நாள்தோறும் அவன் திருக்கோயிலை வலம்வருவார் வினைகள் மாயும்.

திருஆடானை

வெந்தநீறணி மார்பிற்றோல்புனை
அந்தமில்லவ னாடானை
கந்தமாமலர் தூவிக்கைதொழும்
சிந்தையார்வினை தேயுமே. **#1221**

தீயிடைவெந்த திருநீற்றை அணிந்தவரும் மார்பின் கண் மான்தோலை அணிந்தவரும், தோற்றக் கேடு இல்லாதவருமான சிவபெருமான் உறையும் திருவாடானையை அடைந்து அவ்விறைவரை மணமலர்களைத்தூவி வழிபடும் சிந்தனையை உடையவர் களின் வினைகள் தேயும்.

திருஆடானை

மறைவலாரொடு வானவர்தொழு
தறையுந்தண்புன லாடானை
உறையும்ஈசனை யேத்தத்தீவினை
பறையுநல்வினை பற்றுமே. **#1222**

வேதங்களில் வல்ல அந்தணர்களோடு விண்ணில் உறையும் தேவர்களும் வந்து வணங்கும் நீர்வளம்சான்ற திருவாடானையில் உறையும் ஈசனை ஏத்தத் தீவினைகள் அழியும். நல்வினைகள் வந்துசேரும்.

திருஆடானை

மாயனும்மல ரானுங்கைதொழ
ஆயவந்தண னாடானை
தூயமாமலர் தூவிக்கைதொழத்
தீயவல்வினை தீருமே. **#1223**

மாயவனாகிய திருமாலும், தாமரைமலர் மேலுறையும் நான்முகனும் கைகளால் தொழுது வழிபடுதற்குரியவனாகிய அந்தணன் உறையும் திருவாடானையை அடைந்து அவ்விறைவனைத் தூய மலர்களைத் தூவிக்கைகளால் தொழுபவர்களின் தீய வல் வினைகள் தீரும்.

திருஆடானை

வீடினார்மலி வெங்கடத்துநின்
றாடலானுறை யாடானை

நாடிஞானசம் பந்தனசெந்தமிழ்
பாடநோய்பிணி பாறுமே. **#1224**
ஊழிக்காலத்து இறந்தவர்களின் உடல்கள் நிறைந்து எரிந்து வேகும் சுடுகாட்டுள் நின்று உருத்திரதாண்டவமாடும் இறைவன் உறையும் திருவாடானையை அடைந்து ஞானசம்பந்தன் அருளிய இச்செந் தமிழ் மாலையைப் பாடி வழிபடுபவர்களின் நோய்களும் பிணிகளும் நீங்கும்.

சீகாழி

சீர்காழி

சீகாழி,
பண் - செவ்வழி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

பொடியிலங்குந் திருமேனி
யாளர் புலியதளினர்
அடியிலங்குங் கழலார்க்க
ஆடும் மடிகள்ளிடம்
இடியிலங்குங் குரலோதம்
மல்கவ் வெறிவார்திரைக்
கடியிலங்கும் புனல்முத்
தலைக்குங்கடற் காழியே. **#1225**

திருநீறணிந்த திருமேனியர். புலித்தோல் உடுத்தவர். திருவடிகளில் விளங்கும் கழல்கள் ஆர்க்க ஆடுபவர். அவர் உறையுமிடம், இடிபோல் முழங்கும் கடல் அலைகளின் நீர்ப் பெருக்கு முத்துக்களை மிகுதியாகக் கொண்டு வந்து கரையில் சேர்க்கும் காழிப்பதியாகும்.

சீர்காழி

மயலிலங்குந் துயர்மா
சறுப்பானருந் தொண்டர்கள்
அயலிலங்கப் பணிசெய்ய
நின்றவ் வடிகள்ளிடம்
புயலிலங்குங் கொடையாளர்
வேதத்தொலி பொலியவே
கயலிலங்கும் வயற்கழனி
சூழுங்கடற் காழியே. **#1226**

மயக்கம் தரும் பிறவித்துயராகிய மாசினைப் போக்க எண்ணிய தொண்டர்கள் தான் வாழும் இடங்கள் எங்கும் பணிசெய்ய நின்ற சிவபிரான் உறையுமிடம், மேகம் போல வரையாது கொடுக்கும் கொடையாளர்களுடன் தேவதஒலிபரவும் சிறப்பினதாய, கயல்மீன்கள் தவழும் வயல்கள் சூழ்ந்த காழிப் பதியாகும்.

சீர்காழி

கூர்விளங்குந் திரிசூல
வேலர்குழைக் காதினர்
மார்விலங்கும் புரிநூலு
கந்தமண வாளனூர்
நேர்விலங்கல் லனதிரை
கள்மோதந் நெடுந்தாரைவாய்க்
கார்விலங்கல் லெனக்கலந்
தொழுகுங்கடற் காழியே. **#1227**

கூரிய முத்தலைச் சூலத்தை ஏந்தியவர். குழையணிந்த செவியினர். மார்பில் முப்புரிநூல் விளங்கும் மணவாளக் கோலத்தினர். அவருக்குரிய ஊர், மலைபோலக் கடல் அலைகள் வந்தலைக்கும் காழிப் பதியாகும்.

<u>சீர்காழி</u>

குற்றமில்லார் குறைபாடு
செய்வார் பழிதீர்ப்பவர்
பெற்றநல்ல கொடிமுன்
னுயர்த்த பெருமானிடம்
மற்றுநல்லார் மனத்தா
லினியார் மறைகலையெலாங்
கற்றுநல்லார் பிழைதெரிந்
தளிக்குங்கடற் காழியே. **#1228**

குற்றம் இல்லாதவர். தம் குறைகளைக் கூறி வேண்டுபவருக்கு வரும் பழிகளைத் தீர்ப்பவர். விடைக்கொடியை உயர்த்தியவர். அப் பெருமானுக்குரிய இடம், நல்லவர், மனத்தால் இனியவர், வேதங்களைக் கற்றுணர்ந்து நல்லோர் செய்யும் பிழைதெரிந்து போக்கித் தலையளி செய்வோர் ஆகியவர்கள் வாழும் கடற்காழியாகும்.

<u>சீர்காழி</u>

விருதிலங்குஞ் சரிதைத்
தொழிலார் விரிசடையினார்
எருதிலங்கப் பொலிந்தேறும்
எந்தைக் கிடமாவது
பொதிலங்கும் மறைகிளைஞர்
ஓதப் பிழைகேட்டலாற்
கருதுகிள்ளைக் குலந்தெரிந்து
தீர்க்குங்கடற் காழியே. **#1229**

வெற்றியமைந்த புராண வரலாறுகளை உடையவர். விரிந்த சடையினர். எருது விளங்க அதன்மேல் பொலிவோடு அமரும் எந்தை. அவருக்குரிய

இடம், பெருமை பொருந்திய வேதங்களைப் பயில்வோர் ஓதக்கேட்டு அதிலுள்ள பிழைகளைப் பலகாலும் கேட்டுப் பழகிய வாசனையால் கிளிக் குலங்கள் தெரிந்து தீர்க்கும் காழிப்பதியாகும்.

சீர்காழி

தோடிலங்குங் குழைக்காதர்
தேவர்சுரும் பார்மலர்ப்
பீடிலங்குஞ் சடைப்பெருமை
யாளர்க் கிடமாவது
கோடிலங்கும் பெரும்பொழில்
கள்மல்கப் பெருஞ்செந்நெலின்
காடிலங்கும் வயல்பயிலும்
அந்தண்கடற் காழியே. **#1230**

தோடும் குழையும் விளங்கும் காதினர். வேதங்களை அருளியவர். வண்டுகள் மொய்க்கும் மலர்களை அணிந்து பெருமையோடு இலங்கும் சடைமிசைக் கங்கையைச் சூடியவர். அவ்வடிகட்கு இடம் பெரிய கிளைகளோடு கூடிய மரங்கள் செறிந்த பொழில்கள் நிறைந்துள்ளதும் செந்நெற்காடுகளை உடையவயல்களை உடையதுமான காழிப்பதியாகும்.

சீர்காழி

மலையிலங்குஞ் சிலையாக
வேகம்மதில் மூன்றெரித்
தலையிலங்கும் புனற்கங்கை
வைத்தவ்வடி கட்கிடம்
இலையிலங்கும் மலர்க்கைதை
கண்டல்வெறி விரவலாற்
கலையிலங்குங் கணத்தினம்
பொலியுங்கடற் காழியே. **#1231**

மேருமலையை வில்லாகக் கொண்டு முப் புரங்களை எரித்து, அலைகளோடு கூடிய கங்கையை முடிமிசை வைத்துள்ள அடிகட்கு இடம், இலைகளோடு பூத்து விளங்கும் தாழை நீர் முள்ளி ஆகியவற்றின் மணத்துடன் வேதம் வல்லமறையவர் கணம் வாழும் காழிப்பதியாகும்.

சீர்காழி

முழுதிலங்கும் பெரும்பொருள்
வாழும்முரண் இலங்கைக்கோன்
அழுதிரங்கச் சிரமுர

மொடுங்கவ் வடர்த்தாங்கவன்
தொழுதிரங்கத் துயர்தீர்த்
துகந்தார்க் கிடமாவது
கழுதும்புள்ளும் மதிற்புறம
தாருங்கடற் காழியே. #1232

உலகில் மாறுபாடுடையவனாய் வாழ்ந்த இராவணன் அழுது இரங்க, அவன் தலை மார்பு ஆகியன ஒடுங்க அடர்த்துப்பின் அவன் தொழுது இரங்கிய அளவில் அவனது துயர் தீர்த்தருளிய இறைவற்கு இடம் வண்டும் பறவைகளும் மதிற்புறத்தே வாழும் கடற்காழியாகும்.

சீர்காழி

பூவினானும் விரிபோதின்
மல்குந்திரு மகடனை
மேவினானும் வியந்தேத்த
நீண்டா ரழலாய்நிறைந்
தோவியங்கே யவர்க்கருள்
புரிந்தவ் வொருவர்க்கிடங்
காவியங்கண் மடமங்கையர்
சேர்கடற் காழியே. #1233

நான்முகனும், தாமரைமலரில் வாழும் திருமகளை மருவிய திருமாலும் வியந்து போற்ற, அழலுருவாய் நீண்டுப்பின் அதனின் நீங்கி அவர்களுக்கு அருள்புரிந்த இறைவற்கு இடம், குவளை மலர் போலும் கண்களை உடைய அழகிய மகளிர் வாழும் கடற்காழியாகும்.

சீர்காழி

உடைநவின் றாருடைவிட்
டுழல்வார் இருந்தவத்தார்
முடைநவின் றம்மொழி
யொழித்துகந்தம் முதல்வன்னிடம்
மடைநவின்ற புனற்கெண்டை
பாயும்வயல் மலிதரக்
கடைநவின்றந் நெடுமாடம்
ஓங்குங்கடற் காழியே. #1234

உடையோடும், உடையின்றியும் திரிபவரும், கடுமையான விரதங்களைத் தவமாக மேற்கொள்பவருமான புத்தர்சமணர்களின் நாற்றமுடைய மொழிகளையொழித்து உகந்த முதல்வன் இடம், கெண்டை மீன்கள் துள்ளிப் பாயும் நீர் நிறைந்த மடைகளோடு கூடிய வயல்கள் சூழ்ந்ததும், வாயில்களை உடைய உயர்ந்த மாடவீடுகளைக்

கொண்டுள்ளதுமான காழிப்பதியாகும்.

சீர்காழி

கருகுமுந்நீர் திரையோத
மாருங் கடற்காழியுள்
உரகமாருஞ் சடையடி
கள்தம்பா லுணர்ந்துறுதலாற்
பெருகமல்கும் புகழ்பேணுந்
தொண்டர்க்கிசை யார்தமிழ்
விரகன்சொன்ன இவைபாடி
யாடக்கெடும் வினைகளே. **#1235**

கரிய கடல் அலைகளின் ஓதநீர் நிறைந்த காழிப்பதியுள், பாம்பணிந்தவராய் விளங்கும் சடைகளை உடைய அடிகளின் அருளை உணர்ந்து ஓதுதலால் புகழ் பெருக வாழ்ந்து அன்பு செய்யும் தொண்டர்கள் தமிழ் விரகனாகிய ஞானசம்பந்தன் சொன்ன இப்பதிகப் பாடல்களைப் பாடி ஆட அவர்களுடைய பாவங்கள் கெடும்.

திருக்கேதாரம்

திருக்கேதாரம்

திருக்கேதாரம்,
பண் - செவ்வழி,
இத்தலம் வடதேசத்திலுள்ளது. ,
சுவாமிபெயர் : கேதாரேசுவரர்.
தேவியார் : கௌரியம்மை.

தொண்டரஞ்சு களிறும்
அடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு
செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால
மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல
மொட்டலருங் கேதாரமே. **#1236**

அடியவர் ஐம்புலக்களிறுகளையும் அடக்கி ஆண்டு, நாண்மலர்களைக் கொண்டு இண்டைகட்டிச் சார்த்தி வழிபாடு செய்யுமிடம், வண்டுகள் பாடவும், மயில்கள் ஆர்ப்பரிக்கவும், மான் கன்றுகள் துள்ளவும், சுனைகளில் கெண்டைகள் பாய்வதால் நீலமலர் மொட்டுக்கள் அலரவும் விளங்கும் திருக்கேதாரமாகும்.

திருக்கேதாரம்

பாதம்விண்ணோர் பலரும்
பரவிப் பணிந்தேத்தவே
வேதநான்கும் பதினெட்டொ
டாறும் விரித்தார்க்கிடம்
தாதுவிண்ட மதுவுண்டு
மிண்டிவரு வண்டினம்
கீதம்பாட மடமந்தி
கேட்டுகளுங் கேதாரமே. **#1237**

விண்ணோர் பலரும்பாதம் பரவித் தொழ நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் பதினெண் புராணங்களையும் விரித்துரைத்த சிவபிரானுக்கு இடம், மலரின் மது உண்ட வண்டுகள் கீதம்பாட மந்திகள் கேட்டு மகிழும் திருக்கேதாரமாகும்.

திருக்கேதாரம்

முந்திவந்து புரோதாய
மூழ்கி முனிகள்பலர்
எந்தைபெம்மா னெனநின்றி
றைஞ்சும் மிடமென்பரால்
மந்திபாயச் சரேலச்
சொரிந்தும் முரிந்துக்கபூக்
கெந்தநாறக் கிளருஞ்
சடையெந்தை கேதாரமே. **#1238**

முனிவர்கள் உதயத்துக்கு முன் எழுந்து நீராடி எந்தைபெருமான் என இறைஞ்சச் சடாதாரியான சிவபிரானுக்குரிய இடம், மந்திகள் பாய்தலால் சரேலெனத் தேனைச் சொரிந்து முரிந்து வீழ்ந்த மலர்களின் மணங்கமழும் திருக்கேதாரமாகும்.

<u>திருக்கேதாரம்</u>

உள்ளமிக்கார் குதிரைம்
முகத்தார் ஒருகாலர்கள்
எள்கலில்லா இமையோர்கள்
சேரும் மிடமென்பரால்
பிள்ளைதுள்ளிக் கிள்ளைபயில்வ
கேட்டுப் பிரியாதுபோய்க்
கிள்ளையேனற் கதிர்கொணர்ந்து
வாய்ப்பெய்யுங் கேதாரமே. **#1239**

தியான பலம் உடையோரும், குதிரை முகமுடைய கின்னரரும், ஒற்றைக் காலுடைய பிரமதகணத்தவரும் இமையவரும் சிவபிரானை வழிபடக் கூடுமிடம், தம்குஞ்சுகள் பசியோடு தம்மை அழைப்பதைக் கேட்டுக் கிளிகள் ஏனற் கதிர்களைக் கொய்து வந்து அவற்றின் வாயிற் பெய்யும் திருக்கேதாரமாகும்.

<u>திருக்கேதாரம்</u>

ஊழியூழி யுணர்வார்கள்
வேதத்தினொண் பொருள்களால்
வாழியெந்தை யெனவந்தி
றைஞ்சும் இடமென்பரால்
மேழிதாங்கி யுழுவார்கள்
போலவ்விரை தேரிய
கேழல்பூழ்தி கிளைக்க
மணிசிந்துங் கேதாரமே. **#1240**

பல்லூழிக்காலம் வேதப் பொருள்களை உணரும் அடியவர்

சிவபெருமானை வாழ்த்தி இறைஞ்சிச் சேரும் இடம், உணவு பெற விரும்பிக் கலப்பையால் உழுவார்க்கு அந்நிலத்தில் மாணிக்க மணிகள் கிடைக்கும் திருக்கேதாரமாகும்.

திருக்கேதாரம்

நீறுபூசி நிலத்துண்டு
நீர்மூழ்கி நீள்வரைதன்மேல்
தேறுசிந்தை யுடையார்கள்
சேரும் இடமென்பரால்
ஏறிமாவின் கனியும்பலா
வின்இருஞ் சுளைகளும்
கீறிநாளும் முசுக்கிளையோ
டுண்டுகளுங் கேதாரமே. **#1241**

நீரில் மூழ்கித் திருநீற்றை அணிந்து, நிலத்திடை உண்டு, நீண்ட மலையின்மேல் தெளந்த சிந்தை உடையவர்களான தாபதர்கள் வாழும் இடம், குரங்குகள் மா,பலா மரங்களில் ஏறி அவற்றின் கனிகளைக் கீறி உண்டு மகிழ்ந்து வாழும் திருக்கேதாரமாகும்.

திருக்கேதாரம்

மடந்தைபாகத் தடக்கிம்
மறையோதி வானோர்தொழத்
தொடர்ந்தநம்மேல் வினைதீர்க்க
நின்றார்க் கிடமென்பரால்
உடைந்தகாற்றுக் குயர்வேங்கை
பூத்துதிரக்கல் லறைகண்மேல்
கிடந்தவேங்கை சினமாமுகஞ்
செய்யுங் கேதாரமே. **#1242**

சிவபிரான் வானோர் தொழுமாறு மறை ஓதியும், மங்கை பங்கராகியும், வேதாகமங்களை அருளியும், அடியவர் வினைகளைத் தீர்த்தற்கு எழுந்தருளி விளங்கும் இடம், காற்றடிக்கப் பூத்த வேங்கை மலர்கள் பாறைகளின் மேல் உதிர்ந்து கிடந்து புலியென மற்ற புலிகளை மருள்விக்கும் திருக்கேதாரமாகும்.

திருக்கேதாரம்

அரவமுந்நீர் அணியிலங்கைக்
கோனையரு வரைதனால்
வெருவவூன்றி விரலா
டலர்த்தார்க் கிடமென்பரால்

குரவங்கோங்கங் குளிர்பிண்டி
ஞாழல்சுர புன்னைமேல்
கிரமமாக வரிவண்டு
பண்செய்யுங் கேதாரமே. **#1243**

கடல்சூழ்ந்த இலங்கை மன்னன் இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தபோது அம்மலைக்கீழ் அகப்படுத்திக் கால்விரலை ஊன்றி அடர்த்த இறைவனுக்கு இடம், குரவம், கோங்கு, அசோகு, ஞாழல், சுரபுன்னை ஆகிய மரங்களில் பூத்த மலர்களில் முறையாக வண்டு பண்செய்து தேனுண்ணும் கேதாரமாகும்.

திருக்கேதாரம்

ஆழ்ந்துகாணா ருயர்ந்தெய்த
கில்லார் அலமந்தவர்
தாழ்ந்துதந்தம் முடிசாய
நின்றார்க் கிடமென்பரால
வீழ்ந்து செற்றுந் நிழற்கிரங்கும்
வேழத்தின்வெண் மருப்பினைக்
கீழ்ந்துசிங்கங் குருகுண்ண
முத்துதிருங் கேதாரமே. **#1244**

பன்றியுருக் கொண்டு மண் இடந்தும் காணாத திருமாலும், அன்னப்புள்ளாய் விண் பறந்தும் காணாத பிரமனும் தாழ்ந்துதம் முடிசாய்த்து வணங்க நின்றவனாகிய சிவபிரானுக்கு உரிய இடம், சிங்கம் யானைமேல் வீழ்ந்து அழித்து அதன்மருப்பைப் பிளந்து குருத்தை உண்ணும்போது முத்துக்கள் மருப்பிலிருந்து உதிரும் கேதாரமாகும்.

திருக்கேதாரம்

கடுக்கள்தின்று கழிமீன்
கவர்வார்கண் மாசுடம்பினர்
இடுக்கணுய்ப்பா ரவரெய்த
வொண்ணா விடமென்பரால்
அடுக்கநின்றவ் வறவுரைகள்
கேட்டாங் கவர்வினைகளைக்
கெடுக்கநின்ற பெருமான்
உறைகின்ற கேதாரமே. **#1245**

துவர்க்காய்களைத் தின்று கழிமீன்களை யாரும் அறியாமல் கவர்ந்து உண்பவரும், மாசு பொருந்திய உடலினரும் மக்களைத் துன்பநெறியில் செலுத்துவோருமாகிய சமணர்கள் சாராத இடம், அருகில் இருந்து அறநெறியான வார்த்தைகளைக் கேட்டு அடியவர் வினைகளைக்

கெடுக்கும் பெருமான் உறையும் கேதாரமாகும்.

திருக்கேதாரம்

வாய்ந்தசெந்நெல் விளைகழனி
மல்கும்வயற் காழியான்
ஏய்ந்தநீர்க்கோட் டிமையோர்
உறைகின்ற கேதாரத்தை
ஆய்ந்துசொன்ன அருந்தமிழ்கள்
பத்தும்மிசை வல்லவர்
வேந்தராகி யுலகாண்டு
வீடுகதி பெறுவரே. **#1246**

வயல்வளம் உடைய காழிநகரில் தோன்றிய ஞானசம்பந்தன், நீர் அருவிகளை உடையதும், இமையோர்கள் உறைவதுமாகிய கேதாரத்து இறைவர்மீது ஆய்ந்து சொன்ன அருந்தமிழ் பத்தையும் இசையோடு பாடி வழிபட வல்லவர். வேந்தராய் உலகை ஆண்டு முடிவில் வீடுகதி பெறுவார்கள்.

திருப்புகலூர்

திருப்புகலூர்

திருப்புகலூர்,
பண் - செவ்வழி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வர்த்தமானீசுவரர்.
தேவியார் : கருந்தார்க்குழலியம்மை.

வெங்கள்விம்மு குழலிளைய
ராடவ்வெறி விரவுநீர்ப்
பொங்குசெங்கட் கருங்கயல்கள்
பாயும்புக லூர்தனுள்
திங்கள்சூடித் திரிபுரம்ஓர்
அம்பால்எரி யூட்டிய
எங்கள்பெம்மான் அடிபரவ
நாளும்இடர் கழியுமே. **#1247**

விரும்பத்தக்க தேன் விம்மும் மலர்கள் கூடிய கூந்தலினராகிய இளம்பெண்கள் ஆட, மணம் விரவும் நீர்நிலையில் வாழும் செம்மைமிக்க கண்களை உடைய கரிய கயல்மீன்கள் துள்ளிப் பாயும் புகலூரில் விளங்கும் திங்கள் சூடித் திரிபுரங்கள் ஓரம்பால் எரியூட்டிய எங்கள் பெருமான் திருவடிகளைப்பரவ இடர் கெடும்.

திருப்புகலூர்

வாழ்ந்தநாளும் இனிவாழு
நாளும்இவை யறிதிரேல்
வீழ்ந்தநாளெம் பெருமானை
யேத்தாவிதி யில்லிகாள்
போழ்ந்ததிங்கட் புரிசடையி
னான்றன் புகலூரையே
சூழ்ந்தவுள்ளம் முடையீர்கள்
உங்கள்துயர் தீருமே. **#1248**

இதுவரை வாழ்ந்த நாளையும் இனி வாழும் நாளையும் அறிவீரேயானால் எம்பெருமானை ஏத்தாத நாள்கள் வீழ்ந்த நாட்கள் என்றறிந்தும், எம்பெருமானை ஏத்தும் நல்லூழாகிய விதி இல்லாதவர்களே! பிறை மதிசூடிய சடையினான்தன் புகலூரை மறவாது நினையும் உள்ளம் உடையீர்களாயின் உங்கள் துயர் தீரும்.

திருப்புகலூர்

மடையின்நெய்தல் கருங்குவளை
செய்யமலர்த் தாமரை
புடைகொள்செந்நெல் விளைகழனி
மல்கும்புக லூர்தனுள்
தொடைகொள்கொன்றை புனைந்தானொர்
பாகம்மதி சூடியை
அடையவல்லவர் அமருலகம்
ஆளப்பெறு வார்களே. **#1249**

மடைகளில் நெய்தல், குவளை, செந்தாமரைமலர் ஆகியன விளங்க, அருகில் செந்நெல் விளையும் வயல்களை உடைய புகலூரில் தன்பாகத்தே கொன்றை மாலை சூடி மதிபுனைந்து உமையோடு விளங்கும் சிவபிரானை அடைய வல்லவர் அமருலகு ஆள்வர்.

திருப்புகலூர்

பூவுநநீரும் பலியுஞ்
சுமந்து புகலூரையே
நாவினாலே நவின்றேத்த
லோவார்செவித் துளைகளால்
யாவுங்கேளார் அவன்பெருமை
யல்லால்அடி யார்கடாம்
ஓவும்நாளும் உணர்வொழிந்த
நாளென் றுள்ளங்கொள்ளவே. **#1250**

பூவும், நீரும், நிவேதனப் பொருள்களும் எடுத்துவந்து புகலூரை அடைந்து, அங்குள்ள பெருமானை நாவினால் நவின்று, ஏத்த வல்லவராய், செவிகளால் அவன் பெருமையல்லால் யாதும் கேளாதவராய்த் தொண்டுபூண்ட அடியவர்களே இறைவனை நினைதல் பேசுதல் இல்லாத நாள்களைப் பயனின்றிக் கழிந்த நாள் என்றும் உணர்வு ஒழிந்த நாள் என்றும் கருதுவர்.

திருப்புகலூர்

அன்னங்கன்னிப் பெடைபுல்கி
யொல்கியணி நடையவாய்ப்
பொன்னங்காஞ்சி மலர்ச்சின்ன
மாலும்புக லூர்தனுள்
முன்னம்மூன்று மதிலெரித்த
மூர்த்திதிறங் கருதுங்கால்

இன்னரென்னப் பெரிதரியர்
ஏத்தச் சிறிதெளயரே. **#1251**
அன்னங்கள் கன்னிப் பெடைகளைத் தழுவி ஒதுங்கி அழகிய நடையினவாய்ப் பொன்போன்று அலரும் காஞ்சி மரங்களின் நிழலில் ஆரவாரிக்கும் புகலூரில், முன் நாளில் முப்புரங்களை எரித்த மூர்த்தியின் இயல்புகளைக் கருதுமிடத்து இத்தகையவர் என்னப் பெரிதும் அரியராய் அடியார்கள் ஏத்த மிக எளியவர் ஆவர்.

<u>திருப்புகலூர்</u>

குலவராகக் குலமிலரும்
மாகக்குணம் புகழுங்கால்
உலகினல்ல கதிபெறுவ
ரேனும்மலர் ஊறுதேன்
புலவமெல்லாம் வெறிகமழும்
அந்தண்புக லூர்தனுள்
நிலவமல்கு சடையடிகள்
பாதம் நினைவார்களே. **#1252**
உயர் குலத்தினராயினும் அல்லாதவராயினும் அவருடைய குணங்களைப் புகழுமிடத்து அவர் நற்கதி பெறுவர். ஆதலின், அடியவர்கள் மலர்களில் விளைந்த தேனால், புலால் நாறும் இடங்களிலும் மணம் வீசுகின்ற, அழகிய புகலூரில் பிறையணிந்த சடையுடைய அடிகளின் திருவடிகளையே நினைவார்கள்.

<u>திருப்புகலூர்</u>

ஆணும்பெண்ணும் மெனநிற்ப
ரேனும்அர வாரமாப்
பூணுமேனும் புகலூர்தனக்
கோர்பொரு ளாயினான்
ஊணும்ஊரார் இடுபிச்சை
யேற்றுண்டுடை கோவணம்
பேணுமேனும் பிரானென்ப
ரால்எம்பெரு மானையே. **#1253**
புகலூரைத் தமக்குரிய இடமாகக் கொண்ட இறைவர் ஆணும் பெண்ணுமான வடிவுடையரேனும், பாம்புகளை உடல் முழுதும் அணிகலன்களாகப் பூண்பவரேனும், ஊரார் இடும்பிச்சையை ஏற்று உண்பவரேனும், கோவணம் ஒன்றையே உடையாகக் கொண்டவரேனும், அடியவர் அவரையே பிரான் என்பர்.

திருப்புகலூர்

உய்யவேண்டில் எழுபோத
நெஞ்சேயுயர் இலங்கைக்கோன்
கைகளொல்கக் கருவரை
யெடுத்தானை யோர்விரலினால்
செய்கைதோன்றச் சிதைத்தருள
வல்லசிவன் மேயபூம்
பொய்கைசூழ்ந்த புகலூர்
புகழப் பொருளாகுமே. **#1254**

நெஞ்சே! உய்தி பெற வேண்டில் எழுக, போதுக; உயரிய இலங்கைக்கு அரசனாகிய இராவணனை, கைகளால் கயிலை மலையைப் பெயர்த்தவனை ஓர் விரலால் தன் வன்மை தோன்றச் சிதைத்து அருளவல்ல சிவன் மேவிய, பூம் பொய்கை சூழ்ந்த புகலூரைப் புகழ்ந்து போற்ற அதுவே அடைதற்குரிய மெய்ப் பொருள் ஆகும்.

திருப்புகலூர்

நேமியானும் முகநான்
குடையந்நெறி யண்ணலும்
ஆமிதென்று தகைந்தேத்தப்
போயாரழ லாயினான்
சாமிதாதை சரணாகு
மென்றுதலை சாய்மினோ
பூமியெல்லாம் புகழ்செல்வம்
மல்கும் புகலூரையே. **#1255**

சக்கராயுதம் உடைய திருமாலும், நான்முகனும் இதுவே ஏற்ற வழி எனக்கூறுபடுத்திப் பன்றியாயும் அன்னமாயும் வடிவு கொண்டு தேட அழலுரு ஆனவனும் முருகனின் தந்தையும் ஆகிய புகலூர்ப் பெருமானே நாம் சரண் அடைதற்குரியவன் ஆவன், என்று தலைதாழ்த்தி வணங்குமின் உலகம் புகழும் செல்வமும் நலமும் நிறையும்.

திருப்புகலூர்

வேர்த்தமெய்யர் உருவத்
துடைவிட் டுழல்வார்களும்
போர்த்தகூறைப் போதிநீழ
லாரும் புகலூர்தனுள்
தீர்த்தமெல்லாஞ் சடைக்கரந்த
தேவன்திறங் கருதுங்கால்

ஓர்த்துமெய்யென் றுணராது
பாதந்தொழு துய்ம்மினே. **#1256**
வியர்வை தோன்றிய உடலினோரும், உடலில்
உடையின்றித்திரிபவரும், ஆடையைப் போர்த்திக் கொண்டு
அரசமரநிழலில் உறைவாரும் ஆகிய சமணரும் புத்தரும் கூறும்
நெறிகளை விடுத்து, புகலூரில் கங்கைசூடிய பெருமான் திருவடிகளைக்
கருதி வழிபடுமிடத்து அவனுடைய இயல்புகளை ஆராய முற்படாமல்
அவன் திருவடிகளை வணங்கி உய்மின்.

<u>திருப்புகலூர்</u>

புந்தியார்ந்த பெரியோர்கள்
ஏத்தும் புகலூர்தனுள்
வெந்தசாம்பற் பொடிப்பூச
வல்லவிடை யூர்தியை
அந்தமில்லா அனலாட
லானையணி ஞானசம்
பந்தன்சொன்ன தமிழ்பாடி
யாடக்கெடும் பாவமே. **#1257**
அறிவார்ந்த பெரியோர்கள் ஏத்தும் புகலூரில் நன்கு வெந்த திருநீற்றுப்
பொடியைப் பூசவல்லவனும் விடையூர்த்தியனும்,, அழிவற்ற அனலில்
நின்று ஆடுபவனும் ஆகிய பெருமானை ஞான சம்பந்தன் சொன்ன
இத்தமிழ்மாலையைப் பாடி, ஆடிப் போற்ற, பாவம் கெடும்.

திருநாகைக்காரோணம்

திருநாகைக்காரோணம்

திருநாகைக்காரோணம்,
பண் - செவ்வழி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காயாரோகணேசுவரர்.
தேவியார் : நீலாயதாட்சியம்மை.

கூனல்திங்கட் குறுங்கண்ணி
கான்றந்நெடு வெண்ணிலா
ஏனற்பூத்தம் மராங்கோதை
யோடும்விரா வுஞ்சடை
வானநாடன் அமரர்பெரு
மாற்கிட மாவது
கானல்வேலி கழிசூழ்
கடல்நாகைக் காரோணமே. **#1258**

வளைந்த பிறையாகிய சிறிய தலைமாலை, ஒளி உமிழும் வெண்ணிலவில் குறிஞ்சி நிலத்தில் தினைக்கொல்லையில் பூத்த கடம்பமலர் மாலை ஆகியவற்றைப் புனைந்த சடையை உடைய வானநாடனும், அமரர் பெருமானும் ஆகிய இறைவற்கு இடமாவது சோலைகளை வேலியாகக் கொண்டதும் உப்பங்கழிகளை உடையதுமாகிய கடல்நாகைக்காரோணமாகும்.

திருநாகைக்காரோணம்

விலங்கலொன்று சிலையாமதில்
மூன்றுடன் வீட்டினான்
இலங்குகண்டத் தெழிலாமை
பூண்டாற் கிடமாவது
மலங்கியோங்கிவ் வருவெண்டிரை
மல்கிய மால்கடல்
கலங்கலோதங் கழிசூழ்
கடல்நாகைக் காரோணமே. **#1259**

மேருமலை ஒன்றை வில்லாகக் கொண்டு மும்மதில்களை அழித்தவனும் அழகிய கழுத்தில் ஆமை ஓட்டைப் பூண்டவனும் ஆகிய இறைவனுக்கு இடம், கலங்கி ஓங்கி வரும் வெண் திரைகளை உடைய கடலின் கரையில் கலங்கிய நீர்ப்பெருக்கோடு கூடிய கழிகள் சூழ்ந்த கடல் நாகைக்காரோணமாகும்.

திருநாகைக்காரோணம்

வெறிகொளாருங் கடற்கைதை
நெய்தல்விரி பூம்பொழில்
முறிகொண்ஞாழல் முடப்புன்னை
முல்லைமுகை வெண்மலர்
நறைகொள்கொன்றைந் நயந்தோங்கு
நாதற் கிடமாவது
கறைகொளோதங் கழிசூழ்
கடல்நாகைக் காரோணமே. **#1260**

தளிர்களோடு கூடிய ஞாழல்மலர், வளைந்த புன்னை மரத்தில் பூத்தமலர்கள், வெள்ளிய முல்லையரும்புகள், தேன் நிறைந்த கொன்றைமலர் ஆகியவற்றை விரும்பி அணியும் பெருமானுக்கு இடம், மணம் கமழும் தாழைமலர், நெய்தல்மலர் ஆகியவை நிறைந்த பொழில்களால் சூழப்பட்ட, கரிய ஓதம் பரவி விளங்கும் கடல் நாகைக்காரோணமாகும்.

திருநாகைக்காரோணம்

வண்டுபாட வளர்கொன்றை
மாலைமதி யோடுடன்
கொண்டகோலங் குளிர்கங்கை
தங்குங்குருள் குஞ்சியுள்
உண்டுபோலும் மெனவைத்து
கந்தவொரு வற்கிடம்
கண்டல்வேலி கழிசூழ்
கடல்நாகைக் காரோணமே. **#1261**

வண்டுகள் பாடுமாறு மலர்ந்த கொன்றை மலர் மாலையை இளம்பிறையோடு ஒருசேர அணிந்து, சுருண்ட சடையுள் குளிர்ந்த கங்கையை ஐயப்படுமாறு மறைத்துவைத்து, மகிழ்ந்த இறைவனுக்கு இடம், தாழைவேலி சூழ்ந்ததும் உப்பங்கழிகள் நிறைந்ததும் ஆகிய கடல் நாகைக்காரோணமாகும்.

திருநாகைக்காரோணம்

வார்கொள்கோலம் முலைமங்கை
நல்லார்மகிழ்ந் தேத்தவே
நீர்கொள்கோலச் சடைநெடு
வெண்திங்கள் நிகழ்வெய்தவே
போர்கொள்சூலப் படைபுல்கு

கையார்க் கிடமாவது
கார்கொளோதங் கழிசூழ்
கடல்நாகைக் காரோணமே. **#1262**

நல்லவர் மகிழ்ந்தேத்த, கச்சணிந்த தனங்களை உடைய உமையம்மையோடு கூடிய அழகோடு, தண்மையான அழகிய சடையில் நீண்டநிலாக்கதிர்களைப் பரப்பும் இளம்பிறை விளங்கப் போருடற்றும் சூலப்படையைக் கையின்கண் கொண்டுவிளங்கும் சிவபிரானுக்குரிய இடம் ஓதம் பெருகும் கரிய கழிகள் சூழ்ந்த கடல் நாகைக் காரோணமாகும்.

திருநாகைக்காரோணம்

விடையதேறிவ் விடவர
வசைத்தவ் விகிர்தரவர்
படைகொள்பூதம் பலபாட
ஆடும்பர மரவர்
உடைகொள்வேங்கை யுரிதோ
லுடையார்க் கிடமாவது
கடைகொள்செல்வங் கழிசூழ்
கடல்நாகைக் காரோணமே. **#1263**

விடைமீது ஏறி வருபவனும், விடம்பொருந்திய பாம்பை இடையில்கட்டிய விகிர்தனும், பூதப்படைகள் பாட ஆடும் பரமனும், புலித்தோலை உடையாக உடுத்தவனும் ஆகிய சிவபெருமானுக்குரிய இடம், மீன்களாகிய செல்வங்கள் நிறைந்த கழிசூழ்ந்த கடல்நாகைக்காரோணமாகும்.

திருநாகைக்காரோணம்

பொய்துவாழ்வார் மனம்பாழ்
படுக்கும் மலர்ப்பூசனை
செய்துவாழ்வார் சிவன்சேவடிக்கே
செலுஞ் சிந்தையார்
எய்தவாழ்வார் எழில்நக்க
ரெம்மாற் கிடமாவது
கைதல்வேலி கழிசூழ்
கடல்நாகைக் காரோணமே. **#1264**

மனத்தைப் பாழ்படுத்தி வாழும் பொய்ம்மை வாழ்வுடையாரும், சிவன் சேவடிக்கே செல்லும் சிந்தையராய் மலர் தூவிப் பூசனைசெய்து வாழ் அடியவரும் தம்மை எய்தவாழ்வாராகிய அழகிய பெருமானுக்கு இடம், தாழைவேலியையும் உப்பங் கழிகளையும் உடைய கடல்

நாகைக்காரோணமாகும்.

திருநாகைக்காரோணம்

பத்திரட்டி திரடோ
ளுடையான் முடிபத்திற
வத்திரட்டி விரலா
லடர்த்தார்க் கிடமாவது
மைத்திரட்டிவ் வருவெண்டிரை
மல்கிய மால்கடல்
கத்திரட்டுங் கழிசூழ்
கடனாகைக் காரோணமே. **#1265**

இருபது தோள்களை உடைய இராவணனுடைய பத்துத் தலைகளும் நெரியச் சிவந்த கால் விரல்களால் அடர்த்த பெருமானுக்குரிய இடம், கரிய மணலைத்திரட்டி வரும் வெண்திரைகளை உடைய பெரியகடலைச் சூழ்ந்துள்ள கழிகள் ஒளிசிறந்து ஒலியெழுப்பும் கடல் நாகைக்காரோணமாகும்.

திருநாகைக்காரோணம்

நல்லபோதில் லுறைவானு
மாலுந் நடுக்கத்தினால்
அல்லராவ ரெனநின்ற
பெம்மாற் கிடமாவது
மல்லலோங்கிவ் வருவெண்டிரை
மல்கிய மால்கடல்
கல்லலோதங் கழிசூழ்
கடனாகைக் காரோணமே. **#1266**

நல்ல தாமரை மலரில் உறையும் நான்முகனும், திருமாலும் நடுக்கத்தால் இவரே சிவபரஞ்சுடர் எனவும் அல்லர் எனவும் ஐயுற நின்ற பெருமானுக்குரிய இடம், வளமோங்கிவரும் வெள்ளிய அலைகள் நிரம்பிய பெரிய கடலினது ஒலிக்கும் ஓதங்களையுடைய கழிகள் சூழ்ந்த கடல் நாகைக்காரோணமாகும்.

திருநாகைக்காரோணம்

உயர்ந்தபோதின் னுருவத்
துடைவிட் டுழல்வார்களும்
பெயர்ந்தமண்டை யிடுபிண்ட
மாவுண் டுழல்வார்களும்
நயந்துகாணா வகைநின்ற

நாதர்க் கிடமாவது
கயங்கொளோதங் கழிசூழ்
கடல்நாகைக் காரோணமே. **#1267**
தாமரைமலர் போன்று சிவந்த கல்லாடையை உடுத்தவர்களும்
உடையின்றித் திரிபவர்களும் கையில் ஏந்திய மண்டையில் பிறர் இடும்
பிச்சையை உணவாகக் கொண்டு உழல்பவரும் ஆகிய புத்தர்களும்
சமணர்களும் விரும்பிக் காணாதவாறு நின்ற பெருமானுக்கு உரிய இடம்
ஆழமும் நீர்ப் பெருக்கும் உடைய கழிகள் சூழ்ந்து விளங்கும்
கடல்நாகைக் காரோணமாகும்.

திருநாகைக்காரோணம்

மல்குதண்பூம் புனல்வாய்ந்
தொழுகும்வயற் காழியான்
நல்லகேள்வித் தமிழ்ஞான
சம்பந்தன்நல் லார்கள்முன்
வல்லவாறே புனைந்தேத்துங்
காரோணத்து வண்தமிழ்
சொல்லுவார்க்கும் இவைகேட்ப
வர்க்குந்துய ரில்லையே. **#1268**
நீர்நிறைந்த வயல்களால் சூழப்பட்ட சீகாழிப் பதியில் தோன்றியவரும்
நல்ல கேள்வியை உடையவரும் ஆகிய தமிழ் ஞானசம்பந்தர்
நல்லோர்கள்முன் வல்லவாறு பாடிய காரோணத்துத் திருப்பதிகமாகிய
இவ்வண்தமிழைச் சொல்பவர்கட்கும் கேட்பவர்கட்கும் துன்பம் இல்லை.

திருஇரும்பைமாகாளம்

திருஇரும்பைமாகாளம்

திருஇரும்பைமாகாளம்,
பண் - செவ்வழி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாகாளேசுவரர்.
தேவியார் : குயிலம்மை.

மண்டுகங்கை சடையிற்
கரந்தும் மதிசூடிமான்
கொண்டகையாற் புரமூன்
றெரித்த குழகன்னிடம்
எண்டிசையும் புகழ்போய்
விளங்கும் இரும்பைதனுள்
வண்டுகீதம் முரல்பொழில்
சுலாய்நின்ற மாகாளமே. **#1269**

கங்கையைச் சடையில் கரந்து, பிறைமதியைச் சூடி, மான் ஏந்திய கையால் கணைதொடுத்து முப்புரங்களை எரித்த குழகனது இடம், எண்திசையும் புகழ்பெற்று விளங்கும் திருஇரும்பை நகரில் உள்ளதும் வண்டுகள் இசைபாடி முரலும் பொழில் சூழ்ந்து விளங்குவதுமாகிய திருமாகாளமாகும்.

திருஇரும்பைமாகாளம்

வேதவித்தாய் வெள்ளைநீறு
பூசி வினையாயின
கோதுவித்தா நீறெழக்
கொடிமா மதிலாயின
ஏதவித்தா யினதீர்க்
கும்மிடம் இரும்பைதனுள்
மாதவத்தோர் மறையோர்
தொழநின்ற மாகாளமே. **#1270**

வேதவித்தாய், வெண்ணீறுபூசி, வினைகள் யாவற்றையும் அழித்து, கொடிய திரிபுரங்களை நீறெழச் செய்து, குற்றங்களுக்கு விதையானவற்றைத் தீர்த்து, அருள்புரியும் சிவபிரானது இடம், திருஇரும்பை நகரில் உள்ளதும், மாதவத் தோரும் மறையோரும் தொழ நின்றதுமான திருமாகாளமாகும்.

திருஇரும்பைமாகாளம்

வெந்தநீறும் எலும்பும்
அணிந்த விடையூர்தியான்
எந்தைபெம்மா னிடம்எழில்
கொள்சோலை யிரும்பைதனுள்
கந்தமாய பலவின்
கனிகள் கமழும்பொழில்
மந்தியேறிக் கொணர்ந்துண்
டுகள்கின்ற மாகாளமே. **#1271**

திருவெண்ணீற்றையும் எலும்பையும் அணிந்தவனும், விடைஊர்தியனும், எந்தையும், தலைவனுமாகிய இறைவனது இடம், அழகிய சோலைகள் சூழ்ந்ததும் மணம் கமழும் பலாக்கனிகளை மந்திகள் ஏறிப் பறித்து உண்டு திரியும் பொழில்கள் சூழ்ந்ததுமாகிய திருஇரும்பை நகரில் உள்ள திருமாகாளம் ஆகும்.

திருஇரும்பைமாகாளம்

நஞ்சுகண்டத் தடக்கி
நடுங்கும் மலையான்மகள்
அஞ்சவேழம் உரித்த
பெருமான் அமரும்மிடம்
எஞ்சலில்லாப் புகழ்போய்
விளங்கும் இரும்பைதனுள்
மஞ்சிலோங்கும் பொழில்சூழ்ந்
தழகாய மாகாளமே. **#1272**

நஞ்சைக் கண்டத்தில் அடக்கியவரும், மலைமகள் அஞ்சி நடுங்க யானையை உரித்தவருமான பெருமான் அமரும் இடம், குன்றாத புகழ் விளங்கும் திருஇரும்பை நகரில் உள்ளதும் மேகங்கள் தோயும் பொழில்கள் சூழ்ந்ததுமாகிய அழகிய திருமாகாளமாகும்.

திருஇரும்பைமாகாளம்

பூசுமாசில் பொடியான்
விடையான் பொருப்பான்மகள்
கூசவானை யுரித்தபெரு
மான்குறை வெண்மதி
ஈசனெங்கள் இறைவன்
னிடம்போல் இரும்பைதனுள்
மாசிலோர்கண் மலர்கொண்

டணிகின்ற மாகாளமே. **#1273**
நஞ்சைக் கண்டத்தில் அடக்கியவரும், மலைமகள் அஞ்சி நடுங்க யானையை உரித்தவருமான பெருமான் அமரும் இடம், குன்றாத புகழ் விளங்கும் திருஇரும்பை நகரில் உள்ளதும் மேகங்கள் தோயும் பொழில்கள் சூழ்ந்ததுமாகிய அழகிய திருமாகாளமாகும்.

திருஇரும்பைமாகாளம்

குறைவதாய குளிர்திங்கள்
சூடிக் குனித்தான்வினை
பறைவதாக்கும் பரமன்
பகவன் பரந்தசடை
இறைவனெங்கள் பெருமான்
இடம்போல் இரும்பைதனுள்
மறைகள்வல்லார் வணங்கித்
தொழுகின்ற மாகாளமே. **#1274**
கலைகள் குறைந்த பிறைமதியைச் சூடிக் கூத்தாடிய வரும்,வினைகளை அழிக்கும் பரமரும், தூய்தான ஆறுகுணங்களை உடையவரும், பரவலான சடைகளை உடைய இறைவரும், எங்கள் பெருமானுமாகிய இறைவரது இடம் திருஇரும்பை நகரில் வேத வித்துக்கள் வழிபடும் திருமாகாளமாகும்.

திருஇரும்பைமாகாளம்

பொங்குசெங்கண் அரவும்
மதியும் புரிபுன்சடைத்
தங்கவைத்த பெருமானென
நின்றவர் தாழ்விடம்
எங்குமிச்சை யமர்ந்தான்
இடம்போல் இரும்பைதனுள்
மங்குல்தோயும் பொழில்சூழ்ந்
தழகாய மாகாளமே. **#1275**
சடையில் பாம்பையும் பிறையும் பகை நீக்கித் தங்க வைத்த பெருமானும், எவ்விடத்தும் விருப்போடு எழுந்தருளி விளங்குபவனுமாகிய இறைவனது இடம் திருஇரும்பையூரில் வானளாவிய பொழில்கள் சூழ்ந்து விளங்கும் திருமாகாளம் ஆகும்.

திருஇரும்பைமாகாளம்

நட்டத்தோடு நரியாடு
கானத்தெரி யாடுவான்

அட்டமூர்த்தி யழல்போ
லுருவன் அழகாகவே
இட்டமாக இருக்கும்
இடம்போல் இரும்பைதனுள்
வட்டஞ்சூழ்ந்து பணிவார்
பிணிதீர்க்கும் மாகாளமே. **#1276**

நரிகள் விளையாடும் இடுகாட்டில் எரியேந்தி நடனம் புரிபவரும், அட்டமூர்த்தி வடிவினரும், அழல் உருவினரும் ஆகிய இறைவர் விருப்போடு எழுந்தருளிய இடம் திருஇரும்பை நகரில் உள்ளதும் வலம் வந்து தொழுவார் பிணிகளைத் தீர்ப்பதுமாகிய திருமாகாளமாகும்.

<u>திருஇரும்பைமாகாளம்</u>

அட்டகாலன் றனைவவ்
வினான்அவ் வரக்கன்முடி
எட்டுமற்றும் மிருபத்திரண்
டும்இற வூன்றினான்
இட்டமாக விருப்பா
னவன்போல் இரும்பைதனுள்
மட்டுவார்ந்த பொழில்சூழ்ந்
தெழிலாரும் மாகாளமே. **#1277**

மார்க்கண்டேயரோடு போராடிய காலனுயிரைக் கவர்ந்தவரும், இராவணன் பத்துத்தலைகளும் இருபது தோள்களும் நெரியுமாறு திருவடியை ஊன்றியவரும், ஆகிய சிவபிரான் இட்டமாக இருக்குமிடம் திருஇரும்பை நகரில் விளங்குவதும் தேனார்ந்த பொழில் சூழ்ந்துள்ளதுமான திருமாகாளமாகும்.

<u>திருஇரும்பைமாகாளம்</u>

அரவமார்த்தன் றனலங்கை
யேந்தி யடியும்முடி
பிரமன்மாலும் அறியாமை
நின்ற பெரியோனிடம்
குரவமாரும் பொழிற்குயில்கள்
சேரும் இரும்பைதனுள்
மருவிவானோர் மறையோர்
தொழுகின்ற மாகாளமே. **#1278**

பாம்பைத் தம் இடையில் கட்டிக்கொண்டு, அனலை அங்கையில் ஏந்தி, பிரமன், மால் ஆகியோர் அடிமுடி அறியாதவாறு ஓங்கிநின்ற பெரியோன் இடம், குயில்கள் வாழும் குரா மரங்கள் நிறைந்த பொழில்

சூழ்ந்த திரு இரும்பை நகரில் உள்ள வானோரும் மறையோரும் தொழும் திருமாகாளமாகும்.

திருஇரும்பைமாகாளம்

எந்தையெம்மான் இடம்எழில்
கொள்சோலை யிரும்பைதனுள்
மந்தமாய பொழில்சூழ்ந்
தழகாரு மாகாளத்தில்
அந்தமில்லா அனலாடு
வானையணி ஞானசம்
பந்தன்சொன்ன தமிழ்பாட
வல்லார்பழி போகுமே. **#1279**

எந்தையும் எங்கள் தலைவனும் ஆகிய சிவபிரான் விளங்குவதும் திருஇரும்பையில் விளங்கும் தென்றல் வந்துலவும் பொழில்கள் சூழ்ந்ததுமாகிய திருமாகாளத்தில் முடிவற்ற நிலையில் அனலாடும் இறைவன் மீது ஞானசம்பந்தன் பாடிய இத்திருப்பதிகத் தமிழை ஓதுபவர்களின் பழிகள் போகும்.

திருத்திலதைப்பதி

திருத்திலதைப்பதி

திருத்திலதைப்பதி,
பண் - செவ்வழி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மதிமுத்தநாதேசுவரர்.
தேவியார் : பொற்கொடியம்மை.

பொடிகள்பூசிப் பலதொண்டர்
கூடிப் புலர்காலையே
அடிகளாரத் தொழுதேத்த
நின்ற அழகன்னிடம்
கொடிகளோங்கிக் குலவும்
விழவார் திலதைப்பதி
வடிகொள்சோலைம் மலர்
மணங்கமழும் மதிமுத்தமே. **#1280**

வைகறைப்போதில் தொண்டர்கள் பலரும் கூடி நியமங்களை முடித்துத் திருநீற்றுப் பொலிவோடு திருவடிகளை மனமாரத் தொழுதேத்தநின்ற அழகனது இடம், கொடிகள் ஓங்கி அசைந்தாடுவதும் திருவிழாக்கள் இடையறாமல் நிகழ்வதுமாகிய திருத்திலதைப்பதியிலுள்ள அழகிய சோலைகளின் மலர்கள் மணம் கமழ்ந்து விளங்கும் மதிமுத்தம் கோயிலாகும்.

திருத்திலதைப்பதி

தொண்டர்மிண்டிப் புகைவிம்மு
சாந்துங்கமழ் துணையலும்
கொண்டுகண்டார் குறிப்புணர
நின்ற குழகன்னிடம்
தெண்டிரைப்பூம் புனலரிசில்
சூழ்ந்த திலதைப்பதி
வண்டுகெண்டுற் றிசைபயிலுஞ்
சோலைம் மதிமுத்தமே. **#1281**

தெளிந்த நீரையுடைய அரிசிலாற்றங்கரையிலமைந்த திலதைப்பதியில் விளங்குவதும், வண்டுகள் கெண்டி இசை பயிலும் மலர்களை உடைய சோலைகளால் சூழப்பெற்றதுமாகிய மதிமுத்தம், நெருங்கிவந்து நறுமணப் புகையும் சாந்தமும் மாலைகளும் கொண்டு வழிபடும் அடியார்களின் கருத்தறிந்து. அவர்கட்கு அருள் புரியும் குழகன்

இடமாகும்.

திருத்திலதைப்பதி

அடலுளேறுய்த் துகந்தான்
அடியார் அமரர்தொழக்
கடலுள்நஞ்ச அமுதாக
வுண்ட கடவுள்ளிடம்
திடலடங்கச் செழுங்கழனி
சூழ்ந்த திலதைப்பதி
மடலுள்வாழைக் கனிதேன்
பிலிற்றும் மதிமுத்தமே. **#1282**

திடல்களைச்சுற்றி வயல்கள் சூழ்ந்து விளங்குவதும், மடல்வழியாக வாழைக்கனிசாறு ஒழுகுவதும் ஆகிய வளங்களை உடைய திலதைப்பதியிலுள்ள மதிமுத்தம், வலிய விடையை ஏறிச் செலுத்தி மகிழ்பவரும், அடியார்களும் அமரர்களும் தொழுமாறு கடலுள் எழுந்த நஞ்சை அமுதாக உண்டருளியவருமாகிய கடவுள் விரும்பி உறையுமிடமாகும்.

திருத்திலதைப்பதி

கங்கைதிங்கள் வன்னிதுன்
எருக்கின்னொடு கூவிளம்
வெங்கண்நாகம் விரிசடையில்
வைத்த விகிர்தன்னிடம்
செங்கயல்பாய் புனலரிசில்
சூழ்ந்த திலதைப்பதி
மங்குல்தோயும் பொழில்சூழ்ந்
தழகார் மதிமுத்தமே. **#1283**

கயல்மீன்கள் பாய்ந்து விளையாடும் நீரை உடைய அரிசிலாறு சூழ்ந்ததும், மேகம் தோயும் பொழில்கள் சூழ்ந்ததுமாகிய திலதைப்பதியில் விளங்கும் அழகிய மதிமுத்தம், கங்கை, பிறை, வன்னி, எருக்கு, கூவிளம், நாகம் ஆகியவற்றைத் தம் விரிசடையில் வைத்த விகிர்தனின் இடமாகும்.

திருத்திலதைப்பதி

புரவியேழும் மணிபூண்
டியங்குங்கொடித் தேரினான்
பரவிநின்று வழிபாடு
செய்யும்பர மேட்டியூர்

விரவிஞாழல் விரிகோங்கு
வேங்கைசுர புன்னைகள்
மரவமவ்வல் மலருந்
திலதைம் மதிமுத்தமே. #1284

ஞாழல், கோங்கு, வேங்கை, சுரபுன்னை, கடம்பு, முல்லை ஆகியன மலரும் பூங்காவை உடைய திலதைப்பதியிலுள்ள மதிமுத்தம், மணிகள் கட்டிய ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட கொடித்தேரைச் செலுத்தும் சூரியன் நின்று வழிபாடு செய்யும் இறைவனது ஊராகும்.

திருத்திலதைப்பதி

விண்ணர்வேதம் விரித்தோத
வல்லார் ஒருபாகமும்
பெண்ணர்எண்ணார் எயில்
செற்றுகந்த பெருமானிடம்
தெண்ணிலாவின் ஒளிதீண்டு
சோலைத் திலதைப்பதி
மண்ணுளார்வந் தருள்பேண
நின்றம் மதிமுத்தமே. #1285

விண்ணுலகிலுள்ளவரும், வேதங்களை அருளியவரும், ஒரு பாகமாக உமையம்மையை உடையவரும், தம்மை எண்ணாத திரிபுரத்தசுரர்களின் கோட்டைகளை அழித்துப் பின் அவர் கட்கு அருள் செய்தவரும் ஆகிய பெருமான் உறையும் இடம், தௌந்த நிலாவொளி வீசும் சோலைகள் சூழ்ந்ததும் மண்ணுலகில் உள்ளவர் அருள் பெற வழிபடுவதுமாகிய திலதைப்பதியிலுள்ள மதி முத்தமாகும்.

திருத்திலதைப்பதி

ஆறுசூடி யடையார்புரஞ்
செற்றவர் பொற்றொடி
கூறுசேரும் முருவர்க்
கிடமாவது கூறுங்கால்
தேறலாரும் பொழில்
சூழ்ந்தழகார் திலதைப்பதி
மாறிலாவண் புனலரிசில்
சூழ்ந்தம் மதிமுத்தமே. #1286

கங்கையைத் தலையில் சூடியவர். திரிபுரப் பகைவருடைய கோட்டைகளை அழித்தவர். மாதொரு கூறர். அவ்விறைவர்க் குரிய இடம், தேன் பொருந்திய பொழில்கள் சூழ்ந்ததும், அழகியதும், நீர்வற்றாத அரிசிலாற்றினால் சூழப்பெற்றதுமாகிய திலதைப்பதியி

லுள்ள மதிமுத்தமாகும்.

திருத்திலதைப்பதி

கடுத்துவந்த கனன்மேனி
யினான்கரு வரைதனை
எடுத்தவன்றன் முடிதோள்
அடர்த்தார்க் கிடமாவது
புடைக்கொள்பூகத் திளம்பாளை
புல்கும் மதுப்பாயவாய்
மடுத்துமந்தி யுகளுந்
திலதைம் மதிமுத்தமே. **#1287**

சினத்தோடுவந்த கார்மேகம் போலும் நிறத்தை உடைய இராவணன் வலிய கயிலைமலையை எடுக்க, அவனுடைய முடிதோள் ஆகியவற்றை அடர்த்த இறைவனது இடம், தழைத்து வளர்ந்த பாக்குமரத்தின் இளம்பா வழியாய்ப் பாயும் தேனை உண்டு மந்திகள் விளையாடும் திலதைப்பதியிலுள்ள மதிமுத்தமாகும்.

திருத்திலதைப்பதி

படங்கொணாகத் தணையானும்
பைந்தா மரையின்மிசை
இடங்கொணால்வே தனுமேத்த
நின்ற இறைவன்னிடம்
திடங்கொள்நாவின் இசைதொண்டர்
பாடுந் திலதைப்பதி
மடங்கல்வந்து வழிபாடு
செய்யும் மதிமுத்தமே. **#1288**

ஆயிரம் தலைகளை உடைய ஆதிசேடனைத் தன் படுக்கையாகக்கொண்ட திருமாலும், புதியதாமரைமலரில் விளங்கி வேதங்களை ஓதும் நான்முகனும் வழிபட எழுந்தருளிய இறைவன் இடம், தொண்டர்கள் திண்மையான நாவினால் இசை பாடித் தொழும் திலதைப்பதியுள் சிங்கம் வந்து வழிபாடு செய்யும் மதிமுத்தமாகும்.

திருத்திலதைப்பதி

புத்தர்தேரர் பொறியில்
சமணர்களும் வீறிலாப்
பித்தர்சொன்னம் மொழிகேட்கி
லாத பெருமானிடம்
பத்தர்சித்தர் பணிவுற்

றிறைஞ்சுந் திலதைப்பதி
மத்தயானை வழிபாடு
செய்யும் மதிமுத்தமே. **#1289**

புத்தர், தேரர், அறிவற்றசமணர், பெருமையில்லாத பித்தர் ஆகிய புறச்சமயத்தார் கூறும் மொழிகளைக் கேளாத பெருமானது இடம், அன்பர்களும் அறிஞர்களும் பணிந்து வழிபடும் திலதைப்பதியில் மதயானைவந்து வழிபட்ட சிறப்புடைய மதிமுத்தமாகும்.

<u>திருத்திலதைப்பதி</u>

மந்தமாரும் பொழில்
சூழ்திலதைம் மதிமுத்தமேற்
கந்தமாருங் கடற்காழி
யுள்ளான் தமிழ்ஞானசம்
பந்தன்மாலை பழிதீர
நின்றேத்த வல்லார்கள்போய்ச்
சிந்தைசெய்வார் சிவன்சேவடி
சேர்வது திண்ணமே. **#1290**

தென்றற்காற்று வீசும் சோலை சூழ்ந்த திலதைப்பதியுள் விளங்கும் மதிமுத்தத்தில் எழுந்தருளிய இறைவன் மீது நறுமணம் கமழும் கடற்கரையில் விளங்கும் காழி ஞான சம்பந்தன் பாடிய பாமாலையைப் பழிதீர ஓதி வழிபடுபவர் சிவன் சேவடிகளைச் சிந்தை செய்பவராய் அவ்வடிகளை அடைவது உறுதி.

திருநாகேச்சரம்

திருநாகேச்சரம்,
பண் - செவ்வழி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செண்பகாரணியேசுவரர்.
தேவியார் : குன்றமுலைநாயகியம்மை.

தழைகொள்சந் தும்மகிலும்
மயிற்பீலி யுஞ்சாதியின்
பழமும்உந்திப் புனல்பாய்
பழங்காவிரித் தென்கரை
நமுவில்வானோர் தொழநல்கு
சீர்மல்கு நாகேச்சரத்
தழகர்பாதந் தொழுதேத்த
வல்லார்க் கழகாகுமே. **#1291**

தழைகளோடு கூடிய சந்தன மரங்கள், அகில் மரங்கள், மயிற்பீலி, நல்லபழங்கள் ஆகியவற்றைப்புனலில் உந்தி வந்து பாயும் பழமையான காவிரியின் தென்கரையில் வானோர் விலகாது தொழ அருள் நல்கும் சிறப்புமிக்க நாகேச்சுரத்தில் விளங்கும் அழகர் பாதங்களைத் தொழுது போற்றவல்லார்க்கு அழகு நலம் வாய்க்கும்.

திருநாகேச்சரம்

பெண்ணொர்பாகம் அடையச்
சடையிற் புனல்பேணிய
வண்ணமான பெருமான்
மருவும் இடம்மண்ணுளார்
நண்ணிநாளுந் தொழுதேத்தி
நன்கெய்து நாகேச்சரம்
கண்ணினாற் காணவல்லா
ரவர்கண் ணுடையார்களே. **#1292**

ஒருபாகத்தே உமையையும், சடையில் நீர் வடிவான கங்கையையும், கொண்ட அழகிய பெருமான் அமரும் இடம் ஆகிய, மண்ணுலகத்தோர் நாள்தோறும் வந்து வணங்கி நன்மைகள் பெறும் நாகேச்சரத்தைக் கண்ணால் காண்பவரே கண்ணுடையராவர்.

திருநாகேச்சரம்

குறவர்கொல்லைப் புனங்கொள்ளை
கொண்டும் மணிகுலவுநீர்
பறவையாலப் பரக்கும்
பழங்காவிரித் தென்கரை
நறவநாறும் பொழில்சூழ்ந்
தழகாய நாகேச்சரத்
திறைவர்பாதந் தொழுதேத்த
வல்லார்க்கிட ரில்லையே. **#1293**

குறவர் வாழும் குறிஞ்சிப்புனம், முல்லைநிலம் ஆகியவற்றைக் கொள்ளைகொண்டு மணிகள் குலாவும் நீரைப் பரவச் செய்யும் காவிரித் தென்கரையில் தேன்மணம் கமழும் பொழில் சூழ்ந்து அழகியதாய் விளங்கும் நாகேச்சுரத்து இறைவர் பாதங்களைத் தொழுது ஏத்த வல்லார்க்கு இடர்இல்லை.

திருநாகேச்சரம்

கூசநோக்காதுமுன் சொன்ன
பொய்கொடு வினைகுற்றமும்
நாசமாக்கும் மனத்தார்கள்
வந்தாடு நாகேச்சரம்
தேசமாக்குந் திருக்கோயி
லாக்கொண்ட செல்வன்கழல்
நேசமாக்குந் திறத்தார்
அறத்தார் நெறிப்பாலரே. **#1294**

ஆராயாது பிறர் மனம் கூசுமாறு சொல்லும் பொய், கொடிய வினைகளால் வந்த குற்றங்கள் ஆகியவற்றைச் செய்யாத நன்மனம் உடைய அடியவர்கள் வந்து மகிழும் நாகேச்சுரத்தை ஒளிவிளங்கும் கோயிலாகக் கொண்ட செல்வன் திருவடிகளில் அன்புடையவர் அறநெறிப் பாலராவர்.

திருநாகேச்சரம்

வம்புநாறும் மலரும்மலைப்
பண்டமுங் கொண்டுநீர்
பைம்பொன்வாரிக் கொழிக்கும்
பழங்காவிரித் தென்கரை
நம்பன்நாளும் அமர்கின்ற
நாகேச்சர நண்ணுவார்
உம்பர்வானோர் தொழச்
சென்றுடனாவதும்உண்மையே. **#1295**

மணம் கமழும் மலர்களையும், மலைப் பொருள்களையும் வாரிக்கொண்டு, பைம் பொன் கொழித்து வரும் நீரை யுடைய பழங்காவிரித் தென்கரையில் நம்பன் நாளும் அமர்கின்ற நாகேச் சரத்தை நண்ணுபவர் உம்பர் வானவர் தொழச் சிவபிரானோடு ஒன்றாவர்.

திருநாகேச்சரம்

காளமேகந் நிறக்கால
னோடந்தகன் கருடனும்
நீளமாய்நின் றெய்தகாமனும்
பட்டன நினைவுறின்
நாளுநாதன் அமர்கின்ற
நாகேச்சர நண்ணுவார்
கோளுநாளுந் தீயவேனும்
நன்காங் குறிக்கொண்மினே. **#1296**

கரிய நிறமுடைய காலன், அந்தகன், கருடன், விலகி நின்று கணை எய்த காமன் ஆகியோரை இறைவன் செற்றதை நினைந்து நாள்தோறும் சிவபிரான் உறையும் நாகேச்சுரத்தை நண்ணி வழிபடுபவர்க்குக் கோள்களும் நாள்களும் தீயவேனும் நல்லன ஆகும். அதனை மனத்தில் கொள்மின்.

திருநாகேச்சரம்

வேயுதிர்முத் தொடுமத்த
யானை மருப்பும்விராய்ப்
பாய்புனல்வந் தலைக்கும்
பழங்காவிரித் தென்கரை
நாயிறுந்திங் களுங்கூடி
வந்தாடு நாகேச்சரம்
மேயவன்றன் அடிபோற்றி
யென்பார் வினைவீடுமே. **#1297**

மூங்கில் முத்துக்கள், யானைமருப்பு ஆகியவற்றுடன் வந்து வளம் செயும் காவிரியாற்றின் தென்கரையில், நாயிறு, திங்கள் இரண்டும் வந்து வழிபடும் நாகேச்சுரத்தில் எழுந்தருளிய, இறைவன் திருவடிகளைப் போற்றி என வணங்குவார் வினைகள் கெடும்.

திருநாகேச்சரம்

இலங்கைவேந்தன் சிரம்பத்தி
ரட்டியெழிற் றோள்களும்
மலங்கிவீழம் மலையால்

அடர்த்தா னிடமல்கிய
நலங்கொள்சிந்தை யவர்நாள்தொறும்
நண்ணும் நாகேச்சரம்
வலங்கொள்சிந்தை யுடையார்
இடராயின மாயுமே. **#1298**

இலங்கை வேந்தனாகிய இராவணனின் பத்துத் தலைகள் இருபது தோள்கள் ஆகியன சிதையுமாறு மலையினால் அடர்த்த இறைவன் இடம் ஆகிய நன்மைகெழுமிய மனமுடையோர் நாள்தோறும் நண்ணி வழிபடும் நாகேச்சுரத்தை வலம் வந்து வழிபடும் சிந்தை உடையவர்களின் இடர்கள் கெடும்.

திருநாகேச்சரம்

கரியமாலும் மயனும்
மடியும்முடி காண்பொணா
எரியதாகிந் நிமிர்ந்தான்
அமரும்இட மீண்டுகா
விரியின்நீர்வந் தலைக்குங்
கரைமேவு நாகேச்சரம்
பிரிவிலாதவ் வடியார்கள்
வானிற் பிரியார்களே. **#1299**

கருநிறமுடைய திருமாலும், பிரமனும் அடிமுடி காண இயலாதவாறு எரியுருவாக நிமிர்ந்த இறைவன் அமரும் இடம் ஆகிய, பெருகிவரும் காவிரி நீர் வந்தலைக்கும் தென் கரையில் அமைந்த நாகேச்சுரத்தைப் பிரிவிலாத அடியவர் சிவலோகத்தைப் பிரியார்.

திருநாகேச்சரம்

தட்டிடுக்கி யுறிதூக்கி
யகையினர் சாக்கியர்
கட்டுரைக்கும் மொழிகொள்ளலும்
வெள்ளி லங்காட்டிடை
நட்டிருட்கண் நடமாடிய
நாதன் நாகேச்சுரம்
மட்டிருக்கும் மலரிட்
டடிவீழ்வது வாய்மையே. **#1300**

தட்டைக் கக்கத்தில் இடுக்கி உறிதூக்கிய கையினராய்த்திரியும் சமணர், சாக்கியர், புனைந்து சொல்லும் மொழிகளைக் கொள்ளாது, இடுகாட்டில் நள்ளிருளில் நடனமாடும் நாகேச்சுரத்து இறைவனைத் தேன் நிறைந்த மலர்களைத் தூவி அடி வீழ்ந்து வணங்குவது உண்மைப் பயனைத்தரும்.

திருநாகேச்சரம்

கந்தநாறும் புனற்காவிரித்
தென்கரைக் கண்ணுதல்
நந்திசேருந் திருநாகேச்
சரத்தின் மேன்ஞானசம்
பந்தனாவிற் பனுவல்
லிவைபத்தும் வல்லார்கள்போய்
எந்தையீசன் இருக்கும்
உலகெய்த வல்லார்களே. **#1301**

மணம் கமழும் நீரை உடைய காவிரித் தென் கரையில், கண்ணுதற் கடவுளாகிய நந்தி எழுந்தருளிய திருநாகேச்சுரத்தின் மேல் ஞானசம்பந்தன் நாவினால் போற்றிய இப்பனுவல் பத்தையும் வல்லவர் மறுமையில் எந்தையீசன் இருக்கும் சிவலோகம் எய்துவர்.

திருமூக்கீச்சரம்

திருமூக்கீச்சரம்

திருமூக்கீச்சரம்,
பண் - செவ்வழி

சாந்தம்வெண்ணீறெனப்பூசி வெள்ளஞ்சடை வைத்தவர்
காந்தளாரும் விரலேழை
யொடாடிய காரணம்
ஆய்ந்துகொண்டாங் கறியந்
நிறைந்தாரவ ரார்கொலோ
வேந்தன்மூக்கீச் சரத்தடிகள்
செய்கின்றதோர் மெய்ம்மையே. **#1302**

சந்தனம்போலத் திருநீற்றை உடல் முழுதும் பூசி, கங்கையைச் சடைமீது வைத்துள்ளவராகிய சிவபிரான், காந்தள் போன்ற கைவிரல்களை உடைய உமையம்மையோடு கூடியிருந்ததற்குரிய காரணத்தை ஆராய்ந்தறிந்தவர்கள் யார்? கோச்செங்கட்சோழனால் கட்டப்பட்ட மூக்கீச்சரத்துள் விளங்கும் இறைவன் செய்யும் மெய்ம்மை இதுவாகும்.

திருமூக்கீச்சரம்

வெண்டலையோர் கலனாப்
பலிதேர்ந்து விரிசடைக்
கொண்டலாரும் புனல்சேர்த்
துமையாளொடுங் கூட்டமா
விண்டவர்தம் மதிலெய்தபின்
வேனில் வேள்வெந்தெழக்
கண்டவர் மூக்கீச்சரத்தெம்
அடிகள் செய்கன்மமே. **#1303**

வெண்தலையை உண்கலனாகக் கையில் ஏந்திப் பலிதேர்தல், விரிந்தசடையில் கங்கையைத் தாங்குதல், உமையம்மையோடு கூடியிருத்தல், பகைவர்தம் முப்புரங்களை எய்து அழித்தல், மன்மதனை நெற்றிவிழியால் வெந்தழியச் செய்தல் ஆகியன மூக்கீச் சரத்தில் விளங்கும் எம் அடிகள் செய்த செயல்களாகும்.

திருமூக்கீச்சரம்

மருவலார்தம் மதிலெய்த
துவும்மான் மதலையை
உருவிலாரவ் வெரியூட்டி

யதும்உல குண்டதால்
செருவிலாரும் புலிசெங்
கயலானை யினான்செய்த
பொருவின் மூக்கீச்சரத்தெம்
அடிகள் செயும்பூசலே. #1304

போர்க்கருவியாகிய வில், புலி, கயல் ஆகிய மூவிலச்சினைகளுக்கும் உரிய சேர, சோழ, பாண்டிய மண்டலங்களுக்குரியவனாய் விளங்கிய கோச்செங்கட்சோழனால் கட்டப்பட்ட ஒப்பற்ற மூக்கீச்சரத்தில் உறையும் எம் அடிகள் செய்த போர்களில் மும்மதில்களை எய்தது, மால்மகனாகிய காமனை எரித்தது ஆகிய உலகறிந்தனவாம்.

திருமூக்கீச்சரம்

அன்னமன்னந் நடைச்சாய
லாளோ டழகெய்தவே
மின்னையன்ன சடைக்கங்கை
யாள்மேவிய காரணம்
தென்னன்கோழி யெழில்வஞ்சியும்
ஓங்கு செங்கோலினான்
மன்னன்மூக்கீச் சரத்தடிகள்
செய்கின்ற தோர்மாயமே. #1305

தென்நாட்டின் உறையூர் வஞ்சி ஆகிய சோழ, சேர மண்டலங்களுக்கும் உரியவனாய்ப் புகழ்மிக்க செங்கோலினனாய் விளங்கிய கோச்செங்கட்சோழ மன்னன் கட்டிய மூக்கீச்சரத்துக் கோயிலில் விளங்கும் அடிகள், அன்னம் போன்ற நடையினை உடைய உமையம்மையாரோடு அழகுற விளங்கி, மின்னல் போன்ற சடையில் கங்கையைக் கொண்டுள்ள காரணம் யாதோ?

திருமூக்கீச்சரம்

விடமுனாரவ் வழல்வாய
தோர் பாம்பரை வீக்கியே
நடமுனாரவ் வழலாடுவர்
பேயொடு நள்ளிருள்
வடமன்நீடு புகழ்ப்பூழி
யன்றென்ன வன்கோழிமன்
அடன்மன்மூக்கீச் சரத்தடிகள்
செய்கின்ற தோரச்சமே. #1306

வடதிசையில் புகழ்மிக்கு விளங்கும் பாண்டியனாகவும் உறையூருக்குரிய சோழனாகவும் விளங்கிய வலிமை பொருந்திய

கோச்செங்கட்சோழமன்னன் கட்டிய மூக்கீச்சரத்துறையும் அடிகள் அச்சம் தரும் முறையில், அழல் போன்ற வாயில் நஞ்சுடைய பாம்பை அரையில் கட்டியவர். நள்ளிருளில் பேயோடு, ஆரழலில் நடனம் ஆடுபவர்.

திருமூக்கீச்சரம்

வெந்தநீறு மெய்யிற்
பூசுவராடுவர் வீங்கிருள்
வந்தெனாரவ் வளைகொள்வதும்
இங்கொரு மாயமாம்
அந்தண்மா மானதன்னேரியன்
செம்பிய னாக்கிய
எந்தைமூக்கீச் சரத்தடிகள்
செய்கின்ற தோரேதமே. **#1307**

அகத்துறைப்பாடல்: பகைவரின் மானத்தை அழிக்கும் பெருவீரனும் நேரியன் செம்பியன் என்ற பெயர்களை உடையவனுமான கோச்செங்கட்சோழன் கட்டிய மூக்கீச்சரத்தில் விளங்கும் அடிகள் செய்த ஏதமான செயல் திருநீற்றை மேனியில் பூசிய சுந்தரத்திருமேனியராய், அடல் வல்லவராய், மிக்க இருளில் வந்து என் அரிய வளையல்களை மாயமான முறையில் கவர்ந்து சென்ற தாகும்.

திருமூக்கீச்சரம்

அரையிலாருங் கலையில்ல
வனாணொடு பெண்ணுமாய்
உரையிலரவ் வழலாடு
வரொன்றலர் காண்மினோ
விரவலார்தம் மதின்மூன்
றுடன்வெவ்வழ லாக்கினான்
அரையன்மூக்கீச் சரத்தடிகள்
செய்கின்ற தோரச்சமே. **#1308**

இடையில் பொருந்தும் உடை இல்லாதவன். ஆணும், பெண்ணுமாய் விளங்குபவன். அழலில் நின்று ஆடுபவன். ஒன்றாயின்றிப் பலபலவேடம் கொள்பவன். பகைவரின் முப்புரங்களை அழல்எழச் செய்து அழித்தவன். கோச்செங்கணான் கட்டிய மூக்கீச்சரக் கோயிலில் விளங்கும் அப்பெருமான், செய்யும் அச்சமான செயல்கள் இவையாகும்.

திருமூக்கீச்சரம்

ஈர்க்குநீர்ச்செஞ் சடைக்கேற்

றதுங்கூற்றை யுதைத்ததும்
கூர்க்குநன்மூ விலைவேல்வல
னேந்திய கொள்கையும்
ஆர்க்கும்வாயான் அரக்கன்
னுரத்தை நெரித்தவ்வடல்
மூர்க்கன்மூக்கீச் சரத்தடிகள்
செய்யாநின்ற மொய்ம்பதே. **#1309**

மூக்கீச்சரத்து அடிகள் செய்த வலிய செயல்கள் ஈர்க்கும் தன்மையை உடைய கங்கையைச் சடைமிசை ஏற்றது, கூரிய முத்தலைச்சூலத்தை வெற்றிக்கு அடையாளமாகப் பிடித்துள்ளது. ஆரவாரிக்கும் வாயினனும் வலியமூர்க்கனும், அரக்கனும் ஆகிய இராவணன் உடலை நெரித்தது முதலியனவாகும்.

<u>திருமூக்கீச்சரம்</u>

நீருளாரும் மலர்மேல்
உறைவான் நெடுமாலுமாய்ச்
சீருளாருங் கழல்தேட
மெய்த்தீத் திரளாயினான்
சீரினாலங் கொளிர்தென்ன
வன்செம்பி யன்வில்லவன்
சேருமூக்கீச் சரத்தடிகள்
செய்கின்ற தோர்செம்மையே. **#1310**

சிறப்புமிக்க தென்னவன், செம்பியன், வில்லவன் ஆகிய மூவேந்தரும் வந்து வழிபடும் மூக்கீச்சரத்தில், உறையும் பெருமான் நீருள் தோன்றிய தாமரையில் விளங்கும் நான்முகனும், நெடியமாலும் புகழிற் பொருந்திய திருவடிகளைத் தேட முற்பட்டபோது தீத்திரளாய் நின்றவன்.

<u>திருமூக்கீச்சரம்</u>

வெண்புலான்மார் பிடுதுகிலினர்
வெற்றரை யுழல்பவர்
உண்பினாலே யுரைப்பார்
மொழி யூனமதாக்கினான்
ஒண்புலால்வேன் மிகவல்லவ
னோங்கெழிற் கிள்ளிசேர்
பண்பின்மூக்கீச் சரத்தடிகள்
செய்கின்றதோர் பச்சையே. **#1311**

வெண்மையான புலால் நாற்றம் வீசும் ஆடையை மார்பிற் கொண்டவரும், வெற்றுடம்போடு திரிபவரும் ஆகிய புத்தர்களும்

சமணரும் உண்ணும் பொருட்டு உரைக்கும் மொழிகளைக் குறையுடைய தாக்கினான். புலால் மணக்கும் வேல் வென்றி உடையவன். சோழமன்னன் எடுப்பித்த மூக்கீச்சரத்து அப் பெருமான் செய்யும் புதுமையான செயல் இதுவாகும்.

<u>திருமூக்கீச்சரம்</u>

மல்லையார்மும் முடிமன்னர்
மூக்கீச்சரத் தடிகளைச்
செல்வராக நினையும்படி
சேர்த்திய செந்தமிழ்
நல்லராய்வாழ் பவர்காழி
யுள்ஞான சம்பந்தன
சொல்லவல்லா ரவர்வானுல
காளவும் வல்லரே. **#1312**

மற்போரில் வல்லவராய முடிமன்னர் மூவரானும் தொழப் பெறும் மூக்கீச்சரத்து அடிகளை நல்லவர் வாழும் காழியுள் மேவிய ஞானசம்பந்தன் செல்வராக நினையும்படிப் பாடிய இச் செந்தமிழைச் சொல்லவல்லவர் வானுலகையும் ஆளவல்லவர் ஆவர்.

திருப்பாதிரிப்புலியூர்

திருப்பாதிரிப்புலியூர்

திருப்பாதிரிப்புலியூர்,
பண் - செவ்வழி,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தோன்றாத்துணையீசுவரர்.
தேவியார் : தோகையம்பிகையம்மை.

முன்னநின்ற முடக்கான்
முயற்கருள் செய்துநீள்
புன்னைநின்று கமழ்பா
திரிப்புலி யூருளான்
தன்னைநின்று வணங்குந்
தனைத்தவ மில்லிகள்
பின்னைநின்ற பிணியாக்
கைபெறு வார்களே. **#1313**

முடங்கிய கால்களை உடைய முயலுருவத்தைப் பெற்றுத் தன்னை வணங்கி முன்னே நின்ற மங்கண முனிவருடைய சாபத்தைப் போக்கி அவருக்கு அருள் செய்து, நீண்ட புன்னைமரங்கள் மணம் கமழும் திருப்பாதிரிப் புலியூரில் எழுந்தருளி இருக்கும் இறைவனை வணங்கும் மேலான தவம் இல்லாதவர்கள் நோயால் நலியும் யாக்கையைப் பெறுவார்கள்.

திருப்பாதிரிப்புலியூர்

கொள்ளிநக்க பகுவாய
பேய்கள் குழைந்தாடவே
முள்ளிலவம் முதுகாட்
டுறையும் முதல்வன்இடம்
புள்ளினங்கள் பயிலும்
பாதிரிப் புலியூர்தனை
உள்ள நம்மேல்
வினையாயின ஒழியுங்களே. **#1314**

நகும் போது தீயை உமிழும் திறந்த வாயை உடைய பேய்கள் குழைந்தாட முள்ளிலவ மரங்கள் நிறைந்த சுடுகாட்டில் உறையும் இறைவன் இடமாகிய, அன்னம், மயில் முதலிய பறவையினங்கள் வாழும் திருப்பாதிரிப்புலியூரை நினைந்து வழிபட்டு நம்மேலுள்ளன ஆகிய வினைகளை ஒழியுங்கள்.

திருப்பாதிரிப்புலியூர்

மருளினல்லார் வழிபாடு
செய்யும் மழுவாளர்மேல்
பொருளினல்லார் பயில்
பாதிரிப் புலியூருளான்
வெருளின்மானின் பிணை
நோக்கல்செய்து வெறிசெய்தபின்
அருளிஆகத் திடைவைத்
ததுவும் மழகாகவே. **#1315**

மெய்ப்பொருளை அறிந்தவரும் மயக்கமற்ற ஞானியரும் வழிபாடு செய்து வாழும் திருப்பாதிப்புலியுல் வாழம் மழவாளரைக் கண்டு மருளும் பெண்மான் போன்ற பார்வையை உடைய பார்வதியை நோக்கி, அவளைத் தம்மீது காதல் கொள்ளச் செய்து, தம் ஆகத்திடை வைத்து அருள்பவராய் உள்ள அப்பெருமான் செயல்மிக்க அழகானதாகும்.

திருப்பாதிரிப்புலியூர்

போதினாலும் புகையாலும்
உய்த்தே அடியார்கள்தாம்
போதினாலே வழிபாடு
செய்யப் புலியூர் தனுள்
ஆதிநாலும் அவலம்
மிலாதஅடி கள்மறை
ஓதிநாளும் இடும்பிச்சை
யேற்றுண் டுணப்பாலதே. **#1316**

மலர்கள் தூவியும் தசாங்கம் முதலிய மணமுடைய பொருள்களைப் புகைத்தும் அடியவர்கள் காலந்தவறாமல் வழிபாடு செய்யப் பாதிரிப்புலியூரில் உறையும் அவலம் இலாத அடிகள் நாள் தோறும் வேதங்களை ஓதிக் கொண்டு சென்று அன்பர்கள் இடும் பிச்சையை ஏற்று உண்ணும் இயல்பினர்.

திருப்பாதிரிப்புலியூர்

ஆகநல்லார் அமுதாக்க
வுண்டான் அழலைந்தலை
நாகநல்லார் பரவந்நயந்
தங்கரை யார்த்தவன்
போகநல்லார் பயிலும்
பாதிரிப் புலியூர் தனுள்

பாகநல்லா ளொடுநின்ற
எம்பர மேட்டியே. **#1317**

நுகர்ச்சிக்குரிய இளமகிளிர் பயிலும் பாதிரிப்புலியூரில் பெரிய நாயகியாரை இடப்பாகமாகக் கொண்டுள்ள பரமேட்டி உடலின் இடப் பாதியிலே உறையும் உமையம்மை அமுது ஆக்கிக் கொடுக்க நஞ்சை உண்டவன். நல்லோர் பரவ நச்சு வெப்பத்தை உடைய ஐந்தலைப் பாம்பை விரும்பி அரையில் கட்டியவன்.

<u>திருப்பாதிரிப்புலியூர்</u>

மதியமொய்த்த கதிர்போ
லொளிம்மணற் கானல்வாய்ப்
புதியமுத்தந் திகழ்
பாதிரிப் புலியூரெனும்
பதியில்வைக்கப் படுமெந்தை
தன்பழந் தொண்டர்கள்
குதியுங்கொள்வர் விதியுஞ்
செய்வர் குழகாகவே. **#1318**

பழ அடியார்கள் அழகாக ஆகம விதிகளின்படி வழிபாடு செய்யவும் ஆனந்தக் கூத்தாடவும் நிலவொளி போன்று வெண்மணல் பரவிய கடற்கரைச் சோலை இடத்தே புதிய முத்துக்கள் திகழும் திருப்பாதிரிப்புலியூரில் எழுந்தருளி உள்ளார் இறைவர்.

<u>திருப்பாதிரிப்புலியூர்</u>

கொங்கரவப் படுவண்
டறைகுளிர் கானல்வாய்ச்
சங்கரவப் பறையின்
னொலியவை சார்ந்தெழப்
பொங்கரவம் முயர்
பாதிரிப் புலியூர்தனுள்
அங்கரவம் அரையில்
அசைத்தானை அடைமினே. **#1319**

பூந்தாதுகளின் வண்டுகள் செய்யும் ஒலி கடற்கரைச் சோலைகளில் சங்குகளின் ஒலி, பறைமுழவு ஆகிய ஒலிகள் கூடி ஆரவாரம் மிகுந்து தோன்றும் திருப்பாதிரிப் புலியூரில் இடையிலே பாம்பைக் கச்சாக அணிந்து எழுந்தருளிய பரமனை அடையுங்கள்.

<u>திருப்பாதிரிப்புலியூர்</u>

வீக்கமெழும் மிலங்கைக்

கிறை விலங்கல்லிடை
ஊக்கமொழிந் தலறவ்
விரலாலிறை யூன்றினான்
பூக்கமழும் புனற்
பாதிரிப் புலியூர்தனை
நோக்கமெலிந் தணுகா
வினைநுணு குங்களே. **#1320**

பெருமை மிக்க இலங்கைக்கு அரசனாகிய இராவணன் கயிலை மலையிடைத்தனது செருக்கழிந்து அலறுமாறு கால் விரலை ஊன்றிய இறைவன் எழுந்தருளிய மலர் மணம் கமழும் நீர் வளம் சான்ற பாதிரிப்புலியூரை நோக்க வினைகள் மெலிந்து நுணுகி ஒழியும்.

திருப்பாதிரிப்புலியூர்

அன்னந்தாவும் மணியார்
பொழின்மணியார் புன்னை
பொன்னந் தாதுசொரி
பாதிரிப் புலியூர்தனுள்
முன்னந்தாவி அடிமூன்
றளந்தவன் நான்முகன்
தன்னந்தாளுற் றுணராத
தோர்தவ நீதியே. **#1321**

அன்னங்கள் விளையாடும் அழகிய சோலைகளில் முத்துமணி போன்ற புன்னை மலர்கள் பொன்போலும் தாதுக்களைச் சொரியும் திருப்பாதிரிப்புலியூரில், முற்காலத்தே எல்லா உலகங்களையும் தாவி மூன்றடியால் அளந்த திருமாலும், நான்முகனும், சிறிதேனும் திருத்தாளையும் திருமுடியையும் அறிய முடியாதவராய்த் தவத்தின் நேரிய நீதி வடிவினராய்ப் பெருமான் விளங்குகிறார்.

திருப்பாதிரிப்புலியூர்

உரிந்தகூறை யுருவத்
தொடுதெரு வத்திடைத்
திரிந்துதின்னுஞ் சிறுநோன்
பரும்பெருந் தேரரும்
எரிந்துசொன்னவ் வுரைகொள்
ளாதேயெடுத் தேத்துமின்
புரிந்தவெண் ணீற்றண்ணல்
பாதிரிப்புலி யூரையே. **#1322**

ஆடையின்றித் தெருவில் திரிந்து தின்னும் அற்பவிரதத்தை உடைய

சமணரும், புத்தரும் எரிவினால் சொல்லும் உரைகளைக் கொள்ளாது. திருவெண்ணீறு அணிந்த திருப்பாதிரிப்புலியூர் அண்ணலைப் புகழ்ந்து போற்றுங்கள்.

திருப்பாதிரிப்புலியூர்

அந்தண்நல் லாரகன்
காழியுள் ஞானசம்
பந்தன்நல் லார்பயில்
பாதிரிப் புலியூர்தனுள்
சந்தமாலைத் தமிழ்பத்தி
வைதரித் தார்கண்மேல்
வந்துதீயவ் வடையாமை
யால்வினை மாயுமே. **#1323**

அந்தணர்கள் நிறைந்துவாழும் அகன்ற சீகாழிப் பதியில் திருஞானசம்பந்தன், நல்லவர் வாழும் திருப்பாதிரிப் புலியூரில் எழுந்தருளிய இறைவர் மீது பாடிய இசை மாலை ஆகிய இத்திரருபதிகத்தை ஓதி வழிபடுவாரைத் தீமைகள் அணுகா. அவர்தம் வினைகள் மாயும்.

திருப்புகலி

சீர்காழி

திருப்புகலி,
பண் - செவ்வழி, திருப்புகலி மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

விடைய தேறி வெறிஅக் கரவார்த்த
விமலனார்
படைய தாகப் பரசு தரித்தார்க்
கிடமாவது
கொடை யிலோவார் குலமும் உயர்ந்தம்
மறையோர்கள்தாம்
புடைகொள் வேள்விப் புகையும்ப ருலாவும்
புகலியே. **#1324**

விடைமீதுஏறி, முடைநாறும் எலும்பு, பாம்பு இவற்றை மாலையாக அணிந்துவரும் விமலரும், மழுவைப் படைக் கலனாகக் கொண்ட வரும் ஆகிய சிவபிரானுக்குரிய இடம், கொடை வண்மை, குன்றா மரபினரும் ஆகிய, உயரிய, வேதங்களில் வல்ல அந்தணர் வேட்கும் வேள்விப்புகை வானத்து உலாவும் புகலிப் பதியாகும்.

சீர்காழி

வேலை தன்னின் மிகுநஞ்சினை யுண்டிருள்
கண்டனார்
ஞால மெங்கும் பலிகொண் டுழல்வார்
நகராவது
சால நல்லார் பயிலும் மறைகேட்டுப்
பதங்களைச்
சோலை மேவுங் கிளித்தான் சொற்பயிலும்
புகலியே. **#1325**

கடலில் தோன்றிய மிக்க நஞ்சினை, உண்டு இருண்ட கண்டத்தினரும், உலகெங்கும் பலியேற்றுத் திரிபவருமான சிவபிரானுக்குரிய நகர், மிகவும் நல்லவர் பயிலும் வேதப்பதங்களைக் கேட்டு, சோலைகளில் வாழும் கிளிகள் அச்சொற்களை மீண்டும் கூறும் புகலியாகும்.

சீர்காழி

வண்டு வாழுங் குழல்மங்கை யோர்கூ
றுகந்தார்மதித்
துண்ட மேவுஞ் சுடர்த்தொல் சடையார்க்
கிடமாவது
கெண்டை பாய மடுவில் லுயர்கேதகை
மாதவி
புண்ட ரீகம் மலர்ப்பொய்கை நிலாவும்
புகலியே. **#1326**

வண்டுகள் மொய்க்கும் கூந்தலை உடைய உமை நங்கையை தன் மேனியின் ஒரு கூறாக உகந்தவரும், பிறைமதி அணிந்த ஒளி மயமான தொல்சடை முடியினரும், ஆகிய சிவபெருமானுக்கு இடமாக விளங்குவது கெண்டை மீன்கள் துள்ளி ஆடும் மடுக்களையும், தாழை, மாதவி மரங்களையும், தாமரை மலரும் பொய்கைகளையும் கொண்ட புகலியாகும்.

<u>சீர்காழி</u>

திரியு மூன்று புரமும் எரித்துத்
திகழ்வானவர்க்
கரிய பெம்மான் அரவக் குழையார்க்
கிடமாவது
பெரிய மாடத் துயருங் கொடியின்
மிடைவால்வெயிற்
புரிவி லாத தடம்பூம் பொழில்சூழ்
தண்புகலியே. **#1327**

வானத்தில் திரிந்து இடர்விளைத்த முப்புரங்களை எரித்தவனும் வானவர்க்கு அரியவனாய் விளங்குவோனும், அரவக் குழை அணிந்தவனுமாகிய சிவபெருமானுக்கு இடமாக விளங்குவது, பெரிய மாடவீடுகளில் விளங்கும் கொடிகளால் வெண்மையான வெயிலொளி புகாததாய், தடம் பொய்கைகள் சூழ்ந்ததாய் விளங்கும் புகலியாகும்.

<u>சீர்காழி</u>

ஏவி லாருஞ் சிலைப்பார்த் தனுக்கின்
றருள்செய்தவர்
நாவி னாண்மூக் கரிவித்த நம்பர்க்
கிடமாவது
மாவி லாருங் கனிவார் கிடங்கில்
விழவாளைபோய்ப்
பூவி லாரும் புனற்பொற்கை யில்வைகும்

புகலியே. #1328
கணை பொருந்திய வில்லில் வல்ல அருச்சுனனுக்கு அருள் செய்தவரும், கலைமகளின் மூக்கை அரிவித்தவரும், ஆகிய சிவபிரானுக்குரிய இடம், மாங்கனிகள் பெரிய மடுக்களில் வீழ்வதைக் கண்டு வாளைமீன்கள் பூக்கள் நிறைந்த அப்பொய்கை மடுக்களைச் சென்றடையும் புகலிப்பதியாகும்.

சீர்காழி

தக்கன் வேள்வி தகர்த்த தலைவன்
தையலாளொடும்
ஒக்க வேயெம் முரவோ னுறையும்
மிடமாவது
கொக்கு வாழை பலவின் கொழுந்தண்
கனிகொன்றைகள்
புக்க வாசப் புன்னை பொன்றிரள் காட்டும்
புகலியே. #1329
தக்கன் வேள்வியைத் தகர்த்தவனும், எம் உரவோனும் ஆகிய சிவபிரான் தையலாளொடு உறையும் இடம், மா, வாழை, பலா ஆகிய கனிகளின் மணத்துடன் கொன்றை, புன்னை இவற்றின் மகரந்தம் பொன்திரள் போலத்தோன்றும் புகலியாகும்.

சீர்காழி

தொலைவி லாத அரக்கன் உரத்தைத்
தொலைவித்தவன்
தலையுந் தோளுந் நெரித்த சதுரர்க்
கிடமாவது
கலையின் மேவும் மனத்தோர் இரப்போர்க்குக்
கரப்பிலார்
பொலியு மந்தண் பொழில்சூழ்ந் தழகாரும்
புகலியே. #1330
அழிவற்ற இராவணனின் ஆற்றலை அழித்து அவனது தலை தோள் ஆகியவற்றை நெரித்த சதுரப்பாடுடைய சிவபிரானுக் குரிய இடம், கலை உள்ளம் கொண்டோர், இரப்போர்க்கு இல்லை என்னாத வண்மையுடையயோ விளங்கும் பொழில் சூழ்ந்த புகலிப் பதியாகும்.

சீர்காழி

கீண்டு புக்கார் பறந்தார் அயர்ந்தார்
கேழலன்னமாய்க்

காண்டு மென்றார் கழல்பணிய நின்றார்க்
கிடமாவது.
நீண்ட நாரை யிரையாரல் வாரநிறை
செறுவினிற்
பூண்டு மிக்கவ் வயல்காட்டும் அந்தண்
புகலியே. #1331

கேழலாய் நிலத்தை அகழ்ந்து சென்ற திருமால், அன்னமாய்ப் பறந்து உயர்ந்து சென்ற நான்முகன் ஆகியோர் அடிமுடி காண்போம் எனச்சூளுரைத்து முயன்று தோற்றுக் கழல்பணிய நின்றார்க்கு இடமாக விளங்குவது, நாரைக்கு இரையான ஆரல் மீன்கள் ஒழுகி ஓட, நிறைந்த சேற்றோடு விளங்கும் வயல்களை உடைய அழகிய புகலிப்பதியாகும்.

சீர்காழி

தடுக்கு டுத்துத் தலையைப் பறிப்பாரொடு
சாக்கியர்
இடுக்க ணுய்ப்பா ரிறைஞ்சாத வெம்மாற்
கிடமாவது
மடுப்ப டுக்குஞ் சுருதிப்பொருள் வல்லவர்
வானுளோர்
அடுத்த டுத்துப் புகுந்தீண்டு மந்தண்
புகலியே. #1332

ஓலையால் இயன்ற தடுக்கைக் கட்டிக் கொண்டும் தலையைப் பறித்துக் கொண்டும் வாழும் சமணர்களும், சாக்கியர்களும் இடுக்கண்பட்டவராய் இறைஞ்சாது நிற்குமாறு செய்த எம்பெருமானுக்கு உரிய இடமாக விளங்குவது, வேதம் வல்ல அந்தணரும் வானுலகில் வாழும் தேவர்களும் அடுத்தடுத்து வந்து வழிபடும் புகலிப்பதியாகும்.

சீர்காழி

எய்த வொண்ணா இறைவன் னுறைகின்ற
புகலியைக்
கைதவ மில்லாக் கவுணியன் ஞான
சம்பந்தன்சீர்
செய்த பத்தும் மிவைசெப்ப வல்லார்
சிவலோகத்தில்
எய்தி நல்ல விமையோர்க ளேத்த
இருப்பார்களே. #1333

உயிர் தம் அறிவால் எய்த ஒண்ணாத இறைவன் உறையும் புகலியை, வஞ்சனையற்ற கவுணியர்குடியில் தோன்றிய ஞானசம்பந்தன்

சிறப்புடன் பாடிய பத்துப் பாடல்களாகிய இவற்றை, செப்பவல்லவர் சிவலோகத்தை அடைந்து நல்ல தேவர்கள் ஏத்தப் புகழுடன் இருப்பர்.

இரண்டாம் திருமுறை - திருக்கடைக்காப்பு முற்றும்

பன்னிருதிருமுறை

திருஞானசம்பந்தர்

மூன்றாம் திருமுறை - திருக்கடைக்காப்பு

தொகுப்பு: சங்கர்

சித்திரை 2017 வெளியீடு

பன்னிருதிருமுறை

மூன்றாம் திருமுறை - திருக்கடைக்காப்பு

திருஞானசம்பந்தர் அருளியது

1347 பாடல்கள் கொண்ட 125 பதிகங்கள்

பன்னிருதிருமுறை

திருஞானசம்பந்தர்

மூன்றாம் திருமுறை - திருக்கடைக்காப்பு

தொகுப்பு: சங்கர்

சித்திரை 2017 வெளியீடு

கோயில்

கோயில்

கோயில்,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருமூலத்தானநாயகர் (எ) சபாநாதர்.
தேவியார் : சிவகாமியம்மை.

ஆடி னாய்நறு நெய்யொடு பால்தயிர்
அந்த ணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடி னாய்இட மாநறுங் கொன்றை நயந்தவனே
பாடி னாய்மறை யோடுபல் கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்டிங்கள்
சூடி னாய்அரு ளாய்சுருங்கஎம தொல்வினையே **#1**

நறுமணம் உடைய நெய்யும், பாலும், தயிரும் ஆட்டப்பெற்றவனே! தில்லைவாழந்தணர் எல்லோரும் எப்பொழுதும் அகத்தும் புறத்தும் பிரியாது வழிபடும் திருச்சிற்றம்பலத்தைத் திருக்கூத்தாடும் ஞான வெளியாகக் கொண்டு வாழ்பவனே! நறியகொன்றைப் பூமாலையை நயந்து (விரும்பிச்) சூடியவனே! நான்மறையுள் சாமகானத்துடன் பல கீதங்களையும் பாடியவனே! பலவாகிய சடைமேல், குளிர்பனியைச் சொரிகின்ற வெண்ணிலவையுடைய இளம் பிறையைச் சூடியவனே! எம் தொல்லை வினை இல்லையாம்படி திருவருள் செய்க.

கோயில்

கொட்ட மேகம ழும்குழ லாளொடு கூடி னாய்எரு தேறி னாய்நுதற்
பட்ட மேபுனை வாய்இசை பாடுவ பாரிடமா
நட்ட மேநவில் வாய்மறை யோர்தில்லை
நல்ல வர்பிரி யாதசிற் றம்பலம்
இட்ட மாஉறை வாய்இவை மேவிய தென்னைகொலோ **#2**

நறுமணம் கமழும் கூந்தலை உடைய சிவகாமி அம்மையாரொடு கூடியவனே, விடையேறியவனே, நெற்றிப்பட்டம் அணிந்தவனே, பூதகணங்கள் இசைபாடுவனவாகத் திருக்கூத்தாடுவோனே, (அறிதற்கரிய) வேதங்களை ஓர்கின்ற தில்லையில் வாழும் நல்லவராய அந்தணர் பிரியாத திருச்சிற்றம்பலத்தே விருப்பொடு வாழ்பவனே! இவ்வைந்து கருணைச் செயல்களையும் மேவியது யாது காரணம் பற்றியோ? கூறியருள்க.

கோயில்

நீலத் தார்கரி யமிடற் றார்நல்ல
நெற்றி மேல்உற்ற கண்ணி னார்பற்று
சூலத் தார்சுட லைப்பொடி நீறணி வார்சடையார்
சீலத் தார்தொழு தேத்துசிற் றம்பலம்
சேர்த லால்கழற் சேவடி கைதொழக்
கோலத் தாய்அரு ளாய்உன காரணம்கூறுதுமே **#3**

நீலநிறத்தைப் பொருந்திய கரிய திருக்கழுத்தினர் (திருநீலகண்டர்). அழகிய நெற்றிக்கண்ணினர். திரிசூலம் பற்றியவர், காடுடைய சுடலைப் பொடிபூசியவர், சடையினர், சீலம் மிக்கவர் ஆகிய தில்லைவாழந்தணர் வணங்கியேத்தும் திருச்சிற்றம்பலத்தை இடைவிடாது நினைந்து சேர்தலால். திருக்கோலம் உடைய நடராசப் பெருமானே! நின் கழலணிந்த சேவடியைக் கையால் தொழ அருள் செய்தாய். உன்னுடைய காரணங்களை (முதன்மையை)க் கூறுவேம்.

கோயில்

கொம்ப லைத்தழ கெய்திய நுண்ணிடைக்
கோல வாள்மதி போலமு கத்திரண் டம்ப லைத்தகண் ணாள்முலை
மேவிய வார்சடையான்
கம்ப லைத்தெழு காமுறு காளையர்
காத லால்கழற் சேவடி கைதொழ
அம்பலத்துறை வான்அடி யார்க்கடையாவினையே **#4**

பூங்கொம்பு தனக்கு இணையாகாவாறு அலையச் செய்து அதனழகினையும் தான் பெற்ற நுண்ணிய இடையையும், அழகும் ஒளியும் உடைய திங்கள் போலும் முகத்தில் இரண்டு அம்புகளை வருத்தி ஒப்பாகீர் என்றொதுக்கிய திருக்கண்களையும் உடைய சிவகாமியம்மையார் கொங்கைகளை விரும்பிய வார்சடையான், (நடராசாப் பெருமான்), அரகர முழக்கஞ் செய்து விழுந்தெழுந்து அன்பர்கள் அன்புடன் வழிபடும் காளையைப்போன்ற உடற்கட்டினர். பேரார்வத்தோடு திருக்கழலணிந்த சிவந்த திருவடிகளைக் கைகளால் தொழ, பொன்னம்பலத்தில் திருக் கூத்தாடும் முழுமுதல்வன் அடியவர்க்கு வினைத்தொடர்பு இல்லை.

கோயில்

தொல்லை யார்அமு துண்ணநஞ் சுண்டதோர்
தூம ணிமிட றாபகு வாயதோர்
பல்லை யார்தலை யிற்பலி ஏற்றுழல் பண்டரங்கா

தில்லை யார்தொழு தேத்துசிற் றம்பலம்
சேர்த லால்கழற் சேவடி கைதொழ
இல்லை யாம்வினை தான்எரி யம்மதில் எய்தவனே **#5**
திரிபுரத்தை எரித்தொழிக்க மலையில்லால் தீக்கணையை எய்தவனே, பழந்தேவர் எல்லாரும் அமுதுண்ண வேண்டிக் கருணைப் பெருக்கால், நஞ்சினை உண்டதொரு தூய நீலமணிபோலக் கறுத்த திருக்கழுத்தினனே! பற்கள் நிறைந்த பிளந்த வாயுடையதொரு தலையில் பலியை ஏற்று உழலும் பாண்டரங்கக் கூத்தனே! தில்லை வாழந்தணர் வணங்கி ஏத்தும் திருச்சிற்றம்பலத்தைச் சேர்ந்து வழிபடுதலாலும் கழலணிந்த சேவடியைக் கைகளால் தொழுதலாலும் இருவினையும் பற்றறக் கழியும்.

<u>கோயில்</u>

ஆகந் தோய்அணி கொன்றை யாய்அனல்
அங்கை யாய்அம ரர்க்கம ராவுமை
பாகந் தோய்பக வாபலி யேற்றுழல் பண்டரங்கா
மாகந் தோய்பொழில் மல்குசிற் றம்பலம்
மன்னி னாய்மழு வாளி னாய்அழல்
நாகந் தோய்அரை யாய்அடி யாரைநண்
ணாவினையே **#6**
திருமேனியில் தோய்த்த அழகிய கொன்றை மாலையையுடையவனே! தீ ஏந்திய திருக்கையனே! தேவதேவனே! அம்பிகைபாகமுடைய பகவனே! பலி ஏற்றுத்திரியும் பாண்டரங்கக் கூத்தனே! வானளாவிய சோலைகள் நிறைந்த திருச்சிற்றம்பலத்தே நிலைபெற்றவனே! மழுவாளை ஏந்தியவனே! நச்சுத் தீயையுடைய அரவக்கச்சணிந்த திருவரையினனே! உன் அடியவரை வினைகள் அடையா. (ஆதலின், உனக்கு அடிமை பூண்ட எமக்கும் வினை இல்லை என்றவாறு.)

<u>கோயில்</u>

சாதி யார்பளிங் கின்னொடு வெள்ளிய
சங்க வார்குழை யாய்திக ழப்படும்
வேதி யாவிகிர் தாவிழ வாரணி தில்லைதன்னுள்
ஆதி யாய்க்கிடம் ஆயசிற் றம்பலம்
அங்கை யால்தொழ வல்லடி யார்களை
வாதி யாதகலும்நலி யாமலி தீவினையே **#7**
நல்ல இனத்துப் பொருந்திய பளிங்கொடு வெண் சங்குகொண்டு செய்யப்பட்ட குண்டலத்தை உடையானே, விளங்குகின்ற மறையோனே, விகிர்தனே, திருவிழாக்கள் நிறைந்த அழகிய தில்லையுள்

முதல்வனாகிய நினக்கு இடமான திருச்சிற்றம்பலத்தை அழகிய கைகளால் தொழவல்ல அடியார்களைத் தீவினைப் பெருக்கம் வாதிக்காது; வருத்தா தொழியும்.

கோயில்

வேயி னார்பணைத் தோளியொ டாடலை
வேண்டி னாய்விகிர் தாஉயிர் கட்கமு
தாயி னாய்இடு காட்டெரி யாடல்அ மர்ந்தவனே
தீயி னார்கணை யால்புரம் மூன்றெய்த
செம்மை யாய்திகழ் கின்றசிற் றம்பலம்
மேயி னாய்கழ லேதொழு தெய்துதும் மேலுலகே **#8**

மூங்கிலைப் போன்ற பருத்த தோளுடைய காளியொடு திருக்கூத்தாடுதலை விரும்பினவனே, விகிர்தனே, வணங்கிய உயிர்கட்கு அருளமுதமாகியவனே, இடுகாட்டின் தீயில் ஆடுதலை விரும்பியவனே, தீக்கடவுளைக் கூரிய முனையாக் கொண்ட திருமாலாகிய கணையால் திரிபுரத்தை எய்த செம்மையனே, திருவருளாகி விளங்குகின்ற திருச்சிற்றம்பலத்தைத் திரு நடங்கொள்ளும் இடமாக விரும்பியவனே, நின் கழலடிகளையே தொழுது சிவலோகத்தை அடைவோம்.

கோயில்

தாரி னார்விரிகொன்றை யாய்மதி
தாங்கு நீள்சடை யாய்தலை வாநல்ல
தேரி னார்மறு கின்திரு வாரணி தில்லைதன்னுள்
சீரி னால்வழி பாடொழி யாததோர்
செம்மை யால்அழ காயசிற் றம்பலம்
ஏரி னால் அமர்ந் தாய்உன சீரடி யேத்துதுமே **#9**

மலர்ந்த கொன்றைப் பூமாலையைச் சூடியவனே, பிறையைத் தாங்கும் நீண்ட சடையவனே, தலைவனே, அழகிய தேர்களாலே பொலிவு நிறையப் பெற்ற திருவீதிகளையுடைய செல்வம் நிறைந்த திருத்தில்லையுள், சிறந்த நூல் முறைப்படி வழிபடுதலை ஒழியாததொரு செம்மையால் அழகான திருச்சிற்றம்பலத்தைத் திருக் கூத்தெழுச்சியால் விரும்பினவனே, உன் சீரடிகளை ஏத்துவேம். ஒழியாத வழிபாடு இன்றும் உண்டு.

கோயில்

வெற்ற ரையுழல் வார்துவர் ஆடைய
வேடத் தாரவர் கள்உரை கொள்ளன்மின்

மற்ற வருல கின்னவ லம்மவை மாற்றகில்லார்
கற்ற வர்தொழு தேத்துசிற் றம்பலம்
காத லால்கழற் சேவடி கைதொழ
உற்ற வர்உல கின்உறு திகொள வல்லவரே **#10**
ஆடையில்லாத அரையினராய்த் திரிவாராகிய சமணருரைகளையும் துவரூட்டிய ஆடையால் கொள்ளும் வேடத்தவராகிய தேரருரைகளையும் ஒரு பொருளுரையாகக் கொள்ளாதீர்கள். அவர்கள் உலகத்து அவலங்களை மாற்ற வல்லாரல்லர். சிவாகமங்களைக் கற்று நாற்பாதங்களையும் வல்ல சைவர் தொழுது ஏத்தும் திருச்சிற்றம்பலத்தைக் கண்ட ஆராத காதலால், கழலணிந்த சேவடிகளைக் கைகளால் தொழ உற்றவரே உயிர்க்கு உலகினால் உள்ள உறுதி (ஆன்மலாபம்) கொள்ளவல்லவராவர்.

கோயில்

நாறு பூம்பொழில் நண்ணிய காழியுள்
நான்ம றைவல்ல ஞானசம் பந்தன்
ஊறும் இன்தமி ழால்உயர்ந் தார்உறை தில்லைதன்னுள்
ஏறு தொல்புகழ் ஏந்துசிற் றம்பலத்
தீச னைஇசை யாற்சொன்ன பத்திவை
கூறு மாறுவல் லார்உயர்ந் தாரொடும் கூடுவரே **#11**
மணம் நாறும் பூஞ்சோலைகள் பொருந்திய சீகாழியுள் நான்கு மறைகளிலும் வல்ல திருஞானசம்பந்தர் ஊறும் இனிய தமிழால் சொன்னவையும், வேதசிவாகமங்களையுணர்ந்த அந்தணர் மூவாயிரவர் வாழும் தில்லையுள் மேன்மேல் ஏறும் தொன்மைப்புகழ் தாங்கும் திருச்சிற்றம்பலம் உடையானைப் பண்ணிசையால் சொன்னவையும் ஆகிய இத்திருப்பதிகத்தை சையுடன் பாடுமாறு வல்லவர் தேவரொடுங் கூடி இன்பம் அடைவர். (தி.3ப.6பா.11; தி.3ப.31பா.11; தி.3ப.52பா.11.)

திருப்பூந்தராய்

சீர்காழி

திருப்பூந்தராய்,
பண் - காந்தாரபஞ்சமம்

பந்து சேர்விர லாள்பவ ளத்துவர் வாயி
னாள்பனி மாமதி போன்முகத்
தந்த மில்புக ழாள்மலை மாதொடும் ஆதிப்பிரான்
வந்து சேர்விடம் வானவர் எத்திசையுந்
நிறைந் துவலஞ் செய்து மாமலர்
புந்தி செய்திறைஞ் சிப்பொழி பூந்தராய் போற்றதுமே #12

பந்து வந்தணைகின்ற விரல்களையும், பவளம் போன்று சிவந்த வாயினையும், குளிர்ந்த முழுமதி போன்ற முகத்தையும், அளவற்ற புகழையுமுடையவளான மலைமகளாகிய உமா தேவியோடு எப்பொருள்கட்கும் முதல்வராக விளங்கும் சிவபெருமான் எழுந்தருளியுள்ள இடம் திருப்பூந்தராய் ஆகும். அங்குத் தேவர்கள் எல்லாத் திசைகளிலும் நிறைந்து, வலம் வந்து, மனத்தால், நினைந்து, உடலால், வணங்கி, சிறந்த மலர்களைத் தூவி வழிபடுவர். அத்தலத்தினை நாம் வணங்குவோமாக!

சீர்காழி

காவி யங்கருங் கண்ணி னாள்கனித்
தொண்டை வாய்க்கதிர் முத்தநல் வெண்ணகைத்
தூவி யம்பெடை அன்னந டைச்சுரி மென்குழலாள்
தேவி யும்திரு மேனியோர் பாகமாய்
ஒன்றி ரண்டொரு மூன்றொடு சேர்பதி
பூவி லந்தணன் ஒப்பவர் பூந்தராய் போற்றுதுமே #13

நீலோற்பல மலர் போன்ற கரிய கண்களையும், கொவ்வைக்கனிபோல் சிவந்த வாயினையும், ஒளிவீசுகின்ற முத்துப்போன்ற வெண்மையான பற்களையும், இறகுகளையுடைய பெண் அன்னப்பறவை போன்ற நடையையும், பின்னிய மென்மையான கூந்தலையும் உடைய உமாதேவியைத் தன் திருமேனியில் ஒருபாகமாகக் கொண்டு இறைவன் எழுந்தருளியுள்ள இடம், மரபுப்படி சீகாழிக்கு வழங்கப்படுகின்ற பன்னிரு பெயர்களுள் ஆறாவதாகக் கூறப்படுகின்ற திருப்பூந்தராய். தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனை ஒத்த அந்தணர்கள் வசிக்கும் அத்திருத்தலத்தை நாம் வணங்குவோமாக!

சீர்காழி

பைய ராவரும் அல்குன் மெல்லியல்
பஞ்சின் நேரடி வஞ்சிகொள் நுண்ணிடைத்
தைய லாள்ஒரு பாலுடை எம்மிறை சாருமிடம்
செய்யெ லாங்கழு நீர்கம லம்மலர்த்
தேற லூறலிற் சேறுல ராதநற்
பொய்யி லாமறை யோர்பயில் பூந்தராய் போற்றுதுமே **#14**

பாம்பின் படம் போன்ற அல்குலையும், பஞ்சு போன்ற மென்மையான அடியையும், வஞ்சிக்கொடி போன்ற நுண்ணிய இடையையும் உடைய தையலாகிய உமாதேவியைத் தன் திருமேனியில் ஒருபாகமாகக் கொண்ட எங்கள் இறைவன் விரும்பி எழுந்தருளியுள்ள இடம், செங்கழுநீர்ப் பூக்கள், தாமரைப் பூக்கள் இவற்றிலிருந்து தேன் ஊறிப் பாய்தலால் ஏற்பட்ட சேறு உலராத வயல்களையும், பொய்ம்மையிலாத அந்தணர்கள் வசிக்கும் சிறப்பையுமுடைய திருப்பூந்தராய். அத்திருத்தலத்தை நாம் வணங்குவோமாக!

சீர்காழி

முள்ளி நாண்முகை மொட்டியல் கோங்கின்
அரும்பு தேன்கொள் குரும்பைமூ வாமருந்
துள்ளி யன்றபைம் பொற்கல சத்தியல் ஒத்தமுலை
வெள்ளி மால்வரை அன்னதோர் மேனியின்
மேவி னார்பதி வீமரு தண்பொழிற்
புள்ளி னந்துயின் மல்கிய பூந்தராய் போற்றுதுமே **#15**

தாமரைமொட்டு, கோங்கின் அரும்பு, ஊறும் தேனை உள்ளே கொண்ட இளநீர், மூவாமருந்தாகிய அமிர்தத்தை உள்ளடக்கிய பசும்பொற்கலசம் இவற்றை ஒத்த திரு முலைகளையுடைய உமாதேவியாரை, திருநீறு பூசப் பெற்றமையால் வெள்ளிமலைபோல் விளங்கும் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு சிவபெருமான் விரும்பி எழுந்தருளியுள்ள இடம், பறவைகள் அமைதியாய்த் துயில்கின்ற, மலர்கள் நிறைந்த குளிர்ச்சி பொருந்திய சோலைகளையுடைய திருப்பூந்தராய். அத்திருத்தலத்தை நாம் வணங்குவோமாக!

சீர்காழி

பண்ணி யன்றெழு மென்மொழி யாள்பகர்
கோதை யேர்திகழ் பைந்தளிர் மேனியோர்
பெண்ணி யன்றமொய்ம் பிற்பெரு மாற்கிடம்
பெய்வளையார்

கண்ணி யன்றெழு காவிச் செழுங்கரு
நீல மல்கிய காமரு வாவிநற்
புண்ணி யருறை யும்பதி பூந்தராய் போற்றுதுமே **#16**
பண்ணின் இசையோடு ஒலிக்கின்ற மென்மொழியாளாய், நிறைந்த கூந்தலையும், பசுந்தளிர் போன்ற மேனியையுமுடைய உமாதேவியைத் தன் திருமேனியின் ஒரு பாகமாகக் கொண்ட சிவபெருமான் விரும்பி எழுந்தருளியிருக்கும் இடம், வளையல்களை அணிந்த பெண்களின் கண்களைப் போன்ற நீலோற்பல மலர்கள் நிறைந்த அழகிய குளங்களையுடையதும், பசு புண்ணியங்கள், பதி புண்ணியங்களைச் செய்கின்றவர்கள் வசிக்கின்ற பதியுமாகிய திருப்பூந்தராய். அத்திருத்தலத்தை நாம் வணங்குவோமாக!

சீர்காழி

வாணி லாமதி போல்நுத லாள்மட
மாழை யொண்க ணாள்வண்ட ரளந்நகை
பாணி லாவிய இன்னிசை யார்மொழிப் பாவையொடும்
சேணி லாத்திகழ் செஞ்சடை யெம்மண்ணல்
சேர்வ துசிக ரப்பெருங் கோயில்சூழ்
போணி லாநுழை யும்பொழிற் பூந்தராய் போற்றுதுமே **#17**
ஒளி பொருந்திய பிறைச்சந்திரனைப் போன்ற நெற்றியையும், மாம்பிஞ்சு போன்ற ஒள்ளிய கண்களையும் வளமான முத்துக்களைப் போன்ற பற்களையும், பாட்டில் விளங்குகின்ற இனிய இசைபோன்ற மொழியினையும் உடைய பாவையாகிய உமா தேவியோடு, வானில் விளங்கும் நிலவு திகழ்கின்ற சிவந்த சடையையுடைய எங்கள் தலைவனான சிவபெருமான் விரும்பி எழுந்தருளியுள்ள இடமாவது, உயர்ந்த சிகரத்தையுடைய பெருங் கோயிலைச் சூழ்ந்து பிறைச்சந்திரன் நுழையும் சோலைகளையுடைய திருப்பூந்தராய். அத்திருத்தலத்தை நாம் வணங்குவோமாக!

சீர்காழி

காரு லாவிய வார்குழ லாள்கயற்
கண்ணி னாள்புயற் காலொளி மின்னிடை
வாரு லாவிய மென்முலை யாள்மலை மாதுடனாய்
நீரு லாவிய சென்னி யன்மன்னி
நிகரும் நாமமுந் நான்கு நிகழ்பதி
போரு லாவெயில் சூழ்பொழிற் பூந்தராய்
போற்றுதுமே **#18**
கார்மேகம் போன்ற கரிய நீண்ட கூந்தலையும், கயல்மீன் போன்ற

கண்களையும், மேகத்தில் தோன்றும் மின்னலைப் போன்ற இடையையும், கச்சணிந்த மென்மையான கொங்கைகளையும் உடைய மலைமகளான உமாதேவியோடு, கங்கையைத் தாங்கிய முடியையுடைய சிவபெருமான் நிலை பெற்றிருக்கும் பதி, பன்னிரு திருப்பெயர்கள் கொண்டு தனக்குத்தானே ஒப்பாக விளங்கும் பெருமை மிகுந்த, போர்க்கருவிகள் பொருத்தப்பட்ட மதில்கள் சூழ்ந்த, சோலைகள் நிறைந்த திருப்பூந்தராய். அத்திருத்தலத்தை நாம் வணங்குவோமாக!

சீர்காழி

காசை சேர்குழ லாள்கயல் ஏர்தடங்
கண்ணி காம்பன தோள்கதிர் மென்முலைத்
தேசு சேர்மலை மாதம ருந்திரு மார்பகலத்
பெயராய்ப் பிறையையுணர்த்தலும் காண்க.
தீசன் மேவும் இருங்கயி லையெடுத்
தானை அன்றடர்த் தானிணைச் சேவடி
பூசை செய்பவர் சேர்பொழிற் பூந்தராய் போற்றுதுமே #19

காயாம்பூப் போன்ற கருநிறமுடைய கூந்தலையும், கயல்மீன் போன்ற அழகிய அகன்ற கண்களையும், மூங்கில் போன்ற தோள்களையும், கதிர்வீசும் மென்மை வாய்ந்த கொங்கைகளையும், உடைய ஒளி பொருந்திய மலைமகளான உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்ட அழகிய அகன்ற மார்பினையுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ளதும் பெரிய கயிலை மலையினைப் பெயர்த்தெடுத்த இராவணனை அந்நாளில் அடர்த்த அச்சிவனின் சேவடிகள் இரண்டினையும் வழிபடுகிறவர்கள் வந்து சேர்கின்றதும், ஆகிய சோலைகள் சூழ்ந்த திருப்பூந்தராய் என்னும் திருத்தலத்தை நாம் வணங்குவோமாக!

சீர்காழி

கொங்கு சேர்குழ லாள்நிழல் வெண்ணகைக்
கொவ்வை வாய்க்கொடி யேரிடை யாள்உமை
பங்கு சேர்திரு மார்புடை யார்படர் தீயுருவாய்
மங்குல் வண்ணனு மாமல ரோனும்
மயங்க நீண்டவர் வான்மிசை வந்தெழு
பொங்கு நீரின் மிதந்தநற் பூந்தராய் போற்றுதுமே #20

மணம் பொருந்திய கூந்தலையும், ஒளி பொருந்திய வெண்ணிறப் பற்களையும், கொவ்வைக்கனி போன்ற வாயினையும், கொடி போன்ற அழகிய இடையையும் உடைய உமாதேவியைத் தன்னுடைய ஒரு பாகமாக வைத்துள்ள அழகிய மார்பினையுடையவராய், கார்மேக வண்ணனான திருமாலும், தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பிரமனும்

அடிமுடியறியாது மயங்கும்படி படர்கின்ற தீயுருவாய் ஓங்கி நின்ற சிவபெருமான் எழுந்தருளும் இடம், வானம்வரை பொங்கிய ஊழி வெள்ளத்திலும் அழியாது மிதந்த நற்பதியான திருப்பூந்தராய். அத்திருத்தலத்தை நாம் வணங்குவோமாக!

சீர்காழி

கலவ மாமயி லார்இய லாள்கரும்
பன்ன மென்மொழி யாள்கதிர் வாள்நுதற்
குலவு பூங்குழ லாள்உமை கூறனை வேறுரையால்
அலவை சொல்லுவார் தேர்அமண் ஆதர்கள்
ஆக்கி னான்றனை நண்ணலும் நல்கும்நற்
புலவர் தாம்புகழ் பொற்பதி பூந்தராய் போற்றுதுமே **#21**

தோகை மயில் போன்ற சாயலையுடையவளாய்க், கரும்பு போன்று இனிய மொழியை மென்மையாகப் பேசுபவளும், கதிர் வீசுகின்ற ஒளியுடைய நெற்றியுடையவளும், வாசனை பொருந்திய பூக்களைச் சூடிய கூந்தலையுடையவளுமான உமா தேவியை ஒரு பாகமாக வைத்தவர் சிவபெருமான். கூறத்தகாத சொற்களால் பழித்துக் கூறும் புத்தர்களையும், சமணர்களையும் பிறக்கும்படி செய்தவன் அவனே. அப்பெருமானை மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒன்றுபட வழிபட்டால் சிவபோகத்தைத் தருவான். அத்தகைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் சிவஞானிகள் போற்றும் அழகிய பதியான திருப்பூந்தராய். அத்திருத்தலத்தை நாம் வணங்குவோமாக.

சீர்காழி

தேம்பல் நுண்ணிடை யாள்செழுஞ் சேலன
கண்ணி யோடண்ணல் சேர்விடம் தேன்அமர்
பூம்பொ ழில்திகழ் பொற்பதி பூந்தராய் போற்றுதும்என்
றோம்பு தன்மையன் முத்தமிழ் நான்மறை
ஞான சம்பந்தன் ஒண்டமிழ் மாலைகொண்
டாம்படி இவை ஏத்தவல் லார்க்குஅடை
யாவினையே **#22**

மெலிந்த சிற்றிடையையும், செழுமையான சேல்மீன் போன்ற கண்களையும் உடைய உமாதேவியோடு எங்கள் தலைவனான சிவபெருமான் வீற்றிருக்கும் இடம், தேன் நிறைந்த பூஞ்சோலைகளுடன் விளங்குகின்ற அழகிய பதியான திருப்பூந்தராய். அதனை வணங்குவோம் என்று அத்திருத்தலப் பெருமையைப் போற்றி வளர்க்கின்ற முத்தமிழ், நான்மறை இரண்டிற்குமுரிய திருஞானசம்பந்தனின் சிவஞானம் ததும்பும் தமிழ்ப்பாமாலையாகிய

இப்பதிகத்தினைத் தமக்குப் பயன்தர வேண்டி ஓதுபவர்களை வினைகள் வந்தடையா.

திருப்புகலி

சீர்காழி

திருப்புகலி,
பண் - காந்தாரபஞ்சமம், திருப்புகலி மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

இயலிசை எனும்பொரு ளின்திறமாம்
புயல்அன மிடறுடைப் புண்ணியனே
கயல்அன வரிநெடுங் கண்ணியொடும்
அயல்உல கடிதொழ அமர்ந்தவனே
கலன்ஆவது வெண்டலை கடிபொழிற் புகலிதன்னுள்
நிலன்நாள்தொறும் இன்புற நிறைமதி அருளினனே #23

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் இவற்றில் கூறப்படும் பொருளின் பயனாக விளங்குகின்ற, கார்மேகம் போன்ற கருநிறக் கண்டத்தையுடைய புண்ணிய மூர்த்தியே! கயல்மீன் போன்ற நீண்ட கண்களையுடைய உமாதேவியோடு எல்லா உலகங்களும் தொழும்படி வீற்றிருப்பவனே! உனக்கு அணிகலனாக அல்லது உண்கலனாக விளங்குவது மண்டையோடே ஆகும். நல்ல மணமுடைய பூஞ்சோலைகள் நிறைந்த திருப்புகலியில் வீற்றிருந்து இந்நிலவுலகத்தோர் நாடோறும் இன்புறும்படி நிறைந்த அபர ஞான, பர ஞானங்களை அடியேனுக்கு நீ அருளிச் செய்தாய்.

சீர்காழி

நிலையுறும் இடர்நிலை யாதவண்ணம்
இலையுறு மலர்கள்கொண் டேத்துதும்யாம்
மலையினில் அரிவையை வெருவவன்றோல்
அலைவரு மதகரி யுரித்தவனே இமையோர்கள்நின்
தாள்தொழ எழில்திகழ் பொழிற்புகலி
உமையாளொடு மன்னினை உயர்திரு வடியிணையே #24

ஆரவாரித்துவரும் மதயானையின் வலிய தோலினை மலைமகளான உமாதேவி அஞ்சும்படி உரித்தவனே! அழகிய சோலைகள் நிறைந்த திருப்புகலியில் வானவர்களும் வந்து உன்திருவடிகளைத் தொழும் பொருட்டு உமாதேவியோடு நிலையாக வீற்றிருக்கின்றாய். எங்களால் நீக்குவதற்கரிய நிலைத்த துன்பங்களை நீ நீக்கும் வண்ணம் இலைகளையும், மலர்களையும் கொண்டு உன் திருவடிகளை அர்ச்சித்து

நாங்கள் வழிபடுவோம்.

<u>சீர்காழி</u>

பாடினை அருமறை வரன்முறையால்
ஆடினை காணமுன் அருவனத்திற்
சாடினை காலனைத் தயங்கொளிசேர்
நீடுவெண் பிறைமுடி நின்மலனே
நினையேஅடி யார்தொழ நெடுமதிற் புகலிந்நகர்
தனையேயிட மேவினை தவநெறி அருள்எமக்கே **#25**

ஒளி விளங்குகின்ற வளரும் தன்மையுடைய வெண்பிறையைச் சடைமுடியில் சூடிய நின்மலனே! அரிய வேதங்களை இசையிலக்கண முறைப்படி, பாடியருளினாய்! முனிவரும் அவர்களின் பத்தினிகளும் காணும்படி அரிய தாருகாவனத்தில் திருநடனம் ஆடினாய்! மார்க்கண்டேயன் உயிரைக் கவரவந்த காலனைக் காலால் உதைத்தாய்! முழுமுதற்கடவுளான உன்னை அடியார்கள் தொழும்படி நீண்டமதில்கள் சூழ்ந்த திருப்புகலிநகரில் வீற்றிருந்து அருளினாய்! எங்கட்குத் தவநெறியினை அருள்வாயாக! சுந்தரர் இறைவனிடம் ‘‘தலைவா உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே’’ என்று வேண்டியது இங்கு நினைவு கூரத்தக்கது.

<u>சீர்காழி</u>

நிழல்திகழ் மழுவினை யானையின்தோல்
அழல்திகழ் மேனியில் அணிந்தவனே
கழல்திகழ் சிலம்பொலி அலம்பநல்ல
முழவொடும் அருநடம் முயற்றினனே
முடிமேல்மதி சூடினை முருகமர் பொழிற்புகலி
அடியாரவர் ஏத்துற அழகொடும் இருந்தவனே **#26**

ஒளிவிளங்கும் மழுப்படையை ஏந்தியவனே! யானையின் தோலை நெருப்புப்போல் விளங்குகின்ற உனது சிவந்த திருமேனியில் அணிந்தவனே! திருவடியில் விளங்கும் வீரக் கழல்களும், சிலம்பும் ஒலிக்க, நல்ல முழவு முழங்கத் திருநடனம் புரிபவனே! சடைமுடியில் பிறைச்சந்திரனைச் சூடியவனே! அழகிய சோலைகள் சூழ்ந்த திருப்புகலியில் அடியார்கள் உன்னைப் புகழ்ந்து வணங்கும் படி வீற்றிருந்தருளினாய்.

<u>சீர்காழி</u>

கருமையின் ஒளிர்கடல் நஞ்சம்உண்ட
உரிமையின் உலகுயிர் அளித்தநின்றன்

பெருமையை நிலத்தவர் பேசின்அல்லால்
அருமையில் அளப்பரி தாயவனே
அரவேரிடை யாளொடும் அலைகடன் மலிபுகலிப்
பொருள்சேர்தர நாள்தொறும் புவிமிசைப் பொலிந்தவனே **#27**

பாற்கடலில் தோன்றிய கருநிற நஞ்சை உண்டு, உன் முழுமுதற் பண்பினை விளங்குமாறு செய்து உலகுயிர்களைப் பாதுகாத்தருளிய உன்னுடைய பெருமையை மண்ணுலகத்தோர் போற்றலாமே தவிர, மற்ற எவ்வித அளவைகளாலும் ஆராய்வதற்கு அரியவனாய் உள்ளவனே! அரவம் அன்ன இடையுடைய உமாதேவியோடு, அலைகளையுடைய கடல்வளம் பொருந்திய திருப்புகலியிலே, இப்பூவுலகில் நாள்தோறும் அறம், பொருள், இன்பம்,வீடு என்னும் நால்வகைப் பொருள்களும் சேரும்படி நீ வீற்றிருந்தருளுகின்றாய்.

சீர்காழி

அடையரி மாவொடு வேங்கையின்றோல்
புடைபட அரைமிசைப் புனைந்தவனே
படையுடை நெடுமதிற் பரிசழித்த
விடையுடைக் கொடிமல்கு வேதியனே
விகிர்தாபரமா நின்னை விண்ணவர் தொழப்புகலித்
தகுவாய்மட மாதொடுந் தாள்பணிந் தவர்தமக்கே **#28**

சிங்கத்தின் தோலைப் போர்த்து, புலியின் தோலையும் உடம்பில் பொருந்துமாறு இடையில் அணிந்துள்ளவனே! படைக்கருவிகளைக் கொண்ட நீண்ட மதில்களையுடைய திரிபுரத்தின் வலிமையை அழித்தவனே! இடபக் கொடியுடைய வேத நாயகனே! விகிர்தனே! எப்பொருட்கும் மேலானவனே! விண்ணோர்களும் தொழத் திருப்புகலியிலே உமாதேவியோடு வீற்றிருந்து உன் திரு வடிகளை வணங்கும் அனைவர்க்கும் அருள்புரிகின்றாய்.

சீர்காழி

அடியவர் தொழுதெழ அமரரேத்தச்
செடியவல் வினைபல தீர்ப்பவனே
துடியிடை அகல்அல்குல் தூமொழியைப்
பொடியணி மார்புறப் புல்கினனே
புண்ணியா புனிதா புகர்ஏற்றினை புகலிந்நகர்
நண்ணினாய் கழல்ஏத்திட நண்ணகி
லாவினையே **#29**

அடியவர்கள் தொழுதெழ, தேவர்கள் புகழ்ந்து வணங்க, அவர்களின் துன்பம்தரும் கொடியவினைகளைத் தீர்த்தருளும் எம் இறைவனே!

உடுக்கை போன்ற இடையையும், அகன்ற அல்குலையும், தூய மொழிகளையுமுடைய உமாதேவியைத் திருநீறு அணிந்த தன் திருமார்பில் தழுவியவனே! புண்ணிய மூர்த்தியே! புனிதனே! இடபவாகனனே! திருப்புகலிநகரில் வீற்றிருக்கும் பெருமானே! உன் திருவடிகளை வணங்கிப் போற்றுபவர்களை வினைகள் வந்தடையா.

சீர்காழி

இரவொடு பகலதாம் எம்மான்உன்னைப்
பரவுதல் ஒழிகிலேன் வழியடியேன்
குரவிரி நறுங்கொன்றை கொண்டணிந்த
அரவிரி சடைமுடி ஆண்டகையே
அனமென்னடை யாளொடும் அதிர்கடல் இலங்கைமன்னை
இனமார்தரு தோளடர்த் திருந்தனை புகலியுளே **#30**

இரவு, பகல் போன்ற கால தத்துவத்தை இயக்கும் எம்பெருமானே! வழி வழி அடிமையாக வந்த நான் உன்னை நினைந்து வணங்கி போற்றுதலில் தவறேன். குராமலர்களையும், விரிந்த நறுமணமுடைய கொன்றை மலர்களையும், பாம்பையும் சடைமுடியில் அணிந்து, எம்மை ஆண்டருளும் பெருமானே! ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த இலங்கை மன்னனான இராவணனின் இருபது தோள்களையும் அடர்ந்த நீ அன்னம் போன்ற மென்னடையுடைய உமாதேவியோடு திருப்புகலியில் எழுந்தருளியுள்ளாய்.

சீர்காழி

உருகிட உவகைதந் துடலினுள்ளால்
பருகிடும் அமுதன பண்பினனே
பொருகடல் வண்ணனும் பூவுளானும்
பெருகிடும் அருள்எனப் பிறங்கெரியாய்
உயர்ந்தாய்இனி நீஎனை ஒண்மலரடி யிணைக்கீழ்
வயந்தாங் குறநல் கிடுமதிற் புகலிமனே **#31**

உள்ளமும், உடலும் உருக உன்னைப் போற்றும் அடியவர்கட்குச் சிவானந்தம் அளிக்கும் அமுதம் போன்ற இனிமை வாய்ந்தவனே! கடல் போன்ற நீலநிறமுடைய திருமாலும், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும் அடிமுடி காணாதபடி நெருப்பு மலையாய், உன்னுடைய பெருகும் அருளென உயர்ந்து நின்றாய். மதில்களையுடைய திருப்புகலியில் வீற்றிருக்கும் இறைவனே! நீ என்னை உன் ஒளி பொருந்திய திருவடியிணைக்கீழ் விரும்பி வீற்றிருக்கும்படி

சீர்காழி

கையினில் உண்பவர் கணிகைநோன்பர்
செய்வன தவமலாச் செதுமதியார்
பொய்யவர் உரைகளைப் பொருள்எனாத
மெய்யவர் அடிதொழ விரும்பினனே
வியந்தாய்வெள் ளேற்றினை விண்ணவர் தொழுபுகலி
உயர்ந்தார்பெருங் கோயிலுள் ஒருங்குடன் இருந்தவனே **#32**
கையில் உணவேற்று உண்ணும் சமணர்களும், கணபங்கவாதம் செய்யும் புத்தர்களும் தவமல்லாததைச் செய்யும் அற்பமதியினர். உண்மைப்பொருளாம் இறைவனை உணராமல் வெறும் உலகியலறங்களை மட்டுமே பேசுகின்ற அவர்களுடைய உரைகளைப் பொருளெனக் கொள்ளாது, மெய்ப்பொருளாம் சிவனையுணர்ந்த ஞானிகள் வந்து திருவடிகளைத் தொழ, விரும்பி அருள் புரிபவனே! வெண்ணிற எருதினை வாகனமாகக் கொண்டாய். விண்ணவர்களும் தொழ, திருப்புகலியில் உயர்ந்த அழகிய பெருங்கோயிலினுள் உமாதேவியுடன் ஒருங்கு வீற்றிருக்கின்றாய்.

சீர்காழி

புண்ணியர் தொழுதெழு புகலிந்நகர்
விண்ணவர் அடிதொழ விளங்கினானை
நண்ணிய ஞானசம் பந்தன்வாய்மை
பண்ணிய அருந்தமிழ் பத்தும்வல்லார்
நடலையவை இன்றிப்போய் நண்ணுவர் சிவனுலகம்
இடராயின இன்றித்தாம் எய்துவர் தவநெறியே **#33**
சிவபுண்ணியர்கள் வணங்குகின்ற திருப்புகலிப் பதியில், விண்ணவர்களும் தன் திருவடிகளைத் தொழும்படி விளங்கும் சிவபெருமானை, மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒன்றுபடப் போற்றிய திருஞானசம்பந்தனின் அருந்தமிழ்ப் பாக்கள் பத்தினையும் ஓதவல்லவர்கள் எவ்வித இடர்களுமின்றித் தவநெறியில் நின்று, பிறவித் துன்பத்தினின்றும் நீங்கிச் சிவனுலகம் அடைவர்.

திருஆவடுதுறை

திருஆவடுதுறை

திருஆவடுதுறை,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாசிலாமணியீசுவரர்.
தேவியார் : ஒப்பிலாமுலையம்மை.

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே #34 ★★★★★

திருப்பாற்கடலில், அமுதம் பெறும் பொருட்டுக் கடைந்தபோது தோன்றிய நஞ்சினைக் கழுத்தில் அடக்கித் தேவர்களைக் காத்த வேதநாயகனே! வாழ்க்கையில் இடையூறு ஏற்பட்டுத் துன்பம் உண்டானாலும், இளமை நீங்கி மூப்பினால் தளர்ச்சியுற்றாலும், தீவினைப்பயனால் நோய் தொடர்ந்து வந்தாலும், உன்திருவடிகளைத் தொழுது வணங்குவேன். அத்தகைய அடியேனை நீ ஆட்கொள்ளும் தன்மை இதுவோ? திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே (உலக நன்மையின் பொருட்டுத் தந்தை செய்ய விரும்புகின்ற வேள்விக்குத்) தேவைப்படுகின்ற பொருளை நீ எனக்குத் தரவில்லையானால் அஃது உன் திருவருளுக்கு அழகாகுமா?

திருஆவடுதுறை

வாழினும் சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உனகழல் விடுவேன்அல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே #35

ஒளிர்கின்ற செஞ்சடையில் குளிர்ச்சியான கங்கையையும், பிறைச்சந்திரனையும் அணிந்த சிவபெருமானே! இம்மையில் மண்ணுலகில் நல்வினைப் பயனால் இன்பம் அனுபவிக்கின்ற காலத்திலும், தீவினைப் பயனால் துன்புற்று வருந்தும் காலத்திலும், நன்னெறியினின்று விலகித் தீநெறியில் செல்கின்ற காலத்திலும்,

வினைப் பயன்களை அனுபவித்து முடித்துச் சாகப்போகும் காலத்திலும், உன்னுடைய திருவடிகளை இறுகப் பற்றியதிலிருந்து நீங்கியவன் அல்லேன். இத்தகைய என்னை நீ ஆட்கொள்ளும் தன்மை இதுவோ? திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே! (உலக நன்மையின் பொருட்டுத் தந்தை செய்ய விரும்புகின்ற வேள்விக்காக) எனக்குப் பொருள் தாராவிடில் அஃது உனது இன்னருளுக்கு அழகாகுமா?

திருஆவடுதுறை

நனவினும் கனவினும் நம்பாஉன்னை
மனவினும் வழிபடல் மறவேன்அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே **#36**

கங்கையையும், நறுமணம் கமழும் கொன்றையையும் அணிந்து கனன்று எரிகின்ற நெருப்பைக் கையிலேந்தி யுள்ளவனே! அனைவரின் நம்பிக்கைக்கும், விருப்பத்திற்குமுரிய உன்னை நனவிலும், கனவிலும், மனம் ஒன்றி வணங்குவதற்கு மறந்திலேன். இத்தகைய என்னை நீ ஆட்கொள்ளுமாறு இதுவோ? திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! (உலக நன்மைக்காகத் தந்தை செய்ய விரும்புகின்ற வேள்விக்குத்) தேவையான பொருளை எனக்குத் தாராவிடில், அஃது உனதின்னருளுக்கு அழகாகுமா?

திருஆவடுதுறை

தும்மலொ டருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாதென்நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதிள் எரிஎழ முனிந்தவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே **#37**

கையிலே மேருமலையை வில்லாக ஏந்தி அக்கினியைக் கணையாகத் தொடுத்து முப்புரங்களை எரியும்படி செய்தவனே! தும்மல், அவற்றின் உபாதைகள் இவற்றால் துன்பம் வரும்பொழுதும் உன்னுடைய மலர் போன்ற திருவடிகளைப் போற்றுதல் அல்லாமல் என் நா வேறெதனையும் நவிலாது. திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! இத்தகைய தன்மையுடைய என்னை நீ ஆட்கொள்ளும் முறை இதுவோ? (உலக நன்மைக்காகத் தந்தை செய்ய விரும்புகின்ற வேள்விக்குத்) தேவையான பொருளை எனக்குத் தாராவிடில் அஃது

உனதின்னருளுக்கு அழகாகுமா?

திருஆவடுதுறை

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே **#38**

கொய்து அணியப்பெறும் நறுமணம் கமழும் மலர்களைச் சூடியுள்ள முடியையும், மை போன்ற கருநிறக் கண்டத்தையும் உடைய மறையவனே! கைப்பொருள்கள் யாவும் இழந்து வருந்தும் காலத்திலும், பிறரால் இழிவாகக் கருதப்பட்டுக் கழிவுப் பொருள் போன்று ஒதுக்கப்பட்ட காலத்திலும், உன்னுடைய செம்மை வாய்ந்த திருவடிகளைப் போற்றுதலல்லாமல், வேறெதனையும் Cநான் சிந்தை செய்யேன். திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! இத்தன்மையுடைய என்னை நீ ஆட்கொள்ளும் முறை இதுவோ? (உலக நன்மைக்காகத் தந்தையார் செய்ய விரும்புகின்ற வேள்விக்குத்) தேவையான பொருளை எனக்குத் தாராவிடில் அஃது உனதின்னருளுக்கு அழகாகுமா?

திருஆவடுதுறை

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய்உன் னடியலால் ஏத்தாதென்நா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே **#39**

ஐந்து தலைகளையுடைய பாம்பை அரையில் கச்சாகக் கட்டி, நறுமணம் கமழும் திருவெண்ணீற்றினைத் திருமேனியில் அணிந்துள்ள சங்கரனே! கொடிய துன்பத்தால் அச்சமுற்றாலும், எம் தந்தையே! உன்திருவடிகளைப் போற்றுதல் அல்லாமல் என் நா வேறெதனையும் சொல்லாது. அங்ஙனமிருக்க திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! நீ எம்மை ஆட்கொள்ளும் வகை இதுவோ. (உலக நன்மைக்காகத் தந்தையார் செய்ய விரும்பும் வேள்விக்குத்) தேவையான பொருளை எனக்குத் தாராவிடில் அஃது உனதின்னருளுக்கு அழகாகுமா?

திருஆவடுதுறை

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் அடியலால் அரற்றாதென்நா
ஒப்புடை ஒருவனை உருவழிய
அப்படி அழலெழ விழித்தவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே **#40**

அழகில் தனக்கு ஒப்புமையாகத் தன்னைத் தவிரப் பிறரைச் சொல்ல முடியாத மன்மதனை, அவனுடைய வடிவம் அழியுமாறு நெருப்புத் தோன்ற நெற்றிக் கண்ணைத் திறந்து விழித்தவனே! திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! கொடிய வினையினால் துன்பம் நெருப்புப் போல வந்து தாக்கினாலும், அனைத்துயிர்கட்கும் தந்தையான உன் திருவடிகளைப் போற்றுதலல்லாமல் என் நா வேறொன்றையும் நவிலாது. இப்படிப்பட்ட என்னை நீ ஆட்கொள்ளும்முறை இதுவோ? (உலக நன்மைக்காகத் தந்தையார் செய்ய விரும்புகின்ற வேள்விக்குத்) தேவையான பொருளை எனக்குத் தாராவிடில் அஃது உனதின்னருளுக்கு அழகாகுமா?

திருஆவடுதுறை

பேரிடர் பெருகிஓர் பிணிவரினும்
சீருடைக் கழல்அலால் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி யிராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே **#41**

அழகிய மணிமுடியணிந்த இராவணன் பொறுத்தற்கரிய துன்பமடையம்படி கயிலை மலையின்கீழ் அடர்த்தவனே! திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! தீவினையால் பெருந்துன்பம் தரும் நோய் வரினும் வாழ்வுதரும் உன் திருவடிகளைப் போற்றுதல் அல்லாமல் வேறெதனையும் நான் சிந்தனை செய்ததில்லை. இப்படிப்பட்ட என்னை நீ ஆட்கொள்ளும் முறை இதுவோ? (உலக நன்மைக்காகத் தந்தையார் செய்ய விரும்புகின்ற வேள்விக்குத்) தேவையான பொருளை எனக்குத் தாராவிடில் அஃது உனதின்னருளுக்கு அழகாகுமா?

திருஆவடுதுறை

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும்நின்

ஒண்மல ரடியலால் உரையாதென்நாக்
கண்ணனும் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே **#42**

திருமாலும், மணங்கமழ் தாமரையில் வீற்றிருக்கும் பிரமனும் அளந்தறிதற்கு அரியவனே! திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! நான் உண்ணும் நிலையிலும், பசியால் களைத்திருக்கும் நிலையிலும், உறங்கும் நிலையிலும் ஒளிபொருந்திய உன் திருவடிகளைப் போற்றுதலல்லாமல் என் நா வேறெதையும் நவிலாது. அப்படிப்பட்ட என்னை நீ ஆட்கொள்ளும் முறை இதுவோ? (உலக நன்மைக்காகத் தந்தையார் செய்யும் வேள்விக்குத்) தேவைப்படும் பொருளை எனக்குத் தாராவிடில் அஃது உனதின்னருளுக்கு அழகாகுமா?

<u>திருஆவடுதுறை</u>

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் னடியலால் அரற்றாதென்னாப்
புத்தரும் சமணரும் புறன்உரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே **#43**

புத்தரும், சமணரும் புறங்கூறினாலும் பொருட்படுத்தாது உன்னை வணங்குகின்ற பக்தர்கட்கு அருள்புரிகின்றவனே! பித்த நோயால் மயங்கும் நிலையுற்றாலும், தலைவா! உன் திருவடிகளைப் போற்றுதலல்லாமல் என் நா வேறேதையும் பேசாது. திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! இப்படிப்பட்ட என்னை நீ ஆட்கொள்ளும் முறை இதுவோ? (உலக நன்மைக்காகத் தந்தையார் செய்ய விரும்புகின்ற வேள்விக்குத்) தேவைப்படும் பொருளை எனக்குத் தாராவிடில் அஃது உனதின்னருளுக்கு அழகாகுமா?

<u>திருஆவடுதுறை</u>

அலைபுனல் ஆவடு துறைஅமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்இறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயினநீங் கிப்போய் விண்ணவர் வியனுலகம்

நிலையாகமுன் ஏறுவர்நிலிமிசை நிலையிலரே **#44**
அலைகளையுடைய காவிரிவளம் பொருந்திய திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் இலை போன்ற நுனியையுடைய திரிசூலப் படையேந்திய எம் இறைவனைப் பற்றி உலக நலன்களை விரும்பிய ஞானசம்பந்தன் அருளிய சிறப்புடைய அருந்தமிழ் மாலையாகிய இத்திருப்பதிகத்தை ஓதுபவர்கள் வினையாவும் நீங்கப்பெற்று விரிந்த விண்ணுலகில் நிலையாக வீற்றிருப்பர். துன்பம் தரும் இம்மண்ணுலகில் மீண்டும் வந்து பிறவார்.

திருப்பூந்தராய்

சீர்காழி

திருப்பூந்தராய்,
பண் - காந்தாரபஞ்சமம்

தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
நன்ற தாகிய நம்பன் தானே **#45**

சிவனை மதியாது தக்கன் செயத் யாகத்தைத் தகர்த்தவனாகிய, திருப்பூந்தராய்த் தலத்தில் எழுந்தருளிய மிகுந்த சிறப்புடைய, இயல்பாகவே பாசங்களில் நீங்கிய சிவபெருமானின் பெருமையுடைய திருவடிகளைச் சிந்தியுங்கள். அனைத்துயிர்கட்கும் நன்மையைச் செய்கின்ற, அனைவராலும் விரும்பப்படுகின்ற அச்சிவ பெருமானே நமக்கு வீடுபேற்றினைத் தருவான்.

சீர்காழி

புள்ளி னம்புகழ் போற்றிய பூந்தராய்
வெள்ளம் தாங்கு விகிர்தன் அடிதொழ
ஞாலத் தில்உயர் வார்உள்கும் நன்னெறி
மூலம் ஆய முதலவன் தானே **#46**

பறவையினங்களும் புகழ்ந்து போற்றிய திருப்பூந்தராய் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள கங்கையைத் தாங்கி யுள்ள விகிர்தனான சிவபெருமானின் திருவடிகளைத் தொழுதலே இந்நிலவுலகில் உயர்வடைவதை விரும்புபவர்கள் சிந்திக்கும் நன்னெறியாகும். ஏனென்றால் அனைத்திற்கும் மூலப் பொருளாக விளங்குபவன் அச்சிவபெருமானே ஆவான்.

சீர்காழி

வேந்த ராய்உல காள விருப்புறின்
பூந்த ராய்நகர் மேயவன் பொற்கழல்
நீதி யால்நினைந் தேத்தி உள்கிடச்
சாதி யாவினை யான தானே **#47**

நீங்கள் மன்னராகி உலகாள விரும்பினால் திருப்பூந்தராய் என்னும் தலத்தில எழுந்தருளியுள்ள சிவபெருமானின் பொன்னார் திருவடிகளை வழிபடுங்கள். மேலும் அத்திருவடிகளை விதிமுறைப்படி நினைத்து, போற்றித் தியானித்தால் வினைகள் தம் தொழிலைச் செய்யா. எனவே

பிறவி நீங்கும். வீடுபேறு உண்டாகும்.

சீர்காழி

பூசு ரர்தொழு தேத்திய பூந்தராய்
ஈசன் சேவடி யேத்தி யிறைஞ்சிடச்
சிந்தை நோயவை தீர நல்கிடும்
இந்து வார்சடை யெம்இ றையே **#48**

இப்பூவுலகில் தேவர்கள் போன்று பெருமையாகக் கருதப்படுகின்ற அந்தணர்கள் வணங்கிப் போற்றும் திருப்பூந்தராய் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனின் செம்மை வாய்ந்த திருவடிகளைத் துதித்து இறைஞ்சிடச் சந்திரனை அணிந்த நீண்ட சடைகளையுடைய இறைவன் நம் மனக்கவலைகளைப் போக்கி அருள்புரிவான். "தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது" (குறள் -7) என்ற வள்ளுவர் வாக்கு இங்கு நினைவு கூர்தற்குரியது.

சீர்காழி

பொலிந்த என்பணி மேனியன் பூந்தராய்
மலிந்த புந்தியர் ஆகி வணங்கிட
நுந்தம் மேல்வினையோட வீடுசெய்
எந்தை யாயஎம் மீசன் தானே **#49**

எலும்பு மாலைகளைத் தன் திருமேனியில் அணிந்து திருப்பூந்தராய் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானை, நிறைந்த உள்ளத்தோடு வணங்கிட, நம் அனைவர்க்கும் தந்தையாகிய அவ்விறைவன், நீங்கள் முன்பு ஈட்டிய சஞ்சிதவினையைப் போக்குதலோடு, இனிமேல் வரும் ஆகாமிய வினையும் ஏறாதபடி செய்து வீடுபேறு அருளுவான். தத்தம் கால எல்லைகளில் நீங்கிய திருமால், பிரமன் இவர்களின் எலும்புகளைச் சிவபெருமான் மாலையாக அணிந்துள்ளது சிவனின் அநாதி நித்தத்தன்மையையும், யாவருக்கும் முதல்வனாம் தன்மையையும் உணர்த்தும்.

சீர்காழி

பூதம் சூழப் பொலிந்தவன் பூந்தராய்
நாதன் சேவடி நாளும் நவின்றிட
நல்கும் நாள்தொறும் இன்பம் நளிர்புனல்
பில்கு வார்சடைப் பிஞ்ஞு கனே **#50**

திருப்பூந்தராய் என்னும் தலத்தில் பூதகணங்கள் சூழ விளங்கும் தலைவனாகிய சிவபெருமானின் திருவடிகளை எந்நாளும் போற்றி

வணங்க, குளிர்ந்த கங்கைநீர் சொட்டுகின்ற நீண்ட சடைமுடியுடைய அப்பெருமான் நமக்கு நாள்தோறும் பேரின்பம் அருளுவான்.

சீர்காழி

புற்றின் நாகம் அணிந்தவன் பூந்தராய்
பற்றிவாழும் பரமனைப் பாடிடப்
பாவம் ஆயின தீரப் பணித்திடுஞ்
சேவ தேறிய செல்வன் தானே **#51**

புற்றில் வாழும் பாம்பை ஆபரணமாக அணிந்து, திருப்பூந்தராய் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள, அனைவருக்கும் மேலான கடவுளான சிவபெருமானைப் பாடி வணங்க, விடையேறும் செல்வனான அவன், நாம் மனம், வாக்கு, காயத்தால் செய்த பாவங்களனைத்தையும் தீர்த்தருளுவான்.

சீர்காழி

போத கத்தூரி போர்த்தவன் பூந்தராய்
காத லித்தான் கழல்விரல் ஒன்றினால்
அரக்கன் ஆற்றல் அழித்தவ னுக்கருள்
பெருக்கி நின்றஎம் பிஞ்ஞ கனே **#52**

யானையின் தோலை உரித்துப் போர்த்தித் திருப்பூந்தராய் என்னும் தலத்தில் விரும்பி எழுந்தருளியுள்ள எனது பிஞ்ஞகனாகிய சிவபெருமானே தனது திருவடி விரல் ஒன்றினால் அரக்கனது ஆற்றலை அழித்துப் பின்னர் அவனுக்கு அருள் செய்தான்.

சீர்காழி

மத்தம் ஆனஇருவர் மருவொணா
அத்தன் ஆனவன் மேவிய பூந்தராய்
ஆளதாக அடைந்துய்ம்மின் நும்வினை
மாளு மாறருள் செய்யுந் தானே **#53**

தாமே தலைவர் என்று செருக்குக் கொண்ட திருமாலும், பிரமனும், அறிந்து அடைய முடியாது உயர்ந்து விளங்கிய சிவபெருமான் எழுந்தருளிய திருப்பூந்தராய் என்னும் தலத்தை அவனுக்கு ஆட்படும்படி அடியவராய்ச் சென்று சேர்ந்து மேல் நிலையை அடையுங்கள. அவன் தானே வந்து உங்கள் வினைகள் அழியுமாறு அருள்புரிவான்.

சீர்காழி

பொருத்த மில்சமண் சாக்கியக் பொய்கடிந்
திருத்தல் செய்தபிரான் இமை யோர்தொழப்

பூந்த ராய்நகர் கோயில் கொண்டுகை
ஏந்து மான்மறி யெம்இ றையே **#54**

வேத நெறிகட்குப் பொருந்தாத சமணர், புத்தர்களின் பொய்யுரைகளை ஒதுக்கி, விண்ணோர்கள் வணங்கும் படி வீற்றிருக்கும் கடவுள், திருப்பூந்தராய்த் தலத்தைக் கோயிலாகக் கொண்டு தனது கையில் மான்கன்றை ஏந்தியுள்ள சிவபெருமானே ஆவான்.

<u>சீர்காழி</u>

புந்தி யான்மிக நல்லவர் பூந்தராய்
அந்தம் இல்எம் அடிகளை ஞானசம்
பந்தன் மாலைகொண் டேத்தி வாழும்நும்
பந்த மார்வினை பாறி டுமே **#55**

உள்ளத்தால் மிக நல்ல சிவனடியார்கள் வாழ்கின்ற திருப்பூந்தராய் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள, என்றும் அழிதலில்லாத எம் தலைவனான சிவபெருமானைத் திருஞானசம்பந்தன் அருளிச் செய்த இப்பதிகப் பாமாலையைக் கொண்டு போற்றி வாழுங்கள். உங்களைப் பந்தித்து நின்ற வினைகள் யாவும் நீங்கும்.

திருக்கொள்ளம்பூதூர்

திருக்கொள்ளம்பூதூர்

திருக்கொள்ளம்பூதூர்,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வில்வவனேசுவரர்.
தேவியார் : சவுந்தராம்பிகையம்மை. இது ஓடக்காரனில்லாமல் அவ்வோடம் ஆற்றிற்சென்று கரைசேரும்படி அருளிச்செய்த பதிகம்.

கொட்ட மேகம ழுங்கொள்ளம் பூதூர்
நட்டம் ஆடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே **#56**

நல்லமணம் கமழும் திருக்கொள்ளம்பூதூர் என்னும் திருத்தலத்தில் திருநடனமாடும் இறைவனைத் தியானிப்பதால்,இந்த ஓடமாவது ஆற்றைக் கடந்து செல்லத் தனக்குத்தானே தள்ளப்படுவதாக. எம் நம்பிக்கைக்கும், விருப்பத்திற்குமுரிய சிவபெருமானே! மனத்தால் உன்னைச் சிந்தித்து மகிழும் அடியவர்கள் புறத்தேயும் உன்னைத் திருக்கோயிலில் கண்டு வணங்க அருள்புரிவாயாக.

திருக்கொள்ளம்பூதூர்

கோட்ட கக்கழ னிக்கொள்ளம் பூதூர்
நாட்ட கத்துறை நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே **#57**

நீர்நிலைகளும், வயல்களும் கொண்டு விளங்கும் திருக்கொள்ளம் பூதூர் என்னும் தலத்தில் விரும்பி வீற்றிருக்கின்ற நம்பனைத் தியானிக்க, இந்த ஓடமானது ஆற்றைக் கடந்து செல்லத் தனக்குத்தானே தள்ளப்படுவதாக. மனத்தால் உன்னைச் சிந்தித்து மகிழும் அடியவர்கள் புறத்தேயும் உன்னைத் திருக்கோயிலில் கண்டு வழிபட அருள்புரிவாயாக.

திருக்கொள்ளம்பூதூர்

குலையி னார்தெங்கு சூழ்கொள்ளம் பூதூர்
விலையி லாட்கொண்ட விகிர்தனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே **#58**

குலைகளோடு கூடிய தென்னை மரங்கள் சூழ்ந்த

திருக்கொள்ளம்பூதூரில், விலை கொடுத்து வாங்கிய பொருளைப் போன்ற அருமையுடன் என்னை ஆட்கொண்ட விகிர்தனாகிய உன்னைத் தியானிக்க இந்த ஓடமாவது ஆற்றைக் கடந்து செல்லத் தனக்குத் தானே தள்ளப்படுவதாக. நம்பனே! மனத்தால் உன்னைச் சிந்தித்து மகிழும் அடியவர்கள் புறத்தேயும் உன்னைத் திருக்கோயிலில் கண்டு வழிபட அருள்புரிவாயாக.

திருக்கொள்ளம்பூதூர்

குவளை கண்மல ருங்கொள்ளம் பூதூர்த்
தவள நீறணி தலைவனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே **#59**

பெண்களின் கண்களைப் போன்று குவளை மலர்கள் மலர்ந்துள்ள திருக்கொள்ளம்பூதூரில் வீற்றிருக்கின்ற திருவெண்ணீறு அணிந்துள்ள தலைவனான சிவபெருமானைத் தியானிக்க இந்த ஓடமானது ஆற்றைக் கடந்து செல்லத் தனக்குத் தானே தள்ளப்படுவதாக. நம்பனே! மனத்தால் உன்னைச் சிந்தித்து மகிழும் அடியவர்கள். புறத்தேயும் உன்னைத் திருக்கோயிலில் கண்டு வழிபட அருள்புரிவாயாக.

திருக்கொள்ளம்பூதூர்

கொன்றை பொன்சொரி யுங்கொள்ளம் பூதூர்
நின்ற புன்சடை நிமலனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே **#60**

கொன்றை மரமானது பொன்னிறப் பூக்களை உதிர்க்கின்ற திருக்கொள்ளம்பூதூரில் எழுந்தருளியுள்ள நிமலனைத் தியானிக்க இந்த ஓடமானது ஆற்றைக் கடக்கத் தனக்குத் தானே தள்ளப்படுவதாக. நம்பனே! மனத்தால் உன்னைச் சிந்தித்து மகிழும் அடியவர்கள் புறத்தேயும் உன்னைத் திருக்கோயிலில் கண்டு வழிபட அருள்புரிவாயாக.

திருக்கொள்ளம்பூதூர்

ஓடம் வந்தணை யுங்கொள்ளம் பூதூர்
ஆடல் பேணிய அடிகளை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே **#61**

திருநடனம் செய்யும் தலைவனான சிவபெருமானைத் தியானிக்க ஓடமானது திருக்கொள்ளம்பூதூர் என்னும் தலத்தினை அடையும்படி

ஆற்றைக் கடக்கத் தானாகவே தள்ளப்படுவதாக. நம்பனே! மனத்தால் உன்னைச் சிந்தித்து மகிழும் அடியவர்கள் புறத்தேயும் உன்னைத் திருக்கோயிலில் கண்டு வழிபட அருள்புரிவாயாக.

திருக்கொள்ளம்பூதூர்

ஆறு வந்தணை யுங்கொள்ளம் பூதூர்
ஏறு தாங்கிய இறைவனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே **#62**

ஆறு வந்தடைகின்ற திருக்கொள்ளம்பூதூரில் இடபம் தாங்கிய இறைவனைத் தியானிக்க ஓடம் தானாகவே தள்ளப்படுவதாக. நம்பனே! மனத்தால் உன்னைச் சிந்தித்து மகிழும் அடியவர்கள் புறத்தேயும் உன்னைத் திருக்கோயிலில் கண்டு வழிபட அருள்புரிவாயாக.

திருக்கொள்ளம்பூதூர்

குரக்கி னம்பயி லுங்கொள்ளம் பூதூர்
அரக்க னைச்செற்ற ஆதியை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே **#63**

குரங்குக் கூட்டங்கள் மரங்களில் ஆடிக் குதிப்பதால் உண்டாகும் ஒலி நிறைந்த திருக்கொள்ளம்பூதூரில் எழுந்தருளியிருக்கின்றவனும், இராவணனை மலையின் கீழ் நெருக்கியவனுமான ஆதிமுதல்வனான சிவபெருமானைத் தியானிக்க இந்த ஓடம் தானாகவே தள்ளப்படுவதாக. நம்பனே! மனத்தால் உன்னைச் சிந்தித்து மகிழும் அடியவர்கள் புறத்தேயும் உன்னைத் திருக்கோயிலில் கண்டு வழிபட அருள்புரிவாயாக.

திருக்கொள்ளம்பூதூர்

பருவ ரால்உக ளுங்கொள்ளம் பூதூர்
இருவர் காண்பரி யான்கழ லுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே **#64**

பருத்த வரால்மீன்கள் துள்ளுகின்ற திருக்கொள்ளம்பூதூரில் எழுந்தருளியிருக்கின்ற, திருமாலும், பிரமனும் காண்பதற்கு அரியவனாய் நின்ற சிவபெருமானின் திருவடிகளைத் தியானிக்க இந்த ஓடம் தானாகவே தள்ளப்படுவதாக. நம்பனே! மனத்தால் உன்னைச் சிந்தித்து மகிழும் அடியவர்கள் புறத்தேயும் உன்னைத் திருக்கோயிலில் கண்டு வழிபட அருள்புரிவாயாக.

திருக்கொள்ளம்பூதூர்

நீர கக்கழ னிக்கொள்ளம் பூதூர்த்
தேர மண்செற்ற செல்வனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே **#65**

நீர்வளம் மிக்க வயல்களையுடைய திருக்கொள்ளம்பூதூரில் எழுந்தருளியுள்ளவனாய், புத்தர்களும், சமணர்களும் பகைத்துப் பேசும் செல்வனான சிவபெருமானைத் தியானிக்க இந்த ஓடம் தானே தள்ளப்படுவதாக. நம்பனே! மனத்தால் உன்னைச் சிந்தித்து மகிழும் அடியார்கள் புறத்தேயும் உன்னைத் திருக்கோயிலில் கண்டு வழிபட அருள்புரிவாயாக.

திருக்கொள்ளம்பூதூர்

கொன்றை சேர்சடை யான்கொள்ளம் பூதூர்
நன்று காழியுள் ஞானசம் பந்தன்
இன்றுசொன் மாலைகொண் டேத்த வல்லார்போய்
என்றும் வானவ ரோடிருப் பாரே **#66**

கொன்றை மலர்களை அணிந்த சடைமுடியுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கொள்ளம்பூதூரில் நற்புகழுடைய காழியில் வசிக்கும் ஞானசம்பந்தன் உரைத்த இப் பதிகப் பாமாலையால் இறைவனைப் போற்ற வல்லவர்கள் எப்பொழுதும் தேவர்களோடு கூடி மகிழ்வர்.

திருப்புகலி

சீர்காழி

திருப்புகலி,
பண் - காந்தாரபஞ்சமம், திருப்புகலி மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

கண்ணுத லானும்வெண் ணீற்றினா னுங்கழ
லார்க்கவே
பண்ணிசை பாடநின் றாடினா னும்பரஞ்
சோதியும்
புண்ணிய நான்மறை யோர்களேத் தும்புக
லிந்நகர்ப்
பெண்ணினல் லாளொடும் வீற்றிருந் தபெரு
மானன்றே **#67**

நெற்றிக் கண்ணையுடையவனும், திருவெண்ணீற்றினைப் பூசியுள்ளவனும், திருவடிகளில் கழல்கள் ஒலிக்கப்பண்ணுடன் இசைபாட நடனம் ஆடுபவனும் ஆகி, மேலான சோதி வடிவாக விளங்குகின்ற கடவுள், சிவபுண்ணியர்களாகிய, நான்கு வேதங்களையும் பயின்ற அந்தணர்கள் துதிக்கின்ற திருப் புகலி நகரில் பெண்ணின் நல்லவளாகிய உமாதேவியோடு வீற்றிருந்தருளும் சிவபெருமானேயாவான்.

சீர்காழி

சாம்பலோ டுந்தழ லாடினா னுஞ்சடை
யின்மிசைப்
பாம்பினோ டும்மதி சூடினா னும்பசு
வேறியும்
பூம்படு கல்லிள வாளைபா யும்புக
லிந்நகர்க்
காம்பன தோளியொ டும்மிருந் தகட
வுளன்றே **#68**

மகாசங்கார காலத்தில் சாம்பலோடு நெருப்பில் ஆடியவனும், சடைமுடியில் பாம்போடு சந்திரனைச் சூடியுள்ளவனும், இடபவாகனத்தில் ஏறியுள்ளவனுமான சிவபெருமான், மலர்ப்பொய்கையில் இள வாளை மீன்கள் துள்ளிப் பாய்கின்ற

திருப்புகலி நகரில், மூங்கில் போன்ற தோளுடைய உமாதேவியோடு வீற்றிருக்கும் கடவுளே ஆவான்.

சீர்காழி

கருப்புநல் வார்சிலைக் காமன்வே வக்கடைக்
கண்டானும்
மருப்புநல் லானையி னீருரி போர்த்தம
ணாளனும்
பொருப்பன மாமணி மாடமோங் கும்புக
லிந்நகர்
விருப்பினல் லாளொடும் வீற்றிருந் தவிம
லனன்றே **#69**

நல்ல நீண்ட கரும்பு வில்லையுடைய மன்மதன் எரியும்படி நெற்றிக் கண்ணால் விழித்தவனும், அழகிய தந்தத்தையுடைய யானையின் வலிய தோலினை உரித்துப் போர்த்திக் கொண்ட மணாளனுமாகிய சிவபெருமான், மலைகள் போன்று உயர்ந்து விளங்கும் அழகிய மாடங்களையுடைய திருப்புகலி நகரில் தன்மீது விருப்பமுடைய உமாதேவியோடு வீற்றிருந்தருளும் விமலனேயாவான்.

சீர்காழி

அங்கையி லங்கழ லேந்தினா னும்அழ
காகவே
கங்கையைச் செஞ்சடை சூடினா னுங்கட
லின்னிடைப்
பொங்கிய நஞ்சமு துண்டவ னும்புக
லிந்நகர்
மங்கைநல் லாளொடும் வீற்றிருந் தமண
வாளனே **#70**

உள்ளங்கையில் நெருப்பை ஏந்தியவனும், அழகுறக் கங்கையைச் செஞ்சடையில் சூடியவனும், திருப்பாற் கடலில் தோன்றிய நஞ்சை அமுதாக உண்டவனும், திருப்புகலி நகரில் மங்கை நல்லாளாகிய உமாதேவியோடு வீற்றிருந்தருளும் சிவபெருமானேயாவான்.

சீர்காழி

சாமநல் வேதனுந் தக்கன்றன் வேள்வித
கர்த்தானும்
நாமநூ றாயிரஞ் சொல்லிவா னோர்தொழு
நாதனும்

பூமல்கு தண்பொழின் மன்னுமந் தண்புக
லிந்நகர்க்
கோமள மாதொடும் வீற்றிருந் தகுழ
கனன்றே **#71**

நல்ல சாமவேதத்தை அருளியவனும், சிவனை நினையாது தக்கன் செய்த யாகத்தைத் தகர்த்தவனும், நூறாயிரம் திருநாமங்களைச் சொல்லித் தேவர்களும் அருச்சித்து வணங்கும் தலைவனும், பூக்கள் நிறைந்த குளிர்ந்த சோலைகள் நிலைபெற்றிருக்கும் அழகும், குளிர்ச்சியுமுடைய திருப்புகலி நகரில் அழகிய இளம்பெண்ணாகிய உமாதேவியோடு வீற்றிருந்தருளும் அழகிய சிவபெருமானேயாவான்.

சீர்காழி

இரவிடை யொள்ளெரி யாடினா னும்இமை
யோர்தொழச்
செருவிடை முப்புரந் தீயெரித் தசிவ
லோகனும்
பொருவிடை யொன்றுகந் தேறினா னும்புக
லிந்நகர்
அரவிடை மாதொடும் வீற்றிருந் தவழ
கனன்றே **#72**

மகாசங்காரம் என்று சொல்லப்படும் நள்ளிரவில் ஒளிமிக்க நெருப்பில் ஆடியவனும், தேவர்கள் தொழுது வேண்டப் போர் முகத்தில் முப்புரங்களைத் தீப்பற்றி எரியும்படி செய்த சிவலோகநாதனும், இடபவாகனத்தில் உகந்து ஏறியவனும், திருப்புகலி நகரில் பாம்புபோன்ற இடையினையுடைய உமாதேவியோடு வீற்றிருந்தருளும் அழகிய சிவபெருமானேயாவான்.

சீர்காழி

சேர்ப்பது திண்சிலை மேவினா னுந்திகழ்
பாலன்மேல்
வேர்ப்பது செய்தவெங் கூற்றுதைத் தானும்வேள்
விப்புகை
போர்ப்பது செய்தணி மாடமோங் கும்புக
லிந்நகர்ப்
பார்ப்பதி யோடுடன் வீற்றிருந் தபர
மனன்றே **#73**

திண்ணிய கயிலை மலையை விரும்பி இருப்பிடமாகக் கொண்டவனும், பாலனான மார்க்கண்டேயர் மீது சினம் கொண்டு வந்த

கொடுங்காலனைக் காலால் உதைத்தவனும், வேள்விப் புகையால் மூடப்பட்ட அழகிய மாடங்கள் ஓங்கும் திருப்புகலி நகரில் உமாதேவியோடு வீற்றிருந்தருள்பவனும் எல்லோருக்கும் மேலானவனான சிவபெருமானே யாவான்.

சீர்காழி

கன்னெடு மால்வரைக் கீழரக் கன்னிடர்
கண்டானும்
வின்னெடும் போர்விறல் வேடனா கிவிச
யற்கொரு
பொன்னெடுங் கோல்கொடுத் தானுமந் தண்புக
லிந்நகர்
அன்னமன் னந்நடை மங்கையொ டும்அமர்ந்
தானன்றே **#74**

கல் போன்று திண்ணிய நெடிய பெரிய திருக்கயிலை மலையின் கீழ் அரக்கனான இராவணனை இடர் செய்தானும், வில்லேந்திப் போர்புரியும் வீரமுடைய வேட்டுவ வடிவில் வந்து அர்ச்சுனனுக்கு ஒரு பொன்மயமான பாசுபதம் என்ற அம்பைக் கொடுத்தவனும், அழகிய குளிர்ச்சியான திருப்புகலி நகரில் அன்னம் போன்ற நடையையுடைய உமாதேவியோடு வீற்றிருந்து அருளுபவனான சிவபெருமானேயாவான்.

சீர்காழி

பொன்னிற நான்முகன் பச்சையான் என்றிவர்
புக்குழித்
தன்னையின் னானெனக் காண்பரி யதழற்
சோதியும்
புன்னைபொன் றாதுதிர் மல்குமந் தண்புக
லிந்நகர்
மின்னிடை மாதொடும் வீற்றிருந் தவிம
லனன்றே **#75**

பொன்னிறப் பிரமனும், பச்சைநிறத் திருமாலும் என்ற இவர்கள் அடிமுடி காணப் புகுந்தபோது தன்னை இன்னானெனக் காண்பதற்கியலாதபடி அழற்பிழம்பாய் நின்ற பெருமான், புன்னை மரங்கள் பொன் போன்ற தாதுக்களை உதிர்க்க அழகிய, குளிர்ச்சியான திருப்புகலி நகரில் மின்னல் போன்ற இடையையுடைய உமாதேவியோடு வீற்றிருந்தருளும் விமலனாகிய சிவபெருமானேயாவான்.

சீர்காழி

பிண்டியும் போதியும் பேணுவார் பேச்சினைப்
பேணாததோர்
தொண்டருங் காதல்செய் சோதியா யசுடர்ச்
சோதியான்
புண்டரீ கம்மலர்ப் பொய்கைசூழ்ந் தபுக
லிந்நகர்
வண்டமர் கோதையோ டும்மிருந் தமண
வாளனே **#76**

அசோக மரத்தையும், அரசமரத்தையும் போற்றும் சமணர்கள், புத்தர்கள், சொல்லும் உரைகளைப் போற்றாது ஒப்பற்ற தொண்டர்கள் பக்தியுடன் வழிபாடு செய்கின்ற சோதிச் சுடராய் ஒளிரும் இறைவன் தாமரைகள் மலரும் பொய்கைகள் சூழ்ந்த திருப்புகலி நகரில் வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடைய உமாதேவியோடு எழுந்தருளியுள்ள மணவாளனான சிவபெருமானேயாவான்.

சீர்காழி

பூங்கமழ் கோதையோ டும்மிருந் தான்புக
லிந்நகர்ப
பாங்கனை ஞானசம் பந்தன்சொன் னதமிழ்
பத்திவை
ஆங்கமர் வெய்திய வாதியா கவிசை
வல்லவர்
ஓங்கம ராவதி யோர்தொழச் செல்வது
முண்மையே **#77**

பூ மணம் கமழும் கூந்தலையுடைய உமா தேவியை ஒரு பாகமாகக் கொண்ட திருப்புகலி நகர் இறைவனை, ஞானசம்பந்தன் சொன்ன தமிழ்ப்பாக்கள் பத்தினைத் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவமாகவே கொண்டு இன்னிசையுடன் ஓதித் துதிக்க வல்லவர்கள் பெருமையுடைய தேவலோகத்தாரும் தொழும்படி சிவனுலகம் செல்வர் என்பது உண்மையே ஆகும்.

திருக்கடவூர்வீரட்டம்

திருக்கடவூர்

திருக்கடவூர்வீரட்டம்,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அமிர்தகடேசுவரர்.
தேவியார் : அபிராமியம்மை.

சடையுடை யானும்நெய் யாடலா னுஞ்சரி
கோவண
உடையுடை யானுமை யார்ந்த வொண்கண்
உமைகேள்வனும்
கடையுடை நன்னெடு மாடமோங் குங்கட
வூர்தனுள்
விடையுடை யண்ணலும் வீரட்டா னத்தர
னல்லனே #78

சடை முடியுடையவனும், பசுவிலிருந்து பெறப்படும் நெய் முதலான ஐந்து பொருள்களால் திருமுழுக்காட்டப் படுபவனும், சரிந்த கோவண ஆடையுடையவனும், மை தீட்டிய ஒளி பொருந்திய கண்ணை யுடைய உமாதேவியின் கணவனும், வாயில்களையுடைய நெடிதோங்கிய நல்ல மாடங்களை உடைய திருக்கடவூரில் இடபவாகனத்தில் வீற்றிருக்கும் அண்ணலும் வீரட்டானத்து அரன் அல்லனோ?

திருக்கடவூர்

எரிதரு வார்சடை யானும்வெள் ளையெரு
தேறியும்
புரிதரு மாமலர்க் கொன்றைமா லைபுனைந்
தேத்தவே
கரிதரு காலனைச் சாடினா னுங்கட
வூர்தனுள்
விரிதரு தொல்புகழ் வீரட்டா னத்தர
னல்லனே. #79

நெருப்புப் போன்று சிவந்த நீண்ட சடைமுடி உடையவனும், வெண்ணிற எருதை வாகனமாகக் கொண்டவனும், சிறந்த கொன்றை மலர்களாலான மாலையைப் புனைந்து ஏத்தி மார்க்கண்டேயன் வழிபட, அவனுயிரைக் கவர வந்த கருநிறக் காலனைக் காலால் உதைத்தவனுமாகிய இறைவன் திருக்கடவூரில் மேன்மேலும் பெருகுகின்ற பழம்புகழுடைய

திருவீரட்டானத்தில் வீற்றிருந்தருளும் அரன் அல்லனோ?

திருக்கடவூர்

நாதனும் நள்ளிரு ளாடினா னும்நளிர்
போதின்கண்
பாதனும் பாய்புலித் தோலினா னும்பசு
வேறியும்
காதலர் தண்கட வூரினா னுங்கலந்
தேத்தவே
வேதம தோதியும் வீரட்டா னத்தர
னல்லனே. **#80**

எல்லா உலகங்கட்கும் தலைவனும், மகாசங்கார காலத்தில் நடனம் புரிபவனும், அடியவர்களின் இதயத்தாமரையில் வீற்றிருப்பவனும், புலித்தோலாடை உடையவனும், இடபவாகனனும், அன்பர்கள் வசிக்கும் குளிர்ச்சி பொருந்திய திருக்கடவூரில் விளங்கு பவனுமான இறைவன் யாவரும் வணங்குமாறு வேதத்தை அருளிச் சய்த வீரட்டானத்து அரன் அல்லனோ?

திருக்கடவூர்

மழுவமர் செல்வனும் மாசிலாதபல
பூதமுன்
முழவொலி யாழ்குழன் மொந்தைகொட்டமுது
காட்டிடைக்
கழல்வளர் கால்குஞ்சித் தாடினா னுங்கட
வூர்தனுள்
விழவொலி மல்கிய வீரட்டா னத்தர
னல்லனே **#81**

மழுப்படையேந்திய செல்வனும், குற்றமில்லாத பல பூதகணங்கள் முரசு ஒலிக்க, யாழும் குழலும் இசைக்க, மொந்தை என்னும் வாத்தியம் கொட்ட, சுடுகாட்டில் கழல் ஒலிக்கத் தன் திருப்பாதத்தை நன்கு வளைத்து ஆடும் பெருமான் திருக்கடவூரில் திருவிழாக்களின் ஒலி நிறைந்த வீரட்டானத்து அரன் அல்லனோ?

திருக்கடவூர்

சுடர்மணிச் சுண்ணவெண் ணீற்றினா னுஞ்சுழல்
வாயதோர்
படமணி நாகம் ரைக்கசைத் தபர
மேட்டியும்

கடமணி மாவுரித் தோலினா னுங்கட
வூர்தனுள்
விடமணி கண்டனும் வீரட்டா னத்தர
னல்லனே **#82**

சுடர்விடும் மணிபோன்ற உருத்திராக்கம் அணிந்துள்ளவனும், வாசனை பொருந்திய திருவெண்ணீற்றினைப் பூசியுள்ள வனும், அசைகின்ற படமுடைய பாம்பை இடையில் கச்சாக அணிந்துள்ள கடவுளும், மதமுடைய யானையின் தோலை உரித்துப் போர்த்தவனும், திருக்கடவூரில் நஞ்சை மணி போன்று கண்டத்தில் கொண்டு விளங்குபவனும் வீரட்டானத்தில் வீற்றிருந்தருளும் அரன் அல்லனோ? விடமணிகண்டன்-“நீலமணி மிடற்று ஒருவன் போல” (அவ்வையார், புறநானூறு) நினைவுகூர்க.

<u>திருக்கடவூர்</u>

பண்பொலி நான்மறை பாடியா டிப்பல
வூர்கள்போய்
உண்பலி கொண்டுழல் வானும்வா னின்னொளி
மல்கிய
கண்பொலி நெற்றிவெண் டிங்களா னுங்கட
வூர்தனுள்
வெண்பொடிப் பூசியும் வீரட்டா னத்தர
னல்லனே **#83**

நான்கு வேதங்களையும் பண்ணோடு பாடுபவனும், நடனம் ஆடுபவனும், பலவூர்களுக்கும் சென்று மண்டையோட்டில் பிச்சையேற்றுத் திரிபவனும், நெற்றிக் கண்ணை உடையவனும், வானில் ஒளிரும் வெள்ளிய சந்திரனைச் சடையிலணிந்துள்ளவனும், திருவெண்ணீற்றைப் பூசியுள்ளவனும் திருக்கடவூரிலுள்ள வீரட்டானத்து அரன் அல்லனோ?

<u>திருக்கடவூர்</u>

செவ்வழ லாய்நில மாகிநின் றசிவ
மூர்த்தியும்
முவ்வழல் நான்மறை யைந்துமா யமுனி
கேள்வனும்
கவ்வழல் வாய்க்கத நாகமார்த் தான்கட
வூர்தனுள்
வெவ்வழல் ஏந்துகை வீரட்டா னத்தர
னல்லனே **#84**

செந்நிற நெருப்பாகவும், நிலமாகவும் விளங்கும் சிவமூர்த்தியும், ஆகவனீயம், காருகபத்தியம், தட்சிணாக்கினி என்ற மூவகை நெருப்பாய்த் திகழ்பவனும், இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கு வேதங்களாய் விளங்குபவனும், ஞானநூல்களை ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல் என்ற ஞானவேள்வி ஐந்து இயற்றும் முனிவர்களின் துணைவனாய் விளங்குபவனும், கவ்வுகின்ற நெருப்பைப் போன்று விடத்தைக் கக்குகின்ற வாயையுடைய சினமிகுந்த பாம்பை அணிந்தவனும், வெப்ப முடைய நெருப்பை ஏந்திய கரத்தை உடையவனும், திருக் கடவூரிலுள்ள வீரட்டானத்தில் எழுந்தருளியுள்ள அரன் அல்லனோ?

திருக்கடவூர்

அடியிரண் டோருடம் பைஞ்ஞான்கி ருபது
தோள்தச
முடியுடை வேந்தனை மூர்க்கழித் தமுதன்
மூர்த்தியும்
கடிகம ழும்பொழில் சூழுமந் தண்கட
வூர்தனுள்
வெடிதலை யேந்தியும் வீரட்டா னத்தர
னல்லனே **#85**

ஓர் உடம்பில் இரண்டு கால்களும், இருபது தோள்களும், பத்துத் தலைகளுமுடைய இலங்கை வேந்தனான இராவணனின் மூர்க்கத் தன்மையை அழித்த முதல் பொருளாகிய மூர்த்தியும், முடை நாற்றமுடைய பிரமனின் மண்டையோட்டை ஏந்தியுள்ளவனும், திருக்கடவூரிலுள்ள வீரட்டானத்தில் எழுந்தருளியுள்ள அரன் அல்லனோ?

திருக்கடவூர்

வரைகுடை யாமழை தாங்கினா னும்வளர்
போதின்கண்
புரைகடிந் தோங்கிய நான்முகத் தான்புரிந்
தேத்தவே
கரைகடல் சூழ்வையங் காக்கின்றா னுங்கட
வூர்தனுள்
விரைகமழ் பூம்பொழில் வீரட்டா னத்தர
னல்லனே **#86**

கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்துப் பெருமழையிலிருந்து ஆக்களையும், ஆயர்களையும் காத்த திருமாலும், குற்றமற்ற தாமரை

மலரில் வீற்றிருக்கும் பிரமனும் சிவனே முழுமுதற்பொருள் என உணர்ந்து துதிக்க, பக்கங்களில் கடல் சூழ்ந்த இவ்வுலகத்தைக் காக்கின்றவன், திருக்கடவூரில் மணங்கமழ் பூஞ்சோலைகளுடைய வீரட்டானத்தில் வீற்றிருந்தருளும் அரன் அல்லனோ?

திருக்கடவூர்

தேரரும் மாசுகொள் மேனியா ரும்தெள
யாததோர்
ஆரருஞ் சொற்பொரு ளாகிநின் றஎம
தாதியான்
காரிளங் கொன்றைவெண்டிங்களா னுங்கட
வூர்தனுள்
வீரமுஞ் சேர்கழல் வீரட்டா னத்தர
னல்லனே **#87**

புத்தர்களும், அழுக்கு உடம்பையுடைய சமணர்களும் தெளந்தறிதற்கரிய சொல்லும், பொருளுமாகி நின்ற எம் ஆதிப்பிரான், கார்காலத்தில்மலரும் இளங்கொன்றைப் பூக்களை அணிந்துள்ளவனும், வெண்ணிறச் சந்திரனைச் சடையில் சூடியுள்ளவனும், வீரக்கழல்களை அணிந்துள்ளவனும் ஆகிய, திருக்கடவூரிலுள்ள வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் அரன் அல்லனோ?

திருக்கடவூர்

வெந்தவெண் ணீரணி வீரட்டா னத்துறை
வேந்தனை
அந்தணர் தங்கட வூருளா னைஅணி
காழியான்
சந்தமெல் லாம்அடிச் சாத்தவல் லமறை
ஞானசம்
பந்தன செந்தமிழ் பாடியா டக்கெடும்
பாவமே **#88**

விதிப்படி அமைக்கப்பட்ட திருவெண்ணீற்றினை அணிந்துள்ள திருவீரட்டானத்து இறைவனாய், அந்தணர்கள் வழிபாடு செய்யத் திருக்கடவூரில் திகழ்பவனை, அழகிய சீகாழியில்அவதரித்த வேதமுணர்ந்த ஞானசம்பந்தன் செந்தமிழில் அருளிய இச்சந்தப் பாடல்களை இறைவன் திருவடிக்குப் பக்தியுடன் சாத்திப் பாடியாடும் அன்பர்களின் பாவம் கெடும்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை

திருவீழிமிழலை,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

கேள்வியர் நாடொறு மோதுநல் வேதத்தர் கேடிலா
வேள்விசெ யந்தணர் வேதியர் வீழி மிழலையார்
வாழியர் தோற்றமுங் கேடும்வைப் பாருயிர் கட்கெலாம்
ஆழியர் தம்மடி போற்றியென் பார்கட் கணியரே **#89**

கேள்வி ஞானம் உடையவர்களும், நாள்தோறும் நல்ல வேதத்தை ஓதுபவர்களும், கெடுதலில்லாத யாகத்தைச் செய்கின்ற, எவ்வுயிர்களிடத்தும் இரக்கமுடையவர்களுமான அந்தணர்கள், போற்றுகின்ற வேதநாயகர் திருவீழிமிழலையில் வீற்றிருந்தருளும் சிவபெருமானேயாவார். அவர் ஆருயிர்கட்கெல்லாம் வினைப்பயனுக்கேற்பப் பிறப்பும், இறப்பும் செய்வார். கடலாழம் கண்டறியவரப்படாதது போல அவருடைய தன்மை பிறரால் அறிதற்கு அரியது. தம்முடைய திருவடிகளைப் போற்றி வணங்கும் அன்பர்கட்கு நெருக்கமானவர்.

திருவீழிமிழலை

கல்லினற் பாவையோர் பாகத்தர் காதலித் தேத்திய
மெல்லினத் தார்பக்கல் மேவினர் வீழி மிழலையார்
நல்லினத் தார்செய்த வேள்வி செகுத்தெழு ஞாயிற்றின்
பல்லனைத் துந்தகர்த் தாரடி யார்பாவ நாசரே **#90**

இறைவர் மலைமகளாகிய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டவர். பக்தியோடு துதிக்கும் மென்மையான இனத்தாராகிய அந்தணர்கள் விரும்பிப் போற்றுகின்ற வீழிமிழலையில் விளங்குபவர். சிவனை நினையாது செய்த தக்கனது யாகத்தை அழித்தவர். அந்த யாகத்தில் பங்கேற்ற சூரியனின் பற்களைத் தகர்த் தவர். தம்மைத் தொழும் அடியவர்களின் பாவத்தைப் போக்குபவர்.

திருவீழிமிழலை

நஞ்சினை யுண்டிருள் கண்டர்பண் டந்தக னைச்செற்ற
வெஞ்சின மூவிலைச் சூலத்தர் வீழி மிழலையார்

அஞ்சனக் கண்ணுமை பங்கினர் கங்கையங் காடிய
மஞ்சனச் செஞ்சடை யாரென வல்வினை மாயுமே **#91**
இறைவர் நஞ்சுண்டதால் இருள் போன்ற கறுத்த கண்டத்தையுடையவர். கடுங்கோபம் கொண்டு அந்தகாசுரன் என்ற அரக்கனைக் கொன்ற மூவிலைச் சூலப்படையையுடையவர். திருவீழிமிழலையில் வீற்றிருந்தருளுபவர். மைதீட்டிய கண்களையுடைய உமாதேவியைத் தம் ஒரு பாகமாகக் கொண்டவர். கங்கையால் அபிடேகம் செய்யப்பட்ட சிவந்த சடை முடியையுடையவர். அத்தகைய சிவபெருமானைத் தொழும் அடியவர்களின் கொடு வினை யாவும் அழியும்.

திருவீழிமிழலை

கலையிலங் கும்மழு கட்டங்கங் கண்டிகை குண்டலம்
விலையிலங் கும்மணி மாடத்தர் வீழி மிழலையார்
தலையிலங் கும்பிறை தாழ்வடஞ் சூலந் தமருகம்
அலையிலங் கும்புன லேற்றவர்க் கும்மடி யார்க்குமே **#92**
மான், மழுப்படை, யோகதண்டம், உருத்திராக்கம், குண்டலம் முதலியன கொணடு, விலைமதிப்புடைய மணிகளால் அலங்கரிக்கப்பட்ட மாடங்களையுடைய திருவீழிமிழலையில் இறைவர் வீற்றிருந்தருளுகின்றார். தலையிலே பிறைச் சந்திரன் திகழ, கழுத்திலே எலும்புமாலை விளங்க, கையில் சூலம், உடுக்கை கொண்டு அலையுடைய கங்கையை ஏற்று இடபக்கொடி கொண்டு விளங்குபவர். யோகநெறி நின்று தம்மைத் தொழும் அடியவர்களும் தம்மைப் போன்ற உருவம் (சாரூப பதவி) பெறச் செய்வார். (ஒத்த தோழர்கள் ஒன்று போல் அலங்கரித்துக் கொள்வது போல).

திருவீழிமிழலை

பிறையுறு செஞ்சடை யார்விடை யார்பிச்சை நச்சியே
வெறியுறு நாட்பலி தேர்ந்துழல் வீழி மிழலையார்
முறைமுறை யாலிசை பாடுவா ராடிமுன் றொண்டர்கள்
இறையுறை வாஞ்சிய மல்லதெப் போதுமென் னுள்ளமே **#93**
திருவீழிமிழலையில் வீற்றிருக்கும் இறைவர் பிறைச் சந்திரனைச் சூடிய சிவந்த சடைமுடியையுடையவர். இடபத்தை வாகனமாக உடையவர். பிச்சையெடுத்தலை விரும்பும் நாள்களில் பலியேற்றுத் திரிவார். தொண்டரகள் பண்முறைப்படி இசைபாடி அதற் கேற்ப ஆட முற்பட அவர்கள் இதயத் தாமரையில் வீற்றிருப்பார். அவரையல்லாது எனது உள்ளம் வேறெதையும் நினையாது.

திருவீழிமிழலை

வசையறு மாதவங் கண்டு வரிசிலை வேடனாய்
விசையனுக் கன்றருள் செய்தவர் வீழி மிழலையார்
இசைவர விட்டியல் கேட்பித்துக் கல்ல வடமிட்டுத்
திசைதொழு தாடியும் பாடுவார் சிந்தையுட் சேர்வரே **#94**

திருவீழிமிழலையில் வீற்றிருக்கும் இறைவர் அருச்சுனன் செய்த குற்றமற்ற பெருந்தவம் கண்டு இரங்கி, அழகிய வில்லேந்திய வேட்டுவ வடிவில் வந்து அவனுக்கு அருள்புரிந்தவர். தம்மை இசைத்தமிழால் பாடி, தம் திருப்புகழைப் போற்றி உரைத்துப் பிறரைக் கேட்கும்படி செய்து, முரசொலிக்கத் திசைநோக்கித் தொழுது ஆடிப்பாடுவார் சிந்தனையில் வீற்றிருப்பர்.

திருவீழிமிழலை

சேடர்விண் ணோர்கட்குத் தேவர்நன் மூவிரு தொன்னூலர்
வீடர்முத் தீயர்நால் வேதத்தர் வீழி மிழலையார்
காடரங் காவுமை காணவண் டத்திமை யோர்தொழ
நாடக மாடியை யேத்தவல் லார்வினை நாசமே **#95**

திருவீமிழலையில் வீற்றிருக்கும் இறைவர் விண்ணோர்கட்குத் தூரமானவர். மேன்மை வாய்ந்த வேதாங்க நூல்கள் ஆறினையும் கற்று வல்லவர்களாய், மூவகை அழலை ஓம்பி, நால் வேதங்களையும் பயின்ற அந்தணர்கட்கு அணியராகி வீட்டின்பம் நல்குபவர். சுடுகாட்டை அரங்காகக் கொண்டு, உமாதேவியார் கண்டு மகிழ, எல்லா அண்டங்களிலுமுள்ள தேவர்கள் தொழத் திருநடனம் செய்பவராகிய சிவபெருமானை ஏத்தி வழிபடுபவர்களின் வினையாவும் அழியும்.

திருவீழிமிழலை

எடுத்தவன் மாமலைக் கீழ வி ராவணன் வீழ்தர
விடுத்தருள் செய்திசை கேட்டவர் வீழி மிழலையார்
படுத்துவெங் காலனைப் பால்வழி பாடுசெய் பாலற்குக்
கொடுத்தன ரின்பங் கொடுப்பர் தொழக்குறை
வில்லையே **#96**

பெரியகயிலை மலையை அப்புறப்படுத்த எடுத்த இராவணனை அம்மலையின் கீழேயே கிடந்து அலறுமாறு அடர்த்து, பின் அவன் சாமகானம் பாடிய இசை கேட்டு அருள்புரிந்தார் திருவீழிமிழலையில் வீற்றிருக்கும் சிவபெருமான். அவர் கொடிய காலனை உதைத்து. தம்மருகில் நின்று வழிபாடு செய்த பாலனான மார்க்கண்டேயனுக்குப் பேரின்பம் கொடுத்தார். அச் சிவபெருமான் தம்மைத் தொழுது போற்றும் அடியவர்கட்கு எவ்விதக் குறைவு மில்லாமல் எல்லா நலன்களையும் கொடுப்பார்.

<u>திருவீழிமிழலை</u>

திக்கமர் நான்முகன் மாலண்ட மண்டலந் தேடிட
மிக்கமர் தீத்திர ளாயவர் வீழி மிழலையார்
சொக்கம தாடியும் பாடியும் பாரிடஞ் சூழ்தரும்
நக்கர்தந் நாமந மச்சிவா யவ்வென்பார் நல்லரே **#97**

நான்கு திக்குகளையும் நோக்குகின்ற முகங்களையுடைய பிரமனும், திருமாலும் மேலுள்ள அண்டங்கள் அனைத்திலும், கீழுள்ள அண்டங்களிலும் முடி, அடி தேட, காணமுடியாவண்ணம், மிகுந்த எழும் தீப்பிழம்பாய் நின்றவர் திருவீழிமிழலையில் வீற்றிருக்கும் சிவபெருமான். அவர் சொக்கு எனப்படும் ஒருவகைத் திருக்கூத்து ஆடியும், பாடியும் பூதகணங்கள் சூழ விளங்கும் நக்கர், அவருடைய திருநாமமாகிய நமச்சிவாய என்பதை ஓதவல்லவர்கள் சிவபுண்ணியம் செய்தவராவர்.

<u>திருவீழிமிழலை</u>

துற்றரை யார்துவ ராடையர் துப்புர வொன்றிலா
வெற்றரை யார்அறி யாநெறி வீழி மிழலையார்
சொற்றெரி யாப்பொருள் சோதிக்கப் பால்நின்ற சோதிதான்
மற்றறி யாஅடி யார்கள்தஞ் சிந்தையுள் மன்னுமே **#98**

பொருந்திய காவியாடை அணிந்த புத்தர்களும், ஆடையணியாத சுத்தமில்லாச் சமணர்களும் அறியாத நெறியில் விளங்குபவர் திருவீழிமிழலையில் வீற்றிருக்கும் இறைவர். சொல்லையும், பொருளையும் கடந்து அருள் ஒளியாக விளங்கும் இறைவர், தம்மைத் தவிர வேறெதையும் அறியாத அடியார்களின் சிந்தனையில் நிலையாக வீற்றிருப்பார்.

<u>திருவீழிமிழலை</u>

வேதியர் கைதொழு வீழி மிழலைவி ரும்பிய
ஆதியை வாழ்பொழிற் காழியுண் ஞானசம் பந்தன்ஆய்ந்
தோதிய வொண்டமிழ் பத்திவை யுற்றுரை செய்பவர்
மாதியல் பங்கன் மலரடி சேரவும் வல்லரே **#99**

அந்தணர்கள் கைகூப்பித் தொழுது போற்றும் திருவீழிமிழலையை விரும்பி வீற்றிருக்கும் இறைவனை, சோலைகள் விளங்கும் சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தன் ஆராய்ந்து ஓதிய ஒண்தமிழ்ப் பாக்கள் பத்தினையும் கூறிப் போற்றி வழிபடுபவர்கள் உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்ட சிவபெருமானின் மலர் போன்ற திருவடிகளைச் சேர்ந்து முக்திப் பேற்றினைப் பெறுவர்.

திருஇராமேச்சுரம்

திருஇராமேச்சுரம்

திருஇராமேச்சுரம்,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : இராமநாதேசுவரர்.
தேவியார் : பர்வதவர்த்தனி.

அலைவளர் தண்மதி யோடய லேஅடக் கிஉமை
முலைவளர் பாகமு யங்கவல் லமுதல் வன்முனி
இலைவளர் தாழைகள் விம்முகா னலிரா மேச்சுரம்
தலைவளர் கோலநன் மாலையன் தானிருந் தாட்சியே **#100**

கங்கையையும், குளிர்ந்த சந்திரனையும் சடை முடியிலே அடக்கி, உமாதேவியின் முலைவளர் பாகத்தைக் கூடவல்ல முதல்வனாகிய சிவபெருமான், நீண்ட மடல்களையுடைய தாழைகள் மலர்ந்துள்ள கடற்கரைச் சோலையையுடைய இராமேச்சுரத்துள், தலைகளால் ஆகிய அழகிய நல்ல மாலையை அணிந்து அருளாட்சி செய்கின்றான்.

திருஇராமேச்சுரம்

தேவியை வவ்விய தென்னிலங் கைத்தச மாமுகன்
பூவிய லும்முடி பொன்றுவித் தபழி போயற
ஏவிய லுஞ்சிலை யண்ணல்செய் தவிரா மேச்சுரம்
மேவிய சிந்தையி னார்கள்தம் மேல்வினை வீடுமே **#101**

சீதாப்பிராட்டியைக் கவர்ந்த தென்னிலங்கை மன்னனான தசமாமுகனின் பூச்சூடிய முடியையுடைய தலைகளை அறுத்துக் கொன்ற பழி நீங்குமாறு அம்பினைச் செலுத்தும் வில்லையுடைய அண்ணலாகிய இராமபிரான் வழிபட்ட இராமேச்சுரத்தை இடைவிடாது சிந்திப்பவர்களின் வினை அழியும்.

திருஇராமேச்சுரம்

மானன நோக்கியை தேவிதன் னையொரு மாயையால்
கானதில் வவ்விய காரரக் கன் உயில் செற்றவன்
ஈனமி லாப்புக ழண்ணல்செய் தவிரா மேச்சுரம்
ஞானமும் நன்பொரு ளாகிநின்றதொரு நன்மையே **#102**

மான் போன்ற மருண்ட பார்வையையுடைய சீதாப்பிராட்டியை மாயம் செய்து கானகத்தில் கவர்ந்த கரிய அரக்கனாகிய இராவணனின் உயிரை நீக்கிய குற்றமில்லாத பெரும் புகழுடைய அண்ணலாகிய

இராமபிரான் வழிபட்ட இராமேச்சுரமானது மன்னுயிர்கட்கு நன்மைதரும் சிவஞானத்தையும், அதன் பயனான முத்தி இன்பத்தையும் தரும்.

திருஇராமேச்சுரம்

உரையுண ராதவன் காமமென் னும்முறு வேட்கையான்
வரைபொரு தோளிறச் செற்றவில் லிமகிழ்ந் தேத்திய
விரைமரு வுங்கடலோதமல் குமிரா மேச்சுரத்
தரையர வாடநின் றாடல்பே ணுமம்மா னல்லனே **#103**

மிகுந்த காமவேட்கையால் பிறன்மனைவியைக் கவர்தல் தவறு என்ற அறவுரையை உணராத, இராவணனின் மலை போன்ற தோள்களைத் தொலைத்த இராமன் மகிழ்ந்து போற்றிய, புலவு நாறும் கடற்கரையையுடைய இராமேச்சுரத்தில் வீற்றிருக்கும் இறைவன் அரையில் பாம்மை கச்சாகக் கட்டித் திருநடனம் புரியும் தலைவனான சிவபெருமான் அல்லனோ?

திருஇராமேச்சுரம்

ஊறுடை வெண்டலை கையிலேந் திப்பல வூர்தொறும்
வீறுடை மங்கைய ரையம்பெய்யவிற லார்ந்ததோர்
ஏறுடை வெல்கொடி யெந்தைமே யவிரா மேச்சுரம்
பேறுடை யான்பெயர் ஏத்துமாந் தர்பிணி பேருமே **#104**

கையினால் பறித்த பிரமனது தலையை ஏந்தி ஊர்கள் தோறும் சென்று அழகிய மங்கையர்கள் இட்ட பிச்சையை ஏற்றவனாய், வீரமுடைய இடபம் பொறிக்கப்பட்ட வெற்றிக் கொடியுடைய எந்தையாகிய சிவபெருமான் இராமேச்சுரத்தில் வீற்றிருந்தருளுகின்றான். வீடுபேற்றை நல்கும் அவன் திருப்பெயரை ஏத்தும் மாந்தர்களின் பிறவிப்பிணி நீங்கும்.

திருஇராமேச்சுரம்

அணையலை சூழ்கட லன்றடைத் துவழி செய்தவன்
பணையிலங் கும்முடி பத்திறுத் தபழி போக்கிய
இணையிலி யென்றுமி ருந்தகோ யிலிரா மேச்சுரம்
துணையிலி தூமலர்ப் பாதமேத் தத்துயர் நீங்குமே **#105**

அலைகளையுடைய கடலில் அன்று அணை கட்டிக் கடப்பதற்கு வழி செய்த இராமபிரான், இராவணனின் பருத்த தலைகள் பத்தினையும் தொலைத்ததால் ஏற்பட்ட பழியைப் போக்கிய இணையற்ற இறைவன், என்றும் வீற்றிருந்தருளும் கோயில் இராமேச்சுரம். தனக்கு ஒப்பு ஒருவருமில்லாத அப்பெருமானின் தூய மலர் போன்ற திருவடிகளைப்

போற்றித் துதிப்பவர்களின் துன்பம் நீங்கும்.

திருஇராமேச்சுரம்

சனிபுதன் ஞாயிறு வெள்ளிதிங் கட்பல தீயன
முனிவது செய்துகந் தானைவென் றவ்வினை மூடிட
இனியருள் நல்கிடென் றண்ணல்செய் தவிரா மேச்சுரம்
பனிமதி சூடிநின் றாடவல் லபர மேட்டியே **#106**

சனி, புதன், சூரியன், வெள்ளி, சந்திரன் மற்றும் அங்காரகன், குரு, ராகு, கேது ஆகிய நவக்கிரகங்களால் தீமை வரும் எனச் சோதிடன் கூறியதைக் கேட்டுக் கோபம் கொண்டு அவர்களைச் சிறையில் வைத்த தன் ஆற்றலுக்கு மகிழ்ந்த இராவணனை அழித்து வெற்றி கொண்ட பழி தீர, அருளை வேண்டி அண்ணல் இராமபிரான் வழிபட்ட தலம் இராமேச்சுரம். அங்கு எழுந்தருளியிருப்பவர் குளிர்ச்சி பொருந்திய சந்திரனைச் சூடித் திருநடனம் செய்யும் முழுமுதற் பொருளான சிவபெருமானே ஆவார்.

திருஇராமேச்சுரம்

பெருவரை யன்றெடுத் தேந்தினான் றன்பெயர் சாய்கெட
ப அருவரை யாலடர்த் தன்றுநல் கியயன் மாலெனும்
இருவரு நாடிநின் றேத்துகோ யிலிரா மேச்சுரத்
தொருவனு மேபல வாகிநின் றதொரு வண்ணமே **#107**

பெரிய கயிலைமலையை எடுத்த இராவணனது புகழ் குறைந்து அழியும்படி அவனை அம்மலைக்கீழ் அடர்த்தலும், தன் தவறுணர்ந்து சாமகானம் அவன் பாடியபோது அவனுக்கு அருளுதலும் செய்தவர் சிவபெருமான். பிரமனும், திருமாலும் முழுமுதற்பொருள் சிவன் என்பதை உணர்ந்து வந்து ஏத்தியபோது விளங்கித் தோன்றி, இராமேச்சுரத்திலுள்ள கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் ஒருவனே எல்லாப் பொருள்களிலும் விளங்கித் தோன்றுகின்றான்.

திருஇராமேச்சுரம்

சாக்கியர் வன்சமண் கையர்மெய் யிற்றடு மாற்றத்தார்
வாக்கிய லும்முரை பற்றுவிட்டுமதி யொண்மையால்
ஏக்கிய லுஞ்சிலை யண்ணல்செய் தவிரா மேச்சுரம்
ஆக்கிய செல்வனை யேத்திவாழ் மின்னரு ளாகவே **#108**

புத்தர்களும், சமணர்களும் கூறுகின்ற உண்மை யல்லாததும், தடுமாற்றம் கொண்டதுமாகிய உரைகளைப் பற்றி நிற்காது, ஒளிமிகுந்த அம்பினைச் செலுத்தும் வில்லையுடைய அண்ணலாகிய இராமபிரான் வழிபட்ட இராமேச்சுரத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை

ஞானத்தால் ஏத்தி வாழுங்கள். அவனருளால் எல்லா நலன்களும் உண்டாகும்.

திருஇராமேச்சுரம்

பகலவன் மீதியங் காமைக்காத் தபதி யோன்றனை
இகலழி வித்தவ னேத்துகோ யிலிரா மேச்சுரம்
புகலியுள் ஞானசம் பந்தன்சொன் னதமிழ் புந்தியால்
அகலிட மெங்குநின் றேத்தவல் லார்க்கில்லை யல்லலே **#109**

தான் பெற்ற வரத்தின் வலிமையால் சூரியன் தன் நகருக்கு மேலே செல்லக் கூடாது என்று ஆணையிட்ட இலங்கைக் கோனாகிய இராவணனைப் போரில் அழித்த இராமபிரான் வழிபட்ட கோயிலாகிய இராமேச்சுரத்தினை, திருப்புகலியில் அவதரித்த ஞானசம்பந்தன் சொன்ன இத்தமிழ்ப் பதிகத்தால் மனம் ஒன்றி இப்பூமியில் எங்கும் ஓதவல்லவர்கட்குத் துன்பம் சிறிதும் இல்லை.

திருப்புனவாயில்

திருப்புனவாயில்

திருப்புனவாயில்,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : புனவாயிலீசுவரர்.
தேவியார் : கருணையீசுவரியம்மை.

மின்னியல் செஞ்சடை வெண்பிறை யன்விரி
நூலினன்
பன்னிய நான்மறை பாடியா டிப்பல
வூர்கள்போய்
அன்னமன் னந்நடை யாளொ டும்மம
ரும்மிடம்
புன்னைநன் மாமலர் பொன்னுதிர்க் கும்புன
வாயிலே **#110**

மின்னல் போன்று ஒளிரும் சிவந்த சடைமுடியும், வெண்மையான பிறைச்சந்திரனும், விரிந்த மார்பினில் முப்புரிநூலும் கொண்டு, அடிக்கடி ஓதப்படும் நான்கு வேதங்களையும் பாடியாடிப் பல திருத்தலங்கட்கும் சென்று, அன்னம் போன்ற நடையையுடைய உமாதேவியோடு இறைவன் வீற்றிருந்தருளும் இடமானது, புன்னை மலர்கள் பொன் போன்ற தாதுக்களை உதிர்க்கும் திருப்புனவாயில் ஆகும்.

திருப்புனவாயில்

விண்டவர் தம்புர மூன்றெரித் துவிடை
யேறிப்போய்
வண்டம ருங்குழல் மங்கையொ டும்மகிழ்ந்
தானிடம் கண்டலு ஞாழலு நின்றுபெ ருங்கடற்
கானல்வாய்ப்
புண்டரீ கம்மலர்ப் பொய்கைசூழ்ந் தபுன
வாயிலே **#111**

பகையசுரர்களின் மூன்று கோட்டைகளும் எரிந்து சாம்பலாகுமாறு செய்து, இடபவாகனத்தில் ஏறி, வண்டமர்ந்துள்ள கூந்தலையுடைய உமாதேவியோடு மகிழ்ந்து, இறைவன் எழுந்தருளியிருக்கும் இடமாவது, தாழையும், புலிநகக் கொன்றையும் தழைத்த கடற்கரைச் சோலையும், தாமரைகள் மலர்ந்துள்ள குளங்களும் சூழ்ந்த திருப்புனவாயில் ஆகும்.

திருப்புனவாயில்

விடையுடை வெல்கொடி யேந்தினா னும்விறற்
பாரிடம்
புடைபட வாடிய வேடத்தா னும்புன
வாயிலில்
தொடைநவில் கொன்றையந் தாரினா னுஞ்சுடர்
வெண்மழுப்
படைவல னேந்திய பால்நெய்யா டும்பர
மனன்றே **#112**

இடபம் பொறித்த வெற்றிக் கொடியை ஏந்தியவனும், வீரமிக்க பூதகணங்கள் சூழ நடனம் செய்யும் கோலத்தை உடையவனுமான சிவபெருமான் திருப்புனவாயில் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி, கொன்றை மாலை அணிந்து, ஒளியுடைய மழுப்படையை வலக்கையிலே ஏந்தி, பாலாலும், நெய்யாலும் திருமுழுக்காட்டப்பட்டு அடியவர்கட்கு அருள்புரியும் பரம்பொருள் ஆவான்.

திருப்புனவாயில்

சங்கவெண் தோடணி காதினா னுஞ்சடை
தாழவே
அங்கையி லங்கழ லேந்தினா னும்மழ
காகவே
பொங்கர வம்மணி மார்பினா னும்புன
வாயிலில்
பைங்கண்வெள் ளேற்றண்ண லாகிநின் றபர
மேட்டியே **#113**

திருப்புனவாயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் வெண்சங்கினாலாகிய தோடணிந்த காதுடையவன். தாழ்ந்த நீண்ட சடையுடையவன். உள்ளங்கையில் நெருப்பு ஏந்தியவன். சீறிப் படமாடும் பாம்பை ஆபரணமாக அணிந்த மார்புடையவன். திருப்புனவாயில் என்னும் திருத்தலத்திலே பசிய கண்களையுடைய வெண்ணிற இடபவாகனத்தில் எழுந்தருளிய சிவபெருமான் மேலான பரம்பொருள் ஆவான்.

திருப்புனவாயில்

கலிபடு தண்கடல் நஞ்சமுண் டகறைக்
கண்டனும்
புலியதள் பாம்பரைச் சுற்றினா னும்புன

வாயிலில்
ஒலிதரு தண்புன லோடெருக் கும்மத
மத்தமும்
மெலிதரு வெண்பிறை சூடிநின் றவிடை
யூர்தியே #114

ஒலிக்கின்ற குளிர்ச்சியான பாற்கடலில் தோன்றிய நஞ்சை உண்டதால் கறுத்த கண்டத்தை உடையவன் சிவபெருமான். புலித்தோலை ஆடையாகவும், பாம்பை அரையில் கச்சாகவும் கட்டியவன். அவன் திருப்புனவாயில் என்னும் தலத்தில், ஒலிக்கின்ற குளிர்ந்த கங்கையோடு, எருக்கு, ஊமத்தம் ஆகிய மலர்களையும், மெலிந்த வெண்ணிறப் பிறைச்சந்திரனையும் சடையில் சூடி இடப வாகனத்தில் வீற்றிருந்தருளுகின்றான்.

திருப்புனவாயில்

வாருறு மென்முலை மங்கைபா டநட
மாடிப்போய்க்
காருறு கொன்றைவெண் டிங்களா னுங்கனல்
வாயதோர்
போருறு வெண்மழு வேந்தினா னும்புன
வாயிலில்
சீருறு செல்வமல் கவ்விருந் தசிவ
லோகனே #115

கச்சணிந்த மெல்லிய முலைகளையுடைய உமாதேவி பாட, அதற்கேற்ப நடனம் ஆடி, கார்காலத்தில் மலர்கின்ற கொன்றைமலரையும், வெண்ணிறத் திங்களையும் சடையிலே சூடி, நெருப்புப் போன்று ஒளிர்கின்ற போர் செய்யப் பயன்படும் வெண்மழுப்படையைக் கையில் ஏந்தித் திருப்புனவாயில் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவலோகநாதனாகிய சிவபெருமான் தன் அடியார்கட்குச் சீருறு செல்வம் அருள்வான்.

திருப்புனவாயில்

பெருங்கடல் நஞ்சமு துண்டுகந் துபெருங்
காட்டிடைத்
திருத்திள மென்முலைத் தேவிபா டந்நட
மாடிப்போய்ப்
பொருந்தலர் தம்புர மூன்றுமெய் துபுன
வாயிலில்
இருந்தவன் தன்கழ லேத்துவார் கட்கிடர்

இல்லையே #116

சிவபெருமான், பெரிய பாற்கடலைக் கடைந்த போது ஏற்பட்ட நஞ்சை உண்டு மகிழ்ந்தவன். சுடுகாட்டில் இளமென் முலையுடைய உமாதேவி பாட நடனமாடியவன். பகையசுரர்களின் புரம் மூன்றையும் அம்பு எய்து அழித்தவன். திருப்புனவாயில் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள அப்பெருமானின் திருவடிகளைப் போற்றித் தொழுபவர்கட்கு எவ்விதத் துன்பமும் இல்லை.

திருப்புனவாயில்

மனமிகு வேலனவ் வாளரக் கன்வலி
ஒல்கிட
வனமிகு மால்வரை யால்அடர்த் தானிட
மன்னிய
இனமிகு தொல்புகழ் பாடல்ஆ டல்எழின்
மல்கிய
புனமிகு கொன்றையந் தென்றலார்ந் தபுன
வாயிலே #117

செருக்குடைய மனம் உடையவனும், வேல், வாள் போன்ற படைக்கலன்களை உடையவனுமான அரக்கனான இராவணனின் வலிமை அழியுமாறு, அழகும், பெருமையுமுடைய கயிலை மலையால் அடர்த்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, அவனுடைய பழம்புகழைப் பல்வேறு வகைகளில் போற்றுகின்ற பாடல்களும், ஆடல்களும் நிறைந்து அழகுற விளங்குகின்றதும், கொன்றை மலரின் நறுமணத்தைச் சுமந்துவரும் தென்றல்காற்று வீசுகின்றதுமான திருப்புனவாயில் ஆகும்.

திருப்புனவாயில்

திருவளர் தாமரை மேவினா னும்திகழ்
பாற்கடற்
கருநிற வண்ணனும் காண்பரி யகட
வுள்ளிடம்
நரல்சுரி சங்கொடும் இப்பியுந் திந்நல
மல்கிய
பொருகடல் வெண்டிரை வந்தெறி யும்புன
வாயிலே #118

அழகிய தாமரையில் வீற்றிருக்கின்ற பிரமனும், விளங்கும் திருப்பாற் கடலில் பள்ளி கொண்டுள்ள கருநிறத் திருமாலும் காண்பதற்கரியவன் சிவபெருமான். அவன் விரும்பி எழுந்தருளியுள்ள இடம் கடலின்

வெண்ணிற அலைகள் கரையை மோதும்போது தள்ளப்பட்ட ஒலிக்கின்ற சுரிசங்குகளும், சிப்பிகளும் நிறைந்து செல்வம் கொழிக்கும் திருப்புனவாயில் ஆகும்.

திருப்புனவாயில்

போதியெ னப்பெய ராயினா ரும்பொறி
யில்சமண்
சாதியு ரைப்பன கொண்டயர்ந் துதளர்
வெய்தன்மின்
போதவிழ் தண்பொழில் மல்குமந் தண்புன
வாயிலில்
வேதனை நாடொறு மேத்துவார் மேல்வினை
வீடுமே **#119**

புத்தர்களும், சமணர்களும் சாதித்துக் கூறுகின்ற சொற்களைக் கேட்டு உணர்வழிந்து தளர்ச்சி அடைய வேண்டா. பூக்கள் மலர்ந்துள்ள குளிர்ச்சி பொருந்திய சோலைகள் நிறைந்த அழகிய குளிர்ந்த திருப்புனவாயிலில் வீற்றிருந்தருளும் வேதத்தின் பொருளாயுள்ள சிவபெருமானை நாள்தோறும் போற்றி வழிபடுபவர்களின் வினையாவும் நீங்கும்.

திருப்புனவாயில்

பொற்றொடி யாளுமை பங்கன்மே வும்புன
வாயிலைக்
கற்றவர் தாந்தொழு தேத்தநின் றகடற்
காழியான்
நற்றமிழ் ஞானசம் பந்தன்சொன் னதமிழ்
நன்மையால்
அற்றமில் பாடல்பத் தேத்தவல் லார்அருள்
சேர்வரே **#120**

பொன் வளையலணிந்த உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்ட சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருப்புனவாயில் என்னும் தலத்தை வேதாகமங்களைக் கற்றவர்கள் தொழுது போற்றுமாறு கடல் வளமிக்க சீகாழியில் அவதரித்த நற்றமிழ் ஞான சம்பந்தன் அருளிய குற்றமில்லாத இத்தமிழ்ப் பாக்கள் பத்தினையும் ஓத வல்லவர்கள் இறையருளைப் பெறுவர்.

திருக்கோட்டாறு

திருக்கோட்டாறு

திருக்கோட்டாறு,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஐராபதேசுவரர்.
தேவியார் : வண்டமர்பூங்குழலம்மை.

வேதியன் விண்ணவ ரேத்தநின் றான்விளங்
கும்மறை
ஓதிய வொண்பொரு ளாகிநின் றானொளி
யார்கிளி
கோதிய தண்பொழில் சூழ்ந்தழ கார்திருக்
கோட்டாற்றுள்
ஆதியை யேநினைந் தேத்தவல் லார்க்கல்ல
லில்லையே #121

வேதங்களை அருளிச் செய்த சிவபெருமான் விண்ணோர்களாலும் தொழப்படுகின்றான். அவ்வேதங்களால் போற்றப்படும் உயர்ந்த பொருளாகவும் விளங்குகின்றான். அழகிய கிளிகள் கொஞ்சும் குளிர்ச்சியான சோலைகள் சூழ்ந்த அழகான திருக்கோட்டாறு என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஆதிப் பிரானான அவனை நினைந்து வணங்க வல்லவர்கட்குத் துன்பம் இல்லை.

திருக்கோட்டாறு

ஏலம லர்க்குழன் மங்கைநல் லாள்இம
வான்மகள்
பாலம ருந்திரு மேனியெங் கள்பர
மேட்டியும்
கோலம லர்ப்பொழில் சூழ்ந்தெழி லார்திருக்
கோட்டாற்றுள்
ஆலநீழற்கீ ழிருந்தறஞ் சொன்ன
அழகனே #122

மணம் கமழும் கூந்தலையுடைய மங்கை நல்லாளான, இமவான் மகளான உமாதேவியைத் தன் திருமேனியின் ஒரு பாகமாக வைத்த எங்கள் பரம்பொருளான சிவபெருமான், வண்ணப் பூக்களையுடைய சோலைகள் சூழ்ந்த அழகிய திருக்கோட்டாறு என்னும் தலத்தில் ஆலமரநிழலில் தட்சணாமூர்த்தியாக அமர்ந்து சனகாதி முனிவர்கட்கு

அறம் உரைத்த அழகனாவான்.

திருக்கோட்டாறு

இலைமல்கு சூலமொன் றேந்தினா னுமிமை
யோர்தொழ
மலைமல்கு மங்கையோர் பங்கனா யம்மணி
கண்டனும்
குலைமல்கு தண்பொழில் சூழ்ந்தழ கார்திருக்
கோட்டாற்றுள்
அலைமல்கு வார்சடை யேற்றுகந் தவழ
கனன்றே **#123**

சிவபெருமான் இலைபோன்ற சூலப்படையைக் கையில் ஏந்தியவன். விண்ணோர்களும் தொழுது வணங்க மலை மகளான உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்ட நீலகண்டன். கங்கையை நீண்ட சடையிலே தாங்கிய அழகனான அவன், காய்களும், கனிகளும் குலைகளாகத் தொங்கும் குளிர்ந்த சோலை சூழ்ந்த அழகிய திருக்கோட்டாறு என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ளான்.

திருக்கோட்டாறு

ஊனம ரும்முட லுள்ளிருந் தவ்வுமை
பங்கனும் வானம ரும்மதி சென்னிவைத் தமறை
யோதியும்
தேனம ரும்மலர்ச் சோலைசூழ்ந் ததிருக்
கோட்டாற்றுள்
தானம ரும்விடை யானும்எங் கள்தலை
வனன்றே **#124**

இறைவன் உடம்பினை இயக்கும் உயிர்க்குள் உயிராய் விளங்குபவன். உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டவன். வானில் தவழும் சந்திரனைத் தலையிலே அணிந்தவன். வேதங்களை அருளிச் செய்தவன். இடபத்தை வாகனமாக உடையவன். அவன் தேனுடைய மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருக்கோட்டாறு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற எங்கள் தலைவன் ஆவான்.

திருக்கோட்டாறு

வம்பல ரும்மலர்க் கோதைபா கம்மகிழ்
மைந்தனும்
செம்பவ ளத்திரு மேனிவெண் ணீறணி
செல்வனும்

கொம்பம ரும்மலர் வண்டுகெண் டுந்திருக்
கோட்டாற்றுள்
நம்பனெ னப்பணி வார்க்கருள் செய்யெங்கள்
நாதனே **#125**
சிவபெருமான் நறுமணம் கமழும் மாலை யணிந்த கூந்தலையுடைய உமாதேவியை ஒரு பாகமாக வைத்து மகிழும் வலிமையுடையவன். செம்பவளம் போன்ற திருமேனியில் வெண்ணிறத் திருநீறு அணிந்துள்ள செல்வன். அனைத்துயிர்களும் விரும்பி அடையத்தக்க அவன், கொம்புகளிலுள்ள மலர்களை வண்டுகள் கெண்டுகின்ற திருக்கோட்டாறு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்து, தன்னைப் பணிந்து வணங்குபவர்கட்கு அருள்புரிபவன். அவனே எங்கள் தலைவன்.

<u>திருக்கோட்டாறு</u>

பந்தம ரும்விரன் மங்கைநல் லாளொரு
பாகமா
வெந்தம ரும்பொடிப் பூசவல் லவிகிர்
தன்மிகும்
கொந்தம ரும்மலர்ச் சோலைசூழ்ந் ததிருக்
கோட்டாற்றுள்
அந்தண னைநினைந் தேத்தவல் லார்க்கில்லை
அல்லலே **#126**
சிவபெருமான் பந்துபோன்ற திரட்சியான விரல்களையுடைய மங்கை நல்லாளாகிய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டவன். வெந்து தணிந்த திருநீற்றினைப் பூசியுள்ள விகிர்தன். மிகுதியாகக் கொத்தாகப் பூக்கும் மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருக்கோட்டாறு என்னும் திருத் தலத்தில் வீற்றிருந்தருள்கின்ற, அனைத்துயிர்களிடத்தும் செவ்விய அருளுடைய அவனை நினைந்து வழிபடும் அடியவர்கட்கு அல்லல் சிறிதும் இல்லை.

<u>திருக்கோட்டாறு</u>

துண்டம ரும்பிறை சூடிநீ டுசுடர் வண்ணனும்
வண்டம ருங்குழன் மங்கைநல் லாளொரு பங்கனும்
தெண்டிரை நீர்வயல் சூழ்ந்தழ கார்திருக் கோட்டாற்றுள்
அண்டமு மெண்டிசை யாகிநின் றவழ கனன்றே **#127**
துண்டித்த பிறை போன்ற சந்திரனைச் சடையில் சூடியவன் சிவபெருமான். நீண்டு ஓங்கும் நெருப்புப் போன்ற சிவந்த நிறமுடையவன். பூவிலுள்ள தேனை விரும்பி வண்டுகள் அமர்கின்ற

கூந்தலையுடைய மங்கை நல்லாளாகிய உமாதேவியை ஒருபாகமாகக் கொண்டவன். கடலும், நீர்வளமிக்க செழுமையான வயல்கள் சூழ்ந்த நிலவளமுமுடைய அழகான திருக்கோட்டாறு என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் அண்டங்களும், எட்டுத்திசைகளுமாகி நின்ற அழகன் அல்லனோ?

திருக்கோட்டாறு

இரவம ருந்நிறம் பெற்றுடை யவிலங்
கைக்கிறை
கரவம ரக்கயி லையெடுத் தான்வலி
செற்றவன்
குரவம ரும்மலர்ச் சோலைசூழ்ந் ததிருக்
கோட்டாற்றுள்
அரவம ருஞ்சடை யானடி யார்க்கருள்
செய்யுமே **#128**

இரவு போன்ற கருமைநிறமுடைய இலங்கை மன்னனான இராவணன் வஞ்சனையால் கயிலைமலையைப் பெயர்த்து எடுக்க, அவன் வலிமையை அழித்த சிவபெருமான், குரா மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருக்கோட்டாறு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்து, சடைமுடியில் பாம்பணிந்து விளங்கி, தன் அடியவர்கட்கு அருள்புரிகின்றான்.

திருக்கோட்டாறு

ஓங்கிய நாரண னான்முக னும்உண
ராவகை
நீங்கிய தீயுரு வாகிநின் றநிம
லன்னிழற்
கோங்கம ரும்பொழில் சூழ்ந்தெழி லார்திருக்
கோட்டாற்றுள்
ஆங்கம ரும்பெரு மானம ரர்க்கம
ரனன்றே **#129**

செருக்குடைய திருமாலும், பிரமனும் உணரா வண்ணம் அளந்தறிய முடியாத தீ யுருவாகிநின்ற சிவபெருமான் இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன். நிழல்தரும் கோங்குமலர்ச் சோலை சூழ்ந்த அழகிய திருக்கோட்டாறு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் பெருமான். தேவர்கட்கெல்லாம் தேவனாவான்.

திருக்கோட்டாறு

கடுக்கொடுத் ததுவ ராடையர் காட்சியில்
லாததோர்
தடுக்கிடுக் கிச்சம ணேதிரி வார்கட்குத்
தன்னருள்
கொடுக்கலில் லாக்குழ கன்அம ருந்திருக்
கோட்டாற்றுள்
இடுக்கணின் றித்தொழு வார்அம ரர்க்கிறை
யாவரே **#130**

சாயம் பற்றும் பொருட்டுக் கடுக்காய் நீரில் தோய்த்த காவி ஆடை அணிந்த புத்தர்களுக்கும், சிறுபாயைச் சுமந்து திரியும் சமணர்களுக்கும் தன்னை நாடாததால், அருள் புரியமாட்டாத அழகன் சிவபெருமான். திருக்கோட்டாறு என்னும் தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற அவனைச் சிரமப்படாமல் எளிய முயற்சியால் வழிபடுகின்றவர்களும், தேவர்கட்குத் தலைவராவர்.

<u>திருக்கோட்டாறு</u>

கொடியுயர் மால்விடை யூர்தியி னான்திருக்
கோட்டாற்றுள்
அடிகழ லார்க்கநின் றாடவல் லஅரு
ளாளனைக்
கடிகம ழும்பொழிற் காழியுண் ஞானசம்
பந்தன்சொல்
படியிவை பாடிநின் றாடவல் லார்க்கில்லை
பாவமே **#131**

இடபத்தைக் கொடியாகவும், வாகனமாகவும் கொண்டு திருக்கோட்டாறு என்னும் தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமான் திருவடிகளிலுள்ள கழல்கள் ஒலிக்க, திருநடனம் புரியும் அருளாளன். அப்பெருமானை நறுமணம் கமழும் சோலைகளையுடைய சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தன் அருளிய இப்பதிகப் பாடல்களால் போற்றிப் பாடியாட வல்லவர்களின் பாவம் யாவும் நீங்கும்.

திருப்பூந்தராய்

சீர்காழி

திருப்பூந்தராய்,
பண் - காந்தாரபஞ்சமம்

மின்னன வெயிறுடை விரவ லோர்கள்தந்
துன்னிய புரமுகச் சுளித்த தொன்மையர்
புன்னையம் பொழிலணி பூந்த ராய்நகர்
அன்னமன் னந்நடை யரிவை பங்கரே **#132**

மின்னலைப் போன்ற பற்களையுடைய பகையசுரர்களின் நெருங்கிய புரம்மூன்றும் சாம்பலாகும்படி கோபித்த பழமையானவரான சிவபெருமான், புன்னை மரங்கள் நிறைந்த சோலைகளால் சூழப்பட்ட அழகிய பூந்தராய் நகரில், அன்னம் போன்ற நடையையுடைய உமாதேவியைப் பாகமாகக் கொண்டு வீற்றிருந்தருளுகின்றார்.

சீர்காழி

மூதணி முப்புரத் தெண்ணி லோர்களை
வேதணி சரத்தினால் வீட்டி னாரவர்
போதணி பொழிலமர் பூந்த ராய்நகர்த்
தாதணி குழலுமை தலைவர் காண்மினே **#133**

பழமையான அணிவகுப்பையுடைய முப்புரத்திலிருந்த அளவற்ற அசுரர்களை வெம்மையுடைய அம்பினால் அழித்தவராகிய சிவபெருமான், மலர்கள் நிறைந்த அழகிய சோலைகளையுடைய திருப்பூந்தராய் என்னும் திருத்தலத்தில் மகரந்தப் பொடிகள் தங்கிய கூந்தலையுடைய உமாதேவியின் தலைவராய் வீற்றிருந்தருளுகின்றார். அவரைத் தரிசித்துப் பிறவிப் பயனை அடையுங்கள்.

சீர்காழி

தருக்கிய திரிபுரத் தவர்கள் தாம்உகப்
பெருக்கிய சிலைதனைப் பிடித்த பெற்றியர்
பொருக்கடல் புடைதரு பூந்த ராய்நகர்க்
கருக்கிய குழலுமை கணவர் காண்மினே **#134**

செருக்குக் கொண்ட திரிபுரத்தசுரர்கள் அழியுமாறும், தேவர்களின் இன்பம் பெருகுமாறும், மேருமலையை வில்லாகப் பிடித்த சிவபெருமான், அலைவீசுகின்ற கடல் பக்கங்களில் சூழ்ந்திருக்க, பெருமையுடைய திருப்பூந்தராய் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந் தருளுவாராய், கூந்தலுக்கு உவமையாகக் கூறப்படும்

பொருள்களெல்லாம் தமக்கு அத்தகைய நிறமும், அழகும் இல்லையே என்று வருத்தமுறும்படி அழகிய, கரிய கூந்தலையுடைய உமாதேவியின் கணவர் ஆவார். அவரைத் தரிசித்துப் பிறவிப் பயனை அடையுங்கள்.

சீர்காழி

நாகமும் வரையுமே நாணும் வில்லுமா
மாகமார் புரங்களை மறித்த மாண்பினர்
பூகமார் பொழிலணி பூந்த ராய்நகர்ப்
பாகமர் மொழியுமை பங்கர் காண்மினே **#135**

வாசுகி என்னும் பாம்பை நாணாகவும், மேரு மலையை வில்லாகவும் கொண்டு, ஆகாயத்தில் திரிந்த திரிபுரங்களை அழித்த மாண்புடைய சிவபெருமான், கமுக மரங்கள் நிறைந்த சோலைகளால் அழகுடன் திகழும் திருப்பூந்தராய் என்னும் திருத்தலத்தில் வெல்லப்பாகு போன்று இனிமையாகப் பேசுகின்ற உமாதேவியைப் பாகமாகக் கொண்டு வீற்றிருந்தருளுகின்றார். அவரைத் தரிசித்துப் பிறவிப்பயனை அடையுங்கள்.

சீர்காழி

வெள்ளெயி றுடையவவ் விரவ லார்களூர்
ஒள்ளெரி யூட்டிய வொருவ னாரொளிர்
புள்ளணி புறவினிற் பூந்த ராய்நகர்க்
கள்ளணி குழலுமை கணவர் காண்மினே **#136**

வெண்ணிறப் பற்களையுடைய அசுரர்களின் திரிபுரங்கள், ஒளி பொருந்திய நெருப்பால் எரிந்து சாம்பலாகுமாறு செய்தவர் சிவபெருமான். மின்னுகின்ற பறவைகளை உடைய திருப்பூந்தராய் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் அப்பெருமானார் தேன்கமழும் கூந்தலையுடைய உமாதேவியின் கணவராவார். அப்பெருமானாரைத் தரிசித்துப் பிறவிப் பயனைப் பெறுங்கள்.

சீர்காழி

துங்கிய றானவர் தோற்ற மாநகர்
அங்கியில் வீழ்தர வாய்ந்த வம்பினர்
பொங்கிய கடலணி பூந்த ராய்நகர்
அங்கய லனகணி யரிவை பங்கரே **#137**

அசுரர்களின் நெடிய வடிவங்களைப் போன்ற தோற்றத்தையுடைய பெரிய முப்புரங்களையும், நெருப்பால் அழியுமாறு செய்த அக்கினிக் கணையை உடைய சிவபெருமான், பொங்கும் கடலையுடைய அழகிய திருப்பூந்தராய் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார்.

அப்பெருமான் அழகிய கயல்மீன் போன்ற கண்களையுடைய உமாதேவியை ஒரு பாகமாக உடையவர். அப்பெருமானைத் தரிசித்துப் பிறவிப்பயனைப் பெறுங்கள்.

சீர்காழி

அண்டர்க ளுய்ந்திட வவுணர் மாய்தரக்
கண்டவர் கடல்விட முண்ட கண்டனார்
புண்டரீ கவ்வயற் பூந்த ராய்நகர்
வண்டமர் குழலிதன் மணாளர் காண்மினே **#138**

சிவபெருமான் எல்லா அண்டத்தவர்களும் நன்மை அடையும் பொருட்டுத் திரிபுர அசுரர்களை மாய்த்தவர். கடலில் தோன்றிய நஞ்சை உண்ட கருநிறக் கண்டத்தர். தாமரை மலர்கள் பூத்துள்ள வயல்களையுடைய திருப்பூந்தராய் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுபவர். பூவிலுள்ள தேனை உண்ணும்பொருட்டு வண்டு அமர்கின்ற கூந்தலையுடைய உமாதேவியின் மணாளர் ஆவார். அப்பெருமானைத் தரிசித்துப் பிறவிப் பயனைப் பெறுங்கள்.

சீர்காழி

மாசின வரக்கனை வரையின் வாட்டிய
காய்சின வெயில்களைக் கறுத்த கண்டனார்
பூசுரர் பொலிதரு பூந்த ராய்நகர்க்
காசைசெய் குழலுமை கணவர் காண்மினே **#139**

சிவபெருமான் குற்றம் செய்த அரக்கனான இராவணனைக் கயிலை மலையின்கீழ் அடர்த்தவர். கோபத்தால் பிற உயிர்களைத் துன்புறுத்திய அசுரர்களின் மூன்று கோட்டைகளை எரித்த நீலகண்டர். அந்தணர்கள் நிறைந்து விளங்குகின்ற திருப்பூந்தராய் என்னும் திருத்தலத்தில், வீற்றிருந்தருளும் அவர் காயாம்பூவைப் போன்ற கருநிறக் கூந்தலையுடைய உமாதேவியின் கணவராவார். அவரைத் தரிசித்துப் பிறவிப் பயனைப் பெறுங்கள்.

சீர்காழி

தாமுக மாக்கிய வசுரர் தம்பதி
வேமுக மாக்கிய விகிர்தர் கண்ணனும்
பூமக னறிகிலாப் பூந்த ராய்நகர்க்
கோமக ளெழில்பெறு மரிவை கூறரே **#140**

தம் விருப்பம்போல் தேவர்கட்குத் துன்பம் செய்த அசுரர்களின் மூன்று நகரங்களை வெந்தழியுமாறு செய்த விகிர்தர் சிவபெருமான். திருமாலும், பிரமனும் அறிய ஒண்ணாதவர். திருப்பூந்தராய் என்னும் திருத்தலத்தில்

வீற்றிருந்தருளும் தலைவரான சிவபெருமான் அழகிய உமாதேவியைத் தம் உடம்பின் ஒரு கூறாகக் கொண்டவர். அவரைத் தரிசித்துப் பிறவிப் பயனை அடையுங்கள்.

சீர்காழி

முத்தர வசுரர்கண் மொய்த்த முப்புரம்
அத்தகு மழலிடை வீட்டி னாரமண்
புத்தரு மறிவொணாப் பூந்த ராய்நகர்க்
கொத்தணி குழலுமை கூறர் காண்மினே **#141**

சிவபெருமான் மூன்று தரத்தினராகிய அசுரர்கள் மிகுந்த முப்புரங்களை நெருப்பில் எரிந்து சாம்பலாகுமாறு செய்தவர். சமணர்களாலும், புத்தர்களாலும் அறிய ஒண்ணாதவர். திருப்பூந்தராய் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் அவர், பூங்கொத்துக்களால் அழகுபடுத்தப்பட்ட கூந்தலையுடைய உமாதேவியைத் தம் உடம்பின் ஒரு கூறாகக் கொண்டவர். அப்பெருமானைத் தரிசித்துப் பிறவிப் பயனை அடையுங்கள்.

சீர்காழி

புரமெரி செய்தவர் பூந்த ராய்நகர்ப்
பரமலி குழலுமை நங்கை பங்கரைப்
பரவிய பந்தன்மெய்ப் பாடல் வல்லவர்
சிரமலி சிவகதி சேர்தல் திண்ணமே **#142**

முப்புரம் எரித்த சிவபெருமான் திருப்பூந்தராய் என்னும் திருத்தலத்தில் அடர்த்தியான கூந்தலையுடைய உமா தேவியை ஒரு பாகமாகக் கொண்டு வீற்றிருந்தருளுகின்றார். அப்பெருமானை ஞானசம்பந்தன் நவின்ற இம்மெய்ம்மைப் பதிகத்தால் போற்ற வல்லவர்கள் தலையானதாகக் கருதப்படுகின்ற சிவகதியை நிச்சயம் பெறுவர்.

திருப்பைஞ்ஞீலி

திருப்பைஞ்ஞீலி

திருப்பைஞ்ஞீலி,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நீலகண்டேசுவரர்.
தேவியார் : விசாலாட்சியம்மை.

ஆரிடம் பாடி ரடிகள் காடலால்
ஓரிடங் குறைவில ருடையர் கோவணம்
நீரிடஞ் சடைவிடை யூர்தி நித்தலும்
பாரிடம் பணிசெயும் பயில்பைஞ் ஞீலியே **#143**

சிவபெருமான் இருடிகளுக்காக வேதத்தை அருளிச் செய்தவர். வசிப்பது சுடுகாடானாலும் அதனால் ஒரு குறையும் இல்லாதவர். அணிவது கோவண ஆடை. சடைமுடியில் கங்கையைத் தாங்கியவர். இடபவாகனத்தில் ஏறியவர். தினந்தோறும் பூதகணங்கள் சூழ்ந்து நின்று பணிசெய்யத் திருப்பைஞ்ஞீலியில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருப்பைஞ்ஞீலி

மருவிலார் திரிபுர மெரிய மால்வரை
பருவிலாக் குனித்தபைஞ் ஞீலி மேவலான்
உருவிலான் பெருமையை யுளங்கொ ளாதவத்
திருவிலா ரவர்களைத் தெருட்ட லாகுமே **#144**

பகையசுரர்களின் முப்புரங்களும் எரிந்து சாம்பலாகுமாறு மேரு என்னும் பெருமையுடைய மலையினை வில்லாக வளைத்த சிவபெருமான் திருப்பைஞ்ஞீலி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றான். இத்தகைய வடிவ முடையவன் அவன் என்று வரையறை செய்து உணர்த்த இயலாத அப்பெருமானுடைய பெருமையை உணராதவர் அவனருளைப் பெறாதவர். அவர்களின் அறிவைத் தெளிவித்தல் இயலுமா?

திருப்பைஞ்ஞீலி

அஞ்சுரும் பணிமல ரமுத மாந்தித்தேன்
பஞ்சுரம் பயிற்றுபைஞ் ஞீலி மேவலான்
வெஞ்சுரந் தனிலுமை வெருவ வந்ததோர்
குஞ்சரம் படவுரி போர்த்த கொள்கையே **#145**

அழகிய வண்டு மலரை அடைந்து தேனைக் குடித்துப் பஞ்சுரம் என்னும்

பண்ணைப் பாடுகின்ற திருப்பைஞ்ஞீலி என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவன், வெப்பம் மிகுந்த காட்டில் உமாதேவி அஞ்சுமாறு வந்த யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவன்.

திருப்பைஞ்ஞீலி

கோடல்கள் புறவணி கொல்லை முல்லைமேல்
பாடல்வண் டிசைமுரல் பயில்பைஞ் ஞீலியார்
பேடல ராணலர் பெண்ணு மல்லதோர்
ஆடலை யுகந்தவெம் மடிக ளல்லரே **#146**

காந்தள் மலர்களிலும், முல்லை நிலத்திலுள்ள காடுகளிலுமுள்ள முல்லை மலர்களின் மீதும் அமர்ந்திருக்கும் வண்டுகள் செய்யும் ரீங்காரம் பண்ணிசைபோல் ஒலிக்க, திருப்பைஞ்ஞீலி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் இறைவர் அலியல்லர். ஆணுமல்லர். பெண்ணுமல்லர். திருநடனம் புரிவதில் விருப்பமுடைய அப்பெருமானார் எங்கள் தலைவர் ஆவார்.

திருப்பைஞ்ஞீலி

விழியிலா நகுதலை விளங்கி ளம்பிறை
சுழியிலார் வருபுனற் சூழல் தாங்கினான்
பழியிலார் பரவுபைஞ் ஞீலி பாடலான்
கிழியிலார் கேண்மையைக் கெடுக்க லாகுமே **#147**

விழியிலாத பற்களோடு கூடிய பிரமகபாலத்தைக் கையில் ஏந்தி, இளம்பிறையையும், கங்கையையும் சடையில் தாங்கியுள்ளவன் சிவபெருமான். பழியிலாத அடியவர்கள் போற்றிப் பாடத் திருப்பைஞ்ஞீலி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் அப்பெருமான் தன்னை வணங்குபவர்களின் செல்வ மில்லாத வறுமைநிலையைப் போக்குவான்.

திருப்பைஞ்ஞீலி

விடையுடைக் கொடிவல னேந்தி வெண்மழுப்
படையுடைக் கடவுள்பைஞ் ஞீலி மேவலான்
துடியிடைக் கலையல்கு லாளோர் பாகமாச்
சடையிடைப் புனல்வைத்த சதுர னல்லனே **#148**

இடபம் பொறித்த கொடியை வலக்கையில் ஏந்தி, வெண்மழுப்படையையுடைய கடவுள் திருப்பைஞ்ஞீலி என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ளான். உடுக்கை போன்ற குறுகிய இடையில் மேகலை என்னும் ஆபரணம் அணிந்து, சீலையால் மறைத்த

அல்குலையுடைய உமாதேவியைத் தன் திருமேனியில் ஒருபாகமாகக் கொண்டு, சடையிலே கங்கையைத் தரித்த சதுரன் ஆவான்.

திருப்பைஞ்ஞீலி

தூயவன் தூயவெண் ணீறு மேனிமேல்
பாயவன் பாயபைஞ் ஞீலி கோயிலா
மேயவன் வேய்புரை தோளி பாகமா
ஏயவ னெனைச்செயுந் தன்மை யென்கொலோ **#149**

இறைவன் தூயஉடம்பினன். தூய்மையான திருநீற்றைத் தன் திருமேனி முழுவதும் பரவப் பூசியவன். திருப் பைஞ்ஞீலி என்னும் திருத்தலத்திலுள்ள திருக்கோயிலில் விரும்பி வீற்றிருந்தருளுபவன். மூங்கிலைப் போன்ற தோளையுடைய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டவன். அப்பெருமான் சீவனான என்னைச் சிவனாகச் செய்யும் பண்புதான் என்னே!

திருப்பைஞ்ஞீலி

தொத்தின தோள்முடி யுடைய வன்றலை
பத்தினை நெரித்தபைஞ் ஞீலி மேவலான்
முத்தினை முறுவல்செய் தாளொர் பாகமாப்
பொத்தினன் திருந்தடி பொருந்தி வாழ்மினே **#150**

கொத்தாகவுள்ள இருபது தோள்களைக் கொண்ட இராவணனின் முடியுடைய தலைகள் பத்தையும் இறைவன் நெரித்தான். அப்பெருமான் திருப்பைஞ்ஞீலி என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்றான். முத்துப் போன்ற பற்களை உடைய உமாதேவியை ஒருபாகமாக அணைத்துக் கொண்டவன். அப் பெருமானின் திருவடிகளைப் பொருந்தி வாழ்வீர்களாக.

திருப்பைஞ்ஞீலி

நீருடைப் போதுறை வானு மாலுமாய்ச்
சீருடைக் கழலடி சென்னி காண்கிலர்
பாருடைக் கடவுள்பைஞ் ஞீலி மேவிய
தாருடைக் கொன்றையந் தலைவர் தன்மையே **#151**

நீர்நிலைகளில் விளங்குகின்ற தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பிரமனும், திருமாலும் திருமுடியையும், சிறப்புடைய கழலணிந்த திருவடிகளையும் தேடியும் காணாது நிற்க, இவ்வுலகை உடைமைப் பொருளாகக் கொண்ட இறைவன் திருப்பைஞ்ஞீலி என்னும் திருத்தலத்தில் கொன்றைமாலை அணிந்த தலைவனாய் வீற்றிருந்தருளுகின்றான்.

திருப்பைஞ்ஞீலி

பீலியார் பெருமையும் பிடகர் நூன்மையும்
சாலியா தவர்களைச் சாதி யாததோர்
கோலியா வருவரை கூட்டி யெய்தபைஞ்
ஞீலியான் கழலடி நினைந்து வாழ்மினே **#152**

மயிற்பீலி யேந்திப் பெருமை கொள்ளும் சமணர்களும், திரிபிடகம் என்னும் சமயநூலுடைய புத்தர்களும், தங்கள் நூற்பொருளோடு பொருந்தாதவர்களை வாதிட்டு வெல்லும் வல்லமையில்லாதவர்கள். எனவே, அவர்களின் உரைகளைக் கேளாது, வளைக்க முடியாத மேருமலையை வில்லாக வளைத்து அம்பினைத் தொடுத்து எய்து முப்புரங்களை எரித்தவனும், திருப்பைஞ்ஞீலி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற வனுமான சிவபெருமானின் கழலணிந்த திருவடிகளை நினைந்து வணங்கி வாழ்வீர்களாக!

திருப்பைஞ்ஞீலி

கண்புனல் விளைவயற் காழிக் கற்பகம்
நண்புண ரருமறை ஞான சம்பந்தன்
பண்பினர் பரவுபைஞ் ஞீலி பாடுவார்
உண்பின வுலகினி லோங்கி வாழ்வரே **#153**

தண்ணீர் பாய்கின்ற வயல்வளமுடைய சீகாழியில், கற்பகமரம் போன்று அன்பினால் அனைத்துயிர்கட்டும் நலம் சேர்க்கும் அருமறைவல்ல ஞானசம்பந்தன், நற்பண்புடையவர் வணங்கும் திருப்பைஞ்ஞீலி என்னும் திருத்தலத்திலுள்ள இறைவனைப் பாடிய இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள், வினைப்பயன்களை நுகர்வதற்காகப் பிறந்துள்ள இப்பூவுலகில் ஓங்கி வாழ்வர்.

திருவெண்காடு

திருவெண்காடு

திருவெண்காடு,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சுவேதாரணியேசுவரர்.
தேவியார் : பிரமவித்தியாநாயகியம்மை.

மந்திர மறையவை வான வரொடும்
இந்திரன் வழிபட நின்ற எம்மிறை
வெந்தவெண் ணீற்றர்வெண் காடு மேவிய
அந்தமு முதலுடை யடிக ளல்லரே **#154**

பஞ்சாக்கர மந்திரத்தைத் தனி நடுப்பகுதியில் கொண்ட வேதங்களும், தேவர்களும், இந்திரனும் வழிபட வீற்றிருக்கின்ற எங்கள் இறைவனாய், வெந்த வெண்ணீற்றினைத் திருமேனியில் பூசித் திருவெண்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமான் அந்தமும், ஆதியுமாகிய அடிகள் அல்லரோ?

திருவெண்காடு

படையுடை மழுவினர் பாய்புலித் தோலின்
உடைவிரி கோவண முகந்த கொள்கையர்
விடையுடைக் கொடியர்வெண் காடு மேவிய
சடையிடைப் புனல்வைத்த சதுர ரல்லரே **#155**

இறைவர் மழுவைப் படையாக உடையவர். பாய்கின்ற புலித்தோலை ஆடையாக உடையவர். கோவணத்தை உகந்து அணிந்தவர். இடபவடிவம் பொறிக்கப்பட்ட கொடியுடையவர். திருவெண்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமான் சடையிலே கங்கையைத் தாங்கிய திறமையானவர் அல்லரோ?

திருவெண்காடு

பாலொடு நெய்தயிர் பலவு மாடுவர்
தோலொடு நூலிழை துதைந்த மார்பினர்
மேலவர் பரவுவெண் காடு மேவிய
ஆலம தமர்ந்தவெம் மடிக ளல்லரே **#156**

இறைவர் பாலொடு, நெய், தயிர் மற்றும் பலவற்றாலும் திருமுழுக்கு ஆட்டப்படுபவர். யானைத்தோலைப் போர்வையாகவும், புலித்தோலை ஆடையாகவும் அணிந்தவர். முப்புரி நூலணிந்த மார்பினர்,

சிவஞானிகள் துதிக்கின்ற திருவெண்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் கல்லால மரத்தின்கீழ் வீற்றிருந்து அறம் உரைத்த எம் தலைவர் அல்லரோ?

திருவெண்காடு

ஞாழலுஞ் செருந்தியு நறுமலர்ப் புன்னையுந்
தாழைவெண் குருகயல் தயங்கு கானலில்
வேழம துரித்தவெண் காடு மேவிய
யாழின திசையுடை யிறைவ ரல்லரே **#157**

புலிநகக் கொன்றையும், செருந்தியும், நறுமணமிக்க புன்னை மலர்களும், தாழையும், குருக்கத்தியும் விளங்கும் கடற்கரைச் சோலையுடைய திருவெண்காடு என்னும் திருத்தலத்தில், யானையின் தோலையுரித்த ஆற்றல் உடையவராயும், யாழிசை போன்ற இனிமை உடையவராயும் உள்ள சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார் அல்லரோ?

திருவெண்காடு

பூதங்கள் பலவுடைப் புனிதர் புண்ணியர்
ஏதங்கள் பலவிடர் தீர்க்கு மெம்மிறை
வேதங்கண் முதல்வர்வெண் காடு மேவிய
பாதங்கள் தொழநின்ற பரம ரல்லரே **#158**

எம் இறைவர், பூதகணங்கள் பல உடைய புனிதர். புண்ணிய வடிவினர். தம்மை வழிபடுபவர்களின் குற்றங்களையும், துன்பங்களையும் தீர்த்தருளுபவர். அவர் வேதங்களில் கூறப்படும் முதல்வர். திருவெண்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் அவர்தம் பாதங்கள் அனைவராலும் தொழப்படும் நிலையில் விளங்கும் பரம்பொருள் அல்லவோ?

திருவெண்காடு

மண்ணவர் விண்ணவர் வணங்க வைகலும்
எண்ணிய தேவர்கள் இறைஞ்சும் எம்மிறை
விண்ணமர் பொழில்கொள்வெண் காடு மேவிய
அண்ணலை அடிதொழ அல்லல் இல்லையே **#159**

மண்ணுலகத்தோரும், விண்ணுலகத்தோரும், மற்றுமுள்ள தேவர்களும் தினந்தோறும் எங்கள் இறைவனை வழிபட்டுப் போற்றுகின்றனர். வானளாவிய சோலைகளையுடைய திருவெண்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கின்ற அப் பெருமானின் திருவடிகளை வணங்குபவர்கட்குத் துன்பம் இல்லை.

திருவெண்காடு

நயந்தவர்க் கருள்பல நல்கி யிந்திரன்
கயந்திரம் வழிபடநின்ற கண்ணுதல்
வியந்தவர் பரவுவெண் காடுமேவிய
பயந்தரு மழுவுடைப் பரம ரல்லரே **#160**
விரும்பி வழிபடும் அடியவர்கட்கு வேண்டுவன வேண்டியவாறு அருளி, இந்திரனின் வெள்ளையானை வழிபட அதற்கும் அருள்புரிந்தவர் நெற்றிக்கண்ணுடைய சிவபெருமான் ஆவார். அனைவரும் அந்த இன்னருளை வியந்து போற்றும்படி திருவெண்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் பயந்தரு மழுப்படையுடைய பரமர் அல்லரோ?

திருவெண்காடு

மலையுட னெடுத்தவல் லரக்கன் நீள்முடி
தலையுட னெரித்தருள் செய்த சங்கரர்
விலையுடை நீற்றர்வெண் காடு மேவிய
அலையுடைப் புனல்வைத்த அடிகள் அல்லரே **#161**
கயிலைமலையை எடுத்த கொடிய அரக்கனாகிய இராவணனின் நீண்டமுடி, தலை, உடல் ஆகியவற்றை நெரித்து, பின் அவன் தவறுணர்ந்து சாமகானம் பாட, அருள் செய்த சங்கரர், மதிப்புடைய திருநீற்றினைப் பூசியவர். அலையுடைய கங்கையைச் சடையில் தாங்கித் திருவெண்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் பெருமான் அவர் அல்லரோ?

திருவெண்காடு

ஏடவிழ் நறுமலர் அயனு மாலுமாய்த்
தேடவுந் தெரிந்தவர் தேர கிற்கிலார்
வேடம துடையவெண் காடு மேவிய
ஆடலை யமர்ந்தஎம் அடிகள் அல்லரே **#162**
பூவிதழ்களுடைய நறுமணம் கமழும் தாமரையில் வீற்றிருக்கும் பிரமனும், திருமாலும் திருமுடியையும், திருஅடியையும் காணத்தேடியும் காண்பதற்கு அரியவராய் நெருப்புமலையாய் விளங்கியவரும், பலபல வேடம் கொள்பவருமான இறைவன் திருவெண்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்து திருநடனம் புரிதலை விரும்பிய அடிகள் அல்லரோ?

திருவெண்காடு

போதியர் பிண்டியர் பொருத்தம் இல்லிகள்
நீதிகள் சொல்லியும் நினைய கிற்கிலார்
வேதியர் பரவுவெண் காடு மேவிய
ஆதியை யடிதொழ அல்லல் இல்லையே **#163**

புத்தரும், சமணரும் பொருத்தம் இல்லாதவராய், இறையுண்மையை உணர்த்தும் நீதிகளை எடுத்துரைத்தும், நல்வாழ்வு இல்லாமையால் அவற்றை நினைத்துப் பார்த்தலும் செய்யாதவர் ஆயினர். எனவே அவர்களைச் சாராது, வேதம் ஓதும் அந்தணர்கள் பரவித் துதிக்கின்ற திருவெண்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற அனைத்துலகுக்கும் முதற்பொருளாகிய சிவபெருமான் திருவடிகளைத் தொழத் துன்பம் இல்லையாம்.

திருவெண்காடு

நல்லவர் புகலியுள் ஞான சம்பந்தன்
செல்வன்எம் சிவனுறை திருவெண் காட்டின்மேற்
சொல்லிய அருந்தமிழ் பத்தும் வல்லவர்
அல்லலோ டருவினை அறுதல் ஆணையே **#164**

பசுபுண்ணியம், பதிபுண்ணியம் செய்த நல்லவர்கள் வசிக்கின்ற திருப்புகலியுள் அவதரித்த ஞானசம்பந்தன், செல்வனாகிய எம் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருவெண்காட்டின் மேல் பாடிய அருந்தமிழ்ப் பாக்கள் பத்தினையும் பக்தியோடு ஓதவல்லவர்களுடைய துன்பங்களோடு அவற்றிற்குக் காரணமான அருவினையும் அறும் என்பது நமது ஆணையாகும்.

திருக்கொள்ளிக்காடு

திருக்கொள்ளிக்காடு

திருக்கொள்ளிக்காடு,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது,
சுவாமிபெயர் : அக்கினீசுவரர்.
தேவியார் : பஞ்சினுமெல்லடியம்மை.

நிணம்படு சுடலையி னீறு பூசிநின்
றிணங்குவர் பேய்களோ டிடுவர் மாநடம்
உணங்கல்வெண் டலைதனில் உண்ப ராயினும்
குணம்பெரி துடையர்நங் கொள்ளிக் காடரே **#165**

பிணங்களை எரிக்கும் சுடுகாட்டின் சாம்பலைப் பூசிப் பேய்களோடு பெரிய கூத்து ஆடுகின்ற இறைவர், உலர்ந்த பிரமகபாலத்தைக் கையில் ஏந்திப் பலியேற்று உண்பர். ஆயினும் அப்பெருமான் உயர்ந்த குணம் உடையவராய்த் திருக்கொள்ளிக்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கொள்ளிக்காடு

ஆற்றநல் லடியிணை அலர்கொண் டேத்துவான்
சாற்றிய அந்தணன் தகுதி கண்டநாள்
மாற்றல னாகிமுன் னடர்த்து வந்தணை
கூற்றினை யுதைத்தனர் கொள்ளிக் காடரே **#166**

நலம் தரும் இறைவனின் திருவடிகளை மலர்கொண்டு போற்றி வழிபட்ட மார்க்கண்டேயனின் வாழ்நாள் இறுதியை அறிந்து யாவராலும் தவிர்க்க முடியாதவனாகி மார்க்கண்டேயனை நெருங்கி வந்தடைந்த கூற்றுவனைக் காலால் உதைத்த இறைவர் திருக்கொள்ளிக்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கொள்ளிக்காடு

அத்தகு வானவர்க் காக மால்விடம்
வைத்தவர் மணிபுரை கண்டத் தின்னுளே
மத்தமும் வன்னியும் மலிந்த சென்னிமேல்
கொத்தலர் கொன்றையர் கொள்ளிக் காடரே **#167**

தாம் வாழ்வான் வேண்டி வணங்கும் வானவர்களைக் காப்பதற்காகக் கொடிய விடத்தை உண்டு தம் கண்டத்தில் அடக்கிய சிவபெருமான், ஊமத்தம் பூவும், வன்னியும் அணிந்த சடைமுடியில் கொத்தாகக்

கொன்றைமலர் சூடியவர். அப்பெருமான் திருக்கொள்ளிக்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கொள்ளிக்காடு

பாவண மேவுசொன் மாலை யிற்பல
நாவணங் கொள்கையின் நவின்ற செய்கையர்
ஆவணங் கொண்டெமை யாள்வ ராயினும்
கோவணங் கொள்கையர் கொள்ளிக் காடரே #168

யாப்பிலக்கணம் பொருந்துமாறு சொல்லைத் தொடுக்கும் மாலை போன்ற பாடல்கள் பலவற்றை நாநயத்துடன் நவிலுமாறு செய்தவர் இறைவர். அவர் உயிர்களாகிய எங்களை அடிமை கொண்டு ஆள்பவராயினும் கோவண ஆடை உடையவர். அப்பெருமான் திருக்கொள்ளிக்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கொள்ளிக்காடு

வாரணி வனமுலை மங்கை யாளொடும்
சீரணி திருவுருத் திகழ்ந்த சென்னியர்
நாரணி சிலைதனால் நணுக லாரெயில்
கூரெரி கொளுவினர் கொள்ளிக் காடரே #169

கச்சணிந்த அழகிய முலையுடைய உமாதேவியோடு, சிறந்த அழகிய திருவுருவத்துடன் விளங்கும் சிவபெருமான், நாண் பூட்டிய மேருமலையை வில்லாகக் கொண்டு பகைவர்களாகிய முப்புர அசுரர்களின் மதில்களை அக்கினியை அம்பின் நுனியாகக் கொண்டு கொளுத்தியவர். அப்பெருமான் திருக்கொள்ளிக்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கொள்ளிக்காடு

பஞ்சுதோய் மெல்லடிப் பாவை யாளொடும்
மஞ்சுதோய் கயிலையுள் மகிழ்வர் நாள்தொறும்
வெஞ்சின மருப்பொடு விரைய வந்தடை
குஞ்சரம் உரித்தனர் கொள்ளிக் காடரே #170

செம்பஞ்சுக் குழம்பு தோய்ந்த மெல்லிய பாதத்தையுடைய உமாதேவியை உடனாகக் கொண்டு, மேகத்தைத் தொடும்படி உயர்ந்துள்ள கயிலைமலையில் மகிழ்ந்திருந்து நாள் தோறும் தம்மை வழிபடுபவர்கட்கு அருள் பாலிக்கும் இறைவர், கொடிய சினத்தோடும், கொம்போடும் வேகமாக வந்தடைந்த யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டவர். அப்பெருமான் திருக்கொள்ளிக்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கொள்ளிக்காடு

இறையுறு வரிவளை யிசைகள் பாடிட
அறையுறு கழலடி ஆர்க்க ஆடுவர்
சிறையுறு விரிபுனல் சென்னி யின்மிசைக்
குறையுறு மதியினர் கொள்ளிக் காடரே **#171**

திருக்கையில் விளங்கும் அழகிய வளையல்களையுடைய உமாதேவி இசைபாட, திருவடிகளில் விளங்கும் வீரக்கழல்கள் ஒலிக்க, இறைவர் திருநடனம் புரிகின்றார். அப்பெருமான் பாய்கின்ற கங்கையைத் தடுத்துச் சடையில் தாங்கி, கலைகுறைந்த சந்திரனையும் தலையில் சூடி, திருக்கொள்ளிக்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கொள்ளிக்காடு

எடுத்தனன் கயிலையை யியல்வ லியினால்
அடர்த்தனர் திருவிர லால்அ லறிடப்
படுத்தன ரென்றவன் பாடல் பாடலும்
கொடுத்தனர் கொற்றவாள் கொள்ளிக் காடரே **#172**

தன்னுடைய வலிமையினால் கயிலைமலையை அப்புறப்படுத்த எடுத்த இராவணனை, தம் காற்பெரு விரலையூன்றி அம்மலையின்கீழ் அடர்த்து அவறும்படி செய்ய, இராவணன் தவறு ணர்ந்து, தன்னை வருத்திய சிவனைப் போற்றிச் சாமகானம் பாட, இறைவர் இரங்கி வீரவாளை அருளினார். அப்பெருமானார் திருக்கொள்ளிக்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கொள்ளிக்காடு

தேடினா ரயன்முடி மாலுஞ் சேவடி
நாடினா ரவரென்று நணுக கிற்றிலர்
பாடினார் பரிவொடு பத்தர் சித்தமும்
கூடினார்க் கருள் செய்வர் கொள்ளிக் காடரே **#173**

பிரமன் திருமுடியினையும், திருமால் திருவடியையும் தேட, அவர்களால் எப்பொழுதும் அணுகமுடியாதவராய் விளங்கும் சிவபெருமான், பக்தர்கள் மனம் ஒன்றி அன்பால் அகம் குழைந்து பாட அருள்செய்வார். அப்பெருமானார் திருக்கொள்ளிக்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கொள்ளிக்காடு

நாடிநின் றறிவில்நா ணிலிகள் சாக்கியர்
ஓடிமுன் னோதிய வுரைகள் மெய்யல

பாடுவர் நான்மறை பயின்ற மாதொடும்
கூடுவர் திருவுருக் கொள்ளிக் காடரே #174
இறையுண்மையை உணரும் அறிவில்லாத நாணமற்ற சமணரும், புத்தர்களும் முனைந்து சொல்லும் உரைகள் மெய்யானவை அல்ல. அவர்களைச் சாராதுவிட்டு, நான்கு வேதங்களை அருளிய சிவபெருமான், நன்கு பழகிய உமாதேவியோடு திருக்கொள்ளிக்காடு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் திருக்கோலத்தைக் கண்டு தரிசித்து உய்தி அடையுங்கள்.

திருக்கொள்ளிக்காடு

நற்றவர் காழியுண் ஞானசம் பந்தன்
குற்றமில் பெரும்புகழ்க் கொள்ளிக் காடரைச்
சொற்றமி ழின்னிசை மாலை சோர்வின்றிக்
கற்றவர் கழலடி காண வல்லரே #175
நல்தவத்தோர் வாழ்கின்ற சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தன், குற்றமற்ற பெரும்புகழுடைய திருக்கொள்ளிக்காடு என்னும் தலத்தில் வீற்றிருந்தருளும் இறைவனை, அழகு தமிழில், இன்னிசையோடு பாடிய இப்பாமாலையைத் தளராது கற்று ஓத வல்லவர்கள் அப்பெருமானின் திருவடிகளைக் காணும் பேறு பெறுவார்கள்.

திருவிசயமங்கை

திருவிசயமங்கை

திருவிசயமங்கை,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : விசயநாதேசுவரர்.
தேவியார் : மங்கைநாயகியம்மை.

மருவமர் குழலுமை பங்கர் வார்சடை
அரவமர் கொள்கையெம் அடிகள் கோயிலாம்
குரவமர் சுரபுன்னை கோங்கு வேங்கைகள்
விரவிய பொழிலணி விசய மங்கையே #176

நறுமணம் கமழும் கூந்தலையுடைய உமா தேவியை ஒருபாகத்தில் கொண்ட, நீண்ட சடையில் பாம்பணிந்த சிவபெருமான் எழுந்தருளியுள்ள கோயில், குரவம், சுரபுன்னை, கோங்கு, வேங்கை ஆகிய மரங்கள் நிறைந்து விளங்கும் சோலைகள் சூழ்ந்த அழகிய திருவிசயமங்கை ஆகும்.

திருவிசயமங்கை

கீதமுன் னிசைதரக் கிளரும் வீணையர்
பூதமுன் னியல்புடைப் புனிதர் பொன்னகர்
கோதனம் வழிபடக் குலவு நான்மறை
வேதியர் தொழுதெழு விசய மங்கையே #177

கீதங்களை முன்னே இசைக்க விளங்கும் வீணையினை உடையவரும், பூதகணங்கள் சூழ விளங்கும் புனிதரான சிவபெருமானின் பொன்னகர் என்பது, இடபதேவர் வழிபட விளங்குவதும், நான்கு வேதங்களையும் ஓதும் அந்தணர்கள் தொழுது போற்றும் திருவிசயமங்கை என்னும் திருத்தலம் ஆகும். கோதனம் வழிபட - பசுக்கூட்டங்கள் வழிபட என்றும் பொருள் உரைப்பர். ஒரு காலத்தில் இவ்வூர் கோவந்த புத்தூர் என வழங்கப்பட்டதாகக் கூறுவர்.

திருவிசயமங்கை

அக்கர வரையினர் அரிவை பாகமாத்
தொக்கநல் விடையுடைச் சோதி தொன்னகர்
தக்கநல் வானவர் தலைவர் நாள்தொறும்
மிக்கவர் தொழுதெழு விசய மங்கையே #178

உருத்திராக்கத்தையும், பாம்பையும் அணிந்த இடுப்பையுடையவரும்,

உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டவரும், சிறந்த நல் இடபத்தை வாகனமாக உடைய சோதி வடிவான சிவபெருமான் வீற்றிருந்தருளும் பழமை வாய்ந்த நகர், தகுதியுடைய நல்ல தேவர்களும், அவர்களுடைய தலைவர்களும் நாள்தோறும் வணங்கிப் போற்றுகின்ற திருவிசயமங்கை என்னும் திருத்தலமாகும். அக்கு - உருத்திராக்கம். இதனை "அக்கு மாலை கொடங்கையி வெண்ணுவார்" (தி.3 ப.307 பா.3) என்ற திருஞானசம்பந்தர் திருவாக்கால் அறிக.

திருவிசயமங்கை

தொடைமலி யிதழியுந் துன்னெ ருக்கொடு
புடைமலி சடைமுடி யடிகள் பொன்னகர்
படைமலி மழுவினர் பைங்கண் மூரிவெள்
விடைமலி கொடியணல் விசய மங்கையே **#179**

கொன்றை மாலையும், நெருக்கமாகத் தொடுக்கப்பட்ட எருக்க மாலையும் பக்கங்களிலே விளங்கும் சடைமுடியுடைய அடிகளாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் அழகிய நகரம், மழுவை ஆயுதமாக உடையவரும், பசிய கண்களையுடைய வலிமையுடைய வெண்ணிற எருதுவை கொடியாக உடைய சிவபெருமானின் திருவிசயமங்கை என்னும் திருத்தலமாகும்.

திருவிசயமங்கை

தோடமர் காதினன் துதைந்த நீற்றினன்
ஏடமர் கோதையோ டினித மர்விடம்
காடமர் மாகரி கதறப் போர்த்ததோர்
வேடம துடையணல் விசய மங்கையே **#180**

இறைவன் இடப்பாகத்தில் தோடணிந்த காதினன். நன்கு குழையத் திருநீறு பூசிய மேனியன். காட்டிலே வசிக்கின்ற பெரிய யானை கதறும்படி அதன் தோலை உரித்துப் போர்த்துக் கொண்ட ஒப்பற்ற திருக்கோலத்தையுடைய அண்ணலான சிவபெருமான், பூவிதழ்களை அணிந்த கூந்தலையுடைய உமாதேவியொடு இனிது வீற்றிருக்கும் இடம் திருவிசயமங்கை என்னும் திருத்தலமாகும்.

திருவிசயமங்கை

மைப்புரை கண்ணுமை பங்கன் வண்டழல்
ஒப்புரை மேனியெம் முடைய வன்னகர்
அப்பொடு மலர்கொடங் கிறைஞ்சி வானவர்
மெய்ப்பட வருள்புரி விசய மங்கையே **#181**

நீலோற்ப மலர் போன்ற கண்ணுடைய உமாதேவியை ஒரு பாகத்தில்

கொண்டவன் இறைவன். சிறந்த நெருப்புப் போன்ற திருமேனியுடையவன். எம்மை ஆளும் அவரின் நகர் நீரும், மலரும் கொண்டு தேவர்கள் உண்மையாக வழிபட அவர்களுக்கு அருள்புரிந்த திருவிசயமங்கை என்னும் திருத்தலம் ஆகும். பூவும், நீரும் கொண்டு அன்புடன் வழிபடுபவர்களின் பூசையை ஏற்று இறைவன் அருள் செய்வான் என்று கூறுவது அன்பில்லாதவர்களின் பூவையும், நீரையும் இறைவன் ஏற்றுக்கொள்ள மாட்டான் என்பதைப் புலப்படுத்தும். "பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பர் அவர்தமை நாணியே" (தி.5 ப.90 பா.9) என்ற திருநாவுக்கரசரின் திருவாக்கை இங்கு நினைவுகூர்க.

திருவிசயமங்கை

இரும்பொனின் மலைவில்லின் எரிச ரத்தினால்
வரும்புரங் களைப்பொடி செய்த மைந்தனூர்
சுரும்பமர் கொன்றையும் தூய மத்தமும்
விரும்பிய சடையணல் விசய மங்கையே **#182**

பெரிய மேருமலையாகிய வில்லினால் எய்யப்பட்ட நெருப்பாகிய அம்பினால் திரிபுரங்களைப் பொடி செய்த பெரும் வீரமுடையவன் இறைவன். வண்டுகள் அமர்கின்ற கொன்றை மலர் மாலையையும், தூய ஊமத்தை மலரையும் விரும்பி அணிந்த சடைமுடியுடைய தலைவனான சிவபெருமான் வீற்றிருந்தருளுவது திருவிசயமங்கை என்னும் திருத்தலம் ஆகும்.

திருவிசயமங்கை

உளங்கைய இருபதோ டொருபதுங் கொடாங்
களந்தரும் வரையெடுத் திடும்அ ரக்கனைத்
தளர்ந்துட னெரிதர வடர்த்த தன்மையன்
விளங்கிழை யொடும்புகும் விசய மங்கையே **#183**

தன்னுடைய வழியில் இம்மலை தடுக்கின்றது என்று மனம் கசந்து, இருபது தோள்களும், பத்துத் தலைகளும் கொண்டதால் தான் வலிமையுடையவன் என்று எண்ணி, எடுத்தற்கு அரிய கயிலை மலையினைப் பெயர்த்தெடுக்க முயன்ற அரக்கனான இராவணன் தளர்ந்து உடல் நெரியும் படி அடர்த்த தன்மையுடைய சிவபெருமான், ஒளிவீசும் ஆபரணங்களை அணிந்த உமாதேவியோடு வீற்றிருந்தருளுவது திருவிசயமங்கை என்னும் திருத்தலம் ஆகும்.

திருவிசயமங்கை

மண்ணினை யுண்டவன் மலரின் மேலுறை

அண்ணல்கள் தமக்களப் பரிய அத்தனூர்
தண்ணறுஞ் சாந்தமும் பூவு நீர்கொடு
விண்ணவர் தொழுதெழு விசய மங்கையே **#184**
மண்ணினை உண்ட திருமாலும், தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பிரமனும் அளத்தற்கரிய தலைவனான சிவபெருமானது ஊர், குளிர்ச்சி பொருந்திய நறுமணம் கமழும் சந்தனமும், பூவும் நீரும் கொண்டு விண்ணவர் தொழுது போற்றும் திருவிசயமங்கை என்னும் திருத்தலமாகும்.

திருவிசயமங்கை

கஞ்சியுங் கவளமுண் கவணர் கட்டுரை
நஞ்சினுங் கொடியன நமர்கள் தேர்கிலார்
செஞ்சடை முடியுடைத் தேவன் நன்னகர்
விஞ்சையர் தொழுதெழு விசய மங்கையே **#185**
கஞ்சி உண்ணும் புத்தர்களும், கவனமாக உணவு உண்ணும் சமணர்களும் உரைக்கின்ற கருத்துக்கள் நஞ்சினும் கொடியனவாகும். நம்மவர்கள் அவற்றை ஏற்றுக் கொள்ளார். சிவந்த சடைமுடியுடைய தேவாதி தேவனின் நல்ல நகரம் வித்தியாதரர்கள் தொழுது வணங்கும் திருவிசயமங்கை என்னும் திருத்தலமாகும்.

திருவிசயமங்கை

விண்ணவர் தொழுதெழு விசய மங்கையை
நண்ணிய புகலியுள் ஞானசம் பந்தன்
பண்ணிய செந்தமிழ் பத்தும் வல்லவர்
புண்ணியர் சிவகதி புகுதல் திண்ணமே **#186**
விண்ணவர்கள் தொழுது வழிபடும் திருவிசயமங்கை என்னும் திருத்தலத்தை அடைந்து, திருப்புகலியில் அவதரித்த ஞானசம்பந்தன் அருளிய இச்செந்தமிழ்ப் பாக்கள் பத்தினையும் ஓத வல்லவர்கள் சிவபுண்ணியச் செல்வர்களாவர். அவர்கள் சிவகதி அடைவது உறுதியாகும்.

திருவைகல்மாடக்கோயில்

திருவைகல்மாடக்கோயில்

திருவைகல்மாடக்கோயில்,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வைகனாதேசுவரர்.
தேவியார் : வைகலம்பிகையம்மை.

துளமதி யுடைமறி தோன்று கையினர்
இளமதி யணிசடை யெந்தை யாரிடம்
உளமதி யுடையவர் வைக லோங்கிய
வளமதி தடவிய மாடக் கோயிலே #187

இறைவன், துள்ளிக்குதிக்கும் இயல்புடைய மான்கன்றை ஏந்தியுள்ள திருக்கரத்தினன். இளம்பிறையை அணிந்துள்ள சடையன். எம் தந்தையாகிய அச்சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது சிவஞானிகள் வாழ்கின்ற திருவைகல் என்னும் திருத்தலத்தில், அழகிய சந்திரனை வருடுமளவு ஓங்கி உயர்ந்துள்ள திருமாடக்கோயில் ஆகும்.

திருவைகல்மாடக்கோயில்

மெய்யக மிளிரும்வெண் ணூலர் வேதியர்
மையகண் மலைமக ளோடும் வைகிடம்
வையக மகிழ்தர வைகல் மேற்றிசைச்
செய்யகண் வளவன்முன் செய்த கோயிலே #188

இறைவர் ஒளிர்கின்ற முப்புரிநூல் அணிந்துள்ளவர். வேதத்தை அருளிச்செய்தவர். அவர், மை தீட்டிய கரிய கண்ணுடைய மலைமகளான உமாதேவியை உடனாகக் கொண்டு வீற்றிருந்தருளும் இடமாவது, இப்பூவுலகத்தார் மகிழும்படி திருவைகல் என்னும் திருத்தலத்தில் மேற்குத் திசையில், சிவந்த கண்ணுடைய கோச்செங்கட்சோழ மன்னனால் முற்காலத்தில் எழுப்பப்பட்ட மாடக்கோயிலாகும்.

திருவைகல்மாடக்கோயில்

கணியணி மலர்கொடு காலை மாலையும்
பணியணி பவர்க்கருள் செய்த பான்மையர்
தணியணி யுமையொடு தாமும் தங்கிடம்
மணியணி கிளர்வைகன் மாடக் கோயிலே #189

வேங்கைமரத்தின் அழகிய மலர்களைக் கொண்டு காலையும், மாலையும்

வழிபாடு செய்பவர்கட்கு அருள்செய்யும் தன்மையுடைவர் இறைவர். அவர் குளிர்ந்த அருளையே தம் வடிவமாகக் கொண்டு உமாதேவியோடு தாமும் வீற்றிருந்தருளும் இடமாவது இரத்தினங்களால் அழகுபடுத்தப்பட்ட திருவைகல் என்னும் திருத்தலத்திலுள்ள மாடக்கோயிலாகும்.

திருவைகல்மாடக்கோயில்

கொம்பியல் கோதைமுன் அஞ்சக் குஞ்சரத்
தும்பிய துரிசெய்த துங்கர் தங்கிடம்
வம்பியல் சோலைசூழ் வைகல் மேற்றிசைச்
செம்பியன் கோச்செங்க ணான்செய் கோயிலே **#190**

பூங்கொம்பு போன்ற மெல்லியலாளான உமாதேவி அஞ்சுமாறு யானையின் தோலை உரித்த மேன்மையுடையவனான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்த திருவைகல் என்னும் திருத்தலத்தின் மேற்குத்திசையில் கோச்செங்கட் சோழன் எழுப்பிய மாடக்கோயில் ஆகும்.

திருவைகல்மாடக்கோயில்

விடமடை மிற்றினர் வேத நாவினர்
மடமொழி மலைமக ளோடும் வைகிடம்
மடவனம் நடைபயில் வைகல் மாநகர்க்
குடதிசை நிலவிய மாடக்கோயிலே **#191**

இறைவர் பாற்கடலில் தோன்றிய நஞ்சை அடைத்து வைத்துள்ள கண்டத்தினர். வேதங்களை ஓதும் நாவினர். அவர், இனிய மொழிகளை மென்மையாகப் பேசுகின்ற மலைமகளான உமாதேவியோடு வீற்றிருந்தருளும் இடம், இள அன்னப்பறவைகள் நடைபயிலும் திருவைகல் என்னும் பெருநகரின் மேற்குத்திசையில் நிலவும் மாடக்கோயில் ஆகும்.

திருவைகல்மாடக்கோயில்

நிறைபுனல் பிறையொடு நிலவு நீள்சடை
இறையவர் உறைவிடம் இலங்கு மூவெரிப
மறையொடு வளர்வுசெய் வாணர் வைகலில்
திறையுடை நிறைசெல்வன் செய்த கோயிலே **#192**

புனிதமான கங்கையையும் பிறைச்சந்திரனையும் அணிந்துள்ள நீண்ட சடைமுடியுடைய இறைவர் வீற்றிருந்தருளும் இடமாவது, மூவகை அக்கினிகளை வேதங்களோடு வளர்க்கின்ற அந்தணர்கள் வாழ்கின்ற திருவைகல் என்னும் திருத்தலத்தில், சிற்றரசர்கள் கப்பம் கட்ட நிறைந்த

செல்வனாக விளங்கும் கோச்செங்கட்சோழன் என்ற மாமன்னன் கட்டிய மாடக்கோயில் ஆகும்.

திருவைகல்மாடக்கோயில்

எரிசரம் வரிசிலை வளைய ஏவிமுன்
திரிபுர மெரிசெய்த செல்வர் சேர்விடம்
வரிவளை யவர்பயில் வைகல் மேற்றிசை
வருமுகில் அணவிய மாடக் கோயிலே **#193**

அக்கினியாகிய அம்பை, மேருமலையை நீண்ட வில்லாக வளைத்துச் செலுத்தி முற்காலத்தில் திரிபுரங்களை எரியுண்ணுமாறு செய்த செல்வராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற இடமாவது, வரிவளையல்கள் அணிந்த பெண்கள் பழகுகின்ற திருவைகல் என்னும் திருத்தலத்தின் மேற்குத் திசையில் விரிந்துள்ள மேகத்தைத் தொடும்படி ஓங்கியுள்ள மாடக்கோயில் ஆகும்.

திருவைகல்மாடக்கோயில்

மலையன இருபது தோளி னான்வலி
தொலைவுசெய் தருள்செய்த சோதி யாரிடம்
மலர்மலி பொழிலணி வைகல் வாழ்வர்கள்
வலம்வரு மலையன மாடக் கோயிலே **#194**

மலை போன்ற இருபது தோள்களையுடைய இராவணனது வலிமையை அழித்து, பின்னர் அவன் சாம கானம் பாடிப் போற்ற அவனுக்கு அருள் செய்த சோதியாகிய இறைவன் வீற்றிருந்தருளும் இடமாவது, மலர்கள் நிறைந்த சோலைகளை யுடைய அழகிய திருவைகலில் வாழ்கின்றவர்கள் வலம் வந்து வணங்கும் மலை போன்ற மாடக்கோயில் ஆகும்.

திருவைகல்மாடக்கோயில்

மாலவன் மலரவன் நேடி மால்கொள
மாலெரி யாகிய வரதர் வைகிடம்
மாலைகொ டணிமறை வாணர் வைகலில்
மாலன மணியணி மாடக் கோயிலே **#195**

திருமாலும், பிரமனும் இறைவனின் அடிமுடிகளைத் தேடியும் காணமுடியாது மயக்கம் கொள்ள, நெருப்பு மலையாய் நின்ற, வழிபடுபவர்கட்கு வேண்டிய வரங்களை அளிக்கவல்ல சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, பூமாலைகளை இறைவனுக்கு அணிவித்து, வேதங்களை ஓதி வழிபாடு செய்யும் அந்தணர்கள் வாழ்கின்ற திருவைகல் என்னும் திருத்தலத்தில், மேகம் போலும்

நிறத்தையுடைய நீலமணிகளால் அழகுபடுத்தப்பட்ட மாடக்கோயில் ஆகும்.

திருவைகல்மாடக்கோயில்

கடுவுடை வாயினர் கஞ்சி வாயினர்
பிடகுரை பேணிலார் பேணு கோயிலாம்
மடமுடை யவர்பயில் வைகல் மாநகர்
வடமலை யனையநன் மாடக் கோயிலே **#196**

கடுக்காயைத் தின்னும் வாயுடையவர்களும், கஞ்சி குடிக்கும் வாயுடையவர்களுமான சமணர்களையும், புத்தர்களின் பிடக நூலையும் பொருட்படுத்தாத சிவனடியார்கள் போற்றும் கோயிலாவது, மடம் என்னும் பண்புடைய மகளிர் பழகுகின்ற திருவைகல் என்னும் மாநகரில் மேருமலையை ஒத்த சிறப்புடைய நன்மாடக் கோயில் ஆகும்.

திருவைகல்மாடக்கோயில்

மைந்தன திடம்வைகல் மாடக் கோயிலைச்
சந்தமர் பொழிலணி சண்பை ஞானசம்
பந்தன தமிழ்கெழு பாடல் பத்திவை
சிந்தைசெய் பவர்சிவ லோகஞ் சேர்வரே **#197**

அளவில்லாத ஆற்றலுடைய இறைவன் வீற்றிருந்தருளும் இடமாகிய திருவைகல் என்னும் திருத்தலத்திலுள்ள மாடக் கோயிலைச் சந்தன மரங்கள் கொண்ட சோலைகளையுடைய அழகிய திருச்சண்பை நகரில் அவதரித்த ஞானசம்பந்தன் அருளிய இத்தமிழ்ப் பதிகத்தைச் சிந்தையிலிருத்திப் போற்ற வல்லவர்கள் சிவலோகத்தில் இருப்பர்.

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரிநாதேசுவரர்.
தேவியார் : பூங்குழனாயகியம்மை.

எரிதர அனல்கையில் ஏந்தி யெல்லியில்
நரிதிரி கானிடை நட்டம் ஆடுவர்
அரிசிலம் பொருபுனல் அம்பர் மாநகர்க்
குரிசில்செங் கண்ணவன் கோயில் சேர்வரே **#198**

இறைவர் எரிகின்ற நெருப்பைக் கையில் ஏந்தி நள்ளிருளில், நரிகள் திரிகின்ற மயானத்தில் திருநடனம் புரிகின்றார். அப்பெருமானார் அரிசில் ஆறு பாய்வதால் நீர்வளமிக்க அம்பர் மாநகரில் பெருமையிற் சிறந்த, சிவந்த கண்களையுடைய கோச்செங்கட் சோழன் கட்டிய கோயிலில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்

மையகண் மலைமகள் பாக மாயிருள்
கையதோர் கனலெரி கனல ஆடுவர்
ஐயநன் பொருபுனல் அம்பர்ச் செம்பியர்
செய்யகண் ணிறைசெய்த கோயில் சேர்வரே **#199**

மைபூசிய கண்ணையுடைய மலைமகளான உமாதேவியை ஒருபாகமாகக் கொண்டு, இருளில், இறைவர் கையில் கனன்று எரிகின்ற நெருப்பானது சுவாலை வீச, நடனம் ஆடுவார். அப்பெருமானார் கரையை மோதுகின்ற அரிசிலாற்றினால் நீர் வளமிக்க அழகிய நல்ல அம்பர் மாநகரில் கோச்செங்கட் சோழன் கட்டிய கோயிலில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்

மறைபுனை பாடலர் சுடர்கை மல்கவோர்
பிறைபுனை சடைமுடி பெயர ஆடுவர்
அறைபுன னிறைவயல் அம்பர் மாநகர்
இறைபுனை யெழில்வளர் இடம தென்பரே **#200**

வேதங்களை அருளிப் பாடுகின்ற இறைவர், சுடர்விடு நெருப்பு கையில் விளங்கவும், பிறைச்சந்திரன் சடைமுடியில் அசையவும் ஆடுவார்.

ஒலிக்கின்ற அரிசிலாற்றினால் நீர் நிறைந்த வயல்களையுடைய அம்பர் மாநகரில், கோச்செங்கட்சோழ மன்னன் எழுப்பிய அழகுமிகு கோயிலில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்

இரவுமல் கிளமதி சூடி யீடுயர்
பரவமல் கருமறை பாடி யாடுவர்
அரவமோ டுயர்செம்மல் அம்பர்க் கொம்பலர்
மரவமல் கெழினகர் மருவி வாழ்வரே **#201**

இரவில் ஒளிரும் இளம்பிறைச் சந்திரனைச் சூடி, தம் பெருமையின் உயர்வைத் துதிப்பதற்குரிய அருமறைகளை இறைவர் பாடி ஆடுவார். பாம்பணிந்து உயர்ந்து விளங்கும் சம்மலாகிய சிவபெருமான், கொம்புகளில் மலர்களையுடைய வெண்கடம்ப மரங்கள் நிறைந்து சோலைகளையுடைய அழகிய அம்பர் மாநகரில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்

சங்கணி குழையினர் சாமம் பாடுவர்
வெங்கனல் கனல்தர வீசி யாடுவர்
அங்கணி விழவமர் அம்பர் மாநகர்ச்
செங்கணல் இறைசெய்த கோயில் சேர்வரே **#202**

இறைவர் சங்கினாலாகிய குழை அணிந்த காதினர். சாமவேதத்தைப் பாடுவார். மிகுந்த வெப்பமுடைய நெருப்புச் சுவாலை வீசத் தோள்வீசி ஆடுவார். அழகிய திருவிழாக்கள் நடைபெறும் அம்பர் மாநகரில் கோச்செங்கட்சோழ மன்னன் எழுப்பிய திருக்கோயிலில் அப்பெருமானார் வீற்றிருந்தருளுகின்றார்.

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்

கழல்வளர் காலினர் சுடர்கை மல்கவோர்
சுழல்வளர் குளிர்புனல் சூடி யாடுவர்
அழல்வளர் மறையவர் அம்பர்ப் பைம்பொழில்
நிழல்வளர் நெடுநகர் இடம தென்பரே **#203**

இறைவர் வீரக்கழல்கள் அணிந்த திருவடிகள் உடையவர். சுடர்விட்டு எரியும் நெருப்பைக் கையில் ஏந்தியுள்ளவர். நீர்ச்சுழிகளையுடைய குளிர்ந்த கங்கையைச் சடையில் சூடி ஆடுவர். அப்பெருமானார், வேள்வித்தீ வளர்க்கும் அந்தணர்கள் வாழ்கின்ற அம்பர் மாநகரில் அழகிய சோலைகளையுடைய நிழல்தரும் பெருந் திருக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்

இகலுறு சுடரெரி யிலங்க வீசியே
பகலிடம் பலிகொளப் பாடி யாடுவர்
அகலிட மலிபுகழ் அம்பர் வம்பவிழ்
புகலிட நெடுநகர் புகுவர் போலுமே **#204**
இறைவர், வலிமைமிக்க சுடர்விட்டு எரியும் நெருப்பை ஏந்தித்
தோள்களை வீசிப் பலி ஏற்கும் பொருட்டுப் பாடி ஆடுவர்.
அப்பெருமானார் அகன்ற இப்பூவுலகெங்கும் பரவிய மிகு புகழையுடைய
அம்பர் மாநகரில், தெய்விக மணம் கமழும் திருக்கோயிலைத் தமது
இருப்பிடமாகக் கொண்டு வீற்றிருந்தருளுகின்றார்.

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்

எரியன மணிமுடி யிலங்கைக் கோன்தன
கரியன தடக்கைகள் அடர்த்த காலினர்
அரியவர் வளநகர் அம்பர் இன்பொடு
புரியவர் பிரிவிலாப் பூதஞ் சூழவே **#205**
சிவபெருமான், நெருப்புப் போன்று ஒளிவீசும் இரத்தினங்கள்
பதிக்கப்பட்ட கிரீடம் அணிந்த இலங்கை மன்னனான இராவணனின்
கரிய, பருத்த கைகளை அடர்த்த திருவடிகளை யுடையவர்.
அருந்தவத்தோர் வாழ்கின்ற வளம் பொருந்திய அம்பர் மாநகரில்,
தம்மைப் பிரிவில்லாத பூதகணங்கள் புடைசூழ இனிதே
வீற்றிருந்தருளுகின்றார்.

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்

வெறிகிளர் மலர்மிசை யவனும் வெந்தொழிற்
பொறிகிள ரவணைப் புல்கு செல்வனும்
அறிகில அரியவர் அம்பர்ச் செம்பியர்
செறிகழ லிறைசெய்த கோயில் சேர்வரே **#206**
நறுமணம் கமழும் தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் பிரமனும், கொல்லும்
தன்மையுடைய பாம்பைப் படுக்கையாகக் கொண்டுள்ள செல்வனாகிய
திருமாலும், அறிதற்கு அரியரான இறைவர் திரு அம்பர் மாநகரில்
கோச்செங்கட்சோழ மன்னன் கட்டிய திருக்கோயிலில் தம் கழலணிந்த
திருவடி பொருந்த வீற்றிருந்தருளுகின்றார்.

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்

வழிதலை பறிதலை யவர்கள் கட்டிய
மொழிதலைப் பயனென மொழியல் வம்மினோ

அழிதலை பொருபுனல் அம்பர் மாநகர்
உழிதலை யொழிந்துளர் உமையுந் தாமுமே **#207**
மழித்த தலையையும், முடி பறித்த தலையையும் உடைய புத்தர்களும், சமணர்களும் கட்டுரையாகக் கூறியவற்றைப் பயனுடையவெனக் கொள்ள வேண்டா. கங்கையைச் சடையிலே தாங்கி, அங்குமிங்கும் சுற்றித் திரிதலை ஒழித்து, அம்பர் மாநகரில் உமாதேவியோடு வீற்றிருந்தருளும் இறைவனைத் தரிசித்து அருள் பெற வாருங்கள்.

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்

அழகரை யடிகளை அம்பர் மேவிய
நிழல்திகழ் சடைமுடி நீல கண்டரை
உமிழ்திரை யுலகினில் ஓதுவீர் கொண்மின்
தமிழ்கெழு விரகினன் தமிழ்செய் மாலையே **#208**
அழகரை, அடிகளை, திரு அம்பர் மாநகரில் எழுந்தருளியிருக்கும் ஒளிர்கின்ற சடைமுடியுடைய நீலகண்டரான சிவபெருமானை, அலைவீசுகின்ற கடலுடைய இவ்வுலகினில், முத்தமிழ் விரகனாகிய ஞானசம்பந்தன் அருளிய இத்தமிழ்ப் பாமாலையாகிய திருப்பதிகத்தை ஓதிச் சிவகதி பெறுமின்.

திருப்பூவணம்

திருப்பூவணம்

திருப்பூவணம்,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பூவணநாதர்.
தேவியார் : மின்னாம்பிகையம்மை.

மாதமர் மேனிய னாகி வண்டொடு
போதமர் பொழிலணி பூவ ணத்துறை
வேதனை விரவலர் அரண மூன்றெய்த
நாதனை அடிதொழ நன்மை யாகுமே **#209**

உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக்கொண்டு, வண்டமர்கின்ற மலர்கள் உள்ள சோலையுடைய அழகிய திருப்பூவணம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற, துன்பம்தரும் பகையசுரர்களின் மூன்று கோட்டைகளையும் அம்பு எய்து அழித்த நாதனான சிவபெருமானின் திருவடிகளைத் தொழ எல்லா நலன்களும் உண்டாகும்.

திருப்பூவணம்

வானணி மதிபுல்கு சென்னி வண்டொடு
தேனணி பொழிற்றிருப் பூவ ணத்துறை
ஆனநல் லுருமறை அங்கம் ஓதிய
ஞானனை அடிதொழ நன்மை யாகுமே **#210**

வானில் அழகுறத் திகழும் சந்திரனைத் தொடுமளவு உயர்ந்தோங்கிய, வண்டு நுகரும் தேனையுடைய மலர்களுள்ள அழகிய சோலையையுடைய திருப்பூவணத்தில் வீற்றிருந்தருளுகின்ற, நலம் தரும் நான்கு வேதங்களையும், அவற்றின் ஆறு அங்கங்களையும் ஓதியருளிய ஞானவடிவினனான சிவபெருமானின் திருவடிகளைத் தொழ, எல்லா நலன்களும் உண்டாகும்.

திருப்பூவணம்

வெந்துயர் உறுபிணி வினைகள் தீர்வதோர்
புந்தியர் தொழுதெழு பூவ ணத்துறை
அந்திவெண் பிறையினோ டாறு சூடிய
நந்தியை அடிதொழ நன்மை யாகுமே **#211**

கொடுந்துன்பம் தரும் நோயும், அதற்குக் காரணமான வினைகளும்

சிவனருளாலேயே தீரும் என்பதை நிச்சயித்து, அவனைத் தொழுது போற்றுகின்றவர்கள் வசிக்கும் திருப்பூவணம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற, மாலைக்காலத்தில் உதிக்கும் வெண்பிறையோடு கங்கையும் சூடிய சிவபெருமானின் திருவடிகளைத் தொழ, எல்லா நலன் களும் உண்டாகும்.

திருப்பூவணம்

வாசநன் மலர்மலி மார்பில் வெண்பொடிப்
பூசனைப் பொழில்திகழ் பூவ ணத்துறை
ஈசனை மலர்புனைந் தேத்து வார்வினை
நாசனை யடிதொழ நன்மை யாகுமே **#212**

நறுமணம் கமழும் மலர்மாலைகளை அணிந்துள்ள மார்பில், திருவெண்ணீற்றினைப் பூசி, சோலைகளையுடைய திருப்பூவணம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமான், மலர்புனைந்து ஏத்தும் அன்பர்களின் வினையைப் போக்குவான். அப்பெருமானின் திருவடிகளைத் தொழ எல்லா நன்மைகளும் உண்டாகும்.

திருப்பூவணம்

குருந்தொடு மாதவி கோங்கு மல்லிகை
பொருந்திய பொழிற்றிருப் பூவ ணத்துறை
அருந்திறல் அவுணர்தம் அரண மூன்றெய்த
பெருந்தகை அடிதொழப் பீடை யில்லையே **#213**

குருந்து, மாதவி, கோங்கு, மல்லிகை மலர்ந்துள்ள சோலைகளையுடைய திருப்பூவணம் என்னும் திருத் தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற அரு வலிமையுடைய அசுரர்களின் மூன்று கோட்டைகளையும் அம்பு எய்து அழித்த பெருந் தகையான சிவபெருமானின் திருவடிகளைத் தொழ, துன்பம் யாவும் நீங்கும்.

திருப்பூவணம்

வெறிகமழ் புன்னைபொன் ஞாழல் விம்மிய
பொறியர வணிபொழிற் பூவ ணத்துறை
கிறிபடு முடையினன் கேடில் கொள்கையன்
நறுமல ரடிதொழ நன்மை யாகுமே **#214**

நறுமணம் கமழும் புன்னை, புலிநகக் கொன்றை முதலான மரங்கள் நிறைந்த அழகிய சோலையையுடைய திருப்பூவணம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற, கோவண ஆடை தரித்த, அழிதலில்லாத கொள்கைகளை உடைய சிவ பெருமானின்

நறுமணமிக்க மலர் போன்ற திருவடிகளைத் தொழ, எல்லா நலன்களும் உண்டாகும்.

திருப்பூவணம்

பறைமல்கு முழவொடு பாட லாடலன்
பொறைமல்கு பொழிலணி பூவ ணத்துறை
மறைமல்கு பாடலன் மாதொர் கூறினன்
அறைமல்கு கழல்தொழ அல்லல் இல்லையே **#215**

பறையின் ஒலியும், முழவின் ஓசையும் ஒலிக்கப் பாடி ஆடுபவன் இறைவன். அமைதி தவழும் சோலையையுடைய அழகிய திருப்பூவணம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுபவன். நால்வேதங்களையும் பாடுபவன். உமாதேவியைத் தன் திருமேனியின் ஒரு கூறாகக் கொண்டவன். அப்பெருமானின் ஒலிக்கின்ற கழலணிந்த திருவடிகளைத் தொழத் துன்பம் சிறிதும் இல்லை.

திருப்பூவணம்

வரைதனை யெடுத்தவல் லரக்கன் நீள்முடி
விரல்தனில் அடர்த்தவன் வெள்ளை நீற்றினன்
பொருபுனல் புடையணி பூவ ணந்தனைப்
பரவிய அடியவர்க் கில்லை பாவமே **#216**

கயிலைமலையைப் பெயர்த்தெடுத்த வலிமை வாய்ந்த அரக்கனான இராவணனின் நீண்ட முடிகளைத் தம் காற் பெருவிரலை ஊன்றி அடர்த்தவர் சிவபெருமான். தம் திருமேனி முழுவதும் திருவெண்ணீற்றினைப் பூசி, ஒலிக்கின்ற கங்கையைத் தம் சடைமுடியின் ஒரு பக்கத்தில் அணிந்து திருப்பூவணம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கின்ற அப்பெருமானைத் தொழுது போற்றும் அடியவர்களின் பாவம் நாசமாகும்.

திருப்பூவணம்

நீர்மல்கு மலருறை வானும் மாலுமாய்ச்
சீர்மல்கு திருந்தடி சேர கிற்கிலர்
போர்மல்கு மழுவினன் மேய பூவணம்
ஏர்மல்கு மலர்புனைந் தேத்தல் இன்பமே **#217**

நீரில் வளரும் தாமரைமலரில் வீற்றிருக்கின்ற பிரமனும், திருமாலும், தன்னைத் தொழுபவர்களை நன்னெறிப் படுத்தும் இறைவனின் சிறந்த திருவடிகளைச் சேர்தற்கு இயலாதவராயினர். போர்த் தன்மையுடைய மழுப்படையுடைய சிவ பெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருப்பூவணத்தை அழகிய மலர் கொண்டு போற்றுதல் இன்பம் தரும்.

திருப்பூவணம்

மண்டைகொண் டுழிதரு மதியில் தேரரும்
குண்டருங் குணம்அல பேசுங் கோலத்தர்
வண்டமர் வளர்பொழின் மல்கு பூவணம்
கண்டவ ரடிதொழு தேத்தல் கன்மமே **#218**

மண்டை என்னும் ஒருவகைப் பாத்திரத்தை ஏந்திப் பிச்சையெடுத்துத் திரிகின்ற புத்தர்களும், சமணர்களும், இறையுண்மையை உணராது கூறும் பயனற்ற பேச்சைக் கேளாது, வண்டுகள் மொய்க்கின்ற வளமுடைய சோலைகள் நிறைந்த திருப்பூவணம் என்னும் திருத்தலத்தைத் தரிசித்து அங்கு வீற்றிருந்தருளும் சிவபெருமானின் திருவடிகளைத் தொழுது போற்றுதல் நம் கடமையாகும்.

திருப்பூவணம்

புண்ணியர் தொழுதெழு பூவ ணத்துறை
அண்ணலை யடிதொழு தந்தண் காழியுள்
நண்ணிய அருமறை ஞானசம் பந்தன்
பண்ணிய தமிழ்சொலப் பறையும் பாவமே **#219**

புண்ணியர்கள் தொழுது போற்றுகின்ற திருப்பூவணம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற தலைவரான சிவபெருமானின் திருவடிகளைத் தொழுது போற்றி, அழகிய, குளிர்ச்சியான சீகாழியில் அவதரித்த அருமறைவல்ல ஞானசம்பந்தன் அருளிய இத்தமிழ்ப் பாடல்களை ஓதவல்லவர்களின் பாவம் யாவும் நீங்கும்.

திருக்கருக்குடி

திருக்கருக்குடி

திருக்கருக்குடி,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சற்குணலிங்கேசுவரர்.
தேவியார் : சர்வாலங்கிரதமின்னம்மை.

நனவிலும் கனவிலும் நாளும் தன்னொளி
நினைவிலும் எனக்குவந் தெய்து நின்மலன்
கனைகடல் வையகம் தொழுக ருக்குடி
அனலெரி யாடுமெம் அடிகள் காண்மினே **#220**

நான் விழித்திருக்கும் பொழுதும், கனவு காணும்பொழுதும், உள்ளொளியாக நெஞ்சில் நின்று நினைவிலும் எனக்குக் காட்சி தரும், இயல்பாகவே பாசங்களின் நீங்கியவனாகிய இறைவனாய், ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த இப்பூவுலகத்தோர் போற்றும் திருக்கருக்குடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற, நெருப்பைக் கையிலேந்தி ஆடுகின்ற எம் தலைவரான சிவபெருமானைத் தரிசித்துப் பயனடைவீர்களாக.

திருக்கருக்குடி

வேதியன் விடையுடை விமலன் ஒன்னலர்
மூதெயில் எரியெழ முனிந்த முக்கணன்
காதியல் குழையினன் கருக்கு டியமர்
ஆதியை அடிதொழ அல்ல லில்லையே **#221**

வேதத்தை அருளிச் செய்தவனும், வேதப் பொருளாக விளங்குபவனும், இயல்பாகவே பாசங்களின் நீங்கிய வனும், பகையசுரர்களின் மூன்று மதில்களும் எரிந்து சாம்பலாகுமாறு கோபித்த முக்கண்ணனுமான சிவபெருமான் காதில் குழை அணிந்தவனாய்த் திருக்கருக்குடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றான். எப்பொருட்கும் முதல்வனான அப்பெருமானின் திருவடிகளைத் தொழத் துன்பம் இல்லை.

திருக்கருக்குடி

மஞ்சுறு பொழில்வள மலிக ருக்குடி
நஞ்சுறு திருமிட றுடைய நாதனார்
அஞ்சுரும் பார்குழல் அரிவை அஞ்சவே
வெஞ்சுரந் தனில்விளை யாடல் என்கொலோ **#222**

மேகம் சூழும் சோலைகளையுடைய வளம் மிக்க திருக்கருக்குடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற நஞ்சுண்ட திருக்கழுத்தையுடைய தலைவரான சிவபெருமான், அழகிய வண்டுகள் மொய்க்கும் கூந்தலையுடைய உமாதேவி அஞ்சம்படி கொடிய சுடுகாட்டில் ஆடல் செய்வது என்கொல்?

திருக்கருக்குடி

ஊனுடைப் பிறவியை அறுக்க உன்னுவீர்
கானிடை யாடலான் பயில்க ருக்குடிக்
கோனுயர் கோயிலை வணங்கி வைகலும்
வானவர் தொழுகழல் வாழ்த்தி வாழ்மினே **#223**

வினைப்பயனை அனுபவிக்க உடம்பெடுத்த இப்பிறவியை ஒழிக்க நினைக்கும் மாந்தரீர்! சுடுகாட்டில் திருநடனம் செய்யும் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருக்கருக்குடி என்னும் திருத்தலத்திலுள்ள உயர்ந்த கோயிலை வணங்கியும், நாள்தோறும் வானவர்கள் தொழுகின்ற அப்பெருமானின் திருவடிகளை வாழ்த்தியும் வாழ்வீர்களாக!

திருக்கருக்குடி

சூடுவர் சடையிடைக் கங்கை நங்கையைக்
கூடுவர் உலகிடை ஐயங் கொண்டொலி
பாடுவர் இசைபறை கொட்ட நட்டிருள்
ஆடுவர் கருக்குடி அண்ணல் வண்ணமே **#224**

இறைவர் சடைமுடியில் கங்கையைச் சூடி உள்ளார். தம் திருமேனியில் ஒரு பாகமாக உமாதேவியை வைத்துள்ளார். இவ்வுலகில் பிச்சை ஏற்கும் பொழுது இசையோடு பாடுவார். பறைகொட்ட நள்ளிருளில் நடனம் ஆடுவார். இது திருக்கருக்குடியில் வீற்றிருந்தருளும் தலைவரான சிவபெருமானின் அருள் தன்மையாகும்.

திருக்கருக்குடி

இன்புடை யாரிசை வீணை பூணரா
என்புடை யாரெழின் மேனி மேலெரி
முன்புடை யார்முதல் ஏத்தும் அன்பருக்
கன்புடை யார்கருக் குடியெம் அண்ணலே **#225**

திருக்கருக்குடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் தலைவரான சிவபெருமான் வீணையை இசைத்துப் பாடுவதில் மகிழ்பவர். தம்முடைய அழகிய திருமேனியில் பாம்பையும்,எலும்பையும் ஆபரணமாக அணிந்துள்ளவர். எரிகின்ற நெருப்பைத் திருக்கரத்தில்

ஏந்தியுள்ளவர். யாவற்றுக்கும் மூலப் பொருளாகிய, முதற்பொருளாக விளங்குபவர். அன்பர்களிடத்து அன்புடையவர்.

திருக்கருக்குடி

காலமும் ஞாயிறுந் தீயும் ஆயவர்
கோலமும் முடியர வணிந்த கொள்கையர்
சீலமும் உடையவர் திருக்க ருக்குடிச்
சாலவும் இனிதவ ருடைய தன்மையே **#226**

சிவபெருமான் கால தத்துவமாகவும், அதனைக் கடந்தும் விளங்குபவர். ஞாயிறு முதலிய சுடராக ஒளிர்பவர். நெருப்பு முதலிய பஞ்சபூதங்களானவர். தம் சடைமுடியில் பாம்பணிந்தவர். சிறந்த புகழை உடையவர். திருக்கருக்குடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற அப்பெருமானின் தன்மை சாலவும் இனிதாகும்.

திருக்கருக்குடி

எறிகடல் புடைதழு விலங்கை மன்னனை
முறிபட வரையிடை யடர்த்த மூர்த்தியார்
கறைபடு பொழின்மதி தவழ்க ருக்குடி
அறிவொடு தொழுமவர் ஆள்வர் நன்மையே **#227**

அலைவீசுகின்ற கடலையுடைய இலங்கை மன்னனான இராவணனை நிலை கெடும்படி மலையிடையில் வைத்து அடர்த்த சிவமூர்த்தியாகிய இறைவர், மரங்களின் அடர்த்தியால் இருண்ட சோலைகளில் சந்திரன் தவழும் திருக்கருக்குடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுபவராய், தம்மை ஞானத்தால் தொழும் அடியவர்கட்கு நன்மையைத் தந்தருளி ஆட்சி செய்கின்றார்.

திருக்கருக்குடி

பூமனுந் திசைமுகன் றானும் பொற்பமர்
வாமனன் அறிகிலா வண்ண மோங்கெரி
ஆமென வுயர்ந்தவன் அணிக ருக்குடி
நாமன னினில்வர நினைதல் நன்மையே **#228**

தாமரைப் பூவில் வாழ்கின்ற பிரமனும், அழகிய வாமனாவதாரம் எடுத்த திருமாலும் அறிய முடியா வண்ணம், ஓங்கிய நெருப்பு மலையாய் உயர்ந்து நின்ற சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருக்கருக்குடி என்னும் திருத்தலத்தை நாம் மனத்தால் நினைந்து வழிபட நன்மையாகும்.

திருக்கருக்குடி

சாக்கியர் சமண்படு கையர் பொய்ம்மொழி
ஆக்கிய வுரைகொளேல் அருந்தி ருந்நமக்
காக்கிய அரனுறை அணிக ருக்குடிப்
பூக்கமழ் கோயிலே புடைபட் டுய்ம்மினே **#229**

புத்தரும், சமணர்களுமான வஞ்சகர் கூறும் பொய்ம்மொழிகளை உரையாகக் கொள்ள வேண்டா. பெறுதற்கரிய சைவசமயத்தில் நம்மைப் பிறக்குமாறு செய்த சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற அழகிய திருக்கருக்குடி என்னும் திருத்தலத்திலுள்ள பூமணம் கமழும் திருக்கோயிலைச் சார்ந்து உய்தி அடையுங்கள்.

திருக்கருக்குடி

கானலில் விரைமலர் விம்மு காழியான்
வானவன் கருக்குடி மைந்தன் றன்னொளி
ஆனமெய்ஞ் ஞானசம் பந்தன் சொல்லிய
ஊனமில் மொழிவலார்க் குயரு மின்பமே **#230**

கடற்கரைச் சோலைகளில் நறுமணம் கமழும் மலர்கள் நிறைந்த சீகாழியில் அவதரித்த, வானவர் தொழுதெழு திருக்கருக்குடி என்னும் திருத்தலத்திலுள்ள சிவனொளியே தானான மெய்ஞ்ஞான சம்பந்தன் அருளிய குற்றமில்லாத இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்கட்குப் பேரின்பம் மிகும்.

திருப்பஞ்சாக்கரப்பதிகம்

திருப்பஞ்சாக்கரப்பதிகம்

திருப்பஞ்சாக்கரப்பதிகம்,
பண் - காந்தாரபஞ்சமம்

துஞ்சலும் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே **#231** ★★★★★

தூங்கும்பொழுதும், விழித்திருக்கும் பொழுதும், மனம் கசிந்து உருக நாள்தோறும் திருஐந்தெழுத்தை நினைத்துப் போற்றுங்கள். பல வழிகளில் திரிந்து செல்லும் தன்மையுடைய மனத்தை அவ்வாறு செல்லவிடாமல் தடுத்து ஒருமுகப்படுத்தி இறைவனையே நினைத்து அவன் திருவடிகளை வாழ்த்திப் போற்றிய மார்க்கண்டேயரின் உயிரை அவருக்கு விதிக்கப்பட்ட வாழ்நாள் இறுதியில் கவர வந்த கூற்றுவனை உதைத்து அழித்தன திருவைந்தெழுத்தே.

திருப்பஞ்சாக்கரப்பதிகம்

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே **#232**

மந்திரங்களாகவும், நான்கு வேதங்களாகவும் ஆகித் தேவர்களுடைய சிந்தையினுள்ளும் நின்று அவர்களை ஆட்கொண்டு நன்னெறி பயப்பது திருவைந்தெழுத்தே ஆகும். செந்நிற அழலோம்பிச் செம்மை நெறியில் நிற்கும் வேதியர்க்கும் காலை, நண்பகல், மாலை என்ற மூன்று சந்தியா காலங்களிலும் செபிக்க வேண்டிய மந்திரம் திருஐந்தெழுத்தேயாகும்.

திருப்பஞ்சாக்கரப்பதிகம்

ஊனில் உயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே **#233**

உடம்பில் பிராணாயாமத்தால் உயிர்ப்புச் சக்தியை ஒடுக்கி, ஞானவிளக்கம் பெறச் செய்து, அறிவைப் பெறும் வாயில்களால் நல்ல மெய்யறிவை நாடி இறைவனைப் போற்றுவார்கட்கு அறியாமையால் வரும் துன்பங்களைக் கெடுப்பன திருவைந்தெழுத்தேயாகும்.

திருப்பஞ்சாக்கரப்பதிகம்

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்
தல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே **#234**

புண்ணியர், பாவிகள் என்ற பாகுபாடு இன்றி விரும்பிச் செபிப்பவர்கள் யாவரேயாயினும் அவர்களுடைய மலங்களை நீக்கிச் சிவமுத்தி காட்டும் ஆற்றலுடையன திருவைந்தெழுத்தாகும். எமதூதர்கள் வந்து உயிரைக் கொண்டு செல்லும் காலத்தும், மரணத்தறுவாயில் ஏற்படக் கூடிய துன்பத்தைப் போக்குவனவும் திருவைந்தெழுத்தேயாகும்.

திருப்பஞ்சாக்கரப்பதிகம்

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சுந் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே **#235**

வலிய மன்மதனின் அம்பானது தேன்துளிர்க்கும் தாமரை, அசோகு, மா, முல்லை, கருங்குவளை என்ற ஐந்து மலர்கள் ஆகும். இவ்வுலகிலுள்ள பூதங்கள் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐந்தாகும். சோலைகள் அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என ஐந்தாகும். பாம்பின் படம் ஐந்து ஆகும். செபிப்போருடைய கைவிரல்கள் ஐந்தாகும். இவ்வாறு ஐவகையாகக் காணப்படும் யாவற்றுக்கும் ஒப்ப, மந்திரமும் திருவைந்தெழுத்தேயாகும்.

திருப்பஞ்சாக்கரப்பதிகம்

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே **#236**

தும்மல், இருமல் தொடர்ந்து வந்த பொழுதும், கொடிய நரகத் துன்பத்தை அனுபவிக்க நேரும் பொழுதும், முற்பிறப்புக்களில் செய்த வினை இப்பிறவியில் வந்து வருத்தும் பொழுதும், இப்பிறவியில் நாள்தோறும் ஓதிவந்ததன் பயனால் மறுபிறவியிலும் வந்து துணையாவது திருவைந்தெழுத்தேயாகும்.

திருப்பஞ்சாக்கரப்பதிகம்

வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்

பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடிஉ கப்பன அஞ்செ ழுத்துமே **#237**

இறப்பு, பிறப்பு இவற்றை அறுத்து இத்திருமந்திரத்தைப் பாராட்டிச் செபிப்பவர்களின் துன்பங்களை நீக்குவன. தினந்தோறும் செல்வங்கள் யாவும் கொடுப்பன. நிலை பெற்ற நடனத்தையாடும் சிவபெருமான் மகிழ்வன திருவைந்தெழுத்தேயாகும்.

திருப்பஞ்சாக்கரப்பதிகம்

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டை யிராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே **#238**

வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடைய உமா தேவியால் செபிக்கப்படும் சிறப்புடையன திருவைந்தெழுத்தாகும். முற்காலத்தில் இராவணன் திருவைந்தெழுத்து ஓதி உய்ந்தான். அடியார்கள் தங்கள் கடமையாகக் கொண்டு, செபித்த அளவில் அவர்களுக்கு அண்டங்களையெல்லாம் அரசாளக் கொடுப்பன இவ்வைந்தெழுத்தாகும்.

திருப்பஞ்சாக்கரப்பதிகம்

கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வணம் ஆவன அஞ்செ ழுத்துமே **#239**

திருமாலும், பிரமனும் காணவொண்ணாத சிறப்புடைய திருவடிகளின் பெருமையை நாள்தோறும் பலமுறை பேசிப் போற்றும் பக்தர்கட்கு ஆர்வமாக விளங்குவன திருவைந்தெழுத்தாகும்.

திருப்பஞ்சாக்கரப்பதிகம்

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திரம் ஆவன அஞ்செ ழுத்துமே **#240**

புத்தர்களும், சமணர்களும் கூறும் பொய் வார்த்தைகளை மனத்திற் கொள்ளாத தெளந்த சித்தத்தவர்களால் உறுதியுடன் ஓதப்படுவன திருவைந்தெழுத்தாகும். சகல சக்திகளுமுடைய திருநீற்றை அணிபவர்களுடன் போர்புரிய வரும் பகைவர்களை எதிர்த்து

அம்புபோல் பாய்ந்து அழிக்கவல்லன திருவைந்தெழுத்தேயாகும்.

திருப்பஞ்சாக்கரப்பதிகம்

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்
துற்றன வல்லவர் உம்ப ராவரே **#241**

நன்னெறி கூட்டுவிக்கும் தமிழ் பரப்பும், ஞானசம்பந்தன், நான்கு வேதங்களையும் கற்று வல்லவனாய்ச் சீகாழி மக்கள் தலைவனாய் மனத்தால் தியானித்துப் பாடிய, கேடுகள் வாராமல் தடுக்கும் திருவைந்தெழுத்தின் பெருமைகளை எடுத்துரைக்கும் இம்மாலையின் பத்துப் பாடல்களையும் ஓதவல்லவர்கள் தேவர்களாவார்கள்.

திருவிற்கோலம்

திருவிற்கோலம்

திருவிற்கோலம்,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. இந்தத்தலம் கூவமென வழங்கப்படுகின்றது. ,
சுவாமிபெயர் : புராந்தகேசுவரர்.
தேவியார் : புராந்தரியம்மை.

உருவினார் உமையொடும் ஒன்றி நின்றதோர்
திருவினான் வளர்சடைத் திங்கள் கங்கையான்
வெருவிவா னவர்தொழ வெகுண்டு நோக்கிய
செருவினான் உறைவிடம் திருவிற் கோலமே **#242**

அழகே உருவான உமாதேவியோடு ஒன்றிநின்ற, செல்வரான சிவபெருமான் தம் சடைமுடியில் திங்களும், கங்கையும் சூடியவர். வானவர்கள் அஞ்சித் தொழுது போற்றுமாறு, வெகுண்டெழுந்து போர்க்கோலம் பூண்டு வில்லேந்தி, அப்பெருமான் வீற்றிருந்தருளுகிற இடம் திருவிற்கோலம் ஆகும்.

திருவிற்கோலம்

சிற்றிடை யுமையொரு பங்க னங்கையில்
உற்றதோர் எரியினன் ஒரு சரத்தினால்
வெற்றிகொள் அவுணர்கள் புரங்கள் வெந்தறச்
செற்றவன் உறைவிடம் திருவிற் கோலமே **#243**

சிறிய இடையையுடைய உமாதேவியைத் தம் திருமேனியின் ஒரு பாகமாகக் கொண்டு, அழகிய கையில் நெருப்பு ஏந்தி விளங்கும் சிவபெருமான், ஓர் அம்பால் அசுரர்களின் மூன்று புரங்களும் வெந்தழியுமாறு போர்செய்து வெற்றி கொண்டவர். அப்பெருமான் வீற்றிருந்தருளுகின்ற இடம் திருவிற்கோலம் என்னும் கோயிலாகும்.

திருவிற்கோலம்

ஐயன்நல் லதிசயன் அயன்விண் ணோர்தொழும்
மையணி கண்டனார் வண்ண வண்ணம்வான்
பையர வல்குலாள் பாகம் ஆகவும்
செய்யவன் உறைவிடம் திருவிற் கோலமே **#244**

இறைவர் யாவற்றுக்கும் தலைவர். பல பல வேடம் கொள்ளும் அதிசயர். பிரமமும், மற்றுமுள்ள விண்ணோர்களும் தொழுகின்ற மை போன்ற

இருண்ட கண்டத்தர். நல்ல வண்ணமுடைய, பாம்பின் படம் போன்ற அல்குலையுடைய உமாதேவியைத் தம் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு செம்மேனியராய் அவர் வீற்றிருந்தருளும் இடம் திருவிற்கோலம் ஆகும்.

திருவிற்கோலம்

விதைத்தவன் முனிவருக் கறமுன் காலனை
உதைத்தவன் உயிரிழந் துருண்டு வீழ்தரப்
புதைத்தவன் நெடுநகர்ப் புரங்கள் மூன்றையும்
சிதைத்தவன் உறைவிடம் திருவிற் கோலமே **#245**

இறைவன் சனகாதி முனிவர்கட்கு அறக்கருத்துக்களை நன்கு பதியும்படி உபதேசித்தவன். மார்க்கண்டேயனின் உயிரைக் கவரவந்த காலனைக் காலால் உதைத்து உருண்டு விழும்படி செய்தவன். திரிபுரங்கள் மூன்றையும் எரித்துச் சாம்பலாகுமாறு சிதைத்தவன். அப்பெருமான் வீற்றிருந்தருளுகின்ற இடம் திருவிற்கோலம் என்பதாம்.

திருவிற்கோலம்

முந்தினான் மூவருள் முதல்வன் ஆயினான்
கொந்துலா மலர்ப்பொழிற் கூக மேவினான்
அந்திவான் பிறையினான் அடியர் மேல்வினை
சிந்துவான் உறைவிடம் திருவிற் கோலமே **#246**

இறைவன் எல்லாப் பொருள்கட்கும் முற்பட்டவன். மும்மூர்த்திகளுக்குள் தலைவனானவன். கொத்தாகப் பூக்கும் மலர்கள் நிறைந்த சோலைகளையுடைய கூகம் என்னும் ஊரில் வீற்றிருப்பவன். மாலையில் வானில் தோன்றும் பிறைச் சந்திரனைச் சூடியவன். அடியவர்களைப் பற்றியுள்ள வினைகள் நீங்கும்படி செய்பவன். அப்பெருமான் வீற்றிருந்தருளுமிடம் திருவிற்கோலம் ஆகும்.

திருவிற்கோலம்

தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்
வகுத்தவன் வளர்பொழிற் கூக மேவினான்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவன் உறைவிடம் திருவிற் கோலமே **#247**

இறைவன் அரிய நான்கு வேதங்களையும் அவற்றின் ஆறங்கங்களையும் தொகுத்தவன். சிவாகமங்களை அருளிச் செய்தவன். வளமையான சோலைகளையுடைய கூகம் என்னும் ஊரில் வீற்றிருக்கும் அவன், தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். செருக்குற்று மிகுந்த கொடுமைகளைச் செய்த அசுரர்களின் முப்புரங்களை வெந்தழியும்படி

செய்தவன். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவிற்கோலம் ஆகும்.

திருவிற்கோலம்

விரித்தவன் அருமறை விரிச டைவெள்ளம்
தரித்தவன் தரியலர் புரங்கள் ஆசற
எரித்தவன் இலங்கையர் கோன்இ டர்படச்
சிரித்தவன் உறைவிடம் திருவிற் கோலமே **#248**

அரும்பொருளுரைக்கும் வேதங்களை இறைவன் விரித்து அருளியவன். விரிந்து சென்ற கங்கையைச் சடைமுடியில் தாங்கியவன். பகையசுரர்களின் முப்புரங்கள் அற்றொழியும்படி எரித்தவன். இலங்கை மன்னனான இராவணன் கயிலையின் கீழ்த்துன்புறும்படி செய்து, பின் அருள் புரிந்த விளையாடல் செய்தவன். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவிற்கோலம் ஆகும்.

திருவிற்கோலம்

திரிதரு புரம்எரி செய்த சேவகன்
வரியர வொடுமதி சடையில் வைத்தவன் அரியொடு பிரமனதாற்ற லால் உருத்
தெரியலன் உறைவிடம் திருவிற் கோலமே **#249**

இறைவன் வானத்திலே பறந்து திரிந்து தேவர்கட்குத் தீங்குகள் செய்த அசுரர்களின் முப்புரங்களை எரித்தவன். வரிகளையுடைய பாம்பையும், சந்திரனையும் சடையிலே அணிந்தவன். திருமாலும், பிரமனும் தமது ஆற்றலைப் பெரிதாகக் கொண்டு முனைந்ததால் காண்பதற்கு அரியவனானவன். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது திருவிற்கோலம் ஆகும்.

திருவிற்கோலம்

சீர்மையில் சமணொடு சீவ ரக்கையர்
நீர்மைஇல் உரைகள்கொள் ளாத நேசர்க்குப்
பார்மலி பெருஞ்செல்வம் பரிந்து நல்கிடும்
சீர்மையி னான்இடம் திருவிற் கோலமே **#250**

இறையுண்மையை உணரும் தன்மையில்லாத சமணர்களும், புத்தர்களும் கூறும் உரைகளைக் கொள்ளாது, இறை நம்பிக்கையுடன் அவன்மீது பக்தி செலுத்துபவர்கட்கு உலகில் பெருஞ்செல்வத்தைப் பரிவுடன் இறைவன் தருவான். அத்தகைய மேன்மையுடைய பெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவிற்கோலம் ஆகும்.

திருவிற்கோலம்

கோடல்வெண் பிறையனைக் கூக மேவிய
சேடன செழுமதில் திருவிற் கோலத்தை
நாடவல் லதமிழ் ஞானசம் பந்தன
பாடல்வல் லார்களுக் கில்லை பாவமே **#251**

வளைந்த வெண்ணிறப் பிறைச்சந்திரனைச் சடையில் சூடி, கூகம் என்னும் ஊரில், அழகிய, வளமையான மதில்களையுடைய திருவிற்கோலம் என்னும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளும் சிவபெருமானை நினைத்துத் தமிழ் ஞானசம்பந்தன் பாடல்களைப் பாட வல்லவர்கட்குப் பாவம் இல்லை.

திருக்கழுமலம்

சீர்காழி

திருக்கழுமலம்,
பண் - கொல்லி, கழுமலம் என்பது சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலை
கண்ணினல் லஃதுறங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே **#252** ★★★★★

உயிர்கள் இப்பூவுலகில் வளமோடு இன்பவாழ்வு வாழலாம். தினந்தோறும் இறைவனை நினைத்து வழிபட யாதொரு குறையுமிலாத முக்தியின்பமும் பெறலாம். இத்தகைய பேற்றினை அளிக்கும் பொருட்டே கண்ணுக்கினிய நல்ல வளத்தையுடைய கழுமலம் என்னும் ஊரில் பெண்ணின் நல்லாளாகிய உமாதேவியோடு பெருந்தகையாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான்.

சீர்காழி

போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தான்எனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே **#253**

பொற்கிண்ணத்தில் ஞானம் பெருகும் அடிசிலை இறைவனின் ஆணைப்படி உமாதேவியார் திருஞானசம்பந்தப் பெருமானுக்கு ஊட்ட, பால் அறாவாயராக விளங்கிய அவரைப் பார்த்து "யார் தந்த அடிசிலை உண்டனை?" என்று தந்தையார் கோபித்து வினவ இறைவர் தம் திருக்காட்சியினை நல்கி என்னை ஆட்கொண்டார். அத்தகைய பெருமையுடைய சிவபெருமான் காதிற் குழையோடும் பேதையாகிய உமாதேவியோடும் கழுமலம் என்னும் வளநகரில் வீற்றிருந்தருளுகின்றார்.

சீர்காழி

தொண்டனை செய்தொழில் துயரறுத் துய்யலாம்
வண்டணை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண்டுணை நெற்றியான் கழுமல வளநகர்ப்

பெண்டுணை யாகவோர் பெருந்தகை யிருந்ததே #254
தொன்றுதொட்டு உயிர்களைப் பற்றி வருகின்ற வினையால் உண்டாகும் துன்பத்தை நீக்கி உய்விக்கும் பொருட்டு, வண்டுகள் மொய்க்கின்ற தேனையுடைய கொன்றை மலர்களைச் சடைமுடியில் அணிந்தும், நெற்றியில் ஒரு கண் கொண்டும், கழுமலம் என்னும் வளநகரில் உமாதேவியை உடனாகக் கொண்டும் பெருந்தகையாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான்.

சீர்காழி

அயர்வுளோம் என்றுநீ அசைவொழி நெஞ்சமே
நியர்வளை முன்கையாள் நேரிழை யவளொடும்
கயல்வயல் குதிகொளுங் கழுமல வளநகர்ப்
பெயர்பல துதிசெயப் பெருந்தகை யிருந்ததே #255
நெஞ்சமே! வினையால் இத்துன்பம் வந்தது என்று எண்ணித் தளர்ச்சியுற்றுச் சோம்பியிருத்தலை ஒழிப்பாயாக. (இறைவனை வழிபட்டு இத்துன்பத்திலிருந்து விடுபடவேண்டும் என்பது குறிப்பு). ஒளிமிக்க வளையல்கள் முன்கைகளில் விளங்க, சிறந்த ஆபரணங்களை அணிந்த உமாதேவியோடு,

சீர்காழி

அடைவிலோம் என்றுநீ அயர்வொழி நெஞ்சமே
விடையமர் கொடியினான் விண்ணவர் தொழுதெழும்
கடையுயர் மாடமார் கழுமல வளநகர்ப்
பெடைநடை யவளொடும் பெருந்தகை யிருந்ததே #256
ஊழிக்காலத்தில் உயர்கின்ற கழுமல வளநகர் எனினும் ஆம்.

சீர்காழி

மற்றொரு பற்றிலை நெஞ்சமே மறைபல
கற்றநல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடைப் பேரல்குல் திருந்திழை யவளொடும்
பெற்றெனை யாளுடைப் பெருந்தகை யிருந்ததே #257
நெஞ்சமே! இறைவனைத் தவிர மற்றோர் பற்று எதுவுமில்லை. நான்கு வேதங்களையும் நன்கு கற்று, கற்றதன்படி ஒழுகுகின்ற அந்தணர்கள் வாழ்கின்ற திருக்கழுமலம் என்னும் வளநகரில் சிற்றிடையும், பெரிய அல்குலும் உடைய, அழகிய ஆபரணங்கள் அணிந்த உமாதேவியோடு, என்னை ஆட்கொண்ட பெருந்தகையாராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.

சீர்காழி

குறைவளை வதுமொழி குறைவொழி நெஞ்சமே
நிறைவளை முன்கையாள் நேரிழை யவளொடும்
கறைவளர் பொழிலணி கழுமல வளநகர்ப்
பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை யிருந்ததே **#258**

நெஞ்சமே! மனக்குறை கொண்டு மொழியும் சொற்களை விடுவாயாக. நிறைந்த வளையல்களை முன்கையில் அணிந்து, சிறந்த ஆபரணங்களை அணிந்த உமாதேவியோடு, இருண்ட சோலைகளையுடைய அழகிய திருக்கழுமலம் என்னும் வளநகரில், பிறைச்சந்திரனைச் சடைமுடியில் சூடிப் பெருந்தகையாராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.

சீர்காழி

அரக்கனார் அருவரை யெடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால் நீடியாழ் பாடவே
கருக்குவா ளருள்செய்தான் கழுமல வளநகர்ப்
பெருக்குநீ ரவளொடும் பெருந்தகை யிருந்ததே **#259**

பெருமையுடைய கயிலைமலையை எடுத்த அரக்கனான இராவணன் அலறும்படி தம் காற்பெருவிரலை ஊன்றி இறைவர் அம்மலையின்கீழ் அவனை நெருக்கினார். பின் அவன்தன் தவறுணர்ந்து நீண்ட யாழை எடுத்து இன்னிசையோடு பாட, கூர்மையான வாளை அருளினார். திருக்கழுமலம் என்னும் வள நகரில் உயிர்கட்கு மிக்க இன்னருள் செய்யும் உமாதேவியோடு பெருந்தகையாராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.

சீர்காழி

நெடியவன் பிரமனும் நினைப்பரி தாய்அவர்
அடியொடு முடியறி யாஅழல் உருவினன்
கடிகமழ் பொழில்அணி கழுமல வளநகர்ப்
பிடிநடை யவளொடும் பெருந்தகை யிருந்ததே **#260**

நினைந்துருகும் தன்மையில்லாத திருமாலும், பிரமனும் அடிமுடி அறியாவண்ணம் சிவபெருமான் அழலுருவாய் ஓங்கி நின்றனன். நறுமணம் கமழும் சோலைகளை உடைய திருக்கழுமலம் என்னும் வளநகரில் பெண்யானையின் நடைபோன்று விளங்கும் நடையை உடைய உமாதேவியோடு பெருந்தகையாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான்.

சீர்காழி

தாருறு தட்டுடைச் சமணர்சாக் கியர்கள்தம்
ஆருறு சொற்களைந் தடியிணை அடைந்துய்ம்மின்
காருறு பொழில்வளர் கழுமல வளநகர்ப்
பேரறத் தாளொடும் பெருந்தகை யிருந்ததே **#261**
மாலை போன்று, பாயை விரும்பி ஆடையாக அணிந்துள்ள சமணர்களும், புத்தர்களும், இறையுண்மையை எடுத்துரைக்காது, தமக்குப் பொருந்தியவாறு கூறுதலால், அவற்றை விடுத்து, இறைவனின் திருவடிகளை வழிபட்டு உய்வீர்களாக. பசுமைவாய்ந்த அழகிய சோலைகள் வளர்ந்துள்ள திருக்கழுமலம் என்னும் வளநகரில் பேரறத்தாளாகிய உமாதேவியோடு பெருந்தகையாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான்.

சீர்காழி

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோ டிருந்தஎம் பிரான்றனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன செந்தமிழ்
விரும்புவா ரவர்கள்போய் விண்ணுல காள்வரே **#262**
மாலை போன்று, பாயை விரும்பி ஆடையாக அணிந்துள்ள சமணர்களும், புத்தர்களும், இறையுண்மையை எடுத்துரைக்காது, தமக்குப் பொருந்தியவாறு கூறுதலால், அவற்றை விடுத்து, இறைவனின் திருவடிகளை வழிபட்டு உய்வீர்களாக. பசுமைவாய்ந்த அழகிய சோலைகள் வளர்ந்துள்ள திருக்கழுமலம் என்னும் வளநகரில் பேரறத்தாளாகிய உமாதேவியோடு பெருந்தகையாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான்.

திருந்துதேவன்குடி

திருந்துதேவன்குடி

திருந்துதேவன்குடி,
பண் - கொல்லி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கர்க்கடகேசுவரர்.
தேவியார் : அருமருந்துநாயகியம்மை.

மருந்துவேண் டில்இவை மந்திரங் கள்இவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்இவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே **#263** ★★★★★

திருந்துதேவன்குடியில் வீற்றிருக்கும், தேவர்கட்கெல்லாம் தேவனாக விளங்குபவனும், அருந்தவத்தோர்களால் தொழப்படுபவனுமான சிவபெருமானின் திருவேடங்கள் (திருநீறு, உருத்திராக்கம், சடாமுடி) மருந்து வேண்டுபவர்க்கு மருந்தாகவும், மந்திரங்கள் விரும்புவார்கட்கு மந்திரமாகவும், சிவபுண்ணியச் சரிதை கேட்க விரும்புவார்கட்கு அப்புண்ணியப் பயனாகவும் அமையும்.

திருந்துதேவன்குடி

வீதிபோக் காவன வினையைவீட் டுவ்வன
ஓதியோர்க் கப்படாப் பொருளையோர் விப்பன
தீதில்தே வன்குடித் தேவர்தே வெய்திய
ஆதிஅந் தம்மிலா அடிகள்வே டங்களே **#264**

தேவர்கட்கெல்லாம் தேவனாக, தீமையில்லாத திருந்து தேவன்குடியில் வீற்றிருக்கும் ஆதியந்தமில்லாச் சிவபெருமானின் சிவவேடங்கள் கோயிலுக்குச் செல்லும்போது அணியப்பட்டு அழகு தருவன. தீவினைகளைப் போக்குவன. கற்று ஆராய்ந்தறிய முடியாத ஞானநூல்களின் நுண்பொருள்களைத் தெளிவாக உணரும்படி செய்வன.

திருந்துதேவன்குடி

மானம்ஆக் குவ்வன மாசுநீக் குவ்வன
வானையுள் கச்செலும் வழிகள் காட்டுவ்வன
தேனும்வண் டும்மிசை பாடுந்தே வன்குடி
ஆனஞ்சா டும்முடி அடிகள்வே டங்களே **#265**

தேன் மணமும், வண்டுகள் இன்னிசையும் விளங்கும் திருந்துதேவன் குடியில் வீற்றிருக்கும், பசுவிலிருந்து பெறப்படும் பஞ்சகவ்வியங்களால்

திருமுழுக்காட்டப்படும் சிவபெருமானின் சிவவேடங்கள், மன்னுயிர்களின் பெருமையை மேம்படச் செய்வன. வினைகட்குக் காரணமான அஞ்ஞானமான மாசினை நீக்குவன. முக்திக்குரிய வழிகளைக் காட்டுவன.

<u>திருந்துதேவன்குடி</u>

செவிகளார் விப்பன சிந்தையுட் சேர்வன
கவிகள்பா டுவ்வன கண்குளிர் விப்பன
புவிகள்பொங் கப்புனல் பாயுந்தே வன்குடி
அவிகளுய்க் கப்படும் அடிகள்வே டங்களே **#266**

இப்பூமியைச் செழிக்கச் செய்யும் நீர்வளமுடைய திருந்துதேவன்குடியில் வீற்றிருந்து, வேள்வியின் அவிர்ப் பாகத்தை ஏற்று உயிர்களை உய்யச் செய்யும் சிவபெருமானின் திரு வேடங்களின் சிறப்புக்கள் கேட்கச் செவிகட்கு இன்பம் தருவன. நினைக்கச் சிந்தையில் சீரிய கருத்துக்களைத் தோற்றுவிப்பன. கவிபாடும் ஆற்றலைத் தருவன. சிவவேடக்காட்சிகள் கண்களைக் குளிர்விப்பன.

<u>திருந்துதேவன்குடி</u>

விண்ணுலா வும்நெறி வீடுகாட் டும்நெறி
மண்ணுலா வும்நெறி மயக்கந்தீர்க் கும்நெறி
தெண்ணிலா வெண்மதி தீண்டுதே வன்குடி
அண்ணலா னேறுடை அடிகள்வே டங்களே **#267**

ஒளிரும் சந்திர மண்டலத்தைத் தொடும் திருந்துதேவன்குடியில் இடப வாகனத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானின் திருவேடம், இப்பூவுலகில் வாழும் நன்னெறியைக் காட்டி, தத்துவங்களே தான் என மயங்குவதைத் தீர்க்கும். சிவலோகம் செல்லும் நெறிகாட்டும். முக்தி நெறி காட்டும்.

<u>திருந்துதேவன்குடி</u>

பங்கமென் னப்படர் பழிகளென் னப்படா
புங்கமென் னப்படர் புகழ்களென் னப்படும்
திங்கள்தோ யும்பொழில் தீண்டுதே வன்குடி
அங்கம்ஆ றும்சொன்ன அடிகள்வே டங்களே **#268**

சந்திரனைத் தொடுமளவு ஓங்கி வளர்ந்துள்ள, நந்தனவனச் சோலையையுடைய திருந்துதேவன்குடியில் வேதத்தின் ஆறு அங்கங்களையும் விரித்துச் சொன்ன சிவபெருமானின் திருவேடங்களை நினைப்பூட்டும் வகையில் சிவவேடம் கொள்பவர்களை முன்னர்ப் பழிபாவங்கட்கு ஆளாயினோர் என்று எள்ளற்க. அவர்கள் உயர்வு வாயினால் சொல்ல முடியாத அளவு புகழைத் தருவதாகக் கருதுக.

திருந்துதேவன்குடி

கரைதல்ஒன் றும்மிலை கருதவல் லார்தமக்
குரையில்ஊ னம்மிலை உலகினின் மன்னுவர்
திரைகள்பொங் கப்புனல் பாயுந்தே வன்குடி
அரையில்வெண் கோவணத் தடிகள்வே டங்களே **#269**

அலைகள் வீசுகின்ற ஆறுபாயும் திருந்து தேவன்குடியில் இடையில் வெண்ணிறக் கோவணத்தை அணிந்துள்ள சிவபெருமானின் திருவேடங்கள் முழுதும் குணமேயாகும். குற்றம் என்று சொல்வதற்கு ஒன்றும் இல்லை. அவ்வேடங்களை நினைத்து அவற்றின் பெருமையைச் சொல்பவர்களின் குறைகள் நீங்கும். அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வர்.

திருந்துதேவன்குடி

உலகமுட் குந்திறல் உடையரக் கன்வலி
விலகுபூ தக்கணம் வெருட்டும்வே டத்தின
திலகமா ரும்பொழில் சூழ்ந்ததே வன்குடி
அலர்தயங் கும்முடி அடிகள்வே டங்களே **#270**

சிறந்த நந்தவனச்சோலை சூழ்ந்த திருந்துதேவன் குடியில் மலர் அணிந்த முடியுடைய சிவபெருமானின் திருவேடம், உலகத்தைத் தனக்குக் கீழ் அடக்கும் ஆற்றலுடைய இராவணனது வலியும் பின்வாங்கத்தக்க வலியையுடைய பூதகணங்கள் சூழ விளங்குவது. எனவே அவ்வேடம் அஞ்சத்தக்க பிற பொருள்கள் அடியார்களை வந்தடையாதபடி வெருட்டவல்லது.

திருந்துதேவன்குடி

துளக்கம்இல் லாதன தூயதோற் றத்தன
விளக்கம்ஆக் குவ்வன வெறிவண்டா ரும்பொழில்
திளைக்குந்தே வன்குடித் திசைமுக னோடுமால்
அளக்கஒண் ணாவண்ணத் தடிகள்வே டங்களே **#271**

வண்டுகள் மொய்க்கின்ற மலர்களையுடைய நறுமணம் கமழும் நந்தவனச் சோலை விளங்கும் திருந்துதேவன் குடியில், பிரமனும் திருமாலும் காணவொண்ணாச் சிவபெருமானின் திருவேடங்கள் மன்னுயிர்களை நிலைகலங்காமல் காக்கவல்லன. கண்டவர் மனத்தைத் தூய்மைசெய்யும் தோற்றத்தை உடையன. அஞ்ஞானத்தை நீக்கி ஞானவிளக்கம் தருவன.

திருந்துதேவன்குடி

செருமரு தண்டுவர்த் தேரம ணாதர்கள்
உருமரு வப்படாத் தொழும்பர்தம் உரைகொளேல்
திருமரு வும்பொய்கை சூழ்ந்ததே வன்குடி
அருமருந் தாவன அடிகள்வே டங்களே **#272**

நெருங்கிய மருதமர இலையின் குளிர்ந்த துவர்தோய்ந்த ஆடையணிந்த புத்தர்களும், சமணர்களும் இறைவனை உணரும் அறிவற்றவர்கள். அருகில் நெருங்க முடியாத தோற்றமுடைய அவர்களின் உரைகளை ஏற்க வேண்டா. இலக்குமி வீற்றிருக்கும் தாமரை மலர்ந்துள்ள பொய்கை சூழ்ந்த திருந்துதேவன் குடியில் வீற்றிருக்கும் சிவபெருமானின் திருவேடம், உயிர்களின் பிறவிப்பிணிக்கு அருமருந்தாகி இன்பம் பயக்கும்.

திருந்துதேவன்குடி

சேடர்தே வன்குடித் தேவர்தே வன்றனை
மாடம்ஓங் கும்பொழின் மல்குதண் காழியான்
நாடவல் லதமிழ் ஞானசம் பந்தன
பாடல்பத் தும்வல்லார்க் கில்லையாம் பாவமே **#273**

தேவர்கள் தொழும் திருந்துதேவன்குடியில் வீற்றிருந்தருளுகின்ற தேவர்கட்கெல்லாம் தேவனான சிவபெருமானைப் பற்றி, ஓங்கிய மாடமாளிகைகளும், சோலைகளும் நிறைந்த, குளிர்ச்சிபொருந்திய சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தன் விரும்பும் இன்தமிழில் அருளிய பத்துப் பாடல்களையும் ஓதவல்லவர்கட்குப் பாவம் இல்லை.

திருக்கானப்பேர்

திருக்கானப்பேர்

திருக்கானப்பேர்,
பண் - கொல்லி,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது.
இத்தலம் காளையார் கோவிலென்று வழங்கப்படுகின்றது. ,
சுவாமிபெயர் : காளையீசுவரர்.
தேவியார் : மகமாயியம்மை.

பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்
கடியுலாம் பூம்பொழிற் கானப்பேர் அண்ணல்நின்
அடியலால் அடைசரண் உடையரோ வடியரே **#274**

பெண் யானைகள் பின்தொடர, பெரிய தும்பிக்கையுடைய ஆண்யானையானது, விடியற்காலையிலேயே குளத்தில் மூழ்கி, மலர்களை ஏந்தி விதிமுறைப்படி வழிபடுகின்ற நறுமணம் கமழும் பூஞ்சோலையுடைய திருக்கானப்பேர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமானின் திருவடிகளை யன்றி, அடியவர்கள் சரணம் புகுவதற்கு யாது உள்ளது?

திருக்கானப்பேர்

நுண்ணிடைப் பேரல்குல் நூபுர மெல்லடிப்
பெண்ணின்நல் லாளையோர் பாகமாப் பேணினான்
கண்ணுடை நெற்றியான் கருதிய கானப்பேர்
விண்ணிடை வேட்கையார் விரும்புதல் கருமமே **#275**

நுண்ணிய இடையையும், பெரிய அல்குலையும், சிலம்பணிந்த மென்மையான பாதங்களையும் உடைய பெண்ணின் நல்லாளாகிய உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்ட நெற்றிக்கண்ணுடைய சிவபெருமான் வீற்றிருந் தருளுகின்ற திருக்கானப்பேர் என்னும் திருத்தலத்தை, விண்ணுலகை ஆளும் விருப்பமுடையவர்கள் விரும்பி ஏத்துதல் கடமையாகும்.

திருக்கானப்பேர்

வாவியாய்த் தங்கிய நுண்சிறை வண்டினம்
காவிவாய்ப் பண்செயுங் கானப்பேர் அண்ணலை
நாவிவாய்ச் சாந்துளும் பூவுளு ஞானநீர்
தூவிவாய்ப் பெய்துநின் றாட்டுவார் தொண்டரே **#276**

பகலில் குளத்திலுள்ள தாமரை மலர்களில் தங்கித்தேனைப் பருகிய வண்டினம், இரவில் அப்போது மலரும் நீலோற்பல மலரை அடைந்து தேனுண்ட மகிழ்ச்சியில் பண்ணிசைக்க விளங்கும் திருக்கானப்பேர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் இறைவனை, கஸ்தூரி என்னும் மான், புழுகுப்பூனை இவற்றிலிருந்து பெறப்படும் வாசனைப்பொருள், சந்தனம், புனித நீர் முதலியன கொண்டு அடியவர்கள் திருமுழுக்காட்டி, மலர்தூவி அர்ச்சித்துப் போற்றி வழிபடுபவர்.

திருக்கானப்பேர்

நிறையுடை நெஞ்சுளும் நீருளும் பூவுளும்
பறையுடை முழவுளும் பலியுளும் பாட்டுளும்
கறையுடை மிடற்றண்ணல் கருதிய கானப்பேர்
குறையுடை அவர்க்கலாற் களைகிலார் குற்றமே **#277**

திருக்கானப்பேர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற நஞ்சுண்ட கறுத்த கண்டத்தையுடைய சிவபெருமானை, மனத்தை பொறிவழிஓடாது ஒருமுகப்படுத்தி நிறுத்திய நெஞ்சுடன், பூவும் நீரும் கொண்டு, முழவு முழங்க, இறைவனின் புகழைப்பாடி நைவேத்தியம் செய்து வழிபடுகின்ற மெய்யடியார்களுக்கு அல்லாது ஏனையோர்களுக்குக் குறைகள் தீருமோ!

திருக்கானப்பேர்

ஏனப்பூண் மார்பின்மேல் என்புபூண் டீறிலா
ஞானப்பே ராயிரம் பேரினா னண்ணிய
கானப்பேர் ஊர்தொழுங் காதலார் தீதிலர்
வானப்பேர் ஊர்புகும் வண்ணமும் வல்லரே **#278**

பன்றிக்கொம்பை ஆபரணமாக அணிந்த மார்பின்மேல், எலும்புமாலையும் அணிந்து, அழிவில்லாத சிவஞானம் தருகின்ற திருநாமம் ஆயிரம் கொண்டு திருக்கானப்பேர் என்னும் திருத்தலத்தினை விரும்பித் தொழும் அடியவர்கள் தீவினைகளற்றவர் ஆவர். தேவர்களின் நகரமான அமராவதியை அடையும் சிறப்புடையவர் ஆவர்.

திருக்கானப்பேர்

பள்ளமே படர்சடைப் பாற்படப் பாய்ந்தநீர்
வெள்ளமே தாங்கினான் வெண்மதி சூடினான்
கள்ளமே செய்கிலார் கருதிய கானப்பேர்
உள்ளமே கோயிலா உள்கும்என் உள்ளமே **#279**

பள்ளம் போன்ற படர்ந்த சடையில், வெள்ளம் போலப் பாய்ந்த

கங்கையைத் தாங்கி வெண்ணிறச் சந்திரனையும் சூடினான் சிவபெருமான். கள்ளம் என்பதை அறியாது வெள்ளை உள்ளத்துடன் இறைவனை வழிபடுகின்ற, திருக்கானப்பேர் என்னும் திருத்தலத்திலுள்ள மெய்யடியார்களின் திருவுள்ளத்தைக் கோயிலாக நினைத்து என் மனம் வழிபடும்.

திருக்கானப்பேர்

மானமா மடப்பிடி வன்கையால் அலகிடக்
கானமார் கடகரி வழிபடுங் கானப்பேர்
ஊனமாம் உடம்பினில் உறுபிணி கெடஎண்ணில்
ஞானமா மலர்கொடு நணுகுதல் நன்மையே **#280**

பெரிய பெண் யானை தன் வலியகையால் அலகிடக் கானகத்திலுள்ள மதமுடைய பெரிய ஆண் யானையானது வழிபடுகின்ற திருக்கானப்பேர் என்னும் திருத்தலத்திலுள்ள இறைவனை, குற்றமுடைய இவ்வுடம்பிலுள்ள உயிரைப் பிணித்துள்ள ஆணவமாகிய நோய் தீர ஞானமாகிய மலர்கொண்டு மனம், வாக்கு, காயத்தால் வழிபட நன்மைகள் உண்டாகும்.

திருக்கானப்பேர்

வாளினான் வேலினான் மால்வரை யெடுத்ததிண்
தோளினான் நெடுமுடி தொலையவே ஊன்றிய
தாளினான் கானப்பேர் தலையினால் வணங்குவார்
நாளுநாள் உயர்வதோர் நன்மையைப் பெறுவரே **#281**

வாட்போர் வலியாலும், வேற்படைப் பயிற்சியாலும், பெரிய கயிலைமலையை எடுத்த வலிமை வாய்ந்த தோள்களை உடைய இராவணனின் நீண்டமுடிகள் நலியுமாறு, பெருவிரலை ஊன்றிய திருவடிகளையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்கானப்பேர் என்னும் திருத்தலத்தைத் தலையால் வணங்கும் அடியவர்கள் நாளுக்கு நாள் உயர்நிலை அடைந்து எல்லா நலன்களையும் பெறுவார்கள்.

திருக்கானப்பேர்

சிலையினான் முப்புரந் தீயெழச் செற்றவன்
நிலையிலா இருவரை நிலைமைகண்டு ஓங்கினான்
கலையினார் புறவிற்றேன் கமழ்தரு கானப்பேர்
தலையினால் வணங்குவார் தவமுடை யார்களே **#282**

மேருமலையை வில்லாகக் கொண்டு முப்புரத்தைத் தீப்பற்றும்படி செய்து அழித்த சிவபெருமான், நிலையிலா பிரமன், திருமால் இவர்களின் செருக்கைக் கண்டு அவர்கள் காணாத வண்ணம் நெருப்பு

மலையாய் ஓங்கி நின்றான். அழகிய குறிஞ்சியும், முல்லையும் சார்ந்த நிலமான, தேன் மணம் கமழத் திகழும் திருக்கானப்பேர் என்னும் திருத்தலத்தைத் தொழுது போற்றுபவர்கள் தவமுடையவர்கள் ஆவர்.

திருக்கானப்பேர்

உறித்தலைச் சுரையொடு குண்டிகை பிடித்துச்சி
பறித்தலும் போர்த்தலும் பயனிலை பாவிகாள்
மறித்தலை மடப்பிடி வளர்இளங் கொழுங்கொடி
கறித்தெழு கானப்பேர் கைதொழல் கருமமே **#283**

உறியினிடத்துச் சுரைக்குடுக்கை, கமண்டலம் இவற்றைத் தாங்கிக் கையில் பிடித்து அலையும், இறைவனை உணராத பாவிகளாகிய சமணர், புத்தர்கள் முறையே செய்யும் தலையிலுள்ள முடிகளைப் பறித்தலும், காவியாடை போர்த்தலும் ஆகிய செயல்களால் பயனில்லை. மடமையுடைய பெண்யானையும் வளர்கின்ற இளங்கொழுங்கொடியும் போன்ற உமாதேவியை ஒருபாகமாகக் கொண்டு சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்கானப்பேர் என்னும் திருத்தலத்தைக் கைக்கூப்பித் தொழுவது நம் கடமையாகும்.

திருக்கானப்பேர்

காட்டகத்து ஆடலான் கருதிய கானப்பேர்
கோட்டகத் திளவரால் குதிகொளும் காழியான்
நாட்டகத் தோங்குசீர் ஞானசம் பந்தன
பாட்டகத் திவைவலார்க்கு இல்லையாம் பாவமே **#284**

சுடுகாட்டில் ஆடுகின்ற சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் திருக்கானப்பேர் என்னும் திருத்தலத்தை, இளவரால் மீன்கள் துள்ளிப்பாயும் நீர்நிலைகளையுடைய வளமையான சீகாழி என்னும் நகரில் அவதரித்த மிகுந்த புகழுடைய ஞானசம்பந்தன் பாடிய இத்திருப்பதிகத்தால் போற்ற வல்லவர்கட்குப் பாவம் இல்லை. (அவர்கள் பாவத்திற்குக் காரணமான தீவினைகளைலிருந்து நீங்கப் பெற்றவர்கள் ஆவர்.)

திருச்சக்கரப்பள்ளி

திருச்சக்கரப்பள்ளி

திருச்சக்கரப்பள்ளி,
பண் - கொல்லி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஆலந்துறைஈசுவரர்.
தேவியார் : அல்லியங்கோதையம்மை.

படையினார் வெண்மழுப் பாய்புலித் தோலரை
உடையினார் உமையொரு கூறனார் ஊர்வதோர்
விடையினார் வெண்பொடிப் பூசியார் விரிபுனல்
சடையினார் உறைவிடஞ் சக்கரப் பள்ளியே **#285**

சிவபெருமான் வெண்ணிற மழுவைப் படைக்கலனாக உடையவர். பாயும் புலித்தோலை அரையில் ஆடையாக அணிந்தவர். உமாதேவியைத் தம் திருமேனியில் ஒரு கூறாகக் கொண்டவர். இடபத்தை வாகனமாகக் கொண்டவர். திருவெண்ணீற்றைப் பூசியவர். கங்கையைச் சடையிலே தாங்கியவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருச்சக்கரப்பள்ளி என்னும் கோயிலாகும்.

திருச்சக்கரப்பள்ளி

பாடினார் அருமறை பனிமதி சடைமிசைச்
சூடினார் படுதலை துன்எருக் கதனொடும்
நாடினார் இடுபலி நண்ணியோர் காலனைச்
சாடினார் வளநகர் சக்கரப் பள்ளியே **#286**

சிவபெருமான் அரிய நால்வேதங்களை ஓதி அருளியவர். குளிர்ந்த சந்திரனைச் சடைமுடியில் சூடியவர். மண்டையோட்டு மாலையுடன் எருக்கம் பூவும் அணிந்தவர். திருக்கரத்தில் கபாலம் ஏந்திப் பிச்சை ஏற்றுத் திரிபவர். தம்மை உறுதியாகப் பற்றி வழிபடும் மார்க்கண்டேயனின் உயிரைக் கவரவந்த காலனைக் காலால் உதைத்தவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் வளநகர் திருச்சக்கரப்பள்ளி என்னும் திருக்கோயிலை உடைய ஊராகும்.

திருச்சக்கரப்பள்ளி

மின்னினார் சடைமிசை விரிகதிர் மதியமும்
பொன்னினார் கொன்றையும் பொறிகிளர் அரவமும்
துன்னினார் உலகெலாம் தொழுதெழ நான்மறை
தன்னினார் வளநகர் சக்கரப் பள்ளியே **#287**

சிவபெருமான் மின்னலைப் போன்ற சடையின் மீது, ஒளிக்கதிர்களை வீசுகின்ற சந்திரனையும், பொன் போன்ற கொன்றை மலரையும் நெருப்புப் பொறி போன்று விடத்தைக் கக்குகின்ற பாம்பையும் அணிந்தவர். உலகம் யாவும் தொழுது போற்றுமாறு நான்கு வேதங்களின் உட்பொருளாக விளங்குபவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் வளநகர் திருச்சக்கரப்பள்ளி என்பதாகும்.

திருச்சக்கரப்பள்ளி

நலமலி கொள்கையார் நான்மறை பாடலார்
வலமலி மழுவினார் மகிழும்ஊர் வண்டறை
மலர்மலி சலமொடு வந்திழி காவிரி
சலசல மணிகொழி சக்கரப் பள்ளியே **#288**

சிவபெருமான் எல்லா உயிர்கட்கும் நன்மையே செய்யும் பெருங்கருணையாளர். நான்கு வேதங்களையும் அருளிச் செய்தவர். வலிமையுடைய மழுவைப் படைக்கலனாக ஏந்தியவர். அப்பெருமான் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் ஊர், வண்டுகள் ஒலிக்கின்ற, தேன்துளிகளைக் கொண்ட மலர்கள் மணம் வீச, வேகமாகப் பாயும் காவிரியாறு சலசல என ஒலிக்கும், மணிகளைக் கரையிலே ஒதுக்கும் வளமுடைய திருச்சக்கரப்பள்ளி என்பதாகும்.

திருச்சக்கரப்பள்ளி

வெந்தவெண் பொடியணி வேதியர் விரிபுனல்
அந்தமில் அணிமலை மங்கையோ டமரும்ஊர்
கந்தமார் மலரொடு காரகில் பல்மணி
சந்தினோடு அணைபுனற் சக்கரப் பள்ளியே **#289**

சிவபெருமான் வெந்த திருவெண்ணீற்றினை அணிந்த வேதநாயகர். கங்கையைச் சடைமுடியில் தாங்கியவர். அவர் அழியா அழகுடைய மலைமங்கையான உமாதேவியோடு வீற்றிருந்தருளும் ஊர், நறுமணம் கமழும் மலர், அகில், பலவகை மணிகள், சந்தனமரம் இவை வந்தடைகின்ற நீர்வளமிக்க திருச்சக்கரப் பள்ளி என்பதாகும்.

திருச்சக்கரப்பள்ளி

பாங்கினான் முப்புரம் பாழ்பட வெஞ்சிலை
வாங்கினார் வானவர் தானவர் வணங்கிட
ஓங்கினார் உமையொரு கூறொடும் ஒலிபுனல்
தாங்கினார் உறைவிடஞ் சக்கரப் பள்ளியே **#290**

உரிய தன்மையில் முப்புரங்களும் பாழ்பட்டு எரிந்து சாம்பலாகும்படி, கோபத்துடன், வளைக்க முடியாத மேருமலையை வில்லாக

வளைத்தவர். தேவர்களும், அசுரர்களும் வணங்கும் பெருமை பெற்றவர். உமாதேவியைத் தம் உடம்பில் ஒரு கூறாகக் கொண்டவர். ஒலிக்கின்ற கங்கையைச் சடைமுடியில் தாங்கியவர். அப்பெருமான் வீற்றிருந்தருளுமிடம் திருச்சக்கரப்பள்ளி என்பதாகும்.

திருச்சக்கரப்பள்ளி

பாரினார் தொழுதெழு பரவுபல் லாயிரம்
பேரினார் பெண்ணொரு கூறனார் பேரொலி
நீரினார் சடைமுடி நிரைமலர்க் கொன்றையந்
தாரினார் வளநகர் சக்கரப் பள்ளியே **#291**

சிவபெருமான் இப்பூவுலக மக்களெல்லாம் தொழுது போற்றும் பல்லாயிரக்கணக்கான திருநாமங்களை உடையவர். உமாதேவியைத் தம் திருமேனியில் ஒருபாகமாகக் கொண்டவர். பேரொலியோடு பெருக்கெடுத்து வரும் கங்கையைச் சடைமுடியில் தாங்கியவர். கொத்தாக மலரும் கொன்றை மலர்களை அழகிய மாலையாக அணிந்தவர். அப்பெருமான் வீற்றிருந்தரும் வளநகர் திருச்சக்கரப்பள்ளி என்பதாகும்.

திருச்சக்கரப்பள்ளி

முதிரிலா வெண்பிறை சூடினார் முன்னநாள்
எதிரிலா முப்புரம் எரிசெய்தார் வரைதனால்
அதிரிலா வல்லரக் கன்வலி வாட்டிய
சதிரினார் வளநகர் சக்கரப் பள்ளியே **#292**

முதிர்வு அடையாத இள வெண்திங்களைச் சிவபெருமான் சடைமுடியில் சூடியவர். முன்பொருநாள் தம்மை எதிர்த்துப் போர் செய்து வெற்றி பெறுதற்கு ஒருவரும் இல்லை என்னும் நிலையில் திரிந்த அசுரர்களின் முப்புரங்களை எரித்துச் சாம்பலாகுமாறு செய்தவர். கயிலைமலையினால் வல்லசுரனான இராவணனின் வலிமையை அடக்கிய திறமையாளர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் வளநகர் திருச்சக்கரப்பள்ளி என்பதாகும்.

திருச்சக்கரப்பள்ளி

துணிபடு கோவணம் சுண்ணவெண் பொடியினர்
பணிபடு மார்பினர் பனிமதிச் சடையினர்
மணிவணன் அவனொடு மலர்மிசை யானையும்
தணிவினர் வளநகர் சக்கரப் பள்ளியே **#293**

கிழிக்கப்பட்ட துணியைக் கோவணமாகச் சிவ பெருமான் அணிந்தவர், மணம் கமழும் திருவெண்ணீற்றினைப் பூசியவர். பாம்பை மார்பில்

ஆபரணமாக அணிந்தவர். குளிர்ந்த சந்திரனைச் சடைமுடியில் சூடியவர். திருமாலும், பிரமனும் தங்களையே தலைவராகக் கருதிய செருக்கைத் தணியச் செய்தவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் வளநகர் திருச்சக்கரப்பள்ளி என்பதாகும்.

திருச்சக்கரப்பள்ளி

உடம்புபோர் சீவரர் ஊண்டொழிற் சமணர்கள்
விடம்படும் உரையவை மெய்யல விரிபுனல்
வடம்படு மலர்கொடு வணங்குமின் வைகலும்
தடம்புனல் சூழ்தரு சக்கரப் பள்ளியே **#294**

உடம்பைப் போர்க்கும் சீவரம் என்று சொல்லப்படும் மஞ்சள் உடை உடுத்தும் புத்தர்களும், உண்பதையே தொழிலாகக் கொண்ட சமணர்களும் உரைப்பவை நஞ்சு போன்று கொடுமையானவை. மெய்ம்மையானவை அல்ல. அவற்றைப் பொருளாகக் கொள்ளவேண்டா. விரிந்து பரவும் புனிதநீர் கொண்டு அபிடேகம் செய்தும், மலர் மாலைகளைச் சார்த்தியும், குளிர்ந்த குளங்கள் சூழ்ந்து நீர்வளம் மிகுந்து விளங்கும் திருச்சக்கரப் பள்ளியில் வீற்றிருந்தருளும் இறைவனை நாளும் வணங்குவீர்களாக!

திருச்சக்கரப்பள்ளி

தண்வயல் புடையணி சக்கரப் பள்ளியெம்
கண்ணுத லவனடிக் கழுமல வளநகர்
நண்ணிய செந்தமிழ் ஞானசம் பந்தன்சொல்
பண்ணிய விவைசொலப் பறையுமெய்ப் பாவமே **#295**

குளிர்ந்த வயல் சூழ்ந்த வளமை நிறைந்த அழகிய திருச்சக்கரப்பள்ளியில் எம்முடைய, நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானின் திருவடிகளை, திருக்கழுமல வளநகரில் அவதரித்த செந்தமிழ் வல்ல ஞானசம்பந்தன் போற்றிய இத்திருப்பதிகத்தைப் பக்தியுடன் பாடுபவர்களின் பாவம் நீங்கும்.

திருமழபாடி

திருமழபாடி

திருமழபாடி,
பண் - கொல்லி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வச்சிரத்தம்பேசுவரர்.
தேவியார் : அழகாம்பிகையம்மை.

காலையார் வண்டினங் கிண்டிய காருறும்
சோலையார் பைங்கிளி சொற்பொருள் பயிலவே
வேலையார் விடம்அணி வேதியன் விரும்பிடம்
மாலையார் மதிதவழ் மாமழ பாடியே **#296**

காலைப்பண்ணாகிய மருதப்பண்ணை இசைக்கின்ற வண்டினங்கள் கிளர்ந்த மலர்களையுடைய, மரங்கள் மேகத்தைத் தொடும்படி வளர்ந்துள்ள சோலைகளில் பைங்கிளிகள் அத்தலத்திலுள்ளோர் பயிலும் சைவநூல்களில், சொல்லையும், பொருளையும் பயில்வன. கடலில் தோன்றிய விடத்தைக் கண்டத்தில் மணிபோல் உள்ளடக்கிய வேதப்பொருளாகிய சிவபெருமான் விரும்பி வீற்றிந்தருளும் இடம், மாடங்களில் சந்திரன் தவழ்கின்ற திருமழபாடி என்னும் திருத்தலம் ஆகும்.

திருமழபாடி

கறையணி மிடறுஉடைக் கண்ணுதல் நண்ணிய
பிறையணி செஞ்சடைப் பிஞ்ஞகன் பேணும்ஊர்
துறையணி குருகினம் தூமலர் துதையவே
மறையணி நாவினான் மாமழ பாடியே **#297**

நீலகண்டராயும், நெற்றிக்கண்ணை உடையவரும் தம்மை அடைக்கலமாக வந்தடைந்த சந்திரனை அழகிய செஞ்சடையில் சூடிய பிஞ்ஞகருமான சிவபெருமான் வேதங்களை ஓதுபவர். அவர் வீற்றிருந்தருளும் ஊர், நீர்த்துறைகளிலே வெண்ணிறப் பறவைகள் அங்கு மலர்ந்துள்ள வெண்ணிற மலர்கட்கும் தமக்கும் வேறுபாடு தோன்றாதபடி விளங்கும் திருமழபாடி என்னும் திருத்தலமாகும்.

திருமழபாடி

அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியும்
செந்தமிழ்க் கீதமும் சீரினால் வளர்தரப்
பந்தணை மெல்விர லாளொடு பயில்விடம்

மந்தம்வந் துலவுசீர் மாமழ பாடியே #298
அந்தணர்கள் வேள்வி செய்யும்போது கூறுகிறவேதங்கள் ஒலிக்கவும், செந்தமிழ்ப் பக்திப்பாடல்கள் இசைக்கவும், சிறப்புடன், இறைவன், பந்து வந்தடைகின்ற மென்மையான விரல்களையுடைய உமாதேவியோடு வீற்றிருந்தருளும் இடம், தென்றற் காற்று வீசும் புகழ்மிக்க திருமழபாடி என்னும் திருத்தலமாகும்.

திருமழபாடி

அத்தியின் உரிதனை அழகுறப் போர்த்தவன்
முத்தியாய் மூவரின் முதல்வனாய் நின்றவன்
பத்தியால் பாடிடப் பரிந்தவர்க்கு அருள்செயும்
அத்தனார் உறைவிடம் அணிமழ பாடியே #299
யானையின் தோலை உரித்து அழகுறச் சிவபெருமான் போர்த்திக் கொண்டவன். வீடுபேறாயும், மும்மூர்த்திகட்கு முதல்வனாயும் விளங்குபவன். பக்தியால் பாடிப் போற்றும் அன்பர்கட்கு அருள்புரியும் தலைவன், அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம் அழகிய திருமழபாடி என்னும் திருத்தலமாகும்.

திருமழபாடி

கங்கையார் சடையிடைக் கதிர்மதி யணிந்தவன்
வெங்கண்வாள் அரவுடை வேதியன் தீதிலாச்
செங்கயற் கண்உமை யாளொடுஞ் சேர்விடம்
மங்கைமார் நடம்பயில் மாமழ பாடியே #300
கங்கையைத் தாங்கிய சடைமுடியின் இடையில் ஒளிரும் சந்திரனை அணிந்தவன் சிவபெருமான். கொடிய கண்ணையுடைய ஒளியுடைய பாம்பை ஆபரணமாக அணிந்தவன். வேதத்தை அருளி வேதப்பொருளாகவும் விளங்குபவன். தன்னை வழிபடுபவர்களின் தீவினைகளை நீக்கும் அருளுடைய சிவந்த கண்ணையுடைய உமாதேவியோடு அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம் மங்கையர்கள் நடம் பயின்று விளங்கும் சிறப்புடைய திருமழபாடி என்னும் திருத்தலம் ஆகும்.

திருமழபாடி

பாலனார் ஆருயிர் பாங்கினால் உணவரும்
காலனார் உயிர்செகக் காலினால் சாடினான்
சேலினார் கண்ணினாள் தன்னொடுஞ் சேர்விடம்
மாலினார் வழிபடும் மாமழ பாடியே #301
பாலனான மார்க்கண்டேயனின் வாழ்நாள் முடிந்ததும் அவன்

ஆருயிரைக் கவரவந்த காலனின் உயிர் அழியும்படி அவனைக் காலால் உதைத்த சிவபெருமான், சேல்மீன் போன்ற கண்களையுடைய உமாதேவியோடு வீற்றிருந்தருளும் இடம் திருமால் முதலான பெருமையுடையவர்கள் வழிபடும் சிறப்புமிக்க திருமழபாடி என்னும் திருத்தலம் ஆகும்.

திருமழபாடி

விண்ணிலார் இமையவர் மெய்ம்மகிழ்ந் தேத்தவே
எண்ணிலார் முப்புரம் எரியுண நகைசெய்தார்
கண்ணினால் காமனைக் கனல்எழக் காய்ந்தஎம்
அண்ணலார் உறைவிடம் அணிமழ பாடியே **#302**

சிவபெருமான் விண்ணுலகத்துத் தேவர்கள் மெய்ம்மகிழ்ந்து போற்றத் தம்மை வழிபட்டு உய்யும் எண்ணமில்லாத அசுரர்களின் முப்புரங்களைச் சிரித்து எரியுண்ணும்படி செய்தவர். நெற்றிக்கண்ணைத் திறந்து நெருப்புப்பொறி பறக்க மன்மதனை எரித்த எம் தலைவரான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் அழகிய திருமழபாடி என்னும் திருத்தலம் ஆகும்.

திருமழபாடி

கரத்தினால் கயிலையை யெடுத்தகார் அரக்கன
சிரத்தினை ஊன்றலுஞ் சிவனடி சரண்எனா
இரத்தினாற் கைந்நரம் பெடுத்திசை பாடலும்
வரத்தினான் மருவிடம் மாமழ பாடியே **#303**

தன் கையால் கயிலைமலையைப் பெயர்த்தெடுத்த கரிய அரக்கனான இராவணனின் தலைகள் அம்மலையின்கீழ் நலிவுற்றுத் துன்புறும்படி தம்காற்பேருவிரலைச் சிவபெருமான் ஊன்றியவர். பின் இராவணன் சிவன் திருவடியையே சரணம் எனக் கொண்டு அருள்புரியும்படி கெஞ்சி வேண்டித் தன் கை நரம்பினை எடுத்து வீணையாக மீட்டிச் சாமகானம் பாட, அவனுக்கு வரமருளிய சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் இடம் திருமழபாடி என்னும் திருத்தலம் ஆகும்.

திருமழபாடி

ஏடுலா மலர்மிசை அயனெழில் மாலுமாய்
நாடினார்க் கரியசீர் நாதனார் உறைவிடம்
பாடெலாம் பெண்ணையின் பழம்விழப் பைம்பொழில்
மாடெலாம் மல்குசீர் மாமழ பாடியே **#304**

இதழ்களையுடைய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும், திருமாலும் அடிமுடி தேட, காண்பதற்கு அரியவராய் விளங்கிய சிவபெருமான்

வீற்றிருந்தருளும் இடம், ஒருபக்கம் பனைமரங்களின் பழுத்த பழங்கள் உதிர மறுபக்கம் பசுமையான சோலைகள் விளங்கும் சிறப்புடைய திருமழபாடி என்னும் திருத்தலம் ஆகும்.

திருமழபாடி

உறிபிடித் தூத்தைவாய்ச் சமணொடு சாக்கியர்
நெறிபிடித் தறிவிலா நீசர்சொற் கொள்ளன்மின்
பொறிபிடித் தரவினம் பூணெனக் கொண்டுமான்
மறிபிடித் தானிடம் மாமழ பாடியே **#305**

நீர்க்கலசத்தை உறியிலே தாங்கி அதைப் பிரம்பில் மாட்டித் தூக்கிச் செல்லும், வாய் கழுவும் வழக்கமில்லாத சமணர்களும், புத்தர்களும் இறையுண்மையை அறியாது கூறும் சொற்களைப் பொருளாகக் கொள்ள வேண்டா. படமெடுத்தாடும், புள்ளிகளையுடைய பாம்பை ஆபரணமாக அணிந்து, இள மான்கன்றைக் கரத்தில் ஏந்திய சிவபெருமான் விற்றிருந்தருளும் இடம் திருமழபாடி என்னும் திருத்தலம் ஆகும்.

திருமழபாடி

ஞாலத்தா ராதிரை நாளினான் நாள்தொறும்
சீலத்தான் மேவிய திருமழ பாடியை
ஞாலத்தான் மிக்கசீர் ஞானசம் பந்தன்சொல்
கோலத்தால் பாடுவார் குற்றம்அற் றார்களே **#306**

இப்பூவுலகில் சிறப்பாக விளங்கும் ஆதிரை என்னும் நட்சத்திரத்திற்குரிய சிவபெருமானுக்கு, நாள்தோறும் சிவாகமவிதிப்படி பூசைகள் நடைபெறுகின்ற திருமழபாடி என்னும் திருத்தலத்தினை, உலகத்தோரால் போற்றப்படுகின்ற மிகுந்த புகழையுடைய திருஞானசம்பந்தன் அருளிய திருப்பதிகத்தைச் சிவவேடப் பொலிவுடன் பாடுபவர்கள் தீவினையிலிருந்து நீங்கப் பெற்றவர்கள் ஆவர்.

மேலைத்திருக்காட்டுப்பள்ளி

மேலைத்திருக்காட்டுப்பள்ளி

மேலைத்திருக்காட்டுப்பள்ளி,
பண் - கொல்லி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தீயாடியப்பர்.
தேவியார் : வார்கொண்டமுலையம்மை.

வாருமன் னும்முலை மங்கையோர் பங்கினன்
ஊருமன் னும்பலி உண்பதும் வெண்டலை
காருமன் னும்பொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
நீருமன் னுஞ்சடை நிமலர்தந் நீர்மையே **#307**

கச்சணிந்த முலையையுடைய உமாதேவியைத் தம் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு, சிவபெருமான் பிரமகபாலம் ஏந்தி ஊர்தோறும் சென்று பிச்சை ஏற்பவர். அப்பெருமான் மேகத்தைத் தொடும்படி வளர்ந்துள்ள சோலைகள் சூழ்ந்த திருக்காட்டுப்பள்ளி என்னும் திருத்தலத்தில் கங்கையைத் தாங்கிய சடைமுடியை உடைய நிமலராய் விளங்குவது அவர்தம் சிறந்த குணமாகும்.

மேலைத்திருக்காட்டுப்பள்ளி

நிருத்தனார் நீள்சடை மதியொடு பாம்பணி
கருத்தனார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
அருத்தனார் அழகமர் மங்கையோர் பாகமாப்
பொருத்தனார் கழலிணை போற்றுதல் பொருளதே **#308**

சிவபெருமான் திருநடனம் செய்பவர். நீண்ட சடைமுடியில் சந்திரனோடு பாம்பை ஆபரணமாக அணிந்தவர். நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்த திருக்காட்டுப்பள்ளி என்னும் திருத்தலத்தில் கண்ணாற்காணும் பொருள்வடிவாயும் விளங்குபவர். அழகிய உமாதேவியைத் தம் திருமேனியில் ஒருபாகமாகக் கொண்டுள்ள அப்பெருமானின் திருவடிகளைப் போற்றி வணங்குதலே பயனுடைய செய்கையாகும்.

மேலைத்திருக்காட்டுப்பள்ளி

பண்ணினார் அருமறை பாடினார் நெற்றியோர்
கண்ணினார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
விண்ணனார் விரிபுனல் மேவினார் சடைமுடி
அண்ணலார் என்மையா ளுடையஎம் மடிகளே **#309**

சிவபெருமான் அரிய வேதங்களை உரிய பண்ணோடு பாடியருளினார்.

அவர் நெற்றிக்கண்ணை உடையவர். நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்த திருக்காட்டுப்பள்ளி என்னும் திருத்தலத்தில், ஆகாயத்திலிருந்து விரிந்த கங்கையைத் தாங்கிய சடைமடியுடையவராய் வீற்றிருந்தருளும் அச்சிவபெருமானே எம்மை ஆட்கொண்டருளும் எம் தலைவர் ஆவார்.

மேலைத்திருக்காட்டுப்பள்ளி

பணங்கொள்நா கம்அரைக் கார்ப்பது பல்பலி
உணங்கலோ டுண்கலன் உறைவது காட்டிடைக்
கணங்கள்கூ டித்தொழு தேத்துகாட் டுப்பள்ளி
நிணங்கொள்சூ லப்படை நிமலர்தம் நீர்மையே **#310**

சிவபெருமான் இடுப்பிலே கச்சாக அணிந்திருப்பது படமெடுத்தாடும் நாகமாகும். பல இடங்களில் பிச்சையேற்று வந்த உணவை உண்ணும் பாத்திரம், உலர்ந்த பிரமகபாலமாகும். வசிப்பது சுடுகாடாகும். அத்தகைய பெருமானார் சிவகணத்தோர் தொழுது அருளுகின்றார். கொழுப்பினைக் கொண்ட சூலப்படையை ஏந்திய நிமலராய் விளங்கும் இயல்புடையவர்.

மேலைத்திருக்காட்டுப்பள்ளி

வரையுலாம் சந்தொடு வந்திழி காவிரிக்
கரையுலாம் இடுமணல் சூழ்ந்தகாட் டுப்பள்ளித்
திரையுலாம் கங்கையும் திங்களும் சூடியங்
கரையுலாங் கோவணத் தடிகள்வே டங்களே **#311**

மலையில் செழித்த சந்தனமரங்களை நீரோட்டத்தால் உந்தித் தள்ளிக் கரையினில் சேர்க்கும் காவிரியின் மணல் சூழ்ந்த திருக்காட்டுப்பள்ளி என்னும் திருத்தலத்தின் இறைவர் அலைவீசும் கங்கையையும், சந்திரனையும் சடைமுடியிலே சூடி, இடுக்கிலே கோவண ஆடையுடன் காட்சிதரும் கோலமுடையவர்.

மேலைத்திருக்காட்டுப்பள்ளி

வேதனார் வெண்மழு வேந்தினார் அங்கமுன்
ஓதினார் உமையொரு கூறனார் ஒண்குழைக்
காதினார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
நாதனார் திருவடி நாளும்நின் றேத்துமே **#312**

வேதத்தை அருளிச்செய்து வேதப்பொருளாகவும் விளங்குபவர் சிவபெருமான். வெண்ணிற மழுப்படையை ஏந்தியவர். உமாதேவியைத் தம் திருமேனியில் ஒரு கூறாகக் கொண்டவர். ஒளி பொருந்திய குழையணிந்த காதை உடையவர். நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்த திருக்காட்டுப்பள்ளி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும்

தலைவரான அப்பெருமானின் திருவடிகளைத் தினந்தோறும் போற்றி வழிபடுவீர்களாக!

மேலைத்திருக்காட்டுப்பள்ளி

மையினார் மிடறனார் மான்மழு வேந்திய
கையினார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
தையலோர் பாகமாத் தண்மதி சூடிய
ஐயனார் அடிதொழ அல்லல்ஒன் றில்லையே **#313**

மை போன்ற கரிய கண்டத்தையுடைய சிவ பெருமான் மானையும், மழுவையும் ஏந்திய கையினார், நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்த திருக்காட்டுப்பள்ளி என்னும் திருத்தலத்தில் உமாதேவியைத் தம் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு குளிர்ந்த சந்திரனைச் சடைமுடியில் சூடிய தலைவரான சிவபெருமானின் திருவடிகளைத் தொழுது போற்றத் துன்பம் சிறிதும் இல்லை.

மேலைத்திருக்காட்டுப்பள்ளி

சிலைதனால் முப்புரஞ் செற்றவன் சீரினார்
மலைதனால் வல்லரக் கன்வலி வாட்டினான்
கலைதனார் புறவணி மல்குகாட் டுப்பள்ளி
தலைதனால் வணங்கிடத் தவமது ஆகுமே **#314**

சிவபெருமான் மேருமலையை வில்லாகக் கொண்டு முப்புரங்களை அழித்தவர். சிறப்புடைய கயிலை மலை யினால் இராவணனின் வலிமையை அடக்கியவர். மான்கள் உலவும் முல்லைநிலமான அழகு திகழும் திருக்காட்டுப்பள்ளி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் அப்பெருமானைப் பக்தியுடன் தலைதாழ்த்தி வணங்க நல்தவப்பேறு உண்டாகும்.

மேலைத்திருக்காட்டுப்பள்ளி

செங்கண்மால் திகழ்தரு மலருறை திசைமுகன்
தங்கையால் தொழுதெழத் தழலுரு ஆயினான்
கங்கையார் சடையினான் கருதுகாட் டுப்பள்ளி
அங்கையால் தொழும்அவர்க் கல்லல்ஒன் றில்லையே **#315**

சிவந்த கண்களையுடைய திருமாலும், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும் தொழுது போற்ற அழல் உருவமாய் விளங்கியவர் சிவபொருமான். கங்கையைச் சடையிலே தாங்கித் திருக்காட்டுப்பள்ளி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற அப்பெருமானை அழகிய கைகளால் கூப்பித் தொழும் அன்பர்கட்குத் துன்பம் இல்லை.

மேலைத்திருக்காட்டுப்பள்ளி

போதியார் பிண்டியார் என்றவப் பொய்யர்கள்
வாதினால் உரையவை மெய்யல வைகலும்
காரினார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
ஏரினால் தொழுதெழ வின்பம்வந் தெய்துமே **#316**

அரச மரத்தினடியில் ஞானம் பெற்ற புத்தரின் வழிவந்த புத்தர்களும், அசோகமர நிழலில் அமரும் அருகக் கடவுளை வணங்கும் சமணர்களும், தங்கள் வாதத்தால் உரைப்பவை மெய்ம்மை யானவை அல்ல, மேகம் தவழும், நறுமணம் கமழும் சாலைகள் சூழ்ந்த திருக்காட்டுப்பள்ளி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் இறைவனை நாள்தோறும் சீலத்தால் தொழுது பாற்ற இன்பம் வந்தடையும்.

மேலைத்திருக்காட்டுப்பள்ளி

பொருபுனல் புடையணி புறவநன் னகர்மன்னன்
அருமறை யவைவல் வணிகொள்சம் பந்தன்சொல்
கருமணி மிடற்றினன் கருதுகாட் டுப்பள்ளி
பரவிய தமிழ்சொல்லப் பறையுமெய்ப் பாவமே **#317**

நீர்வளமிக்க அழகிய புறவம் என்னும் பெயர் கொண்ட சீகாழியில் அவதரித்த. அருமறைகளில் வல்ல, சிவஞானத்தையே ஆபரணமாக அணிந்த ஞானசம்பந்தன், நீலமணி போன்ற கண்டத்தையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்காட்டுப் பள்ளி என்னும் திருத்தலத்தை வணங்கிப் போற்றிய இத்திருப்பதிகத்தை ஓத, பாவம் நீங்கும்.

திருஅரதைப்பெரும்பாழி

திருஅரதைப்பெரும்பாழி

திருஅரதைப்பெரும்பாழி,
பண் - கொல்லி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பரதேசுவரர்.
தேவியார் : அலங்காரநாயகியம்மை.

பைத்தபாம் போடரைக் கோவணம் பாய்புலி
மொய்த்தபேய் கள்முழக் கம்முது காட்டிடை
நித்தமா கந்நட மாடிவெண் ணீறணி
பித்தர்கோ யில்அர தைப்பெரும் பாழியே **#318**

இடுப்பில் படத்தையுடைய பாம்பைக் கச்சாகக் கட்டி, கோவணமும் புலித்தோலும் அணிந்து, பூதகணங்கள் சூழ்ந்து, முழங்கச் சுடுகாட்டில் நிலைபெற்ற நடனம் ஆடி, திருவெண்ணீறு அணிந்த பித்தரான சிவபெருமான் கோயில் கொண்டருளுவது திருஅரதைப் பெரும்பாழியே ஆகும்.

திருஅரதைப்பெரும்பாழி

கயலசே லகருங் கண்ணியர் நாள்தொறும்
பயலைகொள் ளப்பலி தேர்ந்துழல் பான்மையார்
இயலைவா னோர்நினைந் தோர்களுக் கெண்ணரும்
பெயர ர்கோ யில்அர தைப்பெரும் பாழியே **#319**

கயல்மீன் போன்றும், சேல் மீன் போன்றும் அழகிய கருநிறக் கண்களையுடைய மகளிர் நாள்தோறும் பசலை நோய் கொள்ளுமாறு அழகிய தோற்றத்துடன் பலியேற்று உழலும் தன்மையுடையவர் சிவபெருமான். அவருடைய தன்மைகள் வானவர்களும், அடியவர்களும் எண்ணுதற்கு அரிய. பல திருப்பெயர்களைக் கொண்டு விளங்கும் அப்பெருமான் கோயில் கொண்டருளுவது திருஅரதைப் பெரும்பாழியே.

திருஅரதைப்பெரும்பாழி

கோடல்சா லவ்வுடை யார்கொலை யானையின்
மூடல்சா லவ்வுடை யார்முளி கானிடை
ஆடல்சா லவ்வுடை யாரழ காகிய
பீடர்கோ யில்அர தைப்பெரும் பாழியே **#320**

அடியவர்களின் வேண்டுதல்களை ஏற்று இறைவர் அருள்புரிபவர். கொல்லும் தன்மையுடைய யானையின் தோலை உரித்துப் போர்த்துக்

கொண்டவர். அருவருக்கத்தக்க சுடுகாட்டில் நடனம் புரிபவர். அழகிய பெருமையுடைய அப்பெருமான் கோயில் கொண்டருளுவது திருஅரதைப் பெரும்பாழியே.

திருஅரதைப்பெரும்பாழி

மண்ணர்நீ ரார்அழ லார்மலி காலினார்
மூவிண்ணர்வே தம்விரித் தோதுவார் மெய்ப்பொருள்
பண்ணர்பா டல்உடை யாரொரு பாகமும்
பெண்ணர்கோ யில்அர தைப்பெரும் பாழியே **#321**

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்களாக விளங்குபவர் இறைவர். வேதத்தின் உண்மைப் பொருளை விரித்து ஓதுபவர். மெய்ப்பொருளாகியவர். பண்ணோடு கூடிய பாடலில் விளங்குபவர். உமாதேவியைத் தம் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு விளங்குபவர். அப்பெருமானார் கோயில் கொண்டருளுவது திருஅரதைப்பெரும்பாழியே.

திருஅரதைப்பெரும்பாழி

மறையர்வா யின்மொழி மானொடு வெண்மழுக்
கறைகொள்சூ லம்முடைக் கையர்கா ரார்தரும்
நறைகொள்கொன் றைநயந் தார்தருஞ் சென்னிமேல்
பிறையர்கோ யில்அர தைப்பெரும் பாழியே **#322**

சிவபெருமான் வேதங்களை அருளிச்செய்தவர், மானும், வெண்மழுவும், சூலமும் ஏந்திய கையர். கார் காலத்தில் மலரும் தேன் துளிக்கும் நறுமணமுடைய கொன்றை மாலையை விரும்பி அணிந்துள்ளவர். சடைமுடியில் பிறைச்சந்திரனைச் சூடியவர். அப்பெருமான் கோயில் கொண்டருளுவது திரு அரதைப் பெரும்பாழியே.

திருஅரதைப்பெரும்பாழி

புற்றரவம்புலித் தோலரைக் கோவணம்
தற்றிர வின்னட மாடுவர் தாழ்தரு
சுற்றமர் பாரிடந் தொல்கொடி யின்மிசைப்
பெற்றர்கோ யில்அர தைப்பெரும் பாழியே **#323**

புற்றில் வாழும் பாம்பையும், புலித்தோலையும், கோவணத்தையும் இடையில் அணிந்து, இரவில் நடனமாடும் சிவபெருமான், பூதகணங்கள் சூழ்ந்து நின்று வணங்க இடபக் கொடியுடையவர். அப்பெருமான் கோயில் கொண்டருளுவது திருஅரதைப் பெரும்பாழியே.

திருஅரதைப்பெரும்பாழி

துணையிறுத் தஞ்சுரி சங்கமர் வெண்பொடி
இணையிலேற் றையுகந் தேறுவ ரும்எரி
கணையினான் முப்புரம் செற்றவர் கையினில்
பிணையர்கோ யில்அர தைப்பெரும் பாழியே **#324**
அழகிய சுரிந்த சங்கினாலாகிய குழைகளைக் காதில் அணிந்தும், திருவெண்ணீற்றைப் பூசியும் விளங்குபவர் இறைவர், ஒப்பற்ற இடபத்தை விரும்பி வாகனமாக ஏறுபவரும், அக்கினிக் கணையைச் செலுத்தி முப்புரங்களை அழித்தவரும், கையினில் இளமான்கன்றை ஏந்தியவருமான அச்சிவபெருமான் கோயில் கொண்டு அருளுவது திரு அரதைப் பெரும்பாழியே ஆகும்.

திருஅரதைப்பெரும்பாழி

சரிவிலா வல்லரக் கன்றடந் தோடலை
நெரிவிலா ரவ்வடர்த் தார்நெறி மென்குழல்
அரிவைபா கம்அமர்ந் தாரடி யாரொடும்
பிரிவில்கோ யில்அர தைப்பெரும் பாழியே **#325**
தளர்ச்சியே இல்லாத வல்லசுரனான இராவணனின் வலிமையான பெரியதோள்களும், தலைகளும் நெரியுமாறு அடர்த்த சிவபெருமான், அடர்த்தியான மென்மை வாய்ந்த கூந்தலையுடைய உமாதேவியைத் தம் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு, அடியவர்களோடு பிரிவில்லாது வீற்றிருந் தருளும் கோயில் திருஅரதைப் பெரும்பாழியே.

திருஅரதைப்பெரும்பாழி

வரியரா என்பணி மார்பினர் நீர்மல்கும்
ப எரியரா வுஞ்சடை மேற்பிறை யேற்றவர்
கரியமா லோடயன் காண்பரி தாகிய
பெரியர்கோ யில்அர தைப்பெரும் பாழியே **#326**
வரிகளையுடைய பாம்பு, எலும்பு ஆகியவற்றை ஆபரணமாக அணிந்த மார்பினர் இறைவர். கங்கையைத் தாங்கிய நெருப்புப் போன்ற சிவந்த சடையில் பிறைச்சந்திரனைச் சூடியவர். கருநிறத் திருமாலும், பிரமனும் காண்பதற்கரிய ஓங்கிய பெருமையுடைய சிவபெருமான் கோயில் கொண்டருளுவது திருஅரதைப் பெரும்பாழியே.

திருஅரதைப்பெரும்பாழி

நாணிலா தசமண் சாக்கியர் நாடொறும்
ஏணிலா தம்மொழி யவ்வெழி லாயவர்
சேணுலா மும்மதில் தீயெழச் செற்றவர்
பேணுகோ யில்அர தைப்பெரும் பாழியே **#327**

சமணர்களும், புத்தர்களும் நாள்தோறும் பெருமையற்ற சொற்களை மொழிகின்றனர். அவற்றை ஏலாது அழகுடையவ ராய், ஆகாயத்தில் திரியும் முப்புரங்களை எரிந்து சாம்பலாகுமாறு அழித்த சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் கோயில் திருஅரதைப் பெரும்பாழியே.

திருஅரதைப்பெரும்பாழி

நீரினார் புன்சடை நிமலனுக் கிடமெனப்
பாரினார் பரவர தைப்பெரும் பாழியைச்
சீரினார் காழியுள் ஞானசம் பந்தன்செய்
ஏரினார் தமிழ்வல்லார்க் கில்லையாம் பாவமே **#328**

கங்கையை மெல்லிய சடையில் தாங்கிய நிமலனான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் எனப் பூவுலகத்தோரால் போற்றி வணங்கப்படும் திரு அரதைப் பெரும்பாழியைப் போற்றி, புகழுடைய சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தன் அருளிய சிறப்புடைய இத்தமிழ்ப்பதிகத்தை ஓத வல்லவர்கட்குப் பாவம் இல்லை.

திருமயேந்திரப்பள்ளி

திருமயேந்திரப்பள்ளி

திருமயேந்திரப்பள்ளி,
பண் - கொல்லி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருமேனியழகர்.
தேவியார் : வடிவாம்பிகையம்மை.

திரைதரு பவளமும் சீர்திகழ் வயிரமும்
கரைதரு மகிலொடு கனவளை புகுதரும்
வரைவிலா லெயிலெய்த மயேந்திரப் பள்ளியுள்
அரவரை யழகனை யடியிணை பணிமினே #329

கடலலைகள் அடித்துவரும் பவளங்களும், சிறப்புடைய வைரமும், கரையிலே ஒதுக்கப்பட்ட அகில் மரங்களும், கனமான சங்குகளும் நிறைந்த திருமயேந்திரப்பள்ளி என்னும் திருத்தலத்தில், மேருமலையாகிய வில்லால், அக்கினிக் கணையாகிய அம்பை எய்து முப்புரங்களை எரியும்படி செய்த, இடையில் பாம்பைக் கச்சாக அணிந்துள்ள அழகனாகிய சிவபெருமானின் திருவடிகளை வணங்குவீர்களாக.

திருமயேந்திரப்பள்ளி

கொண்டல்சேர் கோபுரங் கோலமார் மாளிகை
கண்டலுங் கைதையுங் கமல்மார் வாவியும்
வண்டுலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியிற்
செண்டுசேர் விடையினான் றிருந்தடி பணிமினே #330

மேகத்தைத் தொடும்படி உயர்ந்த கோபுரங்களும், அழகிய மாளிகைகளும், நீர்முள்ளியும், தாழையும், தாமரைகள் மலர்ந்துள்ள குளங்களும், வண்டுகள் உலவுகின்ற சோலைகளுமுடைய அழகிய திருமயேந்திரப் பள்ளியில் வட்டமாக நடைபயிலும் இடபத்தை வாகனமாகக் கொண்ட சிவபெருமானின், உயிர்களை நன்னெறியில் செலுத்தும் திருவடிகளை வணங்குவீர்களாக.

திருமயேந்திரப்பள்ளி

கோங்கிள வேங்கையும் கொழுமலர்ப் புன்னையும்
தாங்குதேன் கொன்றையும் தகுமலர்க் குரவமு
மாங்கரும் பும்வயன் மயேந்திரப் பள்ளியுள்
ஆங்கிருந் தவன்கழ லடியிணை பணிமினே #331

கோங்கு, வேங்கை, செழுமையான மலர்களையுடைய புன்னை, தேன் துளிகளையுடைய கொன்றை, சிறந்த மலர்களை உடைய குரவம் முதலிய மரங்கள் நிறைந்த சோலைகளும், மாமரங்களும், கரும்புகள் நிறைந்த வயல்களும் உடைய திருமயேந்திரப்பள்ளியில் வீற்றிருந்தருளும் சிவபெருமானின் வீரக் கழல்கள் அணிந்த திருவடிகளை வணங்குவீர்களாக.

திருமயேந்திரப்பள்ளி

வங்கமார் சேணுயர் வருகுறி யான்மிகு
சங்கமா ரொலியகில் தருபுகை கமழ்தரு
மங்கையோர் பங்கினன் மயேந்திரப் பள்ளியுள்
எங்கணா யகன்றன திணையடி பணிமினே **#332**

வாணிகத்தின் பொருட்டு மிக்க நெடுந்தூரம் சென்ற கப்பல்கள் திரும்பிவரும் குறிப்பினை ஊரிலுள்ளவர்கட்கு உணர்த்த ஊதப்படும் சங்குகளின் ஒலியும், அகிற்கட்டைகளால் தூபம் இடுகின்றபோது உண்டாகும் நறுமணம் கமழும் புகையுமுடைய திருமயேந்திரப் பள்ளியுள், உமாதேவியைத் தன் திருமேனியின் ஒரு பாகமாகக் கொண்டு வீற்றிருந்தருளும் எங்கள் தலைவனான சிவபெருமானின் திருவடிகளை வணங்குவீர்களாக.

திருமயேந்திரப்பள்ளி

நித்திலத் தொகைபல நிரைதரு மலரெனச்
சித்திரப் புணரிசேர்த் திடத்திகழ்ந் திருந்தவன்
மைத்திகழ் கண்டனன் மயேந்திரப் பள்ளியுட்
கைத்தல மழுவனைக் கண்டடி பணிமினே **#333**

இறைவனை வழிபடற்கு மலர்களைக் கையால் ஏந்தி வருதல் போல, பல முத்துக்குவியல்களை அழகிய கடலானது அலைகளால் கரையினில் சேர்க்கத் திருமயேந்திரப் பள்ளியுள் வீற்றிருந்தருளும் இறைவனும், மை போன்று கருநிறம் கொண்ட கழுத்தையுடையவனும், கையில் மழு என்னும் ஆயுதத்தை ஏந்தியவனுமான சிவபெருமானைத் தரிசித்து அவன் திருவடிகளை வணங்குவீர்களாக.

திருமயேந்திரப்பள்ளி

சந்திரன் கதிரவன் றகுபுக ழயனொடும்
இந்திரன் வழிபட விருந்தவெம் மிறையவன்
மந்திர மறைவளர் மயேந்திரப் பள்ளியுள்
அந்தமி லழகனை யடிபணிந் துய்ம்மினே **#334**

சந்திரன், சூரியன், மிகுபுகழ்ப் பிரமன், இந்திரன் முதலியோர் வழிபட

விளங்கும் எம் இறைவனாய், வேதமந்திரங்கள் சிறப்படைய திருமயேந்திரப் பள்ளியில் வீற்றிருந்தருளும் அழிவில்லாத பேரழகனாகிய சிவபெருமானின் திருவடிகளை வணங்கி நன்மை அடைவீர்களாக.

திருமயேந்திரப்பள்ளி

சடைமுடி முனிவர்கள் சமைவொடும் வழிபட
நடநவில் புரிவின னறவணி மலரொடு
படர்சடை மதியினன் மயேந்திரப் பள்ளியுள்
அடல்விடை யுடையவ னடிபணிந் துய்ம்மினே **#335**

சடைமுடியுடைய முனிவர்கள் பூசைத்திரவியங்களைச் சேகரித்து வழிபட, திருமயேந்திரப்பள்ளியுள் வீற்றிருந்தருளுபவனும், திருநடனம் செய்பவனும், தேன் துளிக்கும் வாசனைமிக்க அழகிய மலர்களோடு பரந்து விரிந்த சடையில் சந்திரனைச் சூடியவனும், வலிமையுடைய எருதினை வாகனமாக உடையவனுமான சிவபெருமானின் திருவடிகளை வணங்கி நன்மை அடைவீர்களாக!

திருமயேந்திரப்பள்ளி

சிரமொரு பதுமுடைச் செருவலி யரக்கனைக்
கரமிரு பதுமிறக் கனவரை யடர்த்தவன்
மரவமர் பூம்பொழின் மயேந்திரப் பள்ளியுள்
அரவமர் சடையனை யடிபணிந் துய்ம்மினே **#336**

பத்துத் தலைகளையுடைய, போர் செய்யும் வலிமையுடைய அரக்கனான இராவணனின் இருபது கரங்களும் கெடுமாறு, கனத்த கயிலைமலையின் கீழ் அடர்த்த பெருமானாய், வெண்கடம்ப மரங்கள் நிறைந்த அழகிய சோலை சூழ்ந்த திருமயேந்திரப்பள்ளியுள் வீற்றிருந்தருளும் பாம்பணிந்த சடைமுடியுடைய சிவபெருமானின் திருவடிகளை வணங்கி நன்மை அடையுங்கள்.

திருமயேந்திரப்பள்ளி

நாகணைத் துயில்பவ னலமிகு மலரவன்
ஆகணைந் தவர்கழ லணையவும் பெறுகிலர்
மாகணைந் தலர்பொழின் மயேந்திரப் பள்ளியுள்
யோகணைந் தவன்கழல் உணர்ந்திருந் துய்ம்மினே **#337**

ஆதிசேடனாகிய பாம்புப் படுக்கையில் துயில்பவனான திருமாலும், அழகிய தாமரையில் வீற்றிருக்கும் பிரமனும் இறைவனின் அடிமுடிகளைத் தேட முற்பட்டு, பன்றி உருவெடுத்த திருமால் சிவனின் திருவடிகளை நெருங்கவும் இயலாதவரானார். (அன்ன உருவெடுத்த

பிரமன் திருமுடியை நெருங்க இயலாதவரானார் என்பதும் குறிப்பு.) ஆகாயமளாவிய பூஞ்சோலைகளையுடைய திருமயேந்திரப் பள்ளியில் யோக மூர்த்தியாய் வீற்றிருந்தருளும் சிவபெருமானின் திருவடிகளை உணர்ந்து தியானித்து நன்மை அடைவீர்களாக!

திருமயேந்திரப்பள்ளி

உடைதுறந் தவர்களு முடைதுவ ருடையரும்
படுபழி யுடையவர் பகர்வன விடுமினீர்
மடைவளர் வயலணி மயேந்திரப் பள்ளியுள்
இடமுடை யீசனை யிணையடி பணிமினே **#338**

ஆடையினைத் துறந்தவர்களாகிய சமணர்களும், மஞ்சள் உடை அணிபவர்களாகிய புத்தர்களும் மிக்க பழிக்கிடமாகக் கூறுவனவற்றைக் கேளாது விடுவீர்களாக. மடையின் மூலம் நீர் பாயும் வளமுடைய வயல்களையுடைய அழகிய மயேந்திரப்பள்ளியுள் வீற்றிருந்தருளும் சிவபெருமானின் திருவடிகளை வணங்குவீர்களாக.

திருமயேந்திரப்பள்ளி

வம்புலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியுள்
நம்பனார் கழலடி ஞானசம் பந்தன்சொல்
நம்பர மிதுவென நாவினா னவில்பவர்
உம்பரா ரெதிர்கொள வுயர்பதி யணைவரே **#339**

நறுமணம் கமழும் சோலைகளையுடைய அழகிய திருமயேந்திரப் பள்ளியுள் எவ்வுயிரும் விரும்பும் சிவபெருமானின் வீரக்கழலணிந்த திருவடிகளைப் போற்றி ஞானசம்பந்தன் அருளிய இத்திருப்பதிகத்தை 'இது நம்முடைய கடமை' என்ற உறுதியுடன் நாவினால் பாடித் துதிப்பவர்கள் தேவர்கள் எதிர்கொண்டு அழைக்க உயர்ந்த இடத்தினை அடைவார்கள்.

திருஏடகம்

திருஏடகம்,
பண் - கொல்லி

வன்னியு மத்தமு மதிபொதி சடையினன்
பொன்னிய றிருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட வடியவர்
இன்னிசை பாடல ரேடகத் தொருவனே #340

வன்னியும், ஊமத்த மலரும், சந்திரனும் தாங்கிய சடைமுடியுடைய சிவபெருமானின் பொன்போன்ற திருவடிகளைப் புதுமலர்களைக் கொண்டு பெருமையுடைய அந்தணர்கள் போற்றி வழிபடவும், அடியவர்கள் இன்னிசையுடன் பாடிப் போற்றவும் ஒப்பற்ற இறைவனான சிவபெருமான் திருவேடகத்தில் வீற்றிருந்தருளுகின்றான்.

திருஏடகம்

கொடிநெடு மாளிகை கோபுரங் குளிர்மதி
வடிவுற வமைதர மருவிய வேடகத்
தடிகளை யடிபணிந் தரற்றுமி னன்பினால்
இடிபடும் வினைகள்போ யில்லைய தாகுமே #341

கொடிகளையுடைய நீண்டு உயர்ந்த மாளிகையின் கோபுரம் குளிர்ந்த சந்திரனைத் தழுவுதலால் மதிபோல் ஒளிரும் திருவேடகத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் திருவடிகளைக் கீழே விழுந்து வணங்கி இறைவனுடைய புகழைக் கூறி அன்பினால் வழிபடுங்கள். நம்மைத் துன்புறுத்தும் தீவினைகள் யாவும் அழிந்துவிடும்.

திருஏடகம்

குண்டலந் திகழ்தரு காதுடைக் குழகனை
வண்டலம் பும்மலர்க் கொன்றைவான் மதியணி
செண்டலம் பும்விடைச் சேடனூ ரேடகம்
கண்டுகை தொழுதலுங் கவலைநோய் கழலுமே #342

காதில் இரு கந்தருவர்களைக் குண்டலமாகக் கொண்டு விளங்கும் அழகராய், வண்டுகள் ஒலிக்கின்ற கொன்றை மலரையும், வானில் விளங்கும் சந்திரனையும் சடைமுடியில் அணிந்து, மணியோசை ஒலிக்க வீரநடை போடும் இடபவாகனத்தின் மீது வீற்றிருந்தருளும் மேன்மையுடையவரான சிவபெருமானின் ஊர் திருவேடகமாகும். அத்திருத்தலத்தைத் தரிசித்துக் கைகூப்பி வணங்கிப் போற்ற,

மனக்கவலையால் வரும் நோய் நீங்கும்.

திருஏடகம்

ஏலமார் தருகுழ லேழையோ டெழில்பெறும்
கோலமார் தருவிடைக் குழகனா ருறைவிடம்
சாலமா தவிகளுஞ் சந்தனஞ் சண்பகம்
சீலமா ரேடகஞ் சேர்தலாஞ் செல்வமே **#343**

மயிர்ச்சாந்து தடவிய மணமிகு கூந்தலையுடைய உமாதேவியோடு, அழகிய இடபவாகனத்தில் ஏறும் அழகனான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமான ஆல், மாதவி, சந்தனம், செண்பகம் முதலியன மிகுந்து விளங்கும் சிறப்புடைய திருவேடகம் சென்று அவனை வழிபட்டால் செல்வம் பெருகும்.

திருஏடகம்

வரியணி நயனிநன் மலைமகண் மறுகிடக்
கரியினை யுரிசெய்த கறையணி மிடறினன்
பெரியவன் பெண்ணினோ டாணலி யாகிய
எரியவ னுறைவிட மேடகக் கோயிலே **#344**

செவ்வரி படர்ந்த கண்களையுடைய, நல்ல மலை மகளான உமாதேவி கலங்க, யானையின் தோலை உரித்த, விடம் அணிகண்டரான, பெருமை மிகுந்தவரான சிவபெருமான், பெண்ணாகவும், ஆணாகவும், அலியாகவும் விளங்கும் சோதி உருவினார். அவர் வீற்றிருந்தருளும் இடமாவது திருவேடகக் கோயிலாகும்.

திருஏடகம்

பொய்கையின் பொழிலுறு புதுமலர்த் தென்றலார்
வைகையின் வடகரை மருவிய வேடகத்
தையனை யடிபணிந் தரற்றுமின் னடர்தரும்
வெய்யவன் பிணிகெட வீடௌ தாகுமே **#345**

குளங்களிலும், சோலைகளிலும் அன்றலர்ந்த புதுமலர்களின் மணத்தைச் சுமந்து தென்றல் காற்று வீச, வைகை ஆற்றின் வடகரையிலுள்ள திருவேடகத்தில் வீற்றிருக்கும் தலைவனான சிவபெருமானின் திருவடிகளைப் பணிந்து அவனைப் போற்றிப் பாடுங்கள். அது இம்மையில் துன்பம்தரும் கொடிய நோய்களைத் தீர்த்து, மறுமையில் முத்திப்பேற்றினை எளிதாகக் கிடைக்கச் செய்யும்.

திருஏடகம்

தடவரை யெடுத்தவன் றருக்கிறத் தோளடர்

படவிர லூன்றியே பரிந்தவற் கருள்செய்தான்
மடவர லெருக்கொடு வன்னியு மத்தமும்
இடமுடைச் சடையினன் ஏடகத் திறைவனே **#346**
பெரிய கயிலைமலையை எடுத்த இராவணனின் செருக்கைக் கெடுத்துத் தோள்கள் நொருங்கும்படி காற்பெருவிரலை ஊன்றிப், பின்னர் தவறுணர்ந்து இராவணன் இசைத்து வழிபட அவனுக்குப் பரிவுடன் அருள்செய்த இறைவனாய், இளைய எருக்கு, வன்னி, ஊமத்தம் மலர்களை அணிந்த சடைமுடியுடைய சிவபெருமான் திருவேடகத்தில் வீற்றிருந்தருளும் இறைவன் ஆவான்.

திருஏடகம்

பொன்னுமா மணிகளும் பொருதிரைச் சந்தகில்
தன்னுளார் வைகையின் கரைதனிற் சமைவுற
அன்னமா மயனுமா லடிமுடி தேடியும்
இன்னவா றெனவொணான் ஏடகத் தொருவனே **#347**
பொன்னும், மணிவகைகளும், சந்தனம், அகில் ஆகிய மரங்களும் வீசுகின்ற அலைகள் வாயிலாகக் கொண்டுவந்து சேர்க்கப்படும் வைகையின் கரையில், அன்னப் பறவையாகப் பிரமன் திருமுடியையும், பன்றி வடிவாகத் திருமால் திருவடியையும் தேடியும் இன்னவெனக் காணொணாது விளங்கிய சிவபெருமான் திருவேடகத்தில் வீற்றிருந்தருளும் ஒப்பற்ற இறைவன் ஆவான்.

திருஏடகம்

குண்டிகைக் கையினர் குணமிலாத் தேரர்கள்
பண்டியைப் பெருக்கிடும் பளர்கள் பணிகிலர்
வண்டிரைக் கும்மலர்க் கொன்றையும் வன்னியும்
இண்டைசேர்க் குஞ்சடை யேடகத் தெந்தையே **#348**
கையில் குண்டிகையேந்திய சமணர்களும், இறை உண்மையை உணராத புத்தர்களும், உண்டு வயிற்றைப் பெருக்கச் செய்யும் பாவிகள். அவர்கள் இறைவனை வணங்காதவர்கள். அவர்களின் உரைகளைப் பொருளாகக் கொள்ளவேண்டா. வண்டுகள் மொய்க்கின்ற கொன்றை மலரையும், வன்னியையும் மாலையாக அணிந்த சடைமுடியுடைய, திருவேடகத்தில் வீற்றிருந்தருளும் எம் தந்தையாகிய சிவபெருமானை ஏத்தி வழிபடுங்கள்.

திருஏடகம்

கோடுசந் தனமகில் கொண்டிழி வைகைநீர்
ஏடுசென் றணைதரு மேடகத் தொருவனை

நாடுதென் புகலியுண் ஞானசம் பந்தன
பாடல்பத் திவைவல்லார்க் கில்லையாம் பாவமே **#349**

யானையின் தந்தம், சந்தனம், அகில் ஆகியவற்றை அலைகள் வாயிலாகக் கொண்டுவரும் வைகைநீரில் எதிர் நீந்திச் சென்ற திருவேடு தங்கிய திருவேடகம் என்னும் திருத்தலத்திலுள்ள ஒப்பற்ற இறைவனை நாடிப்போற்றிய, அழகிய புகலியில் அவதரித்த ஞானசம்பந்தன் அருளிய இப்பத்துப் பாடல்களையும் பக்தியுடன் ஓதவல்லவர்கட்குப் பாவம் இல்லை. அவர்கள் தீவினைகளிலிருந்து நீங்கப் பெற்றவர்கள் ஆவர்.

திருஉசாத்தானம்

திருஉசாத்தானம்

திருஉசாத்தானம்,
பண் - கொல்லி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மந்திரபுரீசுவரர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

நீரிடைத் துயின்றவன் றம்பிநீள் சாம்புவான்
போருடைச் சுக்கிரீ வன்அநு மான்றொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தவெம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே **#350**

பாற்கடலில் பள்ளிகொள்ளும் திருமாலின் அவதாரமான இராமனும், இலக்குமணனும், சாம்பவான், சுக்கிரீவன், அனுமன் ஆகியோரும் தொழுது வணங்கக் கருநிற நஞ்சை உண்டு காத்தருள் செய்த எம் பெருமைக்குரிய, எங்களை ஏவல்கொள்ளும் தலைவனான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவுசாத்தானம் ஆகும்.

திருஉசாத்தானம்

கொல்லையே றுடையவன் கோவண ஆடையன்
பல்லையார் படுதலைப் பலிகொளும் பரமனார்
முல்லையார் புறவணி முதுபதி நறைகமழ்
தில்லையா னுறைவிடந் திருவுசாத் தானமே **#351**

முல்லைநிலம் சார்ந்த எருதை (திருமாலை) இறைவன் வாகனமாக உடையவன். கோவண ஆடை உடையவன். குறிதரு கோலநற் குணத்தினா ரடிதொழ முன்பல்லிருந்த உலர்ந்த பிரமகபாலத்தை ஏந்திப் பிச்சையேற்கும் பரமன். முல்லைக்கொடிகளையுடைய முல்லை நிலத்தில், தேன் துளிக்கும் சோலைகளையுடைய அழகிய பழம்பதியான தில்லையில் விளங்குபவன். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவுசாத்தானம் ஆகும்.

திருஉசாத்தானம்

தாமலார் போலவே தக்கனார் வேள்வியை
ஊமனார் தங்கனா வாக்கினா னொருநொடிக்
காமனா ருடல்கெடக் காய்ந்தவெங் கண்ணுதல்
சேமமா வுறைவிடந் திருவுசாத் தானமே **#352**

தான் அயலார் போலத் தன் மாமனான தக்கன் செய்த வேள்வியை

ஊமன் கண்ட கனவு போலப் பயனற்ற தாக்கினான். ஒரு நொடியில் மன்மதனின் உடல் எரிந்து சாம்பலாகுமாறு செய்த நெற்றிக் கண்ணுடைய கடவுளாவான். அப்பெருமான் அடியவர்கட்கு நன்மை தரும் பொருட்டு வீற்றிருந்தருளும் இடம் திருவுசாத்தானம் ஆகும்.

திருஉசாத்தானம்

மறிதரு கரத்தினான் மால்விடை யேறியான்
குறிதரு கோலநற் குணத்தினா ரடிதொழ
நெறிதரு வேதியர் நித்தலு நியமஞ்செய்
செறிதரு பொழிலணி திருவுசாத் தானமே **#353**

இள மான்கன்றைத் திருக்கரத்தில் ஏந்தி, பெருமையுடைய இடப வாகனத்திலேறி, சிவவேடப் பொலிவுடைய நற்பண்புடைய அடியவர்கள் தன் திருவடியைத் தொழுது போற்றவும், சிவாகமநெறியில் ஒழுகும் அந்தணர்கள் நாள்தோறும் நியமத்துடன் பூசை செய்யவும் விளங்கும் சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் அடர்ந்த சோலைகள் சூழ்ந்த அழகிய திருவுசாத்தானம் ஆகும்.

திருஉசாத்தானம்

பண்டிரைத் தயனுமா லும்பல பத்தர்கள்
தொண்டிரைத் தும்மலர் தூவித்தோத் திரஞ்சொலக்
கொண்டிரைக் கொடியொடுங் குருகினி னல்லினம்
தெண்டிரைக் கழனிசூழ் திருவுசாத் தானமே **#354**

பண்டைக்காலம் முதல் மகிழ்ச்சியால் ஆரவாரித்துப் பிரமனும், திருமாலும், மற்றுமுள்ள பல பக்தர்களும் அடிமைத் திறத்தினால் மலர்களைத் தூவித் தோத்திரம் சொல்லி வழி பட, இறைவன் வீற்றிருந்தருளுவது, மீன் முதலிய இரைகளைக் கவரும் காக்கையோடு, நல்ல பறவை இனங்கள் தங்குகின்ற, நீர்வளமிக்க வயல்கள் சூழ்ந்த திருவுசாத்தானம் ஆகும்.

திருஉசாத்தானம்

மடவரல் பங்கினன் மலைதனை மதியாது
சடசட வெடுத்தவன் தலைபத்து நெரிதர
அடர்தர வூன்றியங் கேயவற் கருள்செய்தான்
திடமென வுறைவிடந் திருவுசாத் தானமே **#355**

உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு விளங்கும் இறைவன், கயிலைமலையை மதியாது பெயர்த்தெடுத்த இராவணனின் பத்துத் தலைகளும் நெரியும்படி தன் காற்பெருவிரலை ஊன்றி அம்மலையின்கீழ் அவனை அடர்த்து, பின்னர் இராவணன் தன்

தவறுணர்ந்து வழிபட அவனுக்கு அருள் செய்தவன். அப்பெருமான் உறுதியாக வீற்றிருந்தருளும் இடம் திருவுசாத்தானம் ஆகும்.

திருஉசாத்தானம்

ஆணலார் பெண்ணலார் அயனொடு மாலுக்கும்
காணொணா வண்ணத்தான் கருதுவார் மனத்துளான்
பேணுவார் பிணியொடும் பிறப்பறுப் பானிடம்
சேணுலா மாளிகைத் திருவுசாத் தானமே **#356**

இறைவர் ஆணுமல்லர். பெண்ணுமல்லர். பிரமனும், திருமாலும் காணொணாத வண்ணம் விளங்குபவர். தம்மை நினைந்து வழிபடும் அன்பர்களின் மனத்தில் நிறைந்துள்ளவர். தம்மை வழிபடும் அடியவர்களின் உடல்நோயை நீக்குவதோடு பிறவி நோயையும் தீர்ப்பவர். அப்பெருமானார் வீற்றிருந்தருளும் இடம் ஆகாயமளாவிய மாளிகைகள் உடைய திருவுசாத்தானம் ஆகும்.

திருஉசாத்தானம்

கானமார் வாழ்க்கையான் காரமண் டேரர்சொல்
ஊனமாக் கொண்டுநீ ருரைமினுய் யவெனில்
வானமார் மதிலணி மாளிகை வளர்பொழில்
தேனமா மதியந்தோய் திருவுசாத் தானமே **#357**

சமணர்களும், புத்தர்களும், இறையுண்மையை உணராது கூறும் சொற்கள் பயனற்றவை. நீங்கள் உய்ய வேண்டும் என்றால் சுடுகாட்டில் திருநடனம் செய்யும் இறைவன் வீற்றிருந்தருளுகின்ற, வானளாவிய உயர்ந்த மதில்களும், மாளிகைகளும், செழித்த சோலைகளும் சூழ்ந்த இனிய நிலவு தோயும் திருவுசாத்தானம் என்னும் திருத்தலத்தைப் போற்றி வழிபடுங்கள்.

திருஉசாத்தானம்

வரைதிரிந் திழியுநீர் வளவயற் புகலிமன்
திரைதிரிந் தெறிகடற் றிருவுசாத் தானரை
உரைதெரிந் துணருஞ்சம் பந்தனொண் தமிழ் வல்லார்
நரைதிரை யின்றியே நன்னெறி சேர்வரே **#358**

மலையிலிருந்து தன் தன்மை மாறுபட்டுப் பாயும் காவிரியின் நீர் வளமும், வயல் வளமும் மிகுந்த புகலியில் அவதரித்த ஞானசம்பந்தன், அலைவீசுகின்ற கடலையுடைய திருவுசாத்தானத்தில் வீற்றிருந்தருளும் இறைவனை உணர்ந்து போற்றிய இந்த ஒண் தமிழ்ப் பதிகத்தை ஓத வல்லவர்கள் நரை, திரை என வந்து தாக்கும் மூப்பின் தளர்ச்சியின்றி, இளமை மிடுக்குடன் வாழ்ந்து சிவஞான நெறியில் நிற்பர்.

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம்,
பண் - கொல்லி,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது - இதுவே விருத்தாசலம். ,
சுவாமிபெயர் : பழமலைநாதர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

வண்ணமா மலர்கொடு வானவர் வழிபட
அண்ணலா ராயிழை யாளொடு மமர்விடம்
விண்ணின்மா மழைபொழிந் திழியவெள் ளருவிசேர்
திண்ணிலார் புறவணி திருமுது குன்றமே **#359**

பல வண்ண மலர்களைக் கொண்டு வானவர்கள் வழிபடச் சிவபெருமான் அழகிய ஆபரணங்கள் அணிந்த உமாதேவியோடு இனிது வீற்றிருந்தருளும் இடமாவது, வானத்திலிருந்து மழை பொழிந்து வெள்ளருவியாகப் பாயச் செழித்த திண்மையான முல்லைநிலம் சூழ விளங்கும் அழகிய திருமுதுகுன்றம் ஆகும்.

திருமுதுகுன்றம்

வெறியுலாங் கொன்றையந் தாரினான் மேதகு
பொறியுலா மரவசைத் தாடியோர் புண்ணியன்
மறியுலாங் கையினான் மங்கையோ டமர்விடம் செறியுளார் புறவணி
திருமுது குன்றமே **#360**

வாசனை பொருந்திய கொன்றை மாலையை அணிந்து, படமெடுக்கும் புள்ளிகளையுடைய பாம்பை இடையில் கட்டி ஆடுகின்ற புண்ணிய மூர்த்தியான சிவபெருமான், இளமான் கன்றை ஏந்திய திருக்கரத்தை உடையவனாய், உமாதேவியோடு வீற்றிருந்தருளுகின்ற இடமானது சோலைகள் நிறைந்த அழகிய திருமுதுகுன்றம் ஆகும்.

திருமுதுகுன்றம்

ஏறினார் விடைமிசை இமையவர் தொழவுமை
கூறனார் கொல்புலித் தோலினார் மேனிமேல்
நீறனார் நிறைபுனற் சடையனார் நிகழ்விடம்
தேறலார் பொழிலணி திருமுது குன்றமே **#361**

இறைவன், இடபவாகனத்தில் ஏறித் தேவர்கள் தொழுது போற்ற, உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு கூறாகக் கொண்டு, கொல்லும் தன்மையுடைய புலியின் தோலை ஆடையாக அணிந்து, திருமேனியில்

திருவெண்ணீறு அணிந்து, நிறைந்த கங்கையைச் சடைமுடியில் தாங்கி வீற்றிருந்தருளும் இடமாவது, தேன் துளிகளையுடைய மலர்கள் விளங்கும் சோலைகள் சூழ்ந்த அழகிய திருமுதுகுன்றம் ஆகும்.

திருமுதுகுன்றம்

உரையினா ருறுபொரு ளாயினா னுமையொடும்
விரையினார் கொன்றைசேர் சடையினார் மேவிடம்
உரையினா ரொலியென வோங்குமுத் தாறுமெய்த்
திரையினா ரெறிபுனற் றிருமுது குன்றமே **#362**

இறைவன் வேதத்தால் நுவலப்படும் பொருளாக விளங்குபவன். உமாதேவியை உடனாகக் கொண்டு நறுமணம் கமழும் கொன்றை மலரைச் சடைமுடியில் அணிந்தவன். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம், பக்தர்கள் உரைக்கும் அரநாமத்தின் ஒலியென அலையோசை எழுப்பும், பெருகுகிற மணிமுத்தாறுடைய திருமுதுகுன்றம் ஆகும்.

திருமுதுகுன்றம்

கடியவா யினகுரற் களிற்றினைப் பிளிறவோர்
இடியவெங் குரலினோ டாளிசென் றிடுநெறி
வடியவாய் மழுவினன் மங்கையோ டமர்விடம்
செடியதார் புறவணி திருமுது குன்றமே **#363**

கனத்த குரலில் ஆண் யானையானது பிளிற, இடிபோன்ற குரலில் கர்ச்சிக்கும் சிங்கம் செல்லும் வழிகளில், கூரிய முனையுடைய மழுப்படை ஏந்தி, உமாதேவியோடு இறைவன் வீற்றிருந்தருளும் இடமாவது செடிகொடிகள் அடர்ந்த குறிஞ்சிப் புறவிடமான அழகிய திருமுதுகுன்றம் ஆகும்.

திருமுதுகுன்றம்

கானமார் கரியினீ ருரிவையார் பெரியதோர்
வானமார் மதியினோ டரவர்தா மருவிடம்
ஊனமா யினபிணி யவைகெடுத் துமையொடும்
தேனமார் பொழிலணி திருமுது குன்றமே **#364**

காட்டில் திரியும் யானையின் தோலை உரித்துப் போர்வையாகப் போர்த்திய இறைவன், அகன்ற வானத்தில் தவழும் சந்திரனையும், பாம்பையும் அணிந்து, உயிர்களைப் பற்றியுள்ள குற்றமான ஆணவம் என்னும் நோயைத் தீர்த்து, அருளும் பொருட்டு உமாதேவியோடு வீற்றிருந்தருளும் இடமாவது, தேன் துளிக்கும் பூஞ்சோலைகளையுடைய அழகிய திருமுதுகுன்றம் ஆகும்.

திருமுதுகுன்றம்

மஞ்சர்தா மலர்கொடு வானவர் வணங்கிட
வெஞ்சொலார் வேடரோ டாடவர் விரும்பவே
அஞ்சொலா ளுமையொடும் மமர்விட மணிகலைச்
செஞ்சொலார் பயிறருந் திருமுது குன்றமே **#365**

வலிமை மிகந்தவராகிய சிவபெருமானைத் தேவர்கள் மலர்தூவிப் போற்றி வணங்க, கொடுந்தொழில் செய்யும் வேடர்களும், பிற ஆடவர்களும் விரும்பித் தொழ, அழகிய இன்சொல் பேசும் உமாதேவியோடு இறைவர் வீற்றிருந்தருளும் இடம் வேதங்களை நன்கு கற்றவர்களும், பக்திப் பாடல்களைப் பாடுபவர்களும் வசிக்கின்ற திருமுதுகுன்றம் ஆகும்.

திருமுதுகுன்றம்

காரினா ரமர்தருங் கயிலைநன் மலையினை
ஏரினார் முடியிரா வணனெடுத் தானிற
வாரினார் முலையொடும் மன்னினார் மருவிடம்
சீரினார் திகழ்தருந் திருமுது குன்றமே **#366**

மழை பொழியும் கார்மேகம் போன்று உயிர் கட்கு அருள்புரியும் சிவபெருமான் வீற்றிருக்கும் நன்மைதரும் கயிலை மலையினை, அழகிய முடியுடைய இராவணன் எடுத்தபோது, அவனை நலியச் செய்த இறைவன், கச்சணிந்த முலையுடைய உமாதேவியோடு வீற்றிருந்தருளும் இடம் சிறப்பு மிக்க திருமுதுகுன்றம் ஆகும்.

திருமுதுகுன்றம்

ஆடினார் கானகத் தருமறை யின்பொருள்
பாடினார் பலபுகழ்ப் பரமனா ரிணையடி
ஏடினார் மலர்மிசை யயனுமா லிருவரும்
தேடினா ரறிவொணார் திருமுது குன்றமே **#367**

இறைவர் சுடுகாட்டில் திருநடனம் ஆடியவர். அரிய வேதங்களை அருளி, அவற்றின் உட்பொருளை விரித்தோதியவர். எவ்வுயிர்கட்கும் தலைவரான அவர் தம் திருவடிகளை இதழ்களையுடைய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும், திருமாலும் தேடியும் அறியப்படவொண்ணாதவர். அப்பெருமானார் வீற்றிருந்தருளும் இடம் திருமுதுகுன்றம் ஆகும்.

திருமுதுகுன்றம்

மாசுமெய் தூசுகொண் டுழல்சமண் சாக்கியர்

பேசுமெய் யுளவல்ல பேணுவீர் காணுமின்
வாசமார் தருபொழில் வண்டினம் மிசைசெயத்
தேசமார் புகழ்மிகுந் திருமுது குன்றமே **#368**

அழுக்கு உடம்பையும், அழுக்கு உடையையுமுடைய சமணர்களும், புத்தர்களும் கூறும் மொழிகள் மெய்ம்மையானவை அல்ல. வாசனை பொருந்திய சோலைகளில் வண்டினங்கள் இசைக்க, அழகும், புகழும் மிகுந்த திருமுதுகுன்றம் என்னும் திருத்தலத்தைத் தரிசித்து, அங்குள்ள இறைவனைப் போற்றி வழிபடுங்கள்.

திருமுதுகுன்றம்

திண்ணினார் புறவணி திருமுது குன்றரை
நண்ணினான் காழியுண் ஞானசம் பந்தன்சொல்
எண்ணினா னீரைந்து மாலையு மியலுமாப்
பண்ணினாற் பாடுவார்க் கில்லையாம் பாவமே **#369**

செழுமையான சோலைகளையுடைய திருமுதுகுன்றத்தில் வீற்றிருந்தருளும் இறைவனை மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒன்றுபட வழிபட்டு, சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தன் அருளிய இத்திருப்பதிகத்தைப் பண்ணிசையோடு பாடவல்லவர்களின் பாவம் நீங்கும்.

திருத்தென்குடித்திட்டை

திருத்தென்குடித்திட்டை

திருத்தென்குடித்திட்டை,
பண் - கொல்லி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பசுபதீசுவரர்.
தேவியார் : உலகநாயகியம்மை.

முன்னைநான் மறையவை முறைமுறை குறையொடும்
தன்னதாள் தொழுதெழ நின்றவன் றன்னிடம்
மன்னுமா காவிரி வந்தடி வருடநல்
செந்நெலார் வளவயல் தென்குடித் திட்டையே **#370**

நான்கு மறைகளும் நூல்களில் விதித்த முறையில் தொழுது போற்ற, உயிர்களெல்லாம் தங்கள் குறைகளை முறையிட்டுத் தன் திருவடிகளை வணங்கிப் போற்றச் சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, காவிரிநீர் வாய்க்கால்கள் வழிவந்து செந்நெல் விளையும் வயல்களை வளப்படுத்தும் சிறப்புடைய தென்குடித்திட்டை ஆகும்.

திருத்தென்குடித்திட்டை

மகரமா டுங்கொடி மன்மத வேடனை
நிகரலா காநெருப் பெழவிழித் தானிடம்
பகரவா ணித்திலம் பன்மக ரத்தொடும்
சிகரமா ளிகைதொகுந் தென்குடித் திட்டையே **#371**

மீன்கொடியுடைய மன்மதன் எரிந்து சாம்பலாகுமாறு நெருப்புப்பொறி பறக்க நெற்றிக் கண்ணைத் திறந்து விழித்த ஒப்பற்ற சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, வாள் போல் மின்னும் முத்துக்களும், பல அணிவகைகளும் பதிக்கப்பெற்று உயர்ந்து விளங்கும் மாளிகைகளையுடைய திருத்தென்குடித்திட்டை என்பதாகும்.

திருத்தென்குடித்திட்டை

கருவினா லன்றியே கருவெலா மாயவன்
உருவினா லன்றியே யுருவுசெய் தானிடம்
பருவநாள் விழவொடும் பாடலோ டலும்
திருவினான் மிகுபுகழ்த் தென்குடித் திட்டையே **#372**

இறைவன் கருவயப்பட்டுப் பிறவாமலே எல்லாப் பொருள்கட்கும் கருப்பொருளாக விளங்குபவன். தனக்கென ஒரு குறிப்பிட்ட உருவமில்லாத இறைவன் பிற பொருள்களெலாம் உருவு கொள்ளும்படி

தோற்றுவித்து அருள்பவன். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது பருவகாலங்களிலும், திருவிழாக்காலங்களிலும் பாடலும், ஆடலும் செல்வத்தால் மிகச் சிறப்புற நடக்கும் புகழையுடைய திருத்தென்குடித்திட்டை என்பதாகும். கருவினாலன்றி என்றது சிவபெருமான் கருவயப்பட்டுப் பிறவான் என்பதை உணர்த்தும்.

"பிறவாதே தோன்றிய பெம்மான் தன்னை" (தி.6.ப.11 பா.1) என்ற திருநாவுக்கரசர் திருவாக்கை இங்கு நினைவுகூர்க. பிறப்பில்லாத அவனுக்கு இறப்புமில்லை. அவன் அநாதி நித்தப்பொருள். (அநாதி - தோற்றமும், அழிவுமில்லாதது) உருவினாலன்றி - தனக்கென ஒரு குறிப்பிட்ட உருவம் இல்லாதவன். தன்பொருட்டு உருவு கொள்ளாது அடியார் பொருட்டு உருவம் கொள்பவன். "நானாவித உருவால் நமை ஆள்வான்" (தி.1 ப.9 பா.5) என்ற திருஞானசம்பந்தர் திருவாக்கையும், "இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என்ற திருநாவுக்கரசர் திருவாக்கையும் (தி.6 ப.97 பா.10) இங்கு நினைவுகூர்க.

<u>திருத்தென்குடித்திட்டை</u>

உண்ணிலா வாவியா யோங்குதன் றன்மையை
விண்ணிலா ரறிகிலா வேதவே தாந்தனூர்
எண்ணிலா ரெழின்மணிக் கனகமா ளிகையிளந்
தெண்ணிலா விரிதருந் தென்குடித் திட்டையே **#373**

இறைவன் உயிருக்குள் உயிராய் ஓங்கி ஒளிரும் தன்மையைத் தேவர்களும் அறிகிலர். அவன் வேத உபநிடத உட்பொருளாக விளங்குபவன். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம் அழகிய மணிகள் பதிக்கப்பெற்ற பொன்மாளிகையின் மேல், தெளிந்த நிலவின் ஒளி பரவும் திருத்தென்குடித்திட்டை என்பதாகும்.

<u>திருத்தென்குடித்திட்டை</u>

வருந்திவா னோர்கள்வந் தடையமா நஞ்சுதான்
அருந்தியா ரமுதவர்க் கருள்செய்தா னமருமூர்
செருந்திபூ மாதவிப் பந்தர்வண் செண்பகம்
திருந்துநீள் வளர்பொழில் தென்குடித் திட்டையே **#374**

திருப்பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய நஞ்சின் வெப்பத்தால் துன்புற்ற தேவர்கள் தன்னைத் தஞ்சமென வந்தடைய அவர்களுக்கு இரங்கி நஞ்சைத் தான் அருந்தி அமுதத்தை அவர்கட்கு அருளிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் நகர், செருந்தி, மாதவி, செண்பகம் இவை மிகுதியாக வளரும் நீண்ட சோலைகளை உடைய

தென்குடித்திட்டையாகும்.

திருத்தென்குடித்திட்டை

ஊறினா ரோசையுள் ஒன்றினா ரொன்றிமால்
கூறினா ரமர்தருங் குமரவேள் தாதையூர்
ஆறினார் பொய்யகத் தையுணர் வெய்திமெய்
தேறினார் வழிபடுந் தென்குடித் திட்டையே **#375**

இறைவர் எப்பொருள்களிலும் நிறைந்தவர். எல்லா ஓசைகளிலும் ஒன்றியவர். திருமாலை ஒரு கூறாகக் கொண்டவர். குமரக்கடவுளின் தந்தை. அப்பெருமானார் வீற்றிருந்தருளும் நகரானது ஆறு பகைகளாகிய காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் இவற்றைக் களைந்து, நிலையற்ற பொருள்கள்மேல் செல்லும் அவாவினை அடக்கி, மனத்தைப் பொறி வழிச் செல்ல விடாது ஒருமுகப்படுத்தி, சிவனே மெய்ப்பொருள் எனத் தெளிந்தவர்கள் வழிபடும் திருத்தென்குடித்திட்டை என்பதாகும்.

திருத்தென்குடித்திட்டை

கானலைக் கும்மவன் கண்ணிடந் தப்பநீள்
வானலைக் குந்தவத் தேவுவைத் தானிடம்
தானலைத் தெள்ளமூர் தாமரைத் தண்டுறை
தேனலைக் கும்வயல் தென்குடித் திட்டையே **#376**

காட்டிலுள்ள உயிர்களை வருத்தும் வேடர் குலத்தவராகிய கண்ணப்ப நாயனார் கண் இடந்து அப்பியபோது, தேவர்களும் பொறாமையால் வருந்தும்படி, தவத்தையுடைய கண்ணப்பரைத் தெய்வமாகச் செய்தான் சிவபெருமான். அப் பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது தெளிந்த நீர்நிலைகளில் மலர்ந்துள்ள தாமரைகளில் தண்டிலிருந்து தேன்பெருகிப் பாயும் வயல்வளமுடைய திருத்தென்குடித்திட்டை என்பதாகும்.

திருத்தென்குடித்திட்டை

மாலொடும் பொருதிறல் வாளரக் கன்னெரிந்
தோலிடும் படிவிர லொன்றுவைத் தானிடம்
காலொடுங் கனகமூக் குடன்வரக் கயல்வரால்
சேலொடும் பாய்வயல் தென்குடித்திட்டையே **#377**

திருமாலின் அவதாரமான இராமனோடும் போர் புரியும் வல்லமைபெற்ற அரக்கனான இராவணன் கயிலைமலையின் கீழ்ச் சிக்குண்டு ஓலமிட்டு அலறும்படி தன் காற்பெருவிரலை ஊன்றிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, கால்வாய் வழியாகச் செல்லும் நீரில் பொன்னிற மூக்குடைய கயல், வரால், சேல் போன்ற மீன்கள் வந்து

பாயும் வயல்களையுடைய திருத்தென்குடித்திட்டை என்பதாகும்.

திருத்தென்குடித்திட்டை

நாரணன் றன்னொடு நான்முகன் றானுமாய்க்
காரணன் னடிமுடி காணவொண் ணானிடம்
ஆரணங் கொண்டுபூ சுரர்கள்வந் தடிதொழச்
சீரணங் கும்புகழ்த் தென்குடித் திட்டையே **#378**

திருமாலும், பிரமனும் தேடியும் அடிமுடி காணவொண்ணாதவாறு விளங்கிய, உலகிற்கு நிமித்த காரணமான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், இப்பூவுலக தேவர்கள் என்று சொல்லப்படும் அந்தணர்கள் வேதம் ஓதித் தன் திருவடிகளை வணங்குமாறு சிறந்த தெய்வத்தன்மையுடைய புகழுடன் சிவபெருமான் விளங்கும் திருத்தென்குடித்திட்டை என்பதாகும்.

திருத்தென்குடித்திட்டை

குண்டிகைக் கையுடைக் குண்டரும் புத்தரும்
பண்டுரைத் தேயிடும் பற்றுவிட் டீர்தொழும்
வண்டிரைக் கும்பொழிற் றண்டலைக் கொண்டலார்
தெண்டிரைத் தண்புனல் தென்குடித் திட்டையே **#379**

கமண்டலம் ஏந்திய கையுடைய சமணர்களும், புத்தர்களும் சொல்லும் பொருத்தமில்லாத உரைகளைப் பற்றி நில்லாதீர். வண்டுகள் ஒலிக்கும் சோலையின் உச்சியில் குளிர்ந்த மேகங்கள் தவழ, தெளிந்த அலைகளையுடைய குளிர்ச்சியான ஆறுபாயும் திருத்தென்குடித்திட்டைச் சார்ந்து இறைவனை வழிபடுங்கள்.

திருத்தென்குடித்திட்டை

தேனலார் சோலைசூழ் தென்குடித் திட்டையைக்
கானலார் கடிபொழில் சூழ்தருங் காழியுள்
ஞானமார் ஞானசம் பந்தன செந்தமிழ்
பானலார் மொழிவலார்க் கில்லையாம் பாவமே **#380**

தேன் துளிக்கும் மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த திருத்தென்குடித்திட்டையைப் போற்றி, கடற்கரையின்கண் அமைந்துள்ள நறுமணமிக்க சோலைகள் சூழ்ந்த சீகாழியில் அவதரித்த, சிவஞானம் நிறைந்த ஞானசம்பந்தன் அருளிய இச் செந்தமிழ்ப்பாக்களைப் பாடவல்லவர்கட்குப் பாவம் இல்லை.

திருக்காளத்தி

திருக்காளத்தி

திருக்காளத்தி,
பண் - கொல்லி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காளத்திநாதர்.
தேவியார் : ஞானப்பூங்கோதையாரம்மை.

சந்தமா ரகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினி லுமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையா ரிணையடி யென்மனத் துள்ளவே **#381**

சந்தனம், அகில், சாதிக்காய், தேக்கு ஆகிய மரங்களை அலைகளால் உந்தித் தள்ளிவரும் சிறப்பான பொன்முகலி என்னும் ஆற்றின் கரையில், தென்றல் காற்றும் வீசும் சோலைகள் வளர்ந்து பெருக, வள்ளல் தன்மையுடைய எம் தந்தையாகிய காளத்திநாதர் உமாதேவியோடு, அவருடைய திருவடிகள் எம் மனத்தில் பதியுமாறு வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்காளத்தி

ஆலமா மரவமோ டமைந்தசீர்ச் சந்தனம்
சாலமா பீலியுஞ் சண்பக முந்தியே
காலமார் முகலிவந் தணைதரு காளத்தி
நீலமார் கண்டனை நினையுமா நினைவதே **#382**

ஆல், மா, குங்கும மரம், சந்தனம் ஆகிய மரங்களும், மிகுதியான மயிற்பீலியும், சண்பகமும் அலைகளால் தள்ளப்பட்டுப் பருவக்காலங்களில் நிறைகின்ற பொன்முகலி என்னும் ஆற்றின் கரையில் அமைந்துள்ள திருக்காளத்தி என்னும் திருத்தளத்தில் வீற்றிருந்தருளும் நீலகண்டனான இறைவனை எவ்வகையில் நினைந்து வழிபடுதல் பொருந்துமோ அத்தன்மையில் நினைந்து வழிபடுதல் நம் கடமையாகும்.

திருக்காளத்தி

கோங்கமே குரவமே கொன்றையம் பாதிரி
மூங்கில்வந் தணைதரு முகலியின் கரையினில்
ஆங்கமர் காளத்தி யடிகளை யடிதொழ
வீங்குவெந் துயர்கெடும் வீடெளி தாகுமே **#383**

கோங்கு, குரவம், கொன்றை, பாதிரி, மூங்கில் ஆகிய மரங்களைத் தள்ளிக் கொண்டுவரும் பொன்முகலி ஆற்றின் கரையில் வீற்றிருக்கும் காளத்திநாதரின் திருவடிகளைத் தொழுது போற்ற, பெருகிவரும் கொடிய துன்பம் கெடும். முத்திப்பேறு எளிதாகக் கைகூடும்.

திருக்காளத்தி

கரும்புதேன் கட்டியுங் கதலியின் கனிகளும்
அரும்புநீர் முகலியின் கரையினி லணிமதி
ஒருங்குவார் சடையினன் காளத்தி யொருவனை
விரும்புவா ரவர்கடாம் விண்ணுல காள்வரே **#384**

கரும்பு, தேன் கட்டி, வாழைக்கனி ஆகியவற்றை விளைவிக்கும் நீர்வளமுடைய பொன்முகலி ஆற்றின் கரையில், அழகிய பிறைச்சந்திரனை நீண்ட சடையில் சூடி வீற்றிருந்தருளும் ஒப்பற்ற காளத்திநாதரை விரும்பிப் பணிபவர்கள் விண்ணுலகை ஆள்வார்கள்.

திருக்காளத்தி

வரைதரு மகிலொடு மாமுத்த முந்திய
திரைதரு முகலியின் கரையினிற் றேமலர்
விரைதரு சடைமுடிக் காளத்தி விண்ணவன்
நிரைதரு கழலிணை நித்தலும் நினைமினே **#385**

மலையில் வளரும் அகிலும் முத்துக்களும் அலைகளால் தள்ளப்பட்டு வரும் பொன்முகலி ஆற்றின் கரையில், தேன் துளிக்கின்ற நறுமண மலர்களைச் சடைமுடியில் அணிந்து விளங்கும், காளத்தியிலுள்ள தேவாதி தேவனாகிய சிவபெருமானின் ஒலிக்கின்ற வீரக்கழல்களை அணிந்த திருவடிகளைத் தினந்தோறும் நினைந்து போற்றி வழிபடுவீர்களாக.

திருக்காளத்தி

முத்துமா மணிகளு முழுமலர்த் திரள்களும்
எத்துமா முகலியின் கரையினி லெழில்பெறக்
கத்திட வரக்கனைக் கால்விர லூன்றிய
அத்தன்றன் காளத்தி அணைவது கருமமே **#386**

இராவணன் கயிலைமலையின் கீழ் நெரியும்படி தன் காற்பெருவிரலை ஊன்றிய சிவபெருமான், முத்துக்களும், மணிகளும், மலர்க்கொத்துக்களும் அலைகளால் தள்ளப்பட்டு வரும் பொன்முகலி ஆற்றின் கரையில் அமைந்துள்ள அழகிய திருக்காளத்தி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றான். அத்திருத்தலத்தை அடைந்து அப்பெருமானை வணங்குதல் நம் கடமையாகும்.

திருக்காளத்தி

மண்ணுமா வேங்கையும் மருதுகள் பீழ்ந்துந்தி
நண்ணுமா முகலியின் கரையினி னன்மைசேர்
வண்ணமா மலரவன் மாலவன் காண்கிலா
அண்ணலார் காளத்தி யாங்கணைந் துய்ம்மினே **#387**

வேங்கை, மருது ஆகிய மரங்கள் வேருடன் வீழ்த்தப்பட்டுச் சேற்று மண்ணுடன் கலந்து தள்ளப்பட்டு வரும் பொன்முகலியாற்றின் கரையில், அழகிய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும், திருமாலும் காண்பதற்கு அரியவனும், எவ்வுயிர்கட்கும் நன்மையே செய்கின்றவனுமான சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான். அத்திருத்தலத்தை அடைந்து வணங்கிப் போற்றி உய்தி பெறுங்கள்.

திருக்காளத்தி

வீங்கிய வுடலினர் விரிதரு துவருடைப்
பாங்கிலார் சொலைவிடும் பரனடி பணியுமின்
ஓங்குவண் காளத்தி யுள்ளமோ டுணர்தர
வாங்கிடும் வினைகளை வானவர்க் கொருவனே **#388**

பருத்த உடலுடைய சமணர்களும், புத்தர்களும் இறையுண்மையை உணராது கூறும் சொற்களைக் கை விடுக. இறைவனுடைய திருவடிகளை வணங்கிப் போற்றுங்கள். வளமுடன் ஓங்கும் வள்ளலாகிய திருக்காளத்திநாதனை உள்ளத்தால் உணர்ந்து மனம் ஒன்றி வழிபட்டால் தேவர்களுக்கெல்லாம் தலைவனான அச்சிவபெருமான், வழிபடும் உயிர்களின் வினைகளைத் தீர்த்து நன்மை செய்வான்.

திருக்காளத்தி

அட்டமா சித்திகள் அணைதரு காளத்தி வட்டவார்
சடையனை வயலணி காழியான்
சிட்டநான் மறைவல ஞானசம் பந்தன்சொல்
இட்டமாப் பாடுவார்க் கில்லையாம் பாவமே **#389**

அட்டமா சித்திகளைத் தரும் திருக்காளத்தியில் வீற்றிருந்தருளும் நீண்ட சடைமுடியுடைய சிவபெருமானைப் போற்றி, வயல் வளமிக்க அழகிய சீகாழியில் அவதரித்த நான்கு வேதங்களையும் நன்கு கற்றுவல்ல ஞானசம்பந்தன் அருளிய இத்திருப்பதிகத்தை விரும்பி ஓதவல்லவர்கட்குப் பாவம் இல்லை.

திருப்பிரமபுரம்

சீர்காழி

திருப்பிரமபுரம்,
பண் - கொல்லி, திருப்பிரமபுர மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

கரமுனம்மல ராற்புனன்மலர்
தூவியேகலந் தேத்துமின்
பரமனூர்பல பேரினாற்பொலி
பத்தர்சித்தர்கள் தாம்பயில்
வரமுன்னவ்வருள் செய்யவல்லவெம்
மையனாடொறு மேயசீர்ப்
பிரமனூர்பிர மாபுரத்துறை
பிஞ்ஞகன்னருள் பேணியே **#390**

யாவர்க்கும் மேலான பொருளான சிவபெருமானது ஊரும் பல திருப்பெயர்களை உடையது. பக்தர்களும், சித்தர்களும் போற்றி வணங்க, அவர்கள் வேண்டும் வரங்களை நல்கி அருள் செய்யவல்ல என் தலைவன் நாள்தோறும் விரும்பி வீற்றிருந்தருளும் சிறப்புடைய பிரமனூர் ஆகிய திருப்பிரமபுரத்தில் எழுந்தருளியுள்ள பிஞ்ஞகனின் அருளைப் போற்றிக் கைத்தாமரையால் தூய நீரை அபிடேகம் செய்து, மலர்களைத் தூவி ஒரு நெறிய மனம் வைத்து வழிபடுவீர்களாக.

சீர்காழி

விண்ணிலார்மதி சூடினான்விரும்
பும்மறையவன் றன்றலை
உண்ணநன்பலி பேணினானுல
கத்துளூனுயி ரான்மலைப்
பெண்ணினார்திரு மேனியான்பிர
மாபுரத்துறை கோயிலுள்
அண்ணலாரரு ளாளனாயமர்
கின்றவெம்முடை யாதியே **#391**

இறைவர் விண்ணிலே விளங்கும் சந்திரனைச் சடையில் சூடியவர். விரும்பும் நான்மறைகளை ஓதுகின்ற பிரமனின் மண்டையோட்டை உண்கலனாகக் கொண்டு பிச்சை ஏற்றவர். உலகத்து உயிர்கட்கு உடம்பும், உயிருமானவர். மலைமகளான உமாதேவியைத் தம்

திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டவரும், திருப்பிரமபுரத்துறைகின்ற கோயிலினுள் அருளைப் பொழிபவராய் அமர்ந்துள்ள தலைவரும் ஆகிய எம்முடைய சிவபெருமானே ஆதிப்பிரான் ஆவார்.

சீர்காழி

எல்லையில்புக ழாளனும்மிமை
யோர்கணத்துடன் கூடியும்
பல்லையார்தலை யிற்பலியது
கொண்டுகந்த படிறனுந்
தொல்லைவையகத் தேறுதொண்டர்கள்
தூமலர்சொரிந் தேத்தவே
மல்லையம்பொழி றேன்பில்கும்பிர
மாபுரத்துறை மைந்தனே **#392**

இறைவர் எல்லையற்ற புகழ் உடையவர். தேவர்கள் கூட்டம் சூழ விளங்குபவர். பற்களையுடைய பிரமனின் மண்டையோட்டில் பிச்சையேற்று மகிழ்ந்த வஞ்சகர். அவர் பழமையான இந்நிலவுலகில் தத்துவங்களைக் கடந்து ஏறிய தெளந்த அறிவுடைய தொண்டர்கள் தூய மலர்களைத் தூவி ஏத்தி வழிபட, வளம் மிக்க அழகிய சோலைகளில் தேன் சொட்டும் திருப்பிரமபுரத்துக் கோயிலில் வீற்றிருந்தருளுகின்ற வலிமையுடைய சிவபெருமானே யாவார்.

சீர்காழி

அடையலார்புரம் சீறியந்தண
ரேத்தமாமட மாதொடும்
பெடையெலாங்கடற் கானல்புல்கும்பிர
மாபுரத்துறைகோயிலான்
றொடையலார்நறுங் கொன்றையான்றொழி
லேபரவிநின் றேத்தினால்
இடையிலார்சிவ லோகமெய்துதற்
கீதுகாரணங் காண்மினே **#393**

பகையசுரர்களின் மூன்று புரங்களையும் கோபித்து அழித்து, அந்தணர்கள் போற்றி வணங்க, உமா தேவியோடு, பெண் பறவைகள் தங்கள் ஆண் பறவைகளுடன் கூடும் கடற்கரைச் சோலைகளையுடைய திருப்பிரமாபுரத்தில் கோயில் கொண்டருளியவன் சிவபெருமான். இடையீடில்லாதவர்களாய்ச் சிவலோகம் சென்று அடைவதற்கு, நறுங்கொன்றை மலர்களை மாலையாக அணிந்த சிவபெருமானின் வழிபாட்டிற்குரியவைகளைச் செய்து, அவன் அருட்செயல்களைப்

போற்றி வழிபடும் நெறியே சாதனமாகும் என்பதை அறிவீர்களாக.

சீர்காழி

வாயிடைம்மறை யோதிமங்கையர்
வந்திடப்பலி கொண்டுபோய்ப்
போயிடம்மெரி கானிடைப்புரி
நாடகம்மினி தாடினான்
பேயொடுங்குடி வாழ்வினான்பிர
மாபுரத்துறை பிஞ்ஞகன்
றாயிடைப்பொரு டந்தையாகுமென்
றோதுவார்க்கரு டன்மையே **#394**

இறைவன் தன் திருவாயால் வேதங்களை அருளிச் செய்தவன். தாருகாவனத்து முனிபத்தினிகள் வந்து பிச்சையிடப் பிரமகபாலத்தில் பலிஏற்று, சுடுகாட்டையே அரங்கமாக் கொண்டு நடனம் ஆடுபவன். பேய்க் கணங்களுடன் கூடி வாழ்பவன். திருப்பிரமாபுரத்துக் கோயிலில் வீற்றிருந்தருளுகின்ற பிஞ்ஞகனாகச் சிவபெருமானே, பெற்ற தாயும், தந்தையும், மற்றுமுள்ள அனைத்துப் பொருளுமாய் விளங்குபவன் என்பதை உணர்ந்து ஓதுபவர்கட்கு அவன் அருள்செய்பவன்.

சீர்காழி

ஊடினாலினி யாவதென்னுயர்
நெஞ்சமேயுறு வல்வினைக்
கோடிநீயுழல் கின்றதென்னழ
லன்றுதன்கையி லேந்தினான்
பீடுநேர்ந்தது கொள்கையான்பிர
மாபுரத்துறை வேதியன்
ஏடுநேர்மதி யோடராவணி
யெந்தையொன்றுநின் றேத்திடே **#395**

உயர் நெஞ்சமே! என் சொல்வழி நில்லாது பிணங்கினால் அதனால் உனக்கு ஆகப்போவது என்ன? வல்வினையை ஈட்டுவதற்கென்றே நீ ஓடி உழல்வது தான் என்ன? பண்டைக்காலத்தில் தன் திருக்கரத்தில் நெருப்பேந்தியவன் சிவபெருமான். தன்னை வழிபடும் அடியவர்கட்குப் பேரின்பத்தை வழங்கும் தன்மையன். திருப்பிரமாபுரத்து வீற்றிருந்தருளும் வேதங்களை அருளிச் செய்தவனும், மலரை ஒத்த பிறைச் சந்திரனையும், பாம்பையும் அணிந்தவனுமான சிவபெருமானை எம் தந்தை என்று போற்றி வழிபடுவீர்களாக.

சீர்காழி

செய்யன்வெள்ளிய னொள்ளியார்சில
ரென்றுமேத்தி நினைந்திட
ஐயனாண்டகை யந்தணனரு
மாமறைப்பொரு ளாயினான்
பெய்யுமாமழை யானவன்பிர
மாபுரமிடம் பேணிய
வெய்யவெண்மழு வேந்தியைந்நினைந்
தேத்துமின்வினை வீடவே **#396**

இறைவன் சிவந்த திருமேனியுடையவன். வெள்ளிமலை எனப்படும் கயிலைக்கு நாயகன். சிவஞானம் பெற்ற பெருமக்களால் எக்காலத்திலும் போற்றப்பட்டு வணங்கப்படும் தலைவன். அளவில்லா ஆற்றலும், எவ்வுயிரிடத்தும் பேரிரக்கமும் உடையவன். அரிய நான்மறைகளின் உட்பொருளாய் விளங்குபவன். பெய்யும் மழைபோன்றவன். திருப்பிரமாபுரத்தில் வீற்றிருந்தருளும் மழுப்படையேந்திய சிவபெருமானை உங்கள் வினைகள் நீங்க வழிபடுவீர்களாக!

<u>சீர்காழி</u>

கன்றொருக்கையி லேந்திநல்விள
வின்கனிபட நூறியுஞ்
சென்றொருக்கிய மாமறைப்பொரு
டேர்ந்தசெம்மல ரோனுமாய்
அன்றரக்கனைச் செற்றவன்னடி
யும்முடியவை காண்கிலார்
பின்றருக்கிய தண்பொழிற்பிர
மாபுரத்தரன் பெற்றியே **#397**

ஒருகையால் பசுவின் கன்றைப்பற்றி விளமரத்தின் கனியை அழித்த திருமாலும், தொகுக்கப்பட்ட வேதங்களின் பொருளை நன்கு கற்ற பிரமனும், அன்று தன்காற் பெருவிரலை ஊன்றி இராவணனைக் கயிலையின்கீழ் நெருக்கிய சிவபெருமானுடைய திருவடியையும், திருமுடியையும் தேடியும் காணாதவராயினர். அப்பெருமான் அருள் தன்மையும், ஆற்றலும் கொண்டு எழுச்சிமிக்க குளிர்ந்த சோலைகளையுடைய திருப்பிரமபுரத்து வீற்றிருந்தருளுகின்றான்.

<u>சீர்காழி</u>

உண்டுடுக்கைவிட் டார்களும்முயர்
கஞ்சிமண்டைகொள் தேரரும்
பண்டடக்கு சொற்பேசும்அப்பாரி
வொன்றிலார்கள்சொற் கொள்ளன்மின்

தண்டொடக்குவன் சூலமுந்தழன்
மாமழுப்படை தன்கையிற்
கொண்டொடுக்கிய மைந்தனெம்பிர
மாபுரத்துறை கூத்தனே **#398**

உணவை உண்டு ஆடையைக் கைவிட்ட சமணர்களும், மண்டை என்னும் பாத்திரத்தில் கஞ்சியேற்று உண்ணும் புத்தர்களும் மக்களிடம் பரிவில்லாதவர்கள். உயர்ந்தவையும் தொன்றுதொட்டு வருவனவுமாகிய வேத ஆகம நூல்களைப் பழித்துப் பேசுபவர். அவர்கள் சொற்களைக் கொள்ள வேண்டா. வீணை,அக்குமாலை, சூலம், நெருப்பு, பெரிய மழுப்படை இவற்றைத் தன்கையில் கொண்டு இவ்வுலகமனைத்தையும் ஒடுக்கி அருளும் வல்லமையுடையவன் எம் திருப்பிரமபுரத்து வீற்றிருந்தருளும் கூத்தனாகிய சிவபெருமானேயாவான். அவனை வணங்கிப் போற்றி உய்வீர்களாக!

<u>சீர்காழி</u>

பித்தனைப்பிர மாபுரத்துறை
பிஞ்ஞகன்கழல் பேணியே
மெய்த்தவத்துநின் றோர்களுக்குரை
செய்துநன்பொருண் மேவிட
வைத்தசிந்தையுண் ஞானசம்பந்தன்
வாய்நவின்றெழு மாலைகள்
பொய்த்தவம்பொறி நீங்கஇன்னிசை
போற்றிசெய்யுமெய்ம் மாந்தரே **#399**

பித்தனும், திருப்பிரமபுரத்து உறைகின்ற பிஞ்ஞகனும் ஆகிய சிவபெருமானின் திருவடிகளைப் போற்றி, மெய்த் தவநெறிகளில் நிற்போர்கட்கு உரைசெய்து வீடுபேறு அடையச் செய்ய வேண்டும் என்ற சிந்தையில், ஞானசம்பந்தன் திருவாய்நவின்ற இத்திருமாலைகளைப் பொய்த்தவத்தில் செலுத்தும் பொறிவழிச் செல்லும் புலன்களின் குற்றம் நீங்க இன்னிசையால் போற்றுபவர்களே மெய்யுணர்ந்த மாந்தர் ஆவர்.

திருக்கண்டியூர்வீரட்டம்

திருக்கண்டியூர்வீரட்டம்

திருக்கண்டியூர்வீரட்டம்,
பண் - கொல்லி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டேசுவரர்.
தேவியார் : மங்கைநாயகியம்மை. இறை உத்தரவு.

வினவினேனறி யாமையில்லுரை
செய்ம்மினீரருள் வேண்டுவீர்
கனைவிலார்புனற் காவிரிக்கரை
மேயகண்டியூர் வீரட்டன்
தனமுனேதனக் கின்மையோதம
ராயினாரண்ட மாளத்தான்
வனனில்வாழ்க்கைகொண் டாடிப்பாடியிவ்
வையமாப்பலி தேர்ந்ததே #400

இறையருளை வேண்டிய பணிசெய்யும் அன்பர்காள்! அறியாமை காரணமாக வினவுகின்றேன். உரைசெய்வீர்களாக! ஆரவாரத்தோடு மிகுந்தநீர் செல்லும் காவிரியின் கரையிலுள்ள திருக்கண்டியூரில் வீற்றிருந்தருளும் வீரட்ட நாதன், தனக்கு நெருக்கமான திருமாலும், பிரமனும் அண்டங்களை ஆளத் தான் சுடுகாட்டில் வாழ்ந்து ஆடியும், பாடியும் பிச்சையேற்றுத் திரிவது ஏன்? தனக்கு முன்னோர் தேடிவைத்த பொருள் இல்லாத காரணத்தினாலா?

திருக்கண்டியூர்வீரட்டம்

உள்ளவாறெனக் குரைசெய்மின்னுயர்
வாயமாதவம் பேணுவீர்
கள்ளவிழ்பொழில் சூழங்கண்டியூர்
வீரட்டத்துறை காதலான்
பிள்ளைவான்பிறை செஞ்சடைம்மிசை
வைத்ததும்பெரு நீரொலி
வெள்ளந்தாங்கிய தென்கொலோமிகு
மங்கையா ளுடனாகவே #401

உயர்ந்த பெரிய தவநெறியில் நிற்பவர்களே! எனக்கு உள்ளவாறு உரைசெய்வீர்களாக! தேன்கமழும் சோலைகள் சூழ்ந்த திருக்கண்டியூரில் தனக்கு ஒப்பாரும், மிக்காருமில்லாத, உமாதேவியோடு வீற்றிருந்தருளும் சிவபெருமான் இளம்பிறைச்

சந்திரனைச் சிவந்த சடையின் மீது வைத்ததும், பெருநீர்ப் பெருக்காகிய கங்கையைச் சடையில் தாங்கியதும் என் கொல்?.

திருக்கண்டியூர்வீரட்டம்

அடியராயினீர் சொல்லுமின்அறி
கின்றிலேன்அரன் செய்கையைப்
படியெலாந்தொழு தேத்துகண்டியூர்
வீரட்டத்துறை பான்மையான்
முடிவுமாய்முத லாய்இவ்வைய
முழுதுமாய்அழ காயதோர்
பொடியதார்திரு மார்பினிற்புரி
நூலும்பூண்டெழு பொற்பதே **#402**

என் சிற்றறிவினால் சிவபெருமானின் செய்கையை அறிய இயலவில்லை. எப்பொழுதும் சிவபெருமானின் திருவடிகளை இடையறாது சிந்தித்துக் கொண்டிருக்கும் அடியவர்களே! நீங்கள் எனக்குச் சொல்வீர்களாக! உலகமெல்லாம் தொழுது போற்றுகின்ற திருக்கண்டியூரில் வீரட்டானத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் இவ்வுலகிற்கு அந்தமாயும், ஆதியாயும் இருப்பவன். இவ்வுலகம் முழுவதும் நிறைந்து விளங்குபவன். அப்பெருமான் தன் அழகிய மார்பில் திருநீற்றுப் பூச்சும், முப்புரிநூலும் பூண்டு தோன்றுவது ஏன்?

திருக்கண்டியூர்வீரட்டம்

பழையதொண்டர்கள் பகருமின்பல
வாயவேதியன் பான்மையைக்
கழையுலாம்புனல் மல்குகாவிரி
மன்னுகண்டியூர் வீரட்டன்
குழையொர்காதினிற் பெய்துகந்தொரு
குன்றின்மங்கை வெருவுறப்
புழைநெடுங்கைநன் மாவுரித்தது
போர்த்துகந்த பொலிவதே **#403**

சிவனடியார் திருக்கூட்டமரபில் வழிவழியாய் வருகின்ற பழ அடியீராகிய நீங்கள் புத்தடியேனுக்குப் பலவாகிய தன்மைகளையுடைய இறைவனின் தன்மையைக் கூறுங்கள். மலையிலிருந்து பெருகும் காவிரியால் வளம்மிகுந்த திருக்கண்டியூரில் வீற்றிருந்தருளும் வீரட்டநாதன், தன் காதில் ஒரு குழையணிந்து மகிழ்ந்து, மலைமகளான உமாதேவி அஞ்சுமாறு துளையுடைய நீண்ட தும்பிக்கையையுடைய யானையின் தோலை உரித்துப் போர்த்தது ஏன்?

திருக்கண்டியூர்வீரட்டம்

விரவிலாதுமைக் கேட்கின்றேன்அடி
விரும்பியாட்செய்வீர் விளம்புமின்
கரையெலாந்திரை மண்டுகாவிரிக்
கண்டியூருறை வீரட்டன்
முரவமொந்தை முழாவொலிக்க
முழங்குபேயொடுங் கூடிப்போய்ப்
பரவுவானவர்க் காகவார்கடல்
நஞ்சமுண்ட பரிசதே **#404**

அடியார் நடுவுள் கலந்திருக்கப் பெறாமையால் இவற்றை வினவுகின்றேன். இறைவனின் திருவடிகட்கு விரும்பிப் பணிசெய்யும் அடியவர்களே! விளம்புவீராக. அலைகள் மோதுகின்ற காவிரியின் கரையிலுள்ள திருக்கண்டியூரில் வீற்றிருந்தருளும் வீரட்டநாதன், முரவு, மொந்தை, முழவு முதலான வாத்தியங்கள் முழங்க, பேய்க்கணங்களும், பூதகணங்களும் சூழ்ந்து நிற்க, தன்னை வழிபட்ட தேவர்கள் பொருட்டுப் பெரிய பாற்கடலில் தோன்றிய நஞ்சினை உண்ட தன்மைதான் என்கொல்?.

திருக்கண்டியூர்வீரட்டம்

இயலுமாறெனக் கியம்புமின்னிறை
வன்னுமாய்நிறை செய்கையைக்
கயனெடுங்கண்ணி னார்கள்தாம்பொலி
கண்டியூருரை வீரட்டன்
புயல்பொழிந்திழி வானுளோர்களுக்
காகஅன்றயன் பொய்ச்சிரம்
அயனகவ்வ தரிந்துமற்றதில்
ஊணுகந்த வருத்தியே **#405**

மெய்யடியார்களே! இறைவன் உலகினுக்கும், உயிருக்கும் தலைவனாய் இருப்பதோடு, உலகப்பொருள்களிலும், அனைத்து உயிர்களிடத்தும் அவையேயாய்க் கலந்து வியாபித்து நிற்கும் தன்மையை எனக்கு இயன்ற அளவு இயம்புவீர்களாக! கயல் போன்ற நீண்ட கண்களையுடைய மகளிர் வாழ்கின்ற திருக்கண்டியூரில் வீற்றிருந்தருளும் வீரட்டநாதன் உலகத்தில் மழை பொழியச் செய்து நலம்புரியும் தேவர்கட்காகப் பிரமனுடைய ஐந்தாவது சிரத்தை அயலார் பரிகசிக்கும்படி நகத்தால் அரிந்து, அதில் பிச்சையேற்றுண்ணும் விருப்பம் என்கொல்?

திருக்கண்டியூர்வீரட்டம்

திருந்துதொண்டர்கள் செப்புமின்மிகச்
செல்வன்றன்னது திறமெலாம்
கருந்தடங்கண்ணி னார்கடாந்தொழு
கண்டியூருறை வீரட்டன்
இருந்துநால்வரொ டானிழல்லற
முரைத்தும்மிகு வெம்மையார்
வருந்தவன்சிலை யாலம்மாமதின்
மூன்றுமாட்டிய வண்ணமே **#406**

தௌந்த சிவஞானம் பெற்று இறைவனுக்குத் தொண்டு செய்யும் அன்பர்களே! மெய்ச் செல்வனாக விளங்கும் சிவபெருமானின் தன்மைகளை எனக்கு உரைப்பீர்களாக! கருநிற அழகிய கண்களையுடைய மகளிர் வழிபடும் திருக்கண்டியூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் வீரட்டநாதன், அன்று ஆலமரநிழலில் நால்வர்க்கு அறம் உரைத்ததும், தேவர்களைத் துன்புறுத்திய அசுரர்களின் மூன்று கோட்டைகளும் எரியுமாறு மேருமலையை வில்லாக வளைத்ததும் என்கொல்?

திருக்கண்டியூர்வீரட்டம்

நாவிரித்தரன் றொல்புகழ்பல
பேணுவீரிறை நல்குமின்
காவிரித்தடம் புனல்செய்கண்டியூர்
வீரட்டத்துறை கண்ணுதல்
கோவிரிப்பய னானஞ்சாடிய
கொள்கையுங்கொடி வரைபெற
மாவரைத்தலத் தாலரக்கனை
வலியைவாட்டிய மாண்பதே **#407**

நாவால் சிவபெருமானது பழம்புகழ் போற்றும் அடியவர்களே! எனக்கு விடை கூறுவீர்களாக. காவிரியால் நீர் வளம்மிக்க திருக்கண்டியூர் வீரட்டானத்தில் வீற்றிருந்தருளுகின்ற நெற்றிக்கண்ணுடைய சிவபெருமான், பசுவிலிருந்து பெறப்படும் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகிய பஞ்சகவ்வியங்களால் திருமுழுக்காட்டப்படும் தன்மையும், கொடி போன்ற பார்வதி அமைதி பெற, பெரிய கயிலைமலையில் தன் காற்பெருவிரலை ஊன்றி மலையின் கீழ் இராவணன் நெரியுமாறு செய்து அவன் வலிமையை அழித்த மாண்பும் என்கொல்?

திருக்கண்டியூர்வீரட்டம்

பெருமையேசர ணாகவாழ்வுறு
மாந்தர்காளிறை பேசுமின்
கருமையார்பொழில் சூழுந்தண்வயற்
கண்டியூருறை வீரட்டன்
ஒருமையாலுயர் மாலுமற்றை
மலரவன்உணர்ந் தேத்தவே
அருமையாலவ ருக்குயர்ந்தெரி
யாகிநின்றவத் தன்மையே **#408**

சிவபெருமானுடைய பெருமையைப் புகழ்ந்து கூறி, அவனைச் சரண்புகுந்து அவனருளால் வாழும் மாந்தர்காள்! விடை கூறுவீர்களாக! மரங்களின் அடர்த்தியால் வெயில் நுழையாது இருண்டு விளங்கும் சோலைகள் சூழ்ந்த, குளிர்ச்சியான வயல்களையுடைய திருக்கண்டியூரில் வீற்றிருந்தருளுகின்ற வீரட்டநாதன், திருமாலும், பிரமனும் சிவபெருமானின் முழுமுதல்தன்மையை உணர்ந்து போற்றும்படி, அவர்கள் காண்பதற்கு அரியவனாய் உயர்ந்து நெருப்புமலையாய் நின்ற தன்மை என் கொல்?

திருக்கண்டியூர்வீரட்டம்

நமரெழுபிறப் பறுக்குமாந்தர்காள்
நவிலுமின்உமைக் கேட்கின்றேன்
கமரழிவயல் சூழுந்தண்புனற்
கண்டியூருறை வீரட்டன்
தமரழிந்தெழு சாக்கியச்சமண்
ஆதரோது மதுகொளா
தமரரானவ ரேத்தவந்தகன்
தன்னைச்சூலத்தில் ஆய்ந்ததே **#409**

தம்மைச் சார்ந்து விளங்கும் சுற்றத்தவர்களின் ஏழு பிறப்புக்களையும் அறுக்கும் மெய்யடியார்களே! உங்களை வினவுகின்றேன். விடை கூறுவீர்களாக. பூமியில் வெடிப்பு ஏற்பட்டு வறட்சி உண்டாகாதவாறு குளிர்ந்த நீர் பாயும் வயல்கள் சூழ்ந்த திருக்கண்டியூரில் வீற்றிருந்தருளும் வீரட்டன், தமது சமயத்தவர் பயனெய்தாது அழியும்படி இறைவனைச்சாரும் வழிகளை எடுத்துரைக்காத புத்தர், சமணர்கள் உரைக்கும் உலகியல் அறங்களான கொல்லாமை, பரதுக்க துக்கம் இவற்றை மறுத்து, தேவர்கள் ஏத்த அந்தகாசுரனைச் சூலத்தால் குத்திக் கொன்றது ஏன்?

திருக்கண்டியூர்வீரட்டம்

கருத்தனைப்பொழில் சூழுங்கண்டியூர்
வீரட்டத்துறை கள்வனை
அருத்தனைத்திறம் அடியர்பால்மிகக்
கேட்டுகந்த வினாவுரை
திருத்தமாந்திகழ் காழிஞானசம்
பந்தன்செப்பிய செந்தமிழ்
ஒருத்தராகிலும் பலர்களாகிலும்
உரைசெய்வார் உயர்ந்தார்களே **#410**

அன்பர்தம் கருத்தாக விளங்குபவனாய், சோலைகள் சூழ்ந்த திருக்கண்டியூர் வீரட்டானத்தில் பிறரால் காணப்பெறாது மறைந்திருந்து மனத்தைக் கவரும் கள்வனாய், சொல்லின் பொருளாக இருக்கும், அப்பெருமானின் திறத்தினை அடியவர்களிடம் வினாவுரையாகக் கேட்டு மகிழும் முறையில் சீகாழியில் அவதரித்த, இறைவனின் இயல்புகளை நன்கு உணர்ந்த ஞானசம்பந்தன் செப்பிய செந்தமிழாகிய இத்திருப்பதிகத்தை ஒருவராகத் தனித்தும், பலராகச் சேர்ந்தும் ஓதவல்லவர்கள் உயர்ந்தவர்கள் ஆவர்.

திருஆலவாய்

திருஆலவாய்

திருஆலவாய்,
பண் - கொல்லி,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. இதுவே மதுரை. ,
சுவாமிபெயர் : சொக்கநாதசுவாமி.
தேவியார் : மீனாட்சியம்மை. இது பாண்டியராசனுடைய சுரப்பிணி தீர்ப்பதற்காகத் திருஞான சம்பந்தசுவாமிகள் எழுந்தருளியிருக்கும்போது பாண்டிமாதேவி யாகிய மங்கையர்க்கரசியார்கண்டு சுவாமிகளுடைய திருமேனி மிகுந்த பாலியமாயிருக்கின்றதுமன்றித் தனிமையாயுமிருக்கின்றது; சமணர்களோ சரீரதிடமுள்ளவர்களும் பலருமாயிருக்கின்றார் களென்று உட்பரிவுற்றக் குறிப்பினைத் திருஞானசம்பந்த சுவாமி கள் திருவுள்ளத்திலுணர்ந்து கொண்டு அன்னையே அஞ்சவேண்டு வதில்லை யென்று கட்டளையிட்ட பதிகம்.

மானினேர்விழி மாதராய்வழு
திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ
னென்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய
இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு
வாலவாயர னிற்கவே **#411**

மான்போன்ற மருண்ட பார்வையுடைய மாதரசியே! பாண்டிய மன்னனின் மனைவியான பெருந்தேவியே! கேள். "பால்வடியும் நல்ல வாயையுடைய பாலன்" என்று நீ இரக்கமடைய வேண்டா. திருஆலவாயரன் துணைநிற்பதால் ஆனைமலை முதலான இடங்களிலிருந்து வந்துள்ளவர்களும், பல துன்பங்களைப் பிறர்க்கு விளைவிக்கின்றவர்களுமாகிய இழிந்த இச்சமணர்கட்கு யான் எளியேன் அல்லேன்.

திருஆலவாய்

ஆகமத்தொடு மந்திரங்க
ளமைந்தசங்கத பங்கமாப்
பாகதத்தொ டிரைத்துரைத்த
சனங்கள்வெட்குறு பக்கமா
மாகதக்கரி போற்றிரிந்து

புரிந்துநின்றுணும் மாசுசேர்
ஆகதர்க்கெள யேனலேன்திரு
வாலவாயர னிற்கவே #412

வேத ஆகமங்களையும், மந்திரங்களையும், நன்கு பயின்ற வைதிக மாந்தர் வெட்கம் அடையும்படி அம்மொழியின் கூறாகிய பிராகிருத மொழியை ஆரவாரித்துப் பேசி மிக்க கோபத்தையுடைய யானைபோல் திரிந்து நின்றுண்ணும் அழுக்குமேனியுடைய சமணர்கட்கு நான் எளியேன் அல்லேன், திருஆலவாய் அரன்துணை நிற்பதால்

திருஆலவாய்

அத்தகுபொரு ளுண்டுமில்லையு
மென்றுநின்றவர்க் கச்சமா
ஒத்தொவ்வாமை மொழிந்துவாதி
லழிந்தெழுந்த கவிப்பெயர்ச்
சத்திரத்தின் மடிந்தொடிந்து
சனங்கள் வெட்குற நக்கமே
சித்திரர்க்கெள யேனலேன்றிரு
வாலவாயர னிற்கவே #413

கடவுள் உண்டு என்றும் சொல்லமுடியாது, இல்லை என்றும் சொல்லமுடியாது என்னும் பொருள்பட அத்திநாத்தி என்று ஒத்தும், ஒவ்வாமலும் கூறும் சமணர்கள் வாதில் அழிந்து தோற்று, எனது கவிதையாகிய வாளால் மடிந்து ஒடிவர். பார்ப்பவர் வெட்கப்படும்படி ஆடையின்றி உலவும் தங்கள் நெறியே மேலானது என சித்திரவார்த்தை பேசுபவர்கட்கு, நான் ஆலவாயரன் துணைநிற்றலால் எளியேன் அல்லேன்.

திருஆலவாய்

சந்துசேனனு மிந்துசேனனுந்
தருமசேனனுங் கருமைசேர்
கந்துசேனனுங் கனகசேனனு
முதலதாகிய பெயர்கொளா
மந்திபோற்றிரிந் தாரியத்தொடு
செந்தமிழ்ப்பய னறிகிலா
அந்தகர்க்கெள யேனலேன்றிரு
வாலவாயர னிற்கவே #414

சந்தசேனன், இந்து சேனன், தருமசேனன், மாசுடைய கந்தசேனன், கனகசேனன் முதலான பெயர்களைக் கொண்டு மந்திபோல் திரிந்து, வடமொழி, தென்மொழிகளைக் கற்றதன் பயனாகிய சிவனே

முழுமுதற்கடவுள் எனவும், சைவமே சீரிய சமயநெறி என்னும் உணர்வினைப் பெறாது அகக்கண்ணிழந்து திரியும் சமணர்கட்கு யான் எளியேனல்லேன். திருவாலவாயரன் என்னுள்ளிருந்து அருள்புரிவார்.

திருஆலவாய்

கூட்டினார்கி ளியின்விருத்த
முரைத்ததோரொலி யின்றொழிற்
பாட்டுமெய் சொலிப் பக்கமேசெலு
மெக்கர்தங்களைப் பல்லறம்
காட்டியேவரு மாடெலாங்கவர்
கையரைக்கசி வொன்றிலாச்
சேட்டைகட்கெள யேனலேன்றிரு
வாலவாயர னிற்கவே **#415**

கூண்டிலிருக்கும் கிளியின் ஒலித்தன்மைக்கு ஏற்ப, கிளிவிருத்தம் முதலிய சுவடிகளின் பொருள்களை மெய்யென்று சொல்லி ஏமாற்றுகிறவர்கட்கும், பல தருமங்களைச் செய்தவர்களாக வெளியில் காட்டி அவற்றால் வரும் செல்வங்களைக்கவரும் கீழோர்கட்கும் இரக்கமில்லாத குறும்பர் கட்கும் யான் எளியேனல்லேன். திருவாலவாயரன் என்றும் நின்று அருள்புரிவார்.

திருஆலவாய்

கனகநந்தியும் புட்பநந்தியும்
பவணநந்தியுங் குமணமா
சுனகநந்தியுங் குனகநந்தியுந்
திவணநந்தியு மொழிகொளா
அனகநந்தியர் மதுவொழிந்தவ
மேதவம்புரி வோமெனும்
சினகருக்கெள யேனலேன்றிரு
வாலவாயர னிற்கவே **#416**

கனகநந்தி, புட்நந்தி, பவணநந்தி, குமண மாசுனகநந்தி, குனகநந்தி, திவணநந்தி என எண்ணற்ற பலவகை நந்திகள் என்னும் பெயர் கொண்டவர்களாய் மது உண்பதை ஒழித்து, அவமாகிய நிலையைத் தவமெனக் கொள்ளும் சமணர்கட்கு யான் எளியேனல்லேன், திருவாலவாயரன் என்னுள் நிற்பதால்.

திருஆலவாய்

பந்தணம்மவை யொன்றிலம்பரி
வொன்றிலம்மென வாசக

மந்தணம்பல பேசிமாசறு
சீர்மையின்றிய நாயமே
அந்தணம்மரு கந்தணம்மது
புத்தணம்மது சித்தணச்
சிந்தணர்க்கெள யேனலேன்றிரு
வாலவாயரனிற்கவே **#417**

சுற்றமும், பற்றும் இல்லை என்று கூறியும், இரகசியமான வாசகங்களைப் பேசியும், குற்றமற்ற ஒழுங்கு நெறியின்றியும், நியாயமற்ற நெறிநின்று, ஆருகதசமயத்தின் கொள்கை இத்தகையது என்று கூறித்திரியும் சமணர்கட்கும், புத்த சமயத்தின் கொள்கை இத்தகையது என்று கூறித்திரியும் புத்தர்கட்கும், அச்சமயங்களில் சித்தி பெற்றோர்கட்கும் ஆலவாயரன் என்றும் துணை நிற்றலால், யான் எளியவன் அல்லேன்.

திருஆலவாய்

மேலெனக்கெதி ரில்லையென்ற
வரக்கனார் மிகை செற்றதீப்
போலியைப்பணி யக்கிலாதொரு
பொய்த்தவங்கொடு குண்டிகை
பீலிகைக்கொடு பாயிடுக்கி
நடுக்கியேபிறர் பின்செலும்
சீலிகட்கெள யேனலேன்றிரு
வாலவாயர னிற்கவே **#418**

தனக்கு மேலானவரும், எதிரானவரும் இல்லை என்று கருதிய இராவணனது செருக்கை அழித்த, தீயைப்போன்று செந்நிற மேனியுடைய சிவபெருமானைப் பணிந்து ஏத்தாது, பொய்த்தவம் பூண்டு, குண்டிகை, மயிற்பீலி ஆகியவற்றைக் கொண்டு, பாயை அக்குளில் இடுக்கி நடந்து செல்லுங்கால் சிற்றுயிர்க்கு ஊறுநேருமோ என அஞ்சி நடுக்கத்துடன் ஒருவன்பின் ஒருவராய்ச் செல்வதைச் சீலம் எனக்கொள்ளும் சமணர்கட்கு, யான், திருவாலவாயரன் என்னுள்துணை நிற்றலால் எளியவனல்லேன்.

திருஆலவாய்

பூமகற்கு மரிக்குமோர்வரு
புண்ணியன்னடி போற்றிலார்
சாமவத்தையி னார்கள்போறலை
யைப்பறித்தொரு பொய்த்தவம்
வேமவத்தைசெ லுத்திமெய்ப்பொடி

யட்டிவாய்சக திக்குநேர்
ஆமவர்க்கெள யேனலேன்றிரு
வாலவாயர னிற்கவே #419

பிரமனும், திருமாலும் அறியவொண்ணாத புண்ணியனான சிவபெருமானின் திருவடிகளைப் போற்றி வணங்காது, இறந்தோர்க்கு நீர்க்கடன் செய்பவர்போல் தலைமுடியைக் களைந்து, பொய்த்தவத்தால் துன்புறும் நிலையடையும்படி உடம்பை வாட்டி, பொருளற்ற உரைகளைக் கூறுகின்ற சமணர்கட்கு யான் எளியேன் அல்லேன், திருவாலவாயரன் என்னுள் துணை நிற்றலால்.

திருஆலவாய்

தங்களுக்குமச் சாக்கியர்க்குந்
தரிப்பொணாதநற் சேவடி
எங்கணாயக னேத்தொழிந்திடுக்
கேமடுத்தொரு பொய்த்தவம்
பொங்குநூல்வழி யன்றியேபுல
வோர்களைப்பழிக் கும்பொலா
அங்கதர்க்கெள யேனலேன்றிரு
வாலவாயர னிற்கவே #420

சமணர்கட்கும், புத்தர்கட்கும் அரியவராகிய, நல்ல சிவந்த திருவடிகளையுடைய எங்கள் தலைவராகிய சிவபெருமானை வழிபடுதலைவிட்டு, பொய்த்தவம் பூண்டு, நல்ல நூல்கள் கூறும் வழியும் நில்லாது அறிஞர்களைப் பொல்லாப் பழிச்சொல் பேசுபவர்கட்கு, யான் திருவாலவாயரன் என்னுள் நிற்பதால் எளியேன் அல்லேன்.

திருஆலவாய்

எக்கராமமண் கையருக்கெள
யேனலேன்றிரு வாலவாய்ச்
சொக்கனென்னு ளிருக்கவேதுளங்
கும்முடித்தென்னன் முன்னிவை
தக்கசீர்ப்புக லிக்குமன்றமிழ்
நாதன்ஞானசம் பந்தன்வாய்
ஒக்கவேயுரை செய்தபத்து
முரைப்பவர்க்கிட ரில்லையே #421

திருஆலவாய் இறைவன் சொக்கநாதன் என் உள்ளத்தில் இருத்தலால், செருக்குடைய சமணர்கட்கு யான் எளியவன் அல்லன் என்று பாண்டிய மன்னன் முன்னிலையில் திருப்புகலியில் அவதரித்த தமிழ் நாதனாகிய ஞானசம்பந்தன் வாய்மையோடு அருளிய இத்திருப்பதிகத்தை

ஓதவல்லவர்கட்குத் துன்பம் இல்லை.

தனித்திருவிருக்குக்குறள்

தனித்திருவிருக்குக்குறள்

தனித்திருவிருக்குக்குறள்,
பண் - கொல்லி

கல்லானீழல், அல்லாத்தேவை
நல்லார்பேணார், அல்லோநாமே #422
கல்லால மரத்தின் நிழலில் சனகாதி முனிவர்கட்கு அறநெறி உரைத்தருளிய சிவபெருமானை அன்றிப் பிறிதொரு தெய்வத்தை மெய்யுணர்ந்த ஞானிகள் பொருளாகக் கொள்ளார். நாமும் அவ்வாறே சிவனையன்றி வேறு தெய்வத்தை வழிபடோம்.

தனித்திருவிருக்குக்குறள்

கொன்றைசூடி, நின்றதேவை
அன்றியொன்று, நன்றிலோமே #423
கொன்றை மலரைச் சூடிவிளங்கும் சிவ பெருமானை அன்றி, பிறிதொரு தெய்வமும் முக்திச் செல்வம் தருவதாக நாம் கருதோம்.

தனித்திருவிருக்குக்குறள்

கல்லாநெஞ்சின், நில்லானீசன்
சொல்லாதாரோ, டல்லோநாமே #424
இறைவனை இடைவிடாது தியானிக்காதவர் உள்ளத்தில் அவன் நில்லான். ஆதலால் அப்பெருமானின் பெருமைகளைப் போற்றாதவர்களோடு நாங்கள் சேரோம்.

தனித்திருவிருக்குக்குறள்

கூற்றுதைத்த, நீற்றினானைப்
போற்றுவார்கள், தோற்றினாரே #425
மார்க்கண்டடேயரின் உயிரைக் கவரவந்த கூற்றுவனைத் தன் திருப்பாதத்தால் உதைத்த, தன் திருமேனியில் திருவெண்ணீற்றினைப் பூசியுள்ள சிவபெருமானைப் போற்றுபவர்களே பிறந்ததன் பயனை அடைவர்.

தனித்திருவிருக்குக்குறள்

காட்டுளாடும், பாட்டுளானை
நாட்டுளாரும், தேட்டுளாரே #426
சுடுகாட்டில் நடனம் ஆடும் இறைவன் அடியாரேத்தும் பாமாலையை உடையவன். சிவபெருமானே முழுமுதற்கடவுள் என்று தம் உள்ளத்தில்

நிலைநிறுத்தியவர்களே பேரின்பச் செல்வத்தில் திளைப்பவர்கள்.

தனித்திருவிருக்குக்குறள்

தக்கன்வேள்விப், பொக்கந்தீர்த்த
மிக்கதேவர், பக்கத்தோமே **#427**

முழுமுதற்பொருளான சிவனை நினையாது தக்கன் செய்த வேள்வியின் குற்றத்தைத் தீர்த்த வல்லமையும், அருளுமுடைய சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டராய் யாம் உள்ளோம்.

தனித்திருவிருக்குக்குறள்

பெண்ணாணாய, விண்ணோர்கோவை
நண்ணாதாரை, எண்ணோநாமே **#428**

பெண்ணாகவும், ஆணாகவும் ஆகி தேவர்கள் போற்றும் தலைவரான சிவபெருமானை மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும் வழிபடாதவர்களை நாம் நெஞ்சாலும் நினைப்பதில்லை.

தனித்திருவிருக்குக்குறள்

தூர்த்தன்வீரம், தீர்த்தகோவை
ஆத்தமாக, ஏத்தினோமே **#429**

துன்மதியால் கயிலையைப் பெயர்த்த இராவணனது வலிமையை அழித்து, பின் அவன் தன் தவறுணர்ந்து சாமகானம்பாடி இறைஞ்ச அவனுக்கு ஒளி பொருந்திய வாளும், நீண்ட வாழ்நாளும் அருளிய இறைவனை நாம் விரும்பிப் போற்றி வணங்கினோம்.

தனித்திருவிருக்குக்குறள்

பூவினானும், தாவினானும்
நாவினாலும், நோவினாரே **#430**

தாமரைப் பூவின்மேல் வீற்றிருந்தருளும் பிரமனும் உலகத்தைத் தாவிஅளந்த திருமாலும், இறைவனின் திருமுடியையும், திருவடியையும் உடல்வருந்தித் தேடியும் காணாதவர்களாய்ப் பின்னர் நாவால் அவனைப் போற்றி உருகிநின்றனர்.

தனித்திருவிருக்குக்குறள்

மொட்டமணர், கட்டர்தேரர்
பிட்டர்சொல்லை, விட்டுளோமே **#431**

தலைமயிரைப் பறித்து மொட்டைத் தலையுடன் விளங்கும் சமணர்களும், கட்டான உடலமைப்புடைய புத்தர்களும், சைவசமய நெறிக்குப் புறம்பாகக் கூறுவனவற்றை நாம் பொருளாகக் கொள்ளாது

விட்டோம்.

<u>தனித்திருவிருக்குக்குறள்</u>

அந்தண்காழிப், பந்தன்சொல்லைச்
சிந்தைசெய்வோர், உய்த்துளோரே **#432**
அழகிய குளிர்ச்சி பொருந்திய சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தர் அருளிய இத்திருப்பதிகத்தைச் சிந்தனை செய்து பாடுபடுவர்கள் உய்தி பெற்றவர்களாவர்.

திருவேகம்பம்

திருஏகம்பம்

திருவேகம்பம்,
பண் - கொல்லி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஏகாம்பரநாதர்.
தேவியார் : காமாட்சியம்மை.

கருவார்கச்சித், திருவேகம்பத்
தொருவாவென்ன, மருவாவினையே #433

யாவற்றுக்கும் கருப்பொருளாக விளங்கும் திருக்கச்சியேகம்பத்தில் வீற்றிருந்தருளும் ஒப்பற்ற சிவபெருமானைப் போற்றி வணங்க வினைவந்து சாராது.

திருஏகம்பம்

மதியார்கச்சி, நதியேகம்பம்
விதியாலேத்தப், பதியாவாரே #434

மதி தவழும் மாடங்களையுடைய கச்சியில் கம்பை நதியின் கரையில் விளங்குகின்ற திருவேகம்பத்தைச் சிவாகம விதிப்படி அன்பர்கள் போற்றி வணங்கச் சிவகணங்களுக்குத் தலைமையாய் விளங்குவார்கள்.

திருஏகம்பம்

கலியார்கச்சி, மலியேகம்பம்
பலியாற்போற்ற, நலியாவினையே #435

விழாக்கள் மலிந்து ஆரவாரத்துடன் எப்பொழுதும் விளங்கும் கச்சியில் வீற்றிருந்தருளுகின்ற திருவேகம்பநாதரைப் பூசைக்குரிய பொருள்களைக் கொண்டு பூசை செய்து போற்றி வழிபடத் தீவினையால் வரும் துன்பம் இல்லை.

திருஏகம்பம்

வரமார்கச்சிப், புரமேகம்பம்
பரவாவேத்த, விரவாவினையே #436

தன்னை வழிபடும் அன்பர்களுக்கு வேண்டிய வரங்களை நல்கும் தெய்வத்தன்மையுடைய நகர் காஞ்சிபுரம் ஆகும். இத்திருத்தலத்தில் திருவேகம்பப் பெருமானை வணங்கிப் போற்ற வினை தொடராது நீங்கும்

திருஏகம்பம்

படமார்கச்சி, இடமேகம்பத்
துடையாயென்ன, அடையாவினையே **#437**
சித்திர வேலைப்பாடுகளையுடைய அழகிய கச்சியை இடமாகக் கொண்டு திருவேகம்பத்தில் வீற்றிருந்தருளும் இறைவன் எங்கள் தலைவனே என்று போற்ற வினை வந்து சாராது.

திருஏகம்பம்

நலமார்கச்சி, நிலவேகம்பம்
குலவாவேத்தக், கலவாவினையே **#438**
நலம் தரும் கச்சிநகரில் விளங்குகின்ற திருவேகம்பத்தை அன்பால் அகமகிழ்ந்து போற்றி வணங்க வினை நீங்கும்.

திருஏகம்பம்

கரியின்னுரியன், திருவேகம்பன்
பெரியபுரமூன், றெரிசெய்தானே **#439**
யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்ட இறைவனான திருவேகம்பப் பெருமான், தேவர்களைத் துன்புறுத்திய அசுரர்கள் வாழ்ந்த மூன்றுபுரங்களையும் எரியுண்ணும்படி செய்தார்.

திருஏகம்பம்

இலங்கையரசைத், துலங்கவூன்றும்
நலங்கொள்கம்பன், இலங்குசரணே **#440**
இலங்கை மன்னனான இராவணனைக் கயிலைமலையின் கீழ் நெரியுமாறு காற்பெருவிரலை ஊன்றி, அவன் நலத்தை அழித்த திருவேகம்பன் திருவடியைச் சரணடைதலே ஒளிமிக்க வாழ்விற்குரிய வழியாகும்.

திருஏகம்பம்

மறையோனரியும், அறியாவனலன்
நெறியேகம்பம், குறியாற்றொழுமே **#441**
பிரமனும், திருமாலும் அறியமுடியாத வண்ணம் நெருப்பு மலையாய் நின்ற சிவபெருமான் கச்சியில் திருவேகம்ப நாதராக நெறியாகவும், போற்றித்தொழப் பெறும் குறியாகவும் உள்ளார்.

திருஏகம்பம்

பறியாத்தேரர், நெறியில்கச்சிச்
செறிகொள்கம்பம், குறுகுவோமே **#442**
தலைமயிர் பறியாத புத்தர்களும், அது பறிக்கப்பட்ட சமணர்களும்

கூறும் நெறியில் அமையாது, கச்சியில் ஞானம் பெருகும் திருவேகம்பநாதனின் திருக்கோயிலை அடைந்து வழிபடுவோமாக.

திருஏகம்பம்

கொச்சைவேந்தன், கச்சிக்கம்பம்
மெச்சுஞ்சொல்லை, நச்சும்புகழே **#443**
கொச்சைவயம் என்னும் திருப்பெயருடைய சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தன் திருக்கச்சியேகம்பத்தைப் போற்றிப்பாடிய இத்திருப்பதிகத்தை ஓதுபவர்கள் நிலைத்த புகழுடன் விளங்குவார்கள்.

திருச்சிற்றேமம்

திருச்சிற்றேமம்

திருச்சிற்றேமம்,
பண் - கொல்லிக்கௌவாணம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பொன்வைத்தநாதர்.
தேவியார் : அகிலாண்டேசுவரியம்மை.

நிறைவெண்டிங்கள் வாண்முக
மாதர்பாட நீள்சடைக்
குறைவெண்டிங்கள் சூடியோ
ராடன்மேய கொள்கையான்
சிறைவண்டியாழ்செய் பைம்பொழிற்
பழனஞ்சூழ்சிற் றேமத்தான்
இறைவனென்றே யுலகெலா
மேத்தநின்ற பெருமானே **#444**

வெண்மையான முழுநிலவு போன்று ஒளி பொருந்திய முகமுடைய உமாதேவியார் இசைபாட, நீண்ட சடைமுடியில் பிறைச்சந்திரனைச் சூடி, நடனம் புரிகின்ற இயல் புடையவராய், சிறகுகளையுடைய வண்டுகள் யாழ் போன்று ஒலிக்கும் பசுமையான சோலைகளும், வயல்களும் சூழ்ந்த திருச்சிற்றேமத்தில் வீற்றிருந்தருளுகின்ற இறைவர் உலகமெல்லாம் ஏத்திப் போற்றுகின்ற சிவபெருமானே ஆவர்.

திருச்சிற்றேமம்

மாகத்திங்கள் வாண்முக
மாதர்பாட வார்சடைப்
பாகத்திங்கள் சூடியோ
ராடன்மேய பண்டங்கன்
மேகத்தாடு சோலைசூழ்
மிடைசிற்றேம மேவினான்
ஆகத்தேர்கொ ளாமையைப்
பூண்டவண்ண லல்லனே **#445**

ஆகாயத்தில் விளங்கும் சந்திரன் போன்று ஒளியுடைய முகத்தையுடைய உமாதேவியார் இசைபாட, நீண்ட சடையில் பிறைச்சந்திரனைச் சூடிப் பண்டரங்கம் என்னும் கூத்தாடும் இறைவர், மேகம் திகழும் சோலைசூழ்ந்த திருச்சிறறமத்தில் வீற்றிருந்தருளுகின்றார். அப்பெருமான் திருமார்பில் ஆமை ஓட்டினை ஆபரணமாகப் பூண்ட

அண்ணலான சிவபெருமான் அல்லரோ?

திருச்சிற்றேமம்

நெடுவெண்டிங்கள் வாண்முக
மாதர்பாட நீள்சடைக்
கொடுவெண்டிங்கள் சூடியோ
ராடன்மேய கொள்கையான்
படுவண்டியாழ்செய் பைம்பொழிற்
பழனஞ்சூழ்சிற் றேமத்தான்
கடுவெங்கூற்றைக் காலினாற்
காய்ந்தகடவு ளல்லனே **#446**

வெண்ணிறப் பூரண சந்திரன் போன்ற ஒளி பொருந்திய முகம் கொண்ட உமாதேவி இன்னிசையோடு பாட, நீண்ட சடையில் வளைந்த பிறைச்சந்திரனைச் சூடி நடனம் செய்கின்ற பெருமானாய், வண்டுகள் யாழ்போன்று ஒலி செய்யப் பசுமை வாய்ந்த சோலைகள் சூழ்ந்த திருச்சிற்றேமத்தில் வீற்றிருந்தருளுகின்ற இறைவன் கொடிய காலனைக் காலால் உதைத்து அழித்த கடவுளான சிவபெருமான் அல்லனோ?

திருச்சிற்றேமம்

கதிரார் திங்கள் வாண்முக
மாதர்பாடக் கண்ணுதல்
முதிரார்திங்கள் சூடியோ
ராடன்மேய முக்கணன்
எதிரார்புனலம் புன்சடை
எழிலாருஞ்சிற் றேமத்தான்
அதிரார்பைங்க ணேறுடை
யாதிமூர்த்தி யல்லனே **#447**

கதிர்வீசும் சந்திரனைப் போன்ற ஒளிபொருந்திய முகம்கொண்ட உமாதேவியார் பண்ணோடு பாட, நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் இளம்பிறைச் சந்திரனைச் சூடி, ஆடுகின்ற முக்கண்ணர் ஆவார். அவர் கங்கையும், சடைமுடியும் கொண்டவராய் அழகுடைய திருச்சிற்றேமத்தில் வீற்றிருந்தருளுபவர். அவர், கழுத்தில் கட்டிய சதங்கைமணி ஒலிக்கும், பசிய கண்களையுடைய இடபத்தை வாகனமாகக் கொண்ட ஆதிமூர்த்தி அல்லரோ?

திருச்சிற்றேமம்

வானார்திங்கள் வாண்முக
மாதர்பாட வார்சடைக்

கூனார்திங்கள் சூடிய
ராடன்மேய கொள்கையான்
தேனார்வண்டு பண்செயுந்
திருவாருஞ்சிற் றேமத்தான்
மானார்விழிநன் மாதொடும்
மகிழ்ந்தமைந்த னல்லனே #448

வானில் விளங்கும் சந்திரனைப் போன்று ஒளிபொருந்திய முகமுடைய உமாதேவியார் பண்ணோடு பாட, நீண்ட சடைமுடியில் வளைந்த பிறைச்சந்திரனைச் சூடித் திருநடனம் செய்பவனாய்ப் பூக்களிலுள்ள தேனை அருந்திய வண்டு இசைபாடுகின்ற அழகிய திருச்சிற்றேமத்தில் வீற்றிருந்தருளும் இறைவன், மான் போன்ற மருண்ட பார்வையுடைய உமாதேவியோடு மகிழ்ந்திருக்கும் வீரமுடைய சிவபெருமான் அல்லரோ?

திருச்சிற்றேமம்

பனிவெண்டிங்கள் வாண்முக
மாதர்பாடப் பல்சடைக்
குனிவெண்டிங்கள் சூடியோ
ராடன்மேய கொள்கையான்
தனிவெள்விடையன் புள்ளினத்
தாமம்சூழ்சிற் றேமத்தான்
முனிவு மூப்புநீக்கிய
முக்கண்மூர்த்தி யல்லனே #449

குளிர்ந்த வெண்ணிலவைப் போன்ற ஒளி பொருந்திய முகமுடைய உமாதேவியார் பண்ணிசைத்துப் பாட, சடைமுடியில் வளைந்த பிறைச்சந்திரனைச் சூடி ஆடல்புரிகின்றவர் இறைவர். அவர் ஒற்றை வெள் இடபத்தை வாகனமாகக் கொண்டு, பறவை இனங்களும் நறுமண மலர்களும் சூழ்ந்து விளங்கும் திருச்சிற்றேமத்தில் வீற்றிருந்தருளுபவர். அவர் விருப்பு வெறுப்பு அற்றவ ராய், மூப்பினை அடையப்பெறாதவரான முக்கண் மூர்த்தியான சிவபெருமான் அல்லரோ?

திருச்சிற்றேமம்

கிளருந்திங்கள் வாண்முக
மாதர்பாடக் கேடிலா
வளருந்திங்கள் சூடியோ
ராடன்மேய மாதவன்
தளிருங்கொம்பு மதுவுமார்

தாமஞ்சூழ்சிற் றேமத்தான்
ஒளிரும்வெண்ணூன் மார்பனென்
உள்ளத்துள்ளான் அல்லனே **#450**
கிளர்ந்து எழுந்த பூரண சந்திரனைப் போன்று ஒளிபொருந்திய முகம் கொண்ட உமாதேவியார் பண்ணோடு பாட, குறைவிலாது வளரும் தன்மையுடைய பிறைச்சந்திரனைச் சூடித் திருநடனம் செய்யும் இறைவர், தளிரும், கொம்புகளும், தேன் துளிக்கும் மலர்மாலைகளும் சூழ விளங்கும் திருச்சிற்றேமத்தில் வீற்றிருந்தருளுபவர். அப்பெருமான் ஒளிரும் முப்புரிநூலை அணிந்த திருமார்பினராய் என் உள்ளத்திலுள்ளவர் அல்லரோ?

<u>திருச்சிற்றேமம்</u>

சூழ்ந்ததிங்கள் வாண்முக
மாதர்பாடச் சூழ்சடைப்
போழ்ந்ததிங்கள் சூடியோ
ராடன்மேய புண்ணியன்
தாழ்ந்தவயற்சிற் றேமத்தான்
றடவரையைத்தன் றாளினால்
ஆழ்ந்தவரக்க னொல்கவன்
றடர்த்தவண்ண லல்லனே **#451**
சந்திரனைப் போன்று ஒளியுடைய முகம் கொண்ட உமாதேவியார் பண் இசைத்துப்பாட, சடைமுடியில் பிறைச் சந்திரனைச் சூடித் திருநடனம் செய்யும் புண்ணிய மூர்த்தியாகிய சிவபெருமான், வயல்வளமிக்க திருச்சிற்றேமத்தில் வீற்றிருந்தருளுகின்றார். அப்பெருமான் தம்காற் பெருவிரலை ஊன்றிப் பெரிய கயிலைமலையின் கீழ் அரக்கனான இராவணன் நெருக்குண்ணும்படி அன்று அடர்த்த அண்ணல் அல்லரோ?

<u>திருச்சிற்றேமம்</u>

தனிவெண்டிங்கள் வாண்முக
மாதர்பாடத் தாழ்சடைத்
துணிவெண்டிங்கள் சூடியோ
ராடன்மேய தொன்மையான்
அணிவண்ணச்சிற் றேமத்தா
னலர்மேலந்த ணாளனும்
மணிவண்ணனுமுன் காண்கிலா
மழுவாட்செல்வ னல்லனே **#452**
ஒப்பற்ற வெண்ணிறச் சந்திரன் போன்று ஒளிரும் முகமுடைய உமாதேவியார் பண்ணிசையோடு பாட, தாழ்ந்த சடையில் இளம்பிறைச்

சந்திரனைச் சூடித்திருநடனம் செய்கின்ற மிகப் பழமையான இறைவன், அழகிய திருச்சிற்றேமத்தில் வீற்றிருந்தருளுகின்றார். அப்பெருமான் தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமனும், நீலரத்தினம் போன்ற நிறமுடைய திருமாலும் காணமுடியாதவாறு மழுப்படை ஏந்தி விளங்குகின்ற செல்வர் அல்லரோ?

திருச்சிற்றேமம்

வெள்ளைத்திங்கள் வாண்முக
மாதர்பாட வீழ்சடைப்
பிள்ளைத்திங்கள் சூடியோ
ராடன்மேய பிஞ்ஞகன்
உள்ளத்தார்சிற் றேமத்தா
னுருவார்புத்த ரொப்பிலாக்
கள்ளத்தாரைத் தானாக்கியுட்
கரந்துவைத்தான் அல்லனே **#453**

வெண்ணிறச் சந்திரன் போன்ற ஒளி திகழும் முகமுடைய உமாதேவியார் பண்ணிசைத்துப்பாட, சடைமுடியில் பிறைச்சந்திரனைச் சூடி, திருநடனம் செய்யும் இறைவன் விரும்பி வீற்றிருந்தருளுவது திருச்சிற்றேமம் என்ற தலமாகும். அப்பெருமான் புத்தர், சமணர் ஆகியோர்களைப் படைத்தும், அவர்கட்குத் தோன்றாதவாறு மறைந்தும் விளங்குபவர்.

திருச்சிற்றேமம்

கல்லிலோத மல்குதண்
கானல்சூழ்ந்த காழியான்
நல்லவாய வின்றமிழ்
நவிலுஞான சம்பந்தன்
செல்வனூர்சிற் றேமத்தைப்
பாடல்சீரார் நாவினால்
வல்லராகி வாழ்த்துவா
ரல்லலின்றி வாழ்வரே **#454**

கற்களால் ஆகிய மதிலில் கடல் அலைகள் மல்கும், குளிர்ந்த கடற்கரைச் சோலைசூழ்ந்த சீகாழியில் அவதரித்த ஞான சம்பந்தன், செல்வனாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றதிருச்சிற்றேமத்தைப் போற்றி நல்ல இன்தமிழில் அருளிய சிறப்புடைய இப்பாடல்களை நாவினால் ஓதவல்லவர்கள் துன்பம் அற்று வாழ்வார்கள்.

சீகாழி

சீர்காழி

சீகாழி,
பண் - கௌசிகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

சந்த மார்முலை யாடன கூறனார்
வெந்த வெண்பொடி யாடிய மெய்யனார்
கந்த மார்பொழில் சூழ்தரு காழியுள்
எந்தை யாரடி யென்மனத் துள்ளவே **#455**

இறைவர் அழகிய திருமுலைகளையுடைய உமாதேவியாரைத் தம் திருமேனியில் ஒரு கூறாகக் கொண்டவர். வெந்த திருவெண்ணீற்றினைப் பூசிய திருமேனி உடையவர். நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்த சீகாழியுள் வீற்றிருந்தருளிய என் தந்தையாராகிய சிவபெருமானின் திருவடிகள் என் மனத்தில் நன்கு பதிந்துள்ளன.

சீர்காழி

மானி டம்முடை யார்வளர் செஞ்சடைத்
தேனி டங்கொளுந் கொன்றையந் தாரினார்
கானி டங்கொளுந் தண்வயற் காழியார்
ஊனி டங்கொண்டெ னுச்சியி னிற்பரே **#456**

மானை இடக்கரத்தில் ஏந்திய சிவபெருமான் நீண்ட சிவந்த சடைமுடியின்மீது, தேன் துளிக்கும் கொன்றை மாலையை அணிந்தவர். நறுமணம் திகழும் குளிர்ந்த வயல்களையுடைய சீகாழியில் வீற்றிருந்தருளும் அப்பெருமான் இந்த உடலை இடமாகக் கொண்டு எனது உச்சியில் நிற்பர்.

சீர்காழி

மைகொள் கண்டத்தர் வான்மதிச் சென்னியர்
பைகொள் வாளர வாட்டும் படிறனார்
கைகொண் மான்மறி யார்கடற் காழியுள்
ஐய னந்தணர்போற்ற இருக்குமே **#457**

நஞ்சுண்டதால் மை போன்ற கறுத்த கண்டத்தை உடையவரும், வானில் விளங்கும் சந்திரனைச் சடைமுடியில் சூடி, படமெடுத்தாடும் பாம்பினை ஆட்டும் படிறரும், இளமான்கன்றை இடக்கரத்தில் ஏந்தியுள்ள

தலைவருமான சிவபெருமான், அந்தணர்கள் போற்றக் கடல்சூழ்ந்த சீகாழியில் வீற்றிருந்தருளுகின்றார்.

சீர்காழி

புற்றி னாகமும் பூளையும் வன்னியுங்
கற்றை வார்சடை வைத்தவர் காழியுட்
பொற்றொ டியோ டிருந்தவர் பொற்கழல்
உற்ற போதுட னேத்தி யுணருமே. **#458**

புற்றில் வாழும் பாம்பையும், தும்பைப்பூ மாலையையும், வன்னிப் பத்திரத்தையும் தமது கற்றையான நீண்ட சடைமேல் அணிந்து, சீகாழியில் உமாதேவியோடு வீற்றிருந் தருளுகின்ற சிவபெருமானின் பொன்போன்ற திருவடிகளைச் சமயம் நேர்ந்தபொழுது தாமதியாது உடனே துதித்துத் தியானித்து அவனருளை உணர்வீர்களாக.

சீர்காழி

நலியுங் குற்றமு நம்முட னோய்வினை
மெலியு மாறது வேண்டுதி ரேல்வெய்ய
கலிக டிந்தகை யார்கடற் காழியுள்
அலைகொள் செஞ்சடை யாரடி போற்றுமே **#459**

நம் மனத்தை வருத்தும் குற்றங்களும், தீவினைகளால் நம் உடலை வருத்தும் நோய்களும், மெலிந்து விலக விரும்புவீர்களாயின், கையால் வேள்வி வளர்த்துக் கொடிய கலியினால் ஏற்படும் துன்பத்தை ஓட்டும் அந்தணர்கள் வாழ்கின்ற கடல்சூழ்ந்த சீகாழியில், அலைகளையுடைய கங்கையைத் தாங்கிய செஞ்சடையானாகிய சிவபெருமானின் திருவடிகளைப் போற்றி வழிபடுங்கள்.

சீர்காழி

பெண்ணொர் கூறினர் பேயுட னாடுவர்
பண்ணு மேத்திசை பாடிய வேடத்தர்
கண்ணு மூன்றுடை யார்கடற் காழியுள்
அண்ண லாய வடிகள் சரிதையே **#460**

சிவபெருமான் உமாதேவியைத் தம் திருமேனியில் ஒரு பாகமாக உடையவர். பேய்க்கணங்கள் சூழ ஆடுபவர். உலகத்தார் போற்றும்படி நல்ல பண்களை ஏழிசைகளோடு பாடிய வேடத்தர், மூன்று கண்களை உடையவர். இவை கடல்சூழ்ந்த சீகாழியில் வீற்றிருந்தருளும் தலைவரான சிவபெருமானின் புகழை உணர்த்துபவைகள் ஆகும்.

சீர்காழி

பற்று மானு மழுவு மழகுற
முற்று மூர்திரிந் துபலி முன்னுவர்
கற்ற மாநன் மறையவர் காழியுட்
பெற்ற மேற துகந்தார் பெருமையே **#461**
பெருமானார் தம் திருக்கரத்திலே மானையும், மழுவையும் அழகுற ஏந்தி, ஊர்முழுவதும் திரிந்து பிச்சை எடுக்க முற்படுவார். வேதங்களை நன்கு கற்ற பெருமையுடைய நல்ல அந்தணர்கள் வாழ்கின்ற சீகாழியில் இடபத்தை வாகனமாக விரும்பி வீற்றிருந்தருளுகின்ற அச்சிவபெருமானது தன்மை இத்தன்மைத்தாகும்.

சீர்காழி

எடுத்த வல்லரக் கன்முடி தோளிற
அடர்த்து கந்தருள் செய்தவர் காழியுட்
கொடித்த யங்குநற் கோயிலு ளின்புற
இடத்து மாதொடு தாமு மிருப்பரே **#462**
திருக்கயிலைமலையைப் பெயர்த்தெடுத்த வல்லரக்கனான இராவணனின் முடியும், தோளும் நெரியுமாறு அடர்த்து, பின் அவன் எழுப்பிய சாமகானத்தால் மகிழ்ந்து அருள் செய்த சிவபெருமான் சீகாழியில் கொடிகள் விளங்குகின்ற அழகிய திருக்கோயிலுள் தம் திருமேனியின் இடப்புறத்தில் உமாதேவியை உடனாகக் கொண்டு இன்புற வீற்றிருந்தருளுவர்.

சீர்காழி

காலன் தன்னுயிர் வீட்டு கழலடி
மாலு நான்முகன் றானும் வனப்புற
ஓல மிட்டுமுன் றேடி யுணர்கிலாச்
சீலங் கொண்டவ னூர்திகழ் காழியே **#463**
காலன் உயிரைப் போக்கிய இறைவன் திருவடியைத் திருமாலும், பிரமனும் வனப்புறும் தோற்றத்தினராய் ஓலமிட்டுத் தேடியும் காணவொண்ணாத சிறப்புடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் ஊர் பெருமையுடன் திகழும் சீகாழியாகும்.

சீர்காழி

உருவ நீத்தவர் தாமு முறுதுவர்
தருவ லாடையி னாருந் தகவிலர்
கருமம் வேண்டுதி ரேற்கடற் காழியுள்
ஒருவன் சேவடி யேஅடைந் துய்ம்மினே **#464**
தமது கடுமையான சமய ஒழுக்கத்தினால் உடலின் இயற்கை நிறம்

மாறிக் கருநிறமான சமணர்களும், துவர் நிறம் ஊட்டப்பட்ட ஆடையை உடுக்கின்ற புத்தர்களும் தகைமை யற்றவர்கள். உங்களுக்கு நல்ல காரியம் கைகூட வேண்டுமென்று விரும்பினீர்களேயானால், கடலை அடுத்த சீகாழியில் வீற்றிருந் தருளும் ஒப்பற்ற சிவபெருமானின் சிவந்த திருவடிகளைச் சரணடைந்து உய்வீர்களாக!

சீர்காழி

கானல் வந்துல வுங்கடற் காழியுள்
ஈன மில்லி யிணையடி யேத்திடும்
ஞான சம்பந்தன் சொல்லிய நற்றமிழ்
மான மாக்கும் மகிழ்ந்துரை செய்யவே **#465**

கரையிலுள்ள சோலைகளிலிருந்து நறுமணம் வீசும் கடலை அடுத்த சீகாழியில், அழிவற்று என்றும் நித்தப் பொருளாக விளங்கிடும் சிவபெருமானுடைய இரண்டு திருவடி களையும் வணங்கிடும் ஞானசம்பந்தன் அருளிய இத்திருப்பதிகத்தை மனமகிழ்ச்சியுடன் பாட அத்தமிழ் மேலான வீடுபேற்றைத் தரும்.

திருக்கழிப்பாலை

திருக்கழிப்பாலை

திருக்கழிப்பாலை,
பண் - கௌசிகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பால்வண்ணநாதர்.
தேவியார் : வேதநாயகியம்மை.

வெந்த குங்கி லியப்புகை விம்மவே
கந்த நின்றுல வுங்கழிப் பாலையார்
அந்த மும்மள வும்மறி யாததோர்
சந்த மாலவர் மேவிய சாந்தமே **#466**

நெருப்பிலிடப்பட்ட குங்கிலியத்தின் புகைப்பெருக்கால் நறுமணம் கமழும் திருக்கழிப்பாலையில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் அழிவில்லாதவர். இன்ன தன்மையர் என்று அளந்தறியமுடியாதவர். அப்பெருமானின் சாந்தநிலையும் அளக்கொணாத தன்மையுடையதாகும்.

திருக்கழிப்பாலை

வானி லங்க விளங்கு மிளம்பிறை
தான லங்க லுகந்த தலைவனார்
கானி லங்க வருங்கழிப் பாலையார்
மான லம்மட நோக்குடை யாளொடே **#467**

வானம் பிரகாசிக்க விளங்கும் இளம்பிறைச் சந்திரனை மாலைப்போல் விரும்பி அணிந்த தலைவரான சிவ பெருமான், கடற்கரைச் சோலை விளங்கும் திருக்கழிப்பாலையில் மான் போன்ற பார்வையுடைய உமாதேவியாரோடு வீற்றிருந்தருளுவார்.

திருக்கழிப்பாலை

கொடிகொ ளேற்றினர் கூற்றை யுதைத்தனர்
பொடிகொண் மார்பினிற் பூண்டதொ ராமையர்
கடிகொள் பூம்பொழில் சூழ்கழிப் பாலையுள்
அடிகள் செய்வன வார்க்கறி வொண்ணுமே **#468**

இறைவர் எருதுக் கொடியுடையவர். காலனைக் காலால் உதைத்தவர். திருநீறு அணிந்துள்ள மார்பில் ஆமையின் ஓட்டினை ஆபரணமாக அணிந்தவர். நறுமணம் கமழும் பூஞ்சோலைகள் சூழ்ந்த திருக்கழிப்பாலையில் வீற்றிருந்தருளும் அப்பெருமானின் செயல்களை

யார்தான் அறிந்துகொள்ளமுடியும்? ஒருவராலும் முடியாது.

திருக்கழிப்பாலை

பண்ண லம்பட வண்டறை கொன்றையின்
தண்ண லங்க லுகந்த தலைவனார்
கண்ண லங்கவ ருங்கழிப் பாலையுள்
அண்ண லெங்கட வுள்ளவன் அல்லனே #469

பூக்களிலுள்ள தேனை உண்டதால் வண்டுகள் பண்ணிசைக்கக் குளிர்ச்சி பொருந்திய கொன்றைமாலையை விரும்பி அணிகின்ற தலைவரான சிவபெருமான் கண்ணைக் கவரும் பேரழகினையுடைய திருக்கழிப்பாலையில் வீற்றிருக்கும் அண்ணலாவார். அவரே எம் கடவுள் அல்லரே?

திருக்கழிப்பாலை

ஏரி னாருல கத்திமை யோரொடும்
பாரி னாருட னேபர வப்படுங்
காரி னார்பொழில் சூழ்கழிப் பாலையெம்
சீரி னார்கழ லேசிந்தை செய்ம்மினே #470

எழுச்சி மிகுந்த விண்ணுலகத்தவராகிய தேவர்களோடு, மண்ணுலக மக்களாலும் சேர்ந்து தொழப்படுகின்றவனும், மேகங்கள் தவழும் சோலைகள் சூழ்ந்த திருக்கழிப்பாலையில் வீற்றிருந்தருளும் சிறப்புடையவனுமாகிய சிவபெருமானின் திருவடிகளையே சிந்தை செய்யுங்கள்.

திருக்கழிப்பாலை

துள்ளு மான்மறி யங்கையி லேந்தியூர்
கொள்வ னாரிடு வெண்டலை யிற்பலி
கள்வ னாருறை யுங்கழிப் பாலையை
உள்ளு வார்வினை யாயின வோயுமே #471

துள்ளுகின்ற இளமையான மானை, அழகிய கையில் ஏந்தி, ஊர்தோறும் திரிந்து பிச்சை ஏற்கின்ற கள்வனாராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருக்கழிப்0பாலையை நினைந்து ஏத்த வினையாவும் நீங்கும்.

திருக்கழிப்பாலை

மண்ணி னார்மலி செல்வமும் வானமும்
எண்ணி நீரினி தேத்துமின் பாகமும்
பெண்ணி னார்பிறை நெற்றியொ டுற்றமுக்

கண்ணி னாருறை யுங்கழிப் பாலையே #472
மண்ணுலகில் பொருந்திய மிக்க செல்வங்களையும், வானுலகில் மறுமையில் பெறக்கூடிய செல்வத்தையும் தருபவன் இவனே என்பதை மனத்தில் எண்ணி, தன் திருமேனியின் ஒரு பாகமாக உமாதேவியைக் கொண்டுள்ளவனும், பிறைச் சந்திரனைச் சடைமுடியில் அணிந்த வனும், முக்கண்ணனுமான சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருக்கழிப்பாலையை இனிதே போற்றி நீங்கள் வணங்குவீர்களாக!

திருக்கழிப்பாலை

இலங்கை மன்னனை யீரைந் திரட்டிதோள்
துலங்க வூன்றிய தூமழு வாளினார்
கலங்கள் வந்துல வுங்கழிப் பாலையை
வலங்கொள் வார்வினை யாயின மாயுமே #473
இலங்கை மன்னனான இராவணனின் இருபது தோள்களும் நொறுங்கும்படி கயிலைமலையில் தன்காற்பெருவிரலை ஊன்றிய, தூய்மையான மழுவாகிய படைக்கலத்தை உடைய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற, மரக்கலங்கள் வந்து உலவும் திருக்கழிப்பாலையை வலமாக வருபவர்களுக்கு வினைகள் யாவும் அழிந்துவிடும்.

திருக்கழிப்பாலை

ஆட்சி யாலல ரானொடு மாலுமாய்த்
தாட்சி யாலறி யாது தளர்ந்தனர்
காட்சி யாலறி யான்கழிப் பாலையை
மாட்சி யாற்றொழு வார்வினை மாயுமே #474
தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பிரமனும், திருமாலும் தாங்கள் செய்கின்ற படைத்தல், காத்தல் ஆகிய தொழில்களின் ஆளுமையால் ஏற்பட்ட செருக்குக் காரணமாக இறைவனுடைய திருமுடியையும், திருவடியையும் அறிய முற்பட்டு, தமது தாழ்ச்சியால் அவற்றை அறியமுடியாது தளர்ச்சியடைந்தனர். நூலறிவாலும், ஆன்ம அறிவாலும் அறியப்படாதவனான சிவ பெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருக்கழிப்பாலையை அதன் மாட்சிமை உணர்ந்து தொழுவாருடைய வினைகள் யாவும் மாயும்.

திருக்கழிப்பாலை

செய்ய நுண்டுவ ராடையி னாரொடு
மெய்யின் மாசு பிறக்கிய வீறிலாக்
கையர் கேண்மை யெனோகழிப் பாலையெம்

ஐயன் சேவடி யேயடைந் துய்ம்மினே **#475**
சிவந்த மெல்லிய மஞ்சட் காவி உடைகளை உடுத்தும் புத்தர்களோடும், அழுக்கு உடம்பை உடைய பெருமையற்ற கீழ்மக்களாகிய சமணர்களோடும் நட்பு உங்கட்கு ஏனோ? திருக்கழிப் பாலையில் வீற்றிருந்தருளும் எம் தலைவராகிய சிவபெருமானுடைய சிவந்த திருவடிகளையே சரணாக அடைந்து உய்தி பெறுங்கள்.

திருக்கழிப்பாலை

அந்தண் காழி யருமறை ஞானசம்
பந்தன் பாய்புனல் சூழ்கழிப் பாலையைச்
சிந்தை யாற்சொன்ன செந்தமிழ் வல்லவர்
முந்தி வானுல காடன் முறைமையே **#476**

அழகிய, குளிர்ச்சி மிகுந்த சீகாழியில் அவதரித்த அருமறைவல்ல ஞானசம்பந்தன், பாய்கின்ற நீர் சூழ்ந்த திருக்கழிப்பாலையைப் போற்றிச் சிவ சிந்தையோடு சொன்ன செந்தமிழாகிய இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள் எல்லோரும் முன்னதாக வானுலகத்தை ஆளுதற்கு உரியவராவர்.

திருவாரூர்

திருவாரூர்

திருவாரூர்,
பண் - கௌசிகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

அந்த மாயுல காதியு மாயினான்
வெந்த வெண்பொடிப் பூசிய வேதியன்
சிந்தை யேபுகுந் தான்றிரு வாரூரெம்
எந்தை தானெனை யேன்றுகொ ளுங்கொலோ **#477**

சிவபெருமான் உலகத்தின் ஒடுக்கத்திற்கும், தோற்றத்திற்கும் நிமித்த காரணன். திருவெண்ணீறு பூசிய வேத நாயகன். என் சிந்தையில் புகுந்து விளங்குபவன். திருவாரூரில் வீற்றிருந்தருளும் எம் தந்தையான அவன் என்னை ஏற்று அருள் புரிவானோ!

திருவாரூர்

கருத்த னேகரு தார்புர மூன்றெய்த
ஒருத்த னேயுமை யாளொரு கூறனே
திருத்த னேதிரு வாரூரெந் தீவண்ண
அருத்த வென்னெனை யஞ்சலென் னாததே **#478**

இறைவர் என் கருத்திலிருப்பவர். தம்மைக் கருதிப் போற்றாத பகையசுரர்களின் மூன்று புரங்களையும் அக்கினிக்கணை தொடுத்து எரித்துச் சாம்பலாகுமாறு செய்தவர். ஒப்பற்றவர், உமாதேவியைத் தம் திருமேனியில் ஒரு கூறாகக் கொண்டவர். தூயவர். திருவாரூரில் வீற்றிருந்தருளும் தீ வண்ணர். எப்பொருட்கும் விளக்கமாய் அமைந்த பெரும்பொருள். அவர் என்னை அஞ்சற்க என்று மொழியாததன் காரணம் யாதோ?

திருவாரூர்

மறையன் மாமுனி வன்மரு வார்புரம்
இறையின் மாத்திரை யில்லெரி யூட்டினான்
சிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூரெம்
இறைவன் றானெனை யேன்றுகொ ளுங்கொலோ **#479**

இறைவன், வேதங்களை அருளிச் செய்து வேதப்பொருளாகவும் விளங்குபவன். பெரிய தவத்தன். பகையசுரர்களின் முப்புரங்களை

நொடிப்பொழுதில் எரியூட்டியவன். சிறகுகளையுடைய வண்டுகள் ஒலிக்கும் சோலைகள் சூழ்ந்த திருவாரூரில் வீற்றிருந்தருளும் இறைவன் என்னை அடியவனாக ஏற்றுக் கொள்வானோ!

திருவாரூர்

பல்லி லோடுகை யேந்திப் பலிதிரிந்
தெல்லி வந்திடு காட்டெரி யாடுவான்
செல்வ மல்கிய தென்றிரு வாரூரான்
அல்ல றீர்த்தெனை யஞ்சலெ னுங்கொலோ **#480**

இறைவர் பிரமனின் பல் இல்லாத மண்டையோட்டை ஏந்திப் பலி ஏற்றுத் திரிபவர். இரவில் சுடுகாட்டில் நடனம் புரிபவர். செல்வச் செழிப்பு மிக்க அழகிய திருவாரூரில் வீற்றிருந்தருளும் அப்பெருமான் என் துன்பத்தைத் தீர்த்து அஞ்சாதே என்று சொல்லி அருள்புரிவாரோ!

திருவாரூர்

குருந்த மேறிக் கொடிவிடு மாதவி
விரிந்த லர்ந்த விரைகமழ் தேன்கொன்றை
திருந்து மாடங்கள் சூழ்திரு வாரூரான்
வருந்தும் போதெனை வாடலெ னுங்கொலோ **#481**

குருந்த மரத்தில் ஏறிப்படரும் மாதவியும், விரிந்து மலர்ந்த நறுமணம் கமழும் தேனுடைய கொன்றை மரங்களும் திகழ, மாடமாளிகைகள் சூழ்ந்த திருவாரூரில் வீற்றிருந்தருளும் இறைவர் நான் வருந்தும்போது, என்னை வருந்தாதே என்றுரைத்து அருள் புரிவாரோ!

திருவாரூர்

வார்கொண் மென்முலை யாளொரு பாகமா
ஊர்க ளாரிடு பிச்சைகொ ளுத்தமன்
சீர்கொண் மாடங்கள் சூழ்திரு வாரூரான்
ஆர்க ணாவெனை யஞ்சலெ னாததே **#482**

கச்சணிந்த மெல்லிய முலைகளையுடைய உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு, ஊரிலுள்ளவர்கள் இடுகின்ற பிச்சையை ஏற்கும் உத்தமனாய், செல்வ வளமிக்க அழகிய மாடங்கள் சூழ்ந்த திருவாரூரில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் நான் வேறு யாரைச் சரணாகப் புகுந்துள்ளேன் என்று கருதி அவன் என்னை அஞ்சாதே என்று கூறாமலிருக்கிறான்?

திருவாரூர்

வளைக்கை மங்கைநல் லாளையோர் பாகமாத்

துளைக்கை யானை துயர்படப் போர்த்தவன்
திளைக்குந் தண்புனல் சூழ்திரு வாரூரான்
இளைக்கும் போதெனை யேன்றுகொ ளுங்கொலோ **#483**
வளையலணிந்த கைகளையுடைய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்ட இறைவன், தன்னை எதிர்த்து வந்த யானையானது கலங்குமாறு அடர்த்து அதன் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவன், குளிர்ந்த புனல் சூழ்ந்த திருவாரூரில் வீற்றிருந்தருளும் இறைவன், இளைத்து வருந்தும் காலத்தில் என்னை ஏற்று அருள் புரிவானோ!

<u>திருவாரூர்</u>

இலங்கை மன்ன னிருபது தோளிறக்
கலங்கக் கால்விர லாற்கடைக் கண்டவன்
வலங்கொள் மாமதில் சூழ்திரு வாரூரான்
அலங்கல் தந்தெனை யஞ்சலெ னுங்கொலோ **#484**
இலங்கை வேந்தனான இராவணனுடைய இருபது தோள்களும் நொறுங்கிக் கலங்கத் தன் காற்பெருவிரலை ஊன்றியவர் இறைவர். வலிமையுடைய பெரிய மதில்கள் சூழ்ந்த திருவாரூரில் வீற்றிருந்தருளும் அப்பெருமான் எனக்குப் பெருமை சேர்க்கும் மாலை தந்து அருளி, நான் வருந்தும் காலத்தில் அஞ்சாதே என்று அபயம் அளித்துக் காப்பாரோ!

<u>திருவாரூர்</u>

நெடிய மாலும் பிரமனும் நேர்கிலாப்
படிய வன்பனி மாமதிச் சென்னியான்
செடிக ணீக்கிய தென்றிரு வாரூரெம்
அடிக டானெனை யஞ்சலெ னுங்கொலோ **#485**
நீண்டு உயர்ந்த திருமாலும், பிரமனும் காணமுடியாத தன்மையராய்க்குளிர்ந்த சந்திரனைச் சடைமுடியில் தாங்கிய இறைவர், மன்னுயிர்களின் பாவங்களை நீக்கி அழகிய திருவாரூரில் வீற்றிருந்தருளும் அடிகளாவார். அவர் என்னை அஞ்சாதே என்று அருள் புரிவாரோ!

<u>திருவாரூர்</u>

மாசு மெய்யினர் வண்டுவ ராடைகொள்
காசை போர்க்குங் கலதிகள் சொற்கொளேல்
தேச மல்கிய தென்றிரு வாரூரெம்
ஈசன் றானெனை யேன்றுகொ ளுங்கொலோ **#486**
அழுக்கு உடம்பையுடைய சமணர்களும், துவராடை அணிந்த

புத்தர்களும், கூறும் பயனற்ற சொற்களைக் கொள்ளாதீர், அருளொளி விளங்கும் அழகிய திருவாரூரில் வீற்றிருந்தருளும் எம் இறைவரான சிவபெருமான் என்னை ஏற்று நின்று அருள்புரிவாரோ!

திருவாரூர்

வன்னி கொன்றை மதியொடு கூவிளம்
சென்னி வைத்த பிரான்றிரு வாரூரை
மன்னு காழியுண் ஞானசம் பந்தன்வாய்ப்
பன்னு பாடல்வல் லார்க்கில்லை பாவமே **#487**

வன்னி, கொன்றை, சந்திரன், வில்வம் ஆகியவற்றைச் சடைமுடியில் திகழச் சூடிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருவாரூரை, நிலைபெற்ற சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தன் வாய்மலர்ந்து அருளிய இத்திருப்பாடல்களை ஓத வல்லவர்கட்குப் பாவம் இல்லை.

திருக்கருகாவூர்

திருக்கருகாவூர்

திருக்கருகாவூர்,
பண் - கௌசிகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

முத்தி லங்குமுறு வல்லுமை யஞ்சவே
மத்த யானைமறு கவ்வுரி வாங்கியக்
கத்தை போர்த்தகட வுள்கரு காவூரெம்
அத்தர் வண்ணம்மழ லும்மழல் வண்ணமே **#488**

முத்துப் போன்ற புன்னகை கொண்டு விளங்கும் உமாதேவி அஞ்சுமாறு மதம் பிடித்த யானையின் தோலை உரித்துப் போர்த்திய கடவுள் திருக்கருகாவூரில் வீற்றிருந்தருளும் எம் தலைவர். அவர் வண்ணம் நெருப்புப் போன்ற சிவந்த வண்ணமாகும்.

திருக்கருகாவூர்

விமுத வல்லசடை யான்வினை யுள்குவார்க்
கமுத நீழலக லாததோர் செல்வமாம்
கமுத முல்லை கமழ்கின்ற கருவாவூர்
அமுதர் வண்ணம்மழ லும்மழல் வண்ணமே **#489**

கங்கையைத் தாங்கிய சடைமுடியுடைய சிவபெருமானுக்குத் திருத்தொண்டு செய்யும் அடியவர்களே. நும் பணி ஆனது அமுதம் போல இன்பம் விளைவிக்கும் திருவடி நீழலை விட்டு அகலாத செல்வமாகும். வெண்ணிற முல்லை மணம் கமழ்கின்ற திருக்கருகாவூரில் வீற்றிருந்தருளும் இறைவன் அமுதம் போன்று இனிமை தருபவன். அவனுடைய வண்ணம் நெருப்புப் போன்றசிவந்த வண்ணமாகும்.

திருக்கருகாவூர்

பழக வல்லசிறுத் தொண்டர்பா வின்னிசைக்
குழக ரென்றுகுழை யாவழை யாவரும்
கழல்கொள் பாடலுடை யார்கரு காவூரெம்
அழகர் வண்ணம்மழ லும்மழல் வண்ணமே **#490**

பழகுவதற்குரிய சிறப்புடைய சிறுத்தொண்டர்கள் இன்னிசையோடு பாடி அழகனான சிவபெருமானைக் குழைந்து, அழைத்து, கழலணிந்த திருவடிகளையே பொருளாகக் கொண்ட பாக்களைப் பாட,

திருக்கருகாவூரில் வீற்றிருந்தருளும் அழகரான சிவபெருமானின் வண்ணம் நெருப்புப் போன்ற சிவந்த வண்ணமாகும்.

திருக்கருகாவூர்

பொடிமெய் பூசிமலர் கொய்து புணர்ந்துடன்
செடிய ரல்லாவுள்ளம் நல்கிய செல்வத்தர்
கடிகொள் முல்லைகம ழுங்கரு காவூரெம்
அடிகள் வண்ணம்மழ லும்மழல் வண்ணமே **#491**

திருவெண்ணீற்றைத் திருமேனியில் பூசி, மலர் கொண்டு தூவிப் போற்றி வழிபடும் அடியவர்கட்குக் குற்றமில்லாச் செம்மையான உள்ளம் நல்கும் செல்வரான சிவபெருமான், நறுமணம் கமழும் முல்லைகளையுடைய திருக்கருகாவூரில் வீற்றிருந்தருளும் எம் அடிகளாவார். அவருடைய வண்ணம் நெருப்புப்போன்ற சிவந்த வண்ணமாகும்.

திருக்கருகாவூர்

மைய லின்றிமலர் கொய்துவ ணங்கிடச்
செய்ய வுள்ளம்மிக நல்கிய செல்வத்தர்
கைதன் முல்லைகம ழுங்கரு காவூரெம்
ஐயர் வண்ணம்மழ லும்மழல் வண்ணமே **#492**

மயக்கமில்லாமல் மலர்கொய்து போற்றி வணங்கும் அடியவர்கட்குச் செம்மையான உள்ளம் நல்கும் செல்வத்தராகிய சிவபெருமான், தாழையும் முல்லையும் மணம் கமழும் திருக்கருகாவூரில் வீற்றிருந்தருளும் எம் தலைவர் ஆவார். அவருடைய வண்ணம் நெருப்புப் போன்ற சிவந்த வண்ணமாகும்.

திருக்கருகாவூர்

மாசில் தொண்டர்மலர் கொண்டுவ ணங்கிட
ஆசை யாரவரு ணல்கிய செல்வத்தர்
காய்சி னத்தவிடை யார்கரு காவூரெம்
ஈசர் வண்ணம்மெரி யும்மெரி வண்ணமே **#493**

மாசில்லாத தொண்டர்கள் மலர்தூவி வணங்கிட அவர்கள் விருப்பம் நிறைவேற அருள்நல்கும் செல்வரான சிவ பெருமான், சினம் கொள்ளும் இடபத்தை வாகனமாகக் கொண்டு திருக்கருகாவூரில் வீற்றிருந்தருளும் எம் இறைவர் ஆவார். அவர் வண்ணம் எரியும் நெருப்புப் போன்ற சிவந்த வண்ணமாகும்.

திருக்கருகாவூர்

வெந்த நீறுமெய் பூசிய வேதியன்

சிந்தை நின்றருள் நல்கிய செல்வத்தன்
கந்த மௌவல்கம ழுங்கரு காவூரெம்
எந்தை வண்ணம்மெரி யும்மெரி வண்ணமே **#494**
திருநீறு பூசிய வேதியராய், அடியவர்தம் சிந்ததையுள் நின்று அருள்புரியும் செல்வரான சிவபெருமான், நறுமணம்கமழும் முல்லைகள் மலரும் திருக்கருகாவூரில் வீற்றிருந்தருளும் எம் தந்தையாவார். அவர் வண்ணம் எரியும் நெருப்புப் போன்ற சிவந்த வண்ணமாகும்.

திருக்கருகாவூர்

பண்ணி னேர்மொழி யாளையோர் பாகனார்
மண்ணு கோலம்முடை யம்மல ரானொடும்
கண்ண னேடவரி யார்கரு காவூரெம்
அண்ணல் வண்ணம்மழ லும்மழல் வண்ணமே **#495**
பண்போன்று இனிய மொழிபேசும் உமா தேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்ட இறைவன், அலங்கரிக்கப்பட்ட கோலமுடைய அழகிய மலரில் வீற்றிருந்தருளும் பிரமனும், திருமாலும் காண்பதற்கு அரியவராய்த் திருக்கருகாவூரில் வீற்றிருந்தருளும் எம் தலைவர் ஆவார். அவனது வண்ணம் நெருப்புப் போன்ற சிவந்த வண்ணமாகும்.

திருக்கருகாவூர்

போர்த்த மெய்யினர் போதுழல் வார்கள்சொல்
தீர்த்த மென்றுதெள வீர்தெள யேன்மின்
கார்த்தண் முல்லைகம ழுங்கரு காவூரெம்
ஆத்தர் வண்ணம்மழ லும்மழல் வண்ணமே **#496**
மஞ்சட் காவி ஆடையால் போர்த்த உடம்பினர்களும், பொழுதெல்லாம் அலைபவர்களும் சொல்கின்ற மொழிகளை உயர்வானவாகக் கொள்ள வேண்டா. மேகம் சூழ, குளிர்ந்த முல்லை மணம் கமழும் திருக்கருகாவூரில் வீற்றிருந் தருளும் எம் சிவனின் வண்ணம் நெருப்புப் போன்ற சிவந்த வண்ணம்.

திருக்கருகாவூர்

கலவ மஞ்ஞையுல வுங்கரு காவூர்
நிலவு பாட லுடையான்றன நீள்கழல்
குலவு ஞானசம் பந்தன செந்தமிழ்
சொலவ லாரவர் தொல்வினை தீருமே **#497**
மயில், தோகை விரித்து ஆடுகின்ற திருக்கருகாவூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் இறைவர் புகழ்ப் பாக்கள் கொண்டு போற்றி வழிபடப் பெற்றவர். அப்பெருமானுடைய திருவடிகளில் அன்பு

செலுத்தி ஞானசம்பந்தன் அருளிய இத்திருப் பதிகத்தை ஓத வல்லவர்களின் தொல்வினை தீரும்.

திருஆலவாய்

திருஆலவாய்

திருஆலவாய்,
பண் - கௌசிகம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. இதுவே மதுரை. ,
சுவாமிபெயர் : சொக்கநாதசுவாமி.
தேவியார் : மீனாட்சியம்மை.

காட்டு மாவ துரித்துரி போர்த்துடல்
நாட்ட மூன்றுடை யாயுரை செய்வனான்
வேட்டு வேள்விசெய் யாஅமண் கையரை
ஒட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே **#498**

காட்டிலுள்ள யானையின் தோலை உரித்துப் போர்த்திய இறைவனே! மூன்று கண்ணுடைய பெருமானே! நல்வேள்வியைப் புரியாதவர்களாகிய சமணர்களுடன் நான் வாதம் செய்து அவரை விரட்டுவதற்குத் திருவுளக்குறிப்பு யாது? உரை செய்வாயாக!

திருஆலவாய்

மத்த யானையின் ஈருரி மூடிய
அத்த னேயணி ஆலவா யாய்பணி
பொய்த்த வன்தவ வேடத்த ராஞ்சமண்
சித்த ரையழிக் கத்திரு வுள்ளமே **#499**

மதம் பொருந்திய யானையின் தோலை உரித்துப் போர்த்திய அத்தனே! அழகிய ஆலவாயில் விளங்கும் நாதனே! பொய்த்தவ வேடம் கொண்ட சமணரிடம் வாது செய்து அழிப்பதற்குத் திருவுள்ளம் யாதோ? உரைப்பாயாக.

திருஆலவாய்

மண்ண கத்திலும் வானிலு மெங்குமாம்
திண்ண கத்திரு வாலவா யாயருள்
பெண்ண கத்தெழிற் சாக்கியப் பேயமண்
தெண்ணர் கற்பழிக் கத்திரு வுள்ளமே **#500**

இப் பூவிலகத்திலும், விண்ணுலகத்திலும் மற்றும் எல்லா இடங்களிலும் உறுதியாய் விளங்கும் ஆலவாயில் வீற்றிருக்கின்ற இறைவனே! பௌத்தர்களும் சமணர்களும் வாதம் புரியும் தன்மையில் அவர்தம் கல்வியைத் தகுதியற்றதாக அழிதல் செய்வதற்குத் திருவுள்ளம் யாது! உரைத்தருள்வாயாக.

திருஆலவாய்

ஓதி யோத்திறி யாவம ணாதரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
ஆதி யேதிரு வாலவா யண்ணலே
நீதி யாக நினைந்தருள் செய்திடே **#501**

வேதங்களை ஓதி உணரும் ஞானம் அற்றவராகிய சமணர்களை வாதில் வெற்றி கொள்ளத் திருவுள்ளம் யாது? ஆதி மூர்த்தியாய்த் திருஆலவாயில் வீற்றிருந்தருளும் அண்ணலே! நடுநிலையிலிருந்து அருள் செய்வாயாக!

திருஆலவாய்

வைய மார்புக ழாயடி யார்தொழும்
செய்கை யார்திரு வாலவா யாய்செப்பாய்
கையி லுண்டுழ லுமமண் கையரைப்
பைய வாது செயத்திரு வுள்ளமே **#502**

உலகெங்கும் பரவிய புகழை உடையவனே! அடியவர்கள் தொழுது போற்றும் திருஆலவாயில் வீற்றிருந்தருளும் இறைவனே! கையில் உணவு வாங்கி உண்டு திரியும் அமணராகிய கீழ்மக்களுடன் மெதுவாக நான் வாதம் புரிவதற்குத் திருவுள்ளம் யாது? உரைத்தருள்வாயாக!

திருஆலவாய்

நாறு சேர்வயற் றண்டலை மிண்டிய
தேற லார்திரு வாலவா யாய்செப்பாய்
வீறி லாத்தவ மோட்டமண் வேடரைச்
சீறி வாதுசெ யத்திரு உள்ளமே **#503**

நாற்றுக்கள் நடப்பட்ட வயல்களிலும், சோலைகளிலும் பெருக்கெடுத்து வழியும் தேன் நிறைந்த திருவாலவாயில் வீற்றிருந்தருளும் சிவபெருமானே! பெருமையில்லாத தவத்தைப் புரியும் முரடர்களாகிய சமணர்களைச் சினந்து வாது செய்ய உன்னுடைய திருவுள்ளம் யாது? சொல்லியருள்வாயாக!

திருஆலவாய்

பண்ட டித்தவத் தார்பயில் வாற்றொழும்
தொண்ட ருக்கௌ யாய்திரு வாலவாய்
அண்ட னேயமண் கையரை வாதினில்
செண்ட டித்துள றத்திரு வுள்ளமே **#504**

தொன்றுதொட்டுப் பலகாலும் பழகிய திறத்தால் உம்முடைய

திருவடிகளையே வணங்கி வருகின்ற தொண்டர்களுக்கு எளியவரே! திருவாலவாயில் வீற்றிருந்தருளுபவரே! அண்டப் பொருளாக விளங்கும் பெருமையுடையவரே! சமணர்களை வாதில் வளைத்து அடித்து அழிக்க எண்ணுகிறேன். உமது திருவுளம் யாது?

திருஆலவாய்

அரக்கன் தான்கிரி யேற்றவன் றன்முடிச்
செருக்கி னைத்தவிர்த் தாய்திரு வாலவாய்ப்
பரக்கு மாண்புடை யாயமண் பாவரைக்
கரக்க வாதுசெ யத்திரு வுள்ளமே **#505**

கயிலைமலையைப் பெயர்த்தவனாகிய இராவணனின் முடிகளை நெரித்து, அவனது செருக்கினை அழித்தவரே! திருவாலவாயில் வீற்றிருந்தருளும் சிவபெருமானே! எங்கும் பரவிய புகழை உடையவரே! இறைவனை நினைந்து வழிபடும் பேறு பெறாதவர்களான சமணர்களை அடக்குவதற்கு அவர்களுடன் அடியேன் வாது செய்யத் தங்கள் திருவுள்ளம் யாது?

திருஆலவாய்

மாலும் நான்முக னும்மறி யாநெறி
ஆல வாயுறை யும்மண்ண லேபணி
மேலை வீடுண ராவெற்ற ரையரைச்
சால வாதுசெ யத்திரு யுள்ளமே **#506**

திருமாலும், பிரமனும் அறியாத தன்மையராய்த் திருஆலவாயில் வீற்றிருந்தருளும் தலைவரான சிவபெருமானே! இறைவனுக்குத் தொண்டு செய்து உயர்ந்த வீட்டுநெறியினை அடைவதற்குரிய வழியை உணராது ஆடையின்றித் திரியும் சமணர்களோடு மிகவும் வாது செய்யத் தங்கள் திருவுள்ளம் யாது?

திருஆலவாய்

கழிக்க ரைப்படு மீன்கவர் வாரமண்
அழிப்ப ரையழிக் கத்திரு வுள்ளமே
தெழிக்கும் பூம்புனல் சூழ்திரு வாலவாய்
மழுப்ப டையுடை மைந்தனே நல்கிடே **#507**

நீர்நிலைகளிலுள்ள மீன்களைக் கவர்ந்து உண்ணும் புத்தர்களையும், நன்மார்க்கங்களை அழித்த வரும் சமணர்களையும் அடக்க எண்ணுகிறேன். ஒலிக்கும் அழகிய ஆறு சூழ்ந்த திருவாலவாயில் வீற்றிருந்தருளும் இறைவரே! மழுப்படையை உடைய மைந்தரே! உமது திருவுள்ளம் யாது?

<u>திருஆலவாய்</u>

செந்தெ னாமுர லுந்திரு வாலவாய்
மைந்த னேயென்று வல்லம ணாசறச்
சந்த மார்தமிழ் கேட்டமெய்ஞ் ஞானசம்
பந்தன் சொற்பக ரும்பழி நீங்கவே **#508**

வண்டுகள் முரலும் திருஆலவாயில் வீற்றிருந்தருளும் மைந்தனே என்று விளித்து வலிய அமணர்களின் நெறிகளிலுள்ள குற்றங்கள் நீங்கச் சந்தமுடைய தழிழால் இறைவன் திருவுள்ளம் யாது எனக் கேட்ட மெய்ஞ்ஞானசம்பந்தன் அருளிய இத்திருப்பதிகத்தைப் பழிநீங்க ஓதுவீர்களாக!

திருமழபாடி

திருமழபாடி

திருமழபாடி,
பண் - கௌசிகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வச்சிரத்தம்பேசுவரர்.
தேவியார் : அழகாம்பிகையம்மை.

அங்கை யாரழ லன்னழ கார்சடைக்
கங்கை யான்கட வுள்ளிட மேவிய
மங்கை யானுறை யும்மழ பாடியைத்
தங்கை யாற்றொழ வார்தக வாளரே **#509**

இறைவன் அழகிய கையில் நெருப்பேந்தியவன். அழகிய செஞ்சடையில் கங்கையைத் தாங்கி, இடம், பொருள், காலம் இவற்றைக் கடந்து என்றும் நிலைத்துள்ள அச்சிவபெருமான் தன் திருமேனியின் இடப்பாகமாக உமாதேவியைக் கொண்டு வீற்றிருந்தருளும் மழபாடியைக் கைகளால் கூப்பித் தொழும் அன்பர்கள் நற்பண்பாளர்கள் ஆவர்.

திருமழபாடி

விதியு மாம்விளை வாமொளி யார்ந்ததோர்
கதியு மாங்கசி வாம்வசி யாற்றமா
மதியு மாம்வலி யாமழ பாடியுள்
நதியந் தோய்சடை நாதன்நற் பாதமே **#510**

திருமழபாடியில் வீற்றிருந்தருளும் கங்கையைச் சடையில் தாங்கிய சிவபெருமானின் திருவடிகளே ஆன்மாக்களுக்கு விதியாவதும், அவ்விதியின் விளைவாவதும், ஒளியிற் கலப்பதாகிய முத்தி ஆவதுமாம். மனத்தைக் கசியவைத்துத் தன்வயப்படுத்தும் சிவ ஞானத்தை விளைவிக்கும் அத்தகைய திருவடிகளை வழிபடுவீர்களாக.

திருமழபாடி

முழவி னான்முது காடுறை பேய்க்கணக்
குழுவி னான்குல வுங்கையி லேந்திய
மழுவி னானுறை யும்மழ பாடியைத்
தொழுமி னுந்துய ரானவை தீரவே **#511**

இறைவன் முழவு என்னும் வாத்தியம் உடையவன். சுடுகாட்டில் உறையும் பேய்க்கணத்துடன் குலவி நடனம்புரிபவன். அழகிய கையில் மழுப்படையை உடையவர். அப்பெருமான் வீற்றிருந்தருளுகின்ற

திருமழபாடியை உங்கள் துன்பம் எல்லாம் நீங்கும்படி தொழுது போற்றுங்கள்.

திருமழபாடி

கலையி னான்மறை யான்கதி யாகிய
மலையி னான்மரு வார்புர மூன்றெய்த
சிலையி னான்சேர் திருமழ பாடியைத்
தலையி னால்வணங் கத்தவ மாகுமே **#512**

இறைவன் ஆயகலைகள் அறுபத்துநான்கு ஆனவர். நான்கு மறைகள் ஆகியவன். உயிர்கள் சரண்புகும் இடமாகிய கயிலை மலையினை உடையவன். பகையசுரர்களின் திரிபுரங்களை எரியுண்ணுமாறு அக்கினிக்கணையை ஏவிய, மேருமலையை வில்லாக உடையவன். அப்பெருமான் வீற்றிருந்தருளும் திருமழபாடியைத் தலையினால் வணங்கிப் போற்றத் தவத்தின் பலன் கைகூடும்.

திருமழபாடி

நல்வி னைப்பய னான்மறை யின்பொருள்
கல்வி யாயக ருத்தனு ருத்திரன்
செல்வன் மேய திருமழ பாடியைப்
புல்கி யேத்து மதுபுக ழாகுமே **#513**

இறைவன் நல்வினையின் பயனாகியவன். நான்மறையின் பொருளாகியவன். கல்விப் பயனாகிய கருத்தன். உருத்திரனாகத் திகழ்பவன். அச்செல்வன் வீற்றிருந்தருளும் திருமழபாடியைப் போற்றுங்கள். அது உமக்குப் புகழ் தரும்.

திருமழபாடி

நீடி னாருல குக்குயி ராய்நின்றான்
ஆடி னானெரி கானிடை மாநடம்
பாடி னாரிசை மாமழ பாடியை
நாடி னார்க்கில்லை நல்குர வானவே **#514**

பரந்த இவ்வுலகிற்கு இறைவன் உயிராய் விளங்குகின்றான். அப்பெருமான் சுடுகாட்டில் திருநடனம் ஆடுபவன். பத்தர்கள் இசையோடு போற்றிப் பாடத் திருமழபாடியில் இனிது வீற்றிருந்தருளும் அவனைச் சார்ந்து போற்றுபவர்கட்கு வறுமை இல்லை.

திருமழபாடி

மின்னி னாரிடை யாளொரு பாகமாய்
மன்னி னானுறை மாமழ பாடியைப்

பன்னி னாரிசை யால்வழி பாடுசெய்
துன்னி னார்வினை யாயின வோயுமே #515
மின்னலைப் போன்று ஒளிரும் நுண்ணிய இடையுடைய உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற மாமழபாடியை இசைப்பாடலால் போற்றி வழிபாடு செய்யும் அன்பர்களின் வினையாவும் நீங்கும்.

<u>திருமழபாடி</u>

தென்னி லங்கையர் மன்னன் செழுவரை
தன்னி லங்கவ டர்த்தருள் செய்தவன்
மன்னி லங்கிய மாமழ பாடியை
உன்னி லங்க வுறுபிணி யில்லையே #516
இராவணனைச் செழுமையான கயிலைமலையின் கீழ் அடர்த்து அருள் செய்தவர் சிவபெருமான். அவர் நிலையாக வீற்றிருந்தருளுகின்ற திருமழபாடியை நினைந்து போற்ற உடம்பில் உறுகின்ற பிணி யாவும் நீங்கும்.

<u>திருமழபாடி</u>

திருவி னாயக னுஞ்செழுந் தாமரை
மருவி னானுந் தொழத்தழன் மாண்பமர்
உருவி னானுறை யும்மழ பாடியைப்
பரவி னார்வினைப் பற்றறுப் பார்களே #517
திருமகளின் நாயகனாகிய திருமாலும், செழுமை வாய்ந்த தாமரையில் வீற்றிருந்தருளும் பிரமனும், தொழுது போற்ற நெருப்பு மலையாக நின்ற மாண்புடைய வடிவினரான சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருமழபாடியைப் பரவிப் போற்றும் அன்பர்கள் பற்றிலிருந்து நீங்கியவராவர்.

<u>திருமழபாடி</u>

நலியும் நன்றறி யாச்சமண் சாக்கியர்
வலிய சொல்லினு மாமழ பாடியுள்
ஒலிசெய் வார்கழ லான்திற முள்கவே
மெலியு நம்முடன் மேல்வினை யானவே #518
நன்மை அறியாத சமணர்களும், புத்தர்களும் பிறரை வருத்தும் சொற்களை வலிய உரைத்தாலும் அவற்றைப் பொருளாகக் கொள்ளாது, திருமழபாடியுள் வீரக்கழல்கள் ஒலிக்கத் திருநடனம் புரியும் சிவபெருமானின் அருட்செயலை நினைந்து போற்றினால் நம்மைப் பற்றியுள்ள வினையாவும் மெலிந்து அழியும்.

திருமழபாடி

மந்த முந்து பொழின்மழ பாடியுள்
எந்தை சந்த மினிதுகந் தேத்துவான்
கந்த மார்கடற் காழியுண் ஞானசம்
பந்தன் மாலைவல் லார்க்கில்லை பாவமே **#519**

தென்றல் காற்று வீசும் சோலைகள் சூழ்ந்த திருமழபாடியுள் வீற்றிருந்தருளும் எம் தந்தையாகிய சிவ பெருமானைச் சந்தம் பொலியும் இசைப்பாடல்களால் போற்றி, வாசனை வீசும் கடலுடைய சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தன் அருளிய இத்திருப்பதிக மாலையை ஓதவல்லவர்கட்குப் பாவம் இல்லை.

நமச்சிவாயத்திருப்பதிகம்

நமச்சிவாயத்திருப்பதிகம்

நமச்சிவாயத்திருப்பதிகம்,
பண் - கௌசிகம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே **#520** ★★★★★

உள்ளன்பு கொண்டு மனம் கசிந்து கண்ணீர் பெருகி தன்னை ஓதுபவர்களை முத்திநெறியாகிய நன்னெறிக்குக் கூட்டுவிப்பதும், நான்கு வேதங்களின் உண்மைப் பொருளாக விளங்குபவனும், அனைவருக்கும் தலைவனான சிவபெருமானின் திருநாமம் 'நமச்சிவாய' என்ற திருவைந்தெழுத்தாகும்.

நமச்சிவாயத்திருப்பதிகம்

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே **#521**

சிவபெருமானின் திருவடிகளையே பற்றுக் கோடாக நம்பும் பக்தர்கள் திருவைந்தெழுத்தைத் தங்கள் நாவினால் உச்சரித்தால், நறுமணம் கமழும் நாள்மலர்களில் உள்ள தேன்போல இனிமை பயப்பது, எல்லா உலகங்கட்கும் செம்பொன் திலகம் போன்றது நம்முடைய சிவபெருமானின் திருநாமமான 'நமச்சிவாய' என்னும் திருவைந்தெழுத்தே ஆகும்.

நமச்சிவாயத்திருப்பதிகம்

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே **#522**

உள்ளம் நெகிழ்ந்து அன்புமிகப் பெருக சிவ பெருமானைச் சிந்தித்து, தமது அழகிய கையில் உருத்திராக்க மாலையைக் கொண்டு திருவைந்தெழுத்தை விதிப்படிச் செபிப்பவர்களைத் தேவர்களாக்கும் தகுதியைப் பெறும்படிச் செய்வது ஆடையில்லாத சிவபெருமானின் திருநாமமாகிய 'நமச்சிவாய' என்னும் திருவைந்தெழுத்தேயாகும்.

நமச்சிவாயத்திருப்பதிகம்

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே **#523**

தன்னை நாடோறும் தியானித்து வழிபடும் அடியவர்கட்கு என்றும் நன்மை செய்பவனும், நெற்றிக்கண்ணை உடையவனுமான சிவபெருமானின் திருநாமம் 'நமச்சிவாய' என்ற திருவைந்தெழுத்தாகும். இனிமையான சொற்களால் திருவைந்தெழுத்தை நயம்பட ஓதவல்லவர்களை எவரேனும் அண்டினால், அங்ஙனம் அண்டியவர்களையும் அணுக இயமன் தூதன் பயப்படுவான்.

நமச்சிவாயத்திருப்பதிகம்

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கயு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே **#524**

கொலைத்தொழிலில் ஈடுபட்டவர்களாக இருப்பினும், நற்குணமும், பல நல்லொழுக்கங்களும் இல்லாதவர் ஆயினும் ஏதேனும் சிறு பூர்வ புண்ணியத்தால் திருவைந்தெழுத்தை உச்சிப்பார்களேயானால் எல்லாவிதமான தீங்குகளினின்றும் நீங்குவர் என்று பெரியோர்கள் கூறுவர். அத்தகைய சிறப்புடையது எல்லோருக்கும் நன்மையே செய்பவனாகிய சிவபெருமானின் திருப்பெயரான 'நமச்சிவாய' என்னும் திருவைந்தெழுத்தேயாகும்.

நமச்சிவாயத்திருப்பதிகம்

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே **#525**

மந்தர மலை போன்ற பாவங்களைச் செய்து பாசங்களால் கட்டுண்டவர்களும், திருவைந்தெழுத்தை உச்சரிப்பார் களேயானால் அவர்களது கொடியவினைகள் தீர்ந்து போகும். அவர்கட்குச் செல்வமும் பெருகும். அத்தகைய சிறப்புடையது நந்தி என்னும் பெயருடைய சிவபெருமானின் திருநாமமான 'நமச்சிவாய' என்பதாகும்.

நமச்சிவாயத்திருப்பதிகம்

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே #526

எழ் நரகங்கட்குச் செல்லக் கூடிய பாவிகளானாலும் திரவைந்தெழுத்பை பக்தியோடு உச்சரிப்பார்களேயானால், உருத்திர கணத்தாரோடு சேர்ந்து வசிக்கும் பேற்றினைப் பெறுவர். அடியவர்கள் கேட்ட வரமெல்லாம் தரும் சிவபெருமானின் திரு நாமமும் திருவைந்தெழுத்தே ஆகும்.

நமச்சிவாயத்திருப்பதிகம்

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே #527

இலங்கை மன்னனான இராவணன் திருக்கயிலையைப் பெயர்த்து எடுக்க முயல, சங்கரன் தன் காற்பெருவிரலை ஊன்றவும், கயிலையின் கீழ் நெருக்குண்டு அவன் வாய்விட்டு அலற அவனுக்கு உய்யும்நெறி அருளி, நன்மை செய்வதையே தன் இயல்பாக உடைய சிவபெருமானின் திருநாமமாகிய ‘நமச்சிவாய’ என்ற திருவைந்தெழுத்தாகும்.

நமச்சிவாயத்திருப்பதிகம்

போதன் போதன கண்ணனு மண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓதும் நாமம் நமச்சி வாயவே #528

தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பிரமனும், தாமரை மலர் போன்ற கண்களையுடைய திருமாலும், எல்லோருக்கும் தலைவரான சிவபெருமானின் திருமுடியையும், திருவடியையும் தேட முயற்சித்து காண இயலாதவராகித் தம் செயலுக்கு வருந்திப் பின்னர் அவர்கள் நல்லறிவு பெற்று ஓதி உய்ந்தது ‘நமச்சிவாய’ என்ற திருவைந்தெழுத்தேயாகும்.

நமச்சிவாயத்திருப்பதிகம்

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே #529

தேவர்கள் வேண்ட நஞ்சினை உண்டு அதை கழுத்தில் தேக்கிய நீலகண்டனான சிவபெருமானின் திருநாமமாகிய ‘நமச்சிவாய’ என்னும் திருவைந்தெழுத்து மந்திரத்தை, மண்டை என்னும் ஒருவித பாத்திரத்தில் கஞ்சியைக் குடிக்கும் வழக்கமுடைய பௌத்தர்களும், கைகளையே பாத்திரமாகக் கொண்டு அதில் உணவு ஏற்றுப் புசிக்கும் வழக்கமுடைய சமணர்களும் ஓதும் பேறு பெற்றிலர்.

<u>நமச்சிவாயத்திருப்பதிகம்</u>

நந்தி நாமம் நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே **#530**

நந்தி என்னும் பெயருடைய சிவபெருமானின் திருநாமமாகிய ‘நமச்சிவாய’ என்னும் திருவைந்தெழுத்தைச் சந்தம் மிகுந்த தமிழ் கொண்டு ஞானசம்பந்தன் அருளிச் செய்த இத்திருப்பதிகத்தைச் சிந்தை மகிழ ஓத வல்லவர்கள் பந்தபாசம் அறுக்க வல்லவர் ஆவர்.

திருத்தண்டலைநீணெறி

திருத்தண்டலைநீணெறி

திருத்தண்டலைநீணெறி,
பண் - கௌசிகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நீணெறிநாதேசுவரர்.
தேவியார் : ஞானாம்பிகையம்மை.

விரும்புந் திங்களுங் கங்கையும் விம்மவே
சுரும்புந் தும்பியுஞ் சூழ்சடை யார்க்கிடம்
கரும்புஞ் செந்நெலுங் காய்கமு கின்வளம்
நெருங்குந் தண்டலை நீணெறி காண்மினே **#531**

விரும்பப்படுகின்ற சந்திரனையும், கங்கையையும் தாங்கி, சுரும்பு, தும்பி ரீங்காரம் செய்யும் மலர்களைச் சூடியுள்ள சடை முடியையுடைய இறைவன் வீற்றிருந்தருளும் இடமாவது கரும்பும், செந்நெலும், பாக்கு மரங்களும் நிறைந்து வளம் கொழிக்கும் திருத்தண்டலை நீள்நெறியாகும். இத்திருத்தலத்தைத் தரிசித்து இறைவனை வணங்கிப் போற்றுங்கள்.

திருத்தண்டலைநீணெறி

இகழுங் கால னிதயத்து மென்னுளும்
திகழுஞ் சேவடி யான்றிருந் தும்மிடம்
புகழும் பூமக ளும்புணர் பூசுரர்
நிகழுந் தண்டலை நீணெறி காண்மினே **#532**

சிவபக்தரான மார்க்கண்டேயரை மதியாது இகழ்ந்த காலனின் இதயத்துள்ளும், என்னுள்ளும் திகழும், சிவந்த திருவடிகளையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும்இடம், புகழுடைய திரு மகளும், அந்தணர்களும் விளங்கும் திருத்தண்டலை நீள்நெறியாகும். அத்திருத்தலத்தைத் தரிசித்து இறைவனை வணங்கிப் போற்றுங்கள்.

திருத்தண்டலைநீணெறி

பரந்த நீலப் படரெரி வல்விடம்
கரந்த கண்டத்தி னான்கரு தும்மிடம்
சுரந்த மேதி துறைபடிந் தோடையில்
நிரந்த தண்டலை நீணெறி காண்மினே **#533**

விரிந்து பரந்த எரிபோன்ற கொடிய நஞ்சினைக் கண்டத்தில் தேக்கி நீலகண்டனாக இறைவன் வீற்றிருந்தருளும் இடமாவது, ஓடையில்

எருமை படிந்து பால் சொரியும் வளமிக்க திருத்தண்டலை நீள்நெறியாகும். அங்கு அப்பெருமானை வணங்கி வழிபடுங்கள்.

திருத்தண்டலைநீணெறி

தவந்த வென்புந் தவளப் பொடியுமே
உவந்த மேனியி னானுறை யும்மிடம்
சிவந்த பொன்னுஞ் செழுந்தர ளங்களும்
நிவந்த தண்டலை நீணெறி காண்மினே **#534**

வெந்த எலும்பும், திருவெண்ணீறும் உவந்து திருமேனியில் தரித்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, சிவந்த பொன்னும், செழுமையான முத்துக்களும் மிகுந்த திருத்தண்டலை நீள்நெறியாகும். இத்திருத்தலத்தைத் தரிசித்து இறைவனை வணங்கிப் போற்றுங்கள்.

திருத்தண்டலைநீணெறி

இலங்கை வேந்த னிருபது தோளிற
விலங்க லில்லடர்த் தான்விரும் பும்மிடம்
சலங்கொ ளிப்பி தரளமுஞ் சங்கமும்
நிலங்கொள் தண்டலை நீணெறி காண்மினே **#535**

இலங்கை மன்னனான இராவணனின் இருபது தோள்களும் நெரியுமாறு கயிலைமலையின்கீழ் அடர்த்த இறைவன் வீற்றிருந்தருளும் இடமாவது, நீரில் உள்ள சிப்பிகளும், முத்துக்களும், சங்குகளும் அலைகள் வாயிலாக அடித்துவரப்பட்டுச் செல்வவளம் மிகுந்த திருத்தண்டலை நீள்நெறியாகும். அங்கு வீற்றிருந்தருளும் பெருமானைத் தரிசித்து வழிபடுங்கள்.

திருத்தண்டலைநீணெறி

கருவ ருந்தியி னான்முகன் கண்ணனென்
றிருவ ருந்தெரி யாவொரு வன்னிடம்
செருவ ருந்திய செம்பியன் கோச்செங்கண்
நிருபர் தண்டலை நீணெறி காண்மினே **#536**

சிருட்டி செய்யும் பிரமன் திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றினான். அவனும், திருமாலும் தெரிந்து கொள்ள முடியாத ஒப்பற்றவராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது போரில் முயன்ற கோச்செங்கட் சோழ மன்னன் கட்டிய கோயிலாகிய திருத்தண்டலை நீள்நெறியாகும். அங்கு வீற்றிருந்தருளும் பெருமானைத் தரிசித்து வழிபடுங்கள்.

திருத்தண்டலைநீணெறி

கலவு சீவரத் தார்கையி லுண்பவர்
குலவ மாட்டாக் குழக னுறைவிடம்
சுலவு மாமதி லுஞ்சுதை மாடமும்
நிலவு தண்டலை நீணெறி காண்மினே **#537**

சீவரமென்னும் ஆடையைச் சுற்றிய புத்தர்களும், கையில் உணவைக் கவளமாய் வாங்கி உண்ணும் சமணர்களும் அன்பு செலுத்துவதற்கு எட்டாதவனாய் விளங்கும் அழகனான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, வளைந்தமாமதில் களும், சுண்ணச் சாந்தினாலாகிய மாடங்களும் விளங்குகின்ற திருத் தண்டலை நீள்நெறி ஆகும். அங்கு வீற்றிருந்தருளும் பெருமானைத் தரிசித்து வழிபடுங்கள்.

<u>திருத்தண்டலைநீணெறி</u>

நீற்றர் தண்டலை நீணெறி நாதனைத்
தோற்று மேன்மையர் தோணி புரத்திறை
சாற்று ஞானசம் பந்தன் றமிழ்வலார்
மாற்றில் செல்வர் மறப்பர் பிறப்பையே **#538**

திருநீறு அணியப்பெற்ற அடியவர்கள் வாழும் திருத்தண்டலை நீணெறியில் வீற்றிருக்கும் நாதனை, அத்தகைய திருநீற்றின் மேன்மை விளங்கும் தோணிபுரத்தில் வீற்றிருந்தருளும் ஞானசம்பந்தன் அருளிய இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள் நிலைத்த செல்வத்தை உடையவர்களாய்ப் பிறவிப்பிணி நீங்கப் பெற்றவராவர்.

திருஆலவாய்

திருஆலவாய்

திருஆலவாய்,
பண் - கௌசிகம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. இதுவே மதுரை. ,
சுவாமிபெயர் : சொக்கநாதசுவாமி.
தேவியார் : மீனாட்சியம்மை.

செய்ய னேதிரு வாலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே #539

நடுநிலைமை உடையவரே! திருஆலவாயில் வீற்றிருந்தருளும் தலைவரே! என்னை அஞ்சேல் என்று அருள் செய்வீராக. பொய்யராகிய சமணர் இம்மடத்திற்கு வைத்த இந்நெருப்பு மெல்லச் சென்று பாண்டிய மன்னனைப் பற்றுவதாக.

திருஆலவாய்

சித்த னேதிரு வாலவாய் மேவிய
அத்த னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எத்த ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பத்தி மன்தென்னன் பாண்டியற் காகவே #540

எல்லாம் வல்ல சித்தரே! திருஆலவாயில் வீற்றிருந்தருளிய தலைவரே! என்னை அஞ்சேல் என்று அருள் செய்வீராக. ஏமாற்றித் திரிவோராகிய சமணர் இம்மடத்திற்கு வைத்த இந்நெருப்பு ஆருக மதத்தில் பக்தியுடையோனாகிய பாண்டிய மன்னனைப் பற்றுவதாக.

திருஆலவாய்

தக்கன் வேள்வி தகர்த்தரு ளாலவாய்ச்
சொக்க னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எக்க ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பக்க மேசென்று பாண்டியற் காகவே #541

சிவனை மதியாது தக்கன் செய்த வேள்வியைச் சிதைத்த திருஆலவாய்ச் சொக்கரே! என்னை அஞ்சேல் என்று அருள்புரிவீராக. இறுமாப்புடைய சமணர்கள் இம்மடத்திற்குப் பற்ற வைத்த நெருப்பு அத்தகையோர் பக்கமே சார்ந்து பாண்டிய மன்னனைப் பற்றுவதாக.

திருஆலவாய்

சிட்ட னேதிரு வாலவாய் மேவிய
அட்டமூர்த்திய னேயஞ்ச லென்றருள்
துட்ட ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பட்டி மன்றென்னன் பாண்டியற் காகவே **#542**
நீதிநெறி தவறாதவரே! திருஆலவாயில் வீற்றிருந்தருளும் அட்டமூர்த்தி வடிவானவரே! என்னை அஞ்சேல் என்று அருள்புரிவீராக! கொடியவரான அமணர் இம்மடத்தில் பற்ற வைத்த நெருப்பு கல்வியறிவுடையோனாகிய பாண்டிய மன்னனைச் சென்று பற்றுவதாக.

<u>திருஆலவாய்</u>

நண்ண லார்புர மூன்றெரி யாலவாய்
அண்ண லேயஞ்ச லென்றருள் செய்யெனை
எண்ணி லாவம ணர்கொளு வுஞ்சுடர்
பண்ணி யற்றமிழ்ப் பாண்டியற் காகவே **#543**
பகையசுரர்களின் திரிபுரங்களை எரித்த திருஆலவாயில் வீற்றிருந்தருளும் அண்ணலே! என்னை அஞ்சேல் என்று அருள்செய்வீராக. சிந்திக்கும் திறனில்லாத சமணர்கள் இம்மடத்தைக் கொளுத்திய நெருப்பானது பண்ணிசையோடு தமிழ் வழங்கும் பாண்டிய மன்னனைச் சென்று பற்றுவதாக.

<u>திருஆலவாய்</u>

தஞ்ச மென்றுன் சரண்புகுந் தேனையும்
அஞ்ச லென்றரு ளாலவா யண்ணலே
வஞ்சஞ் செய்தம ணர்கொளு வுஞ்சுடர்
பஞ்ச வன்தென்னன் பாண்டியற்காகவே **#544**
திருஆலவாயில் வீற்றிருந்தருளும் அண்ணலே! அபயம் என்று உம்முடைய திருவடிகளைச் சரணம் அடைந்த அடியேனையும் அஞ்சேல் என்று கூறி அருள்புரிவீராக. வஞ்சகம் செய்யும் சமணர்கள் இம்மடத்திற்கு வைத்த இந்த நெருப்பு, பஞ்சவன், தென்னன் முதலிய பெயர்களையுடைய பாண்டிய மன்னனைச் சென்று பற்றுவதாக.

<u>திருஆலவாய்</u>

செங்கண் வெள்விடை யாய்திரு வாலவாய்
அங்க ணாவஞ்ச லென்றருள் செய்யெனைக்
கங்கு லாரமண் கைய ரிடுங்கனல்
பங்கமில் தென்னன் பாண்டியற் காகவே **#545**
சிவந்த கண்களையுடைய வெண்ணிற இடபத்தை வாகனமாக உடையவரே! திருஆலவாயில் வீற்றிருந்தருளும் அழகிய

கண்களையுடைய சிவபெருமானே! அடியேனை அஞ்சேல் என்று அருள்செய்வீராக! இருள்மனம் கொண்ட சமணர்கள் இம்மடத்திற்கு இட்ட நெருப்பானது, உயிருக்குத் தீங்கு நேராதபடி பாண்டிய மன்னனைச் சென்று பற்றுவதாக.

திருஆலவாய்

தூர்த்தன் வீரந் தொலைத்தரு ளாலவாய்
ஆத்த னேயஞ்ச லென்றருள் செய்யெனை
ஏத்தி லாவம ணர்கொளு வுஞ்சுடர்
பார்த்தி வன்தென்னன் பாண்டியற்காகவே **#546**

பிறன் மாதரை விரும்பிய தூர்த்தனாகிய இராவணனின் வீரத்தை அழித்துப்பின் அருள்செய்த திருஆலவாயில் வீற்றிருந்தருளும் பெருங்கருணையுடைய சிவபெருமானே! அடியேனை அஞ்சேல் என்று அருள்செய்வீராக! இறைவனைத் துதிக்கும் பேறு பெறாத சமணர்கள் இம்மடத்திற்கு இட்ட நெருப்பு, இப்பூவுலகை ஆளும் தென்னன் பாண்டியனைச் சென்று பற்றுவதாக!

திருஆலவாய்

தாவி னானயன் றானறி யாவகை
மேவி னாய்திரு வாலவா யாயருள்
தூவி லாவம ணர்கொளு வுஞ்சுடர்
பாவி னான்தென்னன் பாண்டியற்காகவே **#547**

உலகத்தைத் தாவியளந்த திருமாலும், பிரமனும் அறிய முடியாதவாறு நெருப்பு மலையாய் ஓங்கி நின்ற திருஆலவாய் இறைவனே! அடியேனுக்கு அருள் புரிவீராக! நீராடமையால் தூய்மையற்ற சமணர்கள் இம்மடத்திற்கு இட்ட இந்நெருப்பு இதற்குக் காரணமான பாண்டிய மன்னனைச் சென்று பற்றுவதாக!

திருஆலவாய்

எண்டி சைக்கெழி லாலவாய் மேவிய
அண்ட னேயஞ்ச லென்றருள் செய்யெனைக்
குண்ட ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பண்டிமன் தென்னன் பாண்டியற்காகவே **#548**

எட்டுத் திசைகளிலும் எழில் பரவும் திருஆலவாயில் வீற்றிருந்தருளும், அண்டங்களுக்கெல்லாம் நாயகனான சிவபெருமானே! அடியேனை அஞ்சேல் என்று அருள்புரிவீராக! சிறுமையுடைய சமணர்கள் இம்மடத்திற்கு இட்ட நெருப்பானது தொன்மையாக விளங்கும் பாண்டிய மன்னனைச் சென்று பற்றுவதாக.

திருஆலவாய்

அப்ப னாலவா யாதி யருளினால்
வெப்பம் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்த னுரைபத்தும்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே **#549**

‘எனக்குத் தந்தையாக விளங்கும் திருஆலவாய் ஆதிமூர்த்தியின் திருவருளால் சமணர்கள் இம்மடத்திற்கு வைத்த நெருப்பின் வெப்பமானது பாண்டிய மன்னனைப் பற்றுவதாக’ என்று உலக நியதிக்கு ஏற்ற தன்மையில் ஞானசம்பந்தன் உரைத்தருளிய இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள் குற்றமற்ற செல்வர்களாகத் திகழ்வர்.

திருஆலவாய் - திருவிராகம்

திருஆலவாய்

திருஆலவாய் - திருவிராகம்,
பண் - கௌசிகம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. இதுவே மதுரை. ,
சுவாமிபெயர் : சொக்கநாதசுவாமி.
தேவியார் : மீனாட்சியம்மை.

வீடலால வாயிலாய் விழுமியார்க ணின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே **#550**

வீடுபேற்றிலன்றி வேறொன்றில் விருப்பம் இல்லாதவராய் மெய்ஞ்ஞானிகள் உம் திருவடிகளைப் போற்றிப்பாட, அவர்தம் வாக்கினிடமாக விளங்குபவரே! அவர்கள் துதித்துப் போற்றுகின்ற பண்புகள் பலவற்றை உடையவரே! சுடுகாட்டைத் தவிர வேறோர் இடத்தை விரும்பி நில்லாதவரே! கபாலி என்னும் பெயரையுடையவராய், மதில் சூழப்பெற்ற நான்மாடக்கூடல் என்னும் திருஆலவாயில் எழுந்தருளியுள்ள பெருமானாரே! நீர் மதுரையம்பதியில் குலாவி விளையாடுவது எம்மால் அறியும் தரத்த தன்றாயுள்ளது.

திருஆலவாய்

பட்டிசைந்த வல்குலாள் பாவையாளோர் பாகமா
ஒட்டிசைந்த தன்றியும் முச்சியாளொ ருத்தியாக்
கொட்டிசைந்த வாடலாய் கூடலால வாயிலாய்
எட்டிசைந்த மூர்த்தியா யிருந்தவாறி தென்னையே **#551**

பட்டாடை அணிந்த திருமேனியுடைய உமாதேவியைத் தம் திருமேனியில் ஒருபாகமாகப் பிரியாவண்ணம் கொண்டதோடு, சடைமுடியின் உச்சியில் கங்கா தேவியையும் தாங்கியவரே! கொட்டு என்னும் பறை முழங்க ஆடுபவரே! கூடல் ஆலவாயில் வீற்றிருந்து அருள்பவரே! அட்டமூர்த்தியாய் விளங்கும் சிவபெருமானே! உம் அருள்தன்மை எம்மால் எடுத்தியம்ப வல்லதோ.

திருஆலவாய்

குற்றநீ குணங்கணீ கூடலால வாயிலாய்
சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ யருத்தமின்ப மென்றிவை

முற்றுநீ புகழ்ந்துமுன் னுரைப்பதென்மு கம்மனே #552
திருஆலவாயில் வீற்றிருந்தருளும் இறைவரே! நீரே உயிர்க்குள் உயிராய் ஒன்றி உடனிருந்து இயக்குகிறீர். ஆதலால் எனது குற்றமும் நீரே; குணமும் நீரே; என் சுற்றமும் தவைவரும் நீரே. என்னுள்ளிருக்கும் அறியாமையாகிய இருளை நீக்கி அறிவொளி தொடர்ந்தொளிரச் செய்யும் சோதி நீரே. பொதுவும், சிறப்புமாகிய வேத, ஆகம நூல்களில் கருத்தும் நீரே. நூல்களில் உட்பொருளை அடியேன் நனிவிளங்கச் செய்பவரும், அவ்விளக்கத்தால் இன்பம் அடையச் செய்பவரும் நீரே. உம் திருமுன் அடியேன் இவ்வாறு உம்மைப் புகழ்வது உண்மையேயன்றி வெறும் புகழ்ச்சியன்று.

திருஆலவாய்

முதிருநீர்ச் சடைமுடி முதல்வன்நீ முழங்கழல்
அதிரவீசி யாடுவா யழகன்நீ புயங்கன்நீ
மதுரன்நீ மணாளன்நீ மதுரையால வாயிலாய்
சதுரன்நீ சதுர்முகன் காலமேந்து சம்புவே #553
மதுரை என வழங்கும் திருஆலவாயில் வீற்றிருந்தருளும் இறைவனே! தூயகங்கையைச் சடைமுடியில் தாங்கிய முதல்வன் நீ. சப்தத்துடன் எரியும் நெருப்பிடையே நின்று நிலமதிர ஆடுபவன்நீ. அழகன் நீ. பாம்பை ஆபரணமாக அணிந்தவன் நீ. வரம்பில் இன்பம் உடையவன் நீ. மணவாளன் நீ. மதுரை எனப்படும் ஆலவாயில் வீற்றிருந்தருளுபவன் நீ. சாமர்த்தியமுடையவன் நீ. பிரமகபாலமேந்திப் பலியேற்றுத் திரியும் சிவபிரான் நீ.

திருஆலவாய்

கோலமாய நீண்மதிற் கூடலால வாயிலாய்
பாலனாய தொண்டு செய்து பண்டுமின்று முன்னையே
நீலமாய கண்டனே நின்னையன்றி நித்தலும்
சீலமாய சிந்தையில் தேர்வதில்லை தேவரே #554
அழகிய நீண்ட மதில்களையுடைய கூடலில் விளங்கும் திருஆலவாயில் வீற்றிருந்தருளும் பெருமானே! மார்க்கண்டேயர், சண்டேசுரர் போன்ற பாலர்கள் சிவபூசை செய்து பண்டைக் காலத்தும், இக்காலத்தும் வழிபட விளங்கும் நீலகண்டனே. தேவர்கள் உன்னையன்றிப் பிற தெய்வங்களைத் தமது தூயசிந்தையில் கொள்ளாதவராய் வாழ்கின்றனர்.

திருஆலவாய்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க வாடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ

கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே #555
பொன்போல் ஒளிரும் அழகிய சடைமுடி பின்னால் தாழ்ந்து அசைய நடனம் ஆடுபவரே! தலைக்கோலம் உடையவரே! பிறப்பற்றவரே! கொன்றைமாலை சூடிய முடி உடையவரே! நான்மாடக் கூடலில் திருஆலவாயில் வீற்றிருந்தருளும் இறைவரே! உம் ஒளிமயமான திருநடனத்தை நினைத்து இன்புற்றிருப்பதே உயிர்கள் உய்தி பெறுதற்குரிய நியமம் ஆகும்.

திருஆலவாய்

ஆதியந்த மாயினா யாலவாயி லண்ணலே
சோதியந்த மாயினாய் சோதியுள்ளொர் சோதியாய்
கீதம்வந்த வாய்மையாற் கிளர்தருக்கி னார்க்கலால்
ஓதிவந்த வாய்மையா லுணர்ந்துரைக்க லாகுமே #556
உலகத் தோற்றத்திற்கும், ஒடுக்கத்திற்கும் நிமித்த காரணராய் விளங்கும் திருஆலவாயில் வீற்றிருந்தருளும் இறைவரே! பேரொளிப் பிழம்பாக விளங்குபவரே! பெருஞ்சோதிக்குள் சோதியாய் ஒளிர்பவர் நீர். உபதேச வழியாகச் சிவஞானம் பெற்ற பக்குவமுடைய ஆன்மாக்களுக்கு அல்லாமல் ஏனைய அபரஞானமாகிய கல்வி அறிவுடையோர்க்கு உம் அருட்பண்பை உணர்தற்கும், உரைப்பதற்கும் இயலுமோ?

திருஆலவாய்

கறையிலங்கு கண்டனே கருத்திலாக் கருங்கடல்
துறையிலங்கை மன்னனைத் தோளடர ஊன்றினாய்
மறையிலங்கு பாடலாய் மதுரையால வாயிலாய்
நிறையிலங்கு நெஞ்சினால் நினைப்பதே நியமமே #557
விடக்கறை விளங்கும் கழுத்தை உடையவரே! கரிய கடலால் சூழப்பட்ட இலங்கை மன்னனின் தோள்கள் நொறுங்கும்படி திருக்கயிலைமலையில் காற்பெருவிரலை ஊன்றியவரே! வேதங்களிலுள்ள பாடல்களால் போற்றப்படுபவரே! மதுரையிலுள்ள திருஆலவாயில் வீற்றிருந்தருளுபவரே! மனத்தை ஒரு வழியே நிறுத்தி உம்மை நினைப்பதே உய்தற்குரிய நியமமாகும்.

திருஆலவாய்

தாவணவ் விடையினாய் தலைமையாக நாடொறும்
கோவணவ் வுடையினாய் கூடலால வாயிலாய்
தீவணம் மலர்மிசைத் திசைமுகனு மாலுநின்
தூவணம் மளக்கிலார் துளக்கமெய்து வார்களே #558

தாவிச் செல்லும்இடபத்தை வாகனமாக உடையவரே! தலைமை உடையவராய் நாடொறும் கோவண ஆடையோடு கூடல் ஆலவாயில் வீற்றிருந்து அருள் செய்பவரே! நெருப்புப் போன்று செந்நிறமான தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும், திருமாலும், உம் முழுமுதல் தன்மையை அறியாதவர்களாய்க் கலக்கம் உற்றார்கள்.

திருஆலவாய்

தேற்றமில் வினைத்தொழிற் றேரருஞ் சமணரும்
போற்றிசைத்து நின்கழல் புகழ்ந்து புண்ணியங்கொளார்
கூற்றுதைத்த தாளினாய் கூடலால வாயிலாய்
நாற்றிசைக்கு மூர்த்தியாகி நின்றதென்ன நன்மையே **#559**

தெளவில்லாத செயல்களைச் செய்யும் புத்தரும், சமணரும் உம் திருவடிகளைப் போற்றிப் புகழ்ந்து புண்ணியங்களைத் தேடிக்கொள்ளாதவராயினர். காலனை மார்க்கண்டேயர்க்காக உதைத்த திருவடிகளை உடையவரே! கூடல் ஆலவாயில் வீற்றிருந்தருளும் இறைவரே! உலகனைத்திற்கும் தலைவராக விளங்கி உயிர்கட்கு எல்லா நன்மையும் தருபவர் நீவிர் அல்லிரோ?

திருஆலவாய்

போயநீர் வளங்கொளும் பொருபுனற் புகலியான்
பாயகேள்வி ஞானசம் பந்தன்நல்ல பண்பினால்
ஆயசொல்லின் மாலைகொண்டு ஆலவாயிலண்ணலைத்
தீயதீர எண்ணுவார்கள் சிந்தையாவர் தேவரே **#560**

நீர்வளம் தரும், ஒலிக்கின்ற ஆறு பாய்கின்ற சீகாழியில் அவதரித்த பரந்த கேள்வி ஞானமுடைய ஞானசம்பந்தன் இறைவனுடைய நற்பண்புகளைப் போற்றி அருளிய இச்சொல் மாலையை ஓதித் திருஆலவாயில் வீற்றிருந்தருளும் இச்சிவ பெருமானை வழிபடுபவர்கள் தீமைகள் நீங்கப்பெற்று நற்சிந்தை யுடைய தேவர்களாவர்.

திருவானைக்கா - திருவிராகம்

திருவானைக்கா

திருவானைக்கா - திருவிராகம்,
பண் - கௌசிகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சம்புகேசுவரர்.
தேவியார் : அகிலாண்டநாயகியம்மை.

வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு
வார்சடைத்
தேனைக்காவி லின்மொழித் தேவிபாக
மாயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக
வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதுமேத
மில்லையே **#561**

வானிலுள்ள இருளைப் போக்கும் வெண்மதியைச் சடையில் தாங்கி, தேன் போன்ற இனிய மொழி பேசும் உமாதேவியைத் தன்திருமேனியின் ஒரு பாகமாகக் கொண்டு, திருஆனைக்காவில் வீற்றிருந்தருளும் சிவபெருமானைச் சரணாக வாழ்பவர்கட்குத் தம்மைத் தாமே காத்துக் கொள்ள முடியாமல் பிறதுணை வேண்டும்படி நேரும் பெரிய அபாயம் எதுவும் இல்லை.

திருவானைக்கா

சேறுபட்ட தண்வயற் சென்றுசென்று
சேணுலா
வாறுபட்ட நுண்டுறை யானைக்காவி
லண்ணலார்
நீறுபட்ட மேனியார் நிகரில்பாத
மேத்துவார்
வேறுபட்ட சிந்தையார் விண்ணிலெண்ண
வல்லரே **#562**

சேறுடைய குளிர்ச்சி பொருந்திய வயல் வளம் பெருகுமாறு, நெடுந்தொலைவு சென்று ஓடிவரும் காவிரி ஆற்றின் துறையில் விளங்கும் திருவானைக்காவில் வீற்றிருந்தருளும் அண்ணலாகிய சிவபெருமான், திருவெண்ணீறு பூசிய திருமேனியுடையவர். ஒப்பற்ற அப்பெருமானின் திருவடிகளைப் போற்றுபவர்கள், சிந்தை முதலிய

பசுகரணங்கள், பதி கரணங்களாக மாறியவர்களாய், முத்தியின்பம் பெறுவதற்குரிய சிவஞானம் கைகூடப் பெற்றவர்கள் ஆவர்.

திருவானைக்கா

தாரமாய மாதரா டானொர்பாக
மாயினான்
ஈரமாய புன்சடை ஏற்றதிங்கள்
சூடினான்
ஆரமாய மார்புடை யானைக்காவி
லண்ணலை
வாரமாய் வணங்குவார் வல்வினைகள்
மாயுமே **#563**

தாரமாகிய உமாதேவியைத் தம் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டவர் சிவபெருமான். கங்கையைத் தாங்கிய சடைமுடியில் சந்திரனையும் சூடியவர். சோழ அரசனின் வேண்டுகோளுக்கிணங்க, அவனது தொலைந்த இரத்தின மாலையைத் திருமஞ்சன நீரோடு தம் திருமார்பில் ஏற்றவர். திருவானைக்காவில் வீற்றிருந்தருளும் அண்ணலான சிவபெருமானை அன்புடன் வணங்குவார்களின் தீவினைகள் யாவும் நீங்கும்.

திருவானைக்கா

விண்ணினண்ணு புல்கிய வீரமாய
மால்விடைச்
சுண்ணவெண்ணீ றாடினான் சூலமேந்து
கையினான்
அண்ணல்கண்ணொர் மூன்றினா னானைக்காவு
கைதொழ
எண்ணும்வண்ணம் வல்லவர்க் கேதமொன்று
மில்லையே **#564**

வானில் நண்ணிச்சென்று முப்புரம் எரித்தபோது திருமால் இடபமாகத் தாங்கினான். இறைவன் திருவெண்ணீறு அணிந்தவன். சூலமேந்திய கையினன். மூன்று கண்களையுடைய மூர்த்தியான சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருவானைக்காவைக் கைதொழ எண்ணும் அன்பர்கட்குத் தீமை எதுவும் இல்லை.

திருவானைக்கா

வெய்யபாவங் கைவிட வேண்டுவீர்க
ளாண்டசீர்

மைகொள்கண்டன் வெய்யதீ மாலையாடு
காதலான்
கொய்யவிண்ட நாண்மலர்க் கொன்றைதுன்று
சென்னியெம்
ஐயன்மேய பொய்கைசூ ழானைக்காவு
சேர்மினே #565

கொடிய பாவமானது விலக வேண்டும் என்று விரும்புகிற அன்பர்களே! தேவர்களைக் காத்து அருள்புரிந்த நஞ்சுண்ட இருண்ட கண்டத்தினனும், வெப்ப மிகுந்த நெருப்பினை ஏந்தி ஆடுகின்ற அன்புடையவனும், அன்றலர்ந்த கொன்றை மலரைக் கொய்து தலையிலணிந்தவனுமான எம் தலைவனான சிவபெருமான் வீற்றிருந்தருளும் பொய்கை சூழ்ந்த திருவானைக்கா என்னும் திருத்தலத்தை அடைந்து வழிபடுவீர்களாக.

திருவானைக்கா

நாணுமோர்வு சார்வுமுன் நகையுமுட்கு
நன்மையும்
பேணுறாத செல்வமும் பேசநின்ற
பெற்றியான்
ஆணும்பெண்ணு மாகிய வானைக்காவி
லண்ணலார்
காணுங்கண்ணு மூன்றுடைக் கறைகொண்மிடற
னல்லனே #566

அஞ்ஞானத்தால் ஈசனை அறியாத பிறர் நாணத்தக்க நாணமும், பதியை ஓர்ந்து அறிதலும், அறிந்தபின் சார்ந்திருத்தலும், சார்தலினல் மகிழ்ச்சியும், மனத்தை அடக்கி உள்கித் தியானம் செய்தலுமாகிய நன்மையும் உடையவர்களாய், எவற்றையும் பொருட்படுத்தாத வீரியமும் கொண்ட அடியவர்கள் கொண்டாடிப் பேசத்தக்க தன்மையை உடைய, சிவபெருமான் ஆணும், பெண்ணும் சேர்ந்ததாகிய அர்த்தநாரித் திருக்கோலத்தில் திருவானைக்காவில் வீற்றிருந்தருளும் அண்ணலாய் மூன்று கண்களையுடையவராய் விளங்குபவர் அல்லரோ?

திருவானைக்கா

கூருமாலை நண்பகற் கூடிவல்ல
தொண்டர்கள் பேருமூருஞ் செல்வமும் பேசநின்ற
பெற்றியான்
பாரும்விண்ணுங் கைதொழப் பாயுங்கங்கை
செஞ்சடை
ஆரநீரொ டேந்தினா னானைக்காவு

சேர்மினே #567

காலை, மாலை, நண்பகல் முக்காலங்களிலும் இறைவனுக்குத் தொண்டு செய்யும் அடியார்கள் ஒன்று கூடி, இறைவனின் திருநாம மகிமைகளையும் திருத்தலங்களின் சிறப்புக்களையும், அவன் அருட்செயல்களையும் போற்றிப் பேச விளங்கும் தன்மையன் சிவபெருமான். பூவலகத்தோரும், விண்ணுலகத்தோரும் கைதொழுது வணங்கக் கங்கையைச் செஞ்சடையில் தாங்கியுள்ள சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருவானைக்கா என்னும் திருத்தலத்தை அடைந்து வழிபடுவீர்களாக.

திருவானைக்கா

பொன்னமல்கு தாமரைப் போதுதாது
வண்டினம்
அன்னமல்கு தண்டுறை யானைக்காவி
லண்ணலைப்
பன்னவல்ல நான்மறை பாடவல்ல
தன்மையோர்
முன்னவல்லர் மொய்கழ றுன்னவல்லர்
விண்ணையே #568

இலக்குமி வீற்றிருந்தருளும் தாமரை மலரில் வண்டினம் ரீங்காரம் செய்யவும், அன்னப்பறவைகள் வைகும் குளிர்ந்த நீர்நிலைகளின் துறைகளை உடைய திருஆனைக்காவில் வீற்றிருந்தருளும் அண்ணலான சிவபெருமானை நான்கு வேதங்களிலுமுள்ள பாடல்களைப் பாடி, அவன் திருவடிகளைப் போற்றி வணங்குபவர்கள் இப்பூவலகின்கண் குறைவற்ற செல்வராய்த் திகழ்வதோடு மறுமையில் விண்ணுலகை ஆள்வர்.

திருவானைக்கா

ஊனொடுண்ட னன்றென ஊனொடுண்டல்
தீதென
ஆனதொண்ட ரன்பினாற் பேசநின்ற
தன்மையான்
வானொடொன்று சூடினான் வாய்மையாக
மன்னிநின்று
ஆனொடஞ்சு மாடினா னானைக்காவு
சேர்மினே #569

ஊன் உணவு இறைவனுக்குப் படைத்தல் நன்று என்று சுவைமிகுந்த இறைச்சியைப் படைத்த கண்ணப்பநாயனாரின் அன்பிற்கும், ஊன்

உணவு இறைவனுக்குப் படைத்தல் அபசாரம் அது தீது என மருண்ட சிவகோசரியார் அன்பிற்கும் கட்டுண்ட தன்மையினனும், பிறைச்சந்திரனைச் சடையில் சூடி, சத்தியப் பொருளாக என்றும் நிலைத்து நின்று, பசுவிலிருந்து பெறப்படும் பஞ்சகவ்வியங்களால் திருமுழுக்காட்டப் படுகின்றவனுமாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருவானைக்கா என்னும் திருத்தலத்தைச் சார்ந்து அவனை வழிபட்டு உய்யுங்கள்.

திருவானைக்கா

கையிலுண்ணுங் கையருங் கடுக்கள்தின்
கழுக்களும்
மெய்யைப்போர்க்கும் பொய்யரும் வேதநெறியை
யறிகிலார்
தையல்பாக மாயினான் றழலதுருவத்
தானெங்கள்
ஐயன்மேய பொய்கைசூ ழானைக்காவு
சேர்மினே **#570**

கையில் உணவு வாங்கி உண்ணும் சமணரும், கடுக்காய்களைத் தின்னும் புத்தர்களும், மெய்ப்பொருளாம் இறைவனை உணராது பொய்ப்பொருளாம் உலகியலைப் பற்றிப் பேசுபவர்களாய் வேதநெறியை அறியாதவர்கள். எனவே அவர்களைச் சாராது, உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டவரும், நெருப்புப் போன்ற சிவந்த திருமேனியை உடையவருமான எங்கள் தலைவரான சிவபெருமான் வீற்றிருந்தருளும் பொய்கை சூழ்ந்த திருவானைக்கா என்னும் திருத்தலத்தை அடைந்து அவரை வழிபட்டு உய்யுங்கள்.

திருவானைக்கா

ஊழியூழி வையகத் துயிர்கடோற்று
வானொடும்
ஆழியானுங் காண்கிலா வானைக்காவி
லண்ணலைக்
காழிஞான சம்பந்தன் கருதிச்சொன்ன
பத்திவை
வாழியாகக் கற்பவர் வல்வினைகண்
மாயுமே **#571**

ஊ0ழிக்காலந்தோறும் உயிர்களுக்குத் தனு, கரண, புவன, போகங்களைப் படைக்கின்ற பிரமனும், திருமாலும் இறைவனின்

முடியையும், அடியையும் தேடிச்சென்றும் காண்பதற்கு அரிய திருவானைக்காவில் வீற்றிருந்தருளும் அண்ணலான சிவ பெருமானைச் சீகாழிப்பதியில் அவதரித்த ஞானசம்பந்தன் போற்றி அருளிய இத்திருப்பதிகத்தை மண்ணில் நல்ல வண்ணம் வாழக் கற்று ஓதவல்லவர்களின் கொடியவினையாவும் மாய்ந்தழியும்.

திருப்பாசுரம்

திருப்பாசுரம்

திருப்பாசுரம்,
பண் - கௌசிகம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே **#572** ★★★★★

உலக நன்மையின் பொருட்டு வேள்விகள், அர்ச்சனைகள், வழிபாடுகள் ஆகியவை செய்யும் அந்தணர்கள் வாழ்க. அவ்வேள்விகளைச் சிவன் நியதிப்படி ஏற்றுச் செலுத்தும் வானவர்கள் வாழ்க. வேள்வி, ‘வழிபாடு இவற்றிற்குரிய பஞ்ச கௌவியங்களையும், திருநீற்றினையும் அளிக்கும் பசுக்கூட்டங்கள் வாழ்க. வேள்வியின் பயனால் குளிர்ந்த மழை பொழிக. சிவாலய பூசை முதலியவற்றை அழியாது காத்துவரும் மன்னனின் செங்கோலாட்சி ஓங்குக. வேள்விகளால் வரும் நலங்களை அடைய வொட்டாது கேடுவிளைவிக்கும் அயனெறிகளிலுள்ள தீயவை ஆழ்க. உயிர்கள் யாவும் சிவன் நாமத்தை ஓதுக. இவ்வுலக மக்களின் துன்பம் நீங்குக.

திருப்பாசுரம்

அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரிய ரேறுகந் தேறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்
பெரிய ராரறி வாரவர் பெற்றியே **#573**

பாச ஞானத்தாலும், பசு ஞானத்தாலும் காண்பதற்கு அரியவர். பதிஞானத்தால் உணரும் மெய்யன்புடைய அடியவர்க்கு அவர் திருமேனி தரித்து வந்து, நெருப்பேந்திய கையர், ஏறுகந்தேறுவர், கண்டமும் கரியவர், காடுறை வாழ்க்கையராய் எளிதிற்காட்சி அருளுவர். ஆயினும் உலகத்தையே தம் வடிவமாகக் கொண்ட பெரியவர். அவருடைய தன்மையை யாவரால் அறிந்து கொள்ள முடியும்?

திருப்பாசுரம்

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தியா வெழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யாரவ ரெவ்வகையார் கொலோ **#574**

இறைவன் வெந்த சாம்பலை வாசனைப் பொடியெனப் பூசியவர். தந்தையும், தாயுமில்லாதவர். தம்மை இடையறாது சிந்திப்பவர்கள் வினையைத் தீர்ப்பவர். அத்தகைய எம் தந்தையாரான அவரின் பண்புகளை எவ்வகைக் கூற்றால் கூறுவது.

திருப்பாசுரம்

ஆட்பா லவர்க்கருளும் வண்ணமு மாதி மாண்பும்
கேட்பான் புகிலள வில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவைகேட்க தக்கார் **#575**

இறைவன் பக்குவமுடைய உயிர்கட்கு அருள்புரிகின்ற தன்மையும், பழமை வாய்ந்த புகழும் கேட்கவும், சொல்லவும் தொடங்கினால் அளவில்லாதன. ஆதலால் அவைபற்றிய ஆராய்ச்சி வேண்டா. எம் தந்தையாகிய இறைவனின் திருவடிகளைச் சார்ந்து வணங்கி அவன் புகழைக் கேட்கும் அடியவர்கட்குக் கோள்களாலும், தீயவினைகளாலும் துன்பம் உண்டாகாது. தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்க - என்றது திருவடி ஞானம் கைகாட்ட அதனுள் அடங்கி நின்றுணர்வதாகிய நிட்டை கூடல் என்னும் நான்காவது ஞானநிலை.

திருப்பாசுரம்

ஏதுக்க ளாலு மெடுத்த மொழியாலு மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள் சோதி
மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கண் மிக்கீரிறையே வந்து சார்மின்களே **#576**

இறைவனை அன்பால் வழிபடும் ஞானிகளே! அனுமானப் பிரமாணத்தாலும் உரையளவையாலும் இறைவனை மிகுதியாகச் சோதிக்க வேண்டா. அவன் ஊனக்கண் கொண்டு நோக்கப்புறத்தே சோதி வடிவமாகவும், அன்போடு கூடி அகத்தால் ஞானக்கண் கொண்டு நோக்க உள்ளொளியாகவும் விளங்குபவன். அவனை விரைவில் வந்து சார்ந்து, மனம் ஒன்றி வழிபட்டுப் பிறவித்துன்பத்தைப் போக்கிக் கொள்ளுங்கள். இறைவன் அளவைகளால் அறியப்படும் ஆராய்ச்சிக்கு அப்பாற் பட்டவன்.

திருப்பாசுரம்

ஆடும் மெனவும் மருஞ்கூற்ற முதைத்து வேதம்
பாடும் மெனவும் புகழல்லது பாவநீங்கக்
கேடும் பிறப்பும் மறுக்கும் மெனக்கேட் டீராகில்
நாடுந் திறத்தார்க் கருளல்லது நாட்ட லாமே **#577**

இறைவன் திருநடனம் புரிவதும், மார்க்கண்டேயருக்காகக் காலனைக் காலால் உதைத்ததும், வேதங்களை அருளிச் செய்ததும் ஆகிய செயல்கள் புகழ் கருதியா, மன்னுயிர்களின் தீவினைகளை நீக்குவதற்கா, பிறப்பை அறுத்துப் பிறவா நெறியை அளிப்பதற்கா என்று கேட்பீராயின், இவை தன்னைச் சார்ந்த அடியார்கட்கு அருள் செய்வதற்கேயன்றி வேறு காரணத்தாலல்ல என்று உறுதியாகக் கூறலாம். இறைவன் உயிர்களிடத்துக் கொண்ட அளப்பருங் கருணையே அவன் செயல்கட்குக் காரணம்.

திருப்பாசுரம்

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் மறிவார் சொலக்கேட்டு
மன்றே **#578**

சண்டீசர் நறுமணமுடைய மலர்களைத் தூவிப் போற்றி, நல்ல பசுவின் பால் கொண்டு மணலாலான சிவலிங்கத்திற்குத் திருமுழுக்காட்டத் தந்தை கோபம் கொண்டு காலால் இடற, சிவ பூசைக்கு இடையூறு செய்த கால் மீது அருகிலுள்ள கோலை எடுத்து ஓச்ச, அது மழுவாக மாறிக் காலை வெட்டினாலும், முக்கண் மூர்த்தியான் சிவபெருமான் அவ்வடியவருக்குத் திருவடிப்பேற்றினை அளித்தருளியதை அறிவு சால் அன்பர்கள் அன்றே சொல்லக் கேட்டோம் அல்லமோ?

திருப்பாசுரம்

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை யுலகத்தவ ரேத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூத னொலிமாலை யென்றே கலிக்கோவை சொல்லே **#579**

வேதத்தை அருளிச் செய்தவனாய், வேதப் பொருளாகவும் விளங்கும் சிவபெருமானை முதல்வனாகக் கொண்டு, குற்றம் செய்யாது நன்னெறியில் நிற்கும் பொருட்டு உலகத்தோர் அவனைப் போற்றிசைக்க, பூத நாயகனான அவனைப் போற்றிச் சூதமுனிவர் அருளிச் செய்த பதினெட்டு புராணங்களும் ஒழுக்கத்தைப் போதிப்பனவாகும்.

திருப்பாசுரம்

பாராழி வட்டம் பகையா னலிந்தாட்ட வாடிப்
பேராழி யானதிடர் கண்டருள் செய்தல் பேணி

நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்ட வர்க்குப்
போராழி யீந்த புகழும் புகழுற்ற தன்றே #580

கடல்போல் பெருகியுள்ள இப்பூவுலக மக்கள் பகைவர்களால் நலிவுறுத்தி அலைக்கப்பட, அவர்கள் துன்பத்தை அறிந்து அருள் செய்ய விரும்பி, தான் கண்துயிலும் கடலைவிட்டுப் பூமிக்கு வந்து, தம்மைத் தன்நெஞ்சிடமாகக் கொண்ட திருமாலுக்கு அவர் வேண்டுகோளுக்கிணங்கக் காத்தல் தொழில் நன்கு நிகழப் பேராற்றல் மிகுந்த சக்கராயுதப் படையைச் சிவபெருமான் ஈந்தது மெய்யான புகழ் அன்றோ?

<u>திருப்பாசுரம்</u>

மாலா யவனும் மறைவல்ல நான்மு கனும்
பாலாய தேவர் பகரில் லமு தூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க் கரிதா யெழுந்த
ஆலால முண்டங்கம ரர்க்கருள் செய்த தாமே #581

திருமாலும், நான்மறைகளையும் நன்கு கற்ற பிரமனும், பலராகிய தேவர்களும் சொல்வதற்கரிய அமுதுண்ண விரும்பி, பாற்கடலைக் கடைய அரிதாய் எழுந்த ஆலகால விடத்தை உண்டு, தேவர்களைக் காத்து அருள்செய்தவர் சிவபெருமான்.

<u>திருப்பாசுரம்</u>

அற்றன்றி யந்தண் மதுரைத் தொகை யாக்கினானும்
தெற்றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர்வி னூரவும் பண்பு நோக்கில்
பெற்றொன் றுயர்த்த பெருமான் பெருமானு
மன்றே #582

சிவபெருமான் முன்னர்க்கூறிய புகழுரைகட்கு மட்டுமன்றி, மதுரையில் தமிழ்ச்சங்கம் அமைத்து தமிழ் வளர்த்தருளியவர். சிவபெருமானே முழுமுதற்பொருள் எனத் தெளவு பெறாதவர்கள் தெளவுபெறும் பொருட்டு வாதத்தில் உண்மைகாண ஞானசம்பந்தர் இட்ட ஏடு பற்றற்ற சிவஞானிகளின் மனம் பிறவியாற்றை எதிர்த்துச் செல்வது போல, வையையாற்றை எதிர்த்துச் சென்ற தன்மையை நோக்கில், இடபவாகனத்தின் மீதேறிய சிவபெருமானே முழுமுதற்கடவுள் என்பது உண்மையாகும். ஆதலால் அவர்பால் அன்பு செய்தல் கடன் என்பது குறிப்பு. ஞானசம்பந்தர் சமணர்களோடு புனல்வாதம் செய்ததற்கும், அப்போது அவரிட்ட ஏடு வையையாற்றை எதிர்த்துச் சென்ற அற்புத நிகழ்ச்சிக்கும் இப்பாடலே அகச்சான்றாகும்.

திருப்பாசுரம்

நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்தனல்ல
எல்லார்களும்பரவு மீசனை யேத்து பாடல்
பல்லார் களும்மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோ ருலகாளவும் வல்ல ரன்றே **#583**

சிவஞானிகள் வாழ்கின்ற புகலி எனப்படும் சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தன், மெய்யன்பர்களால் நன்கு வணங்கப்படும் சிவபெருமானைப் போற்றிப் பாடிய பாடல்கள் பலராலும் மதிக்கப்படும் திருப்பாசுரம் ஆகும். இதனை ஓத வல்லவர்கள் வானுலகை ஆளும் வல்லமை பெறுவர்.

திருவான்மியூர்

திருவான்மியூர்

திருவான்மியூர்,
பண் - கௌசிகம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மருந்தீசுவரர்.
தேவியார் : சுந்தரமாது (அ) சொக்கநாயகி.

விரையார் கொன்றையினாய் விடமுண்ட
மிடற்றினனே
உரையார் பல்புகழா யுமைநங்கையொர்
பங்குடையாய்
திரையார் தெண்கடல்சூழ் திருவான்மி
யூருறையும்
அரையா வுன்னையல்லா லடையாதென
தாதரவே **#584**

நறுமணம் கமழும் கொன்றைமலரை அணிந்தவனே. விடமுண்ட கறுத்த கண்டத்தினனே. அடியவர்களால் பலவாகப் புகழ்ந்துரைக்கப் படுபவனே. உமாதேவியைத் தன்திரு மேனியில் ஒரு பாகமாகக் கொண்டவனே. அலைவீசும் அழகிய கடல் சூழ்ந்த திருவான்மியூரில் வீற்றிருந்தருளும் அரசனே! உன்னைத்தவிர என்மனம் ஆதரவாக வேறெதையும் அடையாது.

திருவான்மியூர்

இடியா ரேறுடையா யிமையோர்தம்
மணிமுடியாய்
கொடியார் மாமதியோ டரவம்மலர்க்
கொன்றையினாய்
செடியார் மாதவிசூழ் திருவான்மி
யூருறையும்
அடிகே ளுன்னையல்லா லடையாதென
தாதரவே **#585**

இடிபோல் முழங்கும் இடபத்தை வாகனமாக உடையவனே! தேவர்கள் தங்கள் மணிமுடி உன் திருப்பாதத்தில் படும்படி வணங்க அவர்கட்கு வாழ்வளிக்கும் முதற்பொருளே! இடபக்கொடியும், சந்திரனும், பாம்பும், கொன்றைமலரும் உடைய இறைவனே! செடிகளோடு கூடிய மாதவி மலரின் மணம் சூழ்ந்த திருவான்மியூரில் வீற்றிருந்தருளும் தலைவனான

சிவபெருமானே! உன்னைத் தவிர என் மனம், ஆதரவாக வேறெதையும் அடையாது.

திருவான்மியூர்

கையார் வெண்மழுவா கனல்போற்றிரு
மேனியனே
மையா ரொண்கணல்லா ளுமையாள்வளர்
மார்பினனே
செய்யார் செங்கயல்பாய் திருவான்மி
யூருறையும்
ஐயா வுன்னையல்லா லடையாதென
தாதரவே **#586**

கையின்கண் பொருந்திய வெண்மையான மழுவாயுதத்தை உடையவனே! கனல் போன்ற சிவந்த திருமேனியனே! மை பூசப் பெற்ற, ஒளி பொருந்திய கண்களை உடைய நல்லவளாகிய உமையம்மை கண்வளரும் மார்பினனே! வயல்களில் செங்கயல்கள் பாயும் வளம் பொருந்திய திருவான்மியூரில் உறையும் ஐயனே! உன்னையல்லால் எனது அன்பு பிறிதொருவரைச் சென்றடையாது.

திருவான்மியூர்

பொன்போ லுஞ்சடைமேற் புனல்தாங்கிய
புண்ணியனே
மின்போ லும்புரிநூல் விடையேறிய
வேதியனே
தென்பால் வையமெலாந் திகழுந்திரு
வான்மிதன்னில்
அன்பா வுன்னையல்லா லடையாதென
தாதரவே **#587**

பொன்போல் ஒளிரும் சடைமேல் கங்கையைத் தாங்கிய புண்ணியமூர்த்தியே! மின்போல் ஒளிரும் முப்புரிநூல் அணிந்து, இடப வாகனத்திலேறி, வேதங்களை அருளிச் செய்தவனாய், வேதப் பொருளாகவும் விளங்குபவனே! உலகெலாம் இன்புறத் திருவான்மியூர் என்னும் தலத்தில் வீற்றிருந்தருளும் அன்புருவான உன்னையல்லால் என் மனம் வேறெதையும் ஆதரவாக அடையாது.

திருவான்மியூர்

கண்ணா ருந்நுதலாய் கதிர்சூழொளி
மேனியின்மேல்

எண்ணார் வெண்பொடிநீ றணிவாயெழில்
வார்பொழில்சூழ்
திண்ணார் வண்புரிசைத் திருவான்மி
யூருறையும்
அண்ணா வுன்னையல்லா லடையாதென
தாதரவே **#588**

நெற்றிக்கண்ணை உடையவனே! கதிர்போல் ஒளிரும் திருமேனி மீது திருவெண்ணீற்றினை அணிந்துள்ளவனே! அழகிய சோலைகள் சூழ்ந்த உறுதியான மதில்களை உடைய திருவான்மியூரில் வீற்றிருந்தருளும் தந்தையே! உன்னையல்லால் என்மனம் வேறெதையும் ஆதரவாக அடையாது.

திருவான்மியூர்

நீதி நின்னையல்லா னெறியாதும்
நினைந்தறியேன்
ஓதீ நான்மறைகள் மறையோன்றலை
யொன்றினையும்
சேதீ சேதமில்லாத் திருவான்மி
யூருறையும்
ஆதீ யுன்னையல்லா லடையாதென
தாதரவே **#589**

நீதிவடிவாயுள்ளவனே! உன்னையே நினைப்பதல்லாமல் உன்னை வழிபடுதற்குரிய நெறி வேறொன்றை அறிந்திலேன். நால்வேதங்களை அருளிச் செய்தவனே! பிரமன் தலை ஒன்றை நகத்தால் கிள்ளியவனே! எத்தகைய குறைவுமின்றி வளம் பொருந்திய திருவான்மியூரில் வீற்றிருந்தருளும் ஆதிமூர்த்தியே! உன்னையல்லால் என்மனம் வேறெதையும் ஆதரவாக அடையாது.

திருவான்மியூர்

வானார் மாமதிசேர் சடையாய்வரை
போலவரும்
கானா ரானையின்றோ லுரித்தாய்கறை
மாமிடற்றாய்
தேனார் சோலைகள்சூழ் திருவான்மி
யூருறையும்
ஆனா யுன்னையல்லா லடையாதென
தாதரவே **#590**

வானில் விளங்கும் சந்திரனைச் சடையில் தரித்தவனே! மலைபோல

வரும் பாட்டிலுள்ள யானையின் தோலை உரித்தவனே! நஞ்சுண்டு கறுத்த கண்டத்தையுடையவனே! தேன் துளிக்கும் மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருவான்மியூரில் இடபவாகனத்தில வீற்றிருந்தருளும் இறைவனே! உன்னையல்லால் என்மனம் வேறெதையும் ஆதரவாக அடையாது.

திருவான்மியூர்

பொறிவாய் நாகணையா னொடுபூமிசை
மேயவனும்
நெறியார் நீள்கழன்மேன் முடிகாண்பரி
தாயவனே
செறிவார் மாமதில்சூழ் திருவான்மி
யூருறையும்
அறிவே யுன்னையல்லா லடையாதென
தாதரவே **#591**

நெருப்புப் பொறிபோல் விடம் கக்கும் வாயுடைய பாம்பைப் படுக்கையாகக் கொண்ட திருமாலும், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும், நன்னெறி காட்டும் உனது நீண்ட திருவடியையும், மேலோங்கும் திருமுடியையும் காண்பதற்கு அரியவனாய் விளங்கியவனே! நெருக்கமாக நீண்ட பெரிய மதில்கள் சூழ்ந்த திருவான்மியூரில் வீற்றிருந்தருளும் முற்றுணர்வும், இயற்கை உணர்வுமுடையவனே! உன்னையல்லால் என் மனம் வேறெதையும் ஆதரவாக அடையாது.

திருவான்மியூர்

குண்டா டுஞ்சமணர் கொடுஞ்சாக்கிய
ரென்றிவர்கள்
கண்டார் காரணங்கள் கருதாதவர்
பேசநின்றாய்
திண்டேர் வீதியதார் திருவான்மி
யூருறையும்
அண்டா வுன்னையல்லா லடையாதென
தாதரவே **#592**

விதண்டாவாதம் செய்கின்ற சமணர்களும், முரட்டுத் தன்மையுடைய புத்தர்களும் காரணம் அறியாதவராய் உன்னைப்பேச வீற்றிருந்தாய். வலிமை வாய்ந்த தேரோடும் வீதிகளையுடைய திருவான்மியூரில் வீற்றிருந்தருளும் தேவனே! உன்னையல்லால் என் மனமானது ஆதரவாக வேறெதையும் நாடாது.

திருவான்மியூர்

கன்றா ருங்கமுகின் வயல்சூழ்தரு
காழிதனில்
நன்றான புகழான் மிகுஞானசம்
பந்தனுரை
சென்றார் தம்மிடர்தீர் திருவான்மி
யூரதன்மேல்
குன்றா தேத்தவல்லார் கொடுவல்வினை
போயறுமே **#593**

பாக்குமரக் கன்றுகள் வயல்களைச் சூழ்ந்து விளங்குகின்ற சீகாழியில் அவதரித்து, நல்ல புகழ் மிகுந்த ஞானசம்பந்தன், இடர்தீர்க்கும் திருவான்மியூரின் மேல் போற்றி அருளிய இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்கட்குக் கொடிய தீவினையானது நீங்கும்.

திருப்பிரமபுரம்

சீர்காழி

திருப்பிரமபுரம்,
பண் - பஞ்சமம், திருப்பிரமபுர மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

இறையவ னீசனெந்தை யிமை யோர்தொழு
தேத்தநின்ற
கறையணி கண்டன்வெண்டோ டணி காதினன்
காலத்தன்று
மறைமொழி வாய்மையினான் மலையா ளொடு
மன்னுசென்னிப்
பிறையணி செஞ்சடையான் பிர மாபுரம்
பேணுமினே **#594**

இறைவன், ஈசன், எம் தந்தை என்று வானவர்கள் தொழுது போற்ற நின்று, நஞ்சுண்ட கறுத்த கண்டத்தினன். சங்கினாலாகிய குழையணிந்த காதினையுடையவன். அக்காலத்தில் வேதத்தின் பொருளை உபதேசித்தருளியவன். மலைமகளான உமாதேவியோடு தலையில் பிறைச்சந்திரனை அணிந்த சிவந்த சடையுடைய அச்சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருப்பிரமாபுரம் என்னும் திருத்தலத்தைப் போற்றி வழிபடுவீர்களாக!

சீர்காழி

சடையினன் சாமவேதன் சரி கோவண
வன்மழுவாட்
படையினன் பாய்புலித்தோ லுடை யான்மறை
பல்கலைநூல்
உடையவ னூனமில்லி யுட னாயுமை
நங்கையென்னும்
பெடையொடும் பேணுமிடம் பிர மாபுரம் பேணுமினே **#595**

இறைவன் சடைமுடியுடையவன். சாமவேதத்தில் விருப்பமுடையவன். சரிந்த கோவண ஆடையை அணிந்தவன். மழுவாகிய படை உடையவன். பாயும் புலியின் தோலை உடையவன். வேதம் முதலான பல கலைநூல்களில் கூறப்படும் தலைவன். எத்தகைய குறைபாடும் இல்லாத அவன், உமாதேவியோடு விரும்பி வீற்றிருந்தருளுமிடமான

திருப்பிரமாபுரம் என்னும் திருத்தலத்தைப் போற்றி வழிபடுவீர்களாக!

சீர்காழி

மாணியை நாடுகால னுயிர் மாய்தரச்
செற்றுக்காளி
காணிய வாடல்கொண்டான் கலந் தூர்வழி
சென்றுபிச்சை
ஊணியல் பாகக்கொண்டங் குட னேயுமை
நங்கையொடும்
பேணிய கோயின்மன்னும் பிர மாபுரம்
பேணுமினே **#596**

இறைவன் பிரமசாரியான மார்க்கண்டேயரின் உயிரைக் கவரவந்த காலனின் உயிரை மாய்த்தவன். காளிதேவி காணுமாறு திருநடனம் புரிந்தவன். பிரமகபாலத்தைக் கையிலேந்தி ஊர்தோறும் சென்று பிச்சையேற்று உண்ணுதலை இயல்பாகக் காண்டவன். அப்பெருமான் உமாதேவியோடு விரும்பி வீற்றிருந்தருளும் கோயிலாக நிலைபெற்றுள்ள திருப்பிரமாபுரம் என்னும் திருத்தலத்தைப் போற்றி வழிபடுவீர்களாக.

சீர்காழி

பாரிடம் விண்ணுமெங்கும் பயி னஞ்சு
பரந்துமிண்டப்
பேரிடர்த் தேவர்கணம் பெரு மானிது
காவெனலும்
ஓரிடத் தேகரந்தங் குமை நங்கையொ
டும்முடனே
பேரிட மாகக்கொண்ட பிர மாபுரம்
பேணுமினே **#597**

நிலவுலகிலும், விண்ணுலகிலும் எங்கும் பயின்ற விடமானது பரவிப் பெருக, அதனால் பெருந்துன்பத்திற்குட்பட்ட தேவர்கள் அனைவரும், “பெருமானே! காப்பாற்றுவீர்களாக” என்று பிரார்த்திக்க, அவ்விடத்தைக் கண்டத்தில் கரந்து அருள்புரிந்த அப்பெருமான் உமாதேவியோடு வீற்றிருந்தருளுகின்ற பெருமை மிகுந்த திருப்பிரமாபுரம் என்னும் திருத்தலத்தைப் போற்றி வழிபடுவீர்களாக.

சீர்காழி

நச்சர வச்சடைமே னளிர் திங்களு
மொன்றவைத்தங்

கச்ச மெழவிடைமே லழ கார்மழு
வேந்திநல்ல
இச்சை பகர்ந்துமிக விடு மின்பலி
யென்றுநாளும்
பிச்சைகொ ளண்ணனண்ணும் பிர மாபுரம்
பேணுமினே **#598**

இறைவன் விடம் பொருந்திய பாம்பைச் சடைமுடியில் தரித்து, குளிர்ச்சி பொருந்திய சந்திரனையும் அதனுடன் ஒன்றி இருக்குமாறு செய்தவன். அழகிய இடப வாகனத்தின் மீது அமர்ந்து அச்சம் தரும் மழுப்படையை ஏந்தியவன். இன்மொழிகள் பேசி 'மிக இடுங்கள்' என்று நாள்தோறும் பிச்சை ஏற்கும் தலைவனாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருப்பிரமாபுரம் என்னும் திருத்தலத்தைப் போற்றி வழிபடுவீர்களாக!

சீர்காழி

பெற்றவன் முப்புரங்கள் பிழை யாவண்ணம்
வாளியினாற்
செற்றவன் செஞ்சடையிற் றிகழ் கங்கை
தனைத்தரித்திட்
டொற்றை விடையினனா யுமை நங்கையொ
டும்முடனே
பெற்றிமை யாலிருந்தான் பிர மாபுரம்
பேணுமினே **#599**

இறைவன் திரிபுர அசுரர்கள் தவத்தினால் பெற்ற வலிய மூன்றுபுரங்களையும் தப்பாவண்ணம் ஓரம்பினால் அழித்தவன். சிவந்த சடையில் அழகிய கங்கையைத் தரித்தவன். ஒற்றை இடபவாகனம் ஏறினவன். உமாதேவியோடு அவன் வீற்றிருந்தருளும் பெருமையுடைய திருப்பிரமாபுரம் என்னும் திருத்தலத்தைப் போற்றி வழிபடுவீர்களாக!

சீர்காழி

வேத மலிந்தவொலி விழ வின்னொலி
வீணையொலி
கீத மலிந்துடனே கிள ரத்திகழ்
பௌவமறை
ஓத மலிந்துயர்வான் முக டேறவொண்
மால்வரையான்
பேதையொ டும்மிருந்தான் பிர மாபுரம்
பேணுமினே **#600**

வேதங்களை ஓதுகின்ற ஒலி, வீணையின் இன்னொலி, கீதஒலி இவை

ஒருசேர எழுந்த கடல்ஓசையை அடக்குமாறு, வானத்தின் உச்சியை அடைவதாய் உள்ள, ஒளி பொருந்திய பெரிய கயிலைமலையானாகிய சிவபெருமான் உமாதேவியோடு வீற்றிருந்தருளும் திருப்பிரமாபுரம் என்னும் திருத்தலத்தைப் போற்றி வழிபடுங்கள்.

சீர்காழி

இமையவ ரஞ்சியோட வெதிர் வாரவர்
தம்மையின்றி
அமைதரு வல்லரக்கன் னடர்த் தும்மலை
யன்றெடுப்பக்
குமையது செய்துபாடக் கொற்ற வாளொடு
நாள்கொடுத்திட்
டுமையொ டிருந்தபிரான் பிர மாபுர
முன்னுமினே **#601**

தேவர்கள் அஞ்சியோடத் தன்னை எதிர்ப்பவர் யாருமில்லாது அமைந்த வல்லசுரனாகிய இராவணன் பண்டைக் காலத்தில் கயிலையைப் பெயர்த்து எடுக்க, சிவபெருமான் தன் காற்பெருவிரலை ஊன்றி அவன் அம்மலைக்கீழ் நசுங்கும்படி துன்பம் செய்து, பின் அவன் தவறுணர்ந்து சாமகானம் பாடித் துதிக்க, அவனுக்கு வெற்றிதரும் வாளொடு, நீண்ட வாழ்நாளும் கொடுத்து அருள்செய்து, உமாதேவியாரோடு வீற்றிருந்தருளும் திருப்பிரமாபுரம் என்னும் திருத்தலத்தைப் போற்றி வழிபடுங்கள்.

சீர்காழி

ஞால மளித்தவனும் மரி யும்மடி
யோடுமுடி
காலம் பலசெலவுங் கண்டி லாமையி
னாற்கதறி
ஓல மிடவருளி யுமை நங்கையொ
டும்முடனாய்
ஏல விருந்தபிரான் பிர மாபுர
மேத்துமினே **#602**

இப்பூவுலகைப் படைத்த பிரமனும், திருமாலும்,பலகாலம் இறைவனுடைய அடிமுடியைத் தேடி அலைந்து காண முடியாது கதறி ஓலமிட அவர்கட்கு அருள்புரிந்த அச்சிவ பெருமான் உமாதேவியை உடனாகக் கொண்டு வீற்றிருந்தருளும் திருப்பிரமாபுரம் என்னும் திருத்தலத்தைப் போற்றி வழிபடுங்கள்.

சீர்காழி

துவருறு மாடையினார் தொக்க பீலியர்
நக்கரையர்
அவரவர் தன்மைகள்கண் டணு கேன்மின்
னருள்பெறுவீர்
கவருறு சிந்தையொன்றிக் கழி காலமெல்
லாம்படைத்த
இவரவ ரென்றிறைஞ்சிப் பிர மாபுர
மேத்துமினே **#603**

மஞ்சட்காவி ஊட்டப்பட்ட ஆடையணிந்த புத்தர்களும், தொகுத்துக் கட்டிய மயிற்பீலியைக் கையிலேந்தி யவராய், ஆடையில்லாத இடையையுடைய சமணர்களும், இறையுண்மையை அறியாதவர்களாதலால் அவர்களை அணுகாதீர். திருவருள் பெற விரும்பும் அடியார்களே! ஐயம் பல நிறைந்த மனத்தை ஒருமுகப்படுத்தி, சென்ற காலம் முதலிய எல்லாக் காலத்தையும் படைத்த முழுமுதற்கடவுள் சிவபெருமான் என்று வணங்கி, அப்பெருமான் வீற்றிருந்தருளும் திருப்பிரமாபுரம் என்னும் திருத்தலத்தைப் போற்றி வழிபடுங்கள்.

சீர்காழி

உரைதரு நான்மறையோர் புகழ்ந் தேத்தவொண்
மாதினொடும்
வரையென வீற்றிருந்தான் மலி கின்ற
பிரமபுரத்
தரசினை யேத்தவல்ல வணி சம்பந்தன்
பத்தும்வல்லார்
விரைதரு விண்ணுலகம் மெதிர் கொள்ள
விரும்புவரே **#604**

சிவபெருமானது பெருமையை உரைக்கும் நான்கு வேதங்களையும் பயின்றவர்கள் அப்பெருமானைப் புகழ்ந்து போற்ற, அழகிய உமாதேவியோடு மலைபோன்று உறுதிப் பொருளாக விளங்கும் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற பிரமாபுரத்தில் அருளாட்சியைப் போற்றி ஞானசம்பந்தன் அருளிய இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்களை நறுமணம் கமழும் விண்ணுலகத்துத் தேவர்கள் எதிர்கொண்டழைத்துச் செல்ல விரும்புவர்.

திருவொற்றியூர்

திருவொற்றியூர்

திருவொற்றியூர்,
பண் - பஞ்சமம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாணிக்கத்தியாகர்.
தேவியார் : வடிவுடையம்மை.

விடையவன் விண்ணுமண்ணுந் தொழ நின்றவன்
வெண்மழுவாட்
படையவன் பாய்புலித்தோ லுடை கோவணம்
பல்கரந்தைச்
சடையவன் சாமவேதன் சசி தங்கிய
சங்கவெண்டோ
டுடையவன் னூனமில்லி யுறை யும்மிட
மொற்றியூரே **#605**

சிவபெருமான் இடபவாகனத்தை உடையவன். விண்ணுளோரும், இம்மண்ணுலக மாந்தரும் தொழுது போற்ற விளங்குபவன். கறைபடியாத மழுப்படை உடையவன். பாயும் புலித்தோலுடையும், கோவணமும் உடையவன். பலவிதமான மலர்களைச் சடையில் அணிந்தவன். சாமகானப் பிரியன். சந்திரனைச் சடையில் தாங்கி, சங்கினால் ஆகிய வெண்மையான தோடு என்னும் காதணி அணிந்தவன். குறைவில்லாத அப்பெருமான் தன்னை வழிபடும் அடியவர்களின் ஊனமாகக் கருதப்படும் குற்றம் குறைகளைக் களைந்து வீற்றிருந்தருளும் இடம் திருவொற்றியூர் என்னும் திருத்தலம் ஆகும்.

திருவொற்றியூர்

பாரிடம் பாணிசெய்யப் பறைக் கட்செறு
பல்கணப்பேய்
சீரொடும் பாடலாட லில யஞ்சிதை
யாதகொள்கைத்
தாரிடும் போர்விடையன் றலைவன்றலை
யேகலனா
ஊரிடும் பிச்சைகொள்வா னுறை யும்மிட
மொற்றியூரே **#606**

பூதகணங்கள் பண்ணிசைத்துப் பாட, பறைகள் கொட்ட, கண்டாரைக் கொல்லவல்ல பல்வேறு பேய்க்கணங்கள் தாளத்தோடு இலயம்

கெடாதவாறு பாடி ஆடத் திருநடனம் புரிபவன். கிண்கிணிமாலை அணிந்த போர்செய்யும் தன்மையுடைய இடப வாகனத்தில் வீற்றிருந்தருளும் தலைவன். பிரமகபாலத்தை உண்கலனாகக் கொண்டு ஊர்தோறும் திரிந்து பிச்சை ஏற்பவன். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது திருவொற்றியூர் என்னும் திருத்தலம் ஆகும்.

திருவொற்றியூர்

விளிதரு நீருமண்ணும் விசும் போடனல்
காலுமாகி
அளிதரு பேரருளா னர னாகிய
வாதிமூர்த்தி
களிதரு வண்டு பண்செய் கமழ் கொன்றையி னோடணிந்த
ஒளிதரு வெண்பிறையா னுறை யும்மிட
மொற்றியூரே **#607**

ஓசையுடன் பாயும் நீர், நிலம், ஆகாயம், நெருப்பு, காற்றுமாகி, மன்னுயிர்களைக் காக்கும் பெருங்கருணையாளன் ஆகிய சங்கார கர்த்தாவாகிய சிவபெருமானே உலகத்தோற்றத்திற்கும் நிமித்தகாரணனாவான். மலர்களிலுள்ள தேனைப்பருகிய மகிழ்ச்சியில் வண்டுகள் பண்ணிசைக்கும் நறுமணம் கமழும் கொன்றை மாலையோடு ஒளிரும் வெண்பிறைச் சந்திரனையும் சடையில் அணிந்த அச்சிவபெருமான் வீற்றிருந்தருளுவது திருவொற்றியூர் என்னும் திருத்தலமாகும்.

திருவொற்றியூர்

அரவமே கச்சதாக வரைத் தானலர்
கொன்றையந்தார்
விரவிவெண் ணூல்கிடந்த விரை யார்வரை
மார்பனெந்தை
பரவுவார் பாவமெல்லாம் பறைத் துப்படர்
புன்சடைமேல்
உரவுநீ ரேற்றபெம்மா னுறை யும்மிட
மொற்றியூரே **#608**

சிவபெருமான் இடையிலே பாம்மைப் கச்சாக அணிந்தவர். கொன்றை மலர்மாலை அணிந்தவர். வெண்ணிற முப்புரி நூலணிந்து கலவைச் சாந்தணிந்த மலைபோன்ற மார்பை உடையவர். எம் தந்தையான அச் சிவபெருமான் தம்மை வணங்குவாரின் பாவத்தைப் போக்கிப் படர்ந்த சடையின் மேல் கங்கையைத் தாங்கியவர். அவர் வீற்றிருந்தருளும் இடம் திருவொற்றியூர் என்னும் திருத்தலம் ஆகும்.

திருவொற்றியூர்

விலகினார் வெய்யபாவம் விதி யாலருள்
செய்துநல்ல
பலகினார் மொந்தைதாளந் தகுணிச்சமும்
பாணியாலே
அலகினால் வீசிநீர்கொண் டடி மேலல
ரிட்டுமுட்டா
துலகினா ரேத்தநின்றா னுறை யும்மிட
மொற்றியூரே **#609**

கொடிய பாவத்திலிருந்து விடுபட்ட பக்குவ ஆன்மாக்கட்கு, விதிப்படி அருள்செய்து, சிவபெருமான் நல்ல பல வகையான வாத்தியங்களான மொந்தை, தாளம், தகுணிச்சம் என்னும் ஒருவகை தோற்கருவி முதலியன ஒலிக்கப் பாட்டோடும், தாளத்தோடும் எண்தோள் வீசி நின்று ஆட, உலகத்தோர் அவன் திருவடியில் மலர்களைத் தூவி, தங்கள் வழிபாடு தடைப்படா வண்ணம் துதித்து வணங்க அவன் வீற்றிருந்தருளும் இடம் திருவொற்றியூர் என்னும் திருத்தலமாகும்.

திருவொற்றியூர்

கமையொடு நின்றசீரான் கழ லுஞ்சிலம்
புமொலிப்பச்
சுமையொடு மேலும்வைத்தான் விரி கொன்றையுஞ்
சோமனையும்
அமையொடு நீண்டதிண்டோ ளழ காயபொற் றோடிலங்க
உமையொடுங் கூடிநின்றா னுறை யும்மிட
மொற்றியூரே **#610**

பொறுமையுடன் விளங்கும் தலைவனான சிவபெருமான், தன் திருவடிகளிலுள்ள கழலும், சிலம்பும் ஒலிக்கச் சடைமுடியில் மலர்ந்த கொன்றையையும், சந்திரனையும் தாங்கிய, நீண்ட வலிமையான தோளழகு உடையவன். காதில் பொன்னாலாகிய தோடு பிரகாசிக்க உமாதேவியோடு சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது திருவொற்றியூர் என்னும் திருத்தலம் ஆகும்.

திருவொற்றியூர்

நன்றியால் வாழ்வதுள்ளம் முல குக்கொடு
நன்மையாலே
கன்றனார் மும்மதிலுங் கரு மால்வரை
யோசிலையாப்

பொன்றினார் வார் சுடலைப் பொடி நீறணிந்
தாரழலம்
பொன்றினா லெய்தபெம்மா னுறை யும்மிட
மொற்றியூரே #611

உள்ளத்தில் பிறருக்கு உபகாரமாய் வாழ வேண்டும் என்பதை உலகிற்கு உணர்த்தச் சிவபெருமான், உலகத்தார்க்கு தீமை செய்த அசுரர்கள் வாழும் முப்புரங்களையும், பெருமை வாய்ந்த மேருமலையை வில்லாகக் கொண்டு அக்கினிக்கணை ஒன்றை எய்து அழித்தவர். நெடிய சுடலைப்பொடியாகிய நீற்றினை அணிந்தவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவொற்றியூர் என்னும் திருத்தலமாகும்.

திருவொற்றியூர்

பெற்றியாற் பித்தனொப்பான் பெரு மான்கரு
மானுரிதோல்
சுற்றியான் சுத்திசூலஞ் சுடர்க் கண்ணுதன்
மேல்விளங்கத்
தெற்றியாற் செற்றரக்கன் னுட லைச்செழு
மால்வரைக்கீழ்
ஒற்றியான் முற்றுமாள்வா னுறை யும்மிட
மொற்றியூரே #612

பித்தனைப் போன்று விளங்கும் சிவபெருமான், செய்கையால் அறிவில் பெரியவனாவான். கலைமானின் தோசை சுற்றி உடுத்தவன். சுத்தி, சூலம் எனபன ஏந்தியவன். நெற்றிக்கண் உடையவன். கோபமுடைய அரக்கனான இராவணன் கயிலை மலையைப் பெயர்த்து எடுக்க, அவன் அம்மலையின்கீழ் நெரியுமாறு தன் காற்பெருவிரலை அழுத்தியவன். உலகம் முழுவதையும் ஆட்கொண்டருளும் அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது திருவொற்றியூர் என்னும் திருத்தலமாகும்.

திருவொற்றியூர்

திருவினார் போதினானுந் திரு மாலுமொர்
தெய்வமுன்னித்
தெரிவினாற் காணமாட்டார் திகழ் சேவடி
சிந்தைசெய்து
பரவினார் பாமெல்லாம் பறையப்படர்
பேரொளியோ
டொருவனாய் நின்றபெம்மா னுறை யும்மிட
மொற்றியூரே #613

இலக்குமி எழுந்தருளிய தாமரை மலரில் வீற்றிருந்தருளும் பிரமனும்,

திருமாலும் ஒப்பற்ற தெய்வத்தைக் காணவேண்டும் என நினைத்துத் தம்அறிவால் தேடிக் காணமாட்டாதவர் ஆயினர். சிவபெருமானின் சிவந்த திருவடிகளை மனத்தால் சிந்தித்து வழிபடுபவர்களின் பாவம் எல்லாம் அழியப் படர்ந்த பேரொளியோடு ஒப்பற்றவனாயிருந்த அச் சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவொற்றியூர் என்னும் திருத்தலம் ஆகும்.

திருவொற்றியூர்

தோகையம்பீலிகொள்வார் துவர்க் கூறைகள்
போர்த்துழல்வார்
ஆகம செல்வனாரை யலர் தூற்றுதல்
காரணமாக்
கூகையம் மாக்கள்சொல்லைக் குறிக் கொள்ளன்மி
னேழுலகும்
ஓகைதந் தாளவல்லா னுறை யும்மிட
மொற்றியூரே **#614**

நடந்து செல்லும்போது எறும்பு முதலிய சிறு பூச்சிகள் மிதிபட்டு இறந்துவிடாதிருக்க மயில்தோகை ஏந்திப் பெருக்கிச் செல்லும் சமணர்களும், துவர் ஆடையைப் போர்த்திய புத்தர்களும், ஆகமம் அருளிய, ஆகம நெறியில் பூசிக்கப்படும் செல்வரான சிவபெருமானைப் பழித்துக் கூறுவதால், கோட்டான் போன்று ஐயறிவுடைய விலங்குகட்கு ஒப்பாவாராதலால் அவர்கள் கூறும் சொற்களைப் பொருளெனக் கொள்ள வேண்டா. ஏழுலகும் மகிழுமாறு ஆட்கொள்ள வல்ல சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவொற்றியூர் என்னும் திருத்தலமாகும்.

திருவொற்றியூர்

ஒண்பிறை மல்குசென்னி யிறை வன்னுறை
யொற்றியூரைச்
சண்பையர் தந்தலைவன் றமிழ் ஞானசம்
பந்தன்சொன்ன
பண்புனை பாடல்பத்தும் பர விப்பணிந்
தேத்தவல்லார்
விண்புனை மேலுலகம் விருப் பெய்துவர்
வீடெளதே **#615**

ஒளிரும் பிறைச்சந்திரனைத் தலையில் சூடிய இறைவனான சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருவொற்றியூரை, சண்பை என்று கூறப்படும் சீகாழியில் சிவம் பெருக்க அவதரித்த தலைவனான தமிழ்

ஞானசம்பந்தன் அருளிய பண்ணோடு கூடிய இப்பாடல்கள் பத்தையும் ஓதி வழிபட வல்லவர்கள் விண்ணிலுள்ள சுவர்க்கலோத்தை அடைந்து வீடுபேற்றை எளிதில் அடைவர்.

திருச்சாத்தமங்கை

திருச்சாத்தமங்கை

திருச்சாத்தமங்கை,
பண் - பஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அயவந்தீசுவரர்.
தேவியார் : மலர்க்கணம்பிகையம்மை.

திருமலர்க் கொன்றைமாலை திளைக் கும்மதி
சென்னிவைத்தீர்
இருமலர்க் கண்ணிதன்னோ டுட னாவது
மேற்பதொன்றே
பெருமலர்ச் சோலைமேக முரிஞ் சும்பெருஞ்
சாத்தமங்கை
அருமல ராதிமூர்த்தீ யய வந்தி
யமர்ந்தவனே **#616**

தெய்வத்தன்மை பொருந்திய கொன்றை மலர்களை மாலையாக அணிந்தவனும், சந்திரனைத் தலையில் தரித்தவனும், இரு தாமரை மலர் போன்ற கண்களையுடைய உமாதேவியை உடனாகக் கொண்டு, நறுமணம் பெருகும் மலர்கள் நிறைந்த சோலைகளிலுள்ள மரங்கள் மேகத்தை உராயும்படி விளங்கும் திருச்சாத்த மங்கை என்னும் திருத்தலத்தில், உலகிற்கு ஒப்பற்றவனாகி விளங்கும் ஆதிமூர்த்தியும் ஆகிய சிவபெருமான் அயவந்தி என்னும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்றார். இத்திருத்தலத்தின் அம்பிகையின் திருப்பெயரான இருமலர்க்கண்ணம்மை என்பது இப்பாடலில் உணர்த்தப்படுகின்றது.

திருச்சாத்தமங்கை

பொடிதனைப் பூசுமார்பிற் புரி நூலொரு
பாற்பொருந்தக்
கொடியன சாயலாளோ டுடனாவதுங்
கூடுவதே
கடிமண மல்கிநாளுங் கம ழும்பொழிற்
சாத்தமங்கை
அடிகணக் கன்பரவ வய வந்தி
யமர்ந்தவனே **#617**

சிவபெருமான் திருவெண்ணீற்றினைப் பூசிய திருமார்பில் முப்புரிநூல்

அணிந்து, பூங்கொடி போன்ற மெல்லிய சாயலுடைய உமாதேவியை உடனாகக் கொண்டு விளங்குகிறான். நறுமண மலர்கள் நாளும் பூத்து வாசனை வீசும் சோலைகளையுடைய திருச்சாத்தமங்கையில் சிவபெருமான் திருநீலநக்க நாயனார் போற்றி வழிபட அயவந்தி என்னும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்றான்.

திருச்சாத்தமங்கை

நூனலந் தங்குமார்பி னுகர் நீறணிந்
தேறதேறி
மானன நோக்கிதன்னோ டுட னாவது
மாண்பதுவே
தானலங் கொண்டுமேகந் தவ ழும்பொழிற்
சாத்தமங்கை
ஆனலந் தோய்ந்தவெம்மா னயவந்தி
யமர்ந்தவனே **#618**

முப்புரிநூல் அணிந்த திருமார்பில் திருவெண்ணீற்றினை அணிந்து, இடப வாகனத்திலேறி, மான் போன்ற மருண்ட பார்வையுடைய உமாதேவியை உடனாகக் கொண்டு விளங்குபவன் சிவபெருமான். மேகத்தைத் தொடும்படி உயர்ந்த அழகிய சோலைகள் சூழ்ந்த திருச்சாத்த மங்கை என்னும் திருத்தலத்தில் பசுவிலிருந்து பெறப்படும் பஞ்சகவ்வியங்களால் திருமுழுக் காட்டப்படும் சிவபெருமான் திருஅயவந்தி என்னும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்றான்.

திருச்சாத்தமங்கை

மற்றவின் மால்வரையா மதி லெய்துவெண்
ணீறுபூசிப்
புற்றர வல்குலாளோ டுட னாவதும்
பொற்பதுவே
கற்றவர் சாத்தமங்கை நகர் கைதொழச்
செய்தபாவம்
அற்றவர் நாளுமேத்த வய வந்தி
யமர்ந்தவனே **#619**

பெரிய மேருமலையை வில்லாகக் கொண்டு மும்மதில்களை எய்து அழித்து, திருவெண்ணீற்றினைப் பூசி, புற்றில் வாழ்கின்ற பாம்பு போன்ற அல்குலையுடைய உமாதேவியை உடனாகக் கொண்டு விளங்குகிறான் சிவபெருமான். வேதகாமங்களை நன்கு கற்றவர்கள் வாழ்கின்ற திருச்சாத்தமங்கை என்னும் திருத்தலத்தைக் கைக்கூப்பித் தொழப் பாவம் நீங்கும். உலகப் பற்றற்ற மெய்யடியார்கள், தமக்குப்

பற்றுக் கோடாக விளங்கும் சிவ பெருமானை நாள்தோறும் போற்றி வழிபட திருஅயவந்தி என்னும் திருக்கோயிலில் அவன் வீற்றிருந்தருளுகின்றான்.

திருச்சாத்தமங்கை

வெந்தவெண் ணீறுபூசி விடை யேறிய
வேதகீதன்
பந்தண வும்விரலா ளுட னாவதும்
பாங்கதுவே
சந்தமா றங்கம்வேதந் தரித் தார்தொழுஞ்
சாத்தமங்கை
அந்தமா யாதியாகி யய வந்தி
யமர்ந்தவனே **#620**

இறைவன் திருவெண்ணீற்றினைப் பூசியவன். இடபவாகனத்தில் ஏறியமர்பவன். வேதத்தை இசையோடு பாடியருளி, வேதப் பொருளாகவும் விளங்குபவன். பந்து வந்தணைகின்ற விரல்களையுடைய உமாதேவியை உடனாகக் கொண்டவன். வேதமும், அதன் ஆறங்கமும் ஓதுகின்ற அந்தணர்கள் தொழுகின்ற திருச்சாத்தமங்கை என்னும் திருத்தலத்தில் உலகத்திற்கு அந்தமும், ஆதியுமாகிய சிவபெருமான் திருஅயவந்தி என்னும் கோயிலில் வீற்றிருந்தருளுகின்றான்.

திருச்சாத்தமங்கை

வேதமாய் வேள்வியாகி விளங் கும்பொருள்
வீடதாகிச்
சோதியாய் மங்கைபாகந் நிலை தான்சொல்ல
லாவதொன்றே
சாதியான் மிக்கசீராற் றகு வார்தொழுஞ்
சாத்தமங்கை
ஆதியாய் நின்றபெம்மா னய வந்தி
யமர்ந்தவனே **#621**

இறைவன் வேதங்களை அருளி வேதப் பொருளாகவும் விளங்குபவன். எரியோம்பிச் செய்யப்படும் வேத வேள்வியாகவும், ஞானவேள்வியாகவும் திகழ்பவன். ஒண்பொருளாகவும், வீடுபேறாகவும் உள்ளவன். சோதிவடிவானவன். உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு விளங்குபவன். இப்பெருமான் இத்தகையவன் என்பதை வாயினால் சொல்லவும் ஆகுமோ? அத்தகைய சிறப்புடைய பெருமான், தக்கவர்கள் தொழும் திருசாத்தமங்கை என்னும்

திருத்தலத்தில் ஆதிமூர்த்தியாய் திருஅயவந்தி என்னும் கோயிலில் வீற்றிருந்தருளுகின்றான்.

திருச்சாத்தமங்கை

இமயமெல் லாமிரிய மதி லெய்துவெண்
ணீறுபூசி
உமையையொர் பாகம்வைத்த நிலை தானுன்ன
லாவதொன்றே
சமயமா றங்கம்வேதந் தரித் தார்தொழுஞ்
சாத்தமங்கை
அமையவே றோங்குசீரா னய வந்தி
யமர்ந்தவனே **#622**

சிவபெருமான் இமயம் முதலான பெரிய மலைகளும் நிலைகலங்குமாறு, முப்புரங்களை எரித்து, திருவெண்ணீற்றினைப் பூசி உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாக வைத்த தன்மை பாராட்டிப் பேசக் கூடிய அரிய செயலாகும். அவன் சமயநூல்களையும், வேதத்தையும், அதன் அங்கங்களையும் ஓதுகின்ற அந்தணர்கள் தொழுகின்ற திருச்சாத்தமங்கை என்னும் திருத்தலத்தில் சிறப்புடன் ஓங்கித் திருஅயவந்தி என்னும் கோயிலில் வீற்றிருந்தருளுகின்றான்.

திருச்சாத்தமங்கை

பண்ணுலாம் பாடல்வீணை பயில் வானோர்
பரமயோகி
விண்ணுலா மால்வரையான் மகள் பாகமும்
வேண்டினையே
தண்ணிலா வெண்மதியந் தவ ழும்பொழிற்
சாத்தமங்கை
அண்ணலாய் நின்றவெம்மா னய வந்தி
யமர்ந்தவனே **#623**

இறைவன் பண்ணிசையோடு கூடிய பாடலை வீணையில் மீட்டிப் பாடுவான். பரமயோகி அவன். மலையரசன் மகளாகிய பார்வதி தேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டவன். அப்பெருமான் குளிர்ச்சி பொருந்திய வெண்ணிற சந்திரனைத் தொடும்படி ஓங்கி உயர்ந்த சோலைகள் சூழ்ந்த திருசாத்தமங்கையில் தலைவனாய் விளங்கி, திருஅயவந்தி என்னும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்றான்.

திருச்சாத்தமங்கை

பேரெழிற் றோளரக்கன் வலி செற்றதும்
பெண்ணோர்பாகம்
ஈரெழிற் கோலமாகி யுட னாவது
மேற்பதொன்றே
காரெழில் வண்ணனோடு கன கம்மனை
யானுங்காணா
ஆரழல் வண்ணமங்கை யய வந்தி
யமர்ந்தவனே **#624**

மிகுந்த எழிலுடைய வலிமை வாய்ந்த தோள்களினால் மலையைப் பெயர்த்த இராவணனின் வலிமையை அடக்கிய சிவபெருமான் உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு அம்மையப்பனாகவும், உடனாகக் கொண்டு அழகிய இரண்டு கோலமாகவும், கார்மேகம் போன்ற அழகிய வண்ணனான திருமாலும், பொன்போன்ற நிறமுடைய பிரமனும், காண முடியாவண்ணம் நெருப்பு வண்ணமுமாகி, திருசாத்தமங்கை என்னும் திருத்தலத்தில், திரு அயவந்தி என்னும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்றான்.

<u>திருச்சாத்தமங்கை</u>

கங்கையோர் வார்சடைமே லடை யப்புடை
யேகமழும்
மங்கையோ டொன்றிநின்றம் மதிதான்சொல்ல
லாவதொன்றே
சங்கையில் லாமறையோ ரவர் தாந்தொழு
சாத்தமங்கை
அங்கையிற் சென்னிவைத்தா யயவந்தி
யமர்ந்தவனே **#625**

சிவபெருமான் கங்கையை நீண்ட சடைமுடியில் தாங்கி, பக்கத்தில் உமாதேவியோடு ஒன்றி நின்ற அறிவுடைமை சொல்லக் கூடிய தொன்றா? அவன் ஐயமில்லாமல் வேதங்களைக் கற்றஅந்தணர்கள் தொழுகின்ற திருசாத்தமங்கை என்னும் திருத்தலத்தில் உள்ளங்கையில் பிரமகபாலம் ஏந்தித் திருஅயவந்தி என்னும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்றான்.

<u>திருச்சாத்தமங்கை</u>

மறையினார் மல்குகாழித் தமிழ் ஞானசம்
பந்தன்மன்னும்
நிறையினார் நீலநக்க னெடு மாநக
ரென்றுதொண்டர்

அறையுமூர் சாத்தமங்கை யய வந்திமே
லாய்ந்தபத்தும்
முறைமையா லேத்தவல்லா ரிமை யோரிலு
முந்துவரே **#626**
நான்மறைவல்ல அந்தணர்கள் வாழ்கின்ற சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தன், மனத்தைப் புறவழியோடாது நிறுத்தி, திருநீலநக்கருடைய நெடுமா நகர் என்று தொண்டர்களால் போற்றப்படும் திருசாத்தமங்கை என்னும் திருத்தலத்திலுள்ள திருஅயவந்தி என்னும் திருக்கோயிலைப் போற்றி அருளிய இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள் தேவர்களைவிட மேலானவர்கள் ஆவர்.

திருக்குடமூக்கு

திருக்குடமூக்கு

திருக்குடமூக்கு,
பண் - பஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கும்பேசுவரர்.
தேவியார் : மங்களநாயகியம்மை.

அரவிரி கோடனீட லணி காவிரி
யாற்றயலே
மரவிரி போதுமௌவன் மண மல்லிகை
கள்ளவிழும்
குரவிரி சோலைசூழ்ந்த சூழ கன்குட
மூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி யிருந் தானவ
னெம்மிறையே **#627**

பாம்பைப் போலும் தண்டோடு மலர் விரிந்த காந்தட் செடிகள் செழித்திருத்தலால், அழகிய காவிரியாற்றின் பக்கம், மராமரங்கள் விரிந்த மலர்களும், முல்லையும், மணம் வீசும் மல்லிகையும், தேனோடு முறுக்கு உடையும் மலர்களைஉடைய குராமரங்களும் விரிந்த சோலை சூழ்ந்த கும்பகோணத்தினை இடமாகக் கொண்டு குழகனாகிய சிவபெருமான், இரவில் ஒளிரும் சந்திரனைச் சூடி வீற்றிருக்கிறான். அப்பெருமானே எம் இறைவன்.

திருக்குடமூக்கு

ஓத்தர வங்களோடு மொலி காவிரி
யார்த்தயலே
பூத்தர வங்களோடும் புகை கொண்டடி
போற்றிநல்ல
கூத்தர வங்களோவாக் குழ கன்குட
மூக்கிடமா
ஏத்தர வங்கள்செய்ய விருந் தானவ
னெம்மிறையே **#628**

வேதங்கள் ஓதப்படும் ஒலியோடு, காவிரியாறு பாயும் ஒலியும் சேர்ந்தொலிக்க, பக்கத்திலுள்ள பூஞ்சோலைகளில் மலர்ந்துள்ள பூக்களைக் கொண்டு தூவி, தூபதீபம் காட்டி இறைவனைப் போற்றுவதால் உண்டாகும் ஒலி விளங்க, திருநடனம் புரியும்

அழகனாகிய சிவபெருமான், திருக்குட மூக்கினை இடமாகக் கொண்டு வீற்றிருந்தருளுகின்றான். எல்லோரும் போற்றி வணங்கும் புகழுடைய அப்பெருமானே யாம் வணங்கும் கடவுளாவான்.

திருக்குடமூக்கு

மயில்பெடை புல்கியால மணன் மேன்மட
வன்னமல்கும்
பயில்பெடை வண்டுபண்செய் பழங் காவிரிப்பைம்
பொழில்வாய்க்
குயில்பெடை யோடுபாட லுடை யான்குட
மூக்கிடமா
இயலொடு வானமேத்த விருந் தானவ
னெம்மிறையே **#629**

ஆண்மயில் பெண்மயிலைத் தழுவி ஆட, காவிரியாற்றின் கரையிலுள்ள மணலின் மீது ஆண் அன்னம் தன் பெண் அன்னத்தோடு நடைபயில, வண்டுகள் பண்ணிசைக்க, நிறைய பழங்கள் கனிந்துள்ள பசுமையான சோலைகளில் குயிலானது பெடையோடு சேர்ந்து கீதமிசைக்கத் திருக்குடமூக்கு என்னும் திருத்தலத்தில் விண்ணோர்கள் வேதாகம முறைப்படி பூசிக்க வீற்றிருந்தருளும் சிவபெருமானே யாம் வணங்கும் கடவுளாவான்.

திருக்குடமூக்கு

மிக்கரை தாழவேங்கை யுரி யார்த்துமை
யாள்வெருவ
அக்கர வாமையேன மருப் போடவை
பூண்டழகார்
கொக்கரை யோடுபாட லுடை யான்குட
மூக்கிடமா
எக்கரை யாருமேத்த விருந் தானவ
னெம்மிறையே **#630**

சிவபெருமான் புலியின் தோலை உரித்து நன்கு தாழ இடுப்பில் கட்டியவர். உமாதேவி அஞ்சுமாறு எலும்பு, பாம்பு, ஆமையோடு, பன்றியின் கொம்பு ஆகியவற்றை அழகிய ஆபரணமாகப் பூண்டு, கொக்கரை என்னும் வாத்தியம் இசைக்கப் பாடும் சிவபெருமான் திருக்குடமூக்கு என்னும் திருத்தலத்தில் எத்தன்மேயோரும் போற்றி வணங்க வீற்றிருந்தருளுகின்றான். அவனே யாம் வணங்கும் கடவுளாவான்.

திருக்குடமூக்கு

வடிவுடை வாட்டடங்கண் ணுமை யஞ்சவோர்
வாரணத்தைப்
பொடியணி மேனிமூட வுரி கொண்டவன்
புன்சடையான்
கொடிநெடு மாடமோங்குங் குழ கன்குட
மூக்கிடமா
இடிபடு வானமேத்த விருந் தானவ
னெம்மிறையே **#631**

அழகிய உருவமுடைய வாள்போன்ற ஒளி பொருந்திய அகன்ற கண்களையுடைய உமாதேவி அஞ்சுமாறு யானையின் தோலை உரித்து, திருவெண்ணீறணிந்த திருமேனிமீது போர்த்தவனும், சடைமுடியுடையவனும், அழகனும் ஆன சிவபெருமான், கொடிகள் அசைகின்ற ஆகாயத்தைத் தொடும்படி ஓங்கி வளர்ந்துள்ள நீண்ட மாடங்கள் நிறைந்த திருக்குடமூக்கு என்னும் திருத்தலத்தில் வானவர்கள் போற்ற வீற்றிருந் தருளுகின்றான். அப்பெருமானே யாம் வணங்கும் கடவுளாவான்.

திருக்குடமூக்கு

கழைவளர் கவ்வைமுத்தங் கமழ் காவிரி
யாற்றயலே
தழைவளர் மாவினல்ல பல வின்கனி
கள்தங்கும்
குழைவளர் சோலைசூழ்ந்த சூழ கன்குட
மூக்கிடமா
இழைவளர் மங்கையோடு மிருந் தானவ
னெம்மிறையே **#632**

முற்றிய மூங்கில்களிலிருந்து மிகுதியாகக் கிடைக்கும் ஒலிக்கின்ற முத்துக்கள் நிறைந்த காவிரியாற்றின் பக்கத்திலே, தழைகள் மிகுந்த மாங்கனிகளும், பலாவின் கனிகளும் கொத்தாக விளைகின்ற சோலைகள் சூழ்ந்த திருக்குடமூக்கு என்னும் திருத்தலத்தில், அழகான சிவபெருமான், நல்ல ஆபரணங்கள் அணிந்த உமாதேவியோடு வீற்றிருந்தருளுகின்றான். அப்பெருமானே யாம் வணங்கும் கடவுளாவான்.

திருக்குடமூக்கு

மலைமலி மங்கைபாகம் மகிழ்ந் தானெழில்

வையமுய்யச்
சிலைமலி வெங்கணையாற் சிதைத் தான்புர
மூன்றினையும்
குலைமலி தண்பலவின் பழம் வீழ்குட
மூக்கிடமா
இலைமலி சூலமேந்தி யிருந் தானவ
னெம்மிறையே **#633**

மலைமகளாகிய உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு, மகிழ்ந்து விளங்கும் சிவபெருமான் எழில்மிக்க இவ்வுலகம் உய்யுமாறு மேருமலையை வில்லாகக் கொண்டு, அக்கினியைக் கணையாக்கித் தொடுத்து, மூன்று புரங்களையும் சிதைத்தவன். கொத்தாகக் காய்க்கும் பலாக்கனிகள் தாமாகவே கனிந்து வீழும் வளம் நிறைந்த திருக்குடமூக்கு என்னும் திருத்தலத்தில் இலைபோன்ற சூலப்படையை ஏந்தி வீற்றிருந்தருளும் சிவபெருமானே யாம் வணங்கும் கடவுளாவான்.

திருக்குடமூக்கு

நெடுமுடி பத்துடைய நிகழ்வாளரக்
கன்னுடலைப்
படுமிடர் கண்டயரப் பரு மால்வரைக்
கீழடர்த்தான்
கொடுமட றங்குதெங்கு பழம் வீழ்குட
மூக்கிடமா
இடுமண லெக்கர்சூழ விருந் தானவ
னெம்மிறையே **#634**

நீண்ட முடிகள் பத்துடைய வாளுடைய இராவணனின் உடலானது துன்பப்படுமாறு கயிலைமலையின் கீழ் அடர்த்த பெருமானாய், வளைந்த மடல்களையுடைய தென்னை மரங்களிலிருந்து முற்றிய காய்கள் விழும் திருக்குடமூக்கு என்னும் திருத்தலத்தில் மணல் திட்டு சூழ வீற்றிருந்தருளும் சிவபெருமானேயாம் வணங்கும் கடவுளாவான்.

திருக்குடமூக்கு

ஆரெரி யாழியானு மல ரானும
ளப்பரிய
நீரிரி புன்சடைமே னிரம் பாமதி
சூடிநல்ல
கூரெரி யாகிநீண்ட குழ கன்குட
மூக்கிடமா

ஈருரி கோவணத்தோ டிருந் தானவ
னெம்மிறையே #635

அக்கினிபோல் ஒளிரும் சக்கராயுதப் படையுடைய திருமாலும், பிரமனும் அளக்கமுடியாதவனாய், கட்டுப்படுத்த முடியாமல் பெருக்கெடுத்த கங்கையைப் புன்சடை மேல் தாங்கி, இளம்பிறைச் சந்திரனைச் சூடி, நல்ல நெருப்புப் பிழம்பு போல் ஓங்கி நின்ற அழகனானசிவபெருமான், திருகுடமூக்கு என்னும் திருத்தலத்தில் தோலும் கோவண ஆடையும் அணிந்து வீற்றிருந்தருளுகின்றான். அவனே யாம் வணங்கும் கடவுள் ஆவான்.

திருக்குடமூக்கு

மூடிய சீவரத்தார் முது மட்டையர்
மோட்டமணர்
நாடிய தேவரெல்லா நயந் தேத்திய
நன்னலத்தான்
கூடிய குன்றமெல்லா முடை யான்குட
மூக்கிடமா
ஏடலர் கொன்றைசூடி யிருந்தானவ
னெம்மிறையே #636

மஞ்சட் காவியுடையணிந்த, இறைவனை உணராத பேதையராகிய புத்தர்களும், இறுமாப்புடைய சமணர்களும், கூறுவன பயனற்றவை. தன்னை நாடித் தேவர்கள் எல்லாம் விரும்பி வழிபட, அவர்கட்கு நல்லதையே அருளும் சிவபெருமான், மன்னுயிரைக் குன்றவைக்கும் தீவினையால் வரும் குற்றங்களை நீக்கி அருள்புரிவான். திருக்குடமூக்கு என்னும் திருத்தலத்தில் இதழ் விரிந்த கொன்றைமாலையைச் சூடி வீற்றிருந்தருளும் அப் பெருமானே யாம் வணங்கும் கடவுளாவான்.

திருக்குடமூக்கு

வெண்கொடி மாடமோங்கு விறல் வெங்குரு
நன்னகரான்
நண்பொடு நின்றசீரான் றமிழ்ஞானசம்
பந்தனல்ல
தண்குட மூக்கமர்ந்தா னடிசேர்தமிழ்
பத்தும்வல்லார்
விண்புடை மேலுலகம் வியப்பெய்துவர்
வீடெளதே #637

வெண்கொடி அசைகின்ற மாடங்கள் ஓங்கி விளங்கும் வெங்குரு எனப்படும் சீகாழியில் அனைவரிடத்தும் நட்புக் கொண்டு பழகும்

புகழ்மிக்க தமிழ் ஞானசம்பந்தன் நல்ல குளிர்ந்த திருக்குடமூக்கு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற சிவ பெருமானின் திருவடிகளைப் போற்றி அருளிய இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள் வானிலுள்ள சுவர்க்கலோகத்தை அடைந்து இன்புறுவர். அவர்கட்கு முக்திப்பேறு எளிதாகக் கைகூடும்.

திருவக்கரை

திருவக்கரை

திருவக்கரை,
பண் - பஞ்சமம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சந்திரசேகரேசுவரர்.
தேவியார் : வடிவாம்பிகையம்மை.

கறையணி மாமிடற்றான் கரி காடரங்
காவுடையான்
பிறையணி கொன்றையினா னொரு பாகமும்
பெண்ணமர்ந்தான்
மறையவன் றன்றலையிற் பலி கொள்பவன்
வக்கரையில்
உறைபவ னெங்கள்பிரா னொலி யார்கழ
லுள்குதுமே **#638**

இறைவன் நஞ்சுண்ட கறுத்த கண்டத்தை உடையவன். சுடுகாட்டில் திருநடனம் செய்பவன். பிறைச் சந்திரனையும், கொன்றைமாலையையும் அணிந்தவன். உமாதேவியைத் தன்திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டவன். பிரமன் தலையைக் கொய்து அதன் ஓட்டில் பிச்சை ஏற்பவன். திருவக்கரை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற எங்கள் தலைவனான சிவபெருமானின் ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த திருவடிகளைத் தியானிப்பீர்களாக.

திருவக்கரை

பாய்ந்தவன் காலனைமுன் பணைத் தோளியொர்
பாகமதா
ஏய்ந்தவ னெண்ணிறந்தவ் விமை யோர்க
டொழுதிறைஞ்ச
வாய்ந்தவன் முப்புரங்க ளெரி செய்தவன்
வக்கரையில்
தேய்ந்திள வெண்பிறைசேர் சடை யானடி
செப்புதுமே **#639**

மார்க்கண்டேயரின் உயிரைக் கவரவந்த காலனைக் காலால் சிவபெருமான் உதைத்தவன். பருத்த தோள்களை உடைய உமா தேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டவன். எண்ணற்ற தேவர்களால் தொழுது போற்றப்படுபவன். முப்புரங்கள் எரிந்து

சாம்பலாகுமாறு செய்தவன். திருவக்கரை என்னும் திருத்தலத்தில் தேய்ந்த வெண்ணிறப் பிறைச்சந்திரனைச் சடையில் சூடி வீற்றிருந்தருளும் அச்சிவபெருமானின் திருவடிகளை வணங்கிப் போற்றுவோமாக!

திருவக்கரை

சந்திர சேகரனே யரு ளாயென்று
தண்விசும்பில்
இந்திர னும்முதலா விமை யோர்க
டொழுதிறைஞ்ச
அந்தர மூவெயிலும் மன லாய்விழ
வோரம்பினால்
மந்தர மேருவில்லா வளைத் தானிடம்
வக்கரையே **#640**

“சந்திரனைச் சடைமுடியில் சூடியுள்ள சிவபெருமானே! அருள்புரிவீராக” என்று குளிர்ந்த விண்ணுலகத்தில் விளங்கும் இந்திரன் முதலான தேவர்கள் தொழுது போற்ற, அந்தரத்தில் திரிந்து கேடுகளை விளைவித்த மூன்று கோட்டைகளும் அக்கினியாகிய கணையினால் எரிந்து சாம்பலாகுமாறு மந்தர மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமான் வீற்றிருந்தருளும்

திருவக்கரை

நெய்யணி சூலமொடு நிறை வெண்மழு
வும்மரவும்
கையணி கொள்கையினான் கனன் மேவிய
வாடலினான்
மெய்யணி வெண்பொடியான் விரி கோவண
வாடையின்மேல்
மையணி மாமிடற்றா னுறை யும்மிடம்
வக்கரையே **#641**

நெய் தடவப்பட்ட சூலத்தையும், வெண்ணிற மழுவையும் படைக்கலனாக ஏந்தி, பாம்பைக் கையில் ஆபரணமாகப் பூண்டு, நெருப்பேந்தித் திருநடனம் செய்பவன் சிவபெருமான். அவன் தன் திருமேனியில் திருவெண்ணீற்றினைப் பூசியவன். விரித்து ஓதப்பெறும் வேதங்களைக் கோவணமாக அணிந்தவன். மை நிறம் பெற்ற கரிய கண்டத்தையுடைய அச்சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவக்கரை என்னும் திருத்தலமாகும்.

திருவக்கரை

ஏனவெண் கொம்பினொடும் மிள வாமையும்
பூண்டுகந்து
கூனிள வெண்பிறையுங் குளிர் மத்தமுஞ்
சூடிநல்ல
இடம் திருவக்கரை என்னும் திருத்தலமாகும்.
மானன மென்விழியா ளொடும் வக்கரை மேவியவன்
தானவர் முப்புரங்க ளெரி செய்த
தலைமகனே **#642**

பன்றியின் கொம்பும், ஆமையின் ஓடும் அணிகலனாகக் கொண்டு, வளைந்த பிறைச்சந்திரனையும், குளிர்ந்த ஊமத்த மலரையும் சூடி, நல்ல மான்போன்ற மென்மையான விழிகளையுடைய உமாதேவியோடு திருவக்கரை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் பகையசுரர்களின் முப்புரங்களை எரியுண்ணும்படி செய்த முதல்வன் ஆவான்.

திருவக்கரை

கார்மலி கொன்றையொடுங் கதிர் மத்தமும்
வாளரவும்
நீர்மலி யுஞ்சடைமே னிரம் பாமதி
சூடிநல்ல
வார்மலி மென்முலையா ளொடும் வக்கரை
மேவியவன்
பார்மலி வெண்டலையிற் பலி கொண்டுழல்
பான்மையனே **#643**

கார்காலத்தில் மிகுதியாக மலரும் கொன்றை மலரும், ஊமத்த மலரும், ஒளி பொருந்திய பாம்பும், கங்கையும் சடைமுடியில் திகழ, கலைநிரம்பா பிறைச்சந்திரனைச் சூடி, நல்ல கச்சணிந்த மென்மையான முலைகளையுடைய உமாதேவியோடு திருவக்கரை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றான் சிவபெருமான். அப்பெருமான் இப்பூவுலகில் வெண்ணிறப்பிரம கபாலத்தில் பிச்சையேற்றுத் திரியும் தன்மையன்.

திருவக்கரை

கானண வும்மறிமா னொரு கையதோர்
கைமழுவாள்
தேனண வுங்குழலா ளுமை சேர்திரு

மேனியனான்
வானணா வும்பொழில்சூழ் திரு வக்கரை
மேவியவன்
ஊனணா வுந்தலையிற் பலி கொண்டுழ
லுத்தமனே **#644**

காட்டில் உலவும் மானை ஒரு கையில் ஏந்தி, மழுவாளை மற்றொரு கையிலேந்தியவன் சிவபெருமான். வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடைய உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டவன். வானளாவிய சோலைகள் சூழ்ந்த திருவக்கரை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் பிரமனின் மண்டையோட்டை ஏந்திப் பிச்சை எடுத்துத் திரியும் உத்தமனாவான்.

திருவக்கரை

இலங்கையர் மன்னனாகி யெழில் பெற்ற
விராவணனைக்
கலங்கவொர் கால்விரலாற் கதிர் பொன்முடி
பத்தலற
நலங்கெழு சிந்தையனா யருள் பெற்றலு
நன்களித்த
வலங்கெழு மூவிலையே லுடை யானிடம்
வக்கரையே **#645**

இலங்கை மன்னனான அழகிய இராவணன் கலங்குமாறு, சிவபெருமான் தன் காற்பெருவிரலை ஊன்றி, ஒளி வீசுகின்ற பொன்னாலான திருமுடிகளணிந்த அவன் தலைகள் பத்தும் அலறுமாறு செய்தான். பின் இராவணன் செருக்கு நீங்கி, நல்ல சிந்தனையோடு இறைவனைப் போற்றிசைக்க, திருவருளால் இறைவன் அவனுக்கு வீரவாளும், நீண்ட வாழ்நாளும் கொடுத்து அருள் புரிந்தான். அத்தகைய பெருமான் வலக்கையில் மூவிலைவேல் ஏந்தி வீற்றிருந்தருளும் இடம் திருவக்கரை என்னும் திருத்தலமாகும்.

திருவக்கரை

காமனை யீடழித்திட் டவன் காதலி
சென்றிரப்பச்
சேமமே யுன்றனக்கென்றருள் செய்தவன்
றேவர்பிரான்
சாமவெண் டாமரைமே லய னுந்தர
ணியளந்த
வாமன னும்மறியா வகை யானிடம்

வக்கரையே **#646**

மன்மதனுடைய அழகிய வலிய தேகத்தை எரித்துச் சாம்பலாக்கிப் பின்னர் அவன் மனைவி இரதி இரந்து வேண்டிப் பிரார்த்திக்கச் சிவபெருமான் மன்மதனை உயிர்ப்பித்து அவள் கண்ணுக்கு மட்டும் புலப்படும்படி அருள்புரிந்தான். வெண்டாமரையில் வீற்றிருந்து சாமகானம் பாடுகின்ற பிரமனும், உலகையளந்த வாமனனான திருமாலும் அறியாவண்ணம் நீண்ட சோதியாக நின்ற சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவக்கரை என்னும் திருத்தலமாகும்.

திருவக்கரை

மூடிய சீவரத்தர் முதிர் பிண்டிய
ரென்றிவர்கள்
தேடிய தேவர்தம்மா லிறைஞ் சப்படுந்
தேவர்பிரான்
பாடிய நான்மறையான் பலிக் கென்றுபல்
வீதிதொறும்
வாடிய வெண்டலைகொண் டுழல் வானிடம்
வக்கரையே **#647**

காவியாடை போர்த்திய புத்தர்களும், அசோக மரத்தை வணங்கும் சமணர்களும், தேடுகின்ற தேவர்களால் வணங்கப் படுகின்ற தேவர்கட்கெல்லாம் தலைவனான சிவபெருமான் நான்மறைகளை அருளிச்செய்து, பல வீதிகள்தோறும் சென்று உலர்ந்த பிரம கபாலத்தை ஏந்திப் பிச்சையேற்றுத் திரிவான். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவக்கரை என்னும் திருத்தலமாகும்.

திருவக்கரை

தண்புன லும்மரவுஞ் சடை மேலுடை
யான்பிறைதோய்
வண்பொழில் சூழ்ந்தழகா ரிறை வன்னுறை
வக்கரையைச்
சண்பையர் தந்தலைவன் றமிழ் ஞானசம்
பந்தன்சொன்ன
பண்புனை பாடல்வல்லா ரவர் தம்வினை
பற்றறுமே **#648**

குளிர்ந்த கங்கையும், பாம்பும் சடைமுடியில் அணிந்த அழகனான சிவபெருமான், உறையும் சந்திரனைத் தொடும் படி ஓங்கி வளர்ந்துள்ள செழுமைவாய்ந்த சோலைகள் சூழ்ந்த திருவக்கரை என்னும் திருத்தலத்தைப் போற்றி, சண்பை நகர் எனப்படும் சீகாழியில் சிவம்

பெருக்க அவதரித்த தலைவனான தமிழ் ஞான சம்பந்தன், அருளிய பண்ணோடு கூடிய இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள் வினையிலிருந்து நீங்கப் பெறுவர்.

திருவெண்டுறை

திருவெண்டுறை

திருவெண்டுறை,
பண் - பஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வெண்டுறைநாதேசுவரர்.
தேவியார் : வேனெடுங்கண்ணியம்மை.

ஆதிய னாதிரையன் னன லாடிய
வாரழகன்
பாதியொர் மாதினொடும் பயி லும்பர
மாபரமன்
போதிய லும்முடிமேற் புன லோடர
வம்புனைந்த
வேதியன் மாதிமையால் விரும் பும்மிடம்
வெண்டுறையே **#649**

சிவபெருமான் ஆதிமூர்த்தியானவர். திருவாதிரை என்னும் நட்சத்திரத்திற்கு உரியவர். நெருப்பைக் கையிலேந்தித் திருநடனம் புரியும் பேரழகர். தம் திருமேனியின் ஒரு பாகமாக உமாதேவியை ஏற்று மேலான பொருள்கள் எவற்றினும் மிக மேலான பொருளாயிருப்பவர். கொன்றை முதலிய மலர்களை அணிந்த முடிமேல், கங்கையையும் பாம்பையும் அணிந்தவராய், வேதங்களை அருளிச் செய்தவர் சிவபெருமான் ஆவார். அப்பெருமானார் மிக்க அன்புடன் வீற்றிருந்தருளும் இடம் திருவெண்டுறை என்பதாகும்.

திருவெண்டுறை

காலனை யோருதையில் லுயிர் வீடுசெய்
வார்கழலான்
பாலொடு நெய்தயிரும் பயின் றாடிய
பண்டரங்கன்
மாலை மதியொடுநீ ரர வம்புனை
வார்சடையான்
வேலன கண்ணியொடும் விரும் பும்மிடம்
வெண்டுறையே **#650**

மார்க்கண்டேயர் உயிரைக் கவரவந்த காலனைக் காலால் உதைத்து உயிர்விடும்படி செய்த சிவபெருமான் வாரால் கட்டிய வீரக்கழலையணிந்தவன். பால், நெய், தயிர் முதலியவற்றால்

திருமுழுக்காட்டப்பட்டுப் பண்டரங்கம் என்னும் திருக்கூத்துப் புரிந்தவன். மாலை நேர சந்திரனொடு, கங்கை, பாம்பு இவற்றை அணிந்த விரிந்த சடையுடையவன். வேல்போன்ற கண்களையுடைய உமாதேவியோடு அப்பெருமான் வீற்றிருந்தருளுமிடம் திருவெண்டுறை என்னும் திருத்தலமாகும்.

திருவெண்டுறை

படைநவில் வெண்மழுவான் பல பூதப்
படையுடையான்
கடைநவின் மும்மதிலும் மெரி யூட்டிய
கண்ணுதலான்
உடைநவி லும்புலித்தோ லுடை யாடையி
னான்கடிய
விடைநவி லுங்கொடியான் விரும் பும்மிடம்
வெண்டுறையே **#651**

சிவபெருமான் தூய மழுப்படை உடையவர். பலவகையான பூதகணங்களைப் படைவீரர்களாகக் கொண்டுள்ளவர். பாவங்களைச் செய்து வந்த மூன்று மதில்களையும் எரியுண்ணும்படி செய்த நெற்றிக் கண்ணையுடையவர். புலித்தோலாடை அணிந்தவர். விரைந்து செல்லக்கூடிய ஆற்றல் பொருந்திய இடபத்தைக் கொடியாக உடைய அச்சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவெண்டுறை என்னும் திருத்தலமாகும். அத்திருத்தலத்தைப் போற்றி வழிபடுங்கள்.

திருவெண்டுறை

பண்ணமர் வீணையினான் பர விப்பணி
தொண்டர்கடம்
எண்ணமர் சிந்தையினா னிமை யோர்க்கு
மறிவரியான்
பெண்ணமர் கூறுடையான் பிர மன்றலை
யிற்பலியான்
விண்ணவர் தம்பெருமான் விரும் பும்மிடம்
வெண்டுறையே **#652**

சிவபெருமான் வீணையிலே பண்ணோடு கூடிய பாடலை மீட்டுபவர். தம்மைப் போற்றி வணங்குகின்ற தொண்டர்களின் சிந்தையில் எழுந்தருளியிருப்பவர். தேவர்களால் அறிவதற்கு அரியவர். உமாதேவியைத் தம் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டவர். பிரம கபாலம் ஏந்திப் பிச்சையேற்றவர். தேவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கும் சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவெண்டுறை

என்னும் திருத்தலமாகும்.

திருவெண்டுறை

பாரிய லும்பலியான் படி யார்க்கு
மறிவரியான்
சீரிய லும்மலையா ளொரு பாகமும்
சேரவைத்தான்
போரிய லும்புரமூன் றுடன் பொன்மலை
யேசிலையா
வீரிய நின்றுசெய்தான் விரும் பும்மிடம்
வெண்டுறையே **#653**

சிவபெருமான் உலகத்தார் செய்யும் பூசைகளைத் தான் ஏற்பவன். தன் தன்மையை உலக மாந்தர்களின் சிற்றறிவால் அறிவதற்கு அரியவனாய் விளங்குபவன். புகழ்மிக்க உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டவன். போர் செய்யும் தன்மையுடைய முப்புரங்களுடன் பொன்மயமான மேருமலையே வில்லாகக் கொண்டு தன் வலிமையைக் காட்டிப் போர் செய்தவன். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவெண்டுறை என்னும் திருத்தலமாகும்.

திருவெண்டுறை

ஊழிக ளாயுலகா யொரு வர்க்கு
முணர்வரியான்
போழிள வெண்மதியும் புன லும்மணி
புன்சடையான்
யாழின் மொழியுமையாள் வெரு வவ்வெழில்
வெண்மருப்பின்
வேழ முரித்தபிரான் விரும் பும்மிடம்
வெண்டுறையே **#654**

சிவபெருமான் ஊழிக்காலங்கள்தோறும் உலகப்பொருட்களுள் கலப்பால் ஒன்றாய் விளங்கினும், ஒருவர்க்கும் உணர்வதற்கு அரியவனாய் விளங்குகின்றான். பிளவுபட்ட வெண்ணிறச் சந்திரனையும், கங்கையையும் அணிந்த சடையுடையவன். யாழ் போன்று இனிமையான மொழி பேசுகின்ற உமாதேவி அஞ்சும்படி அழகிய வெண் தந்தமுடைய யானையின் தோலை உரித்தவன். அப்பெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் இடம் திருவெண்டுறை என்னும் திருத்தலமாகும்.

திருவெண்டுறை

கன்றிய காலனையும் முரு ளக்கனல்
வாயலறிப்
பொன்றமு னின்றபிரான் பொடி யாடிய
மேனியினான்
சென்றிமை யோர்பரவுந் திகழ் சேவடி
யான்புலன்கள்
வென்றவ னெம்மிறைவன் விரும் பும்மிடம்
வெண்டுறையே **#655**

மார்க்கண்டேயரின் உயிரைக் கவரச் சினந்து வந்த காலன் அலறி விழுமாறு காலால் உதைத்து அழித்தவன். திருவெண்ணீற்றினைத் திருமேனியில் பூசியவன். தேவர்களெல்லாம் சென்று போற்றி வணங்கும் செம்மையான திருவடிகளை உடையவன். ஞானிகள் புலன்களை வெல்லும்படி செய்பவன். எம் தலைவனான அச்சிவ பெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவெண்டுறை என்னும் திருத்தலமாகும்.

திருவெண்டுறை

கரமிரு பத்தினாலுங் கடு வன்சின
மாயெடுத்த
சிரமொரு பத்துமுடை யரக் கன்வலி
செற்றுகந்தான்
பரவவல் லார்வினைக ளறுப் பானொரு
பாகமும்பெண்
விரவிய வேடத்தினான் விரும் பும்மிடம்
வெண்டுறையே **#656**

பத்துத் தலைகளையுடைய அரக்கனான இராவணன், தன் இருபது கரங்களினாலும் கடும் கோபத்துடன் கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க அவனது வலிமையை சிவபெருமான் அழித்தான். அவன் தன்னைப் போற்றி வழிபடும் பக்தர்களின் வினைகளை அறுப்பவன். தன் திருமேனியின் ஒரு பாகமாக உமாதேவியைக் கொண்ட கோலத்துடன் விளங்கும்சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவெண்டுறை என்னும் திருத்தலமாகும்.

திருவெண்டுறை

கோல மலரயனுங் குளிர் கொண்ட
னிறத்தவனும்
சீல மறிவரிதாய்த் திகழ்ந் தோங்கிய
செந்தழலான்
மூலம தாகிநின்றான் முதிர் புன்சடை

வெண்பிறையான்
வேலை விடமிடற்றான் விரும் பும்மிடம்
வெண்டுறையே **#657**

அழகிய தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் பிரமனும், குளிர்ந்த மழைநீர் பொழியும் மேகம் போன்று கருநிறமுடைய திருமாலும், தனது தன்மையை அறிதற்கு அரியவனாய்ச் சிவந்த நெருப்பு மலைபோல் ஓங்கி நின்றவன் சிவபெருமான். அவன் எல்லாவற்றுக்கும் மூலப்பொருளாக விளங்கி நின்றான். முதிர்ந்த சடையில் வெண்ணிறப் பிறைச்சந்திரனை அணிந்தவன். கடலில் தோன்றிய விடத்தைக் கண்டத்தில் அடக்கிய நீலகண்டனான அச்சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவெண்டுறை என்னும் திருத்தலமாகும்

<u>திருவெண்டுறை</u>

நக்குரு வாயவருந் துவ ராடை
நயந்துடையாம்
பொக்கர்க டம்முரைகள் ளவை பொய்யென
வெம்மிறைவன்
திக்கு நிறைபுகழார் தரு தேவர்பி
ரான்கனகம்
மிக்குயர் சோதியவன் விரும் பும்மிடம்
வெண்டுறையே **#658**

ஆடையணியா உடம்புடைய சமணர்களும், மஞ்சட் காவியாடை அணிந்த புத்தர்களும் மெய்ப்பொருளாம் இறைவனைப் பற்றி ஏதும் கூறாது, தோன்றி நின்று அழியும் தன்மையுடைய உலகப் பொருள்கள் பற்றிக் கூறும் உரைகளைப் பொருளெனக் கொள்ளற்க. எம் தலைவனான சிவபெருமான் எல்லாத் திக்குகளிலும் நிறைந்து புகழுடன் விளங்குபவன். தேவர்கட்கெல்லாம் தலைவன். பொன் போன்று மிக்குயர்ந்த சோதியாய் விளங்குபவனான அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவெண்டுறை என்னும் திருத்தலமாகும்.

<u>திருவெண்டுறை</u>

திண்ணம ரும்புரிசைத் திரு வெண்டுறை
மேயவனைத்
தண்ணம ரும்பொழில்சூழ் தரு சண்பையர்
தந்தலைவன்
எண்ணமர் பல்கலையா னிசை ஞானசம்
பந்தன்சொன்ன
பண்ணமர் பாடல்வல்லார் வினை யாயின

பற்றறுமே **#659**

உறுதியான மதில்களையுடைய திருவெண்டுறை என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் போற்றி, குளிர்ச்சி பொருந்திய சோலைகள் சூழ்ந்த சண்பை எனப்படும் சீகாழியில் அவதரித்த தலைவனான, பலகலைகளில் வல்ல ஞானசம்பந்தன் அருளிய இப்பண்ணோடு கூடிய திருப்பதிகத்தை ஓத வல்லவர்களின் வினையாவும் நீங்கும்.

திருப்பனந்தாள்

திருப்பனந்தாள்

திருப்பனந்தாள்,
பண் - பஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சடையப்பஈசுவரர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

கண்பொலி நெற்றியினான் றிகழ் கையிலொர்
வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை
மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை
வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாட் டிருத் தாடகை
ஈச்சரமே **#660**

சிவபெருமான் நெற்றிக்கண்ணையுடையவன். தூய வெண்மழுவினைக் கையிலேந்தியவன். உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாக உடையவன். மிக்க பெருமையுடைய திருமாலை இடப வாகனமாகக் கொண்டவன். விண்ணிலே விளங்குகின்ற பிறைச்சந்திரனை அணிந்த சிவந்த சடையினையுடைய, வேதங்களை அருளிச் செய்த சிவபெருமானுடைய உறைவிடம் குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த திருப்பனந்தாள் என்னும் திருத்தலத்திலுள்ள திருத்தாடகையீச்சரம் என்னும் திருக்கோயிலாகும்.

திருப்பனந்தாள்

விரித்தவ னான்மறையை மிக்க விண்ணவர்
வந்திறைஞ்ச
எரித்தவன் முப்புரங்கள் ளிய லேழுல
கில்லுயிரும்
பிரித்தவன் செஞ்சடைமே னிறை பேரொலி
வெள்ளந்தன்னைத்
தரித்தவ னூர்பனந்தாட் டிருத் தாடகை
யீச்சரமே **#661**

சிவபெருமான் நான்குவேதங்களின் பொருளை விரித்து ஓதியவன். தேவர்களெல்லாம் வந்து வேண்ட முப்புரங்களை எரித்தவன். ஏழுலகங்களிலுமுள்ள உயிர்களைச் சங்கார காலத்தில் பிரித்தவன்.

சிவந்த சடையின்மேல் நிறைந்த பேரொலியோடு பெருக்கெடுத்து வந்த கங்கையைத் தாங்கியவன். அப்பெருமான் வீற்றிருந்தருளும் உறைவிடம் திருப்பனந்தாள் என்னும் திருத்தலத்தில் திருத்தாடகையீச்சரம் என்னும் திருக்கோயிலாகும்.

திருப்பனந்தாள்

உடுத்தவன் மானுரிதோல் கழ லுள்கவல்
லார்வினைகள்
கெடுத்தருள் செய்யவல்லான் கிளர் கீதமொர்
நான்மறையான்
மடுத்தவ னஞ்சமுதா மிக்க மாதவர்
வேள்வியைமுன்
தடுத்தவனூர் பனந்தாட் டிருத் தாடகை
யீச்சரமே **#662**

சிவபெருமான் மான்தோலை ஆடையாக அணிந்தவன். தன் திருவடிகளை நினைத்து வழிபடுபவர்களின் வினைகளைப் போக்குபவன். இனிய இசையுடைய நால்வேதங்களை அருளிச்செய்து அவ்வேதங்களின் உட்பொருளாகவும் விளங்குபவன். பாற்கடலில் தோன்றிய நஞ்சை அமுதம்போல் உட்கொண்டவன். தன்னை மதியாது தக்கன் செய்த வேள்வியைத் தகர்த்தவன். இத்தகைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் உறைவிடம் திருப்பனந்தாள் என்னும் திருத்தலத்திலுள்ள, திருத்தாடகையீச்சரம் என்னும்கோயிலாகும்.

திருப்பனந்தாள்

சூழ்தரு வல்வினையு முடல் தோன்றிய
பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேன் மிக வேத்துமின்
பாய்புனலும்
போழிள வெண்மதியும் மனல் பொங்கரவும்
புனைந்த
தாழ்சடை யான்பனந்தாட் டிருத் தாடகை
யீச்சரமே **#663**

பிறவிதோறும் உயிர்களைச் சூழ்ந்து வருகின்ற எளிதில் நீங்காத வினைகளும், அவற்றின் காரணமாக உடலில் தோன்றும் பலவகை நோய்களும் நீங்க வேண்டும் என்று எண்ணுவீராயின் பாய்கின்ற கங்கையையும், பிளவுபட்ட இளமையான வெண்ணிறச் சந்திரனையும், நெருப்புப் போல் விடம் கக்கும் பாம்பையும் அணிந்த தாழ்ந்த சடையினையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற

திருப்பனந்தாள் என்னும் திருத்தலத்திலுள்ள, திருத்தாடகையீச்சரம் என்னும் திருக்கோயிலை மிகவும் போற்றி வழிபடுவீர்களாக!

திருப்பனந்தாள்

விடம்படு கண்டத்தினா னிருள் வெள்வளை
மங்கையொடும்
நடம்புரி கொள்கையினா னவ னெம்மிறை
சேருமிடம்
படம்புரி நாகமொடு திரை பன்மணி
யுங்கொணரும்
தடம்புனல் சூழ்பனந்தாட் டிருத் தாடகை
யீச்சரமே **#664**

சிவபெருமான் விடத்தைத் தேக்கிய கண்டத்தை உடையவன். வெண்ணிற வளையல்களையணிந்த உமாதேவியோடு நள்ளிருளில் திருநடனம் புரிபவன். எங்கள் தலைவனான சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் இடம், படமெடுத்தாடும் பாம்பு கக்குகின்ற நவரத்தினமணிகளோடு, அலைகள் பலவகையான மணிகளை அடித்துக் கொண்டு வந்து சேர்க்கும் பெருமையுடைய மண்ணியாறு சூழ்ந்த திருப்பனந்தாள் என்னும் திருத்தலத்திலுள்ள திருத்தாடகையீச்சரம் என்னும் திருக்கோயிலாகும்.

திருப்பனந்தாள்

விடையுயர் வெல்கொடியா னடி விண்ணொடு
மண்ணுமெல்லாம்
புடைபட வாடவல்லான் மிகு பூதமார்
பல்படையான்
தொடைநவில் கொன்றையொடு வன்னி துன்னெருக்
கும்மணிந்த
சடையவ னூர்பனந்தாட் டிருத் தாடகை
யீச்சரமே **#665**

சிவபெருமான் வெற்றிக் கொடியாக இடபம் பொறித்த கொடி உடையவன். விண்ணுலகமும், மண்ணுலகமும், மற்றுமுள்ள எல்லா உலகங்களும் தன் திருவடிபதியுமாறு விசுவரூபம் எடுத்து ஆடவல்லவன். பலவகையான பூதகணங்களைப் படையாக உடையவன். கொன்றைமாலையோடு, வன்னி, எருக்கம் இவை அணிந்த சடையுடையவன். அப்பெருமான் வீற்றிருந்தருளும் உறைவிடம் திருப்பனந்தாள் என்னும் திருத்தலத்திலுள்ள திருத்தாடகையீச்சரம் என்னும் திருக்கோயிலாகும்.

திருப்பனந்தாள்

மலையவன் முன்பயந்த மட மாதையொர்
கூறுடையான்
சிலைமலி வெங்கணையாற் புர மூன்றவை
செற்றுகந்தான்
அலைமலி தண்புனலும் மதி யாடர
வும்மணிந்த
தலையவ னூர்பனந்தாட் டிருத் தாடகை
யீச்சரமே **#666**

சிவபெருமான் மலையரசன் பெற்றெடுத்த உமாதேவியைத் தன் திருமேனியின் ஒருபாகமாகக் கொண்டவன். மேரு மலையை வில்லாக்கி, அக்கினியைக் கணையாக்கி முப்புரங்களையும் எரித்துச் சாம்பலாகும்படி அழித்தவன். அலைகளையுடைய குளிர்ந்த கங்கையையும், சந்திரனையும், பாம்பையும் அணிந்த சடைமுடியுடையவன். அப்பெருமான் வீற்றிருந்தருளுவது திருப்பனந்தாள் என்னும் திருத்தலத்திலுள்ள திருத்தாடகையீச்சரம் என்னும் திருக்கோயிலாகும்.

திருப்பனந்தாள்

செற்றரக் கன்வலியைத் திரு மெல்விர
லாலடர்த்து
முற்றும்வெண் ணீறணிந்த திரு மேனியன்
மும்மையினான்
புற்றர வம்புலியின் னுரி தோலொடு
கோவணமும்
தற்றவ னூர்பனந்தாட் டிருத் தாடகை
யீச்சரமே **#667**

இராவணனது வலிமையைத் தன் மெல்லிய திருக்காற்பெருவிரலை ஊன்றி அழித்தவன். முற்றும் திருவெண்ணீறு அணிந்த திருமேனியுடையவன். உருவம், அருவம், அருவுருவம் என்ற மூவகைத் திருமேனிகளையுடையவன். புற்றில் வாழ்கின்ற பாம்பையும், புலித்தோலையும், கோவணத்தையும் ஆடையாக உடுத்தவன். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருப்பனந்தாள் என்னும் திருத்தலத்திலுள்ள திருத்தாடகையீச்சரம் என்னும் திருக்கோயிலாகும்.

திருப்பனந்தாள்

வின்மலை நாணரவம் மிகு வெங்கன

லம்பதனால்
புன்மைசெய் தானவர் தம் புரம் பொன்றுவித்
தான்புனிதன்
நன்மலர் மேலயனுந் நண்ணு நாரண
னும்மறியாத்
தன்மைய னூர்பனந்தாட் டிருத் தாடகை
யீச்சரமே **#668**

சிவபெருமான் மேருமலையை வில்லாகவும், வாசுகி என்னும் பாம்பை நாணாகவும், மிகுந்த வெப்பமுடைய அக்கினியை அம்பாகவும் கொண்டு, தீமை செய்த அசுரர்களின் முப்புரங்களையும் எரித்துச் சாம்பலாகுமாறு அழித்தவன். நல்ல தாமரை மலரின்மேல் வீற்றிருக்கும் பிரமனும், திருமாலும் அறியாத தன்மையன். அப்பெருமான் வீற்றிருந்தருளும் ஊரானது திருப்பனந்தாள் என்னும் திருத்தலமாகும். அங்குத் திருத்தாடகையீச்சரம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ளான்.

திருப்பனந்தாள்

ஆதர் சமணரொடும் மடை யைந்துகில்
போர்த்துழலும்
நீத ருரைக்குமொழி யவை கொள்ளன்மி
னின்மலனூர்
போதவிழ் பொய்கைதனுட் டிகழ் புள்ளிரி
யப்பொழில்வாய்த்
தாதவி ழும்பனந்தாட் டிருத்
தாடகை யீச்சரமே **#669**

பயனிலிகளாகிய சமணர்களும், அழகிய துணிகளைப்போர்த்துத் திரிகின்ற புத்தர்களும் உரைக்கின்ற மொழிகளை ஏற்றுக் கொள்ளாதீர்கள். நின்மலனான சிவபெருமானது உறைவிடம் தாமரை மொட்டுகள் மலர்கின்ற பொய்கைகளில் புள்ளினங்கள் ஓடச் சோலைகளிலுள்ள மலர்களின் மகரந்தப் பொடிகள் உதிரும் திருப்பனந்தாள் என்னும் திருத்தலத்திலுள்ள திருத்தாடகை யீச்சரம் என்னும் திருக்கோயிலாகும்.

திருப்பனந்தாள்

தண்வயல் சூழ்பனந்தாட் டிருத் தாடகை
யீச்சரத்துக் கண்ணய லேபிறையா னவன் றன்னைமுன்
காழியர்கோன்
நண்ணிய செந்தமிழான் மிகு ஞானசம்

பந்தனல்ல
பண்ணியல் பாடல்வல்லா ரவர் தம்வினை
பற்றறுமே **#670**
குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருப்பனந்தாள் என்னும் திருத்தலத்தில், திருத்தாடகையீச்சரம் என்னும் திருக்கோயிலில், வீற்றிருந்தருளுகின்ற நெற்றிக் கண்ணின் அருகே பிறைச் சந்திரனை அணிந்துள்ள சிவபெருமானைப் போற்றி, சீகாழியில் அவதரித்த தலைவனான ஞானசம்பந்தன் செந்தமிழில் அருளிய நன்மைபயக்க வல்ல பண்ணோடு கூடிய இப்பாடல்களைப் பாடவல்லவர்களின் வினைகள் யாவும் அழியும்.

திருச்செங்காட்டங்குடி

திருச்செங்காட்டங்குடி

திருச்செங்காட்டங்குடி,
பண் - பஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கணபதீசுவரர்.
தேவியார் : திருக்குழல்மாதம்மை.

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள்
பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய்
தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன்
பணிசெய்ய
வெங்காட்டு ளனலேந்தி விளையாடும்
பெருமானே #671

பசுமையான கிளைகளில் மலர்களையுடைய புன்னைமரத்தில் வீற்றிருக்கும் பறவைகளே! தலைவனான சிவபெருமான் என்னைப் பிரிந்ததால் உடம்பு பசலைநிறம் பெற, ஆடி ஆடி உல்லாசமாக இயங்கிய என் மகிழ்ச்சியை நீக்கி எனக்குத் தாங்காத துன்பம் தந்தான். அவன் திருச்செங்காட்டங்குடி என்னும் திருத்தலத்தில் சிறுத்தொண்டர் பணி செய்ய சுடுகாட்டுள், கையில் அனல் ஏந்தி திருநடனம் புரியும் பெருமானாவான்.

திருச்செங்காட்டங்குடி

பொன்னம்பூங் கழிக்கானற் புணர் துணையோ
டுடன்வாழும்
அன்னங்கா ளன்றில்கா ளகன் றும்போய்
வருவீர்காள்
கன்னவிறோட் சிறுத்தொண்டன்
கணபதீச் சரமேய
இன்னமுத னிணையடிக்கீ ழெனதல்ல
லுரையீரே #672

பொன்போன்ற மகரந்தத்தை உதிர்க்கும் புன்னைப் பூக்களையுடைய கடற்கரைச் சோலையில் தம் துணையோடு சேர்ந்து வாழும் அன்னப் பறவைகளே! அன்றில் பறவைகளே! நீங்கள் இச்சோலையிலிருந்து வெளி இடங்கட்கும் சென்று வரும் இயல்புடையவர்கள். கல் போன்று

திண்மையான அழகிய தோள்களையுடைய சிறுத்தொண்டர்
பணிசெய்யக் கணபதீச்சரம் என்னும் திருக்கோயிலில்
வீற்றிருந்தருளுகின்ற இனிய அமுது போன்ற சிவபெருமானின்
திருவடிக்கீழ் இருந்து என்னுடைய துன்பத்தைச் சொல்லமாட்டீர்களா?

திருச்செங்காட்டங்குடி

குட்டத்துங் குழிக்கரையுங் குளிர்பொய்கைத்
தடத்தகத்தும்
இட்டத்தா லிரைதேரு மிருஞ்சிறகின்
மடநாராய்
சிட்டன்சீர்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங்
குடிமேய
வட்டவார் சடையார்க்கென் வருத்தஞ்சென்
றுரையாயே **#673**

குட்டை, குழி, குளிர்ந்த பொய்கை ஆகிய இடங்களில் விருப்பத்துடன்
இரையைத் தேர்கின்ற பெரிய இரு சிறகுகளை உடைய இளநாரையே!
புகழ்மிக்க சிறுத்தொண்டர் நியமத்தோடு வழிபடத்
திருச்செங்காட்டங்குடியில் வீற்றிருந் தருளுகின்ற நீண்ட அடர்ந்த
சடைமுடியுடைய சிவபெருமானிடம் சென்று என் வருத்தத்தை உரைக்க
மாட்டாயோ? உரைப்பாயாக என்பது குறிப்பு.

திருச்செங்காட்டங்குடி

கானருகும் வயலருகுங் கழியருகுங்
கடலருகும்
மீனிரிய வருபுனலி லிரைதேர்வெண்
மடநாராய்
தேனமர் தார்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங்
குடிமேய
வானமருஞ் சடையார்க்கென் வருத்தஞ்சென்
றுரையாயே **#674**

கடற்கரைச் சோலையின் அருகிலும், வயல், கழி, கடல் ஆகியவற்றின்
அருகிலும் பெருகும் நீரில் ஓடுகின்ற மீன்களை இரையாகத் தேரும்
வெண்ணிறமான மட நாரையே! தேன் துளிக்கும் மாலைகளையுடைய
சிறுத்தொண்டர் பணிசெய்யத் திருச்செங்காட்டங்குடியில்
வீற்றிருந்தருளுகின்ற, மாலை வானம் போன்ற சிவந்த சடையுடைய
சிவபெருமானிடம் சென்று என் வருத்தத்தை உரைப்பாயாக.

திருச்செங்காட்டங்குடி

ஆரலாஞ் சுறவமேய்ந் தகன்கழனிச்
சிறகுலர்த்தும்
பாரல்வாய்ச் சிறுகுருகே பயிறூவி
மடநாராய்
சீருலாஞ் சிறுத்தொண்டன் செங்காட்டங்
குடிமேய
நீருலாஞ் சடையார்க்கென் நிலைமைசென்
றுரையீரே #675

ஆரல், சுறவம் ஆகியன பாய்கின்ற அகன்ற கழனிகளில் சிறகுகளை உலர்த்துகின்ற நெடிய மூக்கையுடைய சிறிய உள்ளான் பறவையே!. அடர்ந்த சிறகுடைய இளநாரையே! புகழ்மிக்க சிறுத்தொண்டர் பணி செய்ய திருச்செங்காட்டங்குடியில் வீற்றிருந் தருளுகின்ற கங்கையைத் தாங்கிய சடைமுடியுடைய சிவபெருமானிடம் சென்று என்னுடைய நிலையினை உரைப்பீர்களாக.

<u>திருச்செங்காட்டங்குடி</u>

குறைக்கொண்டா ரிடர்தீர்த்தல் கடனன்றே
குளிர்பொய்கைத்
துறைக்கெண்டை கவர்குருகே துணைபிரியா
மடநாராய்
கறைக்கண்டன் பிறைச்சென்னிக் கணபதீச்
சரமேய
சிறுத்தொண்டன் பெருமான்சீ ருருளொருநாட்
பெறலாமே #676

தங்களின் குறைகளைத் தீர்க்க வேண்டுபவர்களின் துன்பத்தைப் போக்குதல் தலைவரானவரின் கடமை அன்றோ? குளிர்ந்த குளத்தின் கரையில் கெண்டை மீனைக் கவர்ந்து இரையாகக் கொள்ளும் பறவையே! துணையைப் பிரியாதிருக்கும் மடநாரையே! நீலகண்டரும், பிறைச்சந்திரனைத் தலையிலே சூடியுள்ளவரும், கணபதீச்சரம் என்னும் திருக்கோயிலில் சிறுத்தொண்டரால் வழி படப்படுபவரும் ஆகிய சிவபெருமானது சீராகிய எய்ப்பிடத்து உதவும் பேரருளை நான் பெறுமாறு தூது சென்றுரைப்பீர்களாக!

<u>திருச்செங்காட்டங்குடி</u>

கருவடிய பசுங்கால்வெண் குருகேயொண்
கழிநாராய்
ஒருவடியா ளிரந்தாளென் றொருநாட்சென்
றுரையீரே

செருவடிதோட் சிறுத்தொண்டன் செங்காட்டங்
குடிமேய
திருவடிதன் திருவருளே பெறலாமோ
திறத்தவர்க்கே #677

கரிய சேற்றில் அளைந்த பசுங்காலையுடைய வெண்குருகே! அழகிய கழியிலுள்ள நாரையே! போர் செய்வதால் வலிமை பெற்ற அழகிய வடிவுடைய தோள்களையுடைய சிறுத்தொண்டர் வழிபடுகின்ற திருச்செங்காட்டங்குடியிலுள்ள திருக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமானின் திரு வடிகளை வழிபடும் திறத்தவர்களே அவன் திருவருளைப் பெறலாமோ? ஓர் அடியாள் அவருடைய திருவருளைக் கெஞ்சி வேண்டினாள் என்று ஒரு நாளாவது சென்று அவரிடம் உரைப்பீராக!

திருச்செங்காட்டங்குடி

கூரார லிரைதேர்ந்து குளமுலவி
வயல்வாழும்
தாராவே மடநாராய் தமியேற்கொன்
றுரையீரே
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங்
குடிமேய
பேராளன் பெருமான்ற னருளொருநாட்
பெறலாமே #678

கூர்மையான அலகால் இரையைக் கொத்திக் குளங்களிலும், வயல்களிலும் வாழ்கின்ற தாரா என்ற பறவையே! மட நாரையே! என் பொருட்டுச் சிவபெருமானிடம் சென்று ஒரு செய்தியை சொல்வீரோ? சிறந்த புகழுடைய சிறுத்தொண்டர் வழிபடுகின்ற திருச்செங்காட்டங்குடியில் வீற்றிருந்தருளுகின்ற கீர்த்தியுடைய சிவபெருமான் திருவருளை ஒருநாள் அடியேன் பெறுதல் இயலுமா?

திருச்செங்காட்டங்குடி

நறப்பொலிபூங் கழிக்கான னவில்குருகே
யுலகெல்லாம்
அறப்பலிதேர்ந் துழல்வார்க்கென் னலர்கோட
லழகியதே
சிறப்புலவான் சிறுத்தொண்டன் செங்காட்டங்
குடிமேய
பிறப்பிலிபேர் பிதற்றிநின் றிழக்கோவெம்
பெருநலமே #679

தேனுடைய பூக்கள் நிறைந்த கழியின் கரையிலுள்ள சோலையில் வாழ்கின்ற பறவையே! உலக மக்களெல்லாம் அறத்தைக் கருதி இடுகின்ற பிச்சையை ஏற்று உழல்கின்ற சிவபெருமானுக்குப் பிறர் என்னைத் தூற்றுமாறு செய்வது அழகாகுமா? சிறப்புடைய சிறுத்தொண்டன் வழிபடும் திருச்செங்காட்டங்குடியில் வீற்றிருந்தருளுகின்ற பிறப்பிலியாகிய சிவபெருமானுடைய திருநாமத்தைப் போற்றித் துதிசெய்யும் நான் எல்லாவிதப் பெருமைக்குரிய நலங்களை இழப்பது முறைமையா?

திருச்செங்காட்டங்குடி

செந்தண்பூம் புனல்பரந்த செங்காட்டங்
குடிமேய வெந்தநீ றணிமார்பன் சிறுத்தொண்ட
னவன்வேண்ட
அந்தண்பூங் கலிக்காழி யடிகளையே
யடிபரவும்
சந்தங்கொள் சம்பந்தன் றமிழுரைப்போர்
தக்கோரே **#680**

சிறந்த, குளிர்ந்த, அழகிய ஆறுபாயும் திருச்செங்காட்டங்குடியில் வீற்றிருந்தருளுகின்ற, திருவெண்ணீறு அணிந்த மார்புடைய சிவனை, சிறுத்தொண்டர் வழிபட்டபடி, அழகிய, குளிர்ந்த ஒலிமிக்க காழியிலுள்ள இறைவனின் திருவடிகளை வணங்கும் ஞானசம்பந்தன் சந்தம் மிகுந்த திருத் தமிழில் அருளிய இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள் மனிதப் பிறவி எடுத்ததன் தகுதியைப் பெற்றவராவர்.

திருப்பெருவேளூர்

திருப்பெருவேளூர்

திருப்பெருவேளூர்,
பண் - பஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது,
சுவாமிபெயர் : பிரியாவீசுவரர்.
தேவியார் : மின்னனையாளம்மை.

அண்ணாவுங் கழுக்குன்று மாயமலை
யவைவாழ்வார்
விண்ணோரு மண்ணோரும் வியந்தேத்த
வருள்செய்வார்
கண்ணாவா ருலகுக்குக் கருத்தானார்
புரமெரித்த
பெண்ணாணாம் பெருமானார் பெருவேளூர்
பிரியாரே **#681**

சிவபெருமான் திருவண்ணாமலையும், திருக்கழுகுன்றமும் ஆகிய மலைகளில் தம்மை அடைந்தோர்க்கு வாழ்வுதரும் பொருட்டு எழுந்தருளியுள்ளார். விண்ணுலகத்தவரும், மண்ணுலகத்தவரும் வியந்து போற்ற அருள்செய்வார். உலகிற்குக் கண்ணாக விளங்குபவர். வழிபடுபவர்களின் கருத்தில் இருப்பவர். முப்புரங்களை எரித்தவர், பெண்ணும், ஆணுமாக விளங்கும் அப்பெருமான் திருப்பெருவேளூர் என்னும் திருத்தலத்தைப் பிரியாது வீற்றிருந்தருளுகின்றார்.

திருப்பெருவேளூர்

கருமானி னுரியுடையர் கரிகாட
ரிமவானார்
மருமானா ரிவரென்று மடவாளோ
டுடனாவர்
பொருமான விடையூர்வ துடையார்வெண்
பொடிப்பூசும்
பெருமானார் பிஞ்ஞகனார் பெருவேளூர்
பிரியாரே **#682**

சிவபெருமான் கரியமானின் தோலை ஆடையாக உடுத்தவர். சுடுகாட்டில் ஆடுபவர். இமவான் மருமகன் இவர் என்று சொல்லும்படி உமாதேவியை உடனாகக் கொண்டவர். போர்புரிய வல்ல பெருமையையுடைய இடப வாகனத்தில் ஊர்ந்து செல்பவர்.

திருவெண்ணீற்றினைப் பூசியவர். பிஞ்ஞகன் என்று போற்றப்படும் அச்சிவபெருமான் திருப்பெருவேளூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் பிரிய நாதர் ஆவார்.

திருப்பெருவேளூர்

குணக்குந்தென் றிசைக்கண்ணுங் குடபாலும்
வடபாலும்
கணக்கென்ன வருள்செய்வார் கழிந்தோர்க்கு
மொழிந்தோர்க்கும்
வணக்கம்செய் மனத்தராய் வணங்காதார்
தமக்கென்றும்
பிணக்கஞ்செய் பெருமானார் பெருவேளூர்
பிரியாரே **#683**

சிவபெருமான் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என எத்திசையிலுள்ளோர்க்கும் ஒன்றுபோல் அருள்புரிவார். அஞ்ஞானத்தால் நாள்களைக் கழிப்பவர்கட்கும், மெய்ஞ்ஞானத்தால் தம்மைப் போற்றுவார்கட்கும், மனத்தால் சிந்தித்துக் காயத்தால் தம்மை வழிபடும் அடியவர்கட்கும் அருள்புரிபவர். வணங்கிப் போற்றாதவர் கட்கு மாறுபாடாக விளங்குபவர். அப்பெருமான் திருப்பெருவேளூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் பிரியநாதர் ஆவார்.

திருப்பெருவேளூர்

இறைக்கொண்ட வளையாளோ டிருகூறா
யொருகூறு
மறைக்கண்டத் திறைநாவர் மதிலெய்த
சிலைவலவர்
கறைக்கொண்ட மிடறுடையர் கனல்கிளருஞ்
சடைமுடிமேல்
பிறைக்கொண்ட பெருமானார் பெருவேளூர்
பிரியாரே **#684**

சிவபெருமான், முன்கையில் வளையலணிந்த உமாதேவி ஒரு கூறாகவும், தாம் ஒரு கூறாகவும் இருகூறுடைய அர்த்தநாரியாய் விளங்குபவர். வேதங்களை அருளிச் செய்த நாவுடையர். மும்மதில்களை எய்த மேருமலையை வில்லாக உடையவர். நஞ்சை அடக்கியதால் கறைகொண்ட கண்டத்தர். நெருப்புப்போல் மிளிரும் சிவந்த சடையில் பிறையணிந்த பெருமானாகிய அவர் திருப்பெருவேளூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் பிரியநாதர் ஆவார்.

<u>திருப்பெருவேளூர்</u>

விழையாதார் விழைவார்போல் விகிர்தங்கள்
பலபேசிக்
குழையாதார் குழைவார்போற் குணநல்ல
பலகூறி
அழையாவு மரற்றாவு மடிவீழ்வார்
தமக்கென்றும்
பிழையாத பெருமானார் பெருவேளூர்
பிரியாரே **#685**

உலகப் பொருள்களில் பற்றுக் கொண்டு விழையாமல் இறைவன்பால் விழைத்து பலவாறு போற்றி, உலகியலில் மருள்கொண்டு குழையாது, இறைவனின் திருவருளில் குழைந்து அவன் புகழைப் பலவாறு எடுத்துக்கூறி, "பெருமானே! அருள் புரிவீராக!" என அழைத்தும், அரற்றியும், அவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்குபவர்கட்கு என்றும் தவறாது உடனே அருள்புரியும் சிவபெருமான் திருப்பெருவேளூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் பிரியநாதர் ஆவார்.

<u>திருப்பெருவேளூர்</u>

விரித்தார்நான் மறைப்பொருளை யுமையஞ்ச
விறல்வேழம்
உரித்தாரா முரிபோர்த்து மதின்மூன்று
மொருகணையால்
எரித்தாரா மிமைப்பளவி லிமையோர்க
டொழுதிறைஞ்சப்
பெருத்தாரெம் பெருமானார் பெருவேளூர்
பிரியாரே **#686**

சிவபெருமான் நான்மறைகளை விரித்துப் பொருள் உரைத்தவர். உமாதேவி அஞ்சும்படி யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவர். மும்மதில்களையும் ஓர் அம்பினால் இமைக்கும் அளவில் எரித்தவர். தேவர்கள் வணங்கிப் போற்ற விசுவரூபம் கொண்ட எம்பெருமான் திருப்பெருவேளூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் பிரியநாதர் ஆவார்.

<u>திருப்பெருவேளூர்</u>

மறப்பிலா வடிமைக்கண் மனம்வைப்பார்
தமக்கெல்லாம்
சிறப்பிலார் மதிலெய்த சிலைவல்லா

ரொருகணையால்
இறப்பிலார் பிணியில்லார் தமக்கென்றும்
கேடிலார்
பிறப்பிலாப் பெருமானார் பெருவேளூர்
பிரியாரே **#687**

இறைவர் தம்மை மறவாது தமக்கு அடியவர்களாய் விளங்குபவர்கள் மனத்தில் வீற்றிருப்பவர். சிறப்பில்லாத பகையசுரர்களின் மும்மதில்களை மேருமலையை வில்லாகக் கொண்டு, அக்கினியைக் கணையாக எய்து நெருப்புண்ணும்படி அழித்தவர். அவர் இறப்பற்றவர். நோயில்லாதவர். கேடு இல்லாதவர். பிறப்பில்லாத அப்பெருமான் திருப்பெருவேளூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் பிரியநாதர் ஆவார்.

<u>திருப்பெருவேளூர்</u>

எரியார்வேற் கடற்றானை யிலங்கைக்கோன்
றனைவீழ
முரியார்ந்த தடந்தோள்க ளடர்த்துகந்த
முதலாளர்
வரியார்வெஞ் சிலைபிடித்து மடவாளை
யொருபாகம்
பிரியாத பெருமானார் பெருவேளூர்
பிரியாரே **#688**

நெருப்புப் போல் சிவந்த வேற்படை உடைய சேனைகளைக் கடல்போல் விரியப் பெற்றுள்ள இராவணன் அலறுமாறு, வலிமை வாய்ந்த அவனுடைய அகன்ற தோள்களை நெரித்துப் பின்னர் அவன் சாமகானம் பாடக் கேட்டுகந்த முதல்வரான சிவபெருமான், கட்டுக்களையுடைய கொடிய வில்லேந்தி, உமாதேவியைத் தம்திருமேனியின் ஒருபாகமாகப் பிரியாது பெற்று, திருப்பெருவேளூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் பிரியநாதர் ஆவார்.

<u>திருப்பெருவேளூர்</u>

சேணியலு நெடுமாலுந் திசைமுகனுஞ்
செருவெய்திக்
காணியல்பை யறிவிலராய்க் கனல்வண்ண
ரடியிணைக்கீழ்
நாணியவர் தொழுதேத்த நாணாமே
யருள்செய்து
பேணியவெம் பெருமானார் பெருவேளூர்

பிரியாரே #689
திருவிக்கிரமாவதாரத்தில் வானை அளந்த திருமாலும், பிரமனும் செருக்குற்றுத் தாமே தலைவர் எனக் கருதி இறைவனைத் தேட, அவனைக் காணும் முறையை அறியாதவராய், நெருப்பு வண்ணமாய் நின்ற சிவபெருமானின் திருவடிக்கீழ் நாணமுற்று நின்று தொழுது போற்ற, அவர்களின் நாணத்தைப் போக்கி அருள்செய்து பாதுகாத்த அப்பெருமான் திருப்பெருவேளூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் பிரியநாதர் ஆவார்.

திருப்பெருவேளூர்

புற்றேறி யுணங்குவார் புகையார்ந்த
துகில்போர்ப்பார்
சொற்றேற வேண்டாநீர் தொழுமின்கள்
சுடர்வண்ணம்
மற்றேரும் பரிமாவு மதகளிறு
மிவையொழியப்
பெற்றேறும் பெருமானார் பெருவேளூர்
பிரியாரே #690

புற்றேறும்படி கடுமையான தவத்தால் உடம்பை வாட்டும் சமணர்களும், மஞ்சட்காவியூட்டிய ஆடையை அணியும் புத்தர்களும் இறையுண்மையை உணராது கூறும் சொற்களை நீங்கள் ஏற்க வேண்டா. நெருப்புப் போன்று சிவந்த வண்ணமுடையவனும், தேரும், குதிரையும், யானையும் வாகனமாகக் கொள்ளாது, இடபத்தை வாகனமாகக் கொண்டுள்ள தலைவனுமான, திருப்பெருவேளூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் பிரியநாதனை நீவிர் தொழுது வணங்குங்கள்.

திருப்பெருவேளூர்

பைம்பொன்சீர் மணிவாரிப் பலவுஞ்சேர்
கனியுந்தி
அம்பொன்செய் மடவரலா ரணிமல்கு
பெருவேளூர்
நம்பன்றன் கழல்பரவி நவில்கின்ற
மறைஞான
சம்பந்தன் தமிழ்வல்லார்க் கருவினைநோய்
சாராவே #691

அழகிய பொன்னையும், சிறந்த மணிகளான இரத்தினங்களையும், பலவகையான கனிகளையும் அடித்துக் கொண்டுவரும் காவிரியில்,

பொன்னாலாகிய அழகிய ஆபரணங்களை அணிந்த, நீராடும் மகளிர்கள் மிகுந்த திருப்பெருவேளூரில் வீற்றிருக்கும் சிவபெருமானின் திருவடிகளைப் போற்றிஅருளிய வேதம்வல்ல ஞானசம்பந்தனின் இச்செந்தமிழ்ப் பதிகத்தை ஓத வல்லவர்களை அருவினைகளும், அவற்றால் வரும் பிறவிநோயும் சாரா.

திருக்கச்சிநெறிக்காரைக்காடு

திருக்கச்சிநெறிக்காரைக்காடு

திருக்கச்சிநெறிக்காரைக்காடு,
பண் - பஞ்சமம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காரைத்திருநாதஈசுவரர்.
தேவியார் : காரார்குழலியம்மை.

வாரணவு முலைமங்கை பங்கினரா
யங்கையினில்
போரணவு மழுவொன்றங் கேந்திவெண்
பொடியணிவர்
காரணவு மணிமாடங் கடைநவின்ற
கலிக்கச்சி
நீரணவு மலர்ப்பொய்கை நெறிக்காரைக்
காட்டாரே **#692**

சிவபெருமான் கச்சு அணிந்த மெல்லிய முலையுடைய உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டவன். அழகிய கையில் போருக்குரிய மழுவை ஏந்தியவன். திருமேனியில் திருவெண்ணீற்றினைப் பூசியவன். மேகத்தைத் தொடும்படி உயர்ந்துள்ள இரத்தினங்கள் பதிக்கப்பட்ட மாளிகைகளையும், பிரளயகாலத்து ஒலியோ என்று சொல்லும் பேரோசையையுமுடைய காஞ்சியில், நீர் நிரம்பிய மலர்கள் பூத்துள்ள குளங்களையுடைய திருக்கச்சிநெறிக் காரைக்காட்டில் வீற்றிருந்தருளுகின்றான்.

திருக்கச்சிநெறிக்காரைக்காடு

காரூரு மணிமிடற்றார் கரிகாட
ருடைதலைகொண்
ஊரூரன் பலிக்குழல்வா ருழைமானி
னுரியதளர்
தேரூரு நெடுவீதிச் செழுங்கச்சி
மாநகர்வாய்
நீரூரு மலர்ப்பொய்கை நெறிக்காரைக்
காட்டாரே **#693**

சிவபெருமான் கார்மேகம் போன்ற நீலநிறமுடைய கண்டத்தார். கொள்ளிகள் கரிந்த சுடு காட்டிலிருப்பவர், பிரமகபாலத்தைக் கையிலேந்தி ஊர்தோறும் சென்று பிச்சை எடுத்துத் திரிவார்.

மான்தோலை ஆடையாக உடுத்தவர். அப்பெருமான் தேரோடும் நீண்ட வீதிகளையுடைய செழிப்புடைய திருக்கச்சிமாநகரில் நீர் நிறைந்த, மலர்கள் பூத்துள்ள குளங்களையுடைய திருக்கச்சிநெறிக் காரைக் காட்டில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கச்சிநெறிக்காரைக்காடு

கூறணிந்தார் கொடியிடையைக் குளிர்சடைமே
லிளமதியோ
டாறணிந்தா ராடரவம் பூண்டுகந்தா
ரான்வெள்ளை
ஏறணிந்தார் கொடியதன்மே லென்பணிந்தார்
வரைமார்பில்
நீறணிந்தார் கலிக்கச்சி நெறிக்காரைக்
காட்டாரே **#694**

ஒலிநிறைந்த திருக்கச்சிநெறிக் காரைக்காட்டில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் கொடிபோன்ற இடையுடைய உமாதேவியைத் தம் திருமேனியில் ஒரு பாதியாகக் கொண்டவர். குளிர்ந்த சடைமீது இளம்பிறைச் சந்திரனோடு, கங்கை, பாம்பு இவற்றை அணிந்து மகிழ்ந்தவர். வெற்றிக் கொடியில் வெண்ணிற இடபத்தைக் கொண்டுள்ளார். மலைபோன்ற மார்பில் எலும்பு மாலையை அணிந்துள்ளார். திருநீற்றையும் அணிந்துள்ளார்.

திருக்கச்சிநெறிக்காரைக்காடு

பிறைநவின்ற செஞ்சடைகள் பின்றாழப்
பூதங்கள்
மறைநவின்ற பாடலோ டாடலராய்
மழுவேந்திச்
சிறைநவின்ற வண்டினங்கள் தீங்கனிவாய்த்
தேன்கதுவும்
நிறைநவின்ற கலிக்கச்சி நெறிக்காரைக்
காட்டாரே **#695**

பிறைச்சந்திரனைச் சூடிய சிவந்த சடைகள் பின் பக்கம் தொங்க, பூதகணங்கள் நால்வேதங்களை ஓதப் பாடலும், ஆடலும் கொண்டு மழுப்படை ஏந்திச் சிவபெருமான் விளங்குகின்றார். அப்பெருமான் சிறகுகளையுடைய வண்டுகள் இனிய கனிகளில் சொட்டும் தேனை உறிஞ்சி உண்ட மகிழ்ச்சியில் இன்னொலி செய்யும் திருக்கச்சிநெறிக் காரைக்காட்டில் வீற்றிருந் தருளுகின்றார்.

திருக்கச்சிநெறிக்காரைக்காடு

அன்றாலின் கீழிருந்தங் கறம்புரிந்த
வருளாளர்
குன்றாத வெஞ்சிலையிற் கோளரவ
நாண்கொளுவி
ஒன்றாதார் புரமூன்று மோங்கெரியில்
வெந்தவிய
நின்றாருங் கலிக்கச்சி நெறிக்காரைக்
காட்டாரே **#696**

சிவபெருமான் அன்று ஆலமரநிழலின் கீழிருந்து சனகாதி முனிவர்கட்கு அறம் உரைத்த அருளாளர், குன்றாத வலிமையுடைய மேருமலையை வில்லாகக் கொண்டு, கொல்லும் தன்மையுடைய பாம்பை நாணாகப்பூட்டி, பகையசுரர்களின் முப்புரங்களை மிக்க நெருப்பில் வெந்தழியும்படி செய்தவர். அப்பெருமான் ஒலிமிகுந்த திருக்கச்சி நெறிக்காரைக்காட்டில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கச்சிநெறிக்காரைக்காடு

பன்மலர்கள் கொண்டடிக்கீழ் வானோர்கள்
பணிந்திறைஞ்ச
நன்மையிலா வல்லவுணர் நகர்மூன்று
மொருநொடியில்
வின்மலையி னாண்கொளுவி வெங்கணையா
லெய்தழித்த
நின்மலனார் கலிக்கச்சி நெறிக்காரைக்
காட்டாரே **#697**

தேவர்கள் பலவகையான மலர்களைத் தூவி இறைவனின் திருவடிக்கீழ்ப் பணிந்து வணங்க, நன்மைபுரியாது தீமை செய்த வலிய அசுரர்களின் மூன்று நகரங்களையும், ஒரு நொடியில், மேருமலையை வில்லாகக் கொண்டு, வாசுகி என்னும் பாம்பை நாணாகக் கொண்டு அக்கினியாகிய அம்பை எய்து அழித்த, இயல்பாகவே பாசங்களின் நீங்கிய சிவபெருமான் ஒலிமிக்க திருக்கச்சிநெறிக் காரைக்காட்டில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கச்சிநெறிக்காரைக்காடு

புற்றிடை வாளரவினொடு புனைகொன்றை
மதமத்தம்
எற்றொழியா வலைபுனலோ டிளமதிய

மேந்துசடைப்
பெற்றுடையா ரொருபாகம் பெண்ணுடையார்
கண்ணமரும்
நெற்றியினார் கலிக்கச்சி நெறிக்காரைக்
காட்டாரே **#698**

சிவபெருமான் புற்றில் வாழும் ஒளிமிக்க பாம்பையும், கொன்றை மலரையும், ஊமத்தை மலரையும் அணிந்து, ஓய்தல் இல்லாது அலைவீசும் கங்கையோடு, பிறைச்சந்திரனையும் தாங்கிய சடையையுடையவர். தம் திருமேனியில் ஒருபாகமாக உமாதேவியைக் கொண்டவர். நெற்றிக்கண்ணையுடையவர். அப்பெருமான் ஒலிமிக்க திருக்கச்சிநெறிக்காரைக்காட்டில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கச்சிநெறிக்காரைக்காடு

ஏழ்கடல்சூழ் தென்னிலங்கைக் கோமானை
யெழில்வரைவாய்த்
தாழ்விரலா லூன்றியதோர் தன்மையினார்
நன்மையினார்
ஆழ்கிடங்குஞ் சூழ்வயலு மதில்புல்கி
யழகமரும்
நீண்டமறுகிற் கலிக்கச்சி நெறிக்காரைக்
காட்டாரே **#699**

ஏழுகடல் சூழ்ந்த இலங்கை மன்னனான இராவணனை அழகிய கயிலையின் கீழ் நொறுங்கும்படி தம் காற்பெருவிரலை ஊன்றி வலியழித்த தன்மையுடையவர் சிவபெருமான். அவர் எவ்வுயிர்க்கும் நன்மையே செய்வார். அப்பெருமான் ஆழ்ந்த அகழியும், சுற்றிய வயல்களும், மதில்களும் நிறைந்த அழகுடன் திகழும், நீண்ட வீதிகளையுடைய ஒலிமிக்க திருக்கச்சிநெறிக் காரைக்காட்டில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கச்சிநெறிக்காரைக்காடு

ஊண்டானு மொலிகடனஞ் சுடைதலையிற்
பலிகொள்வர்
மாண்டார்தம் மெலும்பணிவர் வரியரவோ
டெழிலாமை
பூண்டாரு மோரிருவ ரறியாமைப்
பொங்கெரியாய்
நீண்டாருங் கலிக்கச்சி நெறிக்காரைக்
காட்டாரே **#700**

சிவபெருமானின் உணவு ஒலிக்கின்ற கடலில் தோன்றிய நஞ்சு. உடைந்த தலையாகிய பிரமகபாலத்தை ஏந்திப் பிச்சையேற்றுத் திரிவார். இறந்த தேவர்களின் எலும்புகளை மாலையாக அணிந்தவர். வரிகளையுடைய பாம்போடு, அழகிய ஆமையோட்டையும் அணிந்தவர். திருமால், பிரமன் இருவரும் அறியா வண்ணம் ஓங்கிய நெருப்புப் பிழம்பாய் நின்றவர். அப் பெருமான் ஒலிமிக்க திருக்கச்சி நெறிக் காரைக்காட்டில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கச்சிநெறிக்காரைக்காடு

குண்டாடிச் சமண்படுவார் கூறைதனை
மெய்போர்த்து மிண்டாடித் திரிதருவா ருரைப்பனகண்
மெய்யல்ல
வண்டாருங் குழலாளை வரையாகத்
தொருபாகம்
கண்டாருங் கலிக்கச்சி நெறிக்காரைக்
காட்டாரே #701

விதண்டாவாதம் பேசி நல்லூழ் இல்லாமையால் சமண சமயம் சார்ந்தோரும், மஞ்சள் காவியாடையை உடம்பில் போர்த்திய வலிய உரைகளைப் பேசித் திரியும் புத்தர்களும் இறையுண்மையை உணராதவர்கள். ஆதலால் அவர்கள் பேசுவதை விடுத்து, வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடைய உமாதேவியைத் தன் மலை போன்ற திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு கண்டவர்கள் மகிழும்படி ஒலிமிக்க திருக்கச்சிநெறிக் காரைக்காட்டில் வீற்றிருந்தருளும் சிவபெருமானைப் போற்றி வணங்குங்கள்.

திருக்கச்சிநெறிக்காரைக்காடு

கண்ணாருங் கலிக்கச்சி நெறிக்காரைக்
காட்டுறையும்
பெண்ணாருந் திருமேனிப் பெருமான
தடிவாழ்த்தித்
தண்ணாரும் பொழிற்காழித் தமிழ்ஞான
சம்பந்தன்
பண்ணாருந் தமிழ்வல்லார் பரலோகத்
திருப்பாரே #702

கண்ணுக்கு இனிமை தரும் ஒலிமிக்க திருக்கச்சி நெறிக் காரைக்காட்டில் வீற்றிருந்தருளும், தன் திருமேனியின் ஒரு பாகமாக உமாதேவியை வைத்த சிவபெருமான் திருவடிகளை வாழ்த்தி, குளிர்ச்சி பொருந்திய அழகிய சோலைகள் சூழ்ந்த சீகாழியில் அவதரித்த தமிழ் ஞானசம்பந்தன்

அருளிய பண்ணோடு கூடிய இத்தமிழ்த் திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள் இறைவனுலகில் இருப்பதாகிய சாலோக பதவியை அடைவர்.

திருவேட்டக்குடி

திருவேட்டக்குடி

திருவேட்டக்குடி,
பண் - பஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருமேனியழகீசுவரர்.
தேவியார் : சாந்தநாயகியம்மை.

வண்டிரைக்கும் மலர்க்கொன்றை
விரிசடைமேல் வரியரவம்
கண்டிரைக்கும் பிறைச்சென்னிக்
காபாலி கனைகழல்கள்
தொண்டிரைத்துத் தொழுதிறைஞ்சத்
துளங்கொளிநீர்ச் சுடர்ப்பவளம்
தெண்டிரைகள் கொணர்ந்தெறியுந்
திருவேட்டக் குடியாரே #703

வண்டுகள் ஆரவாரிக்கும் கொன்றை மாலையை விரிந்த சடையின்மேல் அணிந்து, வரிகளையுடைய பாம்பைக் கண்டு பயத்தால் ஆரவாரிக்கும் சந்திரனைச் சடையில் சூடியுள்ள சிவபெருமானின் வீரக்கழல்கள் அணிந்த திருவடிகளைத் தொண்டர்கள் ஆரவாரித்துப் போற்றி வணங்க, விளங்குகின்ற ஒளியையுடைய கடலிலுள்ள சுடர்போல் செந்நிறமான பவளத்தை அலைகள் கொணர்ந்து எறியும் திருவேட்டக்குடி என்னும் திருத்தலத்தில் அவர் வீற்றிருந்தருளுகின்றார்.

திருவேட்டக்குடி

பாய்திமிலர் வலையோடு
மீன்வாரிப் பயின்றெங்கும்
காசினியிற் கொணர்ந்தட்டுங்
கைதல்சூழ் கழிக்கானல்
போயிரவிற் பேயோடும்
புறங்காட்டிற் புரிந்தழகார்
தீயெரிகை மகிழ்ந்தாருந்
திருவேட்டக் குடியாரே #704

வலைஞர்கள் பாய்ந்து செல்லும் படகுகளில், வலையுடன் கடலில் எப்பக்கமும் திரிந்து வலைவீசி மீன்களைப் பிடித்து வாரி தரைக்குக் கொண்டு வந்து குவிக்கும் தாழை சூழ்ந்த கழியுடைய சோலை விளங்க, நள்ளிரவில் பேய்க் கூட்டங்களோடு சுடுகாட்டில் கையில் நெருப்பேந்தி

நடனம் ஆடும் சிவபெருமான் திருவேட்டக்குடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருள்கின்றான்.

திருவேட்டக்குடி

தோத்திரமா மணலிலிங்கந்
தொடங்கியவா னிரையிற்பால்
பாத்திரமா வாட்டுதலும்
பரஞ்சோதி பரிந்தருளி
ஆத்தமென மறைநால்வர்க்
கறம்புரிநூ லன்றுரைத்த
தீர்த்தமல்கு சடையாருந்
திருவேட்டக் குடியாரே #705

வழிபாடு செய்வதற்காக மணலில் இலிங்கத்தை அமைத்து, தாம் மேய்க்கும் பசுக்கூட்டங்களின் பாலைப் பாத்திரத்தில் பொருந்தக் கொண்டு, அபிடேகம் செய்து வழிபட்ட சண்டேசுரர்க்கு மேலான சோதிவடிவை அருள்புரிந்தவன் சிவபெருமான், தனக்கு அன்பர் என்று வேதங்களில் வல்ல சனகாதி முனிவர் நால்வர்க்கும் அன்று அறம் உரைத்தவன் சிவபெருமான். அப்பெருமான் புனித தீர்த்தமாகிய கங்கையைச் சடையிலே தாங்கித் திருவேட்டக்குடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றான்.

திருவேட்டக்குடி

கலவஞ்சேர் கழிக்கானல்
கதிர்முத்தங் கலந்தெங்கும்
அலவஞ்சே ரணைவாரிக்
கொணர்ந்தெறியு மகன்றுறைவாய்
நிலவஞ்சேர் நுண்ணிடைய
நேரிழையா ளவளோடும்
திலகஞ்சேர் நெற்றியினார்
திருவேட்டக் குடியாரே #706

மயில்கள் தோகை விரித்து ஆடும் கடற்கரைச் சோலைகளை உடைய, கடல் நண்டுகள் சேர்ந்த குவியல்களை வாரிக்கொணர்ந்து சேர்க்கின்ற காவிரியின் அகன்ற கரையில், ஒளி பொருந்திய குறுகிய இடையை உடைய அழகான அணிகலன்களை அணிந்த உமாதேவியோடு, திலகம் போன்று சுடர்தரும் நெற்றியுடைய சிவபெருமான் திருவேட்டக்குடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றான்.

திருவேட்டக்குடி

பங்கமார் கடலலறப்
பருவரையோ டரவுழலச்
செங்கண்மால் கடையவெழு
நஞ்சருந்துஞ் சிவமூர்த்தி
அங்கநான் மறைநால்வர்க்
கறம்பொருளின் பயனளித்த
திங்கள்சேர் சடையாருந்
திருவேட்டக் குடியாரே **#707**

சேறாகும் வண்ணம் கடல்நீர் அலைப்புற, மேருமலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு, சிவந்த கண்களையுடைய திருமால் முன்னின்று கடைய எழுந்த நஞ்சையருந்தியவர் சிவமூர்த்தி. நால் வேதங்களையும், அவற்றின் ஆறங்கங்களையும் உணர்ந்த சனகாதிமுனிவர்கள் நால்வர்க்கும் அறநூற் பொருளின் பயனாகிய அனுபவத்தை உணர்த்தியருளிய பிறை சூடிய சடையையுடைய சிவபெருமான் திருவேட்டக்குடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருவேட்டக்குடி

நாவாய பிறைச்சென்னி
நலந்திகழு மிலங்கிப்பி
கோவாத நித்திலங்கள்
கொணர்ந்தெறியுங் குளிர்கானல்
ஏவாரும் வெஞ்சிலையா
லெயின்மூன்று மெரிசெய்த
தேவாதி தேவனார்
திருவேட்டக் குடியாரே **#708**

சிவபெருமான் தோணிபோன்ற வடிவுடைய பிறைச்சந்திரனைச் சடையிலே தரித்தவர். அழகாய் விளங்கும் சங்குப்பூச்சிகளையும், கோத்தற்குரிய துளையில்லாத நல்முத்துக்களையும் கடலலைகள் கொணர்ந்து சேர்கின்ற குளிர்ந்த கடற்கரைச் சோலைகளையுடைய திருவேட்டக்குடி என்னும் திருத்தலத்தில் அக்கினியாகிய கணையினால் மேருமலையை வில்லாகக் கொண்டு முப்புரங்களை எரித்த தேவாதி தேவனான அச்சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.

திருவேட்டக்குடி

பானிலவும் பங்கையத்துப்
பைங்கானல் வெண்குருகு
கானிலவு மலர்ப்பொய்கைக்

கைதல்சூழ் கழிக்கானல்
மானின்விழி மலைமகளோ
டொருபாகம் பிரிவரியார்
தேனிலவு மலர்ச்சோலைத்
திருவேட்டக் குடியாரே #709

பால்போல் விளங்குகின்ற வெண்தாமரையானது ஒளிர, பசுமை வாய்ந்த கடற்கரைச் சோலைகளில் வெண்ணிறப் பறவைகள் விளங்க, மணம் வீசும் மலர்களையுடைய குளங்களும், தாழைகள் சூழ்ந்த கடற்கரைச் சோலைகளும், தேன்துளிர்க்கும் மலர்ச் சோலைகளும் விளங்கும் திருவேட்டக்குடி என்னும் திருத்தலத்தில், மான் போன்ற மருண்ட பார்வையுடைய மலைமகளான உமாதேவியைத் தம் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு பிரிதலில்லாமல் வீற்றிருந்தருளுகின்றார் சிவபெருமான்.

திருவேட்டக்குடி

துறையுலவு கடலோதஞ்
சுரிசங்க மிடறிப்போய்
நறையுலவும் பொழிற்புன்னை
நன்னீழற் கீழமரும்
இறைபயிலு மிராவணன்றன்
றலைபத்து மிருபதுதோள்
திறலழிய வடர்த்தாருந்
திருவேட்டக் குடியாரே #710

கரையை வந்தடைகின்ற கடலலைகள் சுரி சங்குகளை வீச, தேன் துளிக்கும் நறுமணமுடைய புன்னை மரங்கள் நிறைந்த சோலைகள் நிழலைத்தரத் திருவேட்டக்குடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் இலங்கை வேந்தனான இராவணனின் தலைகள் பத்தும் இருபது தோள்களும் வலிமை இழக்குமாறு அடர்த்தவர்.

திருவேட்டக்குடி

அருமறைநான் முகத்தானு
மகலிடநீ ரேற்றானும்
இருவருமா யளப்பரிய
வெரியுருவாய் நீண்டபிரான்
வருபுனலின் மணியுந்தி
மறிதிரையார் சுடர்ப்பவளத்
திருவுருவில் வெண்ணீற்றார்
திருவேட்டக் குடியாரே #711

அரிய நால்வேதங்களையும் கற்ற பிரமனும், மாவலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி நிலம் வேண்டி நீர் ஏற்ற திருமாலும் ஆகிய இருவரும் அளந்தறிய முடியாவண்ணம் நெருப்புப் பிழம்பாய் ஓங்கி நின்றவர் சிவபெருமான். பெருக்கெடுத்துவரும் காவிரியாற்றின், வீசுகின்ற அலைகள் மணிகளை உந்தித் தள்ளிச் சேர்க்கும் வளமிகுந்த திருவேட்டக்குடி என்னும் திருத்தலத்தில், சுடர்விடும் பவளம் போன்ற தம் திருமேனியில் திருவெண்ணீறு பூசப் பெற்றவராய், சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.

திருவேட்டக்குடி

இகழ்ந்துரைக்குஞ் சமணர்களு
மிடும்போர்வைச் சாக்கியரும்
புகழ்ந்துரையாப் பாவிகள்சொற்
கொள்ளேன்மின் பொருளென்ன
நிகழ்ந்திலங்கு வெண்மணலி
ணிறைத்துண்டப் பிறைக்கற்றை
திகழ்ந்திலங்கு செஞ்சடையார்
திருவேட்டக் குடியாரே **#712**

வேதவள்ளியை நிந்தனை செய்யும் சமணர்களும், பௌத்தர்களும் இறைவனைப் புகழ்ந்துரையாத பாவிகள். ஆதலால் அவர்களுடைய சொற்களைப் பொருளெனக் கொள்ள வேண்டா. வெண்மணலைப் போன்ற ஒளிக்கற்றையுடைய பிறைச் சந்திரனைச் சிவந்த சடையில் கொண்டு திகழும் சிவபெருமான் திருவேட்டக்குடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார். அப்பெருமானைப் போற்றி வழிபடுங்கள்.

திருவேட்டக்குடி

தெண்டிரைசேர் வயலுடுத்த
திருவேட்டக் குடியாரைத்
தண்டலைசூழ் கலிக்காழித்
தமிழ்ஞான சம்பந்தன்
ஒண்டமிழ்நூ லிவைபத்து
முணர்ந்தேத்த வல்லார்போய்
உண்டுடுப்பில் வானவரோ
டுயர்வானத் திருப்பாரே **#713**

தெளிந்த நீர் அலைகளையுடைய வயல்கள் நிறைந்த திருவேட்டக்குடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமானைப் போற்றி, சோலைகள் சூழ்ந்த, திருவிழாக்களின் ஓசை மிகுந்த சீகாழியில்

அவதரித்த தமிழ் ஞானசம்பந்தன் ஒண்தமிழில் அருளிய இத்திருப்பதிகத்தை நன்கு பொருளுணர்ந்து ஏத்தியும், ஓதியும் வழிபடுபவர்கள் மானிடர்களைப் போல் உண்டலும், உடுத்தலும் இல்லாது வேறுபட்ட தன்மையுடைய தேவர்களை ஒத்து உயர் வானுலகில் இருப்பர்.

திருப்பிரமபுரம்

சீர்காழி

திருப்பிரமபுரம்,
பண் - சாதாரி, திருப்பிரமபுர மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

சுரருலகு நரர்கள்பயி றரணிதல
முரணழிய வரணமதின்முப்
புரமெரிய விரவுவகை சரவிசைகொள்
கரமுடைய பரமனிடமாம்
வரமருள வரன்முறையி னிரைநிறைகொள்
வருசுருதி சிரவுரையினாற்
பிரமனுய ரரனெழில்கொள் சரணவிணை
பரவவளர் பிரமபுரமே **#714**

தேவர் வாழ்கின்ற விண்ணுலகமும், மனிதர்கள் வாழ்கின்ற இப்பூவுலகமும் வலிமை அழியும்படி துன்புறுத்திய, காவலாகக் கோட்டை மதில்களையுடைய முப்புரங்களும் எரிந்து சாம்பலாகுமாறு ஓர் அம்பை விரைவாகச் செலுத்தும் ஆற்றலுடையவர் சிவபெருமான். எல்லாச் சுரங்களும் வரிசைபெற அமைந்த, வேதசிரமாகிய உபநிடதஉரைகளை வரன்முறையோடு ஓதி, அரனாரின் எழில் மிகுந்த புகழை எடுத்துரைத்துச் சரணடைந்து அவர் இணை மலரடியைத் தான் வரம் பெற வேண்டிப் பிரமன் துதித்தலால் புகழால் ஓங்கிய பிரமாபுரம் எனப்பட்டது.

சீர்காழி

தாணுமிகு வாணிசைகொ டாணுவியர்
பேணுமது காணுமளவிற்
கோணுநுத னீணயனி கோணில்பிடி
மாணிமது நாணும்வகையே
ஏணுகரி பூணழிய வாணியல்கொண்
மாணிபதி சேணமரர்கோன்
வேணுவினை யேணிநகர் காணிறிவி
காணநடு வேணுபுரமே **#715**

தன்னை அன்பால் வழிபடும் தேவர்கள் கயமுகாசுரனால் துன்புற்று அஞ்சி வழிபட, நிலைபெற்ற சிவபெருமான் வலிமைமிகுந்த

ஆண்யானையின் வடிவம் கொண்டருளினார். வளைந்த நெற்றியையும், நீண்ட கண்களையு முடைய உமாதேவி குற்றமில்லாதபடி பெண்யானையின் உருவை எடுத்தாள். மது என்னும் அசுரன் வெட்கப்படும்படியும், வலிமைகொண்டு தீமை செய்த கயமுகாசுரன் அழியுமாறும் ஆற்றல்மிக்க அழகிய விநாயகக் கடவுளைத் தோற்றுவித்த பெருமைக்குரிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் பதியாவது, வானுலகிலுள்ள தேவர்களின் தலைவனான இந்திரன் சூரபதுமனுக்கு அஞ்சி ஒளிந்து வாழ்ந்தால் மூங்கிலை ஏணியாகக் கொண்டு, தான் நேரே காணமுடியாத தேவலோகத்தின் நிலையை ஒளிந்து காணும்பொருட்டு நட்ட வேணுபுரம் ஆகும். சூரபதுமனுக்கு அஞ்சி இந்திரன் வந்து மூங்கிலில் மறைந்திருந்து பூசித்த வரலாற்றால் போந்தபெயர் வேணுபுரம் என்பது.

சீர்காழி

பகலொளிசெய் நகமணியை முகைமலரை
நிகழ்சரண வகவுமுனிவர்க்
ககலமலி சகலகலை மிகவுரைசெய்
முகமுடைய பகவனிடமாம்
பகைகளையும் வகையிலறு முகவிறையை
மிகவருள நிகரிலிமையோர்
புகவுலகு புகழவெழி றிகழநிக
ழலர்பெருகு புகலிநகரே **#716**

சூரியனைப் போல் பிரகாசிக்கும் மலையிற் பிறந்த நாகரத்தினத்தையும், அரும்பு விரிந்த செந்தாமரையையும் போன்ற திருவடிகளைச் சரணாக அடைந்த சனகாதி முனிவர்கட்குச் சகல கலைகளையும் நன்கு உணருமாறு விரித்து உபதேசித்தருளிய திருவருள் நோக்கத்தையுடையவர் சிவபெருமான். அத்தகைய பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது பகையசுரர்களை வேர் அறுக்கும் வகையில் அறுமுகக்கடவுளை அருளும்படி ஒப்பற்ற தேவர்கள் சரண்புக அழகுடன் திகழும் புகழ்மிக்க திருப்புகலி என்னும் திருத்தலமாகும். தேவர்கள் புகலடைந்தமையால் புகலி எனப் பெயர் பெற்றது.

சீர்காழி

அங்கண்மதி கங்கைநதி வெங்கணர
வங்களெழி றங்குமிதழித்
துங்கமலர் தங்குசடை யங்கிநிக
ரெங்களிறை தங்குமிடமாம்
வெங்கதிர்வி ளங்குலக மெங்குமெதிர்

பொங்கெரிபு லன்கள்களைவோர்
வெங்குருவி ளங்கியுமை பங்கர்சர
ணங்கள்பணி வெங்குருவதே **#717**

அழகிய சந்திரனும், கங்கை நதியும், கொடிய பாம்புகளும், அழகிய இதழ்களையுடைய கொன்றை மலரும் நெருப்புப் போன்ற சடைமுடியில் அணிந்தவர், எங்கள் இறைவராகிய சிவபெருமான். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, சூரியனால் விளங்குகின்ற இவ்வுலகிலுள்ளோர் நல்வழிக்கு மாறாக மிக வருத்துகின்ற மனம் முதலிய அந்தக் கரணங்களின் சேட்டையால் வரும் துன்பத்தைக் களைய விரும்புபவர்கள் பணியும் வெங்குரு ஆகும். அது தேவகுருவாகிய வியாழபகவான் உமை பங்கராகிய பரமனைப் பணிந்து பேறு பெற்ற தலமாகும்.

<u>சீர்காழி</u>

ஆணியல்பு காணவன வாணவியல்
பேணியெதிர் பாணமழைசேர்
தூணியற நாணியற வேணுசிலை
பேணியற நாணிவிசயன்
பாணியமர் பூணவருண் மாணுபிர
மாணியிட மேணிமுறையிற்
பாணியுல காளமிக வாணின்மலி
தோணிநிகர் தோணிபுரமே **#718**

விசயனுடைய வீரத்தன்மையை உமை காண வனத்தில் வாழும் வேடன் வடிவம் கொண்டு, அவனுக்கு எதிராகப் போர் தொடங்கி, அவன் சொரியும் மழைபோன்ற அம்புகளும், அவ்வம்புகள் தங்கிய அம்பறாத்துணியும் நீங்கவும், வில்நாண் அறுபடவும், வளைந்த மூங்கிலால் வடிவமைத்த வில்லைத் துணித்தவர். அதனால் அர்ச்சுனன் நாணமுற்றுக் கையால் அடித்துச் செய்யும் மற்போர் செய்யவர, அவனுக்கு அருள்புரிந்தவர், பிரமாணமான மறைகட்கு வாச்சியமாக (பொருளாக) உள்ள சிவபெருமான். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது காலாந்தரத்தில் பிரளயகால வெள்ளமானது உலகம் முழுவதையும் மூழ்கச் செய்ய, ஆற்றல் பெருகுமாறு ஊழி வெள்ளத்தில் தோணிபோல் மிதந்த தோணிபுரம் எனப்படும் திருத்தலமாகும்.
பிரமாணி - பிரமாணமாகிய மறைகட்கு வாச்சியமாக உள்ளவர்.

<u>சீர்காழி</u>

நிராமய பராபர புராதன
பராவுசிவ ராகவருளென்

றிராவுமெ திராயது பராநினை
புராணனம ராதிபதியாம்
அராமிசை யிராதெழி றராயர
பராயண வராகவுருவா
தராயனை விராயெரி பராய்மிகு
தராய்மொழி விராயபதியே **#719**

இறைவன் நோயற்றவன். அனைத்துப் பொருட்கட்கும் மேலான பரம்பொருள். மிகப்பழமையானவன். பராவுசிவன் என்று இரவும், பகலும் போற்றித் தியானிக்கப்படுகின்ற பழமை யானவன். தேவர்கட்கெல்லாம் தலைவனாக விளங்கும் அச்சிவ பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, இரணியாக்கனால் கொள்ளப்பட்டுக் கடலில் கிடந்த அழகிய பூமியை, திருமால் பாற்கடலில் அரவணையிலிருந்து எழுந்து வந்து வெள்ளைப் பன்றி உருவெடுத்து இரணியாக்கனைக் கொன்று பூமியைக் கொம்பிலேற்றி அவனை வருத்திய பழிபோகச் சிவனை வழிபட்ட புகழ்மிக்க பூந்தராய் என்னும் திருத்தலமாகும்.

<u>சீர்காழி</u>

அரணையுறு முரணர்பலர் மரணம்வர
விரணமதி லரமலிபடைக்
கரம்விசிறு விரகனமர் கரணனுயர்
பரனெறிகொள் கரனதிடமாம்
பரவமுது விரவவிடல் புரளமுறு
மரவையரி சிரமரியவச்
சிரமரன சரணமவை பரவவிரு
கிரகமமர் சிரபுரமதே **#720**

மும்மதில்களை அரணாகக் கொண்ட திரிபுரத்தசுரர்களால் பலருக்கு மரணம் ஏற்பட, காயங்கள் முதலான உண்டாக்கித் துன்புறுத்தும் அம்மதிலின் மேல் அரத்தால் அராவப்பட்டஆயுதத்தைக் கையினால் ஏவிய சமர்த்தனும், தன்னைச் சரணடைந்தவர்களின் கரணங்களின் சேட்டையை அடக்குவிப் போனும், யாவரினும் உயர்ந்த மேன்மையுடையவனும், உபதேசிக்கும் முறையைக் கொண்ட திருக்கரத்தை உடையவனுமான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, எல்லோராலும் போற்றப்படுகின்ற அமுதத்தைப் பாற்கடலிலிருந்து கடைந்து எடுத்த காலத்தில், தனக்குக் கிடைக்கும்படி பந்தியில் வந்த பாம்பின் சிரத்தினைத் திருமால் அரிந்து வீச, அந்தத் தலையானது சிவபெருமானைச் சரணடைந்து துதித்தலால் இரு

கிரகங்களாக நவக்கிரக வரிசையில் பொலியும் சிரபுரம் என்னும் திருத்தலம் ஆகும்.

சீர்காழி

அறமழிவு பெறவுலகு தெறுபுயவன்
விறலழிய நிறுவிவிரன்மா
மறையினொலி முறைமுரல்செய் பிறையெயிற
னுறவருளு மிறைவனிடமாங்
குறைவின்மிக நிறைதையுழி மறையமரர்
நிறையருள முறையொடுவரும்
புறவனெதிர் நிறைநிலவு பொறையனுடல்
பெறவருளு புறவமதுவே **#721**

தருமம் அழியுமாறு உலகத்தைத் துன்புறுத்திய புயவலிமையுடைய இராவணனது வலிமை அழியுமாறு தம் காற்பெருவிரலை ஊன்றி, பின் இராவணன் தவறுணர்ந்து சாமகானம் பாடிப் போற்ற வளைந்த பற்களையுடைய அந்த இராவணனுக்கு நீண்ட வாழ்நாளும், ஒளிபொருந்திய வாளும் அருளியவர் சிவபெருமான். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, வேதங்கட்கும், தேவர்கட்கும் ஒத்ததாகிய நீதியை வழங்கும்படி, முறையிட்டு வந்த புறாவிற்குரியவனாகிய வேடன் எதிரே, புறாவின் எடைக்குச் சமமாகத் தன் சதையை அறுத்து வைத்தும் நிரம்பாது தான் துலையேறி எடை சமன்பெறுமாறு செய்த சிபிச்சக்கரவர்த்தி குறையில்லா உடம்பைப் பெற அருள் புரிந்ததும், தான் செய்த பழிபோக புறா உருவில் வந்த தீக்கடவுள் பூசித்ததும் ஆகிய புறவம் என்னும் திருத்தலமாகும்.

சீர்காழி

விண்பயில மண்பகிரி வண்பிரம
னெண்பெரிய பண்படை கொண்மால்
கண்பரியு மொண்பொழிய நுண்பொருள்கள்
தண்புகழ்கொள் கண்டனிடமாம்
மண்பரியு மொண்பொழிய நுண்புசகர்
புண்பயில விண்படரவச்
சண்பைமொழி பண்பமுனி கண்பழிசெய்
பண்புகளை சண்பைநகரே **#722**

சிறந்த பிரமன் அன்ன உரு எடுத்து ஆகாயத்தில் சென்றும், மிக்க மதிப்புடைய தகுதியான சக்கராயுதப் படையைக் கொண்ட திருமால் பன்றி உரு எடுத்து மண்ணைப் பிளந்து சென்றும் காணப்பெறாது, கண்ணால் பற்றக்கூடிய ஒளி நீங்க, நுண்ணிய பொருளாக, இனிய

கீர்த்தியைக் கொண்ட அகண்டனாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், மண்ணின் நுண்புழுதிபோல் அராவிய இரும்பு உலக்கைத்தூள் சண்பைப் புல்லாக முளைக்க அவற்றால் யாதவ குமாரர்கள் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு இறந்து விண்ணுலகை அடைய, துருவாச முனிவரை இழிவு செய்து பழிகொண்ட தன் இனத்தவர்கட்கு நற்கதி உண்டாகுமாறும் சண்பை என்னும் கோரையால் உண்டான புண்கள் தீருமாறும் கண்ணபிரான் போற்றி வழிபட்டுச் சாபத்தை நீக்கியதால், சண்பை என்னும் பெயர் பெற்ற திருத்தலமாகும்.

சீர்காழி

பாழியுறை வேழநிகர் பாழமணர்
சூழமுட லாளருணரா
ஏழினிசை யாழின்மொழி யேழையவள்
வாழுமிறை தாழுமிடமாங்
கீழிசைகொண் மேலுலகில் வாழரசு
சூழரசு வாழவரனுக்
காழியசில் காழிசெய வேழுலகி
லூழிவளர் காழிநகரே **#723**

பாழியில் தங்கும், யானையை ஒத்த சமணர்களும், கூட்டமாக வாழும் உடலைப் பாதுகாப்போராகிய பௌத்தர்களும் இறைவனை உணராதவர்கள். ஏழிசையும், யாழின் இனிமையும் போன்ற மொழியுடைய உமாதேவியை உடனாகக் கொண்டு சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், கீழுலகில் புகழ்கொண்ட அரசர்களும், மேலுலகில் வாழ்கின்ற அரசனாகிய இந்திரனும், மற்றும் சூழ்ந்துள்ளவர்களும் வாழும்பொருட்டு நடனம் புரிந்த இறைவனிடம் ஆடலில் தோற்று, தன் குற்றம் நீங்குமாறு அப்பெருமானை வழிபட்டு காளி அருள் பெற்ற செயல் சப்தலோகங்களிலும் பல ஊழிக்காலமாக பேசப்பட்டு வரும் பெருமையுடைய காழிநகராகும்.

சீர்காழி

நச்சரவு கச்சௌவ சைச்சுமதி
யுச்சியின்மி லைச்சொருகையான்
மெய்ச்சிர மனைச்சுலகி னிச்சமிடு
பிச்சையமர் பிச்சனிடமாம்
மச்சமத நச்சிமத மச்சிறுமி
யைச்செய்தவ வச்சவிரதக்
கொச்சைமுர வச்சர்பணி யச்சுரர்க
ணச்சிமிடை கொச்சைநகரே **#724**

நஞ்சையுடைய பாம்பைக் கச்சாகக் கட்டி, சந்திரனைத் தலையிலே சூடி, ஒரு கையில் பிரமகபாலத்தைத் தாங்கி, உலகிலே நாடோறும் இடுகின்ற பிச்சையை விரும்பும் பித்தனாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், மீன் நாற்றத்தை விரும்பும் மச்சகந்தியை வசமிழந்து ஆற்றினிடையில் புணர்ந்த கொச்சைத் தன்மைக்குக் கதறி அது நீங்க பராசரமுனிவர் வணங்க, தேவர்களும் விரும்பி அணுகும் கொச்சைவயம் எனப்படும் திருத்தலமாகும்.

<u>சீர்காழி</u>

ஒழுகலரி தழிகலியி லுழியுலகு
பழிபெருகு வழியைநினையா
முழுதுடலி லெழுமயிர்க டழுவுமுனி
குழுவினொடு கெழுவுசிவனைத்
தொழுதுலகி லிழுகுமல மழியும்வகை
கழுவுமுரை கழுமலநகர்ப்
பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன்
வழிமொழிகண் மொழிதகையவே **#725**

நல்லொழுக்கத்தில் நிற்றல் அரிதாகி அழிகின்ற கலிகாலத்தில் உலகில் பழிபெருகுதலை நினைந்து வருந்தி, உடல் முழுவதும் முடி முளைத்துள்ள உரோமச முனிவர் தம் குழுவினருடன் அங்குத் தங்கி, சிவபெருமானைத் தொழுது, உலக இச்சைக்கு இழுக்கின்ற மலங்கள் நீங்கிச் சிவஞான உபதேசம் பெற்றதால் கழுமலம் எனப் போற்றப்படும் திருத்தலத்தினை வணங்குவோரின் குற்றம் இல்லையாகச் செய்கின்ற தலைவனும், எழுதும் வேதமெனப் போற்றப்படும் தமிழ் வல்லவனுமாகிய ஞானசம்பந்தன் அருளிய இந்த வழிமொழித் திருவிராகப் பாசுரங்கள் பாடிப் பயன்பெறும் தன்மை உடையன.

திருக்கயிலாயம்

திருக்கயிலாயம்

திருக்கயிலாயம்,
பண் - சாதாரி,
இத்தலம் இமயமலையிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கயிலாயநாதர்.
தேவியார் : பார்வதியம்மை.

வாளவரி கோளபுலி கீளதுரி
தாளின்மிசை நாளுமகிழ்வர்
ஆளுமவர் வேளநகர் போளயில
கோளகளி றாளிவரவில்
தோளமரர் தாளமதர் கூளியெழ
மீளமிளிர் தூளிவளர்பொன்
காளமுகின் மூளுமிருள் கீளவிரி
தாளகயி லாயமலையே **#726**

சிவபெருமான் ஒளிபொருந்திய வரிகளையுடைய புலியின் தோலை உடுத்தவர். அது பாதத்தில் பொருந்த எக்காலத்திலும் ஆனந்தமாய் இருப்பவர். அடியவர்களை ஆட்கொள்பவர். எதிரிட்ட விலங்குகளைக் கிழிக்கும் கூரிய பற்களை யுடைய திரண்ட வடிவுடைய யானையை அடக்கியாண்டவர். சிறந்த வில்லினை ஏந்திய தோளர். கூளிகள் தாளமிட நடனம் புரிபவர். திருவெண்ணீற்றினை அணிந்தவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் கயிலாய மலையானது கரிய மேகங்களால் மூண்ட இருட்டை ஓட்டும் வெண்பொன்னாகிய ஒளியை விரிக்கும் அடிவாரம் உடையதாகும்.

திருக்கயிலாயம்

புற்றரவு பற்றியகை நெற்றியது
மற்றொருக ணொற்றைவிடையன்
செற்றதெயி லுற்றதுமை யற்றவர்க
ணற்றுணைவ னுற்றநகர்தான்
சுற்றுமணி பெற்றதொளி செற்றமொடு
குற்றமில தெற்றெனவினாய்க்
கற்றவர்கள் சொற்றொகையின் முற்றுமொளி
பெற்றகயி லாயமலையே **#727**

சிவபெருமான் புற்றில் வாழும் பாம்பைப் பற்றிய கையை உடையவர். நெற்றியில் ஒரு கண்ணுடையவர். ஒற்றை இடபத்தை உடையவர்.

முப்புரத்தை எரித்தவர். உமாதேவியை ஒரு பாகமாக உடையவர். உலகப் பற்றை நீக்கிய அடியவர்கட்கு நல்ல துணையாக விளங்குபவர். அத்தகைய பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது. மலையிற் பிறக்கும் மணிகள் ஒளியிழக்குமாறு தன்னொளி மிக்க கயிலாய மலையாகும். கற்றவர்கள் போற்றித் துதிப்பதால் ஞான ஒளி பெற்ற சிறப்புடையது இக்கயிலாய மலையாகும்.

திருக்கயிலாயம்

சிங்கவரை மங்கையர்க டங்களன
செங்கைநிறை கொங்குமலர் தூய்
எங்கள் வினை சங்கையவை யிங்ககல
வங்கமொழி யெங்குமுளவாய்த்
திங்களிரு ணொங்கவொளி விங்கிமிளிர்
தொங்கலொடு தங்கவயலே
கங்கையொடு பொங்குசடை யெங்களிறை
தங்குகயி லாயமலையே **#728**

சிங்கங்கள் வாழ்கின்ற மலைகளிலுள்ள வித்தியாதர மகளிர் தங்கள் சிவந்த கைகளால் தேந்துளிக்கும், நறுமணம் கமழும் மலர்களைத் தூவிப் போற்றி. ‘‘எங்கள் வினைகளும், துன்பங்களும் அகலுமாறு அருள்புரிவீராக’’ என்று அங்கமாய் மொழியும் தோத்திரங்கள் எங்கும் ஒலிக்க, சந்திரனிடத்துள்ள குறையைப் போக்கி ஒளிமிகும்படி செய்து, மாலையோடு பக்கத்திலே கங்கையையும் மிகுந்த சடையிலே தாங்கி எங்கள் இறைவனான சிவபெருமான் வீற்றிருந்தருளுவது திருக்கயிலாய மலையாகும்.

திருக்கயிலாயம்

முடியசடை பிடியதொரு வடியமழு
வுடையர்செடி யுடையதலையில்
வெடியவினை கொடியர்கெட விடுசில்பலி
நொடியமகி ழடிகளிடமாம்
கொடியகுர லுடையவிடை கடியதுடி
யடியினொடு மிடியினதிரக்
கடியகுர னெடியமுகின் மடியவத
ரடிகொள்கயி லாயமலையே **#729**

சிவபெருமான் தலையில் சடைமுடியையும், கையில் கூரிய மழுவையும் உடையவர். வெறுக்கத்தக்க கொலைத் தொழிலை உடைய அசுரர்களை அழித்தவர். பிச்சையேற்றுத் திரியும் அச்சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் இடபத்தின் கனத்த குரலும், யானையின் பிளிறலும் இணைந்து

மிகுந்த ஓசையுடன், மேகங்களின் இடிமுழக்கத்தை அடக்கி அடிவாரம்வரை செல்லும் திருக்கயிலாயமலையாகும்.

திருக்கயிலாயம்

குடங்கையி னுடங்கெரி தொடர்ந்தெழ
விடங்கிளர் படங்கொளரவம்
மடங்கொளி படர்ந்திட நடந்தரு
விடங்கன திடந்தண் முகில்போய்த்
தடங்கட றொடர்ந்துட னுடங்குவ
விடங்கொளமி டைந்தகுரலால்
கடுங்கலின் முடங்களை நுடங்கர
வொடுங்குகயி லாயமலையே **#730**

உள்ளங்கையில் நெருப்பானது எரிய, படம் கொண்டு ஆடுகின்ற பாம்பானது ஒளிர்ந்து திருமேனியில் படர, நடனம் புரியும் பேரழகரான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, மேகங்கள் கடல்நீரை முகந்து, மேலே சென்று எல்லா இடங்களிலும் பரவி, இடிமுழக்கத்துடன் மழை பொழிய, அந்த இடியோசை கேட்ட மெலிந்த நாகம் வளைந்த புற்றிலே பதுங்குகின்ற திருக்கயிலாய மலையாகும்.

திருக்கயிலாயம்

ஏதமில பூதமொடு கோதைதுணை
யாதிமுதல் வேதவிகிர்தன்
கீதமொடு நீதிபல வோதிமற
வாதுபயி னாதனகர்தான்
தாதுபொதி போதுவிட வூதுசிறை
மீதுதுளி கூதனலியக்
காதன்மிகு சோதிகிளர் மாதுபயில்
கோதுகயி லாயமலையே **#731**

குற்றமில்லாத பூதகணங்கள் சூழ்ந்திருக்க, உமா தேவியைத் துணையாகக் கொண்டு, ஆதிமூர்த்தியாகிய சிவபெருமான், வேதங்களை இசையோடு பாடியருளி, அதன் பொருளையும் விரித்து, நீதிக்கருத்துக்கள் பலவற்றையும் ஓதியவன். தேவர்களாலும், முனிவர்களாலும், அடியவர்களாலும் நாள்தோறும் மறவாது வணங்கப்படும் தலைவன். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, மகரந்தப்பொடிகளைத் தன்னுள் அடக்கிய அரும்பு மலர, தேனை ஊதி உறிஞ்சிய சிறகுகளையுடைய வண்டுகள் தம்மேல் சிதறிய தேன்துளிகளால் குளிர் வருத்த, அன்புமிக, ஒளிர்கின்ற, அழகிய குயில்கள் தளிர்களைக் கோதும் திருக்கயிலாய மலையாகும்.

திருக்கயிலாயம்

சென்றுபல வென்றுலவு புன்றலையர்
துன்றலொடு மொன்றியுடனே
நின்றமர ரென்றுமிறை வன்றனடி
சென்றுபணி கின்றநகர்தான்
துன்றுமலர் பொன்றிகழ்செய் கொன்றைவிரை
தென்றலொடு சென்றுகமழக்
கன்றுபிடி துன்றுகளி றென்னிவைமுன்
னின்றகயி லாயமலையே **#732**

நன்மக்கள் ஐம்புலன்களையும் வென்றவர்களாய் குறுமயிர் பொருந்திய தலைகளையுடைய பூதகணங்களோடு சேர்ந்து, தேவர்களும் உடன்நிற்க எக்காலத்தும் இறைவனின் திருவடிகளை வணங்குகின்ற நகர், கொத்தாக மலரும் பொன்போல் விளங்கும் கொன்றை மலர்களின் நறுமணம் தென்றற்காற்றோடு பரவ, இள யானைக்கன்றுகளும், பெண் யானைகளும், ஆண் யானைகளும் மலையின் முற்பக்கங்களில் உலவுகின்ற திருக்கயிலாயமலையாகும்.

திருக்கயிலாயம்

மருப்பிடை நெருப்பெழு தருக்கொடு
செருச்செய்த பருத்தகளிறின்
பொருப்பிடை விருப்புற விருக்கையை
யொருக்குட னரக்னுணரா
தொருத்தியை வெருக்குற வெருட்டலு
நெருக்கென நிருத்தவிரலால்
கருத்தில வொருத்தனை யெருத்திற
நெரித்தகயி லாயமலையே **#733**

தந்தத்தில் நெருப்புப்பொறி பறக்க, மலையோடு கர்வத்துடன் போர்செய்த பருத்த யானையைப் போல, கயிலை மலையில் சிவபெருமான் வீற்றிருத்தலைப் பொருட்படுத்தாது, இராவணன் அதனைப் பெயர்க்க முயல, ஒப்பற்ற உமாதேவி அஞ்சவும், சிவபெருமான் நடனம்புரியும் தன் காற்பெருவிரலை ஊன்றி அறிவற்ற இராவணனின் கழுத்து முறியும்படி செய்த கயிலாயமலையே சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாகும்.

திருக்கயிலாயம்

பரியதிரை யெரியபுனல் வரியபுலி
யுரியதுடை பரிசையுடையான்

வரியவளை யரியகணி யுருவினொடு
புரிவினவர் பிரிவினகர்தான்
பெரியவெரி யுருவமது தெரியவுரு
பரிவுதரு மருமையதனால்
கரியவனு மரியமறை புரியவனு
மருவுகயி லாயமலையே #734

சிவபெருமான் நெருப்பையும், பெரிய அலைகளையுடைய கங்கையையும் கொண்டவர். வரிகளையுடைய புலித்தோலை ஆடையாக அணிந்தவர். கீற்றுக்களையுடைய வளையல்களை அணிந்த செவ்வரி படர்ந்த கண்களையுடைய உமாதேவியைத் தம் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு பிரிவில்லாது வீற்றிருந்தருளும் இடமாவது, சிவபெருமான் பெரிய சோதிப்பிழம்பாய் நிற்க அதன் அடியையும், முடியையும் தேடத்தொடங்கிக் காண்பதற்கரியதாய் விளங்கியதால் நீலநிறத் திருமாலும், அருமறைகள் வல்ல பிரமனும் தவறுணர்ந்து மன்னிப்பு வேண்டும் பொருட்டுப் பொருந்திய திருக்கயிலாய மலையாகும்.

திருக்கயிலாயம்

அண்டர்தொழு சண்டி பணி கண்டடிமை
கொண்டவிறை துண்டமதியோ
டிண்டைபுனை வுண்டசடை முண்டதர
சண்டவிருள் கண்டரிடமாம்
குண்டமண வண்டரவர் மண்டைகையி
லுண்டுளறி மிண்டுசமயம்
கண்டவர்கள் கொண்டவர்கள் பண்டுமறி
யாதகயி லாயமலையே #735

தேவர்களும் தொழுது போற்றும் சண்டேசுவர நாயனாரின் சிவவழிபாட்டைக் கண்டு மகிழ்ந்து ஆட்கொண்டவர் சிவபெருமான். பிறைச்சந்திரனை இண்டைமாலையால் அலங்கரிக்கப்பட்ட சடைமுடியில் தரித்தும், மண்டையோட்டை மாலையாக அணிந்தும், கடிய இருள் போன்ற கழுத்தையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், குண்டான சமணர்களும், கையிலேந்திய மண்டையில் உணவு உண்டு திரியும் புத்தர்களும், அச் சமயங்களைக் கண்டவர்களும், அநுட்டிப்போர்களும் முன்பு அறியாத திருக்கயிலாய மலையாகும்.

திருக்கயிலாயம்

அந்தண்வரை வந்தபுன றந்ததிரை
சந்தனமொ டுந்தியகிலும்

கந்தமலர் கொந்தினொடு மந்திபல
சிந்துகயி லாயமலைமேல்
எந்தையடி வந்தணுகு சந்தமொடு
செந்தமிழி சைந்தபுகலிப்
பந்தனுரை சிந்தைசெய வந்தவினை
நைந்துபர லோகமௌதே **#736**

அழகிய, குளிர்ச்சி பொருந்திய மலையிலிருந்து விழும் நீரின் அலைகள் சந்தனம், அகில் இவற்றை உந்தித் தள்ள, நறுமணம் கமழும் மலர்க் கொத்துக்களோடு குரங்குக் கூட்டங்கள் சிதறும் திருக்கயிலாயமலையில் வீற்றிருந்தருளும் சிவபெருமானின் திருவடிகளைப் போற்றி, சந்த இசையோடு செந்தமிழில் திருப் புகலியில் அவதரித்து திருஞானசம்பந்தர் அருளிச்செய்த இத்திருப் பதிகத்தை மனத்தால் சிந்தித்து, வாயால் ஓத வினையாவும் நலியப் பரலோகம் எளிதில் பெறக்கூடும்.

திருக்காளத்தி

திருக்காளத்தி

திருக்காளத்தி,
பண் - சாதாரி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காளத்திநாதர்.
தேவியார் : ஞானப்பூங்கோதையாரம்மை.

வானவர்கள் தானவர்கள் வாதைபட
வந்ததொரு மாகடல்விடம்
தானமுது செய்தருள் புரிந்தசிவன்
மேவுமலை தன்னைவினவில்
ஏனமிள மானினொடு கிள்ளைதினை
கொள்ளவெழி லார்கவணினால்
கானவர்த மாமகளிர் கனகமணி
விலகுகா ளத்திமலையே #737

தேவர்களும், அசுரர்களும் வருந்தித் துன்புறுமாறு பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய ஆலகால விடத்தை, தான் அமுது போன்று உண்டு அருள் செய்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் மலை எது என வினவினால், பன்றிகள், இளமான்கள், கிளிகள் இவை தினைகளைக்கவர வேட்டுவ மகளிர்கள் பொன்னாலும், இரத்தினங்களாலும் ஆகிய ஆபரணங்களைக் கவண்கற்களாக வீசி விரட்டும் சிறப்புடைய திருக்காளத்திமலையாகும்.

திருக்காளத்தி

முதுசினவி லவுணர்புர மூன்றுமொரு
நொடிவரையின் மூளவெரிசெய்
சதுரர்மதி பொதிசடையர் சங்கரர்
விரும்புமலை தன்னைவினவில்
எதிரெதிர வெதிர்பிணைய வெழுபொறிகள்
சிதறவெழி லேனமுழுத
கதிர்மணியின் வளரொளிக ளிருளகல
நிலவுகா ளத்திமலையே #738

மிகுந்த கோபத்துடன் மேருமலையை வில்லாகக் கொண்டு பகையசுரர்களின் முப்புரங்களையும் ஒருநொடிப் பொழுதில் எரியுண்ணும்படி செய்த சமர்த்தர் சிவபெருமான். அவர் சந்திரனைத் தரித்த சடையையுடையவர். எல்லா உயிர்கட்கும் நன்மையே செய்பவர்.

அப்பெருமான் வீற்றிருந்தருளும் மலை, எதிரெதிராக உள்ள மூங்கில்கள் உராய்வதால் தோன்றிய நெருப்புப் பொறிகளாலும், பன்றிகள் கொம்பினால் மண்ணைக் கிளறும்போது கிடைத்த மணிகளாலும் இருள் நீங்க விளங்குகின்ற திருக்காளத்தி மலையாகும்.

திருக்காளத்தி

வல்லைவரு காளியைவ குத்துவலி
யாகிமிகு தாரகனைநீ
கொல்லென விடுத்தருள் புரிந்தசிவன்
மேவுமலை கூறிவினவில்
பல்பலவி ருங்கனி பருங்கிமிக
வுண்டவை நெருங்கியினமாய்க்
கல்லதிர நின்றுகரு மந்திவிளை
யாடுகா ளத்திமலையே **#739**

தாரகன் இழைத்த துன்பம் கண்டு, விரைந்து நீக்கவரும் காளியை நோக்கி, “வலிமை மிகுந்த தாரகன் என்னும் அசுரனை நீ கொல்வாயாக” என்று மொழிந்து அருள்செய்த சிவ பெருமான் வீற்றிருந்தருளும் மலை, பலவகைச் சுவைமிகுந்த பெரிய கனிகளின் சாற்றை அருந்தி, ஒரே கூட்டமாய் மொய்த்து, மலை அதிரும்படி கருங்குரங்குகள் விளையாடுகின்ற திருக்காளத்தி மலையாகும்.

திருக்காளத்தி

வேயனைய தோளுமையொர் பாகமது
வாகவிடை யேறிசடைமேல்
தூயமதி சூடிசுடு காடினட
மாடிமலை தன்னைவினவில்
வாய்கலச மாகவழி பாடுசெய்யும்
வேடன்மல ராகுநயனம்
காய்கணை யினாலிடந் தீசனடி
கூடுகா ளத்திமலையே **#740**

மூங்கிலைப் போன்ற தோளுடைய உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு, இடப வாகனத்தில் ஏறி, சடைமுடியில் தூயசந்திரனைச் சூடி,சுடுகாட்டில் நடனம் ஆடும் சிவபெருமான் வீற்றிருந்தருளும் மலை, வாயே அபிடேக கலசமாக வழிபாடு செய்த வேடராகிய கண்ணப்பர், தம் மலர்போன்ற கண்ணைக் கொடிய அம்பினால் தோண்டி இறைவனுக்கு அப்பி, இறைவனின் திருவடியைச் சார்ந்த சிறப்புடைய திருக்காளத்தி மலையாகும்.

திருக்காளத்தி

மலையின்மிசை தனின்முகில்போல் வருவதொரு
மதகரியை மழைபொலலறக்
கொலைசெய்துமை யஞ்சவுரி போர்த்தசிவன்
மேவுமலை கூறிவினவில்
அலைகொள்புன லருவிபல சுனைகள்வழி
யிழியவய னிலவுமுதுவேய்
கலகலென வொளிகொள்கதிர் முத்தமவை
சிந்துகா ளத்திமலையே **#741**

மலையின்மேல் தவழும் மேகம்போல் வந்த மதம்பொருந்திய யானையானது இடிபோல் பிளிற, அதனைக் கொன்று உமாதேவி அஞ்சும்படி அதன் தோலைப் போர்த்திக் கொண்ட சிவபெருமான் வீற்றிருந்தருளும் மலை, அலைகளையுடைய நீர் மலையிலிருந்து அருவிபோல் இழிந்து, பல சுனைகளின் வழியாக வயல்களில் பாய, அருகிலுள்ள முற்றிய மூங்கில்கள் கலகல என்ற ஒலியுடன், கதிர்போல் ஒளிரும் முத்துக்களைச் சிந்தும் திருக்காளத்திமலையாகும்.

திருக்காளத்தி

பாரகம் விளங்கிய பகீரத
னருந்தவ முயன்றபணிகண்
டாரருள் புரிந்தலைகொள் கங்கைசடை
யேற்றவரன் மலையைவினவில்
வாரத ரிருங்குறவர் சேவலின்
மடுத்தவ ரெரித்தவிறகில்
காரகி லிரும்புகை விசும்புகமழ்
கின்றகா ளத்திமலையே **#742**

பாரதபூமியில் சிறந்து விளங்கிய பகீரதன் என்னும் மன்னன், பிதிரர்கட்கு நற்கதி உண்டாகுமாறு அரியதவம் செய்து வானிலுள்ள கங்கையைப் பூவுலகிற்குக் கொண்டுவர, அவனுக்கு அருள்செய்து, பெருக்கெடுத்த கங்கையைத் தன் சடையில் தாங்கிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் மலை, நெடிய வழிகளையுடைய கானக் குறவர்கள் தங்கள் குடிசையில் அடுப் பெரித்த, கரிய அகில் கட்டையிலிருந்து கிளம்பிய பெரியபுகை ஆகாயத்தில் மணக்கின்ற திருக்காளத்திமலையாகும்.

திருக்காளத்தி

ஆருமெதி ராதவலி யாகிய
சலந்தரனை யாழியதனால்

ஈரும்வகை செய்தருள் புரிந்தவ
னிருந்தமலை தன்னைவினவில்
ஊருமர வம்மொளிகொண் மாமணி
யுமிழ்ந்தவை யுலாவிவரலால்
காரிருள் கடிந்துகன கம்மென
விளங்குகா ளத்திமலையே **#743**

தன்னை எதிர்த்துப் போர்செய்ய யாரும் வாராத, வலிமை மிகுந்த சலந்தராசுரனின் தலையைச் சக்கராயுதத்தால் பிளந்து தேவர்கட்கு அருள்புரிந்து சிவபெருமான் வீற்றிருந்தருளும் மலை, ஊர்ந்து செல்லுகின்ற பாம்புகள் உமிழ்ந்த இரத்தினங்களின் ஒளியால் கரிய இருள் நீங்கப் பெற்று, பொன்மலைபோல் பிரகாசிக்கின்ற திருக்காளத்தி மலையாகும்.

<u>திருக்காளத்தி</u>

எரியனைய சுரிமயி ரிராவணனை
யீடழிய எழில்கொள்விரலால்
பெரியவரை யூன்றியருள் செய்தசிவன்
மேவுமலை பெற்றிவினவில்
வரியசிலை வேடுவர்க ளாடவர்க
ணீடுவரை யூடுவரலால்
கரியினொடு வரியுழுவை யரியினமும்
வெருவுகா ளத்திமலையே **#744**

நெருப்புப்போல் சிவந்த சுருண்ட முடிகளையுடைய இராவணனின் வலிமை அழியுமாறு, தன் அழிகிய காற்பெருவிரலை ஊன்றிப் பெரிய கயிலைமலையின் கீழ் அவனை அழுத்தி, பின் அருள்செய்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் மலை, நீண்ட வில்லேந்திய வேடர்கள் நெடிய மலையினூடே வருவதால், யானைகளும், வரிகளையுடைய புலிகளும், சிங்கக் கூட்டங்களும் அஞ்சுகின்ற திருக்காளத்திமலையாகும்.

<u>திருக்காளத்தி</u>

இனதளவி லிவனதடி யிணையுமுடி
யறிதுமென விகலுமிருவர்
தனதுருவ மறிவரிய சகலசிவன்
மேவுமலை தன்னை வினவில்
புனவர்புன மயிலனைய மாதரொடு
மைந்தரு மணம்புணருநாள்
கனகமென மலர்களணி வேங்கைக

ணிலாவுகா ளத்திமலையே #745
குறிப்பிட்ட இந்தக் கால எல்லைக்குள்

திருக்காளத்தி

நின்றுகவ ளம்பலகொள் கையரொடு
மெய்யிலிடு போர்வையவரும்
நன்றியறி யாதவகை நின்றசிவன்
மேவுமலை நாடிவினவில்
குன்றின்மலி துன்றுபொழி னின்றகுளிர்
சந்தின்முறி தின்றுகுலவிக்
கன்றினொடு சென்றுபிடி நின்றுவிளை
யாடுகா ளத்திமலையே #746

நின்று கொண்டே கவளமாக உணவு உண்ணும் சமணர்களும், உடம்பில் போர்த்த போர்வையுடைய புத்தர்களும் தனது பேரருளை அறியாவண்ணம் விளங்கும் சிவபெருமான் வீற்றிருந்தருளும் மலை, நெருங்கிய சோலைகளில் உள்ள குளிர்ந்த சந்தனத் தழைகளைத் தம் கன்றுகளுடன் சென்று தின்று பெண் யானைகள் விளையாடுகின்ற திருக்காளத்தி மலையாகும்.

திருக்காளத்தி

காடதிட மாகநட மாடுசிவன்
மேவுகா ளத்திமலையை
மாடமொடு மாளிகைக ணீடுவளர்
கொச்சைவய மன்னுதலைவன்
நாடுபல நீடுபுகழ் ஞானசம்
பந்தனுரை நல்லதமிழின்
பாடலொடு பாடுமிசை வல்லவர்க
ணல்லர்பர லோகமெளதே #747

சுடுகாட்டை அரங்காகக் கொண்டு ஆடுகின்ற சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற காளத்திமலையைப் போற்றி, மாடமாளிகைகள் நீண்டு ஓங்கி வளர்ந்தள்ள கொச்சைவயம் என்னும் சீகாழியின் நிலைபெற்ற தலைவனும், பலநாடுகளிலும் பரவிய புகழையுடையவனுமாகிய ஞானசம்பந்தன் நல்ல தமிழில் அருளிய இப்பாடல்களை இசையுடன் ஓத வல்லவர்கள் சிறந்தவர்களாவர். அவர்கள் சிவலோகம் அடைதல் எளிதாகும்.

திருமயிலாடுதுறை

திருமயிலாடுதுறை

திருமயிலாடுதுறை,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாயூரநாதர்.
தேவியார் : அஞ்சநாயகியம்மை.

ஏனவெயி றாடரவொ டென்புவரி
யாமையிவை பூண்டிளைஞராய்க்
கானவரி நீடுழுவை யதளுடைய
படர்சடையர் காணியெனலாம்
ஆனபுகழ் வேதியர்க ளாகுதியின்
மீதுபுகை போகியழகார்
வானமுறு சோலைமிசை மாசுபட
மூசுமயி லாடுதுறையே #748

சிவபெருமான் பன்றியின் கொம்பும், படமெடுத்து ஆடும் பாம்பும், எலும்பும், வரிகளையுடைய ஆமையோடும் அணிந்து, இளைஞராய், காட்டில் வாழும், வரிகளையுடைய புலித் தோலை ஆடையாக உடுத்தவர், படர்ந்து விரிந்த சடையுடைய அச்சிவ பெருமானைக் கண்டு தரிசிப்பதற்குரிய இடம், புகழ்மிக்க அந்தணர்கள் வளர்க்கும் வேள்வியிலிருந்து எழும்புகை, அழகிய தேவலோகத்திலுள்ள கற்பகச்சோலை மீது அழுக்குப்படப் படியும் திருமயிலாடு துறை என்னும் திருத்தலமாகும்.

திருமயிலாடுதுறை

அந்தண்மதி செஞ்சடைய ரங்கணெழில்
கொன்றையொ டணிந்தழகராம்
எந்தமடி கட்கினிய தானமது
வேண்டிலெழி லார்பதியதாம்
கந்தமலி சந்தினொடு காரகிலும்
வாரிவரு காவிரியுளால்
வந்ததிரை யுந்தியெதிர் மந்திமலர்
சிந்துமயி லாடுதுறையே #749

சிவபெருமான் அழகிய குளிர்ந்த சந்திரனை அணிந்த சிவந்த சடையையுடையவர். அச்சடையிலே அழகிய கொன்றை மாலையை அணிந்த அழகரான எம் சிவபெருமான் வீற்றிருந்தருளும் இனிய இடம்

திருமயிலாடுதுறை என்னும் திருத்தலமாகும். அத்திருத்தலமானது மணம் கமழும் சந்தனமரங்களோடு, கரிய அகில் மரங்களையும் வாரிக் கொண்டு வரும் காவிரியின் அலைகள் தம்மேல் நீர்த்திவலை வீசுவதால், அதனைக் கோபித்து அதற்கு எதிராக, கரையோரத்துச் சோலைகளிலுள்ள குரங்குகள் மலர்களை வீசுகின்ற தன்மையுடன் திகழ்வதாகும்.

திருமயிலாடுதுறை

தோளின்மிசை வரியரவ நஞ்சழல
வீக்கிமிகு நோக்கரியராய்
மூளைபடு வெண்டலையி லுண்டுமுது
காடுறையு முதல்வரிடமாம்
பாளைபடு பைங்கமுகு செங்கனி
யுதிர்த்திட நிரந்துகமழ்பூ
வாளைகுதி கொள்ளமடல் விரியமண
நாறுமயி லாடுதுறையே **#750**

சிவபெருமான், தோளின்மீது வரிகளையுடைய பாம்புநஞ்சை உமிழுமாறு, அதனை இறுக அணிந்தவர். எண்ணுதற்கு அரியவராய் விளங்குபவர். மூளை நீங்கிய பிரமகபாலத்தில் பலியேற்று உண்டு சுடுகாட்டில் வசிப்பவர். எப்பொருட்கும் முதல்வரான அச்சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், காவிரியிலுள்ள வாளைமீன்கள் கரையோரங்களிலுள்ள பாளைபொருந்திய பசிய கமுக மரங்களில் பாய, அவை சிவந்த பழங்களை உதிர்க்க, அதனால் பூ இதழ்கள் விரிய நறுமணம் கமழும் திருமயிலாடுதுறை என்னும் திருத்தலமாகும்.

திருமயிலாடுதுறை

ஏதமில ரரியமறை மலையர்மக
ளாகியவி லங்குநுதலொண்
பேதைதட மார்பதிட மாகவுறை
கின்றபெரு மானதிடமாம்
காதன்மிகு கவ்வையொடு மவ்வலவை
கூடிவரு காவிரியுளால்
மாதர்மறி திரைகள்புக வெறியவெறி
கமழுமயி லாடுதுறையே **#751**

சிவபெருமான் எவ்விதக் குற்றமுமில்லாதவர். அரிய வேதங்களை அருளிச் செய்து அவற்றின் பொருளாகவும் விளங்குபவர். மலையரசன் மகளான. ஒளி பொருந்திய வளைந்த நெற்றியையுடைய உமாதேவியின் அகன்ற மார்பு தன் இடப் பகுதியாக உறைகின்ற சிவபெருமான்

வீற்றிருந்தருளும் இடமாவது. ஆரவாரித்து வரும் அலைகள் மூலம் மல்லிகை முதலிய நறுமணமலர்கள் கூடிவரும் காவிரியில் நீராட மாதர்கள் புக, மணமற்ற பொருள்களும் மணம் கமழப்பெறும் திருமாயிலாடுதுறை என்னும் திருத்தலமாகும்.

திருமயிலாடுதுறை

பூவிரி கதுப்பின்மட மங்கையர
கந்தொறு நடந்துபலிதேர்
பாவிரி யிசைக்குரிய பாடல்பயி
லும்பரமர் பழமையெனலாம்
காவிரி நுரைத்திரு கரைக்குமணி
சிந்தவரி வண்டுகவர
மாவிரி மதுக்கிழிய மந்திகுதி
கொள்ளுமயி லாடுதுறையே **#752**

மலர்ந்த பூக்களைக் கூந்தலில் சூடியுள்ள, தாருகாவனத்து முனிபத்தினிகளின் இல்லங்கள்தோறும் சென்று பிச்சையெடுத்துப் பண்ணோடு கூடிய பாடல்களை இசைக்கும் சிவபெருமான் மிகப் பழமையானவர். காவிரியின் அலைகள் இரு கரைகளிலுமுள்ள சோலைகளில் இரத்தினங்களைச் சிதற, அதனால் அஞ்சி மந்திகள் குதிக்க, மரக்கிளைகளில் மோதி, மாமரத்தில் கட்டப்பட்ட தேன்கூடுகள் கிழியத் தேன் சிந்த, அதனை வண்டுகள் கவர்ந்துண்ணும் வளமிக்க திருமயிலாடுதுறையில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.

திருமயிலாடுதுறை

கடந்திகழ் கருங்களி றுரித்துமையு
மஞ்சமிக நோக்கரியராய்
விடந்திகழு மூவிலைநல் வேலுடைய
வேதியர் விரும்புமிடமாம்
தொடர்ந்தொளிர் கிடந்ததொரு சோதிமிகு
தொண்டையெழில் கொண்டதுவர்வாய்
மடந்தையர் குடைந்தபுனல் வாசமிக
நாறுமயி லாடுதுறையே **#753**

சிவபெருமான் மதம் பொருந்திய கரிய யானையின் தோலை உரித்து உமாதேவி அஞ்சுமாறு போர்த்திக் கொண்டவர். மனத்தால் எண்ணுதற்கு அரியவர். பகைவர்கட்குக் கேடு விளைவிக்கும் மூவிலைச் சூலம் கொண்டவர். வேதங்களை அருளிச் செய்து வேதப்பொருளாகவும் விளங்குபவர். அப்பெருமான் விரும்பி வீற்றிந்தருளும் இடமாவது ஒளிர்கின்ற மேனியும், கொவ்வைப் பழம் போல் அழகிய சிவந்த வாயும்

கொண்ட தேவமகளிர் நீரைக் குடைந்து ஆடுவதால் நீர் நறுமணம் கமழும் சிறப்புடைய திருமயிலாடு துறை என்னும் திருத்தலமாகும்.

திருமயிலாடுதுறை

அவ்வதிசை யாருமடி யாருமுள
ராகவருள் செய்தவர்கண்மேல்
எவ்வமற வைகலு மிரங்கியெரி
யாடுமெம தீசனிடமாம்
கவ்வையொடு காவிரி கலந்துவரு
தென்கரை நிரந்துகமழ்பூ
மவ்வலொடு மாதவி மயங்கிமண
நாறுமயி லாடுருறையே **#754**

அந்தந்தத் திக்குகளிலுள்ள எல்லா அடியவர்களும் நல்ல வண்ணம் வாழும் பொருட்டு அருள்செய்து, அவர்களுடைய வினைகள். நீங்க நாள்தோறும் இரங்கித் தீயேந்தி ஆடுகின்ற எம் இறைவனான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், ஆரவாரத் தோடு வரும் காவிரி - மணமிக்க மல்லிகை, மாரவி முதலான மலர்களைத் தள்ளிவர நறுமணம் கமழும் அதன் தென்கரையிலுள்ள திருமயிலாடுதுறை என்னும் திருத்தலமாகும்.

திருமயிலாடுதுறை

இலங்கையநகர் மன்னன்முடி யொருபதினொ
டிருபருதொ ணெரியவிரலால்
விலங்கலி லடர்த்தருள் புரிந்தவ
ரிருந்தவிடம் வினவுதிர்களேல்
கலங்கனுரை யுந்தியெதிர் வந்தகய
மூகிமலர் கொண்டுமகிழா
மலங்கிவரு காவிரி நிரந்துபொழி
கின்றமயி லாடுதுறையே **#755**

இலங்கை மன்னனான இராவணனின் பத்து மடிகளையும், இருபது தோள்களையும் நெரியும்படி தன்காற் பெருவிரலைக் கயிலைமலையில் ஊன்றி அடர்த்துப் பின் அவனுக்கு அருள்புரிந்தவர் சிவபெருமான். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம், கலங்களோடு நுரையைத் தள்ளி, எதிரேயுள்ள குளத்தில் பாய்ந்து அங்குள்ள மணமிக்க மலர்களை அடித்துக் கொண்டு களிப்புடன் சுழித்து வருகின்ற காவிரியாறு பாய்வதால் வளமிக்க திரும்யிலாடுதுறை என்னும் திருத்தலமாகும்.

திருமயிலாடுதுறை

ஒண்டிறலி னான்முகனு மாலுமிக
நேடிண ராதவகையால்
அண்டமுற வங்கியுரு வாகிமிக
நீண்டவர னாரதிடமாம்
கொண்டையிரை கொண்டுகௌ றாருட
னிருந்துகிளர் வாயறுதல்சேர்
வண்டன்மணல் கெண்டிமட நாரையிளை
யாடுமயி லாடுதுறையே #756
மிகுந்த வலிமையுடைய பிரனும், திருமாலும் தேடியும்
உணரமடியபவண்ணம், அகாயம்வரை அளாவி நெருப்புப் பிழம்பாய்
நீண்டு நின்ற சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது,
கொண்டைமீனை இரையாக உண்டு, கௌறு, ஆரல் முதலிய மீன்கள்
விளங்குகின்ற ஆற்றின் கரையிலுள்ள நாரை, தண்ணீர் அறுத்தலால்
உண்டான வண்டல் மண்ணைக் கிளறி விளையாடும் திருமயிலாடு
துறை என்னும் திருத்தலமாகும்.

திருமயிலாடுதுறை

மிண்டுதிற லமணரொடு சாக்கியரு
மலர்தூற்ற மிக்கதிறலோன்
இண்டைகுடி கொண்டசடை யெங்கள்பெரு
மானதிட மென்பரெழிலார்
தெண்டிரை பரந்தொழுகு காவிரிய
தென்கரை நிரந்துகமழ்பூ
வண்டவை திளைக்கமது வந்தொழுகு
சோலைமயி லாடுதுறையே #757
துடுக்காகப் பேசுகின்ற சமணர்களும், புத்தர்களும் பழித்துக்கூற,
அவர்கள் அறிவிற்கு அப்பாற்பட்ட ஆற்றலுடையவனும்,
இண்டைமாலை சூடிய சடைமுடி உடைய வனுமான எங்கள்
சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, தெளிய அலைகள் உடன்
பாயும் காவிரியாற்றின் தென்கரையில் மணமிக்க பூக்களில் வண்டுகள்
மூழ்கியுண்ண, தேன் வெளிப்பட்டு ஒழுகுகின்ற சோலைகளையுடைய
அழகிய திருமயிலாடுதுறை என்னும் திருத்தலமாகும்.

திருமயிலாடுதுறை

நிணந்தரு மயானநில வானமதி
யாததொரு சூலமொடுபேய்க்
கணந்தொழு கபாலிகழ லேத்திமிக
வாய்த்ததொரு காதன்மையினால்

மணந்தண்மலி காழிமறை ஞானசம்
பந்தன்மயி லாடுதுறையைப்
புணர்ந்ததமிழ் பத்துமிசை யாலுரைசெய்
வார்பெறுவர் பொன்னுலகமே **#758**

இறந்தார் உடலின் கொழுப்புப் பொருந்திய சுடுகாட்டில், பூவுலகிலும், வானுலகிலும் உள்ள வீரர் எவரையும் பொருட்படுத்தாத சிறப்புடைய சூலப்படையோடு, பேய்க்கூட்டங்கள் தொழ, பிரமகபாலத்தை ஏந்தியுள்ள சிவபெருமானின் திருவடிகளை வணங்கி மிக்க அன்புடன், நறுமணமும், குளிர்ச்சியும் பொருந்திய சீகாழியில் அவதரித்த வேதங்களின் உட்பொருளை நன்குணர்ந்த ஞானசம்பந்தன், திருமயிலாடுதுறையைப் போற்றிப்ப பாடிய இத்தமிழ்ப்பாக்கள் பத்தினையும் இசையோடு பாடுகிறவர்கள் சொர்க்கலோகம் அடைவர்.

திருவைகாவூர்

திருவைகாவூர்

திருவைகாவூர்,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வில்லவனேசர்.
தேவியார் : வளைக்கைவல்லியம்மை.

கோழைமிட றாககவி கோளுமில வாகவிசை
கூடும்வகையால்
ஏழையடி யாரவர்கள் யாவை சொன சொன்மகிழு
மீசனிடமாம்
தாழையிள நீர்முதிய காய்கமுகின் வீழநிரை
தாறுசிதறி
வாழையுதிர் வீழ்கனிக ளூறிவயல் சேறுசெயும் வைகாவிலே **#759**

சிவனைத் தவிர வேறு பற்றுக்கோடில்லாத ஏழையடியவர்கள், கோழை பொருந்திய கழுத்து உடையராயினும், பாடும் கவிகளைப் பொருளுணரும்படி நிறுத்திப் பாடாவிடினும், தங்களால் இயன்ற இசையில், பக்தியுடன் பாடுகின்ற பாடல்கள் எவையாய் இருந்தாலும், அவற்றிற்கு மகிழ்கின்றவன் சிவபெருமான். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது தென்னை மரத்தின் முற்றிய காய்கள் கமுக மரத்தில் விழ, அதன் வரிசையான குலைகள் சிதறி வாழைக்குலையில் விழ, அவ்வாழை மரங்களினின்றும் உதிர்ந்து வீழ்கின்ற கனிகள் வயலில் ஊறி அதனைச் சேறாகச் செய்யும் வளமிக்க திருவைகாவூர் என்னும் திருத்தலமாகும்.

திருவைகாவூர்

அண்டமுறு மேருவரை யங்கிகணை நாணரவ
தாகவெழிலார்
விண்டவர்த முப்புரமெ ரித்தவிகிர் தன்னவன்
விரும்புமிடமாம்
புண்டரிக மாமலர்கள் புக்குவிளை யாடுவயல்
சூழ்தடமெலாம்
வண்டினிசை பாடவழகார்குயின்மி ழற்றுபொழில்
வைகாவிலே **#760**

வானளாவிய பெரிய மேருமலையை வில்லாகவும், அக்கினியைக் கணையாகவும், வாசுகி என்னும் பாம்பை நாணாகவும் கொண்டு,

பகையசுரர்களின் அழகிய முப்புரங்களை எரியுண்ணும்படி செய்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, தாமரை மலர்களில் வண்டுகள் புகுந்து தேனுண்டு விளையாடி, வயல்களில் அவற்றைச் சுற்றியுள்ள குளங்களிலும் தேனுண்ட மகிழ்ச்சியில் இசைபாட, அதற்கேற்ப அழகிய குயில்கள் கூவுகின்ற சோலைகளையுடைய திருவைகாவூர் என்னும் திருத்தலமாகும்.

திருவைகாவூர்

ஊனமில ராகியுயர் நற்றவமெய் கற்றவை
யுணர்ந்தவடியார்
ஞானமிக நின்றுதொழ நாளுமருள் செய்யவல
நாதனிடமாம்
ஆனவயல் சூழ்தருமல் சூழியரு கேபொழில்க
டோறுமழகார்
வானமதி யோடுமழை நீண்முகில்கள் வந்தணவும்
வைகாலிலே **#761**

மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களால் செய்யப்படும் குற்றங்கள் இல்லாதவர்களாய், நல்ல தவத்தை மேற்கொண்டு, பதிநூல்களை நன்கு கற்று, கேட்டுத் தெளய உணர்ந்த அடியார்கள் ஞானத்தால் வணங்க, நாடேறும் அருள் செய்ய வல்ல சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, நல்ல வயல் வளமும் அழகிய சந்திரனைத் தொடும்படி ஓங்கியுயர்ந்த மதில்களும், மழைதரும் மேகங்கள் தவழும் சோலைகளும் விளங்குகின்ற திருவைகாவூர் என்னும் திருத்தலமாகும்.

திருவைகாவூர்

இன்னவுரு வின்னநிற மென்றறிவ தேலரிது
நீதிபலவும்
தன்னவுரு வாமெனமி குத்ததவ னீதியொடு
தானர்விடம்
முன்னைவினை போய்வகையி னான்முழு
துணர்ந்துமுயல்
கின்றமுனிவர்
மன்னவிரு போதுமரு வித்தொழுது சேரும்வயல்
வைகாவிலே **#762**

சிவபெருமானை இன்ன உருவம் உடையவன்; இன்ன நிறம் உடையவன் என்று உயிர்கள் தம் ஆன்ம போதத்தால் அறியமுடியாது. புண்ணியங்கள் பலவும் தனது உரு என்று சொல்லும்படி மிகுந்த தவக்கோலத்தை உடையவன். அப்பெருமான் அருளோடு

வீற்றிருந்தருளும் இடம், முன்னை வினைகளெல்லாம் நீங்க, அவனை வணங்கும் நெறிகளை முறைப்படி முழுவதும் உணர்ந்து நிட்டைகூட முயல்கின்ற முனிவர்கள் காலை, மாலை என்ற இருவேளைகளிலும் சென்று தொழுது போற்றும், வயல்வளம் பொருந்திய திருவைகாவூர் என்னும் திருத்தலமாகும்.

திருவைகாவூர்

வேதமொடு வேள்விபல வாயினமி குத்துவிதி
யாறுசமயம்
ஓதியுமு ணர்ந்துமுள தேவர்தொழ நின்றருள்செ
யொருவனிடமாம்
மேதகைய கேதகைள் புன்னையொடு ஞாழலவை
மிக்கவழகார்
மாதவிம ணங்கமழ வண்டுபல பாடுபொழில்
வைகாவிலே **#763**

வேதங்களை ஓதியும், ஓதுவித்தும், வேள்விகள் பலசெய்தும், விதிப்படி ஆறு சமயநூல்களைக் கற்றும், உணர்ந்தும் உள்ள பூவுலகதேவர்கள் என்று போற்றப்படும் அந்தணர்கள் தொழ அவர்கட்கு அருள்செய்கின்ற சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், சிறந்த தாழைகள், புன்னை, புலிநகக்கொன்றை மிகுந்துள்ளதும், மிக்க அழகுடைய மாதவிக் கொடிகள் நறுமணம் கமழவும் வண்டுகள் பல பாடவும் விளங்கும் சோலைகள் சூழ்ந்ததுமாகிய திருவைகாவூர் என்னும் திருத்தலமாகும்.

திருவைகாவூர்

நஞ்சமுது செய்தமணி கண்டனமை யாளுடைய
ஞானமுதல்வன்
செஞ்சடையி டைப்புனல்க ரந்தசிவலோகனமர்
கின்றவிடமாம்
அஞ்சுடரொ டாறுபத மேழினிசை யெண்ணரிய
வண்ணமுளவாய்
மைஞ்சரொடு மாதர்பல ருந்தொழுது சேரும்வயல்
வைகாவிலே **#764**

சிவபெருமான் நஞ்சை அமுது போன்று உட்கொண்டவன். நம்மை ஆட்கொள்கின்ற ஞானமுதல்வன். சிவந்த சடையிலே கங்கையை ஒளித்த சிவலோக நாயகனாகிய அச்சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது அழகிய தீபச்சுடருடன், பிரணவம் முதலாகிய பஞ்சாட்சரத்தைப் பொருளுணர்ந்தது உச்சரித்து, ஏழுசுரங்களோடு பாடும் தோத்திரப் பாடல்களைப் பாடி, எண்ண முடியாத விதத்தில்

ஆடவர்களோடு மகளிர்கள் பலரும் தொழுது வணங்கும், வயல்வளமிக்க திருவைகாவூர் என்னும் திருத்தலமாகும்.

திருவைகாவூர்

நாளுமிகு பாடலொடு ஞானமிகு நல்லமலர்
வல்லவகையால்
தோளினொடு கைகுளிர வேதொழும வர்க்கருள்செய்
சோதியிடமாம்
நீளவளர் சோலைதொறு நாளிபல துன்றுகனி
நின்றதுதிர
வாளைகுதிகொள்ளமது நாறமலர் விரியும்வயல்
வைகாவிலே **#765**

நாள்தோறும் பக்தியோடு தோத்திரப் பாடல்கள் பாடி, ஞானமலர்களான கொல்லாமை, அருள், ஐம்பொறி அடக்கல், பொறை, தவம், வாய்மை, அன்பு, அறிவு இவை கொண்டு தோள்களும், கைகளும் கூப்பித் தொழுபவர்கட்கு அருள் செய்கின்ற சோதிவடிவான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, நீண்டு வளர்ந்த சோலைகளிலுள்ள தென்னைகளிலிருந்து முற்றிய நெற்றுக்கள் உதிர, அதனால் வாளைமீன்கள் துள்ளிப்பாய, அதனால் தேன்மணக்கும் மலர்கள் விரிய வயல்கள் சூழ்ந்த திருவைகாவூர் என்னும் திருத்தலம் ஆகும்.

திருவைகாவூர்

கையிருப தோடுமெய்க லங்கிடவி லங்கலையெ
டுத்தகடியோன்
ஐயிருசி ரங்களையொ ருங்குடனெ ரித்தவழ
கன்றனிடமாம்
கையின்மலர் கொண்டுநல காலையொடு மாலைகரு
திப்பலவிதம்
வையகமெ லாமருவி நின்றுதொழு தேத்துமெழில்
வைகாவிலே **#766**

இருபது கைகளும், வலிமையான உடம்பும் துன்புறும்படி பெரிய கயிலைமலையைப் பெயர்த்த தீயோனான இராவணனின் பத்துத் தலைகளையும் ஒருங்கே நெரித்த அழகனான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், இவ்வையகத்திலுள்ள அடியவர்கள் பலர் கையில் மலர் கொண்டு, காலையும், மாலையும் தியானித்து, பக்தியுடன் பலவிதத் தோத்திரங்களைப் பாடி வணங்கிப் போற்றுகின்ற அழகிய திருவைகாவூர் என்னும் திருத்தலமாகும்.

திருவைகாவூர்

அந்தமுத லாதிபெரு மானமரர் கோனையயன்
மாலுமிவர்கள்
எந்தைபெரு மானிறைவ னென்றுதொழ நின்றருள்செ
யீசனிடமாம்
சிந்தைசெய்து பாடுமடி யார்பொடிமெய் பூசியெழு
தொண்டரவர்கள்
வந்துபல சந்தமலர் முந்தியணை யும்பதிநல்
வைகாவிலே **#767**

இவ்வுலக ஒடுக்கத்திற்கும், தோற்றத்திற்கும் நிமித்த காரணனான சிவபெருமான், பிரமனும், திருமாலும் தங்கள் செருக்கொழிந்து "எம் தந்தையே! தலைவனே! இறைவனே" என்று தொழுது போற்ற அவர்கட்கு அருள் செய்து வீற்றிருந்தருளும் இடமாவது, சிந்தித்துப் பாடும் அடியார்களும், தன் மேனியிலே திருநீற்றைப் பூசியுள்ள தொண்டர்களும் நறுமணம் கமழும் மலர்களை ஏந்தி, வழிபடுவதற்கு ஒருவரையொருவர் முந்துகின்ற, நற்கதிதரும் திருத்தலமாகிய திருவைகாவூர் ஆகும்.

திருவைகாவூர்

ஈசனெமை யாளுடைய வெந்தைபெரு மானிறைவ
னென்றுதனையே
பேசுதல்செ யாவமணர் புத்தரவர் சித்தமணை
யாவவனிடம்
தேசமதெ லாமருவி நின்றுபர வித்திகழ
நின்றபுகழோன்
வாசமல ரானபல தூவியணை யும்பதிநல்
வைகாவிலே **#768**

சிவபெருமானை எம்மை ஆட்கொள்ளும் தந்தை, தலைவன், இறைவன் என்று போற்றுதல் செய்யாத சமணர்கள், புத்தர்கள் இவர்களின் சித்தத்தில் புகாத அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, எல்லா தேசத்தாரும் கூடிநின்று போற்ற, நிலைத்த புகழுடைய அப்பெருமானை நறுமணமிக்க நல்மலர்களைத் தூவி வழிபட நற்கதிதரும் திருத்தலமாகிய திருவைகாவூர் ஆகும்.

திருவைகாவூர்

முற்றுநமை யாளுடைய முக்கண்முதல் வன்றிருவை
காவிலதனை

செற்றமலி னார்சிரபு ரத்தலைவன் ஞானசம்
பந்தனு ரைசெய்
உற்றதமிழ் மாலையீ ரைந்துமிவை வல்லவ
ருருத்திரரெனப்
பெற்றமர லோகமிக வாழ்வர்பிரி யாரவர்பெ
ரும்புகழொடே **#769**
முழுவதுமாய் நம்மை ஆட்கொண்ட முக்கண்ணுடைய முதல்வனான சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருவைகாவில் என்னும் திருத்தலத்தைப் போற்றி, தன்னையடைந்தோர் வினைகளை அழிக்கும் சிரபுரத்தில் அவதரித்த தலைவனான ஞானசம்பந்தன் அருளிய இத்தமிழ்ப்பாக்கள் பத்தினையும் ஓத வல்லவர்கள் உருத்திரர்களாகிச் சிவலோகத்தில் முத்தியின்பத்தில் இருந்து பிரியாது புகழுடன் வாழ்வர்.

திருமாகறல்

திருமாகறல்,
பண் - சாதாரி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அடைக்கலங்காத்தநாதர்.
தேவியார் : புவனநாயகியம்மை.

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை யாடலரவம்
மங்குலொடு நீள்கொடிகண் மாடமலி
நீடுபொழின் மாகறலுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர்
திங்களணி செஞ்சடையினான்
செங்கண்விடை யண்ணலடி சேர்பவர்கள்
தீவினைகள் தீருமுடனே **#770**

நன்றாக இஞ்சி விளையும் வயலில் பணிசெய்யும் பள்ளத்தியர்களின் பாடலும், ஆடலுமாகிய ஓசை விளங்க, மேகத்தைத்தொடும்படி நீண்ட கொடிகளும், உயர்ந்த மாடமாளிகைகளும், அடர்ந்த சோலைகளும் கொண்ட திருமாகறல் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றான் சிவபெருமான். நறுமணம் கமழும் கொன்றை மலரும், கங்கையும், பிறைச்சந்திரனும் அணிந்த சிவந்த சடையை உடையவனும், சிவந்த கண்களையுடைய திருமாலாகிய இடபத்தை உடையவனுமான அப்பெருமானின் திருவடிகளை இடைவிடாது நினைப்பவர்களின் தீவினைகள் உடனே தீரும்.

திருமாகறல்

கலையினொலி மங்கையர்கள் பாடலொலி
யாடல்கவி னெய்தியழகார்
மலையினிகர் மாடமுயர் நீள்கொடிகள்
வீசுமலி மாகறலுளான்
இலையின்மலி வேல்நுனைய சூலம்வல
னேந்தியெரி புன்சடையினுள்
அலைகொள்புன லேந்துபெரு மானடியை
யேத்தவினை யகலுமிகவே **#771**

வேதாகமக் கலைகளைக் கற்பவர்களின் ஒலியும், பெண்களின் பாடல், ஆடல் ஒலிகளும் சேர்ந்து இனிமை தர, அழகிய மலையை ஒத்த உயர்ந்த

மாட மாளிகைகளில் நீண்ட கொடிகள் அசை செல்வ வளமிக்க திருமாகறல் என்னும் திருத்தலத்தில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான். இலைபோன்ற அமைப்புடைய வேலையும், கூர்மையான நுனியுடைய சூலத்தையும், வலக்கையிலே ஏந்தி, நெருப்புப் போன்ற சிவந்த புன்சடையில் அலைகளையுடைய கங்கையைத் தாங்கிய அச்சிவபெருமானின் திருவடிகளைப் போற்ற வினை முற்றிலும் நீங்கும்.

திருமாகறல்

காலையொடு துந்துபிகள் சங்குகுழல்
யாழ்முழவு காமருவுசீர்
மாலைவழி பாடுசெய்து மாதவர்க
ளேத்திமகிழ் மாகறலுளான்
தோலையுடை பேணியதன் மேலொர்சுடர்
நாகமசை யாவழகிதாப்
பாலையன நீறுபுனை வானடியை
யேத்தவினை பறையுமுடனே **#772**

துந்துபி, சங்கு, குழல், யாழ், முழவு முதலிய வாத்தியங்கள் ஒலிக்க, காலையும் மாலையும் வழிபாடு செய்து முனிவர்கள் போற்றி வணங்க மகிழ்வுடன் சிவபெருமான் திருமாகறல் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றான். அப்பெருமான் தோலாடையை விரும்பி அணிந்து, அதன்மேல் ஒளிவிடும் நாகத்தைக் கச்சாகக் கட்டி, அழகுறப் பால்போன்ற திருவெண்ணீற்றைப் பூசி விளங்குகின்றான். அவனுடைய திருவடிகளைப் போற்றி வணங்க, உடனே வினையாவும் நீங்கும்.

திருமாகறல்

இங்குகதிர் முத்தினொடு பொன்மணிக
ளுந்தியெழின் மெய்யுளுடனே
மங்கையரு மைந்தர்களு மன்னுபுன
லாடிமகிழ் மாகறலுளான்
கொங்குவளர் கொன்றைகுளிர் திங்களணி
செஞ்சடையி னானடியையே
நுங்கள்வினை தீரமிக வேத்திவழி
பாடுநுகரா வெழுமினே **#773**

ஒளிர்கின்ற முத்து, பொன், மணி இவற்றை ஆபரணங்களாக அணியப்பெற்ற பெண்கள் தங்கள் துணைவர்களுடன் நீராடி மகிழ்கின்ற திருமாகறல் என்னும் திருத்தலத்தில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான். அப்பெருமான் நறுமணம் கமழும்

கொன்றையையும், குளிர்ந்த சந்திரனையும் சிவந்த சடையில் அணிந்துள்ளான். அவனுடைய திருவடிகளை உங்கள் வினைதீர மிகவும் போற்றி வழிபட எழுவீர்களாக.

திருமாகறல்

துஞ்சுநறு நீலமிரு ணீங்கவொளி
தோன்றுமது வார்கழனிவாய்
மஞ்சுமலி பூம்பொழிலின் மயில்கண்ட
மாடமலி மாகறலுளான்.
வஞ்சமத யானையுரி போர்த்துமகிழ்
வானொர்மழு வாளன் வளரும்
நஞ்சமிருள் கண்டமுடை நாதனடி
யாரைநலி யாவினைகளே #774

நறுமணம் கமழும் நீலோற்பல மலர்கள் இருட்டில் இருட்டாய் இருந்து, இருள்நீங்கி விடிந்ததும் நிறம் விளங்கித் தோன்றுகின்றன. நிறையப் பூக்கும் அம்மலர்கள் தேனை வயல்களில் சொரிகின்றன. அருகிலுள்ள, மேகங்கள் படிந்துள்ள பூஞ்சோலைகளில் மயில்கள் நடனமாடுகின்றன. இத்தகைய சிறப்புடைய திருமாகறல் என்னும் திருத்தலத்தில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான். அப்பெருமான் வஞ்ச முடைய மதயானையின் தோலை உரித்துப் போர்த்து மகிழ்கின்றான். ஒப்பற்ற மழுப்படையை உடையவன். நஞ்சை யுண்டு மிக இருண்ட கழுத்தையுடையவன். அத்தலைவனான சிவபெருமானின் அடியார்களை வினைகள் துன்புறுத்தா.

திருமாகறல்

மன்னுமறை யோர்களொடு பல்படிம
மாதவர்கள் கூடியுடனாய்
இன்னவகை யாலினிதி றைஞ்சியிமை
யோரிலெழு மாகறலுளான்
மின்னைவிரி புன்சடையின் மேன்மலர்கள்
கங்கையொடு திங்களெனவே
உன்னுமவர் தொல்வினைக ளொல்கவுயர்
வானுலக மேறலெளதே #775

என்றும் நிலைத்திருக்கும் வேதங்களை நன்கு கற்ற அந்தணர்களும், பலவிதத் தவக்கோலங்கள் தாங்கிய முனிவர்களும் கூடி இறைவனை இனிது இறைஞ்சும் தன்மையில் தேவர்களை ஒத்து விளங்குகின்ற திருமாகறல் என்னும் திருத்தலத்தில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான். அப்பெருமான் மின்னல்போல் ஒளிரும் விரிந்த

செஞ் சடையின்மேல் மலர்களையும், கங்கையையும், பிறைச் சந்திரனையும் அணிந்துள்ளான். அப்பெருமானை நினைந்து வழிபடுபவர்களின் தொல்வினைகள் நீங்க, உயர் வானுலகை அவர்கள் எளிதில் அடைவர்.

திருமாகறல்

வெய்யவினை நெறிகள்செல வந்தணையு
மேல்வினைகள் விட்டலுறுவீர்
மைகொள்விரி கானன்மது வார்கழனி
மாகறலு ளானெழிலதார்
கையகரி கால்வரையின் மேலதுரி
தோலுடைய மேனியழகார்
ஐயனடி சேர்பவரை யஞ்சியடை
யாவினைக ளகலுமிகவே **#776**

கொடிய வினைகள் தாம் வந்த வழியே செல்லவும், இனி இப்பிறவியில் மேலும் ஈட்டுதற்குரிய ஆகாமிய வினைகளை ஒழிக்க வல்லவர்களே! மேகங்கள் தவழும் ஆற்றங்கரைச் சோலைகளிலுள்ள பூக்களிலிருந்து தேன் ஒழுகும் வயல்களையுடைய திருமாகறல் என்னும் திருத்தலத்தில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான். அப்பெருமான் யானையின் தோலை உரித்துப் போர்த்த அழகிய திருமேனியுடையவன். யாவர்க்கும் தலைவனான அப்பெருமானின் திருவடிகளை நினைந்து வழிபடுபவர்களை வினையானது அடைய அஞ்சி அகன்று ஓடும்.

திருமாகறல்

தூசுதுகி னீள்கொடிகண் மேகமொடு
தோய்வனபொன் மாடமிசையே
மாசுபடு செய்கைமிக மாதவர்க
ளோதிமலி மாகறலுளான்
பாசுபத விச்சைவரி நச்சரவு
கச்சையுடை பேணியழகார்
பூசுபொடி யீசனென வேத்தவினை
நிற்றலில போகுமுடனே **#777**

பொன்மயமான மாடங்களின் உச்சியில் கட்டப் பட்டுள்ள வெண்துகிலாலான கொடிகள் கருநிற மேகத்தைத் தொடுகின்ற மாசுபடு செய்கை தவிர வேறு குற்றமில்லாத, பெரிய தவத்தார்கள், வேதங்கள் ஓத விளங்கும் திருமாகறல் என்னும் திருத்தலத்தில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான். அப்பெருமான் பாசுபத கோலத்தை விரும்பி, வரிகளையுடைய விடமுடைய பாம்பைக் கச்சாக அணிந்த

அழகுடையவன். திருவெண்ணீற்றைப் பூசியவன். அவனைப் போற்றி வழிபட வினையாவும் நில்லாது உடனே விலகிச் செல்லும்.

திருமாகறல்

தூயவிரி தாமரைக ணெய்தல்கழு
நீர்குவளை தோன்றமதுவுண்
பாயவரி வண்டுபல பண்முரலு
மோசைபயின் மாறலுளான்
சாயவிர லூன்றியவி ராவணன
தன்மைகெட நின்றபெருமான்
ஆயபுக ழேத்துமடி யார்கள்வினை
யாயினவு மகல்வதெளதே #778

தூய்மையான தாமரை, நெய்தல், கழுநீர், குவளை போன்ற மலர்கள் விரிய, அவற்றிலிருந்து தேனைப் பருகும் வரிகளையுடைய வண்டுகள் பண்ணிசையோடு பாடுதலால் ஏற்படும் ஓசை மிகுந்த திருமாகறல் என்னும் திருத்தலத்தில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான். அவன் தன் காற்பெருவிரலை ஊன்றி இராவணனின் வலிமை கெடுமாறு செய்தவன். அப்பெருமானின் புகழைப் போற்றி வணங்கும் அடியவர்களின் வினை எளிதில் நீங்கும்.

திருமாகறல்

காலினல பைங்கழல்க ணீண்முடியின்
மேலுணர்வு காமுறவினார்
மாலுமல ரானுமறி யாமையெரி
யாகியுயர் மாகறலுளான்
நாலுமெரி தோலுமுரி மாமணிய
நாகமொடு கூடியுடனாய்
ஆலும்விடை யூர்தியுடை யடிகளடி
யாரையடை யாவினைகளே #779

பைம்பொன்னாலாகிய வீரக்கழல்களை அணிந்த திருவடிகளையும், நீண்ட சடைமுடியையும் காணவேண்டும் என்ற விருப்பமுடன் முயன்ற திருமாலும், பிரமனும் அறியாவண்ணம் நெருப்புப் பிழம்பாய் ஓங்கி நின்ற சிவபெருமான் திருமாகறலில் வீற்றிருந்தருளுகின்றான். உடம்பில் நாலிடத்து நெருப்பைக் கொண்டும், தோலுரித்து மாணிக்கத்தைக் கக்கும் பாம்பணிந்தும், அசைந்து நடக்கின்ற இடபத்தை வாகனமாகக் கொண்டுள்ள சிவபெருமானின் அடியார்களை வினைகள் அடையா.

திருமாகறல்

கடைகொணெடு மாடமிக வோங்குகமழ்
வீதிமலி காழியவர்கோன்
அடையும்வகை யாற்பரவி யரனையடி
கூடுசம் பந்துனுரையால்
மடைகொள்புன லோடுவயல் கூடுபொழின்
மாகறலுளா னடியையே
உடையதமிழ் பத்துமுணர் வாரவர்கள்
தொல்வினைக ளொல்குமுடனே **#780**

வாயில்களையுடைய மிக உயர்ந்த நீண்ட மாடங்களும், நறுமணம் கமழும் வீதிகளும் உடைய சீகாழியில் வாழ்பவர்கட்குத் தலைவனான திருஞானசம்பந்தன், சிவபெருமானைச் சேர்தற்குரிய நெறிமுறைகளால் துதித்து, மடைகளில் தேங்கிய தண்ணீர் ஓடிப் பாய்கின்ற வயல்களும், நெருங்கிய சோலைகளுமாக நீர்வளமும், நிலவளமுமிக்க திருமாகறல் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் அப்பெருமானைப் போற்றி அருளிய இத்தமிழ்ப் பாக்கள் பத்தினையும் உணர்ந்து ஓதவல்லவர்களின் தொல்வினைகள் நீங்கும்.

திருப்பட்டீச்சரம்

திருப்பட்டீச்சரம்

திருப்பட்டீச்சரம்,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பட்டீச்சரநாதர்.
தேவியார் : பல்வளைநாயகியம்மை.

பாடன்மறை சூடன்மதி பல்வளையொர்
பாகமதின் மூன்றொர்கணையால்
கூடவெரி யூட்டியெழில் காட்டிநிழல்
கூட்டுபொழில் சூழ்பழைசையுள்
மாடமழ பாடியுறை பட்டிசர
மேயகடி கட்டரவினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி
காட்டிவினை வீடுமவரே **#781**

சிவபெருமான் வேதங்களை அருளிச்செய்து வேதப் பொருளாயும் விளங்குபவர். பிறைச்சந்திரனைச் சூடியவர். பல வளையல்களையணிந்த உமாதேவியைத் தம் திருமேனியின் ஒரு பாகமாகக் கொண்டவர். மதில்கள் மூன்றினையும் ஒரு கணையால் எரித்த வீர அழகைக் காட்டியவர். நிழல்தரும் சோலைகள் சூழ்ந்த திருப்பழையாறையில், மாடங்களையுடைய திருமழபாடி என்னும் நகரில், திருப்பட்டீச்சரம் என்னும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்றார். பாம்பைக் கச்சாகக் கட்டியவர். வேடநிலைக்கேற்ப நல்லொழுக்கத்தில் நிற்கும் அடியவர்களின் வினைகளைப் போக்கி முத்திநெறி அருளவல்லவர்.

திருப்பட்டீச்சரம்

நீரின்மலி புன்சடையர் நீளரவு
கச்சையது நச்சிலையதோர்
கூரின்மலி சூலமது வேந்தியுடை
கோவணமு மானினுரிதோல்
காரின்மலி கொன்றைவிரி தார்கடவுள்
காதல்செய்து மேயநகர்தான்
பாரின்மலி சீர்பழைசை பட்டிசர
மேத்தவினை பற்றழியுமே **#782**

சிவபெருமான் கங்கையைச் சடையில் தாங்கியவர். நீண்ட பாம்பைக்

கச்சாகக் கட்டியவர். கூர்மையான இலைபோன்ற வடிவுடைய கொடிய சூலப்படையை ஏந்தியவர். கோவண ஆடை அணிந்தவர். மான் தோலையும் அணிந்தவர். கார்காலத்தில் மலரும் கொன்றையை மாலையாக அணிந்தவர். அத்தகைய கடவுள் விரும்பி வீற்றிருந்தருளும் தலமாவது பூமியில் மிக்க புகழையுடைய திருப்பழையாறை ஆகும். அங்குள்ள திருப்பட்டீச்சரம் என்னும் கோயிலிலுள்ள இறைவனைப் போற்றி வணங்க நம் வினைகள் யாவும் அடியோடு அழியும்.

<u>திருப்பட்டீச்சரம்</u>

காலைமட வார்கள்புன லாடுவது
கௌவைகடி யார்மறுகெலாம்
மாலைமண நாறுபழை யாறைமழ
பாடியழ காயமலிசீர்ப்
பாலையன நீறுபுனை மார்பனுறை
பட்டிசர மேபரவுவார்
மேலையொரு மால்கடல்கள் போல்பெருகி
விண்ணுலக மாளுமவரே **#783**

பெண்கள் காலையில் நீர்நிலைகளில் நீராடுவதால் உண்டாகும் ஓசையை உடையதாய், மாலையில் பூசை செய்வதால் வீதிகளிலெல்லாம் நறுமணம் கமழ்வதாய் உள்ள திருப்பழையாறை என்னும் தலத்தில் மழபாடி என்னும் பகுதியில், தன் திருமேனி முழுவதும் மிக்க சிறப்புடைய பால்போன்ற திருவெண்ணீற்றைப் பூசிய மார்புடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருப்பட்டீச்சரம் என்னும் திருக்கோயிலை வணங்குவார் இம்மையில் கடல்போல் செல்வம் பெருக, மறுமையில் விண்ணுலகை ஆள்வர்.

<u>திருப்பட்டீச்சரம்</u>

கண்ணின்மிசை நண்ணியிழி விப்பமுக
மேத்துகமழ் செஞ்சடையினான்
பண்ணின்மிசை நின்றுபல பாணிபட
வாடவல பான்மதியினான்
மண்ணின்மிசை நேரின்மழ பாடிமலி
பட்டிசர மேமருவுவார்
விண்ணின்மிசை வாழுமிமை யோரொடுட
னாதலது மேவலௌதே **#784**

சிவபெருமானின் கண்களை உமாதேவி பொத்த, அதனால் அரும்பிய வியர்வையைக் கங்கையாகச் செஞ்சடையில் தாங்கியவன். அப்பெருமான் பண்ணிசைகளோடு பாடல்களைப் பாடவும், ஆடவும்

வல்லவன். பால் போன்ற வெண்ணிறச் சந்திரனைச் சூடியவன். அப்பெருமான் மண்ணுலகில் ஒப்பற்ற பெருமையுடைய திருமழபாடி என்னும் தலத்தில் திருப்பட்டீச்சரம் என்னும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்றான். அவனைப் போற்றி வணங்குபவர்களுக்கு விண்ணுலகிலுள்ள தேவர்களுடன் வாழ்வது எளிதாகும்.

திருப்பட்டீச்சரம்

மருவமுழ வதிரமழ பாடிமலி
மத்தவிழ வார்க்கவரையார்
பருவமழை பண்கவர்செய் பட்டிசர
மேயபடர் புன்சடையினான்
வெருவமத யானையுரி போர்த்துமையை
யஞ்சவரு வெள்விடையினான்
உருவமெரி கழல்கடொழ வுள்ளமுடை
யாரையடை யாவினைகளே **#785**

முழவு முதலிய வாத்தியங்கள் அதிர்ந்து ஒலிக்க, திருமழபாடி என்னும் திருத்தலம் கோயில் உற்சவங்களாலும், விழாக்களியாட்டங்களாலும் ஓசை மிகுந்து விளங்குகின்றது. மலை உள்ளதால் பருவகாலத்தில் மழை பொழிய, வளம் மிகுந்து, கண்டவர் மனத்தைக் கவர்கின்ற திருப்பட்டீச்சரம் என்னும் திருக்கோயிலில் படர்ந்த செஞ்சடையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான். அப்பெருமான் அஞ்சத்தக்க மதயானையின் தோலை உமாதேவி அஞ்சுமாறு உரித்துப் போர்த்துக் கொண்டவன். வெண்ணிற இடபத்தை வாகனமாகக் கொண்டவன். நெருப்புப் போன்ற சிவந்த திருமேனியுடைய அச்சிவபெருமானின் திருவடிகளை உள்ளம் ஒன்றித் தொழுபவர்களை வினையால் வரும் துன்பம் சாராது.

திருப்பட்டீச்சரம்

மறையினொலி கீதமொடு பாடுவன
பூதமடி மருவிவிரவார்
பறையினொலி பெருகநிகழ் நட்டமமர்
பட்டிசர மேயபனிகூர்
பிறையினொடு மருவியதொர் சடையினிடை
யேற்றபுன றோற்றநிலையாம்
இறைவனடி முறைமுறையி னேத்துமவர்
தீத்தொழில்க ளில்லர்மிகவே **#786**

வேதங்கள் ஓதும் ஒலியும், கீதங்கள் பாடும் ஒலியும், பூதகணங்கள் திருவடிக்கீழ் அமர்ந்து போற்றும் ஒலியும் கலந்து ஒலிக்க, பறை என்னும்

வாத்திய ஓசையும் பெருகத் திருநடனம் புரியும் சிவபெருமான் திருப்பட்டீச்சரம் என்னும் கோயிலில் வீற்றிருந்தருளுகின்றான். குளிர்ச்சி பொருந்திய சந்திரனை அணிந்த சடையிலே கங்கையையும் தாங்கிய நிலையான தோற்றப் பொலிவு உடையவன். அத்தகைய இறைவனின் திருவடிகளை நாடொறும் முறைமையோடு போற்றி வணங்குபவர்கள் துன்புறும் வினைகளிலிருந்து முற்றிலும் நீங்கியவராவர்.

திருப்பட்டீச்சரம்

பிறவிபிணி மூப்பினொடு நீங்கியிமை
யோருலகு பேணலுறுவார்
துறவியெனு முள்ளமுடை யார்கள்கொடி
வீதியழ காயதொகுசீர்
இறைவனுறை பட்டிசர மேத்தியெழு
வார்கள்வினை யேதுமிலவாய்
நறவவிரை யாலுமொழி யாலும்வழி
பாடுமற வாதவவரே #787

பிறவியாகிய நோயும், மூப்பும் நீங்கித் தேவலோகத்தில் உள்ளவர்களால் பாராட்டப்படுகின்றவர்களும், உலகப் பற்றைத் துறந்த உள்ளமுடைய ஞானிகளும் வாழ்கின்ற, கொடி அசைகின்ற வீதிகளையுடைய திருப்பட்டீச்சரம் என்னும் திருக்கோயிலில் அழகிய சிறப்புடைய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான். அக்கோயிலைப் போற்றி வணங்குபவர்கள் வினை சிறிதும் இல்லாதவராகி, தேன் ஒழுகுகின்ற நறுமணம் கமழும் மலர்களாலும், தோத்திரங்களாலும் சிவனை வழிபட மறவாதவர்களாவர். அவர்கள் சிவகணங்களோடு உறைவர் என்பது குறிப்பு.

திருப்பட்டீச்சரம்

நேசமிகு தோள்வலவ னாகியிறை
வன்மலையை நீக்கியிடலும்
நீசன்விறல் வாட்டிவரை யுற்றதுண
ராதநிரம் பாமதியினான்
ஈசனுறை பட்டிசர மேத்தியெழு
வார்கள்வினை யேதுமிலவாய்
நாசமற வேண்டுதலி னண்ணலெள
தாமமரர் விண்ணுலகமே #788

திக்குவிசயம் செய்வதில் விருப்பம் கொண்டு வரும் இராவணன் தன் புய வலிமையினால் சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலை மலையைப்

பெயர்த்தெடுக்க, இழிபண்புடைய இராவணனின் வலிமையை வாட்டியவராய், தன்னுடைய எல்லையும், தன்னுடைய நிலைமையும் பிறரால் அறியப்படாது, பிறைச்சந்திரனை அணிந்த அச்சிவபெருமான் வீற்றிருந்தருகின்ற திருப்பட்டீச்சரம் என்னும் திருக்கோயிலைத் தொழுது வணங்குவார்களின் வினை முழுவதும் நீங்க, இனிப் பிறந்திறத்தலும் நீங்க அவர்கள் சிவஞானம் பெறுதலால் விண்ணுலகத்தை எளிதில் அடைவர்.

திருப்பட்டீச்சரம்

தூயமல ரானுநெடி யானுமறி
யாரவன தோற்றநிலையின்
ஏயவகை யானதனை யாரதறி
வாரணிகொண் மார்பினகலம்
பாயநல நீறதணி வானுமைத
னோடுமுறை பட்டிசரமே
மேயவன தீரடியு மேத்தவெளி
தாகுநல மேலுலகமே **#789**

தூய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும், திருமாலும் சிவபெருமானுடைய தோற்றத்தையும், பலவகையான நிலைகளையும் அறியாதவர்களாயின் வேறுயார்தான் அவற்றை அறிவர்? அழகிய அகன்ற மார்பு முழுவதும் திருநீற்றினை அணிந்து உமாதேவியோடு இறைவன் வீற்றிருந்தருளுகின்ற திருப்பட்டீச்சரம் என்னும் திருக்கோயிலை அடைந்து அவன் இரு திருவடிகளைப் போற்றி வணங்கச் சிவஞானம் பெறுதலும், அதன் பயனால் முக்தியுலகை அடைதலும் எளிதாகும்.

திருப்பட்டீச்சரம்

தடுக்கினை யிடுக்கிமட வார்களிடு
பிண்டமது வுண்டுழல்தரும்
கடுப்பொடி யுடற்கவசர் கத்துமொழி
காதல்செய்தி டாதுகமழ்சேர்
மடைக்கயல் வயற்கொண்மழ பாடிநகர்
நீடுபழை யாறையதனுள்
படைக்கொரு கரத்தன்மிகு பட்டிசர
மேத்தவிணை பற்றறுதலே **#790**

தடுக்கையேந்திப் பெண்கள் இடுகின்ற உணவை உண்டு, சுற்றித் திரிகின்றவர்களும், கடுக்காய்ப் பொடியைத் தின்பவர்களுமான சமணர்களும், உடம்பைப் போர்த்திக் கொள்கின்ற பௌத்தர்களும்

கூறும் அன்பற்ற

திருப்பட்டீச்சரம்

மந்தமலி சோலைமழ பாடிநகர்
நீடுபழை யாறையதனுள்
பந்தமுயர் வீடுநல பட்டிசர
மேயபடர் புன்சடையனை
அந்தண்மறை யோரினிது வாழ்புகலி
ஞானசம் பந்தனணியார்
செந்தமிழ்கள் கொண்டினிது செப்பவல
தொண்டர்வினை நிற்பதிலவே **#791**

தென்றல் உலாவும் சோலைகளையுடைய திருமழபாடி என்னும் நகர்ப் பகுதியைத் தன்னுள் கொண்ட நெடிய பழையாறை என்னும் திருத்தலத்தில், தன்னையடைந்தவர்கட்குப் பந்தமும், வீடும் அருளவல்ல நல்ல திருப்பட்டீச்சரம் என்னும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்றான் படர்ந்த சிறுசடைகளையுடைய சிவபெருமான். அப்பெருமானைப் போற்றி எவ்வுயிர்களிடத்தும் இரக்கமுள்ள மறையோர்கள் இனிது வாழ்கின்ற திருப்புகலியில் அவதரித்த ஞானசம்பந்தன் அழகிய செந்தமிழில் அருளிய இப்பதிகத்தைக் கேட்டற்கும், உணர்தற்கும் இனிதாகச் சொல்லவல்ல தொண்டர்களின் வினைகள் நீங்கும்.

திருத்தேவூர்

திருத்தேவூர்

திருத்தேவூர்,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தேவகுருநாதர்.
தேவியார் : தேன்மொழியம்மை.

காடுபயில் வீடுமுடை யோடுகலன்
மூடுமுடை யாடைபுலிதோல்
தேடுபலி யூணதுடை வேடமிகு
வேதியர் திருந்துபதிதான்
நாடகம தாடமஞ்ஞை பாடவரி
கோடல்கைம் மறிப்பநலமார்
சேடுமிகு பேடையன மூடிமகிழ்
மாடமிடை தேவூரதுவே #792

சிவபெருமான் வசிக்கும் வீடு சுடுகாடாகும். முடைநாற்றம் பொருந்திய மண்டையோடு அவன் உண்கலமாகும். அவனது ஆடை புலித்தோலாகும். உணவு தேடியுண்ணும் பிச்சையாகும். இத்தகைய கோலமுடைய, வேதத்தை அருளிச் செய்த வேதப்பொருளாக விளங்கும் சிவபெருமான் வீற்றிருந்தருளும் தலமாவது, சோலைகளில் மயில்கள் ஆட, வண்டுகள் பாட, காந்தள்கள் அசைந்து கைத்தாளமிட, அழகிய இளம் பெண் அன்னம் போன்ற பெண்கள் ஆடவர்களோடு ஊடி, பின் ஊடல் நீங்கி மகிழ்கின்ற மாடங்கள் நிறைந்த திருத்தேவூர் என்பதாகும்.

திருத்தேவூர்

கோளரவு கொன்றைநகு வெண்டலையெ
ருக்குவனி கொக்கிறகொடும்
வாளரவு தண்சலம கட்குலவு
செஞ்சடைவ ரத்திறைவனூர்
வேளரவு கொங்கையிள மங்கையர்கள்
குங்குமம் விரைக்குமணமார்
தேளரவு தென்றறெரு வெங்குநிறை
வொன்றிவரு தேவூரதுவே #793

கொல்லும் தன்மையுடைய பாம்பு, கொன்றை, சிரிக்கும் மண்டையோடு, எருக்கு, வன்னி, கொக்கு இறகு, ஒளி பொருந்திய பாம்பு, குளிர்ச்சி பொருந்திய கங்காதேவி, இவை குலவுகின்ற சிவந்த சடையுடைய

சிவபெருமான் வீற்றிருந்தருளும் தலம், மன்மதனும் விரும்பும் கொங்கைகளை உடைய, கணவரோடு கூடிய இள மங்கையர்கட்குக் குங்கும குழம்பின் மணத்தை அதிகரிக்கச் செய்யும் தன்மையுடையதும், கணவரைப் பிரிந்த மகளிர்கட்குத் தேள் கொட்டுவது போல் துன்பஞ் செய்கின்ற தன்மையுடையதுமான தென்றல் காற்று தெருவெங்கும் நிறைந்து பெருகும் திருத்தேவூர் ஆகும்.

<u>திருத்தேவூர்</u>

பண்டடவு சொல்லின்மலை வல்லியுமை
பங்கனெமை யாளுமிறைவன்
எண்டடவு வானவரி றைஞ்சுகழ
லோனினிதி ருந்தவிடமாம்
விண்டடவு வார்பொழி லுகுத்தநற
வாடிமலர் சூடிவிரையார்
செண்டடவு மாளிகை செறிந்துதிரு
வொன்றிவளர் தேவூரதுவே **#794**

பண்ணிசை போன்ற இனிய மொழிகளைப் பேசுகின்ற மலைமகளான உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு எம்மையாளும் இறைவன் எண்ணற்ற தேவர்கள் தன் திருவடிகளை வணங்க இனிது வீற்றிருந்தருளும் இடம், வானளாவி உயர்ந்த சோலைகள் உகுக்கும் தேன்துளிக்கும் மலர்களைச் சூடி, அதனால் நறுமணம் கமழ, ஆகாயமளாவிய உயர்ந்த மாளிகைகள் நிறைந்த திருமகள்வாசம் செய்யும் திருத்தேவூர் ஆகும்.

<u>திருத்தேவூர்</u>

மாசின்மன நேசர்தம தாசைவளர்
சூலதரன் மேலையிமையோர்
ஈசன்மறை யோதியெரி யாடிமிகு
பாசுபதன் மேவுபதிதான்
வாசமலர் கோதுகுயில் வாசகமு
மாதரவர் பூவைமொழியும்
தேசவொலி வீணையொடு கீதமது
வீதிநிறை தேவூரதுவே **#795**

சிவபெருமான் களங்கமற்ற மனமுடைய அடியார்கள் தன்மேல் கொண்ட பக்தி மேன்மேலும் பெருக விளங்குபவன். சூலப்படையை ஏந்தியவன். வானுலகிலுள்ள தேவர்கட்குத் தலைவன். வேதங்களை ஓதியருளி வேதப்பொருளாயும் விளங்குபவன். நெருப்பேந்தி நடனம் ஆடுபவன். வெற்றிதரும் பாசுபத அஸ்திரம் உடையவன். அத்தகைய சிவபெருமான்

இனிது வீற்றிருந்தருளும் தலமாவது, நறுமணமிக்க மலர்களை மூக்கால் கோதுகின்ற குயில்களின் கூவலும், நாகணவாய்ப் பறவை போன்று பேசுகின்ற பெண்களின் இனிய மொழியும், அடியவர்கள் இறைவனைப் புகழும் ஒலியும் நிறைந்து விளங்கும் வீதிகளையுடைய திருத்தேவூர் ஆகும்.

திருத்தேவூர்

கானமுறு மான்மறிய னானையுரி
போர்வைகன லாடல்புரிவோன்
ஏனவெயி றாமையிள நாகம்வளர்
மார்பினிமை யோர்தலைவனூர்
வானணவு சூதமிள வாழைமகிழ்
மாதவி பலாநிலவிவார்
தேனமுது வுண்டுவரி வண்டுமருள்
பாடிவரு தேவூரதுவே **#796**

சிவபெருமான் காட்டில் வாழ்கின்ற மான்கன்றைக் கரத்தில் ஏந்தியவன். யானையின் தோலை உரித்துப் போர்வையாகப் போர்த்தியவன். நெருப்பேந்தித் திருநடனம் செய்பவன். பன்றியின் கொம்பு, ஆமை ஓடு, இளம் பாம்பு, இவற்றை மார்பில் அணிந்தவன். தேவர்களின் தலைவன். அவன் உகந்தருளிய திருத்தலம் வானளாவிய மா, வாழை, மகிழ், மாதவி, பலா முதலிய மரங்கள் தழைத்து, சொரிகின்ற தேனை உண்டு, வரிகளையுடைய வண்டுகள் தேனுண்ட மயக்கத்தில் பாடும் திருத்தேவூர் ஆகும்.

திருத்தேவூர்

ஆறினொடு கீறுமதி யேறுசடை
** **யேறனடை யார்நகர்கடான்
சீறுமவை வேறுபட நீறுசெய்த
** **நீறனமை யாளுமரனூர்
வீறுமல ரூறுமது வேறிவளர்
** **வாயவிளை கின்றகழனிச்
சேறுபடு செங்கயல் விளிப்பவிள
** **வாளைவரு தேவூரதுவே **#797**

சிவபெருமான் சடையிலே கங்கையோடு, பிறைச்சந்திரனையு

திருத்தேவூர்

கன்றியெழ வென்றிநிகழ் துன்றுபுர
மன்றவிய நின்றுநகைசெய்

என்றனது சென்றுநிலை யெந்தைதன
தந்தையம ரின்பநகர்தான்
முன்றின்மிசை நின்றபல வின்கனிக
டின்றுகற வைக்குருளைகள்
சென்றிசைய நின்றுதுளி யொன்றவிளை
யாடிவளர் தேவூரதுவே **#798**

கோபித்து உலகையழிக்க எண்ணி வெற்றிபெற்ற பகையசுரர்களின் நெருங்கிய மூன்றுபுரங்களையும், சிவபெருமான் சிரித்துச் சாம்பலாகுமாறு செய்தவன். நான் சென்றடையக் கூடிய பற்றுக்கோடாக விளங்குபவன். என் தந்தைக்குத் தந்தையாகிய அச்சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் இனிய தலமாவது, வீட்டின் முன்னால் நின்ற பலாக்கனிகளைத் தின்று கறவைப் பசுக்களின் கன்றுகள் துள்ளி விளையாடி வளர்கின்ற திருத்தேவூர் ஆகும்.

<u>திருத்தேவூர்</u>

ஓதமலி கின்றதெனி லங்கையரை
யன்மலி புயங்கணெரியப்
பாதமலி கின்றவிர லொன்றினில்
அடர்த்தபர மன்றனதிடம்
போதமலி கின்றமட வார்கணட
மாடலொடு பொங்குமுரவம்
சேதமலி கின்றகரம் வென்றிதொழி
லாளர்புரி தேவூரதுவே **#799**

கடல் அலைகள் மோதுகின்ற தென்னிலங்கை மன்னனான இராவணனின் வலிமை மிகுந்த புயங்கள் நெரிபடத் தன் காற்பெருவிரலை ஊன்றி அடர்த்த சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற தலமாவது, மகிழ்ச்சி மிகுந்த பெண்கள் நடனமாடவும், முழவு ஒலிக்கவும், சேற்றில் பயில்கின்ற கையினால் உழவுத் தொழில் செய்து வறுமைப் பிணியையும், பசிப்பிணியையும் ஓட்டி வெற்றிகாணும் வேளாளர்கள் நிறைந்த திருத்தேவூர் ஆகும்.

<u>திருத்தேவூர்</u>

வண்ணமுகி லன்னவெழி லண்ணலொடு
சுண்ணமலி வண்ணமலர்மேல்
நண்ணவனு மெண்ணரிய விண்ணவர்கள்
கண்ணவ னலங்கொள்பதிதான்
வண்ணவன நுண்ணிடையி னெண்ணரிய
வன்னநடை யின்மொழியினார்

திண்ணவண மாளிகை செறிந்தவிசை
யாழ்மருவு தேவூரதுவே **#800**
கருநிற மேகத்தையொத்த அழகிய திருமாலும், மகரந்தப்பொடி நிறைந்த
தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமனும், அள

திருத்தேவூர்

பொச்சமமர் பிச்சைபயி லச்சமணு
மெச்சமறு போதியருமா
மொச்சைபயி லிச்சைகடி பிச்சன்மிகு
நச்சரவன் மொச்சநகர்தான்
மைச்சின்முகில் வைச்சபொழில்
* * * * * * * **#801**
பொய்யான துறவு வேடம்கொண்டு பிச்சையெடுக்கும் சமணர்களும்,
புகழற்ற புத்தர்களும் கூறும் விருப்ப மான உபதேச மொழிகளை
விலக்கி, பித்தன் எனப்படுபவனும், விடமுடைய பாம்பை
அணிந்தவனும் ஆகிய சிவபெருமானுடைய, மொய்த்த மெய்யடியார்கள்
நெருங்கிய தலமாவது, மேகத்தைத் தொடும்படி உயர்ந்துள்ள
சோலைகள் சூழ்ந்த திருத்தேவூர் ஆகும்.

திருத்தேவூர்

துங்கமிகு பொங்கரவு தங்குசடை
நங்களிறை துன்றுகுழலார்
செங்கயல்கண் மங்கையுமை நங்கையொரு
பங்கனமர் தேவூரதன்மேல்
பைங்கமல மங்கணிகொள் திண்புகலி
ஞானசம் பந்தனுரைசெய்
சங்கமலி செந்தமிழ்கள் பத்துமிவை
வல்லவர்கள் சங்கையிலரே **#802**
நீண்டு வளர்ந்து படமெடுக்கும் பாம்பைச் சிவந்த சடையில் அணிந்தவர்
நம் தலைவரான சிவபெருமான். அவர் அடர்ந்த கூந்தலையும், செவ்விய
கயல்மீன் போன்ற கண்களையுமுடைய உமாதேவியைத் தம்
திருமேனியில் ஒருபாகமாகக் கொண்டவர். அவர் வீற்றிருந்தருளும் தலம்
திருத்தேவூர், அதைப் போற்றிப் பசிய தாமரை மலர்கள் அழகு
செய்கின்ற வலிய திருப்புகலியில் அவதரித்த ஞானசம்பந்தன் அருளிய
இச்செந்தமிழ்ப்பாக்கள் பத்தையும் அடியார் கூட்டங்களில் ஓத
வல்லவர்கள் குற்றமற்றவர் ஆவர்.

திருச்சண்பைநகர்

சீர்காழி

திருச்சண்பைநகர்,
பண் - சாதாரி

எந்தமது சிந்தைபிரி யாதபெரு
மானென விறைஞ்சியிமையோர்
வந்துதுதி செய்யவளர் தூபமொடு
தீபமலி வாய்மையதனால்
அந்தியமர் சந்திபல வர்ச்சனைகள்
செய்யவமர் கின்றவழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு
மேவுபதி சண்பைநகரே **#803**

'எங்கள் சிந்தையிலிருந்து நீங்காத தலைவனே!' என்று தேவர்கள் தொழுது போற்ற, நறுமணம் கமழும் தூபதீபம் முதலிய உபசாரங்களோடு பூசாவிதிப்படி மாலை, முதலிய சந்தியா காலங்களில் அர்ச்சனைகள் செய்ய வீற்றிருக்கும் அழகனான சிவபெருமான், நறுமணம் கமழும் கூந்தலையுடைய உமாதேவியை உடனாகக் கொண்டு விளங்குகின்ற தலம் திருச்சண்பைநகர் ஆகும்.

சீர்காழி

அங்கம்விரி துத்தியர வாமைவிர
வாரமமர் மார்பிலழகன்
பங்கய முகத்தரிவை யோடுபிரி
யாதுபயில் கின்றபதிதான்
பொங்குபர வைத்திரை கொணர்ந்துபவ
ளத்திரள் பொலிந்தவயலே
சங்குபுரி யிப்பிதர ளத்திரள்
பிறங்கொளிகொள் சண்பைநகரே **#804**

திருமேனியிலே பரந்த புள்ளிகளையுடைய பாம்பையும், ஆமையோட்டையும் கலந்த மாலையாக மார்பிலே விரும்பியணிந்த அழகனாகிய சிவபெருமான், தாமரை மலர்போன்ற முகத்தையுடைய உமாதேவியாரோடு பிரியாது வாழ்கின்ற தலமாவது, பொங்கியெழும் கடலலைகள் அடித்துக்கொண்டு வந்து குவிக்கின்ற பவளத்திரள்களின் பக்கத்திலே, வலம்புரிச் சங்குகளும், சிப்பிகளும் சொரிந்த முத்துக் குவியல்களின் மிகுதியான பிரகாசத்தைக் கொண்ட திருச்சண்பை நகராகும்.

<u>சீர்காழி</u>

போழுமதி தாழுநதி பொங்கரவு
தங்குபுரி புன்சடையினன்
யாழின்மொழி மாழைவிழி யேழையிள
மாதினொ டிருந்தபதிதான்
வாழைவளர் ஞாழன்மகிழ் மன்னுபுனை
துன்னுபொழின் மாடுமடலார்
தாழைமுகிழ் வேழமிகு தந்தமென
வுந்துதகு சண்பைநகரே **#805**

வட்டவடிவைப் பிளந்தாற் போன்ற பிறைச் சந்திரனும், கீழே பாய்ந்து ஓடுகின்ற கங்கையாறும், சீறும் பாம்புகளும் தங்குகின்ற முறுக்குண்ட செஞ்சடையுடையவன் சிவபெருமான், யாழ் போன்ற இனிய மொழியையும், மாம்பிஞ்சு போன்ற விழிகளையும் கொண்டு தன்னையே பற்றுக் கோடாகக் கொண்ட உமாதேவியோடு அப்பெருமான் வீற்றிருந்தருளும் தலம், வாழை, புலிநகக் கொன்றை, மகிழ், புன்னை முதலிய மரங்கள் நிறைந்து அடர்ந்த சோலைகளின் பக்கத்தில் மடல்கள் பொருந்திய தாழையின் அரும்பை யானையின் ஒடிந்த தந்தம் என்று சூடாது அலட்சியம் செய்யும் திருச்சண்பை நகராகும்.

<u>சீர்காழி</u>

கொட்டமுழ விட்டவடி வட்டணைகள்
கட்டநட மாடிகுலவும்
பட்டநுதல் கட்டுமலர் மட்டுமலி
பாவையொடு மேவுபதிதான்
வட்டமதி தட்டுபொழி லுட்டமது
வாய்மைவழு வாதமொழியார்
சட்டகலை யெட்டுமரு வெட்டும்வளர்
தத்தைபயில் சண்பைநகரே **#806**

முழவு முதலிய வாத்தியங்கள் ஒலிக்க, வைத்த பாதங்கள் வட்டணை என்னும் நாட்டிய வகைகளைச் செய்யத் திருநடனம் செய்யும் சிவபெருமான் பட்டத்தை நெற்றியில் அணிந்து, சூடிய மலர்மாலைகளின் நறுமணம் மிகுந்த பாவை போன்ற உமாதேவியாரோடு வீற்றிருந்தருளுகின்ற தலமாவது, எப்போதும் உண்மையே பேசுகின்ற, அறுபத்து நான்கு கலைகளையும் பயில்கின்ற கற்றவர்கள் கூறுவனவற்றை, சந்திரனொளி நுழைய முடியாதவாறு ஓங்கி உயர்ந்து அடத்தியாக உள்ள சோலைகளில் வளர்கின்ற கிளிகள் சொல்லும் பான்மையுடன் விளங்கும் திருச்சண்பை நகராகும்.

சீர்காழி

பணங்கெழுவு பாடலினொ டாடல்பிரி
யாதபர மேட்டிபகவன்
அணங்கெழுவு பாகமுடை யாகமுடை
யன்பர்பெரு மானதிடமாம்
இணங்கெழுவி யாடுகொடி மாடமதி
னீடுவிரை யார் புறவெலாந்
தணங்கெழுவி யேடலர்கொ டாமரையி
லன்னம்வளர் சண்பைநகரே **#807**

பண்ணிசையோடு கூடிய பாடலும், ஆடலும் நீங்காத பரம்பொருளும், ஐசுவரியம் முதலிய ஆறுகுணங்களை உடையவனும், உமாதேவியைத் தன் திருமேனியில் இடப்பாகமாகக் கொண்டவனும், அன்பர்கட்கு அருள்புரிகின்ற பெருமானுமாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் தலமாவது, ஒன்றோடொன்று இணங்கியாடுமாறு நாட்டப்பட்ட கொடிகளையுடைய மாடங்களும், மதில்களும் உடையதும், மணம் பொருந்திய புறவிடங்களிலெல்லாம் குளிர்ச்சி பொருந்திய இதழ்கள் விரிந்த தாமரைமலர்கள் மேல் அன்னங்கள் வளர்கின்ற இயல்பினதும் ஆகிய திருச்சண்பைநகர் ஆகும்.

சீர்காழி

பாலனுயிர் மேலணவு காலனுயிர்
பாறவுதை செய்தபரமன்
ஆலுமயில் போலியலி யாயிழைத
னோடுமமர் வெய்துமிடமாம்
ஏலமலி சோலையின வண்டுமலர்
கிண்டிநற வுண்டிசைசெயச்
சாலிவயல் கோலமலி சேலுகள
நீலம்வளர் சண்பைநகரே **#808**

பாலனான மார்க்கண்டேயனின் உயிரைக் கவர வந்த எமனது உயிர் நீங்கும்படி உதைத்த பரமன், ஆடுகின்ற மயில் போன்ற சாயலையுடைய ஆராய்ந்து தேர்ந்தெடுத்த ஆபரணங்களையணிந்த உமாதேவியோடு வீற்றிருந்தருளும் தலமாவது, ஏலம் முதலிய வாசனைப் பொருள்கள் மிகுந்த சோலைகளில் வண்டுகளின் கூட்டம் மலர்களைக் கிளறி, தேனைக்குடித்து இசைபாட, அழகிய மீன்கள் துள்ளிப்பாய, நீலோற் பல மலர்கள் செழித்து வளர்கின்ற திருச்சண்பை நகர் ஆகும்.

சீர்காழி

விண்பொயத னான்மழைவி ழாதொழியி
னும்விளைவு தான்மிகவுடை
மண்பொயத னால்வளமி லாதொழியி
னுந்தமது வண்மைவழுவார்
உண்பகர வாருலகி னூழிபல
தோறுநிலை யானபதிதான்
சண்பைநக ரீசனடி தாழுமடி
யார்தமது தன்மையதுவே **#809**

வானம் பொய்த்து மழை பெய்யாது ஒழிந்தாலும், மிகுந்த விளைச்சலைத்தரும் நிலம் வறண்டதால் வளம் இல்லாமல் போனாலும், அடியவர்கட்கும், மற்றும் பசித்தவர்கட்கும் உணவுதரத் தம் கொடைத்தன்மையில் தவறாதவர்கள், நெடிய உலகத்தில் பல ஊழிகளிலும் நிலையாக இருந்த தலம் திருச்சண்பைநகர் ஆகும். அங்குக் கோயில் கொண்ட சிவபெருமான் திருவடிகளைத் தொழுது வணங்குகின்ற அடியார்களின் தன்மையும் அதுவேயாகும்.

<u>சீர்காழி</u>

வரைக்குலம கட்கொரு மறுக்கம்வரு
வித்தமதி யில்வலியுடை
அரக்கனது ரக்கரசி ரத்துற
வடர்த்தருள் புரிந்தவழகன்
இருக்கையத ருக்கன்முத லானவிமை
யோர்குழுமி யேழ்விழவினிற்
றருக்குல நெருக்குமலி தண்பொழில்கள்
கொண்டலன சண்பைநகரே **#810**

கயிலைமலையைப் பெயர்த்து இமயமலையரசனின் மகளான உமாதேவிக்கு அச்சத்தை உண்டாக்கிய, அறிவற்ற ஆனால் வலிமையுடைய இராவணனின் மார்பு, கைகள், தலைகள் ஆகியவை மலையின்கீழ் நொறுங்கும் படி தன் காற்பெருவிரலை ஊன்றி, பின் அவன் தன் தவறுணர்ந்து இறைஞ்ச ஒளிபொருந்திய வெற்றிவாளும், நீண்ட ஆயுளும் கொடுத்து அருள்புரிந்த அழகனான சிவபெருமான் வீற்றிருந் தருளும் தலமாவது, சூரியன் முதலான தேவர்கள் ஏழாந்திரு விழாவில் கூடிவந்து வணங்க, தேவலோகத்திலுள்ள கற்பகச்சோலையை நெருக்கும்படி, மேகம் படிந்த குளிர்ச்சி பொருந்திய சோலைகள் சூழ்ந்த வளமிக்க திருச்சண்பைநகர் ஆகும்.

<u>சீர்காழி</u>

நீலவரை போலநிகழ் கேழலுரு

நீள்பறவை நேருருவமாம்
மாலுமல ரானுமறி யாமைவளர்
தீயுருவ மானவரதன்
சேலுமின வேலுமன கண்ணியொடு
நண்ணுபதி சூழ்புறவெலாஞ்
சாலிமலி சோலைகுயில் புள்ளினொடு
கிள்ளைபயில் சண்பைநகரே **#811**

நீலமலைபோன்ற பெரிய பன்றி உருவம் கொண்ட திருமாலும், பெரிய அன்னப்பறவையின் உருவம் தாங்கிய பிரமனும், அறியாத வகையில் வளர்ந்தோங்கிய நெருப்புப் பிழம்பு வடிவாகிய வணங்குவோர்க்கு வேண்டும் வரங்கள் தருகின்ற சிவபெருமான், சேல்மீனும், வேலும் ஒத்த கண்களையுடைய உமாதேவியோடு வீற்றிருந்தருளும் தலம், சுற்றியுள்ள அயலிடங்களிலெல்லாம் நெற்பயிர்கள் மலிந்ததும், சோலைகளில் குயில்களும், மற்ற பறவைகளோடு கிளிகளும் வசிக்கின்றதுமான திருச்சண்பை நகராகும்.

<u>சீர்காழி</u>

போதியர்கள் பிண்டியர்கள் போதுவழு,
வாதவகை யுண்டுபலபொய்
ஓதியவர் கொண்டுசெய்வ தொன்றுமிலை
நன்றதுணர் வீருரைமினோ
ஆதியெமை யாளுடைய வரிவையொடு
பிரிவிலி யமர்ந்தபதிதான்
சாதிமணி தெண்டிரை கொணர்ந்துவயல்
புகவெறிகொள் சண்பைநகரே **#812**

அரசமரத்தை வணங்கும் புத்தர்களும், அசோக மரத்தை வணங்கும் சமணர்களும் நேரம்தோறும் தவறாது உண்டு பொய்ப்பொருளாம் நிலையற்ற உலகப்பொருள்களைப் பற்றிப் பேசுகின்ற, மெய்ப்பொருளாம் இறைவனைப் பற்றிப் போசாத அவர்கள் உரைகளை மேற்கொண்டு, செய்யத்தக்க பயனுடைய செயல்யாதுமில்லை. பயன்தரும் நெறி எது என்று அறிபவர்களே! முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானும், எங்களை ஆட்கொள்ளும் உமா தேவியும் பிரியாது தங்கி இருக்கும் தலமாவது, உயர்ந்த சாதி இரத்தினங்களைத் தெளிந்த கடலலைகள் அடித்துக்கொண்டு வந்து வயல்களில் விழும்படி செய்கின்ற திருச்சண்பை நகராகும். அதனைப் புகழ்ந்து பேசி அத்தலத்து இறைவனை வழிபடுவீர்களாக.

<u>சீர்காழி</u>

வாரின்மலி கொங்கையுமை நங்கையொடு
சங்கரன் மகிழ்ந்தமரு
மூர்சாரின்முர றென்கடல் விசும்புற
முழங்கொலிகொள் சண்பைநகர்மேற்
பாரின்மலி கின்றபுகழ் நின்றதமிழ்
ஞானசம் பந்தனுரைசெய்
சீரின்மலி செந்தமிழ்கள் செப்புமவர்
சேர்வர்சிவ லோகநெறியே **#813**

கச்சணிந்த கொங்கைகளையுடைய உமைநங்கையோடு எவ்வுயிர்கட்கும் நன்மையைச் செய்கின்ற சங்கரன் என்ற பெயர் கொண்ட சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் தலமாவதும், வீதிகள் முதலிய இடங்களில் கடலோசைபோல் முழங்குகின்ற பேரொலியானது, வானுலகைச் சென்றடையுமாறு உள்ளதும் ஆகிய திருச்சண்பை நகரைப் போற்றி, இப்பூவுலகில் நிலைத்த புகழுடைய தமிழ் ஞானசம்பந்தன் அருளிய சிறப்புடைய இச்செந்தமிழ்ப் பாக்களைப் பாடுகிறவர்கள் சிவலோகத்தை அடைவர்.

திருவேதவனம்

திருமறைக்காடு

திருவேதவனம்,
பண் - சாதாரி, வேதவனம் என்பது வேதாரணியம்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வேதாரணியேசுவரர்.
தேவியார் : யாழைப்பழித்தமொழியம்மை.

கற்பொலிசு ரத்திினெரி கானினிடை
மாநடம தாடிமடவார்
இற்பலி கொளப்புகுது மெந்தைபெரு
மானதிட மென்பர் புவிமேல்
மற்பொலி கலிக்கடன் மலைக்குவ
டெனத்திரை கொழித்தமணியை
விற்பொலி நுதற்கொடி யிடைக்கணிகை
மார்கவரும் வேதவனமே **#814**

பருக்கைக் கற்கள் மிகுந்த, பாலைவனம் போன்ற வெப்பம் உடைய சுடுகாட்டில் சிவபெருமான் நடனமாடுகின்றார். அவர் மகளிர்களின் இல்லந்தோறும் புகுந்து பிச்சை ஏற்பவர். எம் தந்தையாகிய அச்சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், இப்பூமியில், ஒலிக்கின்ற கடலலைகள் மலைச்சிகரங்களைப் போல உயர்ந்து ஓடிவந்து கரையிலே ஒதுக்குகின்ற இரத்தினங்களை வில்லைப் போன்ற வளைந்த நெற்றியும், பூங்கொடி போன்ற மெல்லிய, குறுகிய இடையும் உடைய உருத்திரகணிகையர்கள் வாரிக் கொள்கின்ற வளமிக்க திருவேதவனமாகும்.

திருமறைக்காடு

பண்டிரை பயப்புணரி யிற்கனக
மால்வரையை நட்டரவினைக்
கொண்டுகயி றிற்கடைய வந்தவிட
முண்டகுழ கன்றனிடமாம்
வண்டிரை நிழற்பொழிலின் மாதவியின்
மீதணவு தென்றல்வெறியார்
வெண்டிரைகள் செம்பவள முந்துகடல்
வந்தமொழி வேதவனமே **#815**

முற்காலத்தில் ஒலிக்கின்ற அலைகளையுடைய பாற்கடலில், பொன்மயமான மந்தரமலையை மத்தாக ஊன்றி, வாசுகி என்னும்

பாம்பைக் கயிறாகக் கொண்டு தேவர்கள் கடைய எழுந்த ஆலகால விடத்தை, அமுது போன்று உண்டருளிய அழகனான சிவபெருமான் வீற்றிருந்தருளும்இடம், நிழல்தரும் சோலைகளில் வண்டுகள் ஆரவாரிப்பதாய், மாதவி முதலிய மரங்களின் மீது தவழும் தென்றற் காற்றின் நறுமணமுடையதாய்க் கடலின் வெண்ணிற அலைகள் செம்பவளங்களை உந்தித் தள்ளும், புகழுடைய திருவேதவனம் என்னும் திருத்தலமாகும்.

திருமறைக்காடு

காரியன்மெல் லோதிநதி மாதைமுடி
வார்சடையில் வைத்துமலையார்
நாரியொரு பான்மகிழு நம்பருறை
வென்பர்நெடு மாடமறுகில்
தேரியல் விழாவினொலி திண்பணில
மொண்படக நாளுமிசையால்
வேரிமலி வார்குழனன் மாதரிசை
பாடலொலி வேதவனமே **#816**

மேகத்தையொத்த மெல்லிய கூந்தலையுடைய, கங்காதேவியை நீண்ட சடைமுடியில் தாங்கி, மலைமகளைத் தன திருமேனியின் பாதிப்பாகமாகக் கொண்டு சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற தலமாவது. நீண்ட மாடங்களையுடைய வீதிகளில் தேர் ஓடும் திருவிழாக்களின் ஒலியும், திண்ணிய சங்குகளின் ஒலியும், ஒளி பொருந்திய பேரி அல்லது தம்பட்டம் என்னும் வாத்தியத்தின் ஒலியும், நாடோறும் ஒலிக்க, நறுமணம் கமழும் தொங்கும் கூந்தலையுடைய பெண்கள் இசைக்கருவிகளோடு பாடுகின்ற பாட்டினிசையும் ஒலிக்கின்ற திருவேதவனம் என்னும் திருத்தலமாகும்.

திருமறைக்காடு

நீறுதிரு மேனியின் மிசைத்தொளிபெ
றத்தடவி வந்திடபமே
ஏறியுல கங்கடொறும் பிச்சைநுக
ரிச்சைய ரிருந்தபதியாம்
ஊறுபொரு ளின்றமி ழியற்கிளவி
தேருமட மாதருடனார்
வேறுதிசை யாடவர்கள் கூறவிசை
தேருமெழில் வேதவனமே **#817**

சிவபெருமான் தம் திருமேனியிலே திருநீற்றை ஒளி பொருந்தப் பூசியவர். இடபவாகனத்தில் ஏறியவர். ஊர்கள்தொறும் சென்று பிச்சை எடுத்து

உண்பதில் இச்சையுடையவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் தலமாவது, இனிய தமிழ்மொழியில் இயற்சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேசும் இளம்பெண்களுடன், வாணிகத்தின் பொருட்டு வேற்றுத் திசைகளிலிருந்து கப்பலில் வந்த ஆண்கள் பேசுவதற்குச் சொற்களைத் தெரிந்து கொள்ளும் அழகிய திருவேதவனம் ஆகும்.

திருமறைக்காடு

கத்திரிகை துத்திரி கறங்குதுடி
தக்கையொ டிடக்கைபடகம்
எத்தனை யுலப்பில்கரு வித்திர
ளலம்பவிமை யோர்கள்பரச
ஒத்தற மிதித்துநட மிட்டவொரு
வர்க்கிடம தென்பருலகில்
மெய்த்தகைய பத்தரொடு சித்தர்கண்
மிடைந்துகளும் வேதவனமே **#818**

கத்தரிகை, துத்தரி, ஒலிக்கின்ற உடுக்கை, தக்கை, படகம் என்னும் இசைக்கருவிகள் ஒலிக்க, தேவர்கள் துதிக்க, தாளத்திற்கேற்பத் திருத்தாளையூன்றி நடனமாடும் ஒப்பற்ற சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், உண்மைத் தன்மையுடைய பத்தர்களும், சித்து வல்லவர்களும் நெருங்கி மகிழ்ச்சி மீதூரத் துள்ளிக்குதிக்கும் திருவேதவனம் என்னும் திருத்தலமாகும்.

திருமறைக்காடு

மாலைமதி வாளரவு கொன்றைமலர்
துன்றுசடை நின்றசுழலக்
காலையி லெழுந்தகதிர் தாரகை
மடங்கவன லாடுமரனூர்
சோலையின் மரங்க டொறு மிண்டியின
வண்டுமது வுண்டிசைசெய
வேலையொலி சங்குதிரை வங்கசுற
வங்கொணரும் வேதவனமே **#819**

மாலையில் தோன்றும் சந்திரனும், ஒளி பொருந்திய பாம்பும், கொன்றை மலரும் நெருங்கிய சடையில் தங்கிச் சுழன்று புரள, காலையில் தோன்றிய கதிரவன் ஒளியும் விண் மீன்களின் ஒளியும், திருமேனியின் ஒளியும், திருநீற்றுப் பூச்சின் ஒளியும் கண்டு அடங்குமாறு, நெருப்பேந்தி நடனமாடுகின்ற சிவபெருமான் வீற்றிருந்தருளும் தலம், சோலைகளிலுள்ள மரங்களில் வண்டினங்கள் தேனைக்குடித்து ஒலி செய்ய, கடலினின்றும் ஒலிக்கும் சங்குகளையும், கப்பல்களையுடைக்கும்

சுறாமீன்களையும் அலைகள் கரைக்குக் கொணரும் திருவேதவனம் என்னும் திருத்தலமாகும்.

திருமறைக்காடு

வஞ்சகம னத்தவுணர் வல்லரண
மன்றவிய வார்சிலைவளைத்
தஞ்சக மவித்தவம ரர்க்கமர
னாதிபெரு மானதிடமாம்
கிஞ்சுக விதழ்க்கனிக ளூறியசெவ்
வாயவர்கள் பாடல்பயில
விஞ்சுக வியக்கர்முனி வக்கண
நிறைந்துமிடை வேதவனமே **#820**

வஞ்சகம் பொருந்திய மனத்தையுடைய அசுரர்களின் மூன்று மதில்களையும் பெரிய மேருமலையை வில்லாக வளைத்து அழகிய உலகில் ஒழித்த தேவதேவனாம், முழுமுதற் கடவுளான சிவபெருமான் வீற்றிருந்தருளும் தலமாவது, முள் முருக்கம் பூவையொத்த உதடுகளால், கனிபோன்று இனிய மொழிகளைப் பேசும் சிவந்த வாயையுடைய பெண்கள் பாட, வியக்கும் மனத்தையுடைய இயக்கர்களும், முனிவர் கூட்டங்களும் நிறைந்து போற்ற விளங்கும் திருவேதவனம் என்னும் திருத்தலமாகும்.

திருமறைக்காடு

முடித்தலைகள் பத்துடை முருட்டுரு
வரக்கனை நெருக்கிவிரலால்
அடித்தலமுன் வைத்தலம ரக்கருணை
வைத்தவ னிடம்பலதுயர்
கெடுத்தலை நினைத்தற மியற்றுதல்
கிளர்ந்துபுல வாணர்வறுமை
விடுத்தலை மதித்துநிதி நல்குமவர்
மல்குபதி வேதவனமே **#821**

கிரீடம் அணிந்த பத்துத் தலைகளையுடையனாய், முரட்டுத் தன்மையுடைய அரக்கனான இராவணனைத் தன் காற்பெருவிரலை ஊன்றி மலையின்கீழ் நெருக்கிப் பின் அவனுக்குக் கருணைபுரிந்தருளிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் தலம், பலவிதத் துன்பங்களும் கெடும்படி அறம் இயற்றும் முயற்சியுடையவர்களாய், புலவர்களின் வறுமையை நீக்கக் கருதித் திரவியங்களைக் கொடுக்கும் கொடையாளிகள் நிறைந்த திருவேதவனம் என்னும் திருத்தலமாகும்.

திருமறைக்காடு

வாசமலர் மேவியுறை வானுநெடு
மாலுமறி யாதநெறியைக்
கூசுதல்செ யாதவம ணாதரொடு
தேரர்குறு காதவரனூர்
காசுமணி வார்கனக நீடுகட
லோடுதிரை வார்துவலைமேல்
வீசுவலை வாணரவை வாரிவிலை
பேசுமெழில் வேதவனமே **#822**

நறுமணம் கமழும் தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும், திருமாலும் அறியாத சிவன் பெருமையைப் பழிப்பதற்குக் கூசாத பயனிலிகளாகிய சமணர்களுடன், பௌத்தர்களும் அடையாத சிவபெருமான் வீற்றிருக்கும் தலமாவது செம்படவர்கள் பெரிய கடலலைகள் ஓடிவரும்போது வலையை வீசி, அவை கொணர்கின்ற இரத்தினங்களையும், மணிகளையும் சிறந்த பொன்னையும் வாரி விலைபேசும் அழகிய திருவேதவனம் என்னும் திருத்தலமாகும்.

திருமறைக்காடு

மந்தமுர வங்கடல் வளங்கெழுவு
காழிபதி மன்னுகவுணி
வெந்தபொடி நீறணியும் வேதவன
வேவுசிவ னின்னருளினால்
சந்தமிவை தண்டமிழி னின்னிசை
யெனப்பரவு பாடலுலகில்
பந்தனுரை கொண்டுமொழி வார்கள்பயில்
வார்களுயர் வானுலகமே **#823**

மந்தமான ஓசையுடைய கடல்வளமிக்க சீகாழிப்பதியில் விளங்கும் கவுணியர் கோத்திரத்தில் அவதரித்த ஞானசம்பந்தன், திருவேதவனத்தில் வீற்றிருந்தருளும் திருவெண்ணீறு அணிந்த சிவபெருமானின் இன்னருளால் அவனைப் போற்றிச் சந்தம் விளங்கும் இன்னிசையால் அருளிய இத்திருப்பதிகத்தைப் பாடு பவர்கள் உயர்ந்த சிவலோகத்தில் வாழ்வர்.

திருமாணிகுழி

திருமாணிகுழி

திருமாணிகுழி,
பண் - சாதாரி,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாணிக்கமேனியீசுவரர்.
தேவியார் : மாணிக்கவல்லியம்மை.

பொன்னியல் பொருப்பரையன் மங்கையொரு
பங்கர்புன றங்குசடைமேல்
வன்னியொடு மத்தமலர் வைத்தவிறல்
வித்தகர் மகிழ்ந்துறைவிடம்
கன்னியிள வாளைகுதி கொள்ளவிள
வள்ளைபட ரள்ளல்வயல்வாய்
மன்னியிள மேதிகள் படிந்துமனை
சேருதவி மாணிகுழியே **#824**

சிவபெருமான் பொன்மயமான இமயமலை அரசனின் மகளான உமாதேவியைத் தன்திருமேனியில் ஒருபாகமாகக் கொண்டவர். கங்கைநீர் தங்கிய சடையில் வன்னிப் பத்திரத்துடன் பொன்னூமத்தம் பூவை அணிந்த வலிய அறிவுருவான அச்சிவபெருமான் வீற்றிருந்தருளும் தலமாவது, வரப்பின்மேல் இளவள்ளைக் கொடிகள் படர்ந்த சேற்றையுடைய வயலில், இள வாளை மீன்கள் துள்ளிப்பாய, இள எருமைகள் அதில் படிந்து வீடுசேரும், நீர்வளமும் நிலவளமுமிக்க திருமாணிகுழி ஆகும்.

திருமாணிகுழி

சோதிமிகு நீறதுமெய் பூசியொரு
தோலுடை புனைந்துதெருவே
மாதர்மனை தோறுமிசை பாடிவசி
பேசுமர னார்மகிழ்விடம்
தாதுமலி தாமரை மணங்கமழ
வண்டுமுர றண்பழனமிக்
கோதமலி வேலைபுடை சூழுலகி
னீடுதவி மாணிகுழியே **#825**

ஒளிமிகுந்த திருவெண்ணீற்றினைத் திரு மேனியில் உத்தூளணமாகப் பூசி, தோலை ஆடையாக அணிந்து, தெருக்களில் பெண்கள் உள்ள ஒவ்வொரு இல்லமும் சென்று இசைப்பாடல்களைப் பாடி வயப்படுத்தும்

பேச்சுக்களைப் பேசும் சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் தலம் மகரந்தப்பொடிகள் மிக்க தாமரை மலர்கள் மணம் வீசுவதும், வண்டுகள் ஒலிக்கின்ற குளிர்ச்சி பொருந்திய வயல்களையுடையதும், கடலலைகளின் ஓசை மிகுந்ததும் ஆகி விளங்குகின்ற திருமாணிகுழி என்பதாம்.

திருமாணிகுழி

அம்பனைய கண்ணுமை மடந்தையவ
ளஞ்சிவெரு வச்சினமுடைக்
கம்பமத யானையுரி செய்தவர
னார்கருதி மேயவிடமாம்
வம்புமலி சோலைபுடை சூழமணி
மாடமது நீடி யழகார்
உம்பரவர் கோனகர மென்னமிக
மன்னுதவி மாணிகுழியே **#826**

அம்பு போன்ற கூரிய கண்களையுடைய உமாதேவி அஞ்ச, கோபமுடைய, தூணிலே கட்டக்கூடிய மதயானையின் தோலை உரித்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் தலம், நறுமணமிக்க சோலைகளையுடையதும், இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற மாடமாளிகைகள் நிறைந்த அழகிய தேவலோகத்து நகரமாகிய அமராவதியைப் போன்று நிலைபெற்று விளங்குவதும் ஆகிய திருமாணிகுழியாகும்.

திருமாணிகுழி

நித்தநிய மத்தொழில னாகிநெடு
மால்குறள னாகிமிகவும்
சித்தம தொருக்கிவழி பாடுசெய
நின்றசிவ லோகனிடமாம் கொத்தலரமலர்ப்பொழிலி னீடுகுல
மஞ்ஞைநட மாடலதுகண்
டொத்தவரி வண்டுக ளுலாவியிசை
பாடுதவி மாணிகுழியே **#827**

நாள்தோறும் அநுட்டானம் முதலிய நியமம் பூண்டவனாய்த் திருமால் வாமனவடிவங் கொண்டு மனத்தை ஒரு முகப்படுத்தி வழிபாடு செய்யச் சிவலோக நாயகனாகிய சிவ பெருமான் வீற்றிருந்தருளும் தலம், கொத்தாக மலர்ந்துள்ள பூக்களையுடைய சோலைகளில் சிறந்த மயில்கள் நடனமாட அதைப்பார்த்த வரிகளையுடைய வண்டுகள் நடனத்துக்கு ஒத்தவாறு இசைபாடுகின்ற திருமாணிகுழி ஆகும்.

திருமாணிகுழி

மாசின்மதி சூடுசடை மாமுடியர்
வல்லசுரர் தொன்னகரமுன்
நாசமது செய்துநல வானவர்க
ளுக்கருள்செய் நம்பனிடமாம்
வாசமலி மென்குழன் மடந்தையர்கண்
மாளிகையின் மன்னியழகார்
ஊசன்மிசை யேறியினி தாகவிசை
பாடுதவி மாணிகுழியே **#828**

சிவபெருமான் குற்றமில்லாத சந்திரனைச் சடையில் சூடியவர். வல்லசுரர்களின் பழமைவாய்ந்த திரிபுரங்களை அழித்து நற்குண நற்செய்கையுடைய தேவர்கட்கு அருள்புரிந்தவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் தலம், நறுமணமிக்க மெல்லிய கூந்தலையுடைய பெண்கள், மாளிகைகளில் தங்கி அழகிய ஊஞ்சலில் ஏறியமர்ந்து இனிமையாக ஊசற்பாட்டுப்பாடி ஆடுகின்ற திருமாணிகுழி ஆகும்.

திருமாணிகுழி

மந்தமலர் கொண்டுவழி பாடுசெயு
மாணியுயிர் வவ்வமனமாய்
வந்தவொரு காலனுயிர் மாளவுதை
செய்தமணி கண்டனிடமாம்
சந்தினொடு காரகில் சுமந்துதட
மாமலர்கள் கொண்டுகெடிலம்
உந்துபுனல் வந்துவயல் பாயுமண
மாருதவி மாணிகுழியே **#829**

மலரும் நிலையிலுள்ள மலர்களைக் கொண்டு சிவவழிபாடு செய்த பிரமசாரியான மார்க்கண்டேயனின் உயிரைக் கவரும் மனத்தோடு வந்த காலனின் உயிர் நீங்குமாறு காலால் உதைத்த நீலகண்டனான சிவபெருமான் வீற்றிருந்தருளும் தலம், சந்தன மரங்கள், கரிய அகிற் கட்டைகள் இவற்றைச் சுமந்து மலையிலிருந்து விழுந்து, குளங்களில் பூத்துள்ள சிறந்த மலர்களையும் தள்ளிக் கொண்டு வரும் கெடிலநதியின் நீர் வயல்களில் பாய நறுமணம் கமழும் திருமாணிகுழி ஆகும்.

திருமாணிகுழி

எண் பெரிய வானவர்க ணின்றுதுதி
செய்யவிறை யேகருணையாய்
உண்பரிய நஞ்சுதனை யுண்டுலக

முய்யவரு ளுத்தமனிடம்
பண்பயிலும் வண்டுபல கெண்டிமது
வுண்டுநிறை பைம் பொழிலின்வாய்
ஒண்பலவி னின்கனி சொரிந்துமண
நாறுதவி மாணிகுழியே **#830**
எண்ணற்ற தேவர்கள் வணங்கிநின்று துதி செய்யப்
பேரருளுடையவனாய் எவரும் உண்ணுதற்கரிய நஞ்சை உண்டு உலகம்
உய்யும்படி அருள்செய்த உத்தமனான சிவபெருமான் வீற்றிருந்தருளும்
தலமாவது, பண்ணிசை பாடுகின்ற வண்டுகள், பல மலர்களையும்
கிளறி, தேனருந்த, வளம்மிக்க பசுமை வாய்ந்த சோலைகளிடத்துச்
சிறந்த பலாமரங்களின் இனிய கனிகளிலிருந்து தேனைச் சொரிந்து
நறுமணம் கமழ்கின்ற திருமாணிகுழி என்பதாகும்.

<u>திருமாணிகுழி</u>

எண்ணமது வின்றியெழி லார்கைலை
மாமலை யெடுத்ததிறலார்
திண்ணிய வரக்கனை நெரித்தருள்
புரிந்தசிவ லோகனிடமாம்
பண்ணமரு மென்மொழியி னார்பணை
முலைப்பவள வாயழகதார்
ஒண்ணுதன் மடந்தையர் குடைந்துபுன
லாடுதவி மாணிகுழியே **#831**
கயிலைமலையின் பெருமையையும், சிவ பெருமானின் அளவற்ற
ஆற்றலையும் சிந்தியாது, கயிலைமலையைப் பெயர்த்தெடுத்த வலிய
அரக்கனான இராவணனை அம்மலையின்கீழ் நெரித்து, பின் அவன்
சாமகானம் பாட அருள்புரிந்த சிவலோக நாயகனாகிய சிவபெருமான்
வீற்றிருந்தருளும் தலமாவது, பண் போன்று மென்மொழி
பேசபவர்களாய்ப் பருத்த கொங்கைகளையும், பவளம் போன்ற
வாயையும், அழகிய ஒளிபொருந்திய நெற்றியையுமுடைய பெண்கள்
கையாற் குடைந்து நீராடும் திருமாணிகுழி ஆகும்.

<u>திருமாணிகுழி</u>

நேடுமய னோடுதிரு மாலுமுண
ராவகை நிமிர்ந்துமுடிமேல்
ஏடுலவு திங்கண்மத மத்தமித
ழிச்சடையெம் மீசனிடமாம்
மாடுலவு மல்லிகை குருந்துகொடி
மாதவி செருந்திகுரவி

னூடுலவு புன்னைவிரை தாதுமலி
சேருதவி மாணிகுழியே #832

பிரமனும், திருமாலும் இறைவனின் அடிமுடி தேடியும், உணராவகை நெருப்புப்பிழம்பாய் ஓங்கி நின்றவர் சிவ பெருமான். அவர்தம் சடைமுடியில் வெண்தாமரை இதழ் போன்ற பிறைச்சந்திரனையும், ஊமத்தை, கொன்றை ஆகியவற்றையும் அணிந்து விளங்குபவர். எம் இறைவரான சிவபெருமான் வீற்றிருந்தருளும் தலமாவது, மகரந்தப்பொடி நிறைந்த மல்லிகை, குருந்து, மாதவி, செருந்தி, குரவம், புன்னை என்ற மணம் கமழும் மலர்கள் நிறைந்த திருமாணிகுழி என்பதாம்.

திருமாணிகுழி

மொட்டையம ணாதர்முது தேரர்மதி
யில்லிகண் முயன்றனபடும்
முட்டைகண் மொழிந்தமொழி கொண்டருள்செய்
யாதமுதல் வன்றனிடமாம்
மட்டைமலி தாழையிள நீர்முதிய
வாழையில் விழுந்தவதரில்
ஒட்டமலி பூகநிரை தாறுதிர
வேறுதவி மாணிகுழியே #833

மொட்டைத் தலையுடைய சமணர்களும், பேதைமை முதிர்ந்த புத்தர்களும் இறையுண்மையை உணராதவர்கள். முயன்று செய்த வினைகளே பயன்தரும். அதற்குக் கர்த்தாவேண்டா என்று சொல்பவர்கள் அவர்கள். உருட்டிய வழி உருளும். முட்டை போல் தமக்கென ஓர் உறுதி இல்லாத, அவர்கள் சொன்ன சொற்களால் அவர்கட்கு அருள்புரியாத சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, மட்டைகளையுடைய தென்னைகளின் இளநீர்கள் வாழையிலும், பாக்கு மரங்களிலும் விழுந்து குலைகள் சிதற விளங்கும் திருமாணிகுழி ஆகும்.

திருமாணிகுழி

உந்திவரு தண்கெடில மோடுபுனல்
சூழுதவி மாணிகுழிமேல்
அந்திமதி சூடியவெம் மானையடி
சேருமணி காழிநகரான்
சந்தநிறை தண்டமிழ் தெரிந்துணரும்
ஞானசம் பந்தனதுசொல்
முந்தியிசை செய்துமொழி வார்களுடை
யார்கணெடு வானநிலனே #834

பல பொருள்களை நீர்ப்பெருக்குடன் அடித்து வரும் கெடிலநதி சூழ்ந்த உதவிமாணிகுழியின் மீது, மாலைக்காலப் பிறைச்சந்திரனைச் சூடிய எம் தலைவனான சிவபெருமானின் திருவடிகளை இடைவிடாது தியானிக்கும் அழகிய சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தன் சந்தம் நிறைந்த இன்தமிழில் அறிந்துணர்ந்து அருளிய இத்திருப்பதிகத்தை இசையுடன் பாட முற்படுபவர்கள் உயர்ந்த முத்திப் பேற்றைப் பெறுவர்.

திருவேதிகுடி

திருவேதிகுடி

திருவேதிகுடி,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வேதபுரீசுவரர்.
தேவியார் : மங்கையர்க்கரசியம்மை.

நீறுவரி யாடரவொ டாமைமன
வென்புநிரை பூண்பரிடபம்
ஏறுவரி யாவரு மிறைஞ்சுகழ
லாதிய ரிருந்தவிடமாம்
தாறுவிரி பூகமலி வாழைவிரை
நாறவிணை வாளைமடுவில்
வேறுபிரி யாதுவிளை யாடவள
மாரும்வயல் வேதிகுடியே #835

திருநீற்றினையும், வரிகளையுடைய ஆடும் பாம்பையும், ஆமையோட்டையும், அக்குமணியையும், எலும்பு மாலையையும் சிவபெருமான் அணிந்துள்ளார். அவர் இட பவாகனத்தில் ஏறுவார். யாவரும் வணங்கத்தக்க முதல்வராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், பாளைகள் விரிந்த பாக்குமரங்கள் நிறைந்த சோலைகளிலும், பழங்கள் கனிந்த வாழைத் தோட்டங்களிலும் நறுமணம் வீச, மடுக்களில் ஆணும், பெண்ணுமான வாளை மீன்கள் வேறு பிரியாமல் விளையாடும், வயல்வளமிக்க திருவேதிகுடி ஆகும்.

திருவேதிகுடி

சொற்பிரிவி லாதமறை பாடிநட,
மாடுவர்தொ லானையுரிவை
மற்புரி புயத்தினிது மேவுவரெந்
நாளும்வளர் வானவர்தொழத்
துற்பரிய நஞ்சமுத மாகமு
னயின்றவ ரியன்றதொகுசீர்
வெற்பரையன் மங்கையொரு பங்கர்நக
ரென்பர்திரு வேதிகுடியே #836

சிவபெருமான் இசையும், சொல்லின் மெய்ப்பொருளும் பிரிதல் இல்லாத வேதத்தைப்பாடி நடனம் ஆடுவர். முதிர்ந்த யானையின் தோலை உரித்து மல்யுத்தம் புரியவல்ல தோளில் இனிதாக அணிவார்.

நாள்தோறும் தேவர்கள் வணங்க, உண்ணுதற்கரிய நஞ்சை அமுதமாக முற்காலத்தில் உண்டருளியவர். பலவாற்றானும் புகழ்மிக்க மலையரையன் மகளாகிய உமாதேவியாரை ஒருபாகமாகக் கொண்டருளிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் தலம் திருவேதிகுடி என்பதாம்.

திருவேதிகுடி

போழுமதி பூணரவு கொன்றைமலர்
துன்றுசடை வென்றிபுகமேல்
வாழுநதி தாழுமரு ளாளரிரு
ளார்மிடறர் மாதரிமையோர்
சூழுமிர வாளர்திரு மார்பில்விரி
நூலர்வரி தோலருடைமேல்
வேழவுரி போர்வையினர் மேவுபதி
யென்பர்திரு வேதிகுடியே **#837**

சிவபெருமான் வட்டத்தைப் பிளந்தாலனைய பிறைச்சந்திரனை அணிந்தவர். பாம்பு, கொன்றைமலர் இவற்றைச் சடையிலணிந்த, அதில் தங்கிய கங்காநதியைப் பகீரதன் முயற்சிக்கு வெற்றி உண்டாக உலகிற் பாயச்செய்த அருளாளர். விடம் உண்டதால் கருநிறம் வாய்ந்த கண்டத்தையுடையவர். தேவ லோகத்திலுள்ள மகளிரும், ஆடவரும் தங்கள் குறைகளைக் கூறி அவை தீர அருளை வேண்டுபவர். அழகிய மார்பில் முப்புரிநூல் அணிந்தவர். புலித் தோலாடை அணிந்தவர். அதன் மேல் யானைத்தோலைப் போர்த்தவர். அத்தகைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் தலம் திருவேதிகுடி ஆகும்.

திருவேதிகுடி

காடர்கரி காலர்கனல் கையரனன்
மெய்யருடல் செய்யர்செவியில்
தோடர்தெரி கீளர்சரி கோவணவ
ராவணவர் தொல்லைநகர்தான்
பாடலுடை யார்களடி யார்கண்மல
ரோடுபுனல் கொண்டுபணிவார்
வேடமொளி யானபொடி பூசியிசை
மேவுதிரு வேதிகுடியே **#838**

சிவபெருமான் சுடுகாட்டில் இருப்பவர். யானையின் தோலை உரித்து அதற்குக் காலனாக ஆனவர். நெருப்பைக் கையில் ஏந்தியவர். நெருப்புப் போன்ற சிவந்த மேனி உடையவர். தூய உடம்பினர். காதில் தோட்டை அணிந்தவர். கிழிந்த ஆடை அணிந்தவர். சரிந்த கோவணத்தை

அணிந்தவர். பசுவேறி வரும் கோலத்தையுடையவர். அச்சிவபெருமான் வீற்றிருந்தருளும் பழமையான நகரானது, தோத்திரம் பாடும் அடியார்கள் புனிதநீரால் அபிடேகம் செய்து, மலரால் அர்ச்சித்து வணங்கி, சிவவேடத்தை நினைப்பூட்டும் திருவெண்ணீற்றினைப் பூசிக் கீர்த்தியுடன் விளங்குகின்ற திருவேதிகுடி என்னும் திருத்தலமாகும்.

திருவேதிகுடி

சொக்கர்துணை மிக்கவெயி லுக்கற
முனிந்துதொழு மூவர்மகிழத்
தக்கவருள் பக்கமுற வைத்தவர
னாரினிது தங்குநகர்தான்
கொக்கரவ முற்றபொழில் வெற்றிநிழல்
பற்றிவரி வண்டிசைகுலாம்
மிக்கமரர் மெச்சியினி தச்சமிடர்
போகநல்கு வேதிகுடியே **#839**

சிவபெருமான் மிக்க அழகுடையவன். கோபத்தால். சிரித்து மும்மதில்களும் வெந்தழியுமாறு செய்தபோது, அங்கிருந்த மூவர் தன்னை வணங்கிப் போற்ற அவர்கள் மகிழும்படியாகத் தன் பக்கத்திலே இருக்கும்படி அருள்புரிந்தவன். அப்பெருமான் வீற்றிருந்தருளும் நகராவது, மாமரச் சோலைகளில் மகளிர் விளையாடும் ஆரவாரமும், மகளிரின் மேனி ஒளியானது மாந்தளிர்களை வென்ற வெற்றி பற்றி வரிவண்டுகள் இசைபாடும் ஒலியும், தேவர்களை போற்றும் ஒலியும் கொண்டு, தன்னையடைந்து வழிபடுபவர்களின் அச்சமும், துன்பமும் நீங்க நன்மையை அளிக்கும் திருவேதிகுடி என்னும் திருத்தலமாகும்.

திருவேதிகுடி

செய்யதிரு மேனிமிசை வெண்பொடி
யணிந்துகரு மானுரிவைபோர்த்
தையமிடு மென்றுமட மங்கையொ
டகந்திரியு மண்ணலிடமாம்
வையம்விலை மாறிடினு மேறுபுகழ்
யாதவவர் வேதிகுடியே **#840**

சிவபெருமான் தம் சிவந்த திருமேனியில் வெண்ணிறத் திருநீற்றை அணிந்தவர். கரிய யானையின் தோலைப் போர்த்தவர். 'பிச்சையிடுங்கள்' என்று இளமைவாய்ந்த உமா தேவியாரோடு வீடுவீடாகத் திரிகின்றவர், நம் தலைவரான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, இப்பூமியில் பஞ்சத்தால் பண்டங்களின் விலை ஏறினாலும், மிகுந்த புகழும், குறையாத பண்பாடும்

உடையவர்களும், இனிய புலவர்கட்குக் கொடையளிக்கும் போது வன்சொற்கள் சொல்லாத் தன்மையுடையவர்களும் ஆகிய மாந்தர்கள் வாழ்கின்ற திருவேதிகுடி என்னும் திருத்தலமாகும்.

திருவேதிகுடி

உன்னியிரு போதுமடி பேணுமடி
யார்தமிட ரொல்கவருளித்
துன்னியொரு நால்வருட னானிழ
லிருந்ததுணை வன்றனிடமாம்
கன்னியரொ டாடவர்கண் மாமணம்
விரும்பியரு மங்கலமிக
மின்னியலு நுண்ணிடைநன் மங்கைய
ரியற்றுபதி வேதிகுடியே **#841**

காலை, மாலை ஆகிய இருவேளைகளிலும் தியானித்துத் தன் திருவடிகளைப் போற்றும் அடியார்களுடைய துன்பங்கள் நீங்கும்படி அருள்செய்பவன் சிவபெருமான். தன்னையடைந்த சனகர், சனந்தனர், சனாதனர், சனற் குமாரர் என்ற நான்கு முனிவர்கட்கும் கல்லால மரத்தின்கீழ் தட்சிணாமூர்த்தி கோலம் கொண்டு அறம் உரைத்தவன். அனைத்துயிர்கட்கும் பற்றுக்கோடாய் விளங்குபவன். அவன் உறைவிடம் கன்னியர்களும், ஆடவர்களும் சிறப்பான வகையில் திருமணம் செய்து கொள்ளும் மங்கலநாளில் திருமணத்திற்குரிய மங்கலச் சடங்குகளை மிகச் சிறப்புற நடத்துகின்ற மின்னலைப் போன்ற நுண்ணிடையுடைய மகளிர்கள் வாழும் திருவேதிகுடி என்னும் திருத்தலமாகும்.

திருவேதிகுடி

உரக்கநெ ருப்பெழநெ ருக்கிவரை
பற்றியவொ ருத்தன்முடிதோள்
அரக்கனை யடர்த்தவனி சைக்கினிது
நல்கியரு ளங்கணனிடம்
முருக்கிதழ் மடக்கொடி மடந்தையரு
மாடவரு மொய்த்த கலவை
விரைக்குழன் மிகக்கமழ விண்ணிசை
யுலாவுதிரு வேதிகுடியே **#842**

கயிலைமலையைப் பெயர்த்து எடுக்க முயன்ற அரக்கனான இராவணனின் தலைகளையும், தோள்களையும், நெஞ்சிலும், கரத்திலும் நெருப்புப்போல வருத்துமாறு மலையின்கீழ் அடர்த்து, பின் அவன் சாமகானம் இசைக்க அவனுக்கு ஒளி பொருந்திய வெற்றிவாளையும்,

நீண்ட வாழ்நாளையும் அருளிய பெருங்கருணையாளனான சிவபெருமான் வீற்றிருந்தருளும் தலமாவது, கல்யாண முருங்கைப்பூப் போன்ற உதடுகளையுடைய, இளங்கொடி போன்ற பெண்களும், ஆடவர்களும், நறுமணம் கமழும் கலவையைக் கூந்தலில் தடவ, அதன் மணமானது விண்ணுலகிலும் பரவ விளங்கும் திருவேதிகுடி என்னும் திருத்தலமாகும்.

திருவேதிகுடி

பூவின்மிசை யந்தணனொ டாழிபொலி
யங்கையனு நேடவெரியாய்த்
தேவுமிவ ரல்லரினி யாவரென
நின்றுதிகழ் கின்றவரிடம்
பாவலர்க ளோசையியல் கேள்விய
தறாதகொடை யாளர்பயில்வாம்
மேவரிய செல்வநெடு மாடம்வளர்
வீதிநிகழ் வேதிகுடியே **#843**

தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனுடன்,

திருவேதிகுடி

வஞ்சமணர் தேரர்மதி கேடர்த
மனத்தறிவி லாதவர்மொழி
தஞ்சமென வென்றுமுண ராதவடி
யார்கருது சைவனிடமாம்
அஞ்சுபுலன் வென்றறு வகைப்பொரு
டெரிந்தெழு விசைக்கிளவியால்
வெஞ்சின மொழித்தவர்கண் மேவிநிகழ்
கின்றதிரு வேதிகுடியே **#844**

வஞ்சனையுடைய சமணர்களும், புத்தர்களும் கெட்ட மதியுடையவர்கள். இறைவனை உணரும் அறிவில்லாத அவர்கள் கூறும் மொழிகள் பற்றுக் கோடாகத் தக்கன என்று எந்நாளும் நினையாத அடியார்கள் தியானிக்கின்ற சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது ஐம்புலன்களை வென்று, அறுவகைச் சமய நூற்பொருள்களை ஆராய்ந்து, ஏழுவகைச் சுரங்களால் இசைப்பாடல்களைப் பாடி, கோபத்தை ஒழித்த அருளாளர்கள் மேவி விளங்குகின்ற திருவேதிகுடி ஆகும்.

திருவேதிகுடி

கந்தமலி தண்பொழினன் மாடமிடை

காழிவளர் ஞானமுணர்சம்
பந்தன்மலி செந்தமிழின் மாலைகொடு
வேதிகுடி யாதி கழலே
சிந்தைசெய வல்லவர்க ணல்லவர்க
ளென்னநிகழ் வெய்தியிமையோர்
அந்தவுல கெய்தியர சாளுமது
வேசரத மாணைநமதே **#845**

நறுமணம் கமழும் குளிர்ந்த சோலைகளும், அழகிய மாடங்களும் நெருங்கிய சீகாழியில் அவதரித்த ஞான சம்பந்தன் பொருட்செறிவுடைய செந்தமிழில் அருளிய இப்பாமாலை கொண்டு திருவேதிகுடியில் வீற்றிருந்தருளும் முதல்வனான சிவபெருமானின் திருவடிகளைச் சிந்தித்துப் போற்றுபவர்கள் நல்லவர்களாய்த் திகழ்வர். மறுமையில் தேவலோகத்தை அடைந்து அரசாள்வர். இது நமது ஆணை.

திருக்கோகரணம்

திருக்கோகரணம்

திருக்கோகரணம்,
பண் - சாதாரி,
இத்தலம் துளுவதேசத்திலிருப்பது. அந்தத்தேயத்தில் இது ஒரேதலம். ,
சுவாமிபெயர் : மாபலநாதர்.
தேவியார் : கோகரணநாயகியம்மை.

என்றுமரி யானயல வர்க்கிய
லிசைப்பொருள்க ளாகியெனதுள்
நன்றுமொளி யானொளிசி றந்தபொன்
முடிக்கடவு ணண்ணுமிடமாம்
ஒன்றியம னத்தடியர் கூடியிமை
யோர்பரவு நீடரவமார்
குன்றுகணெ ருங்கிவிரி தண்டலை
மிடைந்துவளர் கோகரணமே **#846**

சிவபெருமான் அடியார் அல்லாதவர்க்கு எப்பொழுதும் காண்டற்கு அரியவன். இயற்றமிழும், இசைத்தமிழும் ஆகி எனது உள்ளத்தில் நன்கு ஒளியாகி வீற்றிருப்பவன். பொன் போன்று ஒளிரும் சடைமுடியுடைய அக்கடவுள் வீற்றிருந்தருளும் இடமாவது, ஒன்றிய மனமுடைய அடியவர்களுடன் தேவர்களும் கூடியிருந்து பரவுகின்ற குன்றுகளும், சோலைகளும் விளங்கும் திருக்கோகரணம் என்னும் திருத்தலமாகும்.

திருக்கோகரணம்

பேதைமட மங்கையொரு பங்கிட
மிகுத்திடப மேறியமரர்
வாதைபட வண்கடலெ ழுந்தவிட
முண்டசிவன் வாழுமிடமாம்
மாதரொடு மாடவர்கள் வந்தடி
யிறைஞ்சிநிறை மாமலர்கடூய்க்
கோதைவரி வண்டிசைகொள் கீதமுரல்
கின்றவளர் கோகரணமே **#847**

பேதைமைக் குணத்தையுடைய இளம் பெண்ணாகிய உமாதேவியை இடப்பாகமாகக் கொண்டு, இடப வாகனத்தின் மேலேறி, தேவர்கள் துன்பத்தில் அழுந்தியபோது கடலில் தோன்றியவிடத்தை உட்கொண்டு சிவபெருமான் காத்தருளினார். அப்பெருமான் வீற்றிருந்தருள்கின்ற இடமாவது பெண்களோடு ஆடவர்களும் வந்து இறைவனின்

திருவடிகளை வணங்கி, சிறந்த மலர்களைத் தூவிப் போற்ற, சாத்திய மாலைகளில் வரி வண்டுகள் மொய்த்து இன்னிசை எழுப்பும் கீர்த்தி மிகுந்த திருக்கோகரணம் என்னும் திருத்தலமாகும்.

திருக்கோகரணம்

முறைத்திறமு றப்பொருடெரிந்துமுனி
வர்க்கருளி யாலநிழல்வாய்
மறைத்திற மறத்தொகுதி கண்டுசம
யங்களைவ குத்தவனிடம்
துறைத்துறை மிகுத்தருவி தூமலர்
சுமந்துவரை யுந்திமதகைக்
குறைத்தறை யிடக்கரி புரிந்திடறு
சாரன்மலி கோகரணமே **#848**

கல்லால நிழலின் கீழ்ச் சனகாதி முனிவர்கட்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களையும் சிவபெருமான் முறையோடு உபதேசித்தார். வேதத்தின் பொருளாகிய சரியை முதலிய நாற்பாதப் பொருட்களையும் கண்டு அறுவகைச் சமயங்களை வகுத்தவர் சிவபெருமான். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம் துறைகள்தோறும் அருவிநீர் தூய்மையான மலர்களைச் சுமந்து கொண்டு, மூங்கில்களைத் தள்ளி, மதகுகளைச் சிதைத்து, யானை பிளிற மோதும் சாரலையுடைய திருக்கோகரணம் என்னும் தலமாகும்.

திருக்கோகரணம்

இலைத்தலை மிகுந்தபடை யெண்கரம்
விளங்கவெரி வீசிமுடிமேல்
அலைத்தலை தொகுத்தபுனல் செஞ்சடையில்
வைத்தவழ கன்றனிடமாம்
மலைத்தலை வகுத்தமுழை தோறுமுழை
வாளரிகள் கேழல்களிறு
கொலைத்தலை மடப்பிடிகள் கூடிவிளை
யாடிநிகழ் கோகரணமே **#849**

சிவபெருமான் இலைபோன்ற நுனியுடைய சூலப்படையை உடையவன். எட்டுக்கரங்களை உடையவன். நெருப்பைக் கையிலேந்தி எண்தோள் வீசி நடனம் ஆடுபவன். தலையிலுள்ள செஞ்சடையில் அலைகளையுடைய கங்கையைத் தாங்கியவன். அத்தகைய அழகான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது மலைகளிலுள்ள குகைகளில் மான்களும், சிங்கங்களும், பன்றிகளும், யானைகளும், கொம்பாற் கொல்லுதலையுடைய இளம் பெண்யானைகளும் கூடி

விளையாடுகின்ற திருக்கோகரணம் என்னும் தலமாகும்.

திருக்கோகரணம்

தொடைத்தலை மலைத்திதழி துன்னிய
வெருக்கலரி வன்னிமுடியின்
சடைத்தலை மிலைச்சியத போதனனெ
மாதிபயில் கின்றபதியாம்
படைத்தலை பிடித்துமற வாளரொடு
வேடர்கள் பயின்றுகுழுமிக்
குடைத்தலை நதிப்படிய நின்றுபழி
தீரநல்கு கோகரணமே **#850**

சிவபெருமான் தலைமாலை அணிந்தவர். சடையில் கொன்றை, எருக்கு, அலரி, வன்னிப்பத்திரங்களையும் அணிந்தவர். எம் முதல்வரான சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற இடமானது வெற்றி பொருந்திய வாளாயுதத்தை ஏந்திய வீரர்களுடன் வேடர்கள் நட்புக் கொண்டு கூடி அலைகளையுடைய புனித நதியில் குடைந்து மூழ்கி வணங்க அப்பெருமான் அவர்களின் பழிபாவத்தை நீக்கி அருள்புரியும் திருக்கோகரணமாகும்.

திருக்கோகரணம்

நீறுதிரு மேனிமிசை யாடிநிறை
வார்கழல் சிலம்பொலிசெய
ஏறுவிளை யாடவிசை கொண்டிடு
பலிக்குவரு மீசனிடமாம்
ஆறுசம யங்களும்வி ரும்பியடி
பேணியர னாகமமிகக்
கூறுமனம் வேறிரதி வந்தடியர்
கம்பம்வரு கோகரணமே **#851**

சிவபெருமான் திருநீற்றைத் திருமேனியில் பூசியவர். திருக்கழலில் அணிந்த சிலம்பு ஒலி செய்ய இடபத்தில் ஏறி இசைபாடிப் பலி ஏற்று வருவார். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமானது சிவாகம விதிப்படி இறைவனின் திருவடிகளை விரும்பி வழிபடுகின்ற ஆறு சமயத்தவர்களும், மனத்தில் சிவானந்தம் மேலிட உடலில் நடுக்கம் வருகின்ற அடியவர்களாய் வாழ்கின்ற திருக்கோகரணமாகும்.

திருக்கோகரணம்

கல்லவட மொந்தைகுழ றாளமலி
கொக்கரைய ரக்கரைமிசை

பல்லபட நாகம்விரி கோவணவ
ராளுநக ரென்பரயலே
நல்லமட மாதரர னாமமு
நவிற்றிய திருத்தமுழுகக்
கொல்லவிட நோயகல் தரப்புகல்கொ
டுத்தருளு கோகரணமே **#852**

ஓசைமிகுந்த கல்லவடம், மொந்தை, குழல், தாளம், வலம்புரிச்சங்கு ஆகிய வாத்தியங்களுக்கு ஏற்ப சிவ பெருமான் நடனமாடுவார். அக்குப்பாசி அணிந்த இடுப்பில், நச்சுப்பற்களும், படமும் உடைய பாம்பை அணிந்து கோவண ஆடை உடுத்தவர். அத்தகைய சிவபெருமான் ஆளும் நகர் நற்குண, நற்செய்கை யுடையவர்களாகிய பெண்கள் சிவபெருமானது திருப்பெயரைச் சொல்லித் தீர்த்தத்தில் முழுக, கொல்லும் விடநோய் போன்ற வினைகளைத் தீர்த்து, காரியம் யாவினும் வெற்றி கொடுத்தருளும் திருக்கோகரணமாகும்.

திருக்கோகரணம்

வரைத்தல நெருக்கிய முருட்டிரு
ணிறத்தவன வாய்களலற
விரற்றலை யுகிர்ச்சிறிது வைத்தபெரு
மானினிது மேவுமிடமாம்
புரைத்தலை கெடுத்தமுனி வாணர்பொலி
வாகிவினை தீரவதன்மேல்
குரைத்தலை கழற்பணிய வோமம்வில
கும்புகைசெய் கோகரணமே **#853**

முரட்டுத்தனமும், இருண்ட நிறமுமுடைய இராவணனின் பத்து வாய்களும் அலறும்படி, தன் காற்பெருவிரலை ஊன்றி அவனைக் கயிலைமலையின் கீழ் நெருக்கிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, முனிவர்களும், வேத வல்லுநர்களும் வினைதீர, ஒலிக்கின்ற கழலணிந்த சிவபெருமானின் திருவடிகளைப் பணிந்து, அரநாமத்தினை ஓதி வேள்வி புரிய அப்புகை பரவுகின்ற திருக்கோகரணம் ஆகும்.

திருக்கோகரணம்

வில்லிமையி னால்விற லரக்கனுயிர்
செற்றவனும் வேதமுதலோன்
இல்லையுள தென்றிகலி நேடவெரி
யாகியுயர் கின்றபரனூர்
எல்லையில் வரைத்தகடல் வட்டமு
மிறைஞ்சிநிறை வாசமுருவக்

கொல்லையி லிளங்குறவர் தம்மயிர்
புலர்த்திவளர் கோகரணமே **#854**
வில்லாற்றலால் வலிமையுடைய அரக்கனான இராவணனின் உயிரைப் போக்கிய திருமாலும், வேதத்தை ஓதும் பிரமனும், தம்முள் மாறுபட்டு இல்லையென்றும், உள்ளது என்றும் அறியமுடியாதவாறு தேட, நெருப்புவடிவாகி ஓங்கி நின்ற சிவ பெருமான் வீற்றிருந்தருளும் ஊர், எல்லையாக அளவுபடுத்திய கடலால் சூழப்பட்ட பூவுலகத்தோரும், தேவலோகத்தவரும் வணங்க, தினைப்புனங்களில் இளங்குறவர்கள் நறுமணம் கமழும் கூந்தலை உலர்த்தும் எழில்மிகுந்த திருக்கோகரணம் ஆகும்.

திருக்கோகரணம்

நேசமின் மனச்சமணர் தேரர்க
ணிரந்தமொழி பொய்களகல்வித்
தாசைகொண் மனத்தையடி யாரவர்
தமக்கருளு மங்கணனிடம்
பாசம தறுத்தவனி யிற்பெயர்கள்
பத்துடைய மன்னனவனைக்
கூசவகை கண்டுபி னவற்கருள்க
ணல்கவல கோகரணமே **#855**
உள்ளன்பில்லாத சமணர்களும், புத்தர்களும் கூறும் சொற்களைப் பொய்யென நீக்கி, தன்னிடத்து ஆசை கொள்ளும்படியான மனத்தையுடைய அடியவர்களுக்கு அருளும் அழகிய கருணையையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, இவ்வரிய பூவுலகில் பத்துப்பெயர்களையுடைய அர்ச்சுனனின் பாசத்தைப் போக்கி, அவன் நாணும்படி போர்செய்து பின் அருள் புரிந்த திருக்கோகரணம் ஆகும்.

திருக்கோகரணம்

கோடலர வீனும்விரி சாரன்மு
னெருங்கிவளர் கோகரணமே
ஈடமினி தாகவுறை வானடிகள்
பேணியணி காழிநகரான்
நாடிய தமிழ்க்கிளவி யின்னிசைசெய்
ஞானசம் பந்தன்மொழிகள்
பாடவல பத்தரவ ரெத்திசையு
மாள்வர்பர லோகமெளதே **#856**
காந்தட்செடிகள் பாம்புபோல் மலர்கின்ற அகன்ற

மலைச்சாரலையுடைய வளம்பெருகும் திருக்கோகரணத்தை இடமாகக் கொண்டு இனிது வீற்றிருந்தருளும் சிவபெருமானின் திருவடிகளைப் போற்றி, ஆராய்ந்து தமிழ்ச்சொற்களால் சீகாழியில் அவதரித்த திருஞானசம்பந்தன் அருளிய இனிய இசைப்பாடல்களைப் பாடவல்ல பக்தர்கள் அரசராகிய எல்லாத் திசையும் ஆள்வர். பின் சிவலோகமும் எளிதில் அடைவர்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை

திருவீழிமிழலை,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

சீர்மருவு தேசினொடு தேசமலி
செல்வமறை யோர்கள்பணியத்
தார்மருவு கொன்றையணி தாழ்சடையி
னானமர்ச யங்கொள்பதிதான்
பார்மருவு பங்கயமு யர்ந்தவயல்
சூழ்பழன நீடவருகே
கார்மருவு வெண்கனக மாளிகை
கவின்பெருகு வீழிநகரே **#857**

சிறப்புப் பொருந்திய சிவஒளியோடு, தேசங்களிலெல்லாம் புகழ்பெற்ற செல்வன் கழலேத்தும் செல்வத்தை உடைய அந்தணர்கள் வணங்குகின்ற தாழ்ந்த சடையையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் வெற்றிமிகும் பதியாவது, பூமியில் பொருந்திய தாமரை மலர்கள் மலர்ந்த வயல்களும், மேகம் சூழ்ந்த வெண்மையான, செல்வ வளமிக்க மாளிகைகளும் அழகுபெற விளங்குகின்ற திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

பட்டமுழ விட்டபணி லத்தினொடு
பன்மறைக ளோதுபணிநல்
சிட்டர்கள்ச யத்துதிகள் செய்யவருள்
செய்தழல்கொண் மேனியவனூர்
மட்டுலவு செங்கமல வேலிவயல்
செந்நெல்வளர் மன்னுபொழில்வாய்
விட்டுலவு தென்றல்விரை நாறுபதி
வேதியர்கள் வீழிநகரே **#858**

கொட்டும் முழவின் ஓசையும், ஊதும் சங்கின் ஒலியும், பல வேதங்களை ஓதுகின்ற பணியை மேற்கொள்ளும், சீலமுடைய அந்தணர்கள் வெல்க என்னும் துதிப்பாடல்கள் பாட அருள்செய்பவர் அழல் போன்ற சிவந்த மேனியுடைய சிவபெருமான். அவர் வீற்றிருந்தருளும் ஊரானது

நறுமணம் கமழும் செந்தாமரை மலர்கள் வேலி போன்று சூழ்ந்து விளங்குவதும், செந்நெல் பெருகும் வயல்வளமிக்கதும், வளம் பொருந்திய சோலைகள் சூழ்ந்ததும், தென்றலின் நறுமணம் கமழ்வதும் அந்தணர்கள் வசிக்கின்றதுமான திருவீழிநகர் என்னும் பதியாகும்.

திருவீழிமிழலை

மண்ணிழிசு ரர்க்குவள மிக்கபதி
மற்றுமுள மன்னுயிர்களுக்
கெண்ணிழிவி லின்பநிகழ் வெய்தவெழி
லார்பொழி லிலங்கறுபதம்
பண்ணிழிவி லாதவகை பாடமட
மஞ்ஞைநட மாடவழகார்
விண்ணிழிவி மானமுடை விண்ணவர்பி
ரான்மருவு வீழிநகரே **#859**

தேவலோகத்திலிருந்து பூவுலகிற்கு வந்த தேவர்கட்கு வளமிக்க பதி, மற்றுமுள்ள மன்னுயிர்கட்கு எண்ணற்ற இன்பங்களைத் தரும்பதி, அழகிய சோலைகளில் வண்டுகள் பாட, இள மயில்கள் நடனமாட, அழகிய தேவலோகத்திலிருந்து கொண்டு வரப்பட்டு வழிபடப்படும் விமானமுடைய கோயிலில் தேவர்களின் தலைவனான சிவபெருமான் வீற்றிருந்தருளும் சிறப்புடைய திரு வீழிமிழலை என்னும் தலமாகும்.

திருவீழிமிழலை

செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு
நற்கலைதெ ரிந்தவவரோ
டந்தமில்கு ணத்தவர்க ளர்ச்சனைகள்
செய்யவமர் கின்றவரனூர்
கொந்தலர்பொ ழிற்பழன வேலிகுளிர்
தண்புனல்வ ளம்பெருகவே
வெந்திறல்வி ளங்கிவளர் வேதியர்வி
ரும்புபதி வீழிநகரே **#860**

பக்தியுடன் இனிய செந்தமிழ்ப் பாக்கள் பாடும் அன்பர்களும், தெய்வத் தன்மையுடைய வேதம் ஓதும் நாவையுடைய அந்தணர்களும், சிறந்த நற்பயன் தருவதாகிய கலைகளைத் தெரிந்த அர்ச்சனைகள் செய்ய, சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் ஊரானது, கொத்தாக மலரும் பூக்கள் நிறைந்த சோலைகளும், வேலி சூழ்ந்த வயல்களும், குளிர்ந்த நீர்நிலைகளும் வளம்பெருகி விளங்க, வேள்வி இயற்றும் வேத விற்பன்னர்கள் விரும்புகின்ற பதியாகிய திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

பூதபதி யாகியபு ராணமுனி
புண்ணியநன் மாதைமருவிப்
பேதமதி லாதவகை பாகமிக
வைத்தபெரு மானதிடமாம்
மாதவர்க ளன்னமறை யாளர்கள்
வளர்த்தமலி வேள்வியதனால்
ஏதமதி லாதவகை யின்பமமர்
கின்றவெழில் வீழிநகரே **#861**

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என விளங்குகின்ற ஐம்பூதங்கட்கும் பதியாகிய சிவபெருமான் பழமையான தவக் கோலம் பூண்டவர். அவர் புண்ணிய தேவியாகிய உமாதேவியைத் தம் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது மாதவர்களும், அந்தணர்களும் அழலோம்பி வளர்க்கும் வேள்வியினால் பசி, பிணி, வறுமை, மழையின்மை முதலிய தீங்கு நேராமலும், உண்டி, நோயின்மை, செல்வம், பருவ மழை முதலிய நன்மை நிகழவும், மாந்தர் மகிழ்ச்சியடைகின்ற திருவீழிமிழலை ஆகும்.

திருவீழிமிழலை

மண்ணின்மறை யோர்மருவு வைதிகமு
மாதவமு மற்றுமுலகத்
தெண்ணில்பொரு ளாயவை படைத்தவிமை
யோர்கள்பெரு மானதிடமாம்
நண்ணிவரு நாவலர்க ணாடொறும்
வளர்க்கநிகழ் கின்றபுகழ்சேர்
விண்ணுலவு மாளிகை நெருங்கிவளர்
நீள்புரிசை வீழிநகரே **#862**

இப்பூவுலகில் அந்தணர் ஆற்றி வருகின்ற வைதிக தருமங்களையும், மகா முனிவர் ஒழுகிவருகின்ற தவநெறிகளையும், மற்றும் உலகியல் நெறி பற்றிய பல்வகை அறங்களையும் படைத்தருளிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, நாடிவருகின்ற புலவர்கள் நாள்தோறும்வளர்க்க வளர்ந்து வரும் புகழையுடையதும், வானளாவிய மாளிகையின் நிறைந்து செல்வம் வளர்வதும், ஓங்கிய மதிலையுடையதுமான திருவீழிமிழலை ஆகும். கு - ரை: வைதிகமும் - வேதநெறி யொழுக்கத்திற்குரிய அறங்களையும். மாதவம் - சிறந்த தவநெறி யொழுக்கத்திற்குரிய அறங்களையும், மற்றும் உலகியல்

நெறிபற்றி யொழுகற்பால பல்வகையறங்களையும் படைத்தருளிய சிவபெருமானது இடமாவது என்பது முதலிரண்டடியின் கருத்து. நாடி வருகின்ற புலவர்கள் நாள்தோறும் வளர்க்க வளர்ந்து வரும் புகழையுடையதும், வான் அளாவிய மாளிகைகள் செறிந்து செல்வம் வளர்வதும், ஓங்கிய மதிலையுடையதுமாகிய திருவீழிமிழலையென்பது பின்னிரண்டடியின் கருத்து.

திருவீழிமிழலை

மந்திரநன் மாமறையி னோடுவளர்
வேள்விமிசை மிக்கபுகைபோய்
அந்தரவி சும்பணவி யற்புத
மெனப்படரு மாழியிருள்வாய்
மந்தரநன் மாளிகை நிலாவுமணி
நீடுகதிர் விட்டவொளிபோய்
வெந்தழல் விளக்கென விரும்பினார்
திருந்துபதி வீழிநகரே **#863**

வேத மந்திரங்கள் ஓதி வளர்க்கப்படும் வேள்வியின் புகையானது மேலே சென்று ஆகாயத்தில் கலந்து அற்புதம் போன்று பகற்காலத்தே இருள் சூழக் கடலைக் கடைந்த மந்திரமலையைப்போன்ற அழகிய மாளிகைகளில் பதிக்கப்பட்ட இரத்தினங்களின் ஒளியானது நெடுந்தூரம் பாய்ந்து புகையால் விளைந்த இருளைப் போக்கி ஒளிரும். அவ்வொளி வெவ்விய தழலில் ஏற்றிய விளக்கொளிபோல் விளங்கும் இயல்பினதாய் விருப்பமுடையவர்களாய், மனநிறைவோடு மக்கள் வாழ்கின்ற தலம் திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

ஆனவலி யிற்றசமு கன்றலைய
ரங்கவணி யாழிவிரலால்
ஊனமரு யர்ந்தகுரு திப்புனலில்
வீழ்தரவு ணர்ந்தபரனூர்
தேனமர் திருந்துபொழில் செங்கனக
மாளிகை திகழ்ந்தமதிளோ
டானதிரு வுற்றுவள ரந்தணர்
நிறைந்தவணி வீழிநகரே **#864**

தசமுகன் எனப்படும் இராவணன் தன் வலிமையைப் பெரிதாகக் கருதிக் கயிலைமலையைப் பெயர்த்தெடுக்க, அவனது தலைகள் அரைபடும்படி அழகிய திருக்காற்பெருவிரலை ஊன்றி, அவனுடைய உடலிலிருந்து குருதி பெருகுமாறு செய்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் ஊரானது

தேன்மணம் கமழும் சோலைகளும், செம்பொன் மாளிகைகளும், உயர்ந்த மதில்களும் உடையதாய்ச் செல்வம் பெருகி வளரும் அந்தணர்கள் நிறைந்த அழகிய திருவீழிநகராகும்.

திருவீழிமிழலை

ஏனவுரு வாகிமணி டந்தவிமை
யோனுமெழி லன்னவுருவம்
ஆனவனு மாதியினோ டந்தமறி
யாதவழன் மேனியவனூர்
வானணவு மாமதிண் மருங்கலர்
நெருங்கிய வளங்கொள்பொழில்வாய்
வேனலமர் வெய்திட விளங்கொளியின்
மிக்கபுகழ் வீழிநகரே **#865**

பன்றி வடிவம் கொண்டு பூமியைத் தோண்டிய திருமாலும், அழகிய அன்னப்பறவை உருவெடுத்த பிரமனும் தேடத் தன் முடியையும், அடியையும் அறியப்படாத வண்ணம் நெருப்பு வடிவாய் நின்ற சிவபெருமான் வீற்றிருந்தருளும் ஊரானது, வானளாவிய பெரிய மதில்களினருகில் மலர்கள் அடர்ந்த, வளமிக்க சோலையில் மாந்தர் வெயிற்காலத்தில் தங்க, விளங்குகின்ற தெய்வத்தன்மை மிக்க புகழுடைய திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

குண்டமண ராகியொரு கோலமிகு
பீலியொடு குண்டிகைபிடித்
தெண்டிசையு மில்லதொரு தெய்வமுள
தென்பரது வென்னபொருளாம்
பண்டையய னன்னவர்கள் பாவனை
விரும்புபரன் மேவுபதிசீர்
வெண்டரள வாணகைநன் மாதர்கள்
விளங்குமெழில் வீழிநகரே **#866**

சமணர்கள் முரட்டுத்தன்மை உடையவராய், அழகிய மயிற்பீலியும், குண்டிகையும் ஏந்தி, எட்டுத் திக்கிலும் மிகுந்த ஆற்றலுடைய தெய்வம் ஒன்று உள்ளது என்பதால் என்ன பயன் உள்ளது? வேதத்தை ஓதும் பிரமனைப் போன்ற அறிஞர்கள் விரும்பிப் போற்றும் சிவபெருமான் வீற்றிருந்தருளும் ஊர், வெண்ணிற முத்துப்போன்ற ஒளிபொருந்திய பற்களையுடைய கற்புடைப் பெண்கள் விளங்கும் அழகிய திருவீழிமிழலையாகும்.

திருவீழிமிழலை

மத்தமலி கொன்றைவளர் வார்சடையில்
வைத்தபரன் வீழிநகர்சேர்
வித்தகனை வெங்குருவில் வேதியன்
விரும்புதமிழ் மாலைகள்வலார்
சித்திர விமானமமர் செல்வமலி
கின்றசிவ லோகமருவி
அத்தகு குணத்தவர்க ளாகியனு
போகமொடி யோகமவரதே **#867**

பொன்னூமத்தை மலரும், கொன்றைமலரும், நீண்ட சடையிலே அணிந்த பெருமானும், திருவீழிமிழலைநகரில் வீற்றிருந்தருளும் சதுரனுமாகிய சிவபெருமானைப் போற்றி. வெங்குரு என்னும் பெயரையுடைய சீகாழியில் அவதரித்த வேதவல்லுநனான ஞானசம்பந்தன் அருளிய இத்தமிழ் மாலைகளை ஓதவல்லவர்கள், அழகிய கோயிலையுடைய செல்வம் மலிகின்ற சிவலோகத்தை அடைந்து, சத்துவ குணம் உடையவர்களாகி இறைவனோடு பேரின்பம் துய்ப்பதற்குரிய சிவயோகத்தைப் பெறுவர்.

திருத்தோணிபுரம்

சீர்காழி

திருத்தோணிபுரம்,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தோணியப்பர்.
தேவியார் : திருநிலைநாயகியம்மை.

சங்கமரு முன்கைமட மாதையொரு
பாலுடன் விரும்பி
அங்கமுடன் மேலுறவ ணிந்துபிணி
தீரவருள் செய்யும்
எங்கள்பெரு மானிடமெ னத்தகுமு
னைக்கடலின் முத்தந்
துங்கமணி யிப்பிகள் கரைக்குவரு
தோணிபுர மாமே **#868**

முன்கையில் சங்குவளையல் அணிந்த உமாதேவியைத் தன்னுடைய உடம்பின் ஒரு பாகமாக விருப்பத்துடன் அமர்த்தி, எலும்பைத் தன் உடம்பில் நன்கு பொருந்தும்படி அணிந்து, தன்னைத் தியானிப்பவரது மும்மலப் பிணிப்பு நீங்கும்படி அருள்புரிகின்ற எங்கள் சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது அலைவீசுகின்ற கடலினின்றும் முத்துக்களும், இரத்தினங்களும், சங்குப்பூச்சிகளும் கரைக்கு வந்து சேருகின்ற திருத்தோணிபுரம் ஆகும்.

சீர்காழி

சல்லரியி யாழ்முழவ மொந்தைகுழ
றாளமதி யம்பக்
கல்லரிய மாமலையர் பாவையொரு
பாகநிலை செய்து
அல்லெரிகை யேந்திநட மாடுசடை
யண்ணலிட மென்பர்
சொல்லரிய தொண்டர்துதி செய்யவளர்
தோணிபுர மாமே **#869**

சல்லரி, யாழ், முழவம், மொந்தை, குழல், தாளம் முதலிய வாத்தியங்கள் ஒலிக்க, பெரிய மலையாகிய இமயமலையரசரின் அரிய மகளாகிய உமாதேவியைத் தன் திருமேனியில் ஒருபாகமாகப் பிரியாமல் கொண்டு, கையில் அனலை ஏந்தி இரவில் நடனமாடுகின்ற, சடைமுடியையுடைய

சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற இடம், சொல்லுதற்குரிய பெருமையுடைய தொண்டர்கள் போற்ற நாளும் புகழ் வளரும் திருத்தோணிபுரம் ஆகும்.

சீர்காழி

வண்டரவுகொன்றைவளர் புன்சடையின்
மேன்மதியம் வைத்துப்
பண்டரவு தன்னரையி லார்த்தபர
மேட்டிபழி தீரக்
கண்டரவ வொண்கடலி னஞ்சமமு
துண்டகட வுள்ளூர்
தொண்டரவர் மிண்டிவழி பாடுமல்கு
தோணிபுர மாமே **#870**

வண்டுகள் மொய்த்து ஊதுகின்ற கொன்றைமலர் மாலையை அணிந்த வளர்ந்த சிவந்த சடையில் பிறைச்சந்திரனையும் தரித்து, பண்டைக்காலத்தில் இடையில் பாம்பைக் கச்சாகக் கட்டிய மேலான இடத்திலுள்ள சிவபெருமான், திருமால் முதலியோர் தனது அருளின்றி அமுதம் கடையச் சென்ற தோடம் அவரைவிட்டு நீங்குமாறு, திருவருள் செய்து, அலைகளின் ஆரவாரத்தையுடைய சிறந்த பாற்கடலினின்றும் எழுந்த நஞ்சினை அமுதமென உண்ட கடவுளாய் வீற்றிருந்தருளும் ஊர், திருத்தொண்டர்கள் ஒருவரை ஒருவர் முந்திச் செய்கின்ற வழிபாடுகள் மிகுந்த திருத்தோணிபுரம் ஆகும்.

சீர்காழி

கொல்லைவிடை யேறுடைய கோவணவ
னாவணவு மாலை
ஒல்லையுடை யானடைய லாரரண
மொள்ளழல் விளைத்த
வில்லையுடை யான்மிக விரும்புபதி
மேவிவளர் தொண்டர்
சொல்லையடை வாகவிடர் தீர்த்தருள்செய்
தோணிபுர மாமே **#871**

சிவபெருமான் முல்லைநிலத்ததாகிய இடபவாகனத்தை யுடையவன். கோவண ஆடை அணிந்தவன். அடிய வர்கள் பாடிப் போற்றித் தொழும் பாமாலைகளை உடையவன். தொண்டர்கள் பக்தியுடன் ஒலிக்கும் அரநாமமும், சிவநாமமும் ஓதப்படும் பண்பினன். பகைவரது மதில்கள் எரிந்து சாம்பலாகுமாறு செய்த மேருவை வில்லாக உடையவன். அப் பெருமான் வீற்றிருந்தருளும் பதியாவது, இறைவனையே

பற்றுக்கோடாகக் கொண்டு மேன்மேலும் பக்தி செய்கின்ற தொண்டர்களின் வேண்டு கோள்களை ஏற்று, அவர்களின் துன்பங்களைத் தீர்த்து அருள்செய்கின்ற திருத்தோணிபுரம் ஆகும்.

சீர்காழி

தேயுமதி யஞ்சடையி லங்கிடவி
லங்கன்மலி கானிற்
காயுமடு திண்கரியி னீருரிவை
போர்த்தவனி னைப்பார்
தாயென நிறைந்ததொரு தன்மையினர்
நன்மையொடு வாழ்வு
தூயமறை யாளர்முறை யோதிநிறை
தோணிபுர மாமே **#872**

கலைகள் தேய்ந்து அழியும் நிலையிலிருந்த சந்திரனைச் சடைமுடியில் தரித்து மீண்டும் விளங்கி ஒளிருமாறு செய்தவர் சிவபெருமான். மலைகள் மிக்க காட்டில் திரிகின்ற சினமுடைய, கொல்லும் தன்மையுடைய வலிய யானையின் தோலை உரித்துப் போர்த்தவர். தம்மையே சிந்தித்திருப்பவர்கட்குத் தாயைப் போலக் கருணை காட்டிப் பாதுகாப்பவர். எங்கும் நிறைந்த தன்மையர். அடியவர்கட்கு நன்மை புரிதலையே தம் கடனாகக் கொண்ட அப்பெருமானார் வீற்றிருந்தருளுகின்ற இடம், தூய்மையுடைய வேதியர்கள் வேதங்களை ஓதி நிறைகின்ற திருத்தோணிபுரம் ஆகும்.

சீர்காழி

பற்றலர்த முப்புரமெ ரித்தடிப
ணிந்தவர்கண் மேலைக்
குற்றமதொ ழித்தருளு கொள்கையினன்
வெள்ளின்முது கானிற்
பற்றவனி சைக்கிளவி பாரிடம
தேத்தநட மாடுந்
துற்றசடை யத்தனுறை கின்றபதி
தோணிபுர மாமே **#873**

சிவபெருமான் பகைவர்களின் முப்புரங்களை எரிந்து சாம்பலாகுமாறு செய்தவர். தம் திருவடிகளைப் பணிந்து வணங்குபவர்களின் குற்றங்களை ஒழித்துத் திருவருள் புரியும் கொள்கையினையுடையவர். பாடைகள் மலிந்த சுடுகாட்டில் பற்றுடையவர். பூதகணங்கள் இசைப் பாடல்களைத் துதித்துப்பாட நடனமாடுபவர். அடர்ந்து வளர்ந்த சடையையுடைய, அனைத்துயிர்க்கும் தந்தையாகிய சிவபெருமான்

வீற்றிருந்து அருளுகின்ற தலம் திருத்தோணிபுரம் ஆகும்.

சீர்காழி

பண்ணமரு நான்மறையர் நூன்முறை
பயின்றதிரு மார்பிற்
பெண்ணமரு மேனியினர் தம்பெருமை
பேசுமடி யார்மெய்த்
திண்ணமரும் வல்வினைக டீரவருள்
செய்தலுடை யானூர்
துண்ணென விரும்புசரி யைத்தொழிலர்
தோணிபுர மாமே **#874**

சிவபெருமான் பண்ணிசையோடு கூடிய நான்கு வேதங்களை அருளியவர். வேதாகம சாத்திரங்களின் முடிவான கருத்தை, மோனநிலையில் சின்முத்திரையால் தெரிவித்தருளிய திருமார்பையுடையவர். உமாதேவியைத் தம் திருமேனியில் ஒருபாகமாகக் கொண்டவர். தமது பெருமை பேசும் அடியவர்களின் தீர்ப்பதற்கரிய வல்வினைகளைத் தீர்த்து அருளியவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் ஊரானது சரியையாதி தொழில்களை விரைவுடன் பணிசெய்தலில் விருப்புடைய மெய்த்தொண்டர் வாழ்கின்ற திருத்தோணிபுரம் என்னும் திருத்தலமாகும்.

சீர்காழி

தென்றிசையி லங்கையரை யன்றிசைகள்
வீரம்விளை வித்து
வென்றிசை புயங்களை யடர்த்தருளும்
வித்தகனி டஞ்சீர்
ஒன்றிசையி யற்கிளவி பாடமயி
லாடவளர் சோலை
துன்றுசெய வண்டுமலி தும்பிமுர
றோணிபுர மாமே **#875**

தென்திசையில் விளங்கிய இலங்கை மன்னனான இராவணன் எல்லாத் திசைகளிலும் திக்விஜயம் செய்து தனது வீரத்தை நிலைநாட்டி, வெற்றி கொண்ட தோள்களை நெருக்கிப் பின் அருளும் புரிந்த வித்தகனான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், இசையுடன் குயில்கள் பாட, மயில்கள் ஆட, வளம் பொருந்திய சோலைகளின் மலர்களிலுள்ள தேனை உண்ணும்பொருட்டு, வண்டுகளும், மிகுந்த தும்பிகளும் சுருதிகூட்டுவது போல் முரல்கின்ற திருத்தோணிபுரம் ஆகும்.

சீர்காழி

நாற்றமிகு மாமலரின் மேலயனு
நாரணனு நாடி
ஆற்றலத னான்மிகவ ளப்பரிய
வண்ணமெரி யாகி
ஊற்றமிகு கீழுலகு மேலுலகு
மோங்கியெழு தன்மைத்
தோற்றமிக நாளுமரி யானுறைவு
தோணிபுர மாமே **#876**

நறுமணம் கமழும் தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமனும், திருமாலும் தேட முயலத் தங்களது ஆற்றலால் அளந்தறிதற்கு அரிதாகும் வண்ணம், நெருப்புப் பிழம்பாகி, கீழுலகு மேலுலகு ஆகியவற்றை வியாபித்து ஓங்கியெழுந்த தன்மையுடைய தோற்றத்தை உடையவனாய் ஒருநாளும் அவர்கள் அறிதற்கரியனாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருத்தோணிபுரம் ஆகும்.

சீர்காழி

மூடுதுவ ராடையினர் வேடநிலை
காட்டுமம ணாதர்
கேடுபல சொல்லிடுவ ரம்மொழிகெ
டுத்தடைவி னானக்
காடுபதி யாகநட மாடிமட
மாதொடிரு காதிற்
றோடுகுழை பெய்தவர்த மக்குறைவு
தோணிபுர மாமே **#877**

உடலை மூடி மறைக்கின்ற துவராடையணிந்த புத்தர்களும், தமது வேடமாகிய ஆடையணியாத் தன்மையினைப் போல தமது அறிவும் உளது எனக் காட்டும் அறிவிலிகளாகிய சமணர்களும் தீமை விளைவிக்கக் கூடிய பல சொற்களைக் கூறுவர். அத்தீய மொழிகளை நீக்கி, சுடுகாட்டைத் தமது இருப்பிடமாகக் கொண்டு, நடனமாடி, உமாதேவியோடு கூடி, இருகாதுகளிலும் முறையே தோடும், குழையும் அணிந்தவராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் தலம் திருத்தோணிபுரம் ஆகும்.

சீர்காழி

துஞ்சிருளி னின்றுநட மாடிமிகு
தோணிபுர மேய

மஞ்சனைவ ணங்குதிரு ஞானசம்
பந்தனசொல் மாலை
தஞ்சமென நின்றிசைமொ ழிந்தவடி
யார்கள்தடு மாற்றம்
வஞ்சமிலர் நெஞ்சிருளு நீங்கியருள்
பெற்றுவளர் வாரே **#878**

அனைத்துலகும் ஒடுங்கிய பிரளயம் எனப்படும் பேரிருளில் நின்று நடனமாடுபவனாய்ப், புகழ்மிகுந்த திருத்தோணிபுரத்தை விரும்பி வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமானை வணங்கித திருஞானசம்பந்தர் அருளிய இச்சொல்மாலைகளே தமக்குப் பற்றுக்கோடாகும் என்ற கருத்தில் நிலைத்துநின்று, அதனை இசையுடன் ஓதும் அடியவர்கள் நெறிதவறுதலும் அதற்குக் காரணமான வஞ்சனையும் இல்லாதவர்கள். அவர்கள் நெஞ்சிலுள்ள அறியாமை என்னும் இருள் நீங்கப் பெற்று, இறைவனது அருள் பெற்றுச் சீலத்துடன் வளர்வர்.

திருஅவளிவணல்லூர்

திருஅவளிவணல்லூர்

திருஅவளிவணல்லூர்,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சாட்சிநாயகர்.
தேவியார் : சவுந்தரநாயகியம்மை.

கொம்பிரிய வண்டுலவு கொன்றைபுரி
நூலொடுகு லாவித்
தம்பரிசி னோடுசுடு நீறுதட
வந்திடப மேறிக்
கம்பரிய செம்பொனெடு மாடமதில்
கல்வரைவி லாக
அம்பெரிய வெய்தபெரு மானுறைவ
தவளிவண லூரே #879

இறைவர் வண்டுகள் மொய்க்கும் கொன்றை மாலை அணிந்தவர். முப்புரிநூல் அணிந்த திருமார்பினர். திருவெண்ணீறு பூசியவர். இடப வாகனத்தில் ஏறி வீற்றிருப்பவர். ஆகாயத்தில் திரிந்த பொன், வெள்ளி, இரும்பு ஆகிய கோட்டைகளின் மதில்களை, மேருமலையை வில்லாகக் கொண்டு அம்பு எய்து எரித்தவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் தலம் திரு அவளிவணல்லூர் ஆகும்.

திருஅவளிவணல்லூர்

ஓமையன கள்ளியன வாகையன
கூகைமுர லோசை
ஈமமெரி சூழ்சுடலை வாசமுது
காடுநட மாடித்
தூய்மையுடை யக்கொடர வம்விரவி
மிக்கொளிது லங்க
ஆமையொடு பூணுமடி கள்ளுறைவ
தவளிவண லூரே #880

ஓமை, கள்ளி, வாகை முதலிய மரங்கள் நிறைந்ததும், கோட்டான்கள் கத்தும் ஓசையும் உடையதும் ஆன கொள்ளி நெருப்புச் சூழ்ந்த சுடலை வாசமுடைய சுடுகாட்டில் திருநடனம் செய்பவர் சிவபெருமான். தூய்மையான எலும்பும், பாம்பும் கலந்து ஒளி துலங்க, ஆமையோட்டினை ஆபரணமாக அணிந்துள்ள சிவபெருமான்

வீற்றிருந்தருளுவது திருஅவளிவணல்லூர் என்னும் திருத்தலமாகும்.

திருஅவளிவணல்லூர்

நீறுடைய மார்பிலிம வான்மகளோர்
பாகநிலை செய்து
கூறுடைய வேடமொடு கூடியழ
காயதொரு கோலம்
ஏறுடைய ரேனுமிடு காடிரவி
னின்றுநட மாடும்
ஆறுடைய வார்சடையி னானுறைவ
தவளிவண லூரே **#881**

சிவபெருமான் திருநீறணிந்த தம் திருமார்பில் இமவான் மகளாகிய உமாதேவியை ஒருபாகமாகக் கொண்டு அர்த்தநாரி என்னும் அழகிய கோலத்தில் இடபவாகனத்தில் வீற்றிருப்பவர். சுடுகாட்டில் இரவில் நடனம் ஆடுபவர். கங்கையை நீண்ட சடையில் தாங்கியவர். அப்பெருமான் வீற்றிருந்தருளுவது திருஅவளிவணல்லூர் என்னும் திருத்தலமாகும்.

திருஅவளிவணல்லூர்

பிணியுமிலர் கேடுமிலர் தோற்றமில
ரென்றுலகு பேணிப்
பணியுமடி யார்களன பாவமற
வின்னருள்ப யந்து
துணியுடைய தோலுமுடை கோவணமு
நாகமுட றொங்க
அணியுமழ காகவுடை யானுறைவ
தவளிவண லூரே **#882**

பிணியும், இறப்பும், பிறப்பும் இல்லாதவர் என்று உலகத்தவரால் போற்றப் படும் சிவபெருமான் தம்மை வணங்கும் அடியவர்களின் பாவம் யாவும் நீங்குமாறு செய்து, இன்னருள் புரிபவர். கிழிந்த தோலையும், கோவணத்தையும் ஆடையாக உடுத்ததுடன், பாம்பை அழகிய ஆபரணமாக அணிந்து விளங்கும் அவர் வீற்றிருந்தருளுவது திருஅவளிவண்ணலூர் என்னும் திருத்தலமாகும்.

திருஅவளிவணல்லூர்

குழலின்வரி வண்டுமுரன் மெல்லியன
பொன்மலர்கள் கொண்டு
கழலின்மிசை யிண்டைபுனை வார்கடவு

ளென்றமரர் கூடித்
தொழலும்வழி பாடுமுடை யார்துயரு
நோயுமிலராவர்
அழலுமழு வேந்துகையி னானுறைவ
தவளிவணலூரே **#883**

குழலின் ஓசைபோல் வண்டுகள் ஒலி எழுப்பி மொய்க்கும் மெல்லிய அழகிய மலர்களைக் கொண்டு இண்டைமாலைகட்டி, சிவபெருமான் திருவடிகளில் சார்த்தித் தேவர்கள் எல்லாம் ஒன்றுகூடி, "இவரே முழுமுதற் கடவுள்" என்று தொழுது போற்றுவர். அத்தகைய வழிபாட்டைச் செய்பவர்கட்கு, உள்ளத்தால் வரும் துயரும், உடலால் வரும் நோயும் இல்லை. அவ்வாறு அடியவர்கட்கு அருள்புரியும் இறைவன், நெருப்புப்போல் ஒளிவீசும் மழுவேந்திய கையுடையவனாய் வீற்றிருந்தருளுவது திருஅவளிவணல்லூர் என்னும் திருத்தலமாகும்.

திருஅவளிவணல்லூர்

துஞ்சலில ராயமரர் நின்றுதொழுப
தேத்தவருள் செய்து
நஞ்சுமிட றுண்டுகரி தாயவெளி
தாகியொரு நம்பன்
மஞ்சுறநி மிர்ந்துமைந டுங்கவக
லத்தொடுவ ளாவி
அஞ்சமத வேழவுரி யானுறைவ
தவளிவண லூரே **#884**

உறக்கமின்றித் தேவர்கள் இடையறாது தம்மைத் தொழுது போற்ற, நஞ்சினையுண்டு அவர்களைக் காத்து அருள் செய்து, கண்டம் கரியதாகவும் ஏனைய உருவம் படிகம் போல் வெண்மையாகவும் விளங்குபவர் சிவபெருமான். மதம் பிடித்த யானை அஞ்சும்படி, வானளாவ நிமிர்ந்து அதன் தோலை உரித்து, உமை நடுங்கத் தம் மார்பில் போர்த்தவர். அப்பெருமான் வீற்றிருந் தருளுவது திருஅவளிவணல்லூர் என்னும் திருத்தலமாகும்.

திருஅவளிவணல்லூர்

கூடரவ மொந்தைகுழல் யாழ்முழவி
னோடுமிசை செய்யப்
பீடரவ மாகுபட ரம்புசெய்து
பேரிடப மோடும்
காடரவ மாகுகனல் கொண்டிரவில்
நின்றுநட மாடி

ஆடரவ மார்த்தபெரு மானுறைவ
தவளிவண லூரே #885
மொந்தை, குழல், யாழ், முழவு முதலிய வாத்தியங்கள் ஒலிக்க, எண்தோள்வீசி ஆடும்போது சடையிலுள்ள கங்கைநீர் அம்பு போலப் பாய, பெரிய இடப வாகனத்தோடு, சுடுகாட்டில் ஓசையுடன் எரியும் நருப்பையேந்தி இரவில் நடனமாடி, படமெடுத்தாடும் பாம்பைக் கச்சாகக் கட்டிய சிவபெருமான் வீற்றிருந்தருளுவது திருஅவளிவணல்லூர் என்னும் திருத்தலம் ஆகும்.

திருஅவளிவணல்லூர்

ஒருவரையு மேல்வலிகொ டேனெனவெ
ழுந்தவிற லோனிப்
பெருவரையின் மேலொர்பெரு மானுமுளனோ
வெனவெ குண்ட
கருவரையு மாழ்கடலு மன்னதிறல்
கைகளுடை யோனை
அருவரையி லூன்றியடர்த் தானுறைவ
தவளிவண லூரே #886
எனக்கு மேல் ஒருவரையும் வலிமையுடையவராகக் காணப்பொறேன் என வீரத்துடன் எழுந்து, இக்கயிலைமலையின் மேல்ஒரு பெருமான் உளனோ என வெகுண்டு, மலையைப் பெயர்த்த பெரியமலை போன்றும், ஆழமான கடல்போன்றும் வலிமையுடைய அரக்கனான இராவணனைத் தன்காற் பெருவிரலை ஊன்றி, அம்மலையின்கீழ் நெரியும்படி செய்த சிவபெருமான் வீற்றிருந்தருளுவது திருஅவளிவணல்லூர் என்னும் திருத்தலமாகும்

திருஅவளிவணல்லூர்

பொறிவரிய நாகமுயர் பொங்கணைய
ணைந்தபுக ழோனும்
வெறிவரிய வண்டறைய விண்டமலர்
மேல்விழுமி யோனும்
செறிவரிய தோற்றமொடு வாற்றன்மிக
நின்றுசிறி தேயும்
அறிவரிய னாயபெரு மானுறைவ
தவளிவண லூரே #887
புள்ளிகளையுடைய நெடிய பாம்பை உயர்ந்த படுக்கையாகக் கொண்டு விளங்குகின்ற புகழ்மிக்க திருமாலும், வாசனையறிகின்ற கீற்றுகளையுடைய வண்டு ஒலித்து ஊத, அதனால் விரிந்த தாமரைமேல்

வசிக்கின்ற பிரமனும், பிறர்க்கு அரிய வலிமையுடைய தோற்றத்தோடு தமது ஆற்றல் முழுவதையும் செலுத்தித் தேடியும், சிறிதளவும் அறிவதற்கு அரியவராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது திருஅவளிவணல்லூர் என்னும் திருத்தலமாகும்.

திருஅவளிவணல்லூர்

கழியருகு பள்ளியிட மாகவடு
மீன்கள்கவர் வாரும்
வழியருகு சாரவெயி னின்றடிசி
லுள்கிவரு வாரும்
பழியருகி னாரொழிக பான்மையொடு
நின்றுதொழு தேத்தும்
அழியருவி தோய்ந்தபெரு மானுறைவ
தவளிவண லூரே **#888**

ஆற்றங்கழி அருகிலிருக்கும் சமணப்பள்ளி இடமாக நின்று, சமைத்து உண்பதற்குரிய மீன்களைக் கவரும் சமணர்களும், தெருக்களில் உச்சிவேளையில் நின்று உணவு ஏற்க வரும் புத்தர்களும் கூறும் பழிக்கு அடுத்துச் சொல்வதாகிய பாவத்தை உடையவர்கள். பக்தியால் தொழுதேத்தும் அடியவர்கள் கண்களில் இருந்து தோன்றும் அருவி போன்ற நீரில் தோய்ந்து விளங்கும் சிவபெருமான் வீற்றிருந்தருளுவது திருஅவளிவணல்லூர் என்னும் திருத்தலமாகும்.

திருஅவளிவணல்லூர்

ஆனமொழி யானதிற லோர்பரவு
மவளிவண லூர்மேல்
போனமொழி நன்மொழி களாயபுகழ்
தோணிபுர வூரன்
ஞானமொழி மாலைபல நாடுபுகழ்
ஞானசம் பந்தன்
தேனமொழி மாலைபுகழ் வார்துயர்க
டீயதிலர் தாமே **#889**

பொருளுடைய புகழ்மொழிகளால் மெய்ஞ்ஞானிகள் துதிக்கின்ற அவளிவணல்லூர் என்னும் திருத்தலத்தைத் திசைகள் தோறும் பரவிய நன்மொழியால் புகழ்போற்றும் தோணிபுரத்தில் அவதரித்த சிவஞானங் கமழ்கின்ற திருப்பதிகங்களால் நல்ல நாடுகளெல்லாம் புகழ்கின்ற ஞானசம்பந்தன் அருளிய தேன்போன்ற இனிமையான மொழிகளால் ஆன இப்பாமாலையால் புகழ்ந்து போற்றுபவர் துயரற்றவர் ஆவர். அவர்களைத் தீமை அணுகாது.

திருநல்லூர்

திருநல்லூர்

திருநல்லூர்,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பெரியாண்டேசுவரர்.
தேவியார் : திரிபுரசுந்தரியம்மை.

வண்டிரிய விண்டமலர் மல்குசடை
தாழவிடை யேறிப்
பண்டெரிகை கொண்டபர மன்பதிய
தென்பரத னயலே
நண்டிரிய நாரையிரை தேரவரை
மேலருவி முத்தம்
தெண்டிரைகண் மோதவிரி போதுகம
ழுந்திருந லூரே **#890**

வண்டு அமர விரிந்த மலர்கள் நிறைந்த சடைதொங்கச் சிவபெருமான் இடபவாகனத்திலேறி, பண்டைக்காலந்தொட்டே கையில் நெருப்பேந்தியவனாய் விளங்கும் பதியாவது, பக்கத்தில் நண்டு ஓட, நாரை தேட மலையிலிருந்து விழும் அருவி முத்துக்களை அடித்துக் கொண்டு வந்து சேர்க்க, காவிரியின் தெளிய அலைகள் மோதுவதால் அரும்புகள் மலர நறுமணம் கமழும் திருநல்லூர் என்னும் திருத்தலமாகும்.

திருநல்லூர்

பல்வளரு நாகமரை யார்த்துவரை
மங்கையொரு பாகம்
மல்வளர்பு யத்திலணை வித்துமகி
ழும்பரம னிடமாம்
சொல்வளரி சைக்கிளவி பாடிமட
வார்நடம தாடிச்
செல்வமறை யோர்கண்முறை யேத்தவள
ருந்திருந லூரே **#891**

நச்சுப்பல்லுடைய நாகத்தை இடுப்பிலே கச்சாகக் கட்டி, மலைமங்கையாகிய உமாதேவியைத் தன் வலிமையான தோளின் இடப்பாகத்தில் அணைத்து மகிழும் சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, மகளிர் பொருட்செறிவுடைய பாடல்களைப் பாடி,

அவற்றிற்கேற்ப நடனமாடுவதும், வேதம் ஓத வல்ல அந்தணர்கள் நியதிப்படி போற்றி வழிபடுவதும் ஆகிய புகழ்வளரும் திருநல்லூர் என்னும் திருத்தலமாகும்.

திருநல்லூர்

நீடுவரை மேருவில தாகநிகழ்
நாகமழ லம்பால்
கூடலர்கண் மூவெயிலெ ரித்தகுழ
கன்குலவு சடைமேல்
ஏடுலவு கொன்றைபுன னின்றுதிக
ழுந்நிமல னிடமாம்
சேடுலவு தாமரைக ணீடுவய
லார்திருந லூரே **#892**

பெரிய மேருமலையை வில்லாகவும், வாசுகி என்னும் பாம்பை நாணாகவும், அக்கினியை அம்பாகவும் கொண்டு, பகைவர்களின் மும்மதில்களை எரித்த அழகனான சிவபெருமானின் சடைமேல் இதழ்களையுடைய கொன்றையும், கங்கையும் விளங்குகின்றன. இயல்பாகவே பாசங்களின் நீங்கியவனான அச்சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது பெருமைமிக்க தாமரை மலர்கள் விளங்கும் வயல்வளமுடைய திருநல்லூர் என்னும் திருத்தலமாகும்.

திருநல்லூர்

கருகுபுரி மிடறர்கரி காடரெரி
கையதனி லேந்தி
அருகுவரு கரியினுரி யதளர்பட
வரவரிடம் வினவில்
முருகுவிரி பொழிலின்மண நாறமயி
லாலமர மேறித்
திருகுசின மந்திகனி சிந்தமது
வார்திருந லூரே **#893**

சிவபெருமான் கருகிய கண்டத்தை உடையவர், சுடுகாட்டில் கையில் எரியும் நெருப்பேந்தி நடனமாடுபவர். தம்மைத் தாக்க வந்த மதம் பிடித்த யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டவர். படமாடும் பாம்பை ஆபரணமாக அணிந்தவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, சோலைகளிலுள்ள நறுமணத்தை நுகர்ந்த இன்பத்தால் மயில்களாட, அவ்வாடலுக்குப் பொழில் பரிசில் வழங்கிலதே என்று சினந்தவை போல் குரங்குகள் மரத்திலேறி, மயிலாடுதல் கண்ட இன்பத்திற்கு ஈடாகப் பரிசு கொடுப்பனபோல் கனிகளை உதிர்க்கக்

கனிச்சாறு பெருகும் திருநல்லூர் எனும் திருத்தலமாம்.

திருநல்லூர்

பொடிகொடிரு மார்பர்புரி நூலர்புனல்
பொங்கரவு தங்கும்
முடிகொள்சடை தாழவிடை யேறுமுத
லாளரவரிடமாம்
இடிகொண்முழ வோசையெழி லார்செய்தொழி
லாளர்விழ மல்கச்
செடிகொள்வினை யகலமன மினியவர்கள்
சேர்திருந லூரே **#894**

சிவபெருமான் திருநீறணிந்த அழகிய மார்பை உடையவர். முப்புரிநூல் அணிந்தவர். கங்கையையும், பாம்பையும் தாங்கிய தாழ்ந்த சடைமுடியுடையவர். இடப வாகனத்தில் வீற்றிருந்தருளும் முதற்பொருளானவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, இடி போன்ற முழவோசை ஒலிக்க, தொழிலாளர்களின் கைத்திறத்தால் அழகுடன் விழாக்கள் சிறந்து விளங்க, அவ்விழாக்களைச் சேவித்தலால் துன்பம்தரும் வினைகள் அகல, இனிய மனமுடையோர் வசிக்கின்ற திருநல்லூர் என்னும் திருத்தலமாகும்.

திருநல்லூர்

புற்றரவர் நெற்றியொர்க ணொற்றைவிடை
யூர்வரடை யாளம்
சுற்றமிருள் பற்றியபல் பூதமிசை
பாடநசை யாலே
கற்றமறை யுற்றுணர்வர் பற்றலர்கண்
முற்றுமெயின் மாளச்
செற்றவ ரிருப்பிட நெருக்குபுன
லார்திருந லூரே **#895**

சிவபெருமான் புற்றில் வாழும் பாம்பை அணிந்தவர், நெற்றியில் ஒரு கண் உடையவர். இடப வாகனத்தில் அமர்ந்தவர். இவையே அவரது அடையாளமாகும். அத்தகையவர் அடையாளம் காணமுடியாத இருட்டில் பல பூதங்கள் இசைபாட நடனம்புரிபவர். விருப்பத்தோடு வேதங்களைக் கற்ற அந்தணர்களால் உணர்ந்து போற்றப்படுபவர். பகையசுரர்களின் முப்புரங்கள் எரியும் படி சினந்தவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது நீர்வளம் நிறைந்த திருநல்லூர் என்னும் திருத்தலமாகும்.

திருநல்லூர்

பொங்கரவ ரங்குமுடன் மேலணிவர்
ஞாலமிடுபிச்சை
தங்கரவ மாகவுழி தந்துமெய்து
லங்கியவெண் ணீற்றர்
கங்கையர வம்விரவு திங்கள்சடை
யடிகளிடம் வினவில்
செங்கயல்வ திக்குதிகொ ளும்புனல
தார்திருந லூரே **#896**

இறைவன் சினம் பொங்கப் படமெடுத்தாடும் பாம்பை அணிந்துள்ளவர். எலும்பையும் திருமேனியில் அணிந்தவர். பிரமகபாலமேந்திப் பூமியிலுள்ளோர் இடும் பிச்சையேற்க ஆரவாரித்துத் திரிபவர். தம் திருமேனியில் திருவெண்ணீற்றைப் பூசியுள்ளவர். கங்கையையும், பாம்பையும், சந்திரனையும் சடை முடியிலணிந்துள்ளவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது செங்கயல் மீன்கள் சேற்றில் குதிக்கும் நீர்வளமிக்க திருநல்லூர் என்னும் திருத்தலம் ஆகும்.

திருநல்லூர்

ஏறுபுகழ் பெற்றதெனி லங்கையவர்
கோனையரு வரையில்
சீறியவ னுக்கருளு மெங்கள்சிவ
லோகனிட மாகும்
கூறுமடி யார்களிசை பாடிவலம்
வந்தயரு மருவிச்
சேறுகமரானவழி யத்திகழ்த
ருந்திருந லூரே **#897**

மிக்க புகழ் பெற்ற தென் இலங்கை மன்னனான இராவணனைக் கயிலைமலையின் கீழ் நெருக்கி அடர்த்துப் பின்னர் அவனுக்கு நீண்ட வாழ்நாளும், வெற்றிதரும் வீரவாளும் அளித்து அருள்செய்தவர் சிவலோக நாதரான சிவபெருமான் ஆவார். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, அடியார்கள் இசைபாடி வலம் வரும்பொழுது, பக்தியால் அவர்கள் கண்களிலிருந்து பெருக்கெடுக்கும் ஆனந்தக் கண்ணீர் அருவியெனப் பாய்ந்து அருகிலுள்ள நிலவெடிப்புகளில் விழ, வெடிப்புக்கள் நீங்கி நிலம் சேறாகத் திகழும் திருநல்லூர் என்னும் திருத்தலமாகும்.

திருநல்லூர்

மாலுமலர் மேலயனு நேடியறி
யாமையெரி யாய
கோலமுடை யானுணர்வு கோதில்புக
ழானிடம தாகும்
நாலுமறை யங்கமுத லாறுமெரி
மூன்றுதழ லோம்பும்
சீலமுடை யார்கணெடு மாடம்வள
ருந்திருந லூரே **#898**

திருமாலும், தாமரை மலர்மேல் வீற்றிருக்கின்ற பிரமனும் தேடியும் அறியமுடியா வண்ணம் பெருஞ்சோதிவடிவாய் விளங்கியவனும், இயல்பாகவே பாசங்களின் நீங்கி முற்றுணர்வும், இயற்கையுணர்வும் உடையவனும், குற்றமற்ற புகழையுடையவனும் ஆன சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, நான்கு வேதங்களும், ஆறு அங்கங்களும், மூன்று அழலும் ஓம்புகின்ற சீலமுடைய தூய அந்தணர்கள் வாழ்கின்ற நீண்ட மாடமாளிகைகளையுடைய திருநல்லூர் என்னும் திருத்தலமாகும்.

<u>திருநல்லூர்</u>

கீறுமுடை கோவணமி லாமையிலொ
லோவியதவத்தர்
பாறுமுடன் மூடுதுவ ராடையர்கள்
வேடமவை பாரேல்
ஏறுமட வாளொடினி தேறிமுனி
ருந்தவிடமென்பர்
தேறுமன வாரமுடை யார்குடிசெ
யுந்திருந லூரே **#899**

கிழித்த துணியும், கோவணமும் இல்லாமையால் ஆடை துவைக்கும் தொழில் நீங்கிய தவத்தவர்களாகிய சமணத் துறவிகளும், அழியக்கூடிய உடலைத் துவராடையில் போர்த்திக் கொள்ளும் புத்தத்துறவிகளும் கொண்ட வேடத்தை ஒரு பொருட்டாக ஏற்க வேண்டா. சிவபெருமான் உமாதேவியை உடனாகக் கொண்டு இடபத்தின் மீது இனிதேறி, தொன்றுதொட்டு வீற்றிருந்தருளும் இடமாவது, சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்ற தெளிந்த உள்ளமும், அன்பும் உடையவர்களான சிவனடியார்கள் வாழ்கின்ற திருநல்லூர் என்னும் திருத்தலமாகும்.

<u>திருநல்லூர்</u>

திரைகளிரு கரையும்வரு பொன்னிநில
வுந்திருந லூர்மேல்
பரசுதரு பாணியைந லந்திகழ்செய்

தோணிபுர நாதன்
உரைசெய்தமிழ் ஞானசம்பந்தனிசை
மாலைமொழி வார்போய்
விரைசெய்மலர் தூவவிதி பேணுகதி
பேறுபெறு வாரே #900
காவிரியின் இருகரைகளிலும் அலைகள் மோதுவதால் செழிப்புடன் விளங்கும் திருநல்லூர் என்னும் திருத்தலத்திலுள்ள மழுவேந்திய கரமுடைய சிவபெருமானை, வயல் வளமிக்க, தோணிபுர நாதனான தமிழ் ஞானசம்பந்தன் போற்றிசைத்த இப்பாமாலையை ஓதுபவர்கள், பிரமனால் நறுமணமிக்க சிறந்த மலர்கள்தூவி வழிபடப்படும் சிவபெருமானுடைய திருவடியைப் பெறும் பேற்றினை அடைவார்கள்.

திருப்புறவம்

சீர்காழி

திருப்புறவம்,
பண் - சாதாரி, திருப்புறவம் என்பது சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

பெண்ணிய லுருவினர் பெருகிய புனல்விர
வியபிறைக்
கண்ணியர் கடுநடை விடையினர் கழறொழு
மடியவர்
நண்ணிய பிணிகெட வருள்புரி பவர்நணு
குயர்பதி
புண்ணிய மறையவர் நிறைபுக ழொலிமலி
புறவமமே **#901**

சிவபெருமான் உமாதேவியைத் தம் இடப் பாகமாகக் கொண்ட வடிவமுடையவர். பெருக்கெடுக்கும் கங்கை நீரோடு, பிறைச்சந்திரனையும் தலை மாலையாக அணிந்தவர். விரைந்த நடையுடைய எருதினை வாகனமாகக் கொண்டவர். தம் திருவடிகளைத் தொழுது போற்றும் அடியவர்களின் நோயைத் தீர்த்து அருள்புரிபவர். அப்பெருமான் வீற்றிருந்தருளுகின்ற உயர்ந்த பதியாவது, புண்ணியம் தரும் மறைகளை ஓதும் அந்தணர்கள் நிறைந்து இறைவனைப் புகழ்கின்ற ஒலி மிகுந்த திருப்புறவம் என்னும் திருத்தலமாகும்.

சீர்காழி

கொக்குடை யிறகொடு பிறையொடு குளிர்சடை
முடியினர்
அக்குடை வடமுமொ ரரவமு மலரரை
மிசையினில்
திக்குடை மருவிய வுருவினர் திகழ்மலை
மகளொடும்
புக்குட னுறைவது புதுமலர் விரைகமழ்
புறவமே **#902**

கொக்கின் இறகோடும், பிறைச்சந்திரனோடும் கூடிய குளிர்ந்த சடைமுடியுடையவர் சிவபெருமான். எலும்பு மாலை அணிந்தவர். பாம்பை அரையில் கச்சாகக் கட்டியவர். திசைகளையே ஆடையாகக்

கொண்ட உருவினர். அவர் மலைமகளான உமாதேவியோடு வீற்றிருந்தருளுவது அன்றலர்ந்த மலர்களின் நறுமணம் கமழும் திருப்புறவம் என்னும் திருத்தலமாகும்.

சீர்காழி

கொங்கியல் சுரிகுழல் வரிவளை யிளமுலை
யுமையொரு
பங்கிய றிருவுரு வுடையவர் பரசுவொ
டிரலைமெய்
தங்கிய கரதல முடையவர் விடையவ
ருறைபதி
பொங்கிய பொருகடல் கொளவதன் மிசையுயர்
புறவமே **#903**

வாசனை பொருந்திய சுரிந்த கூந்தலையும், வரிகளையுடைய வளையல்களையும், இளமை வாய்ந்த முலைகளையும் உடைய உமாதேவியைத் தம் ஒருபாகமாகக் கொண்டு அர்த்த நாரீசுவர வடிவில் விளங்குபவர் சிவபெருமான். அவர் மழுவோடு, மானையும் கரத்தில் ஏந்தியவர், இடப வாகனமுடையவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் தலமாவது ஊழிக்காலத்தில் கடல் பொங்கிக் கரையில் மோதி உலகத்தை அழிக்க, அதில் மூழ்காது அக்கடலின்மீது உயர்ந்து மிதந்த சிறப்புடைய திருப்புறவம் என்னும் திருத்தலமாகும்.

சீர்காழி

மாதவ முடைமறை யவனுயிர் கொளவரு
மறலியை
மேதகு திருவடி யிறையுற வுயிரது
விலகினார்
சாதக வுருவியல் கானிடை யுமைவெரு
வுறவரு
போதக வுரியதண் மருவின ருறைபதி
புறவமே **#904**

பெரிய தவம் செய்த மறையவனான மார்க்கண்டேயனின் உயிரைக் கவரவந்த காலனைத் தம் பெருமை பொருந்திய திருவடி சற்றே பொருந்திய மாத்திரத்தில் அவனது உயிர் விலகும் படி செய்தவரும், பூதகணங்கள் உலவும் காட்டில் உமாதேவி அஞ்சும் படி வந்த யானையின் தோலை உரித்துப் போர்த்தவருமான சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற இடம் திருப்புறவம் என்னும் திருத்தலமாகும்.

சீர்காழி

காமனை யழல்கொள விழிசெய்து கருதலா
கடிமதில்
தூமம துறவிறல் சுடர்கொளு வியவிறை
தொகுபதி
ஓமமொ டுயர்மறை பிறவிய வகைதனொ
டொளிகெழு
பூமக னலரொடு புனல்கொடு வழிபடு
புறவமே **#905**

சிவபெருமான் மன்மதன் எரியுமாறு நெற்றிக் கண்ணால் விழித்து நோக்கியவர். பகையசுரர்களது காவலுடைய மும்மதில்களும் புகையெழும்படி வலிய நெருப்புப் பற்றும்படி செய்தவர். அவர் வீற்றிருந்தருளும் தலமாவது, வேள்வி வளர்த்து, வேத மந்திரங்கள் ஓதி, பிற வாத்தியங்கள் ஒலிக்க, தீபமேற்றிப் பிரமன், மலரும், நீரும் கொண்டு வழிபட்ட திருப்புறவம் என்னும் திருத்தலமாகும்.

சீர்காழி

சொன்னய முடையவர் சுருதிகள் கருதிய**,**
தொழிலினர்
பின்னையர் நடுவுணர் பெருமையர் திருவடி
பேணிட
முன்னைய முதல்வினை யறவரு ளினருறை
முதுபதி
புன்னையின் முகைநிதி பொதியவிழ் பொழிலணி
புறவமே **#906**

இனிய சொற்களாலமைந்த பொருள் நயமிக்க தோத்திரங்களைச் சொல்பவர்களும், வேதங்கள் கடைப்பிடிக்கும்படி கூறிய கர்மாக்களைச் செய்பவர்களும், வேதத்தின் பிற்பகுதியான உபநிடதங்கள் என்னும் ஞானகாண்டத்தைக் கடைப்பிடிப்பவர்களும் வேதத்தின் நடுவில் அதன் உள்ளீடாக விளங்கும் பொருள் சிவனே என்பதை உணர்ந்த பெருமையுடையவர்களும், தம் திருவடிகளைப் போற்றி வழிபட, அவர்களைத் தொன்றுதொட்டுத் தொடர்ந்துவரும் ஆணவம், கன்மம் இவை அறும்படி செய்பவராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் பதியானது, பொன் முடிப்புப் போன்ற புன்னையரும்பு, பொதியவிழ்வது போல மலர, அதிலிருந்து பொன் போன்ற மகரந்தம் சிந்தும் சோலைவளமுடைய அழகிய திருப்புறவம் என்னும் திருத்தலமாகும்.

சீர்காழி

வரிதரு புலியத ளுடையினர் மழுவெறி
படையினர்
பிரிதரு நகுதலை வடமுடி மிசையணி
பெருமையர்
எரிதரு முருவின ரிமையவர் தொழுவதொ
ரியல்பினர்
புரிதரு குழலுமை யொடுமினி துறைபதி
புறவமே **#907**

சிவபெருமான் வரிகளையுடைய புலியின்தோலை ஆடையாக உடுத்தவர். பகைவர்மேல் வீசும் மழுப்படையையுடையவர். யாகத்திலிருந்து பிரிந்து வந்த நகுதலையைத் திருமுடியின் மீது மாலைபோல் அணிந்து கொண்ட பெருமையையுடையவர். எரிபோல் மிளிர்கின்ற சிவந்த மேனியுடையவர். தேவர்களால் தொழப்படும் தன்மையுடையவர். இத்தகைய சிவபெருமான் பின்னிய கூந்தலையுடைய உமாதேவியோடு இனிதே வீற்றிருந்தருளும் பதி திருப்புறவம் என்னும் திருத்தலமாகும்.

சீர்காழி

வசிதரு முருவொடு மலர்தலை யுலகினை
வலிசெயும்
நிசிசர னுடலொடு நெடுமுடி யொருபது
நெரிவுற
ஒசிதர வொருவிர னிறுவின ரொளிவளர்
வெளிபொடி
பொசிதரு திருவுரு வுடையவ ருறைபதி
புறவமே **#908**

வாளேந்திய கோலத்தோடு இடமகன்ற இவ்வுலகத்தைத் தன் வலிமையால் துன்புறுத்திய அரக்கனான இராவணனின் உடலோடு நெடிய தலைகள் பத்தும் நொறுங்கித் துவளும்படி தம் காற்பெருவிரலை ஊன்றியவரும், ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற வெண்ணிறத் திருவெண்ணீற்றைப் பூசிய திருவுருவமுடையவருமான சிவபெருமான் வீற்றிருந்தருளும் பதி திருப்புறவம் என்னும் திருத்தலமாகும்.

சீர்காழி

தேனக மருவிய செறிதரு முளரிசெய்
தவிசினில்

ஊனக மருவிய புலனுகர் வுணர்வுடை
யொருவனும்
வானகம் வரையக மறிகடல் நிலனெனு
மெழுவகைப்
போனக மருவின னறிவரி யவர்பதி
புறவமே **#909**

உள்ளிடத்தில் தேன் பொருந்திய, இதழ்கள் பல செறிந்த தாமரை மலராகிய ஆசனத்தில் அமர்ந்து, சிவபெருமானின் ஆணையினால் மன்னுயிர்கட்குத் தனு, கரண, புவன, போகங்களைப் படைக்கும் பிரமனும், ஏழுவகையாக அமைந்த வானகம், மலை, கடல், நிலன் இவற்றை உணவாக உண்டவனான திருமாலும் அறிதற்கரியவரான சிவபெருமான் வீற்றிருந்தருளும் பதியானது திருப்புறவம் என்னும் திருத்தலமாகும்.

சீர்காழி

கோசர நுகர்பவர் கொழுகிய துவரன
துகிலினர்
பாசுர வினைதரு பளகர்கள் பழிதரு
மொழியினர்
நீசரை விடுமினி நினைவுறு நிமலர்த
முறைபதி
பூசுரர் மறைபயி னிறைபுக ழொலிமலி
புறவமே **#910**

நீரில் சஞ்சரிக்கின்ற மீன்களை உணவாகக் கொள்பவர்களும், துவர் தோய்க்கப்பட்ட ஆடையணிபவர்களாகிய புத்தர்களும் ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயனறியாது வெறும் திருச்சிற்றம்பலம் பாட்டைப் பாடுதலாகிய தொழிலையுடைய குற்ற முடையவர்கள். பிறரைப் பழித்துப் புறங்கூறும் மொழிகளையுடையவர்கள் சமணர்கள், இவ்விருவகை நீசர்களை விட்டு, சிவபெருமானைத் தியானியுங்கள். இயல்பாகவே பாசங்களின் நீங்கியவனான அப்பெருமான் வீற்றிருந்தருளும் பதியாவது, இப் பூவுலக தேவர்கள் என்று போற்றப்படும் அந்தணர்கள் வேதங்களைப் பயின்று இறைவனைப் புகழும் ஒலி மிகுந்த திருப்புறவம் என்னும் திருத்தலமாகும்.

சீர்காழி

போதியல் பொழிலணி புறவநன் னகருறை
புனிதனை
வேதிய ரதிபதி மிகுதலை தமிழ்கெழு

விரகினன்
ஓதிய வொருபது முரியதொ ரிசைகொள
வுரைசெயும்
நீதிய ரவரிரு நிலனிடை நிகழ்தரு
பிறவியே #911
மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த திருப்புறவம் என்ற நல்ல நகரில் வீற்றிருந்தருளுகின்ற தூய உடம்பினனான சிவபெருமானைப் போற்றி, அந்தணர்களின் தலைவனும், மிக்க முதன்மையுடைய தமிழ்ச் சமர்த்தனுமாகிய திருஞானசம்பந்தன் அருளிய இப்பத்துப் பாடல்களையும் உரிய இசையுடன் ஓதும் முறைமை தவறாதவர்கள் இப்பெரிய நிலவுலகில் இனி நிகழ்தலாகிய பிறவி இல்லாதவர்களாவர்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை

திருவீழிமிழலை,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

மட்டொளி விரிதரு மலர்நிறை சுரிகுழன்
மடவரல்
பட்டொளி மணியல்கு லுமையமை யுருவொரு
பாகமாக்
கட்டொளிர் புனலொடு கடியர வுடனுறை
முடிமிசை
விட்டொளி யுதிர்பிதிர் மதியவர் பதிவிழி
மிழலையே #912

மலர் விரிய நறுமணம் கமழும், நெளந்த கூந்தலையுடையளாய், மடமைப் பண்புடைய பெண்ணானவளாய், பட்டாடையில் ஒளிமிக்க மேகலா பரணத்தை அணிந்தவளான உமா தேவியைத் தம் ஒருபாகமாகக் கொண்ட சிவபெருமான், சடைமுடியின்கண் கட்டப்பட்டு விளங்கும் பிரகாசிக்கின்ற கங்கைநீரோடு, கடிக்கும் பாம்புசேர வசிக்கின்ற சடைமுடியில் விட்டுவிட்டுப் பிரகாசிக்கும், தேய்ந்த கலைகளையுடைய சந்திரனையும் அணிந்து வீற்றிருந்தருளும் பதி திருவீழிமிழலை என்னும் திருத்தலமாகும்.

திருவீழிமிழலை

எண்ணிற வரிவளை நெறிகுழ லெழின்மொழி
யிளமுலைப்
பெண்ணுறு முடலினர் பெருகிய கடல்விட
மிடறினர்
கண்ணுறு நுதலினர் கடியதொர் விடையினர்
கனலினர்
விண்ணுறு பிறையணி சடையினர் பதிவிழி
மிழலையே #913

சிவபெருமான், எண்ணற்ற வரிகளையுடைய வளையல்களையும், சுருண்ட கூந்தலையும் அழகிய மொழியையும், இளமுலைகளையும் உடைய உமாதேவியைத் தம் திருமேனியின் ஒரு பாகமாகக்

கொண்டவர். பெருகித் தோன்றிய கடல் விடமுண்ட கண்டத்தினர். நெற்றிக் கண்ணையுடையவர். விரைந்து நடக்கும் இடபத்தை வாகனமாக உடையவர். நெருப்பேந்திய கையினர். விண்ணில் திகழும் பிறைச்சந்திரனை அணிந்த சடையினர். இத்தகைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் பதி, திருவீழிமிழலை என்னும் திருத்தலமாகும்.

திருவீழிமிழலை

மைத்தகு மதர்விழி மலைமக ளுருவொரு
பாகமா
வைத்தவர் மதகிரி யுரிவைசெய் தவர்தமை
மருவினார்
தெத்தென விசைமுரல் சரிதையர் திகழ்தரு
மரவினர்
வித்தக நகுதலை யுடையவ ரிடம்விழி
மிழலையே **#914**

மை பூசிய அழகிய விழிகளையுடைய உமாதேவியை, சிவபெருமான் தம் உடம்பின் இடப்பாகமாக வைத்தவர். மதம் பிடித்த யானையின் தோலை உரித்தவர். தம்மை அடைந்தவர் தாளத்துடன் இசைபாடுகின்ற புகழையுடையவர். பாம்பை அணிந்தவர். அதிசயமான மண்டையோட்டைக் கொண்டவர். இத்தகைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவீழிமிழலை என்னும் திருத்தலமாகும்.

திருவீழிமிழலை

செவ்வழ லெனநனி பெருகிய வுருவினர்
செறிதரு
கவ்வழ லரவினர் கதிர்முதிர் மழுவினர்
தொழுவிலா
முவ்வழ னிசிசரர் விறலவை யழிதர
முதுமதிள்
வெவ்வழல் கொளநனி முனிபவர் பதிவிழி
மிழலையே **#915**

சிவபெருமான் செந்நிறமான அழல்போன்ற மேனியுடையவர். நெருப்புப் போன்று விடமுடைய, கவ்வும் தன்மையுடைய பாம்பை அரையில் கச்சாக இறுக்கமாகக் கட்டியவர். சுடர் விடும் மழுப்படை உடையவர். தம்மைத் தொழாத, பகைமையுடைய, சினம் மிகுந்த மூன்று அசுரர்களின் வலிமை அழியுமாறு அவர்களின் மதில்களை எரியுண்ணும்படி மிகவும் கோபித்தவர். அத்தகைய பெருமான் வீற்றிருந்தருளும் பதியானது திருவீழிமிழலை என்னும் திருத்தலமாகும்.

திருவீழிமிழலை

பைங்கண தொருபெரு மழலைவெ ளேற்றினர்
பலியெனா
எங்கணு முழிதர்வ ரிமையவர் தொழுதெழு
மியல்பினர்
அங்கண ரமரர்க ளடியிணை தொழுதெழ
வாரமா
வெங்கண வரவின ருறைதரு பதிவிழி
மிழலையே **#916**

பசிய கண்களையும், சிறு முழக்கத்தையுமுடைய பெரிய வெண்ணிற இடபத்தைச் சிவபெருமான் வாகனமாகக் கொண்டவர். எல்லா இடங்களிலும் பிச்சை ஏற்றுத் திரிபவர். தேவர்களால் தொழப்படும் தன்மையர். தேவர்கள் தொழுது எழும் இயல்பினராகிய அடியவர்களாலும் தொழுது போற்றப்படுபவர். கொடிய கண்ணையுடைய பாம்பை அணிந்தவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் பதியானது திருவீழிமிழலை என்னும் திருத்தலமாகும்.

திருவீழிமிழலை

பொன்னன புரிதரு சடையினர் பொடியணி
வடிவினர்
உன்னினர் வினையவை களைதலை மருவிய
வொருவனார்
தென்னென விசைமுரல் சரிதையர் திகழ்தரு
மார்பினில்
மின்னென மிளிர்வதொ ரரவினர் பதிவிழி
மிழலையே **#917**

இறைவன் பொன்போன்று ஒளிரும் முறுக்கேறிய சடைமுடி உடையவர். திருவெண்ணீறு அணிந்த திருமேனியர். தம்மை நினைந்து போற்றும் அடியவர்களின் வினைகளை வேரோடு களைந்து அருள்புரியும் ஒப்பற்றவர். இனிய இசையுடன் போற்றப் படும் புகழையுடையவர். அழகிய திருமார்பில் மின்னலைப் போல் ஒளிரும் பாம்பணிந்தவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் பதி, திருவீழி மிழலை என்னும் திருத்தலமாகும்.

திருவீழிமிழலை

அக்கினொ டரவரை யணிதிக ழொளியதொ
ராமைபூண்

டிக்குக மலிதலை கலனென விடுபலி
யேகுவர்
கொக்கரை குழன்முழ விழவொடு மிசைவதொர்
சரிதையர்
மிக்கவ ருறைவது விரைகமழ் பொழில்விழி
மிழலையே **#918**

சிவபெருமான், அக்குப்பாசியோடு பாம்பையும் அரையில் அணிந்தவர். ஒளிரும் ஆமையோட்டை மார்பில் பூண்டவர். கரும்பின் சுவை போன்று இனிய மொழிகளைப்பேசி, தம் கையில் நீங்காது பொருந்திய மண்டையோடாகிய பாத்திரத்தில் இடப்படுகின்ற பிச்சையை ஏற்பவர். கொக்கரை, குழல், முழவு முதலான வாத்தியங்கள் இசைக்க, நிகழும் விழாக்களில் அடியார் செய்யும் சிறப்புக்களை ஏற்று மகிழும் பண்பினர். தம்மினும் மிக்கவரில்லையாக மேம்பட்ட அப்பெருமான் வீற்றிருந்தருளுவது நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்த திருவீழிமிழலை என்னும் திருத்தலமாகும்.

<u>திருவீழிமிழலை</u>

பாதமொர் விரலுற மலையடர் பலதலை
நெரிதரப்
பூதமொ டடியவர் புனைகழ றொழுதெழு
புகழினர்
ஓதமொ டொலிதிரை படுகடல் விடமுடை
மிடறினர்
வேதமொ டுறுதொழின் மதியவர் பதிவிழி
மிழலையே **#919**

தம் பாதத்திலுள்ள ஒரு விரலை ஊன்றி, கயிலை மலையின்கீழ் இராவணனின் பத்துத் தலைகளும் நெரியும்படி செய்தவர். பூதகணங்களும் அடியவர்களும் தம்முடைய அழகிய திருவடிகளைத் தொழுது போற்றத்தக்க புகழையுடையவர். ஆரவாரத்தோடு ஒலிக்கின்ற அலைகளையுடைய கடலில் தோன்றிய விடத்தைத் தேக்கிய கண்டத்தர். அச்சிவபெருமான் வீற்றிருந் தருளும் பதியாவது, வேதம் ஓதுதலுடன், தமக்குரிய ஆறு தொழில்களையும் செய்கின்ற அறிஞர்களாகிய அந்தணர்கள் வாழ்கின்ற திருவீழிமிழலை என்னும் திருத்தலமாகும்.

<u>திருவீழிமிழலை</u>

நீரணி மலர்மிசை யுறைபவ னிறைகட
லுறுதுயில்
நாரண னெனவிவ ரிருவரு நறுமல

ரடிமுடி
ஓருணர் வினர்செல லுறலரு முருவினொ
டொளிதிகழ்
வீரண ருறைவது வெறிகமழ் பொழில்விழி
மிழலையே #920

நீரில் விளங்கும் தாமரையில் வீற்றிருக்கும் பிரமனும், நிறைந்த நீருடைய கடலில் துயிலும் திருமாலும் ஆகிய இவர்கள் இருவரும் இறைவனின் நறுமணம் கமழும் மலர் போன்ற திருவடியையும், மலரணிந்த திருமுடியையும் காண வேண்டும் என்ற ஒரே உணர்வினராய்ச் சென்றும், காணற்கு அரியவராய்ப் பேரொளியாய் ஓங்கி நின்ற வீரம் பொருந்திய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, நறுமணம் கமழும் பூக்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருவீழிமிழலை என்னும் திருத்தலமாகும்.

<u>திருவீழிமிழலை</u>

இச்சைய ரினிதென இடுபலி படுதலை
மகிழ்வதோர்
பிச்சையர் பெருமையை யிறைபொழு தறிவென
வுணர்விலர்
மொச்சைய வமணரு முடைபடு துகிலரு
மழிவதோர்
விச்சைய ருறைவது விரைகமழ் பொழில்விழி
மிழலையே #921

பிரமனின் மண்டையோட்டில் இடப்படுகின்ற பிச்சையை இனிதென ஏற்கும் விருப்பமுடைய சிவபெருமானின் பெருமையைச் சிறிதும் அறியும் உணர்வில்லாதவர்கள் சமணர்களும், புத்தர்களும் ஆவர். நீராடாமையால் துர்நாற்றத்தை உடைய சமணர்களும், துவைத்து உடுத்தாமையால் முடைநாற்றமுடைய திருச்சிற்றம்பலம் ஆடையைப் போர்ப்பவர்களாகிய புத்தர்களும் அழிவதற்குக் காரணமான வித்தை செய்பவரான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது நறுமணம் கமழும் சோலைகளையுடைய திருவீழிமிழலை என்னும் திருத்தலமாகும்.

<u>திருவீழிமிழலை</u>

உன்னிய வருமறை யொலியினை முறைமிகு
பாடல்செய்
இன்னிசை யவருறை யெழிறிகழ் பொழில்விழி
மிழலையை
மன்னிய புகலியுண் ஞானசம் பந்தன
வண்டமிழ்

சொன்னவர் துயரிலர் வியனுல குறுகதி
பெறுவரே **#922**

இறைவன் அருளிச்செய்ததாகக் கருதப்படும் அருமறையின் ஒலியினை முறையாக இசையோடு பாடிப் போற்றும் அந்தணர்கள் வசிக்கின்றதும், அழகிய சோலைகள் விளங்குவதுமான திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தைப் போற்றி, நிலைபெற்ற புகலியில் அவதரித்த ஞானசம்பந்தன் வண்தமிழால் அருளிய இத்திருப்பதிகத்தை ஓதுபவர்கள் இம்மையில் துயரற்றவராவர். மறுமையில் வீடுபேறடைவர்.

திருச்சேறை

திருச்சேறை

திருச்சேறை,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சென்னெறியப்பர்.
தேவியார் : ஞானவல்லியம்மை.

முறியுறு நிறமல்கு முகிழ்முலை மலைமகள்
வெருவமுன்
வெறியுறு மதகரி யதள்பட வுரிசெய்த
விறலினர்
நறியுறு மிதழியின் மலரொடு நதிமதி
நகுதலை
செறியுறு சடைமுடி யடிகடம் வளநகர்
சேறையே #923

சிவபெருமான், தளிர் போன்ற நிறமும், அரும்பு போன்ற முலையுமுடைய உமாதேவி அஞ்சுமாறு, மதம் பிடித்த யானையின் தோலை உரித்த வலிமையுடையவர். நறுமணம் கமழும் இதழ்களை உடைய கொன்றைப் பூவோடு, கங்கை நதியையும், பிறைச்சந்திரனையும், மண்டையோட்டையும் நெருங்கிய சடை முடியில் அணிந்துள்ள அவ்வடிகள் வீற்றிருந் தருளும் வளநகர் திருச்சேறை என்னும் திருத்தலமாகும்.

திருச்சேறை

புனமுடை நறுமலர் பலகொடு தொழுவதொர்
புரிவினர்
மனமுடை யடியவர் படுதுயர் களைவதொர்
வாய்மையர்
இனமுடை மணியினொ டரசிலை யொளிபெற
மிளிர்வதோர்
சினமுதிர் விடையுடை யடிகடம் வளநகர்
சேறையே #924

வணங்களிலுள்ள பல நறுமலர்களைப் பறித்துத் தூவித் தொழுகின்ற அடியவர்கட்கும், மன உறுதிப்பாட்டுடன் அன்பால் உருகித் தியானம் செய்யும் அடியவர்கட்கும் துயர் களைந்து அருள்புரியும் நியமமுடைய சிவபெருமான் கழுத்தில் கட்டப்படும் மணியும், அரசிலை போன்ற

அணியும் ஒளிர, மிக்க கோபமுடைய இடபத்தை வாகனமாகக் கொண்டவராய் வீற்றிருந்தருளும் வளநகர் திருச்சேறை என்னும் திருத்தலமாகும்.

திருச்சேறை

புரிதரு சடையினர் புலியத ளரையினர்
பொடிபுல்கும்
எரிதரு முருவின ரிடபம தேறவ
ரீடுலா
வரிதரு வளையின ரவரவர் மகிழ்தர
மனைதொறும்
திரிதரு சரிதைய ருறைதரு வளநகர்
சேறையே **#925**

சிவபெருமான் முறுக்குண்ட சடைமுடி உடையவர். புலியின் தோலை அரையில் கட்டியவர். நீறுபூத்த நெருப்புப் போன்ற சிவந்த திருமேனியில் வெண்ணிறத் திருநீற்றினைப் பூசி விளங்கும் உருவினர். இடப வாகனத்தில் ஏறுபவர். சரிந்த வரிகளையுடைய வளையல்களை அணிந்த, பெருமையுடைய மகளிர் மகிழும்படி வீடுகள்தோறும் திரிந்து பிச்சையேற்கும் இயல்புடையவர். அத்தகைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் வளநகர் திருச்சேறை என்னும் திருத்தலமாகும்.

திருச்சேறை

துடிபடு மிடையுடை மடவர லுடனொரு
பாகமா
இடிபடு குரலுடை விடையினர் படமுடை
யரவினர்
பொடிபடு முருவினர் புலியுரி பொலிதரு
மரையினர்
செடிபடு சடைமுடி யடிகடம் வளநகர்
சேறையே **#926**

உடுக்கை போன்று குறுகிய இடையுடைய உமா தேவியைச், சிவபெருமான் தம் ஒரு பாகமாகக் கொண்டவர். இடிமுழக்கம் போன்ற குரலுடைய இடபத்தை வாகனமாகக் கொண்டவர். படமெடுத்தாடும் பாம்பை அணிந்தவர். திருவெண்ணீறு அணிந்த உருவினர். இடையில் புலித்தோலாடை அணிந்தவர். செடிபோன்று அடர்த்தியான சடைமுடி உடையவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் வளநகர் திருச்சேறை என்னும் திருத்தலமாகும்.

<u>திருச்சேறை</u>

அந்தர முழிதரு திரிபுர மொருநொடி
யளவினில்
மந்தர வரிசிலை யதனிடை யரவரி
வாளியால்
வெந்தழி தரவெய்த விடலையர் விடமணி
மிடறினர்
செந்தழ னிறமுடை யடிகடம் வளநகர்
சேறையே **#927**

சிவபெருமான் ஆகாயத்தில் சுற்றித் திரிந்த திரி புரங்களை ஒரு நொடிப்பொழுதில் மலையை வில்லாகவும், அதனிடை வாசுகி என்னும் பாம்பை நாணாகவும் பூட்டி, திருமால், வாயு, அக்கினி இவற்றை அம்பாகக் கொண்டு எய்து வெந் தழியுமாறு செய்த வீரமிக்க வாலிபர். தேக்கிய விடம் மணி போன்று விளங்கும் கண்டத்தர். செந்தழல் போன்ற மேனியுடைய அவர் வீற்றிருந்தருளும் வளநகர் திருச்சேறை என்னும் திருத்தலமாகும்.

<u>திருச்சேறை</u>

மத்தர முறுதிறன் மறவர்தம் வடிவுகொ
டுருவுடைப்
பத்தொரு பெயருடை விசயனை யசைவுசெய்
பரிசினால்
அத்திர மருளுந மடிகள தணிகிளர்
மணியணி
சித்திர வளநகர் செறிபொழி றழுவிய
சேறையே **#928**

மந்தர மலை போன்ற வலிமையுடைய வேட்டுவ வடிவம் தாங்கி வந்து, பத்துப் பெயர்களைச் சிறப்பாகக் கொண்ட விசயனைப் பொருது தளரச் செய்து, அவன் கௌரவர்களைத் தோல்வியடையச் செய்யும் வண்ணம் பாசுபதம் என்னும் அம்பைக் கொடுத்தருளிய சிவபெருமான் வீற்றிருந்தருளுவது இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட அழகிய வளநகராய், அடர்ந்த சோலைகள் சூழப்பெற்ற திருச்சேறை என்னும் திருத்தலமாகும்.

<u>திருச்சேறை</u>

பாடின ரருமறை முறைமுறை பொருளென
வருநடம்

ஆடினர் ருலகிடை யலர்கொடு மடியவர்
துதிசெய
வாடினர் படுதலை யிடுபலி யதுகொடு
மகிழ்தரும்
சேடர்தம் வளநகர் செறிபொழி றழுவிய
சேறையே #929

இறைவன் முறைப்படி வரிசையாக அரிய வேதங்களைப் பாடியருளியவர். ஐந்தொழில்களை ஆற்றும் திரு நடனம் செய்பவர். உலகில் அடியவர்கள் மலரும், பூசைக்குரிய பிற பொருள்களும் கொண்டு போற்றித் துதிக்க அருள்செய்பவர். வாட்டமுற்ற பிரமனின் வறண்ட மண்டையோட்டில் பிச்சையேற்று மகிழ்பவர். அப்பெருமான் பெருமையுடன் வீற்றிருந்தருளும் வளநகர், அடர்ந்த சோலைகள் விளங்கும் திருச்சேறை என்னும் திருத்தலமாகும்.

<u>திருச்சேறை</u>

கட்டுர மதுகொடு கயிலைநன் மலைமலி
கரமுடை
நிட்டுர னுடலொடு நெடுமுடி யொருபது
நெரிசெய்தார்
மட்டுர மலரடி யடியவர் தொழுதெழ
வருள்செயும்
சிட்டர்தம் வளநகர் செறிபொழி றழுவிய
சேறையே #930

தனது உறுதியான உடல்வலிமை கொண்டு கயிலைமலையைத் தன் மிகுதியான கரங்களால் பெயர்த்தெடுக்க முயன்ற கொடியவனான இராவணனின் உடலும், பெரிய தலைகள் பத்தும் நெரித்தவர் சிவபெருமான். அவருடைய நறுமணம் கமழும் மலர் போன்ற திருவடிகளை அடியவர்கள் தொழுது போற்ற அருள் செய்யும் நல்லியல்புடையவர். அவர் வீற்றிருந்தருளும் வளநகர் அடர்ந்த சோலைகள் சூழ்ந்த திருச்சேறை என்னும் திருத்தலமாகும்.

<u>திருச்சேறை</u>

பன்றியர் பறவையர் பரிசுடை வடிவொடு
படர்தர
அன்றிய வவரவ ரடியொடு முடியவை
யறிகிலார்
நின்றிரு புடைபட நெடுவெரி நடுவெயொர்
நிகழ்தரச்

சென்றுயர் வெளிபட வருளிய வவர்நகர்
சேறையே #931
திருமால் பன்றி உருவெடுத்தும், பிரமன் அன்னப்பறவை உருவெடுத்தும் இறைவனைக் காணமுயல, அவ்விருவரும் தன் அடியையும், முடியையும் அறியாவண்ணம் அவர்கள் நடுவே நெடிய நெருப்புப் பிழம்பாய்த் தோன்றுமாறு, ஓங்கி, தன் மேலாந்தன்மை வெளிப்பட அருளிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் நகர் திருச்சேறை என்னும் திருத்தலமாகும்.

திருச்சேறை

துகடுறு விரிதுகி லுடையவ ரமணெனும்
வடிவினர்
விகடம துறுசிறு மொழியவை நலமில
வினவிடல்
முகிடரு மிளமதி யரவொடு மழகுற
முதுநதி
திகடரு சடைமுடி யடிகடம் வளநகர்
சேறையே #932
அழுக்கு மிகுந்த ஆடையை உடுத்திக் கொள்ளும் புத்தர்களும், தோற்றத்தாலேயே இவர்கள் அமணர்கள் என்று கண்டு கொள்ளத்தக்க வடிவுடைய சமணர்களும், குறும்புத்தனமாகக் கூறும் அற்ப மொழிகள் நன்மை பயக்காதவை. எனவே அவற்றைக் கேளற்க. அரும்பையொத்த இளம்பிறைச் சந்திரனையும், பாம்பையும், கங்கையையும் அழகுற அணிந்த சடைமுடியுடைய அடிகளான சிவபெருமான் வீற்றிருந்தருளும் வள நகர் திருச்சேறை என்னும் திருத்தலமாகும்.

திருச்சேறை

கற்றநன் மறைபயி லடியவ ரடிதொழு
கவினுறு
சிற்றிடை யவளொடு மிடமென வுறைவதொர்
சேறைமேல்
குற்றமில் புகலியு ளிகலறு ஞானசம்
பந்தன
சொற்றக வுறமொழி பவரழி விலர்துயர்
தீருமே #933
நன்மை தரும் வேதங்களை ஐயந்திரிபறக் கற்று ஓதும் அடியவர்கள், தன்னுடைய திருவடிகளைத் தொழ, அழகிய குறுகிய இடையுடைய உமாதேவியோடு, சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருச்சேறை என்னும்

திருத்தலத்தைப் போற்றிக், குற்றமற்ற புகலியில் அவதரித்த, எவரோடும் பகைமையில்லாத ஞானசம்பந்தன் அருளிய இத்திருப்பதிகத்தை முறையோடு ஓதுபவர்கள் அழிவற்றவர்கள். அவர்களின் துன்பங்கள் யாவும் தீரும்.

திருநள்ளாறு

திருநள்ளாறு

திருநள்ளாறு,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ள சப்த தியாகர் தலங்களிலொன்று. ,
சுவாமிபெயர் : தெர்ப்பாரணியர்.
தேவியார் : போகமார்த்தபூண்முலையம்மை. இது சமணர் வாதின்பொருட்டுத் தீயிலிடுதற்கு போகமார்த்த பூண்முலையாளென்னும் பதிகம் உதயமாக இது தீயில் பழுது படாது என்னுந் துணிவுகொண்டு அருளிச்செய்த பதிகம்.

தளிரிள வளரொளி தனதெழி
றருதிகழ் மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை
யிணையவை குலவலின்
நளிரிள வளரொளி மருவுநள்
ளாறர்தந் நாமமே
மிளிரிள வளரெரி யிடிலிவை
பழுதிலை மெய்ம்மையே **#934**

இளந்தளிர் நாளுக்கு நாள் வளர்ந்து பசுமை அடைதல் போல், வளரும் அருளின் எழில் திகழும் உமாதேவியின், குளிர்ந்த, வளரும் இள ஒளிவீசம் அழகிய முலையை மகிழ்ந்து தழுவப் பெறுதலால். குளிர்ந்த வளரொளி போன்று நள்ளாறர்தம் புகழ்கூறும், ‘போகமார்த்த பூண் முலையாள்’ என்று தொடங்கும் (தி.1. ப.49. பா.1) திருப்பதிகம் எழுதப்பெற்ற ஓலையை, அவர் திருமேனி போல் பிரகாசிக்கின்ற நெருப்பிலிட்டால் அவை பழுது இல்லாதனவாம் என்பது சத்தியமே.

திருநள்ளாறு

போதமர் தருபுரி குழலெழின்
மலைமகள் பூணணி
சீதம தணிதரு முகிழிள
வனமுலை செறிதலின்
நாதம தெழிலுரு வனையநள்
ளாறர்தந் நாமமே
மீதம தெரியினி லிடிலிவை
பழுதிலை மெய்ம்மையே **#935**

மலர் கொண்டு புனைந்து அலங்கரிக்கப்பட்ட கூந்தலை உடைய

அழகிய மலைமகளான உமாதேவியின் ஆபரணம் அணிந்து, குளிர்ச்சிதரும் சந்தனத்தை அணிந்த, அரும்பொத்த இளைய அழகிய முலைகளைத் தழுவுகின்றவரும், நாத தத்துவம் அழகிய உருவாகக் கொண்டவருமான திருநள்ளாறு இறைவரின் புகழ் கூறும் திருப்பதிகம் எழுதப்பட்ட ஏடுகளை மேலான அவருருவான நெருப்பிலிட்டால் அவை பழுதில்லாதனவாம் என்பது சத்தியமே.

திருநள்ளாறு

இட்டுறு மணியணி யிணர்புணர்
வளரொளி யெழில்வடம்
கட்டுறு கதிரிள வனமுலை
யிணையொடு கலவலின்
நட்டுறு செறிவயன் மருவுநள்
ளாறர்தந் நாமமே
இட்டுறு மெரியினி லிடிலிவை
பழுதிலை மெய்ம்மையே **#936**

பூங்கொத்துக்களைப் போன்று, இரத்தினங்கள் வரிசையாகக் கோக்கப்பட்ட மாலையணிந்த உமாதேவியின், ஒளி வீசும் இளைய அழகிய முலைகளைத் தழுவும், கதிர்கள் நெருக்கமாக வளர்ந்துள்ள வயல்வளமிக்க திருநள்ளாறு இறைவனின் புகழ் உரைக்கும் திருப்பதிகம் எழுதப்பட்ட ஏடுகளை அனல் வாதத்திற்கென வளர்க்கப்பட்ட நெருப்பிலிட்டால் அவை பழுதில்லாதனவாம் என்பது சத்தியமே.

திருநள்ளாறு

மைச்சணி வரியரி நயனிதொன்
மலைமகள் பயனுறு
கச்சணி கதிரிள வனமுலை
யவையொடு கலவலின்
நச்சணி மிடறுடை யடிகணள்
ளாறர்தந் நாமமே
மெச்சணி யெரியினி லிடிலிவை
பழுதிலை மெய்ம்மையே **#937**

மை பூசப்பெற்ற ஒழுங்கான செவ்வரி படர்ந்த அழகிய கண்களையுடைய தொன்மையாய் விளங்கும் உமா தேவியாரின் பரஞானம், அபரஞானம் ஆகிய பயன்தரும் கச்சணிந்த ஒளிரும் இளைய அழகிய முலையைத் தழுவும் நஞ்சணி கண்டத்தினனான திருநள்ளாற்று இறைவனைப் போற்றும் திருப்பதிகம் எழுதப்பட்ட ஏடுகளை அழகிய நெருப்பிலிட்டால் அவை பழுதில்லாதனவாம் என்பது சத்தியமே.

திருநள்ளாறு

பண்ணியன் மலைமகள் கதிர்விடு
பருமணி யணிநிறக்
கண்ணியல் கலசம தனமுலை
யிணையொடு கலவலின்
நண்ணிய குளிர்புனல் புகுதுநள்
ளாறர்தந் நாமமே
விண்ணிய லெரியினி லிடிலிவை
பழுதிலை மெய்ம்மையே **#938**

பண்பாடமைந்த மலைமகளின் ஒளிவீசுகின்ற இரத்தினங்கள் பதித்த ஆபரணத்தை அணிந்த, அழகான கலசம் போன்ற இருமுலைகளையும் கூடும், குளிர்ச்சி பொருந்திய நீர் பாயும் திருநள்ளாற்று இறைவனின் நாமத்தைப் போற்றும் திருப்பதிகம் எழுதப்பட்ட ஏடுகளை ஆகாயமளாவிய இந்நெருப்பில் இட்டாலும் அவை பழுதில்லாதனவாகும் என்பது சத்தியமே.

திருநள்ளாறு

போதுறு புரிகுழன் மலைமக
ளிளவளர் பொன்னணி
சூதுறு தளிர்நிற வனமுலை
யவையொடு துதைதலின்
தாதுறு நிறமுடை யடிகணள்
ளாறர்தந் நாமமே
மீதுறு மெரியினி லிடிலிவை
பழுதிலை மெய்ம்மையே **#939**

மலர்களணிந்த பின்னிய கூந்தலையுடைய மலைமகளான உமாதேவியாரின் பொன்னாபரணம் அணிந்த, சூதாடும் வட்டை ஒத்த, தளிர்போன்ற நிறமுடைய அழகிய முலைகளோடு நெருங்கியிருத்தலால், பொன்போலும் நிறம் பெற்ற அடிகளாகிய நள்ளாற்று இறைவனின் திருநாமத்தைப் போற்றும் திருப்பதிகம் எழுதப்பட்ட ஏடுகளை மேல்நோக்கி எரியும் இயல்புடைய இந்நெருப்பிலிட்டாலும் அவை பழுதில்லாதனவாகும் என்பது, சத்தியமே.

திருநள்ளாறு

கார்மலி நெறிபுரி சுரிகுழன்
மலைமகள் கவினுறு
சீர்மலி தருமணி யணிமுலை

திகழ்வொடு செறிதலின்
தார்மலி நகுதலை யுடையநள்
ளாறர்தந் நாமமே
ஏர்மலி யெரியினி லிடிலிவை
பழுதிலை மெய்ம்மையே #940

அடர்த்தியான, பின்னப்பட்ட, சுருண்ட கார் மேகம் போன்ற கருநிறமான கூந்தலையுடைய மலைமகளான உமாதேவியின் அழகிய, சிறந்த மணிகள் பதிக்கப்பட்ட ஆபரணம் அணிந்த முலைகளோடு நெருங்கியிருக்கும், மண்டையோட்டை மாலையாக அணிந்துள்ள திருநள்ளாற்று இறைவனின் திருநாமத்தைப் போற்றும் திருப்பதிகம் எழுதப்பட்ட ஏடுகளை எழுச்சியுடன் எரியும் இந்நெருப்பிலிட்டால் அவை பழுதில்லாதனவாகும் என்பது சத்தியமே.

திருநள்ளாறு

மன்னிய வளரொளி மலைமகள்
தளிர்நிற மதமிகு
பொன்னியன் மணியணி கலசம
தனமுலை புணர்தலின்
தன்னியல் தசமுக னெரியநள்
ளாறர்தந் நாமமே
மின்னிய லெரியினி லிடிலிவை
பழுதிலை மெய்ம்மையே #941

நிலைபெற்று வளரும் ஞானவொளி பிரகாசிக்கும் மலைமகளான உமாதேவியின் தளிர்நிறத்தனவாய் மான்மதமாகிய கத்தூரியை அணியப்பெற்றனவாய், இரத்தினங்கள் பதிக்கப்பட்ட பொன்னாலான ஆபரணத்தை அணிந்துள்ளனவாய், கலசத்தை ஒத்தனவாய் விளங்கும் இருமுலைகளைப் புணர்கின்றவரும், ஆணவமே இயல்பாக உடைய இராவணனைக் கயிலையின் கீழ் நெரியும்படி செய்தவருமான திருநள்ளாற்று இறைவரின் திரு நாமத்தைப் போற்றும் திருப்பதிகம் எழுதப்பட்ட ஏடுகளை, மின்னலைப் போன்ற எரியும் இந்நெருப்பிலிட்டாலும் அவை பழுதில்லாதனவாகும் என்பது சத்தியமே.

திருநள்ளாறு

கான்முக மயிலியன் மலைமகள்
கதிர்விடு கனமிகு
பான்முக மியல்பணை யிணைமுலை
துணையொடு பயிறலின்

நான்முக னரியறி வரியநள்
ளாறர்தந் நாமமே
மேன்முக வெரியினி லிடிலிவை
பழுதிலை மெய்ம்மையே #942

காட்டில் விளங்கும் மயில் போன்ற சாயலையுடைய உமாதேவியின், ஒளிவிடுகின்ற கனத்த பால்சுரக்கும் பருத்த இருமுலைகளைக் கூடுகின்றவரும், பிரமனும், திருமாலும் அறிவதற்கு அரியவராக விளங்குகின்றவருமான திருநள்ளாற்று இறைவரின் திருநாமத்தைப் போற்றும் திருப்பதிகம் எழுதப்பட்ட ஏடுகளை மேல்நோக்கி எரியும் இந்நெருப்பிலிட்டாலும் அவை பழுதில்லாதனவாகும் என்பது சத்தியமே.

திருநள்ளாறு

அத்திர நயனிதொன் மலைமகள்
பயனுறு மதிசயச்
சித்திர மணியணி திகழ்முலை
யிணையொடு செறிதலின்
புத்தரொ டமணர்பொய் பெயருநள்
ளாறர்தந் நாமமே
மெய்த்திர ளெரியினி லிடிலிவை
பழுதிலை மெய்ம்மையே #943

அம்பு போன்று கூர்மையான கண்களையுடைய தொன்மையான மலைமகளான உமாதேவியின் பயன்தரும் அதிசயம் விளைவிக்கும், பலவகையான இரத்தினங்கள் பதிக்கப்பட்ட ஆபரணங்கள் அணியப் பெற்றுள்ள இருமுலைகளோடு நெருங்கியிருப்பவரும், புத்தர்களாலும், சமணர்களாலும் உணரப்படாதவரும் பொய்யினின்று நீங்கியவருமான திருநள்ளாற்று இறைவரின் திருநாமத்தைப் போற்றும் திருப்பதிகம் எழுதப்பட்ட ஏடுகளை, திரண்டு எரியும் இந்நெருப்பில் இட்டாலும் அவை பழுதில்லாதனவாகும் என்பது சத்தியமே.

திருநள்ளாறு

சிற்றிடை யரிவைதன் வனமுலை
யிணையொடு செறிதரும்
நற்றிற முறுகழு மலநகர்
ஞானசம் பந்தன
கொற்றவ னெதிரிடை யெரியினி
லிடவிவை கூறிய
சொற்றெரி யொருபது மறிபவர்

துயரிலர் தூயரே #944

சிறிய இடையினையுடைய உமாதேவியின் அழகிய முலைகளோடு நெருங்கியிருக்கும் திருநள்ளாற்று இறைவனைப் போற்றும் திருப்பதிகம் எழுதிய ஏடுகளை, நன்மை தரும் கழுமலநகரில் அவதரித்த திருஞானசம்பந்தன், பாண்டிய மன்னனின் எதிரில், நெருப்பின் நடுவில் இடுகின்றபோது கூறிய, இத்திருப்பதிகத்தை ஓதும் அன்பர்கள் துயரற்றவர்கள் ஆவர். மும்மலங்களினின்றும் நீங்கித் தூயராய் விளங்குவர்.

திருவிளமர்

திருவிளமர்

திருவிளமர்,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பதஞ்சலிமனோகரேசுவரர்.
தேவியார் : யாழினுமென்மொழியம்மை.

மத்தக மணிபெற மலர்வதொர் மதிபுரை
நுதல்கரம்
ஒத்தக நகமணி மிளிர்வதொ ரரவின
ரொளிகிளர்
அத்தக வடிதொழ வருள்பெறு கண்ணொடு
முமையவள்
வித்தக ருறைவது விரிபொழில் வளநகர்
விளமரே #945

சிவபெருமான், தலையில் அழகுற விளங்கும் பிறைச்சந்திரனை ஒத்த நெற்றியுடையவர். கரத்தில் விளங்கும் நகங்களைப் போல தலையிலுள்ள இரத்தினங்கள் பிரகாசிக்கும் ஐந்தலைப் பாம்பைக் கங்கணமாகக் கட்டியவர். இத்தகைய சிவபெருமானின் திருவடிகளைத் தொழுது யாம் உய்யும்பொருட்டு, அருள்பெருகும் கண்களையுடைய உமாதேவியோடு வித்தகராகிய அப்பெருமான் வீற்றிருந்தருளுவது விரிந்த சோலைகள் சூழ்ந்த வளமை வாய்ந்த திருவிளமர் என்னும் திருத்தலமாகும்.

திருவிளமர்

பட்டில கியமுலை யரிவைய ருலகினி
லிடுபலி
ஒட்டில கிணைமர வடியின ருமையுறு
வடிவினர்
சிட்டில கழகிய பொடியினர் விடைமிசை
சேர்வதோர்
விட்டில கழகொளி பெயரவ ருறைவது
விளமரே #946

சிவபெருமான், உலகில் பட்டாடையால் மூடப்பட்ட முலைகளையுடைய பெண்கள் இடுகின்ற பலிகளை ஏற்க, இசைத்துச் செல்கின்ற மரப்பாதுகைகளை அணிந்த திருவடிகளை உடையவர். உமாதேவியை

ஒரு பாகமாகக் கொண்ட கோலத்தர். தூய்மையையும், ஞானத்தையும் உணர்த்தும் திருவெண்ணீற்றினைப் பூசியுள்ளவர். இடபவாகனத்தில் வீற்றிருப்பவர். சொல்லொணாப் பேரழகிய தோற்றப் பொலிவுடன் நடக்கும் சிவபெருமான் வீற்றிருந்தருளுவது திருவிளமர் என்னும் திருத்தலமாகும்.

திருவிளமர்

அங்கதி ரொளியின ரரையிடை மிளிர்வதொ
ரரவொடு
செங்கதி ரெனநிற மனையதொர் செழுமணி
மார்பினர்
சங்கதிர் பறைகுழன் முழவினொ டிசைதரு
சரிதையர்
வெங்கதி ருறுமழு வுடையவ ரிடமெனில்
விளமரே **#947**

சிவபெருமான் அழகிய ஒளிவீசும் தோற்றப் பொலிவுடையவர். இடையிலே பாம்பைக் கச்சாகக் கட்டியவர். செந்நிற கதிர் போன்ற நிறமுடையவர். அக்கதிர்போல் ஒளிவீசும் இரத்தினங்கள் பதிக்கப்பட்ட ஆபரணங்களை அணிந்துள்ள மார்பினர். சங்குகள் ஒலிக்க, பறை, குழல், முழவு போன்ற வாத்தியங்கள் இசைக்கத் திருக்கூத்து ஆடுபவர். வெண்ணிற ஒளிவீசும் மழுப்படையை உடையவர். இத்தகைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவிளமர் என்னும் திருத்தலமாகும்.

திருவிளமர்

மாடம தெனவளர் மதிலவை யெரிசெய்வர்
விரவுசீர்ப்
பீடென வருமறை யுரைசெய்வர் பெரியபல்
சரிதைகள்
பாடல ராடிய சுடலையி லிடமுற
நடநவில்
வேடம துடையவர் வியனக ரதுசொலில்
விளமரே **#948**

மாடம் போன்று உயர்ந்து விளங்கிய, தேவர்கட்குத் தீமை செய்த பகையசுரர்களின் மும்மதில்களைச் சிவபெருமான் எரித்தவர். தமது புகழ் பாடுவதையே பொருளாகக் கொண்ட வேதங்களை அருளிச் செய்தவர். தமது வரலாறுகள் அடியவர்களால் பாடலாகப் பாடப்படும் பெருமையுடையவர். சுடுகாட்டை அரங்கமாகக் கொண்ட திருநடனம்

செய்யும் கோலத்தர். இத்தகைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் பெருமை மிக்க நகரானது திருவிளமர் என்னும் திருத்தலமாகும்.

திருவிளமர்

பண்டலை மழலைசெ யாழென மொழியுமை
பாகமாக்
கொண்டலை குரைகழ லடிதொழு மவர்வினை
குறுகிலர்
விண்டலை யமரர்கள் துதிசெய வருள்புரி
விறலினர்
வெண்டலை பலிகொளும் விமலர்தம் வளநகர்
விளமரே **#949**

பண்ணின் இசையை ஒலிக்கும் யாழ்போன்ற இனியமொழி பேசும் உமாதேவியைத் தம் திருமேனியின் ஒரு பாகமாகக் கொண்டவர் சிவபெருமான். அவருடைய, அசைகின்ற ஒலிக்கும் வீரக்கழல்களை அணிந்துள்ள திருவடிகளைத் தொழும் அடியவர்களை வினை சாராது. விண்ணுலகிலுள்ள தேவர்கள் தொழுது போற்ற அருள்செய்யும் பெருங்கருணையாளர். பிரமனுடைய மண்டையோட்டில் பிச்சையேற்றுத் திரிபவரும் இயல்பாகவே பாசங்களின் நீங்கியவருமான அச்சிவபெருமான் வீற்றிருந்தருளும் வளம் மிகுந்த நகர் திருவிளமர் என்னும் திருத்தலமாகும்.

திருவிளமர்

மனைகடொ றிடுபலி யதுகொள்வர் மதிபொதி
சடையினர்
கனைகட லடுவிட மமுதுசெய் கறையணி
மிடறினர்
முனைகெட வருமதி ளெரிசெய்த வவர்கழல்
பரவுவார்
வினைகெட வருள்புரி தொழிலினர் செழுநகர்
விளமரே **#950**

சிவபெருமான் தாருகவனத்தில் மனைகள்தொறும் சென்று பிச்சை ஏற்றவர். சந்திரனைத் தரித்த சடையுடையவர். ஒலிக்கின்ற கடலில் தோன்றி உயிர்களைக் கொல்ல வந்த விடத்தை அமுதமாக உண்டு கறை படிந்த அழகிய கண்டத்தர். போர் முனைப்பு உடன் எழுந்த பகையசுரர்களின் மும்மதில்களை எரித்தவர்.தம் திருவடிகளை வணங்குபவர்களின் வினைகெடும்படி அருள்புரியும் தொழிலுடையவர். இத்தகைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் செழிப்பான நகர்

திருவிளமர் என்னும் திருத்தலமாகும்.

திருவிளமர்

நெறிகமழ் தருமுரை யுணர்வினர்
புணர்வுறு மடவரல்
செறிகமழ் தருமுரு வுடையவர் படைபல
பயில்பவர்
பொறிகமழ் தருபட வரவினர் விரவிய
சடைமிசை
வெறிகமழ் தருமல ரடைபவ ரிடமெனில்
விளமரே #951

சிவபெருமான் சரியை முதலிய நான்கு நெறிகளாலும், ஆகமங்களாலும் மன்னுயிர்கட்கு மெய்யுணர்வு நல்கியவர். தம்மின் வேறாகாத ஞானமே வடிவான உமாதேவியை இடப்பாகமாகப் பொருந்தி விளங்கும் உருவுடையவர். திருக்கரங்களில் படைகள் பல ஏந்தியவர். புள்ளிகளையுடைய படமெடுத்தாடும் பாம்பை அணிந்தவர். கங்கை, பிறைச்சந்திரன், பாம்பு இவை கலந்த சடைமுடியின் மீது அடியவர்கள் புனையும் நறுமணமலர்கள் அடையப் பெற்றவர். இத்தகைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருவிளமர் என்னும் திருத்தலமாகும்.

திருவிளமர்

தெண்கடல் புடையணி நெடுமதி லிலங்கையர்
தலைவனைப்
பண்பட வரைதனி லடர்செய்த பைங்கழல்
வடிவினர்
திண்கட லடைபுனல் திகழ்சடை புகுவதொர்
சேர்வினார்
விண்கடல் விடமலி யடிகள்தம் வளநகர்
விளமரே #952

தெளவான நீரையுடைய கடல்சூழ்ந்த, அழகிய நீண்ட மதில்களையுடைய இலங்கை அரசனான இராவணன் பண் படையும்படி, கயிலைமலையின் கீழ் அடர்த்த கழலணிந்த திருவடிகளையுடையவர் சிவபெருமான். கடலையடையும் கங்கையை, சடையில் தாங்கியவர். விண்ணுலகிலுள்ள பரந்த பாற்கடலில் தோன்றிய விடத்தைத் தேக்கிய கண்டத்தர். இத்தகைய தலைவரான சிவபெருமான் வீற்றிருந்தருளும் வளமை பொருந்திய நகர் திரு விளமர் என்னும் திருத்தலமாகும்.

திருவிளமர்

தொண்டசை யுறவரு துயருறு காலனை
மாள்வுற
அண்டல்செய் திருவரை வெருவுற வாரழ
லாயினார்
கொண்டல்செய் தருதிரு மிடறின ரிடமெனி
லளியினம்
விண்டிசை யுறுமலர் நறுமது விரிபொழில்
விளமரே **#953**

சிவனுக்கு அடிமை பூணும் திருத்தொண்டின் நிலை அழியும்படி, மார்க்கண்டேயருக்குத் துன்பம் செய்ய வந்த காலனை மாளும் படி செய்து, பின்னர்த் தம் ஆணையின்படி ஒழுகுமாறு செய்தவர் சிவ பெருமான். பிரமன், திருமால் என்னும் இருவரையும் அஞ்சுவிக்கக் காண்டற்கரிய அழல் வடிவானவர். மேகம் போன்ற கரிய கண்டத்தை உடையவர். இத்தகைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், வண்டினங்கள் விரிந்த மலர்களைக் கிண்டி நல்ல தேனை ஒலியுடன் பருகும் சோலைகளை உடைய திருவிளமர் என்னும் திருத்தலமாகும்.

திருவிளமர்

ஒள்ளியர் தொழுதெழ வுலகினி லுரைசெயு
மொழிபல
கொள்ளிய களவினர் குண்டிகை யவர்தவ
மறிகிலார்
பள்ளியை மெய்யெனக் கருதன்மின் பரிவொடு
பேணுவீர்
வெள்ளிய பிறையணி சடையினர் வளநகர்
விளமரே **#954**

உலகத்து அறிவுடையார்களால் வணங்கி ஏத்துதற்குரிய மதங்கள் பல உண்டு. வடமொழி, தமிழ் முதலிய பல மொழிகளிலுமுள்ள உயர்ந்த பொருள்களைக் களவுசெய்து தம்மதாகக் திருச்சிற்றம்பலம் காட்டும் திருட்டுத்தனமிக்கவரும், தவம் அறிகிலாதவருமான சமண, புத்தர்தம் பள்ளியினர் கூறும் நெறிகளை மெய்யென்று கருதற்க. வெண்ணிறப் பிறைச்சந்திரனை அணிந்த சடையையுடைய, வளம் மிகுந்த நகரான திருவிளமர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானை அன்போடு போற்றி வழிபடுங்கள்.

திருவிளமர்

வெந்தவெண் பொடியணி யடிகளை விளமருள்
விகிர்தரைச்
சிந்தையு ளிடைபெற வுரைசெய்த தமிழிவை
செழுவிய
அந்தணர் புகலியு ளழகம ரருமறை
ஞானசம்
பந்தன மொழியிவை யுரைசெயு மவர்வினை
பறையுமே **#955**

பசுவின் சாணம் வெந்ததாலான திருவெண்நீற்றினை அணிந்த தலைவரை, திருவிளமர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் வேறுபட்டவரை (விகிர்தர்), சிந்தையுள் இடையறாது இருத்தும்படி, அந்தணர்கள் வாழ்கின்ற செழுமையான திருப்புகலியில் அவதரித்த அருமறைவல்ல ஞானசம்பந்தர் போற்றி அருளிச் செய்த தமிழாகிய இத்திருப் பதிகத்தை ஓதுவோர் வினை அழியும்.

திருக்கொச்சைவயம்

சீர்காழி

திருக்கொச்சைவயம்,
பண் - சாதாரி

திருந்துமா களிற்றிள மருப்பொடு
திரண்மணிச் சந்தமுந்திக்
குருந்துமா குரவமுங் குடசமும்
பீலியுஞ் சுமந்துகொண்டு
நிரந்துமா வயல்புகு நீடுகோட்
டாறுசூழ் கொச்சைமேவிப்
பொருந்தினார் திருந்தடி போற்றிவாழ்
நெஞ்சமே புகலதாமே **#956**

நெஞ்சமே! அழகான இளயானைத் தந்தங்களோடு, திரட்சியான இரத்தினங்களையும், சந்தன மரங்களையும் அடித்துக் கொண்டு, குருந்து, மா, குரவம், குடசம் முதலிய மரவகைகளையும், மயிலின் தோகைகளையும் சுமந்து கொண்டு பரவி, பெரிய வயல்களில் பாய்கின்ற நெடிய கரைகளையுடைய காவிரி நதி சூழும் திருக்கொச்சைவயம் என்னும் இத்திருத்தலத்தை விரும்பி வீற்றிருந்தருளும் சிவபெருமானின் அழகிய திருவடிகளைப் போற்றி வாழ்வாயாக! அத்திருவடியே நமக்குச் சரண்புகும் இடமாகும்.

சீர்காழி

ஏலமா ரிலவமோ டினமலர்த்
தொகுதியா யெங்குநுந்திக்
கோலமா மிளகொடு கொழுங்கனி
கொன்றையுங் கொண்டுகோட்டா
றாலியா வயல்புகு மணிதரு
கொச்சையே நச்சிமேவும்
நீலமார் கண்டனை நினைமட
நெஞ்சமே யஞ்சனீயே **#957**

மடநெஞ்சமே! மணம் கமழும் ஏலம், இலவங்கம் இவைகளோடு நறுமணம் கமழும் மலர்களையும் தள்ளிக் கொண்டு, அழகிய மிளகுக் கொடிகளோடு, நன்கு பழுத்த கனிகள், கொன்றை மலர்கள் ஆகியவற்றை அலைகள் வாயிலாக அடித்துக் கொண்டு ஆரவாரத்துடன் பாயும் காவிரி நதியின் நீர் வயல்களில் புகுகின்ற அழகிய திருக்கொச்சைவயம் என்னும் இத்திருத்தலத்தை விரும்பி

வீற்றிருந்தருளும் நீலகண்டரான சிவபெருமானை நினைப்பாயாக! நீ அஞ்சாதே.

சீர்காழி

பொன்னுமா மணிகொழித்தெறிபுனற்
கரைகள்வாய் நுரைகளுந்திக
கன்னிமார் முலைநலங் கவரவந்
தேறுகோட் டாறுசூழ
மன்னினார் மாதொடும் மருவிடங்
கொச்சையே மருவினாளும்
முன்னைநோய் தொடருமா றில்லைகா
ணெஞ்சமே யஞ்சனீயே **#958**

நெஞ்சமே! பொன்னையும், பெரிய மணிகளையும் ஒதுக்கிக் கரையில் எறிகின்ற ஆற்றுநீர் நுரைகளைத் தள்ளிக் கொண்டு, கன்னிப்பெண்களின் மார்பில் பூசியிருந்த சந்தனம் முதலிய வாசனைத் திரவியங்கள் அகற்றிக் கரைசேர்க்கின்ற காவிரி சூழ்ந்திருக்க, உமாதேவியாரோடு நிலைபெற்று இருப்பவராகிய சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் திருக்கொச்சைவயம் என்னும் இத்திருத்தலத்தையே எக்காலத்தும் பொருந்தி வாழ்வாயாக! அவ்வாறு வாழ்ந்தால் தொன்றுதொட்ட வரும் மலநோயானது இனி உன்னைத் தொடராது.நீ அஞ்சல் வேண்டா.

சீர்காழி

கந்தமார் கேதகைச் சந்தனக்
காடுசூழ் கதலிமாடே
வந்துமா வள்ளையின் பவரளிக்
குவளையைச் சாடியோடக்
கொந்துவார் குழலினார் குதிகொள்கோட்
டாறுசூழ் கொச்சைமேய
எந்தையா ரடிநினைந் துய்யலாம்
நெஞ்சமே யஞ்சனீயே **#959**

நெஞ்சமே! மணம் பொருந்திய தாழை, சந்தனக் காடு என்பவற்றைச் சூழ்ந்து, வாழைத் தோட்டங்களின் பக்கமாக வந்து, மா மரத்தையும், வள்ளிக் கொடியின் திரளையும், மொய்க்கும் வண்டுகளையும் குவளையையும் மோதி ஓட, பூங்கொத்துக்கள் அணிந்த நீண்ட கூந்தலையுடைய பெண்கள் குதித்துக் கொண்ட நீராடும் காவிரி நதி சூழ்ந்த திருக்கொச்சைவயம் என்னும் திருத்தலத்தை விரும்பி வீற்றிருந்தருளிய எந்தையாரான சிவபெருமானின் திருவடிகளைத்

தியானித்து நாம் உய்தி பெறலாம். நீ அஞ்சவேண்டா.

சீர்காழி

மறைகொளும் திறலினா ராகுதிப்
புகைகள்வா னண்டமிண்டிச்
சிறைகொளும் புனலணிசெழும்பதி
திகழ்மதிற் கொச்சை தன்பால்
உறைவிட மெனமன மதுகொளும்
பிரமனார் சிரமறுத்த
இறைவன தடியிணை யிறைஞ்சிவாழ்
நெஞ்சமே யஞ்சனீயே #960

நெஞ்சமே! வேதங்களை அவற்றின் பொருள் உணர்ந்து ஓதும் வன்மை படைத்த அந்தணர்கள் இயற்றுகின்ற வேள்விப் புகை ஆகாயத்தை அளாவி நெருங்குதலால் மழை பொழிய,அந்நீர் தங்கிய கரைகளையுடைய நீர்நிலைகளால் அழகுடன் விளங்கும் செழும்பதியாகிய, மதில்கள் விளங்குகின்ற திருக்கொச்சைவயம் என்னும் திருத்தலத்தை, தாம் எழுந்தருளும் இடமாகக் கொண்ட மனமுடையவரும், பிரமனின் சிரமறுத்தவருமான சிவபெருமானின் இரண்டு திருவடிகளையும் வணங்கி வாழ்வாயாக! நீ அஞ்சவேண்டா.

சீர்காழி

சுற்றமு மக்களுந் தொக்கவத்
தக்கனைச் சாடியன்றே
உற்றமால் வரையுமை நங்கையைப்
பங்கமா வுள்கினானோர்
குற்றமில்லடியவர் குழுமிய
வீதிசூழ் கொச்சைமேவி
நற்றவ மருள்புரி நம்பனை
நம்பிடாய் நாளுநெஞ்சே #961

நெஞ்சமே! சிவனை நினையாது செய்த தக்கன் வேள்வியைத் தகர்த்து, அதற்குத் துணையாக நின்ற சுற்றத்தார்களையும், மற்றவர்களையும் தண்டித்து, தன் மனைவி தாட்சாயனி தக்கன் மகளான தோடம் நீங்க இமயமலை அரையன் மகளாதற்கும், தன் திருமேனியில் ஒரு பாகமாதற்கும் நினைத்தருளியவனும், ஒரு குற்றமில்லாத அடியவர்கள் குழுமிய வீதிகள் சூழ்ந்த திருக்கொச்சைவயம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்து, திரிகரணங்களும் ஒன்றிச் சிவவழிபாடு செய்பவர்கட்கு அதன் பயனை அளித்து அருள்புரிகின்றவனுமாகிய சிவபெருமானை எந்நாளும் நீ விரும்பி வாழ்வாயாக!

சீர்காழி

கொண்டலார் வந்திடக் கோலவார்
பொழில்களிற் கூடிமந்தி
கண்டவார் கழைபிடித் தேறிமா
முகிறனைக் கதுவுகொச்சை
அண்டவா னவர்களு மமரரு
முனிவரும் பணியவாலம்
உண்டமா கண்டனார் தம்மையே
யுள்குநீ யஞ்சனெஞ்சே #962

நெஞ்சமே! மேகங்கள் வந்தவுடன், அழகிய நீண்ட சோலைகளிலுள்ள குரங்குகள் கூடி, தங்கட்கு முன்னே காணப்படுகின்ற மூங்கில்களைப் பற்றி ஏறி, அந்தக் கரிய மேகங்களைக் கையால் பிடிக்கின்ற திருக்கொச்சைவயம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற, அண்ட வானவர்களும், தேவர்களும், முனிவர்களும் வந்து பணிய, ஆலகால விடத்தினை உண்டு அவர்களைக் காத்த பெருமையையுடைய கழுத்தினையுடைய சிவபெருமானையே எப்பொழுதும் நீ நினைத்துத் தியானிப்பாயாக! நீ அஞ்சல் வேண்டா.

சீர்காழி

அடலெயிற் றரக்கனார் நெருக்கிமா
மலையெடுத் தார்த்தவாய்கள்
உடல்கெடத் திருவிர லூன்றினா
ருறைவிட மொளிகொள்வெள்ளி
மடலிடைப் பவளமு முத்தமுந்
தொத்துவண் புன்னைமாடே
பெடையொடுங் குருகினம் பெருகுதண்
கொச்சையே பேணுநெஞ்சே #963

நெஞ்சமே! வலிமை வாய்ந்த பற்களையுடைய அரக்கனான இராவணன் பெரிய திருக்கயிலைமலையைப் பெயர்த்தெடுக்க, ஆரவாரித்த அவனது வாய்களுடன் உடலும் நெரியும்படி தன் காற்பெருவிரலை ஊன்றினவனான சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற, ஒளிபொருந்திய வெள்ளியைப் போன்ற இதழ்களையுடைய பூக்களின் இடையிடையே பவளம் போன்ற செந்நிறப் பூக்களும், முத்துக்களைப் போன்ற அரும்புகளும், அமைந்த பூங்கொத்துக்களையுடைய செழித்த புன்னைமரங்களின் பக்கத்தில் பறவை இனங்கள் தங்கள் பெடைகளோடு வளர்தலையுடைய திருக்கொச்சைவயம் என்னும் திருத்தலத்தை நீ போற்றி வழிபடுவாயாக!

சீர்காழி

அரவினிற் றுயிறரு மரியுநற்
பிரமனு மன்றயர்ந்து
குரைகழ றிருமுடி யளவிட
வரியவர் கொங்குசெம்பொன்
விரிபொழி லிடைமிகு மலைமகண்
மகிழ்தர வீற்றிருந்த
கரியநன் மிடறுடைக் கடவுளார்
கொச்சையே கருதுநெஞ்சே **#964**

நெஞ்சமே! பாம்புப் படுக்கையில் துயிலும் திருமாலும், நல்ல பிரமதேவனும் சோர்வடையும்படி, ஒலிக்கின்ற வீரக்கழல்களை அணிந்த திருவடிகளையும், திருமுடியையும் அளவிடுதற்கு அரியவராய், பூக்களிலுள்ள மகரந்தமானது செம்பொன்துகளைப்போல உதிர்கின்ற சோலைகளுக்கு இடையில், மலைமகளான உமாதேவியார் மகிழும்படி, கரிய, அழகிய கழுத்தினை யுடையவராய்ச் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருக் கொச்சைவயம் என்னும் இத்திருத்தலத்தை நீ எப்பொழுதும் தியானிப்பாயாக!

சீர்காழி

கடுமலி யுடலுடை யமணருங்
கஞ்சியுண் சாக்கியரும்
இடுமற வுரைதனை யிகழ்பவர்
கருதுநம் மீசர்வானோர்
நடுவுறை நம்பனை நான்மறை
யவர்பணிந் தேத்தஞாலம்
உடையவன் கொச்சையே யுள்கிவாழ்
நெஞ்சமே யஞ்சனீயே **#965**

நெஞ்சமே! கடுக்காய்களைத் தின்னும் சமணர்களும், கஞ்சி உணவை உண்கின்ற புத்தர்களும், சொல்லுகின்ற சமயபோதனைகளை இகழ்பவர்களாகிய அடியவர்கள் நினைந்து போற்றும் நம் இறைவனும், தேவர்கள் தன்னைச் சுற்றி நின்று தொழ அவர்கள் நடுவுள் வீற்றிருந்தருளும் நண்பனும், நான்கு வேதங்களையும் நன்கு கற்ற அந்தணர்கள் பணிந்து போற்ற இந்த உலகம் முழுவதையும் தனக்கு உடைமைப் பொருளாக உடையவனுமாகிய சிவபெருமானது திருக்கொச்சைவயம் என்னும் திருத்தலத்தைத் தியானித்து நல்வாழ்வு வாழ்வாயாக! நீ அஞ்ச வேண்டா.

<u>சீர்காழி</u>

காய்ந்துதங் காலினாற் காலனைச்
செற்றவர் கடிகொள்கொச்சை
ஆய்ந்துகொண் டிடமென விருந்தநல்
லடிகளை யாதரித்தே
ஏய்ந்ததொல் புகழ்மிகு மெழின்மறை
ஞானசம் பந்தன்சொன்ன
வாய்ந்தவிம் மாலைகள் வல்லவர்
நல்லர்வா னுலகின்மேலே **#966**

தம் அடியவனான மார்க்கண்டேயனின் உயிரைக் கவரவந்த காலனைக் கோபித்துக் காலால் உதைத்து மாய்த்தவரும், காவலையுடைய திருக்கொச்சைவயம் என்னும் திருத்தலத்தினைத் தாம் வீற்றிருந்தருளுதற்கு ஏற்ற இடமென ஆராய்ந்து எழுந்தருளியுள்ள நம் தலைவருமான சிவபெருமானிடம் பக்தி கொண்டு, பொருந்திய தொன்மையான புகழ்மிகுந்த, அழகிய, மறைவல்ல ஞானசம்பந்தன் போற்றி அருளிய சிறப்புடைய இத்தமிழ் மாலைகளை ஓதவல்லவர்கள் நன்மைதரும் வானுலகில் மேன்மையுடன் வீற்றிருப்பர்.

திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்

திருத்துருத்தி

திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்,
பண் - சாதாரி

ஓங்கிமே லுழிதரு மொலிபுனற்
கங்கையை யொருசடைமேல்
தாங்கினா ரிடுபலி தலைகல
னாக்கொண்ட தம்மடிகள்
பாங்கினா லுமையொடு பகலிடம்
புகலிடம் பைம்பொழில்சூழ்
வீங்குநீர்த் துருத்தியா ரிரவிடத்
துறைவர்வேள் விக்குடியே #967

சிவபெருமான், மேன்மேலும் ஓங்கி எழுந்து ஓசையுடன் பெருக்கெடுத்து வந்த கங்கையாற்றின் வெள்ளத்தை ஒரு சடையில் தாங்கியவர். இடுகின்ற பிச்சையை ஏற்கத் தலை யோட்டையே பாத்திரமாகக் கொண்ட தலைவர். முறைப்படி, பகற்காலத்தில் தங்குமிடமாகப் பசுமையான சோலைகள் சூழ்ந்ததும், நீர்ச்செழிப்பு மிக்கதுமான திருத்துருத்தி என்னும் திருத்தலத்தை உடையவர். அப்பெருமானே இரவில் திருவேள்விக்குடிஎன்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருத்துருத்தி

தூறுசேர் சுடலையிற் சுடரெரி
யாடுவர் துளங்கொளிசேர்
நீறுசாந் தெனவுகந் தணிவர்வெண்
பிறைபுல்கு சடைமுடியார்
நாறுசாந் திளமுலை யரிவையோ
டொருபக லமர்ந்தபிரான்
வீறுசேர் துருத்தியா ரிரவிடத்
துறைவர்வேள் விக்குடியே #968

சிவபெருமான், புதர்ச்செடிகள் நிறைந்த சுடுகாட்டில் ஒளிவிடும் நெருப்பேந்தி ஆடுபவர். விளங்கும் ஒளியுடைய திருநீற்றினைக் கலவைச் சந்தனம் போல மகிழ்ச்சியுடன் அணிந்து கொள்பவர். வெண்மையான பிறைச்சந்திரனை அணிந்த சடைமுடி உடையவர். மணம் கமழும் சந்தனக்குழம்பை அணிந்த இளமையான கொங்கைகளையுடைய உமாதேவியோடு பொருள் வளமிக்க

திருத்துருத்தியில் பகற்காலத்தில் தங்கியிருப்பவர். இரவில் திருவேள்விக்குடியில் வீற்றிருந்தருள்பவர்.

திருத்துருத்தி

மழைவள ரிளமதி மலரொடு
தலைபுல்கு வார்சடைமேல்
கழைவளர் புனல்புகக் கண்டவெங்
கண்ணுதற் கபாலியார்தாம்
இழைவளர் துகிலல்கு லரிவையோ
டொருபக லமர்ந்தபிரான்
விழைவளர் துருத்தியா ரிரவிடத்
துறைவர்வேள் விக்குடியே **#969**

குளிர்ச்சியான இளம்பிறையும், கொன்றை, ஊமத்தை போன்ற மலர்களோடு ஒரு வெண்தலையும் பொருந்திய நீண்ட சடையின் மீது, கரும்பு முதலிய பயிர்களை வளர்க்கும் கங்கை நதியினைத் தங்கச் செய்த எம் கண்ணுதல் கடவுளாகிய சிவபெருமான் பிரம கபாலம் ஏந்தியவர். அவர் இழைகளால் நெய்யப்பட்ட ஆடையணிந்த அல்குலையுடைய உமாதேவியோடு பகலில், மேன்மேலும் தரிசிக்க ஆசைதரும் திருத்துருத்தியில் வீற்றிருந்தருளுவார். அவரே இரவில் திருவேள்விக்குடியில் வீற்றிருந்தருளுவார்.

திருத்துருத்தி

கரும்பன வரிசிலைப் பெருந்தகைக்
காமனைக் கவினழித்த
சுரும்பொடு தேன்மல்கு தூமலர்க்
கொன்றையஞ் சுடர்ச்சடையார்
அரும்பன வனமுலை யரிவையொ
டொருபக லமர்ந்தபிரான்
விரும்பிடம் துருத்தியா ரிரவிடத்
துறைவர்வேள் விக்குடியே **#970**

இறைவன் கரும்பு வில்லையுடைய பெருந்தகையாகிய மன்மதனின் அழகிய உடலை அழித்தவர். வண்டுகள் மொய்க்கும், தேன் மணம் கமழும் தூய கொன்றை மலரை அழகிய ஒளிமிக்க சடைமுடியில் அணிந்தவர். அவர் தாமரை மொட்டுப் போன்று அழகிய கொங்கைகளை உடைய உமா தேவியோடு பகலில் விரும்பி வீற்றிருந்தருளும் இடம் திருத்துருத்தி என்னும் திருத்தலமாகும். அவரே இரவில் வீற்றிருந்தருளுவது திருவேள்விக்குடி என்னும் திருத்தலமாகும்.

திருத்துருத்தி

வளங்கிளர் மதியமும் பொன்மலர்க்
கொன்றையும் வாளரவும்
களங்கொளச் சடையிடை வைத்தளங்
கண்ணுதற் கபாலியார்தாம்
துளங்குநூன் மார்பின ரரிவையொ
டொருபக லமர்ந்தபிரான்
விளங்குநீர்த் துருத்தியா ரிரவிடத்
துறைவர்வேள் விக்குடியே **#971**

அழகு மிளிரும் சந்திரனும், பொன் போன்ற கொன்றைமலரும், வாள் போன்று ஒளிரும் பாம்பும் இருக்குமிடமாகச் சடைமுடியில் வைத்தருளிய, நெற்றிக்கண்ணையுடைய எங்கள் சிவபெருமான் பிரமகபாலம் ஏந்தியவர். அசைகின்ற முப்புரி நூலணிந்த மார்பினர். அவர் உமாதேவியாரோடு பகலில் நீர்வளமிக்க திருத்துருத்தி என்னும் திருத்தலத்திலும், இரவில் திருவேள்விக்குடி என்னும் திருத்தலத்திலும் வீற்றிருந்தருளுவார்.

திருத்துருத்தி

பொறியுலா மடுபுலி யுரிவையர்
வரியராப் பூண்டிலங்கும்
நெறியுலாம் பலிகொளு நீர்மையர்
சீர்மையை நினைப்பரியார்
மறியுலாங் கையினர் மங்கையொ
டொருபக லமர்ந்தபிரான்
வெறியுலாந் துருத்தியா ரிரவிடத்
துறைவர்வேள் விக்குடியே **#972**

சிவபெருமான் வரிகளையுடைய கொல்லும் தன்மையுடைய புலித்தோலாடை அணிந்தவர். நெடிய பாம்பை ஆபரணமாகப் பூண்டவர். பிச்சை எடுப்பதை நெறியாகக் கொண்டதன்மையர். இத்தகைய எளிமை உடையவர் ஆயினும், எவராலும் நினைத்துப் பார்ப்பதற்கும் அரிய பெருமையுடையவர். மான்கன்று ஏந்திய கையினர். அத்தகைய பெருமான் உமா தேவியாரோடு பகலில் நறுமணம் கமழும் திருத்துருத்தி என்னும் திருத்தலத்திலும், இரவில் திருவேள்விக்குடி என்னும் திருத் தலத்திலும் வீற்றிருந்தருளுகின்றார்.

திருத்துருத்தி

புரிதரு சடையினர் புலியுரி

யரையினர் பொடியணிந்து
திரிதரு மியல்பினர் திரிபுர
மூன்றையுந் தீவளைத்தார்
வரிதரு வனமுலை மங்கையொ
டொருபக லமர்ந்தபிரான்
விரிதரு துருத்தியா ரிரவிடத்
துறைவர்வேள் விக்குடியே **#973**

சிவபெருமான் முறுக்குண்ட சடையினை உடையவர். புலியின் தோலை அரையில் உடுத்தவர். திருவெண்நீற்றை அணிந்து கொண்டு திரியும் இயல்பினர். திரியும் புரங்கள் மூன்றையும் தீயால் வளைவித்து எரித்தவர். சந்தனக் கீற்றுக்கள் எழுதப் பெற்ற அழகிய கொங்கைகளையுடைய உமாதேவியோடு பகலில் திருத் துருத்தி என்னும் திருத்தலத்திலும், இரவில் திருவேள்விக்குடி என்னும் திருத்தலத்திலும் வீற்றிருந்தருளுவார்.

<u>திருத்துருத்தி</u>

நீண்டிலங் கவிரொளி நெடுமுடி
யரக்கனிந் நீள்வரையைக்
கீண்டிடந் திடுவனென் றெழுந்தவ
னாள்வினை கீழ்ப்படுத்தார்
பூண்டநூன் மார்பின ரரிவையொ
டொருபக லமர்ந்தபிரான்
வேண்டிடந் துருத்தியா ரிரவிடத்
துறைவர்வேள் விக்குடியே **#974**

நெடுந்தூரம் விளங்கிப் பிரகாசிக்கும் இரத்தினங்கள் பதிக்கப்பட்ட பெரிய கிரீடத்தை அணிந்துள்ள இராவணன் “இப்பெரிய கயிலைமலையைப் பெயர்த்தெடுத்து அப் பாலிடுவேன்” என்று ஆணவத்துடன் எழுந்த அவனது முயற்சியை அழித்தருளியவர் சிவபெருமான். அவர் பூணூல் அணிந்த திருமார்பினர். அவர் உமாதேவியோடு பகலில், விரும்பி வீற்றிருந்தருளும் இடம் திருத்துருத்தி என்னும் திருத்தலமாகும். இரவில் திருவேள்விக்குடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுவார்.

<u>திருத்துருத்தி</u>

கரைகட லரவணைக் கடவுளுந்
தாமரை நான்முகனும்
குரைகழ லடிதொழக் கூரெரி
யெனநிறங் கொண்டபிரான்

வரைகெழு மகளொடும் பகலிடம்
புகலிடம் வண்பொழில்சூழ்
விரைகமழ் துருத்தியா ரிரவிடத்
துறைவர்வேள் விக்குடியே #975

ஒலிக்கின்ற கடலில் பாம்புப் படுக்கையில் துயில்கொள்ளும் திருமாலும், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும், ஒலிக்கும் வீரக்கழல்களை அணிந்த தம் திருவடிகளை, செருக்கழிந்து தொழுமாறு ஓங்கிய நெருப்பு வடிவாய் நின்றவர் சிவபெருமான். அவர் மலைமகளான உமாதேவியோடு பகலில் வீற்றிருந்தருளும் இடம் வளமை வாய்ந்த சோலைகள் சூழ்ந்த நறுமணம் கமழும் திருத்துருத்தி என்னும் திருத்தலமாகும். இரவில் திருவேள்விக்குடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருத்துருத்தி

அயமுக வெயினிலை யமணருங்
குண்டருஞ் சாக்கியரும்
நயமுக வுரையினர் நகுவன
சரிதைகள் செய்துழல்வார்
கயலன வரிநெடுங் கண்ணியொ
டொருபக லமர்ந்தபிரான்
வியனகர்த் துருத்தியா ரிரவிடத்
துறைவர்வேள் விக்குடியே #976

பழுக்கக் காய்ச்சிய இரும்பு போல் சுடும் வெயிலில் தவமென்று நிற்றலையுடைய சமணர்களும், குண்டர்களாகிய புத்தர்களும், இன்முகத்தோடு நயமாகப் பேசி, நகைச்சுவை ததும்பும் செயல்களைச் செய்து திரிபவர்கள். ஆதலால் அவர் உரைகளைக் கொள்ளாதீர். கயல்மீன் போன்ற, அழகிய, வரிகளையுடைய நீண்ட கண்களையுடைய உமாதேவியோடு பகலில் அகன்ற நகராகிய திருத் துருத்தியில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் இரவில் திருவேள்விக் குடியில் வீற்றிருந்தருளுகின்றார். அவரை வழிபட்ட உய்வீர்களாக.

திருத்துருத்தி

விண்ணுலாம் விரிபொழில் விரைமணற்
றுருத்திவேள் விக்குடியும்
ஒண்ணுலாம் மொலிகழலாடுவா
ரரிவையொ டுறைபதியை
நண்ணுலாம் புகலியு ளருமறை
ஞானசம் பந்தன்சொன்ன

பண்ணுலா மருந்தமிழ் பாடுவா
ராடுவார் பழியிலரே #977

ஒளிவிடும், ஒலிக்கின்ற கழல்கள் அணிந்து திருநடனம் செய்யும் சிவபெருமான் உமாதேவியோடு வீற்றிருந்தருளுகின்ற, ஆகாயம்வரை உயர்ந்துள்ள விரிந்த சோலைகள் நிறைந்த, மணம் பொருந்திய மணற் பரப்பையுடைய திருத்துருத்தி, திருவேள்விக்குடி ஆகிய திருத்தலங்களைப் போற்றி அனைவரும் வழிபடும் திருப்புகலியில் அவதரித்த அருமறைவல்ல ஞானசம்பந்தன் பாடிய பண்ணோடு கூடிய இந்த அரிய தமிழ்ப்பதிகத்தைப் பாடுபவர்களும், பரவசமடைந்து ஆடுபவர்களும் எவ்விதமான பழியும், பாவமும் இல்லாதவர்களாவர்.

திருவடகுரங்காடுதுறை

திருவடகுரங்காடுதுறை

திருவடகுரங்காடுதுறை,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : குலைவணங்குநாதர்.
தேவியார் : சடைமுடியம்மை.

கோங்கமே குரவமே கொழுமலர்ப் புன்னையே கொகுடிமுல்லை
வேங்கையே ஞாழலே விம்முபா
திரிகளே விரவியெங்கும்
ஓங்குமா காவிரி வடகரை
யடைகுரங் காடுதுறை
வீங்குநீர்ச் சடைமுடி யடிகளா
ரிடமென விரும்பினாரே **#978**

கோங்கு, குரவம், செழித்த மலர்களைத் தரும் புன்னை, கொகுடி, முல்லை, வேங்கை, புலிநகக் கொன்றை, பாதிரி ஆகிய மரங்களை அடித்துவரும் காவிரியின் வடகரையிலுள்ள குரங்காடுதுறை என்னும் திருத்தலத்தைச் சிவபெருமான் தமது இருப்பிடமாகக் கொண்டு விரும்பி வீற்றிருந்தருளுபவர்.

திருவடகுரங்காடுதுறை

மந்தமா யிழிமதக் களிற்றிள
மருப்பொடு பொருப்பினல்ல
சந்தமா ரகிலொடு சாதியின்
பலங்களுந் தகையமோதி
உந்துமா காவிரி வடகரை
யடைகுரங் காடுதுறை
எந்தையா ரிணையடி யிமையவர்
தொழுதெழு மியல்பினாரே **#979**

சிறு அளவில் மதம் சொரியும் யானைக் கன்றுகளின் தந்தங்களையும், நல்ல சந்தனம், அகில், சாதிக்காய் ஆகிய பயன்தரக்கூடிய மரங்களையும் விழும்படி மோதி, அலைகளால் அடித்துவரும் காவிரியின் வடகரையிலுள்ள குரங்காடுதுறை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் எந்தையாகிய சிவபெருமானின் திருவடிகளைத் தேவர்கள் தொழுது எழும் தன்மையர்.

திருவடகுரங்காடுதுறை

முத்துமா மணியொடு முழைவள
ராரமு முகந்துநுந்தி
எத்துமா காவிரி வடகரை
யடைகுரங் காடுதுறை
மத்தமா மலரொடு மதிபொதி
சடைமுடி யடிகடம்மேல்
சித்தமா மடியவர் சிவகதி
பெறுவது திண்ணமன்றே **#980**

முத்து, மணி, குகைகளின் அருகில் வளரும் சந்தனமரம் இவற்றை வாரி, தள்ளி மோதும் காவிரியின் வடகரையில் உள்ள குரங்காடுதுறை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும், பெருமை மிகுந்த பொன்னூமத்த மலரோடு, சந்திரனையும் அணிந்து உள்ள சடைமுடி உடைய தலைவரான சிவபெருமானைச் சித்தத்தால் வழிபடும் அடியவர்கள் சிவகதி பெறுவது உறுதி.

திருவடகுரங்காடுதுறை

கறியுமா மிளகொடு கதலியின்
பலங்களுங் கலந்துநுந்தி
எறியுமா காவிரி வடகரை
யடைகுரங் காடுதுறை
மறியுலாங் கையினர் மலரடி
தொழுதெழ மருவுமுள்ளக்
குறியினா ரவர்மிகக் கூடுவார்
நீடுவா னுலகினூடே **#981**

உறைக்கும் மிளகுச் செடிகளோடு, வாழையும் கலந்து தள்ளி வரும் காவிரியின் வடகரையில் விளங்கும் குரங்காடுதுறை என்னும் திருத்தலத்தில் மான்கன்றை ஏந்திய கையையுடைய சிவபெருமானின் திருவடிகளைத் தொழுது, உள்ளம் உருகப் போற்றுபவர்கள் வானுலகடைந்து மேன்மையுடன் மகிழ்ந்திருப்பர்.

திருவடகுரங்காடுதுறை

கோடிடைச் சொரிந்ததே னதனொடுங்
கொண்டல்வாய் விண்டமுன்னீர்
காடுடைப் பீலியுங் கடறுடைப்
பண்டமுங் கலந்துநுந்தி
ஓடுடைக் காவிரி வடகரை

யடைகுரங் காடுதுறை
பீடுடைச் சடைமுடி யடிகளா
ரிடமெனப் பேணினாரே **#982**

மரக்கிளைகளில் சொரிந்த தேனோடு, மேகம் பெய்த முன்னீரும் கலக்கக் காட்டில் வசிக்கும் மயிலின் பீலியும், மலைச்சாரலில் விளையும் பண்டங்களும் உந்தித் தள்ளி ஓடிவரும் காவிரியின் வடகரையிலுள்ள குரங்காடுதுறை என்னும் திருத்தலத்தை, பெருமையுடைய சடைமுடியுடைய தலைவரான சிவபெருமான் விரும்பி வீற்றிருக்கும் இடமாகக் கொண்டுள்ளார்.

திருவடகுரங்காடுதுறை

கோலமா மலரொடு தூபமுஞ்
சாந்தமுங் கொண்டுபோற்றி
வாலியார் வழிபடப் பொருந்தினார்
திருந்துமாங் கனிகளுந்தி
ஆலுமா காவிரி வடகரை
யடைகுரங் காடுதுறை
நீலமா மணிமிடற் றடிகளை
நினையவல் வினைகள்வீடே **#983**

அழகிய நறுமலர்களுடன், தூபமும், சந்தனமும் கொண்டு போற்றி வாலியார் வழிபட்டதும், இனிய மாங்கனிகளை அடித்து அசைந்துவரும் காவிரியின் வடகரையில் உள்ளதுமான குரங்காடுதுறை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற நீலமணி போன்ற கண்டத்தையுடைய சிவபெருமானை நினைத்து போற்ற வல்லவர்களின் வலிய தீவினைகள் யாவும் தீரும்.

திருவடகுரங்காடுதுறை

நீலமா மணிநிறத் தரக்கனை
யிருபது கரத்தொடொல்க
வாலினாற் கட்டிய வாலியார்
வழிபட மன்னுகோயில்
ஏலமோ டிலையில வங்கமே
யிஞ்சியே மஞ்சளுந்தி
ஆலியா வருபுனல் வடகரை
யடைகுரங் காடுதுறையே **#984**

நீலமணிபோன்ற கருநிற அரக்கனான இராவணனை, இருபது கரத்தொடும் வாலினாற் இறுகக் கட்டிய வாலியார் வழிபடப் பெருமைபெற்ற கோயில், ஏலம், பச்சிலை, இலவங்கம், இஞ்சி, மஞ்சள்

இவற்றை உந்தி, ஒலித்து, ஓடிவரும் காவிரியின் வடகரையிலுள்ள குரங்காடுதுறை என்னும் திருத்தலமாகும்.

திருவடகுரங்காடுதுறை

பொருந்திறற் பெருங்கைமா வுரித்துமை
யஞ்சவே யொருங்குநோக்கிப்
பெருந்திறத் தநங்கனை யநங்கமா
விழித்ததும் பெருமைபோலும்
வருந்திறற் காவிரி வடகரை
யடைகுரங் காடுதுறை
அருந்திறத் திருவரை யல்லல்கண்
டோங்கிய வடிகளாரே **#985**

போர்செய்யும் தன்மையுடைய பெரிய துதிக்கையுடைய யானையின் தோலை, உமாதேவி அஞ்சுமாறு உரித்து வியப்படையும்படி செய்தவர் சிவபெருமான். அவர் பெருந்திறமை மிக்க மன்மதனின் உடல் அழியுமாறு நெற்றிக்கண்ணைத் திறந்து விழித்த பெருமையுடையவர். பலவிதப் பொருட்களை அடித்துவரும் காவிரியின் வடகரையிலுள்ள குரங்காடுதுறை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் அப்பெருமான், பிரமனும், திருமாலும் தம்மைத் தேடித் துன்புறச்செய்து நெருப்பு மலையாய் ஓங்கி ஒளிர்ந்த தலைவராவார்.

திருவடகுரங்காடுதுறை

கட்டமண் டேருங் கடுக்கடின்
கழுக்களுங் கசிவொன்றில்லாப்
பிட்டர்தம் மறவுரை கொள்ளலும்
பெருவரைப் பண்டமுந்தி
எட்டுமா காவிரி வடகரை
யடைகுரங் காடுதுறைச்
சிட்டனா ரடிதொழச் சிவகதி
பெறுவது திண்ணமாமே **#986**

கடுக்காய்களைத் தின்கின்ற கழுக்களான கட்டுப்பாட்டையுடைய சமணர்களும், புத்தர்களும், மன இரக்கமின்றிக் கூறும் அறவுரைகளை கொள்ளாதீர். பெரிய மலையிலுள்ள பொருள்களைத் தள்ளிப் பாயும் காவிரியின் வடகரையிலுள்ள குரங்காடுதுறை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் சீலமிக்க சிவபெருமானின் திருவடிகளைத் தொழுபவர்கள் சிவகதி பெறுவது உறுதியாகும்.

திருவடகுரங்காடுதுறை

தாழிளங் காவிரி வடகரை
யடைகுரங்காடுதுறைப்
போழிள மதிபொதி புரிதரு
சடைமுடிப் புண்ணியனைக்
காழியா னருமறை ஞானசம்
பந்தன கருதுபாடல்
கோழையா வழைப்பினுங் கூடுவார்
நீடுவா னுலகினூடே **#987**

பள்ளம் நோக்கி ஓடிப்பாயும் காவிரியின் வட கரையிலுள்ள குரங்காடுதுறை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும், பிறைச்சந்திரனை அணிந்த முறுக்குண்ட சடைமுடியுடைய புண்ணிய மூர்த்தியான சிவபெருமானைப் போற்றி, சீகாழியில் அவதரித்த அருமறைவல்ல ஞானசம்பந்தன் அருளிய இப்பாடல்களை அடியவர்கள் கோழைமிடறோடு பாடினாலும் என்றும் அழியாத முக்தியுலகை அடைவர்.

திருநெல்வேலி

திருநெல்வேலி

திருநெல்வேலி,
பண் - சாதாரி

மருந்தவை மந்திர மறுமைநன்
னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே
சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன்
சொரிதரத் துன்றுபைம்பூம்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வேலி
யுறை செல்வர்தாமே **#988** ★★★★★

நல்ல நெஞ்சமே! இறைவனின் திருநாமத்தைச் சிந்தனை செய்வாயாக. அத்திருநாமமானது மருந்தாக இருந்து நோயைத் தீர்க்கும். மந்திரமாக விளங்கி அச்சத்தைப் போக்கும். மறுமையில் நற்கதி தரும். மற்றும் உயிர்கள் அடைதற்கேற்ற பயன்கள் யாவும் தரும். போக்கமுடியாத துன்பத்தைப் போக்கும். அத்திரு நாமத்திற்குரிய இறைவன் குளிர்ச்சிமிக்க சோலையில் கொன்றை மரங்கள் பொன்னிறப் பூக்களை உதிர்க்க, நெருங்கியுள்ள, பசுமையான அழகிய செருந்தி மரங்கள் செம்பொன் போன்ற மலர்களைப் பூக்கின்ற திருநெல்வேலியில் வீற்றிருந்தருள்கிற அருட்செல்வர் ஆவார்.

திருநெல்வேலி

என்றுமோ ரியல்பின ரெனநினை
வரியவ ரேறதேறிச்
சென்றுதாஞ் செடிச்சியர் மனைதொறும்
பலிகொளு மியல்பதுவே
துன்றுதண் பொழினுழைந் தெழுவிய
கேதகைப் போதளைந்து
தென்றல்வந் துலவிய திருநெல்வேலி
யுறை செல்வர்தாமே **#989**

நெருங்கிய குளிர்ந்த சோலையில் நுழைந்து, செழித்து வளர்ந்துள்ள தாழம்பூவில் படிந்து தென்றல் காற்று வந்து வீசுகின்ற திருநெல்வேலியில் வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமான் எப்போதும் ஒரே தன்மையுடையவர் என்று நினைப்பதற்கு முடியாதவர் ஆவர். அவர் இடபவாகனத்திலேறிச் செடிச்சியர் போன்ற தாழ்குலத்தோர்

மனைதோறும் சென்று பிச்சை ஏற்கும் இயல்பும் உடையவர். அவரை வழிபடுவீர்களாக.

திருநெல்வேலி

பொறிகிள ரரவமும் போழிள
மதியமுங்கங் கையென்னும்
நெறிபடு குழலியைச் சடைமிசைச்
சுலவிவெண் ணீறுபூசிக்
கிறிபட நடந்துநற் கிளிமொழி
யவர்மனங் கவர்வர்போலும்
செறிபொழி றழுவிய திருநெல்வேலி
யுறை செல்வர்தாமே **#990**

புள்ளிகளையுடைய பாம்பையும், ஒரு கூறாகிய இளம்பிறைச் சந்திரனையும் கங்கை என்ற சுருண்ட கூந்தலை யுடையவனையும் சடைமீது சுற்றி அணிந்து, வெண்மையான திருநீற்றைப் பூசி, பிறர் மயங்கும் வண்ணம் நடந்து, நல்ல கிளி போலும் இனிமையான சொற்களைப் பேசும் தாருகாவனத்து முனிவர்களின் பத்தினிகளின் மனத்தை வசப்படுத்தும் சிவபெருமான், நெருங்கிய சோலைகள் சூழ்ந்த திருநெல்வேலியில் வீற்றிருந்தருளும் அருட்செல்வர் ஆவார். அவரை வழிபடுவீர்களாக.

திருநெல்வேலி

காண்டகு மலைமகள் கதிர்நிலா
முறுவல்செய் தருளவேயும்
பூண்டநா கம்புறங் காடரங்
காநட மாடல்பேணி
ஈண்டுமா மாடங்கண் மாளிகை
மீதெழு கொடிமதியம்
தீண்டிவந் துலவிய திருநெல்வேலி
யுறை செல்வர்தாமே **#991**

நெருங்கிய பெரிய மாடங்களிலும், மாளிகைகளிலும், மேலே கட்டப்பட்ட கொடிகள் சந்திர மண்டலத்தைத் தொட்டு அசைகின்ற திருநெல்வேலியில் வீற்றிருந்தருளுகின்ற அருட்செல்வரான சிவபெருமான், தரிசிப்பதற்கு இனிய மலை மகளான உமாதேவி ஒளிவிடும் பற்களால் புன்முறுவல் செய்து அருகிலிருந்தருளவும், பாம்பை ஆபரணமாக அணிந்து ஊருக்குப் புறம்பேயுள்ள சுடுகாட்டை அரங்கமாகக் கொண்டு நடனமாடுதலை விரும்புபவர். அவரை வழிபடுவீர்களாக.

திருநெல்வேலி

ஏனைவெண் கொம்பொடு மெழில்திகழ்
மத்தமு மிளவரவும்
கூனல்வெண் பிறைதவழ் சடையினர்
கொல்புலித் தோலுடையார்
ஆனினல் ஐந்துகந் தாடுவர்
பாடுவ ரருமறைகள்
தேனில்வண் டமர்பொழிற் றிருநெல்வேலி
யுறைசெல்வர் தாமே **#992**

தேன்பருக வண்டுகள் அமர்கின்ற பூக்கள் நிறைந்த சோலைகளையுடைய திருநெல்வேலியில் வீற்றிருந்தருளும் அருட்செல்வரான சிவபெருமான் பன்றியின் கொம்புடன், அழகிய ஊமத்த மலரையும், இளம் பாம்பையும், வளைந்த வெண்ணிறப் பிறைச்சந்திரனையும், அணிந்த சடைமுடி உடையவர். கொல்லும் தன்மையுடைய புலித்தோலை ஆடையாக உடுத்தவர். கொல்லும் தன்மையுடைய புலித்தோலை ஆடையாக உடுத்தவர். பசுவிலிருந்து பெறப்படும் பால், தயிர், நெய், கோசலம், கோமயம், ஆகிய பஞ்சகவ்வியத்தால் திருமுழுக்காட்டப்படுபவர். அரிய வேதங்களை அருளியவர்.

திருநெல்வேலி

வெடிதரு தலையினர் வேனல்வெள்
ளேற்றினர் விரிசடையர்
பொடியணி மார்பினர் புலியத
ளாடையர் பொங்கரவர்
வடிவுடை மங்கையோர் பங்கினர்
மாதரை மையல்செய்வார்
செடிபடு பொழிலணி திருநெல்வேலி
யுறை செல்வர் தாமே **#993**

புதர்களையுடைய சோலைகள் சூழ்ந்த அழகிய திருநெல்வேலியில் வீற்றிருந்தருளும் அருட்செல்வரான சிவபெருமான், மண்டையோட்டை மாலையாக உடையவர். சினமிகு வெண்ணிற இடபத்தை வாகனமாக உடையவர். விரிந்த சடையுடையவர். திருவெண்ணீறு அணிந்த மார்பினர். புலித்தோலாடை அணிந்தவர். கோபம் பொங்கும் பாம்பை அணிந்தவர், அழகிய உமாதேவியைத் தம் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டுள்ளவர். தாருகாவனத்து முனிவர்களின் பத்தினிகளை மயங்கும்படி செய்தவர். அவரை வழிபடுவீர்களாக.

திருநெல்வேலி

அக்குலா மரையினர் திரையுலா
முடியின ரடிகளன்று
தக்கனார் வேள்வியைச் சாடிய
சதுரனார் கதிர்கொள்செம்மை
புக்கதோர் புரிவினர் வரிதரு
வண்டுபண் முரலுஞ்சோலைத்
திக்கெலாம் புகழுறுந் திருநெல்வேலி
யுறை செல்வர் தாமே **#994**

வரிகளையுடைய வண்டுகள் பண்ணிசைக்கின்ற சோலைகளையுடைய, எல்லாத் திசைகளிலும் புகழ் பரவிய திரு நெல்வேலியில் வீற்றிருந்தருளுகின்ற அருட்செல்வராகிய சிவபெருமான், சங்குமணிகளைக் கட்டிவிளங்கும் இடையினையுடையவர். அலைகளையுடைய கங்கையைத் தாங்கிய சடைமுடியை உடைய தலைவர். அவரை மதியாது தக்கன் செய்த யாகத்தை அழித்த திறமையையுடையவர். செவ்வொளி படரும் சடையினர். அவரை வழிபடுவீர்களாக.

திருநெல்வேலி

முந்திமா விலங்கலன் றெடுத்தவன்
முடிகடோ ணெரிதரவே
உந்திமா மலரடி யொருவிர
லுகிர்நுதி யாலடர்த்தார்
கந்தமார் தருபொழின் மந்திகள்
பாய்தர மதுத்திவலை
சிந்துபூந் துறைகமழ் திருநெல்வேலி
யுறை செல்வர் தாமே **#995**

நறுமணம் கமழும் சோலைகளில் பெண் குரங்குகள் தாவுதலால் தேன்துளிகள் சிந்துகின்ற, பூக்களைக் கொண்ட நீர்த் துறைகளை உடைய திருநெல்வேலியில் வீற்றிருந்தருளும் அருட்செல்வராகிய சிவபெருமான், பெருமை மிகுந்த கயிலை மலையை அந்நாளில் பெயர்ந்தெடுத்த இராவணனின் தலைகளும், தோள்களும் நெரியும் வண்ணம், சிறந்த மலர் போன்ற திருவடியின் ஒரு விரல் நகநுனியை ஊன்றி வருத்தினார். அவரை வழிபடுவீர்களாக.

திருநெல்வேலி

பைங்கண்வா ளரவணை யவனொடு

பனிமல ரோனுங்காணா
தங்கணா வருளென வவரவர்
முறைமுறை யிறைஞ்சநின்றார்
சங்கநான் மறையவர் நிறைதர
வரிவைய ராடல்பேணத்
திங்கணாள் விழமல்கு திருநெல்வேலி
யுறை செல்வர் தாமே **#996**
பசுமையான, வாள்போன்ற ஒளிபொருந்திய கூரிய கண்களையுடைய ஆதிசேடனாகிய பாம்புப் படுக்கையில் பள்ளிகொள்ளும் திருமாலுடன், குளிர்ந்த தாமரைப்பூவில் வீற்றிருக்கின்ற பிரமனும் முழுமுதற் பொருளான இறைவனைக் காணமுடியாமல், அழகிய கண்களையுடைய பெருமானே அருள்புரிக என்று அவரவர் தாம்தாம் அறிந்த முறையில் வணங்கும் வண்ணம் விளங்கும் சிவபெருமானே, அந்தணர்கள் ஒன்றுகூடி நால் வேதங்களைப் பாடவும், பெண்கள் நடனமாடவும், மாத விழாக்களும், நாள் விழாக்களும் நிறைந்துள்ள திருநெல்வேலியில் வீற்றிருந்தருளும் அருட்செல்வராவார். அவரை வழிபடுவீர்களாக.

திருநெல்வேலி

துவருறு விரிதுகி லாடையர்
வேடமில் சமணரென்னும்
அவருறு சிறுசொலை யவமென
நினையுமெம் மண்ணலார்தாம்
கவருறு கொடிமல்கு மாளிகைச்
சூளிகை மயில்களாலத்
திவருறு மதிதவழ் திருநெல்வேலி
யுறை செல்வர் தாமே **#997**
மருதந்துவரில் தோய்ந்த மஞ்சட் காவிஆடை அணியும் புத்தர்களும், வேடநெறி நில்லாத சமணர்களும் கூறுகின்ற புன்மொழிகளைப் பயனற்றன என்று நினையுங்கள். எம் தலைவராகிய சிவபெருமான், கண்டார் மனங்களைக் கவர்கின்ற, கொடி விளங்கும் மாளிகையின் நிலா முற்றத்தில் மயில்கள் நடமாட, அதனைக் காணத் தேவர்களும் வருகின்ற, சந்திரன் தவழ்கின்ற திருநெல்வேலியில் வீற்றிருந்தருளும் அருட்செல்வம் ஆவார். அவரை வழிபடுங்கள்.

திருநெல்வேலி

பெருந்தண்மா மலர்மிசை யயனவ
னனையவர் பேணுகல்வித்
திருந்துமா மறையவர் திருநெல்வேலி

யுறை செல்வர்தம்மைப்
பொருந்துநீர்த் தடமல்கு புகலியுண்
ஞானசம் பந்தன்சொன்ன
அருந்தமிழ் மாலைகள் பாடியாடக்
கெடு மருவினையே **#998**
பெரிய, குளிர்ந்த, சிறந்த தாமரைப்பூவில் வீற்றிருக்கும் பிரமனைப்
போன்றவர்களான தாம் விரும்பும் கல்வியினால் மனம் பண்பட்ட,
சிறந்த வேதங்களை உணர்ந்த அந்தணர்களை உடைய
திருநெல்வேலியில் வீற்றிருந்தருளும் அருட்செல்வரான
சிவபெருமானைப் போற்றி, பொருந்திய நீர் நிலைகள் நிரம்பிய சீகாழி
ஞானசம்பந்தன் பாடிய பாமாலைகளைப் பாடிப் பரவசத்துடன் ஆட,
போக்க முடியாத வினைகளெல்லாம் அழிந்து போகும்.

திருஅம்பர்மாகாளம்

திருஅம்பர்த்திருமாகாளம்

திருஅம்பர்மாகாளம்,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காளகண்டேசுவரர்.
தேவியார் : பட்சநாயகியம்மை.

பாடியுளார் விடையினர் பாய்புலித்
தோலினர் பாவநாசர்
பொடிகொண்மா மேனியர் பூதமார்
படையினர் பூணநூலர்
கடிகொண்மா மலரிடு மடியினர்
பிடிநடை மங்கையோடும்
அடிகளா ரருள்புரிந் திருப்பிட
மம்பர்மா காளந்தானே #999

சிவபெருமான் உலகில் பொருந்திய இடப வாகனம் உடையவர். பாய்கின்ற புலித்தோலை ஆடையாக அணிந்துள்ளவர். மன்னுயிர்களின் பாவத்தைப் போக்குபவர். திருவெண்ணீறணிந்த திருமேனியர். பூதங்களாகிய படைகளை உடையவர். முப்புரி நூலணிந்த மார்பினர். பூசிக்கும் அடியவர்களால் நறுமணம் கமழும் மலர்கள் இடப்படுகின்ற திருவடிகளையுடையவர். அத்தகைய பெருமான் பெண்யானை போன்ற நடையுடைய உமாதேவியோடும் அன்பர்களுக்கு அருள்புரிந்து வீற்றிருந்தருளும் இடமாவது திரு அம்பர்மாகாளம் என்னும் திருத்தலமாகும்.

திருஅம்பர்த்திருமாகாளம்

கையின்மா மழுவினர் கடுவிட
முண்டவெங் காளகண்டர்
செய்யமா மேனிய ரூனம
ருடைதலைப் பலிதிரிவார்
வையமார் பொதுவினின் மறையவர்
தொழுதெழ நடமதாடும்
ஐயன்மா தேவியோ டிருப்பிட
மம்பர்மா காளந்தானே #1000

சிவபெருமான் கையில் பெருமையான மழுப்படையை உடையவர். கொடிய விடமுண்டதால் கரிய கண்டத்தை உடையவர். சிவந்த

திருமேனியர். ஊன்பொருந்திய உடைந்த மண்டையோட்டில் பிச்சையேற்றுத் திரிபவர். உலகனைத்திற்கும் உரியதான சிற்சபையில் அந்தணர்கள் தொழுது போற்ற நடனமாடும் தலைவர். அப்பெருமான் உமாதேவியோடு வீற்றிருந்தருளும் இடம் திருஅம்பர்மாகாளம் என்னும் திருத்தலமாகும்.

திருஅம்பர்த்திருமாகாளம்

பரவின வடியவர் படுதுயர்
கெடுப்பவர் பரிவிலார்பால்
கரவினர் கனலன வுருவினர்
படுதலைப் பலிகொடேகும்
இரவினர் பகலெரி கானிடை
யாடிய வேடர்பூணும்
அரவின ரரிவையோ டிருப்பிட
மம்பர்மா காளந்தானே **#1001**

இறைவர் தம்மை வணங்கிப் போற்றும் அடியவர்கள் படும் துயரத்தைத் தீர்ப்பவர். தம்மிடத்து அன்பில்லாதவர்கள் பால் தோன்றாத நிலையில் மறைந்திருப்பவர். நெருப்புப் போன்ற சிவந்த வண்ணமுடையவர். பிரமகபாலம் ஏந்திப் பிச்சை ஏற்றுத் திரிபவர். நண்பகல் போல் சுடுகின்ற முதுகாட்டில் இரவில் நெருப்பேந்தி ஆடும் வேடத்தை உடையவர். பாம்பை அணிந்துள்ளவர். அப்பெருமான் உமாதேவியோடு வீற்றிருந்தருளும் இடம் திருஅம்பர்மாகாளம் என்னும் திருத் தலமாகும்.

திருஅம்பர்த்திருமாகாளம்

நீற்றினர் நீண்டவார் சடையினர்
படையினர் நிமலர்வெள்ளை
ஏற்றின ரெரிபுரி கரத்தினர்
புரத்துளா ருயிரைவவ்வும்
கூற்றினர் கொடியிடை முனிவுற
நனிவருங் குலவுகங்கை
ஆற்றின ரரிவையோ டிருப்பிட
மம்பர்மா காளந்தானே **#1002**

சிவபெருமான் திருவெண்ணீறணிந்த மேனியர். நீண்டு தொங்கும் சடையினர். கரங்களில் பலவகை ஆயுதங்களை ஏந்தியுள்ளவர். இயல்பாகவே பாசங்களின் நீங்கியவர். வெண்ணிற இடபத்தை வாகனமாக உடையவர். நெருப்பேந்திய கரத்தினர். திரிபுர அசுரர்களின் உயிரைக் கவரும் எமனாக விளங்கியவர். கொடிபோன்ற இடையுடைய உமாதேவி கோபம் கொள்ளும்படி கங்கையாகிய நங்கையை

மகிழ்வுடன் சடையில் தாங்கியவர். அப்பெருமான் உமாதேவியோடு வீற்றிருந்தருளும் இடம் திருஅம்பர் மாகாளம் என்னும் திருத்தலமாகும்.

திருஅம்பர்த்திருமாகாளம்

புறத்தின ரகத்துளர் போற்றிநின்
றழுதெழு மன்பர்சிந்தைத்
திறத்தின ரறிவிலாச் செதுமதித்
தக்கன்றன் வேள்விசெற்ற
மறத்தினர் மாதவர் நால்வருக்
காலின்கீ ழருள்புரிந்த
அறத்தின ரரிவையோ டிருப்பிட
மம்பர்மா காளந்தானே #1003

இறைவர் உள்ளும், புறமும் நிறைந்தவர். உள்ளம் உருகிப் போற்றிக் கண்ணீர் மல்கும் அன்பர்களின் சிந்தையில் விளங்குபவர். அறிவில்லாத, அழிதற்கேதுவாகிய புத்தி படைத்த தக்கனின் வேள்வியை அழித்தவர். சனகர், சனந்தரர், சனாதரர், சனற்குமாரர் என்ற நான்கு முனிவர்கட்குக் கல்லாலின் கீழிருந்து அறமுரைத்து அருள்புரிந்தவர். அப்பெருமான் உமாதேவியோடு வீற்றிருந்தருளும் இடம் திருஅம்பர்மாகாளம் என்னும் திருத்தலமாகும்.

திருஅம்பர்த்திருமாகாளம்

பழகமா மலர்பறித் திண்டைகொண்
டிறைஞ்சுவார் பாற்செறிந்த
குழகனார் குணம்புகழ்ந் தேத்துவா
ரவர்பலர் கூடநின்ற
கழகனார் கரியுரித் தாடுகங்
காளர்நங் காளியேத்தும்
அழகனா ரரிவையோ டிருப்பிட
மம்பர்மா காளந்தானே #1004

இறைவர், தினம்தோறும் மலர் பறித்து மாலை கட்டி வழிபாடு செய்யும் அடியவர்களைவிட்டு நீங்காத இளையர். தம் குணங்களைப் புகழ்ந்து போற்றும் அன்பர்கள் கூட்டத்திலிருக்கும் அழகர். யானைத் தோலை உரித்துப் போர்த்தி ஆடுபவர். எலும்பு மாலை அணிந்துள்ளவர். காளியால் வணங்கப்பட்ட அழகர். அப்பெருமான் உமாதேவியோடு வீற்றிருந்தருளும் இடம் திருஅம்பர் மாகாளம் என்னும் திருத்தலமாகும்.

திருஅம்பர்த்திருமாகாளம்

சங்கவார் குழையினர் தழலன

வுருவினர் தமதருளே
எங்குமா யிருந்தவ ரருந்தவ
முனிவருக் களித்துகந்தார்
பொங்குமா புனல்பரந் தரிசிலின்
வடகரை திருத்தம்பேணி
அங்கமா றோதுவா ரிருப்பிட
மம்பர்மா காளந்தானே **#1005**

இறைவர் சங்கினாலாகிய குழையைக் காதிலணிந்துள்ளவர். நெருப்புப் போன்ற செந்நிற மேனியர். தமது அருளால் எங்கும் வியாபித்துள்ளவர். அரிய தவம் செய்யும் முனிவர்களுக்குத் தம்மையே அளித்து மகிழ்பவர். அவர் அங்கு, பொங்கும் நீர் பரந்த அரிசிலாற்றினைத் தீர்த்தமாகக் கொண்டு, வேதத்தின் ஆறு அங்கங்களை ஓதுபவராய் வீற்றிருந்தருளும் இடம் ஆற்றின் வடகரையில் உள்ள திருஅம்பர்மாகாளம் என்னும் திருத்தலமாகும்.

திருஅம்பர்த்திருமாகாளம்

பொருசிலை மதனனைப் பொடிபட
விழித்தவர் பொழிலிலங்கைக்
குரிசிலைக் குலவரைக் கீழுற
வடர்த்தவர் கோயில்கூறில்
பெருசிலை நலமணி பீலியோ
டேலமும் பெருகநுந்தும்
அரிசிலின் வடகரை யழகம
ரம்பர்மா காளந்தானே **#1006**

சிவபெருமான், போர்புரியும் வில்லுடைய மன்மதனை எரித்துச் சாம்பலாகும்படி நெற்றிக்கண்ணைத் திறந்து விழித்தவர். சோலைகளையுடைய இலங்கை மன்னனைக் கயிலை மலையின்கீழ் அடர்த்த அப்பெருமான் வீற்றிருந்தருளும் கோயில், பெரிய மலையினின்றும் நவமணிகளையும், மயிற்பீலி ஏலம் முதலியவற்றையும் மிகுதியாக அடித்துக் கொண்டு வரும் அரிசிலாற்றின் வடகரையில் அமைந்துள்ள அழகிய திரு அம்பர்மாகாளம் என்னும் திருத்தலமாகும்.

திருஅம்பர்த்திருமாகாளம்

வரியரா வதன்மிசைத் துயின்றவன்
றானுமா மலருளானும்
எரியரா வணிகழ லேத்தவொண்
ணாவகை யுயர்ந்துபின்னும்
பிரியரா மடியவர்க் கணியராய்ப்

பணிவிலா தவருக்கென்றும்
அரியரா யரிவையோ டிருப்பிட
மம்பர்மா காளந்தானே #1007

வரிகளையுடைய பாம்புப் படுக்கையில் பள்ளிகொள்ளும் திருமாலும், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும் உணர்ந்து போற்ற முடியாவண்ணம் எரியுருவாய்ச் சிவபெருமான் உயர்ந்து நின்றவர். தம்மிடத்து அன்புசெலுத்தும் அடியவர்கட்கு அணியராகியும், பணிவில்லாதவர்கட்கு அரியராயும் விளங்குபவர். அவர் உமாதேவியோடு வீற்றிருந்தருளும் இடம் திரு அம்பர்மாகாளம் என்னும் திருத்தலமாகும்.

திருஅம்பர்த்திருமாகாளம்

சாக்கியக் கயவர்வன் றலைபறிக்
கையரும் பொய்யினானூல்
ஆக்கிய மொழியவை பிழையவை
யாதலில் வழிபடுவீர்
வீக்கிய வரவுடைக் கச்சையா
னிச்சையா னவர்கட்கெல்லாம்
ஆக்கிய வரனுறை யம்பர்மா
காளமே யடை மினீரே #1008

புத்தர்களாகிய கீழ்மக்களும், தலைமயிர் பறிக்கும் இயல்புடைய வஞ்சகர்களாகிய சமணர்களும், இறைவனை உணராது, பொய்யினால் சிருட்டித்த நூல்களிலுள்ள உபதேசங்கள் குற்றமுடையவை. அவற்றைக் கேட்கவேண்டா. பாம்பைக் கச்சாக அணிந்தவனும், தன்னிடத்துப் பக்தி செலுத்தும் அடியவர்கட்கு அருள் புரிபவனுமான சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருஅம்பர் மாகாளம் என்னும் திருத்தலத்தை அடைந்து வழிபடுவீர்களாக!

திருஅம்பர்த்திருமாகாளம்

செம்பொன்மா மணிகொழித் தெழுதிரை
வருபுன லரிசில்சூழ்ந்த
அம்பர்மா காளமே கோயிலா
வணங்கினோ டிருந்தகோனைக்
கம்பினார் நெடுமதிற் காழியுண்
ஞானசம் பந்தன்சொன்ன
நம்பிநாண் மொழிபவர்க் கில்லையாம்
வினைநலம் பெறுவர்தாமே #1009

செம்பொன்னையும், இரத்தினங்களையும் அடித்துக் கொண்டு அலை

வரும் நீரையுடைய அரிசிலாறு சூழ்ந்த திருஅம்பர்மாகாளம் என்னும் திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ள, உமாதேவியோடு வீற்றிருந்தருளும் சிவபெருமானைப் போற்றி, சங்கு, சுட்ட சுண்ணாம்பு இவற்றால் சுதை பூசப்பட்ட நெடிய மதில்களையுடைய சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தன் அருளிய இத்திருப்பதிகத்தை விரும்பி, நாள்தோறும் பாடுபவர்களுக்கு வினை இல்லை. அவர்கள் எல்லா நலன்களும் பெறுவர். இது உறுதி.

திருவெங்குரு

சீர்காழி

திருவெங்குரு,
பண் - சாதாரி, திருவெங்குரு என்பது சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

விண்ணவர் தொழுதெழு வெங்குரு மேவிய
சுண்ணவெண் பொடியணி வீரே
சுண்ணவெண் பொடியணி வீரும தொழுகழல்
எண்ணவல் லாரிட ரிலரே **#1010**

தேவர்கள் தொழுது போற்றுகின்ற திருவெங்குரு என்னும் திருத்தலத்தை விரும்பி வீற்றிருந்தருளும், சுண்ணம் போன்ற வெண்மையான திருநீற்றினை அணிந்துள்ள சிவபெருமானே! சுண்ணம் போன்ற வெண்மையான திருநீற்றினை அணியும் பெருமானாகிய உம் தொழத்தக்க திருவடிகளைத் தியானிக்க வல்லவர் துன்பம் அற்றவர்கள் ஆவர்.

சீர்காழி

வேதியர் தொழுதெழு வெங்குரு மேவிய
ஆதிய வருமறை யீரே
ஆதிய வருமறை யீருமை யலர்கொடு
ஓதிய ருணர்வுடை யோரே **#1011**

நால்வேதங்களையும் ஐயந்திரிபறக் கற்ற அந்தணர்கள் வழிபடுகின்ற திருவெங்குரு என்னும் திருத்தலத்தை விரும்பி வீற்றிருந்தருளும், முதன்மையான வேதத்தின் பொருளானவரே! முதன்மையான வேதத்தின் பொருளானவரான உம்மை மலர்கள் கொண்டு பூசித்துத், தோத்திரம் செய்பவர்கள் சிவஞானம் உடையவர்கள் ஆவர்.

சீர்காழி

விளங்குதண் பொழிலணி வெங்குருமேவிய
இளம்பிறை யணிசடை யீரே
இளம்பிறை யணிசடை யீரும திணையடி
உளங்கொள வுறுபிணி யிலரே **#1012**

பெருமையுடன் விளங்குகின்ற குளிர்ந்த சோலைகளையுடைய அழகிய திருவெங்குரு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும்,

இளம்பிறைச்சந்திரனை அணிந்த சடையினையுடைய சிவபெருமானே! இளம்பிறைச் சந்திரனைச் சடையில் அணிந்துள்ள உம்முடைய இரண்டு திருவடிகளையும் மனத்தால் நினைத்துத் தியானிப்பவர்கள் உற்றபிணிகள் இல்லாதவராவர்.

சீர்காழி

விண்டலர் பொழிலணி வெங்குரு மேவிய
வண்டமர் வளர்சடை யீரே
வண்டமர் வளர்சடை யீருமை வாழ்த்துமத்
தொண்டர்க டுயர்பிணி யிலரே **#1013**

முறுக்குடைந்து விரிகின்ற மலர்களையுடைய சோலைகளால் அழகுடன் திகழும் திருவெங்குரு என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளும், வண்டுகள் விரும்பும் நீண்ட சடையுடைய சிவபெருமானே! வண்டுகள் விரும்பும் சடையினையுடைய பெருமானாகிய உம்மை வாழ்த்தும் சிறப்புடைய தொண்டர்கள் துயரும், பிணியும் அற்றவர்கள் ஆவர்.

சீர்காழி

மிக்கவர் தொழுதெழு வெங்குரு மேவிய
அக்கினொ டரவசைத் தீரே
அக்கினொ டரவசைத் தீரும தடியிணை
தக்கவ ருறுவது தவமே **#1014**

அன்பின் மிக்கார் தொழுது எழுகின்ற திருவெங்குரு என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, அக்குப்பாசியோடு பாம்பையும் அணிந்துள்ள சிவபெருமானே! அக்குப்பாசியோடு பாம்பையும் அணிந்துள்ள பெருமானாகிய உம் இணையடிகளைத் துதிக்கும் தகுதிபெற்ற அடியவர்கள் பெறுவது சிறந்த தவத்தின் பயனாகும்.

சீர்காழி

வெந்தவெண் பொடியணி வெங்குரு மேவிய
அந்தமில் பெருமையி னீரே
அந்தமில் பெருமையி னீருமை யலர்கொடு
சிந்தைசெய் வோர்வினை சிதைவே **#1015**

சுடப்பட்ட வெண்ணிறத் திருவெண்ணீற்றினை அணிந்து, திருவெங்குரு என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற அழிவில்லாத புகழுடைய சிவபெருமானே! அழிதல் இல்லாத புகழுடைய உம்மை மலர்கள் கொண்டு வழிபட்டுத் தியானிப்பவர்களின் வினைகள் சிதைந்து போகும்.

சீர்காழி

விழமல்கு பொழிலணி வெங்குரு மேவிய
அழன்மல்கு மங்கையி னீரே
அழன்மல்கு மங்கையி னீருமை யலர்கொடு
தொழவல்லல் கெடுவது துணிவே **#1016**

திருவிழாக்கள் நிறைந்ததும், சோலைகள் அழகு செய்வதுமான திருவெங்குரு என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளும் நெருப்பேந்திய அழகிய திருக்கரத்தையுடைய சிவ பெருமானே! நெருப்பேந்திய அழகிய திருக்கரமுடைய உம்மை மலர்கள் கொண்டு வழிபடுபவர்களின் துன்பங்கள் கெடுவது நிச்சயம்.

சீர்காழி

வித்தக மறையவர் வெங்குரு மேவிய
மத்தநன் மலர்புனை வீரே
மத்தநன் மலர்புனை வீரும தடிதொழுஞ்
சித்தம துடையவர் திருவே **#1017**

சாமர்த்தியமுடைய, நான்மறைகளைக் கற்றுவல்ல அந்தணர்கள் நிறைந்த திருவெங்குரு என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, ஊமத்த நன்மலரினைச் சூடியுள்ள, சிவபெருமானே! ஊமத்தம் மலர் சூடிய உம் திருவடிகளைத் தொழும் சித்தமுடையவர்கள் எல்லாச் செல்வங்களும் பெற்றவர் ஆவார்.

சீர்காழி

மேலவர் தொழுதெழு வெங்குரு மேவிய
ஆலநன் மணிமிடற் றீரே
ஆலநன் மணிமிடற் றீரும தடிதொழுஞ்
சீலம துடையவர் திருவே **#1018**

மேலான பக்தர்கள் தொழுதெழுகின்ற திருவெங்குரு என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, விடம் தங்கிய அழகிய கண்டத்தை உடைய சிவபெருமானே! விடம் தங்கிய அழகிய கண்டத்தையுடையவராகிய உம்திருவடிகளைத் தொழுகின்ற நல்லொழுக்கம் உடையவர்களே பேரின்பம் பெறுவர்.

சீர்காழி

விரைமல்கு பொழிலணி வெங்குரு மேவிய
அரைமல்கு புலியத ளீரே
அரைமல்கு புலியத ளீரும தடியிணை

உரைமல்கு புகழவ ருயர்வே #1019
நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்த அழகிய திருவெங்குரு என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, அரையில் கட்டிய புலித்தோல் ஆடையையுடைய சிவபெருமானே! அரையில் கட்டிய புலித்தோலாடையையுடைய பெருமானாகிய உம் இணையடிகளை நிரம்பிய சொற்களால் புகழ்பவர்களே உயர்வு அடைவர்.

திருஇன்னம்பர்

திருஇன்னம்பர்

திருஇன்னம்பர்,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : எழுத்தறிந்தவீசுவரர்.
தேவியார் : கொந்தார்பூங்குழலம்மை.

எண்டிசைக் கும்புகழி ன்னம்பர் மேவிய
வண்டிசைக் குஞ்சடை யீரே
வண்டிசைக் குஞ்சடை யீருமை வாழ்த்துவார்
தொண்டிசைக் குந்தொழி லோரே **#1020**

எட்டுத் திசைகளிலும் புகழ்பரப்பும் திருஇன்னம்பர் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, வண்டு இசைக்கும் மலர்மாலை அணிந்த சடையுடைய சிவபெருமானே! வண்டிசைக்கும் மலர்மாலை அணிந்துள்ள சடையுடைய உம்மை வாழ்த்தும் அடியவர்கள் தொண்டு நெறியில் சிறப்புடன் நின்று மேம்படுவரே.

திருஇன்னம்பர்

யாழ்நரம் பின்னிசை யின்னம்பர் மேவிய
தாழ்தரு சடைமுடி யீரே
தாழ்தரு சடைமுடி யீருமைச் சார்பவர்
ஆழ்துய ரருவினை யிலரே **#1021**

யாழின் இனிய இசையை உடைய திருஇன்னம்பர் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற நீண்ட தாழ்ந்த சடைமுடியுடைய சிவபெருமானே! நீண்டு தாழ்ந்த சடைமுடியுடைய உம்மைச் சார்ந்து பக்தியுடன் வழிபடுபவர்கள் பெருந்துன்பத்திலிருந்தும், அதற்குக் காரணமான அரிய வினையிலிருந்தும் நீங்கியவராவர்.

திருஇன்னம்பர்

இளமதி நுதலியொ டின்னம்பர் மேவிய
வளமதி வளர்சடை யீரே
வளமதி வளர்சடை யீருமே வாழ்த்துவார்
உளமதி மிகவுடை யோரே **#1022**

பிறைச்சந்திரனைப் போன்ற நெற்றியையுடைய உமாதேவியோடு திருஇன்னம்பர் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற,

குளிர்ச்சிபொருந்திய சந்திரனை அணிந்த நீண்ட சடையுடைய சிவபெருமானே! குளிர்ச்சி பொருந்திய சந்திரனை அணிந்த நீண்ட சடையுடைய உம்மை வாயால் வாழ்த்தி வழிபடுவோர் பேரறிவுடையவராவர்.

திருஇன்னம்பர்

இடிகுர லிசைமுர லின்னம்பர் மேவிய
கடிகமழ் சடைமுடி யீரே
கடிகமழ் சடைமுடி யீரும கழறொழும்
அடியவ ரருவினை யிலரே **#1023**

இடிக்குரல் போன்று ஒலிக்கும் முரசு, முழவு போன்ற வாத்தியங்கள் ஒலிக்க, திரு இன்னம்பர் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, நறுமணம் கமழும் சடைமுடி உடைய சிவபெருமானே! நறுமணம் கமழும் சடை முடியுடைய உம் திருவடிகளைத் தொழும் அடியவர்கள் வினைநீக்கம் பெற்றவராவர்.

திருஇன்னம்பர்

இமையவர் தொழுதெழு மின்னம்பர் மேவிய
உமையொரு கூறுடை யீரே.
உமையொரு கூறுடை யீருமை யுள்குவார்
அமைகில ராகில ரன்பே **#1024**

உமையைத் திருமேனியின் ஓர் பாகத்திற் கொண்டவரே, தேவர்கள் தொழுது போற்றும் திரு இன்னம்பரில் எழுந்தருள்பவரே, உமை பாகராகிய உம்மை உள்ளத்தால் நினைந்து ஏத்துபவர் அன்பு அமையப் பெறாதவர் ஆகார்.

திருஇன்னம்பர்

எண்ணரும் புகழுடை யின்னம்பர் மேவிய
தண்ணருஞ் சடைமுடி யீரே
தண்ணருஞ் சடைமுடி யீருமைச் சார்பவர்
விண்ணவ ரடைவுடை யோரே **#1025**

நினைத்தற்கரிய அளவில்லாத பெரும்புகழையுடைய திருஇன்னம்பர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற, குளிர்ந்த சடைமுடியுடைய சிவபெருமானே! குளிர்ந்த சடைமுடியுடைய உம்மைச் சார்ந்து வழிபடுபவர்கள் தேவர்களுக்குரிய சிறப்பினை அடைவர்.

திருஇன்னம்பர்

எழிறிக ழும்பொழி லின்னம்பர் மேவிய

நிழறிகழ் மேனியி னீரே
நிழறிகழ் மேனியி னீருமை நினைபவர்
குழறிய கொடுவினை யிலரே **#1026**
அழகுடன் விளங்கும் சோலைகள் சூழ்ந்த திரு இன்னம்பர் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, ஒளி விளங்கும் திருமேனியுடைய சிவபெருமானே! ஒளி விளங்கும் திருமேனியுடைய உம்மை நினைப்பவர்களுடைய, வாட்டும் குழம்பிய கொடுவினை கெட்டழியும்.

திருஇன்னம்பர்

ஏத்தரும் புகழணி யின்னம்பர் மேவிய
தூர்த்தனைத் தொலைவுசெய் தீரே
தூர்த்தனைத் தொலைவுசெய் தீருமைத் தொழுபவர்
கூர்த்தநற் குணமுடை யோரே **#1027**
போற்றுதற்கு அரிய புகழுடைய அழகிய திருஇன்னம்பர் என்னும் திருத்தலத்தில் விருமபி வீற்றிருந்தருளுபவரும், தூர்த்தனான இராவணனை அடர்த்தவருமான சிவபெருமானே! தூர்த்தனான இராவணனை அடர்த்த உம்மைத் தொழுபவர் பேரறிவும், நற்குணம் உடையவராவர்.

திருஇன்னம்பர்

இயலுளோர் தொழுதெழு மின்னம்பர் மேவிய
அயனுமா லறிவரி யீரே
அயனுமா லறிவரி யீரும தடிதொழும்
இயலுளார் மறுபிறப் பிலரே **#1028**
நல்லியல்புடையோர் தொழுது எழுகின்ற திருஇன்னம்பர் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளும் சிவபெருமானே! பிரமனும், திருமாலும் அறிவதற்கரிய உம் திருவடிகளைத் தொழும் இயல்பு உடையவர்கட்கு மறுபிறப்பு இல்லை.

திருஇன்னம்பர்

ஏரமர் பொழிலணி யின்னம்பர் மேவிய
தேரமண் சிதைவுசெய் தீரே
தேரமண் சிதைவுசெய் தீருமைச் சேர்பவர்
ஆர்துய ரருவினை யிலரே **#1029**
ஏர் எனப்படும் திருத்தலத்திற்கு அருகிலுள்ள சோலைகள் சூழ்ந்த அழகிய திரு இன்னம்பர் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்றவராய், சமண, புத்த நெறிகளிலுள்ள குறைகளைக்

காட்டித் தாழ்ச்சியுறச் செய்த சிவபெருமானே! சமண, புத்த நெறிகள் தாழ்வடையும்படி செய்த உம் திருவடிகளைப் போற்றி வணங்குபவர்கட்குத் துன்பமும், அதற்குக் காரணமான தீவினையும் இல்லை.

திருஇன்னம்பர்

ஏடமர் பொழிலணி யின்னம்பர் ரீசனை
நாடமர் ஞானசம் பந்தன்
நாடமர் ஞானசம் பந்தன நற்றமிழ்
பாடவல் லார்பழி யிலரே **#1030**

இதழ்களையுடைய மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த அழகிய திருஇன்னம்பர் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமானைப் போற்றி, தேசமெல்லாம் விரும்புகின்ற ஞானசம்பந்தன் அருளிய நற்றமிழாலன இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள் பழியற்றவர் ஆவர்.

திருநெல்வெண்ணெய்

திருநெல்வெண்ணெய்

திருநெல்வெண்ணெய்,
பண் - சாதாரி,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வெண்ணையப்பர்.
தேவியார் : நீலமலர்க்கண்ணம்மை.

நல்வெணெய் விழுதுபெய் தாடுதிர் நாடொறும்
நெல்வெணெய் மேவிய நீரே
நெல்வெணெய் மேவிய நீருமை நாடொறும்
சொல்வண மிடுவது சொல்லே #1031

நல்ல வெண்ணெய் விழுதாகப் பெய்து செய்யப்பட்ட திருமஞ்சனம் நாள்தோறும் கொண்டருளுவீர். திருநெல்வெண்ணெய் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளும் சிவபெருமானே! திருநெல்வெண்ணெய் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் உம்மைத் தினந்தோறும் துதித்துச் சொல்லப்படுகின்ற சொற்களே பயன்தரும் சொற்களாகும்.

திருநெல்வெண்ணெய்

நிச்சலு மடியவர் தொழுதெழு நெல்வெணெய்க்
கச்சிள வரவசைத் தீர
கச்சிள வரவசைத் தீருமைக் காண்பவர்
அச்சமொ டருவினை யிலரே #1032

நாள்தோறும் அடியவர்கள் தொழுது எழுகின்ற, நெல்வெண்ணெய் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, இளமையான பாம்பைக் கச்சாக இடையில் அணிந்துள்ள சிவபெருமானே! அவ்வாறு கச்சாக இளம் பாம்பை அணிந்துள்ள உம்மைத் தரிசிப்பவரே துன்பங்களைக் கண்டு அச்சப்படாதவர், கொடிய வினைகளும் இல்லாதவர்.

திருநெல்வெண்ணெய்

நிறைவிரி தொல்புகழ் நெல்வெணெய் மேவிய
அரைவிரி கோவணத் தீரே
அரைவிரி கோவணத் தீருமை யலர்கொடு
உரைவிரிப் போருயர்ந் தோரே #1033

வரிசையாக உலகெங்கும் பரந்த தொன்மையான புகழினையுடைய

திருநெல்வெண்ணெயில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, இடையில் விரித்துக் கட்டிய கோவணத்தையுடைய சிவபெருமானே! அவ்வாறு கோவணத்தை விரித்துக் கட்டிய உம்மை மலர்களைக் கொண்டு பூசித்து, உமது புகழைப் போற்றிப் பாடுபவர்கள் உயர்ந்தவர்கள் ஆவர்.

திருநெல்வெண்ணெய்

நீர்மல்கு தொல்புகழ் நெல்வெணெய் மேவிய
ஊர்மல்கி யுறையவல் லீரே
ஊர்மல்கி யுறையவல் லீருமை யுள்குதல்
பார்மல்கு புகழவர் பண்பே #1034

நீர்வளம்மிக்க தொன்மையான புகழ் பொருந்திய திருநெல்வெண்ணெய் என்னும் திருத்தலத்தை விரும்பி அவ்வூரில் நிலையாக வீற்றிருந்தருளும் சிவபெருமானே! அவ்வாறு அவ்வூரில் நிலையாக வீற்றிருந்தருளுகின்ற உம்மை எப்போதும் இடையறாது தியானித்தலே உலகின் உயர்ந்த புகழையுடைய சிவஞானிகள் இயல்பாகும்.

திருநெல்வெண்ணெய்

நீடிளம் பொழிலணி நெல்வெணெய் மேவிய
ஆடிளம் பாப்பசைத் தீர
ஆடிளம் பாப்பசைத் தீருமை யன்பொடு
பாடுள முடையவர் பண்பே #1035

நீண்ட இளமரங்களையுடைய சோலைகள் சூழ்ந்த அழகிய திருநெல்வெண்ணெய் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற, ஆடுகின்ற இளம்பாம்பினைக் கச்சாகக் கட்டியுள்ள சிவபெருமானே! அவ்வாறு ஆடுகின்ற இளம்பாம்பைக் கச்சாக அணிந்த உம்மை அன்போடு பாடுகின்ற உள்ளம் உடையவர்களின் பண்பே சிறந்ததாகும்.

திருநெல்வெண்ணெய்

நெற்றியோர் கண்ணுடை நெல்வெணெய் மேவிய
பெற்றிகொள் பிறைநுத லீரே
பெற்றிகொள் பிறைநுத லீருமைப் பேணுதல்
கற்றறி வோர்கள்தங் கடனே #1036

நெற்றிக்கண்ணை உடையவரும், திருநெல்வெண்ணெய் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருள்பவரும், அடியவர்கட்கருளும் பண்புடைய பிறை போன்ற நெற்றியையுடைய உமாதேவியை உடைய வருமாகிய சிவபெருமானே! அவ்வாறு பிறைபோன்ற நெற்றியுடைய உமா தேவியை உடைய உம்மை வழிபடுதலே ஞான நூல்களைக் கற்றறிந்த அறிஞர்களின் கடமையாகும்.

திருநெல்வெண்ணெய்

நிறையவர் தொழுதெழு நெல்வெண்ணெய் மேவிய
கறையணி மிடறுடை யீரே
கறையணி மிடறுடை யீருமைக் காண்பவர்
உறைவதும் உம்அடிக் கீழே **#1037**

நிறையுடையவர்கள் தொழுது எழுகின்ற திருநெல்வெண்ணெய் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, விடமுண்ட கறுத்த கண்டத்தையுடைய சிவபெருமானே! அவ்வாறு விடமுண்ட கறுத்த கண்டத்தையுடைய உம்மைத் தரிசிப்பவர்கள் உம் திருவடிக்கீழ் என்றும் வீற்றிருப்பர்.

திருநெல்வெண்ணெய்

நெருக்கிய பொழிலணி நெல்வெண்ணெய் மேவியன்
றரக்கனை யசைவுசெய் தீர
அரக்கனை யசைவுசெய் தீருமை யன்புசெய்
திருக்கவல் லாரிட ரிலரே **#1038**

நெருங்கிய சோலைகள் சூழ்ந்து அழகுடன் விளங்கும் திருநெல்வெண்ணெய் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுப வரும், அரக்கனான இராவணனை வலிகுன்றச் செய்தவருமான சிவபெருமானே! அவ்வாறு அரக்கனை வலிகுன்றச் செய்தவரான உம்மை அன்புடன் வணங்குபவர்கள் துன்பமே இல்லாதவர்கள் ஆவர்.

திருநெல்வெண்ணெய்

நிரைவிரி சடைமுடி நெல்வெண்ணெய் மேவியன்
றிருவரை யிடர்கள் செய்தீரே
இருவரை யிடர்கள் செய்தீருமை யிசைவொடு
பரவவல் லார்பழி யிலரே **#1039**

வரிசையாக விரிந்த சடைமுடியினை உடையவராய்,திரு நெல்வெண்ணெய் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுபவராய், அன்று திருமாலும், பிரமனும் உம் அடிமுடி காணாமல் துன்பம் அடையச் செய்த சிவபெருமானே! அவ்வாறு திருமால், பிரமன் என்னும் இருவரைத் துன்பம் அடையச் செய்தவராகிய உம்மை உள்ளும், புறமும் ஒத்து வணங்கிப் போற்று பவர்கள் பழியில்லாதவர் ஆவர்.

திருநெல்வெண்ணெய்

நீக்கிய புனலணி நெல்வெண்ணெய் மேவிய

சாக்கியச் சமண் கெடுத் தீரே
சாக்கியச் சமண்கெடுத் தீருமைச் சார்வது
பாக்கிய முடையவர் பண்பே **#1040**
வறுமை, பிணி முதலியவற்றை நீக்கியவரும், திருநெல்வெண்ணெய் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுபவரும், புத்தமும், சமணமும் கெடுத்தவருமாகிய சிவபெருமானே! அவ்வாறு புத்தமும், சமணமும் கெடுத்த உம்மைப் பற்றுக்கோடாகச் சார்வது புண்ணியம் செய்தவர்களின் பண்பாகும்.

<u>திருநெல்வெண்ணெய்</u>

நிலமல்கு தொல்புகழ் நெல்வெணெ யீசனை
நலமல்கு ஞானசம் பந்தன்
நலமல்கு ஞானசம் பந்தன் செந்தமிழ்
சொலமல்கு வார்துய ரிலரே **#1041**
நிலவுலகெங்கும் நிறைந்த தொன்மையான புகழையுடைய திருநெல்வெண்ணெய் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமானைப் போற்றி, நன்மைகளைத் தருகின்ற ஞானசம்பந்தன் அருளிய இச்செந்தமிழ்ப் பதிகத்தைப் பாடுவதில் மகிழ்ச்சி மிக்கவர்கள் துன்பம் இல்லாதவர்கள் ஆவர்.

திருச்சிறுகுடி

திருச்சிறுகுடி

திருச்சிறுகுடி,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மங்களேசுவரர்.
தேவியார் : மங்களநாயகியம்மை.

திடமலி மதிளணி சிறுகுடி மேவிய
படமலி யரவுடை யீரே
படமலி யரவுடை யீருமைப் பணிபவர்
அடைவது மமருல கதுவே **#1042**

வலிமைமிக்க மதில்களையுடைய அழகிய திருச்செறுகுடி என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, படமெடுக்கும் பாம்பை அணிந்துள்ள சிவபெருமானே! அவ்வாறு படமெடுக்கும் பாம்பை அணிந்துள்ள உம்மை வணங்குபவர்கள் சிவலோகம் அடைவர்.

திருச்சிறுகுடி

சிற்றிடை யுடன்மகிழ் சிறுகுடி மேவிய
சுற்றிய சடைமுடி யீரே
சுற்றிய சடைமுடி யீரும தொழுகழல்
உற்றவ ருறுபிணி யிலரே **#1043**

குறுகிய இடையையுடைய உமாதேவியை உடனாகக் கொண்டு மகிழ்ச்சியுடன் திருச்சிறுகுடி என்னும் திருத் தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற சுற்றிய சடைமுடியுடைய சிவபெருமானே! சுற்றிய சடைமுடியுடைய உம் திருவடிகளைத் தொழுது வணங்குபவர்கட்குப் பிணி எதுவும் இல்லை.

திருச்சிறுகுடி

தெள்ளிய புனலணி சிறுகுடி மேவிய
துள்ளிய மானுடை யீரே
துள்ளிய மானுடை யீரும தொழுகழல்
உள்ளுதல் செயநல முறுமே **#1044**

தெளந்த நீர்வளமுடைய திருச்சிறுகுடி என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, துள்ளிக் குதிக்கும் மானைக் கரத்தில் ஏந்தியுள்ள சிவபெருமானே! துள்ளிக் குதிக்கும் மானை உடைய உம்முடைய திருவடிகளை நினைத்துத் தியானிக்கும் அடியவர்கள் எல்லா

நலன்களையும் பெறுவர்.

திருச்சிறுகுடி

செந்நெல வயலணி சிறுகுடி மேவிய
ஒன்னலர் புரமெரித் தீரே
ஒன்னலர் புரமெரித் தீருமை யுள்குவார்
சொன்னல முடையவர் தொண்டே **#1045**
செந்நெல் விளையும் வயல்வளமிக்க திருச் சிறுகுடி என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, நம்மோடு சேராது பகைமை கொண்ட அசுரர்கள் வாழும் திரிபுரங்களை எரித்த சிவபெருமானே! திரிபுரம் எரித்த உம்மை நினைத்துப் போற்றும் சொல் நலமுடையவர்களே திருத்தொண்டர்கள் ஆவர். (உமது வழிபாட்டின் பலனைப் பற்றிப் பிறருக்கு பதேசிக்கும் தக்கோர் ஆவர் என்பர்).

திருச்சிறுகுடி

செற்றினின் மலிபுனற் சிறுகுடி மேவிய
பெற்றிகொள் பிறைமுடி யீரே
பெற்றிகொள் பிறைமுடி யீருமைப் பேணிநஞ்
சற்றவ ரருவினை யிலரே **#1046**
பாத்திகளில் குன்றாது பாயும் நீர்வளமுடைய திருச்சிறுகுடி என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, முடியில் தங்கும் பேறுபெற்ற பிறைச்சந்திரனை அணிந்த சடைமுடி உடைய சிவபெருமானே! பேறு பெற்ற பிறைச்சந்திரனை அணிந்த திருமுடியுடைய உம்மை மனம் குந்து வழிபடுபவர்கள் உலகப் பற்றற்றவர்கள். அதன் காரணமாக மேல்வரும் அருவினையும் இல்லாதவராவர்.

திருச்சிறுகுடி

செங்கயல் புனலணி சிறுகுடி மேவிய
மங்கையை யிடமுடை யீரே
மங்கையை யிடமுடை யீருமை வாழ்த்துவார்
சங்கைய திலர்நலர் தவமே **#1047**
செங்கயல்மீன் விளங்கும் நீர்வளமிக்க திருச்சிறுகுடி என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, உமாதேவி யைத் தம் இடப்பாகமாகக் கொண்டு விளம்கும் சிவபெருமானே! உமா தேவியைத் தம் இடப்பாகமாகக் கொண்டு விளங்கும் உம்மை வாழ்த்தும் அடியவர்கள் அச்சம் இல்லாதவராவர். நலமிக்கவரும், தவப்பேறு உடைய வரும் ஆவர்.

திருச்சிறுகுடி

செறிபொழி றழுவிய சிறுகுடி மேவிய
வெறிகமழ் சடைமுடி யீரே
வெறிகமழ் சடைமுடி யீரு விரும்பிமெய்ந்
நெறியுணர் வோருயர்ந்தோரே **#1048**

அடர்ந்த சோலைகள் விளங்கும் திருச்சிறுகுடி என்னும் திருத்தலத்தல் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற நறுமணம் கமழும் சடைமுடியுடைய சிவபெருமானே! நறுமணம் கமழும் சடைமுடியுடைய உம்மை விரும்பி, அடைவதற்குரிய நெறிகளில் சன்மார்க்க நெறியில் நிற்போர் உயர்ந்தோராவர்.

திருச்சிறுகுடி

திரைசயவர் தொழுதெழு சிறுகுடி மேவிய
தசமுகு னுரநெரித் தீரே
தசமுக னுரநெரித் தீருமைச் சார்பவர்
வசையறு மதுவழி பாடே **#1049**

எல்லாத் திக்குக்களிலுமுள்ளவர்கள் தொழுது போற்றும் திருச்சிறுகுடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றவரும், இராவணனின் வலிமை அடங்கும்படி கயிலைமலையின் கீழ் அவனை நெரித்தவருமான சிவபெருமானே! அவ்வாறு இராவணனின் வலிமையை அடக்கிய உம்மைப் பற்றுக்கோடாகக் கொண்டு வழிபடுபவர்களின் குற்றம் யாவும் தீர்ந்து குணம் பெருகும். அது உம்மை வழிபட்டதன் பலனாகும்.

திருச்சிறுகுடி

செருவரை வயலமர் சிறுகுடி மேவிய
இருவர யசைவுசெய் தீரே
இருவரை யசைவுசெய் தீருமை யேத்துவார்
அருவினை யொடுதுய ரிலரே **#1050**

வயல்வளமிக்க திருச்சிறுகுடி என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்றவரும், மாறுபாடு கொண்ட திருமால், பிரமன் இவர்களை வருத்தியவருமான சிவபெருமானே! அவ்விருவரையும் வருத்திய உம்மைப் போற்றி வழிபடுபவர்கள் நீக்குவதற்குரிய வினையும், அதன் விளைவால் உண்டாகும் துன்பமும் இல்லாதவர்கள் ஆவர்.

திருச்சிறுகுடி

செய்த்தலை புனலணி சிறுகுடி மேவிய

புத்தரோ டமண்புறத் தீரே
புத்தரொ டமண்புறத் தீருமைப் போற்றுதல்
பத்தர்கள் தம்முடியப் பரிசே **#1051**
வயல்களில் நீர்பாயும் அழகிய சிறுகுடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றவராய்ப், புத்தர், சமணர்கட்குப் புறம்பாக இருக்கும் சிவபெருமானே! புத்தர் சமணர்கட்குப் புறம்பான உம்மைப்போற்றி வணங்குதலையே பக்தர்கள் தம்முடைய பேறாகக் கொள்வர்.

திருச்சிறுகுடி

தேனமர் பொழிலணி சிறுகுடி மேவிய
மானமர் கரமுடை யீரே
மானமர் கரமுடை யீருமை வாழ்த்திய
ஞானசம் பந்தன தமிழே **#1052**
வண்டுகள் விரும்பும் சோலைகளை உடைய அழகிய திருச்சிறுகுடி என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, மான் ஏந்திய கரமுடைய சிவபெருமானே! மான் ஏந்திய கரமுடைய உம்மை வாழ்த்திப் போற்றி ஞானசம்பந்தனின் இத்தமிழ்ப் பதிகத்தை ஓதவல்லவர்கள் இம்மை, மறுமைப் பலன்களைப் பெறுவர்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை

திருவீழிமிழலை,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

வெண்மதி தவழ்மதில் மிழலையு ளீர்சடை
ஒண்மதி யணியுடை யீரே
ஒண்மதி யணியுடை யீருமை யுணர்பவர்
கண்மதி மிகுவது கடனே **#1053**

விண்ணிலுள்ள வெண்ணிறச் சந்திரனைத் தொடுமளவு உயர்ந்துள்ள மதில்களையுடைய திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்றவரும், சடையில் ஒளி பொருந்திய சந்திரனை அணிந்துள்ளவருமான சிவபெருமானே! ஒளி பொருந்திய சந்திரனை அணிந்துள்ள உம்மை முதற்பொருளாக உணர்ந்து வழிபடுபவர்கள் சிவஞானம் பெறுவர்.

திருவீழிமிழலை

விதிவழி மறையவர் மிழலையு ளீர்நடம்
சதிவழி வருவதொர் சதிரே
சதிவழி வருவதொர் சதிருடை யீருமை
அதிகுணர் புகழ்வது மழகே **#1054**

வேதங்களில் விதிக்கப்பட்ட ஒழுக்க நெறிகளைப் பின்பற்றி வாழும் அந்தணர்கள் நிறைந்த திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருள்கின்றவரும், தாளத்துக்கு ஏற்ப அழகாகத் திருநடனம் புரிபவருமான சிவபெருமானே! தாளத்திற்கு ஏற்பத் திருநடனம் புரியும் பெருமையுடைய உம்மைச் சத்துவகுணமுடைய ஞானிகள் போற்றிப் புகழ்வது சிறப்பானது.

திருவீழிமிழலை

விரைமலி பொழிலணி மிழலையு ளீரொரு
வரைமிசை யுறைவதும் வலதே
வரைமிசை யுறைவதொர் வலதுடை யீருமை
உரைசெயு மவைமறை யொலியே **#1055**

நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்த அழகிய திருவீழிமிழலை என்னும்

திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளும் நீர் பெருமையுடைய கயிலைமலையில் வாழ்வதும் சாமர்த்தியமே. கயிலைமலையில் வாழும் பெருமையுடைய உம்மைப் போற்றிப் புகழ்வன வேதங்கள்.

திருவீழிமிழலை

விட்டெழில் பெறுபுகழ் மிழலையு ளீர்கையில்
இட்டெழில் பெறுகிற தெரியே
இட்டெழில் பெறுகிற தெரியுடை யீர்புரம்
அட்டது வரைசிலை யாலே **#1056**

மிகுந்த அழகும், புகழுமுடைய திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்றவரும் கையில் ஏந்தப்பட்டதால் அழகுபெற்ற நெருப்பை உடையவருமான சிவபெருமானே! அழகிய நெருப்பேந்திய நீர் திரிபுரத்தை எரித்தது மேருமலையை வில்லாக வளைத்தும் (அக்கினியைக் கணையாக எய்தும்) அல்லவா_

திருவீழிமிழலை

வேனிகர் கண்ணியர் மிழலையு ளீர்நல
பானிக ருருவுடை யீரே
பானிக ருருவுடை யீரும துடனுமை
தான்மிக வுறைவது தவமே **#1057**

வேல் போன்று கூர்மையும், ஒளியுமுடைய கண்களையுடைய பெண்கள் வாழ்கின்ற திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருள்கின்ற, நல்ல பால் போன்ற நிறமுடைய சிவபெருமானே! பால் போன்ற நிறமுடைய உம்முடன் உமாதேவி வீற்றிருந்தருளுவது தவச்சிறப்புடையதாகும்.

திருவீழிமிழலை

விரைமலி பொழிலணி மிழலையு ளீர்செனி
நிறையுற வணிவது நெறியே
நிறையுற வணிகதொர் நெறியுடை யீரும
தரையுற வணிகவன வரவே **#1058**

நறுமணம் கமழும் சோலைகளையுடைய அழகிய திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளியுள்ளவரும், மண்டையோட்டால் ஆகிய மாலையை அணிந்துள்ளவருமான ஆளுகையையுடைய சிவபெருமானே! அவ்வாறு தலை மாலை அணிந்து ஆளுகை உடைய நீவிர் உமது அரையில் கச்சாகக் கட்டியது அரவமே.

திருவீழிமிழலை

விசையுறு புனல்வயன் மிழலையு ளீரர
வசையுற வணிவுடை யீரே
அசையுற வணிவுடை யீருமை யறிபவர்
நசையுறு நாவினர் தாமே **#1059**

வேகமாக ஓடிப் புனல் வற்றாத நீர்வளம் மிக்க வயல்களை உடைய திருவீழிமிலை என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்றவரும், அரவம் அசையும்படி ஆபரணமாக அணிந்துள்ளவருமான சிவபெருமானே! அவ்வாறு அசையும் அரவத்தை ஆபரணமாக அணிந்துள்ள உம்மை அறிபவர்களே, தாம் கூறுவனவற்றை அனைவரும் விரும்பிக் கேட்கும்வண்ணம் உண்மைப் பொருளை உபதேசிக்கும் வல்லுநர் ஆவர்.

<u>திருவீழிமிழலை</u>

விலங்கலொண் மதிளணி மிழலையு ளீரன்றவ்
இலங்கைமன் னிடர்கெடுத் தீரே
இலங்கைமன் னிடர்கெடுத் தீருமை யேத்துவார்
புலன்களை முனிவது பொருளே **#1060**

மலைபோன்ற உறுதியான மதிலையுடைய திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுபவரும், அன்று இலங்கை மன்னனான இராவணனைக் கயிலையின் கீழ் அடர்த்தபோது, அவன் உம்மைப் போற்றிச் சாமகானம் பாட அவன் துன்பத்தைப் போக்கியவரும் ஆகிய சிவபெருமானே! அவ்வாறு இலங்கை மன்னனின் துன்பத்தைப் போக்கிய உம்மைப் போற்றி வணங்குபவர்களே புலன்களை அடக்கி ஆளும் வல்லமையுடையவர்.

<u>திருவீழிமிழலை</u>

வெற்பமர் பொழிலணி மிழலையு ளீருமை
அற்புத னயனறி யானே
அற்புத னயனறி யாவகைநின்றவ
நற்பத மறிவது நயமே **#1061**

மலைபோன்ற மாளிகைகளும், சோலைகளு முடைய அழகிய திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்றவரும், திருமாலும், பிரமனும் அறியாவண்ணம் நின்றவருமான சிவபெருமானே! அவ்வாறு திருமாலும், பிரமனும் அறியாவண்ணம் நின்ற உம் நல்ல திருவடிகளை இடையறாது நினைப்பதே மானிடப் பிறவி எய்தினோர் அடையும் பயனாகும்.

<u>திருவீழிமிழலை</u>

வித்தக மறையவர் மிழலையு ளீரன்று
புத்தரொ டமணழித் தீரே
புத்தரொ டமணழித் தீருமைப் போற்றுவார்
பத்திசெய் மனமுடை யவரே **#1062**
நான்மறைகளைக் கற்றுவல்ல அந்தணர்கள் வாழும் திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்றவரும், புத்தமும், சமணமும் வீழுமாறு செய்தவருமான சிவபெருமானே! அவ்வாறு புத்தமும், சமணமும் வீழ்ச்சியடையும்படி செய்த உம்மைப் போற்றுபவர்களே பத்தியுடைய நன்மனம் உடையவர்கள்.

திருவீழிமிழலை

விண்பயில் பொழிலணி மிழலையு ளீசனைச்
சண்பையுண் ஞானசம் பந்தன
சண்பையுண் ஞானசம் பந்தன தமிழிவை
ஒண்பொரு ளுணர்வது முணர்வே **#1063**
ஆகாயத்தைத் தொடும்படி உயர்ந்தோங்கிய சோலைகளையுடைய அழகிய திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளும் சிவபெருமானை, திருச்சண்பை என்னும் திருத்தலத்தில் அவதரித்த ஞானசம்பந்தன் போற்றி அருளினான். அவ்வாறு, திருச்சண்பையில் அவதரித்த ஞானசம்பந்தன் அருளிய இத்தமிழ்ப் பதிகத்தின் சீரிய கருத்தை உணர்ந்து ஓதுதல் நல்லுணர்வு ஆகும்.

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம்,
பண் - சாதாரி,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது - இதுவே விருத்தாசலம். ,
சுவாமிபெயர் : பழமலைநாதர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

முரசதிர்ந் தெழுதரு முதுகுன்ற மேவிய
பரசமர் படையுடை யீரே
பரசமர் படையுடை யீருமைப் பரவுவார்
அரசர்க ளுலகிலா வாரே **#1064**

பூசை, திருவிழா முதலிய காலங்களில் முரசு அதிர்ந்து பேரோசை ஏழுப்புகின்ற திருமுதுகுன்றம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற மழுப்படையை உடைய சிவபெருமானே! மழுப்படையையுடைய உம்மைப் போற்றி வணங்குபவர்கள் உலகினில் அரசர்கள் ஆவர்

திருமுதுகுன்றம்

மொய்குழ லாளொட முதுகுன்ற மேவிய
பையர வம்மசைத் தீரே
பையர வம்மசைத் தீருமைப் பாடுவார்
நைவிலர் நாடொறு நலமே **#1065**

அடர்ந்த கூந்தலையுடைய உமாதேவியோடு திருமுதுகுன்றம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, பாம்பைக் கச்சாக அரையில் கட்டியுள்ள சிவபெருமானே! பாம்பைக் காச்சாகக் கட்டியுள்ள உம்மை பாடுவார் எவ்விதக் குறையும் இல்லாதவர். நாள்தோறும் நன்மைகளையே மிகப்பெறுவர்.

திருமுதுகுன்றம்

முழவமம் பொழிலணி முதுகுன்ற மேவிய
மழவிடை யதுவுடை யீரே
மழவிடை யதுவுடை யீருமை வாழ்த்துவார்
பழியொடு பகையிலர் தாமே **#1066**

முழவுகள் ஒலிக்கின்றதும், சோலைகளால் அழகு பெற்றதுமான திருமுதுகுன்றம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, இளமைவாய்ந்த இடபத்தை, வாகனமாகவும் கொடியாகவும் உடைய

சிவபெருமானே! இளமைவாய்ந்த இடபத்தை வாகனமாகவும், கொடியாகவும் கொண்ட உம்மை வாழ்த்துபவர்கள் பழியும், பாவமும் இல்லாதவர்கள் ஆவர்.

திருமுதுகுன்றம்

முருகமர் பொழிலணி முதுகுன்ற மேவிய
உருவமர் சடைமுடி யீரே
உருவமர் சடைமுடி யீருமை யோதுவார்
திருவொடு தேசினர் தாமே **#1067**

வாசனை பொருந்திய சோலைகள் அழகு செய்கின்ற திருமுதுகுன்றம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, அழகு பொருந்திய சடைமுடியினையுடையவரே! அழகு பொருந்திய சடைமுடியினை உடையவராகிய உம்மைப் போற்றி வணங்குபவர்கள் செல்வமும், புகழும் உடையவர்.

திருமுதுகுன்றம்

முத்தி தருமுயர் முதுகுன்ற மேவிய
பத்து முடியடர்த் தீரே
பத்து முடியடர்த் தீருமைப் பாடுவார்
சித்தநல் வவ்வடி யாரே **#1068**

முத்தியைத் தருகின்ற உயர்ந்த திருமுதுகுன்றம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்றவரும், இராவணனின் பத்துத் தலைகளையும் அடர்த்தவருமான சிவபெருமானே! இராவணனின் பத்துத் தலைகளையும் அடர்த்த உம்மைப் பாடுவார் அழகிய சித்தமுள்ள அடியவர்களாவார்கள்.

திருமுதுகுன்றம்

முயன்றவ ரருள்பெறு முதுகுன்ற மேவியன்
றியன்றவ ரறிவரி யீரே
இயன்றவ ரறிவரி யீருமை யேத்துவார்
பயன்றலை நிற்பவர் தாமே **#1069**

தவநெறியில் முயல்பவர்கள் அருள்பெறுகின்ற திருமுதுகுன்றம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, அன்று தம் செருக்கால் காணத் தொடங்கிய பிரமன், திருமால் இவர்களால் காண்பதற்கு அரியவராக விளங்கிய சிவபெருமானே! பிரமனும், திருமாலும் அறியவொண்ணாதவராகிய உம்மைப் போற்றி வழிபடுவர்கள் சிறந்த பயனாகிய முத்தியைத் தலைக்கூடுவர்.

திருமுதுகுன்றம்

மொட்டலர் பொழிலணி முதுகுன்ற மேவிய
கட்டமண் டேரைக்காய்ந் தீரே
கட்டமண் டேரைக்காய்ந் தீருமைக் கருதுவார்
சிட்டர்கள் சீர்பெறு வாரே #1070
மொட்டுக்கள் மலர்கின்ற சோலைகளையுடைய அழகிய திருமுதுகுன்றத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, கட்டுப்பாட்டினையுடைய சமணர்களையும், புத்தர்களையும் கோபித்தவரான சிவபெருமானே! சமணர்களையும், புத்தர்களையும் கோபித்த உம்மைத் தியானிப்பவர்கள் சிறந்த அடியார்கள் பெறுதற்குரிய முத்திப்பேற்றினைப் பெறுவர்.

திருமுதுகுன்றம்

மூடிய சோலைசூழ் முதுகுன்றத் தீசனை
நாடிய ஞானசம் பந்தன்
நாடிய ஞானசம் பந்தன செந்தமிழ்
பாடிய அவர்பழி யிலரே #1071
அடர்ந்த சோலைகள் சூழ்ந்த திருமுதுகுன்றம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளும் சிவபெருமானைத் திருஞானசம்பந்தர் போற்றி அருளினார். அவ்வாறு திருஞானசம்பந்தர் போற்றியருளிய இச்செந்தமிழ்ப் பதிகத்தைப் பாடுபவர்கள் பழியிலர் ஆவர்.

திருத்தோணிபுரம்

சீர்காழி

திருத்தோணிபுரம்,
பண் - சாதாரி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தோணியப்பர்.
தேவியார் : திருநிலைநாயகியம்மை.

கரும்பமர் வில்லியைக் காய்ந்து காதற்
காரிகை மாட்டருளி
அரும்பமர் கொங்கை யோர்பான் மகிழ்ந்த
வற்புதஞ் செப்பரிதால்
பெரும்பக லேவந்தென் பெண்மை கொண்டு
பேர்த்தவர் சேர்ந்தவிடஞ்
சுரும்பமர் சோலைகள் சூழ்ந்த செம்மைத்
தோணிபுரந்தானே **#1072**

சிவபெருமான் கரும்பினை வில்லாகக் கொண்ட மன்மதனைக் கோபித்து நெருப்புக் கண்ணால் எரித்து, பின்னர் அவனது அன்பிற்குரிய மனையாளாகிய இரதி வேண்ட அவள் கண்ணுக்கு மட்டும் உருவம் தோன்றுமாறு செய்து, கோங்கின் அரும்பு போன்ற கொங்கைகளையுடைய உமாதேவியை ஒரு பகுதியாகக் கொண்டு மகிழ்ந்த அற்புதம் செப்புதற்கரியதாகும். நண்பகலிலே வந்து எனது பெண்மை நலத்தைக் கவர்ந்து கொண்டு திரும்பவும் அவர் சென்று சேர்ந்த இடம் வண்டுகள் விரும்பி உறைகின்ற சோலைகள் சூழப்பெற்ற நன்னெறி மிக்க திருத்தோணிபுரம் ஆகும்.

சீர்காழி

கொங்கியல் பூங்குழற் கொவ்வைச் செவ்வாய்க்
கோமள மாதுமையாள்
பங்கிய லுந்திரு மேனி யெங்கும்
பால்வெள்ளை நீறணிந்து
சங்கியல் வெள்வளை சோர வந்தென்
சாயல்கொண் டார்தமதூர்
துங்கியன் மாளிகை சூழ்ந்த செம்மைத்
தோணி புரந்தானே **#1073**

இயற்கைமணம் பொருந்திய அழகிய கூந்தலையும், கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயையுமுடைய அழகிய உமா தேவியைத் தன் ஒரு

பாகமாகப் பொருந்திய, திருமேனி முழுவதும் பால்போன்ற வெண்மையான திருநீற்றை அணிந்துள்ள சிவபெருமான் எனது உள்ளத்தில் புகுந்து என் வளையல் கழன்று விழுமாறு செய்து, எனது தோற்றப் பொலிவினைக் கெடுத்து வீற்றுருந்தருளும் ஊர் உயர்ந்த மாளிகைகள் சூழ்ந்த நன்னெறி மிக்க திருத்தோணிபுரம் என்னும் திருத்தலமாகும்.

சீர்காழி

மத்தக் களிற்றுரி போர்க்கக் கண்டு
மாதுமை பேதுறலுஞ்
சித்தந் தெளியநின் றாடி யேறூர்
தீவண்ணர் சில்பலிக்கென்
றொத்தபடி வந்தென் னுள்ளங் கொண்ட
வொருவர்க் கிடம்போலுந்
துத்தநல் லின்னிசை வண்டு பாடுந்
தோணி புரந்தானே **#1074**

மதம் பிடித்த யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டதைக் கண்ட உமாதேவி அஞ்சவும், அவள் பயம் நீங்கி மனம் தெளியச் சிவபெருமான் திருநடனம் செய்தார். அவர் இடபத்தை வாகனமாக உடையவர். நெருப்புப் போன்ற சிவந்த மேனியர். சிறுபிச்சை ஏற்க அதற்கேற்ற பிட்சாடனர் கோலத்தில் வந்து உனது உள்ளத்தைக் கவர்ந்து கொண்ட ஒப்பற்றவராகிய அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம் துத்தம் என்னும் நல்ல இன்னிசையை, வண்டுகள் பாடுகின்ற திருத்தோணிபுரம் என்னும் திருத்தலமாகும்.

சீர்காழி

வள்ள லிருந்த மலையத னைவலஞ்
செய்தல் வாய்மையென
உள்ளங் கொள்ளாது கொதித்தெ ழுந்தன்
றெடுத்தோ னுரநெரிய
மெள்ள விரல்வைத்தெ னுள்ளங் கொண்டார்
மேவு மிடம்போலுந்
துள்ளொலி வெள்ளத்தின்மேன்மி தந்த
தோணி புரந்தானே **#1075**

வேண்டுவோர் வேண்டுவதே வரையாது வழங்கும் வள்ளலான சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற கயிலைமலையை வலஞ்செய்து செல்லலே உண்மைநெறி என்பதை உள்ளத்தில் கொள்ளாது, தனது திக்விஜயத்திற்கு இடையூறாக உள்ளது என்று கோபம் கொண்டு அன்று

திருக்கயிலை மலையைப் பெயர்த்து எடுக்க முயன்ற இராவணனின் நெஞ்சு நெரியும்படி தன்காற்பெருவிரலை ஊன்றிய, என்னுடைய உள்ளத்தைக் கவர்ந்து கொண்ட சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற இடம், பிரளய காலத்தில் அலைகள் துள்ளி வரவதால் உண்டாகிய ஒலியுடன் கூடிய வெள்ளத்தின்மேல் மித்ந்து நிலைபெற்ற திருத்தோணிபுரம் என்னும் திருத்தலமாகும்.

<u>சீர்காழி</u>

வெல்பற வைக்கொடி மாலு மற்றை
விரைமலர் மேலயனும்
பல்பற வைப்படி யாயுயர்ந்தும் பன்றிய
தாய்ப்ப ணிந்தஞ்
செல்வறநீண்டெஞ் சிந்தைபொண்ட
செல்வ ரிடம்போலுந்
தொல்பற வைசுமந் தோங்கு செம்மைத்
தோணி புரந்தானே **#1076**

கருடக்கொடிடையு திருமாலும், நறுமணமிக்க தாமரை மலரில் வீற்றிருந்தருளும் பிரமனும் முறையே பன்றியாய் உருக்கொண்டு கீழே அகழ்ந்து கென்றும், அன்னப் பறவையாய் உருவெடுத்தும், காணற்கரியராய் நெருப்புருவாய் நீண்டு எம் உள்ளத்தைக் கவர்ந்த செல்வரான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், தொன்மையான பறவைகள் சுமந்த ஓங்கியுள்ள நன்னெறி மிக்க திருத்தோணிபுரம் என்னும் திருத்தலமாகும்.

<u>சீர்காழி</u>

குண்டிகை பீலி தட்டோடு நின்று
கோசரங் கொள்ளியரும்
மண்டைகை யேந்தி மனங்கொள் கஞ்சி
யூணரும் வாய்மடிய
இண்டை புனைந்தெரு தேறிவந்தெ
னெழில்கவந் தாரிடமாம்
தொண்டிசை பாட லறாத தொன்மைத்
தோணி புரந்தானே **#1077**

கமண்டலம், மயில்தோகை, தடுக்கு ஆகிய வற்றுடன் மலைகளில் வசிக்கின்ற சமணர்களும், மண்டை என்னும் உண்கலத்தில் கஞ்சிபெற்றுப் பருகும் புத்தர்களும் பேசுகின்ற வார்த்தைகள் அடங்க, இண்டை மாலை புனைந்து, இடப வாகனத்திலேறி எனது அழகைக் கவர்ந்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், தொண்டர்களின்

இசைப்பாடல்கள் நீங்காத பழமைவாய்ந்த திருத்தோணிபுரம் என்னும் திருத்தலமாகும்.

சீர்காழி

தூமரு மாளிகை மாட நீடு
தோணி புரத்திறையை
மாமறை நான்கினொ டங்க மாறும்
வல்லவன் வாய்மையினால்
நாமரு கேள்வி நலந்திகழும் ஞான
சம்பந் தன்சொன்ன
பாமரு பாடல்கள் பத்தும் வல்லார்
பார்முழு தாள்பவரே **#1078**

தூய்மையான வெண்ணிற மாளிகைகள், மாடங்கள் நிறைந்த திருத்தோணிபுரம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமானைப் போற்றி, நானகு வேதங்களும், அவற்றின் ஆறு அங்கங்களும் வல்லவனும், தானுண்ட ஞானப் பாலை நாவால் மறித்து உண்மையான உபதேச மொழிகளாக் நமக்குக் கேள்வி ஞானத்தைப் புகட்டிட நன்மையைச் செய்கின்றவனுமான திருஞானசம்பந்தன் அருளிய பாட்டிலக்கணங்க.ள் பொருந்திய இப்பாடல்கள் பத்தினையும் பத்தியுடன் ஓத வல்லவர்கள் இப்பூவுலகம் முழுவதையும் ஆளும் பேறு பெறுவர்

திருஇராமேச்சுரம்

திருஇராமேச்சுரம்

திருஇராமேச்சுரம்,
பண் - சாதாரி,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : இராமநாதேசுவரர்.
தேவியார் : பர்வதவர்த்தனி.

திரிதரு மாமணி நாகமாடத்
திளைத்தொரு தீயழல்வாய்
நரிகதிக்க வெரியேந்தி யாடு
நலமே தெரிந்துணர்வார்
எரிகதிர் முத்த மிலங்குகான
லிராமேச் சுரமேய
விரிகதிர் வெண்பிறை மல்குசென்னி
விமலர் செயுஞ்செயலே #1079

அரிய மாணிக்கங்களையுடைய நாகங்களைப் படமெடுத்து ஆடுமாறு தம் உடலில் அணிந்துள்ளவர் சிவபெருமான். அவர் மகாசங்கார காலத்தில் நரிகள் ஊளையிடும் சுடுகாட்டில் நெருப்பேந்தி நடனம் செய்வார். மிக்க ஒளியுடைய முத்துக்கள் விளங்கும் சோலைகள் சூழ்ந்த இராமேச்சுரம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, ஒளிக்கதிர் வீசும் வெண்மையான பிறைச்சந்திரனைச் சடைமுடியில் தரித்த, இயர்பாகவே பாசங்களின் நீங்கியவரான சிவபெருமானின் அச்செயல், உயிர்கள் இளைப்பாறும் பொருட்டுச் செய்யப்படும் அருட்செயல் என்பதை உணர்ந்தவர்களே மெய்ஞ்ஞானிகள் ஆவர்.

திருஇராமேச்சுரம்

பொறிகிளர் பாம்பரை யார்த்தயலே
புரிவோ டுமைபாடத்
றிகிள ரப்பெயர்ந் தெல்லியாடுந்
திறமே தெரிந்துணர்வார்
எறிகிளர் வெண்டிரை வந்துபேரு
மிராமேச் சுரமேய
மறிகிளர் மானம்ழுப் புல்குகையெம்
மணாளர் செயுஞ்செயலே #1080

வெண்ணிற அலைகள் துள்ளிவீசும் கடலுடைய இராமேச்சுரத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, இள மான்கன்றையும், மழுவியும்

ஏந்தியுள்ள சிவபெருமான் புள்ளிகளையுடைய பாம்பை இடையில் கட்டிக் கொண்டு, பக்கத்திலே சுருண்ட கூந்தலையுடைய உமாதேவி பாட, அதற்பேற்ப விரலால் தேறித்துப் பண்ணும் யாழ் முதலியவற்றின் இசை ஒலிக்க, நள்ளிரவில் நடனமாடும் செயலின் உண்மையைத் தெரிந்து உணர்பவர் மெய்ஞ்ஞானிகளாவர்.

திருஇராமேச்சுரம்

அலைவளர் தண்புனல் வார்சடைமே
லடக்கி யொருபாகம்
மலைவளர் காதலி பாடவாடி
மயக்கா வருமாட்சி
இலைவளர் தாழை முகிழ்விரியு
மிராமேச் சுரமேயார்
தலைவளர் கோலநன் மாலைசூடுந்
தலைவர் செயுஞ்செயலே **#1081**

தழைகளை உடைய தாழை மரங்கள் மலர்களை விரிக்கும் திருராமேச்சுரத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற. அழகிய தலைமாலைகளைச் சூடிய, தலைவராகிய சிவபெருமான் தமது நீண்ட சடைமுடிமேல் அலைபெருகிவரும் கங்கைநீரை அடக்கி, ஒரு பாகமாக அமைந்த மலையிலே வளர்ந்த உமாதேவி பாட, நடனமாடித் தம் தன்மை இதுவென்றுபிறர் அறியாதவாறு செய்து வரும் அருஞ்செயலின் மாட்சியை மெய்ஞ்ஞானிகளே உணர்வர்.

திருஇராமேச்சுரம்

மாதன நேரிழை யேர்தடங்கண்
மலையான் மகள்பாடந்
தேதெரி யங்கையி லேந்தியாடுத்
திறமே தெரிந்துணர்வார்
ஏதமி லார்தொழு தேத்திவாழ்த்து
மிராமேச் சுரமேயார்
போதுவெண் டிங்கள்பைங் கொன்றைசூடும்
புனிதர் செயுஞ்செயலே **#1082**

குற்றமற்ற அடியவர்கள் தொழுது போற்றத் திரு இராமேச்சுரம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, அரும்பு போன்ற இள வெண்ணிறப் பிறைச்சந்திரனையும், கொன்றை மலரையும் சூடியுள்ள புனிதரான சிவபெருமான், பெரிய கொங்கைகளையுடையவளாய், ஒளிபொருந்திய ஆபரணங்களை அணிந்த, பெரிய கண்களையுடைய, மலையான்மகளான உமாதேவி பாட, ஒளிபொருந்திய நெருப்பை

உள்ளங்கையிலேந்தி நடனமாடும் செயலின் திறத்தைத் தெரிந்துணர்வார் சிவஞானிகளாவர்.

திருஇராமேச்சுரம்

சூலமோ டொண்மழு நின்றிலங்கச்
சுடுகா டிடமாகக்
கோலநன் மாதுடன் பாடவாடுங்
குணமே குறித்துணர்வார்
ஏல நறும்பொழில் வண்டுபாடு
மிராமேச் சுரமேய
நீலமார் கண்ட முடையவெங்கள்
நிமலர் செயுஞ்செயலே **#1083**

ஏலம் முதலிய செடிகளையுடைய நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்த திருஇராமேச்சுரம் என்னும் திருத் தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற நீலகண்டமுடைய, இயல்பாகவே பாவங்களின் நீங்கியவரான எங்கள் சிவபெருமான், சூலம், ஒளி பொருந்திய மழு ஆகியவற்றை ஏந்திச் சுடுகாட்டை இடமாகக் கொண்டு அழகிய உமாதேவி அருகில் நின்று பாட, நடனம் செய்யும் குணத்தைக் குறித்துணர்பவர் சிவஞானிகளாவர்.

திருஇராமேச்சுரம்

கணைபிணை வெஞ்சிலை கையிலேந்திக்
காமனைக் காய்ந்தவர்தாம்
இணைபிணை நோக்கிநல் லாளோடாடு
மியல்பின ராகிநல்ல
இணைமலர் மேலன்னம் வைகுகான
லிராமேச் சுரமேயார்
அணைபிணை புல்கு கரந்தைசூடும்
அடிகள் செயுஞ்செயலே **#1084**

சிறந்த தாமரை மலர்களில் அன்னங்கள் வாழும் சோலைகள் சூழ்ந்த திருஇராமேச்சுரம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிந்தருளுகின்ற, சேர்த்துக் கட்டப்பெற்ற கரந்தைமாலை சூடிய சிவபெருமான், ஐம்மலர்க்கணைகளைத் தொடுக்க வில்லைக் கையில் ஏந்திய மன்மதனை எரித்தவர். அப்பெருமான் போன்ற மருண்ட கண்களையுடைய உமாதேவியோடு நடனமாடும் இயல்புடையவர்.

திருஇராமேச்சுரம்

நீரினார் புன்சடை பின்புதாழ

நெடுவெண் மதிசூடி
ஊரினார் துஞ்சிருள் பாடியாடும்
உவகை தெரிந்துணர்வார்
ஏரினார் பைம்பொழில் வண்டுபாடு
மிராமேச் சுரமேய
காரினார் கொன்றைவெண் டிங்கள்சூடுங்
கடவுள் செயுஞ்செயலே **#1085**
வண்டுகள் பாடும் அழகிய சோலைகள் சூழ்ந்த திருஇராமேச்சுரம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, கார்காலத்தில் மலரும் கொன்றையையும், வெண்ணிறப் பிறைச் சந்திரனையும் சூடியவரான சிவபெருமான், கங்கையைத் தாங்கிய புன்சடை பின்புறம் தொங்க, மிக்க வெண்ணிறப்பிறைச்சந்திரனைச் சூடி, உலகமே உறங்கும் நள்ளிரவில் பாடி ஆடும் உவகையின் செயல் தன்மையை உணர்பவர் சிவஞானிகளாவர்.

திருஇராமேச்சுரம்

பொன்றிகழ் சுண்ணவெண் ணீறுபூசிப்
புலித்தோ லுடையாக
மின்றிகழ் சோதியர் பாடலாடன்
மிக்கார் வருமாட்சி
என்றுநல் லோர்கள் பரவியேத்து
மிராமேச் சுரமேயார்
குன்றினா லன்றரக் கன்றடந்தோ
ளடர்த்தார்கொளுங் கொள்கையே **#1086**
என்றும் நல்லோர்கள் போற்றி வணங்கும் திரு இராமேச்சுரம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, கயிலைமலையால் அன்று இராவணனின் அகன்ற வலிமையான தோள்களை அடர்த்த சிவபெருமான், நறுமணமிக்க அழகிய திருவெண்ணீற்றினைத் திருமேனியில் பூசி, புலித்தோலாடை அணிந்து, மின்னல் போன்று ஒளிரும் செவ்வண்ணத்தராய், பாடி ஆடி வரும் செயலின் பருமையை உணர்பவர் சிவஞானிகளாவர்.

திருஇராமேச்சுரம்

கோவல னான்முக னோக்கொணாத
குழக னழகாய
மேவல னொள்ளெரி யேந்தியாடு
மிமையோ ரிறைமெய்ம்மை
ஏவல னார்புகழ்ந் தேத்திவாழ்த்து

மிராமேச் சுரமேய
சேவல வெல்கொடி யேந்துகொள்கையெம்
மிறைவர் செயுஞ்செயலே #1087
அம்பு எய்தலில் வல்ல இராமபிரான் புகழ்ந்து ஏத்திவாழ்த்தும் திருஇராமேச்சுரம் என்னும் திருத்தலத்தில், விரும்பி வீற்றிருந்தருகின்ற, இடபம் பொறித்த வெற்றிக் கொடியை ஏந்திய சிவபெருமான், திருமால், பிரமன் இவர்களால் அறியப்படாதவர். இளமையும், அழகும் அமைந்த திருவுருவினர். ஒளி பொருந்திய நெருப்பைத் தம் கையிலேந்தி ஆடுகின்ற, தேவர்கட்கெல்லாம் இறைவனான அப்பெருமானின் அருட்செயலின் மெய்ம்மையை அறிவோர் சிவஞானிகளாவர்.

திருஇராமேச்சுரம்

பின்னொடு முன்னிடு தட்டைச்சாத்திப்
பிரட்டே திரிவாரும்
பொன்னெடுஞ் சீவரப் போர்வையார்கள்
புறங்கூறல் கேளாதே
இன்னெடுஞ் சோலைவண் டியாழ்முரலு
மிராமேச் சுரமேய
பன்னெடு வெண்டலை கொண்டுழலும்
பரமர் செயுஞ்செயலே #1088
முதுகிலும், மார்பிலும் தடுக்கை அணிந்து, ஒதுக்கப்பட்ட இடங்களில் திரியும் சமணர்களும், பொன் போன்ற சீவரம் என்னும் ஆடையைப் போர்த்த புத்தர்களும் கூறும் புறங் கூற்று மொழிகளைக் கேளாமல், யாழிசை போல் வண்டுகள் ஒலிக்கும் சோலைகளை உடைய திருஇராமேச்சுரம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளி, பல்லையுடைய பெரிய மண்டையோட்டில் பலியேற்றுத் திரியும் சிவபெருமான் செய்யும் செயல்களைக் கேட்டு உணர்ந்து, அவரை வழிபட்டு உய்திபெறுங்கள்.

திருஇராமேச்சுரம்

தேவியை வவ்விய தென்னிலங்கை
யரையன் றிறல்வாட்டி
ஏவியல் வெஞ்சிலை யண்ணல்நண்ணு
மிராமேச் சுரத்தாரை
நாவியன் ஞானசம் பந்தனல்ல
மொழியா னவின்றேத்தும்
பாவியன் மாலைவல்லா ரவர்தம்வினை
யாயின பற்றறுமே #1089

சீதாதேவியைக் கவர்ந்த தென்னிலங்கை மன்னனான இராவணனின் வலிமையை அழித்து, அம்பு எய்யும் வில்லேந்திய இராமபிரான் வழிபட்ட திருஇராமமேச்சுரம் என்னும் திருத்தலத்தில், விரும்பி வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமானை, நாவலராகிய ஞானசம்பந்தர், நல்ல மொழியால் போற்றிப் பாடிய பாட்டின் இலக்கணம் வாய்ந்த இப்பாமாலையை, ஓதி வழிபட வல்லவர்களின் வினைகள், முற்றிலும் அழியும்.

திருநாரையூர்

திருநாரையூர்

திருநாரையூர்,
பண் - பழம்பஞ்சுரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சௌந்தரேசர்.
தேவியார் : திரிபுரசுந்தரியம்மை.

காம்பினை வென்றமென் றோளி பாகங்
கலந்தா னலந்தாங்கு
தேம்புனல் சூழ்திகழ் மாமடு விற்றிரு
நாரை யூர்மேய
பூம்புனல் சேர்புரி புன்ச டையான்
புலியின் னுரிதோன்மேல்
பாம்பினை வீக்கிய பண்ட ரங்கன்
பாதம் பணிவோமே #1090

சிவபெருமான், மூங்கிலைப் போன்ற தோளையுடைய உமாதேவியைத் தம் ஒரு பாகமாகக் கொண்டவர். நலம் தரும் இனிய நீர் சூழ்ந்த சிறந்த நீர்நிலைகளையுடைய திருநாரையூர் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுபவர். அழகிய கங்கையையும், முறுக்குண்ட சிவந்த சடையையுமுடையவர். புலித்தோலாடை அணிந்தவர். பாம்பைக் கச்சாகக் கட்டியவர். பண்டரங்கன் என்னும் திருப் பெயர் உடையவர். அத்தகைய சிவபெருமானின் திருப்பாதங்களை நாம் பணிவோமாக.

திருநாரையூர்

தீவினை யாயின தீர்க்க நின்றான்
றிருநாரை யூர்மேயான்
பூவினை மேவு சடைமுடி யான்புடை
சூழப் பலபூதம்
ஆவினி லைந்துங்கொண் டாட்டு கந்தா
னடங்கார் மதின்மூன்றும்
ஏவினை யெய் தழித்தான் கழலே
பரவா வெழுவோமே #1091

சிவபெருமான் தம்மை வழிபடுபவர்களின் தீவினைகளைத் தீர்த்தருள்பவர். திருநாரையூர் என்னும் திருத் தலத்தில் விரும்பி வீற்றிருந்தருள்பவர். பூமாலையணிந்த சடைமுடி உடையவர். பூதகணங்கள் புடைசூழ விளங்குபவர். பசுவிலிருந்து பெறப்படும் ஐந்து

பொருள்களால் (பஞ்சகவ்வியம்) அபிடேகம் செய்து கொள்வதில் விருப்பமுடையவர். அடங்காது திரிந்த பகையசுரர்களின் மும்மதில்களை ஓர் அம்பு எய்து அழித்தவர். அப்பெருமானின் திருவடிகளை நாம் வழிபட்டு உயர்வடைவோமாக!.

திருநாரையூர்

மாயவன் சேயவன் வெள்ளி யவன்
விடஞ்சேரு மைமிடற்றன்
ஆயவ னாகியொ ரந்தர மும்மவ
னென்று வரையாகம்
தீயவ னீரவன் பூமி யவன்றிரு
நாரை யூர்தன்னில்
மேயவ னைத்தொழு வாரவர் மேல்வினை
யாயின வீடுமே **#1092**

கருநிறமுடைய திருமால், செந்நிறமுடைய உருத்திரன், வெள்ளைத் தாமரைப் பூவில் வீற்றிருக்கும் பிரமன் விட முண்ட நீலகண்டமுடைய மகேசுவரன் ஆகிய மூர்த்தி பேதங்களும், மற்றும் பல வேறுபாடான மூர்த்தி பேதங்களும் தாமேயாகியவர். மலைபோன்ற திருமேனி உடையவர். நெருப்பு, நீர், பூமி (உபலட்சணத்தால் காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், உயிர்) இவற்றையும் உடம்பாக உடையவர். திருநாரையூர் என்னும் திருத்தலத்தில் விரும்பு வீற்றிருந்தருள்பவர். அப்பெருமானைத் தொழு வாருடைய வினைகள் முழுதும் அவர்களைவிட்டு நீங்கும்.

திருநாரையூர்

துஞ்சிரு ளாடுவர் தூமுறுவல்
துளங்குமு டம்பினராய்
அஞ்சுட ராரெரி யாடு வரார்அழ
லார்வி ழிக்கண்
நஞ்சுமிழ் நாக மரைக்கசைப் பர்நல
னோங்கு நாரையூர்
எஞ்சிவ னார்க்கடி மைப்படு வார்க்கினி
யில்லை யேதமே **#1093**

சிவபெருமான் அமைத்தும் ஒடுங்குகின்ற ஊழிக் காலத்தில் திருநடனம் செய்பவர். தூய புன்சிரிப்போடு விளங்கும் திருமேனியர். அழகிய சுடரானது நன்கு எரியும்படி கைகளை வீசி ஆடுவார். நெற்றியில் நெருப்புக் கண்ணுடையவர். நஞ்சைக் கக்கும் நாகத்தை அரையில் கச்சாகக் கட்டியவர். நலம் பெருகச் செய்யும் திருநாரையூர் என்னும்

திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற எம் சிவபெருமானுக்கு அடிமைத் தொண்டு செய்பவர்கட்கு இனி எந்நாளும் துன்பம் என்பதே இல்லை.

திருநாரையூர்

பொங்கி ளங்கொன் றையினார் கடலில்
விடமுண் டிமையோர்கள்
தங்களை யாரிடர் தீர நின்ற
தலைவர் சடைமேலோர்
திங்களைவைத்தன லாட லினார்திரு
நாரை யூர்மேய
வெங்கனல் வெண்ணீ றணிய வல்லா
ரவரே விழுமியரே **#1094**

சிவபெருமான், செழித்து விளங்கும் இடங்கொன்றை மலரைச் சூடியவர். பாற்கடலில் தோன்றிய விடத்தை உண்டு தேவர்களின் பெருந்துயரைத் தீர்த்த தலைவர். சடைமேல் ஒரு சந்திரனை அணிந்து நெருப்பைக் கையிலேந்தி ஆடுபவர். திரு நாரையூர் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுபவர். வெங்கனலால் நீறாக்கப்பட்ட வெண்ணீற்றினை அணியவல்ல அப்பெருமானே யாவரினும் மேலானவர் ஆவர்.

திருநாரையூர்

பாரு றுவாய் மையினார் பரவும்
பரமேட்டி பைங்கொன்றைத்
தாரு றுமார் புடையான் மலையின்
றலைவன் மலைமகளைச்
சீரு றுமா மறுகிற் சிறைவண்
டறையுந் திருநாரை
யூரு றையெம் மிறைவர்க் கிவையொன்
றொடொன் றொவ்வாவே **#1095**

சிவபெருமான், இந்நிலவுலகம் முழுவதும் புகழ் பரவும் மெய்யுணர்வுடையவர்களால் வணங்கப்படும் மேலான பரம்பொருள் ஆவார். பசுமைவாய்ந்த கொன்றை மாலையை அணிந்த மார்புடையவர். கைலைமலையின் தலைவர். மலைமகளைச் சிறப்புடன் ஒரு பாகமாகக் கொண்டவர். வீதிகள் சிறகுகளையுடைய வண்டுகள் ஒலிக்கின்ற திருநாரையூர் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருள்கின்ற இறைவர் அணிந்துள்ள பொருள்கள் ஒன்றோடொன்று ஒவ்வாதனவாம்.

திருநாரையூர்

கள்ளி யிடுதலை யேந்துகை யர்கரி
காடர் கண்ணுதலர்
வெள்ளிய கோவண வாடை தன்மேல்
மிளிரா டரவார்த்து
நள்ளிரு ணட்டம தாடுவர் நன்னல
னோங்கு நாரையூர்
உள்ளிய போழ்தி லெம்மேல் வருவல்
வினையாயின வோடுமே **#1096**

சிவபெருமான் கள்ளிச் செடிகள் நிறைந்த சுடுகாட்டில் இடப்பட்ட மண்டையோட்டை ஏந்திய கையையுடையவர். சுடுகாட்டில் இருப்பவர். நெற்றிக் கண்ணர். வெண்ணிறக் கோவண ஆடையை அணிந்து, அதன்மேல் ஒளிரும், ஆடுகின்ற பாம்பைக் கச்சாகக் கட்டி நள்ளிருளில் நடனமாடுபவர். நல்ல நலன்களை எல்லாம் மேன்மேலும் பெருகத் தருகின்ற திருநாரையூர் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமானை நினைத்த மாத்திரத்தில் எம்மேல் வருகின்ற வலிய வினைகள் யாவும் ஓடிவிடும்.

<u>திருநாரையூர்</u>

நாமமெ னைப்பல வும்முடை யான்நல
னோங்கு நாரையூர்
தாமொம் மெனப்ப றையாழ் குழல்
தாளார் கழல்பயில
ஈம விளக்கெரி சூழ்சு டலை
யியம்பும் மிடுகாட்டில்
சாம முரைக்கநின் றாடு வானுந்
தழலாய சங்கரனே **#1097**

நலன்களைப் பெருகச் செய்யும் திருநாரையூர் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமான் பல திருப்பெயர்களை உடையவர். பறை, யாழ், குழல் முதலியன தாம் ஒம் என ஒலிக்க, அவற்றொடு ஒத்துத் தம் திருவடிகளில் அணிந்துள்ள கழல்கள் ஒலிக்க, காட்டில், கொள்ளி விளக்கு எரிய, சாமகானம் ஒலிக்க நின்றாடுகின்ற பெருமான் நெருப்புருவான சங்கரனே ஆவார்.

<u>திருநாரையூர்</u>

ஊனுடைவெண் டலைகொண் டுழல்வா
னொளிர்புன் சடைமேலோர்
வானிடைவெண் மதிவைத் துகந்தான்
வரிவண் டியாழ்முரலத்

தேனுடைமா மலரன்னம் வைகுந்
திருநாரை யூர்மேய
ஆனிடையைந் துகந்தா னடியே
பரவா வடைவோமே #1098

சிவபெருமான் ஊனுடை மண்டையோட்டை உண்கலனாகக் கொண்டு, பிச்சையேற்றுத் திரிபவர். ஒளிர்கின்ற சடைமேல், வானத்தில் தவழும் வெண்ணிறச் சந்திரனை அணிந்து, மகிழ்பவர். வரிகளையுடைய வண்டுகள் யாழிசைபோல் ஒலிக்க, தேன் உடைய சிறந்த தாமரை மலரில் அன்னம் தங்க விளங்கும் திருநாரையூர் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுபவர். பசுவில் இருந்து பெறப்படும் பஞ்சகவ்வியங்களால் அபிடேகம் செய்யப்படுதலை விரும்புபவர். அப்பெருமானின் திருவடிகளை வணங்கி நற்கதி அடைவோமாக!

திருநாரையூர்

தூசுபு னைதுவ ராடைமேவுந்
தொழிலாருடம்பினிலுள்
மாசுனைந்துடைநீத்தவர்கண்
மயனீர்மை கேளாதே
தேசுடையீர்கள் தெளந்தடைமின்
திருநாரை யூர்தன்னில்
பூசுபொடித்த லைவ ரடியா
ரடியே பொருத்தமே #1099

மஞ்சட் காவி உடை உடுத்தும் புத்தர்களும், உடம்பிலும், உள்ளத்திலும், அழுக்கினைக் கொண்டு ஆடை உடுத்தலை ஒழித்தவர்களாகிய சமணர்களும் கூறும் மயக்கும் தன்மையுடைய மொழிகளைக் கேளாதீர்கள். மெய்யறிவுடையவர்களே! சிவபெருமானே மெய்ப்பொருள் என்பதைத் தெளவாக உணர்ந்து, திருநாரையூர் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, திருவெண்ணீறு பூசிய தலைவராகிய சிவபெருமானின் திருவடி களையும், அவர் அடியார்களின் திருவடிகளையும் வணங்குவதே பொருந்தும் எனக்கொண்டு அவற்றைச் சரணாக அடையுங்கள்.

திருநாரையூர்

தண்மதி தாழ்பொழில் சூழ் புகலித்
தமிழ்ஞான சம்பந்தன்
ஒண்மதி சேர்சடை யானுறையுந்
திருநாரை யூர்தன்மேல்
பண்மதி யாற்சொன்ன பாடல் பத்தும்

பயின்றார் வினைபோகி
மண்மதி யாதுபோய் வான்புகுவர்
வானோ ரெதிர்கொளவே **#1100**

குளிர்ச்சி பொருந்திய சந்திரன் தவழ்கின்ற சோலைகள் சூழ்ந்த திருப்புகலி என்னும் திருத்தலத்தில் அவதரித்த தமிழ் வல்ல ஞானசம்பந்தன், ஒளி பொருந்திய சந்திரனை அணிந்த சடையையுடைய சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் திருநாரையூர் என்னும் திருத்தலத்தின் மேல், பயில்வோருக்கு இசையறிவு உண்டாகும் வண்ணம் பாடியருளிய இப்பாடல்கள் பத்தையும் பயின்று ஓத வல்லவர்கள் மண்ணுலக வாழ்க்கை நிலையற்றதென உணர்ந்து அதனை மதியாது, தேவர்கள் எதிர் கொண்டழைக்க வானுலகை அடைவர்.

திருவலம்புரம்

திருவலம்புரம்

திருவலம்புரம்,
பண் - பழம்பஞ்சுரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வலம்புரநாதர்.
தேவியார் : வடுவகிர்க்கணம்மை.

கொடியுடை மும்மதி லூடுருவக்
குனிவெஞ் சிலைதாங்கி
இடிபட வெய்த வமரர்பிரா
னடியா ரிசைந்தேத்தத்
துடியிடை யாளையொர் பாகமாகத்
துதைந்தா ரிடம்போலும்
வடிவுடை மேதி வயல்படியும்
வலம்புர நன்னகரே **#1101**

கொடிகளையுடைய மூன்று மதில்களையும் ஊடுருவிச் செல்லுமாறு மேருமலையை வில்லாக வளைத்துத் தாங்கி, பேரொலியுடன் அம்மதில் அழியும்படி அம்பெய்த தேவர்களின் தலைவரான சிவபெருமான், அடியார்களெல்லாம் மனமொன்றிக் கூடிப்போற்ற உடுக்கை போன்ற குறுகிய இடையுடைய உமா தேவியைப்பிரிவில்லாமல் தம் உடம்பில் ஒரு பாகமாகக் கொண்டு வீற்றிருந்தருளுகின்ற இடமாவது அழகிய எருமைகள் வயலிலே படியும் திருவலம்புரம் என்னும் நன்னகராகும்.

திருவலம்புரம்

கோத்தகல் லாடையுங் கோவணமுங்
கொடுகொட்டி கொண்டொருகைத்
தேய்த்தன் றநங்கனைத் தேசழித்துத்
திசையார் தொழுதேத்தக்
காய்த்தகல் லாலதன் கீழிருந்த
கடவுள் ளிடம்போலும்
வாய்த்தமுத் தீத்தொழி னான்மறையோர்
வலம்புர நன்னகரே **#1102**

சிவபெருமான் காவியுடையும், கோவணமும் அணிந்தவர். ஒரு கையில் கொடுகொட்டி என்னும் வாத்தியத்தை ஏந்தி வாசிப்பவர். மன்மதனை அன்று உருவழியும்படி எரித்தவர். எல்லாத் திசைகளிலும் உள்ளவர்கள் தொழுது வணங்கும்படி, காய்கள் நிறைந்த கல்லால மரத்தின் கீழ்த்

தட்சிணாமூர்த்தி திருக்கோலத்தில் வீற்றிருந்தவர். அக்கடவுள் விரும்பி வீற்றிருந்தருளும் இடம், முத்தீ வளர்த்து, நான்கு வேதங்களையும் நன்கு பயின்ற அந்தணர்கள் வாழ்கின்ற திருவலம்புரம் என்னும் நன்னகராகும்.

<u>திருவலம்புரம்</u>

நொய்யதொர் மான்மறி கைவிரலின் னுனைமே னிலையாக்கி
மெய்யெரி மேனிவெண் ணீறுபூசி
விரிபுன் சடைதாழபப
மையிருஞ் சோலை மணங்கமழ
இருந்தா ரிடம்போலும்
வைகலு மாமுழ வம்மதிரும்
வலம்புர நன்னகரே **#1103**

இலேசான உடம்பையுடைய மான்கன்றைத் தன் கைவிரல் நுனிமேல் நிலையாக நிற்குமாறு செய்து, நெருப்புப் போன்ற சிவந்த மேனியில் திருவெண்ணீற்றினைப் பூசி, விரிந்த சிவந்தசடை தாழ விளங்கும் சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், நாள்தோறும் நித்திய பூசையே திருவிழாப் போல் முழவதிரச் சிறப்புடன் நடக்கும், இருளடர்ந்த பெரிய சோலைகளின் நறுமணம் கமழும் திருவலம்புரம் என்னும் நன்னகராகும்.

<u>திருவலம்புரம்</u>

ஊனம ராக்கை யுடம்புதன்னை
உணரிற் பொருளன்று
தேனமர் கொன்றையி னானடிக்கே
சிறுகாலை யேத்துமினோ
ஆனம ரைந்துங்கொண் டாட்டுகந்த
வடிக ளிடம்போலும்
வானவர் நாடொறும் வந்திறைஞ்சும்
வலம்புர நன்னகரே **#1104**

தசை முதலியவற்றால் கட்டப்பட்ட இவ்வுடம்பு நிலையற்றது என்பதை உணர்ந்து, அதனைப் பேணுதலையே பொருளாகக் கொள்ளாது, தேன்மணம் கமழும் கொன்றைமாலை அணிந்த சிவபெருமான் திருவடிகளையே சிறுவயது முதல் போற்றி வழிபடுங்கள். பசுவிலிருந்து பெறப்படும் பஞ்சகவ்வியங்களால் அபிடேகம் செய்யப் படுவதால் மகிழும் தலைவரான சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற இடம் தேவர்கள் நாள்தோறும் வந்து வழிபடுகின்ற திருவலம்புரம் என்னும் நன்னகராகும்.

<u>திருவலம்புரம்</u>

செற்றெறியுந் திரையார் கலுழிச்
செழுநீர்கிளர் செஞ்சடைமேல்
அற்றறியா தனலாடு நட்ட
மணியார் தடங்கண்ணி
பெற்றறிவா ரெருதேற வல்ல
பெருமா னிடம்போலும்
வற்றறியாப் புனல்வாய்ப் புடைய
வலம்புர நன்னகரே **#1105**

கரைகளில் மோதி வீசுகின்ற அலைகளையுடைய கங்கை நதியினை, ஒளி பொருந்திய சிவந்த சடையின்மீது நீங்காது தங்கவைத்த சிவபெருமான் நெருப்பைக் கையிலேந்தி நடனம் செய்பவர். அழகு பொருந்திய அகன்ற கண்களையுடைய உமா தேவியை ஒரு பாகமாகக் கொண்டவர். இடபத்தை வாகனமாக ஏற்றவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம், வற்றுதலை அறியாத நீர்பெருகும் வாய்ப்புடைய திருவலம்புரம் என்னும் நன்னகர் ஆகும்.

<u>திருவலம்புரம்</u>

உண்ணவண் ணத்தொளி நஞ்சமுண்டு
உமையோ டுடனாகிச்
சுண்ணவண் ணப்பொடி மேனிபூசிச்
சுடர்ச்சோதி நின்றிலங்கப்
பண்ணவண் ணத்தன பாணிசெய்யப்
பயின்றா ரிடம்போலும்
வண்ணவண் ணப்பறை பாணியறா
வலம்புர நன்னகரே **#1106**

தேவர்கள் அமுதுண்ணும் பொருட்டு, கருநிறமும் ஒளியுமுடைய நஞ்சைத் தாம் உண்டவர் சிவபெருமான். உமா தேவியை உடனாகக் கொண்டவர். மணம் பொருந்திய திரு வெண்ணீற்றைத் திருமேனியில் பூசியவர். சுடர்விடும் சோதியாய் விளங்குபவர். பல்வேறு பண்களில் சிவபூதங்கள் நடனம் செய்பவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, பலவகைப்பட்ட பறை முதலிய வாத்தியங்களின் முழக்கு நீங்காத திருவலம்புரம் என்னும் நன்னகர் ஆகும்.

<u>திருவலம்புரம்</u>

புரிதரு புன்சடை பொன்றயங்கப்
புரிநூல் புரண்டிலங்க
விரைதரு வேழத்தி னீருரிதோன்
மேன்மூடி வேய்புரைதோள்

அரைதரு பூந்துகி லாரணங்கை
அமர்ந்தா ரிடம்போலும்
வரைதரு தொல்புகழ் வாழ்க்கையறா
வலம்புர நன்னகரே **#1107**

முறுக்குண்ட மென்மையான சடை பொன்போல் ஒளிர, முப்புரிநூல் மார்பில் புரண்டு விளங்க, மிக வேகமாகச் செல்லக்கூடிய யானையின் இழுத்து உரிக்கப்பட்ட தோலை உடலின் மேல் போர்த்தி, மூங்கிலையொத்த தோளையுடையவளாய், இடையில் அழகிய ஆடையை அணிந்துள்ள உமாதேவியை உடனாகக் கொண்டு சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், புலவர்களால் போற்றப்படும் பழம் புகழுடைய, குடிமக்களின் செல்வ வாழ்க்கை என்றும் குறையாத திருவலம்புரம் என்னும் நன்னகர் ஆகும்.

<u>திருவலம்புரம்</u>

தண்டணை தோளிரு பத்தினொடுந்
தலைபத் துடையானை
ஒண்டணை மாதுமை தானடுங்க
வொருகால் விரலூன்றி
மிண்டது தீர்த்தருள் செய்யவல்ல
விகிர்தர்க் கிடம்போலும்
வண்டணை தன்னொடு வைகுபொழில்
வலம்புர நன்னகரே **#1108**

தண்டு முதலிய ஆயுதங்களையுடைய இருபது தோள்களும், பத்துத் தலைகளுமுடைய இராவணன் கயிலையைப் பெயர்த்த போது, தம் உடம்போடு ஒன்றாக அணைந்துள்ள உமா தேவி நடுங்க, சிவபெருமான் தம்காற் பெருவிரலை ஊன்றி அவ்வரக்கனின் செருக்கை அடக்கி, பின் அவன் தன் தவறுணர்ந்து துதித்தபோது, அருளும் செய்த மாறுபட்ட தன்மையுடையவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம் ஆண் வண்டுகள் தம் பெடை வண்டுகளைத் தழுவித் தங்கும் சோலைகளை உடைய திருவலம்புரம் என்னும் நன்னகர் ஆகும்.

<u>திருவலம்புரம்</u>

தாருறு தாமரை மேலயனுந்
தரணி யளந்தானும்
தேர்வறி யாவகை யாலிகலித்
திகைத்துத் திரிந்தேத்தப்
பேர்வறி யாவகை யானிமிர்ந்த
பெருமா னிடம்போலும்

வாருறு சோலை மணங்கமழும்
வலம்புர நன்னகரே #1109
மாலையாக அமைதற்குரிய தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் பிரமனும், உலகை இரண்டடிகளால் அளந்த திருமாலும் உண்மையை உணரமுடியாது, தம்முள் யார் பெரியவர் என்று மாறுபாடு கொண்டு, முழுமுதற் பொருளின் அடிமுடி காணமுடியாது திகைத்துத் திரிந்து, பின் தம் குற்றம் உணர்ந்து இறைவனைப் போற்றி வணங்க, அசைக்க முடியாத நெருப்புப் பிழம்பாய் நிமிர்ந்து நின்ற சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், நீண்ட சோலைகளையுடைய நறுமணம் கமழும் திருவலம்புரம் என்னும் நன்னகர் ஆகும்.

திருவலம்புரம்

காவிய நற்றுவ ராடையினார்
கடுநோன்பு மேல்கொள்ளும்
பாவிகள் சொல்லைப் பயின்றறியாப்
பழந்தொண்ட ருள்ளுருக
ஆவியு ணின்றருள் செய்யவல்ல
வழக ரிடம்போலும்
வாவியி னீர்வயல் வாய்ப்புடைய
வலம்புர நன்னகரே #1110
காவி நிறத்தைத் தருவதாகிய துவர்நீரில் தோய்த்த ஆடையினையுடைய புத்தர்களும், கடுமையான நோன்புகளை மேற்கோள்ளும் பாவிகளாகிய சமணர்களும் கூறும் சொற்களைச் திருச்சிற்றம்பலம் சிறிதும் கேளாத, வழிவழியாகச் சிவனடிமை செய்யும் தொண்டர்கள் உள்ளம் உருகி ஏத்த, அவர்களின் உயிர்க்குள்ளுயிராயிருந்து அருள் செய்யவல்ல அழகர் சிவபெருமான் ஆவார். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம், குளங்களிலிருந்து வயல்கட்குப் பாயும் நீர்வளமுடைய திருவலம்புரம் என்னும் நன்னகர் ஆகும்.

திருவலம்புரம்

நல்லிய னான்மறை யோர்புகலித்
தமிழ்ஞான சம்பந்தன்
வல்லியந் தோலுடை யாடையினான்
வலம்புர நன்னகரைச்
சொல்லிய பாடல்கள் பத்துஞ்சொல்ல
வல்லவர் தொல்வினைபோய்ச்
செல்வன சேவடி சென்றணுகிச்
சிவலோகஞ் சேர்வாரே #1111

நல்லொழுக்கமுடைய, நான்கு வேதங்களையும் நன்கு கற்று வல்லவர்கள் வாழ்கின்ற திருப்புகலி என்னும் திருத்தலத்தில் அவதரித்த தமிழ் ஞானசம்பந்தன், புலியின் தோலை ஆடையாக உடுத்திய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருவலம்புரம் என்னும் நன்னகரைப் போற்றிப் பாடிய இப்பாடல்கள் பத்தையும் சொல்ல வல்லவர்கள், தொல்வினை நீங்கிச் சிவலோகம் சென்றணுகி முத்திச் செல்வத்தைத் தருகின்ற சிவபெருமானின் சேவடிகளைச் சேர்ந்திருப்பர்.

திருப்பருதிநியமம்

திருப்பருதிநியமம்

திருப்பருதிநியமம்,
பண் - பழம்பஞ்சுரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பருதியப்பர்.
தேவியார் : மங்களநாயகியம்மை.

விண்கொண்ட தூமதி சூடிநீடு
விரிபுன் சடைதாழப்
பெண்கொண்ட மார்பில்வெண் ணீறுபூசிப்
பேணார் பலிதேர்ந்து
கண்கொண்ட சாயலொ டேர்கவர்ந்த
கள்வர்க் கிடம்போலும்
பண்கொண்ட வண்டினம் பாடியாடும்
பரிதிந் நியமமே **#1112**

ஆகாயத்தை இடமாகக் கொண்ட வெண்ணிறப் பிறைச் சந்திரனைச் சூடிய நீண்ட விரிந்த சிவந்த சடைதாழ, உமா தேவியை ஒரு பாகமாகக் கொண்டு தம் திருமார்பில் திரு வெண்ணீற்றினைப் பூசி, பெருமைக்கு ஒவ்வாமல் பிச்சை ஏற்று, கண்ணைக் கவரும் தோற்றப் பொலிவொடு வந்து என் அழகைக் கவர்ந்த கள்வரான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், வண்டுகள் பண்ணிசையோடு பாடியாடும் திருப்பரிதிநியமம் என்னும் திருத்தலம் ஆகும்.

திருப்பருதிநியமம்

அரவொலி வில்லொலி யம்பினொலி
யடங்கார் புரமூன்றும்
நிரவவல்லார் நிமிர்புன் சடைமே
னிரம்பா மதிசூடி
இரவில் புகுந்தெ னெழில்கவர்ந்த
விறைவர்க் கிடம்போலும்
பரவவல் லார்வினை பாழ்படுக்கும்
பரிதிந் நியமமே **#1113**

வாசுகி என்னும் பாம்பாகிய நாணின் ஓசையும், மேருமலையாகிய வில்லின் ஓசையும், காற்று, திருமால், நெருப்பு ஆகிய அம்பின் ஓசையும் எழ, பகையசுரர்களின் மூன்று புரங்களையும் அழித்துத் தரையோடு தரையாக்கியவர் சிவபெருமான். நிமிர்ந்த மெல்லிய சடைமேல்

கலைநிரம்பாத சந்திரனைச் சூடி இரவில் வந்து என் எழிலைக் கவர்ந்த இறைவன் சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, தன்னை வணங்கிப் போற்றுவார்களின் வினையை அழிக்கும் திருப்பரிதிநியமம் என்னும் திருத்தலமாகும்.

<u>திருப்பருதிநியமம்</u>

வாண்முக வார்குழல் வாணெடுங்கண்
வளைத்தோண் மாதஞ்ச
நீண்முக மாகிய பைங்களிற்றின்
னுரிமே னிகழ்வித்து
நாண்முகங் காட்டி நலங்கவர்ந்த
நாதர்க் கிடம்போலும்
பாண்முக வண்டினம் பாடியாடும்
பரிதிந் நியமமே **#1114**

ஒளிபொருந்திய திருமுகத்தையும், நீண்ட கூந்தலையும், வாள்போன்று ஒளியும் கூர்மையும் மிக்க நீண்ட கண்களையும் மூங்கில் போன்ற மென்மை வாய்ந்த தோள்களையும் உடைய உமாதேவி அஞ்சும்படி, நீண்ட துதிக்கையையுடைய யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டவர் சிவ பெருமான்.அவர் நான் நாணம் கொண்டு விளங்குமாறு செய்தவர். என் பெண்மை நலத்தை இழந்து அவரையே பற்றுமாறு செய்தவர். அத்தலைவர் வீற்றிருந்தருளும் இடம் வண்டுகள் முரன்று பாடியாடும் திருப்பரிதிநியமம் என்னும் திருத்தலமாகும்.

<u>திருப்பருதிநியமம்</u>

வெஞ்சுரஞ் சேர்விளை யாடல்பேணி
விரிபுன் சடைதாழத்
துஞ்சிருண் மாலையும் நண்பகலுந்
துணையார் பலிதேர்ந்து
அஞ்சுரும் பார்குழல் சோரவுள்ளங்
கவர்ந்தார்க் கிடம்போலும்
பஞ்சுரம் பாடிவண்டி யாழ்முரலும்
பரிதிந் நியமமே **#1115**

சிவபெருமான் கொடிய பாலைவனம் போன்ற சுடுகாட்டில் நடனம் செய்பவர். விரிந்த சிவந்த சடை தொங்க அனைவரும் உறங்குகின்ற இரவிலும், மாலையிலும், நண்பகலிலும், பூத கணங்கள் துணைவரப் பிச்சை ஏற்பவர். அழகிய வண்டுகள் ஒலிக்கக் கூந்தல் சரிய என் உள்ளத்தைக் கவர்ந்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், வண்டுகள் யாழொலி போன்று பஞ்சுரம் முதலிய பண்ணிசைத்துப்

பாடும் திருப்பரிதிநியமம் என்னும் திருத்தலமாகும்.

திருப்பருதிநியமம்

நீர்புல்கு புன்சடை நின்றிலங்க
நெடுவெண் மதிசூடித்
தார்புல்கு மார்பில்வெண் ணீறணிந்து
தலையார் பலிதேர்வார்
ஏர்புல்கு சாய லெழில்கவர்ந்த
விறைவர்க் கிடம்போலும்
பார்புல்கு தொல்புக ழால்விளங்கும்
பரிதிந் நியமமே **#1116**

சிவபெருமான் மென்மையான சடையில் கங்கை நதியைத் தாங்கியதோடு, இளம்பிறைச் சந்திரனையும் சூடியவர். மலர்மாலை அணிந்த திருமார்பில் திருவெண்ணீறும் அணிந்தவர். பிரம கபாலம் ஏந்திப் பிச்சையேற்றுத் திரிபவர். என் தோற்றப் பொலிவையும், அழகையும் கவர்ந்த அச்சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், உலகம் முழுவதும் பரவிய பழம் புகழையுடைய திருப்பரிதிநியமம் என்னும் திருத்தலமாகும்.

திருப்பருதிநியமம்

வெங்கடுங் காட்டகத் தாடல்பேணி
விரிபுன் சடைதாழத்
திங்கள் திருமுடிமேல் விளங்கத்
திசையார் பலிதேர்வார்
சங்கொடு சாய லெழில்கவர்ந்த
சைவர்க் கிடம்போலும்
பைங்கொடி முல்லை படர்புறவிற்
பரிதிந் நியமமே **#1117**

சிவபெருமான் மிகுந்த வெப்பமுடைய சுடுகாட்டில் திருநடனம் செய்பவர். விரிந்த சிவந்த சடைதொங்கச் சந்திரனைத் திருமுடிமேல் சூடியவர். எல்லாத் திசைகளிலும் சென்று பிச்சையேற்றுத் திரிபவர். நான் அணிந்துள்ள சங்காலாகிய வளைகள் சோர, என் தோற்றப் பொலிவைக் கவர்ந்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், பசுமையான முல்லைக்கொடி படர்ந்துள்ள திருப்பரிதிநியமம் என்னும் திருத்தலமாகும்.

திருப்பருதிநியமம்

பிறைவளர் செஞ்சடை பின்றயங்கப்

பெரிய மழுவேந்தி
மறையொலி பாடிவெண் ணீறுபூசி
மனைகள் பலிதேர்வார்
இறைவளை சோர வெழில்கவர்ந்த
விறைவர்க் கிடம்போலும்
பறையொலி சங்கொலி யால்விளங்கும்
பரிதிந் நியமமே #1118

சிவபெருமான் பிறைச்சந்திரனை அணிந்த சிவந்தசடை பின்புறம் விளங்கித் தொங்க, பெரிய மழுப்படையைக் கையிலேந்தி, வேதங்களைப் பாடி, திருவெண்ணீற்றினைப் பூசி வீடுகள்தோறும் பிச்சையேற்றுத் திரிவார். அவர், என் முன்கையில் அணிந்துள்ள வளையல்கள் கழன்றுவிழ, என் தோற்றப் பொலிவைக் கவர்ந்த இறைவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம், பறை யொலியும், சங்கொலியும் விளங்கத் திருவிழாக்கள் நிகழும் திருப் பரிதிநியமம் என்னும் திருத்தலமாகும்.

திருப்பருதிநியமம்

ஆசடை வானவர் தானவரோ
டடியா ரமர்ந்தேத்த
மாசடை யாதவெண்ணீறுபூசி
மனைகள் பலிதேர்வார்
காசடை மேகலை சோரவுள்ளங்
கவர்ந்தார்க் கிடம்போலும்
பாசடைத் தாமரை வைகுபொய்கைப்
பரிதிந் நியமமே #1119

அனைத்துயிர்கட்கும் பற்றுக்கோடாக விளங்கும் சிவபெருமான் தேவர்களும், வித்தியாதரர்களும் உடன் திகழ, அடியவர்கள் அமர்ந்து ஏத்தி வழிபடப்படுபவர். அவர், பாவத்தை அடைவியாது நீக்க வல்ல திருவெண்ணீற்றினைப் பூசி வீடுகள்தோறும் சென்று பிச்சை ஏற்றுத் திரிபவர். அவர் மணிகள் பதிக்கப்பெற்ற மேகலை நழுவி விழுமாறு என்னை மெலியச்செய்து, என் உள்ளம் கவர்ந்தவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம், பசுமையான இலைகளையுடைய தாமரைகள் விளங்கும் பொய்கையுடைய திருப்பரிதிநியமம் என்னும் திருத்தலமாகும்.

திருப்பருதிநியமம்

நாடினர் காண்கிலர் நான்முகனுந்
திருமா னயந்தேத்தக்

கூடல ராடல ராகிநாளுங்
குழகர் பலிதேர்வார்
ஏடலர் சோர வெழில்கவர்ந்த
இறைவர்க் கிடம்போலும்
பாடல ராடல ராய்வணங்கும்
பரிதிந் நியமமே **#1120**

தேடிக் காணாதவர்களாகிய பிரமனும், திருமாலும் பணிந்து ஏத்த அவர்களிடத்துக் காணக் கூடாதவராகி எம்மிடத்து விளையாடுதலை உடையவராய் நாடோறும் இளமையும், அழகு முடையவராய்ப் பிச்சையேற்றுத் திரிபவர், சிவபெருமான். அவர் இதழ்களையுடைய தாமரை போன்ற என்முகம் சோர்வடைய என் அழகைக் கவர்ந்த கள்வர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம் அடியவர்கள் பக்திப் பாடல்களைப் பாடி, ஆடி வணங்கும் திருப்பரிதிநியமம் என்னும் திருத்தலமாகும்.

திருப்பருதிநியமம்

கல்வள ராடையர் கையிலுண்ணுங்
கழுக்க ளிழுக்கான
சொல்வள மாக நினைக்கவேண்டா
சுடுநீ றதுவாடி
நல்வளை சோர நலங்கவர்ந்த
நாதர்க் கிடம்போலும்
பல்வளர் முல்லையங் கொல்லைவேலிப்
பரிதிந் நியமமே **#1121**

காவிக்கல்லால் துவர்நிறம் பெற்ற ஆடையணிந்த புத்தர்களும், கையில் உணவு வாங்கி உண்ணும் கழுக்களான சமணர்களும் கூறும், குற்றமுடைய சொற்களைப் பொருளென நினைக்க வேண்டா. சுட்ட திருவெண்ணீறு அணிந்து, என் நல் வளையல்கள் கழல, என் பெண்மை நலத்தைக் கவர்ந்த தலைவரான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், பெண்களின் பற்களைப் போல அரும்பு அடர்ந்த முல்லைவனமே வேலியாக உடைய திருப்பரிதிநியமம் என்னும் திருத்தலமாகும். அப்பெருமானை வழிபட்டு உய்வீர்களாக என்பது குறிப்பு.

திருப்பருதிநியமம்

பையர வம்விரி காந்தள்விம்மு
பரிதிந் நியமத்துத்
தையலொர் பாக மமர்ந்தவனைத்
தமிழ்ஞான சம்பந்தன்

பொய்யிலி மாலை புனைந்தபத்தும்
பரவிப் புகழ்ந்தேத்த
ஐயுற வில்லை பிறப்பறுத்தல்
அவலம் அடையாவே **#1122**
படத்தையுடைய பாம்பு போல மலர் விரிந்த காந்தட்செடிகள் செழித்துள்ள திருப்பரிதிநியமம் என்னும் திருத்தலத்தில் உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு வீற்றிருந்தருளும் பொய்யிலியாகிய சிவபெருமானைப் போற்றி, தமிழ்வல்ல ஞானசம்பந்தன் உண்மையன்போடு அருளிய இப்பத்துப் பாட்டுக்களாலாகிய பாமாலையால் புகழ்ந்து வணங்குபவர்களின் பிறப்பு அறும் என்பதில் ஐயமில்லை. அவர்கட்கு இம்மையில் துன்பம் எதுவும் இல்லை.

திருக்கலிக்காமூர்

திருக்கலிக்காமூர்

திருக்கலிக்காமூர்,
பண் - பழம்பஞ்சுரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சுந்தரேசுவரர்.
தேவியார் : அழகுவனமுலையம்மை.

மடல்வரை யின்மது விம்முசோலை
வயல்சூழ்ந் தழகாருங்
கடல்வரை யோதங் கலந்துமுத்தஞ்
சொரியுங் கலிக்காமூர்
உடல்வரை யின்னுயிர் வாழ்க்கையாய
வொருவன் கழலேத்த
இடர்தொட ராவினை யானசிந்தும்
மிறைவன் னருளாமே **#1123**

பூ இதழ்களில் அளவற்ற தேன் பெருகுகின்ற சோலைகளும், வயல்களும் சூழ, மலைபோன்ற வரும் அலைகளில் கலந்து முத்துக்களைக் கடல் சொரிகின்ற திருக்கலிக்காமூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றவனும், உடல் எல்லையில் தங்கும் உயிர் வாழ்வதற்குக் காரணமான உயிராகிய ஒப்பற்றவனுமாகிய சிவபெருமான் திருவடிகளை வணங்கித் துதிக்கத் துன்பங்கள் தொடரமாட்டா. அத்துன்பங்கட்குக் காரணமான, அநுபவித்துக் கழிந்தவை போக எஞ்சியுள்ள வினைகளும் அழிந்துபோகும். இறைவனின் திருவருட்சக்தி பதியும் பேரின்பம் பெறுவர்.

திருக்கலிக்காமூர்

மைவரை போற்றிரை யோடுகூடிப்
புடையே மலிந்தோதங்
கைவரை யால்வளர் சங்கமெங்கும்
மிகுக்குங் கலிக்காமூர்
மெய்வரை யான்மகள் பாகன்றன்னை
விரும்ப வுடல்வாழும்
ஐவரை யாசறுத் தாளுமென்பர்
அதுவுஞ் சரதமே **#1124**

மேகம் படியும் மலைபேன்ற அலைகளோடு கூடிவரும் கடல், கரையின் கண்ணே பருத்த சங்குகளை எங்கும் மிகுதியாகக் குவிக்கும்

திருக்கலிக்காழூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற, மலையரசன் மகளான உமாதேவியைத் தம் இடப்பாகமாகக் கொண்டவரான சிவபெருமானை விரும்பி அடைய, அப்பெருமான் நமது உடலில் வாழும் ஐந்து இந்திரியங்களையும் குற்றமறுத்து நம்மை ஆட்கொள்வர் என்று அறிஞர்கள் கூறுவர். அஃது உண்மையேயாம்.

திருக்கலிக்காமூர்

தூவிய நீர்மல ரேந்திவையத்
தவர்க டொழுதேத்தக்
காவியி னேர்விழி மாதரென்றுங்
கவினார் கலிக்காமூர்
மேவிய வீசனை யெம்பிரானை
விரும்பி வழிபட்டால்
ஆவியுள் நீங்கல னாதிமூர்த்தி
யமரர் பெருமானே **#1125**

அபிடேகம் செய்யும் பொருட்டுத் தூய நீரையும், பூசிக்கும் பொருட்டு மலர்களையும் ஏந்தி வந்து இவ்வுலகத்தவர்களும், நீலோற்பல மலர்போன்ற கண்களை உடைய பெண்களும் வணங்கிப் போற்ற, என்றும்அழகுடன் திகழும் திருக்கலிக்காமூர் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, எம் தலைவனான சிவபெருமானை விரும்பி வழிபட்டால், ஆதிமூர்த்தியும் தேவர்கட்கெல்லாம் தலைவனுமான அப்பெருமான் உயிரினுள் நீங்கலாகாத தன்மையோடு விளங்குவான்.

திருக்கலிக்காமூர்

குன்றுகள் போற்றிரை யுந்தியந்தண்
மணியார் தரமேதி
கன்றுடன் புல்கியா யம்மனைசூழ்
கவினார் கலிக்காமூர்
என்றுண ரூழியும் வாழுமெந்தை
பெருமா னடியேத்தி
நின்றுணர் வாரை நினையகில்லார்
நீசர் நமன்றமரே **#1126**

குன்றுகளைப் போன்ற உயர்ந்த கடலலைகள் அழகிய குளிர்ச்சி பொருந்திய முத்துக்களைத் தள்ளிக் கொண்டு வந்து சேர்த்தலும், எருமைக் கூட்டங்கள் கன்றுகளோடு கூடித் தத்தம் மனைகளைச் சென்று சேர்தலுமுடைய அழகு பொருந்திய திருக்கலிக்காமூர் என்ற திருத்தலத்தில் ஊழிக்காலத்திலும் வீற்றிருந்தருளும் எந்தையாகிய

சிவபெருமானின் திருவடிகளைப் போற்றி நின்று வழிபடுகின்ற அடியவர்களை நினையாதவர்கள் கீழ்மக்கள் ஆவர். அவர்கள் இயமனது சுற்றத்தாரும் ஆவர்.

திருக்கலிக்காமூர்

வானிடை வாண்மதி மாடந்தீண்ட
மருங்கே கடலோதங்
கானிடை நீழலிற் கண்டல்வாழுங்
கழிசூழ் கலிக்காமூர்
ஆனிடை யைந்துகந் தாடினானை
யமரர் தொழுதேத்த
நானடை வாம்வண மன்புதந்த
நலமே நினைவோமே **#1127**

வானத்தில் ஒளிரும் சந்திரனைத் தொடுமளவு உயர்ந்த மாடங்களும், பக்கங்களில் கடலலைகள் மோதச் சோலைகளில் நிழலில் செழித்து வளரும் தாழைகளும் கொண்ட உப்பங் கழிகள் சூழ்தலுமுடையது திருக்கலிக்காமூர். இத்திருத் தலத்தில் வீற்றிருந்தருளுகின்றவரும், பசுவிலிருந்து பெறப்படும் பஞ்ச கவ்வியங்களால் அபிடேகம் செய்யப்படுகின்றவரும் ஆய சிவபெருமானைத் தேவர்கள் தொழுது போற்ற அவர்கள் அடையாத நலன்களை அடியேன் அடையும் வண்ணம் அன்புடன் அவன் அருள்புரிந்த சிறப்பினை அடையும் வண்ணம் அன்புடன் அவன் அருள்புரிந்த சிறப்பினை என்றும் நினைந்து போற்றுவோமாக!

திருக்கலிக்காமூர்

துறைவளர் கேதகை மீதுவாசஞ்
சூழ்வான் மலிதென்றல்
கறைவள ருங்கட லோதமென்றுங்
கலிக்குங் கலிக்காமூர்
மறைவள ரும்பொரு ளாயினானை
மனத்தா னினைந்தேத்த
நிறைவள ரும்புக ழெய்தும்வாதை
நினையா வினைபோமே **#1128**

கடற்கரையில் வளர்ந்துள்ள தாழையின் பூவின் நறுமணத்தைக் கவர்ந்து வீசுகின்ற தென்றலோடு, மிக்க கரு நிறமுடைய கடலலைகள் எக்காலத்தும் ஒலிக்கின்ற திருக்கலிக்காமூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற, நால்வேதங்களின் உட்பொருளாக விளங்கும் சிவபெருமானை மனத்தால் நினைந்து போற்ற எக்காலத்தும் அழியாத

புகழ் வந்து சேரும். துன்பம் வந்து சேர நினையாது. அத்துன்பத்திற்குக் காரணமான வினைகளும் நீங்கும்.

திருக்கலிக்காமூர்

கோலநன் மேனியின் மாதர்மைந்தர்
கொணர்மங் கலியத்திற்
காலமும் பொய்க்கினுந் தாம்வழுவா
தியற்றுங் கலிக்காமூர்
ஞாலமுந் தீவளி ஞாயிறாய
நம்பன் கழலேத்தி
ஓலமி டாதவ ரூழியென்று
முணர்வைத் துறந்தாரே #1129

அழகிய நல்ல மேனியுடைய மகளிரும், ஆடவரும்; காலமழை பொய்த்தாலும், பூசைக்குரிய மங்கலப் பொருள்களை வழுவாது கொண்டுவந்து சேர்த்துப் பூசை நடத்தும் சிறப்புடையது திருக்கலிக்காமூர் என்னும் திருத்தலமாகும். அங்கு வீற்றிருந்தருளுகின்ற நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், ஞாயிறு, திங்கள், ஆன்மா என்னும் அட்டமூர்த்தமாகிய சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, உள்ளம் உருகி ஓலமிடாதவர்கள் ஊழிக் காலம் வரை வாழ்ந்தாலும் சிவஞானம் கைவரப் பெறாதவர் ஆவர்.

திருக்கலிக்காமூர்

ஊரர வந்தலை நீண்முடியா
னொலிநீ ருலகாண்டு
காரர வக்கடல் சூழவாழும்
பதியாங் கலிக்காமூர்
தேரர வல்குலம் பேதையஞ்சத்
திருந்து வரைபேர்த்தான்
ஆரர வம்பட வைத்தபாத
முடையா னிடமாமே #1130

ஊருகின்ற பாம்பைத் தலையிலுள்ள நீண்ட முடியில் அணிந்து, ஒலிக்கின்ற நீரையுடைய இவ்வுலகம் முழுமையும் ஆண்டு, கறுத்த ஆரவாரமுடைய கடல்சூழச் சிவபெருமான் வீற்றிருந்தருளும்பதி திருக்கலிக்காமூர் என்பதாம். அது தேர் போன்ற அகன்ற அல்குலையுடைய உமாதேவி அஞ்சும்படி திருக்கயிலை மலையைப் பெயர்த்த இராவணன் அதன்கீழ் நசுக்குண்டு அலறும்படி தம் திருப்பாத விரலை ஊன்றிய சிவபெருமானுடைய இருப்பிடமாகும்.

திருக்கலிக்காமூர்

அருவரை யேந்திய மாலுமற்றை
யலர்மே லுறைவானும்
இருவரு மஞ்ச வெரியுருவா
யெழுந்தான் கலிக்காமூர்
ஒருவரை யான்மகள் பாகன்றன்னை
யுணர்வாற் றொழுதேத்தத்
திருமரு வுஞ்சிதை வில்லைச்செம்மைத்
தேசுண் டவர்பாலே **#1131**

கோவர்த்தன மலையைக் குடையாகத் தூக்கிய திருமாலும், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும் ஆகிய இருவரும் அஞ்சும்படி பெருஞ்சோதி வடிவாய் நின்றவரும், திருக்கலிக்காமூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருள்கின்றவரும், ஒப்பற்ற மலை அரசன் மகளை ஒரு பாகமாக உடையவருமான சிவபெருமானை மெய்யுணர்வால் தொழுது போற்றுபவர்களைச் செல்வம் வந்தடையும். அவர்கட்கு எவ்விதக் குறைவும் இல்லை. மேலும் அவர்களிடம் செம்மையான சிவஞானம் உண்டாகும். அச்சிவஞானத்தால் முத்திபெறுவர் என்பது குறிப்பு.

திருக்கலிக்காமூர்

மாசு பிறக்கிய மேனியாரு
மருவுந் துவராடை
மீசு பிறக்கிய மெய்யினாரு
மறியா ரவர்தோற்றந்
காசினி நீர்த்திரண் மண்டியெங்கும்
வளமார் கலிக்காமூர்
ஈசனை யெந்தை பிரானையேத்தி
நினைவார் வினைபோமே **#1132**

நீராடாததால் அழுக்கு உடலையுடைய சமணர்களும், மஞ்சட் காவியாடையைப் போர்த்திய உடலையுடைய புத்தர்களும் சிவபெருமானது பெருமையை அறியாதவர்கள். எனவே அவர்களைப் பின்பற்றாத இந்நிலவுலகில் நீர்ப்பெருக்கு எங்கும் நிறைந்து நல்லவளம் பொருந்திய திருக்கலிக்காமூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற எம் தந்தையும் தலைவனுமான சிவபெருமானைப் போற்றித் தியானிப்பவர்களுடைய வினைகள் நில்லாது போம்.

திருக்கலிக்காமூர்

ஆழியு ணஞ்சமு தாரவுண்டன்
றமரர்க் கமுதுண்ண
ஊழிதொறும்முள ராவளித்தா
னுலகத் துயர்கின்ற
காழியுண் ஞானசம் பந்தன்சொன்ன
தமிழாற் கலிக்காமூர்
வாழி யெம்மானை வணங்கியேத்த
மருவா பிணிதானே **#1133**

பாற்கடலில் தோன்றிய நஞ்சை அமுதமாகத் தாம் உண்டு அன்று தேவர்கட்கு அமுதத்தை அளித்து ஊழிதோறும் நிலைத்திருக்குமாறு அருள்செய்தவர் சிவபெருமான். இவ்வுலகில் உயர்ச்சியடைகின்ற சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தன் அருளிய இத்தமிழ்ப் பாமாலையால், திருக்கலிக்காமூர் என்னும் திருத்தலத்தில் வாழும் எம் தந்தையாகிய சிவபெருமானை வணங்கிப் போற்ற, அவ்வாறு வணங்குபவர்களை நோய்கள் வந்து அணுகா.

திருவலஞ்சுழி

திருவலஞ்சுழி

திருவலஞ்சுழி,
பண் - பழம்பஞ்சுரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காப்பகத்தீசுவரர்.
தேவியார் : மங்களநாயகியம்மை.

பள்ளம தாய படர்சடைமேற்
பயிலுந் திரைக்கங்கை
வெள்ளம தார விரும்பிநின்ற
விகிர்தன் விடையேறும்
வள்ளல் வலஞ்சுழி வாணனென்று
மருவி நினைந்தேத்தி
உள்ள முருக வுணருமின்க
ளுறுநோ யடையாவே **#1134**

பள்ளம் போன்ற உட்குழிவுடைய படர்ந்த சடைமீது அலைகளையுடைய கங்கை நீர்ப் பெருக்கை விரும்பித் தாங்கி நின்ற வேறுபட்ட தன்மையுடையவர் சிவபெருமான்.அவர் இடபவாகனத்தில் ஏறும் வள்ளல். திருவலஞ்சுழி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுபவர். அப்பெருமானை நினைந்து போற்றி உள்ளம் உருக உணருமின்கள். உறுநோய் உங்களை அணுகாது.

திருவலஞ்சுழி

காரணி வெள்ளை மதியஞ்சூடிக்
கமழ்புன் சடைதன்மேல்
தாரணி கொன்றையுந் தண்ணெருக்குந்
தழைய நுழைவித்து
வாரணி கொங்கைநல் லாள்தனோடும்
வலஞ்சுழி மேவியவர்
ஊரணி பெய்பலி கொண்டுகந்த
வுவகை யறியோமே **#1135**

சிவபெருமான், கருமேகத்திற்கு அழகு செய்கின்ற வெண்ணிறச் சந்திரனைச் சூடி, இயற்கை மணம் கமழும் சிவந்த சடைமேல் அழகிய கொன்றைமாலையையும், குளிர்ச்சி பொருந்திய எருக்கம் பூ மாலையையும் நிரம்ப அணிந்துள்ளவர். கச்சணிந்த அழகிய கொங்கைகளை உடைய உமாதேவியோடு திருவலஞ்சுழி என்னும்

திருத்தலத்தில் வீற்றிருந்தருளுபவர். ஊர்கள்தோறும் சென்று அவர் பிச்சையேற்று மகிழ்ந்த பெருமையைச் சிற்றறிவுடைய யாம் எங்ஙனம் அறிவோம்? அறிய இயலவில்லை.

திருவலஞ்சுழி

பொன்னிய லுந்திரு மேனிதன்மேற்
புரிநூல் பொலிவித்து
மின்னிய லுஞ்சடை தாழவேழ
வுரிபோர்த் தரவாட
மன்னிய மாமறை யோர்கள்போற்றும்
வலஞ்சுழி வாணர்தம்மேல்
உன்னிய சிந்தையி னீங்ககில்லார்க்
குயர்வாம் பிணிபோமே **#1136**

சிவபெருமான் பொன்போன்ற அழகிய திருமேனி மீது முப்புரிநூல் அழகுற விளங்குமாறு அணிந்துள்ளவர். மின்னலைப் போல ஒளிவீசும் சடைதாழ, யானையின் தோலை உரித்துப் போர்த்தவர். ஆடும் பாம்பை அணிந்தவர். நிலைபெற்ற, பெருமையுடைய வேதங்களில் வல்ல அந்தணர்கள் போற்றும் திருவலஞ்சுழி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமானை இடையறாது சிந்தித்து வழிபடும் அடியவர்கட்கு எல்லா நலன்களும் உண்டாகும். நோய் நீங்கும்.

திருவலஞ்சுழி

விடையொரு பாலொரு பால்விரும்பு
மெல்லியல் புல்கியதோர்
சடையொரு பாலொடு பாலிடங்கொள்
தாழ்குழல் போற்றிசைப்ப
நடையொரு பாலொரு பால்சிலம்பு
நாளும் வலஞ்சுழிசேர்
அடையொரு பாலடை யாதசெய்யுஞ்
செய்கை யறியோமே **#1137**

சிவபெருமானுக்கு இடபவாகனம் ஒரு பக்கம், விரும்பிச் சேர்ந்து மெல்லியல்புடைய கங்காதேவி ஒரு பக்கம். விரிந்து பரந்த சடை ஒரு பக்கம். தாழ்ந்த கூந்தலையுடைய உமாதேவி ஒரு பக்கம். ஏறுபோல் பீடுநடை பயிலும் திருவடி ஒருபக்கம். சிலம்பு அணிந்த திருவடி ஒருபக்கம். திருவலஞ்சுழி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமானை நாளும் வழிபடுக. முற்கூறியவை வேறெங்கும் சென்றடையாது சிவனையே அடையும் சிறப்பைச் சிற்றறிவுடைய நாம் அறியோம்.

திருவலஞ்சுழி

கையம ரும்மழு நாகம்வீணை
கலைமான் மறியேந்தி
மெய்யம ரும்பொடிப் பூசிவீசுங்
குழையார் தருதோடும்
பையம ரும்மர வாடவாடும்
படர்சடை யார்க்கிடமாம்
மையம ரும்பொழில் சூழும்வேலி
வலஞ்சுழி மாநகரே **#1138**

இறைவன் கையில் மழு, பாம்பு, வீணை, கலைமான்கன்று என்பனவற்றை ஏந்தியுள்ளவர். திருமேனியில் திருவெண்ணீற்றைப் பூசியுள்ளவர். ஒளியை வீசி அசைகின்ற குழையும் தோடும் காதில் அணிந்துள்ளவர். படமாடும் பாம்பை அணிந்து நடனமாடுபவர். படர்ந்த சடையையுடைய அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடம், நாற்புறமும் வேலிபோன்று, இருளடர்ந்த சோலைகள் சூழ்ந்த திருவலஞ்சுழி என்னும் மாநகரமாகும்.

திருவலஞ்சுழி

தண்டொடு சூலந் தழையவேந்தித்
தையலொருபாகம்
கண்டிடு பெய்பலி பேணிநாணார்
கரியி னுரிதோலர்
வண்டிடு மொய்பொழில் சூழ்ந்தமாட
வலஞ்சுழி மன்னியவர்
தொண்டொடு கூடித் துதைந்துநின்ற
தொடர்பைத் தொடர்வோமே **#1139**

சிவபெருமான் தண்டு, சூலம் இவற்றை ஒளிமிக ஏந்தியுள்ளவர். உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டுள்ளவர். இடப்படுகின்ற பிச்சையை விரும்பி ஏற்பதில் வெட்கப்படாதவர். யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டவர். வண்டுகள் மொய்க்கின்ற சோலைகள் சூழ்ந்த மாடங்களையுடைய திருவலஞ்சுழி என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருள்பவர். அப்பெருமான் திருத்தொண்டர்களோடு கூடி நெருங்கி நின்று அருள்வதை உணர்ந்து, நாமும் அவருடைய தொடர்பைத் தொடர்வோமாக!

திருவலஞ்சுழி

கல்லிய லும்மலை யங்கைநீங்க

வளைத்து வளையாதார்
சொல்லிய லும்மதின் மூன்றுஞ்செற்ற
சுடரா னிடர்நீங்க
மல்லிய லுந்திர டோளெம்மாதி
வலஞ்சுழி மாநகரே
புல்கிய வேந்தனைப் புல்கியேத்தி
யிருப்பவர் புண்ணியரே **#1140**

சிவபெருமான் கல்லின் தன்மை பொருந்திய மேருமலையை அதன் கடினத்தன்மை நீங்க வளைத்து, செருக்குற்ற திரிபுர அசுரர்களின், பழிச்சொல்லுக்கு இடமாகிய மும்மதில்களையும் அழித்தவர். ஒளிவடிவானவர். அடியவர்களின் இடர் நீங்க, மற்போர் பயின்ற திரண்ட தோளையுடைய எம் முதல்வராய்த் திருவலஞ்சுழி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார். மன்னுயிர்களை ஆளும் அரசரான அச்சிவபெருமானைச் சார்ந்து போற்றி வழிபடுபவர்கள் புண்ணியர்கள் ஆவர்.

திருவலஞ்சுழி

வெஞ்சின வாளரக்கன் வரையை
விறலா லெடுத்தான்றோள்
அஞ்சுமொ ராறிரு நான்குமொன்று
மடர்த்தா ரழகாய
நஞ்சிருள் கண்டத்து நாதரென்று
நணுகு மிடம்போலும்
மஞ்சுல வும்பொழில் வண்டுகெண்டும்
வலஞ்சுழி மாநகரே **#1141**

கடுஞ்சினமுடைய கொடிய அசுரனான இராவணன் தன் வலிமையால் கயிலை மலையைப் பெயர்க்க, அவன் இருபது தோள்களையும் அடர்த்தவர் சிவபெருமான். அவர் நஞ்சுண்டு இருண்ட அழகிய கண்டத்தையுடைய தலைவர். அவர் விரும்பி வீற்றிருந்தருளும் இடம் மேகத்தைத் தொடும்படி உயர்ந்துள்ள சோலைகளிலுள்ள மலர்களை வண்டுகள் காலால் கிண்டும் திரு வலஞ்சுழி என்னும் திருத்தலமாகும்.

திருவலஞ்சுழி

ஏடிய னான்முகன் சீர்நெடுமா
லெனநின் றவர்காணார்
கூடிய கூரெரி யாய்நிமிர்ந்த
குழக ருலகேத்த
வாடிய வெண்டலை கையிலேந்தி

வலஞ்சுழி மேயவெம்மான்
பாடிய நான்மறை யாளர்செய்யுஞ்
சரிதை பலபலவே **#1142**

இதழ்களையுடைய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும், திருமாலும் காணமுடியாத வண்ணம் நெருப்புப் பிழம்பாய் ஓங்கி நின்றவர் சிவபெருமான். அவர் உலகோர் போற்றி வணங்குமாறு, வற்றிய பிரமகபாலத்தைக் கையிலேந்தி திருவலஞ்சுழி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார். எம் தலைவரான அவரை நான்கு வேதங்களையும் நன்கு கற்றுவல்லவர்கள் பாடிப் போற்றும் தன்மையில் அவர் புரியும் திருவிளையாடல்கள் பலபல வாகும்.

திருவலஞ்சுழி

குண்டரும் புத்தருங் கூறையின்றிக்
குழுவா ருரைநீத்துத்
தொண்டருந் தன்றொழில் பேணநின்ற
கழலா னழலாடி
வண்டம ரும்பொழின் மல்குபொன்னி
வலஞ்சுழி வாணனெம்மான்
பண்டொரு வேள்வி முனிந்துசெற்ற
பரிசே பகர்வோமே **#1143**

தீவினைக்கஞ்சாத சமணர்கள், ஆடையின்றிக் கூட்டமாயிருப்பவர்கள். அவர்களும் புத்தர்களும் இறைவனை உணராது கூறும் மொழிகளைத் தள்ளிவிடுங்கள். தொண்டர்கள் சரியைத் தொழிலில் விரும்பி வழிபட்டு நிற்க. கழலணிந்த திருவடிகளையுடைய சிவபெருமான் அழல் ஏந்தி ஆடுபவன். வண்டுகள் விரும்புகின்ற சோலைகளையுடையதும், காவிரியாறு வலஞ்சுழித்துப் பாய்கின்றதுமான திருவலஞ்சுழி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமான் முன்னொரு காலத்தில் அவனை நினையாது தக்கன் செய்த வேள்வியைக் கோபித்து அழித்த தன்மையைப் பகர்வோமாக.

திருவலஞ்சுழி

வாழியெம் மானெனக் கெந்தைமேய
வலஞ்சுழி மாநகர்மேல்
காழியுண் ஞானசம் பந்தன்சொன்ன
கருத்தின் றமிழ்மாலை
ஆழியிவ் வையகத் தேத்தவல்லா
ரவர்க்குந் தமருக்கும்
ஊழி யொருபெரு மின்பமோக்கும்

உருவும் முயர்வாமே **#1144**
எம் தலைவனும், தந்தையுமான, சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருவலஞ்சுழி என்னும் மாநகரை வாழ்த்தி, சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தன் அருளிய சிறந்த பயனைத் தரும் கருத்துக்கள் அடங்கிய தமிழ்மாலையாகிய இத்திருப்பதிகத்தை ஏத்த வல்லவர்களும், அவர்களுடைய சுற்றத்தார்களும் கடல் சூழ்ந்த இவ்வையகத்திலேயே பேரின்பம் துய்ப்பர். ஊழிக்காலத்திலும் நனிவிளங்கும் உயர்ந்த புகழுடைவர்.

திருநாரையூர்

திருநாரையூர்

திருநாரையூர்,
பண் - பழம்பஞ்சுரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சௌந்தரேசர்.
தேவியார் : திரிபுரசுந்தரியம்மை.

கடலிடை வெங்கடு நஞ்சமுண்ட
கடவுள் விடையேறி
உடலிடை யிற்பொடிப் பூசவல்லா
னுமையோ டொருபாகன்
அடலிடை யிற்சிலை தாங்கியெய்த
வம்மா னடியார்மேல்
நடலைவி னைத்தொகை தீர்த்துகந்தானிட
நாரை யூர்தானே **#1145**

கடலில் தோன்றிய வெப்பம் மிகுந்த கடுமையான நஞ்சையுண்ட கடவுள் இடபவாகனத்தில் ஏறி, திருமேனியில் திரு வெண்ணீற்றினைப் பூசி, உமாதேவியைத் தம் ஒரு பாகமாகக் கொண்டவர். முப்புர அசுரர்களுடன் போரிடும் சமயத்தில் மேரு மலையாகிய வில்லைத் தாங்கிக் கணைஎய்த பெருமான், தம்முடைய அடியார்கள் மேல் வரும் துன்பம்தரும் வினைத் தொகுதிகளைத் தொலைத்து மகிழ்பவர். இத்தகைய சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் இடம் திருநாரையூர் என்னும் திருத்தலமாகும்.

திருநாரையூர்

விண்ணின்மின் னேர்மதி துத்திநாகம்
விரிபூ மலர்க்கொன்றை
பெண்ணின்முன் னேமிக வைத்துகந்த
பெருமா னெரியாடி
நண்ணிய தன்னடி யார்களோடுந்
திருநாரை யூரானென்
றெண்ணுமி னும்வினை போகும்வண்ண
மிறைஞ்சுந் நிறைவாமே **#1146**

ஆகாயத்தில் விளங்கும், மின்னல் போன்ற ஒளியுடைய சந்திரனையும், படப்புள்ளிகளையுடைய பாம்பினையும், விரிந்த கொன்றைமலரையும், கங்காதேவிக்கு முன்னே சடையிலணிந்த மிகவும் மகிழ்ந்த பெருமான், நெருப்பேந்தி ஆடுபவர். திருநாரையூர் என்னும் திருத்தலத்தில்

வீற்றிருந்தருளுகின்ற அச்சிவ பெருமானை மனம், வாக்கு, காயத்தால் வழிபடுகின்ற அடியார்கள் கூட்டத்தோடு நீங்களும் சேர்ந்து தியானம் செய்யுங்கள். உங்கள் வினைகள் தொலைந்துபோகும் வண்ணம் வணங்குங்கள். எல்லா நலன்களும் நிறையக் குறைவிலா இன்பம் உண்டாகும்.

திருநாரையூர்

தோடொரு காதொரு காதுசேர்ந்த
குழையா னிழைதோன்றும்
பீடொரு கால்பிரி யாதுநின்ற
பிறையான் மறையோதி
நாடொரு காலமுஞ் சேரநின்றதிரு
நாரை யூரானைப்
பாடுமி னீர்பழி போகும்வண்ணம்
பயிலு முயர்வாமே **#1147**

சிவபெருமான் இடக் காதில் தோடும், வலக் காதில் குழையும் அணிந்துள்ளவர். மார்பில் பூணூல் அணிந்துள்ளவர். ஒரு காலத்திலும் பெருமை நீங்காமல் நிலைத்து நிற்பவர். பிறைச் சந்திரனை அணிந்துள்ளவர்.வேதங்களை ஓதுபவர். ஒவ்வொரு காலத்திலும் நாட்டிலுள்ள அடியார்கள் வணங்குதற்கு வந்து சேரும்படி வீற்றிருந் தருளுகின்ற திருநாரையூர்ப் பெருமானைப் பாடுவீர்களாக. உங்கள் பழிகள் நீங்கும் வண்ணம் இடைவிடாது வணங்குங்கள். உங்கட்கு உயர்வு உண்டாகும்.

திருநாரையூர்

வெண்ணில வஞ்சடை சேரவைத்து
விளங்குந் தலையேந்திப்
பெண்ணி லமர்ந்தொரு கூறதாய
பெருமா னருளார்ந்த
அண்ணன் மன்னியுறை கோயிலாகு
மணிநாரை யூர்தன்னை
நண்ணல மர்ந்துற வாக்குமின்கள்
நடலை கரிசறுமே **#1148**

வெண்ணிறப் பிறைச்சந்திரனைத் தலையிலே அணிந்து, விளங்குகின்ற பிரமகபாலத்தைக் கையிலேந்தி, உமா தேவியைத் தன்னுடம்பில் ஒரு கூறாகக் கொண்ட பெருமானும், அருள் நிறைந்து தலைவனுமாகிய சிவபெருமான் நிலையாக வீற்றிருந்தருளும் கோயிலுள்ள அழகிய திருநாரையூர் என்னும் திருத்தலத்தில் சேர்ந்து இறைவனிடம் அன்பு

செலுத்துங்கள். உங்கள் துன்பங்கள் நீங்கும்.

திருநாரையூர்

வானமர் தீவளி நீர்நிலனாய்
வழங்கும் பழியாகும்
ஊனம ரின்னுயிர் தீங்குகுற்ற
முறைவாற் பிறிதின்றி
நானம ரும்பொரு ளாகிநின்றான்
றிருநாரை யூரெந்தை
கோனவ னைக்குறு கக்குறுகா
கொடுவல் வினைதானே **#1149**

ஆகாயம், நெருப்பு, காற்று, நீர், நிலம், ஆகிய ஐம்பூதங்களின் தொடர்பாய் விளங்குகின்ற, பழிக்கு இடமாகிய தசையாகிய இவ்வுடம்பில் தங்குகின்ற இனிய உயிர் தீமை பயக்கும் குற்றம் புரியும் இயல்பாயுள்ளது. அக்குற்றங்களிலிருந்து உய்தி பெறப் பிறிதொரு வழியின்றி, அடியேன் விரும்பிச் சார்தற்குப் பற்றுக் கோடாக விளங்கும் பெருமான் திருநாரையூரில் வீற்றிருந்தருளுகின்ற என் தந்தையும், தலைவனுமாவான். அப்பெருமானைச் சரணடையக் கொடிய வல்வினைகள் நம்மை வந்து சாரா.

திருநாரையூர்

கொக்கிற குங்குளிர் சென்னிமத்தங்
குலாய மலர்சூடி
அக்கர வோடரை யார்த்துகந்த
வழகன் குழகாக
நக்கம ருந்திரு மேனியாளன்றிரு
நாரை யூர்மேவிப்
புக்கம ரும்மனத் தோர்கடம்மைப்
புணரும் புகறானே **#1150**

சிவபெருமான் தலையில் கொக்கின் இறகையும், குளிர்ந்த பொன்னூமத்தையின் செழித்த மலரையும் சூடியவர். எலும்பைப் பாம்போடு சேர்த்து இடுப்பில் கட்டி மகிழும் அழகர். இளமையாய்த் திகம்பரராய்த் திகழும் திருமேனியுடையவர். அப்பெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருநாரையூர் என்னும் திருத்தலத்தை அடைந்து, அவரை விரும்பி வழிபடும் மனத்தையுடையவர்களிடத்துத் திருவருட்சத்தி பதியும்.

திருநாரையூர்

ஊழியு மின்பமுங் காலமாகி
யுயருந் தவமாகி
ஏழிசை யின்பொருள் வாழும்வாழ்க்கை
வினையின் புணர்ப்பாகி
நாழிகை யும்பல ஞாயிறாகிநளிர்
நாரை யூர்தன்னில்
வாழியர் மேதகு மைந்தர்செய்யும்
வகையின் விளைவாமே **#1151**

சிவபெருமான் ஊழிக்காலமும், இன்பமும், காலங்களும் ஆகியவர். உயர்ந்த தவம் ஆகியவர். ஏழிசையின் பயனாக விளங்குபவர். வாழ்கின்ற வாழ்க்கையில் உயிர்கள் செய்கின்ற வினையின் பயன்களை உயிர்கட்குச் சேர்ப்பிப்பவர். நாழிகை முதலிய சிறு காலங்களின் அளவுகளாகிப் பலவாகிய நாள்களும் ஆகியவர். இவைகளெல்லாம் குளிர்ச்சி பொருந்திய திரநாரையூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமானின் அருள் விளையாடல்களின் விளைவுகளேயாகும்.

திருநாரையூர்

கூசமிலா தரக்கன் வரையைக்
குலுங்க வெடுத்தான்றோள்
நாசம தாகி யிறவடர்த்த
விரலான் கரவாதார்
பேசவி யப்பொடு பேணநின்ற
பெரியோ னிடம்போலும்
தேசமு றப்புகழ் செம்மைபெற்ற
திருநாரை யூர்தானே **#1152**

கூசுதல் இல்லாது திருக்கயிலாய மலையைக் குலுங்க எடுத்த இராவணனுடைய தோள்கள் நெரியும்படி அடர்த்த திருப்பாத விரலையுடையவர் சிவபெருமான். நெஞ்சில் வஞ்சமில்லாத உண்மையடியார்கள் மிகவும் வியப்போடு பேசும்படியும், இடைவிடாது தியானிக்கும்படியும் நின்ற பெருமையுடையவர். இத்தகைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், தேசம் முழுவதும் புகழுகின்ற சிறப்புடைய திருநாரையூர் என்னும் திருத்தலமாகும்.

திருநாரையூர்

பூமக னும்மவ னைப்பயந்த
ஆமள வுந்திரிந் தேத்திக்காண்ட
லறிதற் கரியானூர்

பாமரு வுங்குணத் தோர்களீண்டிப்
பலவும் பணிசெய்யும்
தேமரு வுந்திகழ் சோலைசூழ்ந்த
திருநாரை யூர்தானே **#1153**

தாமரைப் பூவில் வீற்றிருந்தருளும் பிரமனும், அவனைப் பெற்ற மேகம் போன்ற நிறத்தையுடைய திருமாலும், தங்களால் இயன்ற அளவு திரிந்து தேடியும், ஏத்தியும் காண்பதற்கு அரியவனாக விளங்கி சிவபெருமான் வீற்றிருந்தருளும் ஊர், நீதி நூல்களில் சொல்லிய நற்குண, நற்செய்கை உடையவர்கள் கூடி, திருத்தொண்டுகள் பலவும் செய்யும், தேன்மணம் கமழும் சோலைகள் சூழ்ந்த திருநாரையூர் என்னும் திருத்தலமாகும்.

திருநாரையூர்

வெற்றரை யாகிய வேடங்காட்டித்
திரிவார் துவராடை
உற்றரை யோர்க ளுரைக்குஞ்சொல்லை
யுணரா தெழுமின்கள்
குற்றமி லாததோர் கொள்கையெம்மான்
குழகன் றொழிலாரப்
பெற்றர வாட்டிவரும் பெருமான்றிரு
நாரை யூர்சேர்வே **#1154**

ஆடையற்ற கோலத்துடன் திரியும் சமணர்களும், மஞ்சட் காவியாடை போர்த்துத் திரியும் புத்தர்களும் உரைக்கின்ற சொற்களை ஏற்க வேண்டா. குற்றமில்லாத கொள்கை உடைய எம் தலைவரும், இளமையானவரும், அடியவர்கட்கு அருள்புரியும் தொழிலையுடையவரும், அரவம் அணிந்துள்ளவருமான சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருநாரையூர் என்னும் திருத்தலத்தைச் சேர்ந்து, வழிபட்டு உய்வீர்களாக.

திருநாரையூர்

பாடிய லுந்திரை சூழ்புகலித்
திருஞான சம்பந்தன்
சேடிய லும்புக ழோங்குசெம்மைத்
திருநாரை யூரான்மேல்
பாடிய தண்டமிழ் மாலைபத்தும்
பரவித் திரிந்தாக
வாடிய சிந்தையி னார்க்குநீங்கு
மவலக் கடல்தானே **#1155**

அலைஓசையுடைய கடல்சூழ்ந்த சீகாழியில் அவதரித்த

திருஞானசம்பந்தன், பெருமை பொருந்தியதும் ஓங்கும் புகழ் உடையதும், சிவத்தன்மை உடையதுமான திருநாரையூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமான் மீது பாடிய பத்துப்பாடல்களாலாகிய இத்தண்டமிழ் மாலையாகிய பதிகத்தைப் பாடித் துதிக்கும் சிந்தையுடைய அடியார்களின் கடல்போன்ற பெருந்துன்பம் நீங்கும்.

திருஆலவாய்

திருஆலவாய்

திருஆலவாய்,
பண் - பழம்பஞ்சுரம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. இதுவே மதுரை. ,
சுவாமிபெயர் : சொக்கநாதசுவாமி.
தேவியார் : மீனாட்சியம்மை.

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லியமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே **#1156**

உமாதேவியைத் தன் உடம்பில் ஒரு பாதியாக வைத்துள்ள பரமனே! தென் ஆலவாயில் வீற்றிருந்தருளும் எம் ஆதிமூர்த்தியே! வேதத்தையும், வேள்வியையும், பழித்துத் திரியும் பயனற்றவர்களாகிய சமணர்களையும், புத்தர்களையும் வாதில் வென்றழிக்க உம்மை வேண்டுகின்றேன். உமது திருவுள்ளம் யாது? உலகனைத்தும் உமது புகழே மிக வேண்டும். திருவருள்புரிவீராக!

திருஆலவாய்

வைதி கத்தின் வழியொழு காதவக்
கைத வம்முடைக் காரமண் தேரரை
எய்தி வாதுசெ யத்திரு வுள்ளமே
மைதி கழ்தரு மாமணி கண்டனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே **#1157**

கருநீலமணி போன்ற கண்டத்தையுடைய சிவபெருமானே! வேதநெறிகளைப் பின்பற்றி ஒழுகாத வஞ்சனையையுடைய கரிய சமணர்களையும், புத்தர்களையும் கூட்டி வாது செய்து வெல்ல விரும்புகின்றேன். உமது திருவுள்ளம் யாது? தென் ஆலவாயில் வீற்றிருந்தருளும் எம் முதல்வரே! உலகனைத்தும் உம் புகழே மிக வேண்டும். திருவருள்புரிவீராக!

திருஆலவாய்

மறைவ ழக்கமி லாதமா பாவிகள்

பறித லைக்கையர் பாயுடுப் பார்களை
முறிய வாதுசெ யத்திரு வுள்ளமே
மறியு லாங்கையின் மாமழு வாளனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே #1158

மான்கன்றையும், மழுவையும் கைகளில் ஏந்தியுள்ள சிவபெருமானே! வேத நெறிப்படி ஒழுகாத கொடிய பாவிகளாகிய, கையினால் முடி பறிக்கப்பட்ட தலையோடு பாயை உடுத்தித் திரியும் சமணர்கள் தோல்வியுறும்படி அவர்களோடு வாது செய்ய உமது திருவுளம் யாது? தென் ஆலவாயில் வீற்றிருந்தருளும் எம் முதல்வரே! உலகனைத்தும் உம் புகழே மிக வேண்டும். திருவருள்புரிவீராக!

திருஆலவாய்

அறுத்த வங்கமா றாயின நீர்மையைக்
கறுத்த வாழமண் கையர்கள் தம்மொடும்
செறுத்து வாதுசெயத்திரு வுள்ளமே
முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே #1159

ஒளிபொருந்திய பிறைச்சந்திரனை அணிந்த முதல்வனே! வரையறுக்கப்பட்ட வேதத்தின் ஆறு அங்கம் வகுக்கும் கொள்கைகளை வெறுக்கும் சமணர்களாகிய கீழோர்களைத் தடுத்து அவர்களோடு அடியேன் வாது செய்ய உமது திருவுள்ளம் யாது? தென் ஆலவாயில் வீற்றிருந்தருளும் எம் ஆதிமூர்த்தியே! உலகனைத்தும் உம் புகழே மிகவேண்டும். திருவருள்புரிவீராக!

திருஆலவாய்

அந்த ணாளர் புரியு மருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த வாதுசெ யத்திரு வுள்ளமே
வெந்த நீற தணியும் விகிர்தனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே #1160

நெருப்பில் வெந்த திருவெண்ணீற்றினை அணியும் வேறுபட்ட இயல்புகளையுடைய சிவபெருமானே! அந்தணர்கள் செய்யும் அரிய வேதக்கிரியைகளை நினைத்துப் பார்க்காத சமணர்களின் வலிமைகள் சிதறும்படி அடியேன் வாது செய்ய உமது திருவுள்ளம் யாது? அழகிய திருஆலவாயில் வீற்றிருந்தருளும் எம் ஆதி மூர்த்தியே! உலகனைத்தும்

உம் புகழே மிக வேண்டும். திருவருள் புரிவீராக!

திருஆலவாய்

வேட்டு வேள்விசெ யும்பொரு ளைவிளி
மூட்டு சிந்தை முருட்டமண் குண்டரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே
காட்டி லானை யுரித்தவெங் கள்வனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே **#1161**

காட்டில் வாழும் யானையின் தோலை உரித்துப் போர்த்த என் உள்ளங் கவர்ந்த கள்வரே! அந்தணர்கள் விரும்பிச் செய்கின்ற வேள்விச் செயல்களை இகழ்ந்து பேசும் வன்னெஞ்சினராகிய அமண்குண்டர்களை அடியேன் வாது செய்து விரட்ட உமது திருவுள்ளம் யாது? அழகிய ஆலவாயில் வீற்றிருந்தருளும் எம் ஆதி மூர்த்தியே! உலகனைத்தும் உம் புகழே மிக வேண்டும். திருவருள் புரிவீராக!

திருஆலவாய்

அழல தோம்பு மருமறை யோர்திறம்
விழல தென்னு மருகர் திறத்திறம்
கழல வாதுசெ யத்திரு வுள்ளமே
தழலி லங்கு திருவுருச் சைவனே
ஞால நின்புக ழேமிக வேண்டந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே **#1162**

நெருப்புப் போன்று விளங்கும் சிவந்த திருமேனியுடைய சிவபெருமானே! அழலோம்பி அருமறையாளர்கள் செய்யும் காரியங்களைப் பயனற்றவை என்று கூறும் சமணர்களின் பலவகைத் திறமைகளும் விலக வாது செய்ய எண்ணுகின்றேன். உமது திருவுள்ளம் யாது? அழகிய ஆலவாயில் வீற்றிருந்தருளும் எம்ஆதிமூர்த்தியே! உலகனைத்தும் உம் புகழே மிக வேண்டுகின்றேன். திருவருள்புரிவீராக!

திருஆலவாய்

நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவு நில்லா வமணரைத்
தேற்றி வாதுசெ யத்திரு வுள்ளமே
ஆற்ற வாள ரக்கற்கு மருளினாய்
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே **#1163**

சிறந்த வாள்வீரனான இராவணனுக்கு மிக்க அருள் புரிந்தவரே! திருநீறு

பூசியவர் மேல் பட்டு வீசும் காற்றடிக்கும் இடத்திலும் நில்லாத வன்கண்மை பொருந்திய உள்ளமுடைய சமணர்களின் பிழையைத் தெளவித்து வாது செய்ய, உமது திருவுள்ளம் யாது? அழகிய ஆலவாயில் வீற்றிருந்தருளும் எம் ஆதிமூர்த்தியே! உலகனைத்தும் உம் புகழே மிக வேண்டும். திருவருள்புரிவீராக!

திருஆலவாய்

நீல மேனி யமணர் திறத்துநின்
சீலம் வாதுசெ யத்திரு வுள்ளமே
மாலு நான்முக னுங்காண் பரியதோர்
கோல மேனிய தாகிய குன்றமே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே **#1164**

திருமாலும், பிரமனும் காணுதற்கரியவராய், அழகிய திருமேனியோடு நெருப்பு மலையாய் ஓங்கி நின்ற சிவபெருமானே! கரிய உடலையுடைய சமணர்களோடு உமது உயர்வினை வெளிப்படுத்தும் வண்ணம் வாது செய்ய உமது திருவுள்ளம் யாது? அழகிய ஆலவாயில் வீற்றிருந்தருளும் எம் ஆதிமூர்த்தியே! உலகனைத்தும்உம் புகழே மிக வேண்டும். திருவருள்புரிவீராக!

திருஆலவாய்

அன்று முப்புரஞ் செற்ற வழகநின்
துன்று பொற்கழல் பேணா வருகரைத்
தென்ற வாதுசெ யத்திரு வுள்ளமே
கன்று சாக்கியர் காணாத் தலைவனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே **#1165**

சினந்து பேசும் இயல்புடைய சமண, புத்தர்களால் காணஇயலாத தலைவரே! முன்னொரு காலத்தில் முப்புரங்களை எரித்த அழகரே! உம்முடைய பொன்போன்ற திருவடிகளைப் போற்றாத சமணர்கள் தோற்றோட வாதம் செய்ய, உமது திருவுள்ளம் யாது? அழகிய ஆலவாயில் வீற்றிருந்தருளும் எம் ஆதிமூர்த்தியே! உலகனைத்தும் உம் புகழே மிக வேண்டும். திருவருள் புரிவீராக!

திருஆலவாய்

கூட லாலவாய்க் கோனை விடைகொண்டு
வாடன் மேனி யமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்தவிப்

பாடல் வல்லவர் பாக்கிய வாளரே **#1166**
நான்கு மாடங்கள் கூடும் திரு ஆலவாயில் வீற்றிருந்தருளும் இறைவரை வணங்கி, உண்ணாநோன்புகளால் வாடிய உடலைஉடைய சமணர்களோடு வாது செய்து அவர்களைத் தோல்வியுறும் படி செய்ய இறைவரது இசைவும், அருளும் பெற்ற, மாடங்களையுடைய சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தன் பாடிய இப்பதிக பாடல்களை ஓத வல்லவர்கள் பாக்கியவான்களாவர்.

கூடச்சதுக்கம்

கூடச்சதுக்கம்

கூடச்சதுக்கம்,
பண் - பழம்பஞ்சுரம்

மண்ணது வுண்டரி மலரோன்காணா
வெண்ணாவல் விரும்பும யேந்திரரும்
கண்ணது வோங்கிய கயிலையாரும்
அண்ணலா ரூராதி யானைக்காவே **#1167**

மண்ணுண்ட திருமாலும், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும் காணமுடியாதபடி, திருமயேந்திர மலையில் எழுந்தருளியிருப்பவரும், காட்சிமிக்க திருக்கயிலையில் எழுந்தருளி இருப்பவரும், திருவாரூரில் வீற்றிருப்பவரும், வெண்ணாவல் மரத்தின்கீழ் எழுந்தருள விரும்புபவரும் ஆகிய தலைவராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் தலம் திருவானைக்காவேயாகும்.

கூடச்சதுக்கம்

வந்துமா லயனவர் காண்பரியார்
வெந்தவெண் ணீறணி மயேந்திரரும்
கந்தவார் சடையுடைக் கயிலையாரும்
அந்தணா ரூராதி யானைக்காவே **#1168**

சிவபெருமான், திருமாலும், பிரமனும் காண்பதற்கு அரியவர். அவர் வெந்த திருவெண்ணீற்றினை அணிந்தவராய்த் திருமயேந்திரத்திலும், நறுமணம் கமழும் சடையுடையவராய்த் திருக்கயிலையிலும், அழகிய, குளிர்ச்சிமிக்க திருவாரூரிலும், பழமை வாய்ந்த திருவானைக்காவிலும் விளங்குபவர்.

கூடச்சதுக்கம்

மாலயன் றேடிய மயேந்திரரும்
காலனை யுயிர்கொண்ட கயிலையாரும்
வேலைய தோங்கும்வெண் ணாவலாரும்
ஆலையா ரூராதி யானைக்காவே **#1169**

திருமாலும், பிரமனும் தேடிய சிவபெருமான் திருமயேந்திரத்தில் வீற்றிருந்தருளுகின்றார். அவரே மார்க்கண்டேயருக்காகக் காலனை மாய்த்த கயிலைநாதர். பஞ்சபூதத் தலங்களுள் அப்புத்(நீர்) தலமாக விளங்கும் திருஆனைக்காவில் வெண்ணாவல் மரத்தின்கீழ் வீற்றிருந்தருளுபவர். கருப்பங்கழனிகளை உடைய திருவாரூரில்

வீற்றிருந்தருளுபவரும் அவரே.

கூடச்சதுக்கம்

கருடனை யேறரி யயனோர்காணார்
வெருள்விடை யேறிய மயேந்திரரும்
கருடரு கண்டத்தெங் கயிலையாரும்
அருளனா ரூராதி யானைக்காவே **#1170**

கருடவாகனம் கொண்ட திருமாலும், பிரமனும் காணமுடியாதவராகிய சிவபெருமான், பகைவர் அஞ்சத்தக்க இடபவாகனத்தில் விளங்குகின்ற திருமயேந்திரர், கருநிறக் கண்டத்தையுடைய திருக்கயிலைநாதர். அருளே திருமேனியாகக் கொண்ட திருஆரூரர். அவரே ஆதியாகிய திருவானைக்காவில் வீற்றிருந்தருளுபவர்.

கூடச்சதுக்கம்

மதுசூதன் நான்முகன் வணங்கரியார்
மதியது சொல்லிய மயேந்திரரும்
கதிர்முலை புல்கிய கயிலையாரும்
அதியனா ரூராதி யானைக்காவே **#1171**

மது என்ற அசுரனைக் கொன்றவனாகிய திருமாலும், பிரமனும் வணங்குதற்கு அரியராய் விளங்குபவர் சிவபெருமான். ஆகமங்களை உபதேசித்தருளிய திருமகேந்திர மலையில் வீற்றிருந்தருளுபவர். ஒளி பொருந்திய கொங்கைகளையுடைய உமாதேவியைத் தழுவிய திருக்கயிலைநாதர். எவர்க்கும் மேம்பட்டவர். திருவாரூரில் வீற்றிருந்தருளுபவர். அவரே ஆதியாகிய திருவானைக்காவில் வீற்றிருந்தருளுகின்றார்.

கூடச்சதுக்கம்

சக்கரம் வேண்டுமால் பிரமன்காணா
மிக்கவர் கயிலை மயேந்திரரும்
தக்கனைத் தலையரி தழலுருவர்
அக்கணி யவராரூ ரானைக்காவே **#1172**

சக்கராயுதத்தை வேண்டிப் பெற்ற திருமாலும், பிரமனும் காணாத வண்ணம் விளங்கிய, யாவரினும் மேம்பட்டவரான சிவபெருமான், திருக்கயிலைமலையிலும், திருமயேந்திரத்திலும் வீற்றிருந்தருளுகின்றார். அவர் தக்கனின் தலையை அரிந்தவர். நெருப்புருவானவர். உருத்திராக்கமாலை அணிந்தவர். திருவாரூரிலும், திருவானைக்காவிலும் வீற்றிருந்தருளுபவர்.

கூடச்சதுக்கம்

கண்ணனு நான்முகன் காண்பரியார்
வெண்ணாவல் விரும்பு மயேந்திரரும்
கண்ணப்பர்க் கருள்செய்த கயிலையெங்கள்
அண்ணலா ரூராதி யானைக்காவே **#1173**

கருநிறத் திருமாலும், பிரமனும் காண்பதற்கு அரியவரான சிவபெருமான் திருமயேந்திரத்தில் வீற்றிருந்தருளுகின்றார். அவர் கண்ணப்பர்க்கு அருள்செய்த கயிலைநாதர். எங்கள் தலைவரான திருவாரூரர். அவர் வெண்ணாவல் மரத்தின்கீழ் வீற்றிருக்க விரும்பும் திருவானைக்காவிலுள்ள ஆதிமூர்த்தி ஆவார்.

கூடச்சதுக்கம்

கடல்வண்ணன் நான்முகன் காண்பரியார்
தடவரை யரக்கனைத் தலைநெரித்தார்
விடமது வுண்டவெம் மயேந்திரரும்
அடல்விடையா ரூராதி யானைக்காவே **#1174**

கடல்போலும் கருநிறமுடைய திருமாலும், பிரமனும் காண்பதற்கரிய சிவபெருமான், பெரிய கயிலைமலையின் கீழ் இராவணனின் தலையை நெரித்த கயிலைநாதர். விடமுண்ட திருமயேந்திரர். வலிய இடபத்தில் ஏறும் திருவாரூரர். அவரே திருவானைக்காவில் வீற்றிருந்தருளும் ஆதிமூர்த்தி ஆவார்.

கூடச்சதுக்கம்

ஆதிமா லயனவர் காண்பரியார்
வேதங்கள் துதிசெயு மயேந்திரரும்
காதிலொர் குழையுடைக் கயிலையாரும்
ஆதியா ரூரெந்தை யானைக்காவே **#1175**

தொன்றுதொட்டுத் திருமாலும், பிரமனும் காண்பதற்கு அரியவராய் ஓங்கிய சிவபெருமான், வேதங்களால் துதிக்கப்பெறும் மயேந்திரரும், காதில் குழையணிந்த கயிலைநாதரும், ஆதியாகிய திருவாரூர் எந்தையும் ஆவர். அவரே திருவானைக் காவல் வீற்றிருந்தருளுகின்றார்.

கூடச்சதுக்கம்

அறிவி லமண்புத்த ரறிவுகொள்ளேல்
வெறியமான் கரத்தாரூர் மயேந்திரரும்
மறிகட லோனயன் றேடத்தானும்
அறிவரு கயிலையோ னானைக்காவே **#1176**

இறைவனைப் பற்றி எதுவுமே கூறாத அறிவிலிகளாகிய சமணர்களும், புத்தர்களும் கூறும் உரைகளைக் கொள்ள வேண்டா. மடங்கிவீசும் அலைகளையுடைய பாற்கடலில் பள்ளி கொள்ளும் திருமாலும், பிரமனும் அறிவதற்கரியவரான கயிலை மலையில் வீற்றிருந்தருளும் சிவபெருமானே, மருண்ட பார்வையுடைய மான்கன்றைக் கையிலேந்தித் திருவாரூரிலும், திருமயேந்திரத்திலும், திருவானைக்காவிலும் வீற்றிருந்தருளுகின்றார்.

கூடச்சதுக்கம்

ஏனமா லயனவர் காண்பரியார்
கானமார் கயிலைநன் மயேந்திரரும்
ஆனவா ரூராதி யானைக்காவை
ஞானசம் பந்தன் றமிழ்சொல்லுமே **#1177**

பன்றி உருவமெடுத்த திருமாலும், பிரமனும் காண்பதற்கு அரியவராய் ஓங்கிய சிவபெருமான், சோலைகள் சூழ்ந்த திருக்கயிலையிலும், நல்ல திரு மயேந்திரத்திலும், திருவாரூரிலும், திருவானைக்காவிலும் வீற்றிருந்தருளுகின்றார். அத்தகைய சிவபெருமானைப் போற்றி ஞானசம்பந்தர் அருளிய இத்தமிழ் மாலையை ஓதவல்லவர்கள் பெறலரும் பிறவிப் பயனைப் பெறுவார்கள்.

திருப்பிரமபுரம்

சீர்காழி

திருப்பிரமபுரம்,
பண் - பழம்பஞ்சுரம், திருப்பிரமபுர மென்பது சீர்காழி.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

வரமதேகொளா வுரமதேசெயும்
புரமெரித்தவன் பிரமநற்புரத்
தரனனாமமே பரவுவார்கள்சீர்
விரவுநீள் புவியே **#1178**

தவம் செய்து பெற்ற வரத்தை நன்முறையில் பயன்படுத்தாது, தமது வலிமையைப் பயன்படுத்தித் தீமை செய்த அசுரர்களின் முப்புரங்களை எரித்தவர் சிவபெருமான். திருப் பிரமபுரம் என்னும் நன்னகரில் வீற்றிருந்தருளும் அச்சிவபெருமானின் புகழைப் போற்றி வணங்கும் அடியார்களின் பெருமை இவ்வகன்ற பூமி முழுவதும் பரவும்.

சீர்காழி

சேணுலாமதில் வேணுமண்ணுளோர்
காணமன்றலார் வேணுநற்புரத்
தாணுவின்கழல் பேணுகின்றவ
ராணியொத் தவரே **#1179**

ஆகாயத்தை அளாவிய மதில் விண்உலகத்தவர் இறங்குவதற்கு வைத்த மூங்கில் ஏணி என மண்ணுலகத்தவர் காணும்படி அமைந்த, நறுமணம் கமழும் திருவேணுபுரம் என்னும் நன்னகரில் வீற்றிருந்தருளும் தாணுவாகிய சிவபெருமானின் திருவடிகளைப் போற்றி வழிபடுகிறவர்கள் ஆணிப்பொன் போன்று சிறந்தவர்கள் ஆவர்.

சீர்காழி

அகலமார்தரைப் புகலுநான் மறைக்
கிகலியோர்கள்வாழ் புகலிமாநகர்ப்
பகல்செய்வோனெதிர்ச் சகலசேகர
னகிலநா யகனே **#1180**

விரிந்த இப்பூமியிலுள்ளவர்களால் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற நான்கு வேதங்களிலும் வல்லவர்கள் வாழ்கின்ற திருப்புகலி என்னும் பெரிய நகரத்தில் வீற்றிருந்தருள்கின்றவரும், சூரியனுக்கு எதிரான

கலையோடு கூடிய சந்திரனை முடியில் அணிந்தவருமான சிவபெருமானே அகில உலகத்திற்கும் தலைவர் ஆவார்.

சீர்காழி

துங்கமாகரி பங்கமாவடுஞ்
செங்கையானிகழ் வெங்குருத்திகழ்
அங்கணானடி தங்கையாற்றொழத்
தங்குமோ வினையே #1181

உயர்ந்ததும், பெரியதுமான யானை துன்புறும்படி கொன்று அதன் தோலையுரித்த சிவந்த கைகளையுடையவனும், புகழுடன் விளங்கும் திருவெங்குரு என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற அழகிய கண்களை உடையவனுமான சிவபெருமான் திருவடிகளைத் தங்கள் கைகளால் தொழுபவர்களிடம் வினைகள் தங்கா.

சீர்காழி

காணியொண்பொருட் கற்றவர்க்கீகை
யுடைமையோரவர் காதல்செய்யுநற்
றோணிவண்புரத் தாணியென்பவர்
தூமதி யினரே #1182

நிலங்களையும், அறவழியில் ஈட்டிய பொருள்களையும் கற்றவர்கட்குக் கொடையாகக் கொடுப்போர் விரும்பி வாழ்கின்ற திருத்தோணிபுரம் என்னும் நல்ல வளமைமிக்க நகரில் வீற்றிருந்தருளுகின்ற ஆணிப்பொன் போன்று அரிய பொருளாய் விளங்கும் சிவபெருமானைத் துதிப்பவர்கள் தூய சிவஞானம் பெறுவர்.

சீர்காழி

ஏந்தராவெதிர் வாய்ந்தநுண்ணிடைப்
பூந்தணோதியாள் சேர்ந்தபங்கினன்
பூந்தராய்தொழு மாந்தர் மேனிமேற்
சேர்ந்திரா வினையே #1183

படம் விரிக்கும் பாம்பிற்கு ஒப்பான நுண்ணிய இடையை உடையவளாய்ப் பூ அணிந்த குளிர்ந்த கூந்தலையுடைய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்ட சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருப்பூந்தராய் என்னும் திருத்தலத்தைத் தொழும் மக்கள்மேல் பிணி முதலிய துன்பங்கள் உடம்பைப் பற்றி நில்லாமல் விலகிவிடும்.

சீர்காழி

சுரபுரத்தினைத் துயர்செய்தாரகன்

துஞ்சவெஞ்சினக் காளியைத்தருஞ்
சிரபுரத்துளா னென்னவல்லவர்
சித்திபெற் றவரே #1184
தேவருலகத்தைத் துன்புறுத்திய தாரகாசுரனைக் கொல்லும்படி வெஞ்சினம் கொண்ட காளியை அம்பிகையின் அம்சமாகத் தோற்றுவித்தருளிய திருச்சிரபுரத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமானைப் போற்றி வழிபடுபவர்கள் அட்டமாசித்திகள் அனைத்தும் பெறுவர்.

சீர்காழி

உறவுமாகியற் றவர்களுக்குமா
நெதிகொடுத்துநீள் புவியிலங்குசீர்ப்
புறவமாநகர்க் கிறைவனேயெனத்
தெறகிலா வினையே #1185
வறியவர்கட்கு உறவினராகி அவர்கட்கு மாபெருஞ் செல்வத்தைக் கொடுத்து அருள்செய்கின்ற, இந்த நீண்டபூமியில் மக்கள் புகழுடன் விளங்குகின்ற திருப்புறவம் என்னும் மாநகரில் வீற்றிருந் தருளுகின்ற சிவபெருமானே என்று போற்றி வணங்குபவர்களை வினைகள் துன்பம் செய்யா.

சீர்காழி

பண்புசேரிலங் கைக்குநாதனன்
முடிகள்பத்தையுங் கெடநெரித்தவன்
சண்பையாதியைத் தொழுமவர்களைச்
சாதியா வினையே #1186
பெருமைகள் பலவுடைய இலங்கைக்கு அரசனான இராவணன் முடிகள் பத்தையும் நெரித்த, திருச்சண்பை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற ஆதியாகிய சிவபெருமானைத் தொழுபவர்கள் வினைகள் துன்புறுத்தா. வலியிழந்துபோம்.

சீர்காழி

ஆழியங்கையிற் கொண்டமாலய
னறிவொணாததோர் வடிவுகொண்டவன்
காழிமாநகர்க் கடவுணாமமே
கற்றல்நற் றவமே #1187
சக்கரப்படையை அழகிய கையில் கொண்ட திருமாலும், பிரமனும் அறிய வொண்ணாதபடி நெருப்புப் பிழம்பு வடிவாய் நின்றவனும், சீகாழி என்னும் மாநகரில் வீற்றிருந்தருளுகின்ற கடவுளுமான சிவபெருமானின்

புகழ்களையே கற்றல் நல்ல தவமாகும்.

சீர்காழி

விச்சையொன்றிலாச் சமணர்சாக்கியப்
பிச்சர்தங்களைக் கரிசறுத்தவன்
கொச்சைமாநகர்க் கன்புசெய்பவர்
குணங்கள் கூறுமினே **#1188**

மெய்யுணர்வு தரும் கல்வியறிவு இல்லாத சமணர், புத்தர்களாகிய பித்தர்களின் குற்றங்களை நீக்கிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருக்கொச்சை மாநகரிடத்து அன்பு செய்பவர்களுடைய குணங்களை எடுத்துக் கூறுங்கள்.

சீர்காழி

கழுமலத்தினுட் கடவுள்பாதமே
கருதுஞானசம் பந்தனின்தமிழ்
முழுதும்வல்லவர்க் கின்பமேதரு
முக்கணெம் மிறையே **#1189**

திருக்கழுமலம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்ற கடவுளாகிய சிவபெருமானின் திருவடிகளையே தியானிக்கின்ற ஞானசம்பந்தனின் இத்தமிழ்மாலையை முழுமையாக ஓதவல்லவர்கட்கு முக்கண் இறையாகிய அச்சிவபெருமான் அனைத்து இன்பங்களையும் தந்தருள்வான்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை

திருவீழிமிழலை,
பண் - பழம்பஞ்சுரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

வேலினேர்தரு கண்ணினாளுமை
பங்கனங்கணன் மிழலைமாநகர்
ஆலநீழலின் மேவினானடிக்
கன்பர்துன் பிலரே **#1190**

வேல் போன்று கூர்மையும், ஒளியுமுடைய கண்களை உடைய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டவர். அழகிய கண்களையுடைய சிவபெருமான். அவர் திருவீழிமிழலை என்னும் மாநகரில் வீற்றிருந்தருளுகின்றார். ஆலமரநிழல் கீழிருந்து அறம்உரைத்தவர். அப்பெருமானின் திருவடிகளை அன்புடன் வணங்குபவர்கட்குத் துன்பம் இல்லை.

திருவீழிமிழலை

விளங்குநான்மறை வல்லவேதியர்
மல்குசீர்வளர் மிழலையானடி
உளங்கொள்வார்தமை யுளங்கொள்வார்வினை
யொல்லை யாசறுமே **#1191**

நான்கு வேதங்களையும் நன்கு கற்றுவல்ல அந்தணர்கள் வசிக்கின்ற, புகழ்மிக்க திருவீழிமிழலையில் வீற்றிருந்தருளும் சிவபெருமானின் திருவடிகளை உள்ளத்தால் தியானிப்பவர்கள் சிவனடியார்கள், அவ்வடியார்களை வழிபடும் அன்பர்களின் வினையான குற்றம் விரைவில் நீங்கும்.

திருவீழிமிழலை

விசையினோடெழு பசையுநஞ்சினை
யசைவுசெய்தவன் மிழலைமாநகர்
இசையுமீசனை நசையின்மேவினான்
மிசைசெயா வினையே **#1192**

வேகமாகப் பரவும் கொல்லும் தன்மையுடைய விடத்தை உண்டு சிவபெருமான் திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில்

வீற்றிருந்தருளுகின்றான். நஞ்சுண்டும் சாவாது புகழுடன் விளங்கும் அப்பெருமானை நாடி வணங்கினால் வினையானது துன்பம் செய்யாது.

திருவீழிமிழலை

வென்றிசேர்கொடி மூடுமாமதிண்
மிழலைமாநகர் மேவிநாடொறும்
நின்றவாதிதன் னடிநினைப்பவர்
துன்பமொன் றிலரே **#1193**

சிவபெருமானின் வெற்றிக்கொடிகள் வானத்தை மூடும்படி விளங்கும், உயர்ந்த மதில்களையுடையது திருவீழி மிழிலை என்னும் மாநகர். அப்பெருமாநகரினைவிரும்பி ஆங்கு வீற்றிருந்தருளும் சிவபெருமானின் திருவடிகளை நாள் தோறும் நினைத்து வழிபடுபவர்கட்குத் துன்பம் சிறிதும் இல்லை.

திருவீழிமிழலை

போதகந்தனை யுரிசெய்தோன்புய
னேர்வரும்பொழின் மிழலைமாநகர்
ஆதரஞ்செய்த வடிகள்பாதம்
அலாலொர்பற் றிலமே **#1194**

செருக்குடன் முனிவர்களால் கொடு வேள்வியினின்றும் அனுப்பப்பட்ட மதங்கொண்ட யானையின் தோலை உரித்த சிவபெருமான், மேகம்படியும் சோலைகளையுடைய திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்றார். அப்பெருமானின் திருவடிகளைத்தவிர வேறு பற்று எதுவும் எமக்கு இல்லை.

திருவீழிமிழலை

தக்கன்வேள்வியைச் சாடினார்மணி
தொக்கமாளிகை மிழலைமேவிய
நக்கனாரடி தொழுவர் மேல்வினை
நாடொறுங் கெடுமே **#1195**

சிவபெருமான், தக்கன் வேள்வியைத் தகர்த்தவர். இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற மாளிகைகளையுடைய திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் திகம்பரரான சிவபெருமானின் திருவடிகளை நாள்தோறும் தொழுபவர்கட்கு மேல்வினை உண்டாகாது.

திருவீழிமிழலை

போரணாவுமுப் புரமெரித்தவன்
பொழில்கள்சூழ்தரு மிழலைமாநகர்ச்

சேருமீசனைச் சிந்தைசெய்பவர்
தீவினை கெடுமே #1196

போர்க்குணத்தை விரும்பி அதனை மேற் கொண்ட அசுரர்களின் முப்புரங்களை எரித்த சிவபெருமான், சோலைகள் சூழ்ந்த திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார். அப்பெருமானைச் சிந்தித்து வழிபடும் அடியவர்களின் தீவினை அழிந்துவிடும்.

திருவீழிமிழலை

இரக்கமிஃறொழி லரக்கனாருட
னெருக்கினான்மிகு மிழலையானடி
சிரக்கொள்பூவென வொருக்கினார்புகழ்
பரக்குநீள் புவியே #1197

இரக்கம் அற்ற தொழில்புரியும் அரக்கனான இராவணனின் உடல் நெரியும்படி கயிலைமலையின் கீழ் அடர்த்த சிவபெருமான் திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார். அப்பெருமானின் திருவடிக் கமலங்களை சிரசின்மேல் வைத்த மலர்போலக் கொண்டு, சிந்தையை ஒருமுகப்படுத்தி வழிபடுபவர்கள், உலகில் புகழுடன் விளங்குவர்.

திருவீழிமிழலை

துன்றுபூமகன் பன்றியானவ
னொன்றுமோர்கிலா மிழலையானடி
சென்றுபூம்புன னின்றுதூவினார்
நன்றுசேர் பவரே #1198

இதழ் நெருங்கிய தாமரைப் பூவில் வீற்றிருக்கும் பிரமனும், பன்றி உருவெடுத்த திருமாலும் உணர்தற்கரியவனான சிவ பெருமான், திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றான். அப்பெருமானின் திருவடிகளை, பூவும், நீரும் கொண்டு பூசிப்பவர்கள், முத்தி பெறுவர்.

திருவீழிமிழலை

புத்தர்கைச்சமண் பித்தர்பொய்க்குவை
வைத்தவித்தகன் மிழலைமாநகர்
சித்தம்வைத்தவ ரித்தலத்தினுண்
மெய்த்தவத் தவரே #1199

புத்தர்களும், சமணர்களும் கூறும் பொய்க் குவியல்களாகிய உபதேசங்களைத் தோற்க வைத்த ஞானசொரூபரான சிவபெருமான்,

திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார். அப்பெருமான் மீது சித்தம் வைத்து வழிபடுபவர்கள் இப்பூவுலகில் மெய்யான தவத்தைப் புரிந்தவராவர்.

திருவீழிமிழலை

சந்தமார்பொழின் மிழலையீசனைச்
சண்பைஞானசம் பந்தன்வாய்நவில்
பந்தமார்தமிழ் பத்தும்வல்லவர்
பத்தரா குவரே **#1200**

சந்தன மணம் கமழும் சோலைகளையுடைய திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமானைப் போற்றி, சண்பையில் அவதரித்த ஞானசம்பந்தர் அருளிய திருவருளால் பிணிக்கப்படும் இத்தமிழ்ப்பதிகத்தை ஓதவல்லவர்கள் பத்தர்கள் ஆவர்.

திருப்பல்லவனீச்சரம்

திருப்பல்லவனீச்சரம்

திருப்பல்லவனீச்சரம்,
பண் - பழம்பஞ்சுரம்

பரசுபாணியர் பாடல்வீணையர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தரசுபேணி நின்றார்
இவர்தன்மை யறிவாரார் #1201

சிவபெருமான் மழுப்படையைக் கையில் ஏந்தியவர். வீணையில் பாட்டிசைப்பவர். காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரத்தில் ஆட்சி புரிந்து அருள்புரிபவர். இவரது தன்மை எத்தகையது என்பதை யார் அறிவார்? ஒருவரும் அறியார்.

திருப்பல்லவனீச்சரம்

பட்டநெற்றியர் நட்டமாடுவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
திட்டமா யிருப்பார்
இவர்தன்மை யறிவாரார் #1202

தலைமைப் பட்டத்திற்குரிய அடையாள அணிகலன் அணிந்த நெற்றியர். திருநடனம் செய்பவர். காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரத்தில் விரும்பி வீற்றிருந்தருளுபவர். இவரது தன்மை எத்தன்மையது என்பதை யாவரே அறிவார்?

திருப்பல்லவனீச்சரம்

பவளமேனியர் திகழுநீற்றினர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தழகரா யிருப்பார்
இவர்தன்மை யறிவாரார் #1203

சிவபெருமான் பவளம் போன்ற சிவந்த மேனியுடையவர், ஒளிபொருந்திய திருவெண்ணீற்றினை அணிந்துள்ளவர். காவிரிப் பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரத்தில் விரும்பி வீற்றிருந்தருளும் அழகர். இவரது தன்மை எத்தன்மையது என்பதை யாவரே அறிவார்?

திருப்பல்லவனீச்சரம்

பண்ணில்யாழினர் பயிலுமொந்தையர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்

தண்ணலா யிருப்பார்
இவர்தன்மை யறிவாரார் #1204
இறைவன் பண்ணிசைக்கும் யாழினை உடையவர். மொந்தை என்னும் வாத்தியத்தை வாசிப்பவர். காவிரிப்பூம் பட்டினத்துப் பல்லவனீச்சரத்தில் விரும்பி வீற்றிருந்தருளும் தலைவர். இவரது தன்மை எத்தகையது என்பதை யார் அறிவார்?

திருப்பல்லவனீச்சரம்

பல்லிலோட்டினர் பலிகொண்டுண்பவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தெல்லியாட் டுகந்தார்
இவர்தன்மை யறிவாரார் #1205
சிவபெருமான் பற்களே இல்லாத மண்டையோட்டில் பிச்சையேற்று உண்பவர். காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரத்தில் விரும்பி வீற்றிருந்தருள்பவர். இரவில் நடனம் ஆடுதலை விரும்புபவர். இவர் தன்மை யார் அறிவார்?

திருப்பல்லவனீச்சரம்

பச்சைமேனியர் பிச்சைகொள்பவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
திச்சையா யிருப்பார்
இவர்தன்மை யறிவாரார் #1206
சிவபெருமான் பச்சைநிறம் கொண்ட திருமேனி உடையவர். பிச்சையேற்று உண்பவர். காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரத்தில் விரும்பி வீற்றிருந்தருளுபவர். இவர் தன்மை யார் அறிவார்?

திருப்பல்லவனீச்சரம்

பைங்கணேற்றினர் திங்கள்சூடுவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தெங்குமா யிருப்பார்
இவர்தன்மை யறிவாரார் #1207
இறைவன் பசிய கண்களையுடைய எருதின்மேல் ஏறுபவர். பிறைச்சந்திரனை சூடியுள்ளவர். காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரத்தில் விரும்பி வீற்றிருந்தருளினாலும், எங்கும் வியாபித்துள்ளவர். இவர் தன்மை யார் அறிவார்?

திருப்பல்லவனீச்சரம்

பாதங்கைதொழ வேதமோதுவர்

பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தாதியா யிருப்பார்
இவர்தன்மை யறிவாரார் **#1208**
தம் திருவடிகளைக் கைகளால் தொழுது உலகத்தினர் நன்மையடையும் பொருட்டு வேதங்களைச் சிவபெருமான் அருளிச்செய்தார். காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரத்தில் விரும்பி வீற்றிருந்தருளும் ஆதிமூர்த்தியாய் இருப்பவர். இவரது தன்மையை யார் அறிவார்?

திருப்பல்லவனீச்சரம்

படிகொண்மேனியர் கடிகொள்கொன்றையர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தடிகளா யிருப்பார்
இவர்தன்மை யறிவாரார் **#1209**
இறைவன் உலகம் முழுவதையும் தம் திரு மேனியாகக் கொண்டவர். நறுமணம் கமழும் கொன்றை மாலையை அணிந்துள்ளவன். காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரத்தில் தலைவனாய் விரும்பி வீற்றிருந்தருளுபவன். இவன் தன்மை யார் அறிவார்?

திருப்பல்லவனீச்சரம்

பறைகொள்பாணியர் பிறைகொள்சென்னியர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
திறைவரா யிருப்பார்
இவர்தன்மை யறிவாரார் **#1210**
இறைவன் பறை என்னும் இசைக்கருவியை உடையவன். பிறைச்சந்திரனைத் தலையிலே அணிந்துள்ளவன். காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரத்தில் யாவர்க்கும் தலைவனாய் விரும்பி வீற்றிருந்தருளுபவன். இவர் தன்மை யார் அறிவார்?

திருப்பல்லவனீச்சரம்

வானமாள்வதற் கூனமொனறிலை
மாதர்பல்லவ னீச்சரத்தானை
ஞானசம்பந்தன் நற்றமிழ்
சொல்லவல்லவர் நல்லவரே **#1211**
அழகிய காவிரிப்பூம்பட்டினப் பல்லவனீச்சரத்து இறைவனைப் போற்றி, ஞானசம்பந்தன் அருளிய இந்நற்றமிழ்த் திருப் பதிகத்தை ஓத வல்லவர்கள் நற்குணங்கள் வாய்க்கப் பெறுவர். அவர்கள் மறுமையில் வானுலகை ஆள்வதற்குத் தடையொன்றுமில்லை.

திருக்கழுமலம்

சீர்காழி

திருக்கழுமலம்,
பண் - பழம்பஞ்சுரம், கழுமலம் என்பது சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருண் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்ற மறைப்பது முன்பணியே
அமரர்கள் செய்வது முன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே
பிரம புரத்தை யுகந்தனையே #1212

இறைவரே! உமாதேவியார் பிரியாது பொருந்தி இருப்பது உம் திருமேனியையே. சிவஞானிகள் உணர்ந்து போற்றுவது உமது பேரருளையே. கற்றுணர்ந்த துறவிகள் வெறுப்பது மனைவி முதலிய குடும்பத்தையே. நெற்றிக்கண் எரித்தது மன்மதனையே. உமது திருமேனியை மறைப்பது பாம்பே. தேவர்கள் செய்வது உமது பணிவிடையே. நீர் பெற்றெடுத்து விரும்பி அணைத்தது முருகப் பெருமானையே. நீர் திருப்பிரமபுரம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்றீர்.

சீர்காழி

சதிமிக வந்த சலந்தரனே
தடிசிர நேர்கொள் சலந்தரனே
அதிரொளி சேர்திகி ரிப்படையா
லமர்ந்தன ரும்பர்து திப்படையால்
மதிதவழ் வெற்பது கைச்சிலையே
மருவிட மேற்பது கைச்சிலையே
விதியினி லிட்டவி ரும்பரனே
வேணு புரத்தை விரும்பரனே #1213

வஞ்சனை செய்து வந்தவன் சலந்தரன் என்னும் அசுரனே. அவன் தலையை வெட்டியவன் கங்கையைத் தாங்கிய அரன். கண்டவர்கள் நடுங்கத்தக்க ஒளிபொருந்திய சக்கராயுதத்தால் சலந்தனைக் கொல்லத்

தேவர்கள் துதித்து மகிழ்ந்தனர். சந்திர மண்டலத்தை அளாவிய மேருமலை, கையிலேந்திய வில்லாம். பொருந்திய நஞ்சை உணவாக ஏற்பதில் வெறுத்திலீர். விதிக்கப்பட்ட அறவழியில் உலகவர் ஒழுகுவதில் விருப்பத்தையுடைய பெரிய மேலான கடவுளே. வேணுபுரம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளும் அரனே!

சீர்காழி

காதம ரத்திகழ் தோடினனே
கானவ னாய்க்கடி தோடினனே
பாதம தாற்கூற் றுதைத்தனனே
பார்த்த னுடலம் புதைத்தனனே
தாதவிழ் கொன்றை தரித்தனனே
சார்ந்த வினைய தரித்தனனே
போத மமரு முரைப்பொருளே
புகலி யமர்ந்த பரம்பொருளே **#1214**

இறைவர் காதில் தோட்டை அணிந்தவர். வேடுவனாகி மிக விரைந்து சென்றவர். யமனைக் காலால் உதைத்தவர்.அர்ச்சுனனது உடலைக் கவசம் போல் மூடினவர். மகரந்தத்தோடு மலர்ந்த கொன்றையை அணிந்தவர். அன்பர்களின் வினைகளை அழித்தவர். சிவஞானக் கருத்தடங்கிய உபதேச மொழியின் பொருளாயுள்ளவர். அவரே திருப்புகலி என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளும் பரம்பொருள்.

சீர்காழி

மைத்திகழ் நஞ்சுமிழ் மாசுணமே
மகிழ்ந்தரை சேர்வது மாசுணமே
மெய்த்துடல் பூசுவர் மேன்மதியே
வேதம தோதுவர் மேன்மதியே
பொய்த்தலை யோடுறு மத்தமதே
புரிசடை வைத்தது மத்தமதே
வித்தக ராகிய வெங்குருவே
விரும்பி யமர்ந்தனர் வெங்குருவே **#1215**

கருநிறமுடைய நஞ்சைக் கக்கும் பாம்பை மகிழ்ந்து இடுப்பில் அணிந்துள்ளவர். திருநீற்றினையே சந்தனம் போல் உடம்பில் பூசியவர். அவர் தலைமேல் விளங்குவது சந்திரனே. அவர் வேதம் அருளியது உயிர்கட்கு மேலான ஞானம் அருளவே. மண்டையோடு ஏந்தி மயானத்தில் விளங்குபவர். முறுக்குண்ட சடையில் அவர் அணிந்துள்ளது ஊமத்த மலரே. வித்தகராகிய அப்பெருமான் எம் குரு

ஆவார். அவர் விரும்பி வீற்றிருந்தருளுவதும் திருவெங்குரு என்னும் திருத்தலமாகும்.

<u>சீர்காழி</u>

உடன்பயில் கின்றனன் மாதவனே
உறுபொறி காய்ந்திசை மாதவனே
திடம்பட மாமறை கண்டனனே
திரிகுண மேவிய கண்டனனே
படங்கொ ளரவரை செய்தனனே
பகடுரி கொண்டரை செய்தனனே
தொடர்ந்த துயர்க்கொரு நஞ்சிவனே
தோணி புரத்துறை நஞ்சிவனே **#1216**

இறைவனே! திருமாலைத் தம்முடன் இடப்பாகத்தில் இருக்கும்படி செய்கின்றவர். தம்வழிச் செல்லும் இயல்புடைய இந்திரியங்களை அடக்கும் பெரிய தவம் செய்தவர். உறுதி பயக்கும் சிறந்த வேதங்களை அருளியவர். முக்குண வயப்பட்டுச் செய்த புறச்சமயக் கொள்கைகளைக் கண்டனம் செய்பவர். படமெடுக்கும் பாம்பை இடுப்பில் அணிந்தவர். யானையின் தோலை உரித்து அதைக் கொன்றவர். தொடர்ந்த துன்பங்களை அழிப்பதில் இவர் விடம் போன்றவர். இவரே திருத்தோணிபுரம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் நம் சிவபெருமான் ஆவார்.

<u>சீர்காழி</u>

திகழ்கைய தும்புகை தங்கழலே
தேவர் தொழுவதுந் தங்கழலே
இகழ்பவர் தாமொரு மானிடமே
யிருந்தனு வோடெழின் மானிடமே
மிகவரு நீர்கொளு மஞ்சடையே
மின்னிகர் கின்றது மஞ்சடையே
தகவிர தங்கொள்வர் சுந்தரரே
தக்க தராயுறை சுந்தரரே **#1217**

இறைவன் அழகிய கையில் ஏந்தியுள்ளது புகைகொண்டு எழும் நெருப்பே. தேவர்கள் போற்றுவது அவருடைய திருக்கழல்களையே. தம்மை இகழ்ந்த தாருகவனத்து முனிவர்கள் ஏவிய மானை இடக்கரத்தில் எந்தியுள்ளார். பக்குவான்மாக்கட்கு ஞானோபதேசம் செய்ய அவர் காட்சி தந்தது மானிட உடம்பில். பெருக்கெடுக்கும் கங்கையைத் தாங்கியது அழகிய சடையிலே. மின்னலைப் போன்று ஒளிரும் அழகிய சடையை உடையவர். தகுந்த விரதம் கொள்ளும் சுந்தர

வடிவினர். அவர் எக்காலத்திலும் அழியாது நிலைத்து நிற்கும் பூந்தராய் என்னும் திருப்பதியில் வீற்றிருந்தருளும் அழகர்.

சீர்காழி

ஓர்வரு கண்க ளிணைக்கயலே
யுமையவள் கண்க ளிணைக்கழலே
ஏர்மரு வுங்கழ னாகமதே
யெழில்கொளு தாசன நாகமதே
நீர்வரு கொந்தள கங்கையதே
நெடுஞ்சடை மேவிய கங்கையதே
சேர்வரு யோக தியம்பகனே
சிரபுர மேய தியம்பகனே **#1218**

இறைவனையும், அடியாரையும் காணாத கண்கள் புறம்பானவை. உமாதேவியின் கண்கள் இரு கயல்மீன்கட்கு ஒப்பானவை. அழகிய திருவடிகளில் கட்டியிருப்பது நாகத்தையே. அவருடைய திருமேனியானது நெருப்பு வண்ணம் உடையது நீர்மயமான கொத்தான கூந்தல் ஒழுங்காய் உள்ளது. நெடுஞ்சடையில் தங்கியுள்ளது, கங்கையே. சேர்தற்கரிய யோகநிலையைக் காட்டிய மூன்று கண்களையுடையவரே. நெருப்பாகிய அம்பைக் கையின் இடத்துக்கொண்டு சிரபுரம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்து அருளுகின்றார்.

சீர்காழி

ஈண்டு துயிலம ரப்பினனே
யிருங்க ணிடந்தடி யப்பினனே
தீண்டல ரும்பரி சக்கரமே
திகழ்ந்தொளி சேர்வது சக்கரமே
வேண்டி வருந்த நகைத்தலையே
மிகைத்தவ ரோடு நகைத்தலையே
பூண்டனர் சேர லுமாபதியே
புறவ மமர்ந்த வுமாபதியே **#1219**

பாற்கடலில் துயில் கொள்ளும் திருமால், தமது பெரிய கண்ணைத் தோண்டிச் சிவபெருமானின் திருவடிகளில் அர்ச்சித்தனர். தீண்டுதற்கரிய தன்மையுடைய அந்தக் கரத்தில் ஒளியுடையதாய் விளங்குவது சக்கரமே. தாருகாவனத்து முனிவர்கள் விரும்பி யாகம் செய்து சிரமப்படச் சிவனைக் கொல்ல வந்தது நகுவெண்டலை. அம்முனிவர்களைப் பரிகசிப்பது போல வெண்டலைகளை மாலையாக அணிந்து கொண்டனர். அவர் சேர்வது எவற்றிலும் சிறந்த அடியார் உள்ளமாகிய இடமாம். புறவம் என்னும் திருத்தலத்தில் விரும்பி

வீற்றிருந்தருளுபவரும் அந்த உமாபதியே ஆவார்.

சீர்காழி

நின்மணி வாயது நீழலையே
நேசம தானவர் நீழலையே
உன்னி மனத்தெழு சங்கமதே
யொளியத னோடுறு சங்கமதே
கன்னிய ரைக்கவ ருங்களனே
கடல்விட முண்டக ருங்களனே
மன்னிவ ரைப்பதி சண்பையதே
வாரி வயன்மலி சண்பையதே **#1220**

சிவபெருமானே! மணிகட்டிய உன் கோயில் வாசலின் நிழலையே அருளிடமாகக் கொண்ட நேசமுடைய அடியவர்களிடமிருந்து நீங்கமாட்டாய். அவர்களின் அடிச்சுவட்டை எண்ணி. மனத்தில் தொழுகின்ற அடியவர்கள் விளங்குகின்ற இடமே அடியவர் திருக்கூட்டம் எனத்தகும். அவர் தாருகாவனத்தில் வாழும் மகளிர் உள்ளத்தைக் கவர்ந்த கள்வர். கடலில் எழுந்த விடத்தை உண்ட கரிய கண்டத்தர். அப்பெருமான் நிலையாக விரும்பி வீற்றிருந்தருளும் வரையறுத்தலை உடையபதி சண்பைப்புல்லாலே அழகாகச் சூழப் பட்டதாகிய கடல்வளமும், வயல் வளமும் உடைய சண்பை நகராகும்.

சீர்காழி

இலங்கை யரக்கர் தமக்கிறையே
யிடந்து கயிலை யெடுக்கிறையே
புலன்கள் கெடவுடன் பாடினனே
பொறிகள் கெடவுடன் பாடினனே
இலங்கிய மேனி யிராவணனே
யெய்து பெயரு மிராவணனே
கலந்தருள் பெற்றது மாவசியே
காழி யரனடி மாவசியே **#1221**

இலங்கை அரக்கர்கட்கு அரசனான இராவணன் கயிலையைப் பெயர்த்து எடுக்க, இறைவன் திருப்பாத விரலை ஊன்றக் கயிலையின் கீழ் நடுக்குண்டு, இந்திரியங்கள் மயங்கச் சோர்ந்து தான் பிழைக்கும் வண்ணம் இறையருளை வேண்டி உடனே பாடினன். பழைய செருக்கு நீங்கி, பொறிகள் பக்தி நிலையில் செல்ல அவனுடைய பாடலுக்கு இறைவன் உடன்பட்டு அருளினன். இரவு போன்ற கரிய நிறத்தை உடைய அவன் கயிலைமலையின் கீழ் நடுக்குண்டு அழுததனால் உண்டான பெயரே இராவணன் என்பதாம். இறைவனின் அருளில்

கலந்து அவன் பெற்றது சிறந்த வாளாயுதம். சீகாழி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமானின் திருவடி சிறந்த வசீகரத்தை உடையதாகும்.

சீர்காழி

கண்ணிகழ் புண்டரி கத்தினனே
கலந்திரி புண்டரி கத்தினனே
மண்ணிக ழும்பரி சேனமதே
வானக மேய்வகை சேனமதே
நண்ணி யடிமுடி யெய்தலரே
நளிர்மலி சோலையி லெய்தலரே
பண்ணியல் கொச்சை பசுபதியே
பசுமிக வூர்வர் பசுபதியே **#1222**

தாமரை போன்ற கண்களையுடைய திருமாலும், அவனோடு சேர்ந்து திரிந்த உந்திக் கமலத்தில் தோன்றிய பிரமனும், பூமியைத் தோண்டும் பன்றியாகவும், வானத்தில் பறக்கும் பருந்தாகவும் அடி, முடி தேட முயன்று அடையாதவர் ஆயினர். குளிர்ச்சி மிக்க சோலைகளில் உள்ள மலர்கள் சிவபூசை பண்ணப் பயன்படத் திருக்கொச்சை வயம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார், உயிர்கட்கெல்லாம் தலைவரான பசுபதி எனப்படும் சிவபெருமான். அவர் ஆனேற்றில் ஏறுவதால் பசுபதி என்னும் பெயர் படைத்தவரும் ஆவார்.

சீர்காழி

பருமதில் மதுரைமன் னவையெதிரே
பதிகம தெழுதிலை யவையெதிரே.
வருநதி யிடைமிசை வருகரனே
வசையொடு மலர்கெட வருகரனே
கருதலி லிசைமுர றருமருளே
கழுமல மமரிறை தருமருளே
மருவிய தமிழ்விர கனமொழியே
வல்லவர் தம்மிடம் திடமொழியே **#1223**

பெரிய மதில்களையுடைய மதுரை நகரின்கண் அரசனது அவைமுன்னர்த், திருப்பதிகத்தை ஓலையில் எழுதி வைகை நதியின் மீது செலுத்த அதனை எதிர் நோக்கிச் செல்லுமாறு செய்த கரத்தையுடையவர் சிவபெருமான். அவர் சைவர்கட்கு வந்த பழியும், பழிதூற்றலும் கெடுமாறு சமணர்களை அழித்தவர். நினைக்கவும் முடியாதபடி சைவர்களின் புகழ் உலகம் முழுவதும் ஒலிக்கும்படி செய்த வியப்பான செயல். திருக்கழுமலத்தில் வீற்றிருந்தருளும் இறைவனின்

அருளே. அவ்வருளைப் பெற்ற முத்தமிழ் விரகரது பாடல்களை ஓதவல்லவர்கள் இடர் ஒழிதல் நிச்சயம்.

திருவேகம்பம்

திருஏகம்பம்

திருவேகம்பம்,
பண் - பழம்பஞ்சுரம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஏகாம்பரநாதர்.
தேவியார் : காமாட்சியம்மை.

பாயுமால்விடை மேலொரு பாகனே
பாவைதன்னுரு மேலொரு பாகனே
தூயவானவர் வேதத் துவனியே
சோதிமாலெரி வேதத் துவனியே
ஆயுநன்பொரு ளுண்பொரு ளாதியே
யாலநீழ லரும்பொரு ளாதியே
காயவின்மதன் பட்டது கம்பமே
கண்ணுதற்பர மற்கிடங் கம்பமே **#1224**

இறைவர் பாய்ந்து செல்லும் பெருமையுடைய இடபத்தைச் செலுத்துபவர். உமாதேவியைத் தம் திருமேனியில் ஒருபாகமாகக் கொண்டவர். தேவர்கள் போற்றுகின்ற வேதத்தின் தொனியானவர். சுடர்விட்டு எரியும் வெம்மையுடைய வேள்வித்தீ ஆனவர். ஆராயத்தக்க நல்ல கருத்துக்கள் எல்லாவற்றிலும் நுட்பமான கருத்தாக விளங்குபவர். ஆலநிழலின் கீழ்த் தட்சிணாமூர்த்தியாய் விளங்கிச் சனகாதி முனிவர்கட்கு அரும் பொருள் உரைத்த முதல்வர். போர்புரிய வந்த வில்லையுடைய மன்மதன் முதற்கண் அடைந்தது நடுக்கமேயாம். நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் திருக்கச்சியேகம்பமே.

திருஏகம்பம்

சடையணிந்ததும் வெண்டலை மாலையே
தம்முடம்பிலும் வெண்டலை மாலையே
படையிலங்கையிற் சூலம தென்பதே
பரந்திலங்கையிற் சூலம தென்பதே
புடைபரப்பன பூதக ணங்களே
போற்றிசைப்பன பூகத ணங்களே
கடைகடோறு மிரப்பது மிச்சையே
கம்பமேவி யிருப்பது மிச்சையே **#1225**

சிவபெருமான் சடையில் அணிந்திருப்பது வெண்டலை மாலை ஆகும்.

உடம்பிலும் தலைமாலை அணிந்துள்ளார். அழகிய கையில் சூலப்படை ஏந்தி உள்ளவர். பரந்து விளங்கும் கையைப் படை போன்று கொண்டு தோண்டிய அழகு செய்வதாகிய அணிகலன் திருமானின் கண் ஆகும். பக்கத்தில் சூழ்ந்து விளங்குவனவும், போற்றிசைப்பனவும் பூதகணங்களே. அப்பெருமான் வாயில்கள் தோறும் சென்று இரப்பது உணவே. அவர் திருக்கச்சியேகம்பம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்றார்.

திருஏகம்பம்

வெள் எருக்கொடு தும்பை மிலைச்சியே;
ஏறு முன் செலத் தும்பை மிலைச்சியே!
அள்ளி நீறு அது பூசுவ தாகமே;
ஆன மாசுணம் மூசுவது ஆகமே;
புள்ளி ஆடை உடுப்பது கத்துமே;
போன, ஊழி, உடுப்பது உகத்துமே;
கள் உலாம் மலர்க் கம்பம் இருப்பதே
காஞ்சி மா நகர்க் கம்பம் இருப்பு அதே. #1226
உரை கொடுக்கப்படவில்லை

திருஏகம்பம்

முற்றலாமை யணிந்த முதல்வரே
மூரியாமை யணிந்த முதல்வரே
பற்றிவாளர வாட்டும் பரிசரே
பாலுநெய்யுகந் தாட்டும் பரிசரே
வற்றலோடு கலம்பலி தேர்வதே
வானினோடு கலம்பலி தேர்வதே
கற்றிலாமனங் கம்ப மிருப்பதே
காஞ்சிமாநகர்க் கம்ப மிருப்பதே #1227

சிவபெருமான் ஆமையோட்டை அணிந்த முதல்வர்.வலிய ஆனேற்றை அழகு செய்து ஏறிய முதல்வர். ஒளி பொருந்திய பாம்பைப் பிடித்து ஆட்டும் தன்மையர். பாலாலும், நெய்யாலும் திருமுழுக்காட்டப்படும் பெருமையுடையவர். வற்றிய மண்டையோட்டைப் பாத்திரமாகக் கொண்டு பிச்சையேற்றுத் திரிபவர். தேவர்களாலும் ஏனைய உலகிலுள்ள அடியவர்களாலும் போற்றிப் பூசை செய்யப்படுபவர். அவரைப் போற்றாதவர்கள் மனம் இரும்புத்தூண் போன்றது. அப்பெருமான் திருவேகம்பம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்றார்.

திருஏகம்பம்

வேடனாகி விசையற் கருளியே
வேலைநஞ்ச மிசையற் கருளியே
ஆடுபாம்பரை யார்த்த துடையதே
யஞ்சுபூதமு மார்த்த துடையதே
கோடுவான்மதிக் கண்ணி யழகிதே
குற்றமின்மதிக் கண்ணி யழகிதே
காடுவாழ்பதி யாவது மும்மதே
கம்பமாவதி யாவது மும்மதே **#1228**

சிவபெருமான் வேட்டுவ வடிவம் தாங்கி அர்ச்சுனனுக்கு அருள்புரிந்தவர். கடலில் தோன்றிய நஞ்சை உண்டு கண்டம் கறுத்தவர். ஆடும் பாம்பை அரையில் கச்சாகக் கட்டி அதன்மேல் ஆடை அணிந்தவர், பிரளயகாலத்தில் ஐம்பூதங்களால் ஆகிய உலகம் அவரால் அழிக்கப்பட்டது. வளைந்த ஆகாயத்தில் விளங்கும் பிறையைத் தலைமாலையாக அழகுற அணிந்தவர். களங்கமில்லாத மெய்யடியார்களின் பக்தியாகிய வலை உணர்தற்கு இனிமையானது. சுடுகாடே அவர் வாழும் இருப்பிடம், திருக்கச்சியேகம்பத்தையும் தாம் விரும்பும் திருத்தலமாகக் கொண்டு வீற்றிருந்தருளுகின்றார்.

திருஏகம்பம்

இரும்புகைக்கொடி தங்கழல் கையதே
யிமயமாமக டங்கழல் கையதே
அரும்புமொய்த்த மலர்ப்பொறை தாங்கியே
யாழியான்றன் மலர்ப்பொறை தாங்கியே
பெரும்பகனட மாடுதல் செய்துமே
பேதைமார்மனம் வாடுதல் செய்துமே
கரும்புமொய்த்தெழு கம்ப மிருப்பதே
காஞ்சிமாநகர்க் கம்ப மிருப்பதே **#1229**

இறைவர் கொடி போன்று பெரிய புகையுடன் எழும் நெருப்பைக் கையிலேந்தியவர். இமயமலையரசனின் மகளான உமாதேவியின் கைகளால் அவருடைய திருவடிகள் வருடப்படுவன. அடியவர்களால் பூசிக்கப்படும் அரும்புகளையும், மலர்களையும் பாரமாகத் தாங்குபவர். சக்கரப் படையுடைய திருமாலின் பெரிய உடலெலும்பாகிய கங்காளத்தைச் சுமப்பவர். பகலில் திருநடனம் செய்பவர். தாருகாவனத்து முனிபத்தினிகளின் மனம் வாடச் செய்பவர். கருப்பங்கழிகள் நிறைந்து கம்பம் போலப் பருத்துக் காணப்படும் திருக்கச்சியேகம்பம் என்ற திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுபவர்.

திருஏகம்பம்

முதிரமங்கை தவஞ்செய்த காலமே
முன்புமங்கை தவஞ்செய்த காலமே
வெதிர்களோடகில் சந்தமு ருட்டியே
வேழமோடகில் சந்த முருட்டியே
அதிரவாறு வரத்தழு வத்தொடே
யானையாடு வரத்தழு வத்தொடே
கதிர்கொள்பூண்முலைக் கம்ப மிருப்பதே
காஞ்சிமாநகர்க் கம்ப மிருப்பதே **#1230**

மேகம் போலும் நிறத்தையுடைய அம்பிகை முற்காலத்தில் இமயமலையில் சிவபெருமானைக் கணவராக அடையத் தவம் செய்தாள். பின் அம்பிகை கம்பையாற்றில் தவம் செய்யும் இக்காலத்திலும் மூங்கில், அகில், சந்தனம், மற்றும் ஏனைய முருட்டு மரங்களையும், யானை முதலிய மிருகங்களையும் ஓட முடியாதவாறு ஆரவாரத்தோடு கம்பையாறு அடித்துக்கொண்டு வர, பஞ்சகவ்வியங்களால் அபிடேகம் செய்யப்படும் சிவபெருமானைத் தழுவுவதால் முலைத்தழும்பு தம்பம்போல் உறுதியான அவர் மார்பில் விளங்குகின்றது. அப்பெருமான் காஞ்சிமாநகரிலுள்ள திருவேகம்பத்தில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருஏகம்பம்

பண்டரக்க னெடுத்த பலத்தையே
பாய்ந்தரக்க னெடுத்த பலத்தையே
கொண்டரக்கிய துங்கால் விரலையே
கோளரக்கிய துங்கால் விரலையே
உண்டுழன்றது முண்டத் தலையிலே
யுடுபதிக்கிட முண்டத் தலையிலே
கண்டநஞ்ச மடக்கினை கம்பமே
கடவுணீயிடங் கொண்டது கம்பமே **#1231**

சிவபெருமான், இராவணன் கைலைமலையை எடுத்த வலிமையை, மேற்சென்ற சிதறுவித்தலால், அவன் வலிமையற்றவன் என்பதை உணர்த்தும் வகையில் தம் திருப்பாத விரலை ஊன்றியவர். தாருகவனத்து முனிவரேவலால் கொனை செய்ய வந்த மானை ஏந்தியுள்ளவர். அவர் பிச்சையெடுத்துத் திரிந்தது தலை மண்டையோட்டிலே. சந்திரனுக்கு இடம் கொடுத்தது அவர் தலையிலே. நஞ்சைக் கண்டத்தில் அடக்கிய, உலகைத் தாங்கும் தூண் போன்றவன் சிவபெருமானே. கடவுளாகிய அப்பெருமான் விரும்பி

வீற்றிருந்தருளுவது திருக்கச்சியேகம்பமே.

திருஏகம்பம்

தூணியான சுடர்விடு சோதியே
சுத்தமான சுடர்விடு சோதியே
பேணியோடு பிரமப் பறவையே
பித்தனான பிரமப் பறவையே
சேணினோடு கீழூழி திரிந்துமே
சித்தமோடு கீழூழி திரிந்துமே
காணநின்றன ருற்றது கம்பமே
கடவுணீயிட முற்றது கம்பமே **#1232**

அம்பறாத் தூணியாகிய நெற்றிக்கண்ணிலிருந்து சுடர்விடும் நெருப்புப் பொறிகளை உடையவரே. அவற்றிலிருந்து தோன்றியவரே இயல்பாகவே பாசங்களின் நீங்கிய சுடர்விடு ஞானமயமான முருகக் கடவுளாவார். தம் வலிமையைப் பாராட்டி முடி காண்பான் சென்ற பிரமன் அன்னப்பறவை வடிவு தாங்கி ஆகாயத்திலும், திருமால் பன்றி உருவில் பாதாளத்திலும் செருக்கோடும், கீழ்மைத் தன்மையோடும் இறைவனைக் காண முயன்று ஊழிக்காலம் வரை திரிந்தும் அவர்கள் கண்டது அக்கினித் தம்பமாகிய உமது வடிவத்தையே. பரம் பொருளாகிய நீ விரும்பி வீற்றிருந்தருளுவது திருச்கச்சியேகம்பமே ஆகும்.

திருஏகம்பம்

ஓருடம்பினை யீருரு வாகவே
யுன்பொருட்டிற மீருரு வாகவே
ஆருமெய்தற் கரிது பெரிதுமே
யாற்றவெய்தற் கரிது பெரிதுமே
தேரரும்மறி யாது திகைப்பரே
சித்தமும்மறி யாது திகைப்பரே
கார்நிறத்தம ணர்க்கொரு கம்பமே
கடவுணீயிடங் கொண்டது கம்பமே **#1233**

இறைவரே! யானையின் உடம்பினை உரித்ததாகிய தோலை உடம்பில் போர்வையாக அணிந்துள்ளீர். உம்முடைய உண்மைத்தன்மை சக்தி, சிவம் என இரண்டு திறந்தது. உமது பாகத்திலுள்ள அம்பிகையின் கரிய நிறம் ஒளிவாய்ந்தது. உயிர்கள் ஆன்ம முயற்சியினால் உம் திருவடிகளை அடைதல் அரிது. புத்தர் களும் உம்மை அறியாது திகைப்பர். அவர்கள் அறிவும் தம் நிலைமை மாறமாட்டாதாதலால் உம்மைத் துதிப்பதை வெறுப்பர். கருநிறமுடைய சமணர்கள் உம்மைக் கண்டு நடுங்குவர்.

பரம்பொருளாகிய நீர் விரும்பி வீற்றிருந்தருளுவது திருக்கச்சியேகம்பமே.

திருஏகம்பம்

கந்தமார்பொழில் சூழ்தரு கம்பமே
காதல்செய்பவர் தீர்த்திடு கம்பமே
புந்திசெய்வது விரும்பிப் புகலியே
பூசுரன்றன் விரும்பிப் புகலியே
அந்தமில்பொரு ளாயின கொண்டுமே
யண்ணலின்பொரு ளாயின கொண்டுமே
பந்தனின்னியல் பாடிய பத்துமே
பாடவல்லவ ராயின பத்துமே **#1234**

நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்து விளங்குவது திருவேகம்பம் என்னும் திருத்தலம். அதனை விரும்பி வழிபடுபவர்கள் பழவினையால் வரும் துன்பங்கட்கு வருந்திச் சொரியும் துன்பக் கண்ணீரைத் தீர்த்திடும். எல்லாம் சிவன் செயல் என்பதை நிச்சயித்து, புகலியில் அவதரித்த பூசுரனான திருஞான சம்பந்தன், அந்தமில் பொருளாந்தன்மையை உட்கொண்டு, சிவபெருமானின் புகழையே பொருளாகக் கொண்டு அருளிய இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள் பக்தியில் மேம்பட்டு எல்லாம் கைகூடப்பெறுவர்.

திருஆலவாய்

திருஆலவாய்

திருஆலவாய்,
பண் - பழம்பஞ்சுரம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. இதுவே மதுரை. ,
சுவாமிபெயர் : சொக்கநாதசுவாமி.
தேவியார் : மீனாட்சியம்மை.

ஆலநீழ லுகந்த திருக்கையே
யானபாட லுகந்த திருக்கையே
பாலினேர்மொழி யாளொரு பங்கனே
பாதமோதலர் சேர்புர பங்கனே
கோலநீறணி மேதகு பூதனே
கோதிலார்மன மேவிய பூதனே
ஆலநஞ்சமு துண்ட களத்தனே
யாலவாயுறை யண்டர் களத்தனே **#1235**

சிவபெருமான் கல்லால நிழலை விரும்பி இருப்பிடமாகக் கொண்டவர். அவருக்கு விருப்பமான பாடல் இருக்குவேதமாகும். அவர் பால் போன்று இனிய மொழி பேசும் உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டவர். தம் திருவடிகளைப் போற்றாத அசுரர்களின் முப்புரங்களை அழித்தவர். அழகிய திருநீற்றைப் பூசிய சிறந்த பூதகணங்களைப் படையாக உடையவர். குற்றமற்றவர்களின் உள்ளத்தில் தங்கிய உயிர்க்கு உயிரானவர். ஆலகால விடமுண்ட கண்டத்தையுடையவர். தேவர்கட்கெல்லாம் தலைவரான அவர் திருவாலவாய் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருஆலவாய்

பாதியாவுடன் கொண்டது மாலையே
பாம்புதார்மலர்க் கொன்றைநன் மாலையே
கோதினீறது பூசிடு மாகனே
கொண்டநற்கையின் மானிட மாகனே
நாதனாடொறு மாடுவ தானையே
நாடியன்றுரி செய்தது மானையே
வேதநூல்பயில் கின்றது வாயிலே
விகிர்தனூர்திரு வாலநல் வாயிலே **#1236**

சிவபெருமான் தம் உடம்பில் பாதியாகக் கொண்டது திருமாலை. பாம்பும், கொன்றை மலரும் அவருக்கு நன்மாலைகளாகும். குற்றமற்ற

திருநீறு பூசிய மார்பை உடையவர். இடத் திருக்கரத்தில் மானை ஏந்தியுள்ளவர். அவர் நாள்தோறும் அபிடேகம் கொள்வது பஞ்ச கவ்வியத்தால். அவர் உரித்தது யானையை. வேத நூல்களை அருளுவது அவரது திருவாய். விகிர்தரான அவர் விரும்பி வீற்றிருந்தருளுவது திரு ஆலவாய்.

திருஆலவாய்

காடுநீட துறப்பல கத்தனே
காதலால்நினை வார்தம கத்தனே
பாடுபேயொடு பூதம சிக்கவே
பல்பிணத்தசை நாடிய சிக்கவே
நீடுமாநட மாடவி ருப்பனே
நின்னடித்தொழ நாளுமி ருப்பனே
ஆடனீள்சடை மேவிய வப்பனே
யாலவாயினின் மேவிய வப்பனே **#1237**

இறைவர், பெரிய சுடுகாட்டில் எல்லாவற்றிற்கும் கர்த்தாவாயிருப்பவர். தம்மைப் பத்தியால் நினைவார்தம் உள்ளத்தில் இருப்பவர். பாடுகின்ற பேய், மற்றும் பூதகணங்களுடன் குழைந்திருப்பவர். அக்கணங்கள் பிணத்தசைகளை விரும்பியுண்ண நடனம் ஆடுபவர். திரு வடிகளைத் தொழுபவர்கட்கு நாளும் அருள்புரிபவர். அசைகின்ற சடைமீது கங்கையைத் தாங்கியுள்ளவர். திருஆலவாயில் வீற்றிருந்தருளும் தந்தை அவரே.

திருஆலவாய்

பண்டயன்றலை யொன்று மறுத்தியே
பாதமோதினர் பாவ மறுத்தியே
துண்டவெண்பிறை சென்னி யிருத்தியே
தூயவெள்ளெரு தேறியி ருத்தியே
கண்டுகாமனை வேவ விழித்தியே
காதலில்லவர் தம்மை யிழித்தியே
அண்டநாயக னேமிகு கண்டனே
யாலவாயினின் மேவிய கண்டனே **#1238**

முற்காலத்தில் நீர் பிரமனின் தலை ஒன்றை அறுத்தீர்.உம் திருவடிகளை வணங்கும் அன்பர்களின் பாவங்களை அறுப்பீர். பிறைச்சந்திரனைச் சடையில் அணிந்துள்ளீர். தூய வெண்ணிற இடபத்தின் மீது இருப்பீர். மன்மதன் சாம்பலாகுமாறு நெற்றிக்கண்ணால் விழித்தீர். அன்பில்லாதவரை இகழ்வீர். தேவர்

திருஆலவாய்

சென்றுதாதை யுகுத்தனன் பாலையே
சீறியன்பு செகுத்தனன் பாலையே
வென்றிசேர்மழுக் கொண்டுமுன் காலையே
வீழவெட்டிடக் கண்டுமுன் காலையே
நின்றமாணியை யோடின கங்கையால்
நிலவமல்கி யுதித்தன கங்கையால்
அன்றுநின்னுரு வாகத் தடவியே
யாலவாயர னாகத் தடவியே **#1239**

தந்தையாகிய எச்சதத்தன் சிவபூசைக்குரிய பாலைக் கவிழ்த்துவிட, புதல்வராகிய விசாரசருமர் சினந்து அருகிலுள்ள கோலை எடுத்து ஓச்ச அது மழுவாக மாறித் தந்தையின் முன்காலை வெட்டிற்று. ஆங்குச் சிவபூசை ஆற்றிய பிரமசாரியான அவ்விசார சருமருக்குக் கங்கை முதலானவற்றை அணிந்த திருக்கோலத்தோடு தோன்றிக் காட்சி நல்கியவர் சிவபெருமான். அப்பெருமான், தந்தையாகிய எச்சதத்தனை வீழ்த்திய அடியவரின் பாவத்தைப் போக்கித் தம் திருக்கையால் வருடிச் சிவசாரூபம் பெறத்தடவிச் சண்டீச பதம் தந்து அருளினர். அப்பெருமான் திருஆலவாயில் வீற்றிருந்தருளும் அரன் ஆவார்.

திருஆலவாய்

நக்கமேகுவர் நாடுமோ ரூருமே
நாதன்மேனியின் மாசுண மூருமே
தக்கபூமனைச் சுற்றக் கருளொடே
தாரமுய்த்தது பாணற் கருளொடே
மிக்கதென்னவன் றேவிக் கணியையே
மெல்லநல்கிய தொண்டர்க் கணியையே
அக்கினாரமு துண்கல னோடுமே
யாலவாயர னாருமை யோடுமே **#1240**

சிவபெருமான் நாடுகளிலும், ஊர்தோறும் ஆடையில்லாக் கோலத்தோடு பிச்சைக்குச் செல்வார். அவர் திருமேனியில் பாம்பு ஊர்ந்து கொண்டிருக்கும். திருநீலகண்ட யாழ்ப்பாணரை அழைத்து வரும்படி அடியார்களுக்குக் கனவில் ஏவ, அவ்வாறே வந்து அப்பாணர் பாடும்போது பொற்பலகை அருளி அமரச் செய்தார். தென்னவன் தேவியாகிய மங்கையர்க்கரசியாருக்கு மங்கலியம் முதலான மங்களகரமான அணிகளை அருளியவர். திருத்தொண்டர்க்கு அண்மையாய் விளங்குபவர். எலும்புமாலை அணிந்துள்ளவர். மண்டையோட்டை உண்கலனாகக் கொண்டவர். அப்பெருமான்

திருஆலவாயில் உமாதேவியை உடனாகக் கொண்டு வீற்றிருந்தருளுகின்றார்.

திருஆலவாய்

வெய்யவன்பல் லுகுத்தது குட்டியே
வெங்கண்மாசுணங் கையது குட்டியே
ஐயனேயன லாடிய மெய்யனே
யன்பினால்நினை வார்க்கருண் மெய்யனே
வையமுய்யவன் றுண்டது காளமே
வள்ளல்கையது மேவுகங் காளமே
ஐயமேற்ப துரைப்பது வீணையே
யாலவாயரன் கையது வீணையே #1241

சிவபெருமான் சூரியனுடைய பல்லை உதிர்த்து கையால் குட்டி. அவர் கையிலிருப்பது கொடிய கண்களையுடைய பாம்புக்குட்டி. அவரே தலைவர். அனலில் ஆடும் திருமேனியுடையவர். அன்பால் நினைந்து வழிபடும் அடியவர்கட்கு அருள் வழங்கும் மெய்யர். உலகமுய்ய அன்று அவர் உண்டது விடமே. வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் வள்ளலான அவர் கையில் விளங்குவது எலும்புக்கூடே. அவர் பிச்சை ஏற்பதாக உலகோர் உரைப்பது வீண் ஆகும். திருஆலவாயில் வீற்றிருந்தருளும் அரனார் கையிலுள்ளது வீணையே.

திருஆலவாய்

தோள்கள்பத்தொடு பத்து மயக்கியே
தொக்கதேவர் செருக்கை மயக்கியே
வாளரக்க னிலத்துக் களித்துமே
வந்தமால்வரை கண்டு களித்துமே
நீள்பொருப்பை யெடுத்தவுன் மத்தனே
நின்விரற்றலை யான்மத மத்தனே
ஆளுமாதி முறித்தது மெய்கொலோ
வாலவாயர னுய்த்தது மெய்கொலோ #1242

வாளைக் கையிலேந்திய இராவணன் தன் இருபது தோள்களின் வலிமையையும் சேர்த்துக் கொண்டு திக்குவிசயம் செய்து, தன்னை எதிர்க்க வந்த தேவர்களின் வலிமையை மயங்கச் செய்து, இப்பூவுலகில் களித்து நிற்க, தன் தேரைத் தடுத்த கயிலை மலையைக்கண்டு வெகுண்டு பாய்ந்து சென்று அதனைப் பெயர்த்து எடுத்து உன்மத்தன் ஆயினன். அந்நிலையில் இறைவர் தம் திருப்பாத விரலை ஊன்ற, இராவணனின் தலை நெரிய, அவன் செருக்கு அழிந்தவன் ஆயினான். உலகனைத்தும் ஆளுகின்ற முதல்வராகிய தாம் அவ்வரக்கனின் உடலை முறியச்

செய்தது மெய்கொல்? திருஆலவாயில் வீற்றிருந்தருளும் அரனே! பின்னர் அவனது பாடலைக் கேட்டு அருள்செய்ததும் உண்மையான வரலாறு தானோ?

திருஆலவாய்

பங்கயத்துள நான்முகன் மாலொடே
பாதநீண்முடி நேடிட மாலொடே
துங்கநற்றழ லின்னுரு வாயுமே
தூயபாடல் பயின்றது வாயுமே
செங்கயற்கணி னாரிடு பிச்சையே
சென்றுகொண்டுரை செய்வது பிச்சையே
அங்கியைத்திகழ் விப்ப திடக்கையே
யாலவாயர னார திடக்கையே **#1243**

செந்தாமலை மலரில் வீற்றிருக்கும் பிரமன் திருமாலோடு இறைவனின் அடியையும், முடியையும் தேட, அவர்கள் மயங்க, உயர்ந்த நல்ல அக்கினி உருவாய் நின்றான். பின்னர்த் தங்கள் பிழைகளை மன்னித்து அருளுமாறு தூய பாடல்களைப் பாடின, அவர்கள் வாய். சிவந்த கயல்மீன்கள் போன்ற கண்களையுடைய முனிபத்தினிகள் இறைவருக்கு இட்டது பிச்சையே. அதனை ஏற்று அவர் உரைசெய்தது அவர்கட்குப் பித்து உண்டாகும் வண்ணமே. அவர் நெருப்பேந்தியுள்ளது இடத் திருக்கரத்திலே. திருஆலவாய் சிவபெருமான் திடமாக வீற்றிருந்தருளும் இடம் ஆகும்.

திருஆலவாய்

தேரரோடம ணர்க்குநல் கானையே
தேவர்நாடொறுஞ் சேர்வது கானையே
கோரமட்டது புண்டரி கத்தையே
கொண்டநீள்கழல் புண்டரி கத்தையே
நேரிலூர்க ளழித்தது நாகமே
நீள்சடைத்திகழ் கின்றது நாகமே
ஆரமாக வுகந்தது மென்பதே
யாலவாயர னாரிட மென்பதே **#1244**

சிவபெருமான் தம்மைப் போற்றாத புத்தர்கட்கும், சமணர்கட்கும் அருள்புரியாதவர். தேவர்கள் நாள்தோறும் சென்று வணங்குவது அவர் எழுந்தருளியிருக்கும் கடம்பவனத்தை. அவர் வெற்றிகொண்டு வீழ்த்தியது புலியையே. திருமால் இறைவனைப் பூசித்துத் திருவடியில் சேர்த்தது தாமரை மலர் போன்ற கண்ணையே. பகைமை கொண்ட மூன்று புரங்களை அழித்தது மேருமலை வில்லே. பெருமானின் நீண்ட

சடைமுடியில் விளங்குவது நாகமே. இறைவன் மாலையாக விரும்பி அணிவது எலும்பே. அப்பெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் இடம் திருஆலவாய் என்பதே.

திருஆலவாய்

ஈனஞானிக டம்மொடு விரகனே
யேறுபல்பொருண் முத்தமிழ் விரகனே
ஆனகாழியுண் ஞானசம்பந்தனே
யாலவாயினின் மேயசம் பந்தனே
ஆனவானவர் வாயினு ளத்தனே
யன்பரானவர் வாயினு ளத்தனே
நானுரைத்தன செந்தமிழ் பத்துமே
வல்லவர்க்கிவை நற்றமிழ் பத்துமே **#1245**

தேவர்களால் துதிக்கப்படும் தலைவரே. அடியவர்களின் இனிய உள்ளத்தில் இருப்பவரே! நல்லறிவு அற்றவர்கள்பால் பொருந்தாத கொள்கையுடையவரே. பல பொருள்களை அடக்கிய, முத்தமிழ் விரகரான சீகாழியுள் அவதரித்த ஞான சம்பந்தர், திருஆலவாய் இறைவரிடம் உரிமையுடையவராய் அவரைப் போற்றிப் பாடிய இச்செந்தமிழ்ப் பாடல்கள் பத்தும் ஓதவல்லவர்கட்கு எல்லா நன்மைகளும் உண்டாகும்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை,
பண் - பழம்பஞ்சுரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

துன்றுகொன்றைநஞ் சடையதே
தூய கண்டநஞ் சடையதே
கன்றின் மானிடக் கையதே
கல்லின் மானிடக் கையதே
என்று மேறுவ திடவமே
யென்னி டைப்பலி யிடவமே
நின்ற தும்மிழலை யுள்ளுமே
நீரெனைச் சிறிது முள்ளுமே **#1246**

சிவபெருமான் நெருங்கிய கொன்றைமலரைச் சூடியுள்ளது சடையில். அவருடைய தூயகழுத்து நஞ்சை அடக்கியுள்ளது. மான்கன்றை ஏந்தி உள்ளது இடக்கை. இமயமலையரசன் மகளான மான் போன்ற உமாதேவியைக் கொண்டுள்ளது இடப்பக்கம். அவர் என்றும் ஏறும் வாகனம் இடபமே. பிச்சாடனரான நீர் நான் பிச்சையிட என்னிடத்து வருவீராக. நீர் வீற்றிருந்தருளுவது திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில், அதுபோல அடியேன் உள்ளத்திலும் எழுந்தருள நினைப்பீராக!

திருவீழிமிழலை

ஓதி வாயதும் மறைகளே
யுரைப்ப தும்பல மறைகளே
பாதி கொண்டதும் மாதையே
பணிகின் றேன்மிகு மாதையே
காது சேர்கனங் குழையரே
காத லார்கனங் குழையரே
வீதி வாய்மிகும் வேதியா
மிழலை மேவிய வேதியா **#1247**

சிவபெருமான் ஓதுவன வேதங்களே. உரைப்பது பிறர் எவர்க்கும் தெரிவதற்கரிய பொருள்களே. திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டது உமாதேவியை. வழிபடுகின்றேன் அவ்வழகிய கோலத்தை. காதிலே

அணிந்திருப்பது கனவிய குழை. அவர் தம்மிடத்து அன்பு செலுத்துபவர்களிடத்துக் குழைந்து நிற்பர். வீதியிலே மிகுவது வேதஒலி. வேதங்களை அருளிச் செய்த அப்பெருமான் வீற்றிருந்தருளுவது திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில்.

திருவீழிமிழலை

பாடு கின்றபண் டாரமே
பத்த ரன்னபண் டாரமே
சூடு கின்றது மத்தமே
தொழுத வென்னையுன் மத்தமே
நீடு செய்வதுந் தக்கதே
நின்ன ரைத்திகழ்ந் தக்கதே
நாடு சேர்மிழலை யூருமே
நாக நஞ்சழலை யூருமே **#1248**

சிவபெருமான் ஊழி இறுதியில் பாடுகின்ற பண்தாரம் என்னும் இசை ஈறாகிய எழுவகை இசையுமே. பக்தர்கட்கு ஞானக்கருவூலமாய் விளங்குபவர். அவர் சூடுவது ஊமத்த மலர். அவரை வணங்கும் என்னைப் பித்தனாக்கினார். அவரையே நீளத் தியானித்துப் போற்றுமாறு செய்தார். இது தகுமோ? அவருடைய இடுப்பில் விளங்குவது அக்குப்பாசியே. அப்பெருமான் மிழலை நாட்டிலுள்ள திருவீழிமிழலையில் வீற்றிருந்தருளுகின்றார். அவருடைய திருமேனியில் நாகமும், கண்டத்தில் நஞ்சும், கரத்தில் நெருப்பும் விளங்குகின்றன.

திருவீழிமிழலை

கட்டு கின்றகழ னாகமே
காய்ந்ததும் மதன னாகமே
இட்ட மாவதிசை பாடலே
யிசைந்த நூலினமர் பாடலே
கொட்டுவான் முழவம் வாணனே
குலாயசீர் மிழலை வாணனே
நட்ட மாடுவது சந்தியே
நானுய்தற் கிரவு சந்தியே **#1249**

சிவபெருமான் திருவடிகளில் வீரக்கழலாக அணிந்துள்ளது நாகத்தையே. அவர் எரித்தது மன்மதனது உடம்பையே. அவர் விரும்புவது அடியவர்கள் பாடும் இசைப் பாடலே. பொருந்திய நூலின் அமைதிக்கு ஏற்றதாயிருப்பது அவர் ஆடலே. அவ்வாடலுக்கு முழவங் கொட்டுபவன் வாணனே. இவை திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில்

வீற்றிருந்தருளும் சிவபெருமானின் சிறப்புக்கள். அவர் நடனமாடுவது சந்தி என்னும் நாடக உறுப்பின்படி. நான் காம வாதையினின்றும் பிழைப்பதற்கு இராக்காலம் தக்க சமயமாகும்.

திருவீழிமிழலை

ஓவி லாதிடுங் கரணமே
யுன்னு மென்னுடைக் கரணமே
ஏவு சேர்வுநின் னாணையே
யருளி னின்னபொற் றாணையே
பாவி யாதுரை மெய்யிலே
பயின்ற நின்னடி மெய்யிலே
மேவி னான்விறற் கண்ணனே
மிழலை மேயமுக் கண்ணனே **#1250**

மிழலையை உகந்தருளியிருக்கும் முக்கண் இறைவரே படைப்புக் காலமுதல் மகாசங்கார காலம் வரை ஓய்வின்றித் தொழிலாற்றும் கரணபூதர். மனம் முதலிய அகக்கருவிகள் உம்மையே நினைக்கும். மன்மதபாணம் என்மேல் தைப்பதும் உம் ஆணையால், உம் பொன்போன்ற திருவடிகளை நீர் அருளினால் துன்பம் எனக்கு நேருமோ? உம்மைக் கருதாது உரைப்பன மெய்ம்மையாகாது. வலியோனாகிய திருமால் உம்முடைய திருவடியை உண்மையாகவே பொருந்தப் பெற்றான்.

திருவீழிமிழலை

வாய்ந்த மேனியெரி வண்ணமே
மகிழ்ந்து பாடுவது வண்ணமே
காய்ந்து வீழ்ந்தவன் காலனே
கடுநடஞ் செயுங் காலனே
போந்த தெம்மிடை யிரவிலே
யும்மிடைக் கள்வ மிரவிலே
வேய்ந்ததும் மிழலை யென்பதே
விரும்பியே யணிவ தென்பதே **#1251**

சிவபெருமானின் திருமேனி நெருப்புப் போன்று சிவந்த வண்ணமுடையது. அவர் மகிழ்ந்து பாடுவது பல வண்ணப் பாடல்களையே. அவரால் உதைக்கப் பட்டு வீழ்ந்தவன் காலன். அவர் அழகிய திருநடனம் செய்யும் கால்களை உடையவர். அவர் எங்கள் வீட்டிற்குப் பிச்சை யேற்க வந்தது இரவில். எம் உள்ளம் புகுந்து கவர்ந்தது இரவில். அப்பெருமான் வீற்றிருந்தருளுவது திருவீழிமிழலை என்னும் திருத்தலமாகும். அவர் விரும்பி அணிவது எலும்பு மாலையே.

திருவீழிமிழலை

அப்பி யன்றகண் ணயனுமே
யமரர் கோமகனு மயனுமே
ஒப்பி லின்றமரர் தருவதே
யொண்கையா லமரர் தருவதே
மெய்ப்ப யின்றவ ரிருக்கையே
மிழலை யூரும திருக்கையே
செப்புமின் னெருது மேயுமே
சேர்வுமக் கெருது மேயுமே #1252

பாற்கடலில், துயிலும் கண்ணுடைய திருமாலும், தேவேந்திரனும், பிரமனும் கேட்டவற்றை ஒப்பின்றி உமது திருக்கரம் வழங்கி வருதலால் அது கற்பக விருட்சம் ஆகும். மெய்த்தவம் செய்பவர்களின் உள்ளக்கோயில் உமது இருப்பிடமாகும். திருவீழி மிழலை என்னும் திருத்தலமும் நீர் வீற்றிருந்தருளும் இடமாகும். உமக்கென்றுள்ள விளைநிலமாகிய என் மனநிலத்தில் எருது புகுந்து கேடு விளைவித்தல் தகுமோ? அதை ஓட்டி என்னை ஆட்கொள்ள அங்கு வருவதற்கு உமக்கு எருதும் இருக்குமே.

திருவீழிமிழலை

தான வக்குலம் விளக்கியே
தாரகைச் செல விளக்கியே
வான டர்த்த கயிலாயமே
வந்து மேவு கயிலாயமே
தானெ டுத்தவல் லரக்கனே
தடமுடித் திரள ரக்கனே
மேன டைச்செல விருப்பனே
மிழலை நற்பதி விருப்பனே #1253

சிவபெருமான், பகைத்து நிற்கும் அசுரர் அழிவர் என்பதை விளக்கியவர். தாரகை முதலான ஒளிதரும் பொருள்களின் ஒளியைத் தம் பேரொளியால் குன்றச் செய்தவர். வானை முட்டும் உயர்ந்த கயிலைமலையைத் தம் வல்லமையால் எடுத்த அரக்கனான இராவணனின் பெரிய முடிகளை நெரித்தவர். மனைகள் தோறும் சென்று பிச்சை எடுத்தலில் விருப்பமுடையவர். திருவீழிமிழலை என்னும் நற்பதியில் விரும்பி வீற்றிருந்தருளுபவர்.

திருவீழிமிழலை

காய மிக்கதொரு பன்றியே

கலந்த நின்னவுரு பன்றியே
ஏய விப்புவி மயங்கவே
யிருவர் தாமன மயங்கவே
தூய மெய்த்திர ளகண்டனே
தோன்றி நின்றமணி கண்டனே
மேய வித்துயில் விலக்கணா
மிழலை மேவிய விலக்கணா **#1254**

பன்றி உருவெடுத்த திருமால், பிரமன் ஆகிய இருவரும் சேர்ந்து தேடவும்,உம் உருவத் திருமேனியைக் காண்பதற்கு இயலாதவராய், இப்புவியில் மயங்கி நின்று, மனம் கலங்கிய நிலையில், தூய சோதித் திரளாய் அகண்ட திரு மேனியராய்த் தோன்றி நின்ற நீலகண்டத்தை உடையவரே. எம் தலைவரே! அடியேனின் தூக்கம் பிடிக்கா நிலையை விலக்குவீராக! திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் அழகரே.

<u>திருவீழிமிழலை</u>

கஞ்சியைக் குலவு கையரே
கலக்கமா ரமணர் கையரே
அஞ்ச வாதிலருள் செய்யநீ
யணைந்திடும் பரிசு செய்யநீ
வஞ்சனே வரவும் வல்லையே
மதித்தெ னைச்சிறிதும் வல்லையே
வெஞ்ச லின்றிவரு வித்தகா
மிழலைசே ரும்விறல் வித்தகா **#1255**

சிவபெருமானே! கஞ்சி உண்ணும் கையையுடைய பௌத்தர்களும், சமணர்களும் அஞ்சுமாறு, அடியேன் வாதில் வெற்றி கொள்ள அருள்செய்தீர் நீவிர். பிறர் செய்யும் சூழ்ச்சியை அறிய வல்லீரும் நீவிர். அடியவரின் துயர் நீக்கிட வருவதற்கு வல்லீர். நீவிர் என் உரையைச் சிறிதளவேனும் மதித்து விரைவில் வரவும் இல்லையே. குறைதலில்லாமல் மேன்மேலும் வருகின்ற இத்துயரங்கள் எனக்குத் தகா. திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கும் வலிமை மிக்க வித்தகரே.

<u>திருவீழிமிழலை</u>

மேய செஞ்சடையி னப்பனே
மிழலைமே வியவெ னப்பனே
ஏயு மாசெய விருப்பனே
யிசைந்த வாசெய விருப்பனே

காய வர்க்கசம் பந்தனே
காழி ஞானசம் பந்தனே
வாயுரைத்த தமிழ் பத்துமே
வல்லவர்க்கு மிவை பத்துமே **#1256**

சிவபெருமான் சிவந்த சடையில் கங்கையை அணிந்தவர். திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் என் அப்பர். முத்தொழிலையும் அவருடைய சந்நிதியில் அவரவர் செய்ய வாளா இருப்பவர். தம்மைப் போற்றி வழிபடும் பக்தர்கட்கு விருப்பமானவர். பஞ்ச பூதங்களோடும் தோய்ந்தும் தோயாமல் இருப்பவர். அப்பெருமானைப் போற்றி, சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தன் அருளிய இத்தமிழ்த் திருப்பதிகத்தை ஓத வல்லவர்களுக்கு, இவை ஞானத்தின் படிநிலைகள் பத்தாய் அமையும். (இறுதியில் சிவபோகம் பெறுவர் என்பது குறிப்பு).

சீகாழி

சீர்காழி

சீகாழி,
பண் - கௌசிகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணாகா
காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா **#1257**
ஆன்மாக்களாகிய நாங்கள் கடவுளென்றால் அது பொருந்துமா? நீயே ஒப்பில்லாத கடவுளென்றால் அது முற்றிலும் தகும். பேரியாழ் என்னும் வீணையை வாசிப்பவனே! யாவரும் விரும்பத்தக்க கட்டழகனே! பகைப்பொருள்களும் சிவனைச் சாரின் பகை தீர்ந்து நட்பாகும் என்ற உண்மையினை யாவரும் காணுமாறு பாம்புகளை உடையவனே. கை, கால் முதலிய அவயவங்கள் காணாவண்ணம் காமனை அருவமாகச் செய்தவனே. சீகாழி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுபவனே. இலக்குமியின் கணவனான திருமாலாகவும் வருபவனே! மாயை முதலிய மலங்களிலிருந்து எம்மை விடுவிப்பாயாக

சீர்காழி

யாகாயாழீ காயாகா தாயாரா‌ரா தாயாயா
யாயாதாரா ராயாதா காயாகாழீ யாகாயா **#1258**
வேள்வி வடிவினனே. யாழ் வாசிப்பவனே. அடியார்கட்கு அருள் வரும்பொழுது உருவத்திருமேனி கொள்பவனே. சங்கார கருத்தாவே. அனைத்துயிர்க்கும் தாயானவனே. ஆத்திப்பூ மாலை அணிந்துள்ளவனே. தாருகாவனத்து முனிபத்தினிகளாகிய மகளிர் கூட்டத்தை வேட்கையுறும்படி செய்தவனே. சீகாழி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுபவனே. துன்பங்கள் எவற்றினின்றும் எம்மைக் காப்பாயாக.

சீர்காழி

தாவாமூவா தாசாகா ழீநாதாநீ யாமாமா
மாமாயாநீ தாநாழீ காசாதாவா மூவாதா **#1259**
அழியாத மூப்பிலாத தசகாரியத்தால் அடையும் பொருளாக உள்ளவனே. சீகாழி என்னும் திருத்தலத்து முதல்வனே. எல்லோரும் அஞ்சி நீங்குகின்ற சுடுகாட்டில் நள்ளிரவில் நடனமாடும் நாதனே.

மாண்புமிக்கவனே. ஐராவணம் என்னும் யானையின் மேல் ஏறி வருபவனே. கொடையில் கடல் போன்றவனே. சாவினின்றும் எங்களைக் காத்தருள்வாயாக. ஒளியுடைய மாணிக்கம் போன்றவனே. வேண்டும் வரங்களைத் தந்தருள்வாயாக. எங்கள்முன் எழுந்தருள் வாயாக. முன்னைப் பழம்பொருளே. காற்று முதலான ஐம்பூதங்களின் வடிவானவனே!

சீர்காழி

நீவாவாயா காயாழீ காவாவானோ வாராமே
மேராவானோ வாவாகா ழீயாகாயா வாவாநீ **#1260**

என்றும் மாறுதலில்லாத மெய்ப்பொருளானவனே. தாங்கிய வீணையை உடையவனே. கொடிய பிறவித் துன்பம் எங்களை அடையாவண்ணம் வந்து காத்தருள்வாயாக. விண்ணிலுள்ள தேவர்கள் துன்பம் அடையாதவாறு மேருமலையை வில்லாக ஏந்தி முப்புரங்களை அழித்தவனே. சீகாழி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருள்பவனே, ஆகாய சொரூபியே! நீ விரைந்து வருவாயாக! அருள் புரிவாயாக.

சீர்காழி

யாகாலாமே யாகாழீ யாமேதாவீ தாயாவீ
வீயாதாவீ தாமேயா ழீகாயாமே லாகாயா **#1261**

யாவற்றுக்கும் கால கர்த்தாவாக விளங்குபவனே. எப்பொருளிலும் எள்ளில் எண்ணெய் போன்று உள்ளும், புறம்பும் ஒத்து நிறைந்திருப்பவனே! சீகாழி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருள்பவனே! அறிவில் மேம்பாடு உடையவனே! அனைத்துயிர்கட்கும் தாயாகவும், உயிராகவும் உள்ளவனே! என்றும் அழிவில்லாதவனே! இன்குரல் எழுப்பும் கின்னரம் முதலிய பறவைகள் தன்னருகின் வந்து விழும்படி வீணைவாசிப்பவனே. யாங்கள் மேற்கொண்டு ஆவனவற்றிற்கு ஆராயாதவாறு எங்களைக் காத்தருள் வாயாக!.

சீர்காழி

மேலேபோகா மேதேழீ காலாலேகா லானாயே
யேனாலாகா லேலாகா ழீதேமேகா போலேமே **#1262**

மார்க்கண்டேயரின் உயிரைக் கவர வந்த காலனைக் கடுங்குரலால் கண்டித்தவரே. உம் திருவடியால் அவனை உதைத்து அக்காலனுக்குக் காலன் ஆகியவரே. பொருந்திய சனகர் முதலிய நால்வர்க்கும் சிவகுருவாகிக் கல்லால மரத்தின் கீழ் உபதேசித்து மெய்யுணர்வு பெறச் செய்தவரே. சீகாழி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும்

பரம்பொருளே. மேகத்தை வாகனமாகக் கொண்டருளியவரே. அடியேங்கள் உம் திருக் கூட்டத்தில் ஒருவர் போல் ஆவோம்.

சீர்காழி

நீயாமாநீ யேயாமா தாவேழீகா நீதானே
நேதாநீகா ழீவேதா மாயாயேநீ மாயாநீ **#1263**

உன்னைவிட்டு நீங்குதலில்லாத உமாதேவியை உடையவனே! ஒப்பற்ற தாயானவனே! ஏழிசை வடிவானவனே! நீயே வலிய எழுந்தருளி எங்களைக் காத்தருள்வாயாக! பேரன்பு வாய்ந்த நெஞ்சத்தை இடமாக உடையவனே. சீகாழி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும், வேதங்களை அருளிச்செய்து வேதங்களின் உட்பொருளாக விளங்குபவனே. எங்களைக் கொல்லவரும் துன்பங்களை நீ கொன்று அருள்செய்யாயோ?

சீர்காழி

நேணவராவிழ யாசைழியே வேகதளேரிய ளாயுழிகா
காழியுளாயரி ளேதகவே யேழிசையாழவி ராவணனே **#1264**

இறைவரின் திருவடிகளில் பேரன்பு செலுத்தும் அடியவராம் பசுக்கள் தன்வயமற்றுக் கிடக்க, கட்டிய ஆசை என்று சொல்லப்படும் பெருங்கயிற்றைத் தண்ணளியால் அவிழ்த்தருள்பவரே. மிக வேகமாக ஓடும் மானின் தோலை அணிந்துள்ள பேரழகு வாய்ந்தவரே. பொறுக்கலாகாத் தீவினைத் துன்பங்கள் தாக்க வரும்போது காத்தருள்வீராக! மன்னித்தற்கரிய குற்றங்கள் எங்களின் சிறுமைத் தன்மையால் செய்தனவாகலின் அவற்றைப் பெரியவாகக் கொள்ளாது சிறியவாகக் கொண்டு பொறுத்தருள்வீராக! ஏழிசைவல்ல இராவணன் செருக்கினால் செய்த பெரும்பிழையைத் தேவரீர் மன்னித்து அருளினீர் அல்லவா? (அடியேம் சிறுமையால் செய்த பிழையையும் மன்னித்தருளும் என்பது குறிப்பு).

சீர்காழி

காலேமேமேலே காணீகா ழீகாலேமா லேமேபூ
பூமேலேமா லேகாழீ காணீகாலே மேலேகா **#1265**

காற்றாகி எங்கும் கலந்தருள்பவனே. மறைப்பாற்றலின் வழி எவ்வுயிர்க்கும் மயக்கம் செய்து பின் அருள்புரிபவனே. பூக்களில் சிறந்த தாமரைப்பூவில் வீற்றிருக்கும் பிரமனும், திருமாலும், முறையே திருமுடியையும், திருவடியையும் காணுதலை ஒழித்த வைரத் தன்மையுடையவனே! சீகாழி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுபவனே. எங்களை கடைக் கணித்தருள்வாயாக. உன்

திருவடியைத் தந்தருளுவாயாக!.

சீர்காழி

வேரியுமேணவ காழியொயே யேனைநிணேமட ளோகரதே
தேரகளோடம ணேநினையே யேயொழிகாவண மயுரிவே **#1266**
நறுமணமும், தெய்விக மணமும், பெருமையும், புதுமையும் கலந்து விளங்கும் சீகாழி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுபவனே! துன்பங்களை நீக்கி அருள்பவனே. பேரருள் உடையவனே. அதனை அள்ளிக்கொள்ளல் அகத்தவத்தாராகிய சிவயோகிகளின் செய்கையே. புத்தர், சமணர்களின் மொழிகளை எண்ணுதலையும், நண்ணுதலையும் ஒழித்தருள்வாயாக! இப்புறச் சமயத்தார் பன்னெறிகளில் புகாமல் காத்தருளும் திறம் நின் திருவடிக்கே உரியதாகும்.

சீர்காழி

நேரகழாமித யாசழிதா யேனனியேனனி ளாயுழிகா
காழியுளானின யேனினயே தாழிசயாதமி ழாகரனே **#1267**
நேர்மையை அகழ்ந்து எறிவதாகிய, நெஞ்சத்தில் நிலைத்து எவரையும் துன்புறுத்தும் காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களையும் அழித்தருள வல்லவனே. உலகுக்கெல்லாம் தாயாம் தன்மையை ஏற்றருளத் தக்கவன், ஒப்பில்லாத நீ ஒருவனே. நன்மை புரிந்தருளுவதில் உயர்ந்தவனே! நாங்கள் தளர்ந்த இடத்து எங்களைக் காத்தருள்வாயாக! என்று நற்றமிழுக்கு உறைவிடமாகவுள்ளதிருஞானசம்பந்தப் பெருமான் சிவபெருமானைப் போற்றி அருளிய, பாடுவோர்களையும், கேட்போர்களையும் உள்ளம் குழையச் செய்யும் இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்கட்கு எந்தக் குறைவும் உண்டாகாது.

திருக்கழுமலம்

சீர்காழி

திருக்கழுமலம்,
பண் - புறநீர்மை, கழுமலம் என்பது சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

மடன்மலி கொன்றை துன்றுவா ளெருக்கும்
வன்னியு மத்தமுஞ் சடைமேற்
படலொலி திரைகண் மோதிய கங்கைத்
தலைவனார் தம்மிடம் பகரில்
விடலொளி பரந்த வெண்டிரை முத்த
மிப்பிகள் கொணர்ந்துவெள் ளருவிக்
கடலொலி யோத மோதவந் தலைக்குங்
கழுமல நகரென லாமே **#1268**

இதழ்கள் நிறைந்த கொன்றை மாலையும், நெருங்கிய ஒளியுடைய வெள்ளெருக்க மாலையும், ஊமத்தம் பூ மாலையும் அணிந்த சடையின்மேல், ஒலி அடங்கிய அலை மோதும்படியான கங்கைக்குத் தலைவரான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம் எது என்றால், ஒலி மிகுந்த வெள்ளிய அலைகள் முத்துக்களையும், சிப்பிகளையும் அடித்துக் கொணர்ந்து ஒதுக்கும் கடலினொலி தன் வெள்ளப் பெருக்கைக் கரைமோதச் செய்யும் திருக்கழுமலநகர் எனக் கூறலாம்.

சீர்காழி

மின்னிய வரவும் வெறிமலர் பலவும்
விரும்பிய திங்களுந் தங்கு
சென்னிய துடையான் றேவர்தம் பெருமான்
சேயிழை யொடுமுறை விடமாம்
பொன்னியன் மணியு முரிகரி மருப்புஞ்
சந்தமு முந்துவன் றிரைகள்
கன்னிய ராடக் கடலொலி மலியுங்
கழுமல நகரென லாமே **#1269**

மின்னும் பாம்பும், நறுமணம் கமழும் மலர்களும், இறைவனின் திருவடியைச் சரணடைந்த பிறைச்சந்திரனும் தங்கிய தலையுடையவர் சிவபெருமான். அவர் தேவர்கட்கெல்லாம் தலைவர். அப்பெருமான் செம்மையான ஆபரணமணிந்த உமாதேவியோடு வீற்றிருந்தருளும்

இடம், பொன், மணி, யானையின் வளைந்த தந்தம், சந்தனக்கட்டை இவற்றை உந்தித் தள்ளுகின்ற வலிய அலைகளையுடையதும், கன்னிப்பெண்கள் கடற்கரையில் விளையாடுதலையுடையதும், கடலொலி மிகுதலையுடையதுமான திருக்கழுமலநகர் எனலாம்.

சீர்காழி

சீருறு தொண்டர் கொண்டடி போற்றச்
செழுமலர் புனலொடு தூபந்
தாருறு கொன்றை தம்முடி வைத்த
சைவனார் தங்கிட மெங்கும்
ஊருறு பதிக ளுலகுடன் பொங்கி
யொலிபுனல் கொளவுடன் மிதந்த
காருறு செம்மை நன்மையான் மிக்க
கழுமல நகரென லாமே **#1270**

பெருமை மிக்க சிவதொண்டர்கள் நறுமலரும், நீரும், தூபமுங் கொண்டு திருவடிகளைப் பூசிக்கும்படி, கொன்றை மாலையினைத் தமது திருமுடிமேல் வைத்தருளிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, பலவூர்களைத் தம்பாற் கொண்டுள்ள பதிகளை உலகுடன் கொள்ளும்படி கடல் பொங்கி எழுந்தபோது திருவருளால் தோணிபோல் மிதந்து மழையினாற் பெறும் நன்மைகள் குறைவறச் சிறந்துள்ள திருக்கழுமலநகர் எனலாம்.

சீர்காழி

மண்ணினா ரேத்த வானுளார் பரச
வந்தரத் தமரர்கள் போற்றப்
பண்ணினா ரெல்லாம் பலபல வேட
முடையவர் பயில்விட மெங்கும்
எண்ணினான் மிக்கா ரியல்பினா னிறைந்தா
ரேந்திழை யவரொடு மைந்தர்
கண்ணினா லின்பங் கண்டொளி பரக்குங்
கழுமல நகரென லாமே **#1271**

மண்ணுலக மெய்யன்பர்கள் போற்றி வணங்கவும், வானத்திலுள்ள தேவர்கள் துதிக்கவும், பிரமன், திருமால் முதலியோர்கள் போற்றவும் விளங்கி, எல்லாவற்றையும் ஆக்கியருளியவரும், பலபல சிவமூர்த்தங்களாக விளங்குபவருமான சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, இறைவனின் திருவடி மறவா நினைவால் சிறந்த உள்ளம் உடையவர்களும், செவ்விய அணிகலன்கள் அணிந்துள்ள மகளிரும் அவரொடு நீங்காது ஒன்றித்து வாழும் ஆண்மை மிக்க ஆடவர்களும்,

காணுந்தோறும் இன்பம் நுகரத் திருவருள் ஒளியைப் பரப்புகின்ற திருக்கழுமலநகர் எனக் கூறலாம்.

சீர்காழி

சுருதியான் றலையும் நாமகண் மூக்குஞ்
சுடரவன் கரமுமுன் னியங்கு
பரிதியான் பல்லு மிறுத்தவர்க் கருளும்
பரமனார் பயின்றினி திருக்கை
விருதினான் மறையு மங்கமோ ராறும்
வேள்வியும் வேட்டவர் ஞானங்
கருதினா ருலகிற் கருத்துடை யார்சேர்
கழுமல நகரென லாமே **#1272**

பிரமனது தலையையும், சரஸ்வதியின் மூக்கையும், தீக்கடவுளின் கையையும், காலம் காட்டி முன் செல்லும் சூரியனின் பல்லையும் இறுத்து, பின் உமாதேவி வேண்ட அவர்கட்கு அருளும் புரிந்த சிவபெருமான் பயின்று இனிதாக வீற்றிருந்தருளும் இடமாவது, வழிவழிக் கேட்கும் தொழிலாகப் பயின்று வரும் புகழுடைய நான்கு வேதங்களையும், ஆறு அங்கங்களையும் அறிந்து, அவற்றின்படி வேத வேள்விகளைச் செய்பவர்களும், ஞான வேட்கை உடையவர்களும், உலகில் பிறந்ததன் பெரும்பயனை அடைய விரும்பும் கருத்துடையவர்களும் வசிக்கின்ற திருக்கழுமலநகர் எனக் கூறலாம்.

சீர்காழி

புற்றில்வா ளரவு மாமையும் பூண்ட
புனிதனார் பனிமலர்க் கொன்றை
பற்றிவான் மதியஞ் சடையிடை வைத்த
படிறனார் பயின்றினி திருக்கை
செற்றுவன் றிரைக ளொன்றொடொன் றோடிச்
செயிர்த்துவண் சங்கொடு வங்கங்
கற்றுறை வரைகள் கரைக்குவந் துரைக்குங்
கழுமல நகரென லாமே **#1273**

புற்றில் வாழுந் தன்மையுடைய ஒளிமிக்க பாம்பையும், ஆமையோட்டையும் ஆபரணமாகப் பூண்ட புனிதரும், குளிர்ச்சி பொருந்திய கொன்றை மலருடன், வானத்திலுள்ள சந்திரனையும் சடையில் வைத்த எம் உள்ளம் கவர் கள்வருமான சிவபெருமான் பயின்று இனிதாக வீற்றிருந்தருளும் இடம், வலிய அலைகள் ஒன்றோடொன்று மோதிப் பொரும் கடலானது வளமையான சங்குகளோடு, கப்பல்களையும் கொண்டு வந்து மலைகள் போலக் கரை

வந்து சாரச்செய்யும் திருக்கழுமலநகர் எனக் கூறலாம்.

சீர்காழி

அலைபுனற் கங்கை தங்கிய சடையா
ரடனெடு மதிலொரு மூன்று
கொலையிடைச் செந்தீ வெந்தறக் கண்ட
குழகனார் கோயில தென்பர்
மலையின்மிக் குயர்ந்த மரக்கலஞ் சரக்கு
மற்றுமற் றிடையிடை யெங்குங்
கலைகளித் தேறிக் கானலில் வாழுங்
கழுமல நகரென லாமே **#1274**

அலைகளோடு கூடிய கங்கையைத் தாங்கிய சடையை உடையவர் சிவபெருமான்.நீண்ட மூன்று மதில்களும் கொலை நிகழ்வதாகிய போரினிடையே செந்தீயினால் வெந்தழியும் படி செய்தவர், இளமையும், அழகுடைய சிவபெருமான் ஆவார். வீற்றிருந்தருளும் கோயிலையுடைய திருத்தலமாவது, மலைகளை விட மிக்குயர்ந்த சரக்கு மரக்கலங்கள் கடற்கரையில் நிற்க, கடற்கரைச் சோலைகளில் மான்கள் மகிழ்ந்து ஓடி வாழ்தலுடைய திருக்கழுமல நகர் எனக் கூறலாம்.

சீர்காழி

ஒருக்கமுன் னினையாத் தக்கன்றன் வேள்வி
யுடைதர வுழறிய படையார்
அரக்கனை வரையா லாற்றலன் றழித்த
வழகனா ரமர்ந்துறை கோயில்
பரக்கும்வண் புகழார் பழியவை பார்த்துப்
பலபல வறங்களே பயிற்றிக்
கரக்குமா றறியா வண்மையார் வாழுங்
கழுமல நகரென லாமே **#1275**

இறைவனை நினையாது முற்காலத்தில் தக்கன் செய்த யாகமாவது ஒருங்கே அழியும்படி கலக்கிய பூதப்படைகளை உடையவரும், அரக்கனான இராவணனது ஆற்றலை மலையைச் சற்றே கால்விரலால் ஊன்றி நெருக்குதலால் அழித்த அழகருமான சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் கோயிலுள்ள திருத் தலமாவது பரவுதலையுடைய மெய்ம்மையான புகழையுடையவரும், குற்றங்கள் வாராவண்ணம் நன்கு ஆராய்ந்து ஒல்லும் வகையான் ஓவாது அறம்புரியும் மிக்க பயிற்சியுடையாரும், கனவிலும் கரக்கும் எண்ணம் இல்லாத வள்ளன்மையுடையாரும் ஆகிய செந்நெறிச் செல்வர்கள் வாழும் கழுமலநகரெனக் கூறலாம்.

சீர்காழி

அருவரை பொறுத்த வாற்றலி னானு
மணிகிளர் தாமரை யானும்
இருவரு மேத்த வெரியுரு வான
விறைவனா ருறைவிடம் வினவில்
ஒருவரிவ் வுலகில் வாழ்கிலா வண்ண
மொலிபுனல் வெள்ளமுன் பரப்பக்
கருவரை சூழ்ந்த கடலிடை மிதக்குங்
கழுமல நகரென லாமே **#1276**

கோவர்த்தன மலையைக் குடையாகத் தாங்கிய ஆற்றலுடைய திருமாலும், அழகிய செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும் ஏத்தித் துதிக்கும்படியாகத் தீப்பிழம்பின் உருவாய் நின்ற சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடம், ஒருவரும் இவ்வுலகில் வாழ இயலா வண்ணம், பேரூழிக் காலத்தில் பெருவெளள்ம் பெருக்கெடுக்க, அப்பரப்பில் கருவரை போன்ற திருமால் கிடந்து அறிதுயில் கொள்ளும் கடலிடைத் திருத்தோணி போன்று மிதந்த சிறப்பு வாய்ந்த திருக்கழுமலநகர் எனக் கூறலாம்.

சீர்காழி

உரிந்துய ருருவி லுடைதவிர்ந் தாரு
மத்துகில் போர்த்துழல் வாருந்
தெரிந்துபுன் மொழிகள் செப்பின கேளாச்
செம்மையார் நன்மையா லுறைவாங்
குருந்துயர் கோங்கு கொடிவிடு முல்லை
மல்லிகை சண்பகம் வேங்கை
கருத்தடங் கண்ணின் மங்கைமார் கொய்யுங்
கழுமல நகரென லாமே **#1277**

உயர்ந்த தமது உடலின்றும் உடையினை நீக்கிய சமணர்களும், மிக்க ஆடையினை உடல் முழுவதும் போர்த்துத் திருச்சிற்றம்பலம் திரியும் புத்தர்களம் ஆராய்ந்துணரும் அறிவிலாது ஏனைச் செந்நெறியாளர்களை இழிமொழிகளால் இகழ்ந்துரைப்பர். அப்புன்மொழிகளைப் 'புறம் கேளோம்' என்ற மறையின்படி ஒரு பொருளாகக் கொள்ளாத செம்மையாளர்கட்கு நன்மைபுரியும் சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமாவது, குருந்து, கோங்கு, முல்லை, மல்லிகை, சண்பகம், வேங்கை ஆகிய மலர்களைக் கரிய அகன்ற கண்களையுடைய மங்கையர்கள் கொய்கின்ற திருக்கழுமலநகர் எனக் கூறலாம்.

<u>சீர்காழி</u>

கானலங் கழனி யோதம்வந் துலவுங்
கழுமல நகருறை வார்மேல்
ஞானசம் பந்த னற்றமிழ் மாலை
நன்மையா லுரைசெய்து நவில்வார்
ஊனசம் பந்தத் துறுபிணி நீங்கி
யுள்ளமு மொருவழிக் கொண்டு
வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார்
மற்றிதற் காணையும் நமதே **#1278**

கடற்கரைச் சோலைகளை அடுத்த வயல்களில் கடல்நீர் வந்து பாய்தலையுடைய திருக்கழுமலம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் இறைவனைப் போற்றிப் பாடிய ஞானசம்பந்தனுடைய நல்ல தமிழ்மாலைகளைப் பத்தியோடு பொருள் உணர்ந்து பாடித் துதிப்பவர்கள் உடலுடன் தொடர்பு கொண்டதான பிறவிப் பிணி நீங்கி, உள்ளம் ஒருமைப்பாட்டினையுடைய சிவலோகத்தில் வாழ்வர். மீண்டும் நிலவுலகில் வந்து பிறவார். இதற்கு ஆணையும் நம்முடையதே ஆகும்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை

திருவீழிமிழலை,
பண் - புறநீர்மை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

புள்ளித்தோ லாடை பூண்பது நாகம்
பூசுசாந் தம்பொடி நீறு
கொள்ளித்தீ விளக்குக் கூளிகள் கூட்டங்
காளியைக் குணஞ்செய்கூத் துடையோன்
அள்ளற்கா ராமை யகடுவான் மதிய
மேய்க்கமுட் டாழைக ளானை
வெள்ளைக் கொம்பீனும் விரிபொழில் வீழி
மிழலையா னெனவினை கெடுமே **#1279**

சிவபெருமான் புலித்தோல் ஆடை உடுத்தவர். பாம்பை ஆபரணமாக அணிந்தவர். நறுமணம் கமழும் திருநீற்றைப் பொடியாகப் பூசியவர். சுடுகாட்டில் கொள்ளி நெருப்பை விளக்காகக் கொண்டு பூதகணங்கள் சூழக் காளியுடன் நடனம் புரிந்தவர். சேற்றில் விளங்கும் ஆமையின் வயிறு போன்ற சந்திரனும், யானையின் கொம்புபோன்ற தாழையும் விளங்கும் சோலைகளையுடைய திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார். அப்பெருமானின் திருநாமத்தை ஓத வினையாவும் கெடும்.

திருவீழிமிழலை

இசைந்தவா றடியா ரிடுதுவல் வானோ
ரிழுகுசந் தனத்திளங் கமலப்
பசும்பொன்வா சிகைமேற் பரப்புவாய் கரப்பாய்
பத்திசெய் யாதவர் பக்கல்
அசும்புபாய் கழனி யலர்கயன் முதலோ
டுடுந்தரிந் தெடுத்தவான் சும்மை
விசும்புதூர்ப் பனபோல் விம்மிய வீழி
மிழலையா னெனவினை கெடுமே **#1280**

அடியவர்கள் பக்திப் பெருக்குடன் மலர்தூவிப் போற்றவும், தேவர்கள் நறுமணம் கமழும் பொற்றாமரை மாலைகளைச் சாத்தவும் அவர்கட்கு அருள்வாய். பக்தி செயாதவர்கட்கு ஒளிந்திருப்பாய். ஊற்று நீர் பாயும்

கழனிகளில் மலர்களும், கயல்களும் திகழ, அரிந்த கதிர்களிலிருந்து தூற்றும் நல்லானது வானத்திலிருந்து உதிர்வன போன்று வளமுடன் விளங்குவது திருவீழிமிழலை என்னும் திருத்தலமாகும். அங்கு வீற்றிருந்தருளும் சிவபெருமானின் திருநாமத்தை ஓத வினை யாவும் நீங்கும்.

திருவீழிமிழலை

நிருத்தன்ஆ றங்கன் நீற்றன்நான் மறையன்
நீலமார் மிடற்றன்நெற் றிக்கண்
ஒருத்தன்மற் றெல்லா வுயிர்கட்கு முயிரா
யுளனிலன் கேடிலி யுமைகோன்
திருத்தமாய் நாளு மாடுநீர்ப் பொய்கை
சிறியவ ரறிவினின் மிக்க
விருத்தரை யடிவீழ்ந் திடம்புகும் வீழி
மிழலையா னெனவினை கெடுமே **#1281**

சிவபெருமான் திருநடனம் செய்பவர். வேதத்தின் அங்கமாக விளங்குபவர். திருநீறு பூசியுள்ளவர். நால்வேதங்களை அருளிச் செய்து அவ்வேதங்களின் பொருளாய் விளங்குபவர். நீலகண்டத்தர். நெற்றிக் கண்ணுடையவர். ஒப்பற்றவர். எல்லா உயிர்கட்கும் உயிராய் விளங்குபவர். பதிஞானத்தால் உணர்பவர்க்கு உளராவார். பசு ஞானத்தாலும், பாச ஞானத்தாலும் அறிய முற்படுபவர்கட்கு இலராவார். உயிர்களின் தீமையைப் போக்குபவர். உமாதேவியின் கணவர். புனித தீர்த்தத்தால் நாள்தோறும் அபிடேபிக்கப்படுபவர். வயதில் சிறியோர் அறிவு சால் சான்றோரின் திருப்பாதத்தை அட்டாங்க நமஸ்காரமாக வணங்கிப் போற்றச் சீலம் மிக்கவர்கள் வாழும் திருவீழிமிழலையில் வீற்றிருந்தருளுபவர். அவருடைய திருநாமத்தை ஓத வினை நீங்கும்.

திருவீழிமிழலை

தாங்கருங் காலந் தவிரவந்திருவர்
தம்மொடுங் கூடினா ரங்கம்
பாங்கினாற் றரித்துப் பண்டுபோ லெல்லாம்
பண்ணிய கண்ணுதற் பரமர்
தேங்கொள்பூங் கமுகு தெங்கிளங் கொடிமாச்
செண்பகம் வண்பலா விலுப்பை
வேங்கைபூ மகிழால் வெயிற்புகா வீழி
மிழலையா னெனவினை கெடுமே **#1282**

மகாசங்கார காலத்தில் திருமால், பிரமன் ஆகிய இருவரின் எலும்புகளை அழகுற அணிந்து, பின் முன்பு போல் மீண்டும் எல்லாம் படைத்துத்

தொழிலாற்றும் நெற்றிக் கண்ணுடையவர் சிவபெருமான். அவர் கமுகு, தென்னை, மா, செண்பகம், பலா, இலுப்பை, வேங்கை, மகிழ், ஆல் முதலியன சேர்ந்த வெயில்புகாத சோலைகள் சூழ்ந்த திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுவார். அப்பெருமானுடைய திரு நாமத்தை ஓத வினையாவும் நீங்கும்.

திருவீழிமிழலை

கூசுமா மயானங் கோயில்வா யிற்கட்
குடவயிற் றனசில பூதம்
பூசுமா சாந்தம் பூதிமெல் லோதி
பாதிநற் பொங்கர வரையோன்
வாசமாம் புன்னை மௌவல்செங் கழுநீர்
மலரணைந் தெழுந்தவான் தென்றல்
வீசுமாம் பொழிற்றேன் றுவலைசேர் வீழி
மிழலையா னெனவினை கெடுமே **#1283**

எவரும் அடைவதற்குக் கூச்சப்படுகின்ற மயானத்தில் பெரிய வயிற்றையுடைய பூதங்கள் சூழ நறுமணம் கமழும் சாந்துபோலத்திருநீறு பூசிப், பார்வதிபாகராய், ஆடுகின்ற பாம்பை இடுப்பில் அணிந்து விளங்குபவர், சிவபெருமான். அவர் நறுமணம் கமழும் புன்னை, முல்லை, செங்கழுநீர் மலர் ஆகிய மணங்கமழும் மலர்களில் கலந்து தென்றல் வீசும் சோலைகளிலிருந்து தேன்துளிகள் சிதறும் திருவீழிமிழலையில் வீற்றிருந்தருளுவார். அப் பெருமானின் திருநாமத்தை ஓத வினையாவும் நீங்கும்.

திருவீழிமிழலை

பாதியோர் மாதர் மாலுமோர் பாகர்
பங்கயத் தயனுமோர் பாலர்
ஆதியாய் நடுவா யந்தமாய் நின்ற
வடிகளா ரமரர்கட் கமரர்
போதுசேர் சென்னிப் புரூரவாப் பணிசெய்
பூசுரர் பூமக னனைய
வேதியர் வேதத் தொலியறா வீழி
மிழலையா னெனவினை கெடுமே **#1284**

இறைவன் உமாதேவியைத் திருமேனியில் ஒருபாகமாகக் கொண்டு விளங்குபவர். திருமாலும், பிரமனையும் தம்பாகமாகக் கொண்டு ஏகபாத திரிமூர்த்தியாகத் திகழ்பவர். அவர் உலகத் தோற்றத்திற்கும், நிலைபெறுதலுக்கும், ஒடுக்கத்திற்கும் நிமித்த காரணராய் விளங்கும் தலைவர். தேவர்கட்குக் கடவுள். மலரணிந்த தலையையுடைய புரூரவச்

சக்கரவர்த்தியால் திருப்பணி செய்யப் பெற்றுப் பிரமனையொத்த வேதியர்கள் ஓதுகின்ற வேத ஒலி இடையறாது ஒலிக்கின்ற திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுகின்றார். அப்பெருமானின் திருநாமத்தை ஓத வினையாவும் நீங்கும்.

திருவீழிமிழலை

தன்றவம் பெரிய சலந்தர னுடலந்
தடிந்தசக் கரமெனக் கருளென்
றன்றரி வழிபட் டிழிச்சிய விமானத்
திறையவன் பிறையணி சடையன்
நின்றநாள் காலை யிருந்தநாண் மாலை
கிடந்தமண் மேல்வரு கலியை
வென்றவே தியர்கள் விழாவறா வீழி
மிழலையா னெனவினை கெடுமே **#1285**

சிவபெருமான் திருவருளால் தோன்றிய சக்கரப்படை சலந்தராசுரனை அழித்ததைக் கண்ட திருமால், அத்தகைய சக்கரப்படையைத் தனக்கு அருள வேண்டித் தேவலோகத்திலிருந்து விமானத்தைக் கொண்டு வந்து சிவனைப் பூசித்தார். சிவபெருமான் சந்திரனை அணிந்த சடையையுடையவர். அவர் வீற்றிருந்தருளும் இடமாவது எல்லாக் காலத்திலும் மண்ணுலகத்தின் சேர்க்கையால் உண்டாகும் துன்பத்தை வென்ற அந்தணர்கள் வாழ்கின்ற, திருவிழாக்கள் நீங்காத திருவீழிமிழலை என்னும் திருத்தலமாகும். அத்திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் இறைவனுடைய திருநாமத்தை ஓத, வினை யாவும் நீங்கும்.

திருவீழிமிழலை

கடுத்தவா ளரக்கன் கைலையன் றெடுத்த
கரமுரஞ் சிரநெரிந் தலற
அடுத்ததோர் விரலா லஞ்செழுத் துரைக்க
வருளினன் றடமிகு நெடுவாள்
படித்தநான் மறைகேட் டிருந்தபைங் கிளிகள்
பதங்களை யோதப்பா டிருந்த
விடைக்குலம் பயிற்றும் விரிபொழில் வீழி
மிழலையா னெனவினை கெடுமே **#1286**

கோபமுடைய, வாளேந்தியுள்ள அரக்கனான இராவணன் முன்பு கயிலைமலையைப் பெயர்த்தெடுக்க, அவன் கரமும், சிரமும் நெரிபட்டு அலறும்படி தம் திருப்பாதவிரலை ஊன்றியவர் சிவபெருமான். பின் இராவணன் தன் தவறுணர்ந்து அஞ்செழுத்தை யாழில் மீட்ட நீண்ட

வாளை அவனுக்குக் கொடுத்தருளினார். அத்தியயனம் செய்த நான்மறைகளைக் கற்றுணர்ந்த வேதியர்கள் ஓதக்கேட்ட கிளிகள் அப்பதங்களை ஓத, அருகிருந்து கேட்ட பசுக் கூட்டங்களும் அவற்றைக் கேட்கத் தம் செவிகளைப் பழக்கும், விரிந்த சோலைகளையுடைய திருவீழிமிழலை என்னும் திருத்தலமாகும். அங்கு வீற்றிருந் தருளும் இறைவனின் திருநாமத்தை ஓத, வினையாவும் கெடும். விடைக்குலம் - வேதம் பயிலும் சிறுவர் குழாமுமாம்.

திருவீழிமிழலை

அளவிட லுற்ற வயனொடு மாலு
மண்டமண் கெண்டியுங் காணா
முளையெரி யாய மூர்த்தியைத் தீர்த்த
முக்கணெம் முதல்வனை முத்தைத்
தளையவிழ் கமலத் தவிசின்மே லன்னந்
தன்னிளம் பெடையொடும் புல்கி
விளைகதிர்க் கவரி வீசவிற் றிருக்கு
மிழலையா னெனவினை கெடுமே **#1287**

பிரமனும், திருமாலும் முடியையும், அடியையும் தேட முற்பட்டு, அண்டங்கட்கு மேலெல்லாம் பறந்து சென்றும், பூமி மண்ணை இடந்து கீழே பாதாளலோகம் முழுவதும் சென்றும் காண முடியாவண்ணம் நெருப்புப் பிழம்பாய் விளங்கியவர் முக்கண் உடைய முதல்வரான சிவபெருமான். முத்துத் தரும் இதழ் விரிந்த தாமரைச் சிம்மாசனத்தில் அன்னப்பறவையானது தனது பெடையுடன் இருக்க, நெற்கதிர்கள் கவரிவீசுவதைப் போன்று விளங்கும் வயல்களைஉடைய திருவீழிமிழலையில் வீற்றிருந்தருளும் பெருமானுடைய திருநாமத்தை ஓத வினை தீரும்.

திருவீழிமிழலை

கஞ்சிப்போ துடையார் கையிற்கோ சாரக்
கலதிகள் கட்டுரை விட்டு
அஞ்சித்தே விரிய வெழுந்தநஞ் சதனை
யுண்டம ரர்க்கமு தருளி
இஞ்சிக்கே கதலிக் கனிவிழக் கமுகின்
குலையொடும் பழம்விழத் தெங்கின்
மிஞ்சுக்கே மஞ்சு சேர்பொழில் வீழி
மிழலையா னெனவினை கெடுமே **#1288**

கஞ்சியைக் கையில் வாங்கி உண்பவர்களும், ஆடையணியாத் துறவிகளுமான சமணர்கள், உரைக்கும் மொழிகளை ஏற்க வேண்டா.

தேவர்கள் அஞ்சும்படி எழுந்த நஞ்சைத் தாம் உண்டு அவர்கட்கு அமுதம் அருளியவர் சிவபெருமான். உயர்ந்த கமுகின் பழக்குலை விழ, அதனால் வாழையின் கனிகள் மதில்மேல் உதிரும். மிக உயர்ந்த தென்னை மரங்களின் உச்சியில் மேகம் படியும். இத்தகைய வளம் பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார். அப்பெருமான் திருநாமத்தை ஓத வினையாவும் நீங்கும்.

திருவீழிமிழலை

வேந்தர்வந் திறைஞ்ச வேதியர் வீழி
மிழலையுள் விண்ணிழி விமானத்
தேய்ந்ததன் றேவி யோடுறை கின்ற
வீசனை யெம்பெரு மானைத்
தோய்ந்தநீர்த் தோணி புரத்துறை மறையோன்
றூமொழி ஞானசம் பந்தன்
வாய்ந்தபா மாலை வாய்நவில் வாரை
வானவர் வழிபடு வாரே **#1289**

இந்திரன் முதலான தேவர்கள் வந்து வழிபட, வேதங்களைக் கற்ற அந்தணர்கள் வாழ்கின்ற திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தில் விண்ணிழி விமானத்தில் உமாதேவியோடு வீற்றிருந்தருளும் இறைவனான எங்கள் சிவபெருமானை, நீர்வளம் மிகுந்த தோணிபுரத்தில் அவதரித்த மறைவல்ல தூயமொழி பேசும் ஞானசம்பந்தன், போற்றி உரைத்த இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள் வானவர்களால் வணங்கப்படுவார்கள்.

திருஆலவாய்

திருஆலவாய்

திருஆலவாய்,
பண் - புறநீர்மை,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. இதுவே மதுரை. ,
சுவாமிபெயர் : சொக்கநாதசுவாமி.
தேவியார் : மீனாட்சியம்மை.

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே **#1290**

மங்கையர்க்கரசியார் சோழ மன்னரின் புதல்வி. கைகளில் வரிகளையுடைய வளையல்களை அணிந்தவர். பெண்மைக்குரிய மடம் என்னும் பண்புக்குரிய பெருமையுடையவர். தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளுக்கு ஒப்பானவர். பாண்டிய மன்னனின் பட்டத்தரசி. சிவத்தொண்டு செய்து நாள்தோறும் சிவபெருமானைப் போற்றி வழிபடும் தன்மையுடையவர். அச்சிவபெருமான் ஓங்கி எரியும் நெருப்புப் போன்று சிவந்த வண்ணமுடைய தூய உருவினர். உயிர்கட்கெல்லாம் தலைவர். நான்கு வேதங்களையும், அவற்றின் பொருள்களையும் அருளிச் செய்தவர். அப்பெருமான் அங்கயற்கண்ணி உடனாக வீற்றிருந்தருளும் திருஆலவாய் என்னும் திருத்தலம் இதுவே யாகும்.

திருஆலவாய்

வெற்றவே யடியா ரடிமிசை வீழும்
விருப்பினன் வெள்ளைநீ றணியும்
கொற்றவன் றனக்கு மந்திரி யாய
குலச்சிறை குலாவிநின் றேத்தும்
ஒற்றைவெள் விடைய னும்பரார் தலைவ
னுலகினி லியற்கையை யொழித்திட்
டற்றவர்க் கற்ற சிவனுறை கின்ற
வாலவா யாவது மிதுவே **#1291**

பற்றற்ற உள்ளத்தோடு, சிவனடியார்களைக் காணும்போது கீழே விழுந்து அவர் திருவடிகளை வணங்கும் பக்தியுடையவரும், திருவெண்ணீறு திருஞானசம்பந்தரால் பூசப்பெறும் புண்ணியப் பேறுடையவனாகிய பாண்டிய மன்னனுக்கு அமைச்சருமாகிய குலச்சிறை நாயனார் மகிழ்வோடு வணங்கித் துதிக்கும் சிவபெருமான் ஒப்பற்ற வெண்ணிற இடபத்தை வாகனமாக உடையவர். தேவர்களின் தலைவர். உலகியல்புகளை வெறுத்து அகப்பற்று, புறப்பற்று ஆகியவற்றைக் கைவிட்டுத் தம்மையே கருதும் அன்பர்க்கு அன்பராய் விளங்குபவர். அப்பெருமான் வீற்றிருந்தருளும் திருஆலவாய் என்னும் திருத்தலம் இதுவேயாகும்.

திருஆலவாய்

செந்துவர் வாயாள் சேலன கண்ணாள்
சிவன்றிரு நீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள் பாண்டிமா தேவி
பணிசெயப் பாரிட நிலவும்
சந்தமார் தரளம் பாம்புநீர் மத்தந்
தண்ணெருக் கம்மலர் வன்னி
அந்திவான் மதிசேர் சடைமுடி யண்ண
லாலவா யாவது மிதுவே **#1292**

மங்கையர்க்கரசியார் சிவந்த பவளம் போன்ற வாயையுடையவர். சேல் மீன் போன்ற கண்களை உடையவர். சிவபெருமானது திருநீற்றின் பெருமையை வளர்ப்பவர். விரல்நுனி பந்து போன்று திரட்சியுடைய பாண்டிமா தேவியார் சிவத்தொண்டு செய்ய, உலகில் சிறந்த நகராக விளங்குவதும், அழகிய முத்துக்கள், பாம்பு, கங்கை, ஊமத்தை, குளிர்ச்சி பொருந்திய எருக்க மலர், வன்னிமலர், மாலைநேரத்தில் தோன்றும் பிறைச்சந்திரன் இவற்றை சடைமுடியில் அணிந்துள்ள தலைவரான சிவபெருமான் வீற்றிருந்தருளுவது ஆகிய திருஆலவாய் என்னும் திருத்தலம் இதுவேயாகும்.

திருஆலவாய்

கணங்களாய் வரினுந் தமியராய் வரினு
மடியவர் தங்களைக் கண்டால்
குணங்கொடு பணியுங் குலச்சிறை குலாவுங்
கோபுரஞ் சூழ்மணிக் கோயில்
மணங்கமழ் கொன்றை வாளரா மதியம்
வன்னிவன் கூவிள மாலை
அணங்குவீற் றிருந்த சடைமுடி யண்ண

லாலவா யாவது மிதுவே #1293
சிவனடியார்கள் கூட்டமாக வந்தாலும், தனியராக வந்தாலும்,
அவர்களைக் காணும்போது அவர்களின் குணச்சிறப்புக்களைக் கூறி,
வழிபடும் தன்மையுடைய குலச்சிறையார் வழிபாடு செய்யும்,
கோபுரங்கள் சூழ்ந்த அழகிய கோயிலைக் கொண்டதும், மணம் கமழும்
கொன்றை, பாம்பு, சந்திரன், வன்னி, வில்வம், கங்கை இவை விளங்கும்
சடைமுடியுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளுவதும் ஆகிய
திருஆலவாய் என்னும் திருத்தலம் இதுவே யாகும்.

திருஆலவாய்

செய்யதா மரைமே லன்னமே அனைய
சேயிழை திருநுதற் செல்வி
பையரா வல்குற் பாண்டிமா தேவி
நாடொறும் பணிந்தினி தேத்த
வெய்யவேற் சூலம் பாசமங் குசமான்
விரிகதிர் மழுவுடன் றரித்த
ஐயனா ருமையோ டின்புறு கின்ற
வாலவா யாவது மிதுவே #1294
சிவந்த தாமரைமலர் மேல் வீற்றிருக்கும் இலக்குமி போன்று
அழகுடையவரும், சிறந்த ஆபரணங்களை அணிந்துள்ளவரும், அழகிய
நெற்றியையும், பாம்பின் படம் போன்ற அல்குலையும் உடையவருமான
பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசியார் நாள்தோறும்
மனமகிழ்வோடு வழிபாடு செய்து போற்ற, வேல், சூலம், பாசம்,
அங்குசம், மான், மழு ஆகியவற்றைத் தாங்கியுள்ள சிவபெருமான்
உமாதேவியோடு இன்புற்று வீற்றிருந்தருளுகின்ற திருஆலவாய்
என்னும் திருத்தலம் இதுவே.

திருஆலவாய்

நலமில ராக நலமதுண் டாக
நாடவர் நாடறி கின்ற
குலமில ராகக் குலமதுண் டாகத்
தவம்பணி குலச்சிறை பரவும்
கலைமலி கரத்தன் மூவிலை வேலன்
கரியுரி மூடிய கண்டன்
அலைமலி புனல்சேர் சடைமுடி யண்ண
லாலவா யாவது மிதுவே #1295
நல்ல குணங்களை உடையவராயினும், அவை இல்லாதவராயினும்,
எந்த நாட்டவராயினும், நாடறிந்த உயர்குடியிற் பிறந்தவராயினும்,

பிறவாதாராயினும் அடியவர்களைக் காணும்போது அவர்களை வணங்கி வழிபடுதலையே தவமாகக் கொண்டவர் குலச்சிறையார். அத்தகைய குலச்சிறையார் வழிபடுகின்ற, மான் ஏந்திய கையினரும், மூவிலைச் சூலத்தவரும், வேலரும், யானைத் தோலைப் போர்த்த நீலகண்டரும், கங்கையைத் தாங்கிய சடை முடியை உடையவருமான சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருஆலவாய் என்னும் திருத்தலம் இதுவே.

திருஆலவாய்

முத்தின்றாழ் வடமுஞ் சந்தனக் குழம்பு
நீறுந்தன் மார்பினின் முயங்கப்
பத்தியார் கின்ற பாண்டிமா தேவி
பாங்கொடு பணிசெய நின்ற
சுத்தமார் பளிங்கின் பெருமலை யுடனே
சுடர்மர கதமடுத் தாற்போல்
அத்தனா ருமையோ டின்புறு கின்ற
வாலவா யாவது மிதுவே **#1296**

முத்துமாலையும், சந்தனக் குழம்பும், திருநீறும் தம் மார்பில் விளங்கப் பக்தியோடு பாண்டிமாதேவியாரான மங்கையர்க்கரசியார் வழிபடுகின்ற, தூய பளிங்குமலை போன்ற சிவபெருமானும், சுடர்விடு மரகதக் கொடி போன்ற உமாதேவியும் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் திரு ஆலவாய் இதுவே.

திருஆலவாய்

நாவணங் கியல்பா மஞ்செழுத் தோதி
நல்லராய் நல்லியல் பாகும்
கோவணம் பூதி சாதனங் கண்டாற்
றொழுதெழு குலச்சிறை போற்ற
ஏவணங் கியல்பா மிராவணன் றிண்டோ
ளிருபது நெரிதர வூன்றி
ஆவணங் கொண்ட சடைமுடி யண்ண
லாலவா யாவது மிதுவே **#1297**

நாவிற்கு அழகு செய்யும் இயல்பினதாகிய திருவைந்தெழுத்தை ஓதி, நல்லவராய், நல்லியல்புகளை அளிக்கும் கோவணம், விபூதி, உருத்திராக்கம் முதலிய சிவசின்னங்கள் அணிந்தவர்களைக் கண்டால் வணங்கி மகிழ்பவர் குலச்சிறை நாயனார். அவர் வழிபாடு செய்கின்ற, பகைவரது அம்புகள் பணிந்து அப்பாற் செல்லும் பெருவலிமை படைத்த இராவணனின் இருபது தோள்களும் நெரியுமாறு தம் திருப்பாதவிரலை

ஊன்றிப் பின் அவனைச் சிவபக்தனாகும்படி செய்தருளிய சடைமுடியுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருஆலவாய் என்னும் திருத்தலம் இதுவே.

திருஆலவாய்

மண்ணெலா நிகழ மன்னனாய் மன்னு
மணிமுடிச் சோழன்றன் மகளாம்
பண்ணினேர் மொழியாள் பாண்டிமா தேவி
பாங்கினாற் பணிசெய்து பரவ
விண்ணுலா ரிருவர் கீழொடு மேலு
மளப்பரி தாம்வகை நின்ற
அண்ணலா ருமையோ டின்புறு கின்ற
வாலவா யாவது மிதுவே **#1298**

உலகம் முழுவதும் தனது செங்கோல் ஆட்சி நிகழ் மன்னனாய் விளங்கிய மணிமுடிச் சோழனின் மகளார், மங்கையர்க்கரசியார். பண்ணிசை போன்ற மொழியுடையவர். பாண்டிய மன்னனின் பட்டத்தரசியார். அத்தேவியார் அன்போடு வழிபாடு செய்து போற்றுகின்ற, விண்ணிலுள்ள திருமாலும், பிரமனும் கீழும் மேலுமாய்ச் சென்று இறைவனின் அடிமுடி தேட முயன்று காண முடியாவண்ணம் அனற்பிழம்பாய் நின்ற சிவபெருமான் உமாதேவியோடு மகிழ்ந்து வீற்றிருந்தருளும் திருஆலவாய் என்னும் திருத்தலம் இதுவே.

திருஆலவாய்

தொண்டரா யுள்ளார் திசைதிசை தோறுந்
தொழுதுதன் குணத்தினைக் குலாவக்
கண்டுநா டோறு மின்புறு கின்ற
குலச்சிறை கருதி நின்றேத்தக்
குண்டரா யுள்ளார் சாக்கியர் தங்கள்
குறியின்க ணெறியிடை வாரா
அண்டநா யகன்றா னமர்ந்துவீற் றிருந்த
வாலவா யாவது மிதுவே **#1299**

சிவத்தொண்டர்கள் எல்லாத் திசைகளிலும் சிவபெருமானைத் தொழுது, அவர் அருட்குணத்தைப் போற்றி, அருட்செயல்களை மகிழ்ந்து கூறக்கேட்டு இன்புறும் தன்மையுடையவர் குலச்சிறையார். அவர் பக்தியுடன் வழிபடுகின்ற, புத்த, சமணத்தைப் பின்பற்றுபவர் கொள்ளும் குறியின்கண் அடங்காத நெறியுடைய, இவ்வண்டத்துக்கெல்லாம் நாயகனாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருத்தலம் இதுவேயாகும்.

திருஆலவாய்

பன்னலம் புணரும் பாண்டிமாதேவி
குலச்சிறை யெனுமிவர் பணியும்
அந்நலம் பெறுசீ ராலவா யீசன்
றிருவடி யாங்கவை போற்றிக்
கன்னலம் பெரிய காழியுண் ஞான
சம்பந்தன் செந்தமி ழிவைகொண்
டின்னலம் பாட வல்லவ ரிமையோ
ரேத்தவீற் றிருப்பவ ரினிதே **#1300**

பலவகைச் செல்வ நலன்களும் வாய்க்கப் பெற்ற பாண்டிமா தேவியாராகிய மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையார் என்னும் மந்திரியாரும் வழிபட்டுப் போற்ற அவ்விருவர் பணிகளையும் ஏற்றருளும் சிறப்புடைய திருஆலவாய் இறைவன் திருவடிகளைப் போற்றி, கருப்பங் கழனிகளையுடைய சீகாழிப் பதியில் அவதரித்த ஞானசம்பந்தர் அருளிய செந்தமிழ்ப் பாமாலையாகிய இத்திருப்பதிகத்தை இன்னிசையோடு ஓதவல்லவர்கள் தேவர்கள் வணங்கச் சிவலோகத்தில் வீற்றிருப்பர்.

திருப்பந்தணநல்லூர்

திருப்பந்தணநல்லூர்

திருப்பந்தணநல்லூர்,
பண் - புறநீர்மை

இடறினார் கூற்றைப் பொடிசெய்தார் மதிலை
யிவைசொல்லி யுலகெழுந் தேத்தக்
கடறினா ராவர் காற்றுளா ராவர்
காதலித் துறைதரு கோயில்
கொடிறனார் யாதுங் குறைவிலார் தாம்போய்க்
கோவணங் கொண்டுகூத் தாடும்
படிறனார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே #1301

திருப்பந்தணைநல்லூர் என்ற திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் பசுபதியாராகிய சிவபெருமான் காலனை உதைத்து அழித்தவர், அசுரர்களின் முப்புரங்கள் பொடியாகும்படி எரித்தவர், என்பன போன்ற புகழ்மொழிகளாகிய இவற்றைச் சொல்லி உலகத்தவர் மிகவும் துதிக்கும்படியாகக் காட்டில் உள்ளவராவர். காற்றில் எங்கும் கலந்துள்ளார். உறுதிப்பாடுடையவர். எதனாலும் குறைவில்லாதவர். கோவணம் தரித்துக் கூத்தாடும் வஞ்சகரும் ஆவார்.

திருப்பந்தணநல்லூர்

கழியுளா ரெனவுங் கடலுளா ரெனவுங்
காட்டுளார் நாட்டுளா ரெனவும்
வழியுளா ரெனவு மலையுளா ரெனவு
மண்ணுளார் விண்ணுளா ரெனவும்
சுழியுளா ரெனவுஞ் சுவடுதா மறியார்
தொண்டர்வாய் வந்தன சொல்லும்
பழியுளார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே #1302

இறைவன் கடற்கழியில் உள்ளார். கடலிலே உள்ளார், காடுகளில் உள்ளார். நாடுகளில் உள்ளார். விண்ணுலகத் திலே உள்ளார். நீர்ச்சுழிகளில் உள்ளார். இவ்வாறு அவர் எல்லா இடத்திலும் இருப்பவர் என்று சொல்லப் பெற்றாலும், அவ்வாறு இருக்கும் அடையாளம் பிறர் எவராலும் அறியப்படாத தன்மையர் ஆவார். இவ்வாறு தொண்டர்களின் போற்றுதலுக்கும், வணக்கத்திற்குமுரிய சிவபெருமான் திருப்பந்தணைநல்லூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும்

பசுபதியார் ஆவார்.

திருப்பந்தணநல்லூர்

காட்டினா ரெனவு நாட்டினா ரெனவுங்
கடுந்தொழிற் காலனைக் காலால்
வீட்டினா ரெனவுஞ் சாந்த வெண்ணீறு
பூசியோர் வெண்மதி சடைமேல்
சூட்டினா ரெனவுஞ் சுவடுதா மறியார்
சொல்லுள சொல்லுநால் வேதப்
பாட்டினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே **#1303**

இறைவர் காட்டில் வசிப்பவர். நாட்டில் உள்ளவர். கொடுந்தொழில் செய்யும் இயமனைக் காலால் உதைத்தவர். நறுமணம் கமழும் திருவெண்ணீற்றைப் பூசியுள்ளவர். வெண்ணிறப் பிறைச் சந்திரனைச் சடைமேல் அணிந்துள்ளவர். இவ்வாறு எத்தனை புகழ்ச்சொற்கள் உண்டோ அத்தனையும் சொல்லப் பெற்ற நால் வேதங்களாகிய பாட்டின் பொருளானவர். அப்படித் தாம் எல்லாமாய் இருக்கின்ற அடையாளம் பிறரால் அறியப்படாத தன்மையர்.

திருப்பந்தணநல்லூர்

முருகினார் பொழில்சூ ழுலகினா ரேத்த
மொய்த்தபல் கணங்களின் துயர்கண்
டுருகினா ராகி யுறுதிபோந் துள்ள
மொண்மையா லொளிதிகழ் மேனி
கருகினா ரெல்லாங் கைதொழு தேத்தக்
கடலுணஞ் சமுதமா வாங்கிப்
பருகினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே **#1304**

இறைவன் அழகிய சோலைகள் சூழ்ந்த உலகத்தார் போற்றி வணங்க, நெருங்கிய பலவகைக் கணங்களின் துயரினைக் கண்டு உருகி, உள்ள உறுதியோடு, ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற தங்கள் உடல்கள் கருநிறம் அடையப் பெற்றாராகிய திருமால் முதலிய தேவர்களெல்லாம் கைதொழுது வணங்க, அவரது துன்பத்தினைப் போக்கக் கடலுள் எழுந்த நஞ்சினை அமுதம்போல் வாங்கிப் பருகினவர். அப்பெருமான் திருப்பந்தணைநல்லூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் பசுபதியார் ஆவார்.

திருப்பந்தணநல்லூர்

பொன்னினார் கொன்றை யிருவடங் கிடந்து
பொறிகிளர் பூணநூல் புரள
மின்னினா ருருவின் மிளிர்வதோ ரரவ
மேவுவெண் ணீறுமெய் பூசித்
துன்னினார் நால்வர்க் கறமமர்ந் தருளித்
தொன்மையார் தோற்றமுங் கேடும்
பன்னினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே **#1305**

இறைவர் பொன்போன்ற பெரிய கொன்றை மாலையை வண்டுகள் கிளர்ந்து ஒலிக்கும்படி மார்பில் அணிந்துள்ளவர். அத்துடன் முப்புரி நூலும் அணிந்துள்ளவர். மின்னல் போன்று ஒளியுடைய பாம்பை அணிந்துள்ளவர். திருவெண்ணீற்றினைப் பூசியுள்ளவர். தம்மை வந்தடைந்த சனகாதி முனிவர்கள் நால்வர்க்கும் அறப்பொருள் உபதேசித்தவர். தொன்மைக்கோலம் உடையவர். மாறி மாறி உலகைப் படைத்தலும், அழித்தலும் செய்பவர். அப்பெருமான் திருப்பந்தணைநல்லூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் பசுபதியார் ஆவார்.

<u>திருப்பந்தணநல்லூர்</u>

ஒண்பொனா ரனைய வண்ணல்வாழ் கெனவு
முமையவள் கணவன்வாழ் கெனவும்
அண்பினார் பிரியா ரல்லுநன் பகலு
மடியவ ரடியிணை தொழவே
நண்பினா ரெல்லா நல்லரென் றேத்த
அல்லவர் தீயரென் றேத்தும்
பண்பினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே **#1306**

அன்பர்கள் இறைவனை, ‘ஒளிமிக்க பொன் போன்ற தலைவரே வாழ்க’ எனவும், ‘உமையவள் கணவனே வாழ்க’ எனவும் போற்றுவர். அவரை நெருங்கி அணுகப்பெற்று, இரவும், பகலும் பிரியாராகித் திருவடிகளைத் தொழுவர். பத்தர்களெல்லாரும் அவர் நன்மையைச் செய்பவர் என்று போற்ற, மற்றவர்கள் தீமையைச் செய்பவர் என்று சொல்லும் தன்மையினையுடையவர். அப்பெருமான் திருப்பந்தணைநல்லூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் பசுபதியார் ஆவர்.

<u>திருப்பந்தணநல்லூர்</u>

எற்றினா ரேது மிடைகொள்வா ரில்லை
யிருநிலம் வானுல கெல்லை

தெற்றினார் தங்கள் காரண மாகச்
செருமலைந் தடியிணை சேர்வான்
முற்றினார் வாழு மும்மதில் வேவ
மூவிலைச் சூலமு மழுவும்
பற்றினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே **#1307**

தமக்கு எத்தகைய துன்பமும் செய்யாத தேவர்களையும், மண்ணுலக மாந்தர்களையும் துன்புறுத்தி, மோதி அழித்தலைச் செய்த பகைவர்கள் காரணமாகப் போர் செய்து, தம் திருவடிகளைச் சேரும் பொருட்டுத் தவம் முற்றினார்களாகிய மூவர்கள் வாழ்கின்ற முப்புரங்களும், (அம்மூவர் தவிர) வேகும்படி செய்து மூவிலைச் சூலமும், மழுவாயுதமும் ஏந்தியவர். அப்பெருமான் திருப்பந்தணைநல்லூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் ஆவார்.

<u>திருப்பந்தணநல்லூர்</u>

ஒலிசெய்த குழலின் முழவம தியம்ப
வோசையா லாடல றாத
கலிசெய்த பூதங் கையினா லிடவே
காலினாற் பாய்தலு மரக்கன்
வலிகொள்வர் புலியி னுரிகொள்வ ரேனை
வாழ்வுநன் றானுமோர் தலையில்
பலிகொள்வர் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே **#1308**

குழலும், முழவும் ஒலிக்க அவற்றின் ஓசையோடு ஆடலும் நீங்காத மகிழ்ச்சியுடைய திருக்கயிலாய மலையைப் பெயர்க்க இராவணன் அதன் கீழ்க் கையைச் செலுத்த, அது கண்டு இறைவன் தம் காற்பெருவிரலை ஊன்றி இராவணனின் வலிமையை அழியுமாறு செய்தார். அவர் புலியின் தோலை ஆடையாக உடுத்தவர். நல்ல வாழ்வு உடையவர் எனினும் பிரம கபாலத்தைக் கையிலேந்திப் பிச்சை ஏற்பவர். அப்பெருமான் திருப்பந்தணைநல்லூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் பசுபதியார் ஆவார்.

<u>திருப்பந்தணநல்லூர்</u>

சேற்றினார் பொய்கைத் தாமரை யானுஞ்
செங்கண்மா லிவரிரு கூறாத்
தோற்றினார் தோற்றத் தொன்மையை யறியார்
துணைமையும் பெருமையுந் தம்மில்
சாற்றினார் சாற்றி யாற்றலோ மென்னச்

சரண்கொடுத் தவர்செய்த பாவம்
பாற்றினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே **#1309**
சேறு நிறைந்த பொய்கையில் மலரும் தாமரைமேல் வீற்றிருக்கும் பிரமனும், சிவந்த கண்களையுடைய திருமாலும் முறையே அன்ன உருவெடுத்து மேல்நோக்கி வானிலும், பன்றி உருவெடுத்துக் கீழ்நோக்கிப் பாதாளத்திலும் இறைவனின் முடியையும், அடியையும் தேடிச்செல்ல, அறியாது தோற்றனர். இறைவனின் தொன்மைத் தோற்றத்தை அறியாது துணையையும், பெருமையையும் தமக்குள் பேசித் தாமே பரம் எனப் பேசினர். பின் இறைவனிடம் யாம் வலியில்லோம் என்று முறையிட்டுத் தம் பிழையை மன்னிக்க வேண்ட, அவர் அவர்கட்குச் சரண் கொடுத்து அவர்களது பாவத்தை மாற்றியருளினார். அப்பெருமான் திருப்பந்தணைநல்லூரில் வீற்றிருந்தருளும் பசுபதியார் ஆவார்.

திருப்பந்தணநல்லூர்

கல்லிசை பூணக் கலையொலி யோவாக்
கழுமல முதுபதி தன்னில்
நல்லிசை யாளன் புல்லிசை கேளா
நற்றமிழ் ஞானசம் பந்தன்
பல்லிசை பகுவாய்ப் படுதலை யேந்தி
மேவிய பந்தணை நல்லூர்
சொல்லிய பாடல் பத்தும்வல் லவர்மேல்
தொல்வினை சூழகி லாவே **#1310**
கற்கும் ஓசைகள் நிறைந்து கலைகளின் ஒலி நீங்காத திருக்கழுமலம் என்னும் பழமையான நகரில் அவதரித்த நல்ல பெருமையினையுடையவனும், அற்பர்களான புறச்சமயிகளின் மொழியைக் கேளாதவனுமாகிய நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் பற்களுடன் கூடிய பிளந்த வாயினையுடைய மண்டை ஓட்டை ஏந்தியவனான சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற திருப்பந்தணைநல்லூர் என்னும் திருத்தலத்தைப் போற்றி அருளிய பாடல்கள் பத்தினையும் ஓதவல்லவர்களைத் தொல்வினை வந்து சூழாது

திருஓமமாம்புலியூர்

திருஓமமாம்புலியூர்

திருஓமமாம்புலியூர்,
பண் - புறநீர்மை

பூங்கொடி மடவா ளுமையொரு பாகம்
புரிதரு சடைமுடி யடிகள்
வீங்கிரு ணட்ட மாடுமெம் விகிர்தர்
விருப்பொடு முறைவிடம் வினவில்
தேங்கமழ் பொழிலிற் செழுமலர் கோதிச்
செறிதரு வண்டிசை பாடும்
ஓங்கிய புகழா ரோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே #1311

இறைவன் பூங்கொடி போன்ற உமாதேவியை ஒரு பாகமாக உடையவர். முறுக்குண்ட சடைமுடியையுடைய அடிகள். உலகம் சங்கரிக்கப்பட்டு ஒடுங்கிய ஊழிக்காலத்தில் நடனமாடும் விகிர்தர். அப்பெருமான் விருப்பத்துடன் வீற்றிருந்தருள்கின்ற இடம் எது என வினவில், தேன்மணம் கமழும் சோலைகளிலுள்ள செழுமையான மலர்களைக் குடைந்து நெருங்கிக் கூட்டமாயமைந்த வண்டுகள் இசைபாடுகின்ற, ஓங்கிய புகழையுடைய அந்தணர்கள் வாழ்கின்ற ஓமமாம்புலியூரில் அப்பெருமானுக்குரிய உடையவர் வடதளி என்னும் திருக்கோயிலாகும்.

திருஓமமாம்புலியூர்

சம்பரற் கருளிச் சலந்தரன் வீயத்
தழலுமிழ் சக்கரம் படைத்த
எம்பெரு மானா ரிமையவ ரேத்த
வினிதினங் குறைவிடம் வினவில்
அம்பர மாகி யழலுமிழ் புகையி
னாகுதி யான்மழை பொழியும்
உம்பர்க ளேத்து மோமமாம் புலியூ
ருடையவர் வடதளியதுவே #1312

சம்பரன் என்னும் அசுரனுக்கு அருள்செய்தவரும், சலந்தரன் என்னும் அசுரன் அழியும்படி நெருப்பினை உமிழ்கின்ற சக்கரத்தைப் படைத்தவருமான எம் சிவபெருமானார் தேவர்களெல்லாம் வணங்கிப் போற்ற இனிதாக வீற்றிருந்தருளும் இடம், வேள்வி ஆற்ற அதன் புகைமண்டலமானது ஆகாயத்தினை அடைந்து மழைபொழிவதும், தேவர்களால் போற்றப்படுகின்றதுமான திரு ஓமமாம்புலியூரில் உள்ள

உடையவர் வடதளி என்னும் திருக்கோயிலாகும்.

திருஓமமாம்புலியூர்

பாங்குடைத் தவத்துப் பகீரதற் கருளிப்
படர்சடைக் கரந்தநீர்க் கங்கை
தாங்குத றவிர்த்துத் தராதலத் திழித்த
தத்துவ னுறைவிடம் வினவில்
ஆங்கெரி மூன்று மமர்ந்துட னிருந்த
வங்கையா லாகுதி வேட்கும்
ஓங்கிய மறையோ ரோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே **#1313**

சிறந்த குணமுடைய பகீரதனுடைய தவத்திற்கு அருள்செய்வது, தனது படர்ந்த சடையில் மறைத்தருளிய கங்கை நதியினைத் தாங்குதலைத் தவிர்த்துப் பூமியில் சிறிதளவு பாயும்படி செய்த தத்துவனாகிய சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற இடம், மூன்று எரி வளர்த்துத் தம் அழகிய கைகளால் நெய், சமித்து போன்றவைகளை வார்த்து வேள்விகள் செய்கின்ற, ஓங்கிய புகழை யுடைய அந்தணர்கள் வாழ்கின்ற திருஓமமாம்புலியூரில் உள்ள உடையவர் வடதளி என்னும் திருக்கோயிலாகும்.

திருஓமமாம்புலியூர்

புற்றர வணிந்து நீறுமெய் பூசிப்
பூதங்கள் சூழ்தர வூரூர்
பெற்றமொன் றேறிப் பெய்பலி கொள்ளும்
பிரானவ னுறைவிடம் வினவில்
கற்றநால் வேத மங்கமோ ராறுங்
கருத்தினா ரருத்தியாற் றெரியும்
உற்றபல் புகழா ரோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே **#1314**

சிவபெருமான் புற்றில் வசிக்கும் இயல்புடைய பாம்பை அணிந்தவர். திருநீற்றினைத் தன்மேனி முழுவதும் பூசியவர். பூதகணங்கள் சூழ்ந்து வர, இடபத்தின் மேலேறி ஊரூராகச் சென்று பிச்சையேற்பவர். அப்பெருமான் இனிதாக வீற்றிருந்தருளும் இடம், தாங்கள் கற்ற நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள் இவற்றின் கருத்தை உணர்ந்தவர்களாய், அன்பும், புகழுமுடைய அந்தணர்கள் வாழும் திருஓமமாம்புலியூர் உடையவர் வடதளியே.

திருஓமமாம்புலியூர்

நிலத்தவர் வான மாள்பவர் கீழோர்
துயர்கெட நெடியமாற் கருளால்
அலைத்தவல் லசுர ராசற வாழி
யளித்தவ னுறைவிடம் வினவில்
சலத்தினாற் பொருள்கள் வேண்டுதல் செய்யாத்
தன்மையார் நன்மையான் மிக்க
உலப்பில்பல் புகழா ரோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே **#1315**

மண்ணுலகத்தவர்கள், வானுலகை ஆள்பவர்கள், பாதாள உலகத்தினர் ஆகியோரது துன்பம் கெடக் கொடிய அசுரர்கள் புரியும் தீமைகளை அழிக்குமாறு, நெடிய திருமாலுக்குச் சக்கராயுதத்தை அளித்த சிவபெருமான் இனிதாக வீற்றிருந்தருளும் இடம், தீய செயல்களால் பொருள் சேர்தலைச் செய்யாத நல்லொழுக்க சீலர்களும், பெரும்புகழ் மிக்க செயல் செய்யும் சான்றோர்களும் வாழ்கின்ற திருஓமமாம்புலியூரிலுள்ள உடையவர் வடதளி என்னும் திருக்கோயிலாகும்.

<u>திருஓமமாம்புலியூர்</u>

மணந்திகழ் திசைக ளெட்டுமே ழிசையு
மலியுமா றங்கமை வேள்வி
இணைந்தநால் வேத மூன்றெரி யிரண்டு
பிறப்பென வொருமையா லுணரும்
குணங்களு மவற்றின் கொள்பொருள் குற்ற
மற்றவை யுற்றது மெல்லாம்
உணர்ந்தவர் வாழு மோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே **#1316**

எட்டுத் திசைகளும் புகழ்மணங் கமழ்கின்றதும், ஏழிசைகள் மலிந்துள்ளதும், ஆறங்கங்கள், ஐந்து வேள்விகள், நான்கு வேதங்கள், மூன்று எரிகள், இரண்டு பிறப்புகள் என இவற்றை ஒருமை மனத்தால் உணரும் குணங்களும், அவற்றின் பொருளும், குற்றமற்றவை, குற்றமுள்ளவை இவற்றை உணர்ந்து தௌந்தவர்களும் ஆன அந்தணர்கள் வாழ்கின்ற திருஓமமாம்புலியூரில் உடையவரான சிவபெருமான் உடையவர் வடதளி என்னும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்றார்.

<u>திருஓமமாம்புலியூர்</u>

தலையொரு பத்துந் தடக்கையை திரட்டி
தானுடை யரக்கனொண் கயிலை

அலைவது செய்த வவன்றிறல் கெடுத்த
வாதியா ருறைவிடம் வினவில்
மலையென வோங்கு மாளிகை நிலவு
மாமதின் மாற்றல ரென்றும்
உலவுபல் புகழா ரோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே #1317
பத்துத் தலைகளும், நீண்ட இருபது கைகளும் உடைய அரக்கனாக இராவணன் ஒளிபொருந்திய திருக்கயிலை மலையினை அசைக்கத் தொடங்க, அவனது வலிமையைக் கெடுத்த ஆதியாராகிய சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் இடம் எதுவென வினவில், மலைபோல் ஓங்கியுயர்ந்த மாளிகையும், அதனுடன் விளங்கும் பெரிய மதிலும் கூடிய, செல்வநிலை என்றும் மாறாதவராய் விளங்குகின்ற பல்வகையான புகழ்களையுடைய அந்தணர்கள் வசிக்கின்ற திருஓமமாம்புலியூரில் உடையவர் வடதளி என்னும் திருக்கோயிலாகும்.

திருஓமமாம்புலியூர்

கள்ளவிழ் மலர்மே லிருந்தவன் கரியோ
னென்றிவர் காண்பரி தாய
ஒள்ளெரி யுருவ ருமையவ ளோடு
முகந்தினி துறைவிடம் வினவில் பள்ளநீரவாளைபாய்தரு கழனிப்
பனிமலர்ச் சோலைசூ ழாலை
ஒள்ளிய புகழா ரோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே #1318
தேனுடைய தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் பிரமனும், கருநிறமுடைய திருமாலும் இருவரும் காண்பதற்கு அரியவனாய் நெருப்புப் பிழம்பாய் நின்ற சிவபெருமான் உமாதேவியோடு இனிது வீற்றிருந்தருளும் இடம், பள்ளத்தை நோக்கிப் பாயும் நீரோடு வாளை மீன்கள் பாயும் வயல்களும், குளிர்ச்சி பொருந்திய மலர்ச்சோலைகள் சூழ்ந்த கரும்பு ஆலைகளும் உடைய, மிக்க புகழுடைய அந்தணர்கள் வாழ்கின்ற திருஓமமாம் புலியூரில் உடையவர் வடதளி என்னும் திருக்கோயிலாகும்.

திருஓமமாம்புலியூர்

தெளளிய ரல்லாத் தேரரோ டமணர்
தடுக்கொடு சீவர முடுக்கும்
கள்ளமார் மனத்துக் கலதிகட் கருளாக்
கடவுளா ருறைவிடம் வினவில்
நள்ளிருள் யாம நான்மறை தெரிந்து
நலந்திகழ் மூன்றெரி யோம்பும்

ஒள்ளியார் வாழு மோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே #1319

தௌந்த அறிவில்லாத காவியாடை போர்த்திய புத்தர்களும், தடுக்கினை உடுக்கும் சமணர்களும் ஆகிய கள்ள உள்ளத்துடன் விளங்கும் கீழ் மக்கட்கு அருள்புரியாத கடவுளாகிய சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் இடம், நள்ளிருள், யாமம் முதலிய அவ்வக் காலங்கட்கு ஏற்ப, நான்கு வேதங்களிலும் கூறியபடி தெய்வமந்திரங்களை ஓதி, நன்மை தரும் மூன்று அக்கினிகளை வளர்த்து வேள்வி செய்யும் மாசற்ற அறிவுடைய அந்தணர்கள் வாழும் திருஓமமாம் புலியூர் உடையவர் வடதளி என்னும் திருக்கோயிலாகும்.

திருஓமமாம்புலியூர்

விளைதரு வயலுள் வெயில்செறி பவள
மேதிகண் மேய்புலத் திடறி
ஒளிதர மல்கு மோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யரனைக்
களிதரு நிவப்பிற் காண்டகு செல்வக்
காழியுண் ஞானசம் பந்தன்
அளிதரு பாடல் பத்தும்வல் லார்க
ளமரலோ கத்திருப் பாரே #1320

நல்ல விளைச்சலைத் தருகின்ற வயல்களில் ஒளிமிக்க பவளங்கள், எருமைகள் மேய்கின்ற இடங்களில் அவைகளால் இடறப்பட்டு மேலும் ஒளியைத் தருகின்ற திருஓமமாம் புலியூரில் உடையவர் வடதளி என்னும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமானை, களிப்பை உண்டாக்கும் உயர்ந்த காணத்தக்க செல்வத்தையுடைய சீகாழிப்பதியில் அவதரித்த திருஞானசம்பந்தர் போற்றிய, அருளை விளைவிக்கும் இத்திருப்பாடல்கள் பத்தையும் ஓதவல்லவர்கள் சிவலோகத்தில் வீற்றிருப்பர்.

திருக்கோணமாமலை

திருக்கோணமாமலை

திருக்கோணமாமலை,
பண் - புறநீர்மை,
இத்தலம் ஈழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கோணீசர்.
தேவியார் : மாதுமையம்மை.

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே **#1321**

சிவபெருமானின் வலத் திருவடியில் வீரக்கழலும், இடத் திருவடியில் சிலம்பும் ஒலிக்கின்றன. அவர் பாம்பணிந்தவர். இயல்பாகவே பாசங்களின் நீங்கியவர். திருநீறு அணிந்த திருமேனியர்.மலைமகளை ஒரு பாகமாகக் கொண்டவர். இடபக்கொடி உடையவர். சந்தனக் கட்டைகளும், கரிய அகில் கட்டைகளும், மாணிக்கக் கற்களும் அளவின்றிக் கரையில் சேர, ஒலிக்கின்ற கடலின் அலைகள் முத்துக்களைக் கொழிக்கும் திருக்கோண மாமலையில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கோணமாமலை

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே **#1322**

விரைவாகப் பாய்ந்து வந்த யானையின் தோலை உரித்துத் திருமேனிமேல் போர்த்திக் கொண்டவர் சிவபெருமான். அவர் பெண் யானை போன்ற நடையை உடையவளாய், வளையல்களை

அணிந்தவளாய்ப் பிறை போன்ற நெற்றியையுடைய உமாதேவியை ஒரு பாகமாக உடையவர். பிறர் கொடிது என்று அஞ்சத்தக்க அலைகளையுடைய ஒலிக்கின்ற கடல், முத்துக்களைச் சுமந்து மக்களுக்கு வழங்கும் வளமைமிக்க திருக்கோண மாமலையில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கோணமாமலை

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபே ருருவ விழித்தழ னாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே **#1323**

சிவபெருமான் குளிர்ச்சியான இளமையான சந்திரனையும், பசுமையான தலையையுடைய பாம்பையும், படர்ந்த சடைமுடியில் அணிந்துள்ளார். கனிபோன்ற சிவந்த வாயையுடைய உமாதேவியைச் சிவபெருமான் ஒரு பாகமாக உடையவர். மேரு மலையை வில்லாகக் கொண்டு, வாசுகி என்னும் பாம்பை நாணாகக் கொண்டு, அக்கினியைக் கணையாகக் கொண்டு முப்புரத்தை அழித்த ஆற்றலுடையவர். அப்பெருமான் ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த திருக்கோணமலையில் வீற்றிருந்தருளுகின்றார்

திருக்கோணமாமலை

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுஞ் சுமந்து கொழித்துவன் றிரைகள் கரையிடச்
சேர்க்குங் கோணமா
மலையமர்ந் தாரே **#1324**

இறைவர் பெருக்கெடுத்து வந்த கங்கை நதியின் வேகத்தைக் குறைத்து அதனைச் சடையில் தாங்கியவர். அழகிய மன்மதன் சாம்பலாகுமாறு நெற்றிக்கண்ணால் விழித்தவர். பின் அவன் தேவி வேண்ட அவனை உயிர்ப்பித்து அவளுக்கு மட்டும் தெரியும்படிஅருள்செய்தவர். இயல்பாகவே பாசங்களின் நீங்கியவர். தாமரை போன்ற திருவடிகளை

உடையவர். ஆரவாரத்துடன், செழுமையான முத்துக்கள், செம்பொன், இப்பி இவற்றைத் திரளாக அலைகள் கரையிலே சேர்க்கத் திருக்கோணமலை என்னும் திருத்தலத்தில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கோணமாமலை

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே **#1325**

தாயைவிட நல்ல தலைவர் என்று அடியார்கள் சிவபெருமானின் திருவடிகளைப் போற்றிப் பாடுவர். அவர் அடியார்களின் வாயிலும், மனத்திலும் நீங்காத மாண்புடையவர். பல கோலங்களை உடையவர். தம்மை வழிபடும் தொழிலுடைய அடியவர்கள்பால் நோய், பிணி முதலியன தாக்காவண்ணம் காப்பவர். மார்பில் முப்புரிநூல் அணிந்தவர். இவ்வுலகில், திருக்கோயிலும், சுனையும் கடலுடன் சூழ விளங்கும் திருக்கோணமாமலையில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கோணமாமலை

பரிந்துநன் மனத்தால் வழிபடுமாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ்
கோணமா மலையமர்ந் தாரே **#1326**

பக்தி பெருகும் நல்ல மனத்தால் அன்பு பெருக வழிபடும் மார்க்கண்டேயரின் உயிரைக் கவரவந்த காலனை, இறை வழிபாடு வினைப்பலனைச் சாராமல் காக்கும் என்ற சைவக் கொள்கைக்கு முரண்படாவண்ணம் உதைத்துப் பாலனுக்கு அருள்புரிந்த செம்மையான திறமுடையவர் சிவபெருமான். ஆன்மாக்கள் ஆகிய நம்மை ஆட்கொள்பவர். அப்பெருமான் விரிந்துயர்ந்த மல்லிகை, மாதவி, புன்னை, வேங்கை, செருந்தி, செண்பகம், முல்லை ஆகியவை விளங்கும்

சோலைகள் சூழ்ந்த திருக்கோணமலையில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கோணமாமலை

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலா
லேத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புகழாளர்
கோணமா மலையமர்ந் தாரே **#1327**

கயிலைமலையை எடுக்க இராவணனின் செருக்கைத் தம் திருப்பாதவிரலை ஊன்றி அழித்தவர் சிவபெருமான். பின் அவன் ஏத்திப் போற்ற விருப்பத்துடன் வெற்றி வாளும், நீண்ட வாழ்நாளும் அருளியவர். செல்வத்தோடு கூடிய பிறப்பும், இறப்பும் அறியாதவர். சிவனை நினையாது தக்கன் செய்த வேள்வியைத் தடுத்தவர். வனப்பு மிகுந்த உமாதேவியை ஒருபாகமாக வைத்தவர். யிர்களிடத்துக் கருணைகொண்டு தன்னருட் பெருமையையும், வாழ்வும் கொடுத்தவர். அத்தகைய பெரும்புகழையுடைய சிவபெருமான் திருக்கோணமலையில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கோணமாமலை

அருவரா தொருகை வெண்டலையேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியா
யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே **#1328**

அருவருப்பு இல்லாமல் பிரமனின் வெண்தலையைக் கையிலேந்தி வீடுகள்தோறும் சென்று பிச்சை ஏற்று உண்ணும் பெருமமையுடையவர். சீர்மை பொருந்திய பெருங்கடலில் துயில்கொள்ளும் திருமாலும், பிரமனும் ஆகிய இருவரும் அறியா வண்ணம் ஒளியுடைய பெரிய நெருப்புப் பிழம்பாய் உயர்ந்து நின்றவர்.திருமால் சிவபெருமானை ஆயிரம் தாமரை மலர்கள் கொண்டு அர்ச்சிக்க, ஒரு பூக் குறைய, அதற்காகக் தாமரை போன்ற தம் கண்ணையே இடந்து அர்ச்சனை செய்யக் குருவாய் விளங்கியவர்.அடியவர்கள், ஒலிக்கின்ற

வீரக்கழல்கள் அணிந்த தம் திருவடிகளை வணங்கும் வண்ணம் திருக்கோணமலையில் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கோணமாமலை

நின்றுணஞ் சமணுமிருந்துணுந் தேரு
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான்
மெல்லிய லொடுமுட னாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே **#1329**

நின்றுண்ணும் சமணர்களும், இருந்துண்ணும் புத்தர்களும் சிவபெருமானைப் பற்றி நெறியல்லாதவனவற்றைப் புறங்கூறுகின்றனர். சிவபெருமானோ நஞ்சுண்டு தேவர்களைக் காத்த பெருமையுடையவர். மெல்லியலான உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டவர். கடல் சூழ்ந்த அம்மலையில் மணம் வீசும் மல்லிகைச் சோலை விளங்கக் கடலலைகள் கரையில் மோதுகின்றன. கடற்சோலைகளின் மணம்வீசும் திருக்கோணமலையில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.

திருக்கோணமாமலை

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம்பந்தன்
உற்றசெந் தமிழார் மலையீ ரைந்து
முரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே **#1330**

குற்றமில்லாத குடிமக்கள் வாழ்கின்ற ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த திருக்கோணமலையில் வீற்றிருந்தருளும் சிவ பெருமானை,கற்றுணர் ஞானமும், கேள்வி ஞானமும் உடைய சீகாழி வாழ் மக்களின் தலைவரான சிவஞானக் கருத்துடைய ஞானசம்பந்தர் செந்தமிழில் அருளிய இப்பதிகத்தை உரைப்பவர்களும் கேட்பவர்களும் உயர்ந்தோர் ஆவர். அவர்களுடைய சுற்றத்தாரும் எல்லா நலன்களும் பெற்றுத் தொல்வினையிலிருந்து நீங்கப் பெறுவர். சிவலோகத்தில் பொலிவுடன் விளங்குவர்.

திருக்குருகாவூர்

திருக்குருகாவூர்

திருக்குருகாவூர்,
பண் - அந்தாளிக்குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வெள்ளிடையப்பர்.
தேவியார் : காவியங்கண்ணியம்மை.

சுண்ணவெண் ணீறணி மார்பில் தோல்புனைந்
தெண்ணரும் பல்கண மேத்தநின் றாடுவர்
விண்ணமர் பைம்பொழில் வெள்ளடை மேவிய
பெண்ணமர் மேனியெம் பிஞ்ஞக னாரே **#1331**

சிவபெருமான் பொடியாகிய வெண்ணிறத் திருநீற்றினை அணிந்த மார்பில் யானைத் தோலைப் போர்த்திக் கொண்டு எண்ணுதற்கரிய பல கணங்களும் போற்ற நடனம் செய்வார். அத்தகைய சிவபெருமான் தேவர்களும் விரும்பும் பசுமையான சோலைகள் சூழ்ந்த திருக்குருகாவூரில் வெள்ளடை என்னும் கோயிலில், உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு விரும்பி வீற்றிருந்தருளும் தலைக்கோலமுடையவர்.

திருக்குருகாவூர்

திரைபுல்கு கங்கை திகழ்சடை வைத்து
வரைமக ளோடுட னாடுதிர் மல்கு
விரைகமழ் தண்பொழில் வெள்ளடை மேவிய
அரைமல்கு வாளர வாட்டுகந் தீரே **#1332**

நறுமணம் கமழும் குளிர்ச்சி பொருந்திய சோலைகளையுடைய திருக்குருகாவூரில் வெள்ளடை என்னும் கோயிலில் வீற்றிருந்தருளுகின்ற பெருமானே! இடுப்பில் விளங்கும் ஒளிமிக்க பாம்பை ஆட்டுதலை விரும்பி நின்றீர். அலைகளையுடைய கங்கையை ஒளிமிக்க சடையில் வைத்துக் கொண்டு மலைமகளோடு ஆடுகின்றீர்.

திருக்குருகாவூர்

அடையலர் தொன்னகர் மூன்றெரித் தன்ன
நடைமட மங்கையொர் பாக நயந்து
விடையுகந் தேறுதிர் வெள்ளடை மேவிய
சடையமர் வெண்பிறைச் சங்கர னீரே **#1333**

திருக்குருகாவூரில் வெள்ளடை என்னும் திருக்கோயிலில் விரும்பி

வீற்றிருந்தருளுகின்ற, சடையில் வெண்ணிறப் பிறைச்சந்திரனை அணிந்துள்ள சங்கரராகிய நீர் பகைவருடைய தொன்மையான மூன்று நகரங்களையும் எரித்தீர். அன்னம் போன்ற நடையையுடைய உமாதேவியை ஒரு பாகத்தில் மகிழ்ந்து வைத்துள்ளீர். எருதின்மீது விருப்பத்துடன் ஏறுகின்றீர்.

திருக்குருகாவூர்

வளங்கிளர் கங்கை மடவர லோடு
களம்பட ஆடுதிர் காடரங் காக
விளங்கிய தண்பொழில் வெள்ளடை மேவிய
இளம்பிறை சேர்சடை யெம்பெரு மானே **#1334**

குளிர்ச்சி பொருந்திய சோலைகள் நிறைந்த திருக்குருகாவூரில் வெள்ளடை என்னும் திருக்கோயிலில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, இளம்பிறைச்சந்திரனை அணிந்த சடையையுடைய எம் பெருமானே! வளங்களைப் பெருக்குகின்ற கங்கையாளொடு சுடுகாட்டு அரங்கமே இடமாகக் கொண்டு ஆடுகின்றீர்.

திருக்குருகாவூர்

சுரிகுழ னல்ல துடியிடை யோடு
பொரிபுல்கு காட்டிடை யாடுதிர் பொங்க
விரிதரு பைம்பொழில் வெள்ளடை மேவிய
எரிமழு வாட்படை யெந்தை பிரானே **#1335**

விரிந்த பசுமையான சோலைகள் நிறைந்த திருக் குருகாவூரில் வெள்ளடை என்னும் கோயிலில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, நெருப்பு, மழு, வாள் முதலிய படைகளை ஏந்தியுள்ள எம் தந்தையாகிய பெருமானே! நீர் அழகிய சுரிந்த கூந்தலையும், உடுக்கை போன்ற இடையினையுமுடைய உமாதேவியோடு, வெப்பத்தின் மிகுதியால் மரங்கள் முதலியவை பொரிகின்ற சுடுகாட்டில், உலகுமீள உளதாக, ஆடுகின்றீர்.

திருக்குருகாவூர்

காவியங் கண்மட வாளொடுங் காட்டிடைத்
தீயக லேந்திநின் றாடுதிர் தேன்மலர்
மேவிய தண்பொழில் வெள்ளடை மேவிய
ஆவினி லைந்துகொண்டாட்டுகந் தீரே **#1336**

தேன் நிறைந்த மலர்கள் பொருந்திய குளிர்ச்சிமிக்க திருக்குருகாவூரில் வெள்ளடை என்னும் திருக்கோயிலில் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற, பசுவிலிருந்து பெறப்படும் பஞ்சகவ்வியங்களால் அபிடேகம்

செய்யப்படுதலை விரும்பும் பெருமானே! குவளை மலர் போன்ற அழகிய கண்களையுடைய உமாதேவியோடு சுடு காட்டில் கையில் தீ ஏந்தி நின்று ஆடுகின்றீர்.

திருநல்லூர்ப்பெருமணம்

திருநல்லூர்ப்பெருமணம்

திருநல்லூர்ப்பெருமணம்,
பண் - அந்தாளிக்குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது,
சுவாமிபெயர் : சிவலோகத்தியாகேசர்.
தேவியார் : நங்கையுமைநாயகியம்மை.

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே #1337

அடியார்கள் சூழ, திருநல்லூர் என்னும் திருத்தலத்தில் பெருமணம் என்னும் கோயிலில் வீற்றிருந்தருளும் சிவபெருமானே! மிக்க மணமாகிய பொருள்கள் பொருந்திய பாடல்களாகிய மலர்களைச் சூடுதலை உடையீர். அம்மிக்கல் மிதித்துச் செய்யும் சடங்குகள் பலவுடைய திருமணம் எனக்கு வேண்டா. கழுமலம் முதலாகிய பல திருத்தலங்களிலும் சென்று நான் பாடிய திருப்பதிகங்கள் வாயிலாக என்னுடைய விருப்பம் மெய்யாகத் தெரியவில்லையா? என இறைவனிடம் வினவுகின்றார்.

திருநல்லூர்ப்பெருமணம்

தருமண லோதஞ்சேர் தண்கட னித்திலம்
பருமண லாக்கொண்டு பாவைநல் லார்கள்
வருமணங் கூட்டி மணஞ்செயு நல்லூர்ப்
பெருமணத் தான்பெண்ணோர் பாகங் [கொண்டானே #1338

கடலலைகள் அழித்துவிடாமல் வைத்துள்ள இயற்கைக் கரையிலுள்ள மணலோடு, பதுமை போன்ற சிறுமியர் அலைகள் வீசிக்குவித்த, குளிர்ச்சி பொருந்திய கடலில் விளைந்த முத்துக்களையே, பருத்த மணலாகக் கொண்டு சிற்றில் இழைத்து, சிறுசோறிட்டு, நறுமணம் கமழும் மலர்களை வைத்துக் கொண்டு, பாவைகட்கு மணம் செய்து விளையாடுகினற சிறப்பினையுடையது நல்லூர்ப் பெருமணம். அப்பெருமணத் திருக்கோயிலின்கண் வீற்றிருந்தருளும் சிவபெருமான் தன்னிற் பிரிவில்லா உமாதேவியை இடப்பாகமாகக் கொண்டருளினன்.

திருநல்லூர்ப்பெருமணம்

அன்புறு சிந்தைய ராகி யடியவர்

நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்
றின்புறு மெந்தை யிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே #1339
மெய்யடியார்கள் சிவபெருமானிடம் கொண்ட பத்தி காரணமாக, அனைத்துயிர்களிடத்தும் நீங்காத அன்பு நிறைந்த சிந்தையராவர். அவர்கள் சிவத்தை வழிபடுகின்ற நற்றவத்தைச் செய்வர். அவர்கள் திருநல்லூர் என்னும் திருத்தலத்தில், பெருமணம் என்னும் கோயிலில் விரும்பி வீற்றிந்தருளுகின்ற, அனைத்துயிர்கட்கும் இன்பம் தருகின்ற எம் தந்தையாகிய சிவபெருமானின் திருவடிகளைப் போற்றி வணங்குவார்கள். அத்தகைய வழிபாடு செய்பவர்கட்கு எக்காலத்திலும் துன்பம் இல்லை. அவர்கள் நாளும் நல்லின்பத்தை மிகுவிக்கும் சிவத் தொண்டு செய்வர்.

<u>திருநல்லூர்ப்பெருமணம்</u>

வல்லியந் தோலுடை யார்ப்பது போர்ப்பது
கொல்லியல் வேழத் துரிவிரி கோவணம்
நல்லிய லார்தொழு நல்லூர்ப் பெருமணம்
புல்கிய வாழ்க்கையெம் புண்ணிய னார்க்கே #1340
சிவபெருமான் வலிமையான புலியின் தோலை ஆடையாக உடுத்துள்ளவர். கொல்லும் தன்மையுடைய யானையின் தோலைப் போர்வையாகப் போர்த்தவர். விரிந்த கோவணத்தை அணிந்தவர். அப்பெருமான் சிவநெறி ஒழுகும் நற்பண்பாளர்களால் தொழப்படும் வண்ணம் திருநல்லூர் என்னும் திருத்தலத்தில் பெருமணம் என்னும் திருக்கோயிலில் விரும்பி வீற்றிருந்தருளும் வாழ்க்கையையுடையவர். இதுவே புண்ணியரான சிவபெருமானின் இயல்பாகும்.

<u>திருநல்லூர்ப்பெருமணம்</u>

ஏறுகந் தீரிடு காட்டெரி யாடிவெண்
ணீறுகந் தீர்நிரை யார்விரி தேன்கொன்றை
நாறுகந் தீர்திரு நல்லூர்ப் பெருமணம்
வேறுகந் தீருமை கூறுகந் தீரே #1341
இறைவனே! நீவிர் இடபத்தை விரும்பி வாகனமாகக் கொண்டுள்ளீர். நெருப்பேந்திச் சுடுகாட்டில் ஆடுகின்றீர். திருவெண்ணீற்றினை விரும்பிப் பூசியுள்ளீர். வரிசையாக அழகுடன் விளங்கும் தேன் துளித்து நறுமணம் கமழும் கொன்றை மாலையை அணிந்துள்ளீர். செல்வம் பெருகும் திருநல்லூர் என்னும் திருத்தலத்தில், பெருமணம் என்னும் திருக்கோயிலில் விரும்பி வீற்றிருந்தருளும் நீர் உமாதேவியை ஒரு கூறாகக் கொண்டு உகந்துள்ளீர்.

திருநல்லூர்ப்பெருமணம்

சிட்டப்பட் டார்க்கெள யான்செங்கண் வேட்டுவப்
பட்டங்கட் டுஞ்சென்னி யான்பதி யாவது
நட்டக்கொட் டாட்டறா நல்லூர்ப் பெருமணத்
திட்டப்பட் டாலொத்தி ராலெம் பிரானிரே **#1342**

சிவபெருமான் நியமம் தவறாது வழிபடுபவர்கட்கு எளியர். வேடுவக் கோலத்தில் நெற்றிப்பட்டம் கட்டிய தலையினை உடையவர். அவர் விரும்பி வீற்றிருந்தருளும் இடமாவது நாட்டியங்களின் கொட்டு வாத்திய ஓசையும், திருவிழா முதலிய கொண்டாட்டங்களின் ஓசையும் ஒழியாத, திருநல்லூர் என்னும் திருத்தலத்தில் பெருமணம் என்னும் கோயிலாகும். எம் தலைவராகிய நீர் ஏனைய தலங்களிலும் விரும்பி வீற்றிருக்கின்றீர்.

திருநல்லூர்ப்பெருமணம்

மேகத்த கண்டன்எண் தோளன்வெண் ணீற்றுமை
பாகத்தன் பாய்புலித் தோலொடு பந்தித்த
நாகத்தன் நல்லூர்ப் பெருமணத் தான்நல்ல
போகத்தன் யோகத்தை யேபுரிந் தானே **#1343**

இறைவன் மழைமேகம் போன்ற இருண்ட திருநீல கண்டத்தன். எட்டுத் திருத்தோள்களை உடையவன். வெண்ணீற்று உமையாள் என்னும் திருநாமம் தாங்கிய அம்பிகையை ஒரு பாகமாகக் கொண்டவன். பதுங்கியிருந்து பாயும் தன்மையுடைய புலியினை உரித்து அதன் தோலினை ஆடையாக உடுத்தவன். அதன்மேல் பாம்பைக் கச்சாக இறுகக் கட்டியவன். அப்பெருமான் திருநல்லூர் என்னும் திருத் தலத்தில் பெருமணம் என்னும் திருக்கோயிலில், உயிர்கள் போகம் துய்க்கும் பொருட்டுப் போகவடிவில் விளங்குகின்றான். மேலும் மன்னுயிர்கள் நற்றவம் புரிந்து திருவடிப் பேறெய்தும் பொருட்டு யோகத்தையே புரிந்தருள்வன்.

திருநல்லூர்ப்பெருமணம்

தக்கிருந் தீரன்று தாளா லரக்கனை
உக்கிருந் தொல்க வுயர்வரைக் கீழிட்டு
நக்கிருந் தீரின்று நல்லூர்ப் பெருமணம்
புக்கிருந் தீரெமைப் போக்கரு ளீரே **#1344**

இறைவனே! யாண்டும் உம்முடைய சிறந்த முழுமுதல் தன்மைக்கேற்ப வீற்றிருந்தருளுகின்றீர். முன்னாளில் இலங்கையை ஆண்ட அசுரனான இராவணன் கயிலையைப் பெயர்த்தெடுக்க முயன்றபோது, உயர்ந்த

அம்மலையின்கீழ் அவன் உடல் குழைந்து நொறுங்கும்படி சிரித்துக் கொண்டிருந்நீர். இந்நாளில் திருமணநல்லூர் என்னும் திருத்தலத்தில் பெருமணம் என்னும் திருக்கோயிலில் வீற்றிருந்து அருள்புரிகின்றீர். அடியார்களாகிய நாங்கள் உம் திருவடிகளைச் சேர்வதற்கு அருள்புரிவீராக!.

திருநல்லூர்ப்பெருமணம்

ஏலுந்தண் டாமரை யானு மியல்புடை
மாலுந்தம் மாண்பறி கின்றிலர் மாமறை
நாலுந்தம் பாட்டென்பர் நல்லூர்ப் பெருமணம்
போலுந்தங் கோயில் புரிசடை யார்க்கே **#1345**

குளிர்ச்சி பொருந்திய செந்தாமரையில் வீற்றிருக்கும் பிரமனும், திருமாலும் சிவபெருமானுடைய மாண்பை ஒரு சிறிதும் அறிந்திலர். இறைவனின் அடிமுடியைத் தேட முயன்றும் காண்கிலர். நால்வேதங்களை அருளிச் செய்த சிவபெருமானே அவ்வேதங்களின் உட்பொருளாய் விளங்குகின்றார் என நல்லோர் நுவல்வர். அப்பெருமான் திருநல்லூர் என்னும் திருத்தலத்தில், பெருமணம் என்னும் திருக்கோயிலில் நிலையாக வீற்றிருந்தருளுகின்றார்.

திருநல்லூர்ப்பெருமணம்

ஆத ரமணொடு சாக்கியர் தாஞ்சொல்லும்
பேதைமை கேட்டுப் பிணக்குறு வீர்வம்மின்
நாதனை நல்லூர்ப் பெருமண மேவிய
வேதன தாள்தொழ வீடௌ தாமே **#1346**

இறைவனை உணரும் அறிவில்லாத சமணர்கள், பௌத்தர்கள் ஆகியோர்கள் கூறும் புன்னெறியைக் கேட்டு, நன்னெறியாம் சித்தாந்தச் சிவநெறிக்கண் இணங்காது பிணங்கி நிற்கும். பெற்றியீர்! வாருங்கள். அனைத்துயிர்க்கும் தலைவன் சிவபெருமான். திருநல்லூர் என்னும் திருத்தலத்தில் பெருமணம் என்னும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்ற வேதங்களின் பொருளான சிவபெருமானின் திருவடிகளை வழிபடுங்கள். அவ்வாறு வழிபட்டால் வீடுபேறு எளிதில் கிட்டும்.

திருநல்லூர்ப்பெருமணம்

நறும்பொழிற் காழியுண் ஞானசம் பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
உறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்
கறும்பழி பாவ மவல மிலரே **#1347**

நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்த சீகாழியில் அவதரித்த திருஞானசம்பந்தன், பெறுதற்கரிய முத்திப்பேற்றை அருளும், திருமணநல்லூர் என்னும் திருத்தலத்தில், பெருமணம் என்னும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளும் சிவபெருமானை, அவர் திருவடியில் இரண்டறக் கலக்கும் கருத்தோடு பாடிய சிறந்த பயனைத் தரவல்ல இத்தமிழ்த் திருப்பதிகத்தைப் பக்தியுடன் ஓதவல்லவர்கட்குப் பழியும், பாவமும் அற்றொழியும். பிறப்பு இறப்புக்களாகிய துன்பம் நீங்கப் பேரின்பம் வாய்க்கும்.

மூன்றாம் திருமுறை - திருக்கடைக்காப்பு முற்றும்



பன்னிருதிருமுறை

திருநாவுக்கரசர்

நான்காம் திருமுறை - தேவாரம்

தொகுப்பு: சங்கர்

சித்திரை 2017 வெளியீடு

பன்னிருதிருமுறை

நான்காம் திருமுறை - தேவாரம்

திருநாவுக்கரசர் அருளியது

1070 பாடல்கள் கொண்ட 114 பதிகங்கள்



பன்னிருதிருமுறை

திருநாவுக்கரசர்

நான்காம் திருமுறை - தேவாரம்

தொகுப்பு: சங்கர்

சித்திரை **2017** வெளியீடு

திருவதிகைவீரட்டானம்

திருஅதிகைவீரட்டானம்

திருவதிகைவீரட்டானம், பண் - கொல்லி,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : திருவதிகைநாயகி. இப்பதிகம் சூலைநோய்தீர
ஓதியருளியது.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. #1 ★★★★★

கெடில ஆற்றின் வடகரையில்விளங்கும் திருவதிகை என்னும் வீரட்டானத் திருப்பதியில் உகந்தெழுந்தருளியிருக்கும் தலைவனே! யான் இப்பிறப்பில் என் அறிவு அறியப் பல கொடுஞ் செயல்களைச் செய்தேனாக எனக்குத் தோன்றவில்லை. அவ்வாறாகச் சூலைநோய், யாருக்கும் நோய்முதல் புலப்படாத வகையில் என் வயிற்றினுள் டலாடு ஏனைய உள் உறுப்புக்களைக் கட்டிச் செயற்படாமல் மடக்குதலால் அடியேன் அவ்வலியைப் பொறுக்க இயலாதேனாக உள்ளேன். கூற்றுவனைப் போல அந்நோய் அடியேனைத் துன்புறுத்தும் செயலை நீக்கும் ஆற்றலுடையீர். அந்நோயை விலக்கினால் எப்பொழுதும் காளை மீது ஊரும் உம் அடிக்கண் நீங்காமல் மனத்தால் துணிவும் தலையால் தணிவும் மொழியால் பணிவும் தோன்ற வணங்குவேன். ஏற்றாய் அடிக்கு + ஏ. ஏ - தேற்றம்.

திருஅதிகைவீரட்டானம்

நெஞ்சம்உமக் கேயிட மாகவைத்தேன
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்இது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகிவந் தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்தும்இடர்
அஞ்சேலும்என் னீர்அதி கைக்கெடில

வீரட்டா னத்துறை அம்மானே. #2

அதிகைக் கெடில வீரட்டானத்துறை அம்மானே! என் நெஞ்சத்தை உம்மிடத்திலேயே உறைவிடம் பெறுமாறு பண்படுத்திவிட்டேன். இனி ஒரு பொழுதும் உம்மை நினையாமல் இருக்கமாட்டேன். இச்சூலைநோயைப் போலக் காரணத்தைப் புலப்படுத்தாமல் காரியத்தில் செயற்படும் கொடுநோயை அடியேன் இதுகாறும் அனுபவித்தறியேன். வயிற்றினோடு ஏனைய உள்ளுறுப்புக்களைக் கட்டி அவை செயற்படாமல் மடக்கியிடுவதற்கு விடம்போல வந்து என்னைத் துன்புறுத்தும் நோயை விரட்டியோ செயற்பாடு இல்லாமல் மறைத்தோ என்னைக் காப்பீராக. அஞ்சேல் என்று எனக்கு அருளுவீராக.

திருஅதிகைவீரட்டானம்

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேஉமக் காட்செய்துவாழலுற்றாற்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
பெற்றம்ஏற்றுகந் தீர்சுற்றும் வெண்டலைகொண்
டணிந்தீர்அடி கேள்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. #3

அதிகை... அம்மானே! உலகப்பற்றுக்களோடு இணைந்து இறந்தவர்களை எரித்த சாம்பலை உடலில் பூசிக் கொள்ள வல்ல பெருமானே! காளையை இவர்தலை விரும்புகின்றவரே! வெண்தலைமாலை அணிகின்றவரே! உம்மை வழிபடுபவர்களுடைய பாவங்களைப்போக்க வல்லீரே! இறந்துபட்டவருடைய மண்டையோட்டில் பிச்சை ஏற்றுத்திரிபவரே! உம்மையே பரம்பொருளாகத் துணிந்து உமக்கு அடிமை செய்து அடியேன் வாழக்கருதுதலின், துன்புறுத்தும் சூலைநோயைப் போக்கி அருளுவீராக.

திருஅதிகைவீரட்டானம்

முன்னம்அடி யேன்அறி யாமையினான்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னைஅடி யேன்உமக் காளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னைஅடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர்தங்கடன் ஆவதுதான்
அன்னநடை யார்அதி கைக்கெடில

வீரட்டா னத்துறை அம்மானே. #4

அன்னம்போன்ற நடை அழகை உடைய இளமகளிர் நிறைந்த அதிகை... எம்மானே! இதற்குமுன் அடியேன் உம்மைப் பரம்பொருளாக அறிந்து உம் தொண்டில் ஈடுபடாமையால் தேவரீர் அடியேனை வெகுண்டமையால், சூலைநோய் என்னை வருத்திச் செயற்பட முடியாமல் செய்யவே, அதன் நலிவுக்கு ஆளாகிய பின்னர் அடியேன் உமக்கு அடிமையாகி விட்டேன். அடியேனை வருத்தும் சூலை நோயைத் தவிர்த்து அருளவேண்டும். மேம்பட்டவர்களது கடமை தம்மைச் சரணமாக அடைந்தவர்களுடைய வினையைப் போக்குவது அன்றோ!

திருஅதிகைவீரட்டானம்

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புனல் ஆர்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. #5

ஆரவாரித்துப் பெருகும் கெடிலக் கரையிலமைந்த அதிகை வீரட்டானப்பெருமானே! குளத்தில் பிறர் இறங்காமல் பாதுகாத்துச் செயற்படுபவர் தம் காவலில் சோர்வு பட்டமையால், கரையில் நின்றவர்கள் இக்குளத்தின் ஆழத்தைக் கண்டு அனுபவிப்பாயாக என்று ஆழமான குளத்தில்விழுமாறு தள்ளிவிட, அக்குளத்தில் ஆழத்தில் நிலையாக நீந்திக் கொண்டிருக்கும் வழிமுறை ஒன்றும் அறியாதேனாகிய அடியேன், சூலைநோய் வயிற்றோடு ஏனையஉள் உறுப்புக்களைக் கட்டி என்னைச் செயற்படமுடியேனாகச் செய்ய, பெருமானாகிய நீயே எல்லாவினைகளையும் போக்கி அருளுவாய் என்றவார்த்தையை இதற்குமுன் கேட்டு அறியாதேனாய் நாளை வீணாக்கினேன்.

திருஅதிகைவீரட்டானம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம்என் னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்

அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. #6

அதிகை... அம்மானே! இறந்தவர் மண்டையோட்டில் பிச்சை எடுத்துத் திரியும் பெருமானே! என் உடலின் உள்ளாய் வருத்தும் சூலைநோயைப் போக்கி அருளுவாயாக. இனி அபிடேகத்தீர்த்தத்தையும் பூவையும் உனக்கு சமர்ப்பிப்பதனை மறவேன். தமிழோடு இசைப்பாடலை மறவேன். இன்புறும் பொழுதிலும் துன்புறும் பொழுதிலும் உன்னை மறவேன். உன் திருநாமத்தை என் நாவினால் ஒலிப்பதனை மறவேனாய் இனி இருக்கிறேன். சலம் பூவொடு தூவ - பாடம்.

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர்தலை காவல் இலாமையினால்
வயந்தேஉமக் காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றின்அகம்படியே
பறித்துப்புரட் டிஅறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறைஅம்மானே. #7

அதிகை... அம்மானே! அடியேனுக்குத் தலைவராக இருந்து அடியேனை நெறி பிறழாமல் காப்பவர் ஒருவரும் நும்மையல்லாது இல்லாத காரணத்தினால் மனையிலிருந்து வாழும் இல்லற வாழ்க்கையிலும் அதற்கு வேண்டியதாய் நன்னெறியில் ஈட்டப்படும் பொருள் தேடும் செயலிலும் நீங்கினேன். என் வயிற்றினுள்ளே யான் அஞ்சுமாறு குடலைப் பறித்தெடுத்துப்புரட்டி அறுத்துச் சூலை நோய் உள் உறுப்புக்களை இழுக்க, அடியேன் தாங்க முடியாதவனாகி விட்டேன். இனி, உமக்குத் தொண்டனாகி நான் வாழக்கருதினால், அதற்கு ஏற்ப என்னைத் துன்புறுத்தும் சூலைநோயைப் போக்கி அருளுவீராக.

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மனம் ஒன்றும் இலாமையினால்
சலித்தால்ஒரு வர்துணை யாருமில்லைச்
சங்கவெண்குழைக் காதுடை யெம்பெருமான்
கலித்தேயென் வயிற்றின் அகம்படியே
கலக்கிமலக் கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. #8

அதிகை ... அம்மானே! வெண்ணிறச் சங்கினால் ஆகிய குழை என்னும் காதணியை அணிந்துள்ள பெருமானே! அடியேன் மனத்தில் வஞ்சனை ஒன்றும் இல்லாமையினால் மனையின்கண் மகிழ்ந்துவாழும் வாழ்க்கையைக் காய்ந்தேன். சூலைநோய் அடியேன் வயிற்றகத்தே செருக்கிக் கலக்கி வயிற்றின் பகுதிகளை மயக்கிக் கைக்கொண்டு துன்புறுத்துதலால் அடியேன் உயிர் வாழ்தலை வெறுத்து விட்டேன். வருந்தும்போது அடியேனுக்குத் துணையாவார் உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை. அடியேனை நோயினின்றும் காத்தருள்க.

திருஅதிகைவீரட்டானம்

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்
துன்பேகவ லைபிணி யென்றிவற்றை
நணுகாமல் துரந்து கரந்தும்இடீர்
என்போலிகள் உம்மை யினித்தெளயார்
அடியார்படு வதிது வேயாகில்
அன்பேஅமை யும்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. **#9**

அதிகை ... அம்மானே! பொன்னார் மேனியினீர்! முறுக்குண்ட செஞ்சடையீர்! கலைகுறைந்த பிறையை உடையீர்! துன்பம் கவலை பிணி என்னும் இவை அடியேனை அணுகாமல் அவற்றை விரட்டுதலையும் மறைத்தலையும் செய்யீராயின் அடியேனைப் போன்றவர்கள் இப்பொழுது உங்களைத் துன்பம் துடைக்கும் பெருமானாராகத் தெளயமாட்டார்கள். எனினும், உங்கள் அன்பே எங்கள் துயர்துடைத்து எங்களை அமைவுறச்செய்யும்.

திருஅதிகைவீரட்டானம்

போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்
புறங்காடரங்காநட மாடவல்லாய்
ஆர்த்தான்அரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட் டருள்செய்த அதுகருதாய்
வேர்த்தும்புரண்டும்விழுந் தும்எழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழ்அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. **#10**

ஆரவாரித்து நிரம்பும் நீரைஉடைய கெடிலக் கரையிலமைந்த திருவதிகை வீரத்தானத்து உகந்தருளி உறையும் அம்மானே! பண்டு ஓர் யானையின் உதிரப் பசுமை கெடாத தோலைப் போர்த்தவனே! சுடு

காட்டையே கூத்தாடும் அரங்காகக் கொண்டு கூத்து நிகழ்த்துதலில் வல்லவனே! ஆரவாரித்துக் கயிலைமலையைப் பெயர்க்க முற்பட்ட இராவணனை அப்பெரியமலையின் கீழ் நசுக்கிப்பின் அருள் செய்த அதனை நினைத்துப்பார்த்து, வியர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தும் அடியேன்சூலை நோயினால் அநுபவிக்கும் துன்பங்களை நீக்கி அருளுவாயாக.

திருக்கெடிலவடவீரட்டானம்

திருஅதிகைவீரட்டானம்

திருக்கெடிலவடவீரட்டானம்,
பண் - காந்தாரம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : திருவதிகைநாயகி. இப்பதிகம் சமணர்களேவிய யானை அஞ்சும்படி ஓதி அருளியது.

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ்சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண உரிவை யுடையும் வளரும்பவள நிறமும்
அண்ண லரண்முரண் ஏறும் அகலம்வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலு முடையாரொருவர் தமர்நாம்
அஞ்சுவதியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. **#11** ★★★★★

பொடியாக அமைந்த திருநீறாகிய வெள்ளிய சந்தனச் சேறும் முடிமணியாகிய ஒளி வீசும் பிறையும், அழகிய புலித்தோல் ஆடையும், வளர்கின்ற பவளக்கொடி போன்ற நிறமும், தலைமை பொருந்திய பாதுகாவலாக அமைந்த, பகைவரோடு மாறுபடும் காளையும், மார்பில் பரவியிருக்கின்ற பாம்புகளும், திண்ணிய கரையைக் கொண்ட பெரிய நீர்ப்பரப்பினதாகிய கெடிலயாற்று அபிடேகத்திற்குரிய தீர்த்தமும் உடைய ஒப்பற்ற அதிகை வீரட்டருடைய அடியேன் யாம். ஆதலின் எங்களுக்கு அஞ்சுதற்குரிய பொருள் யாதும் இப்பொழுது இல்லை. இனித் தோன்றப்போவதும் இல்லை.

திருஅதிகைவீரட்டானம்

பூண்டதொர் கேழ லெயிறும்பொன்றிக ழாமை புரள
நீண்டதிண் டோள்வலஞ் சூழ்ந்துநிலாக்கதிர் போல வெண்ணூலும்
காண்டகு புள்ளின் சிறகுங்கலந்த கட்டங்கக் கொடியும்
ஈண்டு கெடிலப் புனலு முடையாரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லைஅஞ்ச வருவது மில்லை. **#12**

அணிகலனாக அணிந்த மகாவராகத்தின் கொம்பும், நீண்ட திண்ணிய இடத்தோள் மீது வலப்புறமாகச் சுற்றி, பொன்போல் விளங்கும், ஆமை ஓட்டின் மீது புரண்டவாறு, நிலாப் போல் ஒளிவீசும் வெள்ளிய பூணூலும், காண்டற்கினிய கொக்கின் இறகும், தம்மோடு பொருந்திய மழுவின் வடிவம் எழுதப் பெற்ற கொடியும், பெருகிவரும் கெடிலயாற்றுத் தீர்த்தமும் உடைய அதிகை வீரட்டரின் அடியேம் யாங்கள் ஆதலின் அஞ்சுவது யாதொன்றுமில்லை. அஞ்சவருவதும் இல்லை

திருஅதிகைவீரட்டானம்

ஒத்த வடத்திள நாக முருத்திர பட்ட மிரண்டும்
முத்து வடக்கண் டிகையு முளைத்தெழு மூவிலை வேலும்
சித்த வடமு மதிகைச் சேணுயர் வீரட்டஞ் சூழ்ந்து
தத்துங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. **#13**

தோளில் மாலையாக அணிந்த இளைய பாம்பும், இரண்டாகிய தோள் பட்டிகையும், பலவடங்களாக அமைந்த முத்து மாலையினை இணைந்த உருத்திராக்கக் கண்டிகையும், மூன்று இலைவடிவாக அமைந்த முத்தலைச் சூலமும், சித்தவடம் என்ற பெயரிய சைவமடம் ஒன்றுடைய திருத்தலமும், மதில்கள் உயரமாக உடைய அதிகை நகரை ஒருபுறம் சூழ்ந்து இயங்கும் விரைந்து செல்லும் கெடில நதித் தீர்த்தமும் உடைய பெருமானுடைய அடியேம் யாங்கள் ஆதலின் அஞ்சுவது யாதொன்றுமில்லை. அஞ்ச வருவதுமில்லை.

திருஅதிகைவீரட்டானம்

மடமான் மறிபொற் கலையு மழுப்பாம் பொருகையில் வீணை
குடமால் வரையதிண் டோளுங் குனிசிலைக் கூத்தின் பயில்வும்
இடமால் தழுவிய பாக மிருநில னேற்ற சுவடும்
தடமார் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. **#14**

ஒருகையில் மான்குட்டி, ஒருகையில் மான் தோல் ஆடை, ஒருகையில் மழுப்படை, மற்றொரு கையில் பாம்பு, மற்றொருகையில் வீணை இவற்றை உடையவராய், மேற்றிசைப் பெருமலையை ஒத்த திண்ணிய தோள்களும், வில்போல் வளைந்து ஆடுகின்ற கூத்தின் பயிற்சியும், பெரிய உலகங்களைத் தானமாக ஏற்ற சுவடுடைய திருமால் தழுவிப் பொருந்தியிருக்கும், இடப்பாகமும், நீர்த்துறைகள் அமைந்த கெடில நதித் தீர்த்தமும் உடைய அதிகை வீரட்டரின் அடியேம் யாங்கள். ஆதலால் அஞ்சுவது யாதொன்றும் இல்லை. அஞ்ச வருவதும் இல்லை.

திருஅதிகைவீரட்டானம்

பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. **#15**

பலப்பலவிருப்பங்களை உடையவராய் அவற்றைச்

செயற்படுத்தத்துடித்து விரையும் மக்களின் உள்ளத்தில் கலந்து பிறழச் செய்யும் கணபதியாகிய ஆண்யானையையும். இருளைப்போக்கும் வலிமை மிக்க சூரியன் சந்திரன் ஆகிய இரண்டு ஒளிகளையும், மேம்பட்ட கயிலை மலையையும், நன்மைகள் நிறைந்த கெடில நதித் தீர்த்தத்தையும் உடைய அதிகை வீரட்டரின் அடியேம் யாங்கள் ஆதலின் அஞ்சுவது யாதொன்றும் இல்லை. அஞ்ச வருவதும் இல்லை.

திருஅதிகைவீரட்டானம்

கரந்தன கொள்ளி விளக்குங் கறங்கு துடியின் முழக்கும்
பரந்த பதினெண் கணமும் பயின்றறி யாதன பாட்டும்
அரங்கிடை நூலறி வாள ரறியப் படாததொர் கூத்தும்
நிரந்த கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. **#16**

உயிர்கள் அறியாதவாறு மறைந்து நின்று அடியார்களுக்கு ஒளி வீசும் திருவருளாகிய விளக்கின் ஒளியும், சுழலுகின்ற துடி என்ற இசைக் கருவியின் ஓசையும், எங்கும்பரவிய தேவ கணத்தர் பதினெண்மரும் வேற்றிடங்களில் பழகி அறியாதன வாகிய பாட்டின் ஒலியும், கூத்துவல்லார் கூத்தாடும் அரங்கங்களில் கண்டு அறியப்படாததாகிய கூத்து நிகழ்ச்சியும், முறையாக ஓடிவரும் கெடில நதித் தீர்த்தத்தின் புனிதமும் உடைய அதிகை வீரட்டரின் அடியேம் யாங்கள் ஆதலின் அஞ்சுவது யாதொன்றும் இல்லை. அஞ்ச வருவதும் இல்லை.

திருஅதிகைவீரட்டானம்

கொலைவரி வேங்கை யதளுங் குவவோ டிலங்குபொற் றோடும்
விலைபெறு சங்கக் குழையும் விலையில் கபாலக் கலனும்
மலைமகள் கைக்கொண்ட மார்பும் மணியார்ந் திலங்கு மிடறும்
உலவு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. **#17**

தம்மால் கொல்லப்பட்ட கோடுகளை உடைய புலித்தோலும், திரட்சியோடு விளங்கும் பொலிவுடைய தோடும், பெருவிலையுடைய சங்கினாலாகிய காதணியும், விலையே இல்லாத மண்டையோடாகிய உண்கலனும், பார்வதி தங்குமிடமாகக்கொண்ட மார்பும், நீலமணியின் நிறங்கொண்டு விளங்கும் கழுத்தும், ஒழுகுகின்ற கெடில நதித் தீர்த்தமும் உடைய அதிகை வீரட்டரின் அடியேன் யாங்கள். ஆதலால் அஞ்சுவது யாதொன்றும் இல்லை. அஞ்ச வருவதும் இல்லை

திருஅதிகைவீரட்டானம்

ஆடல் புரிந்த நிலையும் அரையி லசைத்த அரவும்

பாடல் பயின்றபல் பூதம் பல்லா யிரங்கொள் கருவி
நாடற் கரியதொர் கூத்தும் நன்குயர் வீரட்டஞ் சூழ்ந்து.
ஓடுங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. **#18**

கூத்தாடுதலை விரும்பிச் செய்த நிலையும், இடுப்பில் இறுக்கிக் கட்டிய பாம்பும், இசைக் கருவிகளைக் கைகளில் கொண்டு, பல ஆயிரக்கணக்கில் சூழ்ந்த பாடல்களில் பழகிய பூதங்கள் பலவும், ஆராய்ந்து, அறியமுடியாத கூத்தும், மிக உயர்ந்த வீரட்டக் கோயிலை ஒரு பக்கத்தில் சுற்றி ஓடும் கெடில நதித் தீர்த்தமும் உடைய அதிகை வீரட்டரின் அடியேம் யாங்கள். ஆதலில் அஞ்சுவது யாதொன்றும் இல்லை. அஞ்ச வருவதும் இல்லை.

திருஅதிகைவீரட்டானம்

சூழு மரவத் துகிலுந் துகில்கிழி கோவணக் கீளும்
யாழின் மொழியவ ளஞ்ச அஞ்சா தருவரை போன்ற
வேழ முரித்த நிலையும் விரிபொழில் வீரட்டஞ் சூழ்ந்து
தாழுங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. **#19**

பாம்பினால் சுற்றப்பட்ட ஆடையும், துணியிலிருந்து கிழித்தெடுக்கப்பட்ட அரைஞாணோடு கூடிய கோவணமும், யாழ் ஒலி போன்ற இனிய குரலை உடைய பார்வதி அஞ்சுமாறு அச்சமின்றிப் பெரிய மலை போன்று வந்த வேழத்தின் தோலை உரித்த காட்சியும், சோலைகள் மிகுந்த வீரட்டத்தை ஒருபுறம் சுற்றிப் பள்ளத்தில் பாயும் கெடில நதித் தீர்த்தமும் உடைய அதிகை வீரட்டரின் அடியேம் யாங்கள். ஆதலின் எங்களுக்கு அஞ்சுதற்குரிய பொருள் யாதும் இப்பொழுது இல்லை. இனித் தோன்றப் போவதும் இல்லை.

திருஅதிகைவீரட்டானம்

நரம்பெழு கைகள் பிடித்து நங்கைநடுங்க மலையை
உரங்களெல் லாங்கொண்டெடுத்தானொன்பது மொன்று மலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான்வளர்பொழில் வீரட்டஞ் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலு முடையாரொருவர் தமர்நாம்
அஞ்சுவதியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. **#20**

பார்வதி நடுங்கும்படியாக நரம்புகளால் செயற்படும் கைகளைக் கோத்து தன் வலிமையை எல்லாம் ஒன்று சேர்த்துக் கயிலை மலையைப் பெயர்த்த இராவணனுடைய பத்துத் தலைகளும் கதறும்படியாக முதலில் அழுத்திப் பின் அவன் பாடிய சாமகானம் கேட்டு அவனுக்கு வரங்கள் கொடுத்து அருள் செய்த பெருமானாய், வளருகின்ற சோலைகளை

உடைய வீரட்டக் கோயிலை ஒரு புறம் சுற்றி நீர் நிரம்பியுள்ள கெடில நதித் தீர்த்தத்தை உடைய அதிகை வீரட்டரின் அடியேம் யாங்கள். அஞ்சுவது யாதொன்றும் இல்லை. அஞ்ச வருவதும் இல்லை.

திருவையாறு

திருஐயாறு

திருவையாறு,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.
தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை. இது இந்தத்தலத்திலிருக்கும் ஆலயமே, கயிலாசமாகச் சுவாமி தரிசனங்கட்டளையிட்டபோது ஓதியருளிய பதிகம்.

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். **#21** ★★★★★

விரும்பத்தக்க பிறையை முடிமாலையாகச் சூடிய பெருமானைப் பார்வதியோடும் இணைத்துப் பாடியவர்களாய் அருச்சிக்கும் பூவும் அபிடேக நீரும் தலையில் தாங்கித் திருக்கோயிலை நோக்கிப் பெருமானைத் துதித்த வண்ணம் புகும் அடியவர்பின் சென்ற அடியேன். கயிலை மலைக்குச் சென்றபோது ஏற்பட்ட உறுப்பழிவின் சுவடு ஏதும் தோன்றாதவகையில் தீங்கு நீங்கிய யாக்கை கொண்டு, கயிலை மலையிலிருந்து கால்சுவடு படாமல் திருவையாற்றை அடைகின்ற பொழுதில், விருப்பத்திற்கு உரிய இளைய பெண்யானையோடு ஆண்யானை சேர்ந்து இரண்டுமாக வருவனவற்றைக் கண்டு, அவற்றை அடியேன் சத்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம், சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதனவற்றைக் கண்டவனாயினேன்.

திருஐயாறு

போழிளங் கண்ணியி னானைப் பூந்துகி லாளொடும் பாடி
வாழியம் போற்றியென் றேத்தி வட்டமிட் டாடா வருவேன்
ஆழி வலவனின் றேத்தும் ஐயா றடைகின்ற போது
கோழி பெடையொடுங் கூடிக் குளிர்ந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். **#22**

சந்திரனுடைய பிளப்பாகிய பிறையை முடிமாலையாகச் சூடிய பெருமானை, பூ வேலைகள் செய்யப்பட்ட மெல்லிய ஆடையை அணிந்த பார்வதியோடு இணைத்துப்பாடி, 'அவர்கள் திருவடி வாழ்க' எனவும், 'அவர்களுக்கு அடியேனுடைய வணக்கம்' எனவும் சுழன்று

ஆடிக்கொண்டு வரும் அடியேன் சக்கரப்படையை வலக்கையில் ஏந்தியுள்ள திருமால் நிலையாகப் புகழும் ஐயாற்றை அடையும்போது ஆண்கோழி பெண்கோழியுடன் கூட இரண்டுமாக மகிழ்வுடன் வருவனவற்றைக் கண்டேன். அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன்.

திருஜயாறு

எரிப்பிறைக் கண்ணியி னானை யேந்திழை யாளொடும் பாடி
முரித்த விலயங்க ளிட்டு முகமலர்ந் தாடா வருவேன்
அரித்தொழு கும்வெள் ளருவி ஐயா றடைகின்ற போது
வரிக்குயில் பேடையொ டாடி வைகி வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். **#23**

நிலவினை உடைய பிறைக் கண்ணியனாகிய பெருமானைச் சிறந்த அணிகளை உடைய பார்வதியோடும், இணைத்துப்பாடிக் கூத்துக்கு ஏற்ற தாளங்களை இட்டுக் கொண்டு முகமலர்ச்சியோடு ஆடிக்கொண்டு வரும் அடியேன் மணலை அரித்துக் கொண்டு வெள்ளிய அருவிபோல ஓடிவருகின்ற காவிரியின் வடகரைக்கண்ணதாகிய திருவையாற்றை அடையும் நேரத்தில் காதற் கீதங்களைப் பாடும் ஆண்குயில் பெண்குயிலோடு கலக்க. இரண்டும் ஓரிடத்தில் தங்கிப் பின் இணையாக வருவனவற்றைக் கண்டேன். அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன்.

திருஜயாறு

பிறையிளங் கண்ணியி னானைப் பெய்வளை யாளொடும் பாடித்
துறையிளம் பன்மலர் தூவித் தோளைக் குளிரத் தொழுவேன்
அறையிளம் பூங்குயி லாலும் ஐயா றடைகின்ற போது
சிறையிளம் பேடையொ டாடிச் சேவல் வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். **#24**

பிறை சூடிய பெருமானைப் பார்வதியோடும் இணைத்துப்பாடி நீர்த்துறையை அடுத்துவளர்ந்த செடி கொடிகளின் பல மலர்களையும் அடியேன் தோள்கள் மகிழுமாறு அருச்சித்து நான் தொழுவேனாய்ப் பாடும் இளங் குயில்கள் ஒலிக்கும் ஐயாறு அடைகின்றபோது, இளைய பேடையோடு கலந்து வெண் சிறகுகளை உடைய சேவல் அன்னம் இணையாக வருவனவற்றைக் கண்டேன்.அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன்.

திருஐயாறு

ஏடு மதிக்கண்ணி யானை யேந்திழை யாளொடும் பாடிக்
காடொடு நாடு மலையுங் கைதொழு தாடா வருவேன்
ஆட லமர்ந்துறை கின்ற ஐயா றடைகின்ற போது
பேடை மயிலொடுங் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். **#25**

இளைத்த பிறையைச் சூடிய பெருமானைப் பார்வதியோடும் இணைத்துப் பாடிக் காடுகளையும் நாடுகளையும் மலைகளையும் கையால் தொழுதுகொண்டு ஆடி மகிழ்ந்து வரும் அடியேன் எம்பெருமான் கூத்தாடுதலை விரும்பித் தங்கியிருக்கும் ஐயாற்றை அடையும்போது ஆண் மயில் பெடைமயிலொடும் கலக்க இரண்டும் இணையாய் ஒன்றொடொன்று கூடி வருவனவற்றைக் கண்டேன். அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன்.

திருஐயாறு

தண்மதிக் கண்ணியி னானைத் தையனல் லாளொடும் பாடி
உண்மெலி சிந்தைய னாகி யுணரா வுருகா வருவேன்
அண்ண லமர்ந்துறை கின்ற ஐயா றடைகின்ற போது
வண்ணப் பகன்றிலொ டாடி வைகி வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். **#26**

குளிர்ந்த பிறை சூடிய பெருமானைப் பார்வதியோடும் இணைத்துப் பாடி உள்ளம் குழைந்த திருவடி நினைவினேன் ஆகி உணர்ந்து உருகி வரும் அடியேன் தலைமையை உடைய எம்பெருமான் உகந்தருளியிருக்கின்ற ஐயாற்றை அடையும்போது நல்லநிறமுடைய ஆண் பகன்றில் பெண் பகன்றிலோடு இணைந்து இரண்டுமாய் வருவனவற்றைக் கண்டேன். அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன்.

திருஐயாறு

கடிமதிக் கண்ணியி னானைக் காரிகை யாளொடும் பாடி
வடிவொடு வண்ண மிரண்டும் வாய்வேண் டுவசொல்லி வாழ்வேன்
அடியிணை ஆர்க்குங் கழலான் ஐயா றடைகின்றபோது
இடிகுர லன்னதொ ரேன மிசைந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங்கண்டறி யாதன கண்டேன். **#27**

விரும்பும் பிறை சூடிய பெருமானை மெல்லியலாள் ஆகிய பார்வதியோடும் இணைத்துப்பாடி, வைகறையில் துயில் எழுந்து

எம்பெருமானுக்கு உகப்புடையனவாகப் பெறப்படும் மலர்களைக்
கொய்துவரும் அடியேன், சிறந்த அணிகலன்களையும் பொன்னையும்
மணியையும் கரையில் சேர்க்கும் காவிரியின் வடகரையில் அமைந்த
ஐயாற்றை அடையும்போது, பெரிய ஆண்மான் தன் பெடையோடு
இணைய இரண்டுமாக இணைந்து வருவனவற்றைக் கண்டேன்.
அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம்
சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன்.

திருஜயாறு

விரும்பு மதிக்கண்ணி யானை மெல்லிய லாளொடும் பாடிப்
பெரும்புலர் காலை யெழுந்து பெறுமலர் கொய்யா வருவேன்
அருங்கலம் பொன்மணி யுந்தும் ஐயா றடைகின்ற போது
கருங்கலை பேடையொ டாடிக் கலந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். **#28**

விளக்கம் பொருந்திய பிறை சூடிய பெருமானை மெல்லியலாள் ஆகிய
பார்வதியோடும்இணைத்துப்பாடி, வைகறை யில் துயிலெழுந்து
எம்பெருமானுக்கு உகப்புடையனவாகப் பெறப்படும் மலர்களைக்
கொய்துவரும் அடியேன்,சிறந்த அணிகலன்களையும் பொன்னையும்
மணியையும் கரையில் சேர்க்கும் காவிரியின் வடகரையில் அமைந்த
ஐயாற்றை அடையும்போது, பெரிய ஆண் மான் தன் பெடையோடு
இணைய இரண்டுமாக இணைந்து வருவனவற்றைக் கண்டேன்.
அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம்
சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன்.

திருஜயாறு

முற்பிறைக் கண்ணியி னானை மொய்குழ லாளொடும் பாடிப்
பற்றிக் கயிறறுக் கில்லேன் பாடியும் ஆடா வருவேன்
அற்றருள் பெற்றுநின் றாரோ டையா றடைகின்ற போது
நற்றுணைப் பேடையொ டாடி நாரை வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். **#29**

அமாவாசையை அடுத்து ஒருகலையினதாய் முற்பட்டுத்தோன்றும் பிறை
சூடிய பெருமானைச் செறிந்த கூந்தலை உடைய பார்வதியோடும்
இணைத்துப்பாடி, அவன் திருவடிகளைப் பற்றி உலகினோடு உள்ள
பாசத்தைப் போக்கிக் கொள்ள முடியாத அடியேன், பாடிக்கொண்டும்
ஆடிக்கொண்டும் வந்த எம்பெருமானுக்கே அற்றுத் தீர்ந்து அவன் அருள்
பெற்று நிலவும் அடியார்கள் உடன் ஐயாற்றை அடையும்போது, சிறந்த
துணையாகிய பெடையோடு ஆண் நாரைகள் கூட இரண்டுமாக
இணைந்து வருவனவற்றைக் கண்டேன். அவற்றை அடியேன் சக்தியும்

சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன்கண்டறியாதவற்றைக் கண்டேன்.

திருஐயாறு

திங்கள் மதிக்கண்ணி யானைத் தேமெழி யாளொடும் பாடி
எங்கருள் நல்குங்கொ லெந்தை யெனக்கினி யென்னா வருவேன்
அங்கிள மங்கைய ராடும் ஐயா றடைகின்ற போது
பைங்கிளி பேடையொ டாடிப் பறந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். **#30**

பிறை சூடிய பெருமானைத் தேன் போன்ற சொற்களை உடைய பார்வதியோடு இணைத்துப் பாடி எம்பெருமான் இப்பொழுது அடியேனுக்கு எங்கு அருள் செய்வானோ என்று திருத்தலங்களை வழிபட்டுவரும் அடியேன் இளமங்கையர்கள் கூத்து நிகழ்த்தும் ஐயாற்றை அடையும்போது பச்சைக் கிளி தன் பெடையோடு மகிழ, இரண்டுமாக இணைந்து பறந்து வருவனவற்றைக் கண்டேன். அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன்.

திருஐயாறு

வளர்மதிக் கண்ணியி னானை வார்குழ லாளொடும் பாடிக்
களவு படாததொர் காலங் காண்பான் கடைக்கணிற் கின்றேன்
அளவு படாததொ ரன்போ டையா றடைகின்ற போது
இளமண நாகு தழுவி யேறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். **#31**

வளர்தற்குரிய பிறை சூடிய பெருமானை நீண்ட கூந்தலை உடைய பார்வதியோடு இணைத்துப்பாடி, வீணாகக் கழிக்கப் படாத தொரு காலத்தைக் காணும் பொருட்டுக் கடைவாயிலின்கண் நிற்கும் அடியேன், எல்லையற்ற அன்போடு ஐயாற்றை அடையும்பொழுது இளமையை உடையதாய்க் கலத்தலுக்கு ஏற்றதாய பசுவினை, ஏறு தழுவ, இரண்டுமாய் இணைந்து வருவனவற்றைக் கண்டேன். அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன்.

திருவாரூர்

திருவாரூர்

திருவாரூர்,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

பாடிளம் பூதத்தி னானும்
பவளச்செவ் வாய்வண்ணத் தானும்
கூடிள மென்முலை யாளைக்
கூடிய கோலத்தி னானும்
ஓடிள வெண்பிறை யானும்
ஒளிதிகழ் சூலத்தி னானும்
ஆடிளம் பாம்பசைத் தானு
மாரூ ரமர்ந்தவம் மானே. #32

ஆரூரில் உகந்தருளியிருக்கும் பெருமான், பாடுகின்ற இளைய பூதங்களை உடையவனும், சிவந்தவாயினை உடையவனும், பவளம் போன்ற உடல் நிறத்தினாலும், தன் உடம்பின் பாதியாக இணைந்த பார்வதியைக் கூடியதால் ஏற்பட்ட விசேட அழகினனும், வானில் உலவக்கூடிய வெண்பிறையைச் சூடியவனும், ஒளிவிளங்கும், சூலப்படையை உடையவனும் ஆடுகின்ற இளைய பாம்பினைக் கட்டிக் கொண்டவனும் ஆவான்.

திருவாரூர்

நரியைக் குதிரைசெய் வானும்
நரகரைத் தேவுசெய் வானும்
விரதங்கொண் டாடவல் லானும்
விச்சின்றி நாறுசெய் வானும்
முரசதிர்ந் தானைமுன் னோட
முன்பணிந் தன்பர்க ளேத்த
அரவரைச் சாத்திநின் றானு
மாரூ ரமர்ந்தவம் மானே. #33

நரியைக் குதிரையாக மாற்றும் அகடித கடநா சாமர்த்தியம் உடையவனும், நரகர்களையும் தேவர்களாக்க வல்லவனும், அவரவர் மேற்கொள்ளும் விரதங்களுக்கு ஏற்ப அவரவர்க்குப் பயன் அருளுபவனும், விதை இன்றியே பயிரை உண்டாக்க வல்லவனும்,

எம்பெருமானுக்கு உரிய முரசம் தன் மீது அமர்த்தி முழங்கப்பட அதனைத் தாங்கிய ஆண் யானை முன்னே ஓட, தன் முன்னர் நின்று வணங்கி அன்பர்கள் துதிக்கப் பாம்பினை இடுப்பில் கட்டி நின்றவனும் ஆரூரை உகந்தருளியிருக்கும் எம்பெருமான் ஆவான்.

திருவாரூர்

நீறுமெய் பூசவல் லானு
நினைப்பவர் நெஞ்சத்து ளானும்
ஏறுகந் தேறவல் லானும்
எரிபுரை மேனியி னானும்
நாறு கரந்தையி னானு
நான்மறைக் கண்டத்தி னானும்
ஆறு சடைக்கரந் தானு
மாரூ ரமர்ந்தவம் மானே **#34**

திருமேனியில்திருநீற்றைப் பூசுதலில் மேம்பட்டவனும், தன்னை விருப்புற்று நினைக்கும் அடியவர் உள்ளத்து இருப்பவனும், காளையை விரும்பி இவர வல்லவனும், தீயின் நிறத்தை ஒத்த திருமேனி நிறத்தினனும், நறுமணம் கமழும் கரந்தைப் பூச்சூடியவனும், வேதம் ஓதும் குரல்வளையை உடையவனும் கங்கையைச் சடையில் மறைத்தவனும், ஆரூர் அமர்ந்த அம்மான் ஆவான்.

திருவாரூர்

கொம்புநல் வேனி லவனைக்
குழைய முறுவல்செய் தானும்
செம்புநல் கொண்டெயின் மூன்றுந்
தீயெழக் கண்சிவந் தானும்
வம்புநற் கொன்றையி னானும்
வாட்கண்ணி வாட்டம தெய்த
அம்பர வீருரி யானு
மாரூ ரமர்ந்தவம் மானே. **#35**

குயிலை ஊதுகொம்பாக உடைய சிறந்த இளவேனிற்காலத்திற்கு உரிய மன்மதன் தன் ஆற்றல் அழியுமாறு அவனைக் கண் சிவந்து அழித்தவனும், நல்ல செம்பு முதலியவற்றால் செய்யப்பட்ட திரிபுரம் தீயால் அழியுமாறு புன்முறுவல் செய்தவனும், நறுமணம் கமழும் பெரிய கொன்றை மலரை அணிந்தவனும், வாள் போன்ற கண்களை உடைய பார்வதி மனத்தில் சோர்வு கொள்ளுமாறு யானையின் உதிரப் பசுமை கெடாத தோலை ஆடையாக மேலே போர்த்தவனும் ஆரூர் அமர்ந்த அம்மானே யாவான். இது மொழிமாற்றுப் பொருள்கோள்.

திருவாரூர்

ஊழி யளக்கவல் லானு
முகப்பவ ருச்சியுள் ளானும்
தாழிளஞ் செஞ்சடை யானுந்
தண்ணமர் திண்கொடி யானும்
தோழியர் தூதிடை யாடத்
தொழுதடி யார்கள் வணங்க
ஆழி வளைக்கையி னானு
மாரூ ரமர்ந்தவம் மானே. **#36**

ஊழிக்காலங்களைத் தான் அளக்கவல்ல, காலங்களுக்கு அப்பாற்பட்டவனும், தன்னை விரும்பும் அடியவர்கள் தலையின்மேல் உள்ளவனும், தொங்குகின்ற வெளிர் செந்நிறமுடைய சடையினனும், குளிர்ச்சிபொருந்திய வலிய கொடியை உடையவனும், தோழிமார்கள் தலைவியருக்காக எம்பெருமானிடம் தூது செல்ல, அடியார்கள் தலையால் தொழுது கைகளால் வணங்க, சக்கரத்தையும் சங்கையும் தாங்குகிற திருமாலின் கையிற் காட்சியளிப்பவனும் திருவாரூர் அமர்ந்த அம்மானாவான். தண்ணம்ஆர் என்று பாடம் ஓதி மழுப்படையின் வடிவம் எழுதிய என்றும் பொருள் கொள்க. தண்ணம் - மழு. (கழ. த. அக. பக்.512)

திருவாரூர்

ஊர்திரை வேலையுள் ளானு
முலகிறந் தொண்பொரு ளானும்
சீர்தரு பாடலுள் ளானுஞ்
செங்கண் விடைக்கொடி யானும்
வார்தரு பூங்குழ லாளை
மருவி யுடன்வைத் தவனும்
ஆர்திரை நாளுகந் தானு
மாரூ ரமர்ந்தஅம் மானே. **#37**

பரவும் அலைகளை உடைய பாற்கடலில் உள்ளவனும், உலகுக்கு அப்பாற்பட்ட மேம்பட்ட பொருளாவானும், சிறந்த பாடல்களில் உள்ளவனும், சிவந்த கண்களை உடைய திருமாலாகிய காளையின் வடிவம் எழுதிய கொடியை உடையவனும், நீண்ட பொலிவு பொருந்திய கூந்தலை உடைய பார்வதியைத் தழுவி ஒருபாகமாக வைத்தவனும், திரு ஆதிரை நாளை விரும்பி ஏற்றவனும் ஆரூர் அமர்ந்த அம்மானே யாவான்.

திருவாரூர்

தொழற்கங்கை துன்னிநின் றார்க்குத்
தோன்றி யருளவல் லானும்
கழற்கங்கை பன்மலர் கொண்டு
காதல் கனற்றநின் றானும்
குழற்கங்கை யாளையுள் வைத்துக்
கோலச சடைக்கரந் தானும்
அழற்கங்கை யேந்தவல் லானு
மாரூ ரமர்ந்தவம் மானே. **#38**

தொழுவதற்குஉள்ளங்கைகளைச் சேர்த்துக் கொண்டு நிற்கும் அடியவர்கள் மனக்கண்முன் தோன்றி அருள் செய்ய வல்லவனும், தன் திருவடிகளில் சேர்ப்பதற்கு உள்ளங்கைகளிற் பல பூக்களையும் கொண்ட அடியார்களுக்கு அன்புமிகுமாறு நிற்பவனும், கூந்தலை உடைய கங்கையை அழகிய சடையில் வைத்து மறைத்தவனும், தீயினைத் தாங்கத் தன் உள்ளங்கையை நீட்டி ஏற்று ஏந்தும் ஆற்றல் உடையவனும் ஆரூர் அமர்ந்த அம்மானேயாவான்.

திருவாரூர்

ஆயிரந் தாமரை போலும்
ஆயிரஞ் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலும்
ஆயிரந் தோளுடையானும்
ஆயிரம் ஞாயிறு போலும்
ஆயிரம் நீண்முடி யானும்
ஆயிரம் பேருகந் தானு
மாரூ ரமர்ந்தவம் மானே. **#39**

ஆயிரம்தாமரை மலர்கள் போன்ற ஆயிரம் திருவடிகளை உடையவனும, ஆயிரம் மேருமலைகளைப் போன்ற ஆயிரம் தோள்களை உடையவனும், ஆயிரம் சூரியர்களைப் போன்ற ஆயிரம் நீண்ட முடிகளை உடையவனும், ஆயிரம் பெயர்களை விரும்பிக் கொள்பவனும், ஆரூர் அமர்ந்த அம்மான் ஆவான்.

திருவாரூர்

வீடரங் காநிறுப் பானும்
விசும்பினை வேதி தொடர
ஓடரங் காகவைத் தானும்
ஓங்கியொ ரூழியுள் ளானும்

காடரங் காமகிழ்ந் தானுங்
காரிகை யார்கண் மனத்துள்
ஆடரங் கத்திடை யானு
மாரூ ரமர்ந்தவம மானே. #40

முத்தி உலகை ஞான ஆனந்தக் கூத்து நிகழ்த்தும் இடமாக நிலை நிறுத்தியவனும், தன் முடியைக் காண்பதற்குப் பிரமன் வானத்தில் தொடர்ந்து உயரத் தேடி ஓடுகின்ற வெளியிடத்தைத் தான் ஆடும் அரங்கமாகக் கொள்பவனும், பல ஊழிக் காலங்களிலும் உயர்ந்து உள்ளவனும், சுடுகாட்டை ஆடும் அரங்கமாக மகிழ்ந்து ஏற்பவனும் தன்னை வழிபடும் மகளிருடைய கண்களையும் மனத்தையும் தான் ஆடும் அரங்கமாகக் கொண்டு அவற்றிடை உறைபவனும் ஆரூர் அமர்ந்த அம்மானேயாவான்.

திருவாரூர்

பையஞ் சுடர்விடு நாகப்
பள்ளிகொள்வா னுள்ளத் தானும்
கையஞ்சு நான்குடை யானைக்
கால்விர லாலடர்த் தானும்
பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப்
புகழ்புரிந் தார்க்கருள் செய்யும்
ஐயஞ்சி னப்புறத் தானு
மாரூ ரமர்ந்தவம் மானே #41

படமெடுக்கும் அழகிய ஒளியை வெளிப்படுத்துகின்ற பாம்பில் பள்ளி கொள்ளும் திருமாலுடைய உள்ளத்தில் இருப்பவனும், இருபது கைகளை உடைய இராவணனைத் தன் கால் விரல் ஒன்றினால் நசுக்கியவனும், பொய் பேசுதற்கு அஞ்சி உண்மையையே பேசிப் புகழை விரும்பும் அடியவர்களுக்கு அருள் செய்வானும், இருபத்தைந்து தத்துவங்களைக் கடந்து நிற்பவனும் ஆரூர் அமர்ந்த அம்மான் ஆவான்.

திருவாரூர்ப்பழமொழி

திருவாரூர்

திருவாரூர்ப்பழமொழி,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள்தொ ழாதே
உய்யலா மென்றெண்ணி யுறிதூக்கி
யுழிதந்தென் னுள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலு மாரூ ரரைக்
கையினாற் றொழா தொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வ னேனே. **#42**

உடம்பெல்லாம் வெண்ணீறு பூசிய பெருமானுடைய திருவடிகளை வழிபடாமல், கடைத்தேறலாம் என்று நினைத்துச் சமணசமயத்தைத் தழுவி உறியைத் தூக்கிக்கொண்டு திரிந்து மனத்தை அச்சமயத்தில் பறி கொடுத்து, கொய்தற்காக அடியவர்கள் உலவும் பூக்களை உடைய சோலைகளில் குயில்கள் கூவவும் மயில்கள் ஆடவும் அமைந்திருக்கும் திருவாரூரில் உகந்தருளியிருக்கும் பெருமானைக் கையினால் தொழாது காலத்தை வீணாக்கிச் சுவையுடைய இனிய கனி இருக்கவும் அதனை விடுத்துச் சுவையற்ற காய்களை விரும்பிய கள்வனாகி விட்டேனே.

திருவாரூர்

என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்
டென்னையோ ருருவ மாக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட்
டென்னுள்ளங் கோயி லாக்கி
அன்பிருத்தி யடியேனைக் கூழாட்கொண்
டருள்செய் தவாரூ ரர்தம்
முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக்
காக்கைப்பின் போன வாறே. **#43**

எலும்புகளை அடித்தளமாக அமைத்து நரம்புகளையும் தோலையும் பொருந்துமாறு இணைத்து எனக்கு ஓர் உருவத்தைக் கொடுத்து, இன்பங்களை நுகர் பொருளாக வைத்து, முன்பு அடியேன் செய்து

குவித்திருந்த வினைகளைப் போக்கி அடியேனுடைய உள்ளத்தைத்தம் இருப்பிடமாகச் செய்து அடியேன் உள்ளத்தில் அன்பினை நிலைநிறுத்தி, அடியேனை ஆளுதலைக் கடமை (கூழைமை)யாகக் கொண்ட ஆரூர்ப் பெருமானுடைய திரு முன்னர் இருக்கும் வாய்ப்பினை நெகிழவிட்டு, கைப்பற்றுதற்கு எளிதாய் உண்பார்க்குச் சுவையை உடையதான முயலை விடுத்துக் கைப்பற்றுதற்கும் அரிதாய்க் கைக்கொண்டாலும் உணற்குத் தகுதியற்றதாய் உள்ள காக்கை பின் சென்ற அறிவிலியைப் போல ஆகிவிட்டேனே!

திருவாரூர்

பெருகுவித்தென் பாவத்தைப் பண்டெலாங்
குண்டர்கள்தஞ்சொல்லே கேட்டு
உருகுவித்தென் னுள்ளத்தி னுள்ளிருந்த
கள்ளத்தைத் தள்ளிப் போக்கி
அருகுவித்துப் பிணிகாட்டி யாட்கொண்டு
பிணிதீர்த்த வாரூ ரர்தம்
அருகிருக்கும் விதியின்றி அறமிருக்க
மறம்விலைக்குக் கொண்ட வாறே. **#44**

முன்பெல்லாம் உடல்பருத்த சமணத்துறவியரின் சொற்களையே செவிமடுத்து அடியேனுடைய தீவினைகளையே பெருகச் செய்து, உளம் உருகி உள்ளத்தில் தேங்கியிருந்தகள்ள உணர்வை அடியோடு நீக்கி, பிணியை உண்டாக்கித் தம் அருகு வரச்செய்து, அடியவனாகக் கொண்டு அடியேனுடைய பிணியைப் போக்கிய ஆரூர்ப் பெருமானுடைய அருகிலே இருத்தற்குரிய நல்வினையில்லாமல் பல்லாண்டுக் காலம், விலைகொடுத்தாகிலும் பெறத்தக்க அறம் விலை கொடுக்காமலேயே கிட்டவும் அதனை விடுத்து, விலையின்றிக் கிட்டிலும் வெறுக்கத்தக்க. பாவத்தை விலை கொடுத்துப் பெற்ற அறிவில்லாதவனாக ஆகிவிட்டேனே.

திருவாரூர்

குண்டனாய்த் தலைபறித்துக் குவிமுலையார்
நகைநாணா துழிதர் வேனைப்
பண்டமாப் படுத்தென்னைப் பாறலையிற்
றெளித்துத்தன் பாதங் காட்டித்
தொண்டெலா மிசைபாடத் தூமுறுவ
லருள்செய்யு மாரூ ரரைப்
பண்டெலா மறியாதே பனிநீராற்
பாவைசெயப் பாவித் தேனே. **#45**

உடல் பருத்தவனாய்த் தலை மயிரை வலியப் பறித்துத் தலையை மொட்டையாக்கிக்கொண்டு, இள மகளிருடைய ஏளனச் சிரிப்பிற்கும் வெட்கப்படாமல் திரிந்த அடியேனை ஒரு பொருளாக ஏற்றுக் கொண்டு, பால் முதலிய பஞ்சகவ்வியத்தால் தூய்மை பெறச் செய்து தன் திருவடிகளைத் தரிசிப்பதற்குத் தொண்டர்கள் எல்லோரும் தம்புகழைப்பாட அதனைச் செவி மடுத்துப் புன்முறுவலோடு அருள் செய்யும் அப்பெருமானை என் வாழ்க்கையின் முற்பகுதியில் அறியாமல் திரவவடிவமாக இருக்கும் குளிர்ந்த நீரினால் திடப்பொருளாகிய பொம்மையைச் செய்ய முற்படுபவரைப் போல, உண்மையறிவுக்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டேன் ஆனேனே.

திருவாரூர்

துன்னாகத் தேனாகித் துர்ச்சனவர்
சொற்கேட்டுத் துவர்வாய்க் கொண்டு
என்னாகத் திரிதந்தீங் கிருகையேற்
றிடவுண்ட ஏழை யேனான்
பொன்னாகத் தடியேனைப் புகப்பெய்து
பொருட்படுத்த வாரூ ரரை
என்னாகத் திருத்தாதே யேதன்போர்க்
காதனா யகப்பட் டேனே. **#46**

கொடியபாம்பினை ஒத்தேனாகித் தீயவர் சொற்களைக் கேட்டு, கடுக்காயை உண்பதால் அதன் கறை படிந்த பற்களை உடையேனாய், என்விருப்பம்போலத் திரிந்து இருகைகளையும் இணைத்து அவற்றில் பிச்சை ஏற்ற உணவினை உண்ட அறிவிலியாகிய அடியேன், பொன்போன்ற செவ்விய உடலிலே அடியேனை இருத்திக் குறிப்பிடத்தக்க பொருளாக அடியேனை ஆக்கிய ஆரூர்ப் பெருமானை என் உள்ளத்தில் நிலையாக இருக்கச் செய்யாமல், ஒருவன், விளைத்த சண்டையில் அதனோடு யாதும் தொடர்பில்லாத மற்றவன் அகப்பட்டுத் துன்புறுவதுபோல நவீனரான சமணர்கள் செய்த செயல்களில் பரம்பரைச் சைவனாகிய அடியேன் அகப்பட்டுப் பல்லாண்டுகள் துன்புற்றேனே.

திருவாரூர்

பப்போதிப் பவணனாய்ப் பறித்ததொரு
தலையோடே திரிதர் வேனை
ஒப்போட வோதுவித்தென் னுள்ளத்தி
னுள்ளிருந்தங் குறுதி காட்டி
அப்போதைக் கப்போது மடியவர்கட்

காரமுதா மாரூ ரரை
எப்போதும் நினையாதே யிருட்டறையின்
மலடுகறந் தெய்த்த வாறே. **#47**

உலகில் பிறக்கும் பிறவிகளையே நல்கும் நூல்களை ஓதிச் சமணனாய் வலிய மயிர் நீக்கப்பட்ட மொட்டைத் தலையோடு திரியும் அடியேனை நிகரில்லாத வகையில் உவமையிலாக் கலை ஞானத்தை உபதேசித்து என் உள்ளத்தினுள்ளே தங்கி உயிருக்கு உறுதியானவற்றைத் தெரிவித்து ஒவ்வொரு கணமும் அடியவர்களுக்குக் கிட்டுதற்கரிய அமுதமாக உள்ள ஆரூர்ப் பெருமானை எப்பொழுதும் நினையாமல், கறப்பவனொருவன், பயனின்மை மட்டிலன்றிக்காலுதையும் பட்டினைப்பவனாய் இருட்டறையில் மலட்டுப் பசுவை பால் வேண்டிக் கறந்து இளைப்பது போலப் பயனின்றித் துன்புறுதலோடு வாழ்நாளின் முற்பகுதியைக் கழித்தேனே.

<u>திருவாரூர்</u>

கதியொன்று மறியாதே கண்ணழலத்
தலைபறித்துக் கையி லுண்டு
பதியொன்று நெடுவீதிப் பலர்காண
நகைநாணா துழிதர் வேற்கு
மதிதந்த வாரூரில் வார்தேனை
வாய்மடுத்துப் பருகி யுய்யும்
விதியின்றி மதியிலியேன் விளக்கிருக்க
மின்மினித்தீக் காய்ந்த வாறே. **#48**

இனிச்சென்று சேரும் வழியை அறியாமல், கண் எரியுமாறு தலைமயிரை வலியப்பறித்து, கைகளிலேயே உணவை வாங்கியவாறே உண்டு ஊர்களிலுள்ள பெருந்தெருக்களில் பலரும் காண அவருடைய ஏளனச் சிரிப்புக்கு வெட்காமல் திரியும் அடியேனுக்கு நல்லறிவை வழங்கி ஆரூரில் நிறைந்த தேனாகிய பெருமானை நுகர்ந்து கடைத்தேறும் வாய்ப்பினைப் பெறாத நல்லறிவு இல்லாத அடியேன், விளக்கு இருக்கவும் மின்மினியினுடைய தீயைக் குளிர்காயக் கொள்வாரைப் போலப் பயனுடைய பொருளை விடுத்துப் பயனில்லாத பொருளைக் கைகொண்டு வாழ்நாளை வீணாய்க் கழித்தேனே.

<u>திருவாரூர்</u>

பூவையாய்த் தலைபறித்துப் பொறியற்ற
சமண்நீசர் சொல்லே கேட்டுக்
காவிசேர் கண்மடவார்க் கண்டோடிக்
கதவடைக்குங் கள்வ னேன்றன்

ஆவியைப் போகாமே தவிர்த்தென்னை
யாட்கொண்ட வாரூ ரரைப்
பாவியே னறியாதே பாழூரிற்
பயிக்கம்புக் கெய்த்த வாறே. **#49**

தலைமயிரை வலியப் பறித்து, நல்வினையில்லாத கீழோராகிய சமணத் துறவியரின் உபதேசத்தைச் செவிமடுத்து, நாகணவாய்ப் பறவை போன்ற இனிய குரலை உடையவர்களாய், குவளை மலர் போன்ற கண்களையும் உடைய பெண்களைக் காண்டலே தீவினை என்று அவர்களை ஒரோவழிக் கண்டவழி ஓடிச்சென்று இருப்பிடத்தின் கதவினை மூடிக்கொள்ளும் கள்ளத்தன்மை உடைய அடியேனுடைய உயிர் சூலைநோயால் நீங்காதபடி காத்து, என்னை அடிமை கொண்ட ஆரூர்ப்பெருமானை அடியேன் உள்ளவாறு அறியாதே மக்கள் குடிபோகிய ஊரிலே பிச்சை எடுக்கச் சென்று இளைத்தவர்போல் ஆகிவிட்டேனே.

<u>திருவாரூர்</u>

ஒட்டாத வாளவுணர் புரமூன்று
மோரம்பின் வாயின் வீழக்
கட்டானைக் காமனையுங் காலனையுங்
கண்ணினொடு காலின் வீழ
அட்டானை யாரூரி லம்மானை
யார்வச்செற் றக்கு ரோதம்
தட்டானைச் சாராதே தவமிருக்க
அவஞ்செய்து தருக்கி னேனே. **#50**

தன்னோடு நட்புறாத கொடிய அசுரர்களின் மும்மதில்களும் ஓரம்பினால் உருக்குலையுமாறு அழித்தவனாய், காமன் தன் கண்ணினாலும், காலன் தன் காலினாலும், அழியுமாறு அவர்களைத் துன்புறுத்தியவனாய், ஆரூரின் தலைவனாய், பற்று, பகைமை, கோபம், என்ற தீப்பண்புகள் தன்மாட்டு அணுகப் பெறானாய் உள்ள பெருமானை அணுகாமல், தவம், செய்தற்குரிய செயலாய் இருக்கவும், அதனை விடுத்து, பயனற்ற செயல்களைச் செய்து பெருமிதம் கொண்டு திரிந்தேனே.

<u>திருவாரூர்</u>

மறுத்தானொர் வல்லரக்க னீரைந்து
முடியினொடு தோளுந் தாளும்
இறுத்தானையெழின் முளரித்தவிசின்மிசையி
ருந்தான்றன்தலையி லொன்றை
அறுத்தானை யாரூரி லம்மானை

யாலால முண்டு கண்டம்
கறுத்தானைக் கருதாதே கரும்பிருக்க
இரும்புகடித் தெய்த+**C36**த வாறே. **#51**
தேர்ப்பாகன் கூற்றை மறுத்துக் கயிலையைப் பெயர்க்க முற்பட்ட
வலிமை உடைய இராவணனுடைய பத்துத் தலைகளும் தோள்களும்
அடிகளும் செயலறும்படி நசுக்கியவனாய், அழகிய தாமரை மலரிலிருந்த
பிரமன் தலையில் ஒன்றை அறுத்தவனாய், விடமுண்ட நீலகண்டனாய்
உள்ள ஆரூர்ப் பெருமானை மனத்து நினையாமல் மெல்லுதற்கு
ஏற்றதாய் மிகுசுவை உடையதாய் இருக்கும் கரும்பை விடுத்து, கடிக்க
இயலாத சுவையற்ற இரும்பைக் கடித்து அடியேன் வாழ்வின்
முற்பகுதியில் இளைத்தேனே.

திருக்கழிப்பாலை

திருக்கழிப்பாலை

திருக்கழிப்பாலை,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பால்வண்ணநாதர்.
தேவியார் : வேதநாயகியம்மை.

வனபவள வாய்திறந்து வானவர்க்குந்
தானவனே யென்கின் றாளாற்
சினபவளத் திண்டோண்மேற் சேர்ந்திலங்கு
வெண்ணீற்ற னென்கின் றாளால்
அனபவள மேகலையொ டப்பாலைக்
கப்பாலா னென்கின் றாளால்
கனபவளஞ் சிந்துங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. **#52**

அழகியபவளம் போன்ற வாயைத் திறந்து தேவர்களுக்கும் அருள் வழங்குகின்றவனே என்கின்றாள். சிவந்தபவளம் போன்ற திண்ணிய தோள்களின்மேல் சேர்ந்து விளங்கும் வெள்ளிய திருநீறு அணிந்தவனே என்கின்றாள். அன்னம் போன்ற நடையினளாய்ப் பவளத்தாலாகிய மேகலையை அணிந்த பார்வதியோடு சுத்தாவத்தைகளுள் துரியத்துக்கு அப்பாற்பட்ட துரியாதீதத்தில் உள்ளவன் என்கின்றாள். பெரிய பவளங்களைக் கடல் கரையில் சேர்க்கும் திருக்கழிப்பாலையில் உள்ள எம்பெருமானை என்மகள் தரிசித்தாளோ?

திருக்கழிப்பாலை

வண்டுலவு கொன்றை வளர்புன்
சடையானே யென்கின் றாளால்
விண்டலர்ந்து நாறுவதொர் வெள்ளெருக்க
நாண்மலருண் டென்கின் றாளால்
உண்டயலே தோன்றுவதொ ருத்தரியப்
பட்டுடைய னென்கின் றாளால்
கண்டயலே தோன்றுங் கழிப்பாலைச்
சேர்வானைக்கண்டாள் கொல்லோ. **#53**

வண்டுகள் உலவும் கொன்றைப் பூக்கள் தங்கிய செந்நிறச் சடையனே! இதழ் விரிந்து நறுமணம் கமழும் புதிய வெள்ளெருக்க மலரும் அச்சடையில் உள்ளது. பக்கத்தில் காட்சி வழங்கும் மேலாடையாகப்

பட்டினை அவன் அணிந்திருத்தலும் உண்டு என்று கூறுகின்ற என் பெண் கழிமுள்ளி கடற்கரையருகே வளருகின்ற கழிப்பாலைப் பெருமானைக் கண்டாளோ?

திருக்கழிப்பாலை

பிறந்திளைய திங்களெம் பெம்மான்
முடிமேல தென்கின் றாளால்
நிறங்கிளருங் குங்குமத்தின் மேனி
யவனிறமே யென்கின் றாளால்
மறங்கிளர்வேற் கண்ணாள் மணிசேர்
மிடற்றவனே யென்கின் றாளால்
கறங்கோத மல்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. **#54**

இளையபிறைச்சந்திரன் எம்பெருமான் முடிமேல் உள்ளது. அவன் திருமேனியின் நிறம் ஒளிவீசும் குங்குமத்தின் நிறமே. வீரத்தை வெளிப்படுத்தும் வேல் போன்ற கண்களையுடைய பார்வதிதேவியின் கண்மணிபோன்ற நீலகண்டன் என்று கூறுகின்ற என் பெண் ஒலிக்கின்ற கடல் வெள்ளம் மிகுகின்ற கழிப்பாலையை உகந்தருளியிருக்கும் பெருமானைத் தரிசித்தாளோ?

திருக்கழிப்பாலை

இரும்பார்ந்த சூலத்த னேந்தியொர்
வெண்மழுவ னென்கின் றாளால்
சுரும்பார் மலர்க்கொன்றைச் சுண்ணவெண்
ணீற்றவனே யென்கின் றாளால்
பெரும்பால னாகியொர் பிஞ்ஞக
வேடத்த னென்கின் றாளால்
கரும்பானல் பூக்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. **#55**

இரும்பினாலாய சூலமும் மழுப்படையும் ஏந்தியவன், வண்டுகள் பொருந்திய கொன்றை மலரைச் சூடித் திருநீற்றை அணிந்தவன். பெரிய இடப்பகுதியைப் பார்வதி பாகமாகக் கொண்டு அப்பகுதியில் விளங்கும் தலைக்கோலத்தை உடையவன் என்று கூறுகின்ற என்பெண் கருங்குவளை மலர்கள் பூக்கும் கழிப்பாலைப் பெருமானைத் தரிசித்தாளோ?

திருக்கழிப்பாலை

பழியிலான் புகழுடையன் பானீற்ற

னானேற்ற னென்கின் றாளால்
விழியுலாம் பெருந்தடங்கண் ணிரண்டல்ல
மூன்றுளவே யென்கின் றாளால்
சுழியுலாம் வருகங்கை தோய்ந்த
சடையவனே யென்கின் றாளால்
கழியுலாஞ் சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ **#56**

எம்பெருமான் பழியில்லாதவன், புகழுடையவன், பால்போன்ற நீறு அணிந்தவன், காளை வாகனத்தை உடையவன், அவனுக்கு விழிகளாக அமைந்தவை இரண்டல்ல, மூன்று. அவன் நீர்ச் சுழிகளோடு பரவும் கங்கை வந்து தங்கிய சடைமுடியை உடையவன் என்று கூறுகின்ற என்பெண், எங்கும் பரவி ஓடுகின்ற உப்பங்கழிகளால் சூழப்பட்ட திருக்கழிப்பாலைப் பெருமானைத் தரிசித்தாளோ?

<u>திருக்கழிப்பாலை</u>

பண்ணார்ந்த வீணை பயின்ற
விரலவனே யென்கின் றாளால்
எண்ணார் புரமெரித்த வெந்தை
பெருமானே யென்கின் றாளால்
பண்ணார் முழவதிரப் பாடலொ
டாடலனே யென்கின் றாளால்
கண்ணார் பூஞ்சோலைக் கழிப்பாலைச்
சேர்வானைக்கண்டாள் கொல்லோ**. #57**

பண்கள் நிறைந்து ஒலித்தற்கு இடமான கருவியாகிய வீணையை ஒலியெழுப்பும் விரல்களை உடையவனே! பகைவருடைய மும்மதில்களையும் தீக்கு இரையாக்கிய எம் தந்தையாகிய பெருமானே! பண்களுக்கு ஏற்ப முழவு என்ற தோற்கருவி ஒலிக்கப் பாடிக் கொண்டு கூத்து நிகழ்த்துபவனே! என்று கூறுகின்ற என் பெண் கண்ணுக்கு நிறைவைத் தரும் பூக்கள் நிறைந் சோலைகளையுடைய திருக்கழிப்பாலை இறைவனைத் தரிசித்தாளோ?

<u>திருக்கழிப்பாலை</u>

முதிருஞ் சடைமுடிமேன் மூழ்கு
மிளநாக மென்கின் றாளால்
அதுகண் டதனருகே தோன்று
மிளமதிய மென்கின் றாளால்
சதுர்வெண் பளிக்குக் குழைகாதின்
மின்னிடுமே யென்கின் றாளால்

கதிர்முத்தஞ் சிந்துங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. **#58**

நன்கு செறிந்து நிறைந்த சடைமுடிமேல் இளநாகம் மறைந்து கிடக்கிறது. அதனைக் கண்டு அஃது ஊறுதாராது என்ற கருத்தோடு அதன் அருகிலே பிறை காட்சிவழங்குகின்றது. வேலைப்பாடு அமைந்த வெண்ணிறத்ததாகிய பளிங்கினாலாகிய காதணி காதில் இருந்து கொண்டு ஒளி வீசுகின்றது என்று கூறுகின்ற என்பெண் ஒளி வீசுகின்ற முத்துக்களைக் கடல் அலை கரைக்கண் செலுத்தும் திருக்கழிப்பாலைப் பெருமானைத் தரிசித்தாளோ?

திருக்கழிப்பாலை

ஓரோத மோதி யுலகம்
பலிதிரிவா னென்கின் றாளால்
நீரோத மேற நிமிர்புன்
சடையானே யென்கின் றாளால்
பாரோத மேனிப் பவள
மவனிறமே யென்கின் றாளால்
காரோத மல்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. **#59**

ஓர்ந்து கொள்ளத்தக்க வேதங்களைஓதிக்கொண்டு உலகம் முழுதும் பிச்சை ஏற்றுத் திரிகின்றவனே! கங்கை நீர்வெள்ளம் உயர அதற்கேற்ப உயர்ந்து தோன்றும் செந்நிறச் சடையவனே உலகைச் சூழ்ந்த கடலில் உள்ள செந்நிறப் பவளம் எம்பெருமானுடைய திருமேனியின் நிறமே என்று கூறுகின்ற என்பெண், கரிய கடல்வெள்ளம் மிகும் திருக்கழிப்பாலையின்பெருமானைத் தரிசித்தாளோ?

திருக்கழிப்பாலை

வானுலாந் திங்கள் வளர்புன்
சடையானே யென்கின் றாளால்
ஊனுலாம் வெண்டலைகொண் டூரூர்
பலிதிரிவா னென்கின் றாளால்
தேனுலாங் கொன்றை திளைக்குந்
திருமார்ப னென்கின் றாளால்
கானுலாஞ் சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. **#60**

வானத்தில் உலவ வேண்டிய பிறைதங்கிய செஞ்சடையனே! புலால் நாற்றம் கமழும் வெண்ணிற மண்டையோட்டைக் கையில் கொண்டு ஊர்ஊராகப் பிச்சைக்குத் திரிகின்றவனே! தேன் என்ற வண்டினங்கள்

சுற்றும் கொன்றைப் பூக்கள் சிறந்துவிளங்கும் திருமார்பினனே! என்று எம்பெருமானைப் பற்றிக்கூறும் என்மகள், எங்கும் பரவுகின்ற நறுமணம் சூழ்ந்த திருக்கழிப்பாலையிலுள்ள பெருமானைத் தரிசித்தாளோ?

திருக்கழிப்பாலை

அடர்ப்பரிய விராவணனை யருவரைக்கீ
ழடர்த்தவனே யென்கின் றாளால்
சுடர்ப்பெரிய திருமேனிச் சுண்ணவெண்
ணீற்றவனே யென்கின் றாளால்
மடற்பெரிய வாலின்கீ ழறநால்வர்க
கன்றுரைத்தா னென்கின் றாளால்
கடற்கருவி சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. **#61**

துன்புறுத்தி வெல்லுவதற்கரிய இராவணனைக் கயிலைமலையின்கீழ் வருத்தியவனே! ஒளிவீசும் பெருமையை உடைய திருமேனியில் நீறு பூசியவனே! பெரிய இலைகளை உடைய கல்லால மரத்தின் கீழிருந்து சனகர் முதலிய முனிவர் நால்வருக்கு ஒரு காலத்தில்அறத்தை உபதேசித்தவனே என்று கூறுகின்ற என்பெண் கடலின் தொகுதிகளாகிய உப்பங்கழிகள் சூழ்ந்த திருக்கழிப் பாலையின் பெருமானைத் தரிசித்தாளோ?

திருஏகம்பம்

திருஏகம்பம்,
பண் - காந்தாரம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஏகாம்பரநாதர்.
தேவியார் : காமாட்சியம்மை.

கரவாடும் வன்னெஞ்சர்க்
கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை
விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ
வங்கையினி லனலேந்தி
இரவாடும் பெருமானை
யென்மனத்தே வைத்தேனே. #62

பெருமானை மறைத்தலும் மறத்தலும் செய்து உலகப் பொருள்களில் திளைக்கும் வலிய நெஞ்சினை உடையவர்கள் உணர்தற்கு அரியவனாய், வஞ்சனையில்லாத அடியவர் உள்ளத்தில் கலந்து கூத்து நிகழ்த்தும் பெருமானாய், காளையை இவரும் திறனுடையவனாய், பாம்புகள் படமெடுத்து ஆடவும் சடை தொங்கவும், உள்ளங்கையில் தீயினை ஏந்தி இரவினில் கூத்தாடும் பெருமானை என் மனத்தில் நிலையாக வைத்துக் கொண்டேன்.

திருஏகம்பம்

தேனோக்குங் கிளிமழலை
யுமைகேள்வன் செழும்பவளம்
தானோக்குந் திருமேனி
தழலுருவாஞ் சங்கரனை
வானோக்கும் வளர்மதிசேர்
சடையானை வானோர்க்கும்
ஏனோர்க்கும் பெருமானை
யென்மனத்தே வைத்தேனே. #63

தேனை ஒத்து இனிமையதாய்க் கிளி மழலை போன்ற மழலையை உடைய உமாதேவியின் கணவனாய், செழும் பவளம் போன்ற செந்நிறமேனியனாய்த் தழல் உருவனாய், எல்லோருக்கும் நன்மை செய்பவனாய், சிவந்தவானத்தை ஒத்த செஞ்சடையில் பிறையைச்

சூடியவனாய்த் தேவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தலைவனாகிய பெருமானை என் மனத்தில் நிலையாக வைத்துக்கொண்டேன்.

திருஏகம்பம்

கைப்போது மலர்தூவிக்
காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத்
தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி
யைம்புலனு மகத்தடக்கி
எப்போது மினியானை
யென்மனத்தே வைத்தேனே. **#64**

கைகளால், அலரும் பருவத்து மொட்டுக்களையும் பூக்களையும் அர்ப்பணித்துவிருப்போடு தேவர்கள் காலை நண்பகல் மாலை என்ற மூன்று வேளைகளிலும் தலையால் வணங்கித் தொழுமாறு நிலைபெற்ற முழுமுதற் கடவுளாய் எனக்கு எப்பொழுதும் இனியனாக உள்ள பெருமானை ஐம்புலன்களையும் உள்ளத்தால் அடக்கி, அபிடேக நீரையும் மலர்களையும் அர்ப்பணித்து என் மனத்தில் நிலையாக வைத்துக் கொண்டேன்.

திருஏகம்பம்

அண்டமா யாதியா
யருமறையொ டைம்பூதப்
பிண்டமா யுலகுக்கோர்
பெய்பொருளாம்பிஞ்ஞகனைத்
தொண்டர்தா மலர்தூவிச்
சொன்மாலை புனைகின்ற
இண்டைசேர் சடையானை
யென்மனத்தே வைத்தேனே. **#65**

உலகங்களாய், உலகங்களுக்குக் காரணனாய் அரிய வேதங்களாய், ஐம்பெரும் பூதங்களின் பிண்டமாகவும் உலகத்தார்க்குக் கருத்துப் பொருளாகவும் உள்ளவனும், தலைக் கோலத்தை உடையவனாய், அடியவர்கள் மலர்களை அர்ப்பணித்துச் சொல்லால் ஆகிய பாமாலை புனைந்து அணிவிக்கின்ற, தலைமாலை அணிந்து சடையை உடைய பெருமானுமாயவனை என் மனத்தில் நிலையாக வைத்துக் கொண்டேன்.

திருஏகம்பம்

ஆறேறு சடையானை
யாயிரம்பே ரம்மானைப்
பாறேறு படுதலையிற்
பலிகொள்ளும் பரம்பரனை
நீறேறு திருமேனி
நின்மலனை நெடுந்தூவி
ஏறேறும் பெருமானை
யென்மனத்தே வைத்தேனே. **#66**

கங்கை தங்கிய சடையினனாய், ஆயிரம் திருநாமங்களை உடைய தலைவனாய், பருந்துகள் படிகின்ற இறந்து பட்ட மண்டையோட்டில் பிச்சை ஏற்கும் மேம்பட்ட இறைவனாய், திருநீறு அணிந்த திருமேனியை உடைய தூயோனாய் நீண்ட வாலினை உடைய காளையை இவரும் பெருமானை என்மனத்தில் நிலையாக வைத்துக் கொண்டேன்.

<u>திருஏகம்பம்</u>

தேசனைத் தேசங்கள்
தொழநின்ற திருமாலால்
பூசனைப் பூசனைக
ளுகப்பானைப் பூவின்கண்
வாசனை மலைநிலம்நீர்
தீவளியா காசமாம்
ஈசனை யெம்மானை
யென்மனத்தே வைத்தேனே. **#67**

ஒளிவடிவினனாய்,உலகங்கள் வழிபடுமாறு உள்ள திருமாலால் வழிபடப்படுபவனாய், அடியார்கள் செய்யும் வழிபாட்டை உகப்பவனாய், பூவின்கண் நறுமணம் போல எங்கும் பரந்திருப்பவனாய், மலைகளாகவும் ஐம் பூதங்களாகவும் விளங்குகின்றவனாய், எல்லோரையும் அடக்கி ஆள்பவனாய், எங்கள் தலைவனாய் உள்ள பெருமானை என் மனத்தில் நிலையாக வைத்துக் கொண்டேன்.

<u>திருஏகம்பம்</u>

நல்லானை நல்லான
நான்மறையோ டாறங்கம்
வல்லானை வல்லார்கண்
மனத்துறையு மைந்தனைச்
சொல்லானைச் சொல்லார்ந்த
பொருளானைத் துகளேதும்
இல்லானை யெம்மானை

யென்மனத்தே வைத்தேனே. **#68**
பெரியவனாய், மேம்பட்ட நான்மறைகளும் ஆறு அங்கங்களும் வல்லவனாய், தன்னை உள்ளவாறு உணரவல்லார்களுடைய உள்ளத்தில் தங்கும் வலியவனாய், வேத வடிவினனாய், வேதத்தில் நிறைந்திருக்கும் பரம்பொருளாய், இயல்பாகவே களங்கம் ஏதும் இல்லாதவனாய், எங்கள் தலைவனாய் உள்ள பெருமானை என் மனத்தில் நிலையாக வைத்துக் கொண்டேன்.

திருஏகம்பம்

விரித்தானை நால்வர்க்கு
வெவ்வேறு வேதங்கள்
புரித்தானைப் பதஞ்சந்திப்
பொருளுருவாம்புண்ணியனை
தரித்தானைக் கங்கைநீர்
தாழ்சடைமேன் மதின்மூன்றும்
எரித்தானை யெம்மானை
யென்மனத்தே வைத்தேனே. **#69**

சனகர் முதலிய நால்வருக்கு வேதப் பொருள்களை வெவ்வேறு விதங்களில்விரித்து உரைத்தவனாய், வேதங்களால் பரம்பொருளாக விரும்பப்பட்டவனாய், சொற்களும், சந்தியால் ஆகிய தொடர்களும் அவற்றின் பொருளுமாக உள்ள நல்வினை வடிவினனாய், தாழ்ந்த சடைமுடி மீது கங்கை நீரை ஏற்றவனாய், மும்மதில்களையும் எரித்தவனாய் உள்ள எம்பெருமானை என் மனத்தே வைத்தேனே.

திருஏகம்பம்

ஆகம்பத் தரவணையா
னயனறிதற் கரியானைப்
பாகம்பெண் ணாண்பாக
மாய்நின்ற பசுபதியை
மாகம்ப மறையோது
மிறையானை மதிற்கச்சி
யேகம்ப மேயானை
யென்மனத்தே வைத்தேனே. **#70**

பத்து அவதாரங்கள் எடுத்த, பாம்புப் படுக்கை உடைய திருமாலால் அறிய இயலாதவனாய், ஒருபாகம் பெண்பாகமாகவும் மறுபாகம் ஆண்பாகமாகவும், நிலைபெற்ற ஆன்மாக்கள் தலைவனாய், பெரிய தூண்போல அசைக்கமுடியாத, (என்றும் நிலைபெற்ற)வேதங்களை ஓதும் தலைவனாய், மதில்களை உடைய காஞ்சி நகரில் ஒற்றை மாமர

நிழலில் உறையும் பெருமானை என்மனத்து வைத்தேனே.

திருஏகம்பம்

அடுத்தானை யுரித்தானை
யருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே
சிலையாகக்கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச்
சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை
யென்மனத்தே வைத்தேனே. **#71**

தன்னை எதிர்க்க நெருங்கி வந்த யானையைக் கொன்று அதன் தோலை உரித்தவனும், அருச்சுனனுக்குப் பாசுபதப் படை நல்கியவனும், மேருமலையையே வில்லாகக் கொண்டு கூரிய அம்பினைமும்மதில்களும் எரியுமாறு செலுத்தியவனாய், சுனைகள் நிறைந்த கயிலாய மலையைப் பெயர்க்க முற்பட்ட இராவணனை நசுக்கி செயற்பட முடியாதவாறு தடுத்தவனுமான பெருமானை என் மனத்தே வைத்தேனே.

சிவனெனுமோசை

சிவனெனுமோசை

சிவனெனுமோசை,
பண் - பியந்தைக்காந்தாரம்

சிவனெனு மோசை யல்ல தறையோ வுலகிற்
றிருநின்ற செம்மை யுளதே
அவனுமொ ரைய முண்ணி யதளாடையாவ
ததன்மேலொ ராட லரவம்
கவணள வுள்ள வுண்கு கரிகாடு கோயில்
கலனாவ தோடு கருதில்
அவனது பெற்றி கண்டு மவனீர்மை கண்டு
மகநேர்வர் தேவ ரவரே. **#72**

உலகிலே சிவன் என்னும் ஓசையன்றித் திருவானது நிலைபெறக் காரணமான செஞ்சொல் வேறு இல்லை என்று ஆணையிட்டுக் கூறுவேன். எம்பெருமான் பிச்சை எடுத்து உண்பவன். தோலையே ஆடையாக உடையவன். அத்தோல் மேல் ஆடும்பாம்பை இறுகக்கட்டியவன். கவண் கல் அளவு சிறிதே உண்பவன். சுடுகாடே இருப்பிடம். அவனுடைய உண்கலன் மண்டையோடு. ஆராய்ந்து பார்த்தால் அவன் உடைமைகளைக் கண்டும் அவன் தன்மையைக் கண்டும் தேவர்கள் தம் உள்ளத்தை அப்பெருமானுக்கு அர்ப்பணம் செய்வர்.

சிவனெனுமோசை

விரிகதிர் ஞாயி றல்லர் மதியல்லர் வேத
விதியல்லர் விண்ணு நிலனும்
திரிதரு வாயு வல்லர் செறுதீயு மல்லர்
தெளிநீரு மல்லர் தெரியில்
அரிதரு கண்ணி யாளை யொருபாக மாக
வருள்கார ணத்தில்வருவார்
எரியர வார மார்ப ரிமையாரு மல்ல
ரிமைப்பாரு மல்ல ரிவரே. **#73**

இப்பெருமானார் ஒளிக்கதிர்கள் விரியும் சூரியனும் அல்லர். சந்திரனும்அல்லர். பிரமனும் அல்லர். வேதத்தில் விதித் தனவும் விலக்கியனவும் அல்லர். விண்ணும் நிலனும் அலையும் காற்றும் துன்புறுத்தும் தீயும் தெளிந்த நீரும் அல்லர். செவ்வரி கருவரி பரந்த கண்களை உடைய பார்வதி பாகராக அருள் காரணத்தால் காட்சி

வழங்கும் இவர் கோபிக்கின்ற பாம்பினை மார்பில் மாலையாக உடையவர். இவர் கண் இமைக்காத தேவரும் கண் இமைக்கும் மக்களும் அல்லர். இவரே எல்லாமாகி அல்லராய் உடனும் ஆவர்.

சிவனெனுமோசை

தேய்பொடி வெள்ளை பூசி யதன்மேலொர் திங்கள்
திலகம் பதித்த நுதலர்
காய்கதிர் வேலை நீல வொளிமா மிடற்றர்
கரிகாடர் காலொர் கழலர்
வேயுட னாடு தோளி யவள்விம்ம வெய்ய
மழுவீசி வேழ வுரிபோர்த்
தேயிவ ராடு மாறு மிவள்காணு மாறு
மிதுதா னிவர்க்கொ ரியல்பே. **#74**

நுண்ணிய வெண்ணீறு பூசித் திங்கள் போன்ற வடிவுடைய திலகத்தை இட்ட நெற்றியை உடையவர். சூரியன் தோன்றும் கீழ்க்கடலின் நீல ஒளி பொருந்திய கழுத்தினர். சுடுகாட்டில் உறைபவர். காலில் ஒற்றைக் கழல் அணிபவர். மூங்கில் போன்ற தோள்களை உடைய பார்வதி நடுங்குமாறு கொடிய மழுப்படையை வீசி யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்து இவர் கூத்தினை நிகழ்த்துவதும், அதனைப் பார்வதி காணுமாறு செய்வதும் இவருக்கு இயல்பு போலும்.

சிவனெனுமோசை

வளர்பொறி யாமை புல்கி வளர்கோதை வைகி
வடிதோலு நூலும் வளரக்
கிளர்பொறி நாக மொன்று மிளிர்கின்ற மார்பர்
கிளர்காடு நாடு மகிழ்வர்
நளிர்பொறி மஞ்ஞை யன்ன தளிர்போன்று சாய
லவடோன்று வாய்மை பெருகிக்
குளிர்பொறி வண்டு பாடு குழலா ளொருத்தி
யுளள்போல் குலாவி யுடனே. **#75**

பெருமானார் வளர்ந்த, பொறிகளை உடைய ஆமை ஓட்டை அணிந்து, நீண்ட கூந்தலை உடைய பார்வதி தங்கியதும், மான்தோலும் பூணூலும் ஒளிவீசுவதும், மிக்க பொறிகளை உடைய நாகம் விளங்குவதுமான மார்பினராய், காட்டிலும் நாட்டிலும் மகிழ்ந்து ஆடுபவராய் உள்ளார். செறிந்த பொறிகளை உடைய மயில் போன்று கட்புலனாகும் மென்மையும் தளிர் போன்று ஊற்றுக்கினிய மென்மையும் உடையவள் என்று சொல்லப்படும் உண்மை தன்னிடம் நிலைபெறப் புள்ளிகளை உடைய குளிர்ந்த வண்டுகள் பாடும் கூந்தலை உடைய கங்கையாளும்

அப்பெருமானோடு கூடி அவருடன் உள்ளாள் போலும்.

<u>சிவனெனுமோசை</u>

உறைவது காடு போலுமுரிதோ லுடுப்பர்
விடையூர்வ தோடு கலனா
இறையிவர் வாழும் வண்ண மிதுவேலு மீச
ரொருபா லிசைந்த தொருபால
பிறைநுதல் பேதை மாத ருமையென்னு நங்கை
பிறழ்பாட நின்று பிணைவான்
அறைகழல் வண்டு பாடு மடிநீழ லாணை
கடவா தமர ருலகே **#76**

இவர் தங்குமிடம் காடு, உரித்தெடுக்கப்பட்ட புலி முதலியவற்றின் தோலை உடுப்பர். இவர் காளையை ஊர்வர். மண்டையோடு உண்கலம். தலைவராகிய இவர் வாழும் வகை இது. இவர் எல்லோரையும் அடக்கி ஆள்பவர். இவருக்கு உரியது இவர் உடம்பின் வலப்பகுதியே. மற்றொரு பகுதியாகப் பிறைபோன்ற நெற்றியளாய் மடம் என்ற பண்புள்ளவளாய்த் திகழும் விரும்பத்தக்க உமை என்னும் நங்கை உள்ளாள். இடம் பெயர்ந்து ஆடுவதற்காகப் பார்வதியோடும் கூடியிருப்பார். வீரக்கழல் ஒலிக்க வண்டுகள் பாடும் திருவடியின் நிழலாகிய அப்பெருமானாருடைய ஆணையைத் தேவர் உலகம் மீறிச் செயற்படமாட்டாது.

<u>சிவனெனுமோசை</u>

கணிவளர் வேங்கை யோடு கடிதிங்கள் கண்ணி
கழல்கால் சிலம்ப வழகார்
அணிகிள ரார வெள்ளை தவழ்சுண்ண வண்ண
வியலா ரொருவ ரிருவர்
மணிகிளர் மஞ்ஞை யால மழையாடு சோலை
மலையான் மகட்கு மிறைவர்
அணிகிள ரன்ன வண்ண மவள்வண்ண வண்ண
மவர்வண்ண வண்ண மழலே. **#77**

சோதிடனின் இயல்பை உடையதாய் வளருகின்ற வேங்கைப் பூக்களையும் புதிய பிறையையும் முடிமாலையாகச் சூடி, காலில் கழல் ஒலிப்ப இவற்றால் ஏற்படும் அழகினை உடையவர். அழகு விளங்குகின்ற மாலையையும், வெண்ணீற்றையும் அணிந்து செந்நிறமுடைய இயல்பினர் ஆகிய பெருமான் அம்மையப்பராய் இருவராய் உள்ளார். அழகு விளங்குகின்ற மயில்கள் ஆட மேகங்கள் உலாவும் சோலைகளை உடைய இமயத்து மன்னன் மகளாகிய

பார்வதிக்குத் தலைவர். பார்வதியினுடைய நிறத்தின் வண்ணம் அழகுவெளிப்படுகின்ற அன்ன நிறத்தின் வண்ணமாகும். (காரன்னம்)அவருடைய நிறம் நெருப்பின் நிறமாகும்.

சிவனெனுமோசை

நகைவளர் கொன்றை துன்று நகுவெண் டலையர்
நளிர்கங்கை தங்கு முடியர்
மிகைவளர் வேத கீத முறையோடும் வல்ல
கறைகொண் மணிசெய் மிடறர்
முகைவளர் கோதை மாதர் முனிபாடு மாறு
மெரியாடு மாறு மிவர்கைப்
பகைவளர் நாகம் வீசி மதியங்கு மாறு
மிதுபோலு மீச ரியல்பே. **#78**

விளக்கம் மிகுகின்ற கொன்றை மலர் நெருங்கிய தலைமாலையும் குளிர்ந்த கங்கையும் தங்கிய சடைமுடியை உடையவர். உலகில் மேம்பட்டு விளங்குகின்ற வேதப் பாடல்களை ஒலிக்கும் முறையோடு பாடுதலில் வல்ல, விடக்கறை பொருந்திய நீலகண்டர். மொட்டுக்களால் ஆகிய மாலையை அணிந்த பார்வதி, பெருமானுடைய கூத்தாடலுக்கு ஏற்பப்பாடும் முறையும் பெருமான் தீயிடை ஆடும் முறையும், இவர் கையில் ஏந்திய பகைத்தன்மை வளர்கின்ற நாகத்தை அகற்றிப் பிறை அசையுமாறு இவர் இவ்வாறு செய்வதும் போலும் இவர் தன்மையாகும்.

சிவனெனுமோசை

ஒளிவளர் கங்கை தங்கு மொளிமா லயன்ற
னுடல்வெந்து வீய சுடர்நீ
றணிகிள ரார வெள்ளை தவழ்சுண்ண வண்ணர்
தமியாரொருவ ரிருவர்
களிகிளர் வேட முண்டொர் கடமா வுரித்த
வுடைதோல் தொடுத்த கலனார்
அணிகிள ரன்ன தொல்லை யவள்பாக மாக
வெழில்வேத மோது மவரே. **#79**

எம்பெருமான் ஒளிவளர்கின்ற கங்கை தங்கும் சடையின் செந்நிற ஒளியை உடையர். திருமால் பிரமன் இவர்கள் உடைய உடல்கள் சாம்பலாக அவர்களுடைய ஒளி வீசுகின்ற வெள்ளை நீற்றினை, ஒளி வீசும் மாலையின் வெண்ணிறத்தோடு பூசிய வெண்பொடி நிறத்தவர். தனியராயிருந்த ஒருவர். அழகு விளங்குகின்ற அன்னம் போன்ற அநாதிசக்தி ஒருபாகமாக, அதனால் மகிழ்ச்சி மிகும் இருவர் வேடமும் அவருக்கு உண்டு. ஒரு மத யானையை உரித்த தோலை மேலுடையாகப்

போர்த்த, மண்டையோட்டை உடைய அப்பெருமானார் அழகிய வேதத்தை ஓதிக் கொண்டிருப்பவர் ஆவர்.

சிவனெனுமோசை

மலைமட மங்கை யோடும் வடகங்கை நங்கை
மணவாள ராகி மகிழ்வர்
தலைகல னாக வுண்டு தனியே திரிந்து
தவவாண ராகி முயல்வர்
விலையிலி சாந்த மென்று வெறிநீறு பூசி
விளையாடும் வேட விகிர்தர்
அலைகடல் வெள்ள முற்று மலறக் கடைந்த
வழனஞ்ச முண்ட வவரே. **#80**

பார்வதியோடு, வடக்கில் உற்பத்தியாகும் கங்கை என்ற பெண்ணுக்கும் கணவராகி மகிழ்பவர். மண்டையோட்டையே பிச்சை எடுத்து உண்ணும் பாத்திரமாகக் கொண்டு தனியே திரிந்து, அடியார் செய்யும் தவத்தில் வாழ்பவராகி அவர்களுக்கு அருளும் முயற்சியை உடையார். விலையில்லாது கிட்டும் சந்தனமாக மணங்கமழும் திருநீற்றைப் பூசி விளையாடும் வேடத்தை உடையர், உலகியலிலிருந்து வேறுபட்ட இயல்பை உடைய பெருமான், அலைகளை உடைய கடலின் வெள்ளம் முழுவதும் ஒலிக்குமாறு கடைந்ததனால் ஏற்பட்ட கொடிய விடத்தை உண்ட அப்பெருமான் ஆவார்.

சிவனெனுமோசை

புதுவிரி பொனசெ யோலை யொருகா தொர்காது
சுரிசங்க நின்று புரள
விதிவிதி வேத கீத மொருபாடு மோத
மொருபாடு மெல்ல நகுமால்
மதுவிரி கொன்றை துன்று சடைபாக மாதர்
குழல்பாகமாக வருவர்
இதுவிவர் வண்ண வண்ண மிவள்வண்ண வண்ண
மெழில்வண்ண வண்ண மியல்பே. **#81**

புதிதாகச் சுருள் பொன்னால் செய்யப்பட்ட ஓலை ஒருகாதிலும் வளைந்த சங்கு ஒரு காதிலும் காதணிகளாக அமைந்து தோள்கள் மீது புரள, முறைப்படி வேதப்பாடலை ஒருபக்கம் ஓத, இடப்பக்கமாகிய பார்வதி பாகம் மெதுவாக முறுவல் செய்யும். சடைப்பகுதியில் தேன் விரியும் கொன்றைப் பூப் பொருந்த, பெண் பகுதி, கூந்தலைப் பின்னியிருக்கும் பாகமாக வருகின்ற பெருமானுடைய நிறமும், இயல்பும் இவை, தேவியினுடைய நிறமும் இயல்பும் இவை. அழகு வண்ணங்கள்

இரண்டன் இயல்புகள் இவையே.

திருஅங்கமாலை

திருஅங்கமாலை

திருஅங்கமாலை,
பண் - சாதாரி

தலையே நீவணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய். #82 ★★★★★

தலைகளால்ஆகிய மாலையைத் தலையில் அணிந்து மண்டையோட்டில் எடுக்கும் பிச்சைக்கு உலாவும் தலைவனைத் தலையே! நீ வணங்குவாயாக.

திருஅங்கமாலை

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ. #83

கண்களே! கடல்விடத்தை உண்ட நீலகண்டனாய் எட்டுத் தோள்களையும் வீசிக் கொண்டு நின்ற நிலையில் ஆடும் பெருமானை நீங்கள் காணுங்கள்.

திருஅங்கமாலை

செவிகாள் கேண்மின்களோ -சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்திற மெப்போதும்
செவிகாள் கேண்மின்களோ. #84

செவிகளே! சிவபெருமானாகிய எங்கள் தலைவனாய், செம்பவளமும் தீயும் போன்ற திருமேனியனாகிய பெருமானுடைய பண்புகளையும் செயல்களையும் எப்பொழுதும் கேளுங்கள்.

திருஅங்கமாலை

மூக்கே நீமுரலாய் - முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கைம ணாளனை
மூக்கே நீமுரலாய். #85

மூக்கே! சுடுகாட்டில் தங்குகின்ற முக்கண்ணனாய்ச் சொல்வடிவமாய்

இருக்கும் பார்வதி கேள்வனை நீ எப்போழுதும் போற்றி ஒலிப்பாயாக.

திருஅங்கமாலை

வாயே வாழ்த்துகண்டாய் - மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்றன்னை
வாயே வாழ்த்துகண்டாய். **#86**

வாயே! மதயானையின் தோலைப் போர்த்துப் பேய்கள் வாழும் சுடுகாட்டில் கூத்து நிகழ்த்தும் பெருமானை நீ எப்போதும் வாழ்த்துவாயாக.

திருஅங்கமாலை

நெஞ்சே நீநினையாய் - நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீநினையாய். **#87**

நெஞ்சே! மேல் நோக்கிய செஞ்சடையை உடைய புனிதனாய், மேகங்கள் அசையும் இமயமலை மகளாகிய பார்வதி கேள்வனை எப்பொழுதும் நினைப்பாயாக.

திருஅங்கமாலை

கைகாள் கூப்பித்தொழீர் - கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர். **#88**

கைகளே! மணங்கமழும் சிறந்த மலர்களைச் சமர்ப்பித்துப் படம் எடுக்கும் வாயை உடைய பாம்பினை இடையில் இறுகக் கட்டிய மேம்பட்ட பெருமானைக் கூப்பித் தொழுவீராக.

திருஅங்கமாலை

ஆக்கை யாற்பயனென் - அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையா லட்டிப் போற்றியென் னாதஇவ்
ஆக்கை யாற்பயனென். **#89**

எம் பெருமானுடைய கோயிலை வலமாகச் சுற்றி வந்து பூக்களைக் கையால் சமர்ப்பித்து அவனுக்கு வணக்கம் செய்யாத உடம்பினால் யாது பயன்?

திருஅங்கமாலை

கால்க ளாற்பயனென் - கறைக்
கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்க ளாற்பயனென். **#90**
நீலகண்டனான எம்பெருமான் தங்கியிருக்கும் கோயிலாகிய, அழகான
கோபுரத்தை உடைய கோகரணம் என்ற தலத்தை வலம் வாராத
கால்களால் யாது பயன்?

திருஅங்கமாலை

உற்றா ராருளரோ - வுயிர்
கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லால்நமக்
குற்றா ராருளரோ. **#91**
கூற்றுவன்நம் உயிரைக் கைப்பற்றிக்கொண்டு போகும்பொழுது,
குற்றாலத்தில் விரும்பித் தங்கியிருக்கும் கூத்தப் பிரானைத் தவிர நமக்கு
வேண்டியவர் என்று யாவர் உளர்?

திருஅங்கமாலை

இறுமாந் திருப்பன்கொலோ -ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்றங்கு
இறுமாந் திருப்பன்கொலோ. **#92**
எல்லோரையும் அடக்கி ஆளும் எம்பெருமானுடைய பலவாகிய
சிவகணத்தவருள் ஒருவனாகிச் சிறிய மானை ஏந்திய
அப்பெருமானுடைய சிவந்த திருவடிகளின் கீழ்ச் சென்று அங்கு இன்பச்
செருக்கோடு இருப்பேனோ?

திருஅங்கமாலை

தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன். **#93**
திருமாலும் நான்முகனும் தேடியும் காணமுடியாத தேவனைத் தேடி
அவன் என் நெஞ்சத்துள்ளேயே இருக்கின்றான் என்ற செய்தியை
அறிந்து கொண்டேன்.

திருக்கெடிலவாணர்

திருஅதிகைவீரட்டானம்

திருக்கெடிலவாணர்,
பண் - காந்தாரம்

முளைக்கதி ரிளம்பிறை மூழ்க வெள்ளநீர்
வளைத்தெழு சடையினர் மழலை வீணையர்
திளைத்ததோர் மான்மறிக் கையர் செய்யபொன்
கிளைத்துழித் தோன்றிடுங் கெடில வாணரே. **#94**

மண்ணைத் தோண்டிய அளவிலே சிவந்த பொன் வெளிப்படும் கெடில நதிக்கரையில் உகந்தருளியிருக்கும் பெருமான் கிரணங்களை உடைய பிறை முழுகுமாறு கங்கை வெள்ளத்தைத் தேக்கிய நிமிர்ந்த சடையினராய், இனிய வீணையை ஒலிப்பவராய், மான்குட்டி மகிழ்ந்திருக்கும் கையினை உடையவராய், அடியவர் கண்ணுக்குக் காட்சி வழங்குகிறார்.

திருஅதிகைவீரட்டானம்

ஏறின ரேறினை யேழை தன்னொரு
கூறினர் கூறினர் வேத மங்கமும்
ஆறின ராறிடு சடையர் பக்கமும்
கீறின வுடையினர் கெடில வாணரே. **#95**

கெடிலவாணர் காளைவாகனம் உடையவர். பார்வதி பாகர். நான்கு வேதமும் ஆறு அங்கங்களும் அடியார்களுக்கு உபதேசித்தவர். கங்கை தங்கும் சடையினர். பக்கத்திலும் கிழிந்த உடையைக் கொண்டவர்.

திருஅதிகைவீரட்டானம்

விடந்திகழ் கெழுதரு மிடற்றர் வெள்ளைநீ
றுடம்பழ கெழுதுவர் முழுதும் வெண்ணிலாப்
படர்ந்தழ கெழுதரு சடையிற் பாய்புனல்
கிடந்தழ கெழுதிய கெடில வாணரே. **#96**

முழுவதும் பிறையின் வெள்ளிய ஒளி பரவி, அழகாக நிமிர்ந்த சடையில் பாய்ந்த கங்கைப் புனல் தங்கி அழகுறுத்தும் கெடிலவாணர், விடக்கறை தங்கி விளங்கும் நீலகண்டர். வெண்ணீற்றை உடம்பில் அழகாக அணிந்தவர்.

திருஅதிகைவீரட்டானம்

விழுமணி யயிலெயிற் றம்பு வெய்யதோர்

கொழுமணி நெடுவரை கொளுவிக் கோட்டினார்
செழுமணி மிடற்றினர் செய்ய வெய்யதோர்
கெழுமணி யரவினர் கெடில வாணரே. **#97**

கெடிலவாணர் விரும்பத்தக்க சிறந்த இரத்தினங்களை உடைய மேருமலையை, நாகரத்தினங்களையுடைய பாம்பினை நாணாக இணைத்துக் கூரிய பற்களை உடைய அம்புகளைச் செலுத்துவதற்காக வளைத்தார். அவர் நீலகண்டர். நிறத்தால் சிவந்த இரத்தினத்தை உடைய கொடிய நாகபாம்பை அணிகலனாக உடையவர்.

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

குழுவினர் தொழுதெழு மடியர் மேல்வினை
தழுவின கழுவுவர் பவள மேனியர்
மழுவினர் மான்மறிக் கையர் மங்கையைக்
கெழுவின யோகினர் கெடில வாணரே. **#98**

கெடில வாணர் கூட்டமாய்த் தம்பக்கல் வந்து தம்மைத் தொழுது எழும் அடியவர்களுக்கு மேல்வரக்கடவ வினைகளைப் போக்குபவர். பவளம் போன்ற செந்நிற மேனியை உடையவர். மழுவையும் மான்குட்டியையும் ஏந்திய கையினர். பார்வதி பாகராய் இருந்தே யோகத்தில் இருப்பவர்.

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

அங்கையி லனலெரி யேந்தி யாறெனும்
மங்கையைச் சடையிடை மணப்பர் மால்வரை
நங்கையைப் பாகமும் நயப்பர் தென்றிசைக்
கெங்கைய தெனப்படுங் கெடில வாணரே. **#99**

தென் திசையின் கங்கை என்று போற்றப்படும் கெடிலநதிக் கரையின் வீரட்டத்தில் உறையும் பெருமானார் உள்ளங்கையில் நெருப்பினை ஏந்தி, கங்கை என்னும் மங்கையைச் சடையில் சேர்த்தியவர். பார்வதியைத் தம் திருமேனியின் ஒருபாகமாக விரும்புபவர்.

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

கழிந்தவர் தலைகல னேந்திக் காடுறைந்
திழிந்தவ ரொருவரென் றெள்க வாழ்பவர்
வழிந்திழி மதுகர மிழற்ற மந்திகள்
கிழிந்ததே னுகர்தருங் கெடில வாணரே. **#100**

தேன் கூடு கிழிந்ததால் வழிந்த தேனோடு கீழே இறங்கும் வண்டுகள் ஒலிக்க ஒழுகும் தேனைப் பெண் குரங்குகள் நுகரும் கெடிலவாணர் இறந்தவர்களின் மண்டை ஓட்டினை உண்கலனாக ஏந்திச் சுடுகாட்டில் தங்கிக் கீழ் நிலையில் உள்ளவர் என்று அறிவிலிகள் பரிகசிக்குமாறு

வாழ்பவர்.

திருஅதிகைவீரட்டானம்

கிடந்தபாம் பருகுகண் டரிவை பேதுறக்
கிடந்தபாம் பவளையோர் மயிலென் றையுறக்
கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையு மேங்கவே
கிடந்துதா னகுதலைக் கெடில வாணரே. **#101**

பெருமான் திருமார்பில் கிடந்த பாம்பினைத் தன் அருகில் கண்டு பார்வதி மயங்க, அப்பாம்பு அவளை மயிலோ என்று ஐயப்பட, கங்கை தங்கிய சடைமேல் உள்ள பிறையும் பாம்பினைக் கண்டு மனம் வருந்த, இவற்றை எல்லாம் கண்டு சிரிக்கும் மண்டை ஓட்டினைக் கையில் கொண்டவர் கெடில வாணராவர்.

திருஅதிகைவீரட்டானம்

வெறியுறு விரிசடை புரள வீசியோர்
பொறியுறு புலியுரி யரைய தாகவும்
நெறியுறு குழலுமை பாக மாகவும்
கிறிபட வுழிதர்வர் கெடில வாணரே. **#102**

கெடில வாணர் நறுமணம் கமழ்கின்ற விரிந்த சடை புரளுமாறு தலையை அசைத்து, புள்ளிகளை உடைய புலித்தோலை இடையில் அணிந்து, சுருண்ட கூந்தலை உடைய உமாதேவி தம்திருமேனியில் ஒருபாகமாக இருக்கத் தந்திரமாக மாயக் கூத்தாடுவர்.

திருஅதிகைவீரட்டானம்

பூண்டதே ரரக்கனைப் பொருவின் மால்வரைத்
தூண்டுதோ ளவைபட வடர்த்த தாளினார்
ஈண்டுநீர்க் கமலவாய் மேதி பாய்தரக்
கீண்டுதேன் சொரிதருங் கெடில வாணரே. **#103**

பெருக்கெடுத்தோடும் நீர்நிலையில் மலர்ந்திருக்கும் தாமரைப் பூவின் பக்கம் எருமை பாய்தலால் தாமரை இதழ் கிழியத் தேன் வெளிப்படுகின்ற கெடிலவாணர் புட்பக விமானத்தைச் செலுத்தி வந்த இராவணனை ஒப்பற்ற மேம்பட்ட கயிலைமலையைப் பெயர்க்கமுற்பட்ட தோள்கள் நசுங்குமாறு வருந்திய திருவடியை உடையவர்.

நமச்சிவாயப்பதிகம்

நமச்சிவாயப்பதிகம்

நமச்சிவாயப்பதிகம்,
பண் - காந்தாரம், இது சமணர்கள் கற்றூணிற்கட்டிக் கடலிலே வீழ்த்தினபோது ஓதியருளியது.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. **#104** ★★★★★

வேதமான வாசகத்திற்கு நிகரான வாக்கியப் பொருளாக உள்ளவனாய்ப் பரஞ்சோதியாகிய அழியாத வீட்டுலகினனாய் உள்ள எம்பெருமானுடைய, பொலிவுடைய, தமக்குத்தாமே இணையான சேவடிகளை உள்ளம் பொருந்தக் கைதொழுதலால் கல்லைத் துணையாகச் சேர்த்து அதனோடு இணைத்துக் கடலில் தள்ளிவிட்டாலும் எம்பெருமானுடைய திருவைந்தெழுத்தே நமக்குப் பெரிய துணையாகும்.

நமச்சிவாயப்பதிகம்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே. **#105**

பூக்களுக்குள் விலைமதிப்பரிய ஆபரணம்இதழ்கள் மிக்க தாமரையாகும். பசுக்களுக்கு விலைமதிப்பற்ற ஆபரணம் சிவபெருமான் அபிடேகத்துக்குப் பஞ்சகவ்வியம் உதவுதல். அரசனுக்கு விலைமதிப்பற்ற ஆபரணம் செங்கோல் வளையாமல் ஆட்சி செய்வதாம். நாவினுக்கு விலைமதிப்பற்ற ஆபரணம் திருவைந்தெழுத்தேயாகும்.

நமச்சிவாயப்பதிகம்

விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே. **#106**

வானளாவ அடுக்கிய விறகிலே கொடிய நெருப்பு அவற்றை உண்பதற்கு உள்ளே புகுந்தால் விறகினுள் ஒன்றும் மீதியிராது எல்லாம் சாம்பலாகும். இறைவனால் படைக்கப்பட்ட உலகில் மக்கள் பலகாலும் பழகிச் செய்த

பாவத்தை நெருங்கி நின்று போக்குவது திருவைந்தெழுத்தேயாகும்.

நமச்சிவாயப்பதிகம்

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்.
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே. **#107**

எவ்வளவு வறுமைத் துன்பத்தால் நலிவுறினும் எம்பெருமானை விடுத்து வேறுயாரையும் இரந்து 'என் துன்பத்தைப் போக்கினால் நீ எம்பிரானே' என்று கூறித் துயரத்தைப் போக்கு எனக் கேட்போம் அல்லோம். மலையின் அடியில் அகப்பட்டுக் கிடந்தாலும் அருளினால் நமக்கு ஏற்படும் நடுக்கத்தை நீக்குவது திருவைந் தெழுத்தேயாகும்.

நமச்சிவாயப்பதிகம்

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கம
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கல நமச்சி வாயவே. **#108**

விரதத்தை மேற்கொண்ட சான்றோர்களுக்குத் திருநீறு சிறந்த அணியாகும். நான்மறை ஆறங்கம் ஓதுதல் அந்தணர்களுக்குச் சிறந்த அணியாகும். பிறைக்குச் சிவபெருமானுடைய அழகிய சடை சிறந்த அணியாகும். எம்மைப் போன்ற அடியார்களுக்குச் சிறந்த அணி திருவைந்தெழுத்தேயாகும்.

நமச்சிவாயப்பதிகம்

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில னாடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே. **#109**

மனக்கோட்டம் இல்லாது எல்லார்க்கும் நன்மையைச் செய்யும் சிவபெருமான், தன்னையே பற்றுக்கோடாகச் சார்ந்த அடியவர்களைத் தவிர மற்றவர்களுக்கு உயர்நலன் செய்யான். அவர்களுக்கு நாடோறும் விரும்பியதனை நல்காது வினைப்பயன்படி நுகருமாறு விடுப்பான். உயர்ந்த குடும்பத்தில் அடியவர்கள் பிறந்தவர் அல்லராயினும் நற்குலத்துக்குரிய நன்மைகளை மிகவும் கொடுப்பது எம்பெருமானுடைய திருவைந்தெழுத்தேயாகும்.

நமச்சிவாயப்பதிகம்

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடச் சென்றலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினே னாடிற்று நமச்சி வாயவே. **#110**

மேம்பட்ட தொண்டர்கள் உலகப்பற்றுக்களை நீக்கிவிட்டனர். அவர்கள் மேம்பட்ட வீட்டு நெறியையே அடைந்தனர். அடியவர்கள் கூட அடியேனும் ஓடிச் சென்று எம்பெருமான் திருவுருவத்தை அகக்கண்ணால் கண்டேன். அங்ஙனம் கண்டவுடன் திருவைந்தெழுத்தை நாடினேன். நாடிய என்னை அத்திருவைந் தெழுத்தும் நாடியது.

நமச்சிவாயப்பதிகம்

இல்லக விளக்கது விருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. **#111**

வீட்டில் உள்ள விளக்கு ஆங்குள்ள இருளைப் போக்குவதாம். சொல்லின் அகத்து நின்று விளக்குவதாய், ஒளியுடையதாய், பல இடங்களையும் விளக்குவதாய்ப் பல சமயத்தாரும் தம்மை அறியாமலே காண நிற்பதாய் ஞானம் நிறைந்த உள்ளத்திற்கு விளக்குப்போல ஒளியை நல்குவது திருவைந்தெழுத்து மந்திரமே.

நமச்சிவாயப்பதிகம்

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாத றிண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே. **#112**

முந்துறமுன்னம் வீடுபேற்றிற்கு வழிகாட்டிய முதல்வன் முக்கட்பிரானாவான். அவன் அருளிய வழியே உறுதியாகப் பற்றுக் கோடாவது. அந்த வழியிலே சென்று அப்பெருமானுடைய திருவடிகளை அடைபவருக்கு எல்லாம், சிறந்த வழியாக உதவுவது திருவைந்தெழுத்து மந்திரமே.

நமச்சிவாயப்பதிகம்

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே. **#113**

மான்குட்டியைக் கையிலேந்திய, பார்வதி பாகனுடைய பூமாலைகள் சார்த்தப்பெற்ற திருவடிகளை உள்ளம் பொருந்தக் கைதொழுவதற்கு நாவை இணைந்து தழுவிய திருவைந்தெழுத்தைப் பற்றிய இப்பத்துப்பாடல்களை வழிபட வல்ல அடியவர்களுக்கு எத்தகைய துயரங்களும் ஏற்படமாட்டா.

திருப்பழனம்

திருப்பழனம்

திருப்பழனம்,
பண் - பழந்தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஆபத்சகாயர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

சொன்மாலை பயில்கின்ற
குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு
பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள்
முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென்
புதுநலமுண் டிகழ்வானோ. #114

சொல் வரிசையைத் தவறாமல்கூவுகின்ற குயில் இனங்களே! பல வரிசையாக உள்ள கோடுகள் பொருந்திய வண்டுகள் பண்பாடும் திருப்பழனத்தை உகந்தருளியிருப்பவனாய், மாலையின் முற்பகுதியில் ஒளிவீசும் பிறை விளங்கும் சடைமுடியைத் தலையில் உடையவனாய்ப் பொன் போன்ற கொன்றை மாலையை மார்பில் அணிந்த எம்பெருமான் என்னுடைய கன்னிஇள நலத்தை நுகர்ந்து பின் என்னை இகழ்ந்து புறக்கணிப்பானோ? தூது சென்று எம்பெருமானிடம் என் நிலையைச் சொல்லுங்கள்.

திருப்பழனம்

கண்டகங்காள் முண்டகங்காள்
கைதைகாள் நெய்தல்காள்
பண்டரங்க வேடத்தான்
பாட்டோவாப் பழனத்தான்
வண்டுலாந் தடமூழ்கி
மற்றவனென் றளிர் வண்ணம்
கொண்டநா டானறிவான்
குறிக்கொள்ளா தொழிவானோ. #115

நீர் முள்ளிகளே! கடல் முள்ளிகளே! தாழைகளே! நெய்தல்களே! பண்டரங்கக் கூத்திற்கு உரிய வேடத்தானாய். பாட்டுக்கள் நீங்காத திருப்பழனத்தில் உறையும் எம்பெருமான், வண்டுகள் உலாவுகின்ற

குளத்தில் யான் மூழ்க என்னைக் காப்பதற்காகத தானும் குளத்தில் குதித்து என்னைக் கரைசேர்த்தபோழ்து அவன என் தளிர்போன்ற வண்ணத்தை அனுபவித்த அந்நாளை, தான் நினைவில் வைத்திருப்பவள் ஆதலின் என்னைத் தன் அடியவளாக ஏற்றுக்கொள்ளாது என்னைத் தனித்து வருந்துமாறு விடுபவனல்லன்.

திருப்பழனம்

மனைக்காஞ்சி யிளங்குருகே
மறந்தாயோ மதமுகத்த
பனைக்கைம்மா வுரிபோர்த்தான்
பலர்பாடும் பழனத்தான்
நினைக்கின்ற நினைப்பெல்லா
முரையாயோ நிகழ்வண்டே
சுனைக்குவளை மலர்க்கண்ணாள்
சொற்றூதாய்ச் சோர்வாளோ. **#116**

வீட்டுக்கொல்லையில் வளர்க்கப்பட்ட காஞ்சி மரத்தில் தங்கியிருக்கும் இளைய நாரையே! மறந்தாயோ! பிரகாசிக்கின்ற வண்டே! மதம் பொழியும் முகத்தை உடையதாய்ப் பனை போலும் திரண்டு உருண்ட பருத்த துதிக்கையை உடைய யானைத் தோலை மேலே போர்த்தவனாய்ப் பலரும் பாடும் திருப்பழனத்து எம்பெருமான் நினைக்கின்ற நினைவை எல்லாம் அறிந்து வந்து என்னிடம் கூற மாட்டாயா? என் தூதாகச் சென்ற என் தோழி அவன்பால் தான் கொண்ட காதலால் தூது சொல்லவேண்டிய செய்தியை நெகிழவிட்டுவிட்டாளோ?

திருப்பழனம்

புதியையா யினியையாம்
பூந்தென்றால் புறங்காடு
பதியாவ திதுவென்று
பலர்பாடும் பழனத்தான்
மதியாதார் வேள்விதனை
மதித்திட்ட மதிகங்கை
விதியாள னென்னுயிர்மேல்
விளையாடல் விடுத்தானோ. **#117**

புதிய இனிய பூமணம் கமழும் தென்றல் காற்றே! சுடுகாட்டைத் தன் இருப்பிடமாகக் கொண்டு பலரும் புகழும் பழனத்தானாய், தன்னை மதியாத தக்கனும் மற்றவரும் செய்தவேள்வியை ஒரு பொருளாகக் கொண்டு அழித்த, விதியைத் தன் இட்டவழக்காக ஆள்கின்ற பெருமான்,

என் உயிருடன் விளையாடுகின்றானோ?

திருப்பழனம்

மண்பொருந்தி வாழ்பவர்க்கும்
மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும்
வீடுபேறாய் நின்றானைப்
பண்பொருந்த விசைபாடும்
பழனஞ்சே ரப்பனையென்
கண்பொருந்தும் போதத்துங்
கைவிடநான் கடவேனோ. **#118**

இம்மண்ணுலகில் பொருந்தி இம்மை இன்பமே கருதி வாழ்கின்றவருக்கும் மேம்பட்ட தூய்மையை உடைய வேதியர்க்கும் வானத்தில் இருக்கும் தேவர்களுக்கும் துன்ப வீடும் இன்பப் பேறுமாய் நிற்பவனாய், சான்றோர்கள் பண்ணொடு பொருந்த இசைபாடும் திருப்பழனத்தில் உறையும் என் தலைவனை யான் உயிர்போய்க் கண் மூடும் நேரத்திலும் கைவிடக் கூடியவனோ?

திருப்பழனம்

பொங்கோத மால்கடலிற் புறம்புறம்போ
யிரைதேரும்
செங்கால்வெண் மடநாராய் செயற்படுவ
தறியேனான்
அங்கோல வளைகவர்ந்தா னணிபொழில்சூழ்
பழனத்தான்
தங்கோல நறுங்கொன்றைத் தாரருளா
தொழிவானோ. **#119**

மிக்க வெள்ளத்தை உடைய பெரிய கடலில் அலைகளின் பின்னே பின்னே சென்று இரையாகிய மீன்களை ஆராயும் சிவந்த கால்களையும் வெண்ணிறத்தையும் உடைய இளைய நாரையே! அடியேன் இனிச் செய்யும் திறன் அறியேன். என்னுடைய அழகிய திரண்ட வளையல்களைக் கவர்ந்தவனாகிய, அழகிய சோலைகளால் சூழப்பட்ட திருப்பழனத்தில் உறையும் எம்பெருமான் தன்னுடைய அழகிய நறிய கொன்றைப் பூமாலையை அருளாது அடியேனைக் கைவிடுவானோ?

திருப்பழனம்

துணையார முயங்கிப்போய்த்
துறைசேரும் மடநாராய்

பணையார வாரத்தான்
பாட்டோவாப் பழனத்தான்
கணையார விருவிசும்பிற்
கடியரணம் பொடிசெய்த
இணையார மார்பனென்
னெழினலமுண் டிகழ்வானோ. **#120**

துணையானபேட்டினைத் தழுவிச் சென்று நீர்த்துறையை அடையும் இளைய நாரையே! முரசங்களின் ஆரவாரமும் பாடல்களின் ஒலியும் நீங்காத திருப்பழனத்தில் உறைபவனாய், அம்பினால் வானத்தில் இயங்கிய காவலை உடைய மும்மதில்களையும் அடியோடு பொடியாக்கியவனும், முடிக்கப்படாமல் இரு பக்கமும் தொங்கவிடப்படும் மாலையை அணிந்த மார்பினை உடையவனுமான எம்பெருமான், என் அழகையும் இனிமையையும் நுகர்ந்து பின் என்னை அலட்சியம் செய்வானோ?

<u>திருப்பழனம்</u>

கூவைவாய் மணிவரன்றிக்
கொழித்தோடுங் காவிரிப்பூம்
பாவைவாய் முத்திலங்கப்
பாய்ந்தாடும் பழனத்தான்
கோவைவாய் மலைமகள்கோன்
கொல்லேற்றின் கொடியாடைப்
பூவைகாள் மழலைகாள்
போகாத பொழுதுளதே. **#121**

திரளாக உள்ள மணிகளை வாரிக் கரையிலே சேர்த்துப் பெருகி ஓடிக்கொண்டிருக்கும் காவிரிப் பாவையின்கண் முத்துக்கள் விளங்குமாறு மகளிர் பாய்ந்து நீராடும் திருப்பழனத்தை உடையவனாய், கொவ்வைக் கனி போன்ற சிவந்த வாயை உடைய பார்வதியின் கேள்வனாய், உள்ள எம்பெருமானுடைய காளை எழுதிய கொடியாடை மேலே உள்ள மழலைபோல் இனிமையாகப் பேசும் பூவைகளே! எம்பெருமானுடைய பிரவாற்றாமல் அடியேனுக்குப் பொழுது ஒவ்வொரு கணமும் ஓர் ஊழியாய் நீண்டு, கழியாது துன்புறுத்துகின்றது.

<u>திருப்பழனம்</u>

புள்ளிமான் பொறியரவம்
புள்ளுயர்த்தான் மணிநாகப்
பள்ளியான் றொழுதேத்த
விருக்கின்ற பழனத்தான்

உள்ளுவார் வினைதீர்க்கு
மென்றுரைப்ப ருலகெல்லாம்
கள்ளியே னானிவர்க்கென்
கனவளையுங் கடவேனோ. **#122**

புள்ளிகளை உடைய மானே! படப்புள்ளிகளை உடைய பாம்பே! அன்னப் பறவையின் உருவத்தை எழுதிய கொடியை உயர்த்திய பிரமனும், படங்களை உடைய திருஅனந்தாழ்வானைப் படுக்கையாக உடைய திருமாலும், தொழுது துதிக்குமாறு பழனத்தில் உறையும் எம்பெருமான் தன்னைத் தியானிப்பவருடைய வினைகளைப் போக்கி இன்பம் அருளுவான் என்று உலகோர் கூறுகின்றனர். உள்ளத்தில் கள்ளத் தன்மையை உடைய அடியேன் வினை தீரப் பெறாமையே அன்றி இத்தலைவனுக்கு என் கனமான வளையல்களையும் இழக்கும் நிலையேன் ஆவேனோ?

<u>திருப்பழனம்</u>

வஞ்சித்தென் வளைகவர்ந்தான்
வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம்
பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய
வழலோம்பு மப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற
சேவடியாய் கோடியையே. **#123**

அஞ்சிப்போய்க் கலியின் துயரம் நீங்குமாறு முத்தீயை ஓம்பும் அப்பூதியின் குடுமிக்குத் தாமரைப் பூவாக இருக்கும் சிவந்த அடிகளை உடைய கூடல் தெய்வமே! என் வளைகளை வஞ்சித்துக் கவர்ந்த, செம்பஞ்சு போன்ற சிவந்த கால்களையும் வெண்சிறகுகளையும் உடைய அன்னப் பறவைகள் பரவி ஆரவாரிக்கும் பழனத்து எம் பெருமான் அடியேனுக்கு அருள் செய்ய வாரானே என்றாலும், கூடல் சுழியின் இரண்டு முனைகளும் இணைந்து ஒன்று சேருமாறு செய்வாயாக.

திருவையாறு

திருஐயாறு

திருவையாறு,
பண் - பழந்தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.
தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை.

விடகிலே னடிநாயேன்
வேண்டியக்கா லியாதொன்றும்
இடகிலே னமணர்கள்த
மறவுரைகேட் டலமந்தேன்
தொடர்கின்றே னுன்னுடைய
தூமலர்ச்சே வடிகாண்பான்
அடைகின்றே னையாறர்க்
காளாய்நா னுய்ந்தேனே. #124

கீழான நாய் போன்ற யான் பொருட்பற்றை விடுவேன் அல்லேன். வறியவராய் என்னிடம் இரந்து வந்தவர்களுக்கு யாதொன்றும் பிச்சையாக இடுவேன் அல்லேன். சமணத்துறவியரின் அறவுரைகளைக்கேட்டு மனம் சுழன்றேன். உன்னுடைய தூய மலர் போன்ற திருவடிகளைத் தரிசித்து வழிபடத் தொடர்ந்து அடைகின்றேன். ஐயாறனாகிய உனக்கு அடிமைப்பட்டேனாய் அடியேன் கடைத்தேறினேன். இனி உன் திருவடிகளை விடமாட்டேன்.

திருஐயாறு

செம்பவளத் திருவுருவர்
திகழ்சோதி குழைக்காதர்
கொம்பமருங் கொடிமருங்குற்
கோல்வளையா ளொருபாகர்
வம்பவிழு மலர்க்கொன்றை
வளர்சடைமேல் வைத்துகந்த
அம்பவள வையாறர்க்
காளாய்நா னுய்ந்தேனே. #125

செம்பவளம் போன்ற அழகிய வடிவினராய், ஒளி வீசும் குழைகளை அணிந்தகாதினராய், கொம்பினை விரும்பிப்படரும் கொடி போன்ற இடையையும் திரண்டவளையல்களையும் உடைய பார்வதியின் பாகராய், புதிதாக மலரும் கொன்றைப்பூவை வளரும் சடைமேல்

வைத்து உகப்பவராகிய அகிய பவளம் போன்ற நிறத்தையுடைய ஐயாற்றெம்பெருமானுக்கு அடியேன் அடிமையாகிக் கடைத்தேறினேன்.

திருஐயாறு

நணியானே சேயானே
நம்பானே செம்பொன்னின்
துணியானே தோலானே
சுண்ணவெண் ணீற்றானே
மணியானே வானவர்க்க
மருந்தாகிப் பிணிதீர்க்கும்
அணியானே யையாறர்க்
காளாய்நா னுய்ந்தேனே. **#126**

அருகிலும் சேய்மையிலும் உள்ளவனே! பொன்மயமான ஆடையை உடையவனே! தோலாடையையும் உடையவனே! பொடியாகிய வெண்ணீறு அணிந்தவனே! சிந்தாமணி போல்பவனே! தேவர்களுக்கும் பிணியைத்தீர்க்கும் மருந்தாகி நெருங்கியிருப்பவனே! ஐயாறனாகிய உனக்கு அடிமையாய் அடியேன் கடைத்தேறினேன்.

திருஐயாறு

ஊழித்தீ யாய்நின்றா
யுள்குவா ருள்ளத்தாய்
வாழித்தீ யாய்நின்றாய்
வாழ்த்துவார் வாயானே
பாழித்தீ யாய்நின்றாய்
படர்சடைமேற் பனிமதியம்
ஆழித்தீ யையாறர்க்
காளாய்நா னுய்ந்தேனே. **#127**

உலகத்தை அழிக்கும் ஊழித்தீயாய் நின்றவனே! விரும்பித்தியானிப்பவர் உள்ளத்தில் உள்ளவனே! உடம்பகத்து இருந்து உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத முத்தீயாய் இருப்பவனே! வாழ்த்தும் அடியவர் வாயில் உள்ளவனே! பிரமனும் திருமாலும் காணமுடியாதபடி பெரிய தீத்தம்பமாக நின்றவனே! பரவிய சடையின் மேல், உலகத்தாருக்குக் குளிர்ச்சி தரும் சந்திரனாய், தலைவனைப் பிரிந்த தலைவிக்குக் கடலின் உள்ளிருக்கும் குதிரை முகத்தீப்போல வருத்தும் பிறையைச் சூடியவனே! ஐயாறனாகிய உனக்கு ஆளாய் நான் உய்ந்தேனே.

திருஐயாறு

சடையானே சடையிடையே
தவழுந்தண் மதியானே
விடையானே விடையேறிப்
புரமெரித்த வித்தகனே
உடையானே யுடைதலைகொண்
டூரூருண் பலிக்குழலும்
அடையானே யையாறர்க்
காளாய்நா னுய்ந்தேனே. **#128**

சடையை உடையவனே! சடையில் தவழும் பிறையைச் சூடியவனே! காளைவாகனனே! காளை மீது இவர்ந்து முப்புரங்களையும் எரியச்செய்த திறமை உடையவனே! எல்லோரையும் அடிமையாக உடையவனே! மண்டை ஓட்டை ஏந்தி ஊர்தோறும் பிச்சை உணவுக்கு அலைபவனாய் எல்லோரும் அடையத்தக்க சரணியனே! ஐயாறனாகிய உனக்கு அடியேன் ஆளாகி உய்ந்தேனே.

திருஐயாறு

நீரானே தீயானே
நெதியானே கதியானே
ஊரானே யுலகானே
யுடலானே யுயிரானே
பேரானே பிறைசூடீ
பிணிதீர்க்கும் பெருமானென்
றாராத வையாறர்க்
காளாய்நா னுய்ந்தேனே. **#129**

'நீரும் நெருப்பும் செல்வமும் செல்லும் வழியும் ஊரும் உலகமும் உடலும் உயிருமாகி இருப்பவனே! பலதிரு நாமங்களை உடையவனே! பிறை சூடியே! பிணிகளைப் போக்கும் பெருமானே!' என்று பலகால் அழைத்தும் ஆர்வம் அடங்கப் பெறாது மேன்மேல் வளர்ந்து வரும் நிலையில் அடியேனை ஆட்கொண்டு அருளும் ஐயாறனாகிய உனக்கு ஆளாய் நான் உய்ந்தேன்.

திருஐயாறு

கண்ணானாய் மணியானாய்
கருத்தானா யருத்தானாய்
எண்ணானா யெழுத்தானா
யெழுத்தினுக்கோ ரியல்பானாய்
விண்ணானாய் விண்ணிடையே
புரமெரித்த வேதியனே

அண்ணான வையாறர்க்
காளாய்நா னுய்ந்தேனே. **#130**

கண்ணாகவும் கண்ணின் மணியாகவும், அக நோக்கத்திற்கு உரிய கருத்தாகவும், நுகர்ச்சியாகவும், எண்ணாகவும், எழுத்தாகவும், எழுத்தின் இயல்பாகவும், பரவெளியாகவும், வானத்தில் இயங்கிய மும்மதில்களை அழித்த வேதியனாகவும், அடியேனுக்கு நெருங்கியவனாகவும் உள்ள ஐயாறனாகிய உனக்கு ஆளாய் நான் உய்ந்தேனே.

<u>திருஐயாறு</u>

மின்னானா யுருமானாய்
வேதத்தின் பொருளானாய்
பொன்னானாய் மணியானாய்
பொருகடல்வாய் முத்தானாய்
நின்னானா ரிருவர்க்குங்
காண்பரிய நிமிர்சோதி
அன்னானே யையாறர்க்
காளாய்நா னுய்ந்தேனே. **#131**

மின்னாகவும் இடியாகவும் வேதத்தின் பொருளாகவும், பொன்னாகவும் மணியாகவும் அலைகள் மோதும் கடலில் உள்ள முத்தாகவும் உள்ளவனே! நின்னைப் போலத் தம்மைப் பரம்பொருளாகக் கருதிய பிரமனும் திருமாலும் காணமுடியாத உயர்ந்த தீப்பிழம்பாய் நின்ற அத்தன்மையனே! இவ்வாறு உள்ள ஐயாறனாகிய உனக்கு ஆளாய் நான் உய்ந்தேனே.

<u>திருஐயாறு</u>

முத்திசையும் புனற்பொன்னி
மொய்பவளங் கொழித்துந்தப்
பத்தர்பலர் நீர்மூழ்கிப்
பலகாலும் பணிந்தேத்த
எத்திசையும் வானவர்க
ளெம்பெருமா னெனவிறைஞ்சும்
அத்திசையா மையாறார்க்
காளாய்நா னுய்ந்தேனே. **#132**

முத்துக்களோடு கூடிவரும் காவிரியின் வெள்ளம், செறிந்த பவளங்களை அரித்துக் கரைசேர்க்க, பத்தர்பலர் காவிரி நீரில் மூழ்கிப் பலகாலும் வணங்கித்துதிக்க எல்லாத் திசைகளிலும் தேவர்கள் 'எம்பெருமான்!' என்று கூப்பிட்டவாறே வழிபடும் அத்திசைகளில் எல்லாம் அவர்கள் வழிபாட்டை ஏற்கும் ஐயாறர்க்கு ஆளாய் நான் உய்ந்தேனே.

திருஐயாறு

கருவரைசூழ் கடலிலங்கைக்
கோமானைக் கருத்தழியத்
திருவிரலா லுதைகரணஞ்
செய்துகந்த சிவமூர்த்தி
பெருவரைசூழ் வையகத்தார்
பேர்நந்தி யென்றேத்தும்
அருவரைசூ ழையாறர்க்
காளாய்நா னுய்ந்தேனே. **#133**

கடலிடையே பெரிய மலைகளால் சூழப்பட்ட இலங்கை நகர் மன்னனாகிய இராவணனை அவன் எண்ணம் அழியுமாறு திருவிரலால் அழுத்தி உதைத்தலாகிய செயலைச்செய்து அவன் செருக்கை அடக்கி மகிழ்ந்த சிவமூர்த்தியாய், பெரிய கடலால் சூழப்பட்ட இந்நில உலகத்தவர் நந்தி என்று பெயரிட்டு வழிபடும், பெரிய மூங்கிற் காடுகள் சூழ்ந்த ஐயாற்று எம்பெருமானுக்கு, அடியேன் அடிமையாகிக் கடைத்தேறினேன்.

தசபுராணம்

தசபுராணம்

தசபுராணம்,
பண் - பழம்பஞ்சுரம்

பருவரை யொன்றுசுற்றி யரவங்கைவிட்ட
விமையோரிரிந்து பயமாய்த்
திருநெடு மானிறத்தை யடுவான்விசும்பு
சுடுவானெழுந்து விசைபோய்ப்
பெருகிட மற்றிதற்கொர் பிதிகாரமொன்றை
யருளாய்பிரானே யெனலும்
அருள்கொடு மாவிடத்தை யெரியாமலுண்ட
வவனண்டரண்ட ரரசே. **#134**

பெரிய மலையைச் சுற்றிக் கடைகயிறாகக் கொண்ட பாம்பினை விடுத்து நீங்கிய தேவர் ஓடி அஞ்சும்படியாகத் திருமால் திருமேனியை ஒழித்தற்பொருட்டும், விண்ணைச்சுடும் பொருட்டும் எழுந்து விசையொடு சென்று அந்நஞ்சு எங்கும் பரவ, 'பெருமானே! இவ் விடத்துன்பம் நீங்குதற்கு ஒரு கழுவாய் அருளிச்செய்வாயாக' என்று எல்லோரும் வேண்டவும் அருளினால், அப்பெரிய விடத்தை, மற்றவர்களைத் தாக்காதவாறு உண்ட பெருமானே எல்லா அண்டங்களுக்கும் அரசனாவான்.

தசபுராணம்

நிரவொலி வெள்ளமண்டி நெடுவண்டமூட
நிலநின்றுதம்ப மதுவப்
பரமொரு தெய்வமெய்த விதுவொப்பதில்லை
யிருபாலுநின்று பணியப்
பிரமனு மாலுமேலை முடியோடுபாத
மறியாமைநின்ற பெரியோன்
பரமுத லாயதேவர் சிவனாயமூர்த்தி
யவனாநமக்கொர் சரணே. **#135**

பரவிய ஓசையை உடைய வெள்ளப்பெருக்கு மேற் சென்று நீண்ட கண்டங்களை மூழ்க்க, நிலத்திலே நின்ற தீத்தம்பத்தில் பரம்பொருளாகிய ஒப்பற்ற தெய்வம் அடைய, பிரமனும் திருமாலும் இதனை ஒத்த தீப்பிழம்பு முன்னும் இல்லை என்று கருதி அந்நாளில் இரு பக்கங்களிலும் நின்று பணியுமாறு அவர்கள் அதன் முடியையும் அடியையும் அறிய முடியாமல் நின்ற பெரியோனாய் மேம்பட்ட

முற்பட்ட தேவனாம் சிவமூர்த்தியாகிய பெருமானே நமக்குப் பாதுகாவல் நல்கும் சரணியன் ஆவான்.

தசபுராணம்

காலமு நாள்களூழி படையாமுனேக
வுருவாகிமூவ ருருவில்
சாலவு மாகிமிக்க சமயங்களாறி
னுருவாகிநின்ற தழலோன்
ஞாலமு மேலைவிண்ணோ டுலகேழுமுண்டு
குறளாயொராலி னிலைமேல்
பாலனு மாயவற்கொர் பரமாயமூர்த்தி
யவனாநமக்கொர் சரணே. **#136**

நாண்மீன்கள் முதல் ஊழி முடியப் பாகுபட்ட காலத்தையும் படைத்தற்கு முன்பு ஒன்றாய் நின்றவனாய், மும் மூர்த்திகள் உருவிலும் அவர்கள் உயிருக்கு உயிராய் அமைந்தவனாய், அறுவகைச் சமயத்தோருக்கும் அவ்வவர் பொருளாய் விளங்கி நிற்பவனாய், உள்ள சோதி வடிவான பெருமான் வாமனனாகி மண்ணும் மேலை விண்ணுலகும் அடங்கிய ஏழுலகமும் உண்டு. ஓர் ஆலிலை மேல் சிறு குழந்தையாய்ப் பள்ளி கொண்ட திருமாலுக்கும் மேம்பட்ட மூர்த்தியாய் உள்ளவன். அவன் தான் நமக்கு ஒப்பற்ற சரணியன்.

தசபுராணம்

நீடுயர் விண்ணுமண்ணு நெடுவேலைகுன்றொ
டுலகேழுமெங்கு நலியச்
சூடிய கையராகி யிமையோர்கணங்கள்
துதியோதிநின்று தொழலும்
ஓடிய தாரகன்ற னுடலம்பிளந்தும்
ஒழியாதகோப மொழிய
ஆடிய மாநடத்தெ மனலாடிபாத
மவையாநமக்கொர் சரணே. **#137**

நெடிது உயர்ந்த விண்ணும் மண்ணும் நெடிய கடல் மலைகளொடு ஏழுலகமும் முழுவதும் வருந்த வருந்திய தாரகனுடைய கொடுமைகளுக்கு ஆற்றாமல் தேவர் கூட்டத்தார் குவிந்த கையராகிப் பெருமானுடைய புகழ்களைக் கூறியவாறு தொழுத அளவில், தன் இறுதியை நினைத்து உயிர்தப்பி ஓடிய தாரகனுடைய உடலைப் பிளந்தும் நீங்காத கோபம் நீங்குதற்பொருட்டு மகாதாண்டவத்தை ஆடிய தீயாடியப்பருடைய திருவடிகளே நமக்கு ஒப்பற்ற அடைக்கலம் நல்குவன.

தசபுராணம்

நிலைவலி யின்றியெங்கு நிலனோடுவிண்ணு
நிதனஞ்செய்தோடு புரமூன்
றலைநலி வஞ்சியோடி யரியோடுதேவ
ரரணம்புகத்த னருளால்
கொலைநலி வாளிமூள வரவங்கைநாணு
மனல்பாயநீறு புரமா
மலைசிலை கையிலொல்க வளைவித்தவள்ள
லவனாநமக்கொர் சரணே. **#138**

எதிர்த்து நிலைத்து நிற்பதற்குரிய வலிமை இல்லாமையால், மண்ணையும், விண்ணையும் எங்கும் அழித்துக் கொண்டு சஞ்சரிக்கும் திரிபுரங்கள் துன்புறுத்தும் துயரத்துக்கு அஞ்சி ஓடித் திருமாலோடு தேவர்கள் அடைக்கலம் என்று அடையத் தன் அருளால் கொலைத் தொழிலால் வருத்தும் திருமாலாகிய அம்பில் தீக்கடவுள் இணையவும், கையிலுள்ள வாசுகி என்ற பாம்பாகிய நாணில் தீப்பாயவும் மேருமலையாகிய வில் கையில் தளரவும் முப்புரங்களும் சாம்பலாகிவிடுமாறு வில்லை வளைவித்துச் செயற்படுத்திய அருட் கொடையாளனாம் அப்பெருமானே நமக்கு ஒப்பற்ற அடைக்கலம் நல்குபவனாவான்.

தசபுராணம்

நீலநன் மேனிசெங்கண் வளைவெள்ளெயிற்ற
னெரிகேச னேடிவருநாள்
காலைநன் மாலைகொண்டு வழிபாடுசெய்யு
மளவின்கண்வந்து குறுகிப்
பாலனை யோடவோடப் பயமெய்துவித்த
வுயிர்வவ்வுபாசம் விடுமக்
காலனை வீடுசெய்த கழல்போலுமண்டர்
தொழுதோதுசூடு கழலே. **#139**

கருநீல மேனியனும் சிவந்த கண்ணினனும் வளைந்த வெள்ளைக் கோரப் பற்களை உடையவனும் நெருப்புப் போன்ற சிவந்த மயிர் முடியை உடையவனும் ஆகிய காலன், மார்க் கண்டேயனைத் தேடிவந்த அன்று, அம்முனிவன் காலையிலே நல்ல மலர் மாலைகளைக் கொண்டு சிவபெருமானை வழிபாடு செய்த நேரத்தில் அவனிடத்து வந்து அணுகி அவனை மிகவும் அச்சுறுத்தி அவன் உயிரைக் கவரக்கயிற்றை வீசினானாக, அக்காலனை உதைத்து அழித்த சிவபெருமான் திருவடிகளே தேவர்கள் தொழுது வாழ்த்தித் தரைமேல் சூடும்

திருவடிகளாகும்.

தசபுராணம்

உயர்தவ மிக்கதக்க னுயர்வேள்விதன்னி
லவியுண்ணவந்த விமையோர்
பயமுறு மெச்சனங்கி மதியோனுமுற்ற
படிகண்டுநின்று பயமாய்
அயனொடு மாலுமெங்க ளறியாமையாதி
கமியென்றிறைஞ்சி யகலச்
சயமுறு தன்மைகண்ட தழல்வண்ணனெந்தை
கழல்கண்டுகொள்கை கடனே. **#140**

தவத்தில் மேம்பட்ட தக்கன் நிகழ்த்திய மிகச் சிறப்பான வேள்வியில் அவியைப் பெற்று உண்ண வந்த தேவர்களும் அச்சம் மிக்குற்ற வேள்வித் தலைவனும் அக்கினியும் சந்திரனும் ஒறுக்கப்பட்டு அடைந்த நிலைமையை நோக்கி அச்சத்தோடு நின்று பிரமனும், திருமாலும், 'எங்கள் அறியாமை முதலிய குற்றங்களைப் பொறுத்தருள்வாய்', என்று வணங்கி அப்பாற் செல்ல, வெற்றியுற்ற தன்மையைக் கண்ட, தீயைப் போன்ற செந்நிறத்தன் ஆகிய எங்கள் தந்தையின் திருவடிகளைக் கண்டு வழிபடுவதே பிறவாதிருக்க விரும்பும் உயிர்களின் கடமையாகும்.

தசபுராணம்

நலமலி மங்கைநங்கை விளையாடியோடி
நயனத்தலங்கள் கரமா
உலகினை யேழுமுற்று மிருண்மூடமூட
விருளோடநெற்றி யொருகண்
அலர்தர வஞ்சிமற்றை நயனங்கைவிட்டு
மடவாளிறைஞ்ச மதிபோல்
அலர்தரு சோதிபோல வலர்வித்தமுக்க
ணவனாநமக்கொர் சரணே. **#141**

அழகும் பண்பும் மிக்க பார்வதி எம்பெருமானோடு ஓடி விளையாடிய பொழுது அவனுடைய கண்களைக் கைகளால் பொத்த, ஏழு உலகங்களையும் முழுதுமாக இருட்டுக் கவர்ந்து கொள்ளவே, எம்பெருமானுடைய ஒற்றை நெற்றிக்கண் அந்த இருள் அகலுமாறு திறக்க, அதுகண்டு அஞ்சிப் பார்வதி கண்களை மூடிய கைகளை எடுத்துவிட்டு எம்பெருமானை வணங்க, சந்திரனைப் போலவும், சூரியனைப் போலவும் ஏனைய இருகண்களையும் ஒளிவிடச் செய்த அம்முக்கண் மூர்த்தியே நமக்கு ஒப்பற்ற அடைக்கலம் நல்குபவனாவான்.

தசபுராணம்

கழைபடு காடுதென்றல் குயில்கூவவஞ்சு
கணையோனணைந்து புகலும்
மழைவடி வண்ணனெண்ணி மகவோனைவிட்ட
மலரானதொட்ட மதனன்
எழில்பொடி வெந்துவீழ விமையோர்கணங்க
ளெரியென்றிறைஞ்சி யகலத்
தழல்படு நெற்றியொற்றை நயனஞ்சிவந்த
தழல்வண்ணனெந்தை சரணே. **#142**

கரும்புகள் காடுபோல வளர்ந்துள்ள கருப்பங் கொல்லையில் தென்றல் உலவ, குயில்கூவ, ஐந்துமலரம்புகளை உடையவனாய் நெருங்கி வந்து, தனக்குப் பக்க பலமாக இருப்பதாகக் கூறிய கார்மேக வண்ணனாகிய திருமாலையும் இந்திரனையும் விட்டு நீங்கிய, மலர் அம்புகளை விடுத்த மன்மதனுடைய அழகிய உடல் சாம்பலாகித் தரையில் விழ அதனைக் கண்ட தேவர் கூட்டங்கள் நெருப்பு என்று சொல்லி அஞ்சி நீங்குமாறு நெருப்பை வெளிப் படுத்தும் நெற்றியின் ஒற்றைக்கண் சிவந்த தீ நிறத்தவனாகிய எங்கள் தந்தையே நமக்குச் சரணியன் ஆவான்.

தசபுராணம்

தடமல ராயிரங்கள் குறைவொன்றதாக
நிறைவென்றுதன்க ணதனால்
உடன்வழி பாடுசெய்த திருமாலையெந்தை
பெருமானுகந்து மிகவும்
சுடரடி யான்முயன்று சுழல்வித்தரக்க
னிதயம்பிளந்த கொடுமை
அடல்வலி யாழியாழி யவனுக்களித்த
வவனாநமக்கொர் சரணே **#143**

பெரிய தாமரைப் பூக்கள் ஆயிரத்தில் ஒன்று குறைய, வழிபாடு நிறைவதற்காகத் தன் செந்தாமரைக் கண் ஒன்றை இடந்து அதனால் அருச்சித்து வழிபாட்டை நிறைவு செய்த திருமாலை எம் தந்தையாகிய பெருமான் மகிழ்ந்து, தன் ஒளிமிக்க சேவடியால் வட்டமாகச் சக்கரத்தை உண்டாக்கி அதனைச் சுழலச் செய்து, சலந்தரனுடைய மார்பைப் பிளந்த கொடுமை மிக்க வலிமை உடைய சக்கரத்தைப் பாற்கடலையுடைய திருமாலுக்கு அளித்தான். அவனே எமக்கு ஒப்பற்ற அடைக்கலம் நல்குபவனாவான்.

தசபுராணம்

கடுகிய தேர்செலாது கயிலாயமீது
கருதேலுன்வீர மொழிநீ
முடுகுவ தன்றுதன்ம மெனநின்றுபாகன்
மொழிவானைநன்று முனியா
விடுவிடு வென்றுசென்று விரைவுற்றரக்கன்
வரையுற்றெடுக்க முடிதோள்
நெடுநெடு விற்றுவீழ விரலுற்றபாத
நினைவுற்றதென்றன் மனனே. **#144**

விரைந்து செல்லும் தேராயினும் அது கயிலை மலை மீது செல்லாது; உன் வீரத்தைப் பெரிதாகக் கருதாது விட்டு ஒழி. என்னிடத்தில் கோபிப்பது அறம் அன்று' என்று நிறுத்திய தேரில் நின்று கூறிய பாகனை வெகுண்டு, வேகமாகச் சென்று விரைவாக இராவணன் கயிலையைப் பெயர்க்க முற்பட, அவனுடைய தலைகளும் தோள்களும் நெடுநெடு என்னும் ஓசையோடு இற்றுவிழுமாறு அழுத்தியது சிவபெருமானுடைய திருவடியின் விரல் ஒன்று. அத்தகைய திருவடிகளை என் உள்ளம் எண்ணலுற்றது.

பாவநாசத்திருப்பதிகம்

பாவநாசத்திருப்பதிகம்,
பண் - பழம்பஞ்சுரம்

பற்றற் றார்சேர் பழம்பதியைப்
பாசூர் நிலாய பவளத்தைச்
சிற்றம் பலத்தெந் திகழ்கனியைத்
தீண்டற் கரிய திருவுருவை
வெற்றி யூரில் விரிசுடரை
விமலர் கோனைத் திரைசூழ்ந்த
ஒற்றி யூரெ முத்தமனை
யுள்ளத் துள்ளேவைத்தேனே. **#145**

உலகப் பற்றற்றவர்கள் சேரும் பழைய திருத்தலங்களில் திகழ்பவன், பாசூரில் உறையும் பவளம், சிற்றம்பலத்தில் உள்ள கனி, தீண்டுதலுக்கு அரிய திருஉருவம், வெற்றியூரில் விரிந்த ஒளி, தூயவர்கள் தலைவன், கடல் ஒருபுறம் சூழ்ந்த ஒற்றியூர் உத்தமன் ஆகிய பெருமானை அடியேன் உள்ளத்தில் நிலையாக இருத்தினேன்.

பாவநாசத்திருப்பதிகம்

ஆனைக் காவி லணங்கினை
யாரூர் நிலாய வம்மானைக்
கானப் பேரூர்க் கட்டியைக்
கானூர் முளைத்த கரும்பினை
வானப் பேரார் வந்தேத்தும்
வாய்மூர் வாழும் வலம்புரியை
மானக் கயிலை மழகளிற்றை
மதியைச் சுடரை மறவேனே. **#146**

ஆனைக்காவில் உள்ள தெய்வம், ஆரூரில் உறையும் தலைவன், கானப் பேரூரில் உள்ள கரும்பின் கட்டி, கானூரில் முளைத்த கரும்பு, வானத்தினின்றும் நீங்காதவராகிய தேவர் வந்து வழிபடும் திருவாய்மூரில் உறையும் வலம்புரிச் சங்குபோல்வான். பெருமைமிக்க கயிலைமலையில் உறையும் இளைய களிறு, சந்திரனும், சூரியனும் ஆகியவன் என்னும் பெருமானை அடியேன் மறக்க மாட்டேன்.

பாவநாசத்திருப்பதிகம்

மதியங் கண்ணி ஞாயிற்றை

மயக்கந் தீர்க்கு மருந்தினை
அதிகை மூதூ ரரசினை
யையா றமர்ந்த வையனை
விதியைப் புகழை வானோர்கள்
வேண்டித் தேடும் விளக்கினை
நெதியை ஞானக் கொழுந்தினை
நினைந்தேற் குள்ள நிறைந்ததே. **#147**

பிறையைக் குறுங்கண்ணியாக உடைய சூரியன், உலகமயக்கத்தைப் போக்கும் மருந்து, திரவதிகையாகிய பழைய ஊரில் உறையும் அரசு, திருவையாற்றில் விரும்பி உறையும் தலைவன், வேதவிதியாக உள்ளவன், எல்லாப் புகழும் தன்பால் வந்து சேரும் மெய்ப்பொருள், தேவர்கள் விரும்பித்தேடும் ஞானஒளி, பெருஞ் செல்வம், ஞானக் கொழுந்து, ஆகிய பெருமானை விருப்புற்று நினைத்த அளவில் அடியேனுடைய உள்ளம் மகிழ்ச்சியில் நிறைவுற்றது.

<u>பாவநாசத்திருப்பதிகம்</u>

புறம்ப யத்தெம் முத்தினைப்
புகலூ ரிலங்கு பொன்னினை
உறந்தை யோங்கு சிராப்பள்ளி
யுலகம் விளக்கு ஞாயிற்றைக்
கறங்கு மருவிக் கழுக்குன்றிற்
காண்பார் காணுங் கண்ணானை
அறஞ்சூ ழதிகை வீரட்டத்
தரிமா னேற்றை யடைந்தேனே. **#148**

புறம்பயத்தில் உறையும் எங்கள் முத்து, புகலூரில் விளங்கும் பொன், உறையூரில் ஓங்கிக் காணப்படும் சிராப்பள்ளிக் குன்றிலுள்ள உலகுக்கு ஒளிதரும் சூரியன், அருவிகள் ஒலிக்கும் கழுக்குன்றத்தில் தரிசிக்க வருபவர்களுக்குப் பற்றுக்கோடு, அறச்செயல்கள் யாண்டும் செய்யப்படுகின்ற அதிகை வீரட்டத்தில் உள்ள ஆண் சிங்கம் ஆகிய பெருமானை அடியேன் அடைந்தேன்.

<u>பாவநாசத்திருப்பதிகம்</u>

கோலக் காவிற் குருமணியைக்
*குடமூக் குறையும் விடமுணியை
ஆலங் காட்டி லந்தேனை
அமரர் சென்னி யாய்மலரைப்
பாலிற் றிகழும் பைங்கனியைப்
பராய்த் துறையெம் பசும்பொன்னைச்

சூலத் தானைத் துணையிலியைத்
தோளைக் குளிரத் தொழுதேனே. #149
கோலக்காவில் உள்ள நல்ல நிறமுடைய மாணிக்கம், குடமூக்கில் உறையும் விடமுண்டபெருமான், ஆலங்காட்டில் உறையும் அழகிய தேன், தேவர்கள் தலைகளுக்குச் சூட்டப்படும் அழகிய மலர், பால்போல் இனிக்கும் புதுமை மாறாத பழம், பராய்த்துறையில் உள்ள பசிய பொன், சூலம் ஏந்தியவன், ஒப்பற்றவன் ஆகிய பெருமானை அடியேன் தோள்கள் குளிருமாறு கைகூப்பி வணங்கினேன்.

பாவநாசத்திருப்பதிகம்

மருக லுறைமா ணிக்கத்தை
வலஞ்சு ழி(ய்)யின் மாலையைக்
கருகா வூரிற் கற்பகத்தைக்
காண்டற் கரிய கதிரொளியைப்
பெருவே ளூரெம் பிறப்பிலியைப்
பேணு வார்கள் பிரிவரிய
திருவாஞ் சியத்தெஞ் செல்வனைச்
சிந்தை யுள்ளே வைத்தேனே. #150
மருகலில் தங்கும் மாணிக்கம், வலஞ்சுழியில் உள்ள தமிழ்ப்பாமாலை, கருகாவூரில் உள்ள கற்பகம், காண்பதற்கு எளிதில் இயலாத கதிரவன் ஒளி, பெருவேளூரில் உள்ள பிறவாயாக்கைப் பெரியோன், விரும்பித் தொழுபவர்கள் பின் பிரிந்து செல்ல மனம் கொள்ளாதவகையில் உள்ள திருவாஞ்சியத்தில் உறையும் எம் செல்வன் ஆகிய பெருமானை அடியேன் மனத்தில் நிலையாக இருத்தினேன்.

பாவநாசத்திருப்பதிகம்

எழிலார் இராச சிங்கத்தை
இராமேச் சுரத்தெம் எழிலேற்றைக்
குழலார் கோதை வரைமார்பிற்
குற்றா லத்தெங் கூத்தனை
நிழலார் சோலை நெடுங்களத்து
நிலாய நித்த மணாளனை
அழலார் வண்ணத் தம்மானை
அன்பி லணைத்து வைத்தேனே. #151
அழகுமிக்க அரச சிங்கம், இராமேச்சுரத்தில் உறையும் அழகிய காளை, குழல்வாய் மொழியம்மையைத் தன் மலை போன்ற மார்பில் கொண்ட குற்றாலத்தில் உறையும் எங்கள் கூத்தன். நிழல் மிகுந்த சோலைகளையுடைய நெடுங்களத்தில் உறையும் நித்தியகலியாணன், தீ

நிறத்தலைவன் ஆகிய பெருமானை அடியேன் அன்பினால் அடியேனோடு இணைத்து வைத்துக்கொண்டேன்.

பாவநாசத்திருப்பதிகம்

மாலைத் தோன்றும் வளர்மதியை
மறைக்காட் டுறையு மணாளனை
ஆலைக் கரும்பி னின்சாற்றை
யண்ணா மலையெம் மண்ணலைச்
சோலைத் துருத்தி நகர்மேய
சுடரிற் றிகழுந் துளக்கிலியை
மேலை வானோர் பெருமானை
விருப்பால் விழுங்கி யிட்டேனே. **#152**

மாலையில் தோன்றும் ஒளி வளரும் சந்திரன், மறைக்காட்டுள் உறையும் தலைவன், ஆலையில் பிழியப்படும் கரும்பின் இனிய சாறு, அண்ணாமலையிலுள்ள எம் தலைவன், சோலைகளை உடைய துருத்திநகர்க் கோயிலில் விரும்பி உறையும் சூரியனைப் போல ஒளிவீசும் அசைவற நின்ற பேராற்றலன், மேலே உள்ள தேவர்கள் தலைவன் ஆகிய பெருமானை அடியேன் விருப்பத்தோடு விழுங்கி விட்டேன்.

பாவநாசத்திருப்பதிகம்

சோற்றுத் துறையெஞ் சோதியைத்
துருத்தி மேய தூமணியை
ஆற்றிற் பழனத் தம்மானை
யால வாயெம் மருமணியை
நீற்றிற் பொலிந்த நிமிர்திண்டோ
ணெய்த்தா னத்தெந் நிலாச்சுடரைத்
தோற்றக் கடலையட லேற்றைத்
தோளைக் குளிரத் தொழுதேனே. **#153**

சோற்றுத்துறையில் உறையும் ஞானஒளி, துருத்தியில் விரும்பி உறையும் தூயமணி, ஆற்றின்வளம் மிக்க திருப்பழனத் தலைவன். ஆலவாயிலுள்ள சிந்தாமணி, திருநீற்றால் விளங்கும் திண்ணிய தோள்களை உடைய, நெய்த்தானத்தில் உறையும் எம் நிலவொளி, பிறவிக்கடலை அழிக்கும் ஆற்றல் மிக்க காளை ஆகிய பெருமானை அடியேன் தோள்கள் குளிருமாறு கைகூப்பித் தொழுதேன்.

பாவநாசத்திருப்பதிகம்

புத்தூ ருறையும் புனிதனைப்

பூவ ணத்தெம் போரேற்றை
வித்தாய் மிழலை முளைத்தானை
வேள்விக் குடியெம் வேதியனைப்
பொய்த்தார் புரமூன் றெரித்தானைப்
பொதியின் மேய புராணனை
வைத்தே னென்றன் மனத்துள்ளே
மாத்தூர் மேய மருந்தையே. **#154**

புத்தூரில் உறையும் தூயோன், பூவணத்தில் உள்ள எம் போரிடும் காளை, மிழலையில் விதையாகி முளைத்தவன், வேள்விக்குடியில் உறையும் எம் வேதியன், நெறிதவறிய அசுரர்களின் மும்மதில்களையும் எரித்தவன், பொதிய மலையில் விரும்பி உறையும் பழையோன், மாத்தூரில் விரும்பி உறையும் அமுதம் ஆகிய பெருமானை அடியேன் மனத்துள்ளே நிலையாக இருத்தினேன்.

<u>பாவநாசத்திருப்பதிகம்</u>

முந்தித் தானே முளைத்தானை
மூரி வெள்ளே றூர்ந்தானை
அந்திச் செவ்வான் படியானை
யரக்க னாற்ற லழித்தானைச்
சிந்தை வெள்ளப் புனலாட்டிச்
செஞ்சொன் மாலை யடிச்சேர்த்தி
எந்தை பெம்மா னென்னெம்மா
னென்பார் பாவநாசமே. **#155**

ஏனைய எல்லாப் பொருள்களுக்கும் முற்பட்டுத் தோன்றியவன், மூத்த வெண்ணிறக் காளையை இவர்ந்தவன். மாலைநேரச் செவ்வானின் நிறத்தினன். இராவணன் ஆற்றலை அழித்தவன் ஆகிய பெருமானை உள்ளத்தில் தோன்றும் அன்பு என்னும் தீத்தத்தால் அபிடேகித்து, இனிய சொற்களாலாகிய பாமாலைகளை அவன் திருவடிகளில் சேர்ப்பித்து எந்தையே, இறைவனே, என் தலைவனே என்று பலகாலும் அவனை அழைத்து மகிழ்பவருடைய தீவினைகள் அழிந்துவிடும்.

திருப்புகலூர்

திருப்புகலூர்

திருப்புகலூர்,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அக்கினீசுவரர்.
தேவியார் : கருந்தார்குழலியம்மை.

செய்யர் வெண்ணுலர் கருமான் மறிதுள்ளும்
கையர் கனைகழல் கட்டிய காலினர்
மெயயர் மெய்ந்நின் றவர்க்கல்லா தவர்க்கென்றும்
பொய்யர் புகலூர்ப் புரிசடை யாரே. **#156**

புகலூரிலுள்ள முறுக்கேறிய சடையினராகிய பெருமானார் நிறத்தில் செய்யராய், வெண்ணீறு அணிந்தவராய், கரியமான் குட்டி துள்ளும் கையினராய், ஒலிக்கும் வீரக்கழல் கட்டிய காலினராய், உண்மையான நெறியில் ஒழுகும் அடியவர்களுக்கு மெய்யராய், அத்தகுதியில்லாதவர்க்குப் பொய்யராய் உள்ளார்.

திருப்புகலூர்

மேகந லூர்தியர் மின்போன் மிளிர்சடைப்
பாக மதிநுத லாளையொர் பாகத்தர்
நாக வளையினர் நாக வுடையினர்
போகர் புகலூர்ப் புரிசடை யாரே. **#157**

புகலூர்ப் புரிசடையார் மேக நிறத்தினனான திருமாலாகிய காளையைப் பெரிய வாகனமாக உடையவர். மின்னலைப் போல ஒளிவீசும் சடையோடு, பாம்பினைக் கங்கணமாக அணிந்து, யானைத்தோலை மேலுடையாகப் போர்த்திப் பிறை நுதலாளாகிய பார்வதி பாகராய்ப் போகியாயிருந்து உயிர்களுக்குப் போகத்தை அருளுபவராவார்.

திருப்புகலூர்

பெருந்தாழ் சடைமுடி மேற்பிறை சூடிக்
கருந்தாழ் குழலியுந் தாமுங் கலந்து
திருந்தா மனமுடை யார்திறத் தென்றும்
பொருந்தார் புகலூர்ப் புரிசடை யாரே. **#158**

புகலூர்ப் புரி சடையார் பெரிய தாழ்ந்த சடைமுடி மேலே பிறையைச் சூடிக் கரியதாய் நீண்ட கூந்தலை உடைய பார்வதியோடு தாமும் கலந்து, திருந்தாத மனமுடையவர் பக்கல்தாம் என்றும் பொருந்தாராக

உள்ளார்.

திருப்புகலூர்

அக்கா ரணிவட மாகத்தர் நாகத்தர்
நக்கா ரிளமதிக் கண்ணியர் நாடொறும்
உக்கார் தலைபிடித் துண்பலிக் கூர்தொறும்
புக்கார் புகலூர்ப் புரிசடை யாரே. **#159**

புகலூர்ப் புரி சடையார் உருத்திராக்கம் நிறைந்த மாலையைப் பூண்ட மார்பினராய், பாம்பினை உடையவராய், ஒளி வீசும் பிறையை முடிமாலையாகச் சூடியவராய், நாள்தோறும் இறந்தவர் மண்டையோட்டினை ஏந்திப் பிச்சை உணவு வாங்க ஊர் தோறும் செல்பவர் ஆவர்.

திருப்புகலூர்

ஆர்த்தா ருயிரடு மந்தகன் றன்னுடல்
பேர்த்தார் பிறைநுதற் பெண்ணினல் லாளுட்கக்
கூர்த்தார் மருப்பிற் கொலைக்களிற் றீருரி
போர்த்தார் புகலூர்ப் புரிசடை யாரே. **#160**

புகலூர்ப் புரிசடையார் ஆரவாரித்துக் கொண்டு உயிர்களைக் கொல்லும் கூற்றுவனுடைய உடலை அழித்தார். பிறைபோன்ற நெற்றியை உடைய பார்வதி அஞ்சுமாறு கூரிய தந்தங்களை உடைய கொலைத் தொழில் புரியும் யானையைக்கொன்று அதனுடைய உதிரப் பசுமை கெடாத தோலினை உடம்பில் போர்த்தி உள்ளார்.

திருப்புகலூர்

தூமன் சுறவந் துதைந்த கொடியுடைக்
காமன் கணைவலங் காய்ந்தமுக் கண்ணினர்
சேம நெறியினர் சீரை யுடையவர்
பூமன் புகலூர்ப் புரிசடை யாரே. **#161**

வலிமை பொருந்திய சுறாக்கொடியை உடைய மன்மதன் விடுத்த அம்புகளின் வலிமையைக் கோபித்த மூன்றாம் கண்ணையுடையவர். அடியவர்களுக்குப் பாதுகாவலை உடைய வழியை அருளுபவர். மரவுரியை உடுப்பவர். அவர் முருகனார் தொடுத்தளித்த பூக்களை எப்போதும் அணிந்தவராகிய, புகலூரில் உகந்தருளியிருக்கும் முறுக்கேறிய சடையினை உடையவர்.

திருப்புகலூர்

உதைத்தார் மறலி யுருளவொர் காலால்

சிதைத்தார் திகழ்தக்கன் செய்தநல் வேள்வி
பதைத்தார் சிரங்கரங் கொண்டுவெய் யோன்கண்
புதைத்தார் புகலூர்ப் புரிசடை யாரே. **#162**
புகலூர்ப் புரிசடையார் கூற்றுவன் உருளுமாறு அவனை ஒரு திருவடியால் உதைத்தவர். சிறப்பாக விளங்கிய தக்கன் செய்த பெரிய வேள்வியைச் சிதைத்தவர். அவ்வேள்வியில் பங்கு கொண்ட தம் தவறு கருதி நடுங்கிய தேவர்களின் தலைகளையும் கைகளையும் போக்கிச் சூரியனுடைய கண்ணை அவித்தவர்.

திருப்புகலூர்

கரிந்தார் தலையர் கடிமதின் மூன்றும்
தெரிந்தார் கணைகள் செழுந்தழ லுண்ண
விரிந்தார் சடைமேல் விரிபுனற் கங்கை
புரிந்தார் புகலூர்ப் புரிசடை யாரே. **#163**
புகலூர்ப் புரிசடையார் இறந்தவருடைய தலை மாலையை அணிந்தவர். காவல் பொருந்திய மும்மதில்களையும் சிவந்த நெருப்பு உண்ணுமாறு அம்புகளைத் தேர்ந்து எடுத்தவர். விரிந்து பரந்த சடையின்மேல் நீர்மிக்க கங்கையை விரும்பி ஏற்றவர்.

திருப்புகலூர்

ஈண்டா ரழலி னிருவருங் கைதொழ
நீண்டார் நெடுந்தடு மாற்ற நிலையஞ்ச
மாண்டார்த மென்பு மலர்க்கொன்றை மாலையும்
பூண்டார் புகலூர் புரிசடை யாரே. **#164**
புகலூர்ப் புரிசடையார் செறிந்த தீப்பிழம்பாய்ப் பிரமனும் திருமாலும் கைகளால் தொழுமாறு நீண்டவர். தம்முடைய நீண்டகாலத் தடுமாற்ற வாழ்வை நினைந்து அஞ்சுமாறு வாழ்ந்து இறந்தவர்களின் எலும்பையும் கொன்றைமலர் மாலையையும் அணிந்தவர்.

திருப்புகலூர்

கறுத்தார் மணிகண்டங் கால்விர லூன்றி
இறுத்தா ரிலங்கையர் கோன்முடி பத்தும்
அறுத்தார் புலனைந்து மாயிழை பாகம்
பொறுத்தார் புகலூர்ப் புரிசடை யாரே. **#165**
புகலூர்ப் புரிசடையார் இரத்தினம் போன்ற செந்நிறமான கழுத்துக் கறுத்து நீலகண்டராயினார். கால் விரலை ஊன்றி இராவணனுடைய பத்துத் தலைகளையும் செயலற்றவை ஆக்கினார். ஐம்புல நுகர்ச்சியையும் துறந்தவர். பார்வதியைப் பாகமாகக் கொண்டவர்.

திருவாரூர் - அரநெறி

திருவாரூர் அரநெறி

திருவாரூர் - அரநெறி,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

எத்தீ புகினு மெமக்கொரு தீதிலை
தெத்தே எனமுரன் றெம்மு ளுழிதர்வர்
முத்தீ யனையதொர் மூவிலை வேல்பிடித்
தத்தீ நிறத்தா ரரநெறி யாரே. **#166**

உலகம் அறிந்த தீயின் நிறத்தவராகிய அரநெறிப் பெருமானார் முத்தீக்களைப் போன்று, மூன்று இலைவடிவாக அமைந்த வேலினை ஏந்தித் தெத்தே என்ற பண் ஒன்றினை நுணுகிப் பாடிக் கொண்டு எம் உள்ளத்தில் கூத்து நிகழ்த்துகின்றார். ஆதலின் எமக்கு எந்தத் தீயினிடைப் புக நேரினும், அத்தீயினால் தீங்கு யாதும் நிகழாது.

திருவாரூர் அரநெறி

வீரமும் பூண்பர் விசயனொ டாயதொர்
தாரமும் பூண்பர் தமக்கன்பு பட்டவர்
பாரமும் பூண்பர்நற் பைங்கண் மிளிரர
வாரமும் பூண்ப ரரநெறி யாரே. **#167**

அரநெறிப் பெருமான் நல்ல பசிய கண்கள் ஒளிவீசும் பாம்பினை மாலையாக அணிபவர். தம்மிடம் அன்புடையவருடைய பொறுப்புக்களைத் தாமே ஏற்று அருளுபவர். பார்வதியையும் உடன் அழைத்துச் சென்று அருச்சுனனோடு நிகழ்த்தப்பட்ட போரில் வீரச் செயல்களை நிகழ்த்துவர்.

திருவாரூர் அரநெறி

தஞ்ச வண்ணத்தர் சடையினர் தாமுமொர்
வஞ்ச வண்ணத்தர் வண்டார்குழ லாளொடும்
துஞ்ச வண்ணத்தர் துஞ்சாதகண் ணார்தொழும்
அஞ்ச வண்ணத்த ரரநெறி யாரே. **#168**

அரநெறிப் பெருமானார் தம்மைத் தஞ்சம் என்று அடைந்தவருக்குத் தாம் அடைக்கலம் நல்கும் இயல்பினர். சடை முடியை உடையவர். அடியவர் அல்லாதாருக்கு வஞ்சனையான இயல்பினர். வண்டுகள் பொருந்திய

கூந்தலை உடைய பார்வதியோடும் பொருந்தும் இயல்பினர். இமையாக் கண்களை உடைய மேலோர் தொழும் அம்சமந்திர ஜபயோகம் புரிபவர்.

திருவாரூர் அரநெறி

விழித்தனர் காமனை வீழ்தர விண்ணின்
றிழித்தனர் கங்கையை யேத்தினர் பாவம்
கழித்தனர் கல்சூழ் கடியரண் மூன்றும்
அழித்தன ராரூ ரரநெறி யாரே. **#169**

ஆரூர் அரநெறிப் பெருமானார் காமன் பொடியாய் விழுமாறு அவனை நெற்றிக் கண்ணால் நோக்கியவர். வானத்திலிருந்து கங்கையைத் தம் சடையில் இறங்கச் செய்தவர். தம்மை வழிபடுபவருடைய தீவினைகளைப் போக்குபவர். கற்களால் சூழப்பட்ட காவல் பொருந்திய மும்மதில்களையும் அழித்தவர்.

திருவாரூர் அரநெறி

துற்றவர் வெண்டலை யிற்சுருள் கோவணம்
தற்றவர் தம்வினை யானவெ லாமற
அற்றவ ராரூ ரரநெறி கைதொழ
உற்றவர் தாமொளி பெற்றனர் தாமே. **#170**

மண்டையோட்டில் பிச்சைவாங்கி உண்பவரும், சுருண்ட கோவணத்தை இறுக்கிக் கட்டியவரும், இயல்பாகவே வினையின் நீங்கியவருமாய் உள்ள எம்பெருமானாருடைய ஆரூர் அரநெறிக் கோயிலைத் தம் வினைகளாயின எல்லாம் நீங்குமாறு கையால் தொழும் வாய்ப்புப் பெற்றவர், ஞான ஒளி பெற்றவராவர்.

திருவாரூர் அரநெறி

கூடர வத்தர் குரற்கிண் கிணியடி
நீடர வத்தர்முன் மாலை யிடை யிருள்
பாடர வத்தர் பணமஞ்சு பைவிரித்
தாடர வத்த ரரநெறி யாரே. **#171**

ஆரூர் அரநெறிப் பெருமானார் திருவடிகளிலே அரிபெய்சிலம்பினராய் ஒலிக்கும், கிண்கிணியால் ஏற்படும் நீண்ட ஒலியினை உடையவராய், மாலையின் முற்பட்ட பகுதியில் இருளிலே பாடும் ஒலியினராய், படம் விரித்து ஆடும் பாம்பை அணிந்தவராய் உள்ளார்.

திருவாரூர் அரநெறி

கூடவல்லார்குறிப் பில்லுமை யாளொடும்
பாடவல் லார்பயின் றந்தியுஞ் சந்தியும்

ஆடவல் லார்திரு வாரூ ரரநெறி
நாடவல் லார்வினை வீட வல்லாரே. **#172**

உமாதேவியின் குறிப்பறிந்து அவளோடு இணைந்திருத்தலில் வல்லவராய், நண்பகல் அந்தியிலும் காலை மாலைச் சந்திகளிலும் பலகாலும் பாடவல்லவராய், கூத்து நிகழ்த்துதலில் வல்லவராய் உள்ள பெருமானார் உறையும் திருவாரூர் அரநெறியை விரும்பித் தொழவல்லவர்கள் வினைகளைப் போக்கிக் கொள்ளும் ஆற்றலுடையவராவர்.

<u>திருவாரூர் அரநெறி</u>

பாலை நகுபனி வெண்மதி பைங்கொன்றை
மாலையுங் கண்ணியு மாவன சேவடி
காலையு மாலையுங் கைதொழு வார்மனம்
ஆலைய மாரூ ரரநெறி யார்க்கே. **#173**

ஆரூர் அரநெறிப் பெருமானாருக்குப் பாலை ஒத்த வெண்ணிறமுடைய குளிர்ந்த பிறையும் பசிய கொள்றை மாலையும் முடிமாலைகள் ஆகும். அவர் திருவடிகளைக் காலையும் மாலையும் கைதொழவல்ல அடியவர் உள்ளங்களே அவருக்கு உறைவிடமாகும்.

<u>திருவாரூர் அரநெறி</u>

முடிவண்ணம் வானமின் வண்ணந்தம் மார்பின்
பொடிவண்ணந் தம்புக ழூர்தியின் வண்ணம்
படிவண்ணம் பாற்கடல் வண்ணஞ்செஞ் ஞாயி
றடிவண்ண மாரூ ரரநெறி யார்க்கே. **#174**

திருவாரூர் அரநெறியார்க்கு முடியின் நிறம் மேகத்தின் மின்னலின் நிறமாகும். அவர் மார்பில் அணிந்த திருநீற்றின் நிறம் அவர் வாகனமான காளையின் நிறமாகும். அவருடைய திருமேனியின் நிறம் பாற்கடல் நிறமாகும். அவர் திருவடியின் நிறம் சிவந்த காலை ஞாயிற்றின் நிறமாகும்.

<u>திருவாரூர் அரநெறி</u>

பொன்னவில் புன்சடை யானடி யன்னிழல்
இன்னருள் சூடியெள காதுமி ராப்பகல்
மன்னவர் கின்னரர் வானவர் தாந்தொழும்
அன்னவ ராரூ ரரநெறி யாரே. **#175**

ஆரூர் அரநெறியார் பொன்போன்ற சிவந்த முறுக்கேறிய சடையை உடையவர். அவர் அவருடைய திருவடி நிழலிலே இனிய அருளைச் சூடி வழிபடுதலை வெறுக்காது இரவும் பகலும் அரசர்களும் கின்னரர் என்ற

தேவகணத்தாரும் வானவர்களும் தொழும் அத்தன்மையை உடையவர்.

<u>திருவாரூர் அரநெறி</u>

பொருண்மன் னனைப்பற்றிப் புட்பகங்கொண்ட
மருண்மன் னனையெற்றி வாளுட னீந்து
கருண்மன்னு கண்டங் கறுக்கநஞ் சுண்ட
அருண்மன்ன ராரூ ரரநெறி யாரே. **#176**

ஆரூர் அரநெறியார், குபேரனைப் பிடித்து அவனிடமிருந்து புட்பக விமானத்தைக் கைப்பற்றிக்கொண்ட, உள்ள மயக்கம் கொண்ட அரசனாகிய இராவணனை முதலில் வருத்திப்பின் அவனுக்கு வாளும் உடனே அளித்து, கழுத்துக் கறுக்குமாறு கருமை பொருந்திய விடத்தை உண்ட அருள் வடிவான தலைவராவார்.

விடந்தீர்த்ததிருப்பதிகம்

விடந்தீர்த்ததிருப்பதிகம்

விடந்தீர்த்ததிருப்பதிகம்,
பண் - இந்தளம், இது அப்பூதிநாயனார் புத்திரரைத் தீண்டியவிடம்
நீங்கும்படி அருளிச்செய்தது.

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே. **#177**

எம்பெருமானுடைய உள்ளத்தைப்போல உயர்ந்த கயிலை மலையும், அவர் சூடும் உயர்ந்த பிறையும் அவர் பிச்சை எடுக்குமாறு கையில் ஏந்திய மண்டையோடும், அவர் இவரும் காளையும் எண்ணிக்கையில் ஒன்று ஒன்றே போலும்.

விடந்தீர்த்ததிருப்பதிகம்

இரண்டுகொ லாமிமை யோர்தொழு பாதம்
இரண்டுகொ லாமிலங் குங்குழை பெண்ணாண்
இரண்டுகொ லாமுரு வஞ்சிறு மான்மழு
இரண்டுகொ லாமவ ரெய்தின தாமே. **#178**

தேவர்களும் தொழும் எம்பெருமானுடைய பாதங்களும், விளங்கும் அவருடைய காதணிகளும் பெண்ணும் ஆணுமாகிய அவர் உருவமும். அவர் ஏந்திய மான்குட்டியும் மழுவாயுதமும் இரண்டு என்ற எண்ணிக்கையுடையனபோலும். ஏந்தின தாமே - பாடம்.

விடந்தீர்த்ததிருப்பதிகம்

மூன்றுகொ லாமவர் கண்ணுத லாவன
மூன்றுகொ லாமவர் சூலத்தின் மொய்யிலை
மூன்றுகொ லாங்கணை கையது வின்னாண்
மூன்றுகொ லாம்புர மெய்தன தாமே.; **#179**

எம்பெருமானுடைய நெற்றிக்கண்ணோடு சேர்த்துக் கண்கள் மூன்று. அவர் ஏந்திய சூலத்தில் இலை வடிவான பகுதி மூன்று. அவர் கையிலுள்ள வில், நாண், கணை என்பன மூன்று. அவர் அம்பு எய்து அழித்த பகைவர்களின் மதில் மூன்று போலும்.

விடந்தீர்த்ததிருப்பதிகம்

நாலுகொ லாமவர் தம்முக மாவன

நாலுகொ லாஞ்சன னம்முதற் றோற்றமும்
நாலுகொ லாமவ ரூர்தியின் பாதங்கள்
நாலுகொ லாமறை பாடினதாமே.; **#180**

எம்பெருமானுடைய திருமுகங்கள் நான்கு. அவரால் படைக்கப்பட்ட படைப்பு-நிலம், கருப்பை, முட்டை, வியர்வை, இவற்றிலிருந்து தோன்றும் நால்வகையது. அவர் வாகனமாகிய காளையின் பாதங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. அவர் பாடிய வேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்ற நான்கு போலும்.

விடந்தீர்த்ததிருப்பதிகம்

அஞ்சுகொ லாமவ ராடர வின்படம்
அஞ்சுகொ லாமவர் வெல்புல னாவன
அஞ்சுகொ லாமவர் காயப்பட் டான்கணை
அஞ்சுகொ லாமவ ராடின தாமே. **#181**

எம்பெருமான் ஆட்டுகின்ற பாம்பின் படங்கள் ஐந்து, அவர் வென்ற புலன்களும் ஐந்து. அவரால் வெகுளப்பட்ட மன்மதனுடைய பூ அம்புகளும் ஐந்து. அவர் அபிடேகம் செய்வன பசுவினிடத்திலிருந்து தோன்றும் பஞ்சகவ்வியம் என்ற ஐந்து போலும்.

விடந்தீர்த்ததிருப்பதிகம்

ஆறு கொ லாமவ ரங்கம் படைத்தன
ஆறுகொ லாமவர் தம்மக னார்முகம்
ஆறுகொ லாமவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொ லாஞ்சுவை யாக்கின தாமே. **#182**

அவர் வேதத்துக்கு அங்கங்களாகப் படைத்தன ஆறு. அவருடைய மகனாகிய முருகனுடைய முகங்கள் ஆறு. அவர் மாலைமிசை அமர்ந்துள்ள வண்டின் கால்களும் ஆறு. அவர் உணவுச் சுவையாக அமைத்தனவும் ஆறுபோலும்.

விடந்தீர்த்ததிருப்பதிகம்

ஏழுகொ லாமவ ரூழி படைத்தன
ஏழுகொ லாமவர் கண்ட விருங்கடல்
ஏழுகொ லாமவ ராளு முலகங்கள்
ஏழுகொ லாமிசை யாக்கின தாமே. **#183**

அவர் படைத்த படைப்புக்கள் எழுவகையன. அவர் படைத்த கடல்கள் ஏழாகும். அவர் ஆளும் உலகங்களும் மேல் உலகம் ஏழும் கீழ் உலகம் ஏழும். அவர் படைத்த இசைகளும் ஏழு போலும்.

<u>விடந்தீர்த்ததிருப்பதிகம்</u>

எட்டுக்கொ லாமவ ரீறில் பெருங்குணம்
எட்டுக்கொ லாமவர் சூடு மினமலர்
எட்டுக்கொ லாமவர் தோளிணை யாவன
எட்டுக்கொ லாந்திசை யாக்கின தாமே. **#184**

அவருடைய அழிவில்லாத பெருங்குணங்களும் எட்டு. அவர் சூடும் மலர்களில் இனங்களும் எட்டு. அவருடைய ஒன்றற்கொன்று இணையான தோள்களும் எட்டு. அவர் படைத்த திசைகளும் எட்டும் போலும்.

<u>விடந்தீர்த்ததிருப்பதிகம்</u>

ஒன்பது போலவர் வாசல் வகுத்தன
ஒன்பது போலவர் மார்பினி னூலிழை
ஒன்பது போலவர் கோலக் குழற்சடை
ஒன்பது போலவர் பாரிடந் தானே. **#185**

இவ்வுடம்பில் அவர் வகுத்த துவாரங்கள் ஒன்பது. அவர் மார்பில் அணிந்த பூணூலின் இழைகள் ஒன்பது. அவருடைய அழகிய சுருண்ட சடை ஒன்பதாக வகுக்கப்பட்டது. அவர் படைத்த நிலவுலகம் ஒன்பது கண்டங்களை உடையது போலும்.

<u>விடந்தீர்த்ததிருப்பதிகம்</u>

பத்துக்கொ லாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொ லாமெயி றுந்நெரிந் துக்கன
பத்துக்கொ லாமவர் காயப்பட் டான்றலை
பத்துக்கொ லாமடி யார்செய்கை தானே. **#186**

அவர் அணிந்த ஐந்தலைப் பாம்பின் கண்களும் உயிரைப் போக்கும் பற்களும் பத்து. அவரால் கோபிக்கப்பட்ட இராவணனுடைய தலைகளும் பத்து. அவர் அழத்தியதால் நொறுங்கிய அவன் பற்களும் பத்து. அப்பெருமானுடைய அடியார்களுடைய தசகாரியம் என்னும் செயல்களும் பத்துப் போலும்.

திருவாரூர்

திருவாரூர்

திருவாரூர்,
பண் - சீகாமரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

சூலப் படையானைச் சூழாக வீழருவிக்
கோலத்தோட் குங்குமஞ்சேர் குன்றெட்டுடையானைப்
பாலொத்த மென்மொழியாள் பங்களைப் பாங்காய
ஆலத்தின் கீழானை நான்கண்ட தாரூரே. **#187**

சூலப்படை உடையவனாய்; குங்குமம் பூசிய அழகிய தோள்களாகிய, அருவிகள் விழும் எட்டு மலைகளை உடையவனாய், பால்போன்ற இனிய சொற்களை உடைய பார்வதி பாகனாய், தனக்குத் துணையான ஆலமரத்தின் கீழ் இருந்து அறம் உரைத்த பெருமானை நான் ஆரூரில் கண்டேன்.

திருவாரூர்

பக்கமே பாரிடங்கள் சூழப் படுதலையில்
புக்கவூர்ப் பிச்சையேற் றுண்டு பொலிவுடைத்தாய்க்
கொக்கிறகின் றூவல் கொடியெடுத்த கோவணத்தோ
டக்கணிந்த வம்மானை நான்கண்ட தாரூரே. **#188**

இருபுறமும் பூதங்கள் சூழத்தாம் சென்ற ஊர்களில் மண்டையோட்டில் பிச்சை ஏற்று உண்டு, நல்ல விளக்கம் பொருந்து வனவாகக் கொக்கிறகின் தொகுதி, ஒழுங்காக அமைக்கப்பட்ட கோவணம், சங்குமணி இவற்றை அணிந்த தலைவனை அடியேன் கண்டவிடம் ஆரூராகும்.

திருவாரூர்

சேய வுலகமுஞ் செல்சார்வு மானானை
மாயப்போர் வல்லானை மாலைதாழ் மார்பானை
வேயொத்த தோளியர்த மென்முலைமேற் றண்சாந்தின்
ஆயத் திடையானை நான்கண்ட தாரூரே. **#189**

சேய்மையதாகிய வீட்டுலகமாகியபேறும் அதனை அடைவதற்குரிய வழியாகிய ஆறும் ஆகின்றவனாய், அழிக்கின்ற போரில் வல்லவனாய், மாலை தொங்கும் மார்பினனாய், தம் மென்முலைமேல் குளிர்ந்த

சந்தனம் பூசிய, மூங்கிலை ஒத்த தோள்களை உடைய, தன்னை வழிபடும் மகளிர் கூட்டத்திடையே இருக்கும் பெருமானை நான் கண்ட இடம் ஆரூர் ஆகும்.

திருவாரூர்

ஏறேற்ற மாவேறி யெண்கணமும் பின்படர
மாறேற்றார் வல்லரணஞ் சீறி மயானத்தில்
நீறேற்ற மேனியனாய் நீள்சடைமே னீர்ததும்ப
ஆறேற்ற வந்தணனை நான்கண்டதாரூரே. **#190**

வாகனமாக ஏறுதற்குரியவற்றில் மேம்பட்டதான காளையை இவர்ந்து எண்வகை அடியவர் கூட்டங்களும் தன்னைப் பின் தொடர வருவானாய், பகைவராய் எதிர்த்தாருடைய வலிய மதில்களைக் கோபித்தவனாய், சுடுகாட்டுச் சாம்பல் பூசிய மேனியனாய், நீண்ட சடைமுடியின் மீது நீர் நிறைந்து அலை எறியுமாறு கங்கையை ஏற்ற சடையனாய் உள்ள பெருமானை நான் தரிசித்த இடம் ஆரூராகும்.

திருவாரூர்

தாங்கோல வெள்ளெலும்பு பூண்டுதம் மேறேறிப்
பாங்கான வூர்க்கெல்லாஞ் செல்லும் பரமனார்
தேங்காவி நாறுந் திருவாரூர்த் தொன்னகரில்
பூங்கோயி லுண்மகிழ்ந்து போகா திருந்தாரே. **#191**

அழகாக வெண்ணிற எலும்புகளைச் சூடித் தம் காளை மீது இவர்ந்து, பக்கலிலுள்ள ஊர்களுக்கெல்லாம் செல்லும் மேம்பட்டவராய் இனிய குவளைமலர்கள் மணம்வீசும் திருவாரூர் ஆகிய பழைய ஊரில் உள்ள பூங்கோயில் என்ற பெயரை உடைய கோயிலை உகந்து கொண்டு அதனை ஒரு பொழுதும் நீங்காமல் எம்பெருமான் இருந்துள்ளார்.

திருவாரூர்

எம்பட்டம் பட்ட முடையானை யேர்மதியின்
நும்பட்டஞ் சேர்ந்த நுதலானை யந்திவாய்ச்
செம்பட்ட டுடுத்துச் சிறுமா னுரியாடை
அம்பட் டசைத்தானை நான்கண்ட தாரூரே. **#192**

எமது பட்டத்தைத் தனது பட்டமாகக் கொண்டு இருப்பவனாய், அழகான பிறையாகிய குறுகலான பட்டம் சேர்ந்த நெற்றியனாய், மாலை நேர வானம் போன்ற சிவந்த பட்டினை உடுத்து, சிறிய மான் தோல் ஆடையாகிய அழகிய பட்டினையும் கட்டிய பெருமானை அடியேன் தரிசித்த இடம் ஆரூராகும்.

திருவாரூர்

போழொத்த வெண்மதியஞ் சூடிப் பொலிந்திலங்கு
வேழத் துரிபோர்த்தான் வெள்வளையா டானவெருவ
ஊழித்தீ யன்னானை யோங்கொலிமாப் பூண்டதோர்
ஆழித்தேர் வித்தகனை நான்கண்ட தாரூரே. **#193**

மதியத்தின் பிளவாக இரு முனைகளும் ஒத்த வெண்பிறையைச் சூடி, வெள்ளிய வளையல்களை அணிந்த பார்வதி அஞ்சுமாறு யானைத் தோலைப் போர்த்தவனாய், அடியவர்களின் பகைவருக்கு ஊழித்தீ போன்ற கொடியவனாய், கடலாற் சூழப்பட்ட உலகையே ஒலிமிக்க வேதகங்களாகிய குதிரைகள் பூண்ட தேராகக் கொண்ட சாதுரியனான பெருமானை அடியேன் தரிசித்த தலம் ஆரூராகும். ஆழித்தேர் - திருவாரூர்த் தேரின் பெயர்:

திருவாரூர்

வஞ்சனையா ரார்பாடுஞ் சாராத மைந்தனைத்
துஞ்சிருளி லாட லுகந்தானைத் தன்றொண்டர்
நெஞ்சிருள் கூரும் பொழுது நிலாப்பாரித்
தஞ்சுடராய் நின்றானை நான்கண்ட தாரூரே. **#194**

வஞ்சனையுடையவர் யார் மாட்டும் அணுகாத திறமையுடையவனாய், எல்லோரும் உறங்கும் இருள் நேரத்தில் கூத்தாடுதலை விரும்பியவனாய், தன் அடியவர்களுடைய உள்ளத்தில் துயரமாகிய இருள் மிகும்போது ஞானமாகிய ஒளியைப் பரப்பி அழகிய ஞானப் பிரகாசனாய் நின்ற பெருமானை அடியேன் தரிசித்த இடம் ஆரூராகும்.

திருவாரூர்

காரமுது கொன்றை கடிநாறு தண்ணென்ன
நீரமுது கோதையோ டாடிய நீண்மார்பன்
பேரமுத முண்டார்க ளுய்யப் பெருங்கடனஞ்
சாரமுதா வுண்டானை நான்கண்ட தாரூரே. **#195**

நன்கு முதிர்ந்த கொன்றை மரத்தில் பூக்கும் பூவின் நறுமணம் கமழும் குளிர்ந்த நீர் மயமான கங்கையைப் பார்வதியோடு மகிழ்ந்த, நீண்ட மார்பினனாய், பெரிய அமுதத்தை உண்டார்களாய்த் தேவர்கள் உயிர்பிழைப்பதற்காகப் பெரிய கடலின் விடத்தை அமுதமாக உண்ட பெருமானை அடியேன் தரிசித்த இடம் ஆரூராகும்.

திருவாரூர்

தாடமுழுவு கையன் றாமரைப்பூஞ் சேவடியன்

கோடலா வேடத்தன் கொண்டதோர் வீணையினான்
ஆடரவக் கிண்கிணிக்கா லன்னானோர் சேடனை
ஆடுந்தீக் கூத்தனை நான்கண்ட தாரூரே. #196

முழந்தாள் அளவும் நீண்ட கைகளை உடையவனாய், தாமரைப் பூப்போன்ற சிவந்த திருவடிகளை உடையவனாய், பிறரால் கொள்ள முடியாத வேடத்தினனாய், வீணையைக் கையில் கொண்டவனாய், அசைகின்றவாய் ஒலிக்கின்ற கிண்கிணிகளை அணிந்த திருவடிகளை உடைய அத்தகைய மேம்பட்டவனாய்த் தீயில் கூத்தாடும் பெருமானை அடியேன் தரிசித்த தலம் ஆரூராகும்.

திருவாரூர்

மஞ்சாடு குன்றடர வூன்றி மணிவிரலால்
துஞ்சாப்போர் வாளரக்கன் றோணெரியக் கண்குருதிச்
செஞ்சாந் தணிவித்துத் தன்மார்பிற் பால்வெண்ணீற்
றஞ்சாந் தணிந்தானை நான்கண்ட தாரூரே. #197

மேகங்கள் அசைந்து செல்லும் கயிலை மலையை இராவணன் பெயர்க்க முற்பட அழகிய கால் விரலால் அழுத்தி, உறங்காது, போர் செய்யும் திறமையை உடைய கொடிய அவ்வரக்கனுடைய தோள்கள் நெரிய அவன் கண்களிலிருந்து புறப்பட்ட இரத்தமாகிய சிவந்த கலவையை அவனை அணியுமாறு செய்து, தன் மார்பிலே பால்போன்ற வெண்ணீற்றுப் பூச்சினை அணிந்த பெருமானை அடியேன் தரிசித்த திருத்தலம் திருவாரூரே யாம்.

திருவாரூர்

திருவாரூர்,
பண் - சீகாமரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

காண்டலேகருத் தாய்நினைந்திருந் தேன்மனம்புகுந்
தாய்க ழலடி
பூண்டுகொண் டொழிந்தேன்
புறம்போயினா லறையோ
ஈண்டுமாடங்க ணீண்டமா ளிகை மேலெழுகொடி
வானி ளம்மதி
தீண்டிவந் துலவுந்
திருவாரூ ரம்மானே. #198

நெருங்கிய மாடங்கள் நீண்ட மாளிகைகள் இவற்றின்மேல்

உயர்த்தப்பட்ட கொடிகள் வானத்திலுள்ள பிறையைத் தீண்டியவாறு வானத்தில் உலவும் திருவாரூரிலுள்ள பெருமானே! உன்னைக் காண்பதனையே எண்ணமாகக் கொண்டு உன்னை விரும்புற்று நினைத்தவாறு இருந்த அடியேனுடைய உள்ளத்தில் நீ புகுந்தாயாக, உன் வீரக்கழல் அணிந்த திருவடிகளை என் மனத்திற்கு அணிகலனாக அணிந்து கொண்டிருக்கின்ற என்னை விடுத்துப் புறத்தே போக விட்டேன். உன்மேல் ஆணை.

திருவாரூர்

கடம்படந்நட மாடினாய்களை கண்ணினக்கொரு
காதல் செய்தடி
ஒடுங்கி வந்தடைந்தே
னொழிப்பாய் பிழைப்பவெல்லாம்
முடங்கிறான்முது நீர்மலங்கிள வாளைசெங்கயல்
சேல்வ ரால்களி
றடைந்த தண்கழனி
யணியாரூ ரம்மானே.; **#199**

வளைந்த இறால் மீன், பழைய நீர்ப்பள்ளத்தில் உறையும் மலங்கு, இளைய வாளைமீன், சிவந்த கயல்மீன்கள், சேல்மீன்கள், வரால் மீன்கள், களிறு என்ற மீன்கள் வந்து சேரும் குளிர்ந்த வயல்களை உடைய அழகிய ஆரூர்த் தலைவனே! பஞ்சமுக வாத்தியம் ஒலிக்கக் கூத்தாடுபவனே! அடைக்கலம் நல்குபவனாயுள்ள நின்பால் தனியன்பு கொண்டு உன் திருவடிகளில் உலகப் பற்றுக்கள் ஒடுங்க, வந்து அடைந்தேன். அடியேன் செய்த பிழைகளை எல்லாம் போக்குவாயாக.

திருவாரூர்

அருமணித்தடம் பூண்முலை யரம்பையரொ
டருளிப் பாடியர்
உரிமையிற் றொழுவார்
உருத்திர பல்கணத்தார்
விரிசடைவிர திகளந்தணர் சைவர்பாசு
பதர்க பாலிகள்
தெருவினிற் பொலியுந்
திருவாரூ ரம்மானே. **#200**

விலை உயர்ந்த மணிகளாலாகிய பெரிய அணிகலன்களைப் பூண்ட மார்பினை உடைய தேவருலகப் பெண்கள் போல்வாரோடு, கோயில் பணி செய்பவர்கள். ஆதி சைவர்கள், சிவகணத்தார், விரிந்த சடையை உடைய, விரத ஒழுக்கம் பூண்ட மாவிரதிகள், அந்தணர், சைவர்,

பாசுபதர், கபாலிகள் ஆகியோர் தெருக்களில் பலராகக் காணப்படும் திருவாரூர்த் தலைவனே!

திருவாரூர்

பூங்கழறொழு தும்பரவியும் புண்ணியாபுனி
தாவுன் பொற்கழல்
ஈங்கிருக் கப்பெற்றேன்
என்ன குறையுடையேன்
ஓங்குதெங்கிலை யார்கமுகிள வாழைமாவொடு
மாது ளம்பல
தீங்கனி சிதறுந்
திருவாரூ ரம்மானே. **#201**

உயர்ந்த தென்னை மட்டைகளைத் தொடும் அளவு உயர்ந்த கமுகு மரம், இளவாழை, மா, மாதுளம், பலா என்பன இனிய பழங்களை உதிர்க்கும் திருவாரூர்த் தலைவனே! உன்னுடைய பொலிவை உடைய திருவடிகளைத் தொழுதும் முன் நின்று துதித்தும், புண்ணியனாய்ப் புனிதனாயுள்ள உன்னுடைய அழகிய திருவடிகள் என்னிடத்துத் தங்கப் பெற்றதனால் அடியேன் இனிவேறு யாது தேவையை உடையேன்? ஈங்கு - என்னிடம்.

திருவாரூர்

நீறுசேர்செழு மார்பினாய்நிரம் பாமதியொடு
நீள்ச டையிடை
ஆறுபாய வைத்தாய்
அடியே யடைந்தொழிந்தேன்
ஏறிவண்டொடு தும்பியஞ்சிற கூன்றவிண்ட
மலரி தழ்வழி
தேறல்பாய்ந் தொழுகுந்
திருவாரூ ரம்மானே. **#202**

வண்டுகள் தும்பிகளோடு ஏறி மலர்களில் அமர்ந்து, அழகிய சிறகுகளை அவற்றில் அழுத்தி வைப்பதனால், மலர்களின் இதழ்கள் வழியாகத் தேன் பாய்ந்து ஒழுகும் திருவாரூர்த் தலைவனே! நீ திருநீறணிந்த வளமான மார்பினை உடையாய், பிறை மதியோடு உன் நீண்ட சடையிலே கங்கை பரவுமாறு அவற்றைச் சடையில் வைத்துள்ளாய். அடியேன் உன்னை அடைந்து தீவினைகளிலிருந்து நீங்கினேன்.

திருவாரூர்

அளித்துவந்தடி கைதொழுமவர் மேல்வினைகெடும்

என்றி வையகம்
களித்துவந் துடனே
கலந்தாடக் காதலராய்க்
குளித்துமூழ்கியுந் தூவியுங்குடைந் தாடுகோதையர்
குஞ்சி யிட்புகத்
தெளக்குந் தீர்த்தமறாத்
திருவாரூ ரம்மானே. **#203**

உலகிலுள்ள அடியார்கள் உன்னுடைய தியானத்திலே களிப்புக் கொண்டு வந்து ஒரு சேரக்கூடி ஆட, அதனைக் கண்டு தாமும் விருப்பமுற்றவராய்க் கழுத்துவரை குளித்தும் தலை நனைய மூழ்கியும் தீர்த்தத்தை ஒருவர்மேல் மற்றவர் வாரி இறைத்தும், நீரில் உட்புக்கு நீராடும் மகளிர் மயிர் முடிமீது அபிடேக நீர் தெளக்கப்படும் திருவாரூர்த் தலைவனே! அன்பு முதிரப் பெற்றுத் திருக்கோயிலுக்கு வந்து உன் திருவடிகளைக் கைகளால் தொழுகின்ற அடியார்களுடைய வரக்கடவ வினைகளும் அழிந்து விடும் என்று நீ தெரிவிக்கின்றாய் ஆதலின் அடியவர் உன்னடிகளைத் தவறாது வணங்குகின்றனர்.

<u>திருவாரூர்</u>

திரியுமூவெயில் தீயெழச்சிலை வாங்கிநின்றவ
னேயென் சிந்தையுள்
பிரியுமா றெங்ஙனே
பிழைத்தேயும் போகலொட்டேன்
பெரிய செந்நெற்பி ரம்புரிகெந்த சாலிதிப்பிய
மென்றி வையகத்
தரியுந் தண்கழனி
அணியாரூ ரம்மானே. **#204**

உயர்வாகக் கூறப்படும் செந்நெல், பிரம்புரி, கெந்தசாலி, திப்பியம் என்ற பெயருடைய நெல்வகைகள் தம்மகத்து அறுவடை செய்யப்படும் குளிர்ந்த வயல்வளமுடைய அழகிய ஆரூர்த் தலைவனே! வானத்தில் உலவும் மும்மதில்களும் தீப்பற்றி எரியுமாறு வில்லை வளைத்து நின்றவனே! என் உள்ளத்திலிருந்து நீ யாங்ஙனம் பிரிவாய்? மறந்தும் கூட நீ என்னை விடுத்து நீங்க உன்னை விடமாட்டேன்.

<u>திருவாரூர்</u>

பிறத்தலும்பிறந் தாற்பிணிப்பட வாய்ந்தசைந் துட
லம்பு குந்துநின்
றிறக்குமா றுளதே
யிழித்தேன் பிறப்பினைநான்

அறத்தையேபுரிந் தமனத்தனா யார்வச்செற்றக்
குரோத நீக்கியுன்
திறத்தனா யொழிந்தேன்
றிருவாரூ ரம்மானே. #205
திருவாரூர் அம்மானே! இறந்தால் பிறந்தலும் பிறந்தால் உடலில் புகுந்து நின்று பிணிகள் தோன்ற நுணுகி வருந்தி இறக்குமாறும் உள்ளவே. அதனால் பிறப்பை இழிவாகக் கருதி வெறுத்தேனாய், அறத்தையே விரும்பிய மனத்தினேனாய், ஆசை, பகை, வெகுளி இவற்றை நீக்கி உன் அடிமைத் திறத்தில் ஈடுபட்டே னாய் உலகியற் செயல்களிலிருந்து நீங்கினேன்.

திருவாரூர்

முளைத்தவெண்பிறை மொய்சடையுடை யாயெப்போதுமென்
னெஞ்சிடங் கொள்ள
வளைத்துக் கொண்டிருந்தேன்
வலிசெய்து போகலொட்டேன்
அளைப்பிரிந்தவ லவன்போய்ப்புகு தந்தகாலமுங்
கண்டு தன்பெடை
திளைக்குந் தண்கழனித்
திருவாரூ ரம்மானே. #206
வளையிலிருந்து பிரிந்து சென்ற நண்டு மீண்டும் போய் வளையில் புகுந்த காலத்தை நோக்கிப் பெடை நண்டு அதனைக் கண்டு இன்பத்தில் திளைக்கும் குளிர்ந்த வயல்களை உடைய திருவாரூர் அம்மானே! பிறையை அணிந்த செறிந்த சடையனே! எப்பொழுதும் என் நெஞ்சினையே நீ இடமாகக் கொள்ளுமாறு உன்னைப் பலகாலும் சுற்றிக்கொண்டிருந்த அடியேன் இனிப் பிடிவாதம் செய்து அதனை விடுத்துப்போக ஒருப்படேன்.

திருவாரூர்

நாடினார்கம லம்மலரய னோடிரணிய
னாகங் கீண்டவன்
நாடிக் காணமாட்டாத்
தழலாய நம்பானைப்
பாடுவார்பணி வார்பல்லாண்டிசை கூறுபத்தர்கள்
சித்தத் துள்புக்குத்
தேடிக் கண்டுகொண்டேன்
திருவாரூ ரம்மானே. #207
திருவாரூர் அம்மானே! தாமரை மலரில் உள்ள பிரமனோடு, இரணியன்

மார்பினைப் பிளந்த திருமாலும் தேடினராயும் காண மாட்டாத தீப்பிழம்பு வடிவினனாய், நம்மால் விரும்பப்படும் உன்னைப் பாடுபவராய்ப் பணிபவராய் வாழ்த்துபவராய் உள்ள பக்தர்களின் உள்ளத்தினுள்ளே புகுந்து தேடி அவ்விடத்தில் உன்னைக் கண்டு கொண்டேன்.

திருவாரூர்திருவாதிரைப்பதிகம்

திருவாரூர்

திருவாரூர்திருவாதிரைப்பதிகம்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

முத்துவிதான மணிப்பொற்கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்டலைமாலை விரதிகள்
அத்தனாரூ ராதிரைநாளா லதுவண்ணம். **#208**

எம்பெருமானுக்கு விழாக்காலத்திற் கொண்டு செல்லப்படும் நிவேதனப் பொருள்களின் பின்னே முறைப்படி பத்தி மிக்க ஆடவரும் மகளிரும் மாவிரதியரும் சூழ்ந்துவர, வெள்ளிய தலை மாலையை அணிந்த திருவாரூர்த் தலைவன் முத்துக்களால் அமைக்கப்பட்ட மேற்கட்டியின் நிழலிலே அழகிய பொற்காம்பினை உடைய கவரி வீசப்பெறச் சிறப்பான செயற்கையழகோடு திருஆதிரைத் திருநாளில் வழங்கும் காட்சி அது. அது என்று எப்பொழுதும் அடியவர் மனக்கண் முன் நிற்பதாகும்.

திருவாரூர்

நணியார் சேயார் நல்லார் தீயார் நாடோறும்
பிணிதான் றீரு மென்று பிறங்கிக் கிடப்பாரும்
மணியே பொன்னே மைந்தா மணாளா வென்பார்கட்
கணியா னாரூ ராதிரை நாளா லதுவண்ணம். **#209**

திருவாரூருக்கு அண்மையில் உள்ளவர், தூரத்தில் உள்ளவர், நல்லவர்கள், தீக்குணம் மிக்கவர்கள், நாடோறும் தங்கள் பிணிகள் தீரவேண்டும் என்று மிகுதியாக வந்து வழிபடுபவர்கள் ஆகிய யாவரும் 'மணியே பொன்னே வலியவனே தலைவனே' என்று வாய்விட்டு அழைப்ப, அவர்கள் கருத்துக்கு அணியனாய் இருக்கும் ஆரூர்ப் பெருமானுடைய திரு ஆதிரை நாள் திருக்கோலம் அது அது என்று அடியவர் மனக்கண்முன் எப்பொழுதும் நிற்பதாகும்.

திருவாரூர்

வீதிகடோறும் வெண்கொடியோடு விதானங்கள்
சோதிகள்விட்டுச் சுடர்மாமணிக ளொளிதோன்றச்

சாதிகளாய பவளமுமுத்துத் தாமங்கள்
ஆதியாரூ ராதிரைநாளா லதுவண்ணம். #210
வீதிகள் தோறும் வெண் கொடிகளும் மேற்கட்டிகளும் சிறந்த பவளங்களாலும் முத்துக்களாரும் புனையப்பட்ட மாலைகளும் தம்மிடையே பதிக்கப்பட்ட மணிகளால் பேரொளியை வெளிப்படுத்த, எல்லாப் பொருள்களுக்கும் முதல்வனாகிய ஆரூரனுடைய திருவாதிரைத் திருநாளின் பெருவனப்பு எப்பொழுதும் அது அது என்று அடியவர்கள் நினைக்குமாறு உள்ளது.

திருவாரூர்

குணங்கள்பேசிக் கூடிப்பாடித் தொண்டர்கள்
பிணங்கித்தம்மிற் பித்தரைப்போலப் பிதற்றுவார்
வணங்கிநின்று வானவர்வந்து வைகலும்
அணங்கனாரூ ராதிரை நாளா லதுவண்ணம். #211
நாள்தோறும் தேவர்கள் வந்து வணங்கி நிற்க, தெய்வத் தலைவானகிய எம்பெருமானுடைய பல பண்புகளையும் பேசிக்கொண்டு ஒன்று சேர்ந்து அவனைப்பற்றிப் பாடி அடியார்கள் அவனுக்குத் தொண்டு செய்வதில் ஒருவருக்கு ஒருவர் முற்பட்டுப் பித்தரைப்போல அடைவு கெடப் பலவாறு பேசும் ஆரூர் ஆதிரைத் திருநாள் அழகு என்றும் அவர்கள் உள்ளத்தில் நிலை நிற்பதாகும்.

திருவாரூர்

நிலவெண்சங்கும் பறையும்மார்ப்ப நிற்கில்லாப்
பலருமிட்ட கல்லவடங்கள் பரந்தெங்கும்
கலவமஞ்ஞை காரென்றெண்ணிக் களித்துவந்
தலமராரூ ராதிரைநாளா லதுவண்ணம். #212
நிலாப் போன்று வெள்ளிய சங்குகளும் பறைகளும் ஒலிப்பவும் நின்ற இடத்தில் மீண்டும் நில்லாமல் கூத்தாடும் பலரும் காலில் கட்டிக் கொண்ட சதங்கை முதலியவற்றின் ஒலி பரவவும் அவற்றின் ஒலிகளை மேகத்தின் ஒலி என்று கருதித் தோகைகளை உடைய ஆண் மயில்கள் மகிழ்வோடு வந்து ஆடிச்சுழலும்படியாக ஆரூர்த் திருவாதிரைத் திருவிழாவின் அழகு என்றும் உள்ளத்தில் நிலைபெறுவதாகும்.

திருவாரூர்

விம்மாவெருவா விழியாத்தெழியா வெருட்டுவார்
தம்மாண்பிலராய்த் தரியார் தலையான் முட்டுவார்
எம்மானீச னெந்தையெ னப்ப னென்பார்கட்
கம்மானாரூ ராதிரைநாளா லதுவண்ணம். #213

பொருமி, வாய்வெருவி விழித்து உரத்துக்கூறி மற்றவர்களை அஞ்சி ஒதுங்கச் செய்பவராய்த் தமக்கு என்று எந்த நற்செயல்களையும் பண்பையும் கொள்ளாமல் எல்லாம் ஈசன் செயல் என்று மகிழ்ச்சியால் தலையை மோதிக்கொண்டு 'எம்மான் எம்மை அடக்கி ஆள்பவன்; எம் தலைவன்' என்று பெருமான் புகழ் ஓதும் அடியவர் தலைவனாகிய ஆரூர்ப் பெருமானின் திருவாதிரைத் திருநாளின் அழகு என்றும் உள்ளத்தில் நிலைபெறுவதாகும்.

திருவாரூர்

செந்துவர்வாயார் செல்வனசேவடி சிந்திப்பார்
மைந்தர்களோடு மங்கையர்கூடி மயங்குவார்
இந்திரனாதி வானவர்சித்த ரெடுத்தேத்தும்
அந்திரனாரூ ராதிரைநாளா லதுவண்ணம். **#214**

இந்திரன் முதலிய தேவர்களும் சித்தர்களும் பலவாறு துதிக்கும் தனியனாகிய ஆரூர்ப் பெருமானுடைய திருவாதிரைத் திருவிழாவில் செம்பவளம் போன்ற வாயை உடைய ஆடவரோடு மகளிரும் கூடி அவன் திருவடிகளைச் சிந்தித்து ஈடுபடுபவருடைய அழகிய காட்சி என்றும் உள்ளத்தில் நிலை பெறுவதாகும்.

திருவாரூர்

முடிகள்வணங்கி மூவாதார்கண் முன்செல்ல
வடிகொள் வேய்த்தோள் வானரமங்கையர் பின்செல்லப்
பொடிகள்பூசிப் பாடும்தொண்டர் புடைசூழ
அடிகளாரூ ராதிரைநாளா லதுவண்ணம். **#215**

தலையால் வணங்கித் தேவர்கள் முன்னே செல்லவும் செப்பமான மூங்கில்போன்ற தோள்களை உடைய தேவருலகப் பெண்கள் பின்னே செல்லவும் திருநீற்றைப் பூசிய அடியவர்கள் நாற்புறமும் சூழ்ந்து நிற்கவும் எம்பெருமான் ஆரூரில் திருவாதிரைத் திருவிழாவில் காணப்படும் அழகு என்றும் உள்ளத்து நிலை பெறுவதாகும்.

திருவாரூர்

துன்பநும்மைத் தொழாதநாள்க ளென்பாரும்
இன்பநும்மை யேத்துநாள்க ளென்பாரும்
நும்பினெம்மை நுழையப்பணியே யென்பாரும்
அன்பனாரூ ராதிரைநாளா லதுவண்ணம். **#216**

எல்லோருக்கும் அன்பனாகிய ஆரூர்ப் பெருமானுடைய திருவாதிரைத் திருவிழாவில் அடியார்கள் பெருமானாரே! உம்மை அடியேங்கள் வழிபடாத நாள்கள் துன்பம் தரும் நாள்கள்; ஆதலின் நும் திருவடித்

தொண்டில் ஈடுபட்டு அடியேங்கள் நும்பின் எப்பொழுதும் வருமாறு எங்களைச் செயற்படுத்துவீர் என்று வேண்டும் காட்சி என்றும் உள்ளத்து நிலை பெறுவதாகும்.

திருவாரூர்

பாரூர்பௌவத் தானைபத்தர் பணிந்தேத்தச்
சீரூர்பாட லாடலறாத செம்மாப்பார்ந்
தோரூரொழியா துலகமெங்கு மெடுத்தேத்தும்
ஆரூரன்ற னாதிரைநாளா லதுவண்ணம். **#217**

உலகைச் சூழ்ந்து நிற்கும் கடல்போல எல்லை காண ஒண்ணாத பெருமானை அடியார்கள் வணங்கித் துதித்தலால் சிறப்பு மிகுந்த பாடல்கள் ஒலித்தல் நீங்காத பெருமிதத்தை நுகர்ந்தவாறு அப்பகுதியிலுள்ள ஊர்களைச் சேர்ந்தவர்கள் யாவரும் எஞ்சாது எங்கும் எம்பெருமான் புகழை எடுத்துக் கூறித் துதிக்கும் ஆரூர்ப் பெருமானுடைய திருவாதிரைத் திருநாளின் வனப்பு என்றும் அது அது என்று நினைக்குமாறு உள்ளத்தில் நிலைபெறுவதாகும்.

கோயில்

கோயில்

கோயில்,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருமூலத்தானநாயகர் (எ) சபாநாதர்.
தேவியார் : சிவகாமியம்மை.

செஞ்சடைக் கற்றை முற்றத்
திளநிலா வெறிக்குஞ் சென்னி
நஞ்சடை கண்ட னாரைக்
காணலா நறவ நாறு
மஞ்சடை சோலைத் தில்லை
மல்குசிற் றம்ப லத்தே
துஞ்சடை யிருள் கிழியத்
துளங்கெரி யாடு மாறே. **#218**

சிவந்த சடைக்கற்றையாகிய முன்னிடத்தில் பிறை ஒளிவீசும் திருமுடியை உடைய, விடம் பொருந்திய கழுத்தினராகிய சிவபெருமானை, மேக மண்டலம் வரை வளர்ந்த தேன் மணம் கமழும் சோலைகளை உடைய தில்லைப் பதியிலே விளங்குகின்ற சிற்றம் பலத்திலே, செறிந்து பரவியுள்ள இருள் நீங்குமாறு கையில் அசைகின்ற தீயோடு கூத்து நிகழ்த்தும் நிலையில் காணலாம்.

கோயில்

ஏறனா ரேறு தம்பா
லிளநிலா வெறிக்குஞ் சென்னி
ஆறனா ராறு சூடி
யாயிழை யாளோர் பாக
நாறுபூஞ் சோலைத் தில்லை
நவின்றசிற் றம்ப லத்தே
நீறுமெய் பூசி நின்று
நீண்டெரி யாடு மாறே. **#219**

காளையை வாகனமாகவுடையவராய், பிறை ஒளிவீசும் தலையிலே கங்கையாற்றை உடையவராய், கங்கையைச் சூடிக்கொண்டு, பார்வதி ஒருபாகமாக, நறுமணம் கமழும் சோலைகளை உடைய தில்லை நகரிலே தாம் பலகாலும் பழகிய சிற்றம்பலத்திலே உடலில் திருநீறு பூசிக்கொண்டு பலகாலம் ஞானத்தீயிடைக் கூத்தாடுமாற்றைக்

காணலாம்.

கோயில்

சடையனார் சாந்த நீற்றர்
தனிநிலா வெறிக்குஞ் சென்னி
யுடையனா ருடை தலை(ய்)யி
லுண்பதும் பிச்சை யேற்றுக்
கடிகொள்பூந் தில்லை தன்னுட்
கருதுசிற் றம்ப லத்தே
அடிகழ லார்க்க நின்று
வனலெரி யாடு மாறே. **#220**

சடையை உடையவராய்த் திருநீற்றையே சந்தனமாகப் பூசியவராய், ஒரேபிறை ஒளிவீசும் தலையை உடையவராய், மண்டையோட்டில் பிச்சை ஏற்று உண்பதனை உடையவராய், நறுமணம் கமழும் பூக்கள் நிறைந்த தில்லை நகரில் சிறப்பாகக் கருதப்படும் சிற்றம்பலத்திலே, திருவடிகளிலே வீரக்கழல் ஆரவாரம் செய்ய நின்று, ஒளிவீசும் ஞானத் தீயிடையே கூத்து நிகழ்த்துமாற்றைக் காணலாம்.

கோயில்

பையர வசைத்த வல்குற்
பனிநிலா வெறிக்குஞ் சென்னி
மையரிக் கண்ணி யாளும்
மாலுமோர் பாக மாகிச்
செய்யரி தில்லை தன்னுட்
டிகழ்ந்தசிற் றம்ப லத்தே
கையெரி வீசி நின்று
கனலெரி யாடு மாறே. **#221**

குளிர்ந்த பிறை ஒளி வீசும் தலையிலே படம் எடுக்கும் பாம்பை வருத்தும் வனப்புடைய அல்குலை உடைய, செவ்வரி கருவரி பரந்த மை தீட்டிய கண்களை உடைய கங்கையோடு, திருமால் ஒருபாகமாக அமைய, வயலிலே தானியங்கள் அறுவடை செய்யப்படுகின்ற தில்லையம்பதியிலே விளங்கும் சிற்றம்பலத்திலே சிவபெருமான் கையில் ஏந்திய நெருப்பினை வீசிக்கொண்டு நின்றவராய், ஒளிவீசும் ஞானத் தீயிடையே கூத்து நிகழ்த்துமாற்றைக் காணலாம்.

கோயில்

ஓதினார் வேதம் வாயா
லொளிநிலா வெறிக்குஞ் சென்னி

பூதனார் பூதஞ் சூழப்
புலியுரி யதள னார்தாம்
நாதனார் தில்லை தன்னு
ணவின்றசிற் றம்ப லத்தே
காதில்வெண் குழைகள் தாழக்
கனலெரி யாடு மாறே. **#222**

ஐம்பூதங்களாக இருக்கும் பெருமான், தம் வாயால் வேதம் ஓதினராய்ப் பிறை ஒளிவீசும் சென்னியராய்ப் புலித்தோலை அணிந்தவராய்த் தாம் எல்லோருக்கும் தலைவராய்ப் பூதங்கள் சூழத் தில்லையம்பதியில் பலகாலும் பழகிய சிற்றம்பலத்திலே காதிலணிந்த வெண்குழைகள் தொங்குமாறு ஒளிவீசும் ஞானத் தீயிடையே கூத்து நிகழ்த்துமாற்றைக் காணலாம்.

<u>கோயில்</u>

ஓருடம் பிருவ ராகி
யொளிநிலா வெறிக்குஞ் சென்னிப்
பாரிடம் பாணி செய்யப்
பயின்றவெம் பரம மூர்த்தி
காரிடந் தில்லை தன்னுட்
கருதுசிற் றம்ப லத்தே
பேரிடம் பெருக நின்று
பிறங்கெரி யாடு மாறே. **#223**

ஒரே உடம்பில்தாமும் பார்வதியுமாக இருவராகி, ஒளிவீசும் பிறையின் ஒளி பரவிய சென்னியராய், பூதக்கூட்டங்கள் தாளம் போட, கூத்தாடுதலின் பழகிய எம் மேம்பட்ட பெருமான், மேகங்கள் தங்கும் தில்லையிலே சிறப்பாகக் கருதப்படும் சிற்றம்பலத்திலே அகண்டமாய் வளருமாறு நின்று, விளங்குகின்ற ஞானத் தீயிடையே கூத்து நிகழ்த்துமாற்றைக் காணலாம்.

<u>கோயில்</u>

முதற்றனிச் சடையை மூழ்க
முகிழ்நிலா வெறிக்குஞ் சென்னி
மதக்களிற் றுரிவை போர்த்த
மைந்தரைக் காண லாகு
மதர்த்துவண் டறையுஞ் சோலை
மல்குசிற் றம்ப லத்தே
கதத்ததோ ரரவ மாடக்
கனலெரி யாடு மாறே. **#224**

முதன்மையும் ஒப்பற்ற தன்மையும் உடையசடைமுழுதும் பிறை தன் ஒளியைப் பரப்பும் சென்னியை ய், மதம் பொருந்திய யானையை கொன்று அதன் தோலைப் போர்த்திய வலிமை உடையவராய், தேன் உண்டு களித்து வண்டுகள் ஒலிக்கும் சோலைகள் நிறைந்த சிற்றம்பலத்தில் கோபம் கொண்ட பாம்பு படமெடுத்து ஆடச் சிவபெருமான் ஒளிவீசும் ஞானத் தீயிடையே கூத்து நிகழ்த்துமாற்றைக் காணலாம்.

கோயில்

மறையனார் மழுவொன் றேந்தி
மணிநிலா வெறிக்குஞ் சென்னி
இறைவனா ரெம்பி ரானா
ரேத்துவா ரிடர்க டீர்ப்பார்
சிறைகொணீர்த் தில்லை தன்னுட்
டிகழ்ந்தசிற் றம்ப லத்தே
அறைகழ லார்க்க நின்று
வனலெரி யாடு மாறே. **#225**

வேதம் ஓதுபவராய், மழுப்படை ஒன்றை ஏந்தியவராய், அழகிய பிறை நிலவொளி வீசும் சென்னியராய், எல்லோர் உள்ளத்தும் தங்கியிருப்பவராய், எங்கள் தலைவராய், தம்மைத் துதிப்பவர்களுடைய துயரங்களை நீக்குபவராய், நீர்ப் பாசனத்துக்காகத் தேக்கி வைக்கப்பட்டுள்ள தில்லையம்பதியிலே விளங்குகின்ற சிற்றம்பலத்திலே, சிவபெருமான் தம் கழல் ஒலி செய்ய நின்று ஞானத் தீயிடையே கூத்து நிகழ்த்துமாற்றைக் காணலாம்.

கோயில்

விருத்தனாய்ப் பால னாகி
விரிநிலா வெறிக்குஞ் சென்னி
நிருத்தனார் நிருத்தஞ் செய்ய
நீண்டபுன் சடைக டாழக்
கருத்தனார் தில்லை தன்னுட்
கருதுசிற் றம்ப லத்தே
அருத்தமா மேனி தன்னோ
டனலெரி யாடு மாறே. **#226**

ஆண்டில் மூத்தவராகவும், மிக இளையராகவும் காட்சி வழங்குபவராய், பிறை விரிந்த ஒளியைப் பரப்பும் சென்னியராய்க் கூத்து நிகழ்த்துபவராய், நீண்ட சிவந்த சடைகள் தொங்கக் கூத்தாடுதலால் அடியவர் உள்ளத்தில் என்றும் தங்கியிருப்பவராய், தில்லையம்பதியிலே

சிறப்பாகக் கருதப்படுகின்ற சிற்றம்பலத்திலே பார்வதிபாகமான திருமேனியோடு ஒளிவீசும் ஞானத் தீயிடைச் சிவபெருமான் கூத்தாடும் காட்சியைக் காணலாம்.

கோயில்

பாலனாய் விருத்த னாகிப்
பனிநிலா வெறிக்குஞ் சென்னிக்
காலனைக் காலாற் காய்ந்த
கடவுளார் விடையொன் றேறி
ஞாலமாந் தில்லை தன்னுள்
நவின்றசிற் றம்ப லத்தே
நீலஞ்சேர் கண்ட னார்தா
நீண்டெரி யாடு மாறே. **#227**

பாலனாகவும் மூத்தோனாகவும் காட்சி வழங்கிக் குளிர்ந்த பிறை ஒளிவீசும் சென்னியராய்க் காலனை காலான் வெகுண்ட பெருமானார் காளையை இவர்ந்து உலகவர் கூடி வணங்கும் தில்லையம்பதியில் சிறப்பாகப் போற்றப்படும் சிற்றம்பலத்திலே நீலகண்டராய் விரிவாக ஞானத் தீயிடைக் கூத்து நிகழ்த்தும் காட்சியைக் காணலாம்.

கோயில்

மதியிலா வரக்க னோடி
மாமலை யெடுக்க நோக்கி
நெதியன்றோ ணெரிய வூன்றி
நீடிரும் பொழில்கள் சூழ்ந்த
மதியந்தோய் தில்லை தன்னுள்
மல்குசிற் றம்ப லத்தே
அதிசயம் போல நின்று
வனலெரி யாடு மாறே. **#228**

அறிவற்ற அரக்கனாகிய இராவணன் விரைந்து சென்று பெரிய கயிலை மலையைப் பெயர்க்க, அதனை மனத்தால் நோக்கிச் செல்வனான அவனுடைய தோள்கள் நெரியுமாறு கால்விரல் ஒன்றனை ஊன்றி, நீண்ட பொழில்கள் சூழ்ந்த தில்லையுள் விளங்கும் சிற்றம்பலத்திலே சிவபெருமான் எல்லோரும் வியக்குமாறு குறுகிய இடத்தில் நின்று ஒளிவீசும் ஞானத் தீயிடைக் கூத்து நிகழ்த்தும் காட்சியைக் காணலாம்.

கோயில்

கோயில்,
பண் - கொல்லி,

இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருமூலத்தானநாயகர் (எ) சபாநாதர்.
தேவியார் : சிவகாமியம்மை.

பத்தனாய்ப் பாட மாட்டேன்
பரமனே பரம யோகீ
எத்தினாற் பத்தி செய்கே
னென்னைநீ யிகழ வேண்டா
முத்தனே முதல்வா தில்லை
யம்பலத் தாடு கின்ற
அத்தாவுன் னாடல் காண்பா
னடியனேன் வந்த வாறே. **#229**

அநாதியான வினையின் நீங்கியவனே! எல்லாருக்கும் முற்பட்டவனே! தில்லை அம்பலத்தே ஆடுகின்ற தலைவனே! மேம்பட்டவனே! மேம்பட்ட யோகியே! அடியேன் பத்தனாய்ப் பாடும் ஆற்றல் இல்லேன். யாதனால் அடியேன் பத்தி செய்வேன்? அடியேனை நீ இகழவேண்டா. அடியேன் உன் ஆடலைக் காணத் தில்லை வந்துள்ளேன்.

கோயில்

கருத்தனாய்ப் பாட மாட்டேன்
காம்பன தோளி பங்கா
ஒருத்தரா லறிய வொண்ணாத்
திருவுரு வுடைய சோதீ
திருத்தமாந் தில்லை தன்னுட்
டிகழ்ந்தசிற் றம்ப லத்தே
நிருத்தநான் காண வேண்டி
நேர்பட வந்த வாறே. **#230**

மூங்கில் போன்ற தோள்களை உடைய பார்வதி பாகனே! ஒருவராலும் அறியமுடியாத அழகிய ஒளிவடிவு உடையவனே! பரிசுத்தமாயுள்ள தில்லையிலே விளங்குகின்ற சிற்றம்பலத்தில் உன் திருக்கூத்தைக் காணவேண்டி உன்னை உள்ளத்தில் இருத்தி கருத்தொன்றிப் பாடமாட்டாதேனாகிய அடியேன் வந்துள்ளேன்.

கோயில்

கோட்டிலேன் கிளைபி ரியேன்
கேட்குமா கேட்டி யாகில்
நாட்டினே னின்றன் பாதம்
நடுப்பட நெஞ்சி னுள்ளே
மாட்டினீர் வாளை பாயு

மல்குசிற் றம்ப லத்தே
கூட்டமாங் குவிமு லையாள்
கூடநீ யாடு மாறே. **#231**

அடியேன் இதற்குமுன் உன் பெருமையை உள்ளவாறு கேட்டறியேன். இப்பொழுது உன் அடியார்குழாத்தைப் பிரியாமல் உன் பெருமையைக் கேட்குமாறு கேட்பித்தருளி உதவுவாயானால், நீர் நிலைகளில் வாளை மீன்கள் பாயும் வளம் மிகுஞ் சிற்றம்பலத்திலே உன்னோடு கூடியிருக்கும் குவிந்த தனங்களை உடைய பார்வதியோடு கூட நீ ஆடுமாற்றால் (ஆடுதலின் பேறாக) உன் திருவடிகளை நெஞ்சின் நடுவிலே உறுதியாக நிலை நிறுத்தினேன் ஆவேன்.

கோயில்

சிந்தையைத் திகைப்பி யாதே
செறிவுடை யடிமை செய்ய
எந்தைநீ யருளிச் செய்யா
யாதுநான் செய்வ தென்னே
செந்தியார் வேள்வி யோவாத்
தில்லைச்சிற் றம்ப லத்தே
அந்தியும் பகலு மாட
அடியிணை யலசுங் கொள்லோ. **#232**

சிவந்த தீயை ஓம்பும் அந்தணர்களுடைய வேள்விச் செயல்கள் நீங்காத தில்லைச் சிற்றம்பலத்தே அந்தியும் பகலும் நீ கூத்து நிகழ்த்துதலால் உன் திருவடிகள் சோர்வு அடையும்போலும். அடியேன் உள்ளத்தை உலகப் பொருள் நுகர்ச்சியிலிருந்து மாறுபடும் படியாகச் செய்யாமலும் உன்னை அணுகிச் செய்யும் அடிமைத் திறத்தை அடியேனுக்கு அருள் செய்யாமலும் உள்ளாய். இனி அடியேன் செயற்பாலது யாது உள்ளது?

கோயில்

கண்டவா திரிந்து நாளுங்
கருத்தினா னின்றன் பாதங்
கொண்டிருந் தாடிப் பாடிக்
கூடுவன் குறிப்பி னாலே
வண்டுபண் பாடுஞ் சோலை
மல்குசிற் றம்ப லத்தே
எண்டிசை யோரு மேத்த
விறைவநீ யாடு மாறே. **#233**

அடியேன் அனுபவத்தில் கண்டவாறு ஞான நிலைக்குப் பொருந்தியவண்ணம் உலகியலுக்கு மாறுபட்டு உள்ளத்தில் நின்

திருவடிகளை நிலையாகக் கொண்டு ஆடிப்பாடி உன் திருவருட் குறிப்பினாலேயே, வண்டுகள் பண்களைப்பாடும் சோலைகள் மிகுந்த சிற்றம்பலத்திலே எட்டுத் திசைகளில் உள்ளவர்களும் துதிக்குமாறு இறைவனாகிய நீ ஆடும் கூத்தினைக் காண்பதற்கு வந்து சேருவேன்.

கோயில்

பார்த்திருந் தடியனே னான்
பரவுவன் பாடி யாடி
மூர்த்தியே னென்ப னுன்னை
மூவரின் முதல்வ னென்பன்
ஏத்துவா ரிடர்க டீர்ப்பாய்
தில்லைச்சிற் றம்ப லத்துக்
கூத்தாவுன் கூத்துக் காண்பான்
கூடநான் வந்த வாறே. **#234**

வழிபடும் அடியவர்களுடைய துயரங்களைத் தீர்ப்பவனே! தில்லைச் சிற்றம்பலத்தில் உள்ள கூத்தனே! உன் கூத்தினைப் பார்த்து இருந்து உன்னை முன்னின்று துதிப்பேன். ஆடிக் கொண்டும் பாடிக்கொண்டும் உன்னை மூவரினும் முதல்வனாகிய மூர்த்தியே என்று அழைப்பேன். உன் கூத்தினைக் காண்பதற்கு அடியவருடன் நான் வந்தவாறு இதுவாம்.

கோயில்

பொய்யினைத் தவிர விட்டுப்
புறமலா வடிமை செய்ய
ஐயநீ யருளிச் செய்யா
யாதியே யாதி மூர்த்தீ
வையகந் தன்னின் மிக்க
மல்குசிற் றம்ப லத்தே
பையநுன் னாடல் காண்பான்
பரமநான் வந்த வாறே. **#235**

அழியும் பொருள்களிலுள்ள பற்றினை நீங்குமாறு விடுத்து அகத்தடிமையாகிய மெய்யடிமையைச் செய்ய, என் தலைவனே! எல்லோர்க்கும் ஆதியாய முதல் தெய்வமே! நீ அருள் செய்வாயாக. இவ்வுலகிலே மேம்பட்ட மிகுஞ் சிதம்பரத்தில் உன் கூத்தினை சற்றே காண அடியேன் வந்தவாறு இதுவாம்.

கோயில்

மனத்தினார் திகைத்து நாளு

மாண்பலா நெறிகண் மேலே
கனைப்பரா லென்செய் கேனோ
கறையணி கண்டத் தானே
தினைத்தனை வேதங் குன்றாத்
தில்லைச்சிற் றம்ப லத்தே
அனைத்துநின் னிலயங் காண்பா
னடியனேன் வந்த வாறே. **#236**

விடக்கறையை அணிந்த நீலகண்டனே! அடியேனுடைய மனம் நிலைகொள்ளாமல் தடுமாறி நாள்தோறும் பெருமை தாராத வழிகளிலே செருக்கித் திரிகின்றது. அடியேன் யாது செய்வேன். வேதங்களை ஓதுந்திறஞ் சிறிதளவுங் குறைவுபடாத தில்லைச் சிற்றம்பலத்தில் உன் இருப்பிடத்தைத் தரிசிப்பதற்கு அடியேன் வந்தவாறு இதுவாம்.

கோயில்

நெஞ்சினைத் தூய்மை செய்து
நினைக்குமா நினைப்பி யாதே
வஞ்சமே செய்தி யாலோ
வானவர் தலைவ னேநீ
மஞ்சடை சோலைத் தில்லை
மல்குசிற் றம்ப லத்தே
அஞ்செலாள் காண நின்று
வழகநீ யாடு மாறே. **#237**

தேவர்கள் தலைவனே! அடியேனுடைய நெஞ்சினைத் தூய்மை செய்து உன்னை எப்பொழுதும் அடியேன் நினைக்குமாறு திருவுள்ளம் பற்றாமல் வஞ்சனை செய்கின்றாயே. மேகங்கள் தங்குதற்கு வந்து சேரும் உயரமான சோலைகளையுடைய தில்லையம்பதியிற் சிதம்பரத்திலே அழகிய சொற்களையுடைய பார்வதிக்கான நீ ஆடும் திறம் இருந்தவாறு என்னே!

கோயில்

மண்ணுண்ட மால வனு
மலர்மிசைமன்னி னானும்
விண்ணுண்ட திருவு ருவம்
விரும்பினார்காண மாட்டார்
திண்ணுண்ட திருவே மிக்க
தில்லைச்சிற்றம்ப லத்தே
பண்ணுண்ட பாட லோடும்
பரமநீ யாடுமாறே. **#238**

பூமியை உண்ட திருமாலும், மலர்மேலுறையும் பிரமனும் விண்ணளவும் ஒளிநிறைந்த உன் திருவுருவைக் காணும் வேட்கையராயிருந்துமே, தானாக நிலைத்துத் திணிந்திருக்கும் சிவத்திரு மேம்பட்ட தில்லைச் சிற்றம்பலத்தின் கண்ணே பண்ணுக்கு அமைந்த பாடல் ஒலிகளின் இடையே பரம்பொருளாகிய நீ வெளிப்படையாக ஆடுமாற்றை - அதன் மாண்பை (இன்னும்) காணமாட்டாராகின்றனர். (அவர் விதி இருந்தவாறென்னே!)

திருவதிகைவீரட்டானம்

திருஅதிகைவீரட்டானம்

திருவதிகைவீரட்டானம், கொப்பளித்த திருநேரிசை,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : திருவதிகைநாயகி.

இரும்புகொப் பளித்த யானை
யீருரி போர்த்த வீசன்
கரும்புகொப் பளித்த வின்சொற்
காரிகை பாக மாகச்
சுரும்புகொப் பளித்த கங்கைத்
துவலைநீர் சடையி லேற்ற
அரும்புகொப் பளித்த சென்னி
யதிகைவீ ரட்ட னாரே. #239

கரும்பின் இனிமை மிகும் சொற்களை உடைய பார்வதியின் பாகராய், வண்டுகள் தேனை மிகுதியாக உண்டு கொப்பளிக்கும் பூவினை அணிந்த கங்கையாளாகிய நீர் வடிவைச் சடையில் ஏற்றவராய், அரும்புகள் தேனை மிகுதியாக வெளிப்படுத்தும் சென்னியை உடைய அதிகை வீரட்டனார், இரும்பின் நிறத்தைக் கொப்பளித்து விட்டாற்போன்ற செறிவான கருமையுள்ள யானையின் ஈரப்பசுமை கெடாத தோலைப் போர்த்த ஈசனாவார்.

திருஅதிகைவீரட்டானம்

கொம்புகொப் பளித்த திங்கட்
கோணல்வெண் பிறையுஞ் சூடி
வம்புகொப் பளித்த கொன்றை
வளர்சடை மேலும் வைத்துச்
செம்புகொப் பளித்த மூன்று
மதிலுடன் சுருங்க வாங்கி
அம்புகொப் பளிக்க வெய்தா
ரதிகைவீ ரட்ட னாரே. #240

கொம்பின் கூர்மை அதிகரித்த கூரிய வளைந்த வெண் பிறையைச் சூடி, அதன்மேலும் நறுமணம் அதிகரித்த கொன்றை மலரை வளரும் சடையில் அணிந்து, செம்பு மயமான உறுதியான மும்மதில்களும் அழியுமாறு வில்லை வளைத்து அம்பின் விறல் அதிகரிக்குமாறு புரங்களை எய்தவர் அதிகை வீரட்டனாரே.

திருஅதிகைவீரட்டானம்

விடையுங்கொப் பளித்த பாதம்
விண்ணவர் பரவி யேத்தச்
சடையுங்கொப் பளித்த திங்கட்
சாந்தம் வெண் ணீறுபூசி
உடையுங்கொப் பளித்த நாக
முள்குவா ருள்ளத் தென்றும்
அடையுங்கொப் பளித்த சீரா
ரதிகைவீ ரட்ட னாரே. **#241**

இடபத்தில் தழும்பேற்றும் தம் திருவடிகளைத் தேவர்கள் பாடித் துதிக்க சடைக்கு ஒளி ததும்ப வைக்கும் சந்திரனின் நிலவு போன்ற வெண்ணீற்றைச் சாந்தமாகப் பூசி உடைமேல் பல்கித் தோன்றும் நாகங்களைக் கட்டியிருக்கும் திருவடிவை தியானிப்பவரது உள்ளத்தில் நீங்காது சேர்ந்திருந்திருப்பவர் அதிகை வீரட்டனாரே.

திருஅதிகைவீரட்டானம்

கறையுங்கொப் பளித்த கண்டர்
காமவே ளுருவ மங்க
இறையுங்கொப் பளித்த கண்ணா
ரேத்துவா ரிடர்க டீர்ப்பார்
மறையுங்கொப் பளித்த நாவர்
வண்டுண்டு பாடுங் கொன்றை
அறையுங்கொப் பளித்த சென்னி
யதிகைவீ ரட்ட னாரே. **#242**

விடக்கறை துலக்கமாக விளங்கும் கழுத்தினராய், மன்மதன் வடிவம் அழியுமாறு தீயைச் சிறிது வீசிய நெற்றிக் கண்ணினை உடையவராய், தம்மைத் துதிக்கும் அடியவர் துயர்களைத் தீர்ப்பவராய், வேதம் மிக்குத் தொனிக்கும் நாவினராய், வண்டுகள் தேன் உண்டு பாடப்படுவதும், எல்லோராலும் புகழப்படுவதுமான கொன்றை மலரைச் சூடிய சென்னியராய்க் காட்சி வழங்குகிறார் அதிகை வீரட்டனார்.

திருஅதிகைவீரட்டானம்

நீறுகொப் பளித்த மார்பர்
நிழறிகழ் மழுவொன் றேந்திக்
கூறுகொப் பளித்த கோதைக்
கோல்வளை மாதோர் பாகம்
ஏறுகொப் பளித்த பாத

மிமையவர் பரவி யேத்த
ஆறுகொப் பளித்த சென்னி
யதிகைவீ ரட்ட னாரே. #243

திருநீறு பரந்து விளங்கும் மார்பினராய், ஒளி விளங்கும் மழுப்படையைக் கையில் ஏந்தி, எல்லோரும் புகழும் மாலையும் திரண்டவளைகளும் அணிந்து ஒரு பாகத்தை விளக்கும் பார்வதி சமேதராய், காளையைத் தழும்பேற வைத்த தம் திருவடிகளைத் தேவர்கள் துதிக்குமாறு கங்கை நதி பெருகித்தங்கியிருக்கும் செஞ்சடையை உடையவராய் காட்சி வழங்குகிறார் அதிகை வீரட்டனார்.

திருஅதிகைவீரட்டானம்

வணங்குகொப் பளித்த பாதம்
வானவர் பரவி யேத்தப்
பிணங்குகொப் பளித்த சென்னிச்
சடையுடைப் பெருமை யண்ணல்
சுணங்குகொப் பளித்த கொங்கைச்
சுரிகுழல் பாக மாக
அணங்குகொப் பளித்த மேனி
யதிகைவீ ரட்ட னாரே. #244

வேத மந்திரங்களைச் சொல்லி வணங்குதலை மிகவும் பொருந்திய திருவடிகளைத் தேவர்கள் முன் நின்று போற்றிப் புகழ, ஒன்றோடொன்றுணங்காதவை அதிகம் விளங்கும் சடையினை உடைய பெருமை மிக்க தலைமையாளராய், தேமல் மிகவும் பரவிய கொங்கைகளை உடையவளாய்ச் சுருண்ட கூந்தலை உடைய பார்வதியின் பாகராய், தெய்வத் தன்மையை வெளிப்படுத்தும் திருமேனியை உடையவராய்க் காட்சி வழங்குகிறார் அதிகை வீரட்டனார்.

திருஅதிகைவீரட்டானம்

சூலங்கொப் பளித்த கையர்
சுடர்விடு மழுவாள் வீசி
நூலுங்கொப் பளித்த மார்பி
னுண்பொறி யரவஞ் சேர்த்தி
மாலுங்கொப் பளித்த பாகர்
வண்டுபண் பாடுங் கொன்றை
ஆலங்கொப் பளித்த கண்டத்
ததிகைவீ ரட்ட னாரே. #245

சூலம் ஒளிமிகுந்து வீசும் கையினராய், ஒளிவீசும் மழுப்படையை

சுழற்றிக் கொண்டு, முப்புரிநூல் ஒளிவீசும் மார்பில் நுண்ணிய புள்ளிகளை உடைய பாம்பினை அணிந்து வண்டுகள் பண்பாடும் கொன்றை மலர்களைச் சூடித் திருமால் மகிழ்ந்திருக்கும் பாகத்தை உடையவராய், விடத்தின் சுவட்டினை வெளிப்படுத்தும் நீலகண்டராய்க் காட்சி வழங்குகிறார் அதிகை வீரட்டனார்.

திருஅதிகைவீரட்டானம்

நாகங்கொப் பளித்த கையர்
நான்மறை யாய பாடி
மேகங்கொப் பளித்த திங்கள்
விரிசடை மேலும் வைத்துப்
பாகங்கொப் பளித்த மாதர்
பண்ணுடன் பாடி யாட
ஆகங்கொப் பளித்த தோளா
ரதிகைவீ ரட்ட னாரே. **#246**

பாம்பு மகிழ்வோடு விளங்கும் கையினராய், நான்கு வேதங்களையும் பாடிக்கொண்டு, மேகம் மிக்குச் செறிந்த வானில் மிளிரும் பிறையை விரிந்த சடைமேலே சூடி, ஒருபாகமாக விளங்கும் உமாதேவி பண்ணோடு பாடக் கூத்தாடுவதற்குத் திருமேனிக்கண் பூரிப்படைந்து விம்முந் தோள்களை உடையவர் அதிகை வீரட்டனார் ஆவர்.

திருஅதிகைவீரட்டானம்

பரவுகொப் பளித்த பாடல்
பண்ணுடன் பத்த ரேத்த
விரவுகொப் பளித்த கங்கை
விரிசடை மேவ வைத்து
இரவுகொப் பளித்த கண்ட
ரேத்துவா ரிடர்க டீர்ப்பார்
அரவுகொப் பளித்த கைய
ரதிகைவீ ரட்ட னாரே. **#247**

துதித்தற்கு ஏற்ற வாழ்த்துக்களைத் துலங்க வெளிப்படுத்தும் பாடல்களைப் பண்ணுடன் பாடி அடியவர்கள் போற்ற, சடைமுடியில் கலந்து தங்குதற்கு மகிழும் கங்கையைத் தம் விரிந்த சடையில் மகிழுமாறு வைத்து, இருள் கம்மிக் கறுத்த நீலகண்டராய், தம்மை வழிபட்டுப் புகழ்பவர்களின் துயரங்களைத் தீர்ப்பவராய், பாம்பு மகிழ்ந்து ஆடும் கையினராய்க் காட்சி வழங்குகிறார் அதிகை வீரட்டனார்.

திருஅதிகைவீரட்டானம்

தொண்டைகொப் பளித்த செவ்வாய்த்
துடியிடைப் பரவை யல்குற்
கொண்டைகொப் பளித்த கோதைக்
கோல் வளை பாக மாக
வண்டுகொப் பளித்த தீந்தேன்
வரிக்கயல் பருகி மாந்தக்
கெண்டைகொப் பளித்த தெண்ணீர்க்
கெடிலவீ ரட்ட னாரே. **#248**

தொண்டைக்கனி அழகுவீசும் சிவந்தவாய், துடி போன்ற இடை, கடல்போன்ற பரந்த அல்குல்; மயிர் முடிக்கும் விதங்களில் ஒன்றான கொண்டை பிராகாசிக்கும் கூந்தல், திரண்ட வளையல்கள் எனும் இவற்றை உடைய பார்வதிபாகராய், வண்டுகள் உண்டு மிகுதி என்று வெளிப்படுத்திய தேனைக் கோடுகளை உடைய கயல் மீன்கள் பருகத் தாம் பருகுதற்குக் கெண்டை மீன்கள் தாவிவரும் தெளிந்த நீரை உடைய கெடில ஆற்றின் கரையிலுள்ள அதிகை வீரட்டத்தை உகந்தருளியிருக்கும் பெருமானாகக் காட்சி வழங்குகிறார்.

திருஅதிகைவீரட்டானம்

திருவதிகைவீரட்டானம், திருநேரிசை,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : திருவதிகைநாயகி.

வெண்ணிலா மதியந் தன்னை
விரிசடை மேவ வைத்து
உண்ணிலாப் புகுந்து நின்றங்
குணர்வினுக் குணரக் கூறி
விண்ணிலார் மீயச் சூரார்
வேண்டுவார் 1வேண்டி லார்க்கே
அண்ணியார் பெரிதுஞ் சேயா
ரதிகைவீ ரட்ட னாரே. **#249**

தேவருலகிலும் இருப்பதோடு, நிலவுலகில் மீயச்சூர் முதலிய திருத்தலங்களில் உறைபவராய், தம்மை விரும்புபவருக்கு அண்மையில் உள்ளவராய், வேண்டாதவருக்குப் பெரிதும் தொலைவில் உள்ளவராய் விளங்கும் பெருமானார், வெள்ளிய ஒளிவீசும் பிறையை அது விரும்புமாறு விரிசடையிற் சூடி, அடியேன் உள்ளத்திலே ஞானஒளி நிலவப்புகுந்து நின்று, அவ்விடத்தில் உணர்விற்குப் பொருந்துமாறு

உணர்த்த வேண்டியவற்றை உணர்த்தி, அதிகை வீரட்டத்தில் உள்ளார்.

திருஅதிகைவீரட்டானம்

பாடினார் மறைக ணான்கும்
பாயிருள் புகுந்தென் னுள்ளம்
கூடினார் கூட லால
வாயிலார் நல்ல கொன்றை
சூடினார் சூடன் மேவிச்
சூழ்சுடர் சுடலை வெண்ணீ
றாடினா ராடன் மேவி
யதிகைவீ ரட்ட னாரே. **#250**

கூடல் நகர ஆலவாய்க் கோயிலிலுள்ள பெருமான் நான்கு வேதங்களையும் பாடிக்கொண்டு நறிய கொன்றை மாலையை விரும்பிச் சூடி, சுடுகாட்டின் ஒளிவீசும் சாம்பல் பூசி, திரிபுரத்தை அழிக்குந் திருவிளையாடலை விரும்பி அதிகை வீரட்டத்தில் தங்கியவராய், பரந்த ஆன்மிக இருளிலே நுழைந்து வந்து, அடியேனுடைய உள்ளத்தை அடைந்தார்.

திருஅதிகைவீரட்டானம்

ஊனையே கழிக்க வேண்டி
லுணர்மின்க ளுள்ளத் துள்ளே
தேனைய மலர்கள் கொண்டு
சிந்தையுட் சிந்திக் கின்ற
ஏனைய பலவு மாகி
யிமையவ ரேத்த நின்று
ஆனையி னுரிவை போர்த்தா
ரதிகைவீ ரட்ட னாரே. **#251**

உடம்பு எடுத்தலாகிய பிறவித்துயரை அடியோடு போக்க விரும்பினால், உள்ளத்துள்ளே நினைக்கும் எல்லா எண்ணங்களிலும் உறைபவராய், வண்டுகள் வருந்துமாறு மலர்களைக் கைகளில் கொண்டு தேவர்கள் துதிக்குமாறு, யானைத் தோலைப் போர்த்தி நின்று, அதிகை வீரட்டத்தில் காட்சி வழங்கும் பெருமானாரை உள்ளத்துள்ளே தியானித்து உணருங்கள்.

திருஅதிகைவீரட்டானம்

துருத்தியாங் குரம்பை தன்னிற்
றொண்ணூற்றங் கறுவர் நின்று
விருத்திதான் றருக வென்று

வேதனை பலவுஞ் செய்ய
வருத்தியால் வல்ல வாறு
வந்துவந் தடைய நின்ற
அருத்தியார்க் கன்பர் போலு
மதிகைவீ ரட்ட னாரே. **#252**

தோல்துருத்தி போன்ற உடம்பிலே தொண்ணுற்றாறு தத்துவங்களும் தாத்துவிகங்களும் உறைவிடங்கொண்டு தங்கள் வாழ்வுக்கு உரிய பொருள்களை அளிக்க வேண்டுமென்று பல துயரம் செய்யுமாறு உயிரினங்களை வருத்துவதனாலே, தம்மால் இயன்றளவு பெருமானாகிய தம்மை நாடி வந்து அடைந்த விருப்பினை உடைய அடியவர்பால் அதிகை வீரட்டனார் தாமும் அன்பராய் உதவுகிறார்.

திருஅதிகைவீரட்டானம்

பத்தியா லேத்தி நின்று
பணிபவர் நெஞ்சத் துள்ளார்
துத்தியைந் தலைய நாகஞ்
சூழ்சடை முடிமேல் வைத்து
உத்தர மலையர் பாவை
யுமையவ ணடுங்க வன்று
அத்தியி னுரிவை போர்த்தா
ரதிகைவீ ரட்ட னாரே. **#253**

பத்தியோடு வணங்கும் மெய்யன்பர் சித்தத்தில் நிலையாக உள்ளவரும், படப்பொறிகளை உடைய ஐந்தலை நாகத்தைப் பரந்த சடைமுடியின்மேல் சூடி, வடக்கிலுள்ள இமய மலையரசன் மகளான உமாதேவி நடுங்குமாறு யானைத் தோலைப் போர்த்தியவரும் அதிகை வீரட்டனாரே.

திருஅதிகைவீரட்டானம்

வரிமுரி பாடி யென்றும்
வல்லவா றடைந்தும் நெஞ்சே
கரியுரி மூட வல்ல
கடவுளைக் காலத் தாலே
சுரிபுரி விரிகு ழ(ல்)லா
டுடியிடைப் பரவை யல்குல்
அரிவையோர் பாகர் போலு
மதிகைவீ ரட்ட னாரே. **#254**

நெஞ்சே! சுருண்ட கடைகுழன்ற விரிந்த கூந்தலினளாய்த் துடிபோன்ற இடையினளாய்க் கடல்போன்ற அல்குலை உடைய பார்வதி பாகராய்

அதிகை வீரட்டராய் யானைத் தோலைப் போர்த்திய கடவுளாய் விளங்குகிறார் அதிகை வீரட்டனார். அவரை என்றும் வரிப்பாடல்களையும் முரிப்பாடல்களையும் பாடிக் கொண்டு நம்மால் இயன்றவாறு அடையக் கடவோம்.

திருஅதிகைவீரட்டானம்

நீதியா னினைசெய் நெஞ்சே
நிமலனை நித்த மாகப்
பாதியா முமைதன் னோடும்
பாகமாய் நின்ற வெந்தை
சோதியாய்ச் சுடர்வி ளக்காய்ச்
சுண்ணவெண் ணீறதாடி
ஆதியு மீறு மானா
ரதிகைவீ ரட்ட னாரே. **#255**

நெஞ்சே! பார்வதி பாகராய்ச் சோதியாய், ஒளிவிடும் ஞானதீபமாய் நின்ற எம் பிதாவும், திருநீறு பூசி உலகுக்கெல் லாம் ஆதியும் அந்தமுமாக உள்ளவரும் அதிகை வீரட்டனாவார். அத்தூயோரை நாடோறும் முறைப்படி தியானம் செய்வாயாக.

திருஅதிகைவீரட்டானம்

எல்லியும் பகலு மெல்லாந்
துஞ்சுவேற் கொருவர் வந்து
புல்லிய மனத்துக் கோயில்
புக்கனர் காம னென்னும்
வில்லியங் கணையி னானை
வெந்துக நோக்கி யிட்டார்
அல்லியம் பழன வேலி
யதிகைவீ ரட்ட னாரே. **#256**

வில்லையும் அம்புகளையும் உடைய மன்மதன் வெந்து விழும்படி நோக்கியவர், அல்லிச் செடிகள் களையாக நிறைந்த வயல்களை உடைய அதிகை வீரட்டனார். ஒப்பற்றவரான அப்பெருமான் செயற்பாடு ஏதும் இன்றி இரவும் பகலும் கழிக்கும் அடியேன் பக்கல்வந்து அடியேனுடைய அற்பமான மனமாகிய கோயிலிலே புகுந்து விட்டார்.

திருஅதிகைவீரட்டானம்

ஒன்றவே யுணர்தி ராகி
லோங்காரத் தொருவ னாகும்
வென்றவைம் புலன்க டம்மை

விலக்குதற் குரியீ ரெல்லாம்
நன்றவ னார ண(ன்)னு
நான்முக னாடிக் காண்குற்
றன்றவர்க் கரியர் போலு
மதிகைவீ ரட்ட னாரே. #257

பெரியோனாகிய திருமாலும், பிரமனும் தேடிக் காண முயன்ற அன்று அவர்களுக்குக் காண்டற்கு அரியவரான அதிகை வீரட்டனார், ஐம்புலன்களையும் வென்று விலக்குதற்குரிய நீங்கள் எல்லீரும் மனம் பொருந்தித் தியானிப்பீராயின் ஓங்காரத்தில் உள்ளே உள்ள மெய்ப்பொருளாக உங்களுக்குக் காட்சி வழங்குவார்.

திருஅதிகைவீரட்டானம்

தடக்கையா லெடுத்து வைத்துத்
தடவரை குலுங்க வார்த்துக்
கிடக்கையா லிடர்க ளோங்கக்
கிளர்மணி முடிகள் சாய
முடக்கினார் திருவி ரல்தான்
முருகமர் கோதை பாகத்
தடக்கினா ரென்னையாளு
மதிகைவீ ரட்ட னாரே. #258

என்னை அடியவனாக்கிக் கொண்ட அதிகை வீரட்டனார், பெரிய கயிலை மலை நடுங்குமாறு ஆரவாரித்து நீண்ட கைகளால் பெயர்க்க முயன்ற இராவணன் அதன் கீழகப்பட்டுத் துன்பங்கள் மிகுந்து விளக்கமானமண மணிமுடிகள் நசுங்கி அவலமுறுமாறு தம் திருவடிப் பெருவிரலைச் சற்றே வளைத்து ஊன்றினார். அவரே நறுமணம் கமழும் மாலையை அணிந்த பார்வதியை இடப்பாகமாக அடக்கியவரும் ஆவார்.

திருஅதிகைவீரட்டானம்

திருவதிகைவீரட்டானம், திருநேரிசை,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : திருவதிகைநாயகி.

நம்பனே யென்கள் கோவே
நாதனே யாதி மூர்த்தி
பங்கனே பரம யோகீ
யென்றேன்றே பரவி நாளும்
செம்பொனே பவளக் குன்றே

திகழ்மலர்ப் பாதங் காண்பான்
அன்பனே யலந்து போனே
னதிகைவீ ரட்ட னீரே. **#259**
'திருவதிகை வீரத்தானத்தில் உகந்தருளியிருக்கும் பெருமானீரே! எல்லாராலும் விரும்பப்படுகிறவரே! எங்கள் அரசரே! ஆதிமூர்த்தியாகிய பார்வதிபாகரே! மேம்பட்டயோகீசுவரே! பொன்னையும் பவளமலையையும் ஒத்தவரே! அன்பரே!' என்று உம்மைப் பலகாலும் வாய்விட்டழைத்து உமது தாமரை மலர் போன்ற பாதங்களைத் காணத் துயருற்று அடியேன் வருந்துகின்றேன்.

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

பொய்யினான் மிடைந்த போர்வை
புரைபுரை யழுகி வீழ
வேண்டிற்றொன் றைவர் வேண்டார்
செய்யதா மரைக ளன்ன
சேவடி யிரண்டுங் காண்பான்
ஐயநா னலந்து போனே
னதிகைவீ ரட்ட னீரே. **#260**
அழியக்கூடிய பொய்ப்பொருள்களால் இணைத்துச் செய்யப்பட்ட உடம்பில் ஒவ்வொரு துவாரமும் செயற்பாடின்றி அழுகிக்கெட, உண்மையான வாழ்வு வாழ இயலாதேனாய், யான்விரும்பிய ஒப்பற்ற பரஞானத்தை என் ஐம்பொறிகளும் தாமும் விரும்பாமல் இடர்படுதலால், அதிகை வீரட்டனாராகிய உமது சிவந்த தாமரையை ஒத்த திருவடிகள் இரண்டையும் காண்பதற்கு இயலாமல் அடியேன் வருந்தி நிற்கின்றேன்.

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

நீதியால் வாழ மாட்டே
னித்தலுந் தூயே னல்லேன்
ஓதியு முணர மாட்டே
னுன்னையுள் வைக்க மாட்டேன்
சோதியே சுடரே யுன்றன்
றூமலர்ப் பாதங் காண்பான்
ஆதியே யலந்து போனே
னதிகைவீ ரட்ட னீரே. **#261**
ஒளியே!ஞானவிளக்கே! அதிகைப்பெருமானே! தூயேன் அல்லேனாகியஅடியேன் நாடோறும் நெறிப்படி வாழமாட்டாமல், கற்றும்கற்றவாறு உணர இயலாதேனாய், உன்னை உள்ளத்துள்

நிலையாகவைத்துத் தியானிக்க இயலாதேனாய்
முதற்கடவுளாகியஉன்னுடைய தூயமலர்களைப் போன்ற
திருவடிகளைக் காணஇயலாதேனாய் வருந்தி நிற்கிறேன்.

திருஅதிகைவீரட்டானம்

தெருளுமா தெருள மாட்டேன்
றீவினைச் சுற்ற மென்னும்
பொருளுளே யழுந்தி நாளும்
போவதோர் நெறியுங்காணேன்
இருளுமா மணிகண் டாநின்
னிணையடி யிரண்டுங் காண்பான்
அருளுமா றருள வேண்டு
மதிகைவீ ரட்டனீரே. **#262**

இருண்ட நீலமணி போன்ற கழுத்தை உடைய அதிகைப் பெருமானே!
தெளிவடையும் வழியை அடைந்து மனந் தெளிவடைதலை இல்லேனாய்,
தீயவினைகளுக்கு உதவும் தேக பந்துக்கள் என்னும் பொருள்களோடு
இயைந்து நாளும் செல்லத்தக்க மேம்பட்டவழியை அறியேனாய் உள்ள
அடியேன் உன் ஒன்றற்கு ஒன்றுஒப்பான உன் திருவடிகள்
இரண்டனையும் தரிசிக்குமாறுஅருளும் வகையால் அருளவேண்டும்.

திருஅதிகைவீரட்டானம்

அஞ்சினா லியற்றப் பட்ட
வாக்கைபெற் றதனுள் வாழும்
அஞ்சினா லடர்க்கப் பட்டிங்குழிதரு மாத னேனை
அஞ்சினா லுய்க்கும் வண்ணங்காட்டினாய்க்கச்சந் தீர்ந்தேன்
அஞ்சினாற் பொலிந்த சென்னி
யதிகைவீ ரட்ட னீரே. **#263**

பஞ்சகவ்வியத்தால் அபிடேகிக்கப்படுதலால் விளங்குகின்ற சென்னியை
உடைய அதிகை வீரட்டப் பெருமானே! ஐம்பூதங்களால் இயற்றப்பட்ட
இவ்வுடலைப் பெற்று அதன்கண் வாழும் ஐம்பொறிகளால்
வருத்தப்பட்டு இவ்வுலகில்திரியும் அறிவற்ற அடியேனைத்
திருவைந்தெழுத்தால் நல்வழியில் செல்லுமாறு வழிகாட்டினாயாக,
அதனால் அச்சம் நீங்கப்பெற்றேன்.

திருஅதிகைவீரட்டானம்

உறுகயி றூசல் போல
வொன்றுவிட் டொன்று பற்றி
மறுகயி றூசல் போல

வந்துவந் துலவு நெஞ்சம்
பெறுகயி றூசல் போலப்
பிறைபுல்கு சடையாய் பாதத்
தறுகயி றூச லானே
னதிகைவீ ரட்ட னீரே. **#264**

கயிறாகிய ஊஞ்சல் போலப் பிறைச்சந்திரன் அசைந்துகொண்டு தங்கியிருக்கும் சடையினை உடைய அதிகைப் பெருமானே! தன் நிலையை விட்டுச் சென்றுபிறிதோர் இடத்தைப் பற்றி மீண்டும் தொங்கிய நிலைப்பக்கம் வந்துசேரும் ஊசற்கயிறு போல ஓர் இடத்தை விடுத்து அலைந்து மீண்டும் அவ்விடத்திற்கேவரும் நெஞ்சம், கயிறற்ற ஊஞ்சலுக்குத் தாய்தரையேயாதல் போல, இப்பொழுது நின் பாதமே இடமாக தங்கி நிற்கும் இயல்பைப்பெற்றுள்ளேன் ஆயினேன்.

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

கழித்திலேன் காம வெந்நோய்
காதன்மை யென்னும் பாசம்
ஒழித்திலே னூன்க ணோக்கி
யுணர்வெனு மிமைதி றந்து
விழித்திலேன் வெளிறு தோன்ற
வினையெனுஞ் சரக்குக் கொண்டேன்
அழித்திலே னயாத்துப் போனே
னதிகைவீ ரட்ட னீரே. **#265**

அதிகைப் பெருமானே! என்னிடத்துள்ள ஆசாபாசம், காமம் என்ற கொடியநோய் நீங்கப்பெற்றிலேனாய் ஆசை என்னும் பற்றினை விடுத்திலேனாய், உடலுயிர் வாழ்க்கையையே நோக்குபவனாய் இருத்தலால், அதற்குக் காரணமாகிய ஆணவ மறைப்பு விலக, விழிக்கும் மெய்யுணர்வாகிய விழி விழிக்கும் நிலையைப் பெற்றிலேன். அதற்குத்தடையாகிய வினை என்னும் பண்டத்தையும் நிரம்பக் கொண்டுள்ளேன். அதே வேளை, இவற்றின் விருத்திக்கு ஊக்கும் இழிதகவுடையோர் சார்பை விலக்கிக் கொள்ளவும் மறந்து போனேன். நான் என்ன செய்வேன் என்பது குறிப்பு.

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

மன்றத்துப் புன்னை போல
மரம்படு துயர மெய்தி
ஒன்றினா லுணர மாட்டே
னுன்னையுள் வைக்க மாட்டேன்
கன்றிய காலன் வந்து

கருக்குழிவிழுப்ப தற்கே
அன்றினா னலமந் திட்டே
னதிகைவீ ரட்ட னீரே. **#266**

ஊர்ப் பொதுமன்றத்தில்நிற்கும் புன்னைபலராலும் கல்லெறியப்பட்டும் ஏறி அலைக்கப்பட்டும்சதா வருந்துவதுபோல ஐம்பொறிகளால் சதா அலைக்கப்பட்டும் வருந்துவதன்றி ஒருவகையிலும் உண்மையை உணரமாட்டேன். அதை உணர்விக்கவல்ல உன்னையும் உளத்தில் நிலையாக வைக்கமாட்டேன். இந்நிலையில், சினம்மிக்க எமன் வந்து என்னைமீளவும் பிறப்பில் தள்ளுதற்கு அணுகிக்கொண்டுள்ளான். அது கண்டு நான் சுழன்று போனேன் அதிகை வீரட்டத்துப் பெருமானே.

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

பிணிவிடா வாக்கை பெற்றேன்
பெற்றமொன் றேறு வானே
பணிவிடா விடும்பை யென்னும்
பாசனத் தழுந்து கின்றேன்
துணிவிலேன் றூய னல்னேன்
றூமலர்ப் பாதங் காண்பான்
அணியனா யறிய மாட்டே
னதிகைவீ ரட்ட னீரே. **#267**

காளையை ஊர்பவனே! அதிகைப்பெருமானே! நோய்கள் விடுத்து நீங்காத இம்மனித உடலைப் பெற்றிருக்கும் அடியேன், செயற்படாதொழியாத துன்பம் நல்கும் நல்வினை தீவினையாகிய சுற்றத் தொடர்பை நெருக்கமாகக் கொண்டு, அவற்றை அடியோடு நீக்குவதற்குத் தேவையான தூய்மையும் மன உறுதியும் இல்லாதேனாய், அத்தூய்மை துணிவு என்பன வற்றை நல்கும் உன்னுடைய தூய மலர் போன்ற திருவடிகளைக் காணும் வகையில் உன்னை அறியமாட்டாதவனாய் உள்ளேன்.

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

திருவினாள் கொழுந னாருந்
திசைமுக முடைய கோவும்
இருவரு மெழுந்தும் வீழ்ந்து
மிணையடி காண மாட்டா
ஒருவனே யெம்பி ரானே
யுன்றிருப் பாதங் காண்பான்
அருவனே யருள வேண்டு
மதிகைவீ ரட்ட னீரே. **#268**

அதிகை வீரட்டனே! வடிவம் புலப்படாது இருப்பவனே! திருமகள் கேள்வனாய திருமாலும், நான்கு திசைகளிலும் நான்கு முகங்களை உடைய பிரமனும் ஆகிய இருவரும் கீழ் நோக்கித் தோண்டியும் மேல்நோக்கிப் பறந்தும், திருவடிகளையோ உன் உச்சியையோ காண இயலாத ஒப்பற்ற பெருமானாகிய உன் திருப்பாதங்களை அடியேன் காணுமாறு அருள் செய்யவேண்டும்.

திருஅதிகைவீரட்டானம்

திருவதிகைவீரட்டானம், திருநேரிசை,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : திருவதிகைநாயகி.

மடக்கினார் புலியின் றோலை
மாமணி நாகங் கச்சா
முடக்கினார் முகிழ்வெண் டிங்கள்
மொய்சடைக் கற்றை தன்மேல்
தொடக்கினார் தொண்டைச் செவ்வாய்த்
துடியிடைப் பரவை யல்குல்
அடக்கினார் கெடிலவேலி
யதிகை வீரட்ட னாரே. #269

கெடிலநதியை ஒருபுறம் எல்லையாக உடைய அதிகை வீரட்டனார் புலியின்தோலை உடையாக உடம்பைச்சுற்றி இடையில் உடுத்துப் பெரிய முடிமணியை உடைய பாம்பினை அதன் மீது கச்சாக இறுக்கிக் கட்டிப் பிறையைச் செறிந்தசடை மீது செருகித் தொண்டைக்கனி போன்ற சிவந்தவாயையும் துடி போன்ற இடையையும் கடல் போன்ற அல்குலையும் உடைய பார்வதியைத் தம் உடம்பின் ஒருபாகமாக அடக்கியவர் ஆவர்.

திருஅதிகைவீரட்டானம்

சூடினார் கங்கை யாளைச்
சூடிய துழனி கேட்டங்
கூடினா ணங்கை யாளு
மூடலை யொழிக்க வேண்டிப்
பாடினார் சாம வேதம்
பாடிய பாணி யாலே
ஆடினார் கெடில வேலி
யதிகைவீ ரட்ட னாரே. #270

கங்கையாளை எம் பெருமான் சடையில் சூடினாராக அவ்வோசை

கேட்டுப்பார்வதி ஊடினாளாக அவ்வூடலைப் போக்க வேண்டிக் கெடிலவேலி அதிகை வீரட்டனாராகிய பெருமானார் சாமவேதம் பாடியவராய் அப்பாடலின் தாளத்திற்கு ஏற்ப ஆடியவராவர்.

திருஅதிகைவீரட்டானம்

கொம்பினார் குழைத்த வேனற்
கோமகன் கோல நீர்மை
நம்பினார் காண லாகா
வகையதோர் நடலை செய்தார்
வெம்பினார் மதில்கண் மூன்றும்
வில்லிடை யெரித்து வீழ்த்த
அம்பினார் கெடில வேலி
யதிகைவீ ரட்ட னாரே. **#271**

மரக்கிளைகள் தளிர்த்த வேனிற் காலத்திற்கு உரிய அரசனாகியமன் மதனை விடுத்த மால், அயன், இந்திரன் முதலோர் அவன் உருவினை மீண்டும் காண முடியாத வகையில் அவன் உடலைத் தீவிழித்து எரித்து வருத்தினார். அச்செயல் செய்த கெடில வேலி அதிகை வீரட்டனார் பகைவர்களுடைய மும்மதில்களையும் வில்லிடைக்கோத்து எரித்து அழித்த அம்பினை உடையவராவர்.

திருஅதிகைவீரட்டானம்

மறிபடக் கிடந்த கையர்
வளரிள மங்கை பாகம்
செறிபடக் கிடந்த செக்கர்ச்
செழுமதிக் கொழுந்து சூடிப்
பொறிபடக் கிடந்த நாகம்
புகையுமிழ்ந் தழல வீக்கிக்
கிறிபட நடப்பர் போலுங்
கெடிலவீ ரட்ட னாரே. **#272**

கெடில வீரட்டனார் கையில் மான் குட்டியை ஏந்தி, அழகுவளரும் இளையளாகிய பார்வதி பாகராய்ச் செறிந்த செஞ்சடையில் பிறையைச் சூடி, புள்ளிகளை உடையபாம்பு புகையைக் கக்கி வெகுளுமாறு அதனை இடையில்இறுகக்கட்டி, அடியார்களுடைய உள்ளத்திலே பொய்உணர்வு அழியும்படியாக உலவி வருகிறார்.

திருஅதிகைவீரட்டானம்

நரிவரால் கவ்வச் சென்று
நற்றசை யிழந்த தொத்த

தெரிவரான் மால்கொள் சிந்தை
தீப்பதோர் சிந்தை செய்வார்
வரிவரா லுகளுந் தெண்ணீர்க்
கழனிசூழ் பழன வேலி
அரிவரால் வயல்கள் சூழ்ந்த
வதிகைவீ ரட்டனாரே **#273**

கோடுகளை உடைய வரால் மீன்கள் தாவும் தெளந்த நீரை உடைய வயல்கள் சூழ்ந்த மருத நிலத்தை நாற்புறமும் எல்லையாகக் கொண்டு நெல்லரியும் உழவரால் சூழப்பட்ட வயல்களை உடைத்தாய அதிகையின் வீரட்டனார், நரி வரால் மீனைக் கவரச் சென்று தன் வாயில் முன்பு பற்றி இருந்த தசைத் துண்டத்தையும் இழந்தது போல், கிட்டாத ஒன்றை நினைத்துக் கிட்டியதனையும் இழக்கும் இயல்பினதாகிய மனித வாழ்க்கையை ஆராயும் சான்றோர்களுடைய உள்ளத்தில் ஏற்படும் மயக்கத்தை நீக்கும் உபாயத்தைத் திருவுளம் கொண்டு அருளுவார்.

திருஅதிகைவீரட்டானம்

புள்ளலைத் துண்ட வோட்டி
லுண்டுபோய்ப் பலாசங் கொம்பின்
சுள்ளலைச் சுடலை வெண்ணீ
றணிந்தவர் மணிவெள் ளேற்றுத்
துள்ளலைப் பாகன் றன்னைத்
தொடர்ந்திங்கே கிடக்கின் றேனை
அள்ளலைக் கடப்பித் தாளு
மதிகைவீ ரட்ட னாரே. **#274**

புலால்நாற்றத்தால் நெருங்கிவரும் பருந்துகளை விரட்டி மண்டையோட்டிற் பிச்சை எடுத்து உண்டு சென்று, வெப்பத்தாற் பலாசமரங்களின் சிறுகிளைகள் பட்டுப் போகும் சுடுகாட்டின் வெள்ளிய சாம்பலைப் பூசியவராய், அழகிய வெள்ளிய காளைமீது துள்ளி ஏறி அதனைச் செலுத்துபவராய தம்மை, இவ்வுலகிலே பல காலமாகத் தொடர்ந்து பற்றிக் கிடக்கும் அடியேனைப் பிறவிப் பிணியாகிய சேற்றைத் தாண்டச்செய்து அடிமை கொள்பவராய் உள்ளவர் அதிகை வீரட்டனாரே.

திருஅதிகைவீரட்டானம்

நீறிட்ட நுதலர் வேலை
நீலஞ்சேர் கண்டர் மாதர்
கூறிட்ட மெய்ய ராகிக்

கூறினா ராறு நான்கும்
கீறிட்ட திங்கள்சூடிக்
கிளர்தரு சடையி னுள்ளால்
ஆறிட்டு முடிப்பர் போலு
மதிகைவீ ரட்ட னாரே. **#275**

அதிகை வீரட்டனார் நெற்றியில் நீறுபூசி, நீல கண்டராய், பார்வதிபாகராய், நான்கு வேதங்களும் ஆறு சாத்திரங்களும் உரைப்பவராய், பிறையைச்சூடி, மேல்நோக்கி உயரும் சடையிலே கங்கையை அடக்கிச் சடையை முடிப்பவர் ஆவார்.

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

காணிலார் கருத்தில் வாரார்
திருத்தலார் பொருத்த லாகார்
ஏணிலா ரிறப்பு மில்லார்
பிறப்பிலார் துறக்க லாகார்
நாணிலா ரைவ ரோடு
மிட்டெனை விரவி வைத்தார்
ஆணலார் பெண்ணு மல்லா
ரதிகைவீ ரட்ட னாரே. **#276**

ஆணும் பெண்ணும் அல்லாதாராகிய அதிகை வீரட்டனார் பிறர்காட்சிக்கு அரியராய், கருத்திற்கும் எட்டாதவராய்; திருத்துவதற்கு இயலாதவராய், தம்மோடு பொருந்தச் செய்வதற்கும் இயலாதவராய், இந்நிலை என்று குறிப்பிடத்தக்க எந்த நிலையும் இல்லாதவராய், இறப்பும் பிறப்பும் அற்றவராய், இவர் நமக்கு உற்றவர் அல்லர் என்று துறக்க முடியாதவராய், உலகியலுக்கு மாறுபட்டதம் நிலைகளைக் குறித்துச் சிறிதும் நாணுதல் இல்லாதவராய், ஐம்பொறிகளோடு கலந்து தடுமாறுமாறு அடியேனை இவ்வுலகில்தங்க வைத்துள்ளார்.

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

தீர்த்தமா மலையை நோக்கிச்
செருவலி யரக்கன் சென்று
பேர்த்தலும் பேதை யஞ்சப்
பெருவிர லதனை யூன்றிச்
சீர்த்தமா முடிகள் பத்துஞ்
சிதறுவித் தவனை யன்று
ஆர்த்தவா யலற வைத்தா
ரதிகைவீ ரட்ட னாரே. **#277**

அதிகை வீரட்டனார், தூயதான கயிலைமலையை நோக்கி வந்து

போரிடும் வலிமையைஉடைய இராவணன் அதனைப் பெயர்த்த அளவில்பார்வதி அஞ்சத் தம் கால்விரலை அழுத்தி ஊன்றிச்சிறப்புடைய அவனுடைய தலைகள் பத்தும் சிதறச் செய்து,ஒரு கணத்தில், மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தஅவன் வாய்கள் துயரத்தால் கதறுமாறு செய்தவராவர்.

திருஅதிகைவீரட்டானம்

திருவதிகைவீரட்டானம், திருநேரிசை,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : திருவதிகைநாயகி.

முன்பெலா மிளைய காலம்
மூர்த்தியை நினையாதோடிக்
கண்கண விருமி நாளுங்
கருத்தமிந் தருத்தமின்றிப்
பின்பக லுணங்க லட்டும்
பேதைமார் போன்றே னுள்ளம்
அன்பனாய் வாழ மாட்டேன்
அதிகைவீ ரட்ட னீரே. **#278**

அதிகைப் பெருமானாரே, உள்ளத்திலே உமக்கு அன்பனாய் வாழமாட்டேனாய், அடியேனுடைய இளமைக்காலமான அம்முற்பட்ட காலமெல்லாம் உம் திருவடிவைத் தியானம் செய்யாமல் அலைந்து, மூப்பு நிலையில் கணீர் என்ற ஓசை உண்டாகுமாறு இருமிக் கருதற்பாலதாகிய சிவசிந்தனையே இல்லாது, பயனுடைய செயல்கள் செய்யாமல், உணவு வேளைக்கு உதவுமாறு முற்பகலில் சோறு வடிக்காமல் காலம் கடத்தி அகாலமான பிற்பகலில் உண்டற்கிதமில்லாதவற்றை உலையிலிட்டு சமைக்கவும் இல்லக் கிளத்தியர் போலாகின்றேன். உளமார்ந்த மெய்யன்பினால் வாழ இயலாதவனாகின்றேன்.

திருஅதிகைவீரட்டானம்

கறைப்பெருங் கண்டத் தானே
காய்கதிர் நமனை யஞ்சி
நிறைப்பெருங் கடலுங் கண்டே
னீள்வரை யுச்சி கண்டேன்
பிறைப்பெருஞ் சென்னி யானே
பிஞ்ஞகா விவை யனைத்தும்
அறுப்பதோ ருபாயங் காணேன்

அதிகைவீ ரட்ட னீரே. #279
அதிகைப் பெருமானாரே! பெரிய நீலகண்டரே! பிறைசூடீ,
தலைக்கோலம் அணிந்தவரே! உயிர்களைக் கோபித்துக் கவரும்
காலனுக்குப் பயந்து கடல் நீரில் தீர்த்தமாடியும் நீண்ட மலை உச்சியை
அடைந்து அங்த்தவம் செய்தும் பிறப்பு, பிறப்பச்சம் என்ற இவற்றை
நீக்கிக் கொள்வதற்குரிய வழியினை அறிந்தேன் அல்லேன்.

திருஅதிகைவீரட்டானம்

நாதனா ரென்ன நாளு
நடுங்கின ராகித் தங்கள்
ஏதங்க ளறிய மாட்டாரிணையடி தொழுதோ மென்பார்
ஆதனா னவனென் றெள்கியதிகைவீ ரட்ட னேநின்
பாதநான் பரவா துய்க்கும்பழவினைப் பரிசி லேனே. #280

சான்றோர்கள் யாரேனும் தம்மைத் தலைவர் என்று குறிப்பிட்டால்
அதைக் கேட்டு எம்பெருமானாருடைய அடியவராகிய தமக்கு அடியார்
என்ற பெயரைத் தவிரத் தலைவர் என்ற பெயர்ஏலாது என்று நடுங்கித்
தம்மைத் தலைவராகக் கருதும் தவறுகளைச் செய்ய அறியாதவராய்
யாங்கள் அடியவர்க்கு அடியராய் உங்கள் திருவடிகளை வழிபடுகிறோம்
என்று பதில் கூறுவர். ஆனால் அறிவிலியான யானோ என்னைத்
என்னைத் தலைவன் என்று நினைத்து உம்மை இகழ்ந்து அதிகை
வீரட்டராகிய உம்முடைய திருவடிகளை வழிபடாது உலகியல்
தீமைகளிளேயே அடியேனைக் செலுத்தும் பழந்தீவினையாகிய
பரிசிலை உடையேன்.

திருஅதிகைவீரட்டானம்

சுடலைசேர் சுண்ண மெய்யர்
சுரும்புணவிரிந்த கொன்றைப்
படலைசே ரலங்கன் மார்பர்
பழனஞ்சேர் கழினித் தெங்கின்
மடலைநீர் கிழியவோடி
யதனிடை மணிகள் சிந்தும்
கெடிலவீ ரட்ட மேய
கிளர்சடை முடிய னாரே. #281

மருத நிலத்தைச் சார்ந்த வயல்களுக்கு அருகே வளர்ந்த தென்னை
மட்டைகள் பிளக்குமாறு மோதிப் பரவி அவற்றின் மேல்
இரத்தினங்களைச் சிதறுகின்ற கெடில நதிக் கரையிலமைந்த அதிகை
வீரட்டத்தில் விரும்பி உறையும் உயர் சடைமுடிப்பெருமான் சுடுகாட்டுச்
சாம்பலைப் பூசிய உடம்பினராய், வண்டுகள் மொய்க்குமாறு இதழ்கள்

விரிந்த கொன்றைப்பூ மாலை சேர்ந்த மார்பினராய்உள்ளார்.

திருஅதிகைவீரட்டானம்

மந்திர முள்ள தாக
மறிகட லெழு நெய் யாக
இந்திரன் வேள்வித் தீயி
லெழுந்ததோர் கொழுந்தின் வண்ணம்
சிந்திர மாக நோக்கித்
தெருட்டுவார் தெருட்டவந்து
கந்திர முரலுஞ் சோலைக்
கானலங் கெடிலத்தாரே **#282**

மந்தர மலையாகிய மந்திரத்தை உள்ளமைத்துக் கொண்டு கடலையே நெய்யாகக்கொண்டு இந்திரன் செய்த பாற்கடல்கடையும் வேள்வித் தீயின் கொழுந்தாக வெளிப்பட்ட விடத்தின் நீலநிறத்தைத் தம்மை நீலகண்டர் ஆக்கும்சித்திரத்திற்கு உரிய பொருளாகக் கருதித் தம்மால் அறிவுறுத்தப்படும் அடியவர்களுக்கு அறிவிப்பதற்காகப் பெருமான் இந்நிலவுலகிற்கு வந்து மேகங்கள் ஒலிக்கும்சோலைகளை உடைய நறுமணங் கமழும் கெடில நதிக்கரையினதாக அதிகை வீரட்டத்து உள்ளார்.

திருஅதிகைவீரட்டானம்

மைஞ்ஞல மனைய கண்ணாள்
பங்கன்மா மலையை யோடி
மெய்ஞ்ஞரம் புதிரம் பில்க
விசைதணிந் தரக்கன் வீழ்ந்து
கைஞ்ஞரம் பெழுவிக் கொண்டு
காதலா லினிதுசொன்ன
கிஞ்ஞரங் கேட் டுகந்தார்
கெடிலவீ ரட்டனாரே. **#283**

அதிகை வீரட்டனார் மைக்கு அழகு தரும், தமக்குத் தாமே நிகரான கண்களை உடைய பார்வதி பாகராகிய தமது கயிலைமலையை நோக்கி ஓடி அதனைப் பெயர்க்க முற்பட்டு உடல்பிலுள்ள நரம்புகளும் குருதியும் சிந்த, விழுந்து நசுங்கி வேகம்தணிந்து இராவணன் கை நரம்புகளையே வீணையின் நரம்புகளாக அமைத்து அவற்றை ஒலித்துக்கொண்டு அன்பூர இனிமையாகப் பாடிய பாடலைக் கேட்டு உகந்து அவனுக்கு அருளியவர் ஆவார்.

திருச்செம்பொன்பள்ளி

திருச்செம்பொன்பள்ளி

திருச்செம்பொன்பள்ளி, திருநேரிசை,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : திருவதிகைநாயகி.

ஊனினுள் ளுயிரை வாட்டி
உணர்வினார்க்கௌய ராகி
வானினுள் வான வர்க்கும்
அறியலா காதவஞ்சர்
நானெனிற் றானே யென்னும்
ஞானத்தார்பத்தர் நெஞ்சுள்
தேனுமின் னமுது மானார்
திருச்செம்பொன்பள்ளி யாரே. **#284**

திருச்செம்பொன்பள்ளிஎம்பெருமான் இவ்வுடம்பினுள் உள்ள உயிரைத் தவம் விரதம் முதலியவற்றால் வாட்டித் தூய்மையுடையதாக்கி மெய்யுணர்வு பெற்ற பெரியவர்களுக்கு எளியராய், உயர்ந்த உலகிலுள்ள தேவர்களும் அறியமுடியாத கள்ளத்தை உடையவராய், சிவபோதத்தினராய் இருக்கும் சிவஞானிகளுக்கு அமுதமும், சிவனடியார்களின் நெஞ்சில் தேனும்போல இனிப்பவராய் உள்ளார்.

திருச்செம்பொன்பள்ளி

நொய்யவர் விழுமி யாரு
நூலினுண் ணெறியைக் காட்டும்
மெய்யவர் பொய்யு மில்லார்உடலெனு மிடிஞ்சி றன்னில்
நெய்யமர் திரியு மாகிநெஞ்சத்துள் விளக்கு மாகிச்
செய்யவர் கரிய கண்டர்திருச்செம்பொன் பள்ளி யாரே. **#285**

நீலகண்டராய திருச்செம்பொன்பள்ளியார் ஞானவடிவினர் ஆதலின் நொய்யராய், சீர்மை உடையவராய், வேதநெறியைக் காட்டும் உண்மை வடிவினராய், பொய்யிலியாய், உடல் என்னும் ஓட்டாஞ் சில்லியிலே நெய்யில் தோய்த்த திரியாகவும் நெஞ்சில் ஒளி தருகின்ற விளக்காகவும் உள்ள செந்நிறத்தவராவர்.

திருச்செம்பொன்பள்ளி

வெள்ளியர் கரியர் செய்யர்
விண்ணவ ரவர்கள் நெஞ்சுள்

ஒள்ளிய ரூழி யூழி
யுலகம தேத்த நின்ற
பள்ளியர் நெஞ்சத் துள்ளார்
பஞ்சமம் பாடி யாடும்
தெளளியார் கள்ளந் தீர்ப்பார்
திருச்செம்பொன் பள்ளி யாரே. **#286**

திருச்செம்பொன் பள்ளியார் வெண்மை, செம்மை, கருமை என்ற நிறத்தவராய், தேவர்கள் உள்ளத்திலே ஒளி தருபவராய், ஊழிதோறும் உலகங்கள் துதிக்கும் படியான பாற்கடலில் பள்ளி கொண்ட திருமாலுடைய நெஞ்சத்தில் உள்ளவராய், பஞ்சமம் என்ற பண்ணினைப் பாடி ஆடும் ஞானிகளுடைய உள்ளிருளைப் போக்குபவராய் உள்ளார்.

<u>திருச்செம்பொன்பள்ளி</u>

தந்தையுந் தாயு மாகித்
தானவன் ஞான மூர்த்தி
முந்திய தேவர் கூடி
முறைமுறை யிருக்குச் சொல்லி
எந்தைநீ சரண மென்றங்
கிமையவர் பரவி யேத்தச்
சிந்தையுட் சிவம தானார்
திருச்செம்பொன் பள்ளி யாரே. **#287**

திருச்செம்பபொன் பள்ளியார் தந்தையாராய்த் தாயாராய், எல்லோருக்கும் கொடைவழங்குபவராய், ஞானவடிவினராய், முற்பட்ட தேவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து முறைப்படி வேதங்களை ஓதி 'எங்கள் தந்தையே! நீயே அடியேங்களுக்கு அடைக் கலம் நல்குவை' என்று முன் நின்று வழிபட்டுத்துதிக்க, அவர்கள் உள்ளத்துள்ளே மங்கல மூர்த்தியாக இருப்பவராவர்.

<u>திருச்செம்பொன்பள்ளி</u>

ஆறுடைச் சடையார் போலும்
அன்பருக் கன்பர் போலும்
கூறுடை மெய்யர் போலும்
கோளர வரையர் போலும்
நீறுடை யழகர் போலும்
நெய்தலே கமழு நீர்மைச்
சேறுடைக் கமல வேலித்
திருச்செம்பொன் பள்ளி யாரே. **#288**

நெய்தல் பூக்கள் மணம் கமழும் நீர்வளம் உடையதாய்ச் சேற்றிலே

தாமரை பூக்கும் வயல்களை நாற்புறமும் எல்லையாக உடைய திருச்செம்பொன்பள்ளியார் கங்கை சூடியசடையராய்த் தம் அன்பர்களிடத்துத் தாமும் அன்பு செய்பவராய், பார்வதிபாகராய், கொடிய பாம்பினை இறுகக் கட்டிய இடையினராய்த் திரு நீறணிந்த அழகருமாவார்.

திருச்செம்பொன்பள்ளி

ஞாலமு மறிய வேண்டில்
நன்றென வாழ லுற்றீர்
காலமுங் கழிய லான
கள்ளத்தை யொழிய கில்லீர்
கோலமும் வேண்டா வார்வச்
செற்றங்கள் குரோத நீக்கில்
சீலமுந் நோன்பு மாவார்
திருச்செம்பொன் பள்ளி யாரே. **#289**

மேம்பட்டது என்று சொல்லி உலகியலில் திளைத்து வாழும் உலகத்தவராகிய நீங்கள் வீணாகக் கழிகின்ற உங்கள் வஞ்சக வாழ்க்கையை விடாது மேற்கொண்டுள்ளீர். நீங்கள் திருச்செம்பொன் பள்ளியாரை அறியவிரும்புவீராயின், உங்கள் போலி அடியவர் வேடத்தையும் காமக் குரோத கோபாதிகளையும் நீங்கள் போக்கிவிட்டால் அவர் உங்களுக்கு ஒழுக்கமும் தவ விரதமுமாக இருந்து உதவுவார்.

திருச்செம்பொன்பள்ளி

புரிகாலே நேசஞ் செய்ய
விருந்தபுண் டரீகத் தாரும்
எரிகாலே மூன்று மாகி
யிமையவர் தொழநின் றாரும்
தெரிகாலே மூன்று சந்தி
தியானித்து வணங்க நின்று
திரிகாலங் கண்ட வெந்தை
திருச்செம்பொன் பள்ளி யாரே. **#290**

திருச்செம்பொன்பள்ளியார் விருப்பம் முற்பட்ட பொழுதே தம்மிடத்தே அன்பு செய்யும் அடியவர் இதயத் தாமரையில் இடம் கொண்டிருப்பவராய், தீ, காற்று, நிலம், நீர், ஆகாயம் என்ற ஐம்பூதங்களுமாகித் தேவர்கள் தொழுமாறு இருப்பவராய், காலை நண்பகல் அந்தி என்ற மூன்று வேளைகளிலும் ஆராயப்படும் திருவடிகளை நினைந்து அடியவர் யாவரும் வணங்க, முக்காலங்களிலும்

நிலையாக இருப்பவர் ஆவர்.

திருச்செம்பொன்பள்ளி

காருடைக் கொன்றை மாலை
கதிர்மதியரவி னோடும்
நீருடைய சடையுள் வைத்த
நீதியார்நீதி யுள்ளார்
பாரொடு விண்ணு மண்ணும்
பதினெட்டுக் கணங்க ளேத்தச்
சீரொடு பாட லானார்
திருச்செம் பொன்பள்ளி யாரே. **#291**

திருச்செம்பொன்பள்ளியார்கார் காலத்தைத் தனக்குப் பூக்கும் காலமாக உடைய கொன்றைப்பூ மாலையை ஒளிவீசும் பிறை, பாம்பு எனும் இவற்றோடு கங்கை தங்கும் சடையில் வைத்தவராய், நீதியே வடிவானவராய்த் தாமும் அந்நீதியையே நடத்துபவராய், பாதலம், தேவருலகம், மண்ணுலகம் என்ற மூன்று உலகங்களும் பதினேட்டுத் தேவகணங்களும் தம்மைத் துதிக்க, சீரோடு கூடிய பாடல் வடிவாய் உள்ளவர்.

திருச்செம்பொன்பள்ளி

ஓவாத மறைவல் லானும்
ஓதநீர் வண்ணன் காணா
மூவாத பிறப்பி லாரும்
முனிகளா னார்க ளேத்தும்
பூவான மூன்று முந்நூற்
றறுபது மாகு மெந்தை
தேவாதி தேவ ரென்றுந்
திருச்செம்பொன் பள்ளி யாரே. **#292**

திருச்செம்பொன்பள்ளியார் என்றும் அழிதல் இல்லாத வேதத்தை ஓதிக்கொண்டிருக்கும் பிரமனும், கடல் நிறத்தவனாகிய திருமாலும் காணமுடியாதவராய், மூத்தலோ பிறத்தலோ இல்லாதவராய் 1080 மலர்களைக் கொண்டு முனிவர்கள் வழிபடும் எங்கள் தந்தையாராய், என்றும் தேவர்களுக்கு எல்லாம் தேவருமாய் உள்ளார்.

திருச்செம்பொன்பள்ளி

அங்கங்க ளாறும் நான்கும்
அந்தணர்க் கருளிச் செய்து
சங்கங்கள் பாட வாடுஞ்

சங்கரன் மலையெ டுத்தான்
அங்கங்க ளுதிர்ந்து சோர
வலறிட வடர்ந்து நின்றும்
செங்கண்வெள் ளேற தேறுந்
திருச்செம்பொன் பள்ளி யாரே. **#293**
சிவந்த கண்களை உடைய திருமாலாகிய வெண்ணிறக் காளையை
இவரும் திருச்செம்பொன்பள்ளியார், கயிலையைப் பெயர்த்த
இராவணனுடைய உடல் உறுப்புகள் உதிர்ந்து தளர அவன் வாய்விட்டு
அலறுமறு வருத்தி நின்றும் (நின்றவராயினும்) நான்கு வேதங்களையும்
ஆறு அங்கங்களையும் முனிவர்க்கு உபதேசித்துப் பூதகணங்கள் பாடக்
கூத்தாடும் ஆனந்த வடிவினராவர்.

திருக்கழிப்பாலை

திருக்கழிப்பாலை

திருக்கழிப்பாலை, திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பால்வண்ணநாதர்.
தேவியார் : வேதநாயகியம்மை.

நங்கையைப் பாகம் வைத்தார்
ஞானத்தை நவில வைத்தார்
அங்கையி லனலும் வைத்தார்
ஆனையி னுரிவை வைத்தார்
தங்கையின் யாழும் வைத்தார்
தாமரை மலரும் வைத்தார்
கங்கையைச் சடையுள் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்பனாரே. **#294**

கழிப்பாலை யிற் கடற்கரைத் தலைவராக (சேர்ப்பன்) உள்ள பெருமான் பார்வதிபாகராய், சிவஞானத்தை வழங்குமாறு உபதேசிப்பவராய், உள்ளங்கையில் தீயை ஏந்தியவராய், யானைத் தோலைப் போர்த்தவராய், ஒருகையில் யாழை ஏந்தியவராய், அந்தணர் கோலத்திற்கேற்பத் தாமரைப்பூ அணிந்தவராய், கங்கையைச் சடையில் வைத்தவராய் உள்ளார்.

திருக்கழிப்பாலை

விண்ணினை விரும்ப வைத்தார்
வேள்வியை வேட்க வைத்தார்
பண்ணினைப் பாட வைத்தார்
பத்தர்கள் பயில வைத்தார்
மண்ணினைத் தாவ நீண்ட
மாலினுக் கருளும் வைத்தார்
கண்ணினை நெற்றி வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே. **#295**

கழிப்பாலைச் சேர்ப்பனார் அடியவர்கள் வீடு பேற்றை விரும்புமாறும், வேள்விகளை நிகழ்த்துமாறும், பண்களைப் பாடுமாறும், திருவடி வழிபாட்டில் பயிற்சி உறுமாறும் செய்தவர். நெற்றியில் கண்ணுடைய அப்பெருமான் உலகங்களை அளக்குமாறு நீண்ட வடிவெடுத்த திருமாலுக்கும் அருள்பாலித்தவர்.

<u>திருக்கழிப்பாலை</u>

வாமனை வணங்க வைத்தார்
வாயினை வாழ்த்த வைத்தார்
சோமனைச் சடைமேல் வைத்தார்
சோதியுட் சோதி வைத்தார்
ஆமனெய் யாட வைத்தார்
அன்பெனும் பாசம் வைத்தார்
காமனைக் காய்ந்த கண்ணார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே. **#296**

கழிப்பாலைச் சேர்ப்பனார் தம்சத்தியாகிய பெருமாட்டியை எல்லோரும் வணங்குமாறு செய்தவர். எல்லோர்க்கும் வாழ்த்துவதற்காம் வாயை அருளியவர்.பிறையைச் சடையில் சூடி அடியார்களுடைய ஆன்மசொரூபமான ஒளியில் தம் ஞான ஒளியை வைத்து, பசு நெய்யால் தம்மை அபிடேகம் செய்யும் வாய்ப்பினை அடியர்க்கு நல்கி, அன்பென்னும் தொடர்பு சாதனத்தையும் ஆக்கிவைத்தார். அத்துடன் மன்மதனை வெகுண்டு சாம்பலாக்கிய நெற்றிக் கண்ணராய் உள்ளார்.

<u>திருக்கழிப்பாலை</u>

அரியன வங்கம் வேத
மந்தணர்க்கருளும் வைத்தார்
பெரியன புரங்கண் மூன்றும்
பேரழ லுண்ண வைத்தார்
பரியதீ வண்ண ராகிப்
பவளம்போ னிறத்தை வைத்தார்
கரியதோர் கண்டம் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்பனாரே. **#297**

அந்தணர்களுக்கு வேத வேதாங்கக் கல்வியும் சீவ காருணியமும் வழங்கிய கழிப்பாலைச் சேர்ப்பனார் பெரிய மும்மதில்களும் நெருப்பு உண்ணச் செய்து, பெரிய தீயைப்போல ஞானஒளி வீசுபவராய், பவளம் போன்ற செந்நிறத்தினராய் நீலகண்டராய் உள்ளார்.

<u>திருக்கழிப்பாலை</u>

கூரிருள் கிழிய நின்ற
கொடுமழுக் கையில் வைத்தார்
பேரிருள் கழிய மல்கு
பிறைபுனற் சடையில் வைத்தார்
ஆரிரு ளண்டம் வைத்தார்

அறுவகைச் சமயம் வைத்தார்
காரிருள் கண்டம் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே. **#298**

கழிப்பாலைச் சேர்ப்பனார் இருட்டை விரட்டும் கொடிய மழுவினைக் கையில் கொண்டு, பெரிய இருள் நீங்க ஒளி வீசும் பிறையையும் கங்கையையும் சடையில் வைத்து, எல்லா உலகங்களையும் தம் மாயையாகிய இருளுக்குள் வைத்து அறுவகைச் சமயங்களைப் படைத்து, நீலகண்டராய் விளங்குகிறார்.

திருக்கழிப்பாலை

உட்டங்கு சிந்தை வைத்தா
ருள்குவார்க் குள்ளம் வைத்தார்
விட்டங்கு வேள்வி வைத்தார்
வெந்துயர் தீர வைத்தார்
நட்டங்கு நடமும் வைத்தார்
ஞானமு நாவில் வைத்தார்
கட்டங்கந் தோண்மேல் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே. **#299**

கழிப்பாலைச் சேர்ப்பனார் தம்மையே தியானிப்பவருக்கு அதற்கு ஏற்ற அலைவில்லாத மனத்தை அருளி அதனைத் தாம் உள்ளே தங்கும் இருப்பிடமாக வைத்தவர். தேவர்கள் விரும்பித் தங்கி அவி நுகரும் வேள்விகளையும் அவற்றால் நாட்டில் கொடிய துயர் நீங்குதலையும் அமைத்தவர். நள்ளிருளில் கூத்தாடும் பெருமான் ஞானத்துக்கு உரிய நூல்களைப் பயிலும் ஆற்றலை நாவில் அமைத்துக் கொடுத்தவர். தம் தோள்மேல் கட்டங்கப் படையைக் கொண்டுள்ளார்.

திருக்கழிப்பாலை

ஊனப்பே ரொழிய வைத்தார்
ஓதியே யுணர வைத்தார்
ஞானப்பேர் நவில வைத்தார்
ஞானமு நடுவும் வைத்தார்
வானப்பே ராறு வைத்தார்
வைகுந்தற் காழி வைத்தார்
கானப்பேர் காதல் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே. **#300**

கழிப்பாலைச் சேர்ப்பனார் புலால் மயமான இவ்வுடல் தொடர்பான பெயர்கள் நீங்கத் தம் அடியவர் என்ற பெயரை வழங்கி, ஞானநூல்களை ஓதியே ஞானம் பெறும் வழியை வைத்து, ஞான தேகத்திற்குரிய

கடவுளை நினைப்பூட்டும் ஞானப்பெயரையே சொல்லி அழைக்குமாறும் செய்து திருவடி ஞானத்தையும் அந்த ஞானம் தங்குதற்குரிய இதயத்தையும் நல்கி, கங்கையைச் சடையில் வைத்து, திருமாலுக்குச் சக்கரம் நல்கித் திருக்கானப்பேர் என்ற திருத்தலத்தைத் தாம் விரும்பி உறையும் இடமாகக் கொண்டுள்ளார்.

திருக்கழிப்பாலை

கொங்கினு மரும்பு வைத்தார்
கூற்றங்கன் கெடுக்க வைத்தார்
சங்கினுண் முத்தம் வைத்தார்
சாம்பரும் பூச வைத்தார்
அங்கமும் வேதம் வைத்தார்
ஆலமு முண்டு வைத்தார்
கங்குலும் பகலும் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே. **#301**

கழிப்பாலைச் சேர்ப்பனார் அரும்பில் மகரந்தத்தை வைத்தவர். தீயவார்த்தைகள் பேசுதலைப் போக்க திருமுறை ஓதுதலான நல்ல வழியை வைத்தவர். சங்கினுள் முத்துக்களை வைத்தவர். தாம் பூசத் திருநீற்றைப் பொருளாகக் கொண்டவர். உலகம் உய்ய நால்வேதமும் அங்கமும் பரவச் செய்தவர். உலகம் உய்ய விடம் உண்டவர். மகிழ்வாக உறங்க இரவையும், செயற்பட்டு உழைக்கப் பகற்பொழுதையும் அமைத்தவர்.

திருக்கழிப்பாலை

சதுர்முகன் றானுமாலுந்
தம்மிலே யிகலக கண்டு
எதிர்முக மின்றி நின்ற
வெரியுரு வதனை வைத்தார்
பிதிர்முகன் காலன்றன்னைக்
காறனிற் பிதிரவைத்தார்
கதிர்முகஞ் சடையில் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்பனாரே. **#302**

கழிப்பாலைச் சேர்ப்பனார் பிரமனும் திருமாலும் தம் இருவருள் பரம்பொருள் யாவர் என்று மாறுபடுதலைக் கண்டு, கண்கூடாக ஆதியும் அந்தமும் காணமுடியாத தீத்தம்பத்தைப் படைத்தார். கடுமையான முகத்தை உடைய கூற்றுவனைக் காலினால் சிதறவைத்தார். பிறையைச் சடையில் வைத்தவருமானார்.

<u>திருக்கழிப்பாலை</u>

மாலினா ணங்கை யஞ்ச
மதிலிலங் கைக்கு மன்னன்
வேலினான் வெகுண்டெ டுக்கக்
காண்டலும் வேத நாவன்
நூலினா னோக்கி நக்கு
நொடிப்பதோ ரளவில் வீழக்
காலினா லூன்றி யிட்டார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே. **#303**

மதில்களை உடைய இலங்கைக்கு மன்னனாகிய இராவணன் என்ற, வேல் ஏந்திய வீரன் கோபங்கொண்டு கயிலை மலையைப் பெயர்க்க, அதுகண்டு தம்மிடம் பெருவிருப்புடைய பார்வதி அஞ்ச, அதனைக்கண்ட அளவில் வேதங்களை ஓதுபவனும் பூணூல் அணிந்தவனுமாகிய அவ்விராவணனை மனத்தால் நோக்கி, அவன் ஒரு நொடியில் ஆற்றலிழந்து மலையடியில் விழுமாறு, கால் விரலால் அவனை அழுத்தி நசுக்கிவிட்டவர் கழிப்பாலைச் சேர்ப்பனாரே.

திருக்கடவூர்

திருக்கடவூர்

திருக்கடவூர், திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அமிர்தகடேசுவரர்.
தேவியார் : அபிராமியம்மை.

பொள்ளத்த காய மாயப்
பொருளினைப் போக மாதர்
வெள்ளத்தைக் கழிக்க வேண்டில்
விரும்புமின் விளக்குத் தூபம்
உள்ளத்த திரியொன் றேற்றி
யுணருமா றுணர வல்லார்
கள்ளத்தைக் கழிப்பர் போலுங்
கடவூர்வீ ரட்ட னாரே. **#304**

துவாரங்கள் பல உடைய உடம்பெனும் மாயப் பண்டங்களாயப் போகந்தரும் சாதனங்களான மாதர் தொகுதியில் ஏற்படும்பற்றை அறவொழிக்க வேண்டில் சிவபெருமானுக்குத் தீபம் ஏற்றித் தூபம் இட்டு வழிபடும் திருத்தொண்டுகளை விரும்பி மேற்கொள்ளுங்கள். உள்ளமாகிய தகழியிலே உயிராகிய திரியை முறுக்கியிட்டு ஞானமாகியதீபமேற்றிக் கொண்டிருந்து உணருமாற்றால் உணரவல்லவர்களின் கொடுமைகள் அனைத்தையும் போக்குவர் திருக்கடவூர்ப் பெருமான்.

திருக்கடவூர்

மண்ணிடைக் குரம்பை தன்னை
மதித்துநீர் மைய லெய்தில்
விண்ணிடைத் தரும ராசன்
வேண்டினால் விலக்கு வாரார்
பண்ணிடைச் சுவைகள் பாடி
யாடிடும் பத்தர்க் கென்றும்
கண்ணிடை மணியர் போலுங்
கடவூர்வீ ரட்ட னாரே. **#305**

இந்நிலவுலகிலே உமக்கக் கிட்டியுள்ள மனித உடம்பாகிய கூட்டினைப் பெருமையாகக் கருதி நீங்கள் மயக்கந்தரும் இவ்வுலக வாழ்வில் ஈடுபடுவீராயின், யமலோகத்திலுள்ள தருமராசர் உம் உடம்பிலிருந்து உயிரைப் பிரிக்கவிரும்பினால் அதனை அப்பொழுது தடுக்க வல்லவர்

யாவர் உளார்? பண்களோடு சுவையாக எம்பெருமான் புகழைப்பாடிக் கூத்தாடும் அடியவர்களுக்கெல்லாம் கண்மணியைப் போன்றிருந்து அவர்கள் உய்ய வழிகாட்டுகிறார் கடவூர் வீரட்டனார்.

திருக்கடவூர்

பொருத்திய குரம்பை தன்னுட்
பொய்நடை செலுத்து கின்றீர்
ஒருத்தனை யுணர மாட்டீ
ருள்ளத்திற் கொடுமை நீக்கீர்
வருத்தின களிறு தன்னை
வருத்துமா வருத்த வல்லார்
கருத்தினி லிருப்பர் போலுங்
கடவூர்வீ ரட்ட னாரே. **#306**

உயிரைத் தன்னுள் பொருந்தச் செய்த மனித உடம்பில் இருந்து பொய்யான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருக்கின்றீர். உணர வேண்டிய ஒப்பற்ற கடவூர் வீரட்டராகிய அவரை உணர்ந்து, பெருமானாரை உணராதீராய் மனத்தில் ஏற்பட்டுள்ள தீங்கான எண்ணங்களை நீக்காதீராய் உள்ளீர். தம்மைத் துன்புறுத்தும் ஐம்பொறிகளாகிய களிறுகளைச் செயற்படாதொழியச் செய்யும் வழியிலே முயன்று அவற்றை அடக்கிய ஞானியருடைய கருத்தில் எப்போதும் உள்ளார் கடவூர் வீரட்டனார்.

திருக்கடவூர்

பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தர்க்குப்பத்த ராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங்
கார்வத்தையுள்ளே வைத்து
விரும்பிநல்விளக்குத் தூபம்
விதியனா லிடவல்லார்க்குக்
கரும்பினிற் கட்டிபோல் வார்
கடவூர்வீ ரட்ட னாரே. **#307**

வைகறையாமத்தில் நீராடிப் பெருமானிடத்தில் பத்தர்களாகி அரும்புகளையும் மலர்களையும் முறைப்படி பறித்துக் கொண்டு உள்ளத்தில் அன்பை ஆக்கி விருப்பத்தோடு நல்ல விளக்குகளையும் தூபங்களையும் முறைப்படி இட்டு வழிபடவல்ல அடியவர்களுக்குக் கருப்பங்கட்டி போல இனிப்பவராவார் கடவூர் வீரட்டனார்.

திருக்கடவூர்

தலக்கமே செய்து வாழ்ந்து
தக்கவா றொன்று மின்றி
விலக்குவா ரிலாமை யாலே
விளக்கத்திற்கோழி போன்றேன்
மலக்குவார் மனத்தி னுள்ளே
காலனார் தமர்கள் வந்து
கலக்கநான் கலங்கு கின்றேன்
கடவூர்வீ ரட்ட னீரே. **#308**

கடவூர் வீரட்டனீரே! நாணத்தக்க செயல்களையே செய்து வாழ்நாளைக் கடத்தி, ஏற்ற செயல் எதுவும் செய்யாமல், தவறு செய்வதைத் தடுத்து நல்வழிப்படுத்துவாரும் ஒருவரும் இல்லாமையால், செஞ்சுடர் விளக்கத்தில்தானே கூவித் தானே அடங்கும் கோழியைப் போல உள்ளேன். என் மனத்தினுள்ளே ஐம்பொறிகளும் கலக்கத்தைத் தருகின்றன. யமனுடைய ஏவலர்கள் வந்து கலக்குதலால்யான் யம பயத்தாற் கலங்குகின்றேன்.

<u>திருக்கடவூர்</u>

பழியுடை யாக்கை தன்னிற்
பாழுக்கே நீரிறைத்து
வழியிடை வாழ மாட்டேன்
மாயமுந் தெளிய கில்லேன்
அழிவுடைத் தாய வாழ்க்கை
யைவரா லலைக்கப் பட்டுக்
கழியிடைத் தோணி போன்றேன்
கடவூர்வீ ரட்ட னீரே. **#309**

கடவூர் வீரட்டனீரே! குறைபாடுகள் யாவும் உள்ள இந்த உடம்பாகிய பயன் அற்ற பாழ் நிலத்தில், பயன்படும் நீரை வீணாகப்பாய்ச்சி, நேரிய வழியில் வாழ மாட்டாதேனாய், இவ்வுலக வஞ்சனையை உள்ளவாறு தெளிந்து உணரமாட்டேனாய், பாழாகும் வாழ்க்கையை உடைய ஐம்பொறிகளால் பலவாறாக வருத்தப்பட்டு உப்பங்கழியில் அங்கும் இங்கும் அலையும் தோணி போல உள்ளேன்.

<u>திருக்கடவூர்</u>

மாயத்தை யறிய மாட்டேன்
மையல்கொண்மனத்த னாகிப்
பேயொத்துக் கூகை யானேன்
பிஞ்ஞகா பிறப்பொன் றில்லீ
நேயத்தா னினைய மாட்டே

னீதனேன் நீசனே னான்
காயத்தைக் கழிக்க மாட்டேன்
கடவூர்வீ ரட்ட னீரே. **#310**
தலைக்கோலம் அணிந்தவனே! பிறப்பில்லாதவனே! கடவூர் வீரட்டனே! பொய்ப்பொருளைப் பொய்ப்பொருள் என்று அறியமாட்டாதேனாய் மயக்கம் பொருந்திய மனத்தேனாகிப் பேயை ஒத்து அலைந்துதிரிந்து, கோட்டானைப் போலத் தெளவின்றிக் கலங்குகிறேன். அன்போடு உன்னைத் தியானிக்க ஆற்றல் இல்லாத, கீழாருள் கீழேனாகிய அடியேன், இவ்வுடம்பை இழப்பதற்கும் மனம் இல்லாதேனாய் உள்ளேன்.

திருக்கடவூர்

பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து
பாழுக்கே நீரி றைத்தேன்
உற்றலாற் கயவர் தேறா
ரென்னுங்கட் டுரையோடொத்தேன்
எற்றுளே னென்செய்கேனா னிடும்பையால்
ஞானமேதும்
கற்றிலேன் களைகண்காணேன் கடவூர்வீ
ரட்டனீரே. **#311**
கடவூர் வீரட்டனீரே! சிவனடிப் பற்றில்லா வாழ்க்கை வாழ்ந்து பயனற்ற பாழ் நிலத்துக்கு நீர் இறைப்பாரைப் போல அறிவு ஆற்றல்களை வீணாக்கிவிட்டேன். அனுபவித்தால் தான் கீழ்மக்களுக்கு உண்மை புலப்படும் என்னும் பொருள் பொதித்த வார்த்தைக்கு இலக்கியமாக உள்ளேன். யான் எதற்காக உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்! யான் யாது செய்ய வல்லேன்! ஐம்பொறிகள் வசப்பட்டு வருந்தும் துயரத்தாலே ஞானநூல்களை ஞானதேசிகர்பால் உபதேச முறையில் கற்கவில்லை. ஆதலின் அடியேனுக்குப் பற்றுக் கோடாக இருப்பார் ஒருவரையும் காணேன்.

திருக்கடவூர்

சேலினே ரனையகண்ணார் திறம்விட்டுச்
சிவனுக்கன்பாய்ப்
பாலுநற் றயிர்நெய்யோடு பலபல
வாட்டியென்றும்
மாலினைத் தவிர நின்ற
மார்க்கண்டற் காக வன்று
காலனை யுதைப்பர் போலுங்

கடவூர்வீ ரட்ட னாரே. #312
கடவூர் வீரட்டனார், சேல்மீன் போன்ற கண்களை உடைய மகளிரிடம் ஈடுபடும் செயலை விடுத்துச் சிவபெருமானுக்கு அன்பனாய் எம்பெருமானை பஞ்சகவ்வியம் முதலியவற்றால் அபிடேகித்து உலக மயக்கத்தைப் போக்கிச் சிவ வழிபாட்டில் நிலை பெற்ற மார்க்கண்டேயனுக்காகக் கூற்றுவனை உதைத்தவர்.

திருக்கடவூர்

முந்துரு விருவ ரோடு
மூவரு மாயி னாரும்
இந்திர னோடு தேவ
ரிருடிக ளின்பஞ் செய்ய
வந்திரு பதுக டோளா
லெடுத்தவன் வலியை வாட்டிக்
கந்திரு வங்கள் கேட்டார்
கடவூர்வீ ரட்ட னாரே. #313
ஐந்தொழிற் கருத்தாக்கள் நிரலில் முற்படக் கூறப்படும் அயன், அரி எனும் இருவருடன் உருத்திரன், மகேசன், சதாசிவன் என்போரும் கூடி அமையும் ஐவராகவும் தாம் ஒருவரே இருந்து கொண்டு, இந்திரனும் தேவர்களும் முனிவர்களும் தம்மை வழிபட்டு இன்பத்தை விளைக்கவும், கயிலையை நெருங்கி வந்து அதனை இருபது தோள்களாலும் பெயர்த்த இராவணனுடைய வலிமையை அழித்து அவன் வாயினால் இசைப்பாடல்களைக் கேட்டு அருளினார் கடவூர் வீரட்டனார்.

திருப்பயற்றூர்

திருப்பயற்றூர்

திருப்பயற்றூர், திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருப்பயத்தீசுவரர்.
தேவியார் : காவியங்கண்ணியம்மை.

உரித்திட்டா ரானை யின்றோ
லுதிரவா றொழுகி யோட
விரித்திட்டா ருமையா ளஞ்சி
விரல்விதிர்த தலக்க னோக்கித்
தரித்திட்டார் சிறிது போது
தரிக்கில ராகித் தாமுஞ்
சிரித்திட்டா ரெயிறு தோன்றத்
திருப்பயற் றூர னாரே. **#314**

திருப்பயற்றூர்ப் பெருமானார் குருதிவெள்ளம் ஆறாக ஓட யானையின் தோலை உரித்துத் தம் திருமேனியில் விரித்துப் போர்த்தார். யானைத்தோலை உரித்ததனையும் போர்த்ததனையும் கண்டு பார்வதிதேவியார் அஞ்சித்தம் விரல்களைப் பலகாலும் உதறி வருந்தியதனைக் கண்டு, சிறிதுநேரம் அத்தோலைப் போர்த்தியபின் அவ்வாறு தொடர்ந்து போர்த்தும் ஆற்றல் இல்லாதவரைப் போலக் காட்சி வழங்கித் தாமும் பற்கள்தோன்றச் சிரித்துவிட்டார்.

திருப்பயற்றூர்

உவந்திட்டங் குமையோர் பாகம்
வைத்தவ ரூழி யூழி
பவந்திட்ட பரம னார்தா
மலைசிலை நாக மேற்றிக்
கவர்ந்திட்ட புரங்கண் மூன்றுங்
கனலெரி யாகச் சீறிச்
சிவந்திட்ட கண்ணர் போலுந்
திருப்பயற் றூர னாரே. **#315**

திருப்பயற்றூரனார்பல ஊழிகளையும் படைத்த பெருமானாராய், விரும்பிப் பார்வதிபாகராய், மலையை வில்லாகக் கொண்டு, பாம்பை அதற்கு நாணாகக் கட்டி, உலகங்களில் பலரையும் சென்று பற்றி வருத்திய மும்மதில்களும் தீக்கு இரையாகுமாறு, வெகுண்டு சிவந்த கண்களையுடையவர்.

திருப்பயற்றூர்

நங்களுக் கருள தென்று
நான்மறை யோது வார்கள்
தங்களுக் கருளு மெங்க
டத்துவன் றழலன் றன்னை
எங்களுக் கருள்செ யென்ன
நின்றவ னாக மஞ்சுந்
திங்களுக் கருளிச் செய்தார்
திருப்பயற் றூர னாரே. **#316**

திருப்பயற்றூரனார் நமக்கு அருள்கிட்டும் என்று நான்கு வேதங்களையும் ஓதும் அந்தணர்களுக்கு அவ்வாறே அருள் செய்யும் உண்மைப் பொருளாய்த் தீ நிறத்தவராய் எங்களுக்கு அருள் செய்வீராக என்று எல்லா உயிர்களும் வேண்டித் தொழுமாறு அழியாது நின்ற முதல்வராய்ப் பாம்பினை அஞ்சும் பிறைமதிக்கு அஞ்சவேண்டாதவாறு அருள் செய்துள்ளார்.

திருப்பயற்றூர்

பார்த்தனுக் கருளும் வைத்தார்
பாம்பரை யாட வைத்தார்
சாத்தனை மகனா வைத்தார்
சாமுண்டி சாம வேதம்
கூத்தொடும் பாட வைத்தார்
கோளரா மதிய நல்ல
தீர்த்தமுஞ் சடையில் வைத்தார்
திருப்பயற் றூர னாரே. **#317**

திருப்பயற்றூரனார் அருச்சுனனுக்கு அருளி, பாம்பினை இடுப்பில் ஆடுமாறு இறுகக்கட்டி, சாத்தனை மகனாக ஏற்றுக் காளிக்காகச் சாமவேதம் பாடியவாறு கூத்து நிகழ்த்திக் கொடிய பாம்பு, பிறை, கங்கை ஆகிய இவற்றைச் சடையில் அணிந்தவராவார்.

திருப்பயற்றூர்

மூவகை மூவர் போலு
முற்றுமா நெற்றிக் கண்ணர்
நாவகை நாவர் போலு
நான்மறை ஞான மெல்லாம்
ஆவகை யாவர் போலு
மாதிரை நாளர் போலும்

தேவர்க டேவர் போலும்
திருப்பயற் றூர னாரே. #318

திருப்பயற்றூரனார் அருவம் அருவுருவம் உருவம் என்ற மூவகைப்பட்ட இலயசிவம், போகசிவம், அதிகாரசிவம் என்ற மூவராய், நிறைந்த நெற்றிக்கண்ணராய், முறையாக வைகரி முதலான நால்வகை ஒலிகளை வெளிப்படுத்தும் நாவினை உடையவராய், நான்கு வேதங்கள் சிவாகமம் முதலிய ஞானநூல்கள் என்பவற்றின் வடிவினராய், திருவாதிரை நாளை உகப்பவராய்த் தேவர்களுக்குத் தலைவராய் விளங்குபவராவார்.

திருப்பயற்றூர்

ஞாயிறாய் நமனு மாகி
வருணனாய்ச் சோம னாகித்
தீயறா நிருதி வாயுத்
திப்பிய சாந்த னாகிப்
பேயறாக் காட்டி லாடும்
பிஞ்ஞக னெந்தை பெம்மான்
தீயறாக் கையர் போலுந்
திருப்பயற் றூர னாரே. #319

திருப்பயற்றூரனார் தீ நீங்காத கையினராய், தீபங்கள் நீங்காத சுடுகாட்டில் கூத்து நிகழ்த்துபவராய், தலைக்கோலம் அணிந்தவராய், நமக்குத் தந்தையாராய், தலைவராய், ஞாயிறு, சந்திரன்களாகவும், யமன், வருணன், அக்கினி, நிருருதி, வாயு, மேம்பட்ட சாந்த வடிவினனாகிய ஈசானன் ஆகிய எண்திசை காப்போராகவும் உள்ளார்.

திருப்பயற்றூர்

ஆவியா யவியு மாகி
யருக்கமாய்ப் பெருக்க மாகிக்
பாவியர் பாவந் தீர்க்கும்
பரமனாய்ப் பிரம னாகிப்
காவியங் கண்ண ளாகிக்
கடல்வண்ண மாகி நின்ற
தேவியைப் பாகம் வைத்தார்
திருப்பயற் றூர னாரே. #320

திருப்பயற்றூரனார் வேள்வித் தீயின் புகையாய், வேள்வியில் தேவருக்கு வழங்கப்படும் அவி உணவாய், நுண் பொருளாய், மிகப்பெரும் பொருளாய், தீவினை செய்தவருடைய தீவினைகளை எல்லாம் போக்கும் பெருமானாய், பிரமனாய், கருங்குவளைபோன்ற கண்களை உடையளாகிக் கடல் போன்ற நீலநிறம் உடைய பார்வதிபாகராகயும்

உள்ளார்.

திருப்பயற்றூர்

தந்தையாய்த் தாயு மாகித்
தரணியாய்த் தரணியுள் ளார்க்
கெந்தையு மென்ன நின்ற
வேழுல குடனு மாகி
எந்தையெம் பிரானே யென்றென்
றுள்குவா ருள்ளத் தென்றும்
சிந்தையுஞ் சிவமு மாவார்
திருப்பயற் றூர னாரே. **#321**

திருப்பயற்றூரனார், தந்தையாராய்த் தாயாராய் உலகங்களாய், உலகில் உள்ளார் அனைவருக்கும் தலைவராய், ஏழு உலகங்களில் உள்ள உயிர்களின் செயற்பாட்டிற்கு உடனாய் நின்று இயக்குபவராய், 'எந்தையே! எம்பெருமானே!' என்று தியானிப்பவர்கள் உள்ளத்திலே சிந்தையும் சிந்திக்கப்பெறும் சிவமுமாகி உள்ளவராவார்.

திருப்பயற்றூர்

புலன்களைப் போக நீக்கிப்
புந்தியை யொருங்க வைத்து
இலங்களைப் போக நின்று
விரண்டையு நீக்கி யொன்றாய்
மலங்களை மாற்ற வல்லார்
மனத்தினுட் போக மாகிச்
சினங்களைக் களைவர் போலுந்
திருப்பயற் றூர னாரே. **#322**

திருப்பயற்றூரனார், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புல நுகர்ச்சிகளையும் அடியோடு போக்கி, உள்ளத்தை ஒருவழிப்பட நிலைநிறுத்தி, மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களையும் கடக்க நான், தான் என்ற இரண்டையும் நீக்கி அவனேதானே ஆகிய அந்நெறியாளராய், மாயை, கன்மம் என்ற மலங்களைச் செயற்படாதவாறு செய்ய வல்ல அடியவர் மனத்திலே இன்பவடிவினராய்ச் சினத்தைவிளைக்கும் பிறவித் துன்பங்களை நீக்கி நிற்பவராவர்.

திருப்பயற்றூர்

மூர்த்திதன் மலையின் மீது
போகாதா முனிந்து நோக்கிப்

பார்த்துத்தான் பூமி மேலாற்
பாய்ந்துடன் மலையைப் பற்றி
ஆர்த்திட்டான் முடிகள் பத்து
மடர்த்துநல் லரிவை யஞ்சத்
தேத்தெத்தா வென்னக் கேட்டார்
திருப்பயற் றூர னாரே. **#323**

திருப்பயற்றூரனார், சிவபெருமானுடைய கயிலைமலையைக் கடந்து புட்பகவிமானம் போகாதாக, அச்செய்தியைச் சொல்லிய தேரோட்டியை வெகுண்டு நோக்கி, மனத்தான் நோக்கிப் பூமியில் தேரினின்றும் குதித்து விரைந்து கயிலைமலையைப் பெயர்க்க முற்பட்டு இராவணன் அதனைப் பெயர்த்து ஆரவாரம் செய்தபோது மலை நடுங்குதல் கண்டு பார்வதி அஞ்சும் அளவில் அவன் தலைகள் பத்தையும் விரலால் நசுக்கிப் பின் பாடிய தேத்தெத்தா என்ற இசையைக் கேட்டு மகிழ்ந்து அவனுக்கு அருள் செய்பவரானார்.

திருமறைக்காடு

திருமறைக்காடு

திருமறைக்காடு, திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வேதாரணியேசுவரர்.
தேவியார் : யாழைப்பழித்தமொழியம்மை.

இந்திர னோடு தேவ
ரிருடிக ளேத்து கின்ற
சுந்தர மானார் போலுந்
துதிக்கலாஞ் சோதி போலும்
சந்திர னோடு கங்கை
யரவையுஞ் சடையுள் வைத்து
மந்திர மானார் போலு
மாமறைக் காட னாரே. **#324**

மேம்பட்ட மறைக்காட்டுப் பெருமானார் இந்திரனோடு தேவர்களும் முனிவர்களும் புகழுகின்ற அழகராய், எல்லோரும் போற்றும் ஞானஒளியினராய்ச் சந்திரன் கங்கை பாம்பு என்பனவற்றைச் சடையில் வைத்தவராய், தம்மைத் தியானிப்பவரைக் காப்பவராய் உள்ளார்.

திருமறைக்காடு

தேயன நாட ராகித்
தேவர்க டேவர் போலும்
பாயன நாட றுக்கும்
பத்தர்கள் பணிய வம்மின்
காயன நாடு கண்டங்
கதனுளார் காள கண்டர்
மாயன நாடர் போலு
மாமறைக் காட னாரே. **#325**

தெய்வந் தன்மையே வடிவான அத்தகைய வீட்டுலகத்தை உடைய தேவர்கள் தலைவரான மாமறைக்காடரைப் பலவாகப் பரவியுள்ள உலகப்பற்றுக்களைத் துறக்கும் பக்தர்களே! வழி பட வாருங்கள். நாடுகளையும் கண்டங்களையும் கோபிப்பனவாய பலகூறுகளாகப் பரவிவந்த ஆலகால விடத்தின் கோபத்தை மனத்துள் கொண்டு அதனை விழுங்கிய நீலகண்டராம் பெருமானார், திருமாலால் தேடப் படுபவராவார்.

திருமறைக்காடு

அறுமையிவ் வுலகு தன்னை
யாமெனக் கருதிநின்று
வெறுமையின் மனைகள் வாழ்ந்து
வினைகளா னலிவு ணாதே
சிறுமதி யரவு கொன்றை
திகழ்தரு சடையுள் வைத்து
மறுமையு மிம்மை யாவார்
மாமறைக் காட னாரே. **#326**

மாமறைக் காடனார் அழியும் இயல்பினை உடைய இவ்வுலகை நிலைபெற்றது என்று நினைத்துக் கொண்டு உலக வாழ்க்கை வழி நின்று வீணாக இல்வாழ்க்கை நடத்தி இரு வினைகளால் துன்புறுத்தப்படாத வகையில், பிறை பாம்பு கொன்றை இவற்றைச் சடையுள் வைத்த பெருமானாய், தம் அடியவர்களுக்கு மறுமை இன்பமும் இம்மை இன்பமும் வழங்குபவராவார்.

திருமறைக்காடு

கால்கொடுத் திருகை யேற்றிக்
கழிநிரைத் திறைச்சி மேய்ந்து
தோல்படுத் துதிர நீராற்
சுவரெடுத் திரண்டு வாசல்
ஏல்வுடைத் தாவ மைத்தங்
கேழுசா லேகம் பண்ணி
மால்கொடுத் தாவி வைத்தார்
மாமறைக் காட னாரே **#327**

மாமறைக்காடனார் கால்களைக் கொடுத்து கைகளை ஏற்றி எலும்புக் கழிகளை நிரைத்து மேலே புலாலை வேய்ந்து குருதிநீரைக் கலந்து தோலை தட்டிச் சுவரை வைத்து இரண்டு வாயில்களையும் ஏழு சன்னல்களையும் அமைத்து உயிர்க்கு ஒரு வீடுகட்டி அதனுக்கு மால் என்ற பெயர் குறிக்கும் மயக்கம், காற்று, வேட்கை என்பனவற்றைச் செல்வங்களாகக் கொடுத்து குடியேற்றி வைத்துள்ளார்.

திருமறைக்காடு

விண்ணினார் விண்ணின் மிக்கார்
வேதங்கள் விரும்பி யோதப்
பண்ணினார் கின்ன ரங்கள்
பத்தர்கள் பாடி யாடக்

கண்ணினார் கண்ணி னுள்ளே
சோதியாய் நின்ற வெந்தை
மண்ணினார் வலங்கொண் டேத்து
மாமறைக் காட னாரே. **#328**

நிலவுலக மக்கள் நகரையே வலம் வந்து போற்றும் மகிமையுள்ள திருமறைக்காட்டுப் பெருமான் விண்ணுலகில் உளரேனும் விண்ணினும் மேம்பட்டவர். உலகம் வேதத்தை விரும்பி ஓதப்பண்ணியவர். பத்தர்கள் இசைப்பாடல்களைப் பாடியாடத் திருவுளம் பற்றியவர். அகக்கண்ணினுள்ளே ஞானவொளியை எய்தி திகழும் எம் தலைவரும் அவராவார்.

திருமறைக்காடு

அங்கையு ளனலும் வைத்தார்
அறுவகைச் சமயம் வைத்தார்
தங்கையில் வீணை வைத்தார்
தம்மடி பரவ வைத்தார்
திங்களைக் கங்கை யோடு
திகழ்தரு சடையுள் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார்
மாமறைக் காட னாரே. **#329**

மாமறைக் காடனார் பார்வதி பாகராய், உள்ளங்கையில் தீயையும், ஒரு கையில், வீணையையும் வைத்தார். அறுவகைச் சமயங் களைப் படைத்து அடியவர்கள் தம் திருவடிகளை வழிபடுமாறு செய்தவராவார். விளங்குகிற சடையில் சந்திரனைக் கங்கையோடும் வைத்தவர் ஆவார்.

திருமறைக்காடு

கீதராய்க் கீதங் கேட்டுக்
கின்னரந் தன்னை வைத்தார்
வேதராய் வேத மோதி
விளங்கிய சோதி வைத்தார்
ஏதராய் நட்ட மாடி
யிட்டமாய்க் கங்கை யோடு
மாதையோர் பாகம் வைத்தார்
மாமறைக் காட னாரே. **#330**

மாமறைக் காடனார் பார்வதி பாகராய், கங்கையிடம் விருப்பம் உடையவராய், இசைவடிவினராய்ப் பாடலைக் கேட்டு மகிழும் இசை உணர்வை உலகுக்கு வழங்கியவராய், வேதவடிவினராய், வேதம் ஓதுதலால் ஏற்படும் ஞான ஒளியை வழங்குபவராய், எல்லா

நிகழ்ச்சிகளுக்கும் ஆதிகாரணராய்க் கூத்து நிகழ்த்துபவராய் உள்ளார்.

திருமறைக்காடு

கனத்தினார் வலியு டைய
கடிமதி லரண மூன்றும்
சினத்தினுட் சினமாய் நின்று
தீயெழச் செற்றார் போலும்
தனத்தினைத் தவிர்ந்து நின்று
தம்மடி பரவு வார்க்கு
மனத்தினுண் மாசு தீர்ப்பார்
மாமறைக் காட னாரே. **#331**

மாமறைக் காடனார் செருக்குற்ற அசுரர்களுடைய மும்மதில்களையும் கோபத்தின் கோபமாய்க் காட்சி வழங்கித் தீக்கு இரையாகுமாறு அழித்தவர்! உலகச் செல்வத்தின் பற்றுக்களை விடுத்துத் தம் திருவடிகளை முன்நின்று போற்றும் அடியார்களின் மனத்திலுள்ள களங்கங்களை எல்லாம் போக்குபவர்.

திருமறைக்காடு

தேசனைத் தேசன் றன்னைத்
தேவர்கள் போற்றி சைப்பார்
வாசனை செய்து நின்று
வைகலும் வணங்கு மின்கள்
காசினைக் கனலை யென்றுங்
கருத்தினில் வைத்த வர்க்கு
மாசினைத் தீர்ப்பர் போலு
மாமறைக் காட னாரே. **#332**

மாமறைக் காடனார் ஒளி வடிவினராய், எல்லா உலகங்களையும் உடையவராய் உள்ளார். அவரை நறுமணப் பொருள்களைக் கொண்டு வழிபடும் அடியார்களே! நாள்தோறும் வணங்குங்கள். பொன்போல ஒளி வீசுபவராய்க் கனல் போல மாசுகளை எரித்து ஒழிப்பவராய் உள்ள அப்பெருமானாரை என்றும் தியானிப்பவருடைய மாசுகளை அவர் அடியோடு போக்குபவராவார்.

திருமறைக்காடு

பிணியுடை யாக்கை தன்னைப்
பிறப்பறுத் துய்ய வேண்டில்
பணியுடைத் தொழில்கள் பூண்டு
பத்தர்கள் பற்றி னாலே

துணிவுடை யரக்க னோடி
யெடுத்தலுந் தோகை யஞ்ச
மணிமுடிப் பத்தி றுத்தார்
மாமறைக் காட னாரே. **#333**

கயிலையைப் பெயர்த்து அற்புறப்படுத்தலாம் என்ற துணிவினை உடைய இராவணன் விரைந்து சென்று கயிலையைப் பெயர்க்க முற்பட்ட அளவில் பார்வதி. அஞ்ச, அவன்தலைகள் பத்தனையும் நசுக்கியவர் மாமறைக் காடனார், பலபற்றுக்களையும் உடைய இவ்வுடல் தொடர்புக்கேதுவான பிறவிப் பிணியைப் போக்கி ஒழிக்கக் கருதினால், தம் பணிவைப் புலப்படுத்தலுக்கு உரிய இறை தொண்டினை மேற்கொண்டு அடியவர்கள் விருப்பத்தோடு மாமறைக்காடனாரை வழிபடுங்கள்.

திருமறைக்காடு

திருமறைக்காடு, திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வேதாரணியேசுவரர்.
தேவியார் : யாழைப்பழித்தமொழியம்மை.

தேரையு மேல்க டாவித்
திண்ணமாத்தெழித்து நோக்கி
ஆரையு மேலு ணரா
வாண்மையான்மிக்கான் றன்னைப்
பாரையும் விண்ணு மஞ்சப்
பரந்ததோள்முடிய டர்த்துக்
காரிகை யஞ்ச லென்பார்
கலிமறைக்காட னாரே. **#334**

செழிப்பு மிக்கமறைக்காடனார், யாரையும் தனக்கு மேம்பட்டவராக மதிக்காதவனும் ஆளுந்தன்மையால் மேம்பட்டவனுமான இராவணன் கயிலாய மலைக்கு மேலும் தேரைச் செலுத்துமாறு தேரோட்டியை ஏவி அவன் அஃது இயலாமையைக் குறிக்க அவனை அதட்டிக் கடுமையாக நோக்கிக் கயிலையைப் பெயர்க்க முற்பட்ட அளவில் மண்ணும் விண்ணும் அஞ்சுமாறு பரந்த அவனுடைய தோள்களையும் முடிகளையும் நசுக்கிப் பார்வதியை அஞ்சேல் என்று அமைதியுறுத்தினார்.

திருமறைக்காடு

முக்கிமுன் வெகுண் டெடுத்த
முடியுடை யரக்கர் கோனை

நக்கிருந் தூன்றிச் சென்னி
நாண்மதி வைத்த வெந்தை
அக்கர வாமை பூண்ட
வழகனார் கருத்தி னாலே
தெக்குநீர்த் திரைகண் மோதுந்
திருமறைக் காட னாரே. #335

நீரைத் தம்மாட்டுக் கொள்கின்ற அலைகள் கரையை நோக்கி மோதும் திருமறைக்காடனார், தன் முழுவலியையும் பயன்படுத்தி முந்திக் கொண்டு கோபத்தோடு கயிலையைப் பெயர்த்த, முடியை அணிந்த இராவணனைச் சிரித்தபடியே கால் விரலை ஊன்றி நசுக்கியவராய், பிறைசூடிய எம் தலைவராய், எலும்பு, பாம்பு ஆமையோடு இவற்றை அணிந்த அழகராய்த் தம் விருப்பினாலே மறைக்காட்டை இருப்பிடமாகக் கொண்டுள்ளார்.

திருமறைக்காடு

மிகப்பெருத் துலாவ மிக்கா
னக்கொரு தேர்க டாவி
அகப்படுத் தென்று தானு
மாண்மையான் மிக்க ரக்கன்
உகைத்தெடுத் தான்ம லையை
யூன்றலு மவனை யாங்கே
நகைப்படுத் தருளி னானூர்
நான்மறைக் காடு தானே. #336

மிகப்பெரிய உருவினனாய் எங்கும் சஞ்சரிப்பவனாய் உள்ள இராவணன் நகைத்துத் தேரோட்டியை அதட்டி, மலையை மேவித் தேரைச் செலுத்தென்று நிர்ப்பந்திக்க, அஃது இயங்காமையால் தன் மிக்க வலிமையை முழுதும் கொண்டு செலுத்தி மலையைப் பெயர்க்கத் தன் உடம்பினைச் செயற்படுத்திய அளவில் அவனை அவ்விடத்திலேயே சிரிக்கப்படுதலுக்கு உரியனாய் நசுக்கியவருடைய ஊர் நான்கு வேதங்களும் வழிபட்ட மறைக்காடாகும்.

திருமறைக்காடு

அந்தரந் தேர்க டாவி
யாரிவ னென்று சொல்லி
உந்தினான் மாம லையை
யூன்றலு மொள்ள ரக்கன்
பந்தமாந் தலைகள் பத்தும்
வாய்கள்விட் டலறி வீழச்

சிந்தனை செய்து விட்டார்
திருமறைக் காட னாரே. #337
வானத்திலே தேரைச் செலுத்தி அதன் செலவு தடைப்பட்ட அளவில் அதனைத் தடைப்படுத்தியவன் யாவன் என்று வினவிக் கோபத்தால் உந்தப்பட்டு இராவணன் அப்பெரிய கயிலை மலையைப் பெயர்க்க முற்பட்ட அளவில், அவன் உடம்பில் இணைந்த பத்துத்தலைகளும் வாய் திறந்து அலறித் தரையிலே சாயுமாறு திருமறைக்காடனார் திருவுள்ளத்தில் நினைத்துச் செயற்பட்டார்.

திருமறைக்காடு

தடுக்கவுந் தாங்க வொண்ணாத்
தன்வலி யுடைய னாகிக்
கடுக்கவோர் தேர்க டாவிக்
கையிரு பதுக ளாலும்
எடுப்பனா னென்ன பண்ட
மென்றெடுத் தானை யேங்க
அடுக்கவே வல்ல னூரா
மணிமறைக் காடு தானே. #338
விரைவாகப் புட்பகவிமானத்தைச் செலுத்திச் சென்ற வழியில் அதன் செலவினைக் கயிலை மலை தடுக்க அதனைப் பொறுக்க முடியாத ஆத்திரத்தால் மிக்க வலிமையை உடையவனாகி, 'இதுவும் ஒரு பண்டமா? இதோ கையால் பெயர்த்து எறிந்து விடுகிறேன்' என்று கயிலையைப் பெயர்த்த இராவணனை வருந்துமாறு செய்யவல்ல சிவபெருமான் உகந்தருளியுள்ள திருத்தலம் அழகிய மறைக்காடு ஆகும்.

திருமறைக்காடு

நாண்முடிக் கின்ற சீரா
னடுங்கியே மீது போகான்
கோள்பிடித் தார்த்த கையான்
கொடியன்மா வலிய னென்று
நீண்முடிச் சடையர் சேரு
நீள்வரை யெடுக்க லுற்றான்
தோண்முடி நெரிய வைத்தார்
தொன்மறைக் காட னாரே. #339
ஒவ்வொருநாளையும் முடிக்குஞ் சிறப்புடைய சூரியன் ஒடுங்கிக்கொண்டு இலங்கையின்மேல் செல்லாதபடி ஏனைய கிரகங்களையும் தன் ஆணைக்கு உட்படுத்திய செயலினனாய்க் கொடியவனாகிய இராவணன் தான் பெருவலிமை உடையவன் என்று

செருக்கி நீண்ட சடைமுடியை உடைய சிவபெருமானுடைய மலையைப் பெயர்க்கத் தொடங்கிய அளவில் பழைய மறைக்காட்டுப் பெருமான் அவனுடைய தோள்களும் தலைகளும் நசுங்குமாறு செய்துவிட்டார்.

திருமறைக்காடு

பத்துவா யிரட்டிக் கைக
ளுடையன்மா வலிய னென்று
பொத்திவாய் தீமை செய்த
பொருவலி யரக்கர் கோனைக்
கத்திவாய் கதற வன்று
கால்விர லூன்றி யிட்டார்
முத்துவாய் திரைகண் மோது
முதுமறைக் காட னாரே. **#340**

முத்துக்களைத் தம்மிடையே கொண்டனவாய் அலைகள் மோதும் பழைய மறைக்காட்டுப்பெருமான், பத்துவாய்களையும் இருபது கைகளையும் உடைய இராவணன் தான் மிக்கவலிமை உடையவன் என்ற செருக்கால் சத்தப்படாமல் தீவினைகள் செய்பவனாய்க் கயிலையைப் பெயர்த்தலாகிய தீவினையைச் செய்ய அவன் வாயினால் பெரிய குரலில் கதறுமாறு தம் கால்விரலால் அழுத்தி அவனை நசுக்கிவிட்டார்.

திருமறைக்காடு

பக்கமே விட்ட கையான்
பாங்கிலா மதிய னாகிப்
புக்கனன் மாமலைக் கீழ்ப்
போதுமா றறிய மாட்டான்
மிக்கமா மதிகள் கெட்டு
வீரமு மிழந்த வாறே
நக்கன பூத மெல்லா
நான்மறைக் காட னாரே. **#341**

ஒவ்வொரு பக்கமும் பத்துக் கைகளை உடைய இராவணன் தன் தீச்செயல் விளைவுகளைப் பற்றி அறியும் அறிவு இல்லாதவனாய் மலையின் அடியில் புகுந்து வெளியே வரும் வழியை அறிய இயலாதவனாய் மேம்பட்ட அறிவும் கெட்டு வீரத்தையும் இழந்த நிலையைக் கண்டுமறைக்காட்டுப் பெருமானுடைய பூத கணங்கள் சிரித்தன.

திருமறைக்காடு

நாணஞ்சு கைய னாகி
நன்முடி பத்தி னோடு
பாணஞ்சு முன் னிழந்து
பாங்கிலா மதிய னாகி
நீணஞ்சு தா(அ) னுணரா
நின்றெடுத் தானை யன்று
ஏணஞ்சு கைகள் செய்தா
ரெழின்மறைக் காட னாரே. **#342**

இருபது கையனாய்ப் பத்துத் தலைகளை உடைய இராவணன், நைந்து சாமகீதம் பாடும் எண்ணத்தை விடுத்து. தனக்குத் துணையாக உதவாத அறிவினால், பெரும்பயன் தரும் திருவைந் தெழுத்தைத் தியானம் செய்யாது, கயிலையைப் பெயர்க்க முற்பட்டானாக, இனி இந்தக் கைகள் எழுச்சியோடு எந்தச் செயலையும் செய்ய முடியாது போய்விடுமோ என்று அவன் அஞ்சுமாறு அழகிய மறைக்காடனார் அவன் கைகளை நசுக்கினார்.

<u>திருமறைக்காடு</u>

கங்கைநீர் சடையுள் வைக்கக்
காண்டலு மங்கை யூடத்
தென்கையான் றேர்க டாவிச்
சென்றெடுத் தான்ம லையை
முன்கைமா நரம்பு வெட்டி
முன்னிருக் கிசைகள் பாட
அங்கைவா ளருளி னானூ
ரணிமறைக் காடு தானே. **#343**

கங்காதேவியைச் சிவபெருமான் சடையில் வைத்திருந்ததைக் கண்ட பார்வதி ஊடல் கொண்ட நேரத்தில், தென் இலங்கை மன்னனாகிய இராவணன் தேரைச் செலுத்திக் கயிலைமலை தேரின் இயக்கத்திற்கு இடையூறாயுள்ளது என்று அதனைப் பெயர்க்க முற்பட்டானாக, பெருமான் கால்விரல் ஒன்றினால் அவனைக் கயிலை மலையின் கீழ் நசுக்க, அவன்தன் நரம்புகளை எடுத்து யாழ் அமைத்து யாழ் இசையோடு வேதத்தைப்பாட அதனால் உள்ளம் மகிழ்ந்து அவனுக்குத் தாம் கையில் வைத்திருந்த சந்திரகாசம் என்ற வாளினை அருளினார். அப்பெருமான் உகந்தருளியிருக்கும் திருத்தலம் அழகிய திருமறைக்காடாகும்.

திருவிடைமருது

திருவிடைமருதூர்

திருவிடைமருது, திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மருதீசர்.
தேவியார் : நலமுலைநாயகியம்மை.

காடுடைச் சுடலை நீற்றர்
கையில்வெண்டலையர் தையல்
பாடுடைப் பூதஞ் சூழப்
பரமனார் மருத வைப்பில்
தோடுடைக் கைதை யோடு
சூழ்கிடங் கதனைச் சூழ்ந்த
ஏடுடைக் கமல வேலி
யிடைமரு திடங்கொண் டாரே. **#344**

சுடுகாட்டுச் சாம்பலை அணிந்து, கையில் வெள்ளிய மண்டையோட்டினை ஏந்தி, பக்கத்தில் தம்மைச் சார்ந்த பூதங்கள் சூழ மேம்பட்ட சிவபெருமான், மருதநிலத்தில், மடல்களை உடைய தாழைகளோடு சூழும் அகழியைச் சூழ்ந்து தாமரை வேலியாய் அமையும் திருவிடைமருதூரை இடமாகக் கொண்டுள்ளார்.

திருவிடைமருதூர்

முந்தையார் முந்தி யுள்ளார்
மூவர்க்கு முதல்வ ரானார்
சந்தியார் சந்தி யுள்ளார்
தவநெறி தரித்துநின்றார்
சிந்தையார் சிந்தை யுள்ளார்
சிவநெறியனைத்து மானார்
எந்தையா ரெம்பி ரானா
ரிடைமரு திடங்கொண்டாரே. **#345**

எம்தந்தையாராய் எம் தலைவராய் உள்ள பெருமான் முற்பட்டவர்களுக்கும் முற்பட்டவராய், அரி அயன் அரன் என்ற மூவருக்கும் முதற் பொருளானவராய், அந்திகளிலும் அவ்வந்தித் தொழுகைகளிலும் விளங்கும் அருளுருவினராய், தவநெறியில் ஒழுகுபவர் உள்ளத்திருப்பவராய், மங்கலமான வழிகள் எல்லாமாயும் ஆகியவராய், இடைமருதை இடங்கொண்டவராவா.

திருவிடைமருதூர்

காருடைக் கொன்றை மாலை
கதிர்மணி யரவி னோடு
நீருடைச் சடையுள் வைத்த
நீதியார் நீதி யாய
போருடை விடையொன் றேற
வல்லவர் பொன்னித் தென்பால்
ஏருடைக் கமல மோங்கு
மிடைமரு திடங்கொண் டாரே. **#346**

காவிரியின் தென்கரையில் அழகிய தாமரைகள் செழித்து ஓங்கும் இடைமருது என்ற தலத்தை உறைவிடமாகக் கொண்ட பெருமான் கார்காலத்தில் மலரும் மலர்களை உடைய கொன்றை மாலையை ஒளிவீசும் இரத்தினத்தைத் தலையில் உடைய பாம்பினோடு கங்கை தங்கும் சடையில் வைத்த நேர்மையராய், அறமே வடிவெடுத்ததும் போரிடும் ஆற்றலுடையதுமான காளையைச் செலுத்துவதில் வல்லவராய் உள்ளார்.

திருவிடைமருதூர்

விண்ணினார் விண்ணின் மிக்கார்
வேதங்கள் நான்குமங்கம்
பண்ணினார் பண்ணின் மிக்க
பாடலார் பாவந்தீர்க்குந்
கண்ணினார் கண்ணின் மிக்க
நுதலினார்காமற் காய்ந்த
எண்ணினா ரெண்ணின் மிக்க
விடைமரு திடங்கொண்டாரே. **#347**

அடியவருடைய எண்ணத்தில் மேம்பட்ட, இடைமருதை இடங்கொண்ட பெருமானார் தேவருலகை உடையவராய், அதனினும் மேம்பட்டவராய், நான்கு வேதமும் ஆறு அங்கங்களும் உலகறியச் செய்தவராய், பண்ணில் மேம்பட்ட பாடல்களை உடையவராய், அடியவர்களுடைய பாவங்களைப் போக்கும் கருத்து உடையவராய், மேம்பட்ட நெற்றிக்கண்ணராய் மன்மதனை வெகுண்ட பெருமானாய் உள்ளார்.

திருவிடைமருதூர்

வேதங்கள் நான்குங் கொண்டு
விண்ணவர் பரவி யேத்தப்
பூதங்கள் பாடி யாட

லுடையவன் புனித னெந்தை
பாதங்கள் பரவி நின்ற
பத்தர்க டங்கண் மேலை
ஏதங்க டீர நின்றா
ரிடைமரு திடங்கொண் டாரே. **#348**
நான்கு வேதங்களையும் ஒலித்துக்கொண்டு தேவர்கள் முன்நின்று போற்றிப் புகழப் பூதங்கள் பாடக் கூத்தாடுதலை உடைய தூயராகிய எம் தலைவர், தம் திருவடிகளை முன் நின்று துதித்த அடியார்களுடைய பழைய வினைகளையும் இனிவரக் கூடிய வினைகளையும் தீர்ப்பவராக இடைமருதை இடங் கொண்டுள்ளார்.

<u>திருவிடைமருதூர்</u>

பொறியர வரையி லார்த்துப்
பூதங்கள் பலவுஞ் சூழ
முறிதரு வன்னி கொன்றை
முதிர்சடை மூழ்க வைத்து
மறிதரு கங்கை தங்க
வைத்தவ ரெத் திசையும்
எறிதரு புனல்கொள் வேலி
யிடைமரு திடங்கொண் டாரே. **#349**
புள்ளிகளை உடைய பாம்பினை இடையில் இறுகச் சுற்றிப் பூதங்கள் பலவும் தம்மைச் சூழ்ந்திருக்கத் தளிரை உடைய வன்னி, கொன்றை என்பனவற்றைச் செந்நிறம் மிக்க சடையில் கங்கை வெள்ளத்தில் முழுகுமாறு சூடிய பெருமான் நாற்றிசைகளிலும் அலைவீசும் நீரோடு கால்களை எல்லையாக உடைய இடைமருது இடங்கொண்டார்.

<u>திருவிடைமருதூர்</u>

படரொளி சடையி னுள்ளாற்
பாய்புன லரவி னோடு
சுடரொளி மதியம் வைத்துத்
தூவொளி தோன்று மெந்தை
அடரொளி விடையொன் றேற
வல்லவ ரன்பர் தங்கள்
இடரவை கெடவு நின்றா
ரிடைமரு திடங்கொண் டாரே. **#350**
இடைமருது இடங்கொண்ட பெருமான் ஒளிவீசும் சடையிலே பரவும் நீரை உடைய கங்கை, பாம்பு, ஒளி வீசும் பிறை எனும் இவற்றைச் சூடித் தூய செந்நிறத்தோடு காட்சி வழங்கும் எங்கள் தலைவராய்,

பகைவர்களை அழிக்கும் பிரகாசமான காளையை ஏறி ஊர வல்லவராய், அன்பர்களுடைய துயரங்களைப் போக்கவல்லவருமாய் உள்ளார்.

திருவிடைமருதூர்

கமழ்தரு சடையி னுள்ளாற்
கடும்புன லரவி னோடு
தவழ்தரு மதியம் வைத்துத்
தன்னடி பலரு மேத்த
மழுவது வலங்கை யேந்தி
மாதொரு பாக மாகி
எழில்தரு பொழில்கள் சூழ்ந்த
விடைமரு திடங்கொண் டாரே. **#351**

பூக்களின் நறுமணம் கமழும் சடையினுள்ளே விரைந்து ஓடும் கங்கை, பாம்பு பிறை இவற்றைச் சூடித் தம் திருவடிகளைப் பலரும் துதிக்குமாறு மழுப்படையை வலக்கையில் ஏந்திப் பார்வதிபாகராய் அழகிய சோலைகள் சூழ்ந்த இடைமருதுப் பெருமான் உள்ளார்.

திருவிடைமருதூர்

பொன்றிகழ் கொன்றை மாலை
புதுப்புனல் வன்னி மத்தம்
மின்றிகழ் சடையில் வைத்து
மேதகத் தோன்று கின்ற
அன்றவ ரளக்க லாகா
வனலெரி யாகி நீண்டார்
இன்றுட னுலக மேத்த
விடைமரு திடங்கொண் டாரே. **#352**

பொன்போல ஒளிவீசும் கொன்றைப்பூமாலை கங்கை, வன்னி இலை, ஊமத்தம் எனும்இவற்றை ஒளிவீசும் சடையிற் சூடி, ஏனைய தேவர்களின் மேம்பட்டுத் தோன்றுகின்ற பிரமனும் திருமாலும் ஒரு காலத்தில் அடிமுடி காணமுடியாதபடி தீத்தம்பமாகக் காட்சி வழங்கிய பெருமான் இப்பொழுது நன்மக்கள் துதிக்குமாறு இடைமருதில் உறைகின்றார்.

திருவிடைமருதூர்

மலையுடன் விரவி நின்று
மதியிலா வரக்க னூக்கத்
தலையுட னடர்த்து மீண்டே
தலைவனா வருள்க ணல்கிச

சிலையுடை மலையை வாங்கித்
திரிபுர மூன்று மெய்தார்
இலையுடைக் கமல வேலி
யிடைமரு திடங்கொண் டாரே. **#353**
கயிலைமலையை அடைந்து அறிவற்ற அரக்கனாகிய இராவணன் அம்மலையைப் பெயர்க்க முற்பட அவனைத் தலை உட்பட உடல்முழுதும் துன்புறுத்தி மீண்டும் அவன் வேண்ட அவனுக்குத் தலைவராய் இருந்து அவனுக்கு அருட்பேறுகள் பலவற்றை விரும்பி அளித்து, மலையாகிய வில்லை வளைத்து வானில் திரிகின்ற மும்மதில்களையும் எய்து அழித்த பெருமான் இலைகளோடு கூடிய தாமரைமலர்கள் ஊர் எல்லையில் பூத்துக் குலுங்கும் திருவிடைமருதூர் என்ற திருத்தலத்தை உகந்தருளி இருப்பவராவார்.

திருப்பழனம்

திருப்பழனம், திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஆபத்சகாயர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

ஆடினா ரொருவர் போலு
மலர்கமழ் குழலி னாளைக்
கூடினா ரொருவர் போலுங்
குளிர்புனல் வளைந்த திங்கள்
சூடினா ரொருவர் போலுந்
தூயநன் மறைக ணான்கும்
பாடினா ரொருவர் போலும்
பழனத்தெம் பரம னாரே. **#354**

திருப்பழனத்து எம்பெருமான் திருக்கூத்தாடுபவரும், மலர் நறுமணம் வீசும் கூந்தலாளாகிய பார்வதியின் பாகரும், கங்கையும் பிறையும் சூடிய ஒப்பற்றவரும் தூயமறைகள் நான்கினையும் பாடுபவரும் ஆவார்.

திருப்பழனம்

போவதோர் நெறியு மானார்
புரிசடைப் புனித னார்நான்
வேவதோர் வினையிற் பட்டு
வெம்மைதான் விடவுங் கில்லேன்
கூவல்தா னவர்கள் கேளார்
குணமிலா வைவர் செய்யும்
பாவமே தூர நின்றார்
பழனத்தெம் பரம னாரே. **#355**

பழனத்து எம்பெருமான் உயிர் செல்வதற்குரிய வழியாக ஆனவரும், முறுக்குண்ட சடையை உடைய தூயவருமாவார். அடியேன் பலகாலும் கூறுவனவற்றை என் ஐம்பொறிகளும் ஏற்ப தில்லை. ஆதலால் துன்புறுத்தும் வினையில் அகப்பட்டு அதனால் ஏற்படும் வெப்பத்தை நீக்கமுடியாதேனாய் உள்ளேன். நற்பண்பு இல்லாத ஐம்பொறிகளும் செய்யும் தீயவினைகளைப் பழனத்துப் பெருமானாரே தீர்ப்பவராய் இருக்கின்றார்.

திருப்பழனம்

கண்டராய் முண்ட ராகிக்
கையிலோர் கபால மேந்தித்
தொண்டர்கள் பாடி யாடித்
தொழுகழற் பரம னார்தாம்
விண்டவர் புரங்க ளெய்த
வேதியர் வேத நாவர்
பண்டையென் வினைக டீர்ப்பார்
பழனத்தெம் பரம னாரே. **#356**

வீரராய், மழித்த தலையினராய் அல்லது திரிபுண்டரமாய்த் திருநீறு அணிந்தவராய்க் கையில் ஒரு மண்டையோட்டை ஏந்தி, அடியார்கள் பாடி ஆடித் தொழும் திருவடிகளை உடையவராய், பகைவருடைய மும்மதில்களையும் அம்புஎய்து அழித்த வேதியராய், வேதம் ஓதும் நாவினராய்என்னுடைய பழைய வினைகளைத் தீர்ப்பவராய்த் திருப்பழனத்துஎம்பெருமான் அமைந்து உள்ளார்.

<u>திருப்பழனம்</u>

நீரவன் றீயி னோடு
நிழலவ னெழில தாய
பாரவன் விண்ணின் மிக்க
பரமவன் பரம யோகி
ஆரவ னண்ட மிக்க
திசையினோ டொளிக ளாகிப்
பாரகத் தமிழ்த மானார்
பழனத்தெம் பரம னாரே. **#357**

பழனத்து எம்பெருமான் நீராய்த் தீயாய் ஒளியாய் அழகிய நிலவுலகாய்த் தேவருலகிலும் மேம்பட்ட தெய்வமாய் மேலான சிவயோகியாராய் எங்கும் நிறைந்தவராய் அண்டங்களும் மிக்க திசைகளும் முச்சுடர்களுமாகி மண்ணுலக உயிர்களுக்குக் கிட்டிய விண்ணுலக அமுதமாக உள்ளார்.

<u>திருப்பழனம்</u>

ஊழியா ரூழி தோறு
முலகினுக் கொருவ ராகிப்
பாழியார் பாவந் தீர்க்கும்
பராபரர் பரம தாய
ஆழியா னன்னத் தானு
மன்றவர்க் களப் பரிய
பாழியார் பரவி யேத்தும்

பழனத்தெம் பரம னாரே. **#358**
எல்லோரும் முன்நின்று புகழ்ந்து வழிபடும் திருப்பழனத்து எம்பெருமான், ஊழிகளாய், ஊழிதோறும் உலகிற்கு ஒப்பற்ற தலைவராய்ப் பாழாதலை உற்ற மக்களுடைய பாவங்களைப் போக்கும் மேம்பட்டவர்களுக்கும் மேம்பட்டவராய்த் தம்மைப் பரம்பொருளாகக் கருதிய, சக்கரத்தை ஏந்திய திருமாலும் அன்ன வாகனனான பிரமனும் தாம் தீப்பிழம்பாகக் காட்சி வழங்கிய காலத்தில் அடிமுடி அளக்க முடியாத வலிமை உடையவராக விளங்கியவராவார்.

<u>திருப்பழனம்</u>

ஆலின்கீ ழறங்க ளெல்லா
மன்றவர்க் கருளிச் செய்து
நூலின்கீ ழவர்கட் கெல்லா
நுண்பொரு ளாகி நின்று
காலின்கீழ்க் காலன் றன்னைக்
கடுகத்தான் பாய்ந்து பின்னும்
பாலின்கீழ் நெய்யு மானார்
பழனத்தெம் பரம னாரே. **#359**

பழனத்து எம்பெருமான் கல்லால மரத்தின் கீழிருந்து அறங்களை எல்லாம் ஒரு காலத்தில் நால்வருக்கு அருளிச்செய்து நூல்களை ஓதி வீடுபேற்றை விரும்பும் வைநயிகர்களுக்கு நுட்பமான பொருளாய் அமைந்து, காலனைத்தம் காலின் கீழ்க்கிடக்குமாறு விரைந்து பாய்ந்து உதைத்துப்பின், பாலில் உள்ள நெய்போல எங்கும் பரவியிருப்பவராவார்.

<u>திருப்பழனம்</u>

ஆதித்த னங்கி சோம
னயனொடு மால்பு த(ன்)னும்
போதித்து நின்று லகிற்
போற்றிசைத் தாரி வர்கள்
சோதித்தா ரேழுல குஞ்
சோதியுட் சோதி யாகிப்
பாதிப்பெண் ணுருவ மானார்
பழனத்தெம் பரம னாரே. **#360**

சூரியன், அக்கினி, சந்திரன், பிரமன், திருமால், புதன் ஆகியோர் உலகவருக்கு அறிவுறுத்தி நின்று தாமும் சிவபெருமானைப் போற்றி வாழ்பவர்கள். இவர்கள் தம் முயற்சியால் சிவபெருமானைக் கண்ணால் காணலாம் என்று ஏழுலகும் தேடினார்கள். பழனத்து எம் பெருமான்

இவர்களுக்கு எட்டாத வண்ணம் சோதிகளுள் மேம்பட்ட சோதியாகிப் பார்வதிபாகராக உள்ளார்.

திருப்பழனம்

காற்றனாற் காலற் காய்ந்து
காருரி போர்த்த வீசர்
தோற்றனார் கடலு ணஞ்சைத்
தோடுடைக் காதர் சோதி
ஏற்றினா ரிளவெண் டிங்க
ளிரும்பொழில் சூழ்ந்த காயம்
பாற்றினார் வினைக ளெல்லாம்
பழனத்தெம் பரம னாரே. **#361**

காலினாலே கூற்றுவனை உதைத்து, யானைத்தோலைப் போர்த்தியவராய், அனைவரையும் அடக்கி ஆள்பவர் ஆகிய பழனத்து எம் பெருமான், கடலில் தோன்றியவிடத்தைத் தம் மிடற்றுள் அடக்கி என்றும் உலகிற்குத் தோற்றமளிக்கும்படி செய்தவராய், தோடு அணிந்த காதினராய், வெண்ணிறமுடைய காளையினராய், பெரிய உலகத்தை எல்லாம் சூழ்ந்த ஆகாயத்தில் வெள்ளிய சந்திரனில் இளைய ஒளியை அமைத்து ஒளிவிடச்செய்தவராய் அடியார்களுடைய வினைகளை எல்லாம் போக்கியவர் ஆவார்.

திருப்பழனம்

கண்ணனும் பிரம னோடு
காண்கில ராகி வந்தே
எண்ணியுந் துதித்து மேத்த
வெரியுரு வாகி நின்று
வண்ணநன் மலர்க டூவி
வாழ்த்துவார் வாழ்த்தி யேத்தப்
பண்ணுலாம் பாடல் கேட்டார்
பழனத்தெம் பரம னாரே. **#362**

பழனத்து எம் பெருமான் திருமாலும் பிரமனும் தம் முயற்சியால் காண இயலாதவராகி வந்து தியானித்தும் துதித்தும் புகழுமாறு தீப்பிழம்பின் உருவமாகக் காட்சியளித்து, தம்மை வாழ்த்தும்அடியவர்கள் நல்ல நிறத்தை உடைய மலர்களால் அருச்சித்து வாழ்த்தித் துதிக்க அவர்களுடைய பண்ணோடு கூடிய பாடல்களைக் கேட்டு மகிழ்பவராவார்.

திருப்பழனம்

குடையுடை யரக்கன் சென்று
குளிர்கயி லாயவெற் பின்
இடைமட வரலை யஞ்ச
வெடுத்தலு மிறைவ னோக்கி
விடையுடை விகிர்தன் றானும்
விரலினா லூன்றி மீண்டும்
படைகொடை யடிகள் போலும்
பழனத்தெம் பரம னாரே. **#363**

அரசனுக்குரிய வெண் கொற்றக் குடையை உடைய இராவணன் சென்று குளிர்ந்த கயிலாய மலையை, அங்கிருந்த இளையளாகிய பார்வதி அஞ்சுமாறு பெயர்த்த அளவில், காளையை வாகனமாக உடைய, உலகப் பொருள்களிலிருந்து வேறுபட்ட தலைவராகிய பழனத்து எம் பெருமான், தம் விரலினால் அழுத்தி ஊன்றி அவனை நெரித்துப் பின் அவன் பாடலைக் கேட்டு வெகுளி நீங்கி அவனுக்கு வாட்படையை வழங்கியருளியவராவர்.

திருநெய்த்தானம்

திருநெய்த்தானம்

திருநெய்த்தானம், திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நெய்யாடியப்பர்.
தேவியார் : வாலாம்பிகையம்மை.

காலனை வீழச் செற்ற
கழலடி யிரண்டும் வந்தென்
மேலவா யிருக்கப் பெற்றேன்
மேதகத் தோன்று கின்ற
கோலநெய்த் தான மென்னுங்
குளிர்பொழிற் கோயின் மேய
நீலம்வைத் தனைய கண்ட
நினைக்குமா நினைக்கின் றேனே. **#364**

கூற்றுவன் கீழே விழுமாறு அவனை உதைத்த வீரக்கழலணிந்த திருவடிகள் இரண்டும் என்தலைமேல் இருத்தலைப் பெற்றேன். ஆதலின் மிகச் சிறப்பாகக் காட்சிவழங்குகின்ற அழகிய நெய்த்தானத் திருப்பதியின் குளிர்ந்த பொழில்களிடையே அமைந்த கோயிலில் விரும்பி உறைகின்ற நீலகண்டனே! தற்போதம் அற்று நின் போதத்தால் தியானிக்கும் வகையில் உன்னைத் தியானிக்கின்றேன்.

திருநெய்த்தானம்

காமனை யன்றுகண் ணாற்
கனலெரி யாக நோக்கித்
தூமமுந் தீபங் காட்டித்
தொழுமவர்க் கருள்கள் செய்து
சேமநெய்த் தான மென்னுஞ்
செறிபொழிற் கோயின் மேய
வாமனை நினைந்த நெஞ்சம்
வாழ்வுற நினைந்த வாறே. **#365**

மன்மதனை ஒரு காலத்தில் நெற்றிக்கண்ணால் நெருப்பாகப் பார்த்து அழித்து, நறும்புகையும் தீபமும் காட்டித் தொழும் அடியவர்களுக்கு அருள்கள்செய்து, எல்லா உயிர்களுக்கும் பாதுகாவலைத் தரும் சோலைகளால் சூழப்பட்ட நெய்த்தானம் என்னும் இருப்பிடத்தில் பொருந்தியுள்ள சிவபெருமானைத் தியானிக்கும் அடியேனுடைய மனம் நல்வாழ்வுக்கு உரிய செய்தியைத் தியானித்த செயல் போற்றத்தக்கது.

திருநெய்த்தானம்

பிறைதரு சடையின் மேலே
பெய்புனற் கங்கை தன்னை
உறைதர வைத்த வெங்க
ளுத்தம னூழி யாய
நிறைதரு பொழில்கள் சூழ
நின்றநெய்த் தான மென்று
குறைதரு மடிய வர்க்குக்
குழகனைக் கூட லாமே. **#366**

பிறைதங்கிய சடையின்மேலே கங்கைதங்குமாறு வைத்த எங்கள் மேம்பட்ட தலைவனாய், பல ஊழிகளின் வடிவினனாய், பலசோலைகளாலும் சூழப்பட்ட நெய்த்தானமாகிய அவன் உகந்தருளும் திருப்பதியைக் குறையிரந்து வேண்டித் கொள்ளும் திருவடித்தொண்டர்களுக்கு இளையவனாகிய எம்பெருமான் அடைவதற்கு எளியவனாய் உள்ளான்.

திருநெய்த்தானம்

வடிதரு மழுவொன் றேந்தி
வார்சடை மதியம் வைத்துப்
பொடிதரு மேனி மேலே
புரிதரு நூலர் போலும்
நெடிதரு பொழில்கள் சூழ
நின்றநெய்த் தான மேவி
அடிதரு கழல்க ளார்ப்ப
வாடுமெம் மண்ண லாரே. **#367**

சில்வீடு என்ற வண்டுகள் ஒலிக்கும் சோலைகள் சூழ நிலைபெற்ற நெய்த்தானத்தில் விரும்பி உறைந்து திரவடிகளில் அணிந்த கழல்கள் ஒலிக்குமாறு கூத்து நிகழ்த்தும் எம் மேம்பட்ட தலைவர் காய்ச்சி வடிக்கப்பட்டுக் கூரிதாக்கப்பட்ட மழுவைக் கையிலேந்தி, நீண்ட சடையிலே பிறையை அணிந்து திருநீறு அணிந்த மார்பிலே பல நூல்களை முறுக்கி அமைக்கப்பட்ட பூணூலை அணிந்தவராவார்.

திருநெய்த்தானம்

காடிட மாக நின்று
கனலெரி கையி லேந்திப்
பாடிய பூதஞ் சூழப்
பண்ணுடன் பலவுஞ் சொல்லி

ஆடிய கழலர் சீரா
ரந்தணெய்த் தான மென்றும்
கூடிய குழக னாரைக்
கூடுமா றறிகி லேனே. **#368**

கையில் ஒளிவீசும் நெருப்பை ஏந்திச் சுடுகாட்டை இடமாகக் கொண்டு பாடுகின்ற பூதங்கள் தம்மைச் சூழப் பண்ணோடு பல பாடல்கள் பாடி ஆடிய திருவடிகளை உடையவராய்ச் சிறப்புமிக்க அழகிய குளிர்ந்த நெய்த்தானத்தில் எப்பொழுதும் உறைகின்ற இளையவராகிய எம்பெருமானை அடையும் திறத்தை அறியாது இருக்கின்றேனே!

<u>திருநெய்த்தானம்</u>

வானவ வணங்கி யேத்தி
வைகலு மலர்க டூவத்
தானவர்க் கருள்கள் செய்யுஞ்
சங்கரன் செங்க ணேற்றன்
தேனமர் பொழில்கள் சூழத்
திகழுநெய்த் தான மேய
கூனிள மதியி னானைக்
கூடுமா றறிகி லேனே. **#369**

தேவர்கள் நாடோறும் வணங்கித்துதித்து மலர்களை அருச்சிக்க, அவர்களுக்கு வேண்டியவற்றை வழங்கும் நன்மை செய்பவனாய், சிவந்த கண்களையுடைய திருமாலாகிய காளையை உடையவனாய், வண்டுகள் விரும்பித் தங்குகின்ற சோலைகள் நாற்புறமும் சூழ விளங்கும் நெய்த்தானத்தில் விரும்பி உறைகின்ற, வளைந்த பிறை சூடியபெருமானைக் கூடும் திறத்தை அறியாது உள்ளேனே!

<u>திருநெய்த்தானம்</u>

காலதிர் கழல்க ளார்ப்பக்
கனலெரி கையில் வீசி
ஞாலமுங் குழிய நின்று
நட்டம தாடு கின்ற
மேலவர் முகடு தோய
விரிசடை திசைகள் பாய
மாலொரு பாக மாக
மகிழ்ந்தநெய்த் தான னாரே. **#370**

திருமாலைத் தம் திருமேனியின் ஒருபாகமாகக் கொண்டு மகிழ்ந்த நெய்த்தானப் பெருமானார் காலிலே அசைகின்ற கழல்கள் ஒலியெழுப்ப, ஒளிவீசுகின்ற தீயினைக் கையில் வைத்து வீசிக்கொண்டு தரையில்

பள்ளம் தோன்றவும், விரிந்த சடை வானத்தை அளாவ எட்டுத் திசைகளிலும் பரவவும் கூத்து நிகழ்த்தும் மேம்பட்டவராவார்.

திருநெய்த்தானம்

பந்தித்த சடையின் மேலே
பாய்புன லதனை வைத்து
அந்திப்போ தனலு மாடி
யடிகளை யாறு புக்கார்
வந்திப்பார் வணங்கி நின்று
வாழ்த்துவார் வாயி னுள்ளார்
சிந்திப்பார் சிந்தை யுள்ளார்
திருந்துநெய்த் தான னாரே. **#371**

முடிக்கப்பட்ட சடையின்மேலே கங்கையைச் சூடி மாலை நேரத்தில் தீயில் கூத்தாடும் பெருமானார் திருவையாற்றை அடைந்தவராய்த் தம்மைக் கும்பிடுபவராய் வணங்கி வழிநின்று வாழ்த்துபவராகிய அடியவர்களின் நாவில் நின்று, தியானம் செய்பவர் மனத்தில் உறைந்து சிறந்த நெய்த்தானத்தில் நிலையாகத் தங்கி விட்டார்.

திருநெய்த்தானம்

சோதியாய்ச் சுடரு மானார்
சுண்ணவெண் சாந்து பூசி
ஓதிவா யுலக மேத்த
வுகந்துதா மருள்கள் செய்வார்
ஆதியா யந்த மானார்
யாவரு மிறைஞ்சி யேத்த
நீதியாய் நியம மாகி
நின்றநெய்த் தான னாரே. **#372**

ஆதியும் அந்தமும் ஆகியவராய், எல்லோரும் விரும்பித் துதிக்க, நீதியாகவும் தவம் முதலிய வகுக்கப்பட்ட நெறிகளாகவும், நிலைபெற்றிருக்கும் திருநெய்த்தானப் பெருமான் ஒளியாகவும், அவ்வொளியை வெளிப்படுத்தும் சூரியன் முதலிய சுடர்ப் பொருள்களாகவும் ஆயினவராய், திருநீற்றைச் சந்தனமாகப் பூசி வேதம் ஓதி, நன்மக்கள் தம்மைத் துதித்தலால் தாம் அவர்களுக்கு அருள் செய்பவராவார்.

திருநெய்த்தானம்

இலையுடைப் படைகை யேந்து
மிலங்கையர் மன்னன் றன்னைத்

தலையுட னடர்த்து மீண்டே
தானவற் கருள்கள் செய்து
சிலையுடன் கணையைச் சேர்த்துத்
திரிபுர மெரியச் செற்ற
நிலையுடை யடிகள் போலு
நின்றநெய்த் தான னாரே. **#373**

இலைவடிவமாக அமைந்த வேலினைக் கையில் ஏந்திய இராவணனைத் தலை உட்பட உடல் முழுதையும் நசுக்கிப் பின் மீண்டும் அவனுக்குப் பல அருள்களைக் கொடுத்து, வில்லிலே அம்பினை இணைத்து மும்மதில்களையும் அழியுமாறு வெகுண்ட, என்றும் அழியாத நிலையை உடைய பெருமான் நிலைபெற்ற திருநெய்த்தானத் திருப்பதியை உகந்திருப்பவராவார்.

திருவையாறு

திருஐயாறு

திருவையாறு, திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.
தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை.

கங்கையைச் சடையுள் வைத்தார்
கதிர்ப்பொறி யரவும் வைத்தார்
திங்களைத் திகழ வைத்தார்
திசைதிசை தொழவும் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார்
மான்மறி மழுவும் வைத்தார்
அங்கையு ளனலும் வைத்தார்
ஐயனை யாற னாரே. **#374**

நம் தலைவனாராகிய ஐயாறனார், சடையில் கங்கையையும் ஒளிவீசும் புள்ளிகளையுடைய பாம்பையும் பிறையையும் விளங்குமாறு வைத்துத் தம்மை எல்லாத் திசையிலுள்ளாரும் தொழுமாறு அமைத்துக்கொண்டு பார்வதி பாகராய், மான்குட்டியையும், மழுப்படையையும், உள்ளங் கையில் வைத்த தீயையும் உடையவராவார்.

திருஐயாறு

பொடிதனைப் பூச வைத்தார்
பொங்குவெண் ணூலும் வைத்தார்
கடியதோர் நாகம் வைத்தார்
காலனைக் கால வைத்தார்
வடிவுடை மங்கை தன்னை
மார்பிலோர் பாகம் வைத்தார்
அடியிணை தொழவும் வைத்தார்
ஐயனை யாற னாரே. **#375**

ஒளி விளங்கும் பூணூலை அணிந்து, கொடிய நாகத்தைப் பூண்டு, கூற்றுவனை உயிர்க்கக்குமாறு உதைத்து, அழகிய பார்வதியை ஒரு பாகமாக மார்பில் வைத்து ஐயாற்றுத் தலைவராம் பெருமான் அடியவர்கள் திருநீற்றைப்பூசித்தம் திருவடிகளைத் தொழுமாறு வைத்தவராவார்.

திருஐயாறு

உடைதரு கீளும் வைத்தார்
உலகங்க ளனைத்தும் வைத்தார்
படைதரு மழுவும் வைத்தார்
பாய்புலித் தோலும் வைத்தார்
விடைதரு கொடியும் வைத்தார்
வெண்புரி நூலும் வைத்தார்
அடைதர வருளும் வைத்தார்
ஐயனை யாற னாரே. **#376**

கீளொடு கோவணம் அணிந்து, உலகங்களை நிலை நிறுத்தி, மழுப்படை ஏந்தி, பாய்கின்ற புலியின் தோலை உடுத்து, காளை எழுதிய கொடியை உயர்த்தி, வெண்புரிநூல் அணிந்து அடியார்கள் தம்மை அடைய அருள்புரிபவர் ஐயாறராகிய நம் தலைவராவார்.

<u>திருஐயாறு</u>

தொண்டர்க டொழவும் வைத்தார்
தூமதி சடையில் வைத்தார்
இண்டையைத் திகழ வைத்தார்
எமக்கென்று மின்பம் வைத்தார்
வண்டுசேர் குழலி னாளை
மருவியோர் பாகம் வைத்தார்
அண்டவா னவர்க ளேத்து
மையனை யாற னாரே. **#377**

எல்லா உலகங்களிலும் உள்ள தேவர்கள் வழிபடும் தலைவராகிய ஐயாறனார், சடையில் தூய பிறையைச் சூடி, முடி மாலையை விளங்க வைத்து, வண்டுகள் சேர்ந்த கூந்தலையுடைய பார்வதி பாகராய், அடியார்கள் தம்மைத் தொழவும் அடியவராகிய எங்களுக்கு என்றும் இன்பம் பெருகவும் வாய்ப்பு அளித்துள்ளார்.

<u>திருஐயாறு</u>

வானவர் வணங்க வைத்தார்
வல்வினை மாய வைத்தார்
கானிடை நடமும் வைத்தார்
காமனைக் கனலா வைத்தார்
ஆனிடை யைந்தும் வைத்தார்
ஆட்டுவார்க் கருளும் வைத்தார்
ஆனையி னுரிவை வைத்தார்
ஐயனை யாற னாரே. **#378**

தலைவராகிய ஐயாறனார் வானவர் தம்மை வணங்கச் செய்தவராய்,

அடியார்களுடைய கொடிய வினைகளை அழிய வைத்தவராய், சுடுகாட்டிடைக் கூத்து நிகழ்த்துபவராய், மன்மதனைத் தீயினால் சாம்பலாகுமாறு செய்து, பசுவினிடைப் பஞ்ச கவ்வியத்தை அமைத்து அதனால் தம்மை அபிடேகிப்பவருக்கு அருள் செய்து, யானைத்தோலைப் போர்த்திக் கொண்டவராவார்.

திருஐயாறு

சங்கணி குழையும் வைத்தார்
சாம்பர்மெய் பூச வைத்தார்
வெங்கதி ரெரிய வைத்தார்
விரிபொழி லனைத்தும் வைத்தார்
கங்குலும் பகலும் வைத்தார்
கடுவினை களைய வைத்தார்
அங்கம தோத வைத்தார்
ஐயனை யாற னாரே. **#379**

தலைவராகிய ஐயாறனார் சங்கினாலாகிய காதணியை அணிந்தவராய், அடியவர்களும் திருநீறு அணிய வைத்தவராய், சூரியனை வெயிலை வெளிப்படுத்துமாறு செய்தவராய், எல்லா உலகங்களும் படைத்தவராய், இரவையும், பகலையும் தோற்றுவித்தவராய், கொடிய வினைகளைப் போக்கும் வழிகளை உலகுக்கு அறிவித்தவராய், வேதாங்கங்கள் ஆறினையும் ஓதி உணரவைத்தவராய் உள்ளார்.

திருஐயாறு

பத்தர்கட் கருளும் வைத்தார்
பாய்விடை யேற வைத்தார்
சித்தத்தை யொன்ற வைத்தார்
சிவமதே நினைய வைத்தார்
முத்தியை முற்ற வைத்தார்
முறைமுறை நெறிகள் வைத்தார்
அத்தியி னுரிவை வைத்தார்
ஐயனை யாற னாரே. **#380**

தலைவராகிய ஐயாறனார் பத்தர்களுக்கு அருள்பவராய், காளையை ஏறியூர்பவராய், அடியவர் மனத்தை ஒருவழிப்படுத்துபவராய், அம்மனம் சிவனையே நினைக்குமாறு செய்பவராய், அடியார்களுக்கு முத்தி நிலையை முழுதுமாக வைத்தவராய், அந்நிலை எய்துதற்குரிய வழிகளை அமைத்தவராய், யானைத்தோலைப் போர்வையாகக் கொண்டவராய் உள்ளார்.

திருஐயாறு

ஏறுகந் தேற வைத்தார்
இடைமரு திடமும் வைத்தார்
நாறுபூங் கொன்றை வைத்தார்
நாகமு மரையில் வைத்தார்
கூறுமை பாகம் வைத்தார்
கொல்புலித் தோலும் வைத்தார்
ஆறுமோர் சடையில் வைத்தார்
ஐயனை யாற னாரே. **#381**

தலைவராகிய ஐயாறனார் தாம் விரும்பி இவரக்காளை வாகனத்தை உடையவராய், இருப்பிடமாக இடைமருதூரைக் கொண்டவராய், நறுமணங்கமழும் கொன்றைப் பூவைச் சூடியவராய், இடையில் பாம்பினை இறுகக்கட்டியவராய், பார்வதிபாகராய், கொல்லும் புலியின் தோலை ஆடையாக உடையவராய்க் கங்கையைச் சடையில் சூடியவராய் உள்ளார்.

திருஐயாறு

பூதங்கள் பலவும் வைத்தார்
பொங்குவெண் ணீறும் வைத்தார்
கீதங்கள் பாட வைத்தார்
கின்னரந் தன்னை வைத்தார்
பாதங்கள் பரவ வைத்தார்
பத்தர்கள் பணிய வைத்தார்
ஆதியு மந்தம் வைத்தார்
ஐயனை யாற னாரே. **#382**

தலைவராகிய ஐயாறனார் பல பூதகணங்களை உடையவராய், ஒளிவீசும் வெண்ணீறு அணிந்தவராய், இசைப்பாடல்களை அடியவர் பாட வைத்தவராய், இசைக்குச் சிறப்பிடம் வழங்கியவராய், தம் திருவடிகளை அடியவர்கள் முன் நின்று போற்றி வழிபடச் செய்பவராய், தம்மையே ஆதியும் அந்தமுமாக வைத்தவராய் உள்ளார்.

திருஐயாறு

இரப்பவர்க் கீய வைத்தார்
ஈபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாங்
கடுநர கங்கள் வைத்தார்
பரப்புநீர் கங்கை தன்னைப்

படர்சடைப் பாகம் வைத்தார்
அரக்கனுக் கருளும் வைத்தார்
ஐயனை யாற னாரே. #383

தலைவராகிய ஐயாறனார், பிச்சை எடுப்பவருக்கு வழங்கும் உள்ளத்தை நன்மக்களுக்கு அருளியவராய், அங்ஙனம் கொடுப்பவர்களுக்குத் தம் அருளை வழங்கியவராய், நிறைய வைத்துக் கொண்டு இரப்பவர்களுக்கு வழங்காது மறைப்பவர்களுக்குக் கொடிய நரகத் துன்ப நுகர்ச்சியை வழங்குபவராய், பரவிய நீரை உடைய கங்கையைப் பரந்த சடையின் ஒரு பகுதியில் வைத்தவராய், இராவணனுக்கு அருள் செய்தவராய் விளங்குகின்றார்.

திருஐயாறு

திருவையாறு, திருநேரிசை :
பண் - கொல்லி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.
தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை.

குண்டனாய்ச் சமண ரோடே
கூடிநான் கொண்ட மாலைத்
துண்டனே சுடர்கொள் சோதீ
தூநெறி யாகி நின்ற
அண்டனே யமர ரேறே
திருவையா றமர்ந்த தேனே
தொண்டனேன் றொழுதுன் பாதஞ்
சொல்லி நான்றிரிகின் றேனே. #384

அறிவிலியாய் அடியேன் சமணரோடு கூடிப் பெற்ற மனமயக்கத்தை ஒழித்தவனே! ஞானப் பிரகாசனே! தூய வழியாக நின்ற உலகத்தலைவனே! தேவர்கள் தலைவனே! திருவையாற்றில் உகந்தருளியிருக்கும் தேன்போன்ற இனியவனே! அடியேன் உன் திருவடிகளைத் தொழுது அவற்றின் பெருமைகளைக் சொல்லிக் கொண்டு நாட்டில் உலவுகின்றேன்.

திருஐயாறு

பீலிகை யிடுக்கி நாளும்
பெரியதோர் தவமென் றெண்ணி
வாலிய தறிகள் போல
மதியிலார் பட்ட தென்னே
வாலியார் வணங்கி யேத்துந்

திருவையா றமர்ந்த தேனோ
டாலியா வெழுந்த நெஞ்ச
மழகிதா வெழுந்த வாறே. **#385**

மயிற்பீலியைக் கையில்வைத்துக் கொண்டு அச் செயலையே பெரிய தவமாகக் கருதி, மேல்தோல் உரிக்கப்பட்டதனால் வெண்மையாக உள்ள தடிகள்போல ஆடையின்றி அறிவுகெட்ட சமணர்கள் என்ன பயனை அனுபவித்தார்கள்? தூய அறிவினை உடையவர்கள் வணங்கித்துதிக்கின்ற திருவையாற்றை உகந்தரளி இருக்கின்ற தேன் போன்ற பெருமானோடு கூடிக் களிக்கும் அடியேன் உடைய நெஞ்சம் உண்மையில் அழகிதாகவே எழுந்தியல்லாதாகிறது.

திருஐயாறு

தட்டிடு சமண ரோடே
தருக்கிநான் றவமென் றெண்ணி
ஒட்டிடு மனத்தி னீரே
யும்மையான் செய்வ தென்னே
மொட்டிடு கமலப் பொய்கைத்
திருவையா றமர்ந்த தேனோ
டொட்டிடு முள்ளத் தீரே
யும்மைநா னுகந்திட் டேனே. **#386**

உணவுக்குரிய உண்கலன்களாகிய தட்டுக்களைக் கையில் இடுக்கிக் கொள்ளும் சமணரோடு செருக்குற்று அச் செயலையே தவம் என்று கருதி யான் அவர்களோடு இணைந்து வாழுமாறு செய்த மனமே! உனக்கு நான் என்ன தண்டனை கொடுப்பேன்? மொட்டோடு கூடிய தாமரைகள் காணப்படும், மானிடர் ஆக்காத நீர்நிலைகளை உடைய திருவையாற்றில் விரும்பி உறையும் தேன்போன்ற எம்பெருமானோடு இப்பொழுது இணைந்து வாழும் நெஞ்சே! உன் செயல் கண்டு உன்னை நான் இப்பொழுது மெச்சுகின்றேன்.

திருஐயாறு

பாசிப்பன் மாசு மெய்யர்
பலமிலாச் சமண ரோடு
நேசத்தா லிருந்த நெஞ்சை
நீக்குமா றறிய மாட்டேன்
தேசத்தார் பரவி யேத்துந்
திருவையா றமர்ந்த தேனை
வாசத்தால் வணங்க வல்லார்
வல்வினை மாயு மன்றே. **#387**

பல்துலக்காததனால் பசிய நிறம்படிந்த பல்லினராய் அழுக்குப் படிந்த உடம்பினராய்ப் பயனற்ற வாழ்வினை வாழும் சமணரோடு அன்பினால் கூடிவாழ்ந்த மனத்தை அவரிடம் இருந்து பிரித்து நல்வழிப்படுத்தும் வழியை அறியமாட்டாதேனாய் முன்பு அடியேன் இருந்தேன். உலகிலுள்ள நன்மக்கள் எல்லோரும் அன்பினால் முன்நின்று துதித்து வணங்குகின்ற திருவையாறு அமர்ந்த தேனை நறுமணம் கமழும் பூக்களோடு சென்று வணங்கும் ஆற்றல் உடையவர்களுடைய கொடிய வினைகள் அழிந்து ஒழியும் என்பதை இப்பொழுது அறிந்தேன்.

திருஐயாறு

கடுப்பொடி யட்டி மெய்யிற்
கருதியோர் தவமென் றெண்ணி
வடுக்களோ டிசைந்த நெஞ்சே
மதியிலீ பட்ட தென்னே
மடுக்களில் வாளை பாயுந்
திருவையா றமர்ந்த தேனை
அடுத்துநின் றுன்னு நெஞ்சே
யருந்தவஞ் செய்த வாறே. **#388**

கடுக்காய்ப் பொடியை உடம்பில் தடவிக்கொள்ளும் அதனையே ஒரு தவ வாழ்க்கை என்று கருதும் குற்றங்களிலே பொருந்திய என் மனமாகிய அறிவுகெட்ட பொருளே! நீ அந்தப் பயனற்ற செயல்களால் பெற்ற பயன்தான் யாது? நீர்த்தேக்கங்களிலே வாளைமீன்கள் துள்ளித்திரியும் திருவையாறு அமர்ந்ததேனை அணுகி நிலையாக நின்று தியானிக்கும் மனமே! நீ சிறந்த தவச் செயலை இப்பொழுதே செய்தனை ஆகின்றாய்.

திருஐயாறு

துறவியென் றவம தோரேன்
சொல்லிய செலவு செய்து
உறவினா லமண ரோடு
முணர்விலே னுணர்வொன் றின்றி
நறவமார் பொழில்கள் சூழ்ந்த
திருவையா றமர்ந்த தேனை
மறவிலா நெஞ்ச மேநன்
மதியுனக் கடைந்த வாறே. **#389**

வீண் செயல் என்று ஆராய்ந்து உணராதேனாய்ச் சமணர்களோடு கொண்ட உறவினாலே அவர்கள் குறிப்பிட்ட வழியிலேயே காலம் போக்கி உண்மையான செயல்பற்றிய அறிவு இன்றி நல்லுணர்வு

இல்லேனாய் வாழ்ந்தேன். தேன் நிரம்பிய சோலைகள் சூழ்ந்த திருவையாறு அமர்ந்த தேனை மறவாமையால் வாழும் மனமே! உனக்கு இந்த நன்மதி வாய்த்தவாறென்னே!

திருஐயாறு

பல்லுரைச் சமண ரோடே
பலபல கால மெல்லாம்
சொல்லிய செலவு செய்தேன்
சோர்வனா னினைந்த போது
மல்லிகை மலருஞ் சோலைத்
திருவையா றமர்ந்த தேனை
எல்லியும் பகலு மெல்லா
நினைந்தபோ தினிய வாறே. **#390**

வினவிய ஐயங்களுக்குப் பல வழிகளைக் கொண்டு விடைகூறும் சமணர்களோடு பழகிப் பல ஆண்டுகள் அவர்கள் குறிப்பிட்ட வழியில் வாழ்ந்து, அவ்வாறு வாழ்ந்த வாழ்வை நினைக்கும் போது அடியேன் வாழ்நாள் வீணானது குறித்து மனத்தளர்வு உறுகின்றேன். மல்லிகைச் செடிகளில் பூக்கள் மலரும் சோலைகளையுடைய திருவையாறு அமர்ந்ததேனை இப்பொழுது இரவு பகல் ஆகிய எல்லாக் காலத்தும் தியானிக்கும் இனிமை இருந்தவாறென்னே!

திருஐயாறு

மண்ணுளார் விண்ணு ளாரும்
வணங்குவார் பாவம் போக
எண்ணிலாச் சமண ரோடே
யிசைந்தனை யேழை நெஞ்சே
தெண்ணிலா வெறிக்குஞ் சென்னித்
திருவையா றமர்ந்த தேனைக்
கண்ணினாற் காணப் பெற்றுக்
கருதிற்றே முடிந்த வாறே. **#391**

அறிவில்லாத மனமே! மக்களும் தேவரும் தம் தீவினை நீங்கத் தெளிந்த பிறை ஒளிவீசும் சென்னியை உடையராய்த் திருவையாறு அமர்ந்த தேன் போன்ற எம்பெருமானை மண்ணவரும் விண்ணவரும் வணங்குவாராக, நீ ஒரு பொருளாக எண்ணத் தகாதவரான சமணரோடு இணைந்து காலத்தைப் போக்கினாயே. அப்பெருமானை நாம் கண்ணினால் காணப் பெற்றதனால் நாம் விரும்பிய வீடுபேற்றின்பம் கைகூடிவிட்ட காரியமாயிற்று.

திருஐயாறு

குருந்தம தொசித்த மாலும்
குலமலர் மேவி னானும்
திருந்துநற் றிருவ டியுந்
திருமுடி காண மாட்டார்
அருந்தவ முனிவ ரேத்துந்
திருவையா றமாந்த தேனைப்
பொருந்திநின் றுன்னு நெஞ்சே
பொய்வினை மாயு மன்றே. **#392**

இடைக்குலச் சிறுமியர் மரக்கிளைகளில் தொங்க விடப்பட்ட தம் ஆடைகளைத் தாங்களே எடுத்துக்கொண்டு உடுத்துமாறு குருந்தமரத்தைக் கண்ணனாக அவதரித்த காலத்தில் வளைத்துக் கொடுத்த திருமாலும், மேம்பட்ட தாமரையில் விரும்பித் தங்கிய பிரமனும் மேம்பட்ட பெரிய திருவடிகளையும் திருமுடியையும் காண இயலாதவர்களாக, மேம்பட்ட முனிவர்கள் உயர்த்திப் புகழும் திருவையாறு அமர்ந்த தேனை உன்னுள் பொருத்தித் தியானிக்கும் மனமே! அச்செயலால் நம் பொய்யான உடலிலிருந்து நுகரும் வினைப்பயன்கள் யாவும் அழிந்து விடுதல் தௌவு.

திருஐயாறு

அறிவிலா வரக்க னோடி
யருவரை யெடுக்க லுற்று
முறுகினான் முறுகக் கண்டு
மூதறி வாள னோக்கி
நிறுவினான் சிறு விரலா
னெரிந்துபோய் நிலத்தில் வீழ
அறிவினா லருள்கள் செய்தான்
றிருவையா றமர்ந்த தேனே. **#393**

இறைவனுடைய ஆற்றலைப் பற்றிய உண்மை அறிவு இல்லாத இராவணன் விரைந்து சென்று கயிலைமலையைப் பெயர்ப்பதற்கு முழுமையாக முயன்ற செயலைக்கண்டு, உண்மையான ஞான வடிவினனாகிய திருவையாறு அமர்ந்த தேன்போன்றவன் தன் மனத்தால் நோக்கித் தன் கால்விரல் ஒன்றனை அழுத்த அதனால் இராவணன் உடல் நொறுங்கித் தரையில் வீழப் பின் அவன் இறைவனைப் பற்றிய அறிவோடு சாமவேதகீதம் பாட, அவனுக்கு அப்பெருமான் அருள்களைச் செய்தான்.

திருஐயாறு

திருவையாறு, திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.
தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை.

தானலா துலக மில்லை
சகமலா தடிமை யில்லை
கானலா தாட லில்லை
கருதுவார் தங்க ளுக்கு
வானலா தருளு மில்லை
வார்குழன் மங்கை யோடும்
ஆனலா தூர்வ தில்லை
யையனை யாற னார்க்கே. **#394**

நம் தலைவராகிய ஐயாறனார் தொடர்பின்றி உலகங்களின் நிலைபேறு இல்லை. உலகங்களிலுள்ள ஆன்மாக்களைத் தவிர வேறு அடிமைகள் அவர்க்கு இல்லை. சுடுகாட்டினைத் தவிர வேறு கூத்தாடும் இடம் இல்லை. தம்மை உண்மையால் தியானிப்பவர்க்கு வீடுபேற்றைத் தவிர வேறு சிறு சிறப்புக்களை அவர் அருளுவதில்லை. நீண்ட கூந்தலை உடைய பார்வதியோடும் இவர்ந்து செல்வதற்குக் காளையைத் தவிர வேறு வாகனமும் அவர்க்கு இல்லை.

திருஐயாறு

ஆலலா லிருக்கை யில்லை
யருந்தவ முனிவர்க் கன்று
நூலலா னொடிவ தில்லை
நுண்பொரு ளாய்ந்து கொண்டு
மாலுநான் முகனுங் கூடி
மலரடி வணங்க வேலை
ஆலலா லமுத மில்லை
யையனை யாற னார்க்கே. **#395**

ஐயன் ஐயாறனார்க்குக் கல்லால மரத்தைத் தவிர வேற்றிடம் உபதேச பீடமாக அமைவதில்லை. பெருந்தவத்தையுடைய முனிவர்களுக்கு அப்பிரானார் நுண்பொருளாய்வு செய்து வேதாகமப் பொருள்களைத் தவிர வேற்றுப் பொருள்களை உபதேசிப்பதில்லை. திருமாலும் பிரமனும் கூடித் தம் மலர்போன்ற திருவடிகளை வணங்க அவர்கள் வேண்டுகோளுக்கு இரங்கித் தாம் உட்கொண்ட கடல் விடத்தைத் தவிர அவருக்கு உணவு வேறு இல்லை.

திருஜயாறு

நரிபுரி சுடலை தன்னி
னடமலா னவிற்ற லில்லை
சுரிபுரி குழலி யோடுந்
துணையலா லிருக்கை யில்லை
தெரிபுரி சிந்தை யார்க்குத்
தெளவலா லருளு மில்லை
அரிபுரி மலர்கொ டேத்து
மையனை யாற னார்க்கே. #396

திருமால் விரும்பிய மலர்களைக் கொண்டு வழிபடும் ஐயன் ஐயாறனார் நரிகள் விரும்பி உலவும் சுடுகாட்டில் நடமாடல் தவிர மற்றொன்றுஞ் செய்வதில்லை. சுருண்ட முறுக்குண்ட கூந்தலை உடைய பார்வதியைத் தவிர வாழ்க்கைத் துணையாக வேறு ஒருவரையும் கொண்டு வாழ்தல் இல்லை. தன்னுண்மையை ஆராய்ந்து சிந்தித்தலையுடைய அடியார்களுக்கு உள்ளத் தெளவினை வழங்குவதைத் தவிர எம்பெருமான் அருளக் கூடியதும் வேறொன்றும் இல்லை.

திருஜயாறு

தொண்டலாற் றுணையு மில்லை
தோலலா துடையு மில்லை
கண்டலா தருளு மில்லை
கலந்தபின் பிரிவ தில்லை
பண்டைநான் மறைகள் காணாப்
பரிசின னென்றென் றெண்ணி
அண்டவா னவர்க ளேத்து
மையனை யாற னார்க்கே. #397

பழைய நான்மறைகளாலும் உள்ளவாறு உணர இயலாதவர் என்று தியானித்துத் தேவர்களும் துதிக்கும் ஐயன் ஐயாறனார்க்குத் தொண்டர்களைத் தவிரத் துணையாவார் பிறர் இல்லை. தோல்களைத் தவிர வேறு ஆடைகள் இல்லை. அடியார்களின் அநுபூதியிற் கண்டாலல்லாமல் அவர் அவர்களுக்கு அருளுவதில்லை. அடியார்களோடு கூடிய பின்னர் அவர்களை அப்பெருமான் பிரிவதில்லை.

திருஜயாறு

எரியலா லுருவ மில்லை
யேறலா லேற லில்லை

கரியலாற் போர்வை யில்லை
காண்டகு சோதி யார்க்குப்
பிரிவிலா வமரர் கூடிப்
பெருந்தகைப் பிரானென் றேத்தும்
அரியலாற் றேவி யில்லை
யையனை யாற னார்க்கே. **#398**

ஐயன் ஐயாறனார்க்கு நெருப்புருவம் தவிர வேற்றுருவமில்லை. காளையைத் தவிர வேற்று வாகனங்களில் அவர் ஏறுவதில்லை. யானைத்தோலைத் தவிர வேற போர்வை இல்லை. காணுவதற்கு ஏற்ற ஞானப் பிரகாசம் உடைய அப்பெருமானுக்கு, பிரியாது தேவர்கள் கூடி 'மேம்பட்ட சிறப்பினை உடைய பெருமான்' என்று துதிக்கும் திருமாலைத் தவிர வேறு தேவி இல்லை.

<u>திருஐயாறு</u>

என்பலாற் கலனு மில்லை
யெருதலா லூர்வ தில்லை
புன்புலா னாறு காட்டிற்
பொடியலாற் சாந்து மில்லை
துன்பிலாத் தொண்டர் கூடித்
தொழுதழு தாடிப் பாடும்
அன்பலாற் பொருளு மில்லை
யையனை யாற னார்க்கே. **#399**

ஐயன் ஐயாறனார்க்கு எலும்புகளைத் தவிர வேறு அணிகலன்கள் இல்லை. காளையைத் தவிர வேற்று வாகனங்களில் அவர் ஊர்வதில்லை. கீழான புலால் நாற்றம் வீசும் சுடுகாட்டுச் சாம்பலைத் தவிர வேற்றுப் பொருள்களைப் பூசுவதில்லை. உலகத் துன்பங்களில் அழுந்துதல் இல்லாத அடியவர்கள் ஒன்று கூடித் தொழுது, மனம் உருகிக் கண்ணீர் வடித்து ஆடிப்பாடும் அன்பினைத் தவிர அவர் வேறு எதனையும் குறிப்பிடத்தக்க பொருளாய்க் கருதுவதில்லை.

<u>திருஐயாறு</u>

கீளலா லுடையு மில்லை
கிளர்பொறி யரவம் பைம்பூண்
தோளலாற் றுணையு மில்லை
தொத்தலர் கின்ற வேனில்
வேளலாற் காயப் பட்ட
வீரரு மில்லை மீளா
ஆளலாற் கைம்மா றில்லை

யையனை யாற னார்க்கே. #400
அரை நாண் பட்டிகையோடு கூடிய கோவணமாகிய கீள் உடையைத் தவிர ஐயன் ஐயாறனார்க்கு வேறு உடையும் இல்லை. ஒளி வீசும் புள்ளிகளை உடைய பாம்புகளை அழகிய அணிகலன்களாக அணியும் தம் தோள்களைத் தவிர வேறு துணையும் இல்லை. பூங்கொத்துக்கள் மலரும் இளவேனிற்காலத்திற்கு அரசனாகிய மன்மதனைத் தவிர அவரால் நெற்றிக்கண் பொறியால்எரிக்கப்பட்ட வீரன் வேறு ஒருவனும் இல்லை. அப்பெருமானுக்கு அவரை விடுத்து என்றும் நீங்குதல் இல்லாத அடிமைத் தொழில் செய்வதனைத் தவிரக் கைம்மாறாக அடியார்கள் செய்யத்தக்கது பிறிதொன்றுமில்லை.

திருஐயாறு

சகமலா தடிமை யில்லை
தானலாற் றுணையு மில்லை
நகமெலாந் தேயக் கையா
னாண்மலர் தொழுது தூவி
முகமெலாங் கண்ணீர் மல்க
முன்பணிந் தேத்துந் தொண்டர்
அகமலாற் கோயி லில்லை
யையனை யாற னார்க்கே. #401

ஐயன் ஐயாறனார்க்கு உலக உயிர்களைத் தவிர அடிமையாவார் வேறு இல்லை. தமக்குத் தாமே ஒப்பாவார் அன்றி ஒப்பாவார் வேறு இல்லை. நகங்களெல்லாம் தேயுமாறு கைகளால் புதுமலர்களைக் கொய்து வணங்கி அவற்றை அவருக்கு அர்ப்பணித்து முகமெல்லாம் கண்ணீர் வழிந்துபரவ, அவர் திருமுன்னர் வணங்கித் துதிக்கும் தொண்டர்களின் உள்ளத்தைத் தவிர அவருக்கு வேறு இருப்பிடம் இல்லை.

திருஐயாறு

உமையலா துருவ மில்லை
யுலகலா துடைய தில்லை
நமையெலா முடைய ராவர்
நன்மையே தீமை யில்லை
கமையெலா முடைய ராகிக்
கழலடி பரவுந் தொண்டர்க்
கமைவிலா வருள்கொ டுப்பா
ரையனை யாற னார்க்கே. #402

ஐயன் ஐயாறனார்க்குப் பார்வதியொடு இணைந்த உருவமன்றி வேற்று உருவம் இல்லை. இவ்வுலகங்களைத் தவிர அவருக்கு வேறு உடைமைப்

பொருள் இல்லை. அவர் அடியவராகிய நம்மை எல்லாம் தம் அடிமைகளாக உடையவர்.உயிர்களுக்கு அவரால் நன்மையே அன்றித் தீமை சற்றும் இல்லை. பகைவரையும் பொறுக்கும் பொறுமை உடையவராகித்தம் திருவடிகளை முன்நின்று துதிக்கும் அடியவர்களுக்குக் குறைவில்லாத அருள்களை அவர் நல்குபவராவார்.

திருஐயாறு

மலையலா லிருக்கை யில்லை
மதித்திடா வரக்கன் றன்னைத்
தலையலா னெரித்த தில்லை
தடவரைக் கீழ டர்த்து
நிலையிலார் புரங்கள் வேவ
நெருப்பலால் விரித்த தில்லை
அலையினார் பொன்னி மன்னு
மையனை யாற னார்க்கே. **#403**

அலைகளை உடைய காவிரி நிலையாக ஓடும் ஐயாற்றில் வாழ் பெருமானுக்குக் கயிலை மலையைத் தவிர வேறு சிறப்பான இருப்பிடம் இல்லை. தம்மை மதியாது கயிலையைப் பெயர்க்க முற்பட்ட இராவணனுடைய தலையைத் தவிர வேற்றவருடைய தலையை அவர் மலைக்கீழ் வருத்தி நெரித்தலை அறியாதவர் அவர். நிலைபேறில்லாத அசுரர்களின் மும்மதில்களும் அழிய நெருப்பைப் பரப்பியதனைத் தவிர அவர் வேற்றுச் செயல் எதுவும் செய்யவில்லை.

திருச்சோற்றுத்துறை

திருச்சோற்றுத்துறை

திருச்சோற்றுத்துறை, திருநேரிசை :
பண் - கொல்லி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தொலையாச்செல்வர்.
தேவியார் : ஒப்பிலாம்பிகை.

பொய்விரா மேனி தன்னைப்
பொருளெனக் காலம் போக்கி
மெய்விரா மனத்த னல்லேன்
வேதியா வேத நாவா
ஐவரா லலைக்கப் பட்ட
வாக்கைகொண் டயர்த்துப் போனேன்
செய்வரா லுகளுஞ் செம்மைத்
திருச்சோற்றுத் துறைய னாரே. **#404**

வயல்களிலே வரால் மீன்கள் துள்ளித் திரியும் திருச்சோற்றுத்துறைப் பெருமானே! வேதங்களால் பரம் பொருளாக உணரப்பட்டவரே! வேதங்களை ஓதும் நாவினரே! பொய்ப்பொருள்களே கலந்து அமைக்கப்பட்ட இவ்வுடம்பை நிலையான பொருளாகக் கருதி இதனைப் பேணுவதிலேயே காலத்தை வீணாக்கி மெய்ப் பொருளிலே பொருந்தும் சார்பு அற்றேனாய் ஐம்பொறிகளால் வருத்தப்பட்ட இவ்வுடம்பைக் கொண்டு மயங்கிக் காலத்தைக் கழித்துவிட்டேன்.

திருச்சோற்றுத்துறை

கட்டராய் நின்று நீங்கள்
காலத்தைக் கழிக்க வேண்டா
எட்டவாங் கைகள் வீசி
யெல்லிநின் றாடு வானை
அட்டகா மலர்கள் கொண்டே
யானஞ்சு மாட்ட வாடிச்
சிட்டரா யருள்கள் செய்வார்
திருச்சோற்றுத் துறைய னாரே. **#405**

மலபந்தம் உடையோராய் உடற் கட்டினைப் பேணுவதில் நீங்கள் காலத்தைக் கழித்தல் கூடாது. தம் எண் கைகளையும் வீசியவராய் இரவில் ஆடுபவராய் உள்ளார் சோற்றுத் துறையரனார். சோலைகளிலிருந்து கிட்டும் எட்டுப்பூக்களையும் நீங்கள் அர்ப்பணித்துப்

பஞ்ச கவ்வியத்தால் அபிடேகிக்க அவ்வபிடேகத்தை ஏற்று சிட்டராய் உள்ள அப்பெருமான் உங்களுக்கு அருள்கள் செய்வார்.

திருச்சோற்றுத்துறை

கல்லினாற் புரமூன் றெய்த
கடவுளைக் காத லாலே
எல்லியும் பகலு முள்ளே
யேகாந்த மாக வேத்தும்
பல்லில்வெண் டலைகை யேந்திப்
பல்லிலந் திரியுஞ் செல்வர்
சொல்லுநன் பொருளு மாவார்
திருச்சோற்றுத் துறைய னாரே. **#406**

மலையை வில்லாக வளைத்து முப்புரங்களையும் அழித்த பெருமானை அன்போடு தனித்திருந்து இரவும் பகலும் உள்ளத்தில் தியானியுங்கள். பல்லில்லாத வெள்ளிய மண்டையோட்டை உண்கலமாக ஏந்திப் பல வீடுகளிலும் பிச்சைக்காகத் திரியும் செல்வராய், வேதமாயும் வேதத்தின் விழுப்பொருளாயும் உள்ள அவர் உங்களால் தியானிக்கத்தக்க திருச்சோற்றுத்துறையனாரே.

திருச்சோற்றுத்துறை

கறையராய்க் கண்ட நெற்றிக்
கண்ணராய்ப் பெண்ணோர் பாகம்
இறையரா யினிய ராகித்
தனியராய்ப் பனிவெண் டிங்கட்
பிறையராய்ச் செய்த வெல்லாம்
பீடராய்க் கேடில் சோற்றுத்
துறையராய்ப் புகுந்தென் னுள்ளச்
சோர்வுகண் டருளி னாரே. **#407**

நீலகண்டராய், நெற்றிக்கண்ணராய்ப் பார்வதிபாகத் தலைவராய், இனியராய், ஒப்பற்றவராய் இருப்பாராய், குளிர்ந்த வெண் பிறையைச் சூடியவராய், பெருஞ்செயல்களையே செய்வராய் உள்ள, என்றும் அழிதல் இல்லாத திருச்சோற்றுத்துறை இறைவர் அடியேனுடைய உள்ளத்திலே புகுந்து அதனுடைய தளர்ச்சியைக் கண்டு, அது நீங்க அருள் செய்தவராவார்.

திருச்சோற்றுத்துறை

பொந்தையைப் பொருளா வெண்ணிப்
பொருக்கெனக் காலம் போனேன்

எந்தையே யேக மூர்த்தி
யென்றுநின் றேத்த மாட்டேன்
பந்தமாய் வீடு மாகிப்
பரம்பர மாகி நின்று
சிந்தையுட் டேறல் போலுந்
திருச்சோற்றுத் துறைய னாரே. **#408**

பல ஓட்டைகளை உடைய இவ்வுடலைப் பேணத் தக்க பொருளாகக் கருதி விரைவாகக் காலத்தை, 'பற்றினையும் வீட்டின்பத்தையும் தருபவராய் மேலாருள் மேலாராய் நின்று உள்ளத்தில் தேன் போன்று இனிக்கும் திருச்சோற்றுத் துறைப் பெருமானே! எம் தலைவரே! தனிப் பெருந் தெய்வமே' என்றுதுதியாதேனாய், விரைந்தகலக் காலங் கழித்தேன்.

<u>திருச்சோற்றுத்துறை</u>

பேர்த்தினிப் பிறவா வண்ணம்
பிதற்றுமின் பேதை பங்கன்
பார்த்தனுக் கருள்கள் செய்த
பாசுப தன்றி றமே
ஆர்த்துவந் திழிவ தொத்த
வலைபுனற் கங்கை யேற்றுத்
தீர்த்தமாய்ப் போத விட்டார்
திருச்சோற்றுத் துறைய னாரே. **#409**

பார்வதிபாகராய், அருச்சுனனுக்கு அருள்கள் செய்த பாசுபத வேடத்தினராய் ஆரவாரித்துக் கொண்டு வானிலிருந்து இறங்கிய அலையோடு கூடிய நீரை உடைய கங்கையைச் சடையில் ஏற்று உலகவருக்கு நீராடுதற்குரிய தீர்த்தமாகப் பெருகவிட்ட திருச்சோற்றுத் துறையனார் செய்திகளை, இனி மீண்டும் பிறவி எடுக்காத பேறு பெறுவதற்காகப் பலகாலும் அடைவுகேடாகக் கூறுங்கள். (அடைவு கெட - வாயில் வந்தவந்த படி.)

<u>திருச்சோற்றுத்துறை</u>

கொந்தார்பூங் குழலி னாரைக்
கூறியே காலம் போன
எந்தையெம் பிரானாய் நின்ற
விறைவனை யேத்தா தந்தோ
முந்தரா வல்கு லாளை
யுடன்வைத்த வாதி மூர்த்தி
செந்தாது புடைகள் சூழ்ந்த

திருச்சோற்றுத் துறைய னாரே. **#410**
விரைந்து ஊரும் பாம்பின் படம் போன்ற அல்குலை உடைய பார்வதியின் பாகரான, எங்கள் தந்தையாராய், எங்கள் தலைவராய் உள்ள சிவந்த மகரந்தங்கள் எல்லா இடங்களிலும் பரவிக் கிடக்கும் திருச்சோற்றுத்துறைவனாரே ஆதிமூர்த்தியாவர். அவரைத் துதிக்காமல் கொத்துக்களாக மலர்ந்த பூக்களைக் கூந்தலில் அணிந்த மகளிரைப் புகழ்ந்தவாறே எம் காலங்கள் வீணாகி விட்டனவே!

<u>திருச்சோற்றுத்துறை</u>

அங்கதி ரோன வனை
யண்ணலாக் கருத வேண்டா
வெங்கதி ரோன்வ ழியே
போவதற் கமைந்து கொண்மின்
அங்கதி ரோன வனை
யுடன்வைத்த வாதி மூர்த்தி
செங்கதி ரோன்வ ணங்குந்
திருச்சோற்றுத் துறைய னாரே. **#411**
அழகிய கிரணங்களை உடைய பிறையைக் கங்கை பாம்பு முதலியவற்றுடன் சடையில் வைத்த முதற்கடவுள் சூரியனால் வணங்கப்படுகின்ற திருச்சோற்றுத்துறையனாரே ஆதலின் அழகிய கிரணங்களை உடைய சூரியனைத் தலைமைக் கடவுளாகக் கருதாமல் அந்தச் சூரிய மண்டலத்தின் வழியாக அர்ச்சிராதி மார்க்கமாய் வீட்டுலகத்தை அடைவதற்கு உங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள்.

<u>திருச்சோற்றுத்துறை</u>

ஓதியே கழிக்கின் றீர்க
ளுலகத்தீ ரொருவன் றன்னை
நீதியா னினைய மாட்டீர்
நின்மல னென்று சொல்லீர்
சாதியா நான்மு கனுஞ்
சக்கரத் தானுங் காணாச்
சோதியாய்ச் சுடர தானார்
திருச்சோற்றுத் துறைய னாரே. **#412**
'அவன் அருளாலே அவனைக் காணவேண்டும்' என்பதனைச் செயற்படுத்தாமல் தம்முயற்சியால் எம் பெருமானைக் காணலாம் என்று முயன்ற பிரமனும், திருமாலும் காணமுடியாத ஞான ஒளியினையுடையராய்த் தீத்தம்பமான திருச்சோற்றுத் துறையனார்

ஆகிய ஒப்பற்ற பெருமானை நெறிமுறைப்படி தியானம் செய்ய மாட்டீராய், அவரைத் தூயவர் என்று போற்றாதீராய் உலகமக்களாகிய நீங்கள் பயனற்ற நூல்களைப் பயின்றே காலத்தைக் கழிக்காதீர்கள்.

திருச்சோற்றுத்துறை

மற்றுநீர் மனம்வை யாதே
மறுமையைக் கழிக்க வேண்டில்
பெற்றதோ ருபாயந் தன்னாற்
பிரானையே பிதற்று மின்கள்
கற்றுவந் தரக்க னோடிக்
கயிலாய மலையெ டுக்கச்
செற்றுகந் தருளிச் செய்தார்
திருச்சோற்றுத் துறைய னாரே. **#413**

மறுமையில் பிறப்பு ஏற்படாத வகையில் மறுமை என்பதனையே அடியோடு நீங்கள் போக்க விரும்பினால், மற்றைப் பொருள்களிடத்தில் மனத்தை நிலையாக வைக்காமல், பல நூல்களையும் கற்ற செருக்கோடு அரக்கனாகிய இராவணன் விரைந்து சென்று கயிலை மலையைப் பெயர்க்கமுற்பட முதற்கண் அவனை ஒறுத்துப் பின் அவனுக்கு அருள்கள் செய்த திருச்சோற்றுத்துறையனை, அனுபவப் பொருளை ஞானதேசிகர்பால் கேட்டுப் பெற்ற முத்தி உபாயங்களால் பலகாலும் அடைவுகெடத் துதித்துப் பேசுங்கள்.

திருத்துருத்தி

திருத்துருத்தி

திருத்துருத்தி, திருநேரிசை :
பண் - கொல்லி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வேதேசுவரர்.
தேவியார் : முகிழாம்பிகையம்மை.

பொருத்திய குரம்பை தன்னைப்
பொருளெனக் கருத வேண்டா
இருத்தியெப் பொழுதும் நெஞ்சு
ளிறைவனை யேத்து மின்கள்
ஒருத்தியைப் பாகம் வைத்தங்
கொருத்தியைச் சடையுள் வைத்த
துருத்தியஞ் சுடரி னானைத்
தொண்டனேன் கண்ட வாறே. **#414**

எம்பெருமான் இவ்வுயிருக்குச் செயற்பாட்டுச் சாதனமாம்படி தாதுக்களால் இணைத்துள்ள இவ்வுடலே காப்பாற்றத் தக்க உயர்ந்த பொருளாகக் கருதுதல் வேண்டா. எம் பெருமானை எப்பொழுதும் நெஞ்சத்துள் இருக்கச் செய்து அவனைத் துதியுங்கள். பார்வதிபாகனாய்க் கங்கா சடாதரனாய் உள்ள திருத்துருத்தியின் ஞானச் சுடரை அடியேன் கண்டு உய்ந்தவாறு என்னே!

திருத்துருத்தி

சவைதனைச் செய்து வாழ்வான்
சலத்துளே யழுந்து கின்ற
இவையொரு பொருளு மல்ல
விறைவனை யேத்து மின்னோ
அவைபுர மூன்று மெய்து
மடியவர்க் கருளிச் செய்த
சுவையினைத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே. **#415**

குடும்பத்தைப் பெருக்கி உயிர் வாழ்தலுக்கான வஞ்சனையிலே அழுந்திச் செய்யும் உங்களுடைய இச்செயல்கள் எல்லாம் குறிப்பிடத்தக்க நற்பயன் தருவன அல்ல என்றறிந்து எம் பெருமானையே துதியுங்கள். மும்மதில்களையும் அம்பு எய்து அழித்து அடியார்களுக்கு அருள் செய்த சுவைப் பொருளாக உள்ள துருத்திப்

பெருமானை அடியவனாகிய யான் தரிசித்துப் பெற்ற இன்பம் இருந்தவாறு என்னே!

திருத்துருத்தி

உன்னியெப் போதும் நெஞ்சு
ளொருவனை யேத்து மின்னோ
கன்னியை யொருபால் வைத்துக்
கங்கையைச் சடையுள் வைத்துப்
பொன்னியி னடுவு தன்னுட்
பூம்புனல் பொலிந்து தோன்றும்
துன்னிய துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே. **#416**

பார்வதிபாகனாய்க் கங்கா சடாதரனாய்க் காவிரியின் இனிய நீரின் நடுவிலே விளங்கித்தோன்றும் திருத்துருத்திப் பெருமானைத் தரிசித்து அடியேன் கண்ட மகிழ்வு இருந்தவாறு என்னே! ஆதலின் என்னை ஒத்த மகிழ்வினை அடைய எப்பொழுதும் ஒப்பற்ற அப் பெருமானை உள்ளத்தில் இருத்திப் போற்றுங்கள்.

திருத்துருத்தி

ஊன்றலை வலிய னாகி
யுலகத்து ளுயிர்கட் கெல்லாம்
தான்றலைப் பட்டு நின்ற
சார்கன லகத்து வீழ
வான்றலைத் தேவர் கூடி
வானவர்க் கிறைவா வென்னும்
தோன்றலைத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே. **#417**

உலகத்தில் எல்லா உயிர்களுக்கும் அவற்றின் புலால் உடம்பிலும் கலந்து வலிமை தருபவனாகி, உயிர்களுக்குள்ளும் தான் உயிராய் நின்று, அவ்வுயிர்கள் தத்தம் வினைகளுக்கு ஏற்பத் தீயைப் போன்ற துன்பங்களில் அகப்பட அத்துயரம் தாங்காமல் வருந்தும் தேவர்கூட'எங்கள் தலைவனே' என்ற தம் துயர்களைப் போக்குமாறு வேண்டும் மேம்பட்டவனான திருத்துருத்திப் பெருமானைத் தரிசித்து அடியேன் உய்ந்த சீர் இருந்தவாறு என்னே!

திருத்துருத்தி

உடறனைத் கழிக்க லுற்ற
வுலகத்து ளுயிர்கட் கெல்லாம்

இடர்தனைக் கழிய வேண்டி
லிறைவனை யேத்து மின்னோ
கடறனி னஞ்ச முண்டு
காண்பரி தாகி நின்ற
சுடர்தனைத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே. **#418**

கடலில் தோன்றிய விடத்தை உண்டு மற்றவர்கள் தம்முயற்சியால் காண்பதற்கு அரியனாக இருக்கும் ஞானவடிவினனாகிய துருத்திப்பெருமானை அடியேன் தரிசித்து உய்ந்த பேறு இருந்தவாறென்னே! உடல் தொடர்பை அடியோடு போக்கக் கருதும் உயிர்களாகிய உங்களுக்குள்ள துயர்களைப் போக்க நீர் விரும்பினால் அப்பெருமானைத் துதித்துப் போற்றுங்கள்.

திருத்துருத்தி

அள்ளலைக் கடக்க வேண்டி
லரனையே நினைமி னீர்கள்
பொள்ளலிக் காயந் தன்னுட்
புண்டரீ கத்தி ருந்த
வள்ளலை வான வர்க்குங்
காண்பரி தாகி நின்ற
துள்ளலைத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே. **#419**

பலதுவாரங்களை உடைய இவ்வுடலிலே, இதயமாகிய தாமரையில் இருக்கும் வள்ளலாய், தேவர்களுக்கும் தம் முயற்சியால் காண்பதற்கு அரியவனாக இருக்கும், காளையை ஏறி ஊரும் பெருமானை, அடியேன் கண்டு உய்ந்த சீர் இருந்தவாறென்னே! ஆதலின் இப்பிறவியாகிய சேற்றினை நீங்கள் தாண்டிச் செல்ல விரும்பினால் சிவபெருமானையே தியானம் செய்யுங்கள்.

திருத்துருத்தி

பாதியி லுமையா டன்னைப்
பாகமா வைத்த பண்பன்
வேதிய னென்று சொல்லி
விண்ணவர் விரும்பி யேத்தச்
சாதியாஞ் சதுர்மு கனுஞ்
சக்கரத் தானுங் காணாச்
சோதியைத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே. **#420**

பார்வதிபாகன், வேதியன் என்று தேவர்கள் விரும்பித் துதித்தவாறிருக்க, பிறப்பெடுத்த பிரமனும் திருமாலும் காணாத சோதியாகிய திருத்துருத்திப் பெருமானை அடியேன் கண்டு உய்ந்த நலம் இருந்தவாறென்னே!

திருத்துருத்தி

சாமனை வாழ்க்கை யான
சலத்துளே யழுந்த வேண்டா
தூமநல் லகிலுங் காட்டித்
தொழுதடி வணங்கு மின்னோ
சோமனைச் சடையுள் வைத்துத்
தொன்னெறி பலவுங் காட்டும்
தூமனத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே. **#421**

பிறையைச் சடையில் சூடி அடியார்கள் உய்வதற்குப் பழைய நல்ல வழிகளைக் காட்டும் தூய திருவுளங்கொண்ட திருத்துருத்திப் பெருமானை அடியேன் கண்டு உய்ந்த நலம் இருந்தவாறென்னே! ஆதலின் தொண்டர்களாகிய நீங்கள் அழிந்து போகக் கூடிய மனைவாழ்க்கை என்ற வஞ்சனையுள் அழுந்தாது எம்பெருமானுக்கு நறிய அகிற்புகையை அர்ப்பணித்துத் தலையால் தொழுதுஅவன் திருவடிகளை உடலால் வணங்குங்கள்.

திருத்துருத்தி

குண்டரே சமணர் புத்தர்
குறியறி யாது நின்று
கண்டதே கருது வார்கள்
கருத்தெண்ணா தொழிமி னீர்கள்
விண்டவர் புரங்க ளெய்து
விண்ணவர்க் கருள்கள் செய்த
தொண்டர்க டுணையி னானைத்
துருத்திநான் கண்ட வாறே. **#422**

பகைவர்களுடைய மும்மதில்களையும் அம்பு எய்து அழித்துத் தேவர்களுக்கு அருள்களை வழங்கி அடியார்களுக்குத் துணைவனாக இருக்கும் பெருமானை அடியேன் திருத்துருத்தியுள் தரிசித்து உய்ந்த சீர் இருந்தவாறென்னே! உடல் பருத்த சமணரும் புத்தரும் அடையவேண்டிய குறிக்கோளை அறியாமல் தம் தம் ஆராய்ச்சியால் கண்டவற்றையே முடிந்த பொருள்களாகக் கருதுவர். ஆதலின் அவர்கள் கருத்தை உண்மையாகக் கருதாமல் புறக்கணித்து விடுங்கள்.

திருத்துருத்தி

பிண்டத்தைக் கழிக்க வேண்டிற்
பிரானையே பிதற்று மின்கள்
அண்டத்தைக் கழிய நீண்ட
வடலரக் கன்ற னாண்மை
கண்டொத்துக் கால்வி ரலா
லூன்றிமீண் டருளிச் செய்த
துண்டத்துத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே. **#423**

உலகங்களைக் கடந்த நீண்ட புகழை உடைய வலிய அரக்கன் கயிலையைப் பெயர்க்க முற்பட்ட ஆள்வினையை நினைத்து அவனைக் கால் விரலால் ஊன்றி நெரித்துச் செருக்கு அழித்து மீண்டும் அவனுக்கு அருள்கள் செய்தவரும், மதியின் கூறாகிய பிறையை அணிந்தவருமான துருத்திப் பெருமானை அடியேன் கண்டு உய்ந்த சிறப்பு இருந்தவாறென்னே! நீங்களும் இவ்வுடல் தொடர்பாகிய பிறவியை அடியோடு போக்க விரும்பினீர்கள் ஆயின் அப்பெருமான் பண்பு செயல்களையே அடைவு கேடாகப் பேசுங்கள்.

திருக்காஞ்சிமேற்றளி

திருக்கச்சிமேற்றளி

திருக்காஞ்சிமேற்றளி, திருநேரிசை :
பண் - கொல்லி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருமேற்றளிநாதர்.
தேவியார் : திருமேற்றளிநாயகி.

மறையது பாடிப் பிச்சைக்
கென்றகந் திரிந்து வாழ்வார்
பிறையது சடைமு டிமேற்
பெய்வளை யாள்த னோடும்
கறையது கண்டங் கொண்டார்
காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
இறையவர் பாட லாட
லிலங்குமேற் றளிய னாரே. **#424**

காஞ்சிமா நகரிலே தலைவராய்ப் பாடல் ஆடல் விளங்கும் மேற்புறக் கோயிலில் உறையும் பெருமான் வேதங்களைப் பாடிக்கொண்டு பிச்சை எடுப்பதற்காக வீடுதோறும் திரிந்து வாழ்பவராய், பிறையை அணிந்த சடையிலே கங்கையைச் சூடியவராய்க் கழுத்தில் விடத்தின் கருஞ்சுவடு கொண்டவராய் உள்ளார்.

திருக்கச்சிமேற்றளி

மாலன மாயன் றன்னை
மகிழ்ந்தனர் விருத்த ராகும்
பாலனார் பசுப தியார்
பால்வெள்ளை நீறு பூசிக்
காலனைக் காலாற் செற்றார்
காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏலநற் கடம்பன் றந்தை
யிலங்குமேற் றளிய னாரே. **#425**

முருகனுடைய தந்தையாராய்க் காஞ்சி நகரத்து விளங்கும் மேற்புறக் கோயிலிலுள்ள பெருமான் மேகம் போன்ற நிறத்தை உடைய திருமாலைத் தம் திருமேனியில் மகிழ்ந்து ஏற்றவராய், எவர்க்கும் மூத்தவராகவும் இளைய சிறுவராகவும் வடிவு கொள்பவராய், ஆன்மாக்களுக்குத் தலைவராய், பால் போன்ற வெள்ளிய திருநீற்றைப் பூசுபவராய்க் கூற்றுவனைத் தம் திருவடியால் ஒறுத்தவராய் உள்ளார்.

திருக்கச்சிமேற்றளி

விண்ணிடை விண்ண வர்கள்
விரும்பிவந் திறைஞ்சி வாழ்த்தப்
பண்ணிடைச் சுவையின் மிக்க
கின்னரம் பாடல் கேட்பார்
கண்ணிடை மணியி னொப்பார்
காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
எண்ணிடை யெழுத்து மானா
ரிலங்குமேற் றளிய னாரே. **#426**

எண்ணும் எழுத்துமாய் விளங்கும் காஞ்சி மேற்றளியனார்
வானத்திலுள்ள தேவர்கள் விருப்பத்துடன் வந்து வணங்கி வாழ்த்தப்
பண் இன்பம் மிக்க இன்னிசைப் பாடல்களைக் கேட்பவராய்க்
கண்மணிபோல அடியவர்களுக்கு ஞானஒளி வழங்குபவராய் உள்ளார்.

திருக்கச்சிமேற்றளி

சோமனை யரவி னோடு
சூழ்தரக் கங்கை சூடும்
வாமனை வான வர்கள்
வலங்கொடு வந்து போற்றக்
காமனைக் காய்ந்த கண்ணார்
காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏமநின் றாடு மெந்தை
யிலங்குமேற் றளிய னாரே. **#427**

மன்மதனை வெகுண்ட நெற்றிக் கண்ணராய், இரவில் யாமத்தில் கூத்து
நிகழ்த்தும் எந்தையாராய், பிறையைப் பாம்பினோடும் கங்கையோடும்
சூடும் அழகராய்த் தேவர்கள் வலப்புறமாகச் சுற்றி வந்து துதிக்குமாறு
காஞ்சி மேற்றளியனார் அமர்ந்துள்ளார்.

திருக்கச்சிமேற்றளி

ஊனவ ருயிரி னோடு
முலகங்க ளூழி யாகித்
தானவர் தனமு மாகித்
தனஞ்சய னோடெ திர்ந்த
கானவர் காள கண்டர்
காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏனமக் கோடு பூண்டா
ரிலங்குமேற் றளிய னாரே. **#428**

நீலகண்டராய், எலும்போடு பன்றிக் கொம்பினை அணிந்தவராய், அருச்சுனனோடு எதிர்த்துப் போரிட்ட வேடராய், உலகங்களிலும், ஊழிகளிலும், உடம்பினுள்ளும், உயிரினுள்ளும் உடனாய்க் கலந்து இருப்பவராய்த் தானம் செய்பவராய்ச் செல்வ வடிவினராய்க் காஞ்சிமேற்றளியனார் அமைந்துள்ளார்.

திருக்கச்சிமேற்றளி

மாயனாய் மால னாகி
மலரவ னாகி மண்ணாய்த்
தேயமாய்த் திசையெட் டாகித்
தீர்த்தமாய்த் திரிதர் கின்ற
காயமாய்க் காயத் துள்ளார்
காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏயமென் றோளி பாக
ரிலங்குமேற் றளிய னாரே. **#429**

தமக்குப் பொருந்திய மென்மையான தோள்களை உடைய பார்வதியின் பாகராய், திருமாலாகவும், இந்திரனாகவும், பிரமனாகவும், நிலமாகவும், நாடாகவும் எண் திசைகளாகவும் புனித நீர்களாகவும் இயங்குதிணைகளுக்கு உரிய உடல்களாகவும், அவ்வுடல்களின் உள் இருப்பவராகவும் காஞ்சிமேற்றளியனார் கரந்து எங்கும் பரந்து உள்ளார்.

திருக்கச்சிமேற்றளி

மண்ணினை யுண்ட மாயன்
றன்னையோர் பாகங் கொண்டார்
பண்ணினைப் பாடி யாடும்
பத்தர்கள் சித்தங் கொண்டார்
கண்ணினை மூன்றுங் கொண்டார்
காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
எண்ணினை யெண்ண வைத்தா
ரிலங்குமேற் றளிய னாரே. **#430**

உலகை விழுங்கிய திருமாலை ஒரு பாகமாகக் கொண்டவராய், இன்னிசைகளைப் பாடிக் கூத்தாடும் அடியார்கள் உடைய உள்ளங்களைத் தமக்கு இருப்பிடமாகக் கொண்டவராய், முக்கண்ணராய், அடியார்களுடைய எண்ணத்திலே தம்மையே தியானிக்குமாறு வைத்தவராய்க் காஞ்சிமேற்றளியனார் அமைந்துள்ளார்.

திருக்கச்சிமேற்றளி

செல்வியைப் பாகங் கொண்டார்
சேந்தனை மகனாக் கொண்டார்
மல்லிகைக் கண்ணி யோடு
மாமலர்க் கொன்றை சூடிக்
கல்வியைக் கரையி லாத
காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
எல்லியை விளங்க நின்றா
ரிலங்குமேற் றளிய னாரே. **#431**

பார்வதிபாகராய், முருகனை மகனாகக் கொண்டவராய் மல்லிகை கொன்றை இவற்றாலாய முடி மாலையைச் சூடிக் கல்வியைக் கரை கண்ட சான்றோர் வாழும் காஞ்சிநகரிலே, சூரியன் விளக்கமுற அவனொளிக்கு உள்ளொளியாய் மேற்றளியனார் விளங்குகின்றார்.

திருக்கச்சிமேற்றளி

வேறிணை யின்றி யென்றும்
விளங்கொளி மருங்கி னாளைக்
கூறியல் பாகம் வைத்தார்
கோளரா மதியும் வைத்தார்
ஆறினைச் சடையுள் வைத்தார்
அணிபொழிற் கச்சி தன்னுள்
ஏறினை யேறு மெந்தை
யிலங்குமேற் றளிய னாரே. **#432**

தனக்கு இணையில்லாதபடி ஒளிவீசும் குறுகிய இடையை உடைய பார்வதியின் பாகராய்க் கொடிய பாம்பு பிறை கங்கை என்ற இவற்றைச் சடையுள் வைத்துக் காளையை ஏறி ஊரும் எம் தந்தையாராய்க் கச்சிமேற்றளியனார் விளங்குகிறார்.

திருக்கச்சிமேற்றளி

தென்னவன் மலையெ டுக்கச்
சேயிழை நடுங்கக் கண்டு
மன்னவன் விரலா லூன்ற
மணிமுடி நெரிய வாயால்
கன்னலின் கீதம் பாடக்
கேட்டவர் காஞ்சி தன்னுள்
இன்னவற் கருளிச் செய்தா
ரிலங்குமேற் றளிய னாரே. **#433**

காஞ்சியில் இலங்கும் மேற்றளியனார் தென் திசையை ஆண்ட இராவணன் கயிலையைப் பெயர்க்கப் பார்வதி நடுங்கக் கண்டு, என்றும்

நிலையாயிருக்கும் அவர் தம் விரலால் அழுத்த, அதனால் இராவணனுடைய அழகிய தலைகள் நெரியப் பின் அவன் வாயினால் கரும்பைப் போன்ற இனிய பாடல்கள் பாட, அவற்றைக் கேட்டு மகிழ்ந்து அவனுக்கு இன்னருள் செய்தவராவர்.

திருஏகம்பம்

திருஏகம்பம்

திருஏகம்பம், திருநேரிசை,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஏகாம்பரநாதர்.
தேவியார் : காமாட்சியம்மை.

நம்பனை நகர மூன்று
மெரியுண வெருவ நோக்கும்
அம்பனை யமுதை யாற்றை
யணிபொழிற் கச்சி யுள்ளே
கம்பனைக் கதிர்வெண் டிங்கட்
செஞ்சடைக் கடவு டன்னைச்
செம்பொனைப் பவளத் தூணைச்
சிந்தியா வெழுகின் றேனே. **#434**

நம்மால் விரும்பப்படுபவனாய், மும்மதில்களும் தீக்கு இரையாகி வெறுவும் தன்னால் நோக்கும் நோக்காகிய அம்பினை உடையவனாய், அமுதனாய் பேரின்ப பெருக்காறாய், அழகிய சோலையை உடைய காஞ்சிமாநகரில் ஒற்றை மாமரத்தடியில் உறைபவனாய், ஒளி வீசும் கிரணங்களை உடைய பிறையைச் சிவந்த சடையில் அணிந்த கடவுளாய்ச் செம்பொன்னும் பவளத்தூணும் போன்றுள்ள சிவபெருமானைத் தியானிப்பதனால் யான் உள்ளக் கிளர்ச்சி உடையேன் ஆகின்றேன். (ஆறு - நெறி எனலுமாம்.)

திருஏகம்பம்

ஒருமுழ முள்ள குட்ட
மொன்பது துளையு டைத்தாய்
அரைமுழ மதன கல
மதனில்வாழ் முதலை யைந்து
பெருமுழை வாய்தல் பற்றிக்
கிடந்துநான் பிதற்று கின்றேன்
கருமுகில் தவழு மாடக்
கச்சியே கம்ப னீரே. **#435**

கார்மேகங்கள் தவழும் கச்சிமாநகரின் ஏகம்பம் என்ற திருக்கோயிலில் உறையும் பெருமானே! ஒரு முழ நீளமும் அரை முழ அகலமும் ஒன்பது துளைகளும் தன்கண் வாழும் முதலைகள் ஐந்தும் உடைய சிறுகுளத்தின் பெரிய குகை போலும் நீர் வரும் வாய்த் தலைப்பை பிடித்துக் கொண்டு

கிடந்து அடியேன் அடைவு கேடாகப் பலகாலும் பேசுகின்றேன்.

திருஏகம்பம்

மலையினார் மகளோர் பாக
மைந்தனார் மழுவொன் றேந்திச்
சிலையினான் மதில்கண் மூன்றுந்
தீயெழச் செற்ற செல்வர்
இலையினார் சூல மேந்தி
யேகம்ப மேவி னாரைத்
தலையினால் வணங்க வல்லார்
தலைவர்க்குந் தலைவர் தாமே. **#436**

பார்வதி பாகரான இளையராய், ஒற்றைமழுப்படையை ஏந்தியவராய், வில்லினால் மும்மதில்களும் தீப்பற்றி எரியுமாறு அவற்றை அழித்த செல்வராய், இலைவடிவமான சூலத்தைக் கையில் ஏந்தி ஏகம்பத்தை விரும்பி உறையும் பெருமானைத் தம் தலையால் வணங்க வல்ல அடியவர்கள் பெரிய தலைவர்களுக்கும்தலைவராகும் உயர் நிலையினராவர்.

திருஏகம்பம்

பூத்தபொற் கொன்றை மாலை
புரிசடைக் கணிந்த செல்வர்
தீர்த்தமாங் கங்கை யாளைத்
திருமுடி திகழ வைத்து
ஏத்துவா ரேத்த நின்ற
வேகம்ப மேவி னாரை
வாழ்த்துமா றறிய மாட்டேன்
மால்கொடு மயங்கி னேனே. **#437**

பொன்போன்று பூத்த கொன்றைமாலையை முறுக்குண்ட சடைக்கண் அணிந்த செல்வராய், பரிசுத்தமான கங்கையைத் தம் அழகிய முடியிலே விளங்குமாறு வைத்து, தம்மை வழிபடும் அடியார்கள் ஏத்துதற்குப் பொருளாய் நின்ற ஏகம்பத்தை விரும்பி நிலையாக உறையும் பெருமானை வழிபடும் முறையை அறிய இயலாதேனாய், இப்பொழுது அவனிடம் பற்றுக்கொண்ட யான் வீணாகக் கழிந்த காலத்தை நினைத்து மயங்கினேன்.

திருஏகம்பம்

மையினார் மலர்நெ டுங்கண்
மங்கையோர் பங்க ராகிக்

கையிலோர் கபால மேந்திக்
கடைதொறும் பலிகொள் வார்தாம்
எய்வதோ ரேன மோட்டி
யேகம்ப மேவி னாரைக்
கையினாற் றொழவல் லார்க்குக்
கடுவினை களைய லாமே. **#438**

மை பூசிய குவளைமலர் போன்ற நீண்ட கண்களை உடைய பார்வதிபாகராய், கையில் மண்டை ஓட்டைப் பிச்சை பெறும் பாத்திரமாக ஏந்தி வீட்டு முகப்புத்தோறும் பிச்சை பெறுவாராய், தம்மால் அம்பு எய்யப்படும் பன்றியை விரட்டி, ஏகம்பம் மேவிய பெருமானைக் கைகளால் தொழவல்ல அடியவர்களுக்குக் கொடிய தீவினைகளைப் போக்கிக்கொள்ளுதல் இயலும்.

<u>திருஏகம்பம்</u>

தருவினை மருவுங் கங்கை
தங்கிய சடைய னெங்கள்
அருவினை யகல நல்கு
மண்ணலை யமரர் போற்றும்
திருவினைத் திருவே கம்பஞ்
செப்பிட வுறைய வல்ல
உருவினை யுருகி யாங்கே
யுள்ளத்தா லுகக்கின் றேனே. **#439**

சிவபுண்ணியப் பேற்றை அளிக்கவல்ல கங்கை தங்கிய சடையனாய், எங்கள் அரிய வினைப்பயன்கள் எம்மை விடுத்து நீங்குமாறு அருள் வழங்கும் தலைவனாய், தேவர்கள் போற்றும் செல்வமாய், திருவேகம்பத்தில் அடியவர் தன் புகழைப் பாடத் தங்கியிருத்தலில் வல்லனாய், உள்ள சிவபெருமான் உருவினை நினைத்து உருகி உளமார மகிழ்கின்றேன்.

<u>திருஏகம்பம்</u>

கொண்டதோர் கோல மாகிக்
கோலக்கா வுடைய கூத்தன்
உண்டதோர் நஞ்ச மாகி
யுலகெலா முய்ய வுண்டான்
எண்டிசை யோரு மேத்த
நின்றவே கம்பன் றன்னைக்
கண்டுநா னடிமை செய்வான்
கருதியே திரிகின் றேனே. **#440**

தான் விரும்பிக் கொண்ட வடிவுடையவனாய்த் திருக்கோலக்கா என்ற திருத்தலத்தை உடைய கூத்தனாய், உலகங்கள் எல்லாம் உயிர் பிழைக்குமாறு விடத்தை உண்டவனாய் எட்டுத் திசையிலுள்ளாரும் போற்றுமாறு நிலைபெற்ற ஏகம்பனைத் தரிசித்து அவனுக்கு அடிமைத் தொண்டு செய்வதற்கு அடியேன் தலந்தொறும் அலைகின்றேன்.

திருஏகம்பம்

படமுடை யரவி னோடு
பனிமதி யதனைச் சூடிக்
கடமுடை யுரிவை மூடிக்
கண்டவ ரஞ்ச வம்ம
இடமுடைக் கச்சி தன்னு
ளேகம்ப மேவி னான்றன்
நடமுடை யாடல் காண
ஞாலந்தா னுய்ந்த வாறே. **#441**

படத்தை உடைய பாம்பினோடு குளிர்ந்த பிறையைச் சூடி, மதம் பெருக்கும் யானைத் தோலைப் போர்த்துப் பார்ப்பவர்கள் அஞ்சுமாறு, செல்வத்தை உடைய காஞ்சிநகரில் ஏகம்பத்தை உறைவிடமாக விரும்பி ஏற்றுக் கொண்ட சிவபெருமானுடைய சிறப்பான ஆடலைக் காண்பதனால் உலகம் தீவினையிலிருந்து பிழைத்தது. இது வியக்கத்தக்கது.

திருஏகம்பம்

பொன்றிகழ் கொன்றை மாலை
பொருந்திய நெடுந்தண் மார்பர்
நன்றியிற் புகுந்தெ னுள்ள
மௌளவே நவில நின்று
குன்றியி லடுத்த மேனிக்
குவளையங் கண்ட ரெம்மை
இன்றுயில் போது கண்டா
ரினியரே கம்ப னாரே. **#442**

குன்றிமணி போலச் சிவந்த திருமேனியில் கருங்குவளை போல அமைந்த நீலகண்டராய்ப் பொன் நிறக் கொன்றை மாலை பொருந்திய நெடிய குளிர்ந்த மார்பினராய் என் உள்ளத்தில் நன்மை தரும் வகையில் புகுந்து என்மனம் மெதுவாக வணக்கம் சொல்லுமாறு நின்று யான் இனிமையாகத் துயின்றபோது காணப் பெற்றார். அதனால் ஏகம்பனார் எனக்கு இனியராகின்றார்.

திருஏகம்பம்

துருத்தியார் பழனத் துள்ளார்
தொண்டர்கள் பலரு மேத்த
அருத்தியா லன்பு செய்வா
ரவரவர்க் கருள்கள் செய்தே
எருத்தினை யிசைய வேறி
யேகம்ப மேவி னார்க்கு
வருத்திநின் றடிமை செய்வார்
வல்வினை மாயு மன்றே. **#443**

அடியவர் பலரும் போற்றிப் புகழுமாறு திருத்துருத்தி, திருப்பழனம் என்ற தலங்களில் உறைபவராய், விருப்பத்தோடு தம்மிடம் அன்பு காட்டுபவர்களுக்கு அருள்கள் செய்து காளையைப் பொருந்துமாறு இவர்ந்து ஏகம்பத்தை விரும்பி உறையும் எம்பெருமானுக்கு, உடம்பை முயற்சியில் ஈடுபடுத்தி அடிமை செய்யும் அடியவர்களுடைய கொடிய தீவினைகள் அழிந்து ஒழியும்.

திருவொற்றியூர்

திருவொற்றியூர், திருநேரிசை :
பண் - கொல்லி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாணிக்கத்தியாகர்.
தேவியார் : வடிவுடையம்மை.

வெள்ளத்தைச் சடையில் வைத்த
வேதகீ தன்றன் பாதம்
மெளளத்தா னடைய வேண்டின்
மெய்தரு ஞானத் தீயால்
கள்ளத்தைக் கழிய நின்றார்
காயத்துக் கலந்து நின்று
உள்ளத்து ளொளியு மாகு
மொற்றியூ ருடைய கோவே. **#444**

கங்கையைச் சடையில் வைத்தவனாய் வேதம்பாடும் பெருமானுடைய பாதங்களை மெதுவாக வழுவின்றிப் பெற விரும்பினால், மெய்ப்பொருளை வழங்கும் ஞானமாகிய தீயினால் கள்ளம் முதலிய குற்றங்களாகிய காட்டினை எரித்தொழித்துச் செப்பஞ் செய்த அடியவர்களுடைய உள்ளத்திலே ஒற்றியூர் உடைய பெருமான் சிவப்பிரகாசமாக விளங்குவான்.

திருவொற்றியூர்

வசிப்பெனும் வாழ்க்கை வேண்டா
வானவ ரிறைவ னின்று
புசிப்பதோர் பொள்ள லாக்கை
யதனொடும் புணர்வு வேண்டில்
அசிர்ப்பெனு மருந்த வத்தா
லான்மாவி னிடம் தாகி
உசிர்ப்பெனு முணர்வு முள்ளா
ரொற்றியூ ருடைய கோவே. **#445**

ஒரு குறுகிய காலத்து உயிர் வாழ்வதாகிய வாழ்க்கையை வாழ விரும்பாது, உணவு உண்பதனாலேயே செயற்படும் ஒன்பது துளைகளை உடைய இவ்வுடம்பில், தேவர்தலைவனாகிய எம் பெருமான் கூடி நிற்றலை விரும்புவீராயின், நீர் உடம்பு இளைக்க நோற்கும் அரிய தவத்தின் பயனாய் உம் ஆன்மாவில் இடம் பெற்று, உம்

மூச்சுக்காற்றிலும் உணர்விலும் கலந்து உறைவான் திருவொற்றியூரை இடமாகக் கொண்ட எம்பெருமான்.

திருவொற்றியூர்

தானத்தைச் செய்து வாழ்வான்
சலத்துளே யழுந்து கின்றீர்
வானத்தை வணங்க வேண்டில்
வம்மின்கள் வல்லீ ராகில்
ஞானத்தை விளக்கை யேற்றி
நாடியுள் விரவ வல்லார்
ஊனத்தை யொழிப்பர் போலு
மொற்றியூ ருடைய கோவே. **#446**

பல கொடைகளைத் தக்கவருக்கு வழங்கி வாழும் பொருட்டுப் பலவித சஞ்சலங்களிலே அழுந்தி மன அலைதலைவுற்று நிற்கின்ற நீங்கள், சஞ்சலமற்ற வாழ்வு தரும் அருள் வெளியை வணங்குதற்கு ஆற்றல் உடையிராயின் வாருங்கள். சிவஞானமாகிய தீபத்தை ஏற்றி ஆராய்ந்து அநுபூதியில் கண்டு சிவனாந்தம் நுகரவல்ல அடியார்களுடைய பிறவிப் பிணியை அடியோடு கழித்து வீடுபேறு நல்குவான் ஒற்றியூர்ப் பெருமான்.

திருவொற்றியூர்

காமத்து ளழுந்தி நின்று
கண்டரா லொறுப்புண் ணாதே
சாமத்து வேத மாகி
நின்றதோர் சயம்பு தன்னை
ஏமத்து மிடையி ராவு
மேகாந்த மியம்பு வார்க்கு
ஓமத்து ளொளிய தாகு
மொற்றியூ ருடைய கோவே. **#447**

உலக வாழ்வில் பலபற்றுக்களில் பெரிதும் ஈடுபட்டுக் கூற்றுவனுடைய ஏவலர்களால் தண்டிக்கப்பெறாமல் சாமவேத கீதனாகிய தான்தோன்றி நாதனைப் பகற்பொழுதில் நான்கு யாமங்களிலும் இரவுப் பொழுதில் நள்ளிரவு ஒழிந்த யாமங்களிலும் தனித்திருந்து உறுதியாக மந்திரம் உச்சரித்து வழிபடுபவர்களுக்கு ஒற்றியூர்ப் பெருமான் வேள்வியின் ஞானத்தீயாகக் காட்சி வழங்குவான்.

திருவொற்றியூர்

சமையமே லாறு மாகித்

தானொரு சயம்பு வாகி
இமையவர் பரவி யேத்த
வினிதினங் கிருந்த வீசன்
கமையினை யுடைய ராகிக்
கழலடி பரவு வார்க்கு
உமையொரு பாகர் போலு
மொற்றியூ ருடைய கோவே. **#448**

அறுவகை வைதிகச் சமயங்களாகித் தான்தோன்றி நாதராய்த் தேவர்கள் முன்நின்று புகழ்ந்து துதிக்க, அவர்களிடையே மகிழ்வுடன் இருக்கும், எல்லோரையும் அடக்கியாளும் பெருமானாய், பகைவர் செய்யும் தீங்குகளையும் பொறுக்கும் பொறுமை உடையவர் ஆகித் தம் திருவடிகளை முன் நின்று வழிபடுபவர்களுக்கு பார்வதி பாகராய்க் காட்சி வழங்குவார் ஒற்றியூர்ப்பெருமான்.

திருவொற்றியூர்

ஒருத்திதன் றலைச்சென் றாளைக்
கரந்திட்டா னுலக மேத்த
ஒருத்திக்கு நல்ல னாகி
மறுப்படுத் தொளித்து மீண்டே
ஒருத்தியைப் பாகம் வைத்தா
னுணர்வினா லைய முண்ணி
ஒருத்திக்கு நல்ல னல்ல
னொற்றியூ ருடைய கோவே. **#449**

ஒற்றியூர்ப்பெருமான். தன் தலையை அடைந்த கங்கையைச் சடையில் மறைத்து அக்கங்கைக்கு இனியவன் போன்று அவளைச் சிறை செய்து மறைத்து, மீண்டும் பார்வதியாகிய ஒருத்தியை உடம்பின் ஒருபாகமாகக்கொண்டு, தன் விருப்பத்தோடு பிச்சை எடுத்து உண்ணும் அப்பெருமான் கங்கை உமை என்ற இருவருள் ஒருவருக்கும் நல்லவன் அல்லன்.

திருவொற்றியூர்

பிணமுடை யுடலுக் காகப்
பித்தராய்த் திரிந்து நீங்கள்
புணர்வெனும் போகம் வேண்டா
போக்கலாம் பொய்யை நீங்க
நிணமுடை நெஞ்சி னுள்ளா
னினைக்குமா நினைக்கின் றாருக்கு
உணர்வினோ டிருப்பர் போலு

மொற்றியூ ருடைய கோவே. #450
பிணமாதலும் முடை நாற்றமும் உடைய இவ்வுடம்பைப் பேணிப் பாதுகாப்பதற்காக அதனிடத்து விருப்பினிராய்த் திரிந்து சிற்றின்ப வேட்கையை நீவிர்கொள்ளற்க. போக்குவதற்கு உரியதாகும் பொய்யான இப்பிறவிப்பிணியைப் போக்க, கொழுப்பினை உடைய இவ்வுடலின் நெஞ்சினுள் கரந்து உறையும் இறைவரைத் தியானிக்கும் முறையாலே தியானிக்கும் அடியவர்களுக்கு ஒற்றியூர்ப் பெருமான் வாய்த்த சிவஞானத்தோடு குணியாய் இருந்து விளங்குவார்.

<u>திருவொற்றியூர்</u>

பின்னுவார் சடையான் றன்னைப்
பிதற்றிலாப் பேதை மார்கள்
துன்னுவார் நரகந் தன்னுட்
டொல்வினை தீர வேண்டின்
மன்னுவான் மறைக ளோதி
மனத்தினுள் விளக்கொன் றேற்றி
உன்னுவா ருள்ளத் துள்ளா
ரொற்றியூ ருடைய கோவே. #451
முறுக்கேறிய நீண்ட சடையை உடைய ஒற்றியூர்ப் பெருமானுடைய திருநாமங்களை அடைவு கேடாகப் பலகாலும் வாய்விட்டு உரைக்காத அறிவிலிகளே! நீர் இனி அடையப்போகும் நரகத்தில் அனுபவிக்கக் கூடிய பழைய வினைகள் நீங்கவேண்டும் என்று நீர் கருதினால் நிலைபெற்ற மேலான வேதங்களை ஓதி மனத்தினுள்ளே ஞானச் சுடர்விளக்கை ஏற்றித் தியானிப்பவர் உள்ளத்தில் அவர் உள்ளார் என்பதனை உணர்ந்து செயற்படுவீராக.

<u>திருவொற்றியூர்</u>

முள்குவார் போகம் வேண்டின்
முயற்றியா லிடர்கள் வந்தால்
எள்குவா ரௌகி நின்றங்
கிதுவொரு மாய மென்பார்
பள்குவார் பத்த ராகிப்
பாடியு மாடி நின்றும்
உள்குவா ருள்ளத் துள்ளா
ரொற்றியூ ருடைய கோவே. #452
நெஞ்சமே! உன்னால் தழுவப்படும் மகளிருடைய இன்பத்தை நீ விரும்பினால் அதனை அடையப்பலகாலும் முயல்கின்றாய், அவர்கள் உனக்கு ஒரு துயரம் வந்தால் அதனைத் தீர்க்க முற்படாமல் உன்னைப்

பரிகசிப்பர். உன்னுடைய இந்த நிலை புதுமையாய் இருக்கிறது என்று இகழ்வார்கள். அம்மகளிர் மோகத்தை அச்சத்தால் விடுத்தவராய் ஒற்றியூர்ப் பெருமானுக்கு அடியவராய்ப் பாடியும் ஆடியும் நின்று தியானிப்பவர் உள்ளத்தில் அவர் நிலை பெற்றிருப்பவராய்த் துன்பம் வரும்போது அதனைத் துடைப்பவர் ஆவார் என்பதனை உணர்ந்து வாழ்.

திருவொற்றியூர்

வெறுத்துகப் புலன்க ளைந்தும்
வேண்டிற்று வேண்டு நெஞ்சே
மறுத்துக வார்வச் செற்றக்
குரோதங்க ளான மாயப்
பொறுத்துகப் புட்ப கத்தே
ருடையானை யடர வூன்றி
ஒறுத்துகந் தருள்கள் செய்தா
ரொற்றியூ ருடைய கோவே. **#453**

நெஞ்சே! புலன்கள் ஐந்தனையும் நுகரச் செய்யும் பொறிகள் ஐந்தும் நீ வெறுத்து அழியுமாறு தாம் முன்பு வேண்டியவற்றையே பலகாலும் வேண்டி நிற்கும். பொறிகளுக்கு இரை வழங்குதலை மறுத்து ஆர்வம் பகை கோபம் எனும் இவை அழியுமாறு மற்றவரால் வரக்கூடிய துன்பங்களைப் பொறுத்து மகிழ்வோடிருப்பாயாக. புட்பகவிமானத்தை உடைய இராவணனை முதலில் ஒறுத்துப் பின் உகந்து அருள் செய்தவர் ஒற்றியூர்ப் பெருமான்.

திருவொற்றியூர்

திருவொற்றியூர், திருநேரிசை,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாணிக்கத்தியாகர்.
தேவியார் : வடிவுடையம்மை.

ஓம்பினேன் கூட்டை வாளா
வுள்ளத்தோர் கொடுமை வைத்துக்
காம்பிலா மூழை போலக்
கருதிற்றே முகக்க மாட்டேன்
பாம்பின்வாய்த் தேரை போலப்
பலபல நினைக்கின் றேனை
ஓம்பிநீ யுய்யக் கொள்ளா
யொற்றியூ ருடைய கோவே. **#454**

உள்ளத்துள்ளே நேர்மைக்குப் புறம்பான வளைவான செய்திகளைத்

தேக்கி வைத்துக் கொண்டு இவ்வுடம்பினைப் பயனற்ற வகையில் பாதுகாத்துக்கொண்டு, காம்பு இல்லாத அகப்பை முகக்கக் கருதியதனை முகக்க இயலாதவாறுபோல, உன் திருவருள் துணை இல்லாததனால் நினைத்த பேறுகளைப் பெற இயலாதேனாய்ப் பாம்பின் வாயில் அகப்பட்ட தேரை விரைவில் தான் அழியப் போவதனை நினையாது வேறு என்னென்னவோ எல்லாம் நினைப்பதுபோல எண்ணாத பல எண்ணங்களையும் எண்ணி நெஞ்சம் புண்ணாகின்ற அடியேனை ஓம்பி அடியேன் உய்யும் வண்ணம் ஒற்றியூர்ப் பெருமானாகிய நீ அருளவேண்டும்.

திருவொற்றியூர்

மனமெனுந் தோணி பற்றி
மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச்
செறிகட லோடும் போது
மனனெனும் பாறை தாக்கி
மறியும்போ தறிய வொண்ணா
துனையுனு முணர்வை நல்கா
யொற்றியூ ருடைய கோவே. **#455**

ஒற்றியூர் உடைய கோவே! மனம் என்னும் தோணியைப் பொருந்தி, அறிவு என்று சொல்லப்படும் சவள் தண்டை ஊன்றிச் சினம் எனும் சரக்கை அத்தோணியில் ஏற்றிப் பாசக்கடலாகிய பரப்பில் அத்தோணியைச் செலுத்தும்போது மன்மதன் என்ற பாறை தாக்க அத்தோணி கீழ்மேலாகக் கவிழும்போது உன்னை அறிய இயலாதேனாய் வருந்துவேன். அப்போது அடியேன் என்னை மறந்து உன்னையே தியானிக்கும் அறிவை அடியேனுக்கு விரும்பி அளிப்பாயாக.

திருக்கயிலாயம்

திருக்கயிலாயம்

திருக்கயிலாயம், திருநேரிசை,
இத்தலம் இமயமலையிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கயிலாயநாதர்.
தேவியார் : பார்வதியம்மை.

கனகமா வயிர முந்து
மாமணிக் கயிலை கண்டும்
உனகனா யரக்க னோடி
யெடுத்தலு முமையா ளஞ்ச
அனகனாய் நின்ற வீச
னூன்றலு மலறி வீழ்ந்தான்
மனகனா யூன்றி னானேன்
மறித்துநோக் கில்லை யன்றே. **#456**

பொன்னும் வயிரமும் முற்பட்ட சிறந்த இரத்தினங்களும் உடைய கயிலையைப் பார்த்தும் அதனைப் பெயர்த்துவிடும் அகந்தையுற்ற மனத்தானாய் அரக்கன் ஒடிவந்து அதனைப் பெயர்க்க முற்பட்ட அளவிலே பார்வதி அச்சம் கொள்ளப் பாவமில்லாதவனாய் நிலைபெற்று எல்லோரையும் அடக்கி ஆளும் பெருமான் விரலைச் சற்று ஊன்றிய அளவிலே அரக்கனாகிய இராவணன் அலறிக் கொண்டு செயலற்றுக் கீழே விழுந்தான். எம் பெருமான் நிலைபெற்ற உள்ளத்தனாய் விரலை அழுந்த ஊன்றி இருந்தானாயின் மீண்டும் இராவணன் கண்விழித்துப் பார்க்கும் வாய்ப்பே ஏற்பட்டிருக்க மாட்டாது.

திருக்கயிலாயம்

கதித்தவன் கண்சி வந்து
கயிலைநன் மலையை யோடி
அதிர்த்தவ னெடுத்தி டல்லு
மரிவைதா னஞ்ச வீசன்
நெதித்தவ னூன்றி யிட்ட
நிலையழிந் தலறி வீழ்ந்தான்
மதித்திறை யூன்றி னானேன்
மறித்துநோக் கில்லை யன்றே.. **#457**

மன எழுச்சியை உடைய இராவணன் கோபத்தாற் கண்கள் சிவக்கப் பெரிய கயிலைமலையை நோக்கி ஆரவாரித்துக் கொண்டு ஓடிப்

பெயர்க்க முற்பட்ட அளவில், பார்வதி அஞ்ச, எல்லோரையும் ஆள்பவனாகிய தவச்செல்வனான சிவபெருமான் விரலைச் சிறிது ஊன்றியிட்ட நிலையிலேயே அவன் ஆற்றல் அழிந்து கதறிக்கொண்டு விழுந்தான். பெருமான் அவனை அழித்தலைக் கருதி விரலை அழுத்தமாக ஊன்றியிருந்தால் இராவணன் மீண்டும் கண் விழித்துப் பார்க்கும் நிலை ஏற்பட்டிருக்காது.

திருக்கயிலாயம்

கறுத்தவன் கண்சி வந்து
கயிலைநன் மலையைக் கையால்
மறித்தலு மங்கை யஞ்ச
வானவ ரிறைவ னக்கு
நெறித்தொரு விரலா லூன்ற
நெடுவரை போல வீழ்ந்தான்
மறித்திறை யூன்றி னானேன்
மறித்துநோக் கில்லை யன்றே. **#458**

கரிய நிறத்தை உடைய இராவணன் வெகுண்டு கயிலையாகிய பெரிய மலையைக் கையால் புரட்ட முயன்ற அளவில் பார்வதி பயப்படத் தேவர் தலைவனாகிய சிவபெருமான் சிரித்து ஒருவிரலை மெதுவாக ஊன்றி அவனை நெரிக்கப் பெரியமலை கீழே விழுவதுபோல அவன் விழுந்தான். மீண்டும் அவ்விரலை பெருமான் ஊன்றியிருந்தால் இராவணன் மீண்டும் கண்விழிக்கும் வாய்ப்பே ஏற்பட்டிருக்காது.

திருக்கயிலாயம்

கடுத்தவன் கண்சி வந்து
கயிலைநன் மலையை யோடி
எடுத்தலு மங்கை யஞ்ச
விறையவ னிறையே நக்கு
நொடிப்பள விரலா லூன்ற
நோவது மலறி யிட்டான்
மடித்திறை யூன்றி னானேன்
மறித்துநோக் கில்லை யன்றே. **#459**

கோபம் கொண்ட இராவணன் கண்கள் சிவக்கக் கயிலை நன்மலையை ஓடி எடுத்த அளவில் பார்வதி அஞ்ச, எம்பெருமான் அதனை நோக்கி முறுவலித்து ஒருகணநேரம் தன் கால் விரலை ஊன்றிய அவ்வளவில் இராவணன் உடல் நொந்து கதறி விட்டான். கால்விரலை மடித்துச் சிறிது அழுந்த ஊன்றியிருந்தானாகில் மறித்தும் நோக்கு இல்லை அன்றே.

திருக்கயிலாயம்

கன்றித்தன் கண்சி வந்து
கயிலைநன் மலையை யோடி
வென்றித்தன் கைத்த லத்தா
லெடுத்தலும் வெருவ மங்கை
நன்றுத்தா னக்கு நாத
னூன்றலு நகழ வீழ்ந்தான்
மன்றித்தா னூன்றி னானேன்
மறித்துநோக் கில்லை யன்றே. **#460**

வெகுண்டு கண் சிவந்து கயிலை நன்மலையை நோக்கி ஓடி இராவணன் பல வெற்றிகளைப் பெற்ற தன் கைகளால் எடுத்தலும் பார்வதி அஞ்ச எம் பெருமான் நன்கு சிரித்துத் தன் கால் விரலை ஊன்றிய அளவில் அவன் துன்புற்று வீழ்ந்தான். அவனைத் தண்டிக்கக்கருதி விரலைப் பெருமான் அழுத்தி ஊன்றியிருந்தால் மறித்தும் நோக்கு இல்லை அன்றே.

திருக்கயிலாயம்

களித்தவன் கண்சி வந்து
கயிலைநன் மலையை யோடி
நௌத்தவ னெடுத்தி டல்லு
நேரிழை யஞ்ச நோக்கி
வெளித்தவ னூன்றி யிட்ட
வெற்பினா லலறி வீழ்ந்தான்
மளித்திறை யூன்றி னானேன்
மறித்துநோக் கில்லை யன்றே. **#461**

செருக்குற்ற இராவணன் கண்சிவந்து கயிலை நன்மலையை நோக்கி ஓடிச் சென்று உடலை நௌத்துக் கொண்டு பெயர்க்கமுற்பட்ட அளவில் பார்வதி அஞ்ச, அதனை நோக்கி வெண்ணிற நீறு பூசிய பெருமான் மலையை அழுத்த, இராவணன் அலறிக்கொண்டு விழுந்தான். விரலை மடித்துக் கொண்டு அழுத்தமாக ஊன்றியிருந்தால் மறித்தும் நோக்கு இல்லை அன்றே.

திருக்கயிலாயம்

கருத்தனாய்க் கண்சி வந்து
கயிலைநன் மலையைக் கையால்
எருத்தனா யெடுத்த வாறே
யேந்திழை யஞ்ச வீசன்
திருத்தனாய் நின்ற தேவன்

றிருவிர லூன்ற வீழ்ந்தான்
வருத்துவா னூன்றி னானேன்
மறித்துநோக் கில்லை யன்றே. **#462**

இலங்கைத் தலைவன் வெகுண்டு கயிலை நன் மலையைக் காளைபோன்றவனாய்க் கழுத்தைக் கொடுத்துப் பெயர்த்த அளவில் பார்வதி அஞ்ச, எல்லோரையும் ஆள்பவனாய்த் தீய வினைகளிலிருந்து திருத்தி ஆட்கொள்ளும் எம் பெருமான் திருவிரலை ஊன்றிய அளவில் அவன் செயலற்று விழுந்தான். இராவணனைத் துன்புறுத்தும் எண்ணத்தோடு விரலை ஊன்றியிருந்தால் மறித்தும் நோக்கு இல்லை அன்றே.

திருக்கயிலாயம்

கடியவன் கண்சி வந்து
கயிலைநன் மலையை யோடி
வடிவுடை மங்கை யஞ்ச
வெடுத்தலு மருவ நோக்கிச்
செடிபடத் திருவி ரல்லா
லூன்றலுஞ் சிதைந்து வீழ்ந்தான்
வடிவுற வூன்றி னானேன்
மறித்துநோக் கில்லை யன்றே. **#463**

கொடிய இராவணன் வெகுண்டு ஓடிச்சென்று கயிலை நன்மலையைப் பார்வதி அஞ்சுமாறு பெயர்த்த அளவில் சிவபெருமான் பொருந்த நினைத்து அவனுக்குத் தீங்கு நிகழுமாறு திருவிரலால் அழுத்திய அளவில் உருச்சிதைந்து விழுந்தான். விரல் நன்றாகப் பொருந்த ஊன்றியிருந்தாராயின் மறித்தும் நோக்கு இல்லை அன்றே.

திருக்கயிலாயம்

கரியத்தான் கண்சி வந்து
கயிலைநன் மலையைப் பற்றி
இரியத்தா னெடுத்தி டல்லு
மேந்திழை யஞ்ச வீசன்
நெரியத்தா னூன்றா முன்ன
நிற்கிலா தலறி வீழ்ந்தான்
மரியத்தா னூன்றி னானேன்
மறித்துநோக் கில்லை யன்றே. **#464**

உள்ளம் கரியக் கண்கள் சிவக்கக் கயிலை மலையைப் பற்றி அது உறுதிகெட்டுத் தளர இராவணன் பெயர்த்த அளவில் பார்வதி அஞ்ச, ஈசன் இராவணன் உடல் நெரியுமாறுதன் கால்விரலைச் சிறிது ஊன்றாத

முன்னரே கனத்தைத் தாங்கமுடியாத அவன் அலறியவாறு விழுந்தான். அவன் இறக்குமாறு எம் பெருமான் விரலை ஊன்றியிருப்பின் மறித்தும் நோக்கு இல்லை அன்றே.

திருக்கயிலாயம்

கற்றனன் கயிலை தன்னைக்
காண்டலு மரக்க னோடிச்
செற்றவ னெடுத்த வாறே
சேயிழை யஞ்ச வீசன்
உற்றிறை யூன்றா முன்ன
முணர்வழி வகையால் வீழ்ந்தான்
மற்றிறை யூன்றி னானேன்
மறித்துநோக் கில்லை யன்றே. **#465**

சிவபெருமானுடைய கயிலைமலையைக் கண்ட அளவில் இராவணன் வெகுண்டு ஓடிச் சென்று அதனை எடுத்த அளவில் பார்வதி அஞ்ச, எம் பெருமான் அவன் செயலை உள்ளத்துக் கொண்டு தன் விரலை ஊன்றிய மாத்திரத்தே அறிவு அழியும் நிலையில் இராவணன் விழுந்தான். சற்று எம்பெருமான் அழுத்தி ஊன்றியிருந்தால் மீண்டு அவன் உயிரோடு கண் விழித்துப் பார்க்கும் வாய்ப்பே ஏற்படாது போயிருக்கும்.

திருஆப்பாடி

திருஆப்பாடி

திருஆப்பாடி, திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பாலுவந்தநாயகர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

கடலக மேழி னோடும்
பவனமுங் கலந்த விண்ணும்
உடலகத் துயிரும் பாரு
மொள்ளழ லாகி நின்று
தடமலர்க் கந்த மாலை
தண்மதி பகலு மாகி
மடலவிழ் கொன்றை சூடி
மன்னுமாப் பாடி யாரே. **#466**

ஏழு கடலும் காற்றும் விண்ணும், உடல்களில் உள்ள உயிர்களும், உலகமும், தீயும் ஆகிநின்று, பெரியமலர்கள் மணம் வீசும் மாலைக்காலமும், குளிர்ந்த சந்திரன் ஒளிவிடும் இரவும், சூரியன் ஒளிவிடும் பகற்காலமும் ஆகி, நிலைபெற்று நின்ற ஆப்பாடியார் இதழ் விரிகின்ற கொன்றைப் பூமாலையைச் சூடியவராவார்.

திருஆப்பாடி

ஆதியு மறிவு மாகி
யறிவினுட் செறிவு மாகிச்
சோதியுட் சுடரு மாகித்
தூநெறிக் கொருவ னாகிப்
பாதியிற் பெண்ணு மாகிப்
பரவுவார் பாங்க ராகி
வேதியர் வாழுஞ் சேய்ஞல்
விரும்புமாப் பாடி யாரே. **#467**

ஆதியும் அறிவும் ஆகி அறிவினுள் செறிந்திருப்பவராய், ஒளியை உட்கொண்ட ஞானச்சுடராய், தூய வழிக்குச் செலுத்தும் ஒப்பற்றவராய்ப் பாதி பெண் உருவினராய், வழிபடுபவர்களுக்குத் துணைவராய் வேதியர்கள் வாழும் சேய்ஞலூரை அடுத்த ஆப்பாடியில் உறையும் பெருமான் அமைந்துள்ளார்.

திருஆப்பாடி

எண்ணுடை யிருக்கு மாகி
யிருக்கினுட் பொருளு மாகிப்
பண்ணொடு பாட றன்னைப்
பரவுவார் பாங்க ராகிக்
கண்ணொரு நெற்றி யாகிக்
கருதுவார் கருத லாகாப்
பெண்ணொரு பாக மாகிப்
பேணுமாப் பாடி யாரே. **#468**

மிக மேம்பட்டதாக எண்ணப்படும் இருக்கு வேதமாய், அவ்வேதம் குறிப்பிடும் பரம்பொருளாய், பண்ணோடு பாடல் பாடுபவர் துணைவராய், நெற்றிக்கண்ணராய், உண்மை ஞானிகள் அல்லாதாருக்கு அறிதலும் எண்ணுதலும் இயலாத பார்வதி பாகராய்த் திருவாப்பாடியை விரும்பி உறையும் சிவபெருமான் அமைந்துள்ளார்.

திருஆப்பாடி

அண்டமா ரமரர் கோமா
னாதியெம் மண்ணல் பாதம்
கொண்டவன் குறிப்பி னாலே
கூப்பினான் றாப ரத்தைக்
கண்டவன் றாதை பாய்வான்
காலற வெறியக் கண்டு
தண்டியார்க் கருள்கள் செய்த
தலைவராப் பாடி யாரே. **#469**

எல்லா உலகங்களுமாய், தேவர் தலைவராய், எல்லோருக்கும் ஆதியாய் உள்ள அண்ணலாரின் திருவடிகளை மனத்துள்கொண்டு, அப்பெருமான் குறிப்பினாலே மணலிலே மணலால் விசாரசருமன் இலிங்க வடிவத்தை அமைக்க அதனைக் கண்ட அவன் தந்தையாகிய எச்சதத்தன் சிவபூசையை அழிக்க ஓடிவர, விசாரசருமன் அவன் கால்களை வெட்டியதனைக் கண்டு அவனுக்குச் சண்டீசன் என்ற பதவியை அருளிச் செய்தவர் திருவாப்பாடிப் பெருமானாவார்.

திருஆப்பாடி

சிந்தையுந் தெளவு மாகித்
தெளவினுட் சிவமு மாகி
வந்தநற் பயனு மாகி
வாணுதல் பாக மாகி
மந்தமாம் பொழில்கள் சூழ்ந்த
மண்ணித் தென்கரைமேன் மன்னி

அந்தமோ டளவி லாத
வடிகளாப் பாடி யாரே. **#470**

சிந்தித்தல், தௌதல், தௌவினுள் விளங்கும் தூய நிலையாகிய நிட்டை, இவற்றால் பயனாகிய வீடுபேறு ஆகியவைகளாகிப் பார்வதி பாகராய், முடிவும் அளவும் இல்லாதவராய்த் தென்றல் வீசப்பெறுவதாய் மண்ணியாற்றின் அழகிய கரையில் நிலை பெற்றிருக்கும் ஆப்பாடியை உறைவிடமாகக் கொண்ட பெருமான் அமைந்துள்ளார்.

திருஆப்பாடி

வன்னிவா ளரவு மத்த
மதியமு மாறுஞ் சூடி
மின்னிய வுருவாஞ் சோதி
மெய்ப்பொருட் பயனு மாகிக்
கன்னியோர் பாக மாகிக்
கருதுவார் கருத்து மாகி
இன்னிசை தொண்டர் பாட
விருந்தவாப் பாடி யாரே. **#471**

வன்னி, ஒளிபொருந்திய பாம்பு, ஊமத்தை, பிறை, கங்கை இவற்றைச் சூடி மின்னல்போல ஒளிவீசும் வடிவினை உடைய ஒளிமயமாய், ஞானத்தின் பயனாகிய பரமுத்தியாய்ப் பார்வதி பாகராய், தியானிப்பவர் தியானத்தில் இருப்பவராய், இனிய இசைகளை அடியார்கள் பாடுமாறு ஆப்பாடியார் இருக்கின்றார்.

திருஆப்பாடி

உள்ளுமாய்ப் புறமு மாகி
யுருவுமா யருவு மாகி
வெள்ளமாய்க் கரையு மாகி
விரிகதிர் ஞாயி றாகிக்
கள்ளமாய்க் கள்ளத் துள்ளார்
கருத்துமா யருத்த மாகி
அள்ளுவார்க் கள்ளல் செய்திட்
டிருந்தவாப் பாடி யாரே. **#472**

உள்ளும் புறமுமாய், அருவும் உருவுமாய், வெள்ளமும் கரையுமாய்க் கிரணங்கள் விரிகின்ற சூரியனாய், கள்ளமும் கள்ளத்து உள்ளாருமாய்க் கருத்துள் இருப்பவராய்ச் செல்வ வடிவினராய், தம்மைப் பலவகையாலும் அனுபவிக்கும் அடியவர்களுக்கு அவர்கள் விரும்பியவாறு கொள்ளத் தம்மை வழங்கிக் கொண்டு இருப்பவர் ஆப்பாடிப் பெருமான் ஆவார்.

திருஆப்பாடி

மயக்கமாய்த் தெளவு மாகி
மால்வரை வளியு மாகித்
தியக்கமா யொருக்க மாகிச்
சிந்தையு ளொன்றி நின்று
இயக்கமா யிறுதி யாகி
யெண்டிசைக் கிறைவ ராகி
அயக்கமா யடக்க மாய
வைவராப் பாடி யாரே. **#473**

மயக்கமும் தெளவுமாகிப் பெரிய மலைகளும் காற்றுமாகி, அசைவும் அசைவின்மையுமாகி, அடியவர் சிந்தையுள் பொருந்திநின்று, அதனை இயக்குபவராய், உலகுக்கெல்லாம் இறுதியாய், எண் திசைகளுக்கும் தலைவராய், நோயற்றவராய்ப் பொறிவாயில் ஐந்தும் அவித்தவராய், உள்ளவர் திருவாப்பாடிப் பெருமான் ஆவார்.

திருஆப்பாடி

ஆரழ லுருவ மாகி
யண்டமேழ் கடந்த வெந்தை
பேரொளி யுருவி னானைப்
பிரமனு மாலுங் காணாச்
சீரவை பரவி யேத்திச்
சென்றடி வணங்கு வார்க்குப்
பேரரு ளருளிச் செய்வார்
பேணுமாப் பாடி யாரே. **#474**

பெரிய தீத்தம்பத்தின் உருவினராய் ஏழுலகமும் கடந்த எம் தந்தையாராகிய பேரொளிப் பெருமானைப் பிரமனும் திருமாலும் முடி அடி காணமுடியாதிருந்த சிறப்பினை முன்நின்று துதித்துப் புகழ்ந்து, திருவடிகளை வணங்குபவருக்கு, ஆப்பாடியை விரும்பி உறையும் அப்பெருமான் பெருமளவில் அருள் செய்பவராவார்.

திருஆப்பாடி

திண்டிற லரக்க னோடிச்
சீகயி லாயந் தன்னை
எண்டிற லிலனு மாகி
யெடுத்தலு மேழை யஞ்ச
விண்டிறல் நெரிய வூன்றி
மிகக்கடுத் தலறி வீழப்

பண்டிறல் கேட் டுகந்த
பரமராப் பாடி யாரே. #475

மிக்க உடல் வலிமையை உடைய இராவணன் எம் பெருமானைப் பற்றி எண்ணியறியும் அறிவு வலிமை இல்லாதவனாய்ப் பெருமைமிக்க கயிலாய மலையைப் பெயர்க்க முற்பட்ட அளவில் பார்வதி பயப்பட, அவன் உடல் வலிமை நீங்குமளவுக்கு அவன் உடல் நெரியுமாறு மிகவும் வெகுண்டு விரலை ஊன்ற அவன் அலறிவிழப் பின் அவன் பாடிய பண்களையும் அவற்றின் திறங்களையும் கேட்டுகந்தபெருமான் திருஆப்பாடியார் ஆவார்.

திருக்குறுக்கை

திருக்குறுக்கை

திருக்குறுக்கை, திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டேசுவரர்.
தேவியார் : ஞானாம்பிகையம்மை.

ஆதியிற் பிரம னார்தா
மர்ச்சித்தா ரடியி ணைக்கீழ்
ஓதிய வேத நாவ
ருணருமா றுணர லுற்றார்
சோதியுட் சுடரா௫ய்த் தோன்றிச்
சொல்லினை யிறந்தார் பல்பூக்
கோதிவண் டறையுஞ்சோலைக்
குறுக்கைவீ ரட்ட னாரே. **#476**

ஆதிப்பிரமர் வண்டுகள் மலர்களைக் கோதி ஒலிக்கும்சோலைகளால் சூழப்பட்ட குறுக்கைவீரட்டனார் திருவடிக் கீழ் அர்ச்சனை செய்தார். வேதம் ஓதிய நாவினை உடைய பிரமனார் தம்மை வழிபாட்டால் உணருந்தன்மையைச் சிவபெருமான் உணர்ந்தவராவர். அப்பெருமான் சூரியன் முதலிய ஒளிப்பொருள்களுக்கு ஒளிதருபவராய் ஆரேனும் அமர்ந்திருந்து சொல்லும் நிலையைக் கடந்த பெருமையுடையவர்.

திருக்குறுக்கை

நீற்றினை நிறையப் பூசி
நித்தலு நியமஞ் செய்து
ஆற்றுநீர் பூரித் தாட்டு
மந்தண னாரைக் கொல்வான்
சாற்றுநா ளற்ற தென்று
தருமரா சற்காய் வந்த
கூற்றினைக் குமைப்பர் போலுங்
குறுக்கைவீ ரட்ட னாரே. **#477**

திருநீற்றை உடல்நிறையப் பூசி நாடோறும் செய் கடன்களைச்செய்து, காவிரி நீரை நிறைத்து அபிடேகம் செய்யும் மார்க்கண்டேயருக்குப் பிரமனால் குறிப்பிடப்பட்ட வாழ்நாள் முடிந்துவிட்டது என்று அவரைக் கொல்வதற்காகத் தருமராசருடைய ஆணைப்படி வந்த கூற்றுவனைக் குறுக்கை வீரட்டனார் தண்டித்தார்.

திருக்குறுக்கை

தழைத்ததோ ராத்தி யின்கீழ்
தாபர மணலாற் கூப்பி
அழைத்தங்கே யாவின் பாலைக்
கறந்துகொண் டாட்டக் கண்டு
பிழைத்ததன் தாதை தாளைப்
பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோ ரமுத மீந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே. **#478**

தழைகள் நிரம்பிய ஆத்தி மரத்தின் கீழே மணலால் இலிங்கம் அமைத்து எம்பெருமானை அவன் திருநாமங்களைக் கூறி அழைத்து விசாரசருமன் பசுவின் பாலைக் கறந்து கொண்டு அபிடேகம் செய்த்தனைக் கண்டு தவறு செய்த தன்னுடைய தந்தையின் கால்களைப் பெரிய வளைந்த மழுவாயுதத்தால் வெட்ட அவ்விசாரசருமனுக்குக் குறுக்கை வீரட்டனார் சிவானந்தமாகிய அமுதத்தைக் குழைத்துக் கொடுத்துள்ளார்.

திருக்குறுக்கை

சிலந்தியு மானைக் காவிற்
றிருநிழற் பந்தர் செய்து
உலந்தவ ணிறந்த போதே
கோச்செங்க ணானு மாகக்
கலந்தநீர்க் காவிரீ சூழ்
சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார்
குறுக்கைவீ ரட்ட னாரே. **#479**

திருவானைக்காவிற் பெருமானுக்கு அழகிய நிழலைத்தரும் பந்தலை அமைத்த சிலந்தி இறந்தபின் மறுபிறப்பில், சுவாமியுடன் கலந்து பயின்ற நீரைஉடைய காவிரியாற் சூழப்பட்ட சோழ நாட்டு மன்னர் மரபிலே கோச்செங்கண்ணான் என்ற பெயருடைய அரசனாகுமாறு பிறப்பித்து விட்டார் குறுக்கை வீரட்டனார்.

திருக்குறுக்கை

ஏறுட னேழ டர்த்தா
னெண்ணியா யிரம்பூக் கொண்டு
ஆறுடைச் சடையி னானை
யர்ச்சித்தா னடியி ணைக்கீழ்
வேறுமோர் பூக்கு றைய

மெய்ம்மலர்க் கண்ணை யீண்டக்
கூறுமோ ராழி யீந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே. **#480**

ஏழு இடபங்களையும் ஒரு சேர அழித்த கண்ணனாக அவதரித்த திருமால் கங்கா சடாதரனை அவன் திருவடிகளின்கீழ் ஆயிரம் தாமரைப்பூக்கள் கொண்டு அருச்சித்தானாக அப்பூக்களில் ஒரு பூக்குறைய அக்குறைவை நீக்கத் தாமரை போன்ற தன் கண் ஒன்றனைப் பெயர்த்து அருச்சிக்க, அத்திருமாலுக்கு எல்லோராலும் புகழப்படும் சக்கராயுதத்தை வழங்கினார் குறுக்கை வீரட்டனார்.

திருக்குறுக்கை

கல்லினா லெறிந்து கஞ்சி
தாமுணுஞ் சாக்கி யனார்
நெல்லினார் சோறு ணாமே
நீள்விசும் பாள வைத்தார்
எல்லியாங் கெரிகையேந்தி
யெழிறிகழ் நட்டமாடிக்
கொல்லியாம் பண்ணுகந்தார்
குறுக்கை வீரட்டனாரே. **#481**

சிவபெருமான் மீது நாடோறும் ஒரு கல்லினை எறிந்த பின்னரே தாம் உண்ணும் நியமத்தைக் கொண்ட சாக்கிய நாயனார் இவ்வுலகிலிருந்து அரிசிச் சோறு உண்ணாமல் மேம்பட்ட வீட்டுலகை ஆளுமாறு செய்தவர், இரவிலே உள்ளங்கையில் தீயை ஏந்தி அழகிய கூத்து நிகழ்த்திக் கொல்லிப்பண்ணை விரும்பிப் பாடும் குறுக்கை வீரட்டனாராவர்.

திருக்குறுக்கை

காப்பதோர் வில்லு மம்புங்
கையதோ ரிறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத்
தூயவாய்க் கலச மாட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய
குருதிநீ ரொழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார்
குறுக்கைவீ ரட்ட னாரே. **#482**

காவல் செய்வதற்குரிய வில்லும் அம்பும் ஒரு கையிலும், நிவேதனத்திற்குரிய இறைச்சிச் சுமை மற்றொரு கையிலும் பொருந்த, காலில் தோலாலாகிய பெரிய செருப்பினை அணிந்து, தூயவாயினில்

நீரைக்கொண்டு கலசநீரால் அபிடேகிப்பது போல எம் பெருமானை அபிடேகித்து, அப்பெருமானுடைய ஒளிவீசும் பெரிய கண்களில் இரத்தம் பெருகி ஒழுகத் தன் கண் ஒன்றனைப் பெயர்த்து முதலில் ஒரு கண்ணில் அப்பிப்பின் மற்றொரு கண்ணைப் பெயர்க்க அதன்கண் அம்பினைச் செலுத்திய அளவில் அத்திண்ணனுடைய கையைப் பற்றிக்கொண்டார் குறுக்கை வீரட்டனார்.

திருக்குறுக்கை

நிறைமறைக் காடு தன்னில்
நீண்டெரி தீபந் தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச்
சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடன் மண்ணும் விண்ணும்
நீண்டவா னுலக மெல்லாம்
குறைவறக் கொடுப்பர்போலுங்
குறுக்கைவீ ரட்ட னாரே. **#483**

மந்திர சித்தி நிறைந்த வேதங்கள் பூசித்த மறைக் காட்டில் நீண்டு எரியும் திறத்ததாகிய விளக்கினைக் கறுத்த நிறத்தை உடைய எலி தன் மூக்கினை அத்தீப்பிழம்பு சுட்டிட அதனால் வெகுண்டு திரியைத் தூண்டி விளக்கு நல்ல ஒளியோடு எரியச் செய்ய அந்த எலிக்கு மறுபிறப்பில் கடலால் சூழப்பட்ட நிலஉலகம், தேவர் உலகம், நீண்ட மேலுலகங்கள் ஆகியவற்றை எல்லாம் ஆளுமாறு குறைவற வழங்கினார் குறுக்கை வீரட்டனார்.

திருக்குறுக்கை

அணங்குமை பாக மாக
வடக்கிய வாதி மூர்த்தி
வணங்குவா ரிடர்க டீர்க்கு
மருந்துநல் லருந்த வத்த
கணம்புல்லர்க் கருள்கள் செய்து
காதலா மடியார்க் கென்றும்
குணங்களைக் கொடுப்பர் போலுங்
குறுக்கைவீ ரட்ட னாரே. **#484**

பார்வதியைப்பாகமாகத் தம் திருமேனியில் அடக்கிக் கொண்ட வடிவினராய், தம்மை வணங்குபவர்களுடைய துயரம் போக்கும் மருந்தாகியவராய், நல்ல மேம்பட்ட தவத்தை உடைய கணம்புல்ல நாயனாருக்கு அருள்கள் செய்து, தம்மிடம் அன்பு பூணும் அடியவர்களுக்கு, நல்ல பண்புகளை அருளுவார் குறுக்கை வீரட்டனார்.

திருக்குறுக்கை

எடுத்தன னெழிற் கயிலை
யிலங்கையர் மன்னன் றன்னை
அடுத்தொரு விரலா லூன்ற
வலறிப்போ யவனும் வீழ்ந்து
விடுத்தனன் கைந்ந ரம்பால்
வேதகீ தங்கள் பாடக்
கொடுத்தனர் கொற்ற வாணாள்
குறுக்கைவீ ரட்ட னாரே. **#485**

கயிலைமலையைப் பெயர்க்க முற்பட்ட இலங்கையின் மன்னனாகிய இராவணனைப் பொருந்திய கால் விரலால் அழுத்திய அளவில் அலறிப் போய் அவன் செயலற்று விழுந்து, செருக்கினை விடுத்துக் கை நரம்புகளை வீணை நரம்புகள் ஆக்கி ஒலித்து வேத கீதங்களைப் பாட, அவனுக்கு வெற்றியைத் தரும் வாளினையும் நீண்ட ஆயுளையும் நல்கினார் குறுக்கை வீரட்டனார்.

திருக்குறுக்கை

திருக்குறுக்கை, திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டேசுவரர்.
தேவியார் : ஞானாம்பிகையம்மை.

நெடியமால் பிரம னோடு
நீரெனும் பிலயங் கொள்ள
அடியொடு முடியுங் காணா
ரருச்சுனற் கம்பும் வில்லும்
துடியுடை வேட ராகித்
தூயமந் திரங்கள் சொல்லிக்
கொடிநெடுந் தேர்கொ டுத்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே. **#486**

உலகங்களை எல்லாம் ஊழி வெள்ளம் மூழ்க்கிய காலத்தில், சிவபெருமான் தீப்பிழம்பாகத் தோன்ற, பிரமனும், நெடியோனாகிய திருமாலும் முறையே அவருடைய முடிஅடிகளைக் காணா நிலையினராயினர். அப்பெருமான் திருக்குறுக்கை வீரட்டத்து உறைபவராய்த் துடி என்னும் பறையை ஒலிக்கும் வேடர்வடிவினராய் அருச்சுனனுக்குத் தூயமந்திரங்களை உபதேசித்து. அம்பும் வில்லும் கொடிகள் உயர்த்தப்படும் தேரும் வழங்கியுள்ளார்.

திருக்குறுக்கை

ஆத்தமா மயனு மாலு
மன்றிமற் றொழிந்த தேவர்
சோத்தமெம் பெருமா னென்று
தொழுதுதோத் திரங்கள் சொல்லத்
தீர்த்தமா மட்ட மீமுன்
சீருடை யேழு நாளும்
கூத்தராய் வீதி போந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே. **#487**

குருவிற்குத் தொண்டு செய்யும் பிரமனும் திருமாலும் ஏனைய தேவர்களும் 'எம்பெருமானே உனக்கு அஞ்சலி செய்கிறோம்' என்று தொழுது தோத்திரங்களை மொழியக் குறுக்கை வீரட்டனார் பிரமோற்சவ வேள்வி நிகழும் அட்டமிக்கு முற்பட்ட ஏழு நாள்களும் கூத்தாடுபவராய்த் திருவீதி உலாவை நிகழ்த்தியவராவர்.

திருக்குறுக்கை

4.050.3-10 #488

திருக்கோடிகா

திருக்கோடிகா

திருக்கோடிகா, திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கோடீசுவரர்.
தேவியார் : வடிவாம்பிகையம்மை.

நெற்றிமேற் கண்ணி னானே
நீறுமெய் பூசி னானே
கற்றைப்புன் சடையி னானே
கடல்விடம் பருகி னானே
செற்றவர் புரங்கண் மூன்றுஞ்
செவ்வழல் செலுத்தி னானே
குற்றமில் குணத்தி னானே
கோடிகா வுடைய கோவே. **#489**

கோடிகா உடைய பெருமான் நெற்றிக்கண்ணனாய், நீற்றைத் திருமேனியிற் பூசியவனாய், முறுகிக் கற்றையான சிவந்த சடையினனாய், கடலில் தோன்றிய நஞ்சினைப்பருகியவனாய், பகைவருடைய முப்புரங்களிலும் தீயைச் செலுத்தியவனாய், குற்றமற்ற நற்பண்பினாய் உள்ளவனாவான்.

திருக்கோடிகா

கடிகமழ் கொன்றை யானே
கபாலங்கை யேந்தி னானே
வடிவுடை மங்கை தன்னை
மார்பிலோர் பாகத் தானே
அடியிணை பரவ நாளு
மடியவர்க் கருள் செய்வானே
கொடியணி விழவ தோவாக்
கோடிகா வுடைய கோவே. **#490**

கொடிகள் ஏற்றப்பட்டுத் திருவிழாக்கள் நடத்தப் பெறுதல் நீங்காத கோடிகாப் பெருமான் நறுமணம் கமழும் கொன்றைப் பூவினனாய், கையில் ஏந்திய மண்டையோட்டை உடையவனாய், அழகிய பார்வதியைப் பாகமாக மார்பில் கொண்டவனாய்த் தன் திருவடிகளை வழிபடுமாறு நாள்தோறும் அடியவர்களுக்கு அருள் செய்பவனாவான்.

திருக்கோடிகா

நீறுமெய் பூசி னானே
நிழறிகழ் மழுவி னானே
ஏறுகந் தேறி னானே
யிருங்கட லமுதொப் பானே
ஆறுமோர் நான்கு வேத
மறமுரைத் தருளி னானே
கூறுமோர் பெண்ணி னானே
கோடிகா வுடைய கோவே. **#491**

கோடிகாப் பெருமான் நீற்றைத் திருமேனியில் பூசியவனாய், ஒளிவீசும் மழுப்படையினனாய், காளையை விரும்பி ஏறிஊர்ந்தவனாய், பெரிய கடலில் தோன்றிய அமுதத்தை ஒப்பவனாய், நான்கு வேதங்களும் ஆறு அங்கங்களும் ஆகிய அறத்தை உபதேசித்தவனாய், பார்வதி பாகனாய் உள்ளான்.

திருக்கோடிகா

காலனைக் காலாற் செற்றன்
றருள்புரி கருணை யானே
நீலமார் கண்டத் தானே
நீண்முடி யமரர் கோவே
ஞாலமாம் பெருமை யானே
நளிரிளந் திங்கள் சூடும்
கோலமார் சடையினானே
கோடிகா வுடைய கோவே. **#492**

கோடிகா உடைய பெருமான் காலனைக் காலால் ஒறுத்து மார்க்கண்டேயனுக்கு அருள்புரிந்த கருணையாளனாய், நீல கண்டனாய், நீண்டமுடிகளை உடைய தேவர்களுக்குத் தலைவனாய் உலகம் முழுதும் பரவிய பெருமானாய், குளிர்ந்த பிறைசூடும் அழகிய சடையினை உடையவனாய் உள்ளான்.

திருக்கோடிகா

பூணர வாரத் தானே
புலியுரி யரையி னானே
காணில்வெண் கோவ ணம்முங்
கையிலோர் கபால மேந்தி
ஊணுமோர் பிச்சை யானே
யுமையொரு பாகத் தானே
கோணல்வெண் பிறையி னானே
கோடிகா வுடைய கோவே. **#493**

கோடிகா உடைய தலைவன் பாம்பை மாலையாகப் பூண்டு புலித்தோலை இடையில் உடுத்து வெண்கோவணம் தரித்து, கையில் மண்டையோட்டை ஏந்தி. பிச்சை ஏற்ற உணவையே உண்பவனாய்ப் பார்வதிபாகனாய் வளைந்த வெள்ளிய பிறையைச் சூடியவனாய் உள்ளான்.

திருக்கோடிகா

கேழல்வெண் கொம்பு பூண்ட
கிளரொளி மார்பி னானே
ஏழையே னேழை யேனா
னென்செய்கே னெந்தை பெம்மான்
மாழையொண் கண்ணி னார்கள்
வலைதனின் மயங்கு கின்றேன்
கூழையே றுடைய செல்வா
கோடிகா வுடைய கோவே. **#494**

கோடிகா உடைய பெருமானே! பன்றியின் வெண்ணிறக் கொம்பினை அணிந்த ஒளிவீசும் மார்பினனாய், குட்டையான காளையை உடைய செல்வனே! எம் தந்தையாகிய தலைவனே!அழகிய ஒளி பொருந்திய கண்களை உடைய மகளிரின் பார்வையாகிய வலையில் அகப்பட்டு மயங்குகின்றேன். அறிவிலியாகிய அடியேன் யாது செய்குவென்?

திருக்கோடிகா

அழலுமி ழங்கை யானே
யரிவையோர் பாகத் தானே
தழலுமி ழரவ மார்த்துத்
தலைதனில் பலிகொள் வானே
நிழலுமிழ் சோலை சூழ
நீள்வரி வண்டி னங்கள்
குழலுமிழ் கீதம் பாடுங்
கோடிகா வுடைய கோவே. **#495**

நெருப்பை ஏந்திய உள்ளங்கையை உடையவனே! பார்வதிபாகனே! நெருப்பைக் கக்குகின்ற பாம்பினைக் கட்டிக் கொண்டு மண்டையோட்டில் பிச்சை பெறுபவனே! நிழலை வெளிப்படுத்துகின்ற சோலைகள் சூழ்ந்திருக்க அவற்றில் நீண்டகோடுகளை உடைய வண்டினங்கள் வேய்ங்குழல் ஒலிபோன்ற பாடல்களைப் பாடும் கோடிகாவை உடைய பெருமானே!

திருக்கோடிகா

ஏவடு சிலையி னானே
புரமவை யெரிசெய் தானே
மாவடு வகிர்கொள் கண்ணாண்
மலைமகள் பாகத் தானே
ஆவடு துறையு ளானே
யைவரா லாட்டப் பட்டேன்
கோவடு குற்றந் தீராய்
கோடிகா வுடைய கோவே. #496

அம்பை இணைத்த வில்லைக் கொண்டு மும்மதில்களையும் தீக்கு இரையாக்கியவனே! மாவடுவின் பிளப்பைப் போன்ற கண்களை உடைய பார்வதிபாகனே! ஆவடுதுறையில் உறைபவனே! கோடிகா உடைய தலைவனே! ஐம்பொறிகளாலும் யான் அவை விரும்பியவாறு செயற்படுத்தப்பட்டுள்ளேன். பசுக்கொலைக்கு ஒப்பாகிய என் குற்றங்களைப் போக்குவாயாக.

<u>திருக்கோடிகா</u>

ஏற்றநீர்க் கங்கை யானே
யிருநிலந் தாவி னானும்
நாற்றமா மலர்மே லேறு
நான்முக னிவர்கள் கூடி
ஆற்றலா லளக்க லுற்றார்க்
கழலுரு வாயி னானே
கூற்றுக்குங் கூற்ற தானாய்
கோடிகா வுடைய கோவே. #497

கோடிகாவில் உள்ள பெருமானே! கங்கையைச் சடையில் ஏற்றவனே! பெரிய உலகங்களை ஈரடியால் அளந்த திருமாலும் நறுமணம கமழும் தாமரை மலர்மேல் தங்கும் பிரமனும் ஆகியஇருவரும் கூடித் தம் ஆற்றலால் அளக்க முயன்றவர்களுக்குத் தீத்தம்ப வடிவாயினவனே! யமனுக்கும் யமனாயினாய் நீ.

<u>திருக்கோடிகா</u>

பழகநா னடிமை செய்வேன்
பசுபதீ பாவ நாசா
மழகளி யானையின் றோன்
மலைமகள் வெருவப் போர்த்த
அழகனே யரக்கன் றிண்டோ
ளருவரை நெரிய வூன்றும்
குழகனே கோல மார்பா

கோடிகா வுடைய கோவே. **#498**

கோடிகா உடையகோவே! ஆன்மாக்களின் தலைவனே! பாவங்களைப்போக்குபவனே! இளைய மதமயக்கமுடைய யானையின் தோலைப் பார்வதி அஞ்சுமாறு போர்த்த அழகனே! அரக்கனாகிய இராவணனுடைய வலிய தோள்கள் கயிலை மலையின் கீழ் அகப்பட்டு நெரியுமாறு கால்விரலை அழுத்திய அழகனே! நின் தொண்டிற் பழகுமாறு நான் அடித்தொண்டு செய்வேன்.

திருவாரூர்

திருவாரூர்

திருவாரூர், திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

படுகுழிப் பவ்வத் தன்ன
பண்டியைப் பெய்த வாற்றால்
கெடுவதிம் மனிதர் வாழ்க்கை
காண்டொறுங் கேது கின்றேன்
முடுகுவ ரிருந்து ளைவர்
மூர்க்கரே லிவர்க ளோடும்
அடியனேன் வாழ மாட்டே
னாரூர்மூ லட்ட னீரே. **#499**

பெரிய பள்ளமான கடல்போன்ற வயிற்றை நிரப்புவதற்குரிய செயல்களில் ஈடுபடும் வகையால் இந்த மனிதவாழ்வு பாழாகிறது. ஆதலால் இவ்வாழ்க்கையை நினைக்குந்தோறும் இதை விலக்க உதவுபவரை அழைக்கின்றேன். இவ்வுடம்பினுள் அறிவற்ற முரடாகிய ஐம்பொறிகள் இருந்து என்னைத் தம் விருப்பப்படி செயற்படுமாறு தூண்டுகின்றன. ஆரூர் மூலட்டானத்துள்ள பெருமானே! அடியேன் இவைகளோடு சேர்ந்து வாழும் ஆற்றல் உடையேன் அல்லேன்.

திருவாரூர்

புழுப்பெய்த பண்டி தன்னைப்
புறமொரு தோலான் மூடி
ஒழுக்கறா வொன்ப துவா
யொற்றுமை யொன்றுமில்லை
சழக்குடை இதனு ளைவர்
சங்கடம் பலவுஞ் செய்ய
அழிப்பனாய் வாழ மாட்டே
னாரூர்மூ லட்ட னீரே. **#500**

ஆரூர் மூலட்டனீரே! புழுக்களை உள்ளே அடக்கி வைத்த வண்டியை வெளியே ஒரு தோலினாலே மறைத்து, திரவம் ஒழுகுதல் நீங்காத ஒன்பது வழிகள் ஒன்றற்கு ஒன்று ஒவ்வாத வகையில் அதன்கண் அமைய, இவ்வண்டிக்குள் குற்றமுடைய ஐம்பொறிகளும் பல துயரங்களை விளைக்க, அவற்றால் கலக்கமுற்று வாழ இயலாதேனாய்

உள்ளேன்.

திருவாரூர்

பஞ்சின்மெல் லடியி னார்கள்
பாங்கரா யவர்க ணின்று
நெஞ்சினோய் பலவுஞ் செய்து
நினையினும் நினைய வொட்டார்
நஞ்சணி மிடற்றி னானே
நாதனே நம்பனே நான்
அஞ்சினேற் கஞ்ச லென்னீ
ராரூர்மூ லட்ட னீரே. **#501**

விடத்தை அணிந்த கண்டரே! தலைவரே! அடியவரால் விரும்பப்படுகின்றவரே! பஞ்சினைப் போன்ற மெல்லிய பாதங்களை உடைய பெண்கள்பக்கம் சேர்ந்துகொண்டு என் நெஞ்சில் நோய்கள் பலவற்றை உண்டாக்கி உம்மை விருப்புற்று நினைப்பதற்கும் இசையாது செய்யுங் கலக்கத்தைக் கண்டு அஞ்சுகின்ற எனக்கு, ஆரூர்ப் பெருமானாகிய நீர் அஞ்சேல் என்று அடைக்கலம் தருகின்றீர் அல்லீர்.

திருவாரூர்

கெண்டையந் தடங்க ணல்லார்
தம்மையே கெழும வேண்டிக்
குண்டராய்த் திரிதந் தைவர்
குலைத்திடர்க் குழியி னூக்கக்
கண்டுநான் றரிக்க கில்லேன்
காத்துக்கொள்கறை சேர் கண்டா
அண்டவா னவர் போற்று
மாரூர்மூ லட்ட னீரே. **#502**

நீலகண்டரே! எல்லா உலகங்களிலும் உள்ள தேவர்கள் போற்றும் ஆரூர்ப் பெருமானே! கெண்டைமீன்போன்ற அழகிய பெரிய கண்களை உடைய மகளிரைத் தழுவுவிக்க விரும்பி மூர்க்கராய்த் திரியும் என் ஐம்பொறிகளும் என்னை நிலை குலையச் செய்து துன்பம் குழியிலே தள்ளுகையினாலே அவற்றின் செயல்களைப் பொறுக்கும் ஆற்றல் இலேனாகிய என்னைப் பாதுகாத்து உம் அடிமையாகக் கொள்வீராக.

திருவாரூர்

தாழ்குழ லின்சொ னல்லார்
தங்களைத் தஞ்ச மென்று
ஏழையே னாகி நாளு

மென்செய்கே னெந்தை பெம்மான்
வாழ்வதே லரிது போலும்
வைகலு மைவர் வந்து
ஆழ்குழிப் படுக்க வாற்றே
னாரூர்மூ லட்ட னீரே. **#503**

என் தந்தையாகிய பெருமானே! ஆரூர் மூலத்தானத்தில் உறைபவரே! தாழ்ந்த கூந்தலையும் இனிய சொற்களையும் உடைய மகளிரையே பற்றுக்கோடாகக்கொண்டு அறிவற்றவனாகி நாடோறும் யான் யாது செயற்பாலேன்? நாள்தோறும் என் ஐம்பொறிகள் ஆழ்ந்த குழியில் என்னைத் தள்ள முயல்வதால் பொறுக்க முடியாத துயரினேனாய் உள்ளேன். இவ்வுலகில் ஒருவர் தம் குறிக்கோளுக்கு நேர்மையாக வாழ்வதே அரிய செயல்போலும்.

<u>திருவாரூர்</u>

மாற்றமொன் றருள கில்லீர்
மதியிலேன் விதியி லாமை
சீற்றமுந் தீர்த்தல் செய்யீர்
சிக்கன வுடைய ராகிக்
கூற்றம்போ லைவர் வந்து
குலைத்திட்டுக் கோகு செய்ய
ஆற்றவுங் கில்லே னாயே
னாரூர்மூ லட்ட னீரே. **#504**

ஆரூர் மூலத்தானத்துப் பெருமானே! அடியேன் நல்லறிவின்மை காரணமாக நேரிய வழியில் செல்ல இயலாமை குறித்துத் தேவரீர் திருவுள்ளத்தில் எழுந்த கோபத்தைத் தணித்துக் கொள்ளுதலும் செய்யீராயினீர். தம் விருப்பப்படி செயல் புரிவிப்பதில் உறுதியுடைய என் ஐம்பொறிகள் கூற்றுவனைப் போலவந்து என்னைச் சிதற அடித்துத் தோள்தட்டி ஆர்த்து நிற்க நாயேன் அவைகள் தரும் துயரைப் பொறுக்க இயலாதேனாய் உள்ளேன். யான் உய்வதற்கு உரிய ஒரு உபாயத்தையும் நீர் அருளுகின்றீரில்லை.

<u>திருவாரூர்</u>

உயிர்நிலை யுடம்பே காலா
வுள்ளமே தாழி யாகத்
துயரமே யேற்ற மாகத்
துன்பக்கோ லதனைப் பற்றிப்
பயிர்தனைச் சுழிய விட்டுப்
பாழ்க்குநீ ரிறைத்து மிக்க

அயர்வினா லைவர்க் காற்றே
னாரூர்மூ லட்ட னீரே. **#505**

ஆரூர்ப் பெருமானே! உயிர் நிற்றற்குரிய இவ்வுடலைக் காலாக நிறுவித் துயரத்தையே ஏற்றமரமாக அமைத்து, உள்ளத்தையே ஏற்றச் சாலாகக் கொண்டு துன்பமாகிய, ஏற்றத்தோடு கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும் கழியைப்பற்றிப் பயிர்கள் சுருண்டு போகுமாறு அவற்றை விடுத்துப் பாழான வீண்தரைக்கே நீரை இறைத்து மிக்க தளர்ச்சியோடு என்னைத் தீய வழியிலேயே செலுத்தும் ஐம்பொறிகளின் ஆதிக்கத்தைத் தாங்க இயலாதேனாய் உள்ளேன்;

<u>திருவாரூர்</u>

கற்றதே லொன்று மில்லை
காரிகை யாரோ டாடிப்
பெற்றதேற் பெரிதுந் துன்பம்
பேதையேன் பிழைப்பி னாலே
முற்றினா லைவர் வந்து
முறைமுறை துயரஞ் செய்ய
அற்றுநா னலந்து போனே
னாரூர்மூ லட்ட னாரே. **#506**

ஆரூர்ப் பெருமானே! அடியேன் அனுபவப் பொருளை ஞானதேசிகர்பால் கற்றுக்கொண்டது ஏதுமில்லை. மகளிர் பின்னே அலைந்து அறிவற்ற நான் பெருந்துயரம் உற்றேன். என் தவற்றினாலே ஐம்பொறிகளும் தம் ஆற்றலிலே நிறைவுற்றதனால் அவை தாம் விரும்பியவற்றைப் பெற்றுத்தருமாறு என்னை வருத்த அவற்றை எதிர்க்கும் ஆற்றலற்று அடியேன் துயருற்றவனானேன்.

<u>திருவாரூர்</u>

பத்தனாய் வாழ மாட்டேன்
பாவியேன் பரவி வந்து
சித்தத்து ளைவர் தீய
செய்வினை பலவுஞ் செய்ய
மத்துறு தயிரே போல
மறுகுமென் னுள்ளந் தானும்
அத்தனே யமரர் கோவே
யாரூர்மூ லட்ட னாரே. **#507**

தலைவரே! தேவருக்கு அரசரே! ஆரூர் மூலத்தானத்தாரே! தீவினை செய்த அடியேன் பத்தனாக வாழ இயலாதேனாக, என் உள்ளம் முழுதும் பரவி ஐம்பொறிகள் தீய செயல்கள் பலவற்றையும் செய்ய அவை

என்னை வருத்துவதனால் மத்தினால் கடையப்பட்ட தயிரைப் போல என் உள்ளம் நிலை சுழல்கிறது.

திருவாரூர்

தடக்கைநா லைந்துங் கொண்டு
தடவரை தன்னைப் பற்றி
எடுத்தவன் பேர்க்க வோடி
யிரிந்தன பூத மெல்லாம்
முடித்தலை பத்துந் தோளு
முறிதர விறையே யூன்றி
அடர்த்தருள் செய்த தென்னே
யாரூர்மூ லட்ட னீரே. **#508**

ஆரூர் மூலட்டானத்தாரே! நீண்டஇருபது கைகளைக்கொண்டு பெரிய கயிலைமலையைப்பிடித்துப் பெயர்த்து எடுக்கமுயன்ற இராவணன் செயலால் பூதங்கள் எல்லாம் அஞ்சி ஓட, அவனுடைய முடிகள் அணிந்த தலைகளும் இருபது கைகளும் முறியுமாறு சிறிதளவு கால் விரல் ஒன்றனை ஊன்றி வருத்திப் பின் அவனுக்கு அருள் செய்த நும் செயல் இருந்தவாறென்னே!

திருவாரூர்

திருவாரூர், திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

குழல்வலங் கொண்ட சொல்லாள்
கோலவேற் கண்ணி தன்னைக்
கழல்வலங் கொண்டுநீங்காக்
கணங்களக் கணங்க ளார
அழல்வலங் கொண்ட கையா
னருட்கதி ரெறிக்கு மாரூர்
தொழல்வலங் கொண்டல் செய்வான்
றோன்றினார் தோன்றி னாரே. **#509**

வேய்ங்குழல் ஓசையை வென்ற இனியசொல்லையுடையவளாய் அழகிய வேல்போன்ற கண்களையுடைய பார்வதியின் திருவடிகளை வலம் வந்து நீங்காத அடியவர்களுடைய கண்கள் நிறைவுறும்படியாகத் தீயினை வலக்கையில் கொண்ட பெருமான் அருளாகிய ஒளியைவீசும் திருவாரூரைத் தொழுவதற்கும் வலம் வருவதற்கும் வாய்ப்புடையவராகப் பிறப்பெடுத்தவரே பயனுடைய பிறப்பினைப்

பெற்றவராவார்.

திருவாரூர்

நாகத்தை நங்கை யஞ்ச
நங்கையை மஞ்ஞை யென்று
வேகத்தைத் தவிர நாகம்
வேழத்தி னுரிவை போர்த்து
பாகத்தி னிமிர்தல் செய்யாத்
திங்களை மின்னென் றஞ்சி
ஆகத்திற் கிடந்த நாக
மடங்குமா ரூர னார்க்கே. **#510**

ஆரூரனிடத்தில் பாம்பைப் பார்த்துப் பார்வதி அஞ்ச, அப்பார்வதியை மயில் என்று கருதிப் பாம்பு தான் சீறிச் செயற்படும் உற்சாகத்தை நீக்கிச் சோர்வடைய, அப்பாம்பு தன்னை விழுங்கும் என்று அஞ்சிப்பிறை யானைத்தோலுள் மறைய ஒரு பகுதியும் நிமிர்ந்து பார்த்தலைச் செய்யாத சந்திரனை மின்னல் என்று கருதி அஞ்சி மார்பில் கிடந்த நாகம் சோர்ந்து கிடக்கிறது.

திருவாரூர்

தொழுதகங் குழைய மேவித்
தொட்டிமை யுடைய தொண்டர்
அழுதகம் புகுந்து நின்றா
ரவரவர் போலு மாரூர்
எழிலக நடுவெண் முத்த
மன்றியு மேர்கொள் வேலிப்
பொழிலகம் விளங்கு திங்கட்
புதுமுகிழ் சூடி னாரே. **#511**

தம்முள் ஒத்த தன்மை உடைய தொண்டர்கள் தொழுது மனம் உருகுமாறு விரும்பி அழுதனராக, ஆரூரிலே பல வேலிப்பரப்புடைய சோலையின் நடுவே விளங்கும் பூங்கோயிலின் மூலத்தானத்திலே உறைந்து முத்துக்களையும் பிறையையும் சூடிய பெருமான் அவ்வடியவருடைய உள்ளத்திலே புகுந்து நிற்குமாற்றால், தாமும் அவ்வவ்வடியவர் போல்வாராநின்றார்.

திருவாரூர்

நஞ்சிருண் மணிகொள் கண்டர்
நகையிரு ளீமக் கங்குல்
வெஞ்சுடர் விளக்கத் தாடி

விளங்கினார் போலு மூவா
வெஞ்சுடர் முகடுதீண்டி
வெள்ளிநா ராசமன்ன
அஞ்சுட ரணிவெண்டிங்க
ளணியுமா ரூரனாரே. **#512**

அழியாத சூரியமண்டலத்தின் உச்சியைத் தொட்டுக் கொண்டுள்ள சடைமுடியில் வெள்ளிக் கம்பி இருந்தாற்போன்ற அழகிய ஒளி வீசும் பிறையை அணிந்த ஆரூர்ப் பெருமான் நஞ்சினால் இருண்ட நீலகண்டராய், இருள்மிக்க சுடுகாட்டில் இரவிலே வெளிப்படுகின்ற சுடுகாட்டுத் தீயாகிய விளக்கு வெளிச்சத்திலே கூத்தாடி விளங்குபவராவார்.

திருவாரூர்

எந்தளிர் நீர்மை கோல
மேனியென் றிமையோ ரேத்தப்
பைந்தளிர்க் கொம்ப ரன்ன
படர்கொடி பயிலப் பட்டுத்
தஞ்சடைத் தொத்தி னாலுந்
தம்மதோர் நீர்மை யாலும்
அந்தளி ராகம் போலும்
வடிவரா ரூர னாரே. **#513**

எம்முடைய கற்பக மரத் தளிரின் தன்மையான அழகிய மேனியை உடைய ஆரூரன் என்று தேவர்கள் போற்றுமாறு, பசிய தளிரை உடைய காமவல்லி போன்று, தம் மேனிமீது படரும் கொடிபோன்ற பார்வதியால் தழுவப்பட்டு, தம்முடைய சடைத் தொகுதியினாலும் தம்முடைய தனிப்பண்பினாலும் அழகிய தளிரினது வடிவம் போன்றவர் ஆவார் ஆரூரனார்.

திருவாரூர்

வானகம் விளங்க மல்கும்
வளங்கெழு மதியஞ் சூடித்
தானக மழிய வந்து
தாம்பலி தேர்வர் போலும்
ஊனகங் கழிந்த ஓட்டி
லுண்பது மொளிகொ ணஞ்சம்
ஆனகத் தஞ்சு மாடு
மடிகளா ரூர னாரே. **#514**

புலாலின் சுவடு நீங்கப்பெற்ற மண்டையோட்டில் பிச்சை எடுத்து, ஒளி

பொருந்திய விடத்தை உண்டு, பஞ்சகவ்வியத்தில் நீராடும் ஆரூர்ப்பெருமான் வான்வெளி எங்கும் ஒளிபடருமாறு வளரும் பிறையைச் சூடி, பிச்சை இட வரும் இளைய மகளிருடைய மனம் பெண்மைக்குரிய பண்புகள் அழியுமாறு வந்து பிச்சை எடுத்துத் திரிவார் போலும்.

திருவாரூர்

அஞ்சணை கணையி னானை
யழலுற வன்று நோக்கி
அஞ்சணை குழலி னாளை
யமுதமா வணைந்து நக்கு
அஞ்சணை யஞ்சு மாடி
யாடர வாட்டுவார் தாம்
அஞ்சணை வேலி யாரூ
ராதரித் திடங்கொண் டாரே. **#515**

ஐந்து வேலிப் பரப்புடைய திருவாரூர்க்கோயிலை விரும்பி உறையும் பெருமான் ஐங்கணைகளை உடைய மன்மதனைச் சாம்பலாகுமாறு ஒருகாலத்தில் நெற்றிக் கண்ணால் நோக்கி, ஐந்து விதமாக முடிக்கப்படும் (ஐம்பால்) கூந்தலையுடைய பார்வதியை அமுதமாகக் கருதி அவளோடு பொருந்தி, சிரித்து, பஞ்சகவ்வியத்தால் அபிடேகம் கொண்டு, ஐந்து தலைகளை உடையதாய்ப் படம் எடுத்து ஆடும் பாம்பினை ஆட்டுபவராக உள்ளார்.

திருவாரூர்

வணங்கிமுன் னமர ரேத்த
வல்வினை யான தீரப்
பிணங்குடைச் சடையில் வைத்த
பிறையுடைப் பெருமை யண்ணல்
மணங்கம ழோதி பாகர்
மதிநிலா வட்டத் தாடி
அணங்கொடி மாட வீதி
யாரூரெம் மடிக ளாரே. **#516**

சந்திர மண்டலம் வரையில் உயர்ந்து அந்த வட்டமான பகுதியில் அடைந்து சந்திரனை அணுகுகின்ற அழகிய கொடிகள் உயர்த்தப்பட்ட மாடங்களை உடைய வீதிகளைக் கொண்ட ஆரூரில் உள்ள எம்பெருமான் தேவர்கள் தம்முடைய வலிய வினைப் பயன்கள் தீருமாறு முன் நின்று வணங்கித் துதிக்க ஒன்றோடொன்று கலந்து பின்னி முறுகிய சடைகளிடையே பிறையைச் சூடிய பெருமையை உடைய

தலைவராவார்.

<u>திருவாரூர்</u>

நகலிடம் பிறர்கட் காக
நான்மறை யோர்க டங்கள்
புகலிட மாகி வாழும்
புகலிலி யிருவர் கூடி
இகலிட மாக நீண்டங்
கீண்டெழி லழல தாகி
அகலிடம் பரவி யேத்த
வடிகளா ரூர னாரே. **#517**

வீண் பேச்சிற் பொழுதுபோக்கி நல்லோர் இகழ்ச்சிக்கிடமாகும் நிலை (அடியாரல்லாத) பிறர்க்காக நான்கு வேதங்களையும் ஓதும் பக்தர்களுக்கு அடைக்கலமாகி வாழ்பவராய், தமக்கு அடைக்கலம் தருபவர் பிறர் யாரும் இல்லாதவகையில் அனைவருக்கும் தாமே அடைக்கலமாகும் பெருமானாய், திருமாலும் பிரமனும் ஒன்று சேர்ந்து தமக்குள் மாறுபட்டு அடியும் முடியும் தேடும் தீப்பிழம்பாக நீண்டு, உலகத்தார் முன் நின்று துதித்துப் புகழுமாறு ஆரூர்த் தலைவர் விளங்குகிறார்.

<u>திருவாரூர்</u>

ஆயிர நதிகண் மொய்த்த
வலைகட லமுதம் வாங்கி
ஆயிர மசுரர் வாழு
மணிமதின் மூன்றும் வேவ
ஆயிரந் தோளு மட்டித்
தாடிய வசைவு தீர
ஆயிர மடியும் வைத்த
வடிகளா ரூர னாரே. **#518**

நதிகள் பலவாக வந்து கலக்கும் அலைகளையுடைய கடலில் தோன்றிய அமுதினைத் தேவர் நுகருமாறு வழங்கி, அசுரர் பலர் வாழும் அழகிய மதில்கள் மூன்றையும் வேவச் செய்து ஆயிரம் தோள்களையும் சுழற்றி ஆடிய களைப்புத் தீருமாறு தமக்குத் தொண்டு புரிய அடியவர் பலரைக் கொண்டுள்ளவர் ஆரூரனாகிய பெருமான்.

திருப்புகலூர்

திருப்புகலூர்

திருப்புகலூர், திருநேரிசை :
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அக்கினீசுவரர்.
தேவியார் : கருந்தார்க்குழலியம்மை.

பகைத்திட்டார் புரங்கண் மூன்றும்
பாறிநீ றாகி வீழப்
புகைத்திட்ட தேவர் கோவே
பொறியிலே னுடலந் தன்னுள்
அகைத்திட்டங் கதனை நாளு
மைவர்கொண் டாட்ட வாடித்
திகைத்திட்டேன் செய்வ தென்னே
திருப்புக லூர னீரே. **#519**

திருப்புகலூர் பெருமானே! பகையாயின அசுரர்களுடைய முப்புரங்களும் சிதறிச் சாம்பலாய் விழுமாறு தீக்கு இரையாக்கிய தேவர் தலைவரே! நல்வினை இல்லேனுடைய உடலிலே கிளைத்து அதனை நாடோறும் ஐம்பொறிகளும் செயற்படுத்ததனால் வருந்தி மயங்கி விட்டேன். யான் யாது செயற்பாலேன்?

திருப்புகலூர்

மையரி மதர்த்த வொண்கண்
மாதரார் வலையிற் பட்டுக்
கையெரி சூல மேந்துங்
கடவுளை நினைய மாட்டேன்
ஐநெரிந் தகமி டற்றே
யடைக்கும்போ தாவி யார்தாம்
செய்வதொன் றறிய மாட்டேன்
திருப்புக லூர னீரே. **#520**

திருப்புகலூர்ப் பெருமானே! மை தீட்டப்பட்டுச் செவ்வரி பரந்து செழித்த ஒளிபொருந்திய பெண்களின் பார்வையாகிய வலையில் அகப்பட்டுக் கையிலே நெருப்பையும் சூலத்தையும் ஏந்தும் கடவுளாகிய உம்மைத் தியானிக்க இயலாதேனான் கோழை திரண்டு சாய்ந்து கழுத்தின் உட்புறத்தை அடைக்கும்போது என் உயிர் என்ன பாடுபடுமோ அறியேன்.

திருப்புகலூர்

முப்பது முப்பத் தாறு
முப்பது மிடுகு ரம்பை
அப்பர்போ லைவர் வந்து
வதுதரு கிதுவி டென்று
ஒப்பவே நலிய லுற்றா
லுய்யுமா றறிய மாட்டேன்
செப்பமே திகழு மேனித்
திருப்புக லூர னீரே. **#521**

செந்நிற மேனியை உடைய திருப்புகலூர்ப் பெருமானே! தொண்ணூற்றாறு தத்துவ தாத்துவிகங்களால் அமைக்கப் பட்ட இவ்வுடம்பாகிய குடிலிலே தலைவர்களைப்போல ஆட்சிபுரியும் ஐம்பொறிகளும் அவ்வப்போது தோன்றி அதனைக்கொடு, இதனை விடு என்று ஒருசேரத் துன்புறுத்தத் தொடங்கினால் அவற்றில் இருந்து தப்பிக் கடைத்தேறும் வழியை அடியேன் அறியமாட்டேன்.

திருப்புகலூர்

பொறியிலா வழுக்கை யோம்பிப்
பொய்யினை மெய்யென் றெண்ணி
நெறியலா நெறிகள் சென்றே
னீதனே னீதி யேதும்
அறிவிலே னமரர் கோவே
யமுதினை 1மனனில் வைக்கும்
செறிவிலேன் செய்வ தென்னே
திருப்புக லூர னீரே. **#522**

திருப்புகலூர்ப் பெருமானே! பொலிவில்லாத அழுக்கு உருவமான இவ்வுடம்பைப் பாதுகாத்துப் பொய்யான வழியையே மெய்வழியாகக் கருதிக் கீழ்மகனாகிய அடியேன் வழியல்லா வழியிலே வாழ்ந்தேன்! நெறிமுறையான செய்திகளை அறியும் ஆற்றல் இல்லேன். தேவர்கள் தலைவனே! அமுதமாகிய உன்னை மனத்தில் நிலையாகவைத்தற்குரிய யோகமுயற்சி உடையேன் அல்லேன். யாது செயற்பாலேன்?

திருப்புகலூர்

அளியினார் குழலி னார்க
ளவர்களுக்கு கன்ப தாகிக்
களியினார் பாட லோவாக்
கடவூர் வீரட்ட மென்னும்

தளியினார் பாத நாளுந்
நினைவிலாத் தகவி னெஞ்சம்
தெளிவிலேன் செய்வ தென்னே
திருப்புக லூர னீரே. **#523**

திருப்புகலூர்ப் பெருமானே! வண்டுகளால் மொய்க்கப் பெறும் கூந்தலை உடைய பெண்கள்பால் அன்பு செலுத்தி, சிவானந்தக் களிப்பினார்கள் பாடும் பாடல்கள் நீங்காத கடவூர் வீரட்டம் என்னும் கோயிலிலுள்ள அமுதகடேசராம் பெருமானை நாள்தோறும் விருப்புற்று நினைக்காததும், தகுதியற்றதுமான நெஞ்சம் தெளவு பெறாத அடியேன் யாது செய்வேன்?

திருப்புகலூர்

இலவினார் மாதர் பாலே
இசைந்துநா னிருந்து பின்னும்
நிலவுநாள் பலவென் றெண்ணி
நீதனே னாதி யுன்னை
உலவிநா னுள்க மாட்டே
னுன்னடி பரவு ஞானம்
செலவிலேன் செய்வ தென்னே
திருப்புக லூர னீரே. **#524**

திருப்புகலூர்ப் பெருமானே! இலவம் பூப்போன்ற வாயும் பாதங்களும் உள்ள பெண்கள் பால் இசைந்திருந்து இன்னும் அவர்களோடு பல நாள்கள் கூடி இருக்கப் போகிறோம் என்று கருதிக் கீழ்மகனாகிய அடியேன் அப்பெண்டிர் பக்கமே உலாவிக் கொண்டு உன்னை விருப்புடன் நினையாதேனாய் உன் திருவடிகளை முன்நின்று வழிபடும் சிவஞானம் என் உள்ளத்தில் பொருந்தும் நிலையினேன் அல்லேனாய் வாழும் யான் யாது செயற்பாலேன்?

திருப்புகலூர்

காத்திலே னிரண்டு மூன்றுங்
கல்வியே லில்லை யென்பால்
வாய்த்திலே னடிமை தன்னுள்
வாய்மையாற் றூயே னல்லேன்
பார்த்தனுக் கருள்கள் செய்த
பரமனே பரவு வார்கள்
தீர்த்தமே திகழும் பொய்கைத்
திருப்புக லூர னீரே. **#525**

பொய்கைகள் விளங்கும் திருப்புகலூர்ப் பெருமானே!

ஐம்பொறிகளையும் அடக்கினேன் அல்லேன். ஞானதேசிகராற் பெற்ற அனுபவ ஞானம் அடியேன்பால் இல்லை. உம் தொண்டில் அடியேன் வாய்ப்புப் பெற்றேன் அல்லேன். வாய்மையோடு தூய்மை உடையேன் அல்லேன். அருச்சுனனுக்கு அருள்கள் செய்த பெருமானே! வழிபடுவோர்களுடைய தீவினைகளுக்குக் கழுவாயாகி உள்ளவரே! யான் யாது செயற்பாலேன்?

திருப்புகலூர்

நீருமாய்த் தீயு மாகி
நிலனுமாய் விசும்பு மாகி
ஏருடைக் கதிர்க ளாகி
யிமையவ ரிறைஞ்ச **1**நின்றார்
2ஆய்வதற் கரிய ராகி
யங்கங்கே யாடு கின்ற
தேவர்க்குந் தேவ ராவர்
திருப்புக லூர னாரே. **#526**

நீராய்த், தீயாய், நிலனாய், வானமாய், அழகிய ஒளிப்பொருள்களாய்த் தேவர்கள் வழிபட நிற்பவராய், ஆராய்ந்தறிவதற்கு அரியராய்ப் பலப்பல இடங்களில் கூத்து நிகழ்த்தும் தேவதேவர் திருப்புகலூர்ப் பெருமானாவார்.

திருப்புகலூர்

மெய்யுளே விளக்கை யேற்றி
வேண்டள வுயரத் தூண்டி
உய்வதோ ருபாயம் பற்றி
யுகக்கின்றே னுகவா வண்ணம்
ஐவரை யகத்தே வைத்தீ
ரவர்களே வலியர் சாலச்
செய்வதொன் றறிய மாட்டேன்
திருப்புக லூர னீரே. **#527**

திருப்புகலூர்ப் பெருமானே! இவ்வுடம்பினுள்ளே சோடசகலாப் பிராசாத ஞான விளக்கை ஏற்றி, மும்மலங்களையும் கடத்தற்கு வேண்டிய அளவில் அதனைத் தூண்டிவிட்டுப் பிறவித் துன்பத்தினின்றும் தப்பிக்கொள்வதற்கு உரிய உபாயத்தை உறுதியாகப் பிடித்து மேலுயர்ந்து கொண்டிருக்கும் அடியேன் உயர முடியாதபடி ஐம்பொறிகளை அடியேன் உடலில் சால வலிமை உடையனவாக வைத்திருக்கின்றீர். ஆதலின், அடியேன் செய்வதறியேன்.

<u>திருப்புகலூர்</u>

அருவரை தாங்கி னானு
மருமறை யாதி யானும்
இருவரு மறிய மாட்டா
வீசனா ரிலங்கை வேந்தன்
கருவரை யெடுத்த ஞான்று
கண்வழி குருதி சோரத்
திருவிரல் சிறிது வைத்தார்
திருப்புக லூர னாரே. **#528**

திருப்புகலூர்ப் பெருமான் கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்து உயர்த்திய திருமாலும், அரிய வேதங்களை ஓதும் பிரமனும் ஆகிய இருவரும் அறியமாட்டாத ஈசனாய் இலங்கை மன்னனான இராவணன் கயிலையைப் பெயர்த்தபோது அவன் கண்வழியே இரத்தம் பெருகுமாறு கால்விரல் ஒன்றைச் சிறிது வைத்தவராவார்.

திருவலம்புரம்

திருவலம்புரம்

திருவலம்புரம், திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வலம்புரநாதர்.
தேவியார் : வடுவகிர்க்கண்ணம்மை.

தெண்டிரை தேங்கியோ தஞ்
சென்றடி வீழுங் காலைத்
தொண்டிரைத் தண்டர் கோனைத்
தொழுதடி வணங்கி யெங்கும்
வண்டுகண் மதுக்கண் மாந்தும்
வலம்புரத் தடிக டம்மைக்
கொண்டுநற் கீதம் பாடக்
குழகர்தா மிருந்த வாறே. **#529**

எங்கும் வண்டுகள் தேனை வயிறாரப் பருகும் வலம்புரத்திலுள்ள பெருமான் கடலிலுள்ள தெளந்த அலைகள் செறிந்து தம் திருவடிகளில் விழுந்து அலசும்போது, தொண்டர்கள் தம்மை அழைத்தவண்ணம் தொழுது அடியின் கண் வணங்கித் தம்மை உள்ளத்திலும், தம் சிறப்பை உரையிலும் கொண்டு பாடும் வண்ணம் இருந்தாவாறென்னே!

திருவலம்புரம்

மடுக்களில் வாளை பாய
வண்டின மிரிந்த பொய்கைப்
பிடிக்களி றென்னத் தம்மிற்
பிணைபயின் றணைவ ரால்கள்
தொடுத்தநன் மாலை யேந்தித்
தொண்டர்கள் பரவி யேத்த
வடித்தடங் கண்ணி பாகர்
வலம்புரத் திருந்த வாறே. **#530**

மாவடு போன்ற பெரிய கண்களை உடைய பார்வதிபாகர், மடுக்களிலே வாளை மீன்கள் பாயவும் வண்டினங்கள் அஞ்சி ஓடிய பொய்கைகளில் பிடியும் களிறும் போல வரால் மீன்கள் இரட்டையாகக் கலந்து கொண்டு அணையவும் வளம் சான்ற திருவலம் புரத்திலே, தொடுக்கப்பட்ட மாலைகளை ஏந்தியவர்களாய் அடியார்கள் முன்நின்று துதித்துப்போற்றும் வண்ணம் இருந்தவாறென்னே!

திருவலம்புரம்

தேனுடை மலர்கள் கொண்டு
திருந்தடி பொருந்தச் சேர்த்தி
ஆனிடை யஞ்சுங் கொண்டே
யன்பினா லமர வாட்டி
வானிடை மதியஞ் சூடும்
வலம்புரத் தடிக டம்மை
நானடைந் தேத்தப் பெற்று
நல்வினைப் பயனுற் றேனே. **#531**

தேனுள்ள பூக்களைப் பறித்துக் கொண்டு வந்து தம் அழகிய திருவடிகளிலே பொருந்துமாறு அவற்றை அர்ப்பணித்துப் பஞ்சகவ்வியத்தால் அடியார்கள் அபிடேகம் செய்ய அந்த அபிடேகத்தை உவந்து ஏற்று வானில் உலவவேண்டிய பிறையைச் சடையில் சூடிய வலம்புரத்துப் பெருமானை அடியேன் சரணமாக அடைந்து துதித்து நல்வினைப் பயனைப் பெற்றவனானேன்.

திருவலம்புரம்

முளையெயிற் றிளநல் லேனம்
பூண்டுமொய் சடைக டாழ
வளையெயிற் றிளைய நாகம்
வலித்தரை யிசைய வீக்கிப்
1புளைகயப் போர்வை போர்த்துப்
புனலொடு மதியஞ் சூடி
வளைபயி லிளைய ரேத்தும்
வலம்புரத் தடிக டாமே. **#532**

வலம்புரப்பெருமான் இளைய பெரிய பன்றியின் மூங்கில் முளைபோன்ற பற்களை அணிகலனாக மார்பில் பூண்டு, செறிந்த சடைகள் தாழ, வளைந்த பற்களை உடைய பாம்பினை இடைக்குப் பொருந்த இறுக்கிக்கட்டி, துதிக்கையை உடைய யானைத் தோலைப் போர்வையாக அணிந்து, கங்கையையும் பிறையையும் சடையிற் சூடி வளையல்களை அணிந்த மகளிர் தோத்திரிக்குமாறு அமைந்துள்ளார்.

திருவலம்புரம்

சுருளுறு வரையின் மேலாற்
றுலங்கிளம் பளிங்கு சிந்த
இருளுறு கதிர்நு ழைந்த
விளங்கதிர்ப் பசலைத் திங்கள்

அருளுறு மடிய ரெல்லா
மங்கையின் மலர்க ளேந்த
மருளுறு கீதங் கேட்டார்
வலம்புரத் தடிக ளாரே. **#533**

இரா வேளையில் நெற்பயிர்க்குள் விரவி அதற்கு வளர்ச்சிதரும் சந்திரன், மலைச்சிகரம் போல முடியப்பெற்ற தமது சுருண்ட சடையிலே நுழைந்து பளிங்கு போன்ற ஒளியை வெளிப்படுத்திக் கொண்டிருக்க, தம் அருளை அடைய விரும்பிய அடியார் எல்லோரும் அழகிய கைகளில் மலர்களை ஏந்தி நிற்க, அவர் பாடுகிற குறிஞ்சி யாழ்த்திறமான மருள் எனும் பண்ணிசை பொருந்திய பாடல்களைத் திருச்செவி சாத்தியவராய் உள்ளார்.

திருவலம்புரம்

நினைக்கின்றே னெஞ்சு தன்னா
னீண்டபுன் சடையி னானே
அனைத்துடன் கொண்டு வந்தங்
கன்பினா லமைய வாட்டிப்
புனைக்கின்றேன் பொய்ம்மை தன்னை
மெய்ம்மையைப் புணர மாட்டேன்
எனக்குநான் செய்வ தென்னே
யினிவலம் புரவ னீரே. **#534**

நீண்ட சிவந்த சடையை உடைய வலம்புரத்துப் பெருமானே! அபிடேகத்துக்குரிய எல்லாப் பொருள்களையும் கொண்டு வந்து உம்மை அன்போடு முறையாக அபிடேகித்து நற்கதியைச் சேர வல்லேன் அல்லேனாய்ப் பொய்மையைப் பெருக்கி வாழும் அடியேன், அச்செயல்களை மனத்தினால் நினைத்துப் பார்க்கின்றேனன்றி மெய்ம்மையைப் பொருந்த வல்லேனல்லேன். இனி, யான் எனக்குச் செய்து கொள்ளக் கூடியது யாதோ அறியேன்.

திருவலம்புரம்

செங்கயல் சேல்கள் பாய்ந்து
தேம்பழ மினிய நாடித்
தங்கயந் துறந்து போந்து
தடம்பொய்கை யடைந்து நின்று
கொங்கையர் குடையுங் காலைக்
கொழுங்கனி யழுங்கி னாராம்
மங்கல மனையின் மிக்கார்
வலம்புரத் தடிக ளாரே. **#535**

செங்கயல்களும், சேல்களும் தீங்கனியைப் பெற நாடித் தமது நீர்நிலைகளிலிருந்து பாய்ந்து போய், பெரும் பொய்கையை அடைந்து நின்று கொங்கையழகியரான மகளிர் முழுகும் போதில் அவர் கொங்கைகளைக் கனியென்று கருதிப் பற்றுதலால் வருந்தும் அம்மங்கையரின் மனைமாட்சி நிலவும் மனைகளால் மிக்க நிறையும் வலம்புரத்தார் (எம்) அடிகள்! (மிக்கு + ஆர் - மிக்கு நிறையும்.)

திருவலம்புரம்

அருகெலாங் குவளை செந்நெல்
அகலிலை யாம்ப னெய்தல்
தெருவெலாந் தெங்கு மாவும்
பழம்விழும் படப்பை யெல்லாம்
குருகினங் கூடி யாங்கே
கும்மலித் திறகு லர்த்தி
மருவலா மிடங்கள் காட்டும்
வலம்புரத் தடிக ளாரே. **#536**

ஊரின் அருகில் எல்லாம் செந்நெற்பயிர்களும் அப் பயிர்களின் இடையே பூத்த குவளை ஆம்பல் நெய்தல் என்ற பூக்களும் உள்ளன. தெருக்களிலெல்லாம் தென்னையும் மாமரங்களும் உள்ளன. மனைக்கொல்லைகளிலெல்லாம் பழங்கள் விழுகின்றன. அவ்வூரில் பறவை இனங்கள் கூடி ஒலித்து இறகுகளை உலர்த்தித் தங்கும் இடங்கள் பல உள்ளன. இத்தகைய வளங்கள் சான்ற வலம்புரத்திலே எம்பெருமான் உகந்தருளி உறைகின்றார்.

திருவலம்புரம்

கருவரை யனைய மேனிக்
கடல்வண்ண னவனுங் காணான்
திருவரை யனைய பூமேற்
றிசைமுக னவனுங் காணான்
ஒருவரை யுச்சி யேறி
யோங்கினா ரோங்கி வந்து
அருமையி லெளமை யானா
ரவர்வலம் புரவ னாரே. **#537**

கரிய மலை போன்ற திருமேனியை உடைய கடல் நிறத்தவனாகிய திருமாலும், திருமகள் தங்குவதற்கு என்று வரையறுக்கப்பட்ட தாமரைப்பூ மேல் உறையும் பிரமனும் காண முடியாத வராய், ஒப்பற்ற கயிலைமலையின் உச்சியில் மேம்பட்டு உறையும் பெருமான் தம் அருமையை எளிமையாக்கிக் கொண்டு வந்து

திருவலம்புரத்திறைவனாக உள்ளார்.

திருவலம்புரம்

வாளெயி றிலங்க நக்கு
வளர்கயி லாயந் தன்னை
ஆள்வலி கருதிச் சென்ற
வரக்கனை வரைக்கீ ழன்று
தோளொடு பத்து வாயுந்
தொலைந்துட னழுந்த வூன்றி
ஆண்மையும் வலியுந் தீர்ப்பா
ரவர்வலம் புரவ னாரே. **#538**

தன் ஆற்றலைப் பெரிதாக மதித்து கயிலாயத்தைப் பெயர்க்கச் சென்ற இராவணன் தன் தோள்களிருபதும் வாய்கள் (தலைகள்) பத்தும் அம்மலைக்கீழ் நசுங்கித் தொலையுமாறு, சிரித்துக் கொண்டே, தம் திருவடிகளால் அழுத்தமாக ஊன்றி அவ்வகையால் அவனது ஊக்கத்தையும் வலிமையையும் போக்கிய அத்தகையர் வலம்புரவனார் ஆவர்.

திருஆவடுதுறை

திருஆவடுதுறை

திருஆவடுதுறை, திருநேரிசை :
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாசிலாமணியீசுவரர்.
தேவியார் : ஒப்பிலாமுலையம்மை.

மாயிரு ஞால மெல்லா
மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப்
படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த
கழுமல வூரர்க் கம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலும்
ஆவடு துறைய னாரே. **#539**

ஆவடுதுறையனாருடைய மலர் போன்ற திருவடிகளைப் பெரிய உலகத்தவர் யாவரும் வணங்குவர். அப்பெருமான் பரவிய பெரிய கங்கா தேவியைப் பரந்த சடையில் வைப்பவர். மரங்கள் தோறும் காய்கள் மலியும் பெரிய சோலைகளால் சூழப்பட்ட சீகாழி ஊரினராகிய ஞானசம்பந்தப் பெருமானுக்குச் சிறந்த ஆயிரம் பொன்களை அளித்தவர் ஆவர்.

திருஆவடுதுறை

மடந்தைபா கத்தர் போலும்
மான்மறிக் கையர் போலும்
குடந்தையிற் குழகர் போலுங்
கொல்புலித் தோலர் போலும்
கடைந்தநஞ் சுண்பர் போலுங்
காலனைக் காய்வர் போலும்
அடைந்தவர்க் கன்பர் போலும்
ஆவடு துறைய னாரே. **#540**

பார்வதி பாகராய், மான்குட்டியை ஏந்திய கையினராய், கும்பகோணப்பதியில் இளையவராய், தம்மால் கொல்லப்பட்ட புலித்தோலை ஆடையாக உடுத்தவராய், கடல் கடைந்த காலத்து எழுந்த நஞ்சினை உண்டவராய், கூற்றுவனை வெகுண்டவராய்த் தம்மை அடைந்த அடியவருக்கு அன்பராய் அமைந்துள்ளார் ஆவடுதுறையனார்.

திருஆவடுதுறை

உற்றநோய் தீர்ப்பர் போலும்
உறுதுணை யாவர் போலும்
செற்றவர் புரங்கண் மூன்றுந்
தீயெழச் செறுவர் போலும்
கற்றவர் பரவி யேத்திக்
கலந்துலந் தலந்து பாடும்
அற்றவர்க் கன்பர் போலும்
ஆவடு துறைய னாரே. **#541**

அடியார்கள் உற்ற துயரைத் தீர்ப்பவராய் அவர்களுக்கு மேம்பாடான துணைவராய், பகைத்த அசுரரின் மும்மதில்களையும் தீக்கிரையாக்கியவராய், ஞானதேசிகர்பால் உபதேசம் பெற்ற கல்வியாளராம் அடியவர்களாய்க் கூடிவந்து அலந்து பாடுவோராய்த் தம்மிடமே அற்றுத் தீர்ந்த பற்றினராய் அன்பர்களுக்கு அன்பராய் உள்ளார் ஆவடுதுறையனார்.

திருஆவடுதுறை

மழுவமர் கையர் போலும்
மாதவள் பாகர் போலும்
எழுநுனை வேலர் போலும்
என்புகொண் டணிவர் போலும்
தொழுதெழுந் தாடிப் பாடித்
தோத்திரம் பலவுஞ் சொல்லி
அழுமவர்க் கன்பர் போலும்
ஆவடு துறைய னாரே. **#542**

கையில் மழுப்படையை ஏந்தியவராய், பார்வதி பாகராய், கூரிய நுனியை உடைய சூலத்தை ஏந்தியவராய், எலும்பினை மாலையாக அணிபவராய், தொழுது எழுந்து ஆடிப்பாடித் தோத்திரங்கள் பலவும் சொல்லி அழும் அடியவர்களுக்கு அன்பராய் உள்ளார் ஆவடுதுறைப் பெருமான்.

திருஆவடுதுறை

பொடியணி மெய்யர் போலும்
பொங்குவெண் ணூலர் போலும்
கடியதோர் விடையர் போலுங்
காமனைக் காய்வர் போலும்
வெடிபடு தலையர் போலும்

வேட்கையாற் பரவுந் தொண்டர்
அடிமையை **1**ஆள்வர் போலும
ஆவடு துறைய னாரே. **#543**

நீறணிந்த மேனியராய், ஒளி வீசும் வெள்ளிய பூணூலை அணிந்தவராய், விரைந்து செல்லும் காளை வாகனத்தவராய், மன்மதனை வெகுண்டவராய், சூட்டினால் வெடித்த தலை மாலையை உடையவராய், விருப்பத்தோடு முன்நின்று துதிக்கும் அடியவர்களுடைய அடிமையை விரும்புபவராய் உள்ளார் ஆவடுதுறைப் பெருமான்.

<u>திருஆவடுதுறை</u>

வக்கர னுயிரை வவ்வக்
கண்மலர் கொண்டு போற்றச்
சக்கரங் கொடுப்பர் போலுந்
தானவர் தலைவர் போலும்
துக்கமா மூடர் தம்மைத்
துயரிலே வீழ்ப்பர் போலும்
அக்கரை யார்ப்பர் போலும்
ஆவடு துறைய னாரே. **#544**

வக்கரன் உயிரைப் போக்குவதற்குத் திருமால் தன் கண்ணாகிய மலரை அர்ச்சித்து வழிபட அவருக்குச் சக்கரம் வழங்கியவராய், தானம் புரிபவர்களுக்குத் தலைவராய், அறிவற்றவர்களைத் துக்கம் தரும் பிறவித்துயரிலே வீழ்த்துபவராய், அக்கு மணியை இடையிலே அணிபவராய் உள்ளார் ஆவடுதுறைப் பெருமான்.

<u>திருஆவடுதுறை</u>

விடைதரு கொடியர் போலும்
வெண்புரி நூலர் போலும்
படைதரு மழுவர் போலும்
பாய்புலித் தோலர் போலும்
உடைதரு கீளர் போலும்
உலகமு மாவர் போலும்
அடைபவ ரிடர்க டீர்க்கும்
ஆவடு துறையனாரே. **#545**

காளை வடிவம் எழுதிய கொடியை உடையவராய், வெள்ளிய பூணூலை அணிந்தவராய், மழுப்படையை ஏந்தியவராய், பாயும் இயல்புள்ள புலியின் தோலை உடுத்தவராய், கீள் உடையை அணிபவராய், உலகங்களை ஆள்பவராய், தம்மை அடையும் அடியார்களின்

துயரங்களைத் தீர்ப்பவராயுள்ளார் ஆவடுதுறைப் பெருமான்.

திருஆவடுதுறை

முந்திவா னோர்கள் வந்து
முறைமையால் வணங்கி யேத்த
நந்திமா காள ரென்பார்
நடுவுடை யார்க ணிற்பச்
சிந்தியா தேயொ ழிந்தார்
திரிபுர மெரிப்பர்போலும்
அந்திவான் மதியஞ் சூடும்
ஆவடு துறைய னாரே. **#546**

மாலையில் வானத்தில் தோன்றும் பிறையைச் சூடிய ஆவடுதுறைப் பெருமான், முற்பட்டுத்தேவர்கள் வந்து முறைப்படி வணங்கித் துதிக்க, சிவபாதங்களைத்தம் நெஞ்சில் நடுதலாகிய செம்மையுள்ள நந்திமாகாளர் என்பவர்களைத் தவிரத் தம்மை வழிபடாது வீணானவரான அசுரர்களுடைய மும்மதில்களையும் அழித்தவராவர்.

திருஆவடுதுறை

பானம ரேன மாகிப்
பாரிடந் திட்ட மாலும்
தேனமர்ந் தேறு மல்லித்
திசைமுக முடைய கோவும்
தீனரைத் தியக் கறுத்த
திருவுரு வுடையர் போலும்
ஆனரை யேற்றர் போலும்
ஆவடு துறைய னாரே. **#547**

தம் பத்து அவதாரங்களுள் ஒன்றான பன்றி அவதாரத்திற் பூமியை அண்டவெளியிலிருந்து பெருவெள்ளத்தில் பெயர்த்தெடுத்த திருமாலும், தேன்மிக்க தாமரையின் அகவிதழிலிருக்கும் பிரமனும் தாம்தீத்தம்பத்தின் அடியையோ முடியையோ காணமாட்டாத துயரத்தினராக அவர்கள் மயக்கத்தைப் போக்கிய அழகிய வடிவினை உடையராய், வெண்ணிறக் காளை வாகனமுடையவராய் உள்ளார் ஆவடுதுறைப் பெருமான்.

திருஆவடுதுறை

பார்த்தனுக் கருள்வர் போலும்
படர்சடை முடியர் போலும்
ஏத்துவா ரிடர்கள் தீர

வின்பங்கள்கொடுப்பர் போலும்
கூத்தராய்ப் பாடி யாடிக்
கொடுவலி யரக்கன் றன்னை
ஆர்த்தவா யலறு விப்பார்
ஆவடு துறைய னாரே. #548

ஆவடுதுறைப் பெருமானார் அருச்சுனனுக்கு அருள் புரிந்தவராய், விரிந்து பரவிய சடைமுடியை உடையவராய், தம்மை வழிபடுபவர்களுடைய துயரங்கள் தீர அவர்களுக்கு இன்பம் நல்குபவராய், கூத்தாடுபவராய்ப் பாடியும் ஆடியும் விளங்குபவராய் உள்ளார். அவர், கொடிய வலிமையை உடைய இராவணனை, அவன் ஆரவாரித்துக் கொண்டு கயிலைமலையைப் பெயர்க்கவந்த அளவில், அவனுடைய வாய்கள் துயரம் தாங்காமல் அலறுமாறு செய்தவராவர்.

திருஆவடுதுறை

திருஆவடுதுறை, திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாசிலாமணியீசுவரர்.
தேவியார் : ஒப்பிலாமுலையம்மை.

மஞ்சனே மணியு மானாய்
மரகதத் திரளு மானாய்
நெஞ்சுளே புகுந்து நின்று
நினைதரு நிகழ்வி னானே
துஞ்சும்போ தாக வந்து
துணையெனக் காகி நின்று
அஞ்சலென் றருள வேண்டும்
ஆவடு துறையு ளானே. #549

ஆவடுதுறைப் பெருமானே! வலிமை உடையவனே! மணியே! மரகதமணிக் குவியலே! அடியேனுடைய உள்ளத்திற் புகுந்து உன்னை நினைக்கும் நிலையை இன்று தந்துள்ளவனே! யான் உயிர் நீக்கும் போது வந்து அடியேனுக்குத் துணையாக நின்று அஞ்சாதே என்று நீ அருள் செய்யவேண்டும்.

திருஆவடுதுறை

நானுகந் துன்னை நாளும்
நணுகுமா கருதி யேயும்
ஊனுகந் தோம்பு நாயே
னுள்ளுற வைவர்நின்றார்
தானுகந் தேயு கந்த

தகவிலாத் தொண்டனேனான்
ஆனுகந் தேறு வானே
ஆவடு துறையுளானே. #550

காளையை விரும்பி ஏறிஊர்பவனே! ஆவடுதுறைப் பெருமானே! நான் விரும்பி உன்னை அணுகி வரக் கருதியபோதும், உடம்பையே விரும்பிப் பாதுகாக்கும் அடியேனுடைய உட்புறத்தில் நிலையாக நிற்கும் ஐம்பொறிகளும் விரும்புவனவற்றையே யானும் விரும்பிச் செயற்பட்டுஉன் தொண்டன் என்று கூறும் தகுதியற்றவனாய் உள்ளேன்.

திருஆவடுதுறை

கட்டமே வினைக ளான
காத்திவை நோக்கி யாளாய்
ஒட்டவே யொட்டி நாளு
முன்னையுள் வைக்க மாட்டேன்
பட்டவான் றலைகை யேந்திப்
பலிதிரிந் தூர்க டோறும்
அட்டமா வுருவி னானே
யாவடு துறையு ளானே. #551

தன் பரிசழிந்த பெரிய மண்டையோட்டைக் கையில் ஏந்திப் பிச்சை எடுத்து ஊர்கள்தோறும் திரிந்தவனாய்உள்ள அட்ட மூர்த்தியாம் ஆவடுதுறைப் பெருமானே! அடியேன் துன்பம் மேவுதற்குக் காரணமான வினைகள் சாராதவாறு தடுத்து, உனக்கு அடியவனாய், நீ அருட் கண்ணால்நோக்கி அடியேன் உயிரோடு ஒட்டும்படியே, அடியேனும் உன்னோடு ஒட்டி நாளும் உன்னைத் தியானித்தலைச் செய்ய இயலாதேனாய் உள்ளேன்.

திருஆவடுதுறை

பெருமைநன் றுடைய தில்லை
யென்றுநான் பேச மாட்டேன்
ஒருமையா லுன்னை யுள்கி
யுகந்துவா னேற மாட்டேன்
கருமையிட் டாய வூனைக்
கட்டமே கழிக்கின் றேனான்
அருமையா நஞ்ச முண்ட
ஆவடு துறையு ளானே. #552

பெருமைகளை மிகுதியாக உள்ள தில்லைத் திருத்தலத்தைப் பற்றிப் பேசி நல்வினையைத் தேடிக் கொள்ளமாட்டேன். ஒருமைப்பட்ட

உள்ளத்தாலே உன்னை நினைத்து உகந்து பேசி வீட்டுலகை அடையமாட்டேன். ஆணவச் சார்பால் எய்திய உடம்பைத் துயரத்திலேயே கழிக்கின்றேன். நுகர்தற்கு அரிய விடத்தை உண்டு அருளிய ஆவடுதுறைப் பெருமானே! அடியேற்கு அருளுக.

திருஆவடுதுறை

துட்டனாய் வினைய தென்னுஞ்
சுழித்தலை யகப்பட் டேனைக்
கட்டனா வைவர் வந்து
கலக்காமைக் காத்துக்கொள்வாய்
மட்டவிழ் கோதை தன்னை
மகிழ்ந்தொரு பாகம் வைத்து
அட்டமா நாக மாட்டும்
ஆவடு துறையு ளானே. **#553**

நறுமணம் கமழும் மாலையை அணிந்த பார்வதியை மகிழ்வோடு ஒரு பாகமாக்கொண்டு எட்டுப்பெரிய பாம்புகளை ஆட்டுகின்ற ஆவடுதுறைப் பெருமானே! கொடியவனாய் வினை என்று சுழியில் அகப்பட்ட என்னைப் பாசத்தை உடையேனாக ஐம்பொறிகள் கலக்க முடியாதபடி பாதுகாத்து உன் அடியவனாகக் கொள்வாயாக.

திருஆவடுதுறை

காரழல் கண்டமே யாய்க்
கடிமதிற்புரங்கண் மூன்றும்
ஓரழ லம்பி னாலே
யுகைத்துத்தீயெரிய மூட்டி
நீரழற் சடையு ளானே
நினைப்பவர்வினைக டீர்ப்பாய்
ஆரழ லேந்தி யாடு
ஆவடு துறையு ளானே. **#554**

கரிய நெருப்பைப் போன்ற விடத்தை கழுத்தில் இருத்தி, பெரிய மதில்களை உடைய முப்புரங்களையும் ஒரு தீ அம்பைச் செலுத்தித் தீயினால் எரியுமாறு செய்து, கங்கையைத் தீப்போன்ற சடையில் வைத்துத் தன்னை விரும்பும் அடியவர்களுடைய வினைகளைத் தீர்ப்பவனாய் அரிய நெருப்பை உள்ளங்கையில் ஏந்திக் கூத்து நிகழ்த்தும் ஆவடுதுறைப் பெருமானே!

திருஆவடுதுறை

செறிவிலேன் சிந்தை யுள்ளே

சிவனடி தெரியமாட்டேன்
குறியிலேன் குணமொன் றில்லேன்
கூறுமா கூற மாட்டேன்
நெறிபடு மதியொன் றில்லே
னினையுமா நினையமாட்டேன்
அறிவிலே னயர்த்துப் போனே
னாவடு துறையுளானே. **#555**

ஆவடுதுறைப் பெருமானே! மனத்திலே அலைதல் இன்றி செறிவு இல்லாதேனாய்ச் சிவன் அடிகளை அறிய மாட்டேனாய்க் குறிக்கோள் இன்றி நற்பண்பின்றிப் பெரியோர்கள் கூறும் வழியிலே உன் புகழைச் சொல்ல மாட்டாதேனாய் நல்வழியில் செல்லும் அறிவில்லேனாய் நினைக்க வேண்டியவழியிலே நினைக்க மாட்டேனாய் இவ்வாறு உண்மை அறிவு இன்மையால் புல்லறிவினால் மயங்கிப் போயினேன்.

திருஆவடுதுறை

கோலமா மங்கை தன்னைக்
கொண்டொருகோல மாய
சீலமே யறிய மாட்டேன்
செய்வினை மூடிநின்று
ஞாலமா மிதனு ளென்னை
நைவியா வண்ணநல்காய்
ஆலமா நஞ்ச முண்ட
வாவடு துறையுளானே. **#556**

ஆலகால விடத்தை உண்ட ஆவடுதுறைப் பெருமானே! அழகிய பார்வதி பாகனான அழகினை உடைய உன் தன்மையை அறிய மாட்டேனாய் யான் செய்யும் இருவினையும் என்னைப் பிணித்து இவ்வுலகப் பாசத்துள் என்னை வருத்தாத வகையில் அடியேனை விரும்பிப் பாதுகாப்பாயாக.

திருஆவடுதுறை

நெடியவன் மலரி னானுந்
நேர்ந்திருபாலு நேடக்
கடியதோ ருருவ மாகிக்
கனலெரியாகி நின்ற
வடிவின வண்ண மென்றே
யென்றுதாம்பேச லாகார்
அடியனே னெஞ்சி னுள்ளார்
ஆவடு துறையுளானே. **#557**

திருமாலும் பிரமனும் தம்முள் உடன்பட்டு அடியும் முடியும் தேடுமாறு விரைவில் தீத்தம்பமாய் நின்றதன் வடிவமும் தன் நிறமும் இன்ன என்று தம்மால் பேச இயலாதாராக அவ்விருவரும் இருக்க ஆவடுதுறைப் பெருமான் அடியேன் உள்ளத்துள்ளே நிலையாக வீற்றிருக்கிறான்.

திருஆவடுதுறை

மலைக்குநே ராய ரக்கன்
சென்றுற மங்கையஞ்சத்
தலைக்குமேற் கைக ளாலே
தாங்கினான்வலியை மாள
வுலப்பிலா விரலா லூன்றி
யொறுத்தவற்கருள்கள் செய்து
அலைத்தவான் கங்கை சூடும்
ஆவடு துறையுளானே. **#558**

கயிலைமலைக்கு நேராக இராவணன் சென்று சேரப் பார்வதி அஞ்சத் தன் தலைக்கு மேலே கைகளாலே அம்மலையைப் பெயர்க்கத் தாங்கிய அவன் வலிமை அழியுமாறு என்றும் அழிவில்லாத தன் கால்விரலால் ஊன்றி அவனைத் தண்டித்து, அலைகளை உடைய சடையில் கங்கையைச் சூடும் ஆவடுதுறைப் பெருமான் பின் அவனுக்கு அருள் செய்தான்.

திருப்பருப்பதம்

திருப்பருப்பதம்

திருப்பருப்பதம், திருநேரிசை :
பண் - காந்தாரம்,
இத்தலம் வடநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பருப்பதேசுவரர்.
தேவியார் : மனோன்மணியம்மை.

கன்றினார் புரங்கண் மூன்றுங்
கனலெரி யாகச்சீறி
நின்றதோ ருருவந் தன்னா
னீர்மையு நிறையுங்கொண்டு
ஒன்றியாங் குமையுந் தாமு
மூர்பலி தேர்ந்துபின்னும்
பன்றிப்பின் வேட ராகிப்
பருப்பத நோக்கினாரே. **#559**

தம்மைவெகுண்ட பகைவர்களின் மும்மதில்களும் தீக்கு இரையாகுமாறு கோபித்து, தாமும் பார்வதியுமாக இணைந்து ஊர்தோறும் பிச்சைக்காகத் திரிந்து நின்ற தம் வேடப் பாங்கால் பிச்சையிட வந்த மகளிரின் இயல்பையும் நிறை என்ற பண்பையும் கவர்ந்தவராய்ப் பின்னும்அருச்சுனனுக்கு உதவ வேண்டிப் பன்றிப் பின் வேடராய்ச் சென்றவருமாவார்.அப்பெருமான் திருப்பருப்பதத்தைத் தம் உறைவிடமாகக்கொண்டார்.

திருப்பருப்பதம்

கற்றமா மறைகள் பாடிக்
கடைதொறும்பலியுந் தேர்வார்
வற்றலோர் தலைகை யேந்தி
வானவர் வணங்கிவாழ்த்த
முற்றவோர் சடையி னீரை
யேற்றமுக்கண்ணர் தம்மைப்
பற்றினார்க் கருள்கள் செய்து
பருப்பத நோக்கினாரே. **#560**

முனிவர்களுக்குக் கற்பித்தல் வகையால் தாம் கற்ற வேதங்களைப் பாடி, வீட்டுவாயில்தோறும் பிச்சை எடுப்பவராய், மண்டை ஓட்டைக் கையில் ஏந்தி, தேவர்கள் வணங்கி வாழ்த்துமாறு கங்கை முழுவதையும் தம் சடையில் ஏற்ற முக்கட்பெருமான் தம்மைப் பற்றிய அடியவர்கள்மாட்டு

அன்பு செய்து திருப்பருப்பதத்தைத் தம் உறைவிடமாகக் கொண்டார். (காட்டிக் காண்டல் என்ற நயம்பற்றிக் கற்பித்துக் கற்ற எனப்பட்டது.)

திருப்பருப்பதம்

கரவிலா மனத்த ராகிக்
கைதொழுவார்கட் கென்றும்
இரவுநின் றெரிய தாடி
யின்னருள் செய்யுமெந்தை
மருவலார் புரங்கண் மூன்று
மாட்டியவகைய ராகிப்
பரவுவார்க் கருள்கள் செய்து
பருப்பத நோக்கினாரே. **#561**

இரவிலே தீயில் நின்று ஆடுபவராய், பகைவருடைய மும்மதில்களையும் அழித்த செயலினராய், வஞ்சனையில்லாத மனத்தவராகிக் கையால் தொழும் அடியவர்களுக்கு என்றும் இனிய அருள்கள் செய்யும் எம் தந்தையாராகிய பெருமான் தம்மை முன்நின்று துதிப்பவர்களுக்குப்பல அருள்செய்து திருப்பருப்பதத்தைத் தம் உறைவிடமாகக் கொண்டார்.

திருப்பருப்பதம்

கட்டிட்ட தலைகை யேந்திக்
கனலெரி யாடிச்சீறிச்
சுட்டிட்ட நீறு பூசிச்
சுடுபிணக் காட ராகி
விட்டிட்ட வேட்கை யார்க்கு
வேறிருந்தருள்கள் செய்து
பட்டிட்ட வுடைய ராகிப்
பருப்பத நோக்கினாரே. **#562**

பண்டு உடலோடு பொருந்தியிருந்து பின் நீங்கிய மண்டையோட்டைக் கையில் ஏந்தி, ஒளிவீசும் தீயில் கூத்து நிகழ்த்தி, சாம்பலைப்பூசி, சுடுகாட்டில் தங்குபவராகி, உலகப்பற்றினை நீக்கிய அடியவர்களுக்குச் சிறப்பாக அருள்கள் செய்து பட்டுடையைஅணிந்த பெருமான் பருப்பதம் நோக்கினாரே.

திருப்பருப்பதம்

கையராய்க்கபால மேந்திக்
காமனைக்கண்ணாற் காய்ந்து
மெய்யராய் மேனி தன்மேல்
விளங்கு வெண் ணீறுபூசி

உய்வரா யுள்கு வார்கட்
குவகைகள் பலவுஞ் செய்து
பையரா வரையி லார்த்துப்
பருப்பத நோக்கி னாரே. **#563**
மண்டையோட்டை ஏந்திய கையினராய், மன்மதனை நெற்றிக் கண்ணால் வெகுண்டு சாம்பலாக்கி, வடிவை எடுத்துக் கொண்டவராய், உடம்பிலே விளங்கும் வெண்ணீற்றைப்பூசி, தாம் கடைத்தேறுபவர்களாய்ப் பெருமானாகிய தம்மைத் தியானிப்பவர்களுக்கு மகிழ்ச்சிதரும் செயல்களைச் செய்து, படம்எடுக்கும் பாம்பினை இடையில் இறுகக்கட்டிப் பெருமான் பருப்பதம் நோக்கினார்.

<u>திருப்பருப்பதம்</u>

வேடராய் வெய்ய ராகி
வேழத்தி னுரிவைபோர்த்து
ஓடரா யுலக மெல்லா
முழிதர்வருமையுந் தாமும்
காடராய்க் கனல்கை யேந்திக்
கடியதோர்விடைமேல் கொண்டு
பாடராய்ப் பூதஞ் சூழப்
பருப்பத நோக்கினாரே. **#564**
பெருமான், அருச்சுனன் பொருட்டு வேடன் வடிவம் எடுத்தவராய், கொடியவராகி யானையைக் கொன்று அதன் தோலைப்போர்த்து, மண்டையோட்டை ஏந்தி உலகமெல்லாம் சுற்றித் திரிபவராய், உமையம்மையும் தாமுமாய்ச் சுடுகாட்டில் உறைந்து, கையில் தீயை ஏந்தி, விரைந்து செல்லும் காளையை ஏறி ஊர்ந்து பாடிக்கொண்டு பூதங்கள் தம்மைச் சூழ திருப்பருப்பதம் நோக்கினார்.

<u>திருப்பருப்பதம்</u>

மேகம்போன் மிடற்ற ராகி
வேழத்தினுரிவை போர்த்து
ஏகம்ப மேவி னார்தா
மிமையவர்பரவி யேத்தக்
காகம்பர் கழற ராகிக்
கடியதோர்விடையொன் றேறிப்
பாகம்பெண் ணுருவ மானார்
பருப்பத நோக்கினாரே. **#565**
கார்மேகம் போன்ற நீலகண்டராய், யானையின் தோலைப் போர்த்து,

ஏகம்பத்தில் விரும்பி உறையும் பெருமானாய், தேவர்கள் முன்நின்று துதித்துப் புகழ, அவர்களைக் காப்பாற்றும் ஏகாம்பரநாதர் காலில் வீரக்கழலைப் பூண்டு பார்வதி பாகராய்க் காளையை ஏறி ஊர்ந்து பருப்பதம் நோக்கினார்.

திருப்பருப்பதம்

பேரிடர்ப் பிணிக டீர்க்கும்
பிஞ்ஞக னெந்தைபெம்மான்
காருடைக் கண்ட ராகிக்
கபாலமோர்கையி லேந்திச்
சீருடைச் செங்கண் வெள்ளே
றேறிய செல்வர்நல்ல
பாரிடம் பாணி செய்யப்
பருப்பத நோக்கி னாரே. **#566**

பெரிய துயர்களைத் தரும் பிணிகளைப் போக்குபவரும், தலைக்கோலத்தை அணிந்தவரும் எமக்குத் தந்தையாருமாகிய பெருமான், நீலகண்டராய், ஒரு கையில்மண்டையோட்டை ஏந்திச் சிறப்புப்பொருந்திய சிவந்தகண்களை உடைய திருமாலாகிய வெண்ணிறக் காளையை ஏறி ஊர்ந்த செல்வராய்ப் பெரிய பூதங்கள் தாளம்போடப் பருப்பதம் நோக்கினார்.

திருப்பருப்பதம்

அங்கண்மா லுடைய ராய
வைவரா லாட்டுணாதே
உங்கண்மால் தீர வேண்டி
லுள்ளத்தாலுள்கி யேத்தும்
செங்கண்மால் பரவி யேத்திச்
சிவனென நின்றசெல்வர்
பைங்கண்வெள் ளேற தேறிப்
பருப்பத நோக்கினாரே. **#567**

சிவந்த கண்களை உடைய திருமால் முன்நின்று துதித்துப்புகழ்ந்து சிவனாதல் உணருமாறு நிலைபெற்ற செல்வத்தை உடைய பெருமானார் பசிய கண்களை உடைய வெண்ணிற இடபத்தை இவர்ந்து பருப்பதத்தை அடைந்து அங்கு உறைகிறார். உடம்பாகிய அவ்விடத்திலே மயக்கத்தை உடைய ஐம்பொ களால் அவை விரும்பியபடி செயற்படுதலொழிந்து உங்களுடைய மயக்கம் நீங்குதலை விரும்பினால் அப்பெருமானாரை மனத்தால் தியானித்துத் துதியுங்கள்.

திருப்பருப்பதம்

அடல்விடை யூர்தி யாகி
யரக்கன்றோளடர வூன்றிக்
கடலிடை நஞ்ச முண்ட
கறையணி கண்டனார்தாம்
சுடர்விடு மேனி தன்மேற்
சுண்ணவெண்ணீறு பூசிப்
படர்சடை மதியஞ் சேர்த்திப்
பருப்பத நோக்கினாரே. **#568**

வலிய காளையை வாகனமாகக் கொண்டு, இராவணன் தோள்கள் வருந்துமாறு திருவடி விரல் ஒன்றனை ஊன்றி, கடலில் தோன்றிய விடத்தை உண்ட நீலகண்டர் ஒளி வீசும் தம் திருமேனியின் மீது திருநீற்றை அணிந்து, பரவிய சடையிலே பிறையைச் சூடிப் பருப்பதம் நோக்கினார்.

திருஅவளிவணல்லூர்

திருஅவளிவணல்லூர்

திருஅவளிவணல்லூர், திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சாட்சிநாயகேசுவரர்.
தேவியார் : சவுந்தரநாயகியம்மை.

தோற்றினா னெயிறு கவ்வித்
தொழிலுடையரக்கன் றன்னைத்
தேற்றுவான் சென்று சொல்லச்
சிக்கெனத்தவிரு மென்று
வீற்றினை யுடைய னாகி
வெடுவெடுத் தெழுந்தவன்றன்
ஆற்றலை யழிக்க வல்லா
ரவளிவ ணல்லூராரே. **#569**

தீத்தொழிலை உடைய இராவணன் கோபத்தால் தன் பற்கள் உதட்டைக் கவ்வ வெகுட்சியடைந்த போது அவன் கோபத்தைத் தணிக்க வேண்டித் தேரோட்டி உறுதியாகக் கோபத்தை விடுக்குமாறு சொல்ல, தற்பெருமை உடையவனாகிக் கயிலையைப் பெயர்க்க விரைந்து எழுந்த அவனுடைய ஆற்றலை அழித்த பெருமான் அவளிவணல்லூரில் உறைகின்றார்.

திருஅவளிவணல்லூர்

வெம்பினா ரரக்க ரெல்லா
மிகச்சழக்காயிற் றென்று
செம்பினா லெடுத்த கோயில்
சிக்கெனச்சிதையு மென்ன
நம்பினா ரென்று சொல்லி
நன்மையான்மிக்கு நோக்கி
அம்பினா லழிய வெய்தா
ரவளிவ ணல்லூராரே. **#570**

இராவணன் சீதாபிராட்டியை வஞ்சனையால் சிறை வைத்தசெயல் பெரிய குற்றமாயிற்று. ஆதலால் அச் செயலால் செம்பினால் உறுதியாக அமைக்கப்பட்ட அவன் அரண்மனை உறுதியாக அழிந்துவிடும் என்று நன்மனம் கொண்ட அரக்கர்கள் எல்லோரும் வேண்டினாராக, 'நம்மை விரும்பினவர்களுக்கு நாம் நன்மை செய்ய வேண்டும்' என்று விரும்பி நோக்கி, இராமபிரான் அம்பினால் இலங்கையை அழிப்பதற்கு அவன்

உள்ளிருந்து அம்பு எய்தவர் அவளிவணல்லூர்ப் பெருமானாவார்.

திருஅவளிவணல்லூர்

கீழ்ப்படக் கருத லாமோ
கீர்த்திமையுள்ள தாகில்
தோட்பெரு வலியி னாலே
தொலைப்பனான்மலையை யென்று
வேட்பட வைத்த வாறே
விதிர்விதிர்த்தரக்கன் வீழ்ந்து
ஆட்படக் கருதிப் புக்கா
ரவளிவ ணல்லூராரே. **#571**

புகழாந் தன்மை என்மாட்டு இருக்குமாயின் எந்நிலையிலும் அப்புகழ் கீழ்ப்பட நினைக்கலாமோ? 'என் தோள் வலிமையாலே இம்மலையை இடம் பெயர வைக்கிறேன்' என்று தன் விருப்பம் நிறைவேற இராவணன் செயற்பட்ட அளவிலே அவன் நடுநடுங்கி விழுந்து அடியவனாகுமாறு கருதி விரலால் அழுத்திய பெருமான் அவளிவணல்லூரில் உறைகின்றார்.

திருஅவளிவணல்லூர்

நிலைவலம் வல்ல னல்ல
னேர்மையைநினைய மாட்டான்
சிலைவலங் கொண்ட செல்வன்
சீரிய கயிலைதன்னைத்
தலைவலங் கருதிப் புக்குத்
தாக்கினான்றன்னை யன்று
அலைகுலை யாக்கு வித்தா
ரவளிவ ணல்லூ ராரே. **#572**

நிலைத்த வெற்றியை அடையவல்லவன் அல்லனாய், நேர்மையை நினைக்காமல், வில்லின் வெற்றியைக் கொண்ட செல்வராய தம்முடைய கயிலைமலையைத் தலைகளின் வலிமையை நினைத்துப் பெயர்க்க முற்பட்ட இராவணனை அன்று உடல் வருந்திச் குலையக் செய்த பெருமான் அவளிவணல்லூரில் உறைகின்றார்.

திருஅவளிவணல்லூர்

தவ்வலி யொன்ற னாகித்
தனதொருபெருமை யாலே
மெய்வ்வலி யுடைய னென்று
மிகப்பெருந்தேரை யூர்ந்து

செவ்வலி கூர்வி ழி(ய்)யாற்
சிரம்பத்தாலெடுக்குற் றானை
அவ்வலி தீர்க்க வல்லா
ரவளிவ ணல்லூராரே. **#573**

குறைந்த வலிமையை உடையவனாய் இருந்தும், செருக்கினாலே தன்னை உண்மையான வலிமை உடையவன் என்று கருதி மிகப் பெரிய தேரை ஊர்ந்து சென்று சிவந்த கொடிய கூர்மையான விழிகளால் கயிலையை நோக்கித் தன் பத்துத் தலைகளாலும் அதனைத் தூக்க முற்பட்ட இராவணனுடைய வலிமையைப் போக்கிய பெருமான் அவளிவணல்லூரில் உறைகின்றார்.

<u>திருஅவளிவணல்லூர்</u>

நன்மைதா னறிய மாட்டா
னடுவிலா வரக்கர்கோமான்
வன்மையே கருதிச் சென்று
வலிதனைச்செலுத்த லுற்றுக்
கன்மையான் மலையை யோடிக்
கருதித்தா னெடுத்துவாயால்
அம்மையோ வென்ன வைத்தா
ரவளிவ ணல்லூராரே. **#574**

நியாய உணர்வில்லாத இராவணன் தனக்கு நன்மையாவது இன்னது என்று அறிய இயலாதவனாய், தன் உடல் வலிமையையே பெரியதாகக் கருதித் தன் வலிமையைச் செயற்படுத்த முற்பட்டு, கல்லாந் தன்மையுடைய மலையை ஓடிச்சென்று தூக்கமுற்பட்டு வருந்தி, வாயினால் அம்மையோ என்று அலற வைத்த பெருமான் அவளிவணல்லூரில் உறைகிறார்.

<u>திருஅவளிவணல்லூர்</u>

கதம்படப் போது வார்கள்
போதுமக்கருத்தி னாலே
சிதம்பட நின்ற நீர்கள்
சிக்கெனத்தவிரு மென்று
மதம்படு மனத்த னாகி
வன்மையான்மிக்குநோக்க
அதம்பழத் துருவு செய்தா
ரவளிவ ணல்லூராரே. **#575**

'சிவபெருமான் வெகுளும் வகையில் அவனை எதிர்த்துச் செயற்படுபவர்கள் அழிந்து விடுவார்கள் என்ற எண்ணத்தால் இதற்கு

முன் எல்லாச் செயல்களிலும் வெற்றியையே அடைந்த தாங்கள் தோல்வி தரக்கூடிய இச்செயலைத் தவிர்த்து விடுங்கள்' என்ற தேரோட்டி சொல்லை மதியாது செருக்குக் கொண்ட மனத்தினனாய்த் தன் உடல் வன்மையால் கயிலையைப் பெயர்க்க மிகவும் முயல, அவ்விராவணன் உடம்பை அத்திப்பழம் போலச் சிவந்தும் குழைந்தும் நசிந்தும் போகுமாறு செய்த பெருமான் அவளிவணல்லூரில் உறைகின்றார்.

திருஅவளிவணல்லூர்

நாடுமிக் குழிதர் கின்ற
நடுவிலாவரக்கர் கோனை
ஓடுமிக்கென்று சொல்லி
யூன்றினானுகிரி னாலே
பாடிமிக் குய்வ னென்று
பணியநற் றிறங்கள்காட்டி
ஆடுமிக் கரவம் பூண்டா
ரவளிவ ணல்லூராரே. **#576**

பலநாடுகளிலும் சுற்றித் திரிந்த நியாய உணர்வில்லாத இராவணனை இவ்விடத்தை விட்டு விரைந்தோடு என்று அதட்டிக் கால்விரல் நகத்தினாலே அவனை ஊன்ற, நசுங்கிய அவன் மிகுதியாகப் பாடி உயிர் பிழைப்பேன் என்று எண்ணி பாடிப் பணிய அவனுக்குப் பலநன்மைகளைச் செய்தவராய்ப் படமெடுத்து ஆடும் பாம்புகளை மிகுதியாக அணிந்தவராகிய பெருமான் அவளிவணல்லூரில் உறைகின்றார்.

திருஅவளிவணல்லூர்

ஏனமா யிடந்த மாலு
மெழிறரு முளரியானும்
ஞானந்தா னுடைய ராகி
நன்மையையறிய மாட்டார்
சேனந்தா னிலாவ ரக்கன்
செழுவரை யெடுக்க வூன்றி
ஆனந்த வருள்கள் செய்தா
ரவளிவ ணல்லூ ராரே. **#577**

பன்றி வடிவெடுத்துப் பூமியைத் தோண்டிச் சென்ற திருமாலும், அழகிய தாமரையில் உறையும் பிரமனும் ஞானம் உடையவராய்த் தமக்கு நன்மை எது என்று அறியமாட்டாதவராய் இருந்தனர். பருந்துபோலப் பல இடங்களிலும் உலாவும் தன்மையை உள்ள இராவணன் கயிலைமலையைப் பெயர்க்க அவனை அழுத்திப் பின் அவனுக்கு

மகிழ்ச்சி தரும் அருள்களைச் செய்த பெருமான் அவளிவணல்லூரில் உறைகின்றார்.

திருஅவளிவணல்லூர்

ஊக்கினான் மலையை யோடி
யுணர்விலாவரக்கன் றன்னைத்
தாக்கினான் விரலி னாலே
தலைபத்துந்தகர வூன்றி
நோக்கினா னஞ்சத் தன்னை
நோன்பிறவூன்று சொல்லி
ஆக்கினா ரமுத மாக
வவளிவ ணல்லூராரே. **#578**

ஓடிச் சென்று கயிலையைப் பெயர்க்க முற்பட்ட அறிவில்லாத இராவணனைக் கால்விரலால் அழுத்திப் பத்துத்தலைகளும் நொறுங்கச் செய்து அவன் அஞ்சுமாறு அவனுடைய நோன்பின் பயன்களுங் கெட நோக்கிய பெருமான் பின் அவனை அழுத்தியதால் ஏற்பட்ட துயரைப் போக்கி அமுதம் போல் உதவி அவனை அழியாமற் காத்தார் அவளிவணல்லூரார்.

திருப்பெருவேளூர்

திருப்பெருவேளூர்

திருப்பெருவேளூர், திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரியாதநாதர்.
தேவியார் : மின்னனையாளம்மை.

மறையணி நாவி னானை
மறப்பிலார்மனத்து ளானைக்
கறையணி கண்டன் றன்னைக்
கனலெரி யாடினானைப்
பிறையணி சடையி னானைப்
பெருவேளூர் பேணினானை
நறையணி மலர்கள் தூவி
நாடொறும்வணங்கு வேனே. **#579**

வேதம் ஓதும் நாவினராய், தம்மை மறவாதார் மனத்தில் உள்ளவராய், நீலகண்டராய், ஒளிவீசும் நெருப்பில் கூத்து நிகழ்த்துபவராய், பிறையை அணிந்த சடையினராய்ப் பெருவேளூரை விரும்பி உறையும் பெருமானை நறுமண மலர்களைத் தூவி நாள்தோறும் வணங்குவேன் நான்.

திருப்பெருவேளூர்

நாதனா யுலக மெல்லா
நம்பிரானெனவு நின்ற
பாதனாம் பரம யோகி
பலபல திறத்தினாலும்
பேதனாய்த் தோன்றி னானைப்
பெருவேளூர் பேணினானை
ஓதநா வுடைய னாகி
யுரைக்குமாறுரைக்குற் றேனே. **#580**

தலைவனாய், உலகிலுள்ளார் எல்லாம் நம்முடைய பெருமான் என்று கூறுமாறு நிலைபெற்ற திருவடிகளை உடைய மேம்பட்ட யோகியாய், பலவகையாலும் ஒன்றோடொன்று ஒவ்வாப் பலவேடமும் தரித்துக் கொண்டு தோன்றுபவனாய்ப் பெருவேளூரை விரும்பி உறையும் பெருமானைத் தோத்திரிக்கும் நாவினை உடையேனாகிச் சான்றோர் உரைக்கும் வகையிலே உரைத்தலை உடையேன் நான்.

திருப்பெருவேளூர்

குறவிதோண் மணந்த செல்வக்
குமரவே டாதையென்றும்
நறவிள நறுமென் கூந்த
னங்கையோர்பாகத் தானைப்
பிறவியை மாற்று வானைப்
பெருவேளூர் பேணினானை
உறவினால் வல்ல னாகி
யுணருமா றுணர்த்துவேனே. **#581**

குறத்தியாகிய வள்ளியின் தோள்களை மணந்த செல்வனாகிய குமரவேளுடைய தந்தையாராய், என்றும் மணமுள்ள கூவிளம் பூவை அணிந்த நறிய மெல்லிய கூந்தலை உடைய இளைய நங்கையாகிய பார்வதி பாகராய்ப் பிறவிப் பிணியைப் போக்குபவராய்ப் பெருவேளூரை விரும்பி உறையும் பெருமானை அவரிடத்து அடியேன் கொண்ட உறவினால் உணர்ந்த வண்ணம் உணர்த்துவேன் நான்.

திருப்பெருவேளூர்

மைஞ்ஞவில் கண்டன் றன்னை
வலங்கையின்மழுவொன் றேந்திக்
கைஞ்ஞவின் மானி னோடுங்
கனலெரி யாடினானைப்
பிஞ்ஞகன் றன்னை யந்தண்
பெருவேளூர் பேணினானைப்
பொய்ஞ்ஞெக நினைய மாட்டாப்
பொறியிலாவறிவி லேனே. **#582**

நஞ்சுண்ட கருமை படர்ந்த நீல கண்டனாய், வலக்கையில் ஒரு மழுவை ஏந்தி, இடக்கையிற் பொருந்திய மானோடு ஒளி வீசும் தீயிடை ஆடுபவனாய், தலைக்கோலம் அணிந்தவனாய், அழகிய பெருவேளூரில் விரும்பி உறையும் பெருமானைப் பொய்ம்மை நீங்க நினைக்க இயலேனாய் நினைதற்காம் நல்வினையும் அறிவும் இல்லாதவன் நான்.

திருப்பெருவேளூர்

ஓடைசேர் நெற்றி யானை
யுரிவையை மூடி னானை
வீடதே காட்டு வானை
வேதநான் காயினானைப்
பேடைசேர் புறவ நீங்காப்

பெருவேளூர் பேணினானைக்
கூடநான் வல்ல மாற்றங்
குறுகுமா றறிகிலேனே. **#583**
நெற்றிப்பட்டம் அணிந்த யானைத் தோலைப் போர்த்தவராய், அடியார்களுக்கு வீடுபேறு வழங்குபவராய், நான்கு வேத வடிவினராய், பேடையொடு கூடிய புறாக்கள் நீங்காது உறையும் பெருவேளூரை விரும்பி உறையும் பெருமானைக் கூடவல்ல, உலகியலுக்கு மாறுபட்ட வழியாகிய இறை நெறியிலே சென்று அவனை நெருங்கும் முறையை அறியேன்.

<u>திருப்பெருவேளூர்</u>

கச்சைசேர் நாகத் தானைக்
கடல்விடங்கண்டத் தானைக்
கச்சியே கம்பன் றன்னைக்
கனலெரி யாடுவானைப்
பிச்சைசேர்ந் துழல்வினானைப்
பெருவேளூர் பேணி னானை
இச்சைசேர்ந் தமர நானு
மிறைஞ்சுமாறிறைஞ்சு வேனே. **#584**
நாகத்தைக் கச்சாக அணிந்து; கடல் விடத்தைக் கழுத்தில் இருத்தி, காஞ்சியில் ஏகம்பத்தில் உறைபவராய், ஒளிவீசும் தீயில் கூத்து நிகழ்த்துபவராய், பிச்சை எடுப்பதற்கு அலைபவராய், பெருவேளூரை விரும்பித் தங்கும் பெருமானை என் இச்சை நிறைவுற வழிபடும் வழியாலே வழிபடுவேன் நான்.

<u>திருப்பெருவேளூர்</u>

சித்தராய் வந்து தன்னைத்
திருவடி வணங்குவார்கள்
முத்தனை மூர்த்தி யாய
முதல்வனைமுழுது மாய
பித்தனைப் பிறரு மேத்தப்
பெருவேளூர் பேணினானை
மெத்தநே யவனை நாளும்
விரும்புமாறறிகி லேனே. **#585**
ஞானிகளாய் வந்து தம் திருவடிகளை வணங்குபவர்களுக்கு முத்தியை வழங்குபவராய், ஞானமூர்த்தியாகிய முதல்வராய், எல்லா உலகமும் தாமேயாகிய பித்தராய், மற்றவர் யாவரும் தம்மைத் துதிக்குமாறு பெருவேளூரை விரும்பியமிக்க அன்புடைய பெருமானை நாளும்

விரும்பும் திறத்தை அறியாதேன் நான்.

திருப்பெருவேளூர்

முண்டமே தாங்கி னானை
முற்றிய ஞானத் தானை
வண்டுலாங் கொன்றை மாலை
வளர்மதிக்கண்ணி யானைப்
பிண்டமே யாயி னானைப்
பெருவேளூர் பேணினானை
அண்டமா மாதி யானை
யறியுமா றறிகிலேனே. **#586**

தலைமாலையைப் பூண்டவராய், பூரண ஞானமுடையவராய், வண்டுகள் உலவும் கொன்றை மாலையையும் பிறையையும் முடிமாலையாக உடையவராய், என் உடலாகவும் உள்ளவராய்ப் பெருவேளூர்ப் பெருமானாய் எல்லா உலகங்களுமான முதற்கடவுளாய் உள்ள பெருமானை அறியும் வழியால் அறிய இயலாதேனாய் உள்ளேன் நான்.

திருப்பெருவேளூர்

விரிவிலா வறிவி னார்கள்
வேறொருசமயஞ் செய்து
எரிவினாற் சொன்னா ரேனு
மெம்பிராற்கேற்ற தாகும்
பரிவினாற் பெரியோ ரேத்தும்
பெருவேளூர் பற்றி னானை
மருவிநான் வாழ்த்தி யுய்யும்
வகையது நினைக்கின்றேனே. **#587**

விரிவடையாத சிற்றறிவுடையவர்கள் புதியதொரு சமயத்தை உண்டாக்கி வயிற்றெரிச்சலால் அச்சமயத்துக்குப் பிரசாரம் செய்தாராகிலும் அதுவும் பெருமானுக்கு ஏற்புடைய செயலேயாகும். பெரியோர்கள் அன்போடு துதிக்கும் பெருவேளூர்ப் பெருமானைப் பொருந்தி அடியேன் வாழ்த்திப் பிறவிப் பிணியிலிருந்து விடுபடும் வழியை விருப்புற்று நினைக்கின்றேன் நான்.

திருப்பெருவேளூர்

பொருகட லிலங்கை மன்ன
னுடல்கெடப்பொருத்தி நல்ல
கருகிய கண்டத் தானைக்
கதிரிளங்கொழுந்து சூடும்

பெருகிய சடையி னானைப்
பெருவேளூர் பேணினானை
உருகிய வடிய ரேத்து
முள்ளத்தாலுள்கு வேனே. **#588**

அலைகள் மோதும் கடலிடை அமைந்த இலங்கை மன்னனாகிய இராவணனுடைய உடல் நசுங்குமாறு தம் கால்விரலை அழுத்தியவராய், நல்ல நீலகண்டராய், ஒளிவீசும் பிறையைச் சூடும்பரந்த சடையினராய்ப் பெரு வேளூரில் உள்ள பெருமானாரை மனம் உருகிய அடியவர்கள் போற்றும் உள்ளத்தை அடியேனும் பக்குவத்தால் பெற்று அப்பெருமானை விருப்புற்று நினைப்பேன் நான்.

திருஇராமேச்சுரம்

திருஇராமேச்சுரம்

திருஇராமேச்சுரம், திருநேரிசை,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : இராமநாதேசுவரர்.
தேவியார் : பர்வதவர்த்தனி.

பாசமுங் கழிக்க கில்லா
வரக்கரைப்படுத்துத் தக்க
வாசமிக் கலர்கள் கொண்டு
மதியினான்மால்செய் கோயில்
நேசமிக் கன்பி னாலே
நினைமினீர்நின்று நாளும்
தேசமிக் கானி ருந்த
திருவிரா மேச்சுரம்மே. **#589**

நீக்க வேண்டிய பாசத்தை நீக்கும் ஆற்றல் இல்லாத அரக்கர்களை அழித்து மேம்பட்ட சிவஞானத்தால் இராமனாய் அவதரித்த திருமால் அமைத்த கோயிலிலே ஒளிமிக்க சிவபெருமான் உகந்தருளியிருக்கும் திரு இராமேச்சுரத்தை வாசனை மிக்க பூக்களை அர்ப்பணித்து நாள்தோறும் நிலையாகப்பற்றுமிகுந்த அன்போடு எல்லீரும் விருப்புற்று நினையுங்கள்.

திருஇராமேச்சுரம்

முற்றின நாள்க ளென்று
முடிப்பதேகார ண(ம்)மாய்
உற்றவன் போர்க ளாலே
யுணர்விலாவரக்கர் தம்மைச்
செற்றமால் செய்த கோயி
றிருவிரா மேச்சுரத்தைப்
பற்றிநீ பரவு நெஞ்சே
படர்சடையீசன் பாலே. **#590**

நெஞ்சே! அரக்கர்கள் உயிர்வாழ்வதற்கு வகுத்த நாள்கள் முடிந்து விட்டதனால் அவர்களை அழிப்பதனையே காரணமாகக் கொண்டு ஏற்பட்ட வலியபோரினால் மெய்யுணர்வு இல்லாத அரக்கர்களை அழித்த இராமன் ஆகிய திருமால் அமைத்த இராமேச்சுரத்தை உகந்தருளியிருக்கும், பரவிய சடையை உடைய சிவபெருமானிடத்துப் பற்றினைக் கொண்டு நீ முன் நின்று போற்றுவாயாக.

திருஇராமேச்சுரம்

கடலிடை மலைக டம்மா
லடைத்துமால்கரும முற்றித்
திடலிடைச் செய்த கோயிற்
றிருவிரா மேச்சுரத்தைத்
தொடலிடை வைத்து நாவிற்
சுழல்கின்றேன்தூய்மை யின்றி
உடலிடை நின்றும் பேரா
வைவராட் டுண்டுநானே. **#591**

கடலிடத்தை மலைகளால் அடைத்துத் திருமால் தம் செயலை முடித்துப் பின் கடலை அடுத்த மேட்டில் செய்த இராமேச்சுரத்தை, இவ்வுடம்பினின்றும் நீங்காத ஐம்பொறிகளால் தம் விருப்பப்படி செயற்படுத்தப்பட்டு தூய்மையின்றி, நாவிடைவைத்துப் போற்று தலைச் செய்து தடுமாறுகின்றேன். (நாவில் தொடல் இடை - வாக்கு.)

திருஇராமேச்சுரம்

குன்றுபோற் றோளு டைய
குணமிலா வரக்கர்தம்மைக்
கொன்றுபோ ராழி யம்மால்
வேட்கையாற்செய்த கோயில்
நன்றுபோ னெஞ்ச மேநீ
நன்மையை யறிதி யாயில்
சென்றுநீ தொழுதுய் கண்டாய்
திருவிரா மேச்சுரம்மே. **#592**

நெஞ்சமே! நீ நன்மையை அறிவாயானால் மலைகளைப்போன்ற தோள்களையுடைய நற்பண்பு இல்லாத அரக்கர்களைக் கொன்று போரிடும் சக்கராயுதத்தை உடைய திருமால் விருப்பத்தோடு அமைத்த இராமேச்சுரக் கோயிலை, சென்று தொழுது கடைத்தேறுவாயாக. அறியாயாயின் நின் நிலை நன்றல்ல. (நன்று போல்).

திருஇராமேச்சுரம்

வீரமிக் கெயிறு காட்டி
விண்ணுற நீண்டரக்கன்
கூரமிக் கவனைச் சென்று
கொன்றுடன்கடற்ப டுத்துத்
தீரமிக் கானி ருந்த
திருவிரா மேச்சுரத்தைக்

கோரமிக் கார்த வத்தாற்
கூடுவார்குறிப்பு ளாரே. **#593**

கடலைச் சேது கட்டித்தடுத்து, வீரம் மேம்பட்டுக் கோரைப் பற்களை வெளியே காட்டிக் கொண்டு வானளாவ உயர்ந்த கொடுமைமிக்க அரக்கனாகிய இராவணனை இலங்கைக்குச் சென்று அங்கே கொன்று, மீண்டு பேராற்றலுடைய திருமால் கோயில் செய்து வழிபட்டிருந்த இராமேச்சுரத்தை, அஞ்சத்தகும் பான்மையுள்ள தீவிர சாதனைகளால் சென்றடைவார் தம் குறிக்கோள் நிரம்பப் பெறுவர்.

திருஇராமேச்சுரம்

ஆர்வல நம்மின் மிக்கா
ரென்றவவ்வரக்கர் கூடிப்
போர்வலஞ் செய்து மிக்குப்
பொருதவர்தம்மை வீட்டித்
தேர்வலஞ் செற்ற மால்செய்
திருவிரா மேச்சுரத்தைச்
சேர்மட நெஞ்ச மேநீ
செஞ்சடை யெந்தைபாலே. **#594**

மட நெஞ்சமே! 'நம்மை விட வலிமை மிக்கவர்யாவர்' என்று செருக்குற்ற அவ்வரக்கர்கள் ஒன்று கூடிப் போரிலே வெற்றியைக் கருதி வலிமைமிக்குப் போரிட்டாராக, அவர்களை அழித்து அவர்களுடைய தேர்ப்படையின் வலிமையையும் போக்கிய திருமால் அமைத்த இராமேச்சுரத்தை அணுகிச் செஞ்சடைப் பெருமான்பால் அடைவாயாக.

திருஇராமேச்சுரம்

வாக்கினா லின்பு ரைத்து
வாழ்கிலார்தம்மை யெல்லாம்
போக்கினாற் புடைத்த வர்கள்
உயிர்தனை யுண்டுமாறான்
தேக்குநீர் செய்த கோயி
றிருவிரா மேச்சு ரத்தை
நோக்கினால் வணங்கு வார்க
ணோய்வினை நுணுகு மன்றே. **#595**

இனிமையாகப் பேசுதற்கு அமைந்த வாயாலே இனிய சொற்களைப் பேசி வாழாத அரக்கர்களை அழிக்கத்தக்க படைகளால் தாக்கி அவர்கள் உயிரை உண்டு திருமால் கடல் நீரைத் தேக்கிய அணையின் கரையில் அமைத்த கோயிலாகிய இராமேச்சுரத்தை அகநோக்கிலும் புறநோக்கிலும் கண்டு தரிசித்துத் தலையால் வணங்குபவருடைய

நோய்களும் வினைகளும் அழிந்துவிடும்.

திருஇராமேச்சுரம்

பலவுநா டீமை செய்து
பார்தன்மேற்குழுமி வந்து
கொலைவிலார் கொடிய ராய
வரக்கரைக்கொன்று வீழ்த்த
சிலையினான் செய்த கோயி
றிருவிரா மேச்சுரத்தைத்
தலையினால் வணங்கு வார்கள்
தாழ்வராந்தவம தாமே. **#596**

பலகாலமாக இவ்வுலகில் கூட்டமாகத் தோன்றித் தீமைகளையே செய்து கொல்லும் வில்லை ஏந்திய கொடியவர்களான அரக்கர்களைக் கொன்று வீழ்த்திய வில்லை ஏந்திய திருமால் அமைத்த இராமேச்சுரக் கோயிலைத் தலையினால் வணங்கும் அடியவர்கள் பின் உடம்பாலும் முழுமையாக விழுந்து வணங்குவார்கள். அச்செயல் தவப் பயனால் நிகழ்வதாகும்.

திருஇராமேச்சுரம்

கோடிமா தவங்கள் செய்து
குன்றினார்தம்மை யெல்லாம்
வீடவே சக்க ரத்தா
லெறிந்துபின்னன்பு கொண்டு
தேடிமால் செய்த கோயி
றிருவிரா மேச்சுரத்தை
நாடிவாழ் நெஞ்ச மேநீ
நன்னெறியாகு மன்றே. **#597**

நெஞ்சே! பல ஆண்டுகள் சிறந்த தவத்தைச் செய்து, ஒழுக்கக் கேடு உள்ள அரக்கர்களை எல்லாம் அவர்கள் அழியுமாறு சக்கரம் முதலிய படைகளால் அழித்துப் பின்தக்க இடத்தைத் தேடித் திருமால் அமைத்த இராமேச்சுரத்தை நீ விரும்பிச் சென்று வாழ்தி. அதுவே உனக்கு நன்னெறியாம்.

திருஇராமேச்சுரம்

வன்கண்ணர் வாள ரக்கர்
வாழ்வினையொன்ற றியார்
புன்கண்ண ராகி நின்று
போர்கள்செய்தாரை மாட்டிச்
செங்கண்மால் செய்த கோயி

றிருவிரா மேச்சுரத்தைத்
தங்கணா லெய்த வல்லார்
தாழ்வராந்தலைவன் பாலே. **#598**

அகத்தில் உள்ள வன்மையைப் புறத்தில் காட்டும் கண்களை உடைய கொடிய அரக்கர்கள் வாழும் செயலை அறியாராய்த் துன்புறுத்தும் இயல்பினராய் நின்று போர்களைச் செய்ய, அவரை அழித்துச் சிவந்த கண்களை உடைய திருமால் அமைத்த இராமேச்சுரக் கோயிலைத் தம் கண்ணால் தரிசிக்கும் நற்பேறு உடையவர்கள் சிவபெருமான் பக்கலிலேயே தங்கும் வாய்ப்பினைப் பெறுவர்.

<u>திருஇராமேச்சுரம்</u>

வரைகளொத் தேயு யர்ந்த
மணிமுடி யரக்கர்கோனை
விரையமுற் றறவொ டுக்கி
மீண்டுமால்செய்த கோயில்
திரைகள்முத் தால்வ ணங்குந்
திருவிரா மேச்சுரத்தை
உரைகள்பத் தாலு ரைப்பா
ருள்குவா ரன்பினாலே. **#599**

மலைகளை ஒத்து உயர்ந்த, மணிகள் வைத்து இழைக்கப்பட்ட கிரீடங்களை உடைய அரக்கர் தலைவனான இராவணனை விரைவாக அடியோடு அழித்துத் தமிழகம் திரும்பித் திருமால் செய்த கோயிலாய் அலைகள் முத்துக்களைச் சமர்ப்பித்து வணங்கும் திரு இராமேச்சுரத்தை முன்னைய இப்பத்துப் பாடல்களாலும் போற்றுபவர்கள் அன்பினாலே தியானித்து நற்பேறு பெறுபவராவர்.

திருவாலவாய்

திருஆலவாய்

திருவாலவாய், திருநேரிசை,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. இதுவே மதுரை. ,
சுவாமிபெயர் : சொக்கநாதசுவாமி.
தேவியார் : மீனாட்சியம்மை.

வேதியா வேத கீதா
விண்ணவ ரண்ணாவென்றென்
றோதியே மலர்கள் தூவி
யொருங்கிநின்கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய்
படர்சடை மதியஞ்சூடும்
ஆதியே யால வாயில்
அப்பனேயருள்செ யாயே. **#600**

மறைமுதல்வனே! மறைகளைப் பாடுகின்றவனே! தேவர்கள் தலைவனே! பார்வதிபாகனே! பரவிய சடையிற் பிறையைச் சூடும் ஆதிப்பெருமானே! திருஆலவாயிலுள்ள அப்பனே! உன்திரு நாமங்களைப் பலகாலும் ஓதி மலர்கள் தூவி ஒருவழிப்பட்ட மனத்தோடு உன்திருவடிகளை அடியேன் காணுமாறு அருள் செய்வாயாக.

திருஆலவாய்

நம்பனே நான்மு கத்தாய்
நாதனே ஞானமூர்த்தீ
என்பொனே யீசா வென்றென்
றேத்திநா னேசற்றென்றும்
பின்பினே திரிந்து நாயேன்
பேர்த்தினிப்பிறவா வண்ணம்
அன்பனே யால வாயில்
அப்பனேயருள்செ யாயே. **#601**

எல்லோராலும் விரும்பப்படுபவனே! நான்கு முகங்களை உடையவனே! தலைவனே! ஞான வடிவினனே! என் பொன் போன்றவனே! எல்லோரையும் ஆள்பவனே! அன்பனே! ஆலவாயில் அப்பனே! உன்னைப் பலகாலும் துதித்து அடியேன் மனத்திரிபுகளை நீக்கி, பொறிபுலன்களின் வழியேசென்று பிறவாத வண்ணம் நாயேனுக்கு அருள் செய்வாயாக.

திருஆலவாய்

ஒருமருந் தாகி யுள்ளா
யும்பரோடுலகுக் கெல்லாம்
பெருமருந் தாகி நின்றாய்
பேரமு தின்சுவையாய்க்
கருமருந் தாகி யுள்ளா
யாளும்வல்வினைக டீர்க்கும்
அருமருந் தால வாயில்
அப்பனேயருள்செ யாயே. **#602**

ஒப்பற்ற தேவாமிருதமாய் உள்ளவனே! தேவர்களுக்கும் மக்களுக்கும் தலையான மருந்தாக உள்ளவனே! சிறந்த அமுதின் சுவையாய்ப் பிறவிப் பிணி தீர்க்கும் மருந்தாகி உள்ளவனே! எங்கள் வலிய வினைகளைப் போக்கி எங்களை அடிமை கொள்ளும் அருமருந்தாய் ஆலவாயில் உறையும் தலைவனே! அருள் செய்வாயாக.

திருஆலவாய்

செய்யநின் கமல பாதஞ்
சேருமா தேவர்தேவே
மையணி கண்டத் தானே
மான்மறிமழுவொன் றேந்தும்
சைவனே சால ஞானங்
கற்றறிவிலாத நாயேன்
ஐயனே யால வாயில்
அப்பனேயருள்செ யாயே. **#603**

தேவர்தேவனே! நீலகண்டனே! மான்மறியையும் மழுப்படையையும் ஏந்தியுள்ளவனாய சைவ சமயக்கடவுளே! ஞானத்தை முறையாகக் கற்றறியும் வாய்ப்பு இல்லாத அடியேனுடைய தலைவனே! ஆலவாயில் உறையும் அப்பனே! உன்னுடைய சிவந்த தாமரை போன்ற பாதங்களை அடியேன் சேரும்படி மிகவும் அருள் செய்வாயாக.

திருஆலவாய்

வெண்டலை கையி லேந்தி
மிகவுமூர் பலி கொண் டென்றும்
உண்டது மில்லை சொல்லி
லுண்டது நஞ்சசுதன்னைப்
பண்டுனை நினைய மாட்டாப்
பளகனே னுளம தார

அண்டனே யால வாயில்
அப்பனேயருள்செ யாயே. #604
உலகத் தலைவனே! ஆலவாய் அப்பனே! வெள்ளிய மண்டையோட்டைக் கையில் ஏந்தி மிகவும் ஊர்களில் பிச்சையெடுத்தும் அப்பிச்சை உணவை உண்ணாது விடம் ஒன்றையே உண்டவன் என்று சொல்லப் படும் உன்னை அடியேன் வாழ்வின் முற்பகுதியில் விருப்புற்று நினைக்காத குற்றத்தினேன். அத்தகைய அடியேனுடைய உள்ளம் நிறையும்படி அருள்செய்வாயாக.

திருஆலவாய்

எஞ்சலில் புகலி தென்றென்
றேத்திநாளேசற் றென்றும்
வஞ்சக மொன்று மின்றி
மலரடி காணும்வண்ணம்
நஞ்சினை மிடற்றில் வைத்த
நற்பொருட் பதமேநாயேற்
கஞ்சலென் றால வாயில்
அப்பனே யருள்செ யாயே. #605
விடத்தைக் கழுத்தில் அடக்கிய, சிவம் என்ற சொற் பொருளானவனே! ஆலவாயில் அப்பனே! என்றும் அழிவில்லாத அடைக்கலமாகும் இடம் என்று புகழ்ந்து நான் மகிழ்ந்து என்றும் வஞ்சனையின்றி உன் மலர் போன்ற திருவடிகளைத் தரிசிக்கும் வண்ணம் நாயேனுக்கு அஞ்சாதே என்று அருள் செய்வாயாக.

திருஆலவாய்

வழுவிலா துன்னை வாழ்த்தி
வழிபடுந் தொண்டனேனுன்
செழுமலர்ப் பாதங் காணத்
தெண்டிரை நஞ்சமுண்ட
குழகனே கோல வில்லீ
கூத்தனே மாத்தாயுள்ள
அழகனே யால வாயில்
அப்பனேயருள்செ யாயே. #606
தெள்ளிய அலையில் தோன்றிய விடத்தை உண்ட இளையோனே! அழகிய வில்லை ஏந்தியவனே! கூத்தனே! மாற்றுயர்ந்த தங்கம் போன்றுள்ள அழகனே! ஆலவாயில் பெருமானே! குறைபாடில்லாமல் உன்னை வாழ்த்தி வழிபடும் அடியவனாகிய யான் உன்னுடைய செழித்த மலர்போன்ற திருவடிகளைத் தரிசிக்குமாறு அருள்செய்வாயாக.

<u>திருஆலவாய்</u>

நறுமலர் நீருங் கொண்டு
நாடொறு மேத்திவாழ்த்திச்
செறிவன சித்தம் வைத்துத்
திருவடிசேரும் வண்ணம்
மறிகடல் வண்ணன் பாகா
மாமறை யங்கமாறும்
அறிவனே யால வாயில்
அப்பனேயருள்செ யாயே. **#607**

கடல் நிறத்தவனான திருமாலை உடலின் ஒரு பாகமாக உடையவனே! மேம்பட்ட வேதங்களையும் ஆறு அங்கங்களையும் அறிபவனே! ஆலவாயில் அப்பனே! நறியமலர்களையும் தீர்த்தங்களையும் கொண்டு நாள்தோறும் புகழ்ந்து வாழ்த்தித் திருவடிகளைச் செறிதற்குரிய வழிகளை உள்ளத்துக் கொண்டு உன் திருவடிகளை அடியேன் சேரும் வண்ணம் அருள் செய்வாயாக.

<u>திருஆலவாய்</u>

நலந்திகழ் வாயி னூலாற்
சருகிலைப் பந்தர்செய்த
சிலந்தியை யரச தாள
வருளினா யென்றுதிண்ணம்
கலந்துடன் வந்து நின்றாள்
கருதிநான்காண்ப தாக
அலந்தன னால வாயில்
அப்பனேயருள்செ யாயே. **#608**

நன்மைகள் விளங்குதற்குக் காரணமான தன்வாயினால் நூற்கப்பட்ட நூலினாலே சருகான இலைகள் விழுந்து தங்கி நிழல் தரும் பந்தலாக அமைத்த சிலந்தியை மறுபிறப்பில் அரசாளும் மன்னனாகப் பிறக்குமாறு அருள்செய்தாய் என்று உள்ளத்திலே உட்கொண்டு வந்து உன் திருவடிகளைக் காணவருந்தும் அடியேன் காணுமாறு ஆலவாயில் அப்பனாகிய நீ அருள்செய்வாயாக.

<u>திருஆலவாய்</u>

பொடிக்கொடு பூசிப் பொல்லாக்
குரம்பையிற்புந்தி யொன்றிப்
பிடித்துநின் றாள்க ளென்றும்
பிதற்றிநா னிருக்கமாட்டேன்

எடுப்பனென் றிலங்கைக்கோன்வந்
தெடுத்தலுமிருபது தோள்
அடர்த்தனே யால வாயி
லப்பனேயருள்செ யாயே. **#609**

திருநீற்றைப் பூசி அழகில்லாத இந்த உடலிலே மனம் ஒரு வழிப்பட்டு உன் திருவடிகளைப் பற்றி என்றும் அவற்றின் பெருமையை அடைவுகேடாகப் பேசிய வண்ணம் காலம் போக்க இயலாதேனாய் உள்ளேன். கயிலையைப் பெயர்ப்பேன் என்று கருதி இராவணன் வந்து அம்மலையை எடுக்க முயன்ற அளவில் அவனுடைய இருபது தோள்களையும் வருத்திய ஆலவாயில் பெருமானே! அடியேனுக்கு அருள்செய்வாயாக.

திருவண்ணாமலை

திருஅண்ணாமலை

திருவண்ணாமலை, திருநேரிசை,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அருணாசலேசுவரர்.
தேவியார் : உண்ணாமுலையம்மை.

ஓதிமா மலர்கள் தூவி
யுமையவள் பங்காமிக்க
சோதியே துளங்கு மெண்டோட்
சுடர்மழுப்படையு னானே
ஆதியே யமரர் கோவே
யணியணா மலையுளானே
நீதியா னின்னை யல்லா
னினையுமா நினைவிலேனே. **#610**

பார்வதிபாகனே! மேம்பட்ட சோதியே! கூத்தினிடத்தே அசைகின்ற எட்டுத் தோள்களை உடையவனே! மழுப்படையை ஏந்தியவனே! ஆதியே! தேவர்கட்குத்தலைவனே! அழகிய அண்ணாமலையில் இருப்பவனே! உன் திருநாமங்களை ஓதிச் சிறந்த மலர்களை அர்ப்பணித்து முறைப்படி உன்னைத் தியானிப்பதனைத் தவிர மற்றும் பொருள்களை ஊன்றிநினையேன்.

திருஅண்ணாமலை

பண்டனை வென்ற வின்சொற்
பாவையோர்பங்க நீல
கண்டனே கார்கொள் கொன்றைக்
கடவுளே கமலபாதா
அண்டனே யமரர் கோவே
யணியணா மலையுளானே
தொண்டனே னுன்னை யல்லாற்
சொல்லுமாசொல்லி லேனே. **#611**

பண்ணை வென்ற இனிய சொல்லையுடைய பார்வதிபாகனே! நீலகண்டனே! கார்காலத்தில் மலரும் கொன்றைப் பூவை அணிந்த கடவுளே! தாமரை போன்ற திருவடிகளை உடையவனே! தேவனே! தேவர்கள் தலைவனே! அழகிய அண்ணா மலையில் உள்ளவனே! அடியவனாகிய யான் உன்னைத் தவிரப் பிறரை உயர்த்திச் சொல்லும் சொற்களைச் சொல்லுவேன் அல்லேன்.

திருஅண்ணாமலை

உருவமு முயிரு மாகி
யோதியவுலகுக் கெல்லாம்
பெருவினை பிறப்பு வீடாய்
நின்றவெம்பெருமான் மிக்க
அருவிபொன் சொரியு மண்ணா
மலையுளா யண்டர்கோவே
மருவிநின் பாத மல்லான்
மற்றொருமாடி லேனே. **#612**

சடமாகிய மாயையாகவும், சித்தாகிய ஆன்மாக்களாகவும் ஆகியவனாய், குறிப்பிடப்படும் உயிர்களுக்கெல்லாம் மூல கருமமும் பிறப்பும் பிறப்பிலிருந்து விடுதலையுமாய் நின்ற எம் பெருமானே! நீர் மிகுந்த அருவிகள் பொன்னைச் சொரியும் அழகிய அண்ணாமலையில் உள்ளதேவர் தலைவனே! உன் திருவடிகளைப் பொருந்தி அவற்றைத் தவிர வேறு செல்வம் இல்லாதேன் ஆவேன்.

திருஅண்ணாமலை

பைம்பொனே பவளக் குன்றே
பரமனேபால்வெண் ணீறா
செம்பொனே மலர்செய் பாதா
சீர்தரு மணியேமிக்க
அம்பொனே கொழித்து வீழு
மணியணா மலையுளானே
என்பொனே யுன்னை யல்லா
லேதுநா னினைவிலேனே. **#613**

பசிய பொன்னே! பவளமலையே! மேம்பட்டவனே! பால்போன்ற வெண்ணிய நீற்றை அணிந்தவனே! செம்பொன்னே! மலர் போன்ற திருவடிகளை உடையவனே! சிறப்பு மிக்கமாணிக்கமும் மேம்பட்ட அழகிய பொன்னும் அருவிகளால் கொழித்து ஒதுக்கப்படும் அழகிய அண்ணாமலையில் உள்ள அடியேனுடைய பொன் போன்ற அரியவனே! உன்னைத்தவிர அடியேன் உள்ளத்தில் வேற்றுப்பொருள் யாதனையும் நினைக்கின்றேன் அல்லேன்.

திருஅண்ணாமலை

பிறையணி முடியி னானே
பிஞ்ஞகா பெண்ணோர்பாகா
மறைவலா விறைவா வண்டார்

கொன்றையாய்வாம தேவா
அறைகழ லமர ரேத்து
மணியணா மலையுளானே
இறைவனே யுன்னை யல்லால்
யாதுநா னினைவிலேனே. **#614**

பிறையைச் சூடிய சடைமுடியை உடையவனே! தலைக்கோலம் அணிந்தவனே! பார்வதிபாகனே! வேதங்களில் வல்லவனே! தலைவனே! வண்டுகள் பொருந்திய கொன்றைமலரைச் சூடியவனே! வாமதேவனே! ஒலிக்கும் கழலணிந்த திருவடிகளைத் தேவர்கள் போற்றும் அழகிய அண்ணாமலையில் உறைபவனே! அடியேன் உளத்தில் தங்கியிருப்பவனே! உன்னைத்தவிர அடியேன் வேறு எந்தப் பொருளையும் விருப்புற்று உறுதியாக நினைப்பேன் அல்லேன்.

திருஅண்ணாமலை

புரிசடை முடியின் மேலோர்
பொருபுனற்கங்கை வைத்துக்
கரியுரி போர்வை யாகக்
கருதிய காலகாலா
அரிகுல மலிந்தவண்ணா
மலையுளா யலரின்மிக்க
வரிமிகு வண்டுபண்செய்
பாதநான்மறப்பிலேனே. **#615**

முறுக்குண்ட சடையின் மீது அலைகள்மோதும் நீரை உடைய கங்கையை வைத்து. யானைத் தோலைமேற் போர்வையாகக் கொண்டவனாய்க் காலனுக்கும் காலனானவனே! குரங்குக் கூட்டங்கள் மிக்க அண்ணாமலையில் உறைவோனே! மலரினும் மேற்பட்ட, கோடுகளை உடைய வண்டுகள் பண்பாடும் உன் திருவடிகளை அடியேன் மறத்தலைச் செய்யேன்.

திருஅண்ணாமலை

இரவியு மதியும் விண்ணு
மிருநிலம் புனலுங்காற்றும்
உரகமார் பவன மெட்டுந்
திசையொளி யுருவ மானாய்
அரவுமிழ் மணிகொள்சோதி
யணியணா மலையுளானே
பரவுநின் பாதமல்லாற்
பரமநான் பற்றிலேனே. **#616**

பரமனே! சூரியன், சந்திரன், வானம், பூமி, நீர் காற்று, பாம்புகள் தங்கும் பாதலம், எண் திசைகள் இவற்றிலே ஒளி உருவமாக இருப்பவனே! பாம்புகள் உமிழ்கின்ற இரத்தினங்களால் ஒளிவீசும் அழகிய அண்ணாமலைப் பெருமானே! அடியேன் முன் நின்று போற்றும் உன் திருவடிகளைத் தவிர அடியேன் வேறு பற்றுக்கோடு உடையேன் அல்லேன்.

திருஅண்ணாமலை

பார்த்தனுக் கன்று நல்கிப்
பாசுப தத்தையீந்தாய்
நீர்த்ததும் புலாவு கங்கை
நெடுமுடி நிலாவவைத்தாய்
ஆர்த்துவந் தீண்டு கொண்ட
லணியணா மலையு ளானே
தீர்த்தனே நின்றன் பாதத்
திறமலாற்றிறமி லேனே. **#617**

அருச்சுனனுக்கு அக்காலத்தில் விரும்பிப் பாசுபதப் படையை நல்கியவனே! நீர் ததும்புதல் மிகுங் கங்கையை நீண்ட சடையில் தங்குமாறு வைத்தவனே! ஆரவாரித்துக் கொண்டு ஒன்று சேரும் மேகங்கள் தங்கும் அழகிய அண்ணாமலைப் பெருமானே! தூயோனே! உன்பாதங்களின் தொடர்பன்றி அடியேன் வேறு தொடர்பு இல்லேன்.

திருஅண்ணாமலை

பாலுநெய் முதலா மிக்க
பசுவிலைந் தாடுவானே
மாலுநான் முகனுங் கூடிக்
காண்கிலாவகையு ணின்றாய்
ஆலுநீர் கொண்டல் பூக
மணியணா மலையுளானே
வாலுடை விடையா யுன்றன்
மலரடி மறப்பிலேனே. **#618**

பசுவின் பஞ்சகவ்வியத்தில் நீராடுபவனே! திருமாலும் பிரமனும் ஒன்று சேர்ந்து முயன்றும் காண இயலாத வகையில் தீத்தம்பமாய் நின்றவனே! நீரை ஏந்திய மேகங்கள் வரையில் அசைகின்ற உச்சியை உடைய பாக்குமரங்கள் அழகு செய்யும் அண்ணாமலையில் உள்ளவனே! வெண்மையை உடைய காளைவாகனனே! உன்னுடைய மலர் போன்ற பாதங்களை அடியேன் மறவேன்.

திருஅண்ணாமலை

இரக்கமொன் றியாது மில்லாக்
காலனைக் கடிந்தவெம்மான்
உரத்தினால் வரையை யூக்க
வொருவிர னுதியினாலே
அரக்கனை நெரித்த வண்ணா
மலையுளா யமர ரேறே
சிரத்தினால் வணங்கி யேத்தித்
திருவடி மறப்பிலேனே. **#619**

இரக்கம் என்பது சிறிதும் இல்லாத கூற்றுவனைத் தண்டித்த பெருமானே! இராவணன் தன் வலிமையால் கயிலை மலையைப் பெயர்க்க, ஒரு விரல் நுனியினாலே அவனை நெரித்த அண்ணாமலைத் தேவர் தலைவனே! உன்னை அடியேன் தலையால் வணங்கி வாயால் துதித்து மனத்தால் உன் திருவடிகளை மறவாதேனாய் உள்ளேன்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை

திருவீழிமிழலை, திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

பூதத்தின் படையர்பாம்பின்
பூணினர் பூணநூலர்
சீதத்திற் பொலிந்த திங்கட்
கொழுந்தர்நஞ்சழுந்து கண்டர்
கீதத்திற் பொலிந்த வோசைக்
கேள்வியர்வேள்வி யாளர்
வேதத்தின் பொருளர் வீழி
மிழலையுள்விகிர்த னாரே. **#620**

பூதத்தின் படையினராய், பாம்பாகிய அணிகளை உடையவராய், பூணூலை அணிந்தவராய், குளிர்ச்சி, மிகுந்த பிறையைச் சூடியவராய், விடம் பொருந்திய கழுத்தினராய், பாடலோடு பொருந்திய ஓசைச் சிறப்பை உடைய வேதம் ஓதுபவராய், வேள்வியை ஆள்பவராய் வேதத்தின் பொருளராய் வீழிமிழலையில் விகிர்தராம் இயல்புள்ள சிவபெருமான் விளங்குகிறார்.

திருவீழிமிழலை

காலையிற் கதிர்செய் மேனி
கங்குலிற்கறுத்த கண்டர்
மாலையில் மதியஞ் சேர்ந்த
மகுடத்தர்மதுவும் பாலும்
ஆலையிற் பாகும் போல
வண்ணித்திட்டடியார்க் கென்றும்
வேலையி னமுதர் வீழி
மிழலையுள்விகிர்த னாரே. **#621**

காலை ஞாயிற்றின் ஒளியை உடைய திருமேனிய ராய், இரவு இருள் போலக் கறுத்த கழுத்தினராய், மாலையில் தோன்றும் பிறையணிந்த சடை முடியினராய், தேனும் பாலும் கரும்பின் பாகும் கடலில் தோன்றும் அமுதமும் போல அடியவர்களுக்கு இனிப்பை நல்குபவராய் வீழிமிழலையில் உள்ள விகிர்தனார் விளங்குகிறார்.

திருவீழிமிழலை

வருந்தின நெருந லின்றாய்
வழங்கின நாளராற்கீழ்
இருந்துநன் பொருள்க ணால்வர்க்
கியம்பினரிருவ ரோடும்
பொருந்தினர் பிரிந்து தம்பாற்
பொய்யராமவர்கட் கென்றும்
விருந்தினர் திருந்து வீழி
மிழலையுள்விகிர்த னாரே. **#622**

நாளை, நேற்று, இன்று என்னும் முக்காலத்தும் இருப்பவராய், ஆலமரத்தின் கீழ் அமர்ந்து மேம்பட்ட செய்திகளை முனிவர் நால்வருக்கு இயம்பியவராய், திருமாலோடும் பிரமனோடும் பொருந்தியவராய், தம்மை மறந்து தம்மிடம் பொய்யாக நடந்து கொள்பவருக்குத் தம்மை உள்ளவாறு அறிய இயலாத புதியவராய் வீழிமிழலை விகிர்தர்விளங்குகிறார்.

திருவீழிமிழலை

நிலையிலா வூர்மூன் றொன்ற
நெருப்பரிகாற்றம் பாகச்
சிலையுநா ணதுவு நாகங்
கொண்டவர்தேவர் தங்கள்
தலையினாற் றரித்த வென்புந்
தலைமயிர்வடமும் பூண்ட
விலையிலா வேடர் வீழி
மிழலையுள்விகிர்த னாரே. **#623**

எங்கும் இயங்கிக் கொண்டிருந்த மும்மதில்களை அக்கினி, திருமால், வாயு இவர்களை உறுப்பாகக் கொண்ட அம்பு, மலையாகிய வில், பாம்பாகிய நாண் இவற்றைக் கொண்டு அழித்தவராய்த் தேவர்களின் தலைமாலையும், தலைமயிராலாகிய பஞ்சவடி என்னும் பூணூலும் அணிந்தவராய், யாரும் விலை மதித்தற்கில்லாத வேடத்தை உடையவராய் வீழிமிழலை விகிர்தனார் விளங்குகிறார்.

திருவீழிமிழலை

மறையிடைப் பொருளர் மொட்டின்
மலர்வழி வாசத்தேனர்
கறவிடைப் பாலி னெய்யர்
கரும்பினிற்கட்டியாளர்

பிறையிடைப் பாம்பு கொன்றைப்
பிணையல்சேர்சடையு ணீரர்
விறகிடைத் தீயர் வீழி
மிழலையுள்விகிர்த னாரே. **#624**

வேதத்தின் விழுமிய பொருளாக உள்ளவராய், அரும்பு பூக்கும்போது வெளிப்படும் மணமுடைய தேனாகியவராய், கறக்கும் பசுவின் பாலில் கரந்து எங்கும் பரந்திருக்கும் நெய் போன்றவராய், கரும்புச்சாற்றின் கட்டிபோன்று இனியராய், பிறை, பாம்பு, கொன்றைமாலை இவற்றைத் தரித்த சடையில் கங்கை நீரை ஏற்றவராய், விறகிடை மறைந்து பரந்திருக்கும் தீப்போலக் கரந்து எங்கும் பரந்தவராய் வீழிமிழலை விகிர்தனார் விளங்குகிறார்.

<u>திருவீழிமிழலை</u>

எண்ணகத் தில்லை யல்ல
ருளரல்ல ரிமவான்பெற்ற
பெண்ணகத் தரையர்காற்றிற்
பெருவலியிருவ ராகி
மண்ணகத் தைவர் நீரி
னால்வர்தீயதனில் மூவர்
விண்ணகத் தொருவர் வீழி
மிழலையுள்விகிர்த னாரே. **#625**

எண்ணும் எண்ணத்திலே இல்லாதவரும் அல்லராய், உள்ளவரும் அல்லராய், பார்வதி பாகராய், விண்ணில் ஒலிப்பண்பினராய்க் காற்றில் ஒலி ஊறு என்ற இரு பண்பினராய், தீயிடை ஒலி ஊறு ஒளி என்ற மூன்று பண்பினராய், நீரிடை ஒலிஊறு ஒளி சுவை என்ற நாற்பண்பினராய், மண்ணில் ஒலி ஊறு ஒளி சுவை நாற்றம் என்ற ஐந்து பண்பினராய் வீழிமிழலை விகிர்தனார் உள்ளார்.

<u>திருவீழிமிழலை</u>

சந்தணி கொங்கை யாளோர்
பங்கினார்சாம வேதர்
எந்தையு மெந்தை தந்தை
தந்தையு மாயவீசர்
அந்தியோ டுதய மந்த
ணாளரா னெய்யால்வேட்கும்
வெந்தழ லுருவர் வீழி
மிழலையுள்விகிர்த னாரே. **#626**

சந்தனத்தை அணிந்த தனங்களை உடைய பார்வதி பாகர், சாமதேவர்,

அடியேனுக்குத் தந்தையாராகவும் பாட்டனாராகவும் முப்பாட்டனாராகவும் உள்ளவர். காலை சந்தியிலும் மாலை அந்தியிலும் அந்தணாளர்கள் நெய்யால் வேள்வி செய்யும் விரும்பத் தக்க தீயின் உருவர் என இவ்வாறு வீழிமிழலை விகிர்தனார் உள்ளார்.

திருவீழிமிழலை

நீற்றினை நிறையப் பூசி
நித்தலா யிரம்பூக்கொண்டு
ஏற்றுழி யொருநா ளொன்று
குறையக்கண்ணிறைய விட்ட
ஆற்றலுக் காழி நல்கி
யவன்கொணர்ந்திழிச்சுங் கோயில்
வீற்றிருந் தளிப்பர் வீழி
மிழலையுள்விகிர்த னாரே. **#627**

திருநீற்றை நன்கு அணிந்து நாடோறும் ஆயிரம் தாமரைப் பூக்களைக் கொண்டு அர்ச்சனை செய்தகாலத்தில் ஒரு நாள் ஒரு பூக்குறையவே அப்பூவின் தானத்தில்தன் கண்ணைப் பிடுங்கி அர்ச்சித்த முறுகிய பக்தியை உடைய திருமாலுக்குச் சக்கரத்தைக் கொடுத்து அவன் விண்ணிலிருந்து கொணர்ந்து நிறுவியகோயிலில் வீற்றிருந்து வீழிமிழலை விகிர்தனார் எல்லோருக்கும் அருள் செய்கிறார்.

திருவீழிமிழலை

சித்திசெய் பவர்கட்கெல் லாஞ்
சேர்விடஞ்சென்று கூடப்
பத்திசெய் பவர்கள் பாவம்
பறிப்பவ ரிறப்பிலாளர்
முத்திசெய் பவள மேனி
முதிரொளிநீல கண்டர்
வித்தினின் முளையர் வீழி
மிழலையுள்விகிர்த னாரே. **#628**

சித்தியை விரும்புவார்தாம் தாம் சேர்விடஞ் சென்றுகூட வைத்தும் பத்தி செய்பவர்களின் பாவத்தை விலக்கியும் பக்குவர்க்கு முத்தி வழங்கியும் அருள்பவர் பவளம்போல் மேனியும் ஒளியின் முதிர்ந்த நீலகண்டரும் வித்தின் முளைபோல் வாருமாய் உள்ள திருவீழிமிழலை விகிர்தனாரே.

திருவீழிமிழலை

தருக்கின வரக்கன் றேரூர்
சாரதி தடை நிலாது

பொருப்பினை யெடுத்த தோளும்
பொன்முடிபத்தும் புண்ணாய்
நெரிப்புண்டங் கலறி மீண்டு
நினைந்தடிபரவத் தம்வாள்
விருப்பொடுங் கொடுப்பர்வீழி
மிழலையுள்விகிர்த னாரே. **#629**

செருக்குற்ற இராவணன் தன் தேரைச் செலுத்திய சாரதி தடுத்ததனை மனங்கொள்ளாது கயிலைமலையைப் பெயர்க்க முற்பட்ட தோள்களும் அழகிய பத்துத் தலைகளும் புண்ணாகுமாறு சிவபெருமானால் நெரிக்கப்பட்டு, அலறி, மறுபடி அவன் அன்போடு நினைந்து சிவபெருமான் திருவடிகளைத் துதிக்க, அவனுக்கு வீழிமிழலை விகிர்தனராகிய அப்பெருமான் தம்முடைய வாளினை விருப்பத்தோடு வழங்கினார்.

திருச்சாய்க்காடு

திருச்சாய்க்காடு

திருச்சாய்க்காடு, திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சாயவனேசுவரர்.
தேவியார் : குயிலின்நன்மொழியம்மை.

தோடுலா மலர்கள் தூவித்
தொழுதெழுமார்க்கண் டேயன்
வீடுநா ளணுகிற் றென்று
மெய்கொள்வான்வந்த காலன்
பாடுதான் செலலு மஞ்சிப்
பாதமே சரண மென்னச்
சாடினார் காலன் மாளச்
சாய்க்காடுமேவி னாரே. **#630**

இதழ்களை உடைய பூக்களால் அர்ச்சித்துத் தொழுது எழுந்த மார்க்கண்டேயன் இறக்கும் நேரம் அணுகிவிட்டது என்று அவன் பொய்யான உடலிலிருந்து மெய்யான உயிரைப் பிரித்து எடுத்துச் செல்ல வந்த கூற்றுவன் அவன் பக்கம் அணுக, அவன் பயந்து சிவபெருமானுடைய திருவடிகளே தனக்குச் சரணம் என்று சொன்ன அளவில் சாய்க்காட்டில் விரும்பி உறையும் பெருமானார் கூற்றுவன் மாயுமாறு உதைத்தார்.

திருச்சாய்க்காடு

வடங்கெழு மலைமத் தாக
வானவ ரசுரரோடு
கடைந்திட வெழுந்த நஞ்சங்
கண்டு பஃறேவரஞ்சி
அடைந்துநுஞ் சரண மென்ன
வருள்பெரிதுடைய ராகித்
தடங்கட னஞ்ச முண்டார்
சாய்க்காடுமேவி னாரே. **#631**

பாம்பாகிய கடை கயிறு கோக்கப்பட்ட மந்தர மலையை மத்தாகக்கொண்டு தேவர்கள் அசுரரோடு பாற்கடலைக் கடைய, எழுந்த விடத்தைக் கண்டு பல தேவர்களும் அஞ்சிச் சிவபெருமானை அடைந்து 'நும்மையே அடைக்கலம் அருளுபவராகக் கொண்டுள்ளோம்' என்று வேண்டப் பேரருள் உடையவராய் கடல் நஞ்சினை உண்டபிரான்

திருச்சாய்க்காட்டில் எழுந்தருளியுள்ளார்.

திருச்சாய்க்காடு

அரணிலா வெளிய நாவ
லருநிழ லாகவீசன்
வரணிய லாகித் தன்வாய்
நூலினாற்பந்தர் செய்ய
முரணிலாச் சிலந்தி தன்னை
முடியுடை மன்னனாக்கித்
தரணிதா னாள வைத்தார்
சாய்க்காடுமேவி னாரே. **#632**

காவல் அற்ற வெட்ட வெளியில் வளர்ந்த வெண்ணாவல் மரத்தின் குறுகிய நிழலில் சிவபெருமான் இருந்தானாக, தான் இறைவனுடைய அடிமை என்ற கருத்தில் மாறுபாடில்லாத சிலந்தி அம்மரத்தைச் சூழ்ந்து தன் வாய் நூலினால் வெயிலைத் தடுத்து நிழலைச்செய்யும் பந்தரை அமைக்க அச்சிலந்தியை அடுத்த பிறப்பில் முடிசூடும் மன்னனாக்கி உலகை ஆளுமாறுசெய்தார் சாய்க்காடு மேவிய சிவபெருமான்.

திருச்சாய்க்காடு

அரும்பெருஞ் சிலைக்கை வேட
னாய்விறற்பார்த்தற் கன்று
உரம்பெரி துடைமை காட்டி
யொள்ளமர்செய்து மீண்டே
வரம்பெரி துடைய னாக்கி
வாளமர் முகத்தின்மன்னுஞ்
சரம்பொலி தூணி யீந்தார்
சாய்க்காடுமேவி னாரே. **#633**

பெரிய வில்லைக் கையில் ஏந்திய வேட உருவினராய், ஆற்றல் மிக்க அருச்சுனனுக்கு அவன்தவம் செய்துகொண்டு இருந்த காலத்தில் தம்முடைய பேராற்றலை வெளிப்படுத்தி அவனொடு போர் செய்து, பின்னர்ச் சாய்க்காடு மேவிய பெருமான் அவனைப் பெருமை மிகவும் உடையவனாக்கிப் போர் முகத்தில் நிலைபெற அம்புகள் பொலிகின்ற அம்புப் புட்டிலை அவனுக்கு வழங்கினார்.

திருச்சாய்க்காடு

இந்திரன் பிரம னங்கி
யெண்வகை வசுக்க ளோடு
மந்திர மறைய தோதி

வானவர்வணங்கி வாழ்த்தத்
தந்திர மறியாத் தக்கன்
வேள்வியைத்தகர்த்த ஞான்று
சந்திரற் கருள்செய் தாருஞ்
சாய்க்காடுமேவி னாரே. **#634**

இந்திரன், பிரமன், அக்கினி, எட்டு வசுக்கள் இவர்களோடு வேதமந்திரங்களை ஓதித் தேவர்கள் வணங்கி வாழ்த்த, எது செயற்பாலது என்பதனை அறியாத தக்கனுடைய வேள்வியை அழித்தபோது சந்திரனுக்கு அருள் வழங்கினவர் சாய்க்காட்டுப் பெருமான்.

<u>திருச்சாய்க்காடு</u>

ஆமலி பாலு நெய்யு
மாட்டியர்ச்சனைகள் செய்து
பூமலி கொன்றை சூட்டப்
பொறாததன்றாதை தாளைக்
கூர்மழு வொன்றா லோச்சக்
குளிர்சடைக்கொன்றை மாலைத்
தாமநற் சண்டிக் கீந்தார்
சாய்க்காடுமேவி னாரே. **#635**

பசுவிலிருந்து வெளிப்படும் வெண்ணெய்ப் பிடிப்புடைய பாலை அபிடேகம் செய்து அர்ச்சனைகள் சொல்லிப் பூக்களில் மேம்பட்ட கொன்றை மலர்களைச் தான் வழிபட்ட இலிங்கத்திற்கு விசாரசருமனார் சூட்ட, அவற்றைப் பொறாது பூசனையை அழிக்க முற்பட்ட தன் தந்தையின் காலை அவன் கூரிய மழுவினால் வெட்டவே, அவரை சண்டீசன் ஆக்கித் தாம் சூடிய கொன்றை மாலையை அணியும் உரிமையை அவருக்கு வழங்கினார் சாய்க்காடு மேவிய பெருமான்.

<u>திருச்சாய்க்காடு</u>

மையறு மனத்த னாய
பகீரதன்வரங்கள் வேண்ட
ஐயமி லமர ரேத்த
வாயிர முகம தாகி
வையக நௌயப் பாய்வான்
வந்திழி கங்கையென்னுந்
தையலைச் சடையி லேற்றார்
சாய்க்காடுமேவி னாரே. **#636**

குற்றமற்ற மனத்தை உடைய பகீரதன் வரங்களால் வேண்டிய அளவில்,

சிவபெருமானுடைய பேராற்றலில் ஐயம் ஏதும் இல்லாத தேவர்கள் போற்ற, ஆயிரம் கிளைகளை உடையதாகி இவ்வுலகமே நௌயுமாறு பாய்வதற்காக வானத்திலிருந்து இறங்கிய கங்கை என்ற பெண்ணை தம் சடையில் ஏற்றுள்ளவர் சாய்க்காடு மேவிய பெருமான்.

திருச்சாய்க்காடு

குவப்பெருந் தடக்கை வேடன்
கொடுஞ்சிலையிறைச்சிப் பாரம்
துவர்ப்பெருஞ் செருப்பா னீக்கித்
தூயவாய்க்கலச மாட்ட
உவப்பெருங் குருதி சோர
வொருகணை யிடந்தங்கப்பத்
தவப்பெருந் தேவு செய்தார்
சாய்க்காடுமேவி னாரே. **#637**

திரண்ட பெரிய தோளினை உடைய திண்ணனார், ஒரு கையில் வளைந்த வில்லும், மறு கையில் இறைச்சிப் பாரமுந் தாங்கியிருந்தமையால் காளத்திப் பெருமானுக்கு முன்பு சூட்டப்பட்டிருந்த பூக்களைச் செந்நிறம் பொருந்திய தம் காற் செருப்பினால் நீக்கித் தன் தூய வாயாகிய கலசத்தில் மொண்டு வந்த நீரினால் அப்பெருமானுக்கு அபிடேகம் செய்து பூசிக்க, அதனை உவந்த பெருமான் தம் கண்ணில் உதிரம் ஒழுகச் செய்ய, ஓரம்பினால் தம் கண்ணைப் பெயர்த்துக் குருதி சோரும் கண்ணில் அப்பவே, திண்ணனாரை மிகப்பெரிய தெய்வமாகச் செய்துவிட்டார் சாய்க்காடு மேவிய பெருமான்.

திருச்சாய்க்காடு

நக்குலா மலர்பன் னூறு
கொண்டுநன்ஞானத் தோடு
மிக்கபூ சனைகள் செய்வான்
மென்மலரொன்று காணா
தொக்குமென் மலர்க்க ணென்றங்
கொருகணை யிடந்துமப்பச்
சக்கரங் கொடுப்பர்போலுஞ்
சாய்க்காடுமேவி னாரே. **#638**

விரிந்து மணம் வீசும் ஆயிரம் தாமரைப் பூக்களைக் கொண்டு சிவபெருமானைப் பரம் பொருள் என்ற அறிவினோடு மேம்பட்ட பூசனை புரியும்போது மென்மையான பூ ஒன்று குறையத் தம் கண் தாமரைப் பூவினை ஒக்கும் என்று திருமால் தம் கண் ஒன்றை அம்பினால்

பெயர்த்து மலராகக் கொண்டு அர்ச்சிக்க அதனால் மகிழ்ந்த அவர் வேண்டிய சக்கிராயுதத்தை அத்திருமாலுக்கு வழங்கினார் சாய்க்காட்டில் உறையும் சிவபெருமான்.

திருச்சாய்க்காடு

புயங்கமைஞ் ஞான்கும் பத்து
மாயகொண்டரக்க னோடிச்
சிவன்றிரு மலையைப் பேர்க்கத்
திருமலர்க்குழலி யஞ்ச
வியன்பெற வெய்தி வீழ
விரல்சிறிதூன்றி மீண்டே
சயம்பெற நாம மீந்தார்
சாய்க்காடுமேவி னாரே. **#639**

இருபது புயங்களும் பத்துத் தலைகளும் கொண்ட இராவணன் ஓடிச் சென்று சிவபெருமானுடைய கயிலைமலையைப் பெயர்க்க, அதனால் அழகிய மலர்களை அணிந்த கூந்தலை உடைய பார்வதி அஞ்ச, அப்போது அவன் வலிமை நிலைவேறுபாடெய்தி அவன் விழுமாறு சிவன் தம் விரலைச் சிறிது ஊன்றி, அவன் உளம் திருந்தி வழிபட்ட அளவில் அவன் வெற்றி பெறுமாறு அவனுக்கு இராவணன் என்ற பெயரை வழங்கினார் சாய்க்காட்டுப் பெருமான் ஆகிய சிவனார்.

புயங்கம் ஐந்நான்கும் - பாடம்.

திருநாகேச்சரம்

திருநாகேச்சரம்

திருநாகேச்சரம், திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சண்பகாரண்ணியேசுவரர்.
தேவியார் : குன்றமுலைநாயகியம்மை.

கச்சைசேர ரரவர் போலுங்
கறையணி மிடறர்போலும்
பிச்சைகொண் டுண்பர்போலும்
பேரரு ளாளர்போலும்
இச்சையான் மலர்கள் தூவி
யிரவொடுபகலுந் தம்மை
நச்சுவார்க் கினியர்போலும்
நாகவீச்சரவ னாரே. **#640**

திருநாகேச்சுரத்துப் பெருமான், பாம்புக் கச்சை உடையவராய், நீலகண்டராய், பிச்சை எடுத்து உண்பவராய், பேரருளாளராய், விருப்போடு பூக்களைத் தூவி இரவும் பகலும் தம்மை விரும்பி வழிபடுபவர்களுக்கு இனியராய் உள்ளார்.

திருநாகேச்சரம்

வேடுறு வேட ராகி
விசயனோ டெய்தார்போலும்
காடுறு பதியர் போலுங்
கடிபுனற் கங்கைநங்கை
சேடெறி சடையர் போலுந்
தீவினை தீர்க்கவல்ல
நாடறி புகழர் போலும்
நாகவீச்சரவ னாரே. **#641**

திருநாகேச்சுரத்துப் பெருமான் வேடன் உருவில் வந்து அருச்சுனனோடு அம்பு எய்து பொருதவராய், சுடுகாட்டை இருப்பிடமாகக் கொண்டவராய், நறுமணம் கமழும் கங்கையாகிய நங்கையை, பெருமையை வெளிப்படுத்தும் சடையில் அடக்கியவராய், தீவினையைத் தீர்க்க வல்லவராய், அதனால் உலகறிந்த புகழை உடையவராய் உள்ளார்.

திருநாகேச்சரம்

கற்றுணை வில்ல தாகக்
கடியரண் செற்றார்போலும்
பொற்றுணைப் பாதர் போலும்
புலியதளுடையர் போலும்
சொற்றுணை மாலை கொண்டு
தொழுதெழுவார்கட் கெல்லாம்
நற்றுணை யாவர் போலும்
நாகவீச்சரவ னாரே. **#642**

திருநாகேச்சுரத்துப் பெருமான் மலையையே தமக்குத் துணையான வில்லாகக் கொண்டு காவல் அமைந்த முப்புரங்களை அம்பு எய்து அழித்தவராய், பொன்னுக்கு ஒப்பான திருவடிகளை உடையவராய், புலித்தோல் ஆடையராய், வேதத்துக்குச் சமமான பாமாலைகளைக் கொண்டு தொழுது வழிபடுபவர்க்கெல்லாம் மேம்பட்ட துணைவராவார்.

திருநாகேச்சரம்

கொம்பனாள் பாகர் போலுங்
கொடியுடைவிடையர் போலும்
செம்பொனா ருருவர் போலுந்
திகழ்திருநீற்றர் போலும்
எம்பிரா னெம்மை யாளு
மிறைவனே யென்றுதம்மை
நம்புவார்க் கன்பர்போலும்
நாகவீச்சரவ னாரே. **#643**

பார்வதி பாகராய். காளை எழுதிய கொடியினராய், செம்பொன் போன்ற நிறத்தினராய், விளங்கும் திருநீற்றினராய், எம் பெருமானே! எம்மை அடிமை கொள்ளும் இறைவனே! என்று தம்மை விரும்பும் அடியார்களுக்கு அன்பராய் உள்ளார்.

திருநாகேச்சரம்

கடகரி யுரியர் போலுங்
கனன்மழு வாளர் போலும்
படவர வரையர் போலும்
பாரிடம் பலவுங்கூடிக்
குடமுடை முழவ மார்ப்பக்
கூளிகள் பாட நாளும்
நடநவி லடிகள் போலும்
நாகவீச் சரவ னாரே. **#644**

யானைத்தோலைப் போர்த்தவராய், கனல் வீசும் மழுப்படையை

ஏந்தியவராய், படம் எடுக்கும் பாம்பினை இடையில் கட்டியவராய், பூதங்கள் பலவும் கூடிக் குடமுழாவை ஒலிப்பப் பேய்கள் பாட நாடோறும் கூத்து நிகழ்த்தும் தலைவராய் உள்ளார் திருநாகேச்சுரப் பெருமான்.

திருநாகேச்சரம்

பிறையுறு சடையர் போலும்
பெண்ணொருபாகர் போலும்
மறையுறு மொழியர் போலும்
நான்மறையவன்ற னோடும்
முறைமுறை யமரர் கூடி
முடிகளால்வணங்க நின்ற
நறவமர் கழலர் போலும்
நாகவீச்சரவ னாரே. **#645**

திருநாகேச்சுரப் பெருமான் பிறைதங்கும் சடையினராய்ப் பார்வதிபாகராய், வேதங்களை ஓதுபவராய், திருமாலோடும் பிரமனோடும் தேவர்கள் முறையாகக்கூடித் தம் தலைகளால் வணங்கும் தேனைப்போல விரும்பத்தக்க திருவடிகளை உடையவராய் உள்ளார்.

திருநாகேச்சரம்

வஞ்சகர்க் கரியர் போலும்
மருவினோர்க்கெளயர் போலும்
குஞ்சரத் துரியர் போலுங்
கூற்றினைக்குமைப்பர் போலும்
விஞ்சைய ரிரிய வன்று
வேலைவாய்வந்தெ ழுந்த
நஞ்சணி மிடற்றர் போலும்
நாகவீச்சரவ னாரே. **#646**

திருநாகேச்சுரத்துப் பெருமான் வஞ்சகர்களுக்கு அரியராய், தம்மை விரும்பிய அடியவர்களுக்கு எளியராய், யானைத்தோலைப் போர்த்தவராய், கூற்றுவனை ஒறுத்தவராய், தேவர்கள் அஞ்சி ஓடுமாறு கடலில் தோன்றிப் பரவிய விடம் அணிகண்டராய் உள்ளார்.

திருநாகேச்சரம்

போகமார் மோடி கொங்கை
புணர்தரு புனிதர்போலும்
வேகமார் விடையர் போலும்
வெண்பொடியாடு மேனிப்

பாகமா லுடையர் போலும்
பருப்பதவில்லர் போலும்
நாகநா ணுடையர் போலும்
நாகவீச்சசரவ னாரே. **#647**

திருநாகேச்சுரத்துப் பெருமான் இன்பம் நிறைந்த காளியின் கொங்கைகளைத் தழுவும் புனிதராய், விரைந்து செல்லும் காளையை உடையவராய், வெண்ணீறணிந்த திருமேனியின் ஒருபாகமாகத் திருமாலை உடையவராய, மேருமலையாகிய வில்லையும், பாம்பாகிய நாணையும் உடையவராய் உள்ளார்.

திருநாகேச்சரம்

கொக்கரை தாளம் வீணை
பாணிசெய்குழகர் போலும்
அக்கரை யணிவர் போலும்
ஐந்தலை யரவர் போலும்
வக்கரை யமர்வர் போலும்
மாதரை மையல்செய்யும்
நக்கரை யுருவர் போலும்
நாகவீச்சரவ னாரே. **#648**

திருநாகேச்சுரத்துப் பெருமான் கொக்கரை, தாளம், வீணை எனும் இவற்றின் தாளத்திற்கு ஏற்பக் கூத்து நிகழ்த்தும் இளையராய், சங்கு மணியை இடையில் அணிபவராய், ஐந்து தலைகளை உடைய பாம்பினை ஆட்டுபவராய், திருவக்கரைத் திருத்தலத்தில் உகந்தருளியிருப்பவராய், பெண்களை மயக்கும் திகம்பரவடிவினராய் உள்ளார்.

திருநாகேச்சரம்

வின்மையாற் புரங்கண் மூன்றும்
வெந்தழல் விரித்தார் போலும்
தன்மையா லமரர் தங்க
டலைவர்க்குந்தலைவர் போலும்
வன்மையான் மலையெ டுத்தான்
வலியினைத்தொலைவித் தாங்கே
நன்மையா லளிப்பர் போலும்
நாகவீச் சரவ னாரே. **#649**

திருநாகேச்சுரத்துப் பெருமான் தம் வில்லாற்றலால் மும்மதில்களையும் தீக்கு இரையாக்கியவராய், தம் பண்பினாலே தேவர்களுடைய தலைவர்களுக்கும் தலைவராய், தன் உடல் வலிமையாலே கயிலை

மலையைப் பெயர்க்க முற்பட்ட இராவணனது வலிமையைப் போக்கி அவ்விடத்திலேயே அவனுக்கு நன்மை ஏற்படும் வகையில் அருள் செய்தவராவார்.

திருக்கொண்டீச்சரம்

திருக்கொண்டீச்சரம்

திருக்கொண்டீச்சரம், திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது,
சுவாமிபெயர் : பசுபதீசுவரர்.
தேவியார் : சாந்தநாயகியம்மை.

வரைகிலேன் புலன்க ளைந்தும்
வரைகிலாப்பிறவி மாயப்
புரையிலே யடங்கி நின்று
புறப்படும்வழியுங் காணேன்
அரையிலே மிளிரு நாகத்
தண்ணலே யஞ்சலென்னாய்
திரையுலாம் பழன வேலித்
திருக்கொண்டீச்சரத்து ளானே. **#650**

அலைகள் உலாவுகின்ற வயல்களால் சூழப்பட்ட திருக்கொண்டீச்சரத்துப் பெருமானே! இடையில் பாம்பினை விளங்குமாறு அணிந்த அண்ணலே! ஐம்புல வேட்கையை நீக்கும் ஆற்றல் இல்லேனாய், நீக்குதற்கு அரிய பிறவியாகிய வஞ்சனைப் படுகுழியிலே விழுந்து அதனினின்றும் கரையேறும் வழியைக் காணேனாய் உள்ள அடியேனுக்கு அஞ்சேல் என்று அருள் செய்வாயாக!.

திருக்கொண்டீச்சரம்

தொண்டனேன் பிறந்து வாளா
தொல்வினைக் குழியில் வீழ்ந்து
பிண்டமே சுமந்து நைந்து
போர்வதோர் வழியுங் காணேன்
அண்டனே யண்ட வாணா
வறிவனே யஞ்ச லென்னாய்
தெண்டிரைப் பழனஞ் சூழ்ந்த
திருக்கொண்டீச் சரத்து ளானே. **#651**

தேவனே! உலகங்களில் பரந்து எங்கும் கலந்து வாழ்பவனே! முக்காலமும் அறிபவனே! தெளிந்த அலைகளை உடைய வயல்களால் சூழப்பட்ட கொண்டீச்சரத்துப் பெருமானே! உன் அடியேன் பிறவி எடுத்தபின் வீணாகப் பழைய வினைப்பயனாகிய குழியில் விழுந்து இந்த உடம்பைச் சுமந்து வருந்தி இத்துயரிலிருந்து தப்பிப்

பிறவாமையை அடைவதற்குரிய வழியைக் காணேனாய் அஞ்சுகின்றேன். அடியேனுக்கு அஞ்சேல் என்று அருளுவாயாக.

திருக்கொண்டீச்சரம்

கால்கொடுத் தெலும்பு மூட்டிக்
கதிர்நரம் பாக்கை யார்த்துத்
தோலுடுத் துதிர மட்டித்
தொகுமயிர் மேய்ந்த கூரை
ஓலெடுத் துழைஞர் கூடி
யொளிப்பதற் கஞ்சு கின்றேன்
சேலுடைப் பழனஞ் சூழ்ந்த
திருக்கொண்டீச் சரத்து ளானே. **#652**

சேல் மீன்களை உடைய வயல்கள் சூழ்ந்த கொண்டீச்சரப் பெருமானே! இரண்டு கால்களைக் கொடுத்து எலும்புகளைப் பொருத்தி, விளங்கும் நரம்புகளை உடம்பினுள் இணைத்துத் தோலை மேலே போர்த்திக் குருதியை உள்ளே நிரப்பித் தொக்க மயிர்களால் வேய்ந்து அமைக்கப்பட்ட கூரையாகிய இவ்வுடம்பு நிலையாமையை அடையும்போது பக்கத்திலுள்ள உற்றார் உறவினர் ஒன்று கூடி இதன் பிரிவிற்கு வாய் விட்டுக் கதறிச் சுடுகாட்டில் குழி தோண்டிப் புதைப்பதற்கு அஞ்சுகின்றேன்.

திருக்கொண்டீச்சரம்

கூட்டமா யைவர் வந்து
கொடுந்தொழிற் குணத்த ராகி
ஆட்டுவார்க் காற்ற கில்லே
னாடர வசைத்த கோவே
காட்டிடை யரங்க மாக
வாடிய கடவுளேயோ
சேட்டிரும் பழன வேலித்
திருக்கொண்டீச் சரத்து ளானே. **#653**

ஆடுகின்ற பாம்பை இடையில் இறுகக் கட்டிய தலைவனே! சுடுகாட்டைக் கூத்தாடும் அரங்கமாகக் கொண்டு ஆடும் கடவுளே! பெருமை பொருந்திய பரப்புடைய வயல்களால் சூழப்பட்ட கொண்டீச்சரப் பெருமானே! ஐம்பொறிகளும் கூடிவந்து கொடிய தொழில்கள் செய்வதனையே தம் பண்பாகக் கொண்டு என்னைத் தம் விருப்பப்படி செயற்படுத்த அவற்றின் தொல்லையைப் பொறுக்க இயலாதேனாய் உள்ளேன்.

திருக்கொண்டீச்சரம்

பொக்கமாய் நின்றபொல்லாப்
புழுமிடை முடைகொ ளாக்கை
தொக்குநின் றைவர் தொண்ணூற்
றறுவருந் துயக்க மெய்த
மிக்குநின் றிவர்கள் செய்யும்
வேதனைக் கலந்து போனேன்
செக்கரே திகழு மேனித்
திருக்கொண்டீச் சரத்து ளானே. **#654**

செம்மேனி அம்மானாகிய கொண்டீச்சரப் பெருமானே! நிலைபேறின்றிப் பொய்யாக அமைந்த அழகற்ற புழுக்கள் மிகக் கலந்த தீ நாற்றமுடைய இவ்வுடலிலே இணைந்து இருக்கின்ற ஐம்பொறிகளும், 96 தத்துவ தாத்துவிகங்களும் அடியேன் சோர்வு எய்துமாறு செய்யும் கொடுஞ்செயல்களைத் தாங்க இயலாமல் துன்புற்றிருக்கின்றேன்.

திருக்கொண்டீச்சரம்

ஊனுலா முடைகொ ளாக்கை
யுடைகல மாவ தென்றும்
மானுலா மழைக்க ணார்தம்
வாழ்க்கையை மெய்யென் றெண்ணி
நானெலா மினைய கால
நண்ணிலே னெண்ண மில்லேன்
தேனுலாம் பொழில்கள் சூழ்ந்த
திருக்கொண்டீச் சரத்துளானே. **#655**

வண்டுகள் உலாவும் பொழில்கள் சூழ்ந்த திருக்கொண்டீச்சரத்துப் பெருமானே! புலாலால் அமைக்கப்பட்ட நாற்றம் வீசும் உடம்புப் பாறையில் மோதி உடையும் மரக்கலம் போல்வது என்னும் எண்ணம் இல்லாதேனாய், மான் கண்கள் போன்று மருளும் குளிர்ந்த கண்களையுடைய மகளிரோடு வாழும் வாழ்க்கையை உண்மையான வாழ்வு என்று எண்ணினேனாய், அடியேன் இதுகாறும் உன்னை அணுகாது வாழ்க்கையைப் பாழாக்கிவிட்டேன்.

திருக்கொண்டீச்சரம்

சாணிரு மடங்கு நீண்ட
சழக்குடைப்பதிக்கு நாதர்
வாணிக ரைவர் தொண்ணூற்

றறுவரு மயக்கஞ்செய்து
பேணிய பதியி னின்று
பெயரும்போ தறிய மாட்டேன்
சேணுயர் மாட நீடு
திருக்கொண்டீச்சரத்து ளானே. **#656**

வானளாவிய மாடங்கள் பலவாக உள்ள திருக்கொண்டீச்சரத்துப் பெருமானே! ஒரு முழம் நீளம் உடைய பொய்யான உடம்பாகிய ஊருக்கு ஒன்றைக் கொடுத்து ஒன்றை வாங்கும் வாணிக நோக்கமுடைய ஐம்பொறிகளாகிய வாணிகரும், தொண்ணூற்றாறு தத்துவ தாத்துவிகங்களும் கலக்கத்தை உண்டாக்க அடியேன் விரும்பித் தங்கிய அவ்வூரிலிருந்து பிரிந்து போகக் கூடிய நாள் இன்னது என்பதனை அறியும் ஆற்றல் இல்லேனாய் உள்ளேன்.

<u>திருக்கொண்டீச்சரம்</u>

பொய்ம்மறித் தியற்றி வைத்துப்
புலால்கமழ்பண்டம் பெய்து
பைம்மறித் தியற்றி யன்ன
பாங்கிலாக்குரம்பை நின்று
கைம்மறித் தனைய வாவி
கழியும்போ தறிய மாட்டேன்
செந்நெறிச் செலவு காணேன்
திருக்கொண்டீச் சரத்து ளானே. **#657**

திருக்கொண்டீச்சரத்துப்பெருமானே! பொய்களை வெளியே செல்லாதபடி தடுத்துத் திருப்பி அவற்றிற்கு வடிவுதந்து புலால் நாற்றம் வீசும் பொருள்களை அவற்றிற் பொருத்திப் பையை அழுக்குப் புலப்படாதபடி திருப்பி வைத்தாற்போன்று, எனக்குத் துணையாக உதவாத இந்த உடம்பிலிருந்து இது தகாது என்று கைகளால் குறிப்பிட்டுச் செல்வது போன்ற உயிர் நீங்கும் காலம் இது என்பதனை அறியும் ஆற்றல் இல்லேன். உயிருக்கு உறுதி தேடி நேரிய வழியில் செல்லும் ஞான சாரத்தையும் உணரேன்.

<u>திருக்கொண்டீச்சரம்</u>

பாலனாய்க் கழிந்த நாளும்
பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளு
மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்தநாளுங்
குறிக்கோளி லாதுகெட்டேன்

சேலுலாம் பழனவேலித்
திருக்கொண்டீச் சரத்துளானே. **#658**
சேல்கள் உலாவும் வயல்கள் சூழ்ந்த கொண்டீச்சரத்துப் பெருமானே!
சிறுவனாய் இருந்து கழிந்தபாலப் பருவத்தும், குளிர்ந்த மலர்
மாலைகளை அணிந்த மகளிருடைய தொடர்பு உடையவனாய்க் கழிந்த
வாலிபப் பருவத்தும், மெலிவோடு கிழப் பருவம் வரக் கோலை ஊன்றிக்
கழிந்த முதுமைப் பருவத்தும் குறிக்கோள் ஏதும் இன்றி வாழ்ந்து
கெட்டுப் போயினேன்.

<u>திருக்கொண்டீச்சரம்</u>

விரைதரு கருமென் கூந்தல்
விளங்கிழை வேலொண் கண்ணாள்
வெருவர விலங்கைக் கோமான்
விலங்கலை யெடுத்த ஞான்று
பருவரை யனைய தோளு
முடிகளும் பாறி வீழத்
திருவிர லூன்றி னானே
திருக்கொண்டீச் சரத்து ளானே. **#659**
திருக்கொண்டீச்சரத்துப் பெருமான் நறுமணம் கமழும் கரிய மெல்லிய
கூந்தலையும் விளங்குகின்ற அணிகலன்களையும் வேல்போன்ற
ஒளிபொருந்திய கண்களையும் உடைய பார்வதி அஞ்சுமாறு
இராவணன் மலையை எடுத்த போது அவனுடைய பருத்த
மலைபோன்ற தோள்களும் முடிகளும் சிதறி விழுமாறு அழகிய கால்
விரலை ஊன்றினார்.

திருவாலங்காடு

திருவாலங்காடு

திருவாலங்காடு, திருநேரிசை,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஊர்த்ததாண்டவேசுவரர்.
தேவியார் : வண்டார்குழலியம்மை.

வெள்ளநீர்ச் சடையர்போலும்
விரும்புவார்க் கெளியர் போலும்
உள்ளுளே யுருகி நின்றங்
குகப்பவர்க் கன்பர் போலும்
கள்ளமே வினைக ளெல்லாங்
கரிசறுத் திடுவர்போலும்
அள்ளலம் பழனை மேய
வாலங்காட் டடிக ளாரே. **#660**

வயல்களில் சேறு நிரம்பிய பழையனூரை அடுத்த திருவாலங்காட்டுப் பெருமான் கங்கை சூடிய சடையினராய், விரும்புபவர்களுக்கு எளியவராய், உள்ளத்திலே இறை தியானத்தால் நெகிழ்ச்சியுற்று மகிழும் அடியவர்பால் அன்பராய், நுகர்வோர் காரணம் உணராத வகையில் நுகர்விக்கும் இரு வினைகளின் மாசுகளைப் போக்குபவர் ஆவார்.

திருவாலங்காடு

செந்தழ லுருவர் போலுஞ்
சினவிடை யுடையர்போலும்
வெந்தவெண் ணீறு கொண்டு
மெய்க்கணிந் திடுவர் போலும்
மந்தமாம் பொழிற்ப ழனை
மல்கிய வள்ளல் போலும்
அந்தமி லடிகள் போலு
மாலங்காட் டடிக ளாரே. **#661**

ஆலங்காட்டு அடிகளார் செந்தழல் நிறத்தவராய், கோபம் உடைய காளையை உடையவராய், வெண்ணீற்றைத் திருமேனியில் அணிபவராய், தென்றல் வீசும் சோலைகளை உடைய பழையனூரில் உறையும் வள்ளலாராய்த் தமக்கு ஒரு காலத்தும் இறுதியில்லாத பெருமானாய் உள்ளார்.

திருவாலங்காடு

கண்ணினாற் காம வேளைக்
கனலெழ விழிப்பர் போலும்
எண்ணிலார் புரங்கண் மூன்று
மெரியுணச் சிரிப்பர் போலும்
பண்ணினார் முழவ மோவாப்
பைம்பொழிற் பழனை மேய
அண்ணலா ரெம்மை யாளு
மாலங்காட் டடிக ளாரே. **#662**

நம்மை அடிமை கொள்ளும் ஆலங்காட்டுப் பெருமான் நெற்றிக்கண்ணால் கருவேள் ஆகிய மன்மதனைத் தீயினால் சாம்பலாகுமாறு விழித்தவரும், பகைவருடைய மும்மதில் களும் தீக்கு இரையாகுமாறு சிரித்தவரும், பண்ணுக்குஏற்ப ஒலிக்கும் முழாவின் ஒலி நீங்காததும், சோலைகளை உடையதுமான பழையனூரில் விரும்பித்தங்கிய தலைவரும் ஆவார்.

திருவாலங்காடு

காறிடு விடத்தை யுண்ட
கண்டரெண் டோளர் போலும்
தூறிடு சுடலை தன்னிற்
சுண்ணவெண் ணீற்றர் போலும்
கூறிடு முருவர் போலுங்
குளிர்பொழிற் பழனைமேய
ஆறிடு சடையர் போலு
மாலங்காட் டடிக ளாரே. **#663**

குளிர்ந்த சோலைகளை உடைய பழையனூரைச் சேர்ந்த, கங்கை சூடிய ஆலங்காட்டுப் பெருமான் கொல்லுகின்ற விடத்தை உண்ட கழுத்தினராய், எட்டுத் தோளினராய்த் தூறுகள் மண்டிக் கிடக்கும் சுடுகாட்டு வெள்ளிய சாம்பலைப் பூசியவராய்ப் பார்வதிக்காக இடப்பாகத்தைப் பிரித்துக் கொடுத்துப் பார்வதிபாகராம் உருவினராய் உள்ளார்.

திருவாலங்காடு

பார்த்தனோ டமர் பொருது
பத்திமை காண்பர்போலும்
கூர்த்தவா யம்பு கோத்துக்
குணங்களை யறிவர்போலும்
பேர்த்துமோ ராவ நாழி
யம்பொடுங் கொடுப்பர் போலும்

தீர்த்தமாம் பழனை மேய
திருவாலங் காட னாரே. #664

பழையனூரையடுத்த, பாவத்தைப் போக்கும் தூய்மையை உடைய ஆலங்காட்டுப் பெருமான் பார்த்தனோடு போரிட்டு அவனுடைய பக்தியைக் கண்டவராய், கூர்மையான நுனியை உடைய அம்புகளைக் கோத்து அவன் குணங்களை அறிந்தவராய்ப் பின்னும் ஒரு அம்புப் புட்டிலை அத்திரத்தோடு அவனுக்கு வழங்கியவராய் உள்ளார்.

திருவாலங்காடு

வீட்டினார் சுடுவெண் ணீறு
மெய்க்கணிந் திடுவர் போலும்
காட்டினின் றாடல் பேணுங்
கருத்தினையுடையர் போலுங்
பாட்டினார் முழவ மோவாப்
பைம்பொழிற் பழனை மேயார்
ஆட்டினா ரரவந் தன்னை
யாலங்காட் டடிக ளாரே. #665

ஆலங்காட்டுப் பெருமான் இறந்தவர்களைக் கொளுத்திய சாம்பலை உடலில் பூசியவராய்ச் சுடுகாட்டிலிருந்து கூத்தாடுதலை விரும்பும் கருத்தினை உடையவராய்ப் பாம்பினை ஆட்டுபவராய்ப் பாடுதலை உடையவராய், முழாவின் ஒலி நீங்காததும், பசுமையான சோலைகளை உடையதுமான பழையனூரை விரும்பி உறைகின்றார்.

திருவாலங்காடு

தாளுடைச் செங் கமலத்
தடங்கொள்சே வடியர் போலும்
நாளுடைக் காலன் வீழ
வுதைசெய்த நம்பர் போலும்
கோளுடைப் பிறவி தீர்ப்பார்
குளிர்பொழிற் பழனை மேய
ஆளுடை யண்ணல் போலு
மாலங்காட் டடிக ளாரே. #666

குளிர்ந்த சோலைகளை உடைய பழையனூரை அடுத்த ஆலங்காட்டுப் பெருமான் தண்டினை உடைய செங்கமலப்பூப் போன்ற பெருமை பொருந்திய திருவடிகளை உடையவராய், தனக்கு உயிர்வாழ வேண்டிய நாள்கள் இன்னும் பலவாக உடைய இயமன் அழியுமாறு உதைத்த, நம்மால் விரும்பப்படும் தலைவராய், யாம் வினைவயத்தாற் கொள்ளுதற்குரிய பிறவிகளைப் போக்குபவராய் நம்மை

அடிமையாகக்கொள்ளும் தலைவராக உள்ளார்.

திருவாலங்காடு

கூடினா ருமை தனோடே
குறிப்புடை வேடங் கொண்டு
சூடினார் கங்கை யாளைச்
சுவறிடு சடையர் போலும்
பாடினார் சாம வேதம்
பைம்பொழிற் பழனை மேயார்
ஆடினார் காளி காண
வாலங்காட் டடிக ளாரே. **#667**

பசுமையாகிய சோலைகளை உடைய பழையனூரை விரும்புபவராகிய ஆலங்காட்டுப் பெருமான் காதற் குறிப்புடைய வேடத்தைக் கொண்டு பார்வதி பாகராகிக் கங்கையைச் சூடி அதன் பெருக்கைக் குறைத்த சடையினராய்ச் சாமவேதம் பாடினவராய்க் காளிதேவி காண ஆடிய பெருமானாராவார்.

திருவாலங்காடு

வெற்றரைச் சமண ரோடு
விலையுடைக் கூறை போர்க்கும்
ஒற்றரைச் சொற்கள் கொள்ளார்
குணங்களை யுகப்பர் போலும்
பெற்றமே யுகந்தங் கேறும்
பெருமையை யுடையர் போலும்
அற்றங்க ளறிவர் போலு
மாலங்காட் டடிக ளாரே. **#668**

ஆலங்காட்டு அடிகளார் ஆடையற்ற சமணர்களோடு விலைமதிப்புடைய ஆடைகளைப் போர்க்கும் புத்தர்கள் பேசும் ஒன்றும் பாதியுமாகிய சொற்களை ஏற்றுக் கொள்ளாத சிவனடியார்களுடைய குணங்களை விரும்பியவராய், விரும்பிக் காளையை வாகனமாகக் கொள்ளும் பெருமையை உடையவராய்ப் பிறர் அறியாதவாறு மறைத்துச் செய்யும் பாவங்களை அறியும் ஞானமுடையவராய் உள்ளார்.

திருவாலங்காடு

மத்தனாய் மலையெ டுத்த
வரக்கனைக் கரத்தோ டொல்க
ஒத்தினார் திருவி ரலா
லூன்றியிட் டருள்வர் போலும்

பத்தர்தம் பாவந் தீர்க்கும்
பைம்பொழிற் பழனை மேய
அத்தனார் நம்மை யாள்வா
ராலங்காட் டடிக ளாரே. **#669**

ஆலங்காட்டுப் பெருமான் செருக்குற்றவனாய்க் கயிலையைப் பெயர்த்த இராவணனைக் கைகளோடு தளருமாறு விரலை ஊன்றிப் பின் அவனுக்கு அருள் செய்தவராய், பக்தர்களுடைய தீவினைகளைத் தீர்ப்பவராய், பசுமையான சோலைகளை உடைய பழையனூரை விரும்பி உறையும் தலைவராய் நம்மை அடிமை கொள்பவராய் உள்ளார்.

திருக்கோவலூர்வீரட்டம்

திருக்கோவலூர்வீரட்டம்

திருக்கோவலூர்வீரட்டம், திருநேரிசை,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : சிவானந்தவல்லியம்மை.

செத்தையேன் சிதம்பன் நாயேன்
செடியனே னழுக்குப் பாயும்
பொத்தையே போற்றி நாளும்
புகலிட மறிய மாட்டேன்
எத்தைநான் பற்றி நிற்கே
னிருளற நோக்க மாட்டாக்
கொத்தையேன் செய்வ தென்னே
கோவல் வீரட்ட னீரே. **#670**

திருக்கோவலூர் வீரட்டப்பெருமானே! காய்ந்த செத்தையைப் போன்ற பயனற்றவனாய், பண்பிலேனாய், நாய் போன்றேனாய், குற்றமுடையேனாய், முடைநாற்றம் உடையேனாய், அழுக்குப் பரவியிருக்கும் பொத்தலாகிய இவ்வுடம்பினையே விரும்பிப் பாதுகாத்து நாளும் சென்று சேரத்தக்க இடத்தை அறிய இயலாதேனாய், இருள் தீரமனத்தால் உணரமாட்டாத மனக் குருடன் ஆகிய அடியேன் எதனைப்பற்றுதலால் நிலைபேறுடையேனாவேன்? யாது செயற்பாலேன்?

திருக்கோவலூர்வீரட்டம்

தலைசுமந் திருகை நாற்றித்
தரணிக்கே பொறைய தாகி
நிலையிலா நெஞ்சந் தன்னு
ணித்தலு மைவர்வேண்டும்
விலைகொடுத் தறுக்க மாட்டேன்
வேண்டிற்றே வேண்டி யெய்த்தேன்
குலைகள்மாங் கனிகள் சிந்துங்
கோவல்வீ ரட்ட னீரே. **#671**

குலைகளாக மாங்கனிகள் பழுத்து விழும் திருக்கோவலூர்ப் பெருமானே! தலையைச் சுமந்து கொண்டு, இருகைகளைத் தொங்கவிட்டுக் கொண்டு பூமிக்குப் பாரமாய் ஒரு நிலையில் நில்லாத உள்ளத்திலே நாள்தோறும் ஐம்பொறிகள் வேண்டுவனவற்றை வழங்கி அவற்றின் ஆதிக்கத்தை

ஒழிக்க இயலாதேனாய் அவை வேண்டியவற்றையே யானும் விரும்பி இளைத்துப் பாழானேன்.

திருக்கோவலூர்வீரட்டம்

வழித்தலைப் படவு மாட்டேன்
வைகலுந் தூய்மைசெய்து
பழித்திலேன் பாச மற்றுப்
பரமநான்பரவ மாட்டேன்
இழித்திலேன் பிறவி தன்னை
யென்னினைந்திருக்க மாட்டேன்
கொழித்துவந் தலைக்குந் தெண்ணீர்க்
கோவல்வீரட்ட னீரே. **#672**

இருபுறமும் பல பொருள்களையும் அலைகளால் கரையில் சேர்க்கும் தெளிந்த நீரை உடைய திருக்கோவலூர்ப் பெருமானே! சான்றோர் குறிப்பிடும் நல்வழியில் செல்லாதேனாய், நாள்தோறும் உள்ளத்தைத் தூய்மையாக்கி உலகப்பற்றுக்களைப் பழித்து நீத்து மேம்பட்ட உன்னை முன் நின்று புகழமாட்டேனாய், இப்பிறப்பை இழிவாகக் கருதேனாய், யான் பொருத்தமில்லாத பலவற்றை நினைத்துக் காலத்தை வீணாகப் போக்குகிறேன்.

திருக்கோவலூர்வீரட்டம்

சாற்றுவ ரைவர் வந்து
சந்தித்த குடிமை வேண்டிக்
காற்றுவர் கனலப் பேசிக்
கண்செவி மூக்குவாயுள்
ஆற்றுவ ரலந்து போனே
னாதியை யறிவொன் றின்றிக்
கூற்றுவர் வாயிற் பட்டேன்
கோவல்வீ ரட்ட னீரே. **#673**

கோவலூர்ப்பெருமானே! இவ்வுயிர் இவ்வுடலாகிய வீட்டில் ஒண்டிக் குடித்தனம் செய்வதால் இவ்வுடம்பில் ஆதிக்கம் செலுத்தும் உடைமையாளரைப் போல உள்ள ஐம்பொறிகள் தம் விருப்பத்திற்கு வேண்டியவற்றைக் குறிப்பிட்டுக் கண், செவி, மூக்கு, வாய் என்ற தமக்கு அவற்றை வழங்கவேண்டும் என்று கடுமையாகப்பேசி என்னை நடத்துதலால் வருந்தினேனாய் மூலமாயுள்ள உன்னை அறியும் அறிவு இன்றிக் கூற்றுவனுடைய வாயில் அகப்பட்டுள்ளேன்.

திருக்கோவலூர்வீரட்டம்

தடுத்திலே னைவர் தம்மைத்
தத்துவத் துயர்வு நீர்மைப்
படுத்திலேன் பரப்பு நோக்கிப்
பன்மலர்ப் பாத முற்ற
அடுத்திலேன் சிந்தை யார
வார்வலித் தன்பு திண்ணம்
கொடுத்திலேன் கொடிய வாநான்
கோவல்வீ ரட்ட னீரே. **#674**

கோவலூர்ப் பெருமானே! ஐம்பொறிகளை அடக்கி மெய்ப்பொருளின் உண்மைத் தன்மையில் ஆன்மா ஈடுபடும்படி செய்யேனாய், எம் பெருமான் எங்கும் பரவியவனாய் இருப்பதனை மனங்கொண்டு, அவன் திருவடிகளில் சேர்ப்பிக்கப் பலமலர்களையும் பறித்துத் தொகுக்காதேனாய், மனம் நிறைய அன்புகொண்டு அவ்வன்பை எம்பெருமான் பால் செலுத்தேனாய் அடியேன் கொடியேனாகக் காலம் கழித்துவிட்டேனே!

திருக்கோவலூர்வீரட்டம்

மாச்செய்த குரம்பை தன்னை
மண்ணிடை மயக்க மெய்து
நாச்செய்த நாலு மைந்து
நல்லன வாய்தல் வைத்துக்
காச்செய்த காயந் தன்னு
ணித்தலு மைவர் வந்து
கோச்செய்து குமைக்க வாற்றேன்
கோவல்வீ ரட்ட னீரே. **#675**

கோவலூர்ப் பெருமானே! ஐம்பெரும் பூதங்களால் அமைந்த உடம்பாகிய குடிசைக்கு உலகிலே நாவின் சுவையோடு ஒன்பது வாசல்களை அமைத்து உயிரைச் சுமக்கும் இவ்வுடலினுள்ளே நாள்தோறும் ஆட்சி செய்வனவாக, ஐம்பொறிகள் அழிவு செய்தலால் அவற்றின் தீங்குகளைப் பொறுக்க இயலாதேனாய் உள்ளேன்.

திருக்கோவலூர்வீரட்டம்

படைகள்போல் வினைகள் வந்து
பற்றியென் பக்க னின்றும்
விடகிலா வாத லாலே
விகிர்தனை விரும்பி யேத்தும்
இடையிலே னென்செய் கேனா
னிரப்பவர் தங்கட் கென்றும்

கொடையிலேன் கொள்வதே நான்
கோவல்வீரட்ட னீரே. **#676**

கோவலூர்ப் பெருமானே! வினைகள் என்னைத் தாக்கும் படைகளைப் போல வந்து பற்றி விடாமல் வருத்துவதால், என்னிடம் வந்து இரப்பவர்களுக்கு ஒருநாளும் ஒன்றையும் கொடுத்து அறியாதேனாய்ப் பிறரிடம் எதனையாவது பெறுவதனையே தொழிலாகக் கொண்டுள்ள அடியேன், பெருமானாராகிய உங்களை விரும்பித் துதிக்கும் வாய்ப்பினைப் பெறேனாய்ப் பயனற்ற வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

திருக்கோவலூர்வீரட்டம்

பிச்சிலேன் பிறவி தன்னைப்
பேதையேன்பிணக்க மென்னும்
துச்சுளே யழுந்தி வீழ்ந்து
துயரமே யிடும்பைதன்னுள்
அச்சனா யாதி மூர்த்திக்
கன்பனாய் வாழமாட்டாக்
கொச்சையேன் செய்வ தென்னே
கோவல்வீரட்ட னீரே. **#677**

கோவலூர்ப் பெருமானே! அறிவற்றவனாகிய அடியேன் பிறவிப் பிணியை அடியோடு சிதறச் செய்து போக்கும் ஆற்றல் இல்லேன். உயிர் தங்கியிருக்கும் இவ்வுடலின் பற்றிலே அழுந்திக் கிடந்து துயரமே நுகர்தற்குரிய இவ்வுடம்பில் உள்ள உயிரை ஆதிமூர்த்தியாகிய உமக்கு அன்புடையதாகச் செய்து வாழமுடியாத அகக்கண் குருடனாகிய அடியேன் செயற்பாலது யாது உளது?

திருக்கோவலூர்வீரட்டம்

நிணத்திடை யாக்கை பேணி
நியமஞ்செய் திருக்க மாட்டேன்
மணத்திடை யாட்டம் பேசி
மக்களே சுற்ற மென்னும்
கணத்திடை யாட்டப் பட்டுக்
காதலா லுன்னைப் பேணும்
குணத்திடை வாழ மாட்டேன்
கோவல்வீ ரட்ட னீரே. **#678**

கோவலூர்ப் பெருமானே! கொழுப்பை இணைத்து அமைக்கப்பட்ட இவ்வுடம்பினை விரும்பி நாடோறும் செய்யவேண்டிய வழிபாட்டுக் கடமைகளைச் செய்ய மாட்டேனாய், திருமணத்திலே விருப்பம்

கொண்டு பேசி மக்கள் சுற்றம் என்னும் கூட்டத்திலே தடுமாறுமாறு செயற் படுத்தப்பட்டு அன்போடு உம்மை விரும்பும் நற்பண்போடு வாழமாட்டாதேன் ஆயினேன்.

திருக்கோவலூர்வீரட்டம்

விரிகட லிலங்கைக் கோனை
விரிகயி லாயத்தின் கீழ்
இருபது தோளும் பத்துச்
சிரங்களு நெரிய வூன்றிப்
பரவிய பாடல் கேட்டுப்
படைகொடுத் தருளிச் செய்தார்
குரவொடு கோங்கு சூழ்ந்த
கோவல் வீரட்ட னாரே. **#679**

குரவ மரமும் கோங்க மரமும் சூழ்ந்த திருக்கோவலூர்ப் பெருமான். விரிந்த கடலால் சூழப்பட்ட இலங்கை நகர மன்னனான இராவணனைப் பரந்த கயிலை மலையின் கீழே அவனுடைய இருபது தோள்களும் பத்துத் தலைகளும் நெரியுமாறு கால்விரலை அழுத்திப் பின் அவன் முன் நின்று போற்றிய பாடல்களைக் கேட்டு அவனுக்கு வாட்படையைக் கொடுத்து அருளியவராவர்.

திருநனிபள்ளி

திருநனிபள்ளி

திருநனிபள்ளி, திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நற்றுணையப்பர்.
தேவியார் : பர்வதராசபுத்திரி.

முற்றுணை யாயி னானை
மூவர்க்கும் முதல்வன் றன்னைச்
சொற்றுணை யாயி னானைச்
சோதியை யாத ரித்து
உற்றுணர்ந் துருகி யூறி
யுள்கசி வுடைய வர்க்கு
நற்றுணை யாவர் போலு
நனிபள்ளி யடிக ளாரே. **#680**

நனிபள்ளிப் பெருமான் முதல் துணைவராய், மூவர்க்கும் தலைவராய், வேதத்துக்கு இணையானவராய்ச் சோதி வடிவமான தம்மை விரும்பி நன்கு உணர்ந்து உள்ளம் நெகிழ்ந்து உள்ளத்தில் பக்தி ஊறுதலால் நீராய் உருகிக் கண்ணீர்பெருக்கும் அடியவர்களுக்குப் பெரிய துணையாபவராய் உள்ளார்.

திருநனிபள்ளி

புலர்ந்தகால் பூவு நீரங்
கொண்டடி போற்ற மாட்டா
வலஞ்செய்து வாயி னூலால்
வட்டணைப் பந்தர் செய்த
சிலந்தியை யரைய னாக்கிச்
சீர்மைக ளருள வல்லார்
நலந்திகழ் சோலை சூழ்ந்த
நனிபள்ளி யடிக ளாரே. **#681**

அழகு விளங்கும் சோலைகளால் சூழப்பட்ட நனிபள்ளிப்பெருமான், பொழுது விடிந்த அளவில் பூவும் அபிடேக தீர்த்தமும் கொண்டு திருவடியை வணங்க இயலாத பிறப்பினதாகையாலே, பெருமானைச் சுற்றி வலமாக வந்து தன் வாயிலிருந்து சுரக்கும் நூலினாலே வட்டமாகப் பந்தலை அமைத்து வழிபட்ட சிலந்தியை அரசனாக்கி, எல்லா நலன்களையும்அருளிய ஆற்றலுடையவராவர்.

திருநனிபள்ளி

எண்பதும் பத்து மாறு
மென்னுளே யிருந்து மன்னிக்
கண்பழக் கொன்று மின்றிக்
கலக்கநா னலக்க ழிந்தேன்
செண்பகந் திகழும் புன்னை
செழுந்திரட் குரவம் வேங்கை
நண்புசெய் சோலை சூழ்ந்த
நனிபள்ளி யடிக ளாரே. **#682**

செண்பகம், விளங்கும் புன்னை, செழித்து ஓங்கி வளர்ந்த குரவம் வேங்கை இவை கலந்து காணப்படும் சோலைகள் சூழ்ந்த நனிபள்ளிப் பெருமானே! 96 தத்துவ தாத்துவிகங்களும் என் உடம்பினுள்ளே நிலையாக இருந்து சிறிதும் கண்ணோட்டமின்றி என்னைக் கலக்கவே அடியேன் துன்பத்தாற் சீர்குலைந்தேன்.

திருநனிபள்ளி

பண்ணினார் பாட லாகிப்
பழத்தினி லிரத மாகிக்
கண்ணினார் பார்வை யாகிக்
கருத்தொடு கற்ப மாகி
எண்ணினா ரெண்ண மாகி
யேழுல கனைத்து மாகி
நண்ணினார் வினைக டீர்ப்பார்
நனிபள்ளி யடிக ளாரே. **#683**

நனிபள்ளிப்பெருமான் பண் அமைந்த பாடலாகவும், பழத்தின் சுவையாகவும், கண்ணிற் பொருந்திய பார்வையாகவும், கருத்தில் அமைந்த காதல் நினைவாகவும், எண்ணுகின்றவருடைய எண்ணமாகவும் ஏழுலகங்களாகவும் தம்மைச் சரணமாக அடைந்த அடியவர்களுடைய வினைகளைப் போக்குபவராகவும் உள்ளார்.

திருநனிபள்ளி

துஞ்சிருள் காலை மாலை
தொடர்ச்சியை மறந்தி ராதே
அஞ்செழுத் தோதி னாளு
மரனடிக் கன்ப தாகும்
வஞ்சனைப் பாற்சோ றாக்கி
வழக்கிலா வமணர் தந்த

நஞ்சமு தாக்கு வித்தார்
நனிபள்ளி யடிக ளாரே. **#684**
இருள் நீங்கும் காலையிலும் மாலையிலும் பெருமானுக்கும் தமக்கும் உள்ள உறவை மறக்காமல் திருவைந்தெழுத்தை ஓதினால், நாடோறும் சிவனடிக்கண் அன்பு பெருகி வளரும். அத்தகைய அன்பு வளருவதன் பேறாக செய்யும் வஞ்சனையால் பாற்சோற்றை நஞ்சுடன் கலந்து சமைத்து நல்ல வழக்கம் இல்லாத சமணர்கள் கொடுத்த அந்த நஞ்சை அமுதமாக்கி அருளினார் திருநனிபள்ளியடிகள்.

திருநனிபள்ளி

செம்மலர்க் கமலத் தோனுந்
திருமுடி காண மாட்டான்
அம்மலர்ப் பாதங் காண்பா
னாழியா னகழ்ந்துங் காணான்
நின்மல னென்றங் கேத்து
நினைப்பினை யருளி நாளும்
நம்மல மறுப்பர் போலு
நனிபள்ளி யடிக ளாரே. **#685**
செந்தாமரைப் பூவிலுள்ள பிரமன் திருமுடியைக் காணவும், சக்கரத்தை ஏந்திய திருமால் அகழ்ந்தும், தாமரை போன்ற பாதங்களைக் காணவும், இயலாதாராய்த் தம்மைக் களங்கமற்றவர் என்று போற்றும் எண்ணத்தை அவர்களுக்கு வழங்கி நம்முடைய களங்கங்களையும் போக்குபவர் நனிபள்ளி அடிகளார்.

திருநனிபள்ளி

அரவத்தால் வரையைச் சுற்றி
யமரரோ டசுரர் கூடி
அரவித்துக் கடையத் தோன்று
மாலநஞ் சமுதா வுண்டார்
விரவித்தம் மடிய ராகி
வீடிலாத் தொண்டர் தம்மை
நரகத்தில் வீழ வொட்டார்
நனிபள்ளி யடிக ளாரே. **#686**
மந்தரம் என்ற மத்திலே வாசுகி என்ற பாம்பைக் கடை கயிறாகச் சுற்றித் தேவரும் அசுரரும் பேரொலி செய்து கடைந்த போது தோன்றிய நஞ்சத்தை அமுதாக உண்டவராய், தம் அடியவருடன் கலந்து என்றும் தம் அடிமையில் நீங்குதல் இல்லாத அவர்களை நரகத்தில் வீழாமல் காப்பவராய் உள்ளார் நனிபள்ளி அடிகளார்.

<u>திருநனிபள்ளி</u>

மண்ணுளே திரியும் போது
வருவன பலவுங் குற்றம்
புண்ணுளே புரைபு ரையன்
புழுப்பொதி பொள்ள லாக்கை **#687**

இவ்வுலகினில் சுற்றித் திரியும் போது பல குற்றங்கள் ஏற்படுகின்றன. புண்ணினுள்ளே பல துவாரங்களை உடையதாய்ப் புழுக்கள் உள்ளே மறைந்திருக்கும் பலதுளைகளை உடைய உடம்பு...

<u>திருநனிபள்ளி</u>

பத்துமோ ரிரட்டி தோளான்
பாரித்து மலையெ டுக்கப்
பத்துமோ ரிரட்டி தோள்கள்
படருடம் படர வூன்றிப்
பத்துவாய் கீதம் பாடப்
பரிந்தவற் கருள் கொடுத்தார்
பத்தர்தாம் பரவி யேத்து
நனிபள்ளிப் பரம னாரே. **#688**

பக்தர்கள் முன் நின்று துதித்துப் புகழும் நனிபள்ளிப் பெருமான் இருபது தோள்களை உடைய இராவணன் தன் பெருமையைப் பரக்கச் சொல்லிக் கயிலைமலையைப் பெயர்க்க முற்பட, இருபது தோள்களை உடைய அவன் உடல் வருந்துமாறு திருவடி விரல் ஒன்றனை ஊன்றிப் பின் அவன் தன் பத்து வாய்களாலும் இசைப் பாடல்களைப் பாட அவனுக்கு அருள் செய்தவர் ஆவர்.

திருநாகைக்காரோணம்

திருநாகைக்காரோணம்

திருநாகைக்காரோணம், திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காயாரோகணேசுவரர்.
தேவியார் : நீலாயதாட்சியம்மை.

மனைவிதாய் தந்தை மக்கள்
மற்றுள சுற்ற மென்னும்
வினையுளே விழுந்த ழுந்தி
வேதனைக் கிடமா காதே
கனையுமா கடல்சூழ் நாகை
மன்னுகா ரோணத் தானை
நினையுமா வல்லீ ராகி
லுய்யலா நெஞ்சி னீரே. **#689**

மனமே! பெற்றோர் மனைவி மக்கள் ஏனைய சுற்றத்தார் என்று சொல்லப்படும் தேக பந்துக்களின் பாசமாகிய வினையிலே அகப்பட்டு அழுந்தித் துயருக்கு இடமாகாமல் ஒலிக்கின்ற பெரிய கடல் ஒருபுறம் சூழ்ந்த நாகையில் உறையும் காரோணத்தானை விருப்புற்று நினைக்கும் ஆற்றல் உடையையாயின் துயர்களிலிருந்து தப்பி உய்யலாம்.

திருநாகைக்காரோணம்

வையனை வைய முண்ட
மாலங்கந் தோண்மேற் கொண்ட
செய்யனைச் செய்ய போதிற்
றிசைமுகன் சிரமொன் றேந்துங்
கையனைக் கடல்சூழ் நாகைக்
காரோணங் கோயில் கொண்ட
ஐயனை நினைந்த நெஞ்சே
யம்மநா முய்ந்த வாறே. **#690**

எருதை ஊர்பவனாய், ஊழிக்காலத்தே உலகத்தை வயிற்றில் கொண்ட திருமாலுடைய எலும்புருவான கங்காளத்தை தன் தோள் மேல் கொண்ட செந்நிறத்தனாய், செந்தாமரையில் தங்கிய பிரமனுடைய மண்டையோடு ஒன்றனை ஏந்திய கையனாய் ஒருபுறம் கடலால் சூழப்பட்ட நாகைக் காரோணத்தை இருப்பிடமாகக் கொண்ட தலைவனை விருப்புற்று நினைத்த மனமே! நாம் துயரங்களிலிருந்து தப்பிப் பிழைத்தவாறு வியக்கத்தகும்.

திருநாகைக்காரோணம்

நிருத்தனை நிமலன் றன்னை
நீணிலம் விண்ணின் மிக்க
விருத்தனை வேத வித்தை
விளைபொருண் மூல மான
கருத்தனைக் கடல்சூழ் நாகைக்
காரோணங் கோயில் கொண்ட
ஒருத்தனை யுணர்த லானா
முய்ந்தவா நெஞ்சி னீரே. **#691**

மனமே! கூத்தனாய், தூயனாய், நீண்ட இவ்வுலகம், தேவருலகம் ஆகியவற்றிற்கு மேம்பட்டவனாய், வேதங்களால் காரணன் என்று கூறப்படுபவனாய், தோன்றும் பொருளையெல்லாம் படைப்பவனாய் உள்ள நாகைக்காரோணத்து ஒப்பற்ற பெருமானைப் பரம்பொருள் என்று உணர்வதால் நாம் உய்ந்தமை இருந்தவாறென்னே.

திருநாகைக்காரோணம்

மண்டனை யிரந்து கொண்ட
மாயனோ டசுரர் வானோர்
தெண்டிரை கடைய வந்த
தீவிடந்தன்னை யுண்ட
கண்டனைக் கடல்சூழ் நாகைக்
காரோணங் கோயில்கொண்ட
அண்டனை நினைந்து நெஞ்சே
யம்மநா முய்ந்த வாறே. **#692**

உலகங்களை மாவலியிடத்துத் தானமாகப் பெற்ற திருமாலோடு அசுரர்களும் தேவர்களும் தௌந்த அலைகளை உடைய பாற்கடலைக் கடைய அப்பொழுது எழுந்த கொடிய நஞ்சினை உண்ட கழுத்தை உடையவனாய் உள்ள காரோணப்பெருமானை நினைந்த நெஞ்சமே! நாம் உய்ந்தவாறு வியக்கத்தகும்.

திருநாகைக்காரோணம்

நிறைபுன லணிந்த சென்னி
நீணிலா வரவஞ் சூடி
மறையொலி பாடி யாடன்
மயானத்து மகிழ்ந்த மைந்தன்
கறைமலி கடல்சூழ் நாகைக்
காரோணங் கோயில் கொண்ட

இறைவனை நாளு மேத்த
விடும்பைபோ யின்ப மாமே. **#693**

கங்கையை அணிந்த தலையிலே பிறையையும் பாம்பையும் சூடி, வேதங்களைப் பாடிக்கொண்டு, சுடுகாட்டில் கூத்தாடுதலை விரும்பிய ஆற்றல் உடையவனாய், கரு நிறம் மிக்க கடல் சூழ்ந்த திருநாகைக்காரோணம் கோயிலாகக் கொண்ட இறைவனை நாள்தோறும் துதித்தலால் துன்பங்கள் நீங்க இன்பங்கள் மிகும்.

திருநாகைக்காரோணம்

வெம்பனைக் கருங்கை யானை
வெருவவன் றுரிவை போர்த்த
கம்பனைக் காலற் காய்ந்த
காலனை ஞால மேத்தும்
உம்பனை யும்பர் கோனை
நாகைக்கா ரோண மேய
செம்பொனை நினைந்த நெஞ்சே
திண்ணநா முய்ந்த வாறே. **#694**

கொடிய, பனைமரம் போன்ற துதிக்கையை உடைய யானை அஞ்சுமாறு அதன் தோலை உரித்துப் போர்த்த ஏகம்பனாய், கூற்றுவனை உதைத்த காலை உடையவனாய், உலகங்கள் துதிக்கும் தேவனாய், தேவர்கள் தலைவனாய், நாகைக் காரோணத்தில் விரும்பி உறையும் செம்பொன் மேனியனை நினைந்த. நெஞ்சே! நாம் துயரங்களிலிருந்து விடுபட்டமை நிச்சயமாயிற்று.

திருநாகைக்காரோணம்

வெங்கடுங் கானத் தேழை
தன்னொடும் வேட னாய்ச்சென்
றங்கமர் மலைந்து பார்த்தற்
கடுசர மருளி னானை
மங்கைமா ராட லோவா
மன்னுகா ரோணத் தானைக்
கங்குலும் பகலுங் காணப்
பெற்றுநாங் களித்த வாறே. **#695**

வெப்பம் மிக்ககொடிய காட்டிலே, பார்வதியோடு வேடன் வடிவில் சென்று, அங்கு அருச்சுனனோடு போரிட்டு அவனுக்குப் பாசுபதாத்திரத்தை வழங்கியவனாய், பெண்களுடைய கூத்து நீங்காமல் நிலைபெற்ற காரோணத்தில் உள்ள பெருமானை இரவும் பகலும் தரிசிக்கப் பெற்று நாம் களிப்புற்றவாறென்னே!.

திருநாகைக்காரோணம்

தெற்றினர் புரங்கண் மூன்றுந்
தீயினில் விழவோ ரம்பால்
செற்றவெஞ் சிலையர் வஞ்சர்
சிந்தையுட் சேர்வி லாதார்
கற்றவர் பயிலு நாகைக்
காரோணங் கருதி யேத்தப்
பெற்றவர் பிறந்தார் மற்றுப்
பிறந்தவர் பிறந்தி லாரே. **#696**

மாறுபட்ட அசுரர்களின் மும்மதில்களும் தீயினில் எரிந்து சாம்பலாகுமாறு ஓர் அம்பால் அழித்த கொடிய வில்லை ஏந்தியவராய், வஞ்சனை உடையவர் உள்ளத்தில் பொருந்தாதவராய் உள்ள பெருமானாருடைய திருவடிகளை வணங்கக் கற்றவர் பலராக உள்ள நாகைக்காரோணத்தை விரும்பிப் புகழும் பேறு பெற்றவர் பிறவிப் பயனடைந்தவராவர். மற்றவர்கள் பிறந்தும் பிறவாதாரே ஆவார்.

திருநாகைக்காரோணம்

கருமலி கடல்சூழ் நாகைக்
காரோணர் கமல பாதத்
தொருவிர னுதிக்கு நில்லா
தொண்டிற லரக்க னுக்கான்
இருதிற மங்கை மாரோ
டெம்பிரான் செம்பொ னாகம்
திருவடி தரித்து நிற்கத்
திண்ணநா முய்ந்த வாறே. **#697**

மனமே! கருமைமிக்க கடல் ஒருபுறம் சேர்ந்த நாகைக்காரோணருடைய தாமரை போன்ற பாதத்து ஒருவிரல் நுனியைத் தாங்கமுடியாமல் சிறந்த திறமையை உடைய இராவணன் சிதறிவிட்டான். கங்கை, பார்வதி என்ற இரண்டு பெண்களோடு சிவபெருமானுடைய சிவந்த பொன் போன்ற உடம்பைத் தாங்கி நிற்கும் திருவடிகளை நாம் நம்மிடத்தில் தாங்கிக் கொண்டிருப்பதால் நாம் துயரங்களிலிருந்து விடுபட்டவாறு நிச்சயமேயாயிற்று.

திருவின்னம்பர்

திருஇன்னம்பர்

திருவின்னம்பர், திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : எழுத்தறிந்தவீசுவரர்.
தேவியார் : கொந்தார்பூங்குழலம்மை.

விண்ணவர் மகுட கோடி
மிடைந்தசே வடியர் போலும்
பெண்ணொரு பாகர் போலும்
பேடலி யாணர் போலும்
வண்ணமா லயனுங் காணா
மால்வரை யெரியர் போலும்
எண்ணுரு வநேகர் போலும்
இன்னம்ப ரீச னாரே. **#698**

இன்னம்பரில் உறைந்து எல்லோரையும் ஆளும் தலைவர், தேவர்களுடைய பல மகுடங்களும் நெருங்கிக் கலந்த திருவடிகளை உடையவர். பார்வதி பாகர். ஆண் பெண் அலி ஆனவர். நல்ல அழகுடைய திருமாலும், பிரமனும் அடிமுடி காணாத வகையில் பெரிய தீ மலையாகக் காட்சி வழங்கியவர். அட்டமூர்த்தியாயும் அவற்றினும் பல வடிவத்தராயும் உள்ளவர்.

திருஇன்னம்பர்

பன்னிய மறையர் போலும்
பாம்பரை யுடையர் போலும்
துன்னிய சடையர் போலுந்
தூமதி மத்தர் போலும்
மன்னிய மழுவர் போலும்
மாதிட மகிழ்வர் போலும்
என்னையு முடையர் போலும்
இன்னம்ப ரீச னாரே. **#699**

இன்னம்பர் ஈசர் வேதத்தை ஒலித்து, இடையில் ஆடைமேல் பாம்பைஇறுகக் கட்டி, செறிந்த சடையில் பிறையும் ஊமத்தம் பூவும் அணிந்து, மழுப்படை தாங்கிய கையராய், பார்வதி பாகராய், அடியேனையும் அடியவனாக உடையவர்.

திருஇன்னம்பர்

மறியொரு கையர் போலும்
மாதுமை யுடையர் போலும்
பறிதலைப் பிறவி நீக்கிப்
பணிகொள வல்லர் போலும்
செறிவுடை யங்க மாலை
சேர்திரு வுருவர் போலும்
எறிபுனற் சடையர் போலும்
இன்னம்ப ரீச னாரே. **#700**

ஒரு கையில் மான்கன்றை ஏந்திப் பார்வதி பாகராய், தலைமயிரை வலிந்து பிடுங்கிக் கொள்ளும் சமணத் தோற்றத்தை நீக்கி, அடியேனைத் தம் திருத்தொண்டில் ஈடுபடுத்த வல்லவராய், செறிந்த தலைமாலையை அணிந்த வடிவினராய், அலைவீசும் கங்கையைச் சடையில் தரித்தவராய் உள்ளார் இன்னம்பர் ஈசன்.

திருஇன்னம்பர்

விடமலி கண்டர் போலும்
வேள்வியை யழிப்பர் போலும்
கடவுநல் விடையர் போலுங்
காலனைக் காய்வர் போலும்
படமலி யரவர் போலும்
பாய்புலித் தோலர் போலும்
இடர்களைந் தருள்வர்போலும்
இன்னம்ப ரீச னாரே. **#701**

இன்னம்பர் ஈசன், நஞ்சு பொருந்திய கழுத்தினராய், தக்கன் வேள்வியை அழித்தவராய், பெரிய காளையைச் செலுத்துபவராய், கூற்றுவனைக் கோபித்தவராய், படம் எடுக்கும் பாம்பினை உடையவராய், பரவிய புலித்தோலை உடுத்தவராய், அடியார்களுடைய துன்பங்களைப் போக்கி அருள் செய்பவர் ஆவர்.

திருஇன்னம்பர்

அளிமலர்க்கொன்றை துன்று
மவிர்சடையுடையர் போலும்
களிமயிற்சாய லோடுங்
காமனைவிழிப்பர் போலும்
வெளிவளருருவர் போலும்
வெண்பொடியணிவர் போலும்
எளியவரடியர்க் கென்றும்
இன்னம்பரீச னாரே. **#702**

இன்னம்பர் ஈசன் வண்டுகள் மொய்க்கும் கொன்றைப்பூமாலை பொருந்திய. ஒளிவீசும் சடையை உடையவராய், மகிழ்ச்சியுறும் மயில் போன்ற மென்மையை உடைய பார்வதி பாகராய் மன்மதனைச் சாம்பலாகுமாறு விழித்தவராய், எல்லா அண்டங்களும் நிறைந்த விசுவரூபம் எடுத்தவராய், திருநீற்றை அணிபவராய், அடியவர்கள் எப்பொழுதும் வணங்கி வேண்டுவதற்கு எளியவராய் உள்ளார்.

திருஇன்னம்பர்

கணையமர் சிலையர் போலுங்
கரியுரி யுடையர் போலும்
துணையமர் பெண்ணர் போலுந்
தூமணிக் குன்றர் போலும்
அணையுடை யடியர் கூடி
யன்பொடு மலர்கள் தூவும்
இணையடி யுடையர் போலும்
இன்னம்ப ரீச னாரே. **#703**

இன்னம்பர் ஈசன். அம்பு பொருந்திய வில்லினராய், யானைத்தோற் போர்வையினராய், பார்வதி பாகராய், தூய மாணிக்கக் குன்றம் போல்பவராய், உள்ளத்தில் தியானம் செய்யும் அடியார்கள் கூடி அன்பொடு மலர்களைத் தூவும் திருவடி இணையை உடையவருமாவார்.

திருஇன்னம்பர்

பொருப்பமர் புயத்தர் போலும்
புனலணிசடையர் போலும்
மருப்பிள வாமை தாங்கு
மார்பில்வெண்ணூலர் போலும்
உருத்திர மூர்த்தி போலும்
உணர்விலார்புரங்கண் மூன்றும்
எரித்திடு சிலையர் போலும்
இன்னம்ப ரீச னாரே. **#704**

இன்னம்பர் ஈசன் மலையை ஒத்த தோள்களை உடையவராய், கங்கையை அணிந்த சடையினராய், பன்றியின் கொம்பு, இளைய ஆமைஓடு எனும் இவற்றை அணிந்த மார்பில் வெண்ணூலைப் பூண்டவராய், உருத்திர மூர்த்தியாய், நல் உணர்வு இல்லாத அசுரர்களுடைய மும்மதில்களையும் தீக்கு இரையாக்கிய மேருமலையாகிய வில்லை உடையவருமாவார்.

திருஇன்னம்பர்

காடிட முடையர் போலுங்
கடிகுரல்விளியர் போலும்
வேடுரு வுடையர் போலும்
வெண்மதிக்கொழுந்தர் போலும்
கோடலர் வன்னி தும்பை
கொக்கிறகலர்ந்த கொன்றை
ஏடமர் சடையர் போலும்
இன்னம்பரீச னாரே. **#705**

இன்னம்பர் ஈசன், சுடுகாட்டைத் தங்கும் இடமாகக் கொண்டவராய் ,கடுமையான குரலால் ஒலி உண்டாக்குபவராய், அருச்சுனனுக்காக வேடர் வடிவு எடுத்தவராய், பிறை சூடியவராய், கிளைகளில் மலர்கின்ற கொன்றைப் பூவின் இதழ்கள், தும்பை, வன்னி, கொக்கின் இறகு இவை அணியப்பட்ட சடையை உடையவராய் உள்ளார்.

<u>திருஇன்னம்பர்</u>

காறிடு விடத்தை யுண்ட
கண்டரெண் டோளர் போலும்
நீறுடை யுருவர் போலும்
நினைப்பினை யரியர் போலும்
பாறுடைத் தலைகை யேந்திப்
பலிதிரிந் துண்பர் போலும்
ஏறுடைக் கொடியர் போலும்
இன்னம்ப ரீச னாரே **#706**

இன்னம்பர் ஈசன், கைப்புச்சுவையை உடைய நஞ்சினை உண்ட கழுத்தினராய், எட்டுத் தோள்களை உடையவராய், திருநீறு அணிந்த வடிவினராய், நினைப்பதற்கும் எட்டாதவராய், பருந்துகள் நெருங்கும் மண்டை ஓட்டைக் கையில் எந்திப் பல இடங்களிலும் திரிந்து பிச்சை ஏற்று உண்பவராய், காளை வடிவம் எழுதிய கொடியினராய் உள்ளார்.

<u>திருஇன்னம்பர்</u>

ஆர்த்தெழு மிலங்கைக் கோனை
யருவரை யடர்ப்பர் போலும்
பார்த்தனோ டமர் பொருது
படைகொடுத் தருள்வர் போலும்
தீர்த்தமாங் கங்கை தன்னைத்
திருச்சடை வைப்பர் போலும்
ஏத்துவே ழுலகும் வைத்தார்
இன்னம்ப ரீச னாரே. **#707**

இன்னம்பர் ஈசன், ஆரவாரித்துக் கொண்டு கயிலை மலையைப் பெயர்க்க வந்த இராவணனை, மலையின் கீழ் நசுக்கியவர். அருச்சுனனோடு போரிட்டு, அவனுக்குத் தெய்வப் படை களைக் கொடுத்து அருளியவர். தூய்மையை நல்கும் கங்கையைச் சடையில் வைத்தவர். தம்மைப் போற்றிப் புகழ ஏழு உலகங்களிலும் சீவான்மாக்களை வாழ வைத்தவராவார்

திருச்சேறை

திருச்சேறை

திருச்சேறை, திருநேரிசை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சென்னெறியப்பர்.
தேவியார் : ஞானவல்லியம்மை.

பெருந்திரு விமவான் பெற்றபெண்கொடி பிரிந்த பின்னை
வருந்துவான் றவங்கள் செய்ய
மாமணம் புணர்ந்து மன்னும்
அருந்திரு மேனி தன்பா்
லங்கொரு பாக மாகத்
திருந்திட வைத்தார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே. **#708**

திருச்சேறையிலுள்ள செந்நெறி என்னும் கோயிலில் உறைகின்ற செல்வராம் சிவபெருமான் தம்மைத் தாட்சாயணி பிரிந்த பிறகு, மிக்க செல்வத்தை உடைய, இமவான் பெற்ற பெண்மகளாய்த் தோன்றி மிக்க வருத்தத்தைத் தரும் தவங்களைச் செய்ய, பெருமான் அவளைத் திருமணம் செய்து கொண்டு, தன் உடம்பில் ஒரு பாகமாகக் கொண்டார்.

திருச்சேறை

ஓர்த்துள வாறு நோக்கி
யுண்மையை யுணராக் குண்டர்
வார்த்தையை மெய்யென் றெண்ணி
மயக்கில்வீழ்ந் தழுந்து வேனைப்
பேர்த்தெனை யாளாக் கொண்டு
பிறவிவான் பிணிக ளெல்லாம்
தீர்த்தருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே. **#709**

சேறைச் செந்நெறிச் செல்வனார் ஆராய்ந்து உள்ளவாறு உண்மையை உணராத, உடல் பருத்த சமணரின் சொற்களை உண்மையென்று எண்ணி, மயக்கம் தரும் அவர்கள், சமயத்தில் விழுந்து அழுந்திய நிலையில் இருந்த என்னை, வயிற்று வலியால், அழுந்திய நிலையிலிருந்து எடுத்து, என்னை அடியவனாகக் கொண்டு, பிறவியைத் தருகின்ற பெரிய பிணிப்புக்களை எல்லாம் போக்கி, அடியேனுக்கு அருள் செய்தவராவர்.

திருச்சேறை

ஒன்றிய தவத்து மன்னி
யுடையனா யுலப்பில் காலம்
நின்றுதங் கழல்க ளேத்து
நீள்சிலை விசய னுக்கு
வென்றிகொள் வேட னாகி
விரும்பிவெங் கான கத்துச்
சென்றருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே. **#710**

சேறைச் செந்நெறிச் செல்வனார், மனம் அலையாமல் ஒருமையுற்ற தவத்தில் நிலைபெற்று, தபோதனனாய்ப் பல காலம் நின்று தம் கழல்களைத் தியானித்த நீண்ட வில்லை உடைய அருச்சுனனிருந்த காட்டிற்கு வெற்றியைப் பெறும் வேடனாக விரும்பிச் சென்று, அவனுக்கு அருள்கள் பல செய்தார்.

திருச்சேறை

அஞ்சையு மடக்கி யாற்ற
லுடையனா யநேகக லம்
வஞ்சமி றவத்து ணின்று
மன்னிய பகீரதற்கு
வெஞ்சின முகங்க ளாகி
விசையொடு பாயுங் கங்கை
செஞ்சடை யேற்றார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே. **#711**

சேறைச்செந்நெறிச் செல்வனார், ஐம்பொறிகளையும் அடக்கித் தவம் செய்யும் ஆற்றம் உடையவனாய், பல்லாண்டுகள் வஞ்சனையற்ற தவத்தில்நிலைபெற்ற பகீரதனுக்காக, மிகுந்த கோபத்தை உடைய பல முகங்களாகப் பிரிந்து வேகத்தோடு பூமியை நோக்கிப் பாய்ந்த கங்கையைத் தமது சிறந்த சடையில் ஏற்றருளினார்.

திருச்சேறை

நிறைந்த மாமணலைக் கூப்பி
நேசமோ டாவின் பாலைக்
கறந்துகொண் டாட்டக் கண்டு
கறுத்ததன் றாதை தாளை
எறிந்த மாணிக்கப் போதே
யெழில்கொள்சண் டீச னென்னச்

சிறந்தபே றளித்தார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே. **#712**

சேறைச் செந்நெறிச் செல்வனார், மண்ணியாற்றின் நிறைந்த, சிறந்த மணலைச் சிவலிங்க வடிவாகக் குவித்து அந்த இலிங்கத்திற்கு பசுவின் பாலைக் கறந்து அபிடேகம் செய்ய. அதனைக் கோபித்த தன் தந்தையின் கால்களை மழுவினால் வீழ்த்திய பிரமசாரியான விசாரசருமனுக்கு அப்பொழுதே சண்டீசன் என்று. சொல்லப்படும் சிறந்த பதவியை வழங்கினார்.

<u>திருச்சேறை</u>

விரித்தபல் கதிர்கொள் சூலம்வெடிபடு தமரு கங்கை
தரித்ததோர் கோல கால
பயிரவ னாகி வேழம்
உரித்துமை யஞ்சக் கண்டு
வொண்டிரு மணிவாய் விள்ளச
சிரித்தருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே. **#713**

சேறைச் செந்நெறிச் செல்வனார் பலவாறு விரிந்த ஒளியை உடைய சூலத்தையும், உடுக்கையையும் கையில் ஏந்திய அழகினை உடைய கால பைரவ மூர்த்தியாகி, யானைத் தோலை உரித்த தம் செயலைக் கண்டு பார்வதி அஞ்ச, ஒளி பொருந்திய அழகிய பவளம் போன்ற வாயைத் திறந்து சிரித்து அருள் செய்தார்.

<u>திருச்சேறை</u>

சுற்றுமுன் னிமையோர் நின்று
தொழுதுதூ மலர்கள் தூவி
மற்றெமை யுயக்கொ ளென்ன
மன்னுவான் புரங்கண் மூன்றும்
உற்றொரு நொடியின் முன்ன
மொள்ளழல் வாயின் வீழச்
செற்றருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே. **#714**

சேறைச் செந்நெறிச் செல்வனார், தம்மைச் சுற்றி ஒரு காலத்தில் தேவர்கள் எல்லோரும் நின்று கொண்டு வணங்கி, தூய மலர்களைத் தூவி, 'எம்மைக் காப்பாற்றுவாயாக' என்று வேண்ட, வானத்திலே உலவிக் கொண்டிருந்த மும்மதில்களையும் ஒரே நொடியில் தீக்கு இரையாகுமாறு அழித்து, தேவர்களுக்கு அருள் செய்தார்.

திருச்சேறை

முந்தியிவ் வுலக மெல்லாம்
படைத்தவன் மாலி னோடும்
எந்தனி நாத னேயென்
றிறைஞ்சிநின் றேத்தல் செய்ய
அந்தமில் சோதி தன்னை
யடிமுடி யறியா வண்ணம்
செந்தழ லானார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே. **#715**

சேறைச் செந்நெறிச் செல்வனார், முற்பட்டு இவ்வுலகங்களை எல்லாம் படைத்த பிரமன், திருமாலோடு, 'எங்கள் ஒப்பற்ற தலைவனே!' என்று வணங்கித் துதிக்க, முன்னர் எல்லையில்லாத தம்முடைய ஒளியை அடிமுடி அறியாத வண்ணம் தீப்பிழம்பாக அவர்களுக்குக் காட்சி வழங்கினார்.

திருச்சேறை

ஒருவரு நிகரி லாத
வொண்டிற லரக்க னோடிப்
பெருவரை யெடுத்த திண்டோள்
பிறங்கிய முடிக ளிற்று
மருவியெம் பெருமா னென்ன
மலரடி மெல்ல வாங்கித்
திருவருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே. **#716**

சேறைச் செந்நெறிச் செல்வனார். தனக்கு நிகரில்லாத மேம்பட்ட ஆற்றலை உடைய இராவணன், விரைந்து சென்று கயிலை மலையைப் பெயர்க்க முற்பட்ட தன்னுடைய தோள்களும், தலைகளும் சிதறப் பின் அன்பொடு பொருந்தி எம்பெருமானே! என்று வழிபட, தம்முடைய திருவடியை அழுத்துதலைத் தவிர்த்து, அவனுக்குச் சிறந்த அருள் செய்தார்.

நெஞ்சம்ஈசனைநினைந்த

நெஞ்சம்ஈசனைநினைந்த

நெஞ்சம்ஈசனைநினைந்த, திருநேரிசை

முத்தினை மணியைப் பொன்னை
முழுமுதற் பவள மேய்க்கும்
கொத்தினை வயிர மாலைக்
கொழுந்தினை யமரர் சூடும்
வித்தினை வேத வேள்விக்
கேள்வியை விளங்க நின்ற
அத்தனை நினைந்த நெஞ்ச
மழகிதா நினைந்த வாறே. **#717**

முத்து, மணி, பொன், சிறந்த பவளக்கொத்து, வைரத்தின் இயல்பை உடைய ஒளி எனும் இவற்றை ஒத்தவனாய், தேவர்கள் வழிபடும் வித்து, வேதவேள்வி, வேதம் எனும் இவையாக இருக்கும் தலைவனை, நினைத்த மனம் மிக அழகியதாக நினைத்தது உள்ளவாறு என்னே!

நெஞ்சம்ஈசனைநினைந்த

முன்பனை யுலகுக் கெல்லா
மூர்த்தியை முனிக ளேத்தும்
இன்பனை யிலங்கு சோதி
யிறைவனை யரிவை யஞ்ச
வன்பனைத் தடக்கை வேள்விக்
களிற்றினை யுரித்த வெங்கள்
அன்பனை நினைந்த நெஞ்ச
மழகிதா நினைந்த வாறே. **#718**

வலியனாய், உலகுக்கெல்லாம் தலைவனாய், முனிவர்கள் துதிக்கும் இன்பனாய், ஞான ஒளி வீசும் தலைவனாய் உள்ள, பார்வதி அஞ்சுமாறு தாருகவன முனிவர் யாகத்தில் புறப்பட்ட வலிய பனைபோன்ற துதிக்கையை உடைய யானைத்தோலை உரித்த எங்கள் அன்பனை நினைந்த நெஞ்சம் அழகிதா நினைந்தவாறே.

நெஞ்சம்ஈசனைநினைந்த

கரும்பினுமினியான் றன்னைக்
காய்கதிர்ச் சோதி யானை
இருங்கட லமுதந் தன்னை
யிறப்பொடு பிறப்பி லானைப்

பெரும்பொருட் கிளவி யானைப்
பெருந்தவ முனிவ ரேத்தும்
அரும்பொனை நினைந்த நெஞ்ச
மழகிதாநினைந்த வாறே. **#719**

கரும்பைவிட மிக்கசுவை உடையவனாய், சூரியன் போன்ற ஒளி உடையவனாய், கடலில் தோன்றிய அமுதம் போல்பவனாய், பிறப்பு, இறப்பு இல்லாதவனாய், மகா வாக்கியப் பொருளாய் இருப்பவனாய் உள்ள, பெரிய தவத்தை உடைய முனிவர்கள் துதிக்கும் அரிய பொன் போன்ற பெருமானை நினைந்த நெஞ்சம் அழகிதா நினைந்தவாறே.

நெஞ்சம்ஈசனைநினைந்த

செருத்தனை யருத்தி செய்து
செஞ்சரஞ் செலுத்தி யூர்மேல்
கருத்தனைக் கனக மேனிக்
கடவுளைக் கருதும் வானோர்க்
கொருத்தனை யொருத்தி பாகம்
பொருத்தியு மருத்தி தீரா
நிருத்தனை நினைந்த நெஞ்ச
நேர்பட நினைந்த வாறே. **#720**

போரிடுவதில் விருப்பம் கொண்டு, நேராக அம்பைச் செலுத்தி முப்புரத்தைக் குறிக்கோளாகக் கொண்டு அழித்தவனாய், பொன்மேனி அம்மானாய், தன்னைத் தியானிக்கும் தேவர் களுக்கு ஒப்பற்ற தலைவனாய், பார்வதிபாகமாகியும் அவளிடத்து ஆசை நீங்காத கூத்தனாய் உள்ள பெருமானை நினைந்த நெஞ்சம் நேரிதாகவே நினைந்தவாறு என்னே!

நெஞ்சம்ஈசனைநினைந்த

கூற்றினை யுதைத்த பாதக்
குழகனை மழலை வெள்ளே
றேற்றனை யிமையோ ரேத்த
விருஞ்சடைக் கற்றை தன்மேல்
ஆற்றனை யடிய ரேத்து
மமுதனை யமுத யோக
நீற்றனை நினைந்த நெஞ்ச
நேர்பட நினைந்த வாறே. **#721**

கூற்றுவனை உதைத்த பாதங்களை உடைய இளையவனாய், இளைய வெண்ணிறக் காளையை ஊர்பவனாய், தேவர்கள் போற்றப் பெரிய சடைக் கற்றையில் கங்கையைச் சூடியவனாய், அடியார்கள் போற்றும்

அமுதமாய், சிவாமுதம் நல்கும் திருநீற்று மேனியனாய் உள்ள பெருமானை நினைந்த நெஞ்சம் நேர்பட நினைந்தவாறே.

நெஞ்சம்ஈசனைநினைந்த

கருப்பனைத் தடக்கை வேழக்
களிற்றினை யுரித்த கண்டன்
விருப்பனை விளங்கு சோதி
வியன்கயி லாய மென்னும்
பொருப்பனைப் பொருப்பன் மங்கை
பங்கனை யங்கை யேற்ற
நெருப்பனை நினைந்த நெஞ்ச
நேர்பட நினைந்த வாறே. **#722**

கரிய, பனைபோன்ற துதிக்கையை உடைய யானைத் தோலை உரித்தவனாய், நீலகண்டனாய், எல்லா ஆன்மாக்களையும் விரும்புபவனாய், சோதி வடிவினனாய், கயிலை மலையினனாய், பார்வதி பாகனாய், உள்ளங்கையில் நெருப்பை ஏற்பவனாய் உள்ள பெருமானை நினைந்த நெஞ்சம் நேர்பட நினைந்தவாறே.

நெஞ்சம்ஈசனைநினைந்த

நீதியா னினைப்பு ளானை
நினைப்பவர் மனத்து ளானைச்
சாதியைச் சங்கவெண் ணீற்
றண்ணலை விண்ணில் வானோர்
சோதியைத் துளக்க மில்லா
விளக்கினை யளக்க லாகா
ஆதியை நினைந்த நெஞ்ச
மழகிதா நினைந்த வாறே. **#723**

விதிப்படி தியானிக்கப்படுபவனாய், சாதி மாணிக்கமாய், சங்கைப் போன்ற வெண்ணீற்றை அணிந்த தலைவனாய், வானத்திலுள்ள தேவர்களுக்குச் சோதியாய், தூண்டா விளக்காய் உள்ள, ஒருவராலும் அளக்கமுடியாத ஆதியை நினைந்த நெஞ்சம் அழகிதா நினைந்தவாறே.

நெஞ்சம்ஈசனைநினைந்த

பழகனை யுலகுக் கெல்லாம்
பருப்பனைப் பொருப்போ டொக்கும்
மழகளி யானையின் றோன்
மலைமக ணடுங்கப் போர்த்த
குழகனைக் குழவித் திங்கள்

குளிர்சடை மருவ வைத்த
அழகனை நினைந்த நெஞ்ச
மழகிதா நினைந்த வாறே. **#724**
உலகத்தாருக்கெல்லாம் பழகுதற்கு இனியவனாய்,
பெருவடிவுடையவனாய், மலையை ஒத்த இளைய மதயானையின்
தோலைப் பார்வதி நடுங்குமாறு போர்த்த இளையனாய், பிறையைக்
குளிர்ந்த சடையிலே சூடிய அழகனாய் உள்ள பெருமானை நினைந்த
நெஞ்சம் அழகிதா நினைந்தவாறே.

<u>நெஞ்சம்ஈசனைநினைந்த</u>

விண்ணிடை மின்னொப் பானை
மெய்ப்பெரும் பொருளொய் பானைக்
கண்ணிடை மணியொப் பானைக்
கடுவிருட் சுடரொப் பானை
எண்ணிடை யெண்ண லாகா
விருவரை வெருவ நீண்ட
அண்ணலை நினைந்த நெஞ்ச
மழகிதா நினைந்த வாறே. **#725**
வானில் தோன்றும் மின்னலை ஒப்பவனாய், தனக்குத் தானே ஒப்பாகும்
பெரிய மெய்ப்பொருளாய், கண்ணில் மணி போலவும், செறிந்த இருளில்
சுடர்போலவும் ஒளிதருபவனாய், திருமாலும், பிரமனும் தன் மனத்தில்
எண்ணமுடியாத வகையில் அவர்கள் அஞ்சுமாறு நீண்ட தீத்தம்பமாகிய
தலைமையுடைய பெருமானை நினைந்த நெஞ்சம் அழகிதா
நினைந்தவாறே.

<u>நெஞ்சம்ஈசனைநினைந்த</u>

உரவனைத் திரண்ட திண்டோ
ளரக்கனை யூன்றி மூன்றூர்
நிரவனை நிமிர்ந்த சோதி
நீண்முடி யமரர் தங்கள்
குரவனைக் குளிர்வெண் டிங்கட்
சடையிடைப் பொதியுமை வாய்
அரவனை நினைந்த நெஞ்ச
மழகிதா நினைந்த வாறே. **#726**
ஞான வடிவினனாய், திரண்ட வலிய தோள்களை உடைய
இராவணனை நசுக்கியவனாய், மும்மதில்களையும் அழித்தவனாய்,
மிக்க ஒளியும், நீண்ட கிரீடமும் உடைய தேவர்களுக்குக் குருவாய்,
குளிர்ந்த பிறையைச் சடையில் கொண்டவனாய் உள்ள, ஐந்தலைப்

பாம்பை ஆட்டும் பெருமானை நினைந்த நெஞ்சம் அழகிதா நினைந்தவாறே.

தனித் - திருநேரிசை

தனித் திருநேரிசை, திருநேரிசை

தொண்டனேன் பட்ட தென்னே
தூயகா விரியி னன்னீர்
கொண்டிருக் கோதி யாட்டிக்
குங்குமக் குழம்பு சாத்தி
இண்டைகொண் டேற நோக்கி
யீசனை யெம்பி ரானைக்
கண்டனைக் கண்டி ராதே
காலத்தைக் கழித்த வாறே. **#727**

தூய காவிரியின் தீர்த்தத்தைக் கொண்டு மந்திரங்களை ஓதி அபிடேகம் செய்து குங்குமக் குழம்பைச் சார்த்தி, தலையில் மாலையை அணிவித்து, நீலகண்டனாய் எம் தலைவனாய் இருக்கின்ற ஈசனை கண்குளிர நோக்கி மகிழாமல், காலத்தை வீணாக்கின செயலிலே அடியேன் ஈடுபட்டவாறு வருந்தத்தக்கது.

தனித் - திருநேரிசை

பின்னிலேன் முன்னிலே னான்
பிறப்பறுத் தருள்செய் வானே
என்னிலே னாயி னேனா
னிளங்கதிர்ப் பயலைத் திங்கள்
சின்னிலா வெறிக்குஞ் சென்னிச்
சிவபுரத் தமர ரேறே
நின்னலாற் களைக ணாரே
நீறுசே ரகலத் தானே. **#728**

முதலும் முடிவும் இல்லாத அடியேனுடைய பிறவித் துயரைப் போக்கி அருள் செய்பவனே! இளைய கதிர்களை உடைய பிறை தலையிலே சிறிதளவு ஒளிவீசும், தேவர்கள் தலைவனாய்ச் சிவபுரத்து இருப்பவனே! திருநீறணிந்த மார்பினனே! அடியேனுக்கு என்று ஒரு பொருளும் இல்லாதேன் நான். எனக்கு உன்னைத் தவிர பற்றுக்கோடு ஆவார் எவர்?

தனித் - திருநேரிசை

கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கித்

தெளிியே னாகி நின்று
தேடினே னாடிக் கண்டேன்
உள்குவா ருள்கிற் றெல்லா
முடனிருந் தறிதி யென்று
வெள்கினேன் வெள்கி நானும்
விலாவிறச் சிரித்திட் டேனே. **#729**

வஞ்சனை உடைய யான், போலித் தொண்டனாய், காலத்தைப் பல ஆண்டுகள் வீணாக்கி, பின் மனத்தெளவு பெற்று உன்னைத் தேடி ஆராய்ந்து கண்டுகொண்டேன். நினைப்பவர் நினைப்பனவற்றை எல்லாம் அவருடனேயே உள்ளத்தில் இருந்து கொண்டு, நீ அறிகின்றாய் என்பதை அறிந்து நான் வெட்கப்பட்டு உன்னைத் தேடிய என் அறியாமைக்கு என் விலாஎலும்பு ஒடியுமாறு சிரித்தேன்.

<u>தனித் - திருநேரிசை</u>

உடம்பெனு மனைய கத்து
வுள்ளமே தகளியாக
மடம்படு முணர்நெய் யட்டி
யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயா
லெரிகொளவிருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காணலாமே. **#730**

உடம்பு என்ற வீட்டிலே மனமே அகலாக, பசு ஞானமான உணர்வே நெய்யாக, உயிரே திரியாக, சிவஞானத் தீயினால் விளக்கை ஏற்றி, அந்த ஞான ஒளியிலே இலயித்திருந்து பார்க்கில் கடம்ப மலர் மாலையை விரும்பி அணியும், முருகனுடைய தந்தையாகிய சிவபெருமானுடைய திருவடிகளைக் காணலாம்.

<u>தனித் - திருநேரிசை</u>

வஞ்சப்பெண் ணரங்கு கோயில்
வாளெயிற் றரவந் துஞ்சா
வஞ்சப்பெண் ணிருந்த சூழல்
வான்றவிழ் மதியந் தோயும்
வஞ்சப்பெண் வாழ்க்கை யாளன்
வாழ்வினை வாழ லுற்று
வஞ்சப்பெண் ணுறக்க மானேன்
வஞ்சனே னென்செய் கேனே. **#731**

வஞ்சனை உடைய பெண்ணாகிய கங்கை தங்குமிடம் சடைமுடி. அந்தச்

சடைமுடியிலே ஒளிபொருந்திய பற்களை உடையபாம்புகள் உறங்காவாய் உள்ளன. அந்தச் செஞ்சடைச் சூழலிலே பிறை கங்கையில் தோய்ந்தவாறு உள்ளது. அந்தக் கங்கையினுடைய வாழ்க்கையை ஆள்பவன் சிவபெருமான். அவனைப் போன்ற வாழ்வை வாழத் தொடங்கி, வஞ்சனை உடைய அடியேன், வஞ்சனை உடைய பெண்ணின் உறக்கத்தைப் போலப் பொய் வாழ்க்கை வாழ்ந்து யாது செய்ய வல்லேன்?

தனித் - திருநேரிசை

உள்குவா ருள்ளத் தானை
யுணர்வெனும்பெருமை யானை
உள்கினே னானுங் காண்பா
னுருகினே னூறியூறி
எள்கினே னெந்தை பெம்மா
னிருதலைமின்னு கின்ற
கொள்ளிமே லெறும்பெ னுள்ள
மெங்ஙனங் கூடுமாறே. **#732**

நினைப்பவர் மனத்தைக் கோயிலாகக் கொண்டவனாய்ச் சிவஞானமாகிய பெருமையை உடையவனாய் உள்ள பெருமானை நானும் காண்பதற்கு நினைத்து, உருகி அன்பு ஊறி, உள்ளம் உருகினேன். எந்தையாகிய பெருமானே! உன்னை இரண்டு பக்கமும் பற்றி எரிகின்ற கொள்ளியின் உள்ளே உள்ள எறும்பு போன்ற என் உள்ளம் எங்ஙனம் அடைய இயலும்?

தனித் - திருநேரிசை

மோத்தையைக் கண்ட காக்கை
போலவல்வினைகள் மொய்த்துன்
வார்த்தையைப் பேச வொட்டா
மயக்கநான்மயங்கு கின்றேன்
சீத்தையைச் சிதம்பு தன்னைச்
செடிகொணோய்வடிவொன் றில்லா
ஊத்தையைக் கழிக்கும் வண்ண
முணர்வுதாவுலக மூர்த்தீ. **#733**

பிணத்தைக் கண்ட காக்கைகளைப் போல, அடியேனுடைய தீய வினைகள் அடியேனைச் சூழ்ந்து உன் பெருமையைப் பேச ஒட்டாமல் கலக்க, அடியேன் மயங்குகின்றேன். உலகத்துக்குத் தலைவனே! வெறுக்கத் தக்கதாய், பண்பு அற்றதாய் நாற்றம் கொண்டதாய், நோய்க்கு இருப்பிடமாய் அழகிய வடிவில்லாத இந்த உடலை அடியோடு

போக்கும்வண்ணம் அடியேனுக்குச் சிவஞானத்தை அருளுவாயாக.

<u>தனித் - திருநேரிசை</u>

அங்கத்தை மண்ணுக் காக்கி
யார்வத்தை யுனக்கே தந்து
பங்கத்தைப் போக மாற்றிப்
பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்தமேனிச் செல்வா
சாதனாணாயேனுன்னை
எங்குற்றாயென்ற போதா
விங்குற்றேனென்கண் டாயே. **#734**

மேம்பட்டவனே! சங்கை ஒத்த வெண்மையான மேனியை உடைய செல்வனே! இந்த உடம்பு மண்ணிற்பொருந்துமாறு நெடிது வீழ்ந்து விருப்பத்தை உன்னிடத்திலேயே வைத்துப் பிறவி என்ற சேற்றினை அடியோடு போக்கி, உன்னையே ஞான பாவனையால் மனத்திற் கொண்டுள்ளேன். என் உயிர் போகின்ற அன்று நாயைப் போன்று இழிந்த அடியேன் உன்னை, எங்கிருக்கின்றாய் என்று வினவினால், இங்கிருக்கிறேன் என்று அருள் செய்வாயாக.

<u>தனித் - திருநேரிசை</u>

வெள்ளநீர்ச் சடைய னார்தாம்
வினவுவார்போலவந்தென்
னுள்ளமே புகுந்து நின்றார்க்
குறங்குநான்புடைகள் போந்து
கள்ளரோ புகுந்தீரென்னக்
கலந்துதான்நோக்கிநக்கு
வெள்ளரோமென்று நின்றார்
விளங்கிளம்பிறைய னாரே. **#735**

விளங்குகின்ற இளம்பிறையைச் சூடிக் கங்கையைச் சடையில் ஏற்ற பெருமான், ஏதோ என்னை வினவுபவர் போல வந்து என் உள்ளத்துக்குள்ளே புகுந்து நின்றாராக, உறங்கின நான் விழித்தெழுந்து இங்கு புகுந்த நீர் கள்ளரோ என்று வினவ, என் உள்ளத்தில் கலந்திருந்து, தாம் என்னைப் பார்த்துச் சிரித்து கங்கை ஆகிய வெள்ளத்தை உடையோம் என்று நின்றார்.

<u>தனித் - திருநேரிசை</u>

பெருவிர லிறைதா னூன்றப்
பிறையெயிறிலங்க வங்காந்

தருவரை யனைய தோளா
னரக்கனன்றலறி வீழ்ந்தான
இருவரு மொருவ னாய
வுருவமங்குடையவள்ளல்
திருவடி சுமந்து கொண்ட
காண்கநான் றிரியு மாறே. #736

பார்வதி பாகனாய் உள்ள உருவத்தை யுடைய வள்ளலாகிய சிவபெருமான், தம் காற் பெருவிரலைச் சிறிது ஊன்றிய அளவில் மலையைப் போன்ற தோள்களை உடைய இராவணன் பிறையைப் போன்ற பற்கள் வெளித்தோன்ற வாயைப் பிளந்து கொண்டு அலறிக் கீழே சாய்ந்தான். சிறிதும் வலிமையில்லாத அடியேன் அம்மையப்பனாகிய அப்பெருமானுடைய திருவடிகளைத் தலையில் சுமந்து கொண்டு எங்கும் திரிகின்றவாற்றைக் காண்க.

தனித் - திருநேரிசை

தனித் திருநேரிசை, திருநேரிசை

மருளவா மனத்த னாகி
மயங்கினேன்மதியி லாதேன்
இருளவா வறுக்கு மெந்தை
யிணையடிநீழலெ ன்னும்
அருளவாய் பெறுத லின்றி
யஞ்சிநானலமந் தேற்குப்
பொருளவாத் தந்த வாறே
போதுபோய்ப் புலர்ந்த தன்றே. #737

அடியேன் மருளுகின்ற மயக்கமும் ஆசையும் உடைய மனத்தை உடையேனாய் அறிவில்லாதேனாய் மயங்கினேன். அஞ்ஞானத்தைப் போக்கும் எம்பெருமானுடைய திருவடி நிழல் என்னும்விரும்பிப் பெறவேண்டிய அருளைப் பெறாமல் பயந்து அஞ்சினேனாக, அத்தகைய அடியேனுக்கு எம் பெருமான் மெய்ப் பொருளிடத்து ஆசையை நல்கிய அளவில் அஞ்ஞான இருட்பொழுது நீங்கி ஞானஒளிபரவும் பகற்பொழுது தோன்றிவிட்டது.

தனித் - திருநேரிசை

மெய்ம்மையா முழவைச் செய்து
விருப்பெனும்வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப்
பொறையெனு நீரைப் பாய்ச்சித்
தம்மையு நோக்கிக் கண்டு

தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையு ணிற்ப ராகிற்
சிவகதி விளையு மன்றே. **#738**

சரியை முதலிய உண்மை வழிகளாகிய உழுதலைச் செய்து, விருப்பம் என்னும் விதையை விதைத்து, பொய்ம்மை ஆகிய களைகளை நீக்கிப் பொறுமை என்னும் நீரைப் பாய்ச்சிச் சிவரூபத்தால் ஆன்மதரிசனமும் சிவ தரிசனத்தால் ஆன்மசித்தியும் பெற்று, திருநீறு சிவவேடங்கள் முதலிய தகுதிகளாகிய வேலியை அமைத்துச் சிவத்தியானமாகிய செந்நெறியில் நிற்பார்களானால் சிவகதி என்ற பயிர் விளையும்.

<u>தனித் - திருநேரிசை</u>

எம்பிரா னென்ற தேகொண்
டென்னுளே புகுந்துநின்றிங்
கெம்பிரா னாட்ட வாடி
யென்னுளே யுழிதர் வேனை
எம்பிரா னென்னைப் பின்னைத்
தன்னுளேசுரக்கு மென்றால்
எம்பிரா னென்னி னல்லா
லென்செய்கேனேழை யேனே. **#739**

எம்பெருமான்! என்று அடியேன் அழைத்த ஒன்றனையே அடியேனுடைய தகுதியாகக் கொண்டு என் உள்ளத்தில் புகுந்து நின்று எம்பெருமான் செயற்படுத்தச் செயற்பட்டு, என்னைச் செயற்படுத்தும் தலைவனை எனக்குள்ளேயே தேடித் திரிகின்ற, அடியேன் தன்னை இன்னான் என்று கண்டு கொண்ட பிறகு எம் பெருமான் என்னைத் தன்னுள்ளே மறையச் செய்வான் என்றால் எல்லாம் அவன் செயல் என்று இறைபணி வழுவாது நிற்றலேயன்றி அறிவற்ற அடியேன் வேறு யாது செயற்பாலேன்?

<u>தனித் - திருநேரிசை</u>

காயமே கோயி லாகக்
கடிமன மடிமை யாக
வாய்மையே தூய்மை யாக
மனமணி யிலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா
நிறையநீ ரமைய வாட்டிப்
பூசனை யீச னார்க்குப்
போற்றவிக் காட்டி னோமே. **#740**

இந்த உடம்பையே கோயிலாகவும், உலகியலை நீக்கிய மனம்

அடிமையாகவும், தூய்மை உடைய மனமே பரம்பொருள் தங்கும் கருவறையாகவும் எம்பெருமான் அருட்சத்தியான மனோன் மணியே அவன் இலிங்க உருவமாகவும் அமைய, அடியேனுடைய அன்பே நெய்யும் பாலுமாக அவ்விலிங்கமூர்த்தியை மனம் நிறைவு பெற அபிடேகித்துப் பூசிக்கும் அப்பெருமானுக்கு எங்கள் வணக்கங்களையே நிவேதனப் பொருள்களாகப் படைத்தோம்.

தனித் - திருநேரிசை

வஞ்சகப் புலைய னேனை
வழியறத் தொண்டிற்பூட்டி
அஞ்சலென் றாண்டு கொண்டா
யதுவுநின்பெருமை யன்றே
நெஞ்சகங் கனிய மாட்டே
னின்னையுள் வைக்க மாட்டேன்
நஞ்சிடங் கொண்ட கண்டா
வென்னென நன்மை தானே. **#741**

நீலகண்டனே! வஞ்சனையான செயல்களில் ஈடுபட்ட கீழ்மகனாகிய அடியேனைத் தீநெறி கெட நன்னெறியில் ஈடு படுத்தி அஞ்சேல் என்று அடிமை கொண்டாய். அதுவும் உன் பெருமையை வெளிப்படுத்தும் செயலாகும். அடியேனோ உள்ளம் உருகி உன்னை என் உள்ளத்தில் நிலையாக வைக்கமாட்டாதேனாய் உள்ளேன். எனது நன்மை அதாவது நான் பெற்ற நன்மைதான் யாதோ?

தனித் - திருநேரிசை

நாயினுங் கடைப்பட் டேனை
நன்னெறி காட்டி யாண்டாய்
ஆயிர மரவ மார்த்த
வமுதனே யமுத மொத்து
நீயுமென் நெஞ்சி னுள்ளே
நிலாவினாய்நிலாவி நிற்க
நோயவை சாரு மாகி
னோக்கிநீயருள்செய் வாயே. **#742**

பல பாம்புகளை அணிகலன்களாக அணிந்த, அடியேனுக்கு அமுதம் போன்றவனே! நாயினும் கீழ்ப்பட்ட அடியேனை நல்ல நெறியைக் காண்பித்து அடிமையாகக் கொண்டுள்ளாய். நீயும் அடியேன் உள்ளத்தில் அமுதத்தைப் போல வந்து தங்கிவிட்டாய். நீ அப்படித் தங்கியிருக்கவும் அடியேனுக்குத் துயரங்கள் ஏற்படுமாயின் அடியேனுடைய துயர நிலையை நோக்கி, அது நீங்குமாறு அருள்

செய்வாயாக.

தனித் - திருநேரிசை

விள்ளத்தா னொன்று மாட்டேன்
விருப்பெனும் வேட்கை யாலே
வள்ளத்தேன் போல நுன்னை
வாய்மடுத் துண்டி டாமே
உள்ளத்தே நிற்றி யேனு
முயிர்ப்புளே வருதி யேனும்
கள்ளத்தே நிற்றி யம்மா
வெங்ஙனங் காணு மாறே. **#743**

விருப்பம் என்னும் பற்றுள்ளத்தாலே பாத்திரத்தில் இருக்கும் தேனைப் பருகுவது போல உன்னை வாயிற்புகுத்தி உண்ண இயலாதபடி நீ என் உள்ளத்தினுள்ளே இருக்கின்றாய் என்றாலும் என் மூச்சுக் காற்றினுள்ளே கலந்திருக்கின்றாய் என்றாலும் கண்களுக்குப் புலனாகாதபடி மறைந்திருக்கின்றாய். ஆதலின் உன்னைக்காணும் வழி இன்னது என்று வாய்விட்டுச் சொல்லச் சிறிதும் வல்லேன் அல்லேன்.

தனித் - திருநேரிசை

ஆசைவன் பாச மெய்தி
யங்குற்றே னிங்குற் றேனாய்
ஊசலாட் டுண்டு வாளா
வுழந்துநா னுழிதராமே
தேசனே தேச மூர்த்தீ
திருமறைக் காடு மேய
ஈசனே யுன்றன் பாத
மேத்துமா றருளெம் மானே. **#744**

ஆசை என்ற கயிற்றால் கட்டப்பட்டு இயக்கப் படுதலின் மேல் உலக ஆசையால் ஒரு பக்கமும், இவ்வுலக இன்ப நுகர்ச்சி விருப்பினால் வேறொரு புறமுமாகச் சலனப்பட்டு ஒன்றும் உறுதியாகச் செய்ய இயலாதேனாய் வருந்தி நான் சுழலாதபடி, பேரொளி உடையவனும், எல்லா உலகிற்கும் தலைவனும் திருமறைக் காட்டிக் விரும்பி உறைந்து உயிர்களை ஆள்பவனும் ஆகிய உன் திருவடிகளைப் போற்றும் செயலிலேயே அடியேன் ஈடுபடுமாறு அருள் செய்வாயாக.

தனித் - திருநேரிசை

நிறைவிலே னேச மில்லே
னினைவிலேன் வினையின் பாச

மறைவிலே புறப்பட் டேறும்
வகையெனக் கருளெ னெம்மான்
சிறையிலேன் செய்வ தென்னே
திருவடி பரவி யேத்தக்
குறைவிலேன் குற்றந் தீராய்
கொன்றைசேர் சடையி னானே. #745

கொன்றைப்பூவினைத் தரித்த சடையை உடையவனே! எதிலும் மனநிறைவு இல்லாதேனாய், யாரிடத்தும் உண்மையான அன்பு இல்லேனாய், உன்னை விருப்புற்றுநினைத்தல் இல்லேனாய், இருவினையால் கட்டப்பட்ட சூழலிலே அகப்பட்டுத் தடுமாறும் அடியேன் அதனை விடுத்துப் புறப்பட்டு வெளியேறும் நிலையை என் தலைவனாகிய நீ எனக்கு அருளுவாயாக. இவ்வுடலாகிய இருப்பிடத்தில் இருக்கும் அடியேன் யாது செயற்பாலேன்? உன் திருவடிகளை முன் நின்று போற்றி வழிபடும் திறத்தில் குறைபாடு ஏதும் இல்லேனாம் வகையில் என் குற்றங்களை எல்லாம் போக்கி அருளுவாயாக.

தனித் - திருநேரிசை

நடுவிலாக் காலன் வந்து
நணுகும்போ தறிய வொண்ணா
அடுவன வஞ்சு பூத
மவைதமக் காற்ற லாகேன்
படுவன பலவுங் குற்றம்
பாங்கிலா மனிதர் வாழ்க்கை
கெடுவதிப் பிறவி சீசீ
கிளரொளிச் சடையி னீரே. #746

செந்நிற ஒளி வீசும் சடையை உடைய பெருமானே! நீதி உணர்வு இல்லாத கூற்றுவன் வந்து நெருங்கும்போது உம்மை அறிவதற்கு உடன்படாது என்னைவருத்தும் ஐம்பொறிகளும் என்னை வருத்துவதனைப் பொறுக்க இயலாதேனாய் உயிருக்குத் துணையாக உதவாத இந்த மனித வாழ்விலே பல குற்றங்களும் நிகழ்கின்றமையின் இதனை இகழ்ந்து இப்பிறவிப் பிணியை அடியோடு அழித்தொழிக்க வேண்டி உம் அருளைவேண்டுகின்றேன்.

தனித் - திருநேரிசை

தனித் திருநேரிசை, திருநேரிசை

கடும்பக னட்ட மாடிக்
கையிலோர் கபால மேந்தி

இடும்பலிக்கில்லந் தோறு
முழிதரு மிறைவ னீரே
நெடும்பொறை மலையர் பாவை
நேரிழை நெறிமென் கூந்தற்
கொடுங்குழை புகுந்த வன்றுங்
கோவண மரைய தேயோ. **#747**

நடுப்பகலிலே கூத்தாடிக்கொண்டு கையில் ஒரு மண்டையோட்டினை ஏந்தி வழங்கப்படும் பிச்சைக்காக வீடுகள் தோறும் உலாவித்திரிகின்ற பெருமானே! இமவான் மகளாகிய சிறந்த அணிகலன்களையும் சுருண்ட மெல்லிய கூந்தலையும், வளைந்த காதணியையும் உடைய பார்வதி உமக்கு மனைவியாக வந்தபோதும், இடுப்பில் கோவணத்துடன்தான் இருந்தீரோ?

<u>தனித் - திருநேரிசை</u>

கோவண முடுத்த வாறுங்
கோளர வசைத்த வாறும்
தீவணச் சாம்பர் பூசித்
திருவுரு விருந்த வாறும்
பூவணக் கிழவ னாரைப்
புலியுரி யரைய னாரை
ஏவணச் சிலையி னாரை
யாவரே யெழுது வாரே. **#748**

கோவணத்தை உடுத்து, கொடிய பாம்பினை இடுப்பில் இறுகக்கட்டி, தீப்போன்ற செந்நிற உடம்பில் சாம்பலைப் பூசி, அழகிய வடிவினராய், செந்தாமரைக் காடு அனைய நிறத்தை உடையவராய், புலித்தோலை இடையில் அணிந்தவராய், அம்புக்கு ஏற்ற அழகிய வில்லை உடையவருமான பெருமானின் வடிவழகினை ஓவியத்தில் எழுதவல்ல ஆற்றல் உடையவர் யாவர்?

<u>தனித் - திருநேரிசை</u>

விளக்கினாற் பெற்ற வின்ப
மெழுக்கினாற் பதிற்றி யாகும்
துளக்கினன் மலர்தொ டுத்தாற்
றூயவிண் ணேற லாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின்
மெய்ஞ்ஞெறி ஞான மாகும்
அளப்பில கீதஞ் சொன்னார்க்
கடிகடா மருளு மாறே. **#749**

திருக்கோயிலைப் பெருக்குவதனால் பெறும் இன்பத்தைப் போல அதனை மெழுகுவதனால் பத்து மடங்கு இன்பம் ஏற்படும். ஒளியை உடைய நல்ல மலர்களைப் பறித்து அவற்றை மாலையாகத் தொடுத்து இறைவனுக்கு ஒப்படைத்தால், தூய வீட்டுலகத்துக்கு இவ்வான்மா மேல் நோக்கிச் செல்லும். கோயிலில் விளக்கு ஏற்றுபவர்கள் உண்மை வழியில் செலுத்தும் ஞானமாகிய பேறு பெறுவர். எல்லையில்லாத பாடல்களைப் பாடுபவர்களுக்கு இறைவன் அருளும் வகைகள் எல்லை இல்லாதன.

தனித் - திருநேரிசை

சந்திரற் சடையில் வைத்த
சங்கரன் சாம வேதி
அந்தரத் தமரர் பெம்மா
னானல்வெள் ளூர்தி யான்றன்
மந்திர நமச்சி வாய
வாகநீ றணியப் பெற்றால்
வெந்தறும் வினையு நோயும்
வெவ்வழல் விறகிட் டன்றே. **#750**

பிறையைச் சடையில் சூடி, எல்லோருக்கும் நன்மை செய்யும் பெருமானாய், சாம வேதம் ஓதுபவனாய் வானத்திலுள்ள தேவர்களுக்கும் தலைவனாய், பெரிய வெண்ணிறக் காளை வாகனனாய் உள்ள பெருமானுடைய திருவைந்தெழுத்தை ஓதி, திருநீற்றை அணிந்தால்கொடிய நெருப்பில் இடப்பட்ட விறகு போல நம்முடைய நோய்களும், வினைகளும் வெந்து சாம்பலாகும்.

தனித் - திருநேரிசை

புள்ளு வரைவர் கள்வர்
புனத்திடைப் புகுந்து நின்று
துள்ளுவர் சூறை கொள்வர்
தூநெறி விளைய வொட்டார்
முள்ளுடை யவர்க டம்மை
முக்கணான் பாத நீழல்
உள்ளிடை மறைந்து நின்றங்
குணர்வினா லெய்ய லாமே. **#751**

வேடர்களும், திருடர்களும் போன்ற ஐம்பொறிகளும் என் உள்ளத்தில் புகுந்து நின்று மகிழ்வோடு துள்ளிக் கொண்டு, அடியேன் தூய வழியிலே செயற்பட ஒட்டாமல் என்னைக் கொள்ளையடிக்கின்றன. தீமைபுரிவதில் நுண்மை உடைய அவற்றைச் சிவபெருமானுடைய

திருவடி நிழலிலே, அவை காணாதபடி மறைந்து நின்று சிவஞானம் என்னும் அம்பினால் எய்து அழித்து விடலாம்.

தனித் - திருநேரிசை

தொண்ட னேன்பிறந்து வாளாத்
தொல்வினைக் குழியில் வீழ்ந்து
பிண்டமே சுமந்து நாளும்
பெரியதோ ரவாவிற் பட்டேன்
அண்டனே யமரர் கோவே
யறிவனே யஞ்ச லென்னாய்
தெண்டிரைக் கங்கை சூடுந்
திகழ்தரு சடையி னானே. **#752**

தேவனே! தேவர்தலைவனே! முக்காலமும் அறிபவனே! தெளந்த அலைகளை உடைய கங்கையைச் சூடிய செவ்வொளி விளங்கும் சடையனே! உன் அடியவனாகிய யான், மனிதனாகப் பிறந்து வீணாகப் பழைய வினைகளாகிய குழியிலே விழுந்துஇந்த உடம்பைச் சுமந்து கொண்டு நாள்தோறும் பெரிய ஆசையில் அகப்பட்டுத் தடுமாறுகின்றேன். அடியேனை அஞ்சேல்! என்று அருளுவாயாக.

தனித் - திருநேரிசை

பாறினாய் பாவி நெஞ்சே
பன்றிபோ லளற்றிற் பட்டுத்
தேறிநீ நினைதி யாயிற்
சிவகதி திண்ண மாகும்
ஊறலே யுவர்ப்பு நாறி
யுதிரமே யொழுகும் வாசல்
கூறையான் மூடக் கண்டு
கோலமாக் கருதி னாயே. **#753**

தீவினையை உடைய நெஞ்சமே! பன்றியைப் போல இந்த உலகவாழ்வாகிய சேற்றில் அகப்பட்டு, பல திசைகளிலும் ஓடுகின்றாய். உப்பு நீர் ஊறி நாற்றமெடுத்துக் குருதி ஒழுகும் துவாரங்கள் மேற்கூரையாகிய தோலாலே மூடப்பட்டு உள்ள உடம்பின் நிலையை நீ அழகாகக் கருதுகிறாய். இதன் புன்மையைத் தெளந்து நீ இறைவனை விருப்புற்று நினைப்பாயானால் உனக்கு நிச்சயமாகச் சிவகதி கிட்டும்.

தனித் - திருநேரிசை

உய்த்தகா லுதயத் தும்ப
ருமையவ ணடுக்கந் தீர

வைத்தகா லரக்க னோதன்
வான்முடி தனக்கு நேர்ந்தான்
மொய்த்தகான் முகிழ்வெண் டிங்கண்
மூர்த்தியெ னுச்சி தன்மேல்
வைத்தகால் வருந்து மென்று
வாடிநா னொடுங்கி னேனே. **#754**

இராவணன், கயிலை மலையை எடுக்கத் தொடங்கிய காலத்தில், பார்வதிக்கு ஏற்பட்ட அச்சம் தீர, பெருமான் தன்னுடைய கால் விரலை வைத்து அழுத்த அதற்கு இலக்காக இராவணன், தன் பெரிய தலைகளைக்கொடுத்தான். பிறை சூடிய மூர்த்தியாகிய பெருமானுடைய, வண்டுகள் மொய்க்கும் நறுமணம் உடைய மலர் போன்ற திருவடிகளை அப்பெருமான் கரடுமுரடான என் தலைமீது வைத்தால் அத்திருவடிகள் வருந்துமென்று அவை என் தலையைச் சாராதவாறு நான் தாழ்ந்து ஒடுங்கினேன்.

குறைந்த - திருநேரிசை

குறைந்த திருநேரிசை, திருநேரிசை

வென்றிலேன் புலன்க ளைந்தும்
வென்றவர் வளாகந் தன்னுள்
சென்றிலே னாத லாலே
செந்நெறி யதற்குஞ் சேயேன்
நின்றுளே துளும்பு கின்றே
னீசனே னீச னேயோ
இன்றுளே னாளை யில்லே
னென்செய்வான் றோன்றி னேனே. **#755**

எல்லோரையும் ஆளும் பெருமானே! அடியேன் ஐம்புலன்களையும் வென்றேன் அல்லேன். வென்ற சான்றோர்கள் உடைய சூழலிலுஞ் சென்றேன் அல்லேன், ஆதலால் நேர்மையான வழிக்கு அப்பாற்பட்டவனாய், உள்ளூர வருந்துகின்றேன். இன்று உயிருடன் இருக்கும் நான் நாளை உயிருடன் இருப்பேன் என்று உறுதி இல்லை. அங்ஙனம் ஒருபயனும் எய்தாமையின் எதற்காகத் தோன்றினேன் நான்

குறைந்த - திருநேரிசை

கற்றிலேன் கலைகள் ஞானங்
கற்றவர் தங்க ளோடும்
உற்றிலே னாத லாலே
யுணர்வுக்குஞ் சேய னானேன்
பெற்றிலேன் பெருந்த டங்கட்
பேதைமார் தமக்கும் பொல்லேன்
எற்றுளே னிறைவ னேநா
னென்செய்வான் றோன்றி னேனே. **#756**

ஞானக் கலைகளைக் கல்லாத நான் அவற்றைக் கற்றஞானிகளோடு தொடர்பு கொள்ளாததனால் நல்லுணர்வுக்கு அப்பாற்பட்டு விட்டேன். அத்தகைய நல்லறிவு இல்லாத நான் பெரிய நீண்ட கண்களை உடைய மகளிருக்கும் பொலிவு இல்லாதவனாய் உள்ளேன். இறைவனே! நான் எதற்காக இருக்கிறேன்? இம்மை மறுமை வீடுகளுள் எதனையும் தேட இயலாதவனாயினேன். எதற்காகப் பிறப்பெடுத்தேன் நான்?

குறைந்த - திருநேரிசை

மாட்டினேன் மனத்தை முன்னே

மறுமையை யுணர மாட்டேன்
மூட்டிநான் முன்னை நாளே
முதல்வனே வணங்க மாட்டேன்
பாட்டினாய் போல நின்று
பற்றதாம் பாவந் தன்னை
ஈட்டினேன் களைய மாட்டே
னென்செய்வான் தோன்றி னேனே. **#757**
என் மனத்தை இம்மையில் செலுத்தி, மறுமையை உணராது, வாழ்வின் தொடக்கத்திலேயே இறைவனை வணங்காது, பெருமை இல்லாத நாய் போல நின்று, உலகப் பற்றாகிய பாவத்தைத் தேடி, அதனை நீக்காதவனாய் எதற்காகப் பிறப்பெடுத்தேன் நான்?

குறைந்த - திருநேரிசை

கரைக்கடந் தோத மேறுங்
கடல்விட முண்ட கண்டன்
உரைக்கடந் தோது நீர்மை
யுணர்ந்திலே னாத லாலே
அரைக்கிடந் தசையு நாக
மசைப்பனே யின்ப வாழ்க்கைக்
கிரைக்கடைந் துருகு கின்றே
னென்செய்வான் றோன்றி னேனே. **#758**
கரையைக் கடந்து வெள்ளம் பெருகும் கடலில் தோன்றிய விடத்தை உண்ட கழுத்தை உடைய சிவபெருமான் சொல்லையும் கடந்த பெருமையை உடையவன். ஆதலின் அவனைப் பற்றிப்பேசும் தன்மை உணராதேன். ஆதலின் இடையில் பாம்பினை இறுகக் கட்டிய அப் பெருமானை நோக்கி, சிற்றின்பம் விளைக்கும் உலக வாழ்விற்கும், பசியைப்போக்கும் உணவிற்கும் அடையத் தகாதாரை அடைந்து நெஞ்சு உருகிப் பொழுது போக்கும் நான் எதற்காகப் பிறப்பெடுத்தேன் என்று கூறி அவன் அருளை வேண்டுகின்றேன்.

குறைந்த - திருநேரிசை

செம்மைவெண் ணீறு பூசுஞ்
சிவனவன் றேவதேவன்
வெம்மைநோய் வினைகடீர்க்கும்
விகிர்தனுக் கார்வ மெய்தி
அம்மைநின் றடிமை செய்யா
வடிவிலா முடிவில் வாழ்க்கைக்
கிம்மைநின் றுருகு கின்றே

னென்செய்வான் றோன்றி னேனே. **#759**
செம்மையான மேனியில், திருநீற்றைப் பூசும் சிவபெருமானாகிய, கொடிய வினைகளைப் போக்கும் தேவ தேவன் ஆகிய அந்த விகிர்தன்பால் விருப்புற்று முற்பிறப்பில் அடிமை செய்யாத பயனற்ற வாழ்க்கைச் செயலை நினைத்து, இப்பிறப்பில் உருகுகின்றேன். எதற்காகப் பிறப்பெடுத்தேன் நான்?

<u>குறைந்த - திருநேரிசை</u>

பேச்சொடு பேச்சுக் கெல்லாம்
பிறர்தமைப் புறமே பேசக்
கூச்சிலே னாத லாலே
கொடுமையை விடுமா றோரேன்
நாச்சொலி நாளு மூர்த்தி
நன்மையை யுணர மாட்டேன்
ஏச்சுளே நின்று மெய்யே
யென்செய்வான் றோன்றி னேனே. **#760**
பேசும்போதெல்லாம் பிறரைப் புறம் கூறும் செயலை நீங்காதேனாய், கொடுமையை நீக்குமாறு அறியேனாய், சிவபெருமானுடைய பெருமையை நாவினாலே சொல்லி அவன் செய்யும் நன்மையை உணரமாட்டேனாய், இகழ்ச்சிக்கு இடமாகிய இந்த உடம்பில் இன்னும் இருந்து கொண்டுள்ளேன். யாது செய்வதற்காகப் பிறந்தேன் நான்?

<u>குறைந்த - திருநேரிசை</u>

தேசனைத் தேச மாகுந்
திருமாலோர் பங்கன் றன்னைப்
பூசனைப் புனிதன் றன்னைப்
புணரும்புண் டரிகத் தானை
நேசனை நெருப்பன் றன்னை
நிவஞ்சகத் தகன்ற செம்மை
ஈசனை யறிய மாட்டே
னென்செய்வான் றோன்றி னேனே. **#761**
ஒளிஉடையவனாய், உலகங்கள் புகழும் திருமாலை ஒரு பாகமாக உடையவனாய், எல்லாராலும் வணங்கப்படுபவனாய், தூயவனாய், அடியாருடைய உள்ளத் தாமரையில் இருப்பவனாய், அன்பனாய், தீயைஏந்தியவனாய், செம்பொருளாய் உள்ள பெருமானை, அறியமுடியாதவனாகின்றேன். எதற்காகப் பிறந்தேன் நான்?

<u>குறைந்த - திருநேரிசை</u>

விளைக்கின்ற வினையை நோக்கி
வெண்மயிர் விரவி மேலும்
முளைக்கின்ற வினையைப் போக
முயல்கிலே னியல வெள்ளம்
திளைக்கின்ற முடியி னான்
தன்றிருவடி பரவ மாட்டா
திளைக்கின்றே னிருமி யூன்றி
யென்செய்வான் றோன்றி னேனே. **#762**

இன்ப துன்பப் பயன்களை நல்கும் வினையை நினைத்து மயிர் வெளுத்த பிறகும் முளைத்து வளருகின்ற வினையைப் போக்குதற்கு முயலாது, கங்கை தங்கிய சடையை உடைய சிவபெருமானுடைய திருவடிகளை முன்நின்று வழிபட மாட்டாமல், வீணாக இருமிக்கொண்டு, தடியை ஊன்றி இளைக்கும் நிலையினன் ஆகின்றேன். எதற்காகப் பிறப் பெடுத்தேன் நான்?

<u>குறைந்த - திருநேரிசை</u>

விளைவறி விலாமை யாலே
வேதனைக் குழியி லாழ்ந்து
களைகணு மில்லே னெந்தாய்
காமரங் கற்று மில்லேன்
தளையவிழ் கோதை நல்லார்
தங்களோ டின்ப மெய்த
இளையனு மல்லே னெந்தா
யென்செய்வான் றோன்றி னேனே. **#763**

எந்தாய்! பின் விளையும் பயனை அறியாமையால் வேதனையாகிய குழியிலே விழுந்து, ஆழ்ந்து பற்றுக்கோடு இல்லாதுஇருக்கின்றேன். உன்னை வசீகரிக்கும் இசையைக் கற்றேனும் அல்லேன். மாலையை அணிந்த பெண்களோடு இன்பமாக வாழ இளையேனும் அல்லேன். அடியேன் எதற்காகப் பிறப்பெடுத்தேன் நான்?

<u>குறைந்த - திருநேரிசை</u>

வெட்டன வுடைய னாகி
வீரத்தான்மலையெ டுத்த
துட்டனைத் துட்டுத் தீர்த்துச்
சுவைபடக் கீதங் கேட்ட
அட்டமா மூர்த்தி யாய
வாதியை யோதி நாளும்
எட்டனை யெட்ட மாட்டே

னென்செய்வான் றோன்றி னேனே. #764
கடும் போக்கு உடையனாகி, தன் வீரத்தைக் காட்டக் கயிலை மலையைப் பெயர்க்கத் தொடங்கிய தீயவனாகிய இராவணனின்செருக்கை அடக்கி அவன் வாயினின்றும் சுவையாகச் சாம வேதகீதம் கேட்ட அட்டமூர்த்தியாகிய சிவபெருமானுடைய பெருமையைச் சொல்லி அவனை எள்ளளவும் அணுகமாட்டேன். எதற்காகப் பிறப்பெடுத்தேன் நான்?

குறைந்த - திருநேரிசை

குறைந்த திருநேரிசை, திருநேரிசை

மானங் காப்ப தாகித்
தையலார்வலையுதம ளாழ்ந்து
அம்மானையமுதன் றன்னை
யாதியையந்த மாய
செம்மான வொளிகொண்மேனிச்
சிந்தையு ளொன்றி நின்ற
எம்மானைநினைய மாட்டே
னென்செய்வான்றோன்றினேனே. #765

மகளிருக்கு அவமானம் உண்டாகாதவாறு காக்கும் முயற்சியில் ஈடுபட்டு, அவர்களுடைய கண்வலையிற்பட்டு, அதனால்,தலைவனாய் அமுதம் போன்று இனியனாய், எல்லாவற்றுக்கும் ஆதியும் அந்தமும் தானாக உள்ளவனாய், செம்மேனி அம்மானாய், அடியேனுடைய உள்ளத்தில் நிலைபெற்றிருக்கும் எம்முடைய தலைவனை விருப்புற்று நினையமாட்டேன். யாது செய்வதற்காக இவ்வுலகிற் பிறப்பெடுத்துள்ளேன் நான்?

குறைந்த - திருநேரிசை

மக்களே மணந்த தார
மவ்வயிற் றவரை யோம்பும்
சிக்குளே யழுந்தி யீசன்
றிறம்படேன் றவம தோரேன்
கொப்புளே போலத் தோன்றி
யதனுளே மறையக் கண்டும்
இக்களே பரத்தை யோம்ப
வென்செய்வான் றோன்றி னேனே. #766

மனைவி, மக்கள், அவர்களுடைய மக்கள் ஆகியவர்களைப் பாதுகாக்கும் பாசப்பிணைப்பான வாழ்க்கைச் சிக்கலுக்குள் அழுந்தி எம்பெருமான் பற்றிய செய்திகளில ஈடுபடாது, தவம் என்பதனை உணராது, நீர்க்குமிழி

போலத் தோன்றிமறையும் பயனற்ற இவ்வுடம்பைப்பாதுகாப்பதற்கே முயல்கின்றேன். யாது செய்வதற்காகப் பிறப்பெடுத்தேன் நான்?

குறைந்த - திருநேரிசை

கூழையே னாக மாட்டேன்
கொடுவினைக் குழியில் வீழ்ந்து
ஏழினின் னிசையி னாலு
மிறைவனை யேத்த மாட்டேன்
மாழையொண் கண்ணி னல்ல
மடந்தைமார் தமக்கும் பொல்லேன்
ஏழையே னாகி நாளு
மென்செய்வான் றோன்றி னேனே. **#767**

கொடிய வினையின் பயனாகிய குழியில் விழுந்து எம்பெருமான் திருவடிக்கண் அன்பினால் குழையும் இயல்பு இல்லாதேனாய், ஏழிசையால் இறைவன் பெருமையைப் பாடமாட்டாதேனாய், இளைய ஒளி பொருந்திய கண்களை உடைய நல்ல பெண்களுக்கும் பொலிவு இல்லாதேனாய் அறிவற்றேனாய்க் காலத்தைக் கழித்தவனாயினேன். என்ன செயல் செய்வதற்காக இவ்வுலகில்பிறப்பெடுத்தேன் நான்?

குறைந்த - திருநேரிசை

முன்னையென் வினையி னாலே
மூர்த்தியை நினைய மாட்டேன்
பின்னைநான் பித்த னாகிப்
பிதற்றுவன் பேதை யேனான்
என்னுளே மன்னி நின்ற
சீர்மைய தாயினானை
என்னுளே நினைய மாட்டே
னென்செய்வான் றோன்றி னேனே. **#768**

முற்பிறப்பில் செய்த என் வினைப்பயனாலே பெருமானை நினைக்க இயலாத அடியேன் உலகியலிலே ஈடுபட்டு இவ்வுலக இன்பங்களையே மேம்பட்டனவாகப் பிதற்றிக் கொண்டிருப்பேனானேன். அறிவில்லாத அடியேன் என் உள்ளத்தினுள்ளே நிலை பெற்றிருத்தலை தமது சிறப்பியல்பாக உள்ள பெருமானை என்னுள் வைத்துத் தியானிக்க மாட்டாதேனாகின்றேன். வேறு யாது செயல் செய்வதற்காக இவ்வுலகில் தோன்றினேன் நான்?

குறைந்த - திருநேரிசை

கறையணி கண்டன் றன்னைக்

காமரங் கற்று மில்லேன்
பிறைநுதற் பேதை மாதர்
பெய்வளை யார்க்கு மல்லேன்
மறைநவி னாவி னானை
மன்னிநின் றிறைஞ்சி நாளும்
இறையேயு மேத்த மாட்டே
னென்செய்வான் றோன்றி னேனே. **#769**
நீலகண்டனை வசப்படுத்த இசைத்துறைகளைக் கற்றேனும் அல்லேன். பிறைபோன்ற நெற்றியை உடைய வளையலை அணிந்த பேதைமைக் குணத்தை உடைய மகளிரை வசப்படுத்தும் திறத்தேனும் அல்லேன். வேதங்களை ஓதும் நாவினை உடைய எம்பெருமானை நிலையாக நின்று ஒருநாளும் சிறிதளவும் போற்ற மாட்டாதேனாகிறேன். வேறு யாது செயல் செய்வதற்காக இவ்வுலகில் பிறப்பெடுத்தேன் நான்?

<u>குறைந்த - திருநேரிசை</u>

வளைத்துநின் றைவர் கள்வர்
வந்தெனை நடுக்கஞ் செய்யத்
தளைத்துவைத் துலையை யேற்றித்
தழலெரி மடுத்த நீரில்
திளைத்துநின் றாடு கின்ற
வாமைபோற் றெளிவி லாதேன்
இளைத்துநின் றாடு கின்றே
னென்செய்வான் றோன்றி னேனே. **#770**
ஐந்து கள்வர் போன்ற ஐம்பொறிகள் இவ்வுடம்பில் என் உள்ளத்தைச் சுற்றி நின்று கொண்டு என்னை நடுங்கச் செய்தலால், எங்கும் செல்லாதபடி பிணித்து வைத்துப் பாத்திரத்தில் நீரை நிரப்பி அப்பாத்திரத்தைத் தீயினால் சூடாக்க, அந்நீரிலே பிணியை அவிழ்த்துநீத்தவிட்ட அளவிலே மகிழ்வோடி நீந்தி விளையாடிக்கொண்டு சூட்டில் வெந்து உயிர் நீங்க இருக்கும் அவலத்தைப் பற்றிச் சிந்திக்க மாட்டாத ஆமையைப் போல உள்ளத்தெளவு இல்லாதேனாய் வாழ்க்கையில் இளைத்து நின்று தடுமாறுகின்றேன். வேறு யாது செய்வதற்காகப் பிறப்பெடுத்தேன் நான்?

கோயில் - திருவிருத்தம்

கோயில்

கோயில் - திருவிருத்தம், திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருமூலத்தானநாயகர் (எ) சபாநாதர்.
தேவியார் : சிவகாமியம்மை.

பாளை யுடைக்கமு கோங்கிப்பன் மாடம்
நெருங்கியெங்கும்
வாளை யுடைப்புனல் வந்தெறி வாழ்வயற்
றில்லைதன்னுள்
ஆள வுடைக்கழற் சிற்றம் பலத்தரன்
ஆடல்கண்டாற்
பீளை யுடைக்கண்க ளாற்பின்னைப் பேய்த்தொண்டர்
காண்பதென்னே. #771

பாளையை உடைய பாக்கு மரங்கள் உயர்ந்து வளர்ந்தமாடவீடுகள் நெருக்கமாக அமைய, வாளை மீன் குதிக்கும் தண்ணீர் அலை எறியும் வயல்களையுடைய தில்லை நகரிலே, நம்மை ஆட்கொள்ளுதலுக்காக அமைந்த திருவடிகளை உடைய சிற்றம் பலத்துப் பெருமானுடைய ஆடலைக் காணும் வாய்ப்பினைப் பெற்றால், அதன்பின் பீளை ஒழுகும் கண்களால், பிடித்ததனை விடாத பேய் போன்றஇயல்பை உடைய அடியார்கள், தம் கண்களால் காணத்தக்க மேம்பட்ட பொருள் யாதுள்ளதோ!

கோயில்

பொருவிடை யொன்றுடைப் புண்ணிய மூர்த்தி
புலியதளன்
உருவுடை யம்மலை மங்கை மணாள
னுலகுக்கெல்லாம்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற்
றம்பலவன்
றிருவடி யைக்கண்ட கண்கொண்டு மற்றினிக்
காண்பதென்னே. #772

போரிடும் காளை ஒன்றினையுடைய புண்ணிய வடிவினனாய், புலித்தோல் ஆடையனாய், அழகிய பார்வதி மணாளனாய், அந்தணர்கள் வாழ்கின்ற பதியாய் உலகத்தவருக்கெல்லாம் பேரின்பச் செல்வத்தை நல்கும் தில்லையிலுள்ள சிற்றம்பலத்துக் கூத்து நிகழ்த்தும்

பெருமானுடைய திருவடிகளைக் கண்ட கண்களால், காண்பதற்குப் பிறிதொருபொருள் யாதுள்ளதோ!

கோயில்

தொடுத்த மலரொடு தூபமுஞ் சாந்துங்கொண்
டெப்பொழுதும்
அடுத்து வணங்கு மயனொடு மாலுக்குங்
காண்பரியான்
பொடிக்கொண் டணிந்துபொன் னாகிய தில்லைச்சிற்
றம்பலவன்
உடுத்த துகில்கண்ட கண்கொண்டு மற்றினிக்
காண்பதென்னே. **#773**

மாலையாகத் தொடுக்கப் பட்ட மலரொடு புகைக்கு உரியனவும் சந்தனமும் கைகளிற் கொண்டு, எப்பொழுதும் அணுகி வந்து வணங்கும் பிரமனுக்கும் திருமாலுக்கும் தம் முயற்சியினாற் காண்பதற்கு அரியவனாய்த் திகழ்பவனாகித் திருநீறணிந்து பொன் மயமான தில்லைச் சிற்றம்பலத்து ஆடும் பெருமான் அணிந்த புலித்தோலாடையைக் கண்ட கண் கொண்டு காண்பதற்குப் பிறிது பொருள் யாதுள்ளதோ!

கோயில்

வைச்ச பொருணமக் காகுமென் றெண்ணி
நமச்சிவாய
அச்ச மொழிந்தே னணிதில்லை யம்பலத்
தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி யுந்தியின்
மேலசைத்த
கச்சி னழகுகண் டாற்பின்னைக் கண்கொண்டு
காண்பதென்னே. **#774**

நமக்குச் சேமவைப்பாக இருக்கின்ற பொருள் திருவைந்தெழுத்தே என்று விருப்புற்று நினைத்துப் பேரின்ப வாழ்வு குறைவற நடக்கும் என்று துணிந்து அச்சம் ஒழிந்தேன். அழகான தில்லை நகரிலே உள்ள சிற்றம்பலத்தில் கூத்து நிகழ்த்துகின்றவனாய், அடியவர் திறத்துப் பித்தனாய், பிறப்பு அற்றவனாய் நந்தி என்ற பெயரினனாய் உள்ள பெருமானுடைய கொப்பூழின் மேல் இடுப்பைச் சுற்றிக்கட்டடப்பட்ட உதரபந்தமாகிய கச்சின் அழகைக் காணப் பெற்றால் பின்னைக் காணவேண்டிய உயர்ந்த பொருள் யாதுள்ளதோ!

கோயில்

செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற்
றம்பலவன்
மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு
மகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல
மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற வாடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு
காண்பதென்னே. **#775**

வயலிலே காண்கின்ற பூங்கொடியில் நீலோற்பல மலர்கள் மலரும் வளமுள்ள தில்லைப்பதியில் உறையுஞ் சிற்றம்பலவனாய்நெய்யில் நின்றெரியும் தீபச்சுடர் போன்று ஒளிவிடும் நீலமணி மிடற்றனுமாய பெருமான், கருமை நிலைபெற்ற ஒளிமிக்க கண்களை உடைய சிவகாமியம்மையார் கண்டு மகிழ்ந்து நிற்க வைத்துச் செய்வதும் என்று வந்தாய் எனும் திருக்குறிப்புப் புலப்பட நின்று இயற்றுவதுமான ஆடலைக் கண்டபின் காணத்தகும் பொருள் வேறு யாதுளதோ!

கோயில்

ஊனத்தை நீக்கி யுலகறி யவென்னை
யாட்கொண்டவன்
றேனொத் தெனக்கினி யான்றில்லைச் சிற்றம்
பலவனெங்கோன்
வானத் தவருய்ய வன்னஞ்சை யுண்டகண்
டத்திலங்கும்
ஏனத் தெயிறுகண் டாற்பின்னைக் கண்கொண்டு
காண்பதென்னே. **#776**

அவைதிக சமயத்தைச் சார்ந்தவனாயினேன் என்ற என் குறையைப் போக்கி, அடியேனைச் சூலைநோய் அருளி ஆட்கொண்டு, அடியேனுக்குத் தேனை ஒத்து இனியனாய்த் தில்லைச் சிற்றம்பலவனாய் உள்ள எம் தலைவன், தேவர்கள் உயிர் பிழைக்கு மாறு கொடிய விடத்தை உண்டு இருத்திய கழுத்தில் அணிந்திருக்கும் மகாவராகத்தின் கொம்பின் வனப்பைக் கண்டால் பின், காண்பதற்கு மேம்பட்ட பொருள் பிறிது யாதுள்ளதோ!

கோயில்

தெரித்த கணையாற் றிரிபுர மூன்றுஞ்செந்
தீயின்மூழ்க

எரித்த விறைவ னிமையவர் கோமா
னிணையடிகள்
தரித்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற்
றம்பலவன்
சிரித்த முகங்கண்ட கண்கொண்டு மற்றினிக்
காண்பதென்னே. #777

ஆராய்ந்து எடுத்த அம்பாலே வானத்தில் உலவிய மதில்கள் மூன்றும் நெருப்பில் மூழ்குமாறு தீக்கு இரையாக்கிய தலைவனாய், தேவர்கள் மன்னனாய் உள்ள சிவபெருமானுடைய திருவடிகளைத் தம்முள் கொண்டு தாங்கும் மனத்தை உடைய அடியவர்கள் வாழ்கின்ற தில்லை நகரிலே சிற்றம்பலத்தில் கூத்து நிகழ்த்தும் அப்பெருமானுடைய சிரித்த முகத்தைக் கண்ட கண்களால் இனிக் காண்பதற்கு மேம்பட்ட பொருள் பிறிது யாதுள்ளதோ!

<u>கோயில்</u>

சுற்று மமரர் சுரபதி நின்றிருப்
பாதமல்லாற்
பற்றொன் றிலோமென் றழைப்பப் பரவையுள்
நஞ்சையுண்டான்
செற்றங் கநங்கனைத் தீவிழித் தான்றில்லை
யம்பலவன்
நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக்
காண்பதென்னே. #778

சுற்றிச் சூழும் தேவர்களும், இந்திரனும் 'உன் திருவடிகளைத் தவிர எங்களுக்கு வேறு பற்றுக்கோடு இல்லை' என்று கூறி ஆலகால விடத்தை அடக்குமாறு சிவபெருமானை வேண்டியபோது அவர்கள் வேண்டுகோளுக்கு இரங்கிக் கடலில் தோன்றிய விடத்தை உண்டவனாகி தில்லை நகரில் சிற்றம்பலத்தில் கூத்து நிகழ்த்தும் பெருமான், மன்மதனை வெகுண்டு சாம்பலாகுமாறு விழித்த நெற்றிக்கண்ணைக் கண்ட கண்ணால் இனிக் காண்பதற்கு மேம்பட்ட பொருள் பிறிது யாது உளதோ!

<u>கோயில்</u>

சித்தத் தெழுந்த செழுங்கம லத்தன்ன
சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற்
றம்பலவன்
முத்தும் வயிரமு மாணிக்கம் தன்னுள்

விளங்கியதூ
மத்த மலர்கண்ட கண்கொண்டு மற்றினிக்
காண்பதென்னே. #779

உள்ளத்திலே முளைத்துச் செழித்து மலர்ந்த செழுந்தாமரை மலர்களை ஒத்த திருவடிகளை நிலையாக மனத்தில் இறுத்திய சான்றோர்கள் வாழும் தில்லையம்பதியில் உள்ள சிற்றம்பலத்தானுடைய முத்தும் வயிரமும் மாணிக்கமும் தூய மலர்களும் அணிந்த திருச்சென்னியின் மலரழகைக் கண்ட கண்களால் இனி மேம்பட்டதாகக் காண்பதற்குரிய பொருள் பிறிது யாதுள்ளதோ!

<u>கோயில்</u>

தருக்கு மிகுத்துத்தன் றோள்வலி யுன்னித்
தடவரையை
வரைக்கைக ளாலெடுத் தார்ப்ப மலைமகள்
கோன்சிரித்து
அரக்கன் மணிமுடி பத்து மணிதில்லை
யம்பலவன்
நெருக்கி மிதித்த விரல்கண்ட கண்கொண்டு
காண்பதென்னே. #780

இராவணன் செருக்கு மிகுந்துத் தன் தோள் வலிமையை மிகுதியாகக் கருதிப் பெரிய கயிலைமலையைத் தன் மலைபோன்ற கைகளால் எடுத்து ஆரவாரம் செய்ய அதனைக் கண்டு பார்வதி கொழுநனாகிய தில்லைச் சிற்றம்பலவன் சிரித்து இராவணனுடைய கிரீடங்கள் அணிந்த தலைகள் பத்தினையும் நெருக்கி மிதித்த திருக்கால் விரலைக் கண்ட கண்களால் காண்பதற்கு மேம்பட்ட பொருள் பிறிது யாதுள்ளதோ!

<u>கோயில்</u>

கோயில் - திருவிருத்தம், திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருமூலத்தானநாயகர் (எ) சபாநாதர்.
தேவியார் : சிவகாமியம்மை.

கருநட்ட கண்டனை யண்டத் தலைவனைக்
கற்பகத்தைச்
செருநட்ட மும்மதி லெய்யவல் லானைச்செந்
தீமுழங்கத்
திருநட்ட மாடியைத் தில்லைக் கிறையைச்சிற்
றம்பலத்துப்
பெருநட்ட மாடியை வானவர் கோனென்று

வாழ்த்துவனே. #781

கருமை நிலைபெற்ற நீலகண்டனாய், உலகங்களுக்குத் தலைவனாய், கற்பகம் போல அடியவர் வேண்டியன வழங்குபவனாய், போரில் ஈடுபட்ட மும்மதில்களையும் அழிக்க வல்லவனாய், அங்கையில் வைத்த செந்தீ ஒலிக்க அழகிய கூத்தாடுபவனாய், தில்லை நகர்த்தலைவனாய்ச் சிற்றம்பலத்து மகாதாண்டவம் ஆடிய பெருமானைத் 'தேவர்கள் தலைவன்' என்று வாழ்த்துவேன்.

கோயில்

ஒன்றி யிருந்து நினைமின்க ளுந்தமக்
கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தா
னடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்
பலத்துநட்டம்
என்றுவந் தாயென்னு மெம்பெரு மான்றன்
றிருக்குறிப்பே. #782

வெகுண்டு வந்த கூற்றுவனை அடியவன் பொருட்டுக் காலால் ஒறுத்தவனாய்த் தில்லை நகரில் திருச்சிற்றம்பலத்தில் என்று வந்தாய் என்னும் குறிப்புத் தோன்றும்படி கவித்த திருக்கையுடன்எம் பெருமான் நிகழ்த்தும் கூத்தினைச் சென்று தொழுமின்கள்.அக்கூத்தினையே மனம் பொருந்தி நினைமின்கள். உங்களுக்குப் பிறப்பு இறப்பு அகலாமையாகிய குறைபாடு இனி இராது.

கோயில்

கன்மன வீர்கழி யுங்கருத் தேசொல்லிக்
காண்பதென்னே
நன்மன வர்நவி றில்லையுட் சிற்றம்
பலத்துநட்டம்
பொன்மலை யில்வெள்ளிக் குன்றது போலப்
பொலிந்திலங்கி
என்மன மேயொன்றிப் புக்கனன் போந்த
சுவடில்லையே. #783

கல்போன்ற திண்ணிய மனமுடைய உலகமக்களே! உங்கள் மனத்திடை அவ்வப்போது தோன்றும் விருப்பங்களை வெளியிட்டுஅவற்றை நிறைவேற்றித் தரல் வேண்டும் என்று வேண்டி நல்ல உள்ளம் படைத்த சான்றோர்கள் வாழும் தில்லை நகர்ச் சிற்றம்பலத்தில் எம்பெருமான் நிகழ்த்தும் கூத்தினைத் தரிசிப்பதனால், ஆன்ம லாபத்தை விடுத்து

இம்மையிற் கிட்டும் அற்பசாரங்களால் யாது பயன்? தில்லைச் சிற்றம்பலத்திலே பொன்மலைமீது வெள்ளிமலை இருப்பது போல கூத்தப்பிரான் காட்சி வழங்கித் தான்புகுந்த சுவடு புலப்படாமல் அடியேனுடைய மனத்திலே உறுதியாக நிலைபெற்றவனாக வந்து சேர்ந்துவிட்டான்.

கோயில்

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த
மாநிலத்தே. **#784**

வளைந்த புருவங்களையும், கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயிலே முகிழ்க்கும் புன்னகையையும், கங்கையால் ஈரமான சடைமுடியையும், பவளம் போன்ற சிவந்த திருமேனியில் அணிந்த பால் போன்று வெண்மையான வெண்ணீற்றுப் பூச்சினையும், பேரின்பம் நல்கும் தூக்கிய திருவடிகளையும் காணும் வாய்ப்பினைப் பெறுவதாம்பட்சத்தில் இவ்வுலகில் மனிதராய்ப் பிறப்பெடுத்தலும் விரும்பத்தக்க செயலாகும்.

கோயில்

வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி
மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசு பதமருள் செய்தவன்
பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரந் தீவளைத் தான்றில்லை
யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட் டிருப்பதன் றோநந்தங
கூழைமையே. **#785**

சிவபெருமானுடைய அடியார்களே! நமக்கு நல வினை காரணமாக இந்த ஒப்பற்ற மனிதப் பிறவி நமக்குக் கிட்டியுள்ளது. இந்த மனிதப் பிறவியை மதித்துச் செயற்படுவீராக. அருச்சுனனுக்குப் பாசுபதாத்திரம் அருளிச் செய்தவனாய், முப்புரங்களை அம்பு எய்து தீக்கு இரையாக்கியவனாய், தில்லை அம்பலத்துள் கூத்து நிகழ்த்தும் அப்பெருமானுக்கு அடியவராக இருப்பதன்றோ நம் அடிமைப் பண்பாகும்?

கோயில்

பூத்தன பொற்சடை பொன்போன் மிளிரப்
புரிகணங்கள்
ஆர்த்தன கொட்டி யரித்தன பல்குறட்
பூதகணந்
தேத்தென வென்றிசை வண்டுகள் பாடுசிற்
றம்பலத்துக்
கூத்தனிற் கூத்துவல் லாருள ரோவென்றன்
கோல்வளைக்கே. **#786**

பூத்துக் குலுங்குவது போன்ற பொலிவை உடைய செஞ்சடை கொன்றை மலரை அணிந்து பொன்போல ஒளிவீச, அடியார் கூட்டங்கள் மகிழ்ச்சியால் ஆரவாரிக்க,பூதக் கூட்டங்கள் வாத்தியங்களை ஒலிக்க, 'தெத்தே'என்று வண்டுகள் ஒலிக்கும் தில்லை நகரிலுள்ள சிற்றம்பலத்திற் கூத்தினை நிகழ்த்தும் சிவபெருமானைப் போல, திரண்டவளையல்களை அணிந்த என் மகளுடைய மனத்தைத் தம் நாட்டியத்தால் கவரவல்லவர் பிறர்உளரோ? (என்று முக்கணான் முயக்கம் வேட்ட பெற்றிகண்டு தாய் இரங்கிக் கூறியவாறு.)

கோயில்

முடிகொண்ட மத்தமு முக்கண்ணி னோக்கு
முறுவலிப்புந்
துடிகொண்ட கையுந் துதைந்த வெண்ணீறுஞ்
சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித் தோலுமென்
பாவிநெஞ்சிற்
குடிகொண்ட வாதில்லை யம்பலக் கூத்தன்
குரைகழலே. **#787**

தில்லை நகரில் சிற்றம்பலத்திற் கூத்து நிகழ்த்தும் எம்பெருமானுடைய ஒலிக்கின்ற கழல்களை அணிந்த திருவடிகளோடு தலையில் அணிந்த ஊமத்தைப் பூவும், மூன்று கண்களின் பார்வையும், புன்சிரிப்பும், உடுக்கையை ஒலிக்கும் திருக்கையும், உடல் முழுதும் பூசிய திருநீறும், பார்வதியை இடப்பாகமாகக் கொண்ட தனக்குரிய வலப்பாகமும், இடுப்பு முழுதும் பரவி உடுக்கப்பட்ட புலித்தோலும் உலகப் பொருள்களிலே ஈடுபட்டுத் தீவினையை ஈட்டிய அடியேனுடைய பாவியான உள்ளத்தில் இப்பொழுது நிலையாக இடம் பெற்றுவிட்டன.

கோயில்

படைக்கல மாகவுன் னாமத் தெழுத்தஞ்சென்
நாவிற்கொண்டேன்
இடைக்கல மல்லே னெழுபிறப் பும்முனக்
காட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் றொழுது வணங்கித்
தூநீறணிந்துன்
அடைக்கலங் கண்டா யணிதில்லைச் சிற்றம்
பலத்தரனே. **#788**

அழகிய தில்லை நகரிலுள்ள சிற்றம்பலத்தில் உள்ள பெருமானே! என்னை ஏழையர் செய்யக் கூடிய தீங்குகளிலிருந்துபாதுகாக்கும் படைக்கருவியாக உன் திருநாமமாகிய திருவைந்தெழுத்தினையும் அடியேன் நாவினில் நீங்காது கொண்டுள்ளேன். இடையில் ஒருபோதும் உனக்கு அடிமைத் தொண்டு செய்தலைத் தவிர்ந்தேன் அல்லேன். எழுவகைப்பட்ட பிறப்புக்களில் எந்தப் பிறவி எடுத்தாலும் எடுத்த பிறவிக்கு ஏற்ப உனக்கு அடிமைத் தொண்டு செய்கிறேன். அடியேனை நீ விலக்கினாலும் அடியேன் உன்னை விட்டுப் பெயரேன். எப்பொழுதும் உன்னை மனத்தால் தொழுது உடலால் வணங்கித் திருநீறு அணிந்து உன்னால் காக்கப்படவேண்டிய பொருளாக அடியேன் உள்ளேன்.

<u>கோயில்</u>

பொன்னொத்த மேனிமேல் வெண்ணீ றணிந்து
புரிசடைகண்
மின்னொத் திலங்கப் பலிதேர்ந் துழலும்
விடங்கர்வேடச்
சின்னத்தி னான்மலி தில்லையுட் சிற்றம்
பலத்துநட்டம்
என்னத்த னாடல்கண்டின்புற்ற தாலிங்
விருநிலமே. **#789**

பொன்னை ஒத்த செந்நிறமான உடம்பில் வெண்மையான திருநீற்றை அணிந்து, முறுக்குண்ட செஞ்சடைகள் மின்னலைப் போல ஒளிவீச, பிச்சை எடுத்துத் திரியும், உளியால் செதுக்கப்படாது இயல்பான சிவ வேட அடையாளத்தை உடையவனாய், வளம்மிக்க தில்லை நகரின் சிற்றம்பலத்தான் ஆகிய என் தலைவனாம் பெருமானுடைய திருக்கூத்தினைக் கண்டு இவ்வுலகம் இன்புறுகின்றது.

<u>கோயில்</u>

சாட வெடுத்தது தக்கன்றன் வேள்வியிற்

சந்திரனை
வீட வெடுத்தது காலனை நாரணன்
நான்முகனுந்
தேட வெடுத்தது தில்லையுட் சிற்றம்
பலத்துநட்டம்
ஆட வெடுத்திட்ட பாதமன் றோநம்மை
யாட்கொண்டதே. **#790**

தக்கன் நிகழ்த்திய வேள்வியில் தனக்கு உரிய அவியைப் பெறுவதற்காக வந்து கலந்து கொண்ட சந்திரனைத் தேய்ப்பதற்காகத் தூக்கப்பட்டதும், கூற்றுவனை அழிப்பதற்கு உயர்த்தப்பட்டதும், திருமாலும் பிரமனும் காணமுடியாது தேடுமாறு பாதலத்துக்குக் கீழும் வளர்ந்ததும் தில்லைச் சிற்றம்பலத்தில் கூத்தாடுவதற்காக உயர்த்தப்பட்டதும் ஆகிய சிவபெருமானுடைய இடது திருவடியன்றோ நம்மை அடிமையாகக் கொண்டதாகும்.

திருக்கழுமலம்

சீர்காழி

திருக்கழுமலம், திருவிருத்தம், கழுமலம் என்பது சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

பார்கொண்டு மூடிக் கடல்கொண்ட ஞான்றுநின்
பாதமெல்லாம்
நாலஞ்சு புள்ளின மேந்தின வென்பர்
நளிர்மதியங்
கால்கொண்ட வண்கைச சடைவிரித் தாடுங்
கழுமலவர்க்
காளன்றி மற்று முண்டோ வந்தணாழி
யகலிடமே. **#791**

இவ்வுலகினை ஊழிவெள்ளம் மூடி முழுகச் செய்த காலத்தில் உன் பாதங்களை எல்லாம் இருபது பறவைகள் சுமந்தன என்று கூறுவர். குளிர்ந்த பிறை தங்குதலைக் கொண்டதாய், கங்கைக்குத் தங்குமிடம் வழங்கிய வள்ளன்மையை உடைய சடையை விரித்துக்கொண்டு ஆடும் திருக்கழுமலத்துப் பெருமானே! அழகிய குளிர்ந்த கடலாற் சூழப்பட்ட உலகத்துயிர்கள் உனக்கு அடிமையாதல் அன்றி வேறாதலும் உண்டோ?

சீர்காழி

கடையார் கொடிநெடு மாடங்க ளெங்குங்
கலந்திலங்க
உடையா னுடைதலை மாலையுஞ் சூடி
யுகந்தருளி
விடைதா னுடையவவ் வேதியன் வாழுங்
கழுமலத்துள்
அடைவார் வினைக ளவையெளக நாடொறு
மாடுவரே. **#792**

முகப்பிலே கொடிகள் கட்டப்பட்ட பெரிய மாடவீடுகள் வீதிகள் முழுதும் நெருக்கமாக அமைந்து விளங்க, எல்லா ஆன்மாக்களையும் தனக்கு அடிமையாக உடைய வேதியன் ஆகிய சிவபெருமான் தலைமாலையைச் சூடிக்கொண்டு மகிழ்ந்து காளை வாகனனாய்க் காட்சி வழங்கும் திருக்கழுமலத்தை அடையும் அடியவர்கள் தங்கள் நல்வினை தீவினைகள் யாவும் அஞ்சி அகலப் பிறவிப்பிணி தீர்ந்தோம்

என்று நாடோறும் மகிழ்ந்து கூத்தாடுவர்.

சீர்காழி

திரைவாய்ப் பெருங்கடன் முத்தங் குவிப்ப
முகந்துகொண்டு
நுரைவாய் நுளைச்சிய ரோடிக் கழுமலத்
துள்ளழுந்து
விரைவாப் நறுமலர் சூடிய விண்ணவன்
றன்னடிக்கே
வரையாப் பரிசிவை நாடொறு நந்தமை
யாள்வனவே. **#793**

பெரிய கடல் தன் அலை வாயிலாக முத்துக்களைக் கரையில் சேர்க்க நுரையோடுகரை சேர்ந்த அம் முத்துக்களை நெய்தல் நிலமகளிர் முகந்து கொண்டு ஓட, அத்தகைய வளம் நிறைந்த கழுமலத்துள்நிலையாக இருக்கும், நறுமணம் கமழும் பூக்களைச் சூடிய சிவபெருமானுடைய திருவடிகளைச் சூடி, விண்ணவனாகிய அவர் திருவடிக்கே இவை நீக்கலாகாத பரிசுகளென அர்ப்பணிப்பர். அத்திருவடிகள் நாடொறும் நம்மை ஆள்வனவாம். (நுளைச்சியர் முகந்து கொண்டோடிச் சூடி அர்ப்பணிக்கும் பரிசினவான திருவடிகள் நம்மை ஆள்வன என முடிக்க.)

சீர்காழி

விரிக்கு மரும்பதம் வேதங்க ளோதும்
விழுமியநூல்
உரைக்கி லரும்பொரு ளுள்ளுவர் கேட்கி
லுலகமுற்றும்
இரிக்கும் பறையொடு பூதங்கள் பாடக்
கழுமலவன்
நிருத்தம் பழம்படி யாடுங் கழனம்மை
யாள்வனவே. **#794**

வேதங்களின் சொற்களால் விரித்துரைக்கப் படுபவனாய், மேம்பட்ட நூல்களாற் சிறப்பித்து ஓதப்படுபவனாய், சொற்களால் மக்கள் விளக்கிச் சொல்லமுடியாத அரும் பொருளாய், தன் பெருமையைக் கேட்பவர் தியானிக்கத்தக்கவனாய், உள்ள கழுமலப் பெருமான் தன் ஓசையால் பலரையும் அச்சுறுத்தும்பறையின் ஒலியோடு பூதங்கள் பாடத் தான் பண்டு ஆடும் அந்த வகையிலேயே ஆடுவதற்குப் பயன்படுத்தும் திருவடிகள் நம்மை அடிமையாக ஏற்பனவாகும்.

சீர்காழி

சிந்தித் தெழுமன மேநினை யாமுன்
கழுமலத்தைப்
பந்தித்த வல்வினை தீர்க்கவல் லானைப்
பசுபதியைச்
சந்தித்த கால மறுத்துமென் றெண்ணி
யிருந்தவர்க்கு
முந்தித் தொழுகழ னாடொறு நந்தமை
யாள்வனவே. **#795**

மனமே! கழுமலத்தைத் தியானித்த அளவிலேயே நம்மைக் கட்டியிருக்கும் கொடிய வினைகளைப் போக்கவல்லவனாய், ஆன்மாக்களுக்குத் தலைவனாய் உள்ள பெருமானைத் தரிசித்த அந்த நேரத்திலேயே வினையை நீக்கிவிடுவோம் என்று உறுதியாக எண்ணிக்கொண்டிருக்கும் அடியவர்கள் முற்பட்டுத்தொழும் திருவடிகளே நம்மை நாடோறும் அடிமையாக ஏற்பனவாகும்.

சீர்காழி

நிலையும் பெருமையு நீதியுஞ் சால
வழகுடைத்தாய்
அலையும் பெருவெள்ளத் தன்று மிதந்தவித்
தோணிபுரஞ்
சிலையிற் றிரிபுர மூன்றெரித் தார்தங்
கழுமலவர்
அலருங் கழலடி நாடொறு நந்தமை
யாள்வனவே. **#796**

என்றும் நிலைத்திருக்கும் உறுதியும், அந்த உறுதியைப் பெறுவதற்குரிய பெருமையும், உறுதிக்கும் பெருமைக்கும் அடிப்படையான அங்கு வாழும் நன்மக்களுடைய நேர்மையும், மிகவும் அழகுடையனவாக, எங்கும் திரியும் அலைகளை உடைய ஊழிப் பெருவெள்ளத்தில் மிதந்த இத்தோணிபுரத்தில் உகந்தருளியிருப்பவரும், வில்லால் முப்புரங்களையும் தீயூட்டி எரித்த பெருமானுமாம் அவருடைய மலர்ந்த, கழல்களை அணிந்த திருவடிகள் நாள்தோறும் நம்மை அடிமையாக ஏற்பனவாகும்.

சீர்காழி

முற்றிக் கிடந்து முந்நீரின் மிதந்துடன்
மொய்த்தமரர்
சுற்றிக் கிடந்து தொழப்படு கின்றது
சூழரவந்

தெற்றிக் கிடந்துவெங் கொன்றளந் துன்றிவெண்
டிங்கள் சூடும்
கற்றைச் சடைமுடி யார்க்கிட மாய
கழுமலமே. **#797**

எம் பெருமானுடைய திருமேனியைச் சுற்றிப் பாம்புகள்பின்னிக் கிடக்க, விரும்பத்தக்க கொன்றைமலர் பொருந்த, வெள்ளிய பிறையைச்சூடும் கற்றையான சடையை உடைய எம்பெருமானுக்கு உறைவிடமாகிய கழுமலத்திருத்தலம் எல்லா நலன்களும் நிரம்பப் பெற்றதாய் ஊழிப்பெருவெள்ளத்துள் கடலில் மிதந்து தேவர்கள் கூட்டமாக வந்து வணங்கித் தொழப்படும் சிறப்புடையது.கொன்றையும் துன்றி - பாடம்.

<u>சீர்காழி</u>

உடலு முயிரு மொருவழிச் சொல்லு
முலகத்துள்ளே
அடையு முனைவந் தடைந்தா ரமர
ரடியிணைக்கீழ்
நடையும் விழவொடு நாடொறு மல்குங்
கழுமலத்துள்
விடையன் றனிப்பத நாடொறு நந்தமை
யாள்வனவே. **#798**

உடலும் அவ்வுடலைச் செலுத்தும் உயிரும் உலகியல் பொருள்களிலேயே புறப்பற்றும் அகப்பற்றும் கொண்டு வாழ்க்கையை நடத்தும் இவ்வுலகிலே, கூத்தும் திருவிழாக்களும் நாள்தோறும் மிகுதியாக நிகழும் கழுமலத்துள், தேவர்கள்சென்று அடையத்தக்க சரணியன் ஆன உன்னை அணுகி உன்திருவடிக்கீழ்ச் சரணாக மக்கள் அடைந்துள்ளனர். அத்தகைய காளை வாகனனாகிய உன் ஒப்பற்ற திருவடிகளே நாள்தோறும் நம்மை ஆள்வன.

<u>சீர்காழி</u>

பரவைக் கடனஞ்ச முண்டது மில்லையிப்
பார்முழுதும்
நிரவிக் கிடந்து தொழப்படு கின்றது
நீண்டிருவர்
சிரமப் படவந்து சார்ந்தார் கழலடி
காண்பதற்கே
அரவக் கழலடி நாடொறு நந்தமை
யாள்வனவே. **#799**

பரந்த கடலில்தோன்றிய நஞ்சினை உண்ணாமல் கழுத்திலேயே

இறுத்திவிட்டாய். அந்நீலகண்டம் இவ்வுலகத்தார் எல்லோராலும் வரிசையாக வணங்கித் தொழப்படுகின்றது. தீத்தம்ப மாக நீண்ட வடிவெடுத்தாயாக, அத்தகைய உன் திருவடிகளைக் காணத் தம் முயற்சியால் திருமாலும் பிரமனும் முயன்று, பின் வழிபாட்டால் காண்பதற்கு வந்து சேர்ந்துள்ளனர். அத்தகைய கழல்கள் ஒலிக்கும் திருவடிகளே நாளும் நம்மை ஆள்வன.

சீர்காழி

கரையார் கடல்சூ ழிலங்கையர் கோன்றன்
முடிசிதறத்
தொலையா மலரடி யூன்றலு முள்ளம்
விதிர்விதிர்த்துத்
தலையாய்க் கிடந்துயர்ந் தான்றன் கழுமலங்
காண்பதற்கே
அலையாப் பரிசிவை நாடொறு நந்தமை
யாள்வனவே. **#800**

கரையை உடைய கடலால் சூழப்பட்ட இலங்கை மன்னனான இராவணனுடைய முடிகள் நெரியுமாறு, ஒருகாலத்தும் அழிவில்லாத மலர் போன்ற திருவடி விரலை ஊன்றிய அளவில் அவன் உள்ளம் நடுநடுங்கித் தலை பத்தும் வீழ்ந்து வணங்கிக் கிடக்குமாறு கயிலைமலைக்கண் உயர்ந்து விளங்கிய பெருமானுடைய திருக்கழுமலத்தலத்தைத் தரிசிப்பதனால், பிறவிப் பிணியில் வருந்தாத தன்மையை வழங்கும் அப்பெருமானுடைய திருவடிகளாகிய இவை நம்மை நாள்தோறும் அடிமையாக ஏற்பனவாகும்

சீர்காழி

திருக்கழுமலம், திருவிருத்தம், கழுமலம் என்பது சீகாழிக்கொருபெயர்.
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசர்.
தேவியார் : திருநிலைநாயகி.

படையார் மழுவொன்று பற்றிய கையன்
பதிவினவில்
கடையார் கொடிநெடுமாடங்க ளோங்குங்
கழுமலமாம்
மடைவாய்க் குருகினம்பாளை விரிதொறும்
வண்டினங்கள்
பெடைவாய் மதுவுண்டு பேரா திருக்கும்
பெரும்பதியே. **#801**

படையாக ஒருமழு ஆயுதத்தைக் கையில் ஏந்திய சிவபெருமானுடைய திருத்தலம் யாது என்று வினாவினால், நகர்ப்புறவாயிலில் கொடிகள் உயர்ந்து விளங்கும் நெடும் மாடங்களைக கொண்டு விளங்கும் திருக்கழுமலமே அதுவாம். அப்பதியானது நீர்மடைகளிற் பூம்பாளை விரியுந் தோறும் அவற்றிற் சொரியுந் தேனைப் பெண்வண்டுகள் முன்னதாக உண்ணவிட்டு அவற்றின் கடைவாயிற் சொட்டுந் தேனை ஆண் வண்கள் அருந்திக் கொண்டு பிரியாதிருக்கும் பெரும்பதியுமாம்.

ஆருயிர்த் - திருவிருத்தம்

ஆருயிர்த் - திருவிருத்தம்

ஆருயிர்த் திருவிருத்தம், திருவிருத்தம்

எட்டாந் திசைக்கு மிருதிசைக் கும்மிறை
வாமுறையென்
றிட்டா ரமரர்வெம் பூச லெனக்கேட்
டெரிவிழியா
ஒட்டாக் கயவர் திரிபுர மூன்றையு
மோரம்பினால்
அட்டா னடிநிழற் கீழதன் றோவென்ற
னாருயிரே. **#802**

கிழக்கு தென்கிழக்கு முதலிய எட்டுத்திசைகளொடு மேல் கீழ் ஆக இருதிசைகள் ஆகப் பத்துத்திசைகளுக்கும் தலைவனே! 'எங்களைத் திரிபுரத்து அசுரர்களிடமிருந்து காத்தல் நினக்கே உரிய செயலாகும்' என்று தேவர்கள் வேண்டிய கூக்குரலைக் கேட்டுத் தீப்போல விழித்துத் தங்களோடு நட்புறவினால் பொருந்தாத கீழ்மக்களுடைய வானத்தில் உலவும் மும்மதில்களையும் ஓரம்பினால் அழித்தசிவபெருமானுடைய திருவடி நிழலின் கீழ் அல்லவோ என் அரிய உயிர் தங்கியுள்ளது.

ஆருயிர்த் - திருவிருத்தம்

பேழ்வா யரவி னரைக்கமர்ந் தேறிப்
பிறங்கிலங்கு
தேய்வா யிளம்பிறை செஞ்சடை மேல்வைத்த
தேவர்பிரான்
மூவா னிளகான் முழுவுல கோடுமண்
விண்ணுமற்றும்
ஆவா னடிநிழற் கீழதன் றோவென்ற
னாருயிரே **#803**

பிளந்த வாயை உடைய பாம்பினை இடுப்பில் இறுகக்கட்டி, ஒளிவீசும் உருத்தேய்ந்த இளம் பிறையைச் சிவந்த சடையின்மேல் வைத்த தேவர் பிரானாய், மூப்பும் இளமையும் இலாது என்றும் ஒரே நிலையனாய், இந்நிலவுலகும் தேவருலகும் மற்ற உலகங்களுமாகி உள்ள சிவபெருமானுடைய திருவடி நிழலின்கீழ் அல்லவோ அடியேனது அரிய உயிர் நிலைத்துள்ளது.

ஆருயிர்த் - திருவிருத்தம்

தரியா வெகுளிய னாய்த்தக்கன் வேள்வி
தகர்த்துகந்த
எரியா ரிலங்கிய சூலத்தி னானிமை
யாதமுக்கட்
பெரியான் பெரியார் பிறப்பறுப் பானென்றுந்
தன்பிறப்பை
அரியா னடிநிழற் கீழதன் றோவென்ற
னாருயிரே. **#804**

தாங்குதற்கரிய சினம் கொண்டு தக்கன் செய்த வேள்வியினை அழித்து மகிழ்ந்தவனாய், நெருப்பின் தன்மை பொருந்தி விளங்கிய சூலப்படையை உடையவனாய், இமைத்தல் இல்லாத மூன்று கண்களை உடைய பெரியவனாய், மேம்பட்ட அடியார்களின் பிறவித்தொடர்பை அறுப்பவனாய், தான் பிறவா யாக்கைப் பெரியோனாய் இருக்கும் சிவபெருமானுடைய அடி நிழல் கீழது எம் ஆருயிரே. (பிறப்பை + அறியான் பிறத்தலை இல்லாதவன். அருமை - இன்மை.)

ஆருயிர்த் - திருவிருத்தம்

வடிவுடை வாணெடுங் கண்ணுமை யாளையொர்
பான்மகிழ்ந்து
வெடிகொ ளரவொடு வேங்கை யதள்கொண்டு
மேன்மருவிப்
பொடிகொ ளகலத்துப் பொன்பிதிர்ந் தன்னபைங்
கொன்றையந்தார்
அடிக ளடிநிழற் கீழதன் றோவென்ற
னாருயிரே. **#805**

பேரழகுடைய, மாவடு போன்ற மையுண்ட கண்களை உடைய பார்வதியை ஒரு பாகமாக விரும்பி ஏற்று, பொந்து களை இருப்பிடமாகக் கொண்ட பாம்பினை வேங்கையின் தோலாகிய ஆடைமேல் இறுகச் சுற்றி, மேலே பூசப்பட்ட நீற்றின்மீது பொன்னைச் சிதறவிட்டாற்போன்றபசிய கொன்றைமாலையை அணிந்த சிவ பெருமானுடைய அடிநிழல் கீழதல்லவோ எனதாருயிர்.

ஆருயிர்த் - திருவிருத்தம்

பொறுத்தா னமரர்க் கமுதருளி நஞ்ச
முண்டுகண்டம்
கறுத்தான் கறுப்பழ காவுடை யான்கங்கை
செஞ்சடைமேல்
செறுத்தான் றனஞ்சயன் சேணா ரகலங்

கணையொன்றினால்
அறுத்தா னடிநிழற் கீழதன் றோவென்ற
னாருயிரே. #806
தேவர்களுக்கு அமுதம் வழங்க விடத்தை உண்டு அதனைக் கழுத்தில் இருந்தி நீலகண்டனாய் அந்தக் கறுப்பினைத் தனக்கு அழகாகக் கொண்டவனாய், கங்கையைச் சிவந்த சடைமீது அடக்கினவனாய், அருச்சுனனுடைய பரந்த மார்பினை அம்புஒன்றினால் புண்படுத்திய சிவபெருமானுடைய அடிநிழல் கீழதல்லவோ எனதாருயிர்.

ஆருயிர்த் - திருவிருத்தம்

காய்ந்தான் செறற்கரி யானென்று காலனைக்
காலொன்றினால்
பாய்ந்தான் பணைமதில் மூன்றுங் கணையென்னு
மொள்ளழலால்
மேய்ந்தான் வியனுல கேழும் விளங்க
விழுமியநூல்
ஆய்ந்தா னடிநிழற் கீழதன் றோவென்ற
னாருயிரே. #807
மார்க்கண்டேயன் எமனாற் பகைத்துயிர் கவரப்படுதற்குரியனல்லன் என்று அவனைக் கோபித்தவனாகிய கூற்றுவனைத் திருவடி ஒன்றினால் பாய்ந்துதைத்தான். பெரிய மதில்கள்மூன்றனையும் அம்பு என்ற ஒள்ளிய தீயினில் மூழ்கிச் சாம்பலாகச் செய்து, இடமகன்ற ஏழுலங்களும் விளங்கும்படியாக மேம்பட்ட நூல்களை ஆய்ந்துள்ள சிவபெருமான் அடிநீழற் கீழதல்லவோ எனதாருயிர்.

ஆருயிர்த் - திருவிருத்தம்

உளைந்தான் செறுதற் கரியான் றலையை
யுகிரொன்றினால்
களைந்தா னதனை நிறைய நெடுமால்
கணார்குருதி
வளைந்தா னொருவிர லின்னொடு வீழ்வித்துச்
சாம்பர்வெண்ணீ
றளைந்தா னடிநிழற் கீழதன் றோவென்ற
னாருயிரே. #808
பிரமனுடைய தவறான செயலைக் கண்டு வருந்தினனாய், அச்செயலுக்கு உரிய ஒறுப்புக்காக வெல்லுதற்கு அரிய அவன் தலையைநகம் ஒன்றினால் நீக்கியவனாய், அம்மண்டையோடு நிறையுமாறு திருமாலுடைய உடம்பிலுள்ள குருதியை நிரப்பினனாய்

,இராவணனை ஒருவிரலை அழுத்திக் கயிலைமலை யின் கீழ் விழச் செய்தவனாய், சாம்பலாகிய நீற்றினை உடல் முழுதும் பூசியவனுமான சிவபெருமானுடைய அடிநிழல் கீழதல்லவோ எனதாருயிர்.

ஆருயிர்த் - திருவிருத்தம்

முந்திவட் டத்திடைப்பட்டதெல் லாமுடி
வேந்தர் தங்கள்
பந்திவட் டத்திடைப் பட்டலைப் புண்பதற்
கஞ்சிக்கொல்லோ
நந்திவட் டந்நறு மாமலர்க் கொன்றையும்
நக்கசென்னி
அந்திவட் டத்தொளி யானடிச் சேர்ந்த்தென்
னாருயிரே **#809**

என் இந்த வாழ்க்கையின் முற்பகுதியில் யான் செய்தனவற்றைஎல்லாம் உட்கொண்டு அரசர்களுடைய பரிசனங்களாகிய தொகுதியினரிடம் அகப்பட்டு அவர்களால் பலவகையாகத் துன்புறுத்தப்படுவதற்கு அஞ்சிப் போலும் நந்தியா வட்டப்பூவும் கொன்றைப்பூவும் ஒளிவீசும் சென்னியும் மாலை வானம் போன்ற செம்மேனியுமுள்ள அம்மானுடைய அடிநிழலைச் சேர்ந்தது என் ஆருயிர்.

ஆருயிர்த் - திருவிருத்தம்

மிகத்தான் பெரியதொர் வேங்கை யதள்கொண்டு
மெய்ம்மருவி
அகத்தான் வெருவநல் லாளை நடுக்குறுப்
பான்வரும்பொன்
முகத்தாற் குளிர்ந்திருந் துள்ளத்தி னாலுகப்
பானிசைந்த
அகத்தா னடிநிழற் கீழதன் றோவென்ற
னாருயிரே. **#810**

மிகப்பெரிய வேங்கையைக் கொன்று அதன் தோலை ஆடையாக உடுத்திப் பார்வதியை உள்ளம் அஞ்சி நடுங்கச் செய்பவனாய்த் தன்னை நோக்கி வந்த பொன் போன்ற பொலிவை உடைய கங்கையைத் தன் சடையில் முகந்து கொண்டதால் சடை குளிர அதனால் மனத்தில் மகிழ்வெய்தியவனாய், என்னை அடிமையாக ஏற்றுக் கொள்ள இசைந்தசிவபெருமானுடைய அடிநிழல் கீழது அல்லவோ எனதாருயிர்.

ஆருயிர்த் - திருவிருத்தம்

பைம்மா ணரவல்குற் பங்கயச் சீறடி

யாள்வெருவக்
கைம்மா வரிசிலைக் காமனை யட்ட
கடவுண்முக்கண்
எம்மா னிவனென் றிருவரு மேத்த
வெரிநிமிர்ந்த
அம்மா னடிநிழற் கீழதன் றோவென்ற
னாருயிரே. **#811**

படம் எடுக்கும் மேம்பட்ட பாம்பினை ஒத்த அல்குலைஉடையவளாய்ச் சிறிய பாதங்களை உடையளான பார்வதி அஞ்சக் கையிலே மேம்பட்ட கட்டமைந்த வில்லை ஏந்திய மன்மதனை அழித்த தெய்வமாகிய முக்கண்ணனாம் எம்பெருமான் என்று பிரமனும் திருமானும் புகழும்படி தீத்தம்பமாக ஓங்கி வளர்ந்த தலைவனாகிய சிவபெருமானுடைய அடி நிழல் கீழதல்லவோ எனதாருயிர்.

<u>ஆருயிர்த் - திருவிருத்தம்</u>

பழகவொ ரூர்தியரன் பைங்கட் பாரிடம்
பாணிசெய்யக்
குழலு முழவொடு மாநட மாடி
யுயரிலங்கைக்
கிழவ னிருபது தோளு மொருவிர
லாலிறுத்த
அழக னடிநிழற் கீழதன் றோவென்ற
னாருயிரே. **#812**

ஊர்ந்து செலுத்தக் காளையை வாகனமாக உடையவனாய், தீயவர்களை அழிப்பவனாய், பூதங்கள் தாளம் போடக் குழலும் முழவும் ஒலிக்க மேம்பட்ட கூத்து நிகழ்த்துபவனாய், மேம்பட்ட இலங்கை அரசனாகிய இராவணனுடைய இருபது தோள்களையும் தன் திருவடியின் ஒருவிரலால் நெரித்த அழகனாகிய சிவபெருமானுடைய அடிநிழலின் கீழல்லவோ அடியேனடைய அரிய உயிர் பாதுகாவலாக உள்ளது.

திருச்சோற்றுத்துறை

திருச்சோற்றுத்துறை

திருச்சோற்றுத்துறை, திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தொலையாச்செல்வர்.
தேவியார் : ஒப்பிலாம்பிகை.

காலை யெழுந்து கடிமலர் தூயன
தாங்கொணர்ந்து
மேலை யமரர் விரும்பு மிடம்விரை
யான்மலிந்த
சோலை மணங்கமழ் சோற்றுத் துறையுறை
வார்சடைமேல்
மாலை மதியமன் றோவெம் பிரானுக்
கழகியதே. **#813**

காலையிலே எழுந்து நறுமணம் கமழும் தூய மலர்களைக் கொண்டு வந்து வானத்திலுள்ள தேவர்கள் விரும்பும் திருத்தலம், நறுமண மலர்களால் வாசனை எங்கும் வீசும் சோலைகளைஉடைய திருச்சோற்றுத்துறையாம். அங்கு உகந்தருளியிருக்கும் சிவ பெருமானுடைய நீண்ட சடையில் வீற்றிருக்கும் பிறைச் சந்திரன் அல்லவோ எம்பெருமானுக்கு அழகிய அணிகலனாய் வாய்த்திருக்கின்றது.

திருச்சோற்றுத்துறை

வண்டணை கொன்றையும் வன்னியு மத்தமும்
வாளரவும்
கொண்டணைந் தேறு முடியுடை யான்குரை
சேர்கழற்கே
தொண்டணைந் தாடிய சோற்றுத் துறையுறை
வார்சடைமேல்
வெண்டலை மாலையன் றோவெம் பிரானுக்
கழகியதே. **#814**

தொண்டர்கள் ,வண்டுகள் தங்கும் கொன்றை, வன்னி, ஊமத்தை, ஒளிபொருந்திய பாம்பு இவைகள் வந்து பொருந்தித் தங்கும் சடையையுடைய பெருமான் திருவடிக்கண் தொண்டர்கள் வந்து பொருந்தி, பேரின்பக் கடலாடித் திளைக்கும் திருச்சோற்றுத்துறை எம்பெருமானுடைய சடையின்மேல் காட்சி வழங்கும் வெள்ளிய

தலைமாலை அல்லவோ அவருக்கு அழகான அணிகலனாக வாய்த்திருக்கிறது.

திருச்சோற்றுத்துறை

அளக்கு நெறியின னன்பர்க டம்மனத்
தாய்ந்துகொள்வான்
விளக்கு மடியவர் மேல்வினை தீர்த்திடும்
விண்ணவர்கோன்
துளக்குங் குழையணி சோற்றுத் துறையுறை
வார்சடைமேல்
திளைக்கு மதியமன் றோவெம் பிரானுக்
கழகியதே. **#815**

எல்லோருடைய உள்ளப் பண்பையும் அளந்தறியும் முறைமை உடையவராய் ,அடியவர்களுடைய மனத்தை உள்ளவாறு ஆராய்ந்து அறிந்து அவர்களை அடிமை கொள்பவராய், தம்முடைய திருவடிப் பெருமையை உலகம் அறியச் செயற்படும் அடியவர்களுடையபழைய வினைகளையும் புதியவினைகளையும் தீர்த்தருளும், தேவர்தலைவராய், ஒளிவீசும் காதணியை அணிந்திருக்கும் திருச்சோற்றுத்துறை எம் பெருமானுடைய சடை மேல் இருந்து மகிழ்ச்சியில் திளைக்கின்ற பிறைச்சந்திரன் அல்லவோ அப்பெருமானுக்கு அழகிய அணிகலனாக வாய்த்துள்ளது.

திருச்சோற்றுத்துறை

ஆய்ந்தகை வாளர வத்தொடு மால்விடை
யேறியெங்கும்
பேர்ந்தகை மானிட மாடுவர் பின்னு
சடையிடையே
சேர்ந்தகைம் மாமலர் துன்னிய சோற்றுத்
துறையுறைவார்
ஏந்துகைச் சூல மழுவெம் பிரானுக்
கழகியதே. **#816**

கையிலே ஒளிபொருந்திய பாம்பினை ஆராய்ந்து எடுத்துக்கொண்டு, திருமாலாகிய காளையின்மீது இவர்ந்து, எல்லா விடத்தும் மானை ஏந்திய கையினை வீசிக்கொண்டு கூத்து நிகழ்த்துபவராய், ஒன்றோடொன்று பிணைந்த சடைகளிடையே அடியார்கள் தம் கைகளால் அர்ப்பணித்த பூக்கள் தங்கும் சடைமுடியை உடைய சிவபெருமான் கையில்ஏந்திய சூலம் மழு என்ற படைக் கருவிகள் அவருக்கு அழகிய அணிகலன்கள் ஆக அமைந்துள்ளன.

திருச்சோற்றுத்துறை

கூற்றைக் கடந்ததுங் கோளர வார்த்ததுங்
கோளுழுவை
நீற்றிற் றுதைந்து திரியும் பரிசதும்
நாமறியோம்
ஆற்றிற் கிடந்தங் கலைப்ப வலைப்புண்
டசைந்ததொக்கும்
சோற்றுத் துறையுறை வார்சடை மேலதொர்
தூமதியே. **#817**

திருச்சோற்றுத்துறையில் உகந்தருளும் பெருமான் கூற்றுவனை அழித்த செயலும் கொடிய புலித்தோல் ஆடையின் மேல் பாம்பினை இறுகக்கட்டித் திருநீற்றை முழுமையாக அணிந்து, சோற்றுத்துறைப் பெருமானது நீண்ட சடைமேல் விளங்கும் ஒப்பற்ற சந்திரன் அங்குள்ள கங்கையாற்றின் கரையிலே கிடந்து அவ்வாற்றின் அலை அலைக்கும்தோறும் தானலைந்தவாறிருக்கும் அழகையே நாம் அறிவோம்.

திருச்சோற்றுத்துறை

வல்லாடி நின்று வலிபேசுவார்கோளர்
வல்லசுரர்
கொல்லாடி நின்று குமைக்கிலும்வானவர்
வந்திறைஞ்சச்
சொல்லாடி நின்று பயில்கின்றசோற்றுத்
துறையுறைவார்
வில்லாடி நின்ற நிலையெம்பிரானுக்
கழகியதே. **#818**

தங்கள் வலிமையை மிகுத்துக் காட்டிக்கொண்டு நின்று கொல்லப் போவதாகப் பயமுறுத்தும் கொலைஞர்களாய அசுரர்கள் அங்ஙனம் துன்புறுத்தி வருத்தினாலும் அதனைப் பொருட்படுத்தாது தேவர் வந்து வணங்க, அவர்களோடு உரையாடிப் பயில்கின்ற சோற்றுத்துறைப் பெருமான் தமது கைவில்லைத் தொழிற்படுத்தி நிற்கும் நிலை அவர்க்கு அழகிதாகும்.

திருச்சோற்றுத்துறை

ஆய முடையது நாமறி யோம்அர
ணத்தவரைக்
காயக் கணைசிலை வாங்கியு மெய்துந்

துயக்கறுத்தான்
தூயவெண் ணீற்றினன் சோற்றுத் துறையுறை
வார்சடைமேல்
பாயும்வெண் ணீர்த்திரைக் கங்கையெம் மானுக்
கழகியதே. **#819**

எம் பெருமான் முப்புரங்களை அழிக்க முற்பட்ட காலத்தில் அவருக்குச் சேனைத்திரள் இல்லையோ உண்டோ என்பதனைநாம் அறியோம். முப்புர அசுரர்களைக் கோபித்து வலிய வில்லை வளைத்தும் அன்பு எய்தும் அவர்களை அழித்துத் தேவர்களுடைய சோர்வைப் போக்கிய திருநீறு அணிந்த மேனியராகிய திருச்சோற்றுத்துறைப் பெருமானுடைய நீண்ட சடைமுடியின்மேற் பரவும் வெண்ணிற அலைகளைஉடைய கங்கை எம்பெருமானுக்கு அழகிதாகும்.

<u>திருச்சோற்றுத்துறை</u>

அண்ட ரமரர் கடைந்தெழுந் தோடிய
நஞ்சதனை
உண்டு மதனை யொடுக்கவல் லான்மிக்க
வும்பர்கள்கோன்
தொண்டு பயில்கின்ற சோற்றுத் துறையுறை
வார்சடைமேல்
இண்டை மதியமன் றோவெம் பிரானுக்
கழகியதே. **#820**

பகைவரான அசுரரும் தேவரும் பாற்கடலைக் கடைந்தபோது எழுந்து பரவிய விடத்தை உண்டு அதனைக் கழுத்திலே இருத்தவல்ல தேவர் தலைவராய், மேலான இந்திரனும் திருத்தொண்டில்ஈடுபட்டுப் பயில்கின்ற திருச்சோற்றுத்துறைப் பெருமானுடைய முடிமாலை போல விளங்கும் பிறைச்சந்திரன் அல்லவோ அவருக்கு அழகிதாகும்.

<u>திருச்சோற்றுத்துறை</u>

கடன்மணி வண்ணன்கருதியநான்முகன்
றானறியா
விடமணி கண்ட முடையவன் றானெனை
யாளுடையான்
சுடரணிந் தாடிய சோற்றுத் துறையுறை
வார்சடைமேல
படமணி நாகமன் றோவெம் பிரானுக்
கழகியதே. **#821**

பாற்கடலில் அறிதுயில் கொள்ளும் நீலமணி நிறத்தினனாகிய

திருமாலும் பிரமனும் அறியாத நீலகண்டராய், எம்மை அடிமைகளாகக் கொள்பவராய்ச் சூரியன் ஒளி தம் திருமேனியில் பரவுமாறு கூத்து நிகழ்த்தும் திருச்சோற்றுத்துறை பெருமானுடைய சடைமீது இரத்தினமுள்ள படமுடையதாய்த் தங்கியிருக்கும், பாம்பு அல்லவோ அவருக்கு அழகிதாகும்.

திருச்சோற்றுத்துறை

இலங்கைக் கிறைவ னிருபது தோளு
முடிநெரியக்
கலங்க விரலினா லூன்றி யவனைக்
கருத்தழித்த
துலங்கன் மழுவினன் சோற்றுத்து றையுறை
வார்சடைமேல்
இலங்குமதியமன் றோவெம்பிரானுக்
கழகியதே. **#822**

இராவணனுடைய இருபது தோள்களும் தலைகளும் நெரியுமாறும் அவன் மனம்கலங்குமாறும் கால்விரலை ஊன்றி அவன் மனமதர்ப்பை அழித்த, ஒளி வீசும் மழுவை ஏந்திய திருச்சோற்றுத்துறைப் பெருமானுடைய நீண்ட சடைமேல் விளங்கும் பிறைச்சந்திரன் அல்லவோ அவருக்கு அழகிதாகும்.

திருவொற்றியூர்

திருவொற்றியூர்

திருவொற்றியூர், திருவிருத்தம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாணிக்கத்தியாகர்.
தேவியார் : வடிவுடையம்மை.

செற்றுக் களிற்றுரி கொள்கின்ற ஞான்றுசெருவெண்
கொம்பொன்
றிற்றுக் கிடந்தது போலு மிளம்பிறை
பாம்பதனைச்
சுற்றிக் கிடந்தது கிம்புரி போலச்
சுடரிமைக்கும்
நெற்றிக்கண் மற்றதன் முத்தொக்கு மாலொற்றி
யூரனுக்கே. **#823**

யானயைக் கொன்று அதன் தோலைப் போர்வைக்காகக் கொண்ட காலத்தில் போரிடுகின்ற அதனுடைய வெண்மையான தந்தம் ஒன்று ஒடிந்து கிடந்ததுபோல அமைகின்றது. அதனைச் சுற்றிப் பாம்பு கிடத்தல் தந்தத்துக்கிடுங் கிம்புரிப் பூண் போலாகிறது. திருநுதலில் உள்ள நெற்றிக்கண்அத்தந்தத்திலிருந்து தெறித்த முத்தினை யொப்பதாகின்றது திருவொற்றியூர்ப் பெருமானிடத்து.

திருவொற்றியூர்

சொல்லக் கருதிய தொன்றுண்டு கேட்கிற்றொண்
டாயடைந்தார்
அல்லற் படக்கண்டு பின்னென் கொடுத்தி
யலைகொண்முந்நீர்
மல்லற் றிரைச்சங்க நித்திலங் கொண்டுவம்
பக்கரைக்கே
ஒல்லைத் திரைகொணர்ந் தெற்றொற்றி யூருறை
யுத்தமனே. **#824**

கடலின் வளமான அலைகள் சங்குகளிலுள்ள முத்துக்களைக் கொண்டு மணம் வீசும் கரைகளிலே ஒதுக்கிச் சேர்க்கும் ஒற்றியூரில் உகந்தருளியிருக்கும் உத்தமனே! நீ கேட்பதற்குத் திருச்செவிசார்த்துவாயாகில் அடியேன் கூற நினைக்கும் செய்தி ஒன்று உளது. அஃதாவது உனக்கு அடிமைகளாய் வந்து சேர்ந்த அடியவர்கள் துன்பப்படுவதைப் பார்த்துக் கொண்டே வாளா இருக்கும் நீ

இப்பொழுது அவர் துன்பத்தைத் தீர்க்காமல் எதிர் காலத்தில் அவர்களுக்கு யாதுவழங்கத் திருவுள்ளம் பற்றியுள்ளாய்?

திருவொற்றியூர்

பரவை வருதிரை நீர்க்கங்கை பாய்ந்துக்க
பல்சடைமேல்
அரவ மணிதரு கொன்றை யிளந்திங்கள்
சூடியதோர்
குரவ நறுமலர் கோங்க மணிந்து
குலாயசென்னி
உரவு திரைகொணர்ந் தெற்றொற்றி யூருறை
யுத்தமனே. **#825**

பரந்து வருகின்ற அலைகளை உடைய கங்கை நீர் பாய்ந்து சிதறும்படிக்கான வன்மையதாயப் பலவாக உள்ள சடைத் தொகுதி மீது பாம்போடு பிறையையும் கொன்றை குரவம் கோங்கம் ஆகியவற்றின் நறுமலர்களையும் அணிந்து விளங்கும் திருமுடியினனாய்க் கடல் அலைகள் கடல்படு பொருள்களை மோதிக் கொண்டு வந்து கரையில் சேர்க்கின்ற திருஒற்றியூரில் வீற்றிருக்கும் உத்தமனே!

திருவொற்றியூர்

தானகங் காடரங் காக வுடையது
தன்னடைந்தார்
ஊனக நாறு முடைதலை யிற்பலி
கொள்வதுந்தான்
தேனக நாறுந் திருவொற்றி யூருறை
வாரவர்தாம்
தானக மேவந்து போனகம் வேண்டி
யுழிதர்வரே. **#826**

உள்ளிடமெல்லாந் தேன்மணங் கமழுந் திருவொற்றியூரில் உறையும் பெருமான் தான் ஆடரங்காகக் கொள்வதும் காடு. தன்னை அடைந்தார் இடும் பலியை ஏற்பதும் உள்ளூரத் தசையின் முடை நாற்றம் வீசும் தலையோட்டில். அவர் தானாகவே வீடு வீடாக வந்து உணவு வேண்டித் திரிபவரும் ஆவார்.

திருவொற்றியூர்

வேலைக் கடனஞ்ச முண்டுவெள் ளேற்றொடும்
வீற்றிருந்த
மாலைச் சடையார்க் குறைவிட மாவது

வாரிகுன்ற
ஆலைக் கரும்பொடு செந்நெற் கழனி
யருகணைந்த
சோலைத் திருவொற்றி யூரையெப் போதுந்
தொழுமின்களே. **#827**

கடலிற் தோன்றிய நஞ்சை உண்டு இருண்ட கண்டத்துடன்வெள்ளை இடபத்தை ஊர்ந்தருளும், அந்தி செவ்வானம் போன்ற சடையினரான சிவபெருமானுக்கு உறைவிடமாவது வருவாய் குறையாத (ஆலைக்) கரும்புகளோடு செந்நெல்லும் மிகும் வயல்களைச் சூழ்ந்து சோலைகள் விளங்கப்பெறுவதுமான திருவொற்றியூர். அதனை எப்பொழுதுமே தொழுமின்கள்.

திருவொற்றியூர்

புற்றினில் வாழு மரவுக்குந் திங்கட்குங்
கங்கையென்னும்
சிற்றிடை யாட்குஞ் செறிதரு கண்ணிக்குஞ்
சேர்விடமாம்
பெற்றுடை யான்பெரும் பேச்சுடை யான்பிரி
யாதெனையாள்
விற்றுடை யானொற்றி யூருடை யான்றன்
விரிசடையே. **#828**

இடப வாகனத்தை உடையவனாய், தன்னைப் பற்றிச்சான்றோர்கள் பேசும் பொருள்சேர் புகழுரை தாங்குபவனாய் ,என்னைத் தன் விருப்பப்படி விற்பதற்கும் உரிமை உடைய அடியவனாகக் கொண்டவனாய் ஒற்றியூரை உறைவிடமாக உடைய சிவபெருமானுடைய விரிந்த சடை, புற்றில் வாழும் பாம்புக்கும், பிறைச் சந்திரனுக்கும், கங்கை என்ற பெயரை உடைய, சிறிய இடுப்பை உடைய நங்கைக்கும், ஒற்றைப் பூந்தொடையாகிய முடிமாலைக்கும் இருப்பிடமாகும்.

திருவொற்றியூர்

இன்றரைக் கண்ணுடை யாரெங்கு மில்லை
யிமயமென்னும்
குன்றரைக் கண்ணன் குலமகட் பாவைக்குக்
கூறிட்டநா
ளன்றரைக் கண்ணுங் கொடுத்துமை யாளையும்
பாகம்வைத்த
ஒன்றரைக் கண்ணன்கண் டீரொற்றி யூருறை

யுத்தமனே. **#829**

இவ்வுலகில் முழுக்கண் உடையவர்களே காணப்படுகின்றனரே யன்றி அரைக்கண் உடையவர் ஒருவரும் இரார். ஆனால், இமவான் என்று போற்றப்படும் மலைத் தலைவனுக்கு வளர்ப்புமகளாகக் கிட்டிய நல்ல மேன்மையை உடைய பார்வதிக்கு உடம்பைச் செம்பாதியாகப் பங்கிட்டுக் கொடுத்த காலத்திலே தன் முக்கண்களில் செம்பாதியான ஒன்றரைக் கண்கள் அவளுக்காயினதால். மீதியுள்ள ஒன்றரைக் கண்ணனாகவேயுள்ளார் திருவொற்றியூரில் உறையும் உத்தமனாம் எம்பெருமான்.

திருவொற்றியூர்

சுற்றிவண் டியாழ்செயுஞ் சோலையுங் காவுந்
துதைந்திலங்கு
பெற்றிகண் டான்மற்றி யாவருங் கொள்வர்
பிறரிடைநீ
ஒற்றிகொண் டாயொற்றி யூரையுங் கைவிட்
டுறுமென்றெண்ணி
விற்றிகண் டாய்மற் றிதுவொப்ப தில்லிடம்
வேதியனே. **#830**

வேதத்தால் பரம் பொருள் என்று போற்றப்படும் ஒற்றியூர்ப் பெருமானே! வண்டுகள் எப்பொழுதும் சுற்றிக்கொண்டு யாழ் போல ஒலிக்கும் பூஞ்சோலைகளும் பெருமரச்சோலைகளும் செறிந்து விளங்கும் உன் ஒற்றியூரின் சிறப்பினை நோக்கினால் அதனை யாவரும் விலைகொடுத்து வாங்கிக் கொள்வர். அது கருதி நீ ஒற்றியாகப் பெற்று அனுபவிக்கும் இவ்வொற்றியூரையும் பிறரிடம் விற்று அதனைக் கைவிட எண்ணுதியேல் அது ஏற்புடையதன்று. இதனை ஒத்த சிறப்பான இருப்பிடம் பிறிது யாதுமில்லை என்பதனைத் தெரிந்து கொள்வாயாக.

திருவொற்றியூர்

சுற்றிக் கிடந்தொற்றி யூரனென் சிந்தை
பிரிவறியான்
ஒற்றித் திரிதந்து நீயென்ன செய்தி
யுலகமெல்லாம்
பற்றித் திரிதந்து பல்லொடு நாமென்று
கண்குழித்துத்
தெற்றித் திருப்பதல் லாலென்ன செய்யுமித்
தீவினையே. **#831**

என் தீவினையே! திருவொற்றியூர்ப் பெருமான் என்றும் பிரியாது என்

உள்ளத்தைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டுள்ளான். அவ்வாறாக, நீ என்னை, அடியொற்றித் திரிந்து கொண்டிருப்பதால் நீ சாதிக்கப் போவதென்ன? நான் செல்லிடமெல்லாம் அடியொற்றித் திரிந்து தனக்கு வேட்டை வாய்க்காமையால் ஆத்திரமுற்று பல்லையும் நாவையும் மென்று கொண்டு சோக மிகுதியாற் கண் குழிந்து கால் தெற்றித் தானேசோர்ந்திருப்பதைவிட இத்தீவினையால் எனக்கெதிர் எதுவும் நேர்தற்கிடமின்றாம்.

திருவொற்றியூர்

அங்கட் கடுக்கைக்கு முல்லைப் புறவ
முறுவல்செய்யும்
பைங்கட் டலைக்குச் சுடலைக் களரி
பருமணிசேர்
கங்கைக்கு வேலை யரவுக்குப் புற்றுக்
கலைநிரம்பாத்
திங்கட்கு வானந் திருவொற்றி யூரர்
திருமுடியே. **#832**

திருவொற்றியூர்ப் பெருமான் திருமுடியானது அழகிய தேனை உடைய கொன்றை மலருக்கு, முல்லை நிலக்காடு ஆகவும் (உத்தமமான ஆடவர் உடலில் இயல்பாகவே முல்லைப் பூவின் மணம் கமழும். குறுந்தொகை - 193) சிரிக்கும் தலைமாலையாயிருந்து சிரிக்குங் கபாலங்களுக்குச் சுடுகாடாகவும், பருத்த இரத்தினக் கற்களை அலைத்து வரும் கங்கைக்கு அது சென்று சேரும் கடலாகவும், பாம்புக்கு அதன் உறைவிடமான புற்றாகவும், பிறைக்கு அஃது உலவும் வானமாகவும் உள்ளதாகும்.

திருவொற்றியூர்

தருக்கின வாளரக் கன்முடி பத்திறப்
பாதந்தன்னால்
ஒருக்கின வாறடி யேனைப் பிறப்பறுத்
தாளவல்லான்
நெருக்கின வானவர் தானவர் கூடிக்
கடைந்தநஞ்சைப்
பருக்கினவா றென்செய்கே னொற்றி யூருறை
பண்டங்கனே. **#833**

ஒற்றியூரிலே உறைகின்ற பண்டரங்கக் கூத்தனான பெருமான் செருக்குக் கொண்ட இராவணனுடைய பத்துத் தலைகளும் நெரியுமாறு கால்விரலால் நெரித்தொடுக்கினது போலவே அடியேனுடைய பிறப்பையும் போக்கி அடியேனை அடிமையாகக் கொள்ளவல்லவன்.

நெருங்கி நின்ற தேவர்களும் அசுரர்களும் கூடிப் பாற்கடலைக் கடைந்தபோது எழுந்த நஞ்சினை அவனையே பருகுமாறு செய்த வினை இருந்தவாறென்? ஆ! என் செய்கேன் நான்!

திருப்பழனம்

திருப்பழனம்

திருப்பழனம், திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஆபத்சகாயர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

மேவித்து நின்று விளைந்தன வெந்துயர்
துக்கமெல்லாம்
ஆவித்து நின்று கழிந்தன வல்ல
லவையறுப்பான்
பாவித்த பாவனை நீயறி வாய்பழ
னத்தரசே
கூவித்துக் கொள்ளுந்தனையடி யேனைக்
குறிக்கொள்வதே. **#834**

திருப்பழனத்தில் உகந்தருளியிருக்கும் அரசே! அடியேன் வாழ்க்கையில் தீவினையில் விளைவுகளாகிய துக்கங்கள் எல்லாம் கொடிய துயரத்தை அடையச் செய்து என்னை மேவி நிற்கின்றன. அவை தம் செயலில் சோர்ந்து கொட்டாவிவிட்டு அடியேனை விடுத்து நீங்கின அல்ல. அடியேன் அவற்றைப் போக்கச் சிவோகம் பாவனையில் இருக்கும் செய்தியைநீ அறிவாய். அடியேனை உன் அடிமைத் தொழிலில்கூவுவித்துக் கொள்ளுவதை உன் குறிக்கோளாகக் கொள்வாயாக.

திருப்பழனம்

சுற்றிநின் றார்புறங் காவ லமரர்
கடைத்தலையில்
மற்றுநின் றார்திரு மாலொடு நான்முகன்
வந்தடிக்கீழ்ப்
பற்றிநின் றார்பழ னத்தர சேயுன்
பணியறிவான்
உற்றுநின் றாரடி யேனைக் குறிக்கொண்
டருளுவதே. **#835**

பழனத்து அரசே! எண் திசைகளையும் காக்கும் தேவர்கள் உன்னைச்சுற்றி நிற்கின்றனர். நின் திருக்கோயில் வாயிலில் மற்றுமுள்ள தேவர்கள் நிற்கின்றனர். திருமாலும் பிரமனும் வந்து உன் திருவடிக் கீழ்ப்பொருந்தி நின்று நீ இடும் கட்டளை யாது என்பதனை அறிய

ஈடுபாட்டோடு நிற்கின்றனர். இங்ஙனம் தேவர்கள் வழிபடக் காத்துக் கிடக்க வைக்கும் இயல்பினனாகிய நீ, அடியேனை உன் உள்ளத்தில் குறித்துக்கொண்டு அருள் செய்வாயாக.

திருப்பழனம்

ஆடிநின் றாயண்ட மேழுங் கடந்துபோய்
மேலவையும்
கூடிநின் றாய்குவி மென்முலை யாளையுங்
கொண்டுடனே
பாடிநின் றாய்பழ னத்தர சேயங்கொர்
பான்மதியம்
சூடிநின் றாயடி யேனையஞ் சாமைக்
குறிக்கொள்வதே. **#836**

பழனத்து அரசே! நீ மேல் உலகங்கள் ஏழனையும் கடந்து அதற்கு மேலும் உயர்ந்து கூத்து நிகழ்த்தி நின்றாய். எல்லா உயிரோடும் பொருந்தியிருக்கின்றாய். குவிந்த மெல்லிய முலைகளை உடைய பார்வதியையும் உடன் கொண்டு பால் போன்ற வெண்பிறை சூடிப் பாடிக் கொண்டு நிற்கும் நீ அடியேனையும் பிறவித் துயர்கருதி அஞ்சாதபடி ஆட்கொள்ளவேண்டுவதனை உன் திருவுள்ளத்துக் கொள்வாயாக.

திருப்பழனம்

எரித்துவிட் டாயம்பி னாற்புர மூன்றுமுன்
னேபடவும்
உரித்துவிட் டாயுமை யாண்டுக் கெய்தவொர்
குஞ்சரத்தைப்
பரித்துவிட் டாய்பழனத் தர சேகங்கை
வார்சடைமேல்
தரித்துவிட் டாயடி யேனைக் குறிக்கொண்
டருளுவதே. **#837**

பழனத்து அரசே! அம்பினால் மும்மதில்கள் முன்னொரு காலத்தில் அழியுமாறு எரியச் செய்து விட்டாய். பார்வதி நடுங்குமாறு ஓர் யானையைக் கொன்று அதன் தோலை உரித்துப் போர்வையாக அணிந்து விட்டாய். நீண்ட சடையின் மீது கங்கையைப் பொறத்துத் தாங்கியுள்ளாய். அடியேனை உள்ளத்துக்கொண்டு அருள் செய்வாயாக.

திருப்பழனம்

முன்னியு முன்னி முளைத்தன மூவெயி

லும்முடனே
மன்னியு மங்கு மிருந்தனை மாய
மனத்தவர்கள்
பன்னிய நூலின் பரிசறி வாய்பழ
முன்னியுமுன்னடி யேனைக் குறிக்கொண்
டருளுவதே. **#838**

பழனத்து அரசே! மும்மதிலிலுள்ள அரக்கர்களும்எதிர்ப்பட்டு உள்ளத்துக் கருதி உன்னொடு போராடநீ அங்கும் நிலை பெற்று இருந்து அவர்களை அழித்தாய்.வஞ்சமனத்தவராகிய புறச் சமயப் புறப்புறச்சமயத்தவர்கள் இயற்றிவைத்துள்ள நூல்களின் பொருளியல்பையும்நீ அறிவாய். நீ பல செய்திகளை நினைத்துக்கொண்டிருக்கும் நேரத்திலும் அடியேனை உன் உள்ளத்தில்குறித்துக் கொண்டு அருளுவாயாக.

திருப்பழனம்

ஏய்ந்தறுத் தாயின்பனாயிருந் தேபடைத்
தான்றலையைக்
காய்ந்தறுத் தாய்கண்ணினாலன்று காமனைக்
காலனையும்
பாய்ந்தறுத் தாய்பழ னத்தரசேயென்
பழவினைநோய்
ஆய்ந்தறுத் தாயடி யேனைக்குறிக்கொண்
டருளுவதே. **#839**

பழனத்து அரசே! நீ எல்லோருக்கும்இன்பத்தை நல்குபவனாய் இருந்தும் பிரமன் தலையைமனம் பொருந்தி நீக்கினாய். மன்மதனைப் பார்வதியின்திருமணத்தின் முன்பு வெகுண்டு அழித்தாய். கூற்றுவனையும்காலால் உதைத்து அழித்தாய். அடியேனுடைய பழைய வினைகளின்பயனாகிய துன்பத்தை நுணுகுமாறு அழித்து அடியேனைக்குறிக்கொண்டு அருளுவாயாக.

திருப்பழனம்

மற்றுவைத் தாயங்கொர் மாலொரு பாக
மகிழ்ந்துடனே
உற்றுவைத் தாயுமை யாளொடுங் கூடும்
பரிசெனவே
பற்றிவைத் தாய்பழ னத்தர சேயங்கொர்
பாம்பொருகை
சுற்றிவைத் தாயடி யேனைக் குறிக்கொண்
டருளுவதே. **#840**

பழனத்து அரசே! ஒப்பற்ற திருமாலை மகிழ்வோடு உன் திருமேனியின் ஒரு பாகமாக வைத்து, பார்வதிக்குத் திருமேனியின் ஒரு பாகத்தைக் கொடுத்து அவளோடு கூடியிருப்பது போலவே திருமாலொடும் பொருந்தியுள்ளாய். ஒரு பாம்பைப் பிடித்து அஃது ஒருகையைச் சுற்றிக் கொண்டிருக்குமாறு செய்துள்ளாய். அடியேனையும் குறிக்கொண்டு அருளுவாயாக.

திருப்பழனம்

ஊரினின் றாயொன்றி நின்றுவிண் டாரையு
மொள்ளழலால்
போரினின் றாய்பொறை யாயுயி ராவி
சுமந்துகொண்டு.
பாரினின் றாய்பழ னத்தர சேபணி
செய்பவர்கட்
காரநின் றாயடி யேனைக் குறிக்கொண்
டருளுவதே. **#841**

கயிலைமலையில் உள்ளம் பொருந்தி உறைகின்றாய். அத்தகைய பழனத்து அரசே! கொடிய தீயினாலே பகைவர் களை அழிப்பதற்குப் போரில் ஈடுபட்டாய். உயிர்களைப் பாரமாகச் சுமந்து கொண்டு உயிர்களுக்கு உயிராக இருக்கின்றாய். உனக்குத் தொண்டு செய்யும் அடியவர்கள் மனநிறைவு அடையுமாறு திருக்கோயில்களில் நிலையாக இருக்கும் நீ அடியேனையும் குறிக்கொண்டு அருளுவாயாக.

திருப்பழனம்

போகம்வைத் தாய்புரி புன்சடை மேலொர்
புனலதனை
யாகம்வைத் தாய்மலை யான்மட மங்கை
மகிழ்ந்துடனே
பாகம்வைத் தாய்பழ னத்தர சேயுன்
பணியருளால்
ஆகம்வைத் தாயடி யேனைக் குறிக்கொண்
டருளுவதே. **#842**

பழனத்து அரசே! முறுக்கேறிய சிவந்த சடையின் மீது கங்கையை உனக்குப் போகசக்தியாக வைத்துள்ளாய். உன் மார்பில் வைத்திருந்த பார்வதியை மகிழ்ந்து உன் திருமேனியில் ஒருபாகமாகக் கொண்டு விட்டாய். அருளினாலே, உனக்குத் தொண்டு செய்வதற்கே அடியேனுடைய உடம்பை அமைத்துள்ள நீ அடியேனைக் குறிக்கொண்டு (இனிப் பிறவித் துயர் அடியேற்கு நேராதவாறு)

அருளுவாயாக.

திருப்பழனம்

அடுத்திருந் தாயரக் கன்முடி வாயொடு
தோணெரியக்
கெடுத்திருந் தாய்கிளர்ந் தார்வலி யைக்கிளை
யோடுடனே
படுத்திருந் தாய்பழ னத்தர சேபுலி
யின்னுரிதோல்
உடுத்திருந் தாயடி யேனைக் குறிக்கொண்
டருளுவதே. **#843**

பழனத்து அரசே! இராவணன் கயிலையைப் பெயர்க்கத் தொடங்கும் வரையில் அருகிலேயே இருந்து அவன் செயற்பட்ட அளவில் அவனுடைய முடிகள் வாய் கண் தோள்கள் என்பன நெரிந்து சிதறுமாறு கால்விரலால் அழுத்தி அவன் செருக்கைக் கெடுத்தாய். செருக்குற்று எழுந்தவருடைய வலிமையை அவர்களைச் சேர்ந்தவர்களுடைய வலிமையோடும் கெடுத்தாய். புலித்தோலை ஆடையாக உடுத்துள்ளாய். அத்தகைய நீ அடியேனையும் குறித்து மனத்துக் கொண்டு அருளுவாயாக.

திருப்பூந்துருத்தி

திருப்பூந்துருத்தி

திருப்பூந்துருத்தி, திருவிருத்தம்இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : புஷ்பவனநாதர்.
தேவியார் : அழகாலமர்ந்தநாயகி.

மாலினை மாலுற நின்றான் மலைமக
டன்னுடைய
பாலனைப் பான்மதி சூடியைப் பண்புண
ரார்மதின்மேல்
போலனைப் போர்விடை யேறியைப் பூந்துருத்
திம்மகிழும்
ஆலனை யாதிபு ராணனை நாமடி
போற்றுவதே. #844

திருமாலுக்கு அடியைக் காணமுடியாத மயக்கம் ஏற்படும்படி தீத்தம்பமாக நின்றவனாய், பார்வதி பாகனாய், வெள்ளிய பிறை சூடியாய், பிறருக்குத் தீங்கு செய்தல் கூடாது என்ற பண்பினை உணராத திரிபுர அசுரர்களின் மதில்களை வெற்றி கொண்டு அழித்தவனாய், போரிடும் காளையை ஊர்பவனாய்ப் பூந்துருத்தியுள் உறைபவனாய், கல்லாலமரத்தின் கீழ் அமர்ந்திருக்கும் தொன் மூதாளனுடைய திருவடிகளை நாம் வணங்குகிறோம்.

திருப்பூந்துருத்தி

மறியுடை யான்மழு வாளினன் மாமலை
மங்கையொர்பால்
குறியுடை யான்குண மொன்றறிந் தாரில்லை
கூறிலவன்
பொறியுடை வாளர வத்தவன் பூந்துருத்
தியுறையும்
அறிவுடை யாதிபு ராணனை நாமடி
போற்றுவதே. #845

மான் கன்று, மழுப்படை எனும் இவற்றை ஏந்திப் பார்வதி பாகனாய், தன் பண்புகளைப் பிறர் உள்ளவாறு அறிய இயலாதவனாய்ப் புள்ளிகளை உடைய ஒளிபொருந்திய பாம்பினை அணிபவன் என்று எல்லோராலும் கூறப்படுபவனாய்ப் பூந்துருத்தியுள் உகந்தருளியிருக்கும் ஞானவடிவினனாகிய தொன் மூதாளனை நாம் திருவடிக்கண் பணிந்து வணங்குகிறோம்.

திருப்பூந்துருத்தி

மறுத்தவர் மும்மதின் மாயவொர் வெஞ்சிலை
கோத்தொரம்பால்
அறுத்தனை யாலதன் கீழனை யால்விட
முண்டதனைப்
பொறுத்தனைப் பூதப் படையனைப் பூந்துருத்
தியுறையும்
நிறத்தனை நீல மிடற்றனை யானடி
போற்றுவதே. **#846**

தெய்வ நம்பிக்கை கொள்ள மறுத்த அசுரர்களின் மும்மதில்களும் அழியுமாறு ஒருகொடிய சிலையில் ஓர் அம்பினைக் கோத்து அழித்தவனாய், கல்லால மரத்தடியில் அமர்ந்தவனாய், ஆல காலவிடத்தை உண்டு, அதனைக் கழுத்தில் தங்க வைத்தவனாய், பூதப்படை உடையவனாய், பூந்துருத்தியில் உகந்தருளியிருக்கும் செந்நிறத்து நீலகண்டனாகிய பெருமானை அடியேன் திருவடிக்கண் பணிந்து வணங்குகின்றேன்.

திருப்பூந்துருத்தி

உருவினை யூழி முதல்வனை யோதி
நிறைந்து நின்ற
திருவினைத் தேசம் படைத்தனைச் சென்றடைந்
தேனுடைய
பொருவினை யெல்லாந் துரந்தனைப் பூந்துருத்
தியுறையும்
கருவினைக் கண்மூன் றுடையனை யானடி
போற்றுவதே. **#847**

ஞானவடிவினனாய், எல்லா ஊழிகளையும் படைத்த முதல்வனாய், வேதங்களை ஓதி எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் செல்வனாய், உலகங்களை எல்லாம் படைத்தவனாய், தன்னைப் பற்றுக்கோடாய் வந்து அடைந்த அடியேனை மோதுகின்ற வினைகளை எல்லாம் விரட்டியவனாய், பூந்துருத்தி நகரில் உறையும் உலக காரணனாய், முக்கண்ணனாய் உள்ள பெருமானை அடியேன் அடிக்கண் பணிந்து வழிபடுகிறேன்.

திருப்பூந்துருத்தி

தக்கன்றன் வேள்வி தகர்த்தவன் சார
மதுவன்றுகோள்

மிக்கன மும்மதில் வீயவொர் வெஞ்சிலை
கோத்தொரம்பால்
புக்கனன் பொன்றிகழ்ந் தன்னதோர் பூந்துருத்
தியுறையும்
நக்கனை நங்கள்பி ரான்றனை நானடி
போற்றுவதே. **#848**

தக்கனுடைய வேள்வியை எம் பெருமான் அழித்தான் என்பது அவன் பேராற்றலைக் காட்டுவதற்கு உரிய செயல் ஆகாது. பிறரைத் துன்புறுத்துதலில் மேம்பட்ட அசுரர்களின் மும்மதில்களும் அழியுமாறு கொடிய வில்லில் அம்பினைக் கோத்துச் செயற்பட்ட, பூந்துருத்தியுள் உறையும் பொன்னார் மேனியனும் திகம்பரனுமாய எங்கள் பெருமானை அடியேன் அடி போற்றுகிறேன்.

திருப்பூந்துருத்தி

அருகடை மாலையுந் தானுடை யானழ
காலமைந்த
உருவுடை மங்கையுந் தன்னொரு பாலுல
காயுநின்றான்
பொருபடை வேலினன் வில்லினன் பூந்துருத்
தியுறையும்
திருவுடைத் தேச மதியனை யானடி
போற்றுவதே. **#849**

அருகில் இடையிடையே பச்சிலைகளை வைத்துத் தொடுத்த மாலையை உடையவனாய், அழகார்ந்த நாயகியாம் பார்வதி ஒருபாகம் பொருந்தப் பெற்றவனாய், கலப்பினால் உலகெலாமாகி நிற்பவனாய், போரிடும் படைக்கலன்களாகிய வில்லினையும் வேலினையும் உடையவனாய், பூந்துருத்தியுள் உறையும் செல்வத்தை உடைய ஒளி வீசும் பிறைசூடியை அடியேன் அவனடிக்கண் பணிந்து வணங்குகிறேன்.

திருப்பூந்துருத்தி

மன்றியுந் நின்ற மதிலரை மாய
வகைகெடுக்கக்
கன்றியுந் நின்று கடுஞ்சிலை வாங்கிக்
கனலம்பினால்
பொன்றியும் போகப் புரட்டினன் பூந்துருத்
தியுறையும்
அன்றியு செய்தபி ரான்றனை யானடி
போற்றுவதே. **#850**

தன்னால் ஒறுக்கப்பட்டும் மீண்டும் எதிர்த்துநின்ற முபுர அசுரர்கள் அழியுமாறும் அவர்கள் இனமே ஒழியுமாறும் வெகுண்டு கொடிய வில்லை வளைத்துத் தீயைக்கக்கும் அக்கினியாகிய அம்பினால் அவர்கள் மதிலோடு அழிந்துபோகுமாறு செயற்பட்டுப் பூந்துருத்தியுள் உறைகின்ற, அழித்தற்றொழிலுக்கு மறுதலையாகிய ஆக்கச் செயல்களையும் செய்யும் பெருமானை அடியேன் அடிக்கண் பணிந்து வழிபடுகிறேன்.

திருப்பூந்துருத்தி

மின்னிறம் மிக்க விடையுமை நங்கையொர்
பான்மகிழ்ந்தான்
என்னிற மென்றம ரர்பெரியா ரின்னந்
தாமறியார்
பொன்னிற மிக்க சடையவன் பூந்துருத்
திய்யுறையும்
என்னிற வெந்தைபி ரான்றனை யானடி
போற்றுவதே. **#851**

மின்னல் போல ஒளி வீசும் இடையினை உடைய உமாதேவியைத் தன் திருமேனியின் ஒருபாகமாக விரும்பிக் கொண்டவனாய், தேவருள் மிக்கவரும் அவனுடைய உண்மையான நிறம் யாது என்று இன்றுவரை அறிய இயலாதவனாய்ப் பொன்போன்ற சடையை உடையவனாய்ப் பூந்துருத்தியில் உறைகின்ற சூரியன் போல ஒளிவீசும் எந்தை பெருமானை அடியேன் அடிபோற்றுகின்றேன்.

திருப்பூந்துருத்தி

அந்தியை நல்ல மதியினை யார்க்கு
மறிவரிய
செந்தியை வாட்டுஞ்செம் பொன்னினைச் சென்றடைந்
தேனுடைய
புந்தியைப் புக்க வறிவினைப் பூந்துருத்
திய்யுறையும்
நந்தியை நங்கள்பி ரான்றனை நானடி
போற்றுவதே. **#852**

மூன்று அந்திநேரத்திலும் வழிபடுதற்கு உரியவனாய், எல்லோருக்கும் நல்லபுத்தியை வழங்குபவனாய், ஒருவராலும் அறிய முடியாதபடி தீயில் சுட்டுத் தூயதாக்கப்பட்ட செம்பொன் நிறத்தினனாய், தன்னைத் தலைவனாகப் பற்றிய அடியேனுடைய உள்ளமாயும் உள்ளொளிரும் ஞானமாயும் இருப்பவனாய், பூந்துருத்தியில் உறைகின்ற நந்தி என்ற

பெயருக்குரிய நம் தலைவனை அடியேன் அடிக்கண் பணிந்து போற்றுகின்றேன்.

திருப்பூந்துருத்தி

பைக்கையும் பாந்தி விழிக்கையும் பாம்பு
சடையிடையே
வைக்கையும் வானிழி கங்கையு மங்கை
நடுக்குறவே
மொய்க்கை யரக்கனை யூன்றினன் பூந்துருத்
திய்யுறையும்
மிக்கநல் வேத விகிர்தனை நானடி
போற்றுவதே. **#853**

படம் எடுத்தலும் பதுங்கிப் பார்த்தலும் உடைய பாம்பினை, வானத்திலிருந்து இறங்கி வந்த கங்கையோடு சடையிலே வைத்து, கயிலைமலை அசைந்ததால் பார்வதி நடுங்க, அங்ஙனம் அசைத்த வலிய புயங்களை உடைய அரக்கனைத் திருவடி விரல் ஒன்றினால் அழுத்தி நெரித்துப் பூந்துருத்தியில் உகந்தருளி இருக்கும் மேம்பட்ட சிறந்த வேதங்களால் போற்றப்படுவோனும், உலகியலில் இருந்து வேறுபட்ட இயல்பினனுமான பெருமானை, அடியேன் அடிக்கண் பணிந்து வணங்குகின்றேன்.

திருநெய்த்தானம்

திருநெய்த்தானம்

திருநெய்த்தானம், திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நெய்யாடியப்பர்.
தேவியார் : வாலாம்பிகையம்மை.

பாரிடஞ் சாடிய பல்லுயிர் வானம
ரர்க்கருளிக்
காரடைந் தகடல் வாயுமிழ் நஞ்சமு
தாகவுண்டான்
ஊரடைந் திவ்வுல கிற்பலி கொள்வது
நாமறியோம்
நீரடைந் தகரை நின்றநெய்த் தானத்
திருந்தவனே. **#854**

காவிரியாற்றங்கரையில் அமைந்த நெய்த்தானத்தை உகந்தருளியிருக்கும் பெருமானே! பூமியில் ஆலகால விடத்தால் தாக்கப்பட்ட பல உயிர்களுக்கும் தேவருலகிலுள்ள தேவர்களுக்கும் அருள் செய்து, கரிய கடலில் தோன்றிய நஞ்சினை அமுதமாக உண்டருளிய நீ, பல ஊர்களையும் அடைந்து இவ்வுலகில் பிச்சை உணவை ஏற்பதை நாங்கள் அறியோம்.

திருநெய்த்தானம்

தேய்ந்திலங் குஞ்சிறு வெண்மதி யாய்நின்
றிருச்சடைமேல்
பாய்ந்த கங்கைப் புனல்பன் முகமாகிப்
பரந்தொலிப்ப
ஆய்ந்திலங் கும்மழு வேலுடை யாயடி
யேற்குரைநீ
ஏந்திள மங்கையு நீயும்நெய்த் தானத்
திருந்ததுவே. **#855**

தேய்ந்து விளங்கும் பிறைச்சந்திரனை உடையவனே! அழகிய உன் சடையின் மீது இறங்கிப்பாய்ந்த கங்கைநீர் பலமுகங்கொண்டுப் பரவி ஒலிக்கவும், ஆராய்ந்து விளங்கும் மழுப் படையை உடையவனே! அழகு விளங்கும் இளமங்கையான பார்வதியும் நீயும் நெய்த்தானப் பதியில் விரும்பி உறையும் காரணத்தை அடியேனுக்கு உரைப்பாயாக.

திருநெய்த்தானம்

கொன்றடைந் தாடிக் குமைத்திடுங் கூற்றமொன்
னார்மதின்மேல்
சென்றடைந் தாடிப் பொருததுந் தேசமெல்
லாமறியும்.
குன்றடைந் தாடுங் குளிர்பொழிற் காவிரி
யின்கரைமேல்
சென்றடைந் தார்வினை தீர்க்கும்நெய்த் தானத்
திருந்தவனே. **#856**

குடகுமலையிலே தோன்றி எல்லோரும் அடைந்து நீராடுமாறு பெருகியோடும். குளிர்ந்த சோலைகளை இரு மருங்கிலும் கொண்ட, காவிரியின் கரைமேல் உன்னை வந்து அடைந்தவர்களுடைய தீ வினைகளைப் போக்கும் நெய்த்தானப் பெருமானே! நீ சென்று சேர்ந்து போரிட்டுக் கொன்று அழிக்கும் கூற்றுவனாய்ப் பகைவர் மதில்களை அடைந்து செயற்பட்டுப் போரிட்டு அவற்றை அழித்த செயலை உலகமெல்லாம் நன்றாக அறிந்துள்ளது.

திருநெய்த்தானம்

கொட்டு முழவர வத்தொடு கோலம்
பலவணிந்து
நட்டம் பலபயின் றாடுவர் நாக
மரைக்கசைத்துச்
சிட்டர் திரிபுரந் தீயெழச் செற்ற
சிலையுடையான்
இட்ட முமையொடு நின்றநெய்த் தானத்
திருந்தவனே. **#857**

ஒலிக்கின்ற முழவின் ஓசையோடு பல வேடங்களைப் புனைந்து பல கூத்துக்களை அடிக்கடி ஆடுபவரும், பாம்பினை இடையில் இறுகக்கட்டியவரும், சிட்டர்க்காக மும்மதில்களும் தீக்கு இரையாகுமாறு அழித்த வில்லை உடையவரும், ஆகிய சிவபெருமான் நெய்த்தானத்தில் தமக்கு விருப்பமான பார்வதியோடு விரும்பி இருப்பவராவார்.

திருநெய்த்தானம்

கொய்ம்மலர்க் கொன்றை துழாய்வன்னி மத்தமுங்
கூவிளமும்
மெய்ம்மலர் வேய்ந்த விரிசடைக் கற்றைவிண்
ணோர்பெருமான்

மைம்மலர் நீல நிறங்கருங் கண்ணியோர்
பான்மகிழ்ந்தான்
நின்மல னாட னிலயநெய்த் தானத்
திருந்தவனே. **#858**

கொய்யப்பட்ட கொன்றை மலர், திருத்துழாய், வன்னி, ஊமத்தம்பூ, வில்வம் ஏனைய சிறந்த மலர்கள் இவற்றை அணிந்த விரிந்த சடைத் தொகுதியையுடைய தேவர் தலைவனாய், கருமை பரவிய நீல நிறத்தை உடையவளாய்க் கருங்கண்களை உடைய பார்வதி பாகனாய் உள்ள களங்கம் அற்ற தூயோனாகிய சிவபெருமான், தன் ஆடல்களுக்கு அரங்கமாக அமைந்த நெய்த்தானத்தில் இருப்பவனாவான்.

திருநெய்த்தானம்

பூந்தார் நறுங்கொன்றை மாலையை வாங்கிச்
சடைக்கணிந்து
கூர்ந்தார் விடையினை யேறிப்பல் பூதப்
படைநடுவே
போந்தார் புறவிசை பாடவு மாடவுங்
கேட்டருளிச்
சேர்ந்தா ருமையவ ளோடுநெய்த் தானத்
திருந்தவனே. **#859**

நெய்த்தானத்தில் இருக்கும் சிவபெருமான் பூக்களை வரிசையாகத் தொடுத்த கொன்றை மாலையை வளைத்துச் சடைக்கண் அணிந்து, விரைவு மிக்குப் பொருந்திய காளையினை ஏறி ஊர்ந்து பூதப்படைகள் பலவற்றின் நடுவே செல்பவராய்ப் புறத்தே அடியார்கள் பாடும் பாடல்களைக் கேட்டு ஆடல்களைக் கண்டு பார்வதியோடும் இணைந்து உறைகின்றார்.

திருநெய்த்தானம்

பற்றின பாம்பன் படுத்த புலியுரித்
தோலுடையன்
முற்றின மூன்று மதில்களை மூட்டி
யெரித்தறுத்தான்
சுற்றிய பூதப் படையினன் சூல
மழுவொருமான்
செற்றுநந் தீவினை தீர்க்குநெய்த் தானத்
திருந்தவனே. **#860**

பாம்பினைப் பற்றியவனாய், புலித்தோலை உடையாக உடுத்தவனாய், எல்லா வலிமைகளும் நிறைந்த மூன்று மதில்களையும் தீ மூட்டி

அழித்தவனாய்ப் பூதப்படையால் சூழப்பட்டவனாய்ச் சூலம், முழு, மான் எனும் இவற்றை ஏந்தியவனாய் நம் தீவினைகளை அழித்து ஒழிப்பவனாய்ச் சிவபெருமான் நெய்த்தான நகரில் உறைகின்றான்.

திருநெய்த்தானம்

விரித்த சடையினன் விண்ணவர் கோன்விட
முண்டகண்டன்
உரித்த கரியுரி மூடியொன் னார்மதின்
மூன்றுடனே
எரித்த சிலையின னீடழி யாதென்னை
யாண்டுகொண்ட
தரித்த வுமையவ ளோடுநெய்த் தானத்
திருந்தவனே. **#861**

விரித்த சடையினனாய், தேவர்கள் தலைவனாய், விடத்தை உண்டு அடக்கிய கழுத்தினனாய், தான் உரித்த யானைத் தோலைப் போர்த்தவனாய், பகைவரின் மதில்கள் மூன்றனையும் எரித்த வில்லினனாய், தன் பெருமைக்குக் குறைவு வாராத வகையில் அடியேனை அடிமையாகக் கொண்டவனாய் உள்ளவன், தன் உடம்பில் பாதியாகக் கொண்ட பார்வதியோடு நெய்த்தானத்தில் உறைகின்ற பெருமானாவான்.

திருநெய்த்தானம்

தூங்கான் றுளங்கான் துழாய்கொன்றை துன்னிய
செஞ்சடைமேல்
வாங்கா மதியமும் வாளர வுங்கங்கை
தான்புனைந்தான்
தேங்கார் திரிபுரந் தீயெழ வெய்து
தியக்கறுத்து
நீங்கா னுமையவ ளோடுநெய்த் தானத்
திருந்தவனே. **#862**

தாமதம் செய்யாமல் விரைவு உடையவனாய், திருத்துழாயும் கொன்றையும் பொருந்திய சிவந்த சடையின்மீது கைக்கொண்ட பாம்பு பிறை எனும் இவற்றைக் கங்கையோடு அணிந்தவனாய், பகைவருடைய முப்புரங்களையும் தீக்கு இரையாகுமாறு அம்பு செலுத்தி அசுரர்களால் மற்றவருக்கு ஏற்பட்ட சோர்வினைப் போக்கி என்றும் நீங்காதிருக்கும் பெருமான் பார்வதியோடு நெய்த்தானத்திருந்தவனே யாவன்.

திருநெய்த்தானம்

ஊட்டிநின் றான்பொரு வானில முமமதி
றீயம்பினால்
மாட்டிநின் றானன்றி னார்வெந்து வீழவும்
வானவர்க்குக்
காட்டிநின் றான்கத மாக்கங்கை பாயவொர்
வார்சடையை
நீட்டிநின் றான்றிரு நின்றநெய்த் தானத்
திருந்தவனே. **#863**

செல்வம் நிலைபெற்ற நெய்த்தானப் பெருமான் வானில் நிலவிப் போரிட்ட மும்மதில்களையும் தீயாகிய அம்பினால் எரித்துப் பகைவர்கள் வெந்து போகும்படி தீயினால் அழித்து அக்காட்சியைத் தேவர்கள் காணச் செய்து விரைந்து வானினின்றும் இறங்கிய சினத்தை உடைய பெரிய கங்கை பாய்வதற்கு நீண்ட சடைக் கற்றைகளுள் ஒன்றனைக் காட்டி நின்ற பெருமான் திருநெய்த்தானத் திருந்தவனே யாவான்.

திருவேதிகுடி

திருவேதிகுடி

திருவேதிகுடி, திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வேதபுரீசுவரர்.
தேவியார் : மங்கையர்க்கரசியம்மை.

கையது காலெரி நாகங் கனல்விடு
சூலமது
வெய்யது வேலைநஞ் சுண்ட விரிசடை
விண்ணவர்கோன்
செய்யினி னீல மணங்கம ழுந்திரு
வேதிகுடி
ஐயனை யாரா வமுதினை நாமடைந்
தாடுதுமே. **#864**

கைகளில் விடத்தைக் கக்கும் பாம்பினையும் தீயைப் போல வெம்மையைச் செய்யும் சூலப்படையையும் ஏந்தியவனும், கடலில் தோன்றிய கொடிய விடத்தை உண்டவனும், விரிந்த சடையினை உடைய தலைவனுமாய், வயல்களிலே நீலப்பூக்கள் மணம் கமழும் திருவேதிகுடியில் உகந்தருளியிருக்கும் ஐயனுமான, நுகர்ந்தும் நிறைவு தாராத ஆரா அமுதை அடைந்து அதில் முழுகுவவோம் நாம்.

திருவேதிகுடி

கைத்தலை மான்மறி யேந்திய கையன்
கனன்மழுவன்
பொய்த்தலை யேந்திநற் பூதி யணிந்து
பலிதிரிவான்
செய்த்தலை வாளைகள் பாய்ந்துக ளுந்திரு
வேதிகுடி
அத்தனை யாரா வமுதினை நாமடைந்
தாடுதுமே. **#865**

கைகளில் மான்குட்டியையும் கொடிய மழுப்படையையும் ஏந்தி, மண்டையோட்டைத் தாங்கித் திருநீற்றை அணிந்து பொய்த் தலை கொண்டு பிச்சைக்காகத் திரிபவனும், வயல்களிலே வாளை மீன்கள் தாவித் துள்ளும் திருவேதிகுடிப் பெருமானும் ஆகிய ஆரா அமுதை அடைந்து அதில் திளைத்தாடுவோம் நாம்.

திருவேதிகுடி

முன்பின் முதல்வன் முனிவனெம் மேலை
வினைகழித்தான்
அன்பி னிலையி லவுணர் புரம்பொடி
யானசெய்யும்
செம்பொனை நன்மலர் மேலவன் சேர்திரு
வேதிகுடி
அன்பனை நம்மை யுடையனை நாமடைந்
தாடுதுமே. **#866**

முன்னும் பின்னும் தானே உலக காரணனாய், மனனசீலனாய், நம் பழைய வினைகளைப் போக்குபவனாய், அன்பு நிலையில் இல்லாத அசுரர்களின் மும்மதில்களையும் அழித்த செம்பொன் போல்பவனாய், தாமரை மலர்மேல் உள்ள பிரமன் வழிபடுவதற்காக வந்து அடையும் திருவேதிகுடியில் விரும்பி உறைபவனாய், நம்மை அடிமைகொள்ளும் பெருமானை நாம் அடைந்து அவன் அருளாரமுதக் கடலில் ஆடுவோம்.

திருவேதிகுடி

பத்தர்க ணாளு மறவார் பிறவியை
யொன்றறுப்பான்
முத்தர்கண் முன்னம் பணிசெய்து பாரிட
முன்னுயர்த்தான்
கொத்தன கொன்றை மணங்கம ழுந்திரு
வேதிகுடி
அத்தனை யாரா வமுதினை நாமடைந்
தாடுதுமே. **#867**

பக்தர்களாய்த் தன்னை நாளும் மறவாத அடியார்களுக்குப் பொருந்திய பிறவிப் பிணியை அறுப்பவனாய், பாசநீக்கம் உற்றவர்கள் இம்மண்ணுலகில் சிவப்பணி செய்து உயரச் செய்தவனாய், கொத்தாகப் பூத்த கொன்றையின் மணம் பரவும் திருவேதி குடித் தலைவனாய் உள்ள ஆரா அமுதக் கடலை நாம் அடைந்து ஆடுவோம்.

திருவேதிகுடி

ஆனணைந் தேறுங் குறிகுண மாரறி
வாரவர்கை
மானணைந் தாடு மதியும் புனலுஞ்
சடைமுடியன்
தேனணைந் தாடிய வண்டு பயிறிரு

வேதிகுடி
ஆனணைந் தாடு மழுவனை நாமடைந்
தாடுதுமே. **#868**

தேனிலே பொருந்தி உண்டு பறக்கும் வண்டுகள் மிகுதியாகக் காணப்படும் திருவேதிகுடியில் பஞ்சகவ்வியத்தில் அபிடேகம் கொள்ளும், மழு ஏந்திய பெருமான், பிறையும் கங்கையும் சடைமுடியில் சூடி, கையில் மானை வைத்துக் கொண்டு கூத்து நிகழ்த்துபவன் விரும்பி காளையை ஏறி ஊரும் அப்பெருமானுடைய பெயர்களையோ, அடையாளங்களையோ, பண்புகளையோ ஒருவரும் முழுமையாக அறிதல் இயலாது. அவனை அடைந்து அருளாரமுதக் கடலில் ஆடுவோம் நாம்.

<u>திருவேதிகுடி</u>

எண்ணு மெழுத்துங் குறியு மறிபவர்
தாமொழியப்
பண்ணி னிசைமொழி பாடிய வானவர்
தாம்பணிவார்
திண்ணென் வினைகளைத் தீர்க்கும் பிரான்றிரு
வேதிகுடி
நண்ண வரிய வமுதினை நாமடைந்
தாடுதுமே. **#869**

எண்ணையும் எழுத்தையும் பெயர்களையும் அறிபவராகிய தாம் மொழிய அவற்றைக் கேட்டுப் பண்ணோடு இயைந்த பாடல்களைப் பாடுத் தேவர்கள் பணிந்து தௌந்து கொள்ளுமாறு, அழுத்தமான வினைகளைப் போக்கும் பெருமானாய்த் திருவேதிகுடியில் உறையும் கிட்டுதற்கு அரிய அமுதமாக உள்ள சிவபெருமானை நாம் அடைந்து அருட் கடலில் ஆடுவோம்.

<u>திருவேதிகுடி</u>

ஊர்ந்தவிடை யுகந் தேறிய செல்வனை
நாமறியோம்
ஆர்ந்த மடமொழி மங்கையொர் பாக
மகிழ்ந்துடையான்
சேர்ந்து புனற்சடைச் செல்வப்பிரான்றிரு
வேதிகுடிச்
சார்ந்த வயலணி தண்ணமு தையடைந்
தாடுதுமே. **#870**

உகந்து காளையை ஏறி ஊருஞ் செல்வனாகிய பெருமானை நாம்

முழுமையாக அறியோம். செவிக்கு இனியவான மடப்பம் பொருந்திய மொழிகளை உடைய பார்வதியை மகிழ்ந்து பாகமாக உடையவனாய், சடையிற் கங்கையைச் சூடிய செல்வப் பிரானாய் வயல்கள் சூழ்ந்து திருவேதிகுடியைச் சார்ந்திருக்கும் பெருமானாகிய குளிர்ந்த அமுதை அடைந்து அதில் திளைத்து ஆடுவோம் நாம்.

திருவேதிகுடி

எரியு மழுவின னெண்ணியு மற்றொரு
வன்றலையுள்
திரியும் பலியினன் றேயமும் நாடுமெல்
லாமுடையான்
விரியும் பொழிலணி சேறுதிகழ்திரு
வேதிகுடி
அரிய வமுதினை யன்பர்க ளோடடைந்
தாடுதுமே. **#871**

கொடிய மழுவை ஏந்தியவனாய், பிரமனுடைய மண்டையோட்டில் பிச்சை பெற விரும்பித் திரிபவனாய், தேயங்களும் நாடுகளும் எல்லாம் உடையவனாய், விரிந்த சோலைகளும் சேறு விளங்கும் வயல்களும் அழகு செய்யும் திருவேதிகுடியில் உறையும் பெருமானாகிய அரிய அமுதை அன்பர்களோடு அடைந்து அதில் திளைத்து ஆடுவோம்.

திருவேதிகுடி

மையணி கண்டன் மறைவிரி நாவன்
மதித்துகந்த
மெய்யணி நீற்றன் விழுமிய வெண்மழு
வாட்படையான்
செய்ய கமல மணங்கம ழுந்திரு
வேதிகுடி
ஐயனை யாராவமுதினை நாமடைந்
தாடுதுமே. **#872**

நீலகண்டனாய், வேதம் ஓதும் நாவினனாய், பெருமையாகக் கருதி விரும்பிய திருநீற்றை மெய் முழுதும் அணிந்தவனாய், மேம்பட்ட வெள்ளிய மழுப்படையினனாய், சிறந்த தாமரைகள் மணம் வீசும் திருவேதிகுடித் தலைவனாய் உள்ள சிவபெருமானாகிய ஆரா அமுதை அடைந்து அதில் திளைத்தாடுவோம்.

திருவேதிகுடி

வருத்தனை வாளரக் கன்முடி தோளொடு

பத்திறுத்த
பொருத்தனைப் பொய்யா வருளனைப் பூதப்
படையுடைய
திருத்தனைத் தேவர்பி ரான்றிரு வேதி
குடியுடைய
அருத்தனை யாரா வமுதினை நாமடைந்
தாடுதுமே. **#873**
வாளை ஏந்திய அரக்கனுடைய தோள்களோடு தலைகள் பத்தினையும் நெரித்துத் துன்புறுத்தியவனாய், பிறகு அவற்றைப் பொருத்தியவனாய், தவறாத அருளுடையவனாய், பூதப் படையை உடைய புனிதனாய், தேவர்கள் தலைவனாய், திருவேதி குடியில் உறையும் மெய்ப்பொருளான ஆரா அமுதினை அடைந்து அதில் திளைத்து ஆடுவோம் நாம்.

திருவையாறு

திருஐயாறு

திருவையாறு, திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.
தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை.

குறுவித்த வாகுற்ற நோய்வினை காட்டிக்
குறுவித்தநோய்
உறுவித்த வாவுற்ற நோய்வினை தீர்ப்பா
னுகந்தருளி
அறிவித்த வாறடி யேனையை யாற
னடிமைக்களே
செறிவித்தவாதொண்ட னேனைத்தன் பொன்னடிக்
கீழெனையே. #874

என் முன்னைய குற்றமாகிய வினைகள் இப்பிறப்பில் எனக்கு அவற்றின் பயனாகிய நோயினைக் காட்டி என்னைக்குறுகச் செய்தன. அங்ஙனம் வினைப்பயனாக வந்த நோய்கள் என்னால் பொறுக்கும் அளவினவாய் அல்லாதபடி மிகுவிக்கப்பட்டன. அந்நிலையில் யான் உற்ற நோயாகிய வினைப்பயனைப் போக்க ஐயாறன் திருவுள்ளம்பற்றி அடியேனைத் தன் அடிமைத் தொண்டுகள் செய்யுமாறு அறிவித்துத் தன் பொன்போன்ற திருவடிக்கீழ், பொருந்துமாறு தொண்டனாக செய்த செயலுக்குக் காரணம் அவன் கருணையேயன்றி வேறு யாதாக இருத்தல் கூடும்?

திருஐயாறு

கூர்வித்த வாகுற்ற நோய்வினை காட்டியுங்
கூர்வித்தநோய்
ஊர்வித்த வாவுற்ற நோய்வினை தீர்ப்பா
னுகந்தருளி
ஆர்வித்த வாறடி யேனையை யாற
னடிமைக்களே
சேர்வித்த வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக்
கீழெனையே. #875

என் முன்னைய குற்றமாகிய வினைகள் இம்மையில் எனக்கு அவற்றின் பயனாகிய நோயினைக் காட்டித் துயரை மிகுவித்தன. அங்ஙனம் வந்த நோய்கள் என்னைத் தவறான வழியில் செல்லச் செய்தன. அந்த நிலையில் அடியேன் உற்ற நோயைத் தீர்க்கத் திருவுள்ளம் பற்றி

அடியேனைத் தன் அடிமைத் தொண்டுகளில் பொருத்துவித்துத் தன் பொன்னடிக் கீழ்த் தொண்டனாகச் சேருமாறு ஐயாறன் செய்த செயலுக்குக் காரணம் அவன் கருணையேயன்றிப் பிறிதில்லை.

திருஐயாறு

தாக்கின வாசல மேவினை காட்டியுந்
தண்டித்தநோய்
நீக்கின வாநெடு நீரினின் றேற
நினைந்தருளி
ஆக்கின வாறடி யேனையை யாற
னடிமைக்களே
நோக்கின வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக்
கீழெனையே. **#876**

என் முன்னைய வினை என்னைத் தண்டித்தற்கு உரிய சூலை நோயால் தாக்கியது. பின் சமணர்களின் வஞ்சனைச் செயல்களைக் காட்டி என் உயிரைப் போக்க முற்பட்டது. அந்நிலையில் ஐயாறன் என்னைக் கடலினின்றும் கரையேறச் செய்யவேண்டும் என்று திருவுள்ளம் பற்றித் தன் அடிமைத் தொண்டு செய்ய அடியேனை வழுக்களைந்து கொண்டு திருவடிக் கீழ்த் தொண்டனாகச் செய்த செயல் நிர்ஹேதுக கிருபையாலாகியதே.

திருஐயாறு

தருக்கின நான்றக வின்றியு மோடச்
சலமதனால்
நெருக்கின வாநெடு நீரினின் றேற
நினைந்தருளி
உருக்கின வாறடி யேனையை யாற
னடிமைக்களே
பெருக்கின வாதொண்டனேனைத்தன் பொன்னடிக்
கீழெனையே. **#877**

நான் வினைப் பயனைத் தாங்கும் ஆற்றலில்லேனாய்த் தடுமாறி ஓடுமாறு செருக்குற்ற என் முன்னைவினை வஞ்சனையாக என்னை நெருக்க அடியேனைத் துன்பக் கடலிலிருந்து கரையேறச் செய்யத் திருவுள்ளம் பற்றி ஐயாறன் தன் அடிமைத் தொண்டில் உருகச் செய்து அடியேனைத் தன் பொன்னடிக் கீழ் தொண்டனாக மேம்படுத்திய செயல் அவனுடைய காரணம் பற்றாக் கருணையின் விளைவேயாகும்.

திருஐயாறு

இழிவித்த வாறிட்ட நோய்வினை காட்டி
யிடர்ப்படுத்துக்
கழிவித்த வாகட்ட நோய்வினை தீர்ப்பான்
கலந்தருளி
அழிவித்த வாறடி யேனையை யாற
னடிமைக்களே
தொழுவித்த வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக்
கீழெனையே. **#878**

என் முன்னைவினை எனக்கு நோயைக் காட்டி என்னை நிலையிலிருந்து இறங்கச் செய்து துன்புறுத்தி உயிரைப் போக்க முற்பட்ட அளவில், ஐயாறன் அடியேனுடைய துயரம் போக்கித் தன் திருவடிக்கண் தொண்டனாகத் தன்னைத் தொழுமாறு செய்த செயல் அவனுடைய காரணம் பற்றாக் கருணையின் விளைவேயாகும்.

திருஐயாறு

இடைவித்த வாறிட்ட நோய்வினை காட்டி
யிடர்ப்படுத்து
உடைவித்த வாறுற்ற நோய்வினை தீர்ப்பா
னுகந்தருளி
அடைவித்த வாறடி யேனையை யாற
னடிமைக்களே
தொடர்வித்த வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக்
கீழெனையே. **#879**

என் முன்னைவினை எனக்கு நோயைத் தந்து வருத்தித் துன்பத்தில் ஆழ்த்தி உயிரைப் போக்கும் நிலையினதாக. ஐயாறன் அடியேனுக்குத் துயரம் தந்த வினையைப் போக்கத் திருவுள்ளம் பற்றி, அடியேனைத் தன் அடிமைத் தொண்டில் சேர்த்துத் தன் திருவடிக்கண் தொண்டனாகத் தொடர்ந்து பணி செய்யுமாறு செய்த செயல் அவனுடைய காரணம் பற்றாக் கருணையின் விளைவே யாகும்.

திருஐயாறு

படக்கின வாபட நின்றுபன் னாளும்
படக்கினநோய்
அடக்கின வாறது வன்றியுந் தீவினை
பாவமெல்லா
மடக்கின வாறடி யேனையை யாற
னடிமைக்களே
தொடக்கினவா தொண்டனேனைத்தன் பொன்னடிக்

கீழெனையே. #880

என் முன்னை வினை பலநாளும் துயருறுமாறு என்னைத் தாழ்த்தி நோயினால் என்னைச் செயலற்றவன் ஆக்கிய நிலையில் ஐயாறன் அடியேனுடைய வினைப்பயனாகிய பாவங்களை எல்லாம் செயலற்றன ஆக்கித் தன் அடிமைத் தொண்டில் அடியேனைத் திருப்பித் தன் பொன்னடித் தொண்டனாகத் தொடக்கி, திருத்தொண்டு செய்யுமாறு செய்த செயல் அவன் கருணையின் விளைவேயாம்.

திருஐயாறு

மறப்பித்த வாவல்லை நோய்வினை காட்டி
மறப்பித்தநோய்
துறப்பித்த வாதுக்க நோய்வினை தீர்ப்பா
னுகந்தருளி
இறப்பித்த வாறடி யேனையை யாற
னடிமைக்களே
சிறப்பித்த வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக்
கீழெனையே. #881

என் முன்னை வினை எனக்கு நோயைக் காட்டி என் அறிவு நிறைவு ஓர்ப்பு கடைப்பிடி என்பனவற்றை மறக்கச்செய்ய, அங்ஙனம் மறக்கச் செய்த நோய் என் உயிர் உடலைத் துறக்கச்செய்ய முற்பட்ட நேரத்தில் ஐயாறன் அடியேனுடைய வினையைப் போக்கத் திருவுள்ளம் பற்றி அடியேனைத் தன் அடிமைத் தொண்டில் ஈடுபட்டுப் பண்டைத் துயரங்களைக் கடக்கச் செய்து, தன் திருவடிக்கண் தொண்டனாகுமாறு சிறப்பித்த செயல் அவன் கருணையின் விளைவேயாகும்.

திருஐயாறு

துயக்கின வாதுக்க நோய்வினை காட்டித்
துயக்கினநோய்
இயக்கின வாறிட்ட நோய்வினை தீர்ப்பா
னிசைந்தருளி
அயக்கின வாறடி யேனையை யாற
னடிமைக்களே
மயக்கின வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக்
கீழெனையே. #882

என் முன்னை வினை எனக்கு நோயைத் தந்து சோர்வடையச் செய்ய, அந்நோய் தான் விரும்பியபடி அடியேன் உடலைச் செயற்படுத்த அந்நிலையில் ஐயாறன் அடியேனுடைய நோயையும் அதற்குக் காரணமான வினையையும் தீர்க்கத் திருவுள்ளம் பற்றித் தன் அடிமைத்

தொண்டில், அடியேனை நோயிலனாக ஈடுபடுத்தித் தன் பொன்னடித் தொண்டனாகத் தன் திருத்தொண்டில் கலக்குமாறு செய்த செயல் அவன் கருணையின் விளைவேயாகும்.

திருஐயாறு

கறுத்துமிட் டார்கண்டங் கங்கை சடைமேற்
கரந்தருளி
இறுத்துமிட் டாரிலங் கைக்கிறை தன்னை
யிருபதுதோள்
அறுத்துமிட் டாரடி யேனையை யாற
னடிமைக்கனே
பொறுத்துமிட் டார்தொண்ட னேனைத்தன் பொன்னடிக்
கீழெனையே. #883

ஐயாற்றெம் பெருமானார் நீலகண்டராய், கங்காதரராய், இராவணன் இருபது தோள்களையும் நெரித்தவராய், அடியேனைத் தம் அடிமைத் தொண்டில் வேற்றுப் பணிகளை அறுத்து அதன் கண்ணேயே ஈடுபடுமாறு செய்தவராய்த் தம் பொன்னடிக்கீழ் அடியேன் தொண்டனாகுமாறு அடியேனுக்கு ஆதாரமாக அமைந்துவிட்டார். இதற்குக் காரணம் என்னை? அப்பெருமானுடைய காரணம் பற்றாக் கருணையின் விளைவே அடியேனை அப்பெருமானுடைய திருத்தொண்டில் ஈடுபடுத்தியது.

திருஐயாறு

திருவையாறு, திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.
தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை.

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச்
சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன
மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன
பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை யாற
னடித்தலமே. #884

பாம்பினைத் திருமேனியில் சுற்றி அணிந்து மாலையில் தோன்றும் வளர்பிறைப் பக்கத்துப் பிறைச் சந்திரனை அணிந்து கூத்து நிகழ்த்தும் ஐயாறனுடைய திருவடிகள் நம் உள்ளத்தால் உள்ளவாறு சிந்திப்பதற்கு

அரியனவாய், அவன் அருளாலே தியானிக்கும் மெய்ஞ்ஞானியருக்கு மேம்பட்டுச் சிறந்த தேன்போன்ற இனிமையை முன்னர்க்கொடுத்து, அவர்கள் உயிரைப் பிணித்து நின்ற பழவினைகளைப் போக்கி அவர்களுக்கு முத்திப் பேற்றினை வழங்குவனவாகும்.

திருஜயாறு

இழித்தன வேழேழ் பிறப்பு மறுத்தன
வென்மனத்தே
பொழித்தன போரெழிற் கூற்றை யுதைத்தன
போற்றவர்க்காய்க்
கிழித்தன தக்கன் கிளரொளி வேள்வியைக்
கீழமுன்சென்
றழித்தன வாறங்க மானவை யாற
னடித்தலமே. **#885**

வேதங்களின் ஆறு அங்கங்களின் வடிவான ஐயாறன் அடித்தலங்கள் - ஒரு பிறப்பின் வினைப்பயன் தொடர்தற்குரிய ஏழுபிறப்புக்கள் மக்கள், தேவர், நரகர், விலங்கு, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்ற ஏழுவகைப் பிறப்பினுள் எப்பிறப்பாயினும் அறுவறுக்கத்தக்க அப்பிறவிப் பிணியைப் போக்குவனவாய், அடியேன் உள்ளத்தே இன்பத்தைப் பொழிவனவாய், போரிடுவதில் வல்ல கூற்றுவனை உதைத்தனவாய், தக்கனுடைய மேம்பட்ட வேள்வியை அழித்தனவாய், தம்மை வழிபடும் அடியவர்களுக்குக் கீழான பிறவிகளை முற்பட்டு முயன்று அழித்தனவாய் உள்ளன.

திருஜயாறு

மணிநிற மொப்பன பொன்னிற மன்னின
மின்னியல்வாய்
கணிநிற மன்ன கயிலைப் பொருப்பன
காதல்செய்யத்
துணிவன சீலத்த ராகித் தொடர்ந்து
விடாததொண்டர்க்
கணியன சேயன தேவர்க்கை யாற
னடித்தலமே. **#886**

ஐயாறன் அடித்தலங்கள் மாணிக்கத்தைப் போலவும் பொன்னைப் போலவும் மின்னலைப் போலவும் அடியவர்கள் விரும்புகின்ற நிறத்தோடும் ஒளியோடும் விளங்குவனவாய், கயிலைமலையில் உள்ளனவாய், அன்பு செய்யத் தக்கனவாய், நல்லொழுக்கத்துடன் இறைபணியைத் தொடர்ந்து செய்யும் அடியவர்களுக்கு அணியனவாய்த்

தேவர்களுக்குத் தொலைவில் உள்ளனவாய் இருக்கின்றன.

திருஐயாறு

இருடரு துன்பப் படல மறைப்பமெய்ஞ்
ஞானமென்னும்
பொருடரு கண்ணிழந் துண்பொரு ணாடிப்
புகலிழந்த
குருடருந் தம்மைப் பரவக் கொடுநர
கக்குழிநின்
றருடரு கைகொடுத் தேற்றுமை யாற
னடித்தலமே. **#887**

ஐயாறன் அடித்தலங்கள் இருளைத் தரும் துன்பத்திரை மறைக்க மெய்ஞ்ஞானம் என்னும் பார்வையை இழந்த, நுகர்தற்குரிய பொருள்களைத் தேடிப் பற்றுக்கோட்டினை இழந்த குருடர்களும் தம்மைப் போற்றுமாறு கொடிய நரகமாகிய குழியில் இருந்து அவர்களை அருளாகிய கைகளைக் கொடுத்து வெளியேற்றி முத்தி நிலத்தின் கரைக்கண் சேர்ப்பன.

திருஐயாறு

எழுவா யிறுவா யிலாதன வெங்கட்
பிணிதவிர்த்து
வழுவா மருத்துவ மாவன மாநர
கக்குழிவாய்
விழுவா ரவர்தம்மை வீழ்ப்பன மீட்பன
மிக்கவன்போ
டழுவார்க் கமுதங்கள் காண்கவை யாற
னடித்தலமே. **#888**

ஐயாறன் அடித்தலங்கள் - தமக்குத் தோற்றமும் முடிவும் இல்லனவாய் நம்முடைய நோய்களைப் போக்கத்தவறாத மருத்தின் தன்மையவாய் நரகக்குழியில் தம் வினைப்பயனால் விழும் உயிர்களை வினை நுகர்ச்சிக்காக விழச்செய்து பின் கருணையினால் கரையேற்றுவனவாய், மேம்பட்ட அன்பினால் உள்ளம் உருகி அழுபவர்களுக்கு அமுதங்களாக உள்ளன.

திருஐயாறு

துன்பக் கடலிடைத் தோணித் தொழில்பூண்ட
தொண்டர் தம்மை
இன்பக் கரைமுகந் தேற்றுந் திறத்தன

மாற்றயலே
பொன்பட் டொழுகப் பொருந்தொளி செய்யுமப்
பொய் பொருந்தா
அன்பர்க் கணியன காண்கவை யாற
னடித்தலமே. **#889**

ஐயாறன் அடித்தலங்கள் அடியார்களைத் துன்பக் கடலைக் கடத்த உதவும் தோணியின் செயலைச் செய்வனவாய் இன்பமாகிய கரையிலே கொண்டு சேர்ப்பனவாய் மாற்று அறிய முடியாத வலியற்ற பொன்போல ஒளிவீசுவனவாய்ப் பொய்ப் பொருள்களிடத்துப் பற்றற்ற மெய்யடியார்களுக்கு அணியனவாய் உள்ளன.

<u>திருஐயாறு</u>

களித்துக் கலந்ததொர் காதற் கசிவொடு
காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் னின்றவிப் பத்தரைக்
கோதில்செந்தேன்
தெளத்துச் சுவையமு தூட்டி யமரர்கள்
சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வ மாக்குமை யாற
னடித்தலமே. **#890**

ஐயாறன் அடித்தலங்கள் அடியார்குழாத்தோடு மகிழ்ந்து அன்பால் ஏற்பட்ட உள்ள நெகிழ்ச்சியோடு காவிரியில் நீராடித் தொழுது தம் முன் நின்ற அடியார்களை மேம்பட்ட செந்தேனைத் தெளயச் செய்து அத்தேனை அமுதோடு உண்பித்துத் தேவர்கள் சூழ்ந்து வழிபடும் பெரிய செல்வத்தை அவர்களுக்கு வழங்கி எப்பொழுதும் செல்வன்கழல் ஏத்தும் செல்வத்தை இடையறாது நுகரும் வாய்ப்பினை நல்குவன.

<u>திருஐயாறு</u>

திருத்திக் கருத்தனைச் செவ்வே நிறுத்திச்
செறுத்துடலை
வருத்திக் கடிமலர் வாளொடுத் தோச்சி
மருங்குசென்று
விருத்திக் குழக்கவல் லோர்கட்கு விண்பட்
டிகையிடுமால்
அருத்தித் தருந்தவ ரேத்துமை யாற
னடித்தலமே. **#891**

விரும்பிச் சிறந்த தவத்தினை உடையவர்கள் துதிக்கும் ஐயாறனுடைய திருவடிகள் உள்ளத்தைப் பிற பொருட்கண் செல்லாமல் திருத்தம் பெறச்

செய்து அதனைச் சிவபெருமான் திருவடிகளிலேயே பதித்து, தொடர்ந்து, அதனை அடக்கி உடலை யோகத்தால் வருத்தி, நறுமணம் கமழும் ஒளி பொருந்திய மலர்களை எடுத்து உயர்த்தித் திருவடிகளில் தூவி எம்பெருமான் பக்கல் அடைந்து உடல் விருத்தி உயிர் விருத்தி ஆகிய இரண்டற்கும் முயலும் ஆற்றல் உடையவர்களுக்கு வீட்டுலகில் இடம் பெறுவதற்குப் பட்டிகையில் பெயர்ப்பதிவு செய்துவிடும்.

திருஐயாறு

பாடும் பறண்டையு மாந்தையு மார்ப்பப்
பரந்துபல்பேய்
கூடி முழவக் குவிகவிழ் கொட்டக்
குறுநரிகள்
நீடுங் குழல்செய்ய வைய நெளய
நிணப்பிணக்காட்
டாடுங் திருவடி காண்கவை யாற
னடித்தலமே. **#892**

ஐயாறன் அடித்தலங்கள், ஒலிக்கும் பறண்டை மொந்தை என்ற இசைக்கருவிகள் ஆரவாரம் செய்யப் பலபேய்களும் நாற்புறமும் பரவி முழவு முதலியவற்றின் குவிந்து கவிழ்ந்த மார்ச்சனை இடத்தில் ஒலியை எழுப்ப, குறுநரிகள் வேய்ங்குழல் போல ஒலிக்கப் பூமி அதிர்ச்சி தாங்காமல் நெளய, கொழுப்பு உருகும் பிணங்களை உடைய சுடுகாட்டில் கூத்து நிகழ்த்து வனவாம்.

திருஐயாறு

நின்போ லமரர்க ணீண்முடி சாய்த்து
நிமிர்த்துகுத்த
பைம்போ துழக்கிப் பவளந் தழைப்பன
பாங்கறியா
என்போ லிகள்பறித் திட்ட விலையு
முகையுமெல்லாம்
அம்போ தெனக்கொள்ளு மையனை யாற
னடித்தலமே. **#893**

ஆகமப்படி செய்யும் முறைகளை அறியாத அடியேனைப் போன்றவர்கள் பறித்துச் சமர்ப்பித்த இலைகளையும் மொட்டுக்களையும் எல்லாம் அழகிய பூக்களாக ஏற்கும் ஐயாறன் உடைய திருவடிகள் தேவர்கள் நீண்ட முடிகளைச் சாய்த்து வணங்கிச் சமர்ப்பித்த புதிய பூக்களைத் துகைத்து எம்பெருமானைப் போலப் பவள நிறத்தால் சிறந்து விளங்குவன.

திருஐயாறு

திருவையாறு, திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.
தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை.

மலையார் மடந்தை மனத்தன வானோர்
மகுடமன்னி
நிலையா யிருப்பன நின்றோர் மதிப்பன
நீணிலத்துப்
புலையாடு புன்மை தவிர்ப்பன பொன்னுல
கம்மளிக்கும்
அலையார் புனற்பொன்னி சூழ்ந்தவை யாற
னடித்தலமே. **#894**

தேவருலகத்தை வழங்கும், அலையோடு கூடிய நீரை உடைய காவிரி தென்புறத்தில் சூழ்ந்துள்ள ஐயாறன் அடித்தலங்கள் பார்வதியின் மனத்தனவாய், தேவர்களின் முடிகள் விளங்குவதனால் நிலையாகத் தம்மிடம் பொருந்தி யிருப்பனவாய், வழிபட்டு நிற்பவரால் மதிக்கப்படுவனவாய், இவ்வுலகின் கீழ்மையில் ஈடுபடும் புல்லிய பிறவியைப் போக்குவன ஆகும்.

திருஐயாறு

பொலம்புண்டரீகப் புதுமலர் போல்வன
போற்றியென்பார்
புலம்பும் பொழுதும் புணர்துணை யாவன
பொன்னனையாள்
சிலம்புஞ் செறிபா டகமுஞ் செழுங்கிண்
கிணித்திரளும்
அலம்புந் திருவடி காண்கவை யாற
னடித்தலமே. **#895**

ஐயாறன் அடித்தலங்கள் அப்பொழுது அலர்ந்த பொற்றாமரைமலர்கள் போல்வனவாய், தம்மை வழிபடுபவர் தனித்து வருந்தும்போதும் வருத்தத்தைப் போக்கும் துணையாவனவாய், பொன் போன்ற ஒளியையுடைய பார்வதியின் சிலம்பும் பாடகமும் கிண்கிணியும் தம்மிடையே ஒலிப்பனவாகும்.

திருஐயாறு

உற்றா ரிலாதார்க் குறுதுணை யாவன

வோதிநன்னூல்
கற்றார் பரவப் பெருமை யுடையன
காதல்செய்ய
கிற்பார் தமக்குக் கிளரொளி வானகந்
தான்கொடுக்கும்
அற்றார்க் கரும்பொருள் காண்கவை யாற
னடித்தலமே. **#896**

ஐயாறன் அடித்தலங்கள் தமக்கு உதவுவார் இல்லாது தனித்து வருந்துபவர்களுக்கு மேம்பட்ட துணையாவனவாய், சிவாகமங்களை ஓதி அனுபவப் பொருளை ஞானதேசிகர்பால் கேட்டு அறிந்த சான்றோர்கள் முன்நின்று துதிக்கும் பெருமை உடையனவாய், தம்மை விரும்பும் ஆற்றல் உடையவர்களுக்கு மேம்பட்ட ஞானஒளி வடிவமான வீட்டுலகை அளிப்பனவாய் ஏனைய பொருள்பற்று அற்றாருக்குக் கிட்டுதற்குச் சிறந்த பொருளாய் உள்ளனவாம்.

திருஐயாறு

வானைக் கடந்தண்டத் தப்பான் மதிப்பன
மந்திரிப்பார்
ஊனைக் கழித்துய்யக் கொண்டருள் செய்வன
வுத்தமர்க்கு
ஞானச் சுடராய் நடுவே யுதிப்பன
நங்கையஞ்ச
ஆனை யுரித்தன காண்கவை யாற
னடித்தலமே. **#897**

ஐயாறன் அடித்தலங்கள் தேவருலகையும் தாண்டி அதற்கு அப்பாலும் மதிக்கப்படுவனவாய், மந்திரங்களால் வழிபடுகின்றவர்களுடைய பிறவித்துயரைப் போக்கி உய்தி பெற அவர்களை அடிமையாகக் கொண்டு பேரின்பம் நல்குவனவாய், மேம்பட்ட சான்றோர்களுக்கு ஞானஒளியாய் அவர்கள் உள்ளத்தே தோன்றுவனவாய், பார்வதி அஞ்சுமாறு பெருமான் யானையைத் தோல் உரித்த காலை அந்த யானையின் உடலை அழுத்திப் பிடித்துக் கொள்ள உதவியனவாய் உள்ளன.

திருஐயாறு

மாதிர மானில மாவன வானவர்
மாமுகட்டின்
மீதன மென்கழல் வெங்கச்சு வீக்கின
வெந்நமனார்

தூதரை யோடத் துரப்பன துன்பறத்
தொண்டுபட்டார்க்
காதர மாவன காண்கவை யாற
னடித்தலமே. **#898**
ஐயாறன் அடித்தலங்கள் வானுலகும் மண் உலகும் ஆவனவாய்த் தேவர்களின் உச்சியின் மீது பொருந்துவன வாய், மென்மையான கழலும் விரும்பத்தக்க கச்சும் கட்டப்பட்டன வாய், கொடிய தருமராசரின் தூதர்களை ஓடச் செய்வனவாய், உலகத் துன்பங்கள் தீரத்தொண்டராய் அடிமைப் பணி செய்பவருக்குத் தாங்கும் பொருளாய் உள்ளன.

<u>திருஜயாறு</u>

பேணித் தொழுமவர் பொன்னுல காளப்
பிறங்கருளால்
ஏணிப் படிநெறி யிட்டுக் கொடுத்திமை
யோர்முடிமேல்
மாணிக்க மொத்து மரகதம் போன்று
வயிரமன்னி
ஆணிக் கனகமு மொக்குமை யாற
னடித்தலமே. **#899**
ஐயாறன் அடித்தலங்கள், விரும்பித் தொழும் அடியவர்கள் மேம்பட்ட வீட்டுலகத்தை ஆளுமாறு மிக்க அருளினாலே ஏணிப்படி போன்று ஏறிச் செல்லக் கூடிய வழியை அமைத்துக் கொடுத்து, தேவர்கள் முடிக்கு அணியத்தக்க மாணிக்கம், மரகதம், வைரம், தூய பொன் இவற்றை ஒத்து இருப்பனவாம்.

<u>திருஜயாறு</u>

ஓதிய ஞானமும் ஞானப் பொருளு
மொலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியு மாவன
விண்ணுமண்ணும்
சோதியுஞ் செஞ்சுடர் ஞாயிறு மொப்பன
தூமதியோ
டாதியு மந்தமு மானவை யாற
னடித்தலமே. **#900**
ஆதியும், அந்தமும் ஆகிய ஐயாறன் அடித்தலங்கள் வேதஆகமங்களை ஓதியதனால் பெற்ற அபர ஞானமும், ஞானப் பொருளாகிய பரஞானமும், ஒலியால் மேம்பட்ட அந்தணர்கள் ஓதும் வேதமும், வேதத்தை ஒட்டிச் செய்யப்படும் வேள்வியும் தேவருலகமும்

இந்நிலவுலகமும் அக்கினியும் சிவந்த ஒளியை உடைய சூரியனும் தூயமதியும் ஒப்பனவாய ஒளிப்பொருளுமாக உள்ளன.

திருஐயாறு

சுணங்கு முகத்துத் துணைமுலைப் பாவை
சுரும்பொடுவண்
டணங்குங் குழலி யணியார் வளைக்கரங்
கூப்பிநின்று
வணங்கும் பொழுதும் வருடும் பொழுதும்வண்
காந்தளொண்போ
தணங்கு மரவிந்த மொக்குமை யாற
னடித்தலமே. **#901**

ஐயாறன் அடித்தலங்கள் தேமல் படர்ந்த முன்பகுதியை உடைய இணையான தனங்களை உடைய பாவை போன்ற பார்வதி சுரும்பும் வண்டும் அழகுசெய்யும் கூந்தலை உடையவளாய் வளையல்களை அணிந்த கைகளைக் குவித்து நின்று வணங்கும் போதும் தடவிக்கொடுக்கும் போதும் காந்தட்பூவால் அழகுசெய்யப்பட்ட தாமரைப் பூக்களை ஒத்திருக்கின்றன. காந்தட்பூ - பார்வதிகைகள், தாமரை - பெருமான் திருவடிகள்.

திருஐயாறு

சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போதடித்
தொண்டர்துன்னும்
நிழலா வனவென்றும் நீங்காப் பிறவி
நிலைகெடுத்துக்
கழலா வினைகள் கழற்றுவ கால
வனங்கடந்த
அழலா ரொளியன காண்கவை யாற
னடித்தலமே. **#902**

ஐயாறன் அடித்தலங்கள் கலக்குகின்ற துயராகிய வெப்பம், தாக்கும் போது கைத்தொண்டு செய்யும் அடியவர்களுக்குப் பொருந்தும் நிழலானவையாய், ஒரு பொழுதும் நீங்காத பிறவி எடுக்கும் செயலைப் போக்கி, விடுத்து நீங்காத வினைகளை அப்புறப்படுத்துவனவாய்க் காலம் என்னும் காட்டினை எரித்து வென்ற தீயின் நிறைந்த ஒளியை உடையன.

திருஐயாறு

வலியான் றலைபத்தும் வாய்விட்டலற

வரையடர்த்து
மெலியா வலியுடைக் கூற்றை யுதைத்துவிண்
ணோர்கண்முன்னே
பலிசேர் படுகடைப் பார்த்துப்பன் னாளும்
பலரிகழ
அலியா நிலைநிற்கு மையனை யாற
னடித்தலமே. **#903**

நம் தலைவனாகிய ஐயாறனுடைய திருவடிகள் வலிமையை உடைய இராவணனின் தலைகள் பத்தும் வாய்விட்டு அலறுமாறு மலையால் அவனை அழுத்தி, குறையாக வலிமையை உடைய கூற்றுவனை உதைத்து, தேவர்கள் காண அவர்கள் முன்னே பிச்சை வழங்கும் வீட்டுவாயில்களை நோக்கிப் பல நாளும் பலரும் இகழுமாறு ஆண்மை நிலைக்கு ஏலாத அலியாம் நிலைக்கு உரிய செயல்களைச் செய்யும் இயல்பின.

திருக்கண்டியூர்

திருக்கண்டியூர்வீரட்டம்

திருக்கண்டியூர், திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டேசுவரர்.
தேவியார் : மங்கைநாயகியம்மை.

வானவர் தானவர் வைகன் மலர்கொணர்ந்
திட்டிறைஞ்சித்
தானவர் மால்பிர மன்னறி யாத
தகைமையினான்
ஆனவ னாதிபு ராணனன் றோடிய
பன்றியெய்த
கானவ னைக்கண்டி யூரண்ட வாணர்
தொழுகின்றதே. **#904**

தேவர்களும் தேவகணத்தவரான வித்தியாதரர்களும் நாள்தோறும் மலர்களைக் கொணர்ந்து சமர்ப்பித்து வணங்க வைகுந்தத்திலும் சத்தியலோகத்திலும் உள்ள திருமாலும் பிரமனும் உள்ளபடி அறிய முடியாத தன்மையுடைய வியாபகப்பொருளாகியவனாய், காளைவாகனனாய், மூலப் பழம்பொருளாய், அருச்சுனனுக்குப் பாசுபதாத்திரம் வழங்கக் கருதிய அன்று காட்டில் ஓடிய பன்றியை அம்பு எய்த வேடனாய் உள்ள பெருமானுடைய கண்டியூர்த் திருத்தலத்தை உலகில் உள்ள மக்கள் தொழுகின்றார்கள். கண்டியூரைத் தேவர்களும் தானவர்களும் மண்ணவர்களும் தொழுகின்றனர் என்றவாறு.

திருக்கண்டியூர்வீரட்டம்

வான மதியமும் வாளர வும்புன
லோடுசடைத்
தான மதுவென வைத்துழல் வான்றழல்
போலுருவன்
கான மறியொன்று கையுடை யான்கண்டி
யூரிருந்த
ஊனமில் வேத முடையனை நாமடி
யுள்குவதே. **#905**

வானத்தில் இயங்கவேண்டிய பிறை, ஒளி பொருந்திய பாம்பு கங்கை இவற்றிற்குத் தன் தலையைத் தங்குமிடமாக வழங்கித் திரிபவனாய், தீ நிறத்தினனாய், காட்டில் வாழும் மான்குட்டியைக் கையில்

ஏந்தியவனாய்க் கண்டியூரில் இருக்கும், குறைவு ஒன்றும் இல்லாத வேதத்தை உடைய பெருமானை அவன் திருவடிக்கண் நாம் தியானிப்போமாக.

திருக்கண்டியூர்வீரட்டம்

பண்டங் கறுத்ததோர் கையுடை யான்படைத்
தான்றலையை
உண்டங் கறுத்தது மூரொடு நாடவை
தானறியும்
கண்டங் கறுத்த மிடறுடை யான்கண்டி
யூரிருந்த
தொண்டர் பிரானைக்கண் டீரண்ட வாணர்
தொழுகின்றதே. **#906**

பிரமன் தலையைப் பண்டு நீக்கிய கையை உடையவனாய், விடத்தை உண்டு அதனைக் கழுத்தில் இறுத்திய அதனால் நீலகண்டனாய் உயிரினங்களின் அச்சத்தைப் போக்கிய செய்தியை ஊர்களும் நாடுகளும் அறியும். அத்தகைய பெருமான் தொண்டர்கள் தலைவனாய்க் கண்டியூரில் உகந்தருளியிருக்க அவனை அங்கே அண்டத்தில் வாழும் சான்றோர்கள் தொழுகின்றார்கள்.

திருக்கண்டியூர்வீரட்டம்

முடியின்முற் றாததொன் றில்லையெல் லாமுடன்
றானுடையான்
கொடியுமுற் றவ்விடை யேறியோர் கூற்றொரு
பாலுடையான்
கடியமுற் றவ்வினை நோய்களை வான்கண்டி
யூரிருந்தான்
அடியுமுற் றார்தொண்ட ரில்லைகண் டீரண்ட
வானவரே. **#907**

அவன் செய்துமுடிக்க நினைத்தால் வெற்றிகரமாக முடியாத செயல் ஒன்றுமில்லை. எல்லாப் பொருள்களையும் அப்பெருமான் தன்பால் உடையான். கொடியில் தன் உருவம் எழுதப்பட்ட வாகனமாக உடைய காளைமீது இவர்ந்து பார்வதி பாகனாய், அடியார்களுடைய கொடியவினைகளை அடியோடு நீக்குபவனாய்க் கண்டியூரில் உகந்தருளியிருக்கும் அப்பெருமானுடைய திருவடிகளைத் தொண்டர்களே அடைந்தனர். மேலுலகத்தேவர்கள் அடையவில்லை.

திருக்கண்டியூர்வீரட்டம்

பற்றியொ ரானை யுரித்தபி ரான்பவ
ளத்திரள்போல்
முற்று மணிந்ததொர் நீறுடை யான்முன்ன
மேகொடுத்த
கற்றங் குடையவன் றானறி யான்கண்டி
யூரிருந்த
குற்றமில் வேத முடையானை யாமண்டர்
கூறுவதே. #908
ஓர் யானையைக் கீழ்ப்படுத்தி அதன் தோலினை உரித்த தலைவனாய்,
பவளத்திரள் போன்ற மேனி முழுதும் திருநீறு அணிந்தவனாய்,
கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்த கண்ணனாக அவதரித்த
திருமாலால் அறியப்படாதவனாய்க் கண்டியூரில் உறைபவனாய்,
முன்னமே உலகுக்கு வழங்கிய குற்றமற்ற வேதங்களை உடையவனான
அப்பெருமானைத் தேவர்கள் போற்றுகின்றார்கள்.

திருக்கண்டியூர்வீரட்டம்

போர்ப்பனை யானை யுரித்த பிரான்பொறி
வாயரவம்
சேர்ப்பது வானத் திரைகடல் சூழுல
கம்மிதனைக்
காப்பது காரண மாகக் கொண் டான்கண்டி
யூரிருந்த
கூர்ப்புடை யொள்வாண் மழுவனை யாமண்டர்
கூறுவதே. #909
யானையை உரித்த தோலைப் போர்க்கின்ற பிரானாய், உடம்பில்
புள்ளிகளைக் கொண்ட பாம்பினை உடலில் சேர்த்து அணிந்தவனாய்,
வானளாவிய அலைகளை உடைய கடலால் சூழப்பட்ட
இவ்வுலகத்தைக் காப்பதற்காகக் கூர்மையை உடைய மழுப்படையைக்
கொண்ட கண்டியூர்ப் பெருமானைத் தேவர்கள் போற்றுகின்றார்கள்.

திருக்கண்டியூர்வீரட்டம்

அட்டது காலனை யாய்ந்தது வேதமா
றங்கமன்று
சுட்டது காமனைக் கண்ணத னாலே
தொடர்ந்தெரியக்
கட்டவை மூன்று மெரித்த பிரான்கண்டி
யூரிருந்த
குட்டமுன் வேதப் படையனை யாமண்டர்

கூறுவதே. **#910**

கூற்றுவனை அழித்து, வேதங்கள், ஆறு அங்கங்கள் என்ற இவற்றை ஆராய்ந்து, மன்மதனைக் கண்ணிலிருந்து தோன்றிய தீயினால் சுட்டு, தொடர்ந்து எரிந்து சாம்பலாகுமாறு மும்மதில்களையும் தீக்கு இரையாக்கிய தலைவனாய்க் கண்டியூரில் உறையும் கடல்போன்ற வேதங்களைத் தனக்குப் படையாக உடைய பெருமானையே தேவர்கள் போற்றுகின்றார்கள்.

<u>திருக்கண்டியூர்வீரட்டம்</u>

அட்டு மொலிநீ ரணிமதி யும்மல
ரானவெல்லாம்
இட்டுப் பொதியுஞ் சடைமுடி யானிண்டை
மாலையங்கைக்
கட்டு மரவது தானுடை யான்கண்டி
யூரிருந்த
கொட்டும் பறையுடைக் கூத்தனை யாமண்டர்
கூறுவதே. **#911**

உலகத்தை அழிக்கப் பேரொலியோடு வந்த கங்கையையும் பிறையையும் மலர்களையும் வைத்து உள்ளடக்கிய சடைமுடியை உடையவனாய், இண்டைமாலையையும், கையில் அணிகலனாக அணியும் பாம்பையும் உடையவனாய்க் கண்டியூரில் உகந்தருளியிருக்கும், பறையை ஒத்த உடுக்கையை உடைய கூத்தப் பெருமானைத் தேவர்கள் போற்றுகின்றார்கள்.

<u>திருக்கண்டியூர்வீரட்டம்</u>

மாய்ந்தன தீவினை மங்கின நோய்கண்
மறுகிவிழத்
தேய்ந்தன பாவஞ் செறுக்ககில் லாநம்மைச்
செற்றநங்கைக்
காய்ந்த பிரான்கண்டி யூரெம் பிரானங்க
மாறினையும்
ஆய்ந்த பிரானல்ல னோவடி யேனையாட்
கொண்டவனே. **#912**

மன்மதனை வெகுண்டு அழித்த பிரான், கண்டியூரை உகந்தருளியிருக்கும் பிரான், ஆறு அங்கங்களையும் ஆராய்ந்தபிரான் ஆகிய சிவபெருமான் அல்லனோ அடியேனை ஆட்கொண்டுள்ளான். அதனால் தீவினைகள் மறைந்தன; நோய்கள் செயலற்று ஒளிகுறைந்தன; கலங்கி விழுமாறு பாவங்கள் தேய்ந்து விட்டன.

தீவினை நோய்கள் பாவம் என்ற இவைகள் இனி நம்மை அழிக்க வலிமை அற்றனவாகிவிட்டன.

<u>திருக்கண்டியூர்வீரட்டம்</u>

மண்டி மலையை யெடுத்துமத் தாக்கியவ்
வாசுகியைத்
தண்டி யமரர் கடைந்த கடல்விடங்
கண்டருளி
உண்ட பிரானஞ் சொளித்த பிரானஞ்சி
யோடிநண்ணக்
கண்ட பிரானல்ல னோகண்டி யூரண்ட
வானவனே. **#913**

தம் ஆற்றலால் மிக்குச்சென்று மந்தரமலையைப் பெயர்த்துச் சென்று அதனை மத்தாகக்கொண்டு வாசுகி என்ற பாம்பைக் கடைகயிறாகச் சுற்றித் தேவர்கள் கடைந்த கடலிலிருந்து புறப்பட்ட விடத்தைக் கண்டு தேவர்கள் அஞ்சி ஓடிவந்து தன்னை அணுகுமாறு செய்தபிரானாய், அவர்களிடம் அருள்செய்து விடத்தை உண்ட பிரானாய்ப்பின் அது உள்ளே செல்லாதபடி கழுத்தில் அதனை ஒளிவீசுமாறு செய்த பெருமான் கண்டியூரிலுள்ள தேவர்தலைவன் அல்லனோ?

திருப்பாதிரிப்புலியூர்

திருப்பாதிரிப்புலியூர்

திருப்பாதிரிப்புலியூர், திருவிருத்தம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தோன்றாத்துணையீசுவரர்.
தேவியார் : தோகையம்பிகையம்மை.

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன்
றோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத்
துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன் றிருப்பா
திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி
யோங்களுக்கே. **#914**

திருப்பாதிரிப்புலியூரில் தன் அடியவர்களாகிய எங்களுக்கு ஊனக்கண்களுக்குத் தோன்றாத் துணைவனாய் இருந்த பெருமான், அடியேனுக்குத் தாயாய் தந்தையாய் உடன்பிறந்த, சகோதர சகோதரியாராய் அமைந்து, மூன்று உலகங்களையும் படைத்து மகிழ்ந்தவனாய், அடியேன் மனத்துள் இருக்க இசைந்தவனாய்த் தேவர்களுக்கும் அன்பனாகிய சிவபெருமான் ஆவான்.

திருப்பாதிரிப்புலியூர்

பற்றாய் நினைந்திடப் போதுநெஞ் சேயிந்தப்
பாரைமுற்றும்
சுற்றா யலைகடன் மூடினுங் கண்டேன்
புகனமக்கு
உற்றா னுமையவட் கன்பன் றிருப்பா
திரிப்புலியூர்
முற்றா முளைமதிக் கண்ணியி னான்றன
மொய்கழலே. **#915**

நெஞ்சே! இவ்வுலகை முழுதும் சுற்றிக்கொண்டு அலையை உடைய கடல் மூடிக் கொண்டாலும் நமக்கு உறுதுணையாய் உமாதேவிக்கு அன்பனாய்த் திருப்பாதிரிப்புலியூரில் பிறையைக் கண்ணியாகச் சூடிய சிவபெருமானுடைய எல்லா நலன்களும் செறிந்த திருவடிகளே நமக்கு அடைக்கலம் நல்குவன என்பதனை அறிந்துவிட்டேன். ஆதலின், அவற்றையே நமக்குப் பற்றுக்கோடாக எப்பொழுதும் நினைப்பாயாக.

நினைந்திடு எப்போதும் - பாடம்.

திருப்பாதிரிப்புலியூர்

விடையான் விரும்பியென் னுள்ளத் திருத்தா
னினிநமக்கிங்
கடையா வவல மருவினை சாரா
நமனையஞ்சோம்
புடையார் கமலத் தயன்போல் பவர்பா
திரிப்புலியூர்
உடையா னடிய ரடியடி யோங்கட்
கரியதுண்டே. **#916**

காளை வாகனனாகிய பெருமான் விரும்பி அடியேன் உள்ளத்தில் இருக்கின்றான். இனி நம்பக்கம் துயரங்கள்அடையா. தீவினைகள் நெருங்கா. கூற்றுவனுக்கு யாங்கள் அஞ்சமாட்டோம். பிரமனைப் போன்ற அந்தணர்கள் வாழ்வதும் நாற்பக்கங்களும் தாமரைகள் மலர்ந்திருப்பதுமாகிய திருப்பாதிரிப்புலியூர்ப் பெருமானுடைய அடியவர்களுக்கு அடித்தொண்டர்களாகிய எங்களுக்குச் செய்ய இயலாத அரிய செயல் என்பது ஒன்று உண்டோ?

திருப்பாதிரிப்புலியூர்

மாயமெல் லாமுற்ற விட்டிரு ணீங்க
மலைமகட்கே
நேயநிலாவ விருந்தா னவன்றன்
றிருவடிக்கே
தேயமெல் லாநின் றிறைஞ்சுந்
திருப்பாதிரிப்புலியூர்
மேயநல் லான்மலர்ப் பாதமென் சிந்தையு
ணின்றனவே. **#917**

மலைமகளாகிய பார்வதியிடத்தில் அன்பு நிலைபெற்றிருக்க உள்ளவனாகிய பெருமானுடைய திருவடிக்கண் உலகமெல்லாம் வந்து வழிபடுமாறு திருப்பாதிரிப்புலியூரில் விரும்பித்தங்கியிருக்கும் அப்பெரியவனுடைய தாமரை போன்ற திருவடிகள் மாயை எல்லாம் முழுதும் அகன்று ஆவணம் அகலுமாறு அடியேன் உடைய சிந்தையில் நிலையாக உள்ளன.

திருப்பாதிரிப்புலியூர்

வைத்த பொருணமக் காமென்று சொல்லி
மனத்தடைத்துச்

சித்த மொருக்கிச் சிவாய நமவென்
றிருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வா ரவர்பா
திரிப்புலியூர்
அத்த னருள்பெற லாமோ வறிவிலாப்
பேதைநெஞ்சே. **#918**

மெய்யுணர்தல் இல்லாத அறியாமையை உடைய மனமே! நமக்கு என்று சேமவைப்பாக உள்ள பொருள் சிவபெருமானே என்று சொல்லி அவனை மனத்தில் தியானித்து மனத்தை ஒருவழிப்படுத்திச் சிவாய நம என்று திருவைந்தெழுத்தை எப்பொழுதும் ஓதிக் கொண்டிருந்தால் அல்லது, செறிந்த கிரணங்களையுடைய சந்திரனைப்போன்று பல கலைகளில்வல்ல சான்றோர்கள் வாழும் திருப்பாதிரிப்புலியூரிலுள்ள தலைவனுடைய அருளைப் பெறுதல் இயலுமோ?

திருப்பாதிரிப்புலியூர்

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங்
கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்ற னாமம் பயின்றே
னுனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று
நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி
யூரரனே. **#919**

திருப்பாதிரிப்புலியூர்ப் பெருமானே! தாயின் கருவிலே கிடந்த போது உன் திருவடிகளையே தியானிக்கும் கருத்து உடையேனாய் இருந்தேன். கருவின் நீங்கி வெளிப்பட்ட உருவம் கிட்டிய பிறகு உன் அருளினால் இப்பொழுது ஆராய்ந்து உன் திருநாமங்களைப் பலகாலும் சொல்லப் பழகியுள்ளேன். வாய்க்குச் செல்வம் விளங்குமாறு திருவைந்தெழுத்தை ஓதித் திருநீறு இப்பொழுது அணியப் பெற்றேன் ஆதலின் அடியேனுக்கு மங்கலமான மார்க்கத்தைத் தருவாயாக.

திருப்பாதிரிப்புலியூர்

எண்ணா தமர ரிரக்கப் பரவையு
ணஞ்சையுண்டாய்
திண்ணா ரசுரர் திரிபுரந் தீயெழச்
செற்றவனே
பண்ணார்ந் தமைந்த பொருள்கள் பயில்பா
திரிப்புலியூர்க்

கண்ணார் நுதலாய் கழனங் கருத்தி
லுடையனவே. #920
முதலில் உன்னைத் தியானிக்காமல், கடலில் விடம் தோன்றிய பின் அமரர்கள் உன்னை வேண்டக்கடலில் தோன்றிய நஞ்சினை உண்டாய். வலிமை நிறைந்த அசுரர்களுடைய மும்மதில்களையும் அழித்தவனே! பண்ணின் பயனாம் நல்லிசைப் பாடல்கள் ஒலிக்கின்ற பாதிரிப் புலியூரில் உறையும் நெற்றிக்கண்ணனே! உன் திருவடிகள் எங்கள் உள்ளத்தில் உள்ளன.

திருப்பாதிரிப்புலியூர்

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி
யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ்
வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா
திரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கை செஞ்சடைமேல்வைத்த
தீவண்ணனே. #921
இவ்வுலகிலே அடியவர்களுக்கு இரக்கப்பட்டு அருள் செய்கின்ற, திருப்பாதிரிப் புலியூரில் உறையும், செழுமையான கங்கைநீரைச் செஞ்சடையில் தேக்கி வைத்திருக்கும் தீப்போன்ற செந்நிறத்துப் பெருமானே! அடியேன் மறுபிறவியில் புழுவாகப் பிறந்தாலும் புண்ணியமே வடிவெடுத்த உன் திருவடிகள் அடியேன் மனத்தை விட்டு நீங்காதிருக்குமாறு அடியேனுக்கு அருள் செய்ய வேண்டும்.

திருப்பாதிரிப்புலியூர்

மண்பாத லம்புக்கு மால்கடன் மூடிமற்
றேழுலகும்
விண்பா றிசைகெட் டிருசுடர் வீழினு
மஞ்சனெஞ்சே
திண்பா னமக்கொன்று கண்டோந் திருப்பா
திரிப்புலியூர்க்
`கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான
கழலிணையே. #922
நெஞ்சே! இவ்வுலகம் பாதல உலகுக்குப் போய் அழியுமாறு நிலநடுக்கம் உற்று உலகைக் கடல் வெள்ளம் மூட மற்ற ஏழுலகங்களும் வானத்திலே இருப்புக் குலைந்து சிதறச் சூரிய சந்திரர் தம் நிலையான இருப்பிடத்தைவிட்டுக் கீழே விழுந்தாலும் எதனைப் பற்றியும் அச்சம்

கொள்ளாதே. திருப்பாதிரிப்புலியூரில் உறையும் நெற்றிக்கண்ணனாய் ஞான ஒளியை உடைய பெருமானுடைய திரவடிகளாகிய திண்ணிய பகுதி நமக்குப் பாதுகாவலுக்கு உளது என்பதை நாம் அறிவோம்.

திருப்பாதிரிப்புலியூர்

திருந்தா வமணர் தந் தீநெறிப் பட்டுத்
திகைத்துமுத்தி
தருந்தா ளிணைக்கே சரணம் புகுந்தேன்
வரையெடுத்த
பொருந்தா வரக்க னுடனெரித் தாய்பா
திரிப்புலியூர்
இருந்தா யடியே னினிப்பிற வாமல்வந்
தேன்றுகொள்ளே. **#923**

மலையைப் பெயர்க்க முற்பட்ட, நல்லறிவு பொருந்தாத இராவணனுடைய உடலை நெரித்தவனே! திருப்பாதிரிப்புலியூரில் உறைபவனே! மனம் திருந்துதல் இல்லாத சமணருடைய தீயவழியிலே ஈடுபட்டு மனம் மயங்கி, இப்பொழுது முத்தியைத் தரும் திருவடிகளில் சரணமாகப் புகுந்து விட்டேன். இனி, அடியேன் பிறவி எடுக்காத வகையில் அடியேனை ஏற்றுக் கொள்வாயாக.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை

திருவீழிமிழலை, திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

வான்சொட்டச் சொட்டநின் றட்டும் வளர்மதி
யோடயலே
தேன்சொட்டச் சொட்டநின் றட்டுந் திருக்கொன்றை
சென்னிவைத்தீர்
மான்பெட்டை நோக்கி மணாளீர் மணிநீர்
மிழலையுளீர்
நான்சட்ட வும்மை மறக்கினு மென்னைக்
குறிக்கொண்மினே. **#924**

வானத்திலே நிலவொளி ஒழுக ஒழுக நின்று ஒளிவிடும் பிறையோடு அதன் அருகில் தேன் ஒழுகஒழுக நின்று, அழகு செய்யும் கொன்றை மலரைச் சென்னியில் அணிந்தவரே! பெண்மானின் பார்வை போன்ற மருண்ட நோக்கினை உடைய பார்வதியின் கணவரீர்! பளிங்குமணி போன்ற தெளந்த நீரை உடைய வீழிமிழலையில் உள்ள செம்மையீர்! அடியேன் உம்மை மறந்தாலும் அடியேனைத் தொண்டனாக மனத்துக் கொள்ளுங்கள்.

திருவீழிமிழலை

அந்தமு மாதியு மாகிநின் றீர்அண்ட
மெண்டிசையும்
பந்தமும் வீடும் பரப்புகின் றீர்பசு
வேற்றுகந்தீர்
வெந்தழ லோம்பு மிழலையுள் ளீர்என்னைத்
தென்றிசைக்கே
உந்திடும் போது மறக்கினு மென்னைக்
குறிக்கொண்மினே. **#925**

ஆதியும் அந்தமுமாக உள்ளவரே! உலகங்களின் எட்டுத்திசைகளிலும் பற்றினையும் பற்று நீக்கத்தையும் உயிரினங்கள் இடையே பரப்புகின்றவரே! காளையை இவர்தலை விரும்புகின்றவரே! விரும்பத்தக்க முத்தீயை அந்தணர் பாதுகாக்கும் மிழலை நகரில் உள்ளவரே! அடியேனைக் கூற்றுவன் தென் திசையில் செலுத்தும்

போது அடியேன் தங்களை மறந்தாலும் தாங்கள் அடியேனை மனத்தில் குறித்து வைத்துக் கொண்டு காப்பாற்ற வேண்டும்.

திருவீழிமிழலை

அலைக்கின்ற நீர்நிலங் காற்றன லம்பர
மாகிநின்றீர்
கலைக்கன்று சேருங் கரத்தீர் கலைப்பொரு
ளாகிநின்றீர்
விலக்கின்றி நல்கு மிழலையு ளீர்மெய்யிற்
கையொடுகால்
குலைக்கின்று நும்மை மறக்கினு மென்னைக்
குறிக்கொண்மினே. **#926**

அலைவீசும் நீர் நிலம் காற்று தீ ஆகாயம் என்ற ஐம்பூதங்களாகவும் உள்ளவரே! மான்கன்று பொருந்திய கையை உடையவரே! கலைகளினுடைய உண்மைப் பொருளாக உள்ளவரே! யாரையும் புறக்கணிக்காமல் அருள் வழங்கும் மிழலைப் பெருமானே! வாழ்க்கை இறுதிக் காலத்தில் உடம்பில் கைகளும் கால்களும் செயலிழக்க அடியேன் நும்மை மறந்தாலும் அடியேனை மனத்தில் குறித்துக் கொண்டு காக்கவேண்டும்.

திருவீழிமிழலை

தீத்தொழி லான்றலை தீயிலிட் டுச்செய்த
வேள்விசெற்றீர்
பேய்த்தொழி லாட்டியைப் பெற்றுடை யீர்பிடித்
துத்திரியும்
வேய்த்தொழி லாளர் மிழலையுள் ளீர்விக்கி
யஞ்செழுத்தும்
ஓத்தொழிந் தும்மை மறக்கினு மென்னைக்
குறிக்கொண்மினே. **#927**

தீயை ஓம்பும் தக்கனுடைய தலையைத் தீயிலிட்டு அவன் செய்த வேள்வியை அழித்தவரே! பேய்களைத் தன் விருப்பப் படி ஏவல்கொள்ளும் காளியைத் தேவியாகப் பெற்றுள்ளவரே! தம் கையில் முக்கோலாகிய மூங்கிலைச் சுமந்து திரியும் அந்தணர்கள் மிகுந்த மிழலையில் உள்ளவரே! இறுதிக் காலத்தில் விக்கல் எடுப்பதனால் திருவைந்தெழுத்தை ஓதுதலை மறந்து அடியேன் உம்மை மறந்தாலும் என்னைக் குறிக்கொள்மின்.

திருவீழிமிழலை

தோட்பட்ட நாகமுஞ் சூலமுஞ் சுற்றியும்
பத்திமையால்
மேற்பட்ட வந்தணர் வீழியு மென்மையும்
வேறுடையீர்
நாட்பட்டு வந்து பிறந்தே னிறக்க
நமன்றமர்தம்
கோட்பட்டு நும்மை மறக்கினு மென்னைக்
குறிக்கொண்மினே. **#928**

தோள்களில் பொருந்திய பாம்புகளையும் கையில் சூலத்தையும் மகிழ்ந்து அணிந்தும், தொண்டாம் தன்மையால் மேம்பட்ட அந்தணர்கள் வாழும் வீழி நகரையும் அடியேனையும் சிறப்பாக உடையீர்! நெடுங்காலம் உயிர்வாழ்ந்து பின் இறக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டு இவ்வுலகில் பிறப்பெடுத்த அடியேன் இறக்குந்தருவாயில் இயமனுடைய ஏவலரால் கைப்பற்றப்பட்டு உம்மை மறந்தாலும் என்னைக் குறிக்கொண்மின்.

<u>திருவீழிமிழலை</u>

கண்டியிற் பட்ட கழுத்துடை யீர்கரி
காட்டிலிட்ட
பண்டியிற் பட்ட பரிகலந் தீர்பதி
வீழிகொண்டீர்
உண்டியிற் பட்டினி நோயி லுறக்கத்தி
லும்மையைவர்
கொண்டியிற் பட்டு மறக்கினு மென்னைக்
குறிக்கொண்மினே. **#929**

உருத்திராக்கமாலை அணிந்த கழுத்தை உடையவரே! சுடுகாட்டில் எரிந்து புலால் நீங்கிய மண்டையோட்டினை உண்கலமாக உடையவரே! வீழிமிழலையை இருப்பிடமாகக் கொண்டவரே! உணவு உண்ட போதும், உணவின்றிப் பட்டினியாய் இருக்கும் போதும் நோயுற்ற போதும், உறங்கும்போதும், ஐம்பொறிகளால் செயற்படுத்தப்படும் அடியேன் உம்மை மறந்தாலும் அடியேனைக் குறிக்கொண்மின்.

<u>திருவீழிமிழலை</u>

தோற்றங்கண் டான்சிர மொன்றுகொண் டீர்தூய
வெள்ளெருதொன்
றேற்றங்கொண் டீரெழில் வீழி மிழலை
யிருக்கைகொண்டீர்
சீற்றங்கொண் டென்மேற் சிவந்ததொர் பாசத்தால்

வீசியவெம்
கூற்றங்கண் டும்மை மறக்கினு மென்னைக்
குறிக்கொண்மினே. #930

இவ்வுலகைப்படைத்த பிரமனுடைய தலை ஒன்றனைக் கொய்தவரே! தூய வெள்ளிய காளையை வானகமாகக் கொண்டவரே! அழகிய வீழிமிழலையை இருப்பிடமாகக் கொண்டவரே! கோபம் கொண்டு என்மேல் சிவந்ததொரு பாசக்கயிற்றை வீசும் கூற்றுவனைக் கண்டு அடியேன் உம்மை மறந்தாலும் என்னைக் குறிக்கொண்மின்.

<u>திருவீழிமிழலை</u>

சுழிப்பட்ட கங்கையுந் திங்களுஞ் சூடிச்சொக்
கம்பயின்றீர்
பழிப்பட்ட பாம்பரைப் பற்றுடை யீர்படர்
தீப்பருக
விழிப்பட்ட காமனை விட்டீர் மிழலையுள்
ளீர்பிறவிச்
சுழிப்பட்டு நும்மை மறக்கினு மென்னைக்
குறிக்கொண்மினே. #931

நீர்ச் சுழிகளை உடைய கங்கையையும் சந்திரனையும் சூடிச் சுத்த நிருத்தம் என்ற ஆடலை நிகழ்த்துபவரே! பிறரால் பழிக்கப்படும் பாம்பினை இடுப்பில் இறுகச் சுற்றியவரே! நெற்றிவிழியிலிருந்து தோன்றிய நெருப்பு காமனது உடலைச் சாம்பலாக்குமாறு செய்தவரே! வீழிமிழலையில் உள்ளவரே! அடியேன் பிறவிக்கடலின் சுழியில் அகப்பட்டு உம்மை மறந்தாலும் அடியேனைக் குறிக்கொண்மின்.

<u>திருவீழிமிழலை</u>

பிள்ளையிற் பட்ட பிறைமுடி யீர்மறை
யோத வல்லீர்
வெள்ளையிற் பட்டதொர் நீற்றீர் விரிநீர்
மிழலையுள்ளீர்
நள்ளையிற் பட்டைவர் நக்கரைப் பிக்க
நமன்றமர்தம்
கொள்ளையிற் பட்டு மறக்கினு மென்னைக்
குறிக்கொண்மினே. #932

இளைய பிறைச்சந்திரனை முடியில் அணிந்தவரே! வேதம் ஓதவல்லவரே! வெள்ளிய நீற்றை அணிந்தவரே! நீர் விரிந்து பரவிய மிழலையில் இருப்பவரே! ஐம்புலப்பொறிகளின் நடுவில் அகப்பட்டு அவை என்னைக் கண்டு சிரித்து என்னைப் பலகாலும் தேய்க்கும்படி

இயமதூதுவருடைய கொள்ளையிடும் செயலில் அகப்பட்டு அடியேன் உம்மை மறப்பினும் அடியேனைக் குறிக்கொண்மின்.

திருவீழிமிழலை

கறுக்கொண் டரக்கன் கயிலையைப் பற்றிய
கையுமெய்யும்
நெறுக்கென் றிறச்செற்ற சேவடி யாற்கூற்றை
நீறுசெய்தீர்
வெறிக்கொன்றை மாலை முடியீர் விரிநீர்
மிழலையுள்ளீர்
இறக்கின்று நும்மை மறக்கினு மென்னைக்
குறிக்கொண்மினே. **#933**

மனத்தில் ஆத்திரம் கொண்டு இராவணன் கயிலையைப் பெயர்க்கப் பயன்படுத்திய கைகளும் உடம்பும் நெரிக்கப்பட்டு நெறுநெறு என்ற ஒலியோடு அழியும்படி அவனை அழுத்திய திருவடிகளால் கூற்றுவனை அழித்தவரே! நறுமணம் கமழும் கொன்றை மாலையை முடியில் அணிந்தவரே! மிக்க நீர்வளமுடைய மிழலையில் உள்ளவரே! உயிர் போகும் நேரத்தில் அடியேன் உம்மை மறந்தாலும் அடியேனைக் குறிக்கொண்மின்.

திருச்சத்திமுற்றம்

திருச்சத்திமுற்றம்

திருச்சத்திமுற்றம், திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சிவக்கொழுந்தீசுவரர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

கோவாய் முடுகி யடுதிறற் கூற்றங்
குமைப்பதன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை
போகவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண் டாய்முழங்
குந்தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத் துறையுஞ்
சிவக்கொழுந்தே. **#934**

ஒலிக்கும் தீயினைக் கையில் ஏந்திய தேவனே! திருச்சத்திமுற்றத்தில் உகந்தருளியிருக்கும் சிவக்கொழுந்தே! தலைமை உடையவனாய் விரைந்து வந்து உயிரைப் போக்கும் திறமையை உடைய கூற்றுவன் என்னைத் துன்புறுத்துவதன் முன்னம், தாமரைப் பூப் போன்ற திருவடிகளின் அடையாளத்தை என்மேல் பொறித்து வைப்பாயாக. அங்ஙனம் பொறிக்காது வாளா விட்டு விட்டால் அழியாத பழி முழுதும் உன்னைச் சூழ்ந்து கொள்ளும் என்பதனை நீ உணர்வாயாக.

திருச்சத்திமுற்றம்

காய்ந்தா யனங்க னுடலம் பொடிபடக்
காலனைமுன்
பாய்ந்தா யுயிர்செகப் பாதம் பணிவார்தம்
பல்பிறவி
ஆய்ந்தாய்ந் தறுப்பா யடியேற் கருளாயுன்
னன்பர்சிந்தை
சேர்ந்தாய் திருச்சத்தி முற்றத் துறையுஞ்
சிவக்கொழுந்தே. **#935**

திருச்சத்திமுற்றத்து உறையும் சிவக்கொழுந்தே! மன்மதன் உடம்பு சாம்பலாகுமாறு அவனை வெகுண்டாய். கூற்றுவனை அவன் உயிர்போகும்படி உதைத்தாய். உன் திருவடிகளைப் பணிபவர்களின் பல பிறவிகளையும் அறுத்தருளுவாய். உன்னை வழிபடும் அடியவர்களுடைய உள்ளத்தை இருப்பிடமாகக் கொண்ட நீ

அடியேனுக்கு அருள்செய்வாயாக.

திருச்சத்திமுற்றம்

பொத்தார் குரம்பை புகுந்தைவர் நாளும்
புகலழிப்ப
மத்தார் தயிர்போன் மறுகுமென் சிந்தை
மறுக்கொழிவி
அத்தா வடியே னடைக்கலங் கண்டா
யமரர்கடம்
சித்தா திருச்சத்தி முற்றத் துறையுஞ்
சிவக்கொழுந்தே. **#936**

தேவர்கள் உள்ளத்தில் இருப்பவனாய் உள்ள திருச்சத்திமுற்றச் சிவக் கொழுந்துப் பெருமானே! பல துளைகள் உள்ள கூடாகிய இவ்வுடம்பில் புகுந்து ஐம்பொறிகளும் நாள்தோறும் அடியேனுக்குப் பற்றுக்கோடான உன் திருவடிப்பற்றினை அழிக்க, மத்தால் குழப்பப்படும் தயிர்போலச் சுழலும் என் சிந்தையின் கலக்கத்தை ஒழியச் செய்வாயாக. தலைவனே! அடியேன் உன் அடைக்கலம் என்பதனை நோக்குக.

திருச்சத்திமுற்றம்

நில்லாக் குரம்பை நிலையாக் கருதியிந்
நீணிலத்தொன்
றல்லாக் குழிவீழ்ந் தயர்வுறு வேனைவந்
தாண்டுகொண்டாய்
வில்லேர் புருவத் துமையாள் கணவா
விடிற்கெடுவேன்
செல்வா திருச்சத்தி முற்றத் துறையுஞ்
சிவக்கொழுந்தே. **#937**

வில் போன்ற புருவத்தை உடைய பார்வதி கணவனே! செல்வனே! சிவக்கொழுந்தே! நிலைபேறு இல்லாத உடம்பை நிலைபேறு உடையதாகக் கருதி இந்த நீண்ட உலகத்திலே பல துன்பங்களாகிய குழிகளில் விழுந்து சோர்வுறும் அடியேனை நீயாகவே வந்து அடிமை கொண்டுள்ளாய். அடியேனைக் கை விட்டால் அழிந்துவிடுவேன்.

திருச்சத்திமுற்றம்

கருவுற் றிருந்துன் கழலே நினைந்தேன்
கருப்புவியில்
தெருவிற் புகுந்தேன் றிகைத்தடி யேனைத்
திகைப்பொழிவி

உருவிற் றிகழு முமையாள் கணவா
விடிற்கெடுவேன்
திருவிற் பொலிசத்தி முற்றத் துறையுஞ்
சிவக்கொழுந்தே. **#938**

வடிவால் விளங்கும் பார்வதி கணவனே! செல்வத்தால் பொலிவுபெறும் சத்தி முற்றப் பெருமானே! கருப்பையை அடைந்த காலத்தும் உன் திருவடிகளையே தியானித்தேன். கருவில் இருந்து வெளிப்பட்டு வளர்ந்து தெருவில் புகுந்தபோது வியப்புற்ற அடியேனை உலகப்பொருள்களை வியப்போடு பற்றும் நிலையைப் போக்குவிப்பாய். அடியேனை உலகப்பற்றில் விடுவாயானால் வீணாகக் கெட்டுவிடுவேன்.

திருச்சத்திமுற்றம்

வெம்மை நமன்றமர் மிக்கு விரவி
விழுப்பதன்முன்
இம்மையுன் றாளென்றன் னெஞ்சத் தெழுதிவை
யீங்கிகழில்
அம்மை யடியேற் கருளுதி யென்பதிங்
காரறிவார்
செம்மை தருசத்தி முற்றத் துறையுஞ்
சிவக்கொழுந்தே. **#939**

பேரின்பவீட்டை நல்கும் சத்திமுற்றச் சிவக்கொழுந்தே! கொடிய இயமனுடைய ஏவலர் மிகுதியாகக் கூடி என்னைக் கீழே தள்ளுவதன் முன் இம்மை வாழ்விலேயே உன் திருவடிகளை என் நெஞ்சில் சுவடுபடும்படியாக வைப்பாயாக. இவ்வுலகில் என்னை நீ இகழ்ந்து புறக்கணித்து இருப்பாயானால் மறுமையிலே நீ அடியேனுக்கு அருளப் போகும் செய்தியை யாவர் அறிவார்கள்?

திருச்சத்திமுற்றம்

விட்டார் புரங்க ளொருநொடி வேவவொர்
வெங்கணையால்
சுட்டாயென் பாசத் தொடர்பறுத் தாண்டுகொள்
தும்பிபம்பும்
மட்டார் குழலி மலைமகள் பூசை
மகிழ்ந்தருளும்
சிட்டா திருச்சத்தி முற்றத் துறையுஞ்
சிவக்கொழுந்தே. **#940**

வண்டுகள் நெருங்கும் தேன் பொருந்திய மலர்களை அணிந்த கூந்தலை

உடைய பார்வதியின் வழிபாட்டினை விரும்பும் மேம்பட்டவனே! சிவக்கொழுந்தே! பகைவருடைய மதில்கள் ஒருநொடியில் வெந்து போகுமாறு கொடிய அம்பினால் சுட்டு நீறாக்கினாய், அடியேனுடைய உலகப்பற்றாகிய தொடர்பை நீக்கி அடிமை கொள்வாயாக

திருச்சத்திமுற்றம்

இகழ்ந்தவன் வேள்வி யழித்திட் டிமையோர்
பொறையிரப்ப
நிகழ்ந்திட வன்றே விசயமுங் கொண்டது
நீலகண்டா
புகழ்ந்த வடியேன்றன் புன்மைகள் தீரப்
புரிந்துநல்காய்
திகழ்ந்த திருச்சத்தி முற்றத் துறையுஞ்
சிவக்கொழுந்தே. **#941**

விளங்குகின்ற சத்திமுற்றச் சிவக்கொழுந்தே! நீலகண்டா! உன்னை அலட்சியம் செய்த தக்கனுடைய வேள்வியை அழித்து வேள்விக்கு வந்த தேவர்கள் தம்பிழையைப் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்ட உலகப் பிரசித்தமாக அந்நாளிலேயே வெற்றி கொண்ட உன் செயலைப் புகழ்ந்த அடியேனுடைய குறைபாடுகள் நீங்க விரும்பி அருளுவாயாக.

திருச்சத்திமுற்றம்

தக்கார்வ மெய்திச் சமண்தவிர்ந் துன்றன்
சரண்புகுந்தேன்
எக்காத லெப்பய னுன்றிற மல்லா
லெனக்குளதே
மிக்கார் திலையுள் விருப்பா மிகவட
மேருவென்னும்
திக்கா திருச்சத்தி முற்றத் துறையுஞ்
சிவக்கொழுந்தே. **#942**

சான்றோர் வாழும் தில்லைநகரில் விருப்புடையவனே! வடமேரு என்று சிறப்பித்துச் சொல்லப்படும் வடதிசைக்கு உரியவனே! சிவக்கொழுந்தே! பொருத்தமான விருப்பத்தைப் பொருந்திச் சமண் சமயத்தை விடுத்து உன் அடைக்கலமாக வந்து சேர்ந்தேன். உன்னைப் பற்றி செய்திகளைத் தவிர வேற்றுச் செய்திகளில் எந்த விருப்பமும் இல்லை. அவற்றால் எனக்கு எந்தப் பயனும் இல்லை.

திருச்சத்திமுற்றம்

பொறித்தே ரரக்கன் பொருப்பெடுப்புற்றவன்

பொன்முடிதோள்
இறத்தா ளொருவிர லூன்றிட் டலற
விரங்கியொள்வாள்
குறித்தே கொடுத்தாய் கொடியேன்செய் குற்றக்
கொடுவினைநோய்
செறுத்தாய் திருச்சத்தி முற்றத் துறையுஞ்
சிவக்கொழுந்தே. **#943**

சிவக்கொழுந்தே! இயந்திரத் தேரை உடைய இராவணன் கயிலையைப் பெயர்க்க முற்பட்டானாக அவனுடைய பொன்னாலாகிய முடிகளை அணிந்த தலைகளும் தோள்களும் நொறுங்குமாறு ஒரு விரலை அழுத்த அவன் அலற அவனிடம் இரக்கம் காட்டிப் பிரகாசமான வாளினை அவன் நலன் குறித்துக் கொடுத்தாய். தீவினையை உடைய அடியேன் செய்த குற்றமாகிய கொடிய வினையின் பயனாகிய நோயினை அழித்தாய்.

திருநல்லூர்

திருநல்லூர்

திருநல்லூர், திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பெரியாண்டேசுவரர்.
தேவியார் : திரிபுரசுந்தரியம்மை.

அட்டுமி னில்பலி யென்றென் றகங்கடை
தோறும்வந்து
மட்டவி ழுங்குழ லார்வளை கொள்ளும்
வகையென்கொலோ
கொட்டிய பாணி யெடுத்திட்ட பாதமுங்
கோளரவும்
நட்டநின் றாடிய நாதர்நல் லூரிடங்
கொண்டவரே. **#944**

ஒலிக்கப்பட்ட தாளங்களுக்கு ஏற்பக் கூத்து நிகழ்த்திய திருவடிகளும் கொலைத் தொழிலைச் செய்யும் பாம்பும் உடையவராய், நிலையாக நடனமாடும் தலைவராய், நல்லூரில் உகந்தருளியிருக்கும் பெருமான் 'உணவுக்குரிய பிச்சையிடுமின்' என்று வீடுகளின் வாசல்தோறும் வந்து தேன் ஒழுகும் கூந்தலை உடைய மகளிருடைய வளைகளைக் கைப்பற்றும் செயல் யாது காரணம் பற்றியதோ?

திருநல்லூர்

பெண்ணிட்டம் பண்டைய தன்றிவை பெய்பலிக்
கென்றுழல்வார்
நண்ணிட்டு வந்து மனைபுகுந் தாருநல்
லூரகத்தே
பண்ணிட்ட பாடல ராடல ராய்ப்பற்றி
நோக்கிநின்று
கண்ணிட்டுப் போயிற்றுக் காரண முண்டு
கறைக்கண்டரே. **#945**

நீலகண்டப் பெருமானார், பெண்கள் ஆசைப்படும் படி கொண்ட இவ்வடிவம் பண்டு கொண்ட வடிவமன்று; பிறர் வழங்கும் பிச்சைக்காகத் திரிபவராய் வீடுகளை அணுகிப் புகுந்தவராய் நல்லூரில் பண்ணோடு கூடிய பாடல்களைப்பாடுபவரும் ஆடுபவருமாக வந்து எங்களை நோக்கிநின்று கண்ணால் சாடை காட்டிப் போயினதற்கு ஒரு காரணம் உண்டு.

திருநல்லூர்

படவே ரரவல்குற் பாவைநல் லீர்பக
லேயொருவர்
இடுவா ரிடைப்பலி கொள்பவா போலவந்
தில்புகுந்து
நடவா ரடிக ணடம்பயின் றாடிய
கூத்தர்கொலோ
வடபாற் கயிலையுந் தென்பானல் லூருந்தம்
வாழ்பதியே. **#946**

படம் எடுக்கின்ற அழகிய பாம்பு போன்ற அல்குலை உடைய பெண்களாகிய நல்லவர்களே! பகல் நேரத்தில் ஒப்பற்ற பெருமானார் பிச்சை வழங்குபவர்களிடம் பிச்சை பெறுபவரைப்போல வந்து எங்கள் வீடுகளில் புகுந்து வீட்டை விட்டு நீங்காதவராக உள்ளார். அவர் வடக்கே கயிலைமலையையும் தெற்கே நல்லூரையும் தம் உறைவிடமாகக் கொண்டு கூத்தினை விரும்பி ஆடிய கூத்தர் போலும்.

திருநல்லூர்

செஞ்சுடர்ச் சோதிப் பவளத் திரள்திகழ்
முத்தனைய
நஞ்சணி கண்டனல் லூருறை நம்பனை
நானொருகால்
துஞ்சிடைக் கண்டு கனவின் றலைத்தொழு
தேற்கவன்றான்
நெஞ்சிடை நின்றக லான்பல காலமும்
நின்றனனே. **#947**

சிவந்த சூரியன் போன்ற ஒளியுடையவனாய்ப் பவளத்திரளிலே விளங்கும் முத்துப்போல நீறணிந்து விடத்தை அழகாகச் சூடிய நீலகண்டனாய் நல்லூரில் உறையும், நம்மால் விரும்பப்படும் பெருமானை அடியேன் ஒரு முறை உறக்கத்தினிடையே கனவில் கண்டு தொழுதேனாக அவன் தான் என் நெஞ்சினைவிட்டு அகலானாய்ப் பல காலமாக நெஞ்சில் நிலை பெற்றுள்ளான்.

திருநல்லூர்

வெண்மதி சூடி விளங்கநின் றானைவிண்
ணோர்கள்தொழ
நண்ணில யத்தொடு பாடல றாதநல்
லூரகத்தே

திண்னில யங்கொண்டு நின்றான் றிரிபுர
மூன்றெரித்தான்
கண்ணுளும் நெஞ்சத் தகத்து முளகழற்
சேவடியே. **#948**

வெண்பிறை சூடி உலகு விளங்கு நிற்பவனாய்த் தேவர்கள் தொழுமாறு கூத்தாடும் காட்சி நீங்காத நல்லூரை உறுதியான இருப்பிடமாகக் கொண்டு நிற்கும் திரிபுர சங்காரியினுடைய வீரக்கழல் கள் அணிந்த சேவடிகள் அடியேனுடைய கண்கள்முன்னும் நெஞ்சினகத்தும் உள்ளன.

திருநல்லூர்

தேற்றப் படத்திரு நல்லூ ரகத்தே
சிவனிருந்தால்
தோற்றப் படச்சென்று கண்டுகொள் ளார்தொண்டர்
துன்மதியால்
ஆற்றிற் கெடுத்துக் குளத்தினிற் றேடிய
வாதரைப்போல்
காற்றிற் கடுத்துல கெல்லாந் திரிதர்வர்
காண்பதற்கே. **#949**

எல்லார் உள்ளத்தும் தெளவு ஏற்படச் சிவபெருமான் திருநல்லூரிலே நிலையாக உறைந்திருந்தால் தங்களுக்கு அவன் காட்சி வழங்குமாறு அடியவர்கள் அக்கோயிலுக்குச் சென்று அவனைக் கண்டு கொண்டு நெஞ்சு நிறைவுபெறாதவராய், தம் பொருத்தமல்லாத புத்தியினால், ஆற்றில் இழந்த பொருளைக்குளத்தில் சென்று தேடும் அறிவிலிகளைப்போல, எம்பெருமானைத் தரிசிப்பதற்குக் காற்றை விட வேகமாக உலகமெங்கும் சுற்றித் திரிவர்.

திருநல்லூர்

நாட்கொண்ட தாமரைப் பூத்தடஞ் சூழ்ந்தநல்
லூரகத்தே
கீட்கொண்ட கோவணங் காவென்று சொல்லிக்
கிறிபடத்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவி யொடுமங்கொர்
வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தை யுரைக்குமன் றோவிவ்
வகலிடமே. **#950**

காலையிலே மலர்கின்ற தாமரைப் பூக்களை உடைய குளங்கள் ஊரைச் சுற்றி அமைந்திருக்கும் நல்லூரிலே கீளோடு கூடிய இக்கோவணத்தைப் பத்திரமாக வைத்திருந்து பின்னர் யான் வேண்டும் போது

கொடுப்பாயாக என்று சொல்லி வஞ்சனையாக அதனை மறைத்து, ஒளி பொருந்திய கண்களை உடைய அவன் மனைவியோடு அமர் நீதி என்ற வாணிகனை அடியவனாகக் கொண்ட புகழ்ச்செய்தியை இப்பரந்த உலகத்திலுள்ளவர்கள் சிறப்பாகப் பேசுகிறார்கள்.

திருநல்லூர்

அறைமல்கு பைங்கழ லார்ப்பநின் றானணி
யார்சடைமேல்
நறைமல்கு கொன்றையந் தாருடை யானுநல்
லூரகத்தே
பறைமல்கு பாடல னாடல னாகிப்
பரிசழித்தான்
பிறைமல்கு செஞ்சடை தாழநின் றாடிய
பிஞ்ஞகனே. **#951**

பிறை ஒளி வீசும் சிவந்த சடைகள் தொங்குமாறு காலை ஊன்றி நின்று ஆடிய, தலைக்கோலத்தை உடைய பெருமான், ஓசைமிக்க பசிய பொன்னாலாகிய கழல்கள் ஆரவாரிக்க நின்று, அழகிய சடை மீது தேன் நிரம்பிய கொன்றைப் பூமாலையை உடையவனாய் நல்லூரிலே பறை ஓசைக்கு ஏற்பப் பாடுதலையும் ஆடுதலையும் செய்தவனாகி அடியேனுடைய தன்மையை அழித்தவனாவான்.

திருநல்லூர்

மன்னிய மாமறை யோர்மகிழ்ந் தேத்த
மருவியெங்கும்
துன்னிய தொண்டர்க ளின்னிசை பாடித்
தொழுதுநல்லூர்க்
கன்னியர் தாமுங் கனவிடை யுன்னிய
காதலரை
அன்னிய ரற்றவ ரங்கண னேயரு
ணல்கென்பரே. **#952**

நிலைபெற்ற மேம்பட்ட வேதங்களை ஓதும் வேதியர்கள் மகிழ்ந்து துதிக்க, எங்கும் கலந்து பொருந்திய தொண்டர்கள் இனிய இசையைப் பாடித்தொழ, நல்லூரில் உள்ள திருமணம் ஆகாத மகளிர் கனவிலே தாம விரும்பிய காதலராகிய நல்லூர்ப் பெருமானைக் கண்டு, பிறருக்குத் தொடர்பற்றவர் அல்லராக உள்ள அழகிய கருணையை உடைய அப்பெருமானைத் தமக்கு அருள் நல்குமாறு வேண்டுவர்.

திருநல்லூர்

திருவமர் தாமரை சீர்வளர் செங்கழு
நீர்கொணெய்தல்
குருவமர் கோங்கங் குராமகிழ் சண்பகங்
கொன்றைவன்னி
மருவமர் நீள்கொடி மாட மலிமறை
யோர்கணல்லூர்
உருவமர் பாகத் துமையவள் பாகனை
யுள்குதுமே. **#953**

திருமகள் தங்கும் தாமரை, சிறப்பு வளரும் செங்கழுநீர், பறித்துச் சூடும் நெய்தல், நிறம் பொருந்திய கோங்கம், குரா, மகிழ், சண்பகம், கொன்றை, வன்னி, நறுமணம் கமழும் நீண்ட கொடிகள் இவற்றால் சூழப்பட்ட மறையோர்களுடைய மாடவீடுகள் நிறைந்த நல்லூரில் அழகு நிறைந்தவளாய் உள்ள பார்வதி பாகனை நாம் தியானிப்போமாக.

திருநல்லூர்

செல்லேர் கொடியன் சிவன்பெருங் கோயில்
சிவபுரமும்
வல்லேன் புகவு மதில்சூ ழிலங்கையர்
காவலனைக்
கல்லார் முடியொடு தோளிறச் செற்ற
கழலடியான்
நல்லூ ரிருந்த பிரானல்ல னோநம்மை
யாள்பவனே. **#954**

இடியை ஒத்து ஒலிக்கும் காளை வடிவு எழுதப்பட்ட கொடியை உடைய சிவபெருமானுடைய சிவபுரக் கோயிலகத்தும் புக வல்லேன் அடியேன். மதில்களால் சூழப்பட்ட இலங்கை நகர மக்களின் தலைவனான இராவணனுடைய மலையை ஒத்த உறுதியுடைய முடிகளோடு தோள்கள் நெரியுமாறு துன்புறுத்திய திருவடி களை உடையவனாய் நல்லூரில் உறையும் பெருமானே நம்மை அடிமையாக ஆள்பவன் ஆவான்.

திருவையாறு

திருஐயாறு

திருவையாறு, திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.
தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை.

அந்திவட் டத்திங்கட் கண்ணிய னையா
றமர்ந்துவந்தென்
புந்திவட் டத்திடைப் புக்குநின் றானையும்
பொய்யென்பனோ
சிந்திவட் டச்சடைக் கற்றை யலம்பச்
சிறிதலர்ந்த
நந்திவட் டத்தொடு கொன்றை வளாவிய
நம்பனையே. **#955**

வட்டமாகச் சடைக்கற்றையிலே தன் ஒளியைச் சிதறி வண்டுகள் ஒலிக்குமாறு சிறிது மலர்ந்த நந்தியாவட்டப் பூக்களோடு கொன்றைப் பூக்களும் கலக்குமாறு அணிந்த, நம்மால் விரும்பப்பெறும் பெருமானாய், மாலையிலே வட்ட வடிவோடு ஒளி வீசும் சந்திரனைப் பிறையாகக் கொண்டு முடிமாலையாக அணிந்து திருவையாற்றை விரும்பி உறைந்து அடியேனுடைய அறிவாகிய வட்டத்திடையே புகுந்து நிலையாக இருக்கும் பெருமானுடைய இருப்பினை அடியேன் பொய்ச்செயல் என்று கூறுவேனோ?

திருஐயாறு

பாடகக் கால்கழற் கால்பரி திக்கதி
ருக்கவந்தி
நாடகக் கானங்கை முன்செங்க ணேனத்தின்
பின்னடந்த
காடகக் கால்கணங் கைதொழுங் காலெங்
கணாய்நின்றகால்
ஆடகக் காலரி மாறேர வல்லனை
யாற்றனவே. **#956**

பாடகம் என்ற மகளிர் கால் அணியை அணிந்த திருவடி, கழல் என்ற ஆடவர் காலணியை அணிந்த திருவடி, சூரியனுடைய கதிர்கள் மறைதற்குரிய மாலையிலே கூத்தாடும் திருவடிகள், பார்வதிக்கு முன்னர் சிவந்த கண்களை உடைய பன்றியின் பின்னே காட்டுப்பகுதியில் நடந்த

திருவடிகள், அடியவர் கூட்டங்கள் வழிபடும் திருவடிகள், எமக்குப் பற்றுக்கோடாய் நிற்கும் திருவடிகள், பொன் போன்ற திருவடிகள், அரியாகிய திருமால் திருவடியின் இருப்பைப் பன்றி வடிவெடுத்துப் பூமியை அகழ்ந்து சென்று ஆராயுமாறு பேராற்றலுடையன என்னுமாறு ஐயாற்று எம்பெருமானுடைய திருவடிகள் உள்ளன.

திருவேகம்பம்

திருஏகம்பம்

திருவேகம்பம், திருவிருத்தம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஏகாம்பரநாதர்.
தேவியார் : காமாட்சியம்மை.

ஓதுவித் தாய்முன் னறவுரை காட்டி
யமணரொடே
காதுவித் தாய்கட்ட நோய்பிணி தீர்த்தாய்
கலந்தருளிப்
போதுவித் தாய்நின் பணிபிழைக் கிற்புளி
யம்வளாரால்
மோதுவிப் பாயுகப் பாய்முனி வாய்கச்சி
யேகம்பனே. **#957**

காஞ்சிபுரத்தில் ஒற்றை மாமர நிழலில் இருக்கும் பெருமானே! அடியேனுடைய வாழ்க்கையின் முற்பகுதியில் சமணருடைய அறவுரைகளைப் பின்பற்றத்தக்கனவாக உள்ளத்தில் தெரிவித்துச் சமண சமய நூல்களை ஓதுமாறு செய்தாய். பிறகு அவர்களே என்னை அழிப்பதற்கு முயலுமாறு செய்தாய். கொடிய நோயினால் அடியேன் பிணிக்கப்பட்டிருந்த நிலையை நீக்கினாய். அடியேனுடைய உள்ளத்தில் கலந்து சமண சமயத்திலிருந்து சைவ சமயத்துக்குப் புகச் செய்தாய். உன்னுடைய திருத்தொண்டில் தவறு செய்வேனாயின் அடியேனைப் புளிய மரக்குச்சியால் அடித்துத் தண்டிப்பாயாக. நீ சர்வ சுதந்திரன் ஆதலின் நீ விரும்பியதை உகப்பதும் விரும்பாததை வெறுப்பதும் செய்வாய். அடியேனை, உன் திருவுள்ளம் எவ்வாறு உள்ளதோ அவ்வாறு நடத்துவாயாக.

திருஏகம்பம்

எத்தைக்கொண் டெத்தகை யேழை யமணொ
டிசைவித்தெனைக்
கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டு வித்தென்னக்
கோகுசெய்தாய்
முத்திற் றிரளும் பளிங்கினிற் சோதியு
மொய்பவளத்
தொத்தினை யேய்க்கும் படியாய் பொழிற்கச்சி
யேகம்பனே. **#958**

முத்தின் குவியலும் பளிங்கின் ஒளியும் செறிந்த பவளக் கொத்தினை ஒத்துச் செம்மேனியில் வெண்ணீறு அணிந்திருக்கும் கச்சி ஏகம்பனே! யாது காரணம் பற்றி அடியேனை எப்பேர்ப்பட்ட அறிவில்லாத சமணரோடு உறவு கொள்ளச் செய்து குருடனுக்கு ஊமை வழிகாட்டுவித்தாற் போன்ற இழிவினைச் செய்துவிட்டாய்?

திருஏகம்பம்

மெய்யம்பு கோத்த விசயனொ டன்றொரு
வேடுவனாய்ப்
பொய்யம்பெய் தாவ மருளிச்செய் தாய்புர
மூன்றெரியக்
கையம்பெய் தாய்நுன் கழலடி போற்றாக்
கயவர்நெஞ்சில்
குய்யம்பெய் தாய்கொடி மாமதில் சூழ்கச்சி
யேகம்பனே. **#959**

கச்சி ஏகம்பனே! உண்மையாக அம்புகளை வில்லில் சேர்த்துப் போரிட்ட அருச்சுனனோடு அக் காலத்தில் ஒரு வேடன் வடிவினனாய்ப் பொய்யாக அம்பை வில்லில் சேர்த்து அவனோடு போரிட்டு அவனுக்கு அம்பறாத் தூணியை அருளிச் செய்தவனே! முப்புரமும் தீக்கு இரையாகுமாறு கைகளால் அம்பு எய்தவனே! உன்னுடைய வீரக் கழல்கள் அணிந்த திருவடிகளைப் போற்றாத கயவர்களுடைய உள்ளத்தில் மாயையால் உண்மையை மறைத்தல் செய்தவனே! குய்யம் - வஞ்சனை. (சிந்தாமணி-253)

திருஏகம்பம்

குறிக்கொண் டிருந்துசெந் தாமரை யாயிரம்
வைகல்வைகல்
நெறிப்பட விண்டை புனைகின்ற மாலை
நிறையழிப்பான்
கறைக்கண்ட நீயொரு பூக்குறை வித்துக்கண்
சூல்விப்பதே
பிறைத்துண்ட வார்சடை யாய்பெருங் காஞ்சியெம்
பிஞ்ஞகனே. **#960**

மதியின் கூறாகிய பிறையை அணிந்த நீண்ட சடையனே! பெரிய காஞ்சி மாநகரில் உள்ளாயாய்த் தலைக்கோலம் என்ற அணியை அணிந்தவனே! நாளும் ஆயிரம் பூக்களால் இண்டை மாலை தொடுத்துச் சிவபெருமானுக்கு அணிவிக்க வேண்டும் என்ற குறிக்கோளோடு இருந்து நாள்தோறும் ஆயிரம் செந்தாமரை மலர்களால் வரிசை அமைய

இண்டை மாலையைத் தொடுக்கின்ற திருமாலுடைய மனநிறைவை அழிப்பவன் போல நீலகண்டனாகிய நீ ஒரு பூவைக் குறையச் செய்து அப்பூவின் தானத்தில் செந்தாமரை போன்ற தன் கண்ணை இடந்து அவன் பூவாகத் தொடுப்பதற்காக அவன் கண் ஒன்றனைத் தோண்டி எடுக்குமாறு செய்தாயே.

திருஏகம்பம்

உரைக்குங் கழிந்திங் குணர்வரி யானுள்கு
வார்வினையைக்
கரைக்கு மெனக்கை தொழுவதல் லாற்கதி
ரோர்களெல்லாம்
விரைக்கொண் மலரவன் மாலெண் வசுக்களே
காதசர்கள்
இரைக்கு மமிர்தர்க் கறியவொண் ணானெங்க
ளேகம்பனே. **#961**

சொற்களால் தன் பெருமையைச் சொல்ல இயலாதவனாய், மனத்தாலும் உணர்வதற்கு அரியவனாய்த் தன்னை வணங்கு பவர்களுடைய வினைகளைச் செயலற்றன ஆக்குவான் என்ற கருத்தொடு கையால் தொழுவதே அல்லாமல், எங்கள் ஏகம்பப் பெருமான் பிரமன், திருமால், ஆதித்தர் பன்னிருவர், வசுக்கள் எண்மர், உருத்திரர் பதினொருவர் முதலாகத் தன்னை உரத்த குரலில் துதிக்கும் தேவர்களுக்கும் உள்ளவாறு அறிய இயலாதவன் ஆவான்.

திருஏகம்பம்

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே
காண்பதற்கு
உருகிற்றெ னுள்ளமும் நானுங் கிடந்தலந்
தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா
திருவாரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி
யேகம்பனே. **#962**

திருவொற்றியூரா! திருவாலவாயா! திருவாரூரா! கச்சிஏகம்பனே! அடியேன் தாயாரினுடைய கருவிலே பொருந்திய நாள்முதலாக உன் திருவடியைக் காண்பதற்கு அடியேனுடைய உள்ளம் உருகுகிறது. அடியேனும் கிடந்து வருந்தி இளைத்துச் செயலற்று விட்டேன். அடியேனுக்கு உன்னைத் தவிர வேறு அடைக்கலம் இல்லை என்பதனையும் கண்டு அடியேன்மாட்டு இரக்கம் கொள்வாயாக.

திருஏகம்பம்

அரியய னிந்திரன் சந்திரா தித்த
ரமரரெல்லாம்
உரியநின் கொற்றக் கடைத்தலை யாருணங்
காக்கிடந்தார்
புரிதரு புன்சடைப் போக முனிவர்
புலம்புகின்றார்
எரிதரு செஞ்சடை யேகம்ப வென்னோ
திருக்குறிப்பே. **#963**

தீப் போன்ற ஒளியை உடைய சிவந்த சடைமுடியனாகிய ஏகம்பனே! திருமால், பிரமன், இந்திரன், சந்திரன், சூரியன் முதலிய தேவர்கள் எல்லோரும் உரிய உன்னுடைய வெற்றி பொருந்திய கோயிலின் முதல்வாசலில் உன் காட்சியை விரும்பி வாடிக் கிடக்கின்றார்கள். முறுக்கேறிய சிவந்த சடைகளை உடைய, சிவானந்த போகத்தைத் துய்க்க விரும்பும் முனிவர்களும் உன் காட்சி கிட்டாமையால் தனிமைத் துன்பம் உறுகின்றார்கள். அவர்களுக்குக் காட்சி வழங்குவது பற்றி உன் திருவுள்ளம் யாதோ? அருளுவாயாக.

திருஏகம்பம்

பாம்பரைச் சேர்த்திப் படருஞ் சடைமுடிப்
பால்வண்ணனே
கூம்பலைச் செய்த கரதலத் தன்பர்கள்
கூடிப்பன்னாள்
சாம்பரைப் பூசித் தரையிற் புரண்டுநின்
றாள்சரணென்
றேம்பலிப் பார்கட் கிரங்குகண் டாய்கச்சி
யேகம்பனே. **#964**

பாம்பினை இடுப்பில் இறுகக் கட்டிப் பரவிய சடைமுடியை உடைய பால் நிறத்தனே! சச்சி ஏகம்பனே! அடியார்கள் இருகைகளையும் குவித்துக் கொண்டு திருநீற்றைப் பூசிக்கொண்டு அடியார் குழாத்துடன் கூடிப் பலநாள்களாகத் தரையில் புரண்டு உன் திருவடிகளே தங்களுக்கு அடைக்கலம் என்று கூறிவந்து அடைந்துள்ளனர். அவர்களுக்கு நீ இரங்கி அருளுவாயாக.

திருஏகம்பம்

ஏன்றுகொண் டாயென்னை யெம்பெரு மானினி
யல்லமென்னில்

சான்றுகண் டாயிவ் வுலகமெல் லாந்தனி
யேனென்றெனை
ஊன்றிநின் றாரைவர்க் கொற்றிவைத் தாய்பின்னை
யொற்றியெல்லாம்
சோன்றுகொண் டாய்கச்சி யேகம்ப மேய
சுடர்வண்ணனே. **#965**

கச்சி ஏகம்பத்தில் விரும்பி உறைகின்ற ஒளி வடிவினனே! எம் பெருமானே! அடியேனை உன் அடியவன் என்று ஏற்றுக் கொண்ட நீ இப்பொழுது அடியேனை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று கூறினால், நீ அடியேனை ஏற்றுத் கொண்டதற்கு இவ்வுலகம் முழுதும் சாட்சி என்பதனை நினைத்துப்பார். தன் உணர்வு இல்லாதவன் என்று அடியேனைப் பற்றி நின்ற ஐம்பொறிகளுக்கும் போக்கியப் பொருளாக வழங்கிப் பின் அந்தப் போக்கியப் பொருளாயிருந்த தன்மையிலிருந்து அடியேனை மீட்டுக் கொண்டாய் என்பதனை உளம் கொள்வாயாக.

திருஏகம்பம்

உந்திநின் றார்உன்றன் ஓலக்கச் சூளைகள்
வாய்தல் பற்றித்
துன்றிநின் றார்தொல்லை வானவ ரீட்டம்
பணியறிவான்
வந்துநின் றாரய னுந்திரு மாலு
மதிற்கச்சியாய்
இந்தநின் றோமினி யெங்ஙன மோவந்
திறைஞ்சுவதே. **#966**

மதில்கள் உடைய காஞ்சி நகரில் உறைபவனே! உன்னுடைய திருவோலக்க மண்டபத்தின் வாயிலைப் பொருந்தித் தேவலோக அரம்பையர்கள் ஒருவரை ஒருவர் நெருக்கிக் கொண்டு நிற்கிறார்கள். பழைய வானவர் கூட்டத்தினர் தமக்கு இடப்படும் திருத்தொண்டு யாது என்று அறிவதற்கு ஓலக்கத்தில் நெருக்கமாக நின்று கொண்டிருக்கிறார்கள். பிரமனும் திருமாலும் அம்மண்டபத்தில் வந்து நிற்கிறார்கள். இவ்விடத்தில் நிற்கின்ற அடியோங்கள் அவ்வளவு கூட்டம் நிரம்பிய உன் திருவோலக்க மண்டபத்தில் எங்ஙனம் வந்து உன்னைக் கண்டு வழிபடல் இயலும்?

திருவின்னம்பர்

திருஇன்னம்பர்

திருவின்னம்பர், திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : எழுத்தறிந்தவீசுவரர்.
தேவியார் : கொந்தார்பூங்குழலம்மை.

மன்னு மலைமகள் கையால் வருடின
மாமறைகள்
சொன்ன துறைதொறுந் தூப்பொரு ளாயின
தூக்கமலத்
தன்ன வடிவின வன்புடைத் தொண்டர்க்
கமுதரும்பி
இன்னல் களைவன வின்னரம்ப ரான்ற
னிணையடியே. **#967**

இன்னம்பர் எம்பெருமானுடைய திருவடி இணைகள் இமவான் மகளாகிய பார்வதியின் கைகளால் அழுத்தித் தடவப் பட்டன. வேதங்கள் குறிப்பிடும் துறைகளை எல்லாம் பின்பற்றுவதற்குப் பற்றுக்கோடாம் பொருளாய் உள்ளன. தூய தாமரை போன்ற வடிவின; தம்மாட்டு அன்புடைய அடியவர்களுக்கு அமுது வழங்கி அவர்களுடைய துயர்களைப் போக்குவன.

திருஇன்னம்பர்

பைதற் பிணக்குழைக் காளிவெங் கோபம்பங்
கப்படுப்பான்
செய்தற் கரிய திருநடஞ் செய்தன
சீர்மறையோன்
உய்தற் பொருட்டுவெங்கூற்றை யுதைத்தன
வும்பர்க்கெல்லாம்
எய்தற் கரியன வின்னம்ப ரான்ற
னிணையடியே. **#968**

இன்னம்பரான் தன் இணை அடிகள் இளம் பிள்ளைகளின் பிணங்களைக் காதணிகளாக அணியும் காளியின் கொடிய கோபத்தைப் போக்குவதற்கு மற்றவர்களால் செய்தற்கு அரிய திருக்கூத்தினை நிகழ்த்துவன. சிறப்புடைய அந்தணனாகிய மார்க்கண்டேயன் உயிர் தப்புவதற்காகக் கொடிய கூற்றுவனை உதைத்தன. தேவர்களுக்கெல்லாம் கிட்டுதற்கு அரியன.

திருஇன்னம்பர்

சுணங்குநின் றார்கொங்கை யாளுமை சூடின
தூமலரால்
வணங்கிநின் றும்பர்கள் வாழ்த்தின மன்னு
மறைகடம்மில்
பிணங்கிநின் றின்னன வென்றறி யாதன
பேய்க்கணத்தோ
டிணங்கிநின் றாடின வின்னம்ப ரான்ற
னிணையடியே. **#969**

இன்னம்பரான் தன் இணையடிகள் தேமல் படர்ந்த கொங்கைகளை உடைய உமாதேவியால் சூடப்பட்டன; தேவர்கள் வணங்கிநின்று தூய மலர்களைத் தூவி வாழ்த்துதலைப் பொருந்தியன; என்றும் நிலைபெற்ற நான்கு வேதங்களும் தம்முள் கருத்து மாறுபட்டு உண்மையில் இத்தன்மையன என்று அறியப்படாதன; பேய்க் கூட்டத்தொடு கலந்து நின்று கூத்து நிகழ்த்தின.

திருஇன்னம்பர்

ஆறொன் றியசம யங்களி னவ்வவர்க்
கப்பொருள்கள்
வேறொன்றி லாதன விண்ணோர் மதிப்பன
மிக்குவமன்
மாறொன்றி லாதன மண்ணொடு விண்ணகம்
மாய்ந்திடினும்
ஈறொன்றி லாதன வின்னம்ப ரான்ற
னிணையடியே. **#970**

இன்னம்பரான் தன் இணையடிகள் ஆறு ஆறாக நான்கு வகைகளில் அடங்கிய சமயங்களைச் சார்ந்தவர்களுக்கு வேறாகாது அவ்வப் பொருள்களாக நின்று அருள்புரிவன; தேவர்களால் மதிக்கப்படுவன; தம்மை ஒப்பனவும் தம்மின் மிக்கனவும் இல்லாதன; நில உலகமும் மேல் உலகமும் அழிந்த காலத்தும் தமக்கு அழிவு இல்லாதன

திருஇன்னம்பர்

அரக்கர்தம் முப்புர மம்பொன்றி னாலட
லங்கியின்வாய்க்
கரக்கமுன் வைதிகத் தேர்மிசை நின்றன
கட்டுருவம்
பரக்கவெங் கானிடை வேடுரு வாயின

பல்பதிதோ
றிரக்க நடந்தன வின்னம்ப ரான்ற
னிணையடியே. #971
இன்னம்பரான் தன் இணை அடிகள், அரக்கர்களுடைய முப்புரங்களும் அம்பு ஒன்றினால் அழிக்கும் நெருப்பிற்கு இரையாகி மறையுமாறு அக்காலத்தில் வேதங்களாகிய குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் நின்றன; எடுத்துக்கொண்ட வேடர் வடிவம் சிறக்குமாறு கொடிய காட்டிலே வேடர்களுடைய அடிகளின் வடிவின ஆயின; பல ஊர்கள்தோறும் பிச்சை எடுக்க நடந்தன.

திருஇன்னம்பர்

கீண்டுங் கிளர்ந்தும்பொற் கேழன்முன் றேடின
கேடுபடா
ஆண்டும் பலபல வூழியு மாயின
வாரணத்தின்
வேண்டும் பொருள்கள் விளங்கநின் றாடின
மேவுசிலம்
பீண்டுங் கழலின வின்னம்ப ரான்ற
னிணையடியே. #972
இன்னம்பரான் தன் இணையடிகள், நிலத்தைக் கிழித்தும் கிளரியும் பொலிவை உடைய பன்றி வடிவெடுத்த திருமாலால் தேடப்பட்டன; எத்தனை ஆண்டுகள் ஆனாலும் ஊழிகள் கடந்தாலும் கெடுதியை அடையாதன; வேதங்களின் விரும்பிய பொருள் புலப்படுமாறு திருக்கூத்து நிகழ்த்தின; விரும்பிய சிலம்பும் கழலும் அணிந்தன.

திருஇன்னம்பர்

போற்றுந் தகையன பொல்லா முயலகன்
கோபப்புன்மை
ஆற்றுந் தகையன வாறு சமயத்
தவரவரைத்
தேற்றுந் தகையன தேறிய தொண்டரைச்
செந்நெறிக்கே
ஏற்றுந் தகையன வின்னம்ப ரான்ற
னிணையடியே. #973
இன்னம்பரான் தன் இணையடிகள், வழிபடத் தக்கன; கொடிய முயலகனுடைய வெகுளியால் ஏற்பட்ட இழிவைப் போக்கும் தன்மையன; அறு வகைச் சமயங்களைச் சார்ந்த அடியவர்களைத் தெளவிக்கும் தன்மையன; தெளவடைந்த அடியவர்களை மேம்பட்ட

நெறிக்கண் உயர்த்தும் தன்மையன.

திருஇன்னம்பர்

பயம்புன்மை சேர்தரு பாவந் தவிர்ப்பன
பார்ப்பதிதன்
குயம்பொன்மை மாமல ராகக் குலாவின்
கூடவொண்ணாச்
சயம்புவென் றேதகு தாணுவென் றேசதுர்
வேதங்கணின்
றியம்புங் கழலின வின்னம்ப ரான்ற
னிணையடியே. **#974**

இன்னம்பரான் தன் இணை அடிகள், அச்சமும் கீழ்மையும் ஒரு சேர வழங்கும் பாவங்களைப் போக்குவன; பார்வதியினுடைய தனங்களாகிய பொலிவுடைய தாமரை மொட்டுக்களைத் தாமரைப் பூக்களாகிய தம் இனத்தனவாகக் கொண்டு நட்புச் செய்தன; அவன் அருளாலன்றித் தம் முயற்சியால் மாத்திரம் அடைய முடியாத தான்தோன்றி என்று சொல்லத் தகுந்த சிவபெருமானே அத்திருவடிகள் என்று நான்கு வேதங்களும் இயம்பும் சிறப்பினவாய்க் கழல்களை அணிந்தன, சிவபெருமான் செய்யும் அருள்களை அவன் திருவடிகளே வழங்கும் என்பதாம்.

திருஇன்னம்பர்

அயனொடு மாலிந் திரன்சந்த்ரா தித்த
ரமரரெலாம்
சயசய வென்றுமுப் போதும் பணிவன
தண்கடல்சூழ்
வியனில முற்றுக்கும் விண்ணுக்கும் நாகர்
வியனகர்க்கும்
இயபர மாவன வின்னம்ப ரான்ற
னிணையடியே. **#975**

இன்னம்பரான் தன் இணையடிகள், பிரமன், திருமால், இந்திரன், சந்திரன், சூரியன் மற்றுள்ள தேவர்கள் எல்லோரும் சய சய என்று பல்லாண்டு பாடிக் காலை நண்பகல் அந்தி என்ற முப்பொழுதுகளிலும் பணியும் திறத்தன. குளிர்ந்த கடலால் சூழப்பட்டபரந்த இந்த நில உலகத்தில் உள்ளவர்களுக்கும் தேவர் உலகத்தவருக்கும் நாகர் உலகத்தவருக்கும் இம்மை இன்பமும் மறுமை இன்பமும் நல்குவன.

திருஇன்னம்பர்

தருக்கிய தக்கன்றன் வேள்வி தகர்த்தன

தாமரைப்போ
துருக்கிய செம்பொ னுவமனி லாதன
வொண்கயிலை
நெருக்கிய வாளரக் கன்றலை பத்து
நெரித்தவன்றன்
இருக்கியல் பாயின வின்னம்ப ரான்ற
னிணையடியே. **#976**

இன்னம்பரானுடைய இணையடிகள், செருக்குற்ற தக்கனுடைய வேள்வியை அழித்தன; தாமரைப் பூ, உருக்கிய செம்பொன் என்பனவும் தமக்கு உவமம் ஆகாத வகையில் அவற்றிலும் மேம்பட்டன; கயிலையைப் பெயர்க்க முற்பட்ட கொடிய இராவணனுடைய தலைகள் பத்தினையும் நெரித்து அவனால் பாடப்பட்ட வேதங்களின் இயல்பைத் தம் இயல்பாகக் கொண்டன.

திருவாரூர்

திருவாரூர்

திருவாரூர், திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

குலம்பலம் பாவரு குண்டர்முன்
னேநமக் குண்டுகொலோ
அலம்பலம் பாவரு தண்புன
லாரூ ரவிர்சடையான்
சிலம்பலம் பாவரு சேவடி
யான்றிரு மூலட்டானம்
புலம்பலம் பாவரு தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. **#977**

கழுவுதலும் ஒலித்தலும் உடையதாக வரும்தண்ணிய நீர்வளம் மிக்க திருவாரூரில், விளங்குகின்ற சடைமுடியையும் சிலம்புகள் ஒலிக்கும் திருவடிகளையும் உடைய சிவபெருமானுடைய திருமூலத்தானத்தே, அப்பெருமானுடைய பேரிரக்கத்தையும் அதன் பயன்களையும் எண்ணி உருகுதலால் கண்ணீர் வடித்து வரும் அடியவர்களுக்கு அடியவராகும் நல்வினைப்பேறு, கூட்டமும் வலிமையும் பரவிய மூர்க்கர்களாகிய சமணர் காணுமாறு, அவர்கள் முன்னிலையில் நமக்குக் கிட்டுமோ?

திருவாரூர்

மற்றிட மின்றி மனை துறந்
தல்லுணா வல்லமணர்
சொற்றிட மென்று துரிசுபட்
டேனுக்கு முண்டுகொலோ
விற்றிடம் வாங்கி விசயனொ
டன்றொரு வேடுவனாய்ப்
புற்றிடங் கொண்டான்றன் றொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. **#978**

அருச்சுனனுடைய வில்லின் வலிமையைக் கவர்ந்து அக்காலத்தில் வேடுவனாய்க் காட்சி வழங்கிய திருவாரூர்ப் புற்றிடங் கொண்ட பெருமானுடைய அடியவர்களுக்கு அடியவராகும் நல்வினைப் பேறு, வீட்டினையும் துறந்து வேறு இடமும் இல்லாமல் இரவில் உண்ணுதல் இல்லாத உடல் வலிய சமணர்கள் கூறும் செய்திகளே உறுதியானவை

என்று கருதிக் குற்றம் செய்த அடியேனுக்கும் கிட்டுமோ?

திருவாரூர்

ஒருவடி வின்றிநின் றுண்குண்டர்
முன்னமக் குண்டுகொலோ
செருவடி வெஞ்சிலை யாற்புர
மட்டவன் சென்றடையாத்
திருவுடை யான்றிரு வாரூர்த்
திருமூலட் டானன்செங்கண்
பொருவிடை யானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. **#979**

போருக்காக வளைத்துக் கொண்ட மேருமலையாகிய வில்லினாலே மும்மதில்களையும் அழித்தவனாய், தான் போய்த் தேடாமல் இயல்பாகவே மேம்பட்ட செல்வத்தை உடையனாய்த் திருவாரூர்த் திருமூலத்தானத்தில் உறைபவனான, திருமாலாகிய, சிவந்த கண்களை உடைய போரிடும் காளையை உடைய பெருமானுடைய அடியார்களுக்கு அடியவனாகும் நல்வினைப்பேறு, ஆடைகளால் பொலிவு செய்யப்படும் வடிவழகின்றி நின்றபடியே உணவினை வாங்கி உண்ணும் மூர்க்கர்களாகிய சமணர், தம் கண்களால் காணுமாறு, அவர்கள் முன்னிலையில் நமக்குக் கிட்ட வாய்ப்பு உளதோ?

திருவாரூர்

மாசினை யேறிய மேனியர்
வன்கண்ணர் மொண்ணரைவிட்
டீசனை யேநினைந் தேசறு
வேனுக்கு முண்டுகொலோ
தேசனை யாரூர்த் திருமூலட்
டானனைச் சிந்தைசெய்து
பூசனைப்பூசுரர் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. **#980**

ஞான ஒளி வடிவினனாகிய திருவாரூர் மூலத்தானப் பெருமானைப் பூசனை செய்யும் நில உலகத்தேவர்களின் அடியவர்களுக்கு அடியவனாகும் நல்வினைப் பேறு, அழுக்கு ஏறிய உடம்பினராய், அகத்து வன்மையைப் புறத்துக் காட்டும் கண்ணினராய் வழுக்கைத் தலையரான சமணர்களுடைய தொடர்பை விடுத்து, எல்லோரையும் அடக்கி ஆளும் பெருமானையே நினைத்து வருந்தும் அடியேனுக்குக் கிட்ட வாய்ப்பு உளதோ?

திருவாரூர்

அருந்தும் பொழுதுரை யாடா
வமணர் திறமகன்று
வருந்தி நினைந்தர னேயென்று
வாழ்த்துவேற் குண்டுகொலோ
திருந்திய மாமதி லாரூர்த்
திருமூலட் டானனுக்குப்
பொருந்துந் தவமுடைத் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. **#981**

திருத்தமாக அமைந்த பெரிய மதில்களையுடைய திருவாரூர்த் திருமூலத்தானனுக்கு உகப்பான தவத்தில் ஈடுபட்ட அடியவர்களுக்கு அடியவனாகும் நல்வினைப்பேறு, உண்ணும் போது யாரிடமும் பேசாதிருத்தலை விரதமாகக் கொண்ட அமணர் கூட்டத்தை விடுத்து, பழைய செயலுக்கு வருந்தி நின்று 'தீவினையை அழிப்பவனே' என்று, அவனை வாழ்த்தும் அடியேனுக்குக் கிட்ட வாய்ப்பு உளதோ?

திருவாரூர்

வீங்கிய தோள்களுந் தாள்களு
மாய்நின்று வெற்றரையே
மூங்கைகள் போலுண்ணு மூடர்முன்
னேநமக் குண்டுகொலோ
தேங்கமழ் சோலைத்தென் னாரூர்த்
திருமூலட் டானன்செய்ய
பூங்கழ லானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. **#982**

மணம் கமழும் சோலைகளை உடைய அழகிய ஆரூரில் திருமூலத்தானத்து உறையும் சிவந்த மலர்போன்ற திருவடிகளை உடைய பெருமான் திருவடிகளில் தொண்டு செய்யும் அடியவர்களுக்கு அடியவராகும் நல்வினைப் பேறு, பருத்த தோள்களையும் கால்களையும் கொண்டு ஆடை உடுக்காதவராய் ஊமைகள் போல யாரிடமும் பேசாமல் உண்ணும் மூடர்களாகிய சமணர்கள் காணுமாறு நமக்குக் கிட்டும் வாய்ப்பு உளதோ?

திருவாரூர்

பண்ணிய சாத்திரப் பேய்கள்
பறிதலைக் குண்டரைவிட்
டெண்ணில் புகழீசன் றன்னருள்

பெற்றேற்கு முண்டுகொலோ
திண்ணிய மாமதி லாரூர்த்
திருமூலட் டானனெங்கள்
புண்ணியன் றன்னடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. **#983**

உறுதியான பெரிய மதில்களையுடைய திருவாரூர்த் திருமூலத்தானத்தில் உறையும் எங்கள் நல்வினை வடிவினனாகிய பெருமானுடைய அடித்தொண்டருக்குத் தொண்டராகும் புண்ணியம், தாமாகவே புனைந்துரைத்த சாத்திரங்களை உபதேசிப்பவராய், வலிய தலைமயிரை நீக்கிக் கொள்பவராய் உள்ள சமண மூர்க்கர்களை விடுத்துக் கணக்கிட முடியாத புகழை உடைய ஈசன் அருளைப் பெற்ற அடியேனுக்கும் உண்டோ?

<u>திருவாரூர்</u>

கரப்பர்கண் மெய்யைத் தலைபறிக்
கச்சுக மென்னுங்குண்டர்
உரைப்பன கேளாதிங் குய்யப்போந்
தேனுக்கு முண்டுகொலோ
திருப்பொலி யாரூர்த் திருமூலட்
டானன் றிருக்கயிலைப்
பொருப்பன் விருப்பமர் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. **#984**

செல்வத்தால் பொலிவு பெற்ற திருவாரூர்த் திருமூலத்தானத்தில் உறையும் கயிலாயபதியிடம் விருப்பம் பொருந்திய தொண்டருக்குத் தொண்டராம் புண்ணியம், ஒரோவழித் தம் உடம்பைப் பாயால் மறைப்பவராய்த் தலைமயிரை வலிய நீக்குவதே சுகம் என்று கூறும் சமண சமய மூர்க்கர்கள் உரைத்தனவற்றைக் கேளாமல் சிவபெருமான் பக்கல் கடைத்தேறுவதற்காக வந்தடைந்த அடியேனுக்கும் உண்டோ?

<u>திருவாரூர்</u>

கையிலிடு சோறு நின்றுண்ணுங்
காத லமணரைவிட்
டுய்யு நெறிகண்டிங் குய்யப்போந்
தேனுக்கு முண்டுகொலோ
ஐய னணிவய லாரூர்த்
திருமூலட் டானனுக்குப்
பொய்யன் பிலாவடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. **#985**

நம் தலைவனாய் அழகிய வயல்களை உடைய திருவாரூரின் திருமூலத்தானப் பெருமான் பக்கல் உண்மையான அன்புடைய தொண்டருக்குத் தொண்டராம் புண்ணியம், கையில் வழங்கப்படும் சோற்றை நின்றபடியே உண்ணும் செயலில் விருப்பம் கொள்ளும் சமணரைவிடுத்து, பிழைத்தற்குரிய வழியைக் கண்டு சிவபெருமான் பக்கல் பிறவிப் பிணியிலிருந்து தப்புவதற்காக வந்து சேர்ந்த அடியேனுக்கும் கிட்டும் வாய்ப்பு உளதோ?

திருவாரூர்

குற்ற முடைய வமணர்
திறமது கையகன்றிட்
டுற்ற கருமஞ்செய் துய்யப்போந்
தேனுக்கு முண்டுகொலோ
மற்பொலி தோளா னிராவணன்
றன்வலி வாட்டுவித்த
பொற்கழ லானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. **#986**

வலிமை பொருந்திய தோள்களை உடைய இராவணனுடைய வலிமையை அழியச் செய்த பொன்னாலாகிய கழலை அணிந்த சிவபெருமானுடைய தொண்டருக்குத் தொண்டராம் புண்ணியம், குற்றமுடைய சமணர்கள் சமயத்தின் கூறுபாடுகளை விடுத்து நீங்கி, சைவ சமயத்தில் அடியேனுக்குச் செய்வதற்காக வகுக்கப்பட்ட செயல்களைச் செய்து பிறவிப் பிணியினின்றும் பிழைத்துப் போவதற்காக வந்தடைந்த அடியேனுக்கும் கிட்டும் வாய்ப்பு உளதோ?

திருவாரூர்

திருவாரூர், திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

வேம்பினைப் பேசி விடக்கினை யோம்பி
வினைபெருக்கித்
தூம்பினைத் தூர்த்தங்கோர் சுற்றந் துணையென்
றிருத்திர் தொண்டீர்
ஆம்பலம் பூம்பொய்கை யாரூ ரமர்ந்தா
னடிநிழற்கீழ்ச்
சாம்பலைப் பூசிச் சலமின்றித் தொண்டுபட்
டுய்ம்மின்களே. **#987**

தொண்டர்களே! வேம்பு போன்ற கசப்பான சொற்களையே பேசி, இவ்வூன் உடம்பைப் பாதுகாத்து, வினைகளை மிகுதியாகத் தேடிக்கொண்டு வயிற்றை உணவால் நிரப்பிச் சுற்றத்தவர்களே நமக்கு நிலையான துணைவர்கள் என்றிருக்கின்றீர்களே! ஆம்பற் பூக்கள் நிறைந்த பொய்கைகளை உடைய ஆரூரை உகந்தருளியிருக்கும் பெருமானுடைய திருவடிகளின் கீழே சாம்பலைப் பூசி வஞ்சனையின்றித் தொண்டுகளைச் செய்து கடைத்தேறுங்கள்.

திருவாரூர்

ஆராய்ந் தடித்தொண்ட ராணிப்பொ னாரூ
ரகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி யுத்திரம்
பாற்படுத்தான்
நாரூர் நறுமலர் நாத னடித்தொண்டன்
நம்பிநந்தி
நீராற் றிருவிளக் கிட்டமை நீணா
டறியுமன்றே. **#988**

அடியார்களின் அன்புமிக்க நறிய உள்ளத் தாமரையில் வீற்றிருக்கும் சிவபெருமானுடைய திருவடித் தொண்டனும் தொண்டர்களுக்குள் உரையாணிப் பொன்போல் மிகச் சிறந்தவனுமாகிய நம்பிநந்தி, தமிழகத்து வேற்றூர்களில் உள்ளவர் எல்லாம் திருவாரூருக்கு வந்து சேரப் பங்குனி உத்திர விழாவினை ஆராய்ந்து முறைப்படி நடத்தினனாய், நீரை வார்த்துத் திருவிளக்குக்களை எரிய விட்ட செய்தியை நீண்ட தமிழ் உலகம் முழுதும் அறியும்.

திருவாரூர்

பூம்படி மக்கலம் பொற்படி மக்கல
மென்றிவற்றால்
ஆம்படி மக்கல மாகிலு மாரூ
ரினிதமர்ந்தார்
தாம்படி மக்கலம் வேண்டுவ ரேற்றமிழ்
மாலைகளால்
நாம்படி மக்கலஞ் செய்து தொழுதும்
மடநெஞ்சமே. **#989**

மடநெஞ்சமே! எம்பெருமானுடைய திருமேனிக்கு உரிய ஆபரணங்களைப் பொன்னால் செய்து அணிவிப்பர். அஃது இயலாவிடின் பொன் வைக்கும் இடத்தில் பூ வைத்தல் என்ற உலகியற்படி அத்திருமேனியைப் பொன் அணிகளால் அழகுறுத்துவது

போலப் பூவாலும் அழகு செய்வர். திருவாரூரில் இனிது அமர்ந்த பெருமானார் தம் திருமேனிக்கு அணிகலன்கள் வேண்டுவராயின் நாம் தமிழ்ப் பாமாலைகளால் அவருக்கு அணிகலன்கள் செய்த அணிவித்து அவரை வணங்குவோம்.

திருவாரூர்

துடிக்கின்ற பாம்பரை யார்த்துத் துளங்கா
மதியணிந்து
முடித்தொண்ட ராகிமுனிவர் பணிசெய்வ
தேயுமன்றிப்
பொடிக்கொண்டு பூசிப் புகுந்தொண்டர் பாதம் பொறுத்த
பொற்பால்
அடித்தொண்ட னந்தியென் பானுள னாரூ
ரமுதினுக்கே. **#990**

துள்ளுகின்ற பாம்பினை இடுப்பில் இறுகச் சுற்றி நிலை கலங்காத பிறையைச்சூடி, மேம்பட்ட தொண்டர்களாகி முனிவர்கள் திருத்தொண்டுகளைச் செய்வதோடன்றி, திருநீற்றைப்பூசி வந்து சேரும் அடியவர்களுடைய திருவடிகளைத் தன் தலைமேல் கொள்ளும் அழகினோடு கீழான தொண்டன் என்று சொல்லிக் கொள்ளும் நம்பி நந்தியும் ஆரூரில் அமுதம் போன்றுள்ள பெருமானுக்குச் சிறப்பான தொண்டுகளைச் செய்யும் அடியவனாக உள்ளான்.

திருவாரூர்

கரும்பு பிடித்தவர் காயப்பட் டாரங்கொர்
கோடலியால்
இரும்பு பிடித்தவ ரின்புறப் பட்டா
ரிவர்கணிற்க
அரும்பவித் தண்பொழில் சூழணி யாரூ
ரமர்ந்தபெம்மான்
விரும்பு மனத்தினை யாதென்று நானுன்னை
வேண்டுவதே. **#991**

அரும்புகள் மலரும் குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த திருவாரூரில் விரும்பு உறையும் பெருமானே! கரும்பினை வில்லாக ஏந்திய மன்மதன் உன்னால் கோபிக்கப்பட்டுச் சாம்பலானான். கோடலியாகிய இரும்பைப் பிடித்துத் தன் தந்தையின் கால்களைச் சிதைத்த விசாரசருமன் உன்னால் சண்டீசன் என்ற பதவியளிக்கப்பட்டு மகிழ்விக்கப்பட்டான். நீ மனத்தின்கண் கரும்பை விரும்புகின்றாயா இரும்பை விரும்புகின்றாயா? நீ விரும்பும் பொருள் எப்பொருள் என்று

அடியேன் உன்பால் வேண்டுவேன்?

திருவாரூர்

கொடிகொள் விதானங் கவரி பறைசங்கங்
கைவிளக்கோ
டிடிவில் பெருஞ்செல்வ மெய்துவ ரெய்தியு
மூனமில்லா
அடிகளு மாரூ ரகத்தின ராயினு
மந்தவளப்
பொடிகொண் டணிவார்க் கிருளொக்கும் நந்தி
புறப்படிலே. **#992**

கொடிகளும், மேற்கட்டிகளும், பறை, கவரி, சங்கு, கைவிளக்கு என்பனவும் கொண்டு குறைவற்ற செல்வர் பலர் திருவாரூரை வழிபடுதலுக்கு வந்து சேருவர். ஒரு குறைவும் இல்லாத திருமூலத்தானப் பெருமானாரும் திருவாரூரில் அமர்ந்திருப்பர். எனினும் அழகிய வெண்ணீற்றை அணியும் அடியவர்களுக்கு, நம்பு நந்தியடிகள் ஆரூரகத்தில் இல்லாமல், ஊருக்கு வெளியே செல்வாராயின் திருவாரூரில் ஒளியே இல்லை போலத் தோன்றும்.

திருவாரூர்

சங்கொலிப் பித்திடு மின்சிறு காலைத்
தடவழலில்
குங்குலி யப்புகைக் கூட்டென்றுங் காட்டி
யிருபதுதோள்
அங்குலம் வைத்தவன் செங்குரு திப்புன
லோடவஞ்ஞான்
றங்குலி வைத்தா னடித்தா மரையென்னை
யாண்டனவே. **#993**

தொண்டர்களே! விடியற்காலையில் தூப மூட்டியில் உள்ள கனல் எரியில் குங்கிலியத்தை இட்டுக் குங்கிலியப் புகைக் கூட்டினை எம் பெருமானுக்குக் காட்டிச் சங்குகளை ஊதுங்கள். தன் இருபது தோள்களையும் கயிலையில் அதனைப் பெயர்ப்பதற்குச் செயற்படுத்தின இராவணனுடைய இரத்தம் ஓடுமாறு தன் கால்விரல் ஒன்றனை அழுத்தி நெரித்தவனுடைய திருவடித் தாமரைகளே அடியேனை அடிமைகொண்டன. அவை நுமக்கும் அருள் செய்யும்.

திருநாகைக்காரோணம்

திருநாகைக்காரோணம்

திருநாகைக்காரோணம், திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காயாரோகணேசுவரர்.
தேவியார் : நீலாயதாட்சியம்மை.

வடிவுடை மாமலை மங்கைபங் காகங்கை
வார்சடையாய்
கடிகமழ்சோலை சுலவு கடனாகைக்
காரோணனே
பிடிமதவாரணம் பேணுந் துரகநிற்
கப்பெரிய
இடிகுரல் வெள்ளெரு தேறுமி தென்னைகொ
லெம்மிறையே. **#994**

அழகிய பார்வதி பாகனே! நீண்ட சடையில் கங்கையைத் தரித்தவனே! நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்த, கடலையடுத்த நாகைக் காரோணனே! எம்தலைவனே! பெண்யானை, மதமுடைய ஆண்யானை, விரும்பும் குதிரை இவைகள் இருப்பவும் பெரிய, இடிபோன்ற குரலையுடைய வெள்ளிய காளையை நீ இவர்வதன் காரணம் என்ன?

திருநாகைக்காரோணம்

கற்றார் பயில்கட னாகைக்கா ரோணத்தெங்
கண்ணுதலே
விற்றாங் கியகரம் வேனெடுங் கண்ணி
வியன்கரமே
நற்றா ணெடுஞ்சிலை நாண்வலித் தகர
நின்கரமே
செற்றார் புரஞ்செற்ற சேவக மென்னைகொல்
செப்புமினே. **#995**

கற்றவர்கள் பெருகிய, கடலை அடுத்த நாகைக் காரோணத்தில் உறையும், நெற்றியில் கண்ணையுடைய எம்பெருமானே! வில்லைத் தாங்கிய கை, வேல் போன்ற நீண்ட கண்களை உடைய பார்வதி பாகத்தில் உள்ள கையே, நல்ல கால்களால் வில்லை மிதித்து அதற்கு நாணை ஏற்றிய கை உம் பாகத்தில் உள்ளகையே. இவ்வாறாகப் பகைவருடைய மும்மதில்களை அழித்த வீரம் உம்முடையது என்று

கூறுவதன் காரணத்தை அடியேற்குத் தெரிவியுங்கள்.

திருநாகைக்காரோணம்

தூமென் மலர்க்கணை கோத்துத்தீ வேள்வி
தொழிற்படுத்த
காமன் பொடிபடக் காய்ந்த கடனாகைக்
காரோணநின்
நாமம் பரவி நமச்சிவாய வென்னும்
மஞ்செழுத்தும்
சாமன் றுரைக்கத் தருதிகண் டாயெங்கள்
சங்கரனே. **#996**

தூய மெல்லிய பூக்களாகிய அம்புகளைக் கோத்துக் காமாக்கினியை வளர்க்க முற்பட்ட மன்மதன் சாம்பலாகுமாறு கோபித்த கடல்நாகைக் காரோணனே! எங்கள் சங்கரனே! உன் திருப்பெயரை முன்நின்று துதித்து நமச்சிவாய என்ற திருவைந்தெழுத்தையும் அடியேன் உயிர்போகும் பொழுது சொல்லும் பேற்றினை நல்குவாயாக.

திருநாகைக்காரோணம்

பழிவழி யோடிய பாவிப் பறிதலைக்
குண்டர் தங்கள்
மொழிவழி யோடி முடிவேன் முடியாமைக்
காத்துக்கொண்டாய்
கழிவழி யோத முலவு கடனாகைக்
காரோணவென்
வழிவழி யாளாகும் வண்ண மருளெங்கள்
வானவனே. **#997**

உப்பங்கழிவழியே கடலின் வெள்ளநீர் பாயும் கடல் நாகைக் காரோணனே! எங்கள் தேவனே! பழியான வழிகளிலே வாழ்க்கையை நடத்திய தீவினையாளர்களான, தலைமயிரை வலியப் போக்கும் மூர்க்கர்களான, சமணர்கள் சொற்களைக் கேட்டு அவற்றின் வழியிலே வாழ்ந்து அழிந்து போகக்கூடிய அடியேனை அழியாதபடி பாதுகாத்து உனக்கு அடியவனாகக் கொண்டாய். வழிவழியாக அடியேன் உனக்கு அடிமையாகும் முறைமை யாது? அதனை அடியேற்கு அருளுவாயாக.

திருநாகைக்காரோணம்

செந்துவர் வாய்க்கருங் கண்ணிணை வெண்ணகைத்
தேன்மொழியார்
வந்து வலஞ்செய்து மாநட மாட

மலிந்த செல்வக்
கந்த மலிபொழில் சூழ்கட னாகைக்கா
ரோணமென்றும்
சிந்தை செய்வாரைப் பிரியா திருக்குந்
திருமங்கையே. **#998**

சிவந்த பவளம் போன்ற வாயையும் கரிய இருகண்களையும், வெள்ளிய பற்களையும், தேன்போன்ற இனிய சொற்களையும் உடைய இளைய மகளிர் வந்து வலம் செய்து சிறந்த கூத்து நிகழ்த்துமாறு, செல்வம் மிகுந்ததும், நறுமணம் வீசும் பொழில்களால் சூழப்பட்டதுமான கடலை அடுத்து அமைந்த நாகைக் காரோணத்தை என்றும் தியானிப்பவர்களைத் திருமகள் என்றும் நீங்காது இருப்பாள்.

திருநாகைக்காரோணம்

பனைபுரை கைம்மத யானை யுரித்த
பரஞ்சுடரே
கனைகடல் சூழ்தரு நாகைக்கா ரோணத்தெங்
கண்ணுதலே
மனைதுறந் தல்லுணா வல்லமண் குண்டர்
மயக்க நீக்கி
எனைநினைந் தாட்கொண்டாய்க் கென்னினி
யான்செயுமிச்சைகளே. **#999**

பனை மரத்தை ஒத்த துதிக்கையை உடைய மதயானையின் தோலைஉரித்த மேம்பட்ட சோதிவடிவினனே! ஒலிக்கும் கடலால் ஒருபக்கம் சூழப்பட்ட நாகைக் காரோணத்தில் உறையும் எம் நெற்றிக் கண்ணனே! இல்லறவாழ்க்கையை விடுத்து இரவில் உண்ணாத வலிய சமணர்களாகிய மூர்க்கர்திறத்து அடியேன் கொண்டிருந்த மயக்கத்தைப் போக்கி அடியேனை விரும்பி ஆட்கொண்ட உனக்கு அடியேன் விரும்பிக் கைமாறாகச் செய்வது யாது உள்ளது?

திருநாகைக்காரோணம்

சீர்மலி செல்வம் பெரிது டையசெம்பொன்
மாமலையே
கார்மலி சோலை சுலவு கடனாகைக்
காரோணனே
வார்மலி மென்முலை யார்பலி வந்திடச்
சென்றிரந்து
ஊர்மலி பிச்சைகொ டுண்பது மாதிமை
யோவுரையே. **#1000**

சிறப்புமிக்க செல்வத்தை மிகுதியாக உடைய செம்பொன்மலை போன்றவனே! மழையால் செழித்த சோலைகளால் சூழப்பட்ட கடல் நாகைக் காரோணனே! கச்சணிந்த மென்மையான முலையை உடைய மகளிர் வந்து பிச்சையிடுமாறு வீடுதோறும் சென்று பிச்சை வாங்கி ஊர்களில் கிட்டும் பிச்சை உணவை உண்பது பொருத்தமான செயல் ஆகுமா? செல்வாயாக.

திருநாகைக்காரோணம்

வங்க மலிகட னாகைக்கா ரோணத்தெம்
வானவனே
எங்கள் பெருமானொர் விண்ணப்ப முண்டது
கேட்டருளீர்
கங்கை சடையுட் கரந்தாயக் கள்ளத்தை
மௌளவுமை
நங்கை யறியிற்பொல் லாதுகண் டாயெங்க
ணாயகனே. **#1001**

கப்பல்கள் நிறைந்த கடலை அடுத்த நாகைக் காரோணத்தில் உள்ள எம் தேவரே! எங்கள் பெருமானே! அடியேன் வேண்டிச் சொல்லும் செய்தி ஒன்று உள்ளது. அதனைத் திருச்செவி சார்த்தி அருளுவீராக. எங்கள் தலைவரே! கங்கையைச் சடையுள் மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்தக் கள்ளச் செயலை மெதுவாகப் பார்வதிப் பிராட்டி அறிவாளானால் பொல்லாங்கு விளையும் என்பதைத் திருவுள்ளம் பற்றவேண்டும்.

திருநாகைக்காரோணம்

கருந்தடங் கண்ணியுந் தானுங் கடனாகைக்
காரோணத்தான்
இருந்த திருமலை யென்றிறைஞ் சாதன்
றெடுக்கலுற்றான்
பெருந்தலை பத்து மிருபது தோளும்
பிதிர்ந்தலற
இருந்தரு ளிச்செய்த தேமற்றுச் செய்தில
னெம்மிறையே. **#1002**

கரிய நீண்ட கண்களை உடைய பார்வதியும்தானுமாகக் கடல் நாகைக் காரோணத்தான் உகந்தருளியிருக்கும் திருமலை என்று அதனை வழிபடக் கருதாது, அன்று, அதனைப் பெயர்க்க முற்பட்ட இராவணனுடைய தலைகள் பத்தும் தோள்கள் இருபதும் சிதற அதனால் அவன் உரக்கக் கதறக் கயிலை மலையில் இருந்தவாறே அவனுக்கு

வாள் முதலியவற்றை நாகைக் காரோணத்தார் அருளிச் செய்தாரே அல்லாமல் அவன் உயிருக்கு இறுதியைச் செய்யவில்லை.

திருவதிகைவீரட்டானம்

திருஅதிகைவீரட்டானம்

திருவதிகைவீரட்டானம், திருவிருத்தம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : திருவதிகைநாயகி.

மாசிலொள் வாள்போன் மறியு மணிநீர்த்
திரைத்தொகுதி
ஊசலை யாடியங் கொண்சிறை யன்ன
முறங்கலுற்றால்
பாசறை நீலம் பருகிய வண்டுபண்
பாடல்கண்டு
வீசுங் கெடில வடகரைத் தேயெந்தை
வீரட்டமே. **#1003**

குற்றமற்ற ஒளிபொருந்திய வாள்போல ஏறி மடங்கும், பளிங்கு போன்ற நீர் அலைகளின் தொகுதியாகிய ஊசலை ஆடி அங்கு ஒளி பொருந்திய சிறகுகளை உடைய அன்னம் உறங்கத் தொடங்கினால் பசிய இலைகளை உடைய கொடிகளில் உள்ள நீலமலர்களில் தேனைப் பருகி வண்டுகள் பண்ணினைப் பாடுதலைக் கேட்டுக் கெடிலநதி பரிசுப்பொருளாக மணி முதலியவற்றை அவற்றை நோக்கி வீசும் வடகரைக்கண் எம்பிரானுடைய அதிக வீரட்டம் உள்ளது.

திருஅதிகைவீரட்டானம்

பைங்காற் றவளை பறைகொட்டப் பாசிலை
நீர்ப்படுகர்
அங்காற் குவளைமே லாவி யுயிர்ப்ப
வருகுலவும்
செங்காற் குருகிவை சேருஞ் செறிகெடி
லக்கரைத்தே
வெங்காற் குருசிலை வீர னருள்வைத்த
வீரட்டமே. **#1004**

விரும்பத்தக்க அடிப்பகுதியை உடைய பொன்நிறமான மேருமலையாகிய வில்லினை உடைய வீரனாகிய சிவபெருமான் திரிபுரத்தை அழித்துத் தன் அருளை நிலைநாட்டிய அதிகை வீரட்டம், பசிய கால்களை உடைய தவளைகள் பறை போல ஒலி செய்யப் பசிய இலைகளை உடைய நீர்தங்கும் பள்ளத்தில் அழகிய தண்டினை உடைய

குவளை மலர்கள் மணம் வீச, அருகில் உலவும் சிவந்த கால்களை உடைய குருகுகள் குவளைமலர்களை அடையும் நீர் செறிந்த கெடிலநதியின் வடகரையில் உள்ளது.

திருஅதிகைவீரட்டானம்

அம்மலர்க் கண்ணிய ரஞ்சனஞ் செந்துவர்
வாயிளையார்
வெம்முலைச் சாந்தம் விலைபெறு மாலை
யெடுத்தவர்கள்
தம்மருங் குற்கிரங் கார்தடந் தோண்மெலி
யக்குடைவார்
விம்மு புனற்கெடி லக்கரைத் தேயெந்தை
வீரட்டமே. **#1005**

அழகிய மலர் போன்ற மை எழுதிய கண்ணினராய்ச் சிவந்த பவளம் போன்ற வாயினை உடைய மகளிர் விரும்பத்தக்க முலைகளுக்குச் சந்தனமும் விலை மதிப்புடைய மாலைகளும் அணிந்தவராய், தம் இடைக்கு இவை பாரமாகுமே என்ற இரக்கம் இல்லாவராய்த் தம் பெரிய தோள்கள் நீந்துதலால் மெலிவு அடையும்படி நீராடுதலால் ஒலிக்கும் நீரை உடைய கெடிலநதியின் வடகரையில் உள்ளது எம்பிரானுடைய அதிகை வீரட்டம்.

திருஅதிகைவீரட்டானம்

மீனுடைத் தண்புனல் வீரட்ட ரேநும்மை
வேண்டுகின்றதி
யானுடைச் சில்குறை யொன்றுள தானறுந்
தண்ணெருக்கின்
தேனுடைக் கொன்றைச் சடையுடைக் கங்கைத்
திரைதவழும்
கூனுடைத் திங்கட் குழவியெப் போதுங்
குறிக்கொண்மினே. **#1006**

மீன்களை உடைய குளிர்ந்த புனல் பாயும் அதிகையிலுள்ள வீரட்டரே! உம்மை அடியேன் வேண்டுகின்ற சிறிய தேவை ஒன்று உள்ளது. குளிர்ந்த எருக்கம் பூ வொடு தேனை உடைய கொன்றைப் பூவை அணிந்த சடைக்கண் தேக்கி வைத்துள்ள கங்கையின் அலைகளில் தவழும் பிறைச் சந்திரனை எப்பொழுதும் கருத்தில் கொள்ளவேண்டும். அப்பிறை கங்கைவெள்ளத்தில் முழுகிப் போகாதபடி கவனிக்கவேண்டும்.

திருஅதிகைவீரட்டானம்

ஆரட்ட தேனு மிரந்துண் டகமக
வன்றிரிந்து
வேரட்ட நிற்பித் திடுகின்ற தால்விரி
நீர்பரவைச்
சூரட்ட வேலவன் றாதையைச் சூழ்வய
லாரதிகை
வீரட்டத் தானை விரும்பா வரும்பாவ
வேதனையே. **#1007**

விரிந்த நீரை உடைய கடலில் சூரபதுமனை அழித்த வேலை ஏந்திய முருகனுடைய தந்தையாய் வயலால் சூழப்பட்ட அதிகை வீரட்டப் பெருமானைப் பண்டைப் பிறப்பில் வழிபட்டு உய்ய விரும்பாத கொடிய தீவினைப் பயனாகிய வேதனை இப்பிறப்பில், வியர்வை சொட்டச் சொட்ட வீடு வீடாகத் திரிந்து யாவர் சமைத்த பொருளாயிருப்பினும் அதனைப் பிச்சை யேற்று உண்ணுமாறு செய்துள்ளது.

திருஅதிகைவீரட்டானம்

படர்பொற் சடையும் பகுவா யரவும்
பனிமதியும்
சுடலைப் பொடியுமெல் லாமுள வேயவர்
தூயதெண்ணீர்க்
கெடிலக் கரைத்திரு வீரட்ட ராவர்கெட்
டேனடைந்தார்
நடலைக்கு நற்றுணை யாகுங்கண் டீரவர்
நாமங்களே. **#1008**

அவர் தெளந்த நீரை உடைய கெடில நதியில் வடகரையில் அமைந்த அதிகைப் பதியின் வீரட்டராவர். பரவின பொன் போன்ற ஒலியுடைய சடையும், பிளந்த வாயை உடைய பாம்பும், குளிர்ந்த பிறையும் சுடுகாட்டுச் சாம்பலும் எல்லாம் அவருக்கு அடையாளங்களாக உள்ளன. அவருடைய திருநாமங்கள் அவரை அடைக்கலமாக அடைந்தவர்களுடைய துன்பத்தைத் தீர்க்கும் பெரிய துணையாகும். அவ்வாறாகவும் அறிவுகெட்ட அடியேன் அவரைத் தொடர்ந்து பற்றிக் கொள்ள முயலாமல் விட்டு ஒழிந்தேனே.

திருஅதிகைவீரட்டானம்

காளங் கடந்ததொர் கண்டத்த ராகிக்கண்
ணார்கெடில

நாளங் கடிக்கொர் நகரமு மாதிற்கு
நன்கிசைந்த
தாளங்கள் கொண்டுங் குழல்கொண்டும் யாழ்கொண்டுந்
தாமங்நனே
வேளங்கள் கொண்டும் விசும்புசெல் வாரவர்
வீரட்டரே. **#1009**

பார்வதியின் பொருட்டு விடத்தை இருத்திய நீலகண்டராகி, வானத்திலே உலவிச் செல்லும் திரிபுர அசுரரைத் திரிபுரத்தோடு அழித்த வீரத்தானத்தை உடைய பெருமான். நன்கு பொருந்திய தாளங்கள், குழல், யாழ் இவற்றைக் கொண்டு பாம்புகளைச் சூடி, காலையிலே விளக்கமாக உறைவதற்கு அதிகையாகிய ஒரு நகரமும் உடையராய் அவ்வாறே பாய்கால்களை உடைய கெடிலநதிக்கும் உரியவராவர்.

திருப்புகலூர்

திருப்புகலூர்

திருப்புகலூர், திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அக்கினீசுவரர்.
தேவியார் : கருந்தார்க்குழலியம்மை.

தன்னைச் சரணென்று தாளடைந் தேன்றன்
னடியடையப்
புன்னைப் பொழிற்புக லூரண்ணல் செய்வன
கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத் தென்வினை கட்டறுத்
தேழ்நரகத்
தென்னைக் கிடக்கலொட் டான்சிவ லோகத்
திருத்திடுமே. #1010

புன்னை மரங்கள் நிறைந்த சோலைகளை உடைய திருப்புகலூர்ப் பெருமானை அடைக்கலமாகப் பற்றி அவன் திருவடிகளை அடைந்தேன். தன் திருவடிகளை அடைக்கலமாக அடைந்த அளவில் அவன் செய்வனவற்றைக் கேளுங்கள். என் பிறவிப் பிணியைப் போக்கி என் வினையாகிய கட்டினை அறுத்து நீக்கி எழு வகைப்பட்ட நரகத்தில் என்னைக் கிடக்குமாறு விடாமல் சிவலோகத்தில் கொண்டு சேர்த்து விடுவான்.

திருப்புகலூர்

பொன்னை வகுத்தன்ன மேனிய னேபுணர்
மென்முலையாள்
தன்னை வகுத்தன்ன பாகத்த னேதமி
யேற்கிரங்காய்
புன்னை மலர்த்தலை வண்டுறங் கும்புக
லூரரசே
என்னை வகுத்திலை யேலிடும் பைக்கிடம்
யாதுசொல்லே. #1011

பொன்னார் மேனியனே! பார்வதி பாகனே! தனித்து வருந்தும் அடியேனுக்குக் கருணை செய்வாயாக. புன்னை மலர்களிலே வண்டுகள் உறங்கும் புகலூர்த் தலைவனே! யான் இல்லேனாயின் துன்பம் தங்குவதற்கு வேறு இடம் யாது உள்ளது?

திருப்புகலூர்

பொன்னள வார்சடைக் கொன்றையி னாய்புக
லூரரசே
மன்னுள தேவர்கள் தேடு மருந்தே
வலஞ்சுழியாய்
என்னள வேயுனக் காட்பட் டிடைக்கலத்
தேகிடப்பார்
உன்னள வேயெனக் கொன்று மிரங்காத
வுத்தமனே. **#1012**

பொன்னை ஒத்த நீண்ட சடைக்கண் கொன்றைப்பூவை அணிந்தவனே! புகலூருக்கு அரசனே! பெருமையை உடைய தேவர்கள் தேடும் அமுதமே! திருவலஞ்சுழிப்பெருமானே! எனக்குச் சிறிதும் இரக்கம் காட்டாத மேம்பட்ட பண்பினனே! உனக்கு அடிமையாக அமைந்தும் கட்டுக்கும் வீட்டுக்கும் இடையே கிடப்பவர் என்னைத் தவிர உன் அடியவருள் வேறு யாவா உளர்?

திருப்புகலூர்

ஓணப் பிரானு மொளிர்மா மலர்மிசை
யுத்தமனும்
காணப் பராவியுங் காண்கின் றிலர்கர
நாலைந்துடைத்
தோணப் பிரானை வலிதொலைத் தோன்றொல்லை
நீர்ப்புகலூர்க்
கோணப் பிரானைக் குறுகக் குறுகா
கொடுவினையே. **#1013**

திருவோணநாளுக்குத் தலைவனான திருமாலும் பிரகாசிக்கும் பெரிய தாமரைமலரில் உறையும் பிரமனும் உன்னைக் காண்பதற்காக வேண்டியும் காண இயலாதவர் ஆயினர். இருபது தோள்களை உடைய மேம்பட்ட தலைவனாகச் செருக்குக் கொண்ட இராவணனுடைய வலிமையை அழித்தவனாகிய, பண்டு தொட்டு நீர்வளம் மிக்க புகலூரில் உறையும் சாய்ந்த திருமேனியை உடைய பிரானை, அணுகிய அளவில், கொடிய தீவினைகள் நம்மைத் துன்புறுத்த நெருங்கிவாரா.

திருக்கழிப்பாலை

திருக்கழிப்பாலை

திருக்கழிப்பாலை, திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பால்வண்ணநாதர்.
தேவியார் : வேதநாயகியம்மை.

நெய்தற் குருகுதன் பிள்ளையென் றெண்ணி
நெருங்கிச்சென்று
கைதை மடற்புல்கு தென்கழிப் பாலை
யதனுறைவாய்
பைதற் பிறையொடு பாம்புடன் வைத்த
பரிசறியோம்
எய்தப் பெறினிரங் காதுகண் டாய்நம்
மிறையவனே. **#1014**

நெய்தல் நிலத்திலுள்ள நாரை தன் பார்ப்பு என்று கருதி அணுகி வெண்தாழை மடலைத் தழுவும் அழகிய கழிப்பாலையில் உறைபவனே! இளைய பிறைச் சந்திரனோடு தலையில் பாம்பையும் அருகில் வைத்த திறம் பற்றி யாம் அறியோம். தன் அருகே பிறைவரினும் பிறை அருகே தான் அணுகப் பெறினும் பாம்பு இரக்கமின்றி பிறையை விழுங்கிவிடும் என்பதனை நம் தலைவனாகிய நீ அறிவாய் அல்லையோ?

திருக்கழிப்பாலை

பருமா மணியும் பவளமுத் தும்பரந்
துந்திவரை
பொருமால் கரைமேற் றிரைகொணர்ந் தெற்றப்
பொலிந்திலங்குங்
கருமா மிடறுடைக் கண்டனெம் மான்கழிப்
பாலையெந்தை
பெருமா வைனென்னை யாளுடை யானிப்
பெருநிலத்தே. **#1015**

மலையை ஒத்த உயர்ந்த கடற்கரை மீது பெரிய மணி பவளம் முத்து என்பனவற்றைப் பரவிச் செலுத்தி அலைகள் கொண்டு வந்து சேர்ப்பதனால் விளங்கித் தோன்றும் கழிப்பாலை என்ற திருத்தலத்தில் உறையும் எம் தலைவன், எந்தை பெருமான் ஆகிய நீலகண்டன் இப்பேருலகில் அடியேனை அடிமையாகக் கொண்டவன் ஆவான்.

<u>திருக்கழிப்பாலை</u>

நாட்பட் டிருந்தின்ப மெய்தலுற் றிங்கு
நமன்றமராற்
கோட்பட் டொழிவதன் முந்துற வேகுளி
ரார் தடத்துத்
தாட்பட்ட தாமரைப் பொய்கையந் தண்கழிப்
பாலையண்ணற்
காட்பட் டொழிந்தமன் றேவல்ல மாயிவ்
வகலிடத்தே. **#1016**

இப்பரந்த உலகில் பல காலம் உயிர்வாழ்ந்து சிற்றின்ப நுகர்ச்சிகளைப் பொருந்தி இயமனுடைய ஏவலரால் கொள்ளப்பட்டு அழிவதன் முன்னம், குளிர்ந்த நீர் நிலைகளையும், தண்டு நீண்ட தாமரைப் பொய்கைகளையும் உடைய அழகிய குளிர்ந்த கழிப்பாலைப் பெருமானுக்கு அடிமையாகி வல்லமை உடையோமாய் யமபயத்திலிருந்து விடுபட்டோம்.

திருக்கடவூர்

திருக்கடவூர், திருவிருத்தம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அமிர்தகடேசுவரர்.
தேவியார் : அபிராமியம்மை.

மருட்டுயர் தீரவன் றர்ச்சித்த மாணிமார்க்
கண்டேயற்காய்
இருட்டிய மேனி வளைவா ளெயிற்றெரி
போலுங்குஞ்சிச்
சுருட்டிய நாவில்வெங் கூற்றம் பதைப்ப
வுதைத்துங்ஙனே
உருட்டிய சேவடி யான்கட வூருறை
யுத்தமனே. **#1017**

தன்னை மயக்கிய யமபயமாகிய துன்பம் தீருமாறு அக்காலத்தில் அர்ச்சித்த பிரமசாரியான மார்க்கண்டேயனுக்காகக் கரிய உடம்பு, வளைந்த ஒளி பொருந்திய பற்கள் தீயைப் போன்ற சிவந்த மயிர்முடி, மடித்த நா இவற்றை உடைய கொடிய கூற்றுவன் உடல் நடுங்குமாறு அவனை உதைத்து அவ்விடத்திலே அவனை உருளச்செய்த சிவந்த திருவடிகளை உடையவன் திருக்கடவூரில் உகந்தருளி உறைகின்ற உத்தமனாகிய சிவபெருமான் ஆவான்.

திருக்கடவூர்

பதத்தெழு மந்திர மஞ்செழுத் தோதிப்
பரிவினொடும்
இதத்தெழு மாணித னின்னுயி ருண்ண
வெகுண்டடர்த்த
கதத்தெழு காலனைக் கண்குரு திப்புன
லாறொழுக
உதைத்தெழு சேவடி யான்கட வூருறை
யுத்தமனே. **#1018**

ஐந்து சொற்களாக அமைந்த திருவைந்தெழுத்தை ஓதி விருப்பினோடும் தன் நன்மை கருதிச் சிவபெருமானை அணுகியிருந்த பிரமசாரியான மார்க்கண்டேயனுடைய இனிய உயிரை உண்பதற்கு அவனை வெகுண்டு கோபத்தோடு எழுந்து தாக்கிய கூற்றுவனை அவன் கண்கள் குருதியைச் சொரியுமாறு உதைத்துச் செயற்பட்ட சேவடியான் கடவூர்

உறை உத்தமனே.

திருக்கடவூர்

கரப்புறு சிந்தையர் காண்டற் கரியவன்
காமனையும்
நெருப்புமிழ் கண்ணின் னீள்புனற் கங்கையும்
பொங்கரவும்
பரப்பிய செஞ்சடைப் பால்வண்ணன் காலனைப்
பண்டொருகால்
உரப்பிய சேவடி யான்கட வூருறை
யுத்தமனே. **#1019**

வஞ்சனை பொருந்திய மனத்தினர் காண்பதற்கு அரியவனாய், மன்மதன் மீது நெருப்பைச் சொரிந்து அவனை அழித்த கண்ணினனாய், கங்கையும் பாம்பும் சூடிய சிவந்த சடையினை உடையவனாய், வெண்ணீறணிந்து பால் போன்ற நிறத்தினனாய்க் கூற்றுவனை முன்னொரு காலத்தில் பேரொலி செய்து அதட்டியவன் சிவந்த திருவடிகளை உடைய கடவூர் உறை உத்தமன்.

திருக்கடவூர்

மறித்திகழ் கையினன் வானவர் கோனை
மனமகிழ்ந்து
குறித்தெழு மாணித னாருயிர் கொள்வான்
கொதித்தசிந்தைக்
கறுத்தெழு மூவிலை வேலுடைக் காலனைத்
தானலற
உறுக்கிய சேவடி யான்கட வூருறை
யுத்தமனே. **#1020**

மான்குட்டி விளங்கும் கையினனாய், தேவர் தலைவனான தன்னை மனம் மகிழ்ந்து வழிபட்ட பிரமசாரியின் அரிய உயிரைக் கைப்பற்றுதற்காகக் கொதிக்கும் உள்ளத்தோடு வெகுண்டு புறப்பட்ட, மூவிலை வேலை ஏந்திய கூற்றுவன் வாய் விட்டுக் கதறுமாறு அவனைச் சிதைத்த சேவடியை உடையவன், கடவூர் உறை உத்தமன்.

திருக்கடவூர்

குழைத்திகழ் காதினன் வானவர் கோனைக்
குளிர்ந்தெழுந்து
பழக்கமொ டர்ச்சித்த மாணித னாருயிர்
கொள்ளவந்த

தழற்பொதி மூவிலை வேலுடைக் காலனைத்
தானலற
உழக்கிய சேவடி யான்கட வூருறை
யுத்தமனே. **#1021**

குழையணிந்த காதுகளை உடைய, தேவர் தலைவனாகிய தன்னை நீராடி வழக்கமாக அருச்சித்த மாணியின் அரிய உயிரைக் கைப்பற்ற வந்த தீப்பொறி கக்கும் முத்தலைச் சூலம் ஏந்திய கூற்றுவன் கதறுமாறு அவனைச் சிதறச்செய்த சேவடியான் கடவூர் உறை உத்தமன்.

<u>திருக்கடவூர்</u>

பாலனுக் காயன்று பாற்கட லீந்து
பணைத்தெழுந்த
ஆலினிற் கீழிருந் தாரண மோதி
யருமுனிக்காய்ச்
சூலமும் பாசமுங் கொண்டு தொடர்ந்தடர்ந்
தோடிவந்த
காலனைக் காய்ந்தபி ரான்கட வூருறை
யுத்தமனே. **#1022**

சிறுவனாகிய உபமன்யுவுக்குப் பால் உணவுக்காகப் பாற்கடலையே வழங்கி, பல கிளைகளோடு ஓங்கி வளர்ந்த கல்லால மர நிழலின் கீழ் இருந்து வேதங்களின் செய்திகளைச் சனகர் முதலிய முனிவர் நால்வருக்கு உபதேசித்துச் சிறந்த முனிவனான மார்க்கண்டேயனுக்காகச் சூலமும் பாசக் கயிறும் கொண்டு தொடர்ந்து அவனை நெருங்க ஓடிவந்த காலனை வெகுண்ட பெருமான், கடவூர் உறை உத்தமனாவான்.

<u>திருக்கடவூர்</u>

படர்சடைக் கொன்றையும் பன்னக மாலை
பணிகயிறா
உடைதலை கோத்துழன் மேனிய னுண்பலிக்
கென்றுழல்வோன்
சுடர்பொதி மூவிலை வேலுடைக் காலனைத்
துண்டமதா
உடறிய சேவடி யான்கட வூருறை
யுத்தமனே. **#1023**

பரவிய சடையிலே கொன்றைமாலை, பாம்பு மாலை, பாம்பினைத் தொடுக்கும் கயிறாகக் கொண்டு தொடுத்துக் கோத்துத் தலையில் அசைகின்ற தலைமாலை என்பனவற்றை அணிந்த திருமேனியனாய்,

உண்ணும் பொருள்களைப் பிச்சை எடுப்பதற்காகத் திரிவோனாய், ஒளி வீசும் முத்தலைச் சூலம் ஏந்திய காலன் துண்டங்களாகுமாறு வெகுண்ட சேவடிகளை உடையவன் கடவூர் உறை உத்தமன்.

திருக்கடவூர்

வெண்டலை மாலையுங் கங்கை கரோடி
விரிசடைமேல்
பெண்டணி நாயகன் பேயுகந் தாடும்
பெருந்தகையான்
கண்டனி நெற்றியன் காலனைக் காய்ந்து
கடலின்விடம்
உண்டருள் செய்தபி ரான்கட வூருறை
யுத்தமனே. **#1024**

வெள்ளிய தலைகளால் ஆகிய மாலையாகிய கரோடி பொருந்திய விரிந்த சடையின்மீது கங்கையாகிய பெண்ணை அணிந்த தலைவனாய்ப் பேய்களோடு விரும்பி ஆடும் பெருந்தகையாய், நெற்றியில் தனியான ஒரு கண் உடையவனாய்க் காலனை வெகுண்டவனாய், கடல் விடத்தை உண்ட பெருமான் கடவூர் உறை உத்தமன்.

திருக்கடவூர்

கேழல தாகிக் கிளறிய கேசவன்
காண்பரிதாய்
வாழிநன் மாமலர்க் கண்ணிடந் திட்டவம்
மாலவற்கன்
றாழியு மீந்து வடுதிறற் காலனை
யன்றடர்த்து
ஊழியு மாய பிரான்கட வூருறை
யுத்தமனே. **#1025**

பன்றி உருவெடுத்துப் பூமியைக் குடைந்துசென்ற கேசவனாகிய திருமால் தன் முயற்சியால் காண்டற்கு அரியவனாய், தான் வாழ்வதற்காகத் தன் தாமரைபோன்ற கண் ஒன்றனைப் பெயர்த்து அர்ப்பணித்த அத்திருமாலுக்குச் சக்கரப்படையை வழங்கியவனாய், ஒரு காலத்தில் கூற்றுவனை அழித்தவனாய், எல்லா ஊழிகளிலும் உள்ள பெருமான் கடவூர் உறை உத்தமன்.

திருக்கடவூர்

தேன்றிகழ் கொன்றையுங் கூவிள மாலை

திருமுடிமேல்
ஆன்றிக ழைந்துகந் தாடும் பிரான்மலை
யார்த்தெடுத்த
கூன்றிகழ் வாளரக் கன்முடி பத்துங்
குலைந்துவிழ
ஊன்றிய சேவடி யான்கட வூருறை
யுத்தமனே. **#1026**

தேன் விளங்கும் கொன்றை மாலையும் வில்வமாலையும் அணிந்த அழகிய முடியின் மீது பஞ்சகௌவிய அபிடேகத்தை விரும்பும் பிரானாய், ஆரவாரம் செய்து கயிலை மலையைப் பெயர்க்க முற்பட்ட வளைந்த வாளை உடைய இராவணன் பத்துத் தலைகளும் சிதறிவிழுமாறு அழுத்திய சிவந்த பாதங்களை உடையவன் கடவூர் உறை உத்தமன் ஆவான்.

திருமாற்பேறு

திருமாற்பேறு

திருமாற்பேறு, திருவிருத்தம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மால்வணங்குமீசர்.
தேவியார் : கருணைநாயகியம்மை.

மாணிக் குயிர்பெறக் கூற்றை யுதைத்தன
மாவலிபால்
காணிக் கிரந்தவன் காண்டற் கரியன
கண்டதொண்டர்
பேணிக் கிடந்து பரவப் படுவன
பேர்த்துமஃதே
மாணிக்க மாவன மாற்பே றுடையான்
மலரடியே. #1027

மாற்பேறுடையானுடைய தாமரை போன்ற திருவடிகள் பிரமசாரியான மார்க்கண்டேயன் ஆயுள் குறையாது நிலைபெற்றிருக்கக் கூற்றுவனை உதைத்தன. மாவலியினிடத்தில் நிலத்திற்காக யாசகம் செய்த திருமால் காண்பதற்கு அரியன. ஞானத்தால் உணர்ந்த அடியவர்களால் விரும்பித் துதிக்கப்படுவன. மாணிக்கம் போன்று ஒளி வீசுவன. மேலும் வீடுபேற்றை நல்குவன.

திருமாற்பேறு

கருடத் தனிப்பாகன் காண்டற் கரியன
காதல்செய்யில்
குருடர்க்கு முன்னே குடிகொண் டிருப்பன
கோலமல்கு
செருடக் கடிமலர்ச் செல்விதன் செங்கம
லக்கரத்தால்
வருடச் சிவப்பன மாற்பே றுடையான்
மலரடியே. #1028

கருடனை வாகனமாக உடைய திருமால் காண்பதற்கு அரியனவாகிய மாற்பேறுடையான் திருவடிகள் அன்பு செய்தால் அகக்கண் புறக்கண் என்ற இரு கண்களும் இல்லாதவர்களுக்கும் அவர் எதிரே நிலையாக இருந்து நிலைபெயராது ஒளி வீசுவன. அழகுமிக்க வாகைமாலையைச் சூடிய பார்வதி தன் கைகளால் தடவுவதால் சிவப்பு நிறம் மிகுவன.

திருத்தூங்கானைமாடம்

திருத்தூங்கானைமாடம்

திருத்தூங்கானைமாடம், திருவிருத்தம்

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்
போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங்
கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி
மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுட் டூங்கானை மாடச்
சுடர்க்கொழுந்தே. #1029 ★★★★★

விரும்பி மேகங்கள் தங்குதல் பொருந்திய பெண்ணாகடத்திலுள்ள திருக்கோயிலாகிய தூங்கானை மாடத்தில் ஒளிப் பிழம்பாய் இருக்கும் பெருமானே! உன்னுடைய பொன்போன்ற திருவடிகளில் அடியேன் செய்யும் விண்ணப்பமாகிய வேண்டுகோள் ஒன்று உளது. அஃதாவது அடியேனுடைய உயிரைப் பாதுகாக்கும் விருப்பம் உனக்கு உண்டானால், யான் சமண சமயத்தில் வாழ்க்கையின் பெரும் பகுதியை வீணாக்கினவன் என்று மக்கள் கூறும் பழிச் சொற்கள் நீங்குமாறு, உன்னுடைய அடிமையாக அடியேனை எழுதிக் கொண்டாய் என்பது புலப்பட ஒளிவீசும் முத்தலைச் சூலப்பொறியை அடியேன் உடம்பில் பொறித்து வைப்பாயாக.

திருத்தூங்கானைமாடம்

ஆவா சிறுதொண்ட னென்னினைந் தானென்
றரும்பிணிநோய்
காவா தொழியிற் கலக்குமுன் மேற்பழி
காதல்செய்வார்
தேவா திருவடி நீறென்னைப் பூசுசெந்
தாமரையின்
பூவார் கடந்தையுட் டூங்கானை மாடத்தெம்
புண்ணியனே #1030

செந்தாமரைப் பூக்கள் நிறைந்த கடந்தையுள் தூங்கானைமாடத்து உறையும் எம் புண்ணியனே! 'ஐயோ' இச்சிறு தொண்டன் என்னை விருப்புற்று நினைத்தான் என்ற திருவுளம் பற்றிப் பெரிய பிணிகளும் நோய்களும் தாக்காதவாறு அடியேனைப்பாதுகாவாமல் விடுத்தால் புண்ணியனாகிய உனக்குப் பழி வந்து சேரும். ஆதலின் விரும்பும்

அடியவர் தலைவனாகிய நீ உன் திருவடிகள் தோய்ந்த நீற்றினை அடியேன் மீது பூசுவாயாக.

திருத்தூங்கானைமாடம்

கடவுந் திகிரி கடவா தொழியக்
கயிலையுற்றான்
படவுந் திருவிர லொன்றுவைத் தாய்பனி
மால்வரைபோல்
இடவம் பொறித்தென்னை யேன்றுகொள் ளாயிருஞ்
சோலைதிங்கள்
கடவுங் கடந்தையுட் டூங்கானை மாடத்தெந்
தத்துவனே. **#1031**

பெரிய சோலைகளிலே சந்திரன் பொருந்தி உலவும் கடந்தைத் தலத்தில் உள்ள தூங்கானை மாடத்தில் உறையும் எம் மெய்ப்பொருளே! செலுத்திய தேர்ச்சக்கரம் மேல் உருளாது தடைப்படக் கயிலையைப் பெயர்க்க முற்பட்ட இராவணன் உடல் நெரியுமாறு அழகிய கால்விரல் ஒன்றால் அழுத்தியவனே! பெரிய இமய மலைபோன்ற வெண்ணிறமுடைய காளை வடிவப் பொறியை அடியேன் உடலில் பொறித்து அடியேனை உன் தொண்டனாக ஏற்றுக்கொள்வாயாக.

பசுபதி

பசுபதி

பசுபதி, திருவிருத்தம்

சாம்பலைப் பூசித் தரையிற் புரண்டுநின்
றாள்பரவி
ஏம்பலிப் பார்கட் கிரங்குகண் டாயிருங்
கங்கையென்னும்
காம்பலைக் கும்பணைத் தோளி கதிர்ப்பூண்
வனமுலைமேல்
பாம்பலைக் குஞ்சடை யாயெம்மை யாளும்
பசுபதியே. #1032

பெரிய கங்கை என்னும் மூங்கில் போன்ற பருத்ததோள்களை உடைய பெண்ணின் ஒளி வீசுகின்ற அணிகலன்களை அணிந்த அழகிய முலைமீது பாம்புகள் தவழும் சடையை உடையவனே! எம்மை அடிமை கொள்ளும் ஆன்ம நாயகனே! சாம்பலைப் பூசிக் கொண்டு. உறங்கும்போது வெறும் தரையிலேயே கிடந்து உறங்கி உன் திருவடிகளை முன் நின்று துதித்து அங்கலாய்க்கும் அடியவர்கள்திறத்து அருள் செய்வாயாக.

பசுபதி

உடம்பைத் தொலைவித்துன் பாதந் தலைவைத்த
வுத்தமர்கள்
இடும்பைப் படாம லிரங்குகண் டாயிரு ளோடச்
செந்தீ
அடும்பொத் தனைய வழன்மழு வாவழ
லேயுமிழும்
படம்பொத் தரவரை யாயெம்மை யாளும்
பசுபதியே. #1033

இருள் ஓடுமாறு, அடுப்பம்பூவை ஒத்த நிறத்தினதாய்ச் செந்தீயை வெளிப்படுத்திக் கோபிக்கும் மழுப்படையை ஏந்தியவனே! நெருப்பைக் கக்கும் படமெடுத்தாடும் பாம்பை இடுப்பில் இறுகக் கட்டியவனே! எம்மை அடிமை கொள்ளும் பசுபதியே! பிறவிப் பிணியைப் போக்கி உன் திருவடிகளையே தம் தலைக்கண்வைத்த மேம்பட்டவர்களாகிய அடியவர்கள் துன்புறாத வகையில் அவர்களுக்கு இரங்கி அருளுவாயாக.

பசுபதி

தாரித் திரந்தவி ராவடி யார்தடு
மாற்றமென்னும்
மூரித் திரைப்பௌவ நீக்குகண் டாய்முன்னை
நாளொருகால்
வேரித்தண் பூஞ்சுட ரைங்கணை வேள்வெந்து
வீழச்செந்தீப்
பாரித்த கண்ணுடை யாயெம்மை யாளும்
பசுபதியே. **#1034**

முன்னொருகாலத்தில் தேனை உடைய குளிர்ந்த பூக்களாகிய ஒளிவீசும் ஐந்து அம்புகளை உடைய மன்மதனை வெந்து விழுமாறு நெருப்பினை வெளிப்படுத்திய கண்ணுடையவனாய் எம்மை ஆளும் பசுபதியே! வறுமைத் துன்பம் நீங்காத அடியவர்களுக்கு ஏற்படும் தடுமாற்றமாகிய பெரிய அலைகளை உடைய கடலிலிருந்து அவர்களைக் கரையேற்றுவாயாக.

<u>பசுபதி</u>

ஒருவரைத் தஞ்சமென் றெண்ணாதுன் பாத
மிறைஞ்சுகின்றார்
அருவினைச் சுற்ற மகல்விகண் டாயண்ட
மேயணவும்
பெருவரைக் குன்றம் பிளிறப் பிளந்துவேய்த்
தோளியஞ்சப்
பருவரைத் தோலுரித் தாயெம்மை யாளும்
பசுபதியே. **#1035**

வானளாவிய பெரிய மலைபோன்ற யானை பிளிறுமாறு அதன் உடலைப் பிளந்து மூங்கில் போன்ற தோள்களை உடைய பார்வதி அஞ்சுமாறு அதன் தோலை உரித்துப் போர்த்த பசுபதியே! வேறு எவரையும் பற்றுக்கோடாகக் கருதாமல் உன் திருவடிகளையே வழிபடும் அடியவர்களுடைய நீங்குதல் அரிய வினைத் தொகுதிகளைப் போக்கி அருளுவாயாக.

<u>பசுபதி</u>

இடுக்கொன்று மின்றியெஞ் சாமையுன் பாத
மிறைஞ்சுகின்றார்க்
கடர்க்கின்ற நோயை விலக்குகண் டாயண்ட
மெண்டிசையும்
சுடர்த்திங்கள் சூடிச் சுழல்கங்கை யோடுஞ்
சுரும்புதுன்றிப்

படர்க்கொண்ட செஞ்சடை யாயெம்மை யாளும்
பசுபதியே. **#1036**

அண்டங்களிலும் எட்டுத் திசைகளிலும் ஒளி வீசுகின்ற சந்திரனைச் சூடிச் சுழலுகின்ற கங்கையோடு வண்டுகள் நெருங்கிப் பூக்களில் பரவுதலைக் கொண்ட செஞ்சடைப் பசுபதியே! இடையூறு ஏதும் இல்லாமல் தொடர்ச்சியாக உன் திருவடிகளை வழிபடுகின்ற அடியவர்களை வருத்தும் பிறவிப் பிணியைப் போக்குவாயாக.

<u>பசுபதி</u>

அடலைக் கடல்கழி வானின் னடியிணை
யேயடைந்தார்
நடலைப் படாமை விலக்குகண் டாய்நறுங்
கொன்றைதிங்கள்
சுடலைப் பொடிச்சுண்ண மாசுணஞ் சூளா
மணிகிடந்து
படரச் சுடர்மகு டாவெம்மை யாளும்
பசுபதியே. **#1037**

நறிய கொன்றை, பிறை, சாம்பல், பாம்பு, தலையில் சூடும் மணி இவை பரவி ஒளி வீசும் சடைமுடியை உடைய பசுபதியே! துயர்க்கடல் நீங்குவதற்காக நின் திருவடிகளையே பற்றுக்கோடாக அடைந்த அடியவர்கள் வருத்தமுறாத வகையில் அவர்கள் துயரங்களைப் போக்குவாயாக.

<u>பசுபதி</u>

துறவித் தொழிலே புரிந்துன் சுரும்படி
யேதொழுவார்
மறவித் தொழிலது மாற்றுகண் டாய்மதின்
மூன்றுடைய
அறவைத் தொழில்புரிந் தந்தரத் தேசெல்லு
மந்திரத்தேர்ப்
பறவைப் புரமெரித் தாயெம்மை யாளும்
பசுபதியே. **#1038**

மும்மதில்கள் உடையனவாய்த் தாம் தங்கும் இடங்களை அழித்தல் தொழிலைப் புரிந்து வானத்திலே உலவும், மந்திரத்தால் செல்லும் தேர்போலப் பறக்கும் ஆற்றலுடைய மூன்று கோட்டைகளையும் எரித்து அழித்த பசுபதியே! உலகில் பற்றறுத்து நிற்றலாகிய தொழிலையே விரும்பிச் செய்து உன்னுடைய வண்டுகள் சூழ்ந்து திருவடிகளையே தொழும் அடியவர்களுடைய மறத்தலாகிய செயலைப் போக்கி

அருளுவாயாக.

<u>பசுபதி</u>

சித்தத் துருகிச் சிவனெம்பி ரானென்று
சிந்தையுள்ளே
பித்துப் பெருகப் பிதற்றுகின் றார்பிணி
தீர்த்தருளாய்
மத்தத் தரக்க னிருபது தோளு
முடியுமெல்லாம்
பத்துற் றுறநெரித் தாயெம்மை யாளும்
பசுபதியே. **#1039**

செருக்குற்ற இராவணனுடைய இருபது தோள்களையும் பத்துத் தலைகளையும், அவனுக்கு உன் திறத்துப் பக்தி ஏற்படுமாறு நசுக்கியவனே! எம்மை அடிமை கொள்ளும் பசுபதியே! மனம் உருகிச் சிவனே எம் தலைவன் என்று மனத்திலே உறுதியான எண்ணம் மிகவே அதனையே எப்பொழுதும் அடைவுகேடாகச் சொல்லிக் கொண்டிருக்கும் அடியவர்களுடைய பிறவிப் பிணியைப்போக்கி அருளுவாயாக.

சரக்கறை

சரக்கறை

சரக்கறை, திருவிருத்தம்

விடையும் விடைப்பெரும் பாகாவென் விண்ணப்பம்
வெம்மழுவாட்
படையும் படையாய் நிரைத்தபல் பூதமும்
பாய்புலித்தோல்
உடையு முடைதலை மாலையு மாலைப்
பிறையொதுங்கும்
சடையு மிருக்குஞ் சரக்கறை யோவென்
றனிநெஞ்சமே. **#1040**

பகைவரோடு போரிடும் காளையை இவரும் பெரிய பாகனே! அடியேன் வேண்டி உரைப்பது இது. கொடிய மழுவாள் ஆகிய படையும், படைகளாய் வரிசைப் படுத்தப்பட்ட பெரிய பூதங்களும், பாய்கின்ற புலியின் தோலாகிய ஆடையும், உடைந்த தலைகளால் ஆகிய மாலையும், மாலையில் தோன்றும் வளர்பிறை தங்கும் சடைமுடியும் தங்கியிருக்கும் கருவூலமோ அடியேனுடைய தனிமையை விரும்பும் நெஞ்சம்?

சரக்கறை

விஞ்சத் தடவரை வெற்பாவென் விண்ணப்ப
மேலிலங்கு
சங்கக் கலனுஞ் சரிகோ வணமுந்
தமருகமும்
அந்திப் பிறையு மனல்வா யரவும்
விரவியெல்லாம்
சந்தித் திருக்குஞ் சரக்கறை யோவென்
றனிநெஞ்சமே. **#1041**

உயரத்தில் மேம்பட்ட பெரிய பக்க மலைகளை உடைய கயிலை மலையானே! காதுகளில் விளங்கும் சங்கினாலாகிய காதணியும், வளைவாக உடுக்கப்பட்ட கோவணமும், உடுக்கையும், அந்தியில் தோன்றும் வளர்பிறையும், விடத்தை உடைய வாயதாகிய பாம்பும் ஆகிய எல்லாம் கலந்து கூடியிருக்கும் கருவூலமோ அடியேனுடைய தனி நெஞ்சம் என்று விண்ணப்பிக்கிறேன்.

சரக்கறை

வீந்தார் தலைகல னேந்தீயென் விண்ணப்ப
மேலிலங்கு
சாந்தாய வெந்த தவளவெண் ணீறுந்
தகுணிச்சமும்
பூந்தா மரைமேனிப் புள்ளி யுழைமா
னதள்புலித்தோல்
தாந்தா மிருக்குஞ் சரக்கறை யோவென்
றனிநெஞ்சமே. **#1042**

இறந்தவர் தலையைப் பிச்சை எடுக்கும் பாத்திரமாக ஏந்தி இருப்பவனே! திருமேனியில் விளங்கும் சந்தனம் போன்ற வெள்ளிய திருநீறும், தகுணிச்சம் என்ற இசைக்கருவியும், பூத்த தாமரை போன்ற திருமேனியில் அணிந்துள்ள புள்ளிகளை உடைய மான்தோலும் புலித்தோலும் இருக்கும் கருவூலமோ அடியேனுடைய தனி நெஞ்சம் என்று விண்ணப்பிக்கிறேன்.

சரக்கறை

வெஞ்சமர் வேழத் துரியாயென் விண்ணப்ப
மேலிலங்கு
வஞ்சமா வந்த வருபுனற் கங்கையும்
வான்மதியும்
நஞ்சமா நாக நகுசிர மாலை
நகுவெண்டலை
தஞ்சமா வாழுஞ் சரக்கறை யோவென்
றனிநெஞ்சமே. **#1043**

கொடிய போரிட வந்த யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்தவனே! தலையிலே விளங்குகின்ற வஞ்சனையாக வந்த நீரை உடைய கங்கையும், வானில் உலவும் பிறையும், விடத்தை உடைய பெரிய பாம்பும், சிரிக்கின்ற தலைகளால் ஆகிய மாலையும், பிச்சை எடுக்க உதவும் மண்டையோடும் வாழும் கருவூலமோ அடியேனுடைய தனி நெஞ்சம் என்று விண்ணப்பிக்கிறேன்.

சரக்கறை

வேலைக் கடனஞ்ச முண்டாயென் விண்ணப்ப
மேலிலங்கு
காலற்க டந்தா னிடங்கயி லாயமுங்
காமர்கொன்றை
மாலைப் பிறையு மணிவா யரவும்
விரவியெல்லாம்

சாலக் கிடக்குஞ் சரக்கறை யோவென்
றனிநெஞ்சமே. **#1044**
கரையை உடைய பாற்கடலினின்றும் தோன்றிய விடத்தை அருந்தியவனே! கூற்றுவனை அழித்த உன்னுடைய கயிலாய மலையும், தலைமேலே விளங்கும் விருப்பம் மருவிய கொன்றை மாலையும் அதனோடு தோன்றும் பிறையும், அழகிய வாயை உடைய பாம்பும் எல்லாம் பெரிதும் கலந்து கிடக்கும் கருவூலமோ அடியேனுடைய தனி நெஞ்சம் என்று விண்ணப்பிக்கிறேன்.

<u>சரக்கறை</u>

வீழிட்ட கொன்றையந் தாராயென் விண்ணப்ப
மேலிலங்கு
சூழிட் டிருக்குநற் சூளா மணியுஞ்
சுடலைநீறும்
ஏழிட் டிருக்குநல் லக்கு மரவுமென்
பாமையோடும்
தாழிட் டிருக்கும் சரக்கறை யோவென்
றனிநெஞ்சமே. **#1045**
விரும்பப்பட்ட கொன்றை மாலையை அணிந்தவனே! தலையில் விளங்கும் ஒளி சூழ்ந்த சூளாமணி என்னும் தலைக்கு அணியும் மணி ஆபரணமும், சுடுகாட்டுச் சாம்பலும், எழு கோவையாக அமைக்கப்பட்ட சிறந்த அக்கு மணிமாலையும், பாம்பும், எலும்பும், ஆமையோடும் சேர்த்துப் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் கருவூலமோ அடியேனுடைய தனி நெஞ்சம் என்று விண்ணப்பிக்கிறேன்.

<u>சரக்கறை</u>

விண்டார் புரமூன்று மெய்தாயென் விண்ணப்ப
மேலிலங்கு
தொண்டா டியதொண் டடிப்பொடி நீறுந்
தொழுதுபாதம்
கண்டார்கள் கண்டிருக் குங்கயி லாயமுங்
காமர்கொன்றைத்
தண்டா ரிருக்குஞ் சரக்கறை யோவென்
றனிநெஞ்சமே. **#1046**
பகைவருடைய மும்மதில்களையும் அம்பு எய்து அழித்தவனே! உன் மேல் விளங்கும் விருப்பம் மருவிய கொன்றையாகிய குளிர்ந்த மாலையும், தொண்டு செய்யும் அடியவர்களுடைய பாத தூளியும், தொழுது உன் திருவடியைத் தியானிப்பவர்கள் தரிசித்துக்

கொண்டிருக்கும் கயிலாய மலையும் பொருந்தியிருக்கும் கருவூலமோ அடியேனுடைய தனி நெஞ்சம் என்று விண்ணப்பிக்கிறேன்.

சரக்கறை

விடுபட்டி யேறுகந் தேறீயென் விண்ணப்ப
மேலிலங்கு
கொடுகொட்டி கொக்கரை தக்கை குழறாளம்
வீணைமொந்தை
வடுவிட்ட கொன்றையும் வன்னியு மத்தமும்
வாளரவும்
தடுகுட்ட மாடுஞ் சரக்கறை யோவென்
றனிநெஞ்சமே. **#1047**

அடக்கமின்றி வேண்டியவாறு திரியுமாறு விடப்பட்ட பட்டிக்காளையை விரும்பி வாகனமாகக் கொள்பவனே! கொடு கொட்டி, கொக்கரை, தக்கை, குழல், தாளம், வீணை, மொந்தை என்ற இசைக்கருவிகளும், உன் திருமேனியில் விளங்கும் கொன்றை வன்னி ஊமத்தம்பூ, பாம்பு என்பனவும் குணலைக் கூத்தாடும் கருவூலமோ அடியேன் தனி நெஞ்சம் என்று விண்ணப்பிக்கிறேன்.

சரக்கறை

வெண்டிரைக் கங்கை விகிர்தாவென் விண்ணப்ப
மேலிலங்கு
கண்டிகை பூண்டு கடிசூத் திரமேற்
கபாலவடம்
குண்டிகை கொக்கரை கோணற் பிறைகுறட்
பூதப்படை
தண்டிவைத் திட்ட சரக்கறை யோவென்
றனிநெஞ்சமே. **#1048**

வெள்ளிய அலைகளை உடைய கங்கையைச் சடையில் ஏந்திய வேறுபட்டவனே! மார்பின் மேல் விளங்கும் கண்டிகையைக் கழுத்தில் பூண்டு, அரை நாண் கயிற்றின்மீது தலைகளை இணைத்த தலைமாலையை அணிந்து, நீர்ப்பாத்திரம், கொக்கரை என்ற இசைக்கருவி, வளைந்த பிறை, குட்டையான வடிவத்தை உடைய பூதப்படை இவற்றைப் பெருமானாகிய நீ சேகரித்து வைத்துள்ள சரக்கறையோ அடியேனுடைய தனி நெஞ்சம் என்று விண்ணப்பம் செய்கிறேன்.

சரக்கறை

வேதித்த வெம்மழு வாளீயென் விண்ணப்ப
மேலிலங்கு
சோதித் திருக்குநற் சூளா மணியுஞ்
சுடலைநீறும்
பாதிப் பிறையும் படுதலைத் துண்டமும்
பாய்புலித்தோல்
சாதித் திருக்குஞ் சரக்கறை யோவென்
றனிநெஞ்சமே. **#1049**
பகைவர் உடலைப் பிளக்கும் வெள்ளிய மழுப்படையை ஆள்பவனே! தலைமேல் விளங்கும் ஒளியுடைய சூளா மணியும், சுடுகாட்டுச் சாம்பலும், சிறுபிறையும், துண்டமான மண்டையோடும், பாயும் புலித்தோலும் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் சரக்கறை அன்றோ அடியேனுடைய தனி நெஞ்சம் என்று விண்ணப்பம் செய்கிறேன்.

சரக்கறை

விவந்தா டியகழ லெந்தாயென் விண்ணப்ப
மேலிலங்கு
தவந்தா னெடுக்கத் தலைபத் திறுத்தனை
தாழ்புலித்தோல்
சிவந்தா டியபொடி நீறுஞ் சிரமாலை
சூடிநின்று
தவந்தா னிருக்குஞ் சரக்கறை யோவென்
றனிநெஞ்சமே. **#1050**
மற்றவர்களோடு மாறுபட்டு வந்து ஆடிய திருவடிகளை உடைய எம் தலைவனே! முற்பிறவிகளில் செய்து விளங்கிய தவத்தானாகிய இராவணன் கயிலையைப் பெயர்க்க முற்பட அவனுடைய பத்துத் தலைகளையும் சிதைத்தாய். முழந்தாளவு தாழ்ந்த புலியின்தோலும் செம்மேனியில் பூசப்பட்ட வெண் திருநீறும், தலைமாலையும் சூடிக் கொண்டு நீ தவ நிலையில் இருக்கும் கருவூலமோ அடியேனுடைய தனிநெஞ்சம் என்பதனை விண்ணப்பம் செய்கிறேன்.

தனி - திருவிருத்தம்

தனி, திருவிருத்தம்

வெள்ளிக் குழைத்துணி போலுங் கபாலத்தன்
வீழ்ந்திலங்கு
வெள்ளிப் புரியன்ன வெண்புரி நூலன்
விரிசடைமேல்
வெள்ளித் தகடன்ன வெண்பிறை சூடிவெள்
ளென்பணிந்து
வெள்ளிப் பொடிப்பவ ளப்புறம் பூசிய
வேதியனே. **#1051**

வெண்ணிறத்தினை உடைய சங்கின் துண்டு போன்ற வெண்ணிறமான மண்டையோட்டை ஏந்தியவனாய், வெள்ளியை முறுக்கினாற் போன்ற வெள்ளிய பூணூலை அணிந்தவனாய், விரிந்த சடையின்மேல் வெள்ளித்தகடு போன்ற வெண்பிறையைச் சூடியவனாய், வெள்ளிய எலும்புகளை அணிந்து பவளம் போன்ற உடலில் வெண்ணிறநீற்றைப் பூசிய வேதியன் சிவபெருமான் ஆவான்.

தனி - திருவிருத்தம்

உடலைத் துறந்துல கேழுங் கடந்துல
வாததுன்பக்
கடலைக் கடந்துய்யப் போயிட லாகுங்
கனகவண்ணப்
படலைச் சடைப்பர வைத்திரைக் கங்கைப்
பனிப்பிறைவெண்
சுடலைப் பொடிக்கட வுட்கடி மைக்கட்
டுணிநெஞ்சமே. **#1052**

நெஞ்சமே! பொன் போல ஒளிவீசும் செந்நிறமுடைய பரவிய சடையில் கடல் போன்ற அலைகளை உடைய கங்கையையும் குளிர்ந்த பிறையையும் வைத்த, சுடுகாட்டுச் சாம்பலைப் பூசிய தெய்வத்தின் அடிமை செய்தற்கண் துணிவுடையை ஆவாய். அவ்வாறு செய்தால் பிண்டமாகிய உடலைத் துறந்து, ஏழுலகமான அண்டத்தைக் கடந்து அழியாத பிறவித்துன்பக் கடலைக் கடந்து நாம் பிழைத்துப் பாசநீக்கம் பெற்று அப்பெருமானுடைய வீட்டுலகை அடையலாம்.

தனி - திருவிருத்தம்

முன்னே யுரைத்தான் முகமனே யொக்குமிம்
மூவுலகுக்
கன்னையு மத்தனு மாவா யழல்வணா
நீயலையோ
உன்னை நினைந்தே கழியுமென் னாவி
கழிந்ததற்பின்
என்னை மறக்கப் பெறாயெம் பிரானுன்னை
வேண்டியதே. #1053

தீவண்ணனே! உன் முன்னிலையில் யான் ஏதாவது கூறினால் அது உபசாரவார்த்தை போலக் காணப்படும். இம் மூவுலகுக்கும் தாயும் தந்தையும் ஆயவன் நீ அல்லையோ? உன்னைத் தியானித்துக் கொண்டே என் உயிர் நீங்கும். எண் உயிர் இவ்வுடலை நீங்கியபின் என்னை, நீ மறக்கக் கூடாது என்பதனையே யான் உன்னை வேண்டுகிறேன்.

தனி - திருவிருத்தம்

நின்னையெய் போது நினையவொட் டாய்நீ
நினையப்புகில்
பின்னையப் போதே மறப்பித்துப் பேர்த்தொன்று
நாடுவித்தி
உன்னையெப் போது மறந்திட் டுனக்கினி
தாவிருக்கும்
என்னையொப் பாருள ரோசொல்லு வாழி
யிறையவனே. #1054

இறையவனே! உன்னை எப்போதும் நினைத்திருக்குமாறு செய்ய நீ இசைகின்றாய் அல்லை. உன்னை உறுதியாகத் தியானிக்கப் புகுந்தால் அப்போதே அதனை மறக்கச் செய்து வேறொரு பொருளில் அடியேனுடைய மனம் ஈடுபடுமாறு செய்கின்றாய். உன்னை எப்போதும் மறந்தவனாயினும் உனக்கு இனியனாகச் சொல்லிக் கொண்டிருக்கும் அடியேனை ஒத்தவர் வேறு எவரேனும் இவ்வுலகில் உள்ளனரோ என்பதனைச் சொல்லுவாயாக.

தனி - திருவிருத்தம்

முழுத்தழன் மேனித் தவளப் பொடியன்
கனகக்குன்றத்
தெழிற் 1பெருஞ் சோதியை யெங்கள் பிரானை
யிகழ்திர்கண்டீர்
தொழப்படுந் தேவர் தொழப்படு வானைத்

தொழுதபின்னைத்
தொழப்படுந்தேவர்தம்மால் தொழுவிக்குந்தன்
றொண்டரையே. **#1055**

முழுமையான அனல்போன்ற சிவந்த திருமேனியில் வெள்ளிய திருநீற்றை அணிந்தவனாய், மேருமலை போன்ற அழகிய பெரிய ஒளிவடிவினனாகிய எங்கள் பெருமானை இகழ்கின்ற நீங்கள் இதனைத் தெரிந்து கொள்ளுங்கள். பொது மக்களால் தொழப்படும் சிறுதேவரால் தொழப்படும் எம்பெருமானைத் தொழுத பின்னர் அப் பெருமான் பிறரால் தொழப்படும் அச்சிறுதேவரைக் கொண்டும் அவர்களால் தன் அடியவர்களைத் தொழச் செய்வான்.

<u>தனி - திருவிருத்தம்</u>

விண்ணகத் தான்மிக்க வேதத்து ளான்விரி
நீருடுத்த
மண்ணகத் தான்றிரு மாலகத் தான்மரு
வற்கினிய
பண்ணகத் தான்பத்தர் சித்தத்து ளான்பழ
நாயடியேன்
கண்ணகத் தான்மனத் தான்சென்னி யானெங்கறைக்
கண்டனே. **#1056**

எம் நீலகண்டப் பெருமான் தேவருலகிலும், மேம்பட்ட வேதத்திலும், கடலால் சூழப்பட்ட இம்மண்ணுலகத்திலும், திருமாலுடைய உள்ளத்திலும், பழகுதற்கு இனிய பண்களிலும், அடியவர் உள்ளத்தும், பழைய நாயைப் போன்ற இழிந்த அடியேனுடைய மனக் கண்களிலும் மனத்தும், தலைமீதும் எங்கும் கரந்து பரந்துள்ளான்.

<u>தனி - திருவிருத்தம்</u>

பெருங்கடன் மூடிப் பிரளயங் கொண்டு
பிரமனும்போய்
இருங்கடன் மூடி யிறக்கு மிறந்தான்
களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபர முங்கொண்டு
கங்காளராய்
வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை
வாசிக்குமே. **#1057**

பெரிய கடல் இவ்வுலகைமூட ஊழிவெள்ளம் ஏற்படப் பிரமனுடைய சத்திய உலகத்தும் பெரிய கடல்நீர் பொங்கி அதனை மூழ்க்கப் பிரமனும் இறப்பான். அந்நிலையில் பிரமனுடைய இறந்த உடலையும் கரிய

கடல்போன்ற நிறத்தினனாகிய திருமாலுடைய உடலையும் சுமந்து கொண்டு அவர்களுடைய தசைகழிந்த உடம்பின் எலும்புக் கூடுகளை அணிந்தவனாய், ஒடுங்கிய உலகம் மீளத்தோன்றும் முறைமையின் சங்கற்பம் செய்து கொண்டு இருந்து எம்பெருமான் சிறந்த வீணையை வாசித்துக் கொண்டிருப்பான்.

<u>தனி - திருவிருத்தம்</u>

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென்
மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென்
தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென்
வேலைநஞ்சுண்
டூனமொன் றில்லா வொருவனுக் காட்பட்ட
வுத்தமர்க்கே. **#1058**

கடலில் எழுந்தவிடத்தை உண்டும் எந்தக்குறைபாடும் இல்லாத ஒப்பற்ற சிவபெருமானுக்கு அடிமைகளாய்த் தொண்டு செய்யும் மேம்பட்டவர்களுக்கு, வானமும் மண்ணும் அசைந்து ஒடுங்கினாலும், பெரிய மலைகள் இடம் பெயர்ந்து மேல் கீழாகத் தடுமாறினாலும், கடல்களிலுள்ள நீர்வாழ் உயிரினங்கள் அழிந்தாலும், சூரிய சந்திரர்கள் இடம் பெயர்ந்து விழுந்தாலும் அவற்றைப்பற்றிய கவலை ஏதும் ஏற்படாது.

<u>தனி - திருவிருத்தம்</u>

சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம்
மேனியெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு மாகி
லவன்றனையான்
பவனெனு நாமம் பிடித்துத் திரிந்துபன்
னாளழைத்தால்
இவனெனைப் பன்னா ளழைப்பொழி யானென்
றெதிர்ப்படுமே. **#1059**

சிவன் என்ற பெயரைத் தனக்கே உரிய பெயராகக் கொண்ட செம்மேனிப் பெருமான் அடியேனை அடிமையாகக் கொண்டு கருணை செய்திடுவானாகில் அவனை அடியேன் 'பவன்' என்னும் திருப்பெயர் முதலியவற்றை உள்ளத்திலும் சொல்லிலும் பற்றி அவன் அடியேனை இயக்கும் இடம் தொறும் திரிந்து பலநாளும் அழைத்தால், இவன் என்னை பலநாளாக அழைத்தலைத் தவறாது செய்கிறான் என்று

திருவுள்ளம் பற்றி அடியேற்குக் காட்சி வழங்குவான்.

தனி - திருவிருத்தம்

என்னையொப் பாருன்னை யெங்ஙனங் காண்ப
ரிகலியுன்னை
நின்னையொப் பார்நின்னைக் காணும் படித்தன்று
நின்பெருமை
பொன்னையொப் பாரித் தழலை வளாவிச்செம்
மானஞ்செற்று
மின்னையொப் பார மிளிருஞ் சடைக்கற்றை
வேதியனே. **#1060**

பொன்னை ஒத்து ஒளியுடையதாய், தீயை ஒத்துச் செந்நிறத்ததாய்ச் சிவந்த வானத்தைப் பிளந்து நெடுகப் பரவியதாய மின்னலை ஒத்து விட்டு விட்டு ஒளிவீசும் சடைக்கற்றையை உடைய வேதப்பரம்பொருளே! அடியேனை ஒத்த சிற்றறிவினர் உன்னை யாங்ஙனம் காண இயலும்? உன்னோடு மாறுபட்டு உன்னை ஒப்பவராகத் தம்மைக் கருதிக்கொள்ளும் தேவர்கள் உன்னுடைய அடியையோ முடியையோ காண இயலாதவாறு உன்பெருமை ஏனைய எல்லாத் தேவர்களையும் விட மேம்பட்டுள்ளது.

தனி - திருவிருத்தம்

தனி, திருவிருத்தம்

பவளத் தடவரை போலுந்திண் டோள்களத்
தோண்மிசையே
பவளக் குழைதழைத் தாலொக்கும் பல்சடை
யச்சடைமேல்
பவளக் கொழுந்தன்ன பைம்முக நாகமந்
நாகத்தொடும்
பவளக்கண் வால மதியெந்தை சூடும்
பனிமலரே. **#1061**

எம்பெருமானுக்குத் திண்ணிய தோள்கள் பெரிய பவளமலைகள் போலவும், தோள்களில் படியும் சடைக்கற்றைகள் பவளத்தின் தளிர்கள் போலவும், சடைமேல் உள்ள படமெடுக்கும் தலையை உடைய நாகம் பவளக் கொழுந்து போலவும், நாகத்தொடு சூடப்பட்ட இளம்பிறை பவளத்தின் குளிர்ந்த மலர் போலவும் காட்சி வழங்குகின்றன.

தனி - திருவிருத்தம்

முருகார் நறுமல ரிண்டை தழுவிவண்

டேமுரலும்
பெருகா றடைசடைக் கற்றையி னாய்பிணி
மேய்ந்திருந்த
இருகாற் குரம்பை யிதுநா னுடைய
திதுபிரிந்தால்
தருவா யெனக்குன் றிருவடிக் கீழொர்
தலைமறைவே. **#1062**

நறுமணம் கமழும் பூக்களாலாகிய இண்டை மாலையைச் சூடி வண்டுகள் ஒலிக்க, பெருகுகின்ற கங்கை ஆறு வந்து பொருந்தியுள்ள சடைக் கற்றையை உடையவனே! பிணிகளால் உண்ணப் பட்டுக் கிடக்கும் இரு தூண்களாகிய இருகால்களை உடைய அடியேன் உடம்பாகிய குடிசை நீங்கினால் அடியேனுக்கு உன் திருவடிக் கீழ்த் தலைமறைவாய் இருக்க இருப்பிடம் அருளுவாயாக.

<u>தனி - திருவிருத்தம்</u>

மூவா வுருவத்து முக்கண் முதல்வமீக்
கூரிடும்பை
காவா யெனக்கடை தூங்கு மணியைக்கை
யாலமரர்
நாவா யசைத்த வொலியொலி மாறிய
தில்லையப்பால்
தீவா யெரிந்து பொடியாய்க் கழிந்த
திரிபுரமே. **#1063**

என்னும் மூத்தல் இல்லாத வடிவத்தை உடைய முக்கண்ணனாகிய காரணனே! மிகுந்த துயரிலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக என்று உன் இருப்பிடத்தின் வாசலில் தொங்கும் மணியைத் தேவர்கள் கையால் அதன் நாவில் அசைத்து எழுப்பிய ஒலி குறைந்து அழியுமுன் திரிபுரங்கள் நெருப்பில் எரிந்து சாம்பற் பொடியாய்ப் போய்விட்டன.

<u>தனி - திருவிருத்தம்</u>

பந்தித்த பாவங்க ளம்மையிற் செய்தன
விம்மைவந்து
சந்தித்த பின்னைச் சமழ்ப்பதென் னேவந்
தமரர்முன்னாள்
முந்திச் செழுமல ரிட்டு முடிதாழ்த்
தடிவணங்கும்
நந்திக்கு முந்துற வாட்செய்கி லாவிட்ட
நன்னெஞ்சமே. **#1064**

வந்து தேவர்கள் சந்நிதிக்கு முன் எய்திச் சிறந்த பூக்களைச் சமர்ப்பித்துத் தலையைத் தாழ்த்தித் திருவடிகளில் விழுந்து வணங்கும் சிவபெருமான் பக்கல் அடிமை செய்யாது நாளைப் பாழாக்கின நல்ல நெஞ்சமே! சென்ற பிறப்பில் செய்தனவாய் நம்மை விடாது பிணித்த பாவங்கள் இம்மையில் வந்து நமக்குப் பாவப் பயன்களை நல்கும் இந்நேரத்தில் அவை குறித்து வருந்துவதனால் பயன் யாது?

தனி - திருவிருத்தம்

அந்திவட் டத்திளங் கண்ணிய னாறமர்
செஞ்சடையான்
புந்திவட் டத்திடைப் புக்குநின் றானையும்
பொய்யென்பனோ
சந்திவட் டச்சடைக் கற்றை யலம்பச்
சிறிதலர்ந்த
நந்திவட் டத்தொடு கொன்றைவ ளாவிய
நம்பனையே. **#1065**

இது முன்னர்த் திருவையாற்றுத் திருவிருத்தம் இரண்டினுள் ஒன்றாய் முதலில் உளது. 'ஐயாறமர்ந்து வந்தென்' 'ஆறமர் செஞ்சடையான்' என்னும் வேறுபாடு மட்டும் கொண்டது. 'சிந்தி' என்பது சந்தி எனப் பிழைபட்டது. அதுவே அன்றி, இது வேறுபாடல் ஆகாது. 'இளங்கண்ணி' எனல் பொருந்தாது.

தனி - திருவிருத்தம்

உன்மத் தகமலர் சூடி யுலகந்
தொழச்சுடலைப்
பன்மத் தகங்கொண்டு பல்கடை தோறும்
பலிதிரிவான்
என்மத் தகத்தே யிரவும் பகலும்
பிரிவரியான்
தன்மத் தகத்தொ ரிளம்பிறை சூடிய
சங்கரனே. **#1066**

தன் தலையிலே ஓர் இளம் பிறையைச் சூடிய சங்கரன், ஊமத்தம் பூவைச்சூடி, உலகத்தார் தொழச் சுடுகாட்டில் சுடப்பட்ட பல மண்டை ஓடுகளையும் மாலையாக அணிந்து, பல வீட்டு வாயில்கள் தோறும் பிச்சைக்குத் திரிபவனாய், அடியேனுடைய தலையை விடுத்து இரவும் பகலும் பிரியாதவனாக உள்ளான்.

தனி - திருவிருத்தம்

அரைப்பா லுடுப்பன கோவணச் சின்னங்க
ளையமுணல்
வரைப்பா வையைக்கொண்ட தெக்குடி வாழ்க்கைக்கு
வானிரைக்கும்
இரைப்பா படுதலை யேந்துகை யாமறை
தேடுமெந்தாய்
உரைப்பா ருரைப்பன வேசெய்தி யாலெங்க
ளுத்தமனே. **#1067**

விண்ணுலகமெல்லாம் ஒலிக்கும் ஒலிவடிவினனே! நீக்கப்பட்ட பிரமன் தலை ஓட்டினை ஏந்திய கையினனே! வேதங்கள் தேடுகின்ற எந்தையே! எங்கள் மேம்பட்டவனே! இடையிலே கோவண உடை உடுத்து, பிச்சை ஏற்று வாழும் நீ பார்வதியை மணந்து கொண்ட செயல் என்ன குடும்ப வாழ்க்கை நடத்துவதற்கு? உன்னைக் குறை கூறுகின்றவர்கள் குறை கூறுதற்கு ஏற்ற செயல்களையே நீ செய்கின்றாய்.

<u>தனி - திருவிருத்தம்</u>

துறக்கப் படாத வுடலைத் துறந்துவெந்
தூதுவரோ
டிறப்ப னிறந்தா லிருவிசும் பேறுவ
னேறிவந்து
பிறப்பன் பிறந்தாற் பிறையணி வார்சடைப்
பிஞ்ஞகன்பேர்
மறப்பன்கொ லோவென்றென் னுள்ளங் கிடந்து
மறுகிடுமே. **#1068**

பற்றற விட்டொழிப்பதற்கு எளியதல்லாத இவ்வுடம்பை விடுத்துக் கொடிய காலதூதருடைய செயல்களால் இறப்பேன். இறந்தால் மேலுலகம் அடைவேன். மேலுலகம் ஏறிவந்து நிலவுலகிற்கு இறங்கி மீண்டும் பிறப்பேன். பிறந்தால் பிறைச்சந்திரனை அணிந்த நீண்ட சடையை உடைய தலைக்கோலத்தை அணிந்த பெருமானுடைய பெயரை மறந்து விடுவேனோ என்று என் உள்ளம் கிடந்து வருந்துகின்றது.

<u>தனி - திருவிருத்தம்</u>

வேரி வளாய விரைமலர்க் கொன்றை
புனைந்தனகன்
சேரி வளாயவென் சிந்தை புகுந்தான்
றிருமுடிமேல்
வாரி வளாய வருபுனற் கங்கை

சடைமறிவாய்
ஏரி வளாவிக் கிடந்தது போலு
மிளம்பிறையே. #1069
தேன் பெருக்கெடுத்தோடும் நறுமணம் கமழும் கொன்றைமலரைச் சூடிப் பாவமில்லாதவனாகிய இறைவன் உலகியல் செய்திகள் யாவும் கலந்து கிடக்கும் அடியேனுடைய உள்ளத்துப் புகுந்தான். அவன் திருமுடி அதன் மேல் வெள்ளமாய் வரும் நீரை உடைய கங்கை இவற்றால் தன் இயக்கம் தடைப்பட இளைய பிறை சடைப் புறமிருந்து திரும்பி ஏரி போன்ற நீர் நிறைந்த கங்கையில் தோய்ந்து கிடக்கிறது.

தனி - திருவிருத்தம்

கன்னெடுங் காலம் வெதும்பிக் கருங்கட
னீர்சுருங்கிப்
பன்னெடுங் கால மழைதான் மறுக்கினும்
பஞ்சமுண்டென்
றென்னொடுஞ் சூளறு மஞ்சனெஞ் சேயிமை
யாதமுக்கண்
பொன்னெடுங் குன்றமொன் றுண்டுகண் டீரிப்
புகலிடத்தே. #1070
நெடுங்காலம் மலைகள் மழையின்றிச் சூடேறக் கரிய கடலின் நீர் சுருங்குமாறு பல ஆண்டுகள் மழை பெய்யாது போயினும் பஞ்சம் ஏற்படுமே என்று அஞ்சாதே. என்னிடம் வஞ்சினம் கூறும் மனமே! எல்லா உயிர்க்கும் புகலிடமாகிய இச்சிவ பூமியிலே இமையாத முக்கண்களை உடைய பொன் மயமான நெடிய குன்றம் ஒன்று உள்ளது ஆதலின் அடியவர்கள் வருந்த வேண்டிய தேவை இல்லை.

தனி - திருவிருத்தம்

மேலு மறிந்தில னான்முகன் மேற்சென்று
கீழிடந்து
மாலு மறிந்திலன் மாலுற்ற தேவழி
பாடுசெய்யும்
பாலன் மிசைச்சென்று பாசம் விசிறி
மறிந்தசிந்தைக்
கால னறிந்தா னறிதற் கரியான்
கழலடியே. #1071
பிரமன் மேலே அன்ன வடிவிற் சென்று பெருமானுடைய முடியை அறிந்தான் அல்லன். கீழே தோண்டிச் சென்று திருமால் மனக்கலக்கம் உற்றானே அன்றிப் பெருமானுடைய திருவடிகளைக் கண்டான்

அல்லன். சிவபெருமானை வழிபட்டுக் கொண்டிருந்த இளையவனான மார்க்கண்டேயன் பால் சென்று அவன் மீது பாசக்கயிற்றை வீசி எறிந்து செயற்படாமல் மடங்கிய மனத்தை உடைய கூற்றுவன் பிரமனாலும் திருமாலாலும் அறிய முடியாத சிவ பெருமானுடைய கழல்களை அணிந்த திருவடிகளை அறியும் வாய்ப்பினைப் பெற்றான்.
அத்திருவடிகள் வாழ்க.

நான்காம் திருமுறை - தேவாரம் முற்றும்

பன்னிருதிருமுறை

திருநாவுக்கரசர்

ஐந்தாம் திருமுறை - தேவாரம்

தொகுப்பு: சங்கர்

சித்திரை 2017 வெளியீடு

பன்னிருதிருமுறை

ஐந்தாம் திருமுறை - தேவாரம்

திருநாவுக்கரசர் அருளியது

1016 பாடல்கள் கொண்ட 100 பதிகங்கள்

பன்னிருதிருமுறை

திருநாவுக்கரசர்

ஐந்தாம் திருமுறை - தேவாரம்

தொகுப்பு: சங்கர்

சித்திரை 2017 வெளியீடு

கோயில்

கோயில்

கோயில், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருமூலத்தானநாயகர் (எ) சபாநாதர்.
தேவியார் : சிவகாமியம்மை.

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே. **#1** ★★★★★

பேரின்பவீடு நல்கும் தில்லைத் திருச்சிற்றம்பலம் பொன்னுலக வாழ்வையும் தரும். இத்தகைய திருச்சிற்றம்பலத்தை, மேலும் இந்நிலவுலகில் என் அன்பு பெருகும் வகையில் கண்டு, பரமுத்திப் பேரின்ப நிலையை எளிதின் எய்துதற்கு இந்த நல்ல மனிதப் பிறவியை இன்னும் கொடுக்குமோ முதல்வன்?

கோயில்

அரும்பற் றப்பட ஆய்மலர் கொண்டுநீர்
சுரும்பற் றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற் றச்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற் றப்புலி யூரெம் பிரானையே. **#2**

அரும்புகள் நீக்கமுற ஆராய்ந்த போதுகளைக் கொண்டு வண்டுகள் நீக்கமுறத்தூவி, கரும்பாகிய வில்லை ஏந்திய கருவேளை எரித்தவனாகிய பெரும்பற்றப்புலியூர் எம்பிரானை நீர் தொழுமின்.

கோயில்

அரிச்சுற் றவினை யாலடர்ப் புண்டுநீர்
எரிச்சுற் றக்கிடந் தாரென்றயலவர்
சிரிச்சுற் றுப்பல பேசப்ப டாமுனம்
திருச்சிற் றம்பலஞ் சென்றடைந் துய்ம்மினே. **#3**

அரித்தல் மிக்க இருவினையால் தாக்குண்டு எரிசூழ (இடுகாட்டில்) கிடந்தார் என்று அயலோர் சிரிப்புற்றுப் பலபல பேசுதலை அடையுமுன்னரே நீவிர்போய்த் திருச்சிற்றம்பலத்தை அடைந்து உய்மின்.

கோயில்

அல்ல லென்செயும் அருவினை யென்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே. **#4**

எதிர்வினையும் தீர்தற்கரிய நுகர்வினையும் மேலைவல்வினையாகிய துவந்துவங்களும் எனக்கு என்ன துன்பம் செய்யவல்லன? தில்லைமாநகரிலே திருக்கூத்தாடியருளும் திருச்சிற்றம்பலவனார்க்கு அளவில்லாததொர் அடிமைபூண்ட எனக்கு அவ்வினைகள் ஒரு துன்பமும் செய்யவல்லன அல்ல.

<u>கோயில்</u>

ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம்
நான்நி லாவி யிருப்பனென் னாதனைத்
தேன்நி லாவிய சிற்றம் பலவனார்
வான்நி லாவி யிருக்கவும் வைப்பரே. **#5**

உடம்பில் உயிர் உயிர்த்துக்கொண்டிருக்கும் காலமெல்லாம் நான் என்னை ஆளாக உடைய திருச்சிற்றம்பலவனாரை விளக்கமுறப்பெற்றிருப்பேன். இன்பத்தேன் விளங்கிய அத்திருச்சிற்றம்பலவனார் அடியேனைப் பேரின்பவீட்டில் நிலைபெற்றிருக்கவும் வைப்பர்.

<u>கோயில்</u>

சிட்டர் வானவர் சென்று வரங்கொளும்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லுமச்
சிட்டர் பாலணு கான்செறு காலனே. **#6**

ஞானிகளும் தேவர்களும் போய்வேண்டும் வரங்களைப் பெற்றுக்கொள்ளும் சிறப்புடையது தில்லைச் சிற்றம்பலம்; சிட்டர்களாகிய அந்தணர்கள் வாழ்தற்கு இடமாவது அது. அத்தில்லைச் சிற்றம்பலத்தில் திருக்கூத்தாடியருளும் ஞானமூர்த்தியின் திருவடிகளைக் கைகூப்பித் தொழப்போகும் அச்சிட்டர்களாய மெய்ஞ்ஞானியரையே, ஏனையோரைச் செறுதற்கு வல்லகாலன் அணுக மாட்டான்.

<u>கோயில்</u>

ஒருத்த னார்உல கங்கட் கொருசுடர்
திருத்த னார்தில்லைச் சிற்றம் பலவனார்
விருத்த னாரிளை யார்விட முண்டவெம்
அருத்த னாரடி யாரை யறிவரே. **#7**

தனிமுதற்பொருள் உலகங்களுக்கெல்லாம் ஒரே விளக்காய் உள்ளவர்; செம்மையார்; தில்லைச்சிற்றம்பலத்தில் திருக்கூத்தாடுபவர்; முதியார்; இளையார்; நஞ்சுண்ட எம்செல்வர்; அடியாரை அறிவார்.

கோயில்

விண்நி றைந்ததோர் வெவ்வழ லின்னுரு
எண்நி றைந்த இருவர்க் கறிவொணாக்
கண்நி றைந்த கடிபொழி லம்பலத்
துள்நி றைந்துநின் றாடு மொருவனே. **#8**

யான் என்னும் செருக்கு மிகுந்த அயனும் மாலும் காண்டற்கு அரிதாய், ஆகாயத்தையளாவியெழுந்த சோதிப்பிழம்பு ஒப்பற்ற பெருந்தலைவனாய், தேனிறைந்த மணம் பொருந்திய சோலைகள் சூழ்ந்த தில்லையம்பலத்துள் திருச்சிற்றம்பல வடிவாய் நிறைந்து பஞ்சகிருத்திய நடனத்தைச் செய்யும். தொழக்கல்லாதவர்களாகிய அயன்மாலுக்கு அரிய முதல்வன் அன்பால் வழிபட்டவியாக்கிரர், பதஞ்சலியார் என்னும் முனிவர்களுக்கு வெளிப்பட்டுத் தோன்றித் தன்னியல்பை உணர்த்திப் பேரின்பம் அருளினன் என்றபடி.

கோயில்

வில்லை வட்டப் படவாங்கி யவுணர்தம்
வல்லைவட் டம்மதில் மூன்றுடன் மாய்த்தவன்
தில்லைவட் டந்திசை கைதொழு வார்வினை
ஒல்லைவட் டங்கடந் தோடுத லுண்மையே. **#9**

மேருவாகிய வில்லை வளைத்துத் திரிபுரத்தசுரர்களுடைய மும்மதில்களை அழித்தவன் எழுந்தருளிய தில்லை நகரின் திசையை நோக்கிக் கைகூப்புவார் செய்த வினைகள் விரைந்து அவர்ளை விட்டு ஓடும். இஃது உண்மை.

கோயில்

நாடி நாரணன் நான்முக னென்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் நெஞ்சு ளிருக்கவே. **#10**

திருமாலும் பிரமனும் முதல்வனைக் காண்பேம் எனத் தம்முள் எண்ணி முறையே நிலத்தை யகழ்ந்து தேடியும் வானிற் பறந்து திரிந்தும் காணவல்லாரல்லர்; மாடமாளிகைகள் சூழ்ந்த திருத்தில்லையில் திருவம்பலத்தில் நின்று ஆடுகின்ற பெருமானது திருவடிகள் அன்பால் நினையும் என் நெஞ்சத்து விளங்கி இருக்கும்.

கோயில்

மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம் பலவன் திருமலை
அதிர ஆர்த்தெடுத் தான்முடி பத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந் துய்ம்மினே. #11

இனிய மொழிபேசும் பார்வதி அம்மையை இடப்பாகத்தே வைத்தவன்; இளைப்பின்றி உலகெலாம் படைத்துக்காத்து அழிக்கவல்ல சதுரப்பாடுடையவன்; திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ளவன். இப் பெருமான் எழுந்தருளியுள்ள திருமலை எனப்படும் திருக்கயிலாய மலையை அசையும்படி, செருக்கினால் ஆரவாரம் செய்து எடுத்த இராவணனுடைய பத்து முடிகளும் வருந்தும்படி மெள்ள ஊன்றும் செம்மையான திருவடியைச் சென்று கைதொழுது உய்க.

கோயில்

கோயில், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருமூலத்தானநாயகர் (எ) சபாநாதர்.
தேவியார் : சிவகாமியம்மை.

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ. #12

பனைபோன்ற கையையும், மும்மதங்களையும் உடைய யானைத்தோலை உரித்துப் போர்த்தவன்; தன்னை நினைப்பவர் மனத்தைக் கோயிலாக் கொண்டவன்; வேடம் அனைத்துமாம் அம்பலக்கூத்தன். இத்தகைய சிற்றம்பலக் கூத்தனைத் தினையளவுப் பொழுதும் மறந்து வாழ்வேனோ!

கோயில்

தீர்த்த னைச்சிவ னைச்சிவ லோகனை
மூர்த்தி யைமுத லாய ஒருவனைப்
பார்த்த னுக்கருள் செய்தசிற் றம்பலக்
கூத்த னைக்கொடி யேன்மறந் துய்வனோ. #13

அநாதியே பாசங்களின் நீங்கி நின்று தன்னை அடைந்தார்க்கு அவற்றை நீக்கியருளும் தூயனை, பேரின்ப வடிவினனை, சிவலோக நாயகனை, ஞான உருவினனை, உலகத்தோற்றத்தின் முன் அதற்கு மூலமாய் முன்னின்ற ஒருவனை, அருச்சுனனுக்கு வேடனாய்த்தோன்றியும்,

பாசுபதமீந்தும் அருள்செய்த சிற்றம்பலத்துக்கூத்தப்பிரானைக் கொடியேனாகிய யான் மறந்து வாழ்வேனோ? மறவேன்.

கோயில்

கட்டும் பாம்புங் கபாலங்கை மான்மறி
இட்ட மாயிடு காட்டெரி யாடுவான்
சிட்டர் வாழ்தில்லை யம்பலக் கூத்தனை
எட்ட னைப்பொழு தும்மறந் துய்வனோ. **#14**

தன்னைச் சுற்றிக் கட்டிக்கொண்டிருக்கும் பாம்பையும், கையின்கண் பிரமகபாலத்தையும் மான்கன்றையும் உடையவனும், சர்வசங்கார நிலையில் விரும்பி எரிவீசி ஆடுவோனும் ஆய சிட்டர்கள் வாழும் தில்லைச் சிற்றம்பலத்துக் கூத்தனை எள்ளளவுப் பொழுதேனும் மறந்து வாழ்வேனோ?

கோயில்

மாணி பால்கறந் தாட்டி வழிபட
நீணு லகெலாம் ஆளக் கொடுத்தவென்
ஆணியைச் செம்பொ னம்பலத் துள்நின்ற
தாணு வைத்தமி யேன்மறந் துய்வனோ. **#15**

பிரமசாரியாகிய சண்டேசர் பசுக்களின் பாலைக்கறந்து அபிடேகித்து வழிபட நீண்ட உலகம் பலவற்றையும் ஆளும் அதிகாரத்தைக் கொடுத்தவன்; பொன் உரையாணி போன்றவன்; செம்பொன்னம்பலத்துள் நின்று ஆடும் செம்பொருள். அவனைத் தனியனாய நான் மறவேன்.

கோயில்

பித்த னைப்பெருங் காடரங் காவுடை
முத்த னைமுளை வெண்மதி சூடியைச்
சித்தனைச் செம்பொ னம்பலத் துள்நின்ற
அத்த னையடி யேன்மறந் துய்வனோ. **#16**

பித்தன் என்ற பெயருடையவனை, இடுகாட்டையே ஆடுமிடமாகக்கொண்ட, இயல்பாகவே பாசங்களின் நீங்கியோனை, இளம்பிறைசூடியவனை, எல்லாம் வல்லவனை, செம்பொற் சபையிலே நின்று ஆடும் தலைவனை அடியேன் மறவேன்.

கோயில்

நீதி யைநிறை வைமறை நான்குடன்
ஓதி யையொரு வர்க்கும் அறிவொணாச்

சோதி யைச்சுடர்ச் செம்பொனி னம்பலத்
தாதி யையடி யேன்மறந் துய்வனோ. **#17**
நீதியாகவும், நிறைவாகவும், மறைகள் நான்கையும் தந்து
பிரமனாதியர்க்கு உபதேசித்தவனாகவும், ஒருவர்க்கும் அறிய
வொண்ணாத சோதியாகவும், ஒளி வீசும் செம்பொன்னம்பலத்து
ஆதியாகவும் உள்ள பெருமானை அடியேன் மறந்து உய்தலும் கூடுமோ.

<u>கோயில்</u>

மைகொள் கண்டனெண் தோளன்முக் கண்ணினன்
பைகொள் பாம்பரை யார்த்த பரமனார்
செய்ய மாதுறை சிற்றம்ப லத்தெங்கள்
ஐய னையடி யேன்மறந் துய்வனோ. **#18**
திருநீலகண்டனும், எட்டுத்தோளனும்,முக்கண்ணினனும், படம்
கொண்ட பாம்பை அரையிற் கட்டிய பரமனும், திருமகள் உறையும்
சிற்றம்பலத்தின்கண் எங்கள் ஐயனுமாகிய பெருமானை அடியேன்
மறந்து உய்தலுங் கூடுமோ.

<u>கோயில்</u>

முழுதும் வானுல கத்துள தேவர்கள்
தொழுதும் போற்றியுந் தூயசெம் பொன்னினால்
எழுதி மேய்ந்தசிற் றம்பலக் கூத்தனை
இழுதை யேன்மறந் தெங்ஙன முய்வனோ. **#19**
விண்ணிலுள்ள தேவர் வந்து பரவிப்போற்றித் தூய செம்பொன்னினால்
முழுதும் எழுதி மேய்ந்த சிற்றம்பலத்துக் கூத்தப் பெருமானை
இழிவுடைய யான் மறந்து எங்ஙனம் உய்வன்?

<u>கோயில்</u>

காரு லாமலர்க் கொன்றையந் தாரனை
வாரு லாமுலை மங்கைம ணாளனைத்
தேரு லாவிய தில்லையுட் கூத்தனை
ஆர்கி லாஅமு தைமறந் துய்வனோ **#20**
கார்காலத்துப் பூக்கும் கொன்றை மாலையனை,கச்சணிந்த தனங்களை
உடைய உமைகேள்வனை, தேர் உலாவும் தில்லையுள்
கூத்தப்பெருமானை, உண்ணத்தெவிட்டாத அமுது போல் வானை
அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

<u>கோயில்</u>

ஓங்கு மால்வரை யேந்தலுற் றான்சிரம்

வீங்கி விம்முற வூன்றிய தாளினான்
தேங்கு நீர்வயல் சூழ்தில்லைக் கூத்தனைப்
பாங்கி லாத்தொண்ட னேன்மறந் துய்வனோ. **#21**
உயர்ந்த திருக்கயிலாயத்திருமலையை எடுக்கலுற்ற இராவணன்
சிரங்கள் பருத்து விம்முதல் அடைய ஊன்றிய திருவடி உடையவனும்
நீர்வளம் சான்ற தில்லையுட் கூத்துனும் ஆகிய பெருமானை நல்ல
சார்பில்லாத தொண்டனேன் மறந்து உய்தலுங்கூடுமோ.

திருவரத்துறை

திருநெல்வாயில்

திருவரத்துறை, திருக்குறுந்தொகை

கடவு ளைக்கடலுள்ளெழு நஞ்சுண்ட
உடலு ளானையொப் பாரியி லாதவெம்
அடலு ளானை யரத்துறை மேவிய
சுடரு ளானைக்கண் டீர்நாந் தொழுவதே. **#22**

நாம் தொழுவது கடவுளும், பாற்கடலுள் எழுந்த நஞ்சு உண்டு தரித்த, அருட்டிருமேனியுடையவனும், ஒப்புமை சொல்லத் தக்கார் இல்லாத ஆற்றல் உள்ளவனும், அரத்துறைத் தலத்தை விரும்பிய ஒளியானவனும் ஆகிய பெருமானையே.

திருநெல்வாயில்

கரும்பொப் பானைக் கரும்பினிற் கட்டியை
விரும்பொப் பானைவிண் ணோரும் அறிகிலா
அரும்பொப் பானை யரத்துறை மேவிய
சுரும்பொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே. **#23**

நாம் தொழுவது, கரும்பும், கரும்பினிற் கட்டியும் ஒப்பானும், விரும்பிய பொருளை ஒப்பானும், தேவரும் அறியா அரும்பு ஒப்பானவனும், அரத்துறைத் தலத்தை விரும்பிய வண்டு போல்வானும் ஆகிய பெருமானையே.

திருநெல்வாயில்

ஏறொப் பானையெல் லாவுயிர்க் கும்மிறை
வேறொப் பானைவிண் ணோரும் அறிகிலா
ஆறொப் பானை யரத்துறை மேவிய
ஊறொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே. **#24**

நாம்தொழுவது ஏறு ஒப்பானும், எல்லா உயிர்க்கும் இறைவனாகச் சிறந்து நிற்பானும், தேவரும் அறியாநெறி ஒப்பானும், அரத்துறைத் தலத்தை மேவிய உறுபொருளாவானுமாகிய பெருமானையே.

திருநெல்வாயில்

பரப்பொப் பானைப் பகலிருள் நன்னிலா
இரப்பொப் பானை யிளமதி சூடிய
அரப்பொப் பானை யரத்துறை மேவிய
சுரப்பொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே. **#25**

நாம் தொழுவது திருவரத்துறையை விரும்பி எழுந்தருளியவனும் பிறை சூடியவனுமாகிய பகல் ஒளியின் பரப்பையும், இருளில் நன்மைபுரியும் வளர்மதியின் வளர்ச்சியினையும், குறும்பையும், அன்புகாரணமாக உண்டாகும் பாலின் சுரத்தலையும் ஒக்கும் முதல்வனையே, பிறரை அன்று.

திருநெல்வாயில்

நெய்யொப் பானைநெய் யிற்சுடர் போல்வதோர்
மெய்யொப் பானைவிண் ணோரு மறிகிலார்
ஐயொப் பானை யரத்துறை மேவிய
கையொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே. **#26**

நாம் தொழுவது நெய்யும், நெய்யிற் சுடர் போல் விளங்கும் மெய்யும், பெருவியப்பும் போல்வானும், தேவரும் அறியாதவனும் அரத்துறை யென்னுந் தலத்தை விரும்பிய ஒழுக்க மாவானுமாகிய பெருமானையே.

திருநெல்வாயில்

நெதியொப் பானை நெதியிற் கிழவனை
விதியொப் பானைவிண் ணோரு மறிகிலார்
அதியொப் பானை யரத்துறை மேவிய
கதியொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே. **#27**

நாம் தொழுவது நியதி ஆவானும், நியதியின் தலைவனும், விதியாவானும், தேவர்களாலும் அறிய முடியாதவனும், விச்சுவாதிகளும் ஆகிய அரத்துறையென்னுந் தலத்தை மேவி உயிர்களுக்குக் கதியாயிருப்பானையே.

திருநெல்வாயில்

புனலொப் பானைப் பொருந்தலர் தம்மையே
மினலொப் பானைவிண் ணோரு மறிகிலார்
அனலொப் பானை யரத்துறை மேவிய
கனலொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே. **#28**

நாம் தொழுவது புனலும், பொருந்தாதார்க்கு மின்னலும். அனலும் போல்வானும், தேவர்களாலும் அறிய முடியாதவனும் அரத்துறைத் தலத்துக் கனல் போன்றவனுமாகிய பெருமானையே.

திருநெல்வாயில்

பொன்னொப் பானைப்பொன் னிற்சுடர் போல்வதோர்
மின்னொப் பானைவிண் ணோரு மறிகிலார்
அன்னொப் பானை யரத்துறை மேவிய

தன்னொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே. **#29**
நாம் தொழுவது, பொன்னும், பொன்னின் சுடர் போன்ற மின்னலும், அன்னையும் ஒப்பானும், தேவர்களாலும் அறிய முடியாதவனும், அரத்துறைத் தலத்து எழுந்தருளியிருந்து தனக்குத் தானே ஒப்பானவனுமாகிய பெருமானையே.

திருநெல்வாயில்

காழி யானைக் கனவிடை யூருமெய்
வாழி யானைவல் லோருமென் றின்னவர்
ஆழி யான்பிர மற்கும ரத்துறை
ஊழி யானைக்கண் டீர்நாந் தொழுவதே. **#30**

நாம்தொழுவது, காழித்தலத்துக் கடவுளும், பெருமையை உடைய விடையூரும் நித்தத் திருமேனி உள்ளவரும், பிறரால் வல்லோரும் என்று கூறப்படுவோராகிய திருமால் பிரமனுக்கும், ஒடுங்கும் தானமாக உள்ளவருமாகிய திரு அரத்துறை அடிகளையே.

திருநெல்வாயில்

கலையொப் பானைக் கற்றார்க்கோ ரமுதினை
மலையொப் பானை மணிமுடி யூன்றிய
அலையொப் பானை யரத்துறை மேவிய
நிலையொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே. **#31**

நாம் தொழுவது கலையும், கற்றார்க்கமுதும், மலையும் போல்வானும், மலையெடுக்கலுற்ற இராவணனை மணி முடியின்கண் ஊன்றி அலைக்கலுற்றானும், அரத்துறை மேவிநிலை பெற்றிருப்பானுமாகிய பெருமானையே.

திருவண்ணாமலை

திருஅண்ணாமலை

திருவண்ணாமலை, திருக்குறுந்தொகை,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அருணாசலேசுவரர்.
தேவியார் : உண்ணாமுலையம்மை.

வட்ட னைம்மதி சூடியை வானவர்
சிட்ட னைத்திரு வண்ணா மலையனை
இட்ட னையிகழ்ந் தார்புர மூன்றையும்
அட்ட னையடி யேன்மறந் துய்வனோ. **#32**

கந்தையுடை அணிந்தானும், மதிசூடியும், வானவர்க்கு உயர்ந்தானும், திருவண்ணாமலை வடிவினனும், விருப்பம் உடையானும், இகழ்ந்தார் புரங்கள் மூன்றினையும் அட்டானும் ஆகிய பெருமானை அடியேன் மறந்து உய்தலும் கூடுமோ.

திருஅண்ணாமலை

வான னைம்மதி சூடிய மைந்தனைத்
தேன னைத்திரு வண்ணா மலையனை
ஏன னையிகழ்ந் தார்புர மூன்றெய்த
ஆன னையடி யேன்மறந் துய்வனோ. **#33**

வானத்துள்ளவனும், பிறைசூடிய பேராற்றல் உடையவனும், தேனென இனிப்பவனும், திருவண்ணாமலைத் தலத்துக்கு உடையவனும், பன்றிக்கொம்பை அணிந்தவனும், இகழ்ந்தார் புரங்கள் மூன்றினையும் எய்த விடையேறுடையவனும் ஆகிய பெருமானை அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

திருஅண்ணாமலை

மத்த னைம்மத யானையு ரித்தவெஞ்
சித்த னைத்திரு வண்ணா மலையனை
முத்த னைம்முனிந் தார்புர மூன்றெய்த
அதத னையடி யேன்மறந் துய்வனோ. **#34**

ஊமத்தமலர் அணிந்தவனும், யானைத் தோலை உரித்துப் போர்த்து எம் சித்தத்துறைபவனும், திருஅண்ணாமலைத் தலத்துக்குடையவனும், முத்தனும், முனிந்தார் புரங்கள் மூன்றையும் எரியுண்ணச்செய்த அத்தனுமாகிய பெருமானை அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

திருஅண்ணாமலை

காற்ற னைக்கலக் கும்வினை போயறத்
தேற்ற னைத்திரு வண்ணா மலையனைக்
கூற்ற னைக்கொடி யார்புர மூன்றெய்த
ஆற்ற னையடி யேன்மறந் துய்வனோ. **#35**

காற்றாகியுள்ளவனும், கலக்குகின்ற வினைகள் விட்டு நீங்கத் தோற்றம்புரிபவனும், திருவண்ணாமலைத் தலத்துக் குடையவனும், உலகினை நன்றுந் தீதுமாய்க் கூறுசெய்து வகுத்தவனும், கொடியவர் புரங்கள் மூன்றையும் எய்த வீரநெறி உடையவனுமாகிய பெருமானை அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

திருஅண்ணாமலை

மின்ன னைவினை தீர்த்தெனை ஆட்கொண்ட
தென்ன னைத்திரு வண்ணா மலையனை
என்ன னையிகழ்ந் தார்புர மூன்றெய்த
அன்ன னையடி யேன்மறந் துய்வனோ. **#36**

மின் ஒளியுருவாயவனும், வினைகளைப் போக்கி என்னை ஆட்கொண்ட அழகியவனும், திருவண்ணாமலைத் தலத்துக்குடையவனும், என்னை உடையவனும், இகழ்ந்தவர் புரங்கள் மூன்றையும் எய்த அத்தன்மையனும் ஆகிய பெருமானை அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

திருஅண்ணாமலை

மன்ற னைம்மதி யாதவன் வேள்விமேல்
சென்ற னைத்திரு வண்ணா மலையனை
வென்ற னைவெகுண் டார்புர மூன்றையுங்
கொன்ற னைக்கொடி யேன்மறந் துய்வனோ. **#37**

ஐந்துவகை மன்றங்களில் (சபைகளில்) எழுந்தருளியிருப்பவனும், மதியாத தக்கன் வேள்வியின்மேல் உருத்துச் சென்றவனும், திருவண்ணாமலைத் தலத்துக்கு உடையவனும், புலனைந்தும் வென்ற வென்றி உடையவனும், சினந்தார் புரங்கள் மூன்றையும் கொன்றவனும் ஆகிய பெருமானைக் கொடிய வனாகிய அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

திருஅண்ணாமலை

வீர னைவிட முண்டனை விண்ணவர்
தீர னைத்திரு வண்ணா மலையனை
ஊர னையுண ரார்புர மூன்றெய்த
ஆர னையடி யேன்மறந் துய்வனோ. **#38**

வீரச்செயல்களைப் புரிந்தவனும், விடம் உண்டவனும், விண்ணவர்க்கு அச்சம் நீக்குபவனும், திருவண்ணாமலை வடிவினனும், மருத நிலத்தை இடங்கொண்டவனும், உணராதவர் புரங்கள் மூன்றையும் எய்தவனும், ஆத்திமாலை சூடியவனுமாகிய பெருமானை அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

திருஅண்ணாமலை

கருவி னைக்கடல் வாய்விட முண்டவெம்
திருவி னைத்திரு வண்ணா மலையனை
உருவி னையுண ரார்புர மூன்றெய்த
அருவி னையடி யேன்மறந் துய்வனோ. **#39**

கருவாயிருந்து காப்பவனும், கடலெழு நஞ்சு உண்ட எம்திருவாகியவனும், திருவண்ணாமலை வடிவினனும், உருவத்திருமேனி உடையவனும் உணராதவர் புரங்கள் மூன்றையும் எய்தவனும், அருவத்திருமேனி உடையவனுமாகிய பெருமானை அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

திருஅண்ணாமலை

அருத்த னையர வைந்தலை நாகத்தைத்
திருத்த னைத்திரு வண்ணா மலையனைக்
கருத்த னைக்கடி யார்புர மூன்றெய்த
அருத்த னையடி யேன்மறந் துய்வனோ. **#40**

பொருள் வடிவாயுள்ளவனும், ஐந்தலையுடைய நாகத்தைத் திருந்த அணிந்தவனும், திருவண்ணாமலை வடிவினனும், தலைவனானவனும், தீக்குணங்களைக் கடியாதார் புரங்கள் மூன்றையும் எய்தவனும், உயிர்களுக்கு வினைப்பயனைப் பிறழாது நுகர்விப்போனும் ஆகிய பெருமானை அடியேன் மறந்து உய்தலுங்கூடுமோ.

திருஅண்ணாமலை

அரக்க னையல றவ்விர லூன்றிய
திருத்த னைத்திரு வண்ணா மலையனை
இரக்க மாயென் உடலுறு நோய்களைத்
துரக்க னைத்தொண்ட னேன்மறந் துய்வனோ. **#41**

இராவணன் அலறுமாறு அழகிய திருவிரலை ஊன்றிய திருத்தமானவனும். திருவண்ணாமலை வடிவினனும், இரக்கம் கொண்டு என் உடலில் உற்ற நோய்களைத் துரத்திய அருளாளனுமாகிய பெருமானைத் தொண்டுபுரியும் அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

திருஅண்ணாமலை

திருவண்ணாமலை, திருக்குறுந்தொகை,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அருணாசலேசுவரர்.
தேவியார் : உண்ணாமுலையம்மை.

பட்டி ஏறுகந் தேறிப் பலவி(ல்)லம்
இட்ட மாக இரந்துண் டுழிதரும்
அட்ட மூர்த்தியண் ணாமலை கைதொழக்
கெட்டுப் போம்வினை கேடில்லை காண்மினே. **#42**

அடங்காத ஏற்றினை அடக்கி விடையாக் கொண்டு உகந்து ஏறிப் பல மனைகள் தோறும் விருப்பத்தோடு சென்று இரந்து உண்டு அலைந்து சுழலும், அட்டமூர்த்தியின் திருவுருவாகிய திருஅண்ணாமலையைக் கைகளால் தொழ வினைகள் கெட்டு ஒழியும்; என்றும் கேடு இல்லை; காண்பீராக.

திருஅண்ணாமலை

பெற்ற மேறுவர் பெய்பலிக் கென்றவர்
சுற்ற மாமிகு தொல்புக ழாளொடும்
அற்றந் தீர்க்குமண் ணாமலை கைதொழ
நற்ற வத்தொடு ஞானத் திருப்பரே. **#43**

மனைகளிலிடும் பலிக்கெனப் பெற்றம் ஏறும் பெருமான், தனக்குச் சுற்றமாமெனும் உமையம்மையோடும் வருவார். துயர்தீர்க்கும் திருவண்ணாமலையைக் கைதொழுவார். நல்ல தவத்தோடு ஞானநெறியில் பிறழாது இருக்கப்பெறுவர்.

திருஅண்ணாமலை

பல்லி லோடுகை யேந்திப் பலவி(ல்)லம்
ஒல்லை சென்றுணங் கல்கவர் வாரவர்
அல்லல் தீர்க்குமண் ணாமலை கைதொழ
நல்ல வாயின நம்மை யடையுமே. **#44**

பல்லில்லாத மண்டை யோட்டைக் கையில் ஏந்திப் பல மனைகளுக்கும் விரைந்து சென்று பெண்டிர் இடும் உணங்கிய சோற்றை அவர்தம் உள்ளங்களோடு கவர்வாராகிய சிவபிரானுடைய அடியார் அல்லல்களைத் தீர்க்கும் திருவண்ணாமலையைக் கைகளாற்றொழ, நல்லவாயின யாவும் நம்மைத் தாமே வந்தடையும்.

திருஅண்ணாமலை

பாடிச் சென்று பலிக்கென்று நின்றவர்
ஓடிப் போயினர் செய்வதொன் றென்கொலோ
ஆடிப் பாடியண் ணாமலை கைதொழ
ஓடிப் போகும்நம் மேலை வினைகளே. **#45**

பாடிச்சென்று பலிக்கென்று நின்ற பெருமான் ஓடிப்போய்விட்டனராதலால் செய்வது இனி என்னை? ஆடியும் பாடியும் திருவண்ணாமலையைக் கைகளாற்றொழ நம் மேலை (பழைய) வினைகள் ஓடிப்போகும். (`ஓடிப் போயினர் செய்வதொன்றென்கொலோழு எனப் பேசநின்ற பெருமானது திருவண்ணாமலை - என இசையெச்சம் கொண்டு முடிக்க)

திருஅண்ணாமலை

தேடிச் சென்று திருந்தடி யேத்துமின்
நாடி வந்தவர் நம்மையு மாட்கொள்வர்
ஆடிப் பாடியண் ணாமலை கைதொழ
ஓடிப் போம்நம துள்ள வினைகளே. **#46**

தேடிச்சென்று அப்பெருமான் திருவடிகளை ஏத்து வீராக; அங்ஙனம் தேடிச்செல்லும் நம்மை அவரும் நாடிவந்து ஆட்கொள்வர்; ஆடியும் பாடியும் திருவண்ணாமலையைக் கைதொழுதால் நமது நிகழ்வினைகள் ஓடிப்போகும்.

திருஅண்ணாமலை

கட்டி யொக்குங் கரும்பி னிடைத்துணி
வெட்டி வீணைகள் பாடும் விகிர்தனார்
அட்ட மூர்த்தியண் ணாமலை மேவிய
நட்ட மாடியை நண்ணநன் காகுமே. **#47**

கரும்பினிடைக் கட்டி ஒக்குமாறு துணித்தும் வெட்டியும் வீணை வகைகளோடு பாடும் விகிர்தனாகிய அட்ட மூர்த்தியும் திருவண்ணாமலை மேவிய நட்டமாடும் பெருமானுமாகிய இறைவனை நண்ணினால் நன்றே ஆகும்.

திருஅண்ணாமலை

கோணிக் கொண்டையர் வேடமுன் கொண்டவர்
பாணி நட்டங்க ளாடும் பரமனார்
ஆணிப் பொன்னனண் ணாமலை கைதொழப்
பேணி நின்ற பெருவினை போகுமே. **#48**

சேர்த்துக் கட்டிய கொண்டையரும், வேடம் முன்கொண்டவரும் தாளத்திற்கேற்ப நட்டங்கள் ஆடுபவரும் ஆணிப் பொன் போன்றவரும்

ஆகிய பரமனார் திருவண்ணாமலையைக் கைகளால் தொழுதால் நம்மிடம் வருதற்குப் பேணி நின்ற பெருவினைகள் போகும்.

திருஅண்ணாமலை

கண்டந் தான்கறுத் தான்கால னாருயிர்
பண்டு கால்கொடு பாய்ந்த பரமனார்
அண்டத் தோங்குமண் ணாமலை கைதொழ
விண்டு போகுநம் மேலை வினைகளே. **#49**

திருநீலகண்டரும், கூற்றுவன் உயிரைப் பண்டு கால் கொண்டு பாய்ந்த பரமனாரும் ஆகிய பெருமானுக்குரிய அண்டமுற ஓங்கி நிமிர்ந்த திருவண்ணாமலையைக் கைகளாற்றொழுதால் நம் மேலை (பழைய) வினைகள் நம்மைவிட்டு நீங்கும்.

திருஅண்ணாமலை

முந்திச் சென்றுமுப் போதும் வணங்குமின்
அந்தி வாயொளி யான்றனண் ணாமலை
சிந்தி யாவெழு வார்வினை தீர்த்திடும்
கந்த மாமலர் சூடுங் கருத்தனே. **#50**

முந்துறச்சென்று, மாலைச்செவ்வானன்ன மேனி உடையானுடைய திருவண்ணாமலையை மூன்று பொழுதும் வணங்குவீர்களாக; அத்திருவண்ணாமலையைச் சிந்தித்தபடி துயிலெழுவார் வினைகளை, நறுமணமுடைய மலர்களைச் சூடும் தலைவனாகிய பெருமான் தீர்ப்பான்.

திருஅண்ணாமலை

மறையி னானொடு மாலவன் காண்கிலா
நிறையு நீர்மையுள் நின்றருள் செய்தவன்
உறையும் மாண்பினண் ணாமலை கைதொழப்
பறையும் நாஞ்செய்த பாவங்க ளாகவே. **#51**

பிரமனும் திருமாலும் காண்கிலாதவனும், எங்கும் நிறைகின்ற தன்மையுள் நின்று அருள் செய்தவனுமாகிய பெருமான் உறையும் மாண்பினை உடைய திருவண்ணாமலையைக் கைகளாற்றொழுதால் நாம் செய்த பாவங்கள் எல்லாம் கெடும்.

திருவாரூர்

திருவாரூர்

திருவாரூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

எப்போ தும்மிறை யும்மற வாதுநீர்
முப்போ தும்பிர மன்தொழ நின்றவன்
செப்போ தும்பொனின் மேனிச் சிவனவன்
அப்போ தைக்கஞ்ச லென்னுமா ரூரனே. **#52**

மூன்று பொழுதினும் பிரமன் தொழ நின்றவனும், புகழ்ந்து போற்றத்தக்க செம்பொன்னின் வண்ணமேனி உடையவனும், உயிர் உடம்பைவிட்டு நீங்கும் அப்போதைக்கு அஞ்சல் என்று அபயங் கொடுப்பவனுமாகிய சிவபெருமானை எப்போதும் சிறுபொழுதும் நீர் மறவாது இருக்க. (சே - போதும் எனப்பிரித்து விடையின்மீது இவர்ந்து வரும் எனினும் அமையும்)

திருவாரூர்

சடையின் மேலுமொர் தையலை வைத்தவர்
அடைகி லாஅர வைஅரை யார்த்தவர்
படையின் நேர்தடங் கண்ணுமை பாகமா
அடைவர் போலிடு காடரா ரூரரே. **#53**

மருங்கில்மட்டுமின்றிச் சடையின்மேலும் ஒரு தையலை வைத்தவரும், அரவை அரையிற் கட்டியவரும், இடுகாடரும் ஆரூரரும் ஆகியவர் வேற்படையொத்த பெரிய கண்ணை உடைய உமையொரு பாகமாகத் தோன்றி அருள் புரிவர்.

திருவாரூர்

விண்ட வெண்டலை யேகல னாகவே
கொண்ட கம்பலி தேருங் குழகனார்
துண்ட வெண்பிறை வைத்த இறையவர்
அண்ட வாணர்க் கருளுமா ரூரரே. **#54**

வெண்தலையே இரக்கும் கலனாகக் கொண்டு வீடுகள்தோறும் பலிதேரும் இளமையுடையவரும், துண்டாகிய வெள்ளிய பிறை முடிவைத்த இறையவரும், தேவர்களுக்கு அருளும் திருவாரூர்ப் பெருமானேயாவர்.

திருவாரூர்

விடையு மேறுவர் வெண்தலை யிற்பலி
கடைகள் தோறுந் திரியுமெங் கண்ணுதல்
உடையுஞ் சீரை யுறைவது காட்டிடை
அடைவர் போலரங் காகவா ரூரரே. **#55**

திருவாரூர்ப் பெருமான், விடையும் ஏறுவர்; வெண்தலையிற் பலி பெறுவதற்கு இல்லங்களின் முன்புறந்தோறும் திரியும் கண்ணுதலார்; உடையாகச் சீரையைக் கொண்டவர். உறைவதற்குச் சுடு காட்டையே அரங்கமாக அடைவர்.

திருவாரூர்

துளைக்கை வேழத் துரியுடல் போர்த்தவர்
வளைக்கை யாளையொர் பாக மகிழ்வெய்தித்
திளைக்குந் திங்கட் சடையில் திசைமுழு
தளக்குஞ் சிந்தையர் போலுமா ரூரரே. **#56**

திருவாரூர்ப் பெருமான், துளையுள்ள துதிக்கை உடைய யானையின் உரித்த தோலைப் போர்த்தவர்; வளையணிந்த கையாளாகிய உமையம்மையை ஒருபாகமாக மகிழ்ந்தெய்தியவர்; அவர் தமது பிறை பொருந்திய சடையினால், எட்டுத் திசைகளையும் அளந்தறியும் சிந்தை உடையவர் போலும்; உலகமே உருவமா (விச்சுவரூபியா)க நின்றாடுவார் என்பது கருத்து.

திருவாரூர்

பண்ணி னின்மொழி யாளையொர் பாகமா
விண்ணி னார்விளங் கும்மதி சூடியே
சுண்ண நீறுமெய்ப் பூசிச் சுடலையின்
அண்ணி யாடுவர் போலுமா ரூரரே. **#57**

பண்ணையொத்த இனிய மொழியாளாகிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு விசும்பில் விளங்கும் பிறையினைச் சூடி, திருநீற்றுப் பொடியினைத் திருமேனியிற் பூசிச் சுடலையினை அண்மித் திருவாரூர்ப் பெருமான் ஆடுவர்.

திருவாரூர்

மட்டு வார்குழ லாளொடு மால்விடை
இட்ட மாவுகந் தேறு மிறைவனார்
கட்டு வாங்கங் கனன்மழு மான்தனோ
டட்ட மாம்புய மாகுமா ரூரரே. **#58**

தேனொழுகும் புதுமலரணிந்த குழலாளாகிய உமையம்மையொடு பெரிய (திருமாலாகிய) விடையினை விருப்பத்தினோடு உகந்து ஏறும் இறைவனார், கட்டுவாங்கம், சுடர்ந்தெரியும் கனல், மழு, மான் எனுமிவற்றைக்கொண்ட எட்டுத் தோளராகிய திருவாரூர்ப் பெருமானே ஆவர்.

திருவாரூர்

தேய்ந்த திங்கள் கமழ்சடை யன்கனல்
ஏந்தி யெல்லியு ளாடு மிறைவனார்
காய்ந்து காமனை நோக்கின கண்ணினார்
ஆய்ந்த நான்மறை யோதுமா ரூரரே. **#59**

பிறைத் திங்கள் விளங்கும் சடையினரும், கனலைக் கரத்தேந்தி நள்ளிருளில் நட்டம் ஆடும் இறைவரும், காமனைச் சினந்து நோக்கிய கண்ணினரும், ஆராய்ந்த நான்மறைகளால் ஓதப்பெறும் திருவாரூர்ப் பெருமானேயாவர்.

திருவாரூர்

உண்டு நஞ்சுகண்டத்து ளடக்கியங்
கிண்டை செஞ்சடை வைத்த இயல்பினான்
கொண்ட கோவண ஆடையன் கூரெரி
அண்டவாண ரடையுமா ரூரரே. **#60**

நஞ்சினை உண்டு கண்டத்துள் அடக்கியவரும், இண்டை மாலையைத் தம் செஞ்சடையுள் வைத்த இயல்பினரும், கோவணத்தை ஆடையாகக் கொண்டவரும், மிகுந்த எரியைக் கரத்தில் உடையவரும், தேவர்கள் அடைந்து வழிபடும் திருவாரூர்ப் பெருமானேயாவர்.

திருவாரூர்

மாலு நான்முக னும்மறி கிற்கிலார்
கால னாய அவனைக் கடந்திட்டுச்
சூல மான்மழு வேந்திய கையினார்
ஆல முண்டழ காயவா ரூரரே. **#61**

திருமாலும் நான்முகனும் அறிய இயலாதவரும், காலனைக் கடந்திட்டுச் சூலமும், மானும், மழுவும் ஏந்திய கையினரும், ஆலம் உண்டதனால் அழகுபெற்று விளங்கிய கண்டத்தையுடைய வரும் திருவாரூர்ப் பெருமானேயாவர்.

திருவாரூர்

திருவாரூர், திருக்குறுந்தொகை,

இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

கொக்க ரைகுழல் வீணை கொடுகொட்டி
பக்க மேபகு வாயன பூதங்கள்
ஒக்க ஆடலுகந்துடன் கூத்தராய்
அக்கி னோடர வார்ப்பரா ரூரரே. **#62**

கொக்கரை, குழல், வீணை, கொடுகொட்டி ஆகிய வாச்சியங்களைக் கொண்டு இசைந்து மருங்கிலே நின்று பிளந்துவாயை உடைய பல பூதங்கள் ஆடாநிற்ப ஆடுங்கூத்தராய் அக்குமணிகளையும் அரவையும் பூண்பவர் திருவாரூர்ப் பெருமானாவர்.

திருவாரூர்

எந்த மாதவஞ் செய்தனை நெஞ்சமே
பந்தம் வீடவை யாய பராபரன்
அந்த மில்புக ழாரூ ரரனெறி
சிந்தை யுள்ளுஞ் சிரத்துளுந் தங்கவே. **#63**

நெஞ்சமை! பந்தமும், வீடுமாயிருக்கும் தேவதேவனாகிய திருவாரூர்ப் பெருமானுக்குரிய முடிவற்ற புகழ் வாய்ந்து திரு வாரூர் அரநெறி சிந்தையினும், சிரத்தினும் தங்குதற்கு எவ்வளவு பெருந்தவம் நீ செய்தனை? (திருவாரூர், அரநெறியை உள்ளத்திற்கொண்டு மறவாது உணர்தலும் தலையால் தொழலும் நற்றவத்தார்க்கு அன்றி எய்தொணாது என்றபடி).

திருவாரூர்

வண்டு லாமலர் கொண்டு வளர்சடைக்
கிண்டை மாலை புனைந்து மிராப்பகல்
தொண்ட ராகித் தொடர்ந்து விடாதவர்க்
கண்ட மாளவும் வைப்பரா ரூரரே. **#64**

வண்டுகள் அணுகப்பெறாது சூழ உலாவும் மலர்களைக்கொண்டு வளரும் சடைக்கு இண்டை மாலைகள் புனைந்தும், இரவும் பகலும் தொண்டுகள் புரிந்தும் தொடர்ந்து விடாது வழிபடுவார்க்கு அண்டங்களை ஆளவும் கொடுக்கும் பெருமான் திருவாரூரர் ஆவர். ஆளவும் என்னும் எச்ச உம்மையால் சிவஞானமாகிய முக்கியப் பயனைத் தருவதோடு என்க்கொள்க.

திருவாரூர்

துன்பெ லாமற நீங்கிச் சுபத்தராய்

என்பெ லாம்நெக் கிராப்பக லேத்திநின்
றின்ப ராய்நினைந் தென்று மிடையறா
அன்ப ராமவர்க் கன்பரா ரூரரே. **#65**

துன்பங்கள் முற்றும் நீங்கி நலம் சான்றவராய் எலும் பெல்லாம் நெகிழ்ந்து இரவும் பகலும் வழிபட்டு நின்று இன்பமுடையோராய் நினைந்து என்றும் இடையறாத அன்பர்க்கு அன்பராய் இருப்பர் திருவாரூர்ப் பெருமான். (இவ்வியல்புடையார்க்கே முதல்வனும், அன்பனாய், அவரைத் தன் தமர்க்குள் வைக்கும் என்றபடி.)

<u>திருவாரூர்</u>

முருட்டு மெத்தையில் முன்கிடத் தாமுனம்
அரட்டர் ஐவரை ஆசறுத் திட்டுநீர்
முரட்ட டித்தவத் தக்கன்றன் வேள்வியை
அரட்ட டக்கித னாரூ ரடைமினே. **#66**

ஈமக்கிடையில் கிடத்துவதற்கு முன்பு, அடங்காத ஐந்து புலன்களைக் குற்றமறக்களைந்து முரண்பாடு கொண்ட அத்தக்கன் வேள்வியாகிய குறும்பை அடக்கியவனாகிய சிவபெருமான் உறையும் திருவாரூரை நீர் அடைந்து வழிபடுவீராக.

<u>திருவாரூர்</u>

எம்மை யாரிலை யானுமு ளேனலேன்
எம்மை யாரு மிதுசெய வல்லரே
அம்மை யாரெனக் கென்றென் றரற்றினேற்
கம்மை யாரைத்தந் தாராரூ ரையரே. **#67**

எம்மைக்காத்தற்குரிய இருமுதுகுரவரும் இலர்; யானும் (இளம் பருவத்தினன் ஆகலின்) தனித்து வாழும் மன உறுதி உள்ளேன் அல்லேன்; எனது அன்னையை ஒத்த உடன்பிறந்தாரும் (திலகவதியாரும்) இதனைச் செய்ய (எனக்குத் துணையாய் நின்றருள) வல்லரே! (ஆயினும் அவர் இதுபோது உயிர்விடத் துணிதலின்) தாயாய் உடனிருந்து உபகரிக்கவல்லார் ஆர்? என்று இங்ஙனம் பன்முறை வாய்விட்டு அரற்றிய எளியேனுக்குத் திருவாரூரில் எழுந்தருளியுள்ள பெருமானே (ஐயரே) வீட்டு நெறிக்கு உரிய என் உடன் தோன்றினாரை (உயிர்தாங்கச் செய்து) எனக்கு இருமுதுகுரவரும், ஆசானும், கேளும், உறவுமாக வைத்தருளினார். இப்பாட்டு நாவுக்கரசர், முதல்வன் தமது தமக்கையாரை உம்பருலகணைய உறும் நிலை விலக்கி உயிர்தாங்கி மனைத்தவம் புரிந்திருக்க வைத்தது தாம் பின்னர் மெய்யுணர்வு பெற்றுத் திருத்தொண்டின் நெறி பேணி உய்தற்பொருட்டே என நினைந்து பாடியது.

திருவாரூர்

தண்ட வாளியைத் தக்கன்றன் வேள்வியைச்
செண்ட தாடிய தேவர கண்டனைக்
கண்டு கண்டிவள் காதலித் தன்பதாய்க்
கொண்டி யாயின வாறென்றன் கோதையே. **#68**

என்றன் கோதையாகிய இவள் தண்டத்தை (ஒறுப்பு முறை)க் கையாள்பவனும், தக்கன் செய்த பெருவேள்வியைச் செண்டு ஏந்தி ஆடுதல்போல் எளிதாக அட்ட தேவர்கள் முதல்வனும் ஆகிய ஆரூர் வீதிவிடங்கனை (அவன் உலாப்போதரும்போது) பன்முறை கண்டு அவனைக் காதலித்து அன்பே வடிவாய் நம் வயப்பட்டு ஒழுகாத கொண்டி (பட்டி) ஆயினவாறு என்னே!

திருவாரூர்

இவள்ந மைப்பல பேசத் தொடங்கினாள்
அவண மன்றெனி லாரூ ரரனெனும்
பவனி வீதி விடங்கனைக் கண்டிவள்
தவனி யாயின வாறென்றன் தையலே. **#69**

இவள்நம்பால் ஒருநெறிப்படாதபலபேச்சுக்களைப் பேசத்தொடங்கிவிட்டாள். இவள் உள்ள அவ்விடத்தேம் அல்லேம் எனின் (அதாவது, இவள் தனித்துள்ளபோது) ஆரூர் அரன் என மொழிவாள், என்றன் தையலாகிய இவள் உலாப்போந்த வீதிவிடங்கப் பெருமானைக் கண்டமையால் காம நோயுடையாள் ஆனவாறு இது!

திருவாரூர்

நீரைச் செஞ்சடை வைத்த நிமலனார்
காரொத் தமிடற் றர்கனல் வாயரா
ஆரத் தருறை யும்மணி யாரூரைத்
தூரத் தேதொழு வார்வினை தூளியே. **#70**

கங்கைச் சடையரும், திருநீலகண்டரும், அரவாகிய ஆரம் உடையவருமாகிய பெருமான் உறையும் அணி ஆரூர்த் தலத்தைத் தூரத்தே கண்டு தொழுவார் வினைகள் தூளியாகிக் கெடும்.

திருவாரூர்

உள்ள மேயொ ருறுதி யுரைப்பன்நான்
வெள்ளந் தாங்கு விரிசடை வேதியன்
அள்ளல் நீர்வய லாரூ ரமர்ந்தவெம்
வள்ளல் சேவடி வாழ்த்தி வணங்கிடே. **#71**

உள்ளமே! நான் ஓர் உறுதி உரைப்பன்; கேள்; கங்கைவெள்ளத்தைத் தாங்கும் விரித்த சடை உடைய வேதியனும் சேறு, நீர் பொருந்திய வயல்களை உடைய ஆரூர் அமர்ந்த எம் வள்ளலுமாகிய பெருமான் சேவடிகளை வாழ்த்து; வணங்கு.

திருவாரூர்

விண்ட மாமலர் மேலுறை வானொடும்
கொண்டல் வண்ணனுங் கூடி யறிகிலா
அண்ட வாணன்த னாரூ ரடிதொழப்
பண்டை வல்வினை நில்லா பறையுமே. **#72**

விரிந்த மலர்மேலுறை பிரமனும், மேக வண்ணனாகிய திருமாலும் கூடி அறியகில்லாத திருவாரூர் அண்டவாணனது திருவடிகளைத் தொழப் பழைய வல்வினைகள் நில்லாமற் கெடும்.

திருவாரூர்

மையு லாவிய கண்டத்த னண்டத்தன்
கையு லாவிய சூலத்தன் கண்ணுதல்
ஐய னாரூ ரடிதொழு வார்க்கெலாம்
உய்ய லாம்அல்லல் ஒன்றிலை காண்மினே. **#73**

கரிய கண்டம் உடையானும், அண்டத்திலுள்ளானும், கையிற் சூலம் உடையானும், கண்ணுதலானும் ஆகிய திருவாரூர்த்தலத்தின்கண் ஐயன் அடிதொழும் எல்லாரும் உய்தி பெறலாம்; துன்பம் ஒன்றும் அவர்க்கில்லை; காண்பீராக.

திருஅன்னியூர்

திருஅன்னியூர்

திருஅன்னியூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஆபத்சகாயர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

பாற லைத்த படுவெண் தலையினன்
நீற லைத்தசெம் மேனியன் நேரிழை
கூற லைத்தமெய் கோளர வாட்டிய
ஆற லைத்த சடையன்னி யூரனே. **#74**

பருந்துகள் அலைக்கும் வெள்ளிய மண்டைஓட்டைக் கையிற் கொண்டவனும், திருநீறு பூசிய சிவந்த மேனியனும், உமையம்மை ஒரு கூறுகொண்ட மெய்யனும், அரவு ஆட்டி ஆறலைக் குஞ் சடையனும் அன்னியூர்த்தலத்து இறைவனே.

திருஅன்னியூர்

பண்டொத் தமொழி யாளையொர் பாகமாய்
இண்டைச் செஞ்சடை யன்னிருள் சேர்ந்ததோர்
கண்டத் தன்கரி யின்னுரி போர்த்தவன்
அண்டத் தப்புறத் தானன்னி யூரனே. **#75**

பண் பொருந்திய இனியமொழியுடைய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டவனும், இண்டையணிந்தசடையனும், இருளார்கண்டனும், யானைத்தோல் உரித்துப் போர்த்தவனும், அண்டங்களுக்கு அப்புறத்தில் உள்ளவனும் அன்னியூர்த் தலத்து இறைவனே.

திருஅன்னியூர்

பரவி நாளும் பணிந்தவர் தம்வினை
துரவை யாகத் துடைப்பவர் தம்மிடம்
குரவம் நாறுங் குழலுமை கூறராய்
அரவ மாட்டுவர் போலன்னி யூரரே. **#76**

நாள்தோறும் வாழ்த்தி வணங்குவோரது வல்வினைகளைத் துரக்கும்படி நீக்குபவரும், தம்மிடப்பாகத்தில் குரவு நறுமணம் வீசும் குழல் உமையைக் கூறாகவுடையவரும், அரவம் ஆட்டு பவரும் அன்னியூர்த்தலத்து இறைவரே.

திருஅன்னியூர்

வேத கீதர்விண் ணோர்க்கு முயர்ந்தவர்
சோதி வெண்பிறை துன்று சடைக்கணி
நாதர் நீதியி னாலடி யார்தமக்
காதி யாகிநின் றாரன்னி யூரரே. **#77**

வேதங்களை இசையோடு ஓதுவோரும், விண்ணோர்க்கும் உயர்ந்தவரும், ஒளிவெண்பிறை பொருந்திய சடையுடைய தலைவரும், நீதியினால் தம் அடியார்களுக்கெல்லாம் ஆதியாகி நின்றவரும் அன்னியூர்த்தலத்து இறைவரே.

<u>திருஅன்னியூர்</u>

எம்பி ரானிமை யோர்கள் தமக்கெலாம்
இன்ப ராகி யிருந்தவெம் மீசனார்
துன்ப வல்வினை போகத் தொழுமவர்க்
கன்ப ராகிநின் றாரன்னி யூரரே. **#78**

தேவர்களுக்கெல்லாம் இன்பம் செய்வோராகிய எம் ஈசனாரும், எம் தலைவரும், துன்பஞ்செய்யும் வல்வினை போதற்காகத் தொழும் அன்பர்களுக்கு அன்பராகி நின்றவரும் அன்னியூர்த்தலத்து இறைவரே.

<u>திருஅன்னியூர்</u>

வெந்த நீறுமெய் பூசுநன் மேனியர்
கந்த மாமலர் சூடுங் கருத்தினர்
சிந்தை யார்சிவ னார்செய்ய தீவண்ணர்
அந்த ணாளர்கண் டீரன்னி யூரரே. **#79**

வெந்த திருநீறு மெய்யின்கண் பூசிய நலம் வாய்ந்தவரும், நறுமலர் சூடும் கருத்தினராகிய அன்பர் சிந்தைகளில் நிறைந்த சிவனாரும், சிவந்த தீயின் வண்ணம் உடையவரும், அழகிய தண்ணளி உடையவரும் அன்னியூர்த் தலத்து இறைவரே, காண்பீராக.

<u>திருஅன்னியூர்</u>

ஊனை யார்தலை யிற்பலி கொண்டுழல்
வானை வானவர் தாங்கள் வணங்கவே
தேனை யார்குழ லாளையொர் பாகமா
ஆனை யீருரி யாரன்னி யூரரே. **#80**

தசை பொருந்தியிருந்த வெண்டலையிற் பலி கொண்டு திரியும் பெருமான் வானவர் வணங்குமாறு, உமாதேவி யாரை ஒரு பாகமாகக்கொண்டு ஆனைத்தோல் போர்த்தவர் அன்னியூர்த்தலத்து இறைவரே.

திருஅன்னியூர்

காலை போய்ப்பலி தேர்வர்கண் ணார்நெற்றி
மேலை வானவர் வந்து விரும்பிய
சோலை சூழ்புறங் காடரங் காகவே
ஆலின் கீழறத் தாரன்னி யூரரே. **#81**

நெற்றிக்கண் உடையவரும், காலையே போய்ப் பலி ஏற்பவரும், வானவர்களும் விரும்புகின்ற சோலை சூழ் புறங்காட்டினை அரங்காகக் கொண்டுவரும், ஆலின்கீழ் அறத்தை நான்கு முனிவர்களுக்கு உரைத்தவரும் அன்னியூர்த் தலத்து இறைவரே.

திருஅன்னியூர்

எரிகொள் மேனிய ரென்பணிந் தின்பராய்த்
திரியு மூவெயில் தீயெழச் செற்றவர்
கரிய மாலொடு நான்முகன் காண்பதற்
கரிய ராகிநின் றாரன்னி யூரரே. **#82**

தீவண்ண மேனியரும், எலும்பணிந்து இன்புறுவாரும்,திரிந்துவந்து தொல்லைகள் புரிந்த மூவெயில்களைத் தீயெழச் சினந்தவரும், மாலும் நான்முகனும் காண்பதற்கு அரியவரும் அன்னியூர்த்தலத்து இறைவரே.

திருஅன்னியூர்

வஞ்ச ரக்கன் கரமுஞ் சிரத்தொடும்
அஞ்ச மஞ்சுரமோ ராறுநான் கும்மிறப்
பஞ்சின் மெல்விர லாலடர்த் தாயிழை
அஞ்ச லஞ்சலென் றாரன்னி யூரரே. **#83**

வஞ்சனை பொருந்திய இராவணனின் இருபது கைகளும் தலைகளொடு இறும்படியாகப் பஞ்சின் மெல் விரலால் அடர்த்தபோது உமையம்மை அஞ்ச, " ஆயிழையே! அஞ்சல்! அஞ்சல்!" என்று அருளியவர் அன்னியூர்த்தலத்து இறைவரே.

திருமறைக்காடு

திருமறைக்காடு

திருமறைக்காடு, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வேதாரணியேசுவரர்.
தேவியார் : யாழைப்பழித்தமொழியம்மை.

ஓத மால்கடல் பாவி யுலகெலாம்
மாத ரார்வலங் கொண்மறைக் காடரைக்
காதல் செய்து கருதப் படுமவர்
பாத மேத்தப் பறையும்நம் பாவமே. **#84**

அலைகளை உடைய பெருங்கடல் பரவிய சிறப்பினதும், உலகெலாம் உள்ள நற்குணம் வாய்ந்த பெண்கள் வலங்கொள்ளும் மாண்பினதுமாகிய மறைக்காட்டில் உறையும் பெருமானை விரும்பி, எல்லோராலும் தியானிக்கப்படும் அவர் திருவடிகளை வாழ்த்த நம் பாவங்கள் கெடும்.

திருமறைக்காடு

பூக்குந் தாழை புறணி யருகெலாம்
ஆக்கந் தானுடை மாமறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடி யார்தம்மை
நோக்கிக் காண்பது நும்பணி செய்யிலே. **#85**

ஊர்க்குப் புறத்தே உள்ள நீரிலெல்லாம் தாழை பூப்பதும், ஆக்கம் பெருகியதுமாகிய மறைக்காட்டுறையும் பெருமானே! யார்க்கும் காண்டற்கரியீர்! உம் பணி செய்யிலன்றோ அடியார்களைத் தேவரீர் திருவருள் செய்தற்குத் திருவருள் நோக்கம் புரிந்தருள்வது! (பணிந்து பணிசெய்வார்க்கன்றி முதல்வன் அருள் கைகூடாது என்பது கருத்து)

திருமறைக்காடு

புன்னை ஞாழல் புறணி யருகெலாம்
மன்னி னார்வலங் கொள்மறைக் காடரோ
அன்ன மெல்நடை யாளையொர் பாகமாச்
சின்ன வேட முகப்பது செல்வமே. **#86**

ஊர்க்குப் புறத்தே உள்ள நீரின் அருகெல்லாம் புன்னையும் ஞாழலும் பொருந்தியதும், மன்னுதலுற்ற நல்லடியார் வலங்கொள்வதுமாகிய மறைக்காட்டுறையும் பெருமானே! அன்னமென்னடையுடைய உமாதேவியை ஒரு பாகமாகக்கொண்டு நீர் உகப்பதாகிய செல்வம்

சின்னமாகிய உமது வேடமே.

திருமறைக்காடு

அட்ட மாமலர் சூடி யடும்பொடு
வட்டப் புன்சடை மாமறைக் காடரோ
நட்ட மாடியும் நான்மறை பாடியும்
இட்ட மாக விருக்கு மிடமிதே. **#87**

எட்டுவகை மலர்களை அரும்பு மலரோடு சூடிய வட்டவடிவாகிய புன்சடை உடைய மறைக்காட்டுறையும் பெருமானே! நட்டம் ஆடியும், நான்கு வேதங்கள் பாடியும் விருப்பமாகத் தேவரீர் எழுந்தருளியிருக்கும் இடம் இத்தலமோ?

திருமறைக்காடு

நெய்த லாம்பல் நிறைவயல் சூழ்தரும்
மெய்யி னார்வலங் கொண்மறைக் காடரோ
தையல் பாகங்கொண் டீர்கவர் புன்சடைப்
பைதல் வெண்பிறை பாம்புடன் வைப்பதே. **#88**

நெய்தலும் ஆம்பலும் நிறைந்துள்ள வயல்கள் சூழ்ந்துள்ளதும், மெய்யன்பினார் வலம் கொள்வதும் ஆகிய மறைக்காட்டுறையும் பெருமானே! பெண்ணொருபாகம் கொண்ட தேவரீர், கவர்த்த புன்சடையில் வருத்தமுற்ற பிறையை அதனை விழுங்கக் காத்திருக்கும் பாம்புடன் ஒருங்கு வைத்தருளியது என்னையோ? (நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்றா நயத்தலினால் முதல்வனைச் சாரும் போது நலிவும் மெலிவும் இல்லையாகும் என்பது கருத்து).

திருமறைக்காடு

துஞ்சும் போதுந் துயிலின்றி யேத்துவார்
வஞ்சின் றிவலங் கொண்மறைக் காடரோ
பஞ்சின் மெல்லடிப் பாவை பலிகொணர்ந்
தஞ்சி நிற்பது மைந்தலை நாகமே. **#89**

உறங்கும்போதும் உறங்காது உள் உணர்வோர் வஞ்சனையின்றி வலஞ்செய்யும் மறைக்காட்டுறையும் பெருமானே! பஞ்சனைய மெல்லடி உடைய இப்பாவை பலி கொணர்ந்து தேவரீர் பாத்திரத்தில் இடாது அஞ்சி நிற்பதற்குக் காரணம் தேவரீர் அணிந்துள்ள ஐந்தலை நாகமே, அதனை ஏன் அணிந்தீர்?

திருமறைக்காடு

திருவி னார்செல்வ மல்கு விழாவணி

மருவி னார்வலங் கொண்மறைக் காடரோ
உருவி னாளுமை மங்கையொர் பாகமாய்
மருவி னாய்கங்கை யைச்சென்னி தன்னிலே. #90
அருள் திருவுடையாரின் செல்வம் நிறைந்து விளங்கித் தோன்றும் விழாக்களால் அழகு பெற்றதும், நெஞ்சு நும்பால்மருவினார் வலம் செய்வதும் ஆகிய மறைக் காட்டுறையும் பெருமானே! நல்ல ஆழகிய உருவமுடைய உமை மங்கையை ஒரு பாகமாக மருவியதோடு, கங்கையைச் சடையிற் சூடியுள்ளது என்னையோ?

திருமறைக்காடு

சங்கு வந்தலைக் குந்தடங் கானல்வாய்
வங்க மார்வலங் கொண்மறைக் காடரோ
கங்கை செஞ்சடை வைப்பது மன்றியே
அங்கை யில்லன லேந்த லழகிதே. #91
சங்குகளை அலைகள் கரையிலே கொண்டு வந்து உலவவிடும் கடற்கரைச் சோலையிடத்துக் கப்பல்கள் வந்து வலங்கொள்வனபோன்று வரிசைகொள்ளும் மறைக்காட்டுறையும் பெருமானே! தேவரீர் கங்கையைச் செஞ்சடையில் வைப்பதும் அன்றி, அகங்கையில் அனலையும் ஏந்தல் அழகியதேயோ?

திருமறைக்காடு

குறைக்காட் டான்விட்ட தேர்குத்த மாமலை
இறைக்காட்டியெடுத் தான்தலை யீரைந்தும்
மறைக்காட் டான்இறை யூன்றலும் வாய்விட்டான்
இறைக்காட் டாயெம் பிரானுனை யேத்தவே. #92
தன்பாலுள்ள குறையைக் காட்டாதவனாகிய இராவணன் ஏறிவந்த தேர் வழிச்செல்லுதலைத் தடுத்த திருக்கயிலாய மலையைச் சிறுபோது தன்வலிகாட்டி எடுக்கலுற, அவன் பத்துத் தலைகளும், மறைக்காட்டுப் பெருமானே! நீ சிறிது திருவிரல் ஊன்றுதலும், வாய்விட்டரற்றினன். எம்பெருமானே! நீ அடியேன் உனை ஏத்துதலால் எனக்கு இறப்பைக் காட்ட மாட்டாய்; இறவாத இன்ப அன்பே காட்டுவாய் என்றபடி.

திருமறைக்காடு

திருமறைக்காடு, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வேதாரணியேசுவரர்.
தேவியார் : யாழைப்பழித்தமொழியம்மை.

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ

மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. **#93**
பண்ணையொத்த மொழியாளாகிய உமை அம்மையை ஒருபங்கிற் கொண்டவரே! மண்ணுலகத்தவர் வலம் புரியும் மறைக்காட்டுறையும் பெருமானே! அடியேன் என்கண்களால் உம்மைக் காணுமாறு, வேதங்களால் அடைக்கப் பெற்ற இக்கதவினைத் திண்ணமாகத் திறந்து அருள்செய்வீராக.

<u>திருமறைக்காடு</u>

ஈண்டு செஞ்சடை யாகத்து ளீசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேயருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே. **#94**
ஆகத்தில் ஈண்டிய செஞ்சடைகொண்ட இறைவரே! தொகுதியாய கருமுகிலின் நிறத்தையும் தளிரின் ஒளியையும் உடைய மணிகண்டரே. அடியேனை ஆண்டுகொண்ட நீரே அருள் செய்வீராக; நீண்ட இப்பெருங்கதவின் வலியினை நீக்குவீராக.

<u>திருமறைக்காடு</u>

அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட விக்கத வந்திறப் பிம்மினே. **#95**
அட்டமூர்த்தியாகிய எந்தையே! தீயவர் புரங்களைச் சுட்ட உயர்ந்த தேவரே! பட்டமாகக் கட்டிய சடைமுடியுள்ள பரமரே! செவ்வையாக இக்கதவினைத் திறப்பித் தருள்வீராக.

<u>திருமறைக்காடு</u>

அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடைவிருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே. **#96**
அருமை உடைய நான்மறை அருளிய நாவுடையவரே! பெரிய புரம் எரியுண்ணுமாறு சுட்ட உயர்ந்த தேவரே! விரிந்த கோவண ஆடை கொண்ட மிகப்பழையவரே! பெரிய இக்கதவினைப் பிரித்தருள்வீராக.

<u>திருமறைக்காடு</u>

மலையில் நீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழ லேத்தரோ
விலையில் மாமணி வண்ண வுருவரோ
தொலைவி லாக்கத வந்துணை நீக்குமே. **#97**

திருமலையைப்போல் அழியாதிருக்கும் மறைக்காட்டுறையும் பெருமானே! கலைகள் வந்திறைஞ்சிக் கழல் ஏத்தப் படுபவரே! விலைமதிப்பற்ற செம்மணிவண்ணத் திருமேனியரே! தொலைவில்லாத இக்கதவுகளைத் திறந்தருள்வீராக.

திருமறைக்காடு

பூக்குந் தாழை புறணி யருகெலாம்
ஆக்குந் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடி கேளுமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே. **#98**

ஊர்ப்புறத்து நீரின் மருங்கெலாம் தாழை பூப்பதும், தண்பொழில் சூழ்வதுமாகிய மறைக்காட்டுறையும் பெருமானே! யார்க்குங் காண்டல் அரியீர்! அடிகளே! உமைநோக்கிக் காணும் பொருட்டு இக்கதவைத் திறந்தருள்வீராக!

திருமறைக்காடு

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தரோ
அந்த மில்லி யணிமறைக் காடரோ
எந்தை நீயடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே. **#99**

வெந்த திருநீற்றுப் பொடியைப் பூசும் மேலானவரே! முடிவில்லாதவரே! மறைக்காட்டுறையும் பெருமானே! எம் தந்தையே! அடியார்கள் நேர்வாயிலில் வந்து இறைஞ்சிடும் பொருட்டு இப்பெருங்கதவம் பிணிக்கப்பட்டிருத்தலை நீக்கித் திறந்தருள்வீராக.

திருமறைக்காடு

ஆறு சூடும் அணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய எம்பெரு மானிந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே. **#100**

கங்கையாற்றைச் சடையிற் சூடும் மறைக்காட்டுறையும் பெருமானே! ஒரு கூற்றை உமைக்கு ஈந்த இளையவரே! விடையேறிய எம்பெருமானே! இந்த மாறுபாடில்லாத கதவின் வலியினை நீக்கித் திறந்தருள்வீராக.

திருமறைக்காடு

சுண்ண வெண்பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதி யணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே. **#101**

வெண்பொடிச் சுண்ணம் பூசும் உயர்ந்த தேவரே! அழகுசெய்து ஏற்றின்கண் ஏறி உயர்ந்து தோன்றும் பரமரே! அண்ணலே! ஆதியே! அணிமறைக் காட்டுறையும் பெருமானே! திண்ணமாக இக்கதவினைத் திறப்பித்தருள்வீராக.

திருமறைக்காடு

விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. **#102**

விண்ணுலகத்தவர் விரும்பி எதிர்கொண்டு இன்புறுமாறு மண்ணுலகத்தவர் சென்று வணங்கியெழும் மறைக்காட்டுறையும் பெருமானே! கண்ணினால் உமைக் காணுவதற்காகக் கதவினைத் திண்ணமாகத் திறந்து அருள் செய்வீராக.

திருமறைக்காடு

அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீ ரெம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கத வந்திறப் பிம்மினே. **#103**

பெருகும் புன்னைகள் சூழ்ந்த மறைக்காட்டுறையும் பெருமானே! இராவணனை விரலால் அடர்த்திட்ட நீர் எளியேன்பால் இரக்கம் கொஞ்சமும் இல்லாதவராயுள்ளீர்! எம்பெருமானீரே! விரைந்து. இக்கதவினைத் திறப்பித்தருள்வீராக.

திருமீயச்சூர்

திருமீயச்சூர்

திருமீயச்சூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முயற்சிநாதேசுவரர்.
தேவியார் : சுந்தரநாயகியம்மை.

தோற்றுங் கோயிலுந் தோன்றிய கோயிலும்
வேற்றுக் கோயில் பலவுள மீயச்சூர்க்
கூற்றம் பாய்ந்த குளிர்புன் சடையரற்
கேற்றங் கோயில்கண் டீரிளங் கோயிலே. **#104**

இந்நாள்வரை தோன்றிய கோயில்களும், இனித்தோன்றும் கோயில்களும், வேற்றுக்கோயில்களும் பலவுளவேனும், கூற்றுவனைத்தடிந்த குளிர்ந்த புன்சடை உடைய அரனுக்கு மீயச்சூர் இளங்கோயிலே ஏற்றம் உடைய கோயிலாகும்; காண்பீராக.

திருமீயச்சூர்

வந்த னையடைக் கும்மடித் தொண்டர்கள்
பந்த னைசெய்து பாவிக்க நின்றவன்
சிந்த னைதிருத் துந்திரு மீயச்சூர்
எந்த மையுடை யாரிளங் கோயிலே. **#105**

திருவடிக்கு வழிபாடு செய்தலையே உள்ளத்தடைக்கும் தொண்டர்கள் தம்நெஞ்சைக் கட்டுப்படுத்திப் பாவிக்கநின்றவனும், எம்மை அடிமையாக உடையானும் விளங்கியருளும் திருமீயச்சூர் இளங்கோயில் வழிபடுவார் சிந்தனையைத் திருத்தவல்லது ஆகும்.

திருமீயச்சூர்

பஞ்ச மந்திரம் ஓதும் பரமனார்
அஞ்ச ஆனை யுரித்தன லாடுவார்
நெஞ்சம் வாழி நினைந்திரு மீயச்சூர்
எந்த மையுடை யாரிளங் கோயிலே. **#106**

நெஞ்சமே! ஈசானம் முதலிய ஐந்து மந்திரங்களை ஓதும் பரமனும்,ஆனை அஞ்சுமாறு உரித்தவனும், அனல் ஆடுவானும், திருமீயச்சூர் இளங்கோயிலில் எம்மை உடையானுமாகிய பெருமானையே நினைந்திரு; அந்நினைப்பால் வாழ்வாய்.

திருமீயச்சூர்

நாறு மல்லிகை கூவிளஞ் செண்பகம்
வேறு வேறு விரித்த சடையிடை
ஆறு கொண்டுகந் தான்திரு மீயச்சூர்
ஏறு கொண்டுகந் தாரிளங் கோயிலே. **#107**

மணம் வீசும் மல்லிகை, கூவிளம், செண்பகம் முதலிய மலர்களை வேறுவேறாக விரித்த சடையிடை ஆற்றோடுகொண்டுகந்தான் திருமீயச்சூரின் இளங்கோயிலில் விடைமேற்கொண்டு உகந்த பெருமானே! (அடியார் சாத்தும் மல்லிகை முதலியவற்றை முடியில் ஏற்று மகிழ்ந்து அருள்புரிவன் என்பது கருத்து)

<u>திருமீயச்சூர்</u>

வெவ்வ வண்ணத்து நாகம் வெருவவே
கவ்வ வண்ணக் கனல்விரித் தாடுவர்
செவ்வ வண்ணந் திகழ்திரு மீயச்சூர்
எவ்வ வண்ணம் பிரானிளங் கோயிலே. **#108**

வெம்மையான வண்ணத்தையுடைய நாகம் அஞ்சும்படியாக எப்பொருளையும் கவ்விக்கொள்ளும் வண்ணத்தையுடைய கனல் விரித்தாடுவார், திருமீயச்சூர் இளங்கோயில் செவ்வண்ணந்திகழ் மேனியுள்ள பிரானது வண்ணங்கள் எப்படிப்பட்டவை!

<u>திருமீயச்சூர்</u>

பொன்னங் கொன்றையும் பூவணி மாலையும்
பின்னுஞ் செஞ்சடை மேற்பிறை சூடிற்று
மின்னு மேகலை யாளொடு மீயச்சூர்
இன்ன நாள் அக லாரிளங் கோயிலே. **#109**

திருமீயச்சூர் இளங்கோயிலில் ஒளிவிடும் மேகலை அணிந்த உமையம்மையோடு இது போன்ற நாளினும் அகலாது உள்ள பெருமான் பின்னிகொண்டுள்ள சடைமேல் பிறையுடன் சூடியது, பொன்போன்ற கொன்றைக்கண்ணியும் சூடியார் (கொடுக்கும்) மலர்களால் அணிபெறத் தொகுக்கப்பெற்ற மாலையும் ஆம்.

<u>திருமீயச்சூர்</u>

படைகொள் பூதத்தன் பைங்கொன்றைத் தாரினன்
சடைகொள் வெள்ளத்தன் சாந்தவெண் நீற்றினன்
விடைகொ ளூர்தியி னான்திரு மீயச்சூர்
இடைகொண் டேத்தநின் றாரிளங் கோயிலே. **#110**

பூதங்களைப் படையாகக் கொண்டவனும், கொன்றைமாலையனும், சடையில் வெள்ளம் உடையவனும், சாந்த வெண்ணீற்றனும்,

விடையூர்தியானும், திருமீயச்சூர் இளங்கோயிலின் கண் செல்வி தெரிந்து ஏத்துமாறு நின்ற இறைவனேயாவன்.

திருமீயச்சூர்

ஆறு கொண்ட சடையினர் தாமுமோர்
வேறு கொண்டதொர் வேடத்த ராகிலும்
கூறு கொண்டுகந் தாளொடு மீயச்சூர்
ஏறு கொண்டுகந் தாரிளங் கோயிலே. **#111**

சடையினில் ஓர் ஆறு கொண்ட இயல்பினரும், வேறுவேறுகொண்ட வேடத்தராமியல்பினரும். கூறு கொண்டுகந்த அம்மையொடும் திருமீயச்சூர் இளங்கோயிலின்கண் ஏறுகொண்டு உகந்தாரேயாவர்.

திருமீயச்சூர்

வேதத் தானென்பர் வேள்வியு ளானென்பர்
பூதத்தா னென்பர் புண்ணியன் தன்னையே
கீதத் தான்கிள ருந்திரு மீயச்சூர்
ஏதந் தீர்க்கநின் றாரிளங் கோயிலே. **#112**

புண்ணியனாகிய இறைவனை வேதத்தான் என்றும், வேள்வியுளான் என்றும், பூதத்தான் என்றும் கூறுவர்; கீதம் கிளரும் திருமீயச்சூரில், இளங்கோயிலின்கண் அடியவர் ஏதந்தீர்க்க நின்ற இறைவரேயாவர்.

திருமீயச்சூர்

கடுக்கண் டன்கயி லாய மலைதனை
எடுக்க லுற்ற இராவணன் ஈடற
விடுக்க ணின்றி வெகுண்டவன் மீயச்சூர்
இடுக்கண் தீர்க்கநின் றாரிளங் கோயிலே. **#113**

விடமுண்டகண்டனும், கயிலாயமலையினை எடுக்கலுற்ற இராவணன் ஈடற விடுதற்கேற்ற இடமில்லையாம்படி வெகுண்டவன் மீயச்சூரில் இளங்கோயிலின்கண் இடுக்கண் தீர்க்க நின்ற இறைவனேயாவன்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை

திருவீழிமிழலை, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

கரைந்து கைதொழு வாரையுங் காதலன்
வரைந்து வைதெழு வாரையும் வாடலன்
நிரந்த பாரிடத் தோடவர் நித்தலும்
விரைந்து போவது வீழி மிழலைக்கே. **#114**

மனங்கரைந்து கைதொழுவாரையும் காதலித்து அருள்வன்; தன்னை விலக்கி இகழாநின்று எழும் புறச்சமயத்தாரையும் வாடச்செய்யான். இத்தகைய அவன் வரிசையாகிய பூதகணங்களோடு நித்தலும் விரைந்து போவது வீழிமிழலைத் தலத்திற்கே. (வேண்டுதல் வேண்டாமையிலானாகிய முதல்வன், அந்தணர் வழிபடுதலால் அவர்க்கு அருள்புரிய விரைந்து தோன்றுவன் என்றபடி.)

திருவீழிமிழலை

ஏற்று வெல்கொடி யீசன்ற னாதிரை
நாற்றஞ் சூடுவர் நன்னறுந் திங்களார்
நீற்றுச் சந்தன வெள்ளை விரவலார்
வேற்றுக் கோலங்கொள் வீழி மிழலையே. **#115**

பிற கொடிகளை வென்று மேம்பட்ட ஆனேற்றுக் கொடியையுடைய ஈசன் தனக்குரிய ஆதிரை நாளில், தான் வேறு வேறு கோலங் கொண்டு காட்சியளித்தற்கு இடமாகிய திருவீழிமிழலையில் தாம் சந்தனம் எனக்கொண்டு பூசிவந்த வெள்ளை நீற்றைக் கொள்ளாது மணமுள்ள பொருள்களைச் சூடிக்கொள்வர்; மிக நல்லமதியைச் சூடு வோராகவும் உளர். சந்தன வெள்ளை நீற்றை விரவல் உடையராய் (அணிந்து) நாற்றம் சூடுவர் (நறுமலர் அணிவர்) என்றுரைப்பினும் அமையும்.

திருவீழிமிழலை

புனைபொற் சூலத்தன் போர்விடை யூர்தியான்
வினைவெல் நாகத்தன் வெண்மழு வாளினான்
நினைய நின்றவ னீசனை யேயெனா
வினையி லார்தொழும் வீழி மிழலையே. **#116**

சூலம் உடையவனும், விடை ஊர்தியனும், வினைகளை வென்றவனும்

நாகத்தைப் பூண்டவனும், வெண்மழு வாள் உடையவனும், அடியவர்கள் ஈசனே என்று நினைய நின்றவனும், இருவினையற்ற மேலோர் தொழும் வீழிமிழலை இறைவனே.

திருவீழிமிழலை

மாடத் தாடு மனத்துடன் வைத்தவர்
கோடத் தார்குருக் கேத்திரத் தார்பலர்
பாடத் தார்பழிப் பார்பழிப் பல்லதோர்
வேடத் தார்தொழும் வீழி மிழலையே. **#117**

முதல்வனை மாடத்தும் (விமானத்தும்), ஆடும் மனத்தும் உடன் வைத்தவராகிய திருமாலும், வேத கோஷம் செய்யும் பிரமனும், குருக்ஷத்திரத்தார் பலரும் (பாண்டவர்) , வேதத்தின் மூல பாடம் பேணும் அந்தணர்களும், பழிப்பார் கூறும் பழிப்பு அல்லதாகிய திருவேடம் பூண்ட அடியார்களும், தொழும் (பதி) திருவீழிமிழலையே.

திருவீழிமிழலை

எடுத்த வெல்கொடி யேறுடை யான்தமர்
உடுப்பர் கோவண முண்பது பிச்சையே
கெடுப்ப தாவது கீழ்நின்ற வல்வினை
விடுத்துப் போவது வீழி மிழலைக்கே. **#118**

உயர்த்துப் பிடித்த இடபக்கொடியையுடைய சிவபிரானின் அடியவர்கள், கோவணமே உடுப்பது; பிச்சை உணவே உண்பது; கீழ்நின்ற வல்வினைகளையே கெடுப்பது; பந்த பாசங்களை விடுத்துப் போவது வீழிமிழலைக்கே.

திருவீழிமிழலை

குழலை யாழ்மொழி யாரிசை வேட்கையால்
உழலை யாக்கையை யூணு முணர்விலீர்
தழலை நீர்மடிக் கொள்ளன்மின் சாற்றினோம்
மிழலை யானடி சாரவிண் ணாள்வரே. **#119**

குழலையும், யாழையும் போன்ற மொழியாரை வேட்கையினால் இசையும், உழலும் உடலைத் தீநெறியின்கண் ஊன்றும் நல்லுணர்வற்றவர்களே! நெருப்பை நீர் மடியின்கண் கொண்டு கெடாதீர்; பன்முறையினும் சாற்றினோம், மிழலையான் திருவடி சார விண்ணாளும் திறம் பெறலாம்.

திருவீழிமிழலை

தீரன் தீத்தர ளன்சடைத் தங்கிய

நீர னாடிய நீற்றன்வண் டார்கொன்றைத்
தாரன் மாலையன் தண்நறுங் கண்ணியன்
வீரன் வீழி மிழலை விகிர்தனே. **#120**
அறிஞனும், தீத்திரளைக் கையிற்கொண்டாடுபவனும், சடைத் தங்கிய கங்கையனும், ஆடிய திருநீற்றனும், வண்டார்ந்த கொன்றைத்தாரும், குளிர்ந்து மணக்கும் கண்ணியும் மாலையும் உடையவனும், புலன்களை வென்று விளங்கும் வீரனும் வீழிமிழலையிலுள்ள விகிர்தனே.

திருவீழிமிழலை

எரியி னாரிறை யாரிடு காட்டிடை
நரியி னார்பரி யாமகிழ் கின்றதோர்
பெரிய னார்தம் பிறப்பொடு சாதலை
விரிய னார்தொழும் வீழி மிழலையே. **#121**
எரியைக்கையால் ஏந்தியவரும், யாங்கணும் தங்கி நிற்போரும், நரிகளைப் பரிகளாகக் கொண்டு இடுகாட்டிடை ஆடுதலை மகிழ்கின்ற பெரியரும் (மகாதேவனும்) தங்கும் இடம் பிறப்போடு கூடிய இறப்பை அகல நினைப்பார் தொழும் தலமாகிய வீழிமிழலை ஆகும்.

திருவீழிமிழலை

நீண்ட சூழ்சடை மேலொர் நிறைமதி
காண்டு சேவடி மேலொர் கனைகழல்
வேண்டு வாரவர் வீதி புகுந்திலர்
மீண்டும் போவது வீழி மிழலைக்கே. **#122**
நீண்டு சூழ்ந்த சடையின்மேல் ஓர் நிலாமதியும், சேவடியின்மேல் கூப்பிடுதூரம் ஒலிக்கும் ஓர் கழலும் கொண்டு, வேண்டுவாராகிய யாம் உள்ள வீதியுட் புகாது வீழிமிழலைக்கே மீண்டு போவர்; இதுவோ அவர்தம் அருள்!

திருவீழிமிழலை

பாலை யாழொடு செவ்வழிப் பண்கொள
மாலை வானவர் வந்து வழிபடும்
ஆலை யாரழ லந்தண ராகுதி
வேலை யார்தொழும் வீழி மிழலையே. **#123**
மாலைக்காலத்து வானவர் வந்து பாலைப்பண்ணும் செவ்வழிப் பண்ணும் கலந்த பாடல்களைப்பாடி வழிபடும் இடம் அந்த மாலைக்காலத்தே அந்தணர் நிறைந்த நெருப்பை வளர்த்து ஆகுதி செய்யும் தொழிலராய் வழிபடும் திருவீழிமிழலையே ஆம். மாலைக்காலத்தே சுரர்பாடப்பூசுரர் வேட்டு வழிபடும் இடம் என்பது

கருத்து.

திருவீழிமிழலை

மழலை யேற்று மணாளன் திருமலை
சுழல ஆர்த்தெடுத் தான்முடி தோளிறக்
கழல்கொள் காலின் திருவிர லூன்றலும்
மிழலை யானடி வாழ்கென விட்டதே. **#124**

இளமையான ஆனேறுடைய உமைமணாளனது திருக்கயிலாயமலையைச் சுழல ஆர்த்து எடுத்த இராவணனது முடியும் தோளும் இறும்படியாக அவன் தன் கழலணிந்த திருவடியில் உள்ள ஒரு திருவிரலால் ஊன்றுதலும், அவ்வரக்கன் திருவீழிமிழலையானடி வாழ்க என்று வாய்விட்டரற்றினன். அரற்றவே உமைமணாளன் அவனை மேலும் ஒறுக்காமல் விடுவித்தனன்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

என்பொ னேயிமை யோர்தொழு பைங்கழல்
நன்பொ னேநலந் தீங்கறி வொன்றிலேன்
செம்பொ னேதிரு வீழி மிழலையுள்
அன்ப னேயடி யேனைக் குறிக்கொளே. **#125**

என் உயர்ந்த பொருளே! தேவர் தொழுகின்ற கழலணிந்த நல்ல பொருளே! நலம் தீங்கு பகுத்து அறியும் அறிவு சிறிதும் இல்லாத இயல்பினேன் அடியேன்; எனது செம்பொன்னே! திருவீழிமிழலையுள் அன்பு வடிவாம் பெருமானே! அடியேனைக் குறிக்கொண்டு காத்தருள்வாயாக.

திருவீழிமிழலை

கண்ணி னாற்களி கூரக்கை யால்தொழு
தெண்ணு மாறறி யாதிளைப் பேன்றனை
விண்ணு ளார்தொழும் வீழி மிழலையுள்
அண்ண லேயடி யேனைக் குறிக்கொளே. **#126**

இன்பம் மிகும்படி கண்ணினாற்கண்டு, கையால் தொழுது, எண்ணுமாற்றியாது இளைக்கும் எளியேனை, தேவர்கள் தொழும் வீழிமிழலையுள் அண்ணலே, குறிக்கொண்டு காத்தருள்வாயாக.

திருவீழிமிழலை

ஞால மேவிசும் பேநலந் தீமையே
கால மேகருத் தேகருத் தாற்றொழும்
சீல மேதிரு வீழி மிழலையுள்
கோல மேயடி யேனைக் குறிக்கொளே. **#127**

உலகமே! விண்ணே! நன்மையே! தீமையே! காலமே! கருத்தே! கருத்தாற்றொழும் சீலமே! திருவீழிமிழலையுள் வீற்றிருக்கும் கோலமே! அடியேனைக் குறிக்கொண்டு காத்தருள்வாயாக.

திருவீழிமிழலை

முத்த னேமுதல் வாமுகி ழும்முளை
ஒத்த னேயொரு வாவுரு வாகிய
சித்த னேதிரு வீழி மிழலையுள்
அத்த னேயடி யேனைக் குறிக்கொளே. **#128**

முத்தனே! முதல்வா! முகிழ்க்கும் முளையை ஒத்தவனே! ஒப்பற்றவனே! உருவத்திருமேனி உடைய சித்தனே! திருவீழிமிழலையுள் வீற்றிருக்கும் அத்தனே! அடியேனைக் குறிக்கொண்டு காத்தருள்வாயாக.

திருவீழிமிழலை

கருவ னேகரு வாய்த்தெள வார்க்கெலாம்
ஒருவ னேயுயிர்ப் பாயுணர் வாய்நின்ற
திருவ னேதிரு வீழி மிழலையுள்
குருவ னேயடி யேனைக் குறிக்கொளே. **#129**

மூலப்பொருளாக உள்ளவனே! கருவாயுள்ளாய் என்று தௌந்தவர்க்கெல்லாம் ஒப்பற்றவனே! உயிர்ப்பாகவும், உணர்வாகவும் நின்ற செல்வனே! திருவீழிமிழலையுள் வீற்றிருக்கும் குருமூர்த்தியே! அடியேனைக் குறிக்கொண்டு காத்தருள்வாயாக.

திருவீழிமிழலை

காத்த னேபொழி லேழையுங் காதலால்
ஆத்த னேயம ரர்க்கயன் றன்றலை
சேர்த்த னேதிரு வீழி மிழலையுள்
கூத்த னேயடி யேனைக் குறிக்கொளே. **#130**

ஏழுலகங்களையும் கருணையால் காத்தவனே! அமரர்க்கு ஆப்தனே! அயன்றலையைக் கையில் சேர்த்தவனே! திருவீழிமிழலையுள் வீற்றிருக்கும் கூத்தப்பெருமானே! அடியேனைக் குறிக்கொண்டு காத்தருள்வாயாக.

திருவீழிமிழலை

நீதி வானவர் நித்தல் நியமஞ்செய்
தோதி வானவ ரும்முண ராததோர்
வேதி யாவிகிர் தாதிரு வீழியுள்
ஆதி யேயடி யேனைக் குறிக்கொளே. **#131**

வானவர் தமக்குரிய நீதிப்படி நித்தலும் நியமங்கள் செய்து ஓதியும் அவர்களால் உணரப்படாது நின்ற ஒப்பற்ற வேதியா! விகிர்தனே! திருவீழிமிழலையுள் வீற்றிருக்கும் ஆதியே! அடியேனைக் குறிக்கொண்டு காத்தருள்வாயாக.

திருவீழிமிழலை

பழகி நின்னடி சூடிய பாலனைக்
கழகின் மேல்வைத்த காலனைச் சாடிய
அழக னேயணி வீழி மிழலையுள்
குழக னேயடி யேனைக் குறிக்கொளே. **#132**

நின்னடியைப் பழகிச் சூடிய பாலனாகிய மார்க்கண்டேயனை வஞ்சனையால் பற்றமுற்பட்ட காலனைச் சாடிய அழகனே!அழகுமிக்க திருவீழிமிழலையுள் வீற்றிருக்கும் குழகனே! அடியேனைக் குறிக்கொண்டு காத்தருள்வாயாக.

திருவீழிமிழலை

அண்ட வானவர் கூடிக் கடைந்தநஞ்
சுண்ட வானவ னேயுணர் வொன்றிலேன்
விண்ட வான்பொழில் வீழி மிழலையுள்
கொண்ட னேயடி யேனைக் குறிக்கொளே. **#133**

தேவர்கள் அசுரர்களுடன் கூடிக்கடைதலால் எழுந்த நஞ்சினை உண்ட தேவனே! விரிந்த வான் பொழில் சூழ்ந்த திருவீழிமிழலையிற் கோயில் கொண்டவனே! உணர்வு சிறிதும் இல்லேனாகிய அடியேனைக் குறிக்கொண்டு காத்தருள்வாயாக.

திருவீழிமிழலை

ஒருத்தன் ஓங்கலைத் தாங்க லுற்றானுரம்
வருத்தி னாய்வஞ்ச னேன்மனம் மன்னிய
திருத்த னேதிரு வீழி மிழலையுள்
அருத்த னேயடி யேனைக் குறிக்கொளே. **#134**

ஓங்கிய திருக்கயிலையைத் தாங்கிப் பெயர்க்கலுற்ற ஒருத்தனாகிய இராவணனின் வலிகெட அவனை வருத்தியவனே! வஞ்சனை

உடையோன் மனத்தின்கண் நிலை பெற்ற திருத்தியவனே!
திருவீழிமிழலையுள் வீற்றிருக்கும் பொருள் வடிவாய் இருப்பவனே!
அடியேனைக் குறிக்கொண்டு காத்தருள்வாயாக.

திருவிடைமருதூர்

திருவிடைமருதூர்

திருவிடைமருதூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மருதீசர்.
தேவியார் : நலமுலைநாயகியம்மை.

பாச மொன்றில ராய்ப்பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈச னெம்பெரு மானிடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே. **#135**

பல அன்பர்கள் உலக பாசங்கள் ஒன்றும் இல்லாதவராய் மணமிக்க புதுமலர்கள் கொண்டு திருஇடைமருதில் வீற்றிருக்கும் ஈசன் எம்பெருமான் திருவடியை வழிபட்டு வைகுதலைக் கண்டு, புனலாட யாமும் பூசத்திருநாளில் அங்குப் புகுந்து வழிபடுவோம்.

திருவிடைமருதூர்

மறையின் நாண்மலர் கொண்டடி வானவர்
முறையி னால்முனி கள்வழி பாடுசெய்
இறைவ னெம்பெரு மானிடை மருதினில்
உறையு மீசனை யுள்குமெ னுள்ளமே. **#136**

வானவர்களும் முனிவர்களும் மறையின் முறையினால் புதிய மலர்கள் கொண்டு வழிபாடு செய்கின்ற இறைவனும், எம்பெருமானுமாகிய இடைமருதூரில் உறைகின்ற ஈசனை என் உள்ளம் உள்கும்.

திருவிடைமருதூர்

கொன்றை மாலையுங் கூவிள மத்தமும்
சென்று சேரத் திகழ்சடை வைத்தவன்
என்று மெந்தை பிரானிடை மருதினை
நன்று கைதொழு வார்வினை நாசமே. **#137**

கொன்றை மாலையும், கூவிளமும், ஊமத்தமலரும் ஒருங்கு சென்று சேரும்படியாகத் திகழ்கின்ற சடையில் வைத்தவனாகிய இடைமருதூர் உறையும் எந்தையினை என்றும் நன்றுறக்கைதொழுவார் வினைகள் நாசமாகும்.

திருவிடைமருதூர்

இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்

அம்மை யேற்பிற வித்துயர் நீத்திடும்
எம்மை யாளு மிடைமரு தன்கழல்
செம்மை யேதொழு வார்வினை சிந்துமே. **#138**
எம்மையாளும் இடைமருதூர் உறையும் இறைவன் கழலைச்
செம்மையாகத் தொழுவார் வினை சிந்தும். அத்தொழுகை இம்மையில்
வானவர் செல்வம் விளைத்திடும்; அப்பிறப்பில் பிறவித்துயர்
இல்லாவகையில் நீங்கும்.

திருவிடைமருதூர்

வண்ட ணைந்தன வன்னியுங் கொன்றையும்
கொண்ட ணிந்த சடைமுடிக் கூத்தனார்
எண்டி சைக்கு மிடைமரு தாவென
விண்டு போயறும் மேலை வினைகளே. **#139**
வண்டுகள் அணைந்த வன்னியும் கொன்றையும் கொண்டு அணிந்த
சடாமுடியை உடைய கூத்தனார் எனப் படர்க்கையிற் பரவியும்
எண்டிசைக்கும் கதியாகிய இடைமருதா என முன்னிலைப் படுத்திப்
புகழ்ந்தும் வழிபட மேலை வினைகள் யாவும் நம்மைவிட்டு
விலகிக்கெடும்.

திருவிடைமருதூர்

ஏற தேறு மிடைமரு தீசனார்
கூறு வார்வினை தீர்க்குங் குழகனார்
ஆறு செஞ்சடை வைத்த அழகனார்
ஊறி யூறி யுருகுமெ னுள்ளமே. **#140**
விடையினை உகந்தேறும் இறைவரும், தன்னைக் கூறுவார்
வினைகளைத் தீர்க்கும் குழகரும், ஆறு செஞ்சடையின்கண் வைத்த
அழகருமாகிய இடைமருதூர் எம்பிரானையெண்ணி என் உள்ளம் ஊறி
ஊறி உருகுகின்றது.

திருவிடைமருதூர்

விண்ணு ளாரும் விரும்பப் படுபவர்
மண்ணு ளாரும் மதிக்கப் படுபவர்
எண்ணி னார்பொழில் சூழிடை மருதினை
நண்ணி னாரைநண் ணாவினை நாசமே. **#141**
விண்ணிலுள்ள தேவரான் விரும்பப்படுபவரும், மண்ணினுள்ள
மனிதரான் மதிக்கப்படுபவரும் ஆகிய இறைவர்க்குரிய பொழில் சூழ்ந்த
திரு இடைமருதூரை எண்ணி நண்ணியவரை வினையினால் வரும்
கேடுகள் நண்ணமாட்டா.

<u>திருவிடைமருதூர்</u>

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தனார்
கந்த மாலைகள் சூடுங் கருத்தனார்
எந்தை யென்னிடை மருதினி லீசனைச்
சிந்தை யால்நினை வார்வினை தேயுமே. **#142**

திருநீறு பூசும் விகிர்தரும், நறுமண மாலைகள் சூடும் தலைவரும், என் தந்தை போல்வாருமாகிய திருவிடைமருதூர் ஈசனைச் சிந்தையால் நினைப்பவர்களது வினைகள் தேயும்.

<u>திருவிடைமருதூர்</u>

வேத மோதும் விரிசடை யண்ணலார்
பூதம் பாடநின் றாடும் புனிதனார்
ஏதந் தீர்க்கு மிடைமரு தாவென்று
பாத மேத்தப் பறையும்நம் பாவமே. **#143**

தேவர்கள் ஓதும் விரிசடை அண்ணலாரும் பூதங்கள் பாடநின்று ஆடும் புனிதருமாகியவரை ஏதந்தீர்க்கும் இடைமருதூரில் எழுந்தருளியிருக்கும் இறைவா! என்று சொல்லிப் பாதங்கள் ஏத்தினால் நம்பாவங்கள் நம்மை விட்டு நீங்கும்.

<u>திருவிடைமருதூர்</u>

கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே. **#144**

இடைமருதூரில் எழுந்தருளியிருக்கும் ஈசன், தன்னையடைந்த அன்பர்களுக்குக் கனி, கட்டிபட்ட கரும்பு, குளிர்மலரணிந்த குழலையுடைய பாவை போன்ற பெண்கள், தனித்து முடிகவித்து நின்று ஆளும் அரசு ஆகிய அனைத்தினும் மிக்க இனிமை உடையவன். தன்னை அடைந்த மெய்ஞ்ஞானிகளுக்கு அவர்தம் உணர்வு புறத்தே செவ்வுழி இப்பொருள்களிலெல்லாம் பரானந்த போகமாய் விளைவன் என்றலும் பொருத்தம்.

<u>திருவிடைமருதூர்</u>

முற்றி லாமதி சூடும் முதல்வனார்
ஒற்ற னார்மலை யாலரக் கன்முடி
எற்றி னார்கொடி யாரிடை மருதினைப்
பற்றி னாரைப் பற்றாவினை பாவமே. **#145**

இளம்பிறை சூடும் முதல்வரும், மலையால் அரக்கன் முடியை விரலைச் சிறிது ஊன்றி ஒற்றியவரும், இடபக்கொடியை உடையவரும் ஆகிய பெருமான் எழுந்தருளியுள்ள இடைமருதூரினைப் பற்றியவர்களை வினைகளும் அவற்றான் வரும் இடர்களும் பற்றமாட்டா.

திருவிடைமருதூர்

திருவிடைமருதூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மருதீசர்.
தேவியார் : நலமுலைநாயகியம்மை.

பறையி னோசையும் பாடலி னோசையும்
மறையி னோசையும் வைகு மயலெலாம்
இறைவ னெங்கள் பிரானிடை மருதினில்
உறையு மீசனை யுள்குமெ னுள்ளமே. **#146**

பறை, பாடல், மறை ஆகிய மூன்றின் ஓசைகளும் தங்கியிருக்கும் வயற்புறங்களை உடையதும், இறைவனாகிய எங்கள் பிரான் எழுந்தருளியிருப்பதுமாகிய இடைமருதூரினில் உறைகின்ற ஈசனை என் உள்ளம் உள்குகின்றது.

திருவிடைமருதூர்

மனத்துள் மாயனை மாசறு சோதியை
புனிற்றுப் பிள்ளைவெள் ளைம்மதி சூடியை
எனக்குத் தாயையெம் மானிடை மருதனை
நினைத்திட் டூறி நிறைந்ததெ னுள்ளமே. **#147**

மனத்தினுள் மாயமாய் வந்து நிற்பவனும், குற்றமற்ற ஒளிவடிவானவனும், மிக்க இளமதியைச் சூடியவனும், எனக்குத் தாயானவனும், எம்மானும் இடைமருதூரில் எழுந்தருளி இருப்பவனும் ஆகிய இறைவனை நினைத்திட்டு அன்பு ஊறி என் உள்ளம் நிறைந்தது.

திருவிடைமருதூர்

வண்ட ணைந்தன வன்னியும் மத்தமும்
கொண்ட ணிந்த சடைமுடிக் கூத்தனை
எண்டி சைக்கு மிடைமரு தாவென
விண்டு போயறும் மேலை வினைகளே. **#148**

வண்டணைந்த வன்னியும், மத்தமுமாகிய மலர்களைக் கொண்டு அணைந்த சடைமுடிக் கூத்தப் பிரானை, எண்டிசைக்கும் தலைவனாகிய இடைமருதா என்றுகூற, நம் பழைய வினைகள் நம்மைவிட்டுப் பிரிந்து கெட்டு நீங்கும்.

திருவிடைமருதூர்

துணையி லாமையில் தூங்கிருட் பேய்களோ
டணைய லாவ தெமக்கரி தேயெனா
இணையி லாவிடை மாமரு தில்லெழு
பணையி லாகமஞ் சொல்லுந்தன் பாங்கிக்கே. **#149**

ஊழிக்காலத்துப் புலராது தாழ்க்கும் இருளில் முதல்வன் தனக்கு உடனிருப்பார் பிறரொருவரும் ஆண்டு இன்மையின், தன் கணங்களாகிய பேய்களோடு அணைந்து காலத்தைக் கழித்தல் அரிதென்று எண்ணி ஒப்பற்றதாகிய திருவிடை மருதூரில் எழுந்த மருதமரத்தின் கீழிருந்து தன் பாங்கியாகிய உமையம்மைக்கே ஆகமம் உரைப்பாராயினர்.

திருவிடைமருதூர்

மண்ணை யுண்டமால் காணான் மலரடி
விண்ணை விண்டயன் காணான் வியன்முடி
மொண்ணை மாமரு தாவென்றென் மொய்குழல்
பண்ணை யாயமுந் தானும் பயிலுமே. **#150**

மண்ணுலகை உண்ட திருமால் மலரடி காணான், என்றும் விண்ணுலகைப் பிளந்து பறந்து சென்ற நான்முகன் வியன்முடி காணான் என்றும், மாமருதூரில் இருப்பவனே எனக்கருள் என்றும் என் மொய்குழலாளாகிய மகள் விளையாட்டுக்குரிய தன்தோழியர் கூட்டத்துடன் உரைத்து மகிழ்வாள். பருவம் எய்தாதாரையும் தன்பால் ஈர்ப்பவன் முதல்வன் என்றபடி.

திருவிடைமருதூர்

மங்கை காணக் கொடார்மண மாலையை
கங்கை காணக் கொடார்முடிக் கண்ணியை
நங்கை மீரிடை மருதரிந் நங்கைக்கே
எங்கு வாங்கிக் கொடுத்தா ரிதழியே. **#151**

பெண்களே, இடைமருதர் இந்த என்மகளாகிய நங்கைக்குக் கொன்றையைக் கொடுத்துள்ளார் (கொன்றை மலரின்நிறமாகிய பசலையைக் கொடுத்துள்ளார்.) ஆயின், அவர் மார்பில் தாராக உள்ள மணமாலையைக் கொடுப்பின், பக்கத்தில் இருக்கும் பார்வதி காண்பள்; ஆகலின் அதனைக் கொடுத்தல் இயலாது. இனித் தமது முடியின் கண்ணதாகிய கண்ணியையும் கங்கை ஆண்டிருந்து காண்பாள் ஆகலின் கொடுத்தல் இயலாது. மற்று எங்கிருந்து இப்பசலையாகிய கொன்றையைப் பெற்று இவளுக்கு இவர் கொடுத்தது?

திருப்பேரெயில்

திருப்பேரெயில்

திருப்பேரெயில், திருக்குறுந்தொகை

மறையும் ஓதுவர் மான்மறிக் கையினர்
கறைகொள் கண்ட முடைய கபாலியார்
துறையும் போகுவர் தூயவெண் ணீற்றினர்
பிறையுஞ் சூடுவர் பேரெயி லாளரே. **#152**

பேரெயில் தலத்து இறைவர், மறையை ஓதுவர்; மான்குட்டியை யேந்திய கையினர்; திருநீலகண்டர்; கபாலத்தைக் கொண்ட கையினர்; எத்துறையும் போகுவர்; தூய வெண்ணீற்றினர்; பிறையும் சூடும் இயல்பினராவர்.

திருப்பேரெயில்

கணக்கி லாரையுங் கற்றுவல் லாரையும்
வணங்கி லாநெறி கண்டுகொண் டாரையும்
தணக்கு வார்தணிப் பாரெப் பொருளையும்
பிணக்கு வாரவர் பேரெயி லாளரே. **#153**

பேரெயில் தலத்து இறைவர். கல்லாதவரையும், கற்று வல்லவரையும், வணங்காத நெறியைக் கட்டிப் பேசும் வீணரையும், தணக்கும் இயல்புடையவர்; எப்பொருளையும் தணிப்பவர் (ஒடுக்குவர்); பிணக்கும் இயல்பினரும் ஆவர்.

திருப்பேரெயில்

சொரிவிப் பார்மழை சூழ்கதிர்த் திங்களை
விரிவிப் பார்வெயிற் பட்ட விளங்கொளி
எரிவிப் பார்தணிப் பாரெப் பொருளையும்
பிரிவிப் பாரவர் பேரெயி லாளரே. **#154**

பேரெயில் தலத்து இறைவர், மழை சொரிவிப்பார்; திங்களைச் சூழ்கதிர் விரிவிப்பார்; ஞாயிற்றின் கண் பொருந்தியவிளங்கொளியை எரிவிப்பார்; எப் பொருளையும் தணிவிப்பார், அவற்றைப் பிரிவிக்கும் இயல்பினரும் ஆவர்.

திருப்பேரெயில்

செறுவிப் பார்சிலை யால்மதில் தீர்த்தங்கள்
உறுவிப் பார்பல பத்தர்க ளூழ்வினை
அறுவிப் பாரது வன்றியும் நல்வினை

பெறுவிப் பாரவர் பேரெயி லாளரே. **#155**
பேரெயில் தலத்து இறைவர் மேருமலை வில்லால் முப்புரங்களை அழியச் செய்வார்; தீர்த்தங்களை மிகுவிப்பார்; பல பத்தர்களின் ஊழ்வினை அறுவிப்பார்; அதுவன்றியும் நல்வினை பெறும்படியும் செய்வார்.

திருப்பேரெயில்

மற்றை யாரறி யார்மழு வாளினார்
பற்றி யாட்டியோ ரைந்தலை பாம்பரைச்
சுற்றி யாரவர் தூநெறி யால்மிகு
பெற்றி யாரவர் பேரெயி லாளரே. **#156**
பேரெயில் தலத்து இறைவர் அன்பர்களால் அன்றி மற்றையவரால் அறியப்படாத இயல்புடையவர்; மழுவாளை உடையார்; ஓர் ஐந்தலைப்பாம்பைப் பற்றி ஆட்டி அரையிற் சுற்றியவர்; தூநெறியால் மிகுகின்ற பெற்றியும் உடையவர்.

திருப்பேரெயில்

திருக்கு வார்சூழற் செல்வன சேவடி
இருக்கு வாய்மொழி யால்தனை யேத்துவார்
சுருக்கு வார்துயர் தோற்றங்க ளாற்றறப்
பெருக்கு வாரவர் பேரெயி லாளரே. **#157**
பேரெயில் தலத்து இறைவர், வளைந்த நீண்ட குழலாளை உடைய செல்வராகிய தம்மடியை இருக்குவேதம் முதலிய மெய்ம்மொழிகளால் ஏத்துவார்களின் துயரைச் சுருக்குவார்; அவை தோன்றுகின்ற நெறி அறுமாறு அருளைப் பெருக்குவார்.

திருப்பேரெயில்

முன்னை யார்மயி லூர்தி முருகவேள்
தன்னை யாரெனின் தானோர் தலைமகன்
என்னை யாளுமி றையவ னெம்பிரான்
பின்னை யாரவர் பேரெயி லாளரே. **#158**
பேரெயில் தலத்து இறைவர் எனின் அவர், முன்னே தோன்றியவர்; மயிலை ஊர்தியாக உடைய முருகவேளின் தாதையார், ஒப்பற்ற முதல்வர்; என்னையாளும் இறைவரும் எம்பிரானுமாவர்; புதியரிற் புதியரும் அவரே.

திருப்பேரெயில்

உழைத்துந் துள்ளியு முள்ளத்து ளேயுரு

இழைத்து மெந்தை பிரானென் றிராப்பகல்
அழைக்கு மன்பின ராய அடியவர்
பிழைப்பு நீக்குவர் பேரெயி லாளரே. **#159**

பேரெயில் தலத்து இறைவர், உழைத்தும், துள்ளியும், தம் உள்ளத்துள்ளே உருவத்தை இழைத்தும் எந்தையே! பிரானே! என்று இரவும் பகலும் இடைவிடாது அழைக்கும் அன்பர்கள் இயற்றிய பிழைகளை நீக்கும் தன்மை உடையவராவர்.

திருப்பேரெயில்

நீரு லாநிமிர் புன்சடை யாவெனா
ஏரு லாவநங் கன்திறல் வாட்டிய
வாரு லாவன மென்முலை யாளொடும்
பேரு ளாரவர் பேரெயி லாளரே. **#160**

கங்கை உலாவிய நிமிர்ந்த புன்சடையா என்று போற்றாத அழகு பொருந்திய மன்மதன் திறலைவாட்டிய பெரும்புகழ் உடையவர்; கச்சுப் பொருந்திய அழகிய மென்முலையாளொடும் பேரெயிலில் வீற்றிருந்தவர்.

திருப்பேரெயில்

பாணி யார்படு தம்பெயர்ந் தாடுவர்
தூணி யார்விச யற்கருள் செய்தவர்
மாணி யாய்மண் ணளந்தவன் நான்முகன்
பேணி யாரவர் பேரெயி லாளரே. **#161**

பேரெயில் தலத்து இறைவர், படுதம் என்று கூறப்பெறும் கூத்தைத் தாளம் பொருந்த ஆடுபவர்; அம்பறாத்தூணி உடையவராய் (வேடராய்) வந்து அருச்சுனர்க்கு அருள் செய்தவர்; பிரமசாரியாய் வந்து (வாமனாவதார காலத்து) மண்ணளந்தவனாகிய திருமால் பிரமன் என்போரால் பேணப் பட்ட பெருமை உடையவர்.

திருப்பேரெயில்

மதத்த வாளரக் கன்மணிப் புட்பகம்
சிதைக்க வேதிரு மாமலைக் கீழ்ப்புக்குப்
பதைத்தங் கார்த்தெடுத் தான்பத்து நீண்முடி
பிதக்க வூன்றிய பேரெயி லாளரே. **#162**

பேரெயில் தலத்து இறைவர் செருக்குடைய வாள் அரக்கன் இவர்ந்து வந்த புட்பக விமானத்தைத் திருமலை தடுக்கஉடனே பதைத்து அத்திருமலையின் கீழ்ப்புகுந்து அங்கு ஆர்த்து எடுத்தபோது, அவன் முடிபத்தும் சிதையும் படியாக ஊன்றியவர்.

திருவெண்ணியூர்

திருவெண்ணி

திருவெண்ணியூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வெண்ணிநாயகர்.
தேவியார் : அழகியநாயகியம்மை.

முத்தி னைப்பவ ளத்தை முளைத்தவெம்
தொத்தி னைச்சுட ரைச்சுடர் போலொளிப்
பித்த னைக்கொலும் நஞ்சினை வானவர்
நித்த னைநெரு நற்கண்ட வெண்ணியே. **#163**

முத்தினை, பவளத்தை, முளைத்த எம் பூங்கொத்தினை, சுடரை, சுடர்போல் ஒளி உடைய பித்தனை, கொல்லும் நஞ்சு போல்பவனை, வானவர்க்குள் நித்தனை நேற்றுக்கண்ட வெண்ணித்தலமே இன்று என் உள்ளத்தில் பதிந்திருந்து பேரின்பத்தை மிகுவிப்பது.

திருவெண்ணி

வெண்ணித் தொல்நகர் மேயவெண் திங்களார்
கண்ணித் தொத்த சடையர் கபாலியார்
எண்ணித் தம்மை நினைந்திருந் தேனுக்கு
அண்ணித் திட்டமு தூறுமென் நாவுக்கே. **#164**

வெண்ணியாகிய பழைய நகரத்தை மேவியவரும், வெண்திங்களைச் சூடியவரும், கொன்றைக் கண்ணியை உடைய கொத்தாக உள்ள சடையுடையவரும், கபாலத்தைக் கையில் ஏந்திய வரும், ஆகிய அப்பெருமானை எண்ணி நினைத்திருந்தேனுக்கு அவர் நினைவு என் நாவினில் அண்ணித்து அமுதாக ஊறும்.

திருவெண்ணி

காற்றி னைக்கன லைக்கதிர் மாமணி
நீற்றி னைநினைப் பார்வினை நீக்கிடும்
கூற்றி னையுதைத் திட்ட குணமுடை
வீற்றி னைநெரு நற்கண்ட வெண்ணியே. **#165**

காற்றும் கனலும் ஆவான்; கதிர்விக்கும் மாமணிமேற் சண்ணித்த திருநீறு போன்ற திருமேனியுடையான்; அத்திருமேனியை நினைப்பார் வினையை நீக்குபவன். கூற்றினை உதைத்த குணமுடைய தனிச்சிறப்புடையவன். இப்பெருமானை நேற்றுக் காண்டற்கு இடமாக இருந்த திருவெண்ணியே எனக்கு இதுபோது பேரின்பத்தைப்

பெருக்குவது.

திருவெண்ணி

நல்ல னைத்திகழ் நான்மறை யோதியைச்
சொல்ல னைச்சுட ரைச்சுடர் போலொளிர்
கல்ல னைக்கடி மாமதில் மூன்றெய்த
வில்ல னைநெரு நற்கண்ட வெண்ணியே. **#166**

நல்லவினை, விளங்கும் நால்வேதங்களை ஓதும்பிரானை, சொல்வடிவானவனை, ஒளியை, சுடர்விட்டு ஒளிர்கின்ற திருக்கயிலாயத் திருமலை உடையவனை, திரிபுரம் எரிசெய்த வில்லுடையவனை நேற்றுக்கண்ட வெண்ணியே இன்று எம்மை இது செய்வது.

திருவெண்ணி

சுடரைப் போலொளிர் சுண்ணவெண் ணீற்றனை
அடருஞ் சென்னியில் வைத்த அமுதினைப்
படருஞ் செஞ்சடைப் பான்மதி சூடியை
இடரை நீக்கியை யான்கண்ட வெண்ணியே. **#167**

சுடரைப் போல் ஒளிர்கின்ற வெண்ணீற்றுப் பொடியணிமேனியனை, பூவிதழும் (பிறவும்) சென்னியிலே வைத்த அமுதனையானை, படர்ந்த செஞ்சடையிலே பால் போன்ற மதியைச் சூடியவனை, இடர்கள் நீக்கும் இறைவனை யான் கண்டது வெண்ணித் தலத்திலாகும். சடைநெருங்கிய சென்னியில் அமுது (நீர் - கங்கை) வைத்தவனை - எனினும் அமையும். (வைத்த அமுதினை என்பதைஅருங்கேடன் என்பது போலக் கொள்க)

திருவெண்ணி

பூத நாதனைப் பூம்புக லூரனைத்
தாதெ னத்தவ ழும்மதி சூடியை
நாதனை நல்ல நான்மறை யோதியை
வேத னைநெரு நற்கண்ட வெண்ணியே. **#168**

பூதங்களுக்குத் தலைவனை, பூக்கள் நிறைந்த புகலூரனை, மகரந்தம் போல் தவழும் மதியைச் சூடியவனை, தலைவனை, நான்மறை ஓதியவனை, வேதப்பொருளானவனை நேற்று வெண்ணியிற் கண்டு ஏத்தினேன்.

திருவெண்ணி

ஒருத்தி யையொரு பாகத் தடக்கியும்
பொருத்தி யபுனி தன்புரி புன்சடைக்
கருத்த னைக்கறைக் கண்டனைக் கண்ணுதல்

நிருத்த னைநெரு நற்கண்ட வெண்ணியே. **#169**
ஒருத்தியை ஒருபாகத்தில் அடக்கியும், மற்றொருத்தியைப் புன்சடையிற் பொருத்திய புனிதனை, கருத்துள் இருப்பவனை, திருநீலகண்டனை, கண்ணுதலானை, நிருத்தம் ஆடுவானை, நேற்று வெண்ணியிற்கண்டு ஏத்தினேன்.

திருவெண்ணி

சடைய னைச்சரி கோவண ஆடைகொண்
டுடைய னையுணர் வார்வினை தீர்த்திடும்
படைய னைமழு வாளொடு பாய்தரும்
விடைய னைநெரு நற்கண்ட வெண்ணியே. **#170**
சடை உடையவனை, சரியும் கோவண ஆடை கொண்டு உடையவனை, உணர்வார் வினைதீர்த்திடும் மழுவாளொடு பிறவும் படை உடையவனை, பாய்ந்து செல்லும் விடை உடையவனை நேற்று வெண்ணியிற் கண்டு ஏத்தினேன்.

திருவெண்ணி

பொருப்ப னைப்புன லாளொடு புன்சடை
அருப்ப னையிளந் திங்களங் கண்ணியான்
பருப்ப தம்பர வித்தொழுந் தொண்டர்கள்
விருப்ப னைநெரு நற்கண்ட வெண்ணியே. **#171**
திருக்கயிலாயப் பொருப்புக்குரியவனை, கங்கையாளைச் சடையிற் கொண்டவனை, அரும்பு போன்ற இளந்திங்களைக் கண்ணியாகக் கொண்டவனை, திருக்கயிலாயத்தைப் பரவிவாழ்த்தும் தொண்டர்கள் விருப்பத்துக்குரியவனை நேற்றுக் கண்டு வெண்ணியில் ஏத்தினேன்.

திருவெண்ணி

சூல வஞ்சனை வல்லவெஞ் சுந்தரன்
கோல மாஅருள் செய்ததோர் கொள்கையான்
காலன் அஞ்ச வுதைத்திருள் கண்டமாம்
வேலை நஞ்சனைக் கண்டது வெண்ணியே. **#172**
வஞ்சிப்பார் வஞ்சனையைக் களையவல்ல எமது அழகன்; திருமேனிகாட்டி அருள்செய்த கொள்கையினை உடையான்; காலன் அஞ்சும்படி உதைத்தவன்; கண்டம் இருளும்படி செய்த கடல் நஞ்சினை உண்டு அமரர்களை உயிர் வாழச்செய்தவன். இப்பெருமானை நெருநல்கண்ட இடம் திருவெண்ணியூரே ஆம்.

திருவெண்ணி

இலையி னார்கொன்றை சூடிய ஈசனார்
மலையி னாலரக் கன்திறல் வாட்டினார்
சிலையி னால்மதி லெய்தவன் வெண்ணியைத்
தலையி னால்தொழு வார்வினை தாவுமே. **#173**
இலைகளுடன் கூடிய கொன்றை சூடிய ஈசனார் மலையினால் அரக்கன்
ஆற்றலை வாட்டினார். வில்லினால் முப்புரங்களை எய்தவர்க்குரிய
வெண்ணியைத் தலையினால் தொழுவார்களது வினை நீங்கும்.

திருக்கடம்பந்துறை

திருக்கடம்பந்துறை, திருக்குறுந்தொகை

முற்றிலாமுலை யாளிவ ளாகிலும்
அற்றந் தீர்க்கு மறிவில ளாகிலும்
கற்றைச் செஞ்சடை யான்கடம் பந்துறைப்
பெற்றம் ஊர்தியென் றாளெங்கள் பேதையே. **#174**

எங்கள் பேதையாகிய இவள் முற்றாத இளமுலை உடையாள் ஆயினும், அற்றந் தீர்க்கும் அறிவில்லாதவள் ஆயினும், கற்றைச் செஞ்சடையானாகிய கடம்பந்துறைப் பெருமான் இவர்ந்து வரும் ஊர்தி இடபம் என்று கூறுகின்றாள். (செவிலி கூற்று).

திருக்கடம்பந்துறை

தனகி ருந்ததொர் தன்மைய ராகிலும்
முனகு தீரத் தொழுதெழு மின்களோ
கனகப் புன்சடை யான்கடம் பந்துறை
நினைய வல்லவர் நீள்விசும் பாள்வரே. **#175**

நீங்கள் உள்ளக்களிப்பு மிக்கு உடையீராயினும். நுமது இழிவு நீங்குதற்கு முதல்வனைத் தொழுமின்கள்; கனகப் பொன்சடையான் வீற்றிருக்கும் கடம்பந்துறையை நினையும் வல்லமை பெற்றவர் விசும்பு ஆள்வர் ஆதலால்.

திருக்கடம்பந்துறை

ஆரி யந்தமி ழோடிசை யானவன்
கூரி யகுணத் தார்குறி நின்றவன்
காரி கையுடை யான்கடம் பந்துறைச்
சீரி யல்பத்தர் சென்றடை மின்களே. **#176**

பெருமை மிக்க நல்லியல்புகள் பொருந்திய அன்பர்களே! ஆரியமும், தமிழும், இசையும் ஆனவனும் மிக்க குணத்தார் குறியாக நின்றவனும் ஒருபாற் பார்வதிதேவியாரை உடையவனுமாகிய பெருமான் வீற்றிருக்கும் கடம்பந்துறை சென்றடைவீர்களாக.

திருக்கடம்பந்துறை

பண்ணின் இன்மொழி கேட்கும் பரமனை
வண்ண நன்மல ரான்பல தேவரும்
கண்ண னும்மறி யான்கடம் பந்துறை

நண்ண நம்வினை யாயின நாசமே. #177
பண்ணின் இன்மொழி கேட்கும் விருப்புடைய பரமனும், நான்முகனும், தேவர்களும், திருமாலும், அறியப்படாதவனுமாகிய பெருமான் வீற்றிருக்கும் கடம்பந்துறையை நண்ணினால், நம்வினைகளாயவை நாசமாம்.

திருக்கடம்பந்துறை

மறைகொண் டம்மனத் தானை மனத்துளே
நிறைகொண் டந்நெஞ்சி னுள்ளூற வைம்மினோ
கறைகண் டன்னுறை யுங்கடம் பந்துறை
சிறைகொண் டவ்வினை தீரத் தொழுமினே. #178
உபதேசப் பொருளைக் கொண்ட மனத்தே விளங்கித் தோன்றும் முதல்வனை ஒரு நெறிப்பட்ட நெஞ்சின் உள்ளூற வைப்பீர்களாக; திருநீலகண்டன் உறையும் கடம்பந்துறையை நுமது அறிவைக் கட்டுப்படுத்தும் இருவினை தீரத் தொழுவீர்களாக.

திருக்கடம்பந்துறை

நங்கை பாகம்வைத் தந்நறுஞ் சோதியைப்
பங்க மின்றிப் பணிந்தெழு மின்களோ
கங்கைச் செஞ்சடை யான்கடம் பந்துறை
அங்க மோதி யரனுறை கின்றதே. #179
கங்கையைச் செஞ்சடையில் வைத்த பெருமானும் ஆறங்கங்களை ஓதியோரும் ஆகிய இறைவர் உறைகின்றது கடம்பந்துறையாதலால் நங்கையை ஒருபாகம் வைத்த அந்த ஒளியுருவை அவ்விடத்துக் கேடின்றிப் பணிந்தெழுவீர்களாக.

திருக்கடம்பந்துறை

அரிய நான்மறை யாறங்க மாயைந்து
புரியன்தேவர்க ளேத்தநஞ் சுண்டவன்
கரிய கண்டத்தி னான்கடம் பந்துறை
உரிய வாறு நினைமட நெஞ்சமே. #180
அறியாமை உடைய நெஞ்சமே! அரிய நான் மறைகளாய் உள்ளவனும், அன்னமயகோசம் முதலிய ஐங்கோசங்களாகப் பேசப்பட்டவனும், தேவர்கள் வேண்ட நஞ்சுண்டவனும், அதனாற்கறுத்த கண்டத்தினானுமாகிய பெருமான் உறைகின்ற கடம்பந்துறையை விதிமுறைப்படி நினைப்பாயாக.

திருக்கடம்பந்துறை

பூமென் கோதை யுமையொரு பாகனை
ஓமஞ் செய்தும் உணர்மின்க ளுள்ளத்தால்
காமற் காய்ந்த பிரான்கடம் பந்துறை
நாம மேத்தநம் தீவினை நாசமே. **#181**

பூவணிந்த மென்கோதை உடையவளாகிய உமையை ஒருபாகத்தில் உடையவனை வேள்விகள் செய்தும், உள்ளத்தால் உணர்வீர்களாக! மன்மதனைச் சினந்த பெருமான் உறையும் கடம்பந்துறையில் அத்திருநாமம் ஏத்த நம் தீவினைகள் நாசமாம்.

<u>திருக்கடம்பந்துறை</u>

பார ணங்கி வணங்கிப் பணிசெய
நார ணன்பிர மன்னறி யாததோர்
கார ணன்கடம் பந்துறை மேவிய
ஆர ணங்கொரு பாலுடை மைந்தனே. **#182**

திருமாலும் பிரமனும் உலகில் விரும்பி வணங்கிப் பணிசெய்ய அறியாது தேடி இளைத்தற்குக் காரணனாக இருந்தவன் கடம்பந்துறை மேவியவனும், ஆரணங்கை ஒருபால் உடையவனுமாகிய புலன்களைந்தும் வென்ற பெரு வீரனாகிய இறைவனே.

<u>திருக்கடம்பந்துறை</u>

நூலால் நன்றா நினைமின்கள் நோய்கெடப்
பாலா னைந்துட னாடும் பரமனார்
காலா லூன்றுகந் தான்கடம் பந்துறை
மேலா னாஞ்செய்த வல்வினை வீடுமே. **#183**

பாலோடு கூடிய ஆனைந்தும் ஆடும் பரமனும், அரக்கனைக் காலால் ஊன்றி உகந்த பெருமானும் ஆகிய இறைவனைக் கடம்பந்துறையிற் சென்று வழிபட்டால், நாம் செய்த மேலை வல்வினைகள் கெடும். ஆதலால், துன்பங்கெடும் படியாக நூல் அறிவால் நன்றாக நினைத்து வழிபடுவீர்களாக. (நூல் அறிவு - சிவாகம உணர்வு.)

திருக்கடம்பூர்

திருக்கடம்பூர்

திருக்கடம்பூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அமுதகடேசுவரர்.
தேவியார் : சோதிமின்னம்மை.

தளருங் கோளர வத்தொடு தண்மதி
வளருங் கோல வளர்சடை யார்க்கிடம்
கிளரும் பேரிசைக் கின்னரம் பாட்டறாக்
களருங் கார்க்கடம் பூர்க்கரக் கோயிலே. **#184**

தளருகின்ற கொள்ளுதல் தப்பாத பாம்பினோடு, குளிர்ந்த பிறைமதி வளரும் அழகு வளர்கின்ற சடையாராகிய சிவபெருமானுக்கு இடம், பேரிசை கிளர்கின்ற கின்னரங்களின் பாட்டு அறாத, கரிய கடம்பு நிறைந்த ஊரில் திருக்கரக் கோயிலே.

திருக்கடம்பூர்

வெலவ லான்புல னைந்தொடு வேதமும்
சொலவ லான்சுழ லூந்தடு மாற்றமும்
அலவ லான்மனை யார்ந்தமென் தோளியைக்
கலவ லான்கடம் பூர்க்கரக் கோயிலே. **#185**

கடம்பூர்த் திருக்கரக் கோயிலின்கண் வீற்றிருக்கும் இறைவன் புலன் ஐந்தினை வெல்ல வல்லமை உடையவன்; வேதமும் சொல்லவல்லவன்; சுழல்கின்ற தடுமாற்றமும் நீக்க வல்லவன்: மனையார்ந்த மங்கையாகிய மென்றோளுடைய உமாதேவியாரைக் கலத்தல் வல்லவன்.

திருக்கடம்பூர்

பொய்தொ ழாது புலியுரி யோன்பணி
செய்தெ ழாவெழு வார்பணி செய்தெழா
வைதெ ழாதெழு வாரவ ரெளகநீர்
கைதொ ழாவெழு மின்கரக் கோயிலே. **#186**

உலகப் பொருள்களில் பற்றுச் செய்யாது புலியின் தோலை உடுத்தோனாகிய சிவபிரான் பணியைச் செய்து, அவ்வாறு எழுவார் பணியினையும் உடன்செய்து கரக்கோயிலைக் கைதொழுது வணங்கி உயர்வீராக! வைதொழாது எழுவார் எள்ளினால் எள்ளட்டும்.

திருக்கடம்பூர்

துண்ணெ னாமனத் தால்தொழு நெஞ்சமே
பண்ணி னால்முனம் பாட லதுசெய்தே
எண்ணி லாரெயில் மூன்று மெரித்தமுக்
கண்ணி னான்கடம் பூர்க்கரக் கோயிலே. **#187**
நல்ல எண்ணமில்லாதாரது முப்புரம் எரித்த முக்கண்ணனானது கடம்பூர்க் கரக்கோயிலை, பண்ணினால் திருமுன்பு பாடல் பரவி அச்சமின்றி நெஞ்சமே தொழுவாயாக!

திருக்கடம்பூர்

சுனையுள் நீல மலரன கண்டத்தன்
புனையும் பொன்னிறக் கொன்றை புரிசடைக்
கனையும் பைங்கழ லான்கரக் கோயிலை
நினையு முள்ளத் தவர்வினை நீங்குமே. **#188**
சுனையுள் பூத்த நீலமலர் போன்ற கண்டத்தனும், புனையும் பொன்னிறக் கொன்றையுடைய புரிசடையும் ஒலிக்கின்ற கழலும் உடையவனுமாகிய கரக்கோயிற் பெருமானை நினையும் உள்ளத்தவர் வினைகள் நீங்கும்.

திருக்கடம்பூர்

குணங்கள் சொல்லியுங் குற்றங்கள் பேசியும்
வணங்கி வாழ்த்துவ ரன்புடை யாரெலாம்
வணங்கி வான்மலர் கொண்டடி வைகலும்
கணங்கள் போற்றிசைக் குங்கரக் கோயிலே. **#189**
அன்புடையாரெலாம் குணங்கள் சொல்லியும் குற்றங்கள் பேசியும் வணங்கி வாழ்த்துவதும், கணங்கள் வணங்கிவான்மலர் கொண்டு வைகலும் அடி போற்றிசைப்பதும் கரக்கோயில் தலத்திலாகும்.

திருக்கடம்பூர்

பண்ணி னார்மறை பல்பல பூசனை
மண்ணி னார்செய்வ தன்றியும் வைகலும்
விண்ணி னார்கள் வியக்கப் படுவன
கண்ணி னார்கடம் பூர்க்கரக் கோயிலே. **#190**
திருக்கடம்பூர்க் கரக்கோயில் பண்ணினைப் பொருந்திய மறையோதிப் பல்பூசனைகளை மண்ணினுள்ளார் செய்வதன்றியும் நாள்தோறும் விண்ணினுள்ளாரும் வியக்கப்படும் பூசனைகள் செய்யக்கருதினர்.

திருக்கடம்பூர்

அங்கை ஆரழ லேந்திநின் றாடலன்
மங்கை பாட மகிழ்ந்துடன் வார்சடைக்

கங்கை யானுறை யுங்கரக் கோயிலைத்
தங்கை யால்தொழு வார்வினை சாயுமே. **#191**
உமையம்மை உடனிருந்து மகிழ்ந்து பாட அங்கையில் அழல் ஏந்தி நின்று ஆடல் புரிபவன், ஆய கங்கையுறையும் சடையான் வீற்றிருக்கும் கரக்கோயிலைத் தம்கையால் தொழுவாருடைய வினைகள் வலியற்றுக்கெடும்.

திருக்கடம்பூர்

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே. **#192**
கடம்பமாலை சூடிய நம் முருகனைப் பெற்ற உமாதேவியினைப் பங்கில் உடையவனாகிய தென் கடம்பைத் திருக்கரக்கோயிலான் தன் கடன் அடியேன் போன்றாரைத் தாங்குதல்; என் போன்றார் கடன் பணிசெய்து தற்போதம் இன்றியே இருத்தல்.

திருக்கடம்பூர்

பணங்கொள் பாற்கடல் பாம்பணை யானொடும்
மணங்க மழ்மலர்த் தாமரை யானவன்
பிணங்கும் பேராழ லெம்பெரு மாற்கிடம்
கணங்கள் போற்றிசைக் குங்கரக் கோயிலே. **#193**
பாற்கடலில் கிடக்கும் படம்கொண்ட பாம்பு அணையானாகிய திருமாலும் மணம் கமழ் மலர்த்தாமரையானாகியபிரமனும் தம்மில் மாறுபட்ட போது பேரழலாய் நிமிர்ந்த எம்பெருமானுக்கு இடம், கணங்கள் போற்றிசைக்கும் கரக்கோயிலாகும்.

திருக்கடம்பூர்

வரைக்கண் நாலஞ்சு தோளுடை யான்தலை
அரைக்க வூன்றி யருள்செய்த ஈசனார்
திரைக்குந் தண்புனல் சூழ்கரக் கோயிலை
உரைக்கு முள்ளத் தவர்வினை யோயுமே. **#194**
திருக்கயிலாயத் திருமலைக்கண் இருபது தோளுடைய இராவணன் தலைகள் அரைபடும்படி ஊன்றிப் பின்னர் அருள்புரிந்த ஈசனார் வீற்றிருக்கும், அலைவீசும் குளிர் புனல் சூழ்கரக்கோயிலைக் கூறும் உள்ளத்தவர் வினைகள் ஓயும்.

திருக்கடம்பூர்

திருக்கடம்பூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அமுதகடேசுவரர்.
தேவியார் : சோதிமின்னம்மை.

ஒருவ ராயிரு மூவரு மாயவன்
குருவ தாய குழக னுறைவிடம்
பருவ ரால்குதி கொள்ளும் பழனஞ்சூழ்
கருவ தாங்கடம் பூர்க்கரக் கோயிலே. **#195**

ஒருவராய், இருவராய், மூவராய் நிற்பவனும் குருவடிவுமாகிய குழகன் உறைவிடம், பருத்த வரால் மீன்கள் குதித்தலைக் கொள்ளும் பழனங்கள் சூழ்ந்த இடமாகிய கடம்பூர்க்கரக்கோயிலே.

திருக்கடம்பூர்

வன்னி மத்தம் வளரிளந் திங்களோர்
கன்னி யாளைக் கதிர்முடி வைத்தவன்
பொன்னின் மல்கு புணர்முலை யாளொடும்
மன்னி னான்கடம் பூர்க்கரக் கோயிலே. **#196**

வன்னியும், ஊமத்தமலரும், வளர் இளந்திங்களும், கங்கையும் ஆகியவற்றைக் கதிர்விரிக்கும் முடியில் வைத்தவன், பொன்னின் நிறைந்து புணர்முலையாளாகிய உமாதேவியோடும் கடம்பூர்க் கரக்கோயிலில் நிலைபெற்றவன் ஆவன். (எல்லாம் வல்ல முதல்வன் உயிர்களுக்குப் போகம் உதவுதற்குப் போகியாய் இருந்தருள்கின்றான் என்பது கருத்து.)

திருக்கடம்பூர்

இல்லக் கோலமு மிந்த இளமையும்
அல்லற் கோல மறுத்துய வல்லிரே
ஒல்லைச் சென்றடை யுங்கடம் பூர்நகர்ச்
செல்வக் கோயில் திருக்கரக் கோயிலே. **#197**

இல்லத்திற்கொள்ளும் கோலங்களும், இந்த இளமையுமாகிய அல்லற் கோலங்களை அறுத்துஉய்ய வல்லமை உடையீராவீர்; அதற்குக் கடம்பூர்நகர்ச் செல்வக் கோயிலாகிய கரக்கோயிலை விரைந்து சென்று அடைந்து தொழுவீர்களாக.

திருக்கடம்பூர்

வேறுசிந்தை யிலாதவர் தீவினை
கூறு செய்த குழக னுறைவிடம்
ஏறு செல்வத் திமையவர் தாந்தொழும்

ஆறு சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. #198
தம்மைப்பற்றியன்றி வேறு சிந்தனை இல்லாதவர்களது தீவினைகளைக் கூறு செய்யும் குழகன் உறைவிடம், செல்வம் ஏறுகின்ற தேவர்கள் தொழுகின்ற ஆறு சேர்ந்த கடம்பூர்க் கரக்கோயிலாகும்.

திருக்கடம்பூர்

திங்கள் தங்கிய செஞ்சடை மேலுமோர்
மங்கை தங்கும் மணாள னிருப்பிடம்
பொங்கு சேர்மணற் புன்னையும் ஞாழலும்
தெங்கு சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. #199

இடப்பாகத்தே பார்வதியைக் கொண்டதன்றி, திங்கள் பொருந்திய செஞ்சடை மேலும் ஒரு மங்கை தங்கும் மணாளன் இருப்பிடம், மணல் நிறைந்த பகுதியில் புன்னையும், புலிநகக் கொன்றையும், தென்னையும் சேர்ந்த கடம்பூர்க் கரக்கோயிலாகும்.

திருக்கடம்பூர்

மல்லை ஞாலத்து வாழு முயிர்க்கெலாம்
எல்லை யான பிரானா ரிருப்பிடம்
கொல்லை முல்லை கொழுந்தகை மல்லிகை
நல்ல சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. #200

வளம் பொருந்திய உலகத்து வாழும் உயிர்கட்கெல்லாம் எல்லையாகிய தலைவர் இருப்பிடம், முல்லை, கொழுத்த மல்லிகை ஆகிய நல்ல மலர்கள் சேர்ந்த கடம்பூர்க் கரக்கோயிலாகும்.

திருக்கடம்பூர்

தளரும் வாளர வத்தொடு தண்மதி
வளரும் பொற்சடை யாற்கிட மாவது
கிளரும் பேரொலி கின்னரம் பாட்டறாக்
களரி யார்கடம் பூர்க்கரக் கோயிலே. #201

நெகிழும் இயல்புடைய ஒளிபொருந்திய அரவத்தொடு, தண்மதி வளர்கின்ற பொன்னிறம் உடைய சடையார்க்கு இடமாவது, கிளர்கின்ற பேரொலி உடைய கின்னரம் பாட்டறாத களர் நிலத்தைச் சேர்ந்த கடம்பூர்க் கரக்கோயிலாகும்.

திருக்கடம்பூர்

உற்றா ராயுற வாகி யுயிர்க்கெலாம்
பெற்றா ராய பிரானா ருறைவிடம்
முற்றார் மும்மதி லெய்த முதல்வனார்

கற்றார் சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. **#202**
உற்றாராய், உறவாகி உயிர்க்கெலாம் ஈன்றாராகிய தலைவர் அறிவிற்
குறைபாடுடைய முப்புராதிகளின் எயில்களை எய்தமுதல்வனார்
உறைவிடம் கற்றார்கள், வாழும் கடம்பூர்க் கரக் கோயிலாகும்.

திருக்கடம்பூர்

வெள்ளை நீறணி மேனிய வர்க்கெலாம்
உள்ள மாய பிரானா ருறைவிடம்
பிள்ளை வெண்பிறை சூடிய சென்னியான்
கள்வன் சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. **#203**
திருநீறணிந்த மேனியவர்க்கெல்லாம் உள்ளத்தில் விளங்கும்
தலைவனும் வெண்பிறை சூடிய சென்னியானும் ஆகிய பெருமான்
உறைவிடம் கடம்பூரில் உள்ள கள்வன்சேர்ந்த கரக்கோயிலாகும்.

திருக்கடம்பூர்

பரப்பு நீரிலங் கைக்கிறை வன்அவன்
உரத்தி னாலடுக் கல்எடுக் கல்லுற
இரக்க மின்றி யிறைவிர லாற்றலை
அரக்கி னான்கடம் பூர்க்கரக் கோயிலே. **#204**
நீர்ப்பரப்புச் சூழ்ந்த இலங்கைக்குத் தலைவனாகிய இராவணன் தன்
ஆற்றலினால் திருக்கயிலையை எடுக்கத் தொடங்க இரக்கமின்றிச்
சிறிது விரலாற்றலையினை அரக்கினவன் இடம் கடம்பூர்க்கரக்கோயில்.

திருவின்னம்பர்

திருஇன்னம்பர்

திருவின்னம்பர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : எழுத்தறிந்தவீசுவரர்.
தேவியார் : கொந்தார்பூங்குழலம்மை.

என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யானொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே. **#205**

என்னைவிட எனக்கு யாரும் இனியவர் இல்லை; ஆயினும் என்னைவிட இனியவன் ஒருவன் உள்ளான்; என்னுள்ளே உயிர்ப்பாகப் புறம் போந்தும் புக்கும் என்னுள்ளே நிற்கும் இன்னம்பர் ஈசனே அவன்.

திருஇன்னம்பர்

மட்டுண் பார்கள் மடந்தையர் வாட்கண்ணா
கட்டுண் பார்கள் கருதுவ தென்கொலோ
தட்டி முட்டித் தள்ளாடித் தழுக்குழி
எட்டு மூர்த்திய ரின்னம்ப ரீசனே. **#206**

கள்ளுண்பவர்களும், பெண்கள் வாட் கண்ணால் கட்டுண்பவர்களும் கருதுவது எதனை? தட்டி முட்டித் தள்ளாடிவிழும்போது துணையாவார் எட்டு மூர்த்தியாகிய இன்னம்பர் ஈசனல்லனோ?

திருஇன்னம்பர்

கனலுங் கண்ணியுந் தண்மதி யோடுடன்
புனலுங் கொன்றையுஞ் சூடும் புரிசடை
அனலுஞ் சூலமும் மான்மறிக் கையினர்
எனலு மென்மனத் தின்னம்ப ரீசனே. **#207**

கண்ணியும் கொன்றையும், தண்மதியோடு கங்கையும் சூடும் முறுக்குண்ட சடையர், அனல், சூலம், மான் மறி கூடிய கையை உடையவர், என்று சொன்னவுடன் அவ்இன்னம்பர் ஈசன் என்மனத்தே வெளிப்பட்டொளிரும்.

திருஇன்னம்பர்

மழைக்கண் மாமயி லாலு மகிழ்ச்சியான்
அழைக்குந் தன்னடி யார்கள்த மன்பினைக்

குழைக்குந் தன்னைக் குறிக்கொள வேண்டியே
இழைக்கு மென்மனத் தின்னம்ப ரீசனே. **#208**
மழைக்காலத்தில் கரிய மயில்கள் ஆரவாரிக்கும் மகிழ்ச்சியைப் போன்று மகிழ்ந்து அழைக்கும் தன்னடியார்களின்அன்பினைத் தன்பாற் குறிக்கொள்ள வேண்டிக் குழைக்கும் பெருமை உடையவன் என்மனத்து இழைக்கும் இன்னம்பர் ஈசனாவன்.

திருஇன்னம்பர்

தென்ன வன்னெனை யாளுஞ் சிவனவன்
மன்ன வன்மதி யம்மறை யோதியான்
முன்ன மன்னவன் சேர்வன பூழியான்
இன்னம் இன்புற்ற வின்னம்ப ரீசனே. **#209**
தென்னவனும், எனையாளும் சிவனும், மன்னவனும், மதித்தற்குரிய அழகிய மறைகளை ஓதியவனும், உலகத்தோற்றத்திற்கு முன்னரே நிலைத்திருந்தவனும், ஊழியிடத்துச் சேரும் திருநீற்றினை அணிந்தவனும் ஆகிய பெருமான் சூரியன் வழிபட்டு இன்புற்ற இன்னம்பரில் எழுந்தருளியுள்ள ஈசனாவான்.

திருஇன்னம்பர்

விளக்கும் வேறு படப்பிற ருள்ளத்தில்
அளக்குந் தன்னடி யார்மனத் தன்பினைக்
குளக்கு மென்னைக் குறிக்கொள வேண்டியே
இளக்கு மென்மனத் தின்னம்ப ரீசனே. **#210**
அடியவரல்லாத பிறர் உள்ளத்தில் தன்னை வேறுபடத் தோற்றுபவனும், தன்னடியார் மனத்து அன்பினைஅளப்பவனும். தொடர்பு கொள்ளும் என்னைக் குறிக்கொளவேண்டி என் மனத்தினின்று உருகச் செய்பவனும் இன்னம்பர் ஈசனேயாவன்.

திருஇன்னம்பர்

சடைக்க ணாள்புன லாள்அனல் கையதோர்
கடைக்க ணால்மங்கை நோக்கிம வான்மகள்
படைக்க ணால்பரு கப்படு வான்நமக்
கிடைக்க ணாய்நின்ற வின்னம்ப ரீசனே. **#211**
கங்கையாள் சடைக்கண் உள்ளாள்; அவன் கையது அனல். அக்கங்கையாகிய மங்கை ஒரு கடைக்கண்ணால் நோக்க, இமவான் மகளாம் பார்வதி தனது படையனைய கண்களால் அழகைப் பருகநிற்பவன்; நமக்கு துன்பக் காலத்துப் பற்றக்கோடாய் நின்ற இன்னம்பர் ஈசன்.

திருஇன்னம்பர்

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்
றழுது காமுற் றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே. **#212**

தூமலர்களைத் தூவித் தொழுது, துதித்து, நின்று அழுது விருப்புற்று அரற்றுகின்ற மெய்யன்பர்களையும், வாளாபொழுதுபோக்கிப் புறக்கணிப்பார்களையும் கீழ்க்கணக்கெழுதும் இறைவன் இன்னம்பரில் உறையும் ஈசனேயாவன்.

திருஇன்னம்பர்

விரியுந் தண்ணிள வேனிலில் வெண்பிறை
புரியுங் காமனை வேவப் புருவமும்
திரியு மெல்லையில் மும்மதில் தீயெழுந்
தெரிய நோக்கிய வின்னம்ப ரீசனே. **#213**

வெள்ளிய பிறைமதி தோன்றும் குளிர்ந்த இளவேனிற் காலத்திலே காமத்தை விளைக்கும் மன்மதன் வெந்தழியும்படி புருவநெரித்தவன்,நெறிகடந்த மும்மதில் தீயெழுந்தெரியுமாறு நோக்கிய இன்னம்பர் ஈசனே.

திருஇன்னம்பர்

சனியும் வெள்ளியுந் திங்களும் ஞாயிறும்
முனிவ னாய்முடி பத்துடை யான்றனைக்
கனிய வூன்றிய காரண மென்கொலோ
இனிய னாய்நின்ற வின்னம்ப ரீசனே. **#214**

நமக்கு இனியவனாய் நின்ற இன்னம்பர் ஈசனே! சனியும், ஞாயிறும், வெள்ளியும், திங்களுமாகிய கோள்களைமுனிபவனாகிய பத்துத்தலையுடைய இராவணனைக் கனியுமாறு திருவிரலால் ஊன்றிய இன்னாமைக் காரணம் என்னையோ?

திருக்குடமூக்கு

திருக்குடமூக்கு

திருக்குடமூக்கு, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கும்பேசுவரர்.
தேவியார் : மங்களநாயகியம்மை.

பூவ ணத்தவன் புண்ணிய னண்ணியங்
காவ ணத்துடை யானடி யார்களைத்
தீவ ணத்திரு நீறுமெய் பூசியோர்
கோவ ணத்துடை யான்குட மூக்கிலே. **#215**

குடமூக்கிலே உள்ள பெருமான், பூவின் வண்ணத்தை உடையவன், புண்ணியமே வடிவானவன், அடியார்கள் ஆகும் வண்ணம் நண்ணி யருள்புரிந்து அடிமைச் சீட்டெழுதி ஆட்கொள்பவன், தீயின் நிறத்தை உடைய செம்மேனியில் திருநீறு பூசியவன், கோவண ஆடை உடையவன்.

திருக்குடமூக்கு

பூத்தா டிக்கழி யாதேநீர் பூமியீர்
தீத்தா டித்திறஞ் சிந்தையுள் வைம்மினோ
வேர்த்தா டுங்காளி தன்விசை தீர்கென்று
கூத்தா டிய்யுறை யுங்குட மூக்கிலே. **#216**

உலகில் உள்ளவர்களே! நீர் பிறந்து வாளா திரிந்து இறந்து போகாமல், எல்லா உலகங்களையும் எரித்து சர்வசங்கார காலத்தில் ஆடும் இறைவனின் திறத்தைச் சிந்தையுள் இருத்துவீராக! வேர்வை தோன்றுமாறு விரைந்து ஆடிய காளியின் ஆடலை வெல்லுமாறு கூத்து ஆடிய பெருமான் குடமூக்கில் உறைபவன் ஆவான்.

திருக்குடமூக்கு

நங்கை யாளுமை யாளுறை நாதனார்
அங்கை யாளொ டறுபதந் தாழ்சடைக்
கங்கை யாளவள் கன்னி யெனப்படும்
கொங்கை யாளுறை யுங்குட மூக்கிலே. **#217**

உமைநங்கையாளை ஒரு பாகத்திற்கொண்ட தலைவர். அங்கையாளொடு வண்டு தாழ்சடையினளாகிய கங்கையாளும், உறையும் குடமூக்கில் காவிரியுமாகிய தீர்த்தச் சிறப்புக்கள் உள்ளன.

திருக்குடமூக்கு

ஓதா நாவன் திறத்தை யுரைத்திரேல்
ஏதா னும்மினி தாகும் மியமுனை
சேதா ஏறுபடை யானமர்ந் தவிடம்
கோதா விரியுறை யுங்குட மூக்கிலே. **#218**

ஓதாதே உணர்ந்த முதல்வன் திறத்தை எவ்வளவேனும் கூறினால் இனிதாகும்; யமுனையும் கோதாவிரியும் தீர்த்தங்களாகப் பொருந்திய குடமூக்கே சிவந்த ஆனேறுடையானாகிய சிவபிரான் உறையும் இடம்.

<u>திருக்குடமூக்கு</u>

நக்க ரையனை நாடொறும் நன்னெஞ்சே
வக்க ரையுறை வானை வணங்குநீ
அக்க ரையோ டரவரை யார்த்தவன்
கொக்க ரையுடை யான்குட மூக்கிலே. **#219**

நல்ல நெஞ்சே! நீ, திக்குகளையே ஆடையாக உடைய தலைவனும் வக்கரையென்னும் திருத்தலத்து உறைவானும் ஆகிய இறைவனை வணங்குவாயாக! அக்கு மாலையினையும், அரவினையும் அரையில் கட்டியவனும், கொக்கரையென்னும் பாடலையும் கூத்தயும் உடையவனுமாகிய பெருமான் குடமூக்கிலே உள்ளான்.

<u>திருக்குடமூக்கு</u>

துறவி நெஞ்சின ராகிய தொண்டர்காள்
பிறவி நீங்கப் பிதற்றுமின் பித்தராய்
மறவனாய்ப் பார்த்தன் மேற்கணை தொட்டவெம்
குறவ னாருறை யுங்குட மூக்கிலே. **#220**

பற்றுக்களைத் துறக்கும் நெஞ்சுடையவர்களாகிய தொண்டர்களே! மறவனாகிய பார்த்தன்மேற் கணைதொடுத்த எம்குறவேடம் கொண்ட பெருமானும், குடமூக்கில் உறைபவனுமாகிய இறைவனை உமது பிறவி நீங்குமாறு பித்தராய் நின்று பிதற்றுவீர்களாக.

<u>திருக்குடமூக்கு</u>

தொண்ட ராகித் தொழுது பணிமினோ
பண்டை வல்வினை பற்றற வேண்டுவீர்
விண்ட வர்புரம் மூன்றொரு மாத்திரைக்
கொண்ட வன்னுறை யுங்குட மூக்கிலே. **#221**

பழையதாகிய வலிய வினைகளாம் பற்று அற வேண்டுவோரே! பகைவராகி யெதிர்ந்த முப்புராதிகளது மூன்று நகரங்களையும் ஒரு மாத்திரைப் போதில் எரியுண்ணக் கொண்டவன் உறையும் குடமூக்கில், தொண்டராகித் தொழுது பணிவீர்களாக!

திருக்குடமூக்கு

காமி யஞ்செய்து காலங் கழியாதே
ஓமியஞ் செய்தங் குள்ளத் துணர்மினோ
சாமி யோடு சரச்சு வதியவள்
கோமி யும்முறை யுங்குட மூக்கிலே. **#222**

பயன் கருதிய செயல்களையே வாளா செய்து காலம் கழிக்காமல் வேள்விகள் பல செய்து, தன் கணவனாகிய பிரமனோடு சரசுவதியும் கோமி (கோதாவரி)யும், உறையும் குடமூக்கிற் பெருமானை, உள்ளத்தே உணர்வீர்களாக!

திருக்குடமூக்கு

சிரமஞ் செய்து சிவனுக்குப் பத்தராய்ப்
பரம னைப்பல நாளும் பயிற்றுமின்
பிரமன் மாலொடு மற்றொழிந் தார்க்கெலாம்
குரவ னாருறை யுங்குட மூக்கிலே. **#223**

பிரமன், திருமால் முதலிய தேவர்க்கெல்லாம் பரம ஞானாசாரியனாக விளங்கும் பரமன் உறையும் குடமூக்கில், பல நாளும் பயின்று சிவனுக்குப் பக்தர்களாக முயற்சி செய்து வாழ்வீர்களாக.

திருக்குடமூக்கு

அன்று தானரக் கன்கயி லாயத்தைச்
சென்று தானெடுக் கவுமை யஞ்சலும்
நன்று தான்நக்கு நல்விர லூன்றிப்பின்
கொன்று கீதங்கேட் டான்குட மூக்கிலே. **#224**

அரக்கனாகிய இராவணன் திருக்கயிலாயத்தை அன்று சென்றுதான் எடுக்க, உமை அஞ்சுதலும் தான் பெரிதும் சிரித்துத் தன் நல்விரலை ஊன்றிப் பிறகு அவனை வருத்திச் சாமவேதம் கேட்ட பெருமான் குடமூக்கிலே உறைபவன் ஆவான்.

திருநின்றியூர்

திருநின்றியூர்

திருநின்றியூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மகாலட்சுமியீசுவரர்.
தேவியார் : உலகநாயகியம்மை.

கொடுங்கண் வெண்தலை கொண்டு குவிலைப்
படுங்க ணொன்றில ராய்ப்பலி தேர்ந்துண்பர்
நெடுங்கண் மங்கைய ராட்டயர் நின்றியூர்க்
கடுங்கைக் கூற்றுதைத் திட்ட கருத்தரே. **#225**

நீண்ட கண்களை உடைய மங்கையர்கள் ஆடல் புரிகின்ற நின்றியூரில், கடிய கையுடைய கூற்றுவனை உதைத்திட்டவரும் அன்பர்களின் கருத்தில் உறைபவரும் ஆகிய இறைவர், கொடிய கண்களை உடைய. வெள்ளிய கபாலம் கொண்டு, குறைகொண்டு விலைகூவுதற்குப்படும் பொருள் ஏதுமிலராகிய இரவலராய்ப் பலி தேர்ந்து உண்ணும் இயல்புடையவர் ஆவர்.

திருநின்றியூர்

வீதி வேல்நெடுங் கண்ணியர் வெள்வளை
நீதி யேகொளற் பாலது நின்றியூர்
வேத மோதி விளங்குவெண் தோட்டராய்க்
காதில் வெண்குழை வைத்தவெங் கள்வரே. **#226**

வேதங்களை ஓதுபவரும், விளங்குகின்ற வெள்ளியதோடும் வெள்ளிய சங்கக்குழையும் உடைய காதினருமாகிய (அர்த்தநாரீசுவரரும்) எமது கள்வரே! வீதியில் வேலனைய நீண்ட கண்களை உடைய பெண்களின் வெள்வளைகளைக் கொள்வது தேவரீர்க்கு நீதியோ? உரைத்தருள்வீராக.

திருநின்றியூர்

புற்றி னாரர வம்புலித் தோல்மிசைச்
சுற்றி னார்சுண்ணப் போர்வைகொண் டார்சுடர்
நெற்றிக் கண்ணுடை யாரமர் நின்றியூர்
பற்றி னாரைப்பற் றாவினை பாவமே. **#227**

புற்றினைப் பொருந்திய அரவினைப் புலித்தோலின்மேல் சுற்றியவரும், திருநீற்றைப் பூசிய மேனியினரும், சுடர் நெற்றிக்கண்ணை உடையாருமாகிய இறைவர் அமர்கின்ற நின்றியூரைப் பற்றிய

அன்பர்களை, வினைகளும் அவற்றான் வரும் பாபங்களும் பற்றமாட்டா.

திருநின்றியூர்

பறையி னோசையும் பாடலி னோசையும்
மறையி னோசையும் மல்கி யயலெலாம்
நிறையும் பூம்பொழில் சூழ்திரு நின்றியூர்
உறையு மீசனை யுள்குமென் னுள்ளமே. **#228**

பறையின் ஓசையும், தெய்வப்பாடல்களின் ஓசையும், வேதங்களின் ஓசையும் நிறைந்து மருங்கெல்லாம் ஒலிக்கின்ற பூம்பொழில் சூழ்ந்த திருநின்றியூரில் உறையும் ஈசனை என் உள்ளம் உள்குகின்றது.

திருநின்றியூர்

சுனையுள் நீலஞ் சுளியும் நெடுங்கணாள்
இணைய னென்றென்று மேசுவ தென்கொலோ
நினையுந் தண்வயல் சூழ்திரு நின்றியூர்ப்
பனையின் ஈருரி போர்த்த பரமரே. **#229**

நினைத்தற்குரிய குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருநின்றியூரில். பனைபோன்ற துதிக்கையை உடைய யானையின் உரியினைப் போர்த்த பரமரே! சுனையிற் பூத்த நீல மலரும் தோற்றுச் சுளித்தற் கேதுவாய் நெடுங்கண்களை உடையளாகிய இவள்! இத்தன்மை உடையவன், என்று என்றும் ஏசுவதன் காரணம் என்னை?

திருநின்றியூர்

உரைப்பக் கேண்மின்நும் உச்சியு ளான்றனை
நிரைப்பொன் மாமதில் சூழ்திரு நின்றியூர்
உரைப்பொற் கற்றைய ராரிவ ரோவெனில்
திரைத்துப் பாடித் திரிதருஞ் செல்வரே. **#230**

உரைப்பக் கேட்பீராக; நும் சென்னியின்கண் உள்ள சிவபிரானை, வரிசையாகிய பொன்மதில் சூழ்ந்த திருநின்றியூரில்மாற்றுரைக்கத்தக்க பொன் போன்ற கற்றைச் சடையுடையராகிய இவரை ஆர் என்று வினவுவீராயின், அலைத்துப் பாடித் திரிதரும் செல்வர் இவர்.

திருநின்றியூர்

கன்றி யூர்முகில் போலுங் கருங்களிறு
இன்றி ஏறல னாலிது என்கொலோ
நின்றி யூர்பதி யாக நிலாயவன்
வென்றி யேறுடை யெங்கள் விகிர்தனே. **#231**

திருநின்றியூரைப் பதியாகப் பொருந்தியவனும், வெற்றிமிக்க ஆனேறு

உடையவனுமாகிய எங்கள் விகிர்தன், கறுத்து ஊர்ந்து வருகின்ற முகில்போன்ற கருங்களிறு இன்றி வேறு ஏறி ஊராதது என்னையோ?

திருநின்றியூர்

நிலையி லாவெள்ளை மாலையன் நீண்டதோர்
கொலைவி லாலெயி லெய்த கொடியவன்
நிலையி னார்வயல் சூழ்திரு நின்றியூர்
உரையி னால்தொழு வார்வினை யோயுமே. **#232**

நிலையில்லாத வெள்ளெலும்புகளை மாலையாக உடையவனும். நீண்டதோர் கொல்லுந்தொழிலுடைய வில்லால் எயில் எய்த கொடியவனும், நிலையினார் வயல்சூழ் திருநின்றியூர்இறைவனும் ஆகிய பெருமானை மொழியினாற் பாடித் தொழுவார் வினைகள் கெடும்.

திருநின்றியூர்

அஞ்சி யாகிலு மன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ
இஞ்சி மாமதி லெய்திமை யோர்தொழக்
குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே. **#233**

நெஞ்சமே! இஞ்சியாகிய மதிலையுடைய முப்புரங்களை எய்து. தேவர்கள் தொழ, தன்சடையில் வெள்ளிய பிறையைச் சூடிய கூத்தன் உறைகின்ற நின்றியூரை. நீ, அஞ்சியாயினும். அன்பினைப் பொருந்தியாயினும் நினைத்து உய்வாயாக.

திருநின்றியூர்

எளிய னாமொழி யாவிலங் கைக்கிறை
களியி னாற்கயி லாய மெடுத்தவன்
நௌய வூன்றவல் லானமர் நின்றியூர்
அளியி னாற்றொழு வார்வினை யல்குமே. **#234**

எளியனாக மொழியாத இலங்கைக்கு இறைவனாம் இராவணன் செருக்கினாற் கயிலாயம் எடுத்தபோது நௌயுமாறு திருவிரலால் ஊன்ற வல்லவன் அமர்கின்ற திருநின்றியூரை அன்பினால் தொழுவார்களின் வினைகள் சுருங்கும்.

திருவொற்றியூர்

திருவொற்றியூர்

திருவொற்றியூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாணிக்கத்தியாகர்.
தேவியார் : வடிவுடையம்மை.

ஒற்றி யூரு மொளிமதி பாம்பினை
ஒற்றி யூருமப் பாம்பும் அதனையே
ஒற்றி யூர வொருசடை வைத்தவன்
ஒற்றி யூர்தொழ நம்வினை யோயுமே. **#235**

ஒளி விளங்குகின்ற மதி பாம்பினை ஒற்றி ஊரும்; பாம்பும் அம்மதியினைக் கொள்வதற்காக ஒற்றி ஊர்ந்து வரும்; இவ்வாறு இவை ஒன்றையொன்று ஒற்றி ஊரும்படியாக ஒருசடையில் வைத்த சிவபெருமானுக்குரிய ஒற்றயூரைத் தொழ நம்வினைகள் ஓயும்.

திருவொற்றியூர்

வாட்ட மொன்றுரைக் கும்மலை யான்மகள்
ஈட்ட வேயிரு ளாடி யிடுபிணக்
காட்டி லோரி கடிக்க எடுத்ததோர்
ஓட்டை வெண்தலைக் கையொற்றி யூரரே. **#236**

மலையரசன் மகளாகிய உமாதேவியார் தளர்ச்சியாகிய ஒன்று உரைக்க, பேய்க்கணங்கள் நெருங்க நள்ளிருளின்கண் இடுபிணக்காட்டில் ஓரி கடிக்கும்படியாக எடுத்த துளை உடைய வெண்தலையினைக் கையிலே உடையவர் ஒற்றியூர்த் தலத்து இறைவர்.

திருவொற்றியூர்

கூற்றுத் தண்டத்தை யஞ்சிக் குறிக்கொண்மின்
ஆற்றுத் தண்டத் தடக்கு மரனடி
நீற்றுத் தண்டத்த ராய்நினை வார்க்கெலாம்
ஊற்றுத் தண்டொப்பர் போலொற்றி யூரரே. **#237**

கூற்றுவனால் வருந்தண்டமாகிய இறப்புக்கு அஞ்சி, அறத்தின் ஆற்றினால் அனைத்தையும் இயக்கும் சிவ பிரானடியைக் குறிக்கொள்ளுவீராக! திருநீற்றினைப்பூசி வணங்கியெழுந்து நினைக்கின்ற அன்பர்க்கெல்லாம் இனிப்பு ஊறும் கரும்பினை ஒத்து இனிப்பர் ஒற்றியூர்த்தலத்து இறைவர்.

திருவொற்றியூர்

சுற்றும் பேய்சுழ லச்சுடு காட்டெரி
பற்றி யாடுவர் பாய்புலித் தோலினர்
மற்றை யூர்களெல் லாம்பலி தேர்ந்துபோய்
ஒற்றி யூர்புக் குறையு மொருவரே. **#238**

மற்றையூர்களிலெல்லாம் சென்று பலி தேர்ந்து பெற்று மீண்டுபோய் ஒற்றியூரிற்புக்கு உறையும் ஒப்பற்றவராகிய இறைவர் பாய்கின்ற புலியினையுரித்த தோலுடையினராய், சுற்றி நிற்கின்ற பேய்கள் சுழலச் சுடுகாட்டின்கண் கையில் எரியினைப் பற்றி ஆடும் இயல்பினர்.

திருவொற்றியூர்

புற்றில் வாளர வாட்டி யுமையொடு
பெற்ற மேறுகந் தேறும் பெருமையான்
மற்றை யாரொடு வானவ ருந்தொழ
ஒற்றி யூருறை வானோர் கபாலியே. **#239**

மற்றையவர்களோடு தேவர்களும் தொழுமாறு ஒற்றியூரில் உறைவானாகிய கபாலம் கைக்கொண்ட இறைவன் புற்றிலுறையும் வாள்போன்று வருத்தந்தரவல்ல பாம்பினை ஆட்டி உமையோடு ஆனேற்றின்மேல் உயர்ந்து ஏறித்தோன்றும் பெருமையை உடையவன்.

திருவொற்றியூர்

போது தாழ்ந்து புதுமலர் கொண்டுநீர்
மாது தாழ்சடை வைத்த மணாளனார்
ஓது வேதிய னார்திரு வொற்றியூர்
பாத மேத்தப் பறையும்நம் பாவமே. **#240**

போதுகளைவிட்டுப் பூத்த புதுமலர்களைக் கொண்டு கங்கையைத் தாழ்சடையின் கண் வைத்த மணாளனாரும், திருவொற்றியூரில் வேதம் ஓதும் வித்தகரும் ஆகிய பெருமானின் திருவடிகளை ஏத்தினால் நம் பாவங்கள் கெடும்.

திருவொற்றியூர்

பலவும் அன்னங்கள் பன்மலர் மேல்துஞ்சும்
கலவ மஞ்ஞைகள் காரென வெள்குறும்
உலவு பைம்பொழில் சூழ்திரு வொற்றியூர்
நிலவி னானடி யேயடை நெஞ்சமே. **#241**

நெஞ்சமே! அன்னங்கள் பலவும் பலமலர்கள் மேல் தூங்குவதும் கருமை உடைய இருள் விளைத்தலைக் கண்டு பைம்பொழிலை அங்கு உலவும் தோகையுடைய மயில்கள் மேகமெனக் கருதிப் பின் அவையின்மை தெரிந்து வெட்கமுறுதற் சிறப்புடையதுமாகிய திருவொற்றியூரில்

விளங்குகின்ற இறைவன் திருவடிகளையே அடைவாயாக!

திருவொற்றியூர்

ஒன்று போலும் உகந்தவ ரேறிற்று
ஒன்று போலு முதைத்துக் களைந்தது
ஒன்று போலொளி மாமதி சூடிற்று
ஒன்று போலுகந் தாரொற்றி யூரரே. **#242**

உயர்ந்து அவர் ஏறியதும் ஒரு விடையினை; உதைத்துக் களைந்ததும் ஒரு கூற்றுவனை; சூடியதும் ஒளி விளங்கும் ஒரு மதியினை; இவையனைத்தும் ஒன்றுபோல் உகந்தவர் ஒற்றியூர்த்தலத்து இறைவர்.

திருவொற்றியூர்

படைகொள் பூதத்தர் வேதத்தர் கீதத்தர்
சடைகொள் வெள்ளத்தர் சாந்தவெண் நீற்றினர்
உடையுந் தோலுகந் தாருறை யொற்றியூர்
அடையு முள்ளத் தவர்வினை யல்குமே. **#243**

பூதப்படை கொண்டவரும், வேதத்தவரும், இனியகீதத்தவரும், சடையிற்கொண்ட கங்கையினரும், சாந்தமெனப் பூசும் வெண்ணீற்றினரும், தோலை உடையாக உகந்தவரும் ஆகிய பெருமான் உறைகின்ற ஒற்றியூரை அடையும் உள்ளத்தவர்களின் வினைகள் சுருங்கும்.

திருவொற்றியூர்

வரையி னாலுயர் தோளுடை மன்னனை
வரையி னார்வலி செற்றவர் வாழ்விடம்
திரையி னார்புடை சூழ்திரு வொற்றியூர்
உரையி னாற்பொலிந் தாருயர்ந் தார்களே. **#244**

மலையென உயர்ந்த தோள்களை உடைய மன்னனான இராவணனை ஒரு சிறு எல்லையில் ஆற்றல் கெடுத்த பெருமான் வாழும் இடம், அலைகள் பக்கங்களிற்சூழ்ந்த திருவொற்றியூர்; அதனை வாக்கினாற் கூறி விளக்கமுறுவோரே உயர்ந்தவராவர்.

திருப்பாசூர்

திருப்பாசூர்

திருப்பாசூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பாசூர்நாதர்.
தேவியார் : பசுபதிநாயகியம்மை.

முந்தி மூவெயி லெய்த முதல்வனார்
சிந்திப்பார்வினை தீர்த்திடுஞ் செல்வனார்
அந்திக் கோன்தனக் கேயருள் செய்தவர்
பந்திச் செஞ்சடைப் பாசூ ரடிகளே. **#245**

வரிசையாகிய அடர்ந்த செஞ்சடையுடையவராகிய திருப்பாசூர்த் தலத்து இறைவர் முதற்கண் முப்புரங்களை எய்த முதல்வர்; சிந்திப்பவர்களின் வினைகளைத் தீர்க்கும் செல்வர்; சந்திரனுக்கு அருள் செய்த தண்ணளியாளர்.

திருப்பாசூர்

மடந்தை பாகம் மகிழ்ந்த மணாளனார்
தொடர்ந்த வல்வினை போக்கிடுஞ் சோதியார்
கடந்த காலனைக் கால்கொடு பாய்ந்தவர்
படர்ந்த நாகத்தர் பாசூ ரடிகளே. **#246**

படர்ந்தெழும் நாகத்தைப் பூண்ட திர்ப்பாசூர்த் தலத்து இறைவர். உமாதேவியை ஒரு பாகத்து மகிழ்ந்த மணவாளர்; உயிர்களைப் பிறவிதோறும் தொடர்ந்து வரும் வல்லமை உடைய வினைகளாகிய இருளைப் போக்கிடும் ஒளி வடிவானவர்; எல்லை கடந்த இயமனைக் கால்கொண்டு பாய்ந்து உதைத்தவர்.

திருப்பாசூர்

நாறு கொன்றையும் நாகமுந் திங்களும்
ஆறுஞ் செஞ்சடை வைத்த அழகனார்
காறு கண்டத்தர் கையதோர் சூலத்தர்
பாறி னோட்டினர் பாசூ ரடிகளே. **#247**

பருந்துகள் அலைக்கும் மண்டையோட்டினைக் கையில் ஏந்தியவராகிய திர்ப்பாசூர்த்தலத்து இறைவர், மணம்வீசும் கொன்றையும், நாகமும், திங்களும், கங்கையாறும் செஞ்சடையில் வைத்த அழகர்; கரியகண்டத்தர்; கையிற்பிடித்த சூலத்தர்.

திருப்பாசூர்

வெற்றி யூருறை வேதிய ராவர்நல்
ஒற்றி யேறுகந் தேறு மொருவனார்
நெற்றிக் கண்ணினர் நீளர வந்தனைப்
பற்றி யாட்டுவர் பாசூ ரடிகளே. **#248**

நீண்ட அரவினைப் பற்றியாட்டும், இயல்பினர் ஆகிய திருப்பாசூர்த் தலத்து இறைவர், வெற்றியூரில் உறையும் வேதியர், ஏற்றினை ஒற்றி உகந்து ஏறும் ஒப்பற்றவர், நெற்றிக் கண்ணினார்.

திருப்பாசூர்

மட்ட விழ்ந்த மலர்நெடுங் கண்ணிபால்
இட்ட வேட்கைய ராகி யிருப்பவர்
துட்ட ரேலறி யேனிவர் சூழ்ச்சிமை
பட்ட நெற்றியர் பாசூ ரடிகளே. **#249**

பட்டமணிந்த நெற்றியை உடையவராகிய திருப்பாசூர்த்தலத்து இறைவர். தேன் விரிந்த மலர்களையணிந்த நீண்ட கண்ணுடைய உமாதேவியார்பால் விருப்பமும் வேட்கையும் உடையவராயிருப்பவர்; இவர் தீயவரேல் இவரது சூழ்ச்சித் தன்மைகளை அறியேன்.

திருப்பாசூர்

பல்லில் ஓடுகை யேந்திப் பகலெலாம்
எல்லி நின்றிடு பெய்பலி யேற்பவர்
சொல்லிப் போய்ப்புகு மூரறி யேன்சொலீர்
பல்கு நீற்றினார் பாசூ ரடிகளே. **#250**

நிறைந்த திருவெண்ணீற்றினராகிய திருப்பாசூர்த் தலத்து இறைவர், பல்லில்லாத ஓட்டினைக் கையேந்திப் பகலெல்லாம் வெயிலில் நின்று இடுகின்ற பலியினை ஏற்பவர்; சொல்லிவிட்டுச் சென்று புகுந்த ஊரினை அறியேன்; சொல்லுவீராக.

திருப்பாசூர்

கட்டி விட்ட சடையர் கபாலியர்
எட்டி நோக்கிவந் தில்புகுந் தவ்வவர்
இட்ட மாவறி யேனிவர் செய்வன
பட்ட நெற்றியர் பாசூ ரடிகளே. **#251**

பட்டமணிந்த நெற்றியை உடையவராகிய திருப்பாசூர்த்தலத்து இறைவர் கட்டிவிட்ட சடையை உடையவரும், கபாலம் கைக்கொண்டவரும் எட்டிப்பார்த்து இல்லத்தில் புகுந்தவரும் ஆகியர். இவர் விரும்பிச் செய்வன இவையென யான் முற்ற அறியேன்.

திருப்பாசூர்

வேத மோதிவந் தில்புகுந் தாரவர்
காதில் வெண்குழை வைத்த கபாலியார்
நீதி யொன்றறி யார்நிறை கொண்டனர்
பாதி வெண்பிறைப் பாசூ ரடிகளே. **#252**

பாதி வெண்பிறையணிந்த திருப்பாசூர்த் தலத்து இறைவர், வேதங்களை ஓதிவந்து இல்லத்துட் புகுந்தார்; காதில் வெண்குழை வைத்த கபாலியார்; நீதியொன்றறியாது என்னுடைய கற்பினைக் கொண்டார்.

திருப்பாசூர்

சாம்பல் பூசுவர் தாழ்சடை கட்டுவர்
ஓம்பன் மூதெரு தேறு மொருவனார்
தேம்பல் வெண்மதி சூடுவர் தீயதோர்
பாம்பு மாட்டுவர் பாசூ ரடிகளே. **#253**

தீயதாகிய பாம்பினையும் பற்றி ஆடுபவராகிய திர்ப்பாசூர்த் தலத்திறைவர், சாம்பல் பூசுவர்; தாழ்கின்ற சடையினைக் கட்டுவர்; தாங்கும் இயல்புள்ள முதிர்ந்த எருதினை யேறும் ஒருவர்; ஒளிதேம்பிய வெண்மதியைச் சூடுவர்.

திருப்பாசூர்

மாலி னோடு மறையவன் தானுமாய்
மேலுங் கீழு மளப்பரி தாயவர்
ஆலின் நீழ லறம் பகர்ந் தார்மிகப்
பால்வெண் நீற்றினர் பாசூ ரடிகளே. **#254**

பால்போன்ற வெண்ணீற்றையணிந்தவராகிய திருப்பாசூர்த் தலத்திறைவர் மாலினோடு பிரமனும் மேலும் கீழும் அளந்தும் காண்டற்கரியவர்; ஆலின்நீழல் இருந்து அறம் பகர்ந்த ஞானவடிவினர்.

திருப்பாசூர்

திரியும் மூஎயில் செங்கணை யொன்றினால் எரிய
எய்தன ரேனு மிலங்கைக்கோன் நெரிய வூன்றியிட்
டார்விர லொன்றினால் பரியர் நுண்ணியர் பாசூ ரடிகளே. **#255**

பருப்பொருளும், நுண்பொருளுமாகிய திருப்பாசூர்த் தலத்து இறைவர், திரியும் மூன்று புரங்களைச் சிவந்த கணையொன்றினால் எரியுமாறு எய்தனரேனும், இலங்கையரசன் நெரியுமாறு திருவிரலால் ஊன்றியவர் ஆவர்.

திருவன்னியூர்

திருஅன்னியூர்

திருவன்னியூர், திருக்குறுந்தொகை

காடு கொண்டரங் காக்கங்குல் வாய்க்கணம்
பாட மாநட மாடும் பரமனார்
வாட மானிறங் கொள்வர் மணங்கமழ்
மாட மாமதில் சூழ்வன்னி யூரரே. **#256**

மணம் கமழ்கின்ற மாமடங்களும், மாமதில்களும் சூழ்கின்ற வன்னியூரில் வீற்றிருக்கும் இறைவர். சுடுகாட்டினை அரங்காகக்கொண்டு, நள்ளிரவில் பூதகணங்கள் பாடப் பெருநடம் ஆடும் பரமர்; மான்போன்ற இப்பெண் வாட, இவளது பொன்னிறத்தைத் தாம் கொண்டு பசலை நிறம் தந்த இயல்புடையவர்.

திருஅன்னியூர்

செங்கண் நாகம் அரையது தீத்திரள்
அங்கை யேந்திநின் றாரெரி யாடுவர்
கங்கை வார்சடை மேலிடங் கொண்டவர்
மங்கை பாகம்வைத் தார்வன்னி யூரரே. **#257**

உமையம்மையாரை ஒரு பாகமாக வைத்த வன்னியூரில் வீற்றிருக்கும் இறைவர், அரையின்கண் சிவந்த கண்ணையுடைய நாகத்தைக் கட்டியவர்; தீத்தொகுதியை அழகிய கரத்தில் ஏந்தி ஆடுபவர்; நீண்ட சடைமேலிடத்தில் கங்கையைக் கொண்டவர்.

திருஅன்னியூர்

ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானங் காட்டுவர் தம்மடைந் தார்க்கெலாம்
தானங் காட்டித்தன் தாளடைந் தார்கட்கு
வானங் காட்டுவர் போல்வன்னி யூரரே. **#258**

வன்னியூர்த்தலத்து இறைவர், தம்மையடைந்த அன்பர்கட்கெல்லாம், ஞானமும், அதனை அடைதற்குரிய நல்ல நெறியும், அடைதற்குரிய இடமும் காட்டுவர்; தன் திருவடியில் அடைந்தவர்கட்குத் தானங்காட்டுவதோடமையாது வானங்காட்டி ஆளவும் வைப்பார்.

திருஅன்னியூர்

இம்மை அம்மை யெனவிரண் டும்மிவை
மெய்ம்மை தானறி யாது விளம்புவர்

மெய்ம்மை யால்நினை வார்கள்தம் வல்வினை
வம்மின் றீர்ப்பர்கண் டீர்வன்னி யூரரே. #259
உலகினுள்ளீரே! வன்னியூர்த்தலத்து இறைவர் தம்மை மெய்ம்மையாக நினைவார்களுடைய வலிய வினையைத் தீர்க்கும் இயல்பினர்; இப்பிறப்பு, அப்பிறப்பு என்ற இரண்டின் உண்மைத் தன்மை அறியாது விளம்பும் சிலரைச் சாராது வந்து வழிபடுவீராக.

திருஅன்னியூர்

பிறைகொள் வாள்நுதற் பெய்வளைத் தோளியர்
நிறையைக் கொள்பவர் நீறணி மேனியர்
கறைகொள் கண்டத்தர் வெண்மழு வாளினர்
மறைகொள் வாய்மொழி யார்வன்னி யூரரே. #260
வேதங்களை வாய்மொழியாக உடைய வன்னியூர்த்தலத்து இறைவர், பிறையின் பேரழகு கொண்ட ஒளி நுதலையும் வளைபெய் கரங்களையும் உடைய பெண்களது கற்பினைக் கவர்பவர்; திருநீறணிந்த திருமேனியர்; திருநீல கண்டத்தர், ஒளிவீசும் வெள்ளிய மழுவினை உடையவர் ஆவர்.

திருஅன்னியூர்

திளைக்கும் வண்டொடு தேன்படு கொன்றையர்
துளைக்கை வேழத்தர் தோலர் சுடர்மதி
முளைக்கு மூரற் கதிர்கண்டு நாகம்நா
வளைக்கும் வார்சடை யார்வன்னி யூரரே. #261
வன்னியூர்த்தலத்து இறைவர் வண்டும், தேனும் திளைத்துப் பொருந்தும் கொன்றையர்; துளையுடைய அயிராவணம் என்ற வேழத்தினை உடையவர்; புலித்தோலினர்; ஒளி வீசும் மதியில் தோன்றும் நிலாக்கதிரைக்கண்டு நாகமானது கொள்ளுவதற்கு நாவினை வளைக்கின்ற நீண்ட சடையினர் ஆவர்.

திருஅன்னியூர்

குணங்கொள் தோளெட்டு மூர்த்தி யிணையடி
இணங்கு வார்கட் கினியனு மாய்நின்றான்
வணங்கி மாமலர் கொண்டவர் வைகலும்
வணங்கு வார்மனத் தார்வன்னி யூரரே. #262
வன்னியூர்த்தலத்து இறைவர் எட்டுத் தோள்களையும் எட்டுக்குணங்களையும் உடைய மூர்த்தி; தன் இணையடிகளை இணங்கி வழிபடுவார்கட்கு இனியராகியவர்; மலர்கள் கொண்டு வணங்குவார் மனத்தின் கண்ணவர்.

திருஅன்னியூர்

இயலு மாலொடு நான்முகன் செய்தவம்
முயலிற் காண்பரி தாய்நின்ற மூர்த்திதான்
அயலெ லாமன்ன மேயுமந் தாமரை
வயலெ லாங்கயல் பாய்வன்னி யூரரே. **#263**

அயற்பக்கமெலாம் அன்னங்கள் மேய்கின்ற, அழகிய தாமரைகளை உடைய வயல்களிலெல்லாம் கயல்மீன்கள் பாய்கின்ற, வன்னியூர்த்தலத்து இறைவர், இயலுகின்ற திருமாலோடு நான்முகன் தவம் செய்து முயன்றும் காண்டல் அரியராய் நின்ற மூர்த்தியாவர்.

திருஅன்னியூர்

நலங்கொள் பாகனை நன்று முனிந்திடா
விலங்கல் கோத்தெடுத் தானது மிக்கிட
இலங்கை மன்ன னிருபது தோளினை
மலங்க வூன்றிவைத் தர்வன்னி யூரரே. **#264**

வன்னியூர்த்தலத்து இறைவர், நன்மை கொண்ட பாகராகிய தம்மை முடிந்திடாது திருக்கயிலையைக் கரங்களைக் கொண்டு கோர்த்தெடுத்தபோது அவ்விலங்கை மன்னரின் இருபது தோள்களை மலங்கும் படியாகத் திருவிரலை ஊன்றியவர் ஆவர்.

திருவையாறு

திருஐயாறு

திருவையாறு, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.
தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை.

சிந்தை வாய்தலு ளான்வந்து சீரியன்
பொந்து வார்புலால் வெண்தலைக் கையினன்
முந்தி வாயதோர் மூவிலை வேல்பிடித்
தந்தி வாயதோர் பாம்பரை யாறரே. **#265**

ஐயாற்றின் கண் எழுந்தருளியுள்ள இறைவர், அன்பர்களின் சிந்தையின்கண் வந்து பொருந்துதல் உடையவர்; சீர்மை உடையவர்; பொந்துகளை உடைய நீண்ட புலால் உடைய வெண்தலையைக் கையில் ஏந்தியவர்; முந்துகின்ற வாயை உடையதோர் மூவிலைவேல் பிடித்து, அந்தியைப் போன்று சிவந்த வாயினதோர் பாம்பினை அணிந்தவர் ஆவர்.

திருஐயாறு

பாகம் மாலை மகிழ்ந்தனர் பால்மதி
போக ஆனையி னீருரி போர்த்தவர்
கோக மாலை குலாயதோர் கொன்றையும்
ஆக ஆன்நெயஞ் சாடுமை யாறரே. **#266**

ஒருபாகத்தே திருமாலை உடையவர். பால்மதியை மகிழ்ந்தளித்தவர். இடர்கள்போக ஆனையின் உரியைப் போர்த்தவர், தோள்களில் கொன்றைமலர் சூடியவர். ஆனைந்து ஆடுபவர்.

திருஐயாறு

நெஞ்ச மென்பதோர் நீளகயந் தன்னுளே
வஞ்ச மென்பதோர் வான்சுழிப் பட்டுநான்
துஞ்சும் போழ்துநின் னாமத் திருவெழுத்
தஞ்சும் தோன்ற அருளுமை யாறரே. **#267**

ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவரே! நெஞ்சமாகிய ஆழமுடைய நீர் நிலைக்குள்ளே வஞ்சம் என்கின்ற தப்பவியலாத சுழியிலே நான்பட்டு இறக்கும் போது. தேவரீர் திருநாமமாகிய திருவைந்தெழுத்தும் தோன்ற அருள்வீராக.

திருஐயாறு

நினைக்கும் நெஞ்சினுள் ளார்நெடு மாமதில்
அனைத்தும் ஒள்ளழல் வாயெரி யூட்டினார்
பனைக்கை வேழத் துரியுடல் போர்த்தவர்
அனைத்து வாய்தலுள் ளாருமை யாறரே. **#268**

ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர் தம்மை நினைக்கின்றவர்தம் நெஞ்சில் உள்ளவர்; நீண்ட முப்புரங்கள் மூன்றையும் சுடர்விடுகின்ற அழல் உண்ணுமாறு எரியூட்டியவர். பனைபோன்ற துதிக்கையை உடைய யானையின் தோலை உரித்துத் தம்திருமேனியிற் போர்த்தவர்; எல்லாப் பொருள்களினுள்ளும் கலந்து நிற்கும் இயல்பினர்.

திருஐயாறு

பரியர் நுண்ணியர் பார்த்தற் கரியவர்
அரிய பாடல ராடல ரன்றியும்
கரிய கண்டத்தர் காட்சி பிறர்க்கெலாம்
அரியர் தொண்டர்க் கெளயரை யாறரே. **#269**

ஐயாற்றில் எழுந்தருளும் இறைவர், பருப்பொருளாயவர். நுண்பொருளாயவர். பார்த்தற்கு அரியவர். அரியபாடலையும் ஆடலையும் உடையவர். கரிய கழுத்தினர் (திருநீலகண்டர்). பிறர்க்கெலாம் காண்டற்கு அரியவர். தொண்டருக்கோ எளியவர்.

திருஐயாறு

புலரும் போது மிலாப்பட்ட பொற்சுடர்
மலரும் போதுக ளாற்பணி யச்சிலர்
இலரும் போது மிலாதது மன்றியும்
அலரும் போதும் அணியுமை யாறரே. **#270**

இருள்புலரும் காலைப் பொழுதிலும் சூரியன் மறையும் அந்திப்பொழுதிலும் இதழ்விரியும் மலர்களால் விதிமுறை தெரிந்தோர் சிலர் பணிய, அங்ஙனம் ஆகமவிதி அறியாதார் இறைவன் சூடும் மலரல்லாத மலர்களையும், இலைகளையும் கொண்டு அருச்சிக்க அவற்றையும் அணிவன் ஐயாறன்.

திருஐயாறு

பங்க மாலைக் குழலியொர் பால்நிறக்
கங்கை மாலையர் காதன்மை செய்தவர்
மங்கை மாலை மதியமும் கண்ணியும்
அங்க மாலையுஞ் சூடுமை யாறரே. **#271**

இம் மங்கையைக் காதன்மை செய்தவர் இடப்பாகத்தே அழகிய

மாலையணிந்த கூந்தலையுடைய பார்வதியைக் கொண்ட கங்கை மாலையர், அங்கமாலை முதலிவற்றைச் சூடும் ஐயாறர்.

திருஐயாறு

முன்னை யாறு முயன்றெழு வீரெலாம்
பின்னை யாறு பிரியெனும் பேதைகாள்
மன்னை யாறு மருவிய மாதவன்
தன்னை யாறு தொழத்தவ மாகுமே. **#272**

முன் துன்ப நெறியின்கண் முயன்றொழுகுவீர் எல்லோரும் பின் அத்துன்ப நெறியினின்று பிரித்தருளுவீராக என்று வேண்டும் அறியாமையுடையவர்களே! நிலைத்த ஐயாற்றில் எழுந்தருளிய மாதவனை முறையே தொழத்தவமாகும்.

திருஐயாறு

ஆனை யாறென ஆடுகின் றான்முடி
வானை யாறு வளாயது காண்மினோ
நான்ஐ யாறுபுக் கேற்கவ னின்னருள்
தேனை யாறு திறந்தாலே யொக்குமே. **#273**

பஞ்சகவ்வியங்களைத் திருவபிடேகம் கொண்டு ஆடுகின்றவனாகிய பெருமான் திருமுடியில் வானையளாவிய கங்கை பாய்வதைக் காண்பீராக; ஐயாறு புகுந்த அடியேனுக்கு அவன் இன்னருள் தேன் ஆறு திறந்து பாய்ந்தாற் போன்று தித்தித்திருக்கும்.

திருஐயாறு

அரக்கின் மேனியன் அந்தளிர் மேனியன்
அரக்கின் சேவடி யாளஞ்ச அஞ்சலென்
றரக்க னீரைந்து வாயு மலறவே
அரக்கி னானடி யாலுமை யாறனே. **#274**

ஐயாற்றுத் தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் செவ்வரக்கினைப் போன்று சிவந்த மேனியனும், அழகிய தளிர் போன்று விளங்கும் மேனியனும் ஆவன்; செவ்வரக் கனைய சிவந்த அடி உடைய உமாதேவி அஞ்சுதலும், 'அஞ்சேல்' என்று கூறி இராவணனது பத்து வாய்களும் அலறுமாறு தன் திருவடி விரலால் அரக்கியவன் ஆவன்.

திருஐயாறு

திருவையாறு, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.

தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை.

சிந்தை வண்ணத்த ராய்த்திறம் பாவணம்
முந்தி வண்ணத்த ராய்முழு நீறணி
சந்தி வண்ணத்த ராய்த்தழல் போல்வதோர்
அந்தி வண்ணமு மாவரை யாறரே. **#275**

ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர், அடியவர்களின் சிந்தை வண்ணமும்; மாறுபடாத வண்ணம் முன்னே தோன்றிய வண்ணமும், முழுநீறு அணிந்து அந்திவண்ணமாகிய செவ்வண்ணமும், தழல்போல்வதோர் வண்ணமும் உடைய இயல்பினர்.

திருஐயாறு

மூல வண்ணத்த ராய்முத லாகிய
கோல வண்ணத்த ராகிக் கொழுஞ்சுடர்
நீல வண்ணத்த ராகி நெடும்பளிங்
கால வண்ணத்த ராவரை யாறரே. **#276**

ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர், எல்லா உலகங்களுக்கும் மூலமாகிய இயல்பும், முதலாகித் தோன்றிய திருக்கோலத்தின் இயல்பும், வளமையான சுடர்விடுகின்ற நீலநிறமும நீண்ட பளிங்கனைய தம் திருவுருத்தில் நஞ்சின் வண்ணமும் உடையவராய்த் திகழ்வர்.

திருஐயாறு

சிந்தை வண்ணமுந் தீயதோர் வண்ணமும்
அந்திப் போதழ காகிய வண்ணமும்
பந்திக் காலனைப் பாய்ந்த தொர் வண்ணமும்
அந்தி வண்ணமு மாவரை யாறரே. **#277**

ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர் சிந்தை வண்ணமும், தீயின் வண்ணமும், அழகாகிய அந்திப்போதின் வண்ணமும், தானும், கடாவும், பாசக்கயிறுமாக வரிசையாகவரும் காலனைப் பாய்ந்து உதைத்த இயல்பும் உடையவர்.

திருஐயாறு

இருளின் வண்ணமு மேழிசை வண்ணமும்
சுருளின் வண்ணமுஞ் சோதியின் வண்ணமும்
மருளு நான்முகன் மாலொடு வண்ணமும்
அருளும் வண்ணமு மாவரை யாறரே. **#278**

ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர். இருளின் வண்ணமும், ஏழிசைகளின் வண்ணவேற்றுமைகளும், சுருண்ட

சடையின் வண்ணமும், ஒளியின் வண்ணமும். நான்முகனும் திருமாலும் விண்பறந்தும் மண் புகுந்தும் காண்டற்கரிதென மருளும் வண்ணமும் அவர்கள் ஆணவம் அடங்கியவழி அருளும் வண்ணமும் உடையவராவர்.

திருஐயாறு

இழுக்கின் வண்ணங்க ளாகிய வெவ்வழல்
குழைக்கும் வண்ணங்க ளாகியுங் கூடியும்
மழைக்கண் மாமுகி லாகிய வண்ணமும்
அழைக்கும் வண்ணமு மாவரை யாறரே. **#279**

ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர் நல்லியல்புகளினின்றும் இழுக்கி அல்லவை செய்தால் வெவ்விய அழலைப் போன்று வருத்தும் மறக்கருணைவண்ணமும், மழையைத் தன்னிடத்துடைய பெரிய மேகங்களின் இயல்பு போன்று வரையாது அருள் வழங்கும் வண்ணமும், தம்மடியார்களை அழைத்து அருள் வழங்கும் வண்ணமும் உடையவர்.

திருஐயாறு

இண்டை வண்ணமு மேழிசை வண்ணமும்
தொண்டர் வண்ணமுஞ்சோதியின் வண்ணமும்
கண்ட வண்ணங்க ளாய்க்கனல் மாமணி
அண்ட வண்ணமு மாவரை யாறரே. **#280**

ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர் இண்டைமாலை சூடும் இயல்பும், ஏழிசை வடிவாகிய இயல்பும், தொண்டர்கள் நடுவில் நிற்கும் இயல்பும், ஒளி-இயல்பும், கண்ட வண்ணங்கள் அனைத்தும், கனல்போன்று செவ்வொளி விரிக்கும் மாணிக்கவண்ணமும், அண்டங்களின் வண்ணமும் ஆகியவர்.

திருஐயாறு

விரும்பும் வண்ணமும் வேதத்தின் வண்ணமும்
கரும்பின் இன்மொழிக் காரிகை வண்ணமும்
விரும்பு வார்வினை தீர்த்திடும் வண்ணமும்
அரும்பின் வண்ணமு மாவரை யாறரே. **#281**

ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர் எல்லோரும் விரும்பும் இயல்பும் வேதத்தின் இயல்பும், கரும்பினையொத்த இனிய மொழியையுடைய உமையம்மையார் இயல்பும், தம்மை விரும்பும் மெய்யடியார்களின் வினைகளைத் தீர்த்திடும் இயல்பும், அரும்பின் இயல்பும் உடையராவர்.

திருஐயாறு

ஊழி வண்ணமு மொண்சுடர் வண்ணமும்
வேழ ஈருரி போர்த்ததொர் வண்ணமும்
வாழித் தீயுரு வாகிய வண்ணமும்
ஆழி வண்ணமு மாவரை யாறரே. **#282**

ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர் ஊழிகள் தோறும் ஒளிரும் இயல்பும், ஒளிச்சுடர் இயல்பும், யானையின் பச்சைத்தோலைப் போர்த்தருளிய இயல்பும், ஊழித்தீ உருவாகிய இயல்பும், கடல்வண்ணமும் உடையவராவர்.

திருஐயாறு

செய்த வன்திரு நீறணி வண்ணமும்
எய்த நோக்கரி தாகிய வண்ணமும்
கைது காட்சி யரியதோர் வண்ணமும்
ஐது வண்ணமு மாவரை யாறரே. **#283**

ஐயாற்றில் எழுந்தருளும் இறைவன், ஒருகால் யோகு செய்தவனாகத் திருநீறணிந்த வண்ணத்தினன். காண்பதற்கு அரிய தன்மை வாய்ந்தவன், மனதிலே சிறைப்படுத்தித் தியானித்தற்கு அருமை வாய்ந்த தன்மையன். மென்மை தழுவிய அழகினன்.

திருஐயாறு

எடுத்த வாளரக் கன்திறல் வண்ணமும்
இடர்கள் போர்பெரி தாகிய வண்ணமும்
கடுத்த கைந்நரம் பாலிசை வண்ணமும்
அடுத்த வண்ணமு மாவரை யாறரே. **#284**

ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர், திருக்கயிலாயத்தை எடுக்கலுற்ற வாளினை உடைய இராவணன் ஆற்றல், துன்பங்கள் போற் பெரிதாகுமாறு செய்தருளிய இயல்பும், மிகுந்த தன் கைநரம்புகளையே யாழாக்கி அவன் இசைத்தவண்ணம் கண்டு அவனுக்கு அருளாளராக அடுத்த வண்ணமும் உடையவர் ஆவர்.

திருவாவடுதுறை

திருஆவடுதுறை

திருவாவடுதுறை, திருக்குறுந்தொகை

நிறைக்க வாலிய ளல்லளிந் நேரிழை
மறைக்க வாலிய ளல்லளிம் மாதராள்
பிறைக்க வாலப் பெரும்புன லாவடு
துறைக்க வாலியோ டாடிய சுண்ணமே. **#285**

பிறையோடு கூடிய செஞ்சடையில் கங்கையாகிய பெரும்புனலை உடையவரும், திருவாவடுதுறையில் உள்ள கபாலியுமாகிய சிவபெருமானோடு ஆடிய திருநீற்றினை நிறைக்கத் தூய்மையுடையவள் அல்லள் இந்த நேரிழையணிந்த பெண்; அன்றியும் இப்பெண் அதனால் வரும் துயரங்களை மறைக்கும் வல்லமை உடையலளுமல்லள்.

திருஆவடுதுறை

தவள மாமதிச் சாயலோர் சந்திரன்
பிளவு சூடிய பிஞ்ஞக னெம்மிறை
அளவு கண்டில ளாவடு தண்டுறைக்
களவு கண்டன ளொத்தனள் கன்னியே. **#286**

இக்கன்னி, வெள்ளிய பெருமைமிகுந்து மதிக்கத்தக்க சாயலை உடைய சந்திரனின் பிளவாகிய பிறையினை சூடிய எம்மிறைவனாகிய பிஞ்ஞகனின் அன்பின் அளவை முற்றும் கண்டலளேனும், திருவாவடுதுறையிலே அவனைக் களவொழுக்கத்தாற் கண்டவளை ஒத்தாள் ஆயினள்.

திருஆவடுதுறை

பாதிப் பெண்ணொரு பாகத்தன் பன்மறை
ஓதி யென்னுளங் கொண்டவ னொண்பொருள்
ஆதி ஆவடு தண்டுறை மேவிய
சோதி யேசுட ரேயென்று சொல்லுமே. **#287**

இப்பெண், தன் திருமேனியில் ஒரு பாதிப் பெண்ணினை உடையவனே என்றும், பலவாகிய மறைகளை ஓதியருளி என்னுள்ளத்தைக் கவர்ந்துகொண்டவனே என்றும், ஒள்ளிய உலகத்துப் பொருள்களுக்கெல்லாம் ஆதியானவனே என்றும், திருவாவடுதுறையில் விரும்பியெழுந்தருளியிருக்கும் சோதியே என்றும், சுடரே என்றும் சொல்லும் இயல்பினள்.

திருஆவடுதுறை

கார்க்கொண் மாமுகில் போல்வதோர் கண்டத்தன்
வார்க்கொண் மென்முலை சேர்ந்திறு மாந்திவள்
ஆர்க்கொள் கொன்றைய னாவடு தண்டுறைத்
தார்க்கு நின்றிவள் தாழுமா காண்மினே. **#288**

இப்பெண், கருமையைக்கொண்ட பெரிய முகில் போலும் கண்டத்தை உடையவனும், கச்சினைக்கொண்ட மெல்லிய முலையாளாகிய உமையம்மையைச் சேர்ந்து இறுமாந்து இவளது நெஞ்சைப் பிணைக்கும் கொன்றையினை உடையவனும் ஆகிய திருவாவடுதுறைப் பெருமானின் திருமார்பில் அணிந்துள்ள கொன்றைமாலைக்கு மனம் தாழ்கின்றனள்; காண்பீராக.

திருஆவடுதுறை

கருகு கண்டத்தன் காய்கதிர்ச் சோதியன்
பருகு பாலமு தேயெனும் பண்பினன்
அருகு சென்றில ளாவடு தண்டுறை
ஒருவ னென்னை யுடையகோ வென்னுமே. **#289**

இப்பெண், கருத்த கண்டத்தை உடையவனும், கதிர்காய்கின்ற ஒளிவடிவினனும், பருகுதற்கினிய பால் அமுது என்று கூறத்தக்க பண்பை உடையவனுமாகிய அப்பெருமான் அருகிற் சென்றனள். அல்லளாயினும், அவன்பாற்கொண்ட காதல் மிகுதியால் "என்னை உடையவன் திருஆவடுதண்டுறையில் உறையும் தலைவனே" என்று கூறும் இயல்பினள்.

திருஆவடுதுறை

குழலுங் கொன்றையுங் கூவிள மத்தமும்
தழலுந் தையலோர் பாகமாத் தாங்கினான்
அழக னாவடு தண்டுறை யாவெனக்
கழலுங் கைவளை காரிகை யாளுக்கே. **#290**

இவ்வழகுடைய பெண், கொன்றை மலர்களும், கூவிளந்தளிர்களும், ஊமத்தமலர்களும் சூடிய சடையும், தையல் ஒரு பாகமும் கொண்ட ஆவடுதண்டுறைக்குரிய அழகனே என்று விரும்பி அழைத்தலால், கைவளைகள் கழலுகின்ற நிலைமையள் ஆயினள்.

திருஆவடுதுறை

பஞ்சின் மெல்லடிப் பாவையோர் பங்கனைத்
தஞ்ச மென்றிறு மாந்திவ ளாரையும்
அஞ்சு வாளல்ல ளாவடு தண்டுறை
மஞ்ச னோடிவ ளாடிய மையலே. **#291**

இப்பெண் திருவாவடுதண்துறையில் உள்ள, புலன் ஐந்தும் வென்ற பெருவீரனாகிய சிவபெருமானோடு ஆடிக் கொண்ட மயக்கத்தினால், பஞ்சனைய மெல்லடியுடைய உமா தேவியாரைப் பங்கிற்கொண்ட அப்பரமனைத் தஞ்சப்பொருளாகக் கொண்டு இறுமாப்பு எய்தி, வேறு யாரையும் அஞ்சாதவள் ஆயினள்.

திருஆவடுதுறை

பிறையுஞ் சூடிநற் பெண்ணோ டாணாகிய
நிறையும் நெஞ்சமும் நீர்மையும் கொண்டவன்
அறையும் பூம்பொழி லாவடு தண்டுறை
இறைவ னென்னை யுடையவ னென்னுமே. **#292**

இப்பெண், பிறையினைச் சென்னியிற் சூடிய பெண்ணும் ஆணுமாகிய இறைவனும், மேகங்களும், வண்டினங்களும் ஒலிக்கின்ற பூம்பொழில்களை உடைய ஆவடுதண்துறையில் என்னை உடையவனும் ஆகிய பெருமானே, என் கற்பினையும், உள்ளத்தினையும், பிற தன்மைகளையும் கவர்ந்து கொண்டவன் என்று சொல்லுமியல்பினள்.

திருஆவடுதுறை

வையந் தாளைந் தானும் அயனுமாய்
மெய்யைக் காணலுற் றார்க்கழ லாயினான்
ஐய னாவடு தண்டுறை யாவெனக்
கையில் வெள்வளை யுங்கழல் கின்றதே. **#293**

உலகங்களைத் தான் அளந்தவனாகிய திருமாலும், பிரமனும் ஆகிய இருவரும் மெய்பொருளாகிய பிரமத்தைக் காணலுற்றபோது அவ்விருவர் முன்னே பேரழலாய் நிமிர்ந்த பெருமானே! ஐயனே! ஆவடுதண்டுறையில் உள்ள அண்ணலே என்று வாய்விட்டுக்கூவி உடல் மெலிதலால் இவள் கைகளில் உள்ள வெள்வளைகள் கழல்கின்றவாயின.

திருஆவடுதுறை

பக்கம் பூதங்கள் பாடப் பலிகொள்வான்
மிக்க வாளரக் கன்வலி வீட்டினான்
அக்க ணிந்தவ னாவடு தண்டுறை
நக்க னென்னுமிந் நாணிலி காண்மினே. **#294**

பெருமான் தன் நெஞ்சும் கற்பும் கவர்ந்து கொண்டனனேனும், அதுகுறித்துச் சிறிதும் நாணமில்லாதவளாகிய இப்பெண், மீண்டும், பூதங்கள் பக்கத்தில் நின்று பாடப் பலி கொள்வான் என்றும்,

ஆற்றல்மிக்க வாளை உடைய அரக்கனை வலி கெடுத்தான் என்றும், அக்கமாலைகள் அணிந்தான் என்றும், திரு ஆவடு தண்டுறையில் உள்ள திகம்பரன் என்றும் கூறிப்புகழ்ந்தவண்ணம் இருப்பாள்.

திருப்பராய்த்துறை

திருப்பராய்த்துறை

திருப்பராய்த்துறை, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருப்பராய்த்துறைநாதர்.
தேவியார் : பசும்பொன்மயிலம்மை.

கரப்பர் கால மடைந்தவர் தம்வினை
சுருக்கு மாறுவல் லார்கங்கை செஞ்சடைப்
பரப்பு நீர்வரு காவிரித் தென்கரைத்
திருப்ப ராய்த்துறை மேவிய செல்வரே. **#295**

நீர் பரந்துவருகின்ற காவிரியின் தென்கரையில் உள்ள திருப்பராய்த்துறையில் விரும்பி எழுந்தருளியிருக்கும் அருட்செல்வர், தம்மடியடைந்த அன்பர்கட்குப் பக்குவகாலம் வருந் துணையும் மறைந்துநின்று அருள்வர்: பின் அக்காலம் வாய்த்தவழி, அவர்வினைகளைச் சுருக்கிக் கெடுக்குமாற்றில் வல்லவர்; செஞ்சடையிற் கங்கையை உடையார், (காலத்தில் வந்தடைந்தவர் வினைகளை மறையும்படிச் செய்பவர்; விரிந்த கங்கையைத் தம் செஞ்சடையில் சுருக்குமாற்றிலும் வல்லவர் என்றும் இணைக்கலாம்.)

திருப்பராய்த்துறை

மூடி னார்களி யானையின் ஈருரி
பாடி னார்மறை நான்கினோ டாறங்கம்
சேட னார்தென்ப ராய்த்துறைச் செல்வரைத்
தேடிக் கொண்டடி யேன்சென்று காண்பனே. **#296**

தென்பராய்த்துறையுறையும் அருட்செல்வர், செருக்குடைய யானையின் பச்சைத் தோலினால் போர்த்தித் தம் திருமேனியை மூடியவர்; வேதங்கள் நான்கினோடு, அங்கங்கள் ஆறினையும் பாடியவர்; மிக்க பெருமையை உடையவர்; அப்பெருமானைத் தேடிக்கொண்டு சென்று அடியேன் காண்பேன்.

திருப்பராய்த்துறை

பட்ட நெற்றியர் பால்மதிக் கீற்றினர்
நட்ட மாடுவர் நள்ளிரு ளேமமும்
சிட்ட னார்தென்ப ராய்த்துறைச் செல்வனார்
இட்ட மாயிருப் பாரை யறிவரே. **#297**

தென்பராய்த்துறை உறையும் அருட்செல்வர் பட்டமணிந்த

நெற்றியினை உடையவர்; பாலனைய நிலவு சொரியும் மதிக்கீற்றினை உடையவர்; நள்ளிருளில் உலகிற்கு இன்பம் செய்யும் பொருட்டு நடனம் ஆடுபவர்; உயர்வுடையவர்; தம்மிடம் விருப்பமாயிருக்கும் அடியார்களைத் தாம் அறியும் இயல்பினர் ஆவர்.

திருப்பராய்த்துறை

முன்பெ லாஞ்சில மோழைமை பேசுவர்
என்பெ லாம்பல பூண்டங் குழிதர்வர்
தென்ப ராய்த்துறை மேவிய செல்வனார்
அன்ப ராயிருப் பாரை யறிவரே. **#298**

தென்பராய்த்துறை உறையும் அருட்செல்வர், அறியாமையொடு கூடிய சில சொற்களைப் பலர் முன்னிலையிலும் பேசுவார். எலும்புகள் பலவற்றைப் பூண்டு திரிவார். தம்மீது அன்பராய் இருப்பாரை நன்கு அறியும் இயல்பினர்.

திருப்பராய்த்துறை

போது தாதொடு கொண்டு புனைந்துடன்
தாத விழ்சடைச் சங்கரன் பாதத்துள்
வாதை தீர்க்கவென் றேத்திப் பராய்த்துறைச்
சோதி யானைத் தொழுதெழுந் துய்ம்மினே. **#299**

உலகில் உள்ளவர்களே! தென்பராய்த்துறையில் உறைகின்ற ஒளி வடிவான பெருமானை மகரந்தத் தொடும் கூடிய போதுகளைக்கொண்டு புனைந்து தாதவிழும் சடையுடைய அச்சங்கரன் திருவடிகளில் துயரங்களைத் தீர்த்தருள்க என்று பரவித் தொழுதெழுந்து உய்வீர்களாக.

திருப்பராய்த்துறை

நல்ல நான்மறை யோதிய நம்பனைப்
பல்லில் வெண்டலை யிற்பலி கொள்வனைத்
தில்லை யான்தென் பராய்த்துறைச் செல்வனை
வல்லை யாய்வணங் கித்தொழு வாய்மையே. **#300**

நெஞ்சே! தென்பராய்த்துறையில் உறைகின்ற அருட்செல்வரும், நல்லனவாகிய நான்கு மறைகளை ஓதிய நம்பரும், பல இல்லங்களிலும் வெள்ளியதலையிற் பலிகொள்ளும் இயல் பினரும், தில்லைத்தலத்தில் எழுந்தருளியவரும் ஆகிய பெருமானை விரைந்து வணங்கி மெய்ம்மையாகத் தொழுவாயாக!

திருப்பராய்த்துறை

நெருப்பி னாற்குவித் தாலொக்கு நீள்சடைப்

பருப்ப தம்மத யானை யுரித்தவன்
திருப்ப ராய்த்துறை யார்திரு மார்பின்நூல்
பொருப்ப ராவி யிழிபுனல் போன்றதே. #301
நெருப்பினைக் குவித்துவைத்தாலொத்த நீண்ட சடை உடையவரும், மலையினையொத்த மதயானையினை உரித்துப் போர்த்தவரும் ஆகிய திருப்பராய்த்துறையில் எழுந்தருளியிருக்கும் இறைவர் திருமார்பிற் புரள்கின்ற முந்நூல், மலையினை அரித்துக் கொண்டு இழிகின்ற அருவிப்புனலைப் போன்றுள்ளது.

திருப்பராய்த்துறை

எட்ட விட்ட விடுமண லெக்கர்மேல்
பட்ட நுண்துளி பாயும் பராய்த்துறைச்
சிட்டன் சேவடி சென்றடை கிற்றிரேல்
விட்டு நம்வினை யுள்ளன வீடுமே. #302
வானை எட்டுமாறு இட்ட மணலிடு குன்றின் மேல் நுண்ணிய நீர்த்துளிகள் பாய்கின்ற பராய்த்துறையில் உறைகின்ற உயர்ந்த இறைவன் சேவடிகளிற் சென்று அடையும் வல்லமை உடையீராயின், நம்வினைகளாய் உள்ளவை நம்மைவிட்டு நீங்கிக் கெடும்.

திருப்பராய்த்துறை

நெருப்ப ராய்நிமிர்ந் தாலொக்கு நீள்சடை
மருப்ப ராய்வளைந் தாலொக்கும் வாண்மதி
திருப்ப ராய்த்துறை மேவிய செல்வனார்
விருப்ப ராயிருப் பாரை யறிவரே. #303
நெருப்பு அராவி நிமிர்ந்ததனையொத்த நீண்ட சடையையும், தந்தத்தை அராவி வளைத்தது போன்ற பிறைமதியையும் உடையராய்த் திருப்பராய்த்துறையில் விரும்பியெழுந்தருளி இருக்கும் அருட்செல்வர் தம்மிடம் விருப்பமாக உள்ளவர்களை நன்கு அறியும் இயல்பினர் ஆவர்.

திருப்பராய்த்துறை

தொண்டு பாடியுந் தூமலர் தூவியும்
இண்டை கட்டி யிணையடி யேத்தியும்
பண்ட ரங்கர் பராய்த்துறைப் பாங்கரைக்
கண்டு கொண்டடி யேனுய்ந்து போவனே. #304
திருப்பராய்த்துறைத் தலத்து எழுந்தருளியிருப்பவரும், பாண்டரங்கக் கூத்துடையவரும் ஆகிய இறைவர்க்குற்ற தொண்டுகளைப்பற்றிப் பாடியும், அப்பெருமான் இணையடிகளில் இண்டைமாலை சாத்தியும், தூமலர்கள் தூவியும், கண்டும், உள்ளத்திற் கொண்டும் அடியேன்

உய்ந்து போவன்.

திருப்பராய்த்துறை

அரக்க னாற்ற லழித்த அழகனைப்
பரக்கு நீர்ப்பொன்னி மன்னு பராய்த்துறை
இருக்கை மேவிய ஈசனை யேத்துமின்
பொருக்க நும்வினை போயறுங் காண்மினே. **#305**

இராவணனது ஆற்றலை அழித்த அழகனும், நீர் பரக்கின்ற பொன்னி மன்னுகின்ற பராய்த்துறையில் இருக்கை பொருந்திய ஈசனுமாகிய பெருமானை ஏத்துவீர்களாக! நும்வினைகள் விரைந்து போய்த் தொலையும்; காண்பீர்களாக.

திருவானைக்கா

திருவானைக்கா

திருவானைக்கா, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சம்புகேசுவரர்.
தேவியார் : அகிலாண்டநாயகியம்மை.

கோனைக் காவிக் குளிர்ந்த மனத்தராய்த்
தேனைக் காவியுண் ணார்சில தெண்ணர்கள்
ஆனைக் காவிலம் மானை யணைகிலார்
ஊனைக் காவி யுழிதர்வ ரூமரே. **#306**

தௌவற்ற சிலர், உலகிற்கெல்லாம் அரசனாகிய சிவபெருமானைச் சுமத்தலாற் குளிர்ந்த மனத்தை உடையராய் அச் சிவானந்தத் தேனை உண்ணாதவராயுள்ளனர்; சில ஊமர்கள் ஆனைக்காவில் எழுந்தருளியுள்ள தலைவனை அணையாதவர்களாய்த் தம் தசைபொதிந்த உடலை வீணே சுமந்து திரிவர்!

திருவானைக்கா

திருகு சிந்தையைத் தீர்த்துச்செம் மைசெய்து
பருகி யூறலைப் பற்றிப் பதமறிந்
துருகி நைபவர்க் கூனமொன் றின்றியே
அருகு நின்றிடும் ஆனைக்கா வண்ணலே. **#307**

மாறுபடும் மனத்தினை மாறுபாடு நீக்கிச் செம்மைப்படுத்திப் பருகுதற்குரிய தேன் போல் இனிக்கும் பெருமானைப்பற்றிச் செவ்வியறிந்து உருகி நைபவர்க்கு வரக்கடவனவாகிய குற்றங்கள் இல்லாததோடு, அவர்கள் அருகு நின்று ஆனைக்காவின் அண்ணலும் அருள்புரிவன்.

திருவானைக்கா

துன்ப மின்றித் துயரின்றி யென்று நீர்
இன்பம் வேண்டி லிராப்பக லேத்துமின்
என்பொன் ஈச னிறைவனென் றுள்குவார்க்
கன்ப னாயிடும் ஆனைக்கா வண்ணலே. **#308**

என் பொன்போல்வான் என்றும், ஈசன் என்றும், இறைவன் என்றும் உள்ளத்தே உள்குவார்கட்கு ஆனைக்காவின் அண்ணல் அன்பனாய் அருள்புரிவான் ஆதலால், துன்பமும் துயரமும் இன்றி என்றும் குன்றாத இன்பத்தை நீர் விரும்புவீரேயாயின். இரவு பகல் எப்போதும்

வழிபடுவீராக.

திருவானைக்கா

நாவால்நன்று நறுமலர்ச் சேவடி
ஓவா தேத்தி யுளத்தடைத் தார்வினை
காவா யென்றுதங் கைதொழு வார்க்கெலாம்
ஆவா என்றிடும் ஆனைக்கா வண்ணலே. **#309**

நறுமணம் வீசுகின்ற சிவந்த தன் இணையடிகளை நாவினால் பெரிதும் இடைவிடாது ஏத்தி உள்ளத்தே அடைத்தவர்களுக்கும், "வினைத் துன்பங்களினின்று எம்மைக் காப்பாயாக" என்று கைதொழுவார்களுக்கும், ஆனைக்காவின் அண்ணல் ஆவா என்று அபயம் கொடுத்தருளும் இயல்பினன் ஆவன்.

திருவானைக்கா

வஞ்ச மின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொ லின்றி விலகுமின் வீடுற
நைஞ்சு நைஞ்சுநின் றுள்குளிர் வார்க்கெலாம்
அஞ்ச லென்றிடும் ஆனைக்கா வண்ணலே. **#310**

ஆனைக்காவின் அண்ணலை வஞ்சமின்றி நாள் தோறும் வழிபடுவீர்களாக; வெவ்விய சொற்களினின்றும் விலகுவீர்களாக; வீட்டின்பம் பெறும் பொருட்டு நைந்து நைந்து நின்று உள்ளம் குளிர்வார்க்கெல்லாம் "அஞ்சேல்" என்று அருள்பவன் அப்பெருமானேயாவன்.

திருவானைக்கா

நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே
படைகள் போல்வரும் பஞ்சமா பூதங்கள்
தடையொன் றின்றியே தன்னடைந் தார்க்கெலாம்
அடைய நின்றிடும் ஆனைக்கா வண்ணலே. **#311**

உலகியலையே மெய்யென்று கருதும் பொய்யாகிய நாத்திகம் பேசாமல், படைகள் போல் வருகின்ற ஐந்து பெரும் பூதங்களால் வரும் தடைகள் ஒன்றும் இன்றித் தன்னை யடைந்த அன்பர்களுக்கெல்லாம் அடையும் பொருளாக நிற்பவன் ஆனைக் காவின் அண்ணலே ஆவன்.

திருவானைக்கா

ஒழுகு மாடத்து ளொன்பது வாய்தலுங்
கழுக ரிப்பதன் முன்னங் கழலடி
தொழுது கைகளால் தூமலர் தூவிநின்

றழும வர்க்கன்ப னானைக்கா வண்ணலே. **#312**
ஒன்பது வாயில்களும் ஒழுகுகின்ற மாடமாகிய உடம்பினைக் கழுகுகள் அரிக்கும் இறுதிக்காலம் வருதற்கு முன்பே தன் இணையடிகளைக் கைகளால் தொழுது தூய மலர்களால் தூவி நின்று அழுகின்ற அன்பர்கட்கு அன்பனாய் நின்று அருள்பவன் ஆனைக்காவின் அண்ணலே ஆவன்.

<u>திருவானைக்கா</u>

உருளும் போதறி வொண்ணா வுலகத்தீர்
தெருளுஞ் சிக்கெனத் தீவினை சேராதே
இருள றுத்தநின் றீசனென் பார்க்கெலாம்
அருள்கொ டுத்திடும் ஆனைக்கா வண்ணலே. **#313**
உலகவாழ்வினை உதறி இறக்கும் போது இது என்று அறிய இயலாத உலகத்தவர்களே! தௌவடைவீர்களாக; தீவினையைச் சேராமல் விரைந்து, இருள் அறுத்து நின்று "ஈசனே" என்று உரைப்பவர்க்கெல்லாம் அருள்கொடுப்பவன் ஆனைக்காவின் அண்ணலே ஆவன்.

<u>திருவானைக்கா</u>

நேச மாகி நினைமட நெஞ்சமே
நாச மாய குலநலஞ் சுற்றங்கள்
பாச மற்றுப் பராபர வானந்த
ஆசை யுற்றிடும் ஆனைக்கா வண்ணலே. **#314**
அறியாமை உடைய நெஞ்சமே! உன்னைக் கெடுக்கும் இயல்புடையனவாகிய குலம், நலம், சுற்றம், பாசம் முதலியவை அற்று மிக உயர்ந்த ஆனந்த ஆசை உற்று, ஆனைக்காவின் அண்ணலை நேசமாகி நினைந்து உய்வாயாக.

<u>திருவானைக்கா</u>

ஓத மாகடல் சூழிலங் கைக்கிறை
கீதங் கின்னரம் பாடக் கெழுவினான்
பாதம் வாங்கிப் பரிந்தருள் செய்தங்கோர்
ஆதி யாயிடும் ஆனைக்கா வண்ணலே. **#315**
ஆனைக்காவின் அண்ணல், அலைகடல் சூழ்ந்த இலங்கைக்கிறைவனாகிய இராவணன் கீதத்தைக் கின்னரம் போல் மிகப் பொருந்திப்பாடத் தன் திருப்பாதத்துத் திருவிரல் ஒன்றினால் முன்னம் ஊன்றியவர் பின்னவற்குப் பரிந்து அருள் செய்து ஆதி ஆயினர்.

திருப்பூந்துருத்தி

திருப்பூந்துருத்தி

திருப்பூந்துருத்தி, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : புஷ்பவனநாதர்.
தேவியார் : அழகாலமர்ந்தநாயகி.

கொடிகொள் செல்வ விழாக்குண லைஅறாக்
கடிகொள் பூம்பொழிற் கச்சியே கம்பனார்
பொடிகள் பூசிய பூந்துருத் திந்நகர்
அடிகள் சேவடிக் கீழ்நா மிருப்பதே. **#316**

பல கொடிகள் எடுக்கப்பெற்றதும், திருவிழாக்களினால் உண்டாகும் ஆரவாரங்கள் அறாததும், மணமிக்க பூம்பொழில்கள் சூழ்ந்ததுமாகிய திருக்கச்சியேகம்பரும் திருநீற்றுப் பொடியினைப் பூசிய பூந்துருத்தி நகரத்து எழுந்தருளியிருக்கும் சுவாமியும் ஆகிய பெருமான் சேவடிக்கீழ் நாமிருக்கப் பெற்றோம்.

திருப்பூந்துருத்தி

ஆர்த்த தோலுடை கட்டியோர் வேடனாய்ப்
பார்த்த னோடு படைதொடு மாகிலும்
பூத்த நீள்பொழிற் பூந்துருத் திந்நகர்த்
தீர்த்தன் சேவடிக் கீழ்நா மிருப்பதே. **#317**

தோல் உடையினை ஆர்த்துக்கட்டி ஒரு வேடவடிவம் கொண்டு அருச்சுனனோடு படைக்கலந் தொடுக்கு மாயினும், பூத்த மலர்கள் நிறைந்த நீள்பொழில்களை உடைய பூந்துருத்தி நகரத்துத் தீர்த்தவடிவாய் உள்ள பெருமான் சேவடிக்கீழ் நாமிருக்கப் பெற்றோம்.

திருப்பூந்துருத்தி

மாதி னைமதித் தானொரு பாகமாக்
காத லாற்கரந் தான்சடைக் கங்கையைப்
பூத நாயகன் பூந்துருத் திந்நகர்க்
காதி சேவடிக் கீழ்நா மிருப்பதே. **#318**

உமையம்மையை ஒரு பாகமாக மதித்து ஏற்றவனும், சடையின்கண் கங்கையைக் காதலால் ஒளித்துக் கொண்டவனும், பூதங்களுக்குத் தலைவனும், பூந்துருத்தி நகரில் எழுந்தருளியிருக்கும் முதல்வனும் ஆகிய பெருமான் சேவடிக்கீழ் நாமிருக்கப் பெற்றோம்.

திருப்பூந்துருத்தி

மூவ னாய்முத லாயிவ் வுலகெலாம்
காவ னாய்க்கடுங் காலனைக் காய்ந்தவன்
பூவின் நாயகன் பூந்துருத் திந்நகர்த்
தேவன் சேவடிக் கீழ்நா மிருப்பதே. **#319**
முப்பெருங்கடவுளராயும், அவருள் முதல்வனாயும்,
இவ்வுலகெல்லாவற்றையும் காப்பவனாயும், கடிய காலனைக்
காய்ந்தவனாயும், அன்பானினைவாரது உள்ளக் கமலத்தின்கண்
தலைவனாக எழுந்தருளியிருப்பவனாயும் உள்ள பூந்துருத்தி நகரின்
தேவன் சேவடிக்கீழ் நாமிருக்கப் பெற்றோம்.

திருப்பூந்துருத்தி

செம்பொ னேயொக்கும் மேனியன் தேசத்தில்
உம்ப ராரவ ரோடங் கிருக்கிலும்
பொன்பொன் னார் செல்வப் பூந்துருத் திந்நகர்
நம்பன் சேவடிக் கீழ்நா மிருப்பதே. **#320**
நம் தேசத்தில் இருப்பினும் உம்பர் உள்ள தேவருலகத்தவரோடு
இருப்பினும், பொன்னும் பொலிவார்ந்த செல்வமும் உள்ள பூந்துருத்தி
நகரத்து நம்மவனாகவும், செம்பொன்னையே யொத்த
திருமேனியினனாகவும் வீற்றிருக்கும் பெருமான் சேவடிக்கீழ்
நாமிருக்கப் பெற்றோம்.

திருப்பூந்துருத்தி

வல்லம் பேசி வலிசெய்மூன் றூரினைக்
கொல்லம் பேசிக் கொடுஞ்சரம் நூறினான்
புல்லம் பேசியும் பூந்துருத் திந்நகர்ச்
செல்வன் சேவடிக் கீழ்நா மிருப்பதே. **#321**
வன்மைபேசி வன்மையான கொடிய செயல்களையே செய்து திரிந்த
திரிபுரங்களைக் கொல்ல எண்ணிப் பேசிக் கொடிய அம்பால் அழித்த
பூந்துருத்தி நகர்ச்செல்வன் புன்மை பேசினும் அவன் திருவடிக்கீழேயே
இருத்தலை எண்ணுவோம்.

திருப்பூந்துருத்தி

ஒருத்த னாயுல கேழுந் தொழநின்று
பருத்த பாம்பொடு பால்மதி கங்கையும்
பொருத்த னாகிலும் பூந்துருத் திந்நகர்த்
திருத்தன் சேவடிக் கீழ்நா மிருப்பதே. **#322**
ஒப்பற்றவனாய் ஏழு உலகங்களும் தொழ நின்று, பெரிய பாம்பும்,
மதியும், கங்கையும் சடையிற் பொருந்தியவனாய்ப் பூந்துருத்தி நகரத்தே

எழுந்தருளியிருக்கும் திருத்தமானவனின் சேவடிக்கீழ் நாமிருக்கப் பெற்றோம்.

<u>திருப்பூந்துருத்தி</u>

அதிரர் தேவ ரியக்கர் விச் சாதரர்
கருத நின்றவர் காண்பரி தாயினான்
பொருத நீர்வரு பூந்துருத் திந்நகர்ச்
சதுரன் சேவடிக் கீழ்நா மிருப்பதே. **#323**

அதிரர், தேவர் இயக்கர், விச்சாதரர் முதலியவர்கள் கருதுமாறு நின்ற அனைவரும் காண்டலரிய காட்சியானும், நீர் இருகரையும் பொருதுவருகின்ற பூந்துருத்தி நகரத்து எழுந்தருளியிருப்பவனும், சரியை முதலிவற்றில் நான்காவதாகிய ஞானத்தாலே எய்துதற்குரியவனும் ஆகிய பெருமானின் சேவடிக்கீழ் நாம் இருக்கப் பெற்றோம்.

<u>திருப்பூந்துருத்தி</u>

செதுக றாமனத் தார்புறங் கூறினும்
கொதுக றாக்கண்ணி னோன்பிகள் கூறினும்
பொதுவி னாயகன் பூந்துருத் திந்நகர்க்
கதிபன் சேவடிக் கீழ்நா மிருப்பதே. **#324**

குற்றம் நீங்காத மனத்தினர் புறம் பேசினும் கொசு நீங்காத பீளைசார்ந்த கண்களையுடைய புறச்சமய நோன்பிகள் இழித்துக் கூறினும் மன்றவாணனாகிய பூந்துருத்திப் பெருமான் சேவடிக்கீழேயே நாம் இருப்போம்.

<u>திருப்பூந்துருத்தி</u>

துடித்த தோள்வலி வாளரக் கன்தனைப்
பிடித்த கைஞ்ஞெரிந் துற்றன கண்ணெலாம்
பொடிக்க வூன்றிய பூந்துருத் திந்நகர்ப்
படிகொள் சேவடிக் கீழ்நா மிருப்பதே. **#325**

தோளாற்றலும் மிக்க வாளாற்றலும் உடைய இராவணனை துடிக்குமாறும், அவன் பிடித்த கைகள் நெரிவுறுமாறும், கண்ணெலாம் நீர்த்துளிகள் பொடிக்குமாறும் திருவிரலால் ஊன்றிய பூந்துருத்தி நகரத்து எழுந்தருளியிருக்கும் பெருமானின் பெருமைமிக்க சேவடிக்கீழ் நாமிருக்கப் பெற்றோம்.

திருச்சோற்றுத்துறை

திருச்சோற்றுத்துறை

திருச்சோற்றுத்துறை, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தொலையாச்செல்வர்.
தேவியார் : ஒப்பிலாம்பிகை.

கொல்லை யேற்றினர் கோளர வத்தினர்
தில்லைச் சிற்றம் பலத்துறை செல்வனார்
தொல்லை யூழியர் சோற்றுத் துறையர்க்கே
வல்லை யாய்ப்பணி செய்மட நெஞ்சமே. **#326**

அறியாமையை உடைய நெஞ்சமே! முல்லை நிலத்துக்குரிய விடையேற்றினை உடையவரும், கொள்ளும் அரவத்தினை உடையவரும், தில்லைத் திருநகரில் சிற்றம்பலத்தே உறையும் அருட்செல்வரும், பழைய ஊழிக்காலத்தவரும் ஆகிய சோற்றுத் துறையர்க்கு வல்லமை உடையையாய்ப் பணிசெய்வாயாக.

திருச்சோற்றுத்துறை

முத்தி யாக வொருதவஞ் செய்திலை
அத்தி யாலடி யார்க்கொன் றளித்திலை
தொத்து நின்றலர் சோற்றுத் துறையர்க்கே
பத்தி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே. **#327**

அறியாமையை உடைய நெஞ்சமே! முத்திப் பேறெய்தற்பொருட்டு ஒரு தவமும் செய்திலை; அடியார்களுக்கு விருப்பத்தோடு ஒன்றையும் அளித்தாயில்லை; பூங்கொத்துகள் நின்று மலர்கின்ற சோற்றுத்துறையர்க்கு இனியாகிலும் பத்தியோடு பணிசெய்வாயாக.

திருச்சோற்றுத்துறை

ஒட்டி நின்ற உடலுறு நோய்வினை
கட்டி நின்ற கழிந்தவை போயறத்
தொட்டு நின்றுமச் சோற்றுத் துறையர்க்கே
பட்டி யாப்பணி செய்மட நெஞ்சமே. **#328**

அறியாமையை உடைய நெஞ்சமே! உடலை ஒட்டி நின்ற மிகுந்த நோய்களையும், பிணித்து நிற்கும் வினைகளையும் கழிந்து அறும்படியாகச் சோற்றுத்துறையர் திருவடிகளைத் தொட்டு நின்று பட்டியாகப் பணிசெய்வாயாக.

திருச்சோற்றுத்துறை

ஆதியா னண்ட வாணர்க் கருள்நல்கு
நீதி யானென்றும் நின்மல மேயென்றும்
சோதி யானென்றுஞ் சோற்றுத் துறையர்க்கே
வாதி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே. **#329**
அறியாமையை உடைய நெஞ்சமே! முதல்வனும் தேவர்களுக்கு
அருள்நல்கும் நீதியனும், நின்மலனும், சோதியனும் ஆகிய
சோற்றுத்துறைப் பெருமானுக்கு வேறொன்றும் வாளாவாதித்துக் காலம்
போக்காது, பணிசெய்வாயாக.

திருச்சோற்றுத்துறை

ஆட்டி னாயடி யேன்வினை யாயின
ஓட்டினாயொரு காதி விலங்குவெண்
தோட்டி னாயென்று சோற்றுத் துறையர்க்கே
நீட்டி நீபணி செய்மட நெஞ்சமே. **#330**
அறியாமையை உடைய நெஞ்சமே! அடியவனை ஆட்டுவிப்பானே
என்றும், வினைகளாயினவற்றை ஓட்டியவனே என்றும், திருச்செவியில்
விளங்குகின்ற சங்கவெண் தோட்டினையணிந்தவனே என்றும்
சோற்றுத்துறையனார்க்கு நீள நினைந்து நீ பணிசெய்வாயாக.

திருச்சோற்றுத்துறை

பொங்கி நின்றெழுந் தகடல் நஞ்சினைப்
பங்கி உண்டதோர் தெய்வமுண் டோசொலாய்
தொங்கி நீயென்றுஞ் சோற்றுத் துறையர்க்குத்
தங்கி நீபணி செய்மட நெஞ்சமே. **#331**
அறியாமையை உடைய நெஞ்சமே! பொங்கி நின்று எழுந்த
கடலினின்றும் விளைந்த ஆலகாலவிடத்தை விழுங்கி உண்ட ஒரு
தெய்வம் இத்தெய்வத்தையன்றி வேறு உண்டோ சொல்வாயாக!
அச்சோற்றுத்துறையர்க்கு மனம் தாழ்ந்து என்றும்தங்கி நீ
பணிசெய்வாயாக.

திருச்சோற்றுத்துறை

ஆணி போலநீ ஆற்ற வலியைகாண்
ஏணி போலிழிந் தேறியு மேங்கியும்
தோணி யாகிய சோற்றுத் துறையர்க்கே
பூணி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே. **#332**
அறியாமையை உடைய நெஞ்சமே! ஆணி போல நீ மிகவும் வலி
உடையையாயினும், ஏணியைப் போல் இழிந்தும் ஏறியும் இறங்கியும்
வாடுகின்றனை; பிறவிப் பெருங் கடற்குத் தோணியாகிய

சோற்றுத்துறையர்க்குப் பூணியாக நின்று பணிசெய்வாயாக.

திருச்சோற்றுத்துறை

பெற்ற மேறிலென் பேய்படை யாகிலென்
புற்றி லாடர வேயது பூணிலென்
சுற்றி நீயென்றுஞ் சோற்றுத் துறையர்க்கே
பற்றி நீபணி செய்மட நெஞ்சமே. **#333**

அறியாமையை உடைய நெஞ்சமே! ஏற்றினை ஏறினாலென்ன, பேய்கள் படைகளாகிலென்ன, புற்றினைப் பொருந்திய அரவை அணியாகப் பூண்டாலென்ன, நீ என்றும் சோற்றுத் துறையர்க்கே சுற்றியும் பற்றியும் பணிசெய்வாயாக.

திருச்சோற்றுத்துறை

அல்லி யானர வைந்தலை நாகணைப்
பள்ளி யானறி யாத பரிசெலாம்
சொல்லி நீயென்றுஞ் சோற்றுத் துறையர்க்கே
புல்லி நீபணி செய்மட நெஞ்சமே. **#334**

அறியாமையை உடைய நெஞ்சமே! தாமரையின் அகவிதழில் வீற்றிருக்கும் பிரமனும், ஆதிசேடனாகிய படுக்கையை உடையவனாகிய திருமாலும் அறிய முயன்றும் அறிய இயலாத தன்மையெல்லாம் சொல்லி, சோற்றுத்துறையர்க்கே நீ என்றும் பொருந்திப் பணிசெய்வாயாக.

திருச்சோற்றுத்துறை

மிண்ட ரோடு விரவியும் வீறிலாக்
குண்டர் தம்மைக் கழிந்துய்யப் போந்துநீ
தொண்டு செய்தென்றுஞ் சோற்றுத் துறையர்க்கே
உண்டு நீபணி செய்மட நெஞ்சமே. **#335**

அறியாமையை உடைய நெஞ்சமே! அமண்முண்டர்களோடு கலந்தும், பெருமையில்லாத குண்டர்களோடு பொருந்தியும் நின்ற நிலைமையினின்று நீங்கி உய்யப் போந்து நீ, சோற்றுத்துறையர்க்கே தொண்டுசெய்து என்றும் உண்டு பணி செய்வாயாக.

திருச்சோற்றுத்துறை

வாழ்ந்த வன்வலி வாளரக் கன்றனை
ஆழ்ந்து போயல றவ்விர லூன்றினான்
சூழ்ந்த பாரிடஞ் சோற்றுத் துறையர்க்குத்
தாழ்ந்து நீபணி செய்மட நெஞ்சமே. **#336**

அறியாமையை உடைய நெஞ்சமே! ஆற்றலோடு வாழ்ந்தவனாகிய இராவணன் ஆழ்ந்துபோய் அலறுமாறு விரலால் ஊன்றினவனாகிய பூதப்படை சூழ்ந்த சோற்றுத்துறைப் பெருமானுக்கு மனமொழிமெய்களாற்றாழ்ந்து பணிசெய்வாயாக.

திருநெய்த்தானம்

திருநெய்த்தானம்

திருநெய்த்தானம், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நெய்யாடியப்பர்.
தேவியார் : வாலாம்பிகையம்மை.

கொல்லி யான்குளிர் தூங்குகுற் றாலத்தான்
புல்லி யார்புரம் மூன்றெரி செய்தவன்
நெல்லி யானிலை யானநெய்த் தானனைச்
சொல்லி மெய்தொழு வார்சுடர் வாணரே. **#337**

கொல்லிமலையில் வீற்றிருப்பவனும், குளிர்ச்சி செறியும் குற்றாலத்தில் வீற்றிருப்பவனும், பகைவர் புரங்கள் மூன்றையும் எரிசெய்தவனும், திருநெல்லிக்காவில் உள்ளவனும், நிலைபெற்றிருக்கும் திருநெய்த்தானனுமாகிய பெருமானை வாயினாற் சொல்லி மெய்யினால் தொழுவார்கள் ஒளியோடு கூடி வாழும் உயர்நிலை பெறுவர்.

திருநெய்த்தானம்

இரவ னையிடு வெண்தலை யேந்தியைப்
பரவ னைப்படை யார்மதில் மூன்றையும்
நிரவ னைநிலை யானநெய்த் தானனைக்
குரவ னைத்தொழு வார்கொடி வாணரே. **#338**

இரத்தலை உடையவனும், வெண்தலை ஏந்தியவனும், எல்லோராலும் பரவப்படுபவனும், படையுடையார் முப்புரங்களையும் எரியால் நிரந்தவனும், ஞானாசாரியனும் நிலைபெற்றிருக்கும் திருநெய்த்தான்னுமாகிய பெருமானைத் தொழுவார்கள் இவ்வுலகத்து நன்கு வாழ்வோராவர்.

திருநெய்த்தானம்

ஆனிடை யைந்தும் ஆடுவ ராரிருள்
கானிடை நடம் ஆடுவர் காண்மினோ
தேனிடை மலர் பாயுநெய்த் தானனை
வானி டைத்தொழு வார்வலி வாணரே. **#339**

பஞ்சகவ்வியங்களை விரும்பித் திருமஞ்சனம் கொள்பவரும், நள்ளிருளில் இடுகாட்டிடை நடம் ஆடுபவரும் ஆவர்; காண்பீராக! மலரிடைத் தேன் பொழிந்து பாயும் திருநெய்த்தானனை வானிடைத்

தொழுவார்கள் வலிமையோடு வாழ்பவராவர்.

திருநெய்த்தானம்

விண்ட வர்புர மூன்றும்வெண் ணீறெழக்
கண்ட வன்கடி தாகிய் நஞ்சினை
உண்ட வன்னொளி யானநெய்த் தானனைத்
தொண்ட ராய்த்தொழு வார்சுடர் வாணரே. **#340**

பகைவர் புரமூன்றையும் வெள்ளிய சாம்பலாகியெழுமாறு கண்டு எரித்தவனும், கடிதாகிய ஆலகாலத்தை உண்ட வனும் ஆகிய ஒளியான ருநெய்த்தானனைத் தொண்டராகித் தொழுவார் ஒளியோடு கூடி வாழ்பவராவர்.

திருநெய்த்தானம்

முன்கை நோவக் கடைந்தவர் நிற்கவே
சங்கி யாது சமுத்திர நஞ்சுண்டான்
நங்கை யோடு நவின்றநெய்த் தானனைத்
தங்கை யால்தொழு வார்தலை வாணரே. **#341**

தம் முன்கைகள் நோகுமாறு கடைந்த தேவர்களும் அசுரர்களும் அஞ்சிநிற்கச் சிறிதும் ஐயுறாது கடல் நஞ்சுண்டு அனைவரையும் காத்தவனும், உமாதேவியோடு விரும்பி எழுந்தருளியிருப்போனுமாகிய திருநெய்த்தானனைத் தம்கைகளால் தொழுவார் தலைமைத் தன்மையோடு கூட வாழ்பவராவர்.

திருநெய்த்தானம்

சுட்ட நீறுமெய் பூசிச் சுடலையுள்
நட்ட மாடுவர் நள்ளிருள் பேயொடே
சிட்டர் வானவர் தேருநெய்த் தானனை
இட்ட மாய்த்தொழு வாரின்ப வாணரே. **#342**

உலகெல்லாவற்றையும் சுட்ட திருவெண்ணீற்றினைத் திருமேனியிற்பூசி, நள்ளிருளில் பேய்களோடு சுடுகாட்டில் நடம் ஆடுபவரும், உயர்ந்த முனிவர்களும் தேவர்களும் ஆராய்ந்து காணும் திருநெய்த்தானரும் ஆகிய பெருமானை விருப்பமாகத் தொழுவார் இன்பத்தோடு கூடி வாழ்பவராவர்.

திருநெய்த்தானம்

கொள்ளித் தீயெரி வீசிக் கொடியதோர்
கள்ளிக் காட்டிடை யாடுவர் காண்மினோ
தெள்ளித் தேறித் தெளந்துநெய்த் தானனை

உள்ளத் தால்தொழு வாரும்பர் வாணரே. **#343**
தீக்கொள்ளியினின்று எரிவீசிக் கொடிதாகிய கள்ளிக்காட்டில் ஆடும் இயல்பினர் காண்பீராக; தௌவு அடைந்து தேறிப் பின்னும் தௌந்து அத்திருநெய்த்தானரை உள்ளத்தால் தொழுவார் தேவர்களோடு ஒத்த பேரின்பம் பொருந்தி வாழ்பவராவர்.

திருநெய்த்தானம்

உச்சி மேல்விளங் கும்மிள வெண்பிறை
பற்றி யாடர வோடுஞ்ச டைப்பெய்தான்
நெற்றி யாரழல் கண்டநெய்த் தானனைச்
சுற்ற மெய்தொழு வார்சுடர் வாணரே. **#344**
சென்னியில் உச்சியின்மேல் விளங்கும் இள வெண்பிறையும் பற்றியாட்டற்குரிய பாம்பும் சடையின்கண் வைத்தவனும், நெற்றிக்கண்ணனுமாகிய திருநெய்த்தானனைச் சுற்றி வந்து மெய்யால் தொழுவார் ஒளி பொருந்தி வாழ்பவராவர்.

திருநெய்த்தானம்

மாலொ டும்மறை யோதிய நான்முகன்
காலொ டும்முடி காண்பரி தாயினான்
சேலொ டுஞ்செருச் செய்யுநெய்த் தானனை
மாலொ டுந்தொழு வார்வினை வாடுமே. **#345**
திருமாலோடும் வேதங்களை ஓதிய பிரமனும் திருவடியும் திருமுடியும் காண்டற்கரியனாயினானும். சேல்மீன்கள் தம்மிற்பொரும் திருநெய்த்தானத்தில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய பெருமானை அன்புமயக்கத்தால் தொழுவார்களின் வினைகள் வாடிக்கெடும்.

திருநெய்த்தானம்

வலிந்த தோள்வலி வாளரக் கன்றனை
நெருங்க நீள்வரை யூன்றுநெய்த் தானனார்
புரிந்து கைந்நரம் போடிசை பாடலும்
பரிந்த னைப்பணி வார்வினை பாறுமே. **#346**
வலிமை பெற்ற தோளாற்றல் உடைய இராவணனை நீண்டவரை நெருங்கும்படித் திருவிரலையூன்றிய திருநெய்த்தானனாரை விரும்பி கைநரம்புகளோடு இசையினால் அவன் பாடுதலும் அதற்கு விரும்பிய பெருமானைப் பணிவார்களின் வினைகள் கெடும்.

திருப்பழனம்

திருப்பழனம்

திருப்பழனம், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஆபத்சகாயர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

அருவ னாய்அத்தி யீருரி போர்த்துமை
உருவ னாயொற்றி யூர்பதி யாகிலும்
பருவ ரால்வயல் சூழ்ந்த பழனத்தான்
திருவி னாற்றிரு வேண்டுமித் தேவர்க்கே. **#347**

அருவத் திருமேனியுடையவனாய் யானையின் ஈரப்பட்ட உரியைப் போர்த்தவனாய். உமையை ஒரு பாகத்தில் உடையவனாய் ஒற்றியூரைத் தன்பதியாக் கொண்டவன் ஆயினும், பருத்த வரால் மீன்கள் நிறைந்த வயல்கள் சூழ்ந்த பழனம் என்னும் தலத்தினுள்ளான் அருட்செல்வத்தினால் இத்தேவர்களுக்குச் செல்வம் பெருகுதலை விரும்பும்.

திருப்பழனம்

வையம் வந்து வணங்கி வலங்கொளும்
ஐய னையறி யார்சிலர் ஆதர்கள்
பைகொ ளாடர வார்த்த பழனன்பால்
பொய்யர் காலங்கள் போக்கிடு வார்களே. **#348**

படங்கொண்ட பாம்பை அரையில் ஆர்த்துக் கட்டிய பழனத்தலத்து இறைவனும், உலகத்தினுள்ளார் எல்லாரும் வந்து வணங்கி வலம் கொள்ளுதற்குரிய தலைவனும் ஆகிய பெருமானைச் சில குருடர்கள் அறியார்; சில பொய்யர்கள் வணங்காது வீண் காலங்கள் போக்குவர்.

திருப்பழனம்

வண்ண மாக முறுக்கிய வாசிகை
திண்ண மாகத் திருச்சடைச் சேர்த்தியே
பண்ணு மாகவே பாடும் பழனத்தான்
எண்ணும் நீர் அவ னாயிர நாமமே. **#349**

அழகுபெற முறுக்கப்பெற்ற வட்டமாகிய திருச்சடையிற் சேர்த்து உறுதியாகக் கட்டி முடித்துப் பண் பாடும் இறைவனாகிய பழனத்தலத்துப் பெருமானின் ஆயிரம்நாமங்களை நீர் எண்ணுவீராக.

திருப்பழனம்

மூர்க்கப் பாம்பு பிடித்தது மூச்சிட
வாக்கப் பாம்பினைக் கண்ட துணிமதி
பாக்கப் பாம்பினைப் பற்றும் பழனத்தான்
தார்க்கொண் மாலை சடைக்கணிந் திட்டதே. **#350**

பிடித்த கொடுமையை உடைய பாம்பு நெடுமூச்சுவிடவும், அப்பாம்பினைக்கண்ட பிறைமதி நடுங்கிக் காண அப் பாம்பைப் பற்றியாடுபவனாகிய கொன்றைத்தாரும் மாலையும் உடைய பழனத்தலத்துப் பெருமான் இவற்றைச் சடைக்கணிந்திட்டது என்னையோ?

திருப்பழனம்

நீல முண்ட மிடற்றினன் நேர்ந்ததோர்
கோல முண்ட குணத்தால் நிறைந்ததோர்
பாலு முண்டு பழனன்பா லென்னிடை
மாலு முண்டிறை யென்றன் மனத்துளே. **#351**

நேர்ந்ததாகிய கோலமாக நஞ்சினை உண்ட குணத்தால் நிறைந்த நீலகண்டனும், பழனத்தலத்தின் கண் உள்ள இறைவனும் ஆகிய பெருமானிடத்து என்றன் மனத்துள் சிறிது மயக்கம் உளதாகின்றது.

திருப்பழனம்

மந்த மாக வளர்பிறை சூடியோர்
சந்த மாகத் திருச்சடை சாத்துவான்
பந்த மாயின தீர்க்கும் பழனத்தான்
எந்தை தாய்தந்தை யெம்பெரு மானுமே. **#352**

பெருமை தரும்படியாக வளர்பிறையைச் சூடி ஒரு சந்தமாகத் திருச்சடை சாத்துவானும், பந்தமாயினவற்றைத் தீர்ப்பானும் ஆகிய திருப்பழனத்து இறைவன் எந்தையும், தாயும், தந்தையும், எம்பெருமானும் ஆவன்.

திருப்பழனம்

மார்க்க மொன்றறி யார்மதி யில்லிகள்
பூக்க ரத்திற் புரிகிலர் மூடர்கள்
பார்க்க நின்று பரவும் பழனத்தான்
தாட்க ணின்று தலைவணங் கார்களே. **#353**

எல்லோரும் பார்க்க நின்று பழனத்தின்கண் பரவுவார்க்கு அருள் வழங்கும் இறைவனின் திருவடிக்கண் நின்று தலைவணங்காதவர்கள், அறிவிலிகளாகி வழியொன்றறியாதவர்களும், பூக்களைக்கொண்டு கரத்தால் தொழ விழையாத மூடர்களும் ஆவர்.

திருப்பழனம்

ஏறி னாரிமை யோர்கள் பணிகண்டு
தேறு வாரலர் தீவினை யாளர்கள்
பாறி னார்பணி வேண்டும் பழனத்தான்
கூறி னானுமை யாளொடுங் கூடவே. **#354**

இமையோர்களாகிய தேவர்கள் பணி பல கண்டு தம் பதவியினின்றும் மேலே உயர்ந்தது கண்டும். தீவினையாளர்கள் தெளவடைந்தாரல்லர். இழிந்தவராய மக்கள் பணியையும் விரும்பும் பழனத்தலத்து இறைவன் உமையாளொடுங் கூடி ஒரு கூறனாயினன்.

திருப்பழனம்

சுற்று வார்தொழு வார்சுடர் வண்ணன்மேல்
தெற்றி னார்திரி யும்புரம் மூன்றெய்தான்
பற்றி னார்வினை தீர்க்கும் பழனனை
எற்றி னான்மறக் கேனெம் பிரானையே. **#355**

திரியும் புரங்கள் மூன்றையும் எய்தவனும், பற்றியவர்களுடைய வினைகளைத் தீர்க்கும் பெருமானுமாகிய பழனத்தலத்து இறைவன் சுற்றுவாரையும் தொழுவாரையும் மேலே உயர்த்தும் ஒளிவண்ணனாயுள்ளனன்; எம்பெருமானை எதனால் அடியேன் மறக்கக்கூடும்?

திருப்பழனம்

பொங்கு மாகடல் சூழிலங் கைக்கிறை
அங்க மான இறுத்தருள் செய்தவன்
பங்க னென்றும் பழன னுமையொடும்
தங்கன் தாளடி யேனுடை யுச்சியே. **#356**

பழனத்தலத்து இறைவன், பொங்குகின்ற பெருங் கடல் சூழ்ந்த இலங்கைக்கரசனாம் இராவணனது அங்க மானவற்றை இறுத்து அருள்செய்தவனும், உமையொருபங்கனும், அடியேனுடைய உச்சியிலே தன் தாளிணைகளைத் தங்குமாறு செய்தவனும் ஆவான்.

திருச்செம்பொன்பள்ளி

திருச்செம்பொன்பள்ளி

திருச்செம்பொன்பள்ளி, திருக்குறுந்தொகை,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : திருவதிகைநாயகி.

கான றாத கடிபொழில் வண்டினம்
தேன றாத திருச்செம்பொன் பள்ளியான்
ஊட றாததோர் வெண்டலை யிற்பலி
தான றாததோர் கொள்கையன் காண்மினே. **#357**

மணம் நீங்காத விளக்கம் உடைய பொழில்களில் வண்டினங்களின் தேன் நீங்காத திருச்செம்பொன் பள்ளி இறைவன், தசைவிட்டு நீங்காத ஒரு வெண்தலையில் பலியினைத் தான் ஏற்றலினின்றும் நீங்காத இயல்புடையவன்; காண்பீர்களாக.

திருச்செம்பொன்பள்ளி

என்பு மாமையும் பூண்டங் குழிதர்வர்க்
கன்பு மாயிடும் ஆயிழை யீரினிச்
செம்பொன் பள்ளியு ளான்சிவ லோகனை
நம்பொன் பள்ளியுள் கவினை நாசமே. **#358**

எலும்பும், ஆமையும் அணிந்து திரிதருகின்ற செம்பொன்பள்ளி இறைவனும் சிவலோகனுமாகிய பெருமானை அன்பு செய்யும் ஆராய்ந்த இழையை அணிந்த பெண்களே! அப் பெருமானை நம் அழகிய மனக்கோயிலின்கண்ணே நினைந்தால் நம் வினைகள் நாசமாகும்.

திருச்செம்பொன்பள்ளி

வேறு கோலத்த ராணலர் பெண்ணலர்
கீறு கோவண வைதுகி லாடையர்
தேற லாவதொன் றன்றுசெம் பொன்பள்ளி
ஆறு சூடிய அண்ண லவனையே. **#359**

வேறுகோலத்தோடு கூடியவரும், ஆண், பெண் அல்லாதவரும், கிழித்த கோவணத்துகிலாடையுடையவரும், செம்பொன் பள்ளியில் வீற்றிருந்து கங்கையாளைச் சடையிற் சூடிய அண்ணலாகிய அப்பெருமானைத் தெளத்துகொள்ளுதல் யார்க்கும் எளிதாம் ஒன்றன்று.

திருச்செம்பொன்பள்ளி

அருவ ராததோர் வெண்டலை யேந்திவந்
திருவ ராயிடு வார்கடை தேடுவார்
தெருவெ லாமுழல் வார்செம்பொன் பள்ளியார்
ஒருவர் தாம்பல பேருளர் காண்மினே. **#360**
அருவருப்புக்கொள்ளாது ஒரு வெண்டலையை ஏந்திவந்து
தெருவெல்லாம் உழல்வார் செம்பொன் பள்ளி இறைவர்; திருமாலும்
பிரமனுமாகிய இருவரால் திருமுடி, திருவடிகளின் எல்லை தேடப்பட்ட
அவ்வொருவர் பலபெயர்களும் கொண்டு திகழ்வர்; காண்பீர்களாக.

<u>திருச்செம்பொன்பள்ளி</u>

பூவு லாஞ்சடை மேற்புனல் சூடினான்
ஏவ லாலெயின் மூன்று மெரித்தவன்
தேவர் சென்றிறைஞ் சுஞ்செம்பொன் பள்ளியான்
மூவ ராய்முத லாய்நின்ற மூர்த்தியே. **#361**
தேவர்கள் சென்று இறைஞ்சுகின்ற செம்பொன் பள்ளி இறைவர்
கொன்றைப்பூப் பொருந்திய சடையில் கங்கையைச் சூடியவரும்,
ஓரம்பினால் முப்புரம் எரித்தவரும், மூவர்க்கும் முதலாய் நின்ற
மூர்த்தியும் ஆவர்.

<u>திருச்செம்பொன்பள்ளி</u>

சலவ ராயொரு பாம்பொடு தண்மதிக்
கலவ ராவதின் காரண மென்கொலோ
திலக நீண்முடி யார்செம்பொன் பள்ளியார்
குலவில் லாலெயில் மூன்றெய்த கூத்தரே. **#362**
பெருமைக்குரிய வில்லால் மூன்றெயில்களை எய்த கூத்தரும் ,
பொட்டணிந்தவரும், நீண்ட சடாமுடி உடையவருமாகிய
செம்பொன்பள்ளி இறைவர் கங்கையைச் சூடியவராய், பாம்பும்
குளிர்பிறையும் கலந்தவராய் ஆவதன் காரணம் என்னையோ?.

<u>திருச்செம்பொன்பள்ளி</u>

கைகொள் சூலத்தர் கட்டுவாங் கத்தினர்
மைகொள் கண்டத்த ராகி யிருசுடர்
செய்ய மேனிவெண் ணீற்றர்செம் பொன்பள்ளி
ஐயர் கையதோ ரைந்தலை நாகமே. **#363**
கையிற்கொண்ட சூலம் உடையவரும், கட்டு வாங்கத்தை உடையவரும்,
திருநீலகண்டரும் ஆகி இருசுடர்களைப் போன்று சிவந்த திருமேனியும்
அதிற்பூசிய வெண்ணீற்றினருமாகிய செம்பொன்பள்ளித் தலைவர்
கையின்கண் உள்ளது ஓர் ஐந்தலை நாகமாகும்.

திருச்செம்பொன்பள்ளி

வெங்கண் நாகம் வெருவுற ஆர்த்தவர்
பைங்கண் ஆனையி னீருரி போர்த்தவர்
செங்கண் மால்விடை யார்செம்பொன் பள்ளியார்
அங்க ணாயடைந் தார்வினை தீர்ப்பரே. **#364**

வெவ்விய கண்ணையுடைய நாகத்தினை அஞ்சும்படி ஆர்த்துக்கட்டியவரும், பசுமையான கண்ணையுடைய ஆனையின் பச்சைத்தோலைப் போர்த்தவரும், செங்கண்ணையுடைய திருமாலைத் தமக்கு விடையாக உடையவரும் ஆகிய செம்பொன்பள்ளி இறைவர் தம்மை அடைக்கலமாக அடைந்தவர்களின் வினைகளைத் தீர்ப்பர்.

திருச்செம்பொன்பள்ளி

நன்றி நாரணன் நான்முக னென்றிவர்
நின்ற நீண்முடி யோடடி காண்புற்றுச்
சென்று காண்பரி யான்செம்பொன் பள்ளியான்
நின்ற சூழலில் நீளெரி யாகியே. **#365**

செம்பொன்பள்ளி இறைவர் நன்மை மிக்க நாரணனும், பிரமனும் ஆகிய இருவரும் நிலைபெற்ற திருமுடியையும் திருவடியையும் காணத்தொடங்கிச் சென்றும் காண்டலரியவராய் நின்ற அச்சூழ்நிலையில் நீண்டு அழலுருவாயினர்.

திருச்செம்பொன்பள்ளி

திரியும் மும்மதில் செங்கணை யொன்றினால்
எரிய வெய்தன லோட்டி யிலங்கைக்கோன்
நெரிய வூன்றியிட் டார்செம்பொன் பள்ளியார்
அரிய வான மவரருள் செய்வரே. **#366**

செம்பொன்பள்ளி இறைவர். திரிகின்ற மும்மதில்களைச் செங்கணை ஒன்றினால் எரியுமாறு எய்து அனலினால் ஓட்டி, இராவணன் நெரியுமாறு தம் திருவிரல் ஒன்றால் ஊன்றியவர்; தம்மையடைந்த அன்பர்க்கு அரிதாகிய வீட்டுலக இன்பத்தை அப்பெருமான் அருள்வர்.

திருக்கடவூர்வீரட்டம்

திருக்கடவூர்

திருக்கடவூர்வீரட்டம், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசுவரர்.
தேவியார் : மலர்க்குழல்மின்னம்மை.

மலைக்கொ ளானை மயக்கிய வல்வினை
நிலைக்கொ ளானை நினைப்புறு நெஞ்சமே
கொலைக்கை யானையுங் கொன்றிடு மாதலால்
கலைக்கை யானைகண் டீர்கட வூரரே. **#367**

திருக்கடவூரில் மேவும் பெருமான், மலையில் வாழும் யானை போன்று மயக்கம் செய்த கொடிய வினைகளுக்கே நிலைக்களமாய் யானைபோன்று அடங்காது பலவற்றையும் நினைக்கின்ற நல்வினைகளாகிய யானைகளையும் ஏனைய மதயானையையும் அழிக்கும் இயல்பினர் கலையின் பயனாகிய ஒழுக்கத்தால் அடையத்தகும் யானை போன்றவர்.

திருக்கடவூர்

வெள்ளி மால்வரை போல்வதொ ரானையார்
உள்ள வாறெனை யுள்புகு மானையார்
கொள்ள மாகிய கோயிலு ளானையார்
கள்ள வானைகண் டீர்கட வூரரே. **#368**

வெள்ளிமால்வரை போன்ற அயிராவணம் என்னும் ஒப்பற்ற ஆனையை உடையார்; உள்ளவாறே என் உள்ளத்தில் புகுகின்ற ஆனைபோல்வார்; கொள்ளும் இடமாகிய கோயிலுள் ஆனையாய் உள்ளவர்; ஆதலின் கடவூர்த்தலத்து இறைவர் கள்ளம் உடைய ஆனைபோல்வார்; காண்பீர்களாக.

திருக்கடவூர்

ஞான மாகிய நன்குண ரானையார்
ஊனை வேவ வுருக்கிய வானையார்
வேன லானை யுரித்துமை யஞ்சவே
கான லானைகண் டீர்கட வூரரே. **#369**

ஞானமாகிய நன்குணரத்தக்க ஆனையார்; உடற்பொதியைமேவுமாறு உருக்கி உள்ளொளிபெருக்கும் ஆனையார்; ஆனையை உமாதேவியார் அஞ்சுமாறு உரித்த கடவூர்த் தலத்து இறைவர்; கானல் ஆனையும்

போல்வர்; காண்பீர்களாக.

திருக்கடவூர்

ஆல முண்டழ காயதொ ரானையார்
நீல மேனி நெடும்பளிங் கானையார்
கோல மாய கொழுஞ்சுட ரானையார்
கால வானைகண் டீர்கட வூரரே. **#370**

நஞ்சினை உண்டும் அழகுபெற்ற ஆனையார்; நீல மேனியை ஒருபாகத்தே உடைய நீண்ட பளிங்கனைய ஆனையார்; கொழுவிய சுடர்விடும் கோலம் உடைய ஆனையார்; கடவூர்த் தலத்திறைவர் கால ஆனை போல்வர்; காண்பீர்களாக.

திருக்கடவூர்

அளித்த ஆன் அஞ்சு மாடிய வானையார்
வெளுத்த நீள்கொடி யேறுடை யானையார்
எளித்த வேழத்தை எள்குவித் தானையார்
களித்த வானைகண் டீர்கட வூரரே. **#371**

அன்பர்கள் பரிந்து கொடுக்கும் பஞ்ச கவ்வியங்களை ஆடிய ஆனையார்; வெண்மையான இடபக்கொடி உடைய ஆனையார்; இகழ்ந்து வந்த யானையினை எல்லோரும் எள்குமாறு உரித்த ஆனையார்; கடவூர்த்தலத்திறைவர் களிப்புற்ற யானை போல்வர்; காண்பீர்களாக.

திருக்கடவூர்

விடுத்த மால்வரை விண்ணுற வானையார்
தொடுத்த மால்வரை தூயதொ ரானையார்
கடுத்த காலனைக் காய்ந்ததொ ரானையார்
கடுத்த வானைகண் டீர்கட வூரரே. **#372**

விடுத்த பெரியமலையை விண்ணுற நிமிர்க்கும் ஆனையார்; தொடுத்த பெரியமலை தூய்மையாக உடைய ஆனையார்; சினந்துவந்த காலனைக் காய்ந்த ஒப்பற்ற கடவூர்த்தலத்திறைவர் சினத்தலுற்ற ஆனைபோல்வர்; காண்பீர்களாக.

திருக்கடவூர்

மண்ணு ளாரை மயக்குறு மானையார்
எண்ணு ளார்பல ரேத்திடு மானையார்
விண்ணு ளார்பல ரும்மறி யானையார்
கண்ணு ளானைகண் டீர்கட வூரரே. **#373**

மண்ணுலகின் உள்ளாரை மயக்கம் உறுவிக்கும் ஆனையார்;

எண்ணிக்கையிற் பெருகிய நல்லடியார் பலர் ஏத்தித்தொழும் ஆனையார்; விண்ணுலகின்கண் உள்ள தேவர்கள் பலரும் அறிகின்ற ஆனையார்; கடவூர்த்தலத்து இறைவர் காதலாகித் தொழும் அடியார் கண்ணுள் நின்று காட்சி வழங்கும் ஆனைபோல்வர்; காண்பீர்களாக.

திருக்கடவூர்

சினக்குஞ் செம்பவ ளத்திர ளானையார்
மனக்கும் வல்வினை தீர்த்திடு மானையார்
அனைக்கும் அன்புடை யார்மனத் தானையார்
கனைக்கு மானைகண் டீர்கட வூரரே. **#374**

சினக்கின்ற செம்பவளத் திரள்களை உடைய ஆனையார்; மனத்தின்கண் நிறைந்த வல்வினைகளைத் தீர்க்கும் ஆனையார்; அன்னைக்கும் மேலாகிய அன்புடையார் மனத்து உறையும் ஆனையார்; கடவூர்த்தலத்து இறைவர் ஒலித்து முழங்கி வரும் ஆனைபோல்வர்; காண்பீர்களாக.

திருக்கடவூர்

வேத மாகிய வெஞ்சுட ரானையார்
நீதி யானில னாகிய வானையார்
ஓதி யூழி தெரிந்துண ரானையார்
காத லானைகண் டீர்கட வூரரே. **#375**

வேதங்களாய் அதன் ஒளியாய் விளங்கும் ஆனைபோன்றவர். நீதிமுறை விளங்க நிலத்தின்கண் தோன்றியவர் என்க. வேதங்களை ஓதி பல ஊழிகளையும் கண்டறிந்தவர். அன்பர்க்கன்பர் கடவூர் இறைவர்; காண்பீர்களாக.

திருக்கடவூர்

நீண்ட மாலொடு நான்முகன் தானுமாய்க்
காண்டு மென்றுபுக் கார்க ளிருவரும்
மாண்ட வாரழ லாகிய வானையார்
காண்ட லானைகண் டீர்கட வூரரே. **#376**

நெடியோனாகிய திருமாலும், நான்முகனும் காண்போம் என்று ஆணவத்தாற் கருதிப் புகுந்தும் காண்டற்கரியவராய் மாட்சி உடைய பேரழலாக நிமிர்ந்த ஆனையார்; கடவூர்த் தலத்து இறைவர் காண்டற்குரிய ஆனைபோல்வர்; காண்பீர்களாக.

திருக்கடவூர்

அடுத்து வந்த இலங்கையர் மன்னனை

எடுத்த தோள்க ளிறநெரித் தானையார்
கடுத்த காலனைக் காய்ந்ததொ ரானையார்
கடுக்கை யானைகண் டீர்கட வூரரே. **#377**

எடுப்பேன் என்று அடுத்துவந்த இலங்கைவேந்தனை எடுக்கலுற்ற இருபது தோள்களும் இறும் வண்ணம் நெரித்த ஆனையார்; சினந்த காலனைக் காய்ந்த ஆனையார்; கடவூர்த் தலத்து இறைவர் கொன்றையணிந்த ஆனைபோல்வர்; காண்பீர்களாக.

திருக்கடவூர்மயானம்

திருக்கடவூர்மயானம்

திருக்கடவூர்மயானம், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசுவரர்.
தேவியார் : மலர்க்குழல்மின்னம்மை.

குழைகொள் காதினர் கோவண ஆடையர்
உழையர் தாங்கட வூரின் மயானத்தார்
பழைய தம்மடி யார்செய்த பாவமும்
பிழையுந் தீர்ப்பர் பெருமா னடிகளே. **#378**

கடவூர் மயானத்தாராகிய பெருமான் அடிகள் சங்கவெண்குழையணிந்த காதினர்; கோவண ஆடையினர்; அன்பு செய்யும் அடியார்கட்கு மிக்க அண்மையில் உள்ளவர்; தம் பழைய அடியார்கள் செய்த பாவமும் பிழையும் தீர்ப்பவர்.

திருக்கடவூர்மயானம்

உன்னி வானவ ரோதிய சிந்தையில்
கன்னல் தேன்கடவூரின் மயானத்தார்
தன்னை நோக்கித் தொழுதெழு வார்க்கெலாம்
பின்னை யென்னார் பெருமா னடிகளே. **#379**

கடவூர் மயானத்தாராகிய பெருமான் அடிகள், தம்மை உன்னித் தேவர்கள் ஓதும் போது அவர்சிந்தையில்கன்னல் போன்றும் தேன் போன்றும் இனிப்பவர்; தம்மை நோக்கித் தொழுது எழும் அடியவர்கட்கெல்லாம் 'பிறகு அருள்செய்வோம்' என்னாது அப்போதே அருளும் பெருங்கருணை உடையவர்.

திருக்கடவூர்மயானம்

சூல மேந்துவர் தோலுடை ஆடையர்
ஆல முண்டமு தேமிகத் தேக்குவர்
கால காலர் கடவூர் மயானத்தார்
மாலை மார்பர் பெருமா னடிகளே. **#380**

கடவூர் மயானத்தாராகிய பெருமான் அடிகள், சூலம் ஏந்தியிருப்பவர்; புலித்தோலை உடுத்திருப்பவர்; ஆலம் உண்டு அமுதைப் பிறர்க்குத் தேக்கி அளிப்பவர் . காலனுக்கும் காலர்; மாலையணிந்த மார்பினர்.

திருக்கடவூர்மயானம்

இறைவ னாரிமை யோர்தொழு பைங்கழல்
மறவ னார்கட வூரின் மயானத்தார்
அறவ னாரடி யாரடி யார்தங்கள்
பிறவி தீர்ப்பர் பெருமா னடிகளே. **#381**

கடவூர் மயானத்தாராகிய பெருமான் அடிகள், தேவர்கள் தொழுகின்ற பைங்கழலை உடைய இறைவர்; வீரம் உடையவர்; அறமே வடிவானவர்; அடியார்களின் பிறவி நோயைத் தீர்ப்பவர்.

திருக்கடவூர்மயானம்

கத்து காளி கதந்தணி வித்தவர்
மத்தர் தாங்கட வூரின் மயானத்தார்
ஒத்தொவ் வாதன செய்துழல் வாரொரு
பித்தர் காணும் பெருமா னடிகளே. **#382**

கடவூர் மயானத்தாராகிய பெருமான் அடிகள் கத்துகின்ற காளியின் சினத்தைத் தணிவித்தவர்; மதம் பொருந்தியவர் (ஊமத்தமலரைச் சூடியவர்) ஒத்தும் ஒவ்வாதும் செய்யும் செயல் பலவற்றைச் செய்து உழல்கின்ற பித்தர்போல்வர்; காண்பீர்களாக.

திருக்கடவூர்மயானம்

எரிகொள் மேனி யிளம்பிறை வைத்தவர்
கரியர் தாங்கட வூரின் மயானத்தார்
அரிய ரண்டத்து ளோரயன் மாலுக்கும்
பெரியர் காணும் பெருமா னடிகளே. **#383**

கடவூர் மயானத்தாராகிய பெருமான் அடிகள், சிவந்த தழல் வண்ணம் கொண்ட திருமேனியும், இளம்பிறை வைத்த சடையும் உடையவர்; அயிராவணம் என்ற ஆனையை உடையவர்; அயன், திருமால் முதலிய தேவர்கள் யாவருக்கும் காண்டற்கு அரியர்; பெரியர்; காண்பீர்களாக.

திருக்கடவூர்மயானம்

அணங்கு பாகத்தர் ஆரண நான்மறை
கணங்கள் சேர்கட வூரின் மயானத்தார்
வணங்கு வாரிடர் தீர்ப்பர் மயக்குறும்
பிணங்கொள் காடர் பெருமா னடிகளே. **#384**

கடவூர் மயானத்தாராகிய பெருமான் அடிகள், உமை ஒருபாகம் உடையவர்; ஆரணங்களாகிய நான் மறைகளின் தொகுதிகள் தொழுது சேரும் தகைமை உடையவர்; தம்மை வணங்குவார்களது துன்பங்களைத் தீர்ப்பவர்; மயக்கம் மிகுவிக்கும் பிணங்களைக் கொண்ட சுடுகாடே பெரும்பதியாக் கொண்டவர்.

திருக்கடவூர்மயானம்

அரவு கையின ராதி புராணனார்
மரவு சேர்கட வூரின் மயானத்தார்
பரவு வாரிடர் தீர்ப்பர் பணிகொள்வர்
பிரமன் மாற்கும் பெருமா னடிகளே. **#385**

கடவூர் மயானத்தாராகிய பெருமான் அடிகள், அரவம் உடைய கையினர்; ஆதியிற்றோன்றிய பழமையானவர்; தம்மைப் பரவும் அடியார்களது இடர்களைத் தீர்ப்பவர்; அவர்களைப் பணியும் கொள்பவர்; பிரமன், மாலுக்கும் பெரிய இயல்புடையவராவர்.

திருமயிலாடுதுறை

திருமயிலாடுதுறை

திருமயிலாடுதுறை, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாயூரநாதர்.
தேவியார் : அஞ்சநாயகியம்மை.

கொள்ளுங் காதன்மை பெய்துறுங் கோல்வளை
உள்ள முள்கி யுரைக்குந் திருப்பெயர்
வள்ளல் மாமயி லாடு துறையுறை
வெள்ளந் தாங்கு சடையனை வேண்டியே. **#386**

மயிலாடுதுறையில் உறைகின்ற வள்ளலும், கங்கை வெள்ளம் தாங்கிய சடையனுமாகிய பெருமானை விரும்பிக் காதல் கொள்ளும் இயல்புடைய திரண்ட வளைகள் பெய்யப்பட்ட இப்பெண் உள்ளத்தால் உள்கி அப்பெருமான் திருப்பெயரையே உரைக்கும் தன்மையள் ஆயினள்.

திருமயிலாடுதுறை

சித்தந் தேறுஞ் செறிவளை சிக்கெனும்
பச்சை தீருமென் பைங்கொடி பால்மதி
வைத்த மாமயி லாடு துறையரன்
கொத்தி னிற்பொலி கொன்றை கொடுக்கிலே. **#387**

சடையின்கண் வெண்பிறை வைத்த பெருமை பொருந்திய மயிலாடுதுறைத் தலத்து இறைவனது கொத்தாகப் பொலியும் கொன்றை மலரினைக் கொடுத்தால் தன் சித்தம் தெளந்து, உடல் பூரித்து வளைகளைச் செறிப்பாள் என் பைங்கொடியாகிய இவள் தன் பச்சைவண்ணமும் நீங்கிப் பழைய நிறம் பெறுவாள்.

திருமயிலாடுதுறை

அண்டர் வாழ்வும் அமர ரிருக்கையும்
கண்டு வீற்றிருக் குங்கருத் தொன்றிலோம்
வண்டு சேர்மயி லாடு துறையரன்
தொண்டர் பாதங்கள் சூடித் துதையிலே. **#388**

வண்டுகள் சேர்ந்த மயிலாடுதுறைத் தலத்து இறைவனுக்குத் தொண்டுசெய்யும் அடியார் திருப்பாதங்களைச் சூடிச் செறிந்து கொண்டால், தேவ உலக வாழ்வும், தேவர்களது பதவி இன்பங்களும் கண்டு வீற்றிருக்கும் கருத்து எமக்குச் சிறிதும் இல்லை.

திருமயிலாடுதுறை

வெஞ்சி னக்கடுங் காலன் விரைகிலான்
அஞ்சி றப்பும் பிறப்பும் அறுக்கலாம்
மஞ்சன் மாமயி லாடு துறையுறை
அஞ்சொ லாளுமை பங்க னருளிலே. **#389**
பெருவீரம் உடையானும், பெருமைக்குரிய மயிலாடுதுறையில்
உறையும் அழகிய சொல்லை உடையானாகிய உமைபங்கனும் ஆகிய
பெருமான் அருளினால் வெவ்விய சினத்தை உடையனாய்
விரைந்துவரும் காலன் நம்மிடம் விரைய மாட்டான்;
அஞ்சத்தகுவனவாகிய இறப்பும் பிறப்பும் அறுக்கலாம்.

திருமயிலாடுதுறை

குறைவி லோங்கொடு மாநுட வாழ்க்கையால்
கறைநி லாவிய கண்டனெண் தோளினன்
மறைவ லான்மயி லாடு துறையுறை
இறைவன் நீள்கழ லேத்தி யிருக்கிலே. **#390**
திருநீலகண்டனும், எட்டுத் தோளினனும், வேதம் வல்லவனுமாகிய
மயிலாடுதுறை உறையும் இறைவன் நீண்ட கழல்களை ஏத்தி இருந்தால்,
கொடிய மானிட வாழ்க்கையால் வருகின்ற குறைவு சிறிதும்
இல்லாதவராவோம்.

திருமயிலாடுதுறை

நிலைமை சொல்லுநெஞ் சேதவ மென்செய்தாய்
கலைகள் ஆயவல் லான்கயி லாயநன்
மலையன் மாமயி லாடு துறையன்நம்
தலையின் மேலும் மனத்துளுந் தங்கவே. **#391**
கலைகளை ஆய வல்லவனும், கயிலாயமலை உடையவனுமாகிய
பெருமானின் நிலையை சொல்லும் நெஞ்சமே! பெருமைக்குரிய
மயிலாடுதுறை இறைவன் நம்தலையின் மேலும் மனத்துள்ளும்
தங்குதற்கு எத்துணைப் பெருந்தவம் நீ செய்துள்ளாய்!

திருமயிலாடுதுறை

நீற்றி னான்நிமிர் புன்சடை யான்விடை
ஏற்றி னான்நமை யாளுடை யான்புலன்
மாற்றி னான்மயிலாடு துறையென்று
போற்று வார்க்குமுண் டோபுவி வாழ்க்கையே. **#392**
திருநீறணிந்தவனும், நிமிர்தலுற்ற பொலிவுற்ற சடையினனும்,

விடையாகிய ஏற்றினை உடையவனும், நம்மை ஆளுடையவனும், புலன்களின் நெறியை மாற்றியவனுமாகிய மயிலாடுதுறை என்று போற்றுகின்ற அடியார்கட்குத் துயரம் மிகுந்த இவ்வுலக வாழ்க்கை உன்டோ?

திருமயிலாடுதுறை

கோலும் புல்லு மொருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரமுற் றென்பயன்
நீல மாமயி லாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்கட்கே. **#393**

நீல நிறம் உடைய கரிய மயில்கள் ஆடும் துறையினை உடையவனே! முக்கோலும், தருப்பைப்புல்லும், ஒரு கையில் கூர்ச்சமும், தோலும் பூண்டு துயரம் அடைந்து பயன் யாது? நுண்ணுணர்வுடையோர்க்கு நூலும் வேண்டுமோ?

திருமயிலாடுதுறை

பணங்கொ ளாடர வல்குற் பகீரதி
மணங்கொ ளச்சடை வைத்த மறையவன்
வணங்கு மாமயி லாடு துறையரன்
அணங்கொர் பால்கொண்ட கோல மழகிதே. **#394**

படத்தினைக்கொண்டு ஆடுகின்ற அரவனைய அல்குலை உடைய கங்கையை, மணம்கமழும்படி சடையின் கண் வைத்த மறைவடிவானவனும், வணங்கியெழும் மயிலாடுதுறை உறைபவனுமாகிய இறைவன் அம்மையினை ஒருபாகத்தே கொண்டு அருள்செய்யும் திருக்கோலம் மிக அழகியதாகும்.

திருமயிலாடுதுறை

நீணி லாவர வச்சடை நேசனைப்
பேணி லாதவர் பேதுற வோட்டினோம்
வாணி லாமயி லாடு துறைதனைக்
காணி லார்க்குங் கடுந்துய ரில்லையே. **#395**

நீண்ட நிலவினையும், அரவத்தையும் சடையில் விரும்பிச் சூடியுள்ளவனைப் பேணாதவர் பேதுறும்படி விலக்கினோம்; ஒளிபொருந்திய மயிலாடுதுறையினைக் காணில், ஆர்க்கும் கடுந்துயரங்கள் இல்லை.

திருமயிலாடுதுறை

பருத்த தோளும் முடியும் பொடிபட

இருத்தி னானவ னின்னிசை கேட்டலும்
வரத்தி னான்மயி லாடு துறைதொழும்
கரத்தி னார்வினைக் கட்டறுங் காண்மினே. **#396**
இராவணனது பருத்த தோள்களும் முடிகளும் தூளாகுமாறு
இருத்தினவனும், அவனது இன்னிசையைக் கேட்டலும் வரம்
அருளியவனும் ஆகிய பெருமானை, மயிலாடுதுறையில் தொழும்
கரத்தினை உடையவர்கள் வினை, கட்டற்றுப்போகும் காண்பீராக;

திருக்கழிப்பாலை

திருக்கழிப்பாலை

திருக்கழிப்பாலை, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பால்வண்ணநாதர்.
தேவியார் : வேதநாயகியம்மை.

வண்ண மும்வடி வுஞ்சென்று கண்டிலள்
எண்ணி நாமங்க ளேத்தி நிறைந்திலள்
கண்ணு லாம்பொழில் சூழ்கழிப் பாலையெம்
அண்ண லேயறி வானிவள் தன்மையே. **#397**

கழிப்பாலை இறைவனின் நிறம் வடிவம் முதலியவற்றைச்சென்று நேரே கண்டிலள். அவன் திருநாமங்களை எண்ணினாளில்லை. காணாமலே காதல்கொண்டு பிதற்றும் இவள் தன்மையைப் பொழில் சூழ்ந்த கழிப்பாலை இறைவனே அறிவான்.

திருக்கழிப்பாலை

மருந்து வானவ ருய்யநஞ் சுண்டுகந்
திருந்த வன்கழிப் பாலையு ளெம்பிரான்
திருந்து சேவடி சிந்தையுள் வைத்திவள்
பரிந்து ரைக்கிலு மென்சொற் பழிக்குமே. **#398**

தேவர்கள் அமிர்தத்தை உண்டு உய்யத் தான் நஞ்சினை உண்டு உகந்து இருப்பவனும் வலிய கழிப்பாலையில் வீற்றிருக்கும் எம்பெருமானுமாகிய இறைவனின் சேவடிகளைச் சிந்தையுள் வைத்து யான் பரிந்து உரைத்தாலும், இவள் என் சொல்லைப் பழிக்கின்றாள்.

திருக்கழிப்பாலை

மழலை தான்வரச் சொல்தெரி கின்றிலள்
குழலின் நேர்மொழி கூறிய கேண்மினோ
அழக னேகழிப் பாலையெம் மண்ணலே
இகழ்வ தோவெனை யேன்றுகொ ளென்னுமே. **#399**

குழல் இசை போன்ற மொழியினை உடைய இவள், மழலைச்சொல்லே கிளக்கும் இயல்பினள்; தெரியுமாறு சொற்களைப்பேசா இயல்பினளாய்க் கூறிய மொழிகளைக் கேட்பீர்களாக; "அழகனே! கழிப்பாலையில் வீற்றிருக்கும் எம் தலைவனே! என்னை இகழ்வதோ? ஏற்றுக்கொள்" என்கின்றாள்.

திருக்கழிப்பாலை

செய்ய மேனிவெண் ணீறணி வான்றனை
மைய லாகி மதிக்கில ளாரையும்
கைகொள் வெண்மழு வன்கழிப் பாலையெம்
ஐய னேயறி வானிவள்தன்மையே. **#400**

சிவந்த மேனியும், அதில் வெண்ணீறு அணியும் கோலமும் உடைய சிவபெருமானின்மேல் மையல் உடையவளாகி, இவள் ஆரையும் மதிக்கிலள்; கையிற் பிடித்த வெண்மழுவினனும், கழிப்பாலையில் உறைவானும் ஆகிய இறைவனே இவள் தன்மையை அறிவான்.

திருக்கழிப்பாலை

கருத்த னைக்கழிப் பாலையுள் மேவிய
ஒருத்த னைஉமை யாளொரு பங்கனை
அருத்தி யாற்சென்று கண்டிட வேண்டுமென்
றொருத்தி யாருள மூசல தாடுமே. **#401**

ஒருத்தியின் உள்ளம், கருத்தின்கண் இருப்பவனும், கழிப்பாலையுள் எழுந்தருளியிருக்கும் ஒப்பற்றவனும், உமையாளை ஒருபங்கில் உடையவனும் ஆகிய பெருமானை விருப்பத்தாற்சென்று கண்டிடவேண்டும் என்று ஊசலாடுகிறது.

திருக்கழிப்பாலை

கங்கை யைச்சடை வைத்து மலைமகள்
நங்கை யையுட னேவைத்த நாதனார்
திங்கள் சூடித் திருக்கழிப் பாலையான்
இங்கு வந்திடு மென்றிறு மாக்குமே. **#402**

இப்பெண், சடையிற் கங்கையை வைத்து மலைமகளாகிய நங்கையைத் தன்னொரு பங்கில் வைத்த இறைவனாகிய திருக்கழிப்பாலைப் பெருமான் இளம்பிறை சூடி இங்குத் திருவுலாப்போதற்கு எழுந்தருள்வான் என்று இறுமாப்பு அடைகின்றாள்.

திருக்கழிப்பாலை

ஐய னேயழ கேயன லேந்திய
கைய னேகறை சேர்தரு கண்டனே
மையு லாம்பொழில் சூழ்கழிப் பாலையெம்
ஐய னேவிதி யேயரு ளென்னுமே. **#403**

இவள், "தலைவனே! அழகனே! தழலை ஏந்திய கரத்தவனே! திருநீலகண்டனே! மேகங்கள் உலாவுகின்ற பொழில் சூழ்ந்த கழிப்பாலையில் வீற்றிருக்கும் எம் அழகியவனே! நன்மை தீமைகளை விதிப்பவனே! அருள்வாயாக!" என்று கூறுகின்றாள்.

திருக்கழிப்பாலை

பத்தர் கட்கமு தாய பரத்தினை
முத்த னைமுடி வொன்றிலா மூர்த்தியை
அத்த னையணி யார்கழிப் பாலையெம்
சித்த னைச்சென்று சேருமா செப்புமே. **#404**

இவள், அன்பர்கட்கு அமுதாயுள்ள மேலானவனை, முத்தியை அளிப்பவனை, முடிவு ஒன்று இல்லாத மூர்த்தியை, தலைவனை, அழகு நிரம்பிய கழிப்பாலையில் வீற்றிருப்பவனாகிய என் சித்தத்தவனைச் சென்று சேருமாறு ஒரு நெறி எனக்குச் செப்புவீர்களாக!" என்கின்றாள்.

திருக்கழிப்பாலை

பொன்செய் மாமுடி வாளரக் கன்தலை
அஞ்சு நான்குமொன் றும்மிறுத் தானவன்
என்செ யான்கழிப் பாலையு ளெம்பிரான்
துஞ்சும் போதும் துணையென லாகுமே. **#405**

பொன்னாற் செய்யப்பட்ட முடியணிந்தவனும், வாளுடையவனுமாகிய இராவணன் தலைகள் பத்தும் இறுத்தவன்! கழிப்பாலையுள் எம் தலைவன் என்ன செய்யாதவன்? ஆதலின் அப்பெருமானே தூங்கும்போதும் நமக்குத் துணை எனற்குப் பொருந்தியவன் ஆவன்.

திருப்பைஞ்ஞீலி

திருப்பைஞ்ஞீலி

திருப்பைஞ்ஞீலி, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நீலகண்டேசுவரர்.
தேவியார் : விசாலாட்சியம்மை.

உடையர் கோவண மொன்றுங் குறைவிலர்
படைகொள் பாரிடஞ் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
சடையிற் கங்கை தரித்த சதுரரை
அடைய வல்லவர்க் கில்லை அவலமே. **#406**

கோவண உடையினரும், ஒன்றும் குறைவில்லாதவரும், படைக்கலங்களைக்கொண்ட பூதகணங்கள் சூழ்ந்த திருப்பைஞ்ஞீலித் திருத்தலத்தில் எழுந்தருளியவரும் ஆகிய சடையிற் கங்கையை வைத்த சதுரப்பாடு உடைய பெருமானை அடையும் வல்லமை உடைய அன்பர்களுக்குத் துன்பங்கள் இல்லை.

திருப்பைஞ்ஞீலி

மத்த மாமலர் சூடிய மைந்தனார்
சித்த ராய்த்திரி வார்வினை தீர்ப்பரால்
பத்தர் தாந்தொழு தேத்துபைஞ் ஞீலியெம்
அத்த னைத்தொழ வல்லவர் நல்லரே. **#407**

ஊமத்தம் மலர்களைச் சூடிய பெருவீரரும், சித்தராகத் திரிபவரும், அன்பர் பலர் தொழுதேத்தும் பைஞ்ஞீலியில் உறையும் அத்தரும், தொழுவார் வினை தீர்ப்பவரும் ஆகிய அப்பெருமானைத் தொழும் வல்லமை உடையவர் நல்லவர் ஆவர்.

திருப்பைஞ்ஞீலி

விழுது சூலத்தன் வெண்மழு வாட்படைக்
கழுது துஞ்சிருள் காட்டகத் தாடலான்
பழுதொன் றின்றிப் பைஞ்ஞீலிப் பரமனைத்
தொழுது செல்பவர் தமவினை தூளியே. **#408**

நிணம் பொருந்திய சூலத்தையும், வெண் மழுவாளையும் படைக்கலமாக உடையவனும், பேய்களும் தூங்குகின்ற நள்ளிருளில் சுடுகாட்டில் ஆடலை உடையவனும், பைஞ்ஞீலியில் உறையும் பரமனும் ஆகிய பெருமானைப் பழுது ஒன்றும் இன்றித் தொழுது செல்பவர் வினைகள் பொடியாகும்.

திருப்பைஞ்ஞீலி

ஒன்றி மாலும் பிரமனுந் தம்மிலே
நின்ற சூழ லறிவரி யானிடம்
சென்று பாரிட மேத்துபைஞ் ஞீலியுள்
என்றும் மேவி யிருந்த அடிகளே. **#409**

திருமாலும் பிரமனும் தம்மிலே ஒன்றித் தேட முற்பட்டும் திருவடியும் திருமுடியும் நின்ற சூழல் அறிய அரியவனாய் விளங்கிய பெருமான் வீற்றிருக்கும் இடம், பூதங்கள் சென்று ஏத்துகின்ற பைஞ்ஞீலியாகும். இத்தலத்திலேயே அடிகள் என்றும் மேவியிருப்பது.

திருப்பைஞ்ஞீலி

வேழத் தின்னுரி போர்த்த விகிர்தனார்
தாழச் செஞ்சடை மேற்பிறை வைத்தவர்
தாழைத் தண்பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
யாழின் பாட்டை யுகந்த அடிகளே. **#410**

வேழத்தின் தோலை உரித்துப் போர்த்த விகிர்தரும், செஞ்சடைமேல் தாழுமாறு பிறை வைத்தவரும், தாழைகள் நிறைந்த குளிர்ந்த பொழில்கள் சூழ்ந்த பைஞ்ஞீலித் தலத்து உறைபவரும் ஆகிய பெருமான் யாழ்க்குப் பொருந்திய பாடலை உகந்த அடிகள் ஆவர்.

திருப்பைஞ்ஞீலி

குண்டு பட்டுக் குறியறி யாச்சமண்
மிண்ட ரோடு படுத்துய்யப் போந்துநான்
கண்டங் கார்வயல் சூழ்ந்தபைஞ் ஞீலியெம்
அண்ட வாண னடியடைந் துய்ந்தனே. **#411**

உடல் பெருக்கிக் குறிக்கோளையறியாச் சமண்மிண்டரோடு பொருந்தி உய்யப்போந்து நான், கரும்புகள் நிறைந்த வயல் சூழ்ந்த பைஞ்ஞீலித்தலத்து எழுந்தருளியுள்ள தேவதேவன் திருவடிகளை அடைந்து உய்ந்தேன்.

திருப்பைஞ்ஞீலி

வரிப்பை யாடர வாட்டி மதகரி
உரிப்பை மூடிய வுத்தம னாருறை
திர்ப்பைஞ் ஞீலி திசைதொழு வார்கள் போய்
இருப்பர் வானவ ரோடினி தாகவே. **#412**

வரிகளை உடைய படத்தினைப் பொருந்தி ஆடும் அரவத்தை ஆட்டி மதச் செருக்குடைய யானையின் உரியை மெய்ப்பையாக மூடிய

உத்தமனார் உறைகின்ற திருப்பைஞ்ஞீலித் தலத்தைத் திக்குநோக்கித் தொழுபவர்கள் வானவர்களோடு இனிதாக இருப்பர்.

திருப்பைஞ்ஞீலி

கோடல் கோங்கம் புறவணி முல்லைமேல்
பாடல் வண்டிசை கேட்கும்பைஞ் ஞீலியார்
பேடு மாணும் பிறரறி யாததோர்
ஆடு நாக மசைத்த அடிகளே. **#413**

செங்கோடலும், வெண்கோடலும், கோங்கமும் ஆகிய பூக்கள் புறவுநிலமாகிய முல்லைநிலத்தை அணிசெய்தலால், வண்டிசைக்கும் பாடல் கேட்கின்ற பைஞ்ஞீலித் தலத்து இறைவர் பேடும் ஆணும் ஆகிய பிறர் அறியாத இயல்பினர், ஆடும் பாம்பைக் கட்டிய ஒப்பற்ற அடிகள் ஆவர்.

திருப்பைஞ்ஞீலி

காரு லாமலர்க் கொன்றையந் தாரினான்
வாரு லாமுலை மங்கையொர் பங்கினன்
தேரு லாம்பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலியெம்
ஆர்கி லாவமு தையடைந் துய்ம்மினே. **#414**

கார்காலத்துப் பொருந்திய கொன்றை மலர்களாலாகிய தாரினை அணிந்தவனும், கச்சுப் பொருந்திய தனங்களை உடைய உமைமங்கையை ஒரு பங்கில் உடையவனும், பொழில் நுகரவருவோர் இவர்ந்துவந்த தேருலாவுகின்ற பூம்பொழில் சூழ்ந்த பைஞ்ஞீலியில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய ஆரா அமுதை அடைந்து உய்வீர்களாக.

திருப்பைஞ்ஞீலி

தருக்கிச் சென்று தடவரை பற்றலும்
நெருக்கி யூன்ற நினைந்து சிவனையே
அரக்கன் பாட அருளுமெம் மானிடம்
இருக்கை ஞீலியென் பார்க்கிட ரில்லையே. **#415**

அரக்கனாகிய இராவணன் செருக்கினை உற்றுத்தடவரையாகிய திருக்கயிலாயத்தைப் பற்றுதலும், நெருக்கித் திருவிரலால் ஊன்ற, சிவனையே நினைந்து அவன்பாட அவனுக்கு அருள்புரியும் எம்மான் இடம் பைஞ்ஞீலி என்றுரைப்பார்க்கு இடர்கள் இல்லை.

திருவேட்களம்

திருவேட்களம்

திருவேட்களம், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பாசுபதேசுவரர்.
தேவியார் : நல்லநாயகியம்மை.

நன்று நாடொறும் நம்வினை போயறும்
என்று மின்பந் தழைக்கவி ருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே. **#416**

திருவேட்களத்துள்ளுறைகின்ற நெருங்கிய பொலிவார்ந்த சடையுடைய ஈசனைத் தொழுவீர்களாக; அங்ஙனம் தொழுதால் நாள்தொறும் நம்வினை பெரிதும் தொலையும்; என்றும் இன்பம் தழைக்க இருந்து உய்யலாம்.

திருவேட்களம்

கருப்பு வெஞ்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பொருப்பு வெஞ்சிலை யாற்புரஞ் செற்றவன்
விருப்பன் மேவிய வேட்களங் கைதொழு
திருப்ப னாகி லெனக்கிட ரில்லையே. **#417**

கரும்பாகிய விருப்பத்தை விளைக்கும் வில்லை உடைய மன்மதனைக் காய்ந்தவனும், மேருமலையாகிய வில்லினால் முப்புரங்களைச் செற்றவனும், அடியார்களிடத்து விருப்பம் உடையவனும் ஆகிய பெருமான் உறையும் வேட்களத்தைக் கைதொழுது இருந்தேனாயின், எனக்கு இடர்களே இல்லை.

திருவேட்களம்

வேட்க ளத்துறை வேதிய னெம்மிறை
ஆக்க ளேறுவ ரானைஞ்சு மாடுவர்
பூக்கள் கொண்டவன் பொன்னடி போற்றினால்
காப்பர் நம்மைக் கறைமிடற் றண்ணலே. **#418**

வேட்களத்துறையும் வேதியனும், எம் இறைவனும், திருநீலத் திருமிடறு உடைய தலைவனும் ஆகிய பெருமான் விடையுகந்து ஏறுவர்; பஞ்சகவ்வியம் ஆடுவர்; பூக்களைக்கொண்டு திருவடி போற்றினால் நம்மைக் காப்பர்.

திருவேட்களம்

அல்ல லில்லை அருவினை தானில்லை
மல்கு வெண்பிறை சூடும் மணாளனார்
செல்வ னார்திரு வேட்களங் கைதொழ
வல்ல ராகில் வழியது காண்மினே. **#419**

நிறைந்த வெண்பிறையைச் சூடும் மணவாளராகிய திருவேட்களத்து அருட்செல்வரைக் கைகளால் தொழ வல்லவராகில் அதுவே வழியாகும்; காண்பீர்களாக; அவ்வழியே நின்றால் அல்லல்கள் இல்லை; அரிய வினைத் துன்பங்களும் இல்லையாம்.

திருவேட்களம்

துன்ப மில்லைத் துயரில்லை யாமினி
நம்ப னாகிய நன்மணி கண்டனார்
என்பொ னாருறை வேட்கள நன்னகர்
இன்பன் சேவடி யேத்தி யிருப்பதே. **#420**

நம்மவராகிய திருநீலகண்டனும், என் பொன்போன்றவனும் ஆகிய இறைவன் உறைகின்ற திருவேட்கள் நன்னகரில் இன்பமே வடிவாகிய அவன் சேவடியை ஏத்தியிருப்பதனால். இனித் துன்பமும் இல்லை; துயரங்களும் இல்லை.

திருவேட்களம்

கட்டப் பட்டுக் கவலையில் வீழாதே
பாட்ட வல்லுயிர் போவதன் முன்னம்நீர்
சிட்ட னார்திரு வேட்களங் கைதொழப்
பட்ட வல்வினை யாயின் பாறுமே. **#421**

கவலைகளாற் கட்டப்பெற்று வீழ்ந்திடாது, விரைந்து உயிர்போவதற்கு முன்பே நீர், உயர்ந்த இறைவர் எழுந்தருளியுள்ள திருவேட்களம் கைதொழுவீர்களாக; தொழுவீராயின், பொருந்திய வல்வினைகள் அனைத்தும் கெடும்.

திருவேட்களம்

எட்டு மொன்று மிரண்டுமூன் றாயினார்
சிட்டர் சேர்திரு வேட்களங் கைதொழு
திட்ட மாகி யிருமட நெஞ்சமே. **#422**

அறியாமை உடைய நெஞ்சமே! வட்ட வடிவாகிய மென்முலைகளை உடைய உமாதேவியை ஒருபங்கில் உடையவரும், எட்டு மூர்த்தியானவரும், ஒரு பரம்பொருளானவரும், இரண்டு (சிவம், சத்தி) ஆனவரும், மும்மூர்த்தியானவரும் உறைகின்ற சிறப்புடையதும், உயர்ந்தவர்கள் சேர்ந்ததுமான திருவேட்களம் கைதொழுது விருப்புற்று

இருப்பாயாக.

திருவேட்களம்

நட்ட மாடிய நம்பனை நாள்தொறும்
இட்டத் தாலினி தாக நினைமினோ
வட்ட வார்முலை யாளுமை பங்கனார்
சிட்ட னார்திரு வேட்களந் தன்னையே. **#423**

வட்டவடிவமாகிய மென்முலைகளை உடைய உமாதேவியை ஒருபங்கில் உடையவரும், உயர்ந்தவரும் ஆகிய பெருமான் உறையும் திருவேட்களத்தையும், அங்கு நட்டமாடிய நம்பனையும், நாள்தோறும் விருப்பத்துடன் இனிது நினைப்பீராக.

திருவேட்களம்

வட்ட மாமதில் மூன்றுடை வல்லரண்
சுட்ட கொள்கைய ராயினுஞ் சூழ்ந்தவர்
குட்ட வல்வினை தீர்த்துக் குளிர்விக்கும்
சிட்டர் பொற்றிரு வேட்களச் செல்வரே. **#424**

திருவேட்களத்து அருட்செல்வர் வட்டமாக வளைந்த மதில்கள் சூழ்ந்த திரிபுரங்கள் மூன்றையும் சுட்ட கொள்கையர் ஆயினும், தம்மைச் சூழ்ந்தவர் வல்வினைகளைத் தீர்த்து அவர்களைக் குளிர்விக்கும் சிட்டராவர்.

திருவேட்களம்

சேட னாருறை யுஞ்செழு மாமலை
ஓடி ஆங்கெடுத் தான்முடி பத்திற
வாட வூன்றி மலரடி வாங்கிய
வேட னாருறை வேட்களஞ் சேர்மினே. **#425**

பெருமை உடையனாய பெருமான் உறையும் திருமாமலையாகிய திருக்கயிலாயத்தை ஓடி எடுத்தவனாகிய இராவணன் முடிகள் பத்தும் இறும்படியாக வாட ஊன்றி, மலரடியினை வளைத்த வேடனார் உறைகின்ற திருவேட்களம் சேர்வீராக.

திருநல்லம்

திருநல்லம்

திருநல்லம், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : உமாமகேசுவரர்.
தேவியார் : மங்களநாயகியம்மை.

கொல்லத் தான்நம னார்தமர் வந்தக்கால்
இல்லத் தார்செய்ய லாவதெ னேழைகாள்
நல்லத் தான்நமை யாளுடை யான்கழல்
சொல்லத் தான்வல்லி ரேல்துயர் தீருமே. **#426**

அறிவற்றவர்களே! நமன் தமராகிய எமதூதர் கொல்லவந்தபோது இல்லத்தில் உள்ளவர்கள் செய்யலாவது யாது? திருநல்லத்தில் எழுந்தருளியிருப்பவனும், நம்மை ஆளுடையவனும் ஆகிய பெருமான் கழல் சொல்ல வல்லமை உடையீரேல், உம்துயர்கள் தீரும்.

திருநல்லம்

பொக்கம் பேசிப் பொழுது கழியாதே.
துக்கந் தீர்வகை சொல்லுவன் கேண்மினோ
தக்கன் வேள்வி தகர்த்த தழல்வண்ணன்
நக்கன் சேர்நல்லம் நண்ணுதல் நன்மையே. **#427**

பொய்ம்மொழிகளைப் பேசிப் பொழுது கழியாமல் துயரங்கள் தீர்தற்கு ஓர் உபாயம் சொல்லுவேன்; கேட்பீராக; தக்கன் வேள்வியைத் தகர்த்த தீவண்ணனாகிய திகம்பரன் உறைகின்ற திருநல்லம் நண்ணி வழிபடுதலே உமக்கு நன்மை.

திருநல்லம்

பிணிகொள் வார்குழற் பேதையர் காதலால்
பணிகள் மேவிப் பயனில்லை பாவிகாள்
அணுக வேண்டி லரன்நெறி யாவது
நணுக நாதன் நகர்திரு நல்லமே. **#428**

பாவம் செய்தவர்களே! மலர் முதலியன விட்டுப் பிணித்தலைக்கொண்ட நீண்ட கூந்தலை உடைய பெண்களிடத்து வைத்த காதலால், அவர்கட்கு ஆளாகிப் பணிகளைப் பொருந்திச் செய்து பயன் இல்லையாதலால், நெருங்கிப் பணி செய்ய வேண்டில் அரன் நெறியே அணுகி திருநல்லம் சென்று வழிபடுவீர்களாக.

திருநல்லம்

தமக்கு நல்லது தம்முயிர் போயினால்
இமைக்கும் போது மிராதிக் குரம்பைதான்
உமைக்கு நல்லவன் தானுறை யும்பதி
நமக்கு நல்லது நல்ல மடைவதே. **#429**

தம்முயிர் தம்மைவிட்டு நீங்கினால் தமக்கு நல்லது; அங்ஙனமே இவ்வுடலாகிய குடிசை இமைப்பொழுது கூட நில்லா இயல்புடையது; உமாதேவிக்கு நல்லவனாகிய இறைவன் உறைகின்ற பதியாகிய திருநல்லம் என்னுந் தலத்தை அடைந்து வழிபடுவதே நமக்கு நல்லது ஆகும்.

திருநல்லம்

உரை தளர்ந்துட லார்நடுங் காமுனம்
நரைவி டையுடை யானிடம் நல்லமே
பரவு மின்பணி மின்பணி வாரொடே
விரவு மின்விர வாரை விடுமினே. **#430**

வார்த்தைகள் தளர்ந்து உடல் நடுங்குவதற்கு முன்பே, நரை உடைய இடபவாகனத்தை உடைய இறைவன் வீற்றிருக்கும் இடமாகிய திருநல்லத்திற்சென்று பரவிப் பணிவீர்களாக; பணிகின்ற அன்பர்களோடு கலந்து வழிபடுவீராக; அங்ஙனம் கலவாதவர்களை நீங்குவீர்களாக.

திருநல்லம்

அல்ல லாகஐம் பூதங்க ளாட்டினும்
வல்ல வாறு சிவாய நமவென்று
நல்லம் மேவிய நாத னடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே. **#431**

ஐம்பெரும் பூதங்கள் துன்பங்கள் உண்டாக ஆட்டினாலும், திருநல்லத்தில் எழுந்தருளியுள்ள நாதன் திருவடிகளை வல்லவாறு ழுசிவாயநம" என்று தொழுதால். வெல்லுதற்கு வந்த வினைகளாகிய பகை கெடும்.

திருநல்லம்

மாத ராரொடு மக்களுஞ் சுற்றமும்
பேத மாகிப் பிரிவதன் முன்னமே
நாதன் மேவிய நல்லம் நகர்தொழப்
போது மின்னெழு மின்புக லாகுமே. **#432**

மனைவியரும், மக்களும், சுற்றத்தாரும் வேற்றுமைப்பட்டுப் பிரிகின்ற இறுதிக்காலம் வருவதற்குமுன்பே; தலைவன் மேவியுள்ள

திருநல்லமாகிய நகரைத் தொழப் போதுவீர்களாக; எழுவீர்களாக; அப்பெருமானே புகலாவான்.

திருநல்லம்

வெம்மை யான வினைக்கடல் நீங்கிநீர்
செம்மை யாய சிவகதி சேரலாம்
சும்மை யார்மலர் தூவித் தொழுமினோ
நம்மை யாளுடை யானிடம் நல்லமே. **#433**

வண்டுகளின் ஒலி பொருந்திய மலர்களைத் தூவி நம்மை ஆளுடையானாகிய பெருமான் உறையும் திருநல்லத்தினைத் தொழுவீர்களாக; தொழுதால் வெப்பம் பொருந்திய வினைக்கடலினின்றும் நீங்கி நீர் செம்மையாகிய சிவகதியினைச் சேரலாம்.

திருநல்லம்

கால மான கழிவதன் முன்னமே
ஏலு மாறு வணங்கிநின் றேத்துமின்
மாலும் மாமல ரானொடு மாமறை
நாலும் வல்லவர் கோனிடம் நல்லமே. **#434**

திருமாலும், பிரமனும், பெருமைமிக்க வேதங்கள் நான்கும் வல்லவர்களாகிய முனிவர்களும் ஆகிய அனைவர்க்கும் கோனாகிய சிவபெருமான் வீற்றிருக்கும் இடம் திருநல்லம். ஆதலால், பொருந்திய காலம் கழிவதற்கு முன்பே, இயலும் நெறியில் வணங்கி நின்று வழிபடுவீராக.

திருநல்லம்

மல்லை மல்கிய தோளரக் கன்வலி
ஒல்லை யில்லொழித் தானுறை யும்பதி
நல்ல நல்ல மெனும்பெயர் நாவினால்
சொல்ல வல்லவர் தூநெறி சேர்வரே. **#435**

வளம் நிறைந்த தோள்களை உடைய இராவணன் ஆற்றலை விரைந்து ஒழித்த பெருமான் உறைகின்ற பதியாகிய நல்ல நல்லம் என்னும் பெயரை நாவினால். சொல்லும் வல்லமை உடையவர்கள் தூயநெறியிற் சேர்வர்.

திருவாமாத்தூர்

திருஆமாத்தூர்

திருவாமாத்தூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அழகியநாதர்.
தேவியார் : அழகியநாயகியம்மை.

மாமாத் தாகிய மாலயன் மால்கொடு
தாமாத் தேடியுங் காண்கிலர் தாள்முடி
ஆமாத் தூரர னேயரு ளாயென்றென்
றேமாப் பெய்திக்கண் டாரிறை யானையே. **#436**

தமக்குள்ளே பெரும் பூசல் கொண்டவராகிய திருமாலும் பிரமனும் ஆணவ மயக்கம் கொண்டு தாமாகத் தேடியும், பெருமானின் திருவடியடையும் திருமுடியையும் காண்கிலர்; "ஆமாத்தூர் அரனே! அருள்வாயாக" என்று பலமுறை இன்பமுறக் கூவியே இறையானைக் கண்டார்.

திருஆமாத்தூர்

சந்தி யானைச் சமாதிசெய் வார்தங்கள்
புந்தி யானைப்புத் தேளிர் தொழப்படும்
அந்தி யானை ஆமாத்தூ ரழகனைச்
சிந்தி யாதவர் தீவினை யாளரே. **#437**

காலை மாலை ஆகிய சந்திகளில் வணங்கப் படுவானும், யோகநெறி தலைப்படுவாருடைய புந்தியில் உறைபவனும், தேவர்களால் தொழப்படும் அந்திவானத்தைப்போன்ற செம்மேனியானும் ஆகிய ஆமாத்தூர் அழகனைச் சிந்திக்காதவர்கள் தீவினையாளரே ஆவர்.

திருஆமாத்தூர்

காமாத் தம்மெனுங் கார்வலைப் பட்டுநான்
போமாத் தையறி யாது புலம்புவேன்
ஆமாத் தூரர னேயென் றழைத்தலும்
தேமாத் தீங்கனி போலத்தித் திக்குமே. **#438**

காமமும் பொருளுமாகிய கார்வலையிலே பட்டுப்போகும் நெறியை அறியாமற் புலம்புகின்ற அடியேன் "ஆமாத்தூர் அரனே!" என்று அழைத்தலும், தேமாவின் இனிய கனி போலப் பெருமான் தித்தித்தனன்.

திருஆமாத்தூர்

பஞ்ச பூத வலையிற் படுவதற்
கஞ்சி நானு மாமாத்தூ ரழகனை
நெஞ்சி னால்நினைந் தேன்நினை வெய்தலும்
வஞ்ச ஆறுகள் வற்றின காண்மினே. **#439**

ஐம்பெரும் பூதங்களாலாகிய வலையிற்படுவதற்கு அஞ்சி அடியேனும் ஆமாத்தூர் அழகனை நெஞ்சின் கண் நினைந்தேன்; அந்நினைப்பு என்னை எய்துதலும் வஞ்சனையாகிய ஆறுகள் வற்றிவிட்டன; காண்பீராக.

திருஆமாத்தூர்

குராமன் னுங்குழ லாளொரு கூறனார்
அராமன் னுஞ்சடை யான்திரு வாமாத்தூர்
இராம னும்வழி பாடுசெய் யீசனை
நிராம யன்தனை நாளும் நினைமினே. **#440**

குரவமலர்கள் நிலைபெற்ற கூந்தலை உடைய உமா தேவியை ஒரு கூற்றில் உடையவனும், பாம்பு நிலைபெற்ற சடையனும், திருவாமாத்தூரில் இராமனால் வழிபாடு செய்யப் பெற்ற ஈசனும், நிராமயனும் ஆகிய பெருமானை நாள்தோறும் நினைப்பீர்களாக.

திருஆமாத்தூர்

பித்த னைப்பெருந் தேவர் தொழப்படும்
அத்த னையணி யாமாத்தூர் மேவிய
முத்தி னையடி யேனுள் முயறலும்
பத்தி வெள்ளம் பரந்தது காண்மினே. **#441**

பித்தேறியவனும், பெரிய தேவர்களால் தொழப் படும் தலைவனும், அழகு பொருந்திய ஆமாத்தூரை விரும்பிப் பொருந்திய முத்துப் போல்வானும் ஆகிய பெருமானை அடியேன் உள்ளத்தே முயன்று உள்குதலும், அன்பு என்னும் வெள்ளம் பரவி எழுவதாயிற்று; காண்பீர்களாக.

திருஆமாத்தூர்

நீற்றி னார்திரு மேனியன் நேரிழை
கூற்றி னான்குழற் கோலச் சடையிலோர்
ஆற்றி னானணி யாமாத்தூர் மேவிய
ஏற்றி னான்எமை யாளுடை யீசனே. **#442**

எம்மை ஆளுடைய இறைவன், திருநீற்றினால் நிறைந்த திருமேனி உடையவனும், நேரிழையை ஒரு கூற்றில் உடையவனும், அழகு நிறைந்த குழலாகிய சடையில் ஓர் ஆறாம் கங்கையை உடையவனும்

ஆகிய அழகு நிறைந்த ஆமாத்தூரில் விரும்பியெழுந்தருளிய இடப வாகனத்தை உடையவன் ஆவன்.

திருஆமாத்தூர்

பண்ணிற் பாடல்கள் பத்திசெய் வித்தகர்க்
கண்ணித் தாகு மமுதினை யாமாத்தூர்
சண்ணிப் பானைத் தமர்க்கணித் தாயதோர்
கண்ணிற் பாவையன் னானவன் காண்மினே. **#443**

பண்ணினை உடைய பாடல்களைப் பாடித்தன்னை அன்புசெய்யும் திறம் உடையவர்களுக்கு இனிக்கும் அமுது போல்வானும், ஆமாத்தூரில் பொருந்தியவனும், தன்னைச் சார்ந்த அடியார்களுக்கு மிகநெருங்கிக் கண்ணிலுள்ள கருமணிப் பாவை போன்றவனுமானவனைக் காண்பீர்களாக!.

திருஆமாத்தூர்

குண்டர் பீலிகள் கொள்ளுங் குணமிலா
மிண்ட ரோடெனை வேறு படுத்துய்யக்
கொண்ட நாதன் குளிர்புனல் வீரட்டத்
தண்டனாரிட மாமாத்தூர் காண்மினே. **#444**

குண்டர்களும், மயிற்பீலிகளைக்கொள்ளும் குணமில்லாத மிண்டர்களுமாகிய சமணர்களோடு என்னை வேறுபடுத்தி உய்யுமாறு கொண்ட நாதனாகிய குளிர்புனல்சூழ்ந்த வீரட்டத்துத் தேவதேவர் உறையும் இடம் ஆமாத்தூரேயாகும். காண்பீர்களாக!.

திருஆமாத்தூர்

வானஞ் சாடு மதியர வத்தொடு
தானஞ் சாதுடன் வைத்த சடையிடைத்
தேனஞ் சாடிய தெங்கிள நீரொடும்
ஆனஞ் சாடிய வாமாத்தூ ரையனே. **#445**

ஆகாயத்தே இருளைச்சிதைக்கும் மதியை அரவொடும் அஞ்சாதபடி நட்புக் கொள்ள வைத்தவர். தேன் முதலிய பஞ்சாமிர்தத்தொடும் இளநீர் பஞ்சகவ்வியம் முதலியவற்றை அபிடேகம் கொண்டவர் ஆமாத்தூர்ப்பெருமான்.

திருஆமாத்தூர்

விடலை யாய்விலங் கல்லெடுத் தான்முடி
அடர வோர்விர லூன்றிய வாமாத்தூர்
இடம தாக்கொண்ட ஈசனுக் கென்னுளம்

இடம தாகக்கொண் டின்புற் றிருப்பனே. **#446**
அடங்காத விடலையாக வந்த இராவணன் திருக்கயிலாயத்தை எடுக்கலுற்றபோது அவன் முடிகள் அடரும்படியாக ஒரு விரல் ஊன்றயவனும், ஆமாத்தூரை இடமாகக் கொண்ட ஈசனுமாகிய பெருமானுக்கு என்னள்ளத்தை இடமாக வைத்து இன்புற்று இருப்பன் அடியேன்.

திருத்தோணிபுரம்

சீர்காழி

திருத்தோணிபுரம், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தோணியப்பர்.
தேவியார் : திருநிலைநாயகியம்மை.

மாதி யன்று மனைக்கிரு வென்றக்கால்
நீதி தான்சொல நீயெனக் காரெனும்
சோதி யார்தரு தோணி புரவர்க்குத்
தாதி யாவன்நா னென்னுமென் தையலே. **#447**

சிவபெருமான்மேற் காதல் மிகுந்து, 'மனைக் கண் இரு' என்று நான் கூறியபோது, "எனக்கு நீதி சொல்ல நீ என்ன உறவுடையை?" என்று சொல்வதோடு, "ஒளி நிறைந்த தோணிபுரத்து இறைவர்க்குத் தாதியாக நான் ஆவேன்" என்றும் கூறுகின்றனள் என் மகள்.

சீர்காழி

நக்கம் வந்து பலியிடென் றார்க்கிட்ட
மிக்க தையலை வெள்வளை கொள்வது
தொக்க நீர்வயல் தோணி புரவர்க்குத்
தக்க தன்று தமது பெருமைக்கே. **#448**

நீர்வளம் தொகுத்த வயல்களை உடைய தோணி புரத்து இறைவர் நிர்வாணமாய் வந்து 'பலி இடுக' என்றார்க்கு இட்டம் மிகுந்த என் பெண்ணின் வெள்வளைகளை அவர்கொள்வது தமது பெருமைக்குச் சிறிதும் தகுதியுடையதன்று.

சீர்காழி

கெண்டை போல்நய னத்திம வான்மகள்
வுண்டு வார்குழ லாளுட னாகவே
துண்ட வான்பிறைத் தோணி புரவரைக்
கண்டு காமுறுகின்றனள் கன்னியே. **#449**

கெண்டைமீன் போன்ற கண்ணை உடைய இமவான் மகளாகிய வண்டுகள் செறிந்த நீண்ட குழலாள் உடனாக உறையும் வெள்ளிய பிறைமதி அணிந்த தோணிபுரத்து இறைவரைக் கண்டு இப்பெண் காமுறுகின்றனள்.

சீர்காழி

பாலை யாழ்மொழி யாளவள் தாழ்சடை
மேல ளாவது கண்டனள் விண்ணுறச்
சோலை யார்தரு தோணி புரவர்க்குச்
சால நல்லளா கின்றனள் தையலே. **#450**

பாலையாழின் இனிய இசையை ஒத்த மொழியாளாகிய கங்கை தாழ்சடையின்மேல் உள்ளவளாதலைக் கண்டும்,விண்ணைமிக்குப் பொருந்திய சோலைகள் செறிந்த தோணி புரத்திறைவர்க்கு மிகவும் நல்லவளாகின்றனள் இப்பெண்.

சீர்காழி

பண்ணின் நேர்மொழி யாள்பலி யிட்டவிப்
பெண்ணை மால்கொடு பெய்வளை கொள்வது
சுண்ண மாடிய தோணிபு ரத்துறை
அண்ண லாருக்குச் சால அழகிதே. **#451**

சுண்ணமாடிய தோணிபுரத்து உறைகின்ற அண்ணலாராகிய சிவபெருமானுக்குப் பலியிட்டவளும் பண்ணை ஒத்த இனிய மொழியாளுமாகிய இப்பெண்ணுக்கு மயக்கம் கொடுத்துப் பெய்யப் பெற்ற வளைகளையும் கொள்வது சால அழகுடைய செயலோ?

சீர்காழி

முல்லை வெண்நகை மொய்குழ லாயுனக்
கல்ல னாவ தறிந்திலை நீகனித்
தொல்லை யார்பொழில் தோணி புரவர்க்கே
நல்லை யாயிடு கின்றனை நங்கையே. **#452**

முல்லையரும்புகளைப் போன்ற ஒளிச் சிரிப்பையும் வண்டுகள் மொய்க்கும் கூந்தலையும் உடைய நங்கையே! கனிகள் உடையதாகிய பொழில் சூழ்ந்த பழைய தோணிபுரத்து இறைவர்க்கு நீ நல்லவளாகின்றனை; ஆயினும் உனக்கு அவன் அல்லனாவதனை நீ அறிந்திலை.

சீர்காழி

ஒன்று தானறி யாருல கத்தவர்
நின்று சொல்லி நிகழ்ந்த நினைப்பிலர்
துன்று வார்பொழில் தோணி புரவர்தம்
கொன்றை சூடுங் குறிப்பது வாகுமே. **#453**

தலைவிக்குற்ற நோயின் காரணம் நேறொன்றாதலை இவ்வுலகத்தவர் அறியார்; நின்று சொல்லி அவளுக்கு நிகழ்ந்த நினைப்பு இல்லாதவர்கள்; நெருங்கிய நீண்டுயர்ந்த பொழில்களை உடைய

தோணிபுரத்து இறைவருடைய கொன்றை மலரைச் சூட விழையும் குறிப்பே அந்நோய்க்குக் காரணமாகும்.

சீர்காழி

உறவு பேய்க்கண முண்பது வெண்தலை
உறைவ தீமம் உடலிலோர் பெண்கொடி
துறைக ளார்கடல் தோணி புரத்துறை
இறைவ னார்க்கிவ ளென்கண்டன் பாவதே. **#454**

உறவு பேய்க்கூட்டங்கள்; உண்பதோ வெண்தலையில்; வாழ்வதோ சுடுகாட்டில்; உடலின் ஒரு கூற்றிலோ ஒரு பெண்கொடி; துறைகள் பொருந்திய கடலை அடுத்த தோணிபுரத்து உறைகின்ற இறைவனாராகிய பெருமானிடத்து இவள் இவற்றுள் எதனைக்கண்டு அன்பு ஆயினள்?

சீர்காழி

மாக யானை மருப்பேர் முலையினர்
போக யானு மவண்புக்க தேபுகத்
தோகை சேர்தரு தோணி புரவர்க்கே
ஆக யானு மவர்க்கினி யாளதே. **#455**

மேகம் போன்ற கரிய யானையின் தந்தங்களைப் போன்ற தனங்களை உடையவர் காதலித்துச் செல்ல அவர்பின் யானும் சென்று காதலிக்க அவர் அழகில் ஈடுபட்டு அடிமையேன் ஆயினேன்.

சீர்காழி

இட்ட மாயின செய்வாளென் பெண்கொடி
கட்டம் பேசிய காரரக் கன்றனைத்
துட்ட டக்கியதோணி புரத்துறை
அட்ட மூர்த்திக்கு அன்பது வாகியே. **#456**

என் பெண்கொடியாகிய மகள், தன் தொல்லைகளால் உழந்து இசைபாடிய இராவணனாகிய கரிய அரக்கனது தீய செயலை அடக்கிய தோணிபுரத்து இறைவராகிய அட்டமூர்த்திக்கு அன்புகொண்டவளாகித் தன் விருப்பத்திற்கு உரியனவற்றைச் செய்பவளாயினள்.

திருப்புகலூர்

திருப்புகலூர்

திருப்புகலூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வர்த்தமானீசுவரர்.
தேவியார் : கருந்தார்க்குழலியம்மை.

துன்னக் கோவணச் சுண்ணவெண் ணீறணி
பொன்னக் கன்ன சடைப்புக லூரரோ
மின்னக் கன்னவெண் திங்களைப் பாம்புடன்
என்னுக் கோவுடன் வைத்திட் டிருப்பதே. **#457**

கோவண ஆடையையும், வெண்ணீற்றுப் பொடியணிந்த மேனியையும், பொன் விரிந்து மலர்ந்தாலொத்த சடையையும் உடைய புகலூர்த்தலத்துப் பெருமானே! மின்னல் மலர்ந்தது போன்ற வெண்திங்களைப் பாம்புடன் எதற்காகத் தேவரீர் திருச்சடையில் உடன்வைத்துக் கொண்டுள்ளீர்?

திருப்புகலூர்

இரைக்கும் பாம்பு மெறிதரு திங்களும்
நுரைக்குங் கங்கையும் நுண்ணிய செஞ்சடைப்
புரைப்பி லாத பொழிற்புக லூரரை
உரைக்கு மாசொல்லி யொள்வளை சோருமே. **#458**

இப்பெண்,நெட்டுயிர்க்கும் பாம்பையும், அதனால் கவ்வப்படுகின்ற திங்களையும், நுரைத்தெழுந்து அலைவீசும் கங்கையையும் நுண்ணிய செஞ்சடையில் வைத்துக் குற்றமில்லாத பொழில்கள் சூழ்ந்த புகலூரில் உறையும் பெருமானை உரைக்குமாறு கூறித் தன் ஒளிபொருந்திய வளைகள் நெகிழ்கின்றாள்.

திருப்புகலூர்

ஊச லாம்அர வல்குவென் சோர்குழல்
ஏச லாம்பழி தந்தெழில் கொண்டனர்
ஓசொ லாய்மக ளேமுறை யோவென்று
பூசல் நாமிடு தும்பு லூரர்க்கே. **#459**

அசைந்தாடும் அரவத்தின் படத்தைப் போன்ற அல்குலை உடைய என் சோர்குழலாளாகிய பெண்ணைச் சுற்றத்தார் முதலாயினோர் ஏசலாகும் பழி சுமத்தி அவள் எழிலைக் கொண்டனர். ஆதலால், 'ஓ, மகளே ! சொல்வாயாக ! முறையோ ' என்று புகலூர் இறைவர்க்கு நாம் பூசல்

இடுவோமாக.

திருப்புகலூர்

மின்னின் நேரிடை யாளுமை பங்கனைத்
தன்னை நேரொப் பிலாத தலைவனைப்
புன்னைக் கானற் பொழிற்புக லூரனை
என்னு ளாகவைத் தின்புற் றிருப்பனே. **#460**

மின்னலையொத்த இடையாளாகிய உமையினை ஒருபங்கில் உடையவனும், தன்னை நிகர்க்கு மொன்றில்லாத தலைவனும் ஆகிய புன்னைக்கானல் பொழில் சூழ்ந்த புகலூரனை என் உள்ளத்து வைத்து அடியேன் இன்பமுற்றிருப்பேன்.

திருப்புகலூர்

விண்ணி னார்மதி சூடிய வேந்தனை
எண்ணி நாமங்க ளோதி யெழுத்தஞ்சுங்
கண்ணி னாற்கழல் காண்பிட மேதெனில்
புண்ணி யன்புக லூருமென் நெஞ்சுமே. **#461**

விண்ணிற் பொருந்திய பிறைமதியினைச் சூடிய அருள்வேந்தனை, நாமங்கள் கூறியும், திருவைந்மூத்தால் தியானித்தும், கண்ணினாற் காழலடிகளைத் தரிசிக்கும் இடங்கள் எவை என்றால் அப்புண்ணியன் எழுந்தருளியிரும் புகலூரும் என் நெஞ்சமும் ஆம்.

திருப்புகலூர்

அண்ட வாண ரமுதுண நஞ்சுண்டு
பண்டு நான்மறை யோதிய பாடலன்
தொண்ட ராகித் தொழுது மதிப்பவர்
புண்ட ரீகத்து ளார்புக லூரரே. **#462**

புகலூர்த் தலத்து இறைவர், தேவர்கள் அமுதுண்ணவும் தாம் நஞ்சுண்டவர்; பழமையில் நான்மறைப் பாடல்களால் ஓதப்பட்டவர்; தொண்டராகித் தொழுது மதிக்கின்றவர்களின் இதயத் தாமரையில் உள்ளவர் ஆவர்.

திருப்புகலூர்

தத்து வந்தலை கண்டறி வாரிலைத்
தத்து வந்தலை கண்டவர் கண்டிலர்
தத்து வந்தலை நின்றவர்க் கல்லது
தத்து வனலன் தண்புக லூரனே. **#463**

தத்துவங்களின் கூறுபாடுகளை முடிவு போகக் கண்டு அறிவார் இலர்;

அவ்வாறு தத்துவங்களை முடிவு போகக் கண்டவர் காணாதவரேயாவர்; தத்துவம் தலைநின்றவர்க்கே அல்லது தத்துவவடிவானவன் அல்லன் புகலூர்ப் பெருமான்.

திருப்புகலூர்

பெருங்கை யாகிப் பிளிறி வருவதோர்
கருங்கை யானைக் களிற்றுரி போர்த்தவர்
வருங்கை யானை மதகளி றஞ்சினைப்
பொருங்கை யானைகண் டீர்புக லூரரே. **#464**

புகலூர்த்தலத்து இறைவர், பெருங்கையோடு பிளிறி வருவதாகிய ஒரு வலியகையானையை உரித்துப் போர்த்த இயல்பினர்; துதிக்கையை உடைய மதயானைகளாகிய ஐம்புலன்களைப் பொறாது வெல்லும் ஆனைபோல்வார் ஆவர்.

திருப்புகலூர்

பொன்னொத் தனிறத் தானும் பொருகடல்
தன்னொத் தநிறத் தானு மறிகிலாப்
புன்னைத் தாது பொழிற்புக லூரரை
என்னத் தாவென என்னிடர் தீருமே. **#465**

பொன்னை ஒத்த நிறம் உடைய பிரமதேவனும், அளைவீசும் கடைலையொத்த நீல நிறத்தவனான திருமாலும் அறியப்படாத இயல்பினரும் புன்னையின் மகரந்தங்களை உடைய பொழில் சூழ்ந்த திருப்புகலூரின்கண் எழுந்தருளியிருப்பவருமான பெருமானை "என் தந்தையே" என்று கூற என் இடர்கள் அனைத்தும் தீரும்.

திருப்புகலூர்

மத்த னாய்மதி யாது மலைதனை
எத்தி னான்திரள் தோண்முடி பத்திற
ஒத்தி னான்விர லாலொருங் கேத்தலும்
பொத்தி னான்பு லூரைத் தொழுமினே. **#466**

மதச் செருக்குடையவனாய்ச்சிறிதும் மதியாமல் திருக்கயிலாயத்தை எடுக்கலுற்ற இராவணனின் திரண்ட தோள்களும், முடிபத்தும் இறும்படியாகத் திருவிரலால் ஒற்றியவனும், தன் நரம்புகளே யாழாகக்கொண்டு அவன் எத்துதலும் மீண்டும் அருள்செய்தவனும் ஆகிய பெருமான் உறையும் திருப்புகலூரைத் தொழுவீர்களாக.

திருவேகம்பம்

திருஏகம்பம்

திருவேகம்பம், திருக்குறுந்தொகை,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஏகாம்பரநாதர்.
தேவியார் : காமாட்சியம்மை.

பண்டு செய்த பழவினை யின்பயன்
கண்டுங் கண்டுங் களித்திகாண் நெஞ்சமே
வண்டு லாமலர்ச் செஞ்சடை யேகம்பன்
தொண்ட னாய்த்திரி யாய்துயர் தீரவே. **#467**

நெஞ்சமே! நீ முற்பிறவிகளிற் செய்த பழவினைகளின் பயனைக் கண்டும் கண்டும் பின்னும் களிப்புற்றுக் கெடுகின்றனையே, வண்டு உலாவுகின்ற மலரையணிந்த செஞ்சடை உடையவனாகிய திருவேகம்பத்துப் பெருமானுக்குத் தொண்டனாகி உன் துயர்கள் தீரும்பொருட்டுத் திரிவாயாக.

திருஏகம்பம்

நச்சி நாளும் நயந்தடி யார்தொழ
இச்சை யாலுமை நங்கை வழிபடக்
கொச்சை யார்குறு கார்செறி தீம்பொழில்
கச்சி யேகம்ப மேகை தொழுமினே. **#468**

அடியார்கள் நாள்தோறும் நசை உடையவராய் நயந்து தொழவும், உமைநங்கையார் இச்சையால் வழிபடவும் கண்டு,செறிந்த இனிய பொழில்களை உடைய கச்சியேகம்பத்தினை நீங்களும் கைகளாற் றொழுவீர்களாக.

திருஏகம்பம்

ஊனி லாவி யியங்கி யுலகெலாம்
தானு லாவிய தன்மைய ராகிலும்
வானுலாவிய பாணி பிறங்கவெங்
கானி லாடுவர் கச்சியே கம்பரே. **#469**

கச்சி ஏகம்பர், உடல்கள்தோறும் உயிராய் இயங்கி உலகமெல்லாம் பொருந்திய இயல்பினை உடையவராயினும், வானமெங்கும் உலாவிய இசை விளங்கும் படியாக வெவ்விய சுடுகாட்டில் நட்டமும் ஆடுவர்.

திருஏகம்பம்

இமையா முக்கண ரென்நெஞ்சத் துள்ளவர்
தமையா ரும்மறி வொண்ணாத் தகைமையர்
இமையோ ரேத்த இருந்தவ னேகம்பன்
நமையா ளும்மவ னைத்தொழு மின்களே. **#470**

இமையாத முக்கண்ணை உடையவரும், என் நெஞ்சத்தின் கண் உள்ளவரும், தம்மை யாரும் அறியவொண்ணாத பெருந்தகைமை உள்ளவரும். தேவர்கள் ஏத்துமாறு வீற்றிருந்தவரும, நம்மையாள்பவருமாகிய திருவேகம்பரைத் தொழுவீர்களாக.

திருஏகம்பம்

மருந்தி னோடுநற் சுற்றமும் மக்களும்
பொருந்தி நின்றெனக் காயவெம் புண்ணியன்
கருந்த டங்கண்ணி னாளுமை கைதொழ
இருந்த வன்கச்சி யேகம்பத் தெந்தையே. **#471**

கச்சியேகம்பத்தின்கண் எழுந்தருளியுள்ள எந்தை, எனக்கு மருந்தும், சுற்றமும், மக்களும் ஆகப் பொருந்திநின்று விளங்கும் புண்ணிய வடிவினன்; கரிய பெரிய கண்ணை உடைய உமாதேவி கைதொழ இருந்தவன் ஆவன்.

திருஏகம்பம்

பொருளி னோடுநற் சுற்றமும் பற்றிலர்க்
கருளு நன்மைதந் தாயவ ரும்பொருள்
சுருள்கொள் செஞ்சடை யான்கச்சி யேம்பம்
இருள்கெ டச்சென்று கைதொழு தேத்துமே. **#472**

பற்று அற்றவர்களுக்குப் பொருளும், நற்சுற்றமும், அருளும் நன்மைதந்து ஆதலுற்ற அரும்பொருளும் ஆகியவனும், சுருளுதலைக்கொண்ட செஞ்சடை உடையவனும் ஆகிய பெருமான் உறைகின்ற கச்சிஏகம்பத்தை, உம்மைச்சார்ந்த இருள் மலங்கெடச் சென்று கரங்குவித்து வழிபடுவீர்களாக.

திருஏகம்பம்

மூக்கு வாய்செவி கண்ணுட லாகிவந்
தாக்கு மைவர்த மாப்பை யவிழ்த்தருள்
நோக்கு வான்நமை நோய்வினை வாராமே
காக்கும் நாயகன் கச்சியே கம்பனே. **#473**

கச்சியேகம்பத்து இறைவன், மெய், வாய், கண், மூக்குச் செவியாகி வந்து ஆக்கிய நும்புலன்களினாலாய கட்டினை அவிழ்த்தருளித் தன் திருக்கண்களால் நம்மை நோக்குவான்; நோய்களை உண்டாக்கும்

வினைகள் நம்மிடத்து வாராமற் காக்கம் நாயகன் ஆவன்.

திருஏகம்பம்

பண்ணி லோசை பழத்தினி லின்சுவை
பெண்ணொ டாணென்று பேசற் கரியவன்
வண்ண மில்லி வடிவுவே றாயவன்
கண்ணி லுண்மணி கச்சியே கம்பனே. **#474**

கச்சியேகம்பத்து இறைவன் பண்ணின் இசையாகவும் பழத்தில் இனிய சுவையாகவும், பெண் ஆண் என்று ஒருபாற்படுத்திப் பேசுதற்கு அரியவனாகவும் , வண்ணம் இல்லாதவனாகவும், வடிவம் வேறாயவனாகவும், கண்ணினுட் கருமணியாகவும் உள்ளான்.

திருஏகம்பம்

திருவின் நாயகன் செம்மலர் மேலயன்
வெருவ நீண்ட விளங்கொளிச் சோதியான்
ஒருவ னாயுணர் வாயுணர் வல்லதோர்
கருவுள் நாயகன் கச்சியே கம்பனே. **#475**

கச்சியேகம்பத்து இறைவன், திருமகளின் நாயகனாகிய திருமாலும், சிவந்த தாமரை மலர்மேல் உள்ள பிரமனும் அஞ்சி வெருவும்படியாக விளங்குகின்ற நிமிர்ந்த சோதி ஒளியாகவும், ஒப்பற்றவனாகவும், உணர்வு ஆகவும், உணர்வல்லாத கருவினுள் நாயகனாகவும் உள்ளான்.

திருஏகம்பம்

இடுக நுண்ணிடை யேந்திள மென்முலை
வடிவின் மாதர் திறம்மனம் வையன்மின்
பொடிகொள் மேனியன் பூம்பொழிற் கச்சியுள்
அடிக ளெம்மை யருந்துயர் தீர்ப்பரே. **#476**

மிகச் சிறிய (இடுகிய) நுண்ணிடையையும், இளமை உடைய சற்றே ஏந்தினாற்போன்று மெம்முலையையும், உடைய வடிவினையுடைய பெண்கள்பால் உள்ளம் வையாதீர்கள்; திருநீற்றுப்பொடியணிந்த மேனியனாகிய, பொழில் சூழ்ந்த கச்சியேகம்பத்து எழுந்தருளியுள்ள இறைவன் எம்மையெல்லாம் அரிய துயரங்கள் தீர்த்துக் காப்பர்.

திருஏகம்பம்

இலங்கை வேந்த னிராவணன் சென்றுதன்
விலங்க லையெடுக் கவ்விர லூன்றலும்
கலங்கிக் கச்சியே கம்பவோ வென்றலும்
நலங்கொள் செலவளித் தானெங்கள் நாதனே. **#477**

எங்கள் நாதனாகிய கச்சியேகம்பத்து இறைவன், இலங்கை வேந்தனாகிய இராவணன் சென்று தம் திருக்கயிலாயத்தை எடுக்க முற்படுதலும், தன் திருவிரலை ஊன்றக்கலங்குதலுற்று "கச்சி ஏகம்பத்து இறைவா!" என்று அவன் அலறினன்; அது கேட்டு நலம் பெற மீளும் செலவை அவனுக்கு அருளிய பெருங்கருணைத்திறம் உடையவன்.

திருஏகம்பம்

திருவேகம்பம், திருக்குறுந்தொகை,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஏகாம்பரநாதர்.
தேவியார் : காமாட்சியம்மை.

பூமே லானும் பூமகள் கேள்வனும்
நாமே தேவ ரெனாமை நடுக்குறத்
தீமே வும்முரு வாதிரு வேகம்பா
ஆமோ அல்லற்படவடி யோங்களே. **#478**

தாமரைப்பூமேல் உள்ளவனாகிய பிரமதேவனும், பூமகளாகிய இலக்குமிநாயகனாகிய திருமாலும்'யாங்களே பிரமம்' என்று கூறாது நடுக்குறும்படியாகத் தீ வடிவாகிய பெருமானே! திருவேகம்பத்தை உடையவனே! நின் அடியோமாகிய யாங்கள் அல்லறபடுதலும் ஆமோ?

திருஏகம்பம்

அருந்தி றல்அம ரர் அயன் மாலொடு
திருந்த நின்று வழிபடத் தேவியோ
டிருந்த வன்னெழி லார்கச்சி யேகம்பம்
பொருந்தச் சென்று புடைபட் டெழுதுமே. **#479**

அரிய திறலை உடைய தேவர்களும், திருமாலும், பிரமனும் திருத்த முறநின்று வழிபடும் வண்ணம் உமைநங்கையோடு இருந்த பெருமானது அருள் எழில் சேர்ந்த கச்சி ஏகம்பத்தைப் பொருந்த சென்ற வழிபடற்கு எழுவோமாக.

திருஏகம்பம்

கறைகொள் கண்டத்தெண் தோளிறை முக்கணன்
மறைகொள் நாவினன் வானவர்க் காதியான்
உறையும் பூம்பொழில் சூழ்கச்சி யேகம்பம்
முறைமை யாற்சென்று முந்தித் தொழுதுமே. **#480**

திருநீலகண்டனும், எட்டுத்தோள்களை உடைய இறைவனும், முக்கண்ணினனும், வேதம் ஓதும் நாவினனும், தேவர்களுக்கெல்லாம் ஆதியானவனும் ஆகிய பெருமான் உறைகின்ற பூம்பொழில்கள் சூழ்ந்த

கச்சியேகம்பத்தை நெறியினாற் சென்று முந்துறத்தொழுவோமாக.

திருஏகம்பம்

பொறிப்புலன்களைப் போக்கறுத் துள்ளத்தை
நெறிப்ப டுத்து நினைந்தவர் சிந்தையுள்
அறிப்பு றுமமு தாயவ னேகம்பம்
குறிப்பி னாற்சென்று கூடித் தொழுதுமே. **#481**

பொறிகளைப், புலன்களின்வழிப் போதல் தவிர்த்து, உள்ளத்தை ஒரு நெறியின்கண்படச் செய்து நினைந்த மெய்யடியார்களின் சிந்தனையுள் அறிதலுறம் அமுதாகிய பெருமான் எழுந்தருளியுள்ள திருஏகம்பத்தைத் திருவருட் குறிப்பினாற் சென்று கூடித் தொழுவோமாக.

திருஏகம்பம்

சிந்தை யுட்சிவ மாய்நின்ற செம்மையோ
டந்தி யாயன லாய்ப்புனல் வானமாய்ப்
புந்தி யாய்ப்புகுந் துள்ள நிறைந்தவெம்
எந்தை யேகம்பம் ஏத்தித் தொழுமினே. **#482**

சிந்தையுள் சிவமாகிநின்ற செம்மையினோடு, அந்தியாகவும், அனலாகவும், புனலாகவும், வானமாகவும் நினைவார் புத்தியாகிய அந்தக்கரணமாகவும் எல்லாவற்றுள்ளும் புகுந்து, உள்ளத்தில் நிறைந்த எந்தையாரின் கச்சிஏகம்பத்தை ஏத்தித் தொழுவீர்களாக.

திருஏகம்பம்

சாக்கி யத்தோடு மற்றுஞ் சமண்படும்
பாக்கி யம்மிலார் பாடுசெ லாதுறப்
பூக்கொள் சேவடி யான்கச்சி யேகம்பம்
நாக்கொ டேத்தி நயந்து தொழுதுமே. **#483**

புத்தமும், சமணமுமாகிய நெறிகளிற் பட்டுத் திருவருட்செல்வம் இல்லாதவர் மருங்குசெல்லாமல், மிகுந்த பூக்களைக்கொண்ட சேவடியானது கச்சியேகம்பத்தை நாவினைக் கொண்டு ஏத்தி விரும்பித் தொழுவோமாக.

திருஏகம்பம்

மூப்பி னோடு முனிவுறுத் தெந்தமை
ஆர்ப்ப தன்முன் னணியம ரர்க்கிறை
காப்ப தாய கடிபொழி லேகம்பம்
சேர்ப்ப தாகநாஞ் சென்றடைந் துய்துமே. **#484**

வெறுப்புமிகுந்து மூப்பினோடு எம்மையெல்லாம் கட்டுவதற்கு முன்பே,

அணி உடைய அமரர்க்கு இறை உறைவதும்,காவலுடைய மணமிக்க பொழில் சூழ்ந்ததுமாகிய ஏகம்பத்தைச் சேர்வதாக நாம் சென்று தரிசித்து உய்வோமாக.

திருஏகம்பம்

ஆலு மாமயிற் சாயல்நல் லாரொடும்
சால நீயுறு மால்தவிர் நெஞ்சமே
நீல மாமிடற் றண்ணலே கம்பனார்
கோல மாமலர்ப் பாதமே கும்பிடே. **#485**

நெஞ்சமே! ஒலிக்கின்ற பெரிய மயில்போலும் சாயலை உடைய பெண்களோடும் நீ மிகுந்து கொண்ட மயக்கத்தைத் தவிர்வாயாக; நீலமாகிய பெருமைமிக்க கழுத்தினை உடைய அண்ணலாகிய ஏகம்பனாருடைய கோலமிக்க மலர்ச் சேவடிகளைக் கும்பிட்டு உய்வாயாக.

திருஏகம்பம்

பொய்ய னைத்தையும் விட்டவர் புந்தியுள்
மெய்ய னைச்சுடர் வெண்மழு வேந்திய
கைய னைக்கச்சி யேகம்பம் மேவிய
ஐய னைத்தொழு வார்க்கில்லை யல்லலே. **#486**

அனைத்துப் பொய்யையும் விட்ட உயர்ந்தவர் புந்தியுள் மெய்யாகவிளங்குபவனும், சுடர்விடுகின்ற வெண்மழுஏந்திய கையை உடையவனும் ஆகிய கச்சியேகம்பத்தை விரும்பிப் பொருந்திய தலைவனைத் தொழுவார்க்கு அல்லல்கள் இல்லையாம்.

திருஏகம்பம்

அரக்கன் தன்வலி யுன்னிக் கயிலையை
நெருக்கிச் சென்றெடுத் தான்முடி தோள்நெரித்
திரக்க இன்னிசை கேட்டவ னேகம்பம்
தருக்க தாகநாஞ் சார்ந்து தொழுதுமே. **#487**

தன் ஆற்றலைக் கருதியவனாய்த் திருக்கயிலையைழு சென்று எடுத்தவனாகிய அரக்கனின் முடிகளையும் தோள்களையும் நெரித்தவனும், அவனது இரக்கத்திற்குரிய இன்னிசையைக் கேட்டருள் புரிந்தவனும் ஆகிய பெருமான் உறைகின்ற திருவேகம்பத்தை நாம் அருள் இறுமாப்புடன் சார்ந்து தொழுவோமாக.

திருவெண்காடு

திருவெண்காடு

திருவெண்காடு, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சுவேதாரணியேசுவரர்.
தேவியார் : பிரமவித்தியாநாயகியம்மை.

பண்காட் டிப்படி யாயதன் பத்தர்க்குக்
கண்காட் டிக்கண்ணில் நின்ற மணியொக்கும்
பெண்காட் டிப்பிறை சென்னிவைத் தான்திரு
வெண்காட் டையடைந் துய்ம்மட நெஞ்சமே. **#488**

அறியாமையை உடைய நெஞ்சமே! பண்ணிசை காட்டி வழிபடுகின்ற, நிலவுலகிற் பொருந்திய தன் அன்பர்களுக்குத் திருக்கடைக்கண் காட்டி அருளி, கண்ணிற்கருமணி போன்றுள்ளவனும், சென்னியின்கண் பெண், பிறை ஆகியவற்றை வைத்தவனும் ஆகிய பெருமானது திருவெண்காட்டை அடைந்து உய்வாயாக.

திருவெண்காடு

கொள்ளி வெந்தழல் வீசிநின் றாடுவார்
ஒள்ளி யகணஞ் சூழுமை பங்கனார்
வெள்ளி யன்கரி யன்பசு வேறிய
தெள்ளி யன்றிரு வெண்கா டடைநெஞ்சே. **#489**

நெஞ்சே! கொள்ளியாகிய வெவ்விய தழலைவீசி நின்று ஆடுபவரும் ஒள்ளிய பூதகணங்கள் சூழ்பவரும், உமைபங்கரும், வெள்ளிய திருவெண்ணீற்றினரும், அயிராவணம் என்ற ஆனைக்குரியவரும், விடையேறிய தெளவுடையவரும் ஆகிய பெருமானுக்குரிய திருவெண்காட்டை அடைந்து வழிபாடு செய்வாயாக.

திருவெண்காடு

ஊனோக் குமின்பம் வேண்டி யுழலாதே
வானோக் கும்வழி யாவது நின்மினோ
தானோக் குந்தன் னடியவர் நாவினில்
தேனோக் குந்திரு வெண்கா டடைநெஞ்சே. **#490**

நெஞ்சே! தன்னால் நோக்கப்படும் அடியார்கள் நாவினில் அருள் தேன் பாயுமாறு நோக்கும் திருவெண்காட்டை அடைவாயாக! உலகீர்! உடல் நோக்கிய சிற்றன்பங்களைவிரும்பி உழலாது. வான்நோக்கும் வழி எதுவோ அதில் நிற்பீர்களாக.

திருவெண்காடு

பருவெண் கோட்டுப் பைங்கண்மத வேழத்தின்
உருவங் காட்டிநின் றானுமை யஞ்சவே
பெருவெண் காட்டிறை வன்னுறை யும்மிடம்
திருவெண் காடடைந் துய்ம்மட நெஞ்சமே. **#491**

நெஞ்சமே! பருத்த வெள்ளிய தந்தங்களையும், பசுங்கண்களையும், மதத்தையும் உடைய வேழத்தின் உருவத்தை உமையாள் அஞ்சக் காட்டி நின்றவனும், பெரிய சாம்பலால் வெள்ளிய இடுகாட்டில் தங்குபவனும் ஆகிய இறைவன் உறையும் இடமாம் திருவெண்காட்டை அடைந்து உய்வாயாக.

திருவெண்காடு

பற்ற வன்கங்கை பாம்பு மதியுடன்
உற்ற வன்சடை யானுயர் ஞானங்கள்
கற்ற வன்கய வர்புர மோரம்பால்
செற்ற வன்திரு வெண்கா டடை நெஞ்சே. **#492**

நெஞ்சே! உயிர்களாற் பற்றத்தக்கவனும், கங்கை, பாம்பு, பிறையுடன் உற்றவனும் சடையினனும், உயர்ஞானங்கள் கற்றவனும், கீழ்மைக்குணமுடையார் புரங்களை ஓரம்பாற் செற்றவனும் ஆகிய பெருமான் உறையும் திருவெண்காட்டை அடைந்து வழிபாடு செய்வாயாக.

திருவெண்காடு

கூடி னானுமை யாளொரு பாகமாய்
வேட னாய்விச யற்கருள் செய்தவன்
சேட னார்சிவ னார்சிந்தை மேயவெண்
காட னாரடி யேயடை நெஞ்சமே. **#493**

நெஞ்சமே! உமையாளை ஒருபாகமாய்க் கூடியவரும், விசயற்கு வேடனாய் அருள்புரிந்தவரும். உயர்ந்த சிவனாரும் ஆகிய அன்பானினைவார் சிந்தையில்மேவிய திருவெண்காடனாரின் திருவடியே அடைவாயாக.

திருவெண்காடு

தரித்த வன்கங்கை பாம்பு மதியுடன்
புரித்த புன்சடை யான்கய வர்புரம்
எரித்த வன்மறை நான்கினோ டாறங்கம்
விரித்த வன்னுறை வெண்கா டடைநெஞ்சே. **#494**

நெஞ்சே! கங்கை, பாம்பு, மதி ஆகியவற்றை ஒருங்கு தாங்கியவனும். முறுக்குண்ட புன்சடையுடையவனும். கீழவர் புரங்களை எரித்தவனும், நான்கு மறைகளையும், ஆறங்கங்களையும் விரித்தவனும் ஆகிய பெருமான் உறைகின்ற திருவெண் காட்டை அடைந்து வழிபடுவாயாக.

திருவெண்காடு

பட்டம் இண்டை யவைகொடு பத்தர்கள்
சிட்ட னாதியென் றுசிந்தை செய்யவே
நட்ட மூர்த்திஞா னச்சுட ராய்நின்ற
அட்ட மூர்த்திதன் வெண்கா டடைநெஞ்சே. **#495**

நெஞ்சே! பட்டமும், இண்டைமாலைகளும் கொண்டு அன்பர்கள் "உயர்ந்தவனே! ஆதியே!" என்று சிந்தைசெய்ய நடனமாடும் மூர்த்தியாகவும், ஞானச்சுடராய் நின்ற அட்டமூர்த்தியாகவும் உள்ள பெருமானின் திருவெண்காடடைந்து வழிபடுவாயாக.

திருவெண்காடு

ஏன வேடத்தி னானும் பிரமனும்
தான வேடமுன் தாழ்ந்தறி கின்றிலா
ஞான வேடன் விசயற் கருள்செயும்.
கான வேடன்றன் வெண்கா டடை நெஞ்சே. **#496**

நெஞ்சே! பன்றி வேடம் கொண்ட திருமாலும், பிரமனும் தானவேடத்தை முன் தாழ்ந்து அறிய வலிமையில்லாத ஞானவேடனும், அருச்சுனனுக்கு அருள்செய்யும் காட்டு வேடனும் ஆகிய பெருமானின் திருவெண்காடு அடைந்து வழிபடுவாயாக.

திருவெண்காடு

பாலை யாடுவர் பன்மறை யோதுவர்
சேலை யாடிய கண்ணுமை பங்கனார்
வேலை யார்விட முண்டவெண் காடர்க்கு
மாலை யாவது மாண்டவ ரங்கமே. **#497**

பாலைநிலத்தில் ஆடுபவரும், பல மறைகளை ஓதுபவரும், சேல்மீன்போன்று காதளவும் ஆடுகின்ற கண்ணை உடைய உமையொருபாகரும், கடலிற் பொருந்திய விடமுண்டவரும் ஆகிய வெண்காடர்க்கு இடிழுதவர் உறுப்புக்களாகிய எலும்புகளே மாலையாவது.

திருவெண்காடு

இராவ ணஞ்செய மாமதி பற்றவை

இராவ ணம்முடை யான்றனை யுள்குமின்
இராவ ணன்றனை யூன்றி யருள்செய்த
இராவ ணன்திரு வெண்கா டடைமினே. **#498**
அறிவைப்பற்றியிருக்கும் பற்று இல்லாத படி செய்தற்பொருட்டு
அயிராவணத்தை உடைய பெருமானை நினைமின். இராவணனைக்
கால்விரலால் ஊன்றி அருள்செய்த அகோர முகத்தினரின்
திருவெண்காட்டை அடைவீராக.

திருவாய்மூர்

திருவாய்மூர்

திருவாய்மூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வாய்மூரீசுவரர்.
தேவியார் : பாலினுநன்மொழியம்மை.

எங்கே யென்னை யிருந்திடந் தேடிக்கொண்
டங்கே வந்தடை யாள மருளினார்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனா ரதென்கொலோ. **#499**

தென்னனகள் நன்கு தோன்றுகின்ற திருவாய்மூரில் எழுந்தருளியுள்ள அருட்செல்வராகிய இறைவர். என்னை எங்கே என்று தேடி, இருந்த இடத்தைக் கண்டுகொண்டு அங்கே வந்து அடையாளம் அருளியவர், திருவாய்மூர்க்கு வா என்று கூறியருளிச் சென்றார்; அதன் காரணம் என்னை கொல்?

திருவாய்மூர்

மன்னு மாமறைக் காட்டு மணாளனார்
உன்னி யுன்னி யுறங்குகின் றேனுக்குத்
தன்னை வாய்மூர்த் தலைவனா மாசொல்லி
என்னை வாவென்று போனார தென்கொலோ. **#500**

எம்பெருமானையே நினைந்து, நினைந்து உறங்குகின்ற எளியேனுக்கு நிலைபெற்ற பெருமை உடைய மறைக்காட்டுறையும் மணவாளனார் தன்னை வாய்மூர் இறைவனாமாற்றை விளங்கக்கூறி என்னை அங்கு வா என்று கூறியருளிச் சென்றார்; அதன் காரணம் என்னை கொல்?

திருவாய்மூர்

தஞ்சே கண்டேன் தரிக்கிலா தாரென்றேன்
அஞ்சே லுன்னை யழைக்கவந் தேனென்றார்
உஞ்சே னென்றுகந் தேயெழுந் தோட்டந்தேன்
வஞ்சே வல்லரே வாய்மூ ரடிகளே. **#501**

தரித்து ஓரிடத்தில் இராதவர்க்குத் தஞ்சப் பொருளைக் கண்டேன் என்றேன்; "அஞ்சாதே! உன்னை அழைக்க வந்தேன்" என்று அருளினார்; 'உய்ந்தேன்' என்று மகிழ்ந்து எழுந்து ஓட்டம் எடுத்தேன்; வாய்மூர் அடிகள் வஞ்சனையில் வல்லவரோ?

திருவாய்மூர்

கழியக் கண்டிலேன் கண்ணெதி ரேகண்டேன்
ஒழியப் போந்திலே னொக்கவே யோட்டந்தேன்
வழியிற் கண்டிலேன் வாய்மூரடிகள்தம்
சுழியிற் பட்டுச் சுழல்கின்ற தெனகொலோ. **#502**
அவர் என்னைவிட்டு நீங்குமாறு கண்டேனில்லை; கண்ணெதிரே
கண்டேன்; என்னைவிட்டு அவர் நீங்கியபின் போந்தேனில்லை;
ஒக்கவே ஓடிவந்தேன்; ஆயினும் இடைவழியிற் கண்டேனில்லை;
வாய்மூர் அடிகளின் மாயச்சுழலில் அடியேன் இவ்வாறு பட்டுச்
சுழல்கின்றதன் காரணம் என்னையோ?

<u>திருவாய்மூர்</u>

ஒள்ளி யாரிவ ரன்றிமற் றில்லையென்
றுள்கி யுள்கி யுகந்திருந் தேனுக்குத்
தெளளி யாரிவர் போலத் திருவாய்மூர்க்
கள்ளி யாரவர் போலக் கரந்ததே. **#503**
ஒளியுடையவர் இவரையன்றி மற்றுயாரும் இல்லை என்று நினைந்து
நினைந்து மகிழ்ந்திருந்த எளியேனுக்கு, திருவாய் மூரின்கண் தெளந்தவர்
இவர்போலக்காட்டிக் கள்ளம் உடையவர் போல ஒளித்துவிட்டனரே.

<u>திருவாய்மூர்</u>

யாதே செய்துமி யாமலோ நீயென்னில்
ஆதே யேயு மளவில் பெருமையான்
மாதே வாகிய வாய்மூர் மருவினார்
போதே யென்றும் புகுந்ததும் பொய்கொலோ. **#504**
எச்செயல் செய்தாலும் அவன் செயல் என்று எண்ணினால் அதுவே நல்ல
பயனைத்தரும். அளவில்லாத பெருமையுடையான் அவன்,
மாதேவனாகிய வாய்மூர் இறைவா என்றதும் சென்றதும் பொய்யோ?

<u>திருவாய்மூர்</u>

பாடிப்பெற்ற பரிசில் பழங்காசு
வாடி வாட்டந் தவிர்ப்பா ரவரைப்போல்
தேடிக் கொண்டு திருவாய்மூர்க் கேயெனா
ஓடிப் போந்திங் கொள்ளித்தவா றென்கொலோ. **#505**
பாடி அதனாற்பெற்ற பரிசிலாகிய பழங்காசினைக் கொண்டு வாடிய
வாட்டத்தைத் தவிர்ப்பாரைப்போலத் திருவாய்மூர்க்கே தேடிக்கொண்டு
ஓடிவந்து இங்கே ஒளித்தவாற்றிற்கான காரணம் என்னேயோ?

<u>திருவாய்மூர்</u>

திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி யடைப்பித்தா ருந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே. **#506**

வேதங்களாற் பூசிக்கப்பெற்று அடைக்கப்பட்டிருந்த மறைக்காட்டுத் திருக்கதவத்தைத் திறக்குமாறு பாடிய என்னினும், செந்தமிழ்ப்பாடலை உறுதியுடன்பாடி அடைப்பித்தவராகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார் உதோ நின்றார்; திருவாய்மூரில் பிறையைக் கொண்ட செஞ்சடை உடையாராகிய பெருமான் தம்மை மறைக்க வல்லரோ? இவர் பித்தரேயாவர்.

<u>திருவாய்மூர்</u>

தனக்கே றாமை தவிர்க்கென்று வேண்டினும்
நினைத்தேன் பொய்க்கருள் செய்திடு நின்மலன்
எனக்கே வந்தெதிர் வாய்மூருக் கேயெனாப்
புனற்கே பொற்கோயில் புக்கதும் பொய்கொலோ. **#507**

தனக்கு உள்ளம் பொருந்தாமையைத் தவிர்த்தருள்வாயாக என்று வேண்டினும், பொய்யாக நினைக்கும் எளியேன் பொய்க்கும் அருள் செய்யும் நின்மலனாகிய இறைவன், எனக்கு எதிரேவந்து வாய்மூருக்கே வா என்று கூறிவந்து தீர்த்தத்தை அடுத்த பொற்கோயிலில் வந்து புகுந்ததும் பொய்தானோ?

<u>திருவாய்மூர்</u>

தீண்டற் கரிய திருவடி யொன்றினால்
மீண்டற் கும்மிதித் தார்அரக் கன்தனை
வேண்டிக்கொண் டேன்திரு வாய்மூர் விளக்கினைத்
தூண்டிக் கொள்வன்நா னென்றலுந் தோன்றுமே. **#508**

பன்றி வடிவாகச் சென்று தோண்டியும் தீண்டுதற்கரிய திருவடியின்கண் அமைந்த திருவிரல் ஒன்றினால் அரக்கனை மீண்டு அருள்புரிவதற்கும் மிதித்தவராகிய பெருமானை வேண்டிக் கொண்டேன்; திருவாய்மூர் விளக்கினைத் தூண்டிக்கொள்வேன் நான் என்றலும் தோன்றி அருள்புரிந்தான்.

திருப்பாலைத்துறை

திருப்பாலைத்துறை

திருப்பாலைத்துறை, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பாலைவனநாதர்.
தேவியார் : தவளவெண்ணகையம்மை.

நீல மாமணி கண்டத்தர் நீள்சடைக்
கோல மாமதி கங்கையுங் கூட்டினார்
சூல மான்மழு ஏந்திச் சுடர்முடிப்
பால்நெய் யாடுவர் பாலைத் துறையரே. **#509**

திருப்பாலைத்துறையர், நீலமாமணி போலும் திருக்கழுத்தினர்; நீண்ட சடையில் அழகுமிக்க பெரிய மதியையும் கங்கையையும் கூடவைத்தவர்; சூலம், மான், மழு ஏந்தித் தம் ஒளி முடியில் பாலும் நெய்யும் திருவபிடேகம் கொள்வர்.

திருப்பாலைத்துறை

கவள மாகளிற் றின்உரி போர்த்தவர்
தவள வெண்ணகை மங்கையொர் பங்கினர்
திவள வானவர் போற்றித் திசைதொழும்
பவள மேனியர் பாலைத் துறையரே. **#510**

திருப்பாலைத்துறையர், சோற்றுக்கவளம் கொள்ளும் யானையின் உரியைப் போர்த்தவர்; வெள்ளிய நகைப்பை உடைய உமைமங்கையை ஒருபங்கிற் கொண்டவர்; தேவர்கள் போற்றித் திசைநோக்கித் தொழும் பவளம் போன்று சிவந்த மேனியர்.

திருப்பாலைத்துறை

மின்னின் நுண்ணிடைக் கன்னியர் மிக்கெங்கும்
பொன்னி நீர்மூழ்கிப் போற்றி யடிதொழ
மன்னி நான்மறை யோடுபல் கீதமும்
பன்னி னாரவர் பாலைத் துறையரே. **#511**

திருப்பாலைத்துறையர், மின்னலையொத்த நுண்ணிடையை உடைய கன்னிப்பெண்கள் எங்கும் பலராய்க்கூடிக் காவிரியில் நீராடிப்போற்றித் திருவடிகளைத்தொழ நிலைபெற்று, நான்கு வேதங்களும் பல கீதங்களும் பன்னிய சிறப்புடையவராவர்.

திருப்பாலைத்துறை

நீடு காடிட மாய்நின்ற பேய்க்கணங்
கூடு பூதங் குழுமிநின் றார்க்கவே
ஆடி னாரழ காகிய நான்மறை
பாடி னாரவர் பாலைத் துறையரே. #512

திருப்பாலைத்துறையர், சுடுகாடே இடமாய் நீண்டு நின்ற பேயின் தொகுதிகளும், கூடிய பூதங்களும் தம்மில் இணைந்து நின்று ஆர்க்குமாறு ஆடியவர்; அழகாகிய நான்மறை பாடியவர்.

திருப்பாலைத்துறை

சித்தர் கன்னியர் தேவர்கள் தானவர்
பித்தர் நான்மறை வேதியர் பேணிய
அத்த னேநமை யாளுடை யாயெனும்
பத்தர் கட்கன்பர் பாலைத் துறையரே. #513

திருப்பாலைத்துறையர், சித்தரும், கன்னியரும், தேவரும், தானவர்களும், பித்தர்களும், நான்கு மறைகளில் வல்லவேதியரும் பேணிய அத்தனே! நம்மை ஆளுடையாய்! என்று கூறும் அன்பர்களுக்கு அன்பராய் இருப்பர்.

திருப்பாலைத்துறை

விண்ணி னார்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி னார்மற வாதுசி வாயவென்
றெண்ணி னார்க்கிட மாஎழில் வானகம்
பண்ணி னாரவர் பாலைத் துறையரே. #514

தேவர்கள் பணிந்து ஏத்த, (அதுகண்டு) வியப்புறம் மண்ணுலகத்தோர், மறவாது "சிவாயழு என்று தியானிக்க, அவர்களுக்கு இடமாக எழில் மிகும் வானகத்தைப் படைத்தருளியவர், திருப்பாலைத்துறைப் பிரானே.

திருப்பாலைத்துறை

குரவ னார்கொடு கொட்டியுங் கொக்கரை
விரவி னார்பண் கெழுமிய வீணையும்
மருவு நாண்மலர் மல்லிகை செண்பகம்
பரவு நீர்ப்பொன்னிப் பாலைத் துறையரே. #515

மருவிய புதுமலர்களாகிய மல்லிகையும் செண்பகமும் உதிர்ந்து பரவிய நீர்ப்பரப்பை உடைய பொன்னிக் கரையிலுள்ள திருப்பாலைத்துறையர்,கொடுகொட்டி, கொக்கரை, பண் பொருந்திய வீணை ஆகிய வாச்சியங்களின் இசையினை விரவியவரும், குரவரும் ஆவர்.

திருப்பாலைத்துறை

தொடருந் தொண்டரைத் துக்கந் தொடந்தவந்
தடரும் போதர னாயருள் செய்பவர்
கடலின் நஞ்சணி கண்டவர் கடிபுனல்
படருஞ் செஞ்சடைப் பாலைத் துறையரே. **#516**

நறுமணமுடைய கங்கை படரும் செஞ்சடை உடைய திருப்பாலைத்துறையர், தம்மைத்தொடரும் தொண்டரைத் துன்பங்கள் தொடர்ந்து வந்து வருத்தும்போது அரனாகத் தோன்றி அருள்செய்பவர்; கடலினின்றெழுந்த நஞ்சினை உண்டு அணிசெய்யப் பெற்ற திருக்கழுத்தினர்.

திருப்பாலைத்துறை

மேகந் தோய்பிறை சூடுவர் மேகலை
நாகந் தோய்ந்த அரையினர் நல்லியல்
போகந் தோய்ந்த புணர்முலை மங்கையோர்
பாகந் தோய்ந்தவர் பாலைத் துறையரே. **#517**

திருப்பலைத்துறையல், மேகமண்டலத்தைத் தோய்கின்ற பிறையினைச் சூடுவர்: மேகலையாக நாகம் தோய்ந்த அரையினை உடையவர்; நல்லியலுடைய போகம் தோய்தற்குரிய இரண்டு தனங்களையுடைய உமையம்மையை ஒரு பாகம் தோய்ந்தவர்.

திருப்பாலைத்துறை

வெங்கண் வாளர வாட்டி வெருட்டுவர்
அங்க ணாரடி யார்க்கருள் நல்குவர்
செங்கண் மாலயன் தேடற் கரியவர்
பைங்க ணேற்றினர் பாலைத் துறையரே. **#518**

திருப்பாலைத்துறையர், வெவ்விய கண்ணை உடைய வாளரவை ஆட்டி அச்சுறுத்துவர்; அடியார்க்கு அருள் வழங்குபவர்:செங்கண்ணை உடையமாலும் அயனும் தேடற்கு அரியவர்; பைங்கண்ணை உடைய இடபத்தை வாகனமாக உடையவர்.

திருப்பாலைத்துறை

உரத்தி னாலரக் கன்னுயர் மாமலை
நெருக்கி னானை நெரித்தவன் பாடலும்
இரக்க மாஆருள் செய்தபா லைத்துறை
கரத்தி னால்தொழு வார்வினை யோயுமே. **#519**

தன் ஆற்றலினால் இராவணன் உயர்ந்த திருக்கயிலாய மாமலையை

நெருக்கலுற்றானை நெரித்து,அவன் பாடலும் கேட்டு இரக்கமாக அருள்புரிந்த திருப்பாலைத்துறையைக் கரங்களால் தொழுவார் வினை நீங்கும்.

திருநாகேச்சரம்

திருநாகேச்சரம்

திருநாகேச்சரம், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செண்பகாரணியேசுவரர்.
தேவியார் : குன்றமுலைநாயகியம்மை.

நல்லர் நல்லதோர் நாகங்கொண் டாட்டுவர்
வல்லர் வல்வினை தீர்க்கும் மருந்துகள்
பல்லில் ஓடுகை யேந்திப் பலிதிரி
செல்வர் போல்திரு நாகேச் சரவரே. **#520**

திருநாகேச்சரத்திறைவர், நல்லவர்; நல்லதோர் நாகத்தைக் கையிற்கொண்டு ஆட்டுவர்; வல்வினைகளைத் தீர்க்கும் மருந்துகள் அளிக்க வல்லவர்; பல்லில்லாத ஓடு கையேந்திப் பலி திரிகின்ற அருடசெல்வர் ஆவர்.

திருநாகேச்சரம்

நாவ லம்பெருந் தீவினில் வாழ்பவர்
மேவி வந்து வணங்கி வினையொடு
பாவ மாயின பற்றறு வித்திடும்
தேவர் போல்திரு நாகேச் சரவரே. **#521**

திருநாகேச்சரத்திறைவர் நாவலம் பெருந் தீவாகிய (ஜம்புத்வீபம்) காட்டிலுள்ளவர். அனைவரும் மேவிவந்து வணங்கி, வினையொடு பாவமாயினவற்றைப் பற்றறுவித்திடும் தேவர் ஆவர்.

திருநாகேச்சரம்

ஓத மார்கட லின்விட முண்டவர்
ஆதி யாரய னோடம ரர்க்கெலாம்
மாதொர் கூறர் மழுவல னேந்திய
நாதர்போல் திரு நாகேச் சரவரே. **#522**

திருநாகேச்சரத்திறைவர் அலைகள் பொருந்திய கடலின் விடம் உண்டவர்; அயன் தேவர்களாதியாகிய உலகங்களுக்கெல்லாம் ஆதியாயவர்; உடையொரு பாகர்; மழுவினை வலக்கையில் ஏந்திய நாதர் ஆவர்.

திருநாகேச்சரம்

சந்தி ரன்னொடு சூரியர் தாமுடன்

வந்து சீர்வழி பாடுகள் செய்தபின்
ஐந்த லையர வின்பணி கொண்டருள்
மைந்தர் போல்மணி நாகேச் சரவரே. **#523**
திருநாகேச்சரத்திறைவர் சந்திரனோடு சூரியனும் வந்து சீர்வழிபாடுகள் செய்தபின் ஐந்துதலை உடைய அரவின் பணியையும் கொண்டருளும் மைந்தர்(பெருவீரர்)ஆவர்.

திருநாகேச்சரம்

பண்டொர்நாளிகழ் வான்பழித் தக்கனார்
கொண்ட வேள்விக் குமண்டை யதுகெடத்
தண்டமாவிதா தாவின் தலைகொண்ட
செண்டர்போல்திரு நாகேச் சரவரே. **#524**
திருநாகேச்சரத்திறைவர், முன்னோர் நாளில் குற்றங்களை உடைய தக்கன் இகழ்வதற்காகக் கொண்ட வேள்வியினைக் கெடும்படியாகச் செய்தவரும், தண்டையாகப் பிரம தேவனின் தலையைக் கொண்ட செண்டு உடையவரும் ஆவர்.

திருநாகேச்சரம்

வம்பு பூங்குழல் மாது மறுகவோர்
கம்ப யானை யுரித்த கரத்தினர்
செம்பொ னாரித ழிம்மலர்ச் செஞ்சடை
நம்பர் போல்திரு நாகேச் சரவரே. **#525**
திருநாகேச்சரத்திறைவர் புதிய பூக்களையணிந்த குழல் உடைய உமாதேவியார் மனம் சுழல, ஒப்பற்றதாய் நினைப்பாரை நடுங்கச்செய்யும் இயல்பினதாய யானையை உரித்த திருக்கையினர்; செம்பொன்னைப் போன்ற கொன்றை மலர்களையணிந்த செஞ் சடையை உடைய நம்பர் ஆவர்.

திருநாகேச்சரம்

மானை யேந்திய கையினர் மையறு
ஞானச் சோதிய ராதியர் நாமந்தான்
ஆன அஞ்செழுத் தோதவந் தண்ணிக்கும்
தேனர் போல்திரு நாகேச் சரவரே. **#526**
திருநாகேச்சரத்திறைவர் மானை ஏந்திய கையை உடையவர்; குற்றமற்ற அறிவொளியாயவர்; உலகிற்கெல்லாம் ஆதி யாயவர்; தம் திருநாமமாகிய அஞ்செழுத்தை ஓதினால் வந்து அண்ணிக்கின்ற தேனும் ஆவர்.

திருநாகேச்சரம்

கழல்கொள் காலினர் காலனைக் காய்ந்தவர்
தழல்கொள் மேனியர் சாந்தவெண் ணீறணி
அழக ரால்நிழற் கீழற மோதிய
குழகர் போல்குளிர் நாகேச் சரவரே. **#527**

திருநாகேச்சரத்திறைவர் கழல்கொண்ட சேவடியினர்; காலனைக் காய்ந்தருளியவர்; தழல் வண்ணம் கொண்ட செம்மேனியர்; வெண்ணீற்றுப்பொடியணிந்த அழகர்; கல்லால நிழற்கீழ் இருந்து அறம் ஓதிய குழகர் ஆவர்.

திருநாகேச்சரம்

வட்ட மாமதில் மூன்றுடன் வல்லரண்
சுட்ட செய்கைய ராகிலுஞ் சூழ்ந்தவர்
குட்ட வல்வினை தீர்த்துக் குளிர்விக்கும்
சிட்டர் போல்திரு நாகேச் சரவரே. **#528**

திருநாகேச்சரத்திறைவர் வட்டமாக வளைந்த மதில் மூன்றுடன் கூடிய வல்லரண்களைச் சுட்டசெய்கையர்; ஆயினும் தம்மை உள்ளத்தே சூழ்ந்தவர்களின் திரண்ட வல்வினைத் துன்பங்களைத் தீர்த்துக் குளிரும்படிசெய்யும் உயர்ந்தோர் ஆவர்.

திருநாகேச்சரம்

தூர்த்தன் தோண்முடி தாளுந் தொலையவே
சேர்த்தி னார்திருப் பாதத் தொருவிரல்
ஆர்த்து வந்துல கத்தவ ராடிடும்
தீர்த்தர் போல்திரு நாகேச் சரவரே. **#529**

திருநாகேச்சரத்திறைவர் மிக்க கொடியவனாகிய இராவணனது தோள்களும், முடிகளும், தாள்களும் தொலையுமாறு திருப்பாதத்து ஒரு விரலைச் சேர்த்தியவர்; உலகிலுள்ளோரெலாம் ஆர்த்துவந்து நீராடிடும் தீர்த்த வடிவினர் ஆவர்.

திருவதிகைவீரட்டம்

திருஅதிகைவீரட்டானம்

திருவதிகைவீரட்டம், திருக்குறுந்தொகை,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : திருவதிகைநாயகி.

கோணன் மாமதி சூடியோர் கோவணம்
நாணில் வாழ்க்கை நயந்தும் பயனிலை
பாணில் வீணை பயின்றவன் வீரட்டம்
காணி லல்லதென் கண்துயில் கொள்ளுமே. **#530**

வளைந்த பிறைமதி சூடி, கோவணம் அணிந்து விரும்பியும் பயனற்ற நாணமில்லாத வாழ்க்கை உடையவரேனும், வீணையிற் பாடல் பயின்ற சிவபெருமான் உறையும் திருவதிகை வீரட்டத்தைக் கண்டு தொழுதபின்னல்லது என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

திருஅதிகைவீரட்டானம்

பண்ணி னைப்பவ ளத்திரள் மாமணி
அண்ண லையம ரர்தொழு மாதியைச்
சுண்ண வெண்பொடி யான்றிரு வீரட்டம்
நண்ணி லல்லதென் கண்துயில் கொள்ளுமே. **#531**

பண்வடிவானவரும், பவளத்தொகுதி போன்ற மாமணி மேனியுடைய அண்ணலும், தேவர்கள் தொழும் முதல்வரும், திருநீற்றுப்பொடியணிந்தவரும் ஆகிய பெருமான் உறையும் திருவதிகைவீரட்டத்தை நண்ணினாலல்லது என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

திருஅதிகைவீரட்டானம்

உற்ற வர்தம் உறுநோய் களைபவர்
பெற்ற மேறும் பிறங்கு சடையினர்
சுற்றும் பாய்புனல் சூழ்திரு வீரட்டம்
கற்கி லல்லதென் கண்துயில் கொள்ளுமே. **#532**

தம்மைப் பற்றுக்கோடாக அடைந்தவரது மிக்க துயரங்களைக் களைபவரும், இடபம் ஏறுபவரும், விளங்கும் சடையுடையவரும் ஆகிய பெருமான் உறைகின்ற பாயும் கெடில நீர்சுற்றிச் சூழ்கின்ற திருவதிகைவீரட்டத்தைக் கற்ற பின்னல்லது என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

முற்றா வெண்மதி சூடும் முதல்வனார்
செற்றார் வாழுந் திரிபுரந் தீயெழ
விற்றான் கொண்டெயி லெய்தவர் வீரட்டம்
கற்றா லல்லதென் கண்துயில் கொள்ளுமே. **#533**

முதிராத வெள்ளிய பிறையினைச் சூடும் முதல்வரும், சினக்கப்பட்டார் வாழும் மூன்று புரங்கள் தீயெழுமாறு மேருமலையாகிய வில்லைத் தாம் கொண்டு எய்தவரும் ஆகிய பெருமான் உறையும் திருவதிகைவீரட்டத்தைக் கற்றால் அல்லது என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

பல்லா ரும்பல தேவர் பணிபவர்
நல்லா ருந்நயந் தேத்தப் படுபவன்
வில்லால் மூவெயி லெய்தவன் வீரட்டம்
கல்லே னாகிலென் கண்துயில் கொள்ளுமே. **#534**

பலவகைப்பட்ட தேவர்களாலும் பணியப்படுபவரும், நல்லார்களாலும் விரும்பிப் பரவப்படுபவரும், வில்லால் மூவெயில்களை எய்தவரும் ஆகிய பெருமான் உறையும் திருவதிகை வீரட்டத்தைக் கல்லேனாகில் என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

வண்டார் கொன்றையும் மத்தம் வளர்சடைக்
கொண்டான் கோல மதியோ டரவமும்
விண்டார் மும்மதி லெய்தவன் வீரட்டம்
கண்டா லல்லதென் கண்துயில் கொள்ளுமே. **#535**

வண்டுகள் பொருந்திய கொன்றையும், ஊமத்தமலரும், பிறையும், அரவமும் அழகு வளரும் தம் சடையிற் கொண்டவரும், பகைவரது மும்மதில்களை எய்தவரும் ஆகிய பெருமான் உறையும் திருவதிகைவீரட்டத்தைக் கண்டபின்னல்லது என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

அரையார் கோவண ஆடைய னாறெலாந்
திரையா ரொண்புனல் பாய்கெடி லக்கரை
விரையார் நீற்றன் விளங்குவீ ரட்டன்பால்
கரையே னாகிலென் கண்துயில் கொள்ளுமே. **#536**

இடுப்பிற் பொருந்திய கோவண ஆடையரும், வழியெல்லாம் அலையெறியும் ஒள்ளிய நீர் பாய்கின்ற கெடிலக் கரையில் விளங்கும் நறுமணமுடைய திருநீற்றுப் பூச்சினரும் ஆகிய பெருமான் உறையும் திருவதிகை வீரட்டத்தைப் பாடேனாயின் என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

திருஅதிகைவீரட்டானம்

நீறு டைத்தடந் தோளுடை நின்மலன்
ஆறு டைப்புனல் பாய்கெடி லக்கரை
ஏறு டைக்கொடி யான்திரு வீரட்டம்
கூறி லல்லதென் கண்துயில் கொள்ளுமே. **#537**

திருநீறு அணிந்த பெருந்தோளராகிய மலமற்றவரும், இடபக்கொடியுடையாரும் ஆகிய பெருமான் உறைவதும் புனல் பாய்கின்ற கெடில ஆற்றினுடைய கரையில் உள்ளதுமாகிய திருவதிகை வீரட்டத்தைக் கூறினாலல்லது என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

திருஅதிகைவீரட்டானம்

செங்கண் மால்விடை யேறிய செல்வனார்
பைங்க ணானையி னீருரி போர்த்தவர்

அங்கண் ஞாலம தாகிய வீரட்டம்
கங்கு லாகவென் கண்துயில் கொள்ளுமே. **#538**

சிவந்த கண்ணை உடைய திருமாலாகிய விடையேறிய திருவருட்செல்வரும், பசிய கண்ணை உடைய ஆனையின் பச்சைத் தோலை உரித்துப் போத்தருளியவரும், அழகிய இடமகன்ற உலகமுழுதானவருமாகிய பெருமான் உறையும் திருவதிகை வீரட்டத்தைக் (காணேனாயின்) என் கண்கள் இரவாயினும் ஆக, உறக்கம் கொள்ளுமோ?

திருஅதிகைவீரட்டானம்

பூணா ணாரம் பொருந்த வுடையவர்
நாணா கவ்வரை வில்லிடை யம்பினால்
பேணார் மும்மதி லெய்தவன் வீரட்டம்
காணே னாகிலென் கண்துயில் கொள்ளுமே. **#539**

பூண், நாண், மாலை முதலியவற்றைப் பொருந்த உடையவரும், அழகிய மேருமலையாகிய வில்லிடை நாணுடன் கூடிய அம்பினால், பகைவர் மும்மதில்களை எய்தவர் உறையும் திருவதிகை வீரட்டத்தைக் காணேனாகில் என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

திருஅதிகைவீரட்டானம்

வரையார்ந் தவயி ரத்திரள் மாணிக்கம்
திரையார்ந் தபுனல் பாய்கெடி லக்கரை
விரையார் நீற்றன் விளங்கிய வீரட்டம்
உரையே னாகிலென் கண்துயில் கொள்ளுமே. **#540**
மலைகளில் நிறைந்த வயிரத்தின் தொகுதியும் மாணிக்கமும்
ஆகியவற்றைக்கொண்டு அலையார்ந்த புனல் பாய்கின்ற
கெடிலக்கரையில் உள்ளதும், நறுமணமிக்க திருநீற்றினையணிந்த
இறைவன் விளங்குவதுமாகிய திருவதிகை வீரட்டத்தை
உரையேனாகில் என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

திருஅதிகைவீரட்டானம்

உலந்தார் வெண்தலை உண்கல னாகவே
வலந்தான் மிக்கவவ் வாளரக் கன்றனைச்
சிலம்பார் சேவடி யூன்றினான் வீரட்டம்
புலம்பே னாகிவென் கண்துயில் கொள்ளுமே. **#541**
இறந்தவர்களது(வாழ்நாள் உலந்தார்) வெள்ளிய தலைகளை
உண்கலனாகக்கொண்டு, வெற்றிமிக்க அவ்வாளரக்கனாகிய
இராவணனைச் சிலம்பணிந்த திருவடி விரலால் ஊன்றிய பெருமான்
உறையும் திருவதிகைவீரட்டத்தைப் புலம்பிப்பாடேனாயின் என்
கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

திருஅதிகைவீரட்டானம்

திருவதிகைவீரட்டம், திருக்குறுந்தொகை,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : திருவதிகைநாயகி.

எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி
மட்ட லரிடு வார்வினை மாயுமால்
கட்டித் தேன்கலந் தன்ன கெடிலவீ
ரட்ட னாரடி சேரு மவருக்கே. **#542**
கன்னற்கட்டியும் தேனும் கலந்ததைப் போன்று இனிக்கும்
கெடிலவீரட்டனார் சேவடி சேர்பவராய், எட்டுவகைப்பட்ட
நாண்மலர்களாகிய தேனவிழும் மலர்களை இட்டு வழிபடுவார்
வினைகள் மாயும்.

திருஅதிகைவீரட்டானம்

நீள மாநினைந் தெண்மல ரிட்டவர்
கோள வல்வினை யுங்குறை விப்பரால்
வாள மாலிழி யுங்கெடி லக்கரை
வேளி சூழ்ந்தழ காயவீ ரட்டரே. **#543**

வட்டமாகவும், பெரிதாகவும் ஓடுகின்ற கெடில நதிக்கரை வேலிபோல் சூழ்ந்த வீரட்டத்திறைவர், தம்மை இடைவிடாது நினைந்து எண்வகை மலர்களால் வழிபடுபவர்களின் கொடிய வல்வினையை நீக்குவர்.

திருஅதிகைவீரட்டானம்

கள்ளி னாண்மல ரோரிரு நான்கு கொண்டு
உள்கு வாரவர் வல்வினை யோட்டுவார்
தெளளு நீர்வயல் பாய்கெடி லக்கரை
வெள்ளை நீறணி மேனிவீ ரட்டரே. **#544**

தெளளிய நீர்வயலிற் பாய்கின்ற கெடிலக்கரையில் உள்ள திருவதிகை வீரட்டத்தில் எழுந்தருளியிருப்பவராகிய வெண்ணீறணிந்த திருமேனி உடைய பெருமான், தேன் ஒழுகுகின்ற புதிய எட்டு மலர்களைக் கொண்டு அருச்சித்துத் தம்மை உள்குவார்களுடைய வல்வினைகளை ஓட்டுவார்.

திருஅதிகைவீரட்டானம்

பூங்கொத் தாயின மூன்றொடோ ரைந்திட்டு
வாங்கி நின்றவர் வல்வினை யோட்டுவார்
வீங்கு தண்புனல் பாய்கெடி லக்கரை
வேங்கைத் தோலுடை யாடைவீ ரட்டரே. **#545**

செறிந்த குளிர்நீர் பாய்கின்ற கெடிலக்கரையில் உள்ள திருவதிகைவீரட்டத்தில் எழுந்தருளியிருப்பவராகிய புலித்தோலை ஆடையாக உடுத்த பெருமானே, எட்டுவகைப்பட்ட பூங்கொத்துக்களை இட்டு வணங்கிநிற்கும் அடியார்களுடைய வல்வினைகளை ஓட்டுவார்.

திருஅதிகைவீரட்டானம்

தேனப் போதுகள் மூன்றொடோ ரைந்துடன்
தானப் போதிடு வார்வினை தீர்ப்பவர்
மீனத் தண்புனல் பாய்கெடி லக்கரை
வேன லானை யுரித்தவீ ரட்டரே. **#546**

மீன்களை உடைய குளிர்புனல் பாய்கின்ற கெடிலக் கரையில் உள்ள திருவதிகை வீரட்டத்தில் எழுந்தருளியிருப்பவரும், ஆனை உரித்தவருமாகிய பெருமான், தேன் உடைய அழகிய போதுகளாகிய எட்டுவகைப்பட்ட மணமலர்களை இட்டு வணங்குவார் வினைகளைத்

தீர்ப்பவர் ஆவர்.

திருஅதிகைவீரட்டானம்

ஏழித் தொன்மலர் கொண்டு பணிந்தவர்
ஊழித் தொல்வினை யோட அகற்றுவார்
பாழித் தண்புனல் பாய்கெடி லக்கரை
வேழத் தின்னுரி போர்த்தவீ ரட்டரே. **#547**

வன்மை உடையதாகிய குளிர்புனல் பாய்கின்ற கெடிலக்கரையில் உள்ள திருவதிகை வீரட்டத்தில் எழுந்தருளியிருப்பவரும், வேழத்தின் உரியைப் போத்தவருமாகிய பெருமானே, இதழி(ஏழி) யாகிய கொன்றை மலர்களைக் கொண்டு பணிந்த அடியார்களுடைய ஊழியாகத் தொடர்ந்துவரும் பழைய வினைகள் ஓடும்படி நீக்குவார்.

திருஅதிகைவீரட்டானம்

உரைசெய் நூல்வழி யொண்மல ரெட்டிடத்
திரைகள் போல்வரு வல்வினை தீர்ப்பரால்
வரைகள் வந்திழி யுங்கெடி லக்கரை
விரைகள் சூழ்ந்தழ காயவீ ரட்டரே. **#548**

மலைகளினின்று வந்து இழிவதாகிய கெடில நதியின் கரையில் உள்ளதும், நறுமணஞ் சூழ்ந்து எழில் பெற்றதுமாகிய திருவதிகைவீரட்டத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே, ஆகம நூல்கள் உரைக்கின்ற நெறியின்படி எட்டு வகைப்பட்ட ஒளியுடைய மலர்களை இட்டு வணங்கும் அடியார்களின் அலைகள்போல் வருகின்ற வல்வினைகளைத் தீர்ப்பவர் ஆவர்.

திருஅதிகைவீரட்டானம்

ஓலி வண்டறை யொண்மல ரெட்டினால்
காலை யேத்த வினையைக் கழிப்பரால்
ஆலி வந்திழி யுங்கெடி லக்கரை
வேலி சூழ்ந்தழ காயவீரட்டரே. **#549**

மழைநீர் வந்து இழிகின்ற கெடில நதியின் கரையில் உள்ளதும், வேலிகள் சூழ்ந்து எழில் உடையதுமாகிய திருவதிகை வீரட்டத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே, ஓலமிடும் வண்டுகள் ஒலிக்கும் எட்டுவகைப்பட்ட மலர்களால் தம்மைக் காலத்தே வந்து வழிபடுவார்களின் வினையைத் தீர்ப்பவர்.

திருஅதிகைவீரட்டானம்

தாரித் துள்ளித் தடமல ரெட்டினால்

பாரித் தேத்தவல் லார்வினை பாற்றுவார்
மூரித் தெண்திரை பாய்கெடி லக்கரை
வேரிச் செஞ்சடை வேய்ந்தவீ ரட்டரே. **#550**

வலிமை உடையதாய்த் தெளந்துவரும் அலைகளை உடையதாய்ப் பாய்கின்ற கெடிலநதியின் கரையின்கண் உள்ள வீரட்டத்தில் எழுந்தருளியுள்ள மணம் வீசும் செஞ்சடையை நன்கு கட்டிய பெருமான், மனத்தே இறைவன் திருவுருவைத்தாங்கிச் சிந்தித்து எட்டு வகைப்பட்ட மலர்களால் ஏத்தும் வல்லமை உடைய அடியார்களின் வினைகளைக் கெடுப்பார்.

திருஅதிகைவீரட்டானம்

அட்ட புட்ப மவைகொளு மாறுகொண்
டட்ட மூர்த்தி அனாதிதன் பாலணைந்
தட்டு மாறுசெய் கிற்பவ திகைவீ
ரட்ட னாரடி சேரு மவர்களே. **#551**

திருவதிகைவீரட்டனார் திருவடி சேரும் அடியார்கள், அட்டபுட்பங்களை விதிமுறைப்படி கொண்டு அட்ட மூர்த்தியும், ஆதியற்றவரும் ஆகிய பெருமானின்பால் அனைந்து பொருந்துமாறு வழிபாடு செய்யும் திறம் உடையவர் ஆவர்.

திருநாரையூர்

திருநாரையூர்

திருநாரையூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சௌந்தரேசர்.
தேவியார் : திரிபுரசுந்தரியம்மை.

வீறு தானுடை வெற்பன் மடந்தையோர்
கூற னாகிலுங் கூன்பிறை சூடிலும்
நாறு பூம்பொழில் நாரையூர் நம்பனுக்
காறு சூடலும் அம்ம அழகிதே. **#552**

மணம் வீசுகின்ற பூம்பொழில்களை உடைய நாரையூரின்கண் எழுந்தருளியுள்ள நம் இறைவர், பிறிதொன்றற்கில்லாத பெருஞ்சிறப்புடைய திருக்கயிலாயத்தை உடையவர். உமையம்மையை ஒருபங்கில் உடையவர்; வளைந்த பிறை சூடியவர். ஆயினும் கங்கையாற்றினைச் சடையிற் சூடல் மிக்க அழகும் வியப்பும் உடையதே.

திருநாரையூர்

புள்ளி கொண்ட புலியுரி யாடையும்
வெள்ளி கொண்டவெண் பூதிமெய் யாடலும்
நள்ளி தென்டிரை நாரையூ ரான்நஞ்சை
அள்ளி யுண்டலு மம்ம வழகிதே. **#553**

தெளந்த நீர்வளம் உடைய நாரையூரின் கண் எழுந்தருளியுள்ள பெருமான், புள்ளிகளை உடைய புலித்தோலாடையும், வெள்ளி போன்ற நிறம் கொண்ட திருநீற்றுப் பூச்சுடைய திருமேனியும் உடையவராயினும், நஞ்சைஅள்ளி உண்டல் மிக்க அழகும் வியப்பும் உடையதேயாகும்.

திருநாரையூர்

வேடு தங்கிய வேடமும் வெண்தலை
ஓடு தங்கிய வுண்பலி கொள்கையும்
நாடு தங்கிய நாரையூ ரான்நடம்
ஆ டைபங்கழ லம்ம வழகிதே. **#554**

நாட்டின்கண் தங்கிய புகழை உடைய நாரையூரில் எழுந்தருளியுள்ள பெருமான், வேடத்தன்மை தங்கிய திருவேடமும், வெண்தலை ஓட்டில் தங்கிய உணவை உண்ணும் கொள்கையும் உடையவராயினும் நடம்

ஆடுகின்ற பைங்கழல் சேவடி மிக்க அழகும் வியப்பும் உடையதேயாகும்.

திருநாரையூர்

கொக்கின் தூவலுங் கூவிளங் கண்ணியும்
மிக்க வெண்டலை மாலை விரிசடை
நக்க னாகிலும் நாரையூர் நம்பனுக்
கக்கி னாரமு மம்ம வழகிதே. **#555**

திருநாரையூரில் எழுந்தருளியுள்ள நம் பெருமான் கொக்கு வடிவாய் நின்ற அசுரனின் இறகும், கூவிள மலராலாகிய தலைக் கண்ணியும், மிகுந்த வெண்தலைமாலையும், விரிந்த சடையும் உடைய திகம்பரனேயாயினும் அக்கின் மாலை அணிந்திருத்தல் மிக்க வியப்பும் அழகும் உடையதேயாகும்.

திருநாரையூர்

வடிகொள் வெண்மழு மான்அமர் கைகளும்
பொடிகொள் செம்பவ ளம்புரை மேனியும்
நடிகொள் நன்மயில் சேர்திரு நாரையூர்
அடிகள் தம்வடி வம்ம வழகிதே. **#556**

வடித்தலைக்கொண்ட ஒளியால் வெள்ளிய மழுப்படையும் மானும் விரும்புகின்ற கரங்களும், திருநீற்று வெண்பொடி பூசிய செம்பவளம் ஒத்த மேனியும், ஒரு பங்கில் இருக்கும் நடித்தலைக் கொண்ட நன்மயில் போன்ற உமாதேவியும் உடைய திரு நாரையூர்ப் பெருமான் வடிவு, மிக்க வியப்பும் அழகும் உடையதேயாகும்.

திருநாரையூர்

சூலம் மல்கிய கையுஞ் சுடரொடு
பாலும் நெய்தயி ராடிய பான்மையும்
ஞாலம் மல்கிய நாரையூர் நம்பனுக்கு
ஆல நீழலு மம்ம வழகிதே. **#557**

உலகத்தில் புகழ் நிறைந்த திருநாரையூர், நம் பெருமான் சுடரொடு நிறைந்த சூலம் பொருந்திய கையும், பால், நெய், தயிர் முதலிய பஞ்சகவ்வியம் ஆடிய தன்மையும் உடையவராயினும், ஆலநிழலில் இருந்து அறம் உரைத்தல் மிக்க வியப்பும் அழகும் உடையதேயாகும்.

திருநாரையூர்

பண்ணி னால்மறை பாடலோ டாடலும்
எண்ணி லார்புர மூன்றெரி செய்ததும்

நண்ணி னார்துயர் தீர்த்தலும் நாரையூர்
அண்ண லார்செய்கை யம்ம வழகிதே. **#558**
இசையொடு பொருந்திய நான்மறைகளைப் பாடுதலும், ஆடுதலும், நல்ல எண்ணமில்லாத தீயோர்களது முப்புரங்களை எரித்தலும், தம்மைப் பொருந்தியவரது துயரங்களைத் தீர்த்தலும் ஆகிய திருநாரையூர் அண்ணலார் செய்கைகள் அனைத்தும் மிக்க வியப்பும் அழகும் உடையனவேயாம்.

திருநாரையூர்

என்பு பூண்டெரு தேறி யிளம்பிறை
மின்பு ரிந்த சடைமேல் விளங்கவே
நன்ப கற்பலி தேரினும் நாரையூர்
அன்ப னுக்கது வம்ம வழகிதே. **#559**
எலும்புகளைப் பூண்டு, எருதின்மேல் ஏறி, இளம் பிறையினை மின்னலை முறுக்கினாலொத்த ஒளிச்சடையின் மேல் விளங்கச் சூடி, நல்ல பகலிலும் பலிதேர்வராயினும், திருநாரையூரில் உள்ள அன்பு வடிவாய சிவபெருமானுக்கு அது மிக்க வியப்பும் அழகும் உடையதே.

திருநாரையூர்

முரலுங் கின்னர மொந்தை முழங்கவே
இரவி னின்றெரி யாடலு நீடுலாம்
நரலும் வாரிநன் னாரையூர் நம்பனுக்
கரவும் பூணுத லம்ம வழகிதே. **#560**
ஒலிக்கின்ற கின்னரமும், மொந்தையும் முழங்க, நீண்டு நிகழும் இரவில் இடுகாட்டில் நின்று எரித்து ஆடுதலும், அரவினைப் பூணுதலும் ஆகியவை கடல் ஒலிக்கும் திருநாரையூர் நம் பெருமானுக்கு மிக்க வியப்பும் அழகும் உடையதேயாகும்.

திருநாரையூர்

கடுக்கை யஞ்சடை யன்கயி லைம்மலை
எடுத்த வாளரக் கன்தலை யீரைஞ்சும்
நடுக்கம் வந்திற நாரையூ ரான்விரல்
அடுத்ததன்மையு மம்ம வழகிதே. **#561**
கொன்றையினை உடைய அழகார்ந்த சடையனுக்குரிய திருக்கயிலாயத் திருமலையை எடுக்கலுற்ற வாளினை உடைய இராவணனது பத்துத் தலைகளும் நடுங்கி நெரியும் வண்ணம் திருநாரையூர்ப் பெருமான் திருவிரல் இயக்கிய தன்மை வியப்பும் அழகும் உடையதேயாகும்.

திருக்கோளிலி

திருக்கோளிலி

திருக்கோளிலி, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கோளிலியப்பர்.
தேவியார் : வண்டமர்பூங்குழலம்மை.

மைக்கொள் கண்ணுமை பங்கினன் மான்மழுத்
தொக்க கையினன் செய்யதோர் சோதியன்
கொக்க மர்பொழில் சூழ்தரு கோளிலி
நக்க னைத்தொழ நம்வினை நாசமே. **#562**

மையணிந்த கண்களையுடைய உமையை ஒருபங்கில் உடையவனும், மானும் மழுவும் பொருந்திய கைகளை உடையவனும், செவ்விதாகிய ஒப்பற்ற ஒளி வடிவினனும், மாமரங்கள் பொருந்திய பொழில் சூழ்ந்த திருக்கோளிலியில் உறையும் திகம்பரனுமாகிய பெருமானைத் தொழ நம்வினைகள் நாசமாம்.

திருக்கோளிலி

முத்தி னைமுத லாகிய மூர்த்தியை
வித்தி னைவிளை வாய விகிர்தனைக்
கொத்த லர்பொழில் சூழ்தரு கோளிலி
அத்த னைத்தொழ நீங்கும்நம் அல்லலே. **#563**

முத்தினைப் போல்வானும், உலக முதலாக உள்ள திருவுரு உடையோனும், வித்தும் விளைவும் ஆகிய மேலானவனும், பூங்கொத்துக்களை உடைய பொழில்கள் சூழ்ந்த கோளிலியில் உறையும் அத்தனும் ஆகிய பெருமானைத் தொழ நம் அல்லல்கள் நீங்கும்.

திருக்கோளிலி

வெண்டி ரைப்பர வைவிட முண்டதோர்
கண்ட னைக்கலந் தார்தமக் கன்பனைக்
கொண்ட லம்பொழிற் கோளிலி மேவிய
அண்ட னைத்தொழு வார்க்கல்ல லில்லையே. **#564**

வெள்ளிய அலைகளை உடைய கடல் விடம் உண்ட ஒப்பற்ற திருநீலகண்டனும் நெஞ்சு கலந்து பொழுமவர்க்கு அன்பே வடிவாய் அருள்புரிபவனும், மேகங்கள் பொருந்துகின்ற அழகிய சோலைகளை உடைய கோளிலியில் விரும்பி உறையும் தேவனுமாகிய பெருமானைத் தொழுவார்க்கு அல்லல் இல்லை.

திருக்கோளிலி

பலவும் வல்வினை பாறும் பரிசினால்
உலவுங் கங்கையுந் திங்களு மொண்சடை
குலவி னான்குளி ரும்பொழிற் கோளிலி
நிலவி னான்றனை நித்தல் நினைமினே. **#565**
வலிய வினைகள் பலவும் கெடும் தன்மையினால், கங்கையும் மதியும் உலவும் ஒள்ளிய சடை பொருந்தியவனும்,குளிரும் பொழில்களை உடைய கோளிலியில் நிலவியவனுமாகிய பெருமானை நாடோறும் நினைந்து பொழுவீராக! 'தொழுவார்க்கன்றி வினை நீங்கா' என்பது கருத்து.

திருக்கோளிலி

அல்ல லாயின தீரு மழகிய
முல்லை வெண்முறு வல்லுமை யஞ்சவே
கொல்லை யானை யுரித்தவன் கோளிலிச்
செல்வன் சேவடி சென்று தொழுமினே. **#566**
அழகிய முல்லையைப் போன்ற வெள்ளிய முறுவலை உடைய உமாதேவியார் அஞ்சுமாறு குறிஞ்சியில் வாழும் யானையை உரித்தவனும், கோளிலியில் உறையும் திருவருட் செல்வனுமாகிய பெருமான் சேவடிகளைச் சென்று தொழுவீர்களாக; உம் அல்லலாயின அனைத்தும் தீரும். `அல்லல் நீங்கும் என்பதற்குக் கயாசுரனை அழித்துத் தேவர்களைக் காத்தமை சான்றுமு என்றபடி.

திருக்கோளிலி

ஆவின் பால்கண் டளவி லருந்தவப்
பாலன் வேண்டலுஞ் செல்லென்று பாற்கடல்
கூவி னான்குளி ரும்பொழிற் கோளிலி
மேவி னானைத் தொழவினை வீடுமே. **#567**
பசுவின் பாலை முன் உண்டமையால், மிக்க அருந்தவம் உடைய பாலனாகிய உபமன்யு அப் பால் வேண்டலும், 'செல்க' என்று பாற்கடலைக் கூவி அருளியவனும் குளிர் பொழில்களையுடைய கோளிலியில் விரும்பி உறைபவனுமாகிய பெருமானைத் தொழ நம் வினைகள் வீடும். 'பெருமானது அளவில் ஆற்றலும் பேரருளுடைமையும் ' குறித்தபடி.

திருக்கோளிலி

சீர்த்த நன்மனை யாளுஞ் சிறுவரும்

ஆர்த்த சுற்றமும் பற்றிலை யாதலால்
கூத்த னாருறை யுந்திருக் கோளிலி
ஏத்தி நீர்தொழு மின்னிடர் தீருமே. **#568**

பெருமைமிக்க நல்ல மனைவியும், பெற்ற பிள்ளைகளும், பொருந்திய சுற்றத்தாரும் நிலைத்த சார்பு ஆதல் இல்லையாதலால் ஆடும் பெருமான் உறையும் திருக்கோளிலியை ஏத்தி, நீர் தொழுவீராக; நும் இடர்கள் தீரும். 'இறைவனே இருமைக்கும் நீங்காத்துணை' என்றபடி.

திருக்கோளிலி

மால தாகி மயங்கும் மனிதர்காள்
காலம் வந்து கடைமுடி யாமுனம்
கோல வார்பொழிற் கோளிலி மேவிய
நீல கண்டனை நின்று நினைமினே. **#569**

மயக்கத்தை உடையவராகி மயங்கும் மனிதர்களே! உமக்குரிய காலம் வந்து இறுதியுறுவதற்கு முன்னம், அழகுடைய நீண்ட பொழில்களை உடைய கோளிலியில் விரும்பி உறைகின்ற நீல கண்டனை ஒன்றி நின்று நினைப்பீராக! 'யாக்கை நிலையாமையைக் கருதிப் பேரருளாளனை நினைந்து உய்க!' என்றபடி.

திருக்கோளிலி

கேடு மூடிக் கிடந்துண்ணு நாடது
தேடி நீர்திரி யாதே சிவகதி
கூட லாந்திருக் கோளிலி யீசனைப்
பாடு மின்னிர வோடு பகலுமே. **#570**

கேடுகள் சூழ்ந்து மூடிக்கிடந்து துயர் என்னும் நாகநாட்டினைத் தேடி, நீர் திரியாது, திருக்கோளிலி ஈசனை இரவும் பகலும் பாடுவீர்களாக; பாடுவீர்களாயின் சிவகதியே கூடலாம்.

திருக்கோளிலி

மடுத்து மாமலை யேந்தலுற் றான்றனை
அடர்த்துப் பின்னு மிரங்கி யவற்கருள்
கொடுத்த வன்னுறை கோளிலி யேதொழ
விடுத்து நீங்கிடும் மேலை வினைகளே. **#571**

செருக்கை உட்கொண்டு திருக்கயிலாயப் பெருமலையை எடுக்கலுற்றானாகிய இராவணனை நெருக்கிப் பின்னும் இரக்கமுற்று அவனுக்கு அருள்கொடுத்த பெருமான் உறைகின்ற கோளிலியே தொழப் பழைய பிறவிகளிற் செய்த வினைத் துன்பங்கள் விடுத்து நீங்கும். 'பிழைத்தாரையும் பின்னர் இரங்கி வந்தடையில் முதல்வன்

காத்தருள்வான்' என்பது குறிப்பு.

<u>திருக்கோளிலி</u>

திருக்கோளிலி, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கோளிலியப்பர்.
தேவியார் : வண்டமர்பூங்குழலம்மை.

முன்ன மேநினை யாதொழிந் தேனுனை
இன்னம் நானுன சேவடி யேத்திலேன்
செந்நெல் ஆர்வயல் சூழ்திருக் கோளிலி
மன்ன னேயடி யேனை மறவலே. **#572**

செந்நெல் பொருந்திய வயல்கள் சூழ்ந்த திருக்கோளிலியில் எழுந்தருளியுள்ள மன்னனே! (தியாகராசனே!) உன்னை அடியேன் முன்பே நினையாதொழிந்தேன்; இன்னமும் நான் உன் சேவடிகளை நன்கு ஏத்தவில்லை; ஆயினும் அடியேனை மறவாதே; என்னை நினைந்தருள்வாயாக! அவனை நாம் நினைக்கில் அவனும் நம்மை நினைப்பான் என்றபடி.

<u>திருக்கோளிலி</u>

விண்ணு ளார்தொழு தேத்தும் விளக்கினை
மண்ணு ளார்வினை தீர்க்கும் மருந்தினைப்
பண்ணு ளார்பயி லுந்திருக் கோளிலி
அண்ண லாரடி யேதொழு துய்ம்மினே. **#573**

விண்ணிலுள்ள தேவர்கள் தொழுது வணங்கும் விளக்கும், மண்ணுலகிலுள்ளவர் வினைகள் தீர்க்கும் மருந்தும் ஆகிய பண்ணுள்ளவர்கள் பயில்கின்ற திருக்கோளிலியில் எழுந்தரிளியுள்ள அண்ணலார் அடிகளையே தொழுது உய்வீர்களாக!

<u>திருக்கோளிலி</u>

நாளும் நம்முடை நாள்க ளறிகிலோம்
ஆளும் நோய்களோ ரைம்பதோ டாறெட்டும்
ஏழை மைப்பட் டிருந்துநீர் நையாதே
கோளிலி யரன் பாதமே கூறுமே. **#574**

நம்முடைய வாழ்நாள்களின் வரையறையை நாளும் அறியும் ஆற்றல் இல்லை; நம்மை ஆளும் நோய்களோ தொண்ணூற்றெட்டுக்கு மேலாகும். அறிவின்மையின்கண் பொருந்தியிருந்து நீர் வருந்தாமல் கோளிலிச் சிவபெருமான் பாதமே கூறுவீராக.

திருக்கோளிலி

விழவி னோசை யொலியறாத் தண்பொழில்
பழகி னார்வினை தீர்க்கும் பழம்பதி
அழல்கை யானம ருந்திருக் கோளிலிக்
குழக னார்திருப் பாதமே கூறுமே. **#575**

விழாக்களின் ஓசையும் ஒலியும் விட்டு நீங்காத குளிர் பொழில்களை உடையதும், தன்னிடம் பழகி வாழ்வார்களது வினைகளைத் தீர்க்கும் தொல்பதியும், அழலைக் கையில் ஏந்திய பெருமான் அமர்ந்திருப்பதும் ஆகிய திருக்கோளிலியில் குழகன் திருப்பாதத்தையே கூறுவீராக.

திருக்கோளிலி

மூல மாகிய மூவர்க்கும் மூர்த்தியைக்
கால னாகிய காலற்குங் காலனைக்
கோல மாம்பொழில் சூழ்திருக் கோளிலிச்
சூல பாணிதன் பாதந் தொழுமினே. **#576**

மும்மூர்த்திகளுக்கும் மூலமூர்த்தியும், காலகாலனும், அழகுமிக்க பொழில் சூழும் திருக்கோளிலியில் உள்ள சூலத்தைக் கையிலே உடையானுமாகிய பெருமானின் பாதங்களைத் தொழுவீராக.

திருக்கோளிலி

காற்ற னைக்கடல் நஞ்சமு துண்டவெண்
நீற்ற னைநிமிர் புன்சடை யண்ணலை
ஆற்ற னையம ருந்திருக் கோளிலி
ஏற்ற னாரடி யேதொழு தேத்துமே. **#577**

காற்று வடிவாயவனும், கடல் விடம் உண்டவனும், வெண்ணீறணிந்தவனும், நிமிர்ந்த புன்சடை உடைய அண்ணலும், சடையிற் கங்கையாற்றினை உடையவனும் ஆகிய திருக்கோளிலியில் அமரும் இடபத்தை உடையானை, அவன்றன் திருவடிகளையே தொழுது ஏத்துவீராக.

திருக்கோளிலி

வேத மாயவிண் ணோர்கள் தலைவனை
ஓதி மன்னுயி ரேத்து மொருவனைக்
கோதி வண்டறை யுந்திருக் கோளிலி
வேத நாயகன் பாதம் விரும்புமே. **#578**

வைதிகத் தேரின் உறுப்புக்களாய் நின்ற விண்ணோர்களுக்குத் தலைவனும், நிலைபெற்ற உயிர்கள் ஓதி ஏத்தும் ஒப்பற்றவனும்,

வண்டுகள் கோதி ஒலிக்கும் மலர்களின் வளமுடைய திருக்கோளிலியில் வேதநாயகனுமாகிய பெருமானின் பாதங்களை விரும்புவீராக.

திருக்கோளிலி

நீதி யாற்றொழு வார்கள் தலைவனை
வாதை யான விடுக்கும் மணியினைக்
கோதி வண்டறை யுந்திருக் கோளிலி
வேத நாயகன் பாதம் விரும்புமே. **#579**

முறையாகத் தொழுவார்களது தலைவனும், துன்பங்களாயினவற்றை நீக்கும் செம்மணி போல்வானும், வண்டுகள் கிண்டியொலிக்கும் மலர் வனம் உடைய திருக்கோளிலியில் வேதநாயகனுமாகிய பெருமானின் பாதங்களை விரும்புவீராக.

திருக்கோளிலி

மாலும் நான்முக னாலு மறிவொணாப்
பாலின் மென்மொழி யாளொரு பங்கனைக்
கோல மாம்பொழில் சூழ்திருக் கோளிலி
நீல கண்டனை நித்தல் நினைமினே. **#580**

மாலும் பிரமனும் அறியவியலாத, பாலனைய மென்மொழியுடைய உமையொரு கூறனாகிய அழகுடைய பொழில் சூழும் திருக்கோளிலியில் உள்ள நீலகண்டனை நாள் தோறும் நினைந்து தொழுவீராக.

திருக்கோளிலி

அரக்க னாய இலங்கையர் மன்னனை
நெருக்கி யம்முடி பத்திறுத் தானவற்
கிரக்க மாகிய வன்றிருக் கோளிலி
அருத்தி யாயடி யேதொழு துய்ம்மினே. **#581**

அரக்கனாகிய இலங்கையர் மன்னன் இராவணனை நெருக்கி, அம்முடிகள் பத்தினையும் இறுத்தவனும், பின் அவனுக்கு இரங்கியவனும் ஆகிய பெருமான் உறையும் திருக்கோளிலிக்கு விருப்பமாகி, அவன் அடிகளே தொழுது உய்வீராக.

திருப்பழையாறைவடதளி

திருப்பழையாறைவடதளி

திருப்பழையாறைவடதளி, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சோமேசுவரர்.
தேவியார் : சோமகலாநாயகியம்மை.

தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருள்
நிலையி னான்மறைத் தான்மறைக் கொண்ணுமே
அலையி னார்பொழி லாறை வடதளி
நிலையி னானடி யேநினைந் துய்ம்மினே. **#582**

தலைமயிரெல்லாவற்றையும் பறிக்கின்ற சமண் ஒழுக்கம் உடையவர்கள் உள்ளத்து நிலையினால் மறைத்தால் மறைக்கவியலுமோ? அலைநீரின் மருங்கிலுள்ள பொழில்கள் சூழ்ந்த பழையாறைவடதளியின்கண் நிலைபெற்றவன் திருவடிகளையே நினைந்து உய்வீர்களாக.

திருப்பழையாறைவடதளி

மூக்கி னால்முரன் றோதியக் குண்டிகை
தூக்கி னார்குலந் தூரறுத் தேதனக்
காக்கி னானணி யாறை வடதளி
நோக்கி னார்க்கில்லை யால்அரு நோய்களே. **#583**

மூக்கினால் ஒலிக்குமாறு தம் மந்திரங்களை ஓதி, அக்குண்டிகை தூக்கினாராகிய சமணர்கள் குலத்தை அடியோடு வேரறுத்துத் தனக்கு அணியாறைவடதளியை ஆக்கிக் கொண்டானாகிய பெருமானை நோக்கினார்க்கு அருநோய்கள் இல்லை.

திருப்பழையாறைவடதளி

குண்ட ரைக்குண மில்லரைக் கூறையில்
மிண்ட ரைத்துரந் தவிம லன்றனை
அண்ட ரைப்பழை யாறை வடதளிக்
கண்ட ரைத்தொழு துய்ந்தன கைகளே. **#584**

குண்டர்களும், நற்குணமில்லாதவர்களும், உடையணியாத மிண்டர்களுமாகிய சமணர்களைத் துரத்திய விமலனும்,தேவதேவனும் ஆகிய பழையாறைவடதளியில் உள்ள திருநீல கண்டரைத் தொழுது அடியேனின் கரங்கள் உய்ந்தன.

திருப்பழையாறைவடதளி

முடைய ரைத்தலை முண்டிக்கும் மொட்டரைக்
கடைய ரைக்கடிந் தார்கனல் வெண்மழுப்
படைய ரைப்பழை யாறை வடதளி
உடைய ரைக்குளிர்ந் துள்குமென் னுள்ளமே. **#585**

முடைநாற்றம் உடையோரும், தலையை மழித்த மொட்டையர்களும், கீழானவர்களுமாகிய சமணர்களை நீக்கியவரும், கனலையும் வெண்மழுப் படையினையும் உடையவரும் ஆகிய பழையாறை வடதளிக்குடையவரை என் உள்ளம் குளிர்ந்து நினைகின்றது.

திருப்பழையாறைவடதளி

ஒள்ள ரிக்கணார் முன்னமண் நின்றுணும்
கள்ள ரைக்கடிந் தகருப் பூறலை
அள்ள லம்புன லாறை வடதளி
வள்ள லைப்புக ழத்துயர் வாடுமே. **#586**

ஒளியும் அரியும் உடைய கண்ணை உடைய பெண்டிர்க்கு முன்னும் உடையற்றவராய் நின்றுண்ணும் கள்ளர்களாகிய சமணரைக் கடிந்தவரும், கரும்பின் ஊறும் சாறு பாய்ந்தோடிச்சேறாகிய நீர்வளம் உடைய பழையாறை வடதளியில் உள்ள வள்ளலும் ஆகிய பெருமானைப் புகழத் துயரங்கள் வாடும்.

திருப்பழையாறைவடதளி

நீதி யைக்கெட நின்றம ணேயுணும்
சாதி யைக்கெடு மாசெய்த சங்கரன்
ஆதி யைப்பழை யாறை வடதளிச்
சோதி யைத்தொழு வார்துயர் தீருமே. **#587**

முறைமை கெடநின்று ஆடையற்றவராய் உண்ணும் சாதியாகிய சமணரைக் கெடுமாறு செய்தருளிய சங்கரனும், ஆதியும் ஆகிய புழையாறைவடதளியில் உள்ள சோதியைத் தொழுவாருடைய துயர் தீரும்.

திருப்பழையாறைவடதளி

திரட்டி ரைக்க வளந்திணிக் குஞ்சமண்
பிரட்ட ரைப்பிரித் தபெரு மான்றனை
அருட்டி றத்தணி யாறை வடதளித்
தெருட்ட ரைத்தொழத் தீவினை தீருமே. **#588**

திரட்டிய இரையாகிய சோற்றுக் கவளத்தையே மிகத்திணிக்கும் சமண் பொய்யர்களை அங்கிருந்தும் பிரித்த பெருமானை. அருள் திறத்தை உடைய அழகு பொருந்திய பழையாறை வடதளியில் தௌவிக்கும்

பிரானைத் தொழத் தீவினைகள் யாவும் தீரும்.

திருப்பழையாறைவடதளி

ஓதி னத்தெழுத் தஞ்சுண ராச்சமண்
வேதி னைப்படுத் தானைவெங் கூற்றுதை
பாத னைப்பழை யாறை வடதளி
நாத னைத்தொழ நம்வினை நாசமே. **#589**

அடியார் இனத்தே ஓதப்படும் திருவஞ்செழுத்தை உணராத சமணர்களை வேதனைப்படுத்தியவனும், வெங்கூற்றுவனை உதைத்த பாதம் உடையவனும் ஆகிய பழையாறை வடதளியில் உறையும் நாதனைத் தொழ நம் வினைகள் நாசமாம்.

திருப்பழையாறைவடதளி

வாயி ருந்தமி ழேபடித் தாளுறா
ஆயி ரஞ்சம ணும்மழி வாக்கினான்
பாயி ரும்புன லாறை வடதளி
மேய வன்னென வல்வினை வீடுமே. **#590**

மெய்ம்மையும் பெருமையும் உடைய தெய்வத் தமிழையே பயின்று ஆளாக உறாத ஆயிரஞ் சமணரையும் அழிவின் கட்படுத்தவனும்இ பாய்கின்ற பெருந்தண்ணீர் வளம் உடைய பழையாறை வடதளியில் மேவியவனும் ஆகிய பெருமான் என்று சொல்லுமளவிலேயே வல்வினைகள் கெடும்.

திருப்பழையாறைவடதளி

செருத்த னைச்செயுஞ் சேணரக் கன்னுடல்
எருத்தி றவிர லாலிறை யூன்றிய
அருத்த னைப்பழை யாறை வடதளித்
திருத்த னைத்தொழு வார்வினை தேயுமே. **#591**

போரினைச் செய்யும் சேண் புகழ் உடைய இராவணனின் உடலும், பிடரியும் இறும்படித் திருவிரலால் சிறிதே ஊன்றிய சொற்பொருள் வடிவானவனாகிய பழையாறைவடதளியின் அழகிய பெருமானைத் தொழுவார் வினைகள் தேயும்.

திருமாற்பேறு

திருமாற்பேறு

திருமாற்பேறு, திருக்குறுந்தொகை,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மால்வணங்குமீசர்.
தேவியார் : கருணைநாயகியம்மை.

பொருமாற் றின்படை வேண்டிநற் பூம்புனல்
வருமாற் றின்மலர் கொண்டு வழிபடும்
கருமாற் கின்னருள் செய்தவன் காண்தகு
திருமாற் பேறு தொழவினை தேயுமே. **#592**

போரிடுகின்ற நெறியிற் படைக்கலம் வேண்டி நல்ல பூம்புனல் பாய்ந்துவரும் ஆற்றில் மூழ்கி, மலர் கொண்டு வழிபடுவோனாகிய கருநிறத்துத் திருமாலுக்கு இனிய அருள் செய்தவனுக்குரிய காணத்தக்க திருமாற்பேறு தொழ வினைகள் தேயும்.

திருமாற்பேறு

ஆலத் தார்நிழ லில்லற நால்வர்க்குக்
கோலத் தாலுரை செய்தவன் குற்றமில்
மாலுக் காரருள் செய்தவன் மாற்பேறு
ஏலத் தான்தொழு வார்க்கிட ரில்லையே. **#593**

கல் ஆலமரத்தின் பொருந்திய நிழலில் நால்வர்க்கு அறம் அழகுபட உரைத்தவனும், குற்றமற்ற திருமாலுக்கு நிறைந்த பேரருள் செய்தவனும் ஆகிய பெருமான் உறையும் திருமாற்பேற்றைப் பொருந்தத் தாம் தொழுவார்க்கு இடர்கள் இல்லை.

திருமாற்பேறு

துணிவண் ணச்சுட ராழிகொள் வானெண்ணி
அணிவண் ணத்தலர் கொண்டடி யர்ச்சித்த
மணிவண் ணற்கருள் செய்தவன் மாற்பேறு
பணிவண் ணத்தவர்க் கில்லையாம் பாவமே. **#594**

தீவினை செய்தாரைத் துணிக்கின்ற வண்ணத்தையும், ஒளியையும் உடைய சக்கரப்படையினைக் கொள்வதற்காக எண்ணி, அழகு வண்ணம் உடைய மலர்களைக் கொண்டு திருவடிகளை அருச்சித்த நீலமணிபோலும் நிறமுடையானாகிய திருமாலுக்கு அருள் செய்தவன் உறையும் திருமாற்பேற்றைப் பணிகின்ற இயல்புடையார்க்குப் பாவங்கள் இல்லையாம்.

திருமாற்பேறு

தீதவை செய்து தீவினை வீழாதே
காதல் செய்து கருத்தினில் நின்றநன்
மாத வர்பயில் மாற்பேறு கைதொழப்
போது மின்வினை யாயின போகுமே. **#595**
தீயவற்றையே செய்து தீவினையில் பின்னும் வீழாது, கருத்தினில் நிலைபெறுமாற்றை உடைய காதல் புரிந்தோராகிய நல்ல மாதவர் பயில்கின்ற மாற்பேற்றைக் கைதொழப் போது வீராக; உம் வினையாயின போகும்.

திருமாற்பேறு

வார்கொள் மென்முலை மங்கையொர் பங்கினன்
வார்கொள் நன்முர சம்மறை யவ்வறை
வார்கொள் பைம்பொழில் மாற்பேறு கைதொழு
வார்கள் மன்னுவர் பொன்னுல கத்திலே. **#596**
கச்சினைக்கொண்ட மென்முலை உடைய உமையொரு பங்கினன் உறைவதும், இழுத்துக் கட்டப் பெற்ற நல்ல முரசுகளும், நான்மறைகளும் அழகுற ஒலிக்கப்பெறுவதும், நெடிய பசும் பொழில்களை உடையதுமாகிய திருமாற்பேற்றைக்கை தொழும் அடியார்கள் பொன்னுலகத்தில் நிலைபெற வீற்றிருப்பர்.

திருமாற்பேறு

பண்டை வல்வினை பற்றறுக் கும்வகை
உண்டு சொல்லுவன் கேண்மி னொளிகிளர்
வண்டு சேர்பொழில் சூழ்திரு மாற்பேறு
கண்டு கைதொழத் தீருங் கவலையே. **#597**
பழையவல்வினைகளது பற்று அறுக்கும் வகை ஒன்று உண்டு; அதனைச் சொல்லுவேன் கேட்பீராக; ஒளிகிளர்கின்றதும், வண்டுகள் சேரும் பொழில்கள் சூழ்ந்ததுமாகிய திருமாற்பேறு கண்டு கைதொழக் கவலைகள் தீரும்.

திருமாற்பேறு

மழுவ லான்திரு நாமம் மகிழ்ந்துரைத்
தழுவ லார்களுக் கன்புசெய் தின்பொடும்
வழுவி லாவருள் செய்தவன் மாற்பேறு
தொழுவ லார்தமக் கில்லை துயரமே. **#598**
மழுவினை ஏந்திய வெற்றி உடையானது திருநாமத்தை மகிழ்ந்துரைத்து

அழவல்ல அடியார்களுக்கு அன்பு செய்து இன்பமொடும் வழுவில்லாத அருள் செய்தவன் உறையும் திருமாற்பேறு தொழவல்ல அடியார்களுக்குத் துயரங்கள் இல்லை.

திருமாற்பேறு

முன்ன வன்னுல குக்கு முழுமணிப்
பொன்ன வன்திகழ் முத்தொடு போகமாம்
மன்ன வன்திரு மாற்பேறு கைதொழும்
அன்ன வரெமை யாளுடை யார்களே. **#599**

உலகினுக்கு முன்னேதோன்றியவனும், முழுமணியும், பொன்னும், விளங்கும் முத்தும், போகங்களும் ஆக விளங்கும். மன்னவனும் ஆகிய திருமாற்பேற்றில் உறையும் இறைவனைக் கைதொழும் அத்தன்மையவர் எம்மை ஆளுடையார்கள்.

திருமாற்பேறு

வேட னாய்விச யன்னொடும் எய்துவெம்
காடு நீடுகந் தாடிய கண்ணுதல்
மாட நீடுய ருந்திரு மாற்பேறு
பாடு வார்பெறு வார்பர லோகமே. **#600**

அருச்சுனனோடும் வேடனாய் வந்து அம்பு எய்து, வெவ்விய சுடுகாட்டை நீண்டு உகந்து ஆடிய கண்ணுதற் பெருமான் உறைவதும், மாடங்கள் நீண்டு உயருஞ் சிறப்புடையதுமாகிய திருமாற்பேறு பாடுவார்கள் பரலோகம் அடையப் பெறுவார்கள்.

திருமாற்பேறு

கருத்த னாய்க்கயி லாய மலைதனைத்
தருக்கி னாலெடுத் தானைத் தகரவே
வருத்தி யாரருள் செய்தவன் மாற்பேறு
அருத்தி யால்தொழு வார்க்கில்லை யல்லலே. **#601**

கயிலாயமலையை எடுக்கும் கருத்து உடையவனாய்ச் செருக்கினோடு எடுக்கலுற்ற இராவணனைச் சிதையும் வண்ணம் வருத்திப் பின் நிறைந்த அருள் செய்தவன் உறையும் திருமாற்பேற்றை விருப்பத்தினோடு தொழுவார்க்கு அல்லல் இல்லை.

திருமாற்பேறு

திருமாற்பேறு, திருக்குறுந்தொகை,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மால்வணங்குமீசர்.

தேவியார் : கருணைநாயகியம்மை.

ஏது மொன்று மறிவில ராயினும்
ஓதி யஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்
பேத மின்றி யவரவ ருள்ளத்தே
மாதுந் தாமும் மகிழ்வர்மாற் பேறரே. **#602**

திருமாற்பேற்றில் எழுந்தருளியிருக்கும் இறைவர் ஏதொன்றும் அறியாதவர்கள் ஆனாலும், திருவஞ்செழுத்தை ஓதி உணர்வார்கட்கு வேற்றுமையின்றி அவரவர் உள்ளத்தே தாமும் அம்பிகையுமாய் மகிழ்ந்து வீற்றிருப்பர்.

திருமாற்பேறு

அச்ச மில்லைநெஞ் சேயரன் நாமங்கள்
நிச்ச லுந்நினை யாய்வினை போயறக்
கச்ச மாவிட முண்டகண் டாவென
வைச்ச மாநிதி யாவர்மாற் பேறரே. **#603**

நெஞ்சே! அரன் திருநாமங்களை வினைகள் விட்டு நீங்குவதற்காக, நித்தமும் நினைவாயாக; உனக்கு அச்சமில்லை. திருமாற்பேற்று இறைவர், கைப்புள்ள ஆலகால விடத்தை உண்டதிருநீலகண்டர் என்று அன்பொடுகூற, சேமித்து வைத்த மாநிதிபோலப் பயன்படுவர்.

திருமாற்பேறு

சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்தி ரமுங் குலமுங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்கு ளருளுமாற் பேறரே. **#604**

சாத்திரங்கள் பலவற்றைப் பேசும் தீயவர்களே! கோத்திரம், குலம் முதலியவற்றைக் கொண்டு என்ன செய்வீர்! பணிதற்குரிய பொருள் சிவபரம்பொருளே என்று கொண்டு பணிவீராயின், திருமாற்பேற்று இறைவர் ஒருமாத்திரைப் பொழுதுக்குள் அருளுவர்.

திருமாற்பேறு

இருந்து சொல்லுவன் கேண்மின்க ளேழைகாள்
அருந்த வந்தரும் அஞ்செழுத் தோதினால்
பொருந்து நோய்பிணி போகத் துரப்பதோர்
மருந்து மாகுவர் மன்னுமாற் பேறரே. **#605**

அறிவில்லாதவர்களே! சிந்தித்திருந்து சொல்லுவேன்; கேட்பீர்களாக! அரிய தவத்தினாலாய பயனைத்தரும் திருவஞ்செழுத்தை ஓதினால் திருமாற்பேற்று இறைவர் உம்மைப் பொருந்தியுள்ள நோய்களாகிய

பிணிகள் போகும்படி துரத்துவதாகும் ஒப்பற்ற மருந்தும் ஆவர்.

திருமாற்பேறு

சாற்றிச் சொல்லுவன் கேண்மின் தரணியீர்
ஏற்றின் மேல்வரு வான்கழ லேத்தினால்
கூற்றை நீக்கிக் குறைவறுத் தாள்வதோர்
மாற்றி லாச்செம்பொ னாவர்மாற் பேறரே. **#606**

உலகில் உள்ளவர்களே! எல்லோரும் அறியச் சொல்லுவேன் கேட்பீர்களாக; இடபத்தின் மேல் வருவாராகிய திருமாற்பேற்று இறைவர் திருவடிகளை ஏத்தினால், உம்மைக் கொள்ளவரும் கூற்றுவனை நீக்கி, குறைகளை அறுத்து, ஆள்கின்ற மாற்றில்லாத செம்பொன்னை ஒப்பர்.

திருமாற்பேறு

ஈட்டும் மாநிதி சால இழக்கினும்
வீட்டுங் காலன் விரைய அழைக்கினுங்
காட்டில் மாநட மாடுவாய் காவெனில்
வாட்டந் தீர்க்கவும் வல்லர்மாற்பேறரே. **#607**

வருந்திச் சேர்த்த பெருஞ்செல்வத்தை மிகுதியாக இழந்தாலும், அழிக்கும் காலன் விரையவந்து அழைத்தாலும், சுடுகாட்டில் பெரிய நடனம் ஆடுகின்ற பெருமானே! காப்பாற்றுவாயாக! என்றழைத்தால், திருமாற்பேற்றிறைவர் வாட்டம் தீர்க்கவும் வல்லராவர்.

திருமாற்பேறு

ஐய னேயர னேயென் றரற்றினால்
உய்ய லாமுல கத்தவர் பேணுவர்
செய்ய பாத மிரண்டும் நினையவே
வையம் ஆளவும் வைப்பர்மாற் பேறரே. **#608**

தலைவனே! சிவபெருமானே! என்று வாய்விட்டு அரற்றினால் உய்தி அடையலாம்; அதுவன்றியும் உலகத்திலுள்ளவர் பேணி மதிப்புச்செய்வர்; அப்பெருமானின் இரண்டு சிவந்த திருப்பாதங்களை நினைத்தால் திருமாற்பேற்று இறைவர் உலகத்தை ஆளவும் வைப்பர்.

திருமாற்பேறு

உந்திச் சென்று மலையை யெடுத்தவன்
சந்து தோளொடு தாளிற வூன்றினான்
மந்தி பாய்பொழில் சூழுமாற் பேறென
அந்த மில்லாதோ ரின்பம் அணுகுமே. **#609**

செருக்கு தன்னை உந்தித்தள்ளுதலால் சென்று திருக்கயிலாயத்தை எடுத்தவனாகிய இராவணனது சந்தனம் பூசிய தோளும் தாள்களும் இறுமாறு திருவிரலால் ஊன்றிய பெருமானுக்குரியதும், பெண்குரங்குகள் பாயும் பொழில் சூழ்வதுமாகிய திருமாற்பேறு என்று கூறினால் முடிவில்லாத ஒப்பற்ற இன்பம் அணுகும்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

திருஅரிசிற்கரைப்புத்தூர்

திருஅரிசிற்கரைப்புத்தூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழ நாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : படிக்காசளித்தவீசுவரர்.
தேவியார் : அழகம்மை.

முத்தூ ரும்புனல் மொய்யரி சிற்கரைப்
புத்தூ ரன்னடி போற்றியென் பாரெலாம்
பொய்த்தூ ரும்புல னைந்தொடு புல்கிய
மைத்தூ ரும்வினை மாற்றவும் வல்லரே. **#610**

மொய்க்கின்ற முத்துக்கள் ஊர்ந்து வரும் தண்ணீரை உடைய அரிசிலாற்றின் கரையில் உள்ள புத்தூரில் உறையும் பெருமான் "திருவடி போற்றி" என்று கூறுவோரெல்லாம், பொய்யுடையதாகி ஊர்கின்ற ஐந்து புலன்களோடு, பொருந்திய வன்மை உடையதாய் ஊர்கின்ற வினைகளையும் மாற்றும் வல்லமை உடையவர்கள்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

பிறைக்க ணிச்சடை யெம்பெரு மானென்று
கறைக்க ணித்தவர் கண்ட வணக்கத்தாய்
உறக்க ணித்துரு காமனத் தார்களைப்
புறக்க ணித்திடும் புத்தூர்ப் புனிதரே. **#611**

வெண்பிறையாகிய தலைக் கண்ணியணிந்த சடையுடைய எம்பெருமானே என்று கூறி, தம்முடைய குற்றங்களை எண்ணி உணர்ந்த நல்லடியார்கள் கண்ட வணக்கத்துக்குரியவரே! மிகுதியாகக் கருத்தில் எண்ணி உருகாத மனத்தை உடையவர்களைப் புறக்கணித்திடுகின்ற புத்தூரில் எழுந்தருளியுள்ள புனிதரே! (எம்மையாண்டருள்க).

திருஅரிசிற்கரைப்புத்தூர்

அரிசி லின்கரை மேலணி யார்தரு
புரிசை நந்திருப் புத்தூர்ப் புனிதனைப்
பரிசொடும்பர விப்பணி வார்க்கெலாம்
துரிசில் நன்னெறி தோன்றிடுங் காண்மினே. **#612**

அரிசிலாற்றுக்கரையின்மேல் உள்ள அழகு நிறைந்த மதிலை உடைய நம் திருப்புத்தூர்ப் புனிதரை, வணங்கவேண்டிய முறைமைப்படிப் பரவிப் பணிவார்க்கெல்லாம் குற்றமற்ற நன்னெறி தோன்றும்; காண்பீராக.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

வேத னைமிகு வீணையில் மேவிய
கீத னைக்கிள ருந்நறுங் கொன்றையம்
போத னைப்புனல் சூழ்ந்தபுத் தூரனை
நாத னைநினைந் தென்மனம் நையுமே. **#613**

வேதங்கள் ஓதுபவனை, வீணையில் மிகுகின்ற கீதங்கள் உடையவனை, மணம் வீசுகின்ற கொன்றையாகிய அழகிய போதினை அணிந்தவனை, அரிசிற் புனல் சூழ்ந்த புத்தூரில் உள்ள நாதனை, என் மனம் நினைந்து நெகிழ்கின்றது.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

அருப்புப் போன்முலை யாரல்லல் வாழ்க்கைமேல்
விருப்புச் சேர்நிலை விட்டுநல் விட்டமாய்த்
திருப்புத் தூரனைச் சிந்தை செயச்செயக்
கருப்புச் சாற்றிலும் அண்ணிக்குங் காண்மினே. **#614**

கோங்கின் அரும்புபோன்ற முலையுடைய பெண்களோடு கூடித் துன்பங்கள் மிகுந்த வாழ்க்கையின்மேல் விருப்பம் சேர்கின்ற நிலையைவிட்டு நீங்கி, நல்ல பக்தி கொண்டு, திருப்புத்தூரில் உள்ள இறைவனைச் சிந்திக்கச்சிந்திக்கக் கரும்புச் சாற்றைவிடத் தித்திக்கும்; காண்பீராக.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

பாம்பொ டுமதி யும்படர் புன்சடைப்
பூம்புன லும்பொ திந்தபுத் தூருளான்
நாம்ப ணிந்தடி போற்றிட நாள்தொறும்
சாம்ப லென்பு தனக்கணி யாகுமே. **#615**

பாம்பும், பிறையும், பொலிவுள்ள கங்கைநதியும் படர்ந்த செஞ்சடையின்கண் பொதிந்த புத்தூரில் உள்ள புனிதர், நாள்தொறும் நாம் பணிந்து, தன் திருவடியைப் போற்றிட, தான் சாம்பலையும், எலும்பையும் தமக்கு அணியாக்கொள்வர்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

கனல்அங் கைதனி லேந்திவெங் காட்டிடை
அனலங் கெய்திநின் றாடுவர் பாடுவர்
பினலஞ் செஞ்சடை மேற்பிறை யுந்தரு
புனலுஞ் சூடுவர் போலும்புத் தூரரே. **#616**

புத்தூரில் எழுந்தருளியுள்ள இறைவர் தம் அழகிய கையினில்

தீயையேந்தி, வெவ்விய காட்டிடை நெருப்புப் பொருந்திய இடத்திடை எய்தி நின்று ஆடும் இயல்பினர்; பாடும் இயல்பினர்; பின்னுதற்குரிய அழகிய செஞ்சடைமேல் பிறையும் கங்கையும் சூடும் இயல்பினர்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

காற்றி னுங்கடி தாகி நடப்பதோர
ஏற்றி னும்மிசைந் தேறுவ ரென்பொடு
நீற்றி னையணி வர்நினை வாய்த்தமைப்
போற்றி யென்பவர்க் கன்பர்புத் தூரரே. **#617**

புத்தூரில் எழுந்தருளியுள்ள இறைவர். காற்றைவிட விரைந்து நடப்பதாகிய ஒப்பற்ற இடபத்தினும் மனம் ஒத்து ஏறுவர்; எலும்பும் திருநீறும் அணிவர்; 'தம்மையே நினைவாகிப் போற்றி என்று வழிபடுவார்க்கு அன்பர் ஆவர்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

முன்னும் முப்புரஞ் செற்றன ராயினும்
அன்ன மொப்பர் அலந்தடைந் தார்க்கெலாம்
மின்னு மொப்பர் விரிசடை மேனிசெம்
பொன்னு மொப்பர்புத் தூரெம் புனிதரே. **#618**

புத்தூரில் எழுந்தருளியுள்ள இறைவர், முன்னும் மூன்று புரங்களைச் சினந்தவராயினும், வருந்தித் தம்மையடைந்தவர்க்கெல்லாம் அன்னம் போல்வர்; விரிந்த சடை ஒளி விளங்கும் மின்னலென உடையவர்; திருமேனி செம்பொன்னென உடையவர் ஆவர்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

செருத்த னால்தன தேர்செல வுய்த்திடும்
கருத்த னாய்க்கயி லையெடுத் தானுடல்
பருத்த தோள்கெடப் பாதத் தொருவிரல்
பொருத்தி னார்பொழி லார்ந்தபுத் தூரரே. **#619**

பொழில்கள் நிறைந்த புத்தூர்த் தலத்திறைவர், பொருதற்குத் தன்னுடைய தேர் செல்லுமாறு செலுத்துகின்ற கருத்தொடு கூடியவனாகிய இராவணன் திருக்கயிலையை எடுக்கலுற்ற போது, அவன் உடலும் பருத்த தோள்களும் சிதைந்து கெடும் படியாகத் தம் திருப்பாதத்து ஒரு திருவிரலைப் பொருத்தியவர் ஆவர்.

திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்

திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்

திருக்கடுவாய்க்கரைப்புத்தூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சொர்ணபுரீசுவரர்.
தேவியார் : சொர்ணபுரிநாயகியம்மை.

ஒருத்த னைமூ வுலகொடு தேவர்க்கும்
அருத்த னையடி யேன்மனத் துள்ளமர்
கருத்த னைக்கடு வாய்ப்புன லாடிய
திருத்த னைப்புத்தூர்ச் சென்றுகண் டுய்ந்தெனே. **#620**

ஒப்பற்றவனும், மூன்றுலகங்களுக்கும் தேவர்க்கும் பொருளாய் உள்ளவனும், அடியேன் மனத்துள் அமர்கின்ற கருத்தனும், தீயாடிய திருத்தமுற்றவனுமாகிய பெருமானைப் புத்தூரிற் சென்று, கண்டு, உய்ந்தேன்.

திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்

யாவ ருமறி தற்கரி யான்றனை
மூவ ரின்முதல் லாகிய மூர்த்தியை
நாவி னல்லுரை யாகிய நாதனைத்
தேவனைப் புத்தூர்ச் சென்றுகண் டுய்ந்தெனே. **#621**

எல்லோரானும் அறிதற்கு அருமை உடையவனும், மும்மூர்த்திகளுக்கும் முதலாகிய கடவுளும், நாவில் நல்ல உரையாகி அருளும் நாதனும், தேவனுமாகிய பெருமானைப் புத்தூரிலே சென்று கண்டு உய்ந்தேன்.

திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்

அன்ப னையடி யாரிடர் நீக்கியைச்
செம்பொ னைத்திக ழுந்திருக் கச்சியே
கம்ப னைக்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
நம்ப னைக்கண்டு நானுய்யப் பெற்றெனே. **#622**

அன்பே வடிவானவனும், அடியார்கள் துன்பங்களை நீக்குபவனும், செம்பொன் மேனியனும் விளங்கும் திருக்கச்சியேகம்பத்தில் வீற்றிருப்பவனும் ஆகிய கடுவாய்க் கரைத் தென்புத்தூரில் உள்ள நம் பெருமானைக் கண்டு நான் உய்யப் பெற்றேன்.

திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்

மாதனத்தைமா தேவனை மாறிலாக்

கோத னத்திலைந் தாடியை வெண்குழைக்
காத னைக்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
நாத னைக்கண்டு நானுய்யப் பெற்றெனே. **#623**
பெருஞ்செல்வமாகிய அருட்செல்வம் உடையானும், மகாதேவனும், மாறுபாடில்லாத பஞ்சகவ்வியத் திருமுழுக்குக் கொள்பவனும், சங்கவெண்குழையணிந்த காதுடையவனும் ஆகிய கடுவாய்க்கரைத் தென்புத்தூரின் நாதனைக் கண்டு நான் உய்யப்பெற்றேன்.

திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்

குண்டு பட்டகுற் றந்தவிர்த் தென்னையாட்
கொண்டு நற்றிறங் காட்டிய கூத்தனைக்
கண்ட னைக்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
அண்ட னைக்கண் டருவினை யற்றெனே. **#624**
மிகுந்த பல குற்றத்தை நீக்கி என்னை ஆட்கொண்டு நல்ல அருள் திறம் காட்டிய கூத்தனும், திருநீல கண்டனும் ஆகிய கடுவாய்க்கரைத் தென்புத்தூரில் பொருந்தியிருக்கும் பெருமானைக் கண்டு அருவினைகள் அற்றேன்.

திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்

பந்த பாச மறுத்தெனை யாட்கொண்ட
மைந்த னைம்மண வாளனை மாமலர்க்
கந்த நீர்க்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
எந்தை யீசனைக் கண்டினி தாயிற்றே. **#625**
பாசமாகிய கட்டினை அறுத்து, என்னை ஆட்கொண்ட பெருவீரனும், மணவாளக்கோலம் உடையானும், பெரிய மலர்களின் நறுமணம் மிக்க நீரை உடைய கடுவாய்க் கரையிலுள்ள தென்புத்தூரில் உள்ள எந்தையும் ஆகிய ஈசனைக் கண்டதனால் அடியேற்கு இனிதாயிற்று.

திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்

உம்ப ரானை யுருத்திர மூர்த்தியை
அம்ப ரானை யமலனை யாதியைக்
கம்பு நீர்க்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
எம்பி ரானைக்கண் டின்பம தாயிற்றே. **#626**
தேவர் உலகத்துக்கும் அப்பால் உள்ளவனும், உருத்திரமூர்த்தியும், அம்பர்த்தலத்து எழுந்தருளியிருப்பவனும், மலம் அற்றவனும், ஆதியானவனும், சங்குகளையுடைய நீர்பாயும் கடுவாய்க்கரைக்கண் தென்புத்தூரில் உள்ளவனும் ஆகிய எம்பெருமானைக் கண்டதனால் அடியேற்கு இன்பம் ஆயிற்று.

திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்

மாசார் பாச மயக்கறு வித்தெனுள்
நேச மாகிய நித்த மணாளனைப்
பூச நீர்க்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
ஈச னேயென இன்பம தாயிற்றே. **#627**

குற்றம் நிறைந்த பாசமாகிய மயக்கத்தை அறுமாறு செய்து என்னுள்ளத்துக்குள் நேசம் ஆகிய நித்தமணாளன் என்ற திருப்பேர்கொண்டவனும், பூசத்திருநாளில் ஆடற்குரிய கடுவாய்க் கரைத் தென்புத்தூரின்கண் உள்ளவனும் ஆகிய ஈசனே என்று கூற அடியேற்கு இன்பமாயிற்று.

திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்

இடுவா ரிட்ட கவளங் கவர்ந்திரு
கடுவா யிட்டவர் கட்டுரை கொள்ளாதே
கடுவாய்த் தென்கரைப் புத்தூ ரடிகட்காட்
படவே பெற்றுநான் பாக்கியஞ் செய்தெனே. **#628**

பிச்சையிடுவார் இட்ட சோற்றுருண்டையினைப் பெற்றுத் தம் பெரிய கொடிய வாயில் இடும் சமணர்களது கட்டியுரைக்கும் பேச்சைக்கொள்ளாமல், கடுவாய்த்தென்கரைப் புத்தூரின் கண் எழுந்தருளியுள்ள அடிகட்கு ஆட்படப் பெற்று நான் பெரும் பாக்கியம் செய்தவன் ஆயினேன்.

திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்

அரக்க னாற்ற லழித்தவன் பாடல்கேட்
டிரக்க மாகி யருள்புரி யீசனைத்
திரைக்கொள் நீர்க்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
இருக்கு நாதனைக் காணப்பெற் றுய்ந்தெனே. **#629**

இராவணனது ஆற்றலை அழித்து அவன்பாடல் கேட்டுப் பின்னர் இரங்கி அருள்புரியும் ஈசனாகிய, அலைகளைக் கொண்ட கடுவாய்க்கரைத் தென்புத்தூரில் இருக்கும் நாதனைக் காணப்பெற்று உய்ந்தேன்.

திருக்குரங்காடுதுறை

திருக்குரங்காடுதுறை

திருக்குரங்காடுதுறை, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : குலைவணங்குநாதர்.
தேவியார் : அழகுசடைமுடியம்மை.

இரங்கா வன்மனத் தார்க ளியங்குமுப்
புரங்கா வல்அழி யப்பொடி யாக்கினான்
தரங்கா டுந்தட நீர்ப்பொன்னித் தென்கரைக்
குரங்காடு துறைக் கோலக்க பாலியே. **#630**

அலைகள் ஆடுகின்ற பெரிய நீரினை உடைய காவிரியின் தென்கரையில் உள்ள குரங்காடுதுறையில் வீற்றிருக்கும் அழகிய கபாலம் கைக்கொண்ட பெருமான், இரங்காத வலிய மனத்தவர்களாகிய அரக்கர்கள் இயங்குகின்ற முப்புரங்காவல் அழியுமாறு பொடியாக்கியவன் ஆவன்.

திருக்குரங்காடுதுறை

முத்தி னைமணி யைப்பவ ளத்தொளிர்
தொத்தி னைச்சுடர்ச் சோதியைச் சோலைசூழ்
கொத்த லர்குரங் காடு துறையுறை
அத்த னென்னஅண் ணித்திட்டிருந்ததே. **#631**

முத்தும், மணியும், பவளத்தொடு ஒளிர்கின்ற கொத்தும், சுடர்விடும் சோதியும், சோலைகள் சூழ்ந்த பூங்கொத்துக்கள்மலர்கின்ற குரங்காடுதுறை உறையும் அத்தனும் என்று கூற உள்ளத்தில் தித்தித்திருந்தனன் அப்பெருமான்.

திருக்குரங்காடுதுறை

குளிர்பு னற்குரங் காடுது றையனைத்
தளிர்நி றத்தையல் பங்கனைத் தண்மதி
ஒளிய னைந்நினைந் தேனுக்கென் னுள்ளமும்
தெளிவி னைத்தெள யத்தெளந் திட்டதே. **#632**

குளிர்கின்ற நீர் சூழ்ந்த குரங்காடுதுறையில் இருப்பவனும், மாந்தளிரைப் போன்ற நிறம் உடைய மேனியினளாகிய உமாதேவியைப் பங்கிற்கொண்டவனும் தண்ணியமதி ஒளியனும் ஆகிய பெருமானை நினைந்த அடியேனுக்கு என் உள்ளமும் தெளவுறும்படித் தெளவினைத் தெளந்தது.

திருக்குரங்காடுதுறை

மணவன் காண்மலை யாள்நெடு மங்கலக்
கணவன் காண்கலை ஞானிகள் காதலெண்
குணவன் காண்குரங் காடுதுறைதனில்
அணவன் காண்அன்பு செய்யு மடியர்க்கே. **#633**

அன்புசெய்யும் அடியார்க்கு மணவாளக்கோலம் உடையவனும், மலைமகளாகிய உமாதேவிக்கு மங்கலக்கணவனும், கலைஞானிகளாற் காதலிக்கப்பெறுவானும். எண் குணத்தானும், குரங்காடுதுறையில், அண்ணியவனும், ஆவன்.

திருக்குரங்காடுதுறை

ஞாலத் தார்தொழு தேத்திய நன்மையன்
காலத் தான்உயிர் போக்கிய காலினன்
நீலத் தார்மிடற் றான்வெள்ளை நீறணி
கோலத் தான்குரங் காடு துறையனே. **#634**

குரங்காடுதுறையில் வீற்றிருக்கும் இறைவன் உலகத்தாராற் றொழுதேத்தப்பட்ட நன்மை உடையவனும், காலன் உயிர்போகச் செய்த திருக்காலை உடையவனும், நீலநிறம் நிறைந்த திருமிடற்றை உடையவனும், வெண்ணீறணிந்த கோலத்தை உடையவனும் ஆவன்.

திருக்குரங்காடுதுறை

ஆட்டி னான்முன் அமணரோ டென்றனைப்
பாட்டி னான்றன பொன்னடிக் கின்னிசை
வீட்டி னான்வினை மெய்யடி யாரொடும்
கூட்டி னான்குரங் காடு துறையனே. **#635**

குரங்காடுதுறையில் வீற்றிருக்கும் இறைவன், முன்னர் என்னை அமணர்களோடு ஆட்டுவித்தவனும், பின்னர்த் தன் பொன்னார் திருவடிகளுக்கு இனிய பண்ணிசையை என்னைப் பாட்டுவித்தவனும், வினையை வீட்டியவனும், மெய்யடியார்களோடு என்னைக் கூட்டுவித்தவனும் ஆவன்.

திருக்குரங்காடுதுறை

மாத்தன் தான்மறை யார்முறை யான்மறை
ஓத்தன் தாரகன் றன்னுயி ருண்டபெண்
போத்தன் தானவன் பொங்கு சினந்தணி
கூத்தன் தான்குரங் காடு துறையனே. **#636**

வேதங்களில் கூறிய முறையால் மாற்றுயர்ந்த பொன்போன்றவனும்,

வேதசாகைகளை அருளிச்செய்தவனும், தாரகனை அடக்கிய காளியைவென்ற வீரனும், முயலகனது சினத்தைத் தணித்த கூத்தனுமாய் விளங்குபவன் குரங்காடுதுறை இறைவன்.

திருக்குரங்காடுதுறை

நாடி நந்தம ராயின தொண்டர்காள்
ஆடு மின்அழு மின்தொழு மின்னடி
பாடு மின்பர மன்பயி லும்மிடம்
கூடு மின்குரங் காடு துறையையே. **#637**

நம் தமராகிய தொண்டர்களே! பரமன் பயிலும் இடமாகிய குரங்காடுதுறையையே மனத்தால் நாடி ஆடுவீர்களாக; அழுவீர்களாக; தொழுவீர்களாக; அவன் அடியே பாடுவீர்களாக; அத்தலத்தையே கூடுவீர்களாக.

திருக்குரங்காடுதுறை

தென்றல் நன்னெடுந் தேருடை யானுடல்
பொன்ற வெங்கனல் பொங்க விழித்தவன்
அன்ற வந்தக னைஅயிற் சூலத்தால்
கொன்ற வன்குரங் காடு துறையனே. **#638**

குரங்காடுதுறையில் வீற்றிருக்கும் 'இறைவன், தென்றலாகிய நல்ல நீண்டுயர்ந்த தேரை உடையானாகிய காமன் உடல் அழியுமாறு வெவ்விய அனல் பொங்க விழித்தவனும், அன்று காலனைக் கூரிய சூலத்தாற் கொன்றவனும் ஆவன்.

திருக்குரங்காடுதுறை

நற்ற வம்செய்த நால்வர்க்கு நல்லறம்
உற்ற நன்மொழி யாலருள் செய்தநல்
கொற்ற வன்குரங் காடு துறைதொழுப்
பற்றுந் தீவினை யாயின பாறுமே. **#639**

நல்ல தவம் புரிந்தவர்களாகிய சனகர் முதலிய நான்கு முனிவர்களுக்கும் நல் அறம் மிகுந்த நன்மொழியால் அருள் செய்தவனாகிய நல்ல கொற்றவனுறைகின்ற குரங்காடுதுறையைத் தொழுதால் பற்றுகின்ற தீவினையாகியவை கெடும்.

திருக்குரங்காடுதுறை

கடுத்த தோரரக் கன்கயி லைம்மலை
எடுத்த தோள்தலை யிற்றல றவ்விரல்
அடுத்த லும்மவ னின்னிசை கேட்டருள்

கொடுத்த வன்குரங் காடு துறையனே. **#640**

குரங்காடுதுறையில் வீற்றிருக்கும் இறைவன், சினந்த தேரை உடைய இராவணனது, திருக்கயிலையை எடுக்கலுற்ற தோள்களும் தலையும் இற்று, அவன் அலறும்படியாகத் திருவிரலை அடுத்தவன்; பின் அவன் இன்னிசை கேட்டு அருள்கொடுத்தவன் ஆவன்.

திருக்கோழம்பம்

திருக்கோழம்பம்

திருக்கோழம்பம், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கோகுலேசுவரர்.
தேவியார் : சவுந்தரியம்மை.

வேழம் பத்தைவர் வேண்டிற்று வேண்டிப்போய்
ஆழம் பற்றிவீழ் வார்பல வாதர்கள்
கோழம் பத்துறை கூத்தன் குரைகழல்
தாழும் பத்தர்கள் சாலச் சதுரரே. **#641**

வேழம்பம் என்னும் விளையாட்டைப் புரிகின்ற ஐந்து புலன்களாகியவர்கள் விரும்பினவற்றையே தாமும் விரும்பிச் சென்று உலகியல் ஆழங்காற்பட்டுப் பல அறிவற்றவர்கள் வீழ்வர்; கோழம்பத்தில் உறைகின்ற கூத்தன் ஒலிக்கும் கழல் அணிந்த திருவடிகளை வணங்கும் பக்தர்களே மிகவும் திறம் உடையவர்கள்.

திருக்கோழம்பம்

கயிலை நன்மலை யாளுங் கபாலியை
மயிலி யல்மலை மாதின் மணாளனைக்
குயில்ப யில்பொழிற் கோழம்பம் மேயவென்
உயிரி னைநினைந் துள்ளம் உருகுமே. **#642**

திருக்கயிலாயத் திருமலையினை ஆள்கின்ற கபாலியும், மயிலியலை உடைய மலைமங்கையின் மணவாளனும்ஆகிய, குயில் பயில்கின்ற பொழில்கள் உடைய கோழம்பத்தைப் பொருந்திய என் உயிர்போல்வானாகிய இறைவனை நினைந்து உள்ளம் உருகுகின்றது.

திருக்கோழம்பம்

வாழும் பான்மைய ராகிய வான்செல்வம்
தாழும் பான்மைய ராகித்தம் வாயினால்
தாழம் பூமணம் நாறிய தாழ்பொழில்
கோழம் பாவெனக் கூடிய செல்வமே. **#643**

வணங்கும் தன்மையோடு கூடியவராகித் தம்வாயினால், தாழம்பூக்களின் மணம் வீசுகின்ற பொழிலை உடைய "கோழம்பத்தலத்து இறைவா!ழு என்று கூறியதனால் கூடும் செல்வமே, வாழும் தன்மையராகிப் பெற்ற உயர்ந்த செல்வம் ஆகும்.

திருக்கோழம்பம்

பாட லாக்கிடும் பண்ணொடு பெண்ணிவள்
கூட லாக்கிடுங் குன்றின் மணற்கொடு
கோடல் பூத்தலர் கோழம்பத் துள்மகிழ்ந்
தாடுங் கூத்தனுக் கன்புபட் டாளன்றே. **#644**

வெண்கோடலும் செங்கோடலும் ஆகிய மலர்கள் பூத்து விளங்கும் கோழம்பத்துள் மகிழ்ந்து ஆடும் கூத்தனாகியஇறைவனுக்கு இப்பெண் அன்றே அன்புபட்டாள் ஆதலின், பண்ணொடு கூடிய பாடல் ஆக்குவாள்; மணற்குன்றில் மணலினைக் கொண்டு கூடல் இழைப்பாள்.

திருக்கோழம்பம்

தளிர்கொள் மேனியள் தான்மிக அஞ்சவோர்
பிளிறு வாரணத் தீருரி போர்த்தவன்
குளிர்கொள் நீர்வயற் கோழம்பம் மேவினான்
நளிர்கொள் நீர்சடை மேலு நயந்ததே. **#645**

மாந்தளிரின் வண்ணம் கொண்ட மேனியளாகிய உமாதேவி மிக அஞ்சுமாறு ஒப்பற்ற பிளிறிவரும் யானையின் பச்சைத்தோலைப் போர்த்தவனாகிய, குளிர்ச்சிகொண்ட நீண்ட வயல்களையுடைய கோழம்பத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் செறிவினைக்கொண்ட கங்கையினைச் சடைமேலும் நயந்தது வியப்புக்குரியதே.

திருக்கோழம்பம்

நாத ராவர் நமக்கும் பிறர்க்குந்தாம்
வேத நாவர் விடைக்கொடி யார்வெற்பில்
கோதை மாதொடுங் கோழம்பங் கோயில்கொண்
டாதி பாத மடையவல் லார்களே. **#646**

வேதங்களை ஓதிய நாவை உடையவரும், இடபக்கொடியினரும், மலைமங்கையாகிய உமாதேவியோடும் கோழம்பத்திற் கோயில்கொண்ட ஆதியுமாகிய பெருமானின் பாதங்களை அடையவல்லவர்கள் தாம் நமக்கும் பிறர்க்கும் தலைவர் என்று மதிக்கத்தக்கவர்கள்.

திருக்கோழம்பம்

முன்னை நான்செய்த பாவ முதலறப்
பின்னை நான்பெரி தும்மருள் பெற்றது
அன்ன மார்வயற் கோழம்பத் துள்ளமர்
பின்னல் வார்சடை யானைப் பிதற்றியே. **#647**

அன்னம் பொருந்திய வயலை உடைய கோழம்பத்துள் அமர்ந்திருக்கின்ற பின்னிய நீண்டசடையானைப் பிதற்றியே, முன்பு

நான் செய்த பாவம் முதல் அறும்படிப் பின்பு நான் பெரிதும் அருள்பெற்றது.

திருக்கோழம்பம்

ஏழை மாரிடம் நின்றிரு கைக்கொடுண்
கோழை மாரொடுங் கூடிய குற்றமாங்
கூழை பாய்வயற் கோழம்பத் தானடி
ஏழை யேன்முன் மறந்தங் கிருந்ததே. **#648**

ஏழையேனாகிய அடியேன் கூழைமீன்கள் பாய்கின்ற வயல்களை உடைய கோழம்பத்தான் அடியை மறந்து அவர்பால் இருந்தது, பெண்களிடம் நின்று இரண்டு கைகளாலும் அவர்கள் இடும் உணவைக்கொண்டு உண்ணும் கோழைகளோடு கூடிய குற்றமாம்.

திருக்கோழம்பம்

அரவ ணைப்பயில் மாலயன் வந்தடி
பரவ னைப்பர மாம்பரஞ் சோதியைக்
குரவ னைக்குர வார்பொழிற் கோழம்பத்
துரவ னையொரு வர்க்குணர் வொண்ணுமே. **#649**

பாம்பாகிய படுக்கையில் பயிலும் திருமாலும், பிரமனும் வந்து அடிபரவப்பெறுவானும், பரம்பொருளாகிய உயர்ந்தசோதியும், பரமாசாரியனும் ஆகிய குரவமரங்கள் செறிந்த கோழம்பத்தின்கண் அறிவு வடிவானவனை நீங்குபவர்க்கு உணர்தல் இயலுமோ?

திருக்கோழம்பம்

சமர சூரபன் மாவைத் தடிந்தவேற்
குமரன் தாதைநற் கோழம்பம் மேவிய
அமரர் கோவினுக் கன்புடைத் தொண்டர்கள்
அமர லோகம தாளுடை யார்களே. **#650**

போரெதிர்ந்துவந்த சூரபன்மனைக் கொன்ற வேற்படையை உடைய முருகவேளுக்குத் தந்தையும், நல்ல கோழம்பம் மேவிய தேவர்தலைவனும் ஆகிய பெருமானுக்கு அன்புடைய தொண்டர்கள், அமரலோகத்தை ஆளும் உரிமையுடையவராவர்.

திருக்கோழம்பம்

துட்ட னாகி மலையெடுத் தஃதின்கீழ்ப்
பட்டு வீழ்ந்து படர்ந்துய்யப் போயினான்
கொட்டம் நாறிய கோழம்பத் தீசனென்
றிட்ட கீத மிசைத்த அரக்கனே. **#651**

கொட்ட நறுமணம் வீசுகின்ற கோழம்பத்து இறைவன் என்று விருப்பத்திற்குரிய கீதம் இசைத்த அரக்கன் துட்டனாகித் திருக்கயிலையை எடுக்கலுற்று, அம்மலையின் கீழ்ப்பட்டு விழுந்து படர்ந்து பின் உய்ந்தான்.

திருப்பூவனூர்

திருப்பூவனூர்

திருப்பூவனூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : புஷ்பவனநாதர் .
தேவியார் : கற்பகவல்லியம்மை.

பூவ னூர்ப்புனி தன்திரு நாமந்தான்
நாவில் நூறுநூ றாயிரம் நண்ணினார்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்க ளாவரே. **#652**

பூவனூரில் எழுந்தருளியுள்ள இறைவன் திருநாமத்தைத் தம் நாவில் நூறுநூறாயிரம் கூறிப் பரவியவர், தம் பாவங்கள் சிதைந்துகெட்டுத் தேவர் தலைவனாகிய இந்திரனைவிட மிகப் பெருஞ் செல்வர்கள் ஆவர்.

திருப்பூவனூர்

என்ன னென்மனை யெந்தையெ னாருயிர்
தன்னன் தன்னடி யேன்தன மாகிய
பொன்னன் பூவனூர் மேவிய புண்ணியன்
இன்ன னென்றறி வொண்ணா னியற்கையே. **#653**

பூவனூர் மேவிய இறைவன் என்னை உடையவன்; என் மனையாளாகவும் உள்ளவன்; என் தந்தை; என் உயிர்; தனக்குத்தானே உவமையானவன்; தன்னடியேனுக்குச் செல்வமாக உள்ள பொன்னன்; தன் இயல்பினால் இன்னதன்மையன் என்று அறியவியலாதவன் ஆவன்.

திருப்பூவனூர்

குற்றங் கூடிக் குணம்பல கூடாதீர்
மற்றுந் தீவினை செய்தன மாய்க்கலாம்
புற்ற ராவினன் பூவனூ ரீசன்பேர்
கற்று வாழ்த்துங் கழிவதன் முன்னமே. **#654**

குற்றங்களே மிகப் பெருகிக் குணம்பல கூடாதவர்களே! புற்றிற்பொருந்திய பாம்பினைச் சூடியவனாகிய பூவனூர் இறைவன் திருநாமத்தை நீர் மடிவதன் முன்பே கற்று வாழ்த்துவீராக; அங்ஙனம் வாழ்த்தினால் நீர் செய்த வினைகளை மாய்க்கலாம்.

திருப்பூவனூர்

ஆவின் மேவிய ஐந்தமர்ந் தாடுவான்
தூவெண் ணீறு துதைந்தசெம் மேனியான்
மேவ நூல்விரி வெண்ணியின் தென்கரைப்
பூவ னூர்புகு வார்வினை போகுமே. **#655**

பஞ்சகவ்வியங்களை விரும்பித் திருமுழுக்குக் கொள்வானும், தூய வெண்ணீறு செறிந்த செம்மேனியனும், விரிகின்ற பூணூல் மேவியவனும் ஆகிய பெருமானுக்குரியதும் வெண்ணியின் தென்கரைக் கண்ணதுமாகிய பூவனூரின்கண் புக்குத்தொழும் அடியவர்களின் வினை அவரைவிட்டு நீங்கும்.

<u>திருப்பூவனூர்</u>

புல்லம் ஊர்தியூர் பூவனூர் பூம்புனல்
நல்ல மூர்திநல் லூர்நனி பள்ளியூர்
தில்லை யூர்திரு வாரூர்சீர் காழிநல்
வல்ல மூரென வல்வினை மாயுமே. **#656**

புல்லமும், ஊர்தியூரும், பூவனூரும், புனல் வளம் உடைய நல்லமும், ஊர்திநல்லூரும், நனிபள்ளியூரும், தில்லையூரும், திருவாரூரும், சீர்காழியும், நல்லவல்லமும் ஆகியவற்றைக் கூறியவளவிலேயே வல்வினை நீங்கும்.

<u>திருப்பூவனூர்</u>

அனுச யப்பட் டதுவிது வென்னாதே
கனிம னத்தொடு கண்களும் நீர்மல்கிப்
புனித னைப்பூவ னூரனைப் போற்றுவார்
மனித ரில்தலை யான மனிதரே. **#657**

கனிந்த மனத்தொடு கண்கள் நீர் நிறைந்து, ஐயப்பட்டபொருளன்று இது; தௌந்தது என்று கருதிப் பூவனூர்ப் புனிதனைப் போற்றும் மனிதர்களே எல்லா மனிதர்களிலும் தலையான மனிதராவர்.

<u>திருப்பூவனூர்</u>

ஆதி நாதன் அமரர்க ளர்ச்சிதன்
வேத நாவன்வெற் பின்மடப் பாவையோர்
பாதி யானான் பரந்த பெரும்படைப்
பூத நாதன்தென் பூவனூர் நாதனே. **#658**

அழகிய பூவனூர் இறைவன் ஆதியில் தோன்றியவனும், தேவர்களால் அருச்சிக்கப்படுபவனும், வேதம் ஓதும் நாவினனும், மலைமங்கையை ஒரு பாதியிற் கொண்டவனும், பரவிய பெரும் படைக்கலங்களை உடைய பூதநாதனும் ஆவன்.

திருப்பூவனூர்

பூவ னூர்தண் புறம்பயம் பூம்பொழில்
நாவ லூர்நள் ளாறொடு நன்னிலங்
கோவ லூர்குட வாயில் கொடுமுடி
மூவ லூருமுக் கண்ணனூர் காண்மினே. **#659**

பூவனூரும், குளிர்ந்த புறம்பயமும் பூம்பொழில் சூழ்ந்த நாவலூரும், நள்ளாறும், நன்னிலமும், கோவலூரும், குடவாயிலும், கொடுமுடியும், மூவலூரும் ஆகிய அனைத்தும் முக்கண்ணன் ஊர்கள்; காண்பீர்களாக. மூவலூர் வைப்புத்தலம்.

திருப்பூவனூர்

ஏவம் ஏது மிலாஅம ணேதலர்
பாவ காரிகள் சொல்வலைப் பட்டுநான்
தேவ தேவன் திருநெறி யாகிய
பூவ னூர்புகு தப்பெற்ற நாளின்றே. **#660**

விதிவிலக்குகள் ஏதும் இல்லாத அமணர்களாகிய குற்றமுடையோரும்; பாவகாரிகளுமாகியோர் சொல் வலையிற் பட்டு நான் தேவதேவனாம் சிவபெருமானின் திருநெறியாகிய பூவனூர் புகப்பெற்ற நாள் இன்றேயாகும்.

திருப்பூவனூர்

நார ணன்னொடு நான்முக னிந்திரன்
வார ணன்கும ரன்வணங் குங்கழற்
பூர ணன்திருப் பூவனூர் மேவிய
கார ணன்னெனை யாளுடைக் காளையே. **#661**

திருமாலும், பிரமனும், இந்திரனும், விநாயகரும், முருகனும் வணங்கும் கழலை உடைய நிறைவானவனும், திருப்பூவனூரில் பொருந்திய உலககாரணனுமாகிய பெருமானே, என்னை ஆளுடைய காளைபோல்வான்.

திருப்பூவனூர்

மைக்க டுத்த நிறத்தரக் கன்வரை
புக்கெ டுத்தலும் பூவனூ ரன்னடி
மிக்க டுத்த விரல்சிறி தூன்றலும்
பக்க டுத்தபின் பாடியுய்ந் தானன்றே. **#662**

மேகத்தையொத்த நிறத்தை உடைய இராவணன் திருக்கயிலையைப் புகுந்தெடுத்தலும், பூவனூர் இறைவன் திருவடியில் மற்ற விரல்களினும்

சிறப்புமிக்குள்ள பெருவிரலைச் சற்று ஊன்றுதலும் தன் உறுப்பெல்லாம் பிளந்து வருந்தியபிறகு பாடி அருள்பெற்று உய்ந்தான்.

திருவலஞ்சுழி

திருவலஞ்சுழி

திருவலஞ்சுழி, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காப்பகத்தீசுவரர்.
தேவியார் : மங்களநாயகியம்மை.

ஓத மார்கட லின்விட முண்டவன்
பூத நாயகன் பொற்கயி லைக்கிறை
மாதொர் பாகன் வலஞ்சுழி யீசனைப்
பாத மேத்தப் பறையும்நம் பாவமே. **#663**

அலைகளை உடைய பாற்கடலினின்றெழுந்த ஆலகாலவிடத்தை உண்டவனும், பூதங்களுக்கு நாயகனும், பொன்வடிவாகிய திருக்கயிலைக்கு இறைவனும், உமையொரு பங்கனும் ஆகிய திருவலஞ்சுழி இறைவனின் திருவடியை ஏத்தித்தொழுதால் நம் பாவங்கள் கெடும்.

திருவலஞ்சுழி

கயிலை நாதன் கறுத்தவர் முப்புரம்
எயில்கள் தீயெழ வெல்வல வித்தகன்
மயில்க ளாலும் வலஞ்சுழி யீசனைப்
பயில்கி லார்சிலர் பாவித் தொழும்பரே. **#664**

திருக்கயிலைத் தலைவனும், சினந்த பகைவருடைய முப்புரங்களும் எயில்களுடன் தீயெழுமாறு வெல்ல வல்ல திறம் உடையவனும் ஆகிய மயில்கள் ஆரவாரிக்கும் திருவலஞ்சுழி இறைவனைப் பயின்று தொழார் சில பாவிகளாகிய தொண்டர்கள்.

திருவலஞ்சுழி

இளைய காலமெம் மானை யடைகிலாத்
துளையி லாச்செவித் தொண்டர்காள் நும்முடல்
வளையுங் காலம் வலஞ்சுழி யீசனைக்
களைக ணாகக் கருதிநீ ருய்ம்மினே. **#665**

இளமைப்பருவத்தேயே எம் பெருமானை அடைந்து வழிபடாத துளையற்ற செவிகளை உடைய தொண்டர்களே! நும் உடல் வளைந்து முதுமைக்காலம் வந்தவிடத்து திருவலஞ்சுழி இறைவனையே உமக்குத் துன்பம் களையும் துணையாகக் கருதி உய்வீராக.

திருவலஞ்சுழி

நறைகொள் பூம்புனல் கொண்டெழு மாணிக்காய்க்
குறைவி லாக்கொடுங் கூற்றுதைத் திட்டவன்
மறைகொள் நாவன் வலஞ்சுழி மேவிய
இறைவ னையினி யென்றுகொல் காண்பதே. **#666**
தேனைக்கொண்ட பூக்கள் நிரம்பிய நீர்கொண்டு திருமுழுக்காட்ட
எழுந்த மார்க்கண்டேயனுக்காக வேறொன்றும் குறைவில்லாத கொடிய
கூற்றுவனை உதைத்திட்டவனும், வேதங்களை ஓதுதலைக்கொண்ட
நாவினனும் ஆகிய திருவலஞ்சுழியிற் பொருந்திய இறைவனை
இனிக்காண்பது என்றுகொல்?

திருவலஞ்சுழி

விண்ட வர்புர மூன்று மெரிகொளத்
திண்தி றற்சிலை யாலெரி செய்தவன்
வண்டு பண்முர லுந்தண் வலஞ்சுழி
அண்ட னுக்கடி மைத்திறத் தாவனே. **#667**
பகைவர் புரங்கள் மூன்றையும் எரிதல் கொள்ளமிக்க
திண்ணியவில்லினால் எரித்தவனாகிய, வண்டுகள் இசையென
ஒலிக்கின்ற குளிர்ச்சி உடைய வலஞ்சுழியில் வீற்றிருக்கும்
தேவதேவனுக்கு அடிமை செய்யும் திறத்து யான் ஆவன்.

திருவலஞ்சுழி

படங்கொள் பாம்பொடு பான்மதி யஞ்சடை
அடங்க வாழவல் லானும்பர் தம்பிரான்
மடந்தை பாகன் வலஞ்சுழி யானடி
அடைந்த வர்க்கடி மைத்திறத் தாவனே. **#668**
படத்தைக்கொண்ட பாம்பினோடு நிலா தரும் மதியத்தையும் சடையில்
அடங்குமாறு வைத்து வாழ வல்லானும், தேவர் தலைவனும்,
மங்கைபங்கனும் ஆகிய திருவலஞ்சுழி இறைவன் திருவடியை
அடைந்தவர்க்கு அடிமைசெய்யும் திறத்து யான் ஆவன்.

திருவலஞ்சுழி

நாக்கொண் டுபர வும்மடி யார்வினை
போக்க வல்ல புரிசடைப் புண்ணியன்
மாக்கொள் சோலை வலஞ்சுழி யீசன்றன்
ஏக்கொ ளப்புர மூன்றெரி யானவே. **#669**
நாவினைக்கொண்டு இசை பாடித்தொழும் அடியார்களின்
வினைகளைப் போக்கவல்ல முறுக்கமைந்தசடையையுடைய
புண்ணியனாகிய நீண்ட சோலை சூழ்ந்த திருவலஞ்சுழி இறைவன் தன்

ஓர் அம்பு கொள்ளவும் முப்புரங்களும் எரிக்கப்பட்டன.

திருவலஞ்சுழி

தேடு வார்பிர மன்திரு மாலவர்
ஆடு பாதம் அவரு மறிகிலார்
மாட வீதி வலஞ்சுழி யீசனைத்
தேடு வானுறு கின்றதென் சிந்தையே. **#670**

பிரமனும், திருமாலும் தேடுவாராகி இறைவனின் ஆடும் திருவடியை அறியும் ஆற்றல் இலராகவும், மாடங்கள் நெடிதுயர்ந்த வீதிகளை உடைய திருவலஞ்சுழி ஈசனை என் சிந்தை தேடுவதற்காக உறுகின்றது!

திருவலஞ்சுழி

கண்ப னிக்குங்கை கூப்புங்கண் மூன்றுடை
நண்ப னுக்கெனை நான்கொடுப் பேனெனும்
வண்பொன் னித்தென் வலஞ்சுழி மேவிய
பண்ப னிப்பொனைச் செய்த பரிசிதே. **#671**

கண்ணீர் ததும்புகின்றாள்; கைகூப்பித் தொழுகின்றாள்; முக்கண்ணுடைய நண்பனுக்கு என்னை நான் கொடுப்பேன் என்று சொல்கின்றாள்; வளவிய பொன்னித் தென்கரையில் உள்ள வலஞ்சுழி மேவிய பண்பனாகிய பெருமான் இந்தப் பொன்னனைய தலைவிக்குச் செய்த தன்மை இதுவாகும்.

திருவலஞ்சுழி

இலங்கை வேந்த னிருபது தோளிற
நலங்கொள் பாதத் தொருவிர லூன்றினான்
மலங்கு பாய்வயல் சூழ்ந்த வலஞ்சுழி
வலங்கொள் வாரடி யென்றலை மேலவே. **#672**

இலங்கை வேந்தனாம் இராவணனது இருபது தோளும் இறும்படியாக நன்மைமிக்க திருவடியில் ஒரு விரலால் ஊன்றினானுக்குரிய, மலங்கு மீன்கள் பாய்கின்ற வயல் சூழ்ந்த திருவலஞ்சுழியை வலம் கொள்வார் திருவடிகள் என் தலையின் மேலன.

திருவாஞ்சியம்

திருவாஞ்சியம்

திருவாஞ்சியம், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வாஞ்சியநாதர்.
தேவியார் : வாழவந்தநாயகியம்மை.

படையும் பூதமும் பாம்பும்புல் வாயதள்
உடையுந் தாங்கிய உத்தம னார்க்கிடம்
புடைநி லாவிய பூம்பொழில் வாஞ்சியம்
அடைய வல்லவர்க் கல்லலொன் றில்லையே. **#673**

படைக்கலங்களும், பூதமும், பாம்பும், மான்தோல் உடையும் தாங்கிய உத்தமராகிய பெருமானுக்கு இடமாகிய, பக்கமெலாம் பொருந்திய பூம்பொழில் சூழ்ந்த திருவாஞ்சியத்தை அடையவல்லவர்களுக்கு ஒரு துன்பமும் இல்லை.

திருவாஞ்சியம்

பறப்பை யும்பசு வும்படுத் துப்பல
திறத்த வும்முடை யோர்திக ழும்பதி
கறைப்பி றைச்சடைக் கண்ணுதல் சேர்தரு
சிறப்பு டைத்திரு வாஞ்சியஞ் சேர்மினே. **#674**

பறவை வடிவாகிய யூபஸ்தம்பம் நட்டு ஓமம் செய்து பசுவினை வேட்டு வேள்வி செய்து மற்றும் பலதிறத்தை உடைய மறையவர்கள் வாழும் பதியாகியதும், களங்கமுடைய பிறையைச் சடையின்கண் வைத்த நெற்றிக்கண்ணராகிய சிவபிரான் சேரும் சிறப்புடையதுமாகிய திருவாஞ்சியம் சேர்வீராக.

திருவாஞ்சியம்

புற்றில் ஆடர வோடு புனல்மதி
தெற்று செஞ்சடைத் தேவர்பி ரான்பதி
சுற்று மாடங்கள் சூழ்திரு வாஞ்சியம்
பற்றிப் பாடுவார்க் குப்பாவ மில்லையே. **#675**

புற்றில் ஆடும் இயல்புடைய பாம்பினோடு கங்கையும், பிறையும் பொருந்திய செஞ்சடையுடைய தேவர் தலைவன் திருப்பதியாகியதும், சுற்றிலும் மாடங்கள் சூழ்ந்ததுமாகிய திருவாஞ்சியத்தைப்பற்றிப் பாடுபவர்களுக்குப் பாவங்கள் இல்லை.

திருவாஞ்சியம்

அங்க மாறும் அருமறை நான்குடன்
தங்கு வேள்வியர் தாம்பயி லுந்நகர்
செங்கண் மாலிட மார்திரு வாஞ்சியம்
தங்கு வார்நம் அமரர்க் கமரரே. **#676**

நம் தேவதேவராகிய இறைவர், ஆறங்கங்களும் நால்வேதங்களும் தங்குகின்ற வேள்வியுடைய அந்தணர்கள் பயிலும்நகராகிய திருவாஞ்சியத்தில், சிவந்த கண்ணையுடைய திருமாலை இடப்பாற்கொண்டு தங்குவார்.

திருவாஞ்சியம்

நீறு பூசி நிமிர்சடை மேற்பிறை
ஆறு சூடும் அடிக ளுறைபதி
மாறு தானொருங் கும்வயல் வாஞ்சியம்
தேறி வாழ்பவர்க் குச்செல்வ மாகுமே. **#677**

திருநீறு பூசி நிமிர்ந்த சடையின்மேல் பிறையும் கங்கையும் சூடும் பெருமான் உறையும் பதியாகியதும், களைகளாகிய பிரம்பு முதலியவை ஒருங்கும் வயல் வளமுடைய திருவாஞ்சியத்தைத் தெளந்து வாழ்பவர்க்குச் செல்வம் பெருகும்.

திருவாஞ்சியம்

அற்றுப் பற்றின்றி யாரையு மில்லவர்க்
குற்ற நற்றுணை யாவா னுறைபதி
தெற்று மாடங்கள் சூழ்திரு வாஞ்சியம்
கற்றுச் சேர்பவர்க் குக்கருத் தாவதே. **#678**

பாசக்கட்டுகள் நீங்கிப் பற்று என்பதொன்றும் இன்றி யாரையும் இல்லாதவர்க்குப் பொருந்திய நல்ல துணைவனாகிய பெருமான் உறையும் பதியாகியதும், விண்ணைத் தெற்றுகின்ற மாடங்கள் சூழ்வதுமாகிய திருவாஞ்சியத்தைக் கற்றுச் சேரும் அடியார்களுடைய கருத்தாவான் இறைவன்.

திருவாஞ்சியம்

அருக்க னங்கி யமனொடு தேவர்கள்
திருத்துஞ் சேவடி யான்றிக ழுந்நகர்
ஒருத்தி பாக முகந்தவன் வாஞ்சியம்
அருத்தி யாலடை வார்க்கில்லை யல்லலே. **#679**

சூரியனும், அக்கினியும், யமனும், பிற தேவர்களும் திருத்தி அணிசெய்கின்ற சேவடியான் திகழும் நகரமாகியதும், மங்கையை ஒருபங்கிற் கொண்டு மகிழ்ந்தவனுடையதுமாகிய திருவாஞ்சியத்தை

விருப்பத்தினால் அடைவார்க்கு அல்லல் இல்லை.

திருநள்ளாறு

திருநள்ளாறு, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ள சப்த தியாகர் தலங்களிலொன்று. ,
சுவாமிபெயர் : தெர்ப்பாரணியர்.
தேவியார் : போகமார்த்தபூண்முலையம்மை.

உள்ளா றாததோர் புண்டரி கத்திரள்
தெள்ளா றாச்சிவ சோதித் திரளினைக்
கள்ளா றாதபொற் கொன்றை கமழ்சடை
நள்ளா றாவென நம்வினை நாசமே. **#680**

உள்ளே தன் நிறம் கெடாததாகிய ஒப்பற்ற தாமரைத் தொகுதியின் தெளவு நீங்காததாகிய சிவ ஒளிப் பிழம்பினை, தேன் நீங்காத பொன்போன்ற கொன்றைகமழும் சடையினை உடைய "நள்ளாறா!" என்று கூற நம் வினைகள் நாசமாகும்.

திருநள்ளாறு

ஆர ணப்பொரு ளாமரு ளாளனார்
வார ணத்துரி போர்த்தம ணாளனார்
நாரணன் நண்ணி யேத்துநள் ளாறனார்
கார ணக்கலை ஞானக் கடவுளே. **#681**

திருமால் பொருந்தி ஏத்துகின்ற நள்ளாற்று இறைவர், வேதத்தின் பொருளாக விளங்கும் அருளை ஆள்பவர்; யானையின் தோலைப் போர்த்த மணவாளர்; எல்லாவற்றுக்கும் மூலகாரணமாகிய கலைஞானக்கடவுள் ஆவர்.

திருநள்ளாறு

மேகம் பூண்டதோர் மேருவிற் கொண்டெயில்
சோகம் பூண்டழல் சோரத்தொட்டான் அவன்
பாகம் பூண்டமால் பங்கயத் தானொடு
நாகம் பூண்டுகூத் தாடுநள் ளாறனே. **#682**

மேகத்தினைத் தன் உச்சியிற் கொண்டதாகிய மேருமாமலையாகிய வில்லைக்கொண்டு, முப்புரங்களும் சோகம் பூணுமாறு கனல் சோரத் தொட்டவனாகிய அவன், தன்னொரு பாகத்திற்கொண்ட திருமாலும், நான்முகனும் வழிபடுமாறு நாகம் பூண்டு கூத்தாடும் நள்ளாற்று இறைவன்.

திருநள்ளாறு

மலியுஞ் செஞ்சடை வாளர வம்மொடு
பொலியும் பூம்புனல் வைத்த புனிதனார்
நலியுங் கூற்றை நலிந்தநள் ளாறர்தம்
வலியுங் கண்டிறு மாந்து மகிழ்வனே. **#683**
செஞ்சடையில் மலிந்த பாம்பினோடு பொலிகின்ற கங்கையை வைத்த புனிதனாராகிய கூற்றுவனை நலிந்த நள்ளாறரது அருளாற்றலையும் கண்டு இறுமாந்து மகிழ்வேன்.

திருநள்ளாறு

உறவ னாய்நிறைந் துள்ளங் குளிர்ப்பவன்
இறைவ னாகிநின் றெண்ணிறைந் தானவன்
நறவ நாறும் பொழிற்றிரு நள்ளாறன்
மறவ னாய்ப்பன்றிப் பின்சென்ற மாயமே. **#684**
தேன்மணக்கும் பொழிலை உடைய திருநள்ளாற்றுப்பெருமான் உற்றுப்பொருந்தியவனாய் நிறைந்து உள்ளத்தைக் குளிர்விப்பவன்; இறைவனாகிநின்று எண்ணத்தில் நிறைந்தவன்; மறம் உடையவனாய் அருச்சுனனின் பொருட்டுப் பன்றியின்பின் சென்ற மாயம் என்னையோ?

திருநள்ளாறு

செக்க ரங்கழி செஞ்சுடர்ச் சோதியார்
நக்க ரங்கர வார்த்தநள் ளாறனார்
வக்க ரன்னுயிர் வவ்விய மாயற்குச்
சக்க ரம்மருள் செய்த சதுரரே. **#685**
சிவந்த வானமும் அழகிற்குத்தோற்று உள்ள மழிதற்குக் காரணமாகிய செஞ்சுடர் வீசும் சோதியரும், திகம்பரருமாகிய பாம்பினை ஆர்த்துக் கட்டிய நள்ளாற்றிறைவர் வக்கராசுரன் உயிர் போக்கியவராகிய திருமாலுக்குச் சக்கரப் படையை அருள் செய்த திறம் உடையவர்.

திருநள்ளாறு

வஞ்ச நஞ்சிற் பொலிகின்ற கண்டத்தர்
விஞ்சை யிற்செல்வப் பாவைக்கு வேந்தனார்
வஞ்ச நெஞ்சத் தவர்க்கு வழிகொடார்
நஞ்ச நெஞ்சர்க் கருளுநள் ளாறரே. **#686**
நைந்த உள்ளம் உடையவர்களுக்கு அருளும் நள்ளாற்று இறைவர் வஞ்சனைமிக்க நஞ்சினாற் பொலிகின்ற திருக்கழுத்தினர்: தெய்வச் செல்வப்பாவையாகிய உமா தேவிக்கு வேந்தர்: வஞ்சனை உடைய நெஞ்சத்தவர்களுக்கு வழி கொடாதவர்.

திருநள்ளாறு

அல்ல னென்று மலர்க்கரு ளாயின
சொல்ல னென்றுசொல் லாமறைச் சோதியான்
வல்ல னென்றும்வல் லார்வளம் மிக்கவர்
நல்ல னென்றும்நல் லார்க்குநள் ளாறனே. **#687**
அலர்க்கு அல்லன் என்றும், அருளாயின சொல்லன் என்றும், சொல்லாமறைச் சோதியானாகிய வல்லன் என்றும் துதிக்க வல்லவர் வளம் மிக்கவராவர். அத்தகைய நல்லார்க்கு நள்ளாறன் என்றும் நல்லன்.

திருநள்ளாறு

பாம்ப ணைப்பள்ளி கொண்ட பரமனும்
பூம்ப ணைப்பொலி கின்ற புராணனும்
தாம்ப ணிந்தளப் பொண்ணாத் தனித்தழல்
நாம்ப ணிந்தடி போற்றுநள் ளாறனே. **#688**
நாம் பணிந்து அடிபோற்றும் நள்ளாற்று இறைவன், பாம்பாகிய அணையத்தக்க பள்ளியினைக் கொண்ட திருமாலும், பூவாகிய பணைத்த பள்ளியிற் பொலிகின்ற புராணனாகிய நான்முகனும், தாம் பணிந்து அளக்க இயலாத ஒப்பற்ற தனித்தழலாக உள்ளவன்.

திருநள்ளாறு

இலங்கை மன்ன னிருபது தோளிற
மலங்க மால்வரை மேல்விரல் வைத்தவர்
நலங்கொள் நீற்றர்நள் ளாறரை நாடொறும்
வலங்கொள் வார்வினை யாயின மாயுமே. **#689**
இலங்கை மன்னனாகிய இராவணன் இருபது தோள்களும் இற்று மனஞ் சுழலும்படியாகத் திருக்கயிலாயப் பெருவரையின் மேல் திருவிரல் ஊன்றியவரும், நன்மை மிகுந்த திருநீற்றருமாகிய நள்ளாறரை நாள்தோறும் வலம் வந்து வணங்குவார் வினைகள் மாயும்.

திருக்கருவிலி

திருக்கருவிலி

திருக்கருவிலி, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சற்குணநாதர்.
தேவியார் : சர்வாங்கநாயகியம்மை.

மட்டிட் டகுழ லார்சுழ லில்வலைப்
பட்டிட் டுமயங் கிப்பரி யாதுநீர்
கட்டிட் டவினை போகக் கருவிலிக்
கொட்டிட் டையுறை வான்கழல் கூடுமே. **#690**

தேனையுடைய மலர்களைவைத்துச் சூடிய கூந்தலை உடைய பெண்களாகிய சுழலின் வலைப்பட்டு மனம் மயங்கிப் பின் இரங்காமல், நீர் உம்மைக் கட்டிய வினைகள் போக. கருவிலிக்கொட்டிட்டை உறையும் பெருமான் திருவடிகளைக் கூடுவீராக.

திருக்கருவிலி

ஞாலம் மல்கு மனிதர்காள் நாடொறும்
ஏல மாமல ரோடிலை கொண்டுநீர்
கால னார்வரு தன்முன் கருவிலிக்
கோல வார்பொழிற் கொட்டிட்டை சேர்மினே. **#691**

உலகில் நிறைந்த மனிதர்களே! நாள்தோறும் சிறந்த மலர்களோடு பச்சிலைகளையும் பொருந்துமாறு கொண்டு, நீர்உமக்குக் கூற்றுவன் வருவதன் முன்பே அழகு மிக்க நெடிய பொழில்கள் சூழ்ந்த கருவிலிக்கொட்டிட்டையைச் சேர்வீராக.

திருக்கருவிலி

பங்க மாயின பேசப் பறைந்துநீர்
மங்கு மாநினை யாதே மலர்கொடு
கங்கை சேர்சடை யான்றன் கருவிலிக்
கொங்கு வார்பொழிற் கொட்டிட்டை சேர்மினே. **#692**

குற்றமுடையவற்றைப் பேசுதலால், நீர் மங்குமாற்றை நினையாமல் மலர்களைக்கொண்டு, கங்கை சேர்ந்த சடையானுக்குரிய மணம் மிக்க நெடிய பொழில்களை உடைய கருவிலிக்கொட்டிட்டையைச் சேர்வீராக.

திருக்கருவிலி

வாடி நீர்வருந் தாதே மனிதர்காள்

வேட னாய்விச யற்கருள் செய்தவெண்
காட னாருறை கின்ற கருவிலிக்
கோடு நீள்பொழிற் கொட்டிட்டை சேர்மினே. **#693**
மனிதர்களே! நீர் துன்பங்களால் வாடிவருந்தாமல் அருச்சுனனுக்கு வேடனாய்வந்து அருள்செய்த திருவெண்காடனார் உறைகின்ற கிளைகள் நீண்ட பொழிலை உடைய கருவிலிக்கொட்டிட்டையைச் சேர்வீராக.

திருக்கருவிலி

உய்யு மாறிது கேண்மி னுலகத்தீர்
பைகொள் பாம்பரை யான்படை யார்மழுக்
கையி னானுறை கின்ற கருவிலிக்
கொய்கொள் பூம்பொழிற் கொட்டிட்டை சேர்மினே. **#694**
உலகத்தில் உள்ளவர்களே! இதுவே உய்யும்வழி; கேட்பீராக; படம்கொண்ட பாம்பை அரையின்கண் அணிந்தவனும்,மழுப்படை பொருந்திய கையை உடையவனும் ஆகிய பெருமான் உறைகின்ற, கொய்து கொள்ளத்தக்க பூக்களை உடைய பொழில் சூழ்ந்த கருவிலிக்கொட்டிட்டையைச் சேர்வீராக.

திருக்கருவிலி

ஆற்ற வும்அவ லத்தழுந் தாதுநீர்
தோற்றுந் தீயொடு நீர்நிலந் தூவெளி
காற்று மாகிநின் றான்றன் கருவிலிக்
கூற்றங் காய்ந்தவன் கொட்டிட்டை சேர்மினே. **#695**
நீர், மிகவும் துன்பத்தில் அழுந்தாமல், தோற்றுகின்ற தீ, நீர், நிலம், விசும்பு, காற்று ஆகி நின்றவனும், கூற்றுவனைக் காய்ந்தவனும் ஆகிய பெருமானுக்குரிய கருவிலிக் கொட்டிட்டையைச் சேர்வீராக.

திருக்கருவிலி

நில்லா வாழ்வு நிலைபெறு மென்றெண்ணிப்
பொல்லா வாறு செயப்புரி யாதுநீர்
கல்லா ரும்மதில் சூழ்தண் கருவிலிக்
கொல்லே றூர்பவன் கொட்டிட்டை சேர்மினே. **#696**
நில்லாத வாழ்வு நிலைபெறும் என்று எண்ணிப் பொல்லா நெறியின்கண் வினைகளைச் செய விரும்பாது, நீர், கல்லால் நிறைந்த மதில் சூழ்ந்து தண்ணியதும் கொல்லேறாகிய இடபத்தினை ஊர்வானுக்குரியதும் ஆகிய கருவிலிக் கொட்டிட்டையைச் சேர்வீராக.

திருக்கருவிலி

பிணித்த நோய்ப்பிற விப்பிரி வெய்துமா
றுணர்த்த லாமிது கேண்மி னுருத்திர
கணத்தி னார்தொழு தேத்துங் கருவிலிக்
குணத்தி னானுறை கொட்டிட்டை சேர்மினே. **#697**
உம்மைப் பிணித்துள்ள துன்பம் நிறைந்த பிறவிப் பிரிவெய்தும்
நெறியை உணர்த்தலாகின்ற இதனைக் கேட்பீராக!
உருத்திரகணத்தினார் தொழுதேத்துவதும், எண்குணத்தினான்
உறைவதும் ஆகிய கருவிலிக்கொட்டிட்டையைச் சேர்வீராக.

திருக்கருவிலி

நம்பு வீரிது கேண்மின்கள் நாடொறும்
எம்பி ரானென் றிமையவ ரேத்துமே
கம்ப னாருறை கின்ற கருவிலிக்
கொம்ப னார்பயில் கொட்டிட்டை சேர்மினே. **#698**
மனிதர்களே! நான் சொல்லும் இதனை நம்பிக் கேட்பீராக; நாள்தோறும்
தேவர்கள் 'எம்பெருமான்!' என்று ஏத்தும் ஏகம்பத்து இறைவனார்
உறைகின்றதும், பூங்கொம்பு போன்ற பெண்கள் பயில்வதும் ஆகிய
கருவிலிக்கொட்டிட்டையைச் சேர்வீராக.

திருக்கருவிலி

பாரு ளீரிது கேண்மின் பருவரை
பேரு மாறெடுத் தானை யடர்த்தவன்
கார்கொள் நீர்வயல் சூழ்தண் கருவிலிக்
கூர்கொள் வேலினன் கொட்டிட்டை சேர்மினே. **#699**
உலகிலுள்ளவர்களே! இது கேட்பீராக! பெரிய திருக்கயிலாய
மலையைப் பேருமாறு எடுக்கலுற்ற இராவணனை அடர்த்தவனும்
கூர்மைகொண்ட வேலை உடையவனும் ஆகிய பெருமான் உறைகின்ற
கருமையைக் கொண்ட நீர் நிறைந்த வயல் சூழ்ந்த குளிர்ந்த
கருவிலிக்கொட்டிட்டையைச் சேர்வீராக.

திருக்கொண்டீச்சரம்

திருக்கொண்டீச்சரம்

திருக்கொண்டீச்சரம், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது,
சுவாமிபெயர் : பசுபதீசுவரர்.
தேவியார் : சாந்தநாயகியம்மை.

கண்ட பேச்சினிற் காளையர் தங்கள்பால்
மண்டி யேச்சுணும் மாதரைச் சேராதே
சண்டி யீச்சுர வர்க்கருள் செய்தவக்
கொண்டி யீச்சுர வன்கழல் கூறுமே. **#700**

காளை போன்ற ஆடவரிடத்துப் பொருந்திக் கண்டவாறு பேசும் பேச்சாகிய ஏச்சுண்ணும் பெண்களைச் சேராது, சண்டீச்சுரர்க்கு அருள் செய்த கொண்டீச்சுரத்து இறைவன் திருவடியைக் கூறுவீராக.

திருக்கொண்டீச்சரம்

சுற்ற முந்துணை நன்மட வாளொடு
பெற்ற மக்களும் பேண லொழிந்தனர்
குற்ற மில்புகழ்க் கொண்டீச் சுரவனார்
பற்ற லாலொரு பற்றுமற் றில்லையே. **#701**

சுற்றத்தாரும், வாழ்க்கைத்துணையாகிய நல்ல மனைவியோடு பெற்ற பிள்ளைகளும் பேணுதலை ஒழிந்தனராதலால், குற்றமற்ற புகழை உடைய கொண்டீச்சுரத்து இறைவரையன்றி ஒருபற்று மற்று இல்லை.

திருக்கொண்டீச்சரம்

மாடு தானது வில்லெனின் மானுடர்
பாடு தான்செல்வா ரில்லைபன் மாலையாற்
கூட நீர்சென்று கொண்டீச் சுரவனைப்
பாடு மின்பர லோகத் திருத்துமே. **#702**

செல்வம் இல்லையென்றால், மானுடர் பெருமையோடு சூழச் செல்வாரில்லை. ஆதலால், பல மாலைகளாற் கூட, நீர் சென்று கொண்டீச்சுரத்து இறைவனைப் பாடுவீராக; அவ்விறைவன் பரலோகத்து இருக்கவைக்கும்.

திருக்கொண்டீச்சரம்

தந்தை தாயொடு தார மெனுந்தளைப்
பந்தம் ஆங்கறுத் துப்பயில் வெய்திய

கொந்த விழ்பொழிற் கொண்டீச் சுரவனைச்
சிந்தை செய்மின் அவனடி சேரவே. **#703**
தந்தையும் தாயும் தாரமுமாகிய கட்டாகிய தளையை அறுத்துப்
பூங்கொத்துக்கள் பெருகி மலர்கின்ற பொழில்களை உடைய
கொண்டீச்சுரத்து இறைவனைச் சேவடி சேர்வதன் பொருட்டுச் சிந்தை
செய்வீர்களாக.

திருக்கொண்டீச்சரம்

கேளு மின்இள மைய்யது கேடுவந்
தீளை யோடிரு மல்லது எய்தன்முன்
கோள ராவணி கொண்டீச் சுரவனை
நாளு மேத்தித் தொழுமின் நன்காகுமே. **#704**
மனிதர்களே! கேட்பீர்களாக; இளமைக்குக் கேடு வந்து சளியோடு கூடிய
இருமல் வந்தெய்துவதற்குமுன் கொள்ளுகின்ற பாம்பினை அணிகின்ற
கொண்டீச்சுரத்து இறைவனை நாளும் ஏத்தித் தொழுவீராக; உமக்கு
நல்லனவே ஆகும்.

திருக்கொண்டீச்சரம்

வெம்பு நோயும் இடரும் வெறுமையும்
துன்ப முந்துய ரும்மெனுஞ் சூழ்வினை
கொம்ப னார்பயில் கொண்டீச் சுரவனை
எம்பி ரானென வல்லவர்க் கில்லையே. **#705**
பூங்கொம்பைப்போன்ற பெண்கள் பயில்கின்ற கொண்டீச்சுரத்து
இறைவனை "எம்பிரான்" என்று ஏத்தவல்லவர்க்கு, வெம்புதற்குக்
காரணமாகிய நோயும், துன்பமும், வறுமையும் முதலிய சூழ்தற்குரிய
வினைகள் இல்லை.

திருக்கொண்டீச்சரம்

அல்ல லோடரு நோயி லழுந்திநீர்
செல்லு மாநினை யாதே கனைகுரல்
கொல்லை யேறுடைக் கொண்டீச் சுரவனை
வல்ல வாறு தொழவினை மாயுமே. **#706**
துன்பத்தோடு அருநோய்களில் அழுந்திச் செல்லும் நெறி எது என்று
நினையாமல், நீர், கனைத்த குரலை உடைய முல்லை நிலத்துக்குரிய
இடபவாகனத்தை ஊர்ந்தவனாகிய கொண்டீச்சுரத்து இறைவனை
வல்லவாறு தொழுவீரேயாயின் வினைகள் மாயும்.

திருக்கொண்டீச்சரம்

நாறு சாந்தணி நன்முலை மென்மொழி
மாறி லாமலை மங்கையொர் பாகமாக்
கூற னாருறை கொண்டீச் சுரநினைந்
தூறு வார்தமக் கூனமொன் றில்லையே. #707

நறுமணம் வீசும் கலவைச்சாந்தணிந்த நல்ல தனங்களையும் மெல்லிய மொழிகளையும் உடைய மாறுபாடற்ற உமாதேவியை ஒருபாகமாகக்கொண்ட கூற்றை உடையவராகிய பெருமான் உறைகின்ற கொண்டீச்சுரத்தை நினைத்து நெஞ்சில் மேலும் மேலும் எண்ணுபவர்களுக்குக் குற்றம் ஒன்றும் இல்லை.

திருக்கொண்டீச்சரம்

அயிலார் அம்பெரி மேருவில் லாகவே
எயிலா ரும்பொடி யாய்விழ எய்தவன்
குயிலா ரும்பொழிற் கொண்டீச் சுரவனைப்
பயில்வா ரும்பெரு மைபெறும் பாலரே. #708

மேருமலையை வில்லாகக் கொண்டு கூர்மையையுடைய ஓரம்பினால் முப்புரங்கள் தூளாகுமாறு விழ எரியால் எய்தவனாகிய, குயில்களை உடைய பொழில் சூழ்ந்த கொண்டீச்சுரத்து இறைவனைப் பயில்கின்ற அடியவர்கள் பெருமை பெறும் பகுதியை உடையவராவர்.

திருக்கொண்டீச்சரம்

நிலையி னார்வரை நின்றெடுத் தான்றனை
மலையி னாலடர்த் துவிறல் வாட்டினான்
குலையி னார்பொழில் கொண்டீச் சுரவனைத்
தலையி னால்வணங் கத்தவ மாகுமே. #709

நிலையினைப் பொருந்திய திருக்கயிலையை ஆணவத்தொடு நின்று எடுத்த இராவணனை மலையினால் வருத்தி அவன் ஆற்றலை வாட்டியவனாகிய, குலைகள் பொருந்திய சோலையையுடைய பொழில்கள் சூழ்ந்த கொண்டீச்சுரத்து இறைவனைத் தலையினால் வணங்கலே தவம் ஆகும்.

திருவிசயமங்கை

திருவிசயமங்கை

திருவிசயமங்கை, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : விசயநாதேசுவரர்.
தேவியார் : மங்கைநாயகியம்மை.

குசையும் அங்கையிற் கோசமுங் கொண்டவவ்
வசையின் மங்கல வாசகர் வாழ்த்தவே
இசைய மங்கையுந் தானுமொன் றாயினான்
விசைய மங்கையுள் வேதியன் காண்மினே. **#710**

விசயமங்கையுள் வீற்றிருக்கும் வேதியனாகிய பெருமான், தம் அங்கையில் தருப்பையும், மலர்களும் கொண்ட அழகிய, குற்றமற்ற மங்கலவாசகம் உரைப்போர் வாழ்த்தும்படி பொருந்த உமையும் தானும் ஒரு திருமேனி உருவில் நின்றான்.

திருவிசயமங்கை

ஆதி நாத னடல்விடை மேலமர்
பூத நாதன் புலியத ளாடையன்
வேத நாதன் விசயமங் கையுளான்
பாத மோதவல் லார்க்கில்லை பாவமே. **#711**

ஆதிக்கண் தோன்றியநாதனும், வலியுடைய இடபத்தின்மேல் அமரும் பூதநாதனும், புலித்தோலாடையனும், வேதநாதனும் ஆகிய பெருமான் விசயமங்கையில் உள்ளான்; அவன் திருவடிகளைப் புகழ்ந்து உரைக்க வல்லார்க்குப் பாவம் இல்லை.

திருவிசயமங்கை

கொள்ளி டக்கரைக் கோவந்த புத்தூரில்
வெள்வி டைக்கருள் செய்விச யமங்கை
உள்ளி டத்துறை கின்ற வுருத்திரன்
கிள்ளி டத்தலை யற்ற தயனுக்கே. **#712**

கொள்ளிடக்கரைக் கோவந்தபுத்தூரில் வெள்ளிய இடபம் பூசிக்க அதற்கு அருள்செய்தவனும்,விசயமங்கையுள் இடமாகக்கொண்டு உறைகின்றவனும் ஆகிய உருத்திரன், கிள்ளிய விடத்துப் பிரமனுக்குத் தலை ஒன்று அற்றது.

திருவிசயமங்கை

திசையு மெங்குங் குலுங்கத் திரிபுரம்
அசைய அங்கெய்திட் டாரழ லூட்டினான்
விசைய மங்கை விருத்தன் புறத்தடி
விசையின் மங்கி விழுந்தனன் காலனே. **#713**

விசயமங்கையில் உள்ள மிகப் பழையவனாகிய பெருமான், திசைகள் எங்கும் குலுங்குமாறு திரிபுரங்கள் அசையும்படிப் பொருந்திய அழலூட்டியவன்; அப்பெருமான் திருவடிப்புறத்து விரைந்து மயங்கி விழுந்தனன் கூற்றுவன்.

திருவிசயமங்கை

பொள்ள லாக்கை யகத்திலைம் பூதங்கள்
கள்ள மாக்கிக் கலக்கிய காரிருள்
விள்ள லாக்கி விசயமங் கைப்பிரான்
உள்ளல் நோக்கியென் னுள்ளுள் உறையுமே. **#714**

ஓட்டைகளை உடைய உடம்பினகத்து ஐம்பூதங்கள் கள்ளத்தனம் உடையவாக்கிக் கலக்கிய கரிய இருளிலே, அவ்விருளை விலக்குதல் புரிந்த விசயமங்கைப்பெருமான் தன் திருவுள்ளத்தே நினைந்தருளலை நோக்கி என் உள்ளத்துள்ளே உறைவான்.

திருவிசயமங்கை

கொல்லை யேற்றுக் கொடியொடு பொன்மலை
வில்லை யேற்றுடை யான்விச யமங்கைச்
செல்வ போற்றியென் பாருக்குத் தென்திசை
எல்லை யேற்றலு மின்சொலு மாகுமே. **#715**

முல்லைநிலத்துக்குரிய இடபக்கொடியையும், மேருமலையாகிய வில்லையும் பொருந்த உடையவனாகிய விசயமங்கையின் அருட்செல்வ! போற்றி! என்று உரைப்பார்க்குத் தென்திசையில் ஏறுதலும், இனிய புகழும் உளதாகும்.

திருவிசயமங்கை

கண்பல் உக்க கபாலம்அங் கைக்கொண்டு
உண்ப லிக்குழ லுத்தம னுள்ளொளி
வெண்பி றைக்கண்ணி யான்விச யமங்கை
நண்ப னைத்தொழப் பெற்றது நன்மையே. **#716**

கண்ணும் பல்லும் சிந்திவிட்டகபாலத்தைத் தம் அழகியகைக்கொண்டு உண்ணுகின்ற பலிக்கு எங்கும் திரிகின்ற உத்தமனும், வெண்பிறையைக் கண்ணியாக உடையானுமாகிய விசயமங்கையின் நண்புக்குரிய கடவுளைத் தொழப்பெற்றது நன்மையேயாகும்.

திருவிசயமங்கை

பாண்டு வின்மகன் பார்த்தன் பணிசெய்து
வேண்டும் நல்வரங் கொள்விச யமங்கை
ஆண்ட வன்னடி யேநினைந் தாசையால்
காண்ட லேகருத் தாகி யிருப்பனே. **#717**

பாண்டுவின் மகனாகிய பார்த்தன் (அருச்சுனன்) பணிகள் செய்து தான் விரும்பிய நல்வரத்தைக் கொண்ட விசயமங்கையில் உறையும் ஆண்டவன் திருவடியே நினைந்து ஆசையால் அவனைக் காணுதலே கருத்தாக இருப்பன் அடியேன்.

திருவிசயமங்கை

வந்து கேண்மின் மயல்தீர் மனிதர்காள்
வெந்த நீற்றன் விசயமங் கைப்பிரான்
சிந்தை யால்நினை வார்களைச் சிக்கெனப்
பந்து வாக்கி உய்யக்கொளுங் காண்மினே. **#718**

மயக்கந் தீர்தற்குரிய மனிதர்களே! அடியேன் கூறுவதை வந்து கேட்பீராக; வெந்த திருநீற்றை அணிந்தவனாகிய விசயமங்கைப் பெருமான் தன்னைச் சிந்தையால் நினைவார்களைச் சிக்கெனத் தன் உறவுடையவராக்கி உய்யக் கொள்வான்; காண்பீராக.

திருவிசயமங்கை

இலங்கை வேந்த னிருபது தோளிற
விலங்கல் சேர்விர லான்விச யமங்கை
வலஞ்செய் வார்களும் வாழ்த்திசைப் பார்களும்
நலஞ்செய் வாரவர் நன்னெறி நாடியே. **#719**

இலங்கைக்கரசனாகிய இராவணனது இருபது தோள்களும் இற்று விழும்படியாகத் திருக்கயிலையை ஊன்றிய திருவிரலை உடையவனாகிய பெருமானுக்குரிய விசய மங்கையை வலம் வந்து வணங்குபவர்களும், வாழ்த்து இசைப்பவர்களும் நன்னெறிநாடித் தமக்கு நலம் செய்வாராவர்.

திருநீலக்குடி

திருநீலக்குடி

திருநீலக்குடி, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நீலகண்டேசுவரர்.
தேவியார் : நீலநிறவுமையம்மை.

வைத்த மாடும் மனைவியும் மக்கள்நீர்
செத்த போது செறியார் பிரிவதே
நித்த நீலக் குடியர னைந்நினை
சித்த மாகிற் சிவகதி சேர்திரே. **#720**

தேடிவைத்த செல்வமும், மனைவியும், மக்களும் நீர் செத்தபோது உம்மைச் செறியார்; பிரிவதே இயல்பாம்; நாள் தோறும் நீலக்குடியரனை நினையும் சித்தம் ஆகின்சிவகதி சேர்வீர்.

திருநீலக்குடி

செய்ய மேனியன் தேனொடு பால்தயிர்
நெய்ய தாடிய நீலக் குடியரன்
மைய லாய்மற வாமனத் தார்க்கெலாம்
கையி லாமல கக்கனி யொக்குமே. **#721**

சிவந்த திருமேனியனாய்த் தேனும், பாலும், தயிரும், நெய்யும் கொண்டு திருமுழுக்காடும் நீலக்குடி அரனின்மேல் காதல் கொண்டு மறவாத மனத்தினர்க்கெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனி போல அப்பெருமான் புலப்பட்டு அருள்புரிவான்.

திருநீலக்குடி

ஆற்ற நீள்சடை ஆயிழை யாளொரு
கூற்றன் மேனியிற் கோலம தாகிய
நீற்றன் நீலக் குடியுடை யானடி
போற்றி னாரிடர் போக்கும் புநிதனே. **#722**

நீலக்குடி உடைய பெருமான், கங்கையாற்றுடன் கூடிய நீண்ட சடையையுடையவன். உமாதேவியை ஒரு கூற்றிற் கொண்ட இயல்பினன். திருமேனிக்கு அழகு தருவதாகிய திருநீற்றை உடையவன். திருவடி போற்றினார் இடர்களைப் போக்கும் புனிதன்.

திருநீலக்குடி

நாலு வேதியர்க் கின்னருள் நன்னிழல்

ஆலன் ஆலநஞ் சுண்டகண் டத்தமர்
நீலன் நீலக் குடியுறை நின்மலன்
கால னாருயிர் போக்கிய காலனே. **#723**
நான்கு முனிவர்களுக்கு இன்னருள் புரிய ஆலமரத்தின் நன்னிழலின் கீழ் இருந்தோன்; ஆலகால நஞ்சு உண்ட கண்டத்துடன் பொருந்திய நீலநிறம் உடையவன். நீலக்குடி உறையும் மலமற்றவன்; காலன் உயிர் போக்கிய கடவுள்.

திருநீலக்குடி

நேச நீலக் குடியர னேயெனா
நீச ராய்நெடு மால்செய்த மாயத்தால்
ஈச னோர்சரம் எய்ய எரிந்துபோய்
நாச மானார் திரிபுர நாதரே. **#724**
நேசத்துக்குரிய நீலக்குடி அரனே! என்னாத கீழ்மை உடையவராய் நெடுமால் செய்த மாயத்தால் திரிபுரத்து அசுரர்கள் ஈசன் ஓரம்பு எய்ய எரிந்து சாம்பலாய்ப் போய் நாசமாயினர்.

திருநீலக்குடி

கொன்றை சூடியைக் குன்ற மகளொடும்
நின்ற நீலக் குடியர னேயெனீர்
என்றும் வாழ்வுகந் தேயிறு மாக்குநீர்
பொன்றும் போது நுமக்கறி வொண்ணுமே. **#725**
என்றும் பொய்யாகிய உலக வாழ்வை உகந்து இறுமாப்பு அடைகின்ற நீர் இறக்கும்போது நுமக்கு அறியவொண்ணுமோ? ஒண்ணாதாதலால் கொன்றை சூடும் கடவுளுமாகிய மலை மகளோடும் நின்ற நீலக்குடி அரனே என்று உரைப்பீர்களாக!

திருநீலக்குடி

கல்லி னோடெனைப் பூட்டி யமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந் தேனன்றே. **#726**
கல்லினோடு என்னைச் சேர்த்துக்கட்டி அமண் ஒழுக்கமுடையவர்கள் விரைந்து கடல் நீரிற் புக - நூக்கிவிட, என்வாக்கினால் நெல்வளம் உடைய நீண்ட வயல் சூழ்ந்த நீலக்குடி அரனுடைய நல்ல நாமத்தைச் சொல்லி நன்றே உய்ந்தேன்.

திருநீலக்குடி

அழகி யோமிளை யோமெனு மாசையால்
ஒழுகி ஆவி யுடல்விடு முன்னமே
நிழல தார்பொழில் நீலக் குடியரன்
கழல்கொள் சேவடி கைதொழு துய்ம்மினே. **#727**

யாம் அழகியவர்கள்; இளையவர்கள் எனும் ஆசையால் ஒழுகி, உயிர் உடலைவிட்டுப் பிரிந்துபோவதற்கு முன்பே, நிழல் உடையதாய்ச் செறிந்த பொழில்களையுடைய நீலக்குடி அரனுடைய கழலணிந்த சேவடிகளைக் கைகளால் தொழுது உய்வீர்களாக.

<u>திருநீலக்குடி</u>

கற்றைச் செஞ்சடைக் காய்கதிர் வெண்திங்கள்
பற்றிப் பாம்புடன் வைத்த பராபரன்
நெற்றிக் கண்ணுடை நீலக் குடியரன்
சுற்றித் தேவர் தொழுங்கழற் சோதியே. **#728**

கற்றையாகிய செஞ்சடையில், குளிர்ந்த கதிர்களை வீசும் வெண்திங்களைப்பற்றிப் பாம்புடன் வைத்த கடவுளாகிய நெற்றிக்கண்ணுடைய நீலக்குடி அரன், தேவர் சுற்றிவந்து தொழும் கழலணிந்த சோதிவடிவினன் ஆவன்.

<u>திருநீலக்குடி</u>

தருக்கி வெற்பது தாங்கிய வீங்குதோள்
அரக்க னாருட லாங்கொர் விரலினால்
நெரித்து நீலக் குடியரன் பின்னையும்
இரக்க மாயருள் செய்தன னென்பரே. **#729**

நீலக்குடி அரன் தருக்கடைந்து திருக்கயிலையைத் தாங்கிய செறிந்த தோளை உடைய இராவணன் உடலை ஓர் திருவிரலால் நெரித்துப் பின்னையும் இரக்கமாகி அருள் புரிந்த கருணைத் திறம் உடையவன் என்பர்.

திருமங்கலக்குடி

திருமங்கலக்குடி

திருமங்கலக்குடி, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : புராணவரதேசுவரர்.
தேவியார் : மங்களநாயகியம்மை.

தங்க லப்பிய தக்கன் பெருவேள்வி
அங்க லக்கழித் தாரருள் செய்தவன்
கொங்க லர்க்குழல் கொம்பனை யாளொடு
மங்க லக்குடி மேய மணாளனே. **#730**

மணம் உடைய மலரைச்சூடிய கூந்தலை உடைய பூங்கொம்பு போன்ற உமாதேவியோடு மங்கலக்குடியில் மேவிய மணவாளன், தம்மைக் கலக்குதற்காகத் தக்கன் செய்த பெருவேள்வியை அங்கு அலைக்கழித்துப் பின் நிறைந்த அருள் புரிந்தவன்.

திருமங்கலக்குடி

காவி ரியின் வடகரைக் காண்தகு
மாவிரி யும்பொ ழில்மங் கலக்குடித்
தேவ ரியும்பி ரமனுந் தேடொணாத்
தூவெ ரிச்சுடர்ச் சோதியுட் சோதியே. **#731**

காவிரியின் வடகரையில் காணத்தக்க மாமரங்கள் விரிகின்ற பொழில் சூழ்ந்த மங்கலக்குடியில், திருமாலாகிய தேவும், பிரமனும் தேடி அறியவியலாத தூய எரிவிடும் சுடரை உடைய சோதியுள் சோதியாக வீற்றிருக்கிறான் இறைவன்.

திருமங்கலக்குடி

மங்க லக்குடி யீசனை மாகாளி
வெங்க திர்ச்செல்வன் விண்ணொடு மண்ணும்நேர்
சங்கு சக்கர தாரி சதுர்முகன்
அங்க கத்திய னும்மர்ச்சித் தாரன்றே. **#732**

மங்கலக்குடி இறைவனை மாகாளியும், சூரியனும், விண்ணும் மண்ணும் நிகராய சங்கு, சக்கரதாரியாகிய திருமாலும், பிரமனும், அகத்தியனும் அருச்சித்தார்கள்.

திருமங்கலக்குடி

மஞ்சன் வார்கடல் சூழ்மங் கலக்குடி

நஞ்ச மாரமு தாக நயந்துகொண்
டஞ்சு மாட லமர்ந்தடி யேனுடை
நெஞ்ச மாலய மாக்கொண்டு நின்றதே. **#733**

நீண்ட கடல் சூழ்ந்த மங்கலக்குடியில் வீற்றிருக்கும் மைந்தனாகிய (பெருவீரனாகிய) பெருமான், ஆலகாலவிடத்தைச் செறிந்த அமுதமாக விரும்பி உட்கொண்டு, பஞ்சகவ்வியம் ஆடலை விரும்பி அடியேனுடைய நெஞ்சத்தை ஆலயமாகக்கொண்டு நிலை பெற்றான்.

<u>திருமங்கலக்குடி</u>

செல்வம் மல்கு திருமங் கலக்குடி
செல்வம் மல்கு சிவநிய மத்தராய்ச்
செல்வம் மல்கு செழுமறை யோர்தொழச்
செல்வன் தேவியொ டுந்திகழ் கோயிலே. **#734**

செல்வம் நிறைந்த திருமங்கலக்குடியில், அருட்செல்வம் நிறைந்த சிவ ஒழுக்கம் உடையவராய்ச் செல்வம் மல்கும் செழித்த மறையோர் தொழத் திருவருட்செல்வனாகிய பெருமான் உமாதேவியோடும் திகழ்வது திருக்கோயிலிலாகும்.

<u>திருமங்கலக்குடி</u>

மன்னு சீர்மங் கலக்குடி மன்னிய
பின்னு வார்சடைப் பிஞ்ஞகன் தன்பெயர்
உன்னு வாரு முரைக்கவல் லார்களும்
துன்னு வார்நன் னெறிதொடர் வெய்தவே. **#735**

நிலைபெற்ற புகழை உடைய மங்கலக்குடியில் நிலைபெற்ற பின்னுதல் உடைய நீண்ட சடையையுடைய பிஞ்ஞகன் திருநாமத்தை எண்ணுவாரும், சொல்லும் வல்லமை உடையாரும், நன்னெறித் தொடர்பு எய்தத் துன்னுவார் ஆவர்.

<u>திருமங்கலக்குடி</u>

மாத ரார்மரு வும்மங் கலக்குடி
ஆதி நாயகன் அண்டர்கள் நாயகன்
வேத நாயகன் வேதியர் நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே. **#736**

பெண்கள் பொருந்துகின்ற மங்கலக்குடியின் ஆதிநாயகன், தேவர்கள் தலைவன்; வேதநாயகன்; வேதியர்நாயகன்; பூதநாயகன்; புண்ணியமூர்த்தி ஆவன்.

<u>திருமங்கலக்குடி</u>

வண்டு சேர்பொழில் சூழ்மங் கலக்குடி
விண்ட தாதையைத் தாளற வீசிய
சண்ட நாயக னுக்கருள் செய்தவன்
துண்ட மாமதி சூடிய சோதியே. **#737**

வண்டுகள் சேரும் பொழில் சூழ்ந்த மங்கலக்குடியில் இளம் பிறை சூடிய சோதியாகிய பெருமான், மனம் மாறுபட்ட தந்தையைக் கால் ஒடியுமாறு மழுவை வீசிய சண்டேசுரர்க்கு அருள் புரிந்த இறைவன் ஆவன்.

<u>திருமங்கலக்குடி</u>

கூசு வாரலர் குண்டர் குணமிலர்
நேச மேது மிலாதவர் நீசர்கள்
மாசர் பால்மங் கலக்குடி மேவிய
ஈசன் வேறு படுக்கவுய்ந் தேனன்றே. **#738**

மங்கலக்குடி இறைவன், தம் சிறுமை நோக்கிக் கூசாதவர்களும், குண்டர்களும், நற்குணமில்லாதவர்களும், அன்புசிறிதும் இல்லாதவர்களும், கீழானவர்களும், குற்றம் உடையவர்களுமாகிய சமணரோடு என்னை வேறுபடுக்க, உய்ந்தேன்.

<u>திருமங்கலக்குடி</u>

மங்க லக்குடி யான்கயி லைம்மலை
அங்க லைத்தெடுக் குற்ற அரக்கர்கோன்
தன்க ரத்தொடு தாள்தலை தோள்தகர்ந்
தங்க லைத்தழு துய்ந்தனன் தானன்றே. **#739**

மங்கலக்குடியானுக்குரிய கயிலைமலையினை அலைத்து எடுக்கலுற்ற இராவணன் தன் கரங்களோடு தாளும், தலையும் சிதைந்து அலைக்கப்பெற்றுப் பின் அழுது அருள்பெற்று நன்றே உய்ந்தான்.

திருஎறும்பியூர்

திருஎறும்பியூர்

திருஎறும்பியூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : எறும்பீசுவரர்.
தேவியார் : நறுங்குழல்நாயகியம்மை.

விரும்பி யூறு விடேல்மட நெஞ்சமே
கரும்பி னூறல்கண் டாய்கலந் தார்க்கவன்
இரும்பி னூறல றாததோர் வெண்தலை
எறும்பி யூர்மலை யானெங்க ளீசனே. **#740**

அறியாமை உடைய நெஞ்சமே! வெண்தலையைக் கையில் உடையவனும், எறும்பியூர் மலையானும் ஆகிய எங்கள் ஈசன், கலந்த அடியவர்களுக்குக் கரும்பின் ஊறல் போல்வான். அவனை விடாது விரும்பியுறுவாயாக.

திருஎறும்பியூர்

பிறங்கு செஞ்சடைப் பிஞ்ஞகன் பேணுசீர்க்
கறங்கு பூத கணமுடைக் கண்ணுதல்
நறுங்கு ழல்மட வாளொடு நாடொறும்
எறும்பி யூர்மலை யானெங்க ளீசனே. **#741**

எங்கள் இறைவன், விளங்கும் செஞ்சடையையுடைய பிஞ்ஞகனும், பேணுகின்ற புகழை உடைய சுழன்றாடும் இயல்புடைய பூதகணங்களை உடையவனும், நெற்றிக்கண்ணனும் ஆகி, மணம் வீசும் கூந்தலை உடைய உமாதேவியோடு நாள்தோறும் விளங்கும் எறும்பியூர் மலையினன் ஆவன்.

திருஎறும்பியூர்

மருந்து வானவர் தானவர்க் கின்சுவை
புரிந்த புன்சடைப் புண்ணியன் கண்ணுதல்
பொருந்து பூண்முலை மங்கைநல் லாளொடும்
எறும்பி யூர்மலை யானெங்க ளீசனே. **#742**

எங்கள் இறைவன் வானவர்க்கு மருந்தாகவும், தானவர்க்கு இன்சுவையாகவும், முறுக்குண்ட புன்சடையை உடைய புண்ணியனாகவும், நெற்றிக்கண்ணனாகவும், பூண்கள் பொருந்தும் முலையையுடைய மங்கை நல்லாளொடும் மேவும் எறும்பியூர் மலையினன் ஆவன்.

திருஎறும்பியூர்

நிறங்கொள் கண்டத்து நின்மலன் எம்மிறை
மறங்கொள் வேல்கண்ணி வாள்நுதல் பாகமாய்
அறம்பு ரிந்தருள் செய்தவெம் அங்கணன்
எறும்பி யூர்மலை யானெங்க ளீசனே. **#743**

எம் இறைவன் நீலநிறம் கொண்ட கண்டத்தை உடைய நின்மலனும், மறம் கொண்ட வேல்போன்ற கண்ணையும், ஒளியுடைய நுதலையும் உடைய மங்கை ஒருபாகமாகி அறம் புரிந்து அருள் செய்த எம் அண்ணலும் ஆகிய எறும்பியூர் மலையினன் ஆவன்.

திருஎறும்பியூர்

நறும்பொன் நாண்மலர்க் கொன்றையும் நாகமும்
துறும்பு செஞ்சடைத் தூமதி வைத்துவான்
உறும்பொன் மால்வரைப் பேதையோ டூர்தொறும்
எறும்பி யூர்மலை யானெங்க ளீசனே. **#744**

நறுமணமும் பொன்போன்ற நிறமும் உடைய கொன்றையின் புதிய பூக்களும், நாகமும் சுரும்புகள் அடர்ந்தது போன்ற சிவந்த சடையின்கண் தூயமதியோடு வைத்து, விண்ணை உறும் பொன்மலையாகிய இமவான்மகளாகிய உமாதேவியோடு ஊர் தோறும் வீற்றிருக்கும் எங்கள் இறைவன், எறும்பியூர் மலையினன்.

திருஎறும்பியூர்

கறும்பி யூர்வன ஐந்துள காயத்தில்
திறம்பி யூர்வன மற்றும் பலவுள
குறும்பி யூர்வதோர் கூட்டகத் திட்டெனை
எறும்பி யூரரன் செய்த இயற்கையே. **#745**

சினந்து ஊர்வனவாகிய ஐம்பொறிகள் உள்ள உடம்பில், மாறுபட்டு ஊர்வன மற்றும் பல உள்ளன; அழுக்கு ஊர்வதாகிய கூடுபோன்ற அவ்வுடம்பின்கண் இட்டு என்னை எறும்பியூர் அரன் செய்த இயற்கை இது.

திருஎறும்பியூர்

மறந்து மற்றிது பேரிடர் நாடொறும்
திறம்பி நீநினை யேல்மட நெஞ்சமே.
புறஞ்செய் கோலக் குரம்பையி லிட்டெனை
எறும்பி யூரரன் செய்த வியற்கையே. **#746**

அறிவற்ற நெஞ்சமே! பெருந்துன்பங்களால் நாள்தோறும் மற்று இதனை

மறந்து மாறுபட்டு நீ நினையாதே; புறத்தேகோலம் செய்யப்பெற்ற இக்குடிசையில் என்னை இட்டு எறும்பியூர் அரன் செய்த இயற்கை இது.

திருஎறும்பியூர்

இன்ப மும்பிறப் பும்மிறப் பின்னொடு
துன்ப மும்முட னேவைத்த சோதியான்
அன்ப னேயர னேயென் றரற்றுவார்க்
கின்ப னாகு மெறும்பியூ ரீசனே. **#747**

எறும்பியூர் இறைவன் இன்பமும் பிறப்பும், துன்பமும் இறப்பும் உடன் வைத்த சோதிவடிவினனும், "அன்பனே! அரனே!ழு என்று வாய்விட்டு அரற்றுவார்க்கு இன்பமளிப்பவனும் ஆவன் .

திருஎறும்பியூர்

கண்நி றைந்த கனபவ ளத்திரள்
விண்நி றைந்த விரிசுடர்ச் சோதியான்
உள்நி றைந்துரு வாயுயி ராயவன்
எண்நி றைந்த வெறும்பியூ ரீசனே. **#748**

எண்ணமெங்கும் நிறைந்த எறும்பியூர் இறைவன், கண்ணுக்கு நிறைந்த பெருமைமிக்க பவளத்திரளும், விண்ணில் நிறைந்த சுடர் விரிகின்ற சோதி வடிவானவனும், உள்ளத்துள் நிறைந்து உருவாகி உயிராகியவனும் ஆவன்.

திருஎறும்பியூர்

நிறங்கொள் மால்வரை ஊன்றி யெடுத்தலும்
நறுங்கு ழல்மட வாள்நடுக் கெய்திட
மறங்கொள் வாளரக் கன்வலி வாட்டினான்
எறும்பி யூர்மலை யெம்மிறை காண்மினே. **#749**

எறும்பியூர் மலைக்குரிய எம்மிறைவன், நறுமணம் வீசும் கூந்தலையும் இளமையையும் உடைய உமாதேவி நடுக்கம் எய்திட வெண்ணிறம் கொண்ட திருக்கயிலைப் பெருமலையை வீரம் கொண்ட வாளை உடைய இராவணன் ஊன்றி எடுத்தலும், அவன் ஆற்றலை வாடுமாறு செய்தான்.

திருக்குரக்குக்கா

திருக்குரக்குக்கா

திருக்குரக்குக்கா, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கொந்தளக்கருணைநாதர்.
தேவியார் : கொந்தளநாயகியம்மை.

மரக்கொக் காமென வாய்விட் டலறிநீர்
சரக்குக் காவித் திரிந்தய ராதுகால்
பரக்குங் காவிரி நீரலைக் குங்கரைக்
குரக்குக் காவடை யக்கெடுங் குற்றமே. **#750**

மரத்தின்கண் இருக்கும் கொக்கைப்போல வாய்விட்டுக்கூவி, தீயகுணங்களாகிய பொருள்களையே சுமந்து திரிந்து வருந்தாமல், கால்வாய்கள் வழியாகப் பரந்து பாயும் காவிரி நீர் அலைக்கின்ற கரையில் உள்ளதாகிய குரக்குக்காவை அடைய, குற்றங்கள் கெடும்.

திருக்குரக்குக்கா

கட்டா றேகழி காவிரி பாய்வயல்
கொட்டா றேபுன லூறு குரக்குக்கா
முட்டா றாஅடி யேத்த முயல்பவர்க்
கிட்டா றாஇட ரோட எடுக்குமே. **#751**

கட்டப்பட்ட கரைக்குள்ளடங்கிய நெறியின் வழியே கழிகின்ற காவிரி பாய்கின்ற வயல்களில் கொட்டும் நெறியெல்லாம் புனல் ஊறுகின்ற குரக்குக்காவினை முட்டாத நெறியே திருவடியேத்தமுயலும் அடியவர்களுக்குப் பொருந்தும் நெறியாய துன்பங்கள் ஓடுமாறு அருள் புரிவான் இறைவன்.

திருக்குரக்குக்கா

கைய னைத்துங் கலந்தெழு காவிரி
செய்ய னைத்திலுஞ் சென்றிடுஞ் செம்புனல்
கொய்ய னைத்துங் கொணருங் குரக்குக்கா
ஐய னைத்தொழு வார்க்கல்ல லில்லையே. **#752**

பக்கமெங்கும் கலந்து எழுகின்ற காவிரியின் வயல்களனைத்தினும் சென்றிடும் செம்புனல் வெள்ளம் கொய்மீன்களைக் கொணரும் குரக்குக்காவில் உள்ள ஐயனைத்தொழும் அடியார்களுக்கு அல்லல் இல்லை.

திருக்குரக்குக்கா

மிக்க னைத்துத் திசையும் அருவிகள்
புக்குக் காவிரி போந்த புனற்கரைக்
கொக்கி னம்பயில் சோலைக் குரக்குக்கா
நக்க னைநவில் வார்வினை நாசமே. **#753**

அனைத்துத் திக்குகளும் மிகுந்து அருவிகள் புகுந்து பெருகுதலால் காவிரி போந்த புனற்கரையின் கண் கொக்குச் சாதிகள் பயிலும் சோலையை உடைய குரக்குக்காவின்கண் திகம்பரனாய பெருமானைப் போற்றிப் புகழ்வார் வினை நாசமாகும்.

திருக்குரக்குக்கா

விட்டு வெள்ளம் விரிந்தெழு காவிரி
இட்ட நீர்வய லெங்கும் பரந்திடக்
கொட்ட மாமுழ வோங்கு குரக்குக்கா
இட்ட மாயிருப் பார்க்கிட ரில்லையே. **#754**

வெள்ளம் பொருந்தி விரிந்தெழுங் காவிரி இட்ட நீரானது வயல் எங்கும் பரந்திடுதலால் சிறந்து, மாமுழவுகள் கொட்ட ஓங்கும் குரக்குக்காவின் விருப்பமாய் இருப்பவர்களுக்கு இடர்கள் இல்லை.

திருக்குரக்குக்கா

மேலை வானவ ரோடு விரிகடல்
மாலும் நான்முக னாலும் அளப்பொணாக்
கோல மாளிகைக் கோயில் குரக்குக்காப்
பால ராய்த்திரி வார்க்கில்லை பாவமே. **#755**

மேல் உலகத்திலுள்ள தேவர்களோடு விரிந்த கடலில் துயிலும் திருமாலும், நான்முகனும் ஆகியவராலும் அளக்கவியலாத பெருமான் உறைவதும், அழகு மிக்க மாளிகையாகிய கோயிலை உடையதுமாகிய குரக்குக்காவின்பால் வாழ்வோராய்த் திரிவோர்க்குப் பாவம் இல்லை.

திருக்குரக்குக்கா

ஆல நீழ லமர்ந்த அழகனார்
கால னையுதை கொண்ட கருத்தனார்
கோல மஞ்ஞைக ளாலுங் குரக்குக்காப்
பால ருக்கருள் செய்வர் பரிவொடே. **#756**

கல்லால நிழற்கீழ் அமர்ந்த அழகரும், காலனை உதைத்தலைக் கொண்ட கருத்தருமாகிய பெருமான் உறைகின்ற அழகு மிக்க மயில்கள் ஆர்க்கின்ற குரக்குக்காவின்பால் வாழ்வோர்க்குப் பரிவொடு அருள்செய்வர்.

திருக்குரக்குக்கா

செக்க ரங்கெழு செஞ்சுடர்ச் சோதியார்
அக்க ரையரெம் மாதி புராணனார்
கொக்கி னம்வயல் சேருங் குரக்குக்கா
நக்க னைத்தொழ நம்வினை நாசமே. **#757**

செவ்வானத்தைப் போன்றெழுகின்ற சிவந்த சுடர் வீசும் சோதியாரும், அக்கு மணியை இடுப்பில் அணிந்துள்ளவரும், ஆதியிலே தோன்றிய பழமை உடையவரும், கொக்குச் சாதிகள் வயலில் சேர்கின்ற குரக்குக்காவின் திகம்பரனுமாய பெருமானைத் தொழ நம்வினை நாசமாம்.

திருக்குரக்குக்கா

உருகி யூன்குழைந் தேத்தி யெழுமின்நீர்
கரிய கண்டன் கழலடி தன்னையே
குரவ னஞ்செழுங் கோயில் குரக்குக்கா
இரவு மெல்லியு மேத்தித் தொழுமினே. **#758**

திருநீலகண்டன் கழலணிந்த பாதங்களை நீர் உருகி, உடல் குழைந்து ஏத்தி எழுவீராக. நம் செழுங்கோயிலாகிய குரக்குக்காவில் வீற்றிருக்கும் பரமாசாரியனாகிய அப்பெருமானையே இரவும் பகலும் ஏத்தித் தொழுவீர்களாக.

திருக்குரக்குக்கா

இரக்க மின்றி மலையெடுத் தான்முடி
உரத்தை யொல்க அடர்த்தா னுறைவிடம்
குரக்கி னங்குதி கொள்ளுங் குரக்குக்கா
வரத்த னைப்பெற வானுல காள்வரே. **#759**

மலையெடுக்கலுற்ற இராவணன் முடிகளையும் ஆற்றலையும் சுருங்கும்படியாக இரக்கம் இல்லாமல் வருத்தியவனுக்கு இடமாகிய, குரங்குச்சாதி குதித்தலைக்கொள்ளும் குரக்குக்காவில் வரம் அருளும் அப்பெருமானைப் பெற வானுலகு ஆள்வர்.

திருக்கானூர்

திருக்கானூர்

திருக்கானூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்மேனிநாயகர்.
தேவியார் : சிவயோகநாயகியம்மை.

திருவின் நாதனுஞ் செம்மலர் மேலுறை
உருவ னாயுல கத்தி னுயிர்க்கெலாம்
கருவ னாகி முளைத்தவன் கானூரில்
பரம னாய பரஞ்சுடர் காண்மினே. **#760**

கானூரில் தெய்வச்சுடராகிய இறைவன் திருமகள் கணவனாகிய திருமாலும், சிவந்த தாமரை மலர்மேல் உறைகின்ற அழகுடையவனாகிய பிரமனும் ஆகி உலகத்தின் எல்லா உயிர்களுக்கும் கருவிலேயே உற்றுக் காப்பவனாகி முளைத்தவன் ஆவன்.

திருக்கானூர்

பெண்டிர் மக்கள் பெருந்துணை நன்னிதி
உண்டின் றேயென்று கவன்மி னேழைகாள்
கண்டு கொண்மின்நீர் கானூர் முளையினைப்
புண்டரீகப் பொதும்பி லொதுங்கியே. **#761**

அறிவற்றவர்களே! பெண்டிர், மக்கள் பெருந்துணையாகவுள்ள நல்ல செல்வம் இன்று உண்டு என்று மகிழாதீர்;தாமரையாகிய பொதும்பில் ஒதுங்கியே கானூர் முளையாகிய கடவுளை நீர் கண்டுகொள்வீராக; (அவரே பெருந்துணையாவார்).

திருக்கானூர்

தாயத் தார்தமர் நல்நிதி யென்னுமிம்
மாயத் தேகிடந் திட்டு மயங்கிடேல்
காயத் தேயுளன் கானூர் முளையினை
வாயத் தால்வணங் கீர்வினை மாயவே. **#762**

பங்காளியர், தம் சுற்றத்தார், நல்ல செல்வம் என்னும் இம்மாயத்திலே கிடந்து மயங்கவேண்டா; உம் உடலுள்ளேயே உள்ளவனாகிய கானூர் முளையாகிய பெருமானை உங்கள் வினைகள்கெட வாயாற் கூறிப் பரவி வணங்குவீராக.

திருக்கானூர்

குறியில் நின்றுண்டு கூறையி லாச்சமண்
நெறியை விட்டு நிறைகழல் பற்றினேன்
அறிய லுற்றிரேல் கானூர் முளையவன்
செறிவு செய்திட் டிருப்பதென் சிந்தையே. **#763**

இரத்தற் குறிப்பொடு நின்று ஏற்று உண்ணும் ஆடையற்ற அமண்நெறியைவிட்டு நீங்கி எம்பிரான் அருள்நிறையும் கழலைப் பற்றினேன்; அதற்குக் காரணம் அறியலுறுவீரேல், கானூர்முளையாகிய கடவுள் என்சிந்தையில் செறிவு செய்திட்டிருப்பதே ஆகும்.

திருக்கானூர்

பொத்தல் மண்சுவர்ப் பொல்லாக் குரம்பையை
மெய்த்த னென்று வியந்திட லேழைகாள்
சித்தர் பத்தர்கள் சேர்திருக் கானூரில்
அத்தன் பாதம் அடைதல் கருமமே. **#764**

அறிவற்றவர்களே! பொத்தலை உடையதும், மண்சுவர் உடையதுமாகிய இழிந்த இக்குடிசையைத் தன்மெய் என்று ஒவ்வொருவரும் வியந்திடல் வேண்டா. சித்தர்களும் பத்தர்களும் சேர்கின்ற திருக்கானூரில் இறைவன் பாதம் அடைதலே உமக்குக் கருமம் ஆகும்.

திருக்கானூர்

கல்வி ஞானக் கலைப்பொரு ளாயவன்
செல்வம் மல்கு திருக்கானூ ரீசனை
எல்லி யும்பக லும்மிசை வானவா
சொல்லி டீர்நுந் துயரங் கள்தீரவே. **#765**

கல்வியும், ஞானமும், கலையும் ஆகியவற்றின் பொருளாயிருப்பவனும், செல்வம் மல்கும் திருக்கானூரில்இருப்பவனும் ஆகிய ஈசன் இரவும் பகலும் இசைந்து அருள்புரிய ஆனவாற்றை உம் துயரங்கள் தீரச் சொல்லுவீராக.

திருக்கானூர்

நீரும் பாரும் நெருப்பும் அருக்கனும்
காரும் மாருதங் கானூர் முளைத்தவன்
சேர்வு மொன்றறி யாது திசைதிசை
ஓர்வு மென்றில ரோடித் திரிவரே. **#766**

நீரும், மண்ணும், தீயும், வெயிலும், முகிலும், காற்றும் ஆகிய அனைத்துமாகிக் கானூரில் முளைத்த கடவுளைச் "சேர்தும்" என்ற ஒன்றை அறியாது திசைதோறும் திசைதோறும் உணர்ச்சி சிறிதும் இலராய் ஓடித் திரிவர் உலகத்தவர்.

<u>திருக்கானூர்</u>

ஓமத் தோடயன் மாலறி யாவணம்
வீமப் பேரொளி யாய விழுப்பொருள்
காமற் காய்ந்தவன் கானூர் முளைத்தவன்
சேமத் தாலிருப் பாவதென் சிந்தையே. **#767**

வேள்விகளாலும். திருமாலும், பிரமனும் அறியாதவண்ணம் இடுகாட்டகத்தே பேரொளியாகிய உயர்ந்த பொருளும், காமனைக் காய்ந்தவனும் ஆகிய கானூர் முளைத்த கடவுள் என் சிந்தையே பாதுகாவலுக்குரிய இருப்பாகக் கொள்வன்.

<u>திருக்கானூர்</u>

வன்னி கொன்றை யெருக்கணிந் தான்மலை
உன்னி யேசென் றெடுத்தவ னொண்திறல்
தன்னை வீழத் தனிவிரல் வைத்தவன்
கன்னி மாமதிற் கானூர்க் கருத்தனே. **#768**

இளமையுடைய மாமதில் சூழ்ந்த கானூர்க்கருத்தன், வன்னியும், கொன்றையும், எருக்கும் அணிந்த தனக்குரிய மலையைப் பெயர்த்தெடுக்க உன்னிச்சென்று எடுத்தவனாகிய இராவணனின் ஒண்திறல் தன்னை வீழும்படியாகத் தனி விரல் ஒன்றினால் வைத்து அடர்த்தவனாவன்.

திருச்சேறை

திருச்சேறை

திருச்சேறை, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சென்னெறியப்பர்.
தேவியார் : ஞானவல்லியம்மை.

பூரி யாவரும் புண்ணியம் பொய்கெடும்
கூரி தாய அறிவுகை கூடிடும்
சீரி யார்பயில் சேறையுட் செந்நெறி
நாரி பாகன்றன் நாம நவிலவே. **#769**

சீர்மை உடையவர்கள் பயிலும் திருச்சேறையுட் செந்நெறியில் வீற்றிருக்கும் உமையொருபாகனுடைய நாமம் நவின்றால் புண்ணியம் பூரித்துவரும்; பொய்கெடும்; கூர்மை உடையதாகிய அறிவு கைகூடும்.

திருச்சேறை

என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே
மின்னு வார்சடை வேத விழுப்பொருள்
செந்நெ லார்வயற் சேறையுட் செந்நெறி
மன்னு சோதிநம் பால்வந்து வைகவே. **#770**

நெஞ்சமே! மின்னுகின்ற நீண்ட சடையையுடையவனும், வேதவிழுப்பொருளும், செந்நெல் பொருந்திய வயல் உடைய திருச்சேறையுட் செந்நெறியில் நிலைபெற்ற சோதியுமாகிய பெருமான் நம்மிடம் வந்து தங்க, நீ என்ன மாதவம் செய்தாய்!.

திருச்சேறை

பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
இறப்பு நீங்கியிங் கின்பம்வந் தெய்திடும்
சிறப்பர் சேறையுட் செந்நெறி யான்கழல்
மறப்ப தின்றி மனத்தினுள் வைக்கவே. **#771**

திருச்சேறையுட் செந்நெறியில் வீற்றிருக்கும் சிறப்பை உடைய பெருமான் கழலார் திருவடிகளை மறப்பு இன்றி மனத்துள் வைத்தால், பிறப்பு, மூப்பு, மிக்கபசி, மிக்கபிணி, இறப்பு ஆகியவை நீங்கி இம்மையிலேயே இன்பம் வந்து எய்தும்.

திருச்சேறை

மாடு தேடி மயக்கினில் வீழ்ந்துநீர்

ஓடி யெய்த்தும் பயனிலை ஊமர்காள்
சேடர் வாழ்சேறைச் செந்நெறி மேவிய
ஆட லான்தன் அடியடைந் துய்ம்மினே. **#772**
ஊமைகளே! செல்வத்தைத்தேடி மயக்கத்தில் விழுந்து நீர் ஓடி இளைத்தும் பயன் இல்லை; உயர்ந்தவர்கள் வாழ்கின்ற சேறைச்செந்நெறி மேவிய கூத்தப்பிரான் திருவடிகளை அடைந்து உய்வீர்களாக.

திருச்சேறை

எண்ணி நாளும் எரியயிற் கூற்றுவன்
துண்ணென் தோன்றிற் துரக்கும் வழிகண்டேன்
திண்ணன் சேறைத் திருச்செந் நெறியுறை
அண்ண லாருளர் அஞ்சுவ தென்னுக்கே. **#773**
நாள்தோறும் எண்ணி எரியும் வேலும் உடைய கூற்றுவன் துண்ணெனத் தோன்றினால், அவனைத் துரத்தும் வழி ஒன்று கண்டேன்; திண்மை உடையவரும், சேறையுட் செந்நெறி உறையும் அண்ணலாருமாகிய இறைவர் உள்ளார்; அஞ்சுவது பின்னை எதற்கு?

திருச்சேறை

தப்பி வானந் தரணிகம் பிக்கிலென்
ஒப்பில் வேந்தர் ஒருங்குடன் சீறிலென
செப்ப மாஞ்சேறைச் செந்நெறி மேவிய
அப்ப னாருளர் அஞ்சுவ தென்னுக்கே. **#774**
வானம் முறை தவறி (வறண்டு) உலகம் நடுங்கினால் என்ன? ஒப்பற்ற அரசர்கள் ஒருங்கு உடன் சீறிச்சினந்தால் என்ன? செப்பம் பொருந்திய சேறையுட் செந்நெறி மேவிய அப்பனார் உள்ளார்; அஞ்சுவது பின்னை எதற்கு?

திருச்சேறை

வைத்த மாடும் மடந்தைநல் லார்களும்
ஒத்தொவ் வாதவுற் றார்களு மென்செய்வார்
சித்தர் சேறைத் திருச்செந் நெறியுறை
அத்தர் தாமுள ரஞ்சுவ தென்னுக்கே. **#775**
தேடிவைத்த செல்வமும், பெண்களும், ஒத்தும் ஒவ்வாதும் உள்ள சுற்றத்தார் பிறரும் என்ன செய்வார்? சித்தரும், சேறையுட் செந்நெறி மேவிய அத்தருமாகிய இறைவர் உள்ளார்; அஞ்சுவது பின்னை எதற்கு?

திருச்சேறை

குலங்க ளென்செய்வ குற்றங்க ளென்செய்வ
துலங்கி நீநின்று சோர்ந்திடல் நெஞ்சமே
இலங்கு சேறையிற் செந்நெறி மேவிய
அலங்க னாருள ரஞ்சுவ தென்னுக்கே. **#776**

நெஞ்சமே! குலங்கள் என்னசெய்யும் திறத்தன? குற்றங்கள் என்ன செய்யும் திறத்தன? மனம் அசைந்து நீ நின்றுசோராதே; விளங்கும் திருச்சேறையில் செந்நெறி மேவிய கொன்றை மாலையணிந்த இறைவர் உள்ளார்; அஞ்சுவது பின்னை எற்றுக்காக?

திருச்சேறை

பழகி னால்வரும் பண்டுள சுற்றமும்
விழவிடா விடில் வேண்டிய எய்தொணா
திகழ்கொள் சேறையிற் செந்நெறி மேவிய
அழக னாருள ரஞ்சுவ தென்னுக்கே. **#777**

பழகினால் வருகின்ற பழமையாய் உள்ள சுற்றத்தாரும் விழவிடாவிட்டால் வேண்டியதை எய்தவொண்ணாது; விளங்குதலைக்கொண்ட சேறையிற் செந்நெறி மேவிய அழகராகிய இறைவர் உள்ளார்; அஞ்சுவது பின்னை எற்றுக்கு?

திருச்சேறை

பொருந்து நீண்மலை யைப்பிடித் தேந்தினான்
வருந்த வூன்றி மலரடி வாங்கினான்
திருந்து சேறையிற் செந்நெறி மேவியங்
கிருந்த சோதியென் பார்க்கிட ரில்லையே. **#778**

பொருந்திய உயர்ந்த திருக்கயிலையைத் திருமலையைப் பிடித்து ஏந்தலுற்ற இராவணன் வருந்துமாறு ஊன்றி மலரடியினைச் சற்று வளைத்தவனும், திருந்திய சேறையிற் செந்நெறி மேவி அங்கு இருந்த சோதியும் ஆகிய இறைவனை உரைப்பார்க்குத் துன்பங்கள் இல்லை.

திருக்கோடிகா

திருக்கோடிகா, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கோடீசுவரர்.
தேவியார் : வடிவாம்பிகையம்மை.

சங்கு லாமுன்கைத் தையலோர் பாகத்தன்
வெங்கு லாமத வேழம் வெகுண்டவன்
கொங்கு லாம்பொழிற் கோடிகா வாவென
எங்கி லாததோ ரின்பம்வந் தெய்துமே. **#779**

சங்கு வளையல்கள் பொருந்திய முன்கையை உடைய உமாதேவியை ஒருபாகத்திலுடையவனும், சினவெம்மை பொருந்திய மதம் பொழியும் யானையினை வெகுண்டவனும், மணம் உலாவும் பொழிலை உடைய கோடிகாவில் உள்ளவனுமாகிய இறைவா! என்று கூற, எங்கும் இல்லாததோர் இன்பம் வந்து எய்தும்.

திருக்கோடிகா

வாடி வாழ்வதென் னாவது மாதர்பால்
ஓடி வாழ்வினை யுள்கிநீர் நாடொறும்
கோடி காவனைக் கூறீரேற் கூறினேன்
பாடி காவலிற் பட்டுக் கழிதிரே. **#780**

நாள்தோறும் நீர் மாதர்பால் ஓடி, வாழ்வினையே நினைந்து வாடி வாழ்வது என் ஆவது? கோடிகா இறைவனைக் கூறீரேல், ஊர்க்காவலிற்பட்டுக் கழிவீர்; கூறினேன்.

திருக்கோடிகா

முல்லை நன்முறு வல்லுமை பங்கனார்
தில்லை யம்பலத் தில்லுறை செல்வனார்
கொல்லை யேற்றினர் கோடிகா வாவென்றங்
கொல்லை யேத்துவார்க் கூனமொன் றில்லையே. **#781**

முல்லையையொத்த நல்ல சிரிப்புடைய உமை ஒரு பங்கில் உடையவரும், தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் உறையும் அருட்செல்வரும், முல்லை நிலத்து ஏற்றினை வாகனமாக உடைய வரும் ஆகிய கோடிகா இறைவரே என்று விரைந்து ஏத்துவார்க்குக் குற்றம் ஒன்றும் இல்லை.

திருக்கோடிகா

நாவ ளம்பெறு மாறும னன்நன்னுதல்
ஆம ளஞ்சொலி யன்புசெ யின்னலால்
கோம ளஞ்சடைக் கோடிகா வாவென
ஏவ ளின்றெனை யேசுமவ் வேழையே. **#782**

நாவானது வளம் பெறுமாறு அழகிய நுதலை உடைய தலைவி இயன்ற அளவு அழகிய சடையையுடைய கோடிகா இறைவனே என்று அவன் திருப்புகழ் சொல்லி அன்பு செய்தால் பெறலாமேயன்றி அவனை இசைபாடும் வாயால் என்னை வசைபாடுகின்றாளே இந்நங்கை.

<u>திருக்கோடிகா</u>

வீறு தான்பெறு வார்சில ராகிலும்
நாறு பூங்கொன்றை தான்மிக நல்கானேல்
கூறு வேன்கோடி காவுளா யென்றுமால்
ஏறு வேன்நும்மா லேசப் படுவனோ. **#783**

கோடிகாவில் உள்ள இறைவனே! பெருமை பெறுவார் சிலர் ஆயினும் நறுமணம் வீசும் கொன்றையை மிக அருளாதவனானால் கூறுவேன்; என்றும் காமத்துயர் மயக்கம் ஏறுவேன்; நும்மால் ஏசப்படுவனோ?

<u>திருக்கோடிகா</u>

நாடி நாரணன் நான்முகன் வானவர்
தேடி யேசற வுந்தெரி யாததோர்
கோடி காவனைக் கூறாத நாளெலாம்
பாடி காவலிற் பட்டுக் கழியுமே. **#784**

திருமாலும் நான்முகனும் தேவர்களும் ஆராயமுற்பட்டுத் தேடித் துயர் உறவும் தெரியாத இயல்பை உடைய ஒப்பற்ற கோடிகாவுறையும் இறைவனைக் கூறாத நாட்களெல்லாம் ஊர்க்காவலிற்பட்டுக் கழியும்.

<u>திருக்கோடிகா</u>

வரங்க ளால்வரை யையெடுத் தான்றனை
அரங்க வூன்றி யருள்செய்த அப்பனூர்
குரங்கு சேர்பொழிற் கோடிகா வாவென
இரங்கு வேன்மனத் தேதங்கள் தீரவே. **#785**

வரங்களாற்பெற்ற பலத்தால் திருக்கயிலையை எடுத்த இராவணனை அழிய ஊன்றி அருள்செய்த அப்பன் ஊராகிய குரங்குகள் சேரும் பொழிலை உடைய கோடிகா இறைவனே என்று என் மனத்துக் குற்றங்கள் தீர இரங்குவேன்.

திருப்புள்ளிருக்குவேளூர்

திருக்கீழ்வேளூர்

திருப்புள்ளிருக்குவேளூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது,
சுவாமிபெயர் : வைத்தியநாதர்.
தேவியார் : தையல்நாயகியம்மை.

வெள்ளெ ருக்கர வம்விர வுஞ்சடைப்
புள்ளி ருக்குவே ளூரரன் பொற்கழல்
உள்ளிருக்கு முணர்ச்சியில் லாதவர்
நள்ளி ருப்பர் நரகக் குழியிலே. **#786**

வெள்ளெருக்கும், பாம்பும் விரவிய சடையொடு கூடிய புள்ளிருக்கு வேளூர்ச் சிவபெருமானின் பொன்னார் திருவடிகள் உள்ளத்துள் இருக்கும் உணர்ச்சி இல்லாதவர்கள் நரகக்குழியில் செறிந்திருப்பர்.

திருக்கீழ்வேளூர்

மாற்ற மொன்றறி யீர்மனை வாழ்க்கைபோய்க்
கூற்றம் வந்துமைக் கொள்வதன் முன்னமே
போற்ற வல்லீரேற் புள்ளிருக்கு வேளூர்
சீற்ற மாயின தேய்ந்தறுங் காண்மினே. **#787**

விடைசொல்லும் தெளவில்லாதவராய் மனையில் வாழும் வாழ்க்கைபோய். கூற்றுவன் வந்து உம்மைக் கொள்ளுவதற்கு.முன்பே புள்ளிருக்குவேளூரைப் போற்றும் வல்லமை உடையீரேல் சீறுதற்குரிய தீக்குணங்கள் தேய்ந்து அறும்; காண்பீராக.

திருக்கீழ்வேளூர்

அரும றையனை ஆணொடு பெண்ணனைக்
கருவி டம்மிக வுண்டவெங் கண்டனைப்
புரிவெண் நூலனைப் புள்ளிருக்கு வேளூர்
உருகி நைபவ ருள்ளங் குளிருமே. **#788**

அரிய வேதங்களை உடையவனும், ஆணொடு பெண்ணாகியவனும், கரிய ஆலகாலவிடம் மிக உண்ட விருப்பத்திற்குரிய திருநீலகண்டனும், வெள்ளியமுப்புரி நூலனும் ஆகிய பெருமானைப் புள்ளிருக்குவேளூரில் உருகி நையும் அடியார்களின் உள்ளம் குளிரும்.

திருக்கீழ்வேளூர்

தன்னு ருவை யொருவர்க் கறிவொணா

மின்னு ருவனை மேனிவெண் நீற்றனைப்
பொன்னு ருவனைப் புள்ளிருக்கு வேளூர்
என்ன வல்லவர்க் கில்லை யிடர்களே. **#789**
தன் உருவத்தை ஒருவர்க்கும் அறிய வொண்ணாத ஒளி உருவனும், மேனியில்பூசிய வெண்ணீற்றனும், பொன்னார் மேனியனுமாகிய இறைவன் உறையும் புள்ளிருக்கு வேளூர் என்று கூறவல்லவர்க்கு இடர்கள் இல்லை.

<u>திருக்கீழ்வேளூர்</u>

செங்கண் மால்பிர மற்கும் அறிவொணா
அங்கி யின்னுரு வாகி யழல்வதோர்
பொங்க ரவனைப் புள்ளிருக்கு வேளூர்
மங்கை பாகனை வாழ்த்த வருமின்பே. **#790**
சிவந்தகண்ணை உடைய திருமாலுக்கும் பிரமனுக்கும் அறியவொண்ணாத அக்கினியின் உருவாகிக் கனலுகின்ற ஒப்பற்ற, பொங்கியெழும் அரவம் அணிந்த இறைவனாகிய புள்ளிருக்குவேளூரில் உமையொருபாகனை வாழ்த்த இன்பம் வரும்.

<u>திருக்கீழ்வேளூர்</u>

குற்ற மில்லியைக் கோலச் சிலையினால்
செற்ற வர்புரஞ் செந்தழ லாக்கியைப்
புற்ற ரவனைப் புள்ளிருக்கு வேளூர்
பற்ற வல்லவர் பாவம் பறையுமே. **#791**
குற்றங்கள் இல்லாதவனும், அழகுமிக்க மேருமலையாகிய வில்லினால் சினந்தவர் முப்புரங்களைச் செந்தழலாக்கியவனும், புற்றரவம் கொண்டவனுமாகிய இறைவன் உறையும் புள்ளிருக்குவேளூரைப் பற்றும் வல்லமை உடையவர்களது பாவங்கள் கெடும்.

<u>திருக்கீழ்வேளூர்</u>

கையி னோடுகால் கட்டி யுமரெலாம்
ஐயன் வீடின னென்பதன் முன்னம்நீர்
பொய்யி லாஅரன் புள்ளிருக்கு வேளூர்
மையு லாவிய கண்டனை வாழ்த்துமே. **#792**
கைகளோடு கால்களையும் கட்டி உம்மைச் சேர்ந்தவரெல்லாம் எங்கள் ஐயன் இறந்தனன் என்று கூறுவதன்முன்பே, நீர் பொய்யில்லாத சிவபிரானும், புள்ளிருக்குவேளூர்த் திருநீலகண்டனுமாகிய பெருமானை வாழ்த்துவீராக.

திருக்கீழ்வேளூர்

உள்ள முள்கி யுகந்து சிவனென்று
மௌள வுள்க வினைகெடு மெய்ம்மையே
புள்ளி னார்பணி புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே. **#793**

உள்ளத்தால் உள்ளி. உவப்புற்று "சிவன்" என்று மெல்ல உள்கினால் வினைகள் கெடுதல் மெய்மையே; சம்பாதி சடாயு ஆகிய புள்ளினார்பணிகின்ற புள்ளிருக்குவேளூர் வள்ளல் பாதம் வணங்கித் தொழுவீராக.

திருக்கீழ்வேளூர்

அரக்க னார்தலை பத்து மழிதர
நெருக்கி மாமலர்ப் பாதம் நிறுவிய
பொருப்ப னாருறை புள்ளிருக்கு வேளூர்
விருப்பி னால்தொழு வார்வினை வீடுமே. **#794**

இராவணனது தலைபத்தும் அழியும்படி நெருக்கிப் பெருமைமிக்க திருவடி மலர்களை நிறுவிய திருக்கயிலாயமலைத் தலைவர் உறைகின்ற புள்ளிருக்குவேளூரை விருப்பத்தினால் தொழுவார் வினை கெடும்.

திருஅன்பில்ஆலந்துறை

திருஅன்பிலாலந்துறை

திருஅன்பில்ஆலந்துறை, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சத்திவாகீசர்.
தேவியார் : சவுந்தரநாயகியம்மை.

வானஞ் சேர்மதி சூடிய மைந்தனை
நீநெஞ் சேகெடு வாய்நினை கிற்கிலை
ஆனஞ் சாடியை யன்பிலா லந்துறைக்
கோன்எஞ் செல்வனைக் கூறிட கிற்றியே. **#795**

நெஞ்சே! வானத்தைச் சேர்ந்த பிறை மதியைச் சூடிய மைந்தனாகிய சிவபெருமானை நினையும் வல்லமை உடையை இல்லை; நீ கெடுவாய், பஞ்சகவ்வியத் திருவபிஷேகம் கொள்வானாகிய திரு அன்பில் ஆலந்துறைக்கோனாம் எம் செல்வனைக் கூறிடும் வல்லமை பெறுவாயாக.

திருஅன்பிலாலந்துறை

கார ணத்தர் கருத்தர் கபாலியார்
வார ணத்துரி போர்த்த மணாளனார்
ஆர ணப்பொரு ளன்பிலா லந்துறை
நார ணற்கரி யானொரு நம்பியே. **#796**

அன்பிலாலந்துறையில் திருமாலுக்கும் அரியாராகிய ஒப்பற்ற நம்பி, உலககாரணரும், கருத்தில் உள்ளவரும்,பிரமகபாலம் கொண்ட கையினரும், யானை உரிபோர்த்த மணாளரும், வேதப்பொருள் ஆயவரும் ஆவர்.

திருஅன்பிலாலந்துறை

அன்பின் ஆனஞ்ச மைந்துட னாடிய
என்பின் ஆனை யுரித்துக் களைந்தவன்
அன்பி லானையம் மானையள் ளூறிய
அன்பி னால்நினைந் தாரறிந் தார்களே. **#797**

அன்பினால் பஞ்சகவ்வியம் ஐந்துடன் திரு முழுக்குக் கொண்டவனும், எலும்புடைய யானையின் உரியை உரித்துக்களைந்தவனும் ஆகிய, அன்பில் ஆலந்துறையில் உள்ள அம்மானை, நெஞ்சில் அள்ளூறி அன்பினால் நினைந்தவர்களே அறிந்தவர்கள்.

திருஅன்பிலாலந்துறை

சங்கை யுள்ளதுஞ் சாவது மெய்யுமை
பங்க னாரடி பாவியேன் நானுய்ய
அங்க ணனெந்தை யன்பிலா லந்துறைச்
செங்க ணாரடிச் சேரவும் வல்லனே. **#798**

உள்ளதும் ஐயம்; சாவதேமெய்; ஆதலால் உமை பங்கரும், அழகிய கண்ணை உடையவரும், எந்தையும், அன்பிலாலந் துறையில் சிவந்த கண்ணை உடையவருமாகிய பெருமான் அடிகளைப் பாவியேன் நான் உய்யச் சேரவும் வல்லனே!.

திருஅன்பிலாலந்துறை

கொக்கி றகர் குளிர்மதிச் சென்னியர்
மிக்க ரக்கர் புரமெரி செய்தவர்
அக்க ரையின ரன்பிலா லந்துறை
நக்கு ருவரும் நம்மை யறிவரே. **#799**

கொக்கிறகை உடையவரும், குளிர் மதிப் பிறையினைச் சடையிற் கொண்டவரும், சினம்மிக்கு அரக்கர் முப்புரங்களை எரித்தல் செய்தவரும், அக்கினை அரைக்கசைத்தவருமாகிய அன்பிலாலந்துறையில் திகம்பர உருவினராம் இறைவர் நம்மை அறிவர்.

திருஅன்பிலாலந்துறை

வெள்ள முள்ள விரிசடை நந்தியைக்
கள்ள முள்ள மனத்தவர் காண்கிலார்
அள்ள லார்வய லன்பிலா லந்துறை
உள்ள வாறறி யார்சில ரூமரே. **#800**

கங்கையாகிய வெள்ளம் உள்ள விரிசடையோடு கூடிய நந்தியாகிய பெருமானைக் கள்ளமுள்ள மனத்தவர் காணும் திறமை இல்லாதவர்கள்; சேறு நிறைந்த வயலை உடைய அன்பிலாலந்துறையின்கண் உள்ளவாறு சில ஊமையர் அறியார்.

திருஅன்பிலாலந்துறை

பிறவி மாயப் பிணக்கி லழுந்தினும்
உறவெ லாஞ்சிந்தித் துன்னி உகவாதே
அறவ னெம்பிரா னன்பிலா லந்துறை
மறவா தேதொழு தேத்தி வணங்குமே. **#801**

பிறவியாகிய பொய்ப்பிணக்கில் அழுந்தினாலும் உறவெல்லாவற்றையும் சிந்தித்து எண்ணி மகிழாமல், அறவடிவாகிய எம்பெருமானது அன்பிலாலந்துறையை மறவாது தொழுது ஏத்தி வணங்குவீராக.

திருஅன்பிலாலந்துறை

நுணங்கு நூலயன் மாலு மிருவரும்
பிணங்கி யெங்குந் திரிந்தெய்த்துங் காண்கிலா
அணங்க னெம்பிரா னன்பிலா லந்துறை
வணங்கும் நும்வினை மாய்ந்தறும் வண்ணமே. **#802**

நுண்ணிய நூல் பல கற்ற பிரமனும் திருமாலுமாகிய இருவரும் மாறுபட்டு எங்கும் திரிந்து இளைத்தும் காணும் திறமையற்றனர்; அணங்கினை ஒருபாகம் உடைய இறைவன் அன்பிலாலந்துறையை நும் வினைகள் மாய்ந்து அறும் வண்ணம் வணங்குவீராக.

திருஅன்பிலாலந்துறை

பொய்யெ லாமுரைக் குஞ்சமண் சாக்கியக்
கையன் மாருரை கேளா தெழுமினோ
ஐய னெம்பிரா னன்பிலா லந்துறை
மெய்யன் சேவடி யேத்துவார் மெய்யரே. **#803**

எல்லாப் பொய்யும் உரைக்கும் சமணரும், சாக்கியருமாகிய சிறுமை உடையவர்கள் பேச்சைக் கேளாது எழுமின்; ஐயனும் எம்பெருமானும் அன்பிலாலந்துறையில் எழுந்தருளியுள்ள மெய்யனுமாகிய இறைவன் சேவடி ஏத்துவார் மெய்யர் ஆவர்.

திருஅன்பிலாலந்துறை

இலங்கை வேந்த னிருபது தோளிற்று
மலங்க மாமலை மேல்விரல் வைத்தவன்
அலங்க லெம்பிரா னன்பிலா லந்துறை
வலங்கொள் வாரைவா னோர்வலங் கொள்வரே. **#804**

இலங்கை அரசனாம் இராவணன் இருபது தோள்களும் இற்றுச் சுழலும்படியாகத் திருக்கயிலைமாமலை மேல் திருவிரலை ஊன்றியவன் ஆகிய கொன்றைமாலையணிந்த பெருமானுடைய அன்பிலாலந்துறையை வலங்கொண்டு வழிபடுவாரைத் தேவர்கள் வலம் கொண்டு வணங்கிப் போற்றுவர்.

திருப்பாண்டிக்கொடுமுடி

திருப்பாண்டிக்கொடுமுடி

திருப்பாண்டிக்கொடுமுடி, திருக்குறுந்தொகை,
இத்தலம் கொங்குநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கொடுமுடிநாதேசுவரர்.
தேவியார் : பண்மொழியம்மை.

சிட்ட னைச்சிவ னைச்செழுஞ் சோதியை
அட்ட மூர்த்தியை ஆல நிழலமர்
பட்ட னைத்திருப் பாண்டிக் கொடுமுடி
நட்ட னைத்தொழ நம்வினை நாசமே. **#805**

உயர்ந்தவனை, சிவனை, செழுஞ்சோதி வடிவானவனை, எட்டு மூர்த்தியை, கல்லாலநிழற்கீழ் அமரும் ஆசாரியனை, திருப்பாண்டிக்கொடுமுடிக் கூத்தனைத் தொழுதால் நம்வினை நாசமாம்.

திருப்பாண்டிக்கொடுமுடி

பிரமன் மாலறியாத பெருமையன்
தரும மாகிய தத்துவ னெம்பிரான்
பரம னாருறை பாண்டிக் கொடுமுடி
கரும மாகத் தொழுமட நெஞ்சமே. **#806**

அறிவற்ற நெஞ்சமே! பிரமனும் மாலும் அறியாத பெருமையனும், தருமவடிவாகிய தத்துவ வடிவினனும், எம்பிரானும், பரமனும் ஆகிய பெருமான் உறைகின்ற திருப்பாண்டிக் கொடுமுடியைத் தொழுவதே கருமமாகக் கொண்டு பணிவாயாக.

திருப்பாண்டிக்கொடுமுடி

ஊச லாளல்லள் ஒண்கழ லாளல்லள்
தேச மாந்திருப் பாண்டிக் கொடுமுடி
ஈச னேயெனு மித்தனை யல்லது
பேசு மாறறி யாளொரு பேதையே. **#807**

ஒரு பெண் ஊசல் விளையாட்டும் கொண்டிலள்; ஒள்ளிய கழல் அணிவாளுமல்லள்; தேசமாம் திருப்பாண்டிக் கொடுமுடி ஈசனே என்னும் இத்தனையேயல்லது வேறு பேசுமாறு ஒன்றும் அறியாதவள் ஆயினள்.

திருப்பாண்டிக்கொடுமுடி

தூண்டி யசுடர் போலொக்குஞ் சோதியான்
காண்டலுமௌ யன்னடி யார்கட்குப்

பாண்டிக் கொடுமுடி மேய பரமனைக்
காண்டு மென்பவர்க் கேதுங் கருத்தொணான். **#808**
தூண்டிய சுடர்போல் ஒக்கின்ற சோதிவடிவினனாகிய பெருமான் அடியார்களுக்குக் காண்டல் எளியவன்; பாண்டிக் கொடுமுடி மேவிய பரமனைக் காண்போம் என்று கூறுவார்க்கு ஏதும் கருதவொண்ணா இயல்பினோன்.

திருப்பாண்டிக்கொடுமுடி

நெருக்கி யம்முடி நின்றிசை வானவர்
இருக்கொ டும்பணிந் தேத்த விருந்தவன்
திருக்கொ டும்முடி யென்றலுந் தீவினைக்
கருக்கெ டும்மிது கைகண்ட யோகமே. **#809**
இராவணனது அம்முடிகளை நெருக்கி, புகழை உடைய வானவர் நின்று இருக்கு வேதம் உரைத்துப் பணிந்து ஏத்த இருந்தவனுடைய "திருக்கொடுமுடி" என்றலும் தீவினையின் கருக்கெடும்; இது கைகண்ட யோக நெறியாகும்.

திருவான்மியூர்

திருவான்மியூர்

திருவான்மியூர், திருக்குறுந்தொகை,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மருந்தீசுவரர்.
தேவியார் : சுந்தரமாது (அ) சொக்கநாயகி.

விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்டர் நாயகன் தன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர்செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூ ரீசனே. **#810**

விரிந்தமாமலர்களைக் கொண்டு விரைந்து நீர், தேவர்நாயகனும் , வண்டுசேர் பொழில்களை உடைய வான்மியூர் ஈசனுமாகிய இறைவன் சேவடியைச் சூழ்வீர்களாக; முன்பு செய்த பாவங்கள் கெடும்.

திருவான்மியூர்

பொருளுஞ் சுற்றமும் பொய்ம்மையும் விட்டுநீர்
மருளும் மாந்தரை மாற்றி மயக்கறுத்
தருளு மாவல்ல ஆதியா யென்றலும்
மருள றுத்திடும் வான்மியூ ரீசனே. **#811**

பொருளும், சுற்றத்தாருமாகிய பொய்ம்மையை விட்டு நீர் மருளுதற்குரிய மாந்தரை மாற்றி மயக்கம் நீக்கி அருளுமாறுவல்ல ஆதியாய்! என்று கூறியதும் வான்மியூர் ஈசன் மயக்கம் நீக்குவன்.

திருவான்மியூர்

மந்த மாகிய சிந்தை மயக்கறுத்
தந்த மில்குணத் தானை யடைந்துநின்
றெந்தை யீசனென் றேத்திட வல்லிரேல்
வந்து நின்றிடும் வான்மியூ ரீசனே. **#812**

மந்தமாகிய சிந்தையின் மயக்கத்தை அறுத்து முடிவற்ற குணத்தை உடையவனாகிய பெருமானை அடைந்துநின்று எந்தையே! ஈசனே! என்று வழிபடவல்லமை உடையீரேயாயின் வான்மியூர் ஈசன் வந்து நின்றிடும்.

திருவான்மியூர்

உள்ள முள்கலந் தேத்தவல் லார்க்கலால்
கள்ள முள்ள வழிக்கசி வானலன்

வெள்ள மும்மர வும்விர வுஞ்சடை
வள்ள லாகிய வான்மியூ ரீசனே. **#813**
கங்கையும் பாம்பும் கலக்கும் சடையோடு கூடிய வள்ளலாகிய
வான்மியூர் ஈசன், உள்ளம் கலந்து ஏத்த வல்லவர்க்கு அல்லால் கள்ளம்
உள்ளவழிக் கசிவான் அல்லன்.

<u>திருவான்மியூர்</u>

படங்கொள் பாம்பரைப் பால்மதி சூடியை
வடங்கொள் மென்முலை மாதொரு கூறனைத்
தொடர்ந்து நின்று தொழுதெழு வார்வினை
மடங்க நின்றிடும் வான்மியூ ரீசனே. **#814**
படம் கொண்ட பாம்பு உடையவனும் , பால் மதி சூடியவனும் ,
மாலைகள் கொண்ட மென்முலைமாதாகிய உமையொரு கூறனுமான
வான்மியூர் ஈசன், தொடர்ந்து நின்று தொழுது எழுவார் வினைகள்
மடங்க முன்னே வந்து நின்று அருளுவான்.
நெஞ்சி லைவர் நினைக்க நினைக்குறார்
பஞ்சின் மெல்லடி யாளுமை பங்கவென்று
அஞ்சி நாண்மலர் தூவி யழுதிரேல்
வஞ்சந் தீர்த்திடும் வான்மியூ ரீசனே.**|5.082.6 #815**
நெஞ்சில் நினைக்க ஐம்புலக் கள்வர் நினைக்கவையார்; பஞ்சனைய
மெல்லடியாளாகிய உமைபங்கனே!ழு என்று அஞ்சிப் புதிய மலர்கள்
தூவி அழுதீரேல் வான்மியூர் ஈசன் உம் வஞ்சனையைத் தீர்ப்பர்.
நுணங்கு நூலயன் மாலு மறிகிலாக்
குணங்கள் தான்பர விக்குறைந் துக்கவர்
சுணங்கு பூண்முலைத் தூமொழி யாரவர்
வணங்க நின்றிடும் வான்மியூ ரீசனே.**|5.082.7 #816**
நுண்ணிய நூல் பல உணர்ந்த பிரமனும் திருமாலும் அறியும்வல்லமை
இல்லாத பேரருட் குணங்களைப் பரவி சுணங்கு படர்ந்த பூண்களை
உடைய முலையையும் தூய மொழியையும் உடைய பெண்கள் வணங்க
வான்மியூர் ஈசன் நின்றிடுவான்.
ஆதி யும்மர னாயயன் மாலுமாய்ப்
பாதி பெண்ணுரு வாய பரமனென்
றோதி யுள்குழைந் தேத்தவல் லாரவர்
வாதை தீர்த்திடும் வான்மியூ ரீசனே.**|5.082.8 #817**
வான்மியூர் ஈசன் முதலாகிய மூர்த்தி அரனும் அயனும் திருமாலும்
ஆயவன். பாதிபெண்ணுருவுமாகிய பரமன் என்று ஓதி உள்ளம் குழைந்து
ஏத்த வல்லமை உடையவர்களின் துன்பங்களைத் தீர்த்திடுவான்.

ஓட்டை மாடத்தி லொன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னங் கழலடி
நாட்டி நாண்மலர் தூவி வலஞ்சயில்
வாட்டந் தீர்த்திடும் வான்மியூ ரீசசெ.|**5.082.9 #818**
ஓட்டைமாடமாகிய உடம்பில் உள்ள ஒன்பது வாயில்களும் இடுகாட்டில் வெந்து எரிந்து சாம்பலாவதன் முன், தன்கழலடியை நெஞ்சில் நாட்டிப் புதுமலர் தூவி வலம் செய்தால் வான்மியூரீசன் வாட்டம் தீர்ப்பான்.
பார மாக மலையெடுத் தான்றனைச்
சீர மாகத் திருவிர லூன்றினான்
ஆர்வ மாக அழைத்தவ னேத்தலும்
வார மாயினன் வான்மியூ ரீசனே.|**5.082.10 #819**
பாரமாகத் திருக்கயிலையை எடுத்த இராவணனைச் சிதையும்படி திருவிரலால் ஊன்றியவனும், ஆர்வம் பெருகி அழைத்து அவன் ஏத்தலும் அன்பு கொண்டவனும் வான்மியூர் ஈசன் ஆவன்.

திருநாகைக்காரோணம்|திருநாவுக்கர்

திருநாகைக்காரோணம், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காயாரோகணேசுவரர்.
தேவியார் : நீலாயதாட்சியம்மை.

பாணத் தால்மதின் மூன்று மெரித்தவன்
பூணத் தானர வாமை பொறுத்தவன்
காணத் தானினி யான்கடல் நாகைக்கா
ரோணத் தானென நம்வினை யோயுமே.|**5.083.1 #820**

ஓர் அம்பினால் மூன்று மதில்களையும் எரித்தவனும், தான் அணியாகப் பூணப் பாம்பையும் ஆமையையும் தாங்கியவனும், காண இனியவனும் ஆகிய கடல் நாகைக் காரோணத்தான் என நம்வினை ஓயும்!

வண்ட லம்பிய வார்சடை யீசனை
விண்ட லம்பணிந் தேத்தும் விகிர்தனைக்
கண்ட லங்கமழ் நாகைக்கா ரோணனைக்
கண்ட லும்வினை யான கழலுமே.|**5.083.2 #821**

வண்டுகள் ஒலிக்கும் நீண்ட சடையுடைய ஈசனும், விண்ணுலகம் பணிந்தேத்தும் மேலானவனும், தாழை கமழ்கின்ற நாகைக்காரோணனுமாகிய பெருமானைக் காணுதலும் வினைகள் நீங்கும்.

புனையும் மாமலர் கொண்டு புரிசடை
நனையும் மாமலர் சூடிய நம்பனைக்
கனையும் வார்கடல் நாகைக்கா ரோணனை
நினைய வேவினை யாயின நீங்குமே.|**5.083.3 #822**

மாமலர்களைக்கொண்டு புனையும் புரிசடை உடைய நம்பனும். கள்ளால் நனையும் மாமலரைச் சூடிய நம்பனும் ஆகிய ஒலிக்கும் நீண்ட கடல் நாகைக்காரோணனை நினைய வினைகள் நீங்கும்.

கொல்லை மால்விடை யேறிய கோவினை
எல்லி மாநட மாடு மிறைவனைக்
கல்லி னார்மதில் நாகைக்கா ரோணனைச்
சொல்ல வேவினை யானவை சோருமே.|**5.083.4 #823**

முல்லைநிலத்து விடையேறிய அரசனும், இரவில் மகாதாண்டவம் புரியும் இறைவனும் ஆகிய, கற்களால் கட்டப்பட்ட மதில் சூழ்ந்த நாகைக்காரோணனைச் சொல்ல வினைகள் சோரும்.

மெய்ய னைவிடை யூர்தியை வெண்மழுக்
கைய னைக்கடல் நாகைக்கா ரோணனை

மைய னுக்கிய கண்டனை வானவர்
ஐய னைத்தொழு வார்க்கல்ல லில்லையே.**|5.083.5 #824**
உண்மையே உருவானவனும், விடையை ஊர்தியாகக்கொண்டவனும்,
வெண்மழுவைக் கையிற்கொண்டவனும், நாகைக்காரோணனும்,
ஆலகால நஞ்சினை வருத்திய திருக்கழுத்தினனும் ஆகிய தேவர்
தலைவனைத் தொழுவார்க்கு அல்லல் இல்லை.
அலங்கல் சேர்சடை யாதிபு ராணனை
விலங்கல் மெல்லியல் பாகம் விருப்பனைக்
கலங்கள் சேர்கடல் நாகைக்கா ரோணனை
வலங்கொள் வார்வினை யாயின மாயுமே.**|5.083.6 #825**
மாலைகள் சேர்ந்த சடையையுடைய ஆதி புராணனை, மலைமங்கையை
ஒருபாகம் விரும்பிக் கொண்டவனை, கப்பல்கள் சேரும்
கடல்நாகைக்காரோணனை வலம் கொண்டு வணங்குவார் வினைகள்
மாயும்.
சினங்கொள் மால்கரி சீறிய ஏறினை
இனங்கொள் வானவ ரேத்திய வீசனைக்
கனங்கொள் மாமதில் நாகைக்கா ரோணனை
மனங்கொள் வார்வினை யாயின மாயுமே.**|5.083.7 #826**
சினங்கொண்ட பெரிய வேழத்தைச் சினந்து பொறாத ஏறுபோல்வானும்,
தொகுதி கொண்ட தேவர்கள் ஏத்தியஈசனும் ஆகிய பெருமைகொண்ட
மாமதில் சூழ்ந்த நாகைக் காரோணனை உள்ளத்துக்கொள்ளுவார்
வினைகள் மாயும்.

<u>திருவான்மியூர்</u>

அந்த மில்புக ழாயிழை யார்பணிந்
தெந்தை யீசனென் றேத்து மிறைவனைக்
கந்த வார்பொழில் நாகைக்கா ரோணனைச்
சிந்தை செய்யக் கெடுந்துயர் திண்ணமே. **#827**
ஆயிழையார்கள் பணிந்து முடிவற்ற புகழைப் பாடி எந்தையே! ஈசனே"
என்று வாழ்த்தும் இறைவனாகிய மணம் வீசும் நெடிய பொழில் சூழ்ந்த
நாகைக்காரோணனைச் சிந்தித்தால் திண்மையாகத் துயரங்கள் கெடும்.

<u>திருவான்மியூர்</u>

கருவ னைக்கடல் நாகைக்கா ரோணனை
இருவ ருக்கறி வொண்ணா இறைவனை
ஒருவ னையுண ரார்புர மூன்றெய்த
செருவ னைத்தொழத் தீவினை தீருமே. **#828**
உலகிற்கெல்லாம் கருவாகியவனும். கடல்நாகைக் காரோணனும்,

பிரமன் திருமால் ஆகிய இருவருக்கறியவியலாத இறைவனும், ஒப்பற்றவனும் ஆகிய உணராத அசுரரது முப்புரங்களை எய்த போரை உடைய பெருமானைத் தொழத் தீவினைகள் தீரும்.

திருவான்மியூர்

கடல்க ழிதழி நாகைக்கா ரோணன்றன்
வடவ ரையெடுத் தார்த்த அரக்கனை
அடர வூன்றிய பாத மணைதரத்
தொடர அஞ்சுந் துயக்கறுங் காலனே. **#829**

கடல் உப்பங்கழிகள் பொருந்திய நாகைக் காரோணன் தன் திருக்கயிலையை எடுத்து ஆர்த்த இராவணனை அடரத் திருவிரலால் ஊன்றிய பாதம் அணைந்தால் துயக்கற்ற காலன் தொடர அஞ்சுவான்.

திருக்காட்டுப்பள்ளி

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

திருக்காட்டுப்பள்ளி, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஆரணியசுந்தரர்.
தேவியார் : அகிலாண்டநாயகியம்மை.

மாட்டுப் பள்ளி மகிழ்ந்துறை வீர்க்கெலாம்
கேட்டுப் பள்ளிகண் டீர்கெடு வீரிது
ஓட்டுப் பள்ளிவிட் டோட லுறாமுனம்
காட்டுப் பள்ளியு ளான்கழல் சேர்மினே. **#830**

செல்வத்திடத்து மகிழ்ந்து உறைவீர்; கேட்டுப் பள்ளிகண்டீர். உடம்பை விட்டு உயிர் ஓடலுறுவதற்கு முன்பு காட்டுப்பள்ளியிறைவன் திருவடிகளைச் சேர்வீராக.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

மாட்டைத் தேடி மகிழ்ந்துநீர் நும்முளே
நாட்டுப் பொய்யெலாம் பேசிடு நாணிலீர்
கூட்டை விட்டுயிர் போவதன் முன்னமே
காட்டுப் பள்ளியு ளான்கழல் சேர்மினே. **#831** ★★★★★

செல்வத்தையே தேடி நீர் உமக்குள்ளே மகிழ்ந்து நாட்டிலுள்ள பொய்யெல்லாம் பேசிடும் நாணமற்றவர்களே! இந்தக் கூடாகிய உடம்பைவிட்டு உயிர் போவதற்கு முன்பே காட்டுப்பள்ளியுள்ளான் திருவடி சேர்வீராக.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

தேனை வென்றசொல் லாளொடு செல்வமும்
ஊனை விட்டுயிர் போவதன் முன்னமே
கான வேடர் கருதுங்காட் டுப்பள்ளி
ஞான நாயக னைச்சென்று நண்ணுமே. **#832**

தேனை வென்ற சொல்லை உடையவளாகிய மனைவியோடு செல்வமும் கெட்டு உடலைவிட்டு உயிர் போவதற்கு முன்பே காட்டு வேடர்கள் கருதும் காட்டுப்பள்ளியின் ஞானநாயகனைச் சென்று நண்ணுவீராக.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

அருத்த மும்மனை யாளொடு மக்களும்
பொருத்த மில்லைபொல்லாதது போக்கிடும்

கருத்தன் கண்ணுத லண்ணல்காட் டுப்பள்ளித்
திருத்தன் சேவடி யைச்சென்று சேர்மினே. **#833**
பொருளும், மனைவியோடு மக்களும் பொருத்தம் இல்லை; பொல்லாத தீமை போக்கிடும் கருத்தனும், நெற்றிக்கண்ணுடைய அண்ணலும் ஆகிய காட்டுப்பள்ளித் திருத்தன் சேவடியைச் சென்று சேர்வீராக.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

சுற்ற முந்துணை யும்மனை வாழ்க்கையும்
அற்ற போதணை யாரவ ரென்றென்றே
கற்ற வர்கள் கருதுங்காட் டுப்பள்ளிப்
பெற்ற மேறும் பிரானடி சேர்மினே. **#834**
சுற்றத்தாரும் துணைவியும் மனைவாழ்க்கையும், உயிர் உடலைவிட்டு நீங்கியபோது பொருந்தாதவர்கள் என்று, கற்றவர்கள் கருதுகின்ற காட்டுப்பள்ளியில் இடபம் ஏறிய பெருமான் அடி சேர்வீராக.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

அடும்புங் கொன்றையும் வன்னியும் மத்தமும்
துடும்பல் செய்சடைத் தூமணிச் சோதியான்
கடம்பன் தாதை கருதுங்காட் டுப்பள்ளி
உடம்பி னார்க்கோர் உறுதுணை யாகுமே. **#835**
அடும்பும், கொன்றையும், வன்னியும், ஊமத்தமுமாகிய மலர்கள் சூடியிருக்கும் புனைதல் செய்யப்பட்ட சடையுடைய தூமணிச் சோதியானும், கடம்பணிந்த முருகன் தந்தையும் ஆகிய பெருமானே உடம்பை உடையவர்க்கெல்லாம் உறுதுணை ஆவான்; ஆதலின் காட்டுப்பள்ளியையே கருதுவீர்களாக.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

மெய்யின் மாசுடை யாருடல் மூடுவார்
பொய்யை மெய்யென்று புக்குடன் வீழன்மின்
கையின் மானுடை யான்காட்டுப் பள்ளியெம்
ஐயன் தன்னடி யேயடைந் துய்ம்மினே. **#836**
உடம்பில் அழுக்குடையவரும், உடல் மூடுவாருமாகிய புத்தரது பொய்யை மெய்யென்று கருதிப் புகுந்து அவர்களுடன் வீழாதீர்; கையின்கண் மான் உடையான் ஆகிய காட்டுப் பள்ளியில் எம் ஐயன் திருவடிகளையே அடைந்து உய்வீராக.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

வேலை வென்றகண் ணாரை விரும்பிநீர்

சீலங் கெட்டுத் திகையன்மின் பேதைகாள்
காலையேதொழுங் காட்டுப்பள் ளிய்யுறை
நீல கண்டனை நித்தல் நினைமினே. **#837**

அறிவற்றவர்களே! வேலை, அழகால் வென்ற கண்ணை உடைய பெண்டிரை விரும்பி, நீர் ஒழுக்கம் கெட்டுத் திகையாதீர்; காட்டுப்பள்ளியில் உறையும் திருநீலகண்டனை நித்தமும் நினைந்து காலத்தே சென்று தொழுவீராக.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

இன்று ளார்நாளை யில்லை யெனும்பொருள்
ஒன்றும் ஓரா துழிதரு மூமர்காள்
அன்று வானவர்க் காக விடமுண்ட
கண்ட னார்காட்டுப் பள்ளிகண் டுய்ம்மினே. **#838**

ஊமர்களே! இன்றைக்கிருப்பார் நாளைக்கில்லை எனும் பொருள் ஒன்றும் உணராது திரிதருவோரே! அன்று தேவர்களின் பொருட்டு விடமுண்டதிருக்கழுத்தினரது காட்டுப்பள்ளி கண்டு உய்வீராக.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

எண்ணி லாஅரக் கன்மலை யேந்திட
எண்ணி நீண்முடி பத்து மிறுத்தவன்
கண்ணு ளார்கரு துங்காட்டுப் பள்ளியை
நண்ணு வாரவர் தம்வினை நாசமே. **#839**

நல்லெண்ணமில்லாத இராவணன் மலையை எடுக்க, அவன் திருந்துமாறு திருவுளத்து எண்ணி, அவன் நீண்ட முடிகள் பத்தையும் இறுத்தவனுக்குரிய ஞானக்கண்ணுடையவர் கருதி உணரும் காட்டுப்பள்ளியை நண்ணுவாருடைய வினைகள் நாசம் அடையும்.

திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தாயுமானேசுவரர்.
தேவியார் : மட்டுவார்குழலம்மை.

மட்டு வார்குழ லாளொடு மால்விடை
இட்ட மாவுகந் தேறு மிறைவனார்
கட்டு நீத்தவர்க் கின்னரு ளேசெயும்
சிட்டர் போலுஞ் சிராப்பள்ளிச் செல்வரே. **#840** ★★★★★

சிராப்பள்ளிச் செல்வர், தேன் ஒழுகும் நீண்ட குழலை உடைய உமாதேவியோடு பெரிய விடையினை விருப்பத்தினோடு உகந்து ஏறும் இறைவர்; பாசக்கட்டு நீத்தவர்க்கு இன்னருளே புரியும் மேலோர்.

திருச்சிராப்பள்ளி

அரிய யன்தலை வெட்டிவட் டாடினார்
அரிய யன்தொழு தேத்து மரும்பொருள்
பெரிய வன்சிராப் பள்ளியைப் பேணுவார்
அரிய யன்தொழ அங்கிருப் பார்களே. **#841**

திருமால், அயன் ஆகியோர் தலைகளை வெட்டி வட்டுப்போல் ஆடியவரும், அவ்விருவரும் தொழுது வணங்கும்அரும்பொருளும், பெரியவரும் ஆகிய அப்பெருமானுக்குரிய சிராப்பள்ளியைச் சிந்தையுள் பேணும் அன்பர், திருமாலும் பிரமனும் தொழச் சிவலோகத்திருப்பார்கள்.

திருச்சிராப்பள்ளி

அரிச்சி ராப்பக லைவரா லாட்டுண்டு
சுரிச்சி ராதுநெஞ் சேயொன்று சொல்லக்கேள்
திருச்சி ராப்பள்ளி யென்றலுந் தீவினை
நரிச்சி ராது நடக்கும் நடக்குமே. **#842**

நெஞ்சே! ஐம்புலக்கள்வரால் இராப்பகலாக அரிக்கப்பெற்று ஆட்டப்பெற்று வருந்தியிராமல் இருக்க ஓர் உபாயம் சொல்லக் கேட்பாயாக! திருச்சிராப்பள்ளி என்றலும் தீவினை பொருந்தி இருக்காமல் உன்னைவிட்டு நடக்கும்; நடக்கும்!

திருச்சிராப்பள்ளி

தாயு மாயெனக் கேதலை கண்ணுமாய்
பேய னேனையும் ஆண்ட பெருந்தகை
தேய நாதன் சிராப்பள்ளி மேவிய
நாய னாரென நம்வினை நாசமே. **#843**

தாயுமாகி எனக்குத் தலைகண்ணுமாகிப் பேயனேனாகிய என்னையும் ஆட்கொண்டருளிய பெருந்தகையும் தேயங்கட்கெல்லாம் நாதனும் ஆகிய பெருமானைச் சிராப்பள்ளி மேவிய நாயனார் என்று கூறி வாழ்த்த நம்வினை நாசம் அடையும்.

திருவாட்போக்கி

திருவாட்போக்கி, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : இரத்தினகிரீசுவரர்.
தேவியார் : சுரும்பார்குழலம்மை.

கால பாசம் பிடித்தெழு தூதுவர்
பால கர்விருத் தர்பழை யாரெனார்
ஆல நீழ லமர்ந்தவாட் போக்கியார்
சீல மார்ந்தவர் செம்மையுள் நிற்பரே. **#844**

காலபாசத்தைப் பிடித்தெழும் யமதூதுவர்கள் இவர் பாலகர், இவர் விருத்தர், இவர் பழையவர் என்று கூறிவிட்டுச் செல்லார்; கல்லால் நிழற்கீழ் அமர்ந்த வாட்போக்கியாரது சீலம் நிறைந்தவரே செம்மையுள் நின்று சிவகதிபெறுவர்.

திருவாட்போக்கி

விடுத்த தூதுவர் வந்து வினைக்குழிப்
படுத்த போது பயனிலை பாவிகாள்
அடுத்த கின்னரங் கேட்கும்வாட் போக்கியை
எடுத்தும் ஏத்தியும் இன்புறு மின்களே. **#845**

பாவிகளே! எமன் விடுத்த தூதுவர்கள் வந்து வினைக்குழியிலே படுவித்தபோது கதறிப் புலம்பிப் பயன் இல்லை;அடுத்த கின்னர இசை கேட்கும் வாட்போக்கியை எடுத்தேத்தி இன்புறுவீர்களாக.

திருவாட்போக்கி

வந்திவ் வாறு வளைத்தெழு தூதுவர்
உந்தி யோடி நரகத் திடாமுனம்
அந்தி யின்னொளி தாங்கும்வாட் போக்கியார்
சிந்தி யாவெழு வார்வினை தீர்ப்பரே. **#846**

வந்து இவ்வாறு வளைத்தெழுகின்ற எமதூதுவர்கள் மனம் உந்துதலால் ஓடி நரகத்து இடுவதன் முன்னம் அந்தியின் செவ்வொளி தாங்கிய மேனியராகிய வாட்போக்கியிறைவர் தம்மைச் சிந்தித்து எழுவார்களின் வினை தீர்ப்பர்.

திருவாட்போக்கி

கூற்றம் வந்து குமைத்திடும் போதினால்

தேற்றம் வந்து தெளவுற லாகுமே
ஆற்ற வும்மருள் செய்யும்வாட் போக்கிபால்
ஏற்று மின்விளக் கையிருள் நீங்கவே. **#847**
எமன் வந்து அழித்திடும்போதில் முடிவு வந்து தெளவுறல் ஆகாதன்றோ? மிகவும் அருள்செய்யும் வாட்போக்கி இறைவர்பால் விளக்கை இருள் நீங்க ஏற்றுவீராக.

<u>திருவாட்போக்கி</u>

மாறு கொண்டு வளைத்தெழு தூதுவர்
வேறு வேறு படுப்பதன் முன்னமே
ஆறு செஞ்சடை வைத்தவாட் போக்கியார்க்
கூறி யூறி யுருகுமென் னுள்ளமே. **#848**
மாறுபாடுகொண்டு வளைத்தெழும் எமதூதுவர் உடல் வேறு உயிர் வேறு படுப்பதன்முன்பே, கங்கையைச் சிவந்த சடையில் வைத்த வாட்போக்கி இறைவர்க்கு என் உள்ளம் ஊறி ஊறி உருகும்.

<u>திருவாட்போக்கி</u>

கான மோடிக் கடிதெழு தூதுவர்
தான மோடு தலைபிடி யாமுனம்
ஆனஞ் சாடி யுகந்தவாட் போக்கியார்
ஊன மில்லவர்க் குண்மையில் நிற்பரே. **#849**
இடுகாட்டிற்கு ஓடி, விரைந்து எழுந்த எம தூதுவர் இடத்தோடு தலையைப்பிடிப்பதற்கு முன்பே, பஞ்சகவ்வியம் ஆடுதலை உகந்த வாட்போக்கி இறைவர், குற்றமற்றவர்க்கு உண்மையில் முன்னின்றருள்வர்.

<u>திருவாட்போக்கி</u>

பார்த்துப் பாசம் பிடித்தெழு தூதுவர்
கூர்த்த வேலாற் குமைப்பதன் முன்னமே
ஆர்த்த கங்கை யடக்கும்வாட் போக்கியார்
கீர்த்தி மைகள் கிளர்ந்துரை மின்களே. **#850**
பார்த்துப் பாசம் பிடித்தெழுந்த எமதூதுவர் கூரிய வேலாற்குத்தி வருத்துவதன் முன்பே, ஆரவாரித்த கங்கையைச் சடையில் அடக்கும் வாட்போக்கி இறைவர் புகழ்த்தன்மைகளை உள்ளம் கிளர்ந்து உரைப்பீராக.

<u>திருவாட்போக்கி</u>

நாடி வந்து நமன்தமர் நல்லிருள்

கூடி வந்து குமைப்பதன் முன்னமே
ஆடல் பாட லுகந்தவாட் போக்கியை
வாடி யேத்தநம் வாட்டந் தவிருமே. **#851**
எமனைச் சார்ந்தோராகிய தூதுவர் நாடிவந்து, நள்ளிருளில் தாம் பலராய்க் கூடிவந்து வருத்துவதன் முன்பே, ஆடல் பாடல் உகந்த வாட்போக்கி இறைவரை வாடி வழிபட நம்வாட்டம் தீரும்.

திருவாட்போக்கி

கட்ட றுத்துக் கடிதெழு தூதுவர்
பொட்ட நூக்கிப் புறப்படா முன்னமே
அட்ட மாமலர் சூடும்வாட் போக்கியார்க்
கிட்ட மாகி இணையடி யேத்துமே. **#852**
கட்டுக்களை அறுத்து விரைந்து எழுந்த எமதூதுவர்கள் புறப்படுவதற்கு முன்பே, எட்டுப் பூக்களைச் சூடும் வாட்போக்கி இறைவர்க்கு விருப்பம் உடையவராகித் திருவடி ஏத்துவீராக.

திருவாட்போக்கி

இரக்க முன்னறி யாதெழு தூதுவர்
பரக்க ழித்தவர் பற்றுதன் முன்னமே
அரக்க னுக்கருள் செய்தவாட் போக்கியார்
கரப்ப துங்கரப் பாரவர் தங்கட்கே. **#853**
இரக்கமென்பதை முன்னும் அறியாது எழுந்த எமதூதுவர்கள் பரவிவந்து அழித்துப் பற்றிக்கொள்வதற்கு முன்பே, இராவணனுக்கு அருள்செய்த வாட்போக்கி இறைவர் அவர்கட்கு அகப்படாமல் தம்மடியாரை ஒளிக்கவும் ஒளிப்பர்.

திருமணஞ்சேரி

திருமணஞ்சேரி

திருமணஞ்சேரி, திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மணவாளநாயகர்.
தேவியார் : யாழ்மொழியம்மை.

பட்ட நெற்றியர் பாய்புலித் தோலினர்
நட்ட நின்று நவில்பவர் நாடொறும்
சிட்டர் வாழ்திரு வார்மணஞ் சேரியெம்
வட்ட வார்சடை யார்வண்ணம் வாழ்த்துமே. **#854**

பட்டமணிந்த நெற்றியினரும், பாயும் புலியின் தோலை உடுத்தவரும், நாள்தொறும் நட்டமாடி நின்று பாடுவோரும், உயர்ந்தவர் வாழ்கின்ற திருவுடைய மணஞ்சேரியில் வட்டமாகியவார்சடை உடைய எமது பெருமானுமாகிய இறைவர் வண்ணத்தை வாழ்த்துவீராக.

திருமணஞ்சேரி

துன்னு வார்குழ லாளுமை யாளொடும்
பின்னு வார்சடை மேற்பிறை வைத்தவர்
மன்னு வார்மணஞ் சேரி மருந்தினை
உன்னு வார்வினை யாயின வோயுமே. **#855**

நெருங்கிய நீண்ட கூந்தலை உடைய உமாதேவியோடு கூடியவரும், பின்னிய நீண்ட சடைமேற் பிறையை வைத்தவரும் ஆகிய நிலைபெற்ற நீண்ட புகழை உடைய திருமணஞ்சேரியில் மருந்தாம் பெருமானை உள்ளத்தே உன்னவார்களின் வினைகள் ஓயும்.

திருமணஞ்சேரி

புற்றி லாடர வாட்டும் புனிதனார்
தெற்றி னார்புரந் தீயெழச் செற்றவர்
சுற்றி னார்மதில் சூழ்மணஞ் சேரியார்
பற்றி னாரவர் பற்றவர் காண்மினே. **#856**

புற்றிற் பொருந்திய அரவினை ஆட்டும் புனிதரும், எல்லை மீறிய முப்புராதிகளின் கோட்டைகளைத் தீயெழச்சினந்தவரும், சுற்றிலும் நெருங்கிய மதில் சூழ்ந்த மணஞ்சேரி உறைபவருமாகிய இறைவரைப் பற்றினார்க்கு அவர் பற்றாவர்; காண்பீராக.

திருமணஞ்சேரி

மத்த மும்மதி யும்வளர் செஞ்சடை
முத்தர் முக்கணர் மூசர வம்மணி
சித்தர் தீவணர் சீர்மணஞ் சேரியெம்
வித்தர் தாம்விருப் பாரை விருப்பரே. **#857**
ஊமத்தமலரும், பிறையும் வளருஞ் சிவந்த சடையை உடைய முத்தி நாயகரும், முக்குணங்களை உடையவரும், ஒலிக்கும் அரவம் அணிந்த சித்தரும், தீயின்வண்ணம் உடையவரும், பெருமைமிக்க மணஞ்சேரியில் வித்தாயிருப்பாருமாகிய இறைவர் தம்மை விரும்பியவரைத் தாம் விரும்புபவர் ஆவர்.

திருமணஞ்சேரி

துள்ளு மான்மறி தூமழு வாளினர்
வெள்ள நீர்கரந் தார்சடை மேலவர்
அள்ள லார்வயல் சூழ்மணஞ் சேரியெம்
வள்ள லார்கழல் வாழ்த்தல்வாழ் வாவதே. **#858**
துள்ளும் மான்குட்டியையும், தூய மழு வாளினையும் உடையவரும், சடைமேற் கங்கையை மறைத்தவரும் ஆகிய சேறு நிறைந்த வயல் சூழ்ந்த மணஞ்சேரியில் உறையும் வள்ளலார் கழல்களை வாழ்த்தலே வாழ்வாவது.

திருமணஞ்சேரி

நீர்ப ரந்த நிமிர்புன் சடையின்மேல்
ஊர்ப ரந்த உரகம் அணிபவர்
சீர்ப ரந்த திருமணஞ் சேரியார்
ஏர்ப ரந்தங் கிலங்குசூ லத்தரே. **#859**
கங்கைநீர் பரவி நிமிர்ந்து விளங்கும் சடையின் மேல் ஊர்ந்து பரவுகின்ற பாம்பினை அணிந்தவராகிய பெருமை பரவிய திருமணஞ்சேரி இறைவர் எழில் பெருகி விளங்கும் சூலப் படையினை உடையவர்.

திருமணஞ்சேரி

சுண்ணத் தர்சுடு நீறுகந் தாடலார்
விண்ணத் தம்மதி சூடிய வேதியர்
மண்ணத் தம்முழ வார்மணஞ் சேரியார்
வண்ணத் தம்முலை யாளுமை வண்ணரே. **#860**
சுண்ணம் பூசியவரும், சுட்ட வெண்ணீற்றினை உகந்து ஆடுபவரும், விண்ணின் மதியைச் சூடிய வேதியரும் ஆகிய மார்ச்சனை பொருந்திய முழவு ஆர்க்கும் மணஞ்சேரி உறையும் இறைவர், நிறம் உடைய முலையாளாகிய உமையின் வண்ணம் உடையவர் ஆவர்.

திருமணஞ்சேரி

துன்ன வாடையர் தூமழு வாளினர்
பின்னு செஞ்சடை மேற்பிறை வைத்தவர
மன்னு வார்பொழில் சூழ்மணஞ் சேரியெம்
மன்ன னார்கழ லேதொழ வாய்க்குமே. **#861**

பின்னிய நூலாடையினரும், தூயமழு வாளினரும், பின்னிய சிவந்த சடையின்மேல் பிறை வைத்தவரும் ஆகிய, நிலைபெற்ற நீண்ட பொழில்கள் சூழும் மணஞ்சேரி உறையும் மன்னனார் கழலே தொழ வாய்ப்பாவது.

திருமணஞ்சேரி

சித்தர் தேவர்கள் மாலொடு நான்முகன்
புத்தர் சேரமண் கையர் புகழவே
மத்தர் தாமறி யார்மணஞ் சேரியெம்
அத்த னாரடி யார்க்கல்ல லில்லையே. **#862**

சித்தர்களும், தேவர்களும், திருமாலும், நான்முகனும், புத்தரும், உடையற்றவராய சமண ஒழுக்கத்தினரும் புகழ, உலக மையலிற்பட்டவர் அறியாத மணஞ்சேரி மேவிய எம் தலைவரது அடியார்க்கு அல்லல் இல்லை.

திருமணஞ்சேரி

கடுத்த மேனி யரக்கன் கயிலையை
எடுத்த வன்னெடு நீண்முடி பத்திறப்
படுத்த லும்மணஞ் சேரி யருளெனக்
கொடுத்த னன்கொற்ற வாளொடு நாமமே. **#863**

ஆற்றல் மிகுந்த இராவணன் திருக்கயிலையை எடுத்தபோது அவன் நீண்ட முடிகள் பத்தும் இற்றுவிழச்செய்தலும், "மணஞ்சேரி இறைவா! அருள்வாயாக" என்று அவன்கூவ அவனுக்கு வெற்றிதரும் வாளையும், நாமத்தையும் கொடுத்தனன் பெருமான்.

திருமருகல்

திருமருகல்

திருமருகல், திருக்குறுந்தொகை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாணிக்கவண்ணர்.
தேவியார் : வண்டுவார்குழலி.

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே. **#864**

மருகல் இறைவன் திருவடி வாழ்த்தி வணங்கினால் தவம் பெருகலாம்; அறியாமை தீரலாம்; மாறுபட்டதாகிய சிந்தை திருத்தலாம்; கடவுண்மயமாகிய ஒப்பற்ற பேரானந்தத்தைப் பருகலாம்.

திருமருகல்

பாடங் கொள்பனு வல்திறங் கற்றுப்போய்
நாடங் குள்ளன தட்டிய நாணிலீர்
மாடஞ் சூழ்மரு கற்பெரு மான்திரு
வேடங் கைதொழ வீடௌ தாகுமே. **#865**

பாடங்கொண்ட நூல் திறங்களையெல்லாம் கற்றுப்போய் நாட்டில் உள்ளன எல்லாம் பொருந்திய நாணமற்றீரே!மாடங்கள் சூழ்ந்த மருகற் பெருமானின் திருவேடத்தைக் கைகளால் தொழுதால் வீட்டுலகமும் உமக்கு எளிதாகும்.

திருமருகல்

சினத்தி னால்வருஞ் செய்தொழி லாமவை
அனைத்து நீங்கிநின் றாதர வாய்மிக
மனத்தி னால்மரு கற்பெரு மான்திறம்
நினைப்பி னார்க்கில்லை நீள்நில வாழ்க்கையே. **#866**

கோபத்தினால் வருகின்ற செய்யப்படுவதான தொழில்களாகிய பிற தீச்செயல்கள் அனைத்தையும் நீங்கி நின்று ஆதரவாகி உள்ளத்தினால் மருகல் பெருமானாகிய இறைவன் திறத்தை நினைப்பவர்க்கு இவ்வுலக வாழ்க்கை இல்லை.

திருமருகல்

ஓது பைங்கிளிக் கொண்பா லமுதூட்டிப்

பாது காத்துப் பலபல கற்பித்து
மாது தான்மரு கற்பெரு மானுக்குத்
தூது சொல்ல விடத்தான் தொடங்குமே. **#867**

இப்பெண் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைக்கு ஒள்ளிய பால் அமுது ஊட்டிப் பின் அதனைப் பாதுகாத்துப் பலபல வார்த்தைகளை அதற்குக் கற்பித்து மருகற் பெருமானுக்குத் தூது சொல்லிவிடத் தொடங்குகின்றாள்.

திருமருகல்

இன்ன வாறென்ப துண்டறி யேனின்று
துன்னு கைவளை சோரக்கண் நீர்மல்கும்
மன்னு தென்மரு கற்பெரு மான்திறம்
உன்னி யொண்கொடி யுள்ள முருகுமே. **#868**

நிலைபெற்ற அழகிய மருகல் இறைவன் திறமே நினைந்து இப்பெண் கொடியாளாகிய தலைவி உள்ளம் உருகுகின்றாள்; நெருங்கிய கைவளைகள் சோர நின்று கண்ணீர் மல்குகின்றாள்; இதனைத் தீர்ப்பது இன்ன வழி உண்டு என்பது அறியேனாயினேன் யான்.

திருமருகல்

சங்கு சோரக் கலையுஞ் சரியவே
மங்கை தான்மரு கற்பெரு மான்வரும்
அங்க வீதி யருகணை யாநிற்கும்
நங்கை மீரிதற் கென்செய்கேன் நாளுமே. **#869**

பெண்களே! தன் சங்கு வளையல்கள் நெகிழவும், உடை சரியவும் இம்மங்கைதான், மருகல் இறைவன் திருவீதியுலாவருகின்ற அங்க வீதியின் அருகு நாளும் அணைந்து நிற்பாள்; நான் இதற்கு என்னசெய்வேன்?

திருமருகல்

காட்சி பெற்றில ளாகிலுங் காதலே
மீட்சி யொன்றறி யாது மிகுவதே
மாட்சி யார்மரு கற்பெரு மானுக்குத்
தாழ்ச்சி சாலவுண் டாகுமென் தையலே. **#870**

என் பெண் மாட்சிகள் நிறைந்த மருகற்பெருமானுக்கு மனம் தாழும் விருப்பம் மிகவும் உண்டாயினள்; அவனைக் காணும் காட்சியைப் பெற்றிலள் ஆயினும் காதலினின்று மீளுகைக்கு ஒன்றும் அறியாதவள் ஆகி அவ்விருப்பமே மிகுந்தது.

திருமருகல்

நீடு நெஞ்சுள் நினைந்துகண் நீர்மல்கும்
ஓடு மாலினோ டொண்கொடி மாதராள்
மாடம் நீள்மரு கற்பெரு மான்வரில்
கூடு நீயென்று கூட லிழைக்குமே. **#871**

நெஞ்சுக்குள் நீள நினைந்து கண்ணீர் மல்கி ஓடும் மயக்கத்தினோடு
இவ்வொண் தொடியணிந்த பெண், மாடங்கள் நீண்டுயர்ந்த மருகல்
இறைவன் வரின் நீ கூடு என்று கூடல் இழைத்து வருந்துவாள்..

திருமருகல்

கந்த வார்குழல் கட்டிலள் காரிகை
அந்தி மால்விடை யோடுமன் பாய்மிக
வந்தி டாய்மரு கற்பெரு மானென்று
சிந்தை செய்து திகைத்திடுங் காண்மினே. **#872**

மணம் வீசும் நீண்ட கூந்தலை முடியாதவளாய் இப்பெண்,
மால்விடையோடும் மிக்க அன்பாய் "மருகற்பெருமானே! வந்திடாய்!"
என்று சிந்தித்து வாராமையாற் பின்னும் திகைப்பாள்; காண்பீராக.

திருமருகல்

ஆதி மாமலை யன்றெடுத் தானிற்றுச்
சோதி யென்றலுந் தொல்லருள் செய்திடும்
ஆதி யான்மரு கற்பெரு மான்திறம்
ஓதி வாழ்பவர் உம்பர்க்கு மும்பரே. **#873**

ஆதியிற்றோன்றிய திருக்கயிலாயத் திருமலையினை அன்று
எடுத்தவனாகிய இராவணன் தலை இற்றுச் "சோதியே" என்று
கூறுதலும், பழைய அருள் புரிந்திடும் ஆதியானாகிய மருகற்பெருமான்
திறத்தையே ஓதி வாழ்பவர் தேவர்க்கும் தேவராவர்.

தனி

தனி

தனி, திருக்குறுந்தொகை

ஒன்று வெண்பிறைக் கண்ணியோர் கோவணம்
ஒன்று கீளுமை யோடும் உடுத்தது
ஒன்று வெண்தலை யேந்தியெம் உள்ளத்தே
ஒன்றி நின்றங் குறையு மொருவனே. **#874**

வெண்தலை ஒன்று ஏந்தி எம் உள்ளத்தே ஒன்றிநின்று அங்கு உறையும் ஒருவனாம் இறைவன் வெண் பிறையாகிய கண்ணி ஒன்று உடையவன்; உமையோடும் உடுத்தது ஒரு கிழிந்த கோவண உடை.

தனி

இரண்டு மாமவர்க் குள்ளன செய்தொழில்
இரண்டு மாமவர்க் குள்ளன கோலங்கள்
இரண்டு மில்லிள மானெமை யாளுகந்
திரண்டு போதுமென் சிந்தையுள் வைகுமே. **#875**

அவர்க்கு உள்ளனவாகிச் செய்யுந்தொழில்கள் இரண்டு; அவர்க்கு உள்ளனவாகிய கோலங்கள் இரண்டு; எமை ஆளாகக்கொண்டு உகந்து இரவும் பகலும் என் சிந்தையுள் தங்கியிருக்கும்.

தனி

மூன்று மூர்த்தியுள் நின்றிய லுந்தொழில்
மூன்று மாயின மூவிலைச் சூலத்தன்
மூன்று கண்ணினன் தீத்தொழின் மூன்றினன்
மூன்று போதுமென் சிந்தையுள் மூழ்குமே. **#876**

மும்மூர்த்திகளுள் நின்று இயலுகின்ற தொழில் மூன்றும் உடையவன்; மூவிலை வடிவாகிய சூலத்தை உடையவன்; மூன்று கண்ணினன்; தீத்தொழில் மூன்றுடையவன்; மூன்றுபொழுதும் என் சிந்தையுள் மூழ்கியிருப்பான்.

தனி

நாலின் மேன்முகஞ் செற்றது மன்னிழல்
நாலு நன்குணர்ந் திட்டது மின்பமாம்
நாலு வேதஞ் சரித்தது நன்னெறி
நாலு போலெம் அகத்துறை நாதனே. **#877**

எம் உள்ளத்து உறையும் இறைவன் நான்கின் மேலும்

ஒருமிகைமுகமாகிய பிரமனது ஐந்தாவது முகத்தைச் சினந்தவன்; நிலைபெற்ற ஆல நிழலில் நன்கு உணர்ந்திட்ட வேதங்கள் நான்கினை உடையவன்; இன்பமாகிய நான்கு வேதங்களையே குதிரைகளாகக் கொண்டவன்; நல்ல நெறி சரியை முதலிய நான்கு ஆகும்.

தனி

அஞ்சு மஞ்சுமோ ராடி யரைமிசை
அஞ்சு போலரை யார்த்ததின் தத்துவம்
அஞ்சு மஞ்சுமோ ரோரஞ்சு மாயவன்
அஞ்சு மாமெம் அகத்துறை யாதியே. **#878**

என் அகத்து உறை ஆதி. ஆனைந்து ஆடி. ஐந்தொழில் நடனம் ஆடி. இடையில் ஐந்தலை அரவார்த்தவன் அவன். தத்துவங்களாகிய இருபத்தைந்தின் கூறானவன்.

தனி

ஆறு கால்வண்டு மூசிய கொன்றையன
ஆறு சூடிய அண்ட முதல்வனார்
ஆறு கூர்மையர்க் கச்சம யப்பொருள்
ஆறு போலெம் அகத்துறை யாதியே. **#879**

எம் உள்ளத்துறையும் முதல்வனாகிய பெருமான், ஆறு கால்களையுடைய வண்டு ஒலிக்கும் கொன்றையை உடையவன்; கங்கையாற்றைச் சடையிற் சூடிய அண்டங்களுக்கெல்லாம் முதல்வன்; கூரிய அறிவுடைய அறுவகைச் சமயத்தார்க்கு அச்சமயப் பொருளும் நெறியும் ஆயவன்.

தனி

ஏழு மாமலை யேழ்பொழில் சூழ்கடல்
ஏழு போற்றுமி ராவணன் கைந்நரம்
பேழு கேட்டருள் செய்தவன் பொற்கழல்
ஏழுஞ் சூழடி யேன்மனத் துள்ளவே. **#880**

ஏழுமலை ஏழுபுவனம் ஏழ்கடல் போற்றும் இராவணனது ஏழிசைகேட்டு அருள்செய்தவன். அவன் திருவடிகள் எழுபிறவிகளிலும் என்னுள்ளத்தின்கண்ணே உள்ளன.

தனி

எட்டு மூர்த்தியாய் நின்றிய லுந்தொழில்
எட்டு வான்குணத் தீசனெம் மான்றனை
எட்டு மூர்த்தியு மெம்மிறை யெம்முளே

எட்டு மூர்த்தியு மெம்மு ளொடுங்குமே. **#881**
அட்டமூர்த்தியாய்த் தொழில் செய்பவன். எண்குணன். எம் இறைவனாயுள்ள அவ்வெட்டுமூர்த்தி என்னுள்ளத்து எட்டும் மூர்த்தியாய் ஒடுங்கியிருப்பன்.

தனி

ஒன்ப தொன்பதி யானை யொளிகளி
றொன்ப தொன்பது பல்கணஞ் சூழவே
ஒன்ப தாமவை தீத்தொழி லின்னுரை
ஒன்ப தொத்துநின் றென்னு ளொடுங்குமே. **#882**
எண்பத்தொரு பதங்களில் பேசப்படுபவன். பதினெண் சிவகணங்கள் அல்லது எண்பத்தொரு யானைகள் சூழப்பெற்றவன். உடலிடத்துள்ள ஒன்பது வாயிலும் தீத்தொழிலிற் சேராதவாறு ஒன்பது ஒத்து எனக்குள் ஒடுங்குவான்.

தனி

பத்து நூறவன் வெங்கண்வெள் ளேற்றண்ணல்
பத்து நூறவன் பல்சடை தோள்மிசை
பத்தி யாமில மாதலின் ஞானத்தால்
பத்தி யானிடங் கொண்டது பள்ளியே. **#883**
அளவற்ற பெருமையன். சிவகணங்கள் பல்லாயிரவரை உடையவன். அடியவர் உள்ளங்களையே தங்குமிடமாகக் கொண்டவன்.

தனி

தனி, திருக்குறுந்தொகை
மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே. **#884**
இறைவனாகிய எந்தையின் திருவடி நீழல் குற்றமற்ற வீணையின் நாதமும், மாலையிலே தோன்றிய நிலவின் தண்மையும், வீசுகின்ற தென்றலின் சாயலும், செறிந்த இளவேனிலின் மாட்சியும், ஒலிக்கும் வண்டுகள் மொய்க்கும் பொய்கையின் குளிர்ச்சியும் போன்று இன்பம் பயப்பதாகும்.

தனி

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்

நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. **#885**
ஞானமும், கல்வியும், நானறிந்த வித்தையும் பஞ்சாட்சரமே; நா கூறி வழிபடுவதும் அதனையே; நன்னெறி காட்டுவதும் அத்திருமந்திரமேயாகும்.

தனி

ஆளா காரா ளானாரை யடைந் துய்யார்
மீளா ஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்
தோளா தசுரை யோதொழும் பர்செவி
வாளா மாய்ந்துமண் ணாகிக் கழிவரே. **#886**
இறைவனுக்கு ஆளாகமாட்டார்; அவ்வாறு ஆளாகிய மெய்யடியார்களைச் சார்ந்து உய்யவும் மாட்டார். மீளா ஆளாய் மெய்ம்மையுள் நிற்கும் ஆற்றல் இல்லார்; அத்தகைய இழிந்தவர் செவிகள் துளையிட்டுப் பயன்படுத்தவியலாத செவியோ? அந்தோ! வீணே இறந்து மண்ணாகி ஒழிவர்!

தனி

நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே. **#887**
நாணமற்றவர்களே! துன்பம் மிக்க வாழ்வினைக் கொண்டு என்ன செய்வீர்? நீர் இறுதியில் சுடுகாடு அடைவது உறுதி என்பதற்கு ஆன்றோர் சொற்களே சான்று. திருப்பாற்கடலினின்றெழுந்த ஆலகால விடத்தை உண்ட இறைவர் கைவிட்டால், உடல் கிடந்து ஊரார் வெறுக்கும் பொருளாகிவிடும்.

தனி

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கை கேயிரை யாகிக் கழிவரே. **#888**
பூக்களைக் கையிற்கொண்டு சிவபிரானின் பொன்னார் திருவடிகளைப் போற்றுதலில்லாதவர்களும், நாவினைக் கொண்டு இறைவன் திருநாமத்தை நவிலாதவர்களும் தத்தம் உடலுக்கே உணவுதேடிச் சுழன்று இறுதியில் காக்கைக்கே தாம் இரையாகி ஒழிவர்.

தனி

குறிக ளும்மடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்மவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே. **#889**

விதியற்றவர்களே! குறிகளும், அடையாளமும், கோயிலும், நெறிகளும், அவ்விறைவர் நின்றதோர் நேர்மையும் அறிய ஆயிரம் வேதங்கள் கூறினும் உம் மனம் அவற்றுட் புகாதது என்னையோ?

தனி

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே. **#890**

தன்னை வாழ்த்துதற்கு வாயும், தன்னை நினைக்க அறிவற்ற நெஞ்சும், தன்னை வணங்கத் தலையும் தந்த தலைவனாகிய பெருமானை வண்டுகள் சூழ்ந்த மலர்களைத் தூவித்துதிக்காமல், வினையேன் நெடுங்காலம் வீழ்த்தியவாறு என்னே?

தனி

எழுது பாவைநல் லார்திறம் விட்டுநான்
தொழுது போற்றிநின் றேனையுஞ் சூழ்ந்துகொண்
டுழுத சால்வழி யேயுழு வான்பொருட்
டிழுதை நெஞ்சமி தென்படு கின்றதே. **#891**

எழுதிய பாவைச் சித்திரம் போன்ற அழகுடைய பெண்கள் திறத்தின் நீங்கி நான்தொழுது போற்றி நிற்க. என்னையும் ஆராய்ந்து கொண்டு உழுத சால் வழியே பின்னும் உழுவதன் பொருட்டு மிக்க இழிவுடைய நெஞ்சம் செய்கின்றது தானா என்னை?.

தனி

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே. **#892**

நெகிழ்ந்து நெகிழ்ந்து நினைபவர் நெஞ்சுளே புகுந்து நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன், பொய்ம்மையாளர் பூசையிற் பூவையும் நீரையும் கண்டு அவர் தம்மை நாணிச் சிரித்து நிற்பன்.

தனி

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே. **#893**

விறகில் தீப்போலவும், பாலிற்பொருந்திய நெய்போலவும், மாமணிச் சோதியானாகிய இறைவன் மறைய நின்றுளன்; உறவு என்னுங்கோலை நட்டு உணர்வு என்ற கயிற்றினால் முறுகவாங்கிக் கடைந்தால் முன்னின்று அருள் வழங்குவான்.

தனி

தனி, திருக்குறுந்தொகை

ஏயி லானையெ னிச்சை யகம்படிக்
கோயி லானைக் குணப்பெருங் குன்றினை
வாயி லானை மனோன்மணி யைப்பெற்ற
தாயி லானைத் தழுவுமென் ஆவியே. **#894**

தமக்குமேல் தலைவன் இல்லாதவன். உள்ளக்கோயிலான். குணக்குன்று. வாழ்த்துவோர் வாய் இல்லமாக உடையவன். சத்தியை ஈன்றவன். தனக்கொரு தாய் இல்லாதவன். அவனை என்னுயிர் தழுவும்.

தனி

முன்னை ஞான முதல்தனி வித்தினைப்
பின்னை ஞானப் பிறங்கு சடையனை
என்னை ஞானத் திருளறுத் தாண்டவன்
தன்னை ஞானத் தளையிட்டு வைப்பனே. **#895**

பழைய ஞான முதல் தனி வித்தும், பின்னை ஞானம் பிறங்கு சடையனும், என்னை இருள் நீக்கி ஞானத்தால் ஆண்டவனும் ஆகிய இறைவன் தன்னை ஞானமென்னும் தளையினால் பிணித்து உள்ளத்தே வைப்பேன்.

தனி

ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேனுனை நானலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாயுனை நானுந் தொழுவனே. **#896**

சில ஞானிகள் நின்னை ஞானத்தால் தொழுவார்கள்; ஞானத்தால் உன்னை நான் தொழும் திறம் உடையேனல்லேன்; ஞானத்தால்

தொழுகின்றவர்கள் தொழுதலைக் கண்டு, ஞானவடிவாகிய பொருளே! உன்னை நானும் தொழுவன்.

தனி

புழுவுக் குங்குணம் நான்கெனக் கும்மதே
புழுவுக் கிங்கெனக் குள்ளபொல் லாங்கில்லை
புழுவி னுங்கடை யேன்புனி தன்தமர்
குழுவுக் கெவ்விடத் தேன்சென்று கூடவே. **#897**

புழுவுக்கும் குணம் நான்கு; எனக்கும் அவ்வாறே. ஆயினும் எனக்குள்ள பொல்லாங்கு புழுவுக்கில்லையாதலின் புழுவினுங்கடையேனாகிய அடியேன் புனிதனாகிய பெருமானைச் சார்ந்த அடியார் குழுவினுக்குச் சென்றுகூட எவ்விடத்தை உடையேன் ஆவேன்?

தனி

மலையே வந்து விழினும் மனிதர்காள்
நிலையில் நின்று கலங்கப் பெறுதிரேல்
தலைவ னாகிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே. **#898**

மனிதர்களே! மலையே வந்து விழுந்தாலும் தன் நிலையில் நின்று கலங்காதீர்கள். அவ்வாறு கலங்குவீர்களேயானால் ஈசன் அடியார்களை ஐம்பொறிகளாகிய யானைகளே கொன்றுவிடும்.

தனி

கற்றுக் கொள்வன வாயுள நாவு
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம்
எற்றுக் கோநம னால்முனி வுண்பதே. **#899**

திருவைந்தெழுத்தைக் கற்றுக்கொள்ளுவதற்கு வாயும் நாவும் உள்ளன; இட்டுக்கொள்ளப் பூவும், நீரும் உள்ளன;தொகுதியாகிய சிவந்த சடையான் உள்ளான்; நாம் உள்ளோம். இவையெல்லாம் இருக்க எமனால் முனிவுண்பது எற்றுக்கு?

தனி

மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசனெ னுங்கனி
இனிது சாலவு மேசற்ற வர்கட்கே. **#900**

மனிதர்களே! இங்கே வாருங்கள்; ஒன்று சொல்லுவேன்; பழம் தந்தால்

பழத்தை உண்ணவும் வல்லமை உடையீரோ? புனிதனும் கழல்கள் அணிந்த இறைவனும் ஆகிய கனி; ஏசற்றவர்களுக்கு மிகவும் இனியது; காண்பீராக.

தனி

என்னை யேது மறிந்தில னெம்பிரான்
தன்னை நானுமுன் ஏது மறிந்திலேன்
என்னைத் தன்னடி யானென் றறிதலும்
தன்னை நானும் பிரானென் றறிந்தெனே. **#901**

முன் என்னையே ஏதும் அறிந்திலேன்; எம்பெருமானையும் அறிந்திலேன். என்னைத் தன் அடியான் என்றுபெருமான் அறிதலும் தன்னைக்காணும் தலைவன் என்று நானும் அறிந்துகொண்டேன்.

தனி

தெளளத் தேறித் தெளந்துதித் திப்பதோர்
உள்ளத் தேற லமுத வொளிவெளி
கள்ளத் தேன்கடி யேன்கவ லைக்கடல்
வெள்ளத் தேனுக்கெவ் வாறு விளைந்ததே. **#902**

மிக்குத் தெளந்து தித்திப்பதாகிய ஒப்பற்ற உள்ளத்தேன்; அமுதப்பேரொளியும் வெளியும் ஆகிய அவ் அநுபவம் கள்ளம் உடையேனும், கவலைக்கடலைக் கடியாது அவ்வெள்ளத்தே விழுந்துகிடப்பேனுமாகிய எனக்கு விளைந்தது எவ்வாறு?

காலபாராயணம்

காலபாராயணம்

காலபாராயணம், திருக்குறுந்தொகை

கண்டு கொள்ளரி யானைக் கனிவித்துப்
பண்டு நான்செய்த பாழிமை கேட்டிரேல்
கொண்ட பாணி கொடுகொட்டி தாளங்கைக்
கொண்ட தொண்டரைத் துன்னிலுஞ் சூழலே. **#903**

காலதூதர்களே! கண்டுகொள்ள அரியவன். உள்ளத்தைக் கனியச்செய்து முன்பு நான் செய்த அடிமைத் திறத்தைக் கேட்பீரேயானால் தொண்டரைச் சூழாதீர்கள்.

காலபாராயணம்

நடுக்கத் துள்ளும் நகையுளும் நம்பர்க்குக்
கடுக்கக் கல்ல வடமிடு வார்கட்குக்
கொடுக்கக் கொள்க வெனவுரைப் பார்களை
இடுக்கண் செய்யப் பெறீரிங்கு நீங்குமே. **#904**

அஞ்சியும் அன்புசெய்தும் இறைவனிடத்து அன்புடையவராய் ஈகை செய்யும் அடியவரைத் துன்புறுத்தாது அகலுங்கள்.

காலபாராயணம்

கார்கொள் கொன்றைக் கடிமலர்க் கண்ணியான்
சீர்கொள் நாமஞ் சிவனென் றரற்றுவார்
ஆர்க ளாகிலு மாக அவர்களை
நீர்கள் சாரப் பெறீரிங்கு நீங்குமே. **#905**

கார்காலத்திலே மலர்தலைக்கொண்ட கொன்றையின் மணமிக்க மலர்களைக் கண்ணியாக அணிந்தவனது பெருமை கொண்ட திருநாமமாகிய சிவன் என்று அரற்றுவார் ஆராயினும் ஆக; அவர்களை நீர் சாரப்பெறாதீர்; நீங்குவீராக.

காலபாராயணம்

சாற்றி னேன்சடை நீண்முடிச் சங்கரன்
சீற்றங் காமன்கண் வைத்தவன் சேவடி
ஆற்ற வுங்களிப் பட்ட மனத்தராய்ப்
போற்றி யென்றுரைப் பார்புடை போகலே. **#906**

சடையோடு கூடிய நீள்முடியுடைய சங்கரனும், காமனைச் சினந்து எரிசெய்தவனுமாகிய பெருமான் சேவடியைப் போற்றி என்று மிகவும்

களிப்புடைய உள்ளத்தவராய் உரைப்பார் பக்கம் நீவிர் செல்லேல்.

காலபாராயணம்

இறையென் சொல்மற வேல்நமன் தூதுவீர்
பிறையும் பாம்பு முடைப்பெரு மான்தமர்
நறவம் நாறிய நல்நறுஞ் சாந்திலும்
நிறைய நீறணி வாரெதிர் செல்லலே. **#907**

நமன் தூதுவர்களே! என்சொல்லைச் சிறிதும் மறவாதீர்; பிறையும் பாம்பும் உடையான் தமர்களாகிய தேன் நறுமணம் வீசும் நல்ல நறுவிய சாந்தினைவிட நிறையத் திருநீறு பூசும் அடியவர் எதிர் நீவிர் செல்லேல்.

காலபாராயணம்

வாம தேவன் வளநகர் வைகலும்
காம மொன்றில ராய்க்கை விளக்கொடு
தாமம் தூபமும் தண்நறுஞ் சாந்தமும்
ஏம மும்புனை வாரெதிர் செல்லலே. **#908**

வாமதேவனாகிய சிவபெருமான் வளநகராந்திருக்கோயிலில் நாள்தோறும் மனத்தின்கண் வேறொரு விருப்பமும் இல்லாதவராய்க் கைவிளக்கும், தூபமும், மாலையும், தண்ணிய நறுவிய சாந்தமும், பிற வாசனைப் பொருள்களும் புனைவார் எதிர் நீவிர் செல்லேல்.

காலபாராயணம்

படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன் மின்நம தீச னடியரை
விடைகொ ளூர்தியி னானடி யார்குழாம்
புடைபு காதுநீர் போற்றியே போமினே. **#909**

படைக்கலமும் பாசக்கயிறும் பற்றியகையை உடைய தூதுவர்களே! நமது ஈசன் அடியரை அடையாதீர்; இடபத்தை ஊர்தியாகக்கொண்ட இறைவன் அடியார் குழாத்தின் புடை நீர் போகாமல் அவர்களை வழிபட்டுப் போவீராக.

காலபாராயணம்

விச்சை யாவதும் வேட்கைமை யாவதும்
நிச்சல் நீறணி வாரை நினைப்பதே
அச்ச மெய்தி யருகணை யாதுநீர்
பிச்சை புக்கவன் அன்பரைப் பேணுமே. **#910**

வித்தையாவதும், விருப்பத்துக்குரிய தன்மையும் ஆவதும் நாள்தோறும் திருநீறணியும் மெய்யடியாரை நினைப்பதே; அச்சம் கொண்டு, பிச்சை

புகும் பெருமானின் அன்பர்களை நீர் பேணுவீராக.

காலபாராயணம்

இன்னங் கேண்மி னிளம்பிறை சூடிய
மன்னன் பாதம் மனத்துட னேத்துவார்
மன்னு மஞ்செழுத் தாகிய மந்திரம்
தன்னி லொன்றுவல் லாரையுஞ் சாரலே. **#911**

இன்னும் கேட்பீராக; இளம் பிறையினைச் சூடிய அருளரசனாகிய சிவபெருமான் திருவடியோடுகூடிய உள்ளத்துடன் ஏத்தி வழிபடுவார்களையும் நிலைபெற்ற திருவைந்தெழுத்தாகிய மந்திரத்தில் ஒன்று வல்லவரையும் நீவிர் சாரவேண்டா.

காலபாராயணம்

மற்றுங் கேண்மின் மனப்பரிப் பொன்றின்றிச்
சுற்றும் பூசிய நீற்றொடு கோவணம்
ஒற்றை யேறுடை யானடி யேயலால்
பற்றொன் றில்லிகள் மேற்படை போகலே. **#912**

மற்றும் கேட்பீராக; மனத்திலே வேறொன்றும் தாங்குதலின்றி மேனிமுழுதும் பூசிய திருநீற்றொடு கோவணமும் கொண்டு ஒப்பற்ற தனி இடபத்தை உடைய இறைவன் திருவடிகளே அல்லால் வேறு பற்று ஒன்றும் இல்லாதவர்களாகிய அடியார்கள்மேல் படைகொண்டு போகவேண்டா.

காலபாராயணம்

அரக்க னீரைந் தலையுமோர் தாளினால்
நெருக்கி யூன்றியிட் டான்தமர் நிற்கிலும்
சுருக்கெ னாதங்குப் பேர்மின்கண் மற்றுநீர்
சுருக்கெ னிற்சுட ரான்கழல் சூடுமே. **#913**

இராவணனை நெரித்த பெருமானது அடியவர்களைவிட்டு அகலுங்கள்: நீங்கள் ஏதேனும் இடையூறு செய்யமுயன்றால் அவன் திருவடி சுடும்.

மறக்கிற்பனே என்னும்

மறக்கிற்பனே என்னும்

மறக்கிற்பனே என்னும், திருக்குறுந்தொகை

காச னைக்கன லைக்கதிர் மாமணித்
தேச னைப்புக ழார்சிலர் தெண்ணர்கள்
மாசி னைக்கழித் தாட்கொள வல்லவெம்
ஈச னையினி யான்மறக் கிற்பனே. **#914**

காசு உடையவனும், கனல் உடையவனும், ஒளிச்சுடர்விடும் செம்மணி விளக்கம் உடையவனுமாகிய பெருமானைச் சில தெளவற்ற மூடர்கள் புகழார். குற்றத்தினைக் கழித்து ஆட்கொள்ளவல்ல எம் இறைவனை இனி நான் மறக்கும் வல்லமை உடையேனோ?.

மறக்கிற்பனே என்னும்

புந்திக் குவிளக் காய புராணனைச்
சந்திக் கண்நட மாடுஞ் சதுரனை
அந்தி வண்ணனை ஆரழல் மூர்த்தியை
வந்தெ னுள்ளங்கொண் டானை மறப்பனே. **#915**

புத்திக்கு விளக்காக உள்ள மிகப்பழமையனும், நடம் ஆடும் சதுரப்பாடு உடையவனும், அந்திச்செவ்வண்ணம் உடையவனும், நிறைந்த அழல்கொண்ட மூர்த்தியும், வந்து என்னுள்ளம் கொண்டவனுமாகிய பெருமானை மறப்பேனோ?

மறக்கிற்பனே என்னும்

ஈச னீசனென் றென்று மரற்றுவன்
ஈசன் தானென் மனத்திற் பிரிவிலன்
ஈசன் தன்னையு மென்மனத் துக்கொண்டு
ஈசன் தன்னையும் யான்மறக் கிற்பனே. **#916**

ஈசன் ஈசன் என்றும் வாய்விட்டு அரற்றுவேன்; ஈசன் என் மனத்தில் பிரிவில்லாதவனாய் உள்ளான் - ஈசனையும் என் மனத்துக்கொண்டபின், தன்னை யான் மறக்கும் வல்லமை உடையேனோ?

மறக்கிற்பனே என்னும்

ஈச னென்னை யறிந்த தறிந்தனன்
ஈசன் சேவடி யேற்றப் பெறுதலால்
ஈசன் சேவடி யேத்தப்பெற் றேனினி
ஈசன் தன்னையும் யான்மறக் கிற்பனே. **#917**

இறைவன் சேவடிகளை ஏத்தப் பெறும் இயல்பினன் ஆதலால் என்னை இறைவன் அறிந்ததை யான் அறிந்தேன்; பிறகும் அவன் சேவடியை ஏத்தப்பெற்றேன்; ஆதலின் இனி ஈசனை யான் மறக்கும் வல்லமை உடையேனோ?

மறக்கிற்பனே என்னும்

தேனைப் பாலினைத் திங்களை ஞாயிற்றை
வான வெண்மதி சூடிய மைந்தனை
வேனி லானை மெலிவுசெய் தீயழல்
ஞான மூர்த்தியை நான்மறக் கிற்பனே. **#918**

தேனும், பாலும் போல்வானும், சந்திரனும் சூரியனும் போல்வானும், வானத்தின்கண் வெண்மதியினைச் சூடிய வீரனும், இளவேனிலுக்குரியவனாகிய மன்மதனைத் தீயழலால் மெலியச் செய்தவனுமாகிய ஞானக் கடவுளை நான் மறக்கும் வல்லமை உடையேனோ?

மறக்கிற்பனே என்னும்

கன்ன லைக்கரும் பூறிய தேறலை
மின்ன னைமின் னனைய உருவனைப்
பொன்ன னைமணிக் குன்று பிறங்கிய
என்ன னையினி யான்மறக் கிற்பனே. **#919**

கன்னலும், கரும்பின் ஊறிய சாற்றுத் தௌவு போல்வானும், ஒளியை உடையவனும், மின்னலைப் போன்ற உருவம் உடையவனும், பொன்போலும் மேனியின்னும் ஆகிய மாணிக்கக் குன்றுபோல் விளங்கும் என்னை உடையானை, இனியான் மறக்கும் வல்லமை உடையேனோ?

மறக்கிற்பனே என்னும்

கரும்பி னைக்கட்டி யைக்கந்த மாமலர்ச்
சுரும்பி னைச்சுடர்ச் சோதியுட் சோதியை
அரும்பி னிற்பெரும் போதுகொண் டாய்மலர்
விரும்பு மீசனை யான்மறக் கிற்பனே. **#920**

கரும்பும் கட்டியும் போல்வானும், வண்டுகள் சூழும் நறுமண மலர்களை அணிந்த சுடர்விடும் ஒளிக்குள் ஒளிஆகியவனும், அரும்புகளிற் பெரிய போதுகளைக் கொண்டு ஆய்மலரால் விரும்பும் இறைவனுமாகிய பெருமான் யான் மறக்கும் வல்லமை உடையேனோ?

மறக்கிற்பனே என்னும்

துஞ்சும் போதுஞ் சுடர்விடு சோதியை
நெஞ்சுள் நின்று நினைப்பிக்கு நீதியை
நஞ்சு கண்டத் தடக்கிய நம்பனை
வஞ்ச னேனினி நான்மறக் கிற்பனே. **#921**

உறங்கும் போதும் சுடர்விடும் சோதியும், நெஞ்சத்துக்குள் நிலைத்து நின்று நினைக்கவைக்கும் நீதியும், ஆலகாலவிடத்தைத் திருக்கழுத்துள் அடக்கிய நம்பனுமாகிய பெருமானை வஞ்சனை உடைய யான் இனி மறக்கும் வல்லமை உடையேனோ?

<u>மறக்கிற்பனே என்னும்</u>

புதிய பூவினை புண்ணிய நாதனை
நிதியை நீதியை நித்திலக் குன்றினைக்
கதியைக் கண்டங் கறுத்த கடவுளை
மதியை மைந்தனை நான் மறக் கிற்பனே. **#922**

புதிய பூவும், புண்ணியநாதனும், செல்வமும், நீதியும், முத்துக்குன்றும், அடைந்தோர்க்குக் கதியும், மதியும்,மைந்தனும் ஆகிய திருநீலகண்டமுடைய கடவுளை நான் மறக்கும் வல்லமை உடையேனோ?

<u>மறக்கிற்பனே என்னும்</u>

கருகு கார்முகில் போல்வதொர் கண்டனை
உருவ நோக்கியை யூழி முதல்வனைப்
பருகு பாலனைப் பால்மதி சூடியை
மருவு மைந்தனை நான்மறக் கிற்பனே. **#923**

கருமை உடைய கார்முகில் போல்வதாகிய ஒப்பற்ற திருநீலகண்டனும், அழகுடைய நோக்கு இயைந்த ஊழிக் காலத்தும் உள்ள முதல்வனும், பருகுதற்குரிய பால் போன்ற வெண்மதியைச் சூடியவனும், அன்பால் நினைவாரை மருவுகின்ற மைந்தனுமாகிய பெருமானை நான் மறக்கும் வல்லமை உடையேனோ?

தொழற்பாலனம் என்னும்

தொழற்பாலனம் என்னும்

தொழற்பாலனம் என்னும், திருக்குறுந்தொகை

அண்டத் தானை யமரர் தொழப்படும்
பண்டத் தானைப் பவித்திர மார்திரு
முண்டத் தானைமுறை றாத இளம்பிறைத்
துண்டத் தானைக்கண் டீர்தொழற் பாலதே. **#924**

அண்டத்தில் உள்ளவனும், தேவர்களால் தொழப்படும் பொருளும், பவித்துரம் உடைய நெற்றியை உடையவனும், இளம் பிறைப் பிளவினைச் சூடியவனுமாகிய பெருமானே தொழத்தக்கவன்: காண்பீராக.

தொழற்பாலனம் என்னும்

முத்தொப் பானை முளைத்தெழு கற்பக
வித்தொப் பானை விளக்கிட் நேரொளி
ஒத்தொப் பானை யொளிபவ ளத்திரள்
தொத்தொப் பானைக்கண் டீர்தொழற் பாலதே. **#925**

முத்து ஓப்பவனும், முளைத்தெழுகின்ற கற்பகவித்துப் போல்வானும், திருவிளக்கிடை நேர்கின்ற ஒளியை ஒத்திருப்பவனும், ஒளியையுடைய பவளத்திரளின் கொத்தினை ஒப்பவனுமாகிய பெருமானே தொழத்தக்கவன்: காண்பீராக.

தொழற்பாலனம் என்னும்

பண்ணொத் தானைப் பவளந் திரண்டதோர்
வண்ணத் தானை வகையுணர் வான்றனை
எண்ணத் தானை யிளம்பிறை போல்வெள்ளைச்
சுண்ணத் தானைக்கண் டீர்தொழற் பாலதே. **#926**

பண் ஓத்தவனும், பவளம் திரண்டது போன்ற செவ்வண்ணம் உடையவனும், வகைகளையெல்லாம் உணர்பவனும், அடியார்கள் எண்ணத்தில் இருப்பவனும், இளம்பிறை போன்ற வெண்சுண்ணம் உடையவனுமாகிய பெருமானே தொழத்தக்கவன்: காண்பீராக.

தொழற்பாலனம் என்னும்

விடலை யானை விரைகமழ் தேன்கொன்றைப்
படலையானைப் பலிதிரி வான்செலும்
நடலை யானை நரிபிரி யாததோர்

சுடலை யானைக்கண் டீர்தொழற் பாலதே. #927
விடலைப்பருவம் உடையவனும், மணங்கமழும் கொன்றைமாலை உடையவனும், பலிபெறுதற்காகத் திரிதமுசெல்லும் துன்பம் உடையவனும், நரிகள் பிரிந்துசெல்லாத சுடுகாட்டில் இருப்பவனும் ஆகிய பெருமானே தொழத்தக்கவன்: காண்பீராக.

தொழற்பாலனம் என்னும்

பரிதி யானைப்பல் வேறு சமயங்கள்
கருதி யானைக்கண் டார்மனம் மேவிய
பிரிதி யானைப் பிறரறி யாததோர்
சுருதி யானைக்கண் டீர்தொழற் பாலதே. #928
ஞானசூரியனாக உள்ளவனும், பல்வேறு சமயங்களாற் கருதப்பட்டவன்னம், கண்டார் மனத்தை விரும்பியமர்ந்தவனும், பிறர் அறியாததோர் சுருதியானும் ஆஇய பெருமானே, தொழத்தக்கவன்; காண்பீராக.

தொழற்பாலனம் என்னும்

ஆதி யானை அமரர் தொழப்படும்
நீதி யானை நியம நெறிகளை
ஓதி யானை உணர்தற் கரியதோர்
சோதி யானைக்கண் டீர்தொழற் பாலதே. #929
முதல்வனும், தேவர்களால் தொழப்படும் நீதியானவனும், நியமயெறிகளை ஓதியவனும், உணர்தற்கு அரியதாகிய ஓப்பற்ற சோதியானும் ஆகிய பெருமானே தொழத்தக்கவன்: காண்பீராக.

தொழற்பாலனம் என்னும்

ஞாலத் தானைநல் லானைவல் லார்தொழும்
கோலத் தானைக் குணப்பெருங் குன்றினை
மூலத் தானை முதல்வனை மூவிலைச்
சூலத் தானைக்கண் டீர்தொழற் பாலதே. #930
உலகமாகி உள்ளவனும், நல்லவனும், வல்லவர் தொழும் கோலத்தை உடையவனும், கணமாகிய பெருங்குன்றானவனும், மூலமாக உள்ளவனும், முதல்வனும், மூவிலை வடிவாகிய சூலத்தை உடையவனும் ஆகிய பெருமானே தொழத்தக்கவன்; காண்பீராக.

தொழற்பாலனம் என்னும்

ஆதிப் பாலட்ட மூர்த்தியை ஆனஞ்சும்
வேதிப் பானைநம் மேல்வினை வெந்தறச்

சாதிப் பானைத் தவத்தினை மாற்றங்கள்
சோதிப் பானைக்கண் டீர்தொழற் பாலதே. #931
முதற்கண்ணே தோன்றிய அட்ட மூர்த்தியும், பஞ்சகவ்வியம் அபிடேகம் கொள்பவனும், நமது மேல்வினைகள் வெந்து நீங்கும்படிக் கடைக்கண் சாதிப்பவனும், தவத்திடை மாற்றங்கள் தந்து சோதிப்பவனுமாகிய பெருமானே தொழத்தக்கவன்; காண்பீராக.

தொழற்பாலனம் என்னும்

நீற்றி னானை நிகரில்வெண் கோவணக்
கீற்றி னானைக் கிளரொளிச் செஞ்சடை
ஆற்றி னானை யமரர்த மாருயிர்
தோற்றி னானைக்கண் டீர்தொழற் பாலதே. #932
திருநீறணிந்தவனும், ஒப்பற்ற வெள்ளிய கோவணக்கீறு உடையவனும், ஒளிகிளரும் சிவந்த சடைக்கண் கங்கையை உடையவனும் தேவர்க்கு உயிர்வழங்கினானுமாகிய பெருமானே தொழத்தக்கவன்; காண்பீராக.

தொழற்பாலனம் என்னும்

விட்டிட் டானைமெய்ஞ் ஞானத்து மெய்ப்பொருள்
கட்டிட் டானைக் கனங்குழை பாலன்பு
பட்டிட் டானைப் பகைத்தவர் முப்புரஞ்
சுட்டிட் டானைக்கண் டீர்தொழற் பாலதே. #933
மெய்ஞ்ஞானத்து அடியேனை விட்டவனும், மெய்ப்பொருளைக் காட்டியவனும், உமாதேவியினிடத்து அன்பு பொருந்தியவனும், பகைத்தவராகிய திரிபுராதிகள் முப்புரங்களைச் சுட்டவனுமாகிய பெருமானே தொழத்தக்கவன்; காண்பீராக.

தொழற்பாலனம் என்னும்

முற்றி னானை இராவணன் நீண்முடி
ஒற்றி னானை யொருவிர லாலுறப்
பற்றி னானையோர் வெண்டலைப் பாம்பரைச்
சுற்றி னானைக்கண் டீர்தொழற் பாலதே. #934
எல்லாவற்றையும் சூழ்ந்திருபவனும், இராவணன் நீண்முடிகளை ஒற்றியபோது ஒரு விரலால் உறப்பற்றியவனும், ஒரு வெண்டலை உடையவனும், பாம்பினை அரைக்கண் சுற்றியவனும் ஆகிய பெருமானே தொழத்தக்கவன்; காண்பீராக.

இலிங்கபுராணம்

இலிங்கபுராணம், திருக்குறுந்தொகை

புக்க ணைந்து புரிந்தல ரிட்டிலர்
நக்க ணைந்து நறுமலர் கொய்திலர்
சொக்க ணைந்த சுடரொளி வண்ணனை
மிக்குக் காணலுற் றாரங் கிருவரே. **#935**

திருமாலும் பிரமனுமாகிய இருவரும் அழகுபொருந்திய ஒளிச்சுடர் நிறம் உடைய பெருமானைப் புகுந்து அணைந்து விரும்பி மலரிட்டு வணங்கிலராய், மகிழ்ந்து பொருந்தி மணமலர்களைக் கொய்து அருச்சித்திலராய் ஆணவமிகிந்து காண முயன்று காண்கிலராயினார்.

இலிங்கபுராணம்

அலரு நீருங்கொண் டாட்டித் தெளந்திலர்
திலக மண்டலந் தீட்டித் திரிந்திலர்
உலக மூர்த்தி யொளிநிற வண்ணனைச்
செலவு காணலுற் றாரங் கிருவரே. **#936**

திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் உலக மூர்த்தியாகிய ஒளிநிற வண்ணம் உடைய இறைவனைப் பூவும் நீரும்கொண்டு அபிடேகித்துத் தெளவடைந்திலராய்த் திருச்சாந்து தீட்டித் திரிந்திலராய்ச் சென்று காண முயன்று காண்கிலர் ஆயினார்.

இலிங்கபுராணம்

ஆப்பி நீரோ டலகுகைக் கொண்டிலர்
பூப்பெய் கூடை புனைந்து சுமந்திலர்
காப்புக் கொள்ளி கபாலிதன் வேடத்தை
ஒப்பிக் காணலுற் றாரங் கிருவரே. **#937**

திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் உலகங்களைக் காவல்கொள்ளும் கபாலியாகிய பெருமானின் திருவேடத்தைக் காணலுற்றார்கள், சாணநீரோடு, திருவலகும் கைகளிற் கொண்டு வணங்காதவராய்ப் பூக்கள் பெய்த கூடையைப் புனைந்து சுமந்திலர். முனைப்புடன் காணமுயன்று காண்கிலர் ஆயினார்.

இலிங்கபுராணம்

நெய்யும் பாலுங்கொண் டாட்டி நினைந்திலர்
பொய்யும் பொக்கமும் போக்கிப் புகழ்ந்திலர்

ஐயன் வெய்ய அழல்நிற வண்ணனை
மெய்யைக் காணலுற் றாரங் கிருவரே. #938
திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் நெய்யும் பாலும் கொண்டு அபிடேகித்து நினைந்திலராய்ப் பொய்யும்பொக்கமும் போக்கிப் புகழ்ந்திலராய் ஐயனாகிய வெப்பமுடைய அழலின் நிறம் கொண்ட இயல்புடைய பெருமானது மெய்ம்மையைக் காணலுற்றுக் காண்கிலராயினார்.

இலிங்கபுராணம்

எருக்கங் கண்ணிகொண் டிண்டை புனைந்திலர்
பெருக்கக் கோவணம் பீறி யுடுத்திலர்
தருக்கி னாற்சென்று தாழ்சடை யண்ணலை
நெருக்கிக் காணலுற் றாரங் கிருவரே. #939
திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் எருக்க மாலை கொண்டு இண்டை புனைந்து வழிபடாதவராய் அழகு பெருக்குதற்பொருட்டுக் கோவணம் கிழித்து உடுத்தாதவராய் ஆணவத்தினாற்சென்று சடைதாழ்கின்ற அண்ணலாராகிய பெருமானைத் தத்தமில் நெருக்கிச்சென்று காண முயன்று காண்கிலர் ஆயினார்.

இலிங்கபுராணம்

மரங்க ளேறி மலர்பறித் திட்டிலர்
நிரம்ப நீர்சுமந் தாட்டி நினைந்திலர்
உரம்பொ ருந்தி யொளிநிற வண்ணனை
நிரம்பக் காணலுற் றாரங் கிருவரே. #940
திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் அறிவுடன்கூடி ஒளிநிற வண்ணனாகிய பெருமானை, மரங்களில் ஏறிமலர்பறித்திட்டிலராய், நிரம்ப நீர் சுமந்து அபிடேகித்து நினைந்திலராய் ஆணவம் நிரம்பக் காண முயன்று காண்கிலர் ஆயினர்.

இலிங்கபுராணம்

கட்டு வாங்கங் கபாலங்கைக் கொண்டிலர்
அட்ட மாங்கங் கிடந்தடி வீழ்ந்திலர்
சிட்டன் சேவடி சென்றெய்திக் காணிய
பட்ட கட்டமுற் றாரங் கிருவரே. #941
திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் கட்டுவாங்கமும் கபாலமும் கைக்கொள்ளாதவராய், எட்டுறுப்புக்களும் நிலத்துப்படக்கிடந்து அடிதாழாதவராய் இறைவன் சேவடியும் திருமுடியும்காணுதற்குச் சென்றெய்திப் பொருந்திய துயரங்கள் உற்றார் அடிமுடி காண்கிலர்.

இலிங்கபுராணம்

வெந்த நீறு விளங்க அணிந்திலர்
கந்த மாமல ரிண்டை புனைந்திலர்
எந்தை யேறுகந் தேறெரி வண்ணனை
அந்தங் காணலுற் றாரங் கிருவரே. **#942**

திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் வெந்த திருநீறு விளங்க அணியாதவராய், மணமிக்க மலர்களால் இண்டைமாலை புனையாதவராய் எந்தையாகிய ஏறுகந்து ஏறும் எரிவண்ணனாகிய பெருமானின் ஆதியும் அந்தமும் காண இயலாதவர் ஆயினார்.

இலிங்கபுராணம்

இளவெ ழுந்த இருங்குவ ளைம்மலர்
பிளவு செய்து பிணைத்தடி யிட்டிலர்
களவு செய்தொழிற் காமனைக் காய்ந்தவன்
அளவு காணலுற் றாரங் கிருவரே. **#943**

திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் இளமையோடுகூடி எழுந்து கரிய குவளை மலர்களைப் பிளந்து இதழ்களால் பிணைத்துத் திருவடியில் இட்டு வணங்காதவராய் களவு செய்யும் தொழிலை உடைய காமனைக் காய்ந்த பெருமானது அளவினைக் காண முயன்று காண்கிலர் ஆயினார்.

இலிங்கபுராணம்

கண்டி பூண்டு கபாலங்கைக் கொண்டிலர்
விண்ட வான்சங்கம் விம்மவாய் வைத்திலர்
அண்ட மூர்த்தி யழல்நிற வண்ணனைக்
கெண்டிக் காணலுற் றாரங் கிருவரே. **#944**

திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் கணடி அணிந்து கபாலம் கையிற்கொள்ளாதவராய் வெண்மை விரிந்த சங்கம் விம்முமாறு வாயில் வைத்தூதாதவராய் அண்டமூர்த்தியாகிய தீ நிறவண்ணனை மண்ணில் கிண்டியும் விண்ணில் பறந்தும் காண முயன்று காண்கிலர் ஆயினார்.

இலிங்கபுராணம்

செங்க ணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலர்
இங்குற் றேனென்றி லிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே. **#945**

செங்கண் உடையவனாந் திருமாலும், பிரமனும் தம்முள்ளே எங்கும் தேடித்திரிந்தும் காண்கின்ற வல்லமை இல்லாதவர்களுக்கு ஆறி

பொங்கும் செஞ்சடையை உடைய புண்ணியக் கடவுளாம் இறைவன்
"இங்கு உற்றேன்" என்று இலிங்க வடிவில் தோன்றினான்.

மனத்தொகை

மனத்தொகை

மனத்தொகை, திருக்குறுந்தொகை

பொன்னுள் ளத்திரள் புன்சடை யின்புறம்
மின்னுள்ளத்திரள் வெண்பிறை யாயிறை
நின்னுள் ளத்தருள் கொண்டிருள் நீங்குதல்
என்னுள் ளத்துள தெந்தை பிரானிரே. **#946**

எந்தை பெருமானே! பொன்னும் நினையுமாறு அழகு திகழ்கின்ற புன்சடையின் புறத்தே ஒளியுள்ளதாகிய திரண்ட வெண்பிறை சூடியவனே! நின் உள்ளத்துச் சிறிது அருள் கொண்டு என்னுள்ளத்துள் உளதாகிய இருள் நீங்கிடத் திருவுளம் பற்றியருள்க.

மனத்தொகை

முக்க ணும்முடை யாய்முனி கள்பலர்
தொக்கெ ணுங்கழ லாயொரு தோலினோ
டக்க ணம்மரை யாயரு ளேயலா
தெக்க ணும்மில னெந்தை பிரானிரே. **#947**

எந்தை பெருமானே! முக்கண்ணும் உடையாய்! முனிவர்கள் பலர் கூடி எண்ணித் தியானிக்கும் கழலை உடையாய்!புலித்தோலினோடு அழகிய நினது அருளேயல்லாது வேறு எவ்விடத்தும் பொருள் இல்லேன்.

மனத்தொகை

பணியாய் வெங்கதிர் பாய்படர் புன்சடை
முனியாய் நீயுல கம்முழு தாளினும்
தனியாய் நீசரண் நீசல மேபெரி
தினியாய் நீயெனக் கெந்தை பிரானிரே. **#948**

எந்தை பெருமானே! தண்ணியாய்! விரும்புதறைகுரிய தெண்ணிலவு பாயும் படர்புன்சடை முனிவனே! நீ உலகம் முழுதும் ஆண்டாலும் தனியாய்! சரண் நீயே; எனைபால் வஞ்சனையே பெரிது; எனக்கு இனியாய் நீயே.

மனத்தொகை

மறையும் பாடுதிர் மாதவர் மாலினுக்
குறையு மாயினை கோளர வோடொரு
பிறையுஞ் சூடினை யென்பத லாற்பிறி
திறையுஞ் சொல்லிலை யெந்தை பிரானிரே. **#949**

எந்தை பெருமானே! வேதங்களையும் பாடுவீர்; பெரிய முனிவர்களது மயக்கத்தினுக்கு உறையும் ஆயினீர்; கொள்ளும் பாம்பினோடு ஒரு பிறையும் சூடினை என்பதல்லால் வேறு சிறிதும் சொல் இல்லை.

மனத்தொகை

பூத்தார் கொன்றையி னாய்புலி யின்னதள்
ஆர்ம்மா யாடர வோடன லாடிய
கூத்தா நின்குரை யார்கழ லேயல
தேத்தா நாவெனக் கெந்தை பிரானிரே. **#950**

எந்தை பெருமானே! பூத்துச் செறிந்த கொன்றையினை உடையாய்; புலியின் தோலை ஆர்த்துக் கட்டினாய்; ஆடும் பாம்பினோடும் அனலோடும் ஆடும் கூத்தனே! நின் ஒலிக்கும் கழலே அல்லது எனது நா வேறு ஒன்றையும் ஏத்தாது.

மனத்தொகை

பைம்மா லும்மர வாபர மாபசு
மைம்மால் கண்ணியோ டேறுமைந் தாவெனும்
அம்மா லல்லது மற்றடி நாயினேற்
கெம்மா லும்மிலே னெந்தை பிரானிரே. **#951**

எந்தை பெருமானே! படத்தொடு ஒலிக்கும் அரவுடையவனே! பரமனே! இடபத்தின்மேல் அஞ்சனம் தீட்டிய கண்ணுடைய உமாதேவியோடு ஏறும் மைந்தனே! என்றும் அம்மயக்கமல்லது மற்று அடி நாயினேனுக்கு வேறு எம் மயக்கமும் இல்லேன். 'நாயினேன்' என்றும் பாடம்.

மனத்தொகை

வெப்பத் தின்மன மாசு விளக்கிய
செப்பத் தாற்சிவ னென்பவர் தீவினை
ஒப்பத் தீர்த்திடு மொண்கழ லாற்கல்ல
தெப்பற் றும்மில னெந்தை பிரானிரே. **#952**

எந்தை பெருமானே! வெப்பத்தின் மனமாசு விளக்கும் செப்பம் உடைமையினால் "சிவன்" என்பவர் தீவினைகளை ஒப்பத் தீர்க்கும் ஒள்ளிய கழலை உடையானாகிய உமக்கல்லது வேறுபற்று இல்லேன்.

மனத்தொகை

திகழுஞ் சூழ்சுடர் வானொடு வைகலும்
நிகழு மொண்பொரு ளாயின நீதியென்
புகழு மாறு மலானுன பொன்னடி
இகழு மாறில னெந்தை பிரானிரே. **#953**

எந்தை பெருமானே! விளங்குகின்ற சுடர் சூழ்கின்றவனோடு நாள்தோறும் நிகழும் ஒள்ளிய பொருளாயின நீதிகளை என்னே புகழுமாறு! அல்லது உன் பொன்னடிகளை இகழுமாறு இல்லேன்.

மனத்தொகை

கைப்பற் றித்திரு மால்பிர மன்னுனை
எப்பற் றியறி தற்கரி யாயருள்
அப்பற் றல்லது மற்றடி நாயினேன்
எப்பற் றும்மிலே னெந்தை பிரானிரே. **#954**

திருமாலால் அறிதற்கரியவனே! உன் திருவருளாகிய பற்றுக்கோடு ஒன்றைத் தவிர வேறு எப்பற்றும் எனக்கு இல்லை.

மனத்தொகை

எந்தை யெம்பிரா னென்றவர் மேல்மனம்
எந்தை யெம்பிரா னென்றிறைஞ் சித்தொழு
தெந்தை யெம்பிரா னென்றடி யேத்துவார்
எந்தை யெம்பிரா னென்றடி சேர்வரே. **#955**

எந்தை எம்பிரான் என்று மனம் வாக்குக் காயங்களால் வழிபடுவார் இறைவன் திருவடி சேர்வர்.

சித்தத்தொகை

சித்தத்தொகை, திருக்குறுந்தொகை

சிந்திப் பார்மனத் தான்சிவன் செஞ்சுடர்
அந்தி வான்நிறத் தானணி யார்மதி
முந்திச் சூடிய முக்கண்ணி னானடி
வந்திப் பாரவர் வானுல காள்வரே. **#956**

சிந்திப்பவர் மனத்து உறைபவனாகிய சிவனும், சிவந்த சுடர் உடையவனாய் அந்திவானத்து நிறம் பொருந்தியவனும், அழகு நிறைந்த பிறைமதியினை முந்துறச் சூடிக்கொண்ட முக்கண்ணினனுமாகிய பெருமான் திருவடிகளை வணங்குவார்கள் வானுலகை ஆள்வர்.

சித்தத்தொகை

அண்ட மாரிரு ளூடு கடந்தும்பர்
உண்டு போலுமோ ரொண்சுட ரச்சுடர்
கண்டிங் காரறி வாரறி வாரெலாம்
வெண்டிங் கட்கண்ணி வேதிய னென்பரே. **#957**

அண்டங்களையெல்லாம் உள்ளடக்கிய செறிந்த இருள் நடுவே கடந்து அப்பால் ஓர் ஒள்ளிய சுடர் உண்டுபோலும்; அச்சுடரைக் கண்டு இங்கு ஆர் அறியவல்லவர்கள்? அறிபவரெல்லாம் அதனை வெள்ளிய பிறையினை முடிக்கண்ணியாகக்கொண்ட வேதியன் என்பர்.

சித்தத்தொகை

ஆதி யாயவ னாரு மிலாதவன்
போது சேர்புனை நீண்முடிப் புண்ணியன்
பாதிப் பெண்ணுரு வாகிப் பரஞ்சுடர்ச்
சோதி யுட்சோதி யாய்நின்ற சோதியே. **#958**

தன்னுடலிற்பாற் பெண்ணுருவமாகி மேலாய சுடரை உடைய சோதியுட்சோதியாய் நின்ற சோதியாகிய பெருமான் அனைத்தும் ஆதி ஆகியவன் தனக்குப் பற்றாவார் ஆரும் இல்லாதவன் மலர்கள் சேர்த்துப் புனைந்த நீண்டமுடியை உடைய புண்ணியன்.

சித்தத்தொகை

இட்ட திட்டதோ ரேறுகந் தேறியூர்
பட்டி துட்டங்க னாய்ப்பலி தேர்வதோர்
கட்ட வாழ்க்கைய னாகிலும் வானவர்

அட்ட மூர்த்தி யருளென் றடைவரே. #959
தன்னுடலிற்பாற் பெண்ணுருவமாகி மேலாய சுடரை உடைய சோதியுட்சோதியாய் நின்ற சோதியாகிய பெருமான் அனைத்தும் ஆதி ஆகியவன் தனக்குப் பற்றாவார் ஆரும் இல்லாதவன் மலர்கள் சேர்த்துப் புனைந்த நீண்டமுடியை உடைய புண்ணியன்.

சித்தத்தொகை

ஈறில் கூறைய னாகி எரிந்தவெண்
ணீறு பூசி நிலாமதி சூடிலும்
வீறி லாதன செய்யினும் விண்ணவர்
ஊற லாயரு ளாயென் றுரைப்பரே. #960
முடிவற்ற திக்குகளையே ஆடையாக உடுப்பவனாகி எரிந்துவெந்த திருநீறு பூசி நிலவினை உடைய பிறையைச் சூடினும், தன் பெருமைக்கு உகவாதவற்றைச் செய்யினும், தேவர்கள் ` இடையூறற்றவனே ! அருள்வாயாக ` என்று இரந்துரைப்பர்.

சித்தத்தொகை

உச்சி வெண்மதி சூடிலும் ஊனறாப்
பச்சை வெண்டலை யேந்திப் பலஇலம்
பிச்சை யேபுகு மாகிலும் வானவர்
அச்சந் தீர்த்தரு ளாயென் றடைவரே. #961
உச்சிக்கண் வெள்ளியமதி சூடினும், தசை நீங்காத பச்சை வெண்தலையோட்டைக் கையில் ஏந்திப் பல இல்லங்களுக்குப் பிச்சை ஏற்கப் புகுந்தாலும், தேவர்கள் ` எம் அச்சம் தீர்த்து அருள்வாயாக ` என்று அடைவர்.

சித்தத்தொகை

ஊரிலாயென்றொன் றாக உரைப்பதோர்
பேரி லாய்பிறை சூடிய பிஞ்ஞகா
காரு லாங்கண்ட னேயுன் கழலடி
சேர்வி லார்கட்டுகுத் தீயவை தீயவை. #962
தனக்கென்று ஓர் ஊரில்லாதவனே ஒன்றாக உரைக்கும் பேரில்லாதவனே பிறைசூடிய பிஞ்ஞகனே கருமை பொருந்திய திருக்கழுத்தினனே உன் கழலணிந்த திருவடியைச் சேர்தல் இல்லாதவர்களுக்குத் தீயவை என்றும் சேரும்.

சித்தத்தொகை

எந்தை யேயெம் பிரானே யெனவுள்கிச்

சிந்திப் பாரவர் தீவினை தீருமால்
வெந்த நீறுமெய் பூசிய வேதியன்
அந்த மாவளப் பாரடைந் தார்களே. **#963**
எந்தையே எம்பெருமானே என உள்ளத்தால் நினைந்து சிந்திப்பார்களின் தீவினை தீரும் வெந்த திருநீறு பூசிய மெய்யை உடைய வேதியனை அடைந்தவர்கள் அந்தமாக அளக்குந் தம்மை உடையார்.

<u>சித்தத்தொகை</u>

ஏன வெண்மருப் போடென்பு பூண்டெழில்
ஆனை யீருரி போர்த்தன லாடிலும்
தான வண்ணத்த னாகிலுந் தன்னையே
வான நாடர் வணங்குவர் வைகலே. **#964**
பன்றியின் வெள்ளிய கொம்பினோடு எலும்பு அணிந்த அழகுமிக்க ஆனையினை ஈர்ந்து தோல் போத்துத் தீயுடன்ஆடினாலும், தான் அவ்வியல்புடையனாயினும் தேவர்கள் நாள் தோறும் தன்னையே வணங்குவர்.

<u>சித்தத்தொகை</u>

ஐயன் அந்தணன் ஆணொடு பெண்ணுமாம்
மெய்யன் மேதகு வெண்பொடி பூசிய
மைகொள் கண்டத்தன் மான்மறிக் கையினான்
பைகொள் பாம்பரை யார்த்த பரமனே. **#965**
படம் கொண்ட பாம்பினை இடுப்பில் கட்டிய இறைவன் தலைவன் அந்தணன் (அழகும் குளிர்ச்சியும் உடையவன்) ஆண்பெண் வடிவமுடைய திருமேனியினன் மேன்மை மிகுந்த வெண் திருநீரு பூசிய கருமை கொண்ட திருக்கழுத்தினன் மான்குட்டி உடைய கையினன்.

<u>சித்தத்தொகை</u>

ஒருவ னாகிநின் றானிவ வுலகெலாம்
ஒருவ ராகிநின் றார்கட் கறிகிலான்
அருவ ராஅரை ஆர்த்தவ னார்கழல்
பரவு வாரவர் பாவம் பறையுமே. **#966**
இவ்வுலகமெல்லாம் தான் ஒருவனே ஆகி நின்றவனும், திருமாலும் பிரனுமாகிய இருவராகி நின்றவர் அறியஇயலாதவனும், அரிய பாம்பினை இடுப்பில் கட்டியவனும் ஆகிய இறைவனது நிறைந் கழலணிந்த திருவடிகளை வணங்குவாரின் பாவங்கள் கெடும்.

சித்தத்தொகை

ஓத வண்ணனும் ஒண்மலர்ச் செல்வனும்
நாத னேயரு ளாயென்று நாடொறும்
காதல் செய்து கருதப் படுமவர்
பாத மேத்தப் பறையும் நம் பாவமே. **#967**

கடல்வண்ணம் உடையவனாகிய திருமாலும் ஒள்ளிய தாமரைமலர் மேலானாகிய பிரமனும், " தலைவனே அருள்வாய்" என்று நாள்தோறும் விருப்பம் புரிந்து எண்ணப் படுவாராகிய இறைவன் பாதங்களை ஏத்த நம்பாவங்கள் கெடும்.

சித்தத்தொகை

ஔவ தன்மை யவரவ ராக்கையான்
வெவ்வ தன்மைய னென்ப தொழிமினோ
மௌவர் நீண்மலர் மேலுறை வானொடு
பவ்வ வண்ணனு மாய்ப்பணி வார்களே. **#968**

அவரவர் உடம்பினால் அடைவதற்கு வெவ்விய தன்மை உடையவன் என்ற கருத்தை ஒழிப்பீராக. மலர்தல் உடைய நீண்ட மலர்மேல் உறைவானாகிய பிரமனோடு கடல்வண்ணனாகிய திருமாலுமாய்ப் பணிவார்கள்.

சித்தத்தொகை

அக்க மாமையும் பூண்டன லேந்தியில்
புக்குப் பல்பலி தேரும் புராணனை
நக்கு நீர்கள் நரகம் புகேன்மினோ
தொக்க வானவ ராற்றொழு வானையே. **#969**

அக்கமணிகளும் ஆமையும் அணிந்து தீயை ஏந்தி இல்லங்கள் தோறம் புகுந்து பல பலிதேறும் பழமை உடையவனும், தொகத்த தேவர்களால் தொழப்படுவானுமாகிய இறைவனை விரும்பி நீங்கள் நரகத்துப்போகாமல் நற்பேறு அடைவீராக.

சித்தத்தொகை

கங்கை தங்கிய செஞ்சடை மேலிளந்
திங்கள் சூடிய தீநிற வண்ணனார்
இங்க ணாரெழில் வானம் வணங்கவே
அங்க ணாற்கது வாலவன் தன்மையே. **#970**

அழகிய கண்ணராகிய கங்கை தங்கிய சிவந்த சடையின்மேல் இளம் பிறையினைச் சூடிய தழல்வண்ணர் இமைக்காத கண்ணை உடைய

எழில் உடைய வானகத்துள்ளோர் வணங்க உள்ளார் அதுவே அவர் தன்மை.

<u>சித்தத்தொகை</u>

நகர வெல்கொடி யானொடு நன்னெஞ்சே
நுகர நீயுனைக் கொண்டுயப் போக்குறில்
மகர வெல்கொடி மைந்தனைக் காய்ந்தவன்
புகரில் சேவடி யேபுக லாகுமே. **#971**

நல்ல நெஞ்சே வெல்லும் கொடி உடையானோடு நுகர்தற்கு நீ உன்னைக் கொண்டு உய்யப்போதலுற்றால், மீனாகிய வெல்லும் கொடி உடைய மன்மதனைச் சினந்தவனாகிய பெருமானின் குற்றமற்ற சேவடியே தஞ்சப்பொருளாகும்.

<u>சித்தத்தொகை</u>

சரண மாம்படி யார்பிற ரியாவரோ
கரணந் தீர்த்துயிர் கையி லிகர்ந்தபின்
மரண மெய்திய பின்னவை நீக்குவான்
அரண மூஎணில் எணிதவ னல்லனே. **#972**

புகலடையத்தக்கவர் பிறர் யாவர்? செயலற்று உயிர் இறக்கம்போது நம் வினைக்குற்றங்களைத் தீர்த்து அருள்பவன் வேறு யாவன்? அரணமைந்த மூன்று கோட்டைகளையும் அழித்தவன் அல்லனோ?

<u>சித்தத்தொகை</u>

ஞமனென் பான்நர கர்க்க நமக்கெலாம்
சிவனென் பான்செழு மான்மறிக் கையினான்
கவனஞ் செய்யுங் கனவிடை யூர்தியான்
தமரென் றாலுங் கெடுந்தடு மாற்றமே. **#973**

நரகர்க்கெல்லாம் ஞமனாகியும், நமக்கெல்லாம் சிவன் எனப்படுவானாகியும் உள்ளவனும், மான்குட்டி உடைய கையினனும், விரைந்து செல்லும் பெருமைமிக்க இடப ஊர்தி உடையவனம் ஆகிய பெருமானின் தமர் என்றாலும் தடுமாற்றம் கெடும்.

<u>சித்தத்தொகை</u>

இடப மேறியு மில்பலி யேற்பவர்
அடவி காதலித் தாடுவ ரைந்தலைப்
படவம் பாம்பரை யார்த் பரமனைக்
கடவி ராய்ச்சென்று கைதொழு துய்ம்மினே. **#974**

இடபத்தின்மீது ஏறியும், இல்லங்கள் தோறம் பலி ஏற்பவரும்,

சுடுகாட்டினை விரும்பி ஆடுபவரும், ஐந்தலை உடைய படர்ந்த பாம்பினை அரைக்கண் ஆர்த்தவரும் ஆகிய பரமனை வணங்கும் கடப்பாடுடையீராய்ச் சென்று கைதொழுது உய்வீராக.

சித்தத்தொகை

இணர்ந்து கொன்றைபொன் தாது சொரிந்திடும்
புணர்ந்த வாளர வம்மதி யோடுடன்
அணைந்த அஞ்சடை யானவன் பாதமே
உணர்ந்த வுள்ளத் தவருணர் வார்களே. **#975**

கொத்தாகிய கொன்றை பொன் போன்ற மகரந்தத் துறினைச் சொரிந்திடும் இயல்பினதும், பொருந்திய வாள்போன்றபாம்பும் மதியினுடன் அணைந்ததுமாகிய அழகிய சடையுடைய பெருமான் திருவடிகளை உணர்ந்த உள்ளத்தவரே உணர்வர்.

சித்தத்தொகை

தருமந் தான்தவந் தான்தவத் தால்வரும்
கருமந் தான்கரு மான்மறிக் கையினான்
அருமந் தன்ன அதிர்கழல் சேர்மினோ
சிரமஞ் சேரழல் தீவினை யாளரே. **#976**

தொல்லைகள் சேர்ந்த அழலும் தீவினையாளர்களே தானே தருமமாகவும், தானே தவமாகவும், தானே தவத்தால்வரும் செயலாகவும் உள்ள வலிய மான்குட்டியைக் கையில் உடைய பெருமானது, அரிய மருந்து போன்ற (அமிர்தம்) ஒலிக்கும் கழலணிந்த திருவடிகைச் சேர்வீராக.

சித்தத்தொகை

நமச்சி வாயவென் பாருள ரேலவர்
தமச்ச நீங்கத் தவநெறி சார்தலால்
அமைத்துக் கொண்ட தோர் வாழ்க்கைய னாகிலும்
இமைத்து நிற்பது சால அரியதே. **#977**

நமசிவாய என்று சொல்வார் உளராயின் அவர்தம் அச்சங்கள் நீங்கத் தவநெறியைச் சார்தலால் தானே அமைத்துக் கொண்ட ஒப்பற்ற வாழ்க்கையை உடையவனாகிலும் இமைத்து நிற்பது மிகவும் அரியதாகும்.

சித்தத்தொகை

பற்பல் காலம் பயிற்றிப் பரமனைச்
சொற்பல் காலநின் றேத்துமின் தொல்வினை

வெற்பில் தோன்றிய வெங்கதில் கண்டவப்
புற்ப னிக்கெடு மாறது போலுமே. **#978**
பரமனைப் பலப்பல காலங்கள் பயிற்றிச் சொற்களால் பல காலம் நின்று ஏத்துவீராக. உம் பழைய வினைகள் உதயகிரியில் தோன்றிய சூரியனைக் கண்ட அழகிய புல் நுனியில் உள்ள பனித்துளிகள் கெடுமாறு கெடும்.

<u>சித்தத்தொகை</u>

மணிசெய் கண்டத்து மான்மறிக் கையினான்
கணிசெய் வேடத்த ராயவர் காப்பினால்
பணிகள் தாஞ்செய வல்லவர் யாவர்தம்
பிணிசெ யாக்கையை நீக்குவர் பேயரே. **#979**
கரியமணிபோலும் கண்டத்தை உடையவரும், மான்குட்டியை உடைய கையினரும், கருதிச் செய்கின்ற வேடம் உடையவராகிய அவர் காத்தருள்வதால் பணிகளைச் செய்ய வல்லவர்களே நல்லோர் அவ்வாறு புரியது நோய் செய்யும் உடம்பை வீணே கழிப்பவர் பேயர்.

<u>சித்தத்தொகை</u>

இயக்கர் கின்னர ரிந்திரன் தானவர்
நயக்க நின்றவன் நான்முகன் ஆழியான்
மயக்க மெய்தவன் மாலெரி யாயினான்
வியக்குந் தன்மையி னானெம் விகிர்தனே. **#980**
வியக்கும் தன்மை உடையவனாகிய எம் மேலோன், இயக்கர், கின்னரர், இந்திரன், தானவர் முதலியோர் விரும்ப நின்றவனும், பிரமனும் திருமாலும் மயக்கம் எய்த வன்மை உடைய பேரெரிவடிவமாயினான்.

<u>சித்தத்தொகை</u>

அரவ மார்த்தன லாடிய அண்ணலைப்
பரவு வாரவர் பாவம் பறைதற்குக்
குரவை கோத்தவ னுங்குளிர் போதின்மேல்
கரவில் நான்முக னுங்கரி யல்லரே. **#981**
பாம்பினைக்கட்டி அனலோடு ஆடிய அண்ணலை வணங்குவோர் பாவம் கெடுதற்குக் குரவைக் கூத்து ஆடியவனாகிய திருமாலும், குளிர்தாமரையின் மேல் கரத்தலில்லாத பிரமனும் சான்றாவார் அல்லரோ?

<u>சித்தத்தொகை</u>

அழலங் கையினன் அந்தரத் தோங்கிநின்

றுழலும் மூவெயி லொள்ளழ லூட்டினான்
தழலுந் தாமரை யானொடு தாவினான்
கழலுஞ் சென்னியுங் காண்டற் கரியனே. **#982**
இறைவன் அழலை அழகிய கையிற்கொண்டவனும், வானில் ஓங்கி நின்று திரியும் மூன்று மதில்களையும் ஒள்ளழல்ஊட்டியவனும் எரியென மலரும் தாமரையிலுள்ள பிரமனோடு திரமாலும் பறந்தும் தாவியும் தன் கழலடிகளையும் சென்னியையும் காண்டறக்ரியவனுமாவான்.

சித்தத்தொகை

இளமை கைவிட் டகறலு மூப்பினார்
வளமை போய்ப்பிணி யோடு வருதலால்
உளமெ லாமொளி யாய்மதி யாயினான்
கிளமை யேகிளை யாக நினைப்பனே. **#983**
இளமை கைவிட்டு நீங்குதலும் உடல் வளமையெல்லாம் கெட்டுப் பிணியோடு மூப்பு வருதலால் , உள்ளமெல்லாம் ஒளியாகி மதியாகிய பெருமானின் உரிமையையே உறவாகயான் நினைப்பேன்.

சித்தத்தொகை

தன்னிற் றன்னை யறியுந் தலைமகன்
தன்னிற் றன்னை யறியில் தலைப்படும்
தன்னிற் றன்னை யறிவில னாயிடில்
தன்னிற் றன்னையுஞ் சார்தற் கரியனே. **#984**
தன்னில் தன்னை அறியும் தலைமகனாகிய இறைவன் தன்னில் ஒருவன் தன்னையறிந்தால் தலைப்படுவான்.தன்னில் தன்னை அறியும் அறிவிலாகில் தன்னில் தன்னையும் சார்தற்கு அரிய இயல்பினன் ஆவன்.

சித்தத்தொகை

இலங்கை மன்னனை யீரைந்து பத்துமன்
றலங்க லோடுட னேசெல வூன்றிய
நலங்கொள் சேவடி நாடொறும் நாடொறும்
வலங்கொண் டேத்துவார் வானுல காள்வரே. **#985**
இராவணனைப் பத்துத் தலைகளும் அன்று அணிந்திருந்த மாலைகளோடு உடனே கெட ஊன்றிய நலம் உடைய பெருமான் சேவடிகளை நாள்தோறும் வலம்கொண்டு வழிபடுவார் வானுலகினை ஆள்வர்.

உள்ளம்

உள்ளம், திருக்குறுந்தொகை

நீற லைத்ததோர் மேனி நிமிர்சடை
ஆற லைக்கநின் றாடும் அமுதினைத்
தேற லைத்தெள யைத்தெள வாய்த்ததோர்
ஊற லைக்கண்டு கொண்டதெ னுள்ளமே. **#986**

திருநீறு நன்கு பூசப்பெற்ற ஒப்பற மேனியையும், ஓங்கிய சடையில் கங்கையாறு அலைவீச நின்று ஆடும் அமுதமும், தேனும் அதன் தெளவும் அத்தெளவுவாய்த்த ஊறல் போல்வானுமாகிய பெருமானை என் உள்ளம் கண்டு கொண்டது.

உள்ளம்

பொந்தை யைப்புக்கு நீக்கப் புகுந்திடும்
தந்தை யைத்தழல் போல்வதோர் மேனியைச்
சிந்தி யைத்தெள வைத்தெள வாய்த்ததோர்
எந்தை யைக்கண்டு கொண்டதெ னுள்ளமே. **#987**

பொந்து போல்வதாகிய உடலிற்புகுந்து அதன் கட்டினை நீக்கப் புகுந்திடும் தந்தையும், தீப்போன்ற மேனியை அத்தெளவு வாய்த்த எந்தையும் ஆகி நின்ற பெருமானை என் உள்ளம் கண்டு கொண்டது.

உள்ளம்

வெள்ளத் தார்விஞ்சை யார்கள் விரும்பவே
வெள்ளத் தைச்சடை வைத்த விகிர்தனார்
கள்ளத தைக்கழி யம்மன மொன்றிநின்
றுள்ளத் தில்லொளி யைக் கண்ட துள்ளமே. **#988**

இன்ப வெள்ளத்தாராகிய விஞ்சையர்கள் விரும்பும்படி கங்கைவெள்ளத்தைச் சடையில்வைத்த மேலோரை மனம் கள்ளத்தை நீங்க உள்ளம் ஒன்றியிருந்து உள்ளத்தில் ஒளியாகக் கண்டது.

உள்ளம்

அம்மா னையமு தின்னமு தேயென்று
தம்மா னைத்தத்து வத்தடி யார்தொழும்
செம்மா னநிறம் போல்தோர் சிந்தையுள்
எம்மா னைக்கண்டு கொண்டதெ னுள்ளமே. **#989**

அம்மானை , அமுதே இன்னமுதே என்று தத்துவத்தை அறிந்த அடியார்

தொழும் நம் தலைவனும் செம்மையாகிய பெருமை மிக்க நிறம்போல்தாகிச் சிந்தையுள் இருக்கும் எம்மானுமாகிய பெருமானை என் உள்ளம் கண்டு கொண்டது.

உள்ளம்

கூறே றும்உமை பாகமோர் பாலராய்
ஆறே றுஞ்சடை மேற்பிறை சூடுவர்
பாறே றுந்தலை யேந்திப் பலவி(ல்)லம்
ஏறே றுமெந்தை யைக்கண்ட னுள்ளமே. **#990**

கூறாகப் பொருந்தி உடையொரு பாகராகிக், கங்கை ஏறிய சடைமேற் பிறை சூடியவராய் , பருந்துகள் ஏறிப்பறக்கும் வெண்டலை ஏந்திப் பல இல்லங்கள் தோறும் இடபம் ஏறிவரும் எந்தையை என் உள்ளம் கண்டு கொண்டது.

உள்ளம்

முன்னெஞ் சம்மின்றி மூர்க்கராய்ச் சாகின்றார்
தந்நெஞ் சந்தமக் குத்தாமி லாதவர்
வன்னெஞ் சம்மது நீங்குதல் வல்லீரே
என்னெஞ் சிலீச னைக்கண்டதெ னுள்ளமே. **#991**

தம் நெஞ்சம் தமக்குத்தாம் இல்லத சிலர் முன்னுதற்குரிய நெஞ்சம் இல்லாமல் மூர்க்கராய் வாழ்ந்து சாகின்றார், வன்மையுடைய நெஞ்சத்தை நீங்க வல்லமை உடையவர்களே என் நெஞ்சில் ஈசனை என்னுள்ளம் கண்டுகொண்டது.

உள்ளம்

வென்றா னைப்புல னைந்துமென் தீவினை
கொன்றா னைக்குணத் தாரே வணங்கிட
நன்றா நன்மனம் வைத்திடு ஞானமாம்
ஒன்றா னைக்கண்டு கொண்டதெ னுள்ளமே. **#992**

புலன்கள் ஐந்தும் வென்றவனும் என் தீய வினைகளைக் கொன்றவனும், குணத்தால் வணங்கிட நன்றாக நல்லமனத்தில் வைக்கும் ஞானம் என்னும் ஒப்பற்ற பொருளை உடையானுமாகிய பெருமானை என் உள்ளம் கண்டுகொண்டது.

உள்ளம்

மருவி னைமட நெஞ்சம் மனம்புகும்
குருவி னைக்குணத் தாலே வணங்கிடும்
திருவி னைச்சிந்தை யுட்சிவ னாய்நின்ற

உருவி னைக்கண்டு கொண்டதே னுள்ளமே. **#993**
அறிவற்ற மடநெஞ்சமே மனம்புகும் குரு நாதனும், குணத்தால்
வணங்கத்தக்க திருவும் ஆகிய பெருமானைப் பொருந்தினாய் சிந்தையுள்
சிவனாய் நின்ற உருவினை என்னுள்ளம் கண்டுகொண்டது.

உள்ளம்

தேச னைத்திரு மால்பிர மன்செயும்
பூச னைப்புண ரிற்புணர் வாயதோர்
நேச னைநெஞ்சி னுள்நிறை வாய்நின்ற
ஈச னைக்கண்டு கொண்டதெ னுள்ளமே. **#994**
ஒளி உடையவனும், திருமாலும், பிரமனும் செய்யும் பூசனைகள்
பொருந்தினால் அங்குப் பொருந்துகின்ற விருப்பம் உடையவனும்,
நெஞ்சுக்குள் நிறைவாகி நின்ற ஈசனுமாகிய பெருமானை என் உள்ளம்
கண்டுகொண்டது.

உள்ளம்

வெறுத்தா னைம்புல னும்பிர மன்தலை
அறுத்தா னையரக் கன்கயி லாயத்தைக்
கறுத்தா னைக்கா லினில்விர லொன்றினால்
ஒறுத்தா னைக்கண்டு கொண்டதெ னுள்ளமே. **#995**
ஐம்புலன்களை வெறுத்தவனும், பிரமன் தலையினை அறுத்தவனும்,
இராவணன் திருக்கயிலாயத்தின் மேற்சினந்தபோது காலினில் திருவிரல்
ஒன்றினால் ஒறுத்தவனும் ஆகிய பெருமானை என் உள்ளம்
கண்டுகொண்டது.

பாவநாசம்

திருப்பாலைத்துறை

பாவநாசம், திருக்குறுந்தொகை

பாவ மும்பழி பற்றற வேண்டுவீர்
ஆவில் அஞ்சுகந் தாடு மவன்கழல்
மேவ ராய்மிக வும்மகிழ்ந் துள்குமின்
காவ லாளன் கலந்தருள் செய்யுமே. **#996**

பாவமும் பழியும் ஆகிய பற்றுக்கள் அறுதலை விரும்புபவர்களே! பஞ்சகவ்வியம் உகந்து திருவபிடேகம் கொள்ளும் அப்பெருமான் கழலை மகிழ்ந்து மேவுபவராய் நினைவீராக; காத்து ஆள்வோனாகிய இறைவன் கலந்து அருள் செய்வான்.

திருப்பாலைத்துறை

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஒங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்கு மீச னெனாதவர்க் கில்லையே. **#997**

கங்கை நீராடிலும், காவிரியில் நீராடிலும், மணமும் குளிர்ச்சியும் உடைய குமரித்துறையில் நீராடிலும்,பெருகி ஒலிக்கின்ற கடல் நீர்த்துறைதோறும் நீராடிலும் என்ன பயன்? எங்கும் இறைவன் என்னாதவர்க்கு இவற்றாற் பயன் இல்லை.

திருப்பாலைத்துறை

பட்ட ராகிலென் சாத்திரங் கேட்கிலென்
இட்டு மட்டியு மீதொழில் பூணிலென்
எட்டு மொன்று மிரண்டு மறியிலென்
இட்ட மீச னெனாதவர்க் கில்லையே. **#998**

பட்டர் ஆயினும், சாத்திரங்கள் பல கேட்பினும், இட்டும் சேர்த்தும் கொடுக்கும் தொழில் பூணிலும், எட்டும் ஒன்றும் இரண்டும் அறிந்தாலும் என்ன பயன்? விருப்பம் இறைவனுக்கு என்னாதவர்க்கு இவற்றாற் பயன் இல்லையாம்.

திருப்பாலைத்துறை

வேத மோதிலென் வேள்விகள் செய்யிலென்
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதி யங்கமோ ராறு முணரிலென்

ஈச னையுள்கு வார்க்கன்றி யில்லையே. **#999**
வேதம் ஓதினாலும், வேள்விகள் செய்தாலும், நீதிநூல்கள் பலவற்றை நித்தமும் பயிற்றினாலும், ஆறங்கங்களை ஓதி உணர்ந்தாலும் என்ன பயன்? ஈசனை உள்குபவர்க்கு அன்றிமற்றவர்க்கு இவற்றாற் பயன் இல்லையாம்.

திருப்பாலைத்துறை

காலை சென்று கலந்துநீர் மூழ்கிலென்
வேலை தோறும் விதிவழி நிற்கிலென்
ஆலை வேள்வி யடைந்தது வேட்கிலென்
ஏல ஈசனென் பார்க்கன்றி யில்லையே. **#1000**
காலையில் சென்று கலந்து நீரில் முழ்கினாலும், வேளைகள் தோறும் விதிவழிநின்றாலும், ஆலை போன்று வேள்வி அடைந்து வேட்பிலும் என்னபயன்? உள்ளம் பொருந்த இறைவன் என்பார்க்கேயன்றி மற்றவர்க்கு இவற்றாற் பயன் இல்லை.

திருப்பாலைத்துறை

கான நாடு கலந்து திரியிலென்
ஈன மின்றி யிரும்தவஞ் செய்யிலென்
ஊனை யுண்ட லொழிந்துவான் நோக்கிலென்
ஞான னென்பவர்க் கன்றிநன் கில்லையே. **#1001**
காட்டுப பகுதிகளிற் கலந்து திரிந்தாலும், இழிவின்றிப் பெருந்தவம் செய்தாலும், ஊன் உண்ணுதலையொழிந்து வானத்தை நோக்கினாலும் என்ன பயன்? ஞானமயமாகியன்றி மற்றவர்க்கு இவற்றால் நற்பயன் இல்லை.

திருப்பாலைத்துறை

கூட வேடத்த ராகிக் குழுவிலென்
வாடி யூனை வருத்தித் திரியிலென்
ஆடல் வேடத்த னம்பலக் கூத்தனைப்
பாட லாளர்க்கல் லாற்பய னில்லையே. **#1002**
வேடங்கள் கூடியவராகித் திரண்டாலும், உடலை வாடிவருத்தித் திரிந்தாலும் என்ன பயன்? ஆடல்வேடத்தைஉடையவனாகிய அம்பலக்கூத்தனைப் பாடுபவர்க்கு அல்லால் மற்றையோர்க்குப் பயன் இல்லை.

திருப்பாலைத்துறை

நன்று நோற்கிலென் பட்டினி யாகிலென்

குன்ற மேறி இருந்தவஞ் செய்யிலன்
சென்று நீரிற் குளித்துத் திரியிலென்
என்று மீசனென் பார்க்கன்றி யில்லையே. **#1003**

நன்கு தவம்நோற்றாலும், உண்ணாவிரதம் கிடப்பினும், மலையில் ஏறிப் பெருந்தவம் செய்தாலும், சென்று நீரிற்குளித்துத் திரிந்தாலும் என்ன பயன்? என்றும் ஈசன் என்பார்க்கேயன்றி பற்றையோர்க்கு இவற்றாற் பயன் இல்லை.

திருப்பாலைத்துறை

கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல்
ஓடு நீரினை யோட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே. **#1004**

கோடிதீர்த்தங்கள் தோறும் கலந்து குளித்து அவற்றில் நீராடிக் கிடந்தாலும் அரனிடத்து அன்பு இல்லையாயின். ஓடும் இயல்பினை உடைய நீரை ஓட்டைக்குடத்திலே நிறைத்து மூடிவைத்திட்ட மூர்க்கன் ஒருவனின் செயலோடே அது ஒக்கும்.

திருப்பாலைத்துறை

மற்று நற்றவஞ் செய்து வருந்திலென்
பொற்றை யுற்றெடுத் தானுடல் புக்கிறக்
குற்ற நற்குரை யார்கழற் சேவடி
பற்றி லாதவர்க் குப்பய னில்லையே. **#1005**

மற்றும் நற்றவங்கள் பல செய்து வருந்தினால் என்ன பயன்? திருக்கயிலாயத்தை உற்று எடுத்த இராவணனது உடல் புகுந்து இற்றுப்போம்படிப் பொருந்திய நல்லொலிக் கழல்களபணிந்த சேவடியினிடத்துப் பற்றுதல் இல்லாதவர்க்குப் பயனே இல்லை.

ஆதிபுராணம்

ஆதிபுராணம்

ஆதிபுராணம், திருக்குறுந்தொகை

வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயக னாதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே. **#1006** ★★★★★

வேதங்களுக்கு நாயகனும், வேதியர்க்கு நாயகனும், உமாதேவியின் நாயகனும், பெருந்தவம் உடைய முனிவர்களுக்கு நாயகனும், ஆதிநாயகனும், ஆதிரை என்ற விண்மீனுக்கு நாயகனும், பூதங்களுக்கு நாயகனும் புண்ணியமூர்த்தி ஆவான்.

ஆதிபுராணம்

செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட் கேறுமோ
அத்த னென்றரி யோடு பிரமனும்
துத்தி யஞ்செய நின்றநற் சோதியே. **#1007**

மீண்டும் மீண்டும் செத்துச் செத்துப் பிறப்பதே தெய்வமென்று பொய்யாகக் கருதிப் பக்தி செய்யும் மனப்பாறை உடையவர்கட்கு இறைவன் என்று திருமாலோடு பிரமனும் துதிசெய்யநின்ற சோதி உள்ளத்திற் பொருந்துமோ?

ஆதிபுராணம்

நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறு கோடி நாராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறி லாதவன் ஈச னொருவனே. **#1008**

நூறுகோடி பிரமர்கள் அழிந்தனர்; ஆறுகோடி திருமால்களும் அங்ஙனமே ஆயினார்கள்; நீர் பொங்கிப்பெருகும் கங்கையாற்று மணலைவிட எண்ணிக்கையற்ற இந்திரர் நிலையும் அவ்வண்ணமே; முடிவற்றவனாய்த் திகழ்பவன் ஒப்பற்றவனாகிய இறைவன் மட்டுமே.

ஆதிபுராணம்

வாது செய்து மயங்கும் மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலு மேழைகாள்
யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்

மாதே வன்னலால் தேவர்மற் றில்லையே. #1009
அறிவற்றவர்களே! ஒருவரோடொருவர் வாதம் செய்து மயங்கும் மனத்தை உடையவர்களாய் ஏது சொல்லுவீராகிலும், யாதோர் தேவர் எனப்படுவார்க்கெல்லாம் தேவன் மகாதேவனாகிய சிவபிரான் மட்டுமன்றி வேறு யாரும் இல்லை.

ஆதிபுராணம்

கூவ லாமை குரைகட லாமையைக்
கூவ லோடொக்கு மோகட லென்றல்போல்
பாவ காரிகள் பார்ப்பரி தென்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே. #1010
கிணற்றாமை கடலாமையை நோக்கி இக்கிணற்றோடொக்குமோ கடல்? என்று கூறுதலைப்போன்று தேவதேவனாகிய சிவபெருமானின் பெருந்தன்மையைப் பாவிகளாகிய மக்கள் பார்த்தற்கு அரிது என்பர்.

ஆதிபுராணம்

பேய்வ னத்தமர் வானைப் பிரார்த்தித்தார்க்
கீவ னையிமை யோர்முடி தன்னடிச்
சாய்வ னைச்சல வார்கள் தமக்குடல்
சீவ னைச்சிவ னைச்சிந்தி யார்களே. #1011
பேய்களோடு கூடிச் சுடுகாட்டில் அமர்வானும், வேண்டியிருந்தவர்களுக்கு அருள்வழங்குவானும், தேவர்கள் முடிகள் திருவடிகளில் சாய்க்கப்பெறுவானும், தமக்குடலினுள் சீவனுமாய்ச் சிவனுமாய் இருப்பவனை வஞ்சனை உடையவர்கள் சிந்தியார்கள்.

ஆதிபுராணம்

எரிபெ ருக்குவ ரவ்வெரி யீசன
துருவ ருக்கம தாவ துணர்கிலார்
அரிய யற்கரி யானை யயர்த்துபோய்
நரிவி ருத்தம1 தாகுவர் நாடரே. #1012
வேள்விகளில் அக்கினி வளர்ப்பார்கள்; அவ்வக்கினி இறைவன் திருமேனி வகையாவது என்பதை உணரும் ஆற்றல் இல்லாதவர்கள் திருமாலுக்கும் பிரமனுக்கும் அரிய கடவுளைக் காண்டற்கு அயர்த்து நரிவிருத்தம் ஆகுவர்.

[1.நரிவிருத்தம் என்பது நரியினது வரலாறு எனப் பொருள் படும். காட்டில் வேடனொருவன் யானையைக் கொல்ல ஓர் அம்பை எய்து மற்றோர் அம்பை வில்லில் பூட்டி வைத்துக் கொண்டிருந்தான்.

அவ்வேளையில் பாம்பு ஒன்று அவனைக் கடித்தது. தன்னைக் கடித்த பாம்பை வாளால் வெட்டிக்கொன்று தானும் மூர்ச்சித்து விழுந்து இறந்தான். ஒரே நேரத்தில் யானையும் பாம்பும் இறந்தன. வேடனும் இறந்தான். நரி ஒன்று அவ்வழியே வந்து அவற்றைக் கண்டு , அளவற்ற மகிழ்ச்சி கொண்டு, யானை ஆறுமாதத்திற்கு உணவாகும்; வேடனுடல் ஏழுநாட்களுக்கு உணவாகும்; பாம்பை ஒருநாளுக்கு உணவாக வைத்துக்கொள்வோம். இப்போது நம் பசிக்கு இவ்வேடன் கையில் இருக்கும் வில்லிலுள்ள நரம்பாலாகிய நாணைக் கடித்துச் சுவைத்துப் பசியைப் போக்கிக் கொள்வோம் என்று நினைத்து வில்லில் பூட்டியிருந்த நாணை ஆவலோடு சென்று கடித்தது. உடனே இழுத்துக் கட்டப் பட்டிருந்த நாணறுந்த வில் திடீரென நிமிர்ந்த வேகத்தில் நரியின் வாயைக் கிழித்தது. நரியின் எண்ணக் கோட்டைகள் இடிந்தன. நரியும் இறந்தது. மக்களின் மனக்கோட்டைகள் ஒன்று நினைக்க ஒன்றாய் முடிதலை இக்கதை விளக்குகின்றது. பழங்காலத்திலேயே இக்கதை வழங்கியதாகத் தெரிகிறது. பிற்காலத்திலும் திருத்தக்கதேவர் இக்கதையை விருத்தப் பாடலால் பாடியுள்ளார்.]

ஆதிபுராணம்

அருக்கன் பாதம் வணங்குவ ரந்தியில்
அருக்க னாவா னரனுரு வல்லனோ
இருக்கு நான்மறை யீசனை யேதொழும்
கருத்தி னைநினை யார்கன் மனவரே. **#1013**

அந்தியில் சூரியன் பாதங்களை வணங்குவர்; சூரியனாவான் சிவபெருமானின் உருவம் அல்லனோ? இருக்கு முதலிய நான்கு வேதங்கள் இறைவனையே தொழும் கருத்தினைக் கல்மனம் படைத்தவர்களாய்ச் சிலர் நினைக்கமாட்டார்கள்.

ஆதிபுராணம்

தாயி னும்நல்ல சங்கர னுக்கன்பர்
ஆய வுள்ளத் தமுதருந் தப்பெறார்
பேயர் பேய்முலை யுண்டுயிர் போக்கிய
மாயன் மாயத்துப் பட்ட மனத்தரே. **#1014**

பேய்ப்பெண்ணினது பேய்முலைப்பாலினை உண்டு அவள் உயிர் போகச்செய்த திருமாலுடைய மாயத்துப் பொருந்திய மனத்தை உடையவர்கள் தாயினும் நல்லவனாகிய சங்கரனுக்கு அன்பர்கள் ஆகிய உள்ளத்து அமுது அருந்தப்பெறா இயல்பினராவர்.

ஆதிபுராணம்

அரக்கன் வல்லரட் டாங்கொழித் தாரருள்
பெருக்கச் செய்த பிரான் பெருந் தன்மையை
அருத்தி செய்தறி யப்பெறு கின்றிலர்
கருத்தி லாக்கய வக்கணத் தோர்களே. **#1015**
கருத்தில்லாத கீழ்மைக்குணமுடைய மக்கள், இராவணனது வலிய அரட்டுத்தன்மையினை ஒழித்துப் பின்னும் பேரருள் பெருக்கச்செய்த சிவபெருமானின் பெருந்தன்மையை விருப்பம் புரிந்து அறியப்பெறுகிலர் ஆவர்.

ஐந்தாம் திருமுறை - தேவாரம் முற்றும்

பன்னிருதிருமுறை

திருநாவுக்கரசர்

ஆறாம் திருமுறை - தேவாரம்

தொகுப்பு: சங்கர்

சித்திரை 2017 வெளியீடு

பன்னிருதிருமுறை

ஆறாம் திருமுறை - தேவாரம்

திருநாவுக்கரசர் அருளியது

981 பாடல்கள் கொண்ட 99 பதிகங்கள்



பன்னிருதிருமுறை

திருநாவுக்கரசர்

ஆறாம் திருமுறை - தேவாரம்

தொகுப்பு: சங்கர்

சித்திரை **2017** வெளியீடு

கோயில்

கோயில்

கோயில், பெரியதிருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருமூலத்தானநாயகர் (எ) சபாநாதர்.
தேவியார் : சிவகாமியம்மை.

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. #1 ★★★★★

எவ்வளவு தகுதி உடையவரும் தம் முயற்சியால் அணுகுதற்கு அரியவன், அந்தணர்களின் உள்ளத்தில் உள்ளவன். மாற்றுதற்கு அரிய வேதத்தின் உட்பொருளாகியவன், நுண்ணியன், யாரும் தம் முயற்சியால் உணரப்படாத மெய்ப்பொருள் ஆகியவன். தேனும் பாலும் போன்று இனியவன். நிலைபெற்ற ஒளிவடிவினன், தேவர்களுக்குத் தலைவன், திருமாலையும் பிரமனையும், தீயையும், காற்றையும், ஒலிக்கின்ற கடலையும்மேம்பட்ட மலைகளையும் உடனாய் இருந்து செயற்படுப்பவன் ஆகிய மேம்படடவன். புலிக்கால் முனிவனுக்கு உறைவிடமாகிய தில்லையை உகந்து எழுந்தருளும் அப்பெருமானுடைய மெய்ப் புகழைப்பற்றி உரையாடாத நாள்கள் எல்லாம் பயன் அற்ற நாள்களாம்.

கோயில்

கற்றானைக் கங்கைவார் சடையான் றன்னைக்
காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதி னானை
அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள்செய் வானை
ஆரூரும் புகுவானை அறிந்தோ மன்றே
மற்றாருந் தன்னொப்பா ரில்லா தானை
வானவர்க ளெப்பொழுதும் வணங்கி ஏத்தப்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. #2

எல்லாம் வல்லவன், கங்கையைத் தாங்கிய நீண்ட சடையன். ஒரு

பக்கத்தில் காவிரியால் சூழப்பட்ட திருவலஞ்சுழி என்ற திருத்தலத்தை உகந்தருளியிருப்பவன். பொருள் அற்றவருக்கும், தாங்குவார் இல்லாது வருந்துபவருக்கும், அருளுபவன். தன்னைத் தவிர வேறு எவரும் தனக்கு ஒப்பில்லாதவன். தேவர்களால் எப்பொழுதும் வணங்கிப் போற்றப்படுபவன். திருவாரூரிலும் உகந்து தங்கியிருப்பவன் ஆகிய எம்பெருமானை நாம் எல்லாருக்கும் மேலானவன் என்று அறிந்தோம். ஆதலின் அந்தப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

கோயில்

கருமானின் உரியதளே உடையா வீக்கிக்
கனைகழல்கள் கலந்தொலிப்ப அனல்கை ஏந்தி
வருமானத் திரள்தோள்கள் மட்டித் தாட
வளர்மதியஞ் சடைக்கணிந்து மானேர் நோக்கி
அருமான வாண்முகத்தா ளமர்ந்து காண
அமரர்கணம் முடிவணங்க ஆடு கின்ற
பெருமானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. **#3**

யானைத் தோலை மேலாடையாக இறுக்கி உடுத்து, தன் கழல்களின் ஒலி ஏனைய இயங்களின் ஒலியோடு கலந்து ஒலிக்க, கையில் தீயை ஏந்தி, பெருமை வளர்கின்ற பருத்த தோள்களை மடித்து அவைகள் அசையுமாறு, பிறைமதியைச் சடையில் அணிந்து மானின் பார்வை போன்ற பார்வையளாகிய மேம்பட்ட சிறந்த ஒளியை உடைய முகத்தவளாகிய உமாதேவி விரும்பிக்காணுமாறும் தேவர் கூட்டம் தலை தாழ்த்து வணங்குமாறும் திருக்கூத்தாடுகின்ற மேம்பட்டவனாகிய பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

கோயில்

அருந்தவர்கள் தொழுதேத்தும் அப்பன் தன்னை
அமரர்கள்தம் பெருமானை அரனை மூவா
மருந்தமரர்க் கருள்புரிந்த மைந்தன் தன்னை
மறிகடலுங் குலவரையும் மண்ணும் விண்ணும்
திருந்தொளிய தாரகையுந் திசைக ளெட்டுந்
திரிசுடர்கள் ஓரிரண்டும் பிறவு மாய
பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. **#4**

பெருந்தவத்தோர் தொழுது போற்றும் தலைவன், தேவர்கள் தலைவன், தீமைகளை அழிப்பவன், மூப்பு எய்தாமற் செய்யும் அமுதத்தைத்

தேவர்களுக்கு உதவிய வலிமையுடையவன். அலைகள் மடங்கி வீழும் கடல், மேம்பட்டமலை, நிலம், வானம், திருத்தமான ஒளியை உடைய விண்மீன்கள், எண்திசைகள், வானத்தில் உலவுகின்ற காய்கதிர், மதியம், பிறவும், ஆகிய பொருள்களில் உடனாய் இருந்து அவற்றைச் செயற்படுத்தும் மேன்மையை உடையவன் ஆகிய பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

கோயில்

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகன்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. **#5**

ஒப்பற்ற துணைவன், அடியவர்களின் துயரைப் போக்கும் அமுதம் போன்றவன். பரந்த இவ்வுலகில் பிறப்பெடுத்த பின்னர் உடன்தோன்றும் துணைவர், ஏனைய சுற்றத்தார், செல்வம் இவற்றிலுள்ள பாசத்தை நீத்து, பெரியபுலன்களின்மேல் செல்லும் மனத்தை அடக்கி, மகளிரோடும் படுக்கையில் நுகரும் சிற்றின்பப்பயனை அடியோடு நீக்கி, ஏனைய தெய்வங்களோடு பொதுவாக நினைப்பதனை விடுத்துத் தன்னையே விருப்புற்று நினைத்தலில் வல்ல அடியவர்களுக்கு எக்காலத்தும் உடனாய் நின்று உதவும் துணைவன் ஆகிய பெரும்பற்றப்புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

கோயில்

கரும்பமரும் மொழிமடவாள் பங்கன் தன்னைக்
கனவயிரக் குன்றனைய காட்சி யானை
அரும்பமரும் பூங்கொன்றைத் தாரான் தன்னை
அருமறையோ டாறங்க மாயி னானைச்
சுரும்பமருங் கடிபொழில்கள் சூழ்தென் னாரூர்ச்
சுடர்க்கொழுந்தைத் துளக்கில்லா விளக்கை மிக்க
பெரும்பொருளைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. **#6**

கரும்பு போன்ற இனிய சொற்களை உடைய பார்வதியைத் தன் திருமேனியின் இடப்பகுதியாகக் கொண்டவன். மேம்பட்ட

வயிரமலைபோன்ற வடிவினன். அலரும்பருவத்து அரும்பாய்க் கட்டிய கொன்றைப் பூமாலையான். நால்வேதமும் ஆறங்கமும் ஆயினான். வண்டுகள் விரும்பும் நறுமணச்சோலைகள் சூழ்ந்த அழகிய ஆரூரில் மேல் நோக்கும் சுடரொளி போன்றவன். ஒளிப்பிழம்பு அணைதல் இல்லாத விளக்குப் போன்றவன். வீடுபேற்று இன்பமாக இருப்பவன் ஆகிய பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

கோயில்

வரும்பயனை எழுநரம்பி னோசை யானை
வரைசிலையா வானவர்கள் முயன்ற வாளி
அரும்பயஞ்செ யவுணர்புர மெரியக் கோத்த
அம்மானை அலைகடல்நஞ் சயின்றான் தன்னைச்
சுரும்பமருங் குழல்மடவார் கடைக்கண் நோக்கில்
துளங்காத சிந்தையராய்த் துறந்தோ ருள்ளப்
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. #7

ஏழிசையாய் இசைப் பயனாய் உள்ளவன். மேருவை வில்லாகக் கொண்டு, தேவர்களையே அம்பாகக் கொண்டு கொடிய அச்சத்தை விளைத்த அசுரர்களின் மூன்று கோட்டைகளும் எரியுமாறு அம்பினைச் செலுத்திய தலைவன். அலைகடலில் தோன்றிய விடத்தை உண்டவன். வண்டுகள் தங்கும் பூக்களை அணிந்த கூந்தலை உடைய இளைய மகளிரின் கடைக்கண் பார்வையால் அசையாத உள்ளத்தை உடையவராய்ச் சிற்றின்பத்தை அறநீத்த உள்ளத்தார் அடையும் முடிந்த பயனாக இருப்பவன் ஆகிய பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

கோயில்

காரானை யீருரிவைப் போர்வை யானைக்
காமருபூங் கச்சியே கம்பன் தன்னை
ஆரேனும் அடியவர்கட் கணியான் தன்னை
அமரர்களுக் கறிவரிய அளவி லானைப்
பாரோரும் விண்ணோரும் பணிய நட்டம்
பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனை எண்ணில்
பேரானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. #8

கரிய யானையின் உதிரப் பசுமை கெடாத தோலைப் போர்த்தியவன். விருப்பம் மருவிய பொலிவினை உடைய காஞ்சி நகரத்தின் ஏகம்பம்

என்ற திருக்கோயிலை உகந்து எழுந்தருள்பவன். அடியவர்களை அண்மித்திருப்பவன். தம் முயற்சியால் அறிய முயலும் தேவர்களுக்கு அளவிட முடியாதவன். நிலவுலகத்தவரும் வானுலகத்தவரும் தன்னை வணங்குமாறு கூத்தினைப் பயில்கின்ற ஒளி உருவன் ஆகி எண்ணற்ற திருநாமங்களை உடையவன். அத்தகைய பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

கோயில்

முற்றாத பால்வமதியஞ் சூடி னானை
மூவுலகுந் தானாய முதல்வன் தன்னைச்
செற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான் தன்னைத்
திகழொளியை மரகதத்தைத் தேனைப் பாலைக்
குற்றாலத் தமர்ந்துறையுங் குழகன் தன்னைக்கூத்தாட வல்லானைக்
கோனை ஞானம்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்பேசாத நாளெல்லாம்
பிறவா நாளே. **#9**

வெள்ளிய பிறைமதியைச் சூடியவன். மூவுலகும் தானேயாய் இருக்கும் தலைவன். பகைவருடைய மும்மதிலையும் அழித்தவன். விளங்கும் ஒளிவடிவினன். இடப்பாகத்தது நிறத்தால் மரகதமணி போன்றவன். இன்பம்பயத்தலால் தேனும் பாலும் போன்றவன். குற்றாலம் என்ற திருத்தலத்தை உகந்தருளியிருக்கும் இளையவன். கூத்தாடுதலில் வல்லவன். யாவருக்கும் தலைவன். சிவஞானியர் ஞானத்தால் அறியப் பெற்றவன் ஆகிய பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

கோயில்

காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங்
கடிக்கமலத் திருந்தவனுங் காணா வண்ணம்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனை மயக்கந் தீர்க்கும்
ஏரொளியை இருநிலனும் விசும்பும் விண்ணும்
ஏழுலகுங் கடந்தண்டத் தப்பால் நின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
சோத நாளெல்லாம் பிறவா நாளே. **#10**

கரிய உடல் ஒளியை உடையவனும் சிவந்த கண்களை உடையவனும் ஆகிய திருமாலும், நறுமணம் கமழும் செந்தாமரையில் வீற்றிருக்கும் பிரமனும் தன் அடியையும் முடியையும் காணமுடியாதபடி சீரிய ஒளியை உடைய தீப்பிழம்பாய் நின்ற பழைய மேம்பட்ட ஒளியை உடையவன்.

உள்ளத்தில் உள்ள மயக்கத்தைப் போக்கும் ஞான ஒளியானவன். பெரிய இந்நில உலகையும், வானத்தையும், தேவர் உலகையும் உள்ளிட்ட ஏழு உலகங்களையும் கடந்து அவற்றிற்கு அப்பாலும் பரவும் எல்லையற்ற பேரொளிப் பிழம்பாய் இருப்பவன் ஆகிய பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

கோயில்

கோயில், புக்கதிருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருமூலத்தானநாயகர் (எ) சபாநாதர்.
தேவியார் : சிவகாமியம்மை.

மங்குல் மதிதவழும் மாட வீதி
மயிலாப்பி லுள்ளார் மருக லுள்ளார்
கொங்கிற் கொடுமுடியார் குற்றா லத்தார்
குடமூக்கி லுள்ளார்போய்க் கொள்ளம் பூதூர்த்
தங்கு மிடமறியார் சால நாளார்
தரும புரத்துள்ளார் தக்க ளூரார்
பொங்குவெண் ணீறணிந்து பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே.
#11

பொலிவு தரும் வெண்ணீறு அணிந்து, பூதங்கள் தம்மைச் சூழ்ந்து வர, நம்பெருமானார் வானத்தில் உள்ள சந்திரன் தவழ்ந்து செல்லும் உயர்ச்சியை உடைய பெருந்தெருக்களை உடைய மயிலாப்பூர், மருகல்,கொங்குநாட்டுக் கொடுமுடி, குற்றாலம், குடமூக்கு, கொள்ளம்பூதூர், தருமபுரம்,தக்களூர் என்ற திருத்தலங்களில் பல நாள் தங்கி, தாம் உறுதியாகத் தங்கும் இடமாகப் பிறவற்றை அறியாராய், தில்லைச் சிற்றம்பலத்திலே புகுந்து தங்கி விட்டார்.

கோயில்

நாக மரைக்கசைத்த நம்ப ரிந்நாள்
நனிபள்ளி யுள்ளார்போய் நல்லூர்த் தங்கிப்
பாகப் பொழுதெலாம் பாசூர்த் தங்கிப்
பரிதி நியமத்தார் பன்னி ருநாள்
வேதமும் வேள்விப் புகையும் ஓவா
விரிநீர் மிழலை எழுநாள் தங்கிப்
போகமும் பொய்யாப் பொருளு மானார்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. **#12**

ஐம்புல இன்பப் பொருள்களும் மெய்ப்பொருளும் ஆகிய, பாம்பினை

இடையிலே கட்டிய, நம்மால் விரும்பப்படும் இறைவர் நனிபள்ளி, நல்லூர் இவற்றில் தங்கி ஓர் இராப்பொழுது முழுதும் பாசூரில் தங்கிப் பன்னிருநாள் பரிதிநியமத்திலும் ஏழு நாள் வேதமும் வேள்விப் புகையும் நீங்காத நீர்வளம் மிக்க திருவீழிமிழலையிலும் உகந்திருந்து, இந்நாளில் தில்லைச் சிற்றம்பலத்திலே புகுந்து தங்கிவிட்டார்.

கோயில்

துறங்காட்டி யெல்லாம் விரித்தார் போலும்
தூமதியும் பாம்பு முடையார் போலும்
மறங்காட்டி மும்மதிலும் எய்தார் போலும்
மந்திரமுந் தந்திரமுந் தாமே போலும்
அறங்காட்டி அந்தணர்க்கன் றால நீழல்
அறமருளிச் செய்த அரனா ரிந்நாள்
புறங்காட் டெரியாடிப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. **#13**

உலகவருக்கு ஒழுக்கத்தை அறிவித்து, ஒரு காலத்தில் சனகர் முதலிய அந்தணர் நால்வருக்கு வேதத்தின் விழுமிய பொருளை அருளிச்செய்த சிவபெருமான் நிலையில்லாப் பொருள்களில் பற்றறுத்தலாகிய ஞானத்தை அறிவித்து, மெய்ந்நூற் பொருள்கள் அனைத்தையும் அருளினார். களங்கமற்ற பிறைமதியையும் பாம்பினையும் அணிகலனாக உடையார், தம்வீரத்தை வெளிப்படுத்தி மூன்று மதில்களையும் அம்பு எய்து அழித்தார்.மந்திரங்களும் அவற்றை முறையாகப் பயன்படுத்தும் செயல்களும் தாமேயாக உள்ளார்.அப்பெருமான் இந்நாள் தாமே உகந்து தில்லைச் சிற்றம்பலமே புகுந்தார்.

கோயில்

வாரேறு வனமுலையாள் பாக மாக
மழுவாள்கை யேந்தி மயானத் தாடிச்
சீரேறு தண்வயல்சூழ் ஓத வேலித்
திருவாஞ்சி யத்தார் திருநள் ளாற்றார்
காரேறு கண்டத்தார் காமற் காய்ந்த
கண்விளங்கு நெற்றியார் கடல்நஞ் சுண்டார்
போரேறு தாமேறிப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. **#14**

கச்சணிந்த அழகிய திருத்தனங்களை உடைய பார்வதி தம் உடம்பில் ஒரு பகுதியாக அமைய, மழுப்படையைக் கையில் தாங்கிச் சுடுகாட்டில் கூத்து நிகழ்த்தி, விடக்கறை தங்கிய கழுத்தினராய், மன்மதனை

வெகுண்ட கண் விளங்கும் நெற்றியினராய்க் கடலில் தோன்றிய விடத்தைத்தாம் உண்டு, உலகைப் பாதுகாத்த பெருமானார், சிறப்புமிக்க குளிர்ந்த வயல்களால் சூழப்பட்டதும், நீர் வெள்ளத்தை எல்லையாக உடையதுமாகிய திருவாஞ்சியம், திருநள்ளாறு இவற்றை உகந்தருளின திருத்தலங்களாக உடையவராய், பகைவரோடு போரிடும் காளையை வாகனமாகக் கொண்டு பூதங்கள் தம்மைச் சூழ்ந்துவரத் தில்லைச் சிற்றம்பலமே புகுந்தார்.

கோயில்

காரார் கமழ்கொன்றைக் கண்ணி சூடிக்
கபாலங்கை யேந்திக் கணங்கள் பாட
ஊரா ரிடுபிச்சை கொண்டு ழல்லும்
உத்தமராய் நின்ற ஒருவ னார்தாம்
சீரார் கழல்வணங்குந் தேவ தேவர்
திருவாரூர்த் திருமூலட் டான மேயார்
போரார் விடையேறிப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. **#15**

தம் சிறப்பு நிறைந்த திருவடிகளை வணங்கும் தேவர்களுக்கும் தலைவராகிய சிவபெருமானார் கார்காலத்தில் மணம் வீசும் கொன்றைப் பூவாலாகிய முடிமாலையைச் சூடி, மண்டையோட்டைக் கையில் ஏந்தி, பூதகணங்கள் தம் பெருமையைப் பாட, ஊரிலுள்ளார் வழங்கும் பிச்சையை உணவாகக் கொண்டு திரிகின்ற மேம்பட்டவராய்க் காட்சி வழங்கும் ஒப்பற்றவராய், திருவாரூர்த் திருமூலத்தானத்தில் விரும்பித் தங்கிப் பின் போர் செய்யும் காளை மீது இவர்ந்து பூதங்கள் தம்மைச் சுற்றிவரத் தில்லைச்சிற்றம்பலத்தில் புகுந்தார்.

கோயில்

காதார் குழையினர் கட்டங் கத்தர்
கயிலாய மாமலையார் காரோ ணத்தார்
மூதாயர் மூதாதை யில்லார் போலும்
முதலும் இறுதியுந் தாமே போலும்
மாதாய மாதர் மகிழ அன்று
வன்மதவேள் தன்னுடலங் காய்ந்தா ரிந்நாள்
போதார் சடைதாழப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. **#16**

ஆண்டில் மூத்த ஆட்டுவாள், ஊட்டுவாள், ஒல் உறுத்துவாள், நொடி பயிற்றுவாள்,கைத்தாய் என்ற ஐவகையராய செவிலித்தாயரும், நற்றாயும் தந்தையும் இல்லாதவராய், உலகிற்கு முதலாயும் முடிவாயும்

உள்ளவர் தாமேயாய்க் காதில் குழை அணிந்து கட்டங்கம் என்ற படைக்கலத்தை ஏந்திக் கயிலாய மலையிலும், காரோணப்பதிகளிலும், உகந்தருளியிருக்கும் சிவபெருமான் அழகிய பெண் இனத்தார் மகிழுமாறு பார்வதியின் திருமணத்துக்கு முற்பட்ட காலத்திலே மன்மதனுடைய உடம்பினை அழித்தவராய், இந்நாளில் பூக்கள் நிறைந்த தம் சடைகள் தொங்கவும், பூதங்கள் சூழவும், தில்லைச் சிற்றம்பலத்தில் புகுந்தார்.

<u>கோயில்</u>

இறந்தார்க்கும் என்றும் இறவா தார்க்கும்
இமையவர்க்கும் ஏகமாய் நின்று சென்று
பிறந்தார்க்கும் என்றும் பிறவா தார்க்கும்
பெரியார்தம் பெருமையே பேச நின்று
மறந்தார் மனத்தென்றும் மருவார் போலும்
மறைக்காட் டுறையும் மழுவாட் செல்வர்
புறந்தாழ் சடைதாழப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. **#17**

தம்மை மறந்தவர் மனத்தில் என்றும் விரும்பித் தங்காதவராய்த் திருமறைக்காட்டில் உகந்தருளியிருக்கும் மழுப்படையை உடைய பெருமான் உலகியலில் நின்று வாழ்நாள் இறுதி வந்துழி இறந்தவர்.யோகம் முதலியவற்றால் நீண்ட நாள் இறவாது இருந்தவர். தேவர்கள் ஆகிய எல்லோருக்கும் தாமே துணையாய், உலகில் பிறப்பெடுப்பவருக்கும் என்றும் பிறப்பெடுக்கும் நிலையைக் கடந்து வீடுபெற்றவருக்கும் தலைவராய்த் தம் பெருமையையே அவர்கள் என்றும் பேசுமாறு அவர் மனத்துள் என்றும் நிலைபெற்று, பின்புறமாக நீண்டு தொங்கும் சடையை உடையவராய்ப் பூதம் சூழத் தில்லைச்சிற்றம்பலமே புகுந்தார்.

<u>கோயில்</u>

குலாவெண் தலைமாலை யென்பு பூண்டு
குளிர்கொன்றைத் தாரணிந்து கொல்லே றேறிக்
கலாவெங் களிற்றுரிவைப் போர்வை மூடிக்
கையோ டனலேந்திக் காடு றைவார்
நிலாவெண் மதியுரிஞ்ச நீண்ட மாடம்
நிறைவயல்சூழ் நெய்த்தானம் மேய செல்வர்
புலால்வெண் தலையேந்திப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. **#18**

ஒளி விளங்கும் வெண் மதியம் தீண்டுமாறு உயர்ந்த மாடங்களை

உடையதாய் மற்ற இடம் எங்கும் நிறைந்த வயல்களால் சூழப்பட்ட திரு நெய்த்தானத்தை உகந்தருளிய பெருமான் வளைந்த வெண்தலைமாலை. எலும்புகள் இவற்றை அணிந்து குளிர்ந்த கொன்றைப் பூ மாலையை மார்பில் சூடி, கொல்லுதலில் வல்ல காளையை இவர்ந்து, உடம்பை ஒட்டிக் கொடிய யானைத் தோலைப் போர்வையாக அணிந்து உடம்பை மறைத்துக் கொண்டு, கைகளில் மண்டை ஓட்டினையும் தீயையும் ஏந்திச் சுடுகாட்டில் தங்கும் இயல்பினர். அவர், புலால் நாற்றம் கமழும் வெள்ளிய மண்டை ஓட்டினைக் கையில் ஏந்திப் பூதங்கள் சூழத்தில்லைச் சிற்றம்பலத்திலே புகுந்தார்.

கோயில்

சந்தித்த கோவணத்தர் வெண்ணூல் மார்பர்
சங்கரரைக் கண்டீரோ கண்டோ மிந்நாள்
பந்தித்த வெள்விடையைப் பாய வேறிப்
படுதலையி லென்கொலோ ஏந்திக் கொண்டு
வந்திங்கென் வெள்வளையுந் தாமு மெல்லா
மணியாரூர் நின்றந்தி கொள்ளக் கொள்ளப்
பொன்றீ மணிவிளக்குப் பூதம் பற்றப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. **#19**

கோவணம் அணிந்து வெள்ளிய பூணூல் தரித்தவராய் எல்லோருக்கும் இன்பம் செய்யும் பெருமானைக் கண்டீரோ என்று முக்கணான் முயக்கம் வேட்ட தலைவிதன்பால் அன்புடைய அயலாரை வினவினாள். கட்டியிருந்த வெண்ணிறக் காளையைக் கட்டவிழ்த்து அது விரைந்து செல்லுமாறு அதன் மீது தாவி ஏறி, மண்டை ஓட்டில் எதனையோ ஏந்திக்கொண்டு அழகிய ஆரூரிலே அந்தி நேரத்தில் எங்கள் வெள்வளைகளைத் தாம் முழுமையாய்க் கைக்கொள்வதற்காக நின்று, இந்நாளில்அழகிய தீப்போன்ற ஒளி விளக்குக்களைப் பூதங்கள் ஏந்தி வரத் தில்லைச்சிற்றம்பலத்தில் தாம் விரும்பியவாறு புகுந்தார்.

கோயில்

பாதங்கள் நல்லார் பரவி யேத்தப்
பத்திமையாற் பணிசெய்யுந் தொண்டர் தங்கள்
ஏதங்கள் தீர இருந்தார் போலும்
எழுபிறப்பும் ஆளுடைய ஈசனார் தாம்
வேதங்க ளோதிஓர் வீணை யேந்தி
விடையொன்று தாமேறி வேத கீதர்
பூதங்கள் சூழப் புலித்தோல் வீக்கிப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. **#20**

வினைப்பயன் தொடர்தற்குரிய ஏழு பிறப்புக்களிலும் நம்மை அடியவராகக் கொள்ளும் சிவபெருமான் தம் திருவடிகளைச் சான்றோர்கள் முன்னின்று வழிபட்டுத் துதிக்கப் பக்தியால் அவருடைய உகப்பிற்காகவே தொண்டு செய்யும் அடியார்களுடைய துன்பங்கள் நீங்குமாறு திருத்தலங்களில் உகந்தருளியுள்ளார். வீணையைக் கையில் ஏந்தி வேதங்களை ஓதிக் கொண்டு காளை மீது இவர்ந்து புலித்தோலை இடையில் கட்டிய அவ்வேத கீதர் பூதங்கள் தம்மைச் சூழ்ந்து வரத் தில்லைச் சிற்றம்பலத்தைத் தாமே விரும்பிச் சேர்ந்தார்.

கோயில்

பட்டுடுத்துத் தோல்போர்த்துப் பாம்பொன் றார்த்துப்
பகவனார் பாரிடங்கள் சூழ நட்டஞ்
சிட்டராய்த் தீயேந்திச் செய்வார் தம்மைத்
தில்லைச்சிற் றம்பலத்தே கண்டோ மிந்நாள்
விட்டிலங்கு சூலமே வெண்ணூ லுண்டே
ஓதுவதும் வேதமே வீணை யுண்டே
கட்டங்கங் கையதே சென்று காணீர்
கறைசேர் மிடற்றெங் கபாலி யார்க்கே. **#21**

இடையில் பட்டை உடுத்தி அதனைப் பாம்பு ஒன்றினால் இறுக்கிக் கொண்டு மேலேயானைத் தோலைப் போர்த்துப் பெருமான் பூதங்கள் தம்மைச் சூழத் தீயைக்கையில் ஏந்தி ஆடற் கலையில் வல்லவராய் உள்ளார். அவர் இந்நாள் தில்லைச் சிற்றம்பலத்திலேயே ஒளிவீசும் சூலப்படை ஏந்தி, பூணூல் அணிந்து, வீணையை எழீஇ வேதம் ஓதி, ஒருகையில் கட்டங்கம் என்ற படையை ஏந்திவிடக்கறை பொருந்திய கழுத்தினராய் மண்டை ஓட்டினை ஏந்தியவராய் உள்ள காட்சியை எல்லீரும் சென்று காண்மின்கள்.

திருவீரட்டானம்

திருஅதிகைவீரட்டானம்

திருவீரட்டானம், ஏழைத்திருத்தாண்டகம்

வெறிவிரவு கூவிளநல் தொங்க லானை
வீரட்டத் தானைவெள் ளேற்றி னானைப்
பொறியரவி னானைப்புள் ளூர்தி யானைப்
பொன்னிறத்தி னானைப் புகழ்தக் கானை
அறிதற் கரியசீ ரம்மான் தன்னை
அதியரைய மங்கை யமர்ந்தான் தன்னை
எறிகெடிலத் தானை இறைவன் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. **#22**

அலைகள் வீசும் கெடில நதிக்கரையிலுள்ள எம்பெருமான் நறுமணம் கமழும் வில்வமாலை அணிந்தவன். அதிகை வீரட்டத்தில் உகந்தருளியிருப்பவன். இடபவாகனன்.ஆதிசேடனாகவும், கருடவாகனத் திருமாலாகவும் பொன் நிறமுடைய பிரமனாகவும் அவருள் உடனாய் இருந்து அவரைச் செயற்படுப்பவன். பொருள்சேர் புகழுக்குத்தக்கவன். உணர்ந்தார்க்கும் உணர்வரிய சிறப்பினை உடைய தலைவன். அதியரையமங்கை என்ற திருத்தலத்தை உகந்தருளியிருப்பவன். அத்தகைய பெருமானை அறிவிலியாகிய யான் என் வாழ்க்கையின் முற்பகுதியில் வழிபடாது பழித்துக்கூறிய செயல் இரங்கத்தக்கது.

திருஅதிகைவீரட்டானம்

வெள்ளிக் குன்றன்ன விடையான் தன்னை
வில்வலான் வில்வட்டங் காய்ந்தான் தன்னைப்
புள்ளி வரிநாகம் பூண்டான் தன்னைப்
பொன்பிதிர்ந் தன்ன சடையான் தன்னை
வள்ளி வளைத்தோள் முதல்வன் தன்னை
வாரா வுலகருள வல்லான் தன்னை
எள்கவிடு பிச்சை யேற்பான் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. **#23**

மீண்டும் பிறப்பெடுக்க வேண்டிய நிலையில்லாத வீட்டுலகை அருளவல்லஎம்பெருமான் வெள்ளி மலை போன்ற காளையை வாகனமாக உடையவன். வில்லைப்பயன் கோடலில் வல்ல மன்மதனுடைய வில்லைக் கையாண்ட செயலைக் கோபித்தவன். படப்புள்ளிகளையும் கோடுகளையும் உடைய நாகத்தை அணிகலனாக

அணிபவன். பொன் துகள் போல ஒளிவீசும் செஞ்சடையினன். சந்திரனைப் போல ஒளிவீசும் தோள்வளை அணிந்த முதல்வன். பிறர் தன்னை இகழுமாறு பல வீட்டிலுள்ளவர்களும் வழங்கும் பிச்சையை ஏற்பவன். அத்தகைய பெருமானை ஏழையேன் பண்டு இகழ்ந்த திறம் இரங்கத்தக்கது.

திருஅதிகைவீரட்டானம்

முந்தி யுலகம் படைத்தான் தன்னை
மூவா முதலாய மூர்த்தி தன்னைச்
சந்தவெண் திங்க ளணிந்தான் தன்னைத்
தவநெறிகள் சாதிக்க வல்லான் தன்னைச்
சிந்தையில் தீர்வினையைத் தேனைப் பாலைச்
செழுங்கெடில வீரட்டம் மேவி னானை
எந்தை பெருமானை யீசன் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. **#24**

செழிப்புடைய கெடிலநதி பாயும் அதிகை வீரட்டானத்தை உகந்தருளியிருக்கும் எந்தையாய்ப் பெருமானாய், எல்லோரையும் ஆள்பவனாய் உள்ள எம்பெருமான்தான். என்றைக்கும் கெடுதலில்லாத முதற்பொருள். அவனே முற்பட்ட காலத்தில் உலகங்களைப் படைத்தவன். அழகிய வெள்ளியபிறை சூடி அடியார்களின் தவமாகிய நெறியை முற்றுவிப்பவன். சித்தம் முதலிய கருவிகளால் செய்யப்படும் செயல்களின் பயனாய்த் தேனும் பாலும் போன்று இனியவன். அத்தகைய பெருமானை ஏழையேன் பண்டு இகழ்ந்தது இரங்கத்தக்கது.

திருஅதிகைவீரட்டானம்

மந்திரமும் மறைப்பொருளு மானான் தன்னை
மதியமும் ஞாயிறுங் காற்றுந் தீயும்
அந்தரமு மலைகடலு மானான் தன்னை
யதியரைய மங்கை யமர்ந்தான் தன்னைக்
கந்தருவஞ் செய்திருவர் கழல்கை கூப்பிக்
கடிமலர்கள் பலதூவிக் காலை மாலை
இந்திரனும் வானவரும் தொழச்செல் வானை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. **#25**

ஆகா, ஊகூ என்ற கந்தருவர் இருவரும் பாடித் திருவடிகளில் நறுமலர்களைத் தூவிக்கைகளைக் குவித்து காலையும் மாலையும் இந்திரனும் மற்ற தேவர்களும் வழிபடுமாறு எளிமையில் காட்சி வழங்கும் சிவபெருமான் வேதமந்திரமும் அவற்றின் பொருளும் ஆயவன். மதியம், வெங்கதிர், காற்று, தீ, வான், அலைகளை உடைய

கடல் ஆகியவற்றின் உடனாய் நின்று அவற்றைச் செயற்படுப்பவன். அதியரையமங்கை என்ற திருத்தலத்தில் உகந்தருளியிருப்பவன். அத்தகைய பெருமானை ஏழையேன் பண்டு இகழ்ந்தது இரங்கத்தக்கது.

திருஅதிகைவீரட்டானம்

ஒருபிறப்பி லானடியை உணர்ந்துங் காணார்
உயர்கதிக்கு வழிதேடிப் போக மாட்டார்
வருபிறப்பொன் றுணராது மாசு பூசி
வழிகாணா தவர்போல்வார் மனத்த னாகி
அருபிறப்பை யறுப்பிக்கும் அதிகை யூரன்
அம்மான்றன் அடியிணையே அணைந்து வாழா
திருபிறப்பும் வெறுவியரா யிருந்தார் சொற்கேட்
டேழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. **#26**

பிறவாயாக்கைப் பெரியோன் திருவடிகளை நினைத்துப் பார்ப்பது கூடச் செய்யாராய் உயர்கதியை அடைவதற்குரிய வழியைத்தேடி அவ்வழியே வாழ்க்கையை நடத்தாதவராய், இடையறாது வருகின்ற பிறப்பின் காரணத்தை உணராராய், உடம்பில் அழுக்கினைத் தாமே பூசிக்கொண்டு அகக்கண் குருடராயசமண முனிவருடைய மனம்போல் நடப்பேனாகி, இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படாத செயல்களைச் செய்யும் அவர்களுடைய சொற்களை உபதேசமாகக் கொண்டு, கொடிய பிறவியை அடியோடு போக்குவிக்கும் அதிகை வீரட்டானத்து எம்பெருமான் திருவடிகளைச் சரண் புக்கு வாழாமல் ஏழையேன் பண்டு அப்பெருமானை இகழ்ந்த செயல் இரங்கத்தக்கது.

திருஅதிகைவீரட்டானம்

ஆறேற்க வல்ல சடையான் தன்னை
அஞ்சனம் போலும் மிடற்றான் தன்னைக்
கூறேற்கக் கூறமர வல்லான் தன்னைக்
கோல்வளைக்கை மாதராள் பாகன் தன்னை
நீறேற்கப் பூசும் அகலத் தானை
நின்மலன் தன்னை நிமலன் தன்னை
ஏறேற்க வேறுமா வல்லான் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. **#27**

கங்கையைத் தன்னுள் அடங்குமாறு ஏற்றுக் கொள்ள வல்ல சடையான், மைபோலக் கரிய முன் கழுத்தினன். எல்லாப் பொருள்களின் நுண்ணிலையையும் ஏற்று அவற்றுக்குப் பற்றுக் கோடாக நிற்கவும் பருநிலையில் அவற்றுக்கு உள்ளும் புறம்பும் அறிவாய் நிறைந்து நிற்கவும் வல்லவன். திரண்ட வளையல்களைக்கையில் அணிந்த

பார்வதி பாகன். நீறு, தன்னையே சார்பாக ஏற்க அதனைப் பூசிய மார்பினன். தானும் களங்கம் இல்லாதவனாய்ப் பிறர் களங்கத்தையும் போக்குவிப்பவன். காளை வாகனத்தில் தக்கபடி ஏறி அதனைச் செலுத்துவதில் வல்லவன். அத்தகைய பெருமானை ஏழையேன் நான் பண்டு இகழ்ந்த செயல் இரங்கத்தக்கது.

திருஅதிகைவீரட்டானம்

குண்டாக்க னாயுழன்று கையி லுண்டு
குவிமுலையார் தம்முன்னே நாண மின்றி
உண்டி யுகந்தமணே நின்றார் சொற்கேட்
டுடனாகி யுழிதந்தேன் உணர்வொன் றின்றி
வண்டுலவு கொன்றையங் கண்ணி யானை
வானவர்க ளேத்தப் படுவான் தன்னை
எண்டிசைக்கும் மூர்த்தியாய் நின்றான் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. **#28**

மூர்க்கர்களாய் தடுமாறி இளைய பெண்கள் முன்னிலையில் நாணமின்றிஉடையில்லாமல் நின்று உணவைக் கையில் பெற்று நின்றவாறே உண்ணும் சமணத்துறவியரின் சொற்களை மனங்கொண்டு அவர்கள் இனத்தவனாகி நல்லுணர்வில்லாமல் திரிந்த நான், வண்டுகள் சூழ்ந்து திரியும் கொன்றைப்பூ மாலையை அணிந்து வானவர்களால் புகழப்பட்டு, எண்திசையிலுள்ளார்க்கும் தலைவனாய் நிலைபெற்ற எம்பெருமானை ஏழையேனாகிய யான் பண்டு இகழ்ந்தவாறு இரங்கத்தக்கது.

திருஅதிகைவீரட்டானம்

உறிமுடித்த குண்டிகைதங் கையிற் றூக்கி
யூத்தைவாய்ச் சமணர்க்கோர் குண்டாக் கனாய்க்
கறிவிரவு நெய்சோறு கையி லுண்டு
கண்டார்க்குப் பொல்லாத காட்சி யானேன்
மறிதிரைநீர்ப் பவ்வநஞ் சுண்டான் தன்னை
மறித்தொருகால் வல்வினையேன் நினைக்க மாட்டேன்
எறிகெடில நாடர் பெருமான் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. **#29**

உறியில் சுருக்கிட்டு வைத்த கஞ்சிக்கரகத்தைக் கையில் தொங்கவிட்டுக்கொண்டு ஊத்தை வாயினை உடைய சமணர்களிடையே யானும் ஒரு மூர்க்கனாகி, கறியோடு நெய் ஊட்டப்பட்ட சோற்றினைக் கையில் வாங்கி உண்டு காண்பவருக்கு வெறுக்கத்தக்க காட்சிப் பொருளாக இருந்த யான்,அலைமோதும்

கெடில நதி பாயும் நாட்டிற்குத் தலைவனாய்க் கடலில் தோன்றிய நஞ்சினை உண்ட பெருமானைத் தீவினை உடையேனாய், பரம்பரையாக வழிபட்டுவரும் குடும்பப் பழக்கம் பற்றியும் நினைக்க இயலாதேனாய் ஏழையேனாய்ப் பண்டு இகழ்ந்த செயல் இரங்கத்தக்கது.

திருஅதிகைவீரட்டானம்

நிறைவார்ந்த நீர்மையாய் நின்றான் தன்னை
நெற்றிமேற் கண்ணொன் றுடையான் தன்னை
மறையானை மாசொன்றி லாதான் தன்னை
வானவர்மேல் மலரடியை வைத்தான் தன்னைக்
கறையானைக் காதார் சூழையான் தன்னைக்
கட்டங்கம் ஏந்திய கையி னானை
இறையானை எந்தை பெருமான் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. **#30**

எல்லார் உள்ளத்திலும் தங்கியிருப்பவனாகிய எந்தை பெருமான் குறைவிலா நிறைவினனாய் நிலைபெற்றவன். நெற்றிக்கண்ணன். வேத வடிவினன். களங்கம் ஏதும் இல்லாதான். தேவர்கள் தலையில் தன் திருவடிகளை வைத்து அருளியவன். கழுத்தில் விடக்கறை உடையவன். குழைக்காதன். கையில்கட்டங்கம் என்ற படைக்கலன் ஏந்தியவன். அத்தகைய பெருமானை ஏழையேன் பண்டு இகழ்ந்த செயல் இரங்கத்தக்கது.

திருஅதிகைவீரட்டானம்

தொல்லைவான் சூழ்வினைகள் சூழப் போந்து
தூற்றியே னாற்றியேன் சுடராய் நின்று
வல்லையே இடர்தீர்த்திங் கடிமை கொண்ட
வானவர்க்குந் தானவர்க்கும் பெருமான் தன்னைக்
கொல்லைவாய்க் குருந்தொசித்துக் குழலும் ஊதுங்கோவலனும்
நான்முகனுங் கூடி எங்கும்
எல்லைகாண் பரியானை எம்மான் தன்னைஏழையேன் நான்பண்
டிகழ்ந்த வாறே. **#31**

முல்லை நிலத்திலிருந்த குருந்த மரத்தை, அதன் கண் பிணைத்திருந்த இடைக்குலச் சிறுமியர் ஆடைகளை அவர்கள் மீண்டும் எடுத்துக் கொள்வதற்காக வளைத்துக் கொடுத்து, வேய்ங்குழல் ஊதி அவர்களை வசப்படுத்திய இடையனாய் அவதரித்த திருமாலும், பிரமனும் ஆகியஇருவரும் முயன்றும் அடிமுடிகளின் எல்லையைக் காண இயலாதவாறு அனற்பிழம்பாய் நின்றவனாய்த் தேவர்களுக்கும்

அசுரர்களுக்கும் தலைவனாய், எனக்கும் தலைவனாய், பண்டைத் தீவினைகள் என்னைச் சூழ்ந்தமையாலே அவற்றின் வழியே சென்று அவனைப் பலவாறு இழித்துப் பேசியும் பின் ஒருவாறு தெளந்தும் நின்ற அடியேனுடைய அறிவுக்கு அறிவாய் நின்று விரைவில் என் சூலை நோயைத் தீர்த்து என்னை ஆட்கொண்ட பெருமானை ஏழையேன் பண்டு இகழ்ந்தவாறு இரங்கத்தக்கது.

திருஅதிகைவீரட்டானம்

முலைமறைக்கப் பட்டுநீ ராடாப் பெண்கள்
முறைமுறையால் நந்தெய்வ மென்று தீண்டித்
தலைபறிக்குந் தன்மையர்க ளாகி நின்று
தவமேயென் றவஞ்செய்து தக்க தோரார்
மலைமறிக்கச் சென்ற இலங்கைக் கோனை
மதனழியச் செற்றசே வடியி னானை
இலைமறித்த கொன்றையந் தாரான் தன்னை
ஏழையேன் நான்பண்டி கழ்ந்த வாறே. **#32**

மாசுதீரப்புனல் ஆடும் வழக்கத்தை விடுத்து அற்றம் மறைத்தலுக்கு உடைமாத்திரம் அணிந்த சமணசமயப் பெண் துறவியர் தங்கள் தெய்வம் என்று பெரிதும் மதித்துத் தம் கைகளால் தலைமயிரைப் பறிக்கும் பண்புடையவர்களாகித் தங்கள் கொள்கைகளிலேயே நிலைநின்று தக்க செயல் இன்னது என்று ஆராய்ந்தறிய இயலாதவர்களாகித் தவம் என்ற பெயரால் பொருத்த மற்ற செயல்களைச் செய்பவர் சமணத் துறவியர். அவர் வழி நின்றேனாகிய யான். புட்பகவிமானம் சென்ற வழியைக் கயிலை மலை தடுத்ததனால் அதனைப் பெயர்க்கச் சென்ற இராவணனுடைய வலிமை கெடத்துன்புறுத்திய சிவந்த திருவடிகளை உடையவனாய் இலைகளுக்கு இடையே தோன்றிய கொன்றைப் பூவாலாகிய மாலையை அணிந்த எம்பெருமானைப் பண்டு அறியாமை உடையேனாய் இகழ்ந்த திறம் இரங்கத்தக்கது.

திருவதிகைவீரட்டானம்

திருஅதிகைவீரட்டானம்

திருவதிகைவீரட்டானம், அடையாளத்திருத்தாண்டகம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : திருவதிகைநாயகி.

சந்திரனை மாகங்கை திரையால் மோதச்
சடாமகுடத் திருத்துமே சாம வேத
கந்தருவம் விரும்புமே கபால மேந்து
கையனே மெய்யனே கனக மேனிப்
பந்தணவு மெல்விரலாள் பாக னாமே
பசுவேறு மேபரம யோகி யாமே
ஐந்தலைய மாசுணங்கொண் டரையார்க் கும்மே
அவனாகில் அதிகைவீ ரட்ட னாமே. **#33**

சந்திரனைப் பெரிய கங்கை தன் அலைகளால் மோதுமாறு சடை முடியில் வைத்துள்ளான். சாமவேதமாகிய இசையை விரும்புபவன். மண்டையோட்டை ஏந்தியகையினன். பொன்னார் மேனியில், மெல்லிய விரலில் பந்தினை ஏந்தியபார்வதி பாகன். காளையை வாகனமாக உடையவன். மேம்பட்டயோகி. ஐந்தலைப்பாம்பினை இடையில் இறுக்கிக் கட்டியவன் ஆகிய இத்தகைய செயல்களையும் பண்புகளையும் உடைய பெருமான் திருவதிகைவீரட்டானத்தை உகந்தருளியிருப்பவனே.

திருஅதிகைவீரட்டானம்

ஏறேறி யேழுலகும் உழிதர் வானே
இமையவர்கள் தொழுதேத்த இருக்கின் றானே
பாறேறு படுதலையிற் பலிகொள் வானே
படஅரவந் தடமார்பிற் பயில்வித் தானே
நீறேறு செழும்பவளக் குன்றொப் பானே
நெற்றிமேல் ஒற்றைக்கண் நிறைவித் தானே
ஆறேறு சடைமுடிமேற் பிறைவைத் தானே
அவனாகில் அதிகைவீ ரட்ட னாமே. **#34**

காளை மீது ஏறி ஏழுலகமும் சுற்றி வருபவன். தேவர்கள் தொழுது துதிக்குமாறு இருக்கின்றவன். பருந்துகள் படியும், மண்டையோட்டில் பிச்சை எடுப்பவன். தன்பெரிய மார்பில் படமெடுக்கும் பாம்பு ஊரப்பெற்றவன். நீறு படிந்த செழுமையானபவள மலையை ஒத்த

வடிவினன். நெற்றியில் அமைந்த கண் ஒன்று உடையவன். கங்கைதங்கிய சடைமுடிமேல் பிறையைச் சூடியவன். இத்தகைய பெருமான் அதிகைவீரட்டனாவான்.

திருஅதிகைவீரட்டானம்

முண்டத்திற் பொலிந்திலங்கு மேனி யானே
முதலாகி நடுவாகி முடிவா னானே
கண்டத்தில் வெண்மருப்பின் காறை யானே
கதநாகங் கொண்டாடுங் காட்சி யானே
பிண்டத்தின் இயற்கைக்கோர் பெற்றி யானே
பெருநிலநீர் தீவளிஆ காச மாகி
அண்டத்துக் கப்பாலாய் இப்பா லானே
அவனாகில் அதிகைவீ ரட்ட னாமே. **#35**

இறந்த பிரமர்களின் தலைமாலையால் பொலிவு பெற்று விளங்கும் திருமேனியினன். உலகில்தோற்றம் நிலை இறுதிகளைச் செய்பவன். கழுத்தில் மகா வராகத்தின் கொம்பினை அணிகலனாக அணிந்தவன். கோபத்தை உடைய பாம்பினைக் கையில் கொண்டு கூத்தாடிக் காட்சி வழங்குபவன். இவ்வுடம்பின் காரணங்களாய் உள்ள தத்துவங்களுக்குச் சார்பாய் உள்ளவன். ஐம்பெரும்பூதங்களாய் அண்டங்களின் புறமும் உள்ளும் இருப்பவன். அத்தகைய பெருமான் அதிகை வீரட்டனாவான்.

திருஅதிகைவீரட்டானம்

செய்யனே கரியனே கண்டம் பைங்கண்
வெள்ளெயிற்றா டரவனே வினைகள் போக
வெய்யனே தண்கொன்றை மிலைத்த சென்னிச்
சடையனே விளங்குமழுச் சூல மேந்துங்
கையனே காலங்கள் மூன்றா னானே
கருப்புவில் தனிக்கொடும்பூண் காமற் காய்ந்த
ஐயனே பருத்துயர்ந்த ஆனேற் றானே
அவனாகில் அதிகைவீ ரட்ட னாமே. **#36**

நிறத்தால் செய்யவன். கண்டம் கறுத்தவன். பசிய கண்களையும் வெளிய பற்களையும் உடையவாய்ப் படமெடுத்தாடும் பாம்புகளை அணிந்தவன். அடியார்களுடைய வினைகள் நீங்குமாறு அவற்றிற்குப் பகைவனாக உள்ளவன். குளிர்ந்த கொன்றை சூடிய சடையினன். சூலத்தைத் தாங்கும் கையினன். முக்காலங்களாகவும் உள்ளவன். கரும்பு வில்லினை ஒப்பற்ற வளைந்த அணிகலன் போலக் கைக்கொண்ட மன்மதனைக் கோபித்த தலைவன். உயரமும் பருமையும் உடைய காளைவாகனன். இத்தகைய சிறப்பினை உடையவன் அதிகை வீரட்டானத்துப் பெருமானே.

திருஅதிகைவீரட்டானம்

பாடுமே யொழியாமே நால்வே தம்மும்
படர்சடைமேல் ஒளிதிகழப் பனிவெண் டிங்கள்
சூடுமே அரைதிகழத் தோலும் பாம்புஞ்
சுற்றுமே தொண்டைவாய் உமையோர் பாகங்
கூடுமே குடமுழவம் வீணை தாளங்குறுநடைய சிறுபூதம் முழக்க மாக்
கூத்தாடுமே அந்தடக்கை அனலேந் தும்மேஅவனாகில் அதிகைவீ
ரட்ட னாமே. **#37**

இடைவிடாமல் நால்வேதமும் பாடும் இயல்பினன். பரவிய உடையின் மீது ஒளிசிறக்குமாறு குளிர்ந்த வெள்ளிய பிறையைச் சூடியவன். தன் இடையில்விளங்குமாறு புலித்தோலையும் பாம்பினையும் சுற்றியிருப்பவன். கொவ்வைக் கனி போன்ற சிவந்த வாயினை உடைய உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டவன். குறுக அடியிடும் நடையினை உடைய பூதங்கள் குட முழா, வீணை, தாளம் இவற்றை ஒலிக்குமாறு, ஐந்தொழில்களையும் செய்யும் மேம்பட்ட கூத்தினை ஆடுபவன். அழகிய நீண்ட கையொன்றில் தீயை ஏந்துபவன். அத்தகைய பெருமான் திருவதிகை வீரட்டனே.

திருஅதிகைவீரட்டானம்

ஒழித்திடுமே உள்குவார் உள்ளத் துள்ள
உறுபிணியுஞ் செறுபகையும் ஒற்றைக் கண்ணால்
விழித்திடுமே காமனையும் பொடியாய் வீழ
வெள்ளப் புனற்கங்கை செஞ்ச டைமேல்
இழித்திடுமே ஏழுலகுந் தானா கும்மே
இயங்குந் திரிபுரங்க ளோரம் பினால்
அழித்திடுமே ஆதிமா தவத்து ளானே
அவனாகில் அதிகைவீ ரட்ட னாமே. **#38**

தன்னையே தியானிப்பவருடைய உள்ளத்தில் மிக்க நோயையும் அவர்களைத்தாக்கும் உட்பகைகளாகிய காமம் முதலிய ஆறனையும் அடியோடு நீக்குபவன். தனித்திருக்கும் நெற்றிக் கண்ணால் மன்மதன் சாம்பலாகி விழுமாறு நோக்கியவன். நீர் வெண்மையாகிய கங்கையைத் தன் செந்நிறச் சடையில் இறங்கித் தங்குமாறு செய்தவன். ஏழுலக இயக்கத்திற்கும் தானே காரணமாகியவன். வானில் உலாவிய முப்புரங்களையும் ஓர் அம்பினால் அழித்தவன். பண்டு தொட்டு மேம்பட்ட தவத்தைச் செய்பவனாய்த் தன் அடியவர்களுக்குத் தவம் செய்ய வழிகாட்டி ஆகியவன் அத்தகைய பெருமான் அதிகைவீரட்டத்தானே. பாம்பினையும் சுற்றியிருப்பவன். கொவ்வைக்

கனி போன்ற சிவந்த வாயினை உடைய உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டவன். குறுக அடியிடும் நடையினை உடைய பூதங்கள் குட முழா, வீணை, தாளம் இவற்றை ஒலிக்குமாறு, ஐந்தொழில்களையும் செய்யும் மேம்பட்ட கூத்தினை ஆடுபவன். அழகிய நீண்ட கையொன்றில் தீயை ஏந்துபவன். அத்தகைய பெருமான் திருவதிகை வீரட்டனே.

திருஅதிகைவீரட்டானம்

குழலோடு கொக்கரைகைத் தாளம் மொந்தை
குறட்பூதம் முன்பாடத் தான்ஆ டும்மே
கழலாடு திருவிரலாற் கரணஞ் செய்து
கனவின்கண் திருவுருவந் தான்காட் டும்மே
எழிலாருந் தோள்வீசி நடமா டும்மே
ஈமப்பு றங்காட்டில் ஏமந் தோறும்
அழலாடு மேஅட்ட மூர்த்தி யாமே
அவனாகில் அதிகைவீ ரட்ட னாமே. **#39**

குழல், கொக்கரை, மொந்தை முதலிய இயங்களை இயக்கிக் கைத்தாளமிட்டுக் குட்டையான பூதங்கள் பாட அப் பாடலுக்கு ஏற்பத் தான் ஆடுபவன். திருவடிகளிலே அசைகின்ற திரு விரல்களால் உயிர்களின் நுண்ணுடம்புகளை அசைத்துச் செயற்படுத்தி, அடியார்களுடைய கனவிலே தன் திருவுருவை அவர்களுக்குக் காட்டுபவன். அழகு நிரம்பிய தோள்களை விரைவாக அசைத்துக் கூத்தாடுபவன். ஊருக்குப் புறத்தே உள்ள சுடுகாட்டில் இரவு தோறும் நெருப்பின்கண் நின்று ஆடுபவன். எட்டு உரு உடையவன். அத்தகைய பெருமான் அதிகை வீரட்டனே.

திருஅதிகைவீரட்டானம்

மாலாகி மதமிக்க களிறு தன்னை
வதைசெய்து மற்றதனின் உரிவை கொண்டு
மேலாலுங் கீழாலுந் தோன்றா வண்ணம்
வெம்புலால் கைகலக்க மெய்போர்த் தானே
கோலாலம் படவரைநட் டரவு சுற்றிக்
குரைகடலைத் திரையலறக் கடைந்து கொண்ட
ஆலால முண்டிருண்ட கண்டத் தானே
அவனாகில் அதிகைவீ ரட்ட னாமே. **#40**

மதம் மிகுதலானே மயக்கம் கொண்ட ஆண் யானையைக் கொன்ற அதன் தோலினைத் தனியே உரித்துக் தன் திருமேனியை முழுதுமாக அது மறைக்குமாறு உதிரப் பசுமை கெடாது உடம்பில் போர்த்தவன்.

ஆரவாரம் ஏற்பட மந்தரமலையை மத்தாக நட்டு வாசுகியைக் கடைகயிறாகச் சுற்றி ஒலிக்கின்ற கடலை அதன் அலைகள் ஒலிக்குமாறு கடைந்ததனால் ஏற்பட்ட பெரிய விடத்தை உட்கொண்டு இருண்ட கழுத்தினன். அத்தகைய பெருமான் அதிகை வீரட்டனே.

திருஅதிகைவீரட்டானம்

செம்பொனாற் செய்தழகு பெய்தாற் போலுஞ்
செஞ்சடையெம் பெருமானே தெய்வ நாறும்
வம்பினாண் மலர்க்கூந்தல் உமையாள் காதல்
மணவாள னேவலங்கை மழுவா ளனே
நம்பனே நான்மறைகள் தொழநின் றானேநடுங்காதார் புரமூன்றும் நடுங்கச் செற்ற
அம்பனே அண்டகோ சரத்து ளானேஅவனாகில் அதிகைவீ ரட்ட னாமே. **#41**

செம்பொன்னாற் செய்து அதன் கண் அழகினை ஊட்டினாற்போல இயற்கையாக அமைத்த செஞ்சடைப்பெருமான், இயற்கையான தெய்வ மணம் கமழும் தன்மையோடு மலர்களையும் அணியும் கூந்தலை உடைய உமாதேவியினுடைய காதலுக்கு இருப்பிடமான கணவன். வலக்கையில் மழுப்படையை உடையவன். நம்மால் விரும்பப்படுபவன். நான்கு வேதங்களும் வழிபடுமாறு இருப்பவன். அச்சமில்லாத அசுரர்களின் மும்மதில்களும் நடுங்குமாறு அவற்றை அழித்த அம்பினன். எல்லா உலகங்களிலும் நீக்கமற நிறைந்த நிற்பவன். அத்தகைய பெருமான் அதிகை வீரட்டனே.

திருஅதிகைவீரட்டானம்

எழுந்ததிரை நதித்திவலை நனைந்த திங்கள்
இளநிலாத் திகழ்கின்ற வளர்சடையனே
கொழும்பவளச் செங்கனிவாய்க் காமக் கோட்டி
கொங்கையிணை அமர்பொருது கோலங் கொண்ட
தழும்புளவே வரைமார்பில் வெண்ணூ லுண்டே
சாந்தமொடு சந்தனத்தின் அளறு தங்கி
அழுந்தியசெந் திருவுருவில் வெண்ணீற் றானே
அவனாகில் அதிகைவீ ரட்ட னாமே. **#42**

கங்கையிலிருந்து வெளிப்பட்ட அலைகளின் துளிகளால் நனைக்கப்பட்ட பிறைச் சந்திரன் மெல்லிய ஒளியோடு விளங்குகின்ற நீண்ட சடையினன். கச்சியில் காமக்கோட்டத்திலுள்ள பவளம் போலச் சிவந்த, கனிபோன்று மென்மையை உடைய வாயினள் ஆகிய உமாதேவியின் இரு தனங்களும் எம்பெருமான் மார்பில்

போரிட்டதனால் ஏற்பட்ட அழகிய தழும்புகள் தங்கிய மலைபோன்ற அவன் மார்பில் பூணூல் உள்ளது. சந்தனமும், நறுமணக்கூட்டுக்களும் சேறுபோலப் பொருந்திய தன் செம்மேனியில் வெண்ணீறு அணிந்துள்ளான். அத்தகைய பெருமான் அதிகை வீரட்டனே.

திருஅதிகைவீரட்டானம்

நெடியானும் நான்முகனும் நேடிக் காணா
நீண்டானே நேரொருவ ரில்லா தானே
கொடியேறு கோலமா மணிகண் டன்னே
கொல்வேங்கை யதளனே கோவ ணவனே
பொடியேறு மேனியனே ஐயம் வேண்டிப்
புவலோகந் திரியுமே புரிநூ லானே
அடியாரை அமருலகம் ஆள்விக் கும்மே
அவனாகில் அதிகைவீ ரட்ட னாமே. **#43**

தனக்கு ஒப்பார் பிறர் இல்லாத சிவபெருமான் திருமாலும் பிரமனும்தம்முயற்சியால் தேடியும் காண இயலாதவாறு நீண்ட வடிவு கொண்டவன். தன்சிறப்புத் தோன்றக் கொடியை உயர்த்துமாறு அமைந்த நீலகண்டன். கொலைத்தொழிலை உடைய வேங்கையின் தோலைக் கோவணத்தின் மீது ஆடையாக உடுத்தவன்.திருநீறு பூசிய திருமேனியினன். பூணூலை அணிந்த அப்பெருமான் பிச்சை ஏற்றலைக்கருதி மேலுலகங்களிலும் திரிபவன். தன் அடியவர்களைத் தேவர் உலகத்தை ஆளுமாறுசெய்பவன். அத்தகைய பெருமான் அதிகை வீரட்டனே.

திருவீரட்டானம்

திருஅதிகைவீரட்டானம்

திருவீரட்டானம், போற்றித்திருத்தாண்டகம்

எல்லாம் சிவனென்ன நின்றாய் போற்றி
எரிசுடராய் நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி
கொல்லுங்கூற் றொன்றை யுதைத்தாய் போற்றி
கல்லாதார் காட்சிக் கரியாய் போற்றி
கற்றா ரிடும்பை களைவாய் போற்றி
வில்லால் வியனரணம் எய்தாய் போற்றி
வீரட்டங் காதல் விமலா போற்றி. **#44**

எல்லாப் பொருள்களும் சிவனுடைய தொடர்புடையன என்று கூறுமாறு எல்லாப் பொருள்களிலும் கலந்திருப்பவனே! தீ கதிர் மதியம் ஆகி நிற்பவனே! கொலைத் தொழிலைச் செய்யும் மழு என்ற படைக்கலம் ஏந்தியவனே! உயிர்களை உடல்களிலிருந்து பிரிக்கும் கூற்றுவனை உதைத்தவனே! அனுபவப் பெருளை ஞானதேசிகர்பால் கேட்டு அறியாதவருடைய மானதக் காட்சிக்கு அரியவனே! முறையாகக் குருவிடம் உபதேசம் பெற்றவர்களுடைய துயரை நீக்குபவனே! வில்லினைக் கொண்டு பெரிய மதில்களை அழித்தவனே! அதிகை வீரட்டத்தினை உகந்தருளி யிருக்கும் களங்கமற்றவனே! உன்னை வணங்குகிறேன்.

திருஅதிகைவீரட்டானம்

பாட்டுக்கும் ஆட்டுக்கும் பண்பா போற்றி
பல்லூழி யாய படைத்தாய் போற்றி
ஓட்டகத்தே ஊணா உகந்தாய் போற்றி
உள்குவா ருள்ளத் துறைவாய் போற்றி
காட்டகத்தே ஆடல் மகிழ்ந்தாய் போற்றிகார்மேக மன்ன மிடற்றாய் போற்றி
ஆட்டுவதோர் நாக மசைத்தாய் போற்றிஅலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி. **#45**

பாடுதலையும், கூத்து நிகழ்த்துதலையும் பண்புகளாக உடையவனே! பல ஊழிக்காலங்களையும் படைத்தவனே! மண்டையோட்டில் இரந்து பெறுவனவற்றையே உணவாக விரும்பி ஏற்றவனே! உன்னைத் தியானிப்பார் உள்ளத்தைத் தங்குமிடமாக உடையவனே! சுடுகாட்டில் கூத்தாடுதலை உகப்பவனே! கார்மேகம் போன்ற கறுத்த கழுத்தை

உடையவனே! ஒதுங்கியிருந்து படமெடுத்து ஆடச்செய்ய வேண்டிய பாம்பினை இடையில் இறுக்கிக் கட்டிக் கொள்பவனே! அலைகள் வீசும் கெடில நதியை அடுத்த அதிகை வீரட்டானத்திலிருந்து உயிர்களை ஆள்பவனே--உன்னை வணங்குகிறேன்.

திருஅதிகைவீரட்டானம்

முல்லையங் கண்ணி முடியாய் போற்றி
முழுநீறு பூசிய மூர்த்தீ போற்றி
எல்லை நிறைந்த குணத்தாய் போற்றி
ஏழ்நரம்பி னோசை படைத்தாய் போற்றி
சில்லைச் சிரைத்தலையில் ஊணா போற்றி
சென்றடைந்தார் தீவினைகள் தீர்ப்பாய் போற்றி
தில்லைச்சிற் றம்பலம் மேயாய் போற்றி
திருவீரட் டானத்தெஞ் செல்வா போற்றி. **#46**

முடியில் முல்லை மாலை சூடியவனே! உடல் முழுவதும் திருநீறு பூசியவனே! எல்லையற்ற நற்பண்புகளை உடையவனே! யாழின் ஏழு நரம்புகளிலும் ஏழுவகை ஓசையைப் படைத்தவனே! உருண்டை வடிவினதாகிய மயிர் நீங்கிய, மண்டை ஓட்டில் உணவு பெறுபவனே! உன்னை வந்து வழிபடுபவர்களின் தீவினைகளை நீக்குபவனே! தில்லைச் சிற்றம்பலத்தை உகந்தருளியிருக்கிறவனே! அதிகை வீரட்டானத்தில் உகந்தருளியிருக்கும் எம் செல்வனே! உன்னை வணங்குகிறேன்.

திருஅதிகைவீரட்டானம்

சாம்ப ரகலத் தணிந்தாய் போற்றி
தவநெறிகள் சாதித்து நின்றாய் போற்றி
கூம்பித் தொழுவார்தங் குற்றே வலைக்
குறிக்கொண் டிருக்குங் குழகா போற்றி
பாம்பும் மதியும் புனலுந் தம்மிற்
பகைதீர்த் துடன்வைத்த பண்பா போற்றி
ஆம்பல் மலர்கொண்ட டணிந்தாய் போற்றி
அலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி. **#47**

மார்பில் திருநீறு பூசியவனே! அடியார்கள் மேற் கொள்ளும் தவநெறிகள் அவற்றிற்கு உரிய பயன்களைத் தரும்படி செய்து நிற்பவனே! ஐம் பொறிகளையும் மனத்தால் அடக்கி உன்னை வழிபடுபவர்கள் செய்யும் சிறிய தொண்டுகளை உள்ளத்துக்கொண்டு அவர்களுக்கு அருள் செய்ய இருக்கும் இளையோனே! பாம்பும், பிறையும், கங்கையும் தம்மிடையே பகை இன்றி ஒருசேர இருக்குமாறு அவற்றைச் சடையில் அணிந்த

பண்பனே! ஆம்பற் பூக்களையும் அணிந்தவனே! அலைகளை உடைய கெடில நதிக் கரையிலமைந்த அதிகை வீரட்டானத்திருந்து எல்லோரையும் ஆள்பவனே! உன்னை வணங்குகிறேன்.

திருஅதிகைவீரட்டானம்

நீறேறு நீல மிடற்றாய் போற்றி
நிழல் திகழும் வெண்மழுவாள் வைத்தாய் போற்றி
கூறே றுமையொருபாற் கொண்டாய் போற்றி
கோளரவம் ஆட்டுங் குழகா போற்றி
ஆறேறு சென்னி யுடையாய் போற்றி
அடியார்கட் காரமுத மானாய் போற்றி
ஏறேற என்றும் உகப்பாய் போற்றி
யிருங்கெடில வீரட்டத் தெந்தாய் போற்றி. **#48**

திருநீறு பூசிய நீலகண்டனே! ஒளி விளங்கும் வெள்ளிய மழுப்படையை ஏந்தியவனே! தன் உடலில் ஒரு கூறாகப் பொருந்துமாறு உமாதேவியை இடப்பாகமாகக் கொண்டவனே! கொடிய பாம்புகளை ஆடச்செய்யும் இளையவனே! கங்கை தங்கிய தலையினனே! அடியவர்களுக்குக் கிட்டுதற்கு அரிய அமுதம் ஆயினவனே! காளையை வாகனமாக ஏறிச்செலுத்துதலை என்றும் விரும்புபவனே! கெடில நதிக் கரையிலுள்ள பெரிய அதிகை வீரட்டானத்தை உகந்தருளியிருக்கும் எந்தையே! உன்னை வணங்குகிறேன்.

திருஅதிகைவீரட்டானம்

பாடுவார் பாட லுகப்பாய் போற்றி
பழையாற்றுப் பட்டீச் சுரத்தாய் போற்றி
வீடுவார் வீடருள வல்லாய் போற்றி
வேழத் துரிவெருவப் போர்த்தாய் போற்றி
நாடுவார் நாடற் கரியாய் போற்றி
நாக மரைக்கசைத்த நம்பா போற்றி
ஆடும்ஆன் ஐந்தும் உகப்பாய் போற்றி
அலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி. **#49**

உன்னையே விரும்பிப் பாடும் அடியார்களுடைய பாடல்களை விரும்பிச் செவிமடுக்கின்றவனே! பழையாற்றைச் சார்ந்த பட்டீச்சுரத்தை உகந்தருளியிருப்பவனே! உலகப் பற்றறுத்த அடியார்களுக்கு வீடுபேற்றினை அருள வல்லவனே! உமாதேவி அஞ்சுமாறு யானைத் தோலைப் போர்த்திக் கொண்டவனே! தம் முயற்சியாலே உன்னை அடைய விரும்புபவர்கள் ஆராய்ந்து அறிதற்கு அரியவனே! இடையிலே பாம்பினை இறுகக் கட்டியிருப்பவனே! பஞ்சகவ்விய அபிடேகத்தை

விரும்புபவனே! அலைகெடில வீரட்டானத்தை உகந்து உலகை ஆள்பவனே! உன்னை வணங்குகின்றேன்.

திருஅதிகைவீரட்டானம்

மண்துளங்க ஆடல் மகிழ்ந்தாய் போற்றி
மால்கடலும் மால்விசும்பு மானாய் போற்றி
விண்துளங்க மும்மதிலு மெய்தாய் போற்றி
வேழத் துரிமூடும் விகிர்தா போற்றி
பண்துளங்கப் பாடல் பயின்றாய் போற்றி
பார்முழுதும் ஆய பரமா போற்றி
கண்துளங்கக் காமனைமுன் காய்ந்தாய் போற்றி
கார்க்கெடிலங் கொண்ட கபாலி போற்றி. **#50**

நில உலகம் அசையுமாறு கூத்தாடுதலை மகிழ்ந்தவனே! பெரிய கடலும் வானமும் ஆனவனே! வானுலகம் நடுங்கும் படி மூன்று கோட்டைகளையும் அம்பு எய்து அழித்தவனே! யானைத் தோலினால் உடம்பை மூடிக்கொள்ளும், உலகியலுக்கு வேறுபட்டவனே! பண்கள் பொருந்தப் பாடுதலில் பழகியவனே! உலகம் முழுதுமாய் பரவியிருக்கும் மேம்பட்டவனே! கண் அசைத்துத் திறந்த அளவில் முற்காலத்தில் மன்மதனை அழித்தவனே! நீரின் ஆழத்தால் கருநிறம் கொண்ட கெடிலக்கரை வீரட்டானத்தை உகந்து கொண்ட, மண்டைஓட்டை ஏந்தியவனே! உன்னை வணங்குகின்றேன்.

திருஅதிகைவீரட்டானம்

வெஞ்சினவெள் ஏறூர்தி யுடையாய் போற்றி
விரிசடைமேல் வெள்ளம் படைத்தாய் போற்றி
துஞ்சாப் பலிதேருந் தோன்றால் போற்றிதொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
நஞ்சொடுங்குங் கண்டத்து நாதா போற்றிநான்மறையோ டாறங்க மானாய் போற்றி
அஞ்சொலாள் பாகம் அமர்ந்தாய் போற்றிஅலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி. **#51**

மிக்க சினத்தையுடைய வெண்ணிறக் காளையை வாகனமாக உடையவனே! விரிந்த சடையின் மேல் கங்கை வெள்ளத்தைத் தங்கச் செய்தவனே! உறங்காது பிச்சை எடுக்கும் மேம்பட்டவனே! உன்னை வழிபடும் ஒழுக்கத்தை உடைய அடியார்களின் துயரைத் துடைப்பவனே! விடம் தங்கிய கழுத்தை உடைய தலைவனே! நான்கு வேதங்களும் ஆறு அங்கங்களும் ஆகியவனே! இனிய சொல்லை உடைய பார்வதி பாகனே! அலைகெடில வீரட்டத்து ஆள்வாய்!

உன்னை வணங்குகின்றேன்.

திருஅதிகைவீரட்டானம்

சிந்தையாய் நின்ற சிவனே போற்றி
சீபர்ப் பதஞ்சிந்தை செய்தாய் போற்றி
புந்தியாய்ப் புண்டரிகத் துள்ளாய் போற்றி
புண்ணியனே போற்றி புனிதா போற்றி
சந்தியாய் நின்ற சதுரா போற்றி
தத்துவனே போற்றியென் தாதாய் போற்றி
அந்தியாய் நின்ற அரனே போற்றி
அலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி. **#52**

அடியார் உள்ளத்தை இருப்பிடமாய்க் கொண்டு நிலைபெற்ற சிவபெருமானே! இதயத்தாமரையில் ஞானவடிவாகத் தங்கியிருப்பவனே! புண்ணியமே வடிவானவனே! தூயனே! காலை, நண்பகல், மாலை என்ற மூன்று சந்திகளாகவும் இருக்கும் மேம்பட்டவனே! உண்மைப்பொருளே! என் தந்தையே! நேரங்களில் சிறந்த அந்திப்பொழுதாக இருக்கும் அரனே! வீரட்டத்திலிருந்து உலகை ஆள்பவனே! உன்னை வணங்குகின்றேன்.

திருஅதிகைவீரட்டானம்

முக்கணா போற்றி முதல்வா போற்றி
முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி
தக்கணா போற்றி தருமா போற்றி
தத்துவனே போற்றியென் தாதாய் போற்றி
தொக்கணா வென்றிருவர் தோள்கை கூப்பத்
துளங்கா தெரிசுடராய் நின்றாய் போற்றி
எக்கண்ணுங் கண்ணிலேன் எந்தாய் போற்றி
எறிகெடில வீரட்டத் தீசா போற்றி. **#53**

முக்கண்ணனே! முதல்வனே! முருகனுடைய தந்தையே! தென்திசைக் கடவுளே! அறவடிவினனே! மெய்ப் பொருளே! என் தந்தையே! திருமாலும், பிரமனும் ஒன்று சேர்ந்து அண்ணலே என்று அழைத்துக் கை கூப்புமாறு அசையாது ஒளிப்பிழம்பாய் நின்றவனே! வீரட்டானத்து இறைவனே! வேறு எங்கும் பற்றுக் கோடில்லாத அடியேன் தந்தையாகிய உன்னை வணங்குகிறேன்.

திருவதிகைவீரட்டானம்

திருஅதிகைவீரட்டானம்

திருவதிகைவீரட்டானம், திருவடித்திருத்தாண்டகம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : திருவதிகைநாயகி.

அரவணையான் சிந்தித் தரற்றும்மடி
அருமறையான் சென்னிக் கணியாமடி
சரவணத்தான் கைதொழுது சாரும்மடி
சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணாமடி
பரவுவார் பாவம் பறைக்கும்மடி
பதினெண் கணங்களும் பாடும்மடி
திரைவிரவு தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. **#54**

அலைகள் ஒன்றொடொன்று மோதுகின்ற கெடில நதி பாயும் நாடனாய்த் திருவதிகை வீரட்டானத்தை உகந்தருளியுள்ள எம் செல்வனுடைய திருவடிகள் திருமாலால் தியானித்துப் போற்றப்படும். பிரமனுடைய தலைகளுக்கு அணிகளாகும், முருகனால் தொழப்பட்டு அணுகப்பெறும். பற்றுக் கோடாகக் கொண்ட அடியவர்களுக்கெல்லாம் அடைக்கலம் நல்கும், தம்மை வழிபடுபவர்களுடைய பாவத்தைப் போக்கும், பதினெண் தேவ கணத்தவராலும் பாடப் பெறும்.

திருஅதிகைவீரட்டானம்

கொடுவினையா ரென்றுங் குறுகாவடி
குறைந்தடைந்தார் ஆழாமைக் காக்கும்மடி
படுமுழவம் பாணி பயிற்றும்மடி
பதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தவடி
கடுமுரணே றூர்ந்தான் கழற்சேவடி
கடல்வையங் காப்பான் கருதும்மடி
நெடுமதியங் கண்ணி யணிந்தானடி
நிறைகெடில வீரட்டம் நீங்காவடி. **#55**

விரைந்து செல்வதாய் ஏனைய காளைகளினின்றும் மாறுபட்ட காளையை ஊர்பவனும், நீண்ட பிறையை முடிமாலையாக அணிந்தவனும், கெடில நதிக்கரையிலுள்ள அதிகை வீரட்டானத்தை நீங்காது உகந்தருளியிருப்பவனும் ஆகிய எம்பெருமானுடைய திருவடிகள் தீவினை உடையவரால் ஒரு காலும் அணுகப்பெறாதன.

நலிவுற்றுச் சரணாக அடைந்தவரை அழியாமல் காப்பன. முழவு ஒலித்தலையும் தாளம் இடுதலையும் பயிற்றுவிப்பன. வெகுண்டெழுந்த கொடிய கூற்றுவன் மீது பாய்ந்தன. கடலால் சூழப்பட்ட இவ்வுலகைக் காக்கும் திருமாலால் விரும்பிப் போற்றப்படுவன.

திருஅதிகைவீரட்டானம்

வைதெழுவார் காமம்பொய் போகாவடி
வஞ்ச வலைப்பாடொன் றில்லாவடி
கைதொழுது நாமேத்திக் காணும்மடி
கணக்கு வழக்கைக் கடந்தவடி
நெய்தொழுது நாமேத்தி ஆட்டும்மடி
நீள்விசும்பை ஊடறுத்து நின்றவடி
தெய்வப் புனற்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. **#56**

கெடில நாடனாய் அதிகை வீரட்டத்தை உகந் தருளிய செல்வனாகிய எம்பெருமானுடைய திருவடிகள் எம் பெருமானைத் தூற்றிக் கொண்டே துயிலெழுபவருடைய தீய விருப்பங்களே நிறைவேறச் செய்வன; வஞ்சனையாகிய வலையிலே அகப்படாதன. கையால் தொழுது நாவினால் துதித்து நாம் அகக் கண்ணால் காண வாய்ப்பு அளிப்பன. உலகத்தார் கணக்கிடும் எல்லையைக் கடந்து நிற்பன. அடியவராகிய நாம் உடலால் தொழுது நாவால் துதித்துக் கையால் நெய் அபிடேகம் செய்யப் பொருந்துவன. நீண்ட வானுலகையும் கடந்து எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பன.

திருஅதிகைவீரட்டானம்

அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும்மடி
அழகெழுத லாகா அருட்சேவடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்தவடி
சோமனையுங் காலனையுங் காய்ந்தவடி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றும்மடி
பிழைத்தார் பிழைப்பறிய வல்லவடி
திருந்துநீர்த் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. **#57**

தெளவான நீரை உடைய கெடில நதி பாயும் நாட்டினனாய், திருவீரட்டானத்தில் உகந்தருளியிருக்கும் எம் செல்வனாகிய எம்பெருமானுடைய திருவடிகள் தாமரையை அரும்பச் செய்யும் காலையில் தோன்றும் செந்நிறக் கதிரவனை நிறத்தாலும் ஒளியாலும் ஒப்பன. தம் அழகை ஓவியத்து எழுதலாகாத வனப்பினவாய்

அடியார்களுக்கு அருளை வழங்குவன. சுரும்புகளும் வண்டுகளும் சுற்றித் திரியும் வாய்ப்பினை அளிப்பன. சந்திரனையும் கூற்றுவனையும் வெகுண்டன. பெருவிருப்புடைய அடியவரால் குழாமாகப் போற்றப்படுவன. தவறு செய்தவர்களுடைய தவறுகளை அறியும் ஆற்றல் உடையன.

திருஅதிகைவீரட்டானம்

ஒருகாலத் தொன்றாகி நின்றவடி
ஊழிதோ றூழி உயர்ந்தவடி
பொருகழலும் பல்சிலம்பும் மார்க்கும்மடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவடி
இருநிலத்தார் இன்புற்றங் கேத்தும்மடி
இன்புற்றார் இட்டபூ ஏறும்மடி
திருவதிகைத் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. **#58**

கெடில நாட்டுத் திருவதிகை வீரட்டானத்து எம் செல்வனுடைய திருவடிகள் படைப்புக் காலத்து ஒன்றாகி நின்று முற்றழிப்புக் காலத்தில் மாயையைத் தொழிற்படுத்தாது தம் நிலையிலேயே நிற்பன. ஒன்றில் கழலும் மற்றொன்றில் சிலம்பும் ஒலிக்குமாறு அமைந்தன. புகழ்வாருடைய புகழ் உரைகளுக்கு முடிவு காண இயலாதபடி தடுக்கும் ஆற்றல் உடையன. இப்பெரிய நில உலகிலுள்ளார் மகிழ்ந்து துதிக்கும் வாய்ப்பினை அளிப்பன. அவ்வாறு இன்புற்று அடியவர்கள் அருச்சித்த பூக்களைத் தம்பால் தாங்கி நிற்பன.

திருஅதிகைவீரட்டானம்

திருமகட்குச் செந்தா மரையாமடி
சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும்மடி
பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்றவடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவடி
உருவிரண்டு மொன்றோடொன் றொவ்வாவடி
உருவென் றுணரப் படாதவடி
திருவதிகைத் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. **#59**

அழகிய கெடிலநாடனாய திருவதிகை வீரட்டானத்து எம்செல்வன் சேவடிகள் திருமகளுக்குச் செந்தாமரை போல்வன. சிறந்து அடியார்களுக்குத் தேன் போல இனிப்பன. செல்வர்களுக்கு அவர்கள் செல்வத்தைச் செலவிடும் திறத்தை ஓர்ந்து அறிய உரைகல்லாய் இருப்பன. புகழ்பவர் புகழ் எல்லையைத் தடுக்க வல்லன. வலம் இடம்

இருபுறத்து அடிகளும் ஆண் அடியும் பெண் அடியுமாய் ஒன்றொடொன்று ஒவ்வாது அமைந்திருப்பன. தமக்கு உருவம் உடைமையே இயல்பு என்று உணரப்படமுடியாமல் உருவம் அருவம் என்ற நிலைகளைக் கடந்திருப்பன.

திருஅதிகைவீரட்டானம்

உரைமாலை யெல்லா முடையவடி
உரையா லுணரப் படாதவடி
வரைமாதை வாடாமை வைக்கும்மடி
வானவர்கள் தாம்வணங்கி வாழ்த்தும்மடி
அரைமாத் திரையி லடங்கும்மடி
அகலம் அளக்கிற்பா ரில்லாவடி
கரைமாங் கலிக்கெடில நாடன்னடி
கமழ்வீரட்டானக் கபாலியடி. **#60**

கரைகளிலே மக்களின் ஆரவாரத்தை மிகுதியாக உடைய கெடில நதி பாயும் நாட்டில் நறுமணம் கமழும் வீரட்டானத்தை உகந்தருளியிருக்கும், மண்டையோட்டை ஏந்திய சிவபெருமானுடைய திருவடிகள் பாட்டும் உரையுமாகிய சொற்கோவைகளை உடையன. சொற்களால் முழுமையாக உணரப்படாதன, உமா தேவியை மனம் வாடாமல் மகிழ்வாக வைப்பன. வானவர்களால் வணங்கி வாழ்த்தப்படுவன. அரைமாத்திரை ஒலியற்றாகிய பிரணவக் கலையில் அடங்குவன. தம் பரப்பினை யாரும் அளக்கவியலாதபடி எங்கும் பரவி இருப்பன.

திருஅதிகைவீரட்டானம்

நறுமலராய் நாறும் மலர்ச்சேவடி
நடுவா யுலகநா டாயவடி
செறிகதிருந் திங்களுமாய் நின்றவடி
தீத்திரளா யுள்ளே திகழ்ந்தவடி
மறுமதியை மாசு கழுவும்மடி
மந்திரமுந் தந்திரமும் ஆயவடி
செறிகெடில நாடர் பெருமானடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. **#61**

கெடிலநாடர் பெருமானாம் திருவீரட்டானத்து எம் செல்வனுடைய திருவடிகள் இயற்கையிலேயே மலர் மணம் உடையனவாய் மலர்களாலும் அருச்சிக்கப் படுவன. அறமும் நீதியும் தம் வடிவமாக உலகியலையும் நாட்டியலையும் நிகழச்செய்வன. உலகிலே கதிரவனும் மதியுமுமாய்ப் புறத்து ஒளிகளைத் தருவன. யோகியர் உள்ளத்தே ஒளிப்பிழம்பாய் உள்ளொளி பெருக்குவன. சந்திரனுக்கு ஏற்பட்ட

மாசினைக் கழுவியன. மந்திரங்களும் அவற்றைச் செயற்படுத்தும் செயல்களுமாய் உள்ளன.

திருஅதிகைவீரட்டானம்

அணியனவுஞ் சேயனவு மல்லாவடி
யடியார்கட் காரமுத மாயவடி
பணிபவர்க்குப் பாங்காக வல்லவடி
பற்றற்றார் பற்றும் பவளவடி
மணியடி பொன்னடி மாண்பாமடி
மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்லவடி
தணிபாடு தண்கெடில நாடன்னடி
தகைசார்வீ ரட்டத் தலைவன்னடி. **#62**

இனிய இசை பாடப்படும் குளிர்ந்த கெடிலநதி பாயும் நாட்டில் பெருமைபொருந்திய அதிகைவீரட்டானத் தலைவனுடைய திருவடிகள் அடியார்களுக்குப் பக்கத்தில் உள்ளனவாயும், அடியார் அல்லார்க்கு தூரத்தில் உள்ளவாயும் அமைந்திருப்பன. அடியவர்களுக்குக் கிட்டுதற்கு அரிய அமுதம் போன்று உள்ளன. வழிபடுபவர்களுக்குத் துணையாகும் ஆற்றல் உடையன. உலகப் பற்றற்ற சான்றோர்கள் பற்றும் தகையவாய்ப் பவள நிறத்தை உடையன. மணிகள் போலவும் பொன் போலவும் மதிப்பிடற்கரிய பெருமை உடையன. மருந்தாய்ப் பிறவிப் பிணியை அடியோடு நீக்கும் ஆற்றல் உடையன.

திருஅதிகைவீரட்டானம்

அந்தா மரைப்போ தலர்ந்தவடி
அரக்கனையும் ஆற்ற லழித்தவடி
முந்தாகி முன்னே முளைத்தவடி
முழங்கழலாய் நீண்டஎம் மூர்த்தியடி
பந்தாடு மெல்விரலாள் பாகன்னடி
பவளத் தடவரையே போல்வானடி
வெந்தார் சுடலைநீ றாடும்மடி
வீரட்டங் காதல் விமலன்னடி. **#63**

ஒலிக்கும் தழற்பிழம்பாய் வளர்ந்த வடிவினனும் பந்தினை விளையாடும் மெல்லிய விரல்களை உடைய பார்வதி பாகனும், பெரிய பவள மலை போல்வானும், அதிகை வீரட்டத்தை உகந்தருளியிருக்கும் தூயோனும் ஆகிய எம் பெருமானுடைய திருவடிகள் தாமரைப் பூக்கள் போல மலர்ந்துள்ளன. இராவணனுடைய ஆற்றலையும் போக்கியன, ஏனைய பொருள்களின் தோற்றங்களுக்கு முன்னே தோன்றியன. சுடுகாட்டில் எரிக்கப்பட்டவருடைய சாம்பலில் தோய்வனவாம்.

திருவீரட்டானம்

திருஅதிகைவீரட்டானம்

திருவீரட்டானம், காப்புத்திருத்தாண்டகம்

செல்வப் புனற்கெடில வீரட்டமும்
சிற்றேமமும் பெருந்தண் குற்றாலமும்
தில்லைச்சிற் றம்பலமுந் தென்கூடலும்
தென்னானைக் காவும் சிராப்பள்ளியும்
நல்லூரும் தேவன் குடிமருகலும்
நல்லவர்கள் தொழுதேத்து நாரை யூரும்
கல்லலகு நெடும்புருவக் கபால மேந்திக்
கட்டங்கத் தோடுறைவார் காப்புக்களே. **#64**

நீர் மிக்க கெடிலநதியால் செல்வவளம் பெற்ற அதிகை வீரட்டம், சிற்றேமம், மிக்க பரப்பினை உடைய குளிர்ந்த குற்றாலம், தில்லைச் சிற்றம்பலம், தெற்கில் உள்ள மதுரை, அழகிய ஆனைக்கா, சிராப்பள்ளி, நல்லூர், தேவன்குடி, மருகல், சான்றோர்கள் வழிபட்டுத் துதிக்கும் நாரையூர் ஆகியன - கல்லலகு என்ற வாச்சியத்தையும், நீண்ட புருவச் சுவடுடைய மண்டையோட்டினை யும் கட்டங்கம் என்ற படைக்கலத்தையும் ஏந்திய சிவபெருமான் உகந்தருளியுள்ள திருத்தலங்களாம்.

திருஅதிகைவீரட்டானம்

தீர்த்தப் புனற்கெடில வீரட்டமும்
திருக்கோவல் வீரட்டம் வெண்ணெய் நல்லூர்
ஆர்த்தருவி வீழ்சுனைநீ ரண்ணா மலை
அறையணிநல் லூரும் அரநெ றியும்
ஏத்துமின்கள் நீரேத்த நின்ற ஈசன்
இடைமரு தின்னம்பர் ஏகம்பமும்
கார்த்தயங்கு சோலைக் கயிலாயமும்
கண்ணுதலான் தன்னுடைய காப்புக் களே. **#65**

அதிகை வீரட்டம், கோவலூர் வீரட்டம், வெண்ணெய்நல்லூர், அருவிகள் ஆரவாரித்து விழும் சுனைநீரை உடைய அண்ணாமலை, அறையணி நல்லூர், அரநெறி, இடைமருது, இன்னம்பர், ஏகம்பம், மேகத்தொடு விளங்கும் சோலைகளை உடைய கயிலாயம் என்பன - நாம் துதிக்குமாறு நெற்றிக்கண்ணனாகிய எம் பெருமான் உகந்தருளியிருக்கும் திருத்தலங்களாம். அத் தலங்களில் எம்பெருமானைப் போற்றுங்கள்.

திருஅதிகைவீரட்டானம்

சிறையார் புனற்கெடில வீரட்டமும்
திருப்பா திரிப்புலியூர் திருவா மாத்தூர்
துறையார் வனமுனிக ளேத்த நின்ற
சோற்றுத் துறைதுருத்தி நெய்த் தானமும்
அறையார் புனலொழுகு காவி ரிசூழ்
ஐயாற் றமுதர் பழனம் நல்ல
கறையார் பொழில்புடைசூழ் கானப் பேரும்
கழுக்குன்றும் தம்முடைய காப்புக் களே. **#66**

பாறைகளில் மோதிப் பெருகிவருகின்ற நீரை உடைய காவிரியால் தென்புறம் சூழப்பட்ட திருவையாற்றில் அமுதமாக உகந்தருளியிருக்கும் பெருமான் தடுக்கப்படுகின்ற நீரை உடைய கெடில நதிக் கரையிலுள்ள அதிகை வீரட்டம், பாதிரிப்புலியூர், ஆமாத்தூர், நீர்த்துறைகளை அடுத்த சோலைகளில் வாழும் முனிவர்கள் துதிக்க இருக்கும் சோற்றுத்துறை, துருத்தி, நெய்த்தானம், இருண்ட சோலைகளால் சூழப்பட்ட கானப்பேரூர், கழுக்குன்றம் ஆகிய திருத்தலங்களில் கோயில் கொண்டுள்ளான்.

திருஅதிகைவீரட்டானம்

திரையார் புனற்கெடில வீரட்டமும்
திருவாரூர் தேவூர் திருநெல் லிக்கா
உரையார் தொழநின்ற ஒற்றி யூரும்
ஓத்தூரும் மாற்பேறும் மாந்து றையும்
வரையா ரருவிசூழ் மாந தியும்மாகாளம் கேதாரம் மாமேருவும்
கரையார் புனலொழுகு காவி ரிசூழ்கடம்பந் துறையுறைவார் காப்புக் களே. **#67**

கெடிலக் கரை வீரட்டம், திருவாரூர், தேவூர், நெல்லிக்கா, புகழை உடைய சான்றோர் வழிபடும் ஒற்றியூர், ஓத்தூர், மாற்பேறு, மாந்துறை, மலை அருவிகள் சூழ்ந்த மாநதி, மாகாளம், கேதாரம், மாமேரு என்பன காவிரி சூழ்கடப்பந்துறையில் உகந்தருளியிருக்கும் பெருமானுடைய திருத்தலங்களாம்.

திருஅதிகைவீரட்டானம்

செழுநீர்ப் புனற்கெடில வீரட்ட மும்
திரிபுராந் தகம்தென்னார் தேவீச்சரம்
கொழுநீர் புடைசுழிக்குங் கோட்டுக் காவும்
குடமூக்கும் கோகரணம் கோலக் காவும்

பழிநீர்மை யில்லாப் பனங்காட் டூரும்
பனையூர் பயற்றூர் பராய்த்து றையும்
கழுநீர் மதுவிரியுங் காளிங்க மும்
கணபதீச் சரத்தார்தங் காப்புக் களே. **#68**

கெடிலக்கரை அதிகை வீரட்டம், திரிபுராந்தகம், அழகிய தேவீச்சரம், வெள்ளம் சூழும் கோட்டுக்கா, குடமூக்கு, கோகரணம், கோலக்கா, இழித்துரைக்கும் தன்மை இல்லாத பனங் காட்டூர், பனையூர், பயற்றூர், பராய்த்துறை, கழுநீர்ப் பூக்களிலிருந்து தேன் வெளிப்படும் காளிங்கம் என்பன கணபதீச்சரத்தை உகந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய திருத்தலங்களாம்.

திருஅதிகைவீரட்டானம்

தெய்வப் புனற்கெடில வீரட்டமும்
செழுந்தண் பிடவூரும் சென்று நின்று
பவ்வந் திரியும் பருப்ப தமும்
பறியலூர் வீரட்டம் பாவ நாசம்
மவ்வந் திரையு மணிமுத்த மும்மறைக்காடும் வாய்மூர் வலஞ்சு ழியும்
கவ்வை வரிவண்டு பண்ணே பாடுங்கழிப்பாலை தம்முடைய காப்புக்
களே. **#69**

கெடிலக் கரையிலுள்ள அதிகை வீரட்டம், செழிப்பை உடைய குளிர்ந்த பிடவூர், கடல் வெள்ளம் அணுகும் சீசைலம், பறியலூர் வீரட்டம், பாவநாசம், இன்னிசை முழங்கும் மணிமுத்தம், மறைக்காடு, வாய்மூர், வலஞ்சுழி, ஆரவாரத்தை உடைய வண்டுகள் பண்பாடும் கழிப்பாலை என்பன சிவபெருமான் உகந்தருளியிருக்கும் திருத்தலங்களாம்.

திருஅதிகைவீரட்டானம்

தெண்ணீர்ப் புனற்கெடில வீரட்டமுஞ்
சீர்காழி வல்லந் திருவேட்டியும்
உண்ணீரார் ஏடகமும் ஊறல் அம்பர்
உறையூர் நறையூர் அரண நல்லூர்
விண்ணார் விடையார் விளமர் வெண்ணி
மீயச்சூர் வீழி மிழலை மிக்க
கண்ணார் நுதலார் கரபு ரமுங்
காபாலி யாரவர்தங் காப்புக் களே. **#70**

அதிகை வீரட்டம், சீர்காழி, வல்லம், திருவேட்டி, நீர்வளம் மிக்க ஏடகம், ஊறல், அம்பர், உறையூர், நறையூர், அரண நல்லூர், வானத்திலும் உலவும் காளை வாகனம் உடைய சிவ பெருமான் உகக்கும் விளமர், வெண்ணி, மீயச்சூர், வீழிமிழலை, நெற்றிக்கண்ணனாம் சிவபெருமான்

விரும்பும் கரபுரம் ஆகியவை மண்டை ஓட்டினை ஏந்தும் அப்பெருமான் உகந்தருளியுள்ள திருத்தலங்களாம்.

திருஅதிகைவீரட்டானம்

தெளளும் புனற்கெடில வீரட்டமுந்
திண்டீச் சரமுந் திருப்பு கலூர்
எள்ளும் படையான் இடைத்தா னமும்
ஏயீச் சுரமுநல் லேமங் கூடல்
கொள்ளு மிலயத்தார் கோடி காவும்
குரங்கணின் முட்டமுங் குறும்ப லாவும்
கள்ளருந்தத் தெளளியா ருள்கி யேத்துங்
காரோணந் தம்முடைய காப்புக் களே. **#71**

பூதப்படையை உடையவரும், கூத்தினை நிகழ்த்துபவரும், ஆகிய பெருமானார் உகந்தருளியிருக்கும் திருத்தலங்கள், அதிகை வீரட்டம், திண்டீச்சரம், புகலூர், இடைத்தானம், ஏயீச்சுரம், ஏமம், கூடல், கோடிகா, குரங்கணில் முட்டம், குறும்பலா, திருவடி ஞானம் பெறச் சத்திநிபாதம் பெற்றவர் தியானித்துத் துதிக்கும் நாகை குடந்தைக் காரோணங்கள், என்பனவாகும்.

திருஅதிகைவீரட்டானம்

சீரார் புனற்கெடில வீரட்டமும்
திருக்காட்டுப் பள்ளி திருவெண் காடும்
பாரார் பரவுஞ்சீர்ப் பைஞ்ஞீலியும்
பந்தணை நல்லூரும் பாசூர் நல்லம்
நீரார் நிறைவயல்சூழ் நின்றி யூரும்
நெடுங்களமும் நெல்வெண்ணெய் நெல்வாயிலும்
காரார் கமழ் கொன்றைத் தாரார்க் கென்றும்
கடவூரில் வீரட்டங் காப்புக் களே. **#72**

அதிகை வீரட்டம், காட்டுப்பள்ளி, வெண்காடு, உலகு புகழும் சிறப்பினை உடைய பைஞ்ஞீலி, பந்தணைநல்லூர், பாசூர், நல்லம், வயல்சூழ்ந்த நின்றியூர், நெடுங்களம், நெல் வெண்ணெய், நெல்வாயில், கடவூர் வீரட்டம் என்பன கார் காலத்தில் மலரும் கொன்றை மலர் மாலையை அணிந்த சிவபெருமானுடைய திருத்தலங்களாம்.

திருஅதிகைவீரட்டானம்

சிந்தும் புனற்கெடில வீரட்டமும்
திருவாஞ் சியமும் திருநள் ளாறும்
அந்தண் பொழில்புடைசூழ் அயோகந்தியும்

ஆக்கூரும் ஆவூரும் ஆன்பட்டியும்
எந்தம் பெருமாற் கிடமாவதாம்
இடைச்சுரமும் எந்தை தலைச்சங் காடும்
கந்தங் கமழுங் கரவீரமும்
கடம்பூர்க் கரக்கோயில் காப்புக் களே. #73

அதிகை வீரட்டம், வாஞ்சியம், நள்ளாறு, தண்பொழில் சூழ் அயோகந்தி, ஆக்கூர், ஆவூர், ஆன்பட்டி, இடைச்சுரம், தலைச்சங்காடு, நறுமணம் கமழும்கரவீரம், சக்கரக் கோயிலை உடைய கடம்பூர் ஆகியன எங்கள் பெருமானுக்குத் திருத்தலங்களாம்.

திருஅதிகைவீரட்டானம்

தேனார் புனற்கெடில வீரட்டமும்
திருச்செம்பொன் பள்ளி திருப்பூவணம்
வானோர் வணங்கும் மணஞ்சேரியும்
மதிலுஞ்சை மாகாளம் வார ணாசி
ஏனோர்க ளேத்தும் வெகுளீச்சரம்
இலங்கார் பருப்பதத்தோ டேணார் சோலைக்
கானார் மயிலார் கருமாரியும்
கறைமிடற்றார் தம்முடைய காப்புக் களே. #74

அதிகை வீரட்டம், செம்பொன்பள்ளி, பூவணம், தேவரும் வணங்கும் மணஞ்சேரி, மதில்களை உடைய உஞ்சை மாகாளம், வாரணாசி மற்றவர்களும் வழிபடும் வெகுளீச்சரம், விளங்கும் சீசைலம், பெருமையையுடைய சோலைகளிலே காட்டில் தங்கக் கூடிய மயில்கள் பொருந்தியிருக்கும் கருமாரி என்பன நீலகண்டப் பெருமானுடைய திருத்தலங்களாம்.

திருஅதிகைவீரட்டானம்

திருநீர்ப் புனற்கெடில வீரட்டமும்
திருவளப்பூர் தெற்கேறு சித்தவடம்
வருநீர் வளம்பெருகு மாநிருபமும்
மயிலாப்பில் மன்னினார் மன்னியேத்தும்
பெருநீர் வளர்சடையான் பேணிநின்ற
பிரம புரம்சுழியல் பெண்ணாகடம்
கருநீல வண்டரற்றுங் காளத்தியும்
கயிலாயந் தம்முடைய காப்புக் களே. #75

அதிகை வீரட்டம், அளப்பூர், அதிகைக்குத் தெற்கில் உள்ள சித்தவடம், நீர் வளம் மிக்க மாநிருபம், மயிலாப்பூர், பிரமபுரம், சுழியல், பெண்ணாகடம், நல்ல நீலநிறமான வண்டுகள் ஒலிக்கும் காளத்தி,

கயிலாயம் என்பன அடியவர்களால் நிலையாகப் போற்றப்படும் கங்கை தங்கும் சடையை உடைய சிவபெருமான் உகந்தருளியிருக்கும் திருத்தலங்களாம்.

திருக்காளத்தி

திருக்காளத்தி

திருக்காளத்தி, திருத்தாண்டகம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காளத்திநாதர்.
தேவியார் : ஞானப்பூங்கோதையாரம்மை.

விற்றூணொன் றில்லாத நல்கூர்ந் தான்காண்
வியன்கச்சிக் கம்பன்காண் பிச்சை யல்லால்
மற்றூணொன் றில்லாத மாசது ரன்காண்
மயானத்து மைந்தன்காண் மாசொன் றில்லாப்
பொற்றூண்காண் மாமணிநற் குன்றொப் பான்காண்
பொய்யாது பொழிலேழுந் தாங்கி நின்ற
கற்றூண்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன் காண் அவனென் கண்ணு ளானே. **#76**

விற்று அப்பணத்தால் உணவு வாங்குவதற்குரிய பொருள் ஒன்றும் தன்பால் கொள்ளாத வறியவனைப் போலக் காட்சி வழங்கி, கச்சி ஏகம்பத்தில் உகந்தருளியிருந்து, பிச்சை எடுத்தலைத் தவிர உணவுக்கு வேறு வழியில்லாத பெருந்திறமையனாய், மயானத்துக் காணப்படுபவனாய், தவறான ஏழு உலகங்களையும் தாங்கி நிற்கும் கற்றூண் போல்வானாய்க் காளத்தியில் காட்சி வழங்கும் சிவகணங்களின் தலைவனாகிய எம்பெருமான் எப்பொழுதும் என் மனக்கண்களுக்குக் காட்சி வழங்கியவாறே உள்ளான்.

திருக்காளத்தி

இடிப்பான்காண் என்வினையை ஏகம் பன்காண்
எலும்பா பரணன்காண் எல்லாம் முன்னே
முடிப்பான்காண் மூவுலகு மாயி னான்காண்
முறைமையால் ஐம்புரியும் வழுவா வண்ணம்
படித்தான் தலையறுத்த பாசு பதன்காண்
பராய்த்துறையான் பழனம்பைஞ் ஞீலி யான்காண்
கடித்தார் கமழ்கொன்றைக் கண்ணி யான்காண்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. **#77**

என் வினைகளை அழிப்பவனாய், ஏகம்பத்தில் உறைபவனாய், அணிகலன்களாக எலும்புகளையே அணிபவனாய், எல்லா உலக நிகழ்ச்சிகளையும் வகுத்து அமைப்பவனாய், மூவுலகங்களிலும் வியாபித்திருப்பவனாய், பஞ்சாதியாக முறையாக வழு ஏதுமின்றி

வேதங்களை ஓதும் பிரமனின் ஐந்தாம் தலையை நீக்கிய பசுபதி என்ற அடையாளங்களை உடையவனாய், பராய்த்துறை. பழனம், பைஞ்ஞீலி இவற்றில் உகந்தருளியிருப்பவனாய்க் கொன்றைப் பூவினாலாய மார்பு - மாலை, முடிமாலை இவற்றை அணிபவனாகிய காளத்திப் பெருமான் என்கண் உள்ளான்.

திருக்காளத்தி

நாரணன்காண் நான்முகன்காண் நால்வே தன்காண்
ஞானப் பெருங்கடற்கோர் நாவாய் அன்ன
பூரணன்காண் புண்ணியன்காண் புராணன் தான்காண்
புரிசடைமேற் புனலேற்ற புனிதன் தான்காண்
சாரணன்காண் சந்திரன்காண் கதிரோன் தான்காண்
தன்மைக்கண் தானேகாண் தக்கோர்க் கெல்லாம்
காரணன்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன்காண் அவனென் கண்ணு ளானே. **#78**

நாராயணாய், பிரமனாய், நான்கு வேதங்களையும் ஓதுபவனாய், ஞானப் பெருங்கடலின் அக்கரையை அடையச் செய்யும் படகு போன்ற நிறைவானவனாய்ப் புண்ணியனாய்ப் பழையோனாய், முறுக்குண்ட சடை மீது கங்கையை ஏற்ற தூயோனாய், எங்கும் இயங்குபவனாய்ச் சந்திர சூரியர்களை உடனாய் இருந்து செயற்படுப்போனாய், நற்பண்புகளில் தனக்கு உவமை இல்லாதானாய், மெய்யுணர்வுடையோருக்குத் தானே முதற்பொருளாகத் தோன்றுபவனாய்க் காளத்தியில் காட்சி வழங்கும் சிவகணத் தலைவனாகிய எம்பெருமான் என்கண் உள்ளான்.

திருக்காளத்தி

செற்றான்காண் என்வினையைத் தீயாடி காண்
திருவொற்றி யூரான்காண் சிந்தை செய்வார்க்
குற்றான்காண் ஏகம்பம் மேவி னான்காண்
உமையாள்நற் கொழுநன்காண் இமையோரேத்தும்
சொற்றான்காண் சோற்றுத் துறையு ளான்காண்
சுறாவேந்தன் ஏவலத்தை நீறா நோக்கக்
கற்றான்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன்காண் அவனென் கண்ணு ளானே. **#79**

என் தீவினைகளை அழித்துத் தீயின்கண் கூத்து நிகழ்த்தித் தன்னைத் தியானிப்பவர்களுக்கு நெருக்கமானவனாய், உமா தேவியின் கணவனாய், தேவர்கள் துதிக்கும் வேத வடிவினனாய், மன்மதனுடைய அம்பு செலுத்தும் ஆற்றலைச் சாம்பலாக்கக் கற்றவனாய், ஒற்றியூர்,

ஏகம்பம், சோற்றுத்துறை என்ற திருத்தலங்களில் உறை பவனாய்க் காளத்தியில் காணப்படும் கணநாதன் என்கண் உள்ளான்.

திருக்காளத்தி

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றி னுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்.
காளத்தி யானவனென் கண்ணு ளானே. **#80**

மனத்திலும் தலைமேலும் சொற்களிலும் உள்ளானாய், மனம் மெய்மொழிகளைச் செயற்படுத்தித் தன் திருவடிகளை வாயாரப்பாடும் தொண்டர் இனத்தானாய். தேவர்கள் தலை மேலானாய், ஏழுலகங்களையும் கடந்தவனாய், இவ்வுலகில் செவ்விதாகிய பொன் போன்ற நல்ல விளைவை நல்கும் குறிஞ்சி முதலிய நிலத்தில் உள்ளானாய், நறிய கொன்றைப் பூவில் உறைபவனாய், மலை நெருப்பு காற்று மேக மண்டலம் இவற்றில் உடனாய் இருந்து இவற்றைச் செயற்படுப்பவனாய்க் கயிலாயத்து உச்சி உள்ளானாகிய காளத்திப் பெருமான் என்கண் உள்ளான்.

திருக்காளத்தி

எல்லாம்முன் தோன்றாமே தோன்றி னான்காண்
ஏகம்பம் மேயான்காண் இமையோ ரேத்தப்
பொல்லாப் புலனைந்தும் போக்கி னான்காண்
புரிசடைமேற் பாய்கங்கை பூரித் தான்காண்
நல்லவிடை மேல்கொண்டு நாகம் பூண்டு
நளிர்சிரமொன் றேந்தியோர் நாணா யற்ற
கல்லாடை மேற்கொண்ட காபா லிகாண்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. **#81**

ஏனைய பொருள் தோன்றுதற்கு முன்னும் இருப்பவனாய், ஏகம்பத்து விரும்பி உறைபவனாய், தேவர்கள் துதிக்கப் பொறிவாயில் ஐந்து அவித்தவனாய், முறுக்கேறிய சடையின் மேல் பாய்ந்த கங்கையை அதன்கண் நிரப்பியவனாய், பெரிய காளைமீது ஏறிப் பாம்புகளைப் பூண்டு குளிர்ந்த மண்டை யோட்டை ஏந்தி, நாணத்தைக் காப்பதொரு பொருளாகத்துறந்தார் அணியும் காவியாடை உடுத்துக் காபாலம் என்னும் கூத்தாடும் காளத்திநாதன் என் கண் உள்ளான்.

திருக்காளத்தி

கரியுருவு கண்டத்தெங் கண்ணு ளான்காண்
கண்டன்காண் வண்டுண்ட கொன்றை யான்காண்
எரிபவள வண்ணன்காண் ஏகம் பன்காண்
எண்டிசையுந் தானாய குணத்தி னான்காண்
திரிபுரங்கள் தீயிட்ட தீயா டிகாண்
தீவினைகள் தீர்த்திடுமென் சிந்தை யான்காண்
கரியுரிவை போர்த்துகந்த காபா லிகாண்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. **#82**

நீலகண்டனாய், எமக்குக் காட்சி வழங்குபவனாய், அருளால் ஏற்ற பெற்றியின் பல்வேறு வடிவு உடையவனாய், வண்டுகள் நுகரும் கொன்றைப் பூவினை அணிந்தவனாய், ஒளிவீசும் பவள வண்ணனாய், ஏகம்பனாய், எட்டுத் திசைகளும் தானேயாய பண்பினனாய், முப்புரங்களையும் தீக்கொளுவியவனாய். நெருப்பிடையே கூத்து நிகழ்த்துபவனாய், என் உள்ளத்திலிருந்து தீவினைகளை அழிப்பவனாய், யானைத் தோலைப் போர்த்து மகிழ்ந்து காபாலக் கூத்து ஆடுபவனாய்க் காளத்திப் பெருமான் என்கண் உள்ளான்.

திருக்காளத்தி

இல்லாடிச் சில்பலிசென் றேற்கின் றான்காண்
இமையவர்கள் தொழுதிறைஞ்ச இருக்கின்றான்காண்
வில்லாடி வேடனா யோடி னான்காண்
வெண்ணூலுஞ் சேர்ந்த அகலத் தான்காண்
மல்லாடு திரள்தோள்மேல் மழுவா ளன்காண்
மலைமகள்தன் மணாளன்காண் மகிழ்ந்து முன்னாள்
கல்லாலின் கீழிருந்த காபா லிகாண்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. **#83**

இல்லங்கள் தோறும் சென்று அவர்கள் வழங்கும் சிறு அளவினவாகிய உணவுகளை ஏற்கின்றவனாய், தேவர்கள் தொழுது வழிபடப்படுகின்றவனாய், வில்லை ஏந்தி வேடன் உருக்கொண்டு பன்றிப்பின் ஓடியவனாய். பூணூலும் பூண்ட மார்பினனாய், வலிய திரண்ட தோளில் மழுப்படை ஏந்தியவனாய், பார்வதி கணவனாய், மகிழ்வோடு ஒரு காலத்தில் கல்லால மரத்தின் கீழ்த் தென் முகக் கடவுளாய் இருந்தவனாய்க் காபாலக்கூத்து ஆடுபவனாய்க் காளத்தியில் உகந்தருளியிருக்கும் சிவபெருமான் என்கண் உள்ளான்.

திருக்காளத்தி

தேனப்பூ வண்டுண்ட கொன்றை யான்காண்
திருவேகம் பத்தான்காண் தேனார்ந் துக்க
ஞானப்பூங் கோதையாள் பாகத் தான்காண்
நம்பன்காண் ஞானத் தொளியா னான்கண்
வானப்பே ரூரு மறிய வோடி
மட்டித்து நின்றான்காண் வண்டார் சோலைக்
கானப்பே ரூரான்காண் கறைக்கண் டன்காண்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. **#84**

வண்டுகள் நுகரும் தேனை உடைய கொன்றை சூடியாய்த் திரு ஏகம்பத்தனாய், தேன் ஒழுகும் பூக்களை அணிந்த ஞானப்பூங்கோதை அம்மையை இடப்பாகமாகக் கொண்டவனாய், நமக்கு இனியவனாய், ஞானப் பிரகாசனாய், ஊழியிறுதியில் வானமும் உலகும் அழியுமாறு விரைந்து ஒடுக்க வல்லவனாய், வண்டுகள் பொருந்திய சோலைகளை உடைய திருக்கானப்பேரூரில் உறைபவனாய் நீலகண்டனாய்க் காளத்திப் பெருமான் என்கண் உள்ளான்.

<u>திருக்காளத்தி</u>

இறைவயன்காண் ஏழுலகு மாயி னான்காண்
ஏழ்கடலுஞ் சூழ்மலையு மாயி னான்காண்
குறையுடையார் குற்றேவல் கொள்வான் தான்காண்
குடமூக்கிற் கீழ்க்கோட்டம் மேவி னான்காண்
மறைவுடைய வானோர் பெருமான் தான்காண்மறைக்காட் டுறையு
மணிகண் டன்காண்
கறையுடைய கண்டத்தெங் காபா லிகாண்காளத்தி யானவனென்
கண்ணு ளானே. **#85**

யாவருக்கும் முதல்வனாய், ஏழுலகும், ஏழ் கடலும் இவற்றைச் சுற்றிய மலைகளும் ஆகிப் பலகுறைபாடுகளையும் உடைய உயிர்கள் தனக்குச் செய்யும் குற்றறேவல்களை ஏற்றுக் குடமூக்குத் தலத்திலுள்ள கீழ்க்கோட்டத்தை விரும்பி, வேதம் ஓதும் வானோருக்கும் தலைவனாய்த் திருமறைக் காட்டுத் தலத்தில் தங்கும் நீலகண்டனாய்க்கறைக் கண்டனாய்க் காபாலக்கூத்து ஆடும் காளத்திப் பெருமான் என்கண் உள்ளான்.

<u>திருக்காளத்தி</u>

உண்ணா வருநஞ்ச முண்டான் தான்காண்
ஊழித்தீ யன்னான்காண் உகப்பார் காணப்
பண்ணாரப் பல்லியம் பாடி னான்காண்
பயின்றநால் வேதத்தின் பண்பி னான்காண்

அண்ணா மலையான்காண் அடியா ரீட்டம்
அடியிணைகள் தொழுதேத்த அருளு வான்காண்
கண்ணாரக் காண்பார்க்கோர் காட்சி யான்காண்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. **#86**

பிறர் உண்ண இயலாத கொடிய நஞ்சினை உண்டவனாய், ஊழித் தீயை ஒப்ப அழிப்பதனைச் செய்பவனாய்ப் பண்களுக்குப் பொருந்தப் பல வாச்சியங்களை இயக்கிப் பாடியவனாய், தான் ஓதிய நான்கு வேதங்களில் கூறப்பட்ட இறைமைப் பண்புகளை உடையவனாய், அண்ணாமலையானாய், அடியார் கூட்டம் தன் திருவடிகளைத் தொழுது போற்றுமாறு அருளுபவனாய், தன்னை மனக்கண்களால் காண்பவர்களுக்கு அரிய காட்சிப் பொருளாய் இருப்பவனாய் உள்ள காளத்திப் பெருமான் என்கண் உள்ளான்.

திருஆமாத்தூர்

திருஆமாத்தூர்

திருஆமாத்தூர், திருத்தாண்டகம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அழகியநாதேசுவரர்.
தேவியார் : அழகியநாயகியம்மை.

வண்ணங்கள் தாம்பாடி வந்து நின்று
வலிசெய்து வளைகவர்ந்தார் வகையால் நம்மைக்
கண்ணம்பால் நின்றெய்து கனலப் பேசிக்
கடியதோர் விடையேறிக் காபா லியார்
சுண்ணங்கள் தாங்கொண்டு துதையப் பூசித்
தோலுடுத்து நூல்பூண்டு தோன்றத் தோன்ற
அண்ணலார் போகின்றார் வந்து காணீர்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. **#87**

காபாலக் கூத்தாடும் தலைமையை உடைய பெருமான் தாளத்தொடு பொருந்தப்பாடும் இசைகள் பாடிக் கொண்டு வந்து நின்று வற்புறுத்தி நம்வளைகளைக் கவர்ந்தவராய், நாம் மனம் நெகிழும் வகையாலே நம்மைத் தம் கண்களாகிய அம்புகளாலே துன்புறுத்திக் காமத்தீ மூண்டெழுமாறு பேசி, விரைந்து செல்லும் விடையை இவர்ந்து, பலவகை நறுமணப் பொடிகளையும் செறிவாகப் பூசிக்கொண்டு, விலங்குகளின் தோலை உடுத்துப் பூணூல் அணிந்து, தம் பேரழகு தோன்றச் செல்கின்றார். ஆமாத்தூர்த் தலைவராகிய அவர் அழகினை வந்து காணுங்கள்.

திருஆமாத்தூர்

வெந்தார்வெண் பொடிப்பூசி வெள்ளை மாலை
விரிசடைமேற் றாஞ்சூடி வீணை யேந்திக்
கந்தாரந் தாம்முரலாப் போகா நிற்கக்
கறைசேர் மணிமிடற்றீ ரூரே தென்றேன்
நொந்தார்போல் வந்தென தில்லே புக்குநுடங்கே ரிடைமடவாய் நம்மூர் கேட்கில்
அந்தா மரைமலர்மேல் அளிவண்டி யாழ்செய்ஆமாத்தூர் என்றடிகள் போயி னாரே. **#88**

தீயிலிடப்பட்டு வெந்து போனவர் தம் வெள்ளிய சாம்பலைப் பூசி, வெண்ணிற மாலையைப் பரந்த சடையில் சூடி, வீணை ஏந்திக் காந்தாரப் பண்ணைப் பாடிக்கொண்டு எம்பெருமான் சென்று

கொண்டிருக்க, அவரை நோக்கி 'விடக்கறை வெளிப்பட்ட நீலகண்டரே! நும்ஊர் யாது?' எனறு வினவினேன். பசியினால் வருந்தியவரைப் போல வந்து என் வீட்டினுள் புகுந்து 'அசைகின்ற அழகிய இடையினை உடைய இளையவளே! அழகிய தாமரை மலர்மேல் வண்டுகள் யாழ் போல் ஒலிக்கும் ஆமாத்தூரே நம்மூர்' என்று சொல்லிப் பெருமான் போய்விட்டார்.

திருஆமாத்தூர்

கட்டங்கந் தாமொன்று கையி லேந்திக்
கடிய விடையேறிக் காபா லியார்
இட்டங்கள் தாம்பேசி யில்லே புக்கு
இடும்பலியும் இடக்கொள்ளார் போவா ரல்லர்
பட்டிமையும் படிறுமே பேசா நின்றார்பார்ப்பாரைப் பரிசழிப்பார் போல்கின் றார்தாம்
அட்டிய சில்பலியுங் கொள்ளார் வில்ளார்அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. **#89**

கையில் கட்டங்கம் என்ற படையை ஏந்தி, விரைந்து செல்லும் விடையை இவர்ந்து, காபாலக்கூத்தாடும் பெருமான் வேட்கையொடு பொருந்திய சொற்களைப் பேசியவாறே வீட்டிற்குள் புகுந்து வழங்கிய உணவையும் ஏற்றுக்கொள்ளாது, வீட்டை விடுத்துப் போதலையும் செய்யாது நெறிப்படாதனவும் வஞ்சனையை உடையனவுமாகிய செய்திகளையே பேசிக்கொண்டு தம்மை நோக்கும் மகளிரின் நிறை என்ற பண்பினை அழிப்பவர் போலக் காணப்படுகின்றார். வழங்கிய சிலவாகிய உணவுகளையும் ஏலாதவராய்த் தம் மனக்கருத்து இன்னது என்று வெளிப்படையாகக் கூறாதவராய் விளங்கும் ஆமாத்தூர்த் தலைவர் அழகியர்.

திருஆமாத்தூர்

பசைந்தபல பூதத்தர் பாட லாடல்
படநாகக் கச்சையர் பிச்சைக் கென்றங்
கிசைந்ததோ ரியல்பினர் எரியின் மேனி
இமையாமுக் கண்ணினர் நால்வே தத்தர்
பிசைந்ததிரு நீற்றினர் பெண்ணோர் பாகம்பிரிவறியாப் பிஞ்ஞகனார் தெண்ணீர்க் கங்கை
அசைந்த திருமுடியர் அங்கைத் தீயர்அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. **#90**

பாடுதலையும் கூத்தாடுதலையும் விரும்பிய பல பூதங்களை உடைய ஆமாத்தூர்த் தலைவர் படம் எடுக்கும் பாம்பைக்கச்சையாக உடுத்தித்

தீப் போன்ற சிவந்த மேனியராய், இமைக்காத முக்கண்களை உடையவராய் நான்கு வேதங்களையும் ஓதுபவராய்த் திருநீற்றை நீரில் குழைத்து அணிந்தவராய்த் தம் உடம்பின் ஒரு பாகத்தை உமாதேவி நீங்காத தலைக்கோலத்தை உடையவராய், தௌந்த நீரை உடைய கங்கை தங்கும் திருமுடியினராய்த் தீ ஏந்திய கையினராய், அழகியராய்க் காட்சி வழங்குகின்றார்.

திருஆமாத்தூர்

உருளுடைய தேர்புரவி யோடும் யானை
யொன்றாலுங் குறைவில்லை யூர்தி வெள்ளே
றிருளுடைய கண்டத்தர் செந்தீ வண்ணர்
இமையவர்கள் தொழுதேத்தும் இறைவ னார்தாம்
பொருளுடைய ரல்லர் இலரு மல்லர்
புலித்தோ லுடையாகப் பூதஞ் சூழ
அருளுடைய அங்கோதை மாலை மார்பர்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. **#91**

சக்கரங்களை உடைய தேர், குதிரை, யானை, என்பவற்றைக் குறைவறப் பெற்றிருப்பினும் வெள்ளிய காளையையே ஊர்தியாகக் கொண்டு, இருண்ட கழுத்தினராய், சிவந்த தீயின் நிறத்தினராய், பொருள் உடையவர் அல்லர் என்றோ பொருள் இல்லாதவர் அல்லர் என்றோ கூற முடியாத நிலையினராய்ப் புலித்தோலை உடையாக அணிந்து, பூதங்கள் தம்மைச் சுற்றி இருக்குமாறு, மாலை சூடிய மார்பினராய், அருளுடையவராய் உள்ள இமையவர்கள் வழிபட்டுத் துதிக்கும் இறைவராகிய ஆமாத்தூர்த் தலைவர் அழகியவர்.

திருஆமாத்தூர்

வீறுடைய ஏறேறி நீறு பூசி
வெண்டோடு பெய்திடங்கை வீணை யேந்திக்
கூறுடைய மடவாளோர் பாகங் கொண்டு
குழையாடக் கொடுகொட்டி கொட்டா வந்து
பாறுடைய படுதலையோர் கையி லேந்திப்
பலிகொள்வா ரல்லர் படிறே பேசி
ஆறுடைய சடைமுடியெம் மடிகள் போலும்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. **#92**

கங்கையைச் சடைமுடியில் கொண்ட எம் தலைவராகிய ஆமாத்தூர் ஐயர் நீற்றினைப் பூசிக் காதில் வெள்ளிய தோட்டினை அணிந்து இடக்கையில் வீணையை ஏந்தி இடப் பாகமாக உமாதேவியைக் கொண்டு காதுகளில் அணிந்த குழை அசையக் கொடுகொட்டிப்

பறையை ஒலித்துக் கொண்டு பருந்துகள் புலால் நாற்றம் உணர்ந்து அணுகும் மண்டை ஓட்டினை ஒரு கையில் ஏந்தி, ஆற்றல் மிக்க காளையை இவர்ந்து வந்து, பிச்சைபெறாமல் வஞ்சனையாகிய சொற்களையே பேசும் அழகர் போலும்.

திருஆமாத்தூர்

கையோர் கபாலத்தர் மானின் தோலர்
கருத்துடையார் நிருத்தராய்க் காண்பார் முன்னே
செய்ய திருமேனி வெண்ணீ றாடித்
திகழ்புன் சடைமுடிமேல் திங்கள் சூடி
மெய்யொரு பாகத் துமையை வைத்து
மேவார் திரிபுரங்கள் வேவச் செய்து
ஐயனார் போகின்றார் வந்து காணீர்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. **#93**

கையில் மண்டை யோட்டை ஏந்தி, மான் தோல் உடுத்து, பகைவருடைய மும்மதில்களையும் தீயில் வேவச் செய்து, காண்பார் முன் கூத்தாடும் கருத்துடையவராய், தலைவராகிய பெருமான் செய்ய திருமேனியிலே வெள்ளிய நீற்றினைப் பூசித் திகழும் சிவந்த சடைமேல் திங்களைச் சூடி, உடம்பின் ஒரு பாகமாக உமாதேவியைக் கொண்டு, அழகிய தோற்றத்தோடு போகின்றார். அந்த ஆமாத்தூர்த் தலைவரை வந்து காணுங்கள்.

திருஆமாத்தூர்

ஒன்றாலுங் குறைவில்லை ஊர்தி வெள்ளே
றொற்றியூர் உம்மூரே யுணரக் கூறீர்
நின்றுதான் என்செய்வீர் போவீ ராகில்
நெற்றிமேற் கண்காட்டி நிறையுங் கொண்டீர்
என்றுந்தான் இவ்வகையே இடர்செய் கின்றீர்இருக்குமூ
ரினியறிந்தோம் ஏகம்பமோ
அன்றித்தான் போகின்றீர் அடிக ளெம்மோடழகியரே ஆமாத்தூர் ஐய
னாரே. **#94**

உமக்குக் குறை ஒன்றும் இல்லாதாகவும் காளையை வாகனமாகக் கொண்டு ஒற்றியூரை உம் ஊராகக் கொண்ட காரணத்தைக் கூறுகின்றீர் அல்லீர். ஒரு செயலும் செய்யாமல் நின்று கொண்டிருக்கின்றீர். நீர் எம்மை விடுத்துப் போகும் போது நும் நெற்றிக் கண்ணைக் காட்டி எங்கள் அடக்க குணத்தைக் கைப்பற்றிச் செல்கின்றீர். எல்லா நாள்களும் இப்படியே எங்களுக்குத் துன்பம் செய்கின்றீர். நீர் இருக்கும் ஊரை இப்போது அறிந்து விட்டோம். தலைவராகிய தாங்கள் எம்மை

அழைத்துச் செல்லாமல் போகின்ற இடம் ஏகம்பமோ? ஆமாத்தூர்த் தலைவராகிய தாங்கள் எல்லா நிலையிலும் அழகியரே.

திருஆமாத்தூர்

கல்லலகு தாங்கொண்டு காளத் தியார்
கடிய விடையேறிக் காணக் காண
இல்லமே தாம்புகுதா இடுமின் பிச்சை
யென்றாருக் கெதிரெழுந்தே னெங்குங் காணேன்
சொல்லாதே போகின்றீர் உம்மூ ரேதுதுருத்தி பழனமோ நெய்த்தா
னமோ
அல்லலே செய்தடிகள் போகின் றார்தாம்அழகியரே ஆமாத்தூர் ஐய
னாரே. **#95**

காளத்திப் பெருமான் கல்லலகு என்ற வாச்சியத்தைக் கையில் கொண்டு, விரைந்து செல்லும் காளையை இவர்ந்து, எல்லோரும் காணும் வண்ணம் எம் வீட்டிற்குள் தாமே புகுந்து, 'பிச்சை இடுமின்' என்று கூறினாராகப் பிச்சை கொண்டு வந்து பார்க்கும் போது, அவரை வீட்டினுள் எங்கும் காணேனாக, 'ஒன்றும் சொல்லாதே வீட்டை விடுத்துப் போகின்றவரே! உம் ஊர் துருத்தியோ, பழனமோ, நெய்த்தானமோ யாது? என்று யான் வினவவும் கூறாது, என்னை வருத்தி, அவ்வடிகள் போகின்றார், அத்தகைய ஆமாத்தூர்த் தலைவர் எந்நிலையிலும் அழகியவர்.

திருஆமாத்தூர்

மழுங்கலா நீறாடும் மார்பர் போலும்
மணிமிழலை மேய மணாளர் போலும்
கொழுங்குவளைக் கோதைக் கிறைவர் போலும்
கொடுகொட்டி தாள முடையார் போலும்
செழுங்கயி லாயத்தெஞ் செல்வர் போலும்
தென்னதிகை வீரட்டஞ் சேர்ந்தார் போலும்
அழுங்கினா ரையுறவு தீர்ப்பார் போலும்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. **#96**

ஒளி குறையாத திருநீற்றைப் பூசிய மார்பினர், அழகிய திருவீழி மிழலையிலே உகந்தருளியிருக்கும் திருமணக் கோலத்தினர். குவளை மலர் மாலையை அணிந்த உமையம்மைக்குத் தலைவர். கொடு கொட்டி ஆடலுக்கு ஏற்ற தாளம் உடையவர். கயிலாயத்தில் உள்ள எம் செல்வர். தெற்கில் உள்ள அதிகை வீரட்டத்தை உகந்து சேர்ந்தவர். வருந்துபவர்களைக் காப்பாற்ற மாட்டாரோ என்ற ஐயம் தீர்த்து ஆட்கொள்ளும் ஆமாத்தூர்த் தலைவர் எல்லா வகையிலும் அழகியரே.

திருப்பந்தணைநல்லூர்

திருப்பந்தணைநல்லூர்

திருப்பந்தணைநல்லூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பசுபதீசுவரர்.
தேவியார் : காம்பன்னதோளியம்மை.

நோதங்க மில்லாதார் நாகம் பூண்டார்
நூல்பூண்டார் நூன்மேலோ ராமை பூண்டார்
பேய்தங்கு நீள்காட்டில் நட்ட மாடிப்
பிறைசூடுஞ் சடைமேலோர் புனலுஞ் சூடி
ஆதங்கு பைங்குழலாள் பாகங் கொண்டார்
அனல்கொண்டார் அந்திவாய் வண்ணங்கொண்டார்
பாதங்க நீறேற்றார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூ ராரே. **#97**

பந்தணைநல்லூர்ப் பெருமான் வருந்துவதாகிய மாயை உடம்பு உடையர் அல்லாதாராய்ப் பாம்புகளையும், மார்பில் பூணூலையும் அதன்மேல் ஆமை ஓட்டினையும் அணிந்தவர். அவர் வளர்கின்ற கருங்குழலியாகிய உமாதேவியை ஒருபாகமாகக் கொண்டு, பிறையைச் சூடிய சடையில் கங்கையையும் கொண்டு அந்தி வானத்தின் செந்நிறமேனியில் அடிமுதல் முடி வரை திருநீறணிந்து, கையில் தீயினைக் கொண்டு, பேய்கள் தங்கும் பரந்த சுடுகாட்டில் கூத்தாடிப் பசிய கண்களை உடைய காளை மீது இவர்ந்து வந்து பிச்சை ஏற்றவர்.

திருப்பந்தணைநல்லூர்

காடலாற் கருதாதார் கடல்நஞ் சுண்டார்
களிற்றுரிவை மெய்போர்த்தார் கலன தாக
ஓடலாற் கருதாதார் ஒற்றி யூரார்
உறுபிணியுஞ் செறுபகையு மொற்றைக் கண்ணால்
பீடுலாந் தனைசெய்வார் பிடவ மொந்தை
குடமுழவங் கொடுகொட்டி குழலு மோங்கப்
பாடலா ராடலார் பைங்க ணேற்றார்.
பலியேற்றார் பந்தணை நல்லூ ராரே. **#98**

பந்தணைநல்லூர்ப் பெருமான் கடலில் தோன்றிய நஞ்சினை நுகர்ந்து, களிற்றுத் தோலால் மெய்யினைப் போர்த்து, மண்டையோட்டினையே உண்கலனாகக் கொண்டு, ஒற்றியூரை உகந்து, அடியார்களுடைய உடற்பிணிகளையும் உட்பகைகளையும் தம் ஒரே பார்வையாலே

வலிமைகெடச் செய்து, பிடவம், மொந்தை, குடமுழா, கொடுகொட்டி, குழல் என்ற வாச்சியங்கள் ஒலிக்கச் சுடுகாட்டினைத் தவிர வேற்று இடங்களை விரும்பாது, அங்குப் பாடியும் ஆடியும் செயற்பட்டுப் பசிய கண்களை உடைய காளை மீது இவர்ந்து பிச்சை ஏற்றவர்.

திருப்பந்தணநல்லூர்

பூதப் படையுடையார் பொங்கு நூலார்
புலித்தோ லுடையினார் போரேற் றினார்
வேதத் தொழிலார் விரும்ப நின்றார்
விரிசடைமேல் வெண்திங்கட் கண்ணி சூடி
ஓதத் தொலிகடல்வாய் நஞ்ச முண்டார்
உம்பரோ டம்பொன் னுலக மாண்டு
பாதத் தொடுகழலார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூ ராரே. **#99**

தேவர்களை அடிமையாகக் கொண்டு அவர்களுடைய பொன்னுலகை உடைமையாகக் கொண்டு சுற்றிக் கட்டப்பட்ட கழலைத் திருவடிகளில் அணிந்த பந்தணைநல்லூர்ப் பெருமான் வெள்ளம் ஒலிக்கும் கடலில் தோன்றிய விடத்தை உண்டவர். விரிந்த சடைமேல் வெள்ளிய பிறையினை முடிமாலையாகச் சூடியவர். வேதங்கள் ஓதி வேள்விகள் செய்யும் அந்தணர்கள் தம்மைப் பரம்பொருளாக விரும்ப இருப்பவர். திருமாலாகிய போரிடும் காளையை உடைய அப்பெருமான் பூதப்படை உடையவர். அவர் பூணூல் அணிந்து புலித்தோலை இடையில் அணிந்து பசிய கண்களை உடைய காளை மீது அமர்ந்து பிச்சை ஏற்றவர் ஆவார்.

திருப்பந்தணநல்லூர்

நீருலாஞ் சடைமுடிமேல் திங்க ளேற்றார்
நெருப்பேற்றார் அங்கையில் நிறையு மேற்றார்
ஊரெலாம் பலியேற்றார் அரவ மேற்றார்
ஒலிகடல்வாய் நஞ்சம் மிடற்றி லேற்றார்
வாருலா முலைமடவாள் பாக மேற்றார்
மழுவேற்றார் மான்மறியோர் கையி லேற்றார்
பாருலாம் புகழேற்றார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூ ராரே. **#100**

கச்சணிந்த முலைகளையுடைய உமாதேவியாரை இடப்பாகமாக ஏற்ற பந்தணைநல்லூர்ப் பெருமான் கடலில் தோன்றிய நஞ்சினை மிடற்றில் ஏற்றுக் கங்கை உலாவும் சடைமுடி மேல் திங்கள் சூடியவர். மான்குட்டியை ஒருகையில் ஏற்ற அப் பெருமான் அழகிய கை ஒன்றில் நெருப்பை ஏற்று, ஊர்களெல்லாம் பிச்சை ஏற்று, பிச்சையிட வந்த

மகளிரின் நிறை எனற பண்பினைக் கவர்ந்தவர். அவர் மழு ஏந்தி, உலகில் பரவிய புகழுக்கு உரியவராய்ப் பசிய கண்களை உடைய காளையை இவர்ந்து பிச்சை ஏற்றவர்.

திருப்பந்தணநல்லூர்

தொண்டர் தொழுதேத்துஞ் சோதி யேற்றார்
துளங்கா மணிமுடியார் தூய நீற்றார்
இண்டைச் சடைமுடியார் ஈமஞ் சூழ்ந்த
இடுபிணக்காட் டாடலா ரேமந் தோறும்
அண்டத்துக் கப்புறத்தார் ஆதி யானார்
அருக்கனா யாரழலா யடியார் மேலைப்
பண்டை வினையறுப்பார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூ ராரே. **#101**

அண்டங்களையும் கடந்த எங்கும் பரவியிருப்பவராய், எல்லோருக்கும் முற்பட்டவராய்ச் சூரியனாகவும் அக்கினியாகவும் இருந்து, அடியவர்களுடைய பழைய வினைகளைச் சுட்டு எரிப்பவராய் உள்ள பந்தணை நல்லூர்ப் பெருமான் அடியார்கள் தம்மைத் தொழுது துதிப்பதற்குக் காரணமான ஞானஒளியை உடையவர். நடுங்காத அழகிய தலையை உடையவர். தூய நீறணிந்தவர். சடையில் முடிமாலை சூடியவர். இடுகாட்டைச் சூழ்ந்திருக்கும் சுடுகாட்டில் இரவு தோறும் கூத்து நிகழ்த்துபவர். அவர் பசிய கண்களை உடைய காளையை இவர்ந்து பிச்சை ஏற்றவர் ஆவார்.

திருப்பந்தணநல்லூர்

கடமன்னு களியானை யுரிவை போர்த்தார்
கானப்பேர் காதலார் காதல் செய்து
மடமன்னு மடியார்தம் மனத்தி னுள்ளார்
மானுரிதோல் மிசைத்தோளார் மங்கை காண
நடமன்னி யாடுவார் நாகம் பூண்டார்
நான்மறையோ டாறங்கம் நவின்ற நாவார்
படமன்னு திருமுடியார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூ ராரே. **#102**

கானப்பேர் என்ற திருத்தலத்தை விரும்புபவரும், உமாதேவி காண இடையறாது நடம் ஆடுபவரும் ஆகிய பந்தணை நல்லூர்ப் பெருமான், மத யானைத் தோலைப் போர்த்தவர். எம் பெருமான் அருளியவாறன்றித் தாமாக ஒன்றும் அறியாராகிய அடியவர் உள்ளத்தில் உகந்து நிலையாக இருப்பவர். மான் தோலைத் தோளில் அணிந்து, நாகத்தைத் திருமேனியிற் பூண்டு, முடியிலும் பாம்பினைச் சூடி, நான்கு

வேதங்களையும் ஆறு அங்கங்களையும் ஓதுகின்ற நாவினை உடையவர். அவர் பைங்கண் ஏறு ஊர்ந்து பலி ஏற்றவராவர்.

திருப்பந்தணநல்லூர்

முற்றா மதிச்சடையார் மூவ ரானார்
மூவுலகு மேத்தும் முதல்வ ரானார்
கற்றார் பரவுங் கழலார் திங்கள்
கங்கையாள் காதலார் காம்பேய் தோளி
பற்றாகும் பாகத்தார் பால்வெண் ணீற்றார்
பான்மையா லூழி யுலக மானார்
பற்றார் மதிலெரித்தார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூ ராரே. **#103**

பந்தணைநல்லூர்ப் பெருமான் மும்மூர்த்திகளையும் உடனாய் இருந்து செயற்படுத்தலின் மூவர் ஆனவர். அவர் பிறை சூடிய சடையினர். மூவுலகும் துதிக்கும் முதல்வர். சான்றோர் துதிக்கும் திருவடிகளை உடையவர். பிறையையும் கங்கையையும் விரும்பித் தலையில் கொண்டவர். மூங்கில் போன்ற தோள்களை உடைய பார்வதி பாகர். வெள்ளியநீறு அணிபவர். தம் பண்பினால் உலகங்கள் ஆகவும் அவற்றை அழிக்கும் ஊழிக்காலங்களாகவும் உள்ளவர். பகைவர் மதில்களை எரித்த அப்பெருமானார் பைங்கண் ஏறு ஊர்ந்து பலி ஏற்றார்.

திருப்பந்தணநல்லூர்

கண்ணமரு நெற்றியார் காட்டார் நாட்டார்
கனமழுவாட் கொண்டதோர் கையார் சென்னிப்
பெண்ணமருஞ் சடைமுடியார் பேரொன் றில்லார் பிறப்பிலார்
இறப்பிலார் பிணியொன் றில்லார்
மண்ணவரும் வானவரும் மற்றை யோரும்மறையவரும் வந்தெதிரே
வணங்கி யேத்தப்
பண்ணமரும் பாடலார் பைங்க ணேற்றார்பலியேற்றார் பந்தணை
நல்லூ ராரே. **#104**

தமக்கெனப் பெயர் ஒன்றும் இல்லாதவரும், பிறப்பு இறப்பு பிணி என்பன அற்றவரும், நில உலகத்தவரும் வானுலகத்தவரும், பிரமன் உபபிரமர்களும், உரகர் முதலிய மற்றவர்களும் எதிரே வந்து வணங்கித் துதித்துப் பண்ணோடு கூடிப் பாடுதலை உடையவரும் ஆகிய பந்தணைநல்லூர்ப் பெருமான் கங்கை தங்கும் சடையினர். கண் பொருந்திய நெற்றியை உடையவர். கையில் மழு ஏந்தியவர். காட்டிலும், நாட்டிலும் உகந்தருளியிருக்கும் அப் பெருமான் பைங்கண் விடை

ஊர்ந்து பலி ஏற்றார்.

திருப்பந்தணநல்லூர்

ஏறேறி யேழுலகு மேத்த நின்றார்
இமையவர்கள் எப்பொழுது மிறைஞ்ச நின்றார்
நீறேறு மேனியார் நீல முண்டார்
நெருப்புண்டார் அங்கை யனலு முண்டார்
ஆறேறு சென்னியார் ஆனஞ் சாடி
யனலுமிழும் ஐவா யரவு மார்த்தார்
பாறேறு வெண்டலையார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூ ராரே. **#105**

பந்தணை நல்லூர்ப் பெருமான் இடபத்தை இவர்ந்து ஏழுலகும் துதிக்குமாறு நிலையாக இருப்பவர். தேவர்களால் எப்பொழுதும் வழிபடப்படுபவர். நீறணிந்த மேனியர். விடத்தை உண்டவர். வேள்வித்தீயில் இடப்படும் அவியை நுகர்பவர். உள்ளங்கையில் தீயைக் கொண்டு அதனால் அடியார் வினைகளை நீக்குபவர். கங்கை தங்கு சடையினர். ஆன்ஐந்தால் அபிடேகம் செய்யப்படுபவர். தீப்போன்ற விடத்தைக் கக்கும் ஐந்தலை நாகத்தை இடையில் இறுகச்சுற்றியவர். புலால் நாற்றம் கண்டு பருந்துகள் சுற்றி வட்டமிடும் மண்டையோட்டை ஏந்திப் பைங்கண் ஏறு இவர்ந்து பலியேற்றவர் ஆவர்.

திருப்பந்தணநல்லூர்

கல்லூர் கடிமதில்கள் மூன்று மெய்தார்
காரோணங் காதலார் காதல் செய்து
நல்லூரார் ஞானத்தார் ஞான மானார்
நான்மறையோ டாறங்கம் நவின்ற நாவார்
மல்லூர் மணிமலை யின்மே லிருந்து
வாளரக்கர் கோன்தலையை மாளச் செற்றுப்
பல்லூர் பலிதிரிவார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூ ராரே. **#106**

ஞானத்தை அடியார்க்கு வழங்கு பவராய்த் தாமே ஞானவடிவாகி, நான்மறையும் ஆறு அங்கமும் எப்பொழுதும் ஓதும் நாவினை உடையவராய், நாகை, குடந்தைக் காரோணங்களையும் நல்லூரையும் உகந்தருளியிருப்பவர் பந்தணைநல்லூர்ப் பெருமான்.அவர் கற்கள் நிறைந்த மதில்கள் மூன்றையும் அம்பு எய்து அழித்தவர். வலிமை மிகுந்த அழகிய கயிலாயமலைமேலிருந்து கொடிய அரக்கர் மன்னனாகிய இராவணன்தலைகள் சிதறுமாறு கோபித்த அப்பெருமான் பல ஊர்களிலும் பிச்சைக்காகத் திரிந்தவர். அவர் பைங்கண் ஏறுஇவர்ந்து

பணி ஏற்றவர்.

திருப்புன்கூர் - திருநீடூர்

திருப்புன்கூர்

திருப்புன்கூர் - திருநீடூர், திருத்தாண்டகம், இத்தலங்கள்
சோழநாட்டிலுள்ளன.திருப்புன்கூரில்,,
சுவாமிபெயர் : சிவலோகநாதர்.
தேவியார் : சொக்கநாயகியம்மை.திருநீடூரில்,,
சுவாமிபெயர் : சோமநாதேசுவரர்.
தேவியார் : சொக்கநாயகியம்மை.

பிறவாதே தோன்றிய பெம்மான் தன்னைப்
பேணாதார் அவர்தம்மைப் பேணா தானைத்
துறவாதே கட்டறுத்த சோதி யானைத்
தூநெறிக்குந் தூநெறியாய் நின்றான் தன்னைத்
திறமாய எத்திசையுந் தானே யாகித்
திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை
நிறமா மொளியானை நீடூ ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. **#107**

பிற பொருள்களின் கூட்டத்தால் பிறவாது எம் பெருமான் தானே தன் விருப்பத்தால் வடிவங்கொள்பவன். தன்னை விரும்பாதவர்களைத் தானும்விரும்பி உதவாதவன். இயல்பாகவே பந்தங்களின் தொடர்பு இல்லாத ஞான வடிவினன். தூய நன்னெறியில் ஒழுகுவதற்குப் பற்றுக் கோடாய் இருப்பவன். பகுக்கப்பட்ட எத்திசைக்கண்ணும் தானே பரவி யிருப்பவன். திருப்புன்கூரை உகந்தருளியிருக்கும் அச்சிவலோக நாதனே நீடூரிலும் உகந்திருப்பவன். அத்தகைய செந்நிறச் சோதி உருவினைக் கீழ் மகனாகிய அடியேன் விருப்புற்று நினையாமல் இந்நாள் காறும் வாளா இருந்த செயல் இரங்கத்தக்கது.

திருப்புன்கூர்

பின்றானும் முன்றானு மானான் தன்னைப்
பித்தர்க்குப் பித்தனாய் நின்றான் தன்னை
நன்றாங் கறிந்தவர்க்குந் தானே யாகி
நல்வினையுந் தீவினையு மானான் தன்னைச்
சென்றோங்கி விண்ணளவுந் தீயா னானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை
நின்றாய நீடூர் நிலாவி னானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. **#108**

எதிர்காலமும் இறந்தகாலமும் ஆகியவன். தன்னிடம் பெருவிருப்புடைய

அடியார்பக்கல், தானும் பெருவிருப் புடையவன். நல்வினையும் தீவினையும் செய்தவர்களுக்கு அவரவர் வினைகளுக்கு ஏற்பப்பயன்களை வழங்குபவன். வானளாவிய தீப்பிழம்பு வடிவானவன். திருப்புன்கூரை உகந்தருளிய அப்பெருமான் நீடூரிலும் நிலையாக உறைந்திருக்கின்றான். அப்பெருமானை நீசனேன் நினையாவாறு என்னே!

திருப்புன்கூர்

இல்லானை எவ்விடத்தும் உள்ளான் தன்னை
இனிய நினையாதார்க் கின்னா தானை
வல்லானை வல்லடைந்தார்க் கருளும் வண்ணம்
மாட்டாதார்க் கெத்திறத்தும் மாட்டா தானைச்
செல்லாத செந்நெறிக்கே செல்விப் பானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை
நெல்லால் விளைகழனி நீடூ ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. **#109**

எவ்விடத்தும் பரந்திருப்பினும் ஊனக்கண்களுக்குப் புலனாகாதவன். நல்லனவே நினையாதவர்களுக்குத் தான் இனியன் அல்லன். தன்னை விரைந்து சரண்புக்கவர்களுக்குத் தான் அருளுவதில் வல்லவன். ஓரிடம் விட்டு மற்றோரிடம் பெயர்தல் வேண்டாத, வீடுபேறு அடையும் வழியில் செலுத்துபவன் ஆகிய அப்பெருமான், தன்னைச் சரணடையாதவர்களுக்கு, தானும் அருள் செய்யாதவன். திருப்புன்கூர் மேவிய அச்சிவலோகன் நெல்விளையும் வயல்களை உடைய நீடூரையும் உகந்தருளியிருப்பவன். அவனை நீசனாகிய அடியேன் விருப்புற்று நினையாதவாறு என்னே!.

திருப்புன்கூர்

கலைஞானங் கல்லாமே கற்பித் தானைக்
கடுநரகஞ் சாராமே காப்பான் தன்னைப்
பலவாய வேடங்கள் தானே யாகிப்
பணிவார்கட் கங்கங்கே பற்றா னானைச்
சிலையாற் புரமெரித்த தீயாடியைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை
நிலையார் மணிமாட நீடு ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. **#110**

கலைஞானத்தை முயன்று கற்றல் வேண்டாதபடி உள்நின்றே உணர்த்துபவன். கொடிய நரகத்தை அடையாதபடி காப்பவன். பல்வேறு இடங்களிலிருந்து தன்னை வழிபடுபவர் விரும்பும் பல வேடங்களிலும்

தானே காட்சி வழங்கி ஆங்காங்கே உறைபவன். வில்லால் திரிபுரங்களை எரித்தவன். தீயின்கண் கூத்து நிகழ்த்துபவன். திருப்புன்கூர் மேவிய அச்சிவலோகன் பலகாலம் நிலைத்திருக்கும் அழகிய மாடி வீடுகளை உடைய நீடூரையும் உகந் தருளியவன். அவனை நீசனேன் நினையாதவாறு என்னே!.

திருப்புன்கூர்

நோக்காதே எவ்வளவும் நோக்கி னானை
நுணுகாதே யாதொன்றும் நுணுகி னானை
ஆக்காதே யாதொன்று மாக்கி னானை
அணுகாதா ரவர்தம்மை அணுகா தானைத்
தேக்காதே தெண்கடல்நஞ் சுண்டான் தன்னைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை
நீக்காத பேரொளிசேர் நீடூ ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. **#111**

கருவிகளால் அன்றித் தன் நினைவினாலேயே எல்லாப் பொருள்களையும் படைத்துக் காத்து அழிப்பவன். நுண்ணிய பொருள்களிலும் நுண்ணியனாக இயல்பாகவே கலந்திருப்பவன். கருவிகள் கொண்டு படைக்காமல் எல்லாப் பொருள்களையும் தன் நினைவினாலேயே தோற்றுவிப்பவன். தன்னை நெருங்காதவர்களுக்கு அருள் செய்தற்கண் ஈடுபடாதவன். தடுக்காமல் கடல் விடத்தை உண்டவன். அத்தகைய திருப்புன்கூர் மேவிய சிவலோகன் நீக்குதற்கரிய மிக்க பொலிவை உடைய நீடூரானும் ஆவான். அவனை நீசனேன் நினையாதவாறு என்னே!.

திருப்புன்கூர்

பூணலாப் பூணானைப் பூசாச் சாந்த
முடையானை முடைநாறும் புன்க லத்தில்
ஊணலா வூணானை யொருவர் காணா
உத்தமனை ஒளிதிகழும் மேனி யானைச்
சேணுலாஞ் செழும்பவளக் குன்றொப் பானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை
நீணுலா மலர்க்கழனி நீடு ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. **#112**

மற்றவர் அணியக் கருதாத பாம்புகளை அணிகளாகப் பூணுபவன். மற்றவர்கள் பூசிக்கொள்ள விரும்பாத சாம்பலைச் சந்தனம் போலப் பூசிக்கொள்பவன். புலால் நாறும் மண்டையோடாகிய இழிந்த உண்கலத்தில் உண்ணலாகாத பிச்சை எடுத்த ஊணினை உண்பவன்.

இவையாவும் தன்பொருட்டன்றிப் பிறர் பொருட்டேயாக, இவற்றின் காரணத்தை மற்றவர் காணமாட்டாத வகையில் செயற்படும் மேம்பட்டவன். இச்செயல்களால் ஒளிமிக்குத் தோன்றும் திருமேனியை உடையவன். மிக உயர்ந்த மேம்பட்ட பவளமலையை ஒப்பவன். திருப்புன்கூர் மேவிய அச்சிவலோகன் மிகுதியாகக் காணப்படுகின்ற மலர்களை உடைய வயல்கள் பொருந்திய நீடூரானும் ஆவான். அவனை நீசனேன் நினையாதவாறு என்னே!

திருப்புன்கூர்

உரையார் பொருளுக் குலப்பி லானை
யொழியாமே எவ்வுருவு மானான் தன்னைப்
புரையாய்க் கனமாயாழ்ந் தாழா தானைப்
புதியனவு மாய்மிகவும் பழையான் தன்னைத்
திரையார் புனல்சேர் மகுடத் தானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை
நிரையார் மணிமாட நீடூ ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. **#113**

சொற்பொருளுக்கு அப்பாற்பட்டவன். எல்லா உருவங்களிலும் நீங்காது உடன் உறைபவன். நீரில் ஆழாத உட்டுளை உடைய நொய்ய பொருள்களாகவும் நீரில் ஆழும் கனமான பொருள்களாகவும் உள்ளவன். மிகவும் பழைமையாகிய தான் புதியவனாகவும் இருப்பவன். அலைகள் நிறைந்த கங்கையைத் தலையில் சூடியவன். திருப்புன்கூர் மேவிய அச்சிவலோகன் வரிசையான அழகிய மாடிவீடுகளை உடைய நீடூரானும் ஆவான். நீசனேன் அவனை நினையாதவாறு என்னே!

திருப்புன்கூர்

கூரரவத் தணையானுங் குளிர்தண் பொய்கை
மலரவனுங் கூடிச்சென் றறிய மாட்டார்
ஆரொருவ ரவர்தன்மை யறிவார் தேவர்
அறிவோமென் பார்க்கெல்லா மறிய லாகாச்
சீரரவக் கழலானை நிழலார் சோலைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை
நீரரவத் தண்கழனி நீடூ ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. **#114**

மேம்பட்ட ஆதிசேடனைப் படுக்கையாக உடைய திருமாலும், குளிர்ந்த பொய்கையில் தோன்றும் தாமரையை இருப்பிடமாக உடைய பிரமனும் ஆகிய இருவரும் காண முயன்றும் அறியமாட்டாத அப்பெருமான் இயல்பினை யாவர் உள்ளவாறு அறிய இயலும்? அவனை அறிவோம்

என்று நினைக்கும் தேவர்களுக்கும் உண்மையில் அறிய முடியாதவனாய் ஒலிக்கும் அழகிய வீரக்கழலை அணிந்த அப்பெருமான் நிழல் தரும் சோலைகள் உடைய திருப்புன்கூரை மேவியவன். அவனே நீர் பாயும் ஓசையை உடைய குளிர்ந்த வயல்களை உடைய நீடூரானும் ஆவான். அவனை நீசனேன் பண்டு நினையாதவாறு என்னே!

<u>திருப்புன்கூர்</u>

கையெலாம் நெய்பாயக் கழுத்தே கிட்டக்
கால்நிமிர்த்து நின்றுண்ணுங் கையர் சொன்ன
பொய்யெலாம் மெய்யென்று கருதிப் புக்குப்
புள்ளுவரா லகப்படா துய்யப் போந்தேன்
செய்யெலாஞ் செழுங்கமலப் பழன வேலித்
திருப்புன்கூ மேவிய சிவலோ கனை
நெய்தல்வாய்ப் புனற்படப்பை நீடூ ரானை.
நீதனேன் என்னேநான் நினையா வாறே. **#115**

கைகளிலிருந்து நெய் கீழே சொட்டுதலால் அதைத் தவிர்க்கக் கைகளை உயர்த்தாதே கழுத்தைக் கீழே வளைத்துக் கைகளருகே கொணர்வித்து, நிலைகுலையாமலிருப்பதற்குக் கால்களை விரித்துக்கொண்டு நின்றவாறே உண்ணும் கீழ்மக்கள் கூறிய பொய்யுரைகளை மெய் உரைகளாகக் கருதி அவர்கள் குழுவினிடைக் கலந்து, பின் அவ்வேடர்கள் விரித்த வலையில் அகப்படாது அத்தீங்கில் நின்றும் தப்பிப் புறமே வந்து சேர்ந்த அடியேன், வயல்களில் செழிப்பான தாமரைகள் களைகளாகத் தோன்றும் நன்செய் நிலங்களை எல்லையாக உடைய திருப்புன்கூர் சிவலோகநாதன் என்ற பெயரில் உகந்தருளியிருப்பவனாய், கடற்கரைப் பகுதியில் நீர்வளம் உடைய மனைக்கொல்லைகளை உடைய நீடூரிலும் உகந்து தங்கியிருக்கும் அப்பெருமானை, நினையாத கீழ்மகனாய் அடியேன் இருந்தவாறு இரங்கத்தக்கது.

<u>திருப்புன்கூர்</u>

இகழுமா றெங்ஙனே யேழை நெஞ்சே
யிகழாது பரந்தொன்றாய் நின்றான் தன்னை
நகழமால் வரைக்கீழிட் டரக்கர் கோனை
நலனழித்து நன்கருளிச் செய்தான் தன்னைத்
திகழுமா மதகரியி னுரிபோர்த் தானைத்
திருப்புன்கூர் மேவிய சிவ லோ கனை
நிகழுமா வல்லானை நீடூ ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. **#116**

யாதொரு பொருளையும் புறக்கணிக்காது அவற்றிலெல்லாம் உடனாய் இருப்பவன் எம்பெருமான். அவன் இராவணனைக் கயிலை மலையின் அடியில் இட்டு வருந்தச் செய்து அவன் வலிமையைக் குலைத்துப் பின் அவனுக்கு நல்லனவாகிய வாளும் நாளும் வழங்கியவன். மதத்தால் விளங்கிய யானையின் தோலைப் போர்த்தியவன். அவனே திருப்புன்கூர் மேவிய சிவலோக நாதன். தன் விருப்பப்படியே செயற்படவல்ல அப்பெருமான் நீடூரிலும் உகந்தருளியுள்ளான். 'அறிவில்லாத மனமே! அப்பெருமானைக் கீழ்மகனாகிய யான் நினையாத செயலே இரங்கத்தக்கது. அவ்வாறாக நீயும் இகழும் செயல் எவ்வாறு ஏற்பட்டது?'

திருக்கழிப்பாலை

திருக்கழிப்பாலை

திருக்கழிப்பாலை, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பால்வண்ணநாதர்.
தேவியார் : வேதநாயகியம்மை.

ஊனுடுத்தி யொன்பது வாசல் வைத்து
வொள்ளெலும்பு தூணா வுரோமம் மேய்ந்து
தாமெடுத்த கூரை தவிரப் போவார்
தயக்கம் பலபடைத்தார் தாமரையினார்
கானெடுத்து மாமயில்க ளாலுஞ் சோலைக்
கழிப்பாலை மேய கபாலப்பனார்
வானிடத்தை ஊடறுத்து வல்லைச் செல்லும்
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. **#117**

சதைப்பகுதியை வளைத்துச் சுவராகச் செய்து ஒன்பது வாயில்களை அமைத்து வெள்ளிய ஒளியை உடைய எலும்புகளைத் தூணாக அமைத்து மயிரினை மேற்பரப்பித் தாமே படைப்பித்த குடில் நீங்கும்படி தக்காரிடத்து வலியச் சென்று, தாவும் மானைக் கையில் ஏந்திய பெருமான் பல வடிவங்களை உடையவராய் அருள் செய்கின்றார். தோகைகளைப் பரப்பி மயில்கள் ஆடும் சோலைகளை உடைய திருக்கழிப்பாலைத் தலத்தை உகந்தருளியுள்ள மண்டை யோட்டினை ஏந்திய தலைவராகிய அப்பெருமான் வான் உலகங்களை எல்லாம் கடந்து விரைவாகச் செல்லும் வீடுபேற்றுலகிற்குச் செல்லும் வழியை அமைத்துக் கொடுத்துள்ளார். இவ்வுடம்பு பெற்றதனாலாய பயன்கொண்டு அவர் வகுத்த வழியிலே செல்வது ஒன்றே நாம் செயற்பாலது. அவர்க்குக் கைம்மாறாக நாம் செயற்பாலது ஒன்றும் இல்லை.

திருக்கழிப்பாலை

முறையார்ந்த மும்மதிலும் பொடியாச் செற்று
முன்னுமாய்ப் பின்னுமாய் முக்க ணெந்தை
பிறையார்ந்த சடைமுடிமேற் பாம்பு கங்கை
பிணக்கந்தீர்த் துடன்வைத்தார் பெரிய நஞ்சுக்
கறையார்ந்த மிடற்றடங்கக் கண்ட எந்தை கழிப்பாலை மேய கபாலப் பனார்
மறையார்ந்த வாய்மொழியான் மாய யாக்கை வழிவைத்தார்க்

கவ்வழியே போதும் நாமே. #118
மதில்களுக்குரிய இலக்கணங்கள் நிரம்பிய மூன்று மதில்களையும் சாம்பலாகுமாறு அழித்த பெருமான் ஏனைய பொருள்கள் தோன்றுவதன் முன்னும் அவை அழிந்தபின்னும் உள்ள முக்கண் தலைவர்.கங்கை தங்கிய சடைமுடியிலே பிறைச்சந்திரனும் பாம்பும் பகைமை நீங்கச் சேர்த்து வைத்தவர். கொடிய விடக் கறையைக் கழுத்தளவில் தங்கச் செய்தவர், எம்பெருமானார். கழிப்பாலை மேவிய அக்கபாலப்பனார் வேதங்களாகவும் ஆகமங்களாகவும் அமைந்த தம் சொற்களால், இவ்வுடல் அழிய உயிர் செல்லுதற்குரிய வழியை வகுத்தருளியுள்ளார். அவ்வழியிலே நாம் செல்லுவோம்.

திருக்கழிப்பாலை

நௌவுண்டாக் கருதாதே நிமலன் தன்னை
நினைமின்கள் நித்தலும்நே ரிழையா ளாய
ஒளிவண்டார் கருங்குழலி யுமையாள் தன்னை
யொருபாகத் தமர்ந்தடியா ருள்கி யேத்தக்
களிவண்டார் கரும்பொழில் சூழ் கண்டல் வேலிக் கழிப்பாலை மேய கபாலப் பனார்
வளியுண்டார் மாயக் குரம்பை நீங்க வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. #119

தூயனாகிய அப்பெருமானாரை நெகிழ்ச்சியால் இடையறவு படாமல் நாடோறும் தொடர்ந்து விருப்போடு நினையுங்கள். சிறந்த அணிகலன்களை உடைய, வண்டுகள் ஒளிந்து தங்கும் கருங்கூந்தலை உடைய உமாதேவியைத் தம் உடம்பில் ஒருபாகமாக விரும்பிக்கொண்டு, அடியார்கள் நினைந்து துதிக்குமாறு, களிப்பை உடைய வண்டுகள் நிறைந்த இருண்ட சோலைகளுக்குத் தாழைவேலியாகச் சூழ்ந்த கழிப்பாலை மேவிய கபாலப்பனார் காற்றை நுகர்தலாலே நிலைத்து நிற்கும், மாயையின் காரியமாகிய இவ்வுடம்பை இனிக்கொள்ளாது நிலையாக விடுத்தற்குரிய நெறியைக் குறிப்பிட்டுள்ளார். அந்நெறியிலே நாம் செல்வோம்.

திருக்கழிப்பாலை

பொடிநாறு மேனியர் பூதிப் பையர்
புலித்தோலர் பொங்கரவர் பூண நூலர்
அடிநூறு கமலத்தர் ஆரூ ராதி
ஆனஞ்சு மாடும் ஆதிரையி னார்தாம்
கடிநாறு பூஞ்சோலை கமழ்ந்து நாறுங்
கழிப்பாலை மேய கபாலப் பனார்

மடிநாறு மேனியிம் மாயம் நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. **#120**

திருநீறு விளங்கும் திருமேனியை உடைய பெருமானார் திருநீற்றுப்பையையும் வைத்துள்ளார். அவர் பூணூல் அணிந்து புலித்தோலை உடுத்துப் பாம்புகளை அணிகலனாகப் பூண்டவர். ஆதிரை நட்சத்திரத்தை உகந்து கொண்டு திருவாரூரில் உள்ள அவ்வாதி மூர்த்தி பஞ்சகவ்விய அபிடேகத்தை ஏற்றுத் தம் திருவடிகளில் அடியவர்கள் இட்ட பல தாமரைப் பூக்களை உடையவர். சோலைகள் நறுமணம் வீசும் கழிப்பாலை மேவிய அக்கபாலப்பனார், இறந்து போகும் இப்பொய்யாய உடல் நீங்க உயிர் நிலையாகத் தங்குதற்குரிய இடத்தை அடைவதற்கு உரிய வழியை வகுத்துக் கொடுத்துள்ளார். அவ்வழியே நாம் செல்வோம்.

<u>திருக்கழிப்பாலை</u>

விண்ணானாய் விண்ணவர்கள் விரும்பி வந்து
வேதத்தாய் கீதத்தாய் விரவி யெங்கும்
எண்ணானாய் எழுத்தானாய் கடலே ழானாய்
இறையானாய் எம்மிறையே யென்று நிற்கும்
கண்ணானாய் காரானாய் பாரு மானாய்
கழிப்பாலை யுள்ளுறையுங் கபாலப் பனார்
மண்ணாய மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. **#121**

தேவர்கள் விரும்பி வந்து 'தேவருலகம் ஆகியவனே! எல்லா இடங்களிலும் பரவி வேதம் ஓதி, கீதம்பாடி, எண் ஆனவனே! எழுத்தானவனே! ஏழ்கடலும் ஆனவனே! எல்லாப் பொருள்களுக்கும் தலைவனே! எங்கள் தலைவனே! எங்கள் பற்றுக் கோடே! மேகங்களும் உலகப் பொருள்களும் ஆயவனே!' என்று போற்றி நிற்கும் கழிப்பாலை மேவிய கபாலப்பனார் இவ்வுலகில் தோன்றிய நிலையாமையை உடைய உடல் நீங்க வழி வைத்தார். அவ்வழி நாம் செல்வோம்.

<u>திருக்கழிப்பாலை</u>

விண்ணப்ப விச்சா தரர்க ளேத்த
விரிகதிரான் எரிசுடரான் விண்ணு மாகிப்
பண்ணப்பன் பத்தர் மனத்து ளேயும்
பசுபதி பாசுபதன் தேச மூர்த்தி
கண்ணப்பன் கண்ணப்பக் கண்டு கந்தார்
கழிப்பாலை மேய கபாலப் பனார்
வண்ணப் பிணிமாய யாக்கை நீங்க

வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. **#122**
கழிப்பாலை மேவிய கபாலப்பனார், வேண்டுகோளை உடைய வித்தியாதரர்கள் துதிக்க, சூரியன், அக்கினி, விண்ணுலகத்தார் ஆகிய எல்லாப் பொருள்களையும் ஆக்கும் தந்தையார். அடியார்கள் மனத்துள் பொருந்தும் உயிர்களின் தலைவர். பாசுபதவேடத்தையுடைய ஒளி வடிவினர். கண்ணப்ப நாயனார் தம் வலக்கண்ணை இடந்து அப்பிய செயலைக் கண்டு உகந்தவர். அவர் பலவகையான பிணிகளுக்கு இருப்பிடமாகிய இந்நிலையற்ற உடம்பு நீங்க வழி வகுத்துள்ளார். அவ்வழியே நாம் செல்வோம்.

திருக்கழிப்பாலை

பிணம்புல்கு பீறற் குரம்பை மெய்யாப்
பேதப் படுகின்ற பேதை மீர்காள்
நிணம்புல்கு சூலத்தர் நீல கண்டர்
எண்டோளர் எண்ணிறைந்த குணத்தி னாலே
கணம்புல்லன் கருத்துகந்தார் காஞ்சி யுள்ளார் கழிப்பாலை மேய கபாலப் பனார்
மணம்புல்கு மாயக் குரம்பை நீங்க வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. **#123**
பிணமாதலைப் பொருந்தும் ஓட்டைக் குடிசையை நிலைபேறுடையதாகத் தவறாக எண்ணும் அறிவிலிகளே! கழிப்பாலை மேவிய கபாலப்பனார், கொழுப்புத் தங்கும் சூலத்தவராய், நீல கண்டராய், எண்தோளினராய் எண்ணற்ற குணத்தினாலே கணம்புல்ல நாயனாரின் கருத்தை விரும்பி ஏற்றவராய்க் காஞ்சிமாநகரில் உகந்தருளியிருப்பவர். நறுமணப் பொருளால் நாற்றம் மறைக்கப்பட்ட நிலையில்லாத இவ்வுடல் தொடர்பு நீங்குதற்கு வழிவகுத்துள்ளார். அவ்வழியே நாம் செல்வோம்.

திருக்கழிப்பாலை

இயல்பாய ஈசனை எந்தை தந்தை
என்சிந்தை மேவி யுறைகின் றானை
முயல்வானை மூர்த்தியைத் தீர்த்த மான
தியம்பகன் திரிசூலத் தன்ன கையன்
கயல்பாயுங் கண்டல்சூழ் வுண்ட வேலிக்
கழிப்பாலை மேய கபாலப் பனார்
மயலாய மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. **#124**
கயல்மீன்கள் தம் மீது பாயப்பெற்ற தாழை மரங்களை எல்லையாகக்

கொண்டு அவற்றால் சூழப்பட்ட கழிப்பாலை மேவிய கபால அப்பன் செயற்கையான் அன்றி இயற்கையாகவே எல்லோருக்கும் தலைவன். எம் குலத்தலைவன். என் சிந்தையில் விரும்பித் தங்கியிருக்கின்றவன். இடையறாது தொழில் செய்பவன். அவ்வத்தொழில்களுக்கு ஏற்ற திருமேனிகளை உடையவன். தூயவன், முக்கண்ணன், முத்தலைச் சூலத்தினன். தீயை வெளிப்படுத்தும் சிரிப்பினன். அப்பெருமான் மயக்கத்தைத் தரும் நிலையில்லாத இவ்வுடல் நீங்க வழிவைக்க, அவ்வழியே நாம் செல்வோம்.

திருக்கழிப்பாலை

செற்றதோர் மனமொழிந்து சிந்தை செய்து
சிவமூர்த்தி யென்றெழுவார் சிந்தை யுள்ளால்
உற்றதோர் நோய்களைந்திவ் வுலக மெல்லாங்
காட்டுவான் உத்தமன்றா னோதா தெல்லாம்
கற்றதோர் நூலினன் களிறு செற்றான்
கழிப்பாலை மேய கபாலப் பனார்
மற்றிதோர் மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. **#125**

கழிப்பாலை மேவிய கபால அப்பன், மனத்தில் பகை எண்ணத்தை நீக்கிச் சிவபெருமான் என்று தன்னை அன்போடு தியானிப்பவர்களின் உள்ளத்தில் உள்ள நோய்களைப் போக்கி அவர்களை இவவுலகத்தார் போற்றச் செய்யும் உத்தமனாய் எல்லாவற்றையும் ஓதாதே உணர்ந்தவனாய் இயல்பாகவே எல்லாப் பாசங்களையும் நீங்கியவன். அப்பெருமான் இந்த நிலையற்ற உடல் நீங்க வைத்த வழியிலே நாம் போவோம்.

திருக்கழிப்பாலை

பொருதலங்கல் நீண்முடியான் போர ரக்கன்
புட்பகந்தான் பொருப்பின்மீ தோடா தாக
இருநிலங்கள் நடுக்கெய்த எடுத்தி டுதலும்
ஏந்திழையாள் தான்வெருவ இறைவன் நோக்கிக்
கரதலங்கள் கதிர்முடியா றஞ்சி னோடு
கால்விரலா லூன்று கழிப்பா லையார்
வருதலங்க மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. **#126**

போரில் வல்ல அரக்கனாகிய இராவணனுடைய புட்பக விமானம் வெற்றிமாலை சூடிய சிவபெருமானுடைய மலையின் மீது செல்லாதாகக் கீழ் நிலம் அசையுமாறு அவன் மலையைப் பெயர்த்த அளவில்

உமாதேவி அஞ்ச அப்பெருமான் மனத்தால் நோக்கி அவன் இருபது கரங்களையும் பத்துத் தலைகளையும் தன் கால் விரலை ஊன்றி நசுக்கியவன். அப்பெருமான் திருக்கழிப்பாலையை உகந்தருளும் திருத்தலமாகக் கொண்டு பிறத்தலை உடைய நிலையாமையை உடைய இவ்வுடம்பின் தொடர்பு உயிருக்கு என்றும் நீங்குமாறு செய்யும் வழியை அறிவித்துள்ளான். அவ்வழியிலேயே நாம் செல்வோம்.

திருப்புறம்பயம்

திருப்புறம்பயம்

திருப்புறம்பயம், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சாட்சிவரதநாதர்.
தேவியார் : கரும்பன்னசொல்லம்மை.

கொடிமாட நீள்தெருவு கூடல் கோட்டூர்
கொடுங்கோளூர் தண்வளவி கண்டியூரும்
நடமாடு நன்மருகல் வைகி நாளும்
நலமாகு மொற்றியூ ரொற்றி யாகப்
படுமாலை வண்டறையும் பழனம் பாசூர்
பழையாறும் பாற்குளமுங் கைவிட் டிந்நாள்
பொடியேறு மேனியராய்ப் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. **#127**

கொடிகள் கட்டப்பட்ட மாட வீடுகளைக் கொண்ட நீண்ட தெருக்களை உடைய கூடல், கோட்டூர், கொடுங்கோளூர், வளவி, கண்டியூர், கூத்து நிகழ்த்தும் சிறந்த மருகல் இவற்றில் நாளும் தங்கி அழகிய ஒற்றியூர் ஒற்றிவைக்கப்பட்டது என்னும் பொருளைத் தருதலில் அதனை நீங்கி சூரியன் மறையும் மாலையிலே வண்டுகள் ஒலிக்கும் பழனம், பாசூர், பழையாறு, பாற்குளம் என்னும் இவற்றை நீங்கி இன்று திருநீறு அணிந்த மேனியராய்ப் பூதங்கள் தம்மைச் சூழ்ந்துவர எங்களுடைய ஊர் புறம்பயம் என்று கூறி எம்பெருமானார் சென்று விட்டார்.

திருப்புறம்பயம்

முற்றொருவர் போல முழுநீ றாடி
முளைத்திங்கள் சூடிமுந் நூலும் பூண்டு
ஒற்றொருவர் போல உறங்கு வேன்கை
ஒளிவளையை ஒன்றொன்றா எண்ணு கின்றார்
மற்றொருவ ரில்லைத் துணையெ னக்கு
மால்கொண்டாற் போல மயங்கு வேற்குப்
புற்றரவக் கச்சார்த்துப் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. **#128**

தவம் முற்றிய ஒருவரைப்போல உடல் முழுதும் திருநீறு பூசி, பிறைசூடி, முந்நூல் அணிந்து ஒற்றுவதற்கு வந்த ஒருவர் போலப் பொய் உறக்கம் கொண்ட என்கையிலிருக்கும் ஒளி பொருந்திய வளையல்களை ஒன்றொன்றாக எண்ணுகின்றார். எனக்கு இவரன்றித் துணைவர் வேறு

யாரும் இல்லை. இவருடைய செயலைக் கண்டு பித்துப்பிடித்தவரைப் போல மயங்குகின்ற என்னிடத்தில் 'எங்களுடைய ஊர் திருப்புறம்பயம்' என்று கூறிப் பாம்பினைக் கச்சாக அணிந்த எம்பெருமான் பூதங்கள் தம்மைச்சூழ என்னைவிடுத்துப் போய் விட்டார்.

திருப்புறம்பயம்

ஆகாத நஞ்சுண்ட அந்தி வண்ணர்
ஐந்தலைய மாசுணங்கொண் டம்பொற் றோள்மேல்
ஏகாச மாவிட்டோ டொன் றேந்திவந்
திடுதிருவே பலியென்றார்க் கில்லே புக்கேன்
பாகேதுங் கொள்ளார் பலியுங் கொள்ளார்
பாவியேன் கண்ணுள்ளே பற்றி நோக்கிப்
போகாத வேடத்தர் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. **#129**

தீங்கு தருகின்ற விடத்தை நுகர்ந்த, மாலையின் செந்நிறத்தை உடைய பெருமான், ஐந்தலைப் பாம்பு ஒன்றனை அழகிய தோளின் மீது மேலாடையாக அணிந்து, ஓடு ஒன்றனைக் கையில் ஏந்தி, எம் இல்லத்து வந்து 'திருவே! உணவு இடு' என்று கூற, உணவு கொண்டுவர உள்ளே சென்றேன். உணவுகளோடு யான் மீண்டு வரக்குழம்போ சோறோ ஏதும் என்னிடத்துப் பிச்சையாகப் பெறாமல் என்னைக் கூர்ந்து நோக்கி என் கண்ணுள்ளே அவர் உருவம் நீங்காது இருக்குமாறு செய்து, பூதங்கள் சூழப் 'புறம்பயம் நம் ஊர்' என்று போயினார்.

திருப்புறம்பயம்

பன்மலிந்த வெண்தலை கையி லேந்திப்
பன்முகில்போல் மேனிப்ப வந்த நாதர்
நென்மலிந்த நெய்த்தானஞ் சோற்றுத் துறை
நியமந் துருத்தியும் நீடூர் பாச்சில்
கன்மலிந் தோங்கு கழுநீர்க் குன்றங்
கடனாகைக் காரோணங் கைவிட் டிந்நாள்
பொன்மலிந்த கோதையருந் தாமு மெல்லாம்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. **#130**

பல்மிக்க வெள்ளிய மண்டையோட்டைக் கையில் ஏந்திப் பனிபொழியும் மேகம் போன்று திருநீற்றால் வெள்ளிய மேனியை உடைய வஞ்சகராகிய எம் தலைவர், நெல் மிக விளையும் நெய்த்தானம், சோற்றுத்துறை, நியமம், துருத்தி, நீடூர், பாச்சிலாச் சிராமம், கற்கள் மிக்க உயர்ந்த கழுக்குன்றம், கடற்கரையிலமைந்த நாகைக்காரோணம் என்ற தாம் உகந்தருளியிருந்த திருத்தலங்களை விடுத்து, இன்று பொலிவுமிக்க

தம் தேவிமாரோடு கூடியதாம் 'புறம்பயம் நம் ஊர்' என்று போயினார்.

திருப்புறம்பயம்

செத்தவர்தந் தலைமாலை கையி லேந்திச்
சிரமாலை சூடிச் சிவந்த மேனி
மத்தகத்த யானை யுரிவை மூடி
மடவா ளவளோடு மானொன் றேந்தி
அத்தவத்த தேவர் அறுப தின்மர்
ஆறுநூ றாயிரவர்க் காடல் காட்டிப்
புத்தகங் கைக்கொண்டு புலித்தோல் வீக்கிப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. **#131**

இறந்தார் தலைமாலையைக் கையிலெடுத்துத் தலையில் சூடிச் சிவந்த மேனியில் பெரிய தலையை உடைய யானைத் தோலைப் போர்த்துப் பார்வதி பாகராய், மானைக் கையில் ஏந்தி, ஆறுநூறாயிரத்து அறுபது தேவர்கள் தம் கூத்தினைக் காணுமாறு அருள் செய்து, புலித்தோலை இடையில் கட்டிக் கையில் புத்தகம் ஒன்றனை ஏற்றுப் புறம்பயம் நம் ஊர் என்று எம்பெருமான் போயினார்.

திருப்புறம்பயம்

நஞ்சடைந்த கண்டத்தர் வெண்ணீ றாடி
நல்லபுலி யதள்மேல் நாகங் கட்டிப்
பஞ்சடைந்த மெல்விரலாள் பாக மாகப்
பராய்த்துறையே னென்றோர் பவள வண்ணர்
துஞ்சிடையே வந்து துடியுங் கொட்டத் துண்ணென் றெழுந்திருந்தேன் சொல்ல மாட்டேன்
புன்சடையின் மேலோர் புனலுஞ் சூடிப் புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. **#132**

விடம் அடைந்த கழுத்தினராய், நீறு பூசி, பெரிய புலித்தோல் மேல் பாம்பினை இறுகக் கட்டிக் கொண்டு, செம்பஞ்சு போன்ற மெல்லிய விரல்களை உடைய பார்வதி பாகராய்ப் பவளம் போன்ற சிவந்த மேனியை உடைய எம்பெருமான் யான் உறங்கும் இடத்து வந்து துடியை ஒலித்து என்னை விழிக்கச் செய்து 'யான் பராய்த்துறை ஊரினேன்' என்றார்'. யான் திடுக்கிட்டு எழுந்திருந்தேன். பின் அவர் என் குறிப்பறிந்து மெய் தீண்டிச் செய்தனவற்றைச் சொற்களால் எடுத்துக்கூறும் ஆற்றல் இல்லேன். தம் சிவந்த சடையில் கங்கையைச் சூடி அப்பெருமான் 'புறம்பயம் நம் ஊர்' என்று போயினார்.

திருப்புறம்பயம்

மறியிலங்கு கையர் மழுவொன் றேந்தி
மறைக்காட்டே னென்றோர் மழலை பேசிச்
செறியிலங்கு திண்தோள்மேல் நீறு கொண்டு
திருமுண்ட மாஇட்ட திலக நெற்றி
நெறியிலங்கு கூந்தலார் பின்பின் சென்று
நெடுங்கண் பனிசோர நின்று நோக்கிப்
பொறியிலங்கு பாம்பார்த்துப் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. **#133**

ஒருகையில் மான் குட்டியை ஏந்தி, மற்றொரு கையில் மழுப்படையை ஏந்தி, 'யான் மறைக்காட்டில் உள்ளேன்' என்று இனிய சொற்களைப்பேசி, விளங்கிய திண்ணிய தோள்கள் மீது திருநீற்றைப் பூசி, நெற்றியில் திரிபுண்டரமாகத் திருநீறணிந்து, சுருண்ட கூந்தலை உடைய மகளிர்பின் சென்று, தம் கண்கள் கரிந்து நீர் சொரியுமாறு அவர்களை நெடுநேரம் அசையாமல் நோக்கி, புள்ளிகள் பொருந்திய பாம்புகளை இறுகக் கட்டிக் கொண்டு பூதங்கள் சூழ எம்பெருமானார் 'புறம்பயம் நம் ஊர்' என்று போயினார்.

<u>திருப்புறம்பயம்</u>

நில்லாதே பல்லூரும் பலிகள் வேண்டி
நிரைவளையார் பலிபெய்ய நிறையுங் கொண்டு
கொல்லேறுங் கொக்கரையுங் கொடுகொட்டியுங்
குடமூக்கி லங்கொழியக் குளிர்தண் பொய்கை
நல்லாளை நல்லூரே தவிரே னென்று
நறையூரில் தாமும் தவிர்வார் போலப்
பொல்லாத வேடத்தர் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. **#134**

ஓரிடத்தில் தங்காமல் பல ஊர்களும் பிச்சை ஏற்றலைக் கருதிச் சென்று, வளையலை வரிசையாக அணிந்த மகளிர் பிச்சை வழங்க, அதனோடு அவர்களுடைய அடக்கம் என்ற பண்பினையும் கைக்கொண்டு, தம் வாகனமாகக் கொலைத் தொழில் செய்யும் காளையையும், வாச்சியங்களான கொக்கரையையும் கொடுகொட்டியையும் குடமூக்கு என்னும் தலத்தில் விடுத்து, நல்லாளை, நல்லூர், நறையூர் இவற்றில் தங்குபவரைப் போலக் கூறிக் கொண்டு, மகளிரை நிறையழிக்கும் கோலமுடைய நம் பெருமானார் பூதம் சூழப் 'புறம்பயம் நம் ஊர்' என்று போயினார்.

<u>திருப்புறம்பயம்</u>

விரையேறு நீறணிந்தோ ராமை பூண்டு

வெண்தோடு பெய்திடங்கை வீணை யேந்தித்
திரையேறு சென்னிமேல் திங்கள் தன்னைத்
திசைவிளங்க வைத்துகந்த செந்தீ வண்ணர்
அரையேறு மேகலையாள் பாக மாக
ஆரிடத்தி லாட லமர்ந்த ஐயன்
புரையேறு தாமேறிப் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. **#135**
நறுமணம் கமழும்திருநீற்றைப் பூசி ஓர் ஆமையோட்டினை அணிகலனாகப்பூண்டு, காதில் சங்கத் தோட்டினை அணிந்து, இடக்கையிலேவீணையை ஏந்திக் கங்கை தங்கும்சடை மீது பிறையைநாற்றிசையும் அதன் ஒளிபரவுமாறு வைத்து, மகிழ்ந்த,செந்தீ நிறத்துப் பெருமானார், மேகலையை இடையில்அணிந்த உமைபாகராய், பிறர் அணுகுதற்கரியசுடுகாட்டில் கூத்தாடுதலை விரும்பிய தலைவராய், மேம்பட்டகாளையை இவர்ந்து, பூதம் சூழப் 'புறம்பயம் நம் ஊர்'என்று போயினார்.

<u>திருப்புறம்பயம்</u>

கோவாய இந்திரனுள் ளிட்டா ராகக்
குமரனும் விக்கினவி நாய கன்னும்
பூவாய பீடத்து மேல யன்னும்
பூமி யளந்தானும் போற்றி சைப்பப்
பாவாய இன்னிசைகள் பாடி யாடிப்
பாரிடமுந் தாமும் பரந்து பற்றிப்
பூவார்ந்த கொன்றை பொறிவண் டார்க்கப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. **#136**
தேவர் தலைவனானஇந்திரன் உள்ளிட்டவரும், முருகனும், இடர்களையும்விநாயகனும், தாமரையின் மேல் உள்ள பிரமனும்,உலகங்களை அளந்த திருமாலும் வணங்கி வாழ்த்துச்சொல்லுமாறு இனிய பாடல்களைப் பாடி, அவற்றிற்கு ஏற்பஆடி, வண்டு ஒலிக்கும் கொன்றைப் பூவினை அணிந்ததாமும் தம் பூதங்களுமாய்ப் 'புறம்பயம் நம் ஊர்' என்றுபெருமான் போயினார்.

திருநல்லூர்

திருநல்லூர்

திருநல்லூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பெரியாண்டேசுவரர்.
தேவியார் : திரிபுரசுந்தரியம்மை.

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. **#137**

நல்லூரிலுள்ள எம்பெருமானார் நினைந்து உள்ளம் உருகும் அடியவர்களைமேலும் மனம் உருகுமாறு அவர்களுடைய தீவினைகளை எல்லாம்போக்கியவர். சினந்து எதிர்த்த யானையின் தோலைப்போர்வையாகக் கொண்டவர். பிறை சூடியவர். தேவர்கூட்டத்தினர் சிறப்பாகத்தேடி, அரிதின் கிட்டி,அவர்கள், தம்மை மணி மகுடத்தோடு வணங்குதலால் அம்முடிகளில்செறிந்த மலர்களிலிருந்து பாயும் தேனினால் நனைந்தனபோலக் காணப்படும் திருவடிகளை என் தலைமேல் வைத்தார்.இஃது அவர் பேரருளின் தன்மையாம்.

திருநல்லூர்

பொன்நலத்த நறுங்கொன்றை சடைமேல் வைத்தார்
புலியுரியின் னதள்வைத்தார் புனலும் வைத்தார்
மன்நலத்த திரள்தோள் மேல் மழுவாள் வைத்தார்
வார்காதிற் குழைவைத்தார் மதியும் வைத்தார்
மின்நலத்த நுண்ணிடையாள் பாகம் வைத்தார்
வேழத்தி னுரிவைத்தார் வெண்ணூல் வைத்தார்
நன்னலத்த திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. **#138**

நல்லூர் எம்பெருமானார்சடையின் மீது பொன்னிற நறுங்கொன்றை, கங்கை,பிறை என்பன சூடி, காதில் குழை அணிந்து, மார்பில் பூணூல் தரித்து, இடையில் புலித்தோலை உடுத்து, யானைத் தோலைப்

போர்த்து,மின்னல் போன்ற நுண்ணிய இடையை உடைய உமாதேவியாரைப் பாகமாகக் கொண்டு, அழகிய திரண்ட தோள்மேல் மழுப்படையைத்தாங்கி, மேம்பட்ட சிறப்புடைய திருவடிகளை, என்தலைமேல் வைத்த, பேரருளின் தன்மை உடையவர்.

திருநல்லூர்

தோடேறு மலர்க்கொன்றை சடைமேல் வைத்தார்
துன்னெருக்கின் வடம்வைத்தார் துவலை சிந்தப்
பாடேறு படுதிரைக ளேறிய வைத்தார்
பனிமத்த மலர்வைத்தார் பாம்பும் வைத்தார்.
சேடேறு திருநுதல்மேல் நாட்டம் வைத்தார்
சிலைவைத்தார் மலைபெற்ற மகளை வைத்தார்
நாடேறு திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. **#139**

இதழ்கள் மிக்ககொன்றை மலரைத் தலையில் சூடி, எருக்கம் பூ மாலை பூண்டு,தலையில் கங்கை அலைகள் மோதுமாறு ஊமத்தம்பூவையும் பாம்பையும் அணிந்து, மலைமகளைப் பாகமாகக்கொண்டு, அழகு மிகுந்த நெற்றியில் கண் ஒன்று படைத்துக் கொண்டு,கையில் வில் ஏந்தி, யாவரும் விரும்பும் திருவடிகளை என் தலைமேல் வைத்த நல்லூர் எம்பெருமானார் பேரருளின் தன்மை உடையவர்.

திருநல்லூர்

வில்லருளி வருபுருவத் தொருத்தி பாகம்
பொருத்தாகி விரிசடைமே லருவி வைத்தார்
கல்லருளி வரிசிலையா வைத்தார் ஊராக்
கயிலாய மலைவைத்தார் கடவூர் வைத்தார்
சொல்லருளி அறம்நால்வர்க் கறிய வைத்தார்
சுடுசுடலைப் பொடிவைத்தார் துறவி வைத்தார்
நல்லருளால் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. **#140**

நல்லூர் எம்பெருமானார்,வில்போன்ற புருவத்தை உடைய பார்வதியை ஒருபாகமாகக் கொண்டு, விரிந்த சடையில் கங்கையைச் சூடி, மலையை வில்லாகக் கொண்டு, கயிலாயத்தைத் தமக்குரிய சிறப்பான மலையாகக் கொண்டு, கடவூரைத்தாம் உகந்தருளும் திருத்தலமாகக் கொண்டு, வேதங்களை அருளி, முனிவர் நால்வருக்கு அறப்பொருளை அறியவைத்து, தாம் சுடுகாட்டுச் சாம்பலைப் பூசி, தகுதி எய்திய உயிர்களுக்குத் துறவற நெறியை அறிவித்து, மிக்க அருளினாலே, தம்திருவடிகளை எம் தலைமேல் வைத்த பேரருளின் தன்மை

உடையவர்.

திருநல்லூர்

விண்ணிரியுந் திரிபுரங்க ளெரிய வைத்தார்
வினைதொழுவார்க் கறவைத்தார் துறவிவைத்தார்
கண்ணெரியாற் காமனையும் பொடியா வைத்தார்
கடிக்கமல மலர்வைத்தார் கயிலை வைத்தார்
திண்ணெரியுந் தண்புனலு முடனே வைத்தார்
திசைதொழுது மிசையமரர் திகழ்ந்து வாழ்த்தி
நண்ணரிய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. **#141**

நல்லூர் எம்பெருமானார் வானத்தில் உலவிய முப்புரங்களையும் எரித்துத் தம்மை வழிபட்டவர் வினைகளைப் போக்கி, அவர்களுக்குப் பற்றற்ற உள்ளத்தை வழங்கி, நெற்றிக் கண்ணிலிருந்து எழுந்த தீயினால் காமனைப் பொடிப்படுத்து, தீயினையும் நீரினையும் தம்முடல் ஒன்றிலேயே கொண்டு, அடியவர் உள்ளத் தாமரையையும் கயிலை மலையையும் தம் இருப்பிடமாக அமைத்து, மேலுலகில் உள்ள தேவர்கள் எண் திசைகளிலிருந்தும் தொழுது வணங்கி வாழ்த்தியும் கூடக் கிட்ட இயலாத தம் திருவடிகளைஎன் தலைமேல் வைத்த பேரருளின் தன்மை உடையவர்.

திருநல்லூர்

உற்றுலவு பிணியுலகத் தெழுமை வைத்தார்
உயிர்வைத்தார் உயிர்செல்லுங் கதிகள் வைத்தார்
மற்றமரர் கணம்வைத்தார் அமரர் காணா
மறைவைத்தார் குறைமதியம் வளர வைத்தார்
செற்றமலி யார்வமொடு காம லோபஞ்சிறவாத நெறிவைத்தார் துறவி
வைத்தார்
நற்றவர்சேர் திருவடியென் தலைமேல் வைத்தார்நல்லூரெம்
பெருமானார் நல்ல வாறே. **#142**

நல்லூர் எம்பெருமானார் பிணிகள் உலவும் இவ்வுலகிலே எழுவகைப்பட்ட பிறவிகளையும் அவற்றை ஏற்கும் உயிர்களையும் அவ்வுயிர்கள் செல்லும் சுவர்க்கம் நரகம் ஆகிய கதிகளையும் வைத்தவர். குறைந்த சந்திரனை வளரவைத்தவர். பகை, ஆர்வம், காமம், உலோபம் முதலியவை தலை தூக்காத சிறந்த வழியையும் காமம் நீத்தபாலாகிய துறவு வழியையும் அமைத்த அப்பெருமான் நல்லதவத்தை உடைய அடியவர்கள் சரண்புகும் திருவடிகளை என் தலைமேல் வைத்த பேரருளின் தன்மை உடையவர்.

திருநல்லூர்

மாறுமலைந் தாரரண மெரிய வைத்தார்
மணிமுடிமேல் அரவைத்தார் அணிகொள் மேனி
நீறுமலிந் தெரியாடல் நிலவ வைத்தார்
நெற்றிமேற் கண்வைத்தார் நிலையம் வைத்தார்
ஆறுமலைந் தறுதிரைக ளெறிய வைத்தார்
ஆர்வத்தா லடியமரர் பரவ வைத்தார்
நாறுமலர்த் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. **#143**

பகைவராகப் போரிட்ட அசுரர்களின் அரிய மதில்களை எரியச் செய்தவர்.அழகிய சடைமுடி மீது பாம்பினையும் அலைகள் மோதும் கங்கையையும் சூடியவர். அழகிய திருமேனியில் திருநீறு பூசித் தீயினில் தம் கூத்து நிகழவைத்தவர்.நெற்றிக்கண்ணர் பல திருக்கோயில்களை உடையவர்.தேவர்கள் விருப்போடு தம் திருவடிகளை முன் நின்று துதிக்கச் செய்தவர். மலர்களைச் சூடிய திருவடிகளை என் தலைமேல் வைத்த அந்த நல்லூர்ப் பெருமானார் பேரருளின் தன்மை உடையவர்.

திருநல்லூர்

குலங்கள்மிகு மலைகடல்கள் ஞாலம் வைத்தார்
குருமணிசே ரரவைத்தார் கோலம் வைத்தார்
உலங்கிளரும் அரவத்தின் உச்சி வைத்தார்
உண்டருளிவிடம்வைத்தார் எண்டோள் வைத்தார்
நிலங்கிளரும் புனல்கனலுள் அனிலம் வைத்தார்
நிமிர்விசும்பின் மிசைவைத்தார் நினைந்தா ரிந்நாள்
நலங்கிளருந் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. **#144**

இவ்வுலகில் நல்லூர் எம்பெருமானார் பல மலைகளையும் கடல்களையும் அமைத்தவர்.இரத்தினங்கள் பொருந்திய பாம்பை அணிந்து பலபலவேடம் பூண்டவர். திரண்ட கல்போல் உயர்கின்ற பாம்பின் படத்திலிருந்து வெளிப்பட்டுப் பரந்தவிடத்தை உண்டு, அதனைக் கண்டத்துத் தங்கவைத்தவர்.எட்டுத் தோள்களைக் கொண்டுள்ளவர். நிலம் முதலிய ஐம்பூதங்களையும் அமைத்தவர். அவர் அடியேனை விருப்புற்று நினைத்து இப்பொழுது யான் விரும்பியவாறு நன்மைபெருகும் திருவடிகளை என் தலைமேல் வைத்த பேரருளின் தன்மை உடையவர்.

திருநல்லூர்

சென்றுருளுங் கதிரிரண்டும் விசும்பில் வைத்தார்
திசைபத்தும் இருநிலத்தில் திருந்த வைத்தார்
நின்றருளி யடியமரர் வணங்க வைத்தார்
நிறைதவமும் மறைபொருளும் நிலவ வைத்தார்
கொன்றருளிக் கொடுங்கூற்றம் நடுங்கி யோடக்
குரைகழற்சே வடிவைத்தார் விடையும் வைத்தார்
நன்றருளுந் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. #145

நல்லூர் எம்பெருமானார் வானத்தில் உருண்டு உலவும் சூரிய சந்திரர்களை அமைத்தவர். இவ்வுலகில் எண்திசைகள், கீழ்ப்புறம்,மேற்புறம் என்ற பத்துப்பாகுபாட்டையும் வகுத்தவர்.தேவர்கள் தம் திருவடிகளை வணங்குமாறு அவர்கள் உள்ளத்தில் நிலைபெற்று அருள் செய்தவர். நிறைந்த தவமும் ஆசிரியர்பால் கேட்டறிய வேண்டிய இரகசிய உபதேசங்களும் நிகழுமாறு செய்தவர். கொடிய கூற்றுவன் நடுங்கி ஓடுமாறு அவன்புகழைக் கெடுத்து அவனைக் கழலணிந்த தம் திருவடியால் உதைத்தவர். காளையை வாகனமாகக் கொண்டவர்.வீடுபேற்றை நல்கும் திருவடிகளை என் தலைமேல் வைத்த பேரருளின் தன்மை உடையவர்.

திருநல்லூர்

பாம்புரிஞ்சி மதிகிடந்து திரைக ளேங்கப்
பனிக்கொன்றை சடைவைத்தார் பணிசெய் வானோர்
ஆம்பரிசு தமக்கெல்லாம் அருளும் வைத்தார்
அடுசுடலைப் பொடிவைத்தார் அழகும் வைத்தார்
ஓம்பரிய வல்வினைநோய் தீர வைத்தார்
உமையையொரு பால்வைத்தார் உகந்து வானோர்
நாம்பரவும் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. #146

நல்லூர் எம்பெருமானார்,பகைமை நீங்கிப் பாம்பு பிறையை உராய்ந்து கிடக்க,கங்கை அலை வீச, அமைந்த சடையில் கொன்றைப்பூச் சூடியவர். தமக்குத் தொண்டு செய்யும் தேவர்கள் சிறக்குமாறு அவர்களுக்கு ஏற்றவகையில் அருள்கள் செய்தவர்.சுடுகாட்டுச் சாம்பலைப் பூசி ஒப்பனை செய்து கொண்டவர்.நீக்குதற்கு அரிய வலிய முன் வினையினால் ஏற்படும் நலிவுகளை நீங்கச் செய்பவர். உமாதேவியைத் தம் உடம்பின் ஒருபாகமாகக் கொண்டவர். விரும்பி வானோர்களும் நில உலகத்தவரும் முன்நின்று துதிக்கும்திருவடிகளை

என் தலைமேல் வைத்த பேரருளின் திறமுடையவராவர்.

திருநல்லூர்

குலங்கிளரும் வருதிரைக ளேழும் வைத்தார்
குருமணிசேர் மலைவைத்தார் மலையைக் கையால்
உலங்கிளர எடுத்தவன்தோள் முடியும் நோவ
ஒருவிரலா லூறவைத்தார் இறைவா என்று
புலம்புதலும் அருளொடுபோர் வாளும் வைத்தார்புகழ்வைத்தார்
புரிந்தாளாக் கொள்ள வைத்தார்
நலங்கிளருந் திருவடியென் தலைமேல் வைத்தார்நல்லூரெம்
பெருமானார் நல்ல வாறே. **#147**

நல்லூர் எம்பெருமானார்,கூட்டமாக அலைகள் மோதும் ஏழு கடல்களையும் சிறந்த மணிகளை உடைய மலைகளையும் அமைத்தவர். கயிலை மலையைக் கைகளால் பெயர்த்த இராவணனுடைய கல்போன்ற தோள்களும் முடிகளும் வருந்துமாறு ஒற்றை விரலால் அழுத்தியவர்.இராவணன் 'தலைவனே' என்று புலம்பிய அளவில் அவன்பால் அருள்செய்து வாளும் ஈந்தவர். தம் புகழ்ச் செயல்களை விரும்பி மக்கள் தமக்கு ஆளாகுமாறு செய்து, நன்மைகள் மேம்படும் திருவடிகளை என் தலைமேல் வைத்த பேரருளின் திறமுடையவர்.

திருக்கருகாவூர்

திருக்கருகாவூர்

திருக்கருகாவூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

குருகு ஆம்; வயிரம் ஆம்; கூறும் நாள் ஆம்;
கொள்ளும் கிழமை ஆம்; கோளே தான் ஆம்;
பருகா அமுதம் ஆம்; பாலின் நெய் ஆம்;
பழத்தின் இரதம் ஆம்; பாட்டின் பண் ஆம்;
ஒரு கால் உமையாள் ஓர்பாகனும்(ம்) ஆம்;
உள்-நின்ற நாவிற்கு உரையாடி(ய்) ஆம்;
கரு ஆய் உலகுக்கு முன்னே தோன்றும்
கண் ஆம்-கருகாவூர் எந்தைதானே. **#148**

இடைமருதூர் என்ற திருத்தலத்தை உகந்தருளியிருக்கும் இறைவர் சூலப்படை உடையவராய்,ஒளி வீசும் பிறையை முடிமாலையாக அணிந்தவராய்,விரும்பித் திருமாலை ஒருபாகமாகக் கொண்டவராய்,மந்திரமும் அம்மந்திரங்களைப் பயன்கொள்ளும் செயல்களுமாக அமைந்தவராய், கடலில் தோன்றிய விடத்தை உண்டவராய்,ஊழ்வினையை நுகரும்போதே உடன் ஈட்டிக் கொள்ளப்படும் மேல் வினைகளை நீக்கும் வேறுபட்ட இயல்பினராய்,நறுமணம்

திருக்கருகாவூர்

வித்தாம் முளையாகும் வேரே தானாம்
வேண்டும் உருவமாம் விரும்பி நின்ற
பத்தாம் அடியார்க்கோர் பாங்க னுமாம்
பால்நிறமு மாம்பரஞ் சோதி தானாம்
தொத்தாம் அமரர்கணஞ் சூழ்ந்து போற்றத்
தோன்றாதென் உள்ளத்தி னுள்ளே நின்ற
கத்தாம் அடியேற்கும் காணா காட்டுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. **#149**

வித்து, முளை, வேர் எனக் கருகாவூர் எந்தை வேண்டி நின்ற உருவத்தன். தன்னை விரும்பும் பக்தியை உடைய அடியார்க்குத் தோழன். செந்நிறமேயன்றிப் பால் நிறமும் உடையவன். தான் மேம்பட்ட ஒளி உருவனாயிருந்தும் தன்னைத் தேவர் குழாம் சுற்றி நின்று துதிக்கவும்

அதற்குக் காட்சி வழங்காது அடியேனுடைய உள்ளத்திலே மறைந்திருந்து அடியேன் முன் அறியாதனவற்றை எல்லாம் தெரிவிக்கும் கண்ணாக உள்ளவன்.

திருக்கருகாவூர்

பூத்தானாம் பூவின் நிறத்தா னுமாம்
பூக்குளால் வாசமாய் மன்னி நின்ற
கோத்தானாங் கோல்வளையாள் கூற னாகுங்
கொண்ட சமயத்தார் தேவ னாகி
ஏத்தாதார்க் கென்று மிடரே துன்பம்
ஈவானா மென்னெஞ்சத் துள்ளே நின்று
காத்தானாங் காலன் அடையா வண்ணங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. **#150**

பூவும், பூவின் நிறமும் அதன் மணமுமாய் நிலைபெற்றிருக்கும் தலைவனாகிய கருகாவூர் எந்தைதிரண்ட வளைகளை அணிந்த பார்வதிபாகன். ஒவ்வொரு சமயத்தாரும் வழிபடும் தேவராக உள்ளவன்.தன்னை வழிபடாதவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளையும் மனக்கவலைகளையும் போக்காதவனாய் அடியேன் நெஞ்சில் இருந்து காலனால் அச்சம் நிகழாவண்ணம் காத்து வழிகாட்டும் கண்ணாக உள்ளான்.

திருக்கருகாவூர்

இரவனாம் எல்லி நடமாடியாம்
எண்திசைக்குந் தேவனாம் என்னு ளானாம்
அரவனாம் அல்ல லறுப்பானுமாம்
ஆகாச மூர்த்தியாம் ஆனே றேறும்
குரவனாங் கூற்றை யுதைத்தான் தானாங்
கூறாத வஞ்சக் குயலர்க் கென்றும்
கரவனாங் காட்சிக் கௌயா னுமாங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. **#151**

கருகாவூர் எந்தை, இராப்பொழுதாகவும், இரவில் கூத்தாடுபவனாகவும் எண்திசைக்கும் உரிய தேவனாகவும், என் உள்ளத்தில் உறைபவனாகவும், பாம்பினை அணிபவனாகவும் அடியார்களுடைய துன்பங்களைத் துடைப்பவனாகவும், ஆகாயத்தையே வடிவாக உடையவனாகவும், இடபத்தை இவரும் தலைவனாகவும், கூற்றினை உதைத்தவனாகவும் தன் புகழ் கூறாத வஞ்சகத்தில் தேர்ந்தவர்களுக்கு என்றும் மறை பொருளாகவும், அடியார்களின் மனக்கண்களுக்கு எளியவனாகவும் அவர்களுக்குக் கண்ணாகவும் உள்ளான்.

திருக்கருகாவூர்

படைத்தானாம் பாரை யிடந்தா னாகும்
பரிசொன் றறியாமை நின்றான் தானாம்
உடைத்தானாம் ஒன்னார் புரங்கள் மூன்றும்
ஒள்ளழலால் மூட்டி யொருக்கி நின்று
அடைத்தானாஞ் சூலம் மழுவோர் நாக
மசைத்தானாம் ஆனேறொன் றூர்ந்தா னாகும்
கடைத்தானாங் கள்ள மறிவார் நெஞ்சிற்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. **#152**

உலகைப்படைத்த பிரமனும், அதனை ஊழி வெள்ளத்திலிருந்து பெயர்த்தெடுத்த திருமாலும் தன் தன்மையை அறிய இயலாதவாறு தீப் பிழம்பாய் நின்றகருகாவூர் எந்தை, பகைவருடைய மும் மதில்களையும் ஒருசேரத் தீயினால் அழித்தவன். சூலத்தையும் மழுவையும் ஏந்திப் பாம்பினை இடையில் இறுகக் கட்டிக்காளை மீது இவர்ந்தவன். வஞ்சனை உடையவர் நெஞ்சத்தைக் கலக்கித் தன்னை அறியும் அடியார் நெஞ்சில் வழிகாட்டுவோனாய் இருப்பவன்.

திருக்கருகாவூர்

மூலனாம் மூர்த்தியாம் முன்னே தானாம்
மூவாத மேனிமுக் கண்ணி னானாம்
சீலனாஞ் சேர்ந்தா ரிடர்கள் தீர்க்குஞ்
செல்வனாஞ் செஞ்சுடர்க்கோர் சோதி தானாம்
மாலனாம் மங்கையோர் பங்க னாகும்
மன்றாடி யாம்வானோர் தங்கட் கெல்லாம்
காலனாங் காலனைக் காய்ந்தா னாகுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. **#153**

முதற்பொருளாய் வடிவு கொள்வோனாய், எல்லாப் பொருள்களுக்கும் முற்பட்டவனாய், என்றும் மூப்படையாத மேனியனாய், முக்கண்ணினனாய், நற்பண்புகளுக்கு இருப்பிடமாய்த் தன்னை அடைந்தவர்களின் துயர்தீர்க்கும் செல்வனாய், கருகாவூர் எந்தை, சூரியனுக்கும் ஒளி வழங்குபவனாய்த்தன் திருமேனியில் ஒருபாகத்தைத் திருமாலுக்கும் மற்றொருபாகத்தை உமாதேவிக்கும் வழங்குபவனாய், மன்றங்களில் கூத்தாடுபவனாய், தேவர்களுக்கு எல்லாம் இறுதிக்காலத்தை வரையறுக்கும் கூற்றுவனையும் கோபித்தவனாய், அடியார்களுக்கு வழிகாட்டும் கண்ணாக இருப்பவன்.

திருக்கருகாவூர்

அரைசே ரரவனாம் ஆலத் தானாம்
ஆதிரை நாளானாம் அண்ட வானோர்
திரைசேர் திருமுடித் திங்க ளானாந்
தீவினை நாசனென் சிந்தை யானாம்
உரைசே ருலகத்தா ருள்ளா னுமாம்
உமையாளோர் பாகனாம் ஓத வேலிக்
கரைசேர் கடல்நஞ்சை யுண்டா னாகுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. **#154**

கருகாவூர் எந்தை பாம்பை இடையில் அணிந்து விடத்தை உண்டு (ஆல நிழலில்தங்கி) ஆதிரை நட்சத்திரத்திற்கு உரிமை பூண்டு, ஆகாய கங்கை அலைவீசும் தன் அழகிய சடையில் பிறைசூடி, தீவினையைப் போக்கி என் உள்ளத்திலுள்ளான். அவனே புகழ்சேரும் இவ்வுலகத்து மக்கள் உள்ளத்தில் இருப்பவனாய், பார்வதிபாகனாய், உலகுக்கு எல்லையாய்க் கரையமைந்த கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு, அடியார்களுக்கு வழிகாட்டும் கண்ணாக இருப்பவன்.

<u>திருக்கருகாவூர்</u>

துடியாந் துடியின் முழக்கந் தானாஞ்
சொல்லுவார் சொல்லெல்லாஞ் சோதிப் பானாம்
படிதானாம் பாவ மறுப்பா னாகும்
பால்நீற்ற னாம்பரஞ் சோதி தானாம்
கொடியானாங் கூற்றை யுதைத்தா னாகுங்கூறாத வஞ்சக் குயலர்க்
கென்றும்
கடியானாங் காட்சிக் கரியா னாகுங்கண்ணாங் கருகாவூ ரெந்தை
தானே. **#155**

கருகாவூர் எந்தை உடுக்கையாகவும் உடுக்கையின் முழக்கமாகிய ஒலிகளாகவும், அவ்வொலியிலிருந்து தோன்றிய மொழிகளைப் பேசுவாருடைய சொற்களின் வாய்மை பொய்ம்மைகளைச் சோதிப்பவனாகவும், நன்னெறியாகவும், பாவத்தைப் போக்குபவனாகவும், வெள்ளிய நீறணிந்த பரஞ்சோதியாகவும் கொடிய கூற்றுவனை உதைத்தவனாகவும்,உண்மை கூறாத வஞ்சகத்தில் தேர்ந்தவர் கிட்டுதற்கு அரியனாய், அவர்களை ஒறுப்பவனாகவும், அடியார்க்கு வழிகாட்டும் கண்ணாகவும் உள்ளான்.

<u>திருக்கருகாவூர்</u>

விட்டுருவங் கிளர்கின்ற சோதி யானாம்
விண்ணவர்க்கும் அறியாத சூழ லானாம்
பட்டுருவ மால்யானைத் தோல்கீண் டானாம்

பலபலவும் பாணி பயின்றான் தானாம்
எட்டுருவ மூர்த்தியாம் எண்தோ ளானாம்
என்னுச்சி மேலானாம் எம்பி ரானாம்
கட்டுருவங் கடியானைக் காய்ந்தா னாகுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. **#156**

கருகாவூர் எந்தை செந்நிற ஒளிவீசும் சோதியனாய், தேவர்களும் அறியாத நிலையினனாய், தன்னால் கொல்லப்பட்ட யானைத் தோலை உரித்துப் போர்த்தவனாய், பலபலதாளத்திற்கு ஏற்பக் கூத்தாடுபவனாய், அட்டமூர்த்தியாய், எண்தோளனாய், என் தலையின் உச்சி மேலானாம் எம் தலைவனாய், இளைய வடிவினை உடைய மன்மதனைக் கோபித்தவனாய், அடியார்க்கு வழிகாட்டியாக உள்ளான்.

திருக்கருகாவூர்

பொறுத்திருந்த புள்ளூர்வா னுள்ளா னாகி
உள்ளிருந்தங் குள்நோய் களைவான் தானாய்
செறுத்திருந்த மும்மதில்கள் மூன்றும் வேவச்
சிலைகுனியத் தீமுட்டுந் திண்மை யானாம்
அறுத்திருந்த கையானா மந்தா ரல்லி
யிருந்தானை யொருதலையைத் தெரிய நோக்கிக்
கறுத்திருந்த கண்ட முடையான் போலுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. **#157**

தன்னை இடபமாய்த்தாங்கிய கருட வாகனனாகிய திருமாலுடைய உள்ளத்தே பொருந்தி அவன் உள்ளக் கவலையைப் போக்கிய கருகாவூர் எந்தை, தன்னைப் பகைத் தோருடைய மும்மதில்களும் ஒன்றும் எஞ்சாமல் வில்லை வளைத்துத் தீ மூட்டி அழித்தவன். தாமரையில் இருந்த பிரமனுடைய ஐந்தாந் தலையை அவன் செருக்கினை நோக்கி அறுத்த கையனாவான். நீல கண்டனாகிய அப்பெருமான் அடியார்க்கு வழிகாட்டியாக உள்ளான்.

திருக்கருகாவூர்

ஒறுத்தானாம் ஒன்னார் புரங்கள் மூன்றும்
ஒள்ளழலை மாட்டி யுடனே வைத்து
இறுத்தானாம் எண்ணான் முடிகள் பத்தும்
இசைந்தானாம் இன்னிசைகள் கேட்டா னாகும்
அறுத்தானாம் அஞ்சும் அடக்கி யங்கே
ஆகாய மந்திரமு மானா னாகும்
கறுத்தானாங் காலனைக் காலால் வீழக்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. **#158**

கருகாவூர் எந்தை பகைவருடைய மும்மதில்களையும் தீ மூட்டி அழித்தவன்.தன்னை மதியாத இராவணனுடைய தலைகள் பத்தினையும் நசுக்கி அவன் இசையைக் கேட்டு அவனைக் காப்பாற்ற இசைந்தவன். பொறிவாயில் ஐந்தவித்த அப்பெருமான், பரமாகாயத்திலுள்ள வீட்டுலகை இருப்பிடமாக உடையவன். கூற்றுவனைக் கீழே விழுமாறு தன் காலால் கோபித்து உதைத்தவன். அவன் அடியவர்களுக்கு வழிகாட்டியாக உள்ளான்.

திருவிடைமருது

திருவிடைமருதூர்

திருவிடைமருது, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மருதீசர்.
தேவியார் : நலமுலைநாயகியம்மை.

சூலப் படையுடையார் தாமே போலுஞ்
சுடர்த்திங்கட் கண்ணி யுடையார் போலும்
மாலை மகிழ்ந்தொருபால் வைத்தார் போலும்
மந்திரமுந் தந்திரமு மானார் போலும்
வேலைக் கடல்நஞ்ச முண்டார் போலும்
மேல்வினைகள் தீர்க்கும் விகிர்தர் போலும்
ஏலக் கமழ்குழலாள் பாகர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. **#159**

இடைமருதூர் என்ற திருத்தலத்தை உகந்தருளியிருக்கும் இறைவர் சூலப்படை உடையவராய், ஒளி வீசும் பிறையை முடிமாலையாக அணிந்தவராய், விரும்பித் திருமாலை ஒருபாகமாகக் கொண்டவராய், மந்திரமும் அம்மந்திரங்களைப் பயன்கொள்ளும் செயல்களுமாக அமைந்தவராய், கடலில் தோன்றிய விடத்தை உண்டவராய், ஊழ்வினையை நுகரும்போதே உடன் ஈட்டிக் கொள்ளப்படும் மேல் வினைகளை நீக்கும் வேறுபட்ட இயல்பினராய், நறுமணம் கமழும் கூந்தலை உடைய பார்வதி பாகராய் அமைந்துள்ளார்.

திருவிடைமருதூர்

காரார் கமழ்கொன்றைக் கண்ணி போலுங்
காரானை யீருரிவை போர்த்தார் போலும்
பாரார் பரவப் படுவார் போலும்
பத்துப் பல்லூழி பரந்தார் போலும்
சீரால் வணங்கப் படுவார் போலும்
திசையனைத்து மாய்மற்று மானார் போலும்
ஏரார் கமழ்குழலாள் பாகர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. **#160**

இடைமருது மேவிய ஈசனார் கார்காலத்தில் பூக்கும் நறுமணக்கொன்றைப் பூவினை முடிமாலையாக உடையவராய், கரிய யானையின் உதிரப்பசுமை கெடாத தோலினைத் திருமேனியின் மீது போர்த்தியவராய், உலகத்தாரால் முன் நின்று துதிக்கப்படுபவராய்ப் பல

ஊழிக்காலங்களையும் அடக்கி நிற்கும் காலமாய் நிற்பவராய், பலரும் தம்முடைய பொருள்சேர் புகழைச் சொல்லி வணங்க நிற்பவராய், பத்துத் திசைகளிலும் உள்ள நிலப் பகுதிகளும் மற்றும் பரவி நிற்பவராய், நறுமணம் கமழும் அழகிய கூந்தலை உடைய பார்வதி பாகராய் அமைந்துள்ளார்.

திருவிடைமருதூர்

வேதங்கள் வேள்வி பயந்தார் போலும்
விண்ணுலகும் மண்ணுலகு மானார் போலும்
பூதங்க ளாய புராணர் போலும்
புகழ வளரொளியாய் நின்றார் போலும்
பாதம் பரவப் படுவார் போலும்பத்தர் களுக்கின்பம் பயந்தார் போலும்
ஏதங்க ளான கடிவார் போலும்இடைமருது மேவிய ஈச னாரே. **#161**

இடைமருது மேவிய ஈசனார் வேதங்களோடு வேள்விகளைப் படைத்தவராய், விண்ணுலகும் மண்ணுலகும் ஐம்பூதங்களும் தாமேயாகிய பழையவராய்த் தம்மைப் புகழ்வார் உள்ளத்தில் ஞானஒளியாய் நிற்பவராய்த் தம் திருவடிகள் எல்லோராலும் முன்நின்று துதிக்கப்படுவனவாய், அடியார்களுக்கு இன்பம் பயப்பவராய், அவர்களுடைய துன்பங்களையெல்லாம் துடைப்பவராய் அமைந்துள்ளார்.

திருவிடைமருதூர்

திண்குணத்தார் தேவர் கணங்க ளேத்தித்
திசைவணங்கச் சேவடியை வைத்தார் போலும்
விண்குணத்தார் வேள்வி சிதைய நூறி
வியன்கொண்டல் மேற்செல் விகிர்தர் போலும்
பண்குணத்தார் பாடலோ டாட லோவாப்
பரங்குன்றம் மேய பரமர் போலும்
எண்குணத்தார் எண்ணா யிரவர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. **#162**

பிற பிறப்புக்களில் உள்ள உயிர்களை அடிமைப்படுத்தி ஆளும் ஆற்றலை உடைய, தேவகணங்கள் தம் திருவடிகளைத் துதித்துத் திசைநோக்கி வணங்குமாறு செய்த இடைமருது மேவிய ஈசர், இந்திரன் செய்த வேள்வியை அழியுமாறு கெடுத்து, மேகவடிவில் வந்த திருமாலை வாகனமாகக் கொண்டு செலுத்திய வேறுபட்ட இயல்பினர். யாழைப் பண்ணும் (சுருதிகூட்டும்) இயல்பினராகிய மகளிரின் ஆடல் பாடல்கள் நீங்காத பரங்குன்றை விரும்பித் தங்கிய பரம்பொருள் ஆவார். எண்ணாயிரவர் என்ற தொகுதியைச் சார்ந்த அந்தணர்கள் வேற்றுத்

தெய்வங்களை விடுத்துத் தம்மையே பரம்பொருளாகத் தியானிக்கும் இயல்பினராவர்.

திருவிடைமருதூர்

ஊக முகிலுரிஞ்சு சோலை சூழ்ந்த
உயர்பொழில்அண் ணாவி லுறைகின் றாரும்
பாகம் பணிமொழியாள் பாங்க ராகிப்
படுவெண் தலையிற் பலிகொள் வாரும்
மாகமடை மும்மதிலு மெய்தார் தாமு
மணிபொழில்சூழ் ஆரூ ருறைகின் றாரும்
ஏகம்பம் மேயாரு மெல்லா மாவார்
இடைமருது மேவிய ஈச னாரே. **#163**

இடைமருது மேவிய ஈசனார் வானளாவிய சோலைகளிலே குரங்குகள் நடமாடும் அண்ணாமலையிலும், அழகிய பொழில்கள் சூழ்ந்த ஆரூரிலும், கச்சி ஏகம்பத்திலும் உகந்தருளியிருக்கின்றார். பார்வதி பாகராய்ப் பிரமனுடைய மண்டையோட்டில் பிச்சை எடுப்பவர். வானில் உலவிய மும்மதில்களையும் எய்து வீழ்த்தியவர்.எல்லாப் பொருள்களாகவும் உள்ளவர்.

திருவிடைமருதூர்

ஐயிரண்டும் ஆறொன்று மானார் போலும்
அறுமூன்றும் நான்மூன்று மானார் போலும்
செய்வினைகள் நல்வினைக ளானார் போலும்
திசையனைத்து மாய்நிறைந்த செல்வர் போலும்
கொய்மலரங் கொன்றைச் சடையார் போலுங்
கூத்தாட வல்ல குழகர் போலும்
எய்யவந்த காமனையுங் காய்ந்தார் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. **#164**

இடைமருது மேவிய ஈசனார் பத்துத் திசைகளும், ஏழு இசைகளும், பதினெட்டு வித்தைகளும்,பன்னிரண்டு சூரியர்களும், தீவினைகளும் நல்வினைகளுமாகிப் பத்துத் திசைகளிலும் உள்ள பொருள்கள் யாவுமாய் நிறைந்த செல்வராவார். அவர் கொன்றை சூடிய சடையர். கூத்து நிகழ்த்துதலில் வல்ல இளைஞர். தம் மீது மலரம்புகளைச் செலுத்தவந்த மன்மதனைக் கோபித்தவர்.

திருவிடைமருதூர்

பிரியாத குணமுயிர்கட் கஞ்சோ டஞ்சாய்ப்
பிரிவுடைய குணம்பேசிற் பத்தோ டொன்றாய்

விரியாத குணமொருகால் நான்கே யென்பர்
விரிவிலாக் குணநாட்டத் தாறே யென்பர்
தெரிவாய குணமஞ்சுஞ் சமிதை யஞ்சும்பதமஞ்சுங் கதியஞ்சுஞ் செப்பி னாரும்
எரியாய தாமரைமே லியங்கி னாரும்இடைமருது மேவிய ஈச னாரே. **#165**

இடைமருது மேவிய ஈசனார் உயிர்களை விட்டு நீங்காத பத்து இயற்கைப் பண்புகளாகவும், உயிர்களுக்கு மலச் சார்பினால் வரும் பதினொரு செயற்கைப் பண்புகளாகவும், பரம் பொருளுக்கு என்று ஒருகால் தொகுத்துச் சொல்லப்படும் நான்கு பண்புகளாகவும், பிறிதொருகால் சொல்லப்படும் ஆறு பண்புகளாகவும் உள்ளனவற்றையும் மெய்ந்நூல்கள் பற்றி ஆராய்ந்து உணரப்படும் பொதுவான ஐம்பண்புகளையும் ஐவகை சமித்துக்களையும், திருவைந்தெழுத்தையும் உயிர்கள் சென்று சேரக்கூடிய வழிகள் ஐந்தையும் குறிப்பிட்டு ஞானப்பிரகாசமாகிய ஒளியை உடைய அடியவர்களின் உள்ளத்தாமரையில் உலவிவருபவராவார்.

திருவிடைமருதூர்

தோலிற் பொலிந்த வுடையார் போலுஞ்
சுடர்வா யரவசைத்த சோதி போலும்
ஆலம் அமுதாக வுண்டார் போலும்
அடியார்கட் காரமுத மானார் போலும்
காலனையுங் காய்ந்த கழலார் போலுங்
கயிலாயந் தம்மிடமாக் கொண்டார் போலும்
ஏலங் கமழ்குழலாள் பாகர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. **#166**

இடைமருது மேவிய ஈசனார் தோலுடையை உடுத்து அதன்மேல் ஒளிவாய்ந்த பாம்பினை இறுக்கிக் கட்டிய சோதி வடிவானவர். விடத்தையே அமுதம்போல உண்டவர். அடியவர்களுக்கு அமுதம் போல் இனியவர். காலனை வெகுண்டுதைத்த திருவடியை உடையவர். கயிலாயத்தை நிலையான இடமாக உடையவர். நறுமணம் வீசும் கூந்தலை உடைய பார்வதி பாகர்.

திருவிடைமருதூர்

பைந்தளிர்க் கொன்றையந் தாரார் போலும்
படைக்கணாள் பாக முடையார் போலும்
அந்திவாய் வண்ணத் தழகர் போலும்
அணிநீல கண்ட முடையார் போலும்

வந்த வரவுஞ் செலவு மாகி
மாறாதென் னுள்ளத் திருந்தார் போலும்
எந்தம் இடர்தீர்க்க வல்லார் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. **#167**

இடைமருது மேவிய ஈசனார் பசிய தளிர்கள் இடையே தோன்றும் கொன்றைப் பூமாலையர். வேல்போன்ற கண்களை உடைய பார்வதி பாகர். மாலை வானம் போன்றசெந்நிற அழகர். அழகிய நீலகண்டர் உலகில் பிறப்புக்களையும் இறப்புக்களையும் நிகழ்வித்து என் உள்ளத்தில் நீங்காதிருப்பவர். அடியார்களுடைய இடர்களைத் தீர்த்து அவர்களைக் காக்கும் இயல்பினர்.

திருவிடைமருதூர்

கொன்றையங் கூவிள மாலை தன்னைக்
குளிர்சடைமேல் வைத்துகந்த கொள்கை யாரும்
நின்ற அனங்கனை நீறா நோக்கி
நெருப்புருவ மாய்நின்ற நிமல னாரும்
அன்றவ் வரக்கன் அலறி வீழ
அருவரையைக் காலா லழுத்தி னாரும்
என்று மிடுபிச்சை யேற்றுண் பாரும்
இடைமருது மேவிய ஈச னாரே. **#168**

இடைமருது மேவிய ஈசனார் கொன்றை மலரோடு வில்வமாலையைக் குளிர்ந்த சடைமீது வைத்து மகிழ்ந்த இயல்பினர். தம்மீது அம்பு எய்ய இருந்தமன்மதனைச் சாம்பலாக்கி நெருப்பு வடிவாய் நின்ற தூயவர். இராவணன் கயிலை மலையைப் பெயர்க்க முற்பட்ட அன்று அவன் அலறி விழுமாறு அம்மலையைக் காலால் அழுத்தியவர். என்றும் மற்றவர் இடும் பிச்சையை வாங்கி உண்பவர்.

திருவிடைமருதூர்

திருவிடைமருது, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மருதீசர்.
தேவியார் : நலமுலைநாயகியம்மை.

ஆறுசடைக் கணிவர் அங்கைத் தீயர்
அழகர் படையுடைய ரம்பொற் றோள்மேல்
நீறு தடவந் திடப மேறி
நித்தம் பலிகொள்வர் மொய்த்த பூதம்
கூறுங் குணமுடையர் கோவ ணத்தர்
கோடால வேடத்தர் கொள்கை சொல்லின்

ஈறும் நடுவும் முதலு மாவார்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. **#169**
இடைமருதூரினை விரும்பித் திருத்தலமாகக் கொண்ட ஈசனார் சடையில் கங்கையை அணிந்து உள்ளங்கையில் தீயினை ஏற்றவர் அழகர். படைக்கலங்களை ஏந்திய அழகிய பொலிவு உடைய தோள் மீது, நீறு பூசிக் காளையை இவர்ந்து நாளும் பிச்சை ஏற்பவர். தம்மைச் சுற்றியுள்ள பூதங்களால் தம் பண்புகள் பாராட்டப் பெறுபவர். கோவணம் ஒன்றே உடையவர். கையிலே உண்கலத்தை ஏந்திய வேடத்தவர். இவ்வுலகிற்குத் தோற்றம் நிலை அழிவு ஆகியவற்றைச் செய்யும் இயல்பினர்.

திருவிடைமருதூர்

மங்குல் மதிவைப்பர் வான நாடர்
மடமா னிடமுடையர் மாத ராளைப்
பங்கின் மிகவைப்பர் பால்போல் நீற்றர்
பளிக்கு வடம்புனைவர் பாவ நாசர்
சங்கு திரையுகளுஞ் சாய்க்கா டாள்வர்
சரிதை பலவுடையர் தன்மை சொல்லின்
எங்கும் பலிதிரிவ ரென்னுள் நீங்கார்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. **#170**
இடைமருது மேவிய இடங்கொண்ட பெருமானார் வானத்தில் இயங்கும் பிறையைச் சடையில் வைத்தவர். தேவருலகிற்கும் உரியவர். பார்வதியை இடப்பாகமாக உடையவர். மான்குட்டியை இடக்கரத்தில் வைத்திருப்பவர். பால்போன்ற திருநீற்றை அணிந்து, படிக மணிமாலை பூண்டு, அடியார் பாவங்களைப் போக்குபவர். சங்குகள் அலைகளில் உலவும் சாய்க்காடு என்ற தலத்தை ஆள்பவர். பல அரியசெயல்களை உடையவர். எங்கும் பிச்சைக்காகத் திரியும் இயல்பினர். என் உள்ளத்தை விடுத்து என்றும் நீங்காதிருப்பவர்.

திருவிடைமருதூர்

ஆல நிழலிருப்பர் ஆகா யத்தர்
அருவரையி னுச்சியர் ஆணர் பெண்ணர்
காலம் பலகழித்தார் கறைசேர் கண்டர்
கருத்துக்குச் சேயார்தாங் காணா தார்க்குக்
கோலம் பலவுடையர் கொல்லை யேற்றர்கொடுமழுவர் கோழம்பம்
மேய ஈசர்
ஏல மணநாறும் ஈஞ்கோய் நீங்கார்இடைமருது மேவி யிடங்கொண்
டாரே. **#171**

இடைமருது மேவி இடங்கொண்ட பெருமானார் ஆலமர நிழலிலும் ஆகாயத்திலும் மலை உச்சியிலும் இருப்பவர். ஒரே உருவில் ஆணும் பெண்ணுமாக இருப்பவர். காலங்களுக்கு அப்பாற்பட்டவர் நீலகண்டர். தம்மை அறியாதார் உள்ளத்துக்குத் தொலைவில் இருப்பவர். பல வேடங்களை உடையவர். முல்லை நிலத்துக்கு உரிய திருமாலைக் காளை வாகனமாக உடையவர். கொடிய மழுப்படை ஏந்தியவர். கோழம்பம், ஏலக்காய் மணம்கமழும் ஈங்கோய் மலை இவற்றை விரும்பி நீங்காதிருப்பவர்.

திருவிடைமருதூர்

தேசர் திறம்நினைவார் சிந்தை சேரும்
செல்வர் திருவாரூ ரென்று முள்ளார்
வாச மலரின்கண் மான்தோல் போர்ப்பர்
மருவுங் கரியுரியர் வஞ்சக் கள்வர்
நேச ரடைந்தார்க் கடையா தார்க்கு
நிட்டுரவர் கட்டங்கர் நினைவார்க் கென்றும்
ஈசர் புனற்பொன்னித் தீர்த்தர் வாய்த்த
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. **#172**

இடைமருது மேவி இடங்கொண்ட பெருமானார் ஒளியுடையவர், தம் அருள்திறங்களைத் தியானிப்பவர்களுடைய உள்ளத்தில் சென்றடையும் செல்வர்.திருவாரூரில் என்றும் இருப்பவர். பூவிலுள்ள மணம்போல உலகங்கள் எங்கும் பரவியிருப்பவர். மான் தோலைப் போர்த்தியவர். யானைத் தோலையும் உடையவர். எவ்விடத்தும் உருக்காட்டாது மறைந்தே இருக்கும் கள்வர். அடியார்களுக்கு அன்பர். தம் அடிகளை அடையாதவர்களுக்குக் கொடியவர். கட்டங்கப் படையுடையவர். தம்மைவிருப்புற்று நினைப்பவரை என்றும் தாங்குபவர். காவிரியாகிய தீர்த்தத்தை உடையவர்.

திருவிடைமருதூர்

கரப்பர் கரியமனக் கள்வர்க் குள்ளங்
கரவாதே தம்நினைய கிற்பார் பாவம்
துரப்பர் தொடுகடலின் நஞ்ச முண்பர்
தூய மறைமொழியர் தீயா லொட்டி
நிரப்பர் புரமூன்றும் நீறு செய்வர்
நீள்சடையர் பாய்விடைகொண் டெங்கும் ஐயம்
இரப்பர் எமையாள்வர் என்னுள் நீங்கார்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. **#173**

இடைமருது மேவி இடங்கொண்ட பெருமானார் வஞ்சனை மனத்தை

உடைய கள்வர்க்குத் தம்மை மறைத்துக் கொள்பவர். உள்ளத்தில் வஞ்சனையின்றித் தம்மை விருப்புற்று நினைப்பவருடைய பாவங்களை விரட்டுபவர். கடல் விடத்தை உண்டவர். தூய வேதங்களை ஓதுபவர். அறிவில்லாத அசுரர்களின் மும்மதில்களையும் தீயிட்டுச் சாம்பலாக்கியவர். நீண்ட சடை முடியர். விரைந்து செல்லும் காளையை இவர்ந்து எங்கும் பிச்சை யெடுப்பவர். எங்களை ஆள்பவர். என் உள்ளத்தைவிட்டு நீங்காது இருப்பவர்.

திருவிடைமருதூர்

கொடியா ரிடபத்தர் கூத்து மாடிக்
குளிர்கொன்றை மேல்வைப்பர் கோல மார்ந்த
பொடியாரு மேனியர் பூதிப் பையர்
புலித்தோலர் பொங்கரவர் பூண நூலர்
அடியார் குடியாவர் அந்த ணாளர்
ஆகுதியின் மந்திரத்தார் அமரர் போற்ற
இடியார் களிற்றுரியர் எவரும் போற்ற
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. **#174**

எல்லோரும் போற்றுமாறு இடைமருது மேவி இடங்கொண்ட பெருமானார் இடபக்கொடியினராய்க் கூத்தாடு பவராய்க் கொன்றை சூடியவராய். அழகிய நீறுபூசிய மேனியராய்த் திருநீற்றுப் பையினை உடையவராய்ப் புலித்தோலை உடுத்தவராய்ச் சீறும் பாம்பினராய்ப் பூணூலை அணிந்தவராய் அடியவர்களுக்கு மிக அணுகிய உறவினராய்க் கருணையுடையவராய், வேள்வித் தீயில் ஆகுதியிடும் போது சொல்லப்படும் மந்திரவடிவினராய்த் தேவர் போற்றுமாறு பிளிறிக்கொண்டு வந்த களிற்றைக்கொன்று அதன் தோலைப் போர்த்தியவராவர்.

திருவிடைமருதூர்

பச்சை நிறமுடையர் பாலர் சாலப்
பழையர் பிழையெலாம் நீக்கி யாள்வர்
கச்சைக் கதநாகம் பூண்ட தோளர்
கலனொன்று கையேந்தி யில்லந் தோறும்
பிச்சை கொளநுகர்வர் பெரியர் சாலப்
பிறங்கு சடைமுடியர் பேணுந் தொண்டர்
இச்சை மிகஅறிவர் என்று முள்ளார்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. **#175**

என்றும் உள்ளாராய் இடைமருதுமேவி இடங் கொண்ட எம்பெருமானார் பார்வதிக்குரிய தம் இடப்பாகத்தே பச்சை நிறம்

உடையவராய். மிக இளையராகவும் மிகப் பழையராகவும் காட்சி வழங்கி, அடியார்களை அவர்களுடைய பிழைகளைப் போக்கி ஆட்கொள்பவர். கோபம் கொள்ளும் பாம்பினைக் கச்சையாகப் பூண்ட தோள்களை உடையவர். கையில் மண்டையோடாகிய பிச்சைப் பாத்திரத்தை ஏந்தி வீடுகள் தோறும் சென்று பிச்சை எடுத்து உண்பவர்.ஆயினும் உண்மை நிலையினில் மிகவும் பெரியவர். விளங்குகின்ற சடைமுடியை உடையவர். தம்மை விரும்பும் அடியார்களுடைய விருப்பத்தை மிகவும் அறிந்தவர்.

திருவிடைமருதூர்

காவார் சடைமுடியர் காரோ ணத்தர்
கயிலாயம் மன்னினார் பன்னு மின்சொல்
பாவார் பொருளாளர் வாளார் கண்ணி
பயிலுந் திருவுருவம் பாகம் மேயார்
பூவார் புனலணவு புன்கூர் வாழ்வர்
புரமூன்றும் ஒள்ளழலாக் காயத் தொட்ட
ஏவார் சிலைமலைய ரெங்கும் தாமே
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. **#176**

இடைமருது மேவி இடங்கொண்டு எங்கும் தாமேயாகப் பரவியிருக்கின்ற பெருமானார், சோலை போலப் பரவிய சடையினராய் நாகை குடந்தைக் காரோணங்களிலும், கயிலாயத்திலும், தங்குபவராய்ப் பூக்கள் நிரம்பிய புனலால் சூழப்பட்ட புன்கூரில் வாழ்பவராய், இனிய சொற்களாலாகிய பாடல்களின் பொருளை ஆளுதல் உடையவராய், வாள் போன்ற கண்களை உடைய பார்வதி பாகராய், முப்புரங்களையும் தீக்கொளுவுமாறு கொண்ட அம்பொடு பொருந்திய மலையாகியவில்லை உடையவராய் விளங்குகின்றார்.

திருவிடைமருதூர்

புரிந்தார் நடத்தின்கட் பூத நாதர்
பொழிலாரூர் புக்குறைவர் போந்து தம்மில்
பிரிந்தா ரகல்வாய பேயுந் தாமும்
பிரியா ரொருநாளும் பேணு காட்டில்
எரிந்தா ரனலுகப்பர் ஏழி லோசை
யெவ்விடத்துந் தாமேயென் றேத்து வார்பால்
இருந்தார் இமையவர்கள் போற்ற என்றும்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. **#177**

இடைமருது மேவி இடங்கொண்ட பெருமானார் கூத்தில் விருப்பம் உடையவர். பூதங்களின் தலைவர். தம் இருப்பிடமாகிய வீட்டுலகை

விடுத்துப் போந்து சோலைகள் சூழ்ந்த ஆரூரில் புகுந்து தங்குபவர். அகன்ற வாயை உடைய பேய்களை என்றும் பிரியாதவராய்த் தாம் விரும்பும் சுடுகாட்டில் எரிக்கப்படுபவருடைய தீயினை விரும்புபவர். எழுவகையில் அமைந்த இசையால் தம்மையே பரம்பொருளாகத் துதிப்பவர்கள் உள்ள இடங்களிலெல்லாம் தேவர்களும் போற்றுமாறு என்றும் நிலையாக இருப்பவராவர்.

திருவிடைமருதூர்

விட்டிலங்கு மாமழுவர் வேலை நஞ்சர்
விடங்கர் விரிபுனல்சூழ் வெண்காட் டுள்ளார்
மட்டிலங்கு தார்மாலை மார்பில் நீற்றர்
மழபாடி யுள்ளுறைவர் மாகா ளத்தர்
சிட்டிலங்கு வல்லரக்கர் கோனை யன்று
செழுமுடியுந் தோளைஞ்ஞான் கடரக் காலால்
இட்டிரங்கி மற்றவனுக் கீந்தார் வென்றி
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. **#178**

இடைமருது மேவி இடம் கொண்ட பெருமானார் ஒளிவீசும் பெரிய மழுப்படையை உடையவர். கடல் நஞ்சுண்டவர். அழகர் நீர்வளம் மிக்க வெண்காட்டில் உள்ளவர். தேன் பொருந்திய மாலையை அணிந்த மார்பில் திருநீறு பூசியவர். மழபாடியிலும் இரும்பை, அம்பர், உஞ்சைனி என்ற மாகாளங்களிலும் உறைபவர். பெருமை விளங்கும் வலிய அரக்கர்கோனாகிய இராவணனை அவன் கயிலை மலையைப் பெயர்க்க முயன்ற போது சிறந்த தலைகளும் இருபது தோள்களும் வருந்துமாறு திருவடியால் நசுக்கிப் பின் அவன் பக்கல் இரக்கம் கொண்டு அவனுக்குப்பல வெற்றிகளையும் வழங்கியவர்.

திருப்பூவணம்

திருப்பூவணம்

திருப்பூவணம், திருத்தாண்டகம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பூவணநாதர்.
தேவியார் : மின்னாம்பிகையம்மை.

வடியேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. **#179**

சோலைகள் விளங்கும் திருப்பூவணத்தை உகந்தருளியிருக்கும் புனிதராகிய சிவபெருமான் பக்கல், அடியார்களுடைய மனக்கண்முன் கூர்மை பொருந்திய மூவிலைச் சூலமும், நீண்ட சடைமீது அணிந்த பிறையும், நறுமணம் மிக்க கொன்றைப் பூவினால் ஆகிய முடி மாலையும், காதுகளில் கலந்து தோன்றும் குழையும், தோடும், இடிபோல ஒலித்து வந்தயானையின் தோலாகிய போர்வையும், அழகு விளங்கும் முடியும், திருநீறணிந்த அப்பெருமானுடைய திருமேனியும் காட்சி வழங்குகின்றன.

திருப்பூவணம்

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்
அடியவர்கட் காரமுத மாகித் தோன்றும்
ஊணாகி யூர்திரிவா னாகித் தோன்றும்
ஒற்றைவெண் பிறைதோன்றும் பற்றார் தம்மேல்
சேணாக வரைவில்லா லெரித்தல் தோன்றுஞ்
செத்தவர்தம் எலும்பினாற் செறியச் செய்த
பூணாணும் அரைஞாணும் பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. **#180**

பொழில் திகழும் பூவணத்து எம்புனிதனார்பால் ஆணும் பெண்ணுமாகிய வடிவும், அடியவர்களுக்குக் கிட்டுதற்கரிய அமுதம் போன்று இனிமை தரும் செயல்களும்,உணவுக்காக ஊர்களில் திரியும் காட்சியும், ஒற்றை வெண்பிறையும், பகைவருடையமும் மதில்களையும் நீண்ட பாம்பினை

மலையாகிய வில்லில் நாணாகப் பூட்டிஎரித்த செயலும், இறந்தவருடைய எலும்புகளால் உடம்பில் பொருந்துமாறு பூண்டமாலையும் அரைஞாணும் அடியவர் மனக்கண்களுக்கு விளக்கமாகக் காட்சிவழங்கும்.

திருப்பூவணம்

கல்லாலின் நீழற் கலந்து தோன்றுங்
கவின்மறையோர் நால்வர்க்கு நெறிக ளன்று
சொல்லாகச் சொல்லியவா தோன்றுந் தோன்றும்
சூழரவும் மான்மறியுந் தோன்றுந் தோன்றும்
அல்லாத காலனைமுன் அடர்த்தல் தோன்றும்
ஐவகையால் நினைவார்பால் அமர்ந்து தோன்றும்
பொல்லாத புலாலெலும்பு பூணாய்த் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. **#181**

பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்பால் அடியார்களுக்கு மனக்கண் முன்னர், அவர் கல்லாலின் நிழலில் அமர்ந்த காட்சியும், மேம்பட்ட மறைகளை ஓதும்சனகர் முதலிய முனிவர் நால்வர்க்கும் வேத நெறிகளைச் சொற்களால் விளக்கியமை போல மோனநிலையிலிருந்து சொல்லிய காட்சியும்,அவர் உடலைச் சுற்றுமாறு அணிந்த பாம்புகளும் ஏந்திய மான் குட்டியும், அறத்தின் உண்மையை உணர்ந்தவன் அல்லாத காலனை ஒறுத்த காட்சியும், தம்மை நினையும் அடியவர்பால் ஐவகை நிறத்தோடு விரும்பி வழங்கும் காட்சியும், யாவரும் அருவருக்கும் புலாலின் சுவட்டினை உடைய எலும்பினாலாகிய அணிகலன்களும் காட்சி வழங்கும்.

திருப்பூவணம்

படைமலிந்த மழுவாளும் மானுந் தோன்றும்
பன்னிரண்டு கையுடைய பிள்ளை தோன்றும்
நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்றும்
நான்மறையி னொலிதோன்றும் நயனந் தோன்றும்
உடைமலிந்த கோவணமுங் கீளுந் தோன்றும்
மூரல்வெண் சிரமாலை யுலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. **#182**

பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்பால் அடியார்களுடைய மனக்கண் முன்னர்ப் படைக்கலமாம் நன்மை நிறைந்த மழுவும், அவர் ஏந்தியமானும், அருகில் இருக்கும் பன்னிரண்டு கைகளை உடைய முருகப்பெருமான் வடிவும், விரைந்து செல்லும் காளையும், அக்காளை

வடிவம் எழுதிய கொடியும், நான்மறையின் ஒலியும், முக்கண்களும், உடையாக அமைந்த கீளும் கோவணமும், பற்களை உடைய வெள்ளிய மண்டை ஓட்டு மாலையும், அவரைச் சுற்றிக் காணப்படும் பூதங்களின் மகிழ்வும் காட்சி வழங்கும்.

திருப்பூவணம்

மயலாகுந் தன்னடியார்க் கருளுந் தோன்றும்
மாசிலாப் புன்சடைமேல் மதியந் தோன்றும்
இயல்பாக இடுபிச்சை ஏற்றல் தோன்றும்
இருங்கடல்நஞ் சுண்டிருண்ட கண்டந் தோன்றும்
கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை
ஆயிரமா முகத்தினொடு வானில் தோன்றும்
புயல்பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. **#183**

பொழில் திகழும் பூவணத்து எம்புனிதனார்பால் அடியார்களுடைய மனக்கண் முன்னர்த்தம்மிடம் பேரன்பு கொள்ளும் அடியவர்களுக்கு அவர் அருள் செய்யும்செயலும், அழுக்கற்ற சிவந்த சடையின் மேல் அணிந்த பிறையும், பிச்சை ஏற்கும் அவருக்கு அடியவர்கள் வழக்கமாக இடும் பிச்சையை அவர் ஏற்கும் காட்சியும், பெரிய கடலில் நஞ்சினை உண்டதனால் இருண்ட கழுத்தும், கயல்கள் பாயுமாறு விரைவான கலங்கள் வெள்ளமாக ஆயிரமுகத்தோடு வானிலிருந்து இறங்கிய கங்கை தன்னுள் அடங்குமாறு சிவபெருமான் விரித்த சடையின் அழகும் காட்சி வழங்கும்.

திருப்பூவணம்

பாராழி வட்டத்தார் பரவி யிட்ட
பன்மலரும் நறும்புகையும் பரந்து தோன்றும்
சீராழித் தாமரையின் மலர்க ளன்ன
திருந்தியமா நிறத்தசே வடிகள் தோன்றும்
ஓராழித் தேருடைய இலங்கை வேந்தன்
உடல்துணித்த இடர்பாவங் கெடுப்பித் தன்று
போராழி முன்ஈந்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. **#184**

பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்பால் அடியார்களின் மனக்கண்களின் முன்னர் அழகுக் கடலாய் உள்ள தாமரை மலர் போன்ற அழகிய நிறத்தை உடைய திருவடிகளும், அத்திருவடிகளின் மீது பூமண்டலத்திலுள்ளவர்கள் துதித்து அருச்சித்த பல மலர்களும், காட்டிய புகைகளும், ஒப்பற்ற சக்கரங்களை உடைய தேரை உடைய

இராவணனுடைய உடலை அழித்த திருமாலுடைய துன்பம் தரும் தீவினையைப் போக்கி அவருக்குச் சக்கரம் வழங்கிய அழகிய செயலும் காட்சி வழங்கும்.

திருப்பூவணம்

தன்னடியார்க் கருள்புரிந்த தகவு தோன்றுஞ்
சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்
மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோன்றும்
வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்தல் தோன்றும்
துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்புந்
தூயமா மதியுடனே வைத்தல் தோன்றும்
பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. **#185**

பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்பால் அடியார்களின் மனக்கண் முன்னர் தம் அடியவர்களுக்கு அருள்புரிந்த மேம்பட்ட செயலும், பிரமனுடைய தலை ஒன்றனை நீக்கிய செயலும், மின்னலை ஒத்த நுண்ணிய இடையை உடைய பார்வதியை இடப்பாகமாகக் கொண்ட வடிவும், யானைத்தோலை விரும்பிப் போர்த்திய வனப்பும், செறிந்த சடைமீது கங்கை, பாம்பு, பிறை போன்ற இவற்றை வைத்துப் பொன்போன்ற திருமேனி பொலிந்து தோன்றும் வனப்பும் தோற்றம் வழங்கும்.

திருப்பூவணம்

செறிகழலுந் திருவடியுந் தோன்றுந் தோன்றுந்
திரிபுரத்தை யெரிசெய்த சிலையுந் தோன்றும்
நெறியதனை விரித்துரைத்த நேர்மை தோன்றும்
நெற்றிமேல் கண்தோன்றும் பெற்றந் தோன்றும்
மறுபிறவி யறுத்தருளும் வகையுந் தோன்றும்
மலைமகளுஞ் சலமகளும் மலிந்து தோன்றும்
பொறியரவும் இளமதியும் பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. **#186**

பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்பால் அடியவர்களின் மனக் கண்முன்னர் அப்பெருமானுடைய செறிந்த வீரக்கழலும், திருவடிகளும், முப்புரங்களை அழித்த வில்லும், நால்வருக்கு உண்மை நெறியை மோனநிலையில் விரித்துரைத்த நுண்மையும், நெற்றிக்கண்ணும், வாகனமாம் காளையும், அடியார்களுடைய மறுபிறவியை நீக்கி அருள் செய்கின்ற கூறுபாடும், பார்வதியின் வடிவும், கங்கையும், புள்ளிகளை உடைய பாம்பும், பிறைச் சந்திரனும் காட்சி வழஙகும்.

திருப்பூவணம்

அருப்போட்டு முலைமடவாள் பாகந் தோன்றும்
அணிகிளரு முருமென்ன அடர்க்குங் கேழல்
மருப்போட்டு மணிவயிரக் கோவை தோன்றும்
மணமலிந்த நடந்தோன்றும் மணியார் வைகைத்
திருக்கோட்டில் நின்றதோர் திறமுந் தோன்றுஞ்
செக்கர்வா னொளிமிக்குத் திகழ்ந்த சோதிப்
பொருப்போட்டி நின்றதிண் புயமுந் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. **#187**

பொழில் திகழும் பூவணத்து எம்புனிதனார்பால் அடியார்களின் மனக்கண் முன்னர்க் கோங்கு அரும்பினை ஒத்த முலையை உடைய பார்வதிக்கு வழங்கிய இடப்பாகமும், இடியைப் போல அழிக்கும் ஆற்றலுடைய மகாவராகத்தினுடைய மணிவயிரக் கோவையைத் தோற்கச் செய்யும் ஒளியை உடைய மருப்பும், வைகை நதிக்கரையில் நிற்கும் காட்சியும், உமாதேவி மகிழ்தற்குக் காரணமாக அவர் ஆடிய அழகிய கூத்தும், சிவந்த வானத்தினும் ஒளிமிக்கு விளங்கும், மலைகளைத் தம் திண்மையால் தோற்கடிக்கும் வலிய புயங்களும் காட்சி வழங்கும்.

திருப்பூவணம்

ஆங்கணைந்த சண்டிக்கும் அருளி யன்று
தன்முடிமேல் அலர்மாலை யளித்தல் தோன்றும்
பாங்கணைந்து பணிசெய்வார்க் கருளி யன்று
பலபிறவி யறுத்தருளும் பரிசுந் தோன்றும்
கோங்கணைந்த கூவிளமும் மதமத் தம்முங்
குழற்கணிந்த கொள்கையொடுகோலந் தோன்றும்
பூங்கணைவே ளுருவழித்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. **#188**

பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்பால் அடியார்களின் மனக்கண் முன்னர்த் தம்மைச் சரணமாக அடைந்து சண்டேச நாயனாருக்கு அருள் செய்து தாம் முடிமேல் சூடிய மாலையை அவருக்கு வழங்கிய காட்சியும், தம்பக்கல் அடைந்துதொண்டு செய்யும் அடியவர்களுக்கு அருள் செய்து அவர்களுடைய பல பிறவிகளையும் போக்கும் தன்மையும், கோங்கு வில்வம் ஊமத்தம் மலர் என்பவற்றை அணிந்த அழகும், பூக்களை அம்புகளாக உடைய மன்மதனுடைய உருவத்தை அழித்த வனப்பும் காட்சி வழங்கும்.

திருப்பூவணம்

ஆருருவ உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்
வாருருவப் பூண்முலைநன் மங்கை தன்னை
மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவந் தோன்றும்
நீருருவக் கடலிலங்கை யரக்கர் கோனைநெறுநெறென அடர்த்திட்ட நிலையுந் தோன்றும்
போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. **#189**

பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்பால் அடியவர்களின் மனக்கண் முன்னர்த் தம்மை ஒன்றிய உள்ளத்தோடுதியானிப்பவர் உள்ளத்தில் அவர்கள் தியானித்த அதே வடிவில் இருக்கின்ற காட்சியும், கச்சின்மேல் அணிகலன்களை அணிந்த தனங்களை உடைய பார்வதியை ஒருபாகமாக வைத்து மகிழ்ந்த வடிவமும், நீர் நிறைந்த வடிவுடைய கடலால் சூழப்பட்ட இலங்கையின் மன்னனான இராவணன் உடம்பினை நெறு நெறு என்னும் ஓசை ஏற்படுமாறு நசுக்கிய நிலையும், போரிடும் வடிவத்தை உடைய கூற்றுவனை உதைத்த அழகிய செயலும் காட்சி வழங்கும்.

திருவாலவாய்

திருஆலவாய்

திருவாலவாய், திருத்தாண்டகம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. இதுவே மதுரை. ,
சுவாமிபெயர் : சொக்கநாதசுவாமி.
தேவியார் : மீனாட்சியம்மை.

முளைத்தானை யெல்லார்க்கும் முன்னே தோன்றி
முதிருஞ் சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகிமா நாணாக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்தால் துவள நீறாத்
தூமுத்த வெண்முறுவ லுமையோ டாடித்
திளைத்தானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. **#190**

எல்லாப் பொருள்களின் தோற்றத்திற்கும் தான் முன்னே நிற்பவனாய், செறிந்த சடைமுடிமேல் பிறையை வளைவாகச் சூடியவனாய், அசுரர்களுடைய மும்மதில்களையும் மேருமலையை வில்லாகவும் வாசுகி என்ற பாம்பினை நாணாகவும் கொண்டு கொடிய அம்பினாலே அழிந்து சாம்பலாகும்படி அழித்தவனாய், தூயமுத்துப் போன்ற பற்களை உடைய உமாதேவியோடு விளையாடி மகிழ்ந்தவனாய் அழகிய மதுரை மாநகரத்து ஆலவாய் ஆகிய திருக்கோயிலில் உகந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய திருவடிகளையே தியானிக்கும் வாய்ப்பினை யான்பெற்றுள்ளேனே என்று தாம் பெற்ற பேற்றின் அருமையை உணர்ந்து கூறியவாறாம்.

திருஆலவாய்

விண்ணுலகின் மேலார்கள் மேலான் தன்னை
மேலாடு புரமூன்றும் பொடிசெய் தானைப்
பண்ணிலவு பைம்பொழில்சூழ் பழனத் தானைப்
பசும்பொன்னின் நிறத்தானைப் பால்நீற் றானை
உண்ணிலவு சடைக்கற்றைக் கங்கை யாளைக்கரந்துமையோ
டுடனாகி யிருந்தான் தன்னைத்
தெண்ணிலவு தென்கூடல் திருவா லவாய்ச் சிவனடியே சிந்திக்கப்
பெற்றேன் நானே. **#191**

தேவருலகிலுள்ள மேலாருக்கும் மேலாயவனாய், வானத்தில் உலவிய முப்புரங்களையும் அழித்தவனாய், வண்டுகளின் பண்ணோசை

நிலைபெற்ற பசிய பொழில்களை உடைய பழன நகரில் உள்ளானாய், பசும் பொன்நிறத்தனாய்,வெண்ணீறு அணிந்தவனாய், சடைக்கற்றைக்குள் அடங்கிய கங்கையை உடையவனாய், உமையோடு வெளிப்படையாக உடனாகியும் அவளைத் தன் உருவில் மறைத்தும் இருப்பவனாய்த் தௌந்த ஞானம் உடையார் பலரும் தங்கியிருக்கும் தென்கூடல் ஆலவாயில் உள்ள சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

திருஆலவாய்

நீர்த்திரளை நீள்சடைமேல் நிறைவித் தானை
நிலமருவி நீரோடக் கண்டான் தன்னைப்
பாற்றிரளைப் பயின்றாட வல்லான் தன்னைப்
பகைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தான் தன்னைக்
காற்றிரளாய் மேகத்தி னுள்ளே நின்று
கடுங்குரலா யிடிப்பானைக் கண்ணோர் நெற்றித்
தீத்திரளைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. **#192**

கங்கையை நீண்ட சடையில் தங்கச் செய்தவனாய், பின் பகீரதன் பொருட்டாகஅதன் ஒரு பகுதயை நிலத்தின்கண் பெருகி ஓடவிட்டவனாய், பால், தயிர், நெய்என்பவற்றின் அபிடேகத்தைப் பலகாலும் உடையவனாய், பகை கொண்டு வந்தகொடிய கூற்றுவனைத் தண்டித்தவனாய், காற்றின் திரட்சியாய் மேகத்தின்உள்ளே இருந்து கொடிய இடியாக ஓசை எழுப்புபவனாய், நெற்றியின் கண்தீத்திரட்சி போன்ற கண்ணை உடையவனாய் உள்ள தென் கூடல் திருவாலவாய்ச்சிவன் அடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

திருஆலவாய்

வானமிது வெல்லா முடையான் தன்னை
வரியரவக் கச்சானை வன்பேய் சூழக்
கானமதில் நடமாட வல்லான் தன்னைக்
கடைக்கண்ணால் மங்கையையு நோக்கா வென்மேல்
ஊனமது வெல்லா மொழித்தான் தன்னை
யுணர்வாகி யடியேன துள்ளே நின்ற
தேனமுதைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. **#193**

வான் உலகினையும் நிலவுலகினையும் தன் உடைமையாக உடையவனாய்ப் பாம்பினைக் கச்சாக அணிந்தவனாய் வலிய பேய்கள் சூழச்சுடுகாட்டில் கூத்தாட வல்லவனாய், தன் கடைக்கண்களால்

உமாதேவியை நோக்கி அவள் பரிந்துரைத்த குறிப்பினையும் பெற்று என்பால் உள்ள குறைகளை எல்லாம் நீக்கினவனாய், அடியேன் உள்ளத்துள்ளே ஞானவடிவினனாய் நின்று தேன் போலவும் அமுது போலவும் இனியனாய் உள்ள தென் கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப்பெற்றேன் நானே.

திருஆலவாய்

ஊரானை யுலகேழாய் நின்றான் தன்னை
யொற்றைவெண் பிறையானை யுமையோ டென்றும்
பேரானைப் பிறர்க்கென்று மரியான் தன்னைப்
பிணக்காட்டில் நடமாடல் பேயோ டென்றும்
ஆரானை அமரர்களுக் கமுதீந் தானை
அருமறையால் நான்முகனும் மாலும் போற்றும்
சீரானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. **#194**

கயிலை மலையை இருப்பிடமாக உடைய வனாய், ஏழுலகமும் பரந்து இருப்பவனாய், ஒற்றைப்பிறையை அணிந்தவனாய், உமாதேவியை விடுத்து என்றும் நீங்காதவனாய், அடியார் அல்லாதார் நினைத்தற்கு அரியனாய், பேயோடு எந்நாளும் சுடுகாட்டில் கூத்தாடுதலில் தெவிட்டாதவனாய், தான் விடத்தை உண்டு அமரர்களுக்கு அமுதம் ஈந்தவனாய், வேதமந்திரங்களைக் கூறிப் பிரமனும் திருமாலும் துதிக்கும் புகழுடையவனாய் உள்ள தென் கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

திருஆலவாய்

மூவனை மூர்த்தியை மூவா மேனி
யுடையானை மூவுலகுந் தானே யெங்கும்
பாவனைப் பாவ மறுப்பான் தன்னைப்
படியெழுத லாகாத மங்கை யோடு
மேவனை விண்ணோர் நடுங்கக் கண்டுவிரிகடலின் நஞ்சுண் டமுத
மீந்த
தேவனைத் தென்கூடல் திருவா லவாய்ச்சிவனடியே சிந்திக்கப்
பெற்றேன் நானே. **#195**

யாவரினும் முற்பட்டவனாய், அடியார்கள் விரும்பிய வடிவில் காட்சி வழங்குபவனாய், என்றும் மூத்தலில்லாத திருமேனியை உடையவனாய், தானே மூவுலகம் முழுதும் பரவியிருப்பவனாய், அடியவர்களின் தீவினையைப் போக்குபவனாய், ஓவியத்து எழுதவொண்ணா அழகிய உமையோடு விரும்பியிருப்பவனாய், தேவர்கள் நடுங்குதலைக் கண்டு

கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு அமுதத்தை ஈந்ததேவனாய் உள்ள தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

திருஆலவாய்

துறந்தார்க்குத் தூநெறியாய் நின்றான் தன்னைத்
துன்பந் துடைத்தாள வல்லான் தன்னை
இறந்தார்க ளென்பே யணிந்தான் தன்னை
யெல்லி நடமாட வல்லான் தன்னை
மறந்தார் மதில்மூன்றும் மாய்த்தான் தன்னை
மற்றொருபற் றில்லா அடியேற் கென்றும்
சிறந்தானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. **#196**

பற்றறுத்த சான்றோருக்குப் பற்றுக்கோடாகும் வழியாய் இருப்பவனாய், அடியார்களுடைய துன்பத்தைப் போக்கி அவர்களை ஆட்கொள்ள வல்லவனாய், இறந்தவர்களுடைய எலும்பையே அணிந்தவனாய், இரவில் கூத்தாடவல்லவனாய்த் தன்னை மறந்த அசுரர்களின் மும்மதில்களையும் அழித்தவனாய், வேறுபற்றில்லாத அடியார்களுக்கு என்றும் மேம்பட்டு அருளுபவனாய் உள்ள தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

திருஆலவாய்

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. **#197**

அடியார்களுடைய வாயுள்ளும் மனத்துள்ளும் மனத்தில் தோன்றும் எண்ணத்துள்ளும் தங்கி, அவர்களுடைய விருப்பங்களை அறிந்து நிறைவேற்றுபவனாய், மாசற்றவனாய், கலப்பற்ற வெள்ளை நிறக் காளையை உடையவனாய், பிறையைச்சடையில் சூடியவனாய், தொடர்ந்து எனக்குத் தாய்போல உதவுபவனாய்த் தவத்தின் பயனாக உள்ளவனாய், மேம்பட்ட தேவர்கள் தலைவராய திருமால் பிரமன் இந்திரன் முதலியவர்களுக்கு என்றும் சேய்மையிலுள்ளவனாய் இருக்கும்தென் கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

திருஆலவாய்

பகைச்சுடராய்ப் பாவ மறுப்பான் தன்னைப்
பழியிலியாய் நஞ்சுண் டமுதீந் தானை
வகைச்சுடராய் வல்லசுரர் புரமட் டானை
வளைவிலியா யெல்லார்க்கு மருள்செய் வானை
மிகைச்சுடரை விண்ணவர்கண் மேலப் பாலை
மேலாய தேவாதி தேவர்க் கென்றும்
திகைச்சுடரைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. **#198**

தீவினையாகிய இருளைப் போக்கும் ஞானச் சுடராய், அடியார்களின் பாவங்களைப் போக்குபவனாய்ப் பழி ஏதும் இல்லாதவனாய் நஞ்சினை உண்டுதேவர்க்கு அமுதம் ஈந்தவனாய்க் கிளைத்தெழுந்த தீயாகி அசுரருடையமும் மதில்களையும் அழித்தவனாய், நடுவுநிலை தவறாதவனாய் எல்லா உயிர்களுக்கும் அருள் செய்பவனாய், மேலான ஒளிவடிவினனாய், விண்ணவர்களுக்கு மேலும் உயர்வுதரும் அப்பக்தியாய் உள்ளவனாய், மேம்பட்ட தேவர்களுக்கும் ஒளிகாட்டும் கலங்கரை விளக்காக உள்ள தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

திருஆலவாய்

மலையானை மாமேரு மன்னி னானை
வளர்புன் சடையானை வானோர் தங்கள்
தலையானை யென்தலையி னுச்சி யென்றுந்
தாபித் திருந்தானைத் தானே யெங்கும்
துலையாக வொருவரையு மில்லா தானைத்தோன்றாதார்
மதில்மூன்றுந் துவள எய்த
சிலையானைத் தென்கூடல் திருவா லவாய்ச்சிவனடியே சிந்திக்கப்
பெற்றேன் நானே. **#199**

கயிலை மலையை உடையவனாய், மேரு மலையில் தங்கியிருப்பவனாய், வளர்ந்த செஞ்சடையினனாய், வானோருள் மேம்பட்டவனாய், என் தலையின் உச்சியில் என்றும் நிலைபெற்றிருப்பவனாய், எங்கும் தனக்கு நிகராவார் இல்லாதவனாய்த் தன்னை அணுகாது பகையைப்பூண்ட அசுரர் மதில்கள் மூன்றும் அழியுமாறு பயன்படுத்திய வில்லை உடையவனாய் இருக்கும் தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

திருஆலவாய்

தூர்த்தனைத் தோள்முடிபத் திறுத்தான் தன்னைத்
தொன்னரம்பின் இன்னிசைகேட் டருள்செய் தானைப்
பார்த்தனைப் பணிகண்டு பரிந்தான் தன்னைப்
பரிந்தவற்குப் பாசுபதம் ஈந்தான் தன்னை
ஆத்தனை யடியேனுக் கன்பன் தன்னை
யளவிலாப் பல்லூழி கண்டு நின்ற
தீர்த்தனைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. **#200**

பிறன் மனைவியை விரும்பிய இராவணனுடைய தோள்களையும் பத்துத்தலைகளையும் நசுக்கியவனாய், பின் அவன் எழுப்பிய வீணை இசைகேட்டு அருள் செய்தவனாய், அருச்சுனனுடைய தொண்டினைக் கண்டு அவனுக்கு இரங்கிப் பாசுபதாத்திரம் ஈந்தவனாய், நம்பத்தகுந்தவனாய், அடியேன் மாட்டு அன்பு உடையவனாய், அளவற்றபல ஊழிக்காலங்களையும் கண்டும் தன் நிலைபேற்றில் மாறுபடாது இருக்கும் பரிசுத்தனாகிய தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

திருநள்ளாறு

திருநள்ளாறு

திருநள்ளாறு, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ள சப்த தியாகர் தலங்களிலொன்று. ,
சுவாமிபெயர் : தெர்ப்பாரணியர்.
தேவியார் : போகமார்த்தபூண்முலையம்மை.

ஆதிக்கண் நான்முகத்தி லொன்று சென்று
அல்லாத சொல்லுரைக்கத் தன்கை வாளால்
சேதித்த திருவடியைச் செல்ல நல்ல
சிவலோக நெறிவகுத்துக் காட்டு வானை
மாதிமைய மாதொருகூ றாயி னானை
மாமலர்மே லயனோடு மாலுங் காணா
நாதியை நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. **#201**

ஆதி அந்தணன் எனப்படும் பிரமனுடைய முகங்களில் ஒன்று உண்மை அல்லாத சொல்லினைக் கூற அம்முகத்தைத் தன் கையையே வாளாகக் கொண்டு போக்கிய வயிரவனாய், அடியார்கள் அடைவதற்கு மேம்பட்ட சிவலோகம் அடையும் வழியைக் காட்டுவானாய், விரும்பத்தக்க பார்வதி பாகனாய், தாமரை மலர் மேல் உள்ள பிரமனும், திருமாலும் காணமுடியாத தலைவனாய்க் குண பூரணனாய்த் திருநள்ளாற்றில் உகந்தருளியிருக்கும் பெருமானை அடியேனாகிய நான் தியானம்செய்து துன்பங்களிலிருந்து நீங்கிய செயல் மேம்பட்டதாகும்.

திருநள்ளாறு

படையானைப் பாசுபத வேடத் தானைப்
பண்டனங்கற் பார்த்தானைப் பாவ மெல்லாம்
அடையாமைக் காப்பானை யடியார் தங்கள்
அருமருந்தை ஆவாவென் றருள்செய் வானைச்
சடையானைச் சந்திரனைத் தரித்தான் தன்னைச்
சங்கத்த முத்தனைய வெள்ளை யேற்றின்
நடையானை நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. **#202**

பலபடைக்கலங்களை உடையவனாய்ப் பாசுபதமதத்தில் கூறப்படும் வேடத்தனாய், முற்காலத்தில் மன்மதன் சாம்பலாகுமாறு அவனை நெற்றிக்கண்ணால் நோக்கியவனாய், அடியவர்களுக்கு அமுதமாய் அவர்கள் நிலைக்க ஐயோ என்று இரங்கி அருள் செய்பவனாய்ச்

சடையை உடையவனாய்,காளையில் செல்பவனாய்க் குண பூரணனாய் உள்ள நள்ளாற்றானை நான் அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்தவாறே.

திருநள்ளாறு

படஅரவ மொன்றுகொண் டரையி லார்த்த
பராபரனைப் பைஞ்ஞீலி மேவி னானை
அடலரவம் பற்றிக் கடைந்த நஞ்சை
யமுதாக வுண்டானை ஆதி யானை
மடலரவம் மன்னுபூங் கொன்றை யானை
மாமணியை மாணிக்காய்க் காலன் தன்னை
நடலரவஞ் செய்தானை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. **#203**

படமெடுக்கு பாம்பு ஒன்றனை இடையில் இறுகக்கட்டிய, மேலும் கீழுமாய் நிற்பவனை, பைஞ்ஞீலி என்ற தலத்தை உகந்தருளியவனை, வலிய பாம்பினைக்கொண்டு கடைந்தபோது தோன்றிய விடத்தை அமுதம்போல் உண்டவனை, எல்லோருக்கும் முற்பட்டவனை, இதழ்களிலே வண்டுகளின் ஒலிநிறைந்த கொன்றைப் பூவினை அணிந்தவனை, சிறந்த இரத்தினம் போன்றுகண்ணுக்கு இனியவனை. மார்க்கண்டேயன் என்ற பிரமசாரியைக் காத்தற்பொருட்டுக் காலனைத் துன்புறுத்தத் தன் கால் சிலம்பு ஒலிக்க அவனை உதைத்தவனை, நள்ளாற்றில் உகந்தருளியிருப்பவனை நான் அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்தவாறே.

திருநள்ளாறு

கட்டங்க மொன்றுதங் கையி லேந்திக்
கங்கணமுங் காதில்விடு தோடு மிட்டுச்
சுட்டங்கங் கொண்டு துதையப் பூசிச்
சுந்தரனாய்ச் சூலங்கை யேந்தி னானைப்
பட்டங்க மாலை நிறையச் சூடிப்
பல்கணமுந் தாமும் பரந்த காட்டில்
நட்டங்க மாடியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. **#204**

கட்டங்கம் என்ற படையைக் கையில் ஏந்திக் கங்கணம் அணிந்து, காதில்தோடு அணிந்து, உடம்பை எரித்த சாம்பலைத் தன் திருமேனியில் நிறையப் பூசி அழகனாய்த்தன் கையில் சூலம் ஏந்தி எலும்பு மாலையை நிறையச் சூடிப் பூதக்கூட்டமும் தானுமாய்ப் பரந்து சுடுகாட்டில் கூத்து நிகழ்த்தும் நள்ளாற்றானை நான் அடியேன் நினைக்கப்பெற்று

உய்ந்தவாறே.

திருநள்ளாறு

உலந்தார்தம் அங்கங்கொண் டுலக மெல்லாம்
ஒருநொடியி லுழல்வானை உலப்பில் செல்வம்
சிலந்திதனக் கருள்செய்த தேவ தேவைத்
திருச்சிராப் பள்ளி யெஞ்சிவ லோகனைக்
கலந்தார்தம் மனத்தென்றுங் காத லானைக்
கச்சியே கம்பனைக் கமழ்பூங் கொன்றை
நலந்தாங்கும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. **#205**

இறந்தவர்களுடைய எலும்பு மாலையை அணிந்து உலகமெல்லாம் ஒரு நொடிநேரத்தில் சுற்றிவருகின்றவனாய், அழிவில்லாத பெருஞ்செல்வத்தைச் சிலந்திப்பூச்சிக்கு அருளிய தேவதேவனாய்ச் சிராப்பள்ளியில் உகந்தருளியிருக்கும் சிவலோகனாய்த் தன்னைக் கூடிய அடியவருடைய உள்ளத்தைத் தான் என்றும் விரும்புபவனாய்க் காஞ்சியில் ஏகம்பத்து உறைவானாய், நறுமணம் கமழும் கொன்றைப் பூவினால் செயற்கை அழகு கொண்ட குண பூரணனாய் உள்ள நள்ளாற்றானை நான் அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்தவாறே.

திருநள்ளாறு

குலங்கொடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னைக்
குலவரையின் மடப்பாவை யிடப்பா லானை
மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ் செஞ்சடையி னானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்ம மென்னுந்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. **#206**

அடியவர் குடி என்ற பெருமையைக் கொடுத்துத் துன்பத்தை நீக்க வல்லவனாய், பார்வதியை இடப்பாகனாய், உயிர்களைப் பற்றியுள்ள அழுக்குகளை நீக்கித்தன் திருவருளாகிய புனித நீரில் அவற்றை மூழ்குவிப்பவனாய், வேதத்தை ஓதுபவனாய், பிறை சூடிய சடையினனாய், நடுக்கத்தைப் போக்கி இரக்கத்தையே அடிப்படையாகக் கொண்டு அறம் என்னும் உண்மைப் பொருளின் வழியில் வாழ்ந்து தன்னை வழிபடுபவருக்கெல்லாம் நன்மையை நல்கும் குணபூரணனாய் உள்ள நள்ளாற்றானை நான் அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்தவாறே.

திருநள்ளாறு

பூவிரியும் மலர்க்கொன்றைச் சடையி னானைப்
புறம்பயத்தெம் பெருமானைப் புகலூ ரானை
மாவிரியக் களிறுரித்த மைந்தன் தன்னை
மறைக்காடும் வலிவலமும் மன்னி னானைத்
தேவிரியத் திகழ்தக்கன் வேள்வி யெல்லாஞ்
சிதைத்தானை யுதைத்தவன்தன் சிரங்கொண்டானை
நாவிரிய மறைநவின்ற நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. **#207**

பூவாய் விரியும் கொன்றை மலரைச் சூடிய சடையினனாய்ப் புறம்பயம், புகலூர், மறைக்காடு, வலிவலம் என்ற திருத்தலங்களை உகந்தருளிய பெருமானாய், மற்றைய விலங்குகள் அஞ்சி ஓடுதற்குக் காரணமான வலிமையை உடைய களிற்றின் தோலை உரித்த வலிமையை உடையவனாய், ஏனைய தேவர்களும் அஞ்சி ஓடுமாறு தக்கனுடைய வேள்வி முழுதையும் அழித்தவனாய், அவனை ஒறுத்து அவன் தலையை நீக்கினவனாய், நாவினின்றும் வெளிப்படுமாறு வேதத்தை ஓதுபவனாய் உள்ள நள்ளாற்றானை நான்அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்தவாறே.

திருநள்ளாறு

சொல்லானைச் சுடர்ப்பவளச் சோதி யானைத்
தொல்லவுணர் புரமூன்று மெரியச் செற்ற
வில்லானை யெல்லார்க்கும் மேலா னானை
மெல்லியலாள் பாகனை வேதம் நான்கும்
கல்லாலின் நீழற்கீழ் அறங்கண் டானைக்
காளத்தி யானைக் கயிலை மேய
நல்லானை நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. **#208**

வேதங்களை ஓதுபவனாய், ஒளி வீசும் பவளம் போன்ற செந்நிறத்தானாய்ப் பழைய அசுரருடைய மூன்று மதில்களையும் எரியச் செய்த வில்லினை ஏந்தியவனாய், எல்லாருக்கும் மேம்பட்டவனாய்ப் பார்வதி பாகனாய்க் கல்லாலின் கீழே அமர்ந்து நால்தேவதங்களின் அறத்தையும் மௌன நிலையில் நால்வருக்கு உபதேசித்தவனாய்க் காளத்தியையும், கயிலை மலையையும் உகந்தருளிய பெரியவனாய்க் குணபூரணனாய் உள்ள நள்ளாற்றானை நான் அடியேன் நினைக்கப் பெற்று உய்ந்தவாறே.

திருநள்ளாறு

குன்றாத மாமுனிவன் சாபம் நீங்கக்
குரைகழலாற் கூற்றுவனைக் குமைத்த கோனை
அன்றாக அவுணர்புரம் மூன்றும் வேவ
ஆரழல்வா யோட்டி யடர்வித் தானைச்
சென்றாது வேண்டிற்றொன் றீவான் றன்னைச்
சிவனேயெம் பெருமானென் றிருப்பார்க் கென்றும்
நன்றாகும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. **#209**
மேம்பட்ட முனிவனான மார்க்கண்டேயனுடைய குறை வாழ்நாள் ஆகிய சாபம் தீருமாறு திருவடியால் கூற்றுவனை வருத்திய பெருமானாய்ப் பகைமை உண்டாயினமையின் அசுரர் பின் அவன் உறவாகி இசைத்த இன்னிசை கேட்டு இரங்கி அவன் துயரைத் துடைத்தவனாய்த் தன்னை மறவாத அடியவர் மனத்து என்றும் நிலைபெற்றிருப்பவனாய்க் கொன்றை, வன்னி, ஊமத்தம் பூ இவற்றின் தேன் நிறைந்த செஞ்சடையில் பிறையைச் சூடியவனாய் உள்ள நள்ளாற்றானை நான் அடியேன் நினைக்கப் பெற்று உய்ந்தவாறே.

திருநள்ளாறு

இறவாமே வரம்பெற்றே னென்று மிக்க
இராவணனை யிருபதுதோள் நெரிய வூன்றி
உறவாகி யின்னிசைகேட் டிரங்கி மீண்டே
யுற்றபிணி தவிர்த்தருள வல்லான் தன்னை
மறவாதார் மனத்தென்றும் மன்னி னானைமாமதியம் மலர்க்கொன்றை வன்னி மத்தம்
நறவார்நெஞ் சடையானை நள்ளாற் றானைநானடியேன்
நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. **#210**
தான் சாகா வரம் பெற்றானாகச் செருக்கிய இராவணனை அவன் தோள்கள் இருபதும் நசுங்குமாறு திருவடி விரலை ஊன்றியவனாய்ப் உடைய மும்மதில்களையும் தீயிட்டுக் கொளுத்தி அழித்தவனாய்த் தன்னை அடைந்து வேண்டியவர் வேண்டியதை ஈவானாய்ச் 'சிவபெருமானே எம் இறைவன்' என்று அவனையே வழிபட்டுக் கொண்டிருக்கும் அடியவர்களுக்கு எல்லா நலன்களாகவும் விளங்கும் குண பூரணனாகிய நள்ளாற்றானை நான் அடியேன் நினைக்கப் பெற்று உய்ந்தவாறே.

திருவாக்கூர்

திருஆக்கூர்

திருவாக்கூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சுயம்புநாதவீசுவரர்.
தேவியார் : கட்கநேத்திராம்பிகை.

முடித்தா மரையணிந்த மூர்த்தி போலும்
மூவுலகுந் தாமாகி நின்றார் போலும்
கடித்தா மரையேய்ந்த கண்ணார் போலும்
கல்லலகு பாணி பயின்றார் போலும்
கொடித்தா மரைக்காடே நாடுந் தொண்டர்
குற்றேவல் தாம்மகிழ்ந்த குழகர் போலும்
அடித்தா மரைமலர்மேல் வைத்தார் போலும்
ஆக்கூரில் தான்றோன்றி யப்ப னாரே. **#211**

முடியில் தாமரை மலரை அணிந்த மூர்த்தியாய் மூவுலகும் பரந்தவராய், தாமரைக் கண்ணராய், கல்லலகு என்ற வாச்சியத்தை ஒலிக்கப் பழகியவராய், தம்மை அருச்சிப்பதற்குத் தாமரைக் கூட்டத்தை நாடும் அடியவர்கள் செய்யும் குற்றேவலை மகிழ்ந்த இளையராய், தம் திருவடித் தாமரைகளை அடியவர்களின் உள்ளத்தாமரையில் வைத்தவராய், ஆக்கூரிலே (தாமாகவே இலிங்க வடிவில் எழுந்தருளியவர்) தான்தோன்றியப்பர் உள்ளார்.

திருஆக்கூர்

ஓதிற் றொருநூலு மில்லை போலும்
உணரப் படாததொன் றில்லை போலும்
காதிற் குழையிலங்கப் பெய்தார் போலுங்
கவலைப் பிறப்பிடும்பை காப்பார் போலும்
வேதத்தோ டாறங்கஞ் சொன்னார் போலும்
விடஞ்சூழ்ந் திருண்ட மிடற்றார் போலும்
ஆதிக் களவாகி நின்றார் போலும்
ஆக்கூரில் தான்றோன்றி யப்ப னாரே. **#212**

ஒரு நூலையும் ஆசிரியர்பால் கல்லாது எல்லா நூல்களையும் அறிந்தவராய் எல்லாச் செய்திகளையும் உணர்ந்த வராய்க் காதில் ஒளி வீசுமாறு குழையை அணிந்தவராய்க் கவலைக்கு இடமாகிய பிறவித்துன்பம் அடியவருக்கு வாராமல் தடுப்பவராய், வேதங்களும் ஆறு அங்கங்களும் ஓதியவராய், விடத்தால் சூழப்பட்டுக் கறுத்த

கழுத்தினராய்த் தாமே எல்லாவற்றிற்கும் ஆதியாய்த் தமக்கு ஓர் ஆதியின்றி ஆக்கூரில் தான் தோன்றியப்பர் உகந்தருளியுள்ளார்.

திருஆக்கூர்

மையார் மலர்க்கண்ணாள் பாகர் போலும்
மணிநீல கண்ட முடையார் போலும்
நெய்யார் திரிசூலங் கையார் போலும்
நீறேறு தோளெட் டுடையார் போலும்
வையார் மழுவாட் படையார் போலும்
வளர்ஞாயி றன்ன வொளியார் போலும்
ஐவாய் அரவமொன் றார்த்தார் போலும்
ஆக்கூரில் தான்றோன்றி யப்ப னாரே. **#213**

மைபூசிய மலர்போன்ற கண்களை உடைய பார்வதி பாகராய், நீலகண்டராய், நெய் அணிந்த முத்தலைச்சூலக் கையராய். திருநீறுபூசிய எண் தோளராய், கூரிய மழுப்படையினராய், காலைச் சூரியன் போன்ற செந்நிற ஒளியினராய், ஐந்தலைப் பாம்பினை இடையில் இறுகக் கட்டியவராய்த் தான் தோன்றியப்பர் அடியவர் அக்கண்களுக்குக் காட்சி வழங்குகின்றார்.

திருஆக்கூர்

வடிவிளங்கு வெண்மழுவாள் வல்லார் போலும்
வஞ்சக் கருங்கடல்நஞ் சுண்டார் போலும்
பொடிவிளங்கு முந்நூல்சேர் மார்பர் போலும்
பூங்கங்கை தோய்ந்த சடையார் போலும்
கடிவிளங்கு கொன்றையந் தாரார் போலும்கட்டங்கம் ஏந்திய கையார் போலும்
அடிவிளங்கு செம்பொற் கழலார் போலும்.ஆக்கூரில் தான்றோன்றி யப்ப னாரே. **#214**

கூர்மை விளங்கும் வெள்ளிய மழுப்படையைக் கையாளுதலில் வல்லவராய்க் கடலில் தோன்றிய வஞ்சனை உடைய கரிய நஞ்சினை உண்டவராய்த் திருநீற்றோடு பூணூலை அணிந்த மார்பினராய், அழகிய கங்கை தோய்ந்த சடையினராய், மணம்நாறும் கொன்றை மாலையினராய்க் கட்டங்கம் என்ற படையை ஏந்திய கையராய்த் திருவடியில் பொற்கழல் அணிந்தவராய்த் தான்தோன்றியப்பர் ஆக்கூரில் காட்சிவழங்குகிறார்.

திருஆக்கூர்

ஏகாச மாம்புலித்தோல் பாம்பு தாழ

இடுவெண் தலைகலனா ஏந்தி நாளும்
மேகாசங் கட்டழித்த வெள்ளி மாலை
புனலார் சடைமுடிமேற் புனைந்தார் போலும்
மாகாச மாயவெண் ணீருந் தீயும்
மதியும் மதிபிறந்த விண்ணும் மண்ணும்
ஆகாச மென்றிவையு மானார் போலும்
ஆக்கூரில் தான்றோன்றி யப்ப னாரே. **#215**

புலித்தோலை இடையில் உடுத்துப் பாம்பு மேலாடையாக உடல்மேல் தொங்க மண்டையோட்டினையே பிச்சை வாங்கும் பாத்திரமாக ஏந்தி மின்னலை வென்று ஒளிவீசும் கங்கை தங்கும் சடைமுடிமேல் வெண்பூமாலைகளைச் சூடி மிக்க ஒளியை உடைய வெள்ளிய நீரும் தீயும் சந்திரனும் சந்திரன் உலவும் விண்ணும் மண்ணுலகம் வானுலகும் ஆகிய எங்கும் பரந்திருப்பவராகிய தான் தோன்றியப்பர் ஆக்கூரில் காட்சி வழங்குகிறார்.

<u>திருஆக்கூர்</u>

மாதூரும் வாள்நெடுங்கண் செவ்வாய் மென்தோள்
மலைமகளை மார்பத் தணைத்தார் போலும்
மூதூர் முதுதிரைக ளானார் போலும்
முதலும் இறுதியு மில்லார் போலும்
தீதூர நல்வினையாய் நின்றார் போலுந்
திசையெட்டுந் தாமேயாஞ் செல்வர் போலும்
ஆதிரை நாளா வமர்ந்தார் போலும்
ஆக்கூரில் தான்றோன்றி யப்ப னாரே. **#216**

காதல் மிகுகின்ற ஒளியை உடைய நெடிய கண்கள், சிவந்த வாய், மெல்லிய தோள்கள் இவற்றை உடைய பார்வதியை மார்பில் அணைத்துப்பின் பாகமாகக் கொண்டு நிலமும் கடலுமாய், ஆதியந்தம் அற்றவராய்த் தீங்குகளை வெல்லும் நல்வினை வடிவினராய், எண்திசைகளும் தமக்கே உடைமையாக உடைய செல்வராய், ஆதிரை நட்சத்திரத்தை விரும்பிக் கொள்பவராய்த் தான் தோன்றியப்பர் ஆக்கூரில் காட்சி வழங்குகின்றார்.

<u>திருஆக்கூர்</u>

மால்யானை மத்தகத்தைக் கீண்டார் போலும்
மான்தோ லுடையா மகிழ்ந்தார் போலும்
கோலானைக் கோவழலாற் காய்ந்தார் போலும்
குழவிப் பிறைசடைமேல் வைத்தார் போலும்
காலனைக் காலாற் கடந்தார் போலுங்

கயிலாயந் தம்மிடமாக் கொண்டார் போலும்
ஆலானைந் தாடல் உகப்பார் போலும்
ஆக்கூரில் தான்றோன்றி யப்ப னாரே. **#217**

பெரிய யானையின் தலையைப் பிளந்தவராய் மான்தோலை உடையாக விரும்பி ஏற்று, அம்பினை உடைய மன்மதனைத் தம் கண் நெருப்பினால் கோபித்துச் சாம்பலாக்கி இளம்பிறையைச் சடைமேல் சூடிக் காலனைக் காலால் ஒறுத்துக்கயிலாயத்தைத் தம் இருப்பிடமாக ஏற்றுப் பஞ்சகவ்வியத்தால் அபிடேகம் செய்யப் படுவதனை உகந்த தான்தோன்றி அப்பர் ஆக்கூரில் காட்சி வழங்குகிறார்.

திருஆக்கூர்

கண்ணார்ந்த நெற்றி யுடையார் போலுங்
காமனையுங் கண்ணழலாற் காய்ந்தார் போலும்
உண்ணா அருநஞ்ச முண்டார் போலும்
ஊழித்தீ யன்ன வொளியார் போலும்
எண்ணா யிரங்கோடி பேரார் போலும்
ஏறேறிச் செல்லும் இறைவர் போலும்
அண்ணாவும் ஆரூரும் மேயார் போலும்
ஆக்கூரில் தான்றோன்றி யப்ப னாரே. **#218**

நெற்றிக் கண்ணராய்க் காமனை அக்கண்ணின் தீயினால் எரித்தவராய்ப் பிறர் உண்ணாத கொடிய நஞ்சினை உண்டவராய், ஊழித் தீப்போன்ற ஒளியினை உடையவராய்ப் பல கோடிப் பேர்களுக்கு உரியவராய், காளையை இவர்ந்து செல்லும் தலைவராய், அண்ணாமலையையும், ஆரூரையும் உகந்தருளியிருப்பவராய்த் தான் தோன்றி அப்பர் ஆக்கூரில் காட்சி வழங்குகிறார்.

திருஆக்கூர்

கடியார் தளிர்கலந்த கொன்றை மாலை
கதிர்போது தாதணிந்த கண்ணி போலும்
நெடியான் சதுர்முகனு நேட நின்ற
நீலநற் கண்டத் திறையார் போலும்
படியேல் அழல்வண்ணஞ் செம்பொன் மேனி
மணிவண்ணந் தம்வண்ண மாவார் போலும்
அடியார் புகலிடம தானார் போலும்
ஆக்கூரில் தான்றோன்றி யப்ப னாரே. **#219**

புதுமை நிறைந்த தளிர்கள் கலந்த கொன்றைப் பூ மாலை, விடு பூக்கள் மகரந்தம் நிரம்பிய முடிமாலை இவற்றைச் சூடியவராய்த் திருமாலும் பிரமனும் தேடுமாறு ஒளிப்பிழம்பாய் நின்ற நீலகண்ட இறைவராய்த்

தீவண்ணமும் பொன்வண்ணமும் தம் கூற்றிலும் நீல மணிவண்ணம் தேவியின் கூற்றிலும் அமைந்த திருமேனியராய் அடியவர்களுக்கு அடைக்கலம் தரும் இடமாக உள்ளதான் தோன்றியப்பர் ஆக்கூரில் காட்சி வழங்குகிறார்.

திருஆக்கூர்

திரையானுஞ் செந்தா மரைமே லானுந்
தேர்ந்தவர்கள் தாந்தேடிக் காணார் நாணும்
புரையா னெனப்படுவார் தாமே போலும்
போரேறு தாமேறிச் செல்வார் போலும்
கரையா வரைவில்லே நாகம் நாணாக்
காலத் தீயன்ன கனலார் போலும்
வரையார் மதிலெய்த வண்ணர் போலும்
ஆக்கூரில் தான்றோன்றி யப்ப னாரே. **#220**

பாற்கடற்பரமனும், செந்தாமரைமேல் உறையும் பிரமனும் ஆராய்ந்து தேடியும்காண முடியாது நாணுமாறு செய்த மேம்பட்டவராய், போரிடும் காளையை இவர்ந்து செல்பவராய், நெகிழ்ச்சியில்லாத மலையையே வில்லாகவும் பாம்பையே நாணாகவும் கொண்டு ஊழித்தீயை ஒத்த கோலத்தை உடையவராய்ப் பகைவர்களின் மும்மதில்களையும் அழித்த செயலுடைய தான் தோன்றியப்பர் ஆக்கூரில் காட்சி வழங்குகிறார்.

திருநாகைக்காரோணம்

திருநாகைக்காரோணம்

திருநாகைக்காரோணம், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காயாரோகணேசுவரர்.
தேவியார் : நீலாயதாட்சியம்மை.

பாரார் பரவும் பழனத் தானைப்
பருப்பதத் தானைப் பைஞ்ஞீலி யானைச்
சீரார் செழும்பவளக் குன்றொப் பானைத்
திகழுந் திருமுடிமேல் திங்கள் சூடிப்
பேரா யிரமுடைய பெம்மான் தன்னைப்
பிறர்தன்னைக் காட்சிக் கரியான் தன்னைக்
காரார் கடல்புடைசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே. **#221**

உலகத்தார் போற்றும் திருப்பழனம், சீசைலம் பைஞ்ஞீலி என்ற திருத்தலங்களை உடைய பெருமான் சிறப்புடைய செழிப்பான பவளக்குன்றம் போல்பவனாய்த் திருமுடிமேல் பிறையைச் சூடியவனாய், எண்ணிறந்த பெயர்களை உடையவனாய்ப் பிறர் தம் முயற்சியால் தன்னைக் காண முடியாதவனாய்க் கரியகடலால் ஒருபுறம் சூழப்பட்ட அழகிய குளிர்ந்த நாகைக் காரோணத்தில் என்றும் தரிசிக்கும் வகையில் உள்ளான்.

திருநாகைக்காரோணம்

விண்ணோர் பெருமானை வீரட் டனை
வெண்ணீறு மெய்க்கணிந்த மேனி யானைப்
பெண்ணானை ஆணானைப் பேடி யானைப்
பெரும்பற்றத் தண்புலியூர் பேணி னானை
அண்ணா மலையானை ஆனைந் தாடும்
அணியாரூர் வீற்றிருந்த அம்மான் தன்னைக்
கண்ணார் கடல்புடைசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே. **#222**

விண்ணோர் பெருமானாய் வீரட்டனாய், வெண்ணீறு அணிந்த மேனியனாய்ப் பெண்ஆண் பேடிகளாய் உள்ளானாய்ப் பெரும்பற்றப் புலியூர் அண்ணாமலை அழகிய ஆரூர் என்ற திருத்தலங்களில் வீற்றிருக்கும் பெருமானாய்ப் பஞ்சகவ்விய அபிடேகத்தை விரும்பும் பெருமானை இடம் அகன்ற கடல் ஒரு பக்கம் சூழ்ந்த அந்தண் நாகைக்

காரோணத்தில் என்றும் காணலாம்.

திருநாகைக்காரோணம்

சிறையார் வரிவண்டு தேனே பாடுந்
திருமறைக் காட்டெந்தை சிவலோகனை
மறையான்ற வாய்மூருங் கீழ்வே ளூரும்
வலிவலமும் தேவூரும் மன்னி யங்கே
உறைவானை உத்தமனை ஒற்றி யூரிற்பற்றியாள் கின்ற பரமன் தன்னைக்
கறையார் கடல்புடைசூழ் அந்தண் நாகைக்காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே. **#223**

சிறகுகளையும் புள்ளிகளையும் உடைய வண்டுகள் இனிமையாகப்பாடும் திருமறைக்காடு, வேதம் முழங்கும் திருவாய்மூர், கீழ்வேளூர், வலிவலம், தேவூர் இவற்றில் உகந்தருளி இருக்கும் உத்தமனாய், எந்தையாகிய சிவலோகனாய், ஒற்றியூரை உறைவிடமாகக் கொண்டு உலகை ஆள்கின்ற மேம்பட்ட பெருமானைக் கருமை நிறைந்த கடல்புடை சூழ் அந்தண் நாகைக் காரோணத்து என்றும் காணலாம்.

திருநாகைக்காரோணம்

அன்னமாம் பொய்கைசூழ் அம்ப ரானை
ஆச்சிரா மந்நகரும் ஆனைக் காவும்
முன்னமே கோயிலாக் கொண்டான் தன்னை
மூவுலகுந் தானாய மூர்த்தி தன்னைச்
சின்னமாம் பன்மலர்கள் அன்றே சூடிச்
செஞ்சடைமேல் வெண்மதியஞ் சேர்த்தி னானைக்
கன்னியம் புன்னைசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே. **#224**

அன்னங்கள் மிகுகின்ற பொய்கைகள் சூழ்ந்த அம்பர், பாச்சிலாச்சிராமம்,ஆனைக்கா என்பனவற்றை முன்னரே கோயிலாகக் கொண்டவனாய், மூவுலகும் தான்பரந்திருக்கும் வடிவினனாய்ச் செஞ்சடைமேல் தனக்குரிய அடையாளப் பூச்சுக்களையும் பிறையையும் சூடிய பெருமானை இளையனவாதலின் நெடுநாள் நிலைத்திருக்கக்கூடிய புன்னை மரங்கள் சூழ்ந்த அந்தண் நாகைக் காரோணத்து என்றும் காணலாம்.

திருநாகைக்காரோணம்

நடையுடைய நல்லெருதொன் றூர்வான் தன்னை

ஞானப் பெருங்கடலை நல்லூர் மேய
படையுடைய மழுவாளொன் றேந்தி னானைப்
பன்மையே பேசும் படிறன் தன்னை
மடையிடையே வாளை யுகளும் பொய்கை
மருகல்வாய்ச் சோதி மணிகண் டனைக்
கடையுடைய நெடுமாட மோங்கு நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே. **#225**

நல்ல நடையினை உடைய காளையை இவர்ந்து செல்பவனாய், ஞானப் பெருங்கடலாய், நல்லூரை விரும்பியவனாய், மழுப்படையை ஏந்தியவனாய்த் தன் நிலையைப் பலவாகப் பேசும் பொய்யனாய், மடைகளிடையே வாளை மீன்கள் தாவும் பொய்கைகளை உடைய மருகலின் ஒளிவீசும் நீல கண்டனாய் உள்ள பெருமானை நல்ல முகப்புக்களை உடைய பெரிய மாடங்கள் ஓங்கும் நாகைக் காரோணத்து என்றும் காணலாம்.

திருநாகைக்காரோணம்

புலங்கள்பூந் தேறல்வாய் புகலிக் கோனைப்
பூம்புகார்க் கற்பகத்தைப் புன்கூர் மேய
அலங்கலங் கழனிசூ ழணிநீர்க் கங்கை
யவிர்சடைமேல் ஆதரித்த அம்மான் தன்னை
இலங்கு தலைமாலை பாம்பு கொண்டே
ஏகாச மிட்டியங்கு மீசன் தன்னைக்
கலங்கற் கடல்புடைசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே. **#226**

வயல்களிலே பூக்களில் தேன் பொருந்தியுள்ள புகலித் தலைவனாய், பூம்புகாரில் உள்ள கற்பகமாய், அசைகின்ற கதிர்களை உடைய வயல்கள் சூழ்ந்த புன்கூரில் அழகிய நீரை உடைய கங்கையைச் சடைமேல் கொண்ட தலைவனாய், தலைமாலையைச் சூடிப்பாம்பினை மேலாடையாகத் தரித்து விளங்குகின்ற ஈசனைக் கடலிலே மரக்கலங்கள் சூழ்ந்து காணப்படும் அந்தண் நாகைக் காரோணத்து என்றும் காணலாம்.

திருநாகைக்காரோணம்

பொன்மணியம் பூங்கொன்றை மாலை யானைப்
புண்ணியனை வெண்ணீறு பூசி னானைச்
சின்மணிய மூவிலைய சூலத் தானைத்
தென்சிராப் பள்ளிச் சிவலோகனை
மன்மணியை வான்சுடலை யூராப் பேணி

வல்லெருதொன் றேறும் மறைவல் லானைக்
கன்மணிகள் வெண்டிரைசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே. **#227**
பொன்போன்று அழகிய கொன்றை மாலை சூடும் புண்ணியனாய்,
வெண்ணீறு பூசியவனாய்ச் சிலமணிகள் கட்டப்பட்ட முத்தலைச்
சூலத்தை ஏந்தியவனாய், அழகிய சிராப்பள்ளிமேய சிவலோகனாய்த்
தலையாய மணிபோல்பவனாய்ப் பெரிய சுடுகாட்டைத் தங்கும் இடமாக
விரும்பிக்கொண்டு வலிய காளையை இவரும் வேதங்களில் வல்ல
பெருமானை இரத்தினக் கற்களைக் கரைசேர்க்கும் வெள்ளிய அலைகள்
சூழ்ந்த அந்தண் நாகைக் காரோணத்து என்றும் காணலாம்.

திருநாகைக்காரோணம்

வெண்டலையும் வெண்மழுவும் ஏந்தி னானை
விரிகோ வணமசைத்த வெண்ணீற் றானைப்
புண்தலைய மால்யானை யுரிபோர்த் தானைப்
புண்ணியனை வெண்ணீ றணிந்தான் தன்னை
எண்டிசையும் எரியாட வல்லான் தன்னை
யேகம்பம் மேயானை யெம்மான் தன்னைக்
கண்டலங் கழனிசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே. **#228**
கோவணம் உடுத்து வெண்ணீறு பூசிப் புண்ணைத் தலையிலுடைய
பெரிய யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்து வெண்தலை
ஓட்டையும் வெள்ளிய மழுவையும் ஏந்திய புண்ணியனாய்,
வெண்ணீறணிந்து எட்டுத் திசைகளிலும் தீயில் கூத்தாடுபவனாய்,
ஏகம்பத்தில் விரும்பித் தங்கும் எம்பெருமானைத் தாழைப்புதர்கள் சூழ்ந்த
அந்தண் நாகைக் காரோணத்து என்றும் காணலாம்.

திருநாகைக்காரோணம்

சொல்லார்ந்த் சோற்றுத் துறையான் தன்னைத்
தொல்நரகம் நன்னெறியால் தூர்ப்பான் தன்னை
வில்லானை மீயச்சூர் மேவி னானை
வேதியர்கள் நால்வர்க்கும் வேதஞ் சொல்லிப்
பொல்லாதார் தம்அரணம் மூன்றும் பொன்றப்
பொறியரவம் மார்பாரப் பூண்டான் தன்னைக்
கல்லாலின் கீழானைக் கழிசூழ் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே. **#229**
வேதங்கள் முழங்கும் சோற்றுத்துறை, மீயச்சூர் என்ற இவற்றை
மேவியவனாய்ப் பலரையும் நல்ல நெறியில் ஒழுகச் செய்து

நரகலோகத்தைப் பாழ்படச் செய்பவனாய், ஒளியுடையவனாய், வேதியர் நால்வருக்கும் வேத நெறியை அறிவித்தவனாய்த் தீய அசுரரின் மும்மதில்களையும் அழித்தவனாய்ப் புள்ளியை உடைய பாம்பினை மார்பில் பொருந்த அணிந்த பெருமானாய்க் கல்லாலின் கீழ் அமர்ந்த பிரானை உப்பங்கழிகள் சூழ்ந்த நாகைக் காரோணத்து என்றும் காணலாம்.

திருநாகைக்காரோணம்

மனைதுறந்த வல்லமணர் தங்கள் பொய்யும்
மாண்புரைக்கும் மனக்குண்டர் தங்கள் பொய்யும்
சினைபொதிந்த சீவரத்தர் தங்கள் பொய்யும்
மெய்யென்று கருதாதே போத நெஞ்சே
பனையுரியைத் தன்னுடலிற் போர்த்த எந்தை
அவன்பற்றே பற்றாகக் காணின் அல்லால்
கனைகடலின் தெண்கழிசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே. **#230**

நெஞ்சே! துறவு நிலையில் உள்ள சமணர்களின் பொய்யுரைகளையும் தம் பெருமையை எடுத்துரைக்கும் சமண சமய இல்லறத்திலுள்ள அறிவிலிகள் பேசும் பொய்யுரைகளையும் உடம்பிலே துவராடையை அணிந்த புத்தர்களின் பொய்யுரைகளையும் மனத்துக் கொள்ளாமல், யானைத்தோல் போர்த்த எம்பெருமானைப் பற்றும் பற்றினையே உண்மையான விருப்பச் செயலாகக் கொண்டு காண்பதனை விடுத்துக் கடலின் கழி சூழ் நாகைக் காரோணத்து எம் பெருமானைக் காண இயலுமா? அப்பெருமான் தன்னையே பற்றும் பற்றினை அடியவர்களுக்கு அருள்செய்து அகக்கண்களுக்குக் காட்சி வழங்குவான் என்பது.

திருநாகைக்காரோணம்

நெடியானும் மலரவனும் நேடி யாங்கே
நேருருவங் காணாமே சென்று நின்ற
படியானைப் பாம்புரமே காத லானைப்
பாம்பரையோ டார்த்த படிறன் தன்னைச்
செடிநாறும் வெண்தலையிற் பிச்சைக் கென்று
சென்றானை நின்றியூர் மேயான் தன்னைக்
கடிநாறு பூஞ்சோலை யந்தண் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே. **#231**

திருமாலும் பிரமனும் தேடியும் காணமுடியாதபடி நீண்டு வளர்ந்த உருவமுடையவனாய், பாம்புரத்தை விரும்பியவனாய், பாம்பினை

இடையில் கட்டிய வஞ்சகனாய், முடைநாற்றம் வீசிய தலையோட்டில் பிச்சைக்கு என்று திரிந்தவனாய், நின்றியூரை விரும்பித் தங்கிய பெருமானை மணங்கமழும் பூக்களை உடைய சோலைகளால் அழகும் குளிர்ச்சியும் பொருந்திய நாகைக் காரோணத்து என்றும் காணலாம்.

திருமறைக்காடு

திருமறைக்காடு

திருமறைக்காடு, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வேதாரணியேசுவரர்.
தேவியார் : யாழைப்பழித்தமொழியம்மை.

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. **#232**

மறைக்காட்டில் உகந்தருளியிருக்கும் மணாளன் ஆம் சிவபெருமான் தூண்டப்பட்ட விளக்கொளி போன்ற ஒளியின னாய்ப் பழைய தேவர்களுக்கு முடிமணியாய்த் தன்னை நினையாதார் காண்பதற்கு அரிய கடவுளாய்த் தன்னைத் தியானிப்பவருக்கு மிக எளியனாய் வேண்டுவார் வேண்டுவதை ஈவானாய்ப் பேறாகிய தன்னை அடைவதற்குத் தானே ஆறாய் (வழியாய்) விரதங்களால் மாட்சிமைப்பட்ட மனமுடைய சான்றோர்களின் மனத்தானாக உள்ளான்.

திருமறைக்காடு

கைகிளரும் வீணை வலவன் கண்டாய்
காபாலி கண்டாய் திகழுஞ் சோதி
மெய்கிளரும் ஞான விளக்குக் கண்டாய்
மெய்யடியார் உள்ளத்து வித்துக் கண்டாய்
பைகிளரும் நாக மசைத்தான் கண்டாய்
பராபரன் கண்டாய்பா சூரான் கண்டாய்
வைகிளரும் கூர்வாட் படையான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. **#233**

கைகளால் ஒலிக்கப்படும் வீணையை வாசிப்பதில் வல்லவனாய்க் காபாலக்கூத்து ஆடுபவனாய் ஒளி விளங்கும் ஞான விளக்குப்போன்ற வடிவினனாய் மெய் அடியார் உள்ளத்தில் வெளிப்பட்டுத் தோன்றும் வித்தாய்ப் படம் எடுக்கும் நாகத்தை அணிந்தவனாய் மேலாளரையும்

கீழ்ப்படுத்த மேலானாய்ப் பாசூரை உகந்தருளியிருப்பவனாய்க் கூர்மை மிக்க வாட்படையை உடையவனாய் மறைக்காட்டுள் உறையும் மணாளன் உள்ளான்.

திருமறைக்காடு

சிலந்திக் கருள் முன்னஞ் செய்தான் கண்டாய்
திரிபுரங்கள் தீவாய்ப் படுத்தான் கண்டாய்
நிலந்துக்க நீர்வளிதீ யானான் கண்டாய்
நிரூபியாய் ரூபியுமாய் நின்றான் கண்டாய்
சலந்துக்க சென்னிச் சடையான் கண்டாய்
தாமரையான் செங்கண்மால் தானே கண்டாய்
மலந்துக்க மால்விடையொன் றூர்ந்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. **#234**

மறைக்காட்டுள் உறையும் மணாளன் முன்னொரு கால் சிலந்திக்கு அருள் செய்தவனாய், திரிபுரங்களைத் தீ மடுத்தவனாய், நிலம் அதனைச் சூழ்ந்தநீர், தீ, காற்று என்ற பூதங்களில் எங்கும் பரவி இருப்பவனாய், உருவமும் உருவம் அற்ற நிலையும் உடைய வனாய்க் கங்கை தங்கிய சடையினனாய்ப் பிரமனும் திருமாலும் தானேயாய்க் களங்கம் நீங்கிய பெரிய விடை ஒன்றினை இவர்பவனாய் அடியார்கள் மனக்கண்ணிற்குக் காட்சி வழங்குகின்றான்.

திருமறைக்காடு

கள்ளி முதுகாட்டி லாடி கண்டாய்
காலனையுங் காலாற் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழைமானின் தோலான் கண்டாய்
புலியுரிசே ராடைப் புனிதன் கண்டாய்
வெள்ளிமிளிர் பிறைமுடிமேற் சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய்நஞ் செந்தின் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. **#235**

மறைக்காட்டுள் உறையும் மணாளன் கள்ளிகள் படர்ந்த சுடுகாட்டில் கூத்து நிகழ்த்துபவனாய்க் காலனைக் காலால் ஒறுத்தவனாய்ப் புள்ளியை உடைய மான்தோலை உடுத்தவனாய்ப் புலித்தோலையும் ஆடையாகக் கொண்ட புனிதனாய், வெள்ளி போல ஒளி வீசும் பிறையை முடிமேல் சூடியவனாய், வெண்ணீறு அணிந்தவனாய்த் திருச்செந்தூரை விரும்பும் முருகனுக்குத் தந்தையாய் உள்ளான்.

திருமறைக்காடு

ரூரி முழங்கொலிநீ ரானான் கண்டாய்
முழுத்தழல்போல் மேனி முதல்வன் கண்டாய்
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்
இன்னடியார்க் கின்பம் விளைப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணா மலையுறையெம் அண்ணல் கண்டாய்
வாரி மதகளிறே போல்வான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. **#236**
மறைக்காட்டுள் உறையும் மணாளன் மிகவும் முழங்குகின்ற ஒலியை உடைய நீரின் வடிவினனாய், தழல் போன்ற சிவந்த மேனியை உடைய முதல்வனாய், ஏரி நீர் நிறைந்ததனை ஒத்த செல்வனாய்ச் சிறந்த அடியவர்களுக்கு இன்பம் விளைவிப்பவனாய், ஆரியனாய்த் தமிழனாய், அண்ணாமலையில் உகந்தருளியிருக்கும் தலைவனாய், வெள்ளம் போல மதத்தைப் பெருக்குகின்ற மதயானை போல்வானாய் உள்ளான்.

திருமறைக்காடு

ஆடல்மால் யானை யுரித்தான் கண்டாய்
அகத்தியான் பள்ளி யமர்ந்தான் கண்டாய்
கோடியான் கண்டாய் குழகன் கண்டாய்
குளிராரூர் கோயிலாக் கொண்டான் கண்டாய்
நாடிய நன்பொருள்க ளானான் கண்டாய்
நன்மையோ டிம்மைமற் றம்மை யெல்லாம்
வாடிய வாட்டந் தவிர்ப்பான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. **#237**
மறைக்காட்டுள் உறைகின்ற மணாளன் வெற்றி பொருந்திய பெரிய யானையைக் கொன்று அதன் தோலை விரித்துப் போர்த்தவனாய், கோடி என்ற தலத்தில் உறையும் இளையவனாய், அகத்தியான்பள்ளியையும், ஆரூரையும் கோயிலாகக் கொண்டவனாய், அடியவர்கள் விரும்பிய சிறந்த பொருள்கள் ஆவானாய், இப்பிறப்பிலும் மறுபிறப்பிலும் நன்மைகள் ஈந்து வாடிய துயரங்களைத் தவிர்ப்பானாய் உள்ளான்.

திருமறைக்காடு

வேலைசேர் நஞ்சம் மிடற்றான் கண்டாய்
விண்தடவு பூங்கயிலை வெற்பன் கண்டாய்
ஆலைசேர் வேள்வி யழித்தான் கண்டாய்
அமரர்கள் தாமேத்தும் அண்ணல் கண்டாய்
பால்நெய்சேர் ஆனஞ்சும் ஆடி கண்டாய்

பருப்பதத்தான் கண்டாய் பரவை மேனி
மாலையோர் கூறுடைய மைந்தன் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. #238

மறைக்காட்டுள் உறையும் மணாளன் கடலில் தோன்றிய நஞ்சினைத் தன் கழுத்தளவில் அடக்கியவன். வானளாவிய பொலிவுடைய கயிலை மலைக்கு உரியவன். மிக்க அழகு பொருந்திய தக்கனுடைய வேள்வியை அழித்தவன். தேவர்கள் போற்றும் தலைவன். பால் நெய் முதலிய பஞ்ச கவ்விய அபிடேகம் உகந்தவன்.சீசைலத்தில் உறைபவன். அவனே கடல் நிற வண்ணனாகிய திருமாலை ஒருகூறாகத்தன் மேனியில் கொண்ட ஆற்றலுடையவன்.

திருமறைக்காடு

அம்மை பயக்கும் அமிர்து கண்டாய்
அந்தேன் தெளகண்டாய் ஆக்கஞ் செய்திட்
டிம்மை பயக்கும் இறைவன் கண்டாய்
என்னெஞ்சே யுன்னில் இனியான் கண்டாய்
மெய்ம்மையே ஞான விளக்குக் கண்டாய்வெண்காடன் கண்டாய்
வினைகள் போக
மம்ம ரறுக்கும் மருந்து கண்டாய்மறைக்காட் டுறையும் மணாளன்
தானே. #239

மறைக்காட்டுள் உறைகின்ற மணாளன் அடியார்களுக்கு மறுமையைப் பயக்கும் அமுதமாய்ச் செல்வத்தைக் கொடுத்து இம்மையில் நலன்பயக்கும் தெளந்த தேனாய், நம் மனத்தைவிட நமக்கு இனியவனாய், உண்மையான ஞானப்பிரகாசம் நல்கும் விளக்காய், திருவெண்காட்டில் உறைபவனாய், நம் தீவினைகள் நீங்குமாறு நம் மயக்கத்தைப் போக்கும் மருந்தாகவும் உள்ளான்.

திருமறைக்காடு

மூலநோய் தீர்க்கும் முதல்வன் கண்டாய்
முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்
ஆலின்கீழ் நால்வர்க் கறத்தான் கண்டாய்
ஆதியு மந்தமு மானான் கண்டாய்
பால விருத்தனு மானான் கண்டாய்
பவளத் தடவரையே போல்வான் கண்டாய்
மாலைசேர் கொன்றை மலிந்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. #240

எல்லா நோய்களுக்கும் அடிப்படைக் காரணமான ஆணவ மலத்தைச் செயலறச் செய்யும் தலைவனாய், முத்தமிழும் நான்மறையும்

ஆகியவனாய், கல்லால மரநிழலில் அமர்ந்து சனகர் முதலிய முனிவர் நால்வருக்கு அறத்தை மௌனநிலையில் உபதேசித்தவனாய், ஏனைய எல்லாப் பொருள்களுக்கும் ஆதியும் அந்தமுமாக உள்ளவனாய்ப் பாலனும் விருத்தனுமாக வடிவு எடுத்தவனாய்ப் பெரியபவள மலைபோன்ற உருவினனாய், கொன்றைப் பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்தவனாய், மறைக்காட்டு உறைகின்ற மணாளன் காட்சி வழங்குகின்றான்.

திருமறைக்காடு

அயனவனும் மாலவனும் அறியா வண்ணம்
ஆரழலாய் நீண்டுகந்த அண்ணல் கண்டாய்
துயரிலங்கை வேந்தன் துளங்க அன்று
சோதிவிர லாலுற வைத்தான் கண்டாய்
பெயரவர்க்குப் பேரருள்கள் செய்தான் கண்டாய்
பேரும் பெரும்படையோ டீந்தான் கண்டாய்
மயருறு வல்வினைநோய் தீர்ப்பான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. **#241**

மறைக்காட்டுள் உறைகின்ற மணாளன் பிரமனும் திருமாலும் அறியாத வகையில் தீத்தம்பமாய் நீண்டு உயர்ந்த தலைவன். இராவணன் துயரால் நடுங்குமாறு ஒளிவீசும் விரலால் அழுத்தியவன். தசக்கிரீவன் என்ற பழைய பெயரை உடைய அவனுக்கு இராவணன் என்ற பெயரையும் வழங்கிப் பல அருள்களையும் செய்தவன். அவனுக்கு மேம்பட்ட வாட்படையையும் ஈந்தவன். அடியார்களுக்கு மயக்கத்தைத் தரும் ஊழ்வினையால் ஏற்படும் துயரங்களைத் தீர்ப்பவன்.

திருவாரூர்

திருவாரூர்

திருவாரூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

கைம்மான மதகளிற்றி னுரிவை யான்காண்
கறைக்கண்டன் காண்கண்ணார் நெற்றி யான்காண்
அம்மான்காண் ஆடரவொன் றாட்டி னான்காண்
அனலாடி காண்அயில்வாய்ச் சூலத் தான்காண்
எம்மான்காண் ஏழுலகு மாயி னான்காண்
எரிசுடரோன் காண்இலங்கு மழுவா ளன்காண்
செம்மானத் தொளியன்ன மேனியான்காண்
திருவாரூ ரான்காண்என் சிந்தை யானே. **#242**

துதிக்கையையும், பெருமையையும் மதத்தையும் உடைய யானைத் தோலைப் போர்த்தியவனாய் நீலகண்டனாய், கண் பொருந்திய நெற்றியை உடையவனாய், எல்லாருக்கும் தலைவனாய்ப் படம் எடுத்து ஆடும் பாம்பு ஒன்றினை ஆட்டியவனாய்த் தீயில் கூத்து நிகழ்த்துபவனாய்க் கூரிய சூலத்தை ஏந்தியவனாய், எங்களுக்குத் தலைவனாய், ஏழுலகும் பரந்தவனாய், எரிகின்ற விளக்குப் போல்பவனாய், விளங்கும் மழுப்படையை ஏந்தியவனாய்ச் செந்திற வானம் போன்ற மேனியனாய்த் திருவாரூரில் உறைபவனாய், என் மனக் கண்ணிற்குச் சிவபெருமான் காட்சி வழங்குகின்றான்.

திருவாரூர்

ஊனேறு படுதலையி லுண்டி யான்காண்
ஓங்காரன் காண்ஊழி முதலா னான்காண்
ஆனேறொன் றூர்ந்துழலும் ஐயா றன்காண்
அண்டன்காண் அண்டத்துக் கப்பா லான்காண்
மானேறு கரதலத்தெம் மணிகண் டன்காண்
மாதவன்காண் மாதவத்தின் விளைவா னான்காண்
தேனேறும் மலர்க்கொன்றைக் கண்ணி யான்காண்
திருவாரூ ரான்காண்என் சிந்தை யானே. **#243**

புலால் மணம் தங்கிய மண்டையோட்டில் உணவைப் பெற்று உண்பவனாய், ஓங்கார வடிவினனாய், ஊழிகளுக்குத் தலைவனாய்க் காளையை இவர்பவனாய், திருவையாற்றில் உறைபவனாய், எல்லா

உலகங்களும் பரவினவனாய், அண்டங்களுக்கு அப்பாலும் பரவியவனாய், கையில் மானை ஏந்திய நீலகண்டனாய்ப் பெருந்தவத்தினனாய்த் திருவாரூர்ப் பெருமான் என் மனக் கண்ணிற்குக் காட்சி வழங்குகின்றான்.

திருவாரூர்

ஏவணத்த சிலையால்முப் புரமெய் தான்காண்
இறையவன்காண் மறையவன்காண் ஈசன் தான்காண்
தூவணத்த சுடர்ச்சூலப் படையி னான்காண்
சுடர்மூன்றுங் கண்மூன்றாக் கொண்டான் தான்காண்
ஆவணத்தால் என்றன்னை ஆட்கொண் டான்காண்
அனலாடிகாண் அடியார்க் கமிர்தா னான்காண்
தீவணத்த திருவுருவிற் கரியுரு வன்காண்
திருவாரூ ரான்காண் என்சிந்தை யானே. **#244**

திருவாரூரில் உள்ள பெருமான் அம்பைச் செலுத்தும் வில்லால் முப்புரத்தையும் அழித்தவன். அவன் இறைவனாய், மறை ஓதுபவனாய், நிர்விக்கினனாய்ப் பாவத்தை அழிக்கும் தூய ஒளியுடைய சூலப்படையினனாய், சூரியன் சந்திரன் அக்கினி என்பவரைத் தன் மூன்று கண்களாக உடையவனாய், ஏற்றமுறையால் என்னை அடிமை கொண்டவனாய்த் தீயில் கூத்து நிகழ்த்துபவனாய், அடியார்க்கு அமுதமாயினவன். தீப் போன்ற தன்னுடைய திருவுருவில் கழுத்தில் விடத்தாலாய கருமையை உடையவனாவான். அவன் என் சிந்தையான்.

திருவாரூர்

கொங்குவார் மலர்க்கண்ணிக் குற்றா லன்காண்
கொடுமழுவன் காண்கொல்லை வெள்ளேற் றான்காண்
எங்கள்பால் துயர்கெடுக்கு மெம்பி ரான்காண்
ஏழ்கடலு மேழ்மலையு மாயி னான்காண்
பொங்குமா கருங்கடல்நஞ் சுண்டான் தான்காண்
பொற்றூண்காண் செம்பவளத் திரள்போல் வான்காண்
செங்கண்வா ளராமதியோ டுடன்வைத் தான்காண்
திருவாரூ ரான்காண்என் சிந்தை யானே. **#245**

திருவாரூரில் உள்ள பெருமான் தேன் ஒழுகும் மலராலான முடி மாலையைச் சூடி குற்றாலத்தும் உறைபவன். கொடிய மழுப்படையும் வெண்ணிறக் காளை வாகனமும் உடையவன். எங்கள் துயரைப் போக்கும் தலைவன். ஏழ் கடல்களும் ஏழு மலைகளும் ஆகியவன். அலைகள் உயர்ந்த பெரும்பரப்புடைய கடலில் தோன்றிய நஞ்சினை உண்டவன். பொன்னால் ஆகிய தூணையும் பவளத் திரளையும்

நிகர்ப்பவன். பிறையோடு சிவந்த கண்களை உடைய ஒளி வீசும் பாம்பினையும் உடன் வைத்தவன். அவன் என் சிந்தையான்.

திருவாரூர்

காரேறு நெடுங்குடுமிக் கயிலா யன்காண்
கறைக்கண்டன் காண்கண்ணார் நெற்றி யான்காண்
போரேறு நெடுங்கொடிமேல் உயர்த்தி னான்காண்
புண்ணியன்காண் எண்ணரும்பல் குணத்தி னான்காண்
நீரேறு சுடர்ச்சூலப் படையி னான்காண்
நின்மலன்காண் நிகரேது மில்லா தான்காண்
சீரேறு திருமாலோர் பாகத் தான்காண்
திருவாரூ ரான்காண்என் சிந்தை யானே. **#246**

திருவாரூர்ப் பெருமான் மேகங்கள் தவழும் பெரிய உச்சியை உடைய கயிலாய மலையிலும் இருப்பவன். நீல கண்டன். நெற்றிக்கண்ணன். காளை எழுதிய நீண்ட கொடியை மேல் உயர்த்தியவன். புண்ணியன், குணபூரணன். நீர் சுவறுதலுக்குக் காரணமான தீப்போன்ற அழிக்கும் சூலப்படையவன். மாசற்றவன். தன் நிகர் இல்லாதவன். சிறப்பு மிக்க திருமாலைத் தன் உடம்பின் ஒரு பாகமாக உடையவன். அவன் என் சிந்தையான்.

திருவாரூர்

பிறையரவக் குறுங்கண்ணிச் சடையி னான்காண்
பிறப்பிலிகாண் பெண்ணோடா ணாயி னான்காண்
கறையுருவ மணிமிடற்று வெண்ணீற் றான்காண்
கழல்தொழுவார் பிறப்பறுக்குங் காபாலி காண்
இறையுருவக் கனவளையாள் இடப்பா கன்காண்
இருநிலன்காண் இருநிலத்துக் கியல்பா னான்காண்
சிறையுருவக் களிவண்டார் செம்மை யான்காண்
திருவாரூ ரான்காண்என் சிந்தை யானே. **#247**

திருவாரூர்ப் பெருமான் பிறையையும் பாம்பாகிய முடிமாலையையும் சடையில் உடையவன். பிறப்பற்றவன். ஆண், பெண் என்ற இருபகுப்பினை உடைய உருவத்தன். நீலகண்டன். வெண்ணீற்றன். தன் திருவடிகளை வழிபடுபவர்களுடைய பிறவிப்பிணியைப் போக்கும் காபாலக் கூத்தாடுபவன். கைகளில் பெரிய வளையல்களை அணிந்த பார்வதியை இடப்பாகமாகக் கொண்டவன். பெரிய நிலமாகவும் அதனைத் தாங்கிப் பாதுகாப்பவனுமாக உள்ளவன். சிறகுகளை உடைய அழகிய களிப்புடைய வண்டுகள் பொருந்திய செம்மைப் பகுதியை உடையவன். அவன் என் சிந்தையுளான்.

திருவாரூர்

தலையுருவச் சிரமாலை சூடி னான்காண்
தமருலகந் தலைகலனாப் பலிகொள் வான்காண்
அலையுருவச் சுடராழி யாக்கி னான்காண்
அவ்வாழி நெடுமாலுக் கருளி னான்காண்
கொலையுருவக் கூற்றுதைத்த கொள்கை யான்காண்
கூரெரிநீர் மண்ணொடுகாற் றாயி னான்காண்
சிலையுருவச் சரந்துரந்த திறத்தி னான்காண்
திருவாரூ ரான்காண்என் சிந்தை யானே. **#248**

திருவாரூர்ப் பெருமான் தலையில் பொருந்துமாறு தலைமாலையைச் சூடியவன்.மக்களும் தேவரும் உள்ள உலகின் மண்டையோட்டினைப் பிச்சைப் பாத்திரமாகக் கொண்டு பிச்சை வாங்குபவன். பகைவர்களைத் துன்புறுத்தும் அஞ்சத்தக்க ஒளியை உடைய சக்கரத்தைப் படைத்தவன். சலந்தரனை அழித்தபிறகு அச்சக்கரத்தைத் திருமாலுக்கு வழங்கியவன். கொலைத் தொழிலைச் செய்யும் அஞ்சத்தக்க கூற்றுவனை உதைத்தவன். ஐம்பூதங்களும் ஆகியவன். வில்லிலிருந்து புறப்படும் அம்பினைச் செலுத்திய செயலை உடையவன். அவன் என் சிந்தையானே.

திருவாரூர்

ஐயன்காண் குமரன்காண் ஆதி யான்காண்
அடல்மழுவாள் தானொன்று பியன்மே லேந்து
கையன்காண் கடற்பூதப் படையி னான்காண்
கண்ணெரியால் ஐங்கணையோன் உடல்காய்ந் தான்காண்
வெய்யன்காண் தண்புனல்சூழ் செஞ்சடை யான்காண்
வெண்ணீற்றான் காண்விசயற் கருள்செய் தான்காண்
செய்யன்காண் கரியன்காண் வெளியோன் தான்காண்
திருவாரூ ரான்காண்என் சிந்தை யானே. **#249**

திருவாரூர்ப் பெருமான் தலைவனாய், என்றும் இளையவனாய், எல்லோருக்கும் ஆதியாய், மழுப்படையைத் தோளில் சுமந்த கையனாய்க் கடல் போன்ற பூதப்படையனாய்க் கண் எரியால் மன்மதன் உடலை எரித்தவனாய், வெப்பம் உடையவனாய்க் கங்கை சூழ்ந்த செஞ்சடையனாய், வெண்ணீறு அணிந்தவனாய், அருச்சுனனுக்கு அருள் செய்தவனாய், வெண்மை, செம்மை, கருமை என்ற எல்லா நிறங்களையும் உடையவனாய் என் சிந்தையில் உள்ளான்.

திருவாரூர்

மலைவளர்த்த மடமங்கை பாகத் தான்காண்
மயானத்தான் காண்மதியஞ் சூடி னான்காண்
இலைவளர்த்த மலர்க்கொன்றை மாலை யான்காண்
இறையவன்காண் எறிதிரைநீர் நஞ்சுண் டான்காண்
கொலைவளர்த்த மூவிலைய சூலத் தான்காண்கொடுங்குன்றன்
காண்கொல்லை யேற்றி னான்காண்
சிலைவளர்த்த சரந்துரந்த திறத்தி னான்காண்திருவாரூ ரான்காண்என்
சிந்தை யானே. #250

திருவாரூர்ப் பெருமான் பார்வதி பாகனாய்ச் சுடுகாட்டில் இருப்பவனாய்ப் பிறை சூடியவனாய், இலைகளிடையே வளர்ந்த கொன்றை மலர் மாலையைச் சூடியவனாய், எல்லோருக்கும் தலைவனாய்க் கடலில் தோன்றிய நஞ்சினை உண்டவன். முல்லை நிலத் தலைவனான திருமாலை இடபமாக உடைய அப்பெருமான் கொடுங்குன்றத்தும் உறைபவன். கொல்லும் முத்தலைச் சூலத்தை உடைய அப்பெருமான் வில்லில் பூட்டிய அம்பினைச் செலுத்தும் ஆற்றலுடையவன். அவன் என் சிந்தையான்.

திருவாரூர்

பொற்றாது மலர்க்கொன்றை சூடி னான்காண்
புரிநூலன் காண்பொடியார் மேனி யான்காண்
மற்றாருந் தன்னொப்பா ரில்லா தான்காண்
மறையோதி காண்எறிநீர் நஞ்சுண் டான்காண்
எற்றாலுங் குறைவொன்று மில்லா தான்காண்
இறையவன்காண் மறையவன்காண் ஈசன் றான்காண்
செற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான் தான்காண்
திருவாரூ ரான்காண்என் சிந்தை யானே. #251

திருவாரூர்ப் பெருமான் தன்னை ஒப்பார் இல்லாதவன். பூணூல் அணிந்து நீறு பூசி வேதம் ஓதி, பொன் போன்ற மகரந்தம் உடைய கொன்றைப் பூச்சூடி, ஒன்றாலும் குறைவில்லாத் தலைவனாகிய அப்பெருமான் கடல் நஞ்சு உண்டு வேதவடிவினனாய் எல்லாரையும் நிருவகிப்பவனாய்ப் பகைவர் மும்மதில்களையும் அழித்தவன். அவன் என் சிந்தையான்.

திருவாரூர்

திருவாரூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியி னுருவெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறா தானே றேறி
அமரர்நா டாளாதே ஆரூ ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லா தாரே. **#252**
அயிராவணம் என்ற யானையை இவராது காளைமீது இவர்ந்து தேவர்களுடைய நாட்டை ஆளாமல் திருவாரூரை ஆண்ட ஐயுறாத தன்மையை உடைய நுண்மணல் உருவினனாகிய உண்மைப் பொருளே! உயிர்ப்பு இயங்காது மூச்சை அடக்கித் தியானம் செய்து உள்ளமாகிய துணியில் உன்படத்தை எழுதிச் சமாதி நிலையில் இருந்து உயிரை உன்னிடம் அடிமை ஓலை எழுதி ஒப்படைத்து உன் கையில் வழங்கி உன்னால் சிறப்பு வகையில் உணரப்படும் அடியாரோடு உடனாய் இருத்தி. என் தலைவனே! நீ வழங்கிய அருளாகிய கண் கொண்டு உன்னை உணராதவர்கள் உன் இன்பத்தைப் பெறுதற்கு உரியவர் அல்லர்.

<u>திருவாரூர்</u>

எழுது கொடியிடையார் ஏழை மென்றோள்
இளையார்கள் நம்மை யிகழா முன்னம்
பழுது படநினையேல் பாவி நெஞ்சே
பண்டுதான் என்னோடு பகைதா னுண்டோ
முழுதுலகில் வானவர்கள் முற்றுங் கூடி
முடியால் உறவணங்கி முற்றம் பற்றி
அழுது திருவடிக்கே பூசை செய்ய
இருக்கின்றான் ஊர்போலும் ஆரூர் தானே. **#253**
தீ வினையை உடைய மனமே! உனக்கும் எனக்கும் முற்பட்ட பகை ஏதேனும் உண்டோ? கொடி போன்ற இடையையும் மெல்லிய தோள்களையும் மடப்பத்தையும் உடைய இளைய மகளிர் நம் மூப்பினை நோக்கி இகழ்வதன்முன் பயன்பட நினைவாயாக. உலகிலுள்ள தேவர்கள் எல்லோரும் எஞ்சாது கூடித் தலையால் முழுமையாக வணங்கி முன்னிடத்தை அடைந்து அழுது அவன் திருவடிக்கண் பூசனை புரியுமாறு அவன் உகந்தருளியிருக்கின்ற ஆரூரை நினையாது பிறிதொன்றனைப் பழுதுபட நினையாதே!

<u>திருவாரூர்</u>

தேரூரார் மாவூரார் திங்க ளூரார்
திகழ்புன் சடைமுடிமேல் திங்கள் சூடிக்
காரூரா நின்ற கழனிச் சாயற்
கண்ணார்ந்த நெடுமாடங் கலந்து தோன்றும்
ஓரூரா வுலகெலா மொப்பக் கூடி
உமையாள் மணவாளா என்று வாழ்த்தி
ஆரூரா ஆரூரா என்கின் றார்கள்
அமரர்கள்தம் பெருமானே யெங்குற் றாயே. **#254**

தேரூர், மாவூர், திங்களூர் இவற்றில் உறைந்து திகழும் செஞ்சடை மீது பிறை சூடி,நீர் வளம் சான்ற வயல்களையும் கண்ணுக்கு மகிழ்ச்சி தரும் மாடங்களையும் உடைய ஒவ்வோர் ஊராக உலகிலுள்ளார் எல்லாம் உமையாள் கணவனே என்று வாழ்த்தி ஆரூரா ஆரூரா என்று அழைக்கின்றார்கள். அவர்களுக்குக் காட்சி வழங்காமல் நீ எங்கே உள்ளாய்?

திருவாரூர்

கோவணமோ தோலோ உடை யாவது
கொல்லேறோ வேழமோ ஊர்வது தான்
பூவணமோ புறம்பயமோ அன்றா யிற்றான்
பொருந்தாதார் வாழ்க்கை திருந் தாமையோ
தீவணத்த செஞ்சடைமேல் திங்கள் சூடித்
திசைநான்கும் வைத்துகந்த செந்தீ வண்ணர்
ஆவணமோ ஒற்றியோ அம்மா னார்தாம்
அறியேன்மற் றூராமா றாரூர் தானே. **#255**

தலைவராகிய பெருமான் உடுப்பது கோவணமோ தோலோ? ஊர்வது காளையோ, யானையோ? அவர் இருக்குமிடம் பூவணமோ புறம்பயமோ? அவர் பொருந்தாதார் வாழ்க்கையாகிய ஐயமேற்றுண்டல் அழகோ அழகன்றோ? தீப்போன்ற செஞ்சடை மேல் பிறை சூடி நான்கு திசைகளையும் தம் இருப்பிடமாகக் கொண்ட செந்நிறத்து எம்பெருமானார் இப்பொழுது இருக்குமிடம் ஒற்றியூரோ ஆரூரோ அறியேன். அவர்திருவுள்ளம் எவ்வெவற்றில் எவ்வாறாகி உள்ளதோ?

திருவாரூர்

ஏந்து மழுவாளர் இன்னம் பராஅர்
எரிபவள வண்ணர் குடமூக் கிலார்
வாய்ந்த வளைக்கையாள் பாக மாக
வார்சடையார் வந்து வலஞ்சு ழியார்
போந்தா ரடிகள் புறம்ப யத்தே

புகலூர்க்கே போயினார் போரே ரேறி
ஆய்ந்தே யிருப்பார்போ யாரூர் புக்கார்
அண்ணலார் செய்கின்ற கண்மா யமே. **#256**

மழுப்படையை ஏந்திய பெருமான் இன்னம்பரில் இருந்தார். ஒளி வீசும் பவள நிறத்தை உடைய அவர் குடமூக்கில் இருந்தார். நீண்ட சடையை உடைய அப்பெருமானார் வளையல் அணிந்த கைகளை உடைய பார்வதி பாகராக வலஞ்சுழிக்கு வந்தார். அங்கிருந்து புறம்பயத்துக்கும் அடுத்துப் புகலூருக்கும் போயினார். போரிடும் காளை மீது இவர்ந்து தம் இருப்பிடத்தை முடிவு செய்தவர் போலத் திருவாரூரிலே குடிபுகுந்துவிட்டார். அப்பெருமானார் செய்வன யாவும் கண்கட்டுவித்தை போல உள்ளன.

திருவாரூர்

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்ந்தொன் றாகி
உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்
வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோ காரால்
மருவாகி நின்னடியே மறவே னம்மான்
மறித்தொருகாற்பிறப்புண்டேல் மறவா வண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தெங் கூராய்
செம்பொனே கம்பனேதிகைத்திட் டேனே. **#257**

கருப்பையில் துளியாய்ப்புகுந்து நெகிழ்ந்த பிண்டமாய் இருந்து தழைத்து மூளையும் கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்து ஓர் உருவம் எய்தி இவ்வுலகில் பிறப்பெடுத்துத் தாய் ஒருத்தியால் வளர்க்கப்பட்ட உயிரும் அந்நிலையில் நிலைத்து நில்லாது எந்த நேரத்திலும் உடம்பை விடுத்து நீங்கலாம். ஆதலின் அடியேன் உன் திருவடிகளைப் பொருந்தி அவற்றை மறவாமல் இருக்கின்றேன். மீண்டும் அடியேனுக்கு ஒருபிறவி உண்டாகுமாயின் உன்னை மறவாதிருத்தல் கூடுங்கொல்லோ என்று ஐயுற்றுத் திருவாரூர் மணவாளா! திருத்தெங்கூராய்! செம்பொன் ஏகம்பனே! என்று உன் திருப்பெயர்களைக் கூறியவாறு கலங்குகின்றேன்.

திருவாரூர்

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்

அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே. #258

முதலில் சிவபெருமான் என்று அவன் பெயரைக் கேட்டு, அவனுடைய பொன்வண்ணத்தைக் கேட்டு, அவனுடைய திருவாரூரைக் கேட்டு மீண்டும் அவன் திறத்து நீங்காத காதல் உடையவளாயினாள். தாயையும் தந்தையையும் அன்றே மனத்தால் துறந்தாள். உலகவர்கூறும் 'கிழவோற் சேர்தல் கிழத்திக்கு இல்லை' என்ற நெறிமுறையை விடுத்தாள். தலைவனையே நினையும் நினைவிலே தான்செய்யும் செயல்களை அறியாது ஒழிந்தாள். கன்னி எனப்படும் தன் பெயர் நீங்கப் பெற்று அவன் உரிமை என்ற பெயரைக் கொண்டாள். அந்நங்கை அத்தலைவன் திருவடிகளை அணைந்து தனக்கென ஒன்றின்றி அவன் வழியளாய் ஒழிந்தாள்.

திருவாரூர்

ஆடுவாய் நீநட்டம் அளவிற் குன்றா
அவியடுவார் அருமறையோ ரறிந்தே னுன்னைப்
பாடுவார் தும்புருவும் நார தாதி
பரவுவார் அமரர்களும் அமரர் கோனும்
தேடுவார் திருமாலும் நான்மு கனுந்
தீண்டுவார் மலைமகளுங் கங்கை யாளும்
கூடுமே நாயடியேன் செய்குற் றேவல்
குறையுண்டே திருவாரூர் குடிகொண் டீர்க்கே. #259

திருவாரூர்ப் பெருமானே! நீ கூத்தாடுவாய், வேதம் வல்லார் விதிப்படி செய்ய வேண்டும் அளவிற் குறையாமல் உன் நிவேதனத்திற்குரிய அவியைச் சமைப்பார்கள். தும்புருவும் நாரதன் முதலியோரும் உன் பெருமையைப் பாடுவர். தேவர்களும் தேவேந்திரனும் உன்னை முன் நின்று துதிப்பார்கள். திருமாலும் பிரமனும் உன்னைத் தேடுவார்கள். மலைமகளும் கங்கையும் உன்னைத் தழுவுவார்கள். இவ்வளவு செய்திகளையும் அடியேன் அறிந்துள்ளேன். ஆதலின் நாய்போலும் அடியவனாகிய நான் செய்யும் சிறுபணிகள் உனக்கு ஏற்குமோ? ஏலாவோ? அறியேன்.

திருவாரூர்

நீரூருஞ் செஞ்சடையாய் நெற்றிக் கண்ணாய்
நிலாத்திங்கள் துண்டத்தாய் நின்னைத் தேடி
ஓரூரும் ஒழியாமே யொற்றித் தெங்கும்
உலகமெலாந் திரிதந்து நின்னைக் காண்பான்

தேரூரும் நெடுவீதி பற்றி நின்று
திருமாலும் நான்முகனுந் தேர்ந்துங் காணா
தாரூரா ஆரூரா என்கின் றார்கள்
அமரர்கள்தம் பெருமானே ஆரூ ராயே. **#260**
ஆரூர்ப் பெருமானே! கங்கை தங்கும் செந்நிறச் சடையனே! நெற்றியில் கண்ணுடையவனே! நிலாத்திங்கள் துண்டம் ஆகிய பிறை சூடியே! உன்னைத்தேடி நீ இருக்கும் இடத்தை ஆராய்ந்தவாறே, ஓர் ஊர்கூட எஞ்சாமல் உலகம் முழுதும் எங்கும் திரிந்து. உன்னைக் காண்பதற்குத் தேர்கள் உலவும் பரந்த விதிகளியே காத்திருந்து, திருமாலும் பிரமனும் கூட முயன்றும் காண இயலாதவர்களாய், 'தேவர்கள் தலைவனே' ஆரூரா! ஆரூரா! என்று அழைக்கின்றார்கள்.

<u>திருவாரூர்</u>

நல்லூரே நன்றாக நட்ட மிட்டு
நரையேற்றைப் பழையாறே பாய ஏறிப்
பல்லூரும் பலிதிரிந்து சேற்றூர் மீதே
பலர்காணத் தலையாலங் காட்டி னூடே
இல்லார்ந்த பெருவேளூர்த் தளியே பேணியிராப்பட்டீச் சரங்கடந்து மணற்கால் புக்கு
எல்லாருந் தளிச்சாத்தங் குடியிற் காணஇறைப்பொழுதில் திருவாரூர் புக்கார் தாமே. **#261**
நல்லூரில் நன்றாகக் கூத்து நிகழ்த்திப் பழையாறையை நோக்கி வெண்ணிறக் காளையை இவர்ந்து, பல ஊர்களிலும் பிச்சைக்காகத் திரிந்து, சேற்றூரில் பலர் காண நின்று, தலையாலங் காட்டினூடே மறைந்து நின்று, பெருவேளூர்க் கோயிலிலே விரும்பித் தங்கி, பட்டீச்சரத்தில் இராப்பொழுதைக் கழித்து மணற்காலில் நுழைந்து தளிச்சாத்தங் குடி வழியாக எல்லாரும் காணச் சென்று ஒரு நொடிப் பொழுதில் திருவாரூரில் எம் பெருமான் புகுந்தார்.

<u>திருவாரூர்</u>

கருத்துத்திக் கதநாகங் கையி லேந்திக்
கருவரைபோற் களியானை கதறக் கையால்
உரித்தெடுத்துச் சிவந்ததன்தோல் பொருந்த மூடி
உமையவளை யச்சுறுத்தும் ஒளிகொள் மேனித்
திருத்துருத்தி திருப்பழனந் திருநெய்த் தானந்
திருவையா றிடங்கொண்ட செல்வர் இந்நாள்
அரிப்பெருத்த வெள்ளேற்றை அடரவேறி
யப்பனார் இப்பருவ மாரூ ராரே. **#262**

கரிய படப்புள்ளிகளை உடைய, கோபிக்கும் பாம்பினைக் கையில் கொண்டு, பார்வதியை அச்சுறுத்திய பெரிய மலையைப் போன்ற மத யானை பிளிறும்படியாக அதன் தோலை உரித்துச் சிவந்ததம் மேனி மீது பொருந்தப் போர்த்து ஒளி பொருந்திய திருமேனியை உடைய செல்வராம் சிவபெருமானார் திருத்துருத்தி, திருப்பழனம், திருநெய்த்தானம், திருவையாறு என்ற திருத்தலங்களை உறைவிடமாகக் கொண்டு இந்நாளில் தசை மடிப்பால் கீற்றுக்கள் அமைந்த பிடரியை உடைய வெண்ணிறக் காளையை அது சுமக்குமாறு இவர்ந்து, இப்பொழுது திருவாரூரை உகந்தருளியிருக்கிறார்.

திருவாரூர்

திருவாரூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

பாதித்தன் திருவுருவிற் பெண்கொண் டானைப்
பண்டொருகால் தசமுகனை அழுவித் தானை
வாதித்துத் தடமலரான் சிரங்கொண் டானை
வன்கருப்புச் சிலைக்காம னுடல் அட்டானைச்
சோதிச்சந் திரன்மேனி மறுச்செய் தானைச்
சுடரங்கி தேவனையோர் கைக்கொண் டானை
ஆதித்தன் பற்கொண்ட அம்மான் தன்னை
ஆரூரிற் கண்டடியேன் அயர்த்த வாறே. **#263**

பார்வதி பாகனாய்ப் பண்டு இராவணனை வருத்தியவனாய், வருத்திப் பிரமன் தலை ஒன்றை நீக்கியவனாய், வலிய கரும்பு வில்லை உடைய மன்மதன் உடலை எரித்தவனாய், ஒளி பொருந்திய சந்திரனுடைய உடலில் களங்கத்தை உண்டாக்கியவனாய், ஒளி வீசும் அக்கினி தேவனுடைய கை ஒன்றனைப் போக்கிச் சூரியன் ஒருவனுடைய பற்களை நீக்கிய அப்பெருமானைத் திருவாரூரில் அடியேன் தரிசித்து அவனைத் தவிர ஏனையவற்றை எல்லாம் மறந்தேன்.

திருவாரூர்

வெற்புறுத்த திருவடியாற் கூற்றட் டானை
விளக்கினொளி மின்னினொளி முத்தின் சோதி
ஒப்புறுத்த திருவுருவத் தொருவன் தன்னை
ஓதாதே வேத முணர்ந்தான் தன்னை
அப்புறுத்த கடல்நஞ்ச முண்டான் தன்னை
அமுதுண்டார் உலந்தாலும் உலவா தானை

அப்புறுத்த நீரகத்தே அழலா னானை
ஆரூரிற் கண்டடியேன் அயர்த்த வாறே. **#264**
இராவணன் பொருட்டு மலையை அழுத்திய திருவடியால் கூற்றுவனை உதைத்தவனாய், விளக்கு மின்னல் முத்து இவற்றை ஒத்த திருமேனி ஒளியினனாய், வேதங்களை ஓதாது உணர்ந்தவனாய், நீரை மிகுதியாக நிறைத்த கடலில் தோன்றிய விடத்தை உண்டு அமுதமுண்ட தேவர் இறந்த போதும் தான் இறவாதவனாய், கடல் நீரினுள் இருக்கும் பெண் குதிரை முக வடிவினதாகிய தீயாகவும் உள்ள பெருமானை அடியேன் ஆரூரில் கண்டு அயர்த்தேன்.

திருவாரூர்

ஒருகாலத் தொருதேவர் கண்கொண் டானை
யூழிதோ றூழி யுயர்ந்தான் தன்னை
வருகாலஞ் செல்கால மாயி னானை
வன்கருப்புச் சிலைக்காம னுடலட் டானைப்
பொருவேழக் களிற்றுரிவைப் போர்வை யானைப்
புள்ளரைய னுடல்தன்னைப் பொடிசெய் தானை
அருவேள்வி தகர்த்தெச்சன் தலைகொண் டானை
ஆரூரிற் கண்டடியேன் அயர்த்த வாறே. **#265**
தக்கன் வேள்வி செய்த காலத்தில் சூரியன் ஒருவனுடைய கண்களை நீக்கியவனாய், ஊழிகள் தோறும் மேம்பட்டுத் தோன்றுபவனாய், எதிர்காலமும் இறந்த காலமும் ஆயினவனாய், வலிய கரும்பு வில்லை ஏந்திய மன்மதனுடைய உடலை நலிவித்தவனாய், தன்னோடு பொரவந்த யானையை உரித்துப் போர்த்தவனாய், செருக்கொடு வந்த கருடன் உடலைப் பொடி செய்தவனாய், அரிய வேள்வியை அழித்து வேள்வித் தேவனின் தலையை நீக்கிய பெருமானை அடியேன் ஆரூரில் கண்டு அயர்த்தேன்.

திருவாரூர்

மெய்ப்பால்வெண் ணீறணிந்த மேனி யானை
வெண்பளிங்கி னுட்பதித்த சோதி யானை
ஒப்பானை யொப்பிலா வொருவன் தன்னை
உத்தமனை நித்திலத்தை யுலக மெல்லாம்
வைப்பானைக் களைவானை வருவிப் பானை
வல்வினையேன் மனத்தகத்தே மன்னி னானை
அப்பாலைக் கப்பாலைக் கப்பா லானை
ஆரூரிற் கண்டடியேன் அயர்த்த வாறே. **#266**
திருநீறணிந்த மேனியனாய்ப் பளிங்கினுள் பதித்தாற் போன்ற

செஞ்சோதியனாய்த் தன்னொப்பார் பிறர் இல்லாதானாய், உத்தமனாய், முத்துப் போன்று இயற்கை ஒளி உடையவனாய், உலகங்களை எல்லாம் காத்து அழித்துப் படைப்பவனாய்த் தீவினையை உடைய அடியேன் மனத்தில் நிலைபெற்றவனாய், மாயைக்கு அப்பாற்பட்ட உயிருக்கு அப்பாற்பட்டவனை அடியேன் ஆரூரில் கண்டு அயர்த்தேன்.

திருவாரூர்

பிண்டத்திற் பிறந்ததொரு பொருளை மற்றைப்
பிண்டத்தைப் படைத்ததனைப் பெரிய வேதத்
துண்டத்திற் றுணிபொருளைச் சுடுதீ யாகிச்
சுழல்காலாய் நீராகிப் பாரா யிற்றைக்
கண்டத்தில் தீதினஞ் சமுது செய்துகண்மூன்று படைத்ததொரு கரும்பைப் பாலை
அண்டத்துக் கப்புறத்தார் தமக்கு வித்தைஆரூரிற் கண்டடியேன் அயர்த்த வாறே. **#267**

மனித உடலில் பிறந்த உயிர் கொண்டு உணரும் உணர்விற்குத் தோன்றுபவனாய், அவ்வுடலையும் படைத்தவனாய்ப் பெரிய வேதங்களின் யாப்பினுள் துணியப்படும் பரம்பொருளாகக் கூறப்படுபவனாய்ச் சுடு தீயாகியும் சுழன்றடிக்கும் காற்றாகியும் நீராகியும் மண்ணாகியும் இருப்பவனாய்த் தீமைக்கு இருப்பிடமாகிய நஞ்சினை உண்டு அதனைக் கழுத்தளவில் இருத்தியவனாய், முக்கண்ணனாய்க் கரும்பும் பாலும் போல இனியனாய், முத்தர்களுக்குப் பயன் தரும் பொருளாய் உள்ள பெருமானை அடியேன் ஆரூரில்கண்டு அயர்த்தேன்.

திருவாரூர்

நீதியாய் நிலனாகி நெருப்பாய் நீராய்
நிறைகாலாய் இவையிற்றின் நியம மாகிப்
பாதியா யொன்றாகி யிரண்டாய் மூன்றாய்ப்
பரமாணு வாய்ப்பழுத்த பண்க ளாகிச்
சோதியா யிருளாகிச் சுவைக ளாகிச்சுவைகலந்த அப்பாலாய் வீடாய் வீட்டின்
ஆதியாய் அந்தமாய் நின்றான் தன்னைஆரூரிற் கண்டடியேன் அயர்த்த வாறே. **#268**

ஒழுங்குக்கு ஓர் உறைவிடமாய், நிலம் நெருப்பு நீர் எங்கும் நிறைந்த காற்று என்ற இவற்றின் ஒழுங்குகளையும் பண்புகளையும் நிருவகிப்பவனாய், எல்லாப் பொருள்களுக்கும் பற்றுக் கோடாய்ப் பரசிவமாகிய ஒன்றாய்ச் சிவமும் சத்தியும் என இரண்டாய், அயன்மால்

அரன் என்ற மும்மூர்த்திகளாய், அணுவுக்கும் அணுவாய் நிறைந்திருப்பவனாய், செவ்வனம் நிரம்பிய ஏழிசை வடிவினனாய்ச் சோதியாகியும் இருளாகியும் பொருள்களின் சுவைகளாகியும் அடியார்களுக்கு எத்திறத்தினும் சுவைக்கும் திறம் கலந்த பகுதியனாய், வீட்டுலகம் அருளுபவனாய், வீட்டிற்கு வாயிலாகிய ஞானமும் அந்தஞானத்தால் அடையத்தக்க பயனுமாய், அடியார்க்குத் தன்னை அடையத்தானே ஆறும் பேறுமாக (உபாயமும்உபமேயமும்) இருக்கும் பெருமானைத் திருவாரூரில் அடியேன் கண்டு அவனைத் தவிர ஏனைய எல்லாவற்றையும் மறந்தேன்.

திருவாரூர்

திருவாரூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்ததுதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்ற னடித்தொடர்வா னுழிதர் கின்றேன்
இடையிலேன் கெடுவீர்காள் இடறேன் மின்னே. **#269**

நிலையின்மையும் அழிதலுடைமையும் உடைய உலகப் பொருள்களாகிய பெரிய கடலிலே தடுமாறுகின்ற நல்வினை தீவினைகளாகிய இருவினைகளே! நீங்கள் எனக்கு நலம் செய்வீர் அல்லீர். இந்த நிலையின்மையை உடைய பெரிய உடலாகிய கடலைச்சிறிது, சிறிதாக அரித்துத் தின்னும் உங்களுக்குத் தின்றற்கு உரிய பொருள் எதுவும் என்னிடத்தில் இல்லை. ஏனெனில் யான் தேவர்கள் தலைவனாய், எனக்கும் தலைவனாய்க் குளிர்ந்த பெரிய ஆரூரில் உள்ள பெரியகடல் போல்வானாய்த் தன்னைத் தொடர்ந்த அடியார்களைத் தன் திருவடிப் பேரின்பத்தில் அடங்குமாறு செய்கின்ற எம்பெருமானுடைய திருவடிகளைத் தொடர்வதில் இடையீடு இல்லாமல் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றேன். அழிந்து போகக் கூடியவர்களே! இடையில் நின்று என்னைத் தடுக்காதீர்கள்.

திருவாரூர்

ஐம்பெருமா பூதங்காள் ஒருவீர் வேண்டிற்

றொருவீர்வேண் டீர்ஈண்டிவ் வவனி யெல்லாம்
உம்பரமே உம்வசமே யாக்க வல்லீர்க்
கில்லையே நுகர்போகம் யானேல் வானோர்
உம்பருமா யூழியுமா யுலகே ழாகிஒள்ளாரூர் நள்ளமிர்தாம் வள்ளல் வானோ
தம்பெருமா னாய்நின்ற அரனைக் காண்பேன்தடைப்படுவே னாக்கருதித் தருக்கேன் மின்னே. **#270**

ஐம்பெரும் பூதங்களே! உங்களிலே ஒருவர் விரும்பியதை மற்றவர் விரும்பாது இவ்வுலகம் முழுதையும் உம்மால் தாங்கப்படுவதாக்கி உம் வசப்படுத்துவதில் நீங்கள் ஆற்றலுடையீர். உங்களுக்கு என்பால் நுகரத்தக்க இன்பம் தரும் பொருள் ஒன்றுமில்லை. ஏனெனில் யான் தேவர்களும் தேவருலகமும் ஊழிகளும் ஏழு உலகங்களுமாகி, வள்ளலாய்த் தேவர் தலைவனாய், ஒளிபொருந்திய ஆரூரில் குளிர்ந்த அமுதமாக இருக்கும் அரனை இடையீடு இன்றித் தொடர்ந்து எப்பொழுதும் காண்பேன் ஆவேன். உங்களுடைய இடையூறுகளில் என்னை அகப்படுவேனாய்க் கருதிச் செருக்குக் கொள்ளாதீர்கள்.

<u>திருவாரூர்</u>

சில்லுருவிற் குறியிருத்தி நித்தல் பற்றிச்
செழுங்கண்ணால் நோக்குமிது வூக்க மன்று
பல்லுருவில் தொழில்பூண்ட பஞ்ச பூதப்
பளகீரும் வசமன்றே பாரே லெல்லாம்
சொல்லுருவிற் சுடர்மூன்றாய் உருவம் மூன்றாய்த்தூநயனம் மூன்றாகி ஆண்ட ஆரூர்
நல்லுருவிற் சிவனடியே யடைவேன் நும்மால்நமைப்புண்ணேன் கமைத்துநீர் நடமின் களே. **#271**

பல வடிவங்களில் திரிந்து வேறுபடுகின்ற ஐம்பூதங்களாகிய பொய்ம்மையுடையீர்! அழிகின்ற சில உருவங்களைக் குறிக்கோளாகக் கொண்டு நாடோறும் அவற்றை விரும்பிப் புறத்தில் அழகாக உள்ள கண்களால் பார்க்கும் இச்செயல் நல்லொழுக்கம் ஆகாது. இவ்வுலகம் முழுதும் உம் வசப்பட்டிருப்பது போதாதா?யானோ ஐம்புலங்களில் ஒன்றாகச் சொல்லப்படுகின்ற உருவத்தினை உடைய ஞாயிறு திங்கள் தீ என்ற முச்சுடர்களாய், அயன் அரி அரன் என்ற உருவம் மூன்றாய், அச்சுடர்களாகிய கண்கள் மூன்றாய்க் கொண்டு, இவ்வுலகத்தை ஆளும் ஆரூரில் உள்ள நல்ல செந்நிறத்தவனாகிய சிவனடிகளையே அடைவேனாக உள்ளேன். உம்மால் தேய்க்கப்படுவேன் அல்லேன். உமக்கு நான் இணங்காததைப் பொறுத்துக்கொண்டு நுமக்கு வயப்படும்

வேற்றுப் பொருள்களை நோக்கிச் செல்லுங்கள்.

திருவாரூர்

உன்னுருவிற் சுவையொளியூ றோசை நாற்றத்
துறுப்பினது குறிப்பாகு மைவீர் நுங்கள்
மன்னுருவத் தியற்கைகளால் வைப்பீர்க் கையோ
வையகமே போதாதே யானேல் வானோர்
பொன்னுருவைத் தென்னாரூர் மன்னு குன்றைப்
புவிக்கெழிலாஞ் சிவக்கொழுந்தைப் புகுந்தென் சிந்தை
தன்னுருவைத் தந்தவனை யெந்தை தன்னைத்
தலைப்படுவேன் துலைப்படுப்பான் தருக்கேன் மின்னே. **#272**

விரும்பி நினைக்கப்படும் உடலிலே, வாய் கண் உடல் செவி மூக்கு என்ற ஐம்பொறிகளில் புலன்களாக நின்ற சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐவீர்களே! உங்களுடைய மயக்கம் பொருந்திய உருவங்களின் இயற்கைகளால் சுவைக்கின்ற உங்களுக்கு இந்தப் பரந்த உலகம் போதாதா? யானோ தேவர்களுக்கு அழகிய உருவினைத் தந்தவனாய், அழகிய ஆரூரில் நிலைபெற்ற மலைபோல் வானாய், இவ்வுலகுக்கு எல்லாம் அழகாகும் சிவக்கொழுந்தாய், என் சிந்தையுள்ளே புகுந்து அதன்கண் தன்னுருவைத் தந்த என் தலைவனை எப்பொழுதும் அணைந்திருப்பேன். ஆதலால் என்னை உம் அளவில் படுத்தற்குச் செருக்கிக்கொண்டு என்பக்கல் வாராதீர்கள்.

திருவாரூர்

துப்பினைமுன் பற்றறா விறலே மிக்க
சோர்வுபடு சூட்சியமே சுகமே நீங்கள்
ஒப்பனையைப் பாவித்திவ் வுலக மெல்லாம்
உழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதே யென்றன்
வைப்பினைப்பொன் மதிலாரூர் மணியை வைகல்
மணாளனையெம் பெருமானை வானோர் தங்கள்
அப்பனைச்செப் பிடவடைவேன் நும்மால் நானும்
ஆட்டுணே னோட்டந்தீங் கலையேன் மின்னே. **#273**

நுகர்பொருள்களிடத்துப் பண்டுதொட்டுப் பற்றுக்கொள்ளுதல் நீங்காமைக்கு ஏதுவாகிய வெற்றி மிக்க பிறர் மயங்குதற்குக் காரணமான வஞ்சனைகளே! நீங்கள் செயற்கை அழகைப் பரப்பி நீங்கள் கருதிய செயலைச் சுகமாக முடிப்பதற்கு இவ்வுலகம் முழுதும் உழலும் செயல் உங்களுக்கு அரிதன்று. ஆனால் அடியேன் என்சேமநிதியாய் அழகிய மதில்களை உடைய ஆரூரில் மாணிக்கமாய், வைகல் என்ற தலத்தில் மணவாளனாய், எனக்கும் தேவர்களுக்கும் பெருமானாய் உள்ளவனை

முறைப்படி அடைபவன். ஆதலின் உங்களால் நான் மற்றவர்போல ஆட்டுவிக்கப்பட மாட்டேன். ஓடிவந்து என்னை வருத்த முயலாதீர்கள்.

திருவாரூர்

பொங்குமத மானே ஆர்வச் செற்றக்
குரோதமே யுலோபமே பொறையே நீங்கள்
உங்கள்பெரு மாநிலத்தி னெல்லை யெல்லாம்
உழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதே யானேல்
அங்கமலத் தயனொடுமா லாகி மற்று
மதற்கப்பா லொன்றாகி யறிய வொண்ணாச்
செங்கனகத் தனிக்குன்றைச் சிவனை யாரூர்ச்
செல்வனைச்சேர் வேன்நும்மாற் செலுத்து ணேனே. **#274**

பெருமிதம் கொண்ட செருக்கே! மாண்பு இழந்த மானமே! காமமே! பகையே! கோபமே! கஞ்சத்தனமே! துன்பச் சுமைகளே! நீங்கள் உங்கள் ஆளுகைக்கு உட்பட்ட இப்பேருலகத்தின் எல்லைகாறும் நீங்கள் கருதிய செயலை நிறைவேற்றுவதற்குச் சுற்றித்திரிவது உங்களுக்கு அரிது அன்று. ஆனால் யானோ செந்தாமரையில் தங்கிய பிரமனும் திருமாலும் ஆகி அவர்களையும் கடந்த ஒன்றே ஆகிய பரம்பொருளாகி, எவராலும் தம் முயற்சியால் அறிய முடியாத ஒப்பற்ற செம்பொற் குன்று போன்ற சிவபெருமானாகிய ஆரூர்ச் செல்வனைச் சேர்கின்றவன். உம்மால் செலுத்தப்படுவேன் அல்லேன்.

திருவாரூர்

இடர்பாவ மெனமிக்க துக்க வேட்கை
வெறுப்பேயென் றனைவீரும் உலகை யோடிக்
குடைகின்றீர்க் குலகங்கள் குலுங்கி நுங்கள்
குறிநின்ற தமையாதே யானேல் வானோர்
அடையார்தம் புரமூன்று மெரிசெய் தானை
அமரர்கள்தம் பெருமானை யரனை ஆரூர்
உடையானைக் கடுகச்சென் றடைவேன் நும்மா
லாட்டுணே னோட்டந்தீங் கலையேன் மின்னே. **#275**

துன்பங்களே! பாவங்களே! மிக்க துயரம் தரும் வேட்கையே! வெறுப்பே! எல்லீரும் உலகுகளைச் சுற்றிச் சுழன்று அவற்றை வசப்படுத்த அவை தடுமாறி உங்கள் இட்ட வழக்காக இருத்தல் போதாதா? யானோ தேவர்களின் பகைவரான அசுரர்களின் முப்புரங்களையும் எரித்துத் தேவர்கள் பெருமானாய்த் தீங்குகளைப் போக்குபவனாயுள்ள ஆரூர்ப் பெருமானை விரையச் சென்று அடையப் போகிறேன். உம்மால் செயற்படுத்தப்படுவேன் அல்லேன். என்பக்கல் ஓடி வந்து என்னைத்

துன்புறுத்திநும் வசப்படுத்த முயலாதீர்கள்.

திருவாரூர்

விரைந்தாளும் நல்குரவே செல்வே பொல்லா
வெகுட்சியே மகிழ்ச்சியே வெறுப்பே நீங்கள்
நிரைந்தோடி மாநிலத்தை யரித்துத் தின்பீர்க்
கில்லையே நுகர்போகம் யானேல் வானோர்
கரைந்தோட வருநஞ்சை யமுது செய்த
கற்பகத்தைத் தற்பரத்தைத் திருவா ரூரில்
பரஞ்சோதி தனைக்காண்பேன் படேன்நும் பண்பிற்
பரிந்தோடி யோட்டந்து பகட்டன் மின்னே. **#276**

விரைந்து வந்து ஏவல் கொள்ளும் வறுமையே! செல்வமே! கொடிய கோபமே! மகிழ்ச்சியே! வெறுப்பே! நீங்கள் வரிசையாகச் சென்று இவ்வுலகத்தைச் சிறிது சிறிதாகக் குறைத்து உண்ணுவீர்கள். உங்களுக்கு நுகரத்தக்க இன்பம் கிட்டவில்லையா? யானோ தேவர்கள் ஓலமிட்டு ஓடுமாறு வெளிப்பட்ட விடத்தை உண்ட கற்பகமாய், உயிருக்கு மேற்பட்ட பொருளாய்த் திருவாரூரில் உள்ள மேம்பட்ட சோதி வடிவினனைக் காண்கின்றவன். உங்களுடைய பண்புகளில் அகப்படமாட்டேன். விரைந்து ஓடிவந்து என்னை அச்சுறுத்த முயலாதீர்கள்.

திருவாரூர்

மூள்வாய தொழிற்பஞ்சேந் திரிய வஞ்ச
முகரிகாண் முழுதுமிவ் வுலகை யோடி
நாள்வாயு நும்முடைய மம்ம ராணை
நடாத்துகின்றீர்க் கமையாதே யானேல் வானோர்
நீள்வான முகடதனைத் தாங்கி நின்றநெடுந்தூணைப் பாதாளக் கருவை யாரூர்
ஆள்வானைக் கடுகச்சென் றடைவேன் நும்மாலாட்டுணே
னோட்டந்தீங் கலையேன் மின்னே. **#277**

தத்தம் தொழில்களிலேயே ஈடுபட்ட ஐம்பொறிகளாகிய காக்கைகளே! இவ்வுலகம் முழுவதும் சுற்றித் திரிந்து ஒவ்வொரு நாளும் மயக்கமாகிய ஆட்சியை நடத்துகின்ற உமக்கு இன்னும் மனநிறைவு ஏற்படவில்லையா? யானோ தேவருலகின் உச்சியைத் தாங்கி நிற்கும் பெருந்தூணாய்ப் பாதாளத்துக்கும் அடிநிலையாய் ஆரூரை ஆளும் பெருமானை விரைந்து சென்று அடைவேன். உங்களால் செயற்படுத்தப்படுவேன் அல்லேன். ஓடி வந்து என்னை வருத்த முயலாதீர்கள்.

திருவாரூர்

சுருக்கமொடு பெருக்கநிலை நித்தல் பற்றித்
துப்பறையென் றனைவீரிவ் வுலகை யோடிச்
செருக்கிமிகை செலுத்தியும செய்கை வைகல்
செய்கின்றீர்க் கமையாதே யானேல் மிக்க
தருக்கிமிக வரையெடுத்த அரக்கன் ஆகந்தளரவடி யெடுத்தவன்றன் பாடல் கேட்டு
இரக்கமெழுந் தருளியஎம் பெருமான் பாதத்திடையிலேன்
கெடுவீர்காள் இடறேன் மின்னே. **#278**

சுருக்கமே! பெருக்கமே! காலநிலையே! செல்வமே! வறுமையே! இவ்வுலகைச் சுற்றிப் பெருமிதம் கொண்டு உங்கள் ஆட்சியைச் செலுத்தி நாடோறும் உங்கள் செயலை நிகழ்த்திக் கொண்டிருக்கும் செயல் போதாதோ? யானோ மிகவும் செருக்குற்றுக் கயிலையைப் பெயர்த்த இராவணனுடைய உடல் தளருமாறு அவனை அழுத்திப்பின் அவன் பாடலைக் கேட்டு இரங்கி அவனுக்கு அருளிய எம்பெருமானுடைய திருவடிகளிலே இடையீடு இன்றிச் சேர்ந்துள்ளேன். அழிந்து போகக் கூடிய நீங்கள் என்னைத் துன்புறுத்த முயலாதீர்கள்.

திருவாரூர்

திருவாரூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

நீற்றினையும் நெற்றிமே லிட்டார் போலும்
நீங்காமே வெள்ளெலும்பு பூண்டார் போலும்
காற்றினையுங் கடிதாக நடந்தார் போலுங்
கண்ணின்மேற் கண்ணொன் றுடையார் போலும்
கூற்றினையுங் குரைகழலால் உதைத்தார் போலுங்
கொல்புலித்தோ லாடைக் குழகர் போலும்
ஆற்றினையுஞ் செஞ்சடைமேல் வைத்தார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. **#279**

அழகிய திருவாரூர்த் திருமூலத்தானத்தில் உள்ள பெருமானார் நெற்றிக்கண் ஒன்று உடையாராய், நெற்றியில் திருநீறு அணிந்தவராய், வெள்ளிய எலும்புகளை விடாமல் அணிந்தவராய்க் காற்றைவிட விரைவாகச் செல்பவராய், ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்த திருவடியால் கூற்றுவனை உதைத்தவராய்த் தம்மால் கொல்லப்பட்ட புலித்தோல் ஆடையை உடுத்த இளையராய்க் கங்கையையும் சடை மேல்

வைத்தவராய், அகக்கண்களுக்குக் காட்சி நல்குகிறார்.

திருவாரூர்

பரியதோர் பாம்பரைமே லார்த்தார் போலும்
பாசுபதம் பார்த்தற் களித்தார் போலும்
கரியதோர் களிற்றுரிவை போர்த்தார் போலும்
கபாலங்கட் டங்கக் கொடியார் போலும்
பெரியதோர் மலைவில்லா எய்தார் போலும்
பேர்நந்தி யென்னும் பெயரார் போலும்
அரியதோர் அரணங்கள் அட்டார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. **#280**

அணி ஆரூர்த் திருமூலட்டானனார் பருத்த பாம்பினை இடையில் இறுக்க அணிந்தவராய், அருச்சுனனுக்குப் பாசுபதாத்திரம் வழங்கியவராய்க் கரிய யானைத் தோலினைப் போர்த்தவராய், மண்டை ஓட்டினையும் கட்டங்கப் படை எழுதிய கொடியினையும் உடையவராய்ப் பெரிய மலையை வில்லாகக் கொண்டு அம்பு எய்தவராய், நந்தி என்ற பெயரினையும் உடையவராய்ப் பகைவருடைய அழித்தற்கரிய மும்மதில்களையும் அழித்தவராய், நம் மனக்கண் முன் காட்சி வழங்குகின்றார்.

திருவாரூர்

துணியுடையர் தோலுடைய ரென்பார் போலுந்
தூய திருமேனிச் செல்வர் போலும்
பிணியுடைய அடியாரைத் தீர்ப்பார் போலும்
பேசுவார்க் கெல்லாம் பெரியார் போலும்
மணியுடைய மாநாகம் ஆர்ப்பார் போலும்வாசுகிமா நாணாக வைத்தார் போலும்
அணியுடைய நெடுவீதி நடப்பார் போலும்அணியாரூர்த் திருமூலட் டான னாரே. **#281**

கீளும் கோவணமும் ஆகிய குறைந்த உடைகளையும் தோல் உடையையும் உடையவராய்த் தூய திருமேனியை உடைய செல்வராய்,அடியார்களுடைய பிணிகளை நீங்குமாறு போக்குபவராய், மொழியைக் கடந்த பெரும்புகழாளராய், இரத்தினங்களை உடைய மேம்பட்ட நாகங்களை அணிந்தவராய், வாசுகி என்ற பாம்பினைத் தம் வில்லின் நாணாகக் கொண்டவராய், அழகிய நீண்ட வீதிகளில் உலாவுபவராய், அழகிய ஆரூர்ப் பெருமானார் மனக்கண் முன் காட்சி வழங்குகிறார்.

திருவாரூர்

புடைசூழ்ந்த பூதங்கள் வேதம் பாடப்
புலியூர்ச்சிற் றம்பலத்தே நடமா டுவார்
உடைசூழ்ந்த புலித்தோலர் கலிக்கச்சிமேற்
றளியுளார் குளிர்சோலை யேகம் பத்தார்
கடைசூழ்ந்து பலிதேருங் கங்கா ளனார்
கழுமலத்தார் செழுமலர்த்தார்க் குழலி யோடும்
விடைசூழ்ந்த வெல்கொடியார் மல்கு செல்வ
வீழி மிழலையே மேவி னாரே. **#282**

தம்மைச் சுற்றிப் பூதங்கள் வேதம் பாடப் புலியூர்ச் சிற்றம்பலத்தே கூத்து நிகழ்த்தும் பெருமான், புலித்தோலை உடுத்துக் கச்சிமேற்றளி, குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த ஏகம்பம், கழுமலம் இவற்றில் வீடுகள் தோறும் பிச்சைக்கு உலவும், முழு எலும்புக் கூட்டைத் தோளில் அணிந்த, வடிவத்தாராய், மலர் மாலையை அணிந்த கூந்தலை உடைய பார்வதியோடும் காளை வடிவம் எழுதப்பட்ட கொடியோடும் செல்வம் மிகும் வீழிமிழலையை விரும்பி வந்தடைந்தார்.

திருவாரூர்

ஏனத் திளமருப்புப் பூண்டார் போலும்
இமையவர்க ளேத்த இருந்தார் போலும்
கானக்கல் லாற்கீழ் நிழலார் போலுங்
கடல்நஞ்ச முண்டிருண்ட கண்டர் போலும்
வானத் திளமதிசேர் சடையார் போலும்
வான்கயிலை வெற்பின் மகிழ்ந்தார் போலும்
ஆனத்து முன்னெழுத்தாய் நின்றார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. **#283**

பன்றியின் முற்றாத கொம்பினை அணிந்தவராய்த் தேவர்கள் வழிபடும்படியாகத் தங்கியிருப்பவராய்க் காட்டில் உள்ள கல்லால மரத்தின் கீழ் அமர்ந்தவராய்க் கடல் நஞ்சினை உண்டு கறுத்த கழுத்தினராய்ப் பிறை சேர்ந்த சடையினராய், உயர்ந்த கயிலை மலையை உகந்து உறைபவராய், அகரமாகிய எழுத்து ஏனைய எழுத்துக்களின் தோற்றத்துக்குக் காரணமாக இருப்பது போல ஏனைய பொருள்களுக் கெல்லாம் காரணராய், காளையை இவர்ந்தவராய் அடியவர்கள் மனக்கண்முன் அழகிய ஆரூர்ப் பெருமானார் காட்சி வழங்குகிறார்.

திருவாரூர்

காமனையும் கரியாகக் காய்ந்தார் போலுங்
கடல்நஞ்ச முண்டிருண்ட கண்டர் போலும்
சோமனையுஞ் செஞ்சடைமேல் வைத்தார் போலும்
சொல்லாகிச் சொற்பொருளாய் நின்றார் போலும்
நாமனையும் வேதத்தார் தாமே போலும்
நங்கையோர் பால்மகிழ்ந்த நம்பர் போலும்
ஆமனையுந் திருமுடியார் தாமே போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. **#284**

அணி ஆரூர்த் திருமூலட்டானத்துப் பெருமானார் மன்மதனைச் சாம்பலாகுமாறு கோபித்துக்கடல் விடத்தை உண்டு நீலகண்டராய்ப் பிறையையும் சடையில் சூடிச் சொல், சொற்பொருள், நாவால் உச்சரிக்கப்படும் வேதம் இவற்றின் வடிவினராய்ப் பார்வதி பாகராய்க் கங்கையை முடியில் வைத்தவராய் அடியவர் மனக் கண்ணுக்குக் காட்சி வழங்குகிறார்.

<u>திருவாரூர்</u>

முடியார் மதியரவம் வைத்தார் போலும்
மூவுலகுந் தாமேயாய் நின்றார் போலும்
செடியார் தலைப்பலிகொண் டுழல்வார் போலுஞ்
செல்கதிதான் கண்ட சிவனார் போலும்
கடியார்நஞ் சுண்டிருண்ட கண்டர் போலுங்கங்காள வேடக் கருத்தர் போலும்
அடியா ரடிமை யுகப்பா போலும்அணியாரூர்த் திருமூலட் டான னாரே. **#285**

அணி ஆரூர்த் திருமூலட்டானத்துப் பெருமானார் முடியில் பிறையும் பாம்பும் சூடி, மூவுலகும் தாமேயாய்ப் பரந்து புலால் நாற்றம் கமழும் மண்டையோட்டில் பிச்சை ஏற்றுத் திரிந்து வீடுபேற்றிற்கு உரிய வழியைக் காட்டி மற்றவர் நீக்கும் நஞ்சுண்டு நீல கண்டராய், எலும்புக்கூட்டினை அணிந்த வேடத்தை உடைய தலைவராய், அடியார்களுடைய அடிமைப் பணியினை உகப்பவராய் மனக்கண்முன் அடியவர்க்குக் காட்சி வழங்குகின்றார்.

<u>திருவாரூர்</u>

இந்திரத்தை யினிதாக ஈந்தார் போலும்
இமையவர்கள் வந்திறைஞ்சும் இறைவர் போலும்
சுந்தரத்த பொடிதன்னைத் துதைந்தார் போலுந்
தூத்தூய திருமேனித் தோன்றல் போலும்
மந்திரத்தை மனத்துள்ளே வைத்தார் போலும்

மாநாகம் நாணாக வளைத்தார் போலும்
அந்திரத்தே யணியாநஞ் சுண்டார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. **#286**

அணி ஆரூர்த் திருமூலட்டானத்துப் பெருமானார் இந்திர பதவியைத் தக்கவருக்கு மகிழ்வோடு ஈந்து, தேவர்கள் வந்து வழிபடும் தலைவராய் அழகியநீறு பூசி, மிகவும் தூய திருமேனியை உடைய தலைவராய், அடியவர்கள் உள்ளத்தே தம் திருவைந் தெழுத்தை நிலையாக அமைத்து வாசுகியைத் தம் மலைவில்லின் நாணாக வில்லினை வளைத்து இணைத்து, அழகிய நிலைபெற்ற அணியாகுமாறு விடம் உண்டு நீலகண்டராய் நம்மனக்கண்முன் காட்சி வழங்குகின்றார்.

<u>திருவாரூர்</u>

பிண்டத்தைக் காக்கும் பிரானார் போலும்
பிறவி யிறவி யிலாதார் போலும்
முண்டத்து முக்கண் ணுடையார் போலும்
முழுநீறு பூசும் முதல்வர் போலும்
கண்டத் திறையே கறுத்தார் போலும்
காளத்தி காரோணம் மேயார் போலும்
அண்டத்துக் கப்புறமாய் நின்றார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. **#287**

எல்லா உடம்புகளையும் பாதுகாக்கும் தலைவரான திருவாரூர்ப் பெருமானார் பிறப்பு இறப்பு அற்றவராய், நெற்றியில் மூன்றாவது கண்ணை உடையவராய், உடல் முழுதும் நீறு பூசும் தலைவராய்க் கழுத்து சிறிதே கறுத்தவராய்க் காளத்தி, குடந்தை, நாகை என்ற காரோணப்பதிகள் ஆகியவற்றை உகந்தருளியிருப்பவராய் அண்டத்துப் புறத்தும் உள்ளவராய் நம் மனக்கண்முன் காட்சி வழங்குகிறார்.

<u>திருவாரூர்</u>

ஒருகாலத் தொன்றாகி நின்றார் போலும்
ஊழி பலகண் டிருந்தார் போலும்
பெருகாமே வெள்ளந் தவிர்த்தார் போலும்
பிறப்பிடும்பை சாக்காடொன் றில்லார் போலும்
உருகாதார் உள்ளத்து நில்லார் போலும்
உகப்பார் மனத்தென்றும் நீங்கார் போலும்
அருகாக வந்தென்னை யஞ்சே லென்பார்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. **#288**

அணி ஆரூர்த் திருமூலத்தானப் பெருமான் ஒரு காலத்தில் தாம் ஒருவரேயாகிப் பல ஊழிக் காலங்களையும் கண்டு, கங்கையைப்

பெருகாதபடி சடையில் கொண்டு தவிர்த்து, பிறப்பு துயரம் சாக்காடு என்பன இல்லாதவராய், உருகாத மனத்தவர் உள்ளத்தில் உகந்து தங்காதவராய், தம்மை விரும்புவர் உள்ளத்தை என்றும் நீங்காதவராய் அருகில் வந்து எனக்கு அஞ்சேல் என்று அருள் செய்பவர் ஆவர்.

திருவாரூர்

நன்றாக நடைபலவும் நவின்றார் போலும்
ஞானப் பெருங்கடற்கோர் நாதர் போலும்
கொன்றாகிக் கொன்றதொன் றுண்டார் போலுங்
கோளரக்கர் கோன்தலைகள் குறைத்தார் போலும்
சென்றார் திரிபுரங்க ளெய்தார் போலுந்
திசையனைத்து மாயனைத்து மானார் போலும்
அன்றாகில் ஆயிரம் பேரார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. **#289**

அணி ஆரூர்த் திருமூலட்டானப் பெருமானார் நல்ல ஒழுக்க நெறிகளை நூல்கள் வாயிலாக அறிவித்து ஞானப்பெருங்கடற்கு உரிமை உடைய தலைவராய், வேள்வியில் கொல்லப்பட்டதனை வேள்வி செய்யும் அடியவர் உகப்பிற்காக நுகர்பவராய், இராவணன் தலைகள் பத்தினையும் நசுக்கியவராய்ப் பகைவருடைய திரிபுரங்களை அம்பு எய்து அழித்தவராய்த் திசைகளிலும் திசைகளில் உள்ள பொருள்களிலும் பரவியவராய், ஒரு பெயரும் அவருடைய பெயர் அன்று ஆயினும் அடியார் உகப்பிற்காக ஆயிரம் திருநாமங்களை உடையவராய், அடியவர்கள் மனக்கண்ணுக்குக் காட்சி வழங்குகின்றார். சென்றார் - மெலித்தல் விகாரம்.

திருவாரூர்

திருவாரூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

திருமணியைத் தித்திக்குந் தேனைப் பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்த தேறல்
குருமணியைக் குழல்மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணி யானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தில் அருங்கலத்தைப் பாவந் தீர்க்கும்
அருமணியை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. **#290**

செல்வம் தரும் சிந்தாமணியாய், இனிக்கும் தேன், பால், கருப்பஞ்சாறு, தெளவாகிய அமுதம் போன்றவனாய்ச் சிறந்த ஆசிரியனாய், குழல் மொந்தை தாளம் வீணை கொக்கரை சச்சரி இவற்றின் தாளத்திற்கு ஏற்பக் கூத்து நிகழ்த்துபவனாய், எங்கும் கிட்டுதற்கு அரிய பெரிய இரத்தினம் பவளம் முத்து கிளிச்சிறை என்ற பொன் போன்றவனாய்ச் சீசைலத்தின் விலைமிக்க அணிகலனாய், பாவத்தைப் போக்கும் அரிய மாணிக்கமாய் உள்ள ஆரூர்ப் பெருமானை இதுகாறும் அறியாதுநாய் போன்ற, அவன் அடியேன் மறந்திருந்தவாறு கொடியது.

திருவாரூர்

பொன்னேபோல் திருமேனி யுடையான் தன்னைப்
பொங்குவெண் ணூலானைப் புனிதன் தன்னை
மின்னானை மின்னிடையாள் பாகன் தன்னை
வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்தான் தன்னைத்
தன்னானைத் தன்னொப்பா ரில்லா தானைத்
தத்துவனை யுத்தமனைத் தழல்போல் மேனி
அன்னானை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. **#291**

பொன்னார் மேனியனை, வெண்ணூல் அணிந்த புனிதனாய் ஒளி வீசுவானை, பார்வதிபாகனை, யானைத்தோல் போர்வையனைத், தன்வயம் உடையவனைத் தன்னை ஒப்பார் பிறர் இல்லாதவனை, மெய்ப்பயனை, மேம்பட்டவனை, தழல்போன்ற செந்நிற மேனியனை - இவ்வாறெல்லாம் மனக் கண்ணுக்குக் காட்சி வழங்கும் ஆரூர்த் தலைவனை இதுகாறும் அறியாது அடிநாயேன் அயர்த்தவாறே.

திருவாரூர்

ஏற்றானை ஏழுலகு மானான் தன்னை
யேழ்கடலு மேழ்மலையு மானான் தன்னைக்
கூற்றானைக் கூற்ற முதைத்தான் தன்னைக்
கொடுமழுவாள் கொண்டதோர் கையான் தன்னைக்
காற்றானைத் தீயானை நீரு மாகிக்
கடிகமழும் புன்சடைமேற் கங்கை வெள்ள
ஆற்றானை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. **#292**

இடபவாகனனாய், ஏழ்கடலும் ஏழ்மலையும் ஏழுலகும் ஆகிப் பரந்திருப்பவனாய்க் கூற்றுவனாய்த் தருமராசருடைய ஏவலனான கூற்றை உதைத்தவனாய், மழுப்படை ஏந்திய கையனாய், காற்றும் தீயும் நீருமாகி நறுமணம் கமழும் செஞ்சடைமேல் கங்கையைத் தரித்தவனாய்

உள்ள, ஆரூரிலுள்ள, அம்மானை அறியாது அடிநாயேன் அயர்த்தவாறே.

திருவாரூர்

முந்திய வல்வினைகள் தீர்ப்பான் தன்னை
மூவாத மேனிமுக் கண்ணி னானைச்
சந்திரனும் வெங்கதிரு மாயி னானைச்
சங்கரனைச் சங்கக் குழையான் தன்னை
மந்திரமும் மறைப்பொருளு மானான் தன்னை
மறுமையும் இம்மையு மானான் தன்னை
அந்திரனை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. **#293**

முற்பிறப்புக்களில் செய்யப்பட்ட கொடிய வினைகளைத் தீர்ப்பவனாய், மூப்படையாத் திருமேனியில் மூன்று கண்கள் உடையவனாய்ச் சந்திரனும் சூரியனும் ஆகியவனாய், எல்லோருக்கும் நன்மை செய்பவனாய், சங்கினாலாகிய காதணியை உடையவனாய், மந்திரமும் வேதத்தின் பொருளும் மறுமையும் இம்மையுமாய் அழகுநிலை பெற்றிருக்கும் ஆரூரிலுள்ள அம்மானை அறியாது அடிநாயேன் அயர்த்தவாறே.

திருவாரூர்

பிறநெறியாய்ப் பீடாகிப் பிஞ்ஞ கனுமாய்ப்
பித்தனாய்ப் பத்தர் மனத்தி னுள்ளே
உறநெறியாய் ஓமமாய் ஈமக் காட்டில்
ஓரிபல விடநட்ட மாடி னானைத்
துறநெறியாய்த் தூபமாய்த் தோற்ற மாகிநாற்றமாய் நன்மலர்மே
லுறையா நின்ற
அறநெறியை ஆரூரி லம்மான் தன்னைஅறியா தடிநாயே னயர்த்த
வாறே. **#294**

பிறக்கும் வழிகளாகவும், பெருமையாகவும், தலைக்கோலம் அணிந்தவனாகவும், பித்தனாகவும், அடியவர்கள் உள்ளத்தில் உறவுதரும் வழியாகவும், வேள்வியாகவும் அமைந்து, சுடுகாட்டிலுள்ள நரிகள் அஞ்சி ஓடக் கூத்தாடுபவனாய்த் துறவு நெறியாகவும் புகையாகவும் காட்சி வழங்கிப்பூவில் நறுமணம் போல உலகெங்கும் பரந்துள்ளவனாய் உள்ள அறநெறியை அறிவித்த ஆரூர் அம்மானை அறியாது அடிநாயேன் அயர்த்தவாறே.

திருவாரூர்

பழகியவல் வினைகள் பாற்று வானைப்
பசுபதியைப் பாவகனைப் பாவந் தீர்க்கும்
குழகனைக் கோளரவொன் றாட்டு வானைக்
கொடுகொட்டி கொண்டதோர் கையான் தன்னை
விழவனை வீரட்டம் மேவி னானை
விண்ணவர்க ளேத்தி விரும்பு வானை
அழகனை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. **#295**

பழக்கத்தினால் ஏற்படும் வருவினையை அழிப்பவனாய், ஆன்மாக்களுக்குத் தலைவனாய், அக்கினித் தேவனாய்ப் பாவங்கள் போக்கும் இளையவனாய், பாம்பினை ஆட்டுபவனாய்க் கொடுகொட்டிப்பறையைக் கையில் கொண்டவனாய், விழாக்களில் மேவி இருப்பவனாய், வீரட்டத்தில் உறைபவனாய்த் தேவர்கள் துதித்து விரும்பும் அழகனாய் உள்ள ஆரூர் அம்மானை அறியாது அடி நாயேன் அயர்த்தவாறே.

திருவாரூர்

சூளா மணிசேர் முடியான் தன்னைச்
சுண்ணவெண் ணீறணிந்த சோதி யானைக்
கோள்வா யரவ மசைத்தான் தன்னைக்
கொல்புலித்தோ லாடைக் குழகன் தன்னை
நாள்வாயும் பத்தர் மனத்து ளானை
நம்பனை நக்கனை முக்க ணானை
ஆள்வானை ஆரூரில் அம்மான் தன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. **#296**

சூளாமணியை அணிந்த முடியை உடையவனாய். திருநீறு தரித்த ஒளியினனாய், கொடிய பாம்பினை, இடையில் இறுக்கிக் கட்டியவனாய்ப் புலித்தோல் ஆடையை அணிந்த இளையவனாய், எப்பொழுதும் அடியவர் உள்ளத்தில் இருந்து அவரால் விரும்பப்படுபவனாய், ஆடை அற்றவனாய், முக்கண்ணனாய், எல்லோரையும் ஆள்பவனாய் உள்ள ஆரூர் அம்மானை அறியாது அடிநாயேன் அயர்த்தவாறே.

திருவாரூர்

முத்தினை மணிதன்னை மாணிக் கத்தைத்
மூவாத கற்பகத்தின் கொழுந்து தன்னைக்
கொத்தினை வயிரத்தைக் கொல்லே றூர்ந்து
கோளரவொன் றாட்டுங் குழகன் தன்னைப்

பத்தனைப் பத்தர் மனத்து ளானைப்
பரிதிபோல் திருமேனி யுடையான் தன்னை
அத்தனை ஆரூரில் அம்மான் தன்னை
அறியா தடிநாயேன் அயர்த்த வாறே. **#297**

முத்து, மணி, மாணிக்கம், என்றும் மூப்படையாத கற்பகத்தின் கொழுந்து, வயிரம் இவற்றை வைத்துக் கோத்த மாலை போல்வானாய்க் காளையை இவர்ந்து பாம்பாட்டும் இளையவனாய், எல்லோரிடத்தும் அன்புடையவனாய், பக்தர்கள் மனத்தில் நிலைத்து இருப்பவனாய், சூரியனைப் போல ஒளி வீசும் திருமேனியை உடையவனாய், எல்லோருக்கும் தலைவனாய் உள்ள ஆரூர் அம்மானை அறியாது அடிநாயேன் அயர்த்தவாறே.

<u>திருவாரூர்</u>

பையா டரவங்கை யேந்தி னானைப்
பரிதிபோல் திருமேனிப் பால்நீற் றானை
நெய்யாடு திருமேனி நிமலன் தன்னை
நெற்றிமேல் மற்றொருகண் நிறைவித் தானைச்
செய்யானைச் செழும்பவளத் திரளொப் பானைச்
செஞ்சடைமேல் வெண்டிங்கள் சேர்த்தி னானை
ஐயாறு மேயானை ஆரூ ரானை
அறியா தடிநாயேன் அயர்த்த வாறே. **#298**

படமெடுத்தாடும் பாம்பைக் கையில் ஏந்தியவனாய்ச் சூரியனைப் போலச் சிவந்த மேனியில் பால் போன்ற வெண்ணீற்றைப் பூசியவனாய், நெய் அபிடேகம் செய்த திருமேனியை உடைய தூயவனாய், நெற்றியில் மூன்றாவது கண் உடையவனாய்ச் செழும்பவளத்திரள் போன்ற செந்நிறத்தினனாய்ச் செஞ்சடையில் வெண்பிறை சூடியவனாய்த் திருவையாற்றை உகந்தருளியிருப் பவனான ஆரூர் அம்மானை அறியாது அடிநாயேன் அயர்த்தவாறே.

<u>திருவாரூர்</u>

சீரார் முடிபத் துடையான் தன்னைத்
தேசழியத் திருவிரலாற் சிதைய நூக்கிப்
பேரார் பெருமை கொடுத்தான் தன்னைப்
பெண்ணிரண்டும் ஆணுமாய் நின்றான் தன்னைப்
போரார் புரங்கள் புரள நூறும்
புண்ணியனை வெண்ணீ றணிந்தான் தன்னை
ஆரானை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயேன் அயர்த்த வாறே. **#299**

அழகிய பத்துத் தலைகளை உடைய இராவணனை அவன் புகழ் அழியுமாறு கால்விரலால் உடல் சிதைய வருத்திப் பிறகு அவனுக்கு அந்தப் பெயருக்கு ஏற்ப எல்லாரையும் அழச்செய்பவன் என்ற பெருமையைக் கொடுத்தானாய்ப் பார்வதி கங்கை என்ற பெண்பாலர் இருவரைக் கொண்ட ஆண்வடிவு உடையவனாய்ப் போரிட்ட திரிபுரங்கள் அழியுமாறு சாம்பலாக்கிய புண்ணியனாய், வெண்ணீறு அணிந்தானாய், அடியவர்களுக்குத் தெவிட்டாதவனாய் உள்ள ஆரூர் அம்மானை அறியாது அடி நாயேன் அயர்த்தவாறே.

திருவாரூர்

திருவாரூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டான்காண்
ஏழ்கடலும் ஏழுலகும் ஆயி னான்காண்
வம்புந்து கொன்றையந்தார் மாலை யான்காண்
வளர்மதிசேர் கண்ணியன்காண் வானோர் வேண்ட
அம்பொன்றால் மூவெயிலு மெரிசெய் தான்காண்
அனலாடி யானஞ்சு மாடி னான்காண்
செம்பொன்செய் மணிமாடத் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே. **#300**

செம்பொன்னால் செய்த மணிகள் இழைக்கப்பட்ட மாடங்களை உடைய திருவாரூரில் திருமூலத்தானத்திலுள்ள எம் செல்வன் எம்மைத் தளையிடும் ஊழ்வினையால் ஏற்படும் நோயைத் தீர்த்தவன். ஏழ்கடலும் ஏழ்உலகும் ஆயவன். நறுமணம் கமழும் கொன்றை மாலையன். பிறையோடு சூடிய முடிமாலையை உடையவன். தேவர்கள் வேண்ட ஓரம்பினால் மூன்று மதில்களையும் எரித்தவன். தீயில் கூத்தாடுபவன். பஞ்சகவ்விய அபிடேகம் செய்பவன்.

திருவாரூர்

அக்குலாம் அரையினன்காண் அடியார்க் கென்றும்
ஆரமுதாய் அண்ணிக்கும் ஐயாற் றான்காண்
கொக்குலாம் பீலியொடு கொன்றை மாலை
குளிர்மதியுங் கூரரவும் நீருஞ் சென்னித்
தொக்குலாஞ் சடையினன்காண் தொண்டர் செல்லுந்
தூநெறிகாண் வானவர்கள் துதிசெய் தேத்தும்
திக்கெலாம் நிறைந்தபுகழ்த் திருவா ரூரில்

திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே. #301
இடையில் எலும்புகளை அணிந்தவன். அடியார்களுக்கு எப்பொழுதும் கிட்டுதற்கு அரிய அமுதமாய் இனிக்கும் திருவையாற்றில் உறையும் இறைவன். கொக்கிறகு, கொன்றை மாலை, குளிர்ந்தபிறை, கொடுமை மிக்க பாம்பு என்பன ஒருசேரத் தங்கியிருக்கும் சடையினன். தொண்டர்கள் செல்லும் தூயவழியைக் காட்டுபவன் ஆகிய சிவபெருமான் தேவர்கள் துதித்துப் புகழுமாறு எல்லாத்திக்கிலும் நிறைந்த புகழை உடைய திருவாரூரில் திருமூலத்தானத்து உறையும் எம் செல்வனாகக் காட்சி வழங்குகிறான்.

திருவாரூர்

நீரேறு சடைமுடியெம் நிமலன் தான்காண்
நெற்றிமேல் ஒற்றைக்கண் நிறைவித் தான்காண்
வாரேறு வனமுலையாள் பாகத் தான்காண்
வளர்மதிசேர் சடையான்காண் மாதே வன்காண்
காரேறு முகிலனைய கண்டத் தான்காண்கல்லாலின் கீழறங்கள் சொல்லி னான்காண்
சீரேறு மணிமாடத் திருவா ரூரில்திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே. #302
சடைமுடியில் கங்கையைத் தரித்த தூயவன். நெற்றிக்கண்ணன். கச்சணிந்த முலைகளை உடைய பார்வதி பாகன். பிறைசேர் சடையன். பொருந்தேவன். கார்முகில் போன்ற நீலகண்டன். கல்லாலின் கீழ் இருந்து அறங்களைச் சனகர் முதலிய நால்வருக்கு மோன நிலையில் உபதேசித்தவன். சிறப்பு மிக்க அழகிய மாடங்களை உடைய திருவாரூரில் திருமூலத்தானத்தில் எம் செல்வனாக அப்பெருமான் உறைகின்றான்.

திருவாரூர்

கானேறு களிற்றுரிவைப் போர்வை யான்காண்
கற்பகங்காண் காலனையன் றுதைசெய் தான்காண்
ஊனேறு முடைதலையிற் பலிகொள் வான்காண்
உத்தமன்காண் ஒற்றியூர் மேவி னான்காண்
ஆனேறொன் றதுவேறும் அண்ணல் தான்காண்
ஆதித்தன் பல்லிறுத்த ஆதி தான்காண்
தேனேறு மலர்ச்சோலைத் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே. #303
தேன்மிக்க மலர்கள் நிறைந்த சோலைகளை உடைய திருவாரூர்த் திருமூலத்தானத்தில் உறையும் எம் செல்வன் காட்டில் திரிகின்ற

யானைத் தோலைப் போர்த்தியவன். கற்பகம் போன்ற கொடையாளி. கூற்றுவனை ஒருகாலத்து உதைத்தவன். புலால் நாற்றம் கமழும் தலையோட்டில் பிச்சை எடுப்பவன். உத்தமன். ஒற்றியூரில் விரும்பி உறைபவன். காளையை இவரும் தலைவன். சூரியன் ஒருவனுடைய பற்களை உதிர்த்த முதற்பொருள் ஆவான்.

திருவாரூர்

பிறப்போ டிறப்பென்று மில்லா தான்காண்
பெண்ணுருவோ டாணுருவ மாயி னான்காண்
மறப்படுமென் சிந்தைமருள் நீக்கி னான்காண்
வானவரு மறியாத நெறிதந் தான்காண்
நறப்படுபூ மலர்தூபந் தீப நல்ல
நறுஞ்சாந்தங் கொண்டேத்தி நாளும் வானோர்
சிறப்போடு பூசிக்கும் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே. **#304**

தேன் பொருந்திய பூக்கும் நிலையிலுள்ள மலர்கள், தூபம், தீபம், நல்ல சந்தனம் இவற்றைக் கொண்டு துதித்து நாள்தோறும் தேவர்கள் சிறப்போடு பூசனை செய்யும் திருவாரூரில் திருமூலத்தானத்தில் உறையும் செல்வன் பெண்ணும் ஆணுமாகிய உருவுடையவனாய்ப் பிறப்பு இறப்பு இல்லாதவனாய்ப் பாவத்தில் அகப்பட்ட என்மனத்தின் மயக்கத்தை நீக்கியவனாய்த் தேவர்களும் அறியாத வீடுபேற்றிற்கு உரிய வழியை எனக்கு அருள்பவன்.

திருவாரூர்

சங்கரன்காண் சக்கரம்மாற் கருள்செய் தான்காண்
தருணேந்து சேகரன்காண் தலைவன் தான்காண்
அங்கமலத் தயன்சிரங்கள் ஐந்தி லொன்றை
அறுத்தவன்காண் அணிபொழில்சூழ் ஐயாற் றான்காண்
எங்கள்பெரு மான்காண்என் னிடர்கள் போக
அருள்செய்யும் இறைவன்காண் இமையோ ரேத்துஞ்
செங்கமல வயல்புடைசூழ் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே. **#305**

தாமரை களையாக முளைக்கும் வயல்களால் சூழப்பட்டதாய்த் தேவர்களும் போற்றும் திருவாரூரில் திருமூலத்தானத்தில் உள்ள எம் செல்வன் எல்லோருக்கும் இன்பத்தைச் செய்பவன். திருமாலுக்குச் சக்கரப்படையை அருளியவன். பிறைசூடிய தலைவன். தாமரையிலுள்ள பிரமன் தலைகளுள் ஒன்றனை அறுத்தவன். அழகிய சோலைகளால் சூழப்பட்ட திருவையாற்றில் உறைபவன். எங்கள் தலைவன். எங்கள்

துன்பங்கள நீங்குமாறு அருள் செய்யும் இறைவன்.

திருவாரூர்

நன்றருளித் தீதகற்றும் நம்பி ரான்காண்
நான்மறையோ டாறங்க மாயி னான்காண்
மின்திகழுஞ் சோதியன்காண் ஆதி தான்காண்
வெள்ளேறு நின்றுலவு கொடியி னான்காண்
துன்றுபொழிற் கச்சியே கம்பன் தான்காண்
சோற்றுத் துறையான்காண் சோலை சூழ்ந்த
தென்றலார் மணங்கமழுந் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே. **#306**

தென்றல் ஊரைச் சேர்ந்த சோலைகளால் மணங்கமழும் திருவாரூர்த் திருமூலத்தானத்தில் உள்ள எம் செல்வன் நன்மையை அருளித் தீமையைப் போக்கும் நம் தலைவன். நான்மறையோடு ஆறங்கம் ஆயினவன். மின்னல் போன்ற ஒளியை உடைய முற்பட்டவன். காளை எழுதிய கொடியை உடையவன். பொழில் சூழ்ந்த கச்சி ஏகம்பன். சோற்றுத்துறையிலும் உறைபவன்.

திருவாரூர்

பொன்நலத்த நறுங்கொன்றைச் சடையி னான்காண்
புகலூரும் பூவணமும் பொருந்தி னான்காண்
மின்நலத்த நுண்ணிடையாள் பாகத் தான்காண்
வேதியன்காண் வெண்புரிநூல் மார்பி னான்காண்
கொன்னலத்த மூவிலைவேல் ஏந்தி னான்காண்
கோலமா நீறணிந்த மேனி யான்காண்
செந்நலத்த வயல்புடைசூழ் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே. **#307**

சிறந்த வளத்தை உடைய வயல்களால் சூழப்பட்ட திருவாரூர்த் திருமூலத்தானத்தில் உள்ள எம் செல்வன் பொன் நிறக்கொன்றை சூடிய சடையினன். புகலூரிலும் பூவணத்திலும் உறைபவன். மின்னலை ஒத்த நுண்ணிய இடையை உடைய பார்வதிபாகன். வேதியன், பூணூல் அணிந்த மார்பினன். பகைவருக்கு அச்சமும் அடியாருக்கு நன்மையும் தருகின்ற, முத்தலைச் சூலத்தை ஏந்தியவன். திருநீற்றை அழகாக அணிந்த திருமேனியினன்.

திருவாரூர்

விண்டவர்தம் புரமூன்று மெரிசெய் தான்காண்
வேலைவிட முண்டிருண்ட கண்டத் தான்காண்

மண்டலத்தில் ஒளிவளர விளங்கி னான்காண்
வாய்மூரும் மறைக்காடும் மருவி னான்காண்
புண்டரிகக் கண்ணானும் பூவின் மேலைப்புத்தேளுங் காண்பரிய
புராணன் தான்காண்
தெண்டிரைநீர் வயல்புடைசூழ் திருவா ரூரில்திருமூலட் டானத்தெஞ்
செல்வன் தானே. **#308**

தெளந்த அலைகளை உடைய நீர்வளம் பொருந்திய வயல்களால் சூழப்பட்ட திருவாரூரில் திருமூலத்தானத்தில் உறையும் எம் செல்வன் பகைவர் முப்புரங்களையும் எரித்தவன். கடலில் தோன்றிய விடத்தை உண்டு கறுத்த கழுத்தினன். வான மண்டலத்தில் சூரியனும் சந்திரனும் ஒளிவீசுமாறு அருளியவன். வாய்மூரிலும் மறைக்காட்டிலும் உறைபவன். செந்தாமரைக் கண்ணானாகிய திருமாலும் தாமரையில் தங்கும் பிரமனும் காண முடியாத பழையவன்.

திருவாரூர்

செருவளருஞ் செங்கண்மா லேற்றி னான்காண்
தென்னானைக் காவன்காண் தீயில் வீழ
மருவலர்தம் புரமூன்று மெரிசெய் தான்காண்
வஞ்சகர்பா லணுகாத மைந்தன் தான்காண்
அருவரையை யெடுத்தவன்தன் சிரங்கள் பத்தும்
ஐந்நான்கு தோளுநெரிந் தலற அன்று
திருவிரலால் அடர்த்தவன்காண் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே. **#309**

திருவாரூர் திருமூலத்தானத்தில் உள்ள எம் செல்வன் போரில் மேம்பட்ட திருமாலாகிய காளையை உடையவன். அழகிய திருவானைக்காவில் உறைபவன். பகைவர் முப்புரத்தை எரித்தவன். வஞ்சகர் உள்ளத்தில் நெருங்காத வலிமை உடையவன். கயிலையைப் பெயர்த்த இராவணனுடைய பத்துத் தலைகளும் இருபது தோள்களும் நெரிக்கப்பட அவன் அலறுமாறு முன்னொருகால் திருவிரலால் வருத்தியவன்.

திருவாரூர்

திருவாரூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

இடர்கெடுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
ஈண்டொளிசேர் கங்கைச் சடையா யென்றுஞ்

சுடரொளியா யுள்விளங்கு சோதி யென்றுந்
தூநீறு சேர்ந்திலங்கு தோளா வென்றுங்
கடல்விடம துண்டிருண்ட கண்டா வென்றுங்
கலைமான் மறியேந்து கையா வென்றும்
அடல்விடையாய் ஆரமுதே ஆதி யென்றும்
ஆரூரா வென்றென்றே அலறா நில்லே. **#310**

நெஞ்சே! நீ துன்பங்கள் ஒழியும் பகையை ஆராய்வாயாயின் இங்கே வந்து நான் சொல்வதனைக் கேள். செந்நிறம் பொருந்திய சடையில் கங்கையை அணிந்தவனே! ஞானஒளியாய் உள்ளத்தில் விளங்குபவனே! திருநீறணிந்த தோளனே! கடல்விடம் உண்டு கறுத்த கழுத்தினனே! மான் குட்டியை ஏந்திய கையனே! ஆற்றலுடைய காளை வாகனனே! கிட்டுதற்கரிய அமுதே! எல்லோருக்கும் முற்பட்டவனே! ஆரூரனே! எனப்பலகாலும் அழைப்பாயாக.

திருவாரூர்

செடியேறு தீவினைகள் தீரும் வண்ணஞ்
சிந்தித்தே னெஞ்சமே திண்ண மாகப்
பொடியேறு திருமேனி யுடையா யென்றும்
புரந்தரன்றன் தோள்துணித்த புனிதா வென்றும்
அடியேனை யாளாகக் கொண்டா யென்றும்
அம்மானே ஆருரெம் மரசே யென்றும்
கடிநாறு பொழிற்கச்சிக் கம்பா வென்றுங்
கற்பகமே யென்றென்றே கதறா நில்லே. **#311**

நெஞ்சமே! துன்பம்மிக்க தீவினைகள் நீங்கும் வழியை எண்ணுவாயானால் உறுதியாகத் திருநீறணிந்த திருமேனி உடையவனே! இந்திரனுடைய தோள்களை நீக்கிய தூயனே! அடியேனை அடிமையாகக் கொண்டவனே! தலைவனே! ஆரூரில் உள்ள எம் அரசனே! நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்த காஞ்சியில் உள்ள ஏகம்பனே! கற்பகமே! என்று பலகாலும் அழைப்பாயாக.

திருவாரூர்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்

ஆரூரா என்றென்றே அலறா நில்லே. **#312**
நெஞ்சே! நீ தடுமாற்றம் நீங்கி நிலையாக வாழ நினைப்பாயானால் நாள்தோறும் எம்பெருமானுடைய கோயிலுக்குச் சென்று பொழுது விடிவதன் முன் கோயிலைப் பெருக்கி மெழுகிப் பூ மாலையைக் கட்டி எம் பெருமானுக்குச் சாத்தி அவனைத் துதித்துப் புகழ்ந்து பாடித் தலையால் முழுமையாக வணங்கி மகிழ்ச்சியாய்க் கூத்தாடிச் 'சங்கரா நீ வெல்க வாழ்க!' என்றும் 'கங்கையைச் சிவந்த சடையில் வைத்த ஆதிப்பொருளே!' என்றும் 'ஆரூரா!' என்றும் பலகாலும் அலறி அழைப்பாயாக.

<u>திருவாரூர்</u>

புண்ணியமும் நன்னெறியும் ஆவ தெல்லாம்
நெஞ்சமே யிதுகண்டாய் பொருந்தக் கேள்நீ
நுண்ணியவெண் ணூல்கிடந்த மார்பா என்றும்
நுந்தாத வொண்சுடரே யென்றும் நாளும்
விண்ணியங்கு தேவர்களும் வேதம் நான்கும்
விரைமலர்மேல் நான்முகனும் மாலுங் கூடி
எண்ணரிய திருநாம முடையா யென்றும்
எழிலாரூ ராவென்றே ஏத்தா நில்லே. **#313**
நெஞ்சமே! புண்ணியமும் அதற்கு வாயிலாகிய நல்ல வழிகளும் ஆகியவற்றை எல்லாம் நான் கூறக்கூர்ந்து கேள். பூணூல் அணிந்த மார்பனே! தூண்ட வேண்டாத விளக்கே! தேவர்களும் நால்தேவங்களும் தாமரையிலுள்ள பிரமனும் திருமாலும் ஒன்று சேர்ந்தாலும் கணக்கிடமுடியாத திருநாமங்களை உடையவனே! அழகிய ஆரூரனே! என்று பலகாலும் துதிப்பாயாக.

<u>திருவாரூர்</u>

இழைத்தநா ளெல்லை கடப்ப தென்றால்
இரவினொடு நண்பகலு மேத்தி வாழ்த்திப்
பிழைத்ததெலாம் பொறுத்தருள்செய் பெரியோய் என்றும்
பிஞ்ஞகனே மைஞ்ஞவிலுங் கண்டா என்றும்
அழைத்தலறி அடியேனுன் னரணங் கண்டாய்அணியாரூர்
இடங்கொண்ட அழகா என்றும்
குழற்சடையெங் கோனென்றுங் கூறு நெஞ்சேகுற்றமில்லை
யென்மேல்நான் கூறி னேனே. **#314**
நெஞ்சே! இவ்வுடம்போடு கூடி வாழ்வதற்கு வரையறுக்கப்பட்ட நாள்களின் அளவைப் பிறவிக்கு வித்தாகாத வகையில் தாண்ட வேண்டுமென்றால இரவும் நடுப்பகலும் எம் பெருமானைத்

துதித்துவாழ்த்தித் தவறு செய்தனவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு அருள் செய்யும் பெரியோனே! தலைக்கோலம் உடையவனே! நீலகண்டனே! எனப் பலகாலும் கூப்பிட வேண்டும் என்பதனைத் தெரிந்து கொள் நான் உனக்குப் பாதுகாவலாக இருக்கிறேன். ஆரூர் உறையும் அழகா! என்றும் சுருண்ட சடையை உடைய இளையோனே! என்றும் கூப்பிடு. உனக்கு இவ்வாறு உபதேசித்துவிட்டதனால் இனி என்மேல் உனக்கு உய்யும் வழியைக் காட்டவில்லை என்ற குற்றம் ஏற்படாது. செயற்படாமல் வாளா இருந்தால் குற்றம் உன்மேலதே.

திருவாரூர்

நீப்பரிய பல்பிறவி நீக்கும் வண்ணம்
நினைந்திருந்தேன் காண்நெஞ்சே நித்த மாகச்
சேப்பிரியா வெல்கொடியி னானே யென்றும்
சிவலோக நெறிதந்த சிவனே யென்றும்
பூப்பிரியா நான்முகனும் புள்ளின் மேலைப்புண்டரிகக் கண்ணானும் போற்றி யென்னத்
தீப்பிழம்பாய் நின்றவனே செல்வ மல்குந்திருவாரூ ராவென்றே சிந்தி நெஞ்சே. **#315**

நெஞ்சே! அழிக்கமுடியாத பல பிறவிகளையும் போக்கும் வழியை ஆராய்ந்து பார்த்து இவ்வழியைக் கண்டுள்ளேன். நாடோறும் காளை எழுதிய கொடியை உடையவனே! சிவலோகம் அடையும் வழியைக் காட்டிய சிவனே! தாமரையை உறைவிடமாக விரும்பும் பிரமனும் கருடனை இவரும் தாமரைக் கண்ணனாகிய திருமாலும் வழிபட்டு வாழ்த்துமாறு தீப்பிழம்பாய்க் காட்சி வழங்குபவனே! செல்வம் நிறையும் திருவாரூரா என்று பலகாலும் 'நெஞ்சே நீ நினை'.

திருவாரூர்

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்றா நில்லே. **#316**

நெஞ்சே! நான் சொல்வதனைக் கேட்பாயாக. நம்மைப் பற்றி நிற்கும் பாவங்களை அழிக்க வேண்டினால், மேம்பட்ட வழிக்குச் செல்ல

வேண்டும் தன்மையை விரும்பினால், உன்னைச் சுற்றி நிற்கும் வினைகளைப் போக்க நீ விரும்பினால், செயலற்று இராமல் நான்சொல்வதைக் கேள், எனக்கு உறவினரும் துணையும் நீயே, உன்னைத் தவிர வேறு எந்தத் தெய்வத்தையும் நான் பரம்பொருளாக நினையேன். புற்றில் வாழத்தக்கபாம்பினைக் கச்சாக அணிந்த தூயோனே! சோலைகள் சூழ்ந்த ஆரூரனே! என்று எம் பெருமானைப் பலகாலும் துதிப்பாயாக.

திருவாரூர்

மதிதருவன் நெஞ்சமே உஞ்சு போக
வழியாவ திதுகண்டாய் வானோர்க் கெல்லாம்
அதிபதியே ஆரமுதே ஆதீ யென்றும்
அம்மானே ஆரூரெம் ஐயா வென்றும்
துதிசெய்து துன்றுமலர் கொண்டு தூவிச்
சூழும் வலஞ்செய்து தொண்டு பாடிக்
கதிர்மதிசேர் சென்னியனே கால காலா
கற்பகமே யென்றென்றே கதறா நில்லே. **#317**

நெஞ்சமே! உனக்குநான் நல்ல புத்தியைக் கொடுக்கிறேன். பிழைத்துப் போவதற்கு உரிய வழி இதுவே. தேவர்கள் தலைவனே! அரிய அமுதமே! ஆதியே! என்றும், தலைவனே! ஆரூரில் உள்ள எம் குரிசிலே என்றும், அவனைப் போற்றிக் கிட்டிய மலர்களை அவன் திருமேனி மீது தூவி, அவன் கோயிலை வலம் செய்து, தொண்டர்களையும் துதித்து, ஒளிவீசும் பிறை சேர்ந்த தலைவனே! காலனுக்கும் காலனே! கற்பகமே! என்றும் பலகாலும் கதறுவாயாக.

திருவாரூர்

பாசத்தைப் பற்றறுக்க லாகு நெஞ்சே
பரஞ்சோதி பண்டரங்கா பாவ நாசா
தேசத் தொளிவிளக்கே தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட் டானா வென்றும்
நேசத்தை நீபெருக்கி நேர்நின் றுள்கி
நித்தலுஞ் சென்றடிமேல் வீழ்ந்து நின்று
ஏசற்று நின்றிமையோ ரேறே யென்றும்
எம்பெருமா னென்றென்றே யேத்தா நில்லே. **#318**

நெஞ்சே! மேம்பட்ட சோதியே! பண்டரங்கக் கூத்து ஆடுபவனே! பாவத்தைப் போக்குபவனே! உலகுக்கே ஒளிதரும் விளக்கே! தேவதேவனே! திருவாரூர்த் திருமூலட்டானத்து உறையும் பெருமானே! தேவர்கள் தலைவனே! எம்பெருமானே! என்று அன்பைப் பெருக்கி

அவன் முன் நின்று தியானம் செய்து நாளும் அவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிக் கூசி நின்று அவன் பெருமையைப் பாடுவாயாக. இவ்வாறு செய்தால் உலகப் பற்றினை அடியோடு நீக்கிவிடலாம்.

திருவாரூர்

புலன்கள்ஐந்தால் ஆட்டுண்டு போது போக்கிப்
புறம்புறமே திரியாதே போது நெஞ்சே
சலங்கொள்சடை முடியுடைய தலைவா என்றும்
தக்கன்செய் பெருவேள்வி தகர்த்தா யென்றும்
இலங்கையர்கோன் சிரம்நெரித்த இறைவா என்றும்
எழிலாரூ ரிடங்கொண்ட எந்தா யென்றும்
நலங்கொளடி யென்தலைமேல் வைத்தா யென்றும்
நாடோறும் நவின்றேத்தாய் நன்மை யாமே. **#319**

நெஞ்சே! ஐம்புலன்களால் செயற்படுத்தப்பட்டுக் காலத்தைக் கழித்து, மிகக் தொலைவான இடங்களுக்கு அலையாமல், என்பக்கம் வந்துயான் சொல்வதனைக் கேள். கங்கையைச் சடையில் சூடியதலைவா! தக்கனுடைய பெரிய வேள்வியை அழித்தவனே! இராவணன் தலைகளை நெரித்த தலைவனே! அழகிய ஆரூரில் உறையும் எம் தந்தையே! உன் பல நலன்களும் கொண்ட திருவடிகளை என் தலைமேல் வைத்தவனே! என்று நாள் தோறும் கூறி அவனைத் துதிப்பாயாக. அச்செயலே நமக்கு நன்மை தருவதாகும்.

திருவாரூர்

திருவாரூர், போற்றித்திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

கற்றவர்க ளுண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. **#320**

அநுபவப் பொருளை ஞானதேசிகன் பால் உணர்ந்தவர்கள் உண்ணும் கனியே! திருவடிகளைச் சார்ந்தவர்கள் அடையும் நற்பேறே! உன்னையன்றிப் பிறிதொருபற்றற்றவர்களுக்குக் கிட்டும் அமுதமே!

துயர் துடைத்து அடியேனை ஆட்கொண்டவனே! பிறர் ஒப்பாகமாட்டாத வலியவனே! தேவர்கள் போற்றும் அமுதமே! பகைவர்களின் மும்மதில்களை அழித்த சிவனே! திருவாரூர் திருமூலட்டானனே! நீ வாழ்க.

திருவாரூர்

வங்கமலி கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித் தோலாடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற்றி
ஆலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. **#321**

கப்பல்கள் செல்லும் கடலின் நஞ்சை உண்டவனே! மத யானையின் உதிரப்பசுமை கெடாத தோலினைப் போர்த்தியவனே! தேனொடு மலரும் நறுங்கொன்றை மாலையை அணிந்தவனே! உன்னால் கொல்லப்பட்ட புலித்தோலை ஆடையாக உடுத்த இளையவனே! அழகிய நெற்றிக் கண்ணை உடையவனே! தேவர் தலைவனே! ஆல நிழலில் அமர்ந்து அறத்தை மௌன நிலையில் சனகர் முதலியோருக்கு அருளியவனே! ஒப்பற்ற பொற்குன்றே! சிவனே! திருமூலட்டானத்து உறைபவனே! நீ வாழ்க.

திருவாரூர்

மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்னெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக்கண் ணுடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவே லேந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலு மானாய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. **#322**

பார்வதி மணவாளனே! இளைய காளையே உடையவனே! என் நெஞ்சில் நிலையாக நிற்பவனே! நெற்றிக் கண்ணனே! இலைவடிவாய் அமைந்த முத்தலைச் சூலம் ஏந்தியவனே! ஏழ்கடலும் ஏழ் உலகமும் ஆகியவனே! வில்லால் மும்மதில்களை எரித்த சிவனே! திருமூலட்டானத்தில் உறைபவனே! உன் திருவடி வாழ்க.

திருவாரூர்

பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப் படையுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கு மானாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி உலகுக் கொருவனே
போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றிதிருமூலட் டானனே
போற்றி போற்றி. **#323**

பொன்னார் மேனியனே! பூதப்படையனே! சிறப்பு நிலைபெற்ற நான்கு வேதங்களும் ஆனவனே! மான் குட்டியை ஏந்திய கையினனே! உன்னையே தியானிப்பவருக்கு உள் பொருளாய் அகக்கண்களுக்குக் காட்சி வழங்குகின்றவனே! உலகுக்கு ஒப்பற்ற தலைவனே! சென்னியில் வெண்பிறை சூடியவனே! திருமூலட்டானத்தில் உறைபவனே! நீ வாழ்க.

திருவாரூர்

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளி லாட லுகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. **#324**

விடம் தங்கிய கழுத்தினனே! ஞானயோக வடிவினனே! சூரியன் ஒருவனுடைய பற்களைத் தகர்த்த வேந்தனே! வெண்பிறையை முடிமாலையாகச் சூடியவனே! எல்லாம் ஒடுங்கிய இருளில் கூத்தாடுதலை உகந்தவனே! திருநீறு பூசிய சோதியே! சிவந்த சடையை உடையவனே! திருமூலட்டானனே! உன் திருவடி வாழ்க.

திருவாரூர்

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி

செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. **#325**
சங்கரனே! சதாசிவனே! படம் எடுக்கும் பாம்பை அணிந்தவனே! புண்ணியனே! தாமரையில் உள்ள பிரமனும், திருமாலும் காணமுடியாத தீப்பிழம்பின் வடிவானவனே! திருமூலட்டானத்து உறைபவனே! உன் திருப்பாதங்கள் வாழ்க.

திருவாரூர்

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புமவர்க் கரும்பொருளே போற்றி போற்றிநால்வேதம் ஆறங்க மானாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றிதிருமூலட் டானனே போற்றி போற்றி. **#326**
நறுமணம் கமழும் கொன்றைப் பூ அணிந்த சடையனே! சடையில் வானில் உலவும் பிறையையும் ஒளிவீசும் பாம்பினையும் சூடியவனே! பூங்கொம்பு போன்ற நுண்ணிய இடையை உடைய பார்வதி பாகனே! கழலணிந்த திருவடிகளால் கூற்றுவனை உதைத்த தலைவனே! விரும்பும் அடியார்க்குக் கிட்டுதற்கு இனிய செல்வமே! நான்கு வேதங்களும் ஆறு அங்கங்களும் ஆகியவனே! செம்பொன், மரகதம், மாணிக்கம் போன்றவனே! திருமூலட்டானத்தில் உறைகின்றவனே! நீ வாழ்க.

திருவாரூர்

உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி
வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. **#327**
என் உள்ளத்தில் நிலைத்திருப்பவனே உன்னை விரும்புவார் உள்ளத்தை என்றும் நீங்காது இருப்பவனே! வள்ளலே! மணவாளனே! இந்திரனுடைய தோளை நீக்கிய வலிமையுடையவனே! வெண்ணிறக் காளையை ஏறும் உலகியலிலிருந்து வேறு பட்டவனே! எல்லாருக்கும்

மேம்பட்டவனே! தெளந்த நீரை உடைய கங்கையைச் சடையில் ஏற்றவனே! திருமூலட்டானத்தில் உள்ளவனே! நீ வாழ்க.

திருவாரூர்

பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக் காழி யளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. **#328**

பூக்கள் நிறைந்த சடைமுடியை உடையவனே! தூயவனே! தேவர்கள் துதிக்கும் பரம்பொருளே! தெய்வத்தன்மை நிரம்பிய தேவர்களுக்கும் தேவனே! திருமாலுக்குச் சக்கரம் அளித்தவனே! இம்மனிதப் பிறப்பெடுத்தும் வீணாகச் சாகாமல் பிறவிப் பிணியிலிருந்து காப்பாற்றி என்னை ஆண்டவனே! சங்கினை ஒத்த வெள்ளிய நீற்றினை அணிந்த பெருந்திறமை உடையவனே! காளை வடிவம் எழுதிய கொடியை உடையவனே! திருமூலட்டானத்தில் உறைபவனே! நீ வாழ்க.

திருவாரூர்

பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றியன்றரக்கன் ஐந்நான்கு தோளுந் தாளுஞ்
சிரம்நெரித்த சேவடியாய் போற்றி போற்றிதிருமூலட் டானனே போற்றி போற்றி. **#329**

பிரமனுடைய ஐந்தாம் தலையை நீக்கிய பெரியோனே! பெண்ணுருவும், ஆணுருவுமாய் இருப்பவனே! நான்கு கைகளும் முக்கண்களும் உடையவனே! அமுதத்தை உண்ணும் தேவர்களுக்கு அரசே! ஒரு காலத்தில் இராவணனுடைய இருபது தோள்களையும் கால்களையும் தலைகளையும் நெரித்த திருவடியை உடையவனே! திருமூலட்டானத்தில் உறைபவனே! நீ வாழ்க.

திருவாரூர்

இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

பொருங்கைமதக் கரியுரிவைப் போர்வை யானைப்
பூவணமும் வலஞ்சுழியும் பொருந்தி னானைக்
கரும்புதரு கட்டியையின் னமிர்தைத் தேனைக்
காண்பரிய செழுஞ்சுடரைக் கனகக் குன்றை
இருங்கனக மதிலாரூர் மூலத் தானத்
தெழுந்தருளி யிருந்தானை இமையோ ரேத்தும்
அருந்தவனை அரநெறியி லப்பன் றன்னை
அடைந்தடியேன் அருவினைநோய் அறுத்த வாறே. **#330**

போரிடும் துதிக்கையை உடைய மத யானையின் தோலைப் போர்த்தியவனாய்ப் பூவணமும் வலஞ்சுழியும் உறைவிட மாகக் கொண்டவனாய்க் கருப்பங்கட்டியையும் அமுதையும் தேனையும் போன்ற இனியவனாய், காட்சிக்கு செஞ்சுடராய்ப் பொற்குன்றாய்ப் பெரிய பொன்மயமான மதில்களை உடைய ஆரூர் மூலட்டானத்து எழுந்தருளியவனாய், தேவர்கள் துதிக்கும் பெருந்தவத்தோனாய் உள்ள திருவாரூர் அரநெறியப்பனை அடைந்து அடியேன் நீக்கற்கரிய வினையாகிய நோயினைப் போக்கிக் கொண்ட திறம் நன்று.

திருவாரூர்

கற்பகமும் இருசுடரு மாயி னானைக்
காளத்தி கயிலாய மலையு ளானை
விற்பயிலும் மதனழிய விழித்தான் தன்னை
விசயனுக்கு வேடுவனாய் நின்றான் தன்னைப்
பொற்பமரும் பொழிலாரூர் மூலட் டானம்
பொருந்தியஎம் பெருமானைப் பொருந்தார் சிந்தை
அற்புதனை அரநெறியி லப்பன் தன்னை
யடைந்தடியேன் அருவினைநோய் அறுத்த வாறே. **#331**

கற்பகமும், சோம சூரியருமாய் ஆகிக் காளத்தி மலையிலும் கயிலாயத்திலும் உறைந்து, விற்றொழிலில் பழகிய மன்மதன் நீறாகுமாறு நெற்றிக்கண்ணைவிழித்து, அருச்சுனன் முன்வேடனாய்க் காட்சியளித்து, அழகிய சோலைகள் சூழ்ந்த ஆரூர் மூலட்டானத்திலே பொருந்திய எம்பெருமானாய்ப் பகைவர்கள் உள்ளத்தே சூனியமாய் உள்ளவனாய் உள்ள அரநெறியில் அப்பனை அடைந்து அடியேன் அருவினை நோய் அறுத்தவாறே.

திருவாரூர்

பாதியொரு பெண்முடிமேற் கங்கை யானைப்
பாசூரும் பரங்குன்றும் மேயான் தன்னை
வேதியனைத் தன்னடியார்க் கௌயான் தன்னை
மெய்ஞ்ஞான விளக்கானை விரையே நாறும்
போதியலும் பொழிலாரூர் மூலட் டானம்
புற்றிடங்கொண் டிருந்தானைப் போற்றுவார்கள்
ஆதியனை அரநெறியில் அப்பன் தன்னை
யடைந்தடியேன் அருவினைநோய் அறுத்த வாறே. **#332**

பார்வதி பாகனாய்க் கங்கையை இருத்திய முடியினனாய்ப் பாசூரிலும் பரங்குன்றிலும் விரும்பி உறைபவனாய், வேதியனாய்த் தன் அடியார்களுக்கு எளியவனாய், மெய்ஞ்ஞான விளக்காய், நறுமணம் கமழும் மலர்கள் மிக்க சோலைகளை உடைய ஆரூர் மூலட்டானத்தில் உள்ள புற்றிடங்கொண்ட பெருமானாய்த் தன்னைத் துதிப்பவர்கள் தலைவனாய் உள்ள அரநெறியில் அப்பனை அடைந்து அடியேன் அருவினைநோய் அறுத்தவாறே.

<u>திருவாரூர்</u>

நந்திபணி கொண்டருளும் நம்பன் தன்னை
நாகேச் சரமிடமா நண்ணி னானைச்
சந்திமல ரிட்டணிந்து வானோ ரேத்துந்
தத்துவனைச் சக்கரம்மாற் கீந்தான் தன்னை
இந்துநுழை பொழிலாரூர் மூலட் டானம்
இடங்கொண்ட பெருமானை யிமையோர் போற்றும்
அந்தணனை அரநெறியில் அப்பன் தன்னை
யடைந்தடியேன் அருவினைநோய் அறுத்த வாறே. **#333**

நந்திதேவருடைய முதற்பெருங்காவலை ஏற்றுக்கொண்ட தலைவனாய், நாகேச்சுரத்தில் உறைபவனாய், காலை நண்பகல் மாலை என்ற முப்போதும் வானவர்கள் பூக்களால் அலங்கரித்துத் துதிக்கும் மெய்ப் பொருளாய், திருமாலுக்குச் சக்கரம் ஈந்தவனாய், சந்திரன் நுழைந்து செல்லுமாறு வானளாவி உயர்ந்த சோலைகளை உடைய ஆரூர் மூலட்டானத்தில் உறையும் பெருமானாய், தேவர்கள் போற்றும் அந்தணனாய் உள்ள ஆரூரில் அரநெறியின் அப்பனை அடைந்து அடியேன் அருவினை நோய் அறுத்தவாறே.

<u>திருவாரூர்</u>

சுடர்ப்பவளத் திருமேனி வெண்ணீற்றானைச்
சோதிலிங்கத் தூங்கானை மாடத்தானை
விடக்கிடுகா டிடமாக வுடையான் தன்னைமிக்கரண மெரியூட்ட

வல்லான்தன்னை
மடற்குலவு பொழிலாரூர் மூலட் டானம்மன்னியவெம் பெருமானை
மதியார் வேள்வி
அடர்த்தவனை அரநெறியில் அப்பன் தன்னையடைந்தடியேன்
அருவினைநோய் அறுத்த வாறே. **#334**
பவளம் போல ஒளி வீசும் செம்மேனியில் வெண்ணீறு அணிந்தவனைச் சோதிலிங்கமாக உள்ளவனைப் பெண்ணாகடத்துத் தூங்கானைமாடத்து உறைபவனைப் பிணங்கள் இடும் சுடுகாட்டை உறைவிடமாக உடையவனை, தீமை மிக்க முப்புரங்களை எரித்தவனை, பூக்களின் இதழ்கள் மிக்க சோலைகளை உடைய ஆரூர் மூலட்டானத்தில் நிலைபெற்ற எம்பெருமானை, தன்னை மதியாதவர்களுடைய வேள்வியை. அழித்தவனை, அரநெறியில் உறையும் தலைவனை இத்தகைய பண்புகளையும் செயல்களையும் உடைய பெருமானை அடைந்து அடியேன் அருவினை நோய் அறுத்தவாறே.

திருவாரூர்

தாயவனை யெவ்வுயிர்க்குந் தன்னொப் பில்லாத்தகுதில்லை
நடம்பயிலும் தலைவன் தன்னை
மாயவனும் மலரவனும் வானோ ரேத்தமறிகடல்நஞ் சுண்டுகந்த
மைந்தன் தன்னை
மேயவனைப் பொழிலாரூர் மூலட் டானம்விரும்பியவெம் பெருமானை
யெல்லாம் முன்னே
ஆயவனை அரநெறியில் அப்பன் தன்னையடைந்தடியேன்
அருவினைநோய் அறுத்த வாறே. **#335**
எல்லா உயிர்களுக்கும் தாயாய், தனக்கு ஒப்பு இல்லாத திருத்தலமாகிய தில்லையில் கூத்தனாய், திருமாலும், பிரமனும் ஏனைய வானவரும் துதிக்குமாறு அலைகள் மோதி மீளும் கடலின் நஞ்சினை உண்டு மகிழ்ந்த வலியவனாய், எல்லா உயிர்களையும் விரும்பியவனாய், சோலைகளை உடைய ஆரூர் மூலட்டானத்தை விரும்பிய எம்பெருமானாய், எல்லாப் பொருள்களிலும் தொடக்கத்தி லேயே பரவி அவற்றைச் செயற்படுத்துபவனாய் உள்ள ஆரூரில் அர நெறியில் உறையும் அப்பனை அடைந்து அடியேன் அருவினை நோய் அறுத்தவாறே.

திருவாரூர்

பொருளியல்நற் சொற்பதங்க ளாயி னானைப்
புகலூரும் புறம்பயமும் மேயான் தன்னை
மருளியலுஞ் சிந்தையர்க்கு மருந்து தன்னை

மறைக்காடுஞ் சாய்க்காடும் மன்னி னானை
இருளியல்நற் பொழிலாரூர் மூலட் டானத்
தினிதமரும் பெருமானை யிமையோ ரேத்த
அருளியனை அரநெறியி லப்பன் தன்னை
யடைந்தடியேன் அருவினைநோய் அறுத்த வாறே. **#336**

பொருள்களை உடைய சொற்களாக அமைந்தவனாய், புகலூரிலும் புறம்பயத்திலும் விரும்பி உறைபவனாய், மயக்கம் பொருந்திய மனத்தவருக்கு மயக்கம் போக்கும் அமுதமாய், மறைக்காட்டிலும், சாய்க்காட்டிலும் உறைபவனாய், மரச்செறிவால் இருண்ட பெரிய பொழில்களை உடைய ஆரூர் மூலட்டானத்தில் மகிழ்வாக அமர்ந்திருக்கும் பெருமானாய்த் தேவர்கள் துதிக்க அவர்களுக்கு அருளியவனாய் உள்ள அரநெறியின் அப்பனை அடைந்து அடியேன் அருவினை நோய் அறுத்தவாறே.

<u>திருவாரூர்</u>

காலனைக்கா லாற்காய்ந்த கடவுள் தன்னைக்
காரோணங் கழிப்பாலை மேயான் தன்னைப்
பாலனுக்குப் பாற்கடலன் றீந்தான் தன்னைப்
பணியுகந்த அடியார்கட் கினியான் தன்னைச்
சேலுகளும் வயலாரூர் மூலட் டானஞ்
சேர்ந்திருந்த பெருமானைப் பவள மீன்ற
ஆலவனை அரநெறியி லப்பன் தன்னை
யடைந்தடியேன் அருவினைநோய் அறுத்த வாறே. **#337**

காலனைக் காலால் வெகுண்ட கடவுளாய், குடந்தை நாகைக் காரோணங்களையும் கழிப்பாலையையும் விரும்பி உறைபவனாய், உபமன்னியுவாகிய பாலனுக்காகப் பாற்கடலையே அளித்தவனாய், தன் திருத்தொண்டில் மகிழ்ந்து ஈடுபட்ட அடியவர்களுக்கு இனியனாய், சேல்மீன்கள் தாவித் திரியும் வயல்களை உடைய திருவாரூர் மூலட்டானத்தில் சேர்ந்திருக்கும் பெருமானாய், பவளத்தின் ஒளியைத் தருகின்ற ஆலம்விழுது போன்ற சடையை உடையவனாய் உள்ள ஆரூரின் அரநெறியின் அப்பனை அடைந்து அடியேன் அருவினை நோய் அறுத்தவாறே.

<u>திருவாரூர்</u>

ஒப்பொருவ ரில்லாத ஒருவன் தன்னை
ஓத்தூரும் உறையூரும் மேவி னானை
வைப்பவனை மாணிக்கச் சோதி யானை
மாருதமுந் தீவெளிநீர் மண்ணா னானைப்

மெய்ப் பொருள் ஆய் அடியேனது உள்ளே நின்ற
வினை இலியை, திரு மூலட்டானம் மேய
அப் பொன்னை, அரநெறியில் அப்பன் தன்னை,
யடைந்தடியேன் அருவினைநோய் அறுத்த வாறே!. **#338**
தன்னை ஒப்பவர் வேறு யாவரும் இல்லாத ஒப்பற்றவனாய்,
ஓத்தூரையும், உறையூரையும் விரும்பி உறைபவனாய், நமக்குச்
சேமநிதிபோல்வானாய். மாணிக்கத்தின் ஒளியை உடைய வனாய்,
காற்றும் தீயும், ஆகாயமும் நீரும் மண்ணும் ஆகிய ஐம்பூதங்களாகவும்
உள்ளவனாய், ...

திருவாரூர்

பகலவன்தன் பல்லுகுத்த படிறன் தன்னைப்
பராய்த் துறைபைஞ் ஞீலியிடம் பாவித் தானை
இகலவனை இராவணனை யிடர்செய் தானை
யேத்தாதார் மனத்தகத்துள் இருளா னானைப்
புகழ்நிலவு பொழிலாரூர் மூலட் டானம்பொருந்தியவெம்
பெருமானைப் போற்றார் சிந்தை
அகலவனை அரநெறியி லப்பன் தன்னையடைந்தடியேன்
அருவினைநோய் அறுத்த வாறே. **#339**
சூரியன் ஒருவனுடைய பற்களைத் தகர்த்த வஞ்சகனாய்,
பராய்த்துறையையும் பைஞ்ஞீலியையும் உறைவிடங்களாகக்
கருதியவனாய், மாறுபட்ட இராவணனைத் துன்புறுத்தியவனாய்த்
தன்னைத் துதியாதவர் மனத்தினில் இருளாக இருப்பவனாய்ப் புகழ்
பொருந்திய சோலைகளை உடைய ஆரூர் மூலட்டானத்தை
உறைவிடமாகக் கொண்ட எம்பெருமானாய் உள்ள அரநெறியின்
அப்பனை அடைந்து அடியேன் அருவினைநோய் அறுத்தவாறே.

திருவாரூர்

திருவாரூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முல்லைவனேசுவரர்.
தேவியார் : கரும்பனையாளம்மை.

ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ
ஓருருவே மூவுருவ மான நாளோ
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
காமனையுங் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும் விண்ணுந் தெரித்த நாளோ
மான்மறிகை யேந்தியோர் மாதோர் பாகந்

திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. **#340**

ஒப்பற்ற தலைவனாய், உலகங்கள் துதிக்க நின்றவனே! ஒரே உருவம் அரி, அயன், அரன் என்ற மூன்று வடிவம் ஆனவனே! கோபங்கொண்டு கூற்றுவனை உதைத்தவனே! மன்மதனையும் கண்ணிலிருந்து தோன்றிய நெருப்பினால் சாம்பலாக்கியவனே! பொருந்துதல் உடையவனாய் மண் உலகையும், தேவர் உலகையும் படைத்தவனே! மான்குட்டியைக் கையில் ஏந்தியவனே! அழகியவளாம் பார்வதியை ஒருபாகமாக உடலில் கொண்டவனே! இச்செயல்களை எல்லாம் செய்வதற்கு முன்னோ, செய்த பின்னோ நீ திருவாரூரை உகந்தருளும் திருத்தலமாகக் கொண்டுள்ளாய்?

<u>திருவாரூர்</u>

மலையார்பொற் பாவையொடு மகிழ்ந்த நாளோ
வானவரை வலியமுத மூட்டி யந்நாள்
நிலைபேறு பெறுவித்து நின்ற நாளோ
நினைப்பரிய தழற்பிழம்பாய் நிமிர்ந்த நாளோ
அலைசாமே அலைகடல்நஞ் சுண்ட நாளோ
அமரர்கணம் புடைசூழ இருந்த நாளோ
சிலையான்முப் புரமெரித்த முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. **#341**

அழகிய மலை மங்கையாகிய பார்வதியோடு மகிழ்ந்தவனே! தேவர்கள் வருந்தாதபடி கடல் விடத்தை உண்டவனே! தேவர்கணம் புடைசூழ இருந்தவனே! அவர்களுக்கு வலிமை தரும் அமுதத்தை உண்பித்து நிலைபேற்றை அருளியவனே! நினைக்கவும் முடியாத தீப்பிழம்பாக ஓங்கி இருந்தவனே! வில்லால் மும் மதில்களையும் எரித்துச் சாம்பலாக்கியவனே! இச்செயல்களைச் செய்வதன் முன்னோ செய்த பின்னோ நீ திருவாரூரைக் கோயிலாகக் கொண்டாய்?.

<u>திருவாரூர்</u>

பாடகஞ்சேர் மெல்லடிநற் பாவை யாளும்
நீயும்போய்ப் பார்த்தனது பலத்தைக் காண்பான்
வேடனாய் வில்வாங்கி எய்த நாளோ
விண்ணவர்க்குங் கண்ணவனாய் நின்ற நாளோ
மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை
மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ
அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே. **#342**

பாடகம் என்ற அணியினை அணிந்த மெல்லிய அடிகளை உடைய பார்வதியோடு பார்த்தனுடைய வலிமையைப் பரிசோதிப்பதற்கு வேடனாய் வில்லை வளைத்துக் கொண்டு நின்றவனே! தேவர்களுக்கும் பற்றுக் கோடாய் நின்றவனே! மாட மாளிகைகள் நிறைந்த தில்லைத் திருப்பதியில் அழகு விளங்கும் பொன்னம்பலத்தில் நிலைபெற்றுக்கூத்தாடத் தொடங்கியவனே! இச்செயல்களைச் செய்வதன் முன்னோ செய்தபின்னோ நீ திருவாரூரைக் கோயிலாகக் கொண்டாய்?

திருவாரூர்

ஓங்கி உயர்ந்தெழுந்து நின்ற நாளோ
ஓருகம்போல் ஏழுகமாய் நின்ற நாளோ
தாங்கியசீர்த் தலையான வானோர் செய்த
தக்கன்தன் பெருவேள்வி தகர்த்த நாளோ
நீங்கியநீர்த் தாமரையான் நெடுமா லோடு
நில்லாயெம் பெருமானே யென்றங்கேத்தி
வாங்கிமதி வைப்பதற்கு முன்னோ பின்னோ
வளராரூர் கோயிலாக் கொண்ட நாளே. **#343**

ஓங்கி உயர்ந்து எழுந்து நின்றவனே! ஓர் ஊழியில் போலப் பல ஊழிகளிலும் நிலைபெற்றிருப்பவனே! மிகச் சிறப்புடைய உயர்ந்த தேவர்களின் ஒத்துழைப்போடு நிகழ்த்தப்பட்ட தக்கனுடைய பெரிய வேள்வியை அழித்தவனே! நீருள் பூக்காது திருமாலின் உந்தியில் பூத்த தாமரையில் தோன்றிய பிரமனும், திருமாலும், 'பெருமானே! எங்கள் உள்ளத்தில் நிலைபெற்றிருப்பாயாக' என்று துதித்து, தம் உள்ளத்தின் கண் கொண்டு செறித்து வைக்கப்பட்டிருப்பவனே! இச் செயல்கள் நிகழ்த்தப்படுவதன் முன்னோ நிகழ்த்தப்பட்ட பின்னோ நீ திருவாரூரைக் கோயிலாகக் கொண்டாய்?.

திருவாரூர்

பாலனாய் வளர்ந்திலாப் பான்மை யானே
பணிவார்கட் கங்கங்கே பற்றா னானே
நீலமா மணிகண்டத் தெண்டோ ளானே
நெருநலையாய் இன்றாகி நாளை யாகுஞ்
சீலமே சிவலோக நெறியே யாகுஞ்
சீர்மையே கூர்மையே குணமே நல்ல
கோலம்நீ கொள்வதற்கு முன்னோ பின்னோ
குளிராரூர் கோயிலாக் கொண்ட நாளே. **#344**

பாலர் முதலிய பருவங்களைக் கொண்டு வளராமல் என்றும் ஒரே

நிலையில் இருப்பவனே! வழிபடும் அடியவர்களுக்கு
அவ்வவ்விடங்களில் பற்றுக்கோடாய் இருப்பவனே! நீலகண்டனே!
பெருந்தோள்களை உடையவனே! முக்காலமும் ஆளும் செயலை
உடையவனே! சிவலோகம் சேரும் நெறியை அடியாருக்கு அருளும்
புகழுக்குரிய தன்மையனே! நுண்ணறிவு உடையவனே!
நற்பண்புகளுக்கு இருப்பிடமானவனே! அருளுருவம் கொண்டவனே!
இச் செயல்கள் நிகழ்த்தப்படுவதன் முன்னோ நிகழ்த்தப்பட்டதன்
பின்னோ நீ திருவாரூரைக் கோயிலாகக் கொண்டாய்?.

திருவாரூர்

திறம்பலவும் வழிகாட்டிச் செய்கை காட்டிச்
சிறியையாய்ப் பெரியையாய் நின்ற நாளோ
மறம்பலவு முடையாரை மயக்கந் தீர்த்து
மாமுனிவர்க் கருள்செய்தங் கிருந்த நாளோ
பிறங்கியசீர்ப் பிரமன்தன் தலைகை யேந்திப்
பிச்சையேற் றுண்டுழன்று நின்ற நாளோ
அறம்பலவும் உரைப்பதற்கு முன்னோ பின்னோ
அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே. **#345**

உயிர்களுக்கு மனித வாழ்க்கையின் பயனையும் அப்பயனை அடையும்
வழி முறைகளையும் அறிவர் வாயிலாகக் காட்டியவனே! அணுவை
விடச் சிறிய அணுவாகவும் பெரிய பொருள்களை விடப்
பெரியவனாகியும் உள்ளவனே! ஒவ்வாத செயல்கள் பலவும் உடைய
தாருகவனத்து முனிவருடைய மயக்கத்தைத் தீர்த்து அருள் செய்து
இருந்தவனே! மிக்க சிறப்புடைய பிரமனுடைய மண்டையோட்டைக்
கையில் ஏந்திப் பிச்சை ஏற்று உண்டு உழன்று நிற்பவனே! அறம்பலவும்
உரைத்தவனே! இச் செயல்களை நீ செய்வதன் முன்னோ செய்த
பின்னோ திருவாரூரைக் கோயிலாகக் கொண்டாய்?

திருவாரூர்

நிலந்தரத்து நீண்டுருவ மான நாளோ
நிற்பனவும் நடப்பனவும் நீயே யாகிக்
கலந்துரைக்கக் கற்பகமாய் நின்ற நாளோ
காரணத்தால் நாரணனைக் கற்பித் தன்று
வலஞ்சுருக்கி வல்லசுரர் மாண்டு வீழ
வாசுகியை வாய்மடுத்து வானோ ருய்யச்
சலந்தரனைக் கொல்வதற்கு முன்னோ பின்னோ
தண்ணாரூர் கோயிலாக் கொண்ட நாளே. **#346**

மண்ணும் விண்ணும் ஒன்றுபட நீண்ட உருவம் ஆயினவனே!

கலப்பினால் சராசரங்கள் யாவுமாகி நிற்பவனே! எல்லோரும் கூடி உன் பெருமையைப் பேசக் கற்பகமாய் உள்ளவனே! வானோருக்கு அசுரர்கள் தீங்கு விளைத்த காரணத்தால் திருமாலைப் படைத்து அசுரர்களுடைய வலிமையைச் சுருக்கி அவர்கள் மாண்டு அழியச் செய்தவனே! வாசுகியால் வெளிப்பட்ட ஆலகால விடத்தை உண்டவனே! சலந்தரனை அழித்தவனே! இச்செயல்கள் செய்வதற்கு முன்னோ செய்தபின்னோ நீ குளிர்ந்த ஆரூரைக் கோயிலாகக் கொண்டாய்?

திருவாரூர்

பாதத்தால் முயலகனைப் பாது காத்துப்
பாரகத்தே பரஞ்சுடராய் நின்ற நாளோ
கீதத்தை மிகப்பாடும் அடியார்க் கென்றுங்
கேடிலா வானுலகங் கொடுத்த நாளோ
பூதத்தான் பொருநீலி புனிதன் மேவிப்
பொய்யுரையா மறைநால்வர் விண்ணோர்க் கென்றும்
வேதத்தை விரிப்பதற்கு முன்னோ பின்னோ
விழவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. **#347**

அழுத்திய திருவடியால் முயலகனை யாருக்கும் தீங்கு நிகழ்த்தாதவாறு அழுத்திவைத்து உலகில் மேம்பட்ட சுடராய்த் திகழ்பவனே! உன்புகழ் பாடும் அடியவர்களுக்கு என்றும் அழிவில்லா வீட்டுலகம் நல்கியவனே! பூத கணங்களை உடைய நந்தி தேவர், தனக்குத் தானே ஒப்பாகும் பார்வதி, புனிதனாகிய பிரமன், பொய்யுரையாத வேதத்தில் வல்ல நால்வர் மற்றத் தேவர் எல்லோருக்கும் வேதக் கருத்தை விரித்து உரைத்தவனே! நீ இச் செயல்களைச் செய்வதன் முன்னரோ செய்த பின்னரோ திருவாரூரைக் கோயிலாகக் கொண்டாய்?

திருவாரூர்

புகையெட்டும் போக்கெட்டும் புலன்க ளெட்டும்
பூதலங்க ளவையெட்டும் பொழில்க ளெட்டும்
கலையெட்டுங் காப்பெட்டுங் காட்சி யெட்டுங்
கழற்சே வடியடைந்தார் களைக ணெட்டும்
நகையெட்டும் நாளெட்டும் நன்மை யெட்டும்நலஞ்சிறந்தார்
மனத்தகத்து மலர்க ளெட்டு
ம்திகையெட்டுந் தெரிப்பதற்கு முன்னோ பின்னோதிருவாரூர்
கோயிலாக் கொண்ட நாளே. **#348**

சென்று சேரத்தக்க எண் வகைப் பிறப்புக்கள், எண்வகைக் குற்றங்கள், எண்புலன்கள், எண்வகை உலகங்கள், எண்வகைத் தீவுகள், எண்வகைக் கடல்கள், எண்வகை அரண்கள், தீவுகள் எட்டின்எண்வகைப்பட்ட

இயல்புகள், உன் திருவடிகளை அடைந்தவர்களுக்குக்கிட்டும் பயன்கள் எட்டு, எண்வகை ஒளிகள், ஒன்றும்பலவும் ஆகிய பகுதிகளை உடைய எட்டு நாள்கள், எட்டுநன்மைகள், ஞானத்தின் மேம்பட்ட அடியார்களின்மனத்தில் அமைந்த எண்வகைப் பண்புகளாகிய எண்மலர்கள்,எட்டுத் திசைகள் ஆகிய இவற்றைத் தோன்றச் செய்வதன்முன்னோ தோற்றிய பின்னோ நீ திருவாரூரைக்கோயிலாகக் கொண்டாய்?

<u>திருவாரூர்</u>

ஈசனா யுலகேழும் மலையு மாகி
இராவணனை ஈடழித்திட் டிருந்த நாளோ
வாசமலர் மகிழ்தென்ற லான நாளோ
மதயானை யுரிபோர்த்து மகிழ்ந்த நாளோ
தாதுமலர் சண்டிக்குக் கொடுத்த நாளோ
சகரர்களை மறித்திட்டாட் கொண்ட நாளோ
தேசமுமை யறிவதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. **#349**

உலகம் ஏழையும் மலைகள் ஏழையும் அடக்கி ஆள்பவனே! இராவணன் ஆற்றலை அழித்து இருப்பவனே! பொதிய மலையில் அமர்ந்து மலர்களின் மணங்களை மகிழ்ந்து ஏற்கும் தென்றலாகி இருப்பவனே! மதயானையின் தோலைப் போர்த்து மகிழ்ந்தவனே! சூடிய மலர் மாலையைச் சண்டி கேசுவரருக்குக் கொடுத்தவனே! சகரபுத்திரர்களின் சாபத்தைத் தீர்த்து அவர்களை ஆட் கொண்டவனே! இச் செயல்களால் உலகவர் உன்னைப் பரம்பொருள் என்று அறிவதற்கு முன்னோ அறிந்தபின்னோ நீ திருவாரூரைக் கோயிலாகக் கொண்டாய்?

திருவெண்காடு

திருவெண்காடு

திருவெண்காடு, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சுவேதாரணியேசுவரர்.
தேவியார் : பிரமவித்தியாநாயகியம்மை.

தூண்டு சுடர்மேனித் தூநீ றாடிச்
சூலங்கை யேந்தியோர் சுழல்வாய் நாகம்
பூண்டு பொறியரவங் காதிற் பெய்து
பொற்சடைக ளவைதாழப் புரிவெண்ணூலர்
நீண்டு கிடந்திலங்கு திங்கள் சூடி
நெடுந்தெருவே வந்தெனது நெஞ்சங் கொண்டார்
வேண்டு நடைநடக்கும் வெள்ளே றேறி
வெண்காடு மேவிய விகிர்த னாரே. **#350**

தாம் விரும்பியவாறே விரைந்தும் தாவியும் மெல்லென்றும் நடக்கும் காளையை இவர்ந்து திருவெண்காட்டை விரும்பி அடைந்த, உலகியலுக்கு வேறுபட்ட பெருமான், தூண்டப்பட்ட விளக்கினது ஒளி போன்ற பிரகாசம் உடைய திருமேனியில் வெண்ணீறணிந்து, சூலத்தைக் கையில் ஏந்திச் சுழலும் நாக்கினை உடைய பாம்பினை அணிகலனாகப் பூண்டு, காதிலும் பாம்பினை அணிந்து, பொன் போன்ற சடைகள் தொங்கப் பூணூல் அணிந்தவராய் நீண்டு கிடந்து விளங்கும் பிறைச் சந்திரனைச் சூடி நீண்ட தெருவழியே வந்து என் நெஞ்சத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

திருவெண்காடு

பாதந் தரிப்பார்மேல் வைத்த பாதர்
பாதாள மேழுருவப் பாய்ந்த பாதர்
ஏதம் படாவண்ணம் நின்ற பாதர்
ஏழுலகு மாய்நின்ற ஏக பாதர்
ஓதத் தொலிமடங்கி யூருண் டேறி
யொத்துலக மெல்லா மொடுங்கி யபின்
வேதத் தொலிகொண்டு வீணை கேட்பார்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. **#351**

வெண்காடு மேவிய விகிர்தனார் தம் திருவடிகளை மனத்துக் கொள்ளும் அடியவர்களுக்குத் திருவடி தீட்சை செய்து, பாதலத்தையும் கடந்து, கீழ் உருவிச் சென்ற திருவடிகளை உடையவராய், யாருக்கும் தீங்கு

நேராதவகையில் ஏழுலகமாய் நின்ற ஒரே திருவடியை உடையவராய், ஊழி வெள்ளத்தின் ஒலி, உலகையெல்லாம் வெள்ளம் மூழ்குவித்து அவ்வுலகமெல்லாம் அழிந்த பின்னர் அடங்கியபோது, தாம் ஒடுங்காது வேதம் ஓதி வீணையை இசைத்து அவ்வொலியில் மகிழ்வர்.

திருவெண்காடு

நென்னலையோர் ஓடேந்திப் பிச்சைக் கென்று
வந்தார்க்கு வந்தேனென் றில்லே புக்கேன்
அந்நிலையே நிற்கின்றார் ஐயங் கொள்ளார்
அருகே வருவார்போல் நோக்கு கின்றார்
நுந்நிலைமை யேதோநும் மூர்தா னேதோ
என்றேனுக் கொன்றாகச் சொல்ல மாட்டார்
மென்முலையார் கூடி விரும்பி யாடும்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. **#352**

மெல்லிய தனங்களை உடைய மகளிர் கூடி விரும்பி விளையாடும் வெண்காடு மேவிய விகிர்தனார் நேற்று ஒரு மண்டையோட்டைக் கையில் ஏந்திப் பிச்சை பெறுவதற்காக வந்தாராக 'இதோ வந்துவிட்டேன்' என்று வீட்டிற்குள் புகுந்து உணவுடன் நான் மீண்டுவர நின்ற இடத்திலேயே நின்று கொண்டு யான் இடவந்த பிச்சையை ஏற்காமல் பக்கத்தில் வருபவரைப் போல என்னைக் கூர்ந்து நோக்கினார்.'உம் மன நிலை எவ்வாறு இருக்கிறது? உம்முடைய ஊர்யாது?' என்று வினவிய எனக்கு மறுமாற்றம் தாராமலே நின்றுபின் சென்று விட்டார்?

திருவெண்காடு

ஆகத் துமையடக்கி யாறு சூடி
ஐவா யரவசைத்தங் கானே றேறிப்
போகம் பலவுடைத்தாய்ப் பூதஞ் சூழப்
புலித்தோ லுடையாப் புகுந்து நின்றார்
பாகிடுவான் சென்றேனைப் பற்றி நோக்கிப்
பரிசழித்தென் வளைகவர்ந்தார் பாவி யேனை
மேக முகிலுரிஞ்சு சோலை சூழ்ந்த
வெண்காடு மேவிய விகிர்த னாரே. **#353**

பார்வதியைப்பாகமாகக் கொண்டு கங்கையைத் தலையில் சூடி ஐந்தலைப்பாம்பினை இடையில் இறுக்கிக் கட்டிக் காளையை இவர்ந்து சிவபோகத்தை நுகரும் பூதங்கள் பலவும் தம்மைச்சூழப் புலித்தோலை உடுத்து இல்லத்துப்புகுந்து நின்றஅவருக்கு உணவு வழங்க வந்த என்னை உள்ளத்தால் பற்றிக்கூர்ந்து நோக்கி என் அடக்கம் என்ற

பண்பினை அழித்துத்தீ வினையை உடைய என் வளைகளை, மேக மண்டலத்தைஅளாவிய சோலை சூழ்ந்த வெண்காடு மேவிய விகிர்தனார்கவர்ந்து சென்றுவிட்டார்.

திருவெண்காடு

கொள்ளைக் குழைக்காதிற் குண்டைப் பூதங்
கொடுகொட்டி கொட்டிக் குனித்துப் பாட
உள்ளங் கவர்ந்திட்டுப் போவார் போல
உழிதருவர் நான்தெரிய மாட்டேன் மீண்டேன்
கள்ள விழிவிழிப்பர் காணாக் கண்ணாற்
கண்ணுள்ளார் போலே கரந்து நிற்பர்
வெள்ளச் சடைமுடியர் வேத நாவர்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. **#354**

மிக்கஒளியை உடைய குழைகளை அணிந்த, பருத்துக் குறியவடிவுடைய பூதங்கள் கொடுகொட்டி என்ற பறையை இசைத்துக் கூத்தாடிப்பாட, என உள்ளத்தைக் கவர்ந்து கொண்டுபோவாரைப் போல என்னைச் சுற்றி வருகிறார். நான்அவரை உள்ளவாறு அறிய இயலாதேனாய்த் திரும்பினேன். என்னை நேரில் பாராதவரைப் போல அரைக்கண்ணால்பார்க்கிறார். கண்ணுக்கு அகப்படுபவரைப் போலக்காட்டி மறைந்து நிற்கிறார். அவர் கங்கையைச் சடையில் கொண்டவர். வேதம் ஓதிய நாவினை உடையவராய் வெண்காடு மேவிய விகிர்தனார் ஆவர்.

திருவெண்காடு

தொட்டிலங்கு சூலத்தர் மழுவா ளேந்திச்
சுடர்க்கொன்றைத் தாரணிந்து சுவைகள் பேசிப்
பட்டிவெள் ளேறேறிப் பலியுங் கொள்ளார்
பார்ப்பாரைப் பரிசழிப்பா ரொக்கின் றாரால்
கட்டிலங்கு வெண்ணீற்றர் கனலப் பேசிக்
கருத்தழித்து வளைகவர்ந்தார் காலை மாலை
விட்டிலங்கு சடைமுடியர் வேத நாவர்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. **#355**

காலையும்மாலையும் எப்பொழுதும் மின்னுகின்ற சடைமுடியைஉடையவராய், வேதம் ஓதும் நாவினராய், வெண்காடு மேவியவிகிர்தனார், ஏவிப்பணி கொள்ளும் சூலம் மழு என்றபடைகளை ஏந்தியவராய், ஒளி வீசும் கொன்றைப் பூமாலையை அணிந்து இருபொருள்படச் சுவையான சொற்களைப்பேசித் தொழுவத்தில் தங்கக் கூடிய வெண்ணிறக்காளையை இவர்ந்து வந்து பிச்சையையும்

ஏற்காதவராய்த்தம்மை நோக்கி நிற்பவர் இயல்பினை அழிக்கின்றவர்போல, முப்பட்டைகளாகத் திருநீற்றை அணிந்து எனக்குக்காமத் தீ ஏற்படும் வகையில் பேசி என் உள்ளத்தில்அடக்கத்தை நீக்கி என் வளைகளையும் கவர்ந்து சென்றுவிட்டார்.

திருவெண்காடு

பெண்பா லொருபாகம் பேணா வாழ்க்கைக்
கோணாகம் பூண்பனவும் நாணாஞ் சொல்லார்
உண்பார் உறங்குவார் ஒவ்வா நங்காய்
உண்பதுவும் நஞ்சன்றேல் ஓவியுண்ணார்
பண்பால் விரிசடையர் பற்றி நோக்கிப்
பாலைப் பரிசழியப் பேசு கின்றார்
விண்பால் மதிசூடி வேதம் ஓதி
வெண்காடு மேவிய விகிர்த னாரே. **#356**

நங்காய்! வானத்தில் இயங்கும் பிறையைச் சூடி, வேதம் ஓதி, வெண்காடு மேவிய விகிர்தனார் பார்வதியைப் பாகமாகக் கொண்டு, பெண்கள் விரும்பாத வாழ்க்கை வாழ்ந்து கொடிய பாம்புகளைப் பூண்டு நான் வெட்கப் படும்படியாக என்னை நலம் பாராட்டுவார். உலகில் உண்பார் உறங்குவார் செயல்களோடு அவருடைய செயல்கள் ஒவ்வா. அவர் விடம் ஒன்றே உண்பார். அன்றேல் கஞ்சத்தனத்தால் உண்பதனை விடுத்து உண்ணாதே இருப்பார். அழகாக விரிந்த சடையுடையவர். என்னை நெருங்கி வந்து கூர்ந்து பார்த்துப் பாலினும் இனிமையாக என்னிடம் பேசுகின்றார்.

திருவெண்காடு

மருதங்க ளாமொழிவர் மங்கை யோடு
வானவரும் மாலயனுங் கூடித் தங்கள்
சுருதங்க ளாற்றுதித்துத் தூநீ ராட்டித்
தோத்திரங்கள் பலசொல்லித் தூபங் காட்டிக்
கருதுங்கொல் எம்பெருமான் செய்குற்றேவல்
என்பார்க்கு வேண்டும் வரங்கொ டுத்து
விகிர்தங்க ளாநடப்பர் வெள்ளே றேறி
வெண்காடு மேவிய விகிர்த னாரே. **#357**

வெண்ணிறக்காளையை இவர்ந்து வெண்காடு மேவிய விகிர்தனார் பார்வதியிடம் அவள் ஊடலைப் போக்கும் சொற்களைப் பேசுபவராய்த் தேவர்களும் திருமாலும் பிரமனும் கூடிவேத வாக்கியங்களால் துதித்து அபிடேகம் செய்து தோத்திரங்கள் பலவற்றைச் சொல்லி நறுமணப் பொருள்களைப்புகைத்து, 'எம்பெருமான் யாங்கள் செய்யும்

குற்றேவல்களை மனத்துக் கொள்வாரோ' என்று வேண்டுபவர்களுக்கு அவர்கள் வேண்டிய வரங்களைக் கொடுத்துத் தமக்கு வேறுபட்டசெயல்கள் உளவாகக் கொண்டு அவற்றிற்காக இடம் பெயர்ந்துசெல்வர்.

திருவெண்காடு

புள்ளானும் நான்முகனும் புக்கும் போந்துங்
காணார் பொறியழலாய் நின்றான் தன்னை
உள்ளானை யொன்றலா உருவி னானை
உலகுக் கொருவிளக்காய் நின்றான் தன்னைக்
கள்ளேந்து கொன்றைதூய்க் காலை மூன்றும்
ஓவாமே நின்று தவங்கள் செய்த
வெள்ளானை வேண்டும் வரங்கொ டுப்பார்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. **#358**

வெண்காடுமேவிய விகிர்தனார், கருடனை உடைய திருமாலும் நான்குமுகங்களை உடைய பிரமனும் கீழும் மேலும் தேடிச்சென்றும் காண இயலாதவராய்ப் பொறிகளை வெளிப்படுத்தும்அழற்பிழம்பாய் நின்றவராய் எல்லாப்பொருள்களின் உள்ளிடத்தும் இருப்பவராய், அடியார்கள்விரும்பும் பல உருவங்களையும் உடைய வராய்த் தேன் நிறைந்தகொன்றைப்பூவை அருச்சித்து நீங்காமல் நன்னெறியில்நின்று தவம் செய்த ஐராவதம் என்ற வெள்ளானைக்குஅது வேண்டிய வரங்களைக் கொடுப்பவர் ஆவர்.

திருவெண்காடு

மாக்குன் றெடுத்தோன்தன் மைந்த னாகி
மாவேழம் வில்லா மதித்தான் தன்னை
நோக்குந் துணைத்தேவ ரெல்லாம் நிற்க
நொடிவரையில் நோவ விழித்தான் தன்னைக்
காக்குங் கடலிலங்கைக் கோமான் தன்னைக்
கதிர்முடியுங் கண்ணும் பிதுங்க வூன்றி
வீக்கந் தவிர்த்த விரலார் போலும்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. **#359**

வெண்காடுமேவிய விகிர்தனார் கோவர்த் தனத்தைக் குடையாகஉயர்த்திய கண்ணனாகிய திருமாலின் மகனாய்க்கரும்பையேவில்லாகக் கொண்ட மன்மதனுக்குத் துணையாக வந்த தேவர்களெல்லாம் பார்த்துக் கொண்டு நின்ற போதே ஒரே நொடி நேரத்தில் அவன் சாம்பலாகுமாறு நெற்றிக் கண்ணால் நோக்கியவர். கடலே அரணாகப் பாதுகாக்கப்பட்ட இலங்கை மன்னனான

இராவணனுடைய ஒளிவீசும் மகுடம் தாங்கிய தலைகளும் கண்களும் நசுங்கி வெளிப்புறம் தோன்றுமாறு தம் திருவடி விரலை ஊன்றி அவனுடைய செருக்கினை அடக்கியவர் ஆவர்.

திருப்பழனம்

திருப்பழனம்

திருப்பழனம், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஆபத்சகாயர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

அலையார் கடல்நஞ்ச முண்டார் தாமே
அமரர்களுக் கருள்செய்யும் ஆதி தாமே
கொலையாய கூற்ற முதைத்தார் தாமே
கொல்வேங்கைத் தோலொன் றசைத்தார் தாமே
சிலையால் புரமூன் றெரித்தார் தாமே
தீநோய் களைந்தென்னை யாண்டார் தாமே
பலிதேர்ந் தழகாய பண்பர் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே. **#360**

திருப்பழனத்திலே உகந்தருளி உறையும் எம்பெருமான் அலைகள் பொருந்திய கடலின் நஞ்சினை உண்டவர். தேவர்களுக்கு அருள் செய்யும் முதற்பொருள். உயிர்களைக் கவரும் கூற்றினை உதைத்தவர். தம்மால் கொல்லப்பட்ட வேங்கைப் புலியின் தோலை உடுத்தவர். வில்லால் திரிபுரத்தை எரித்தவர். கொடிய சூலை நோயைப் போக்கி என்னை ஆட் கொண்டவர். பிச்சை எடுக்கும் நிலையிலும் அழகான பண்புடையவர்.

திருப்பழனம்

வெள்ள மொருசடைமே லேற்றார் தாமே
மேலார்கண் மேலார்கண் மேலார் தாமே
கள்ளங் கடிந்தென்னை யாண்டார் தாமே
கருத்துடைய பூதப் படையார் தாமே
உள்ளத் துவகை தருவார் தாமே
யுறுநோய் சிறுபிணிகள் தீர்ப்பார் தாமே
பள்ளப் பரவைநஞ் சுண்டார் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே. **#361**

பழன நகர் எம்பிரானார் ஒற்றைச் சடையிலே கங்கை வெள்ளத்தை ஏற்றவர். மேம்பட்டவர் எல்லோருக்கும் மேம்பட்டவர். வஞ்சத்தைப் போக்கி என்னை ஆட்கொண்டவர். ஞானம் பெற்ற பூதங்களைப் படையாக உடையவர். தம்மை நினைக்கும் மனத்திற்கு மகிழ்ச்சி தருபவர். தீராத பெரிய நோய்க ளையும், சிறிய நோய்களையும்

தீர்ப்பவர். ஆழமான கடலில் தோன்றிய நஞ்சினை உண்டவர்.

திருப்பழனம்

இரவும் பகலுமாய் நின்றார் தாமே
எப்போதும் என்நெஞ்சத் துள்ளார் தாமே
அரவ மரையில் அசைத்தார் தாமே
அனலாடி யங்கை மறித்தார் தாமே
குரவங் கமழுங்குற் றாலர் தாமே
கோலங்கள் மேன்மே லுகப்பார் தாமே
பரவும் அடியார்க்குப் பாங்கர் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே. **#362**

பழன நகர் எம்பிரானார் இரவும் பகலும் எப்போதும் என் நெஞ்சத்து உள்ளவராய்ப் பாம்பினை இடையில் இறுக்கிக் கட்டியவராய்த் தீயில் கூத்தாடித் தம் கையால் எல்லோருக்கும் 'அஞ்சன்மின்' என்று அபயம் அளிப்பவராய்க் குரா மலர் மணம் கமழும் குற்றாலத்தில் உறைபவராய்ப் பலபல வேடங்களை விரும்பு பவராய்த் தம்மை வழிபடும் அடியவர்களுக்கு என்றும் பக்கலில் இருந்து உதவுபவர்.

திருப்பழனம்

மாறில் மதில்மூன்று மெய்தார் தாமே
வரியரவங் கச்சாக வார்த்தார் தாமே
நீறுசேர் திருமேனி நிமலர் தாமே
நெற்றி நெருப்புக்கண் வைத்தார் தாமே
ஏறுகொடுஞ் சூலக் கையர் தாமே
யென்பா பரண மணிந்தார் தாமே
பாறுண் தலையிற் பலியார் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே. **#363**

பழன நகர் எம்பிரானார் தமக்கு நிகரில்லாத மதில்கள் மூன்றனையும் அழித்தவராய்க் கோடுகளை உடைய பாம்பினைக் கச்சாக அணிந்தவராய், திருநீறணிந்த தூயவராய், நெற்றியில் அக்கினியாகிய கண்ணை உடையவராய்க் கொடிய சூலத்தை ஏந்தியவராய், எலும்புகளை அணிகளாக அணிந்தவராய்ப் பருந்துகள் புலால் நாற்றமறிந்து வட்டமிடும் மண்டையோட்டில் பிச்சை ஏற்பவராய் உள்ளார்.

திருப்பழனம்

சீரால் வணங்கப் படுவார் தாமே
திசைக்கெல்லாந் தேவாகி நின்றார் தாமே

ஆரா அமுதமு மானார் தாமே
யளவில் பெருமை யுடையார் தாமே
நீறார் நியமம் உடையார் தாமே
நீள்வரைவில் லாக வளைத்தார் தாமே
பாரார் பரவப் படுவார் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே. **#364**

பழன நகர் எம்பிரானார் எல்லோராலும் புகழ்ந்து வணங்கப் படுபவராய், எண் திசைகளுக்கும் உரிய தேவராய், தெவிட்டாத அமுதம் ஆவாராய், எல்லையற்ற பெருமை உடையவராய், நீர்வளம் பொருந்திய நியமம் என்ற திருத்தலத்தை உடையவராய், மேருமலையை வில்லாக வளைத்தவராய், எல்லா உலகத்தாராலும் முன் நின்று துதிக்கப்படுபவர் ஆவர்.

<u>திருப்பழனம்</u>

காலனுயிர் வௌவ வல்லார் தாமே
கடிதோடும் வெள்ளை விடையார் தாமே
கோலம் பலவு முகப்பார் தாமே
கோணாகம் நாணாகப் பூண்டார் தாமே
நீலம் பொலிந்த மிடற்றார் தாமே
நீள்வரையி னுச்சி யிருப்பார் தாமே
பால விருத்தரு மானார் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே. **#365**

பழன நகர் எம்பிரானார் காலன் உயிரைப் போக்க வல்லவராய், விரைந்து ஓடும் வெள்ளை நிறக் காளையை உடைய வராய்ப் பல வேடங்களையும் விரும்புபவராய்க் கொடிய பாம்பினைத் தம் வில்லின் நாணாக இணைத்தவராய், நீல கண்டராய்க் கயிலாயத் தின் உச்சியில் உள்ளாராய், பாலன் மூத்தோன் முதலிய எல்லாப் பருவங்களையும் உடையவராய் உள்ளார்.

<u>திருப்பழனம்</u>

ஏய்ந்த வுமைநங்கை பங்கர் தாமே
யேழூழிக் கப்புறமாய் நின்றார் தாமே
ஆய்ந்து மலர்தூவ நின்றார் தாமே
அளவில் பெருமை யுடையார் தாமே
தேய்ந்த பிறைசடைமேல் வைத்தார் தாமே
தீவாய் அரவதனை யார்த்தார் தாமே
பாய்ந்த படர்கங்கை யேற்றார் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே. **#366**

பழன நகர் எம்பிரானார் தமக்குப் பொருந்திய பார்வதி பாகராய், ஏழு ஊழிக்காலங்களுக்கும் அப்பாற்பட்டவராய், அடியார்கள் மலர்களைத் தூய்மை செய்து அணிவிக்க அவற்றை ஏற்று நிற்பவராய், எல்லை கடந்த பெருமை உடையவராய், உருவில் சிறிய பிறையைச் சடையில் அணிந்தவராய், விடம் கக்கும் வாயினை உடைய பாம்பினை இடையில் இறுக்கிக் கட்டியவராய்த் தேவருலகிலிருந்து கீழ்நோக்கிப் பாய்ந்த கங்கையைச் சடையில் ஏற்றவராய் உள்ளார்.

திருப்பழனம்

ஓராதா ருள்ளத்தில் நில்லார் தாமே
யுள்ளூறும் அன்பர் மனத்தார் தாமே
பேராதென் சிந்தை யிருந்தார் தாமே
பிறர்க்கென்றுங் காட்சிக் கரியார் தாமே
ஊராரு மூவுலகத் துள்ளார் தாமே
யுலகை நடுங்காமற் காப்பார் தாமே
பாரார் முழவத் திடையார் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே. **#367**

பழன நகர் எம்பிரானார் தம்மை நினையாதவர் உள்ளத்தில் நிலையாக இல்லாதவராய், உள்ளத்தில் அன்பு சுரந்து பெருகுகின்ற அன்பர்கள் உள்ளத்தில் நிலையாக இருப்பவராய், என் உள்ளத்தை விட்டு அகலாது இருப்பவராய், தம் அடியவர் அல்லாத பிறருக்குக் காண்பதற்கு அரியவராய், ஊர்கள் நிறைந்த மூவுலகத்தும் பரவியிருப்பவராய், உலகம் துயரால் நடுங்காதபடி காப்பவராய், இவ்வுலகைச் சூழ்ந்த கடல்களிலும் பரவியிருப்பவராய் உள்ளார்.

திருப்பழனம்

நீண்டவர்க்கோர் நெருப்புருவ மானார் தாமே
நேரிழையை யொருபாகம் வைத்தார் தாமே
பூண்டரவைப் புலித்தோல்மே லார்த்தார் தாமே
பொன்னிறத்த வெள்ளச் சடையார் தாமே
ஆண்டுலகே ழனைத்தினையும் வைத்தார் தாமே
அங்கங்கே சிவமாகி நின்றார் தாமே
பாண்டவரிற் பார்த்தனுக்குப் பரிந்தார் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே. **#368**

பழனநகர் எம்பிரானார் திருமாலுக்கு அடியினைக் காணமுடியாத தீப் பிழம்பின் வடிவில் காட்சி வழங்கியவராய், பார்வதி பாகராய், புலித்தோல் மீது பாம்பினை இறுகக் கட்டி இடையில் அணிபவராய், செஞ்சடையில் கங்கை வெள்ளத்தைத் தேக்கியவராய், ஏழு

உலகங்களையும் படைத்து ஆள்பவராய், பல இடங்களிலும் சிவமாகிக் காட்சி வழங்குபவராய், பாண்டவரில் அருச்சுனனுக்கு இரங்கிப் படைகள் வழங்கி அருள்புரிந்தவராய் உள்ளார்.

திருப்பழனம்

விடையேறி வேண்டுலகத் திருப்பார் தாமே
விரிகதிரோன் சோற்றுத் துறையார் தாமே
புடைசூழத் தேவர் குழாத்தார் தாமே
பூந்துருத்தி நெய்த்தானம் மேயார் தாமே
அடைவே புனல்சூழ்ஐ யாற்றார் தாமே
அரக்கனையும் ஆற்ற லழித்தார் தாமே
படையாப் பல்பூத முடையார் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே. **#369**

பழன நகர் எம்பிரானார் காளையை இவர்ந்து தாம் விரும்பிய உலகத்து இருப்பவராய்ச் சூரியன் வழிபடும் சோற்றுத் துறையில் உறைபவராய்த் தேவர் கூட்டத்தால் நாற்பக்கமும் சூழப் பெற்றவராய்ப் பூந்துருத்தியையும் நெய்த்தானத்தையும் விரும்பியவராய், அடுத்துப் புனல்சூழும் திருவையாற்றை உகந்தருளி உறைபவராய், இராவணனுடைய ஆற்றலை அழித்தவராய்ப் பூதங்களைப் படையாக உடையவராய் உள்ளார்.

திருவையாறு

திருஐயாறு

திருவையாறு, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.
தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை.

ஆரார் திரிபுரங்கள் நீறா நோக்கும்
அனலாடி ஆரமுதே யென்றேன் நானே
கூரார் மழுவாட் படையொன் றேந்திக்
குறட்பூதப் பல்படையா யென்றேன் நானே
பேரா யிரமுடையா யென்றேன் நானேபிறைசூடும் பிஞ்ஞகனே யென்றேன் நானே
ஆரா அமுதேயென் ஐயா றன்னேயென்றென்றே நானரற்றி நைகின் றேனே. **#370**

பகைவருடைய முப்புரங்களை அழித்தவனே! தீயில் கூத்து நிகழ்த்துபவனே! கிட்டுதற்கு அரிய அமுதமே! கூரிய மழுப்படையை ஏந்துபவனே! குட்டையான பல பூதங்களைப் படையாக உடையவனே! ஆயிரம் பெயர் உடையவனே! பிறையைச் சூடும் தலைக்கோலம் உடையவனே! ஆரா அமுதமாம் ஐயாற்றெம் பெருமானே! என்று பலகாலும் வாய்விட்டு அழைத்து மனம் உருகி நைகின்றேன்.

திருஐயாறு

தீவாயின் முப்புரங்கள் நீறா நோக்குந்
தீர்த்தா புராணனே யென்றேன் நானே
மூவா மதிசூடி யென்றேன் நானே
முதல்வாமுக் கண்ணனே யென்றேன் நானே
ஏவார் சிலையானே யென்றேன் நானேஇடும்பைக் கடல்நின்றும் ஏற வாங்கி
ஆவாவென் றருள்புரியும் ஐயா றன்னேயென்றென்றே நானரற்றி நைகின் றேனே. **#371**

திரிபுரங்களைச் சுட்டுச் சாம்பலாக்கிய தூயோனே! பழையோய்! பிறைசூடி! முதல்வா! முக்கண்ணா! அம்பு பூட்டிய வில்லினனே! துயர்க்கடலில் அடியேன் அழுந்தாமல் எடுத்துக் கரையேற்றி ஐயோ! என்று இரங்கி அருள்புரியும் ஐயாறனே! என்று வாய்விட்டு அழைத்து நான் மனம் உருகி நிற்கின்றேன்.

திருஐயாறு

அஞ்சுண்ண வண்ணனே யென்றேன் நானே
அடியார்கட் காரமுதே யென்றேன் நானே
நஞ்சணி கண்டனே யென்றேன் நானே
நாவலர்கள் நான்மறையே என்றேன் நானே
நெஞ்சுணர வுள்புக் கிருந்த போது
நிறையும் அமுதமே யென்றேன் நானே
அஞ்சாதே யாள்வானே ஐயா றன்னே
யென்றென்றே நானரற்றி நைகின்றேனே. **#372**
அழகிய நறுமணப் பொடி பூசியவனே! அடியவர்களுக்கு ஆரமுதே!
விடம் அணிந்த கழுத்தினை உடையவனே! சான்றோர்கள் ஓதும் நான்கு
வேத வடிவினனே! என் மனம் உணருமாறு உள்ளே புகுந்திருக்கும்
போதெல்லாம் எனக்கு அமுதம் போன்ற இனியனே! நாங்கள்
அஞ்சாதபடி எங்களை ஆட்கொண்ட ஐயாற்றுப் பெருமானே! என்று
நான் அரற்றி நைகின்றேன்.

திருஐயாறு

தொல்லைத் தொடுகடலே யென்றேன் நானே
துலங்கும் இளம்பிறையா யென்றேன் நானே
எல்லை நிறைந்தானே யென்றேன் நானே
ஏழ்நரம்பின் இன்னிசையா யென்றேன் நானே
அல்லற் கடல்புக் கழுந்து வேனை
வாங்கியருள் செய்தா யென்றேன் நானே
எல்லையாம் ஐயாறா என்றேன் நானே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. **#373**
பழைய மேல் கடலே! சகர புத்திரர்களால் தோண்டப்பட்ட கீழ்க்கடலே!
விளங்கும் இளம் பிறை சூடீ! உலகம் முழுதும் நிறைந்தவனே! ஏழ்
நரம்பாலும் எழுப்பப்படும் ஏழிசை யானவனே! துயரக் கடலில் மூழ்கி
வருந்தும் என்னை கரைக்குக் கொண்டுவந்து அருள் செய்தவனே!
ஐயாற்றை உகந்தருளி உறைவிடமாகக் கொண்டவனே! என்று நான்
அரற்றி நைகின்றேன்.

திருஐயாறு

இண்டைச் சடைமுடியா யென்றேன் நானே
இருசுடர் வானத்தா யென்றேன் நானே
தொண்டர் தொழப்படுவா யென்றேன் நானே
துருத்திநெய்த் தானத்தா யென்றேன் நானே

கண்டங் கறுத்தானே யென்றேன் நானேகனலாகுங் கண்ணானே யென்றேன் நானே
அண்டத்துக் கப்பாலாம் ஐயா றன்னேயென்றென்றே நானரற்றி நைகின் றேனே. **#374**
சடையில் முடி மாலை அணிந்தவனே! சூரிய சந்திரர் உலவும் ஆகாய வடிவினனே! அடியவரால் வணங்கப் படுபவனே! துருத்தியிலும் நெயத்தானத்திலும் உறைபவனே! நீல கண்டனே! தீக் கண்ணனே! அண்டங்களையும் கடந்த ஐயாற்றுப் பெருமானே! என்று நான் அரற்றி நைகின்றேன்.

திருஐயாறு

பற்றார் புரமெரித்தா யென்றேன் நானே
பசுபதீ பண்டரங்கா வென்றேன் நானே
கற்றார்கள் நாவினா யென்றேன் நானே
கடுவிடை யொன்றூர்தியா யென்றேன் நானே
பற்றானார் நெஞ்சுளா யென்றேன் நானே
பார்த்தர்க் கருள்செய்தா யென்றேன் நானே
அற்றார்க் கருள்செய்யும் ஐயா றன்னே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. **#375**
பகைவர் திரிபுரத்தை எரித்தவனே! ஆன்மாக்களுக்குத் தலைவனே! பண்டரங்கக் கூத்து ஆடுபவனே! அனுபவப் பொருளை ஞானதேசிகர் பால் அறிந்த சான்றோர்களின் நாவில் இருப்பவனே! விரைந்து செல்லும் காளை வாகனனே! உன்னையே பற்றுக் கோடாக உடையவரின் நெஞ்சினை உறைவிடமாகக் கொண்டவனே! அருச்சுனனுக்கு அருள்செய்தவனே! வேற்றுக் களைகண் இல்லாதவர்களுக்கு அருள் செய்யும் ஐயாற்றுப் பெருமானே! என்று நான் அரற்றி நைகின்றேன்.

திருஐயாறு

விண்ணோர் தலைவனே யென்றேன் நானே
விளங்கும் இளம்பிறையா யென்றேன் நானே
எண்ணா ரெயிலெரித்தா யென்றேன் நானே
ஏகம்பம் மேயானே யென்றேன் நானே
பண்ணார் மறைபாடி யென்றேன் நானே
பசுபதீ பால்நீற்றா யென்றேன் நானே
அண்ணாஐ யாறனே யென்றேன் நானே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. **#376**
தேவர் தலைவனே! விளங்கும் பிறை சூடியே! பகைவருடைய

மும்மதிலையும் எரித்தவனே! ஏகம்பத்தில் உறைபவனே! பண் நிறைந்த வேதம் ஓதுபவனே! ஆன்மாக்களின் தலைவனே! வெள்ளிய நீறணிந்தவனே! அண்ணால்! ஐயாற்றுப் பெருமானே! என்று நான் அரற்றி நைகின்றேன்.

திருஐயாறு

அவனென்று நானுன்னை யஞ்சா தேனை
அல்லல் அறுப்பானே யென்றேன் நானே
சிவனென்று நானுன்னை யெல்லாஞ் சொல்லச்
செல்வந் தருவானே யென்றேன் நானே
பவனாகி யென்னுள்ளத் துள்ளே நின்று
பண்டை வினையறுப்பா யென்றேன் நானே
அவனென்றே யாதியே ஐயா றன்னே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. **#377**

வீணன் என்று சொல்லுமாறு, உன்னை அஞ்சாது தீய வழியில் சென்று வருந்திய என்னுடைய துன்பங்களைப் போக்கியவனே! இன்பத்துக்குக் காரணன் என்று நான் உன் பெருமை எல்லாம் சொல்ல எனக்கு உன் திருவருட் செல்வத்தை வழங்குகின்றவனே! என் உள்ளத்துள்ளே விளங்கித் தோன்றுபவனாய் இருந்து என் பழைய ஊழ்வினையை நீக்குபவனே! ஆதியே! ஐயாற்றுப் பெருமானே! நீயே யாவுமாய் எங்குமாய் நிற்கும் அவன் எனப்படும் பரம் பொருள் என்று நான் அரற்றி நைகின்றேன்.

திருஐயாறு

கச்சியே கம்பனே யென்றேன் நானே
கயிலாயா காரோணா என்றேன் நானே
நிச்சன் மணாளனே யென்றேன் நானே
நினைப்பார் மனத்துளா யென்றேன் நானே
உச்சம்போ தேறேறீ யென்றேன் நானேஉள்குவா ருள்ளத்தா
யென்றேன் நானே
அச்சம் பிணிதீர்க்கும் ஐயா றன்னேயென்றென்றே நானரற்றி
நைகின்றேனே. **#378**

கச்சியில் ஏகம்பத்து உறைபவனே! கயிலாயனே! குடந்தை நாகைக் காரோணனே! நித்திய கல்யாணனே! விரும்பி நினைப்பவர் மனத்து உள்ளவனே! நண்பகலில் காளையை இவர்ந்து உலவுபவனே! தியானம் செய்பவர் மனத்தை உறைவிடமாகக் கொள்பவனே! அச்சம், நோய் இவற்றைப் போக்கும் ஐயாற்றுப் பெருமானே! என்று நான் அரற்றி நைகின்றேன்.

திருஐயாறு

வில்லாடி வேடனே யென்றேன் நானே
வெண்ணீறு மெய்க்கணிந்தா யென்றேன் நானே
சொல்லாய சூழலா யென்றேன் நானே
சுலாவாய தொல்நெறியே யென்றேன் நானே
எல்லாமா யென்னுயிரே யென்றேன் நானே
இலங்கையர்கோன் தோளிறுத்தா யென்றேன் நானே
அல்லா வினைதீர்க்கும் ஐயா றன்னே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. **#379**

வில்லைச் செலுத்தும் வேடர் வடிவில் தோன்றியவனே! திருமேனியில் வெண்ணீறு அணிந்தவனே! வேதங்கள் ஓதப்படும் இடங்களில் உள்ளவனே! எங்கும் பரவிய நல்லவர்கள் பின்பற்றும் நன்னெறி ஆகியவனே! எனக்கு எல்லாச் செல்வங்களாகவும் உயிராகவும் இருப்பவனே! இராவணனுடைய தோள்களை நெரித்தவனே! உன்னைச் சார்தற்கு இடையூறாக இருக்கும் தீவினையைப் போக்கும் ஐயாற்றுப் பெருமானே! என்று நான் அரற்றி நைகின்றேன்.

திருஐயாறு

திருவையாறு, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொன்சோதீசுரர்.
தேவியார் : அறம்வளர்த்தநாயகியம்மை.

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. **#380**

திருவையாற்றை விடுத்து நீங்காத செம்பொன் போன்ற ஒளியை உடையவனே! பொருளில்லாத வெற்று ஓசையாகவும் பொருளுடைய எழுத்து சொல் என்பனவாக உள்ள ஒலியாகவும் நீ உள்ளாய். இவ்வுலகுக்குத் தன்னிகரில்லாத் தலைவனாக உள்ளாய். மலரில் மணம் போல உலகமெங்கும் பரவியுள்ளாய். இமவான் மருமகனாய் உள்ளாய். உன் பெருமையைப் பேசுதற்கு இறியனாய் உள்ளாய். எனக்குத் தலைவனாய் உன் திருவடிகளை என் தலைமீது வைத்தாய். உலகில்

உள்ள ஞாயிறு திங்கள், கோள்கள், விண்மீன்கள் முதலிய யாவுமாகியுள்ளாய்.

திருஐயாறு

நோக்கரிய திருமேனி யுடையாய் நீயே
நோவாமே நோக்கருள வல்லாய் நீயே
காப்பரிய ஐம்புலனுங் காத்தாய் நீயே
காமனையுங் கண்ணழலாற் காய்ந்தாய் நீயே
ஆர்ப்பரிய மாநாக மார்த்தாய் நீயே
அடியானென் றடியென்மேல் வைத்தாய் நீயே
தீர்ப்பரிய வல்வினைநோய் தீர்ப்பாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. **#381**

ஊனக்கண்ணால் காணுதற்கு இயலாத திருமேனியை உடையாய்! பசி, பிணி முதலியவற்றினால் வருந்தாத படி அருட்பார்வையால் காப்பவன். நீ, அடக்க முடியாத என் ஐம்புலன்களையும் அடக்குமாறு செய்தாய். மன்மதனை நெருப்புக் கண்ணால் வெகுண்டாய். கட்டுதற்கு அரிய பெரிய பாம்பினை வில் நாணாகக் கட்டினாய். உன் அடியவன் என்று என் தலையில் உன் திருவடிகளை வைத்தாய். மற்றவரால் போக்க முடியாத ஊழ்வினையால் ஏற்படும் துயரங்களை நீக்கினாய். இவ்வாறு செய்து திருவையாறு அகலாத செம்பொன் சோதியாய் உள்ளாய்.

திருஐயாறு

கனத்தகத்துக் கடுஞ்சுடராய் நின்றாய் நீயே
கடல்வரைவான் ஆகாய மானாய் நீயே
தனத்தகத்துக் தலைகலனாக் கொண்டாய் நீயே
சார்ந்தாரைத் தகைந்தாள வல்லாய் நீயே
மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் நீயே
மலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
சினத்திருந்த திருநீல கண்டன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. **#382**

திருவையாறு அகலாத செம்பொன் சோதியே! நீ மேகத்தில் மின்னல்களாகவும், கடல் மலை மேகம் ஆகாயம் என்பனவாகியும், மண்டை ஓட்டையே செல்வமாகக் கொண்டவனாகவும், உன்னைச் சார்ந்த அடியவர்களைத் தவறான வழிகளில் செல்லாமல் தடுத்து அடிமை கொள்ள எல்லவனாகவும், அடியவர் உள்ளக் கருத்தை அறிந்து நிறைவேற்றுபவனாகவும், என் தலைமேல் தாமரை போன்ற உன் திருவடிகளை வைத்தவனாகவும், சிவந்த திருமேனியில் நீலகண்டனாகவும் உள்ளாய்.

திருஐயாறு

வானுற்ற மாமலைக ளானாய் நீயே
வடகயிலை மன்னி யிருந்தாய் நீயே
ஊனுற்ற வொளிமழுவாட் படையாய் நீயே
ஒளிமதியோ டரவுபுனல் வைத்தாய் நீயே
ஆனுற்ற ஐந்தும் அமர்ந்தாய் நீயே
அடியானென் றடியென்மேல் வைத்தாய் நீயே
தேனுற்ற சொல்மட வாள் பங்கன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. **#383**

திருவையாறு அகலாத செம்பொற் சோதியாகிய நீ வானளாவிய மலைகளில் வடக்கிலுள்ள கயிலை மலையில் உறைவாய். புலால் மணம் கமழும் ஒளி வீசும் மழுப்படையை உடையாய். சடையில் பிறை, பாம்பு, கங்கை இவற்றை வைத்தாய். பஞ்சகவ்விய அபிடேகத்தை விரும்புகிறாய். அடியவன் என்று என் தலை மீது உன் திருவடிகளை வைத்தாய். தேன் போன்ற சொற்களை உடைய பார்வதி பாகனாய் உள்ளாய்.

திருஐயாறு

பெண்ணாண் பிறப்பிலியாய் நின்றாய் நீயே
பெரியார்கட் கெல்லாம் பெரியாய் நீயே
உண்ணா வருநஞ்ச முண்டாய் நீயே
ஊழி முதல்வனாய் நின்றாய் நீயே
கண்ணா யுலகெலாங் காத்தாய் நீயே
கழற்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்ணார் மழுவாட் படையாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. **#384**

திருவையாறு அகலாத செம்பொற் சோதியாகிய நீ பெண்ணும் ஆணும் ஆகிய பிறப்புக்களை இல்லாதவனாய்ப் பெரியவர்களுக்கு எல்லாம் பெரியவனாய், மற்றவர் உண்ணாத கொடிய நஞ்சினை உண்டவனாய், ஊழிகளுக்கெல்லாம் தலைவனாய்ப் பற்றுக்கோடாய் இருந்து உலகங்களை எல்லாம் காத்தவனாய்க் கழலணிந்த சிவந்த திருவடிகளை என் தலைமேல் வைத்தவனாய், வலிமை வாய்ந்த மழுப்படையை உடையவனாய் உள்ளாய்.

திருஐயாறு

உற்றிருந்த உணர்வெலா மானாய் நீயே
உற்றவர்க்கோர் சுற்றமாய் நின்றாய் நீயே

கற்றிருந்த கலைஞான மானாய் நீயே
கற்றவர்க்கோர் கற்பகமாய் நின்றாய் நீயே
பெற்றிருந்த தாயவளின் நல்லாய் நீயே
பிரானா யடியென்மேல் வைத்தாய் நீயே
செற்றிருந்த திருநீல கண்டன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. **#385**

திருவையாறு அகலாத செம்பொற் சோதியாகிய நீ பொருள்களில் அவற்றின் பண்புகளாக உள்ளாய். அடியவர்கள் சுற்றமாக உள்ளாய். கற்கும் கலையறிவாகவும் அநுபவப்பொருளை ஞானதேசிகர்பால் கேட்டவர்க்கு வேண்டியவை வழங்கும் கற்பகமாகவும் உள்ளாய். பெற்ற தாயை விட மேம்பட்டவனாய் உள்ளாய். பிரானாய் அடி என்மேல் வைத்தாய். நஞ்சினை அடக்கிய நீல கண்டன் நீயே ஆவாய்.

திருஐயாறு

எல்லா உலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. **#386**

திருவையாறு அகலாத செம்பொற் சோதீ! நீ எல்லா உலகங்களும் ஆனவனாய், ஏகம்பத்தில் விரும்பியிருப்பவனாய், நல்லவர்களின் நன்மையை அறிந்து அவருக்கு அருள் செய்பவனாய், ஞான ஒளி வீசும் விளக்காய், கொடிய வினைகளைப் போக்கு பவனாய்ப் புகழ்ச் சேவடி என் மேல் வைத்தவனாய்ச் செல்வங்களுள் மேம்பட்ட வீடுபேற்றுச் செல்வத்தை அருளுபவனாய் உள்ளாய்.

திருஐயாறு

ஆவினில் ஐந்தும் அமர்ந்தாய் நீயே
அளவில் பெருமை யுடையாய் நீயே
பூவினில் நாற்றமாய் நின்றாய் நீயே
போர்க்கோலங் கொண்டெயி லெய்தாய் நீயே
நாவில் நடுவுரையாய் நின்றாய் நீயே
நண்ணி யடியென்மேல் வைத்தாய் நீயே
தேவ ரறியாத தேவன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. **#387**

திருவையாறு அகலாத செம்பொற் சோதீ! நீ பஞ்ச கவ்விய அபிடேகத்தை உகப்பவனாய், எல்லையற்ற பெருமையை உடையவனாய், பூவினில் நாற்றம் போல எங்கும் பரவியவனாய், போர்க் கோலம் பூண்டு மும்மதில்களையும் அழித்தவனாய், நாவினால் பேசும் நடுவுநிலையான சொற்களை உடையவனாய், நண்ணி என் தலை மீது திருவடிகளை வைத்தவனாய், ஏனைய தேவர்களும் அறிய முடியாத தேவனாய் உள்ளாய்.

திருஐயாறு

எண்டிசைக்கும் ஒண்சுடராய் நின்றாய் நீயே
ஏகம்ப மேய இறைவன் நீயே
வண்டிசைக்கும் நறுங்கொன்றைத் தாராய் நீயே
வாரா வுலகருள வல்லாய் நீயே
தொண்டிசைத்துன் அடிபரவ நின்றாய் நீயே
தூமலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்சிலைக்கோர் சரங்கூட்ட வல்லாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. **#388**

திருவையாறு அகலாத செம்பொற் சோதீ! நீ எண்திசைகளிலும் உள்ள ஒளி வீசும் சுடர்கள் ஆனாய். ஏகம்பம் மேவிய இறைவன் நீ. வண்டுகள் ஒலிக்கும் நறுமணம் கமழும் கொன்றை மாலையை உடையவன். சென்றால் மீண்டு வருதல் இல்லாத வீடுபேற்றை அளிப்பவன். அடியார்கள் உன் திருத்தொண்டில் ஈடுபட்டு உன் திருவடிகளை முன்நின்று துதிக்குமாறு உள்ளாய். தூய மலர்போன்ற உன் சிவந்த திருவடிகளை என் தலை மேல் வைத்தாய். திண்ணிய மலையாகிய வில்லுக்கு ஏற்ற அம்பினை இணைத்துச் செயற்பட்டவன் ஆவாய்.

திருஐயாறு

விண்டார் புரமூன்று மெய்தாய் நீயே
விண்ணவர்க்கு மேலாகி நின்றாய் நீயே
கண்டாரைக் கொல்லுநஞ் சுண்டாய் நீயே
காலங்கள் ஊழியாய் நின்றாய் நீயே
தொண்டா அடியேனை ஆண்டாய் நீயேதூமலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்டோள்விட் டெரியாட லுகந்தாய் நீயேதிருவையா றகலாத செம்பொற் சோதீ. **#389**

திருவையாறு அகலாத செம்பொற் சோதீ!நீ பகைவர் முப்புரங்களை அழித்தாய். தேவர்களுக்கும் மேம்பட்டு நின்றாய். பார்த்தவர்களையே உயிரைப் போக்கும் கொடிய விடத்தை உண்டாய். பல

ஊழிக்காலங்களாக நிலைபெற்றிருக்கிறாய். அடியேனைத் தொண்டனாக அடிமை கொண்டாய். தூமலர்ச் சேவடி என்மேல் வைத்தாய். திண்ணிய தோள்களை வீசித் தீயில் கூத்தாடுதலில் திறமை உடையாய்.

திருஜயாறு

ஆரு மறியா இடத்தாய் நீயே
ஆகாயந் தேரூர வல்லாய் நீயே
பேரும் பெரிய இலங்கை வேந்தன்
பெரிய முடிபத் திறுத்தாய் நீயே
ஊரும் புரமூன்றும் அட்டாய் நீயே
ஒண்டா மரையானும் மாலுந் கூடித்
தேரும் அடியென்மேல் வைத்தாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. **#390**

ஒருவரும் அறிய முடியாத உயர் நிலையில் உள்ளாய். வானத்திலே தேரைச் செலுத்தவல்லமை உடையாய். பெரிய புகழை உடைய இராவணனுடைய பத்துத் தலைகளையும் நசுக்கினாய். வானத்தில் உலாவிய மூன்று மதில்களையும் அழித்தாய். பிரமனும் திருமாலும் கூடித்தேடும் அடிகளை என் தலைமேல் வைத்தாய். அத்தகைய நீ திருவையாற்றை விடுத்து நீங்காத செம்பொன் போன்ற ஒளியை உடையையாய் அனைவருக்கும் காட்சி வழங்குகிறாய்.

திருமழபாடி

திருமழபாடி

திருமழபாடி, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வச்சிரத்தம்பேசுவரர்.
தேவியார் : அழகாம்பிகையம்மை.

நீறேறு திருமேனி யுடையான் கண்டாய்
நெற்றிமே லொற்றைக்கண் நிறைந்தான் கண்டாய்
கூறாக உமைபாகங் கொண்டான் கண்டாய்
கொடியவிட முண்டிருண்ட கண்டன் கண்டாய்
ஏறேறி யெங்குந் திரிவான் கண்டாய்
ஏழுலகும் ஏழ்மலையு மானான் கண்டாய்
மாறானார் தம்அரணம் அட்டான் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. **#391**

மழபாடியில் உறையும் அழகன் திருநீறணிந்த அழகிய திருமேனியன். நெற்றிக்கண்ணன். பார்வதி பாகன். விடமுண்ட நீலகண்டன். காளையை இவர்ந்து எங்கும் திரிபவன். ஏழுலகமும் ஏழ்மலையும் ஆயவன். பகைவருடைய மும்மதில்களையும் அழித்தவன்

திருமழபாடி

கொக்கிறகு சென்னி யுடையான் கண்டாய்
கொல்லை விடையேறுங் கூத்தன் கண்டாய்
அக்கரைமே லாட லுடையான் கண்டாய்
அனலங்கை யேந்திய ஆதி கண்டாய்
அக்கோ டரவ மணிந்தான் கண்டாய்
அடியார்கட் காரமுத மானான் கண்டாய்
மற்றிருந்த கங்கைச் சடையான் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. **#392**

மழபாடி மன்னும் மணாளன் சென்னியில் கொக்கு இறகை அணிந்தவன். முல்லை நிலக்கடவுளாகிய திருமாலாகிய காளையை இவர்பவன். கூத்தாடுபவன். தான்கூத்தாடும்போது இடையில் கட்டிய சங்குமணி ஆடுதலை உடையவன். தீயினைஉள்ளங்கையில் ஏந்திய முதற்கடவுள். எலும்பையும், பாம்பையும் அணிந்தவன். அடியவர்களுக்குக் கிட்டுதற்கரிய அமுதமானவன். கங்கை அடங்கியிருக்கும் சடையை உடையவன்.

திருமழபாடி

நெற்றித் தனிக்கண் ணுடையான் கண்டாய்
நேரிழையோர் பாகமாய் நின்றான் கண்டாய்
பற்றிப்பாம் பாட்டும் படிறன் கண்டாய்
பல்லூர் பலிதேர் பரமன் கண்டாய்
செற்றார் புரமூன்றுஞ் செற்றான் கண்டாய்
செழுமா மதிசென்னி வைத்தான் கண்டாய்
மற்றொரு குற்ற மிலாதான் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. **#393**

மழபாடி மன்னும் மணாளன், நெற்றிமேல் ஒற்றைக்கண்ணை உடையவன். பார்வதிபாகன். பாம்பைப் பிடித்து ஆட்டும் வஞ்சகன். பல ஊர்களிலும் பிச்சைஎடுக்கும் மேம்பட்டவன். பகைவர் மும்மதில்களையும் அழித்தவன். பிறையைச்சடையில் அணிந்தவன். எல்லா நற்குணங்களுக்கும் இருப்பிடமாகிய அவன்குற்றமே இல்லாதவன்.

திருமழபாடி

அலையார்ந்த புனற்கங்கைச் சடையான் கண்டாய்
அண்டத்துக் கப்பாலாய் நின்றான் கண்டாய்
கொலையான கூற்றங் குமைத்தான் கண்டாய்
கொல்வேங்கைத் தோலொன்றுடுத்தான் கண்டாய்
சிலையால் திரிபுரங்கள் செற்றான் கண்டாய்
செழுமா மதிசென்னி வைத்தான் கண்டாய்
மலையார் மடந்தை மணாளன் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. **#394**

மழபாடி மன்னும் மணாளன், அலைமிக்க கங்கையைச் சடையில் ஏற்றவன். உலகங்களுக்கு எல்லாம் புறத்தவனாக நிற்பவன். கொலைத் தொழிலைச் செய்யும் கூற்றுவனைத் தண்டித்தவன். தன்னால் கொல்லப்பட்ட வேங்கைத்தோலை ஆடையாக உடுத்தவன். வில்லால் முப்புரங்களை அழித்தவன். பிறையைச் சடையில் வைத்தவன். பார்வதியின் தலைவன்.

திருமழபாடி

உலந்தார்தம் அங்கம் அணிந்தான் கண்டாய்
உவகையோ டின்னருள்கள் செய்தான் கண்டாய்
நலந்திகழுங் கொன்றைச் சடையான் கண்டாய்
நால்வேதம் ஆறங்க மானான் கண்டாய்

உலந்தார் தலைகலனாக் கொண்டான் கண்டாய்
உம்பரார் தங்கள் பெருமான் கண்டாய்
மலர்ந்தார் திருவடியென் தலைமேல் வைத்த
மழபாடி மன்னு மணாளன் றானே. **#395**

மழபாடி மன்னும் மணாளன் இறந்தவர்களுடைய எலும்புகளை அணிந்தவன். மகிழ்வோடுபிறருக்கு அருள் செய்பவன். அழகு விளங்கும் சடையில் கொன்றையை அணிந்தவன். நான்கு வேதங்களும் ஆறு அங்கங்களும் ஆகியவன். இறந்தவர்களின் தலைகளை அணிகலனாக உடையவன். தேவர்களுக்குத் தலைவன். எங்கும் நிறைந்த தன் திருவடிகளை என் தலைமேல்வைத்தவன்.

திருமழபாடி

தாமரையான் தன்தலையைச் சாய்த்தான் கண்டாய்
தகவுடையார் நெஞ்சிருக்கை கொண்டான் கண்டாய்
பூமலரான் ஏத்தும் புனிதன் கண்டாய்
புணர்ச்சிப் பொருளாகி நின்றான் கண்டாய்
ஏமருவு வெஞ்சிலையொன் றேந்தி கண்டாய்இருளார்ந்த கண்டத் திறைவன் கண்டாய்
மாமருவுங் கலைகையி லேந்தி கண்டாய்மழபாடி மன்னு மணாளன் றானே. **#396**

மழபாடி மன்னும் மணாளன், பிரமனுடைய தலை ஒன்றனை நீக்கிநற்பண்புடையவர்கள் நெஞ்சினைத் தன் இருப்பிடமாகக் கொண்டு பூத்தமலர்களால் எல்லோராலும் வழிபடப்படும் தூயவனாய், எல்லோரும் சார்தற்குரிய பொருளாய் இருப்பவனாய், அம்புகள் பொருந்தக் கொடிய வில்லை ஏந்தியவனாய், நீலகண்டத் தெய்வமாய் விலங்குத் தன்மை பொருந்தியமானைக் கையில் ஏந்தியவனாய் உள்ளான்.

திருமழபாடி

நீராகி நெடுவரைக ளானான் கண்டாய்
நிழலாகி நீள்விசும்பு மானான் கண்டாய்
பாராகிப் பெளவமே ழானான் கண்டாய்
பகலாகி வானாகி நின்றான் கண்டாய்
ஆரேனுந் தன்னடியார்க் கன்பன் கண்டாய்அணுவாகி ஆதியாய் நின்றான் கண்டாய்
வாரார்ந்த வனமுலையாள் பங்கன் கண்டாய்மழபாடி மன்னு மணாளன் றானே. **#397**

மழபாடி மன்னும் மணாளன். நீராகவும் பெரிய மலைகளாகவும் ஆகி,

ஒளியாகி, ஆகாயமும் ஆகி, நிலமாகி, ஏழ் கடலும் ஆகிச் சூரியனும் மேகமும் ஆகித் தன் அடியவர் எவரிடத்தும் அன்பனாய், நுட்பமான சக்தியாகி உலகுக்கு எல்லாம் காரணமாய்க் கச்சணிந்த அழகிய முலையை உடைய பார்வதி பாகனாய் உள்ளான்.

திருமழபாடி

பொன்னியலுந் திருமேனி உடையான் கண்டாய்
பூங்கொன்றைத் தாரொன் றணிந்தான் கண்டாய்
மின்னியலும் வார்சடையெம் பெருமான் கண்டாய்
வேழத்தின் உரிவிரும்பிப் போர்த்தான் கண்டாய்
தன்னியல்பார் மற்றொருவ ரில்லான் கண்டாய்
தாங்கரிய சிவந்தானாய் நின்றான் கண்டாய்
மன்னிய மங்கையோர் கூறன் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. **#398**

மழபாடி மன்னும் மணாளன், பொன்னார் மேனியனாய்க் கொன்றைப் பூ மாலை அணிந்தவனாய், ஒளிவீசும் நீண்ட சடை உடையவனாய், யானைத் தோலைவிரும்பிப் போர்த்த வனாய்த் தன் தகுதியை உடையார் மற்றொருவர் இல்லாதானாய்ப் பிறர் ஒருவராலும் பொருந்துதற்கரிய மங்கலப் பொருளாய்த்தன்னோடு கூடிய பார்வதி பாகனாய் உள்ளான்.

திருமழபாடி

ஆலாலம் உண்டுகந்த ஆதி கண்டாய்
அடையலர்தம் புரமூன்றும் எய்தான் கண்டாய்
காலாலக் காலனையும் காய்ந்தான் கண்டாய்
கண்ணப்பர்க் கருள்செய்த காளை கண்டாய்
பாலாரும் மொழிமடவாள் பாகன் கண்டாய்
பசுவேறிப் பலிதிரியும் பண்பன் கண்டாய்
மாலாலும் அறிவரிய மைந்தன் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. **#399**

மழபாடி மன்னும் மணாளன் ஆலகால விடத்தை உண்டு மகிழ்ந்த முதற்பொருளாய்ப் பகைவருடைய மும்மதில்களையும் அழித்தவனாய்த் தன் திருவடியால் கூற்றுவனை ஒறுத்தவனாய், கண்ணப்பருக்கு அருள் செய்த தலைமகனாய், பால்போன்ற சொற்களை உடைய பார்வதி பாகனாய், காளை மீது இவர்ந்து பிச்சைக்கு அலையும் பண்பினனாய்த் திருமாலும் அறிவதற்கரிய வலியவனாய் உள்ளான்.

திருமழபாடி

ஒருசுடராய் உலகேழு மானான் கண்டாய்
ஓங்காரத் துட்பொருளாய் நின்றான் கண்டாய்
விரிசுடராய் விளங்கொளியாய் நின்றான் கண்டாய்
விழவொலியும் வேள்வொலியு மானான் கண்டாய்
இருசுடர்மீ தோடா இலங்கைக் கோனை
யீடழிய இருபதுதோ ளிறுத்தான் கண்டாய்
மருசுடரின் மாணிக்கக் குன்று கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. **#400**

மழபாடி மன்னும் மணாளன் ஒப்பற்ற பேரொளியாய், உலகு ஏழும் பரவி ஓங்காரத்தின் உட்பொருளாய் நின்று, ஞாயிறு முதலிய ஒளிப் பொருள்களாகவும், அவற்றிலிருந்து வெளிப்படும் ஒளியாகவும் அமைந்து, திரு விழாக்களிலும் வேள்விகளிலும் செவிமடுக்கப்படும் ஒலிவடிவினனாய், தன் மீது ஞாயிறும் திங்களும் வானில் ஊர்ந்து செல்வது இராவணனுடைய ஆணையால் தடுக்கப்பட்ட இலங்கையில் மன்னனாகிய அவனுடைய வலிமை அழியுமாறு அவன் இருபது தோள்களையும் நசுங்கச் செய்து ஒளிவிளங்கும் மாணிக்கக்குன்றாய் விளங்குகின்றான்.

திருமழபாடி

திருமழபாடி, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வச்சிரத்தம்பேசுவரர்.
தேவியார் : அழகாம்பிகையம்மை.

அலையடுத்த பெருங்கடல்நஞ் சமுதா வுண்டு
அமரர்கள்தந் தலைகாத்த ஐயர் செம்பொன்
சிலையெடுத்து மாநாகம் நெருப்புக் கோத்துத்
திரிபுரங்கள் தீயிட்ட செல்வர் போலும்
நிலையடுத்த பசும்பொன்னால் முத்தால் நீண்ட
நிரைவயிரப் பலகையாற் குவையார்த் துற்ற
மலையடுத்த மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. **#401**

அலைகள் பொருந்திய பெரிய கடலில் தோன்றிய விடத்தை அமுதமாக உண்டு தேவர்களுடைய உயிரைப் பாதுகாத்த தலைவர் என்றும், மேருவை வில்லாக வளைத்துப் பெரிய பாம்பினை நாணாகப் பூட்டி நெருப்பாகிய அம்பினைக் கோத்து முப்புரங்களையும் எரித்த செல்வர் என்றும், தன் மாற்றுக் குறையாத கிளிச்சிறை என்ற பசிய பொன்னாலும் முத்தாலும் நீண்ட பலகை போன்ற வயிரத்தாலும் குவியலாகத் திரட்டி

இயற்றப்பட்ட மழபாடியில் உறையும், மலைபோல உறுதியாக அமைந்த வயிரத்தூணே என்றும் எம்பெருமானை முன்னிலையாகவும் படர்க்கையாகவும் சொல்லி நான் மனம் உருகுகின்றேன்.

திருமழபாடி

அறைகலந்த குழல்மொந்தை வீணை யாழும்
அந்தரத்திற் கந்தருவர் அமரர் ஏத்த
மறைகலந்த மந்திரமும் நீரும் கொண்டு
வழிபட்டார் வானாளக் கொடுத்தி யன்றே
கறைகலந்த பொழிற்கச்சிக் கம்பம் மேய
கனவயிரத் திரள்தூணே கலிசூழ் மாட
மறைகலந்த மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. **#402**

ஓசை பொருந்திய குழல், மொந்தை, வீணை, யாழ் என்ற இசைக் கருவிகளை இசைத்து வானத்தில் கந்தருவர் என்ற தேவகணத்தாரும் தேவர்களும் துதித்து வேதமந்திரமும் ஓதி, நீரினால் அபிடேகம் செய்து வழிபட, அவர்களுக்கு வானுலகில் வெகுகாலம் அநுபவிக்கும் செல்வத்தைக் கொடுக்கும், செறிவினால் இருண்ட பொழில்களை உடைய காஞ்சி நகரில் ஏகம்பத்தில் விரும்பியிருக்கும் மேம்பட்ட வயிரக்குவியலால் அமைந்த தூண் போல்வாய் என்றும், வேத ஒலி பொருந்திய மாடங்களை உடைய மழபாடியில் உள்ள வயிரத்தூண் போல்வாய் என்றும், நான் பலகாலும் எம்பெருமானை அழைத்து உள்ளம் உருகுகின்றேன்.

திருமழபாடி

உரங்கொடுக்கு மிருண்மெய்யர் மூர்க்கர் பொல்லா
ஊத்தைவாய்ச் சமணர்தமை யுறவாக் கொண்ட
பரங்கெடுத்திங் கடியேனை யாண்டு கொண்ட
பவளத்தின் திரள்தூணே பசும்பொன் முத்தே
புரங்கெடுத்துப் பொல்லாத காமன் ஆகம்
பொடியாக விழித்தருளிப் புவியோர்க் கென்றும்
வரங்கொடுக்கும் மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. **#403**

வலிமை மிக்க கறுத்த உடம்பினராய், உண்மை யறிவு அற்றவராய், நல்லவரல்லாத ஊத்தை வாயை உடைய சமணர்களை ஆன்மபந்துக்களாகக் கொண்ட பாவமாகிய சுமையை நீக்கி, அடியேனை அடிமையாகக் கொண்ட பருத்த பவளத்தூணே! பசிய பொன்னில் பதிக்கப்பட்ட முத்தே! திரிபுரங்களை அழித்துத் தவறான

செயலில் ஈடுபட்ட மன்மதனுடைய உடம்பு சாம்பலாகுமாறு தீ விழித்து உலக மக்களுக்கு என்றும் மேம்பட்ட வாழ்வை அருளும் மழபாடியில் உள்ள வயிரத்தூணே! என்று பலகாலும் நான் வாய்விட்டு அழைத்து உள்ளம் உருகுகின்றேன்.

திருமழபாடி

ஊனிகந்தூ ணுறிக்கையர் குண்டர் பொல்லா
வூத்தைவாய்ச் சமணருற வாகக் கொண்டு
ஞானகஞ்சேர்ந் துள்ளவயி ரத்தை நண்ணா
நாயேனைப் பொருளாக ஆண்டு கொண்ட
மீனகஞ்சேர் வெள்ளநீர் விதியாற் சூடும்
வேந்தனே விண்ணவர்தம் பெருமான் மேக
வானகஞ்சேர் மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. **#404**

சுவைத்து உண்ணுதலை விடுத்துக்கையில் உறியில் கரகத்தைத் தாங்கி உடல்பருத்த பொலிவற்ற, ஊத்தைவாயினை உடைய சமணர்களை ஆன்மபந்துக்களாகக் கொண்டு, உள்ளத்தில் நல்லறிவு பெற்று, உள்ளத்தில் வயிரம் போல ஒளிவீசும் எம்பெருமானை நெருங்காத நாய் போன்ற கீழேனாகிய என்னை ஒரு பொருளாகக் கருதி அடிமையாகக் கொண்ட, மீன் பொருந்திய கங்கையைத் தன் ஆணையால் தலையிலே தங்குமாறு சூடிய அரசனே! தேவர்கள் தலைவனே! மேகத்தை உடைய வானளாவிய மாடி வீடுகளை உடைய மழபாடியில் உகந்தருளியிருக்கும் வயிரத்தூணே என்று நான் பலகாலும் வாய்விட்டுக் கூப்பிட்டு உள்ளம் உருகுகின்றேன்.

திருமழபாடி

சிரமேற்ற நான்முகன்றன் றலையும் மற்றைத்
திருமால்தன் செழுந்தலையும் பொன்றச் சிந்தி
உரமேற்ற இரவிபல் தகர்த்துச் சோமன்
ஒளிர்கலைகள் படவுழக்கி உயிரை நல்கி
நரையேற்ற விடையேறி நாகம் பூண்ட
நம்பியையே மறைநான்கும் ஒல மிட்டு
வரமேற்கும் மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. **#405**

ஐந்தலைகளைக் கொண்ட பிரமனது ஐந்தாவது தலை அழியுமாறும் திருமாலுடைய தலைமை அழியுமாறும் போக்கி, வலிமை உடைய சூரியன் ஒருவனுடைய பற்களை உடைத்துச் சந்திரனுடைய ஒளிவீசும் கலைகள் அழியுமாறு கலக்கி, அவர்களை உயிரோடு விட்டு,

வெண்ணிறக் காளையை இவர்ந்து, பாம்பினை அணிந்த குணபூரணனே! தலைவனே! நான்கு வேதங்களும் உன்புகழ் பாடிப் பெருமை பெறுகின்ற மழபாடி வயிரத்தூணே என்று நான் அரற்றி நைகின்றேன்.

திருமழபாடி

சினந்திருத்துஞ் சிறுப்பெரியார் குண்டர் தங்கள்
செதுமதியார் தீவினைக்கே விழுந்தேன் தேடிப்
புனந்திருத்தும் பொல்லாத பிண்டி பேணும்
பொறியிலியேன் தனைப்பொருளா ஆண்டு கொண்டு
தனந்திருத்து மவர்திறத்தை யொழியப் பாற்றித்தயாமூல தன்மவழி யெனக்கு நல்கி
மனந்திருத்தும் மழபாடி வயிரத் தூணேயென்றென்றே நானரற்றி நைகின் றேனே. **#406**

சினந்து பிறரைத் திருத்த முற்படும் சிறுமையின் மேம்பட்ட பருத்த உடலை உடைய சமணர்களாகிய பொல்லாத அறிவினை உடையவர்கள் காட்டிய தீவினைகளில் அழுந்தினேனாய் விளை நிலங்களை அழித்து அவ்விடத்தில் அசோகமரத்தை வளர்த்துப் பாதுகாக்கும் நல்வினையில்லேனாகிய என்னையும் ஒரு பொருளாக ஏற்று அடிமை கொண்டு மகளிரைப் பற்றிய எண்ணத்தை யான் நினையாதவாறு நீக்கி இரக்கத்திற்கு அடிப்படையான அறவழியை எனக்கு வழங்கி என் மனத்தை நல்வழியில் திருத்தும் மழபாடி வயிரத்தூணே என்று நான் அரற்றி நைகின்றேன்.

திருமழபாடி

சுழித்துணையாம் பிறவிவழித் துக்கம் நீக்குஞ்
சுருள்சடையெம் பெருமானே தூய தெண்ணீர்
இழிப்பரிய பசுபாசப் பிறப்பை நீக்கும்
என்துணையே யென்னுடைய பெம்மான் தம்மான்
பழிப்பரிய திருமாலும் அயனும் காணாப்பரிதியே சுருதிமுடிக் கணியாய் வாய்த்த
வழித்துணையாம் மழபாடி வயிரத் தூணேயென்றென்றே நானரற்றி நைகின் றேனே. **#407**

நீர்ச் சுழிக்கு ஒப்பாகித் தன்னிடத்திலேயே ஆழ்த்தும் பிறவி வழியாகியதுக்கத்தைப் போக்கும் சுருண்ட சடையை உடைய எம் பெருமானே! சடையில் தூயதெளந்த நீராகிய கங்கையை ஏற்றவனே! போக்குதற்கு அரிய பசுத்தன்மையால் உள்ள பாசத்தால் ஏற்படும் பிறப்பை நீக்கிய என் துணைவனே! என் தலைவனே! எல்லோருக்கும்

தலைவனே! குறை கூறுதற்கரிய திருமாலும் பிரமனும் காணாத ஒளிப்பிழம்பே! வேதத்தின் முடிவாகிய உபநிடதங்களுக்கு அணிகலனாய் எனக்குக் கிட்டிய வழித்துணையாகிய மழபாடி வயிரத்தூணே என்று நான் பலகாலும் வாய்விட்டுக் கூப்பிட்டு உள்ளம் உருகுகின்றேன்.

திருநெய்த்தானம்

திருநெய்த்தானம்

திருநெய்த்தானம், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நெய்யாடியப்பர்.
தேவியார் : வாலாம்பிகையம்மை.

வகையெலா முடையாயும் நீயே யென்றும்
வான்கயிலை மேவினாய் நீயே யென்றும்
மிகையெலாம் மிக்காயும் நீயே யென்றும்
வெண்காடு மேவினாய் நீயே யென்றும்
பகையெலாந் தீர்த்தாண்டாய் நீயே யென்றும்
பாசூ ரமர்ந்தாயும் நீயே யென்றும்
திகையெலாந் தொழச் செல்வாய் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாவென் நெஞ்சு ளாயே. **#408**

திருநெய்த்தானத்தில் உகந்தருளி உறையும் பெருமானே! செல்வர்க்கு உரிய கூறுபாடுகள் யாவும் உடைய நீ, உயர்ந்த கயிலை மலையை விரும்பி உறைவாய். உயர்வற உயர்நலம் யாவும் உடையாய், வெண்காடு, பாசூர் இவற்றை உறைவிடமாக விரும்புகிறாய். பகைகளை எல்லாம் போக்கி எமை ஆண்டாய். எண்திசையிலுள்ளாரும் உன்னை வழிபடுமாறு ஆங்கெல்லாம் செல்வாய் என்று உன்பண்பு நலன்களை நாங்கள் எடுத்துத் துதிக்கிறோம்.

திருநெய்த்தானம்

ஆர்த்த எனக்கன்பன் நீயே யென்றும்
ஆதிக் கயிலாயன் நீயே யென்றும்
கூர்த்த நடமாடி நீயே யென்றுங்
கோடிகா மேய குழகா என்றும்
பார்த்தற் கருள் செய்தாய் நீயே யென்றும்
பழையனூர் மேவிய பண்பா என்றும்
தீர்த்தன் சிவலோகன் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாவென் நெஞ்சு ளாயே. **#409**

நின்ற நெய்த்தானா! உனக்கு அடிமையாகப் பிணிக்கப்பட்ட அடியேனிடம் அன்பு உடையாய், பழைய கயிலாயம், கோடிகா பழையனூர் இவற்றில் உறைகின்றாய். நடனக்கலையின் நுட்பங்களெல்லாம் அமையக் கூத்தாடுகின்றாய். அருச்சுனனுக்கு அருள் செய்தாய். தூயவனும் சிவலோகநாதனுமாக உள்ளாய் என்று

அடியோங்கள்நின்னை துதிக்கின்றோம்.

திருநெய்த்தானம்

அல்லாய்ப் பகலானாய் நீயே யென்றும்
ஆதிக் கயிலாயன் நீயே யென்றும்
கல்லா லமர்ந்தாயும் நீயே யென்றுங்
காளத்திக் கற்பகமும் நீயே யென்றும்
சொல்லாய்ப் பொருளானாய் நீயே யென்றுந்சோற்றுத்
துறையுறைவாய் நீயே யென்றும்
செல்வாய்த் திருவானாய் நீயே யென்றும்நின்றநெய்த் தானாவென்
நெஞ்சு ளாயே. **#410**

நின்ற நெய்த்தானா! நீ இரவாகவும் பகலாகவும் உள்ளாய். பழைய கயிலாயம், காளத்தி, சோற்றுத்துறை இவற்றை விரும்பி உறைவாய். கல்லாலின் கீழ் அமர்ந்தவனும், சொல்லும் பொருளுமாய் இருப்பவனும், நீயே. உலகில் எல்லா நிகழ்ச்சிகளும் நடப்பதற்கு உதவும் செல்வமாகவும் நீ உள்ளாய் என்று அடியோங்கள் நின்னைத் துதிக்கின்றோம்.

திருநெய்த்தானம்

மின்னே ரிடைபங்கன் நீயே யென்றும்
வெண்கயிலை மேவினாய் நீயே யென்றும்
பொன்னேர் சடைமுடியாய் நீயே யென்றும்
பூத கணநாதன் நீயே யென்றும்
என்னா விரதத்தாய் நீயே யென்றும்
ஏகம்பத் தென்னீசன் நீயே யென்றும்
தென்னூர்ப் பதியுளாய் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாவென் நெஞ்சு ளாயே. **#411**

நின்ற நெய்த்தானா! நீ வெள்ளிய கயிலை மலை, ஏகம்பம் தென்னூர் இவற்றில் விரும்பி உறைகின்றாய். மின்னலை ஒத்த இடையை உடைய பார்வதிபாகனாய், பொன்னை ஒத்து ஒளி வீசும் சடை முடியனாய்ப் பூதகணத் தலைவனாய் எம் நாவினில் இனிக்கின்ற சுவைப் பொருளாய் உள்ளாய் என்று அடியோங்கள் நினைத்துத் துதிக்கின்றோம்.

திருநெய்த்தானம்

முந்தி யிருந்தாயும் நீயே யென்றும்
முன்கயிலை மேவினாய் நீயே யென்றும்
நந்திக் கருள்செய்தாய் நீயே யென்றும்
நடமாடி நள்ளாறன் நீயே யென்றும்

பந்திப் பரியாயும் நீயே யென்றும்
பைஞ்ஞீலீ மேவினாய் நீயே யென்றும்
சிந்திப் பரியாயும் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாவென் நெஞ்சு ளாயே. **#412**

நின்ற நெய்த்தானா! கயிலை, நள்ளாறு பைஞ்ஞீலி என்ற தலங்களைக் கூத்தனாயநீ விரும்பி உறைகின்றாய். எல்லாப் பொருளுக்கும் முற்பட்டவனாய் நந்திதேவருக்கு அருள் செய்தவனாய், பாசத்தால் பிணிக்க ஒண்ணாதவனாய்ச் சிந்தையால் அணுக ஒண்ணாதவனாய் உள்ளாய் என்று அடியோங்கள் நினைத்துத் துதிக்கின்றோம்.

<u>திருநெய்த்தானம்</u>

தக்கா ரடியார்க்கு நீயே யென்றுந்
தலையார் கயிலாயன் நீயே யென்றும்
அக்காரம் பூண்டாயும் நீயே யென்றும்
ஆக்கூரில் தான்றோன்றி நீயே யென்றும்
புக்காய ஏழுலகும் நீயே யென்றும்
புள்ளிருக்கு வேளூராய் நீயே யென்றும்
தெக்காரு மாகோணத் தானே யென்றும்
நின்றநெய்த் தானாவென் நெஞ்சு ளாயே. **#413**

நின்ற நெய்த்தானா! நீ மேம்பட்ட கயிலாயனாகவும் ஆக்கூரில் தான்தோன்றி ஈசனாகவும் புள்ளிருக்குவேளூர், தெற்கே உள்ள மாகோணம் இவற்றில் உறைபவனாகவும் உள்ளாய். தகுதியுடையவரான அடியாருக்கு நீயே துணையாகவும் எலும்பு மாலை அணிபவனாகவும் உயிர்கள் புகுந்து வாழும் ஏழுலகங்களாகவும் உள்ளாய் என்று அடியோங்கள் நின்னைத் துதிக்கின்றோம்.

<u>திருநெய்த்தானம்</u>

புகழும் பெருமையாய் நீயே யென்றும்
பூங்கயிலை மேவினாய் நீயே யென்றும்
இகழுந் தலையேந்தி நீயே யென்றும்
இராமேச் சுரத்தின்பன் நீயே யென்றும்
அகழும் மதிலுடையாய் நீயே யென்றும்
ஆலவாய் மேவினாய் நீயே யென்றும்
திகழும் மதிசூடி நீயே யென்றும்
நின்றநெய்த் தானாவென் நெஞ்சு ளாயே. **#414**

நின்ற நெய்த்தானா! அழகிய கயிலை, இராமேச்சுரம் ஆலவாய் இவற்றில் உகந்து உறைபவனே! எல்லோரும் புகழும் பெருமையை உடையையாய், யாவரும் இகழும் மண்டையோட்டை உண்கலமாக

ஏந்தியையாய், ஆலவாயில் அகழும் மதிலும் உடையையாய், விளங்கும் பிறை சூடியாய் உள்ளாய் என்று அடியோங்கள் நின்னைத் துதிக்கின்றோம்.

திருநெய்த்தானம்

வானவர்க்கு மூத்திளையாய் நீயே யென்றும்
வானக் கயிலாயன் நீயே யென்றும்
கான நடமாடி நீயே யென்றுங்
கடவூரில் வீரட்டன் நீயே யென்றும்
ஊனார் முடியறுத்தாய் நீயே யென்றும்
ஒற்றியூ ராரூராய் நீயே யென்றும்
தேனாய் அமுதானாய் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாவென் நெஞ்சு ளாயே. **#415**

நின்ற நெய்த்தானா! நீ வானளாவிய கயிலாய னாய்க் கடவூர் வீரட்டனாய், ஒற்றியூரிலும் ஆரூரிலும் உறைபவனாய்த் தேனும் அமுதும் போல இனியனாய் உள்ளாய். தேவர்களுக்கும் முற்பட்ட வனாய், சுடுகாட்டில் கூத்தாடுபவனாய்த் தக்க யாகத்தில் ஈடுபட்ட தேவர்களின் தலைகளைப் போக்கினாய் என்று அடியோங்கள் நின்னைத் துதிக்கின்றோம்.

திருநெய்த்தானம்

தந்தைதா யில்லாதாய் நீயே யென்றுந்
தலையார் கயிலாயன் நீயே யென்றும்
எந்தாயெம் பிரானானாய் நீயே யென்றும்
ஏகம்பத் தென்னீசன் நீயே யென்றும்
முந்திய முக்கணாய் நீயே யென்றும்
மூவலூர் மேவினாய் நீயே யென்றும்
சிந்தையாய்த் தேனூராய் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாவென் நெஞ்சு ளாயே. **#416**

நின்ற நெய்த்தானா! நீ எங்கள் உள்ளத்திலும் மேம்பட்ட கயிலாயம், ஏகம்பம், மூவலூர், தேனூர் என்ற திருத்தலங்களிலும் உறைகின்றாய். தந்தைதாய் இல்லாத பிறவாயாக்கைப் பெரியோனாய், யாவருக்கும் முற்பட்ட முக்கண்ணனாய், எங்களுக்குத் தாய் தந்தையாகவும் தலைவனாகவும் உள்ளாய் என்று அடியோங்கள் நின்னைத் துதிக்கின்றோம்.

திருநெய்த்தானம்

மறித்தான் வலிசெற்றாய் நீயே யென்றும்

வான்கயிலை மேவினாய் நீயே என்றும்
வெறுத்தார் பிறப்பறுப்பாய் நீயே யென்றும்
வீழி மிழலையாய் நீயே யென்றும்
அறத்தாய் அமுதீந்தாய் நீயே யென்றும்யாவர்க்குந் தாங்கொணா நஞ்ச
முண்டு
பொறுத்தாய் புலனைந்தும் நீயே யென்றும்நின்றநெய்த் தானாவென்
நெஞ்சு ளாயே. **#417**
நின்ற நெய்த்தானா! நீ உயரிய கயிலை, வீழிமிழலை இவற்றில்
உறைபவன். தன்விமானத்தை நிறுத்திக் கயிலையைப் பெயர்த்த
இராவணனது வலிமையை அழித்து, உலகப் பற்றைத் துறந்த
அடியார்களுடைய பிறவிப் பிணியைப் போக்கி, அறவடிவினனாய்,
வானோர்க்கு அமுதம் வழங்கி, ஒருவராலும் பொறுக்க முடியாத
விடத்தை உண்டு, பொறிவாயில் ஐந்து அவித்துள்ளாய் என்று
அடியோங்கள் நின்னைத் துதிக்கின்றோம்.

திருநெய்த்தானம்

திருநெய்த்தானம், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நெய்யாடியப்பர்.
தேவியார் : வாலாம்பிகையம்மை.

மெய்த்தானத் தகம்படியுள் ஐவர் நின்று
வேண்டிற்றுக் குறைமுடித்து வினைக்குக் கூடாம்
இத்தானத் திருந்திங்ங னுய்வா னெண்ணும்
இதனையொழி இயம்பக்கேள் ஏழை நெஞ்சே
மைத்தான நீள்நயனி பங்கன் வங்கம்
வருதிரைநீர் நஞ்சுண்ட கண்டன் மேய
நெய்த்தான நன்னகரென் றேத்தி நின்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. **#418**
அறிவில்லாத நெஞ்சமே! யான் கூற நீ கேட்பாயாக. உடம்பாகிய
இடத்தின் உட்புறத்தில், ஐம்பொறிகள் பரு உடம்பாய் நின்று, விரும்பிய
இன்றியமையாத பொருள்களைத் தந்து நிரப்பி, வினைகளுக்குத் தங்கும்
இடமாகிய இந்த உடம்பில் இருந்து, ஐம்புல நுகர்ச்சி நுகர்ந்து
கொண்டே தப்பித்துப் போகலாம் என்ற எண்ணத்தை விட்டுவிடு. நீண்ட
கருங்கண்ணியாகிய பார்வதி பாகனாய்க் கப்பல்கள் இயங்கும் கடலில்
தோன்றிய நஞ்சினை உண்டு நிறுத்திய நீலகண்டன் விரும்பி உறையும்
திருநெய்த்தானத் திருக் கோயிலைத் துதித்துத் தியானிக்க வேண்டும்
என்பதனை விருப்புற்று நினைத்து நீ செயற்பட்டால் பிறவிப்

பிணியிலிருந்து தப்பலாம்.

திருநெய்த்தானம்

ஈண்டா விரும்பிறவித் துறவா ஆக்கை
இதுநீங்க லாம்விதியுண் டென்று சொல்ல
வேண்டாவே நெஞ்சமே விளம்பக் கேள்நீ
விண்ணவர்தம் பெருமானார் மண்ணி லென்னை
ஆண்டானன் றருவரையாற் புரமூன் றெய்தஅம்மானை அரி அயனுங் காணா வண்ணம்
நீண்டா னுறைதுறைநெய்த் தான மென்றுநினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. **#419**

நெஞ்சமே! நான் கூறுவதனைக் கேள்! பிறப்புக்கள் பலவற்றிற்கு ஏதுவாகி நீங்காத இவ்வுடல் தொடர்பிலிருந்து விரைவாக நீங்குதற்குரிய வழி உள்ளது என்பதனை யான் நினக்குக் கூறல் வேண்டா. தேவர்கள் தலைவராய், இவ்வுலகிலே என்னை அடிமை கொண்டவராய், மலையை வில்லாகக் கொண்டு மும்மதில் களையும் அழித்த பெருமானாராய்த் திருமாலும் பிரமனும் காணா வண்ணம் தீப்பிழம்பாய் நீண்டவராய் உள்ளவர் உகந்தருளியிருக்கும் நெய்த்தானம் என்ற தலத்தைத் தியானிக்கும் வழியை விரும்பி நினைப்பாயானால் பிறவிப்பிணியிலிருந்து தப்பித்தல் கூடும்.

திருநெய்த்தானம்

பரவிப் பலபலவுந் தேடி யோடிப்
பாழாங் குரம்பையிடைக் கிடந்து வாளா
குரவிக் குடிவாழ்க்கை வாழ வெண்ணிக்
குலைகை தவிர்நெஞ்சே கூறக் கேள்நீ
இரவிக் குலமுதலா வானோர் கூடி
யெண்ணிறந்த கோடி யமர ராயம்
நிரவிக் கரியவன் நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. **#420**

நெஞ்சே! நான் கூறுவதைக் கேள். உலகெங்கும் தேவை என்று கருதிப்பல பொருள்களையும் தேடித் திரிந்து பாழான இவ்வுடம்பிலே கிடந்து பின்விளைவை நோக்காது, உற்றார் உறவினரோடு கூடி வாழும் குடும்ப வாழ்க்கையை வாழ எண்ணி உடைந்து போதலை நீக்கு. பன்னிரு ஆதித்தர் முதலாகிய வானவர் இனத்தைச் சேர்ந்த கணக்கற்ற தேவர் கூட்டத்தார் ஒன்று சேர்ந்தாலும் தன் புகழை முழுமையாகச் சொல்ல முடியாத சிவபெருமானுடைய நெய்த்தானத்தை நினையுமா நினைத்தக்கால் உய்யலாம்.

திருநெய்த்தானம்

அலையார் வினைத்திறஞ்சே ராக்கை யுள்ளே
யகப்பட்டு ளாசையெனும் பாசந் தன்னுள்
தலையாய்க் கடையாகும் வாழ்வி லாழ்ந்து
தளர்ந்துமிக நெஞ்சமே அஞ்ச வேண்டா
இலையார் புனக்கொன்றை யெறிநீர்த் திங்கள்
இருஞ்சடைமேல் வைத்துகந்தான் இமையோ ரேத்தும்
நிலையா னுறைநிறைநெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. **#421**

நெஞ்சமே! அலைகள் போல ஓயாது செயற்படும் வினைக் கூறுகளுக்குச் சார்பாகிய இவ்வுடம்பில் அகப்பட்டு, ஆசை என்னும் கயிற்றால் சுருக்கிடப்படுமாறு தலையைக் கொடுத்து, கீழான இந்த உலக வாழ்வில் முழுகி மிகத் தளர்ந்து, நீ அஞ்சுதல் வேண்டா. இலைகளிடையே தோன்றும் கொன்றைப் பூ, கங்கை, பிறை இவற்றைப் பெரிய சடையிலே வைத்து மகிழ்ந்தவனாய்த் தேவர்கள் போற்றும் மேம்பட்ட நிலையிலுள்ளவனாகிய சிவபெருமான் உகந்தருளியிருக்கும் நெய்த்தானம் என்று நினையுமா நினைத்தக்கால் உய்யலாகும்.

திருநெய்த்தானம்

தினைத்தனையோர் பொறையிலா வுயிர்போங் கூட்டைப்
பொருளென்று மிகவுன்னி மதியா லிந்த
அனைத்துலகும் ஆளலா மென்று பேசும்
ஆங்காரந் தவிர்நெஞ்சே யமரர்க் காக
முனைத்துவரு மதில்மூன்றும் பொன்ற அன்று
முடுகியவெஞ் சிலைவளைத்துச் செந்தீ மூழ்க
நினைத்த பெருங் கருணையன்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. **#422**

நெஞ்சே! உரிய காலம் முடிந்த பின் சிறிது நேரமும் தாமதிக்காமல் உயிர்விடுத்து நீங்கும் இவ்வுடம்பை மேம்பட்ட பொருளாகப் பெரிதும் கருதிநம் புத்தியினாலே இந்த உலகம் முழுதையும் நமக்கு அடிமைப்படுத்தலாம் என்று பேசும் தன் முனைப்பை நீக்கு. தேவர்களுக்காகப் பகைத்து வந்த மதில்கள் மூன்றும் அழியுமாறு முன்னொரு காலத்தில் விரைவாகத் தூக்கிய வில்லை வளைத்து அம்மதில்களைத் தீக்கு இரையாக்க நினைத்துச் செயற்பட்ட பெரிய கருணையை உடைய சிவபெருமான் உகந்தருளியிருக்கும் நெய்த்தானம் என்று நினையுமா நினைத்தக்கால் உய்யலாகும்.

திருநெய்த்தானம்

மிறைபடுமிவ் வுடல்வாழ்வை மெய்யென் றெண்ணி
வினையிலே கிடந்தழுந்தி வியவேல் நெஞ்சே
குறைவுடையார் மனத்துளான் குமரன் தாதை
கூத்தாடுங் குணமுடையான்கொலைவேற் கையான்
அறைகழலுந் திருவடிமேற் சிலம்பும் ஆர்ப்ப
அவனிதலம் பெயரவரு நட்டம் நின்ற
நிறைவுடையா னிடமாம்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. **#423**

நெஞ்சே! துன்பமே விளைக்கின்ற இந்த உடலில் வாழும் வாழ்வு நிலையானது என்று கருதி வினைப்பயனிலே கிடந்து ஈடுபட்டு மகிழாதே. தம்மைப் பற்றித் தாழ்வாகக் கருதுபவர் மனத்து இருப்பவனாய், முருகனுக்குத் தந்தையாய், கூத்தாடுதலைப் பண்பாக உடையவனாய், கொல்லும் முத்தலை வேல் ஏந்தியகையனாய்த் திருவடிகளில், கழலும், சிலம்பும் ஒலிக்க இவ்வுலகமே பெயருமாறு ஆடும் ஊழிக் கூத்தில் மனநிறையுடையவனாகிய சிவபெருமானுடைய திருத்தலமாகிய நெய்த்தானம் என்று நினையுமா நினைத்தக்கால் உய்யலாம்.

திருநெய்த்தானம்

பேசப் பொருளலாப் பிறவி தன்னைப்
பெரிதென்றுன் சிறுமனத்தால் வேண்டி யீண்டு
வாசக் குழல்மடவார் போக மென்னும்
வலைப்பட்டு வீழாதே வருக நெஞ்சே
தூசக் கரியுரித்தான் தூநீ றாடித்துதைந்திலங்கு நூல்மார்பன் தொடர கில்லா
நீசர்க் கரியவன்நெய்த் தான மென்றுநினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. **#424**

நெஞ்சே! வருக. பேசுதற்கு ஏற்ற உயர்ந்த பொருள் அல்லாத இப்பிறவியைக் கிட்டுதற்கு அரிய பொருளாக உன் அற்பப்புத்தியில் கருதி நறுமணம் கமழும் கூந்தலையுடைய மகளிர் இன்பம் என்னும் வலையில் அகப்பட்டு அழியாமல், யானைத்தோலை உரித்துப் போர்த்துத்தூய திருநீறு பூசிப் பூணூல் அணிந்து, தன்னை அணுகாத கீழ்மக்களுக்கு அரியவனாயுள்ள சிவபெருமானுடைய நெய்த்தானம் என்று நினையுமா நினைந்தக்கால் உய்யலாம்.

திருநெய்த்தானம்

அஞ்சப் புலனிவற்றா லாட்ட வாட்டுண்
டருநோய்க் கிடமாய வுடலின் தன்மை
தஞ்ச மெனக்கருதித் தாழேல் நெஞ்சே
தாழக் கருதுதியே தன்னைச் சேரா
வஞ்ச மனத்தவர்கள் காண வொண்ணா
மணிகண்டன் வானவர்தம் பிரானென் றேத்தும்
நெஞ்சர்க் கினியவன்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. **#425**

நெஞ்சே! ஐம்புலன்களால் நினைத்தவாறு செயற்படுத்தப்பட்டுக் கொடிய நோய்களுக்கு இருப்பிடமாகிய இவ்வுடலில் நிலையாமையை உனக்குப்புகலிடம் என்று கருதி ஐம்புல இன்பத்தில் ஆழ்ந்து போகாதே. தன்னைப் பற்றுக் கோடாக அடையாத வஞ்சமனத்தவர் காண முடியாத நீலகண்டனாய்த் தேவர்கள் தலைவன் என்று போற்றப்படும் மனத்துக்கினிய சிவபெருமானுடைய நெய்த்தானம் என்று நினையுமா நினைந்தக்கால் உய்யலாம்.

திருநெய்த்தானம்

பொருந்தாத உடலகத்திற் புக்க ஆவி
போமா றறிந்தறிந்தே புலைவாழ் வுன்னி
இருந்தாங் கிடர்ப்படநீ வேண்டா நெஞ்சே
யிமையவர்தம் பெருமானன் றுமையா ளஞ்சக்
கருந்தாள் மதகரியை வெருவச் சீறுங்
கண்ணுதல்கண் டமராடிக் கருதார் வேள்வி
நிரந்தரமா இனிதுறைநெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. **#426**

நெஞ்சே! தகுதியற்ற இவ்வுடலில் வினைவயத்தால் புகுந்த உயிர் இதனை எந்த நேரத்திலும் விடுத்து நீங்கிவிடும் என்பதனை அறிந்தும் கீழான ஐம்புல நுகர்ச்சி வாழ்வினையே கருதிக் கொண்டிருந்து துயர்ப்படல் வேண்டா. தேவர்கள் தலைவனாய், ஒருகாலத்தில் பார்வதி அஞ்சுமாறு, கரிய அடிகளை உடையமதயானை அஞ்ச அதனை வெகுண்டவனாய், நெற்றிக் கண்ணனாய், தன்னைப் பரம்பொருளாகக் கருதாதவர் கூடி நிகழ்த்திய வேள்வியைப் போரிட்டு அழித்தவனாய், நிலையாக உகந்தருளியிருக்கும் நெய்த் தானம் என்று நினையுமா நினைந்தக்கால் உய்யலாம்.

திருநெய்த்தானம்

உரித்தன் றுனக்கிவ் வுடலின் தன்மை
உண்மை யுரைத்தேன் விரத மெல்லாந்

தரிந்துந் தவமுயன்றும் வாழா நெஞ்சே
தம்மிடையி லில்லார்க்கொன் றல்லார்க் கன்னன்
எரித்தான் அனலுடையான் எண்டோ ளானேயெம்பெருமா
னென்றேத்தா இலங்கைக் கோனை
நெரித்தானை நெய்த்தானம் மேவி னானைநினையுமா நினைந்தக்கா
லுய்ய லாமே. **#427**

விரதங்களை எல்லாம் மேற்கொண்டு தவ வாழ்வு வாழ முயன்று வாழாத நெஞ்சே! நிலையாமையை உடைய இவ்வுடல் என்றும் உள்ள உயிரைப்பற்ற வேண்டிய உனக்கு உரிய பொருள் அன்று. உண்மையை உனக்குக் கூறிவிட்டேன். தம்மிடத்துப் பொருளில்லாத வறியவர்களுக்கு ஒன்றும் ஈயாதவர்களுக்குத் தானும் எதுவும் ஈயாதவனாய்த் திரிபுரங்களை எரித்தவனாய்க் கையில் தீயை உடையவனாய் எட்டுத் தோள்களை உடைய எம்பெருமானே என்று தன்னைத் துதிக்காத இலங்கை மன்னனான இராவணனை நெரித்த, நெய்த்தானம் என்ற திருத்தலத்தை உகந்தருளி உறைகின்ற பெருமானை நினையுமா நினைந்தக்கால் உய்யலாம்.

திருப்பூந்துருத்தி

திருப்பூந்துருத்தி

திருப்பூந்துருத்தி, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : புஷ்பவனநாதர்.
தேவியார் : அழகாலமர்ந்தநாயகி.

நில்லாத நீர்சடைமேல் நிற்பித் தானை
நினையாவென் நெஞ்சை நினைவித் தானைக்
கல்லா தனவெல்லாங் கற்பித் தானைக்
காணா தனவெல்லாங் காட்டி னானைச்
சொல்லா தனவெல்லாஞ் சொல்லி யென்னைத்
தொடர்ந்திங் கடியேனை யாளாக் கொண்டு
பொல்லாவென் நேர்ய்தீர்த்த புநிதன் தன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே. **#428**

கங்கையைச் சடையில் இருத்தி, அவனை நினையாத என் மனத்தை அவனை நினைக்கச் செய்து, அரும் பேருண்மைகளை எல்லாம் சொல்லி, என்னைத் தொடர்ந்து, என்னை அடிமையாகக் கொண்டு, கொடிய சூலை நோயைத் தீர்த்து எனக்குக் காணாதன எல்லாம் காட்டிய தூயோனாகிய புண்ணியனைப் பூந்துருத்தியில் யான் கண்டேன்.

திருப்பூந்துருத்தி

குற்றாலங் கோகரணம் மேவி னானைக்
கொடுங்கைக் கடுங்கூற்றைப் பாய்ந்தான் தன்னை
உற்றால நஞ்சுண் டொடுக்கி னானை
யுணராவென் நெஞ்சை யுணர்வித் தானைப்
பற்றாலின் கீழங் கிருந்தான் தன்னைப்
பண்ணார்ந்த வீணை பயின்றான் தன்னைப்
புற்றா டரவார்த்த புநிதன் தன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே. **#429**

குற்றாலம் கோகரணம் இவற்றை விரும்பி உறைந்து கொடிய செயலை உடைய கடியவனாகிய கூற்றுவனை ஒறுத்து, ஆலகால விடத்தை உண்டு கழுத்தில் இருத்தி, உணராத என் நெஞ்சத்தில் அரும் பேருண்மைகளை உணர்வித்து, கல்லால மரத்தின் கீழ் அதனைச் சார்பாகக் கொண்டிருந்து, பண் நிறைந்த வீணையை வாசித்து, புற்றிலிருக்கும் படம் எடுத்தாடும் பாம்பினை இறுக அணிந்த தூயோனாகிய புண்ணியனை நான் பூந்துருத்தியில் கண்டேன்.

திருப்பூந்துருத்தி

எனக்கென்றும் இனியானை யெம்மான் தன்னை
யெழிலாரும் ஏகம்பம் மேயான் தன்னை
மனக்கென்றும் வருவானை வஞ்சர் நெஞ்சில்
நில்லானை நின்றியூர் மேயான் தன்னைத்
தனக்கென்றும் அடியேனை யாளாக் கொண்ட
சங்கரனைச் சங்கவார் குழையான் தன்னைப்
புனக்கொன்றைத் தாரணிந்த புநிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே. **#430**

ஏகம்பம் நின்றியூர் இவற்றில் தங்குபவனாய், எனக்கு என்றும் இனிய எம் தலைவனாய், மனத்தில் என்றும் இருப்பவனாய், வஞ்சகர் நெஞ்சில் நில்லாதவனாய், என்னைத் தனக்கு என்றும் ஆளாகக் கொண்டு நன்மை செய்கின்றவனாய், சங்கினால் ஆகிய நீண்ட காதணியை உடையவனாய் மேட்டு நிலத்தில் வளரும் கொன்றைப் பூமாலை அணிந்த தூயோனாகிய, பாசம் இல்லாதவனை, யான் பூந்துருத்தியில் கண்டேன்.

திருப்பூந்துருத்தி

வெறியார் மலர்க்கொன்றை சூடி னானை
வெள்ளானை வந்திறைஞ்சும் வெண்காட் டானை
அறியா தடியே னகப்பட் டேனை
அல்லற்கடல் நின்று மேற வாங்கி
நெறிதா னிதுவென்று காட்டி னானைநிச்சல் நலிபிணிகள் தீர்ப்பான் தன்னைப்
பொறியா டரவார்த்த புநிதன் தன்னைப்பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே. **#431**

மணம் கமழும் கொன்றைப் பூச் சூடி, ஐராவதம் வழிபட்ட வெண்காட்டில் உறைவானாய், அறியாத புறச்சமயத்தில் அகப்பட்ட என்னை அத்துயரக்கடலில் மூழ்காதபடி தூக்கி எடுத்து, இது தான் நேரிய வழி என்று காட்டி, நாடோறும் என்னை வருத்தும் பிணிகளைத் தீர்த்து, புள்ளிகளை உடைய ஆடும்பாம்பினை இறுகக் கட்டிய தூயோனாகிய பாசம் அற்றவனை நான் பூந்துருத்தியில் கண்டேன்.

திருப்பூந்துருத்தி

மிக்கானை வெண்ணீறு சண்ணித் தானை
விண்டார் புரமூன்றும் வேவ நோக்கி
நக்கானை நான்மறைகள் பாடி னானை

நல்லார்கள் பேணிப் பரவ நின்ற
தக்கானைத் தண்டா மரைமே லண்ணல்
தலைகொண்டு மாத்திரைக்கண் உலக மெல்லாம்
புக்கானைப் புண்ணியனைப் புநிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே. **#432**
எல்லாரினும் மேம்பட்டவனாய், வெண்ணீறு பூசி, பகைவரின் மும்மதில்களையும் அழித்து, அவற்றின் அழிவுகண்டு சிரித்து, நான்கு வேதங்களையும் ஓதித் தக்கோர்களால் விரும்பி முன்னின்று துதிக்கப்படுபவனாய், பிரமன் மண்டைஓட்டைச் சுமந்து ஒரு கணநேரத்தில் உலகமெல்லாம் சுற்றித் திரியும் புண்ணியனாய்த் தூயனாய்ப் பாசம் அற்றவனாயுள்ள எம்பெருமானைப் பூந்துருத்தியில் யான் கண்டேன்.

திருப்பூந்துருத்தி

ஆர்த்தானை வாசுகியை அரைக்கோர் கச்சா
அசைத்தானை அழகாய பொன்னார் மேனிப்
பூத்தானத் தான் முடியைப் பொருந்தா வண்ணம்
புணர்ந்தானைப் பூங்கணையா னுடலம் வேவப்
பார்த்தானைப் பரிந்தானைப் பனிநீர்க் கங்கை
படர்சடைமேற் பயின்றானைப் பதைப்ப யானை
போர்த்தானைப் புண்ணியனைப் புநிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே. **#433**
வாசுகி என்ற பாம்பினையே வில்லுக்கு நாணாகக் கட்டியும், இடையிலே கச்சாக அணிந்தும் இருப்பவனாய், பொன் போன்ற உடம்பும் தாமரையாகிய இருப்பிடமும் உடைய பிரமனுடைய தலை ஒன்றனை அவன் உடலில் பொருந்தாதபடி நீக்கியவனாய், மன்மதன் உடல் சாம்பலாகுமாறு நெற்றிக்கண்ணால் நோக்கியவனாய்ப் பின் அவனிடம் அருள் கூர்ந்தவனாய், கங்கையைச் சடை மீது தரித்தவனாய், யானை நடுங்க அதன் தோலை உரித்துப் போர்த்தவனாய்ப் புண்ணியனாய்த் தூயோனாய்ப் பாசம் அற்றவனாய் உள்ள பெருமானைப் பூந்துருத்தியில் நான் கண்டேன்.

திருப்பூந்துருத்தி

எரித்தானை எண்ணார் புரங்கள் மூன்றும்
இமைப்பளவிற் பொடியாக எழிலார் கையால்
உரித்தானை மதகரியை யுற்றுப் பற்றி
யுமையதனைக் கண்டஞ்சி நடுங்கக் கண்டு
சிரித்தானைச் சீரார்ந்த பூதஞ் சூழத்திருச்சடைமேல் திங்களும் பாம்பும்

நீரும்
புரித்தானைப் புண்ணியனைப் புநிதன் தன்னைப்பொய்யிலியைப்
பூந்துருத்திக் கண்டேன் நானே. **#434**
பகைவர் முப்புரங்களையும் இமைகொட்டும் நேரத்திற்குள்
பொடியாகுமாறு எரித்து, மத யானையைப் பற்றித் தன் அழகிய
கைகளால் தோலை உரித்து, உமாதேவி அது கண்டு அஞ்ச, அவள்
அச்சத்தைப் பார்த்து, சிரித்துச் சடையில் பிறையும் பாம்பும் கங்கையும்
சூடிப் பூதகணங்கள் சூழ இருக்கும் புண்ணியனாய்த் தூயோனாய்ப்
பாசம் இல்லாதவனான பெருமானை யான் பூந்துருத்தியில் கண்டேன்.

<u>திருப்பூந்துருத்தி</u>

வைத்தானை வானோ ருலக மெல்லாம்
வந்திறைஞ்சி மலர்கொண்டு நின்று போற்றும்
வித்தானை வேண்டிற்றொன் றீவான் தன்னை
விண்ணவர்தம் பெருமானை வினைகள் போக
உய்த்தானை யொலிகங்கை சடைமேற் றாங்கி
யொளித்தானை யொருபாகத் துமையோ டாங்கே
பொய்த்தானைப் புண்ணியனைப் புநிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே. **#435**
வானோர் உலகமெல்லாம் படைத்தவனாய், அத்தேவர்கள் வந்து
வணங்கிமலர்கொண்டு நின்று துதிக்கும் உலக காரணனாய்,
அடியவர்கள் விரும்பியதை அளிப்பவனாய், இந்திரனுக்கு ஏற்பட்ட
சாபத்தைப் போக்கியவனாய், கங்கையைச் சடையில் மறைத்துப் பாதி
உருவாய் உள்ள பார்வதிக்குப் புலப்படாதவாறு செய்தவனாய்ப்
புண்ணியனாய்த் தூயோனாயுள்ள பாசமற்றவனை நான் பூந்துருத்தியில்
கண்டேன்.

<u>திருப்பூந்துருத்தி</u>

ஆண்டானை வானோ ருலக மெல்லாம்
அந்நா ளறியாத தக்கன் வேள்வி
மீண்டானை விண்ணவர்க ளோடுங் கூடி
விரைமலர்மேல் நான்முகனும் மாலுந் தேட
நீண்டானை நெருப்புருவ மானான் தன்னை
நிலையிலார் மும்மதிலும் வேவ வில்லைப்
பூண்டானைப் புண்ணியனைப் புநிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே. **#436**
தேவருலகமெல்லாம் ஆண்டவனாய், ஒரு காலத்தில் தக்கன் வேள்வியில்
தொடர்பு கொண்டு தன்னால் தண்டிக்கப்பட்ட தேவர்களோடும்

திரும்பியவனாய், தாமரையில் உள்ள பிரமனும் திருமாலும் தேடுமாறு தீப்பிழம்பாக நின்றவனாய், பகைவருடைய மும்மதிலும் தீப்பற்றி அழியுமாறு வில்லைப் பூண்டவனாய்ப் புண்ணியனாய்த் தூயோனாய் உள்ள பாசம் அற்றவனைப் பூந்துருத்தியில் யான் கண்டேன்.

திருப்பூந்துருத்தி

மறுத்தானை மலைகோத்தங் கெடுத்தான் தன்னை
மணிமுடியோ டிருபதுதோள் நெரியக் காலால்
இறுத்தானை யெழுநரம்பி னிசைகேட் டானை
யெண்டிசைக்கும் கண்ணானான் சிரமே லொன்றை
அறுத்தானை யமரர்களுக் கமுதீந் தானை
யாவர்க்குந் தாங்கொணா நஞ்ச முண்டு
பொறுத்தானைப் புண்ணியனைப் புநிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே. **#437**

நந்தி பெருமான் அறிவுரையை அலட்சியம் செய்து தன் கைகளைக் கோத்துக் கயிலை மலையை எடுத்த இராவணனைப் பத்துத்தலைகளும் இருபது தோள்களும் நெரியுமாறு காலால் அழுத்தியவனாய்ப்பின் அவன் பாடிய ஏழுநரம்பின் ஓசையைக் கேட்டு அவனுக்கு அருள் செய்தவனாய், எட்டுக் கண்களை உடைய பிரமனின் மேல்தலையாகிய ஐந்தாம் தலையை அறுத்த வனாய்த் தேவர்களுக்கு அமுதம் ஈந்தவனாய், எவராலும் பொறுக்க முடியாத விடத்தை உண்டு அதனைக் கழுத்தில் இருத்தியவனாய்ப் புண்ணியனாய்த் தூயோனாய்ப் பாசம் அற்றவனாய் உள்ள பெருமானைப் பூந்துருத்தியில் நான் கண்டேன்.

திருச்சோற்றுத்துறை

திருச்சோற்றுத்துறை

திருச்சோற்றுத்துறை, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தொலையாச்செல்வர்.
தேவியார் : ஒப்பிலாம்பிகை.

மூத்தவனாய் உலகுக்கு முந்தி னானே
முறைமையால் எல்லாம் படைக்கின் றானே
ஏத்தவனாய் ஏழுலகு மாயி னானே
இன்பனாய்த் துன்பங் களைகின் றானே
காத்தவனாய் எல்லாந்தான் காண்கின் றானே
கடுவினையேன் தீவினையைக் கண்டு போகத்
தீர்த்தவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. **#438**

காலத்தால் எல்லாருக்கும் முற்பட்டவனே! முறையாக எல்லா உலகையும் படைக்கின்றவனே! ஏழுலகும் தாங்குகின்றவனே! இன்பம் தருபவனாய்த் துன்பங்களைப் போக்குகின்றவனே! முன்னே காத்தமை போல எப்பொழுதும் எல்லோரையும் காக்கின்றவனே! தீவினையை உடைய அடியேனுடைய தீவினையை நீக்கியவனே! திருச்சோற்றுத்துறையிலுள்ள விளங்கும் ஒளியை உடைய சிவனே! அடியேன் உன் அடைக்கலம்.

திருச்சோற்றுத்துறை

தலையவனாய் உலகுக்கோர் தன்மை யானே
தத்துவனாய்ச் சார்ந்தார்க்கின் னமுதா னானே
நிலையவனாய் நின்னொப்பா ரில்லா தானே
நின்றுணராக் கூற்றத்தைச் சீறிப் பாய்ந்த
கொலையவனே கொல்யானைத் தோல்மே லிட்ட
கூற்றுவனே கொடிமதில்கள் மூன்று மெய்த
சிலையவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. **#439**

உலகத் தலைவனே! தத்துவனே! அடியார்க்கு அமுதே! நிலைபேறுடையவனே! ஒப்பற்றவனே! அறிவில்லாத கூற்றுவனை வெகுண்டு உதைத்துத் தண்டித்தவனே! யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்திய கஜசம்கார மூர்த்தியே! கொடிகள் உயர்த்தப்பட்ட மும்மதில்களையும் அழித்த வில்லை உடையவனே!

திருச்சோற்றுத்துறையில் உறையும் திகழ் ஒளியாம் சிவனே! அடியேன் உன் அடைக்கலம்.

திருச்சோற்றுத்துறை

முற்றாத பான்மதியஞ் சூடி னானே
முளைத்தெழுந்த கற்பகத்தின் கொழுந்தொப் பானே
உற்றாரென் றொருவரையு மில்லா தானே
உலகோம்பும் ஒண்சுடரே யோதும் வேதங்
கற்றானே யெல்லாக் கலைஞா னமுங்கல்லாதேன் தீவினைநோய் கண்டு போகச்
செற்றானே திருச்சோற்றுத் துறையு ளானேதிகழொளியே சிவனேயுன் னபயம் நானே. **#440**

வெள்ளிய பிறை மதி சூடியே! முளைத்து வெளிப்பட்ட கற்பகத் தளிர் ஒப்பவனே! தனக்கென வேண்டியவர் யாரும் இல்லாதானே! உலகைப் பாதுகாக்கும் சுடரே! எல்லாக் கலைஞானமும் ஒதாதுணர்ந்து வேதம் ஓதுபவனே! ஒன்றும் கல்லாத அடியேனுடைய தீவினையும் அதனால் விளையும் நோயும் நீங்குமாறு அவற்றை அழித்தவனே! திருச்சோற்றுத் துறையுள் உறையும் திகழ் ஒளியாம் சிவனே! அடியேன் உன் அடைக்கலம்.

திருச்சோற்றுத்துறை

கண்ணவனாய் உலகெல்லாங் காக்கின் றானே
காலங்க ளூழிகண் டிருக்கின் றானே
விண்ணவனாய் விண்ணவர்க்கும் அருள்செய் வானே
வேதனாய் வேதம் விரித்திட் டானே
எண்ணவனா யெண்ணார் புரங்கள் மூன்றும்
இமையாமுன் எரிகொளுவ நோக்கி நக்க
திண்ணவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. **#441**

பற்றுக் கோடாய் இருந்து உலகைக் காப்பவனே! பல ஊழிகளையும் கண்ட, காலம் கடந்த பெருமானே! தேவனாய்த் தேவர்களுக்கும் மற்றை உயிர்களுக்கும் அருள்செய்பவனே! வேத வடிவினனாய் வேதக் கருத்தை விரித்து உரைத்தவனே! எங்கள் உள்ளத்தில் இருப்பவனாய்ப் பகைவருடைய மும்மதிலும் இமை கொட்டும் நேரத்தில் தீக்கு இரையாகுமாறு அவற்றைக் கண்டு சிரித்த உறுதியுடையவனே! திருச்சோற்றுத்துறையில் உறையும் திகழ் ஒளியாம் சிவனே! யான் உன் அடைக்கலம்.

திருச்சோற்றுத்துறை

நம்பனே நான்மறைக ளாயி னானே
நடமாட வல்லானே ஞானக் கூத்தா
கம்பனே கச்சிமா நகரு ளானே
கடிமதில்கள் மூன்றினையும் பொடியா எய்த
அம்பனே அளவிலாப் பெருமை யானே
அடியார்கட் காரமுதே ஆனே றேறுஞ்
செம்பொனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. **#442**

எல்லோராலும் விரும்பப்படுபவனே! நால் வேத வடிவினனே! கூத்தாடவல்ல ஞானத் கூத்தனே! கச்சி ஏகம்பனே! காவலை உடைய மும்மதில்களும் பொடியாகுமாறு செலுத்திய அம்பினை உடையவனே! எல்லையற்ற பெருமை உடையவனே! அடியவர்களுக்குக்கிட்டுதற்கரிய அமுதமானவனே! காளையை இவரும் பொன்னார் மேனியனே! திருச்சோற்றுத்துறை உறையும் திகழ் ஒளியாம் சிவனே! அடியேன் உன் அடைக்கலம்.

திருச்சோற்றுத்துறை

ஆர்ந்தவனே யுலகெலாம் நீயே யாகி
யமைந்தவனே யளவிலாப் பெருமை யானே
கூர்ந்தவனே குற்றாலம் மேய கூத்தா
கொடுமூ விலையதோர் சூல மேந்திப்
பேர்ந்தவனே பிரளயங்க ளெல்லா மாய
பெம்மானென் றெப்போதும் பேசும் நெஞ்சிற்
சேர்ந்தவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. **#443**

உலகமெல்லாம் நீயேயாகிப் பொருந்திக் குறையாது மின்றி நிரம்பியிருப்பவனே! எல்லையற்ற பெருமை உடையவனே! உயிர்களிடத்து அருள் மிகுந்தவனே! குற்றாலத்தை விரும்பிய கூத்தனே! முத்தலைச் சூலம் ஏந்தி ஊழிவெள்ளங்கள் எல்லாம் மறையுமாறு உலாவுபவனே! உன்னைப் பெருமான் என்று நினைக்கும் உள்ளங்களில் சேர்ந்தவனே! திருச்சோற்றுத்துறையில் உள்ள திகழ் ஒளியாம் சிவனே! அடியேன் உன் அடைக்கலம்.

திருச்சோற்றுத்துறை

வானவனாய் வண்மை மனத்தி னானே
மாமணிசேர் வானோர் பெருமான் நீயே

கானவனாய் ஏனத்தின் பின்சென் றானே
கடிய அரணங்கள் மூன்றட் டானே
தானவனாய்த் தண்கயிலை மேவி னானே
தன்னொப்பா ரில்லாத மங்கைக் கென்றுந்
தேனவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. **#444**

தேவனாய் வரம் கொடுக்கும் உள்ளத்தானே! சிந்தாமணியை உடைய தேவர்கள் பெருமானே! வேடனாய்ப் பன்றிப் பின் சென்றவனே! கொடிய மும்மதில்களை அழித்தவனே! குளிர்ந்த கயிலாயத்தை உறைவிடமாக விரும்பி உறைபவனே! தன்னை ஒப்பார் பிறர் இல்லாத பார்வதிக்கு இனியனே! திருச்சோற்றுத்துறையுள் திகழ் ஒளியாய் விளங்கும் சிவனே! அடியேன் உன் அடைக்கலம்.

திருச்சோற்றுத்துறை

தன்னவனாய் உலகெல்லாந் தானே யாகித்
தத்துவனாய்ச் சார்ந்தார்க்கின் னமுதா னானே
என்னவனா யென்னிதயம் மேவி னானே
யீசனே பாச வினைகள் தீர்க்கும்
மன்னவனே மலைமங்கை பாக மாக
வைத்தவனே வானோர் வணங்கும் பொன்னித்
தென்னவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. **#445**

சுதந்திரனாய், எல்லா உலகங்களும் தானே ஆனவனாய், மெய்ப்பொருளாய், அடியார்க்கு அமுதமாய் என்னை அடிமை கொண்டவனாய், என் உள்ளத்தில் விரும்பி உறைபவனாய், எல்லோரையும் அடக்கி ஆள்பவனாய், பாச வினைகளைப் போக்கும் தலைவனாய்ப் பார்வதி பாகனாய்த் தேவர்கள் வணங்கும் காவிரியின் தென்கரையிலுள்ள திருத்சோற்றுத்துறையுள் திகழ் ஒளியாய் விளங்கும் சிவனே! அடியேன் உன் அடைக்கலம்.

திருச்சோற்றுத்துறை

எறிந்தானே எண்டிசைக்குங் கண்ணா னானே
ஏழுலக மெல்லாமுன் னாய்நின் றானே
அறிந்தார்தாம் ஓரிருவ ரறியா வண்ணம்
ஆதியும் அந்தமு மாகி யங்கே
பிறிந்தானே பிறரொருவ ரறியா வண்ணம்
பெம்மானென் றெப்போதும் ஏத்து நெஞ்சிற்
செறிந்தானே திருச்சோற்றுத் துறையு ளானே

திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. **#446**
எட்டுத் திசைகளுக்கும் கண்ணாகி உலகங்களைக் காப்பவனாய், முன் ஏழ் உலகங்களையும் படைக்கும் முதற் பொருளாய் நின்று, பின் அவற்றை அழித்தவனே! பிரமனும் திருமாலும் அறியாவண்ணம் ஆதியும் முடிவும் ஆகி அவர்களிலிருந்து வேறுபட்டவனே! தன்னைத் தலைவன் என்று துதிப்பவர்கள் மனத்தில் மற்றவர் அறியாதபடி பொருந்தியிருப்பவனே! திருச்சோற்றுத்துறையில் உறையும் திகழ் ஒளியாம் சிவனே! அடியேன் உன் அடைக்கலம்.

திருச்சோற்றுத்துறை

மையனைய கண்டத்தாய் மாலும் மற்றை
வானவரும் அறியாத வண்ணச் சூலக்
கையவனே கடியிலங்கைக் கோனை யன்று
கால்விரலாற் கதிர்முடியுந் தோளுஞ் செற்ற
மெய்யவனே யடியார்கள் வேண்டிற் றீயும்
விண்ணவனே விண்ணப்பங் கேட்டு நல்குஞ்
செய்யவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. **#447**
நீலகண்டனே! திருமாலும் மற்றைத் தேவரும் அறியாத சூலபாணியே! இராவணனுடைய ஒளி வீசும் தலைகளையும் தோள்களையும் கால் விரலால் நசுக்கிய மெய்ப்பொருளே! அடியவர்கள் விரும்பியவற்றை அருளும் தேவனே! உயிரினங்களின் வேண்டுகோள்களைக் கேட்டு அவர்களுக்கு அருளும் நடுநிலை யாளனே! திருச்சோற்றுத்துறையில் உறையும் திகழ் ஒளியாம் சிவனே! அடியேன் உனக்கு அடைக்கலம்!

திருவொற்றியூர்

திருவொற்றியூர்

திருவொற்றியூர், திருத்தாண்டகம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாணிக்கத்தியாகர்.
தேவியார் : வடிவுடையம்மை.

வண்டோங்கு செங்கமலங் கழுநீர் மல்கும்
மதமத்தஞ் சேர்சடைமேல் மதியஞ் சூடித்
திண்டோள்கள் ஆயிரமும் வீசி நின்று
திசைசேர நடமாடிச் சிவலோ கனார்
உண்டார்நஞ் சுலகுக்கோ ருறுதி வேண்டி
ஒற்றியூர் மேய வொளிவண் ணனார்
கண்டேன்நான் கனவகத்திற் கண்டேற் கென்றன்
கடும்பிணியுஞ் சுடுந்தொழிலுங் கைவிட் டவே. **#448**

சிவலோகநாதராய ஒற்றியூரில் விரும்பி உறையும் சோதிவடிவினர், வண்டுகள் மொய்க்கும் செந்தாமரை, கழுநீர், ஊமத்தை இவற்றை அணிந்த சடை மீது பிறை சூடி, ஆயிரம் தோள்களையும் எட்டுத் திசைகளின் எல்லைகளையும் அவை அடையுமாறு வீசிக்கொண்டு, கூத்தாடி, உலகுக்கு நலன் பயப்பதற்காக விடத்தை உண்டவர். அவரை அடியேன் கனவில் கண்டேனாக, அவ்வளவில் என் கடிய நோயும் அவை செய்த செயல்களும் நீங்கி விட்டன.

திருவொற்றியூர்

ஆகத்தோர் பாம்பசைத்து வெள்ளே றேறி
அணிகங்கை செஞ்சடைமே லார்க்கச் சூடிப்
பாகத்தோர் பெண்ணுடையார் ஆணு மாவர்
பசுவேறி யுழிதருமெம் பரம யோகி
காமத்தால் ஐங்கணையான் தன்னை வீழக்
கனலா எரிவிழித்த கண்மூன் றினார்
ஓமத்தால் நான்மறைகள் ஓதல் ஓவா
ஒளிதிகழும் ஒற்றியூ ருறைகின் றாரே. **#449**

மார்பில் பாம்பு சூடி, வெண்ணிறக் காளையை இவர்ந்து, கங்கையைச் சடையில் ஆரவாரிக்குமாறு சூடிப் பார்வதி பாகராய், ஆண்மைத் தொழிலராய், அக்காளையை இவர்ந்தே உலகங்களைச் சுற்றி உலவும் மேம்பட்ட யோகியாய், காமவேட்கையில் பழகுகின்ற ஐந்து மலரம்புகளை உடைய மன்மதன் சாம்பலாகி விழுமாறு வெகுண்டு

மூன்றாம் கண்ணைத் தீப் புறப்பட விழித்த பெருமான், வேள்விகளோடு நான்கு வேதம் ஓதுதலும் நீங்காத ஞான ஒளி விளங்கும் ஒற்றியூரில் உகந்தருளியிருக்கின்றார்.

திருவொற்றியூர்

வெள்ளத்தைச் செஞ்சடைமேல் விரும்பி வைத்தீர்
வெண்மதியும் பாம்பு முடனே வைத்தீர்
கள்ளத்தை மனத்தகத்தே கரந்து வைத்தீர்
கண்டார்க்குப் பொல்லாது கண்டீர் எல்லே
கொள்ளத்தான் இசைபாடிப் பலியுங் கொள்ளீர்
கோளரவுங் குளிர்மதியுங் கொடியுங் காட்டி
உள்ளத்தை நீர்கொண்டீர் ஓதல் ஓவா
ஒளிதிகழும் ஒற்றியூ ருடைய கோவே. **#450**

வேதம் ஓதுதல் நீங்காத ஞான ஒளி திகழும் ஒற்றியூரை உடைய தலைவரே, நீர்விரும்பிக் கங்கையைச் சடையில் சூடி, அதன்கண் பிறையையும் பாம்பையும் உடன்வைத்து, காதல் உணர்வாகிய வஞ்சனையை மனத்தில் மறைத்து வைத்திருப்பது காண்பவர்களுக்குப் பெரியதொரு தீங்காய்த் தோன்றுவதாகும். பகற்பொழுதில் பிச்சை வாங்கவருபவரைப் போல இசையைப் பாடிக் கொண்டுவந்து, பிச்சையையும் ஏலாது, உம்முடைய பாம்பு, பிறை, காளை எழுதிய கொடி இவற்றைக் காணச் செய்து, எம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டீர். இதனைச் சற்று நினைத்துப் பார்ப்பீராக.

திருவொற்றியூர்

நரையார்ந்த விடையேறி நீறு பூசி
நாகங்கச் சரைக்கார்த்தோர் தலைகை யேந்தி
உரையாவந் தில்புகுந்து பலிதான் வேண்ட
எம்மடிக ளும்மூர்தான் ஏதோ என்ன
விரையாதே கேட்டியேல் வேற்கண் நல்லாய்
விடுங்கலங்கள் நெடுங்கடலுள்நின்றுதோன்றுந்
திரைமோதக் கரையேறிச் சங்க மூருந்
திருவொற்றி யூரென்றார் தீய வாறே. **#451**

வெள்ளை நிறக் காளையை இவர்ந்து, நீறுபூசி, இடுப்பில் பாம்பைக் கச்சாக உடுத்தி, மண்டைஓட்டைக் கையில் ஏந்தி, ஏதும் பேசாது, எம் இல்லத்தினுள் வந்து பிச்சை வேண்ட, 'எம் வணக்கத்திற்கு உரியவரே! உம் ஊர் யாது?' என்றுயான் வினவ' வேல் போன்ற கண்களை உடைய பெண்ணே! அவசரப் படாமல் கேள். கடலில் மரக்கலங்கள் காணப்படுவதும், திரைகள் தள்ளுவதனால் சங்குகள் கரையை அடைந்து

தவழ்வதுமாகிய திருஒற்றியூர்' என்றார். ஒற்றியூரே ஒழியச்சொந்த ஊர் ஒன்று இல்லாமையால் அவரை எங்குச் சென்று மீண்டும் காணஇயலும்! என்ற எண்ணத்தால் அவருக்கு என ஒரு சொந்த ஊர் இல்லாதது என் தீவினையே என்றாள்.

திருவொற்றியூர்

மத்தமா களியானை யுரிவை போர்த்து
வானகத்தார் தானகத்தா ராகி நின்று
பித்தர்தாம் போலங்கோர் பெருமை பேசிப்
பேதையரை யச்சுறுத்திப் பெயரக் கண்டு
பத்தர்கள்தாம் பலருடனே கூடிப் பாடிப்பயின்றிருக்கு மூரேதோ பணீயீ ரென்ன
ஒத்தமைந்த உத்திரநாள் தீர்த்த மாகஒளிதிகழும் ஒற்றியூ ரென்கின் றாரே. **#452**

மதயானைத் தோலைப் போர்த்தித் தேவருலகில் இருக்க வேண்டிய அவர், எம் வீட்டிற்குள் வந்து பைத்தியம் பிடித்தவரைப் போலத் தாமே தம் பெருமையைப் பேசிக்கொண்டு, பெண்களைப் பயமுறுத்திவிட்டு வெளியே வரக் கண்டு, பத்தர்கள் பலரும் அவரை அணுகி 'நீங்கள் பாடிக்கொண்டே தங்கியிருக்கும் ஊர் யாது?' என்று வினவப் பங்குனி உத்திரத்தில் தீர்த்தவிழாக் கொண்டாடும் ஒளி திகழும் ஒற்றியூர் என்றார்.

திருவொற்றியூர்

கடிய விடையேறிக் காள கண்டர்
கலையோடு மழுவாளோர் கையி லேந்தி
இடிய பலிகொள்ளார் போவா ரல்லர்
எல்லாந்தா னிவ்வடிகள் யாரென் பாரே
வடிவுடைய மங்கையுந் தாமு மெல்லாம்வருவாரை யெதிர்கண்டோம் மயிலாப் புள்ளே
செடிபடுவெண் டலையொன் றேந்தி வந்துதிருவொற்றி யூர்புக்கார் தீய வாறே. **#453**

நீலகண்டர் கைகளில் மானையும் மழுவையும் ஏந்தி, விரைந்து செல்லும் காளையைஇவர்ந்து, இடவந்த உணவையும் பிச்சையாகக் கொள்ளாராய், இடத்தை விட்டுநீங்காதவராயும் உள்ள இப்பெரியவர் யார் என்று எல்லோரும் மருண்டனர்.முன்பு இவர் வடிவுடையமங்கையும் தாமுமாய் மயிலாப்பூரில் வந்த காட்சியைக்கண்டுள்ளோம். பின் ஒரு நாள் புலால் நாற்றம் வீசும் மண்டை ஓட்டை ஏந்திஇங்கு உலவியவராய்த்திருவொற்றியூரில் புகுந்து விட்டார். இவர் எவ்வூரார் என்பதனைக் கூடஅறிய முடியாமல் இருப்பது

நம் தீவினையாகும்.

திருவொற்றியூர்

வல்லாராய் வானவர்க ளெல்லாங் கூடி
வணங்குவார் வாழ்த்துவார் வந்து நிற்பார்
எல்லேயெம் பெருமானைக் காணோ மென்ன
எவ்வாற்றால் எவ்வகையாற் காண மாட்டார்
நல்லார்கள் நான்மறையோர் கூடி நேடி
நாமிருக்கு மூர்பணியீ ரடிகே ளென்ன
ஒல்லைதான் திரையேறி யோதம் மீளும்
ஒளிதிகழும் ஒற்றியூ ரென்கின் றாரே. **#454**

தேவர்கள் எல்லோரும் கூடி வணங்கி வாழ்த்தி நிற்கும் பெருமான் எல்லாச் செயல்கள் செய்வதிலும் வல்லாராகவே, பகற் காலத்தில் எந்த வழியினாலும் எந்த வடிவினாலும் தேவர்கள் தம்மைக் காணமாட்டாதவராய், இவ்வுலகில் எழுந்தருளப் பெண்களும் நான்மறைவல்லோர்களும் ஒன்று கூடி அவரைத் தேடிக் கண்டு 'சான்றீரே! தாங்கள் இருக்கும் ஊர் யாது' என்று வினவ, விரைவில் கடல் அலைகள் கரையில் மோதிமீளும் ஒற்றியூர் என்கின்றார்.

திருவொற்றியூர்

நிலைப்பாடே நான்கண்ட தேடீ கேளாய்
நெருநலைநற் பகலிங்கோ ரடிகள் வந்து
கலைப்பாடுங் கண்மலருங் கலக்க நோக்கிக்
கலந்து பலியிடுவே னெங்குங் காணேன்
சலப்பாடே யினியொருநாட் காண்பே னாகில்
தன்னாகத் தென்னாகம் ஒடுங்கும் வண்ண
முலைப்பாடே படத்தழுவிப் போக லொட்டேன்
ஒற்றியூ ருறைந்திங்கே திரிவானையே. **#455**

தோழி! நான் என் பண்டை நிலையை அடைவதற்கு முடிவு செய்த வழியைக் கூறுகின்றேன் கேளாய். நேற்று நடுப்பகலில் இங்குப் பெரியவர் ஒருவர் வந்து என் உடையினது பெருமையும் கண்களும் அவர் உள்ளத்திலும் கண்களிலும் பொருந்துமாறு என்னைக் கூர்ந்து நோக்கி என்னை உள்ளத்தால் கலந்தாராக, அவருக்கு உணவு கொண்டு வரச்சென்ற நான் திரும்பி வர எங்கும் காணேனாய், வஞ்சனையாக மறைந்து விட்டார். இனி ஒருநாள் அவரைக் காண்பேனானால் அவர் மார்பிலே என் மார்பு அழுந்தும் வண்ணம் என் முலைச்சுவடு அவர் மார்பில் படும்படியாகத் தழுவிக்கொண்டு, ஒற்றியூரில் தங்கி இங்கு உலவும் அவரை, என்னை விடுத்து ஒற்றியூருக்குப் போக

விடமாட்டேன்.

திருவொற்றியூர்

மண்ணல்லை விண்ணல்லை வலய மல்லை
மலையல்லை கடலல்லை வாயு வல்லை
எண்ணல்லை யெழுத்தல்லை யெரியு மல்லை
யிரவல்லை பகலல்லை யாவு மல்லை
பெண்ணல்லை யாணல்லை பேடு மல்லை
பிறிதல்லை யானாயும் பெரியாய் நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீயை யல்லை
உணர்வரிய ஒற்றியூ ருடைய கோவே. **#456**

எங்கள் உள்ளத்தால் உணரமுடியாத ஒற்றியூர்த் தலைவனே. நீ - மண், விண், ஞாயிறு முதலிய மண்டலங்கள், மலை, கடல், காற்று, எரி, எண், எழுத்து, இரவு, பகல், பெண், ஆண், பேடு, முதலிய அல்லையாயும் இவற்றுள் கரந்து எங்கும் பரந்துள்ள பெரியையாயும் பெண்களுக்குத் தீமை செய்யாத நல்ல உள்ளத்தையாயும் உள்ளாய்.

திருவொற்றியூர்

மருவுற்ற மலர்க்குழலி மடவா ளஞ்ச
மலைதுளங்கத் திசைநடுங்கச் செறுத்து நோக்கிச்
செருவுற்ற வாளரக்கன் வலிதான் மாளத்
திருவடியின் விரலொன்றால் அலற வூன்றி
உருவொற்றி யங்கிருவ ரோடிக் காண
ஓங்கினவவ் வொள்ளழலா ரிங்கே வந்து
திருவொற்றி யூர்நம்மூ ரென்று போனார்
செறிவளைகள் ஒன்றொன்றாச் சென்ற வாறே. **#457**

எம்பெருமான், தன்னைப் பொருந்திய மலர் சூடிய கூந்தலை உடைய பார்வதி அஞ்சுமாறு, இராவணன் செய்த செயலால் கயிலை மலை அசைய, எண்திசைகளும் நடுங்க, அவனை வெகுண்டு நோக்கி, அவன் பலம் முழுதும் அழியுமாறு திருவடிவிரல் ஒன்றினால் அவன் அலறுமாறு அழுத்தி, தன் உருவத்தைத் தேடிப் பிரமனும் திருமாலும் முயன்று காணுமாறு தீப்பிழம்பாய் உயர்ந்த பெருமானார் இங்கே (என்னிடத்தில்) வந்து தம்முடைய ஊர் திருவொற்றியூர் என்று கூறிச் சென்றார். அவர் நினைவால் என்னுடைய செறிந்த வளையல்கள் ஒன்று ஒன்றாய் கழன்று விட்டன.

திருஆவடுதுறை

திருஆவடுதுறை

திருஆவடுதுறை, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாசிலாமணியீசுவரர்.
தேவியார் : ஒப்பிலாமுலையம்மை.

நம்பனை நால்வேதங் கரைகண் டானை
ஞானப் பெருங்கடலை நன்மை தன்னைக்
கம்பனைக் கல்லா லிருந்தான் தன்னைக்
கற்பகமா யடியார்கட் கருள்செய் வானைச்
செம்பொன்னைப் பவளத்தைத் திரளு முத்தைத்
திங்களை ஞாயிற்றைத் தீயை நீரை
அம்பொன்னை யாவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. **#458**

நம்மால் விரும்பப்படுபவனாய், நான்கு வேதங்களையும் கரை கண்டவனாய், ஞானப் பெருங்கடலாய், நன்மையாய், ஏகம்பனாய், கல்லாலின் கீழ் இருந்தானாய், கற்பகமாய், அடியார்களுக்கு அருள் செய்வானாய், செம்பொன், பவளம், முத்துத்திரள் திங்கள், ஞாயிறு, தீ இவற்றை ஒப்பானாய், நீராய், செல்வமாய் உள்ள, ஆவடுதுறையிலுள்ள சிவபெருமான் திருவடிகளை அடியேன் அடைந்து தீவினையிலிருந்து பிழைத்தேன்.

திருஆவடுதுறை

மின்னானை மின்னிடைச்சே ருருமி னானை
வெண்முகிலாய் எழுந்துமழை பொழிவான் தன்னைத்
தன்னானைத் தன்னொப்பா ரில்லா தானைத்
தாயாகிப் பல்லுயிர்க்கோர் தந்தை யாகி
என்னானை யெந்தை பெருமான் தன்னை
இருநிலமும் அண்டமுமாய்ச் செக்கர் வானே
அன்னானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. **#459**

மின்னாய், மின்னிடையே சேரும் இடியாய், வெண்முகிலாய், மழைபெய்யும் கார்முகிலாய்ச் சுதந்திரனாய், தன்னை ஒப்பார் பிறர் இல்லாதவனாய்ப் பல்லுயிர்க்கும் தாயாய்த் தந்தையாய் எனக்கு உரிய எந்தையாய்ப் பெரிய உலகங்களும் உலகங்களின் தொகுப்பாகிய அண்டங்களுமாய்ச் செவ்வான் போன்ற நிறத்தினனாய்,

ஆவடுதுறையுள்மேய அரனடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே.

திருஆவடுதுறை

பத்தர்கள் சித்தத்தே பாவித் தானைப்
பவளக் கொழுந்தினை மாணிக் கத்தின்
தொத்தினைத் தூநெறியாய் நின்றான் தன்னைச்
சொல்லுவார் சொற்பொருளின் தோற்ற மாகி
வித்தினை முளைக்கிளையை வேரைச் சீரை
வினைவயத்தின் தன்சார்பை வெய்ய தீர்க்கும்
அத்தனை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. **#460**

அடியார் உள்ளத்தே பரவினவனாய்ப் பவளக் கொழுந்தாய், மாணிக்கக் கொத்தாய்த் தன்னை அடைவதற்குத்தானே பற்றுக்கோடாகிய வழியாய்ச் சொற்பொருளின் உணர்வாய், வித்தாய், முளையாய், முளைகளின் கிளையாய், வேராய்ப் பயனாய், ஊழ்வினை வயத்தால் வந்த அதன் கொடிய தொடர்பான துயரங்களைத் தீர்க்கும் தலைவனாய், ஆவடுதுறை மேய அத்தனாய் உள்ள அரனடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேன்.

திருஆவடுதுறை

பேணியநற் பிறைதவழ்செஞ் சடையி னானைப்
பித்தராம் அடியார்க்கு முத்தி காட்டும்
ஏணியை யிடர்க்கடலுட் சுழிக்கப் பட்டிங்
கிளைக்கின்றேற் கக்கரைக்கே யேற வாங்குந்
தோணியைத் தொண்டனேன் தூய சோதிச்
சுலாவெண் குழையானைச் சுடர்பொற் காசின்
ஆணியை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. **#461**

பிறைதவழ் செஞ்சடையனாய்த் தன்பால் பெரும் பற்றுக் கொண்ட அடியவரை வீட்டுலகத்திற்கு ஏற்றும் ஏணியாய்த் துயர்க் கடல் சுழியில் அகப்பட்டு வருந்தும் அடியேனை ஏறி அக்கரை அடைய உதவிச்சேர்க்கும் தோணியாய், தூய ஒளி வீசும் வெள்ளிய காதணி அணிந்தவனாய், ஒளிவீசும் பொற்காசின் மாற்றினை அளக்கும் உரையாணியாய் ஆவடுதுறையில் மேவிய அரனடியே தொண்டனாகிய அடிநாயேன் அடைந்து உய்ந்தேன்.

திருஆவடுதுறை

ஒருமணியை உலகுக்கோ ருறுதி தன்னை

உதயத்தி னுச்சியை உருமா னானைப்
பருமணியைப் பாலோடஞ் சாடி னானைப்
பவித்திரனைப் பசுபதியைப் பவளக் குன்றைத்
திருமணியைத் தித்திப்பைத் தேன தாகித்
தீங்கரும்பி னின்சுவையைத் திகழுஞ் சோதி
அருமணியை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. **#462**
ஒப்பற்ற மாணிக்கமாய், உலகுக்கு உறுதியாய், உதயமலையின் உச்சியாய், இடியாய், பெரிய இரத்தினமாய், பஞ்சகவ்ய அபிடேகப் பிரியனாய், தூயனாய், ஆன்மாக்களின் தலைவனாய்ப் பவளக்குன்றாய், செல்வம் நல்கும் சிந்தாமணியாய்த் தேன் கரும்பு இவற்றின் இனிப்பாய், ஒளிவீசும் கிட்டுதற்கு அரிய மாணிக்கமாய், ஆவடுதுறைமேய அரன் அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேன்.

<u>திருஆவடுதுறை</u>

ஏற்றானை யெண்டோ ளுடையான் தன்னை
யெல்லி நடமாட வல்லான் தன்னைக்
கூற்றானைக் கூற்ற முதைத்தான் தன்னைக்
குரைகடல்வாய் நஞ்சுண்ட கண்டன் தன்னை
நீற்றானை நீளரவொன் றார்த்தான் தன்னை
நீண்ட சடைமுடிமேல் நீரார் கங்கை
ஆற்றானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. **#463**
காளை வாகனனாய், எண்தோளனாய், இரவில் கூத்து நிகழ்த்துபவனாய், அழித்தற் கடவுளாய்க் கூற்றுவனை உதைத்தவனாய்க் கடலில் தோன்றிய நஞ்சுண்ட நீலகண்டனாய்த் திருநீறு அணிந்தவனாய், நீண்ட பாம்பு ஒன்றனை இடையில் இறுகக் கட்டியவனாய், நீண்ட சடையில் கங்கை சூடியாய், ஆவடுதுறை மேய அரனடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேன்.

<u>திருஆவடுதுறை</u>

கைம்மான மதகளிற்றை உரித்தான் தன்னைக்
கடல்வரைவா னாகாச மானான் தன்னைச்
செம்மானப் பவளத்தைத் திகழும் முத்தைத்
திங்களை ஞாயிற்றைத் தீயா னானை
எம்மானை என்மனமே கோயி லாக
இருந்தானை என்புருகும் அடியார் தங்கள்
அம்மானை ஆவடுதண் டுறையுள் மேய

அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. **#464**
துதிக்கையை உடைய தோலாத மத யானைத் தோலை உரித்தவனாய்க் கடல், மலை, மேகம், ஆகாயம் இவையாவும் ஆனவனாய்ச் செம்பவளமும் வெண்முத்தும் போன்றவனாய்த் திங்கள் சூரியன் தீ என்ற முச்சுடராய், எம் தலைவனாய், என் மனத்தையே இருப்பிடமாகக் கொண்டிருப்பது போல எலும்பும் உருகும் அடியவர்களுக்கும் தலைவனாய், ஆவடுதுறையுள் மேய அரன் அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேன்.

<u>திருஆவடுதுறை</u>

மெய்யானைப் பொய்யரொடு விரவா தானை
வெள்ளிடையைத் தண்ணிழலை வெந்தீ யேந்துங்
கையானைக் காமனுடல் வேவக் காய்ந்த
கண்ணானைக் கண்மூன் றுடையான் தன்னைப்
பையா டரவமதி யுடனே வைத்த
சடையானைப் பாய்புலித்தோ லுடையான் தன்னை
ஐயானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. **#465**
வாய்மை வடிவினனாய், வஞ்சகக் கலப்பு இல்லாதவனாய், வெற்றிடமாய், குளிர்ந்த நிழலாய்த் தீ ஏந்திய கையனாய்க் காமன் உடலை எரித்த கண்ணனாய், முக்கண்ணனாய், பட மெடுத்தாடும் பாம்பையும் பிறையையும் சேர்த்து வைத்த சடையனாய்ப் புலித்தோல் ஆடையனாய், எல்லாருக்கும் தலைவனாய் ஆவடுதுறை மேய அரனடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேன்.

<u>திருஆவடுதுறை</u>

வேண்டாமை வேண்டுவது மில்லான் தன்னை
விசயனைமுன் னசைவித்த வேடன் தன்னைத்
தூண்டாமைச் சுடர்விடுநற் சோதி தன்னைச்
சூலப் படையானைக் காலன் வாழ்நாள்
மாண்டோட வுதைசெய்த மைந்தன் தன்னை
மண்ணவரும் விண்ணவரும் வணங்கி யேத்தும்
ஆண்டானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. **#466**
வேண்டுதல் வேண்டாமை இலானாய், அருச்சுனனை முன்னொரு காலத்தில் வருந்தச் செய்த வேடனாய்த் தூண்டாமலே ஒளிவீசும் சோதியாய்ச் சூலப்படையானாய், கூற்றுவன் வாழ்நாள் கழியுமாறு உதைத்த வலியவனாய், மக்களும் தேவரும் வணங்கித் துதிக்கும்

தலைவனாய், ஆவடுதுறையுள் மேய அரன்அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேன்.

திருஆவடுதுறை

பந்தணவு மெல்விரலாள் பாகன் தன்னைப்
பாடலோ டாடல் பயின்றான் தன்னைக்
கொந்தணவு நறுங்கொன்றை மாலை யானைக்
கோலமா நீல மிடற்றான் தன்னைச்
செந்தமிழோ டாரியனைச் சீரி யானைத்திருமார்பிற் புரிவெண்ணூல்
திகழப் பூண்ட
அந்தணனை ஆவடுதண் டுறையுள் மேயஅரனடியே அடிநாயேன்
அடைந்துய்ந் தேனே. **#467**

பந்தினைப் பொருந்திய மெல்லிய விரல்களை உடைய பார்வதி பாகனாய்ப் பாடலும் ஆடலும் பயின்றவனாய்க் கொத்தாகப் பூக்கும் நறிய கொன்றை மாலையை அணிந்தவனாய், அழகிய நீலகண்டனாய்த் தமிழும் வடமொழியும் ஆகிய மேம்பட்டவனாய், மார்பில் வெள்ளிய பூணூல் அணிந்த அந்தணனாய், ஆவடு துறைமேவிய அரன் அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேன்.

திருஆவடுதுறை

தரித்தானைத் தண்கடல்நஞ் சுண்டான் தன்னைத்
தக்கன்றன் பெருவேள்வி தகர்த்தான் தன்னைப்
பிரித்தானைப் பிறைதவழ்செஞ் சடையி னானைப்
பெருவலியால் மலையெடுத்த அரக்கன் தன்னை
நெரித்தானை நேரிழையாள் பாகத் தானை
நீசனேன் உடலுறு நோயான தீர
அரித்தானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. **#468**

கடலில் தோன்றிய விடத்தை உண்டு அதனைக் கழுத்தில் தரித்தவனாய்த் தக்கனுடைய பெரிய வேள்வியை அழித்தவனாய், அவனுடைய செருக்கைப் போக்கியவனாய்ச் சடையில் பிறை சூடியாய்ப் பெரிய வலிமையால் கயிலையைப் பெயர்த்த இராவணனை நெரித்தவனாய்ப் பார்வதி பாகனாய்க் கீழ் மகனான அடியேனுடைய உடலில் ஏற்பட்ட நோயை நீக்கிய ஆவடுதுறை மேவிய அரன் அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேன்.

திருஆவடுதுறை

இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாசிலாமணியீசுவரர்.
தேவியார் : ஒப்பிலாமுலையம்மை.

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் னுறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. **#469**

நல்லூரழே! என் செல்வமே! வானோர்க்குப் புகழ் உண்டாக ஆற்றலை அருளும் ஞானமே! அடியார்க்குத்திருக்காட்சி வழங்கும் பெரிய சோதியே! என் கற்பகமாகவும் உறவாகவும், உடலாகவும் உள்ளமாகவும் உள்ளத்தின் உணர்வாகவும் கண்ணாகவும் கண்ணின் கருமணியாகவும் கருமணியின் பாவையாகவும் செயற்படும் ஆவடுதுறையிலுள்ள தேவர் தலைவனே! வடிவு புலப்படாத என் வல்வினை நோய் என்னைத் தாக்காதபடி காப்பாயாக.

திருஆவடுதுறை

மாற்றேன் எழுத்தஞ்சும் என்றன் நாவின்
மறவேன் திருவருள்கள் வஞ்ச நெஞ்சின்
ஏற்றேன் பிறதெய்வம் எண்ணா நாயேன்
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
மேற்றான்நீ செய்வனகள் செய்யக் கண்டு
வேதனைக்கே யிடங்கொடுத்து நாளு நாளும்
ஆற்றேன் அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. **#470**

திருவைந்தெழுத்தை என் நாவிலிருந்து நீக்கேன், திருவருள்களை என் நெஞ்சினால் மறவேன். எண்ணினால் எம்பெருமான் திருவடிகளையே எண்ணுவதல்லால் பிற தெய்வங்களை எண்ணா நாயேன் அத்தெய்வங்களை என் நெஞ்சில் ஏலேன். என்மேல் நீ செய்யும் செயல்களைக் கண்டு வேதனைப் பட்டு நானும் பொறுக்க இயலாதவனாக உள்ளேன். ஆவடுதுறையில் உறையும் தேவர் தலைவனே! அடியேனை அஞ்சேல் என்று அருளுவாயாக.

திருஆவடுதுறை

வரையார் மடமங்கை பங்கா கங்கை

மணவாளா வார்சடையாய் நின்றன் நாமம்
உரையா உயிர்போகப் பெறுவே னாகில்
உறுநோய்வந் தெத்தனையு முற்றா லென்னே
கரையா நினைந்துருகிக் கண்ணீர் மல்கிக்
காதலித்து நின்கழலே யேத்து மன்பர்க்
கரையா அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. **#471**

பார்வதி பாகனே! கங்கையைச் சடையில் தரித்தமணவாளா! உன் திருநாமங்களைச் சொல்லிக் கொண்டே உயிர் நீங்கப் பெறுவேனாயின் மிக்க நோய்கள் எத்தனையும் என்னை அடைந்து என் செய்ய முடியும்? கரைந்து நினைந்து உருகிக் கண்ணீர் வடித்துக் காதலித்து உன் திருவடிகளே துதிக்கும் அன்பர்களுக்கு அரசே! ஆவடுதுறை உறையும் அமரர் ஏறே! அடியேனை அஞ்சேல் என்று அருளுவாயாக.

திருஆவடுதுறை

சிலைத்தார் திரிபுரங்கள் தீயில் வேவச்
சிலைவளைவித் துமையவளை யஞ்ச நோக்கிக்
கலித்தாங் கிரும்பிடிமேற் கைவைத் தோடுங்
களிறுரித்த கங்காளா எங்கள் கோவே
நிலத்தார் அவர்தமக்கே பொறையாய் நாளும்
நில்லா வுயிரோம்பு நீத னேன்நான்
அலுத்தேன் அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. **#472**

ஆவடுதுறையில் உறையும் தேவர் தலைவனே! ஆரவாரித்த அசுரர்களின் மும்மதில்களும் தீயில் வேகுமாறு வில்லை வளைத்து, பார்வதியை அஞ்சுமாறு பார்த்துக் கரிய பெண் யானையைத் தழுவி ஓடிய யானையின் தோலை உரித்தவனே! முழு எலும்புக்கூட்டை அணிந்தவனே! எங்கள் தலைவனே! பூமிக்குப் பாரமாய், நில்லாத உயிரை உடலில் நிலை நிறுத்த உடலைப் பாதுகாக்கும் கீழ்மகனாகிய அடியேன் அலுத்து விட்டேன். அடியேனை அஞ்சேல் என்று காப்பாயாக.

திருஆவடுதுறை

நறுமா மலர்கொய்து நீரின் மூழ்கி
நாடோறும் நின்கழலே யேத்தி வாழ்த்தித்
துறவாத துன்பந் துறந்தேன் தன்னைச்
சூழுலகில் ஊழ்வினைவந் துற்றா லென்னே
உறவாகி வானவர்கள் முற்றும் வேண்டஒலிதிரைநீர்க் கடல்நஞ்சுண்

டுய்யக் கொண்ட
அறவா அடியேனை அஞ்சே லென்னாய்ஆவடுதண் டுறையுறையும்
அமர ரேறே. **#473**
நீரில் மூழ்கிப் பின் நறிய சிறந்த மலர்களைப் பறித்து உன்
திருவடிகளிலே இட்டு, உன்னைத் துதித்து வாழ்த்தித் துன்பங்களைப்
போக்கிய அடியேனை, இவ்வுலகில் ஊழ்வினை வந்து யாது செய்ய
இயலும்? தேவர்களிடத்து உறவு பூண்டு அவர்கள் வேண்டியதனால்
கடல் நஞ்சினை உண்டு அவர்களைப் பாதுகாத்த அறவோனாகிய
ஆவடுதுறை அமரர் ஏறே! அடியேனை அஞ்சேல் என்பாயாக.

திருஆவடுதுறை

கோன்நா ரணன் அங்கந் தோள்மேற் கொண்டு
கொழுமலரான் தன்சிரத்தைக் கையி லேந்திக்
கானார் களிற்றுரிவைப் போர்வை மூடிக்
கங்காள வேடராய் எங்குஞ் செல்வீர்
நானார் உமக்கோர் வினைக்கே டனேன்
நல்வினையுந் தீவினையு மெல்லாம் முன்னே
ஆனாய் அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. **#474**
அரசனாகிய நாராயணனுடைய முழு எலும்புக் கூட்டைத் தோள் மேல்
தரித்துப் பிரமன் மண்டையோட்டைக் கையில் ஏந்தி யானைத் தோலைப்
போர்த்துக் கங்காள வேடம் தரித்தவராய், எங்கும் உலவுபவரே!
அடியேன் உமக்கு என்ன உரிமை உடையேன்? வினையாகிய
கேட்டினை உடைய எமக்கு எல்லா நல்வினையும் தீவினையும் ஆகிய
ஆவடுதுறைத் தேவர் தலைவனே! அடியேனை அஞ்சேல் என்பாயாக.

திருஆவடுதுறை

உழையுரித்த மானுரிதோ லாடை யானே
உமையவள்தம் பெருமானே இமையோர் ஏறே
கழையிறுத்த கருங்கடல்நஞ் சுண்ட கண்டா
கயிலாய மலையானே உன்பா லன்பர்
பிழைபொறுத்தி என்பதுவும் பெரியோய் நின்றன்
கடனன்றே பேரருளுன் பால தன்றே
அழையுறுத்து மாமயில்க ளாலுஞ் சோலை
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. **#475**
அகவிக்கொண்டு மயில்கள் ஆடும் ஆவடுதுறைத் தேவர் தலைவனே!
மானை உரித்து அதன் தோலை ஆடையாக உடையவனே! பார்வதியின்
தலைவனே! தேவர் தலைவனே! மூங்கிற் கோல் சுட்டும் ஆழத்தையும்

கடந்த ஆழத்தை உடைய கடலின் நஞ்சினை உண்ட நீலகண்டனே! கயிலாய மலையில் உறைபவனே! உன் அடியவர் பிழைகளைப் பொறுப்பதும் உன் கடமை அன்றோ? உன்பால் பேரருள் உண்டு அன்றோ?.

திருஆவடுதுறை

உலந்தார் தலைகலனொன் றேந்தி வானோ
ருலகம் பலிதிரிவாய் உன்பா லன்பு
கலந்தார் மனங்கவருங் காத லானே
கனலாடுங் கையவனே ஐயா மெய்யே
மலந்தாங் குயிர்ப்பிறவி மாயக் காய
மயக்குளே விழுந்தழுந்தி நாளும் நாளும்
அலந்தேன் அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. **#476**

ஆவடுதுறைத் தேவர் தலைவனே! இறந்தவ ருடைய தலையோட்டைக் கையில் ஏந்தித் தேவர் உலகில் பிச்சை ஏற்பானே! உன்பால் அன்பால் கலந்தவர்களுடைய உள்ளத்தைக் கவரும் அன்புடையாய்! கையில் தீ கொழுந்துவிட்டு எரியுமாறு வைத் திருப்பவனே! தலைவனே! உண்மையாகத் தூய்மைஅற்ற இவ்வுடலில் ஏற்பட்ட மயக்கங்களில் விழுந்து அழுந்தி ஒவ்வொருநாளும் வருந்தும் அடியேனை அஞ்சேல் என்று அருள்செய்வாயாக.

திருஆவடுதுறை

பல்லார்ந்த வெண்டலை கையி லேந்திப்
பசுவேறி யூரூரன் பலிகொள் வானே
கல்லார்ந்த மலைமகளும் நீயு மெல்லாங்
கரிகாட்டி லாட்டுகந்தீர் கருதீ ராகில்
எல்லாரு மென்தன்னை யிகழ்வர் போலும்ஏழையமண் குண்டர்சாக் கியர்களொன்றுக்
கல்லாதார் திறத்தொழிந்தேன் அஞ்சே லென்னாய்ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. **#477**

ஆவடுதுறைத் தேவர் தலைவனே! பல் நிறைந்த வெள்ளிய மண்டையோட்டைக் கையில் ஏந்திக் காளையை இவர்ந்து ஊர் ஊராகப் பிச்சை எடுப்பவனே! பார்வதியும் நீயும் சுடுகாட்டில் கூத்தாடுதலை விரும்புகிறீர். நீங்கள் இருவீரும் என்னை ஆட் கொள்ளக் கருதவில்லையென்றால் மக்களெல்லாரும் அடியேனை இகழ்ந்து கூறுவர். அறிவற்ற பரு உடல்களை உடைய சமணர் புத்தர் ஆகிய பயனற்றவர் தொடர்பை நீக்கிவிட்ட அடியேனை அஞ்சேல் என்பாயாக.

திருஆவடுதுறை

துறந்தார்தந் தூநெறிக்கண் சென்றே னல்லேன்
துணைமாலை சூட்டநான் தூயே னல்லேன்
பிறந்தேன்நின் திருவருளே பேசி னல்லாற்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே
செறிந்தார் மதிலிலங்கைக் கோமான் தன்னைச்
செறுவரைக்கீ ழடர்த்தருளிச் செய்கை யெல்லாம்
அறிந்தேன் அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. **#478**

ஆவடுதுறைத் தேவர் பெருமானே! துறந்தவர் செல்லும் தூய நெறியிலே வாழ்கின்றேன் அல்லேன். உனக்கு இணையான மாலைகளைச் சூட்டும் தூய்மை உடையேன் அல்லேன். உன் திருவருளைப் பற்றிப் பேசியும் அப்படிப் பேசாத நாள்களைப் பயனற்ற நாள்களாகக் கணக்கிட்டும் வாழ்கின்றேன். செறிவாகப் பொருந்திய மதில்களை உடைய இலங்கை அரசனாகிய இராவணனைச் செறிவான கயிலை மலைக்கீழ் நசுக்கிப் பின் அவனுக்கு அருளிய உன் செயல்களை எல்லாம் அறிந்த அடியேனை அஞ்சேல் என்பாயாக.

திருவலிவலம்

திருவலிவலம்

திருவலிவலம், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மனத்துணைநாதர்.
தேவியார் : வாளையங்கண்ணியம்மை.

நல்லான்காண் நான்மறைக ளாயி னான்காண்
நம்பன்காண் நணுகாதார் புரமூன் றெய்த
வில்லான்காண் விண்ணவர்க்கும் மேலா னான்காண்
மெல்லியலாள் பாகன்காண் வேத வேள்விச்
சொல்லான்காண் சுடர்மூன்று மாயி னான்காண்
தொண்டாகிப் பணிவார்க்குத் தொல்வான் ஈய
வல்லான்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. **#479**

பெரியவனாய், நான்கு வேத சொரூபனாய் நம்மால் விரும்பப்படுபவனாய்ப் பகைவருடைய மும்மதில்களையும் எய்தவில்லை உடையவனாய்த் தேவர்களுக்கும் மேம்பட்டவனாய்ப் பார்வதி பாகனாய், மந்திர வடிவினனாய்ச் சந்திரன் சூரியன் தீ என்ற மூஒளிகளின் உருவனாய்த் தொண்டராகி வழிபடுபவர்களுக்கு வீட்டுலகை ஈய வல்லவனாய்த் தேவர்கள் வணங்கித் துதிக்கும் வலிவலத்தை உகந்தருளியிருக்கும் பெருமான் என் உள்ளத்தில் உள்ளான்.

திருவலிவலம்

ஊனவன்காண் உடல்தனக்கோர் உயிரா னான்காண்
உள்ளவன்காண் இல்லவன்காண் உமையாட்கென்றுந்
தேனவன்காண் திருவவன்காண் திசையா னான்காண்
தீர்த்தன்காண் பார்த்தன்றன் பணியைக் கண்ட
கானவன்காண் கடலவன்காண் மலையா னான்காண்
களியானை யீருரிவை கதறப் போர்த்த
வானவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. **#480**

வலிவலத்துப் பெருமான் எல்லோருக்கும் உடம்பாய், உயிராய், அருளாளாகளுக்கு அநுபவப் பொருளாய், உலகியலில் திளைப்பார்க்கு அநுபவம் ஆகாதவனாய்ப் பார்வதிக்குத் தேன் போன்று இனியனாய்ச் செல்வமாய்த் திசைகளாய்த் தூயவனாய், அருச்சுனனுடைய

போர்த்தொழிலை அநுபவித்த வேடனாய், கடலாய், மலையாய், மதயானையைக் கொன்று அதன் உதிரப் பசுமை கெடாத தோலைப் போர்த்திய தேவனாய், தேவர்களும் வணங்கித் துதிக்கப்படுபவனாய் என் உள்ளத்தில் உள்ளான்.

திருவலிவலம்

ஏயவன்காண் எல்லார்க்கு மியல்பா னான்காண்
இன்பன்காண் துன்பங்க ளில்லா தான்காண்
தாயவன்காண் உலகுக்கோர் தன்னொப் பில்லாத்
தத்துவன்காண் உத்தமன்காண் தானே யெங்கும்
ஆயவன்காண் அண்டத்துக் கப்பா லான்காண்அகங்குழைந்து
மெய்யரும்பி அழுவார் தங்கள்
வாயவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்வலிவலத்தான்
காணவனென் மனத்து ளானே. **#481**

எப்பொருளையும் நடத்துபவனாய், எல்லாருக்கும் இயக்கத்தை வழங்குபவனாய்த் துன்பக்கலப்பற்ற இன்பம் உடையவனாய்த் தாயாய், உலகில் தன்னை ஒப்பார் இல்லாத மெய்ப் பொருளாய், உத்தமனாய்த்தானே எங்கும் பரவியவனாய், அண்டங்களுக்கும் அப்பாற்பட்டவனாய், மனம் உருகி மெய் மயிர் பொடித்து அழும் அடியவர்களுக்குத் தன்னை அழைக்கும் அவர்கள் வாயிலுள்ளவனாய்த் தேவர்கள் வணங்கித் துதிக்கும் வலிவலத்தில் உறைபவன் என் உள்ளத்தில் உள்ளான்.

திருவலிவலம்

உய்த்தவன்காண் உடல்தனக்கோர் உயிரானான்காண்
ஓங்காரத் தொருவன்காண் உலகுக் கெல்லாம்
வித்தவன்காண் விண்பொழியும் மழையா னான்காண்
விளைவவன்காண் விரும்பாதார் நெஞ்சத்தென்றும்
பொய்த்தவன்காண் பொழிலேழுந் தாங்கி னான்காண்
புனலோடு வளர்மதியும் பாம்புஞ் சென்னி
வைத்தவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. **#482**

வலிவலத்துப் பெருமான் உடலுக்கு உயிராய் அதனைச் செலுத்துபவனாய், ஓங்காரத்தால் குறிப்பிடப்படும் எப்பொருட்கும் தலைவனாய், உலகுக்கெல்லாம் காரணனாய், வானத்து மழையாய், மழையின் விளைவாய்த் தன்னை விரும்பாதார் மனத்துத் தோன்றாதவனாய், ஏழுலகையும் தாங்குபவனாய்த் தலையில் கங்கை பிறை பாம்பு இவற்றை அணிந்தவனாய்; வானவர்கள் வணங்கித்

துதிக்கப்படுபவனாய் என் உள்ளத்தில் உள்ளான்.

திருவலிவலம்

கூற்றவன்காண் குணமவன்காண் குறியா னான்காண்
குற்றங்க ளனைத்துங்காண் கோல மாய
நீற்றவன்காண் நிழலவன்காண் நெருப்பா னான்காண்
நிமிர்புன் சடைமுடிமேல் நீரார் கங்கை
ஏற்றவன்காண் ஏழுலகு மாயி னான்காண்
இமைப்பளவிற் காமனைமுன் பொடியாய் வீழ
மாற்றவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. **#483**

தேவர்கள் வணங்கித்துதிக்கும் வலிவலத்துப் பெருமான் சொற்களாகவும், சொற்பொருளின் பொதுத் தன்மையாகவும், சிறப்புத் தன்மையாகவும், எல்லாக் குற்றங்களாகவும், நீறணிந்தவனாகவும், நிழலாகவும், வெப்பமாகவும், மேல்நோக்கிய சிவந்த சடையின் மேல் கங்கை நீரை ஏற்றவனாகவும், ஏழுலகும் ஆகியவனாய் இமை நேரத்தில் மன்மதனைச் சாம்பலாக்கியவனாய், என் உள்ளத்து உள்ளான்.

திருவலிவலம்

கோவணமோ தோலோ உடை யாவது
கொல்லேறோ வேழமோ ஊர்வது தான்
பூவணமோ புறம்பயமோ அன்றா யிற்றான்
பொருந்தாதார் வாழ்க்கை திருந் தாமையோ
தீவணத்த செஞ்சடைமேல் திங்கள் சூடித்
திசைநான்கும் வைத்துகந்த செந்தீ வண்ணர்
ஆவணமோ ஒற்றியோ அம்மா னார்தாம்
அறியேன்மற் றூராமா றாரூர் தானே. **#484**

தலைவராகிய பெருமான் உடுப்பது கோவணமோ தோலோ? ஊர்வது காளையோ, யானையோ? அவர் இருக்குமிடம் பூவணமோ புறம்பயமோ? அவர் பொருந்தாதார் வாழ்க்கையாகிய ஐயமேற்றுண்டல் அழகோ அழகன்றோ? தீப்போன்ற செஞ்சடை மேல் பிறை சூடி நான்கு திசைகளையும் தம் இருப்பிடமாகக் கொண்ட செந்நிறத்து எம்பெருமானார் இப்பொழுது இருக்குமிடம் ஒற்றியூரோ ஆரூரோ அறியேன். அவர்திருவுள்ளம் எவ்வெவற்றில் எவ்வாறாகி உள்ளதோ?

திருவலிவலம்

பெண்ணவன்காண் ஆணவன்காண் பெரியோர்க் கென்றும்
பெரியவன்காண் அரியவன்காண் அயனா னான்காண்

எண்ணவன்காண் எழுத்தவன்காண் இன்பக் கேள்வி
இசையவன்காண் இயலவன்காண் எல்லாங் காணுங்
கண்ணவன்காண் கருத்தவன்காண் கழிந்தோர் செல்லுங்
கதியவன்காண் மதியவன்காண் கடலேழ் சூழ்ந்த
மண்ணவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. **#485**
தேவர்கள் வணங்கித்துதிக்கும் வலிவலத்துப் பெருமான் பெண்ணாய், ஆணாய், அரியாய்ப் பிரமனாய்ப் பெரியோரில் பெரியோனாய், எண்ணாய், எழுத்தாய், இயலாய்ச் செவிக்கு இன்பம் தரும் இசையாய்க் கண்ணாய்க் கருத்தாய், இறந்தோர் செல்லும் வழியாய், ஞானமாய், ஏழ்கடல் சூழ்ந்த நிலமாய் என் உள்ளத்து உள்ளான்.

திருவலிவலம்

முன்னவன்காண் பின்னவன்காண் மூவா மேனி
முதலவன்காண் முடிவவன்காண் மூன்று சோதி
அன்னவன்காண் அடியார்க்கும் அண்டத் தார்க்கும்
அணியவன்காண் சேயவன்காண் அளவில் சோதி
மின்னவன்காண் உருமவன்காண் திருமால் பாகம்
வேண்டினன்கா ணீண்டுபுனற் கங்கைக் கென்றும்
மன்னவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. **#486**
வானவர்கள் வணங்கித் துதிக்கும் வலிவலத்துப் பெருமான் முன்னவனாய்ப் பின்னவனாய், என்றும் ஒரே நிலையிலிருக்கும் முதலும் முடிவுமாய் இருப்பவனாய்த் திங்கள் ஞாயிறு தீ என்ற மூவொளியாய், அடியார்க்கு அணியனாய், உலகியலில் மூழ்கியவர்களுக்குத் தொலைவில் உள்ளவனாய், எல்லையற்ற ஒளியை உடைய மின்னலாய், இடியாய்த் திருமாலை உடலின் ஒருபாகமாகக் கொண்டவனாய்க் கங்கையைச் சடையில் நிலைபெறச் செய்தவனாய் என் உள்ளத்து உள்ளான்.

திருவலிவலம்

நெதியவன்காண் யாவர்க்கும் நினைய வொண்ணா
நீதியன்காண் வேதியன்காண் நினைவார்க் கென்றுங்
கதியவன்காண் காரவன்காண் கனலா னான்காண்
காலங்க ளூழியாய்க் கலந்து நின்ற
பதியவன்காண் பழமவன்காண் இரதந் தான்காண்
பாம்போடு திங்கள் பயில வைத்த
மதியவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்

வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. **#487**
வானவர்கள் வணங்கித்துதிக்கும் வலிவலத்துப் பெருமான் செல்வமாய், யாரும் மனத்தால் அணுக இயலாத நீதியனாய் வேதியனாய்த் தன்னை விருப்புற்று நினைக்கும் அடியவர் சென்று சேரும் கதியாய், நீராய்த் தீயாய்ப் பல ஊழிக்காலங்களாய், எல்லாருக்கும் தலைவனாய்ப் பழமாய்ப் பழத்தின் சாறாய்ப் பாம்பையும் பிறையையும் பழகுமாறு அருகில் வைத்த ஞானமுடையவனாய் என் உள்ளத்து உள்ளான்.

திருவலிவலம்

பங்கயத்தின் மேலானும் பால னாகி
உலகளந்த படியானும் பரவிக் காணா
தங்கைவைத்த சென்னியரா யளக்க மாட்டா
அனலவன்காண் அலைகடல்சூ ழிலங்கை வேந்தன்
கொங்கலர்த்த முடிநெரிய விரலா லூன்றுங்
குழகன்காண் அழகன்காண் கோல மாய
மங்கையர்க்கோர் கூறன்காண் வானோ ரேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. **#488**
தேவர் வழிபடும் வலிவலத்தான் தாமரையில் உறையும் பிரமனும் வாமனனாய் உலகை அளந்த திருமாலும் கைகளைத் தலைமிசைக் குவித்து முன்னின்று துதித்து முடியையும் அடிகளையும் எளிமையில் காணமாட்டாது, தம் முயற்சியால் காண முற்பட்டமையின் காணமுடியாத தீப்பிழம்பாக நின்றவனாய் இராவணனுடைய பூக்களைச் சூடிய தலைகள் நெரியுமாறு விரலால் அவனை அழுத்திய இளையனாய், அழகனாய், அழகிய பார்வதி பாகனாய் என் உள்ளத்தில் உள்ளான்.

திருக்கோகரணம்

திருக்கோகரணம்

திருக்கோகரணம், திருத்தாண்டகம்,
இத்தலம் துளுவதேசத்திலிருப்பது. அந்தத்தேயத்தில் இது ஒரேதலம். ,
சுவாமிபெயர் : மாபலநாதர்.
தேவியார் : கோகரணநாயகியம்மை.

சந்திரனுந் தண்புனலுஞ் சந்தித் தான்காண்
தாழ்சடையான்காண் சார்ந்தார்க் கமுதா னான்காண்
அந்தரத்தி லசுரர்புரம் மூன்றட் டான்காண்
அவ்வுருவி லவ்வுருவ மாயி னான்காண்
பந்தரத்து நான்மறைகள் பாடி னான்காண்
பலபலவும் பாணி பயில்கின் றான்காண்
மந்திரத்து மறைப்பொருளு மாயி னான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே. **#489**

பெரிய மேலைக் கடலால் ஒருபுறம் சூழப்பட்ட கோகரணத்தில் உகந்தருளியிருக்கும் எம்பெருமான் தாழ்ந்த சடையில் பிறையையும் கங்கையையும் அணிந்தவனாய், அடியார்களுக்கு அமுதாய் வானத்தில் உலவிய அசுரரின் முப்புரங்களையும் அழித்தவனாய், அழகிய உருவங்களின் மேம்பட்ட அழகுடைய உருவினனாய், இசைவகைகளை உடைய நான்கு வேதங்களையும் பாடினவனாய்த் தாளத்திற்கு ஏற்பக் கூத்து நிகழ்த்துபவனாய், மந்திரத்தை உடைய வேதமாகவும் உள்ளான்.

திருக்கோகரணம்

தந்தவத்தன் தன்தலையைத் தாங்கி னான்காண்
சாரணன்காண் சார்ந்தார்க்கின் னமுதா னான்காண்
கெந்தத்தன் காண்கெடில வீரட் டன்காண்
கேடிலிகாண் கெடுப்பார்மற் றில்லா தான்காண்
வெந்தொத்த நீறுமெய் பூசி னான்காண்
வீரன்காண் வியன்கயிலை மேவி னான்காண்
வந்தொத்த நெடுமாற்கும் அறிவொ ணான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே. **#490**

மேற்குக் கடலை அடுத்த கோகரணப் பெருமான் உலகைப் படைத்த பிரமனது மண்டையோட்டை ஏந்தி எங்கும் சஞ்சரிப்பவனாய், அடியவர்களுக்கு அமுதமாய், மலரில் மணம்போல எங்கும் பரவியவனாய், அதிகை வீரட்டனாய்த் தான்என்றும் அழிவில்லாதவனாய்த் தன்னை அழிப்பாரும் இல்லாதவனாய்த் திருநீறு

பூசியவனாய்த் தவமாகிய பெருமிதம் உடையவனாய், பரந்த கயிலாயத்தை விரும்பி உறைபவனாய்த் தன்னிடத்துத் தோன்றித் தன் கருத்துக்கு ஏற்பக்காத்தல் தொழிலைச் செய்கின்ற திருமாலாலும் உள்ளபடி அறிய ஒண்ணாதவனாய், உள்ளான்.

திருக்கோகரணம்

தன்னுருவம் யாவருக்குந் தாக்கா தான்காண்
தாழ்சடையெம் பெருமான்காண் தக்கார்க் குள்ள
பொன்னுருவச் சோதிபுன லாடி னான்காண்
புராணன்காண் பூதங்க ளாயி னான்காண்
மின்னுருவ நுண்ணிடையாள் பாகத் தான்காண்
வேழத்தி னுரிவெருவப் போர்த்தான் தான்காண்
மன்னுருவாய் மாமறைக ளோதி னான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே. **#491**

மாகடல் சூழ் கோகரணம் மன்னிய பெருமான் தன் உருவையார்க்கும் எதிர்ப்படச் செய்யாதவனாய்த் தாழ் சடையனாய், அடியார்களுக்கு அநுபவப் பொருளாகிய பொற்சோதியாய், கங்கா தரனாய், பழையோனாய், ஐம்பூதங்களாய், மின்னல் போன்ற நுண்ணிய இடையை உடைய பார்வதி பாகனாய், யானையின் தோலை உமாதேவி அஞ்சுமாறு போர்த்தவனாய், என்றும் நிலை பெற்ற உருவமுடையவனாய், வேதங்களை ஓதிக்கொண்டு இருப்பவன் ஆவான்.

திருக்கோகரணம்

ஆறேறு செஞ்சடையெம் ஆரூ ரன்காண்
அன்பன்காண் அணிபழனம் மேயான் றான்காண்
நீறேறி நிழல்திகழும் மேனி யான்காண்
நிருபன்காண் நிகரொன்று மில்லா தான்காண்
கூறேறு கொடுமழுவாட் படையி னான்காண்
கொக்கரையன் காண்குழுநற் பூதத் தான்காண்
மாறாய மதில்மூன்றும் மாய்வித் தான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே. **#492**

மாகடல் சூழ்கோகரணம் மன்னிய பெருமான் கங்கையைச் சடையில் சூடிய ஆரூரனாய்ப் பழனத்தில் உறைபவனாய், அன்பனாய்த் திருநீறணிந்து ஒளிவீசும் மேனியனாய், தலைவனாய், ஒப்பற்றவனாய், பிளவு தோன்றுதற்குக் கருவியாகிய மழுப்படையினனாய், கொக்கரை என்ற வாச்சியத்தை உடையவனாய், மேம்பட்ட பூதக்கூட்டத்தை உடையனாய், பகையாகச் செயற்பட்ட மும்மதிலையும் அழித்து மறையச்

செய்தவனாவான்.

திருக்கோகரணம்

சென்றச் சிலைவாங்கிச் சேர்வித் தான்காண்
தீயம்பன் காண்திரி புரங்கள் மூன்றும்
பொன்றப் பொடியாக நோக்கி னான்காண்
பூதன்காண் பூதப் படையா ளிகாண்
அன்றப் பொழுதே அருள்செய் தான்காண்அனலாடி காண்அடியார்க்
கமுதா னான்காண்
மன்றல் மணங்கமழும் வார்சடை யான்காண்மாகடல்சூழ் கோகரணம்
மன்னி னானே. **#493**

மாகடல் சூழ் கோகரணம் மன்னிய பெருமான் திரிபுரங்களை நோக்கிச் சென்று மேரு மலையாகிய வில்லை வளைத்துத் தீயாகிய அம்பைச் செலுத்தி வானத்தில் திரிந்த மும்மதில்களும் சாம்பலாகுமாறு செய்தவனாய், உயிர்களை ஆளாக உடைய வனாய், பூதப் படை உடையவனாய், அடியார்களுக்கு அன்றன்று அவ்வப்பொழுதே அருள் செய்தவனாய்த் தீயிடையே கூத்தாடுபவனாய், அடியவர்களுக்கு அமுதானவனாய், நறுமணம் கமழும் நீண்ட சடையை உடையவனாய் உள்ளான்.

திருக்கோகரணம்

பிறையோடு பெண்ணொருபால் வைத்தான் றான்காண்
பேரவன்காண் பிறப்பொன்று மில்லா தான்காண்
கறையோடு மணிமிடற்றுக் காபா லிகாண்
கட்டங்கன் காண்கையிற் கபால மேந்திப்
பறையோடு பல்கீதம் பாடி னான்காண்
ஆடினான் காண்பாணி யாக நின்று
மறையோடு மாகீதங் கேட்டான் றான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே. **#494**

மாகடல் சூழ் கோகரணம் மன்னியபெருமான் சடைமுடியாகிய ஓரிடத்தில் பிறையையும் கங்கையையும் சேர்த்து வைத்த புகழோனாய், பிறப்பில்லாதவனாய், நஞ்சுபொருந்திய நீல கண்டனாய்க் காபாலக் கூத்து ஆடுபவனாய்க் கட்டங்கம் என்ற படை உடையவனாய்க் கையில் மண்டையோட்டை ஏந்திப் பறை ஒலிக்கப் பல பாடல்கள் பாடியவனாய், தாளத்திற்கு ஏற்ப ஆடியவனாய், அடியார்கள் ஓதும் வேத ஒலியையும் பாடும் பாடல் இசையையும் செவிமடுத்தவனாவன்.

திருக்கோகரணம்

மின்னளந்த மேல்முகட்டின் மேலுற் றான்காண்
விண்ணவர்தம் பெருமான்காண் மேவி லெங்கும்
முன்னளந்த மூவர்க்கும் முதலா னான்காண்
மூவிலைவேற் சூலத்தெங் கோலத் தான்காண்
எண்ணளந்தென் சிந்தையே மேவி னான்காண்
ஏவலன்காண் இமையோர்க ளேத்த நின்று
மண்ணளந்த மாலறியா மாயத் தான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே. **#495**

மாகடல் சூழ் கோகரணம் மன்னியபெருமான் ஒளிவீசும் அண்டச்சுவரின் மேலும் பொருந்தியவனாய்த் தேவர்கள் தலைவனாய், எவ்விடத்தையும் தம் தொழிலுக்கு உட்படுத்திய மூவருக்கும் காரணனாய், முத்தலைச்சூலம் ஏந்திய அழகினனாய், என் எண்ணத்தை அளந்து என் உள்ளத்தில் விரும்பி உறைபவனாய், அம்பு எய்தலில் வல்லவனாய்த் தேவர்கள் துதிக்குமாறு இருந்து, உலகை அளந்த திருமாலால் அறியப்பட முடியாத வியக்கத்தக்க நிலை உடையவனாக உள்ளான்.

திருக்கோகரணம்

பின்னு சடைமேற்பிறை சூடி னான்காண்
பேரருளன் காண்பிறப்பொன் றில்லா தான்காண்
முன்னி யுலகுக்கு முன்னா னான்காண்
மூவெயிலுஞ் செற்றுகந்த முதல்வன் றான்காண்
இன்னவுரு வென்றறிவொண் ணாதான் றான்காண்
ஏழ்கடலு மேழுலகு மாயி னான்காண்
மன்னும் மடந்தையோர் பாகத் தான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே. **#496**

மாகடல் சூழ் கோகரணம் மன்னியபெருமான் இணைத்த சடைமீது பிறை சூடிப் பேரருளாளனாய்ப் பிறப்பிலியாய், உலகுக்குக் காரணனாய், மும்மதிலும் அழித்து மகிழ்ந்த முதல்வனாய்த் தன் உண்மை உருவை மற்றையார் அறிய இயலாத இயல்பினனாய், ஏழ்கடலும் ஏழ்உலகும் ஆயவனாய்ப் பார்வதி பாகனாய் உள்ளான்.

திருக்கோகரணம்

வெட்ட வெடித்தார்க்கோர் வெவ்வழ லன்காண்
வீரன்காண் வீரட்டம் மேவி னான்காண்
பொட்ட அநங்கனையும் நோக்கி னான்காண்
பூதன்காண் பூதப் படையி னான்காண்
கட்டக் கடுவினைகள் காத்தாள் வான்காண்கண்டன்காண் வண்டுண்ட
கொன்றை யான்காண்

வட்ட மதிப்பாகஞ் சூடி னான்காண்மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே. **#497**

மாகடல் சூழ் கோகரணம் மன்னிய பெருமான் வீணாக அடியவர்களை உரத்தகுரலில் இழித்துப் பேசுபவருக்குக் கொடிய நெருப்புப் போன்றவனாய்த் தவத்தின் பெருமிதம் உடையவனாய், வீரட்டத் தலங்களில் விரும்பியிருப்பவனாய், விரைவாக மன்மதனைச் சாம்பலாகுமாறு தீவிழித்தவனாய், ஐம்பூத வடிவினனாய்ப் பூதப் படையினனாய், தீங்குதரும் கொடிய வினைகள் தாக்காதவாறு காத்து அடியவர்களை ஆட்கொள்பவனாய், கற்கண்டு போன்ற இனியவனாய், வண்டு தேன் உண்ட கொன்றையைச் சூடியவனாய், பிறை சூடியாய் உள்ளான்.

திருக்கோகரணம்

கையாற் கயிலை யெடுத்தான் தன்னைக்
கால்விரலால் தோள்நெரிய வூன்றி னான்காண்
மெய்யின் நரம்பிசையாற் கேட்பித் தாற்கு
மீண்டே யவற்கருள்கள் நல்கி னான்காண்
பொய்யர் மனத்துப் புறம்பா வான்காண்போர்ப்படையான்
காண்பொருவாரில்லா தான்காண்
மைகொள் மணிமிடற்று வார்சடை யான்காண்மாகடல்சூழ்
கோகரணம் மன்னி னானே. **#498**

மாகடல் சூழ் கோகரணம் மன்னிய பெருமான் கைகளால் கயிலை மலையைப் பெயர்த்த இராவணனை, கால் விரலால் தோள்கள் நெரியுமாறு அழுத்தியவனாய், தன் உடம்பில் உள்ள நரம்புகளை வீணை நரம்புகளாகக் கொண்டு இன்னிசை எழுப்பி, தன்னைச் செவிமடுக்கச் செய்த இராவணனுக்கு அருள்களை விரும்பிக் கொடுத்தவனாய்ப் பொய்யருடைய உள்ளங்களுக்கு அப்பாற்பட்டவனாய், போரிடுவதற்குரிய படைக்கலன் ஏந்தியவனாய், அவற்றால் போர் செய்யப்படுவார் ஒருவரும் இல்லாதானாய், நீலகண்டமும், நீண்ட சடையும் உடையவனாய், அடியார்கள் அகக் கண்ணுக்குத்தோற்றம் வழங்குகின்றான்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை

திருவீழிமிழலை, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

போரானை ஈருரிவைப் போர்வை யானைப்
புலியதளே யுடையாடை போற்றி னானைப்
பாரானை மதியானைப் பகலா னானைப்
பல்லுயிராய் நெடுவெளியாய்ப் பரந்து நின்ற
நீரானைக் காற்றானைத் தீயா னானை
நினையாதார் புரமெரிய நினைந்த தெய்வத்
தேரானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. **#499**

தன்னை எதிர்த்து வந்த யானையின் உதிரப் பசுமை கெடாத தோலை மேலே போர்த்தி, புலித்தோலை ஆடையாக உடுத்தவனாய், நிலனாய்ச் சந்திரனாய்ச் சூரியனாய், வானவெளியாய், நீராய் காற்றாய்த் தீயாய்ப் பல உயிர்களாய் அட்ட மூர்த்தியாய்ப் பரந்து நிற்பவனாய், பகைவருடைய மும்மதில்களும் எரியுமாறு நினைத்த போது இவர்ந்து சென்ற தெய்வத்தேருடையவனான திருவீழி மிழலைப் பெருமானை அணுகி வழிபடாதவர்கள் தீய வழியிலேயே சென்று கெடுகின்றவர் ஆவார்கள்.

திருவீழிமிழலை

சவந்தாங்கு மயானத்துச் சாம்ப லென்பு
தலையோடு மயிர்க்கயிறு தரித்தான் தன்னைப்
பவந்தாங்கு பாசுபத வேடத் தானைப்
பண்டமரர் கொண்டுகந்த வேள்வி யெல்லாங்
கவர்ந்தானைக் கச்சியே கம்பன் தன்னைக்
கழலடைந்தான் மேற்கறுத்த காலன் வீழச்
சிவந்தானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. **#500**

பிணங்களை உடைய சுடகாட்டுச் சாம்பல், எலும்பு மண்டையோடு பஞ்சவடி என்ற இவற்றை அணிந்தவனாய்ப் பிறப்பைத் தடுக்கின்ற பாசுபத மதத்தினர் விரும்பிக் கொள்ளும் வேடத்தைத் தரித்தவனாய்த் தன்னை ஒழிந்த தேவர்களைத் கொண்டு தக்கன் செய்த வேள்வியை

அழித்தவனாய்க் கச்சி ஏகம்பனாய்த் தன் திருவடிகளைத் சார்ந்த அடியவனைக் கோபித்து வந்த கூற்றுவனைக் கீழே விழுமாறு அவனைக் கோபித்து உதைத்தவனாய்த் திருவீழி மிழலையில் உள்ள பெருமானை அடையாதவர் தீ நெறிக்கண் சேர்கின்றவராவர்.

திருவீழிமிழலை

அன்றாலின் கீழிருந்தங் கறஞ்சொன் னானை
அகத்தியனை யுகப்பானை அயன்மால் தேட
நின்றானைக் கிடந்தகடல் நஞ்சுண் டானை
நேரிழையைக் கலந்திருந்தே புலன்க ளைந்தும்
வென்றானை மீயச்சூர் மேவி னானை
மெல்லியலாள் தவத்தினிறை யளக்க லூற்றுச்
சென்றானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. **#501**

ஒரு காலத்தில் கல்லால மரத்தின் கீழிருந்து அறத்தை உபதேசித்தவனாய், அகத்தியனை அவன் பெருமை தோன்ற உயரச் செய்தவனாய்ப் பிரமனும் திருமாலும் தேடுமாறு அனற் பிழம்பாய் நின்றவனாய், கடல்விடம் உண்டவனாய்ப் பார்வதியோடு சேர்ந்திருந்தே பொறிவாயில் ஐந்து அவித்தவனாய், மீயச்சூரை உறைவிடமாக விரும்பியவனாய்ப் பார்வதியின் தவத்தின் திண்மையை அளக்கச் சென்றவனாய்த் திருவீழிமிழலையில் எழுந்தருளியிருக்கும் பெருமானைச் சேராதார் தீ நெறிக்கண் செல்பவராவர்.

திருவீழிமிழலை

தூயானைச் சுடர்ப்பவளச் சோதி யானைத்
தோன்றிய எவ்வுயிர்க்குந் துணையாய் நின்ற
தாயானைச் சக்கரமாற் கீந்தான் தன்னைச்
சங்கரனைச் சந்தோக சாமம் ஓதும்
வாயானை மந்திரிப்பார் மனத்து ளானை
வஞ்சனையால் அஞ்செழுத்தும் வழுத்து வார்க்குச்
சேயானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. **#502**

தூயனாய்ப் பவளத்தின் ஒளியை உடையவனாய், எல்லா உயிர்களுக்கும் துணையாக நின்ற தாயாய்த் திருமாலுக்குச் சக்கரம் ஈந்தவனாய், எல்லாருக்கும் நன்மை செய்பவனாய்ச் சந்தோக சாமம் ஓதுபவனாய், மந்திரங்களை எண்ணுபவர் மனத்து உறைபவனாய்த் திருவைந்தெழுத்தின் பயனைத் தெளயாது ஐயுற்று ஓதுபவர்களுக்குத் தொலைவில் உள்ளவனாய், உள்ள திருவீழி மிழலையானைச் சேராதார்

தீ நெறிக்கண் செல்பவராவர்.

திருவீழிமிழலை

நற்றவத்தின் நல்லானைத் தீதாய் வந்த
நஞ்சமுது செய்தானை அமுத முண்ட
மற்றமரர் உலந்தாலும் உலவா தானை
வருகாலஞ் செல்காலம் வந்த காலம்
உற்றவத்தை யுணர்ந்தாரும் உணர லாகா
ஒருசுடரை இருவிசும்பி னூர்மூன் றொன்றச்
செற்றவனைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. **#503**

ஞானத்தின் பொருட்டுச் செய்யப்படும் தவத்திற்குப் பயன் அளிக்கும் பெரியவனாய், தீங்கு செய்வதாய் வந்த விடத்தை அமுதாக உண்டவனாய், அமுதமுண்ட தேவர்கள் இறந்தாலும் தான் இறவாதவனாய், முக்காலப் பொருள்களை உணரும் ஞானிகளும் உணரமுடியாத ஒப்பற்ற ஞானப்பிரகாசனாய், வானத்தின் உலவிய மதில்கள் மூன்றையும் ஒரு சேர அழித்தவனாய், உள்ள திருவீழிமிழலையானைச் சேராதார் தீ நெறிக்கண் செல்பவர் ஆவர்.

திருவீழிமிழலை

மைவான மிடற்றானை அவ்வான் மின்போல்
வளர்சடைமேல் மதியானை மழையா யெங்கும்
பெய்வானைப் பிச்சாட லாடு வானைப்
பிலவாய பேய்க்கணங்க ளார்க்கச் சூலம்
பொய்வானைப் பொய்யிலா மெய்யன் தன்னைப்பூதலமும்
மண்டலமும் பொருந்து வாழ்க்கை
செய்வானைத் திருவீழி மிழலை யானைச்சேராதார் தீநெறிக்கே
சேர்கின் றாரே. **#504**

கரிய மேகம் போன்ற நீலகண்டனாய், வானத்து மின்னல்போலச் சடையில் ஒளிவீசும் பிறை அணிந்தவனாய், எங்கும் மழையாய் அருளைப் பொழிவானாய், எங்கும் சென்று பிச்சை எடுப்பானாய்ப் பள்ளம் போன்ற வாயை உடைய பேய்க் கூட்டங்கள் ஆரவாரிக்க நிறைந்த தூணியிலிருந்து அம்பைச் செலுத்துபவனாய்ப் பொய்கலவாத மெய்யனாய்ப் பூமியிலும் மேலுலகங்களிலும் பொருந்தும் வாழ்க்கையில் உயிர்களைப் பிறக்கச் செய்வானாய், உள்ள திருவீழிமிழலையானைச் சேராதார் தீ நெறிக்கண் செல்பவராவர்.

திருவீழிமிழலை

மிக்கானைக் குறைந்தடைந்தார் மேவ லானை
வெவ்வேறாய் இருமூன்று சமய மாகிப்
புக்கானை எப்பொருட்கும் பொதுவா னானைப்
பொன்னுலகத்தவர் போற்றும் பொருளுக் கெல்லாந்
தக்கானைத் தானன்றி வேறொன் றில்லாத்தத்துவனைத் தடவரையை நடுவு செய்ததிக்
கானைத் திருவீழி மிழலை யானைச்சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. **#505**

எல்லோருக்கும் மேலானவனாய்க் குறையிரந்து வருபவர்களை விரும்பிக் குறைமுடிப்பவனாய், அறுவகை வைதிக சமயங்களாகவும் ஆகியவனாய், எல்லாப் பொருள்களுக்கும் பொதுவானவனாய்த் தேவர்களும் போற்றத்தக்கானாய்த் தன்னைத் தவிர வேறு மெய்ப்பொருள் இல்லாதவனாய், மேருமலையை நடுவாக வைத்துத் திசைகளைப் பகுக்கச் செய்தவனாய், உள்ள திருவீழி மிழலையானைச் சேராதார் தீ நெறிக்கண் செல்பவராவர்.

<u>திருவீழிமிழலை</u>

வானவர்கோன் தோளிறுத்த மைந்தன் தன்னை
வளைகுளமும் மறைக்காடும் மன்னி னானை
ஊனவனை உயிரவனை யொருநாட் பார்த்தன்
உயர்தவத்தின் நிலையறிய லுற்றுச் சென்ற
கானவனைக் கயிலாயம் மேவி னானைக்
கங்கைசேர் சடையானைக் கலந்தார்க் கென்றுந்
தேனவனைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. **#506**

இந்திரனுடைய தோள்களை நீக்கிய வலிமை உடையவனாய், வளைகுளம் மறைக்காடு என்ற தலங்களில் உறைபவனாய், உடலாகவும் உயிராகவும் இருப்பவனாய், ஒரு காலத்தில் அருச்சுனனுடைய தவத்தின் உறுதி நிலையை அறியச் சென்ற வேடுவனாய்க் கயிலாயத்தை விரும்பி உறைபவனாய்க் கங்கை தங்கிய சடையினனாய்த் தன்னைச் சேர்ந்தவர்களுக்குத் தேன் போல இனியவனாய், உள்ள திருவீழிமிழலையானைச் சேராதார் தீ நெறிக் கண் செல்பவராவர்.

<u>திருவீழிமிழலை</u>

பரத்தானை யிப்பக்கம் பலவா னானைப்
பசுபதியைப் பத்தர்க்கு முத்தி காட்டும்
வரத்தானை வணங்குவார் மனத்து ளானை
மாருதமால் எரிமூன்றும் வாய்அம் பீர்க்காஞ்

சரத்தானைச் சரத்தையுந்தன் தாட்கீழ் வைத்த
தபோதனனைச் சடாமகுடத் தணிந்த பைங்கட்
சிரத்தானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. #507

மாயைக்கு அப்பாற்பட்ட நிலையில் உள்ளவனாய், மாயைக்கு இப்பால் அளவற்ற வடிவங்களும் உடையவனாய், ஆன்மாக்களுக்குத் தலைவனாய், அடியவர்களுக்கு முத்தி நிலையைக் காட்டும் மேம்பட்டவனாய்த் தன்னை வணங்குபவர் மனத்து இருப்பவனாய், வாயுதேவன் திருமால் அக்கினி தேவன் இம்மூவரையும் முறையே அம்பின் சிறகாகவும் அம்பாகவும் அம்பின் கூரிய நுனியாகவும் கொண்டவனாய், அந்த அம்பையும் பயன் படுத்தாது விடுத்த தவச்செல்வனாய்த் தாருகவனத்து முனிவர் விடுத்த வெண்தலையைச் சடைமுடியில் அணிந்தவனாய்த் திருவீழிமிழலையில் உள்ள பெருமானைச் சேராதார் தீ நெறிக்கண் செல்பவர் ஆவர்.

திருவீழிமிழலை

அறுத்தானை அயன்தலைகள் அஞ்சி லொன்றை
அஞ்சாதே வரையெடுத்த அரக்கன் தோள்கள்
இறுத்தானை யெழுநரம்பி னிசைகேட் டானை
இந்துவினைத் தேய்த்தானை இரவி தன்பல்
பறித்தானைப் பகீரதற்காய் வானோர் வேண்டப்பரந்திழியும்
புனற்கங்கை பனிபோ லாங்குச்
செறித்தானைத் திருவீழி மிழலை யானைச்சேராதார் தீநெறிக்கே
சேர்கின் றாரே. #508

பிரமனுடைய ஐந்தலைகளுள் ஒன்றனை அறுத்தானாய், அஞ்சாமல் கயிலை மலையைப் பெயர்க்க முற்பட்ட இராவணன் தோள்களை முரித்து அவன் இசைத்த நரம்பின் ஒலியைக் கேட்டவனாய்த் தக்கன் வேள்வியில் சந்திரனைக் காலால் தேய்த்தவனாய், சூரியன் ஒருவனுடைய பற்களை உடைத்தவனாய்ப் பகீரதனுக்காகவும் தேவர்கள் வேண்டியதற்காகவும் பரவலாக இறங்கிவந்த கங்கையைப் பனித்துளி போலத் தன் சடையில் அடக்கியவனாய், உள்ள திருவீழிமிழலைப் பெருமானைச் சேராதார் தீ நெறிக்கண் செல்பவராவர்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

கயிலாய மலையுள்ளார் காரோ ணத்தார்
கந்தமா தனத்துளார் காளத்தி யார்
மயிலாடு துறையுளார் மாகா ளத்தார்
வக்கரையார் சக்கரம்மாற் கீந்தார் வாய்ந்த
அயில்வாய சூலமுங் காபா லமும்
அமருந் திருக்கரத்தார் ஆனே றேறி
வெயிலாய சோதி விளங்கு நீற்றார்
வீழி மிழலையே மேவி னாரே. **#509**

திருமாலுக்குச் சக்கரம் ஈந்த பெருமானார், கூரிய நுனியினை உடைய சூலமும் மண்டையோடும் விளங்கும் திருக் கைகளை உடையவராய், காளையை இவர்ந்து வெயில்போல ஒளி வீசும் நீற்றினைப் பூசிக் கயிலை மலை, நாகை குடந்தைக் காரோணங்கள், கந்தமாதனம், காளத்தி, மயிலாடுதுறை, உஞ்சைனி இரும்பை அம்பர் மாகாளங்கள், வக்கரை இவற்றில் தங்கித் திருவீழிமிழலையை விரும்பி வந்தடைந்தார்.

<u>திருவீழிமிழலை</u>

யூதியணி பொன்னிறத்தர் பூண நூலர்
பொங்கரவர் சங்கரர்வெண் குழையோர் காதர்
கேதிசரம் மேவினார் கேதா ரத்தார்
கெடில வடஅதிகை வீரட் டத்தார்
மாதுயரந் தீர்த்தென்னை உய்யக் கொண்டார்மழபாடி மேய மழுவா ளனார்
வேதிகுடி யுள்ளார் மீயச் சூரார்வீழி மிழலையே மேவி னாரே. **#510**

கெடிலக்கரையிலுள்ள அதிகை வீரத்தானப் பெருமான் பெருமான் பெருந்துயரைத் தீர்த்து என்னை வாழச் செய்தவராய்ப் பொன்னார் மேனியில் நீறு பூசி, பூணூல் தரித்து, கோபம் மிக்க பாம்பினை அணிந்து, காதில் வெண்குழையை இட்டு, எல்லோருக்கும் நன்மை செய்பவராய், கேதீச்சரம், கேதாரம், மழு ஏந்தும் மழபாடி, வேதிகுடி, மீயச்சூர், இவற்றில் தங்கித் திருவீழிமிழலையை விரும்பி வந்தடைந்தார்.

<u>திருவீழிமிழலை</u>

அண்ணா மலையமர்ந்தார் ஆரூ ருள்ளார்
அளப்பூரார் அந்தணர்கள் மாடக் கோயில்
உண்ணா ழிகையார் உமையா ளோடும்
இமையோர் பெருமானார் ஒற்றி யூரார்
பெண்ணா கடத்துப் பெருந்தூங் கானை
மாடத்தார் கூடத்தார் பேரா வூரார்
விண்ணோர்க ளெல்லாம் விரும்பி யேத்த

வீழி மிழலையே மேவி னாரே. #511
இமையோர் பெருமானார் உமையாளோடும் தேவர்கள் எல்லோரும் விரும்பித் துதிக்க அண்ணாமலை, ஆரூர், அளப்பூர், அந்தணர்கள் மிக்க வைகல், மாடக் கோயிலின் மூலத்தானம், ஒற்றியூர், பெண்ணாகடத்துத் தூங்கானை மாடம், ஏமகூடம், பேராவூர் இவற்றில் தங்கித் திருவீழிமிழலையை விரும்பி வந்து அடைந்தார்.

திருவீழிமிழலை

வெண்காட்டார் செங்காட்டங் குடியார் வெண்ணி
நன்னகரார் வேட்களத்தார் வேத நாவார்
பண்காட்டும் வண்டார் பழனத் துள்ளார்
பராய்த்துறையார்சிராப்பள்ளி யுள்ளார் பண்டோர்
வெண்கோட்டுக் கருங்களிற்றைப் பிளிறப் பற்றியுரித்துரிவை போர்த்த விடலை வேடம்
விண்காட்டும் பிறைநுதலி அஞ்சக் காட்டிவீழி மிழலையே மேவி னாரே. #512
வேதம் ஓதும் நாவினராய், முன்பு வெண்கோட்டுக் கருங்களிறு ஒன்றை அது பேரொலி செய்யுமாறு பற்றி அதன் தோலை உரித்துப் போர்த்திய கோபமுற்ற வடிவினைப் பிறை போன்ற நெற்றியை உடைய உமாதேவி அஞ்சுமாறு காட்டி, வெண்காடு, செங் காட்டங்குடி, வெண்ணி, வேட்களம், வண்டுகள் பண்பாடும் பழனம், பராய்த்துறை, சிராப்பள்ளி இவற்றில் தங்கிய பெருமான் திருவீழி மிழலையை விரும்பி வந்தடைந்தார்.

திருவீழிமிழலை

புடைசூழ்ந்த பூதங்கள் வேதம் பாடப்
புலியூர்ச்சிற் றம்பலத்தே நடமா டுவார்
உடைசூழ்ந்த புலித்தோலர் கலிக்கச்சிமேற்
றளியுளார் குளிர்சோலை யேகம் பத்தார்
கடைசூழ்ந்து பலிதேருங் கங்கா ளனார்
கழுமலத்தார் செழுமலர்த்தார்க் குழலி யோடும்
விடைசூழ்ந்த வெல்கொடியார் மல்கு செல்வ
வீழி மிழலையே மேவி னாரே. #513
தம்மைச் சுற்றிப் பூதங்கள் வேதம் பாடப் புலியூர்ச் சிற்றம்பலத்தே கூத்து நிகழ்த்தும் பெருமான், புலித்தோலை உடுத்துக் கச்சிமேற்றளி, குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த ஏகம்பம், கழுமலம் இவற்றில் வீடுகள் தோறும் பிச்சைக்கு உலவும், முழு எலும்புக் கூட்டைத் தோளில் அணிந்த, வடிவத்தாராய், மலர் மாலையை அணிந்த கூந்தலை உடைய

பார்வதியோடும் காளை வடிவம் எழுதப்பட்ட கொடியோடும் செல்வம் மிகும் வீழிமிழலையை விரும்பி வந்தடைந்தார்.

திருவீழிமிழலை

பெரும்புலியூர் விரும்பினார் பெரும்பா ழிய்யார்
பெரும்பற்றப் புலியூர்மூ லட்டா னத்தார்
இரும்புதலார் இரும்பூளை யுள்ளார் ஏரார்
இன்னம்ப ரார்ஈங்கோய் மலையார் இன்சொற்
கரும்பனையாள் உமையோடுங் கருகா வூரார்
கருப்பறிய லூரார் கரவீ ரத்தார்
விரும்பமரர் இரவுபகல் பரவி யேத்த
வீழி மிழலையே மேவி னாரே. **#514**

கரும்பு போன்று இனிய உமாதேவியோடு பெரும்புலியூரை விரும்பிய பெருமான், அவ்வூர் மூலத்தானம், அரதைப்பெரும்பாழி, இரும்புதல், இரும்பூளை, இன்னம்பர், ஈங் கோய்மலை, கருகாவூர், கருப்பறியலூர், கரவீரம் என்ற இடங்களில் தங்கித் தம்மை விரும்பும் தேவர்கள் இரவும் பகலும் முன்னின்று புகழ்ந்து துதிக்குமாறு வீழிமிழலையையே விரும்பி அடைந்தார்.

திருவீழிமிழலை

மறைக்காட்டார் வலிவலத்தார் வாய்மூர் மேயார்
வாழ்கொளி புத்தூரார் மாகா ளத்தார்
கறைக்காட்டுங் கண்டனார் காபா லிய்யார்
கற்குடியார் விற்குடியார் கானப் பேரார்
பறைக்காட்டுங் குழிவிழிகண் பல்பேய் சூழப்
பழையனூர் ஆலங்காட் டடிகள் பண்டோர்
மிறைக்காட்டுங் கொடுங்காலன் வீடப் பாய்ந்தார்
வீழி மிழலையே மேவி னாரே. **#515**

பழையனூர் ஆலங்காட்டுப் பெருமானார் மண்டை ஓட்டினை ஏந்திப் பறையைப்போல குழிந்த விழிகளை உடைய பேய்கள் பல சூழ, நீலகண்டராய், மார்க்கண்டேயனுக்குத் துன்பம் தரவந்த காலன் அழியுமாறு அவனை ஒறுத்து, மறைக்காடு, வலிவலம், வாய்மூர், வாழ்கொளிபுத்தூர், உஞ்சேனி இரும்பை அம்பர் மாகாளங்கள், கற்குடி, விற்குடி, கானப்பேர் இவற்றில் தங்கி வீழிமிழலையை விரும்பி வந்தடைந்தார்.

திருவீழிமிழலை

அஞ்சைக் களத்துள்ளார் ஐயாற் றுள்ளார்

ஆரூரார் பேரூரார் அழுந்தூ ருள்ளார்
தஞ்சைத் தளிக்குளத்தார் தக்க ளூரார்
சாந்தை அயவந்தி தங்கி னார்தாம்
நஞ்சைத் தமக்கமுதா வுண்ட நம்பர்நாகேச் சரத்துள்ளார் நாரை யூரார்
வெஞ்சொற் சமண்சிறையி லென்னை மீட்டார்வீழி மிழலையே மேவி
னாரே. **#516**

பெருமானார் விடத்தைத் தமக்கு அமுதமாக உண்டு நம்மைப் பாதுகாத்தமையால் நம்மால் விரும்பப்படுபவராய்க் கொடிய சொற்களை உடைய சமணசமயச் சிறையிலிருந்து என்னை மீட்டவராய், அஞ்சைக்களம், ஐயாறு, ஆரூர், பேரூர், அழுந்தூர், தஞ்சைத் தளிக்குளம், தக்களூர், சாத்தமங்கையிலுள்ள திருக்கோயிலாகிய அயவந்தி, நாகேச்சரம், நாரையூர் இவற்றில் தங்கி, வீழிமிழலையை விரும்பி வந்தடைந்தார்.

<u>திருவீழிமிழலை</u>

கொண்டலுள்ளார் கொண்டீச் சரத்தி னுள்ளார்
கோவலூர் வீரட்டங் கோயில் கொண்டார்
தண்டலையார் தலையாலங் காட்டி லுள்ளார்
தலைச்சங்கைப் பெருங்கோயில் தங்கி னார்தாம்
வண்டலொடு மணற்கொணரும் பொன்னி நன்னீர்
வலஞ்சுழியார் வைகலின்மேல் மாடத் துள்ளார்
வெண்டலைகைக் கொண்ட விகிர்த வேடர்
வீழி மிழலையே மேவி னாரே. **#517**

வெள்ளிய மண்டையோட்டைக் கையில் ஏந்திய, உலகத்தார் கொள்ளும் வேடங்களிலிருந்து வேறுபட்ட வேடத்தை உடைய பெருமானார், கொண்டல், கொண்டீச்சரம், கோவலூர் வீரட்டம், சோலைகள் சூழ்ந்த தலையாலங்காடு, தலைச்சங்காடு, காவிரி வண்டலொடு மணலைக் கரையில் சேர்க்கும் திருவலஞ்சுழி, வைகல் மாடக்கோயில் ஆகிய தலங்களில் தங்கி வீழிமிழலையை விரும்பி வந்தடைந்தார்.

<u>திருவீழிமிழலை</u>

அரிச்சந் திரத்துள்ளார் அம்ப ருள்ளார்
அரிபிரமர் இந்திரர்க்கும் அரிய ரானார்
புரிச்சந்தி ரத்துள்ளார் போகத் துள்ளார்
பொருப்பரையன் மகளோடு விருப்ப ராகி
எரிச்சந்தி வேட்கு மிடத்தார் ஏம
கூடத்தார் பாடத்தே னிசையார் கீதர்
விரிச்சங்கை யெரிக்கொண்டங் காடும் வேடர்

வீழி மிழலையே மேவி னாரே. #518
திருமால் பிரமன், இந்திரன் என்பவர்களுக்குக் காண்டற்கு அரியராய் உள்ளாராய், உலகவர் நுகரும் எல்லா இன்பங்களிலும் கலந்திருப்பாராய், இமவான் மகளாகிய பார்வதியிடத்து விருப்பமுடையவராய், மூன்று சந்திகளிலும் தீயை ஓம்பும் வேள்விச் சாலைகளில் உகந்திருப்பவராய், தாம் சூடிய மாலைகளில் வண்டுகள் பாட ஏழிசையும் பொருந்திய பண்களைப் பாடுபவராய், உள்ளங்கையை விரித்து அதன்கண் அனலைஏந்தி ஆடும் வேடம் உடையவராய்ச் சிவபெருமான், அரிச்சந்திரம், அம்பர்மாகாளம், புரிச்சந்திரம், ஏமகூடம் இவற்றில் தங்கி வீழிமிழலையை விரும்பி வந்தடைந்தார்.

திருவீழிமிழலை

புன்கூரார் புறம்பயத்தார் புத்தூ ருள்ளார்
பூவணத்தார் புலிவலத்தார் வலியின் மிக்க
தன்கூர்மை கருதிவரை யெடுக்க லுற்றான்
தலைகளொடு மலைகளன்ன தாளுந் தோளும்
பொன்கூருங் கழலடியோர் விரலா லூன்றிப்
பொருப்பதன்கீழ் நெரித்தருள்செய் புவன நாதர்
மின்கூருஞ் சடைமுடியார் விடையின் பாகர்
வீழி மிழலையே மேவி னாரே. #519
ஒளிவீசும் சடைமுடி உடையவராய், காளையை வாகனமாக உடையவராய், வலிமை மிக்க தன் ஆற்றலை நினைத்துக் கயிலை மலையைப் பெயர்க்க முற்பட்ட இராவணனுடைய மலைகளை ஒத்த தலைகளையும் தோள்களையும் தாள்களையும் பொற்கழலணிந்த தம் திருவடியின் ஒரு விரலை ஊன்றி மலையின் கீழ் நொறுங்குமாறு செய்து பின் அவனுக்கு அருள் செய்த உலக நாயகர், புன்கூர், புறம் பயம், புத்தூர், பூவணம், புலிவலம் இவற்றில் தங்கி வீழிமிழலையை விருப்புற்று வந்தடைந்தார்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

கண்ணவன்காண் கண்ணொளிசேர் காட்சி யான்காண்
கந்திருவம் பாட்டிசையிற் காட்டு கின்ற
பண்ணவன்காண் பண்ணவற்றின் திறலா னான்காண்
பழமாகிச் சுவையாகிப் பயக்கின் றான்காண்

மண்ணவன்காண் தீயவன்காண் நீரா னான்காண்
வந்தலைக்கும் மாருதன்காண் மழைமே கஞ்சேர்
விண்ணவன்காண் விண்ணவர்க்கு மேலா னான்காண்
விண்ணிழி தண்வீழி மிழலை யானே. **#520**

திருமாலால் விண்ணுலகிலிருந்து கொண்டு வந்து நிறுவப்பெற்ற விமானத்தை உடைய குளிர்ந்த வீழிமிழலையில் உள்ள பெருமான், கண்ணாய் கண்ணினது ஒளிசேர்தலால் உண்டாகும் காணுதல் தொழிலாய்ப் பாட்டின்கண் உள்ள இசையாகிய இலக்கியத்தில் வைத்துக் காட்டப்படுகின்ற பண்ணாய், அப்பண்களின் உட்பிரிவுகளாய்ப் பழமாய்ச் சுவையாய்ப் பயன்தருகின்றவனாய், மண், நீர், தீ எல்லாவற்றையும் அசைக்கும் காற்று, நீர் உட்கொண்ட மேகம் சேரும் வானம் என்ற ஐம்பூதங்களாய், தேவர்களுக்கு மேம்பட்டவனாய் உள்ளான்.

<u>திருவீழிமிழலை</u>

ஆலைப் படுகரும்பின் சாறு போல
அண்ணிக்கும் அஞ்செழுத்தின் நாமத் தான்காண்
சீல முடையடியார் சிந்தை யான்காண்
திரிபுரமூன் றெரிபடுத்த சிலையி னான்காண்
பாலினொடு தயிர்நறுநெய் யாடி னான்காண்
பண்டரங்க வேடன்காண் பலிதேர் வான்காண்
வேலை விடமுண்ட மிடற்றி னான்காண்
விண்ணிழி தண்வீழி மிழலை யானே. **#521**

விண்ணிழி தண் வீழிமிழலையான் ஆலையினின்றும் ஒழுகுகின்ற கரும்பின் சாறு போலத்தித் திக்கும் திருவைந் தெழுத்தைத் தனக்குப் பெயராக உடையவனாய், நற்பண்புடைய அடியவர்களின் உள்ளத்தில் இருப்பவனாய், வானில் திரியும் மும் மதில்களையும் தீக்கு இரையாக்கிய வில்லை உடையவனாய், பால், தயிர், நெய் இவற்றால் அபிடேகிக்கப்படுபவனாய், பண்டரங்கக் கூத்தாடுபவனாய், சாம்பலை உடல் முழுதும் பூசியவடிவினனாய்ப் பிச்சை எடுப்பவனாய், கடல் விடம் உண்டதால் நீலகண்டனாய் உள்ளான்.

<u>திருவீழிமிழலை</u>

தண்மையொடு வெம்மைதா னாயி னான்காண்
சக்கரம்புட் பாகற் கருள்செய் தான்காண்
கண்ணுமொரு மூன்றுடைய காபாலிகாண்
காமனுடல் வேவித்த கண்ணி னான்காண்
எண்ணில்சமண் தீர்த்தென்னை யாட்கொண் டான்காண்இருவர்க்

கெரியா யருளி னான்காண்
விண்ணவர்கள் போற்ற இருக்கின் றான்காண்விண்ணிழி தண்வீழி
மிழலை யானே. **#522**
விண்ணிழிதண் வீழிமிழலையான் தண்மை வெம்மை என்ற இரு திறமும் உடையவனாய்த் திருமாலுக்குச் சக்கரத்தை அருளியவனாய், மூன்று கண்களை உடையவனாய், காபாலக்கூத்து ஆடுபவனாய்க் காமன் உடலைச் சாம்பலாக்கிய நெற்றிக்கண்ணனாய், என் உள்ளத்தில் இருந்த சமண சமயப் பற்றினைநீக்கி என்னை ஆட்கொண்டவனாய், பிரமன் திருமால் இருவருக்கும் தீப்பிழம்பாய்க் காட்சி வழங்கியவனாய்த் தேவர்கள் துதிக்குமாறு உள்ளான்.

<u>திருவீழிமிழலை</u>

காதிசைந்த சங்கக் குழையி னான்காண்
கனக மலையனைய காட்சி யான்காண்
மாதிசைந்த மாதவமுஞ் சோதித் தான்காண்
வல்லேன வெள்ளெயிற்றா பரணத் தான்காண்
ஆதியன்காண் அண்டத்துக் கப்பா லான்காண்
ஐந்தலைமா நாகம்நாண் ஆக்கி னான்காண்
வேதியன்காண் வேதவிதி காட்டி னான்காண்
விண்ணிழி தண்வீழி மிழலை யானே. **#523**
விண்இழி தண் வீழிமிழலையான்காதில் சங்கக் குழை அணிந்தவனாய்ப் பொன்மலை போன்ற உருவத்தானாய்ப் பார்வதியின் மேம்பட்ட தவத்தைச் சோதித்தவனாய், வலிய பன்றியின் வெள்ளிய கொம்பினை அணியாக அணிந்தவனாய், எல்லாவற்றிற்கும் முற்பட்டவனாய், அண்டங்களையும் கடந்து பரந்தவனாய், ஐந்தலைப்பாம்பினைத் தன் வில்லுக்கு நாணாகக் கொண்டவனாய், வேதம் ஓதுபவனாய், வேத நெறியை உலகிற்கு உபதேசித்தவனாய் உள்ளான்.

<u>திருவீழிமிழலை</u>

நெய்யினொடு பாலிளநீ ராடி னான்காண்
நித்தமண வாளனென நிற்கின் றான்காண்
கையின்மழு வாளொடுமா னேந்தி னான்காண்
காலனுயிர் காலாற் கழிவித் தான்காண்
செய்யதிரு மேனிவெண் ணீற்றி னான்காண்
செஞ்சடைமேல் வெண்மதியஞ் சேர்த்தி னான்காண்
வெய்ய கனல்விளையாட் டாடி னான்காண்
விண்ணிழி தண்வீழி மிழலை யானே. **#524**
விண்இழி தண்வீழிமிழலையான்நெய், பால், இளநீர் இவற்றால்

அபிடேகிக்கப்பட்டவனாய், நித்திய கல்யாணனாகக் காட்சி வழங்குகின்றவனாய், கைகளில் மழுவும் மானும் ஏந்தியவனாய்க் காலன் உயிரைத்தன் காலால் போக்கியவனாய்ச் சிவந்த அழகிய திருமேனியில் வெண்ணீறு அணிந்தவனாய்ச் செஞ்சடைமேல் வெண்பிறையைச் சேர்த்தியவனாய், சூடான தீயில் கூத்தாடுபவனாய் உள்ளான்.

<u>திருவீழிமிழலை</u>

கண்துஞ்சுங் கருநெடுமால் ஆழி வேண்டிக்
கண்ணிடந்து சூட்டக்கண் டருளுவான்காண்
வண்டுண்ணும் மதுக்கொன்றை வன்னி மத்தம்வான்கங்கை
சடைக்கரந்த மாதே வன்காண்
பண்தங்கு மொழிமடவாள் பாகத் தான்காண்
பரமன்காண் பரமேட்டி யாயி னான்காண்
வெண்டிங்கள் அரவொடுசெஞ் சடைவைத் தான்காண்
விண்ணிழி தண்வீழி மிழலை யானே. **#525**

விண்இழிதண் வீழிமிழலையான்எப்பொழுதும் அறிதுயில் கொள்ளும் திருமால் தனக்குச் சக்கராயுதம் வேண்டுமென்று செந்தாமரை போன்ற தன் கண் ஒன்றனைக் குறைந்த மலராகக் கொண்டு அருச்சித்த அதனைக்கண்டு அவனுக்குச் சக்கரம் அருளியவனாய், வண்டுகள் உண்ணும் தேனை உடைய கொன்றை, வன்னி, ஊமத்தை என்னும் இவற்றை ஆகாய கங்கையோடு சடையில் மறைத்த பெரியதேவனாய், பண்போன்ற இனிய சொற்களை உடைய பார்வதி பாகனாய், மேம்பட்டவனாய், உயர்ந்த இடத்தில் இருப்பவனாய்ப் பிறையைப் பாம்போடு சடையில் வைத்தவனாய், அடியார் மனக்கண்ணுக்குக் காட்சி வழங்குகின்றான்.

<u>திருவீழிமிழலை</u>

கற்பொலிதோள் சலந்தரனைப் பிளந்த ஆழி
கருமாலுக் கருள்செய்த கருணை யான்காண்
விற்பொலிதோள் விசயன்வலி தேய்வித் தான்காண்
வேடுவனாய்ப் போர்பொருது காட்டி னான்காண்
தற்பரமாந் தற்பரமாய் நிற்கின் றான்காண்
சதாசிவன்காண் தன்னொப்பா ரில்லா தான்காண்
வெற்பரையன் பாவை விருப்பு ளான்காண்
விண்ணிழி தண்வீழி மிழலை யானே. **#526**

விண்இழிதண் வீழிமிழலையான் மலைபோல விளங்கிய தோள்களை உடைய சலந்தரன் என்ற அசுரனுடைய உடலைப்பிளந்த சக்கராயுதத்தைத் திருமாலுக்கு வழங்கிய கருணையாளனாய், வில்

விளங்கும் தோளை உடைய அருச்சுனன் வலிமையைக் குறையச் செய்து வேடுவனாய் அவனோடு போர் செய்து தன் போர்த் திறமையைக் காட்டியவனாய், மாயையின் மேம்பட்டதாகிய உயிரினும் மேம்பட்ட பொருளாய் இருக்கின்றவனாய்ச் சதாசிவனாய், ஒப்பற்றவனாய், பார்வதியைத் தானும் விரும்பி அவளால் விரும்பப்படுபவனாய் இருப்பவனாவான்.

திருவீழிமிழலை

மெய்த்தவன்காண் மெய்த்தவத்தில் நிற்பார்க் கெல்லாம்
விருப்பிலா இருப்புமன வினையர்க் கென்றும்
பொய்த்தவன் காண் புத்தன் மறவா தோடி
யெறிசல்லி புதுமலர்க ளாக்கி னான்காண்
உய்த்தவன்காண் உயர்கதிக்கே உள்கி னாரை
உலகனைத்தும் ஒளித்தளித்திட் டுய்யச் செய்யும்
வித்தகன்காண் வித்தகர்தாம் விரும்பி யேத்தும்
விண்ணிழி தண்வீழி மிழலை யானே. **#527**

ஞானிகள் விரும்பிப்போற்றும் விண்இழிதண் வீழிமிழலையான் உண்மையான தவத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உள்பொருளாய் விளங்குபவனாய்த் தன் இடத்து விருப்பம் இல்லாத இரும்புபோன்ற கடிய மனத்தவர்களுக்குத் தன் உருவத்தைக் காட்டாது மறைந்தே இருப்பவனாய், சாக்கியநாயனார் மறவாமல் இடும் சிறு கற்களைப் புதிய மலர்களாக ஏற்பவனாய், தன்னைத் தியானித்தவர்களை உயர்கதிக்கண் செலுத்துபவனாய், உலகங்களை அழித்துப்படைத்துக் காக்கும் திறல் உடையோனாய் உள்ளான்.

திருவீழிமிழலை

சந்திரனைத் திருவடியால் தளர்வித் தான்காண்
தக்கனையும் முனிந்தெச்சன் தலைகொண்டான்காண்
இந்திரனைத் தோள்முரிவித் தருள்செய் தான்காண்
ஈசன்காண் நேசன்காண் நினைவோர்க் கெல்லாம்
மந்திரமும் மறைப்பொருளு மாயி னான்காண்
மாலொடயன் மேலொடுகீழ் அறியா வண்ணம்
வெந்தழலின் விரிசுடராய் ஓங்கி னான்காண்
விண்ணிழி தண்வீழி மிழலை யானே. **#528**

விண்இழிதண் வீழிமிழலையான்தக்கன் வேள்வியில் சந்திரனைத் திருவடியால் தேய்த்துத் தக்கனை வெகுண்டு எச்சன் தலையை நீக்கி இந்திரனுடைய தோள்களை ஒடித்துப்பின் அவர்களுக்கு அருள் செய்தவனாய், எல்லோரையும் அடக்கி ஆள்பவனாய், தன்னை

விருப்போடு நினைப்பவர்களுக்கு அன்பனாய், மந்திரமும் வேதப்பொருளும் ஆயினானாய்ப் பிரமனும் திருமாலும் மேலும் கீழும் அறியாவண்ணம் தீப்பிழம்பாய் நீண்டவனாய் உள்ளான்.

திருவீழிமிழலை

ஈங்கைப்பே ரீமவனத் திருக்கின்றான்காண்
எம்மான்காண் கைம்மாவி னுரிபோர்த்தான்காண்
ஓங்குமலைக் கரையன்றன் பாவையோடும்ஒருருவாய் நின்றான்காண்
ஓங்கா ரன்காண்
கோங்குமலர்க்கொன்றையந்தார்க் கண்ணி யான்காண்
கொல்லேறு வெல்கொடி மேற் கூட்டினான் காண்
வேங்கைவரிப் புலித்தோல்மே லாடை யான்காண்
விண்ணிழி தண்வீழி மிழலை யானே. **#529**

விண்இழிதண் வீழிமிழலையான்இண்டங் கொடிகள் அடர்ந்த சுடுகாட்டில் இருப்பவனாய், எங்கள் தலைவனாய், யானைத்தோலைப் போர்த்தியவனாய்ப் பார்வதியோடு ஒரே உருவமாய் நின்றவனாய், ஓங்காரவடிவினனாய், கோங்கு கொன்றை ஆகிய மாலையை உடையவனாய்க் காளை எழுதிய கொடியை உடையவனாய், வேங்கைத்தோலை மேலாடையாகக் கொண்டவனாய் உள்ளான்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகை.

மானேறு கரமுடைய வரதர் போலும்
மால்வரைகால் வளைவில்லா வளைத்தார் போலும்
கானேறு கரிகதற வுரித்தார் போலுங்
கட்டங்கங் கொடிதுடிகைக் கொண்டார் போலும்
தேனேறு திருவிதழித் தாரார் போலுந்
திருவீழி மிழலையமர் செல்வர் போலும்
ஆனேற தேறும் அழகர் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. **#530**

திருவீழிமிழலையில்அமர்ந்த செல்வராய், அடியேனை ஆட்கொண்ட அடிகள் கையில் மானை ஏந்தி வரம் கொடுப்பவராய், பெரிய மலையின் இரு பகுதிகளையும் வில்லாகுமாறு வளைத்தவராய், காட்டில் உலவும் யானை கதறுமாறு அதன் தோலை உரித்தவராய்க் கட்டங்கப்படை உடுக்கை இவற்றைக் கைகளில் கொண்டவராய், தேன் பொருந்திய

கொன்றைப் பூ மாலையை அணிந்தவராய், காளையை இவரும் அழகராய்க் காட்சி வழங்குகிறார்.

திருவீழிமிழலை

சமரம்மிகு சலந்தரன்போர் வேண்டி னானைச்
சக்கரத்தாற் பிளப்பித்த சதுரர் போலும்
நமனையொரு கால்குறைத்த நாதர் போலும்
நாரணனை யிடப்பாகத் தடைத்தார் போலும்
குமரனையும் மகனாக வுடையார் போலுங்
குளிர்வீழி மிழலையமர் குழகர் போலும்
அமரர்கள்பின் அமுதுணநஞ் சுண்டார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. **#531**

குளிர்ந்த வீழிமிழலையில் விரும்பித்தங்கும் இளையவராய், அடியேனை ஆட்கொண்ட அடிகள் தம்மோடு போரிடவந்த சலந்தரன் என்ற அசுரனைச் சக்கரத்தால் பிளந்த திறமை உடையவராய், நமனை ஒரு காலால் உதைத்து அழித்தவராய், திருமாலை இடப்பாகத்துக் கொண்டவராய், முருகனையும் மகனாக உடையவராய்த் தேவர்கள் பிறகு அமுதம் உண்ணுமாறு முன்னர் அவர்களை அழிக்க வந்த நஞ்சினை உண்டவராவார்.

திருவீழிமிழலை

நீறணிந்த திருமேனி நிமலர் போலும்
நேமிநெடு மாற்கருளிச் செய்தார் போலும்
ஏறணிந்த கொடியுடையெம் மிறைவர் போலும்
எயில்மூன்றும் எரிசரத்தா லெய்தார் போலும்
வேறணிந்த கோலமுடை வேடர் போலும்
வியன்வீழி மிழலையுறை விகிர்தர் போலும்
ஆறணிந்த சடாமகுடத் தழகர் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. **#532**

வியன்வீழிமிழலைஉறை விகிர்தராய் அடியேனை அடிமையாகக் கொண்ட அடிகள் திருமேனியில் நீறு அணிந்த தூயோராய்த் திருமாலுக்குச் சக்கரத்தை வழங்கியவராய், காளை எழுதிய கொடியை உடைய என் தலைவராய், நெருப்பாகிய அம்பினால் மூன்று மதில்களையும் எய்தவராய், உலகியலுக்கு வேறாகக் கொண்ட வடிவுடைய வேடராய்ச் சடைமுடியில் கங்கையை அணிந்த அழகராய்க் காட்சி வழங்குகிறார்.

திருவீழிமிழலை

கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலுங்
கயாசுரனை யவனாற்கொல் வித்தார் போலும்
செய்வேள்வித் தக்கனைமுன் சிதைத்தார் போலும்
திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தார் போலும்
மெய்வேள்வி மூர்த்திதலை யறுத்தார் போலும்
வியன்வீழி மிழலையிடங் கொண்டார் போலும்
ஐவேள்வி ஆறங்க மானார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. **#533**

பெரிய வீழிமிழலையில்உறையும் வேறுபட்ட இயல்பினை உடையவராய் அடியேனை ஆட்கொண்ட அடிகள் விநாயகனைப் படைத்து அவனால் கயாசுரனைக் கொல்வித்துத் தக்கனுடைய வேள்வியையும் பிரமன் தலை ஒன்றனையும் அழித்து, யாகதேவன் தலையை அறுத்து, ஐவகை வேள்விகளும் வேதங்களின் ஆறு அங்கங்களுமாக உள்ளார்.

திருவீழிமிழலை

துன்னத்தின் கோவணமொன் றுடையார் போலுந்
சுடர்மூன்றுஞ் சோதியுமாய்த் தூயார் போலும்
பொன்னொத்த திருமேனிப் புனிதர் போலும்
பூதகணம் புடைசூழ வருவார் போலும்
மின்னொத்த செஞ்சடைவெண் பிறையார் போலும்
வியன்வீழி மிழலைசேர் விமலர் போலும்
அன்னத்தேர் அயன்முடிசேர் அடிகள் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. **#534**

பரந்த வீழிமிழலையைச் சேர்ந்த தூயோராய் அடியேனை ஆட்கொண்ட அடிகள் கீளோடு இணைக்கப்பட்ட கோவணம் ஒன்று உடையாராய், மூன்று சுடர்களும் அவற்றின் ஒளியுமாகிய தூயவராய், பொன்னார் மேனிப் புனிதராய், பூதகணம் தம்மைச் சுற்றி வரத் தாம் வருபவராய், மின்னலை ஒத்து ஒளிவீசும் சிவந்த சடையில் பிறை சூடியவராய், அன்னத்தை வாகனமாக உடைய பிரமனுடைய மண்டையோட்டினை ஏந்திய தலைவராய் உள்ளார்.

திருவீழிமிழலை

மாலாலும் அறிவரிய வரதர் போலும்
மறவாதார் பிறப்பறுக்க வல்லார் போலும்
நாலாய மறைக்கிறைவ ரானார் போலும்
நாமவெழுத் தஞ்சாய நம்பர் போலும்
வேலார்கை வீரியைமுன் படைத்தார் போலும்

வியன்வீழி மிழலையமர் விகிர்தர் போலும்
ஆலாலம் மிடற்றடக்கி அளித்தார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. **#535**
வியன் வீழிமிழலை அமர்ந்த விகிர்தராய் அடியேனை ஆட்கொண்ட அடிகள் திருமாலாலும் அறிய முடியாதவராய், வரம் அருளுபவராய், தம்மை மறவாதவர் பிறவிப்பிணியைப் போக்க வல்லவராய், நான்கு வேதங்களுக்கும் தலைவராய், அஞ்செழுத்தாகிய பெயரை உடையவராய், நம்மால் விரும்பப்படுபவராய், கையில் வேலை ஏந்திய காளியைத் தாருகன் என்ற அசுரனை அழிப்பதற்காகப் படைத்தவராய், விடத்தைத்தம் கழுத்தில் அடக்கித் தேவர்களைப் பாதுகாத்தவராவர்.

<u>திருவீழிமிழலை</u>

பஞ்சடுத்த மெல்விரலாள் பங்கர் போலும்
பைந்நாகம் அரைக்கசைத்த பரமர் போலும்
மஞ்சடுத்த மணிநீல கண்டர் போலும்
வடகயிலை மலையுடைய மணாளர் போலுஞ்
செஞ்சடைக்கண்வெண்பிறை கொண்டணிந்தார் போலுந்
திருவீழி மிழலையமர் சிவனார் போலும்
அஞ்சடக்கும் அடியவர்கட் கணியார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. **#536**
திருவீழிமிழலை அமர்ந்த சிவனாராகி அடியேனை ஆட்கொண்ட அடிகள் செம்பஞ்சு போன்ற மெல்லிய விரல்களை உடைய பார்வதி பாகராய், படம் எடுக்கும் பாம்பினை இடையில் இறுகக் கட்டிய மேம்பட்டவராய், காளமேகம் போன்ற அழகிய நீலகண்டராய், வடகயிலைத்தலைவராய், செஞ்சடையில் வெண்பிறை சூடியவராய், ஐம்பொறிகளையும் அடக்கி ஆளும் அடியவர்களுக்கு நெருக்கத்தில் இருப்பவராய் உள்ளார்.

<u>திருவீழிமிழலை</u>

குண்டரொடு பிரித்தெனையாட் கொண்டார் போலும்
குடமூக்கி லிடமாக்கிக் கொண்டார் போலும்
புண்டரிகப் புதுமலரா தனத்தார் போலும்
புள்ளரசைக் கொன்றுயிர்பின் கொடுத்தார் போலும்
வெண்டலையிற் பலிகொண்ட விகிர்தர் போலும்
வியன்வீழி மிழலைநக ருடையார் போலும்
அண்டத்துப் புறத்தப்பா லானார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. **#537**
வியன் வீழிமிழலைநகருடையவராய் அடியேனை ஆட்கொண்ட அடிகள்

சமணரிடமிருந்து அடியேனை ஆட்கொண்டவராய், குடந்தையில் உறைபவராய், அடியவர்கள் உள்ளத் தாமரையை ஆசனமாகக் கொண்டவராய், கருடனைக் கொன்று பின் அவனை உயிர்ப்பித்தவராய், வெள்ளிய மண்டையோட்டில் பிச்சை ஏற்கும் விகிர்தராய், அண்டங்களுக்கும் அப்பாற்பட்டவராய் உள்ளார்.

திருவீழிமிழலை

முத்தனைய முகிழ்முறுவ லுடையார் போலும்
மொய்பவளக் கொடியனைய சடையார் போலும்
எத்தனையும் பத்திசெய்வார்க் கினியார் போலும்
இருநான்கு மூர்த்திகளு மானார் போலும்
மித்திரவச் சிரவணற்கு விருப்பர் போலும்
வியன்வீழி மிழலையமர் விகிர்தர் போலும்
அத்தனொடும் அம்மையெனக் கானார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. **#538**

வியன்வீழிமிழலை அமர் விகிர்தராய் அடியேனை அடிமைகொண்ட அடிகள் முத்துப்போன்ற சிறிதே அரும்புகின்ற நகைப்பினையும், செறிந்த பவளக்கொடிபோன்ற சடையினையும் உடையவராய், சிறிதளவு, தம்பால் பக்தி உடையவருக்கும் இனியராய், அட்டமூர்த்த உருவினராய், நண்பனாகிய குபேரனிடம் விருப்பு உடையவராய், அடியேனுக்குத் தந்தையும் தாயும் ஆவார்.

திருவீழிமிழலை

கரியுரிசெய் துமைவெருவக் கண்டார் போலுங்
கங்கையையுஞ் செஞ்சடைமேற் கரந்தார் போலும்
எரியதொரு கைத்தரித்த இறைவர் போலும்
ஏனத்தின் கூனெயிறு பூண்டார் போலும்
விரிகதிரோ ரிருவரைமுன் வெகுண்டார் போலும்
வியன்வீழி மிழலையமர் விமலர் போலும்
அரிபிரமர் துதிசெயநின் றளித்தார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. **#539**

பரந்த வீழிமிழலையில் விரும்பித்தங்கிய தூயராய், அடியேனை ஆளுடைய அடிகள், பார்வதி அஞ்சுமாறு யானைத் தோலை உரித்துப் போர்த்துக் கங்கையையும் சிவந்த சடையில் மறைத்து, அக்கினி தேவனுடைய ஒரு கையை நீக்கிய தலைவராய்ப் பன்றியின் கூரிய பல்லை அணிகலனாகப் பூண்டு, சந்திரன் சூரியன் என்ற இருவரையும் தக்கன் வேள்விக்களத்தில் வெகுண்டு ஒறுத்துத் திருமாலும் பிரமனும் தம்மைத் தோத்திரிக்க அவர்களுக்கு அருள் செய்தவர்.

<u>திருவீழிமிழலை</u>

கயிலாய மலையெடுத்தான் கதறி வீழக்
கால்விரலால் அடர்த்தருளிச் செய்தார் போலும்
குயிலாரும் மென்மொழியாள் குளிர்ந்து நோக்கக்
கூத்தாட வல்ல குழகர் போலும்
வெயிலாய சோதிவிளக் கானார் போலும்
வியன்வீழி மிழலையமர் விகிர்தர் போலும்
அயிலாரும் மூவிலைவேற் படையார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. **#540**

வீழிமிழலை அமர் விகிர்தராய் அடியேனை ஆட்கொண்ட அடிகள் கயிலாய மலையைப் பெயர்க்க முற்பட்ட இராவணன் கதறிக்கொண்டு விழுமாறு அவனைக் கால் விரலால் நசுக்கிப்பின் அவனுக்கு அருள் செய்தவராய், குயில்போன்ற இனிய சொற்களை உடைய உமையம்மை மனம் குளிர்ந்து காணுமாறு கூத்தாடுதலில் வல்ல இளையராய்ப் பகலவன்போல ஏனைய ஒளிகளைத் தாழ்த்தித் தாம் ஒளி வீசுபவராய்க் கூர்மையான முத்தலைச் சூலப்படையுடையவராய் இருக்கின்றார்.

திருப்புள்ளிருக்குவேளூர்

திருக்கீழ்வேளூர்

திருப்புள்ளிருக்குவேளூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது,
சுவாமிபெயர் : வைத்தியநாதர்.
தேவியார் : தையல்நாயகியம்மை.

ஆண்டானை அடியேனை ஆளாக் கொண்டு
அடியோடு முடியயன்மா லறியா வண்ணம்
நீண்டானை நெடுங்களமா நகரான் தன்னை
நேமிவான் படையால்நீ ளுரவோன் ஆகங்
கீண்டானைக் கேதாரம் மேவி னானைக்
கேடிலியைக் கிளர்பொறிவா ளரவோ டென்பு
பூண்டானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. **#541**

அடியேனை அடிமையாகக்கொண்டு ஆண்டவனாய், திருமாலும் பிரமனும் அடியையும் முடியையும் அறியா வண்ணம் அனற்பிழம்பாய் நீண்டவனாய், நெடுங்களக் கோயிலில் உறைவானாய், சக்கரப்படையால் பேராற்றலுடைய சலந்தரனுடைய மார்பினைப் பிளந்தவனாய், கேதாரத்தில் உறைவோனாய், ஒரு காலத்தும் அழிதல் இல்லாதவனாய், ஒளி வீசும் புள்ளிகளை உடைய பாம்போடு எலும்பினை அணிகலனாகப் பூண்டவனாகிய புள்ளிருக்கு வேளூர்ப் பெருமானைத் துதிக்காமல் பலநாள்களை வீணாகக் கழித்து விட்டேனே.

திருக்கீழ்வேளூர்

சீர்த்தானைச் சிறந்தடியேன் சிந்தை யுள்ளே
திகழ்ந்தானைச் சிவன்தன்னைத் தேவதேவைக்
கூர்த்தானைக் கொடுநெடுவேற் கூற்றந் தன்னைக்
குரைகழலாற் குமைத்துமுனி கொண்ட அச்சம்
பேர்த்தானைப் பிறப்பிலியை இறப்பொன் றில்லாப்
பெம்மானைக் கைம்மாவி னுரிவை பேணிப்
போர்த்தானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. **#542**

அடியேனுடைய உள்ளத்தில் சிறப்பாகக் கிட்டினவனாய் விளங்குகின்ற சிவனாகிய தேவதேவனாய், மிக நுண்ணியனாய், கொடிய நீண்ட வேலை ஏந்தி வந்த கூற்றுவனைத் திருவடியால் உதைத்து, முனிவனாகிய மார்க்கண்டேயன் கொண்ட யம பயத்தைப்

போக்கியவனாய், பிறப்பு இறப்பு இல்லாத தலைவனாய், யானைத் தோலை விரும்பிப் போர்த்தவனாய் உள்ள புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே.

திருக்கீழ்வேளூர்

பத்திமையாற் பணிந்தடியேன் றன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில்வித் தானை
எத்தேவும் ஏத்தும் இறைவன் தன்னை
எம்மானை என்னுள்ளத் துள்ளே யூறும்
அத்தேனை அமுதத்தை ஆவின் பாலை
அண்ணிக்குந் தீங்கரும்பை அரனை ஆதிப்
புத்தேளைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. **#543**

அடியேன் பக்தியோடு வணங்கித் தன்னைப் பலநாளும் பாமாலைகளால் போற்றுமாறு பழக்கியவனாய், எல்லாத்தெய்வங்களும் துதிக்கும் தெய்வமாய், என் தலைவனாய், என் உள்ளத்து ஊறும் தேன் அமுதம் பசுப்பால், இனிய கரும்பு என்பன போன்று இனியனாய்ப் பகைவரை அழிப்பவனாய், ஆதிக் கடவுளாய் உள்ளபுள்ளிருக்கு வேளூரானைப் போற்றாமல் ஆற்ற நாள் போக்கினேனே.

திருக்கீழ்வேளூர்

இருளாய வுள்ளத்தி னிருளை நீக்கி
யிடர்பாவங் கெடுத்தேழை யேனை யுய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போற்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை ஆதிமா தவத்து ளானை
ஆறங்க நால்வேதத் தப்பால் நின்ற
பொருளானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே. **#544**

என் இருண்ட உள்ளத்திலுள்ள அஞ்ஞானத்தைப் போக்க அறிவற்ற என் துயரங்களையும் தீவினைகளையும் போக்கி, நான் கடைத்தேறுமாறு என் தெளிவற்ற மனத்தில் தெளிவு பிறப்பித்து, தன்னைப் போலச் சிவலோகத்தின் வழியை அறியும் உள்ளத்தை வழங்கிய அருளாளனாய், தொடக்கத்திலிருந்தே பெரிய தவத்தில் நிலைபெற்றிருப்பவனாய், நான்கு வேதங்கள் ஆறு அங்கங்கள் இவற்றிற்கு அப்பாற்பட்ட பொருளாய் உள்ள புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாமல் ஆற்ற நாள் போக்கினேனே.

திருக்கீழ்வேளூர்

மின்னுருவை விண்ணகத்தில் ஒன்றாய் மிக்கு
வீசுங்கால் தன்னகத்தில் இரண்டாய்ச் செந்தீத்
தன்னுருவின் மூன்றாய்த்தாழ் புனலின் நான்காய்த்
தரணிதலத் தஞ்சாகி யெஞ்சாத் தஞ்ச
மன்னுருவை வான்பவளக் கொழுந்தை முத்தை
வளரொளியை வயிரத்தை மாசொன் றில்லாப்
பொன்னுருவைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. **#545**

மின்னல் போன்று பிரகாசிக்கும் உருவினனாய், வானத்தில் ஒலி என்றஒரே பண்பாய், வீசும் காற்றில் ஒலி ஊறு என்ற இருபண்புகளாய், சிவந்த நெருப்பில் ஒளி, ஊறு, ஒலி என்ற முப்பண்புகளாய், பள்ளம் நோக்கிச் செல்லும் நீரில் சுவை, ஒளி, ஊறு, ஒலி என்ற நான்கு பண்புகளாய், நிலத்தில் நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஒலி என்ற ஐந்து பண்புகளாய்க் குறையாத புகலிடமாக நிலைபெற்ற பொருளாய், பவளக் கொழுந்தாய், முத்தாய், வளர் ஒளியாய், வயிரமாய், பொன்போலும் நிறமுடைய புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே.

திருக்கீழ்வேளூர்

அறையார்பொற் கழலார்ப்ப அணியார் தில்லை
அம்பலத்துள் நடமாடும் அழகன் தன்னைக்
கறையார்மூ விலைநெடுவேற் கடவுள் தன்னைக்
கடல்நாகைக் காரோணங் கருதி னானை
இறையானை என்னுள்ளத் துள்ளே விள்ளா
திருந்தானை ஏழ்பொழிலுந் தாங்கி நின்ற
பொறையானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. **#546**

பொன்னாலாகியகழல் ஒலிக்கத் தில்லை அம்பலத்துள் கூத்தாடும் அழகனாய், விடக்கறை பொருந்திய முத்தலைச் சூலப்படையனாய்க் கடலை அடுத்த நாகைக் காரோணத்தை உறைவிடமாக விரும்பியவனாய், என் உள்ளத்துள்ளே தங்கி நீங்காது இருந்தவனாய், ஏழுலகப் பாரத்தையும் தாங்குபவனாய், உள்ள புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்ற நான் போக்கினேனே.

திருக்கீழ்வேளூர்

நெருப்பனைய திருமேனி வெண்ணீற் றானை

நீங்காதென் னுள்ளத்தி னுள்ளே நின்ற
விருப்பவனை வேதியனை வேத வித்தை
வெண்காடும் வியன்துருத்தி நகரும் மேவி
இருப்பவனை யிடைமருதோ டீங்கோய் நீங்கா
இறையவனை யெனையாளுங் கயிலை யென்னும்
பொருப்பவனைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. **#547**

நெருப்பினை ஒத்த சிவந்த திருமேனியில் வெண்ணீறு அணிந்தவனாய், என் உள்ளத்தினுள்ளே நீங்காது விரும்பி இருப்பவனாய், வேதம் ஓதுபவனாய், வேதத்தை நன்கு உணர்ந்தவனாய், வெண்காடு, துருத்தி, இடைமருது, ஈங்கோய்மலை இவற்றை நீங்காத இறையவனாய், என்னை ஆட்கொண்ட, கயிலாய மலையை உறைவிடமாகக் கொண்ட புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே.

<u>திருக்கீழ்வேளூர்</u>

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமுந் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. **#548**

ஆயிரம் திருநாமங்களை முன்னின்று உச்சரித்துத் தேவர்கள் துதிக்கும் பெருமானாய்த் தன்னை விடுத்து நீங்காத அடியவர்களுக்கும் என்றும் பிறப்பெடுக்கவாராத வீடுபேற்றுச் செல்வத்தை வழங்குபவனாய், மந்திரமும் அவற்றைச் செயற்படுத்தும்முறைகளும் மருந்துமாகித் தீராத நோய்களைப் போக்கியருள வல்லானாய், திரிபுரங்கள் தீப்பற்றிச் சாம்பலாகுமாறு திண்ணிய வில்லைக் கைக்கொண்டு போரிடுதலில் ஈடுபட்டவனான புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே.

<u>திருக்கீழ்வேளூர்</u>

பண்ணியனைப் பைங்கொடியாள் பாகன் தன்னைப்
படர்சடைமேற் புனல்கரந்த படிறன் தன்னை
நண்ணியனை யென்னாக்கித் தன்னா னானை
நான்மறையின் நற்பொருளை நளிர்வெண் டிங்கட்
கண்ணியனைக் கடியநடை விடையொன் றேறுங்

காரணனை நாரணனைக் கமலத் தோங்கும்
புண்ணியனைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. **#549**
எல்லாப் பொருள்களையும் ஆக்கியவனாய்ப் பார்வதிபாகனாய், பரவிய சடையிலே கங்கையை மறைத்தவஞ்சகனாய், எனக்குத் துணையாய் உடன் நின்று என்னைத் திருத்தித் தன்னிடத்தினின்றும் நீங்காது அணைத்துக்கொண்டவனாய், நான் மறையின் சிறந்த பொருளாய், குளிர்ந்த வெண்பிறையை முடிமாலையாகச் சூடியவனாய், விரைந்து செல்லும் காளையை இவர்ந்த உலக காரணனாய், நாரணனாய், தாமரையில் தங்கும் பிரமனாய் உள்ள புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே.

திருக்கீழ்வேளூர்

இறுத்தானை இலங்கையர்கோன் சிரங்கள் பத்தும்
எழுநரம்பின் இன்னிசைகேட் டின்புற் றானை
அறுத்தானை அடியார்தம் அருநோய் பாவம்
அலைகடலில் ஆலால முண்டு கண்டங்
கறுத்தானைக் கண்ணழலாற் காமன் ஆகங்காய்ந்தானைக்
கனன்மழுவுங் கலையு மங்கை
பொறுத்தானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்போற்றாதே ஆற்றநாள்
போக்கி னேனே. **#550**
இராவணனுடைய பத்துத் தலைகளையும் நசுக்கியவனாய், பின் அவன் எழுப்பிய நரம்பின் இசை கேட்டு மகிழ்ந்தவனாய், அடியார்களுடைய கொடிய நோய்களையும் தீவினைகளையும் போக்கியவனாய், அலைவீசும் கடலின் விடமுண்ட நீல விடமுண்ட நீல கண்டனாய், நெற்றிக்கண் தீயினால் மன்மதனுடைய உடலை எரித்தவ னாய், தீப்பொறி கக்கும் மழுப்படையையும் மானையும் அழகிய கைகளில் கொண்டவனாய், உள்ளபுள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே.

திருக்கயிலாயம்

திருக்கயிலாயம்

திருக்கயிலாயம், போற்றித்திருத்தாண்டகம்,
இத்தலம் இமயமலையிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கயிலாயநாதர்.
தேவியார் : பார்வதியம்மை.

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி யங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#551** ★★★★★

விண்ணாகியும் வேறு பூதங்களாகியும் நிலைபெற்றிருப்பவனே! அடியேனை வேற்றிடத்துக்குத் திரும்பிச் செல்லாதபடி அடிமையாகக் கொண்டவனே! இன்ப ஊற்றாகி உயிர் அறிவினுள்ளே நிலைபெற்றிருப்பவனே! இடையறாத சொற்களின் ஒலியே! சக்தியாகி ஐம்பூதங்களிலும் நான்கு வேதங்களிலும் ஆறு அங்கங்களிலும் இருப்பவனே! காற்றாகி எங்கும் கலந்தவனே! கயிலை மலையில் உறைபவனே! உனக்கு வணக்கங்கள் பல.

திருக்கயிலாயம்

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#552**

பேய்களோடு கூத்தாடுதலை உகந்தவனே! பிறவியைப் போக்கும் தலைவனே! உயிர்களைப் பல வகையான பிறப்புக்களில் நிறுத்தி விளையாடுதலில் வல்லவனே! விரும்பி என் உள்ளத்துப் புகுந்தவனே! பொய்யைச் சார்பாகக் கொண்ட முப்புரங்களை அழித்தவனே! என் சிந்தையை விடுத்துப் போகாது இருப்பவனே! பாம்பைக் கச்சாக

அணிந்தவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

திருக்கயிலாயம்

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#553**

பகைவர் மும்மதில்களையும் அழித்து, விரும்பி என் உள்ளத்துப் புகுந்து, என்னை உருவமுடையவனாகப் படைத்து, என் உயிர் உடம்பின்வழிப் படாதபடி நீக்கி நின் வழிப்படுத்து எனக்கு இன்பமாகிநின்ற செயலுடையவனாய், உலகத்தாரால் முன்னின்று துதிக்கப்படுபவனாய், கருவாய்க்கப்பெற்றுச் சஞ்சரிக்கும் காளமேகம் போல் உலகுக்கு நலன் தருவானாய், உள்ள கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

திருக்கயிலாயம்

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#554**

தேவா போற்றும் அமுதமாய், வந்து என் உள்ளம் புகுந்தவனாய், உயிர்களின் குறையைப் போக்கும் அருள் உருவம் உடையவனாய், ஓங்கித் தீப்பிழம்பாய் உயர்ந்தவனாய், தேனை வடித்த தெளவு போல்பவனாய், தேவர்களுக்கும் தேவனாய், சுடுகாட்டுத் தீயில் கூத்தாடுதலை விரும்பியவனாய் உள்ள கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

திருக்கயிலாயம்

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி

பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#555**

ஊர்களாகவும் உலகமாவும் பரவியவனே! அனற் பிழம்பாய் ஓங்கி உயர்ந்தவனே! புகழ் வடிவினனாய் எங்கும் பரவியவனே! நீங்காது என் உள்ளத்தில் புகுந்தவனே! நீர் நிறைந்த ஓடைபோலக் குளிர்ச்சி தருபவனே! ஒப்பற்றவனே! கார்முகில் போல அருளவல்லவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

திருக்கயிலாயம்

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#556**

முதற்கண் சில வேறு தேவர்களாய் நின்று அருள் வழங்கிப் பின் அத்தேவர்களும் நீ ஒருவனேயாகி ஒன்றி நின்றவனே! தேவர்களும் அறிய முடியாத பெரிய தேவனே! புல்லாகிய ஓரறிவு உயிருக்கும் வாழ்க்கை வழங்கியவனே! நீங்காது என் உள்ளத்துப் புகுந்தவனே! உலகுகள் தோறும் பல உயிர்களாக நின்றபவனே! உலகைப் பற்றி அதனைக் கைவிடாதவனே! கல்லின் கண்ணும் உள்ள உயிர்களாய் நிற்கும் ஒளிப்பொருளே! கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

திருக்கயிலாயம்

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#557**

பண்ணின் இசையாகி இருப்பவனே! உன்னைத் தியானிப்பவரின் பாவத்தைப் போக்குபவனே! எண்ணும் எழுத்தும் சொல்லும் ஆனவனே! என் உள்ளத்தை நீங்காத தலைவனே! விண்ணும் தீயும் நிலனும் ஆகியவனே! மேலார்க்கும் மேலாயவனே! கண்ணின் மணி போன்ற அருமையானவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

திருக்கயிலாயம்

இமையா துயிரா திருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழியே ழான வொருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#558**

ஏனைய உயிர்களைப் போல இமைக்காமல் மூச்சுவிடாமல் இருப்பவனே! என் உள்ளத்தை நீங்காத தலைவனே! பார்வதி பாகனே! பல ஊழிகளையும் கடந்தவனே! பொருந்தாத கொடிய விடத்தை உண்டவனே! முதற் பழையோனே! பொறுமையாகச் செயற்படும் ஞான ஒளி உடையவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

திருக்கயிலாயம்

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#559**

மூத்தலோ பிறத்தலோ இறத்தலோ இல்லாது எல்லாப் பொருள்களுக்கும் முற்பட்டு என்றும் இயற்கையாகவே விளங்கும் தேவர் தலைவரும் தொழும் தெய்வமே! எங்கும் பரவியிருப்பவனே! ஐயோ! என்று வருந்தும் அடியேனுக்கு எல்லாமாய் இருக்கும் பெருமானே! கனகத்திரள் போல்பவனே! கயிலை மலையானே! அடியேன் துயரங்கள் வருத்த வருந்துகின்றேன். என்னைக் காப்பாயாக. உனக்கு வணக்கங்கள் பல.

திருக்கயிலாயம்

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலிப் போற்றி
யங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என் சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#560**

பெரும்பரப்புடைய வானகத்திற்கு இருப்பிடமாய், எப்பொருளின் நீள அகலங்களையும் தன்னுள் அடக்கியவனாய், உன் அடியையும், முடியையும் காண அரியும், அயனும் தம்முள் மாறுபட்டு முயன்றும் அறிய முடியாமல் அனற்பிழம்பாய் நின்றவனாய்க் கொடிய வலிய கூற்றுவனை உதைத்தவனாய், அடியேனுடைய உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டவனாய், கொடிய இடியும் மின்னலும் ஆகியுள்ள கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

திருக்கயிலாயம்

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#561**

உண்ணாது உறங்காது இருப்பவனே! வேதங்களை ஓதாது உணர்ந்தவனே! உன்பெருமையை நினைத்துப் பார்க்காது செயற்பட்ட இராவணனைச் சிறிதளவு விரலை அழுத்தி நசுக்கி மகிழ்ந்து, அடக்கி ஆள்பவனே! பின் அவன்பால் பண்ணோடு கூடிய இசையின் இனிமையைச் செவிமடுத்தவனே! முன்னரேயே அடியேனுடைய உள்ளத்தில் புகுந்தவனே! உலகுக்குப் பற்றுக் கோடாய் இருப்பவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

திருக்கயிலாயம்

திருக்கயிலாயம், போற்றித்திருத்தாண்டகம்,
இத்தலம் இமயமலையிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கயிலாயநாதர்.
தேவியார் : பார்வதியம்மை.

பொறையுடைய பூமிநீ ரானாய் போற்றி
பூதப் படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சி னிடையாய் போற்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்ட முடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#562**

எதனையும் தாங்குதலை உடைய நிலமாகவும் நீராகவும் இருப்பவனே! பூதப்படையை ஆளும் தூயவனே! நல்வழியில் நிறுத்தப்படும் நெஞ்சில் இருப்பவனே! என் உள்ளத்தில் நீங்காது இருப்பவனே! மறைத்துச் சொல்லப்படும் பொருள்களை உடைய வேதத்தை விரித்து உரைத்தவனே! தேவர்களால் வணங்கப்படுபவனே! நீலகண்டனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

திருக்கயிலாயம்

முன்பாகி நின்ற முதலே போற்றி
மூவாத மேனிமுக் கண்ணா போற்றி
அன்பாகி நின்றார்க் கணியாய் போற்றி
ஆறேறு சென்னிச் சடையாய் போற்றி
என்பாக எங்கும் அணிந்தாய் போற்றி
யென்சிந்தை நீங்கா இறைவா போற்றி
கண்பாவி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#563**

எல்லாவற்றிற்கும் முன் உள்ள காரணப்பொருளே! மூப்படையாத உடலை உடைய முக்கண் பெருமானே! அன்பர்களுக்கு ஆபரணமே! கங்கைச் சடையனே! எலும்பாகிய அணிகலன்கள் உடையவனே! என் உள்ளத்தை நீங்காத தலைவனே! கண்ணில் பரவியுள்ள ஒளியே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

திருக்கயிலாயம்

மாலை யெழுந்த மதியே போற்றி
மன்னியென் சிந்தை யிருந்தாய் போற்றி
மேலை வினைகள் அறுப்பாய் போற்றி
மேலாடு திங்கள் முடியாய் போற்றி
ஆலைக் கரும்பின் தெளவே போற்றி
அடியார்கட் காரமுத மானாய் போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி

கயிலை மலையானே போற்றி போற்றி. #564
மாலை மதியமே! என் சிந்தையில் நிலைபெற்று இருப்பவனே! இனித்தோன்றும் என் வினைகளைப் போக்குபவனே! வானில் உலவும் பிறை முடியனே! ஆலையில் பிழியப்படும் கருப்பஞ்சாற்றின் தெளவே! அடியார் அமுதமே! காலையில் தோன்றும் இளஞாயிறே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

திருக்கயிலாயம்

உடலின் வினைக ளறுப்பாய் போற்றி
ஒள்ளெரி வீசும் பிரானே போற்றி
படருஞ் சடைமேல் மதியாய் போற்றி
பல்கணக் கூத்தப் பிரானே போற்றி
சுடரின் திகழ்கின்ற சோதீ போற்றி
தோன்றியென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கடலில் ஒளியாய முத்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. #565
உடலில் நுகரப்படும் வினைகளை அறுப்பவனே! எரியை ஏந்தி ஆடும் பிரானே! பிறையை அணிந்த சடையனே! பல பூதங்களோடு கூத்தாடும் பெருமானே! விளக்குப் போல ஒளிவிடுகின்ற சோதியே! என் உள்ளத்தில் தோன்றியிருப்பவனே! கடலில் ஆழ்ந்திருக்கும் முத்துப் போன்றவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

திருக்கயிலாயம்

மைசேர்ந்த கண்ட மிடற்றாய் போற்றி
மாலுக்கும் ஓராழி யீந்தாய் போற்றி
பொய்சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி
போகாதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மெய்சேரப் பால்வெண்ணீ றாடீ போற்றி
மிக்கார்க ளேத்தும் விளக்கே போற்றி
கைசே ரனலேந்தி யாடீ போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. #566
நீலகண்டனே! திருமாலுக்குச் சக்கரம் ஈந்தவனே! ஐயம் திரிபுகள் உள்ள உள்ளங்களில் புகாதவனே! என் உள்ளத்தே நீங்காது இருப்பவனே! உடல் முழுதும் வெள்ளிய நீறு பூசியவனே! சான்றோர்கள் போற்றும் ஞானதீபமே! கையில் அனலை ஏந்திக் கூத்து நிகழ்த்துபவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

திருக்கயிலாயம்

ஆறேறு சென்னி முடியாய் போற்றி
அடியார்கட் காரமுதாய் நின்றாய் போற்றி
நீறேறு மேனி யுடையாய் போற்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கூறேறு மங்கை மழுவா போற்றி
கொள்ளுங் கிழமையே ழானாய் போற்றி
காறேறு கண்ட மிடற்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#567**

கங்கைச் சடையனே! அடியார்களுக்கு ஆரமுதே! நீறு பூசிய மேனியனே! நீங்காது என் உள்ளத்து இருப்பவனே! கையில் கூரிய மழுப்படையை ஏந்தியவனே! ஏழு கிழமைகளாகவும் உள்ளவனே! நீலகண்டனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

திருக்கயிலாயம்

அண்டமே ழன்று கடந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
பண்டை வினைக ளறுப்பாய் போற்றி
பாரோர்விண் ணேத்தப் படுவாய் போற்றி
தொண்டர் பரவு மிடத்தாய் போற்றி
தொழில்நோக்கி யாளுஞ் சுடரே போற்றி
கண்டங் கறுக்கவும் வல்லாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#568**

ஏழுலகம் கடந்தவனே! ஆதிப்பழம் பொருளே! பழையவினைகளை நீக்குபவனே! மன்னவரும் விண்ணவரும் போற்றும் மூர்த்தியே! அடியார்கள் போற்றும் திருத்தலங்களில் உறைபவனே! வழிபாட்டினை நோக்கி அடியவர்களை ஆளும் ஒளியே! நீலகண்டனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

திருக்கயிலாயம்

பெருகி யலைக்கின்ற ஆறே போற்றி
பேராநோய் பேர விடுப்பாய் போற்றி
உருகிநினை வார்தம் முள்ளாய் போற்றி
ஊனந் தவிர்க்கும் பிரானே போற்றி
அருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி
யாரு மிகழப் படாதாய் போற்றி
கருகிப் பொழிந்தோடு நீரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#569**

பெருகி அலைவீசும் ஆறுபோல்பவனே! நீங்காத நோய்களை

நீக்குபவனே! உருகிநினைப்பவர்களின் உள்ளத்தில் உள்ளவனே! குறைபாடுகளை நீக்கும் பெருமானே! அரிதில் கிட்டப்பெற்று ஒளிவீசும் பொன் போன்றவனே! ஒருவராலும் குறை கூறப்படாதவனே! கார்மேகமாகிப் பொழியும் மழையானவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

திருக்கயிலாயம்

செய்யமலர் மேலான் கண்ணன் போற்றி
தேடியுணராமை நின்றாய் போற்றி
பொய்யாநஞ் சுண்ட பொறையே போற்றி
பொருளாக வென்னையாட் கொண்டாய் போற்றி
மெய்யாக ஆனஞ் சுகந்தாய் போற்றி
மிக்கார்க ளேத்துங் குணத்தாய் போற்றி
கையானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#570**

செந்தாமரை மலர்மேல் உள்ள பிரமனும் திருமாலும் தேடியும் காணமுடியாதவாறு நின்றவனே! விடத்தை உண்ட தவறாத அருள் வடிவே! என்னையும் ஒரு பொருளாக ஆண்டு கொண்டவனே! பஞ்சகவ்விய நீராட்டை விரும்புபவனே! சான்றோர்கள் புகழும் நற்குணனே! துதிக்கையை உடைய யானைத் தோலை உரித்தவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

திருக்கயிலாயம்

மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி
மேலாடு புரமூன்று மெய்தாய் போற்றி
சீலத்தான் தென்னிலங்கை மன்னன் போற்றி
சிலையெடுக்க வாயலற வைத்தாய் போற்றி
கோலத்தாற் குறைவில்லான் தன்னை யன்று
கொடிதாகக் காய்ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையுங் காய்ந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#571**

மேல் உலகில் தங்கும் வாய்ப்பளிக்கப்பட்ட தேவர்கள் தலைவனே! வானில் உலவிய மூன்று மதில்களையும் அம்பு எய்து அழித்தவனே! இராவணன் கயிலையைப் பெயர்க்க அவனை வாயால் அலற வைத்துப் பின் அவனை, உன்னை வழிபடும் பண்பினன் ஆக்கியவனே! அழகில் குறைவில்லாத மன்மதனை ஒருகாலத்தில் சாம்பலாகும்படி கோபித்தவனே! ஒருகாலத்தில் கூற்றுவனையும் வெகுண்டவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

திருக்கயிலாயத்திருமலை

திருக்கயிலாயம்

திருக்கயிலாயத்திருமலை, போற்றித்திருத்தாண்டகம்,
இத்தலம் இமயமலையிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கயிலாயநாதர்.
தேவியார் : பார்வதியம்மை.

பாட்டான நல்ல தொடையாய் போற்றி
பரிசை யறியாமை நின்றாய் போற்றி
சூட்டான திங்கள் முடியாய் போற்றி
தூமாலை மத்தம் அணிந்தாய் போற்றி
ஆட்டான தஞ்சும் அமர்ந்தாய் போற்றி
அடங்கார் புரமெரிய நக்காய் போற்றி
காட்டானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#572**

மேம்பட்ட பாமாலை சூடியவனே! உன்தன்மை இன்னது என்று பிறரால் அறியப்படாதவனே! பிறையை முடியில் சூடியவனே! ஊமத்த மாலையை அணிந்தவனே! பஞ்ச கவ்விய அபிடேகத்தை விரும்புபவனே! பகைவருடைய முப்புரமும் எரியுமாறு நகைத்தவனே! யானையின் தோலை உரித்தவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

திருக்கயிலாயம்

அதிரா வினைகள் அறுப்பாய் போற்றி
ஆல நிழற்கீழ் அமர்ந்தாய் போற்றி
சதுரா சதுரக் குழையாய் போற்றி
சாம்பர்மெய் பூசுந் தலைவா போற்றி
எதிரா வுலகம் அமைப்பாய் போற்றி
யென்றும்மீ ளாவருள் செய்வாய் போற்றி
கதிரார் கதிருக்கோர் கண்ணே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#573**

வினைகள் நடுங்கச் செய்யாதபடி அவற்றை நீக்குபவனே! கல்லால மர நிழற்கீழ் அமர்ந்தவனே! திறமை உடையவனே! சிறந்த குழை என்னும் காதணியை அணிந்தவனே! சாம்பலை உடலில் பூசும் தலைவனே! தனக்கு ஒப்பில்லாத முத்தி உலகை அமைத்து அதனை அடையும் அடியவருக்கு என்றும் பிறப்பிற்குத் திரும்பி வாராத அருளைச் செய்பவனே! ஒளி வீசும் சூரியன் முதலிய ஒளிகளுக்குப் பற்றுக்

கோடாக இருப்பவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

திருக்கயிலாயம்

செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி
செல்லாத செல்வ முடையாய் போற்றி
ஐயாய் பெரியாய் சிறியாய் போற்றி
ஆகாய வண்ண முடையாய் போற்றி
வெய்யாய் தணியாய் அணியாய் போற்றி
வேளாத வேள்வி யுடையாய் போற்றி
கையார் தழலார் விடங்கா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#574**

செம்மை கருமை வெண்ணிறம் இவற்றை உடையவனே! நீங்காத செல்வம் உடையவனே! வியக்கத்தக்கவனே! பெரிய பொருள்களும் சிறிய பொருள்களும் ஆகியவனே! ஆகாயத்தின் தன்மை உடையவனே! தீயோருக்கு வெப்பமும் அடியார்க்குக் குளிர்ச்சியும் அண்மையுமாய் உள்ளவனே! ஓம்பாதே நிலைபெற்றிருக்கும் அருட் சக்தியை உடையவனே! அனல் ஏந்திய அழகனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

திருக்கயிலாயம்

ஆட்சி யுலகை யுடையாய் போற்றி
அடியார்க் கமுதெலாம் ஈவாய் போற்றி
சூட்சி சிறிது மிலாதாய் போற்றி
சூழ்ந்த கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மாட்சி பெரிது முடையாய் போற்றி
மன்னியென் சிந்தை மகிழ்ந்தாய் போற்றி
காட்சி பெரிது மரியாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#575**

உலகை ஆள்பவனே! அடியார்களுக்கு இன்பம் அளிப்பவனே! சிறிதும் வஞ்சனை இல்லாதவனே! கடல் விடம் உண்டவனே! மேம்பட்ட மாண்புகளை உடையவனே! என் உள்ளத்துள் நிலைபெற்றிருப்பவனே! தம்முயற்சியால் யாரும் காண்டற்கு அரியவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

திருக்கயிலாயம்

முன்னியாய் நின்ற முதல்வா போற்றி
மூவாத மேனி யுடையாய் போற்றி
என்னியா யெந்தை பிரானே போற்றி

யேழி னிசையே யுகப்பாய் போற்றி
மன்னிய மங்கை மணாளா போற்றி
மந்திரமுந் தந்திரமு மானாய் போற்றி
கன்னியார் கங்கைத் தலைவா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#576**
தவக்கோலம் பூண்ட முதல்வனே! மூப்படையாத திருமேனியனே! எனக்குத் தாயும் தந்தையும் ஆயவனே! ஏழிசையை விரும்புபவனே! உன்னோடு கூடிய பார்வதியின் துணைவனே! மந்திரமும் அவற்றைச் செயற்படுத்தும் செயல்களும் ஆனவனே! என்றும் அழிவில்லாத கங்கைக்குத் தலைவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

<u>திருக்கயிலாயம்</u>

உரியா யுலகினுக் கெல்லாம் போற்றி
உணர்வென்னும் ஊர்வ துடையாய் போற்றி
எரியாய தெய்வச் சுடரே போற்றி
யேசுமா முண்டி யுடையாய் போற்றி
அரியா யமரர்கட் கெல்லாம் போற்றி
அறிவே யடக்க முடையா போற்றி
கரியானுக் காழியன் றீந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#577**
எல்லா உலகிற்கும் உரிமை உடையவனே! உன் கருத்தறிந்து செயற்படும் காளையை வாகனமாக உடையவனே! எரி போன்ற அருள் விளக்கே! பிறர் இகழுமாறு மண்டை யோட்டினை ஏந்தினவனே! தேவர்கள் அணுகுவதற்கு அரியவனே! அறிவு வடிவானவனே! நுண்ணியனே! ஒரு காலத்தில் திருமாலுக்குச் சக்கரம் ஈந்தவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

<u>திருக்கயிலாயம்</u>

எண்மேலும் எண்ண முடையார் போற்றி
யேறறிய வேறுங் குணத்தாய் போற்றி
பண்மேலே பாவித் திருந்தாய் போற்றி
பண்ணொடியாழ் வீணை பயின்றாய் போற்றி
விண்மேலும் மேலும் நிமிர்ந்தாய் போற்றி
மேலார்கண் மேலார்கண் மேலாய் போற்றி
கண்மேலுங் கண்ணொன் றுடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#578**
உயிர்களுடைய எண்ணங்களுக்கு மேற்பட்ட எண்ணங்களை உடையவனே! உயிர்களைக் கரையேற்றும் பொருட்டு மேம்பட்ட

குணங்களை உடையவனே! பண்ணிடத்திலே விருப்பம் கொண்டு பண்ணோடு யாழினையும் வீணையையும் இசைக்கின்றவனே! வானத்தையும் கடந்து ஓங்கியிருப்பவனே! மேலோருக்கெல்லாம் மேலோனே! இரு கண்களுக்கு மேலே மூன்றாவதான நெற்றிக் கண்ணை உடையவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

திருக்கயிலாயம்

முடியார் சடையின் மதியாய் போற்றி
முழுநீறு சண்ணித்த மூர்த்தீ போற்றி
துடியா ரிடையுமையாள் பங்கா போற்றி
சோதித்தார் காணாமை நின்றாய் போற்றி
அடியார் அடிமை அறிவாய் போற்றி
அமரர் பதியாள வைத்தாய் போற்றி
கடியார் புரமூன்று மெய்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. **#579**

சடையில் பிறை சூடி, திருநீறு பூசிய மூர்த்தியே! உடுக்கை போன்ற இடையை உடைய பார்வதி பாகனே! தம் முயற்சியால் அறிய முற்படுபவர் காணமுடியாதபடி இருப்பவனே! அடியவர்களின் அடிமைத் தன்மையின் உண்மையை அறிபவனே! அவர்களைத் தேவருலகை ஆளவைப்பவனே! காவல் பொருந்திய மும்மதில்களையும் அழித்தவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

திருக்கயிலாயம்

போற்றிசைத்துன் னடிபரவ நின்றாய் போற்றி
புண்ணியனே நண்ண லரியாய் போற்றி
ஏற்றிசைக்கும் வான்மே லிருந்தாய் போற்றி
எண்ணா யிரநூறு பெயராய் போற்றி
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றிநான்முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி
காற்றிசைக்குந் திசைக்கெல்லாம் வித்தே போற்றிகயிலை மலையானே போற்றி போற்றி. **#580**

அடியார்கள் வணக்கம் சொல்லித் திருவடிகளை வழிபடுமாறு இருப்பவனே! புண்ணியனே! முயற்சியால் அணுக அரியவனே! இடி ஒலிக்கும் வான்மேல் இருப்பவனே! எண்ணிறந்த பெயர்களை உடையவனே! நான்கு திசைகளுக்கும் ஒலி வழங்கும் தலைவனே! பிரமனுக்கும் திருமாலுக்கும் உள்ளவாறு உணர்தற்கு அரியவனே! காற்று இயங்கும் திசைகளுக்கெல்லாம் காரணனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கம் பல.

திருவலம்புரம்

திருவலம்புரம்

திருவலம்புரம், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வலம்புரநாதர்.
தேவியார் : வடுவகிர்க்கணம்மை.

மண்ணளந்த மணிவண்ணர் தாமும் மற்றை
மறையவனும் வானவருஞ் சூழ நின்று
கண்மலிந்த திருநெற்றி யுடையார் ஒற்றை
கதநாகங் கையுடையார் காணீ ரன்றே
பண்மலிந்த மொழியவரும் யானு மெல்லாம்
பணிந்திறைஞ்சித் தம்முடைய பின்பின் செல்ல
மண்மலிந்த வயல்புடைசூழ் மாடவீதி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. **#581**

உலகத்தை அளந்த நீலமணி நிறத்தவரான திருமாலும் பிரமனும் தேவர்களும் தம்மைச் சூழ, நெற்றிக்கண்ணராய், ஒற்றைப் பாம்பினைக் கையில் உடையவராய், இனியமொழிகளையுடைய மற்றப் பெண்களும் யானும் பணிந்து வணங்கித் தம்பின்னே செல்லவும், மண்வளம் நிறைந்த வயல்களால் சூழப்பட்ட மாட வீதிகளையுடைய வலம்புர நகரில் புகுந்து, பெருமான் அங்கேயே தங்கிவிட்டார்.

திருவலம்புரம்

சிலைநவின்ற தொருகணையாற் புரமூன் றெய்த
தீவண்ணர் சிறந்திமையோர் இறைஞ்சி யேத்தக்
கொலைநவின்ற களியானை யுரிவை போர்த்துக்
கூத்தாடித் திரிதருமக் கூத்தர் நல்ல
கலைநவின்ற மறையவர்கள் காணக் காணக்
கடுவிடைமேற் பாரிடங்கள் சூழக் காதல்
மலைமகளுங் கங்கையுந் தாமு மெல்லாம்
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. **#582**

வில்லில் பழகிய அம்பு ஒன்றால் முப்புரமும் அழித்த, தீயைப் போன்ற செந்நிறமுடைய பெருமானாய், இமையவர்கள் வழிபட்டுப்புகழக் கொலைத் தொழிலில் பழகிய மத யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கூத்தாடிக்கொண்டு எங்கும் செல்லும் அக்கூத்தர், கலைகளில் பழகிய அந்தணர்கள் காணவும், பூதகணங்கள் சூழவும், விரைவாகச் செல்லும் காளை மீது பார்வதியும் கங்கையும் தாமுமாக

இவர்ந்து, வலம்புரம் சென்று அங்கே தங்கி விட்டார்.

திருவலம்புரம்

தீக்கூருந் திருமேனி யொருபால் மற்றை
யொருபாலும் அரியுருவந் திகழ்ந்த செல்வர்
ஆக்கூரில் தான்தோன்றிப் புகுவார் போல
வருவினையேன் செல்வதுமே யப்பா லெங்கும்
நோக்கா ரொருவிடத்து நூலுந் தோலுந்
துதைந்திலங்குந் திருமேனி வெண்ணீ றாடி
வாக்கால் மறைவிரித்து மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. **#583**

திருமேனியின் ஒரு பகுதி தீயின் நிறமாகவும், மற்றைப்பகுதி திருமாலின் நிறமாகவும் விளங்கித்தோன்ற, ஆக்கூரிலுள்ள தான்தோன்றி மாடத்திற்குச் செல்பவரைப்போல யான் அப்பக்கம் சென்ற அளவில் ஓரிடத்தையும் நோக்காமல், பூணூலும் மான் தோலும் பொருந்திய தம் மேனியில் வெள்ளிய நீறு பூசி, வேதக் கருத்துக்களை விரித்து, மாயமாகச் சில பேசிய வண்ணம், வலம்புரமே புக்கு அங்கே மன்னினாரே.

திருவலம்புரம்

மூவாத மூக்கப்பாம் பரையிற் சாத்தி
மூவர் உருவாய முதல்வ ரிந்நாள்
கோவாத எரிகணையைச் சிலைமேற் கோத்த
குழகனார் குளிர்கொன்றை சூடி யிங்கே
போவாரைக் கண்டடியேன் பின்பின் செல்லப்
புறக்கணித்துத் தம்முடைய பூதஞ் சூழ
வாவா வெனவுரைத்து மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. **#584**

மூப்படையாத கொடிய பாம்பை அரையில் கட்டி, மும்மூர்த்திகளின் உருவமாக உள்ள முதற்கடவுளாம் சிவபெருமான், வேறுயாரும் இணைக்க முடியாத அக்கினியாகிய அம்பினை வில்லில் கோத்த இளையராய்க், குளிர்ந்த கொன்றைப் பூவைச்சூடி, இன்று இங்கே போகின்றவரைக் கண்டு அடியேன் பின்னே செல்ல, என்னைப் புறக்கணித்து, என்னை வாவா என்று பொய்யாக அழைத்துவிட்டுத் தம்முடைய பூதகணம் தம்மைச் சூழ, வலம்புரமேபுக்கு அங்கே மன்னினாரே.

திருவலம்புரம்

அனலொருகை யதுவேந்தி யதளி னோடே

ஐந்தலைய மாநாகம் அரையிற் சாத்திப்
புனல் பொதிந்த சடைக்கற்றைப் பொன்போல்மேனிப்
புனிதனார் புரிந்தமரர் இறைஞ்சி யேத்தச்
சினவிடையை மேல்கொண்டு திருவா ரூருஞ்
சிரபுரமும் இடைமருதுஞ் சேர்வார் போல
மனமுருக வளைகழல மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. **#585**

ஒருகையில் தீயை ஏந்தி, இடையில் அணிந்த தோலாடை மீது
ஐந்தலையை உடைய பெரிய பாம்பினை இறுகக் கட்டிக் கங்கை தங்கிய
சடைமுடியும் பொன் போன்ற திருமேனியும் உடைய புனிதர், விரும்பித்
தேவர்கள் வழிபட்டுத்துதிக்கக் கோபம் உடைய காளையை இவர்ந்து,
திருவாரூரும் சிரபுரமும், இடைமருதும் அடைபவரைப்போல, என்மனம்
உருகுமாறும் வளைகள் கழலுமாறும் என்னிடத்துப் பொய்யாகச்
சிலவற்றைப் பேசி வலம்புரமேபுக்கு அங்கே மன்னினார்.

திருவலம்புரம்

கறுத்ததொரு கண்டத்தர் காலன் வீழக்
காலினாற் காய்ந்துகந்த காபா லியார்
முறித்ததொரு தோலுடுத்து முண்டஞ் சாத்தி
முனிகணங்கள் புடைசூழ முற்றந் தோறுந்
தெறித்ததொரு வீணையராய்ச் செல்வார் தம்வாய்ச்
சிறுமுறுவல் வந்தெனது சிந்தை வெளவ
மறித்தொருகால் நோக்காதே மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. **#586**

நீலகண்டராய்க் கூற்றுவன் அழியுமாறு காலினால் உதைத்து மகிழ்ந்த
காபாலக்கூத்தாடும் பெருமானார் தாம் உரித்த தோலை ஆடையாக
உடுத்து, திருநீறு பூசி முனிவர்கள் தம் இருபுடையும் சூழ்ந்துவர,
வீடுகளில் முன்னிடம் தோறும் வீணையை இசைத்துக் கொண்டு
சென்றாராக, அவருடைய புன்சிரிப்பு என் சிந்தையைக் கவர, மீண்டும்
ஒருமுறை என்னை நோக்காமல் பொய்யாக ஏதோ பேசி,
வலம்புரமேபுக்கு அங்கே மன்னினார்.

திருவலம்புரம்

பட்டுடுத்துப் பவளம்போல் மேனி யெல்லாம்
பசுஞ்சாந்தம் கொண்டணிந்து பாதம் நோவ
இட்டெடுத்து நடமாடி யிங்கே வந்தார்க்
கெவ்வூரீர் எம்பெருமா னென்றே னாவி
விட்டிடுமா றதுசெய்து விரைந்து நோக்கி

வேறோர் பதிபுகப் போவார் போல
வட்டணைகள் படநடந்து மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. **#587**
பட்டினை உடுத்துப் பவளம் போன்ற தம் மேனியில் பசிய சந்தனம் பூசித் தம் திருவடிகளை ஊன்றியும் தூக்கியும் கூத்தாடிக் கொண்டு என்னிடம் வந்தாராக. யான் 'எம்பெருமான் நீர் எவ்வூரைச் சேர்ந்தவர்' என்று வினவ என் உயிர்போகுமாறு என்னை விரைந்து பார்த்து, எனக்கு காமமீதூர்வினை வழங்கி, வேறோர் ஊருக்குச் செல்பவரைப்போலப் பொய் பேசிச் சுழன்று நடந்து, வலம்புரமே புக்கு அங்கே மன்னினாரே.

திருவலம்புரம்

பல்லார் பயில்பழனம் பாசூ ரென்று
பழனம் பதிபழமை சொல்லி நின்றார்
நல்லார் நனிபள்ளி யின்று வைகிநாளைப்போய் நள்ளாறு சேர்து மென்றார்
சொல்லா ரொருவிடமாத் தோள்கை வீசிச்சுந்தரராய் வெந்தநீ றாடி யெங்கு
மல்லார் வயல்புடை சூழ் மாட வீதிவலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. **#588**
பலரும் தங்கியிருக்கும் திருப்பழனம், பாசூர் என்று தம் ஊர்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் பழனப்பதியில் தமக்கு உள்ள பழந்தொடர்பைக்கூறி, நல்லவர்கள் மிக்க நனிபள்ளியில் இன்று தங்கி, மறுநாள் நள்ளாறு போய்ச் சேர எண்ணியுள்ளதாகக்கூறினார். இன்ன இடத்துக்குப் போகப்போவதாக உறுதியாய்க் கூறாமல், திருநீறு பூசிய அழகியராய்த் தம் கைகளை வீசிக் கொண்டு, வளம் பொருந்திய வயல்களால் சூழப்பட்ட மாட வீதிகளை உடைய வலம்புரமேபுக்கு அங்கே மன்னினார்.

திருவலம்புரம்

பொங்கா டரவொன்று கையிற் கொண்டு
போர்வெண் மழுவேந்திப் போகா நிற்பர்
தங்கா ரொருவிடத்துந் தம்மே லார்வந்
தவிர்த்தருளார் தத்துவத்தே நின்றே னென்பர்
எங்கே யிவர்செய்கை யொன்றொன் றொவ்வா
என்கண்ணின் நின்றகலா வேடங் காட்டி
மங்குல் மதிதவழும் மாட வீதி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. **#589**
படமெடுத்து ஆடும் பாம்பு ஒன்றனைக் கையில் கொண்டு, மறுகையில்

போரிடும் மழுப்படையை ஏந்தி, ஓரிடத்தும் தங்காராய்ப் போய்க்கொண்டே, தம்மிடத்து மற்றவர் கொள்ளும் விருப்பத்தை நீக்காராய் மெய்ப்பொருளிடத்தே நிற்பவராகத் தம்மைக் கூறிக்கொண்டே ஒன்றோடொன்று பொருந்தாத செயல்களை உடையவராய், என்கண்களை விட்டு நீங்காத தம் இனிய வேடத்தைக் காட்டி, வானத்திலுள்ள சந்திரன் தவழும்படியான உயர்ந்த மாட வீடுகளைக் கொண்ட வலம்புரமேபுக்கு அங்கே மன்னினார்.

திருவலம்புரம்

செங்கண்மால் சிலைபிடித்துச் சேனை யோடுஞ்
சேதுபந் தனஞ்செய்து சென்று புக்குப்
பொங்குபோர் பலசெய்து புகலால் வென்ற
போரரக்கன் நெடுமுடிகள் பொடியாய் வீழ
அங்கொருதன் திருவிரலால் இறையே யூன்றி
யடர்த்தவற்கே அருள்புரிந்த அடிக ளிந்நாள்
வங்கமலி கடல்புடைசூழ் மாட வீதி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. **#590**

திருமால் வில்லை ஏந்திக் குரக்குச்சேனையோடு, கடலில் அணைகட்டி, இலங்கயைச் சென்று அடைந்து, மேம்பட்ட பலபோர்கள் செய்து, தன்னை அடைக்கலமாக வந்தடைந்த சுக்கிரீவன், வீடணன் முதலியோர் உதவியதால் அரிதில் வென்றழித்த இராவணனுடைய நீண்ட கிரீடங்கள் பொடியாய் விழுமாறு, தன் ஒற்றைக் கால் விரலைச் சிறிதளவு ஊன்றி, அவனை வருத்திப் பின் அவனுக்கே அருளையும் செய்தவர் சிவபெருமான். அப்பெருமானார், இன்று கப்பல்கள் நிறைந்த கடலால் ஒருபுறம் சூழப்பட்டதாய், மாடவீதிகளை உடைய வலம்புரம் என்ற ஊரை அடைந்து அங்கேயே நிலையாகத் தங்கிவிட்டார்.

திருவெண்ணி

திருவெண்ணி

திருவெண்ணி, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வெண்ணிநாயகர்.
தேவியார் : அழகியநாயகியம்மை.

தொண்டிலங்கும் அடியவர்க்கோர் நெறியி னாருந்
தூநீறு துதைந்திலங்கு மார்பி னாரும்
புண்டரிகத் தயனொடுமால் காணா வண்ணம்
பொங்குதழற் பிழம்பாய புராண னாரும்
வண்டமரும் மலர்க்கொன்றை மாலை யாரும்
வானவர்க்கா நஞ்சுண்ட மைந்த னாரும்
விண்டவர்தம் புரமூன்றும் எரி செய்தாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. **#591**

வெண்ணி என்ற திருத்தலத்திலே விரும்பித் தங்கியிருக்கின்ற உலகியலிலிருந்த வேறுபட்டவராகிய சிவபெருமானார், தொண்டுகளால் விளங்கும் அடியவர்களுக்கு ஒப்பற்ற வழியாய் உள்ளவரும், திருநீறு அணிந்த மார்பினரும், தாமரையிலுள்ள பிரமனும் திருமாலும் காணமுடியாதபடி தழற்பிழம்பாய்க் காட்சி வழங்கிய பழம்பொருளானவரும், வண்டுகள் தங்கும் கொன்றை மாலை அணிந்தவரும், தேவர்களுக்காக விடத்தை உண்டவலியவரும், பகைவருடைய மும்மதில்களையும் தீக்கு இரையாக்கியவரும் ஆவார்.

திருவெண்ணி

நெருப்பனைய மேனிமேல் வெண்ணீற் றாரும்
நெற்றிமே லொற்றைக்கண் நிறைவித் தாரும்
பொருப்பரையன் மடப்பாவை யிடப்பா லாரும்
பூந்துருத்தி நகர்மேய புராண னாரும்
மருப்பனைய வெண்மதியக் கண்ணி யாரும்
வளைகுளமும் மறைக்காடும் மன்னி னாரும்
விருப்புடைய அடியவர்தம் முள்ளத் தாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. **#592**

செம்மேனியில் வெண்ணீறு பூசியவரும், நெற்றிக் கண்ணரும், பார்வதி பாகரும், பூந்துருத்தியில் உறையும் பழையவரும், யானைக் கொம்பு போன்ற பிறையை முடிமாலையாச் சூடியவரும், வளைகுளம், மறைக்காடு இவற்றில் தங்கியவரும், தம்மை விரும்பும் அடியாருடைய

உள்ளத்தில் உறைபவரும், வெண்ணி அமர்ந்து உறைகின்ற விகிர்தர் ஆவார்.

திருவெண்ணி

கையுலாம் மூவிலைவே லேந்தி னாருங்
கரிகாட்டில் எரியாடுங் கடவு ளாரும்
பையுலாம் நாகங்கொண் டாட்டு வாரும்
பரவுவார் பாவங்கள் பாற்று வாரும்
செய்யுலாங் கயல்பாய வயல்கள் சூழ்ந்த
திருப்புன்கூர் மேவிய செல்வ னாரும்
மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித் தாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. **#593**

வெண்ணி அமர்ந்துறையும் விகிர்தனார், கையில் முத்தலைச் சூலம் ஏந்தினாரும், சுடுகாட்டு நெருப்பில் கூத்து நிகழ்த்தும் கடவுளும், படமெடுக்கும் பாம்பினை ஆட்டுபவரும், தம்மை வழிபடுகின்றவர்களின் பாவத்தை அழிப்பவரும், கயல் மீன்கள் பாயும் வயல்களை உடைய திருப்புன்கூர் மேவிய செல்வரும், உடல்முழுதும் வெண்ணீறு பூசியவரும் ஆவர்.

திருவெண்ணி

சடையேறு புனல்வைத்த சதுர னாருந்
தக்கன்றன் பெருவேள்வி தடைசெய் தாரும்
உடையேறு புலியதள்மேல் நாகங் கட்டி
யுண்பலிக்கென் றூரூரி னுழிதர் வாரும்
மடையேறிக் கயல்பாய வயல்கள் சூழ்ந்த
மயிலாடு துறையுறையும் மணாள னாரும்
விடையேறு வெல்கொடியெம் விமல னாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. **#594**

சடையில் கங்கை வெள்ளத்தைச் சூடிய திறலுடைய வரும், தக்கனுடைய பெரிய வேள்வி நிறைவேறாமல் தடுத்தவரும், உடையாக அணிந்த புலித்தோல் மீது பாம்பினை இறுக்கிக் கட்டிப் பிச்சைக்காக ஊர் ஊராகத் திரிபவரும், நீர்மடையில் ஏறிக் கயல்பாயு மாறு நீர்வளம் மிக்க வயல்களால் சூழப்பட்ட மயிலாடுதுறையின் தலைவரும், காளை எழுதிய கொடியை உயர்த்திய எம் புனிதரும், வெண்ணி அமர்ந்துறைகின்ற விகிர்தனாரே.

திருவெண்ணி

மண்ணிலங்கு நீரனல்கால் வானு மாகி

மற்றவற்றின் குணமெலா மாய்நின் றாரும்
பண்ணிலங்கு பாடலோ டாட லாரும்பருப்பதமும் பாசூரும் மன்னி
னாரும்
கண்ணிலங்கு நுதலாருங் கபால மேந்திக்கடைதோறும் பலிகொள்ளுங்
காட்சி யாரும்
விண்ணிலங்கு வெண்மதியக் கண்ணி யாரும்வெண்ணியமர்ந்
துறைகின்ற விகிர்த னாரே. **#595**
ஐம்பூதங்களும், அவற்றின் பண்புகளுமாய் நிலைபெற்றவரும், பண்ணோடு கூடிய பாடலும் கூத்தும் நிகழும் சீசைலம், பாசூர் இவற்றில் உறைபவரும், நெற்றிக்கண்ணினரும், மண்டையோட்டினை ஏந்தி வீட்டு வாயில்தோறும் பிச்சை ஏற்கும் செயலை உடையவரும், பிறையை முடிமாலையாக உடையவரும், வெண்ணியமர்ந்து உறைகின்ற விகிர்தனாரே.

திருவெண்ணி

வீடுதனை மெய்யடியார்க் கருள்செய் வாரும்
வேலைவிட முண்டிருண்ட கண்டத் தாரும்
கூடலர்தம் மூவெயிலும் எரிசெய் தாரும்
குரைகழ லாற் கூற்றுவனைக் குமைசெய் தாரும்
ஆடுமர வரைக்கசைத்தங் காடு வாரும்
ஆலமர நீழலிருந் தறஞ்சொன் னாரும்
வேடுவராய் மேல்விசயற் கருள்செய் தாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. **#596**
அடியவருக்கு வீட்டுலகம் நல்குபவரும், விடமுண்ட நீலகண்டரும், பகைவருடைய மும்மதில்களையும் எரித்தவரும், திருவடியால் கூற்றுவனை உதைத்தவரும், படமெடுத்தாடும் பாம்பினை இடையில் இறுகக்கட்டிக்கொண்டு கூத்து நிகழ்த்துபவரும், கல்லால மர நிழலிலிருந்து அறத்தை உபதேசித்தவரும், வேடராய் முன்னொரு காலத்தில் அருச்சுனனுக்கு அருளியவரும், வெண்ணி அமர்ந்து உறைகின்ற விகிர்தனாரே.

திருவெண்ணி

மட்டிலங்கு கொன்றையந்தார் மாலை சூடி
மடவா ளவளோடு மானொன் றேந்திச்
சிட்டிலங்கு வேடத்த ராகி நாளுஞ்
சில்பலிக்கென் றூரூர் திரிதர் வாருங்
கட்டிலங்கு பாசத்தால் வீச வந்த
காலன்றன் கால மறுப்பார் தாமும்

விட்டிலங்கு வெண்குழைசேர் காதி னாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. **#597**
தேன்பொருந்திய கொன்றைமாலை சூடி மான் ஒன்றைக் கையில் ஏந்திப் பார்வதியோடு ஞானம் புலப்படும் வேடத் தோடும் சிலவாகிய பிச்சைக்காக ஊர் ஊராகத் திரிபவரும், உறுதியான பாசத்தால் மார்க்கண்டேயனைக் கட்டவந்த கூற்றுவனுடைய வாழ் நாளைப் போக்கியவரும், ஒளிவீசும் வெள்ளிய காதணி சேரும் காதுகளை உடையவரும், வெண்ணி அமர்ந்து உறைகின்ற விகிர்தனாரே.

திருவெண்ணி

செஞ்சடைக்கோர் வெண்டிங்கள் சூடி னாருந்
திருவால வாயுறையுஞ் செல்வ னாரும்
அஞ்சனக்கண் அரிவையொரு பாகத் தாரும்
ஆறங்கம் நால்வேத மாய்நின் றாரும்
மஞ்சடுத்த நீள்சோலை மாட வீதி
மதிலாரூர் புக்கங்கே மன்னி னாரும்
வெஞ்சினத்த வேழமது உரிசெய் தாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. **#598**
செஞ்சடையில் வெண்பிறை சூடியவரும், திருவால வாய் உறையும் செல்வரும், மைதீட்டிய கண்களை உடைய பார்வதி பாகரும், நான்கு வேதங்களும் ஆறு அங்கங்களுமாகி இருப்பவரும், மேகத்தை அளாவிய நீண்ட சோலைகளையும் மாட வீதிகளையும் மதிலையும் உடைய ஆரூரில் புகுந்து அங்கே நிலையாகத் தங்கிய வரும், மிக்க கோபத்தை உடைய யானையின் தோலை உரித்தவரும், வெண்ணி அமர்ந்து உறைகின்ற விகிர்தனாரே.

திருவெண்ணி

வளங்கிளர்மா மதிசூடும் வேணி யாரும்
வானவர்க்கா நஞ்சுண்ட மைந்த னாருங்
களங்கொளவென் சிந்தை யுள்ளே மன்னினாருங்
கச்சியே கம்பத்தெங் கடவு ளாரும்
உளங்குளிர அமுதூறி யண்ணிப் பாரும்
உத்தமரா யெத்திசையும் மன்னி னாரும்
விளங்கிளரும் வெண்மழுவொன் றேந்தி னாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. **#599**
வளமான பிறைசூடும் சடையினரும், தேவர்களுக்காக விடத்தை உண்ட வலியவரும், என் உள்ளத்தை உறைவிடமாகக் கொண்டு தங்கியவரும் கச்சி ஏகம்பத்து உறைபவரும், என் உள்ளம் குளிருமாறு அமுதமாக

ஊற்றெடுத்து இனிப்பவரும், மேம்பட்டவராய் எல்லாத் திசைகளிலும் நிலைபெற்றிருப்பவரும், ஒளிவீசும் வெள்ளிய மழுப்படையை ஏந்தியவரும் வெண்ணி அமர்ந்து உறைகின்ற விகிர்தனாரே.

திருவெண்ணி

பொன்னிலங்கு கொன்றையந்தார் மாலை சூடிப்
புகலூரும் பூவணமும் பொருந்தி னாருங்
கொன்னிலங்கு மூவிலைவே லேந்தி னாருங்
குளிரார்ந்த செஞ்சடையெங் குழக னாருந்
தென்னிலங்கை மன்னவர்கோன் சிரங்கள் பத்துந்
திருவிரலா லடர்த்தவனுக் கருள்செய் தாரும்
மின்னிலங்கு நுண்ணிடையாள் பாகத் தாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. **#600**

பொன்போல் விளங்கும் கொன்றை மாலை சூடிப் புகலூரிலும் பூவணத்திலும் உறைபவரும், அச்சம் தரும் முத்தலைச் சூலம் ஏந்தியவரும், குளிர்ச்சி தரும் கங்கைபொருந்திய செஞ்சடையை உடைய இளையரும், இராவணனுடைய பத்துத்தலைகளையும் தம் காலின் அழகிய விரலால் வருத்திப் பின் அவனுக்கு அருள் செய்தவரும், மின்னல்போன்ற நுண்ணிய இடையை உடைய பார்வதி பாகரும், வெண்ணி அமர்ந்து உறைகின்ற விகிர்தனாரே.

திருக்கற்குடி

திருக்கற்குடி

திருக்கற்குடி, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முத்தீசர்.
தேவியார் : அஞ்சனாட்சியம்மை.

மூத்தவனை வானவர்க்கு மூவா மேனி
முதலவனைத் திருவரையின் மூக்கப் பாம்பொன்
றார்த்தவனை அக்கரவ மார மாக
அணிந்தவனைப் பணிந்தடியா ரடைந்த அன்போ
டேத்தவனை யிறுவரையில் தேனை ஏனோர்க்
கின்னமுத மளித்தவனை யிடரை யெல்லாங்
காத்தவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. **#601**

தேவர்களுக்கு எல்லாம் மூத்தவனாய், மூப்படையாத திருமேனியை உடைய முதல்வனாய், இடுப்பில் கொடிய பாம்பைச் சுற்றியவனாய், எலும்புகளையும், பாம்புகளையும் மாலையாக அணிந்தவனாய், அடியவர்களால் பணிந்து அன்போடு தோத்திரிக்கப்படுபவனாய், பெரிய மலையில் உள்ள தேன் போன்றவனாய், தேவர்களுக்கு இனிய அமுதம் வழங்கியவனாய், துயரங்களில் இருந்து எல்லோரையும் காத்தவனாய், கற்பகம் போன்றவனாய்க் கற்குடியில் மேம்பட்டவனாய் உள்ள பெருமானை அடியேன் கண்ணாரக் கண்டேன்.

திருக்கற்குடி

செய்யானை வெளியானைக் கரியான் தன்னைத்
திசைமுகனைத் திசையெட்டுஞ் செறிந்தான் தன்னை
ஐயானை நொய்யானைச் சீரி யானை
அணியானைச் சேயானை ஆனஞ் சாடும்
மெய்யானைப் பொய்யாது மில்லான் தன்னை
விடையானைச் சடையானை வெறித்த மான்கொள்
கையானைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. **#602**

செம்மை, வெண்மை, கருமை என்ற நிறங்களை உடையவனாய், பிரமனாய், பெருந்திசையும் பரவியவனாய், அழகியவனாய், நன்மையனாய், புகழுடையவனாய், அண்மையில் உள்ளவனாய்த் தீயவர்களுக்குத் தொலைவில் இருப்பவனாய், பஞ்ச கவ்வியத்தில்

நீராடும் திருமேனியனாய், பொய்யேதும் இல்லாதவனாய், காளை வாகனனாய், சடைமுடியுடையவனாய், மருண்ட மானைக் கையில் ஏந்தியவனாய், கற்பகமாய்க் கற்குடியில் உறையும் சிறப்புடையவனை நான் கண்ணாரக் கண்டேன்.

திருக்கற்குடி

மண்ணதனில் ஐந்தைமா நீரில் நான்கை
வயங்கெரியில் மூன்றைமா ருதத்தி ரண்டை
விண்ணதனி லொன்றை விரிக திரைத்
தண்மதியைத் தாரகைகள் தம்மின் மிக்க
எண்ணதனில் எழுத்தைஏ ழிசையைக் காமன்
எழிலழிய எரியுமிழ்ந்த இமையா நெற்றிக்
கண்ணவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. **#603**

மண்ணில் ஐந்து, நீரில் நான்கு, தீயில் மூன்று, காற்றில் இரண்டு, விண்ணில் ஒன்று என்ற பண்புகளுக்குக் காரணனாய், சூரியனாய், சந்திரனாய், விண்மீன்களாய், அவைகளிலும் எண்ணிறந்தனவாய் உள்ள பொருள்கள் மேல் நிகழும் சொற்களாய், ஏழிசையாய், மன்மதனுடைய அழகிய உடல் அழியுமாறு தீயை வெளிப்படுத்திய அதற்குமுன், திறக்கப்படாத நெற்றிக்கண்ணனாய், கற்பகமாய் உள்ள கற்குடியில் விழுமியானைக் கண்ணாரக் கண்டேன் நானே.

திருக்கற்குடி

நற்றவனைப் புற்றரவ நாணி னானை
நாணாது நகுதலையூண் நயந்தான் தன்னை
முற்றவனை மூவாத மேனி யானை
முந்நீரின் நஞ்சமுகந் துண்டான் தன்னைப்
பற்றவனைப் பற்றார்தம் பதிகள் செற்ற
படையானை அடைவார்தம் பாவம் போக்கக்
கற்றவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. **#604**

மேம்பட்ட தவத்தினனாய்ப் பாம்பை வில் நாணாகக் கொண்டவனாய் வெட்கப்படாமல் மண்டையோட்டில் இடப்படும் பிச்சையை விரும்பியவனாய், நிறைவுடையவனாய், மூப்படையாத உடம்பினனாய், கடல் நஞ்சை விரும்பி உண்டவனாய், எப்பொருட்கும் பற்றுக்கோடாய் உள்ளவனாய், பகைவருடைய மும்மதில்களையும் அழித்த படையை உடையவனாய், தன்னை அடைந்த அடியவருடைய பாவத்தைப் போக்கக் கற்றவனாய், கற்பகமாய் கற்குடியில் உள்ள விழுமியானைக்

கண்ணாரக் கண்டேன் நானே.

திருக்கற்குடி

சங்கைதனைத் தவிர்த்தாண்ட தலைவன் தன்னைச்
சங்கரனைத் தழலுறுதாள் மழுவாள் தாங்கும்
அங்கையனை அங்கமணி ஆகத் தானை
ஆகத்தோர் பாகத்தே அமர வைத்த
மங்கையனை மதியொடுமா சுணமுந் தம்மின்
மருவவிரி சடைமுடிமேல் வைத்த வான்நீர்க்
கங்கையனைக் கற்குடியில் விழுமியானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. **#605**
ஐயத்தைப் போக்கி அடிமை கொண்ட தலைவனாய், நன்மை செய்பவனாய், கைப்பிடியை உடைய நெருப்பைப் போன்ற கொடிய மழுப்படையைத் தாங்கும் கையனாய், எலும்பை அணிந்த மார்பினனாய், பார்வதி பாகனாய், பிறையும் பாம்பும் நட்புடன் பழகும் தன் சடைமுடிமேல் ஆகாய கங்கையை வைத்தவனாய், கற்பகமாய், உள்ள கற்குடியில் விழுமியானைக் கண்ணாரக் கண்டேன் நானே.

திருக்கற்குடி

பெண்ணவனை ஆணவனைப் பேடா னானைப்
பிறப்பிலியை இறப்பிலியைப் பேரா வாணி
விண்ணவனை விண்ணவர்க்கு மேலா னானை
வேதியனை வேதத்தின் கீதம் பாடும்
பண்ணவனைப் பண்ணில்வரு பயனா னானைப்
பாரவனைப் பாரில்வாழ் உயிர்கட் கெல்லாங்
கண்ணவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. **#606**
பெண்ணாய், ஆணாய், அலியாய்ப் பிறப்பு இறப்பு அற்றவனாய், ஓசை நீங்காத விண்ணாய், விண்ணவர்க்கு மேம்பட்டவனாய், வேதியனாய், வேத கீதம் பாடும் பண்ணாய்ப் பண்ணில் வரும் பயனாய் அமைபவனாய், நில உலகமாய், அவ்வுலகில் வாழும் உயிர்களுக்கு எல்லாம் பற்றுக்கோடாய், கற்பகமாய் உள்ள கற்குடியில் விழுமியானைக் கண்ணாரக் கண்டேன் நானே.

திருக்கற்குடி

பண்டானைப் பரந்தானைக் குவிந்தான் தன்னைப்
பாரானை விண்ணாயிவ் வுலக மெல்லாம்
உண்டானை உமிழ்ந்தானை உடையான் தன்னை

யொருவருந்தன் பெருமைதனை அறிய வொண்ணா
விண்டானை விண்டார்தம் புரங்கள் மூன்றும்
வெவ்வழலில் வெந்துபொடி யாகி வீழக்
கண்டானைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. **#607**

பண்டையனாய், உலகத்தோற்றத்தில் பரந்து நிற்பவனாய், உலக ஒழுக்கத்தில் குவிந்து இருப்பவனாய், இவ்வுலகாய், தேவருலகாய், இவ்வுலகமெல்லாம் உண்டவனாய்ப் பின் வெளிப்படுத்தியவனாய், அவற்றிற்கு உரிமையாளனாய், ஒருவரும் தன் பெருமையை அறிய முடியாதபடி சேயனாய், பகைவர் முப்புரமும் தீயில் வெந்து பொடியாகி விழச் செய்தவனாய், கற்பகமாய், உள்ள கற்குடியில் விழுமியானைக் கண்ணாரக் கண்டேன் நானே.

திருக்கற்குடி

வானவனை வானவர்க்கு மேலா னானை
வணங்குமடி யார்மனத்துள்மருவிப் புக்க
தேனவனைத் தேவர்தொழு கழலான் தன்னைச்செய்குணங்கள்
பலவாகி நின்ற வென்றிக்
கோனவனைக் கொல்லை விடை யேற்றி னானைக்
குழல்முழவம் இயம்பக்கூத் தாட வல்ல
கானவனைக் கற்குடியில் விழுமியானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. **#608**

வானவனாய், தேவர்களுக்கு மேம்பட்டவனாய், தன்னை வணங்கும் அடியவர் மனத்துள் விரும்பிப்புகுந்த தேன் போன்றவனாய், தேவர்கள் தொழும் திருவடிகளை உடையவனாய், பலவாகி நின்ற தன் செயல்கள் யாவினும் வெற்றி காணும் தலைவனாய், முல்லை நிலத்தெய்வமாம் திருமாலாகிய காளையை உடையவனாய், குழலும் முழவும் ஒலிக்கச் சுடுகாட்டில் கூத்தாடவல்ல, கற்பகம் போன்ற கற்குடியில் விழுமி யானைக் கண்ணாரக் கண்டேன் நானே.

திருக்கற்குடி

கொலையானையுரிபோர்த்த கொள்கை யானைக்
கோளரியைக் கூரம்பா வரைமேற் கோத்த
சிலையானைச் செம்மைதரு பொருளான் தன்னைத்
திரிபுரத்தோர் மூவர்க்குச் செம்மை செய்த
தலையானைத் தத்துவங்க ளானான் தன்னைத்
தையலோர் பங்கினனைத் தன்கை யேந்து
கலையானைக் கற்குடியில் விழுமி யானைக்

கற்பகத்தைக்கண்ணாரக் கண்டேன் நானே. **#609**
தன்னால் கொல்லப்பட்ட யானையின் தோலைப் போர்த்த செயலினனாய், மலையாகிய வில்லில் திருமாலைக் கூரிய அம்பாகக் கோத்தவனாய், எல்லோருக்கும் நன்மை செய்பவனாய், திரிபுர அசுரருள் சுதர்மன், சுசீலன், சுமாலி என்ற மூவருக்கு நலன் செய்த மேம்பட்டவனாய், மெய்ப்பொருள்கள் ஆகியவனாய், பார்வதி பாகனாய், கையில் மானை ஏந்தியவனாய், கற்பகமாய், கற்குடியில் உள்ள விழுமியானைக் கண்ணாரக் கண்டேன் நானே.

திருக்கற்குடி

பொழிலானைப் பொழிலாரும் புன்கூ ரானைப்
புறம்பயனை அறம்புரிந்த புகலூ ரானை
எழிலானை இடைமருதி னிடங்கொண் டானை
ஈங்கோய்நீங் காதுறையும் இறைவன் தன்னை
அழலாடு மேனியனை அன்று சென்றக்குன்றெடுத்த அரக்கன்தோள் நெரிய ஊன்றுங்
கழலானைக் கற்குடியில் விழுமி யானைக்கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. **#610**
உலகமாக உள்ளவனாய், சோலைகள் நிறைந்த புன்கூர், புறம்பயம், அறத்தை விரும்பிச் செய்கின்ற புகலூர், இடைமருது, ஈங்கோய் இவற்றில் அழகாக இடங்கொண்டு நீங்காது தங்கும் தலைவனாய், தீயில் கூத்தாடும் திருமேனியை உடையவனாய், ஒரு காலத்தில் கயிலையைப் பெயர்க்க முற்பட்ட இராவணனுடைய தோள்கள் நெரியுமாறு ஊன்றிய திருவடியை உடையவனாய்க் கற்பகமாய் உள்ள கற்குடியில் விழுமியானைக் கண்ணாரக் கண்டேன் நானே.

திருக்கன்றாப்பூர்

திருக்கன்றாப்பூர்

திருக்கன்றாப்பூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நடுதறிநன்னாயகர்.
தேவியார் : மாதுமைநாயகியம்மை.

மாதினையோர் கூறுகந்தாய் மறைகொள் நாவா
மதிசூடி வானவர்கள் தங்கட் கெல்லாம்
நாதனே யென்றென்று பரவி நாளும்
நைஞ்சுருகி வஞ்சகமற் றன்பு கூர்ந்து
வாதனையால் முப்பொழுதும் பூநீர் கொண்டு
வைகல் மறவாது வாழ்த்தி யேத்திக்
காதன்மையால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. **#611**

பார்வதி பாகனே! வேதம் ஓதும் நாவனே! பிறை சூடியவனே! தேவர்கள் தலைவனே! என்று புகழ்ந்து நாடோறும் மனம் இளகி உருகி, வஞ்சகமில்லாத அன்பு மிகுந்து, முப்பொழுதும் வாசனை மிக்க நீரும் பூவும் கொண்டு மறவாது வாழ்த்திப்புகழ்ந்து அன்போடு தொழும் அன்பருடைய மனத்தினுள்ளே கன்றாப்பூரில் நடப்பட்டமுளை வடிவினனாய் உள்ள பெருமானைக் காணலாம்.

திருக்கன்றாப்பூர்

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி
வெளுத்தமைந்த கீளொடுகோ வணமுந் தற்றுச்
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பாய் என்றுஞ்
செல்கதிக்கு வழிகாட்டுஞ் சிவனே யென்றுந்
துடியனைய இடைமடவாள் பங்கா வென்றுஞ்
சுடலைதனில் நடமாடுஞ் சோதீ யென்றுங்
கடிமலர்தூய்த் தொழுமடியார்நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. **#612**

பொழுது விடிந்த அளவில் திருநீற்றை மெய்யில் பூசி, வெளுத்த கீளொடு கூடிய கோவணத்தை அணிந்து, கீழ்மையை உடைய வல்வினையால் ஏற்பட்ட நோயினைத் தீர்ப்பவனே! சென்று சேர வேண்டிய நல்லகதிக்கு வழிகாட்டும் சிவனே! உடுக்கை போன்ற இடையை உடைய பார்வதி பாகனே! சுடுகாட்டில் கூத்து நிகழ்த்தும் ஒளி உருவனே! என்று நறுமண மலர்களைத் தூவி வழிபடும் அடியவர்கள் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர்

நடுதறியைக் காணலாம்.

திருக்கன்றாப்பூர்

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போதே
உகந்தடிமைத் திறம்நினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவ ரென்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. **#613**

யாவரேயாயினும் நெற்றியில் திருநீறு அணிந்து, உருத்திராக்கம் பூண்டு இருப்பவரைக் கண்டால், திருவேடத்தின் பெருமையை நினைத்து, வெறுப்பில்லாமல், அவர்களைக் கண்ட போதே விரும்பி அடிமைத் திறத்தை நினைத்து, விரும்பிநோக்கி இவர்கள் நம்மால் வழிபடத்தக்க தேவரா என உள்ளத்தை இருவகையாகச் செலுத்தாமல் இறைவனிடத்துச் செய்யும் செயல்களையே அடியவரிடத்தும் விரும்பிச் செய்து, அங்ஙனம் செய்யும்பொழுது மனத்தில் இருதிறக் கருத்து நிகழாத வகையில் இறைவனையும் அடியவரையும் ஒரே நிலையில் மனத்துக்கொண்டு தொழும், அடியவர் உள்ளத்தில் கன்றாப்பூர் நடுதறியைக் காணலாம்.

திருக்கன்றாப்பூர்

இலங்காலஞ் செல்லாநா ளென்று நெஞ்சத்
திடையாதே யாவர்க்கும் பிச்சை யிட்டு
விலங்காதே நெறிநின்றங் கறிவே மிக்கு
மெய்யன்பு புகப்பெய்து பொய்யை நீக்கித்
துலங்காமெய் வானவரைக் காத்து நஞ்சம்உண்டபிரா னடியிணைக்கே சித்தம் வைத்துக்
கலங்காதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளேகன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. **#614**

'யாம் பொருள் இல்லாதேம் இக்காலம் நம்மால் ஒன்றும் இயலாத காலம்' என்று மனத்தில் தளர்ச்சியுறாமல், பிச்சை ஏற்கவருவோர் எல்லோருக்கும் பிச்சையிட்டு, நல்லவழியில் பிறழாமல் நின்று, இறைவன் பெருங்கருணையாளன் ஆதலை அறியும் அறிவு மிக்கு, பயன் கருதாமல் செய்யும் அன்பை மேற்கொண்டு, பொய்யை விடுத்து, மெய்யுணர்வு விளங்கப் பெறாத தேவர்களைக் காக்க விடம் உண்ட பெருமான் திருவடிக்கண் மனத்தை வைத்துக் கலக்கம் இன்றித் தொழும்

அடியவர் உள்ளத்தினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாம்.

திருக்கன்றாப்பூர்

விருத்தனே வேலைவிட முண்ட கண்டா
விரிசடைமேல் வெண்டிங்கள் விளங்கச் சூடும்
ஒருத்தனே உமைகணவா உலக மூர்த்தீ
நுந்தாத வொண்சுடரே அடியார் தங்கள்
பொருத்தனே யென்றென்று புலம்பி நாளும்
புலனைந்தும் அகத்தடக்கிப் புலம்பி நோக்கிக்
கருத்தினால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. **#615**

'மூத்தோனே! விடம் உண்ட நீலகண்டா! சந்திர சடாதரனே! உமைபாகனே! உலகத்தை வடிவாக உடையவனே! தூண்டவேண்டாத ஒளிவிளக்கே! அடியவர்கள் உறவினனே! என்று பலகாலம் கூப்பிட்டு, ஐம்புலன்களையும் உள்ளே அடக்கி, வேற்றுப் பற்றின்றித் தியானித்து, உள்ளத்தோடு தொழும் அடியவர் உள்ளத்துள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாம்.

திருக்கன்றாப்பூர்

பொசியினால் மிடைந்துபுழுப் பொதிந்த போர்வைப்
பொல்லாத புலாலுடம்பை நிலாசு மென்று
பசியினால் மீதூரப் பட்டே யீட்டிப்
பலர்க்குதவ லதுவொழிந்து பவள வாயார்
வசியினா லகப்பட்டு வீழா முன்னம்
வானவர்கோன் திருநாமம் அஞ்சுஞ் சொல்லிக்
கசிவினால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. **#616**

செந்நீர் வெண்ணீர் நிணம் முதலியவற்றின் கசிவோடு இணைக்கப்பட்டுப் புழுக்களை உள்ளே வைத்துத் தோலால் மூடப்பட்ட இழிந்த இந்தப் புலால் மயமான உடம்பு நிலையாக இருக்கும் என்று உறுதியாக எண்ணிப் பசிப் பிணியையும் பொறுத்துக் கொண்டு பொருளைச் சம்பாதித்து, அப்பொருளால் ஏழைகள் பலருக்கும் உதவுதலைவிடுத்து, பவளம்போன்ற வாயினை உடைய பெண்களிடம் வசப்பட்டு அழிவதன் முன்னம் தேவாதி தேவனுடைய திருநாமமாகிய திருவைந்தெழுத்தைச் சொல்லி உருக்கத்தோடு தொழும் அடியவருடைய நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாம்.

திருக்கன்றாப்பூர்

ஐயினால் மிடறடைப்புண் டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தி லிடுவதன்முன் மதியஞ் சூடும்
ஐயனார்க் காளாகி அன்பு மிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதங்
கையினால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. **#617**

கோழையினால் குரல்வளை அடைக்கப்பட்டு, உடம்பைவிட்டு உயிர்போன அளவிலேயே, வீட்டிலுள்ளவர்கள் ஒன்று சேர்ந்து, கண்களை மையினால் எழுதி, மாலை சூட்டிப் பிணத்தைச் சுடுகாட்டில் இடுவதன் முன்பு, பிறைசூடும் பெருமானுக்கு அடியவராகி, அன்புமிக்கு மனம் குழைந்து மெய் மயிர் சிலிர்த்து, எம்பெருமான் திருவடிகளைக் கைகளால் தொழும் அடியவர் உள்ளத்தினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.

திருக்கன்றாப்பூர்

திருதிமையால் ஐவரையுங் காவ லேவித்
திகையாதே சிவாயநம வென்னுஞ் சிந்தைச்
சுருதிதனைத் துயக்கறுத்துத் துன்ப வெள்ளக்
கடல்நீந்திக் கரையேறுங் கருத்தே மிக்குப்
பரிதிதனைப் பற்பறித்த பாவ நாசா
பரஞ்சுடரே யென்றென்று பரவி நாளுங்
கருதிமிகத் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. **#618**

மன உறுதியால் ஐம்பொறிகளையும் காவலில் வைத்து மனம் கலங்காமல், சூக்கும ஐந்தெழுத்தாகிய மானதமாகக் கணிக்கப்படும் மந்திரத்தைத் தியானித்தலால் மயக்கத்தைப் போக்கித் துன்பமாகிய வெள்ளம் நிறைந்த வாழ்க்கையாகிய கடலைக் கடந்து, முத்திநிலையாகிய கரைக்கு ஏறும் எண்ணமே மிக்கு, 'சூரியன் ஒருவனுடைய பற்களை நீக்கிய பாவநாசனே! மேம்பட்ட ஒளியே! என்று துதித்து, நாள்தோறும் விரும்பி மிகத்தொழும் அடியவர் உள்ளத்தினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாம்.

திருக்கன்றாப்பூர்

குனிந்தசிலை யாற்புரமூன் றெரித்தாய் என்றுங்
கூற்றுதைத்த குரைகழற்சே வடியாய் என்றுந்
தனஞ்சயற்குப் பாசுபத மீந்தாய் என்றுந்

தசக்கிரிவன் மலையெடுக்க விரலால் ஊன்றி
முனிந்தவன்தன் சிரம்பத்துந் தாளுந் தோளும்
முரணழித்திட்டருள்கொடுத்த மூர்த்தீயென்றுங்
கனிந்துமிகத் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. **#619**

வளைந்த வில்லால் முப்புரங்களை எரித்தவனே! யமனை உதைத்த, ஒலிக்கும் கழல் அணிந்த சிவந்த அடியனே! அருச்சுனனுக்குப் பாசுபதப்படை ஈந்தவனே! இராவணன் மலையைப் பெயர்க்க. வெகுண்டு, விரலை ஊன்றி, அவன் பத்துத் தலைகளும் தாள்களும் தோள்களும் வலிமை அழியச் செய்து, பின், அவனுக்கு அருள் செய்த பெருமானே! என்று உருகி மிகத் தொழும் அடியவர் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாம்.

திருவானைக்கா

திருவானைக்கா

திருவானைக்கா, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சம்புகேசுவரர்.
தேவியார் : அகிலாண்டநாயகியம்மை.

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே. **#620**

எத்தனை மேம்பட்ட நற்றாய் செவிலித்தாயர், தந்தை, சுற்றத்தார் என்று நம்மால் போற்றப்படுபவருள் எவர் நமக்கு நல்லவர்கள்! எந்தச் செல்வம் நம்மைத்தாங்கக்கூடியதாகும்? நாம் இறந்தால் நம் தேகபந்துக்களோ, நாம் ஈட்டி வைத்த செல்வமோ நமக்கு உதவும் வாய்ப்பு இல்லை. சிறிய விறகால் தீ மூட்டி இறந்த உடலைக் கொளுத்தி விட்டு எல்லோரும் பிரிந்து செல்வர். ஆதலின் ஏனைய தேகபந்துக்களை விடுத்து, 'என் தலைவனே! ஞானவடிவினனே! நீர்வளம் மிக்க காவிரிக் கரையில் அமைந்த திருவானைக்காவை உகந்தருளியிருக்கும் இடமாக உடைய செல்வனே! உன் பொலிவுடைய திருவடிகளைச் சரணாக அடையப்பெற்றால், துன்பத்தால் வருந்தும் நிலையை யான் அடைவேனோ?' எனக்குத் துன்புறும் நிலை ஏற்படாது என்றபடி.

திருவானைக்கா

ஊனாகி உயிராகி யதனுள் நின்ற
உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேதும் அறியாமே யென்னுள் வந்து
நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாய்உன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே. **#621**

திருவானைக்காவில் உறையும் சிவபெருமானே! ஞானவடிவினனே!

என் உடம்பாய் உயிராய், உயிருள் இருக்கும் ஞானமாய்ப் பிற எல்லாமாகவும் நீ உள்ளாய். யான் ஏதும் அறியாத நிலையில் என்னுள் வந்து சேர்ந்து, எனக்கு நல்ல செயல்களையும் தீய செயல்களையும் அறிவிக்கின்றாய், தேன் நிறைந்த கொன்றைப் பூ மாலையை அணிந்தவனே! திருநின்றியூரில் உறைபவனே! உன் அழகிய திருவடிகளை அடியேன் அடையப் பெறுவேனானால் துன்பத்தால் வருந்தும் நிலை எனக்கு ஏற்படாது.

திருவானைக்கா

ஒப்பாயிவ் வுலகத்தோ டொட்டி வாழ்வான்
ஒன்றலாத் தவத்தாரோ டுடனே நின்று
துப்பாருங் குறையடிசில் துற்றி நற்றுன்
திறம்மறந்து திரிவேனைக் காத்து நீவந்
தெப்பாலும் நுன்னுணர்வே யாக்கி யென்னை
ஆண்டவனே யெழிலானைக் காவா வானோர்
அப்பாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே. **#622**

அழகான ஆனைக்காவில் உள்ளவனே! தேவர்கள் தலைவனே! எல்லோருடனும் சமமாய் இவ்வுலக நடையோடு பொருந்தி வாழ்வதனை மேற்கொள்ளாத சமணத்துறவியரோடு பொருந்தி வாழ்ந்து, உண்ணுதற்கேற்ற கஞ்சியுணவை நிரம்ப உண்டு, நன்மை தரும் உன் பண்பு செயல்களை மறந்து திரிந்த அடியேனைப் பாதுகாத்து, அடியேன் உள்ளத்து வந்து, எப்பொருட்கண்ணும் உன்னை உணரும் உணர்வைத் தந்து, என்னை அடிமை கொண்டவனே! உன் பொற்பாதம் அடையப்பெற்றால் அல்லகண்டம் கொண்டு அடியேன் என் செய்கேனே.

திருவானைக்கா

நினைத்தவர்கள் நெஞ்சுளாய் வஞ்சக் கள்வா
நிறைமதியஞ் சடைவைத்தாய் அடையாதுன்பால்
முனைத்தவர்கள் புரமூன்று மெரியச் செற்றாய்
முன்னானைத் தோல்போர்த்த முதல்வா வென்றுங்
கனைத்துவரும் எருதேறுங் காள கண்டா
கயிலாய மலையாநின் கழலே சேர்ந்தேன்
அனைத்துலகும் ஆள்வானே ஆனைக் காவா
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே. **#623**

எல்லா உலகங்களையும் ஆள்கின்ற ஆனைக்காப் பெருமானே! உன்னை அன்போடு நினைப்பவர்களுடைய நெஞ்சிலே மறைந்து

உறையும் வஞ்சனையை உடைய கள்வனே! ஒளி நிறைந்த பிறையைச் சடையில் சூடியவனே! உன்னைச் சரணடையாது, உன்னோடு பகைத்தவர்களின் மதில்கள் மூன்றும் தீயில் எரியுமாறு அழித்தவனே! முன் ஒரு காலத்தில் யானை ஒன்றனைக் கொன்று அதன் தோலைப் போர்த்திய உலக காரணனே! செருக்கி ஒலித்துக்கொண்டு வரும் காளையை இவர்ந்த நீல கண்டனே! கயிலாய மலையில் உறைபவனே! உன் திருவடிகளை அடைந்த அடியேன் அல்லகண்டம் கொண்டு என் செய்கேனே!

திருவானைக்கா

இம்மாயப் பிறப்பென்னுங் கடலாந் துன்பத்
திடைச்சுழிப்பட் டிளைப்பேனை இளையா வண்ணங்
கைம்மான மனத்துதவிக் கருணை செய்து
காதலரு ளவைவைத்தாய் காண நில்லாய்
வெம்மான மதகரியி னுரிவை போர்த்த
வேதியனே தென்னானைக் காவுள் மேய
அம்மான்நின் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே. **#624**

கொடிய மதச் செருக்குடைய யானைத் தோலைப் போர்த்த வேதியனே! அழகான ஆனைக்காவை உகந்தருளியிருக்கும் தலைவனே! இந்த நிலையின்மையை உடைய பிறவிக் கடலில் துன்பமாகிய சுழியில் அகப்பட்டு, வருந்தும் என்னைக் கைகொடுத்து நீர்ச் சுழியிலிருந்து காப்பவரைப்போல, மனத்திலிருந்து உதவி செய்து, கருணை காட்டி, என்னிடத்தில் அன்பையும், அருளையும் பொழிந்தும், யான் கண்ணால் காணுமாறு வெளியேநிற்கின்றாய் அல்லை. நின் பொற்பாதத்தை அடியேன் அடைப்பெற்றால் அல்லகண்டம் கொண்டு என் செய்கேனே!

திருவானைக்கா

உரையாரும் புகழானே யொற்றி யூராய்
கச்சியே கம்பனே காரோ ணத்தாய்
விரையாரும் மலர்தூவி வணங்கு வார்பால்
மிக்கானே அக்கரவம் ஆரம் பூண்டாய்
திரையாரும் புனற்பொன்னித் தீர்த்தம் மல்கு
திருவானைக் காவிலுறை தேனே வானோர்
அரையாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே. **#625**

புகழுவார் புகழும் சொற்களிலெல்லாம் நிறைந்த புகழுடையவனே! ஒற்றியூர், கச்சி ஏகம்பம், குடந்தை நாகைக் காரோணங்கள் இவற்றில்

உறைபவனே! நறுமணமுடைய மலர்களைத் தூவி வணங்கும் அடியவர் மனத்தில் மிக்கு விளங்குபவனே! எலும்பையும் பாம்பையும் மாலையாகப் பூண்டவனே! அலைகள் நிறைந்த நீரை உடைய காவிரியாகிய புண்ணிய தீர்த்தம் நிறைந்த திருவானைக்காவில் உள்ள தேன் போன்ற இனியவனே! தேவர் தலைவனே! உன்பொற்பாதம் அடியேன் அடையப் பெற்றால் அல்ல கண்டம் கொண்டு என் செய்கேனே.

திருவானைக்கா

மையாரும் மணிமிடற்றாய் மாதோர் கூறாய்
மான்மறியும் மாமழுவும் அனலு மேந்துங்
கையானே காலனுடல் மாளச் செற்ற
கங்காளா முன்கோளும் விளைவு மானாய்
செய்யானே திருமேனி யரியாய் தேவர்குலக்கொழுந்தே
தென்னானைக் காவுள் மேய
ஐயாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்அல்லகண்டங்
கொண்டடியேன் என்செய் கேனே. **#626**

நீலகண்டனே! பார்வதிபாகனே! மான்கன்று, பெரிய மழுப்படை, நெருப்பு இவற்றைத் தாங்கும் திருக்கரங்களை உடையவனே! கூற்றுவனுடைய உயிர்போகுமாறு அவனை அழித்த, முழு எலும்புக்கூடு அணிந்தவனே! முற்பிறப்புக்களில் செய்து கொள்ளப்பட்ட வினைகளும் அவற்றின் பயன்களும் ஆனவனே! செம்மேனி அம்மானே! யாவர்க்கும் நேராகக் காண்பதற்கு அரியவனே! தேவர் குலத்துத் தளிர் போன்றவனே! அழகிய ஆனைக்காவுள் உறையும் தலைவனே! உன்பொற்பாதங்களை அடியேன் அடையப்பெற்றால் அல்ல கண்டம் கொண்டு என் செய்கேனே.

திருவானைக்கா

இலையாருஞ் சூலத்தாய் எண்டோ ளானே
எவ்விடத்தும் நீயல்லா தில்லை யென்று
தலையாரக் கும்பிடுவார் தன்மை யானை
தழல்மடுத்த மாமேருக் கையில் வைத்த
சிலையானே திருவானைக் காவுள் மேய
தீயாடீ சிறுநோயால் நலிவுண் டுள்ளம்
அலையாதே நின்னடியே அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே. **#627**

இலைவடிவாக அமைந்த சூலத்தை ஏந்தியவனே! பெருந் தோள்களை உடையவனே! எவ்விடத்தும் உன்னைத் தவிர வேறு பொருள் இல்லை

என்று, தலைமேல் கைகுவித்துக் கும்பிடுபவர் செயல்களுக்கு உதவும் பண்பினனே! மேருவாகிய வில்லைக் கையில் கொண்டு, திரிபுரத்தைத் தீக்கு இரை ஆக்கியவனே! திருவானைக்காவுள் உறையும், தீயில் கூத்து நிகழ்த்துபவனே! சிறிய நோய்களால் துன்புறுத்தப்பட்டு உள்ளம் வருந்தாது, நின் அடியே அடைதல் கூடுமாயின் அல்லகண்டம் கொண்டு அடியேன் என் செய்கேனே.

திருவானைக்கா

விண்ணாரும் புனல்பொதிசெஞ் சடையாய் வேத
நெறியானே யெறிகடலின் நஞ்ச முண்டாய்
எண்ணாரும் புகழானே உன்னை யெம்மான்
என்றென்றே நாவினில்எப் பொழுதும் உன்னிக்
கண்ணாரக் கண்டிருக்கக் களித்தெப் போதுங்கடிபொழில்சூழ்
தென்னானைக் காவுள் மேய
அண்ணாநின் பொற்பாதம் அடையப் பெற்றால்அல்லகண்டங்
கொண்டடியேன் என்செய் கேனே. **#628**

ஆகாய கங்கை தங்கிய செந்நிறச் சடையனே! வேத நெறியை உபதேசித்தவனே! கடலின் விடத்தை உண்டவனே! எண் நிறைந்த புகழ்களுக்கு உரிய பண்புகளையும் செயல்களையும் உடையவனே! உன்னை என் தலைவன் என்று நாவினால் எப்பொழுதும் கூறி மனத்தால் நினைத்துக் கண்கள் மகிழ்ச்சி நிறையுமாறு காணும்படி எப்பொழுதும் நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்த அழகிய ஆனைக்காவுள் உகந்தருளியிருக்கும் அண்ணால்! நின்பொற்பாதம் அடையப் பெற்றால் அல்ல கண்டம் கொண்டு என் செய்கேனே.

திருவானைக்கா

கொடியேயும் வெள்ளேற்றாய் கூளி பாடக்
குறட்பூதங் கூத்தாட நீயும் ஆடி
வடிவேயும் மங்கைதனை வைத்த மைந்தா
மதிலானைக் காவுளாய் மாகா ளத்தாய்
படியேயுங் கடலிலங்கைக் கோமான் தன்னைப்பருமுடியுந்
திரள்தோளும் அடர்த்து கந்த
அடியேவந் தடைந்தடிமை யாகப் பெற்றால்அல்லகண்டங்
கொண்டடியேன் என்செய் கேனே. **#629**

கொடியில் எழுதப்பட்ட உருவாக அமைந்த காளையை உடையவனே! பேய்கள் பாடக் குட்டையான பூதங்கள் கூத்தாட, நீயும் கூத்து நிகழ்த்தி, அழகிய பார்வதி பாகனாய், மதில்களை உடைய ஆனைக்காவிலும், உஞ்சேனி, இரும்பை, அம்பர் மாகாளங்களிலும் உறைபவனே! நிலம்

முழுதும் சூழ்ந்த கடலிடையே உள்ள இலங்கை மன்னனான இராவணனுடைய பருத்த தலைகளையும் வலிய தோள்களையும் நெரித்து, மகிழ்ந்த உன் திருவடிகளைச் சரணாக அடைந்து உனக்கு அடிமையாகப் பெற்றால் அல்ல கண்டம் கொண்டு அடியேன் என் செய்கேனே.

திருவானைக்கா

திருவானைக்கா, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சம்புகேசுவரர்.
தேவியார் : அகிலாண்டநாயகியம்மை.

முன்னானைத் தோல்போர்த்த மூர்த்தி தன்னை
மூவாத சிந்தையே மனமே வாக்கே
தன்னானை யாப்பண்ணி யேறி னானைச்
சார்தற் கரியானை தாதை தன்னை
என்னானைக் கன்றினையென் ஈசன் தன்னை
யெறிநீர்த் திரையுகளும் காவிரிசூழ்
தென்னானைக் காவானைத் தேனைப் பாலைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. **#630**

முன் ஒரு காலத்தில் யானையைக் கொன்று, அதன் தோலைப் போர்த்தியவனாய், ஞானம் மிகப் பெறாத அடியேனுடைய சிந்தை மனம் வாக்கு இவற்றைத்தான் இவரும் யானைகளாகக் கொண்டு இவர்ந்தானாய், அடியார்க்கு அல்லது மற்றவருக்குக் கிட்டுதற்கு அரியனாய், எல்லோருக்கும் தந்தையாய், என் ஆனைக்கன்று போன்று எனக்கு இனியவனாய், என்னை அடக்கி ஆள்பவனாய், அலைகள் மோதும் காவிரியை அடுத்த அழகிய ஆனைக்காவில் தேனாகவும் பாலாகவும் இனியனாய், நீர்த்திரள் வடிவாக அமைந்த பெருமானை நான் தலைப்பட்டேன்.

திருவானைக்கா

மருந்தானை மந்திரிப்பார் மனத்து ளானை
வளர்மதியஞ் சடையானை மகிழ்ந்தென் உள்ளத்
திருந்தானை இறப்பிலியைப் பிறப்பி லானை
இமையவர்தம் பெருமானை யுமையா ளஞ்சக்
கருந்தான மதகளிற்றி னுரிபோர்த் தானைக்
கனமழுவாட் படையானைப் பலிகொண் டூரூர்
திரிந்தானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. **#631**

அமுதமாக உள்ளவனாய், தியானிப்பவர் மனத்து இருப்பவனாய், பிறையை அணிந்த சடையனாய், மகிழ்ந்து என் உள்ளத்து இருப்பானாய், பிறப்பு இறப்பு இல்லாதவனாய், தேவர்கள் தலைவனாய், பார்வதி அஞ்சுமாறு கரிய மத நீரை உடைய யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்தியவனாய், வலிய மழுப்படையை உடையவனாய், ஊர் ஊராய்ப் பிச்சை எடுத்துத் திரிவானாய்த் திருவானைக்காவில் உள்ள நீர்த்திரள்' வடிவாக அமைந்த பெருமானைத் தலைப்பட்டேன்.

திருவானைக்கா

முற்றாத வெண்டிங்கட் கண்ணி யானை
முந்நீர்நஞ் சுண்டிமையோர்க் கமுதம் நல்கும்
உற்றானைப் பல்லுயிர்க்குந் துணையா னானை
ஓங்காரத் துட்பொருளை உலக மெல்லாம்
பெற்றானைப் பின்னிறக்கஞ் செய்வான் தன்னைப்
பிரானென்று போற்றாதார் புரங்கள் மூன்றுஞ்
செற்றானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடினேனே. **#632**

பிறையை முடிமாலையாக அணிந்தவனாய், கடலில் தோன்றிய விடத்தை உண்டு தேவர்க்கு அமுதம் வழங்கும் உறவினனாய், பல உயிர்களுக்கும் துணையாவானாய், ஓங்காரத்தின் உட்பொருளாய், உலகங்களை எல்லாம் தோற்றுவித்துப்பின் ஒடுக்குபவனாய்த் தன்னைத் தலைவன் என்று போற்றாத அசுரர்களின் முப்புரங்களையும் அழித்தவனாய்த் திருவானைக்காவுள் உறைபவனாய் உள்ள செழுநீர்த் திரளைச் சென்று ஆடினேனே.

திருவானைக்கா

காராருங் கறைமிடற்றெம் பெருமான் தன்னைக்
காதில்வெண் குழையானைக் கமழ்பூங் கொன்றைத்
தாரானைப் புலியதளி னாடை யானைத்
தானன்றி வேறொன்று மில்லா ஞானப்
பேரானை மணியார மார்பி னானைப்பிஞ்ஞகனைத் தெய்வநான் மறைகள் பூண்ட
தேரானைத் திருவானைக் காவு ளானைச்செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. **#633**

கருமை நிறைந்த நீலகண்டனாய்க் காதில் வெண்ணிறக்குழையை அணிந்தவனாய், நறுமணம் கமழும் கொன்றைப் பூ மாலையனாய், புலித்தோலை ஆடையாக அணிந்தவனாய், ஞானமே வடிவாகிய

பொருளாய் உள்ளவனாய், படிகமணிமாலையை மார்பில் அணிபவனாய், உலகங்களை அழிப்பவனாய், தெய்வத் தன்மை பொருந்திய நான்கு வேதங்களாகிய குதிரைகள் பூட்டப்பட்ட தேரை உடையவனாய், திருவானைக்காவில் உறைபவனாய், உள்ள செழு நீர்த்திரளைச் சென்று ஆடினேனே.

திருவானைக்கா

பொய்யேது மில்லாத மெய்யன் தன்னைப்
புண்ணியனை நண்ணாதார் புரம்நீ றாக
எய்தானைச் செய்தவத்தின் மிக்கான் தன்னை
ஏறமரும் பெருமானை யிடமான் ஏந்தும்
கையானைக் கங்காள வேடத் தானைக்
கட்டங்கக் கொடியானைக் கனல்போல் மேனிச்
செய்யானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. **#634**

பொய்க்கலப்பற்ற மெய்ம்மை வடிவினனாய், புண்ணியனாய், பகைவர் மும்மதில்களும் சாம்பலாகுமாறு அம்பு செலுத்தியவனாய், தவத்தில் மேம்பட்டவனாய், காளை வாகனனாய், மானை ஏந்தும் இடக்கையனாய், கங்காள வேடத்தானாய், கட்டங்கம் என்ற படையின் வடிவம் எழுதப்பட்ட கொடியை உடையவனாய், தீயைப்போன்று சிவந்த மேனியனாய்த் திருவானைக்காவுள் உறைபவனாய் உள்ள செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேனே.

திருவானைக்கா

கலையானைப் பரசுதர பாணி யானைக்
கனவயிரத் திரளானை மணிமா ணிக்க
மலையானை யென்தலையி னுச்சி யானை
வார்தருபுன் சடையானை மயானம் மன்னும்
நிலையானை வரியரவு நாணாக் கோத்து
நினையாதார் புரமெரிய வளைத்த மேருச்
சிலையானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. **#635**

கலையையும், மழுப்படையையும் ஏந்திய கைகளை உடையவனாய், பெரிய வயிரத்திரளாய், மாணிக்கமலையாய், என் தலையின்மேல் உள்ளானாய், நீண்ட செஞ்சடையனாய், சுடுகாட்டில் நிலையாக இருப்பவனாய், வாசுகி என்ற பாம்பை நாணாகக் கோத்து, தன்னை விருப்புற்று நினையாத அசுரர்களின் மும்மதில்களும் எரிந்து சாம்பலாகுமாறு, வளைக்கப்பட்ட மேருமலையாகிய வில்லினை

உடையவனாய், திருவானைக்காவில், உள்ள செழுநீர்த் திரளைச் சென்று ஆடினேனே.

திருவானைக்கா

ஆதியனை யெறிமணியி னோசை யானை
அண்டத்தார்க் கறிவொண்ணா தப்பால் மிக்க
சோதியனைத் தூமறையின் பொருளான் தன்னைச்
சுரும்பமரும் மலர்க்கொன்றை தொன்னூல் பூண்ட
வேதியனை அறமுரைத்த பட்டன் தன்னை
விளங்குமல ரயன்சிரங்கள் ஐந்தி லொன்றைச்
சேதியனைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. **#636**

எல்லோருக்கும் முற்பட்டவனாய், மணியின் ஓசை போல எங்கும் பரந்தவனாய், உலகில் உள்ளவரால் அறிய முடியாதபடி உலகுக்கு அப்பாலும் பரவிய சோதி வடிவினனாய், வேதத்தின் விழுமிய பொருளாய், வண்டுகள் தங்கும் கொன்றை மலர், எல்லோருக்கும் முற்படத் தான் பூண்ட பூணூல் இவற்றால் விளங்கும் வேதியனாய், அறத்தை உபதேசித்த ஆசிரியனாய், தாமரையில் விளங்கும் பிரமனுடைய ஐந்து தலைகளில் ஒன்றை நீக்கியவனாய், திருவானைக்காவில் உறைபவனாய், உள்ள செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேனே.

திருவானைக்கா

மகிழ்ந்தானைக் கச்சியே கம்பன் தன்னை
மறவாது கழல்நினைந்து வாழ்த்தி ஏத்திப்
புகழ்ந்தாரைப் பொன்னுலகம் ஆள்விப் பானைப்
பூதகணப் படையானைப் புறங்காட் டாடல்
உகந்தானைப் பிச்சையே யிச்சிப் பானைஒண்பவளத் திரளையென் னுள்ளத் துள்ளே
திகழ்ந்தானைத் திருவானைக் காவு ளானைச்செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. **#637**

கச்சி ஏகம்பத்தை விரும்பி உறைபவனாய், தன் திருவடிகளை மறவாது விருப்புற்று நினைத்து வாழ்த்தி உயர்த்திப் புகழ்ந்த அடியவர்களைப் பொன்னுலகு எனப்படும் தேவர் உலகை ஆளச் செய்பவனாய், பூதகணமாகிய படையை உடையவனாய், சுடு காட்டில் கூத்தாடுதலை விரும்புபவனாய், பிச்சை ஏற்றலை ஆசைப்படுபவனாய், பவளத்திரள்போல என் உள்ளத்தில் விளங்குபவனாய், திருவானைக்காவுள் உறைபவனாய், உள்ள செழுநீர்த்திரளைச் சென்று

ஆடினேனே.

திருவானைக்கா

நசையானை நால்வேதத் தப்பா லானை
நல்குரவு தீப்பிணிநோய் காப்பான் தன்னை
இசையானை யெண்ணிறந்த குணத்தான் தன்னை
இடைமருதும் ஈங்கோயும் நீங்கா தேற்றின்
மிசையானை விரிகடலும் மண்ணும் விண்ணும்
மிகுதீயும் புனலெறிகாற் றாகி யெட்டுத்
திசையானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. **#638**

எல்லோருடைய விருப்பத்திற்கும் உரியவனாய், நான்கு வேதங்களுக்கும் அப்பாற்பட்டவனாய், வறுமை மனநோய்கள் உடல்நோய்கள் ஆகியவற்றை நீக்குபவனாய்ப் புகழுக்கு உரியவனாய், எல்லையற்ற நற்குணங்களுக்கு இருப்பிடமாயவனாய், இடை மருதும் ஈங்கோயும் உறைவிடமாக உடையவனாய், காளைவாகனனாய், விரிந்த கடலும் ஐம்பூதங்களும் எட்டுத் திசைகளும் ஆகியவனாய், திருவானைக்காவுள் உறைவானாய், உள்ள செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேனே.

திருவானைக்கா

பார்த்தானைக் காமனுடல் பொடியாய் வீழப்
பண்டயன்மால் இருவர்க்கும் அறியா வண்ணஞ்
சீர்த்தானைச் செந்தழல்போ லுருவி னானைத்
தேவர்கள் தம் பெருமானைத் திறமுன்னாதே
ஆர்த்தோடி மலையெடுத்த இலங்கை வேந்தன்
ஆண்மையெலாங் கெடுத்தவன்தன் இடரப் போதே
தீர்த்தானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. **#639**

மன்மதன் உடல் சாம்பலாகுமாறு அவனை நெற்றிக் கண்ணால் நோக்கியவனாய், ஒருகாலத்தில் பிரமன் திருமால் இருவரும் தன்னை முடி அடி அறிய முடியாதவாறு தீப்பிழம்பாய் நின்றவனாய், தேவர்கள் தலைவனாய், தன்னுடைய வலிமையை நினைத்துப்பாராமல் ஆரவாரித்து ஓடிவந்து, கயிலை மலையை எடுத்த இராவணனுடைய ஆற்றலைப் போக்கிப்பின் அவன் துயரை அப்பொழுதே தீர்த்தானாய்த் திருவானைக்காவுள் உறைபவனாய் உள்ள செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேனே.

திருவேகம்பம்

திருஏகம்பம்

திருவேகம்பம், திருத்தாண்டகம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஏகாம்பரநாதர்.
தேவியார் : காமாட்சியம்மை.

கூற்றுவன்காண் கூற்றுவனைக்குமைத்த கோன்காண்
குவலயன்காண் குவலயத்தின் நீரா னான்காண்
காற்றவன்காண் கனலவன்காண் கலிக்கும் மின்காண்
கனபவளச் செம்மேனி கலந்த வெள்ளை
நீற்றவன்காண் நிலாவூருஞ் சென்னி யான்காண்
நிறையார்ந்த புனற்கங்கை நிமிர்ச டைமேல்
ஏற்றவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண் அவன்என் எண்ணத் தானே. **#640**

உலகை அழிப்பவனாய், கூற்றுவனை அழித்த தலைவனாய், உலக காரணனாய், உலகில் நீரும் காற்றும் கனலும் ஒலிக்கின்ற மேகமும் அதன் மின்னலுமாகி, பவளச் செம்மேனியில் வெண்ணீறு அணிந்து, பிறைதவழும் சென்னியனாய், கங்கை வெள்ளத்தை நிமிர்ந்த சடைமேல் ஏற்றவனாய், அழகு நிறைந்த சோலைகள் சூழ்ந்த கச்சி ஏகம்பத்திலுள்ள பெருமான் என் எண்ணத்தின்கண் ஆயினான்.

திருஏகம்பம்

பரந்தவன்காண் பல்லுயிர்க ளாகி யெங்கும்
பணிந்தெழுவார் பாவமும் வினையும் போகத்
துரந்தவன்காண் தூமலரங் கண்ணி யான்காண்
தோற்ற நிலையிறுதிப் பொருளாய் வந்த
மருந்தவன்காண் வையகங்கள் பொறைதீர்ப் பான்காண்
மலர்தூவி நினைந்தெழுவா ருள்ளம் நீங்கா
திருந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#641**

பல உயிர்களாகி எங்கும் பரந்தவனாய், தன்னை வழிபட்டு எழுபவருடைய பாவங்களையும் வினைகளையும் போக்கியவனாய், தூய பூக்களாலாகிய முடிமாலையை உடையவனாய், உலகைப்படைத்துக் காத்து அழிக்கும் பொருளாய் அமைந்த அமுதமாய், உலகங்களின் பாரத்தைப் போக்குபவனாய், மலர்களைத் திருவடிகளில் சேர்த்து, விருப்புற்று நினைத்து வழிபடுபவர்களுடைய உள்ளத்தை விடுத்து

நீங்காது இருப்பவனாய், உள்ள எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி ஏகம்பன் என் எண்ணத்தான்.

திருஏகம்பம்

நீற்றவன்காண் நீராகித் தீயா னான்காண்
நிறைமழுவுந் தமருகமும் எரியுங் கையில்
தோற்றவன்காண் தோற்றக் கேடில்லா தான்காண்
துணையிலிகாண் துணையென்று தொழுவா ருள்ளம்
போற்றவன்காண் புகழ்கள்தமைப் படைத்தான் றான்காண்
பொறியரவும் விரிசடைமேற் புனலுங் கங்கை
ஏற்றவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#642**

திருநீறு அணிந்தவனாய், நீரும் தீயும் ஆனவனாய், கனமான மழுப்படை உடுக்கை அக்கினி இவற்றைக் கைகளில் ஏந்தியவனாய்த் தனக்குப் பிறப்பும் இறப்பும் இல்லாதவனாய், ஒப்பற்றவனாய், தன்னைத் துணையாகக் கொண்டு தொழும் அடியவர்களுடைய உள்ளத்தைப் பாதுகாப்பவனாய், புகழ்கள் படைத்தவனாய், விரிந்த சடைமீது புள்ளிகளை உடைய பாம்பினையும் கங்கையையும் ஏற்றவனாய், உள்ள எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி ஏகம்பன் என் எண்ணத்தான்.

திருஏகம்பம்

தாயவன்காண் உலகிற்குத் தன்னொப் பில்லாத்
தத்துவன்காண் மலைமங்கை பங்கா என்பார்
வாயவன்காண் வரும்பிறவி நோய்தீர்ப் பான்காண்
வானவர்க்குந் தானவர்க்கும் மண்ணு ளோர்க்கும்
சேயவன்காண் நினைவார்க்குச் சித்த மாரத்
திருவடியே உள்கிநினைந் தெழுவா ருள்ளம்
ஏயவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண் அவன்என் எண்ணத்தானே. **#643**

உலகிற்குத் தாயாய், தன்னொப்பார் இல்லாத தத்துவனாய்; பார்வதி பாகனாய், அடியவர்கள் வாக்கில் இருப்பவனாய், இனி வரக்கூடிய பிறவி நோயைத் தீர்ப்பானாய், உலகியலிலேயே ஈடுபடும் தன்னை நினையாத தேவர் தானவர் மக்கள் ஆகியோருக்குத் தூரத்திலுள்ளவனாய், மனமாரத் திருவடியை விரும்பித் தியானித்து எழுபவர் உள்ளத்தில் பொருந்தியவனாய், உள்ள எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி ஏகம்பன் என் எண்ணத்தான்.

திருஏகம்பம்

அடுத்தானை யுரித்தான்காண் * *
* * * * * * * **#644**

தன்னைக் கொல்ல நெருங்கி வந்த யானையைக் கொன்று அதன் தோலை உரித்தவன்.

திருஏகம்பம்

அழித்தவன்காண் எயில்மூன்றும் அயில்வா யம்பால்
ஐயாறும் இடைமருதும் ஆள்வான் தான்காண்
பழித்தவன்காண் அடையாரை அடைவார் தங்கள்
பற்றவன்காண் புற்றரவ நாணி னான்காண்
சுழித்தவன்காண் முடிக்கங்கை அடியே போற்றுந்
தூயமா முனிவர்க்காப் பார்மேல் நிற்க
இழித்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண் அவன்என் எண்ணத் தானே. **#645**

கூரிய வாயை உடைய அம்பினாலே மும்மதிலையும் அழித்தவனாய், ஐயாறும், இடைமருதும் ஆள்பவனாய், பகைவரைப் பழித்தவனாய், அடியார்களுக்குத் துணையாய் இருப்பவனாய், பாம்பினை வில் நாணாகக் கொண்டவனாய், தலையில் கங்கையைச் சுழன்று தங்கச் செய்தவனாய், தன் திருவடிகளை வழிபட்ட பகீரதனுக்காக உலகில் ஒடுமாறு கங்கை நீரைச் சிறிது இறக்கியவனாய், உள்ள எழில் ஆரும் பொழில் ஆரும் கச்சி ஏகம்பன் என் எண்ணத்தான்.

திருஏகம்பம்

அசைந்தவன்காண் நடமாடிப் பாடல் பேணி
அழல்வண்ணத் தில்அடியும் முடியுந் தேடப்
பசைந்தவன்காண் பேய்க்கணங்கள் பரவி யேத்தும்
பான்மையன்காண் பரவிநினைந் தெழுவார் தம்பால்
கசிந்தவன்காண் கரியினுரி போர்த்தான் தான்காண்
கடலில்விடம் உண்டமரர்க் கமுத மீய
இசைந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#646**

பாடலை விரும்பி, உடல் அசைந்து கூத்து நிகழ்த்தியவனாய், தன் தீப்பிழம்பாகிய வடிவில் அடியும், முடியும், மாலும் அயனும் தேட, அவர்களுக்கு இரங்கியவனாய், பேய்க் கூட்டங்கள் முன் நின்று துதித்துப் புகழும் இயல்பினனாய், தன்னை முன் நின்று துதித்துத் தியானிப்பவர்பால் மனம் இளகியவனாய், யானைத் தோலைப் போர்த்தவனாய், கடலின் விடத்தை உண்டு தேவர்களுக்கு அமுதம் ஈய மனம் பொருந்தியவனாய், உள்ள எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி

ஏகம்பன் என் எண்ணத்தானே.

திருஏகம்பம்

முடித்தவன்காண் வன்கூற்றைச் சீற்றத் தீயால்
வலியார்தம் புரமூன்றும் வேவச் சாபம்
பிடித்தவன்காண் பிஞ்ஞகனாம் வேடத் தான்காண்
பிணையல்வெறி கமழ்கொன்றை அரவு சென்னி
முடித்தவன்காண் மூவிலைநல் வேலி னான்காண்
முழங்கிஉரு மெனத்தோன்றும் மழையாய் மின்னி
இடித்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#647**

கொடிய கூற்றுவனை அழித்தவனாய், தன் கோபத்தீயினால், வலிய பகைவர்களின் மும்மதில்களும் தீயில் வெந்து அழியுமாறு, வில்லை ஏந்தியவனாய், தலைக்கோலம் அணிந்த வேடத்தானாய், நறுமணம் கமழும் கொன்றை மாலையையும், பாம்பையும் தலையில் அணிந்தவனாய், முத்தலைச் சூலத்தை உடையவனாய், மழையாய் மின்னி இடித்தவனாய், உள்ள எழிலாகும் பொழில் ஆர் கச்சி ஏகம்பன் என் எண்ணத்தானே.

திருஏகம்பம்

வருந்தவன்காண் மனமுருகி நினையா தார்க்கு
வஞ்சன்காண் அஞ்செழுத்து நினைவார்க் கென்றும்
மருந்தவன்காண் வான்பிணிகள் தீரும் வண்ணம்
வானகமும் மண்ணகமும் மற்று மாகிப்
பரந்தவன்காண் படர்சடையெட் டுடையான் தான்காண்
பங்கயத்தோன் தன்சிரத்தை யேந்தி யூரூர்
இரந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#648**

தன்னை மனம் உருகி நினையாதாருக்கு வஞ்சனாய், அஞ்செழுத்தை விருப்புற்று நினைப்பவர்களுக்கு என்றும் அவர்களுடைய பெரிய பிணிகளைத் தீர்க்கும் மருந்தானவனாய், தேவருலகும் மண்ணுலகும் மற்ற உலகங்களுமாகப் பரவியவனாய், நடுச்சடையை விடுத்துத் திசைக்கு ஒன்றாக ஆடும் எட்டுச்சடைகளை உடையவனாய், பிரமனுடைய மண்டையோட்டைக் கையில் ஏந்தி, ஊர் ஊராகப் பிச்சை எடுத்தவனாய், உள்ள எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி ஏகம்பன் என் எண்ணத்தானே.

திருஏகம்பம்

வெம்மான உழுவையத ளுரிபோர்த் தான்காண்
வேதத்தின் பொருளான்காண் என்றி யம்பி
விம்மாநின் றழுவார்கட் களிப்பான் தான்காண்
விடையேறித் திரிவான்காண் நடஞ்செய் பூதத்
தம்மான்காண் அகலிடங்கள் தாங்கி னான்காண்
அற்புதன்காண் சொற்பதமுங் கடந்து நின்ற
எம்மான்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#649**

'கொடிய பெருமை மிக்க புலித்தோலைப் போர்த்தி, வேதத்தின் பொருளாய், எம் இறைவன் உள்ளான்' என்று சொல்லி, மிடறு தழுதழுத்து, அழும் அடியவர்களுக்கு அருள் வழங்கு பவனாய், காளையை இவர்ந்து திரிபவனாய், கூத்தாடும் பூதங்களின் தலைவனாய், உலகங்களைத் தாங்கும் அற்புதனாய், சொல்லின் அளவைக் கடந்து நின்ற புகழை உடைய எம் தலைவனாய், எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி ஏகம்பன் என் எண்ணத்தானே.

திருஏகம்பம்

அறுத்தான்காண் அயன்சிரத்தை அமரர் வேண்ட
ஆழ்கடலின் நஞ்சுண்டங் கணிநீர்க் கங்கை
செறுத்தான்காண் தேவர்க்குந் தேவன் தான்காண்
திசையனைத்துந் தொழுதேத்தக் கலைமான் கையில்
பொறுத்தான்காண் புகலிடத்தை நலிய வந்து
பொருகயிலை எடுத்தவன்தன் முடிதோள் நாலஞ்
சிறுத்தான்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#650**

பிரமன் தலை ஒன்றை அறுத்தவனாய், தேவர் வேண்ட ஆழ்ந்த கடலின் விடத்தை உண்டு, கங்கையைச் சடையில் அடக்கியவனாய், தேவர்களுக்கும் தேவனாய், எண்திசையும் தொழுது வணங்குமாறு கலைமானைக் கையில் தாங்கியவனாய், தன் இருப்பிடமாகிய கயிலை மலையை அசைக்கவந்து, அதனைப் பெயர்த்த இராவணனுடைய பத்துத் தலைகளையும் இருபது தோள்களையும் நசுக்கியவனான, எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி ஏகம்பன் என் எண்ணத்தானே.

திருஏகம்பம்

திருவேகம்பம், திருத்தாண்டகம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஏகாம்பரநாதர்.
தேவியார் : காமாட்சியம்மை.

உத்தவன்காண் உரக்களிற்றை உமையாள் ஒல்க
ஓங்காரத் தொருவன்காண்உணர் மெய்ஞ் ஞானம்
விரித்தவன்காண் விரித்தநால் வேதத் தான்காண்
வியனுலகிற் பல்லுயிரை விதியி னாலே
தெரித்தவன்காண் சில்லுருவாய்த் தோன்றி யெங்குந்
திரண்டவன்காண் திரிபுரத்தை வேவ வில்லால்
எரித்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#651**

பார்வதி கண்டு அச்சத்தால் தளருமாறு, வலிய யானையின் தோலை உரித்தவனாய், ஓங்காரத்தால் உணர்த்தப்படுகின்ற பரம் பொருளாய் மெய்ஞ்ஞானத்தை விரித்தவனாய், நான்கு வேதங்களையும் ஓதுபவனாய், உலகில் பல உயிர்களையும் ஊழ்வினைப்படி படைத்தவனாய், எங்கும் சிறுதெய்வங்களாகவும் தோன்றிப் பரந்திருப்பவனாய், முப்புரங்களும் சாம்பலாகுமாறு வில்லால் எரித்தவனாய், அழகு நிறைந்த சோலைகள் நிரம்பிய கச்சி ஏகம்பன் என் எண்ணத்தில் உள்ளான்.

திருஏகம்பம்

நேசன்காண் நேசர்க்கு நேசந் தன்பால்
இல்லாத நெஞ்சத்து நீசர் தம்மைக்
கூசன்காண் கூசாதார் நெஞ்சு தஞ்சே
குடிகொண்ட குழகன்காண் அழகார் கொன்றை
வாசன்காண் மலைமங்கை பங்கன் தான்காண்
வானவர்கள் எப்பொழுதும் வணங்கி யேத்தும்
ஈசன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#652**

அடியார்க்கு அன்பனாய், தன்னிடம் அன்பு இல்லாத கீழ்மக்களை நினைத்துக் கூசி அகல்பவனாய், தன்னை வணங்குதற்கு நாணாதவர் மனத்தின் கண் எளிமையாய்த் தங்கும் இளையவனாய், அழகிய மணம் கமழும் கொன்றையை அணிந்தவனாய், பார்வதி பாகனாய், தேவர்கள் எப்பொழுதும் வணங்கித் துதிக்கும் எழிலாரும் பொழில் கச்சி ஏகம்பன் என் எண்ணத்தானே.

திருஏகம்பம்

பொறையவன்காண் பூமியேழ் தாங்கி யோங்கும்
புண்ணியன்காண் நண்ணியபுண்டரிகப்போதின்
மறையவன்காண் மறையவனைப் பயந்தோன் தான்காண்
வார்சடைமா சுணமணிந்து வளரும் பிள்ளைப்

பிறையவன்காண் பிறைதிகழும் எயிற்றுப் பேழ்வாய்ப்
பேயோடங் கிடுகாட்டில் எல்லி யாடும்
இறையவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#653**

பூமி முதலிய எழு உலகங்களையும் தாங்கி, மேம்படும் பாரத்தைச் சுமப்பவனாய், புண்ணியனாய், தாமரையில் உறையும் வேதா எனப்படும் பிரமனாய், அவனைப்படைத்த திருமாலாய், நீண்ட சடையில் பாம்போடு பிறையைச் சூடியவனாய், பிறையைப் போன்ற பற்களையும் பிளந்த வாயையும் உடைய பேய்களோடு சுடுகாட்டில் இரவில் கூத்து நிகழ்த்தும் தலைவனாய் உள்ள எழில் ஆரும் பொழில் கச்சி ஏகம்பன் என் எண்ணத்தானே.

திருஏகம்பம்

பாரவன்காண் விசும்பவன்காண் பவ்வந் தான்காண்
பனிவரைகள் இரவினொடு பகலாய் நின்ற
சீரவன்காண் திசையவன்காண் திசைக ளெட்டுஞ்
செறிந்தவன்காண் சிறந்தடியார் சிந்தை செய்யும்
பேரவன்காண் பேரா யிரங்க ளேத்தும்
பெரியவன்காண் அரியவன்காண் பெற்றம் ஊர்ந்த
ஏரவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#654**

பூமியாய், வானமாய், வெள்ளத்தை உடைய கடலாய், பனி உறையும் மலைகளாய், இரவாய்ப் பகலாய் உள்ள சிறப்பை உடையவனாய், திசைகளாய், திசைகள் எட்டின் கண்ணும் செறிந்தவனாய், அடியவர்கள் சிறப்பாகத் தியானிக்கும் பெயர்களை உடையவனாய், ஆயிரம் பெயர்களால் போற்றப்படும் பெரியவனாய், அடியார் அல்லார்க்குக் கிட்டுதற்கு அரியவனாய், காளையை இவரும் அழகினை உடையவனாய் உள்ள எழில் ஆரும் பொழில் கச்சி ஏகம்பன் என் எண்ணத்தானே.

திருஏகம்பம்

பெருந்தவத்தெம் பிஞ்ஞகன்காண் பிறைசூ டிகாண்
பேதையேன் வாதையுறு பிணியைத் தீர்க்கும்
மருந்தவன்காண் மந்திரங்க ளாயி னான்காண்
வானவர்கள் தாம்வணங்கும் மாதே வன்காண்
அருந்தவத்தான் ஆயிழையாள் உமையாள் பாகம்
அமர்ந்தவன்காண் அமரர்கள்தாம் அர்ச்சித் தேத்த
இருந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி

ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#655**
பெரிய தவக்கோலத்தையும், தலைக்கோலத்தையும் உடையவனாய்ப் பிறையைச் சூடியவனாய், அடியேனுடைய துன்புறுத்தும் நோயைத் தீர்க்கும் மருந்தாய், மந்திரங்களாய், தேவர்கள் வணங்கும் பெருந்தேவனாய், மிக்க தவத்தை உடைய பார்வதி பாகனாய், தேவர்கள் அர்ச்சனை செய்து துதிக்குமாறு இருப்பவனாய், உள்ள எழில் ஆரும் பொழில் கச்சி ஏகம்பன் என் எண்ணத்தானே.

திருஏகம்பம்

ஆய்ந்தவன்காண் அருமறையோ டங்கம் ஆறும்
அணிந்தவன்காண் ஆடரவோ டென்பு மாமை
காய்ந்தவன்காண் கண்ணழலாற் காமன் ஆகங்
கனன்றெழுந்த காலனுடல் பொடியாய் வீழப்
பாய்ந்தவன்காண் பண்டுபல சருகால் பந்தர்
பயின்றநூற் சிலந்திக்குப் பாராள் செல்வம்
ஈந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#656**
அரிய வேதங்களையும், ஆறு அங்கங்களையும் ஆராய்பவனாய், படம் எடுத்து ஆடும் பாம்பு, எலும்பு, ஆமை இவற்றை அணிந்தவனாய், கண்ணிலிருந்து புறப்பட்ட தீயினால் மன்மதனுடைய உடம்பை எத்தவனாய், வெகுண்டெழுந்த கூற்றுவனுடைய உடம்பு அழியுமாறு காலால் பாய்ந்தவனாய், ஒரு காலத்தில் பல சருகுகளைத் தன் வாயிலிருந்து வெளிப்படும் நூலால் இணைத்துத் தனக்கு நிழல் தரும் பந்தலை அமைத்த சிலந்திக்கு நாட்டை ஆளும் செல்வத்தை ஈந்தவனாய் உள்ள எழில் ஆரும் பொழில் கச்சி ஏகம்பன் என் எண்ணத்தானே.

திருஏகம்பம்

உமையவளை யொருபாகஞ் சேர்த்தி னான்காண்
உகந்தொலிநீர்க் கங்கைசடை யொழுக்கி னான்காண்
இமய வடகயிலைச் செல்வன் தான்காண்
இற்பலிக்குச் சென்றுழலும் நல்கூர்ந் தான்காண்
சமயமவை யாறினுக்குந் தலைவன் தான்காண்
தத்துவன்காண் உத்தமன்காண் தானே யாய
இமையவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#657**
பார்வதி பாகனாய், மகிழ்ந்து கங்கையைச் சடையில் ஒடுக்கியவனாய், இமயமலையில் உள்ள வடகயிலை மலையில் உறையும் செல்வனாய், வீடுகள் தோறும் பிச்சைக்கு அலையும் வறியவனாய், ஆறுவகை

வைதிகச் சமயங்களுக்கும் தலைவனாய், மெய்ப்பொருளாய், உயர்வற உயர்நலம் உடையவனாய்த் தனக்குத்தானே நிகராகும் தேவனாய் உள்ள எழில் ஆரும் பொழில் கச்சி ஏகம்பன் என் எண்ணத்தானே.

திருஏகம்பம்

தொண்டுபடு தொண்டர்துயர் தீர்ப்பான் தான்காண்
தூமலர்ச்சே வடியிணையெம் சோதி யான்காண்
உண்டுபடு விடங்கண்டத் தொடுக்கி னான்காண்
ஒலிகடலில் அமுதமரர்க் குதவி னான்காண்
வண்டுபடு மலர்க்கொன்றை மாலை யான்காண்
வாண்மதியாய் நாண்மீனு மாயி னான்காண்
எண்டிசையும் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#658**

அடிமை செய்யும் அடியார் துயரங்களைத் தீர்ப்பவனாய், தூய மலர்போன்ற திருவடிகளை உடைய, எம் சோதி வடிவினனாய், உண்டவிடத்தைக் கழுத்தில் ஒடுக்கியவனாய், கடலிலிருந்து வெளிப்பட்ட அமுதத்தைத் தேவர்களுக்கு உதவியவனாய், வண்டுகள் பொருந்தும் கொன்றை மலர் மாலையனாய், ஒளி பொருந்திய சந்திரனும் விண்மீன்களும் ஆயினவனாய், எட்டுத் திசைகளிலும் அழகு நிறைந்த பொழில் ஆர் கச்சி ஏகம்பன் என் எண்ணத்தானே.

திருஏகம்பம்

முந்தைகாண் மூவரினும் முதலா னான்காண்
மூவிலைவேல் மூர்த்திகாண் முருக வேட்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தி னாற்குத்
தாதைகாண் தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச் சிவனவன்காண் செங்கண்மால் விடையொன் றேறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#659**

யாவரினும் முற்பட்டவனாய், மும்மூர்த்திகளிலும் வேறுபட்டு, அவர்கள் தோற்றத்துக்குக் காரணனாய், முத்தலைச் சூலம் ஏந்தியவனாய், முருகனுக்கும் யானைமுகத்தானாகிய விநாயகனுக்கும் தந்தையாய், பணிந்து தன் திருவடிகளை வணங்கும் அடியவர்களுக்கு அவர்கள் சிந்தையில் அகப்படுபவனாய், புறப்பொருள்கள் மாட்டுச் செல்லாத உள்ளத்தாருக்கு இன்பவடிவினனாய், செங்கண்ணனாகிய திருமாலைக் காளையாகக் கொண்டு இவரும் எம் தலைவனாய் உள்ள எழில் ஆரும் பொழில் கச்சி ஏகம்பன் என் எண்ணத்தானே.

<u>திருஏகம்பம்</u>

பொன்னிசையும் புரிசடையெம் புனிதன் தான்காண்
பூதகண நாதன்காண் புலித்தோ லாடை
தன்னிசைய வைத்தளழி லரவி னான்காண்
சங்கவெண் குழைக்காதிற் சதுரன் தான்காண்
மின்னிசையும் வெள்ளெயிற்றோன்வெகுண்டு வெற்பை
யெடுக்கஅடி யடர்ப்பமீண் டவன்றன் வாயில்
இன்னிசைகேட் டிலங்கொளிவா ளீந்தோன் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#660**

பொன்போன்ற ஒளிவீசும் முறுக்கேறிய சடையை உடைய எம் தூயோனாய், பூதகணத் தலைவனாய், புலித்தோலாகிய ஆடையின் மேல் இறுக்கிச் சுற்றிய அழகிய பாம்பினை உடையவனாய், காதில் சங்கினாலாகிய குழையை அணிந்த திறமை உடையவனாய், மின்னலைப் போல ஒளி வீசும் வெள்ளிய பற்களை உடைய இராவணன், கோபம் கொண்டு கயிலை மலையை அசைக்கத் தன் திருவடி அவனை நசுக்க, பின்னர் அவன் வாயிலிருந்து வெளிப்பட்ட இனிய இசையைக் கேட்டு, அவனுக்குச் சந்திரகாசம் என்ற வாளினை வழங்கிய கச்சி ஏகம்பன் என்எண்ணத்திலுள்ளான்.

திருநாகேச்சரம்

திருநாகேச்சரம்

திருநாகேச்சரம், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சண்பகாரண்ணியேசுவரர்.
தேவியார் : குன்றமுலைநாயகியம்மை.

தாயவனை வானோர்க்கும் ஏனோ ருக்குந்
தலையவனை மலையவனை உலக மெல்லாம்
ஆயவனைச் சேயவனை அணியான் தன்னை
அழலவனை நிழலவனை அறிய வொண்ணா
மாயவனை மறையவனை மறையோர் தங்கள்
மந்திரனைத் தந்திரனை வளரா நின்ற
தீயவனைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே. **#661**

தேவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தாய் போல்பவனாய், எல்லாருக்கும் தலைவனாய், மலைகளில் உறைபவனாய், எல்லா உலகங்களும் ஆகியவனாய், அடியார் அல்லாதாருக்குத் தீப்போன்றவனாய்ச் சேய்மையிலுள்ளவனாய், அடியார்களுக்குநிழல் போன்றவனாய் அண்மையில் உள்ளவனாய், பிறரால் அறியப்படாதவியத்தகு பண்பு செயல்களை உடையவனாய், வேதம் ஓதுபவனாய், வேதியர்கள் தியானிக்கும் மந்திரவடிவாய் உள்ளவனாய், ஆகமமாக இருப்பவனாய்,வேள்வித்தீயாய் இருப்பவனாய், திருநாகேச்சரத்தில் உள்ள பெருமானை அடைந்து வழிபடாதவர்கள் நல்ல வழியில் செல்லாதவராவர்.

திருநாகேச்சரம்

உரித்தானை மதவேழந் தன்னை மின்னா
ரொளிமுடியெம் பெருமானை உமையோர் பாகந்
தரித்தானைத் தரியலர்தம் புரமெய் தானைத்
தன்னடைந்தார் தம்வினைநோய் பாவ மெல்லாம்
அரித்தானை ஆலதன்கீழ் இருந்து நால்வர்க்
கறம்பொருள்வீ டின்பமா றங்கம் வேதந்
தெரித்தானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே. **#662**

மத யானைத் தோலை உரித்தவனாய், மின்னல் போல ஒளி வீசும் சடை முடிஉடையவனாய், பார்வதி பாகனாய், பகைவர் மும்மதில்களை

எரித்தவனாய்,அடியார்களுடைய வினைப்பயனாம் நோய்களையும் பாவங்களையும்போக்கியவனாய், கல்லால மரத்தின் அடியில் அமர்ந்து முனிவர் நால்வர்க்குஅறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள்களையும் அவற்றை உணரும்கருவிகளாகிய நான்கு வேதம் ஆறு அங்கங்கள் ஆகியவற்றையும்உபதேசித்தவனாய்த் திருநாகேச்சரத்தில் உறையும் பெருமானைச் சேராதார்நன்னெறிக்கண் சேராதாரே.

திருநாகேச்சரம்

காரானை உரிபோர்த்த கடவுள் தன்னைக்
காதலித்து நினையாத கயவர் நெஞ்சில்
வாரானை மதிப்பவர்தம் மனத்து ளானை
மற்றொருவர் தன்னொப்பா ரொப்பி லாத
ஏரானை இமையவர்தம் பெருமான் தன்னை
இயல்பாகி உலகெலாம் நிறைந்து மிக்க
சீரானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே. **#663**

யானைத்தோல் போர்த்த கடவுளாய, தன்னை விரும்பி நினையாத கீழ் மக்கள் உள்ளத்துக்கண் வாராதானாய், தன்னை மதிப்பவர் மனத்து இருப்பவனாய், தன்னிகர் இல்லாத அழகனாய், தேவர்கள் தலைவனாய், இயல்பாகவே உலகமெல்லாம் நிறைந்து விளங்கும் பொருள்சேர் புகழ் உடையவனாய்த் திருநாகேச் சரத்து உறையும் பெருமானைச் சேராதார் நன்னெறிக்கண் சேராதாரே.

திருநாகேச்சரம்

தலையானை எவ்வுலகுந் தானா னானைத்
தன்னுருவம் யாவர்க்கும் அறிய வொண்ணா
நிலையானை நேசர்க்கு நேசன் தன்னை
நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற
மலையானை வரியரவு நாணாக் கோத்து
வல்லசுரர் புரமூன்றும் மடிய எய்த
சிலையானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே. **#664**

தலைவனாய், எல்லா உலகும் தானே ஆனவனாய், தன் உருவத்தைப் பிறர் அறியமுடியாத நிலையினனாய், அடியார்க்கு அன்பனாய், நீண்ட வானத்து உச்சியைத் தடுத்துஓங்கிய மலைகளானவனாய், கோடுகளை உடைய பாம்பினை நாணாகக் கட்டி, கொடிய அசுரருடைய மும்மதில்களையும் அழியுமாறு அம்பு எய்த வில்லை ஏந்தியவனாய்த்

திருநாகேச்சரத்து உறையும் பெருமானைச் சேராதார் நன்னெறிக்கண் சேராதாரே.

திருநாகேச்சரம்

மெய்யானைத் தன்பக்கல் விரும்பு வார்க்கு
விரும்பாத வரும்பாவி யவர்கட் கென்றும்
பொய்யானைப் புறங்காட்டி லாட லானைப்
பொன்பொலிந்த சடையானைப் பொடிகொள் பூதிப்
பையானைப் பையரவ மசைத்தான் தன்னைப்
பரந்தானைப் பவளமால் வரைபோல் மேனிச்
செய்யானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே. **#665**

தன்பக்கல் விருப்பமுடைய அடியவர்களுக்கு உண்மையானவனாய், தன்னை விரும்பாத கொடிய பாவிகளுக்குப் பொய்யானவனாய், சுடுகாட்டில் கூத்தாடுபவனாய், பொன்போல ஒளிவீசும் சடையினனாய், திருநீறு நிறைந்த பையை உடையவனாய், பாம்பினை அணிந்தவனாய், எங்கும் பரவியிருப்பவனாய், பவள மலைபோலச் சிவந்த திருமேனியை உடையவனாய்த் திருநாகேச் சரத்து உறையும் பெருமானைச் சேராதார் நன்னெறிக் கண் சேராதாரே.

திருநாகேச்சரம்

தூயவன்காண் நீறு துதைந்த மேனி
துளங்கும் பளிங்கனைய சோதி யான்காண்
தீயவன்காண் தீயவுணர் புரஞ்செற் றான்காண்
சிறுமான்கொள் செங்கையெம் பெருமான்தான் காண்
ஆயவன்காண் ஆரூரி லம்மான் தான்காண்
அடியார்கட் காரமுத மாயி னான்காண்
சேயவன்காண் சேமநெறி யாயி னான்காண்
சிவனவன்காண் சிவபுரத் தெஞ்செல்வன் தானே. **#666**

சிவபுரத்தெம் செல்வனாம் சிவபெருமான், தூயவனும், ஒளி விளங்கும் பளிங்கு போன்று, திருநீறு செறிந்த மேனிச் சோதியனும், தீயாய்த் திகழ்பவனும், கொடிய அசுரருடைய புரங்களை அழித்தவனும், சிறுமானைச் செங்கையிலேந்திய எம் பெருமானும், தாய் போன்றவனும், ஆரூரில் அம்மானாய்த் திகழ்பவனும், அடியவர்க்கு ஆரமுதம் ஆனவனும், மற்றையர்க்குத் தொலைவில் உள்ளவனும், பாதுகாவலான நெறியினனும் ஆவான்.

திருநாகேச்சரம்

மறையானை மால்விடையொன் றூர்தி யானை
மால்கடல்நஞ் சுண்டானை வானோர் தங்கள்
இறையானை யென்பிறவித் துயர்தீர்ப் பானை
இன்னமுதை மன்னியசீர் ஏகம் பத்தில்
உறைவானை ஒருவருமீங் கறியா வண்ணம்
என்னுள்ளத் துள்ளே யொளித்து வைத்த
சிறையானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே. **#667**

வேதப் பொருளாய் உள்ளவனாய், பெரிய காளை வாகனனாய், பெரிய கடலில் தோன்றிய விடத்தை உண்டவனாய், தேவர்கள் தலைவனாய், என் பிறவித்துயரைப் போக்குபவனாய், நிலைபெற்ற சிறப்பினை உடைய ஏகம்பத்தில் இனிய அமுதமாக உறைபவனாய், மற்றவருக்குப் புலப்படாத வகையில் அடியேன் உள்ளத்தினுள்ளே சிறை செய்துவைக் கப்பட்டவனாய், திருநாகேச்சரத்து உறையும் பெருமானைச் சேராதார் நன்னெறிக் கண் சேராதாரே.

திருநாகேச்சரம்

எய்தானைப் புரமூன்றும் இமைக்கும் போதில்
இருவிசும்பில் வரும்புனலைத் திருவார் சென்னிப்
பெய்தானைப் பிறப்பிலியை அறத்தில் நில்லாப்
பிரமன்தன் சிரமொன்றைக் கரமொன் றினால்
கொய்தானைக் கூத்தாட வல்லான் தன்னைக்
குறியிலாக் கொடியேனை அடியே னாகச்
செய்தானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே. **#668**

இமைகொட்டும் நேரத்தில் மும்மதில்களையும் அம்பு எய்து அழித்தவனாய், வானிலிருந்து இறங்கிய கங்கை வெள்ளத்தை அழகிய தலையில் ஏற்றவனாய், பிறப்பில்லாதவனாய், அறவழியில் நில்லாத பிரமனுடைய தலை ஒன்றனைத் தன்கை ஒன்றினால் நீக்கியவனாய், கூத்து நிகழ்த்துதலில் வல்லவனாய், குறிக்கோள் ஏதும் இல்லாத கொடியவனான என்னை அடியவனாகச் செய்தானாய் உள்ள திருநாகேச்சரத்து உறையும் பெருமானைச் சேராதார் நன்னெறிக் கண் சேராதாரே.

திருநாகேச்சரம்

அளியானை அண்ணிக்கும் ஆன்பால் தன்னை
வான்பயிரை அப்பயிரின் வாட்டந் தீர்க்குந்
துளியானை அயன்மாலுந் தேடிக் காணாச்

சுடரானைத் துரிசறத் தொண்டு பட்டார்க்
கௌயானை யாவர்க்கும் அரியான் தன்னை
இன்கரும்பின் தன்னுள்ளா லிருந்த தேறல்
தௌயானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே. **#669**

கருணை உடையவனாய், இனிக்கும் பசுப்பால் போல்பவனாய், உலகில் வளரும்பயிர்களாய், அப்பயிர்களின் வாட்டம் தீர்க்கும் மழையாய் உள்ளவனாய், பிரமனும், திருமாலும் தேடியும் காண முடியாத தீப்பிழம்பாய், குற்றம தீரத்தொண்டு செய்யும் அடியவருக்கு எளியவனாய், மற்றயாவருக்கும் அரியவனாய், இனிய கருப்பஞ்சாற்றின் தௌவு போன்றவனாய்த் திருநாகேச்சரத்து உறையும் பெருமானைச் சேராதார் நன்னெறிக் கண் சேராதாரே.

திருநாகேச்சரம்

சீர்த்தானை யுலகேழுஞ் சிறந்து போற்றச்
சிறந்தானை நிறைந்தோங்கு செல்வன் தன்னைப்
பார்த்தானை மதனவேள் பொடியாய் வீழப்
பனிமதியஞ் சடையானைப் புநிதன் தன்னை
ஆர்த்தோடி மலையெடுத்த அரக்கன் அஞ்ச
அருவிரலால் அடர்த்தானை அடைந்தோர் பாவந்
தீர்த்தானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே. **#670**

உலகங்கள் ஏழும் பரவிப் போற்றும்படியான புகழுடையவனாய், ஏனையோரினும சிறந்தவனாய், நிறைந்து உயரும் செல்வத்தனாய், மன்மதன் சாம்பலாகுமாறு அவனை நெற்றிக் கண்ணால் பார்த்தவனாய், பிறை சூடிய சடையினனாய், தூயோனாய், ஆரவாரித்து ஓடிவந்து கயிலைமலையைப் பெயர்த்த இராவணன் அஞ்சுமாறு, அவனைக் கால் விரல் ஒன்றினால் நசுக்கியவனாய், தன்னைச் சரணாக அடைந்தவர்களின் பாவங்களைப் போக்குபவனாய், உள்ள திருநாகேச்சரத்து உறையும் பெருமானைச் சேராதார் நன்னெறிக் கண் சேராதாரே.

திருக்கீழ்வேளூர்

திருக்கீழ்வேளூர்

திருக்கீழ்வேளூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அட்சயலிங்கநாதர்.
தேவியார் : வனமுலைநாயகியம்மை.

ஆளான அடியவர்கட் கன்பன் தன்னை
ஆனஞ்சும் ஆடியைநான் அபயம் புக்க
தாளானைத் தன்னொப்பா ரில்லா தானைச்
சந்தனமுங் குங்குமமுஞ் சாந்துந் தோய்ந்த
தோளானைத் தோளாத முத்தொப் பானைத்
தூவெளுத்த கோவணத்தை அரையி லார்த்த
கீளானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. **#671**

தனக்கு அடிமையான அன்பர்களுக்குத் தானும் அன்பனாய், பஞ்சகவ்விய அபிடேகம் செய்பவனாய், நான் அடைக்கலம் புகுந்த திருவடிகளை உடையவனாய், ஒப்பற்றவனாய், சந்தனமும் குங்குமமும் வாசக்கலவைகளும் பூசப்பட்ட தோள்களை உடையவனாய், துளையிடப்படாத முத்தினை ஒப்பவனாய், தூய வெள்ளிய கோவணத்தைக் கீளோடு இடுப்பில் கட்டியவனாய்க் கீழ்வேளூரை ஆளும் அரசனாய் உள்ள என்றும் அழிதல் இல்லாத பெருமானை அடைக்கலமாக அடைபவர்கள் பிறந்து இறத்தலாகிய கேட்டினை எதிர்காலத்தில் பெறாதார் ஆவர்.

திருக்கீழ்வேளூர்

சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்திருளை வாங்கா தானை
நற்பான்மை அறியாத நாயி னேனை
நன்னெறிக்கே செலும்வண்ணம் நல்கி னானைப்
பற்பாவும் வாயாரப் பாடி யாடிப்
பணிந்தெழுந்து குறைந்தடைந்தார் பாவம் போக்க
கிற்பானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. **#672**

சிவபெருமானுடைய இயல்புகளை உணர்த்தும் பாடல்களில் உள்ள சொற்களின பொருளை நன்றாக உணர்ந்து, மலங்கள் பற்றற நீங்கப் பெற்றுப் பசுபோதம் நீங்கி, அருளில் அடங்கி நில்லாதவர்கள்

உள்ளத்திலுள்ள அஞ்ஞானத்தை நீக்காதவனாய், உய்வதற்குரிய வழியை அறியாத நாய் போன்ற கீழ்மையனாகிய என்னை நல்ல வழியில் செல்லும் வண்ணம் விரும்பி ஆட்கொண்டவனாய், பற்கள் வரிசையாக அமைந்தவாயினால், உச்சரிப்பில் குறை ஏற்படாதவகையில் பாடியும் ஆடியும் பணிந்து எழுந்தும், குறை இரந்து தன்னைச் சரணமாக அடைந்தவர்களுடைய பாவங்களைப் போக்கும் ஆற்றலுடையவனாய்க் கீழ்வேளூரை ஆளும் அரசனாய் உள்ள அழிவற்ற பெருமானை அடைக்கலமாக அடைந்தவர்கள் கேடுஇலார்.

திருக்கீழ்வேளூர்

அளைவாயில் அரவசைத்த அழகன் தன்னை
ஆதரிக்கும் அடியவர்கட் கன்பே யென்றும்
விளைவானை மெய்ஞ்ஞானப் பொருளா னானை
வித்தகனை எத்தனையும் பத்தர் பத்திக்
குளைவானை அல்லாதார்க் குளையா தானை
உலப்பிலியை உள்புக்கென் மனத்து மாசு
கிளைவானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. **#673**

புற்றில் உள்ள பாம்புகளை அணிந்த அழகனாய், தன்னை விரும்பும் அடியவர்களுக்கு அன்பனாய், மெய்ஞ்ஞானப் பொருளாய், பெருந்திறல் உடையவனாய், பத்தர்களுடைய பத்தி எவ்வளவிற்றாயினும் அதற்கு மனம் இரங்குபவனாய், பத்தர் அல்லாதவருக்கு இரங்கானாய், என்றும் அழிவில்லாதவனாய், என் உள்ளத்துப்புக்கு அங்குள்ள மாசுகளைக் கல்லி எடுத்து நீக்குபவனாய்க் கீழ்வேளூரை ஆளும் அரசனாய் உள்ள அழிவற்ற பெருமானை அடைக்கலம் அடைந்தவர்கள் கேடிலாரே.

திருக்கீழ்வேளூர்

தாட்பாவு கமலமலர்த் தயங்கு வானைத்
தலையறுத்து மாவிரதந் தரித்தான் தன்னைக்
கோட்பாவு நாளெல்லா மானான் தன்னைக்
கொடுவினையேன் கொடுநரகக் குழியில் நின்றால்
மீட்பானை வித்துருவின் கொத்தொப் பானை
வேதியனை வேதத்தின் பொருள்கொள் வீணை
கேட்பானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. **#674**

தண்டிலே விரிந்த தாமரையில் உறையும் பிரமனுடைய தலை ஒன்றினை அறுத்தவனாய், மாவிரத சமயத்திற்கு உரிய வேடத்தை அணிந்தவனாய், கிரகங்களின் பெயரால் அமைந்த கிழமைகள் யாவும் ஆவானாய்,

தீவினையை உடைய அடியேன் நின்ற கொடிய நரகக் குழியிலிருந்து அடியேனை மீட்பவனாய், பவளக் கொத்தினை ஒத்தநிறத்தினனாய், வேதம் ஓதுபவனாய், வேதத்தின் பொருள் கொண்ட வீணை ஒலியைக் கேட்பானாய்க் கீழ்வேளூரை ஆளும் அரசனாய் உள்ள பெருமானை அடைக்கலமாக அடைந்த வர்கள் கேடிலாரே.

திருக்கீழ்வேளூர்

நல்லானை நரைவிடையொன் றூர்தி யானை
நால்வேதத் தாறங்கம் நணுக மாட்டாச்
சொல்லானைச் சுடர்மூன்று மானான் தன்னைத்
தொண்டாகிப் பணிவார்கட் கணியான் தன்னை
வில்லானை மெல்லியலோர் பங்கன் தன்னை
மெய்யராய் நினையாதார் வினைகள் தீர்க்க
கில்லானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. **#675**

பெரியவனாய், வெண்ணிறக் காளை வாகனனாய், நான்கு வேதங்களும் ஆறு அங்கங்களும் அணுகமாட்டாத அருள் ஞானத்தானாய், மூன்று சுடர்களும் ஆனவனாய், தொண்டர்களாகித் தன்னைப் பணிபவர்களுக்கு அருகில் உள்ளவனாய், சுயம்பிரகாசனாய், பார்வதிபாகனாய், உண்மையாகத் தன்னை தியானிக்காதவர்கள் வினைகளைப்போக்காதவனாய்க் கீழ்வேளூரை ஆளும் அரசனாய் உள்ள பெருமானை அடைக்கலமாகஅடைந்தவர்கள் கேடிலாரே.

திருக்கீழ்வேளூர்

சுழித்தானைக் கங்கைமலர் வன்னி கொன்றை
தூமத்தம் வாளரவஞ் சூடி னானை
அழித்தானை அரணங்கள் மூன்றும் வேவ
ஆலால நஞ்சதனை உண்டான் தன்னை
விழித்தானைக் காமனுடல் பொடியாய் வீழ
மெல்லியலோர் பங்கனைமுன் வேன லானை
கிழித்தானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. **#676**

கங்கையைச் சடையில் வளைத்துக் கொண்டவனாய், அச்சடையில் வன்னி,கொன்றை, ஊமத்தை மலர்கள், ஒளி பொருந்திய பாம்பு இவற்றைச் சூடியவனாய்,மும்மதில்களும் தீயில் வெந்து சாம்பலாகுமாறு அழித்தவனாய், ஆலகாலவிடத்தை உண்டவனாய், மன்மதன் உடல் பொடியாக விழுமாறு தீக்கண்ணால்விழித்தானாய், பார்வதி பாகனாய், முன்னொரு காலத்தில் வேல் போன்றகூரிய தந்தங்களை உடைய

யானைத் தோலைக் கிழித்து உரித்தவனாய்க்கீழ்வேளூரை ஆளும் அரசனாய் உள்ள பெருமானை அடைக்கலமாக அடைந்தவர்கள்கேடிலாரே.

திருக்கீழ்வேளூர்

உளரொளியை உள்ளத்தி னுள்ளே நின்ற
ஓங்காரத்துட் பொருள்தான் ஆயி னானை
விளரொளியை விடுசுடர்கள் இரண்டும் ஒன்றும்
விண்ணொடுமண் ஆகாச மாயி னானை
வளரொளியை மரகதத்தி னுருவி னானை
வானவர்க ளெப்பொழுதும் வாழ்த்தி யேத்துங்
கிளரொளியைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. **#677**

அசைகின்ற ஒளிவிளக்காய், உள்ளத்து நிலை பெற்ற ஓங்காரத்தின் உட்பொருளாய், வெள்ளொளி உடைய சூரியன், சந்திரன், செந்நிறமுடைய அக்கினி என்ற இவையாகி, தேவருலகும், நிலவுலகும், தேவருலகுக்கும் மேற்பட்ட ஆகாயமுமாகி, மாணிக்கத்தின் ஒளியும் மரகதத்தின் ஒளியுமாகி, தேவர் எப்பொழுதும் வாழ்த்தித் துதிக்கும் ஒளிமிக்க திருமேனியை உடையவனாய்க் கீழ்வேளூரை ஆளும் அரசனாய் உள்ள பெருமானை அடைக்கலமாக அடைந்தவர்கள் கேடிலாரே.

திருக்கீழ்வேளூர்

தடுத்தானைக் காலனைக் காலாற் பொன்றத்
தன்னடைந்த மாணிக்கன் றருள்செய் தானை
உடுத்தானைப் புலியதளோ டக்கும் பாம்பும்
உள்குவா ருள்ளத்தி னுள்ளான் தன்னை
மடுத்தானை அருநஞ்சம் மிடற்றுள் தங்க
வானவர்கள் கூடியஅத் தக்கன் வேள்வி
கெடுத்தானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. **#678**

கூற்றுவன் இறக்குமாறு அவனைக் காலால் உதைத்து, தன்னைச் சரணடைந்தமார்க்கண்டேயனுக்கு ஒருகாலத்தில் அருள் செய்தவனாய், புலித்தோலோடு எலும்பும் பாம்பும் பூண்டவனாய், தன்னை அன்போடு வழிபடுபவர் உள்ளத்து இருப்பவனாய், கொடிய நஞ்சினைத் தன்கழுத்தில் தங்குமாறு உண்டவனாய், தேவர்கள் கூடியிருந்த தக்கனுடைய வேள்வியை அழித்தவனாய், உள்ள கீழ்வேளூரை ஆளும் அரசனாய் உள்ள பெருமானை அடைக்கலமாக அடைந்தவர்கள்

கேடிலாரே.

திருக்கீழ்வேளூர்

மாண்டா ரெலும்பணிந்த வாழ்க்கை யானை
மயானத்திற் கூத்தனைவா ளரவோ டென்பு
பூண்டானைப் புறங்காட்டி லாட லானைப்
போகாதென் னுள்புகுந் திடங்கொண் டென்னை
ஆண்டானை அறிவரிய சிந்தை யானை
அசங்கையனை அமரர்கள்தஞ் சங்கை யெல்லாங்
கீண்டானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. **#679**

இறந்தவர்களுடைய எலும்புகளை அணியும் இயல்பினனாய், கடவூர் மயானம் முதலிய இடங்களில் கூத்தாடுபவனாய், ஒளி பொருந்திய பாம்போடு எலும்பை அணிபவனாய், சுடுகாட்டில் ஆடுபவனாய், என் உள்ளத்தில் இடம் பெற்று, அதனை விடுத்துநீங்காது, என்னை அடிமை கொண்டானாய், தன் உள்ளத் திருப்பதனைப் பிறர்அறிய இயலாதவனாய், அச்சம் இல்லாதவனாய்த் தேவர்களின் அச்சத்தைப் போக்கியவனாய்க் கீழ்வேளூரை ஆளும் அரசனாய் உள்ள பெருமானை அடைக்கலமாக அடைந்தவர்கள் கேடிலாரே.

திருக்கீழ்வேளூர்

முறிப்பான பேசிமலை யெடுத்தான் தானும்
முதுகிறமுன் கைந்நரம்பை யெடுத்துப் பாடப்
பறிப்பான்கைச் சிற்றரிவாள் நீட்டி னானைப்
பாவியேன் நெஞ்சகத்தே பாதப் போது
பொறித்தானைப் புரமூன்றும் எரிசெய் தானைப்
பொய்யர்களைப் பொய்செய்து போது போக்கிக்
கிறிப்பானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. **#680**

தனக்கு அறிவுரை கூறிய தேர்ப்பாகனிடம் கடுஞ் சொற்கள் பேசிக் கயிலைமலையை அசைத்த இராவணன் முதுகு நொறுங்குமாறு அழுத்திப்பின் அவன் தன்கை நரம்புகளை வீணைத் தந்திகளாகக் கொண்டு பாட மலையை அசைத்த அவனுக்குச் சிறிய வாளை அருள் செய்தவனாய், அடியேன் உள்ளத்தே தன் திருவடிகளைப் பதித்தவனாய், மும்மதில்களையும் எரித்துச் சாம்பல் ஆக்கியவனாய், அன்பின்றி வழிபடுபவர்களுக்குத் தானும் அருள்புரிவான் போன்று காட்டிவஞ்சிப்பவனாய்க் கீழ்வேளூரை ஆளும் அரசனாய் உள்ள பெருமானை அடைக்கலமாக அடைந்தவர்கள் கேடிலாரே.

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம், திருத்தாண்டகம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது - இதுவே விருத்தாசலம். ,
சுவாமிபெயர் : பழமலைநாதர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

கருமணியைக் கனகத்தின் குன்றொப் பானைக்
கருதுவார்க் காற்ற எளியான் தன்னைக்
குருமணியைக் கோளரவொன் றாட்டு வானைக்
கொல்வேங்கை யதளானைக் கோவ ணன்னை
அருமணியை அடைந்தவர்கட் கமுதொப் பானை
ஆனஞ்சும் ஆடியைநான் அபயம் புக்க
திருமணியைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. **#681**

கண்ணின் கருமணியைப் போன்று அருமையானவனாய், பொற்குன்று ஒப்பவனாய், தியானிக்கும் அடியவர்களுக்கு மிகவும் எளியவனாய், நல்ல நிறமுடையமாணிக்கமாய், கொடிய பாம்பு ஒன்றினை ஆட்டுபவனாய், வேங்கைத் தோலை உடுத்தவனாய், கோவணம் அணிந்தவனாய், சிந்தாமணியாய், தன்னைச் சரணம் புகுந்தவர்களுக்கு அமுதம் போன்று இனியனாய், பஞ்ச கவ்விய அபிடேகத்தை உகப்பவனாய், அடியேன் சரணடைந்த வீடுபேறாகிய செல்வத்தை நல்கும்மணியாய்த் திருமுதுகுன்றத்தில் உறையும் பெருமானை, தீவினையை உடைய நான் இதுகாறும் உள்ளவாறு அறியாமல் மயங்கிப்போனேனே.

திருமுதுகுன்றம்

காரொளிய கண்டத்தெங் கடவுள் தன்னைக்
காபாலி கட்டங்க மேந்தி னானைப்
பாரொளியை விண்ணொளியைப் பாதாளனைப்
பால்மதியஞ் சூடியோர் பண்பன் தன்னைப்
பேரொளியைப் பெண்பாகம் வைத்தான் தன்னைப்
பேணுவார் தம்வினையைப் பேணி வாங்குஞ்
சீரொளியைத் திருமுதுகுன்றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. **#682**

நீலகண்டனாய்க் காபாலக்கூத்து ஆடுபவனாய், கட்டங்கப் படையை ஏந்தியவனாய், நில உலகு விண் உலகு பாதாள உலகு இவற்றிற்கு

ஒளிவழங்குபவனாய், வெள்ளிய பிறையைச் சூடியவனாய், நற்பண்புக்கு நிலைக்களனாய், தனக்கு நிகரில்லாத ஞான ஒளியை உடையவனாய், பார்வதி பாகனாய், தன்னை விரும்பும் அடியவர்களைத் தானும் விரும்பி, அவர்கள் வினைகளைப் போக்கும் சிறப்பான புகழ் ஒளியை உடையவனாய்த் திருமுதுகுன்றத்தில் உறையும் பெருமானை, தீவினை உடைய நான் இதுகாறும் உள்ளவாறு அறியாமல் மயங்கிப் போனேனே.

திருமுதுகுன்றம்

எத்திசையும் வானவர்கள் தொழநின் றானை
ஏறூர்ந்த பெம்மானையெம்மா னென்று
பத்தனாய்ப் பணிந்தடியேன் தன்னைப்பன்னாள்
பாமாலை பாடப் பயல்வித்தானை
முத்தினை யென்மணியை மாணிக் கத்தை
முளைத்தெழுந்தசெழும்பவளக்கொழுந்தொப்பானைச்
சித்தனையென் திருமுதுகுன் றுடையான்தன்னைத்
தீவினையேன் அறியாதேதிகைத்த வாறே. **#683**

எல்லாத்திசைகளிலும் தேவர்களால் தொழப்படுபவனாய், இடபவாகனனாய், அடியேன் என் தலைவன் என்று பக்தியோடு பணியத் தன்னைப் பல நாளும் பாமாலை பாடப்பழகுவித்தவனாய், முத்து, மணி, மாணிக்கம், முளைத்தெழுந்த செம்பவளக் கொத்து என்பன போலக்கண்ணுக்கு இனியவனாய், எல்லாம் செய்யவல்லவனாய்த் திருமுதுகுன்றத்தில் உறையும் பெருமானை, தீவினை உடைய நான் இதுகாறும் உள்ளவாறு அறியாமல் மயங்கிப் போனேனே.

திருமுதுகுன்றம்

ஊன்கருவின் உள்நின்ற சோதி யானை
உத்தமனைப் பத்தர்மனம் குடிகொண் டானைக்
கான்திரிந்து காண்டீப மேந்தி னானைக்
கார்மேக மிடற்றானைக் கனலைக் காற்றைத்
தான்தெரிந்தங் கடியேனை யாளாக் கொண்டு
தன்னுடைய திருவடியென் தலைமேல் வைத்த
தீங்கரும்பைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. **#684**

உடம்பில் கருவாகி நின்ற உயிருக்குள் ஒளி வடிவாய் உள்ளவனாய், உத்தமனாய், அடியார் மனத்தில் உறைபவனாய், காட்டில் வேடனாய்த் திரிந்து அருச்சுனன் பொருட்டுக் காண்டீபம் என்ற வில்லினை ஏந்தியவனாய், கார்மேகம் போன்ற நீலகண்டனாய், கனலாகவும்,

காற்றாகவும் உள்ளானாய், தானே ஆராய்ந்துஅடியேனைத் தன் அடிமையாகக் கொண்டு தன்னுடைய திருவடிகளை என் தலைமேல் வைத்தகரும்பு போன்ற இனியனாய், திருமுது குன்றத்தில் உறையும் பெருமானை, தீவினை உடைய நான் இதுகாறும் உள்ளவாறு அறியாமல் மயங்கிப் போனேனே.

திருமுதுகுன்றம்

தக்கனது பெருவேள்வி தகர்த்தா னாகித்
தாமரையான் நான்முகனுந் தானே யாகி
மிக்கதொரு தீவளிநீர் ஆகா சம்மாய்
மேலுலகுக் கப்பாலா யிப்பா லானை
அக்கினொடு முத்தினையு மணிந்து தொண்டர்க்
கங்கங்கே அறுசமய மாகி நின்ற
திக்கினையென் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. **#685**

தக்கனுடைய பெரிய வேள்வியை அழித்து, தாமரையில் உறையும் பிரமனும்தானேயாகி, ஐம்பூதங்களும், மேலுலகும், அதற்குஅப்பாலும் இப்பாலுமாய்ப் பரந்து, சங்கு மணியையும், முத்தையும் அணிந்து, அடியவர்களுக்கு அவர்களுடைய பக்குவ நிலைக்கு ஏற்ப ஆறு வைதிக சமயங்களாகிய வழியானவனாய், திருமுதுகுன்றத்தில் உறையும் பெருமானை, தீவினை உடைய நான் இதுகாறும் உள்ளவாறு அறியாமல் மயங்கிப் போனேனே.

திருமுதுகுன்றம்

புகழொளியைப் புரமெரித்த புனிதன் தன்னைப்
பொன்பொதிந்த மேனியனைப் புராணன் தன்னை
விழவொலியும் விண்ணொலியு மானான் தன்னை
வெண்காடு மேவிய விகிர்தன் தன்னைக்
கழலொலியுங் கைவளையும் ஆர்ப்ப ஆர்ப்பக்
கடைதோறு மிடுபிச்சைக் கென்று செல்லுந்
திகழொளியைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. **#686**

புகழாகிய ஒளியை உடையவனாய், திரிபுரத்தை எரித்த தூயோனாய், பொன்னிறம் அமைந்த திருமேனியனாய், பழமையானவனாய், விண்ணின் பண்பாகிய ஒளியும் திருவிழாக்களில் கேட்கப்படும் ஒலியும் ஆகியவனாய், வெண்காட்டில் உறையும் விகிர்தனாய், கால்களில் அணிந்தகழல்களின் ஒலியும் கைவளைகளின் ஒலியும் சிறக்க வீடுகள் தோறும்பிச்சைக்கு என்று சஞ்சரிக்கும் மேம்பட்ட ஒளியை

உடையவனாய், திருமுதுகுன்றத்தில் உறையும் பெருமானை, தீவினை
உடைய நான் இதுகாறும் உள்ளவாறு அறியாமல் மயங்கிப்
போனேனே.

திருமுதுகுன்றம்

போர்த்தானை யின்னுரிதோல் பொங்கப் பொங்கப்
புலியதளே உடையாகத் திரிவான் தன்னை
காத்தானை ஐம்புலனும் புரங்கள் மூன்றும்காலனையுங் குரைகழலாற்
காய்ந்தான் தன்னை
மாத்தாடிப் பத்தராய் வணங்குந் தொண்டர்வல்வினைவே
ரறும்வண்ணம் மருந்து மாகித்
தீர்த்தானைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்தீவினையேன்
அறியாதே திகைத்த வாறே. **#687**

யானையை உரித்த தோலைப் போர்த்துத் திருமேனியின் ஒளி
சிறக்குமாறு புலித்தோலை உடுத்துத் திரிவானாய், பொறிவாயில்
ஐந்தவித்தானாய், முப்புரங்களையும் வெகுண்டவனாய், காலனைத்
திருவடியால் உதைத்தவனாய், மேம்பட்ட கூத்தினை நிகழ்த்துபவனாய்,
பத்தர்களாய் வணங்கும் அடியார்களுடைய வலிய வினைகளும்,
அவற்றால் நிகழும் நோய்களும், நீங்குமாறு மருந்தாகி அவற்றைப்
போக்கியவனாய், திருமுதுகுன்றத்தில் உறையும் பெருமானை, தீவினை
உடைய நான் இதுகாறும் உள்ளவாறு அறியாமல் மயங்கிப்
போனேனே.

திருமுதுகுன்றம்

துறவாதே யாக்கை துறந்தான் தன்னைச்
சோதி முழுமுதலாய் நின்றான் தன்னைப்
பிறவாதே எவ்வுயிர்க்குந் தானே யாகிப்
பெண்ணினோ டாணுருவாய் நின்றான் தன்னை
மறவாதே தன்திறமே வாழ்த்துந் தொண்டர்
மனத்தகத்தே அனவரதம் மன்னி நின்ற
திறலானைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. **#688**

இயல்பாகவே உடம்பு இன்றி இருப்பவனாய், சோதி வடிவினனாய்,
தான்பிறப்பெடுக்காமல் பிறவி எடுக்கும் உயிர்களுக்கெல்லாம் தானே
நலன்செய்பவனாய், பெண்ணுருவும், ஆண் உருவுமாக இருப்பவனாய்,
தன்னை மறவாமல், தன்பண்பு செயல்களையே வாழ்த்தும்
அடியவர்களின் உள்ளத்தே எப்பொழுதும் நிலைபெற்றிருக்கும்
பண்பினை உடையவனாய், திருமுதுகுன்றத்தில் உறையும் பெருமானை,

தீவினை உடைய நான் இதுகாறும் உள்ளவாறு அறியாமல் மயங்கிப்போனேனே.

திருமுதுகுன்றம்

பொற்றூணைப் புலால்நாறு கபால மேந்திப்
புவலோக மெல்லா முழிதந் தானை
முற்றாத வெண்டிங்கட் கண்ணி யானை
முழுமுதலாய் மூவுலகும் முடிவொன் றில்லாக்
கற்றூணைக் காளத்தி மலையான் தன்னைக்
கருதாதார் புரமூன்றும் எரிய அம்பால்
செற்றானைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. **#689**

பொன்மயமான தூண்போல்பவனாய், புலால் நாற்றம் வீசும் மண்டையோட்டினை ஏந்தி மேல் உலகம் எல்லாம் திரிபவனாய், பிறையை முடிமாலையாக அணிந்தவனாய், முழுமுதற் கடவுளாய், எல்லா உலகங்களிலும் விரவி நின்று, தனக்கு இறுதியில்லாது கற்றூண்போல அவற்றைத் தாங்குபவனாய்க் காளத்தி மலையில் உறைபவனாய், பகைவருடைய மும்மதில்களையும் எரியுமாறு வில்லால் அழித்தவனாய், திருமுதுகுன்றம் உறையும் பெருமானை, தீவினை உடைய நான் இதுகாறும் உள்ளவாறு அறியாமல் மயங்கிப் போனேனே.

திருமுதுகுன்றம்

இகழ்ந்தானை இருபதுதோள் நெரிய வூன்றி
யெழுநரம்பி னிசைபாட இனிது கேட்டுப்
புகழ்ந்தானைப் பூந்துருத்தி மேயான் தன்னைப்
புண்ணியனை விண்ணவர்கள் நிதியந் தன்னை
மகிழ்ந்தானை மலைமகளோர் பாகம் வைத்து
வளர்மதியஞ் சடைவைத்து மாலோர் பாகந்
திகழ்ந்தானைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. **#690**

தன்னை இகழ்ந்து, கயிலையை அசைத்த இராவணனுடைய இருபது தோள்களும் நெரியுமாறு விரலை ஊன்றி, அவன் ஏழுநரம்புகளைக் கொண்டு இசைபாட, அதனை இனிது கேட்டு, அவன் இசை ஞானத்தைப் புகழ்ந்தவனாய், பூந்துருத்தியில் உறையும் புண்ணியனாய், தேவர்களுக்குச் செல்வமாய், பார்வதி பாகனாய் மகிழ்ந்தவனாய், பிறையைச் சடையில் சூடித் திருமாலைத் திருமேனியின் ஒருபாகமாகக் கொண்டு விளங்குபவனாய், திருமுதுகுன்றத்தில் உறையும் பெருமானை,

தீவினை உடைய நான் இதுகாறும் உள்ளவாறு அறியாமல் மயங்கிப் போனேனே.

திருப்பள்ளியின்முக்கூடல்

திருப்பள்ளியின்முக்கூடல்

திருப்பள்ளியின்முக்கூடல், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முக்கோணவீசுவரர்.
தேவியார் : மைமேவுங்கண்ணியம்மை.

ஆராத இன்னமுதை அம்மான் தன்னை
அயனொடுமா லறியாத ஆதி யானைத்
தாராரும் மலர்க்கொன்றைச் சடையான் தன்னைச்
சங்கரனைத் தன்னொப்பா ரில்லா தானை
நீரானைக் காற்றானைத் தீயா னானை
நீள்விசும்பாய் ஆழ்கடல்க ளேழுஞ் சூழ்ந்த
பாரானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. **#691**

தெவிட்டாத இனிய அமுதமாய்த் தலைவனாய், பிரமனும் திருமாலும் அறியாத முதலவனாய், கொன்றை மாலை அணிந்த சடையனாய், நன்மை தருபவனாய், ஒப்பற்றவனாய், நீராய், தீயாய், காற்றாய், நீண்ட வானமாய், ஆழ்ந்தகடல்கள் ஏழும் சூழ்ந்த நிலனாய்ப் பரந்து இருக்கும் பள்ளியின் முக்கூடலில் உறைகின்ற பெருமானைப் பலகாலும் சிந்திக்காமல், பயனில்லாமல் யான்தடுமாறித் திரிந்த செயல் இரங்கத்தக்கது.

திருப்பள்ளியின்முக்கூடல்

விடையானை விண்ணவர்கள் எண்ணத் தானை
வேதியனை வெண்டிங்கள் சூடுஞ் சென்னிச்
சடையானைச் சாமம்போல் கண்டத் தானைத்
தத்துவனைத் தன்னொப்பா ரில்லா தானை
அடையாதார் மும்மதிலுந் தீயில் மூழ்க
அடுகணைகோத் தெய்தானை அயில்கொள் சூலப்
படையானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. **#692**

காளை வாகனனாய், தேவர்களால் தியானிக்கப்படுபவனாய், வேதம் ஓதுபவனாய், வெண்பிறைசூடிய சடையனாய், நீலகண்டனாய், மெய்ப் பொருளாய், ஒப்பற்றவனாய், பகைவருடைய மும்மதிலும் தீயில் மூழ்க அழிக்கும் அம்பினைக் கோத்து எய்தவனாய், கூரியசூலப் படையை உடையவனாய், உள்ள பள்ளியின் முக்கூடலில் உறைகின்ற

பெருமானைப் பலகாலும் சிந்திக்காமல், பயனில்லாமல் யான் தடுமாறித் திரிந்த செயல் இரங்கத்தக்கது.

திருப்பள்ளியின்முக்கூடல்

பூதியனைப் பொன்வரையே போல்வான் தன்னைப்
புரிசடைமேல் புனல்கரந்த புனிதன் தன்னை
வேதியனை வெண்காடு மேயான் தன்னை
வெள்ளேற்றின் மேலானை விண்ணோர்க் கெல்லாம்
ஆதியனை ஆதிரைநன் னாளான் தன்னை
அம்மானை மைம்மேவு கண்ணி யாளோர்
பாதியனைப் பள்ளியின் முக்கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. **#693**

நீறு அணிந்தவனாய், பொன்மலை போல்வானாய், முறுக்கேறிய சடையின் கங்கையை மறைத்த தூயோனாய், வேதியனாய், வெண்காட்டில் உறைவானாய், வெண்மையான காளை வாகனனாய், தேவர்களுக்கு எல்லாம் முற்பட்டவனாய், திருவாதிரை நட்சத்திரத்திற்கு உரிமை பூண்டவனாய், தலைவனாய், மை தீட்டிய கண்களை உடைய பார்வதிபாகனாய், உள்ள பள்ளியின் முக்கூடலில் உறைகின்ற பெருமானைப் பலகாலும் சிந்திக்காமல், பயனில்லாமல் யான் தடுமாறித் திரிந்த செயல் இரங்கத்தக்கது.

திருப்பள்ளியின்முக்கூடல்

போர்த்தானை ஆனையின் தோல் புரங்கள் மூன்றும்
பொடியாக எய்தானைப் புனிதன் தன்னை
வார்த்தாங்கு வனமுலையாள் பாகன் தன்னை
மறிகடலுள் நஞ்சுண்டு வானோ ரச்சந்
தீர்த்தானைத் தென்றிசைக்கே காமன் செல்லச்
சிறிதளவில் அவனுடலம் பொடியா வாங்கே
பார்த்தானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. **#694**

யானையின் தோலைப் போர்த்தவனாய், முப்புரங்களும் சாம்பலாகுமாறு அம்புஎய்தவனாய், தூயனாய், கச்சணிந்த முலையை உடைய பார்வதிபாகனாய், அலைகள் கரையை அடைந்து மீண்டு வரும் கடலுள் தோன்றிய விடத்தை உண்டு, தேவர்களின் அச்சத்தைப் போக்கியவனாய், மன்மதன் யமனுலகத்தை அடையுமாறு சிறிது நேரத்தில் அவன் உடலம் சாம்பலாகுமாறு தீத்தோன்ற விழித்தவனாய், உள்ள பள்ளியின் முக்கூடலில் உறைகின்ற பெருமானைப் பலகாலும் சிந்திக்காமல், பயனில்லாமல் யான் தடுமாறித் திரிந்த செயல்

இரங்கத்தக்கது.

திருப்பள்ளியின்முக்கூடல்

அடைந்தார்தம் பாவங்கள் அல்லல் நோய்கள்
அருவினைகள் நல்குரவு செல்லா வண்ணங்
கடிந்தானைக் கார்முகில்போற் கண்டத் தானைக்
கடுஞ்சினத்தோன் தன்னுடலை நேமி யாலே
தடிந்தானைத் தன்னொப் பாரில்லா தானைத்
தத்துவனை உத்தமனை நினைவார் நெஞ்சில்
படிந்தானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. **#695**

தன்னைச் சரணாக அடைந்த அடியவர்பால் பாவங்கள், துன்பங்கள், நோய்கள், பழைய தீவினைகள், வறுமை என்பன அணுகாதவாறு அவற்றைப் போக்கியவனாய், கார்முகில் போன்ற நீலகண்டனாய், மிக்க வெகுளியை உடைய சலந்தரனுடைய உடலைச் சக்கரத்தாலே அழித்தவனாய், ஒப்பற்றவனாய், மெய்ப்பொருளாய், உத்தமனாய், தன்னைத் தியானிக்கும் அடியவர் நெஞ்சில் ஊன்றியிருப்பவனாய், உள்ள பள்ளியின் முக்கூடலில் உறைகின்ற பெருமானைப் பலகாலும் சிந்திக்காமல், பயனில்லாமல் யான் தடுமாறித் திரிந்த செயல் இரங்கத்தக்கது.

திருப்பள்ளியின்முக்கூடல்

கரந்தானைச் செஞ்சடைமேல் கங்கை வெள்ளங்
கனலாடு திருமேனிக் கமலத் தோன்தன்
சிரந்தாங்கு கையானைத் தேவ தேவைத்
திகழொளியைத் தன்னடியே சிந்தை செய்வார்
வருந்தாமைக் காப்பானை மண்ணாய் விண்ணாய்
மறிகடலாய் மால்விசும்பாய் மற்று மாகிப்
பரந்தானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. **#696**

சிவந்த சடையின்மீது கங்கை வெள்ளத்தை மறைத்தவனாய், தீப்போன்ற சிவந்த தன் திருமேனிக்கண் பிரமனுடைய மண்டையோட்டினைச் சுமக்கும் கையை உடையவனாய், தேவர்களுக்குத் தலைமைத் தேவனாய், விளங்குகின்ற ஞானப்பிரகாசனாய், தன் திருவடிகளைத் தியானிப்பவர் வருந்தாத வகையில் அவரைக் காப்பவனாய், ஐம்பூதங்களாகி எங்கும் பரவியுள்ளவனாய், உள்ள பள்ளியின் முக்கூடலில் உறைகின்ற பெருமானைப் பலகாலும் சிந்திக்காமல், பயனில்லாமல் யான்தடுமாறித்

திரிந்த செயல் இரங்கத் தக்கது.

திருப்பள்ளியின்முக்கூடல்

நதியாருஞ் சடையானை நல்லூ ரானை
நள்ளாற்றின் மேயானை நல்லத் தானை
மதுவாரும் பொழில்புடைசூழ் வாய்மூ ரானை
மறைக்காடு மேயானை ஆக்கூ ரானை
நிதியாளன் தோழனை நீடூ ரானை
நெய்த்தான மேயானை ஆரூ ரென்னும்
பதியானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. **#697**

கங்கை தங்கிய சடையினனாய், குபேரனுக்குத் தோழனாய், நல்லூர், நள்ளாறு, நல்லம், தேன் ஒழுகும் பொழில்களால் சூழப்பட்ட வாய்மூர், மறைக்காடு, ஆக்கூர், நீடூர், நெய்த்தானம், ஆரூர் என்னும் திருத்தலங்களில் உறைபவன் ஆகிய பள்ளியின் முக்கூடலில் உறைகின்ற பெருமானைப் பலகாலும் சிந்திக்காமல், பயனில்லாமல் யான் தடுமாறித் திரிந்தசெயல் இரங்கத்தக்கது.

திருப்பள்ளியின்முக்கூடல்

நற்றவனை நான்மறைக ளாயி னானை
நல்லானை நணுகாதார் புரங்கள் மூன்றுஞ்
செற்றவனைச் செஞ்சடைமேல் திங்கள் சூடுந்
திருவாரூர்த் திருமூலட் டானம் மேய
கொற்றவனைக் கூரரவம் பூண்டான் தன்னைக்
குறைந்தடைந்து தன்திறமே கொண்டார்க் கென்றும்
பற்றவனைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. **#698**

பெருந்தவத்தை உடையவனாய், நான்கு வேத வடிவினனாய், பெரியவனாய், பகைவர் மதில்கள் மூன்றையும் அழித்தவனாய், சிவந்த சடையின் மீது பிறையைச் சூடித் திருவாரூர்த் திருமூலட்டானத்தில் விரும்பி உறையும் வெற்றியனாய், கொடிய பாம்புகளைப் பூண்டவனாய், தம் தேவையைக் கருதித்தன் தன்மையையே கடவுள் தன்மையாகத் துணிந்த அடியவர்களுக்கு என்றும் பற்றுக்கோடாக இருப்பவனாய், உள்ள பள்ளியின் முக்கூடலில் உறைகின்ற பெருமானைப் பலகாலும் சிந்திக்காமல், பயனில்லாமல் யான்தடுமாறித் திரிந்த செயல் இரங்கத்தக்கது.

திருப்பள்ளியின்முக்கூடல்

ஊனவனை உடலவனை உயிரா னானை
உலகேழு மானானை உம்பர் கோவை
வானவனை மதிசூடும் வளவி யானை
மலைமகள்முன் வராகத்தின் பின்பே சென்ற
கானவனைக் கயிலாய மலையு ளானைக்
கலந்துருகி நைவார்தம் நெஞ்சி னுள்ளே
பானவனைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. **#699**

ஊனாய், உடலாய், உயிராய், ஏழுலகமுமாய், தேவர்கள் தலைவனாய், பரமபதமாகிய வீட்டுலகில் இருப்பவனாய், பிறை சூடியாய், வளவி என்றதலத்தில் உறைபவனாய், பார்வதி காணப் பன்றியின் பின்போன வேடனாய், கயிலாய மலையில் உள்ளவனாய், ஒன்று பட்டு இளகி உருகும் அடியவருடைய நெஞ்சில், அப்பொழுது கறந்தபால் போல் இனியவனாய், பள்ளியின் முக்கூடலில் உறைகின்ற பெருமானைப் பலகாலும் சிந்திக்காமல், பயனில்லாமல் யான் தடுமாறித் திரிந்த செயல் இரங்கத்தக்கது.

திருப்பள்ளியின்முக்கூடல்

தடுத்தானைத் தான்முனிந்து தன்தோள் கொட்டித்
தடவரையை இருபதுதோள் தலையி னாலும்
எடுத்தானைத் தாள்விரலால் மாள வூன்றி
எழுநரம்பின் இசைபாடல் இனிது கேட்டுக்
கொடுத்தானைப் பேரோடுங் கூர்வாள் தன்னைக்
குரைகழலாற் கூற்றுவனை மாள அன்று
படுத்தானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. **#700**

தன்னைத் தடுத்த தேர்ப்பாகனை வெகுண்டு, தன் தோள்களைக் கொட்டிக் கயிலை மலையைப் பத்துத் தலைகளாலும் இருபது தோள்களாலும் பெயர்த்த தசக்கிரிவனைத் தன் கால் விரலால் நசுங்குமாறு அழுத்தி, அவன் நரம்பு ஒலியோடு இசைத்தபாடலை மகிழ்வோடு கேட்டு, இராவணன் என்ற பெயரையும், கூரிய வாளையும் கொடுத்தவனாய், கழல் ஒலிக்கும் திருவடியால் கூற்றுவன் மாளுமாறு ஒரு காலத்தில் உதைத்தவனாய், உள்ளபள்ளியில் முக்கூடலில் உறைகின்ற பெருமானைப் பலகாலும் சிந்திக்காமல், பயனில்லாமல் யான் தடுமாறித் திரிந்தசெயல் இரங்கத்தக்கது.

ஷேத்திரக்கோவை

ஷேத்திரக்கோவை

ஷேத்திரக்கோவை, திருத்தாண்டகம்

தில்லைச்சிற் றம்பலமுஞ் செம்பொன் பள்ளி
தேவன் குடிசிராப் பள்ளி தெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல்
வீரட்டங் கோகரணங் கோடி காவும்
முல்லைப் புறவம் முருகன் பூண்டி
முழையூர் பழையாறை சத்தி முற்றங்
கல்லில் திகழ்சீரார் காளத்தியுங்
கயிலாய நாதனையே காண லாமே. **#701**

தில்லைச்சிற்றம்பலம், செம்பொன்பள்ளி, தேவன்குடி, சிராப்பள்ளி, தெங்கூர், கொல்லி அறைப்பள்ளி, கோவல் வீரட்டம், கோகரணம், கோடிகா, முல்லைக் கொடிகளை உடைய காடுகளை உடைய முருகன் பூண்டி, முழையூர், பழையாறை, சத்தி முற்றம், குறிஞ்சி நிலத்தில் திகழ்கின்ற சிறப்பு நிறைந்த காளத்தி ஆகிய திருத்தலங்களில் கயிலாய நாதனைக் காணலாம்.

ஷேத்திரக்கோவை

ஆரூர்மூ லட்டானம் ஆனைக் காவும்
ஆக்கூரில் தான்தோன்றி மாடம் ஆவூர்
பேரூர் பிரமபுரம் பேரா வூரும்
பெருந்துறை காம்பீலி பிடவூர் பேணுங்
கூரார் குறுக்கைவீ ரட்டா னம்முங்
கோட்டூர் குடமூக்குக் கோழம் பமுங்
காரார் கழுக்குன்றுங் கானப் பேருங்
கயிலாய நாதனையே காண லாமே. **#702**

ஆரூர் மூலட்டானம், ஆனைக்கா, ஆக்கூரில் உள்ள தான் தோன்றி மாடம், ஆவூர், பேரூர், பிரமபுரம், பேராவூர், பெருந்துறை, காம்பீலி, பிடவூர், எல்லோரும் விரும்பும் சிறப்புமிக்க குறுக்கை வீரட்டம், கோட்டூர், குடமூக்கு, கோழம்பம், மேகங்கள் தங்கும் கழுக்குன்றம், கானப்பேரூர்..... இவற்றில்கயிலாய நாதனைக் காணலாம்.

ஷேத்திரக்கோவை

இடைமரு தீங்கோ யிராமேச் சரம்
இன்னம்பர் ஏரிடவை ஏமப் பேறூர்

சடைமுடி சாலைக் குடிதக்களூர்
தலையாலங் காடு தலைச்சங் காடு
கொடுமுடி குற்றாலங் கொள்ளம் பூதூர்
கோத்திட்டை கோட்டாறு கோட்டுக் காடு
கடைமுடி கானூர் கடம்பந் துறை
கயிலாய நாதனையே காண லாமே. **#703**

இடைமருது, ஈங்கோய், இராமேச்சரம், இன்னம்பர், ஏர்இடவை, ஏமப்பேறூர், சடைமுடி, சாலைக்குடி, தக்களூர், தலையாலங்காடு, தலைச்சங்காடு, கொடுமுடி, குற்றாலம், கொள்ளம் பூதூர், கோத்திட்டை, கோட்டாறு, கோட்டுக்காடு, கடைமுடி, கானூர், கடம்பந்துறை ஆகிய இவற்றில் கயிலாய நாதனைக் காணலாம்.

<u>ஷேத்திரக்கோவை</u>

எச்சி லிளமர் ஏம நல்லூர்
இலம்பையங் கோட்டூர் இறையான் சேரி
அச்சிறு பாக்க மளப்பூர் அம்பர்
ஆவடு தண்டுறை யழுந்தூர் ஆறை
கைச்சினங் கற்குடி கச்சூர் ஆலக்
கோயில் கரவீரங் காட்டுப் பள்ளி
கச்சிப் பலதளியும் ஏகம் பத்துங்
கயிலாய நாதனையே காண லாமே. **#704**

எச்சில் இளமர், ஏமநல்லூர், இலம்பையங் கோட்டூர், இறையான்சேரி, அச்சிறுபாக்கம், அளப்பூர், அம்பர், ஆவடுதுறை, அழுந்தூர், ஆறை, கைச்சினம், கற்குடி, கச்சூர், ஆலக்கோயில், கரவீரம், காட்டுப்பள்ளி, கச்சிப்பலதளி, ஏகம்பம்.... இவற்றில்கயிலாய நாதனைக் காணலாம்.

<u>ஷேத்திரக்கோவை</u>

கொடுங்கோளூர் அஞ்சைக் களஞ்செங் குன்றூர்
கொங்கணங் குன்றியூர் குரக்குக் காவும்
நெடுங்களம் நன்னிலம் நெல்லிக் காவு
நின்றியூர் நீடூர் நியம நல்லூர்
இடும்பா வனமெழுமூர் ஏமூர் தோமூர்
எறும்பியூர் ஏராரு மேம கூடங்
கடம்பை யிளங்கோயில் தன்னி னுள்ளுங்
கயிலாய நாதனையே காண லாமே. **#705**

கொடுங்கோளூர், அஞ்சைக்களம், செங்குன்றூர், கொங்கணம், குன்றியூர், குரக்குக்கா, நெடுங்களம், நன்னிலம், நெல்லிக்கா, நின்றியூர், நீடூர், நியமநல்லூர், இடும்பாவனம், எழுமூர், ஏமூர், தோமூர், எறும்பியூர்,

அழகிய ஏமகூடம், கடம்பை இளங்கோயில்.... ஆகிய இடங்களில் கயிலாய நாதனைக் காணலாம்.

க்ஷேத்திரக்கோவை

மண்ணிப் படிக்கரை வாழ்கொளி புத்தூர்
வக்கரை மந்தாரம் வார ணாசி
வெண்ணி விளத்தொட்டி வேள்விக் குடிவிளமர் விராடபுரம் வேட்க
ளத்தும்
பெண்ணை யருட்டுறைதண் பெண்ணா கடம்
பிரம்பில் பெரும்புலியூர் பெருவே ளூருங்
கண்ணை களர்காறை கழிப்பா லையுங்
கயிலாய நாதனையே காண லாமே. **#706**

மண்ணிப்படிக்கரை, வாழ்கொளிபுத்தூர், வக்கரை, மந்தாரம், வாரணாசி, வெண்ணி, விளத்தொட்டி, வேள்விக்குடி, விளமர், விராடபுரம், வேட்களம், பெண்ணையாற்றங்கரையிலுள்ள அருட்டுறை, பெண்ணாகடம், பிரம்பில், பெரும்புலியூர், பெரு வேளூர், கண்ணை, களர், காறை, கழிப்பாலை, முதலிய இடங்களில் கயிலாய நாதனைக் காணலாம்.

க்ஷேத்திரக்கோவை

வீழி மிழலைவெண் காடு வேங்கூர்
வேதிகுடி விசய மங்கை வியலூர்
ஆழி யகத்தியான் பள்ளி யண்ணா
மலையாலங் காடும் அரதைப் பெரும்
பாழி பழனம்பனந் தாள்பா தாளம்
பராய்த்துறை பைஞ்ஞீலி பனங்காட் டூர்தண்
காழி கடல்நாகைக் காரோ ணத்துங்
கயிலாய நாதனையே காண லாமே. **#707**

வீழிமிழலை, வெண்காடு, வேங்கூர், வேதிகுடி, விசயமங்கை, வியலூர், ஆழி, அகத்தியான்பள்ளி, அண்ணாமலை, ஆலங்காடு, அரதைப் பெரும்பாழி, பழனம், பனந்தாள், பாதாளம், பராய்த்துறை, பைஞ்ஞீலி, பனங்காட்டூர், காழி, கடற்கரையை அடுத்த நாகைக்காரோணம் .... ஆகிய இடங்களில் கயிலாயநாதனைக் காணலாம்.

க்ஷேத்திரக்கோவை

உஞ்சேனை மாகாளம் ஊறல் ஓத்தூர்
உருத்திர கோடி மறைக்காட் டுள்ளும்
மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர்

வீரட்டம் மாதானங் கேதா ரத்தும்
வெஞ்சமாக் கூடல்மீ யச்சூர் வைகா
வேதீச்சுரம் விவீச்சுரம் வெற்றி யூரும்
கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக் கையுங்
கயிலாய நாதனையே காண லாமே. **#708**

உஞ்சேனை மாகாளம், ஊறல், ஓத்தூர், உருத்திர கோடி, மறைக்காடு, மேகங்கள் பொருந்திய பொதியமலை, தஞ்சை, வழுவூர்வீரட்டம், மாதானம், கேதாரம், வெஞ்சமாக்கூடல், மீயச்சூர், வைகாவூர், வேதீச்சரம், விவீச்சுரம், வெற்றியூர், கஞ்சனூர், கஞ்சாறு, பஞ்சாக்கை.... ஆகிய இடங்களில் கயிலாய நாதனைக்காணலாம்.

<u>க்ஷேத்திரக்கோவை</u>

திண்டீச்சரஞ் சேய்ஞலூர் செம்பொன் பள்ளி
தேவூர் சிரபுரஞ்சிற் றேமம் சேறை
கொண்டீச்சரங் கூந்தலூர் கூழையூர் கூடல்
குருகாவூர் வெள்ளடை குமரி கொங்கு
அண்டர் தொழும்அதிகை வீரட் டானம்
ஐயா றசோகந்தி ஆமாத் தூருங்
கண்டியூர் வீரட்டங் கருகா வூருங்
கயிலாய நாதனையே காண லாமே. **#709**

திண்டீச்சரம், சேய்ஞலூர், செம்பொன்பள்ளி, தேவூர், சிரபுரம், சிற்றேமம், சேறை, கொண்டீச்சரம், கூந்தலூர், கூழையூர், கூடல், குருகாவூர் வெள்ளடை, குமரி, கொங்கு, தேவர்கள் தொழும் அதிகைவீரட்டம், ஐயாறு, அசோகந்தி, ஆமாத்தூர், கண்டியூர்வீரட்டம், கருகாவூர், ... ஆகிய இடங்களில் கயிலாயநாதனைக் காணலாம்.

<u>க்ஷேத்திரக்கோவை</u>

நறையூரிற் சித்தீச் சரம்நள் ளாறு
நாரையூர் நாகேச்சரம் நல்லூர் நல்ல
துறையூர் சோற்றுத்துறை சூல மங்கை
தோணிபுரந் துருத்தி சோமேச் சரம்
உறையூர் கடலொற்றி யூரூற் றத்தூர்
ஓமாம் புலியூர்ஓர் ஏட கத்துங்
கறையூர் கருப்பறியல் கன்றாப் பூருங்
கயிலாய நாதனையே காண லாமே. **#710**

நறையூரிலுள்ள சித்தீச்சரம், நள்ளாறு, நாரையூர், நாகேச்சரம், நல்லூர், மேம்பட்டதுறையூர், சோற்றுத்துறை, சூல மங்கை, தோணிபுரம், துருத்தி, சோமேச்சரம், உறையூர், கடலை அடுத்த ஒற்றியூர், ஊற்றத்தூர்,

ஓமாம்புலியூர், ஒப்பற்ற ஏடகம், கறையூர், கருப்பறியல், கன்றாப்பூர் ....
ஆகிய இடங்களில்கயிலாய நாதனைக் காணலாம்.

ஷேத்திரக்கோவை

புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர்
புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர்
வலிவலம் மாற்பேறு வாய்மூர் வைகல்
வலஞ்சுழி வாஞ்சியம் மருகல் வன்னி
நிலமலிநெய்த் தானத்தோ டெத் தானத்தும்
நிலவுபெருங் கோயில்பல கண்டால் தொண்டீர்
கலிவலிமிக் கோனைக்கால் விரலாற் செற்ற
கயிலாய நாதனையே காண லாமே. **#711**

புலிவலம், புத்தூர், புகலூர், புன்கூர், புறம்பயம், பூவணம், பொய்கை நல்லூர், வலிவலம், மாற்பேறு, வாய்மூர், வைகல், வலஞ்சுழி, வாஞ்சியம், மருகல், வன்னி, வளமான நிலத்தை உடைய நெய்த்தானம் முதலிய எந்த ஊரிலும் விளங்குகின்ற பெருங்கோயில்கள் பலவற்றைக் கண்டால், தொண்டர்களே! செருக்கிய வலிமை மிக்க இராவணனைத் தன் கால் விரலால் நசுக்கிய கயிலாய நாதனை அவ்விடங்களிலெல்லாம் காணலாம்.

திருஅடைவு

திருஅடைவு

திருஅடைவு, திருத்தாண்டகம்

பொருப்பள்ளி வரைவில்லாப் புரமூன் றெய்து
புலந்தழியச் சலந்தரனைப் பிளந்தான் பொற்சக்
கரப்பள்ளி திருக்காட்டுப் பள்ளி கள்ளார்
கமழ்கொல்லி யறைப்பள்ளி கலவஞ் சாரற்
சிரப்பள்ளி சிவப்பள்ளி செம்பொன் பள்ளி
செழுநனி பள்ளிதவப் பள்ளி சீரார்
பரப்பள்ளி யென்றென்று பகர்வோ ரெல்லாம்
பரலோகத் தினிதாகப் பாலிப் பாரே. **#712**

மேருவை வில்லாகக்கொண்டு திரிபுரங்களை அம்பால் எய்தானது பொருப்பள்ளி, வருந்தி அழியுமாறு சலந்தரனைச் சக்கரத்தால் பிளந்தானது அழகிய சக்கரப்பள்ளி, திருக்காட்டுப்பள்ளி, மது நிறைந்து மலர்கள் மணம் கமழும் கொல்லியறைப்பள்ளி, மயில்கள் ஆடும் சாரலினை உடைய சிராப்பள்ளி, சிவப்பள்ளி, செம்பொன் பள்ளி, செழிப்புமிக்க நனிபள்ளி, தவப்பள்ளிபுகழ் பொருந்திய பரப்பள்ளி என்று இத்தலப்பெயர்களைப் பலகாலும் சொல்லுவார் எல்லாரும் மேலான தேவருலகை அடைந்து அதனை இனிமைமிகக் காப்பாராவார்.

திருஅடைவு

காவிரியின் கரைக்கண்டி வீரட்டானங்
கடவூர்வீரட்டானங் காமருசீ ரதிகை
மேவியவீ ரட்டானம் வழுவைவீ ரட்டம்
வியன்பறியல் வீரட்டம் விடையூர்திக் கிடமாம்
கோவில்நகர் வீரட்டங் குறுக்கைவீ ரட்டங்
கோத்திட்டைக் குடிவீரட் டானமிவை கூறி
நாவில்நவின் றுரைப்பார்க்கு நணுகச் சென்றால்
நமன்தமருஞ் சிவன்தமரென் றகல்வர் நன்கே. **#713**

காவிரியின் கரையிலுள்ள கண்டியூர் வீரட்டானம், கடவூர் வீரட்டானம், விரும்பத்தக்க புகழினை உடைய அதிகை வீரட்டானம், வழுவூர் வீரட்டானம், பரப்பு மிக்க பறியலூர் வீரட்டானம், இடபத்தை ஊர்தியாக உடைய சிவபெருமானுக்குரிய இடமாகிய கோவலூர் வீரட்டானம், குறுக்கை வீரட்டானம், தலைமையும் மேன்மையுமுடையவிற்குடி வீரட்டானம் என்னும் வீரட்டானங்கள் எட்டினையும் முறைப்பட முன்னர் ஒருமுறை மொழிந்து பின்னர்

அம்முறையே நாவில் பழகிப்பலகாலும் போற்றுவார்க்கு அருகில் இயமதூதர்கள் ஒருகால் செல்ல நேரிடின் இவர் சிவபெருமானுக்கு அடியர் என்று உடனே உணர்ந்து அவரைவிட்டு வெகு தொலைவு அகல நீங்குவர்.

திருஅடைவு

நற்கொடிமேல் விடையுயர்த்த நம்பன் செம்பங்
குடிநல்லக் குடிநளிநாட் டியத்தான் குடி
கற்குடிதென் களக்குடிசெங் காட்டங் குடி
கருந்திட்டைக் குடிகடையக் குடிகா ணுங்கால்
விற்குடிவேள் விக்குடி நல்வேட்டக் குடி
வேதிகுடி மாணிகுடி விடைவாய்க் குடி
புற்குடிமா குடிதேவன் குடிநீலக்குடி
புதுக்குடியும் போற்றஇடர் போகு மன்றே. **#714**

நல்ல இடபக்கொடியை மேலே உயரத்தூக்கியவனும், நம்புதற்குரியவனுமாகிய சிவபெருமானுடைய செம்பங்குடி, நல்லக்குடி, பெருமைமிக்க நாட்டியத்தான்குடி, கற்குடி, இனிய களக்குடி, செங்காட்டங்குடி, கருந்திட்டைக்குடி, கடையக்குடி ஆகியவற்றோடு ஆராயுங்கால் குடியில் முடியும் ஊர்களாகிய விற்குடி, வேள்விக்குடி, நன்மமைமிகு வேட்டக்குடி, வேதிகுடி, மாணிகுடி, விடைவாய்க்குடி, புற்குடி, மாகுடி,, தேவன்குடி, நீலக்குடி, புதுக்குடி, என்பனவற்றையும் புகழ்ந்து கூறத் துன்பம் நீங்கும்.

திருஅடைவு

பிறையூருஞ் சடைமுடியெம் பெருமா னாரூர்
பெரும்பற்றப் புலியூரும் பேரா வூரும்
நறையூரும் நல்லூரும் நல்லாற் றூரும்
நாலூருஞ் சேற்றூரும் நாரை யூரும்
உறையூரும் ஓத்தூரும் ஊற்றத் தூரும்
அளப்பூரோ மாம்புலியூ ரொற்றி யூரும்
துறையூருந் துவையூருந் தோழூர் தானுந்
துடையூருந் தொழஇடர்கள் தொடரா வன்றே. **#715**

பிறை தவழும் சடைமுடிச் சிவபெருமானுடைய ஆரூர், பெரும் பற்றப்புலியூர், பேராவூர், நறையூர், நல்லூர், நல்லாற்றூர், நாலூர், சேற்றூர், நாரையூர், உறையூர், ஓத்தூர், ஊற்றத்தூர், அளப்பூர், ஓமாம்புலியூர், ஒற்றியூர், துறையூர், துவையூர், தோழூர், துடையூர், என்னுமிவற்றைத் தொழத் துன்பங்கள் தொடர மாட்டா.

திருஅடைவு

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றுங்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே. **#716**

நீர்ப்பெருக்கினை உடைய கங்கையாற்றைச் சடையிலணிந்த சிவபெருமான்திகழும் பெருங்கோயில்கள் எழுபத்தெட்டுடன், கடம்பூர்கரக் கோயில், மணங்கமழும் பொழில்கள் சூழ்ந்தஞாழற் கோயில், கருப்பறியலூரில் மலை போன்று விளங்கும் கொகுடிக்கோயில், அந்தணர்கள் வேதம் ஓதி வழிபாடு செய்து துதிக்கும் இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயிலாகிய திருக்கோயில், என்னும் சிவபெருமானுறையும் கோயில்களை வலம் வந்துபடி மீது வீழ்ந்து வணங்கத் தீவினைகள் யாவும்தீரும்.

திருஅடைவு

மலையார்தம் மகளொடுமா தேவன் சேரும்
மறைக்காடு வண்பொழில்சூழ் தலைச்சங் காடு
தலையாலங் காடுதடங் கடல்சூ ழந்தண்
சாய்க்காடு தள்ளுபுனற் கொள்ளிக் காடு
பலர்பாடும் பழையனூ ராலங் காடு
பனங்காடு பாவையர்கள் பாவம் நீங்க
விலையாடும் வளைதிளைக்கக் குடையும் பொய்கை
வெண்காடும் அடையவினை வேறா மன்றே. **#717**

மலையரசன் மகளாகியபார் வதியொடு மகாதேவன் மகிழ்ந்துறையும் மறைக்காடு, வளப்பம் மிக்க சோலைகள் சூழ்ந்த தலைச்சங்காடு, தலையாலங்காடு, பரந்த கடலால் சூழப்பட்டதும், அழகியதும், குளிர்ந்ததுமாகிய சாய்க்காடு, மோதித்தள்ளும் நீரையுடைய கொள்ளிக்காடு, பலரும் புகழும் பழையனூர் ஆலங்காடு, பனங்காடு, பாவை போன்ற பெண்கள் தங்கள் பாவம் நீங்குதற்காக விலை ஏறப்பெற்ற தம் வளையல்கள் கலந்து ஒலிக்கும்படி ஆடும் பொய்கைகளை உடைய வெண்காடு ஆகியவற்றை அடைந்து வணங்க வினைகள் விட்டு நீங்கும்.

திருஅடைவு

கடுவாயர் தமைநீக்கி யென்னை யாட்கொள்
கண்ணுதலோன் நண்ணுமிடம் அண்ணல்வாயில்
நெடுவாயில் நிறைவயல்சூழ் நெய்தல் வாயில்
நிகழ்முல்லை வாயிலொடு ஞாழல் வாயில்
மடுவார்தென் மதுரைநக ரால வாயில்
மறிகடல்சூழ் புனவாயில் மாட நீடு
குடவாயில் குணவாயி லான வெல்லாம்
புகுவாரைக் கொடுவினைகள் கூடா வன்றே. **#718**

கடுக்காயைத் தின்னும்வாயினராகிய சமணரை நீக்கி என்னை அடிமை கொள்ளும்கண்ணுதற் கடவுளாகிய சிவபெருமான் விரும்பித் தங்கும் இடங்களாகிய அண்ணல்வாயில், நெடுவாயில், பயிர் நிறைந்த வயல் சூழ்ந்த நெய்தல்வாயில், நிலவும் முல்லைவாயில், ஞாழல்வாயில், வையை நீர் பொருந்திய அழகிய மதுரை நகரத்து மன்னும் ஆலவாயில், அலை எழுந்து மடங்கும் கடல் சூழ்ந்த புனவாயில், மாடங்கள் உயர்ந்து தோன்றும் குடவாயில், குணவாயில், ஆகிய இவற்றுள் எல்லாம் புகுந்த வணங்குவாரைப் பாவச் செயல்கள் ஒரு நாளும் பற்றமாட்டா.

திருஅடைவு

நாடகமா டிடநந்தி கேச்சுரமா காளேச்
சுரநாகேச் சுரநாக ளேச்சுரநன் கான
கோடீச்சுரங் கொண்டீச் சுரந்திண் டீச்சுரங்
குக்குடேச் சுரமக்கீச் சுரங்கூ றுங்கால்
ஆடகேச் சுரமகத்தீச் சுரமய னீச்சுர
மத்தீச்சுரஞ் சித்தீச்சுர மந்தண் கானல்
ஈடுதிரை யிராமேச்சுர மென்றென் றேத்தி
யிறைவனுறை சுரம்பலவு மியம்பு வோமே. **#719**

கூத்தப் பெருமானது இடமாகிய நந்திகேச்சுரம், மாகாளேச்சுரம், நாகேச்சுரம், நாகளேச்சுரம், நன்மை பொருந்திய கோடீச்சரம், கொண்டீச்சரம், திண்டீச்சரம், குக்குடேச்சுரம், அக்கீச்சரம் என்றுமிவற்றைக் கூறுமிடத்து உடன்வரும் ஆடகேச்சுரம், அகத்தீச்சுரம், அயனீச்சுரம், அத்தீச்சுரம், சித்தீச்சுரம், அழகிய குளிர்ந்த கடற்கரையில் முத்துபவளம் முதலியவற்றைக் கொணர்ந்து போகடும் திரைகள் சூழ்ந்த இராமேச்சுரம் என்றெல்லாம் இறைவன் தங்குகின்றஈச்சுரம் பலவற்றையும் கூறி அவனைப் புகழ்வோமாக.

திருஅடைவு

கந்தமா தனங்கயிலை மலைகே தாரங்
காளத்தி கழுக்குன்றங் கண்ணா ரண்ணா
மந்தமாம் பொழிற்சாரல் வடபற்பதம்
மகேந்திரமா மலைநீலம் ஏம கூடம்
விந்தமா மலைவேதஞ் சையம் மிக்க
வியன்பொதியின் மலைமேரு உதயம் அத்தம்
இந்துசே கரனுறையும் மலைகள் மற்றும்
ஏத்துவோம் இடர்கெடநின் றேத்து வோமே. **#720**

கந்தமாதனம், கயிலைமலை, கேதாரம், காளத்தி, கழுக்குன்றம், இடமகன்ற அண்ணாமலை, தென்றல் தவழும் பொழில்களை உடைய சரிவுகளுடன் கூடிய வடபற்பதம், மகேந்திரமாமலை, நீலமலை, ஏமகூடமலை, விந்தமாமலை, வேதமலை, சையமலை, சோலைகள் மிக்க அகன்ற பொதியின் மலை. மேருமலை, உதயமலை, அத்தமலை ஆகிய இவையும் பிறவுமாகிய சந்திரனை முடியிலணிந்த சிவபெருமானுடைய மலைகளைப் புகழ்வோம். எம் இடர்கெடத் திசைநோக்கி நின்று அவற்றைப் புகழ்ந்து போற்றுவோம்.

திருஅடைவு

நள்ளாறும் பழையாறுங் கோட்டாற் றோடு
நலந்திகழும் நாலாறுந் திருவை யாறுந்
தெள்ளாறும் வளைகுளமுந் தளிக்குளமு நல்
லிடைக்குளமுந் திருக்குளத்தோ டஞ்சைக் களம்
விள்ளாத நெடுங்களம்வேட் களம்நெல் லிக்கா
கோலக்கா ஆனைக்கா வியன்கோடிகா
கள்ளார்ந்த கொன்றையான் நின்ற ஆறுங்
குளம்களங்கா என அனைத்துங் கூறுவோமே. **#721**

நள்ளாறு, பழையாறு, கோட்டாறு, நன்மை நிலவும், நாலாறு, திருஐயாறு, தெள்ளாறு, வளைகுளம், தளிக்குளம், நல்ல இடைக்குளம், திருக்குளம், அஞ்சைக்களம், குறையாத சிறப்புடைய நெடுங்களம், வேட்களம், நெல்லிக்கா, கோலக்கா, ஆனைக்கா, பரந்து திகழும்கோடிகா என்றெல்லாம் தேன் நிறைந்த கொன்றைப்பூ மாலை அணிந்த சிவபெருமான் விளங்கும் ஆறு, குளம், களம், கா ஆகிய எல்லாவற்றையும் கூறுவோம்.

திருஅடைவு

கயிலாய மலையெடுத்தான் கரங்க ளோடு
சிரங்களுரம் நெரியக்கால் விரலாற் செற்றோன்
பயில்வாய பராய்த்துறைதென் பாலைத் துறை

பண்டெழுவர் தவத்துறைவெண்டுறைபைம் பொழிற்
குயிலாலந் துறைசோற்றுத் துறைபூந் துறை
பெருந்துறையுங் குரங்காடு துறையி னோடு
மயிலாடு துறைகடம்பந் துறைஆவடு
துறைமற்றுந் துறையனைத்தும் வணங்கு வோமே. **#722**

கயிலாய மலையை எடுத்த இராவணனுடைய கரங்களும் சிரங்களும் வலிமை சிதையும் வண்ணம் தன் கால் விரலால் அழிவுண்டாக்கிய சிவபெருமான் பயின்றுறையும் பராய்த்துறை, தென்பாலைத்துறை, எழுமுனிவர் பண்டுதவம் செய்த தவத்துறை, வெண்டுறை, பசிய சோலையிடத்துக் குயில்கள் வாழும் ஆலந்துறை, சோற்றுத்துறை, பூந்துறை, பெருந்துறை, குரங்காடுதுறை, மயிலாடுதுறை, கடம்பந்துறை, ஆவடுதுறை ஆகியவற்றையும் துறை என்னும் பெயர் தாங்கும் மற்றைத் திருத்தலங்களையும் வணங்குவோம்.

திருவலஞ்சுழி

திருவலஞ்சுழி

திருவலஞ்சுழி, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காப்பகத்தீசுவரர்.
தேவியார் : மங்களநாயகியம்மை.

அலையார் புனற்கங்கை நங்கை காண
அம்பலத்தில் அருநட்ட மாடி வேடந்
தொலையாத வென்றியார் நின்றி யூரும்
நெடுங்களமும் மேவி விடையை மேல்கொண்
டிலையார் படைகையி லேந்தி யெங்கும்
இமையவரும் உமையவளும் இறைஞ்சி யேத்த
மலையார் திரளருவிப் பொன்னி சூழ்ந்த
வலஞ்சுழியே புக்கிடமா மருவி னாரே. **#723**

அலைபொருந்திய நீரையுடைய கங்கையை உமையம்மை காணுமாறு அம்பலத்தில் பிறர் ஆடுதற்கரிய திருக்கூத்தை ஆடி. அக்கூத்து வேடம் ஒரு காலும் விட்டு நீங்காத வெற்றியையுடைய சிவபெருமான் நின்றியூரையும், நெடுங்களத்தையும் விரும்பிப் பொருந்தி, இடபவாகனத்தை ஏறி இலைவடிவு கொண்ட முனைகளையுடைய படைக்கலங்களைக் கையிலேந்தி, எல்லா இடங்களிலும் நிறைந்து, இமையவரும், அருகிலிருந்து, உமையும் வணங்கித் துதிக்க மலையின் கண் நிறைந்து திரண்ட அருவியால் ஆகிய காவிரியாறு சூழ்ந்த வலஞ்சுழியைத் தாம் புகுந்துறையும் இடமாகவிரும்பி மேற்கொண்டார்.

திருவலஞ்சுழி-திருக்கொட்டையூர்

திருப்புள்ளமங்கை

திருவலஞ்சுழி-திருக்கொட்டையூர், திருத்தாண்டகம், இத்தலங்கள்
சோழநாட்டிலுள்ளன.திருவலஞ்சுழியில்,,
சுவாமிபெயர் : கபர்த்தீசுவரர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.திருக்கொட்டையூரில்,,
சுவாமிபெயர் : சுந்தரகோடீசுவரர்.
தேவியார் : பந்தாடுநாயகியம்மை.

கருமணிபோற் கண்டத் தழகன் கண்டாய்
கல்லால் நிழற்கீ ழிருந்தான் கண்டாய்
பருமணி மாநாகம் பூண்டான் கண்டாய்
பவளக்குன் றன்ன பரமன் கண்டாய்
வருமணிநீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்மாதேவன் கண்டாய்
வரதன் கண்டாய்
குருமணி போல் அழகமருங் கொட்டையூரிற்கோடீச் சரத்துறையுங்
கோமான் தானே. **#724**

நிறம் வாய்ந்த மணிபோன்ற அழகுடையவனும், கொட்டையூரிலுள்ள கோடீச்சரத்துறையும், தலைவனுமாகிய சிவபெருமான் நீலமணி போற்றிகழும் கழுத்தால் அழகு மிக்கவனும் கல்லால மரநிழலில் இருந்தவனும், பருத்த மணிகளை உடைய பெரியபாம்பினை அணியாகப் பூண்டவனும், பவளக்குன்று போல் காட்சியளிக்கும் மேலோனும், தெளந்த நீர் ஒடிவரும் காவிரியின் கரையில் உள்ள வலஞ்சுழியில் உறைபவனும், தேவர்க்கெல்லாம் தலைவன் ஆகிய தேவனும், யாவர்க்கும் வரமருளும் வரதனும் ஆவான்.

திருப்புள்ளமங்கை

கலைக்கன்று தங்கு கரத்தான் கண்டாய்
கலைபயில்வோர் ஞானக்கண் ஆனான் கண்டாய்
அலைக்கங்கை செஞ்சடைமேல் ஏற்றான் கண்டாய்
அண்ட கபாலத்தப் பாலான் கண்டாய்
மலைப்பண்டங் கொண்டு வருநீர்ப் பொன்னி
வலஞ்சுழியின் மேவிய மைந்தன் கண்டாய்
குலைத்தெங்கஞ் சோலைசூழ் கொட்டையூரிற்
கோடீச்ச ரத்துறையுங் கோமான் தானே. **#725**

குலைகளை உடைய தெங்குகள் நிறைந்த சோலையால் சூழப்பட்ட கொட்டையூரிலுள்ள கோடீச்சரத்துறையும் தலைவன் ஆகிய

சிவபெருமான்மான் கன்றை ஏந்திய கரத்தனும், கலைகளைப் பயில்வோருக்குஞானக் கண்ணாய் விளங்குபவனும், அலைகள் பொருந்திய கங்கையாற்றைத் தன்செஞ்சடையில் ஏற்றவனும், அண்டச்சுவரின் உச்சிக்கும் அப்பாலவனும், மலைபடுபொருள்களை அடித்துக் கொண்டு வரும் நீரையுடைய காவிரியின் கரையிலுள்ள வலஞ்சுழியிடத்து மேவிய மைந்தனும் ஆவான்.

திருப்புள்ளமங்கை

செந்தா மரைப்போ தணிந்தான் கண்டாய்
சிவன்கண்டாய் தேவர் பெருமான் கண்டாய்
பந்தாடு மெல்விரலாள் பாகன் கண்டாய்
பாலோடு நெய்தயிர்தே னாடி கண்டாய்
மந்தாரம் உந்தி வருநீர்ப் பொன்னி
வலஞ்சுழியின் மன்னு மணாளன் கண்டாய்
கொந்தார் பொழில்புடைசூழ் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. **#726**

பூங்கொத்துக்கள் நிறைந்த சோலைகள் நான்கு பக்கங்களிலும் சூழவிளங்கும் கொட்டையூரில் உள்ள கோடீச்சரத்து உறையும் தலைவன் செந்தாமரை மலரை அணிந்தவனும், சிவன்என்னும் நாமம் தனக்கே உரியவனும், தேவர்க்குத் தலைவனும், பந்தாடும் மெல்லிய விரல்களையுடைய பார்வதியைத்தன் ஆகத்தின் பாகத்தில் கொண்டவனும், பால்,தயிர், நெய், தேன் இவற்றில் ஆடப்பெறுபவனும், மந்தாரமரங்களைத் தள்ளிக் கொண்டு வரும் நீரையுடையகாவிரியின் கரையிலுள்ள வலஞ்சுழியிடத்து நிலைபெற்று நிற்கும் மணவாளனும் ஆவான்.

திருப்புள்ளமங்கை

பொடியாடு மேனிப் புனிதன் கண்டாய்
புட்பாகற் காழி கொடுத்தான் கண்டாய்
இடியார் கடுமுழக்கே றூர்ந்தான் கண்டாய்
எண்டிசைக்கும் விளக்காகி நின்றான் கண்டாய்
மடலார் திரைபுரளுங் காவிரி வாய்
வலஞ்சுழியின் மேவிய மைந்தன் கண்டாய்
கொடியாடு நெடுமாடக் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. **#727**

துகில் கொடிகள் அசையும் உயர்ந்த மாடங்கள் நிறைந்த கொட்டையூரில் உள்ள கோடீச்சரத் துறையும் தலைவனாகிய சிவபெருமான் திருநீறு திகழுந் திருமேனியை உடையபுனிதனும், கருட வாகனனாகிய

திருமாலுக்குச் சக்கராயுதத்தை உதவியவனும், இடிபோன்று அச்சந்தரும் முழக்கத்தையுடைய இடபத்தினை ஊர்பவனும், எட்டுத் திசைகளுக்கும் விளக்கமாய் நிற்பவனும், பூவிதழ்களைச் சுமந்த அலைகள் புரளும் காவிரியின் கரையிலுள்ள வலஞ்சுழியிடத்துப் பொருந்திய மைந்தனும் ஆவான்.

திருப்புள்ளமங்கை

அக்கரவம் அரைக்கசைத்த அம்மான் கண்டாய்
அருமறைக ளாறங்க மானான் கண்டாய்
தக்கனது பெருவேள்வி தகர்த்தான் கண்டாய்சதாசிவன்காண்
சலந்தரனைப் பிளந்தான் கண்டாய்
மைக்கொண்மயிற் றழைகொண்டு வருநீர்ப் பொன்னிவலஞ்சுழியான்
கண்டாய் மழுவன் கண்டாய்
கொக்கமரும் வயல்புடைசூழ் கொட்டை யூரிற்கோடீச் சரத்துறையுங்
கோமான் தானே. **#728**

கொக்குக்கள் அமர்ந்திருக்கும் வயல்கள் நாற்புறமும் சூழ்ந்துள்ள கொட்டையூரில் கோடீச்சரத்துறையும் தலைவனாகிய சிவபெருமான், சங்கு மணியையும், பாம்பையும் இடையில் கட்டியவனாய், உணர்தற்கரிய நான்மறைகளும் ஆறங்கங்களும் ஆனவனாய், தக்கனது பெருவேள்வியைத் தகர்த்தவனாய், சதாசிவனாய், சலந்தரன் உடலைப் பிளந்தவனாய், நீலநிற மயிற் பீலியை அடித்துக் கொண்டு வரும் நீரினையுடைய காவிரியின் கரையிலுள்ள வலஞ்சுழியில் வாழ்பவனாய், கையில் மழு ஏந்தியவனாய் விளங்குபவன் ஆவான்.

திருப்புள்ளமங்கை

சண்டனைநல் லண்டர்தொழச் செய்தான் கண்டாய்
சதாசிவன் கண்டாய்சங் கரன்றான் கண்டாய்
தொண்டர்பலர் தொழுதேத்துங் கழலான் கண்டாய்
சுடரொளியாய்த் தொடர்வரிதாய் நின்றான் கண்டாய்
மண்டுபுனல் பொன்னிவலஞ்சுழியான் கண்டாய்
மாமுனிவர் தம்முடைய மருந்து கண்டாய்
கொண்டல்தவழ் கொடிமாடக் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையும் கோமான் தானே. **#729**

கொடிகள் கட்டப்பட்டு, மேகங்கள் தவழும் வண்ணம் மிக உயர்ந்த மாடங்களைக் கொண்ட கொட்டையூரிலுள்ள கோடீச்சரத்துறையும் தலைவனாகிய சிவபெருமான், சண்டேசுரனை நல்ல தேவர்கள் தொழுமாறு செய்தவனும், சதாசிவனும், சங்கரனும், தொண்டர் பலரும் புகழ்ந்து வணங்கும் திருவடிகளை உடையவனும், பற்றிப் பின்

தொடர்வதற்கு அரிய பேரொளிப் பிழம்பாய் நின்றவனும், மிக்குவரும் புனலையுடைய காவிரியின் கரையிலுள்ள வலஞ்சுழியில் வாழ்பவனும், பெருமைமிக்க தவத்தவர் நுகரும் அமிர்தமும் ஆவான்.

திருப்புள்ளமங்கை

அணவரியான் கண்டாய் அமலன் கண்டாய்
அவிநாசி கண்டாயண் டத்தான் கண்டாய்
பணமணிமா நாக முடையான் கண்டாய்
பண்டரங்கன் கண்டாய் பகவன் கண்டாய்
மணல்வருநீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாதவற்கும் நான்முகற்கும் வரதன் கண்டாய்
குணமுடைநல் லடியார்வாழ் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. **#730**

நற்குணமிக்க அடியார்கள் வாழ்கின்ற கொட்டையூரிலுள்ள கோடீச்சரத்துறையும் தலைவனாகிய சிவபெருமான், எட்டுதற்கரியவனாய், குற்றமற்றவனாய், அழிவில்லாதவனாய், மேலுலகத்து உள்ளவனாய், படமுடைய பெரிய நாகத்தை அணிபவனாய், பண்டரங்கக் கூத்தினை ஆடுபவனாய், ஐசுவரியம் முதலிய ஆறு குணங்களை உடையவனாய், மணலை வாரிக் கொண்டுவரும் நீரையுடையகாவிரியின் கரையிலுள்ள வலஞ்சுழியில் வாழ்பவனாய், திருமாலுக்கும் பிரமனுக்கும் அவர்கள் விரும்பிய அதிகாரத்தை வழங்குபவனாய் விளங்குபவன் ஆவான்.

திருப்புள்ளமங்கை

விரைகமழும் மலர்க்கொன்றைத் தாரான் கண்டாய்
வேதங்கள் தொழநின்ற நாதன் கண்டாய்
அரையதனிற் புள்ளியத ளுடையான் கண்டாய்
அழலாடி கண்டாய் அழகன் கண்டாய்
வருதிரைநீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
வஞ்சமனத் தவர்க்கரிய மைந்தன் கண்டாய்
குரவமரும் பொழில்புடைசூழ் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. **#731**

குராமரங்கள் நிறைந்த சோலைகள் நாற்புறமுஞ் சூழ்ந்த கொட்டையூரிலுள்ள கோடீச்சரத்துறையும் தலைவனாகிய சிவபெருமான். மணங்கமழும் கொன்றைப் பூ மாலையை உடையவனும், வேதங்களால் போற்றப்படும் தலைவனும், புள்ளிகளை உடைய புலித்தோலை இடையில் உடையாக உடுத்தியவனும், அழலாடுபவனும், அழகனும், தொடர்ந்துவரும் அலைகளையுடையதும் நீர் நிரம்பியதும்

ஆகியகாவிரியின் கரையிலுள்ள வலஞ்சுழியில் வாழ்பவனும், வஞ்சமனத்தாரால் உணரப்படாத மைந்தனும் ஆவான்.

திருப்புள்ளமங்கை

தளங்கிளருந் தாமரையா தனத்தான் கண்டாய்
தசரதன்றன் மகன் அசைவு தவிர்த்தான் கண்டாய்
இளம்பிறையும் முதிர்சடைமேல் வைத்தான் கண்டாய்எட்டெட்
டிருங்கலையு மானான் கண்டாய்
வளங்கிளர்நீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்மாமுனிகள்
தொழுதெழு பொற்கழலான் கண்டாய்
குளங்குளிர்செங் குவளைகிளர் கொட்டை யூரிற்கோடீச் சரத்துறையுங்
கோமான் தானே. **#732**

குளிர்ந்தகுளங்களில் செங்குவளை மலர் மேலெழுந்து விளங்கும் கொட்டையூரிலுள்ள கோடீச்சரத்துறையும் தலைவனாகிய சிவபெருமான், இதழ்கள் மிக்க தாமரை மலரை ஆதனமாக உடையவனாய், தயரதராமனுடைய துன்பங்களைக் களைந்தவனாய், இளம்பிறையையும் பாம்பினையும் கங்கையையும். தன்பழைய சடையில் வைத்தவனாய், கலைகள் அறுபத்து நான்கும் ஆனவனாய், வளத்தை மிகுவிக்கும் நீர்ப் பெருக்கினையுடைய காவிரியின் கரையிலுள்ள வலஞ்சுழியில் வாழ்பவனாய், முனிவர்கள் வணங்கி எழும் பொற்பாதங்களை உடையவனாய் விளங்குபவன் ஆவான்.

திருப்புள்ளமங்கை

விண்டார் புரமூன் றெரித்தான் கண்டாய்
விலங்கலில்வல் லரக்கனுட லடர்த்தான் கண்டாய்
தண்டா மரையானும் மாலுந் தேடத்
தழற்பிழம்பாய் நீண்ட கழலான் கண்டாய்
வண்டார்பூஞ் சோலைவலஞ் சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் மறையோ டங்கங்
கொண்டாடு வேதியர்வாழ் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. **#733**

ஓதிய நான்மறை ஆறங்க, வழிஒழுகும் வேதியர்கள் வாழ்கின்ற கொட்டையூரிலுள்ள கோடீச்சரத்துறையும் தலைவனாகிய சிவபெருமான், பகைவர் புரமூன்றையும் எரித்தவனும், வலிய அரக்கனாகிய இராவணன் உடலைக் கயிலை மலையின் கீழ் வைத்துச் சிதைத்தவனும், குளிர்ந்த தாமரையில் வாழ் நான்முகனும் திருமாலும் தேட நெருப்புப் பிழம்பாய் நீண்டவனாகிய கழலை உடையவனும், வண்டுகள் மொய்க்கும் பூஞ்சோலைகள்மிக்க வலஞ்சுழியில்

வாழ்பவனும், தேவர்க்குத் தேவனும் ஆவான்.

திருநாரையூர்

திருநாரையூர்

திருநாரையூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சௌந்தரேசர்.
தேவியார் : திரிபுரசுந்தரியம்மை.

சொல்லானைப் பொருளானைச் சுருதி யானைச்
சுடராழி நெடுமாலுக் கருள் செய்தானை
அல்லானைப் பகலானை அரியான் தன்னை
அடியார்கட் கெளியானை அரண்மூன் றெய்த
வில்லானைச் சரம்விசயற் கருள்செய் தானை
வெங்கதிரோன் மாமுனிவர் விரும்பி யேத்தும்
நல்லானைத் தீயாடு நம்பன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. **#734**

சொல்லாகவும் பொருளாகவும் வேதங்களாகவும் திகழ்பவனும், ஒளிமிக் கசக்கராயுதத்தைத் திருமாலுக்கு அருளியவனும், இரவாகவும் பகலாகவும் இருப்பவனும், அன்பர் அல்லாதார்க்கு அரியனாகவும் அடியார்க்கு எளியனாகவும் இலங்குபவனும் அசுரர்க்கு அரணாயமைந்த திரிபுரங்கள் அழிய அம்பு எய்தவில்லினனும், விசயற்குப் பாசுபதம் அருளிய அருளாளனும், சூரியனும் பெருந்தவமுனிவர்களும் விரும்பிப் போற்றும் நல்லவனும், தீயாடு பவனும், விரும்புதற்குரிய தலைவனும் ஆகிய சிவபெருமானை நாரையூர் நன்னகரில் நான் கண்டேன்.

திருநாரையூர்

பஞ்சுண்ட மெல்லடியாள் பங்கன் தன்னைப்
பாரொடுநீர் சுடர்படர்காற் றாயி னானை
மஞ்சுண்ட வானாகி வானந் தன்னில்
மதியாகி மதிசடைமேல் வைத்தான் தன்னை
நெஞ்சுண்டென் நினைவாகி நின்றான் தன்னை
நெடுங்கடலைக் கடைந்தவர்போய் நீங்க வோங்கும்
நஞ்சுண்டு தேவர்களுக் கமுதீந் தானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. **#735**

செம்பஞ்சுக்குழம்பு ஊட்டப்பட்ட மெல்லிய பாதங்களை உடைய உமையம்மையை ஒரு கூறாகக் கொண்டவனும், நிலமும், நீரும், தீயும்வீசும் காற்றும் ஆனவனும், மேகம் தவழும் வானமும், அவ்வானத்தில் ஊரும் மதியும் ஆகி அம்மதியைத் தன்சடை முடிமேல்

தாங்கியவனும், என் மனத்தைத் தன் வழிநிறுத்தி அதன் நினைவுகள் எல்லாம் தானாகி நின்றவனும், நெடிய கடலைக் கடைந்தார் அனைவரும் ஓடி நீங்கும் வண்ணம் ஓங்கி எழுந்த நஞ்சைத் தான் உண்டு தேவர்கட்கு அமுதம் ஈந்தவனும் ஆகிய சிவபெருமானை நாரையூர் நன்னகரில்நான் கண்டேன்.

திருநாரையூர்

மூவாதி யாவர்க்கும் மூத்தான் தன்னை
முடியாதே முதல்நடுவு முடிவா னானைத்
தேவாதி தேவர்கட்குந் தேவன் தன்னைத்
திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தான் தன்னை
ஆவாத அடலேறொன் றுடையான் தன்னை
அடியேற்கு நினைதோறும் அண்ணிக் கின்ற
நாவானை நாவினில்நல் லுரையா னானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. **#736**

யாவர்க்கும் முன்னே தோன்றி வைத்தும் மூப்பு இன்றி என்றும் ஒருபெற்றியனாய் உள்ளவனும், தேவர்கட்குத் தலைவராகிய நான்முகன், திருமால், இந்திரன் ஆகியோருக்கும் தலைவனாய்த் திகழ்பவனும், நான்முகனுடைய சிரங்களில் ஒன்றைக் கொய்தவனும், காற்றெனக் கடிதியங்குவதும் வெற்றியையுடையது மாகிய ஆனேற்றை ஊர்தியாக உடையவனும், ஆகி, அடியேன் நினையுந்தொறும் நாவான் நுகரப்படும் தித்திப்பாகும் சுவையாகவும், நாவிற்பயிலும் நல்லுரையானாகவும் விளங்கும் சிவபெருமானை நாரையூராம் நன்னகரில் நான் கண்டேன்.

திருநாரையூர்

செம்பொன்னை நன்பவளந் திகழும் முத்தைச்
செழுமணியைத் தொழுமவர்தஞ் சித்தத் தானை
வம்பவிழும் மலர்க்கணைவேள் உலக்க நோக்கி
மகிழ்ந்தானை மதிற்கச்சி மன்னு கின்ற
கம்பனையெங் கயிலாய மலையான் தன்னைக்
கழுகினொடு காகுத்தன் கருதி யேத்தும்
நம்பனையெம் பெருமானை நாதன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. **#737**

செம்பொன், நற்பவளம், ஒளிமுத்து, செழுமணி என்றெல்லாம் ஒப்புக் கூறப்படுபவனும், வணங்குவார் சித்தத்தில் உறைபவனும், மணங்கமழும் மலர்களை கணைகளாகக் கொண்ட மன்மதன் இறக்கும் வண்ணம் விழித்து மகிழ்ந்தவனும், மதில் சூழ்ந்தகச்சியில் ஏகம்பனாய்

மன்னுபவனும, கயிலாய மலையில்வாழும் எம் தலைவனும், சம்பாதி சடாயு என்ற கழுகுகளும் இராமனும் தமக்கு நன்மைதருவான் இவன் என்று ஆராய்ந்து வணங்கும் இறைவனும், எம்பெருமானும், தலைவனுமாகிய சிவபெருமானை நாரையூராம் நன்னகரில் நான் கண்டேன்.

திருநாரையூர்

புரையுடைய கரியுரிவைப் போர்வை யானைப்
புரிசடைமேற் புனலடைத்த புனிதன் தன்னை
விரையுடைய வெள்ளெருக்கங் கண்ணி யானை
வெண்ணீறு செம்மேனி விரவி னானை
வரையுடைய மகள்தவஞ்செய் மணாளன் தன்னை
வருபிணிநோய் பிரிவிக்கும் மருந்து தன்னை
நரைவிடைநற் கொடியுடைய நாதன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. **#738**

உட்டொளை பொருந்திய கரத்தையுடைய யானையது தோலைப் போர்வையாகக் கொண்டவனும், முறுக்குண்ட சடையின்மேல் கங்கையைச் செறித்து வைத்தபுனிதனும், மணங்கமழும் வெள்ளெருக்கம் பூமாலையை அணிந்தவனும் வெள்ளிய நீறு செம்மேனியிடத்து விரவி விளங்குபவனும், பருவதராசன் மகள் தவம் செய்து அடையப்பெற்ற மணாளனும், வெள்ளிய விடையை உயர்த்திய நற்கொடியை உடைய தலைவனும் ஆகிய சிவபெருமானை நாரையூர் நன்னகரில்நான் கண்டேன்.

திருநாரையூர்

பிறவாதும் இறவாதும் பெருகி னானைப்
பேய்பாட நடமாடும் பித்தன் தன்னை
மறவாத மனத்தகத்து மன்னி னானை
மலையானைக் கடலானை வனத்து ளானை
உறவானைப் பகையானை உயிரா னானை
உள்ளானைப் புறத்தானை ஓசை யானை
நறவாரும் பூங்கொன்றை சூடி னானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. **#739**

பிறவாமையானும், இறவாமையானும் புகழ் பெருகியவனும், பேய்களின் பாட்டிற்கேற்பக் கூத்தாடும் பித்தனும், தன்னை மறவாத மனத்திடத்தேமன்னி நிற்பவனும், மலையிடத்தும் கடலில் கண்ணும் வானின் மேலும் விளங்குபவனும், உறவும் பகையும் உயிரும் ஆகுபவனும், அகத்தும், புறத்தும் திகழ்பவனும்,

தேனிறைந்தகொன்றைப் பூவைச் சூடியவனும் ஆகிய சிவபெருமானை நாரையூராம் நன்னகரில் நான் கண்டேன்.

திருநாரையூர்

தக்கனது வேள்விகெடச் சாடி னானைத்
தலைகலனாப் பலியேற்ற தலைவன் தன்னைக்
கொக்கரைசச் சரிவீணைப் பாணி யானைக்
கோணாகம் பூணாகக் கொண்டான் தன்னை
அக்கினொடும் என்பணிந்த அழகன் தன்னை
அறுமுகனோ டானைமுகற் கப்பன் தன்னை
நக்கனைவக் கரையானை நள்ளாற் றானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. **#740**

தக்கனது வேள்வியை அதன் பயன் கெடுமாறு அழித்தவனும், பிரமனது தலையைப்பாத்திரமாகக் கொண்டு பிச்சை ஏற்ற தலைவனும், கொக்கரை, சச்சரி, வீணை ஆகிய இசைக்கருவிகளை வாசிக்கும் கரத்தினனும், உயிரைக் கொள்ளுதலையுடைய நாகத்தை அணியாகப் பூண்டவனும், உருத்திராக்கம் என்பு இவற்றை அணிந்த அழகனும், ஆறுமுகன், ஆனைமுகன் ஆகிய இருவருக்கும் தந்தையும், ஆடை அணியாதவனும், வக்கரைநள்ளாறு என்னுந் தலங்களில் திகழ்பவனும் ஆகியசிவபெருமானை நாரையூராம் நன்னகரில் நான் கண்டேன்.

திருநாரையூர்

அரிபிரமர் தொழுதேத்தும் அத்தன் தன்னை
அந்தகனுக் கந்தகனை அளக்க லாகா
எரிபுரியும் இலிங்கபுரா ணத்து ளானை
எண்ணாகிப் பண்ணா ரெழுத்தா னானைத்
திரிபுரஞ்செற் றொருமூவர்க் கருள்செய் தானைச்
சிலந்திக்கும் அரசளித்த செல்வன் தன்னை
நரிவிரவு காட்டகத்தி லாட லானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. **#741**

மாலும் நான்முகனும் ஏத்தி வணங்கும் தந்தையும், இயமனுக்கு இறுதியை ஆக்கும்மகாசங்காரக் கடவுளும், அளந்தறிய இயலாத எரிப்பிழம்பாம் இலிங்கத்தினது இயல்புவிரிக்கும் இலிங்கபுராணத்து விளங்கித் தோன்றுபவனும், அருமைமிக்க எண்ணும் பண்ணும் எழுத்தும் ஆனவனும், திரிபுரங்களை அழித்து ஆண்டுத்தன்னை மறவாத மூவர்க்கும் அருள் செய்தவனும், சிலந்திக்குப்புவிபுரக்கும் அரசனாம் பேற்றையளித்த செல்வனும் ஏனை விலங்குகளொடு நரிகள் கலந்து திரியும் சுடுகாட்டில் ஆடுபவனும் ஆகிய சிவபெருமானை நாரையூராம்

நன்னகரில்நான் கண்டேன்.

திருநாரையூர்

ஆலாலம் மிடற்றணியா அடக்கி னானை
ஆலதன்கீழ் அறம்நால்வர்க் கருள்செய் தானைப்
பாலாகித் தேனாகிப் பழமு மாகிப்
பைங்கரும்பா யங்கருந்துஞ் சுவையா னானை
மேலாய வேதியர்க்கு வேள்வி யாகி
வேள்வியினின் பயனாய விமலன் தன்னை
நாலாய மறைக்கிறைவ னாயி னானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. **#742**

ஆலால நஞ்சினைத்தன் கழுத்திற்கு அணியாகக் கொண்டு அதன் நச்சுத்தன்மையைக் கெடுத்தவனும், கல்லால மர நிழலில் அமர்ந்துசனகாதி முனிவர் நால்வருக்கும் அறமுரைத்தவனும், பாலும் தேனும் பழமும் பசிய கரும்பும் ஆகி அவற்றின் இனிய சுவையாய்ப் பயில்பவனும், மேன்மைமிக்க வேதியர்க்கு வேள்வியாய் விளங்குபவனும், வேள்வியின் பயனாய்விளை பவனும், குற்றமற்றவனும், நான் மறைகளாலும் இறைவனாகப் போற்றப்படுபவனும் ஆகிய சிவபெருமானை நாரையூராம் நன்னகரில் நான் கண்டேன்.

திருநாரையூர்

மீளாத ஆளென்னை உடையான் தன்னை
வெளிசெய்த வழிபாடு மேவி னானை
மாளாமை மறையவனுக் குயிரும் வைத்து
வன்கூற்றி னுயிர்மாள உதைத்தான் தன்னைத்
தோளாண்மை கருதிவரை யெடுத்த தூர்த்தன்
தோள்வலியுந் தாள் வலியுந் தொலைவித் தாங்கே
நாளோடு வாள்கொடுத்த நம்பன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. **#743**

விட்டுப்பிரியாத அடிமையாக என்னை உடையவனும், அறிவு ஒன்றிச் செய்தவழிபாட்டை விரும்புபவனும், மார்க்கண்டேய மறையவனுக்கு ஒருகாலும் மாளாதவாறு உயிரளித்து வலியகூற்றின் உயிர் நீங்கும் வண்ணம் உதைத்தவனும், தன்தோள் வலிமையை மதித்துக் கயிலை மலையை எடுக்க முயன்றகாமுகனாகிய இராவணனுடைய தோள்வலியும் முயற்சி மிகுதியும்கெடச் செய்து, அவன் தன்னை உணர்ந்த அப்பொழுதே அவனுக்கு மிகுந்த வாழ்நாளையும் வாளையும் வழங்கிய தலைவனும் ஆகிய சிவபெருமானை நாரையூராம்

நன்னகரில்நான் கண்டேன்.

திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம்

திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம்

திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மடந்தைபாகேசுவரர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

சொன்மலிந்த மறைநான்கா றங்க மாகிச்
சொற்பொருளுங் கடந்த சுடர்ச் சோதி போலும்
கன்மலிந்த கயிலைமலை வாணர் போலுங்
கடல்நஞ்ச முண்டிருண்ட கண்டர் போலும்
மன்மலிந்த மணிவரைத்திண் தோளர் போலும்
மலையரையன் மடப்பாவை மணாளர் போலும்
கொன்மலிந்த மூவிலைவேற் குழகர் போலுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. **#744**

குடந்தைக் கீழ்க்கோட்டத்துத்திகழும் எம் கூத்தனார், சொல் வடிவாய் நிற்கும் நான்குமறைகளும் ஆறு அங்கங்களும் ஆனவரும், சொல்லையும் அதன் பொருளையும் கடந்த ஒளிப்பிழம்பாம் தன்மையரும், பக்க மலைகள் நிறைந்த கயிலை மலையில்வாழ்பவரும், கடலிடத்துத் தோன்றிய நஞ்சையுண்டுகறுத்த கழுத்தினரும், வலிமைமிக்க அழகிய மலைபோன்ற திண்ணிய தோளினரும், பருவதராசன் மகள்பார்வதியின் கணவரும், கொலைத் தொழில் பழகியமூவிலை வேலை ஏந்திய அழகரும் ஆவார்.

திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம்

கானல்இளங் கலிமறவ னாகிப் பார்த்தன்
கருத்தளவு செருத்தொகுதி கண்டார் போலும்
ஆனல்இளங் கடுவிடையொன் றேறி யண்டத்
தப்பாலும் பலிதிரியும் அழகர் போலும்
தேனலிளந் துவலைமலி தென்றல் முன்றிற்
செழும்பொழிற்பூம் பாளைவிரி தேறல் நாறுங்
கூனல்இளம் பிறைதடவு கொடிகொள் மாடக்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. **#745**

நல்லதேனின் சிறியதுளிகளை மிகுதியாக ஏந்தித் தென்றல் தவழும் முன்றிலின் கண்ணுள்ள பொழிலிடத்துப் பாளைகள் விரிதலால் துளிக்கும் தேனின் மணம் கமழப்பெறுவனவும், வளைவு பொருந்திய இளம்பிறையைத் தடவும்துகிற் கொடிகளைக் கொண்டவனும் ஆகிய,

மாடங்களை உடைய குடந்தைக் கீழ்க்கோட்டத்துத் திகழும் எம்கூத்தனார், காட்டில் எழுச்சிமிக்க நல்லிள வேட்டுவன் ஆகி விசயனுடைய ஊக்கத்தின் அளவினையும் விற்றொழிலின் பயிற்சி முழுவதையும் அறிந்தவரும், விரைந்து நடக்கும் நல்லிள ஆனேற்றை ஊர்ந்து இந்நிலவுலகிற்கு அப்பாலும் பிச்சைக்கொள்ளத் திரியும் அழகரும் ஆவார்.

திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம்

நீறலைத்த திருவுருவும் நெற்றிக் கண்ணும்
நிலாஅலைத்த பாம்பினொடு நிறைநீர்க் கங்கை
ஆறலைத்த சடைமுடியும் அம்பொன் தோளும்
அடியவர்க்குக் காட்டியருள் புரிவார் போலும்
ஏறலைத்த நிமிர்கொடியொன் றுடையர் போலும்
ஏழுலகுந் தொழுகழலெம் மீசர் போலும்
கூறலைத்த மலைமடந்தை கொழுநர் போலுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. **#746**

குடந்தைக் கீழ்க்கோட்டத்துத் திகழும் எம் கூத்தனார் திருநீறுபொருந்திய தம் திருவுருவத்தையும், நெற்றிக் கண்ணினையும், பிறையொடு பாம்பும் நீர் நிறைந்த கங்கையும் பொருந்திய சடைமுடியையும், அழகிய பொன்நிறத் தோள்களையும் அடியவர்க்குக் காட்டி அருள்புரிவாராய், இடபம் பொறித்த கொடியை உயர்த்தியவராய், ஏழுலகங்களும் வணங்கும் திருவடிகளை உடைய ஈசராய்த் தம் இடப்பங்காய் இடம் பெற்ற மலைமகட்குக் கொழுநராயும் திகழ்பவர்.

திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம்

தக்கனது பெருவேள்வி தகர்த்தார் போலுஞ்
சந்திரனைக் கலைகவர்ந்து தரித்தார் போலுஞ்
செக்கரொளி பவளவொளி மின்னின் சோதி
செழுஞ்சுடர்த்தீ ஞாயிறெனச் செய்யர் போலும்
மிக்கதிறல் மறையவரால் விளங்கு வேள்வி
மிகுபுகைபோய் விண்பொழியக் கழனி யெல்லாங்
கொக்கினிய கனிசிதறித் தேறல் பாயுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. **#747**

வேதவழி ஒழுகுதலில்மிக்க வன்மையுடைய மறையவராய் விளக்கம் பெறும்வேள்வியிடத்து எழும் மிகு புகை விண்ணிடத்துப்போய் மழையைப் பெய்விக்க, கழனிகளில் மாமரத்தினுடைய இனிய கனிகள் சிதற அவற்றின் சாறு பரவிப் பாயும்குடந்தைக் கீழ்க் கோட்டத்துத் திகழும் எம் கூத்தனார், தக்கனது பெருவேள்வியை அழித்தவரும்,

சந்திரனை ஒற்றைக்கலையுடன் கைப்பற்றித் தலையில் தரித்துக்காப்பாற்றியவரும், செவ்வானொளி, பவளஒளி, மின்னொளி, கொழுவிய சுடர்த்தீயொளி, ஞாயிற்றொளி, ஆகிய எல்லா ஒளியும் ஒருங்கு கலந்தாற்போன்ற செம்மை நிறம் உடையவரும் ஆவார்.

திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம்

காலன்வலி தொலைத்தகழற் காலர் போலுங்
காமனெழில் அழல்விழுங்கக் கண்டார் போலும்
ஆலதனில் அறம்நால்வர்க் களித்தார் போலும்
ஆணொடுபெண் ணலியல்ல ரானார் போலும்
நீலவுரு வயிரநிரை பச்சை செம்பொன்
நெடும்பளிங்கென் றறிவரிய நிறத்தார் போலுங்
கோலமணி கொழித்திழியும் பொன்னி நன்னீர்க்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. **#748**

அழகிய அரதனங்களைக்கரையில் ஒதுக்கி, மலையினின்று இறங்கிவரும் காவிரியின் நன்னீரால் சிறப்புமிகும் குடந்தைக் கீழ்க்கோட்டத்துத்திகழும் எம் கூத்தனார், இயமனது ஆற்றலையழித்ததும், கழல் அணிந்ததும் ஆகிய காலை உடையவரும், மன்மதனது அழகிய உடலை அழல் உண்ணும் வண்ணம் நுதற் கண்ணைவிழித்து நோக்கியவரும், சனகாதி முனிவர் நால்வர்க்கும், கல்லாலின் கீழ் அமர்ந்து அறம் உரைத்தருளியவரும், ஆண் பெண் அலிகளின் அல்லராம் தன்மை உடையவரும், நீலமணி, வரிசைப் படப்பதித்தற்குரிய வயிரம், பச்சை, செம்பொன், நீடு பளிங்கு என்றிவற்றுள் இன்னது ஒன்றுபோலும் நிறத்தினர் என உணர ஒண்ணாததொரு நிறமுடையவரும் ஆவார்.

திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம்

முடிகொண்ட வளர்மதியும் மூன்றாய்த் தோன்றும்
முளைஞாயி றன்னமலர்க் கண்கள் மூன்றும்
அடிகொண்ட சிலம்பொலியும் அருளார் சோதி
அணிமுறுவற் செவ்வாயும் அழகாய்த் தோன்றத்
துடிகொண்ட இடைமடவாள் பாகங் கொண்டு
சுடர்ச்சோதிக்கடிச்செம்பொன்மலைபோலிந்தாள்
குடிகொண்டென் மனத்தகத்தே புகுந்தார் போலுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. **#749**

குடந்தைக் கீழ்க்கோட்டத்துத்திகழுமெம் கூத்தனார், முடியினிடத்தே வளர்மதியைத் தரித்தவராய், மூன்றாய் எழுந்து தோன்றும் இளஞாயிறுகள் என்னத் தக்க மலர்க்கண்கள் மூன்றுடையவராய்,

பாதத்தில்கட்டப்பட்டொலிக்கும் சிலம்பினராய், அருள் நிறைந்து ஒளிமிக்க வரிசையான பற்களுடன் அழகிதாய் விளங்கும் செவ்வாயினராய், உடுக்கை போன்ற இடுப்பினை உடைய உமையம்மையை இடப்பங்காய்க் கொண்டவராய், ஒளிப்பிழம்பாய் விளக்கம் மிக்க செம்பொன்மலை போன்றவராய், இந்நாள் என் மனத்திடத்தே புகுந்துகுடிகொண்டவர் ஆவார்.

திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம்

காரிலங்கு திருவுருவத் தவற்கும் மற்றைக்
கமலத்திற் காரணற்குங் காட்சி யொண்ணாச்
சீரிலங்கு தழற்பிழம்பிற் சிவந்தார் போலுஞ்
சிலைவளைவித் தவுணர்புரஞ் சிதைத்தார் போலும்
பாரிலங்கு புனல்அனல்கால் பரமா காசம்
பரிதிமதி சுருதியுமாய்ப் பரந்தார் போலும்
கூரிலங்கு வேற்குமரன் தாதை போலுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. **#750**

குடந்தைக் கீழ்க்கோட்டத்துத்திகழும் எம் கூத்தனார் மேகம் போல விளங்கும் அழகிய உருவத்தையுடைய திருமாலுக்கும், படைப்பிற்குக் காரணராய்த் தாமரை மலரில்விளங்கும் பிரமனுக்கும் காண முடியாதபடி புகழ் நிலவும்நெருப்புப்பிழம்பு உருவத்தில் சிவந்து காணப்பட்டவரும், மலையை வில்லாக வளைத்து அசுரருடைய முப்புரங்களையும் அழித்தவரும், விளங்கும் நிலம், நீர், தீ, காற்று மேம்பட்ட ஆகாயம், சூரியன் சந்திரன், சுருதி என்றிவையாய்ப் பரவி நின்றவரும், கூர்மையுடன் திகழும் வேலையுடைய குமரனுக்குத் தந்தையானவரும் ஆவார்.

திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம்

பூச்சூழ்ந்த பொழில்தழுவு புகலூ ருள்ளார்
புறம்பயத்தார் அறம்புரிபூந் துருத்தி புக்கு
மாச்சூழ்ந்த பழனத்தார் நெய்த்தா னத்தார்
மாதவத்து வளர்சோற்றுத் துறையார் நல்ல
தீச்சூழ்ந்த திகிரிதிரு மாலுக் கீந்து
திருவானைக் காவிலோர் சிலந்திக் கந்நாள்
கோச்சோழர் குலத்தரசு கொடுத்தார் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. **#751**

குடந்தைக் கீழ்க்கோட்டத்துத் திகழும் எம் கூத்தனார் பூக்கள் பரவிய பொழிலால் தழுவப்பட்ட புகலூரில் உள்ளவரும், புறம்பயத்தில் உறைபவரும், அறத்தை மக்கள் விரும்பி மேற்கொள்ளும் பூந்துருத்தியில்

புக்கவரும், வண்டுகள் சூழ்ந்தபழனத்தை விரும்பிக் கொண்டவரும், நெய்த்தானத்து நிலைத்தவரும், சிறந்த தவஞ்செய்தற்கு ஏற்றசோற்றுத்துறையைப் போற்றிக் கொண்டவரும், தீயைப் போன்ற ஒளியை உமிழும் சக்கராயுதத்தைத் திருமாலுக்கு ஈந்தவரும், திருவானைக்காவில் தொண்டுசெய்த ஒப்பற்ற சிலந்திக்கு மேம்பட்ட சோழர்குடிக்குரிய அரசாட்சியை அந்நாள் கொடுத்தவரும் ஆவார்.

திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம்

பொங்கரவர் புலித்தோலர் புராணர் மார்பிற்
பொறிகிளர்வெண் பூணூல் புனிதர் போலும்
சங்கரவக் கடன்முகடு தட்ட விட்டுச்
சதுரநடம் ஆட்டுகந்த சைவர் போலும்
அங்கரவத் திருவடிக்காட் பிழைப்பத் தந்தை
அந்தணனை அறஎறிந்தார்க் கருளப் போதே
கொங்கரவச் சடைக்கொன்றை கொடுத்தார் போலும்
குடந்தைக்கீழ்க் கேட்டத்தெங் கூத்த னாரே. **#752**

குடந்தைக் கீழ்க்கோட்டத்துத்திகழும் எம் கூத்தனார் சினம் மிகும் பாம்பை அணிந்தவரும், புலித்தோலை உடுத்தவரும், பழமையானவரும், உத்தம இலக்கணமாகிய பொறிகள் (மூன்று வரிகள்) விளங்கும்மார்பிடத்து வெள்ளிய பூணூலைத் தரித்த புனிதரும், சங்குகள் வாழ்வதும் ஒலியுடையதும் ஆகிய கடல் அண்டமுகட்டில் சென்று மோதுமாறு கைகளை வீசித் திறம்படநடனமாடும் அநாதிசைவரும், கழலும், சிலம்பும் கிடந்து ஒலிக்கும் திருவடிக்கு ஆளாதலில் தவறியதனால், தந்தையாகிய அந்தணனைத் தாளிரண்டும் வெட்டுண்டு வீழ மழுவினாலெறிந்தசண்டேசருக்கு அப்பொழுதே அரவம் தவழும் சடை முடியிடத்துத் திகழும் கொன்றை மாலையைக் கொடுத்தவரும் ஆவார்.

திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம்

ஏவியிடர்க் கடலிடைப்பட் டிளைக்கின் றேனை
யிப்பிறவி யறுத்தேற வாங்கி யாங்கே
கூவிஅம ருலகனைத்து முருவிப் போகக்
குறியிலறு குணத்தாண்டு கொண்டார் போலும்
தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
சரசுவதிபொற் றாமரைபுட் கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. **#753**

முதன்மை பொருந்தியகாவிரி, நல்யமுனை, கங்கை, சரசுவதி,

பொற்றாமரை, பிற தாமரைத் தடாகங்கள், தௌநீர்க் கிருட்டிணை, குமரி ஆகிய தீர்த்தங்கள் தாவிவந்து சூழ்ந்த குடந்தைக் கீழ்க்கோட்டத்துத் திகழுமெம் கூத்தனார், என்வினைக்கு ஈடாகத் தம்மால் செலுத்தப்பட்டுத் துன்பக்கடலில் வீழ்ந்து துன்புறுகின்ற என்னைக் கூவிக் கரை ஏறும்படிஎடுத்து, இப்பிறவியை அறுத்து யான் விண்ணவர் உலகம் எல்லாவற்றையும் தாண்டித் தமது சிவலோகத்தில் சென்றுசேரும்படி, மாயை கலவாத தம் அருட்குணம் ஆறனுள்ளும்படுத்து என்னை ஆட்கொண்டவர் ஆவார்.

திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம்

செறிகொண்ட சிந்தைதனுள் தௌந்து தேறித்
தித்திக்குஞ் சிவபுவனத் தமுதம் போலும்
நெறிகொண்ட குழலியுமை பாக மாகநிறைந்தமரர் கணம்வணங்க
நின்றார் போலும்
மறிகொண்ட கரதலத்தெம் மைந்தர் போலும்
மதிலிலங்கைக் கோன்மலங்க வரைக்கீழிட்டுக்
குறிகொண்ட இன்னிசைகேட் டுகந்தார் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. **#754**

குடந்தைக் கீழ்க்கோட்டத்துத்திகழும் எம் கூத்தனார், இறையின்பம் எய்துதலையே முடிந்தபயனாய்த் தௌயவுணர்ந்து தியானத்தில் செறிந்து நிற்பார் சிந்தையில் தித்திக்கும் சிவலோகத்து அமுதம் ஆவாரும், நெறித்த கூந்தலையுடையஉமை ஒருபாகமாக இருக்க, அமரர் கூட்டம் வணங்க, எல்லாநலனும் நிரம்பப்பெற்றுத் திகழ்ந்தவரும், மான்கன்றைத்தம் கரத்தில் ஏந்திய எம் வலியரும், மதிற்காவல்மிக்க இலங்கையிறை கருத்தழியுமாறு மலைக்கீழ் இட்டு அவனை ஒறுத்துப் பின் இலக்கணம் அமைந்த அவன் இசையைக் கேட்டு விருப்புற்று அவனுக்கு நலம்பல நல்கினவரும் ஆவார்.

திருப்புத்தூர்

திருப்புத்தூர்

திருப்புத்தூர், திருத்தாண்டகம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : புத்தூரீசர்.
தேவியார் : சிவகாமியம்மை.

புரிந்தமரர் தொழுதேத்தும் புகழ்தக் கோன்காண்
போர்விடையின் பாகன்காண் புவன மேழும்
விரிந்துபல வுயிராகி விளங்கி னான்காண்
விரைக்கொன்றைக் கண்ணியன்காண் வேதம் நான்கும்
தெரிந்துமுதற் படைத்தோனைச் சிரங்கொண்டோன்காண்
தீர்த்தன்காண் திருமாலோர் பாகத் தான்காண்
திருந்துவயல் புடைதழுவு திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே. **#755**

தேவர்கள் விரும்பித்துதித்து வணங்கும் புகழுக்கு உரியவனும், போர்த்தொழில்வல்ல இடப ஊர்திக்குத் தலைவனும், உலகங்கள் ஏழுமாகிப்பல உயிரும் ஆகி விளங்கியவனும், மணமிக்க கொன்றைக் கண்ணியை உடையவனும், வேதம் நான்கையும் உணர்ந்து முற்படப் படைப்புத் தொழிலை மேற்கொண்ட பிரமனதுசிரத்தைக் கொய்தவனும், குற்றமற்றவனும், திருமாலைஒரு பாகமாகக் கொண்டவனும் ஆகிப் பண்படுத்தப் பட்டவயல்கள் நாற்புறமுஞ் சூழ விளங்கும் திருப்புத்தூர்த்திருத்தளியில் திகழுஞ் சிவபெருமான் என்சிந்தையில் என்றும் நீங்காமல் நிற்பவன் ஆவான்.

திருப்புத்தூர்

வாராரும் முலைமங்கை பாகத் தான்காண்
மாமறைக ளாயவன்காண் மண்ணும் விண்ணுங்
கூரார்வெந் தழலவனுங் காற்றும் நீருங்
குலவரையும் ஆயவன்காண் கொடுநஞ் சுண்ட
காராருங் கண்டன்காண் எண்டோ ளன்காண்
கயிலைமலைப் பொருப்பன்காண் விருப்போ டென்றுந்
தேராரும் நெடுவீதித் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே. **#756**

கச்சணிந்த முலையினையுடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டவனும் பெரிய வேதங்கள் ஆனவனும், நிலமும் விண்ணும், வெம்மைமிகு தழலும் காற்றும் நீரும் உயர்மலையும் ஆயவனும், கொடிய

நஞ்சையுண்டுகறுத்த கண்டத்தவனும், எண்டோளினனும், கயிலைமலையாகிய பொருப்பைத் தன் வாழிடமாகக் கொண்டவனும் ஆகித்தேரோடும் நெடுவீதிகளையுடைய திருப்புத்தூர்த் திருத்தளியில் என்றும் விருப்போடு விளங்கும் சிவ பெருமான் என்சிந்தையிலே என்றும் நீங்காமல் நிலைப்பவன் ஆவான்.

திருப்புத்தூர்

மின்காட்டுங் கொடிமருங்குல் உமையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருப்புவலிச்சிலைக்கை யோன்காண்
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவின் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே. **#757**

மின்னலும் கொடியும் போன்ற இடையினையுடைய உமையம்மையால் என்றும் விரும்பப்படும் கேள்வனும், மலையாகிய வலிமைமிக்க வில்லை வளைத்த கையினனும், நல்ல பாட்டுக்களையாக்க வல்ல புலவனாய்ச் சங்கம் போந்து நல்லபொற் கிழியைத் தருமிக்கு அருளியவனும் ஆகி, மணமிக்ககொன்றை மலர் பொன்னின் வனப்பைக் காட்ட, அருகேநின்ற மேட்டு நிலக் காந்தள் கைகளின் வடிவினைக்காட்ட, இவற்றைக் கண்டு வண்டு இசைபாடும் முல்லையும் குறிஞ்சியும் மயங்கிய வளமிக்க திருப்புத்தூர்த் திருத்தளியில் விளங்கும் சிவபெருமான் என் சிந்தையில் என்றும் நீங்காமல் நிலைப்பவன் ஆவான்.

திருப்புத்தூர்

ஏடேறு மலர்க்கமலத் தயனும் மாலும்
இந்திரனும் பணிந்தேத்த இருக்கின் றான்காண்
தோடேறு மலர்க்கடுக்கை வன்னி மத்தந்
துன்னியசெஞ் சடையான்காண் துகள்தீர் சங்கம்
மாடேறி முத்தீனுங் கானல் வேலி
மறைக்காட்டு மாமணிகாண் வளங்கொள் மேதி
சேடேறி மடுப்படியுந் திருப்புத் தூரில்
திருத்தளியான்காண் அவனென் சிந்தை யானே. **#758**

இதழ்கள் நிறைந்த தாமரைமலரில் விளங்கும் நான்முகனும், திருமாலும் இந்திரனும், பணிந்து துதிக்கும் வண்ணம் இருப்பவனும், இதழ்களையுடையகொன்றை, வன்னி, ஊமத்தை ஆகிய மலர்கள் செறிந்த செஞ்சடையினனும், குற்றமற்ற சங்கம் பக்கத்தே ஏறிமுத்தை

ஈனும் கடற்கரையை எல்லையாக உடைய மறைக்காட்டில்வாழ் மணியும் ஆகி, வளவிய பயிர்களை மேயும் எருமைகரை மீது ஏறி நீர் நிலையில் படியும் திருப்புத்தூர்த்திருத்தளியில் திகழும் சிவபெருமான் என்றும் என்சிந்தையில் நின்று நிலவுபவன் ஆவான்.

திருப்புத்தூர்

கருமருவு வல்வினைநோய் காற்றி னான்காண்
காமருபூங் கச்சியே கம்பத் தான்காண்
பெருமருவு பேருலகில் பிணிகள் தீர்க்கும்பெரும்பற்றத் தண்புலியூர்
மன்றா டிகாண்
தருமருவு கொடைத்தடக்கை யளகைக் கோன்றன்
சங்காதி ஆரூரில் தனியா னைகாண்
திருமருவு பொழில்புடை சூழ்திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே. **#759**

பிறப்பைப் பொருந்துவதற்கு ஏதுவாகிய வலிய வினை நோயை நீக்கியவனும்,விருப்பம் வருதற்குரிய பொலிவுடன் விளங்கும் கச்சிஏகம்பனும், நிலையாமைப் பெருமை மேவும் பெரிய நிலவுலகில் பொருந்தும் பிணிகளைத் தீர்க்கும் குளிர்ச்சிமிக்க பெரும் பற்றப் புலியூர் மன்றாடியும், கற்பகத்தருப் போலக் கொடுக்கும் பெருமை மிக்க கையினையுடைய அளகைக் கோன் ஆகிய குபேரனுக்கு மிக்க நண்பனும், ஆரூரில் அமர்ந்த ஒப்பற்ற யானையும் ஆகித் திருப்புத்தூர்த்திருத்தளியில் திகழும் சிவபெருமான் என்றும் என்சிந்தையில் நின்று நிலவுபவன் ஆவான்.

திருப்புத்தூர்

காம்பாடு தோளுமையாள் காண நட்டங்
கலந்தாடல் புரிந்தவன்காண் கையில் வெய்ய
பாம்பாடப் படுதலையிற் பலிகொள் வோன்காண்
பவளத்தின் பருவரைபோல் படிவத் தான்காண்
தாம்பாடு சினவிடையே பகடாக் கொண்ட
சங்கரன் காண் பொங்கரவக் கச்சை யோன்காண்
சேம்பாடு வயல்புடைசூழ் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே. **#760**

மூங்கில் போன்ற தோளுடைய உமையம்மை காணுமாறு பல கூத்து விகற்பங்களையும் கலந்து ஆடியவனும், சீற்றம்மிக்க பாம்பு கையிற் கங்கணமாய்ப் பொருந்தி ஆடத் தலை ஓட்டில் பிச்சை ஏற்பவனும், பவளத்தால் ஆன பெரிய மலை போன்ற வடிவினனும், கயிற்றால்பிணித்தற்குரிய சினமிக்க இடபத்தையே யானை

எனமதிக்கத்தக்க ஊர்தியாகக் கொண்ட சங்கரனும், பொங்கும் சினப் பாம்பையே அரைப்பட்டிகையாகப்புனைந்தவனும் ஆகி நீர்ச் சேம்புகள் நிறைந்த வயல்கள்நாற்புறமும் சூழ்ந்த திருப்புத்தூர்த் திருத்தளியில் திகழும் சிவபெருமான் என்றும் என் சிந்தையில் நின்று நிலவுபவன் ஆவான்.

திருப்புத்தூர்

வெறிவிரவு மலர்க் கொன்றை விளங்கு திங்கள்
வன்னியொடு விரிசடைமேல் மிலைச்சி னான்காண்
பொறிவிரவு கதநாகம் அக்கி னோடு
பூண்டவன்காண் பொருபுலித்தோ லாடை யான்காண்
அறிவரிய நுண்பொருள்க ளாயி னான்காண்
ஆயிரம்பே ருடையவன்காண் அந்தண் கானல்
செறிபொழில்சூழ் மணிமாடத் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே. **#761**

மணம்நாறும் கொன்றை மலரையும் விளக்கமுடைய திங்களையும் வன்னியையும் விரிந்த சடைமேல் சூடியவனும், புள்ளிகள் பொருந்திய கோபிக்கும் நாகத்தையும், எலும்பினையும் அணியாகப் பூண்டவனும், போர்க்குணமுடைய புலியினது தோலை ஆடையாகக் கொண்டவனும், அறிதற்கரிய நுண்பொருள்களாய் ஆனவனும், ஆயிரம் பேர் உடையவனும் ஆகி, அழகியதும், குளிர்ந்ததும் ஆகிய கடற்கரையிடத்தே நெருங்கிவிளங்கும் பொழில்கள் சூழ்ந்ததும், வரிசையாயமைந்த மாடங்களை உடையதுமாகிய திருப்புத்தூர்த் திருத்தளியில் திகழும் சிவபெருமான் என்றும் என் சிந்தையில் நின்று நிலவுபவன் ஆவான்.

திருப்புத்தூர்

புக்கடைந்த வேதியற்காக் காலற் காய்ந்த
புண்ணியன்காண் வெண்ணகைவெள் வளையாளஞ்ச
மிக்கெதிர்ந்த கரிவெருவ உரித்த கோன்காண்
வெண்மதியைத் தலைசேர்த்த தண்மை யோன்காண்
அக்கரும்பு பெரும்புன்னை நெருங்கு சோலை
ஆரூருக் கதிபதிகாண் அந்தண் தென்றல்
திக்கணைந்து வருமருங்கின் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே. **#762**

தன்பால் அடைக்கலம்புக்க வேதியன் மார்க்கண்டேயனுக்காக இயமனைக் கோபித்துக் கொன்ற புண்ணியனும், வெள்ளிய பற்களையும் வெள்ளிய வளையல்களையும் உடைய உமையம்மை அஞ்சுமாறுசினம்

மிக்கு எதிர்த்த யானை நடுங்க அதன் தோலை உரித்தவனும், வெள்ளிய மதிப்பிறையைத் தலையில்தரித்து அருளியவனும், மன்மதன் வில்லாகக் கொள்ளுதற்கு வாய்ப்புடைய அக்கரும்பும், பெருமைமிக்க புன்னையும் நெருங்கிய சோலைமிக்க ஆரூர்க்கு அதிபதியும் ஆகி,மெல்லிதாய்க் குளிர்ந்த தென்றல் வடக்குத் திக்கினை அணையவரும் இடத்தில் உள்ள திருப்புத்தூர்த் திருத்தளியில் திகழும் சிவபெருமான் என்றும் என் சிந்தையில் நின்றுநிலவுபவன் ஆவான்.

திருப்புத்தூர்

பற்றவன்காண் ஏனோர்க்கும் வானோ ருக்கும்
பராபரன்காண் தக்கன்றன் வேள்வி செற்ற
கொற்றவன்காண் கொடுஞ்சினத்தை யடங்கச் செற்று
ஞானத்தை மேன்மிகுத்தல் கோளாக் கொண்ட
பெற்றியன்காண் பிறங்கருவிக் கழுக்குன் றத்தெம்
பிஞ்ஞகன்காண் பேரெழிலார் காம வேளைச்
செற்றவன்காண் சீர்மருவு திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே. **#763**

அண்டினார்க்குத்துணையானவனும், தேவர்க்கும் மற்றையவர்க்கும் அவரின் வேறுபட்டு மேலானவனும், அவரோடு கலந்து நின்று அவரைப் போலக் கீழானவனும், தக்கனது வேள்வியை அழித்த வெற்றியினனும், கொடிய சினத்தை முற்றிலும் அழித்தவனும், ஞானத்தை மேன்மேலும்வளரச் செய்தலைத் தன்கொள்கையாகக் கொண்டவனும், அருவி விளங்கும் கழுக்குன்றில் யாம் வணங்கும் தலைக்கோலம் உடையவனும், மிக்க எழில் படைத்த மன்மதனை விழித்து அழித்தவனும், ஆகி, புகழ்மிக்க திருப்புத்தூர்த்திருத்தளியில் திகழும் சிவபெருமான் என்றும் என் சிந்தையில் நின்று நிலவுபவன் ஆவான்.

திருப்புத்தூர்

உரம்மதித்த சலந்தரன்தன் ஆகங் கீண்ட
வோராழி படைத்தவன்காண் உலகு சூழும்
வரம்மதித்த கதிரவனைப் பற்கொண் டான்காண்
வானவர்கோன் புயம்நெரித்த வல்லா ளன்காண்
அரமதித்துச் செம்பொன்னி னாரம் பூணா
அணிந்தவன்காண் அலைகடல்சூழ் இலங்கை வேந்தன்
சிரம்நெரித்த சேவடிகாண் திருப்புத் தூரில்
திருத்தளியாண் காண்அவனென் சிந்தை யானே. **#764**

தனது வலியைப் பெரிதாகமதித்த சலந்தரனின் உடலைப் பிளந்த ஒப்பற்ற ஆழியைப் படைத்தவனும், உலகினைச் சூழவருவோனாய்

எல்லாராலும் மேலாக மதிக்கப்பட்ட சூரியனுடைய பல்லைப் பறித்தவனும், இந்திரனுடைய புயத்தை நெரித்த வன்மை யுடையவனும், பாம்பினைச் செம்பொன் ஆரமாகவும் பூணாகவும் மதித்து அணிந்தவனும், அலைகடல் சூழ் இலங்கைக்கு இறையாகிய இராவணனுடைய சிரங்களை நெரியச் செய்த சேவடியினனும் ஆகி, திருப்புத்தூர்த் திருத்தளியில் திகழும் சிவபெருமான் என்றும் என் சிந்தையில் நின்று நிலவுபவன் ஆவான்.

திருவாய்மூர்

திருவாய்மூர்

திருவாய்மூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வாய்மூரீசுவரர்.
தேவியார் : பாலினுநன்மொழியம்மை.

பாட அடியார் பரவக் கண்டேன்
பத்தர் கணங்கண்டேன் மொய்த்த பூதம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்
அங்கை அனல்கண்டேன் கங்கை யாளைக்
கோட லரவார் சடையிற் கண்டேன்
கொக்கி னிதழ்கண்டேன் கொன்றை கண்டேன்
வாடல் தலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. **#765**

அடியார்கள் பாடிப்பரவவும் பத்தர்கணம் சூழ்ந்து நிற்கவும் பூதங்கள் நெருங்கவும் ஆடற்கேற்ற முழவம் முழங்கவும் அமைந்த சூழலில் அழகிய கையில் அனல் ஏந்தியவரும், காந்தட்பூவும், பாம்பும் பொருந்திய சடையில் கங்கையைத் தரித்தவரும், கொக்கிறகைச் சூடியவரும், கொன்றைமாலையை அணிந்தவரும், உலர்ந்த தலையோட்டினைக் கையில் கொண்டவரும் ஆக வாய்மூர்ச் சிவபெருமானை நான் கண்டேன்.

திருவாய்மூர்

பாலின் மொழியாளோர் பாகங் கண்டேன்
பதினெண் கணமும் பயிலக் கண்டேன்
நீல நிறமுண்ட கண்டங் கண்டேன்
நெற்றி நுதல்கண்டேன் பெற்றங் கண்டேன்
காலைக் கதிர்செய் மதியங் கண்டேன்
கரந்தை திருமுடிமேல் தோன்றக் கண்டேன்
மாலைச் சடையும் முடியுங் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. **#766**

பால்போன்று இனிக்கும் மொழியாளாகிய பார்வதி ஒரு பங்காகத்திகழப் பெற்றவரும், பதினெண் கணத்தேவரும் சூழ்ந்து பணி செய்யக் கொண்டவரும், நீலகண்டரும், நெற்றிக் கண்ணரும், பெற்றமூர்பவரும், ஒளிஉமிழும் இளமதியைத் தரித்தவரும், திருமுடி மேல் கரந்தை மலரைச்சூடியவரும், மாலை அணிந்த சடையாலான முடியை

உடையவரும் ஆக வாய்மூர் அடிகளை நான்கண்டேன்.

திருவாய்மூர்

மண்ணைத் திகழ நடம தாடும்
வரைசிலம் பார்க்கின்ற பாதங் கண்டேன்
விண்ணிற் றிகழும் முடியுங் கண்டேன்
வேடம் பலவாஞ் சரிதை கண்டேன்
நண்ணிப் பிரியா மழுவுங் கண்டேன்
நாலு மறையங்கம் ஓதக் கண்டேன்
வண்ணம் பொலிந்திலங்கு கோலங் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. **#767**

நிலவுலகம் நின்று நிலைக்க நிகழ்த்தும் கூத்தாட்டில் கட்டப்பட்ட சிலம்பு ஒலிக்கின்ற பாதங்களை உடையவராய், விண்ணிற் சென்று விளங்கும் முடியினராய், ஏற்கும் பலவகை வேடங்கட்கும் பொருந்திய செயல்களைச் செய்பவராய், பிரியாது விளங்கும் மழுவினராய், நான்கு மறைகளையும் ஆறு அங்கங்களையும் ஓதுபவராய், பலவகை நிறங்களும் அழகுபெறத்திகழும் தோற்றத்தினராய்த் திருவாய்மூர்ச் சிவபெருமானை நான் கண்டேன்.

திருவாய்மூர்

விளைத்த பெரும்பத்தி கூர நின்று
மெய்யடியார் தம்மை விரும்பக் கண்டேன்
இளைக்குங் கதநாக மேனி கண்டேன்
என்பின் கலந்திகழ்ந்து தோன்றக் கண்டேன்
திளைக்குந் திருமார்பில் நீறு கண்டேன்
சேணார் மதில்மூன்றும் பொன்ற அன்று
வளைத்த வரிசிலையுங் கையிற் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. **#768**

முன்னைத் தவம் விளைத்த பத்தி மிக நின்று உண்மை அடியார்கள் தம்மை விரும்புமாறு திகழ்பவராய், கருடனுக்கு அஞ்சுவனவும் இயல்பாகக் கோபம்மிக்கனவும் ஆகிய நாகங்களை அணிந்து விளங்கும் மேனியராய், எலும்பாலான அணிகலன்களைப் பூண்டு திகழுபவராய், திருநீற்றில் மூழ்கும் திருமார்பினராய், வானிடத்து மதில்கள் மூன்றும் அன்று அழியுமாறு வளைத்தவரிந்து கட்டப்பட்ட சிலையைக் கையில் கொண்டவராய் வாய்மூர்ச் சிவபெருமானை நான் கண்டேன்.

திருவாய்மூர்

கான்மறையும் போதகத்தி னுரிவை கண்டேன்

காலிற் கழல்கண்டேன் கரியின் தோல்கொண்
டுன்மறையப் போர்த்த வடிவுங் கண்டேன்
உள்க மனம்வைத்த உணர்வுங் கண்டேன்
நான்மறை யானோடு நெடிய மாலும்
நண்ணி வரக்கண்டேன் திண்ண மாக
மான்மறி தங்கையின் மருவக் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. **#769**
காட்டில் மறைந்து வாழும் யானையின் தோலை உரித்தவராய், காலிற்கட்டியகழலினராய், அவ் யானைத் தோலின் புலாற் பொல்லாங்கு மறையும் வண்ணம் அதனை, போர்வையாகப் போர்த்திக் கொண்ட வடிவினராய், உயிர்கள் தம்மை நினைத்தற்கு உரிய மனத்தை உபகரித்து அருளினவராய், நான்மறையானாகிய பிரமனும் நெடியானாகிய திருமாலும் தம் வலப்பாலும் இடப்பாலும் நண்ணவருபவராய், மான் கன்று நிலையாகப் பொருந்தி நிற்கும் கையினராய்வாய்மூர்ச் சிவபெருமானை நான் கண்டேன்.

<u>திருவாய்மூர்</u>

அடியார் சிலம்பொலிக ளார்ப்பக் கண்டேன்
அவ்வவர்க்கே யீந்த கருணை கண்டேன்
முடியார் சடைமேல் அரவ மூழ்க
மூரிப் பிறைபோய் மறையக் கண்டேன்
கொடியா ரதன்மேல் இடபங் கண்டேன்
கோவணமுங் கீளுங் குலாவக் கண்டேன்
வடியாரும் மூவிலைவேல் கையிற் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. **#770**
திருவடிகளிற் கட்டிய சிலம்பு ஒலிகளின் ஆரவாரத்தை உடையவராய், அவரவர்க்கு ஏற்குமாறு ஈந்த கருணையினராய், சடைச்சுற்றின் நெருக்கினிடை பாம்பு புகுந்துமறைய, அப்பாம்பு தன்னைப் பற்றக் கரந்து வருவதாகக் கருதிப் பெருமை மிக்கபிறையும் அச்சடையின் வேறோர் இடுக்கில் புக்குமறையக் கண்டவராய், கொடியிடத்துப் பொருந்திய இடபத்தினை உடையவராய், கோவணமும் கீளும்கொண்டு விளங்குபவராய், கூரிய மூவிலை வேலினைக் கையில் ஏந்தியவராய்வாய்மூர்ச் சிவபெருமானை நான் கண்டேன்.

<u>திருவாய்மூர்</u>

குழையார் திருத்தோடு காதிற் கண்டேன்
கொக்கரையுஞ் சச்சரியுங் கொள்கை கண்டேன்
இழையார் புரிநூல் வலத்தே கண்டேன்

ஏழிசையாழ் வீணை முரலக் கண்டேன்
தழையார் சடைகண்டேன் தன்மை கண்டேன்
தக்கையொடு தாளங் கறங்கக் கண்டேன்
மழையார் திருமிடறும் மற்றுங் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. **#771**

குழையும் நிறைந்த அழகினையுடைய தோடும் விளங்கும் காதுகளை உடையவராய், கொக்கரை சச்சரி ஆகிய வாச்சியங்களைப் பயன் கொள்பவராய், இழைகள் பொருந்திய முறுக்கப்பட்ட பூணூலை வலம்வர அணிந்தவராய், ஏழிசையும் பயிலும் யாழ் வீணைகளின் இசையை நுகர்வாராய்,தழைத்த சடையினராய், தம்வயத்தினராய், தக்கை தாள முழக்கினராய் மேகம்போன்று கறுத்த திருமிடற்றினராய் வாய்மூர்ச் சிவபெருமானை நான் கண்டேன்.

திருவாய்மூர்

பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்
பரிந்தார்க் கருளும் பரிசுங் கண்டேன்
பாராய்ப் புனலாகி நிற்கை கண்டேன்
விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்
மெல்லியலும் விநாயகனுந் தோன்றக் கண்டேன்
மருந்தாய்ப் பிணிதீர்க்கு மாறு கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. **#772**

உலகத்தார்க்கு ஏலாத செய்கைகள் ஆம் நஞ் கண்ணுதல், பாம்பணிதல் போன்றனவும், பொருத்தமற்ற செய்கைகள் ஆம் சடைதரித்துப் பெண்ணொரு பாகன் ஆதல் போன்றனவும் தம்பால் பொலியக் கொண்டவராய்,போற்றி என்று கூறி விண்ணோர்கள் புகழுமாறு விளங்குபவராய், அன்பருக்கு அருளும் தன்மையாராய், நிலனொடு நீராய் நிற்பவராய், புதியராய் வந்துபரவிய பூதவேதாளக் கணங்களிடையே திகழ்பவராய், மெல்லியல் உமையும் விநாயகனும் மனைவியும் மகனுமாம் உறவு முறை கொண்டவராய், பிணிதீர்க்கும் மருந்தாம் தன்மையினராய் வாய்மூர்ச் சிவபெருமானை நான் கண்டேன்.

திருவாய்மூர்

மெய்யன்ப ரானார்க் கருளுங் கண்டேன்
வேடுவனாய் நின்ற நிலையுங் கண்டேன்
கையம் பரணெரித்த காட்சி கண்டேன்
கங்கணமும் அங்கைக் கனலுங் கண்டேன்
ஐயம் பலவூர் திரியக் கண்டேன்

அன்றவன்றன் வேள்வி யழித்து கந்து
வையம் பரவ இருத்தல் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. **#773**

மெய்யன்பர்க்கு அருளுபவராய், வேட்டுவக் கோலம் கொண்டு நின்றவராய், கையிடத்துக்கொண்ட அம்பால் அரண்களை அழித்த காட்சியினராய், பாம்புக்கங்கணராய், அங்கையில் அனல் ஏந்தியவராய், பல ஊர்களிலும் திரிந்து பிச்சை ஏற்பவராய், பகைத்த தக்கன் வேள்வியை அழித்தவராய் மகிழ்ந்து உலகம் பரவ இருந்தவராய் வாய்மூர்ச் சிவபெருமானை நான் கண்டேன்.

திருவாய்மூர்

கலங்க இருவர்க் கழலாய் நீண்ட
காரணமுங் கண்டேன் கருவாய் நின்று
பலங்கள் தரித்துகந்த பண்புங் கண்டேன்
பாடல் ஒலியெலாங் கூடக் கண்டேன்
இலங்கைத் தலைவன் சிரங்கள் பத்தும்
இறுத்தவனுக் கீந்த பெருமை கண்டேன்
வலங்கைத் தலத்துள் அனலுங் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. **#774**

மாலும் அயனும் கலங்குமாறு நீண்ட தழற் பிழம்பாய்த் தோன்றிய காரணராய், முதலாய் நின்று பயன்களைத் தன்னுட் கொண்டு மகிழ்ந்த பண்பினராய், பாடல் இசையும் ஏனைய ஒலியும் தாம் ஆம் தன்மையராய், இலங்கைக் கிறை இராவணனுடையபத்துத் தலைகளும் நசுங்கச் செய்து பின் அவனுக்கு வரங்கள் ஈந்தபெருமையராய், வலக்கையிடத்து அனல் ஏந்தியவராய் வாய்மூர்ச் சிவபெருமானைநான் கண்டேன்.

திருவாலங்காடு

திருவாலங்காடு

திருவாலங்காடு, திருத்தாண்டகம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஊர்த்ததாண்டவேசுவரர்.
தேவியார் : வண்டார்குழலியம்மை.

ஒன்றா வுலகனைத்து மானார் தாமே
ஊழிதோ றூழி உயர்ந்தார் தாமே
நின்றாகி யெங்கும் நிமிர்ந்தார் தாமே
நீர்வளிதீ யாகாச மானார் தாமே
கொன்றாடுங் கூற்றை யுதைத்தார் தாமே
கோலப் பழனை உடையார் தாமே
சென்றாடு தீர்த்தங்க ளானார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. **#775**

தாமே கலந்து உலகங்கள் யாவும் ஆனவரும், ஊழிகள் தோறும் பல உயிர்களை வீடேற்றி உயர்ந்தவரும், ஒருநிலையே நின்று எல்லா இடங்கட்கும் உரியவராய்ப் பரந்தவரும், நீரும் வளியும் தீயும் ஆகாசமுமாகி நின்றவரும், கொன்று திரிகின்ற கூற்றுவனை உதைத்தவரும், அழகிய பழையனூரைத் தமக்குரியதாக உடையவரும், தேடிச்சென்று மூழ்கும் தீர்த்தங்கள் ஆனவரும் திருவாலங்காட்டுறையும் செல்வரே ஆவார்.

திருவாலங்காடு

மலைமகளைப் பாக மமர்ந்தார் தாமே
வானோர் வணங்கப் படுவார் தாமே
சலமகளைச் செஞ்சடைமேல் வைத்தார் தாமே
சரணென் றிருப்பார்கட் கன்பர் தாமே
பலபலவும் வேடங்க ளானார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
சிலைமலையா மூவெயிலும் அட்டார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. **#776**

மலைமகளைத் தம் உடலிற்பாகமாக விரும்பிக் கொண்டவரும், வானோரால் வணங்கப்படுபவரும், கங்கையாளைத் தம் செஞ்சடைமேல் வைத்தவரும், சரண்புக்குத் தம் செயல் அற்று இருப்பார்க்கு அன்பர் ஆனவரும், பற்பல வேடங்களைப் புனைபவரும், பழையனூரைத் தமக்குரியதாக உடையவரும், மலையை வில்லாகக் கொண்டு

மும்மதில்களையும் அழித்தவரும் திருவாலங் காட்டுறையும் செல்வரே ஆவார்.

திருவாலங்காடு

ஆவுற்ற ஐந்தும் உகந்தார் தாமே
அளவில் பெருமை யுடையார் தாமே
பூவுற்ற நாற்றமாய் நின்றார் தாமே
புனிதப் பொருளாகி நின்றார் தாமே
பாவுற்ற பாட லுகப்பார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
தேவுற் றடிபரவ நின்றார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. **#777**

பசுவிடத்துப் பொருந்திய ஐந்து பொருள்களையும் விரும்பியவரும். அளவிறந்த பெருமையுடையவரும், மலரின்கண் மணம்போல எல்லாப் பொருள்களிலும் நுண்ணியராய் நிறைந்து நின்றவரும், பா என்னும் ஓசையாம் உறுப்புப் பொருந்திய பாட்டினை விரும்புபவரும், பழையனூரைத் தமக்குரியதாக உடையவரும், தேவர் பலரும் அடைந்து அடிபரவ நின்றவரும் திருவாலங்காட்டுறையும் செல்வரே ஆவார்.

திருவாலங்காடு

நாறுபூங் கொன்றை முடியார் தாமே
நான்மறையோ டாறங்கஞ் சொன்னார் தாமே
மாறிலா மேனி யுடையார் தாமே
மாமதியஞ் செஞ்சடைமேல் வைத்தார் தாமே
பாறினார் வெண்டலையி லுண்டார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
தேறினார் சித்தத் திருந்தார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. **#778**

மணங்கமழும் கொன்றை மலரைச் சூடிய முடியினரும், மறை நான்கும் அங்கம் ஆறும் சொன்னவரும், நரைத்துத் திரைத்து மூத்து விளிதல் இல்லாத மேனியை உடையவரும், அழகிய பிறையைத் தஞ்சடைமேல் வைத்தவரும், அழிந்தாருடைய வெள்ளிய தலையோட்டில் பிச்சை ஏற்று உண்டவரும், பழையனூரைத் தமக்குரியதாக உடையவரும், தம் இயல்புகளைத் தெளவாக உணர்ந்த மெஞ்ஞானியரின் சித்தத்தில் இருந்தவரும் திருவாலங்காட்டுறையும் செல்வரே ஆவார்.

திருவாலங்காடு

அல்லும் பகலுமாய் நின்றார் தாமே

அல்லும் பகலுமாய் நின்றார் தாமே
சொல்லும் பொருளெலா மானார் தாமே
தோத்திரமுஞ் சாத்திரமு மானார் தாமே
பல்லுரைக்கும் பாவெலா மானார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
செல்லும் நெறிகாட்ட வல்லார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. **#779**

இரவும் பகலுமாய் நின்றவரும், அந்தியும் சந்தியும் ஆனவரும், சொல்லும், பொருளும் ஆகிய எல்லாப் பொருள்களும் ஆனவரும், தோத்திரமும் சாத்திரமும் ஆனவரும், மற்றை உலகியலுரைக்கும் எல்லாப்பாக்களும் ஆனவரும், பழையனூரைத் தமக்குரியதாக உடையவரும், செல்லுதற்குரியவழியைக் காட்ட வல்லவரும் திருவாலங்காட்டுறையும் செல்வரே ஆவார்.

திருவாலங்காடு

தொண்டாய்ப் பணிவார்க் கணியார் தாமே
தூநீ றணியுஞ் சுவண்டர் தாமே
தண்டா மரையானும் மாலுந் தேடத்
தழலுருவா யோங்கி நிமிர்ந்தார் தாமே
பண்டான இசைபாட நின்றார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
திண்டோள்க ளெட்டு முடையார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. **#780**

தொண்டராய்ப் பணிவார்க்கு அருகில் உள்ளவரும், தூய வெண்ணீற்றையணிந்து நல்லநிறமுடையவரும், குளிர்ந்த தாமரை மலரில் உறையும் நான்முகனும் திருமாலும் தேடத் தழற் பிழம்பாய் நிமிர்ந்து ஓங்கியவரும், பழைமையான இசையில் பாட அது கேட்டு மகிழ்ந்து நின்றவரும், பழையனூரைத் தமக்கு உரியதாக உடையவரும், வலியதோள்கள் எட்டும் உடையவரும் திருவாலங் காட்டுறையும் அடிகளே ஆவார்.

திருவாலங்காடு

மையாருங் கண்ட மிடற்றார் தாமே
மயானத்தி லாடல் மகிழ்ந்தார் தாமே
ஐயாறும் ஆரூரும் ஆனைக் காவும்
அம்பலமுங் கோயிலாக் கொண்டார் தாமே
பையா டரவ மசைத்தார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே

செய்யாள் வழிபட நின்றார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. **#781**
கருமைபொருந்திய மிடற்றினை உடையவரும், சுடுகாட்டில் மகிழ்ந்து ஆடினவரும், ஐயாறும், ஆரூரும், ஆனைக்காவும் தில்லையம்பலமும் கோயிலாகக் கொண்டவரும், படம் விரித்தாடும் பாம்பைக் கச்சையாகவும் கங்கணமாகவும் பிறவாகவும் கட்டியவரும், பழையனூரைத் தமக்குரியதாக உடையவரும், திருமகள் வழிபட அவட்குவரமளித்து நின்றவரும் திருவாலங் காட்டுறையும் செல்வரே யாவர்.

திருவாலங்காடு

விண்முழுதும் மண்முழுது மானார் தாமே
மிக்கோர்க ளேத்துங் குணத்தார் தாமே
கண்விழியாக் காமனையுங் காய்ந்தார் தாமே
காலங்க ளூழி கடந்தார் தாமே
பண்ணியலும் பாட லுகப்பார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
திண்மழுவாள் ஏந்து கரத்தார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. **#782**
விண்முழுதுமாய் மண்முழுதுமாய் வியாபித்து நின்றவரும், உயர்ந்தோர்கள்புகழும் குணத்தினரும், நெற்றிக் கண்ணை விழித்துக் காமனைக் காய்ந்தவரும், காலங்களாகிய ஊழிகள் பலவற்றைக் கடந்தவரும், பண்கள் உலவுதற்கு இடமாகிய பாடல்களை விரும்புபவரும், பழையனூரைத் தமக்குரியதாக உடையவரும், வலியமழுவாயுதத்தை ஏந்திய கரத்தவரும் திருவாலங்காட்டுறை செல்வரே ஆவார்.

திருவாலங்காடு

காரார் கடல்நஞ்சை யுண்டார் தாமே
கயிலை மலையை உடையார் தாமே
ஊராஏ கம்ப முகந்தார் தாமே
ஒற்றியூர் பற்றி யிருந்தார் தாமே
பாரார் புகழப் படுவார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
தீராத வல்வினைநோய் தீர்ப்பார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. **#783**
கடலில் தோன்றிய கரிய நஞ்சை உண்டவரும், கயிலை மலையை உடையவரும், தமக்குரிய ஊராக ஏகம்பத்தை விரும்பிக் கொண்டவரும்,

தமக்குரித்தல்லாததாய் ஒற்றியாகப் பெற்ற ஊர் என்று கொள்ளத்தகும் ஒற்றியூரை நிலையாகப் பற்றி நின்றவரும், உலகத்தாரால் உயர்த்துப் புகழப்படுபவரும், பழையனூரைத் தமக்குரியதாக உடையவரும், வலியவினையாகிய தீராத நோயைத் தீர்ப்பவரும் திருவாலங்காட்டுறையும் செல்வரேயாவர்.

திருவாலங்காடு

மாலைப் பிறைசென்னி வைத்தார் தாமே
வண்கயிலை மாமலையை வந்தி யாத
நீலக் கடல்சூ ழிலங்கைக் கோனை
நெரிய விரலா லடர்த்தார் தாமே
பாலொத்த மேனி நிறத்தார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
சீலத்தா ரேத்துந் திறத்தார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. **#784**

மாலைக் காலத்துப் பிறையைச் சென்னியில் சேர்த்தவரும், வளமிக்க கயிலைமலையை வணங்காதவனும் கரிய கடலால் சூழப்பட்ட இலங்கைக்கு அரசனுமாகிய இராவணனுடைய உடல் நெரியுமாறு கால்விரலை ஊன்றி வருத்தினவரும், பால்போலும் நிறங்கொண்ட மேனியினரும், பழையனூரைத் தமக்குரியதாக உடையவரும், ஒழுக்கமுடைய உயர்ந்தோர் ஏத்தும் கூறுபாட்டில் அமைந்த அறக்கருணை உடையவரும் திருவாலங்காட்டுறையும் செல்வரே ஆவார்.

திருத்தலையாலங்காடு

திருத்தலையாலங்காடு

திருத்தலையாலங்காடு, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஆடவல்லவீசுவரர்.
தேவியார் : திருமடந்தையம்மை.

தொண்டர்க்குத் தூநெறியாய் நின்றான் தன்னைச்
சூழ்நரகில் வீழாமே காப்பான் தன்னை
அண்டத்துக் கப்பாலைக் கப்பா லானை
ஆதிரைநா ளாதரித்த அம்மான் தன்னை
முண்டத்தின் முளைத்தெழுந்த தீயா னானை
மூவுருவத் தோருருவாய் முதலாய் நின்ற
தண்டத்திற் றலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. **#785**

தொண்டர்க்குத் தன்வழி நிற்றலே நன்னெறியாகச் செய்து நின்றவனும், சூழும்நரகில் வீழாமல் தொண்டரைக் காப்பவனும், இப்புவிக்கு அப்பாலைக்கு அப்பால் ஆனவனும், ஆதிரை நாளை விரும்பிக்கொண்ட தலைவனும், நெற்றியிடத்துத் தோன்றி வளரும் தீயினனும், அயன், அரி, அரன் என்னும் மூவுருவங்களுள் ஒருருவமாய அரனாய் நின்று அம்மூவுருவங்களுக்கும் முதலாய் நின்ற இலிங்கவுருவினனும் ஆகிய தலையாலங்காட்டு அண்ணலை அடையாமல் மிக்க நாளைவீணாள் ஆக்கினேன்.

திருத்தலையாலங்காடு

அக்கிருந்த அரையானை அம்மான் தன்னை
அவுணர்புர மொருநொடியில் எரிசெய் தானைக்
கொக்கிருந்த மகுடத்தெங் கூத்தன் தன்னைக்
குண்டலஞ்சேர் காதானைக் குழைவார் சிந்தை
புக்கிருந்து போகாத புனிதன் தன்னைப்
புண்ணியனை யெண்ணருஞ்சீர்ப் போகமெல்லாந்
தக்கிருந்த தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. **#786**

சங்குமணி கட்டிய இடையினனும், தந்தை ஆனவனும், அசுரர் புரங்கள் மூன்றையும் ஒருவிநாடியில் எரித்தவனும், கொக்கிறகு செருகப்பட்ட சடைமுடிக்கூத்தனும், குண்டலஞ்சேர் காதினனும், தன்னை எண்ணி உருகுவார் மனத்துட்புக்கு அங்கிருந்து போகாத புனிதனும், புண்ணிய

உருவினனும், அளவற்ற செல்வத்தான் ஆகும் இன்பமெல்லாம் வாய்த்திருந்தானும் ஆகிய தலையாலங்காட்டண்ணலை அடையாமல்மிக்க நாளை வீணாள் ஆக்கினேன்.

திருத்தலையாலங்காடு

மெய்த்தவத்தை வேதத்தை வேத வித்தை
விளங்கிளமா மதிசூடும் விகிர்தன் தன்னை
எய்த்தவமே உழிதந்த ஏழை யேனை
யிடர்க்கடலில் வீழாமே யேற வாங்கிப்
பொய்த்தவத்தா ரறியாத நெறிநின் றானைப்
புனல்கரந்திட் டுமையொடொரு பாகம் நின்ற
தத்துவனைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. **#787**

உண்மைத் தவமாகி, வேதமுமாகி, வேதத்தின் முதலும் ஆகி, ஒளிரும் இளம்பிறையைச் சூடி, வேறுபட்ட இயல்பினனும், வீணே அலைந்து இளைத்த அறிவற்ற என்னைத் துன்பக் கடலில் வீழாமல் கரையேற எடுத்துப் பொய்த்தவத்தார் அறிய முடியாத நெறியில் என்னை நிற்பித்தவனும், கங்கையைச் சடையில் கரந்து உமையம்மையை ஒரு கூற்றிலே கொண்டு நின்றவனும் ஆகிய தலையாலங்காட்டண்ணலை அடையாமல் மிக்க நாளை வீண்நாள் ஆக்கினேன்.

திருத்தலையாலங்காடு

சிவனாகித் திசைமுகனாய்த் திருமா லாகிச்
செழுஞ்சுடராய்த் தீயாகி நீரு மாகிப்
புவனாகிப் புவனங்க ளனைத்து மாகிப்
பொன்னாகி மணியாகி முத்து மாகிப்
பவனாகிப் பவனங்க ளனைத்து மாகிப்
பசுவேறித் திரிவானோர் பவனாய் நின்ற
தவனாய தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. **#788**

சிவனாய், நான்முகனாய்த் திருமாலாய், சூரிய சந்திரராய், தீயாய், நீராய், புவலோகமாய், புவனங்கள் யாவுமாய், பொன்னாய், மணியாய், முத்துமாய், வேண்டுமிடங்களில் வேண்டியவாறே தோன்றுபவனாய், உயிர்கள் வாழ்தற்கேற்ற இடங்கள் யாவுமாய், இடபத்தை ஊர்ந்து திரியும் ஒருகோலத்தை உடையனாய், தவ வேடந்தாங்கிநின்ற தலையாலங்காட்டண்ணலை அடையாமல் மிக்க நாளை வீணாள் ஆக்கினேன்.

திருத்தலையாலங்காடு

கங்கையெனுங் கடும்புனலைக் கரந்தான் தன்னைக்
காமருபூம் பொழிற்கச்சிக் கம்பன் தன்னை
அங்கையினில் மான்மறியொன் றேந்தி னானை
ஐயாறு மேயானை ஆரூ ரானைப்
பங்கமிலா அடியார்க்குப் பரிந்தான் தன்னைப்
பரிதிநிய மத்தானைப் பாசூ ரானைச்
சங்கரனைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. **#789**

விரைந்து வரும் புனலையுடைய கங்கையைச் சடையில் கரந்தவனாய், விரும்பத்தக்க அழகிய பொழில் சூழ்ந்த கச்சி ஏகம்பனாய், அழகிய கையில்மான்கன்றொன்றை ஏந்தியவனாய், ஐயாறு மேயவனாய், ஆரூரனாய், குற்றமில்லா அடியார் மாட்டுப் பரிவுடையனாய், பரிதி நியமத்தவனாய், பாசூரினனாய், சங்கரனாய் நின்ற தலையாலங்காட்டண்ணலை அடையாமல் மிக்க நாளை வீணாள் ஆக்கினேன்.

திருத்தலையாலங்காடு

விடம்திகழும் அரவரைமேல் வீக்கி னானை
விண்ணவர்க்கு மெண்ணரிய அளவி னானை
அடைந்தவரை அமருலகம் ஆள்விப் பானை
அம்பொன்னைக் கம்பமா களிறட் டானை
மடந்தையொரு பாகனை மகுடந் தன்மேல்
வார்புனலும் வாளரவும் மதியும் வைத்த
தடங்கடலைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. **#790**

விடமுடைய பாம்பினை இடையின் மேல் கட்டியவனாய், தேவர்களாலும் எண்ணுதற்கரிய அளவினனாய், தன்னை அடைந்தவரைத் தேவருலகம் ஆளச்செய்பவனாய், அழகிய பொன்னாய், அசையும் பெரிய களிற்றியானையை அழித்தவனாய், உமை திகழ் ஒருபாகனாய், சடைமுடிமேல் ஒழுகும் நீரையுடையகங்கையையும், கொடிய பாம்பையும், பிறையையும் வைத்தவனாய் அகன்ற கடலை ஒத்தவனாய்த் திகழும் தலையாலங்காட்டண்ணலை அடையாமல் மிக்க நாளை வீண்நாள் ஆக்கினேன்.

திருத்தலையாலங்காடு

விடையேறிக் கடைதோறும் பலிகொள் வானை

வீரட்டம் மேயானை வெண்ணீற் றானை
முடைநாறு முதுகாட்டி லாட லானை
முன்னானைப் பின்னானை யந்நா ளானை
உடையாடை யுரிதோலே உகந்தான் தன்னை
உமையிருந்த பாகத்து ளொருவன் தன்னைச்
சடையானைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. **#791**
இடபமூர்ந்து வீட்டு வாயில்கள் தோறும் பிச்சையேற்பவனாய்,
வீரட்டங்கள் எட்டும் மேவினவனாய், வெண்ணீறு அணிந்தவனாய்,
பிணம் எரிந்து முடைநாறும் சுடுகாட்டில் ஆடுபவனாய், இறப்பு எதிர்வு
நிகழ்வு ஆகிய முக்காலமும் ஆபவனாய், அரையிலுடை
புலித்தோலாகவும் மேலாடை யானைத் தோலாகவும் அமைய
விரும்பினனாய், உமைபொருந்தியபாகத்தோடுள்ள ஒருவனாய்,
சடையவனாய்த் திகழும் தலையாலங்காட்டண்ணலை அடையாமல்
மிக்க நாளை வீணாள் ஆக்கினேன்.

திருத்தலையாலங்காடு

கரும்பிருந்த கட்டிதனைக் கனியைத் தேனைக்
கன்றாப்பின் நடுதறியைக் காறை யானை
இரும்பமர்ந்த மூவிலைவேல் ஏந்தி னானை
யென்னானைத் தென்னானைக் காவான் தன்னைச்
சுரும்பமரும் மலர்க்கொன்றை சூடி னானைத்
தூயானைத் தாயாகி உலகுக் கெல்லாந்
தரும்பொருளைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. **#792**
கரும்பின்கண் இருந்த சாறுகொண்டு சமைத்த கட்டியையும் கனியையும்
தேனையும் ஒப்பவனாய், கன்றாப்பூரின் நடுதறியாய், பன்றியின்
வெண்மருப்பாலாகியகாறை அணியினனாய், இரும்பாலான மூவிலை
வேலை ஏந்தியவனாய், எனக்கு முதல்வனாய், அழகிய ஆனைக்
காவனாய், வண்டுமொய்க்கும் கொன்றை மலரைச்சூடியவனாய்,
தூயவனாய், தாயானவனாய், உலகுக்கெல்லாம் பொருள்
வழங்குபவனாய்த் திகழும் தலையாலங்காட்டு அண்ணலை
அடையாமல் மிக்க நாளைவீணாள் ஆக்கினேன்.

திருத்தலையாலங்காடு

பண்டளவு நரம்போசைப் பயனைப் பாலைப்
படுபயனைக் கடுவெளியைக் கனலைக் காற்றைக்
கண்டளவிற் களிகூர்வார்க் கௌயான் தன்னைக்

காரணனை நாரணனைக் கமலத் தோனை
எண்டளவி லென்னெஞ்சத் துள்ளே நின்ற
எம்மானைக் கைம்மாவி னுரிவை பேணுந்
தண்டரனைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. **#793**

பண்டுதொட்டுவரும் இசையிலக்கணத்தொடு பொருந்திய யாழிசையின் பயனாய், பாலாய், பாலின் சுவையாய், பெரியவானமாய், கனலாய், காற்றாய், தன்னைக்கண்ட அளவிலே மகிழ்ச்சி மிகுவார்க்கு எளியனாய், முதல்வனாய், திருமாலாய், நான்முகனாய், எட்டிதழ்த் தாமரை வடிவிலுள்ள இல்லமாகிய என் நெஞ்சத்துள்ளேநின்ற எம் தலைவனாய், யானைத் தோற் போர்வையைப் பேணுபவனாய், இலிங்கவடிவினனாய்த் திகழும் தலையாலங் காட்டண்ணலை அடையாமல் மிக்க நாளைவீணாள் ஆக்கினேன்.

திருத்தலையாலங்காடு

கைத்தலங்க ளிருபதுடை அரக்கர் கோமான்
கயிலைமலை அதுதன்னைக் கருதா தோடி
முத்திலங்கு முடிதுளங்க வளைக ளெற்றி
முடுகுதலுந் திருவிரலொன் றவன்மேல் வைப்பப்
பத்திலங்கு வாயாலும் பாடல் கேட்டுப்
பரிந்தவனுக் கிராவணனென் றீந்த நாமத்
தத்துவனைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. **#794**

இருபது கைகளையுடைய அரக்கர் கோமான் தோள்வளைகளைப் புடைத்து ஓடிச்சென்று ஆராயாது கயிலை மலையை விரைந்தெடுக்க அவன் முத்து விளங்கும் முடிகள் பத்தும் நடுங்கும் வண்ணம் திருவிரல் ஒன்றை அவன்மேல் வைத்து ஊன்ற அவன் தன் பத்துவாயாலும் பாடிய சாமகீதப் பாடலைக் கேட்டு இரக்கம் மிக்கவனாய் அவனுக்கு இராவணன் என்ற பெயரை ஈந்த தத்துவனாய்த் திகழும் தலையாலங்காட்டண்ணலை அடையாமல் மிக்க நாளை வீணாள் ஆக்கினேனே.

திருமாற்பேறு

திருமாற்பேறு

திருமாற்பேறு, திருத்தாண்டகம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மால்வணங்குமீசர்.
தேவியார் : கருணைநாயகியம்மை.

பாரானை பாரினது பயனா னானைப்
படைப்பாகிப் பல்லுயிர்க்கும் பரிவோன் தன்னை
ஆராத இன்னமுதை அடியார் தங்கட்
கனைத்துலகு மானானை அமரர் கோனைக்
காராருங் கண்டனைக் கயிலை வேந்தைக்
கருதுவார் மனத்தானைக் காலற் செற்ற
சீரானைச் செல்வனைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேன் நானே. **#795**

இப்பூமி ஆனவனும், பூமியின் பயன் ஆனவனும், படைத்தல் தொழிலே தானாய் அதன்கண் நின்றவனும், பல்லுயிர் மேலும் இரக்கம் கொண்டவனும், அடியார்க்குத் தெவிட்டாத இனிய அமுது ஆனவனும், எல்லா உலகுகளாகவும் விரிந்தவனும், தேவர் கோனாய்த் திகழ்பவனும், கரிய கண்டமுடையவனும், கயிலை மலைக்கு இறையவனும், நினைவார் மனத்தில் நிற்பவனும், இயமனை வெகுண்டொறுத்த புகழுடையவனும், செல்வம் மிக்கவனும் ஆகித் திருமாற்பேற்றில் திகழும் எம் செம்பவளக் குன்றினை நான் சென்று அடைந்தேன்.

திருமாற்பேறு

விளைக்கின்ற நீராகி வித்து மாகி
விண்ணொடுமண் ணாகி விளங்கு செம்பொன்
துளைக்கின்ற துளையாகிச் சோதி யாகித்
தூண்டரிய சுடராகித் துளக்கில் வான்மேல்
முளைக்கின்ற கதிர்மதியும் அரவு மொன்றி
முழங்கொலிநீர்க் கங்கையொடு மூவா தென்றுந்
திளைக்கின்ற சடையானைத் திருமாற் பேறறெஞ்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேன் நானே. **#796**

விளைவை உண்டாக்கும் நீராயும், வித்தாயும், விண்ணாயும், மண்ணாயும், செம்பொன்விளையும் சுரங்கமாயும், அலகில் சோதியாயும், தூண்டுதல் வேண்டாவிளக்காயும், அசைவில்லா வானத்தின்மேல் தோன்றி ஒளிர்பிறையும் பாம்பும் என்றும் மூவாது நின்று ஒலிமிக்க

நீரையுடைய கங்கையுடன் விளையாடி மகிழ்கின்ற சடையனாகவும் ஆகித் திருமால் பேற்றில் திகழும் எம்செம்பவளக் குன்றினை நான் சென்றடைந்தேன்.

திருமாற்பேறு

மலைமகள்தங் கோனவனை மாநீர் முத்தை
மரகதத்தை மாமணியை மல்கு செல்வக்
கலைநிலவு கையானைக் கம்பன் தன்னைக்
காண்பினிய செஞ்சுடரைக் கனகக் குன்றை
விலைபெரிய வெண்ணீற்று மேனி யானை
மெய்யடியார் வேண்டுவதே வேண்டு வானைச்
சிலைநிலவு கரத்தானைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேன் நானே. **#797**

மலைமகளுடைய தலைவனும், கடலில் படும் முத்தும், மரகதமும், சிறந்த மாணிக்கமணியும் போல்பவனும், மான் கன்றையே மிக்க செல்வமாகக் கையிடத்துக் கொண்டவனும், கச்சி ஏகம்பனும், விலைமிக்க வெண்ணீற்று மேனியனும், உண்மையடியார் கருதுவதையே தானும் கருதி முடித்தருளுபவனும், வில் நிலவும்கரத்தவனும் ஆகித் திருமாற்பேற்றில் திகழும் எம் செம்பவளக் குன்றினைநான் சென்றடைந்தேன்.

திருமாற்பேறு

உற்றானை யுடல்தனக்கோர் உயிரா னானை
ஓங்காரத் தொருவனையங் குமையோர் பாகம்
பெற்றானைப் பிஞ்ஞகனைப் பிறவா தானைப்
பெரியனவும் அரியனவும் எல்லாம் முன்னே
கற்றானைக் கற்பனவுந் தானே யாய
கச்சியே கம்பனைக் காலன் வீழச்
செற்றானைத் திகழொளியைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேன் நானே. **#798**

உறவானவனும், உடலிடத்து உயிர் ஆனவனும், ஓங்காரத்தில் முழுப்பொருள் தான் ஒருவனே ஆனவனும், உமை ஒரு பாகத்தைப் பெற்றவனும், தலைக்கோலச் சிறப்பினனும், பிறவாதவனும், பெரியனவும் அரியனவும் ஆகிய எல்லாப் பொருள்களையும் பிறர் எல்லார்க்கும் முன்னே கற்றவனும், கற்றவனாகிய தானேகற்கப்படும் பொருளுமாய் ஆனவனும், கச்சி ஏகம்பனும், இயமன் இறந்துபடச் சினந்தவனும், தானே விளங்கும் ஒளியினனும் ஆகித் திருமாற்பேற்றில்திகழும் எம் செம்பவளக் குன்றினை நான் சென்று

அடைந்தேன்.

திருமாற்பேறு

நீறாகி நீறுமிழும் நெருப்பு மாகி
நினைவாகி நினைவினிய மலையான் மங்கை
கூறாகிக் கூற்றாகிக் கோளு மாகிக்
குணமாகிக் குறையாத உவகைக் கண்ணீர்
ஆறாத ஆனந்தத் தடியார் செய்த
அனாசாரம் பொறுத்தருளி அவர்மே லென்றுஞ்
சீறாத பெருமானைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேன் நானே. **#799**

சாம்பலாயும், சாம்பலை உமிழும் நெருப்பாயும், நினைவாயும், நினைவில் நின்று இனிக்கும் உமையம்மை நிலவு கூறாயும், இயமனாயும், தீயனவும் நல்லனவுமாய்நிற்கும் அவ்வினைகளாயும், நிறைந்த அன்புக் கண்ணீரினராய் நீங்காத ஆனந்தத்தையுடைய அடியார்கள் செய்த அனாசாரமாகிய சிறு குற்றங்களைப் பொறுத்து அவர்களை என்றுஞ் சினவாத பெருமானாயும் ஆகித் திருமாற் பேற்றில் திகழும் எம் செம்பவளக் குன்றினை நான் சென்றடைந்தேன்.

திருமாற்பேறு

மருவினிய மறைப்பொருளை மறைக்காட் டானை
மறப்பிலியை மதியேந்து சடையான் தன்னை
உருநிலவு மொண்சுடரை உம்ப ரானை
உரைப்பினிய தவத்தானை உலகின் வித்தைக்
கருநிலவு கண்டனைக் காளத்தியைக்
கருதுவார் மனத்தானைக் கல்வி தன்னைச்
செருநிலவு படையானைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேன் நானே. **#800**

மருவுதற்கினிய மறைப்பொருள் ஆனவனும், மறைக்காட்டில் உறைபவனும், மறப்பில்லாதவனும், பிறை சூடிய சடையினனும், நிலவுகின்ற தன் நிறத்தால் ஒளிரும் சுடர் ஆனவனும், மேலிடத்து உள்ளவனும், பேசுதற்கினியவனும், தவக்கோலம் தாங்கியவனும், உலகிற்கு வித்தானவனும், கறுத்த கண்டத்தவனும், காளத்தி நகரினனும், நினைப்பவர் உள்ளத்தில் நிற்பவனும், போர்த்தொழில் பயின்ற படைக்கலங்களை ஏந்தியவனும் ஆகித் திருமாற் பேற்றில்திகழும் எம் செம்பவளக் குன்றினை நான் சென்றடைந்தேன்.

திருமாற்பேறு

பிறப்பானைப் பிறவாத பெருமை யானைப்
பெரியானை அரியானைப் பெண்ஆண் ஆய
நிறத்தானை நின்மலனை நினையா தாரை
நினையானை நினைவோரை நினைவோன் தன்னை
அறத்தானை அறவோனை ஐயன் தன்னை
அண்ணல்தனை நண்ணரிய அமர ரேத்துந்
திறத்தானைத் திகழொளியைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேன் நானே. **#801**

பலவகைப் பிறப்புகளாய் உள்ளவனும், வினை வயத்தால் பிறவாத பெருமையுடையவனும், தோற்றம் ஆற்றல் முதலியவற்றில் மிகப் பெரியவனும், உணர்தற்கு அரியவனும், பெண்ணும் ஆணுமாகிய வடிவினனும், குற்றமற்றவனும், தன்னை நினையாதாரைத் தான் நினையாதவனும், தன்னை நினைப்போரைத் தான்நினைப்பவனும், அறமேயாய் நின்று அதனை நிலை பெறுவிப்பவனும், நன்மை தீமைகளை அடைவிக்கும் அறவோனும், வியக்கத் தக்கவனும், தலைவனும், தேவர்கள் வணங்கும் தன்மையனும், திகழ்சோதியும் ஆகித் திருமாற்பேற்றில் திகழும் எம்செம்பவளக் குன்றினை நான் சென்றடைந்தேன்.

திருமாற்பேறு

வானகத்தில் வளர்முகிலை மதியந் தன்னை
வணங்குவார் மனத்தானை வடிவார் பொன்னை
ஊனகத்தில் உறுதுணையை உலவா தானை
ஒற்றியூர் உத்தமனை ஊழிக் கன்றைக்
கானகத்துக் கருங்களிற்றைக் காளத் தியைக்
கருதுவார் கருத்தானைக் கருவை மூலத்
தேனகத்தி லின்சுவையைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேன் நானே. **#802**

வானில் வளர் முகிலாயும், மதியமாயும், வணங்குவார் மனத்தில் உறைபவனாயும், அழகிய பொன்னாயும், உடம்பில் உயிர்க்குற்ற உறுதுணையாயும், அழிவில்லாதவனாயும், ஒற்றியூர் வாழ் உத்தமனாயும், ஊழிக்கு ஊழியாயும், கானகத்து வாழ் கருங்களிறாயும், காளத்தி வாழ்வானாயும், கருதுவார் கருத்துள்நிலவுபவனாயும், முதன் முதலாயும், தேனில் இனிய சுவையாயும், நிலவித்திருமாற்பேற்றில் திகழும் எம் செம்பவளக் குன்றினை நான்சென்றடைந்தேன்.

திருமாற்பேறு

முற்றாத முழுமுதலை முளையை மொட்டை

முழுமலரின் மூர்த்தியை முனியா தென்றும்
பற்றாகிப் பல்லுயிர்க்கும் பரிவோன் தன்னைப்
பராபரனைப் பரஞ்சுடரைப் பரிவோர் நெஞ்சில்
உற்றானை உயர்கருப்புச் சிலையோன் நீறாய்
ஒள்ளழல்வாய் வேவவுறு நோக்கத் தானைச்
செற்றானைத் திரிபுரங்கள் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேன் நானே. **#803**

மூவாத முதற்பொருளாயும், முளையாயும், மொட்டாயும், மலரின் வடிவினனாயும், எக்காலத்தும் வெறுப்பிலனாய்ப் பல்லுயிர்க்குந் துணையாகிஇரக்கமுடையனாயும், மேற் பொருளும், கீழ்ப்பொருளும் தான் ஆனவனாயும், மேலான ஒளிப் பிழம்பாயும், எண்ணுவார் மனத்தில் பொருந்தியிருப்பவனாயும், உயர்ந்த கரும்பு வில்லையுடைய மன்மதன் ஒள்ளிய நெருப்பிடத்து வெந்து நீறாகுமாறு செய்த பார்வையனாயும் திரிபுரங்களை அழித்தவனாயும் ஆகித்திருமாற் பேற்றில் திகழும் எம்செம்பவளக் குன்றினை நான் சென்றடைந்தேன்.

திருமாற்பேறு

விரித்தானை நான்மறையோ டங்க மாறும்
வெற்பெடுத்த இராவணனை விரலா லூன்றி
நெரித்தானை நின்மலனை யம்மான் தன்னை
நிலாநிலவு செஞ்சடைமேல் நிறைநீர்க் கங்கை
தரித்தானைச் சங்கரனைச் சம்பு தன்னைத்
தரியலர்கள் புரமூன்றுந் தழல்வாய் வேவச்
சிரித்தானைத் திகழொளியைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேன் நானே. **#804**

நான்மறைகளையும் ஆறங்கங்களையும் விரித்தவனும், கயிலை மலையை எடுக்கமுயன்ற இராவணனை விரலூன்றித் துன்புறுத்தியவனும், குற்றமற்றவனும், தலைவனும், பிறைதங்கிய செஞ்சடைமேல் நீர்நிறைந்த கங்கையைத் தரித்தவனும், இன்பத்தைச் செய்யும் சங்கரனும், இன்ப காரணனான சம்புவும் பகைத்தார்புரங்கள் மூன்றும் நெருப்பிடத்து வேகுமாறு சிரித்தவனும், ஒளிப்பிழம்பாய் விளங்கியவனும் ஆகித் திருமாற்பேற்றில் திகழும் எம் செம்பவளக் குன்றினைநான் சென்றடைந்தேன்.

திருக்கோடிகா

திருக்கோடிகா

திருக்கோடிகா, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கோடீசுவரர்.
தேவியார் : வடிவாம்பிகையம்மை.

கண்டலஞ்சேர் நெற்றியிளங் காளை கண்டாய்
கல்மதில்சூழ் கந்தமா தனத்தான் கண்டாய்
மண்டலஞ்சேர் மயக்கறுக்கும் மருந்து கண்டாய்
மதிற்கச்சி யேகம்பம் மேயான் கண்டாய்
விண்டலஞ்சேர் விளக்கொளியாய் நின்றான் கண்டாய்
மீயச்சூர் பிரியாத விகிர்தன் கண்டாய்
கொண்டலஞ்சேர் கண்டத்தெங் கூத்தன் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. **#805**

திருக்கோடிகாவில் விரும்பியுறையும் அழகனே, நெற்றியிடத்துக் கண் சேர்ந்த இளங்காளையாய், பக்கமலைகளான மதில்கள் சூழ்ந்த கந்தமாதனத்துறைவானாய், பலவகைப் புவனங்களிலும் சென்று பிறத்தற்குக் காரணமாகிய மயக்கத்தை அறுக்கும் மருந்தாய், மதிலாற் சூழப்பட்ட காஞ்சி மாநகரத்து ஏகம்பத்தைமேவியவனாய், தேவருலகிற் சென்று எறிக்கும் விளக்கொளியாய், மீயச்சூரில் நிலைத்து நிற்கும் வேறுபடு தன்மையனாய், மேகத்தினது அழகு சேர்ந்தகண்டத்தனாய் எம் கூத்தனாய் விளங்குவான் ஆவான்.

திருக்கோடிகா

வண்டாடு பூங்குழலாள் பாகன் கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் கண்டாய்
பண்டாடு பழவினைநோய் தீர்ப்பான் கண்டாய்
பரலோக நெறிகாட்டும் பரமன் கண்டாய்
செண்டாடி அவுணர்புரஞ் செற்றான் கண்டாய்
திருவாரூர்த் திருமூலட் டானன் கண்டாய்
கொண்டாடும் அடியவர்தம் மனத்தான் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. **#806**

திருக்கோடிகாவில் விரும்பியுறையும் அழகனே வண்டுகள் மொய்க்கும்பூக்களணிந்த குழலையுடைய உமாதேவியின் பாகனாய், திருமறைக் காட்டில் வாழும் அழகினனாய், பண்டு செய்த வினையான் வரும் துன்பத்தைத் தீர்ப்பவனாய், வீட்டுலக வழியை யுணர்த்தும்

பரமனாய், செண்டு கொண்டு ஆடும் ஆட்டம் போலஎவ்வகை வருத்தமுமின்றிப் பகைவர் புரங்களை அழித்தவனாய், திருவாரூர் மூலட்டானத்தினனாய் விளங்குவான் ஆவான்.

திருக்கோடிகா

அலையார்ந்த புனற்கங்கைச் சடையான் கண்டாய்
அடியார்கட் காரமுத மானான் கண்டாய்
மலையார்ந்த மடமங்கை பங்கன் கண்டாய்
வானோர்கள் முடிக்கணியாய் நின்றான் கண்டாய்
இலையார்ந்த திரிசூலப் படையான் கண்டாய்
ஏழுலகு மாய்நின்ற எந்தை கண்டாய்
கொலையார்ந்த குஞ்சரத்தோல் போர்த்தான் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. **#807**

திருக்கோடிகாவில் விரும்பியுறையும் அழகனே, அலைகளுடன் கூடிய நீரையுடையகங்கை தங்கும் சடையனாய், அடியார்களுக்கு ஆரமுதாய், மலையில் தோன்றிவளர்ந்த இளமங்கை பார்வதியின் பங்கனாய், வானோர்தம் முடிக்கணியாய்த்தன் திருவடிகளைத்தந்து நின்றவனாய், இலைபோன்ற திரிசூலப்படையினனாய், ஏழுலகுமாய் வியாபித்த எந்தையாய், கொலைத் தொழிலிற் பழகிய யானையது தோலைப் போர்த்துக் கொண்டவனாய் விளங்குவான் ஆவான்.

திருக்கோடிகா

மற்றாருந் தன்னொப்பா ரில்லான் கண்டாய்
மயிலாடு துறையிடமா மகிழ்ந்தான் கண்டாய்
புற்றா டரவணிந்த புனிதன் கண்டாய்
பூந்துருத்திப் பொய்யிலியாய் நின்றான் கண்டாய்
அற்றார்கட் கற்றானாய் நின்றான் கண்டாய்
ஐயா றகலாத ஐயன் கண்டாய்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தன் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. **#808**

திருக்கோடிகாவில் விரும்பி உறையும் அழகனே தனக்கு ஒப்பார் யாரும் இலனாய், மயிலாடுதுறையைத் தனக்குப் பொருந்திய இடமாகக் கொண்டு மகிழ்ந்தவனாய், புற்றில் வாழ் அரவுகளை அணிந்த புனிதனாய், பூந்துருத்தியில் பொய்யிலியாய், பற்றற்ற அடியார்க்கு மறைதலின்றி வெளிப்பட்டு நிற்பானாய், ஐயாறு அகலாத ஐயனாய், குற்றாலத்து விரும்பி உறையுங் கூத்தனாய் விளங்குவான் ஆவான்.

திருக்கோடிகா

வாரார்ந்த வனமுலையாள் பங்கன் கண்டாய்
மாற்பேறு காப்பா மகிழ்ந்தான் கண்டாய்
போரார்ந்த மால்விடையொன் றூர்வான் கண்டாய்
புகலூரை அகலாத புனிதன் கண்டாய்
நீரார்ந்த நிமிர்சடையொன் றுடையான் கண்டாய்
நினைப்பார்தம் வினைப்பாரம் இழிப்பான் கண்டாய்
கூரார்ந்த மூவிலைவேற் படையான் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. **#809**

திருக்கோடிகாவில் விரும்பியுறையும் அடிகளே கச்சுப் பொருந்திய அழகிய முலையாளின் பங்கனாய், மாற்பேற்றைத் தனக்குரிய இடமாகக் கொண்டு மகிழ்ந்தானாய், போர்ச் செயலில் பழகிய பெரிய விடை ஒன்றை ஊர்தியாக உடையானாய், புகலூரை நீங்காத புனிதனாய், கங்கைபொருந்திய நீண்ட ஒப்பற்ற சடையை உடையானாய், நினைக்கும் அடியாருடைய வினைச்சுமையை இறக்கிவைப்பானாய், கூர்மை பொருந்திய மூவிலை வேற்படையை உடையானாய் விளங்குவான் ஆவான்.

<u>திருக்கோடிகா</u>

கடிமலிந்த மலர்க்கொன்றைச் சடையான் கண்டாய்
கண்ணப்ப விண்ணப்புக் கொடுத்தான் கண்டாய்
படிமலிந்த பல்பிறவி யறுப்பான் கண்டாய்
பற்றற்றார் பற்றவனாய் நின்றான் கண்டாய்
அடிமலிந்த சிலம்பலம்பத் திரிவான் கண்டாய்
அமரர்கணந் தொழுதேத்தும் அம்மான் கண்டாய்
கொடிமலிந்த மதில்தில்லைக் கூத்தன் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. **#810**

திருக்கோடிகாவில் விரும்பியுறையும் அழகனே! மணம் கமழும் கொன்றை மலரை அணிந்து விளங்கும் சடையனாய், கண்ணை அப்பிய செயற்கு விண்ணைப் பொருந்துதலை ஈடாகக் கொடுத்தானாய், உலகில் நிறைந்த பல பிறவிகளிலும் பிறத்தலை அறுப்பானாய், பற்றற்ற அடியார்க்குத் துணை நின்றானாய், திருவடிகளில் தங்கிய சிலம்பு மிக்கு ஒலிப்பத் திரிவானாய், தேவர் கூட்டம் வணங்கிப் பரவும் தலைவனாய், மிகுதியான கொடிகள் கட்டப்பட்ட மதில்களையுடைய தில்லையில் கூத்தனாய் விளங்குவான் ஆவான்.

<u>திருக்கோடிகா</u>

உழையாடு கரதலமொன் றுடையான் கண்டாய்
ஒற்றியூ ரொற்றியா வுடையான் கண்டாய்

கழையாடு கழுக்குன்றம் அமர்ந்தான் கண்டாய்
காளத்திக் கற்பகமாய் நின்றான் கண்டாய்
இழையாடும் எண்புயத்த இறைவன் கண்டாய்
என்நெஞ்சத் துள்நீங்கா எம்மான் கண்டாய்
குழையாட நடமாடுங் கூத்தன் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. **#811**

திருக்கோடிகாவில் விரும்பியுறையும் அழகனே, மான்கன்று பொருந்திய தொருகரதலத்தனாய், ஒற்றியூரைப் பொருந்தி நிற்கும் இடமாக உடையானாய், மூங்கிலசையும் கழுக்குன்றில் அமர்ந்தானாய், காளத்திக்கண் திகழும்கற்பகமாய், பூணூல் கிடந்தசையும் தோள்கள் எட்டுடைய இறைவனாய், என்நெஞ்சைவிட்டு நீங்கா எந்தலைவனாய், காதணி ஆட நடன மாடுங் கூத்தனாய் விளங்குவான் ஆவான்.

திருக்கோடிகா

படமாடு பன்னகக்கச் சசைத்தான் கண்டாய்
பராய்த்துறையும் பாசூரும் மேயான் கண்டாய்
நடமாடி யேழுலகுந் திரிவான் கண்டாய்
நான்மறையின் பொருள்கண்டாய் நாதன் கண்டாய்
கடமாடு களிறுரித்த கண்டன் கண்டாய்
கயிலாயம் மேவி யிருந்தான் கண்டாய்
குடமாடி யிடமாகக் கொண்டான் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. **#812**

திருக்கோடிகாவில் விரும்புயுறையும் அழகனே படமெடுத்தாடும் பாம்பினைக் கச்சாகக் கட்டியவனாய், பராய்த் துறையிலும் பாசூரிலும் பொருந்தியவனாய், ஏழுலகுஞ் சென்று ஆங்காங்கே நடனமாடுவானாய், நான் மறையின் பொருளினனாய், எல்லார்க்கும் தலைவனாய் (நாததத்துவனாய்) மதநீர் ஒழுகுங் களிற்றினை உரித்த வீரனாய், கயிலை மலையில் விரும்பி உறைவானாய், குடமாடியாம் திருமாலை இடப்பாகமாகக் கொண்டானாய் விளங்குவான் ஆவான்.

திருச்சாய்க்காடு

திருச்சாய்க்காடு, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சாயவனேசுவரர்.
தேவியார் : குயிலின்நன்மொழியம்மை.

வானத் திளமதியும் பாம்புந் தம்மில்
வளர்சடைமேல் ஆதரிப்ப வைத்தார் போலும்
தேனைத் திளைத்துண்டு வண்டு பாடுந்
தில்லை நடமாடுந் தேவர் போலும்
ஞானத்தின் ஒண்சுடராய் நின்றார் போலும்
நன்மையுந் தீமையு மானார் போலும்
தேனொத் தடியார்க் கினியார் போலும்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. **#813**

திருச்சாய்க்காட்டில் இனிதுறையும் செல்வரே வானத்து விளங்கிய இளமதியும்பாம்பும் தம்முள் நிலவும் பகை நீங்கி வாழ அவற்றை நீள் சடைமேல் வைத்தவரும், வண்டு தேனை உண்டு மகிழ்ந்து பாடும் தில்லையில் நடனமாடும் தேவரும், ஞானமாகிய ஒளிப்பிழம்பாய் நின்றவரும், நன்மையும் தீமையும் ஆனவரும், அடியார்க்குத் தேன் போன்று தித்திப்பவரும் ஆவார்.

திருச்சாய்க்காடு

விண்ணோர் பரவநஞ் சுண்டார் போலும்
வியன்துருத்தி வேள்விக் குடியார் போலும்
அண்ணா மலையுறையும் அண்ணல் போலும்
அதியரைய மங்கை யமர்ந்தார் போலும்
பண்ணார் களிவண்டு பாடி யாடும்
பராய்த்துறையுள் மேய பரமர் போலும்
திண்ணார் புகார்முத் தலைக்குந் தெண்ணீர்த்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. **#814**

மணல்செறிந்த புகாரின்கண் முத்துக்களை எறி கின்ற தெளிந்த நீரையுடைய திருச்சாய்க்காட்டில் இனிதுறையும் செல்வரே, விண்ணோர்கள் தொழுதுவேண்ட நஞ்சுண்டவரும், பரந்த துருத்தியிடத்தும் வேள்விக்குடியிடத்தும் உறைபவரும், அண்ணா மலையில் உறையும் அண்ணலவரும், அதியரைய மங்கையில் அமர்ந்தவரும், மிக்குப் பொருந்திய மதுக்களிப்பையுடைய வண்டுகள்

பண்ணினைப் பாடிப்பறந்துலவும் பராய்த்துறையிடத்து மேவிய பரமரும் ஆவார்.

திருச்சாய்க்காடு

கானிரிய வேழ முரித்தார் போலும்
காவிரிப்பூம் பட்டினத் துள்ளார் போலும்
வானிய வருபுரமூன் றெரித்தார் போலும்
வடகயிலை மலையதுதம் மிருக்கை போலும்
ஊனிரியத் தலைகலனா வுடையார் போலும்
உயர்தோணி புரத்துறையும ஒருவர் போலும்
தேனிரிய மீன்பாயுந் தெண்ணீர்ப் பொய்கைத்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. **#815**

மலர்களிடத்துத் தேன் ஒழுகும் வண்ணம் மீன்கள் அவற்றைத் தாக்குகின்ற தௌந்த நீர்ப் பொய்கைகள் மிக்க திருச்சாய்க்காட்டில் இனிதுறையும் செல்வரே காட்டினின்றும் மற்ற விலங்குகள் நீங்கிப்போமாறுவரும் களிற்றியானையை உரித்தவரும், காவிரிப்பூம்பட்டினத்து உள்ளவரும், தேவர்கள் கெட்டோடும் வண்ணம் வானத்தில் பறந்து வரும் திரிபுரங்களையும் எரித்தவரும், வடகயிலையைத் தம் இருக்கையாகக் கொண்டவரும், தசை நீங்கிய அத்தலையை உண்கலமாக உடையவரும், பிரளய காலத்து ஊழி வெள்ளத்து மேலே உயர்ந்து விளங்கும் தோணிபுரத்து உறையும் ஒப்பற்றவரும் ஆவார்.

திருச்சாய்க்காடு

ஊனுற்ற வெண்டலைசேர் கையர் போலும்
ஊழி பலகண் டிருந்தார் போலும்
மானுற்ற கரதலமொன் றுடையார் போலும்
மறைக்காட்டுக் கோடி மகிழ்ந்தார் போலும்
கானுற்ற ஆட லமர்ந்தார் போலும்
காமனையுங் கண்ணழலாற் காய்ந்தார் போலும்
தேனுற்ற சோலை திகழ்ந்து தோன்றுந்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. **#816**

தேன் நிறைந்த சோலைகளின் நடுவில் விளங்கித் தோன்றும் திருச்சாய்க்காட்டில் இனிதுறையும் செல்வரே, தசை பொருந்தி இருந்த வெள்ளிய தலையோடு சேர்ந்த கையினரும், பல ஊழிகளைக் கண்டவரும், மான் பொருந்திய கரதலம் ஒன்றுடைய வரும், திருமறைக்காட்டை அணுகியுள்ள கோடிக்கரையில் மகிழ்ந்து உறைபவரும், காட்டில் ஆடலை விரும்பியவரும், காமனைக்

கண்ணிடத்துத் தோன்றிய அழலால் அழித்தவரும் ஆவார்.

திருச்சாய்க்காடு

கார்மல்கு கொன்றையந் தாரார் போலும்
காலனையும் ஓருதையாற் கண்டார் போலும்
பார்மல்கி யேத்தப் படுவார் போலும்
பருப்பதத்தே பல்லூழி நின்றார் போலும்
ஊர்மல்கு பிச்சைக் குழன்றார் போலும்
ஓத்தூ ரொருநாளும் நீங்கார் போலும்
சீர்மல்கு பாட லுகந்தார் போலும்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. **#817**

திருச்சாய்க்காட்டில் இனிதுறையும் செல்வரே கார் காலத்தில் நிரம்பப்பூக்கும் கொன்றைப் பூவாலாகிய தாரினை உடையவரும், காலனை ஓருதையால் வீழக்கண்டவரும், நிறைந்து நின்று பூமியினுள்ளாரால் புகழப் படுபவரும், திருப்பருப்பதத்தில் எக்காலத்தும் மகிழ்ந்து நின்றவரும், மிக்க பிச்சை பெறுதற்காக ஊரின்கண் அலைபவரும், ஓத்தூரை ஒருகாலும் நீங்காதவரும், தாள அறுதியுடன் கூடிய பாடலை விரும்புபவரும் ஆவார்.

திருச்சாய்க்காடு

மாவாய் பிளந்துகந்த மாலுஞ் செய்ய
மலரவனுந் தாமேயாய் நின்றார் போலும்
மூவாத மேனி முதல்வர் போலும்
முதுகுன்ற மூதா ருடையார் போலும்
கோவாய முனிதன்மேல் வந்த கூற்றைக்
குரைகழலா லன்று குமைத்தார் போலும்
தேவாதி தேவர்க் கரியார் போலும்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. **#818**

திருச்சாய்க்காட்டில் இனிதுறையும் செல்வரே, கேசி என்னும் குதிரையின் வாயைக் கிழித்து மகிழ்ந்த திருமாலும், தாமரை மலரில் வீற்றிருக்கின்ற நான்முகனும் ஆகிய இருவரும் தாமேயாய் நின்றவரும், என்றும் மாறுபடாமல் ஒருபடித்தாய்த் திகழும் மேனியுடைய முதல்வரும், முதுகுன்றமாகிய மூதூரினரும், முனிவர் தலைவனாகிய மார்க்கண்டேயன் மேல் வந்த கூற்றுவனை ஒலிக்கும் கழல் அணிந்த பாதத்தால் அன்று உதைத்தழித்தவரும் தேவர்க்குத் தலைவர் ஆகியபிரம விட்டுணு இந்திரர்க்கு அரியவரும் ஆவார்.

திருச்சாய்க்காடு

கடுவெளியோ டோரைந்து மானார் போலுங்
காரோணத் தென்று மிருப்பார் போலும்
இடிகுரல்வாய்ப் பூதப் படையார் போலும்
ஏகம்பம் மேவி யிருந்தார் போலும்
படியொருவ ரில்லாப் படியார் போலும்
பாண்டிக் கொடுமுடியுந் தம்மூர் போலும்
செடிபடுநோ யடியாரைத் தீர்ப்பார் போலும்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. **#819**

திருச்சாய்க்காட்டில் இனிதுறையும் செல்வரே, பெரிய ஆகாயத்தோடு கூட்டி எண்ணப்படுகின்ற ஐம்பூதங்களும் ஆனவரும், காரோணத்தலங்களில் என்றும் இருப்பவரும், இடிக்கும் குரலைக் கொண்ட வாயையுடைய பூதப்படையினரும், ஏகம்பத்தை விரும்பி அதன் கண் இருந்தவரும் பிறர் ஒருவரும் ஒப்பில்லாத இயல்பினை உடையவரும், பாண்டிக்கொடுமுடியையும் தம் ஊராகக் கொண்டவரும் அடியாருடைய துன்பத்திற்குக் காரணமான நோயைத் தீர்ப்பவரும் ஆவார்.

<u>திருச்சாய்க்காடு</u>

விலையிலா ஆரஞ்சேர் மார்பர் போலும்
வெண்ணீறு மெய்க்கணிந்த விகிர்தர் போலும்
மலையினார் மங்கை மணாளர் போலும்
மாற்பேறு காப்பாய் மகிழ்ந்தார் போலும்
தொலைவிலார் புரமூன்றுந் தொலைத்தார் போலும்
சோற்றுத் துறைதுருத்தி யுள்ளார் போலும்
சிலையினார் செங்க ணரவர் போலும்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. **#820**

திருச்சாய்க்காட்டில் இனிதுறையும் செல்வரே, விலையில்லாத மாலையணிந்தமார்பரும், வெண்ணீற்றை மெய்யிற் பூசிய விகிர்தரும், (மற்றையாரின் வேறுபட்டவர்) மலையரையன் மங்கையின் மணாளரும், மாற்பேற்றினைத் தம் இடமாய்க் கொண்டு மகிழ்ந்தவரும், தோல்வி அறியாத பகைவருடைய மூன்று புரங்களையும் தொலைத்தவரும், சோற்றுத்துறை, துருத்தி ஆகிய தலங்களில் உள்ளவரும், வில்லில் நாணாகப்பூட்டிய பாம்பினை உடையவரும் ஆவார்.

<u>திருச்சாய்க்காடு</u>

அல்லல் அடியார்க் கறுப்பார் போலும்
அமருலகந் தம்மடைந்தார்க் காட்சி போலும்
நல்லமும் நல்லூரும் மேயார் போலும்

நள்ளாறு நாளும் பிரியார் போலும்
முல்லை முகைநகையாள் பாகர் போலும்
முன்னமே தோன்றி முளைத்தார் போலும்
தில்லை நடமாடுந் தேவர் போலும்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. **#821**

திருச்சாய்க்காட்டில் இனிதுறையும் செல்வரே, அடியாருடைய அல்லலை அறுப்பவரும், தம்மை அடைந்தார்க்கு அமருலக ஆட்சியை அளிப்பவரும், நல்லத்திலும் நல்லூரிலும் பொருந்தி நின்றுகாட்சி அளிப்பவரும், நள்ளாற்றை என்றும் பிரியாதவரும், முல்லைமொட்டுப் போன்ற பற்களை உடைய பார்வதியின் பாகரும், உயர்திணை யஃறிணைப் பொருள்கள் யாவற்றிற்கும் முன்னே தோன்றியவரும், தில்லை அம்பலத்தில் திருக்கூத்தியற்றும் தேவரும் ஆவார்.

<u>திருச்சாய்க்காடு</u>

உறைப்புடைய இராவணன் பொன்மலையைக் கையால்
ஊக்கஞ்செய் தெடுத்தலுமே உமையா ளஞ்ச
நிறைப்பெருந்தோள் இருபதும்பொன் முடிகள் பத்தும்
நிலஞ்சேர விரல்வைத்த நிமலர் போலும்
பிறைப்பிளவு சடைக்கணிந்த பெம்மான் போலும்
பெண்ணா ணுருவாகி நின்றார் போலும்
சிறப்புடைய அடியார்கட் கினியார் போலும்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. **#822**

திருச்சாய்க்காட்டில் இனிதுறையும் செல்வரே! எடுத்த வினையை முடிப்பதில்தீவிரம் மிக்க இராவணன் ஊக்கம் மிக்கு அழகிய கயிலை மலையைக் கையால் பெயர்த்தலும், உமையாள் அஞ்ச, வெற்றி நிறைதலையுடைய அவன் பெருந்தோள்கள் இருபதும் முடிகள் பத்தும் சோர்ந்து நிலத்தில் வீழும் வண்ணம் கால்விரலை ஊன்றிய நிமலரும், பிறைச் சந்திரனை அணியாகச் சடையிடத்துக் கொண்ட பெருமானாரும், பெண்ணுருவும் ஆணுருவும் கலந்து நின்ற அம்மையப்பரும், பதிஞானச் சிறப்புடைய அடியவர்களுக்கு இனியவரும் ஆவார்.

திருப்பாசூர்

திருப்பாசூர்

திருப்பாசூர், திருத்தாண்டகம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பாசூர்நாதர்.
தேவியார் : பசுபதிநாயகியம்மை.

விண்ணாகி நிலனாகி விசும்பு மாகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்பு கின்ற
எண்ணாகி எழுத்தாகி இயல்பு மாகி
ஏழுலகுந் தொழுதேத்திக் காண நின்ற
கண்ணாகி மணியாகிக் காட்சி யாகிக்
காதலித்தங் கடியார்கள் பரவ நின்ற
பண்ணாகி இன்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. **#823**

பாசூரிற் பொருந்திய பரஞ்சுடரை மேகமாகவும், நிலனாகவும், ஆகாயமாகவும்,கடல் சூழ்ந்த பூமியிலுள்ளார் விரும்புகின்ற எண்ணாகவும், எழுத்தாகவும், தமக்கென வேறுபட்ட இயல்புகளை உடைய எல்லாப் பொருள்களுமாகவும், ஏழுலகத்தாரும் வணங்கித்துதித்துக் காணுதற்கமைந்த கண்ணாகவும் அக்கண்ணுள் மணியாகவும் அதனால் காணப்படுகின்ற காட்சியாகவும், அடியார்கள் விரும்பித் துதித்தற்குரிய பண் நிறைந்த பாடலாகவும், இன்னமுது ஆகவும் அடியேன் கண்டு உய்ந்தவாறு நன்று.

திருப்பாசூர்

வேதமோர் நான்காய்ஆ றங்க மாகி
விரிகின்ற பொருட்கெல்லாம் வித்து மாகிக்
கூதலாய்ப் பொழிகின்ற மாரி யாகிக்
குவலயங்கள் முழுதுமாய்க் கொண்ட லாகிக்
காதலால் வானவர்கள் போற்றி யென்று
கடிமலர்கள் அவைதூவி ஏத்த நின்ற
பாதியோர் மாதினனைப் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. **#824**

பாசூரிற் பொருந்திய பரஞ்சுடரை நான்கு வேதங்கள் ஆகவும், அங்கங்கள் ஆறுஆகவும், பெருகிவளர்கின்ற பொருள்களுக்கெல்லாம் அடியான வித்து ஆகவும்,விடாது தூற்றம் சிறு திவலைகளைப் பொழியும் மாரியாகவும், உலகங்கள் யாவும் ஆகவும், கீழ்க்காற்று

ஆகவும், அன்பு மேலீட்டால் தேவர்கள் 'போற்றி' என்று உரைத்து மணமலர்களைத் தூவித் தோத்திரிக்க நின்ற மாதொருபாகன் ஆகவும் அடியேன் கண்டு உய்ந்தவாறு நன்று.

<u>திருப்பாசூர்</u>

தடவரைகள் ஏழுமாய்க் காற்றாய்த் தீயாய்த்
தண்விசும்பாய்த் தண்விசும்பி னுச்சி யாகிக்
கடல்வலயஞ் சூழ்ந்ததொரு ஞால மாகிக்காண்கின்ற கதிரவனும் கதியு
மாகிக்
குடமுழவச் சரிவழியே அனல்கை யேந்திக் கூத்தாட வல்ல குழக
னாகிப்
படவரவொன் றதுவாட்டிப் பாசூர் மேயபரஞ்சுடரைக் கண்டடியேன்
உய்ந்த வாறே. **#825**

பாசூரிற் பொருந்திய பரஞ்சுடரை பெரிய ஏழு குலமலைகள் ஆகவும், காற்றாகவும்,தீ ஆகவும், குளிர்ந்த விசும்பாகவும், குளிர் விசும்பின் உச்சி ஆகவும், கடல்வட்டம் சூழ்ந்ததொரு ஞாலம் ஆகவும், காண்பதற்குத் துணை நிற்கும் கதிரவன் ஆகவும், வீடடைதற்குரிய வழியாகவும், குடமுழவு சச்சரி இவற்றின் முழக்கிற்கு ஏற்ப அனலைக் கையில் ஏந்திக் கூத்தாடவல்ல அழகன் ஆகவும், படமெடுத்தாடும் பாம்பொன்றினை ஆட்டுவான் ஆகவும் அடியேன் கண்டு உய்ந்தவாறு நன்று.

<u>திருப்பாசூர்</u>

நீராருஞ் செஞ்சடைமேல் அரவங் கொன்றை
நிறைமதிய முடன்சூடி நீதி யாலே
சீராரும் மறையோதி யுலக முய்யச்
செழுங்கடலைக் கடைந்தகடல் நஞ்ச முண்ட
காராருங் கண்டனைக் கச்சி மேய
கண்ணுதலைக் கடலொற்றி கருதி னானைப்
பாரோரும் விண்ணோரும் பரசும் பாசூர்ப்
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. **#826**

பாரிடத்து மக்களும் விண்ணிடத்துத் தேவரும் புகழும் பாசூரிற் பொருந்திய பரஞ்சுடரை கங்கை பொருந்திய செஞ்சடை மேல் பாம்பு, கொன்றை, அழகுநிறைந்த பிறைமதி. ஆகியவற்றைச் சூடியவன் ஆகவும், சிறப்புமிக்க மறைகளை, அறத்தின் வழி உலகம் ஒழுக ஓதியருளியவன் ஆகவும், வளவிய கடலைக் கடைந்த பொழுது எழுந்த கடல் அளவு கொடுமை மிக்க நஞ்சினை உண்டதனால் கருமை பொருந்திய கண்டனாகவும், கச்சி நகரில் விளங்கும் கண்ணுதலாகவும், கடலை அடுத்துள்ள ஒற்றியூரை உயர்வாக மதிப்பவனாகவும் அடியேன்

கண்டு உய்ந்தவாறு நன்று.

திருப்பாசூர்

வேடனாய் விசயன்தன் வியப்பைக் காண்பான்
விற்பிடித்துக் கொம்புடைய ஏனத் தின்பின்
கூடினார் உமையவளுங் கோலங் கொள்ளக்
கொலைப்பகழி உடன் கோத்துக் கோரப்பூசல்
ஆடினார் பெருங்கூத்துக் காளி காண
அருமறையோ டாறங்கம் ஆய்ந்து கொண்டு
பாடினார் நால்வேதம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. **#827**

பாசூரிற் பொருந்திய பரஞ்சுடரை தமது திருவிளையாடலின் நிலையை உணர்ந்து வியக்கும் விசயனது மருட்கையைக் காண வேண்டி உமையவளும் வேட்டுவக்கோலம் கொள்ளத்தாமும் ஒரு வேடனாய் வில்லை ஏந்திக் கொலையிற் பழகிய பகழியையும் வில்லிற்கோத்துக் கொம்பினையுடைய பன்றியைத் தொடர்ந்து சென்று கொடிய பூசலைச் செய்தவர் ஆகவும், காளி காணப் பெருங்கூத்தினை ஆடினார் ஆகவும், அரிய மறைவாகிய பொருளையுடைய வேதங்களையும் ஆறங்கப் பொருளையும் ஆராய்ந்து மனத்திற்கொண்டு நான்கு வேதங்களையும் பாடினவர் ஆகவும் அடியேன் கண்டு உய்ந்தவாறு நன்று.

திருப்பாசூர்

புத்தியினாற் சிலந்தியுந்தன் வாயின் நூலால்
புதுப்பந்தர் அதுஇழைத்துச் சருகால் மேய்ந்த
சித்தியினால் அரசாண்டு சிறப்புச் செய்யச்
சிவகணத்துப் புகப்பெய்தார் திறலால் மிக்க
வித்தகத்தால் வெள்ளானை விள்ளா அன்பு
விரவியவா கண்டதற்கு வீடு காட்டிப்
பத்தர்களுக் கின்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. **#828**

பாசூரிற் பொருந்திய பரஞ்சுடரைப் பெற்ற ஞானத்தினால் உயர் சிலந்தி தன்வாயிலிருந்து வரும் நூலால் மக்களால் செய்யலாகாத பந்தலை இயற்றி அதனைச சருகால் மூடிய திருத்தொண்டைச் சிந்தித்துச் செய்தமையால் பின் அரசனாகி நிலவுலகை ஆண்டு அப்பிறப்பிலும் சிறந்த தொண்டு செய்யச் சிவகணங்களுள் புக்கு இன்புறுமாறு சேர்த்தருளினவர் ஆகவும், வலிமையும், திறமையும் கொண்டு வெள்ளானை, செய்த செயலிடத்து மிக்க அன்பு விரவியிருந்தமை கண்டு அதற்கு வீடு அருளியவர் ஆகவும், பத்தர்களுக்கு இன்னமுதம் ஆகவும்

அடியேன் கண்டு உய்ந்தவாறு நன்றாம்.

திருப்பாசூர்

இணையொருவர் தாமல்லால் யாரு மில்லார்
இடைமருதோ டேகம்பத் தென்றும் நீங்கார்
அணைவரியர் யாவர்க்கும் ஆதி தேவர்
அருமந்த நன்மையெலாம் அடியார்க் கீவர்
தணல் முழுகு பொடியாடுஞ் செக்கர் மேனித்
தத்துவனைச் சாந்தகிலின் அளறு தோய்ந்த
பணைமுலையாள் பாகனையெம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. **#829**

பாசூரிற் பொருந்திய எம்பரஞ்சுடரைத் தமக்குத் தாம் அல்லால் இணையாவார் ஒருவரும் இல்லார் ஆகவும், இடை மருது, ஏகம்பம் என்றிவற்றை என்றும் நீங்காதார் ஆகவும், யாவர்க்கும் அணைவதற்கு அரியார் ஆகவும், ஆதி தேவர் ஆகவும், அடியார்க்கு அரிய அமுதம் போன்ற நல்லன எல்லாம் ஈவார் ஆகவும், நெருப்பில் மூழ்கினமையால் உண்டான சாம்பற்பூச்சைக் கொண்ட செவ்வானன்னமேனித் தத்துவன் ஆகவும், சந்தனம் அகில் ஆகியவற்றின் சேறு தோயப்பெற்றபருத்த தனத்தினையுடைய பார்வதியின் பாகன் ஆகவும் அடியேன் கண்டு உய்ந்தவாறு நன்று.

திருப்பாசூர்

அண்டவர்கள் கடல்கடைய அதனுள் தோன்றி
அதிர்த்தெழுந்த ஆலாலம் வேலை ஞாலம்
எண்டிசையுஞ் சுடுகின்ற வாற்றைக் கண்டுஇமைப்பளவி
லுண்டிருண்ட கண்டர் தொண்டர்
வண்டுபடு மதுமலர்கள் தூவி நின்றுவானவர்கள் தானவர்கள் வணங்கி
யேத்தும்
பண்டரங்க வேடனையெம் பாசூர் மேயபரஞ்சுடரைக் கண்டடியேன்
உய்ந்த வாறே. **#830**

பாசூரிற் பொருந்திய எம் பரஞ்சுடரை மேலுலகத்தார் கடலைக் கடைய அதனிடத்து அனைவரையும் நடுங்கச்செய்து எழுந்த ஆலால நஞ்சு கடல் சூழ்ந்த உலகை எட்டுத் திசைகளிலும் சுடுகின்ற தன்மையைக்கண்டு இமைப்பளவில் அதனை உண்டு அதனால் கறுத்த கண்டர் ஆகவும், தேவர்களும் அசுரர்களும் வண்டுகள் மொய்க்கும் தேன் நிறைந்த மலர்களைத் தூவி நின்று வணங்கித் துதிக்கும் பண்டரங்கக் கூத்தனாம் வேடம் கொண்டவர் ஆகவும் அடியேன் கண்டு உய்ந்தவாறு நன்று.

திருப்பாசூர்

ஞாலத்தை யுண்டதிரு மாலும் மற்றை
நான்முகனும் அறியாத நெறியார் கையிற்
சூலத்தால் அந்தகனைச் சுருளக் கோத்துத்
தொல்லுலகிற் பல்லுயிரைக் கொல்லுங் கூற்றைக்
காலத்தா லுதைசெய்து காதல் செய்த
அந்தணனைக் கைக்கொண்ட செவ்வான் வண்ணர்
பாலொத்த வெண்ணீற்றர் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. **#831**

பாசூரிற்பொருந்திய பரஞ்சுடரை ஞாலத்தை உண்ட திருமாலும் நான்முகனும் அறியாத நிலையினை உடையவராகவும், அந்தகாசுரன் மடிய அவனைச் சூலத்தாற் குத்தியவர் ஆகவும், பழைய இவ்வுலகில் பல்லுயிரையும் கொல்லும் இயமனைக் காலால் உதைத்து உருட்டித் தன்பால் உண்மை அன்பு கொண்ட அந்தணனைக் கைக்கொண்டு காத்த செவ்வான் அன்னமேனி நிறத்தவர் ஆகவும், பால்போன்ற வெண்ணீற்றுப் பூச்சினர் ஆகவும் அடியேன் கண்டு உய்ந்தவாறு நன்று.

திருப்பாசூர்

வேந்தன்நெடு முடியுடைய அரக்கர் கோமான்
மெல்லியலாள் உமைவெருவ விரைந்திட் டோடிச்
சாந்தமென நீறணிந்தான் கயிலை வெற்பைத்
தடக்கைகளா லெடுத்திடலுந் தாளா லூன்றி
ஏந்துதிரள் திண்டோளுந் தலைகள் பத்தும்
இறுத்தவன்தன் இசைகேட்டு இரக்கங் கொண்ட
பாந்தளணி சடைமுடியெம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. **#832**

பாசூரிற் பொருந்திய எம்பரஞ்சுடரை நெடிய முடியை அணிந்த அரக்கர்கோமானாகிய வேந்தன் விரைந்து ஓடிச் சந்தனம் ஒப்பத்திருநீற்றினைஅணிந்த தனது கயிலை மலையைப் பெரிய கைகளால் பெயர்த்திடவும் மெல்லியல் உமைவெருவ, அவ்வளவில், அவனுடைய வலிமை மிக்கு உயர்ந்து திரண்ட தோள்களும் பத்துத்தலைகளும் இறும் வண்ணம் தன் தாள் விரலை ஊன்றிப் பின் அவனது இசையைக் கேட்டு இரக்கங்கொண்டவன் ஆகவும் சடையாலாகிய முடியிடத்துப் பாம்பை அணிந்தவனாகவும் அடியேன் கண்டு உய்ந்தவாறு நன்று.

திருச்செங்காட்டங்குடி

திருச்செங்காட்டங்குடி

திருச்செங்காட்டங்குடி, திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கணபதீசுவரர்.
தேவியார் : திருக்குழல்மாதம்மை.

பெருந்தகையைப் பெறற்கரிய மாணிக் கத்தைப்
பேணிநினைந் தெழுவார்தம் மனத்தே மன்னி
இருந்தமணி விளக்கதனை நின்ற பூமேல்
எழுந்தருளி யிருந்தானை எண்டோள் வீசி
அருந்திறல்மா நடமாடும் அம்மான் தன்னை
அங்கனகச் சுடர்க்குன்றை அன்றா லின்கீழ்த்
திருந்துமறைப் பொருள்நால்வர்க் கருள்செய் தானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. **#833**

பெருமையாம் தன்மை உடையானும், பெறற்கு அரிய மாணிக்கம் போன்றவனும், விரும்பி நினைந்தவாறே துயிலெழு வார் மனத்தில் நிலைபெற்றுநின்ற மணிவிளக்கு ஆனவனும், நீர்நிலை யில் தாள்மேல் நின்ற தாமரை மலரில் எழுந்தருளியிருந்தவனும், எட்டுத்தோள்களையும் வீசி உலகத்தைத தொழிற்படுத்தும் அரிய ஆற்றல் மிக்க பெரிய கூத்தினை இயற்றும் பெருமானும், அழகிய கனகக் குன்று போல்வானும், பண்டு ஆலின் கீழ் நால்வர்க்கும் திருந்திய மறைப்பொருளை உபதேசித்து அருள்செய்தானும் ஆகிய சிவபெருமானைச் செங்காட்டங்குடியில் நான் கண்டேன்.

திருச்செங்காட்டங்குடி

துங்கநகத் தாலன்றித் தொலையா வென்றித்
தொகுதிறலவ் விரணியனை ஆகங் கீண்ட
அங்கனகத் திருமாலும் அயனுந் தேடும்
ஆரழலை அநங்கனுடல் பொடியாய் வீழ்ந்து
மங்கநகத் தான்வல்ல மருந்து தன்னை
வண்கயிலை மாமலைமேல் மன்னி நின்ற
செங்கனகத் திரள்தோளெஞ் செல்வன் தன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. **#834**

உயர்ந்த நகத்தாலன்றிப் பிற கருவிகளால் அழியாதவனும் தன் ஆற்றலால் பலரையும் வென்று கூட்டிய வெற்றிகளை உடையவனும் ஆகிய இரணியனை மார்பைப பிளந்தவனும், அழகிய கற்றூணில்

தோன்றிச் சிரித்தவனும் ஆகிய திருமாலும், நான்முகனும் தேடும் அணுகுதற்கரிய நெருப்புப் பிழம்பானவனும், மன்மதன் உடல்எரிந்து சாம்பராய் உருக்குலைந்து மங்கவும் அவன் மனைவி இரதி அவனைப் பெற்றுநகுமாறு செய்யவல்ல அமுதம் ஆனவனும், வளவிய கயிலை மாமலைமேல் நிலைத்து நின்றவனும், செம்பொன் நிறங்கொண்டு திரண்ட தோள்களைப் பெற்றசெல்வனும் ஆகிய சிவபெருமானைச் செங்காட்டங்குடியில் நான் கண்டேன்.

திருச்செங்காட்டங்குடி

உருகுமனத் தடியவர்கட் கூறுந் தேனை
உம்பர்மணி முடிக்கணியை உண்மை நின்ற
பெருகுநிலைக் குறியாளர் அறிவு தன்னைப்
பேணியஅந் தணர்க்குமறைப் பொருளைப்பின்னும்
முருகுவிரி நறுமலர்மேல் அயற்கும் மாற்கும்
முழுமுதலை மெய்த்தவத்தோர் துணையை வாய்த்த
திருகுகுழல் உமைநங்கை பங்கன் தன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. **#835**

நினைந்துருகும் அடியாருடைய மனத்தில் ஊற்றெடுக்கும் தேன் ஆனவனும், தேவர்களுடைய மணிகள் இழைத்த மகுடங்களுக்கு அணியாய் நிற்கும் திருவடிகளை உடையவனும், உண்மைக் கண்ணே நின்றாராய் உயர்ந்தோர் கூறும் உறுதிச் சொற்களை ஏற்றுப் பெருகுநிலையாகிய வீடு அடைதலையே குறிக்கோளாய்க் கொண்டவருடைய அறிவாய் விளங்குபவனும், தன்னை விரும்பித் தொழும் அந்தணருக்கு விளங்கித் தோன்றும் மறைப் பொருள் ஆனவனும், பிற்படுவோராம் மணங்கமழும் தாமரை மலர் மேல் விளங்கும் பிரமனுக்கும் திருமாலுக்கும முற்பட்ட பரமகாரணன் ஆனவனும், மெய்யான தவத்தைச் செய்வார்க்கு அமைந்த உறுதுணைவனும், சுருண்ட குழலினையுடைய உமைநங்கைக்கு வாய்த்த பங்கனும் ஆகியசிவபெருமானைச் செங்காட்டங்குடியில் நான் கண்டேன்.

திருச்செங்காட்டங்குடி

கந்தமலர்க் கொன்றையணி சடையான் தன்னைக்
கதிர்விடுமா மணிபிறங்கு கனகச் சோதிச்
சந்தமலர்த் தெரிவை யொரு பாகத்தானைச்
சராசரநற் றாயானை நாயேன் முன்னைப்
பந்தமறுத் தாளாக்கப் பணிகொண் டாங்கே
பன்னியநூல் தமிழ்மாலை பாடு வித்தென்

சிந்தைமயக் கறுத்ததிரு வருளினானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. **#836**
மணங்கமழும் கொன்றை மலரையணிந்த சடையானும் சிறந்த
மரகதமணி உமிழும் ஒளியுடனே விளங்கும் பொன்னின் ஒளிபோல
அழகிய மலரணிந்த உமையின் ஒருபாகத்தொடு தன் பாகம் விளங்கு
பவனும், இயங்குதிணை நிலைத்திணைப் பொருள்களுக்கு நற்றாய்
ஆனவனும், நாயேனுடைய பழைய வினையை அறுத்து அடிமை
கொள்ள என் தொண்டினை மதித்துக் கொண்டாற் போல
முன்னையோர் உரைத்தஇலக்கண

<u>திருச்செங்காட்டங்குடி</u>

நஞ்சடைந்த கண்டத்து நாதன் தன்னை
நளிர்மலர்ப்பூங் கணைவேளை நாச மாக
வெஞ்சினத்தீ விழித்ததொரு நயனத் தானை
வியன்கெடில வீரட்டம் மேவி னானை
மஞ்சடுத்த நீள்சோலை மாட வீதி
மதிலாரூர் இடங்கொண்ட மைந்தன் தன்னைச்
செஞ்சினத்த திரிசூலப் படையான் தன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. **#837**
நஞ்சுபொருந்திய கண்டத்தை உடைய தலைவனும் குளிர்ந்த
மலர்களாகிய அழகிய அம்புகளைக் கொண்ட மன்மதன் அழியுமாறு
கொடிய சினமாகிய நெருப்பு எழவிழித்த ஒரு நெற்றிக் கண்ணினனும்,
கெடில நதிக்கரையில் விளங்கும் பரந்த அதிகை வீரட்டம்
மேவினவனும், மேகம் தவழும் நீண்ட சோலைகளை உடையதும்
மாடவீதிகள் நிறைந்ததும் மதிலால் வளைப்புண்டது மாகிய ஆரூரைத்
தனது இடமாகக் கொண்ட மைந்தனும், சினத்தால் சிவந்து தோன்றும்
திரிசூலப் படையினனும் ஆகிய சிவபெருமானை நான்
செங்காட்டங்குடியிற் கண்டேன்.

<u>திருச்செங்காட்டங்குடி</u>

கன்னியையங் கொருசடையிற் கரந்தான் தன்னைக்
கடவூரில் வீரட்டங் கருதி னானைப்
பொன்னிசூழ ஐயாற்றெம் புனிதன் தன்னைப்
பூந்துருத்தி நெய்த்தானம் பொருந்தி னானைப்
பன்னியநான் மறைவிரிக்கும் பண்பன் தன்னைப்
பரிந்திமையோர் தொழுதேத்திப் பரனே யென்று
சென்னிமிசைக் கொண்டணிசே வடியி னானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. **#838**

கங்கையைத் தன் ஒப்பற்ற சடையின் ஒரு பால் மறைத்தவனும், கடவூர்வீரட்டானத்தைச் சிறந்த இடமாகக் கருதினவனும், காவிரி சூழும் ஐயாற்றில்விளங்கும் எம் புனிதனும், பூந்துருத்தி நெய்த்தானம் ஆகிய பதிகளில்நிலைபெற்றவனும், தான் உரைத்த நான்மறைகளின் பொருளைத் தக்கவர்க்குவிளங்க விரித்து உரைக்கும் இயல்பினனும், தேவர்கள் அன்பு கொண்டுவணங்கிப் புகழ்ந்து 'பரனே' என்று முழங்கித் தம் தலைமீது அணியாகச் சூடிக்கொள்ளும் சிவந்த அடிகளை உடையவனும் ஆகிய சிவபெருமானை நான்செங்காட்டங்குடியில் கண்டேன்.

திருச்செங்காட்டங்குடி

எத்திக்கு மாய்நின்ற இறைவன் தன்னை
ஏகம்பம் மேயானை யில்லாத் தெய்வம்
பொத்தித்தம் மயிர்பறிக்குஞ் சமணர் பொய்யிற்புக்கழுந்தி வீழாமே போத வாங்கிப்
பத்திக்கே வழிகாட்டிப் பாவந் தீர்த்துப்பண்டைவினைப் பயமான எல்லாம் போக்கித்
தித்தித்தென் மனத்துள்ளே ஊறுந் தேனைச்செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. **#839**

எல்லாத் திக்குகளுமாய் நின்ற இறைவனும், ஏகம்பத்தில் பொருந்திநிற் பவனும், தெய்வத்தன்மை இல்லாத ஒன்றைத் தெய்வமாக மனத்துட் கொண்டுதம் மயிரைப் பறிக்கும் சமணருடைய பொய் ஒழுக்கப் படுகுழியில் நான்புக் கழுந்தி வீழாமல், தன் திருவடியாகிய கரையில் புகும்படி என்னைஎடுத்துப் பத்திக்குரிய வழியைக் காட்டிப் பாவத்தைத் தீர்த்து பழைய வினைப் பயனாகவிளைவன எல்லாவற்றையும் விலக்கி என் மனத்துள்ளே ஊறுந்தேனாய்த் தித்திப்பவனும் ஆகிய சிவபெருமானை நான் செங்காட்டங் குடியில் கண்டேன்.

திருச்செங்காட்டங்குடி

கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னைக்
கற்றார்கள் உற்றோருங் காத லானைப்
பொல்லாத நெறியுகந்தார் புரங்கள் மூன்றும்
பொன்றிவிழ அன்றுபொரு சரந்தொட் டானை
நில்லாத நிணக்குரம்பைப் பிணக்கம் நீங்கநிறைதவத்தை அடியேற்கு நிறைவித் தென்றுஞ்
செல்லாத செந்நெறிக்கே செல்விப் பானைச்செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. **#840**

உண்மை நூல்களைக் கல்லாதார் மனத்தை அணுகாது அகலும்

கடவுளும், மெய்ந்நூல்களைக் கற்றவர்கள் ஆராய்ந்து அடையும் அன்பனும், பிறர்க்குத் துன்பமிழைத்தலாகிய பிழைபட்ட நெறியை விரும்பினவருடைய புரங்கள் மூன்றும் அழிந்து விழுமாறு போர் செய்யவல்ல அம்பினைத் தொடுத்தவனும் நிலையற்ற புலாற்குடிலாகிய உடலிடத்து நரைதிரைமூப்புப் பிணி இறப்பு முதலியவற்றால் நிகழும் மாறுபாடு நீங்க நலங்கள் நிறைவதற்குரிய தவத்தை என்பால் செய்து வேறு இடத்திற்குக் கொண்டு செல்லாத செவ்விய நெறியிலே என்னைச் செலுத்து பவனும் ஆகிய சிவபெருமானைநான் செங்காட்டங்குடியில் கண்டேன்.

திருச்செங்காட்டங்குடி

அரியபெரும் பொருளாகி நின்றான் தன்னை
அலைகடலில் ஆலாலம் அமுது செய்த
கரியதொரு கண்டத்துச் செங்கண் ஏற்றுக்
கதிர்விடுமா மணிபிறங்கு காட்சி யானை
உரியபல தொழில் செய்யும் அடியார்தங்கட்
குலகமெலாம் முழுதளிக்கும் உலப்பி லானைத்
தெரிவையொரு பாகத்துச் சேர்த்தி னானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. **#841**

கிடைத்தற்கரிய பெரும்பொருளாய்த் திகழ்பவனும், அலையை உடையகடலிடத்துத் தோன்றிய ஆலால நஞ்சினை உண்ணக் கழிந்த கண்டத்தினனும், சிவந்த கண்களையுடைய இடபத்தின் மேலேறி ஒளிவிடும் சிறந்த மாணிக்க மணிபோல் விளங்குந் தோற்றத்தை உடையவனும், தத்தம் நிலைக்கு ஏற்ற தொண்டினைச் செய்யும் அடியார்க்கு உலகங்களைக் கற்பம் முடியுமளவும் ஆள அளிப்பவனும், அழிவில்லாதவனும், உமையம்மை ஒருபாகமாகக் கொண்டவனும் ஆகிய சிவபெருமானை நான் செங்காட்டங்குடியில் கண்டேன்.

திருச்செங்காட்டங்குடி

போரரவ மால்விடையொன் றூர்தி யானைப்
புறம்பயமும் புகலூரும் மன்னி னானை
நீரரவச் செஞ்சடைமேல் நிலாவெண் டிங்கள்
நீங்காமை வைத்தானை நிமலன் தன்னைப்
பேரரவப் புட்பகத்தே ருடைய வென்றிப்
பிறங்கொளிவாள் அரக்கன்முடி யிடியச் செற்ற
சீரரவக் கழலானைச் செல்வன் தன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. **#842**

போரிடத்து எழுப்பும் ஒலியையுடையதும் பெருமை மிக்கதும் ஆகிய ஒரு

விடையை ஊர்தியாக உடையவனும், புறம்பயத்தும் புகலூரிலும் நிலைத்து நின்றவனும், கங்கையும், பாம்பும் நிலவும் செஞ்சடைமேல் நிலாக்காலும் வெண்டிங்கட்பிறையை என்றும் நீங்காதவாறு வைத்தவனும், நிமலனும், மிக்க ஒலியுடைய புட்பக விமானத்தையுடையவனாய், வெற்றியால் மூவுலகங்களிலும் விளங்கிய புகழுடைய கொடிகள் அரக்கனாகிய இராவணனுடைய முடிகள் பொடியாகும்படி ஒலிக்கும் அழகிய கழலினனும், செல்வனும் ஆகிய சிவபெருமானை நான்செங்காட்டங்குடியில் கண்டேன்.

திருமுண்டீச்சரம்

திருமுண்டீச்சரம், திருத்தாண்டகம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : முண்டீசுவரர்.
தேவியார் : கானார்குழலியம்மை.

ஆர்த்தான்காண் அழல்நாகம் அரைக்கு நாணா
அடியவர்கட் கன்பன்காண் ஆனைத் தோலைப்
போர்த்தான்காண் புரிசடைமேல் புனலேற் றான்காண்
புறங்காட்டி லாடல் புரிந்தான் தான்காண்
காத்தான்காண் உலகேழுங் கலங்கா வண்ணங்
கனைகடல்வாய் நஞ்சதனைக் கண்டத் துள்ளே
சேர்த்தான்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காண்அவனென் சிந்தை யானே. **#843**

திரு முண்டீச்சரத்தில் கோயில் கொண்ட சிவலோகன், சினமிகுந்த நாகத்தை அரைநாணாகக் கட்டியவனும், அடியவர்களுக்கு அன்பனும், யானையின் தோலைப் போர்வையாகக் கொண்டவனும், முறுக்குண்ட சடைமேல் கங்கையை ஏற்றவனும், சுடுகாட்டில் ஆடுவதை விரும்பியவனும், உலகங்கள் ஏழும் கலக்க முறாதபடி ஒலிக்கும் கடலிடை உண்டான நஞ்சினைத் தன் கழுத்திடத்தே சேர்த்தவனும் ஆவான். அவன் என் சிந்தை இடத்தவன் ஆயினான்.

திருமுண்டீச்சரம்

கருத்தன்காண் கமலத்தோன் தலையி லொன்றைக்
காய்ந்தான்காண் பாய்ந்தநீர் பரந்த சென்னி
ஒருத்தன்காண் உமையவளோர் பாகத் தான்காண்
ஓருருவின் மூவுருவாய் ஒன்றாய் நின்ற
விருத்தன்காண் விண்ணவர்க்கும் மேலா னான்காண்
மெய்யடியா ருள்ளத்தே விரும்பி நின்ற
திருத்தன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காண்அவனென் சிந்தை யானே. **#844**

திருமுண்டீச்சரத்தில் கோயில் கொண்ட சிவலோகன் தலைவன் ஆவானும், பிரமன் தலைகளில் ஒன்றைக் கோபித்துக் கொய்தவனும், வேகமாகப் பாய்ந்த கங்கை வேகம் நீங்கிப் பரவிய தலையை உடைய ஒருத்தனும் உமையம்மை தங்கிய பங்கினனும், மூன்று வடிவங்களாய் நின்ற அரி, அயன், அரன் ஆகியோருடைய வடிவங்கள் ஒன்றாகித்

தனது ஒருவடிவமாக அமைந்த பழையோனும், தேவர்களுக் கெல்லாம் மேலானவனும், மெய்யடியார் உள்ளத்தில் விரும்பி உறையும் தூயவனும் ஆவான். அவன் என் சிந்தையிடத்தவன் ஆயினான்.

திருமுண்டீச்சரம்

நம்பன்காண் நரைவிடையொன் றேறி னான்காண்
நாதன்காண் கீதத்தை நவிற்றி னான்காண்
இன்பன்காண் இமையாமுக் கண்ணி னான்காண்
ஏசற்று மனமுருகும் அடியார் தங்கட்
கன்பன்காண் ஆரழல தாடி னான்காண்
அவனிவனென்றியாவர்க்கும் அறிய வொண்ணாச்
செம்பொன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காண்அவனென் சிந்தை யானே. **#845**

திரு முண்டீச்சரத்தில் கோயில் கொண்ட சிவலோகன் நம்புதற்குரியவனும், வெள்ளை விடை ஒன்றை ஊர்தியாகக் கொண்டவனும், தலைவனும், கீதத்தைப் பாடினவனும், இன்பத்தைத் தருபவனும், இமையாத மூன்று கண்கள் உடையவனும், விரும்பி மனமுருகும் அடியார்களுடைய அன்பனும், அனலேந்தி ஆடினவனும், அவன் என்றும் இவன் என்றும் யாராலும் அறிய ஒண்ணாதவனும், செம்பொன் அனையானும் ஆவான். அவன் என் சிந்தையிடத்தவன் ஆயினான்.

திருமுண்டீச்சரம்

மூவன்காண் மூவர்க்கும் முதலா னான்காண்
முன்னுமாய்ப் பின்னுமாய் முடிவா னான்காண்
காவன்காண் உலகுக்கோர் கண்ணா னான்காண்கங்காளன்
காண்கயிலை மலையி னான்காண்
ஆவன்காண் ஆவகத்தஞ் சாடி னான்காண்ஆரழலாய் அயற்கரிக்கு
மறிய வொண்ணாத்
தேவன்காண் திருமுண்டீச் சரத்து மேயசிவலோகன் காண்அவனென்
சிந்தை யானே. **#846**

திருமுண்டீச்சரத்தில் கோயில் கொண்ட சிவலோகன் மூவுருவாய் மூத்தவனும், மூவர்க்கும் முதல் ஆனவனும், உலகத்தோற்றத்திற்கு முன் ஆனவனும், உலக ஒடுக்கத்திற்குப்பின் ஆனவனும், வீடு பேறு ஆனவனும், உலகங்களைக் காப்பவன் ஆனவனும், உலகிற்குக் கண் ஆனவனும், இறந்துபட்ட பிரமவிட்டுணுக்களுடைய என்புக்கூடுகளை அணிந்தவனும், கயிலை மலையினனும், ஆக்கந்தருபவனும், ஆன்ஐந்தில் விரும்பி மூழ்குபவனும், பிரமனுக்கும் திருமாலுக்கும்

அறியமுடியாத அழற்பிழம் பாய்த் தோன்றிய தேவனும் ஆவான். அவன் என் சிந்தையிடத்தவன் ஆயினன்.

திருமுண்டீச்சரம்

கானவன்காண் கானவனாய்ப் பொருதான் றான்காண்
கனலாட வல்லான்காண் கையி லேந்தும்
மானவன்காண் மறைநான்கு மாயி னான்காண்
வல்லேறொன் றதுவேற வல்லான் றான்காண்
ஊனவன்காண் உலகத்துக் குயிரா னான்காண்
உரையவன்காண்உணர்வவன்காண்உணர்ந்தார்க்கென்றுந்
தேனவன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காண்அவனென் சிந்தை யானே. **#847**

திரு முண்டீச்சரத்தில் கோயில் கொண்ட சிவலோகன் காட்டில் உறைபவனும், வேடனாகிப் பார்த்தனொடு பொருதவனும், கனல் ஆட வல்லவனும், மானைக் கையில்ஏந்தியவனும், நான்கு மறைகளாகவும் ஆனவனும், வலிய இடபமொன்றை ஏற வல்லவனும், பலவகை உடம்புகளாயும் நிற்பவனும், சீவான்மாக்களின் உயிர்க்குயிரானவனும், சொல் ஆனவனும் சொற்பொருள் உணர்வு ஆனவனும், தன்னை உணர்ந்தார்க்கு எக்காலத்தும் தேனாய் இனிப்பவனும் ஆவான். அவன் என் சிந்தையிடத்தவன் ஆயினன்.

திருமுண்டீச்சரம்

உற்றவன்காண் உறவெல்லா மாவான் றான்காண்
ஒழிவறநின் றெங்கு முலப்பி லான்காண்
புற்றரவே யாடையுமாய்ப் பூணு மாகிப்
புறங்காட்டி லெரியாடல் புரிந்தான் றான்காண்
நற்றவன்காண் அடியடைந்த மாணிக் காக
நணுகியதோர் பெருங்கூற்றைச் சேவ டியினால்
செற்றவன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காண்அவனென் சிந்தை யானே. **#848**

திரு முண்டீச்சரத்தில் கோயில் கொண்ட சிவலோகன் உயிரோடு உடங்கியைந்து நின்றவனும், எல்லா உறவினருமாய் ஆனவனும், ஓரிடமும் எஞ்சுதலில்லா வகை எவ்விடத்தும் நிறைந்து நின்றவனும், அழிவில்லாதவனும், புற்றில் வாழும் பாம்பை ஆடை மேல் கட்டப்படும் கச்சாகவும் ஆபரணமாகவும் கொண்டவனும், சுடுகாட்டில் எரியேந்தி ஆடுதலைச் செய்தவனும், நல்ல தவவேடங் கொண்டவனும், சரணடைந்த பிரமசாரிக்காக அவனைக் கிட்டிய பெருங்கூற்றுவனைச் சேவடியால் உதைத்து அழித்தவனும் ஆவான். அவன் என்

சிந்தையிடத்தவன் ஆவான்.

திருமுண்டீச்சரம்

உதைத்தவன்காண் உணராத தக்கன் வேள்வி
உருண்டோடத் தொடர்ந்தருக்கன் பல்லை யெல்லாந்
தகர்த்தவன்காண் தக்கன்றன் தலையைச் செற்ற
தலைவன்காண் மலைமகளாம் உமையைச் சால
மதிப்பொழிந்த வல்லமரர் மாண்டார் வேள்வி
வந்தவியுண் டவரோடு மதனை யெல்லாஞ்
சிதைத்தவன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காண்அவனென் சிந்தை யானே. **#849**

திரு முண்டீச்சரத்தில் கோயில் கொண்ட சிவலோகன், மெய்யுணராத தக்கனுடைய வேள்விக்கண் திரட்டி வைக்கப்பட்ட திரவியங்களை உருண்டோட உதைத்தவனும், அருக்கனைத் தொடர்ந்து சென்று அவன் பற்களை எல்லாம் தகர்த்தவனும், தக்கனுடைய தலையைக் கொய்த தலைவனும், மலைமகளாகிய உமையம்மையை மிக இகழ்ந்தவராய், மாட்சிமைப்பட்டவராய்த் தம்மை மதித்து வேள்விக்கண்வந்து அவியுண்டாருமாகிய வலிமைமிக்க தேவர்களொடு அவர்தம் அறியாமை முழுவதையும் அழித்தவனும் ஆவான். அவன் என் சிந்தையிடத்தவன் ஆயினன்.

திருமுண்டீச்சரம்

நேசன்காண் நேசர்க்கு நேசந் தன்பால்
இல்லாத நெஞ்சத்து நீசர் தம்மைக்
கூசன்காண் கூசாதார் நெஞ்சு தஞ்சே
குடிகொண்ட குழகன்காண் அழகார் கொன்றை
வாசன்காண் மலைமங்கை பங்கன் தான்காண்
வானவர்கள் எப்பொழுதும் வணங்கி யேத்தும்
ஈசன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. **#850**

அடியார்க்கு அன்பனாய், தன்னிடம் அன்பு இல்லாத கீழ்மக்களை நினைத்துக் கூசி அகல்பவனாய், தன்னை வணங்குதற்கு நாணாதவர் மனத்தின் கண் எளிமையாய்த் தங்கும் இளையவனாய், அழகிய மணம் கமழும் கொன்றையை அணிந்தவனாய், பார்வதி பாகனாய், தேவர்கள் எப்பொழுதும் வணங்கித் துதிக்கும் எழிலாரும் பொழில் கச்சி ஏகம்பன் என் எண்ணத்தானே.

திருமுண்டீச்சரம்

அறுத்தவன்காண் அடியவர்கள் அல்ல லெல்லாம்
அரும்பொருளாய் நின்றவன்காண் அனங்க னாகம்
மறுத்தவன்காண் மலைதன்னை மதியா தோடி
மலைமகள்தன் மனம்நடுங்க வானோ ரஞ்சக்
கறுத்தவனாய்க் கயிலாய மெடுத்தோன் கையுங்
கதிர்முடியுங் கண்ணும் பிதுங்கி யோடச்
செறுத்தவன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காண்அவனென் சிந்தை யானே. **#851**

அடியார்களுடைய அல்லல்களை யெல்லாம் நீக்கியவனும், அடைவதற்கு அரிய பொருளாய் நின்றவனும், மன்மதனது உடலை அழித்தவனும், மலைமகளாம் உமையம்மையின் மனம் நடுங்கவும் தேவர்கள் அஞ்சவும் கயிலை மலையை மதியாது வெகுண்டு ஓடி அதனைப் பறித்தெடுக்க முற்பட்டவனுடைய கைகளும் ஒளிவீசும் முடிகளை உடைய தலைகளும் கண்களும் பிதுங்கிச் செருக்குக்கெடுமாறு ஒறுத்தவனும், திருமுண்டீச்சரத்துக் கோயில் கொண்ட சிவலோகன் ஆவான். அவன் என் சிந்தையிடத்தவன் ஆயினன்.

திருவாலம்பொழில்

திருவாலம்பொழில்

திருவாலம்பொழில், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஆத்மநாதீசுவரர்.
தேவியார் : ஞானாம்பிகையம்மை.

கருவாகிக் கண்ணுதலாய் நின்றான் றன்னைக்
கமலத்தோன் றலையரிந்த கபா லியை
உருவார்ந்த மலைமகளோர் பாகத் தானை
உணர்வெலா மானானை ஓசை யாகி
வருவானை வலஞ்சுழியெம் பெருமான் றன்னை
மறைக்காடும் ஆவடுதண் டுறையு மேய
திருவானைத் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. **#852**

எல்லாவற்றிற்கும் முதல் ஆனவனும், நுதலிடத்துக் கண் பெற்றவனும், பிரமனது தலையை அரிந்து, அரிந்த அத்தலை ஓட்டை விரும்பிக் கொண்டவனும், அழகிய உமையம்மை விளங்கும் உடலின் ஒரு கூற்றை உடையவனும், உயிர்களுடைய உணர்வுகள் எல்லாம் ஆனவனும், அவ்வுணர்வுகளை உணர்த்தும் ஓசைகளாகி வருபவனும், வலஞ்சுழியில் மன்னும் எம்பெருமானும், மறைக்காட்டிலும், ஆவடுதண்டுறையிலும் பொருந்திவாழும் மேன்மையுடையவனும் ஆகும், தென்பரம்பைக் குடியைச் சார்ந்த திருவாலம் பொழில் சிவபெருமானை, நெஞ்சே! இடைவிடாது சிந்திப்பாயாக.

திருவாலம்பொழில்

உரித்தானைக் களிறதன்தோல் போர்வை யாக
வுடையானை யுடைபுலியி னதளே யாகத்
தரித்தானைச் சடையதன்மேற் கங்கை யங்கைத்
தழலுருவை விடமமுதா வுண்டி தெல்லாம்
பரித்தானைப் பவளமால் வரையன் னானைப்
பாம்பணையான் தனக்கன்றங் காழி நல்கிச்
சிரித்தானைத் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. **#853**

களிற்றின் தோலை உரித்தவனும், அத்தோலைப் போர்வையாகவும், புலியின் தோலை உடையாகவும், உடையவனும், சடைமேல் கங்கையைத் தரித்தவனும், அழகிய கையிடத்து உருவத்தழலை

ஏந்தியவனும், ஆலகால விடத்தை அமுது செய்தவனும், இக்கோலத்தையெல்லாம் மேற்கொண்டு நின்றவனும், பவளப் பெருமலையன்னவனும், ஆதிசேடனைப் படுக்கையாகக் கொண்டு திருமாலுக்கு அன்று சக்கராயுதத்தை வழங்கி மகிழ்ந்தவனும் ஆகும் தென்பரம்பைக் குடியைச் சார்ந்த திருவாலம்பொழிற் சிவபெருமானை நெஞ்சே! இடைவிடாது சிந்திப்பாயாக.

திருவாலம்பொழில்

உருமூன்றாய் உணர்வின்கண் ஒன்றா னானை
ஓங்கார மெய்ப்பொருளை உடம்பி னுள்ளால்
கருவீன்ற வெங்களவை யறிவான் தன்னைக்
காலனைத்தன் கழலடியாற் காய்ந்து மாணிக்
கருளீன்ற ஆரமுதை அமரர் கோனை
யள்ளூறி யெம்பெருமான் என்பார்க் கென்றுந்
திருவீன்ற தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. **#854**

அயன், அரி, அரன் என்னும் நிலைகளால் மூவுருவாகியும் உண்மையை உணருமிடத்து அம்மூவுருவம் ஒருரு ஆனவனும், ஓங்காரத்தின் மெய்ப்பொருளாய்த் திகழ்பவனும், உடம்பின் உள்ளே கருவாய்த் திகழும் மனம் எண்ணும் வஞ்சனையான கொடிய எண்ணங்களை அறிபவனும், இயமனைக் கழலணிந்த தன் திருவடியால் உதைத்து மாணியாகிய மார்க்கண்டேயனுக்கு அருள் செய்த பெறுதற்கரிய அமுது அன்னவனும், தேவர்களுக்குத் தலைவனும் அன்புமிகப் பெருகி எம்பெருமானே என்று விளித்து அடி அடைவார்க்கு என்றும் நன்மைகளை உண்டாக்குபவனும் ஆகிய தென்பரம்பைக் குடியைச் சார்ந்த திருவாலம் பொழிற் சிவபெருமானை நெஞ்சே இடைவிடாது சிந்திப்பாயாக.

திருவாலம்பொழில்

பார்முழுதாய் விசும்பாகிப் பாதா ளமாம்
பரம்பரனைச் சுரும்பமருங் குழலாள் பாகத்
தாரமுதாம் அணிதில்லைக் கூத்தன் தன்னை
வாட்போக்கி யம்மானை யெம்மா னென்று
வாரமதாம் அடியார்க்கு வார மாகி
வஞ்சனைசெய் வார்க்கென்றும் வஞ்ச னாகுஞ்
சீரரசைத் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. **#855**

முழுப்பூமியும், விசும்பும், பாதாளமும் ஆகிய மூவுலகங்களாய் நின்ற மிக மேலானவனும், வண்டுகள் மொய்க்கும் குழலினையுடைய

உமையம்மையைப் பாகத்திற்கொண்ட ஆரமுதம் போன்றவனும், அழகிய தில்லையிடத்து ஆடும் கூத்தனும், வாட் போக்கித் திருத்தலத்துத் தலைவனும், எம் தலைவன் என்று பாராட்டி அன்பு கூரும் அடியார்பால் அன்புடையவனும், வஞ்ச மனத்தார்க்கு என்றும் வஞ்சனும், சிறந்த அரசனும் ஆம் தென்பரம்பைக் குடியைச் சார்ந்த திருவாலம்பொழிற் சிவபெருமானை நெஞ்சே! இடைவிடாமல் சிந்திப்பாயாக.

திருவாலம்பொழில்

வரையார்ந்த மடமங்கை பங்கன் தன்னை
வானவர்க்கும் வானவனை மணியை முத்தை
அரையார்ந்த புலித்தோல்மேல் அரவ மார்த்தஅம்மானைத் தம்மானை அடியார்க் கென்றும்
புரையார்ந்த கோவணத்தெம் புனிதன் தன்னைப்பூந்துருத்தி மேயானைப் புகலூ ரானைத்
திரையார்ந்த தென்பரம்பைக் குடியின் மேயதிருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. **#856**

மலையில் தங்கி வளர்ந்த இளமங்கையைப் பங்கில் ஏற்றவனும் தேவர்க்குத் தேவனும், மணி போன்றவனும், முத்து அனையானும், அரையிற் பொருந்திய புலித்தோல் மேல் பாம்பைக் கட்டிய தலைவனும், அடியார்க்கு என்றுந் தலைவனாய் நின்று அருளுபவனும், வெள்ளிதாய் உயர்ந்த கோவணத்தை அணிந்த புனிதனும், பூந்துருத்தி வாழ்வானும், புகலூரானும் ஆகும், அலை எழும் நீர்நிலைகளை உடைய தென்பரம்பைக்குடியைச் சார்ந்த திருவாலம்பொழிற் சிவபெருமானை நெஞ்சே! இடைவிடாமல் சிந்திப்பாயாக.

திருவாலம்பொழில்

விரிந்தானைக் குவிந்தானை வேத வித்தை
வியன்பிறப்போ டிறப்பாகி நின்றான் தன்னை
அரிந்தானைச் சலந்தரன்றன் உடலம் வேறா
ஆழ்கடல்நஞ் சுண்டிமையோ ரெல்லா முய்யப்
பரிந்தானைப் பல்லசுரர் புரங்கள் மூன்றும்
பாழ்படுப்பான் சிலைமலைநாண் ஏற்றி யம்பு
தெரிந்தானைத் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. **#857**

படைப்புக் காலத்து விரிந்தவனும், அழிப்புக் காலத்துக் குவிந்தவனும், வேதத்தின் வித்தானவனும், பரந்த பிறப்பும் இறப்பும் ஆகி நின்றவனும், சலந்தரன் உடல் இருகூறாய் வேறாக அரிந்தவனும், ஆழ்கடலிலிருந்து தோன்றிய நஞ்சையுண்டு இமையோரெல்லாரும் உய்ய

அருள்புரிந்தவனும், பலவாகிய அசுரர்கள் வாழ்புரங்கள் மூன்றையும் பாழ்படுத்தற்கு மலையாகிய வில்லில் பாம்பாகிய நாணை ஏற்றித் திருமாலாகிய அம்பைத் தெரிந்து எய்தவனும் ஆகும் தென்பரம்பைக் குடியைச் சார்ந்த திருவாலம் பொழிற் சிவபெருமானை நெஞ்சே! இடைவிடாமல் சிந்திப்பாயாக.

திருவாலம்பொழில்

பொல்லாத என்னழுக்கிற் புகுவா னென்னைப்
புறம்புறமே சோதித்த புனிதன் தன்னை
எல்லாருந் தன்னை யிகழ அந்நாள்
இடுபலியென் றகந்திரியும் எம்பி ரானைச்
சொல்லாதா ரவர்தம்மைச் சொல்லா தானைத்
தொடர்ந்துதன் பொன்னடியே பேணு வாரைச்
செல்லாத நெறிசெலுத்த வல்லான் தன்னைத்
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. **#858**

குற்றமிக்க என்னுடம்பில் புகுதற்பொருட்டு என் உடம்பின் புறத்தே நின்று பலகாலும் ஆராய்ந்து குற்றங்களைந்து தூய்மை செய்த புனிதனும், தாருகாவனத்து முனிவர் எல்லாரும் தன்னை இகழ, அந்நாள் அவரகத்தார் இடுபலி என்ற ஒன்றை முன்னிட்டுக் கொண்டு அங்கே திரிந்தவனும், தன்னைப் புகழாதாரைத் தான் என்றும் நினையாதவனும், இடைவிடாமல் தன் பொன்னடிகளையே விரும்பி ஒழுகுவாரை மற்றவர் செல்லாத ஞான நெறியிலே செலுத்த வல்லவனும் ஆகும் திருவாலம்பொழிற் சிவபெருமானை நெஞ்சே! இடைவிடாமல் சிந்திப்பாயாக.

திருவாலம்பொழில்

ஐந்தலைய நாகவணைக் கிடந்த மாலோ
டயன்தேடி நாடரிய அம்மான் தன்னைப்
பந்தணவு மெல்விரலாள் பாகத் தானைப்
பராய்த்துறையும் வெண்காடும் பயின்றான் தன்னைப்
பொந்துடைய வெண்டலையிற் பலிகொள் வானைப்
பூவணமும் புறம்பயமும் பொருந்தி னானைச்
சிந்திய வெந் தீவினைகள் தீர்ப்பான் தன்னைத்
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. **#859**

ஐந்தலைப் பாம்பாகிய படுக்கையில் கிடந்த திருமாலும் பிரமனும் தேடிக் காண இயலாத தலைவனும், பந்து பொருந்தும் மெல்லிய விரலினளாகிய பார்வதியைப் பாகமாகக் கொண்டவனும், பராய்த்துறையிலும், வெண்காட்டிலும் பயின்று நிற்பவனும்,

ஓட்டைகளுடைய வெள்ளிய தலையில் பிச்சை ஏற்பவனும், பூவணத்தும் புறம்பயத்தும் பொருந்தி நிற்பவனும், துன்புறுத்திய எம் கொடுவினைகளைத் தீர்ப்பவனும் ஆகிய திருவாலம்பொழிற் சிவபெருமானை நெஞ்சே! இடைவிடாமல் சிந்திப்பாயாக.

திருவாலம்பொழில்

கையிலுண் டுழல்வாருஞ் சாக்கியருங்
கல்லாத வன்மூடர்க் கல்லா தானைப்
பொய்யிலா தவர்க்கென்றும் பொய்யி லானைப்
பூண்நாகம் நாணாகப் பொருப்பு வில்லாக்
கையினார் அம்பெரிகால் ஈர்க்குக் கோலாக்
கடுந்தவத்தோர் நெடும்புரங்கள் கனல்வாய் வீழ்த்த
செய்யினார் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. **#860**

கையில் உணவை ஏற்று உண்ணும் சமணரும் சாக்கியரும் ஆகிய கல்விப்பயனடையாத வலிய மூடர்க்கு நல்லன் அல்லனும், நெஞ்சில் கரவு இல்லாதார்க்குக் கரவாது வெளிநின்று அருள்பவனும், பூணாக அணிகின்ற நாகமே நாணாகவும், மலையே வில்லாகவும், அக்கினிதேவனும் வாயுதேவனும் கையிற் பொருந்திய அம்பினுடைய ஈர்க்கும் கோலுமாகக் கொண்டு கொடிய தவத்தைச் செய்து வரங்களைப் பெற்ற அசுரர்களுடைய நெடிய புரங்கள் மூன்றையும் நெருப்பில் வீழ்த்தவனும், வயல்கள் நிரம்பிய தென்பரம்பைக் குடியைச் சார்ந்த திருவாலம்பொழிற் சிவபெருமானை நெஞ்சே! இடைவிடாமல் சிந்திப்பாயாக.

திருச்சிவபுரம்

திருச்சிவபுரம்

திருச்சிவபுரம், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரிநாயகர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

வானவன்காண் வானவர்க்கும் மேலா னான்காண்
வடமொழியுந் தென்றமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் ஆனைந்து மாடி னான்காண்
ஐயன்காண் கையிலன லேந்தி யாடுங்
கானவன்காண் கானவனுக் கருள்செய் தான்காண்
கருதுவார் இதயத்துக் கமலத் தூறுந்
தேனவன்காண் சென்றடையாச் செல்வன் றான்காண்
சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன் றானே.
#861

சிவபுரத்து எம் செல்வன் ஆம் சிவபெருமான், வானிடத்து உறைபவனும், தேவர்களுக்கு மேலானவனும், வட மொழியும் இனிய தமிழ் மொழியும் மறைகள் நான்கும் ஆனவனும், ஆன்ஐந்தாம் பஞ்சகவ்வியத்தில் ஆடினவனும், கானவனாகிய கண்ணப்பனுக்கு அருள் செய்தவனும், தன்னைக் கருதுவார் இதயத்திடத்து, தாமரை மலரிடத்து ஊறும் தேன் போன்றவனும், முன்பு இல்லாது, பின்பு காரணத்தாற் சென்றடையும் பெற்றியதன்றி இயல்பாகவே உள்ள செல்வனும் ஆவான்.

திருச்சிவபுரம்

நக்கன்காண் நக்கரவம் அரையி லார்த்த
நாதன்காண் பூதகண மாட ஆடும்
சொக்கன்காண் கொக்கிறகு சூடி னான்காண்
துடியிடையாள் துணைமுலைக்குச் சேர்வதாகும்
பொக்கன்காண் பொக்கணத்த வெண்ணீற்றான்காண்
புவனங்கள் மூன்றினுக்கும் பொருளாய் நின்ற
திக்கன்காண் செக்கரது திகழு மேனிச்
சிவனவன்காண் சிவபுரத் தெஞ்செல்வன் தானே. **#862**

சிவபுரத்து எம் செல்வன் ஆம் சிவபெருமான் உடை இல்லாதவனும், ஒளியுடைய பாம்பினை இடையிற்கட்டிய தலைவனும், பூதகணங்கள் ஆட அவற்றுடன் தானும் ஆடும் அழகனும், கொக்கிறகைச் சூடினவனும், துணை முலைகளை உடைய துடிபோலும்

இடையாளுக்குச் சேரப்படும் இடமாந் தகுதிபெற்ற பொலிவையுடையவனும், சம்புடத்துக்கொண்ட வெள்ளிய திருநீற்றை உடையவனும், புவனங்கள் மூன்றிற்கும் உயிராய் நின்ற புகலிடமானவனும், செவ்வானம் போலத்திகழும் மேனியையுடையவனும் ஆவான்.

<u>திருச்சிவபுரம்</u>

வம்பின்மலர்க் குழலுமையாள் மணவா ளன்காண்
மலரவன்மால் காண்பரிய மைந்தன் தான்காண்
கம்பமதக் கரிபிளிற வுசெய் தோன்காண்
கடல்நஞ்ச முண்டிருண்ட கண்டத் தான்காண்
அம்பர்நகர்ப் பெருங்கோயில் அமர்கின் றான்காண்
அயவந்தி யுள்ளான்காண் ஐயா றன்காண்
செம்பொனெனத் திகழ்கின்ற வுருவத் தான்காண்
சிவனவன்காண் சிவபுரத் தெஞ்செல்வன் தானே. **#863**

சிவபுரத்து எம் செல்வனாம் சிவபெருமான் மணங்கமழும் மலர்களையணிந்த கூந்தலையுடைய உமையம்மையின் கணவனும், நான்முகனும் திருமாலும் காணமுடியாத வலிமையுடைய வனும், அசையுமியல்பினையுடைய மதயானை துன்பமிகுதியால் பிளிற, அதன் தோலை உரித்தவனும், கடலில் தோன்றிய நஞ்சை உண்டதால் இருண்ட கண்டத்தவனும், அம்பர் நகரத்துப் பெருங் கோயிலில் விரும்பி உறைபவனும், அயவந்தித்திருக்கோயிலில் உள்ளவனும், ஐயாறனும், செம்பொன்போல் திகழும் திருவுருவத் தவனும், ஆவான்.

<u>திருச்சிவபுரம்</u>

துறந்தானை அறம்புரியாத் துரிசர் தம்மைத்
தோத்திரங்கள் பலசொல்லி வானோ ரேத்த
நிறைந்தானை நீர்நிலந்தீ வெளிகாற் றாகி
நிற்பனவும் நடப்பனவு மாயி னானை
மறந்தானைத் தன்னினையா வஞ்சர் தம்மை
அஞ்செழுத்தும் வாய்நவில வல்லோர்க் கென்றுஞ்
சிறந்தானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே. **#864**

அறத்தை விரும்பாத குற்றமுடையவர்களைக் கைவிட்டவனாய், தேவர்கள் பலவாகத் துதித்துப்புகழுமாறு, எல்லா முதன்மைகளாலும் நிறைந்தவனாய், ஐம்பூதமும், அவற்றின் காரியமாகிய சராசரமும் ஆகியவனாய், தன்னைத் தியானிக்காத வஞ்சர்களை மறந்து திருவைந்தெழுத்தை ஓதுபவர்களுக்கு எக் காலத்திலும் சிறந்து

உதவுபவனாய், திருநாகேச்சரத்து உறையும் பெருமானைச் சேராதார் நன்னெறிக் கண் சேராதாரே.

திருச்சிவபுரம்

தூயவன்காண் நீறு துதைந்த மேனி
துளங்கும் பளிங்கனைய சோதி யான்காண்
தீயவன்காண் தீயவுணர் புரஞ்செற் றான்காண்
சிறுமான்கொள் செங்கையெம் பெருமான்தான் காண்
ஆயவன்காண் ஆரூரி லம்மான் தான்காண்
அடியார்கட் காரமுத மாயி னான்காண்
சேயவன்காண் சேமநெறி யாயி னான்காண்
சிவனவன்காண் சிவபுரத் தெஞ்செல்வன் தானே. **#865**

சிவபுரத்தெம் செல்வனாம் சிவபெருமான், தூயவனும், ஒளி விளங்கும் பளிங்கு போன்று, திருநீறு செறிந்த மேனிச் சோதியனும், தீயாய்த் திகழ்பவனும், கொடிய அசுரருடைய புரங்களை அழித்தவனும், சிறுமானைச் செங்கையிலேந்திய எம் பெருமானும், தாய் போன்றவனும், ஆரூரில் அம்மானாய்த் திகழ்பவனும், அடியவர்க்கு ஆரமுதம் ஆனவனும், மற்றையர்க்குத் தொலைவில் உள்ளவனும், பாதுகாவலான நெறியினனும் ஆவான்.

திருச்சிவபுரம்

பாரவன்காண் பாரதனிற் பயிரா னான்காண்
பயிர்வளர்க்குந் துளியவன்காண் துளியில் நின்ற
நீரவன்காண் நீர்சடைமேல் நிகழ்வித் தான்காண்
நிலவேந்தர் பரிசாக நினைவுற் றோங்கும்
பேரவன்காண் பிறையெயிற்று வெள்ளைப் பன்றிப்
பிரியாது பலநாளும் வழிபட் டேத்தும்
சீரவன்காண் சீருடைய தேவர்க் கெல்லாஞ்
சிவனவன்காண் சிவபுரத் தெஞ்செல்வன் தானே. **#866**

சிவபுரத்தெம் செல்வனாம் சிவபெருமான், விளைநிலமானவனும், விளைநிலத்தில் பயிரானவனும், பயிரை வளர்க்கும் மழையானவனும், அம்மழைத்துளியில் நின்ற நீரானவனும், தன் சடைமேல் நீர்நிற்கச் செய்தவனும், நிலவேந்தர் தம் ஆட்சியால் தாம் பெறும் பரிசாகத் தம் மனத்தில் எஞ்ஞான்றும் நினைக்குமாறு ஓங்கும் புகழானவனும், பிறை போன்ற விளைந்த பல்லினை உடைய வெள்ளைப் பன்றியாகிய திருமால் இந்நகரின் நீங்காது பலநாளும் வழிபட்டு வணங்கும் புகழினனானவனும், சிறப்புடைய தேவர் எல்லாருக்கும் இன்பக் காரணன் ஆனவனும் ஆவான்.

திருச்சிவபுரம்

வெய்யவன்காண் வெய்யகன லேந்தி னான்காண்
வியன்கெடில வீரட்டம் மேவி னான்காண்
மெய்யவன்காண் பொய்யர்மனம் விரவா தான்காண்
வீணையோ டிசைந்துமிகு பாடல் மிக்க
கையவன்காண் கையில்மழு வேந்தி னான்காண்
காமனங்கம் பொடிவிழித்த கண்ணி னான்காண்
செய்யவன்காண் செய்யவளை மாலுக் கீந்த
சிவனவன்காண் சிவபுரத் தெஞ்செல்வன் தானே. **#867**

சிவபுரத்தெம் செல்வனாம் சிவபெருமான், கொடியவர்க்குக் கொடியவனும், வெப்பமிகு கனலை ஏந்தியவனும், பரந்த கெடிலநதிக்கரை மீதுள்ள அதிகை வீரட்டானத்து அமர்ந்தவனும், மெய்ப்பொருளினனும், பொய்யர் மனத்துட் புகாதவனும், இனிமைமிகும் பாடல் வீணையோடு இயைந்து இனிமை மேலும் மிகுதற்குக் காரணமான விரலினனும், கையில் மழுவாயுதத்தை ஏந்தியவனும், காமனது உடல் எரிந்து சாம்பல் ஆக விழித்த கண்ணினனும், செம்மை நிறத்தவனும், திருமகளைத் திருமாலுக்கு ஈந்தவனும் ஆவான்.

திருச்சிவபுரம்

கலையாரு நூலங்க மாயி னான்காண்
கலைபயிலுங் கருத்தன்காண் திருத்த மாகி
மலையாகி மறிகடலேழ் சூழ்ந்து நின்ற
மண்ணாகி விண்ணாகி நின்றான் தான்காண்
தலையாய மலையெடுத்த தகவி லோனைத்
தகர்ந்துவிழ வொருவிரலாற் சாதித் தாண்ட
சிலையாரும் மடமகளோர் கூறன் தான்காண்
சிவனவன்காண் சிவபுரத் தெஞ்செல்வன் தானே. **#868**

சிவபுரத்தெம் செல்வனாம் சிவபெருமான், கலைகள் எல்லாம் பொருந்திய வேதநூலும் அங்கங்களும் ஆனவனும், கலைகளிற் பொருந்திய கருத்துக்களாய் உள்ளவனும், தீர்த்த மாயும், மலையாயும், அலைகள் மடங்கி வீழ் கடல்கள் ஏழும் சூழ்ந்து நின்ற நிலவுலகமாயும், விண்ணாயும், நின்றவனும், சிறந்த கயிலாய மலையை எடுத்த பண்புகெட்ட இராவணன் வலியிழந்து விடுமாறு ஒரு விரலால் முடித்தவனும், மலையில் தோன்றி வளர்ந்த மட மகளாம் பார்வதியைத் தன் கூறாகக் கொண்டு ஆண்டவனும் ஆவான்.

திருவோமாம்புலியூர்

திருஓமமாம்புலியூர்

திருவோமாம்புலியூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : துயர்தீர்த்தசெல்வர்.
தேவியார் : பூங்கொடியம்மை.

ஆராரும் மூவிலைவேல் அங்கை யானை
அலைகடல்நஞ் சயின்றானை அமர ரேத்தும்
ஏராரும் மதிபொதியுஞ் சடையி னானை
எழுபிறப்பும் எனையாளா வுடையான் தன்னை
ஊராரும் படநாகம் ஆட்டு வானை
உயர்புகழ்சேர் தரும்ஓமாம் புலியூர் மன்னுஞ்
சீராரும் வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. **#869**

கூர்மைபொருந்திய மூவிலை வேலை அங்கையிடத்துக் கொண்டவனும், அலையையுடைய கடலில் தோன்றிய நஞ்சினை உண்டவனும், தேவர்கள் புகழும் அழகு நிறைந்த மதியைத் தன்னுட்கொண்ட சடையனும், இனி எனக்கு எழ இருக்கும் பிறப்புக்களிலும் என்னை அடிமையாக உடையவனும், ஊரும் இயல்பினதாகிய படநாகத்தை ஆட்டுபவனும் ஆகி உயர்புகழ்சேரும் ஓமாம் புலியூரிடத்தே நிலைத்து நிற்கும் சிறப்பினை உடைய வடதளியில் விளங்கும் எம் செல்வனாகிய சிவபெருமானை அடையாது நான் மயங்கி நாள் பல வீண் போக்கினேன்.

திருஓமமாம்புலியூர்

ஆதியான் அரிஅயனென் றறிய வொண்ணா
அமரர்தொழுங் கழலானை யமலன் தன்னைச்
சோதிமதி கலைதொலையத் தக்கன் எச்சன்
சுடர்இரவி அயிலெயிறு தொலைவித் தானை
ஓதிமிக அந்தணர்கள் எரிமூன் றோம்பும்
உயர்புகழார் தரும்ஓமாம் புலியூர் மன்னும்
தீதில்திரு வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. **#870**

தன்னின்வேறு பிரித்து அரி என்றும் அயனென்றும் அறிய ஒண்ணாத ஆதியானவனும், தேவர்கள் தொழும் கழலினனும், இயல்பாகவே பாசமில்லாதவனும், ஒளியுமிழும் சந்திரனுடைய கலைகளைத்

தொலையச் செய்தவனும், தக்கனையும் எச்சனையும் தக்கவாறு தண்டித்தவனும், ஒளிவீசும் இரவியுடைய கூரிய பற்களைத் தகர்த்தவனும் ஆகி, அந்தணர்கள் வேதங்களை மிக ஓதி மூன்று எரிகளையும் முறையே ஓம்புதலினால் உயர்ந்த புகழைப் பொருந்தும் ஓமாம்புலியூரில் திகழும் தீதில்லாத வடதளியில் மன்னும் எம் செல்வனாகிய சிவபெருமானை அடையாது நான் மயங்கி நாள்பல வீண் போக்கினேன்.

திருஓமமாம்புலியூர்

வருமிக்க மதயானை யுரித்தான் தன்னை
வானவர்கோன் தோளனைத்தும் மடிவித் தானைத்
தருமிக்க குழலுமையாள் பாகன் தன்னைச்
சங்கரன்எம் பெருமானைத் தரணி தன்மேல்
உருமிக்க மணிமாடம் நிலாவு வீதி
உத்தமர்வாழ் தரும்ஓமாம் புலியூர் மன்னும்
திருமிக்க வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. **#871**

எதிர்த்துவரும் மதமிக்க யானையின் தோலை உரித்தவனும், தக்கயாகத்தில் இந்திரனுடைய தோள்களை முற்றிலும் துணித்தவனும், நறுமணத்தைத்தரும் செறிந்த குழல் உமையாளின் பாகனும், சங்கரனும், எம்பெருமானும் ஆகி, பூமியின்மேல் ஒளிமிக்க மணிகளானியன்ற மாடங்கள் நிலவுகின்ற வீதிகளை உடையதும், மேலோர்கள் வாழ்வதும் ஆகிய ஓமாம்புலியூரில் அழகுமிக்க வடதளியில் மன்னும் எம்செல்வனாகிய சிவபெருமானை அடையாது நான் மயங்கி நாள் பல வீண் போக்கினேன்.

திருஓமமாம்புலியூர்

அன்றினவர் புரமூன்றும் பொடியாய் வேவ
அழல்விழித்த கண்ணானை அமரர் கோனை
வென்றிமிகு காலனுயிர் பொன்றி வீழ
விளங்குதிரு வடியெடுத்த விகிர்தன் தன்னை
ஒன்றியசீர் இருபிறப்பர் முத்தீ யோம்பும்
உயர்புகழ்நான் மறைஓமாம் புலியூர் நாளும்
தென்றல்மலி வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. **#872**

பகைத்தவர் புரமூன்றும் வெந்து பொடியாமாறு அழல் உண்டாக விழித்த கண்ணினனும், தேவர்கட்குத் தலைவனும், வெற்றியால் மிக்கு விளங்கிய காலன் உயிரிழந்து விழ விளக்கம் மிக்க தன் திருவடியால் உதைத்த

விகிர்தனும் ஆகி, புகழ்பொருந்திய அந்தணாளர் நாளும் முத்தீயையும் ஓம்புதலினால் வரும் உயர் புகழையும் நான்மறை முழக்கத்தையும் உடைய ஓமாம்புலியூரில் தென்றற்காற்று மிக்குத் தவழும் வடதளிவாழ் எம் செல்வனாகிய சிவபெருமானை அடையாது நான் மயங்கி நாள் பல வீண் போக்கினேன்.

திருஓமமாம்புலியூர்

பாங்குடைய எழில்அங்கி யருச்சனைமுன் விரும்பப்
பரிந்தவனுக் கருள்செய்த பரமன் தன்னைப்
பாங்கிலா நரகதனைத் தொண்ட ரானார்
பாராத வகைபண்ண வல்லான் தன்னை
ஓங்குமதில் புடைதழுவும் எழில்ஓமாம் புலியூர்
உயர்புகழந் தணரேத்த வுலகர்க் கென்றும்
தீங்கில்திரு வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. **#873**

முன்செய்த நன்மையுடையனாகிய அழகிய அக்கினிதேவன் அருச்சனை செய்ய விரும்ப அவன் மேல் இரக்கங் கொண்டு அவன் அதனை இயற்ற அருள் செய்த பரமனும், தன் தொண்டரானார், தீங்குடைய நரகினைப் பாராதவாறு பண்ண வல்லவனும் ஆகி, நாற்புறமும் உயர்ந்தமதில் தழுவி நிற்கும் அழகுடைய ஓமாம்புலியூரில் உயர்ந்த புகழினையுடைய அந்தணர்கள் புகழுமாறு பூசையும் விழவும் செவ்வனே நடைபெறுவதால் உலகோர்க்கு என்றும் தீங்கின்றி நிலவும் அழகிய வடதளிவாழ் எம்செல்வனாகிய சிவபெருமானை அடையாது நான் மயங்கி நாள் பல வீண் போக்கினேன்.

திருஓமமாம்புலியூர்

அருந்தவத்தோர் தொழுதேத்தும் அம்மான் தன்னை
ஆராத இன்னமுதை அடியார் தம்மேல்
வருந்துயரந் தவிர்ப்பானை உமையாள் நங்கை
மணவாள நம்பியைஎன் மருந்து தன்னைப்
பொருந்துபுனல் தழுவுவயல் நிலவு துங்கப்
பொழில்கெழுவு தரும்ஓமாம் புலியூர் நாளும்
திருந்துதிரு வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. **#874**

அரிய தவமுடையோர் வணங்க வாழ்த்தும் தலைவனும், தெவிட்டாத இன்னமுதன்னவனும், அடியார்க்கு வரும் துயரங்களை விலக்குபவனும், நங்கை உமையாளின் கணவனாகிய நம்பியும், எனக்கு அமுதும் ஆகி, பயிர் வளர்ச்சிக்குப் பொருத்தமான புனலால் தழுவப்படும் வயலும்,

உயர்ச்சி நிலவும் பொழிலும் பொருந்தி விளங்கும் ஓமாம்புலியூரில் நாளும் நடைபெறுவன திருத்தமுற அமையும் அழகிய வட தளி வாழ் எம் செல்வனாகிய சிவபெருமானை அடையாது நான் மயங்கி நாள் பல வீண் போக்கினேன்.

திருஓமமாம்புலியூர்

மலையானை வருமலையொன் றுரிசெய் தானை
மறையானை மறையாலும் அறிய வொண்ணாக்
கலையானைக் கலையாருங் கையி னானைக்
கடிவானை அடியார்கள் துயர மெல்லாம்
உலையாத அந்தணர்கள் வாழும் ஓமாம்
புலியூர்எம் உத்தமனைப் புரம்மூன் றெய்த
சிலையானை வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. **#875**

கயிலை மலையவனும், யானை ஒன்றின் தோலை உரித்தவனும், வேதத்தில் உள்ளவனும், அவ்வேதத்தாலும் அறியப்படாத தன்மையனும், மான் கன்று பொருந்திய திருக்கரத்தினனும், அடியார்களுடைய துயரங்களை நீக்குபவனும், எம்மால் வணங்கப்படும் உத்தமனும், திரிபுரங்களை எரித்த வில்லினனும் ஆகி ஒழுக்கத்தில் தளராத அந்தணர்கள் வாழும் ஓமாம்புலியூரில் வடதளி வாழ் எம் செல்வனாகிய சிவபெருமானை அடையாது நான் மயங்கி நாள் பல வீண் போக்கினேன்.

திருஓமமாம்புலியூர்

சேர்ந்தோடு மணிக்கங்கை சூடி னானைச்
செழுமதியும் படஅரவும் உடன்வைத் தானைச்
சார்ந்தோர்கட் கினியானைத் தன்னொப் பில்லாத்
தழலுருவைத் தலைமகனைத் தகைநால் வேதம்
ஓர்ந்தோதிப் பயில்வார்வாழ் தருமோமாம் புலியூர்
உள்ளானைக் கள்ளாத அடியார் நெஞ்சிற்
சேர்ந்தானை வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. **#876**

மணிகளைக் கொழித்து ஓடும் கங்கையைச் சூடியவனும், அழகிய மதியையும், படநாகத்தையும் உடன் தங்குமாறு வைத்தவனும், அடியடைந்தார்க்கு இனியனும், தன்னொப்பார் பிறரில்லாத தழல் நிறத்தவனும், எல்லார்க்கும் தலைவனும், பெருமை மிக்க நால் வேதங்களையும் ஓதி ஆராய்ந்து அவற்றிலேயே பழகுவார் வாழும் ஓமாம்புலியூர் உள்ளவனும், அடியாருடைய களவில்லா நெஞ்சில்

சேர்ந்தவனும் ஆகி வடதளிவாழ் எம்செல்வனாகிய சிவபெருமானை அடையாது நான் மயங்கி நாள் பல வீண் போக்கினேன்.

திருஓமமாம்புலியூர்

வார்கெழுவு முலையுமையாள் வெருவ அன்று
மலையெடுத்த வாளரக்கன் தோளுந் தாளும்
ஏர்கெழுவு சிரம்பத்தும் இறுத்து மீண்டே
இன்னிசைகேட்டிருந்தானை இமையோர் கோனைப்
பார்கெழுவு புகழ்மறையோர் பயிலும் மாடப்
பைம்பொழில்சேர் தரும்ஓமாம் புலியூர் மன்னும்
சீர்கெழுவு வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. **#877**

கச்சணிந்த தனத்தினள் ஆகிய உமையாள் அஞ்சுமாறு அன்று கயிலை மலையைப் பெயர்த்த கொடிய அரக்கனுடைய இருபது தோள்களையும் இருதாள்களையும் அழகிய பத்துத் தலைகளையும் நெரித்துப் பின் அச்சினத்தினின்றும் மீண்டு அவனது இன்னிசையைக் கேட்டு உவந்தவனும், தேவர்களின் தலைவனும் ஆகி, புவிமுழுதும் பரவும் புகழினையுடைய மறையோர் மிக்கு வாழ்கின்றதும் மாடங்கள் நிறைந்ததும், பசியபொழில்கள் சூழ்ந்ததும் ஆகிய ஓமாம்புலியூரில், சிறப்புமிக்க வடதளியில் மன்னும் எம் செல்வனாகிய சிவபெருமானை அடையாது நான் மயங்கி நாள் பல வீண்போக்கினேன்.

திருவின்னம்பர்

திருஇன்னம்பர்

திருவின்னம்பர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : எழுத்தறிந்தவீசுவரர்.
தேவியார் : கொந்தார்பூங்குழலம்மை.

அல்லிமலர் நாற்றத் துள்ளார் போலும்
அன்புடையார் சிந்தை அகலார் போலுஞ்
சொல்லின் அருமறைகள் தாமே போலுந்
தூநெறிக்கு வழிகாட்டுந் தொழிலார் போலும்
வில்லிற் புரமூன் றெரித்தார் போலும்
வீங்கிருளும் நல்வெளியு மானார் போலும்
எல்லி நடமாட வல்லார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. **#878**

இன்னம்பர்த் தலத்துத் தான்தோன்றி யீசனாராகிய சிவபெருமானாரே அக இதழ்களையுடைய மலர்களின் நறுமணத்துள் நிலவி இன்பந்தருபவரும், தம்மாட்டு அன்புடையார் சிந்தையை விட்டு அகலாதவரும், தாமே சொற்களையுடைய அரிய வேதங்கள் ஆனவரும், வீட்டுநெறிக்கு வழியாகும் மெய்ஞ்ஞானத்தை உணர்த்தும் தொழிலினரும், வில்லால் புரமூன்றையும் எரித்தவரும், மிக்க இருளும் மிக்க ஒளியும் ஆனவரும், இரவில் கூத்து ஆட வல்லவரும் ஆவார்.

திருஇன்னம்பர்

கோழிக் கொடியோன்தன் தாதை போலும்
கொம்பனாள் பாகங் குளிர்ந்தார் போலும்
ஊழி முதல்வரும் தாமே போலும்
உள்குவா ருள்ளத்தி னுள்ளார் போலும்
ஆழித்தேர் வித்தகருந் தாமே போலும்
அடைந்தவர்கட் கன்பராய் நின்றார் போலும்
ஏழு பிறவிக்குந் தாமே போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. **#879**

இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனாராகிய சிவபெருமானாரே கோழிக்கொடியோனாகிய முருகனுக்குத் தந்தையாரும், பூங்கொம்பு போன்ற உமாதேவியை உடலின் ஒரு பாகமாகக் கொண்டு மகிழ்ந்தவரும், ஊழியின் நிகழ்ச்சிகளுக்குத் தலைவரும், தம்மை நினைப்பவர் உள்ளத்தில் தாம் நீங்காமல் உள்ளவரும், சூரிய

சந்திரர்களாகிய சக்கரங்களையுடைய தேரினை ஊர வல்லவரும்,
தம்மை அடைந்தவரிடத்து அன்புடையவரும், எழுவகைப்
பிறவிகளுக்கும் தாமே காரணரும் ஆவார்.

திருஇன்னம்பர்

தொண்டர்கள் தம்தகவி னுள்ளார் போலும்
தூநெறிக்குந் தூநெறியாய் நின்றார் போலும்
பண்டிருவர் காணாப் படியார் போலும்
பத்தர்கள் தம்சித்தத் திருந்தார் போலும்
கண்டம் இறையே கறுத்தார் போலும்
காமனையுங் காலனையுங் காய்ந்தார் போலும்
இண்டைச் சடைசேர் முடியார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. **#880**
இன்னம்பர்த் தான் தோன்றி ஈசனாராகிய சிவபெருமானாரே,
தொண்டர்களுடைய மெய்யன்பினிடத்துத் திகழ்பவரும், தூய
ஞானநெறிக்குப் பற்றுக்கோடாய் நின்றவரும், பண்டு மாலும் அயனும்
காண இயலாத நிலையினரும், பக்தர்களுடைய சித்தத்தில் இருந்தவரும்,
கண்டம் சிறிது கறுத்தவரும், மன்மதனையும் இயமனையும் வெகுண்டு
ஒறுத்தவரும், முடி மாலையணிந்த சடைமுடியவரும் ஆவார்.

திருஇன்னம்பர்

வானத் திளந்திங்கட் கண்ணி தன்னை
வளர்சடைமேல் வைத்துகந்த மைந்தர் போலும்
ஊனொத்த வேலொன் றுடையார் போலும்
ஒளிநீறு பூசு மொருவர் போலும்
தானத்தின் முப்பொழுதுந் தாமே போலும்
தம்மிற் பிறர்பெரியா ரில்லார் போலும்
ஏனத் தெயிறிலங்கப் பூண்டார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. **#881**
இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனாராகிய சிவபெருமானாரே வானில்
திகழும் பிறைச்சந்திரனாகிய கண்ணியைத் தம் வளரும் சடைமேல்
வைத்து மகிழ்ந்த வலியவரும், ஊன் பொருந்திய சூலம் ஒன்றை
உடையவரும், ஒள்ளிய திருநீற்றைப் பூசும் ஒருவரும், முச்சந்தி
நேரங்களிலும் வழங்கப்படும் அருக்கியம் முதலியவற்றை ஏற்று
அருள்பவரும், தம்மினும் பெரியர் பிறர் இல்லாதவரும், பன்றியினது
கொம்பு மார்பில் விளங்க அணிந்தவரும் ஆவார்.

திருஇன்னம்பர்

சூழுந் துயரம் அறுப்பார் போலும்
தோற்றம் இறுதியாய் நின்றார் போலும்
ஆழுங் கடல்நஞ்சை யுண்டார் போலும்
ஆடலுகந்த அழகர் போலும்
தாழ்வின் மனத்தேனை யாளாக் கொண்டு
தன்மை யளித்த தலைவர் போலும்
ஏழு பிறப்பு மறுப்பார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. **#882**

இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனாராகிய சிவபெருமானாரே, வந்து வளைத்துக்கொள்ளும் துயரங்களை நீக்குபவரும், படைப்பு அழிப்புக்களைச் செய்து நிற்பவரும், ஆழ மிக்க கடலிடத்துத் தோன்றிய நஞ்சை உண்டவரும், கூத்து ஆடுதலை விரும்பும் அழகரும், தாழ்ந்த மனத்தினை உடைய அடியேனையும் அடிமைகொண்டு ஞானமளித்த தலைவரும், ஏழுவகையாகவும் பிறத்தலை அறுத்தெறிபவரும் ஆவார்.

<u>திருஇன்னம்பர்</u>

பாதத் தணையுஞ் சிலம்பர் போலும்
பாரூர் விடையொன் றுடையார் போலும்
பூதப் படையாள் புனிதர் போலும்
பூம்புகலூர் மேய புராணர் போலும்
வேதப் பொருளாய் விளைவார் போலும்
வேடம் பரவித் திரியுந் தொண்டர்
ஏதப் படாவண்ணம் நின்றார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. **#883**

இன்னம்பர்த் தான் தோன்றி ஈசனாராகிய சிவபெருமானாரே, திருவடிகளில் கட்டப்பட்ட சிலம்பினரும், பூமிமேல் நடக்கும் ஓர் இடபத்தை ஊர்தியாக உடையவரும், பூதப்படையைச் செயற்படுத்தும் புனிதரும், புகலூரைப் பொருந்திய புராணரும், வேதங்களின் பொருளாய் விளங்குபவரும், திருநீறு, கண்டிகை, சடை, முதலியவை எங்கே காணப்படினும், அங்கேயெல்லாம் தம்மை ஏத்தி இறைஞ்சி நிற்கும் தொண்டர் துன்பப்படா வண்ணம் காத்து நின்றாரும் ஆவார்.

<u>திருஇன்னம்பர்</u>

பல்லார் தலையோட்டில் ஊணார் போலும்
பத்தர்கள்தம் சித்தத் திருந்தார் போலும்
கல்லாதார் காட்சிக் கரியார் போலும்
கற்றவர்கள் ஏதங் களைவார் போலும்
பொல்லாத பூதப் படையார் போலும்

பொருகடலும் ஏழ்மலையுந் தாமே போலும்
எல்லாரு மேத்தத் தகுவார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. **#884**

இன்னம்பர்த் தான் தோன்றியீசனாராகிய சிவபெருமானாரே, பற்கள் நிறைந்த தலையோட்டில் உணவு ஏற்று உண்பவரும், பத்தர்களுடைய சித்தத்தில் இருந்தவரும், மெய்ந்நூல்களைக் கல்லாதவரால் காணப்படாதவரும், அவற்றைக் கற்பவரின் துன்பங்களைக் களைபவரும், கொடுமைமிகும் பூதப்படையினரும், அலைமோதுங் கடல் ஏழும் குலமலை ஏழும் தாமே ஆனவரும், எல்லாரும் ஏத்துதற்குக் காரணமான அருளினரும் ஆவார்.

<u>திருஇன்னம்பர்</u>

மட்டு மலியுஞ் சடையார் போலும்
மாதையோர் பாக முடையார் போலும்
கட்டம் பிணிகள் தவிர்ப்பார் போலும்
காலன்தன் வாழ்நாள் கழிப்பார் போலும்
நட்டம் பயின்றாடும் நம்பர் போலும்
ஞாலமெரி நீர்வெளிகா லானார் போலும்
எட்டுத் திசைகளுந் தாமே போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. **#885**

இன்னம்பர்த் தான்தோன்றியீசனாராகிய சிவபெருமானாரே, பூக்களின் தேன்மிகும் சடையினரும், உமையை ஒரு பாகத்திலுடையவரும், துன்பம், பிணிகளைத் தவிர்ப்பவரும், இயமன் உயிருக்கு இறுதி கண்டவரும், எப்பொழுதும் கூத்தாடுந் தலைவரும், நிலம், நீர், தீ, வளி, ஆகாசம் ஆம் ஐம்பூதங்கள் ஆனவரும், எட்டுத் திசைகளும் தாமே ஆனவரும் ஆவார்.

<u>திருஇன்னம்பர்</u>

கருவுற்ற காலத்தே யென்னை ஆண்டு
கழற்போது தந்தளித்த கள்வர் போலும்
செருவிற் புரமூன்றும் அட்டார் போலும்
தேவர்க்குந் தேவராஞ் செல்வர் போலும்
மருவிப் பிரியாத மைந்தர் போலும்
மலரடிகள் நாடி வணங்க லுற்ற
இருவர்க் கொருவராய் நின்றார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. **#886**

இன்னம்பர்த் தான்தோன்றியீசனாராகிய சிவபெருமானாரே நான் கருவாய்ப் பொருந்திய காலத்திலேயே மெய்யுணர்வைப் பெறும்

அவாவை என்பால் உண்டாக்கிப் பின் திருவடித் தாமரைகளைத் தந்து காத்த கள்வரும், போரில் பகைவர்புரம் மூன்றையும் அழித்தவரும், தேவர்க்கும் தேவராம் செல்வரும், கூடியபின் பிரியாத மைந்தரும், தம்முடைய மலரடிகளை விரும்பி வணங்கிய பிரமனுக்கும் திருமாலுக்கும் ஒப்பற்ற தலைவராய் நின்றவரும் ஆவார்.

திருஇன்னம்பர்

அலங்கற் சடைதாழ ஐய மேற்று
அரவம் அரையார்க்க வல்லார் போலும்
வலங்கை மழுவொன் றுடையார் போலும்
வான்தக்கன் வேள்வி சிதைத்தார் போலும்
விலங்கல் எடுத்துகந்த வெற்றி யானை
விறலழித்து மெய்ந்நரம்பால் கீதங் கேட்டன்
றிலங்கு சுடர்வாள் கொடுத்தார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. **#887**

இன்னம்பர்த் தான் தோன்றியீசனாராகிய சிவபெருமானார் கொன்றை மாலையணிந்த சடை தாழப் பிச்சை ஏற்க வல்லவரும், பாம்பினை இடையில் கட்டவல்லவரும், வலக்கையில் மழுப்படை ஒன்றை உடையவரும், தருக்கினால் உயர்ந்த தக்கனுடைய வேள்வியைச் சிதைத்தவரும், கயிலை மலையை எடுத்த அளவில் தனது வெற்றி பற்றி மகிழ்ந்த இராவணனது அவ்வெற்றியை அழித்துப் பின் அவன் தன் உடல் நரம்பால் எழுப்பிய இசையைக் கேட்டு அவற்கு ஒளிவாளைக் கொடுத்தவரும் ஆவார்.

திருக்கஞ்சனூர்

திருக்கஞ்சனூர்

திருக்கஞ்சனூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அக்கினீசுவரர்.
தேவியார் : கற்பகநாயகியம்மை.

மூவிலைநற் சூலம்வலன் ஏந்தி னானை
மூன்றுசுடர்க் கண்ணானை மூர்த்தி தன்னை
நாவலனை நரைவிடையொன் றேறு வானை
நால்வேதம் ஆறங்க மாயி னானை
ஆவினிலைந் துகந்தானை அமரர் கோவை
அயன்திருமா லானானை அனலோன் போற்றுங்
காவலனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. **#888**

மூவிலை கொண்ட நல்ல சூலத்தை வலக்கையில் ஏந்தினவனும், சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்களாகிய கண்ணினனும் அழகிய தோற்றத்தினனும், நாவலனும், வெள்ளிய இடபம் ஒன்றை ஊர்பவனும், வேதம் நான்கும் அங்கம் ஆறும் ஆயினவனும், பசு தரும் பஞ்சகவ்வியத்தை விரும்பியவனும், தேவர்களுக்குத் தலைவனும், பிரமனும் திருமாலும் ஆனவனும், அக்கினியால் போற்றப்படும் காவலனும், கஞ்சனூர் ஆண்ட கோவும் ஆகிய கற்பகத்தைக் கண்ணாரக் கண்டு மேல்வரும் பிறப்பை நீங்கினேன்.

திருக்கஞ்சனூர்

தலையேந்து கையானை யென்பார்த் தானைச்
சவந்தாங்கு தோளானைச் சாம்ப லானைக்
குலையேறு நறுங்கொன்றை முடிமேல் வைத்துக்
கோணாக மசைத்தானைக் குலமாங் கைலை
மலையானை மற்றொப்பா ரில்லா தானை
மதிகதிரும் வானவரும் மாலும் போற்றுங்
கலையானைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. **#889**

பிரமகபாலத்தை ஏந்திய கையினனும், எலும்பை மாலையாகக் கோத்து அணிந்தவனும், பிரமவிட்டுணுக்களுடைய எலும்புக்கூடுகளைத் தாங்கும் தோளினனும், வெண்ணீற்றுப் பூச்சினனும், கொத்தாய்ப் பொருந்திய நறிய கொன்றை மலர்களை முடிமேல் கொண்டவனும்,

கொடுமை வல்ல நாகத்தை உடை மேல் கட்டியவனும், மேன்மை மிக்க கயிலை மலையவனும், தனக்குவமை யில்லாதவனும், சந்திரனும், சூரியனும் தேவர்களும் திருமாலும் போற்றும் உருவத்திருமேனி உடையவனும், கஞ்சனூரை ஆண்ட கோவும் ஆகிய கற்பகத்தைக் கண்ணாரக் கண்டு மேல் வரும்பிறப்பை நீங்கினேன்.

திருக்கஞ்சனூர்

தொண்டர்குழாம் தொழுதேத்த அருள்செய் வானைச்
சுடர்மழுவாட் படையானைச் சுழிவான் கங்கைத்
தெண்டிரைகள் பொருதிழிசெஞ் சடையி னானைச்
செக்கர்வா னொளியானைச் சேரா தெண்ணிப்
பண்டமரர் கொண்டுகந்த வேள்வி யெல்லாம்
பாழ்படுத்துத் தலையறுத்துப் பற்கண் கொண்ட
கண்டகனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. **#890**

தொண்டர்கூட்டமாய்த் திரண்டு தொழுது புகழ அவர்க்கு அருள்செய்பவனும், ஒளிரும் மழுவாயுதத்தை உடையவனும், சுழியையுடையதும், தெளிந்த திரைகளால் மோதி இழிவதும் ஆகிய ஆகாய கங்கையைத் தாங்கிய சடையினனும், செவ்வானம் போன்ற ஒளியினனும், தன்னை அடையாமல் பண்டு அமரர்கள் கூடி ஆராய்ந்து மேற்கொண்டு விரும்பிச் செய்த தக்கனுடைய வேள்வி முழுதும் பாழ் செய்து தக்கனையும் எச்சனையும் தலையறுத்துச் சூரியனைப் பல்தகர்த்துப் பகனைக் கண் பறித்துக் கொண்ட கொடியவனும், கஞ்சனூரை ஆண்டகோவும் ஆகிய கற்பகத்தைக் கண்ணாரக் கண்டு மேல் வரும் பிறப்பை நீங்கினேன்.

திருக்கஞ்சனூர்

விண்ணவனை மேருவில்லா வுடையான தன்னை
மெய்யாகிப் பொய்யாகி விதியா னானைப்
பெண்ணவனை ஆணவனைப் பித்தன்தன்னைப்
பிணமிடுகா டுடையானைப் பெருந்தக் கோனை
எண்ணவனை எண்டிசையுங் கீழும் மேலும்
இருவிசும்பும் இருநிலமு மாகித் தோன்றுங்
கண்ணவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. **#891**

சிவலோகனாய், மேருமலையை வில்லாக உடையவனாய், ஞானியர்க்கு உண்மைப்பொருளாகி, உணர்வில்லார்க்கு இல்பொருள் ஆகி அறநெறியும் அருள்நெறியும் ஆனவனும், பெண் ஆண் ஆனவனும்,

பித்தனும், பிணத்தைப் புதைக்கும் இடுகாட்டை இடமாகக் கொண்டவனும், மேலான தகுதியினனும், எண்ணமானவனும், எட்டுத் திசைகளும் கீழும் மேலும் பெரிய ஆகாயமும் பரந்த நிலமும் ஆகித் தோன்றுபவனும், கண்போற் சிறந்தவனும், கஞ்சனூரை ஆண்ட கோவும் ஆகிய கற்பகத்தைக் கண்ணாரக் கண்டு மேல் வரும் பிறப்பை நீங்கினேன்.

திருக்கஞ்சனூர்

உருத்திரனை உமாபதியை உலகா னானை
உத்தமனை நித்திலத்தை ஒருவன் தன்னைப்
பருப்பதத்தைப் பஞ்சவடி மார்பி னானைப்
பகலிரவாய் நீர்வெளியாய்ப் பரந்து நின்ற
நெருப்பதனை நித்திலத்தின் தொத்தொப் பானை
நீறணிந்த மேனியராய் நினைவார் சிந்தைக்
கருத்தவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. **#892**

உருத்திரனும், உமாபதியும், உலகு ஆள்பவனும், உத்தமனும், நித்திலம் அனையவனும், ஒப்பற்றவனும், மலையாய் விளங்குபவனும், மயிர்க் கயிறாகிய பஞ்சவடிப்பூணூல் திகழ் மார்பினனும், பகலும், இரவும், நீரும், ஆகாயமும், பரவிய நெருப்பும் ஆனவனும், முத்தின்கொத்து ஒக்கத் திகழும் திருநீற்றுக் கீற்றினனும், திருநீற்றைப் பூசிய மேனியை உடையவராய், இடைவிடாது நினைக்கும் அன்பர்களின் மனத்தில் உறைபவனும், கஞ்சனூர் ஆண்ட கோவும் ஆகிய கற்பகத்தைக் கண்ணாரக் கண்டு மேல் வரும் பிறப்பை நீங்கினேன்.

திருக்கஞ்சனூர்

ஏடேறு மலர்க்கொன்றை யரவு தும்பை
இளமதியம் எருக்குவா னிழிந்த கங்கை
சேடெறிந்த சடையானைத் தேவர் கோவைச்
செம்பொன்மால் வரையானைச் சேர்ந்தார் சிந்தைக்
கேடிலியைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கிறிபேசி மடவார்பெய் வளைகள் கொள்ளுங்
காடவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. **#893**

இதழ் செறிந்த கொன்றைமலர், பாம்பு, தும்பைப்பூ, பிறைச்சந்திரன், எருக்க மலர், வானின்றிறங்கிய கங்கை ஆகியவைகளால் அழகு விளங்கிய சடையினனும், தேவர்க்குத் தலைவனும், பெரிய செம்பொன்மலை போன்றவனும், தன்னை அடைந்தார் சிந்தையில்

கேடின்றி இருப்பவனும், கீழ்வேளூரிலிருந்து ஆளும் அரசனும், மடவார்கைகளில் அணிந்துள்ள வளைகளைப் பொய்பேசிக் கவர்ந்து கொள்ளும் அதிசயிக்கத்தக்க திறனுடையவனும், கஞ்சனூர் ஆண்ட கோவும் ஆகிய கற்பகத்தைக் கண்ணாரக் கண்டு மேல் வரும் பிறப்பை நீங்கினேன்.

திருக்கஞ்சனூர்

நாரணனும் நான்முகனும் அறியா தானை
நால்வேதத் துருவானை நம்பி தன்னைப்
பாரிடங்கள் பணிசெய்யப் பலிகொண் டுண்ணும்
பால்வணனைத் தீவணனைப் பகலா னானை
வார்பொதியும் முலையாளோர் கூறன் தன்னை
மானிடங்கை யுடையானை மலிவார் கண்டங்
கார்பொதியுங் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. **#894**

திருமாலும், நான்முகனும், அறியாதவனும், வேதமந்திர உருவினனும், ஆடவருட்சிறந்தவனும், பூதங்கள் தான் ஏவிய பணிகளைச் செய்ய தான் பிச்சை ஏற்று உண்ணும் பால் நிறத்தவனும், தீ நிறத்தவனும், பகல் ஆனவனும், கச்சணிந்த கொங்கை யாளை உடலின் ஒரு கூற்றாகக் கொண்டவனும், மானை இடக்கையில் ஏந்தியவனும், தேவர்கள் மகிழ்ச்சி நிறைவதற்குக் காரணமானவனாய், கழுத்துக் கருநிறத்தால் மூடப்பட்டவனும், கஞ்சனூர் ஆண்ட கோவும் ஆகிய கற்பகத்தைக் கண்ணாரக் கண்டு மேல் வரும் பிறப்பை நீங்கினேன்.

திருக்கஞ்சனூர்

வானவனை வலிவலமும் மறைக்காட் டானை
மதிசூடும் பெருமானை மறையோன் தன்னை
ஏனவனை இமவான்றன் பேதை யோடும்
இனிதிருந்த பெருமானை ஏத்து வார்க்குத்
தேனவனைத் தித்திக்கும் பெருமான் தன்னைத்
தீதிலா மறையோனைத் தேவர் போற்றுங்
கானவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. **#895**

வானிடத்தவனும், வலிவலமும் மறைக்காடும் உறைபவனும், மதிசூடும் பெருமானும், ஆதி அந்தணனும், மற்றை வருணத்தினனும், இமவான் மகள் பார்வதி யோடும் இனிதிருந்து அருள்செய்யும் பெருமானும், தன்னை ஏத்தி வணங்குவார்க்குத் தேன் போன்று தித்திப்பவனும், தீது இல்லாமல் அவர்களைக் காத்தற் பொருட்டுக் காலம்பார்த்துக் கரந்து

நிற்பவனும், தேவராற் போற்றப்படும் வேட்டுவனும் கஞ்சனூராண்ட கோவும் ஆகிய கற்பகத்தைக் கண்ணாரக் கண்டு மேல் வரும் பிறப்பை நீங்கினேன்.

திருக்கஞ்சனூர்

நெருப்புருவத் திருமேனி வெண்ணீற் றானை
நினைப்பார்தம் நெஞ்சானை நிறைவா னானைத்
தருக்கழிய முயலகன்மேல் தாள்வைத் தானைச்சலந்தரனைத்
தடிந்தோனைத் தக்கோர் சிந்தை
விருப்பவனை விதியானை வெண்ணீற் றானை
விளங்கொளியாய் மெய்யாகி மிக்கோர் போற்றுங்
கருத்தவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. **#896**

நெருப்புநிறமுடைய அழகிய திருமேனியில் வெண்ணீற்றை அணிந்தவனும், நினைப்பவர் நெஞ்சில் நிலைத்து நிற்பவனும், எங்கும் நிறைந்தவனும், முயலகன்மேல் காலை ஊன்றி ஆடியவனும், சலந்தரனைப் பிளந்திட்டவனும், ஞானிகள் சிந்தையில் விரும்பி வாழ்பவனும், வேதவிதியானவனும், சிவாகமவிதியாய் விளங்குபவனும், இயல்பாகவே விளங்கும் ஒளியாய், மெய்ப்பொருளாய், மேலோர்கள் போற்றும் கருத்தாய்த் திகழ்பவனும், கஞ்சனூர் ஆண்ட கோவும் ஆகிய கற்பகத்தைக் கண்ணாரக் கண்டு மேல் வரும் பிறப்பை நீங்கினேன்.

திருக்கஞ்சனூர்

மடலாழித் தாமரைஆ யிரத்தி லொன்று
மலர்க்கணிடந் திடுதலுமே மலிவான் கோலச்
சுடராழி நெடுமாலுக் கருள்செய் தானைத்
தும்பியுரி போர்த்தானைத் தோழன் விட்ட
அடலாழித் தேருடைய இலங்கைக் கோனை
அருவரைக்கீழ் அடர்த்தானை அருளார் கருணைக்
கடலானைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. **#897**

இதழுடைய வட்டமான தாமரை மலரில் ஆயிரத்தில் ஒன்றாகத் தன் தாமரை மலர்போலும் கண்ணைப் பெயர்த்து இடுதலும் நிறைந்த பெரிய அழகினையும் ஒளியையும் உடைய சக்கராயுதத்தை நெடு மாலுக்கு அருள் செய்தவனும், யானைத் தோலைப் போர்வையாகக் கொண்டவனும், தன் நண்பன் குபேரன் தோற்றுக் கைவிட்ட வலிய சக்கரத்தையுடைய தேரினைத் தன் உடைமை ஆக்கிக்கொண்ட இலங்கைக்கோனை எடுத்தற்கரிய கயிலை மலைக்கீழ் வைத்து

நெரித்தவனும், பின் அவனுக்கு அருளுதலைப் பொருந்திய கருணைக் கடலானவனும், கஞ்சனூர் ஆண்டகோவும் ஆகிய கற்பகத்தைக் கண்ணாரக்கண்டு, மேல் வரும் பிறப்பை நீங்கினேன்.

திருவெறும்பியூர்

திருஎறும்பியூர்

திருவெறும்பியூர், திருத்தாண்டகம்

பன்னியசெந் தமிழறியேன் கவியேன் மாட்டேன்
எண்ணோடு பண்ணிறைந்த கலைக ளாய
தன்னையுந்தன் திறத்தறியாப் பொறியி லேனைத்
தன்திறமும் அறிவித்து நெறியுங் காட்டி
அன்னையையும் அத்தனையும் போல அன்பாய்
அடைந்தேனைத் தொடர்ந்தென்னை யாளாக் கொண்ட
தென்எறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. **#898**

தொல்லாசிரியர் ஆராய்ந்து சொல்லிய செவ்விதாகிய தமிழினது இலக்கணத்தை அறியேனும், கவிபுனைய மாட்டேனும், எண்ணாயும் திருத்தம்பெற்ற கலைகளாயும் நிற்கும் தன்னையும் தன் கூறுபாடுகளையும் அறிதற்குரிய விதியிலேனுமாகிய எனக்கு அவற்றைக் காட்டினவனும், அடைந்தேனைத் தாய் தந்தையரைப் போல அன்பாய்த் தொடர்ந்து ஆளாகக் கொண்டவனும், அழகிய எறும்பியூர் மலைமேல் மன்னும் மாணிக்கமும் செழுஞ்சுடரும் ஆகிய சிவபெருமானை நான் சென்று அடையப்பெற்றேன்.

திருஎறும்பியூர்

பளிங்கின்நிழ லுட்பதித்த சோதி யானைப்
பசுபதியைப் பாசுபத வேடத் தானை
விளிந்தெழுந்த சலந்தரனை வீட்டி னானை
வேதியனை விண்ணவனை மேவி வையம்
அளந்தவனை நான்முகனை அல்லல் தீர்க்கும்அருமருந்தை ஆமா
றறிந்தென் உள்ளந்
தெளந்தெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்செழுஞ்சுடரைச்
சென்றடையப் பெற்றேன் நானே. **#899**

படிகமணியின் ஒளியுள்பதித்து விளங்கிய மாணிக்க ஒளியினனும், பசுபதியும், பாசுபத வேடத்தவனும், அறை கூவிப் போருக்கு எழுந்த சலந்தரனை அழித்தவனும், வேதியனும், விண்ணவனும், பொருந்தி வையத்தை அளந்த திருமாலும், நான்முகனும் ஆனவனும், துன்பந்துடைக்கும் ஆரமுது ஆனவனும் அவனே ஆமாறு அறிந்தமையால் என் உள்ளம் தெளந்து எறும்பியூர் மலைமேல் மன்னும் மாணிக்கமும் செழுஞ்சுடரும் ஆகும் சிவபெருமானை நான் சென்று

அடையப்பெற்றேன்.

திருஎறும்பியூர்

கருவையென்றன் மனத்திருந்த கருத்தை ஞானக்
கடுஞ்சுடரைப் படிந்துகிடந் தமரர் ஏத்தும்
உருவையண்டத் தொருமுதலை யோத வேலி
யுலகினிறை தொழிலிறுதி நடுவாய் நின்ற
மருவைவென்ற குழல்மடவாள் பாகம் வைத்தமயானத்து மாசிலா மணியை வாசத்
திருவெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்செழுஞ்சுடரைச்
சென்றடையப் பெற்றேன் நானே. **#900**

கருத்திற்குக் கருவானவனும், மனத்தில் நிலைத்த கருத்தானவனும் ஞானப்பெருஞ்சுடர் ஆனவனும், அமரர்கள் நிலத்தில் வீழ்ந்து கிடந்து தோத்திரிக்கும் அழகிய வடிவினனும், உலகத்திற்கு ஒப்பற்ற வித்தானவனும், அலையையுடைய கடலாகிய எல்லையையுடைய உலகில் நிறைந்தவனும், முதல், இடை, இறுதியாகிய தொழில்களை இயற்றுபவனும், மலரின் மணத்தை வென்ற குழலினை உடைய உமையம்மையை உடம்பில் பாகமாக வைத்தவனும், மயானத்து ஆடும் மாசிலாமணியும் திரு எறும்பியூர் மலைமேல் வாசம் செய்யும் மாணிக்கமும் செழுஞ்சுடரும் ஆகிய சிவபெருமானை நான் சென்று அடையப் பெற்றேன்.

திருஎறும்பியூர்

பகழிபொழிந் தடலரக்கர் புரங்கள் மூன்றும்
பாழ்படுத்த பரஞ்சுடரைப் பரிந்து தன்னைப்
புகழுமன்பர்க் கின்பமரும் அமுதைத் தேனைப்
புண்ணியனைப் புவனியது முழுதும் போத
உமிழும்அம் பொற்குன்றத்தை முத்தின் தூணைஉமையவள்தம் பெருமானை இமையோ ரேத்தும்
திகழெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்செழுஞ்சுடரைச்
சென்றடையப் பெற்றேன் நானே. **#901**

அம்புகளைத் தூவி ஆற்றல் மிக்க அரக்கர் களுடைய மூன்று புரங்களையும் பாழ்படுத்த பரஞ்சுடரும், தன்னை விரும்பிப் புகழும் அன்பர்க்கு இன்பத்தை மகிழ்ந்தளிக்கும் அமுதமும், தேனும், புண்ணியனும், புவனிமுழுதும் வெளிப்பட ஒளி உமிழும் அழகிய பொற் குன்றமும், முத்தின் தூணும் உமையவளின் தலைவ னும், எறும்பியூர் மலைமேல் திகழ்வதும் இமையோர்கள் ஏத்துவதும் ஆகிய மாணிக்கமும் செழுஞ்சுடரும் ஆகிய சிவபெருமானை நான் சென்று அடையப்

பெற்றேன்.

திருஎறும்பியூர்

பாடங்க ளூடன்பாடப் பயின்று நட்டம்
பயில்வானை அயில்வாய சூல மேந்தி
நேரிடும்போர் மிகவல்ல நிமலன் தன்னை
நின்மலனை அம்மலர்கொண் டயனும் மாலும்
பாரிடந்தும் மேலுயர்ந்துங் காணா வண்ணம்
பரந்தானை நிமிர்ந்துமுனி கணங்க ளேத்துஞ்
சீரெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. **#902**

பூதங்கள் பலவும் சேர்ந்து பலமுறையும் பாடுதற்கு இயையக் கூத்தாடுபவனும், கூரிய வாயினை உடைய சூலத்தைக் கையிற் கொண்டு எதிர்ப்படும் போரை வெல்லுதல் மிக வல்ல நிமலனும், நின்மலனும், அயன் அன்னமாய் மேலே உயர்ந்து சென்றும் மால் பூமியை அகழ்ந்து சென்றும் காணமுடியாதபடி ஒளியாக நீண்டு எங்கும் பரவினவனும், அழகிய மலர்களைக் கொண்டு முனிகணங் களால் ஏத்தப்பட்டுப் புகழ்மிக்க எறும்பியூர் மலைமேல் நிற்கும் மாணிக்கமும் செஞ்சுடருமாகிய சிவபெருமானை நான் சென்று அடையப் பெற்றேன்.

திருஎறும்பியூர்

கார்முகிலாய்ப் பொழிவானைப் பொழிந்த முன்னீர்
கரப்பானைக் கடியநடை விடையொன் றேறி
ஊர்பலவுந் திரிவானை ஊர தாக
ஒற்றியூ ருடையனாய் முற்றும் ஆண்டு
பேரெழுத்தொன் றுடையானைப் பிரம னோடு
மாலவனும் இந்திரன்மந் திரத்தா லேத்துஞ்
சீரெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. **#903**

கரிய மேகமாய் நீரைப் பொழிபவனும், முன்பு முகிலாய்ப் பொழிந்த நீரைப் பின்பு கதிரவனாய் நின்று சுவற்றுபவனும், விரைந்த நடையுடைய விடை ஒன்றை ஊர்ந்து ஊர்பலவும் திரிபவனும், தனக்கு உரிய ஊரை ஒற்றியாகவே வைத்துக்கொண்டு உலகம் முழுதும் ஆள்பவனும், ஓங்காரமாகிய ஓரெழுத்தையே பெயராக உடையவனும், நான்முகன், திருமால், இந்திரன் ஆகியோரால் மந்திரம் கூறித் துதிக்கப்பட்டுப் புகழ் மிக்க எறும்பியூர் மலைமேல் நிற்கும் மாணிக்கமும் செழுஞ்சுசுடரும் ஆகிய சிவபெருமானை நான் சென்றடையப்பெற்றேன்.

திருஎறும்பியூர்

மாண்டா ரெலும்பணிந்த வாழ்க்கை யானை
மயானத்திற் கூத்தனைவா ளரவோ டென்பு
பூண்டானைப் புறங்காட்டி லாட லானைப்
போகாதென் னுள்புகுந் திடங்கொண் டென்னை
ஆண்டானை அறிவரிய சிந்தை யானை
அசங்கையனை அமரர்கள்தஞ் சங்கை யெல்லாங்
கீண்டானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. **#904**

இறந்தவர்களுடைய எலும்புகளை அணியும் இயல்பினனாய், கடவூர் மயானம் முதலிய இடங்களில் கூத்தாடுபவனாய், ஒளி பொருந்திய பாம்போடு எலும்பை அணிபவனாய், சுடுகாட்டில் ஆடுபவனாய், என் உள்ளத்தில் இடம் பெற்று, அதனை விடுத்துநீங்காது, என்னை அடிமை கொண்டானாய், தன் உள்ளத் திருப்பதனைப் பிறர்அறிய இயலாதவனாய், அச்சம் இல்லாதவனாய்த் தேவர்களின் அச்சத்தைப் போக்கியவனாய்க் கீழ்வேளூரை ஆளும் அரசனாய் உள்ள பெருமானை அடைக்கலமாக அடைந்தவர்கள் கேடிலாரே.

திருஎறும்பியூர்

அறந்தெரியா ஊத்தைவாய் அறிவில் சிந்தை
யாரம்பக் குண்டரோ டயர்த்து நாளும்
மறந்துமரன் திருவடிகள் நினைய மாட்டா
மதியிலியேன் வாழ்வெலாம் வாளா மண்மேற்
பிறந்தநாள் நாளல்ல வாளா ஈசன்
பேர்பிதற்றிச் சீரடிமைத் திறத்து ளன்பு
செறிந்தெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. **#905**

அறத்தைத் தெரியாதவரும், ஊத்தை வாயினரும், அறிவில்லாத சிந்தையினரும் ஆரம்பவாதத்தை உடையவரும் ஆகிய சமணக் குண்டரோடும் கூடி, அரன் திருவடிகளை மறந்து, பழக்கத்தால் என்னை அறியாது அவற்றை நினைத்தலையும் ஒருநாளும் செய்யாது அறிவற்றேன். வாழ்வெல்லாம் பயனில்லாத வாழ்வாய் ஒழியவும், மண்மேற்பிறந்த நாளெல்லாம் நாளல்லவாய் வாளா ஒழியவும் இறுதியிற் சிலகாலம் ஈசன் பேர் பிதற்றிச் சிறப்புமிக்க அடிமைக் கூற்றில் அன்பு செறிந்து எறும்பியூர் மலைமேல் திகழும் மாணிக்கமும், செழுஞ் சுடரும் ஆகிய சிவபெருமானை நான் சென்றடையப் பெற்றேன்.

திருஎறும்பியூர்

அறிவிலங்கு மனத்தானை அறிவார்க் கன்றி
அறியாதார் தந்திறத்தொன் றறியா தானைப்
பொறியிலங்கு வாளரவம் புனைந்து பூண்ட
புண்ணியனைப் பொருதிரைவாய் நஞ்ச முண்ட
குறியிலங்கு மிடற்றானை மடற்றேன் கொன்றைச்சடையானை
மடைதோறுங் கமல மென்பூச்
செறியெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்செழுஞ்சுடரைச்
சென்றடையப் பெற்றேன் நானே. **#906**

அறிவால் விளங்குகின்ற மனத்தானும், அறி வார்க்கு அல்லாமல் அறிவில்லாதாரது ஆற்றலால் சிறிதும் அறியப் படாதவனும், புள்ளிகள் விளங்கும் கொடிய பாம்பினைக் கொண்டு ஒப்பனை செய்து கொள்ளும் புண்ணியனும், அலைகள் மோதும் கடலில் தோன்றிய நஞ்சுண்ட அடையாளம் திகழும் மிடற்றவனும், இதழ்களும் தேனும் உடைய கொன்றைப் பூக்களைக் கொண்டு திகழும் சடையானும், மடைகள் தோறும் மென்மையுடைக் கமலப் பூக்கள் செறிந்து விளங்கும் எறும்பியூர் மலைமேல் திகழும் மாணிக்கமும் செழுஞ்சுடரும் ஆகிய சிவபெருமானை நான் சென்று அடையப் பெற்றேன்.

திருஎறும்பியூர்

அருந்தவத்தின் பெருவலியா லறிவ தின்றி
அடலரக்கன் தடவரையை யெடுத்தான் திண்டோள்
முரிந்துநெரிந் தழிந்துபா தாள முற்று
முன்கைநரம் பினையெடுத்துக் கீதம் பாட
இருந்தவனை யேழுலகு மாக்கி னானை
யெம்மானைக் கைம்மாவி னுரிவை போர்த்த
திருந்தெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. **#907**

ஆற்றல் மிக்க அரக்கன் அரியதவத்தால் பெற்ற பெருவலியையே நினைத்துச் செருக்குக் கொண்டமையால் அறிவை இழந்து பெரிய கயிலை மலையை எடுக்க அவன் திண்ணிய தோள்கள் ஒடிந்து நசுங்கி ஆற்றல் அழிந்து பாதாளம் போன்ற பள்ளத்தில் கிடந்தானாகப்பின் முன்கை நரம்பினை எடுத்து வீணை நரம்பாகக் கொண்டு இசைத்துக் கீதம் பாட அதனைக் கேட்டு மகிழ்ந்திருந்தவனும், ஏழுலகங்களையும் படைத்தவனும், எம் தலைவனும், யானையின் தோலைப் போர்வையாகக் கொண்டவனும், அழகிய எறும்பியூர் மலை மேல் திகழும் மாணிக்கமும் செழுஞ்சுடரும் ஆகிய சிவபெருமானை நான்

சென்றடைந்தேன்.

திருக்கழுக்குன்றம்

திருக்கழுக்குன்றம்

திருக்கழுக்குன்றம், திருத்தாண்டகம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வேதகிரீசுவரர்.
தேவியார் : பெண்ணினல்லாளம்மை.

மூவிலைவேற் கையானை மூர்த்தி தன்னை
முதுபிணக்கா டுடையானை முதலா னானை
ஆவினிலைந் துகந்தானை அமரர் கோனை
ஆலால முண்டுகந்த ஐயன் தன்னைப்
பூவினின்மேல் நான்முகனும் மாலும் போற்றப்
புணர்வரிய பெருமானைப் புனிதன் தன்னைக்
காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. **#908**

மூவிலை வேலாகிய சூலத்தைப் பிடித்த கையினனும், அழகிய கடவுளும், பிணமுதுகாட்டை உடையவனும், எல்லாவற்றிற்கும் அடியானவனும், தேவர்களுடைய அரசனும், ஆலகால விடத்தை மகிழ்ந்துண்ட தலைவனும், தாமரைமேல் வீற்றிருக்கும் நான்முகனும் திருமாலும் வணங்குதற்கு நெருங்க முடியாத பெருமானும், புனிதனும், எல்லாவற்றையும் காப்பவனும், கழுக்குன்றில் அமர்ந்தவனும் ஆகிய கற்பகத்தை நான் கண்ணாரக்கண்டேன்.

திருக்கழுக்குன்றம்

பல்லாடு தலைசடைமே லுடையான் தன்னைப்
பாய்புலித்தோ லுடையானைப் பகவன் தன்னைச்
சொல்லோடு பொருளனைத்து மானான் தன்னைச்
சுடருருவில் என்பறாக் கோலத் தானை
அல்லாத காலனைமுன் னடர்த்தான் தன்னை
ஆலின்கீழ் இருந்தானை அமுதா னானைக்
கல்லாடை புனைந்தருளுங் காபா லியைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. **#909**

பற்கள் வெளியே தோன்றுகின்ற வெண் தலையைச் சடைமேல் தரித்தவனும், பாயும் புலியை உரித்துக்கொண்ட தோலாகிய உடையினனும், சிறந்த ஆறு குணங்களை உடையவனும், சொற்களும் பொருள்கள் எல்லாமும் ஆனவனும், என்புஅணி நீங்கப்பெறாத தோற்றத்துடன் ஒளிவிட்டுத் திகழ்பவனும், முறையல்லாத செயலை

மேற்கொண்டகாலனை முன் ஒறுத்தவனும், ஆலின் கீழ் இருந்தவனும், அமுதமானவனும், கல்லாடை புனைந்தருளும் காபாலியும் ஆகிய கற்பகத்தை நான் கண்ணாரக் கண்டேன்.

பலவகைத் - திருத்தாண்டகம்

பலவகைத் - திருத்தாண்டகம்

பலவகைத் - திருத்தாண்டகம், திருத்தாண்டகம்

நேர்ந்தொருத்தி யொருபாகத் தடங்கக் கண்டு
நிலைதளர ஆயிரமா முகத்தி னோடு
பாய்ந்தொருத்தி படர்சடைமேற் பயிலக் கண்டு
படஅரவும் பனிமதியும் வைத்த செல்வர்
தாந்திருத்தித் தம்மனத்தை யொருக்காத் தொண்டர்
தனித்தொருதண் டூன்றிமெய் தளரா முன்னம்
பூந்துருத்தி பூந்துருத்தி யென்பீ ராகில்
பொல்லாப் புலால் துருத்தி போக்க லாமே. **#910**

தம் மனத்தைத் தாம் திருத்தி ஒருமுகப்படுத்தாத மக்களைப் போலப் பேணுவாரின்றித் தனித்துத் தண்டு ஒன்றை ஊன்றி உடல் தளராத முன்னம், துணைவியாக நேர்ந்த ஒருத்தியைத் தன் உடலின் ஒரு பாகத்து அடங்கச் செய்து, பூமி நிலைதளரும் வண்ணம் பெரிய முகங்கள் ஆயிரத்தொடும் பாய்ந்த ஒருத்தியைப் பரந்த சடைமேல் பொருந்தச் செய்து, பட நாகத்தையும் குளிர்ந்த மதியையும் ஒருங்கே வைத்த செல்வராகிய சிவபெருமான் உவந்து உறையும் பூந்துருத்தி. பூந்துருத்தி என்று பலகாலும் நினைத்து வாழ்த்துவீராகில் துன்பமே விளைக்கும் புலால் பொருந்திய துருத்தி போன்ற உடம்பை நீக்கல் கைகூடும்.

பலவகைத் - திருத்தாண்டகம்

ஐத்தானத் தகமிடறு சுற்றி யாங்கே
யகத்தடைந்தால் யாதொன்று மிடுவா ரில்லை
மைத்தானக் கண்மடவார் தங்க ளோடு
மாயமனை வாழ்க்கை மகிழ்ந்து வாழ்வீர்
பைத்தானத் தொண்மதியும் பாம்பும் நீரும்
படர்சடைமேல் வைத்துகந்த பண்பன் மேய
நெய்த்தானம் நெய்த்தான மென்பீ ராகில்
நிலாவாப் புலால்தானம் நீக்க லாமே. **#911**

மைதீட்டும் இடமான கண்களையுடைய மடவாரோடு வாழும் நிலையற்ற மனைவாழ்க்கையில் இறுமாந்து வாழ்வீர்காள்! கோழைக்கு இடமான மிடற்று உட்பகுதி பன்னாளும் பலவற்றையும் பேசி இறுதி நாளில் செயலற்றுக் கோழையினால் அடைக்கப்படும் நிலையை அடைந்தால் அதனை நீங்குதற்கு யாதொரு மருந்துந் தருவாரில்லை. ஆகலான் ஒளிர்மதியையும், படமாகிய இடத்தினையுடைய பாம்பையும்,

கங்கையையும் தன் விரிந்த சடைமேல் வைத்து மகிழ்ந்த பண்பனாகிய சிவபெருமான் விரும்பி உறையும் நெய்த் தானம் நெய்த்தானம் என்று பலகாலும் நினைத்து வாழ்த்துவீராகில் நிலையில்லாத ஊனினாலாகிய உடம்பினை நீக்கல் கைகூடும்.

<u>பலவகைத் - திருத்தாண்டகம்</u>

பொய்யாறா வாறே புனைந்து பேசிப்
புலர்ந்தெழுந்த காலைப் பொருளே தேடிக்
கையாறாக் கரண முடையோ மென்று
களித்த மனத்தராய்க் கருதி வாழ்வீர்
நெய்யாறா ஆடிய நீல கண்டர்
நிமிர்புன் சடைநெற்றிக் கண்ணர் மேய
ஐயாறே ஐயாறே யென்பீ ராகில்
அல்லல்தீர்ந் தமருலகம் ஆள லாமே. **#912**

நிலையாமை நீங்காத முறைமையுடைய பொருள்களையே சிறப்பித்துப் பேசிப் பொழுது புலர எழுந்தது முதல் பொருளைத் தேடி ஒழுக்கமாக எங்கள் குலத்தொழிலைக் கொண்டுள்ளோம் என்று எண்ணி இறுமாந்த மனத்தராய் அத்தொழிலில் தொடர்தலை உறுதியாகக் கருதி வாழ்வீர்காள்! நெய்யை ஆறுபோல் ஆடியவரும், நீலகண்டரும், நீண்ட செஞ்சடையரும், நெற்றிக் கண்ணரும் ஆகிய சிவபெருமான் விரும்பி உறையும் ஐயாறே! ஐயாறே! என்று பலகாலும் நினைத்து வாழ்த்துவீராயின் பிறவித் துன்பம் தீர்த்துச் சிவனுலகை ஆளலும் கைகூடும்.

<u>பலவகைத் - திருத்தாண்டகம்</u>

இழவொன்று தாமொருவர்க் கிட்டொன் றீயார்
ஈன்றெடுத்த தாய்தந்தை பெண்டீர் மக்கள்
கழனங்கோ வையாதல் கண்டுந் தேறார்
களித்த மனத்தராய்க் கருதி வாழ்வீர்
அழனம்மை நீக்குவிக்கும் அரைய னாக்கும்
அமருலகம் ஆள்விக்கும் அம்மான் மேய
பழனம் பழனமே யென்பீ ராகில்
பயின்றெழுந்த பழவினைநோய் பாற்ற லாமே. **#913**

ஒருபொருள் தமக்கு நட்டமாகும்படி உயர்ந்தோர்க்கு ஒன்று கொடுத்தலையும் பல இடத்தும் அலைந்து திரியும் வறியவர் ஒருவர்க்கு ஒன்று ஈதலையும் செய்யாராய், ஈன்றெடுத்த தாய், தந்தை, மனைவியர், மக்கள் முதலியோர் தம் காலில் பூணும் தளையாதலை அனுபவித்தும் தெளியாராய், இறுமாந்த மனத்தாராய் அவர்களையே நிலையாகக் கருதி

வாழ்வீர்காள்! நம் அழுகையை நீக்குவிப்பவனும் நம்மை அரையனாக்குபவனும், நம்மை அமரருலகு ஆள்விப்பவனும் ஆகிய தலைவன் சிவபெருமான் விரும்பி உறையும் பழனம் பழனம் என்று பலகாலும் நினைத்து வாழ்த்துவீராயின் பன்னாள் செய்து போந்த பழைய வினையாகிய நோயை நீக்கலும் கைகூடும்.

<u>பலவகைத் - திருத்தாண்டகம்</u>

ஊற்றுத் துறையொன்ப துள்நின் றோரீர்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டீர்
மாற்றுத் துறைவழி கொண்டோடா முன்னம்
மாய மனைவாழ்க்கை மகிழ்ந்து வாழ்வீர்
வேற்றுத் தொழில்பூண்டார் புரங்கள் மூன்றும்
வெவ்வழல்வாய் வீழ்விக்கும் வேந்தன் மேய
சோற்றுத்துறை சோற்றுத்துறை யென்பீ ராகில்
துயர்நீங்கித் தூநெறிக்கட் சேர லாமே. **#914**

நிலையற்ற மனைவாழ்க்கையில் இறுமாந்து வாழ்வீர்காள்! அழுக்கு ஊறுகின்ற துறையாம் இவ் உடலில் உள்ள ஒன்பது பெருவாயில்களின் உள்ளே அகப்பட்டு நின்றமையால் இறைவனை நினைகின்றிலீர், அவை ஒன்பதையும், ஒருசேர அடைக்கும் இறுதிப்போதில் இறைவனை நினைக்க விரும்பினும் அது செய்யமாட்டீர். மாற்றுத்துறையாகிய யாதனாசரீரத்துடன் செல்லும் வழியை மேற்கொண்டு கால தூதுவரோடு நீவிர் ஓடாமுன்னம் பகைமைத் தொழில் பூண்டாருடைய புரங்கள் மூன்றையும் வெவ்விய அழலிடத்து வீழ்விக்கும் வேந்தனாகிய சிவபெருமான் விரும்பி உறையும் சோற்றுத்துறை சோற்றுத்துறை என்று பலகாலும் நினைத்து வாழ்த்துவீராயின் பிறவித்துயர் நீங்கித் தூய வீட்டுநெறியினைச் சேர்தல் கைகூடும்.

<u>பலவகைத் - திருத்தாண்டகம்</u>

கலஞ்சுழிக்குங் கருங்கடல்சூழ் வையந் தன்னிற்
கள்ளக் கடலி லழுந்தி வாளா
நலஞ்சுழியா எழுநெஞ்சே இன்பம் வேண்டில்
நம்பன்றன் அடியிணைக்கே நவில்வா யாகில்
அலஞ்சுழிக்கு மன்னாகந் தன்னான் மேய
அருமறையோ டாறங்க மானார் கோயில்
வலஞ்சுழியே வலஞ்சுழியே என்பீ ராகில்
வல்வினைகள் தீர்ந்துவா னாள லாமே. **#915**

மரக்கலங்கள் சுழலுகின்ற கரிய கடலால் சூழப்பட்ட உலகில் வஞ்சனைக் கடலில் அழுந்தி, முயலாமலே, நன்மையைத் தேடி

அலைகின்ற நெஞ்சே! நல்லின்பம் பெற வேண்டில் நம்புதற்குரிய தலைவன் திருவடியிணைக்கே வாழ்த்து நவில். அங்ஙனம் நவில விரும்பின் எல்லாப் பொருளும் அடங்கச் சுருட்டும் பாம்பரசனாகிய ஆதிசேடனால் விரும்பப்பட்டதும் அருமறையும் ஆறங்கமும் ஆன சிவபெருமான் உறைவதும் ஆகிய கோயிலைக் கொண்ட வலஞ்சுழியே வலஞ்சுழியே என்று பலகாலும் கூறுவையாயின் வலிய வினைகள் தீர வானுலகு ஆளல் கைகூடும்.

பலவகைத் - திருத்தாண்டகம்

தண்டிகுண் டோதரன்பிங் கிருடி
சார்ந்த புகழ்நந்தி சங்கு கன்னன்
பண்டை யுலகம் படைத்தான் தானும்
பாரை யளந்தான்பல் லாண்டி சைப்பத்
திண்டி வயிற்றுச் சிறுகட் பூதஞ்
சிலபாடச் செங்கண் விடையொன் றூர்வான்
கண்டியூர் கண்டியூர் என்பீ ராகிற்
கடுகநும் வல்வினையைக் கழற்ற லாமே. **#916**

தண்டியும் குண்டோதரனும், பிருங்கியாகிய இருடியும், புகழ்சார்ந்த நந்தியும், சங்குகன்னனும், பண்டு உலகைப் படைத்த பிரமனும், உலகளந்த திருமாலும் பல்லாண்டு இசைக்கவும் திண்ணிய வயிற்றையும் சிறிய கண்களையுமுடைய பூதங்கள் சில பாடவும் விடை ஒன்றை ஊர்பவனாகிய சிவபெருமான் மேவி உறையும் கண்டியூர் கண்டியூர் என்று பலகாலும் நினைத்து வாழ்த்துவீர் ஆயின் நும் வலிய வினையை விரைவாக நீக்கல் கைகூடும்.

பலவகைத் - திருத்தாண்டகம்

விடமூக்கப் பாம்பேபோற் சிந்தி நெஞ்சே
வெள்ளேற்றான் தன்தமரைக் கண்ட போது
வடமூக்க மாமுனிவர் போலச் சென்று
மாதவத்தார் மனத்துள்ளார் மழுவாட் செல்வர்
படமூக்கப் பாம்பணையிற் பள்ளி யானும்
பங்கயத்து மேலயனும் பரவிக் காணாக்
குடமூக்கே குடமூக்கே யென்பீ ராகிற்
கொடுவினைகள் தீர்ந்தரனைக் குறுக லாமே. **#917**

நெஞ்சே! வெள்ளேறு ஊறும் விமலனுடைய அடியார்களைக் கண்டபோது ஆலமர் கடவுளை அடைந்த முனிவர் போல் அவர்களைச் சென்றடைந்து, விடம், உக்க பாம்பு போல அடங்கி வணங்கு. வணங்கி, மாதவத்தார், மனத்து உள்ளவரும், மழுப்படையை ஏந்திய செல்வரும்,

படத்தையுடைய கொடிய பாம்பாகிய அணையிற் பள்ளி கொள்ளும் திருமாலும், பங்கய மலர்வாழ் பிரமனும் புகழ்ந்து தோத்திரித்தும் காணப்படாதவரும் ஆகிய அரனார் மகிழ்ந் துறையும் குடமூக்கே குடமூக்கே என்று பலகாலும் நினைத்து வாழ்த்துவையாயின் கொடுவினைகள் தீர அவரைக் கிட்டுதல் கைகூடும்.

பலவகைத் - திருத்தாண்டகம்

தண்காட்டச் சந்தனமுந் தவள நீறும்
தழையணுகுங் குறுங்கொன்றை மாலை சூடிக்
கண்காட்டாக் கருவரைபோ லனைய காஞ்சிக்
கார்மயிலஞ் சாயலார் கலந்து காண
எண்காட்டாக் காடங் கிடமா நின்று
எரிவீசி யிரவாடும் இறைவர் மேய
வெண்காடே வெண்காடே என்பீ ராகில்
வீடாத வல்வினைநோய் வீட்ட லாமே. **#918**

மேகலையணிந்து கார்மயிலின் சாயலைக் கொண்டு நீலமலைபோன்று விளங்கும் உமாதேவியார் ஒரு பங்கில் கலந்து நின்று கடைக்கண்ணைச் செலுத்திக் காண, சந்தனமும், வெண்ணீறும் குளிர்ந்து விளங்க, தழைவிரவித் தொடுக்கப்பட்ட கொன்றைக் குறுமாலையைச் சூடி, எண்ணற்ற இறந்தோருடைய இடமாகிய முதுகாட்டில் நின்று எரிஏந்தி இரவில் ஆடும் இறைவர் விரும்பி உறையும் வெண்காடே வெண்காடே என்று பலகாலும் நினைந்து வாழ்த்துவீராயின் கெடாத வலிய வினைகளாகிய நோய்களைக் கெடுத்தல் கைகூடும்.

பலவகைத் - திருத்தாண்டகம்

தந்தையார் தாயா ருடன்பி றந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டா
சிந்தையீ ருமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே. **#919**

ஒருவருக்குத் தந்தை யார்? தாய் யார்? உடன் பிறந்தார் தாம் யார்? தாரம் யார்? புத்திரர் யார்? தாம் தாம் தமக்கு என்ன தொடர்புடையர்? நிலவுலகிற் பிறந்தது தந்தை முதலியவரோடு முன்னேயும் கூடிநின்றோ? இறப்பது அவர்களோடு பின்னும் பிரியாது கூடிநிற்கவோ? ஆகவே சிந்தையீர், பொய்யான இத்தொடர்பு கொண்டு ஏதும் மகிழ வேண்டா.

உமக்கு ஓர் உறுதி சொல்லக் கேண்மின். ஒளிவீசித் திகழும் மதியும் கொடிய பாம்பும் நட்புக்கொண்டு விளையாடி மகிழும் முடியை உடைய எந்தையாரது திருநாமமாகிய நமச்சிவாய என்ற திருஐந்தெழுத்தை ஓதியவாறே துயிலெழுவார்க்குப் பெரிய வீட்டுலகில் நிலை பெற்றிருத்தல் கைகூடும். ஆகவே அதனைச் செய்ம்மின்.

நின்ற - திருத்தாண்டகம்

நின்ற - திருத்தாண்டகம்

நின்ற - திருத்தாண்டகம், திருத்தாண்டகம்

இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே. **#920**

பெரிய பூமியாகியும், நீராகியும், தீயாகியும், எறியும் காற்றாகியும், ஆகாயமாகியும், ஞாயிறாகியும், அழிவில்லாத நிலையையுடைய திங்களாகியும், இயமானனாகியும் இங்ஙனம் அட்ட மூர்த்தியாகியும், பெருமையுடையதாகிய நன்மையும், சிறுமை உடையதாகிய குற்றமும், பெண்ணும், ஆணும் ஏனைய தேவருடைய வடிவங்களும் அருவம், உருவம், அருவுருவம் என்னும் தம் மூவகைத் திருமேனிகளும் தாமே ஆகியும், நேற்று ஆகியும், இன்று ஆகியும், நாளை ஆகியும் நீண்ட செஞ்சடையுடைய எம்பெருமான் நின்றவாறு வியக்கத் தக்கதாகும்.

நின்ற - திருத்தாண்டகம்

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக்
கலையாகிக் கலைஞானந் தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோ ராணு மாகிப்பிரளயத்துக் கப்பாலோ ரண்ட மாகி
எண்ணாகி யெண்ணுக்கோ ரெழுத்து மாகியெழுஞ்சுடரா யெம்மடிகள் நின்ற வாறே. **#921**

மண் ஆகியும், விண் ஆகியும், மலையாகியும் வயிரமாகியும், மாணிக்கமாகியும், கண்ணாகியும், கண்ணுக்குப் பொருத்தமான மணியாகியும், நூல் ஆகியும் நூலறிவாகியும் பெண் ஆகியும் பெண்ணுக்கு ஏற்ற ஒப்பற்ற ஆணாகியும், பிரளலயத்துக்கு அப்பால் உள்ள அண்டமாகிய சுத்த மாயாபுவனம் ஆகியும் எண்ணுதற்குப் பொருந்திய பொருள் ஆகியும் அவ்வெண்ணத்தை வெளிப்படுத்தும் ஒப்பற்ற எழுத்தாகியும் தோன்றி விளங்கும் ஒளியாகியும், எம்பெருமான்

நின்றவாறு வியக்கத்தக்கதாகும்.

நின்ற - திருத்தாண்டகம்

கல்லாகிக் களறாகிக் கானு மாகிக்
காவிரியாய்க் கால்ஆறாய்க் கழியு மாகிப்
புல்லாகிப் புதலாகிப் பூடு மாகிப்
புரமாகிப் புரமூன்றுங் கெடுத்தா னாகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளு மாகிச்
சுலாவாகிச் சுலாவுக்கோர் சூழ லாகி
நெல்லாகி நிலனாகி நீரு மாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே. **#922**

மலையாகியும் களர்நிலமாகியும் காடாகியும், ஆறாகியும், வாய்க்காலாகிய வழியாகியும், கடற்கரைக்கழியாகியும், புல்லாகியும், புதராகியும், பூடு ஆகியும், நகர் ஆகியும், புரம் மூன்றிற்கும் அழிவாகியும் சொல்லாகியும், சொல்லிற்குப் பொருந்திய பொருள் ஆகியும், போக்கு வரவு ஆகியும், அப்போக்குவரவுக்கு வேண்டிய இடம் ஆகியும் நிலனாகியும், நீராகியும், நெல்லாகியும், நெடிய ஒளிப் பிழம்பாகியும் எம்பெருமான் நெடுகப்பரவி நின்றவாறு வியக்கத் தக்கதாகும்.

நின்ற - திருத்தாண்டகம்

காற்றாகிக் கார்முகிலாய்க் காலம் மூன்றாய்க்
கனவாகி நனவாகிக் கங்கு லாகிக்
கூற்றாகிக் கூற்றுதைத்த கொல்களிறு மாகிக்
குரைகடலாய்க் குரைகடற்கோர் கோமா னுமாய்
நீற்றானாய் நீறேற்ற மேனி யாகி
நீள்விசும்பாய் நீள்விசும்பி னுச்சி யாகி
ஏற்றானா யேறூர்ந்த செல்வ னாகி
யெழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே. **#923**

காற்றாகியும், கரியமுகிலாகியும், இறப்பு நிகழ்வு எதிர்வெனக் காலம் மூன்றாகியும், கனவாகியும், நனவாகியும், இரவாகியும், நாளின் மற்றொரு கூறாகிய பகலாகியும் அல்லது இயமனால் வரும் சாவு ஆகியும், இயமனை உதைத்துக் கொன்ற களிறாகியும், ஒலிக்கும் கடலாகியும், அக்கடற்குத் தலைவனாம் வருணன் ஆகியும், நீறணிந்த கோலத்தன் ஆகியும், நீறணிதற்கு ஏற்ற வடிவத்தன் ஆகியும், நீண்ட ஆகாயம் ஆகியும், அவ்வாகாயத்து உச்சியாகியும், உலகத்தின் தொழிற்பாடுகள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டவனாகியும், இடபத்தை ஊரும் தலைவனாகியும் தோன்றி விளங்கும் ஒளியாகியும் எம்பெருமான் நின்றவாறு வியக்கத்தக்கதாம்.

நின்ற - திருத்தாண்டகம்

தீயாகி நீராகித் திண்மை யாகித்
திசையாகி அத்திசைக் கோர்தெய்வ மாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
தாரகையும் ஞாயிறுந்தண் மதியு மாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற
இரதங்கள் நுகர்வானுந் தானே யாகி
நீயாகி நானாகி நேர்மை யாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே. **#924**

தீயின் வெம்மையாகியும், நீரின் தண்மையாகியும், நிலத்தின் திண்மையாகியும், திசைகள் ஆகியும், அத்திசைகள் ஒவ்வொன்றிற்கும் உரிய தெய்வமாகியும், தாயாகியும், தந்தையாகியும், சார்தற்குரிய பற்றுக்கோடாகியும், நாண் மீனாகியும், ஞாயிறாகியும், குளிர் மதியமாகியும், காயாகியும், பழங்கள் ஆகியும், பழத்தில் நின்ற சுவைகள் ஆகியும், அச்சுவைகளை நுகர்பவன் ஆகியும் தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூன்று இடங்கள் ஆகியும் நுண்மை ஆகியும் நீண்ட ஒளிப்பிழம்பாகியும் எம்பெருமான் பரவி நின்றவாறு வியக்கத்தக்கதாகும்.

நின்ற - திருத்தாண்டகம்

அங்கமா யாதியாய் வேத மாகி
அருமறையோ டைம்பூதந் தானே யாகிப்
பங்கமாய்ப் பலசொல்லுந் தானே யாகிப்
பால்மதியோ டாதியாய்ப் பான்மை யாகிக்
கங்கையாய்க் காவிரியாய்க் கன்னி யாகிக்
கடலாகி மலையாகிக் கழியு மாகி
எங்குமாய் ஏறூர்ந்த செல்வ னாகி
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே. **#925**

ஆறு அங்கங்கள் ஆகியும், ஆதியாய வேதங்கள் ஆகியும், அரிய மந்திரங்கள் ஆகியும், ஐம்பூதங்களின் தலைவராய தேவர்கள் ஆகியும், புகழ்ச் சொற்களேயன்றி இகழ்ச் சொற்களும் ஆகியும், வெள்ளிய மதி ஆகியும், உலகிற்கு முதல் ஆகியும், வினையாகியும், கங்கை, காவிரி, கன்னி போன்ற தீர்த்தங்களுக்குரிய தேவர்கள் ஆகியும், கடலாகியும், மலையாகியும், கழி ஆகியும், எங்கும் நிறைபொருளாகியும் ஏறூர்ந்த தலைவன் ஆகியும், தோன்றி விளங்கும் ஒளியாகியும் எம்பெருமான் நின்றவாறு வியக்கத்தக்கதாம்.

நின்ற - திருத்தாண்டகம்

மாதா பிதாவாகி மக்க ளாகி
மறிகடலும் மால்விசும்புந் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகிக்
கொல்புலித்தோ லாடைக் குழக னாகிப்
போதாய மலர்கொண்டு போற்றி நின்றுபுனைவார் பிறப்பறுக்கும்
புனித னாகி
யாதானு மெனநினைந்தார்க் கௌதே யாகிஅழல் வண்ண
வண்ணர்தாம் நின்ற வாறே. **#926**
மாதாபிதா மக்கள் ஆகியும், அலை எழுந்து மடங்கும் கடலும் பெரிய
ஆகாயமும் ஆகியும், கோதாவிரி குமரிகள் ஆகியும், கொல்லும்
புலியினது தோலை ஆடையாகக் கொண்ட அழகன் ஆகியும், உரிய
பொழுதில் மலர்வதாகிய பூக்கொண்டு புனைந்து புகழ்ந்து நிற்பாருடைய
பிறப்பறுக்கும் புனிதன் ஆகியும். 'யாது நிகழினும் நிகழ்க' எனக்
கவலையற்றுத் தன்னையே நினைவார்க்கு எளிய பொருள் ஆகியும்
நெருப்பின் நிறம் போலும் நிறமுடைய எம்பெருமான் நின்றவாறு
வியக்கத்தக்கதாம்.

நின்ற - திருத்தாண்டகம்

ஆவாகி ஆவினில் ஐந்து மாகி
அறிவாகி அழலாகி அவியு மாகி
நாவாகி நாவுக்கோர் உரையு மாகி
நாதனாய் வேதத்தி னுள்ளோ னாகிப்
பூவாகிப் பூவுக்கோர் நாற்ற மாகிப்புக்குளால் வாசமாய் நின்றா னாகித்
தேவாதி தேவர் முதலு மாகிச்செழுஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்ற
வாறே. **#927**
பசுவும் பசுவிடத்துத் தோன்றும் ஐம்பொருளும் ஆகியும்
வேள்விக்குரியன அறியும் அறிவும், வேள்வித்தீயும், அத்தீயுட்பெய்யும்
உணவும் ஆகியும், நாவும் நாவுக்கு ஏற்ற உரையும் ஆகியும், நாதமும்
வேதத்தின் பொருளும் ஆகியும், பூவும், அப்பூவிற்குரிய ஒப்பற்ற
நாற்றமும் ஆகியும், நாற்றம் பூவிற்குள் ஒன்றாய் நிற்கும் ஒற்றுமை
நிலையாகியும், தேவர்களும் தேவர்களின் தலைமைத் தேவரும் ஆகியும்,
செழுஞ்சுடராய் எம்பெருமான் பரவி நின்றவாறு வியக்கத்தக்கதாகும்.

நின்ற - திருத்தாண்டகம்

நீராகி நீளகலந் தானே யாகி
நிழலாகி நீள்விசும்பி னுச்சி யாகிப்

பேராகிப் பேருக்கோர் பெருமை யாகிப்
பெருமதில்கள் மூன்றினையு மெய்தா னாகி
ஆரேனுந் தன்னடைந்தோர் தம்மை யெல்லாம்
ஆட்கொள்ள வல்லவெம் மீச னார்தாம்
பாராகிப் பண்ணாகிப் பாட லாகிப்
பரஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்ற வாறே. **#928**

பெரிய மதில்கள் மூன்றையும் எய்தானும், தன்னையடைந்தார் யாராயினும் அவரெல்லாரையும் ஆட்கொள்ளவல்லானும் ஆகிய எம் ஈசன் ஆம் அடிகள் நீரின் சுவையும், நீள அகலங்களும் ஆகியும், புகழும் புகழுக்குப் பொருந்திய ஒப்பற்ற பெருமையும் ஆகியும், பூமியின் பொறைக்குணமும், பண்ணின் இனிமைப் பண்பும், அப்பண்புடைய பாடலும் ஆகியும், மேலான ஒளியாகியும் விளங்கி நின்றவாறு வியக்கத்தக்கதாம்.

<u>நின்ற - திருத்தாண்டகம்</u>

மாலாகி நான்முகனாய் மாபூ தமாய்
மருக்கமாய் அருக்கமாய் மகிழ்வு மாகிப்
பாலாகி யெண்டிசைக்கும் எல்லை யாகிப்
பரப்பாகிப் பரலோகந் தானே யாகிப்
பூலோக புவலோக சுவலோ கமாய்ப்
பூதங்க ளாய்ப்புராணன் தானே யாகி
ஏலா தனவெல்லாம் ஏல்விப் பானாய்
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே. **#929**

மாலும், நான்முகனும் ஆகியும், பெரும்பூதங்கள் ஆகியும், பெருக்கமும், சுருக்கமும், மகிழ்ச்சியும், ஆகியும், எட்டுத்திசைக் கூறும் அவ்வெட்டுத் திசைகளுக்கும் உரிய எல்லையும் ஆகியும், பரப்பும் பரலோகமும் ஆகியும், பூலோக புவலோக சுவலோகங்களும், அவற்றின் உட்பட்ட அண்டங்களும் ஆகியும், புராணனுக்குரிய பழமையாகியும், தான் இன்றித் தாமாக நடைபெறாத சட உலகங்களும், அவைகளை நடைபெறுவித்தற்கு அமைந்தவனும் ஆகியும், எழும் ஒளிப்பிழம்பாகியும், எம்பெருமான் விளங்கி நின்றவாறு வியக்கத்தக்கதாகும்.

தனி - திருத்தாண்டகம்

தனி - திருத்தாண்டகம், திருத்தாண்டகம்

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் து(ம்)நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே. **#930**

ஏறூர்ந்த செல்வனே! எனக்கு அப்பனும் அம்மையும் தமையனும் நீ. அன்புடைய மாமனும் மாமியும் நீ. பிறப்பு, குடிமை முதலியவற்றான் ஒப்புடைய மனைவியரும், ஒள்ளிய செல்வமும் நீ, ஒரு குலத்தவரும், பிற சுற்றத்தவரும், நிலையாக நின்று வாழும் ஒப்பற்ற ஊரும் நீ, நுகர்ச்சிப் பொருள்களாகவும், ஊர்தி வகைகளாகவும் தோன்றுபவனும் நீ, இப்பொன்னும் இம்மணியும் இம்முத்தும் நீ, எனக்குத் துணையாய் உடனின்று உலகத்து அப்பன் அம்மை முதலாயினாரினின்று என்னைத் துறப்பிப்பானும் நீ. நீயே எனக்குக் கடவுள்.

தனி - திருத்தாண்டகம்

வெம்பவரு கிற்பதன்று கூற்றம் நம்மேல்
வெய்ய வினைப்பகையும் பைய நையும்
எம்பரிவுந் தீர்ந்தோம் இடுக்கண் இல்லோம்
எங்கெழிலென் ஞாயி றெளியோ மல்லோம்
அம்பவளச் செஞ்சடைமேல் ஆறு சூடிஅனலாடி ஆன்அஞ்சும் ஆட்டு கந்த
செம்பவள வண்ணர்செங் குன்ற வண்ணர்செவ்வான வண்ணரென் சிந்தை யாரே. **#931**

அழகிய பவளம் போன்ற செஞ்சடைமேல் ஆறு சூடியவரும், அனல் ஆடியவரு ஆன் அஞ்சிலும் ஆடுதலை உகந்தவரும், செம்பவள நிறத்தினரும் செங்குன்ற வடிவினரும், செவ்வான வண்ணரும் ஆகிய சிவபெருமான் எம் சிந்தையராயினார்; அதனால் கூற்றம் நம்மேல் நாம் வருந்தும்படி வரவல்லதன்று. கொடிய வினையாகிய பகையும் மெல்ல வருத்துகின்ற எம் துன்பமும் யாம் தீர்ந்தோம்; யாதோரிடையூறும் இல்லோம்; ஞாயிறு எங்கெழுந்தாலும் அதனால் எமக்கு வரக்கடவது

என்னை? யாவர்க்கும் எளியோம் அல்லோம்.

தனி - திருத்தாண்டகம்

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகு வித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரேபணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரேகாண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே. **#932**

கண்ணுதலாய்! நீ ஆட்டுவித்தால் ஆடாதார் ஒருவர் ஆர்? அடக்குவித்தால் அடங்காதார் ஒருவர் ஆர்? ஓட்டுவித்தால் ஓடாதார் ஒருவர் ஆர்? உருகுவித்தால் உருகாதார் ஒருவர் யார்? பாட்டுவித்தால் பாடாதார் ஒருவர் யார்? பணிவித்தால் பணியாதார் ஒருவர் ஆர்? காட்டுவித்தால் காணாதார் ஒருவர் ஆர்? நீ காட்டாவிடில் காண்பார் ஆர்?

தனி - திருத்தாண்டகம்

நற்பத்தார் நற்பதமே ஞான மூர்த்தீ
நலஞ்சுடரே நால்வேதத் தப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுவுன் தன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத்தெங் கடவு ளானே. **#933**

வீடுபேற்றினை அடைய உரியவருடைய வீடுபேறாய் நின்றவனே! ஞானமே வடிவானவனே! நன்மையை விளக்கும் சுடரே! நான்கு வேதங்களுக்கும் அப்பால் நின்ற சொல்பதத்தாராகிய அபர முத்தருடைய சொற்பதத்தையும் கடந்து நின்ற சொல்லற்கரிய சூழலாய்! இஃது உனது தன்மை. நிற்பது போலக் காட்டி நில்லாது அலைகின்ற நெஞ்சுவழியாக வந்து நிலையில்லாத புலாலுடம்பிற்புகுந்து நின்று எல்லாப் பயன்களையும் தரும் கற்பகமே! கனகமும் மாணிக்கமும் ஒத்த நிறத்தினை உடைய எம் கடவுளே. யான் உன்னை விடுவேன் அல்லேன்.

தனி - திருத்தாண்டகம்

திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினோடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்விதானமும் வெண்கொடியு
மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட்டுண்ணா வூரும்அவை யெல்லாம் ஊரல்ல
அடவி காடே. **#934**

சிவபெருமானது திருக்கோயிலில்லாததால் நன்மையில்லாத ஊரும், திருவெண்ணீற்றை மக்கள் அணியாததால் நன்மையில்லாத ஊரும், உடம்பு வணங்கிப்பத்தி மிகுதியால் மக்கள் பாடா ஊரும், அழகான பலதளிகள் இல்லாத ஊரும், விருப்புடன் வெள்ளிய வலம்புரிச் சங்கினை ஊதாஊரும். மேற்கட்டியும் வெண் கொடிகளும் இல்லா ஊரும், மலரைப்பேரரும்பாய் உள்ள நிலையிற் பறித்துச் சிவனுக்குச் சாத்திப் பின்னரே உண்ணல் முறையாயிருக்க அங்ஙனம் உண்ணா ஊரும், ஆகிய அவை எல்லாம் ஊரல்ல; அடவியாகிய பெருங்காடே.

<u>தனி - திருத்தாண்டகம்</u>

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே. **#935**

திருநாமமாகிய அஞ்செழுத்தை ஒருகாலும் செப்பாராயின், தீவண்ணருடைய இயல்பை ஒருகாலும் பேசாராயின், திருக்கோயிலினை ஒருகாலம் வலம் வாராராயின், உண்பதற்குமுன் பல மலரைப் பேரரும்பாய் உள்ள நிலையிற் பறித்து அவற்றை இறைவனுக்கு இட்டுப்பின் உண்ணாராயின், கொடுநோய்கள் கெட வெண்ணீற்றை அணியாராயின், அங்ஙனம் செய்யாதாரெல்லாரும் இறைவனது திருவருளை இழந்தவராவர். அவர்கள் பிறந்த முறைமை தான் யாதோவெனின், தீராத கொடுநோய்கள் மிகத் துன்புறுத்தச் செத்து, வரும் பிறப்பிலும் பயனின்றி வாளா இறந்து மீளவும் பிறப்பதற்கு அதுவே தொழிலாகி இறக்கின்றார் ஆதலேதான்.

<u>தனி - திருத்தாண்டகம்</u>

நின்னாவார் பிறரின்றி நீயே யானாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்
மன்னனாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்
மறைநான்கு மானாய்ஆ றங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்பூமிமேல் புகழ்தக்க
பொருளே உன்னை
என்னானாய் என்னானாய் என்னி னல்லால்ஏழையேன் என்சொல்லி
யேத்து கேனே. **#936**
நின்னைப்போல் ஆவார் பிறர் இன்றி நீ ஒருவனே ஆனாய்,
நினைப்பார்தம் மனமாகிய நிலத்துக்கு ஒப்பற்ற வித்தும் ஆனாய்,
தலைவன் ஆனாய், அரசர்களுக்கு ஒப்பற்ற அமுதம் ஆனாய்; மறை
நான்கும் ஆறங்கமுமாய், பொன்னும் மணியும் போகமும் ஆகும்
பூமிமேல் புகழ்தற்குரிய பொருளானவனே! நீ எவ்வாறெல்லாம் ஆனாய்
எவ்வாறெல்லாம் ஆனாய் என்று வியப்பதையன்றிச்
சிற்றறிவினையுடைய யான் எவற்றை எஞ்சாதுசொல்லிப் புகழ்வேன்.

<u>தனி - திருத்தாண்டகம்</u>

அத்தாவுன் அடியேனை அன்பா லார்த்தாய்
அருள்நோக்கில் தீர்த்தநீ ராட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியைநீ எளியை யானாய்
எனையாண்டு கொண்டிரங்கியேன்று கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் அத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனையும் எம்பரமோ ஐய ஐயோ
எம்பெருமான் திருக்கருணை யிருந்த வாறே. **#937**
தந்தையே! ஐயா! உன் அடியவன் ஆகிய என்னை என் அன்பு கொண்டு
பிணிப்புண்ணச் செய்தாய்; உனது திருவருள் நோக்கத்தாலே என்னைத்
தீர்த்த நீர் ஆட்டித் தூயவன் ஆக்கினாய். அடைதற்கு மிகவும்
அரியையாகிய நீ எனக்கு மிகவும் எளியை ஆயினாய்; என்மீது இரங்கி
எனை ஆண்டுகொண்டு என்செயல்களை எல்லாம் உன் செயல்களாக
முன்னின்று ஏற்றுக்கொண்டாய். ஒரு நெறிப்படாத பித்தனேனும்
யாதுமுணராத பேதையேனேனும், வீணில் உழலும் பேயேனேனும்
இழிவு மிகுந்த நாயேனேனும் நான் செய்த குற்றங்கள் எல்லாவற்றையும்
பொறுத்தனை. நின் அருட்செயல்கள் யாவும் எம்போலியரது அளவிற்கு
உரியனவோ? அல்ல; அல்ல; எம்பெருமான் திருக்கருணை இருந்த
தன்மையைக் காட்டுவனவே அவை.

<u>தனி - திருத்தாண்டகம்</u>

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
எனசெய்வான் தோன்றினேன் ஏழையேனே. **#938**

சார்ந்த கூட்டத்தால்நான் தீயேன்; குணத்தாலும் தீயேன்;குறிக்கோளாலும் தீயேன். குற்றமாகிய செயலே பெரிதுஉடையேன்; நலம் பயத்தற்குரிய வேடத்தாலும் தீயேன்.எல்லாவற்றாலும் நான் தீயேன். ஞானியல்லேன்; நல்லாரோடுகூடிப்பழகிற்றிலேன்; மறவுணர்வுடைய மக்கட்கும் அஃதில்லாத பிற உயிர்கட்கும் இடைநிற்கின்ற ஒரு சார் விலங்கும் அல்லேன்; மனவுணர்வு பெற்றும்அம் மன உணர்வால் பயன் கொள்ளாமையின் விலங்கல்லாது ஒழிந்தேனும் அல்லேன்; வெறுக்கத்தக்க பொய்குறளை கடுஞ்சொல் பயனில் சொல் என்பனவற்றையே மிகப் பெரிதும் பேசும் ஆற்றலினேன். பிறப்பால்குடிமை நல்லேன் ஆயினும் என்செயலால் அதுவும் பொல்லேனாக இகழப்பட்டேன். பிறர்பால் இரப்பதனையே மேற்கொண்டு என்பால் இரப்பவர்க்கு யாதும் ஈயமாட்டேன். இந்நிலையில் அறிவற்ற நான் என் செய்வதற்காக மனிதனாகத் தோன்றினேன்.

<u>தனி - திருத்தாண்டகம்</u>

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே. **#939**

சங்கநிதி பதுமநிதி ஆகிய நிதிகள் இரண்டையும் தந்து, ஆட்சி செய்யப் பூமியொடு வானுலகையும், தருவாராயினும் சிவபெருமானிடத்தே ஒரு தலையாய அன்பில்லாராய் நிலையின்றி அழிவாராகிய அவரது செல்வத்தை யாம் ஒருபொருளாக மதிக்க மாட்டோம். உறுப்புக்கள்

எல்லாம் அழுகிக் குறையுந் தொழுநோயராய்ப் பசுவை உரித்துத்தின்று திரியும் புலையராயினும் கங்கையை நீண்ட சடையில் கரந்த சிவபெருமானுக்கு அன்பராயின் அவரே நாம் வணங்கும் கடவுள் ஆவார்.

தனி - திருத்தாண்டகம்

தனி - திருத்தாண்டகம், திருத்தாண்டகம்

ஆமயந்தீர்த் தடியேனை யாளாக் கொண்டார்
அதிகைவீ ரட்டானம் ஆட்சி கொண்டார்
தாமரையோன் சிரமரிந்து கையிற் கொண்டார்
தலையதனிற் பலிகொண்டார் நிறைவாம் தன்மை
வாமனனார் மாகாயத் துதிரங் கொண்டார்
மானிடங்கொண் டார்வலங்கைமழுவாள் கொண்டார்
காமனையும் உடல்கொண்டார் கண்ணால் நோக்கிக்
கண்ணப்பர் பணியுங்கொள் கபாலி யாரே. **#940**

கண்ணப்பரது பூசையினையும் அன்புகருதி ஏற்றுக்கொண்ட காபாலியாராகிய சிவபெருமானார் நோய் தீர்த்து அடியேனை ஆளாகக் கொண்டவரும், அதிகை வீரட்டானத்திருந்து ஆட்சி செய்பவரும், பிரமனது சிரத்தைக் கொய்து கையிற் கொண்ட வரும், அத்தலையோட்டில் பிச்சை ஏற்றவரும், வாமனனாகி வந்து மண் இரந்து திரிவிக்கிரமனாய் வளர்ந்து மூவுலகையும் அளந்து மிக்க செருக்குற்ற நிலையில் அப்பேருடம்பின் உதிரத்தை வெளிப்படுத்தி அவனை அழித்தவரும், மான்போன்ற உமையை இடப்பாகமாகக் கொண்டவரும், மழு ஆயுதத்தை வலக்கையில் ஏந்தியவரும், நெற்றிக் கண்ணைத் திறந்து பார்த்துக் காமனை அழித்தவரும் ஆவார்.

தனி - திருத்தாண்டகம்

முப்புரிநூல் வரைமார்பின் முயங்கக் கொண்டார்
முதுகேழல் முளைமருப்புங் கொண்டார் பூணாச்
செப்புருவ முலைமலையாள் பாகங் கொண்டார்
செம்மேனி வெண்ணீறு திகழக் கொண்டார்
துப்புரவார் சுரிசங்கின் தோடு கொண்டார்
சுடர்முடிசூழ்ந் தடியமரர் தொழவுங் கொண்டார்
அப்பலிகொண் டாயிழையார் அன்புங் கொண்டார்
அடியேனை ஆளுடைய அடிக ளாரே. **#941**

அடியேனைத் தமக்கு ஆளாகவுடைய தலைவர் ஆகிய சிவபெருமானார் உத்தமவிலக்கணமாகிய கீற்றுப் பொருந்திய மார்பினிடத்து முப்புரிநூல் பொருந்தக் கொண்டவரும். பழைய பன்றியில் முளை போன்ற

கொம்பினைப் பூணாகக் கொண்டவரும், கிண்ணம் போன்ற அழகிய முலைகளையுடைய பார்வதியை இடப்பாகமாகக் கொண்டவரும் சிவந்த உடலில் வெண்ணீறு விளங்கக் கொண்டவரும், தூய்மை நிறைந்து முறுக்குண்ட சங்கினாலியன்ற தோட்டினைக் கொண்டவரும், அமரர் சூழ்ந்து சுடர் முடியால் தமது அடியைத் தொழக் கொண்டவரும், அந்நாளில் தாருகாவன முனி பத்தினியர் இட்ட பிச்சையோடு அவர்களது அன்பினையும் கொண்டவர் ஆவார்.

<u>தனி - திருத்தாண்டகம்</u>

முடிகொண்டார் முளையிளவெண் டிங்க ளோடு
மூசுமிள நாகமுட னாகக் கொண்டார்
அடிகொண்டார் சிலம்பலம்பு கழலு மார்ப்ப
அடங்காத முயலகனை அடிக்கீழ்க் கொண்டார்
வடிகொண்டார்ந் திலங்குமழு வலங்கைக் கொண்டார்
மாலையிடப் பாகத்தே மருவக் கொண்டார்
துடிகொண்டார் கங்காளந் தோள்மேற் கொண்டார்
சூலைதீர்த் தடியேனை யாட்கொண் டாரே. **#942**

சடையை முடியாகக் கொண்டவரும், முதலில் காணப்படுகின்ற வெள்ளிய பிறைச் சந்திரனையும் படத்தால் மறைக்கும் இளம்பாம்பையும் உடன் உறையும்படி அம்முடிக்கண் கொண்ட வரும், ஒலிக்கும் தன்மை வாய்ந்த சிலம்பினையும் கழலினையும் ஒலிக்கும்படி அடிக்கண் கொண்டவரும், கொடுமை குறையாத முயலகனை அடிக்கீழ்க் கொண்டவரும், கூர்மையைக் கொண்டு நிரம்ப இலங்குகின்ற மழுவினை வலக்கையிற் கொண்டவரும், திருமாலை இடப்பாகமாகப் பொருந்தக் கொண்டவரும், துடியைக் கையிற் கொண்டவரும், எலும்புக் கூட்டினைத் தோள் மேற் கொண்டவரும் ஆகிய சிவபெருமானாரே சூலை நோயைத் தீர்த்து அடியேனை ஆட் கொண்டவர் ஆவார்.

<u>தனி - திருத்தாண்டகம்</u>

பொக்கணமும் புலித்தோலும் புயத்திற் கொண்டார்
பூதப் படைகள்புடை சூழக் கொண்டார்
அக்கினொடு படஅரவம் அரைமேற் கொண்டார்
அனைத்துலகும் படைத்தவையும் அடங்கக் கொண்டார்
கொக்கிறகுங் கூவிளமுங் கொண்டை கொண்டார்
கொடியானை யடலாழிக் கிரையாக் கொண்டார்
செக்கர்நிறத் திருமேனி திகழக் கொண்டார்
செடியேனை யாட்கொண்ட சிவனார் தாமே. **#943**

திருநீற்றுப் பையினையும் புலித்தோலையும் புயத்தில் கொண்டவரும், பூதப்படைகள் தம்மைப் பக்கங்களில் சூடிக் கொண்டவரும், அக்குமணியையும் படநாகத்தையும் இடுப்பின்மேல் கொண்டவரும், தாம் படைத்தவையாகிய எல்லா உலகங்களையும் ஒடுங்குமாறு செய்தலைக் கொண்டவரும், கொக்கிறகினையும் வில்வத்தினையும் முடித்த சடையில் கொண்டவரும், கொடிய சலந்தராசுரனை ஆற்றல் மிக்க ஆழிக்கு இரையாகக் கொண்டவரும், செந்நிறத் திருமேனி விளங்கக் கொண்டவரும் ஆகிய சிவனாரே கீழ்மையேனை ஆட்கொண்டவர்ஆவார்.

<u>தனி - திருத்தாண்டகம்</u>

அந்தகனை அயிற்சூலத் தழுத்திக் கொண்டார்
அருமறையைத் தேர்க்குதிரை யாக்கிக் கொண்டார்
சுந்தரனைத் துணைக்கவரி வீசக் கொண்டார்
சுடுகாடு நடமாடு மிடமாக் கொண்டார்
மந்தரம்நற் பொருசிலையா வளைத்துக்கொண்டார்
மாகாளன் வாசல்காப் பாகக் கொண்டார்
தந்திரமந் திரத்தரா யருளிக் கொண்டார்
சமண்தீர்த்தென் றன்னையாட் கொண்டார் தாமே. **#944**

அந்தகாசுரனைக் கூரிய சூலத்தால் அழுத்தி அவன் உயிரைக் கொண்டவரும், திரிபுரம் அழிக்கச் சென்ற காலத்தில் உணர்தற்கரிய வேதத்தைத் தேர்க்குதிரையாக்கிக் கொண்டவரும், ஆலால சுந்தரனை இரட்டைக் கவரி வீசக்கொண்டவரும், சுடுகாட்டை நடனமாடுமிடமாகக் கொண்டவரும், மந்தர மலையைப் போரிடுதற்குரிய வில்லாக வளைத்துக் கொண்டவரும், மாகாளனை வாசல் காப்பாளனாகக் கொண்டவரும், தந்திர மந்திரங்களில் பொருந்தி நின்று அருளுதலைக் கொண்டவரும் ஆகிய சிவபெருமானார் சமணரிடமிருந்து என்னை நீக்கி என்னை ஆட்கொண்டவர் ஆவார்.

<u>தனி - திருத்தாண்டகம்</u>

பாரிடங்கள் பலகருவி பயிலக் கொண்டார்
பவள நிறங்கொண்டார் பளிங்குங் கொண்டார்
நீரடங்கு சடைமுடிமேல் நிலாவுங் கொண்டார்
நீலநிறங் கோலநிறை மிடற்றிற் கொண்டார்
வாரடங்கு வனமுலையார் மைய லாகி
வந்திட்ட பலி கொண்டார் வளையுங் கொண்டார்
ஊரடங்க வொற்றிநகர் பற்றிக் கொண் டார்
உடலுறுநோய் தீர்த்தென்னை யாட்கொண் டாரே. **#945**

பூதகணங்கள் பல இசைக் கருவிகளையும் இயக்கக் கொண்டவரும், மேனியில் பவளநிறத்தையும் வெண்ணீற்றுப் பூச்சில் பளிங்கு நிறத்தையும் கொண்டவரும், கங்கை தங்கும் சடைமுடிமேல் பிறைச் சந்திரனையும் கொண்டவரும், அழகு நிறைந்த மிடற்றினில் நீலநிறம் கொண்டவரும், கச்சிற்குள் அடங்கும் அழகிய முலையாராகிய தாருகாவன முனிபத்தினியர் காதலால் மயக்கம் கொண்டு வந்திட்ட பிச்சையுடன் அவர்களுடைய கைவளையல்களையும் கொண்டவரும் எல்லா ஊர்களும் தம் ஆட்சியில் அடங்கியிருக்கத் திருஒற்றியூரைத் தமக்கு இடமாகப் பற்றிக் கொண்டவருமாகிய சிவபெருமானார் என் உடலிற் பொருந்திய சூலை நோயைத் தீர்த்து என்னை ஆட்கொண்டவர் ஆவார்.

தனி - திருத்தாண்டகம்

அணிதில்லை அம்பலமா டரங்காக் கொண்டார்
ஆலால வருநஞ்சம் அமுதாக் கொண்டார்
கணிவளர்தார்ப் பொன்னிதழிக் கமழ்தார் கொண்டார்
காதலார் கோடிகலந் திருக்கை கொண்டார்
மணிபணத்த அரவந்தோள் வளையாக் கொண்டார்
மால்விடைமேல் நெடுவீதி போதக் கொண்டார்
துணிபுலித்தோ லினையாடை யுடையாக் கொண்டார்
சூலங்கைக் கொண்டார்தொண் டெனைக்கொண் டாரே. **#946**

அழகிய தில்லை அம்பலத்தைத் தாம் ஆடும் அரங்காகக் கொண்டவரும், கடலில் வந்த ஆலால நஞ்சினை அமுதாகக் கொண்டவரும், அழகு மிகுகின்ற சரங்களாகிய பொன் போன்ற கொன்றை மலராலாகிய மணம் கமழ்கின்ற மாலையைக் கொண்டவரும், விருப்பம் நிறைந்த கோடி என்றதலத்தில் கூடி இருத்தலைக் கொண்டவரும், மாணிக்கத்தோடு கூடிய படத்தையுடைய பாம்பினைத் தோள்வளையாகக் கொண்டவரும், மேற் கொண்டு நீண்ட வீதியில் வருதற்குப் பெரிய இடபத்தைக் கொண்டவரும், உரித்த புலியினது தோலை உத்தரியமாகவும் உடையாகவும் கொண்டவரும், சூலத்தைக் கையில் கொண்டவருமாகிய சிவபெருமானார் என்னைத் தமக்கு அடிமையாகக் கொண்டவராவார்.

தனி - திருத்தாண்டகம்

படமூக்கப் பாம்பணையா னோடு வானோன்
பங்கயனென் றங்கவரைப் படைத்துக் கொண்டார்
குடமூக்கிற் கீழ்க்கோட்டங் கோயில் கொண்டார்
கூற்றுதைத்தோர் வேதியனை உய்யக் கொண்டார்
நெடுமூக்கிற் கரியினுரி மூடிக் கொண்டார்

நினையாத பாவிகளை நீங்கக் கொண்டார்
இடமாக்கி யிடைமருதுங் கொண்டார் பண்டே
யென்னைஇந்நாள் ஆட்கொண்டஇறைவர் தாமே. **#947**
படத்தையும் கொடுமைக் குணத்தையுமுடைய பாம்பைப் படுக்கையாகக் கொண்ட திருமாலையும் இந்திரனையும் பங்கயத்துப் பிரமனையும் தம் விருப்பப்படி படைத்துக் கொண்ட வரும், குடமூக்கிற் கீழ்க் கோட்டத்தைக் கோயிலாகக் கொண்டவரும், கூற்றுவனை உதைத்து ஒப்பற்ற வேதியனாம் மார்க்கண்டேயனை வாழக் கொண்டவரும், துதிக்கையை உடைய யானையினது தோலினை உடலில் போர்த்திக்கொண்டவரும், தம்மை நினையாத பாவிகளை நீங்கக் கொண்டவரும், இடைமருதினைத் தமக்கு இடமாகக் கொண்டவரும், ஆகிய சிவபெருமானார் என்னை இந்நாள் ஆட்கொண்ட இறைவர் ஆவார்.

<u>தனி - திருத்தாண்டகம்</u>

எச்சனிணத் தலைகொண்டார் பகன்கண் கொண்டார்
இரவிகளி லொருவன்பல் லிறுத்துக் கொண்டார்
மெச்சன்வியாத் திரன்தலையும் வேறாக் கொண்டார்
விறலங்கி கரங்கொண்டார் வேள்வி காத்த
உச்சநமன் தாளறுத்தார் சந்திரனை யுதைத்தார்
உணர்விலாத் தக்கன்றன் வேள்வி யெல்லாம்
அச்சமெழ அழித்துக்கொண் டருளுஞ் செய்தார்
அடியேனை யாட்கொண்ட அமலர் தாமே. **#948**
வேள்வித் தெய்வத்தின் நிணம் பொருந்திய தலையைக் கொண்டவரும், சூரியர்களில் ஒருவனாகிய பகனது கண்ணைக் கொண்டவரும், சூரியர்களில் மற்றொருவனுடைய பற்களை உடைத்து ஒறுத்தலைக் கொண்டவரும், தன்னையே மெச்சினவனாய், மாறான, வழியல்லாத வழியிற் சென்ற தக்கன் தலையை வேறாகக் கொண்டவரும், வெற்றியுடைய அக்கினி தேவனின் கரத்தைக் கொண்டவரும், வேள்வியைக் காத்து நின்ற வெற்றியில் உயர்ந்த இயமனுடைய தாளை அறுத்தவரும், சந்திரனை உதைத்தவரும், அறிவில்லாத தக்கனுடைய வேள்வி முழுவதையும் அதில் ஈடுபட்டார் அனைவருக்கும் அச்சம் உண்டாக அழித்துப்பின் அனைவருக்கும் அருள் செய்தவரும் ஆகிய சிவபெருமானார் அடியேனை ஆட்கொண்ட அமலர் ஆவார்.

<u>தனி - திருத்தாண்டகம்</u>

சடையொன்றிற் கங்கையையுந் தரித்துக் கொண்டார்
சாமத்தின் இசைவீணை தடவிக் கொண்டார்

உடையொன்றிற் புள்ளியுழைத் தோலுங் கொண்டார்
உள்குவார் உள்ளத்தை ஒருக்கிக் கொண்டார்
கடைமுன்றிற் பலிகொண்டார் கனலுங் கொண்டார்
காபால வேடங் கருதிக் கொண்டார்
விடைவென்றிக் கொடியதனில் மேவக் கொண்டார்
வெந்துயரந் தீர்த்தென்னை யாட்கொண் டாரே. #949

தன் சடைகள் பலவற்றுள் ஒன்றிடத்தே கங்கையை அடக்கித் தரித்துக் கொண்டவரும், வீணையைத் தடவிச் சாம வேதத்தின் இசையைக் கொண்டவரும், புள்ளி மான் தோலை உடை என்னும் ஒரு தன்மையில் ஏற்றுக்கொண்டவரும், தம்மை நினைவார் உள்ளத்தைத் தம்மிடத்து ஒருங்கிநிற்கும்படி செய்து கொண்டவரும், வீட்டு வாசல் தோறும் பிச்சை கொண்டவரும், கையில் கனல் கொண்டவரும், காபால வேடத்தை விரும்பிக் கொண்டவரும், இடபத்தைத் தன் வெற்றிக் கொடியில் பொருந்தக் கொண்டவரும், ஆகிய சிவபெருமானார் என் கொடிய துயரங்களைத் தீர்த்து என்னை ஆட்கொண்டவர் ஆவார்.

<u>தனி - திருத்தாண்டகம்</u>

குராமலரோ டராமதியஞ் சடைமேற் கொண்டார்
குடமுழநந் தீசனைவா சகனாக் கொண்டார்
சிராமலைதஞ் சேர்விடமாத் திருந்தக் கொண்டார்
தென்றல்நெடுந் தேரோனைப் பொன்றக் கொண்டார்
பராபரனென் பதுதமது பேராக் கொண்டார்
பருப்பதங் கைக்கொண்டார் பயங்கள் பண்ணி
இராவணனென் றவனைப்பேர் இயம்பக் கொண்டார்
இடருறுநோய் தீர்த்தென்னை யாட்கொண் டாரே. #950

குரா மலர் பாம்பு, பிறை இவற்றைச் சடைமேல் கொண்டவரும், நந்தீசனைக் குடமுழா வாசிப்பவனாகக் கொண்டவரும், சிராமலையைத் தாம் சேர்வதற்குத் திருந்த அமைந்த இடமாகக் கொண்டவரும், தென்றலைத் தனது நெடிய தேராகக் கொண்ட மன்மதன் அழியச் சினத்தைக் கொண்டவரும், பராபரன் என்பதுதம் பெயராக அமையக் கொண்டவரும், மேருமலையை வில்லாகக் கையில் கொண்டவரும், பயங்கள் பலவற்றை உண்டாக்கி இராவணன் என்று பேர் இயம்ப அவனைக் கொண்டவரும் ஆகிய சிவபெருமானார் என் துன்பந்தரும் நோய்களைத் தீர்த்து என்னை ஆட்கொண்டவர் ஆவார்.

திருவினாத் - திருத்தாண்டகம்

திருவினாத் - திருத்தாண்டகம்

திருவினாத் - திருத்தாண்டகம், திருத்தாண்டகம்

அண்டங் கடந்த சுவடு முண்டோ
அனலங்கை யேந்திய ஆட லுண்டோ
பண்டை யெழுவர் படியு முண்டோ
பாரிடங்கள் பலசூழப் போந்த துண்டோ
கண்ட மிறையே கறுத்த துண்டோ
கண்ணின்மேற் கண்ணொன் றுடைய துண்டோ
தொண்டர்கள் சூழத் தொடர்ச்சி யுண்டோ
சொல்லீரெம் பிரானாரைக் கண்ட வாறே. **#951**

அன்பர்களே! நீங்கள் கண்ட எம்பிரானிடம் அண்டம் கடந்து நின்றதற்கான அடையாளம் உண்டோ? அங்கையில் அனலேந்திய ஆடலுண்டோ? பண்டை முனிவர் எழுவர் பணி செய்யும் படியும் உண்டோ? பூதங்கள் பல சூழப் போதல் உண்டோ? கண்டம் சிறிதே கறுத்தது உண்டோ? கண்களுக்கு மேலாக நெற்றியில் கண் ஒன்று உண்டோ? தொண்டர் சூழும் அத்தொடர்ச்சி உண்டோ? நீங்கள் அவனைக் கண்டவண்ணம் எமக்குச் சொல்வீராக.

திருவினாத் - திருத்தாண்டகம்

எரிகின்ற இளஞாயி றன்ன மேனி
யிலங்கிழையோர் பாலுண்டோவெள்ளே றுண்டோ
விரிகின்ற பொறியரவத் தழலு முண்டோ
வேழத்தி னுரியுண்டோ வெண்ணூ லுண்டோ
வரிநின்ற பொறியரவச் சடையு முண்டோ
அச்சடைமேல் இளமதியம் வைத்த துண்டோ
சொரிகின்ற புனலுண்டோ சூலம் உண்டோ
சொல்லீரெம் பிரானாரைக் கண்ட வாறே. **#952**

அன்பர்களே! நீங்கள் கண்ட எம்பிரானிடம் இள ஞாயிறு போன்று ஒளிவிடும் அவன் உடலின் ஒருபால் விளங்குகின்ற அணியினை உடைய உமாதேவி உண்டோ? வெள்ளிய இடப முண்டோ? பரவுகின்ற தீப்பொறியும் ஒலியுமுடைய தழலுமுண்டோ? வேழத்தின் தோல் உண்டோ? வெண்ணூல் உண்டோ? வரியும் புள்ளியும் பொருந்திய பாம்பைக் கொண்ட சடையுமுண்டோ? அச்சடை மேல் வைக்கப்பட்ட இளமதியும் உண்டோ? சடையிலிருந்து ஒழுகும் நீர் உண்டோ? கையில் சூலும் உண்டோ? நீங்கள் அவனைக் கண்ட வண்ணம் எமக்குச்

சொல்வீராக.

திருவினாத் - திருத்தாண்டகம்

நிலாமாலை செஞ்சடைமேல் வைத்த துண்டோ
நெற்றிமேற் கண்ணுண்டோ நீறு சாந்தோ
புலால்நாறு வெள்ளெலும்பு பூண்ட துண்டோ
பூதந்தற் சூழ்ந்தனவோ போரே றுண்டோ
கலாமாலை வேற்கண்ணாள் பாகத் துண்டோ
கார்க்கொன்றை மாலை கலந்த துண்டோ
சுலாமாலை யாடரவந் தோள்மே லுண்டோ
சொல்லீரெம் பிரானாரைக் கண்ட வாறே. **#953**

அன்பர்களே! நீவிர் கண்ட எம்பெருமான் பிறைக் கண்ணியைச் செஞ்சடை மேல்வைத்ததுண்டோ? அவனுக்கு நெற்றியில் கண்ணுண்டோ? பூசும் நீறுதான் அவனுக்குச் சந்தனமோ? புலால் நாறும் வெள்ளெலும்புமாலையை அவன் பூண்டதுண்டோ? பூதங்கள் அவனைச் சூழ்ந்ததுண்டோ? போர்க்குணமுடைய இடபம் அருகில் உண்டோ? போர் செய்யும் தன்மை வாய்ந்தனவும், வேல்போன்றனவுமாகிய கண்களையுடைய உமையம்மை அவன் பாகமாகப் பொருந்திய துண்டோ? கார்காலத்து மலரும் கொன்றை மாலை அவனுடலில் கலந்ததுண்டோ? வளைந்தமாலை போல்வதும் படமெடுத்தாடுவதும் ஆகிய பாம்பு தோள்மேல் விளங்குதல் உண்டோ? அவனை நீங்கள் கண்டவண்ணம் எமக்குக் கூறுவீராக.

திருவினாத் - திருத்தாண்டகம்

பண்ணார்ந்த வீணை பயின்ற துண்டோ
பாரிடங்கள் பலசூழப் போந்த துண்டோ
உண்ணா வருநஞ்ச முண்ட துண்டோ
ஊழித்தீ யன்ன ஒளிதா னுண்டோ
கண்ணார் கழல்காலற் செற்ற துண்டோ
காமனையுங் கண்ணழலாற் காய்ந்த துண்டோ
எண்ணார் திரிபுரங்க ளெய்த துண்டோ
எவ்வகையெம் பிரானாரைக் கண்ட வாறே. **#954**

அன்பர்காள்! நீவிர் கண்ட எம்பெருமான் பண் நிறைந்த வீணையை வாசித்துப் பழகியதுண்டோ? பூதங்கள் பல சூழ்ந்து வர வெளியே போந்ததுண்டோ? உண்ணற்காகாத கொடிய நஞ்சை உண்டதுண்டோ? ஊழித் தீப் போன்ற ஒளி அவன்பால் உண்டோ? கண், மகிழ்வால் நிறைதற்குக் காரணமான திருவடியால் அவன் காலனை உதைத்ததுண்டோ? மன்மதனையும் நெற்றிக்கண்ணிடத்துத் தோன்றிய

நெருப்பால் அவன் அழித்ததுண்டோ? பகைவருடைய திரிபுரங்கள் மேல் அவன் அம்பு எய்ததுண்டோ? நீங்கள் அவனை எவ்வகையில் கண்டீர்கள்?

திருவினாத் - திருத்தாண்டகம்

நீறுடைய திருமேனி பாக முண்டோ
நெற்றிமே லொற்றைக்கண் முற்று முண்டோ
கூறுடைய கொடுமழுவாள் கையி லுண்டோ
கொல்புலித்தோ லுடையுண்டோகொண்ட வேடம்
ஆறுடைய சடையுண்டோ அரவ முண்டோ
அதனருகே பிறையுண்டோ அளவி லாத
ஏறுடைய கொடியுண்டோ இலய முண்டோ
எவ்வகையெம் பிரானாரைக் கண்ட வாறே. **#955**

அன்பர்காள்! நீவிர் கண்ட எம்பெருமானுக்குத் திருமேனியில் நீறு பூசிய பாகமுண்டோ? நெற்றியில் நெருப்புமிகும் ஒரு கண்ணுமுண்டோ? கூறுபடுத்துங்கொடிய மழுவாயுதம் கையிலுண்டோ? கொல்லும் புலியது தோலாகிய உடையுண்டோ? கங்கையைத் தாங்கும் சடையுண்டோ? அச்சடையிடத்துப் பாம்பு உண்டோ? அப் பாம்பின் அருகே பிறையுண்டோ? பெருமை அளவிட முடியாத இடபக் கொடியுண்டோ? கூத்துமுண்டோ? நீங்கள் அவன் கொண்ட எவ்வகை வேடத்தில் அவனைக் கண்டீர்கள்?.

திருவினாத் - திருத்தாண்டகம்

பட்டமுந் தோடுமோர் பாகங் கண்டேன்
பார்திகழப் பலிதிரிந்து போதக் கண்டேன்
கொட்டிநின் றிலயங்க ளாடக் கண்டேன்
குழைகாதிற் பிறைசென்னி யிலங்கக் கண்டேன்
கட்டங்கக் கொடிதிண்டோள் ஆடக் கண்டேன்
கனமழுவாள் வலங்கையில் இலங்கக் கண்டேன்
சிட்டனைத் திருவால வாயிற் கண்டேன்
தேவனைக் கனவில்நான் கண்ட வாறே. **#956**

அன்பர்காள்! சிவபெருமானை நான் கனவில் கண்டவாறே நனவிலும் அவன் நெற்றிப்பட்டமும் செவித்தோடும் ஓரொருபாகத்தில் விளங்கக் கண்டேன், நிலம் அழகுபெறுமாறு பிச்சை பெறப்பல இடங்களிலும் திரிந்தலையக் கண்டேன். வாச்சியங்களைப் பூதகணங்கள் இயம்பப் பலவகைக் கூத்துக்களை ஆடக் கண்டேன். காதிற்குழையும் சென்னியில் பிறையும் விளங்கக் கண்டேன், உயர்த்திய மழுக்கொடி திண்டோளை ஒட்டி ஆடக்கண்டேன்; வலிமை மிக்க மழுவாயுதம் வலக்கையில் திகழக்

கண்டேன்; மேலான அவனைத் திருவாலவாயிற் கண்டேன். அவனை நீவிர் கண்டவாறு எங்ஙனம்?.

திருவினாத் - திருத்தாண்டகம்

அலைத்தோடு புனற்கங்கை சடையிற் கண்டேன்
அலர்கொன்றைத் தாரணிந்த வாறு கண்டேன்
பலிக்கோடித் திரிவார்கைப் பாம்பு கண்டேன்
பழனம் புகுவாரைப் பகலே கண்டேன்
கலிக்கச்சி மேற்றளியே யிருக்கக் கண்டேன்
கறைமிடறுங் கண்டேன் கனலுங் கண்டேன்
வலித்துடுத்த மான்தோல் அரையிற் கண்டேன்
மறைவல்ல மாதவனைக் கண்ட வாறே. **#957**

மறைவல்லவனும், மாதவத்தவனும் ஆகிய சிவபெருமானுடைய சடையில் அலைவீசி ஓடும் நீர்ப் பெருக்கையுடைய கங்கையைக் கண்டேன். கொன்றை மலரால் ஆன மாலையை அவன் அணிந்த தன்மையைக் கண்டேன். பிச்சைக்கு ஓடித்திரியும் அவன் கையில் பாம்பைக் கண்டேன். பகற்பொழுதில் பழனத்திருப்பதியில் அவன் சென்றுபு குதலைக் கண்டேன். அவன் ஆரவாரம் மிக்க கச்சி மேற்றளியில் மேவி இருக்கக் கண்டேன். அவனது கறைபொருந்திய மிடற்றைக் கண்டேன்; கையில் கனலும் கண்டேன். அரையில் இறுக்கி உடுத்த மான் தோலைக் கண்டேன். அவனை நான் கண்டவாறு இது. அவனை நீவிர் கண்டவாறு எங்ஙனம்?

திருவினாத் - திருத்தாண்டகம்

நீறேறு திருமேனி நிகழக் கண்டேன்
நீள்சடைமேல் நிறைகங்கை யேறக் கண்டேன்
கூறேறு கொடுமழுவாள் கொள்ளக் கண்டேன்
கொடுகொட்டி கையலகு கையிற் கண்டேன்
ஆறேறு சென்னியணி மதியுங் கண்டேன்
அடியார்கட் காரமுத மாகக் கண்டேன்
ஏறேறி யிந்நெறியே போதக் கண்டேன்
இவ்வகையெம் பெருமானைக் கண்ட வாறே. **#958**

அன்பர்காள்! எம்பெருமான் திருநீறு திகழும் திருமேனியுடன் உலவக் கண்டேன். அவன் நீண்ட சடைமேல் நீர்நிறை கங்கை பொருந்தக் கண்டேன். கூறுபடுத்தலைப் பொருந்திய கொடிய மழுவாயுதத்தை அவன் கொள்ளக் கண்டேன். கொடுகொட்டி என்னும் வாச்சியத்தையும் கையலகு என்னும் ஆயுதத்தையும் அவன் கையிற் கண்டேன். ஆறு பொருந்திய அவன் தலையில் அழகிய மதியையும் கண்டேன். அவன்

அடியார்க்கு ஆரமுதம் போன்று இன்பஞ் செய்தலைக் கண்டேன். அவன் இடபவாகனமேறி இவ்வழியே வரக்கண்டேன். அவனை இவ்வகையில் யான் கண்டேன். அவனை நீவிர் கண்டவாறு எங்ஙனம்?.

திருவினாத் - திருத்தாண்டகம்

விரையுண்ட வெண்ணீறு தானு முண்டு
வெண்டலைகை யுண்டொருகை வீணை யுண்டு
சுரையுண்டு சூடும் பிறையொன் றுண்டு
சூலமுந் தண்டுஞ் சுமந்த துண்டு
அரையுண்ட கோவண ஆடை யுண்டு
வலிக்கோலுந் தோலு மழகா வுண்டு
இரையுண் டறியாத பாம்பு முண்டு
இமையோர் பெருமா னிலாத தென்னே. **#959**

அன்பர்காள்! இமையோர் பெருமானுடலில் மணமுடைய வெண்ணீறு உண்டு. அவன் கைகளில் ஒன்றில் வெண்டலையும் ஒன்றில் வீணையுமுண்டு. சுரைபோன்று தோன்றும் சடை முடியுண்டு அவனுக்கு, அதில் அவன் சூடும் பிறை ஒன்றுண்டு. அவன் சூலாயுதத்தையும் தண்டாயுதத்தையும் சுமந்ததுண்டு, அவனுக்கு இடுப்பில் கட்டிய கோவண ஆடையுண்டு, அவன்பால் ஊன்றுகோலும் போர்க்குந்தோலும் அழகாக உண்டு. அவனிடத்து இருக்கும் பாம்பு பசி இல்லாததாகலின் இரையுண்டறியாதது. அவனிடம் எல்லாம் உள. இவ்வாறு அவனை நான் கண்டேன். நீவிர் அவனைக் கண்டவாறு எங்ஙனம்?

திருவினாத் - திருத்தாண்டகம்

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஓரூர னல்லன் ஓருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே. **#960**

இறைவன் மைபூசிய கண்ணளாம் உமையம்மையும் தானுமாகிக் கச்சி மயானத்து வாழ்பவனும் நீண்ட சடையினனும் ஆவான்" என்று கூறின் அவன் அவ்வளவே ஆம் தன்மையன் அல்லன். அவன் எப்பொருளையும் தன்பொருட்டு ஏற்க இசைதலை உடையான் அல்லன். உலகப் பொருள்களில் ஒருவன் அல்லன்; ஓரூர்க்கே உரியனல்லன். யாதொரு பொருளும் தனக்கு உவமையாதல் இல்லாதவன். அதனால் அவனுடைய

அந்தத் தன்மையையும் அந்த நிறத்தையும் அந்த வடிவத்தையும் அவன் திருவருளையே கண்ணாகப் பெற்றுக் காணலாமேயல்லாமல் மற்றைப் பொருள்கள் போலப் பிறரொருவர் இன்னவகையுட்பட்டவன், இன்ன நிறத்தையுடையவன், இன்ன வடிவத்தை உடையவன் என்று இவனைச் சொல்லோவியமாகவோ எழுத்தோவியமாகவோ எழுதிக் காட்டல் இயலாது.

திருவினாத் - திருத்தாண்டகம்

பொன்னொத்த மேனிமேற் பொடியுங் கண்டேன்
புலித்தோ லுடைகண்டேன் புணரத் தன்மேல்
மின்னொத்த நுண்ணிடையாள் பாகங் கண்டேன்
மிளிர்வதொரு பாம்பும் அரைமேற் கண்டேன்
அன்னத்தே ரூர்ந்த அரக்கன் தன்னை
அலற அடர்த்திட்ட அடியுங் கண்டேன்
சின்ன மலர்க்கொன்றைக் கண்ணி கண்டேன்
சிவனைநான் சிந்தையுட் கண்ட வாறே. **#961**

அன்பர்காள்! நான் சிவபெருமானை என் சிந்தனையுட் கண்டவாறே என் கண்ணிலும் அவன் பொன்னார் மேனி மேல் திருநீற்றுப் பொடியும் கண்டேன்; புலித்தோலாகிய உடை கண்டேன். தன்னிடப்பாகத்தில் மின்னலைப் போன்ற நுண்ணிய இடையை உடைய உமையாள் பொருந்தக் கண்டேன. ஒளியுடைப் பாம்பு ஒன்றையும் அரைமேற்கண்டேன். அன்னம்போன்ற வெள்ளிய தேரினை ஊர்ந்த அரக்கன் அலற அவனை நசுக்கிய திருவடியையும் கண்டேன். அடையாளப் பூவாகிய கொன்றை மலராலான தலை மாலையையும் கண்டேன். நீவிர் அவனைக் கண்டவாறு எங்ஙனம்?

திருமறுமாற்றத்-திருத்தாண்டகம்

திருமறுமாற்றத்-திருத்தாண்டகம்

திருமறுமாற்றத்-திருத்தாண்டகம், திருத்தாண்டகம்

நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம்நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே. **#962** ★★★★★

நாம் வேறு யார்க்கும் அடிமை அல்லோம்; இயமனை அஞ்சோம்; நரகத்தில் புக்கு இடர்ப்படோம்; பொய்யும் இல்லோம்; என்றும் களிப்புற்றிருப்போம்; பிணியாவது இஃது என அறியோம்; வேறு யாரையும் பணிவோம் அல்லோம்; எந்நாளும் எமக்குள்ளது இன்பமே அன்றித் துன்பமில்லை. தான் யார்க்கும் அடிமையாகாத தன்மையனும், நல்ல சங்க வண்குழையை ஒரு காதில் உடைய கோமானும் ஆகிய சங்கரனுக்கு நாம் என்றும் மீளாத அடிமையாய் அப்பொழுது அலர்ந்த மலர் போன்ற அவன் உபய சேவடிகளையே அடைக்கலமாக அடைந்தோம் ஆகலின்.

திருமறுமாற்றத்-திருத்தாண்டகம்

அகலிடமே இடமாக ஊர்கள் தோறும்
அட்டுண்பார் இட்டுண்பார் விலக்கார் ஐயம்
புகலிடமாம் அம்பலங்கள் பூமி தேவி
யுடன்கிடந்தாற் புரட்டாள்பொய் யன்று மெய்யே
இகலுடைய விடையுடையான் ஏன்று கொண்டான்
இனியேதுங் குறைவிலோம் இடர்கள் தீர்ந்தோம்
துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவா சொல்லும்
சொற்கேட்கக் கடவோமோ துரிசற் றோமே. **#963**

பரந்த பூமிமுழுதும் எமக்கு இடமாகும். ஊர்கள் தோறும் தம் உணவை அட்டுண்ணும் இல்லறத்தான் அதனைப் பிறர்க்கு இட்டு அல்லது உண்ணாராதலின் எமக்கு உணவுப் பிச்சையிடுதலை அவர்கள் ஒருபோதும் விலக்கார். அம்பலங்கள் யாம் தங்கும் இடங்களாகும். யாம் தன்னுடன் கிடந்தால் பூமிதேவி எம்மைப் புரட்டி எறியாள். இது பொய்யன்று, மெய்யே. போர்விடையை ஊர்தியாக உடைய

சிவபெருமானார் எம்மைத் தம் அடிமையாக ஏற்றுக் கொண்டார். அதனால் இனியாம் ஏதும் குறைவில்லேம்; துன்பமாயின எல்லாம் தீர்ந்தேம். குற்றமற்றேம் ஆயின் யாம் சிறந்த உடைகளை உடுத்துப் பொன்னாபரணங்களைப் பூண்டு திரியும் அரசர் சொல்லும் சொல்லை ஏற்க வேண்டிய கடப்பாடு உடையேம் அல்லேம்.

திருமறுமாற்றத்-திருத்தாண்டகம்

வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோம்
மாதேவா மாதேவா என்று வாழ்த்தி
நீராண்ட புரோதாயம் ஆடப் பெற்றோம்
நீறணியுங் கோலமே நிகழப் பெற்றோம்
காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்
கன்மனமே நன்மனமாய்க் கரையப் பெற்றோம்
பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணிகேட்கக் கடவோமோ பற்றற் றோமே. **#964**

கச்சணிந்த கொங்கை மாதருடன் சேர்ந்து வாழும் இல்வாழ்க்கையில் பொருந்தோம். மகாதேவா மகாதேவா என்று பலகாலும் அவனை வாழ்த்தி விடியற்காலத்து நீராடப் பெற்றோம், திருநீறணியும் சைவத் திருக்கோலமே எம்பால் நிலவப் பெற்றோம். பண்டு கல்லாய்த் திகழ்ந்த மனம் கரிய மேகம் பொழியும் மழை போலக் கண்ணீர் சோருமாறு நன்மனமாய்க் கரையப் பெற்றோம். ஆகவே உலகியற் பொருளில் பற்றற்றேமாகிய யாம் பூமி முழுவதையும் ஆண்டு ஆனை ஏறி வரும் அரசர் ஏவும் பணிகளை ஏற்க வேண்டிய கடப்பாட்டினேம் அல்லேம்.

திருமறுமாற்றத்-திருத்தாண்டகம்

உறவாவார் உருத்திரபல் கணத்தி னோர்கள்
உடுப்பனகோ வணத்தொடுகீ ளுளவா மன்றே
செறுவாருஞ் செறமாட்டார் தீமை தானும்
நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல்லோம்
நறவார்பொன் னிதழிநறுந் தாரோன் சீரார்
நமச்சிவா யச்சொல்ல வல்லோம் நாவால்
சுறவாருங் கொடியானைப் பொடியாக் கண்ட
சுடர்நயனச் சோதியையே தொடர்வுற் றோமே. **#965**

சிவவேடத்தையுடைய சிவனடியார்கள் எம் உறவினர் ஆவர். கோவணமும் கீளும் யாம் உடுப்பனவாய் உள்ளன. ஆகவே பகைவரும் எம்மை வெகுளார். தேன் நிறைந்து பொன் போன்று திகழும் நல்ல கொன்றை மாலையணிந்த புகழுடைய சிவபெருமானுடைய நமச்சிவாய மந்திரத்தை நாவால் சொல்ல வல்லேமாய்ச் சுறவுக்கொடியானாகிய

மன்மதனைப் பொடியாக அக்கினி நேத்திரத்தை விழித்த சோதிவடிவினனையே தொடர்வுற்றே மாதலின், தீமை, நன்மையாய்ச் சிறக்கப் பிறப்பிற் செல்லேம் ஆயினேம்.

திருமறுமாற்றத்-திருத்தாண்டகம்

என்றும்நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோ மல்லோ மன்றே
உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே. **#966**

சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோமாய், இறந்த பிரமவிட்டுணுக்களுடைய தலைகளை மாலையாகக் கோத்து அணிந்த தலையையுடைய புண்ணியனை நண்ணிய புண்ணியத்து உள்ளோமாதலின் யாவர்க்கும் யாம் என்றும் பின்வாங்குவோம் அல்லோம். இப்பரந்த பூமியில் எமக்கு எதிராவார் யாரும் இல்லை. யாம் தேடிச்சென்று சிறு தெய்வங்களைச் சேர்ந்து தொழுவோம் அல்லோம். யாம் ஒன்றினாலும் குறையுடையேம் அல்லேம். அதனால் மிக்க பிணிகள் எம்மைத் துன்புறுத்தலை விட்டு ஓடிப்போயின.

திருமறுமாற்றத்-திருத்தாண்டகம்

மூவுருவின் முதலுருவாய் இருநான் கான
மூர்த்தியே யென்றுமுப் பத்து மூவர்
தேவர்களும் மிக்கோருஞ் சிறந்து வாழ்த்தும்செம்பவளத் திருமேனிச் சிவனே யென்னும்
நாவுடையார் நமையாள வுடையா ரன்றே
நாவலந்தீ வகத்தினுக்கு நாத ரான
காவலரே யேவி விடுத்தா ரேனுங்
கடவமல்லோம் கடுமையொடு களவற் றோமே. **#967**

அயன், அரி, அரன் என்னும் மூவுருவிற்கும் முதலுருவாயவனே! அட்டமூர்த்தியே! முப்பத்து மூவர் தேவர்களும் அவர்களின் மிக்க இருடியரும் எக்காலத்தும் மகிழ்ச்சி மிக்கு வாழ்த்தும் செம்பவளத் திருமேனியுடைய சிவனே என்று போற்றும் நாவுடையாரே நம்மை அடிமை கொண்டு ஆள உடையாராவார். அதனால் கடிதாய செயலும் களவும் அற்றோமாகிய யாம் நாவலந் தீவு முழுவதற்கும் தலைவரான அரசரே எம்மை அழைத்து வருமாறு தம் ஏவலரை ஏவி விடுத்தாராயினும்

அவர் ஆணை வழி நிற்கும் கடப்பாட்டினேம் அல்லேம்.

திருமறுமாற்றத்-திருத்தாண்டகம்

நிற்பனவும் நடப்பனவும் நிலனும் நீரும்
நெருப்பினொடு காற்றாகி நெடுவா னாகி
அற்பமொடு பெருமையுமாய் அருமை யாகி
அன்புடையார்க் கௌமையதாய் அளக்க லாகாத்
தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானும் யானும்
ஆகின்ற தன்மையனை நன்மை யோடும்
பொற்புடைய பேசக் கடவோம் பேயர்
பேசுவன பேசுதுமே பிழையற் றோமே. **#968**

நிற்பனவும், நடப்பனவும், நிலனும், நீரும், நெருப்பும், காற்றும், நெடுவானும், புன்மையதும், பெரியதும், அரியதும், அன்புடையார்க்கௌயதும், அளக்கலாகாத் தற்பரமும், சதாசிவமும் ஆகித் தானும் யானும் ஆகின்ற தன்மையுடைய சிவபெருமானை அவன் நன்மைகளையும், பொலிவுடைய தன்மைகளையும் புகழ்ந்து பேசக் கடவோம்; அதனால் பிழையற்றோம். அரசனுக்கு வணங்கி நின்று அவனுக்கேற்பப் பேயர் பேசுமாறு போலயாம் பேசுவமோ?

திருமறுமாற்றத்-திருத்தாண்டகம்

ஈசனையெவ் வுலகினுக்கும் இறைவன் தன்னை
இமையவர்தம் பெருமானை எரியாய் மிக்க
தேசனைச் செம்மேனி வெண்ணீற் றானைச்சிலம்பரையன்
பொற்பாவை நலஞ்செய் கின்ற
நேசனை நித்தலும் நினையப் பெற்றோம்நின்றுண்பார் எம்மை
நினையச் சொன்ன
வாசக மெல்லாம் மறந்தோ மன்றேவந்தீரார் மன்னவனா வான்றா
னாரே. **#969**

எவ்வுலகினுக்கும் ஈசனும், இறைவனும், தேவர்கள் தலைவனும், எரிபோன்று மிக்கு ஒளிரும் தேசனும், செம்மேனியிடத்து வெண்ணீற்றானும், மலையரையன் பொற்பாவை தன்னைக் காதலிக்க, தானும் அவளைக் காதலிக்கும் நேசனும் ஆகிய சிவபெருமானைத் தினமும் நினையப் பெற்றோம். அதனால் நின்றுண்ணும் சமணர் என்றும் மறவாதிருக்கும்படி எமக்குச் சொன்ன உறுதிபோலும் சொற்களை எல்லாம் யாம் மறந்தொழிந்தோம். இந்நிலையில் என்னிடம் வந்த நீர் யார்? மன்னன் ஆவான் தானும்யாரே?.

திருமறுமாற்றத்-திருத்தாண்டகம்

சடையுடையான் சங்கக் குழையோர் காதன்
சாம்பலும் பாம்பும் அணிந்த மேனி
விடையுடையான் வேங்கை அதள் மேலாடை
வெள்ளிபோற் புள்ளியுழை மான்தோல் சார்ந்த
உடையுடையான் நம்மை யுடையான் கண்டீர்
உம்மோடு மற்று முளராய் நின்ற
படையுடையான் பணிகேட்கும் பணியோ மல்லோம்
பாசமற வீசும் படியோம் நாமே. #970

சடையுடையானும் ஒருகாதில் விளங்கும் சங்கக் குழையானும், சாம்பலைப் பூசிப் பாம்பை அணிந்த மேனியானும், விடையுடையானும், புலித்தோலாம் மேலாடையானும், வெள்ளி போல் திகழும் புள்ளிகளையுடைய உழைமானின் தோலால் அமைந்த உடை உடையானும் ஆகிய சிவபெருமானே நம்மை அடிமையாக உடையான் ஆவான். அதனால் பாசத்தை முழுதும் உதறியெறியும் நிலையினை உடையோம். ஆகவே உம்மையும் மற்றுமுள்ள படை வீரர்களையுமுடைய அரசனுடைய ஆணைகேட்கும் தொழில் உடையோம் அல்லோம்.

திருமறுமாற்றத்-திருத்தாண்டகம்

நாவார நம்பனையே பாடப் பெற்றோம்
நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்
ஆவாஎன் றெமையாள்வான் அமரர் நாதன்
அயனொடுமாற் கறிவரிய அனலாய் நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை
சேர்ந்திருந்தான் தென்திசைக்கோன் தானே வந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலும்
குணமாகக் கொள்ளோம்எண் குணத்து ளோமே. #971

நாவிடத்து இன்பம் நிறையச் சிவபெருமானையே பாடப் பெற்றோம் அதனால் உடை உடாத சமணர் எம்மை விரும்பாது விலகப்பெற்றோம். அமரர் தலைவனாகிய சிவபெருமான் மனமிரங்கி எமை ஆள்வான். நான்முகனும் திருமாலும் அறிதற்கு அரிய அனற் பிழம்பாய் நீண்டவனும் தேவர்க்குத் தேவனுமாகிய சிவபெருமான் எம் சிந்தையில் மன்னி நின்றான். அதனால் அவனுக்குரிய எண் குணங்களை உடையேமாயினேம். ஆகவே இயமனே வந்து தன் தலைமையை உரைத்து எம்மைக் குற்றேவல் செய்க என்றாலும் அதனை எமக்குரிய நெறியாகக் கொள்ளோம்.

திருப்புகலூர்

திருப்புகலூர்

திருப்புகலூர், திருத்தாண்டகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அக்கினீசுவரர்.
தேவியார் : கருந்தார்க்குழலியம்மை.

எண்ணுகேன் என் சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. **#972**

புண்ணியா, அழகிய புகலூர் மேவிய புண்ணியனே, நினையுந்தன்மை உடையேனாகிய நான் எம்பெருமானாகிய நினது திருவடியை விரும்பி நினையின் அல்லது வேறு எதனை விரும்பி நினைவேன்? நினது கழலடியையே கைதொழுது காணின் அல்லது வேறு காட்சியில்லேன்; மற்றொரு பற்றுக்கோடும் இல்லேன். யான் வாழ்வதற்குப் பொருந்திய உறையுளாகிய இவ்வுடம்பிலே ஒன்பது வாசல் வைத்தாய். அவையாவும் ஒரு சேர அடைக்கப்படும் காலத்து மேற்குறித்தவாறு உன்னையே நினைதலையும் காணுதலையும் செய்யமாட்டேன். ஆதலின் அக்காலம் வாராதபடி இப்பொழுதே உன் திருவடிக்கே வருகின்றேன். என்னை ஏற்றுக் கொண்டருள்வாயாக.

திருப்புகலூர்

அங்கமே பூண்டாய் அனலா டினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்சடை யினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே. **#973**

திருப்புகலூர் மேவியதேவ தேவே! எலும்புகளை அணியாகப் பூண்டவனே, அனலாடீ, ஆதிரை நாண்மீனை உடையவனே, கல்லால

மர நிழலமர்ந்தோனே. ஆனேற்றை ஊர்ந்தவனே, குறைஒன்றுமில்லாத பரவியசடையினனே, பாம்பொடு திங்களை வைத்து வற்றின் பகை தீர்த்தாண்டவனே, தேவர் வேண்டப் பிறிது எண்ணம் ஒன்று இன்றியே சமுத்திரத்தில் தோன்றியநஞ் சினையுண்டு சாதலும் மூத்தலும் இல்லாத வலிய சிங்கமே! உன் திருவடிக்கே வருகின்றேன். என்னை ஏற்றுக் கொண்டருள்வாயாக.

திருப்புகலூர்

பையரவக் கச்சையாய் பால்வெண் ணீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ணா ரின்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்
மான்மறிகை ஏந்தினாய் வஞ்சக் கள்வர்
ஐவரையும் என்மேல் தரவ றுத்தாய்
அவர்வேண்டும் காரியமிங் காவ தில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. **#974**

அழகிய புகலூரில் மேவிய புண்ணியனே! பட நாகத்தைக் கச்சையாகக் கொண்டவனே, பால்போலும் வெள்ளிய திருநீற்றினாய், பளிக்குக் குழையினனே, பண்போலும் இன் சொல்லும் மை பூசிய கண்ணுமுடைய பார்வதியைப் பாகங்கொண்டவனே, மான் கன்றை ஏந்திய கையினனே, வஞ்சமிக்க கள்வரைப் போன்ற ஐம்புலன்களும் வஞ்சம் செய்தலை என்னினின்றும் நீக்கினை. அவை விரும்பும் காரியம் எனக்கு நன்மை பயக்குமாறு இல்லை. என்னுரை பொய்யுரையன்று: உன் திருவடிக்கே வருகின்றேன். என்னை ஏற்றுக்கொண்டு அருள்வாயாக.

திருப்புகலூர்

தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையாற் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க் கென்றும்
அருளாகி ஆதியாய் வேத மாகி
அலர்மேலான் நீர்மேலான் ஆய்ந்துங் காணாப்
பொருளாவாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. **#975**

அழகிய புகலூரில் மேவிய புண்ணியனே! தாங்கள் செய்து வந்த சிவ வழிபாட்டினை இடையிலேயே விட்டொழிந்த மயக்கத்தினராகிய திரிபுரத்தசுரரின் மூன்று மதிலும் தீயில் வேகுமாறு வில்லை வளைத்துச் செங்கணையால் அவற்றை அழித்த தேவனே! மயக்கமின்றி நின்னையே

வழிபடுவார் மனத்தில் ஏற்படும் மெலிவைத் தீர்ப்பவனே! தேவர்களுக்கு மருந்தாய் என்றும் அவருற்ற பிணி தீர்ப்பவனே! அருளே உருவமாகி எப்பொருட்கும் முதலாகிய வேதமானவனே! பிரமனும் திருமாலும் தேடியும் காணமுடியாத பொருளானவனே! உன் திருவடிக்கே வருகின்றேன். என்னை ஏற்றுக் கொண்டருள்வாயாக.

திருப்புகலூர்

நீரேறு செஞ்சடைமேல் நிலாவெண் டிங்கள்
நீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாரேறு படுதலையிற் பலிகொள் வானே
பண்டனங்கற் காய்ந்தானே பாவ நாசா
காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. **#976**

அழகிய புகலூரில் மேவிய புண்ணியனே! கங்கை தங்கிய செஞ்சடைமேல் நிலவையுடைய வெள்ளிய திங்களை நீங்காமல் உறையும்படி விரும்பிவைத்த நீதியனே! பருமை பொருந்திய படுதலையில் பிச்சை கொள்வானே! பண்டு மன்மதனைச் சுட்டு எரித்தவனே! பாவங்களை நாசம் செய்பவனே! கருமை பொருந்திய மேகம் போன்ற கண்டத்தை உடையவனே! கரியதும் கையுடையதுமாகிய களிறுகதற அதனை உரித்து அதன் தோலைப் போர்த்த போர்த்தொழில் வல்ல சிங்கமே! உன் திருவடிக்கே வருகின்றேன். என்னை ஏற்றுக் கொண்டருள்வாயாக.

திருப்புகலூர்

விரிசடையாய் வேதியனே வேத கீதா
விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச் சூராய்
திரிபுரங்கள் எரிசெய்த தேவ தேவேதிருவாரூர்த் திருமூலட் டானம் மேயாய்
மருவினியார் மனத்துளாய் மாகா ளத்தாய்வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தா யென்றும்
புரிசடையாய் உன்னடிக்கே போது கின்றேன்பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. **#977**

அழகிய புகலூரில் மேவிய புண்ணியனே! விரி சடையாய்! வேதத்தாற் புகழப்படுவோனே! வேதத்தைப் பாடுபவனே! விரிந்த பொழிலால் சூழப்பட்ட வெண்காட்டினனே! மீயச்சூரை உடையவனே! திரிபுரங்களை எரித்தழித்த தேவதேவனே! திருவாரூர்த்

திருமூலட்டானத்தில் விரும்பி உறைவோனே! இனிய பண்பு உடையாரின் மனத்துள்ளவனே! மாகாளத்து வாழ்பவனே! வலஞ்சுழி வள்ளலே! மாமறைக்காட்டெந்தையே! என்றும் முறுக்குண்டு திகழும் சடையானே! உன் திருவடிக்கே வருகின்றேன். என்னை ஏன்று கொண்டருள்வாயாக.

திருப்புகலூர்

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாந்
திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவு ளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. **#978**

அழகிய புகலூரில் மேவிய புண்ணியனே! கடவுட்டன்மை மிக்க கடவுளே, எல்லாத் தேவரும் நான்முகனும், இந்திரனும், மாலும் தேடிக் கண்டு நின்று திருவடிமேல் பூக்களை இட்டு நாவிற்பொருந்திய மறையைப்பாடி நட்டம் ஆடிப் போற்ற இள மரக்காவுடன் பொருந்திய பொழிலாகிய சோலையையுடைய கானப் பேரூர் என்ற திருத்தலத்தில் விளங்குபவனே! கழுக்குன்றின் உச்சியில் உள்ளவனே! மனம் வாக்கு மெய்களைக் கடந்தவனே! நின் பூவைப் போலப் பொருந்திய அழகிய திருவடிக்கே வருகின்றேன். என்னை ஏன்றுகொண்டருள்வாயாக.

திருப்புகலூர்

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
நிறைவுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
மான்தோல் உடையா மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியேன் நானிட்டுக் கூறி நின்று
பொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. **#979**

அழகிய புகலூரில் மேவிய புண்ணியனே! நெய்யாடுபவனே, நின்மலனே, நீல கண்டனே, நிறைவுடையவனே, வேதம் வல்லானே, நீதியனே, மைவிரவு கண் மடவாள் பார்வதி திகழ் பாகத்தானே, மான்தோலை உடையாகக் கொண்டு மகிழ்ந்தவனே, இப்பொழுது பறித்தல் பொருந்திய, வில்வம் கொன்றை இவற்றால் ஆகிய

மாலையைக் கொணர்ந்து இட்டு அடியேன் பொய்யில்லாத நின்புகழ்விரிக்கும் தோத்திரங்களைக் கூறி வழிபட்டு நின்று நின் சேவடிக்கே வருகின்றேன். என்னை ஏன்று கொண்டருள்வாயாக.

திருப்புகலூர்

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய்
துதைந்திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தித்
தன்னணையுந் தண்மதியும் பாம்பும் நீருஞ்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மை யானே
அன்ன நடைமடவாள் பாகத் தானே
யக்காரம் பூண்டானே ஆதி யானே
பொன்னங் கழலடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. **#980**

அழகிய புகலூரில் மேவிய புண்ணியனே! தைத்தல் பொருந்திய கோவணத்தை உடையவனே! தூய நீற்றினனே! ஒளி மிகுந்து விளங்கும் வெள்ளிய மழுவாயுதத்தைக் கையிற் கொண்டு, தன்னைச் சார்ந்த குளிர்ந்த பிறையையும் பாம்பையும் கங்கையையும் சடைமுடிமேல் வைத்து மகிழ்ந்த அருள்தன்மையனே! அன்னநடை மடவாள் பார்வதி திகழும் பாகத்தை உடையவனே! எலும்பு மாலை அணிந்தவனே! முதற்கடவுளே! நான் நின் பொன்னால் ஆகிய கழல் அணிந்த திருவடிக்கே வருகின்றேன். என்னை ஏன்று கொண்டு அருள்வாயாக.

திருப்புகலூர்

ஒருவனையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. **#981**

அழகிய புகலூரில் மேவிய புண்ணியனே! ஒருவை ஆகிய நின்னையல்லது என் உள்ளம் வேறு உணராது. உணர்வு கலங்குமாறு புலனாகாது அருவாய் நின்ற இருவினைகளையும் முக்குணங்களையும் என்மேல் விடுத்துப் பொய்யான யான் எனது என்னும் செருக்கினை அறுத்தாய்க்குச் செய்யும் கைம்மாறு இல்லேன். ஏலம் நிறைந்த கரிய மலைகளைச் சூழ்ந்து கடற்கரை விளங்கும் இலங்கைக்கு அரசனது விரைந்து செல்லும் தேர், மேலே ஓடாமல் காலால் ஊன்றிய போர்

செய்யும் திருக்கயிலாய மலையானே! நான் நின் திருவடிக்கே வருகின்றேன். என்னை ஏன்று கொண்டருள்வாயாக.

ஆறாம் திருமுறை - தேவாரம் முற்றும்

பன்னிருதிருமுறை

சுந்தரர்

ஏழாம் திருமுறை - திருப்பாட்டு

தொகுப்பு: சங்கர்

சித்திரை 2017 வெளியீடு

பன்னிருதிருமுறை

ஏழாம் திருமுறை - திருப்பாட்டு

சுந்தரர் அருளியது

1026 பாடல்கள் கொண்ட 100 பதிகங்கள் கிடைத்துள்ளது

பன்னிருதிருமுறை

சுந்தரர்

ஏழாம் திருமுறை - திருப்பாட்டு

தொகுப்பு: சங்கர்

சித்திரை **2017** வெளியீடு

திருவெண்ணெய்நல்லூர்

திருவெண்ணெய்நல்லூர்

திருவெண்ணெய்நல்லூர்,
பண் - இந்தளம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தடுத்தாட்கொண்டவீசுவரர்.
தேவியார் : வேற்கண்மங்கையம்மை.

பித்தாபிறை சூடீபெரு
மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக்
கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி
அல்லேனென லாமே. #1 ★★★★★

பித்தனே, பிறையைக் கண்ணியாகச் சூடியவனே, பெருமை உடையவனே, பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய்நல்லூரின் கண்ணதாகிய, 'அருட்டுறை' என்னும் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் தலைவனே, எனது நெஞ்சத்துள் உன்னை அகலாது வைத்தருளினாய்; அதனால், எவ்வாற்றானும் உன்னை மறவாமலே நினைந்து, முன்பே உனக்கு அடியவனாகி, இப்பொழுது, 'உனக்கு அடியவன் அல்லேன்' என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

திருவெண்ணெய்நல்லூர்

நாயேன்பல நாளும்நினைப்
பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற
லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
ஆயாஉனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. #2

மூங்கில்கள் நிறைந்து வரும் பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய்நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறைத் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் தலைவனே, நாய் போலும்

கீழ்மையுடையேனாகிய யான் உன்னை எனது இளைய நாள்கள் பலவற்றினும் மனத்தால் நினைத்தல் இன்றிப் பேய்போல அலைந்து இளைத்தேன்; ஆயினும், இதுபோழ்து, பெறுதற்கு அரிய உனது திருவருளை நான் பெற்றேன். இப்பேற்றை எனக்கு அளிக்க வந்த உனக்கு, முன்பே நான் அடியவனாகி, இப்பொழுது, 'அடியவன் அல்லேன்' என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

திருவெண்ணெய்நல்லூர்

மன்னேமற வாதேநினைக்
கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி
ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அன்னேஉனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. **#3**

தலைவனே, கரையை மோதி, பொன்னும் மணியும், வயிரமும் ஆகிய இவற்றைத் தள்ளிக்கொண்டு, ஒளிமிக்கு வருகின்ற பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய்நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறைத் திருக்கோயிலின்கண் எழுந்தருளியுள்ள தாய் போன்றவனே, உனக்கு நான் முன்பே அடியவனாகி, இப்பொழுது, 'அடியவன் அல்லேன்' என்று எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ! இனிமேல், உன்னை என் மனத்தில் ஒருபோதும் மறவாமலே நினைப்பேன்.

திருவெண்ணெய்நல்லூர்

முடியேன்இனிப் பிறவேன்பெறின்
மூவேன்பெற்றம் ஊர்தீ
கொடியேன்பல பொய்யேஉரைப்
பேனைக்குறிக் கொள்நீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அடிகேள்உனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. **#4**

இடபத்தை ஊர்பவனே, ஒளி நிறைந்த பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய்நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறைத் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் தலைவனே, உனக்கு நான் முன்பே அடியவனாகி, இப்பொழுது, 'அடியவன் அல்லேன்' என

எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ! அப்பொருந்தாமையை அகற்றி என்னை நீ தெளவித் தருளினமையால், இனி நான் இறக்கவும், மீளப் பிறக்கவும், இவ்வுலகில் வாழப் பெறின் மூப்படைந்து வருந்தவும் ஆற்றேனாகின்றேன். நெறிகோடினேனாகிப் பொய்ம்மைகள் பலவற்றையே பேசுவேனாகிய என்னை நீ வெறாது ஏற்றருள்.

திருவெண்ணெய்நல்லூர்

பாதம்பணி வார்கள்பெறு
பண்டம்மது பணியா
யாதன்பொரு ளானேன்அறி
வில்லேன்அரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
ஆதீஉனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. **#5**

அருளாளனே, பூக்களின் மகரந்தம் நிறைந்த பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறைத் திருக்கோயிலின்கண் எழுந்தருளியுள்ள முதல்வனே, உனக்கு நான் முன்பே அடியவனாகி, இப்பொழுது,'அடியவன் அல்லேன்' என எதிர் வழக்குப் பேசியது பொருந்துமோ! அப்பொருந்தாச் செய்கையைச் செய்தமையால் அறிவில்லேனாயினேன்; அதனால், 'ஆதன்' என்னும் சொற்குப் பொருளாயினேன்; ஆயினும், என்னை இகழாது உன் திருவடியை வணங்கி வாழ்கின்ற அறிவர் பெறும் பேற்றை அளித்தருள்.

திருவெண்ணெய்நல்லூர்

தண்ணார்மதி சூடீதழல்
போலுந்திரு மேனீ
எண்ணார்புர மூன்றும்எரி
யுண்ணநகை செய்தாய
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அண்ணாஉனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. **#6**

தட்பம் நிறைந்த திங்களைச் சூடியவனே, நெருப்புப் போலும் திருமேனியை உடையவனே, உன்னை மதியாதவரது அரண்கள் மூன்றையும் தீ உண்ணும்படி சிரித்தவனே, மூழ்குவோரது பாவத்தைக் கழுவுதல் பொருந்திய பெண்ணையாற்றின் தென்பால் உள்ள

திருவெண்ணெய்நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறைத் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் தலைவனே, உனக்கு நான் முன்பே அடியவனாகி, இப்பொழுது, 'அடியவன் அல்லேன்' என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

திருவெண்ணெய்நல்லூர்

ஊனாய்உயி ரானாய்உட
லானாய்உல கானாய்
வானாய்நில னானாய்கட
லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
ஆனாய்உனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. **#7**

பூக்களின் தேன் நிறைந்த பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய்நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறைத் திருக்கோயிலின்கண் நீங்காது எழுந்தருளியிருப்பவனே, நீ உடலிடத்து நின்று பொருள்களை உணர்ந்து வருகின்ற உயிர்கள் ஆகியும், அவைகள் நிற்கின்ற அவ்வுடல்களாகியும், வானாகியும், நிலமாகியும், கடலாகியும், மலையாகியும் நிற்கின்றாய்; இப்பெற்றியன் ஆகிய உனக்கு நான் முன்பே அடியவனாகி, இப்பொழுது, 'அடியவன் அல்லேன்' என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

திருவெண்ணெய்நல்லூர்

ஏற்றார்புரம் மூன்றும்மெரி
யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி
வேனோசெக்கர் வான்நீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
ஆற்றாய்உனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. **#8**

பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திரு வெண்ணெய்நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறைத் திருக் கோயிலின் கண் எழுந்தருளியிருக்கும் நன்னெறியானவனே, நீ உனக்குப் பகையாய் எதிர்ந்தவர்களது அரண்கள் மூன்றையும் தீ உண்ணும்படி, போர் செய்து அழித்தாய். சிவந்த சடையிடத்து ஆகாய கங்கையைத் தாங்கினாய். அப்பெருமைகளை அறியாமை காரணமாகத் தோன்றும் சொற்களைச்

சொல்லி நான் வீணே உழல்வேனோ! அங்ஙனம் உழலும் நெறியானே, முன்பு உனக்கு அடியவனாயதற்கு மாறாக இப்பொழுது, 'அடியவன் அல்லேன்' என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

திருவெண்ணெய்நல்லூர்

மழுவாள்வலன் ஏந்தீமறை
யோதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின
தீர்த்தல்லுன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அழகாஉனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. #9

மழுப்படையை வலப்பக்கத்தில் ஏந்தியவனே, வேதத்தை ஓதுபவனே, உமையை ஒரு பாகத்தில் உடையவனே, செழுமை வாய்ந்து இடையறாது ஒழுகுகின்ற பொண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய்நல்லூரில் உள்ள அருட்டுறைத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அழகனே, உன்னை வணங்குவாரது துன்பங்களை நீக்குதல் உனது தொழில் என்பதனால், என்னை வலிந்து ஆட்கொள்ள வந்தாய். அதனை அறியாது, முன்பே உனக்கு அடியவனாகியதனை மறுத்து, இப்பொழுது, 'அடியவன் அல்லேன்' என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

திருவெண்ணெய்நல்லூர்

காரூர்புன லெய்திக்கரை
கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ்
பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
ஆரூரன்எம் பெருமாற்காள்
அல்லேன்என லாமே. #10

மேகத்தினின்றும் ஒழுகும் தன்மையை உடைய நீர் திரண்டு பொருந்தி, அலைகளாகிய கைகளால் கரையைக் குத்தி, நிலம் முழுதும் பரவிய புகழைப்பெற்று, ஒளி விளங்குகின்ற பல சிறந்த மணிகளைத் தள்ளிவந்து, அழகு மிகுகின்ற பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய்நல்லூரில் உள்ள அருட்டுறைத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு, ஆரூரன் 'அடியவனல்லேன்'

என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

திருப்பரங்குன்றம்

திருப்பரங்குன்றம்

திருப்பரங்குன்றம்,
பண் - இந்தளம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பரங்கிரிநாதர்.
தேவியார் : ஆவுடைநாயகியம்மை.

கோத்திட்டையுங் கோவலுங் கோயில்கொண்டீர்
உமைக்கொண்டுழல் கின்றதோர் கொல்லைச்சில்லைச்
சேத்திட்டுக்குத் தித்தெரு வேதிரியுஞ்
சிலபூதமும் நீரும் திசைதிசையன
சோத்திட்டுவிண் ணோர்பல ருந்தொழநும்
மரைக்கோவணத் தோடொரு தோல்புடைசூழ்ந்
தார்த்திட்டதும் பாம்புகைக் கொண்டதும்பாம
படிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. **#11**

இறைவரே, நீர், பெரிய மலையையும், சுரத்தையும் கோயிலாகக் கொண்டுள்ளீர். உம்மைச் சுமந்து கொண்டு திரிகின்ற முல்லை நிலத்து இளைய ஓர் எருது. மண்மேடுகளைத் தன் கொம்பால் குத்தித் தெருவில் துள்ளித் திரியும். சில பூதங்களும், அவற்றின் உரப்பல் முதலிய செயல்களும் உம்மைச் சூழ்ந்த பல திசைகளிலும் உள்ளன. தேவர் பலரும், 'சோத்தம்' எனச் சொல்லி வணங்குமாறு, நீர் அரையிற் கோவணத்தோடு, ஒரு தோலைச் சுற்றி அதன்மேற் கச்சாகக் கட்டியுள்ளதும் பாம்பு; கையிற் பிடித்திருப்பதும் பாம்பு; அதனால் அடியேங்கள் உம்மை அணுகி நின்று உமக்குப் பணி செய்ய அஞ்சுவேம்.

திருப்பரங்குன்றம்

முண்டந்தரித் தீர்முது காடுறைவீர்
முழுநீறுமெய் பூசுதிர் மூக்கப்பாம்பைக்
கண்டத்திலுந் தோளிலுங் கட்டிவைத்தீர்
கடலைக்கடைந் திட்டதோர் நஞ்சையுண்டீர்.
பிண்டஞ்சுமந் தும்மொடுங் கூடமாட்டோம்
பெரியாரொடு நட்பினி தென்றிருத்தும்
அண்டங்கடந் தப்புறத்தும் மிருந்தீர்
அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. **#12**

இறைவரே, அடியோங்கள் 'பெரியாரொடு நட்டல் இன்பந் தருவது' என்று கருதியிருப்பேமே ஆயினும், நீர் தலைமாலையை அணிந்துள்ளீர்,

மயானத்தில் வாழ்வீர், அதன்கண் உள்ள சாம்பலை உடல் முழுதும் பூசிக் கொள்வீர், கொடிய பாம்பைக் கழுத்திலும் தோளிலும் கட்டி வைத்திருக்கின்றீர், தேவர்கள், கடலைக் கடைந்து கொணர்ந்து ஊட்டிய பெருவிடத்தினை எளிதாக உண்டீர், இவ்வண்டத்தைக் கடந்து, அதற்கு மேல் உள்ள அண்டத்துக்கும் அப்பால் இருப்பீர், அதனால், ஊனினது திரட்சியாகிய இவ்வுடம்பைச் சுமந்துகொண்டு உம்மோடு தொடர்புகொள்ள வல்லேம் அல்லேம் ஆதலின், உம்மை அணுகிநின்று உமக்குப் பணி செய்ய அஞ்சுவேம்.

திருப்பரங்குன்றம்

மூடாய முயலகன் மூக்கப்பாம்பு
முடைநாறிய வெண்டலை மொய்த்தபல்பேய்
பாடாவரு பூதங்கள் பாய்புலித்தோல்
பரிசொன்றறி யாதன பாரிடங்கள்
தோடார்மலர்க் கொன்றையும் துன்னெருக்குந்
துணைமாமணி நாகம் அரைக்கசைத்தொன்
றாடாதன வேசெய்தீர் எம்பெருமான்
அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. **#13**

எம்பெருமானிரே, இறைவரே, உம்மிடத்து உள்ளவை அறியாமையுடைய முயலகன், கொடிய பாம்பு, முடை நாற்றம் வீசும் வெண்டலை, நெருங்கிய பல பேய்கள், பாட்டுப் பாடித்திரிகின்ற பூதங்கள், பாய்கின்ற புலியின் தோல், நன்மை, தீமை அறியாத பாரிடங்கள் என்னும் இவையே. உமக்கு மாலை, இதழ் நிறைந்த கொன்றைமலரும், எருக்கம்பூவுமாம். இவற்றோடு அரையில், பெரிய மணியையுடைய பாம்பைக் கட்டிக் கொண்டு, எங்கட்குப் பொருந்தாத செயல்களையே மேற்கொண்டீர்; அதனால், அடியேங்கள் உம்மை அணுகி உமக்குப் பணி செய்ய அஞ்சுவேம்.

திருப்பரங்குன்றம்

மஞ்சுண்டமா லைமதி சூடுசென்னி
மலையான்மடந் தைமண வாளநம்பி
பஞ்சுண்டவல் குற்பணை மென்முலையா
ளொடுநீருமொன் றாயிருத் தல்லொழியீர்
நஞ்சுண்டுதே வர்க்கமு தங்கொடுத்த
நலமொன்றறி யோம்உங்கை நாகமதற்
கஞ்சுண்டுப டம்மது போகவிடீர்
அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. **#14**

இறைவரே, மேகம் சூழ்ந்த மாலைப் பொழுதில் தோன்றும் பிறையைச்

சூடிய முடியினையுடைய, மலைமகளாகிய நங்கைக்கு மணவாள நம்பியாகிய நீர், துகில் சூழ்ந்த புறத்தினையும், பெருத்த ஊற்றினிமை பொருந்திய தனங்களையும் உடைய அவளும் நீரும் ஒன்றாய் இருத்தலை ஒரு ஞான்றாயினும் ஒழிகின்றிலீர். நீர் நஞ்சினை உண்டு, தேவர்கட்கு அமுதம் ஈந்த நற்செயலை நாங்கள் சிறிதும் அறிந்திலோம்: உமது கையில் உள்ள பாம்பிற்கோ படங்கள் ஐந்து உள்ளன. அப்பாம்பினை ஒருஞான்றும் அப்பாற்போக விடுகின்றிலீர்; அடியோங்கள் உம்மை அணுகி உமக்குப் பணி செய்ய அஞ்சுவேம்.

திருப்பரங்குன்றம்

பொல்லாப்புறங் காட்டகத் தாட்டொழியீர்
புலால்வாயன பேயொடு பூச்சொழியீர்
எல்லாம்அறி வீர்இது வேயறியீர்
என்றிரங்குவேன் எல்லியும் நண்பகலும்
கல்லால்நிழற் கீழொரு நாட்கண்டதுங்
கடம்பூர்க்கரக் கோயிலின் முன்கண்டதும்
அல்லால்விர கொன்றிலம் எம்பெருமான்
அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. **#15**

எம்பெருமானிரே, இறைவரே, நீர், பொல்லாங்குடை மயானத்தில் ஆடுதலைத் தவிரீர்; அங்குப் புலால் வாயோடு திரிவனவாகிய பேய்களோடு ஆரவாரித்தலை ஒழியீர்; 'எல்லாவற்றையும் அறிகின்ற நீர் இது மட்டில் அறிகின்றிலிரே' என்று, உம் அடியவனாகிய யான், இரவும் பகலும் கவல்வேன். முன் ஒருநாள் கல்லால நிழலில் ஆசிரியக் கோலமாகக் கண்டதும், மற்றொருநாள் கடம்பூர்க் கரக்கோயிலில் இலிங்க மூர்த்தியாகக் கண்டதும் தவிர, பிறிதொரு காலத்தும் மயானத்தின் இழிவை நீர் அறிந்து நீங்கியதை யாம் சிறிதும் கண்டதிலம் அதனால், அடியோங்கள் உம்மை அணுகி உமக்குப் பணி செய்ய அஞ்சுவேம்.

திருப்பரங்குன்றம்

தென்னாத்தெனாத் தெத்தெனா என்றுபாடிச்
சில்பூதமும் நீருந் திசைதிசையன
பன்னான்மறை பாடுதிர் பாசூருளீர்
படம்பக்கங்கொட் டுந்திரு வொற்றியூரீர்
பண்ணார்மொழி யாளையொர் பங்குடையீர்
படுகாட்டகத் தென்றுமோர் பற்றொழியீர்
அண்ணாமலை யேன்என்றீர் ஆரூருளீர்
அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. **#16**

இறைவரே, 'தென்னாத்தெனாத் தெத்தெனா' என்று பாடுகின்ற சில பூதங்களும், அவற்றின் செயல்களும் உம்மைச் சூழ்ந்த பல திசைகளிலும் உள்ளன. ஆயினும், நீர், பலவாகிய நான்கு வகைப்பட்ட வேதங்களைப் பாடுவீர்; திருப்பாசூரில் இருக்கின்றீர் எனினும், 'படம் பக்கம்' என்னும் பறையைக் கொட்டும் தலமாகிய திருவொற்றியூரீராய்த் தோன்றுகின்றீர். பண் போலும் மொழியினை யுடைய உமையை ஒரு பாகத்தில் நீங்காது கொண்டு, குடி வாழ்க்கையீராய்க் காணப்படுகின்றீர் ஆயினும், புறங்காட்டிடத்தில் பற்று நீங்கமாட்டீர். 'அண்ணாமலை யிடத்தேன்' என்றீர் ஆயினும், ஆரூரில் இருக்கின்றீர் அதனால், உம்மை ஒருதலையாகத் துணிதல் கூடாமையால், அடியோங்கள் உமக்கு ஆட்பட்டுப் பணிசெய்ய அஞ்சுவேம்.

திருப்பரங்குன்றம்

சிங்கத்துரி மூடுதிர் தேவர்கணந்
தொழநிற்றீர்பெற் றமுகந் தேறிடுதிர்
பங்கம்பல பேசிடப் பாடுந்தொண்டர்
தமைப்பற்றிக்கொண் டாண்டு விடவுங்கில்லீர்
கங்கைச்சடை யீர்உம் கருத்தறியோம்
கண்ணுமூன்றுடை யீர்கண்ணே யாய்இருந்தால்
அங்கத்துறு நோய்களைந் தாளகில்லீர்
அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. **#17**

கங்கையை உடைய சடையை உடையவரே, இறைவரே, நீர், வேட்டுவர் போலச் சிங்கத்தின் தோலைப் போர்த்துக் கொள்வீர் ஆயினும், தேவர் கூட்டம் வணங்க நிற்பீர். யானை முதலியன இன்றி எருதை விரும்பி ஊர்வீர் ஆயினும், 'இவர் சிலரை ஒட்டி அடிமைகொள்ளல் எற்றிற்கு' என உம்மைப் பலரும் பல குறை சொல்லுமாறு, பாடவல்ல, தொண்டர்களை வலிந்து ஈர்த்து அடிமை கொண்டு, அவர்களை விடவும் மாட்டீர் அதனால், உம் கருத்தினை நாங்கள் அறியகில்லோம். கண்களோ மூன்றுடையீர் ஆயினும், நாங்கள் உம் எதிர் நின்று அகலாதிருக்கின்றோம் என்றால், நீர் எங்கள் உடம்பில் பொருந்தியுள்ள நோயைத் தீர்த்துப் பணிகொள்ள மாட்டீர் ஆகலின், அடியோங்கள் உமக்கு ஆட்பட்டுப் பணி செய்ய அஞ்சுவேம்.

திருப்பரங்குன்றம்

பிணிவண்ணத்த வல்வினை தீர்த்தருளீர்
பெருங்காட்டகத் திற்பெரும் பேயும்நீரும்
துணிவண்ணத்தின் மேலும்ஓர் தோலுடுத்துச்
சுற்றுநாகத்த ராய்ச்சுண்ண நீறுபூசி

மணிவண்ணத்தின் மேலும்ஓர் வண்ணத்தராய்
மற்றும்மற்றும் பலபல வண்ணத்தராய்
அணிவண்ணத்த ராய்நிற்றீர் எம்பெருமான்
அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. **#18**

எம்பெருமானிரே, இறைவரே, நீர், பிணிக்கும் இயல்பினையுடைய எங்கள் வலியவினையை நீக்கி அருள் பண்ணுகின்றிலீர்; அன்றியும், பெரிய காட்டிடத்திற் பெரிய பேயும் நீருமாய்த் துணிந்து நிற்கின்ற தன்மையின் மேலும், தோல் ஒன்றை உடுத்து, அதன் மேற் சுற்றிய பாம்பை உடையவராய், சாம்பலை நறுமணப் பொடியாகப் பூசிக் கொண்டு, நீல மணிபோலும் நிறத்தின் மேலும் மற்றொரு நிறத்தை யுடையவராய், அதன்மேலும் பற்பல நிறத்தை உடையவராய், எவ்வாற்றானும் அழகிய வடிவத்தை உடையவராகியே நிற்றலால் அடியோங்கள் உமக்கு ஆட்பட்டுப் பணிசெய்ய அஞ்சுவேம்.

திருப்பரங்குன்றம்

கோளாளிய குஞ்சரங் கோளிழைத்தீர்
மலையின்தலை யல்லது கோயில்கொள்ளீர்
வேளாளிய காமனை வெந்தழிய
விழித்தீர்அது வன்றியும் வேய்புரையும்
தோளாள்உமை நங்கையொர் பங்குடையீர்
உடுகூறையுஞ் சோறுந்தந் தாளகில்லீர்
ஆளாளிய வேகிற்றீர் எம்பெருமான்
அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. **#19**

எம்பெருமானிரே, இறைவரே, நீர், கொலைத் தொழிலை மேற்கொண்ட யானையைக் கொல்லுதல் செய்தீர்; மலை உச்சியில் அல்லது கோயில் கொள்ளமாட்டீர்; வேட்கையை விளைக்கும் அம்பினை ஏவிய காமனை வெந்து அழியுமாறு அழித்தீர்; அதற்கு மாறாயும், மூங்கில் போலும் தோள்களை யுடையவளாகிய, 'உமை' என்னும் நங்கையை ஒருபாகத்தில் உடையீர்; நும் அடியவர்க்கு, உடுக்கின்ற கூறையையும், உண்கின்ற சோற்றையும் கொடுத்து ஆளமாட்டீர்; அடியவரை அடிமை கொள்ளுதல் மட்டுமே வல்லீர்; அதனால், அடியேங்கள். உமக்கு ஆட்பட்டுப் பணிசெய்ய அஞ்சுவேம்.

திருப்பரங்குன்றம்

பாரோடுவிண் ணும்பக லுமாகிப்
பனிமால்வரை யாகிப் பரவையாகி
நீரோடுதீ யுந்நெடுங் காற்றுமாகி
நெடுவெள்ளிடை யாகி நிலனுமாகித்

தேரோட வரையெடுத் தவரக்கன்
சிரம்பத்திறுத் தீரும் செய்கையெல்லாம்
ஆரோடுங்கூ டாஅடி கேள்இதுஎன்
அடியோம்உமக் காட்செய அஞ்சுதுமே. **#20**

இறைவரே, மண்ணுலகமும் விண்ணுலகமும் ஆகியும், மலை ஆகியும், கடல் ஆகியும், எவ்விடத்தும் இயங்குகின்ற காற்றும் ஆகியும், எல்லையற்ற வெளி ஆகியும், நிலம் ஆகியும் இவ்வாறு எல்லாப் பொருளும் ஆகி நின்றீர். இனி, தனது ஊர்தி தடையின்றி ஓடுதற் பொருட்டு நுமது மலையைப் பெயர்த்த அரக்கனது தலைகள் பத்தினையும் நெரித்தீர். உம்முடைய இச்செய்கைகள் எல்லாம், யார் செய்கையோடும் ஒவ்வா; இஃது என்! இவற்றால் அடியோங்கள் உமக்குப் பணிசெய்ய அஞ்சுவேம்.

<u>திருப்பரங்குன்றம்</u>

அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமென்
றமரர்பெரு மானையா ரூரன்அஞ்சி
முடியால்உல காண்டமூ வேந்தர்முன்னே
மொழிந்தாறுமோர் நான்குமோ ரொன்றினையும்
படியாஇவை கற்றுவல் லவடியார்
பரங்குன்றமே யபர மன்னடிக்கே
குடியாகிவா னோர்க்கும்ஓர் கோவுமாகிக்
குலவேந்தராய் விண்முழு தாள்பவரே. **#21**

தேவர் பெருமானாகிய சிவபெருமானிடத்தில் அச்சங்கொண்டு, நம்பி ஆரூரன், முடியொடு நின்று உலகத்தை ஆள்கின்ற மூவேந்தர் முன்னிலையில், 'அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதும்' என்று சொல்லிப் பாடிய இப்பதினொரு பாடல்களையும், இவையே தமக்கு நெறியாகும்படி ஓதி உணர வல்ல அடியார்கள், திருப்பரங்குன்றத்தை விரும்பி எழுந்தருளியுள்ள அப்பரமனது திருவடி நிழலிலே வாழ்கின்றவராய், அரசர் குடியில் தோன்றிய அரசரோடு ஒருங்கொத்து மண் முழுதும் ஆண்டு, பின் தேவர்க்கும் ஒப்பற்ற அரசராகி விண் முழுதும் ஆள்பவரே ஆவர்.

திருநெல்வாயில் அரத்துறை

திருநெல்வாயில் அரத்துறை

திருநெல்வாயில் அரத்துறை,
பண் - இந்தளம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அரத்துறைநாதர்.
தேவியார் : ஆனந்தநாயகியம்மை.

கல்வாய்அகி லுங்கதிர் மாமணியுங்
கலந்துந்தி வருந்நிவ வின்கரைமேல்
நெல்வாயி லரத்துறை நீடுறையுந்
நிலவெண்மதி சூடிய நின்மலனே
நல்வாயில்செய் தார்நடந் தார்உடுத்தார்
நரைத்தார்இறந் தார்என்று நானிலத்தில்
சொல்லாய்க்கழி கின்ற தறிந்தடியேன்
தொடர்ந்தேன்உய்யப் போவதொர் சூழல்சொல்லே. **#22**

மலையிடத்துள்ள அகில்களையும், ஒளியை யுடைய மாணிக்கங்களையும் ஒன்று கூட்டித் தள்ளிக்கொண்டு வருகின்ற நிவாநதியின் கரைமேல் உள்ள திருநெல்வாயில் அரத் துறையின் கண் என்றும் எழுந்தருளியிருக்கும், நிலவினையுடைய வெள்ளிய பிறையைச் சூடிய மாசற்றவனே, உலகியலில் நின்றோர் அனைவரும், 'நல்ல துணையாகிய இல்லாளை மணந்தார்; இல்லற நெறியிலே ஒழுகினார்; நன்றாக உண்டார்; உடுத்தார்; மூப்படைந்தார்; இறந்தார்' என்று உலகத்தில் சொல்லப்படும் சொல்லை உடையவராய் நீங்குவதன்றி நில்லாமையை அறிந்து உன்னை அடைந்தேன்; ஆதலின், அடியேன் அச்சொல்லிலிருந்து பிழைத்துப் போவதற்குரிய ஒரு வழியினைச் சொல்லியருள்.

திருநெல்வாயில் அரத்துறை

கறிமாமிள கும்மிகு வன்மரமும்
மிகவுந்தி வருந்நிவ வின்கரைமேல்
நெறிவார்குழ லாரவர் காணடஞ்செய்
நெல வாயி லரத்துறை நின்மலனே
வறிதேநிலை யாதஇம் மண்ணுலகின்
நரனாக வகுத்தனை நானிலையேன்
பொறிவாயில்இவ் வைந்தினை யும்மவியப்
பொருதுன்னடி யேபுகுஞ் சூழல்சொல்லே. **#23**

கறிக்கப்படுகின்ற மிளகையுடைய கொடியையும், மிக்க வலிய மரங்களையும் மிகுதியாகத் தள்ளிக்கொண்டு வருகின்ற நிவாநதியின் கரைமேல் உள்ள, நெறித்த நீண்ட கூந்தலையுடைய மகளிர்தாம் பிறர் அனைவரும் விரும்பிக் காணத்தக்க நடனத்தைப் புரிகின்ற திருநெல்வாயில் அரத்துறையின் கண் எழுந்தருளியிருக்கும் மாசற்றவனே, உயிர்கள் பலவும் பயன் ஏதும் இன்றிப் பிறந்து இறக்கும் இம் மண்ணுலகத்தில் அடியேனை மகனாகப் படைத்தாய்; ஆதலின், நான் இறவாது இரேன்; அதனால், 'பொறி' எனப்படுகின்ற, அவாவின் வாயில்களாகிய இவ்வைந்தினையும் அடங்குமாறு வென்று, உன் திருவடிக்கண்ணே புகுதற்குரிய ஒரு வழியினைச் சொல்லியருள்.

<u>திருநெல்வாயில் அரத்துறை</u>

புற்றாடர வம்மரை ஆர்த்துகந்தாய்
புனிதாபொரு வெள்விடை யூர்தியினாய்
எற்றேஒரு கண்ணிலன் நின்னையல்லால்
நெல்வாயி லரத்துறை நின்மலனே
மற்றேல்ஒரு பற்றிலன் எம்பெருமான்
வண்டார்குழ லாள்மங்கை பங்கினனே
அற்றார்பிற விக்கடல் நீந்தியேறி
அடியேன்உய்யப் போவதொர் சூழல்சொல்லே. **#24**

புற்றின்கண் வாழ்கின்ற ஆடுகின்ற பாம்பை விரும்பி அரையின்கண் கட்டியவனே, தூய்மையானவனே, போர் செய்கின்ற வெண்மையான இடப ஊர்தியை உடையவனே, எம் பெருமானே, வண்டுகள் ஒலிக்கின்ற கூந்தலையுடைய உமையம்மையை ஒருபாகத்தில் உடையவனே, திருநெல்வாயில் அரத்துறையின்கண் எழுந்தருளியிருக்கும் மாசற்றவனே, அடியேன் ஒருகண் இல்லாதவனாய் இருக்கின்றேன்; இஃது எத்தன்மைத்து என்பேன்! மற்றும் வினவின், உன்னையன்றி வேறொரு பற்றுக்கோடு இல்லேன்; ஆதலின், அடியேன், இறப்புப் பொருந்திய பிறவிக் கடலைக் கடந்து கரையேறிப் பிழைத்துப் போதற்குரிய ஒரு வழியினைச் சொல்லியருள்.

<u>திருநெல்வாயில் அரத்துறை</u>

கோஓடுயர் கோங்கலர் வேங்கையலர்
மிகவுந்தி வருந்நிவ வின்கரைமேல்
நீஇடுயர் சோலைநெல் வாயிலரத்
துறைநின்மல னேநினை வார்மனத்தாய்
ஓஒடுபு னற்கரை யாம்இளமை
உறங்கிவ்விழித் தாலொக்கும் இப்பிறவி

வாஅடியி ருந்துவருந் தல்செய்யா
தடியேன்உய்யப் போவதொர் சூழல்சொல்லே. #25
கிளைகள் உயர்ந்த கோங்க மரத்தின் மலர்களையும், வேங்கை மரத்தின் மலர்களையும் மிகுதியாகத் தள்ளிக் கொண்டு வருகின்ற நிவாநதியின் கரைமேல் உள்ள, நெடியனவாக ஓங்கிய சோலைகளை உடைய திருநெல்வாயில் அரத்துறையின்கண் எழுந்தருளியிருக்கின்ற மாசற்றவனே, உன்னை நினைகின்றவரது நெஞ்சத்தில் வாழ்பவனே, இப்பிறப்பு, உறங்கியபின் விழித்தாற் போல்வது; இதன்கண் உள்ள இளமையோ, ஓடுகின்ற நீரின் கரையை ஒக்கும்; ஆதலின், 'என் செய்வது' என்று மெலிவுற்று நின்று வருந்தாது, அடியேன், இப் பிறவியிலிருந்து பிழைத்துப் போதற்குரிய ஒரு வழியினைச் சொல்லியருள்.

திருநெல்வாயில் அரத்துறை

உலவும்முகி லிற்றலை கற்பொழிய
உயர்வேயொ டிழிநிவ வின்கரைமேல்
நிலவும்மயி லாரவர் தாம்பயிலும்
நெல்வாயி லரத்துறை நின்மலனே
புலன்ஐந்து மயங்கி அகங்குழையப்
பொருவேலொர் நமன்றமர் தாம்நலிய
அலமந்தும யங்கி அயர்வதன்முன
அடியேன்உய்யப் போவதொர் சூழல்சொல்லே. #26
உலாவுகின்ற மேகங்களினின்றும் மலையின்கண் மழை பொழியப்பட, அந்நீர், ஓங்கிய மூங்கில்களோடு இழிந்து வருகின்ற நிவாநிதியின் கரைமேல் உள்ள, விளங்குகின்ற மயில் போலும் மகளிர் ஆடல் பாடல்களைப் புரிகின்ற திருநெல்வாயில் அரத்துறையின் கண் எழுந்தருளியுள்ள மாசற்றவனே, ஐந்து புலன்களும் தத்தமக்கு உரிய பொறிகளுக்கு எதிர்ப்படாது மாறும்படியும், மனம் மெலியும்படியும், போர் செய்கின்ற முத்தலை வேலை (சூலத்தை) உடைய கூற்றுவனது ஏவலர் வந்து வருத்த, பற்றுக்கோடின்றி, உணர்வு தடுமாறி நின்று இளைத்தற்குமுன், அடியேன், இறப்பினின்றும் பிழைத்துப் போதற்குரிய ஒரு வழியினைச் சொல்லியருள்.

திருநெல்வாயில் அரத்துறை

ஏலம்மில வங்கம் எழிற்கனகம்
மிகவுந்தி வருந்நிவ வின்கரைமேல்
நீலம்மலர்ப் பொய்கையில் அன்னமலி
நெல்வாயி லரத்துறை யாய்ஒருநெல்

வாலூன்ற வருந்தும் உடம்பிதனை
மகிழாதழ காஅலந் தேன்இனியான்
ஆலந்நிழ லில்லமர்ந் தாய்அமரா
அடியேன்உய்யப் போவதொர் சூழல்சொல்லே. **#27**

'ஏலம் இலவங்கம்' என்னும் மரங்களையும், அழகிய பொன்னையும் மிகுதியாகத் தள்ளிக்கொண்டு வருகின்ற நிவா நதியின் கரையில் உள்ள, நீலோற்பல மலர்ப் பொய்கையில் அன்னங்கள் நிறைந்திருக்கும் திருநெல்வாயில் அரத்துறையில் எழுந்தருளியுள்ளவனே, அழகனே, ஆல் நிழலில் அமர்ந்தவனே, என்றும் இறவாதிருப்பவனே, ஒரு நெல்லின் வால் ஊன்றினும் பொறாது வருந்துவதாகிய இவ்வுடம்பினை யான் உறுதி யுடையது என்று கருதி மகிழாது உறுதியை நாடி உழன்றேன்; அடியேன் இதனினின்றும் பிழைத்துப் போதற்குரிய ஒரு வழியினைச் சொல்லி யருள்.

<u>திருநெல்வாயில் அரத்துறை</u>

சிகரம்முகத் திற்றிர ளாரகிலும்
மிகவுந்தி வருந்நிவ வின்கரைமேல்
நிகரின்மயி லாரவர் தாம்பயிலுந்
நெல்வாயி லரத்துறை நின்மலனே
மகரக்குழை யாய்மணக் கோலமதே
பிணக்கோலம் தாம்பிற வியிதுதான்
அகரம்முத லின்னெழுத் தாகிநின்றாய்
அடியேன்உய்யப் போவதொர் சூழல்சொல்லே. **#28**

மலைச் சிகரத்தினின்றும், திரளாய் நிறைந்த அகிலையும் பிறவற்றையும் மிகுதியாகத் தள்ளிக்கொண்டு வருகின்ற நிவாநதியின் கரையில் உள்ள, உலகின் மயில்கள் போலாத வேறுசில மயில்கள் போலும் சிறந்த மகளிர் ஆடல் பாடல்களைப் புரிகின்ற திருநெல்வாயில் அரத்துறையின்கண் எழுந்தருளியிருக் கின்ற மாசற்றவனே, காதில் மகர குண்டலத்தை அணிந்தவனே, எழுத்துக்களுக்கு எல்லாம் அகரமாகிய முதல் எழுத்துப்போன்று, பொருள்களுக்கெல்லாம் முதற்பொருளாகி நிற்பவனே, இவ்வுடம்பு தான், மணக்கோலந்தானே கடிதிற் பிணக்கோலமாய் மாறுகின்ற நிலையாமையை உடையது; ஆதலின், அடியேன் இதனினின்றும் பிழைத்துப் போதற்குரிய ஒரு வழியைச் சொல்லியருள்.

<u>திருநெல்வாயில் அரத்துறை</u>

திண்டேர்நெடு வீதி யிலங்கையர்கோன்
திரள்தோள்இரு பஃதும்நெ ரித்தருளி

ஞெண்டாடுநெ டுவயல் சூழ்புறவின்
நெல்வாயி லரத்துறை நின்மலனே
பண்டேமிக நான்செய்த பாக்கியத்தாற்
பரஞ்சோதிநின் நாமம் பயிலப்பெற்றேன்
அண்டாஅம ரர்க்கம ரர்பெருமான்
அடியேன்உய்யப் போவதொர் சூழல்சொல்லே. **#29**

திண்ணிய தேர்களை உடைய, நீண்ட தெருக்களையுடைய இலங்கையில் உள்ளார்க்கு அரசனாகிய இராவணனது திரண்ட தோள்கள் இருபதையும் முன்னர் நெரித்துப் பின்னர் அவனுக்கு அருள்பண்ணி, நண்டுகள் உலாவுகின்ற நீண்ட வயல் சூழ்ந்த, முல்லை நிலத்தையுடைய திருநெல்வாயில் அரத்துறையின் கண் எழுந்தருளியிருக்கின்ற மாசற்றவனே, மேலான ஒளி வடிவினனே, தேவனே, தேவர்க்குத் தேவராய் உள்ளார்க்குத் தலைவனே, நான் முற்பிறப்பிற் செய்த நல்வினையினால் உனது பெயரைப் பல காலும் சொல்லும் பேற்றினைப் பெற்றேன்; இனி, அடியேன், உலகியலினின்றும் பிழைத்துப் போவதற்குரிய ஒரு வழியினைச் சொல்லியருள்.

<u>திருநெல்வாயில் அரத்துறை</u>

மாணாவுரு வாகியொர் மண்ணளந்தான்
மலர்மேலவன் நேடியுங் காண்பரியாய்
நீணீண்முடி வானவர் வந்திறைஞ்சுந்
நெல்வாயி லரத்துறை நின்மலனே
வாணார்நுத லார்வலைப்பட் டடியேன்
பலவின்கனி ஈயது போல்வதன்முன்
ஆணோடுபெண் ணாமுரு வாகிநின்றாய்
அடியேனுய்யப் போவதொர் சூழல்சொல்லே. **#30**

சிறப்பில்லாத குறள் உருவாகி உலகத்தை அளந்த திருமாலும், மலரின்கண் இருக்கும் பிரமனும் தேடியும் காணுதற்கு அரியவனே, நீண்ட முடியினையுடைய தேவர்கள் வந்து வணங்குகின்ற, திருநெல்வாயில் அரத்துறையின்கண் எழுந்தருளியிருக்கின்ற மாசற்றனவனே, மாசற்றனவனே, ஆணும், பெண்ணுமாகிய உருவத்தைக் கொண்டு நிற்பவனே, அடியேன், ஒளி பொருந்திய நெற்றியையுடைய மாதரது மையலாகிய வலையிற்பட்டு, பலாப் பழத்தில் வீழ்ந்த ஈயைப் போல அழிவதற்குமுன், அவர் மையலினின்றும் பிழைத்துப் போவதற்குரிய ஒரு வழியினைச் சொல்லியருள்.

<u>திருநெல்வாயில் அரத்துறை</u>

நீரூர நெடுவயல் சூழ்புறவின்
நெல்வாயி லரத்துறை நின்மலனைத்
தேரூர்நெடு வீதிநன் மாடமலி
தென்னாவலர் கோனடித் தொண்டன்அணி
ஆரூரன் உரைத்தன நற்றமிழின்
மிகுமாலையொர் பத்திவை கற்றுவல்லார்
காரூர்களி வண்டறை யானைமன்ன
ரவராகியொர் விண்முழு தாள்பவரே. **#31**

நீர் பாய்கின்ற நீண்ட வயல்கள் சூழ்ந்த, முல்லை நிலத்தை உடைய திருநெல்வாயில் அரத்துறையின்கண் எழுந்தருளியிருக்கின்ற மாசற்றவனாகிய இறைவனை, தேர் ஓடும் நீண்ட தெருக்களில் நல்ல மாடமாளிகைகள் நிறைந்த, தென்னாட்டில் உள்ள திருநாவலூரில் உள்ளவர்க்குத் தலைவனும், சிவபெருமானுக்கு அடித் தொண்டனும் ஆகிய அழகிய ஆரூரன் பாடிய, நல்ல தமிழ் மொழியினால் ஆகிய உயர்ந்த பாமாலையின்கண் உள்ள பத்துப் பாடல்களாகிய இவற்றைக் கற்று உணரவல்லவர், கருமை மிக்க, களிப்பினை உடைய வண்டுகள் ஒலிக்க வருகின்ற யானையை உடைய மன்னர்களாகி மண்ணுலகம் முழுதும் ஆண்டு, பின் தேவர்க்குத் தலைவராய் ஒப்பற்ற விண்ணுலகம் முழுதும் ஆள்பவர் ஆவர்.

திருஅஞ்சைக்களம்

திருஅஞ்சைக்களம்

திருஅஞ்சைக்களம்,
பண் - இந்தளம்,
இத்தலம் மலைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அஞ்சைக்களத்தீசுவரர்.
தேவியார் : உமையம்மை.

தலைக்குத்தலை மாலை அணிந்ததென்னே
சடைமேற்கங்கை வெள்ளந் தரித்ததென்னே
அலைக்கும்புலித் தோல்கொண் டசைத்ததென்னே
அதன்மேற்கத நாகங்கச் சார்த்ததென்னே
மலைக்குந்நிக ரொப்பன வன்றிரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்
டலைக்குங்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. #32

மலைக்கு நிகராகிய தன்மையால் தம்மில் ஒப்பனவாகிய வலிய அலைகள் வலம்புரிச் சங்குகளைப் பற்றி ஈர்த்து வந்து எறிந்து முழங்கி மோதுகின்ற கடலினது அழகிய கரையின் கண்ணதாகிய 'மகோதை' என்னும் நகரத்தின்கண் உள்ள, அழகு நிறைந்த சோலைகளையுடைய, 'திருவஞ்சைக்களம்' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற தந்தையே, நீ தலைக்கு அணிகலமாகத் தலைமாலையை அணிந்தது என்? சடையின்மேல், 'கங்கை' என்னும் ஆற்றைத் தாங்கியது என்? கொல்லும் தன்மை யுடைய புலியினது தோலை உரித்தெடுத்து அரையில் உடுத்தது என்? அவ்வுடையின்மேல் சினத்தையுடைய பாம்பைக் கச்சாகக் கட்டியது என்?

திருஅஞ்சைக்களம்

பிடித்தாட்டிஓர் நாகத்தைப் பூண்டதென்னே
பிறங்குஞ்சடை மேற்பிறை சூடிற்றென்னே
பொடித்தான்கொண்டு மெய்ம்முற்றும் பூசிற்றென்னே
புகர்ஏறுகந் தேறல் புரிந்ததென்னே
மடித்தோட்டந்து வன்றிரை யெற்றியிட
வளர்சங்கம்அங் காந்துமுத் தஞ்சொரிய
அடித்தார்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. #33

வலிய அலைகள் தம் வடிவத்தைச் சுருளாகச் செய்து ஓடிவந்து

மோதுதலினால், கரு வளர்கின்ற சங்குகள் வாய் திறந்து முத்துக்களை ஈன, இங்ஙனம் அலைத்து முழங்குகின்ற கடலினது அழகிய கரையின் கண்ணதாகிய, 'மகோதை' என்னும் நகரின்கண் உள்ள, அழகு நிறைந்த சோலைகளையுடைய திருவஞ்சைக்களம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற தந்தையே, நீ, விரும்பத் தகாத பாம்பை, பிடித்து ஆட்டுதலையும், பூணாகப் பூணுதலையும் மேற்கொண்டது என்? விளங்குகின்ற சடையின்கண் பிறையைச் சூடியது என்? சாம்பலை எடுத்து உடம்பு முழுதும் பூசிக் கொண்டது என்? இழிந்த எருதினையே ஊர்தியாகக் கொள்ள விரும்பியது என்?

திருஅஞ்சைக்களம்

சிந்தித்தெழு வார்க்குநெல் லிக்கனியே
சிறியார்பெரி யார்மனத் தேறலுற்றால்
முந்தித்தொழு வார்இற வார்பிறவார்
முனிகள்முனி யேஅம ரர்க்கமரா
சந்தித்தட மால்வரை போற்றிரைகள்
தணியாதிட றுங்கட லங்கரைமேல்
அந்தித்தலைச் செக்கர்வா னேஒத்தியால்
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே. **#34**

மூங்கில்களையுடைய பெரிய மலைகள் போலும் அலைகள் இடைவிடாது மோதுகின்ற கடலினது அழகிய கரையின் கண்ணதாகிய, அழகு நிறைந்த சோலைகளையுடைய திருவஞ்சைக் களம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற தந்தையே, உன்னை நினைந்து துயிலுணர்வார்க்கு நெல்லிக்கனி போன்றவனே, முனிவர்கட்கெல்லாம் முனிவனே, தேவர்கட்கெல்லாம் தேவனே, உன்னை உள்ளந்தெளயப்பெற்றால், சிறியாரும் பெரியாராவர். விரைந்து வந்து உன்னை வணங்குபவர், இறத்தலும் பிறத்தலும் இலராவர். அவரது உள்ளத்தைப் பிணித்தற்கு, நீ, மாலைக் காலத்தில் தோன்றும் செவ்வானம் போலும் அழகிய திருமேனியை உடையையாய் இருக்கின்றனை.

திருஅஞ்சைக்களம்

இழைக்கும்மெழுத் துக்குயி ரேஒத்தியால்
இலையேஒத்தி யால்உளை யேஒத்தியால்
குழைக்கும்பயிர்க் கோர்புய லேஒத்தியால்
அடியார்தமக் கோர்குடி யேஒத்தியால்
மழைக்குந்நிக ரொப்பன வன்றிரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்

டழைக்குங்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. **#35**
துளிகளைத் தூற்றுதலால் மேகத்திற்கு நிகராகும் தன்மையில் தம்மில் ஒப்பனவாகிய வலிய அலைகள், பல பொருள்களை ஈர்த்து வந்து மோதி முழங்கி, வலம்புரிச் சங்கின் இனிய ஓசையால் யாவரையும் தன்பால் வருவிக்கின்ற கடலினது அழகிய கரையின் கண்ணதாகிய, 'மகோதை' என்னும் தலத்தில் உள்ள அழகு நிறைந்த சோலைகளையுடைய திருவஞ்சைக்களம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற தந்தையே, நீ, உலகத்தை இயக்குதலில், எழுதப்படும் எழுத்துக்களுக்கு உயிரெழுத்துப் போல்கின்றாய்; இல்லாதாய் போல்கின்றாய்; ஆயினும் உள்ளாய் போல்கின்றாய்; உயிர்கட்கு உதவுதலில் தளிர்க்கும் பயிர்க்கு மேகம் போல்கின்றாய்; அடியார்களுக்கு அணியையாதலில், அவரோடு ஒருகுடிப் பிறப்பினை போல்கின்றாய்.

திருஅஞ்சைக்களம்

வீடின்பய னென்பிறப் பின்பயனென்
விடையேறுவ தென்மத யானை நிற்கக்
கூடும்மலை மங்கை யொருத்தியுடன்
சடைமேற்கங்கை யாளைநீ சூடிற்றென்னே
பாடும்புல வர்க்கரு ளும்பொருளென்
நெதியம்பல செய்த கலச்செலவின்
ஆடுங்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. **#36**
பொன், மணி முதலிய செல்வங்களைத் தந்த மரக்கலங்களினது செலவினையுடைய, மூழ்குதற்குரிய கடலினது அழகிய கரையின்கண்ணதாகிய, 'மகோதை' என்னும் நகரின்கண் உள்ள, அழகு நிறைந்த சோலைகளையுடைய திருவஞ்சைக்களம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தந்தையே, நீ, 'வீடு, பிறப்பு' என்னும் இரண்டனுள் ஒன்றையே அமையாது, மறுதலைப் பொருள்களாகிய அவ்விரண்டனையும் அமைத்ததன் பயன் யாது? மதத்தையுடைய யானை இருக்க, எருதினை ஊர்வது என்? திருமேனியில் நீங்காது பொருந்தியுள்ள மலைமகளாகிய ஒருத்தியோடு கங்கை என்பவளையும் சடையில் வைத்தது என்? உன்னைப் பாடுகின்ற புலவர்க்கு நீ அளிக்கும் பரிசில் யாது?

திருஅஞ்சைக்களம்

இரவத்திடு காட்டெரி யாடிற்றென்னே
இறந்தார்தலை யிற்பலி கோடலென்னே

பரவித்தொழு வார்பெறு பண்டமென்னே
பரமாபர மேட்டி பணித்தருளாய்
உரவத்தொடு சங்கமொ டிப்பிமுத்தங்
கொணர்ந்தெற்றி முழங்கி வலம்புரிகொண்
டரவக்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. **#37**
யாவர்க்கும் மேலானவனே, எல்லார்க்கும் மேலிடத்தில் உள்ளவனே, வலிமையோடு, 'சங்கு, இப்பி, முத்து' என்பவற்றைக் கொணர்ந்து வீசி, வலம்புரிச்சங்கை மேலே கொண்டு முழங்கி, ஆர்ப்பரவத்தையுடையதாகின்ற கடலினது அழகிய கரையின்கண்ணதாகிய 'மகோதை' என்னும் நகரின்கண் உள்ள அழகு நிறைந்த சோலைகளையுடைய திருவஞ்சைக்களம் என்னும் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும்தந்தையே, நீ இராப் பொழுதில் புறங்காட்டில் எரியில் நின்று ஆடியது என்? இறந்தவரது தலையில் பிச்சையேற்றல் என்? உன்னை ஏத்தி வணங்குவோர் பெறும்பொருள் யாது? சொல்லியருளாய்.

திருஅஞ்சைக்களம்

ஆக்கும்மழி வும்மைய நீயென்பன்நான்
சொல்லுவார்சொற் பொருளவை நீயென்பன்நான்
நாக்கும்செவி யும்கண்ணும் நீயென்பன்நான்
நலனேஇனி நான்உனை நன்குணர்ந்தேன்
நோக்குந்நெதி யம்பல எத்தனையும்
கலத்திற்புகப் பெய்துகொண் டேறநுந்தி
ஆர்க்குங்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. **#38**
எப்பொருட்கும் தலைவனே, இன்பம் தருபவனே, விரும்புகின்ற நுகர்ச்சிப் பொருள்கள் எத்துணை வகையினவற்றையும் மிகுதியாக மரக்கலங்களில் ஏற்றி, நடுவண் செல்லச் செலுத்தி ஆரவாரிக்கின்ற கடலினது அழகிய கரையின்கண்ணதாகிய 'மகோதை' என்னும் நகரின்கண் உள்ள, அழகு நிறைந்த சோலைகளையுடைய, 'திருவஞ்சைக்களம்' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தந்தையே, அடியேன் இதுபோழ்து உன்னை நன்குணர்ந்தேன்' ஆதலின், 'எப்பொருளின் ஆக்கத்திற்கும், அழிவிற்கும் காரணன் நீயே' என்றும், 'அவற்றிற்குக் காரணங்களாகப் பிற பிற வற்றைச் சொல்லுவாரது சொற்பொருள்களும் நீயே' என்றும், 'புலனுணர்வுக்குக் காரணமான, 'நாக்கு, செவி, கண்' என்பனவும் நீயே' என்றும் துணிந்து சொல்லுவேன்.

திருஅஞ்சைக்களம்

வெறுத்தேன்மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன்
விளங்குங்குழைக் காதுடை வேதியனே
இறுத்தாய்இலங் கைக்கிறை யாயவனைத்
தலைபத்தொடு தோள்பல இற்றுவிழக்
கறுத்தாய்கடல் நஞ்சமு துண்டுகண்டங்
கடுகப்பிர மன்தலை யைந்திலும்ஒன்
றறுத்தாய்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. **#39**

ஒளிவிடுகின்ற குழையையணிந்த காதினையுடைய அந்தணனே, கடலினது அழகிய கரையின்கண்ணதாகிய 'மகோதை' என்னும் நகரின்கண் உள்ள, அழகு நிறைந்த சோலைகளையுடைய 'திருவஞ்சைக்களம்' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற தந்தையே, நீ, இலங்கைக்கு அரசனாகிய இராவணனை அவனது பத்துத் தலைகளோடு பல தோள்களும் அற்று விழுவன போலும்படி நெரித்தாய்; பாற்கடலில் தோன்றிய நஞ்சினை அமுதமாக உண்டு, கண்டம் கறுப்பாயினாய்; பிரமன் தலைகள் ஐந்தனுள் ஒன்றை விரைவில் அறுத்தலும் செய்தாய்; அடியேன் எனது மனை வாழ்க்கையை மனத்தாலும் வெறுத்தேன்; உடம்பாலும் துறந்து விட்டேன்.

திருஅஞ்சைக்களம்

பிடிக்குக்களி றேஒத்தி யால்எம்பிரான்
பிரமற்கும் பிரான்மற்றை மாற்கும்பிரான்
நொடிக்கும்மள விற்புரம் மூன்றெரியச்
சிலைதொட்டவ னேஉனை நான்மறவேன்
வடிக்கின்றன போற்சில வன்றிரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்
டடிக்குங்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. **#40**

மூன்று அரண்கள், ஒருமுறை கைந்நொடிக்கும் அளவிலே எரிந்தொழியுமாறு வில்லை வளைத்தவனே, முத்துக்கள் முதலியவற்றை வடித்தெடுத்துச் சேர்ப்பனபோல, சில வலிய அலைகள் அவைகளை ஈர்த்து வந்து வீசி, வலம்புரிச்சங்கினால், கரையிலுள்ளாரைத் தாக்குகின்ற கடலினது அழகிய கரையின்கண்ணதாகிய 'மகோதை' என்னும் நகரின்கண் உள்ள அழகிய சோலைகளையுடைய, 'திருவஞ்சைக்களம்' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற தந்தையே, நீ பெண் யானைக்கு ஆண்யானை போல உயிர்கட்கு

யாண்டும் உடன்செல்லும் துணைவனாய் உள்ளாய்; என் போலும் மக்கட்கும், பிரமன் திருமால் முதலிய தேவர்கட்கும் தலைவனாய் உள்ளாய்; இவற்றையெல்லாம் உணர்ந்து, அடியேன் உன்னை மறத்தல் ஒழிந்தேன்.

திருஅஞ்சைக்களம்

எந்தம்மடி களிமை யோர்பெருமான்
எனக்கென்றும் அளிக்கும் மணிமிடற்றன்
அந்தண்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனை
மந்தம்முழ வுங்குழ லும்மியம்பும்
வளர்நாவலர் கோன்நம்பி ஊரன்சொன்ன
சந்தம்மிகு தண்தமிழ் மாலைகள்கொண்
டடிவீழவல் லார்தடு மாற்றிலரே. **#41**

என்போலும் அடியவர்கட்கு முதல்வனும், தேவர்கட்குத் தலைவனும், எனக்கு எஞ்ஞான்றும் அருள்பண்ணும் சிவனும் ஆகிய, அழகிய குளிர்ந்த கரையின் கண்ணதாகிய, 'மகோதை' என்னும் நகரின்கண் உள்ள, 'திருவஞ்சைக்களம்' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற தந்தையை, மத்தளமும் வேய்ங்குழலும், 'மந்தம்' என்னும் அளவாக இயம்பப்படுகின்ற, நன்மை வளர்கின்ற திருநாவலூரில் உள்ளார்க்குத் தலைவனாகிய நம்பியாரூரன் போற்றிய இசை நலம் மிக்க, தமிழ்ச்சொற்கள் என்னும் மலர்களால் இயன்ற இம்மாலைகளை வாயிலாகக்கொண்டு அப்பெருமானது திருவடிகளில் பணிய வல்லவர் நிலையாமை நீங்கப் பெற்று, நிலைபேறுடையவராவர்.

திருஓணகாந்தன்தளி

திருஓணகாந்தன்தளி

திருஓணகாந்தன்தளி,
பண் - இந்தளம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : ஓணகாந்தீசுவரர்.
தேவியார் : காமாட்சியம்மை.

நெய்யும் பாலுந் தயிருங் கொண்டு
நித்தல் பூசனை செய்ய லுற்றார்
கையி லொன்றுங் காண மில்லைக்
கழல டிதொழு துய்யி னல்லால்
ஐவர் கொண்டிங் காட்ட வாடி
ஆழ்கு ழிப்பட் டழுந்து வேனுக்
குய்யு மாறொன் றருளிச் செய்யீர்
ஓண காந்தன் தளியு ளீரே. **#42**

'திருவோணகாந்தன்தளி' என்னும் திருக்கோயிலில் வாழும் பெருமானிரே, 'நெய், பால், தயிர் முதலியவற்றால் உம்மை நாள்தோறும் வழிபடுவாரது கையில்காசு ஒன்றும் காணப்படுகின்றதில்லை. அவ்வாறே, உமது கழலணிந்த பாதத்தைக் கும்பிட்டு ஏதேனும் பெற்றாலன்றி, இவ்வுலகத்தில், புலன்களாகிய ஐவர் தண்டலாளர் ஐந்து பக்கம் பற்றி ஈர்த்துச் சுழற்றச் சுழன்று, அச்சுழற்சியாலாகிய துன்பம் என்னும் ஆழ்ந்த குழியில் அகப்பட்டு ஏறமாட்டாது அழுந்திப் போவேனாகிய அடியேனுக்கு, அதனினின்றும் கரையேறும் வழியொன்றனைச் சொல்லியருளீர்.

திருஓணகாந்தன்தளி

திங்கள் தங்கு சடையின் மேலோர்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கை யாளேல் வாய்தி றவாள்
கணப தியேல் வயிறு தாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை
தேவி யார்கோற் றட்டி யாளார்
உங்க ளுக்காட் செய்ய மாட்டோம்
ஓண காந்தன் தளியு ளீரே. **#43**

'திருவோணகாந்தன்தளி' என்னும் திருக்கோயிலில் வாழும் பெருமானிரே, பிறை தங்குமாறு சேர்த்துக் கட்டியுள்ள உமது சடையின்

மேலும், ஒப்பற்ற அலைகள் தோன்றிப் புரளுமாறு வீசுகின்ற, 'கங்கை' என்னும் தேவியோவெனில், உமது பக்கத்தில் எஞ் ஞான்றும் உள்ள உமாதேவியார்க்கு அஞ்சி ஒருஞான்றும் வாய் திறத்தலே இல்லை; உம் மூத்த மகனாகிய விநாயகனோவெனில், வயிறு ஒன்றையே முதன்மையாக உடையவன்; (பிறிதொன்றையும் அறியான்). இளைய மகனாகிய, அகங்கையில் வேற்படையை யுடைய முருகனோவெனில், விளையாட்டுப் பிள்ளை; (யாதொன்றையும் பேணான்). தேவியாராகிய உமையம்மையாரோவெனில், உம்மை ஒழிந்து அடியவரை ஆளுவாரல்லர்; (நீரோ அடியவர் குறை நோக்கி யாதும் செய்யீர்) ஆதலின், உம் குடிக்கு யாங்கள் அடிமை செய்ய மாட்டேமாகின்றேம்.

திருஓணகாந்தன்தளி

பெற்ற போழ்தும் பெறாத போழ்தும்
பேணி உம்கழல் ஏத்து வார்கள்
மற்றோர் பற்றிலர் என்றி ரங்கி
மதியு டையவர் செய்கை செய்யீர்
அற்ற போழ்தும் அலந்த போழ்தும்
ஆவற் காலத் தடிகேள் உம்மை
ஒற்றி வைத்திங் குண்ண லாமோ
ஓண காந்தன் தளியு ளீரே. **#44**

தலைவரே, 'திருவோணகாந்தன்தளி' என்னும் திருக்கோயிலில் வாழும் பெருமானிரே, உம்மால் யாதானும் ஒன்றை அடையினும், அடையாதொழியினும் அவ்வாற்றான் வேறுபடுதல் இன்றி எஞ்ஞான்றும் ஒருபெற்றியே உம் திருவடியைப் பற்றிநின்று துதிக்கும் அடியவர், 'நம்மையன்றி வேறொரு துணையும் இல்லாதவர்' என்று நினைத்து, அறிவுடையவர்க்கு உரிய செய்கை ஒன்றும் நீர் செய்கின்றிலீர்; அதனால், உம் அடியவர் தங்கள் கையிற் பொருள் இல்லாதொழிந்த காலத்தும், அது காரணமாக வழியொன்றும் காணாது அலைந்த காலத்தும், உம்மைப் பிறருக்கு ஒற்றியாக வைத்துப் பிழைத்தல்தான் செயற்பாலதோ? (சொல்லீர்)

திருஓணகாந்தன்தளி

வல்ல தெல்லாம் சொல்லி உம்மை
வாழ்த்தி னாலும் வாய்தி றந்தொன்
றில்லை என்னீர் உண்டும் என்னீர்
எம்மை ஆள்வான் இருப்ப தென்நீர்
பல்லை உக்க படுத லையிற்
பகல்எ லாம்போய்ப் பலிதி ரிந்திங்

கொல்லை வாழ்க்கை ஒழிய மாட்டீர்
ஓண காந்தன் தளியு ளீரே. **#45**

'திருவோணகாந்தன்தளி' என்னும் திருக்கோயிலில் வாழும் பெருமானிரே, யாம் வல்ல கருத்துக்கள் பலவும் சொல்லி உம்மை வாழ்த்தியபோதும், நீர் வாய்திறந்து, எமக்கு ஈய யாதேனும் ஒருபொருளை, 'இல்லை' என்றும் சொல்கின்றிலீர்; 'உண்டு' என்றும் சொல்கின்றிலீர்; நீர் எம்மைப் பணிகொள்ள இருத்தல் எவ்வாறு? நாள்தோறும் சென்று, பல் நீங்கிய, இறந்தாரது தலையில் இவ்வுலகில் பிச்சை ஏற்கத் திரிந்தும், இல்வாழ்க்கையை விரைவில் விட்டொழிய மாட்டீர்.

<u>திருஓணகாந்தன்தளி</u>

கூடிக் கூடித் தொண்டர் தங்கள்
கொண்ட பாணி குறைப டாமே
ஆடிப் பாடி அழுது நெக்கங்
கன்பு டையவர்க் கின்பம் ஓரீர்
தேடித் தேடித் திரிந்தெய்த் தாலும்
சித்தம் என்பால் வைக்க மாட்டீர்
ஓடிப் போகீர் பற்றுந் தாரீர்
ஓண காந்தன் தளியு ளீரே. **#46**

'திருவோணகாந்தன்தளி' என்னும் திருக்கோயிலில் வாழும் பெருமானிரே, நீர், தம்மிற் பலகாலும் கூடி., அடியவர்க்கு உரிய, பொருந்திய தாளத்தொடுபட்ட பாட்டுக்களைக் குற்றம் உண்டாகாமலே பாடியும், ஆடியும், மனம்நெகிழ்ந்து அழுதும், மற்றும் அவ்வாற்றால் அன்புடையராய் இருப்பவர்க்கு நன்மை செய்யு மாற்றினை நினைக்கின்றிலீர்; உம்மைக் காண வந்து பலவிடத்திலும் தேடித் தேடித் திரிந்தாலும், என்னிடத்தில் இரக்கம் வைத்துக் காட்சியளிக்கமாட்டீர்; கோயிலைவிட்டுப் போகவும் மாட்டீர்; கோயிலில் வந்து பாடுகின்ற எனக்குப் பற்றுக்கோடும் தரமாட்டீர்; (என் செய்வேன்!)

<u>திருஓணகாந்தன்தளி</u>

வாரி ருங்குழல் வாள்நெ டுங்கண்
மலைம கள்மது விம்மு கொன்றைத்
தாரி ருந்தட மார்பு நீங்காத்
தைய லாள்உல குய்ய வைத்த
காரி ரும்பொழிற் கச்சி மூதூர்க்
காமக் கோட்டம்உண் டாக நீர்போய்
ஊரி டும்பிச்சை கொள்வ தென்னே

ஓண காந்தன் தளியு ளீரே. #47
'திருவோணகாந்தன்தளி' என்னும் திருக்கோயிலில் வாழும் பெருமானிரே. தேன் ததும்புங்கொன்றை மாலையை உடைய உமது பெரிய அகன்ற மார்பினின்றும் நீங்காத, நீண்ட கரிய கூந்தலையும், வாள்போலும் நெடிய கண்களையும் உடைய மலைமகளாகிய தேவி. உலக மெல்லாம் துன்பமின்றி வாழ்தற் பொருட்டு வைத்துள்ள சிறந்த அறச்சாலையாகிய, மேகம் தவழும் பெரிய சோலையையுடைய, 'கச்சி' என்னும் பழைய ஊரின்கண் உள்ள திருக்காமக் கோட்டம் இருக்க, நீர் சென்று, ஊரவர் இடும் பிச்சையை ஏற்பது ஏன்?

திருஓணகாந்தன்தளி

பொய்ம்மை யாலே போது போக்கிப்
புறத்தும் இல்லை அகத்தும் இல்லை
மெய்ம்மை சொல்லி ஆள மாட்டீர்
மேலை நாள்ஒன் றிடவுங் கில்லீர்
எம்மைப் பெற்றால் ஏதும் வேண்டீர்
ஏதுந் தாரீர் ஏதும் ஓதீர்
உம்மை யன்றே எம்பெரு மான்
ஓண காந்தன் தளியு ளீரே. #48

'திருவோணகாந்தன்தளி' என்னும் திருக்கோயிலில் வாழும் பெருமானிரே. நீர் பொய்ச்சொல்லினாலே காலங் கழித்து, திருக்கோயிலின் புறத்தும் காணப்படீர்; அகத்தும் காணப்படீர். ஆகவே நீர் நும் அடியவரை மெய்சொல்லி ஆளமாட்டீர்போலும்! இனி, பின்வரும் நாள்களிலும் ஒன்றும் தரமாட்டீரேயாம்; ஏனெனில், எம்மை ஆளாகப் பெறுமளவும் விடாது வழக்காடுதல் அல்லது, பெற்றுவிட்டால் பின்பு எம்பால் ஒரு பணியையும் விரும்புகின்றிலீர். எவ்வாற்றான் நோக்கினும், நீர் எமக்கு யாதும் ஈகின்றவராயோ, யாதும் சொல்கின்றவராயோ தோன்றவில்லை. இந்நிலையில் நீர் எமக்குத் தலைவராய் இருத்தல், இப்பிறப்பு வந்தபின்னன்று; முற்பிறப்புத் தொட்டேயாம்.

திருஓணகாந்தன்தளி

வலையம் வைத்த கூற்ற மீவான்
வந்து நின்ற வார்த்தை கேட்டுச்
சிலைஅ மைத்த சிந்தை யாலே
திருவ டீதொழு துய்யின் அல்லால்
கலைஅ மைத்த காமச் செற்றக்
குரோத லோப மதவ ரூடை

உலைஅ மைத்திங் கொன்ற மாட்டேன்
ஓண காந்தன் தளியு ளீரே. #49

'திருவோணகாந்தன்தளி' என்னும் திருக்கோயிலில் வாழும் பெருமானிரே, எத்தகையோரையும் கொண்டு செல்ல, பாசத்தைக் கையிலே கொண்டுள்ள கூற்றுவன் வந்து வானத்தின்மேல் நின்ற செய்தியைக்கேட்டு, அடியேன், நீர் கற்போல அமைத்துத் தந்த அம் மனத்தைக் கொண்டே உமது திருவடியைத் தொழுது அக்கூற்றுவனுக்குத் தப்ப நினைக்கின்றேனேயன்றி, விதி அமைத்துத் தந்த ஐம்பொறிகளாகிய ஐந்து உலைக்களக் கூட்டத்தைப் பொருளாக உள்ளத்தமைத்து, 'காமம், மாற்சரியம், குரோதம், உலோபம், மதம்' என்பவரிடைப் பொருந்தி வாழ நினைக்கின்றிலேன்.

திருஓணகாந்தன்தளி

வார மாகித் திருவ டிக்குப்
பணிசெய் தொண்டர் பெறுவ தென்னே
ஆரம் பாம்பு வாழ்வ தாரூர்
ஒற்றி யூரேல் உம்ம தன்று
தார மாகக் கங்கை யாளைச்
சடையில் வைத்த அடிகேள் உந்தம்
ஊரும் காடு உடையும் தோலே
ஓண காந்தன் தளியு ளீரே. #50

'திருவோணகாந்தன்தளி' என்னும் திருக்கோயிலில் வாழும் பெருமானிரே, 'கங்கை' என்பவளைத்தாரமாகக் கொண்டு, இடமின்றிச் சடையில் வைத்துள்ள அடிகளே, நீர் மார்பில் அணியும் ஆரமாவது பாம்பு; வாழும் ஊர் உமக்கு உரிமையில்லாதது; 'ஒற்றியூர் உளதே' எனில் 'ஒற்றி' யெனவே, அஃது உம்முடையது அன்றாயிற்று. உமக்கு இல்லமாவது சுடுகாடு; உமது உடையாவது தோல். இங்ஙனமாதலின், உம்மிடத்து அன்புடையவராய் உம்திருவடிக்குத் தொண்டு செய்யும் அடியவர் உம்மிடத்தினின்றும் பெறுவது எதனை?

திருஓணகாந்தன்தளி

ஓவ ணம்மேல் எருதொன் றேறும்
ஓண காந்தன் தளியு ளார்தாம்
ஆவ ணஞ்செய் தாளுங் கொண்ட
வரைது கில்லொடு பட்டு வீக்கிக்
கோவ ணம்மேற் கொண்ட வேடம்
கோவை யாகஆ ரூரன் சொன்ன
பாவ ணத்தமிழ் பத்தும்வல் லார்க்குப்

பறையுந் தாஞ்செய்த பாவந் தானே. #51
நீக்கப்படும் தன்மையை ஏற்றுள்ள ஒற்றை எருதை ஊர்தியாகக் கொள்ளும், திருவோணகாந்தன்தளியில் வாழ்கின்ற இறைவர், நம்பியாரூரனை, தாமே பத்திரம் எழுதிக் கொண்டுவந்து ஆட்கொண்ட எல்லைக்கண், துகிலும் பட்டும் உடுத்திருந்து, பின்பு அவர் ஆணைவழியே அவரை அவன் அணுகிப் பாடுதலாகிய தொண்டினைச் செய்யும் எல்லைக் கண் கோவண மட்டிலே உடையவராய் நின்ற கோலத்தின் தன்மைகள் பலவும் நிரல்படத் தோன்றுமாறு அமைத்து அவன்பாடிய, பா வடிவாகிய இத் தமிழ்ச் செய்யுள்கள் பத்தினையும் பொருளுணர்ந்து அன்பு மீதூரப் பண்ணொடு நன்கு பாடவல்லவர்க்கு அவர் செய்த பாவம் விரைந்து நீங்கும்.

திருவெண்காடு

திருவெண்காடு

திருவெண்காடு,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சுவேதாரணியேசுவரர்.
தேவியார் : பிரமவித்தியாநாயகியம்மை.

படங்கொள் நாகஞ் சென்னி சேர்த்திப்
பாய்பு லித்தோல் அரையில் வீக்கி
அடங்க லார்ஊர் எரியச் சீறி
அன்று மூவர்க் கருள்பு ரிந்தீர்
மடங்க லானைச் செற்று கந்தீர்
மனைகள் தோறுந் தலைகை யேந்தி
விடங்க ராகித் திரிவ தென்னே
வேலை சூழ்வெண் காட னீரே. **#52**

கடல் சூழ்ந்த திருவெண்காட்டையுடைய இறைவரே, நீர், படத்தையுடைய பாம்பைத் தலையிலே வைத்து, பாய்கின்ற புலியினது தோலை அரையிற் கட்டி, பகைவரது திரிபுரங்கள் எரிந்தொழியுமாறு வெகுண்டு, அந்நாளிற்றானே அவ்வூரிலுள்ள மூவருக்கு அருள் பண்ணினீர்; கூற்றுவனை முன்னர்க் கொன்று, பின்னர் உயிர்ப்பித்து, அவனை மகிழ்ந்து ஏற்றுக்கொண்டீர்; இன்ன பெருமைகளையுடையீராய் இருந்தும், தலை ஓட்டினைக் கையில் ஏந்திக்கொண்டு, பேரழகுடைய உருவத்துடன் மனைகள் தோறும் பிச்சைக்குத் திரிவது என்?

திருவெண்காடு

இழித்து கந்தீர் முன்னை வேடம்
இமைய வர்க்கும் உரைகள் பேணா
தொழித்து கந்தீர் நீர்முன் கொண்ட
வுயர்த வத்தை அமரர் வேண்ட
அழிக்க வந்த காம வேளை
அவனு டைய தாதை காண
விழித்து கந்த வெற்றி யென்னே
வேலை சூழ்வெண் காட னீரே. **#53**

கடல் சூழ்ந்த திருவெண்காட்டையுடைய இறைவரே, நீர், அரி பிரமர்க்கும் அவரது முன்னை உடம்புகளை நீக்கி, அவற்றை விரும்பித்

தோள்மேற் கொண்டீர்; 'என்றும் இறவாதபடி காப்பவன்' என்னும் புகழை விரும்பாது, எல்லாப் பொருள்களையும் அழித்தொழித்து, அதன்பின்னர் அவைகளை மீளத் தோன்றச் செய்தலை விரும்பினீர்; அங்ஙனமாக, நீர் முன்பு மேற்கொண்ட, மேலான தவத்தினை, தேவர் வேண்டிக்கொண்டமையால் அழித்தற்கு வந்த மன்மதனை, அவனுடைய தந்தையாகிய திருமால் ஒன்றும் செய்யமாட்டாது பார்த்துக் கொண்டிருக்க. நெற்றிக்கண்ணால் எரித்து, பின் உயிர்ப்பித்த வெற்றியை விரும்பியது என்?

திருவெண்காடு

படைக ளேந்திப் பாரி டம்மும்
பாதம் போற்ற மாதும் நீரும்
உடையோர் கோவ ணத்த ராகி
உண்மை சொல்லீர் உம்மை யன்றே
சடைகள் தாழக் கரண மிட்டுத்
தன்மை பேசி இல்ப லிக்கு
விடைய தேறித் திரிவ தென்னே
வேலை சூழ்வெண் காட னீரே. **#54**

கடல் சூழ்ந்த திருவெண்காட்டையுடைய இறைவரே, நீர், பூதகணங்கள் பலவகையான படைகளை ஏந்திக் கொண்டு உம் திருவடிகளை வணங்கித் துதிக்க. உம் தேவியுடனே. உடையைக் கோவண உடையாக உடுத்துக்கொண்டு, சடைகள் நீண்டு அசையக் கூத்தாடிக் களித்துப் பின்னர், இல்வாழ்க்கை யுடையாரைப் பெருமையாகச் சொல்லி, அவர்தம் இல்லங்களில் பிச்சைக்குத் திரிதல் என்? உமது உண்மை நிலையைச் சொல்லியருளீர்.

திருவெண்காடு

பண்ணு ளீராய்ப் பாட்டு மானீர்
பத்தர் சித்தம் பரவிக் கொண்டீர்
கண்ணு ளீராய்க் கருத்தில் உம்மைக்
கருது வார்கள் காணும் வண்ணம்
மண்ணு ளீராய் மதியம் வைத்தீர்
வான நாடர் மருவி ஏத்த
விண்ணு ளீராய் நிற்ப தென்னே
வேலை சூழ்வெண் காட னீரே. **#55**

கடல் சூழ்ந்த திருவெண்காட்டையுடைய இறைவரே, நீர், விண்ணுலகத்தில் உள்ளோர் சூழ்ந்து போற்ற ஆங்கு உள்ளீராய் இருந்தும், இம் மண்ணுலகத்தில் பண்களாகியும், அவற்றையுடைய

பாட்டுக்களாகியும், அடியார்களது உள்ளத்தில் நிறைந்தும், மக்கள் முதலிய உயிர்களின் கண்களாகியும், உம்மை உள்ளத்தில் நினைபவர், புறத்தேயும் காணும்படி உருவங் கொண்டும் இருத்தல் என்?

திருவெண்காடு

குடமெ டுத்து நீரும் பூவுங்
கொண்டு தொண்டர் ஏவல் செய்ய
நடமெ டுத்தொன் றாடிப் பாடி
நல்கு வீர்நீர் புல்கும் வண்ணம்
வடமெ டுத்த கொங்கை மாதோர்
பாக மாக வார்க டல்வாய்
விடம்மி டற்றில் வைத்த தென்னே
வேலை சூழ்வெண் காட னீரே. **#56**

கடல் சூழ்ந்த திருவெண்காட்டையுடைய இறைவரே, அடியார்கள் குடத்தைச் சுமந்து நீரையும் பூவையும் ஈட்டிக் கொண்டு வந்து உமக்குப் பணிசெய்ய, நீர், உம்மை என்றும் பிரியாது உடனிருத்தற் பொருட்டு, மணிவடம் அணிந்த தனங்களையுடைய மங்கை ஒரு பாகத்தில் இருக்க நடனத்தை மேற்கொண்டு, ஆடலும் பாடலும் நன்கு இயைய ஆடியும் பாடியும் அவர்கட்கு இன்பந் தருவீர்; அவ்வாறிருந்தும், நீண்ட கடலில் தோன்றிய நஞ்சினைக் கண்டத்தில் வைத்தது என்?

திருவெண்காடு

மாறு பட்ட வனத்த கத்தின்
மருவ வந்த வன்க ளிற்றைப்
பீறி இட்ட மாகப் போர்த்தீர்
பெய்ப லிக்கென் றில்லந் தோறுங்
கூறு பட்ட கொடியும் நீருங்
குலாவி யேற்றை அடர ஏறி
வேறு பட்டுத் திரிவ தென்னே
வேலை சூழ்வெண் காட னீரே. **#57**

கடல் சூழ்ந்த திருவெண்காட்டையுடைய இறைவரே, நீர் உம்மொடு மாறுபட்டு நின்ற, காட்டில் வாழப்பிறந்த, வலியகளிற்றை உரித்து, அதன் தோலை, விருப்பம் உண்டாகப் போர்த்தீர்; அன்ன வீரத்தை உடையீராயும், உமக்கு ஒரு கூறாகப் பொருந்திய மங்கையும் நீரும் எருதையே ஊர்தியாகச் செறிய ஊர்தலும், பிறர் இடுகின்ற பிச்சைக்கென்று இல்லந்தோறும் திரிதலும் செய்து, நுமது பெருமையினின்றும் வேறுபட்டு ஒழுகுதல் என்?

திருவெண்காடு

காத லாலே கருதுந் தொண்டர்
கார ணத்த ராகி நின்றே
பூதம் பாடப் புரிந்து நட்டம்
புவனி யேத்த ஆட வல்லீர்
நீதி யாக ஏழி லோசை
நித்த ராகிச் சித்தர் சூழ
வேத மோதித் திரிவ தென்னே
வேலை சூழ்வெண் காட னீரே. **#58**

கடல் சூழ்ந்த திருவெண்காட்டையுடைய இறைவரே, நீர், உம்மை நினைக்கின்ற அடியார் நிமித்தமாக நின்று, பூதங்கள் பாட, உலகம் உயர்த்துக்கூறுமாறு, நடனத்தை விரும்பி ஆடவல்லீர்; அவ்வாறாகவும், உலகியல் விளங்குதற் பொருட்டு, யோகியர் சூழ, ஏழிசையின்வழி நிலைத்து நின்று, வேதத்தை ஓதித் திரிதல் என்?

திருவெண்காடு

குரவு கொன்றை மதியம் மத்தங்
கொங்கை மாதர் கங்கை நாகம
விரவு கின்ற சடையு டையீர்
விருத்த ரானீர் கருத்தில் உம்மைப்
பரவும் என்மேற் பழிகள் போக்கீர்
பாக மாய மங்கை அஞ்சி
வெருவ வேழஞ் செற்ற தென்னே
வேலை சூழ்வெண் காட னீரே. **#59**

கடல் சூழ்ந்த திருவெண்காட்டையுடைய இறைவரே, நீர், 'குரா மலர், கொன்றை மலர், ஊமத்த மலர், பிறை, தனங்களையுடைய நங்கையாகிய கங்கை, பாம்பு' ஆகிய எல்லாம் தலைமயங்கிக் கிடக்கின்ற சடையினை யுடையீர்; யாவர்க்கும் மூத்தீர்; அங்ஙனமாயினும், எஞ்ஞான்றும் உம்மையே கருத்தில் வைத்துப் பாடுகின்ற என்மேல் உள்ள பாவத்தைப் போக்கீராதலோடு, உமது பாகத்தில் உள்ள மங்கை மிகவும் அச்சங் கொள்ளுமாறு, யானையை உரித்துப் போர்த்தது என்?

திருவெண்காடு

மாடங் காட்டுங் கச்சி யுள்ளீர்
நிச்ச யத்தால் நினைப்பு ளார்பால்
பாடுங் காட்டில் ஆடலுள்ளீர்

பரவும் வண்ணம் எங்ங னேதான்
நாடுங் காட்டில் அயனும் மாலும்
நணுகா வண்ணம் அனலு மாய
வேடங் காட்டித் திரிவ தென்னே
வேலை சூழ்வெண் காட னீரே. #60

கடல் சூழ்ந்த திருவெண்காட்டையுடைய இறைவரே, நீர், உம்மைத் தௌந்த உள்ளத்துடன் நினைப்பவர் முன்னே, உயர்ந்த மாளிகைகளையுடைய கச்சியம்பதியில் எழுந்தருளியுள்ளீர்; என்றாலும், பேய்கள் பாடும் காட்டில் ஆடலை உடையீர்; அதுவன்றியும், அயனும் மாலும் தமது தலைமையை ஆய்ந்து காணுதற்குக் கொண்ட சான்றிடத்து, அவர்கள் உம்மை அணுகாதவாறு தீப்பிழம்பாய் நின்ற வடிவத்தையே எங்கும் காட்டித் திரிவது என்? உம்மையாங்கள் வழிபடுவது எவ்வாறு?

திருவெண்காடு

விரித்த வேதம் ஓத வல்லார்
வேலை சூழ்வெண் காடு மேய
விருத்த னாய வேதன் றன்னை
விரிபொ ழிற்றிரு நாவ லூரன்
அருத்தி யால்ஆ ரூரன் தொண்டன்
அடியன் கேட்ட மாலை பத்துந்
தெரித்த வண்ணம் மொழிய வல்லார்
செம்மை யாளர் வானு ளாரே. #61

விரிவாகச் செய்யப்பட்டுள்ள வேதங்களை ஓத வல்லவர் வாழ்கின்ற, கடல் சூழ்ந்த திருவெண்காட்டில் எழுந்தருளியுள்ள, யாவர்க்கும் மூத்தோனாகிய அந்தணனை, அவனுக்குத் தொண்டனும், அவன் அடியார்க்கு அடியனும் அகன்ற சோலையையுடைய திருநாவலூரனும் ஆகிய நம்பியாரூரன் விருப்பத்தொடு சிலவற்றை வினவிச் செய்த, தமிழ்ச்சொற்களாலாகிய மாலை பத்தினையும், அவன் தெரித்துச் சொன்ன குறிப்பில் நின்று பாட வல்லவர், கோட்டம் நீங்கிய உணர்வினையுடையராய். சிவலோகத்தில் இருப்பவராவர்.

திருஎதிர்கொள்பாடி

திருஎதிர்கொள்பாடி

திருஎதிர்கொள்பாடி,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அயிராவதேசுவரர்.
தேவியார் : வாசமலர்க்குழன்மாதம்மை.

மத்த யானை யேறி மன்னர்
சூழ வருவீர்காள்
செத்த போதில் ஆரு மில்லை
சிந்தையுள் வைம்மின்கள்
வைத்த உள்ளம் மாற்ற வேண்டா
வம்மின் மனத்தீரே
அத்தர் கோயில் எதிர்கொள்பாடி
யென்ப தடைவோமே. **#62**

மதத்தையுடைய யானையின்மீது ஏறி சிற்றரசர்கள் புடைசூழ உலாவருகின்ற பேரரசர்களே, நீவிர் இறந்தால், அதுபோது உம்மோடு துணையாய் வருவார் இவர்களுள் ஒருவரும் இலர்; இறைவன் ஒருவனே அத்தகையனாய் உளன்; இதனை உங்கள் மனத்தில் நன்கு பதிய வைத்துக் கொள்ளுங்கள். அவ்வாறு வைத்த மனத்தைப் பின் அந்நிலையினின்றும் வேறுபடுத்தி, மீள, இவ்வாழ்க்கையை உறுதியதாக நினைக்க வேண்டா.

என் நெஞ்சீரே, நீரும் வாரும்; அவர்களுடன், யாவர்க்கும் தந்தையாராகிய இறைவரது திருக்கோயிலை, 'திருஎதிர்கொள்பாடி' எனப்படுவதாகிய ஊரிடத்துச் சென்று அடைவோம்.

திருஎதிர்கொள்பாடி

தோற்ற முண்டேல் மரண முண்டு
துயர மனைவாழ்க்கை
மாற்ற முண்டேல் வஞ்ச முண்டு
நெஞ்ச மனத்தீரே
நீற்றர் ஏற்றர் நீல கண்டர்
நிறைபுனல் நீள்சடைமேல்
ஏற்றர் கோயில் எதிர்கொள் பாடி
யென்ப தடைவோமே. **#63**

நினைத்தற் றன்மையை யுடைய நெஞ்சீரே, யாவர்க்கும், பிறப்பு உளதாயின், இறப்பும் ஒருதலையாக உண்டு; அவற்றிற்கு இடையே உள்ள இல்வாழ்க்கையும் துன்பம் தருவதே. அவ்வாழ்க்கையின் பொருட்டுச் சொல்லப்படும் சொல் உளதாயின். அதன்கண் பெரும்பாலும் வஞ்சனை உளதாவதேயாம். அதனால், அவைகளின் நீங்குதற் பொருட்டு, வெண்ணீற்றை யணிந்தவரும், இடப வாகனத்தை உடையவரும், மிக்க நீரை நீண்ட சடையிலே தாங்கியவரும் ஆகிய இறைவரது திருக்கோயிலை, 'திருஎதிர்கொள்பாடி' எனப்படுவதாகிய ஊரிடத்துச் சென்று அடைவோம்; வாரீர்.

திருஎதிர்கொள்பாடி

செடிகொள் ஆக்கை சென்று சென்று
தேய்ந்தொல்லை வீழாமுன
வடிகொள் கண்ணார் வஞ்ச னையுட்
பட்டு மயங்காதே
கொடிகொ ளேற்றர் வெள்ளை நீற்றர்
கோவண ஆடையுடை
அடிகள் கோயில் எதிர்கொள் பாடி
யென்ப தடைவோமே. **#64**

நெஞ்சீரே, துன்பத்தைக் கொண்ட உடம்பானது, உலகியலில் உழன்று உழன்று மெலிந்து, விரைய வீழ்ந்தொழியாத முன்னே, மாவடுவின் வடிவைக் கொண்ட கண்களையுடைய மாதரது மயக்கத்திற் பட்டு மயங்காது, தம் கொடி தன்னிடத்துப் பொருந்தக் கொண்ட இடபத்தை யுடையவரும், வெண்மையான நீற்றை அணிந்தவரும், கோவணமாக உடுத்த ஆடையை உடைய தலைவரும் ஆகிய இறைவரது திருக்கோயிலை, 'திருஎதிர்கொள்பாடி' எனப்படுவதாகிய ஊரிடத்துச் சென்று அடைவோம்; வாரீர்.

திருஎதிர்கொள்பாடி

வாழ்வர் கண்டீர் நம்முள் ஐவர்
வஞ்ச மனத்தீரே
யாவ ராலு மிகழப் பட்டிங்
கல்லலில் வீழாதே
மூவ ராயும் இருவ ராயும்
முதல்வன் அவனேயாம்
தேவர் கோயில் எதிர்கொள் பாடி
யென்ப தடைவோமே. **#65**

வஞ்சனையையுடைய நெஞ்சீரே, நமக்கு உட்பட்டவராயே ஐவர்

பகைவர் வாழ்வர்; அதனால், அவரது தீமையால் யாவராலும் இகழப்படும் நிலையை எய்தித் துன்பத்தில் வீழாது, தாமே மும்மூர்த்திகளாயும், தமது ஆணை வழியால் மாலும் அயனுமாயும், எவ்வாற்றானும் உலகிற்கு அவரே முதல்வராகும் முழுமுதல்வராகிய இறைவரது திருக்கோயிலை, 'திருஎதிர்கொள்பாடி' எனப்படுவதாகிய ஊரிடத்துச் சென்று அடைவோம்; வாரீர்.

திருஎதிர்கொள்பாடி

அரித்து நம்மேல் ஐவர் வந்திங்
காறலைப்பான் பொருட்டால்
சிரித்த பல்வாய் வெண்டலை போய்
ஊர்ப்புறஞ் சேராமுன்
வரிக்கொ டுத்தி வாள ரக்கர்
வஞ்சமதில் மூன்றும்
எரித்த வில்லி எதிர்கொள் பாடி
யென்ப தடைவோமே. **#66**

நெஞ்சீரே, ஐவர் ஆறலை கள்வர் நம்மேல் வந்து துன்புறுத்தி நன்னெறியின் இடையே அலைத்தலால் வாணாள் வீணாளாய்க் கழிய, மகிழ்ச்சியாற் சிரித்த பல்லினை உடைய வாய், வெண்டலையாய்ப் போய் ஊர்ப்புறத்திற் சேராத முன்பே, அழகினைக் கொண்ட படப்புள்ளிகளையுடைய பாம்பை அணிந்த, கொடிய அசுரரது பகைமை தங்கிய மதில்கள் மூன்றினையும் எரித்த வில்லையுடைய பெருமானது திருக்கோயிலை, 'திருஎதிர்கொள்பாடி' எனப்படுவதாகிய ஊரிடத்துச் சென்று அடைவோம்; வாரீர்.

திருஎதிர்கொள்பாடி

பொய்யர் கண்டீர் வாழ்க்கை யாளர்
பொத்தடைப் பான்பொருட்டால்
மையல் கொண்டீர் எம்மொ டாடி
நீரும் மனத்தீரே
நைய வேண்டா இம்மை யேத்த
அம்மை நமக்கருளும்
ஐயர் கோயில் எதிர்கொள் பாடி
யென்ப தடைவோமே. **#67**

நெஞ்சீரே, நம் இல்வாழ்க்கையை ஆளுதலுடைய சுற்றத்தார், நம்மீது நிலையற்ற அன்புடையரே; அதனை நினையாது, அவர்கள் குறையை முடித்தற் பொருட்டு நீரும் எம்மொடு கூடித் திரிந்து, மயக்கத்தையுடையீராயினீர்; இனி, அவ்வாற்றால் துன்புறுதல்

வேண்டா; இப்பிறப்பில் நாம் வழிபட்டிருக்க, வருகின்ற பிறப்பில் வந்து நமக்கு அருள் பண்ணும் நம் பெருமானது திருக்கோயிலை, 'திருஎதிர்கொள்பாடி' எனப்படுவதாகிய ஊரிடத்துச் சென்று அடைவோம்; வாரீர்.

திருஎதிர்கொள்பாடி

கூச னீக்கிக் குற்றம் நீக்கிச்
செற்ற மனம்நீக்கி
வாச மல்கு குழலி னார்கள்
வஞ்ச மனைவாழ்க்கை
ஆசை நீக்கி அன்பு சேர்த்தி
என்பணிந் தேறேறும்
ஈசர் கோயில் எதிர்கொள் பாடி
யென்ப தடைவோமே. **#68**

நெஞ்சே, கும்பிட்டுக் கூத்தாடக் கூசுதலை ஒழித்து, காமம் வெகுளி முதலிய குற்றங்களை அகற்றி, யாரிடத்தும் பகை கொள்ளுதலைத் தவிர்த்து, மணம் நிறைந்த கூந்தலையுடைய மகளிரது, வஞ்சனையையுடைய மனைவாழ்க்கையில் உள்ள ஆசையைத் துறந்து எலும்பை அணிதலோடு, விடையை ஊரும் இறைவரது திருக்கோயிலை அவரிடத்து அன்பு வைத்து. 'திரு எதிர் கொள்பாடி' எனப்படுவதாகிய ஊரிடத்துச் சென்று அடைவோம்; அதுவே செயற்பாலது; வா.

திருஎதிர்கொள்பாடி

இன்ப முண்டேல் துன்ப முண்டு
ஏழை மனைவாழ்க்கை
முன்பு சொன்னால் மோழை மையாம்
முட்டை மனத்தீரே
அன்ப ரல்லால் அணிகொள் கொன்றை
யடிகளடி சேரார்
என்பர் கோயில் எதிர்கொள் பாடி
யென்ப தடைவோமே. **#69**

பொறியொன்றும் இல்லாத முட்டைபோலும் நெஞ்சீரே, அறியாமையால் வரும் மனை வாழ்க்கையில் இன்பம் உள்ளதுபோலவே துன்பமும் உளதாதல் கண்கூடு; 'அழகிய கொன்றை மாலையை அணிந்த இறைவரது திருவடிகளை, அவற்றிற்கு அன்பராய் உள்ளவரல்லது அடையமாட்டார்' என்று, அறிந்தோர் கூறுவர்; இவற்றை முன்பு உமக்குச் சொன்னால் நீர் உணரமாட்டாமையின், அறியாமயாய் முடியும்; ஆதலாற் சொன்னோமில்லை. இனி மனை

வாழ்க்கையைக் கைவிட்டு, இறைவரது திருக்கோயிலை, 'திருஎதிர் கொள்பாடி' எனப்படுவதாகிய ஊரிடத்துச் சென்று அடைவோம்; வாரீர்.

திருஎதிர்கொள்பாடி

தந்தை யாருந் தவ்வை யாரு
மெட்டனைச் சார்வாகார்
வந்து நம்மோ டுள்ள ளாவி
வான நெறிகாட்டும
சிந்தை யீரே னெஞ்சி னீரே
திகழ்மதி யஞ்சூடும்
எந்தை கோயில் எதிர்கொள் பாடி
யென்ப தடைவோமே. #70

நெஞ்சீரே, தந்தையாரும் தமக்கையாரும் நமக்கு எள்ளளவும் துணையாகமாட்டார்; ஆதலின், நீர் எம்பால் வந்து உள்ளாய்க் கலந்து உசாவி, எமக்கு வீட்டு நெறியைக் காட்டும் நினைவுடையீராயின், விளங்குகின்ற திங்களைச் சூடும் நம் தந்தை கோயிலை, 'திருஎதிர்கொள்பாடி' எனப்படுவதாகிய ஊரிடத்துச் சென்று அடைவோம்; வாரீர்.

திருஎதிர்கொள்பாடி

குருதி சோர ஆனையின் தோல்
கொண்ட குழற்சடையன்
மருது கீறி ஊடு போன
மாலய னும்அறியாச்
சுருதி யார்க்குஞ் சொல்ல வொண்ணாச்
சோதியெம் மாதியான்
கருது கோயில் எதிர்கொள் பாடி
யென்ப தடைவோமே. #71

நெஞ்சீரே, யானையின் தோலை உதிரம் ஒழுகப் போர்த்த, குழல்போலும் சடையை உடையவனும், இருமருத மரங்களை முரித்து, அவற்றின் இடையே தவழ்ந்த மாயோனும், பிரமனும் காணாத, வேதத்தை உணர்ந்தோர்க்கும் சொல்ல ஒண்ணாத ஒளி வடிவினனும், எங்கள் முதல்வனும் ஆகிய சிவபிரான் தன் இடமாக விரும்புகின்ற திருக்கோயிலை, 'திருஎதிர்கொள்பாடி' எனப்படுவதாகிய ஊரிடத்துச் சென்று அடைவோம்; அதுவே செயற்பாலது; வாரீர்.

திருஎதிர்கொள்பாடி

முத்து நீற்றுப் பவள மேனிச்

செஞ்சடை யான்உறையும்
பத்தர் பந்தத் தெதிர்கொள் பாடிப்
பரமனை யேபணியச்
சித்தம் வைத்த தொண்டர் தொண்டன்
சடைய னவன்சிறுவன்
பத்தன் ஊரன் பாடல் வல்லார்
பாதம் பணிவாரே. #72

முத்துப்போலும் வெள்ளிய நீற்றையும், பவளம் போலும் செய்ய திருமேனியையும், சிவந்த சடையையும் உடைய இறைவன் வாழும், அடியவர் மனம் பிணிப்புண்ணுதலையுடைய திருஎதிர்கொள்பாடியில் உள்ள பெருமானை வணங்கவே விரும்பின, சிவனடியானும், சிவனடியார்க்கு அடியானும், 'சடையன்' என்பானுக்கு மகனும் ஆகிய நம்பியாரூரனது இப்பாடல்களை நன்கு பாடவல்லவர், அப்பெருமானது திருவடியை அடைந்து வணங்கியிருப்பர்.

திருவாரூர்

திருவாரூர்

திருவாரூர்,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வன்மீகநாதர்.
தேவியார் : அல்லியங்கோதையம்மை.

இறைகளோ டிசைந்த இன்பம்
இன்பத்தோ டிசைந்த வாழ்வு
பறைகிழித் தனைய போர்வை
பற்றியான் நோக்கி னேற்குத்
திறைகொணர்ந் தீண்டித் தேவர்
செம்பொனும் மணியுந் தூவி
அறைகழல் இறைஞ்சும் ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே. #73

தேவர்கள், செம்பொன்னையும், மணிகளையும் திறையாகக் கொணர்ந்து திரண்டு வந்து, நினது ஒலிக்கும் கழலையணிந்த திருவடிகளை, மலர் தூவி வணங்குகின்ற, திருவாரூரில் உள்ள தந்தையே, பறையைக் கிழித்தாற்போன்ற உடம்பைப் பற்றிநின்று பார்த்தேனாகிய எனக்கு, அவ்விடத்துச் சிறுபொருள்களோடு பொருந்திவந்த இன்பத்தையும், அவ்வின்பத்தோடு பொருந்தி நிகழ்ந்த இல்வாழ்க்கையையும் அஞ்சு தலுடையனாயினேன்.

திருவாரூர்

ஊன்மிசை உதிரக் குப்பை
ஒருபொரு ளிலாத மாயம்
மானமறித் தனைய நோக்கின்
மடந்தைமார் மதிக்கும் இந்த
மானுடப் பிறவி வாழ்வு
வாழ்வதோர் வாழ்வு வேண்டேன்
ஆனல்வெள் ளேற்ற ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே. #74

வெள்ளிய நல்ல ஆனேற்றையுடையவனே, திருவாரூரில் உள்ள தந்தையே, இறைச்சியை உள்ளடக்கி ஓடுகின்ற குருதிக்குப் பையாய் உள்ள இவ்வுடம்பு, பொருட்டன்மையாகிய உண்மையை உடைத்தல்லாத பொய்ப்பொருள்; ஆதலின், அத்தன்மையை அறியாத,

மான் மருண்டாற் போலும் பார்வையினையுடைய பெண்டிரே மதிக்கின்ற இந்த மானிடப்பிறவி வாழ்வினை, இன்புற்று வாழ்வதொரு வாழ்வாக விரும்புகின்றிலேன்; அத்துன்ப நிலைக்கு அஞ்சுதலுடையனாயினேன்.

திருவாரூர்

அறுபதும் பத்தும் எட்டும்
ஆறினோ டஞ்சும் நான்கும்
துறுபறித் தனைய நோக்கிச்
சொல்லிற்றொன் றாகச் சொல்லார்
நறுமலர்ப் பூவும் நீரும்
நாள்தொறும் வணங்கு வாருக்
கறிவினைக் கொடுக்கும் ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே. **#75**

மணம் கமழும் பூவும், நீருங் கொண்டு உன்னை நாள் தோறும் வழிபடுவார்க்கு மெய்யுணர்வைத் தருகின்ற, திருவாரூரில் உள்ள தந்தையே, பூதங்கள் ஐந்தும், ஞானேந்திரியம் கன்மேந் திரியம் என்னும் இந்திரியங்கள் பத்தும், தன்மாத்திரை ஐந்து அந்தக்கரணம் மூன்று என்னும் நுண்ணுடம்புறுப்புக்கள் எட்டும், தாத்துவிகங்கள் அறுபதும், 'காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன்' என்னும் வித்தியா தத்துவங்களாகிய ஆறும், 'சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி' என்னும் ஆகிய எல்லாம் புதராக, வேறாகக் கண்டு சொல்லின். அவற்றை அறிவுடைய தம்மியல்பாக ஒருவருங் கூறார்; ஆதலின், தம்மை, யானாகவே மயங்கும் வண்ணம் என் இயல்பை மறைத்து நிற்கின்ற அவற்றிற்கு அடியேன் அஞ்சுதலுடைய னாயினேன்.

திருவாரூர்

சொல்லிடில் எல்லை யில்லை
சுவையிலாப் பேதை வாழ்வு
நல்லதோர் கூரை புக்கு
நலமிக அறிந்தே னல்லேன்
மல்லிகை மாட நீடு
மருங்கொடு நெருங்கி யெங்கும்
அல்லிவண் டியங்கும் ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே. **#76**

மேல் மாடங்கள் உயர்ந்துள்ள இடங்களிலெல்லாம், வண்டுகள் மல்லிகை மலரின் அகவிதழில் வீழ்ந்துகிண்டுகின்ற திருவாரூரில் உள்ள தந்தையே, யான், ஓட்டைக்குடில்களுள் துச்சிலிருந்துவாழ்ந்த,

பேதைக்குரித்தாய, துன்பமே நிறைந்த வாழ்க்கைகளைச் சொல்லப்புகின், அவற்றிற்கு ஓர் எல்லை இல்லை. அங்ஙனமாகவும், நல்லதொரு புக்கிலுட் குடிபுகுந்து இன்பம் மிக வாழும் நெறியினை அறிந்திலேன்; அதனால், அஞ்சுதலுடையனாயினேன்.

திருவாரூர்

நரம்பினோ டெலும்பு கட்டி
நசையினோ டிசைவொன் றில்லாக்
குரம்பைவாய்க் குடியி ருந்து
குலத்தினால் வாழ மாட்டேன்
விரும்பிய கமழும் புன்னை
மாதவித் தொகுதி யென்றும்
அரும்புவாய் மலரும் ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே. **#77**

புன்னையும் மாதவியுமாகிய அவற்றையுடைய சோலைக்கண். யாவரும் விரும்புமாறு மணங்கமழ்கின்ற பேரரும்புகள் எந்நாளும் வாய்மலர்கின்ற திருவாரூரில் உள்ள தந்தையே, அடியேன், எலும்புகளை நரம்பாற் கட்டின, விருப்பத்தோடு சிறிதும் இசைவில்லாத (அருவருப்பைத் தருவதான) குடிசைக்கண் குடியிருத்தலால், நன்மாளிகையில் வாழும் உயர்ந்தார் நடுவுள்ளிருந்து வாழ இயலாதவனாயுள்ளேன்; அதனால், அஞ்சுதலுடையனாயினேன்.

திருவாரூர்

மணமென மகிழ்வர் முன்னே
மக்கள்தாய் தந்தை சுற்றம்
பிணமெனச் சுடுவர் பேர்த்தே
பிறவியை வேண்டேன் நாயேன்
பணையிடைச் சோலைதோறும்
பைம்பொழில் விளாகத் தெங்கள்
அணைவினைக் கொடுக்கும் ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே. **#78**

வயல்களின் நடுவேயுள்ள சோலைகளிலெல்லாம், பசிய இளமரக்காக்களை உடைய விளையாடுமிடங்களில், மக்கட்குத் தங்குமிடங்களைத் தருகின்ற திருவாரூரில் உள்ள தந்தையே, உலகில் தாய், தந்தை, சுற்றத்தார் என்போர் முன்பு (இளமையில்) தம் மக்கட்குத் திருமணம் நிகழாநின்றது என மகிழ்வார்கள். பின்பு அவர்தாமே அவர்களை, 'பிணம்' என்று சொல்லி ஊரினின்றும் அகற்றிப் புறங்காட்டிற் கொண்டுபோய் எரிப்படுத்து நீங்குவர்; ஆதலின்,

இத்தன்மைத்தாகிய பிறவியை அடியேன் விரும்புகின்றிலேன்: அதன்கண் வீழ்தற்கு அஞ்சுதலுடையனாயினேன்.

திருவாரூர்

தாழ்வெனுந் தன்மை விட்டுத்
தனத்தையே மனத்தில் வைத்து
வாழ்வதே கருதித் தொண்டர்
மறுமைக்கொன் றீய கில்லார்
ஆழ்குழிப் பட்ட போது
அலக்கணில் ஒருவர்க் காவர்
யாழ்முயன் றிருக்கும் ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே. **#79**

மக்கள் யாழிசைத்து இன்புற்றிருக்கின்ற திருவாரூரில் உள்ள தந்தையே, உலகத்தார் பொருள் ஒன்றனையே பெரிதாக மனத்துட்கொண்டு, அதனால் பெருமையுடன் வாழ்வதையே விரும்பி, பணிவு என்னும் பெருந்தன்மையை விட்டு, மறுமை நலத்தின் பொருட்டு வறியார்க்கு ஒன்று ஈதலை இலராகியே வாழ்வர்; துன்பத்துள் அகப்பட்டவர்க்கு அப்போது உதவியாய் நில்லாது, துன்பமின்றி இன்புற்றிருக்கின்ற மற்றொருவருக்கு உதவியாவர். அவரது தன்மையைக் கண்டு அவரொடு கூடி வாழ்வதற்கு அஞ்சுதலுடையனாயினேன்.

திருவாரூர்

உதிரநீர் இறைச்சிக் குப்பை
எடுத்தது மலக்கு கைம்மேல்
வருவதோர் மாயக் கூரை
வாழ்வதோர் வாழ்வு வேண்டேன்
கரியமா லயனுந் தேடிக் கழலிணை
காண மாட்டா
அரியனாய் நின்ற ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே. **#80**

கருமை நிறத்தையுடைய திருமாலும், பிரமனும் தேடித் திருவடியைக் காணமாட்டாத அருமையையுடையோனாய் நின்ற திருவாரூரில் உள்ள தந்தையே, குருதியாகிய நீராற் பிசைந்த இறைச்சியாகிய மண் குவியலைக் கொண்டு எடுத்ததாகிய மலக் குகையின்மேல் காணப்படுவதாகிய, விரையக்கெடும் தோலாகிய கூரையினுள்ளே வாழ்வதாகிய இழிந்த வாழ்க்கையை அடியேன் ரும்புகின்றிலேன். அதனது தீமைகள் பலவும் அறிந்து அதற்கு அஞ்சுதலுடையனாயினேன்.

திருவாரூர்

பொய்த்தன்மைத் தாய மாயப்
போர்வையை மெய்யென் றெண்ணும்
வித்தகத் தாய வாழ்வு
வேண்டிநான் விரும்ப கில்லேன்
முத்தினைத் தொழுது நாளும்
முடிகளால் வணங்கு வாருக்
கத்தன்மைத் தாகும் ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே. **#81**

முத்துப்போல அரிதிற் கிடைக்கும் நின்னை நாள் தோறும் தொழுது, தலையால் வணங்கும் அன்பர்கட்கு அத்தன்மையதாகிய சிறந்த பொருளாய் நின்று பெரும்பயனைத் தருகின்ற திருவாரூரில் உள்ள தந்தையே, நிலையாத தன்மையையுடைய உடம்பை நிலையுடையதாகக் கருதும் சதுரப்பாட்டினை யுடையதாகிய இவ்வுலக வாழ்க்கையை அடியேன் இன்றியமையாததாக நினைத்து விரும்பும் தன்மையில்லேன்; அதற்கு, அஞ்சுதலுடையனாயினேன்.

திருவாரூர்

தஞ்சொலார் அருள்ப யக்குந்
தமியனேன் தடமு லைக்கண்
அஞ்சொலார் பயிலும் ஆரூர்
அப்பனை ஊரன் அஞ்சிச்
செஞ்சொலால் நயந்த பாடல்
சிந்தியா ஏத்த வல்லார்
நஞ்சுலாங் கண்டத் தெங்கள்
நாதனை நணுகு வாரே. **#82**

பற்றுக் கோடாதற்குப் பொருந்தாத மகளிர் பொருட்டு மனம் உடைகின்ற தமியேனாகிய நம்பியாரூரன், அவரது பெருத்த தனங்களின் இன்பத்திலே அச்சந்தோன்றப் பெற்றவனாய், அழகிய சொற்களையுடைய மகளிர் ஆடல் பாடல்களைப் பயிலுகின்ற திருவாரூரிலுள்ள தந்தையைச் செவ்விய சொற்களால் வேண்டிப் பாடிய இப் பாடல்களை எண்ணிப் பாடவல்லவர், நஞ்சை அணி கலமாகத் தாங்கிய கண்டத்தையுடைய எங்கள் பெருமானை அடைவார்கள்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

திருஅரிசிற்கரைப்புத்தூர்

திருஅரிசிற்கரைப்புத்தூர்,
பண் - இந்தளம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : படிக்காசுவைத்தவீசுவரர்.
தேவியார் : அழகம்மை.

மலைக்கும்மக ளஞ்ச மதகரியை
உரித்தீர்எரித் தீர்வரு முப்புரங்கள்
சிலைக்குங்கொலைச் சேவுகந் தேறொழியீர்
சில்பலிக்கில்கள் தோறுஞ் செலவொழியீர்
கலைக்கொம்புங் கரிமருப் பும்மிடறிக்
கலவம்மயிற் பீலியுங் காரகிலும்
அலைக்கும்புனல் சேரரி சிற்றென்கரை
அழகார்திருப் புத்தூர் அழகனீரே. **#83**

மான்களின் கொம்புகளையும், யானையின் தந்தங்களையும் எடுத்தெறிந்து, தோகையையுடைய மயிலினது இறகுகளையும், கரிய அகிற்கட்டைகளையும் அலையப்பண்ணுகின்ற நீர் பொருந்திய அரிசிலாற்றின் தென்கரையிலுள்ள, அழகு நிறைந்த திருப்புத்தூரில் எழுந்தருளியுள்ள அழகரே! நீர் இமயமலைக்கு மகளாகிய உம் தேவி அச்சங்கொள்ளும்படி மதம் பொருந்திய யானையை உரித்தீர்; பெயர்ந்து வந்து எதிர்த்த மூன்று நகரங்களை எரித்தீர்; முழங்குகின்ற, கொல்லுந் தொழிலையுடைய காளையை விரும்பி ஏறுதலை விடமாட்டீர்; சிலவகையான பிச்சைக்கு இல்லங்கள் தோறும் செல்லுதலையும் நீங்கமாட்டீர்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

அருமல ரோன்சிரம் ஒன்றறுத்தீர்
செறுத்தீர் அழற் சூலத்தில் அந்தகனைத்
திருமகள் கோனெடு மால்பலநாள்
சிறப்பாகிய பூசனை செய்பொழுதில்
ஒருமலர் ஆயிரத் திற்குறைவா
நிறைவாகவோர் கண்மலர் சூட்டலுமே
பொருவிறல் ஆழி புரிந்தளித்தீர்
பொழிலார்திருப் புத்தூர்ப் புனிதனீரே. **#84**

சோலைகள் நிறைந்த திருப்புத்தூரில் எழுந்தருளியுள்ள புனிதரே, நீர்,

அரிதாகிய தாமரைமலரின்கண் இருக்கும் பிரமதேவனது தலையொன்றை அறுத்தீர்; நெருப்பை வீசும் சூலத்தினால் அந்தகாசுரனை அழித்தீர்; திருமட்குத் தலைவனாகிய நீண்ட வடிவினைக் கொண்ட திருமால் உமக்குப் பலநாள் சிறப்பாய் உள்ள வழிபாட்டினைச் செய்து வரும் நாள்களில் ஒருநாள், அவன் சாத்துகின்ற ஆயிரந் தாமரை மலர்களுள் ஒன்று குறைவாகி மறைய, அது நிறைவாகும்படி, தனது கண்ணாகிய மலரைப்பறித்துச் சாத்த மகிழ்ந்து, போரின்கண் வெற்றியைத் தருகின்ற சக்கரப் படையை அருளினீர்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

தரிக்குந்தரை நீர்தழல் காற்றந்தரஞ்
சந்திரன்சவி தாஇய மானன்ஆனீர்
சரிக்கும்பலிக் குத்தலை அங்கையேந்தித்
தையலார்பெய்யக் கொள்வது தக்கதன்றால
முரிக்குந்தளிர்ச் சந்தனத் தோடுவேயும்
முழங்குந்திரைக் கைகளால் வாரிமோதி
அரிக்கும்புனல் சேர்அரி சிற்றென்கரை
அழகார்திருப் புத்தூர் அழகனீரே. **#85**

கிள்ளி அணியத்தக்க தளிர்களையுடைய சந்தன மரத்தையும் மூங்கிலையும், ஒலிக்கின்ற அலைகளாகிய கைகளால் வாரிக்கொண்டு வந்து, கரையை மோதி அதனை ஒழித்து ஓடுகின்ற அரிசிலாற்றின் தென்கரையிலுள்ள, அழகு நிறைந்த திருப்புத்தூரில் எழுந்தருளியுள்ள அழகரே, நீர், 'எல்லாவற்றையும் தாங்குகின்ற நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம், சந்திரன், சூரியன், ஆன்மா' ஆகிய எல்லாப் பொருள்களுமானீர். ஆதலின், ஒன்றும் இல்லாதார் திரிந்து எடுக்கின்ற பிச்சையின் பொருட்டுத் தலை ஓட்டினை அங்கையில் ஏந்திச் சென்று பெண்டிர் சில பொருள்களை இட, அவற்றை ஏற்பது உமக்குத் தகுவதன்று.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

கொடியுடை மும்மதில் வெந்தழியக
குன்றம்வில்லா நாணியிற் கோலொன்றினால்
இடிபட எய்தெரித் தீர்இமைக்கும்
மளவில்லுமக் காரெதிர் எம்பெருமான்
கடிபடு பூங்கணை யான்கருப்புச்
சிலைக்காமனை வேவக் கடைக்கண்ணினால்
பொடிபட நோக்கிய தென்னைகொல்லோ
பொழிலார்திருப் புத்தூர்ப் புனிதனீரே. **#86**

எம்பெருமானிரே, சோலைகள் நிறைந்த திருப்புத்தூரில் எழுந்தருளியுள்ள புனிதரே, நீர், கொடிகளையுடைய மூன்று அரண்கள் வெந்து அழியும்படி, மலை வளைந்து வில்லாகுமாறு கட்டிய நாணியில் தொடுத்த ஓர் அம்பினாலே ஓசையுண்டாக எய்து, இமைக்கும் அளவில் எரித்தீர்; ஆதலின், உமக்கு நிகராவார் யாவர்? ஒருவரும் இல்லை; அங்ஙனமாக, மணம் பொருந்திய மலர்களையே அம்பாகவும், கரும்பையே வில்லாகவும் கொண்ட காம வேளை வெந்து சாம்பராய் அழிய கடைக்கண்ணால் சிவந்து நோக்கியது என் கருதியோ?

திருஅரிசிற்கரைப்புத்தூர்

வணங்கித்தொழு வாரவர் மால்பிரமன்
மற்றும்வானவர் தானவர் மாமுனிவர்
உணங்கற்றலை யிற்பலி கொண்டலென்னே
உலகங்களெல் லாமுடையீர் உரையீர்
இணங்கிக்கயல் சேல்இள வாளைபாய
இனக்கெண்டைதுள் ளக்கண் டிருந்தஅன்னம்
அணங்கிக்குணங் கொள்ளரி சிற்றென்கரை
அழகார்திருப் புத்தூர் அழகனீரே. **#87**

கயலும், சேலும் இளைய வாளையுமாகிய மீன்கள், ஒன்றோடு ஒன்று பொருந்தி மேலெழுந்து பாயவும், கூட்டமாகிய கெண்டை மீன்கள் துள்ளவும் அவற்றைக்கண்டு, முன்பு வாளாவிருந்த அன்னப்பறவைகள் அவைகளைத் துன்புறுத்தித் தம் இயல்பினை மேற்கொள்கின்ற (உண்கின்ற) அரிசிலாற்றின் தென்கரையிலுள்ள, அழகு நிறைந்த திருப்புத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற அழகரே, உலகம் எல்லாவற்றையும் உடையவரே, உம்மை அடிபணிந்து, கை கூப்பித்தொழுகின்ற அடியவராவார், திருமாலும், பிரமனும், மற்றைய தேவரும், அசுரரும், பெரிய முனிவருமாவர்; அங்ஙனமாக. நீர் உலர்ந்த தலையோட்டில் பிச்சை ஏற்பது என்னோ? சொல்லியருளீர்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

அகத்தடி மைசெய்யும் அந்தணன்றான
அரிசிற்புனல் கொண்டுவந் தாட்டுகின்றான்
மிகத்தளர் வெய்திக் குடத்தையும்நும்
முடிமேல்விழுத் திட்டு நடுங்குதலும்
வகுத்தவ னுக்குநித் தற்படியும்
வரும்என்றொரு காசினை நின்றநன்றிப்
புகழ்த்துணை கைப்புகச் செய்துகந்தீர்
பொழிலார்திருப் புத்தூர்ப் புனிதனீரே. **#88**

சோலைகள் நிறைந்த திருப்புத்தூரில் எழுந்தருளியுள்ள புனிதரே, நீர், உமக்கு அகத்தொண்டு செய்யும் அந்தணர் ஒருவர் தம் நியமப்படி ஒருநாள் அரிசிலாற்றின் நீரைக் கொணர்ந்து உமக்கு ஆட்டுகின்றவர், பசியினால் மிகவும் உடல் மெலிவடைந்து, நீர்க்குடத்தையும் உமது முடியின் மேல் நழுவி விழவிட்டு, அப்பிழைக்காக நடுக்கமுற, நீர் அவரது கனவில் தோன்றி, 'அன்பனே, நீ அறியாதவாறு உன்னால் நிகழ்ந்த பிழையை நினைந்து வருந்தற்க', 'உன் உடல் மெலிவிற்குக் காரணமான இவ்வற்கடம் நீங்குங்காறும், நாள்தோறும் உனக்குப் படியாக ஒரு காசும் கிடைக்கும்' என்று அருளிச் செய்து, நாள்தோறும் ஒரு பொற்காசினை வற்கடத்திலும் தவறாது நிலைபெற்ற திருத்தொண்டினைச் செய்த அப்புகழ்த்துணையாரது கையிற் சேரும்படி செய்து, அவரை ஆட்கொண்டருளினீர்.

<u>திருஅரிசிற்கரைப்புத்தூர்</u>

பழிக்கும்பெருந் தக்கன்எச் சம்மழியப்
பகலோன்முத லாப்பல தேவரையும்
தெழிந்திட்டவர் அங்கஞ் சிதைத்தருளுஞ்
செய்கையென்னைகொ லோமைகொள் செம்மிடற்றீர்
விழிக்குந்தழைப் பீலியொ டேலமுந்தி
விளங்கும்மணி முத்தோடு பொன்வரன்றி
அழிக்கும்புனல் சேர்அரி சிற்றென்கரை
அழகார்திருப் புத்தூர் அழகனீரே. **#89**

சிறிதிடத்தில் கருமை நிறத்தைக் கொண்ட, முழுவதும் செம்மையாயுள்ள கண்டத்தையுடையவரே, கண் விழிப்பது போலத்தோன்றும் அழகிய வட்டங்களையுடைய தழையாகிய மயிற்றோகையோடு ஏலக்காய் மரங்களைத்தள்ளி, ஒளி வீசுகின்ற மாணிக்கம், முத்து, பொன் என்பவற்றையும் வாரிக்கொண்டு, கரைகளை அழித்து ஓடும் நீர் பொருந்திய அரிசிலாற்றின் தென்கரையிலுள்ள அழகு நிறைந்த திருப்புத்தூரில் எழுந்தருளியிருக்கும் அழகரே, நீர், உம்மை இகழ்ந்த பெரிய தேவனாகிய தக்கனது வேள்வி அழியும்படி, சூரியன் முதலாக நின்ற தேவர் பலரையும் அவர் நடுங்கும்படி அதட்டி, அவரது உறுப்புக்களில் ஒவ்வொன்றைச் சிதைத்தது என்னையோ?

<u>திருஅரிசிற்கரைப்புத்தூர்</u>

பறைக்கண் நெடும்பேய்க் கணம்பாடல் செய்யக்
குறட்பா ரிடங்கள்பறை தாம்முழக்கப்
பிறைக்கொள் சடைதாழப் பெயர்ந்து நட்டம்
பெருங்கா டரங்காகநின் றாடலென்னே

கறைக்கொள் மணிகண் டமுந்திண் டோ ள்களுங்
கரங்கள்சிரந் தன்னிலுங் கச்சுமாகப்
பொறிக்கொள் அரவம் புனைந்தீர் பலவும்
பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே. #90

நஞ்சைக்கொண்ட நீல கண்டத்தில் கண்டசரமாகவும், திண்ணிய தோள்களில் வாகு வலயமாகவும், முன் கைகளிற் கங்கணமாகவும், தலையில் தலைச் சூட்டாகவும், அரையில் கச்சாகவும் புள்ளிகளைக்கொண்ட பாம்புகள் பலவற்றையும் அணிந்தவரே, சோலைகள் நிறைந்த திருப்புத்தூரில் எழுந்தருளியிருக்கும் புனிதரே, நீர், பறை போலும் பெரிய கண்களையுடைய பேய்க் கூட்டம் பாடு தலைச் செய்யவும், குறுகிய வடிவத்தையுடைய பூதங்கள் பறைகளை முழக்கவும், பிறையைக்கொண்ட சடை கீழே தாழ்ந்து அலைய, காலங்கடந்த காடே அரங்கமாக நின்று, அடிபெயர்த்து நடனமாடுதல் என்?

திருஅரிசிற்கரைப்புத்தூர்

மழைக்கண்மட வாளையோர் பாகம்வைத் தீர்வளர்
புன்சடைக் கங்கையை வைத்துகந்தீர்
முழைக்கொள் அரவோ டென்பணி கலனா
முழுநீறு மெய்பூசுதல் என்னைகொலோ
கழைக்கொள் கரும்புங் கதலிக் கனியுங்
கமுகின் பழுக்காயுங் கவர்ந்துகொண்டிட்
டழைக்கும் புனல்சேர் அரிசிற் றென்கரை
அழகார் திருப்புத்தூர் அழகனீரே. #91

'கழை' என்னும் தன்மையைக்கொண்ட கரும்புகளையும், வாழைப்பழங்களையும், கமுக மரத்தின் முற்றிய காய்களையும் வாரிக்கொண்டுவந்து கூப்பிடுகின்ற நீர் பொருந்திய அரிசிலாற்றின் தென்கரையில் உள்ள அழகு நிறைந்த திருப்புத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற புனிதரே, நீர், மேகம் போலும் பெரிய கண்களையுடைய உமாதேவியை ஒரு பங்கில் வைத்தீர்; அதன் மேலும், வளர்கின்ற புல்லிய சடையின்மேல், 'கங்கை' என்பவளை விரும்பி வைத்தீர். அங்ஙனமாக, செல்வ வாழ்க்கை வாழ நினையாது, புற்றினை இடமாகக் கொள்ளும் பாம்பும், எலும்புமே அணிகலங்களாக, மேனி முழுவதும் சாம்பலைப் பூசி வாழ்தல் என்னோ?

திருஅரிசிற்கரைப்புத்தூர்

கடிக்கும் அரவால் மலையால் அமரர்
கடலைக் கடையவெழு காளகூடம்
ஒடிக்கும் உலகங் களைஎன் றதனை

உமக்கேயமு தாகவுண் டீருமிழீர்
இடிக்கும் மழைவீழ்த் திழித்திட் டருவி
இருபாலுமோடி இரைக்குந் திரைக்கை
அடிக்கும் புனல்சேர் அரிசிற் றென்கரை
அழகார் திருப்புத்தூர் அழகனீரே. **#92**

இடிக்கின்ற மேகத்தைக் கீழே தள்ளி இழுத்துக் கொண்டு, முன்பு அருவியாய் ஓடி, பின்பு, ஒலிக்கின்ற அலைகளாகிய கைகளால் இருபக்கத்தும் உள்ள கரைகளை மோதும் வெள்ளமாய்ப் பெருகி ஒலிக்கின்ற நீர் பொருந்திய அரிசிலாற்றின் தென்கரையிலுள்ள அழகு நிறைந்த திருப்புத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற அழகரே, நீர், கடிக்கும் பாம்பாகிய கயிற்றைக் கொண்டு, மலையாகிய மத்தினால் தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது உண்டாகிய பெருநஞ்சு எல்லாவுலகத்தையும் அழித்துவிடும் என்று இரங்கி, அதனையே உமக்கு உரிய பங்காகிய அமுதமாக ஏற்று உண்டீர்; பின்பு இதுகாறும் அதனை உமிழவும் இல்லை.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

காரூர்மழை பெய்து பொழிஅருவிக்
கழையோடகில் உந்திட் டிருகரையும்
போரூர்புனல் சேர்அரி சிற்றென்கரைப்
பொழிலார்திருப் புத்தூர்ப் புனிதர்தம்மை
ஆரூரன் அருந்தமிழ் ஐந்தினொடைந்
தழகால்உரைப் பார்களுங் கேட்பவரும்
சீரூர்தரு தேவர்க ணங்களொடும்
இணங்கிச்சிவ லோகமே தெய்துவரே. **#93**

மேகங்கள் மிக்க மழையைப் பெய்ய, அதனாலே வீழ்ந்த அருவியிடத்துள்ள மூங்கிலையும், அகிற்கட்டையையும் தள்ளிக்கொண்டு, இருகரைகளின்மீதும் போரினை மேற்கொள்ளும் நீர் பொருந்திய அரிசிலாற்றின் தென்கரையிலுள்ள, சோலைகள் நிறைந்த திருப்புத்தூர்ப் புனிதரை, நம்பியாரூரனது அரிய தமிழ்ப்பாடல்கள் பத்தினாலும், மொழிக்குற்றம், இசைக்குற்றம் இன்றித் துதிப்பவர்களும், அத்துதியைக் கேட்பவர்களும், சிறப்பு மிக்க தேவர் கூட்டத்துட்கூடி வாழ்ந்து, பின் சிவலோகத்தை அடைவார்கள்.

திருக்கச்சிஅனேகதங்காவதம்

திருக்கச்சிஅனேகதங்காவதம்

திருக்கச்சிஅனேகதங்காவதம்,
பண் - இந்தளம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காவதேசுவரர்.
தேவியார் : காமாட்சியம்மை.

தேனெய் புரிந்துழல் செஞ்சடை எம்பெரு
மானதி டந்திகழ் ஐங்கணையக்
கோனை எரித்தெரி யாடி இடம்குல
வான திடங்குறை யாமறையா
மானை இடத்ததொர் கையன் இடம்மத
மாறு படப்பொழி யும்மலைபோல்
ஆனை யுரித்த பிரான திடங்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. **#94**

தேனாகிய நெய்யை விரும்பி உழல்கின்ற சிவந்த சடையை யுடைய எம்பெருமானும், அழகு விளங்கும், ஐங்கணையை உடைய அத்தலைவனாகிய மன்மதனை எரித்தவனும், தீயில் நின்று ஆடுபவனும், மேலானவனும், மிக்க புள்ளிகள் பொருந்திய மானை இடப்பக்கத்திலுள்ள ஒரு கையில் தாங்கினவனும், மும்மதங்களும் ஒன்றினொன்று முற்பட்டுப் பாய்கின்ற மலைபோலும் யானையை உரித்த பெரியோனும் ஆகிய இறைவன் விரும்பி உறையும் இடம், ஆரவாரத்தையுடைய கச்சிமாநகர்க்கண் உள்ள, 'திருவனேகதங்காவதம்' என்னும் திருக்கோயிலே.

திருக்கச்சிஅனேகதங்காவதம்

கூறு நடைக்குழி கட்பகு வாயன
பேயுகந் தாடநின் றோரியிட
வேறு படக்குட கத்திலை யம்பல
வாணனின் றாடல் விரும்புமிடம்
ஏறு விடைக்கொடி எம்பெரு மான்இமை
யோர்பெரு மான்உமை யாள் கணவன்
ஆறு சடைக்குடை அப்பன் இடங்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. **#95**

மேலைத்தில்லை அம்பலவாணன், குறுநடையையும், குழிந்த கண்களையும், பிளந்த வாயினையுமுடையனவாகிய பேய்கள் உடன்

விரும்பி யாடவும் நரிகள் நின்று ஊளையிடவும், சிறப்புண்டாக நின்று ஆடுதலை விரும்புவதும், உயர்ந்த இடபக்கொடியையுடைய எம்பெருமானும், தேவர் பெருமானும், உமாதேவிக்குக் கணவனும், சடையின்கண் கங்கையை யுடைய தந்தையும் ஆகிய அவ்விறைவனுக்கு உரித்தாயதுமாகிய இடம், ஆரவாரத்தையுடைய கச்சிமா நகர்க்கண் உள்ள, 'திருவனேகதங்காவதம்' என்னும் திருக்கோயிலே.

திருக்கச்சிஅனேகதங்காவதம்

கொடிக ளிடைக்குயில் கூவு மிடம்மயி
லாலும் மிடம்மழு வாளுடைய
கடிகொள் புனற்சடை கொண்ட நுதற்கறைக்
கண்டன் இடம்பிறைத் துண்டமுடிச்
செடிகொள் வினைப்பகை தீரும் இடம்திரு
வாகும் இடம்திரு மார்பகலத்
தடிக ளிடம்மழல் வண்ணன் இடம்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. **#96**

துன்பத்தைக் கொண்ட வினையாகிய பகை நீங்குவதும், நன்மை வளர்வதும், மழுப்படையை யுடைய, விளக்கத்தைக் கொண்ட நீரைச் சடையில் ஏற்ற, பிறைத் துண்டமாகிய கண்ணியை யணிந்த நெற்றியை யுடைய நீலகண்டனும், அழகிய மார்பிடத்தனவாகிய பல அணிகலங்களையுடைய தலைவனும், நெருப்புப் போலும் நிறத்தை யுடையவனும் ஆகிய இறைவனுக்கு உரியதும் ஆகிய இடம், கொடி போலும் மகளிர் பாடல்களுக்கு இடையே குயில்கள் கூவுவதும், அவர் ஆடல்களுக்கு இடையே மயில்கள் ஆடுவதும் ஆகிய ஆரவாரத்தை யுடைய கச்சிமாநகர்க்கண் உள்ள. 'திருவனேகதங்காவதம்' என்னும் திருக்கோயிலே.

திருக்கச்சிஅனேகதங்காவதம்

கொங்கு நுழைத்தன வண்டறை கொன்றையுங்
கங்கையுந் திங்களுஞ் சூடுசடை
மங்குல் நுழைமலை மங்கையை நங்கையைப்
பங்கினிற் றங்க உவந்தருள்செய்
சங்கு குழைச்செவி கொண்டரு வித்திரள்
பாயவி யாத்தழல் போலுடைத்தம்
அங்கை மழுத்திகழ் கையன் இடங்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. **#97**

தேனால் நுழைவிக்கப்பட்டனவாகிய வண்டுகள் ஒலிக்கின்ற கொன்றை மாலையையும், கங்கையையும், பிறையையும் அணிந்த

சடையினையுடைய, மேகங்கள் தவழும் மலையில் வளர்ந்த மங்கையும் சிறந்த தேவியுமாகிய உமையை ஒரு பாகத்தில் பொருந்தியிருக்குமாறு மகிழ்ந்து வைத்து உயிர்கட்கு அருள் புரிகின்ற, சங்கக் குழையை அணிந்த காதினின்றும் வெள்ளொளிக் கற்றையாகிய அருவித்திரள் பாய, அவற்றாலும் அவியாத நெருப்புப் போலத் தோன்றுதலையுடைய அங்கையின் மழுவானது இடையறாது ஒளி வீசுகின்ற தன்மையையுடைய இறைவனது இடம், ஆரவாரத்தையுடைய கச்சி மாநகர்க்கண் உள்ள, 'திருவனேகதங்காவதம்' என்னும் திருக்கோயிலே.

திருக்கச்சிஅனேகதங்காவதம்

பைத்த படத்தலை ஆடர வம்பயில்
கின்ற இடம்பயி லப்புகுவார்
சித்தம் ஒருநெறி வைத்த இடந்திகழ்
கின்ற இடந்திரு வானடிக்கே
வைத்த மனத்தவர் பத்தர் மனங்கொள
வைத்த இடம்மழு வாளுடைய
அத்தன் இடம்மழல் வண்ணன் இடங்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. **#98**

ஆடும் பாம்பாகிய ஆதிசேடனது பையின் தன்மையைப் பெற்ற படத்தினையுடைய தலையின்கண் நீங்காதிருக்கின்ற இடமாகிய நிலவுலகத்தில் வாழப்புகுவோர், தமதுள்ளத்தை ஒரு நெறிக்கண்ணே வைத்தபொழுது, அவர்க்கு உயர்ந்து விளங்குவதும், திருவாளனாகிய சிவபிரானது திருவடிக் கண்ணே பிறழாது வைத்த மனத்தையுடையவராகிய அடியார். தம் மனம், விரும்பிக் கொள்ளுமாறு அதனுள் இருத்தப்பட்டதும், மழுப்படையையுடைய தலைவனும், நெருப்புப்போலும் நிறத்தையுடையவனும் ஆகிய அப்பெருமானுக்கு உரித்தாயதும் ஆகிய இடம், ஆரவாரத்தையுடைய கச்சிமாநகர்க்கண் உள்ள, 'திருவனேகதங்காவதம்' என்னும் திருக்கோயிலே.

திருக்கச்சிஅனேகதங்காவதம்

தண்ட முடைத்தரு மன்தமர் என்தம
ரைச்செயும் வன்றுயர் தீர்க்குமிடம்
பிண்ட முடைப்பிற வித்தலை நின்று
நினைப்பவர் ஆக்கையை நீக்குமிடம்
கண்ட முடைக்கரு நஞ்சை நுகர்ந்த
பிரான திடங்கடல் ஏழுகடந்
தண்ட முடைப்பெரு மான திடங்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. **#99**

தண்டாயுதத்தை யுடைய இயமனது ஏவலாளர், என் சுற்றத்தாராகிய சிவனடியாரை நலியக் கருதும் வலிய துன்பத்தைத் தீர்ப்பதும், உடம்பை யுடைய இப்பிறவியின்கண் மனம் பொருந்தி நின்று நினைப்பவரது பிறவியை அறுப்பதும், தனது கண்டம் உடைத்தாயுள்ள கரிய நஞ்சினை, உண்ணும் பொருளாக உண்ட தலைவனும், ஏழு கடல்களின் உள்ளே உள்ள நிலமேயன்றி அண்டம் முழுவதையும் உடைய பெரியோனும் ஆகிய இறைவனுக்கு உரித்தாயதும் ஆகிய இடம், ஆரவாரத்தை யுடைய கச்சிமாநகர்க்கண் உள்ள, 'திருவனேகதங்காவதம்' என்னும் திருக்கோயிலே.

திருக்கச்சிஅனேகதங்காவதம்

கட்டு மயக்க மறுத்தவர் கைதொழு
தேத்தும் இடங்கதி ரோனொளியால்
விட்ட இடம்விடை யூர்தி இடங்குயிற்
பேடைதன் சேவலொ டாடுமிடம்
மட்டு மயங்கி அவிழ்ந்த மலர்ஒரு
மாதவி யோடு மணம்புணரும்
அட்ட புயங்கப் பிரான திடங்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. **#100**

பாசப் பிணிப்பால் உண்டாகும் திரிபுணர்வை நீக்கியவர், கைகுவித்துக் கும்பிட்டுத் துதிப்பதும், இடபவாகனத்தை யுடையவனும், அட்டமா நாகங்களையும் அணிந்தவனுமாகிய இறைவனுக்கு உரித்தாயதுமான இடம், பகலவனது ஒளியினின்று நீங்கியதும், குயிற் பேடை தனது சேவலோடு கூடி விளையாடுவதும் ஆகிய சோலைக் கண் ஒப்பற்ற மாதவியில் தேன் ததும்பி மலர்ந்த மலர், மணத்தைப் பொருந்துகின்ற, ஆரவாரத்தையுடைய கச்சிமா நகர்க்கண்ணுள்ள, 'திருவனேகதங்காவதம்' என்னும் திருக்கோயிலே.

திருக்கச்சிஅனேகதங்காவதம்

புல்லி யிடந்தொழு துய்துமெ னாதவர்
தம்புர மூன்றும் பொடிப்படுத்த
வில்லி இடம்விர வாதுயிர் உண்ணும்வெங்
காலனைக் கால்கொடு வீந்தவியக்
கொல்லி இடங்குளிர் மாதவி மவ்வல்
குராவகு ளங்குருக் கத்திபுன்னை
அல்லி யிடைப்பெடை வண்டுறங் குங்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. **#101**

'முன்பே அடையப் பட்டவனைக் கடைபோகத் தொழுது உய்வோம்'

என்று நினையாது, புத்தனது பொய்யுரையால் மயங்கிய அசுரரது அரண்கள் மூன்றினையும் சாம்பலாக்கிய வில்லை யுடையவனும், யாவரிடத்தும் கண்ணோடாது உயிரை வௌவும் கொடிய காலனை அழிந்தொழியும்படி காலால் கொன்றவனும் ஆகிய இறைவனுக்கு உரித்தாய இடம், குளிர்ந்த வனமல்லிகை, முல்லை, குரா, மகிழ், குருக்கத்தி, புன்னை இவற்றின் மலர்களது அகவிதழில் பெண் வண்டுகள் உறங்குகின்ற, ஆரவாரத்தை யுடைய கச்சிமாநகரில் உள்ள, 'திருவனேகதங்காவதம்' என்னும் திருக்கோயிலே.

திருக்கச்சிஅனேகதங்காவதம்

சங்கை யவர்புணர் தற்கரி யான்றள
வேனகை யாள்வி ராமிகுசீர்
மங்கை யவள்மகி ழச்சுடு காட்டிடை
நட்டநின் றாடிய சங்கரனெம்
மங்கைய வன்னன லேந்து பவன்கனல்
சேரொளி யன்னதொர் பேரகலத்
தங்கை யவன்னுறை கின்ற இடங்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. **#102**

ஐயப்பாடுடையவர் அடைதற்கரியவனும், முல்லையரும்புபோலும் நகையினை யுடையாளாகிய, என்றும் பிரிவில்லாத, மிக்க புகழை யுடைய உமாதேவி மகிழும்படி சுடு காட்டில் நின்று நடனமாடுகின்ற சங்கரனும், எம் அங்கைப் பொருளாய் உள்ளவனும், நெருப்பை ஏந்துபவனும், நெருப்பிற் பொருந்தியுள்ள ஒளிபோலும் ஒளியை யுடைய பெரிய மழுப் படையை ஏந்திய அங்கையை யுடையவனும் ஆகிய இறைவன் நீங்காது உறைகின்ற இடம், ஆரவாரத்தையுடைய கச்சிமா நகர்க் கண் உள்ள, 'திருவனேகதங்காவதம்' என்னும் திருக்கோயிலே.

திருக்கச்சிஅனேகதங்காவதம்

வீடு பெறப்பல ஊழிகள் நின்று
நினைக்கும் இடம்வினை தீருமிடம்
பீடு பெறப்பெரி யோர திடங்கொண்டு
மேவினர் தங்களைக் காக்கும்இடம்
பாடு மிடத்தடி யலான்புகழ் ஊரன்
உரைத்தஇம் மாலைகள் பத்தும்வல்லார்
கூடும் இடஞ்சிவ லோகன் இடங்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. **#103**

முத்தி பெறுதற் பொருட்டுப் பல்லூழி கால மாயினும் இவ்வுடம்போடே நின்று இறைவனை நினைத்தற்குரிய இடமும், அதனால்

வினைநீங்கப்பெறும் இடமும், பெருமையை அடைதற்குரிய வழியைப் பெரியோரது அடிக்கீழ் நின்று பெற்று, அவ்வழியாலே விரும்பி வந்தவர்களைப்பிறவிக் கடலில் வீழாதவாறு காக்கும் இடமும் ஆகிய, ஆரவாரத்தையுடைய கச்சிமாநகர்க்கண் உள்ள, 'திருவனேகதங்காவதம்' என்னும் திருக்கோயிலைப் பாடப் புகும் பொழுது, சிவபிரானுக்கு அடியவனாகிய, புகழையுடைய நம்பியாரூரன் பாடிய இச் சொல்மாலைகள் பத்தினையும் நன்கு பாடவல்லார் அடையும் இடம், சிவபிரானது இடமே யாகும்.

திருப்பூவணம்

திருப்பூவணம்

திருப்பூவணம்,
பண் - இந்தளம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பூவணநாதர்.
தேவியார் : மின்னாம்பிகையம்மை.

திருவுடை யார்திரு மாலய னாலும்
உருவுடை யார்உமை யாளையொர் பாகம்
பரிவுடை யார்அடை வார்வினை தீர்க்கும்
புரிவுடை யார்உறை பூவணம் ஈதோ! **#104**

திருமால், பிரமன் ஆகிய காரணக் கடவுளரிலும் மேலான செல்வத்தை யுடையவரும், தமது திருமேனியில் உமையம்மையை ஒரு பாகமாக உடையவரும், அன்புடையவராய்த் தம்மை அடைவாரது வினைகளைத் தீர்க்கும் விருப்பம் உடையவரும் ஆகிய இறைவர் எழுந்தருளியுள்ள, 'திருப்பூவணம்' என்னும் தலம் இதுதானோ?

திருப்பூவணம்

எண்ணி யிருந்து கிடந்தும் நடந்தும்
அண்ண லெனாநினை வார்வினை தீர்ப்பார்
பண்ணிசை யார்மொழி யார்பலர் பாடப்
புண்ணிய னார்உறை பூவணம் ஈதோ! **#105**

இருப்பினும், கிடப்பினும், நடப்பினும், தம்மையே முதல்வராக ஓர்ந்து நினைவாரது வினைகளை நீக்குபவரும், அறவடி வினருமாகிய இறைவர், பண்ணாகிய இசைபோலப் பொருந்திய மொழியினையுடைய மகளிர் பலர் இனிய பாடல்களைப்பாட எழுந்தருளியிருக்கின்ற, 'திருப்பூவணம்' என்னும் திருத்தலம் இதுதானோ?

திருப்பூவணம்

தெள்ளிய பேய்பல பூத மவற்றொடு
நள்ளிருள் நட்டம தாடல் நவின்றோர்
புள்ளுவ ராகும் அவர்க்கவர் தாமும்
புள்ளுவ னார்உறை பூவணம் ஈதோ! **#106**

தெளிவையுடைய பல பேய்பூதங்களுடன், செறிந்த இருளில் நடனத்தைப் புரிகின்றவரும், வஞ்சகராகின்றவருக்குத் தாமும் வஞ்சகராவோரும் ஆகிய இறைவர் எழுந்தருளியுள்ள, 'திருப்பூவணம்' என்னும் திருத்தலம்

இதுதானோ?

திருப்பூவணம்

நிலனுடை மான்மறி கையது தெய்வக்
கனலுடை மாமழு ஏந்தியோர் கையில்
அனலுடை யார்அழ கார்தரு சென்னிப்
புனலுடை யார்உறை பூவணம் ஈதோ! #107

நிலத்தை வாழும் இடமாக உடைய மான் கன்று கையிடத்ததாக, தெய்வத் தீயாம் தன்மையையுடைய பெரிய மழுவை ஒரு கையிற் பிடித்து, அதனோடே மற்றொரு கையில் நெருப்பை யுடையவரும் ஆகிய இறைவர் எழுந்தருளியுள்ள 'திருப்பூவணம்' என்னும் திருத்தலம் இதுதானோ?

திருப்பூவணம்

நடையுடை நல்லெரு தேறுவர் நல்லார்
கடைகடை தோறிடு மின்பலி என்பார்
துடியிடை நன்மட வாளொடு மார்பில்
பொடிஅணி வார்உறை பூவணம் ஈதோ! #108

பெருமித நடையையுடைய நல்ல ஆனேற்றின் மீது ஏறுபவரும், மகளிரது வாயில் தோறும் சென்று, 'பிச்சை இடுமின்' என்று இரப்பவரும், உடுக்கை போலும் இடையினையுடைய தேவியின் அழகிய மேனியின் பொலிவோடு, சாம்பலைப் பூசிக்கொள் வோரும் ஆகிய இறைவர் எழுந்தருளியுள்ள, 'திருப்பூவணம்' என்னும் திருத்தலம் இதுதானோ?

திருப்பூவணம்

மின்னனை யாள்திரு மேனி விளங்கஓர்
தன்னமர் பாகம தாகிய சங்கரன்
முன்னினை யார்புரம் மூன்றெரி யூட்டிய
பொன்னனை யான்உறை பூவணம் ஈதோ! #109

மின்னல்போலும் மாதராள் திருமேனி தனது திரு மேனியின் ஒரு பாகத்தில் விளங்க விரும்பிவைத்த 'சங்கரன்' என்னும் பெயரையுடையவனும், தன்னை நினையாதவரது அரண்களை முன்பு தீக்கு இரையாக்கிய, பொன் போலும் நிறத்தை யுடையவனும் ஆகிய இறைவன் எழுந்தருளியுள்ள 'திருப்பூவணம்' என்னும் திருத்தலம் இதுதானோ?

திருப்பூவணம்

மிக்கிறை யேயவன் துன்மதி யாலிட

நக்கிறை யேவிர லாலிற வூன்றி
நெக்கிறை யேநினை வார்தனி நெஞ்சம்
புக்குறை வான்உறை பூவணம் ஈதோ! **#110**

தனது தலைமையை எல்லை கடந்து மதித்தவனாகிய இராவணனது தீய எண்ணங் காரணமாக, வெகுளி நகை செய்து, தனது இடமாகிய கயிலையை, அவன் நெரியுமாறு, விரலால் சிறிதே ஊன்றி, தன்னையே உருகி நினைவாரது ஒப்பற்ற நெஞ்சிலே குடிபுகுந்து, ஒருஞான்றும் நீங்காது உறையும் இறைவன் எழுந்தருளியுள்ள, 'திருப்பூவணம்' என்னும் திருத்தலம் இதுதானோ?

<u>திருப்பூவணம்</u>

சீரின் மிகப்பொலி யுந்திருப் பூவணம்
ஆர விருப்பிட மாவுறை வான்றனை
ஊரன் உரைத்தசொன் மாலைகள் பத்திவை
பாரில் உரைப்பவர் பாவம் அறுப்பரே. **#111**

அழகினால் மிகப் பொலிகின்ற, 'திருப்பூவணம்' என்னும் திருத்தலத்தில், விருப்பம் மிக இடமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனை, நம்பியாரூரன் பாடிய இச்சொல் மாலைகள் பத்தினையும் இந்நிலவுலகில் பாடுபவர், தம் பாவத்தை அறுப்பவராவர்.

திருநாட்டுத்தொகை

திருநாட்டுத்தொகை

திருநாட்டுத்தொகை,
பண் - இந்தளம்

வீழக் காலனைக் கால்கொடு
பாய்ந்த விலங்கலான்
கூழை ஏறுகந் தான்இடங்
கொண்டது கோவலூர்
தாழை யூர்தகட் டூர்தக்க
ளூர்தரு மபுரம்
வாழை காய்க்கும் வளர்மரு
கன்னாட்டு மருகலே. **#112**

கூற்றுவனை, அவன் உயிரற்று விழுமாறு, காலால் உதைத்த கயிலாய நாதனும், நடை நிரம்பாத எருதினை ஏறுதலை விரும்பியவனுமாகிய இறைவன் தனக்கு இடமாகக்கொண்ட ஊர், 'திருக்கோவலூர், தாழையூர், தகட்டூர், தக்களூர், தருமபுரம், வாழைகள் காய்க்கின்ற, செல்வம் வளர்கின்ற மருகல் நாட்டில் உள்ள மருகல்' என்பவை.

திருநாட்டுத்தொகை

அண்டத் தண்டத்தின் அப்புறத்
தாடும் அமுதன்ஊர்
தண்டந் தோட்டந்தண் டங்குறை
தண்டலை யாலங்காடு
கண்டல் முண்டல்கள் சூழ்கழிப்
பாலை கடற்கரை
கொண்டல் நாட்டுக்கொண் டல்குறுக்
கைநாட்டுக் குறுக்கையே. **#113**

இவ்வண்டத்திற்கு அப்பால் உள்ள அண்டங்களுக்கும் அப்பால் நின்று நடனம் ஆடுகின்ற அமுதமாய் உள்ள இறைவனது தலங்கள், 'தண்டந்தோட்டம், தண்டங்குறை, தண்டலை, ஆலங்காடு, கடல் முள்ளியும் தாழையும் சூழ்ந்த கழிப்பாலை, கடற்கரை, கொண்டல் நாட்டிலுள்ள கொண்டல், குறுக்கை நாட்டிலுள்ள குறுக்கை' என்பவை.

திருநாட்டுத்தொகை

மூல னூர்முத லாயமுக் கண்ணன்
முதல்வன்ஊர்

நால னூர்நரை ஏறுகந் தேறிய
நம்பன்ஊர்
கோல நீற்றன்குற் றாலங்
குரங்கணின் முட்டமும்
வேல னூர்வெற்றி யூர்வெண்ணிக்
கூற்றத்து வெண்ணியே. **#114**

அழகிய திருநீற்றை அணிந்த, வெள்விடையை விரும்பியேறின, முக்கண் முதல்வனது தலங்கள், 'மூலனூர், முதல்வனூர், நாலனூர், குற்றாலம், குரங்கணின்முட்டம், வேலனூர், வெற்றியூர், வெண்ணிக் கூற்றத்திலுள்ள வெண்ணி' என்பவை.

<u>திருநாட்டுத்தொகை</u>

தேங்கூ ருந்திருச் சிற்றம் பலமுஞ்
சிராப்பள்ளி
பாங்கூ ரெங்கள் பிரானுறை
யுங்கடம் பந்துறை
பூங்கூ ரும்பர மன்பரஞ் சோதி
பயிலும்ஊர்
நாங்கூர் நாட்டுநாங் கூர்நறை
யூர்நாட்டு நறையூரே. **#115**

எமக்குத் துணையாய் வரும் தலைவனும், எப்பொருட்கும் மேலானவனும், எல்லா ஒளிகட்கும் மேலான ஒளியாய் உள்ளவனும் ஆகிய இறைவன் நீங்காது வாழும் அழகு மிகுந்த ஊர்கள், 'தேங்கூர், சிற்றம்பலம், சிராப்பள்ளி, அழகு மிக்க கடம்பந்துறை, நாங்கூர் நாட்டிலுள்ள நாங்கூர், நறையூர் நாட்டிலுள்ள நறையூர்' என்பவை.

<u>திருநாட்டுத்தொகை</u>

குழலை வென்ற மொழிமட
வாளைஓர் கூறனாம்
மழலை யேற்று மணாளன்
இடம்தட மால்வரைக்
கிழவன் கீழை வழிபழை
யாறு கிழையமும்
மிழலை நாட்டு மிழலைவெண்
ணிந்நாட்டு மிழலையே. **#116**

குழலிசையை வென்ற மொழியினையுடைய உமாதேவியை ஒரு பங்கில் உடையவனாகிய, இளமையான இடபத்தையுடைய அழகனும், பெரிய கயிலாய மலைக்கு உரியவனும் ஆகிய இறைவனது தலங்கள்,

'கீழைவழி, பழையாறு, கிழையம், மிழலை நாட்டிலுள்ள மிழலை, வெண்ணி நாட்டிலுள்ள மிழலை' என்பவை.

திருநாட்டுத்தொகை

தென்னூர் கைம்மைத் திருச்சுழி
யற்றிருக் கானப்பேர்
பன்னூர் புக்குறை யும்பர
மற்கிடம் பாய்நலம்
என்னூர் எங்கள்பி ரான்உறை
யுந்திருத் தேவனூர்
பொன்னூர் நாட்டுப்பொன் னூர்புரி
சைநாட்டுப் புரிசையே. **#117**

சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற தலங்களிலே எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு இடமாய், பரவிய புகழையுடையன எவ்வூர்கள் எனின், அவை, எங்கள் பெருமான் எழுந்தருளியுள்ள, 'தென்னூர், ஒழுக்கம் நிறைந்த சுழியல், கானப்பேர், தேவனூர், பொன்னூர் நாட்டிலுள்ள பொன்னூர், புரிசை நாட்டிலுள்ள புரிசை' என்பவை.

திருநாட்டுத்தொகை

ஈழ நாட்டுமா தோட்டந்தென்
னாட்டிரா மேச்சுரம்
சோழ நாட்டுத் துருத்திநெய்த்
தானந் திருமலை
ஆழி யூரன நாட்டுக்கெல்
லாம்அணி யாகிய
கீழை யில்லர னார்க்கிடங்
கிள்ளி குடியதே. **#118**

சிவபெருமானாருக்கு உரிய தலங்கள், ஈழநாட்டில் உள்ள மாதோட்டம், தென்னாட்டில் உள்ள இராமேச்சுரம், சோழநாட்டிலுள்ள துருத்தி, நெய்த்தானம், திருமலை, கடல் சூழ்ந்த நிலவுலகிற் கெல்லாம் அணியாய் விளங்கும் கீழையில், கிள்ளிகுடி என்பவை.

திருநாட்டுத்தொகை

நாளும் நன்னிலந் தென்பனை
யூர்வட கஞ்சனூர்
நீள நீள்சடை யான்நல்லிக்
காவு நெடுங்களம்
காள கண்டன் உறையுங்

கடைமுடி கண்டியூர்
வேளா நாட்டுவே ளூர்விளத்
தூர்நாட்டு விளத்தூரே. **#119**

'நன்னிலம், பனையூர், கஞ்சனூர், நெல்லிக்கா, நெடுங்களம், கடைமுடி, கண்டியூர், வேளா நாட்டில் உள்ள வேளூர், விளத்தூர் நாட்டிலுள்ள விளத்தூர்' என்பவைகளில், மிக நீண்ட சடையையுடையவனும், நஞ்சணிந்த கண்டத்தை யுடையவனுமாகிய இறைவன் எந்நாளும் எழுந்தருளியிருப்பன்.

திருநாட்டுத்தொகை

தழலு மேனியன் தையலொர் பாகம்
அமர்ந்தவன்
தொழலுந் தொல்வினை தீர்க்கின்ற
சோதிசோற் றுத்துறை
கழலுங் கோவை யுடையவன்
காதலிக் கும்மிடம்
பழனம் பாம்பணி பாம்புரந்
தஞ்சைதஞ் சாக்கையே. **#120**

தழல் போல ஒளிவிடும் திருமேனியை உடையவனும், மங்கையை ஒரு பங்கில் விரும்பிவைத்துள்ளவனும், தன்னைத் தொழுதவுடன் தொழுதவரது பழவினையை அறுக்கின்ற ஒளியாய் உள்ளவனும், கழல் அணிந்த மணிவடத்தை உடையவனும், ஆகிய இறைவன் விரும்புகின்ற தலங்கள், 'சோற்றுத்துறை, பழனம், பாம்பணி, பாம்புரம், தஞ்சை, தஞ்சாக்கை' என்பவை.

திருநாட்டுத்தொகை

மைகொள் கண்டன்எண் டோளன்முக்
கண்ணன் வலஞ்சுழி
பைகொள் வாளர வாட்டித்
திரியும் பரமனூர்
செய்யில் வாளைகள் பாய்ந்துக
ளுந்திருப் புன்கூர்நன்
றையன் மேய பொழில் அணி
ஆவடு துறையதே. **#121**

கருமை நிறத்தைக் கொண்ட கண்டத்தையும்,. எட்டுத் தோள்களையும், மூன்று கண்களையும் உடையவனும், படத்தைக்கொண்ட கொடிய பாம்பை ஆட்டித் திரியும் மேலவனுமாகிய இறைவனுடைய தலங்கள், 'வலஞ்சுழி, வயல்களில் வாளை மீன்கள் மேலெழுந்து பாய்ந்து

பிறழ்கின்ற திருப்புன்கூர், அவன் மிக விரும்பிய, சோலையை உடைய அழகிய ஆவடுதுறை' என்பவை.

திருநாட்டுத்தொகை

பேணி நாடத னிற்றிரி
யும்பெரு மான்றனை
ஆணை யாஅடி யார்கள்
தொழப்படும் ஆதியை
நாணிஊரன் வனப்பகை யப்பன்வன்
றொண்டன்சொல்
பாணி யால்இவை ஏத்துவார்
சேர்பர லோகமே. **#122**

நாடுகளில் எல்லாம் விரும்பித் திரியும் பெருமானும், அடியார்கள் தமக்குத் தலைவனாக அறிந்து தொழப்படுகின்ற முதல்வனும் ஆகிய இறைவனை, நாணுடையவளாகிய 'வனப்பகை' என்பவளுக்குத் தந்தையும், இறைவன்முன் வன்மை பேசிப் பின் அவனுக்குத் தொண்டன் ஆகியவனும் ஆகிய நம்பியாரூரன் பாடிய இப்பாடல்களைத் தாளத்தொடு பாடித் துதிப்பவர் அடையும் இடம் சிவலோகமேயாம்.

திருத்துறையூர்

திருத்துறையூர்

திருத்துறையூர்,
பண் - தக்கராகம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : துறையூரப்பர்.
தேவியார் : பூங்கோதையம்மை.

மலையாரரு வித்திரள்
மாமணி யுந்திக்
குரையாரக்கொணர்ந் தெற்றிஓர்
பெண்ணை வடபால்
கலையார் அல்குற் கன்னியர்
ஆடுந் துறையூத்
தலைவாஉனை வேண்டிக்கொள்
வேன்தவ நெறியே. **#123**

மலையிற் பொருந்திய அருவிக் கூட்டம், பெரிய மணிகளைத் தள்ளிக் கொணர்ந்து கரை நிறைய எறிவதாகிய ஒப்பற்ற பெண்ணை யாற்றின் வடகரைக்கண், நல்லஆடையை அணிந்த அல்குலையுடைய கன்னிப்பெண்கள் மூழ்கி விளையாடும் ஒரு துறையைச் சார்ந்த ஊராகிய திருத்துறையூரின்கண் எழுந்தருளியுள்ள தலைவனே, உன்பால் அடியேன் தவநெறியையே வேண்டிக் கொள்வேன்; வேறொன்றையும் வேண்டேன்.

திருத்துறையூர்

மத்தம்மத யானையின்
வெண்மருப் புந்தி
முத்தங்கொணர்ந் தெற்றிஓர்
பெண்ணை வடபால்
பத்தர்பயின் றேத்திப்
பரவுந் துறையூர்
அத்தாஉனை வேண்டிக்கொள்
வேன்தவ நெறியே. **#124**

மயக்கங்கொண்ட மதயானைகளின் கொம்புகளைத் தள்ளிக்கொண்டுவந்து அவற்றில் உள்ள முத்துக்களைக் கரையில் எறிவதாகிய ஒப்பற்ற பெண்ணையாற்றின் வடகரைக்கண் உள்ள, அடியவர் பலகாலும் வந்து ஏத்தி வழிபடுகின்ற திருத்துறையூரில்

எழுந்தருளியுள்ள தந்தையே, உன்பால் அடியேன் தவநெறியையே வேண்டிக் கொள்வேன்; வேறொன்றையும் வேண்டேன்.

திருத்துறையூர்

கந்தங்கமழ் காரகில்
சந்தன முந்திச்
செந்தண்புனல் வந்திழி
பெண்ணை வடபால்
மந்தீபல மாநடம்
ஆடுந் துறையூர்
எந்தாய் உனை வேண்டிக்கொள்
வேன்தவ நெறியே. **#125**

நறுமணம் கமழ்கின்ற கரிய அகில்மரங்களையும் சந்தன மரங்களையும் தள்ளிக்கொண்டு, சிவந்த குளிர்ந்த நீர் இடையறாது வந்து பாய்கின்ற பெண்ணையாற்றின் வடகரைக்கண்ணுள்ள, பெண் குரங்குகள் பல வகையான நடனங்களை ஆடுகின்ற திருத்துறையூரில் எழுந்தருளியுள்ள எம்தந்தையே, உன்பால் அடியேன் தவநெறியையே வேண்டிக் கொள்வேன்; வேறொன்றையும் வேண்டேன்.

திருத்துறையூர்

அரும்பார்ந்தன மல்லிகை
சண்பகஞ் சாடிச்
சுரும்பாரக்கொணர்ந் தெற்றிஓர்
பெண்ணை வடபால்
கரும்பார்மொழிக் கன்னியர்
ஆடுந் துறையூர்
விரும்பாஉனை வேண்டிக்கொள்
வேன்தவ நெறியே. **#126**

அரும்புகள் நிறைந்தனவாகிய 'மல்லிகை, சண்பகம்' என்னும் மரங்களை முரித்து, அவற்றில் உள்ள வண்டுகள் நிறையக்கிடக்கக் கொணர்ந்து கரையில் எறிவதாகிய ஒப்பற்ற பெண்ணை யாற்றின் வடகரைக்கண், கரும்புபோலும் மொழியினை யுடைய கன்னிப் பெண்கள் மூழ்கி விளையாடும் ஒருதுறையைச் சார்ந்த திருத்துறையூரில் எழுந்தருளியுள்ள என் விருப்பத்திற்குரியவனே, உன்பால் அடியேன் தவநெறியையே வேண்டிக்கொள்வேன்; வேறொன்றையும் வேண்டேன்.

திருத்துறையூர்

பாடார்ந்தன மாவும்

பலாக்களுஞ் சாடி
நாடாரவந் தெற்றிஓர்
பெண்ணை வடபால்
மாடார்ந்தன மாளிகை
சூழுந் துறையூர்
வேடாஉனை வேண்டிக்கொள்
வேன்தவ நெறியே. **#127**

பக்கங்களில் நிறைந்துள்ளனவாகிய மாமரங்களையும், பலா மரங்களையும் முரித்துக்கொணர்ந்து நாடெங்கும் நிறையும் படி எறிவதாகிய ஒப்பற்ற பெண்ணையாற்றின் வடகரைக் கண் உள்ள, செல்வம் நிறைந்தனவாகிய மாளிகைகள் சூழ்ந்த துறையூரில் எழுந்தருளியுள்ள, பல அருட்கோலங்களை யுடையவனே, உன்பால் அடியேன் தவநெறியையே வேண்டிக் கொள்வேன்; வேறொன்றையும் வேண்டேன்.

<u>திருத்துறையூர்</u>

மட்டார்மலர்க் கொன்றையும்
வன்னியுஞ் சாடி
மொட்டாரக்கொணர்ந் தெற்றிஓர்
பெண்ணை வடபால்
கொட்டாட்டொடு பாட்டொலி
ஓவாத் துறையூர்ச்
சிட்டாஉனை வேண்டிக்கொள்
வேன்தவ நெறியே. **#128**

தேன் நிறைந்த மலர்களை யுடையகொன்றை மரம், வன்னி மரம் இவைகளை முரித்து, அரும்புகளோடு நிரம்பக் கொணர்ந்து எறிவதாகிய ஒப்பற்ற பெண்ணையாற்றின் வடகரைக் கண், வாச்சிய முழக்கமும், ஆடலும், பாடலும் நீங்காது கொண்டு விளங்குகின்ற திருத் துறையூரில் எழுந்தருளியுள்ள மேலானவனே உன்பால் அடியேன் தவ நெறியையே வேண்டிக் கொள்வேன்; வேறொன்றையும் வேண்டேன்.

<u>திருத்துறையூர்</u>

மாதார்மயிற் பீலியும்
வெண்ணுரை யுந்தித்
தாதாரக்கொணர்ந் தெற்றிஓர்
பெண்ணை வடபால்
போதார்ந்தன பொய்கைகள்
சூழுந் துறையூர்

நாதாஉனை வேண்டிக்கொள்
வேன்தவ நெறியே. **#129**

அழகு நிறைந்தனவான மயிற்பீலியையும், வெள்ளிய நுரைகளையும் தள்ளி, பல மலர்களை மகரந்தத்தோடு நிரம்பக் கொணர்ந்து எறிவதாகிய ஒப்பற்ற பெண்ணையாற்றின் வடகரைக்கண், மலர்கள் நிறைந்தனவாகிய பொய்கைகள் சூழப் பெற்று விளங்கும் திருத்துறையூரில் எழுந்தருளியுள்ள தலைவனே, உன்பால் அடியேன் தவநெறியையே வேண்டிக்கொள்வேன்; வேறொன்றையும் வேண்டேன்.

<u>திருத்துறையூர்</u>

கொய்யார்மலர்க் கோங்கொடு
வேங்கையுஞ் சாடிச்
செய்யாரக்கொணர்ந் தெற்றிஓர்
பெண்ணை வடபால்
மையார்தடங் கண்ணியர்
ஆடுந் துறையூர்
ஐயாஉனை வேண்டிக்கொள்
வேன்தவ நெறியே. **#130**

கொய்தல் பொருந்திய மலரையுடைய கோங்க மரம், வேங்கை மரம் இவைகளை முரித்துக்கொணர்ந்து, வயல் நிறைய எறிவதாகிய, ஒப்பற்ற பெண்ணையாற்றின் வடகரைக்கண், மை பொருந்திய கண்களையுடைய மகளிர் மூழ்கியாடும் ஒரு துறைக்கண் உள்ள திருத்துறையூரில் எழுந்தருளியுள்ள தலைவனே, உன்பால் அடியேன் தவநெறியையே வேண்டிக்கொள்வேன்; வேறொன்றையும் வேண்டேன்.

<u>திருத்துறையூர்</u>

விண்ணார்ந்தன மேகங்கள்
நின்று பொழிய
மண்ணாரக்கொணர்ந் தெற்றிஓர்
பெண்ணை வடபால்
பண்ணார்மொழிப் பாவையர்
ஆடுந் துறையூர்
அண்ணாஉனை வேண்டிக்கொள்
வேன்தவ நெறியே. **#131**

வானத்தில் நிறைந்தனவாகிய மேகங்கள் நிலைத்து நின்று பொழிவதனால், மலைக்கண் உள்ள பொருள்களை வாரிக் கொணர்ந்து நிலம் நிறைய எறிவதாகிய, ஒப்பற்ற பெண்ணையாற்றின் வடகரைக்கண், பண்போலும் மொழியினையுடைய மகளிர் மூழ்கியாடும்

ஒரு துறைக்கண் உள்ள திருத்துறையூரில் எழுந்தருளியுள்ள தலைவனே, உன்போல் அடியேன் தவநெறியையே வேண்டிக்கொள்வேன்; வேறொன்றையும் வேண்டேன்.

திருத்துறையூர்

மாவாய்ப்பிளந் தானும்
மலர்மிசை யானும்
ஆவாஅவர் தேடித்
திரிந்தல மந்தார்
பூவார்ந்தன பொய்கைகள்
சூழுந் துறையூர்த்
தேவாஉனை வேண்டிக்கொள்
வேன்தவ நெறியே. **#132**

பூக்கள் நிறைந்தனவாகிய பொய்கைகள் சூழ்ந்துள்ள திருத்துறையூரில் எழுந்தருளியுள்ள பெருமானே. 'கேசி' என்னும் அசுரன் கொண்ட வஞ்சனை உருவமாகிய குதிரையின் வாயைக் கிழித்த திருமாலும், மலர்மிசையோனாகிய பிரமனும் ஆகிய அவ்விருவரும் உன்னை வழிபட்டுத் தவநெறியை வேண்டிக் கொள்ள மாட்டாது, அந்தோ! உன் அளவினை ஆராய்ந்து தேடியலைந்தனர்; ஆயினும், உன்பால் அடியேன் தவநெறியையே வேண்டிக்கொள்வேன்; வேறொன்றையும் வேண்டேன்.

திருத்துறையூர்

செய்யார்கம லம்மலர்
நாவலூர் மன்னன்
கையால்தொழு தேத்தப்
படுந்துறை யூர்மேல்
பொய்யாத்தமிழ் ஊரன்
உரைத்தன வல்லார்
மெய்யேபெறு வார்கள்
தவநெறி தானே. **#133**

வயல்கள் நிறையத் தாமரை மலரும் திருநாவலூருக்குத் தலைவனும், மெய்ம்மையையே கூறும் தமிழ்ப் பாடலைப் பாடுபவனும் ஆகிய நம்பியாரூரன், யாவராலும் கையால் கும்பிட்டுத் துதிக்கப்படும் திருத்துறையூரில் உள்ள இறைவன் மீது பாடியனவாகிய இப் பாடல்களை நன்கு பாடவல்லவர் தவநெறியைத் தப்பாது பெறுவர்.

திருப்பாச்சிலாச்சிராமம்

திருப்பாச்சிலாச்சிராமம்

திருப்பாச்சிலாச்சிராமம்,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாற்றறிவரதர்.
தேவியார் : பாலசுந்தரியம்மை.

வைத்தனன் தனக்கே தலையும்என் நாவும்
நெஞ்சமும் வஞ்சமொன் றின்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக் கடிமை
உரைத்தக்கால் உவமனே யொக்கும்
பைத்தபாம் பார்த்தோர் கோவணத் தோடு
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பித்தரே யொத்தோர் நச்சில ராகில்
இவரலா தில்லையோ பிரானார். #134

எனது தலையையும், நாவையும், நெஞ்சத்தையும், இத்திருப்பாச்சிலாச்சிராமத்தில் உள்ள எம்பெருமானார்க்கே உரியன ஆக்கினேன்; திருவடித் தொண்டினையும் அவருக்கே வஞ்சனை சிறிதும் இன்றிச் செலுத்தினேன்; இவற்றை யானே சொல்லின், பொய்போல்வதாகும். இந்நிலையில், அவர் படம் விரித்த பாம்பினைக் கட்டிக்கொண்டு ஒரு கோவணத்தோடு இருந்து, பித்தரோடே ஒத்து, சிறிதும் திருவுளம் இரங்கிலராயினும், எம்மைப் புரக்கும் தலைவர் இவரன்றி வேறொருவர் இல்லை; என் செய்கோ!

திருப்பாச்சிலாச்சிராமம்

அன்னையே என்னேன் அத்தனே என்னேன்
அடிகளே யமையுமென் றிருந்தேன்
என்னையும் ஒருவன் உளனென்று கருதி
இறைஇறை திருவருள் காட்டார்
அன்னமாம் பொய்கை சூழ்தரு பாச்சி
லாச்சிரா மத்துறை அடிகள்
பின்னையே அடியார்க் கருள்செய்வ தாகில்
இவரலா தில்லையோ பிரானார். #135

அடியேன் என்னைப் பெற்ற தாயைத் துணை யென்று நினைந்திலேன்; தந்தையைத் துணையென்று நினைந்திலேன்; என்னை ஆண்ட தலைவனே சாலும் என்று நினைத்தேன். இவ்வாறு ஒருவன் உளன்'

என்று, தம் சீரடியாரை நினைத்தற்கிடையில் அன்னங்கள் மிக்கு வாழும் பொய்கை சூழ்ந்த திருப்பாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளியுள்ள இறைவர் என்னையும் சிறிது திருவுள்ளத்தடைத்து, சிறிது திருவருளைப் புலப்படுத்திலர். இவர்தம் அடியவர்க்கு, மறுமை நலம் ஒன்றையே அளித்தலல்லது, இம்மை நலத்தை அருளுவதில்லையாயினும். இம்மையில் அடியேனைப் புரக்கும் தலைவர் இவரன்றி வேறொருவர் இல்லை; என் செய்கோ!

திருப்பாச்சிலாச்சிராமம்

உற்றபோ தல்லால் உறுதியை உணரேன்
உள்ளமே அமையுமென் றிருந்தேன்
செற்றவர் புரமூன் றெரியெழச் செற்ற
செஞ்சடை நஞ்சடை கண்டர்
அற்றவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத்
தடிகள்தாம் யாதுசொன் னாலும்
பெற்றபோதுகந்து பெறாவிடி லிகழில்
இவரலா தில்லையோ பிரானார். **#136**

யான், ஒரு பொருளினால் நன்மையாதல் தீமையாதல் வந்த காலத்தில் அதனைக் கண்டபின் அல்லது, அதற்கு முன்பே அதன் உண்மை இயல்பை ஓர்ந்துணரும் சிறப்புணர்வு இல்லேன்; அதனால், என் பொதுமை யுணர்வே சாலும் என்று அமைந்திருந்தேன், இத்தன்மையேனிடத்து, தேவர் பொருட்டு அவரைப் பகைத்த அசுரரது முப்புரத்தில் தீயெழச்செய்தும், நஞ்சினை யுண்டு கண்டத்தில் வைத்தும், சிவந்த சடை முதலிய தவக் கோலத்தைப் பூண்டும், 'களை கண் இல்லாது அலமந்தவர்க்கு அருள் பண்ணுபவர்' எனப் பெயர் பெற்ற திருப்பாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளியுள்ள இறைவர், அடியேன் யாது சொல்லி இரந்தாலும், தாம் மனம் மகிழ்ச்சி அடையப் பெற்றபோது இரக்கம் வைத்து, பெறாதபோது இரக்கம் வையாது விடினும் அடியேனைப் புரக்கும் தலைவர் இவரன்றி வேறொருவர் இல்லை; என் செய்கோ!

திருப்பாச்சிலாச்சிராமம்

நாச்சில பேசி நமர்பிற ரென்று
நன்றுதீ தென்கிலர் மற்றோர்
பூச்சிலை நெஞ்சே பொன்விளை கழனிப்
புள்ளினஞ் சிலம்புமாம் பொய்கைப்
பாச்சிலாச் சிராமத் தடிகளென் றிவர்தாம்
பலரையும் ஆட்கொள்வர் பரிந்தோர்

பேச்சிலர் ஒன்றைத் தரவில ராகில்
இவரலா தில்லையோ பிரானார். #137
மனமே, பொன் விளையும் எனப் புகழத்தக்க கழனிகளில் பறவைக் கூட்டம் ஒலிப்பதும், நீ நிறைந்த பொய்கைகளையுடையதும் ஆகிய திருப்பாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளியிருக்கும் அடிகள் எனப்பட்ட இவர்தாம், சிலரை, 'நம்மவர்' என்றும், சிலரை, 'பிறர்' என்றும் நாவாற் சிலவற்றைச் சொல்லுதலும். அவர் சொல்வனவற்றைத் தாம், 'நன்று' என்று புகழ்தலாதல், 'தீது' என்று இகழ்தலாதல் செய்தலும் இலர். மற்றும் ஓர் முகமன் செய்தலும் இவரிடத்து இல்லை. ஆயினும், பலரையும் தமக்கு அடிமை என்று மட்டும் ஆளாக்கிக் கொள்வர். அதன்பின்பு அவரிடம் அன்பு கொண்டு ஓர் இனிய பேச்சுப் பேசுதல் இலர்; ஒன்றைத் தருதலும் இலர்; ஆயினும் அடியேனைப் புரக்கும் தலைவர் இவரையன்றி வேறொருவர் இல்லை; என் செய்கோ!

திருப்பாச்சிலாச்சிராமம்

வரிந்தவெஞ் சிலையால் அந்தரத் தெயிலை
வாட்டிய வகையின ரேனும்
புரிந்தஅந் நாளே புகழ்தக்க அடிமை
போகும்நாள் வீழும்நா ளாகிப்
பரிந்தவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத்
தடிகள்தாம் யாதுசொன் னாலும்
பிரிந்திறைப் போதிற் பேர்வதே யாகில்
இவரலா தில்லையோ பிரானார். #138
கட்டப்பட்ட வெவ்விய வில்லால், வானத்தில் இயங்கும் அரண்களை அழித்த வண்கண்மையை உடையவராயினும், தொண்டுபுரிந்த அந்த நாட்களே புகழத்தக்க நாட்களும், தொண்டு புரியாது போகும் நாட்கள் பயனின்றிக் கழிந்த நாட்களுமாம் என்று கொண்டு, அன்புசெய்பவருக்கு அருள் செய்பவராகிய, திருப்பாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளியிருக்கின்ற இறைவர், என்னளவில், யாது சொல்லி இரந்தாலும் திருச்செவியில் ஏலாது, நொடிப் பொழுதில் நீங்குதலையே உடையவராயினும், அடியேனைப் புரக்கும் தலைவர் இவரன்றி வேறொருவர் இல்லை; என் செய்கோ!

திருப்பாச்சிலாச்சிராமம்

செடித்தவஞ் செய்வார் சென்றுழிச் செல்லேன்
தீவினை செற்றிடும் என்று
அடித்தவம் அல்லால் ஆரையும் அறியேன்
ஆவதும் அறிவர்எம் மடிகள்

படைத்தலைச் சூலம் பற்றிய கையர்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பிடித்தவெண் ணீறே பூசுவ தானால்
இவரலா தில்லையோ பிரானார். **#139**

அடியேன், 'பணிபிழைத்தற் குற்றம் வந்து அழிவைச் செய்யும்' என்று அஞ்சி, நன்றல்லாத் தவத்தைச் செய்வார் சென்ற வழியையும் மிதியேன்; தமது திருவடித் தொண்டினையன்றி மற்று யாவரது பணியையும் யான் அறிந்திலேன்; அடியேன் இத் தன்மையேனாதலை எம்பெருமானாராகிய இவரும் அறிவர். அங்ஙனமாக, என்னைப் புரத்தற்கு, படைகளுள் முதன்மையுடைத்தாகிய சூலத்தைப் பிடித்த கையை உடையவராகிய திருப்பாச்சிலாச் சிராமத்தில் எழுந்தருளியிருக்கும் எம் கடவுளாகிய இவரது நிலைமை, பிசைந்த வெள்ளிய சாம்பலைப் பூசுவதே யாயினும், அடியேனைப் புரக்கும் தலைவா இவரன்றி வேறொருவர் இல்லை; என் செய்கோ!

திருப்பாச்சிலாச்சிராமம்

கையது கபாலங் காடுறை வாழ்க்கை
கட்டங்க மேந்திய கையர்
மெய்யது புரிநூல் மிளிரும்புன் சடைமேல்
வெண்டிங்கள் சூடிய விகிர்தா
பையர வல்குற் பாவைய ராடும்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
மெய்யரே யொத்தோர் பொய்செய்வ தாகில்
இவரலா தில்லையோ பிரானார். **#140**

கையின் கண்ணதாகிய தலை ஓட்டினையும், காட்டில் வாழும் வாழ்க்கையினையும், 'கட்டங்கம்' என்னும் படையினை ஏந்திய கையினையும், மார்பின் கண்ணதாகிய முப்புரி நூலினையும் உடைய ஒளிவிடுகின்ற புல்லிய சடையின்மேல் வெள்ளிய பிறையைச் சூடிய விகிர்தரும், அரவப் படம் போலும் அல்குலினை உடைய மகளிர் ஆடலைப் புரியும் திருப்பாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளியிருக்கும் எம் கடவுளும் ஆகிய இவரது தன்மை, சொல் பிறழாதவர் போல வந்து ஆட்கொண்டு, பின்பு பிறழ்தலைச் செய்வதேயாய் விடினும், அடியேனைப் புரக்கும் தலைவர் இவரன்றி வேறொருவர் இல்லை; என் செய்கோ!

திருப்பாச்சிலாச்சிராமம்

நிணம்படு முடலை நிலைமையென் றோரேன்
நெஞ்சமே தஞ்சமென் றிருந்தேன்

கணம்படிந் தேத்திக் கங்குலும் பகலும்
கருத்தினாற் கைதொழு தெழுவேன்
பணம்படும் அரவம் பற்றிய கையர்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பிணம்படு காட்டில் ஆடுவ தாகில்
இவரலா தில்லையோ பிரானார். **#141**

அடியேன், நிணம் பொருந்தியதாகிய இவ்வுடம்பை நிலைத்த தன்மையுடையதென்று நினையாது, நெஞ்சம் இறைவருக்கு உரியது என்றே துணிந்தேன்; இரவும் பகலும் அடியவர் குழாத்தின் ஊடே சென்று தம்மை அன்போடு துதித்துக் கைகூப்பித் தொழுவேன்; இவ்வாறாக, படம் பொருந்திய பாம்பைப் பிடித்த கையை உடையவராகிய திருப்பாச்சிலாச் சிராமத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம் கடவுளாராகிய இவரது தன்மை, பிணம் பொருந்திய காட்டில் ஆடுவதேயாய்விடினும், அடியேனைப் புரக்கும் தலைவர் இவரன்றி வேறொருவர் இல்லை; என் செய்கோ!

திருப்பாச்சிலாச்சிராமம்

குழைத்துவந் தோடிக் கூடுதி நெஞ்சே
குற்றேவல் நாள்தொறுஞ் செய்வான்
இழைத்தநாள் கடவார் அன்பில ரேனும்
எம்பெரு மானென்றெப் போதும்
அழைத்தவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத்
தடிகள்தாம் யாதுசொன் னாலும்
பிழைத்தது பொறுத்தொன் றீகில ராகில்
இவரலா தில்லையோ பிரானார். **#142**

நெஞ்சே, நீ அன்பால் இளகி மகிழ்ச்சியோடும் விரைந்து சென்று நாள் தோறும் குற்றேவல் செய்ய அடைகின்றாய்; ஆயினும், தமக்கு வரையறுத்த நாளெல்லையைத் தவத்தாற் கடக்க மாட்டாத சிலர், இயல்பில் அன்பில்லாதவராயினும், தாம் கேட்டவாற்றால் வாயினால் எப்போதும், 'சிவனே சிவனே' என்று கூப்பிடுந் தன்மையுடையவராயின், அவர்க்கு அருள் செய்பவராகிய திருப்பாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானார், யாது சொல்லி வேண்டினும், நீ பிழை செய்ததைப் பொறுத்து உனக்கு ஒன்றையும் ஈகின்றிலர்; ஆயினும் உன்னைப் புரக்கும் தலைவர் இவரன்றி வேறொருவர் இல்லை;நீ என் செய்தியோ!

திருப்பாச்சிலாச்சிராமம்

துணிப்படும் உடையுஞ் சுண்ணவெண் ணீறுந்

தோற்றமுஞ் சிந்தித்துக் காணில்
மணிப்படு கண்டனை வாயினாற் கூறி
மனத்தினால் தொண்டனேன் நினைவேன்
பணிப்படும் அரவம் பற்றிய கையர்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பிணிப்பட ஆண்டு பணிப்பில ராகில்
இவரலா தில்லையோ பிரானார். **#143**

வட்டாதல் தன்மையிற் பட்ட உடையும், நறும் பொடியாகப் பூசிய வெள்ளிய நீறும், மற்றும் இன்ன தோற்றமும் ஆகிய இவற்றது பெருமையை யுணர்ந்து, அவற்றைக் கண்டால், அடியேன் நீல கண்டத்தையுடைய எம்பெருமானாரைக் கண்டதாகவே மனத்தால் நினைத்து, வாயால் துதிப்பேன்; அவ்வாறாக, படத்தை யுடையதன் வகையிற்பட்டபாம்பைப் பிடித்த கையை யுடையவராகிய, திருப்பாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளி யிருக்கின்ற எம் கடவுளாராகிய இவர், என்னைத் தம்பால் கட்டுண்டு கிடக்குமாறு ஆட்கொண்டு, ஒன்றையும் ஈயாராயினும். அடியேனைப் புரக்கும் தலைவர் இவரன்றி வேறொருவர் இல்லை; என் செய்கோ!

<u>திருப்பாச்சிலாச்சிராமம்</u>

ஒருமையே யல்லேன் எழுமையும் அடியேன்
அடியவர்க் கடியனு மானேன்
உரிமையால் உரியேன் உள்ளமும் உருகும்
ஒண்மலர்ச் சேவடி காட்டாய்
அருமையாம் புகழார்க் கருள்செயும் பாச்சி
லாச்சிரா மத்தெந்தம் மடிகள்
பெருமைகள் பேசிச் சிறுமைகள் செய்யில்
இவரலா தில்லையோ பிரானார். **#144**

எய்தற்கரிய புகழையுடையராய பெரியோர்க்கு அருள் செய்பவராகிய திருப்பாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம் கடவுளாராகிய இவர்க்கு யான் ஒரு பிறப்பில் அடியேன் அல்லேன்; ஏழ் பிறப்பிலும் அடியேன்; அதுவேயுமன்றி, இவர் தம் அடியார்க்கும் அடியனாயினேன்; என்னை விற்கவும், ஒற்றி வைக்கவுமான எல்லா உரிமைகளுமாக இவர்க்கு நான் உரியவனாயினேன்; இவர்தம் ஒளி பொருந்திய மலர் போலும் செம்மையான திருவடிகளே எனக்கு உறுதுணையாக, என் உள்ளம் அவற்றிடத்து உருகா நிற்கும்; இவ்வாறாக, இவர், முன்பு பெருமைகள் பேசி, பின்பு சிறுமைகள் செய்வாராயினும், அடியேனைப் புரக்கும் தலைவர் இவரன்றி வேறொருவர் இல்லை; என் செய்கோ!

திருப்பாச்சிலாச்சிராமம்

ஏசின அல்ல இகழ்ந்தன அல்ல
எம்பெரு மான்என்றெப் போதும்
பாயின புகழான் பாச்சிலாச் சிராமத்
தடிகளை அடிதொழப் பன்னாள்
வாயினாற் கூறி மனத்தினால் நினைவான்
வளவயல் நாவல்ஆ ரூரன்
பேசின பேச்சைப் பொறுத்தில ராகில
இவரலாதில்லையோ பிரானார். **#145**

'எம்பெருமான்' என்று, எப்போதும் உமையோடு பரவிய புகழை யுடையவனும், திருப்பாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளியிருக்கின்ற இறைவரை யடைந்து அவரது திருவடிகளைத் தொழவேண்டுமென்று பல நாட்கள் வாயினாற் சொல்லி, மனத்தினால் நினைந்தவனும் ஆகிய, வளப்பமான வயல்கள் சூழ்ந்த, திரு நாவலூரில் தோன்றிய நம்பியாரூரன் இவரைப் பேசிய பேச்சுக்கள், உண்மையில் ஏசினவும் அல்ல; இகழ்ந்தனவும் அல்ல; ஆதலின், அவைகளை இவர் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும்; அது செய்யாராயினும், அடியேனது பிழைகளைப் பொறுத்து ஆளும் தலைவர் இவரன்றி வேறொருவர் இல்லை; என் செய்கோ!

திருநாட்டியத்தான்குடி

திருநாட்டியத்தான்குடி

திருநாட்டியத்தான்குடி,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கரிநாதேசுவரர்.
தேவியார் : மலர்மங்கையம்மை.

பூணாண் ஆவதொ ரரவங்கண் டஞ்சேன்
புறங்காட் டாடல்கண் டிகழேன்
பேணா யாகிலும் பெருமையை உணர்வேன்
பிறவே னாகிலும் மறவேன்
காணா யாகிலுங் காண்பன்என் மனத்தால்
கருதா யாகிலுங் கருதி
நானேல் உன்னடி பாடுத லொழியேன்
நாட்டியத் தான்குடி நம்பீ. **#146**

திருநாட்டியத்தான் குடியில் எழுந்தருளியிருக்கின்ற நம்பியே. உனக்கு அணிகலமும், அரைநாணும் சிறுமையையுடைய பாம்பாதல் கண்டு அஞ்சேன்; நீ புறங்காட்டில் ஆடுதலைக் கண்டு இகழேன்; நீ எனது சிறுமையை யுணர்ந்து என்னை விரும்பாதொழியினும், யான் உனது பெருமையை உணர்ந்து உன்னை விரும்புவேன்; வேறோராற்றால் நான் பிறவி நீங்குவேனாயினும், உன்னை மறவேன்; நீ என்னைக் கடைக்கணியாதொழியினும், உன்னை கண்ணாரக் காண்பேன்; நீ என்னை உன் திருவுள்ளத்தில் நினைந்து ஏதும் அருள் பண்ணாதொழியினும், நானோ, என் மனத்தால் உன்னை நினைந்து பாடுதலை ஒழியமாட்டேன், இஃது என் அன்பிருந்தவாறு.

திருநாட்டியத்தான்குடி

கச்சேர் பாம்பொன்று கட்டிநின் றிடுகாட்
டெல்லியி லாடலைக் கவர்வன்
துச்சேன் என்மனம் புகுந்திருக் கின்றமை
சொல்லாய் திப்பிய மூர்த்தீ
வைச்சே இடர்களைக் களைந்திட வல்ல
மணியே மாணிக்க வண்ணா
நச்சேன் ஒருவரை நான்உனை யல்லால்
நாட்டியத் தான்குடி நம்பீ. **#147**

உண்மையான தெய்வத் திருமேனியை உடையவனே, துன்பங்களை

உளவாக்கவும் களையவும் வல்ல உயர்வுடையவனே, மாணிக்கம் போலும் நிறத்தை உடையவனே, திரு நாட்டியத்தான் குடியில் எழுந்தருளியிருக்கின்ற நம்பியே, நான் உன்னையன்றி வேறொருவரையும் விரும்பேன்; உயர எழுகின்ற பாம்பு ஒன்றைக் கச்சாகக் கட்டி நின்று இடுகாட்டில் இரவில் ஆடுகின்ற உன் கோலத்தையே மனத்தில் விரும்பியிருத்துவேன்; இழிபுடையேனாகிய என் மனத்தில் நீ இவ்வாறு புகுந்து நிற்றற்குரிய காரணத்தைச்சொல்லியருளாய்!

திருநாட்டியத்தான்குடி

அஞ்சா தேஉனக் காட்செய வல்லேன்
யாதினுக் காசைப் படுகேன்
பஞ்சேர் மெல்லடி மாமலை மங்கை
பங்கா எம்பர மேட்டீ
மஞ்சேர் வெண்மதி செஞ்சடை வைத்த
மணியே மாணிக்க வண்ணா
நஞ்சேர் கண்டா வெண்டலை யேந்தீ
நாட்டியத் தான்குடி நம்பீ. **#148**

பஞ்சு ஊட்டிய அழகிய மெல்லிய பாதங்களையுடைய, பெரிய மலைக்கு மகளாகிய உமையை ஒருபாகத்தில் உடையவனே, மேலான இடத்தில் உள்ள, எங்கள் பெருமானே, மேகங்களின் மேற் செல்லுகின்ற வெள்ளிய திங்களைச் செவ்விய சடையின் கண் வைத்த உயர்வுடையவனே, மாணிக்கம் போலும் நிறத்தை யுடையவனே, நஞ்சு தோன்றுகின்ற கண்டத்தையுடையவனே, வெள்ளிய தலையை ஏந்தியவனே, திருநாட்டியத் தான்குடியில் எழுந்தருளியிருக்கின்ற நம்பியே, அஞ்சாமலே உனக்கு நான் தொண்டுபுரிய வல்லேன்; அதன் பயனாக எதற்கு ஆசைப்படுவேன்? ஒன்றிற்கும் ஆசைப்படேன்; இஃது என் அன்பிருந்தவாறு.

திருநாட்டியத்தான்குடி

கல்லே னல்லேன் நின்புகழ் அடிமை
கல்லா தேபல கற்றேன்
நில்லே னல்லேன் நின்வழி நின்றார்
தம்முடை நீதியை நினைய
வல்லே னல்லேன் பொன்னடி பரவ
மாட்டேன் மறுமையை நினைய
நல்லே னல்லேன் நானுனக் கல்லால்
நாட்டியத் தான்குடி நம்பீ. **#149**

திருநாட்டியத்தான் குடியில் எழுந்தருளியிருக்கின்ற நம்பியே, நான் உனது புகழைக் கல்லாதேனல்லேன்; அடிமைச் செயல்களைப் பிறரிடம் கல்லாமலே நீ உள்நின்று உணர்த்த அவை எல்லாவற்றையும் கற்றேன்; அங்ஙனங் கற்றதற்குத்தக நினது வழியில் நில்லாதவனல்லேன்; அங்ஙனம் நின்றாரது வரலாறுகளை நினைய மாட்டாதவனல்லேன்; உனது பொன் போலும் திருவடிகளைப் பரவுமிடத்து அதற்குப் பயனாக மறுமையின்பத்தை நினைய மாட்டேன்; உனக்கு அல்லது வேறு ஒருவற்கு நான் உறவினன் அல்லேன்; இஃது என் அன்பிருந்தவாறு.

திருநாட்டியத்தான்குடி

மட்டார் பூங்குழல் மலைமகள் கணவனைக்
கருதா தார்தமைக் கருதேன்
ஒட்டா யாகிலும் ஒட்டுவன் அடியேன்
உன்னடி அடைந்தவர்க் கடிமைப்
பட்டே னாகிலும் பாடுதல் ஒழியேன்
பாடியும் நாடியும் அறிய
நட்டேன் ஆதலால் நான்மறக் கில்லேன்
நாட்டியத் தான்குடி நம்பீ. **#150**

திருநாட்டியத்தான் குடியில் எழுந்தளியிருக்கும் நம்பியே, தேன் நிறைந்த பூவை யணிந்த கூந்தலையுடைய மலைமகளுக்குக் கணவனாகிய உன்னை நினையாதவரை நான் நினையேன்; நீ எனக்குத் தலைவனாய் என்னொடு ஒட்டாதே போவாயாயினும், நான் உனக்கு அடியவனாய், உன்னோடு ஒட்டியே நிற்பேன்; உன் திருவடியையே பற்றாக அடைந்த அடியார்க்கு அடியவனாகிய பெருமையை நான் பெற்றுடையேனாயினும், உன்னைப் பாடுதலை விடமாட்டேன்; உன் புகழைப் பாடியும், உனது பெருமைகளை ஆராய்ந்தும் யாவருமறிய உன்னொடு நட்புக் கொண்டேனாதலின் உன்னை நான் மறக்கமாட்டேன்; இஃது என் அன்பிருந்தவாறு.

திருநாட்டியத்தான்குடி

படப்பாற் றன்மையில் நான்பட்ட தெல்லாம்
படுத்தாய் என்றல்லல் பறையேன்
குடப்பாச் சில்லுறை கோக்குளிர் வானே
கோனே கூற்றுதைத் தானே
மடப்பாற் றயிரொடு நெய்மகிழ்ந் தாடு
மறையோ தீமங்கை பங்கா
நடப்பா யாகிலும் நடப்பனுன் னடிக்கே
நாட்டியத் தான்குடி நம்பீ. **#151**

மேற்கிலுள்ள திருப்பாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளியிருக்கும், நீரைப் பொழிகின்ற குளிர்ந்த மேகம் போல்பவனே, யாவர்க்கும், தலைவனே, இயமனை உதைத்தவனே, அடியவர் அகங்களில் பால் தயிர் நெய் இவைகளை மகிழ்ச்சியோடு ஆடுகின்ற, வேதத்தை ஓதுபவனே, உமையை ஒரு பாகத்தில் உடையவனே, திரு நாட்டியத்தான்குடியில் எழுந்தருளியிருக்கின்ற நம்பியே, துன்பங்கள் படுமாறு அமைந்த ஊழினது தன்மையால், நாள்பட்ட துன்பங்களை எல்லாம் நீ படுத்தினாய் என்று சொல்லி நான் முறையிடமாட்டேன். நீ என்னை விட்டு நீங்குவாயாயினும், நான் உன் திருவடியைப் பெறுதற்கே முயல்வேன்; இஃது என் அன்பிருந்தவாறு.

திருநாட்டியத்தான்குடி

ஐவாய் அரவினை மதியுடன் வைத்த
அழகா அமரர்கள் தலைவா
எய்வான் வைத்ததொர் இலக்கினை அணைதர
நினைந்தேன் உள்ளம்உள் ளளவும்
உய்வான் எண்ணிவந் துன்னடி யடைந்தேன்
உகவா யாகிலும் உகப்பன்
நைவா னன்றுனக் காட்பட்ட தடியேன்
நாட்டியத் தான்குடி நம்பீ. **#152**

ஐந்து தலைப் பாம்கினைச் சந்திரனோடு முடியில் வைத்துள்ள அழகனே, தேவர்கட்டுத் தலைவனே, திருநாட்டியத்தான் குடியில் எழுந்தருளியிருக்கின்ற நம்பியே, நான் அன்று உனக்கு ஆட்பட்டது, துன்பத்தால் வருந்துதற்கு அன்று; துன்பத்தினின்றும் உய்ந்து, இன்பம் உற எண்ணிவந்தே உன் திருவடியை அடைந்தேன்; அதனால், நீ என்னை விரும்பாதொழியினும், நான் உன்னை விரும்பியே நிற்பேன்; ஆதலின், நான் எய்தற்கு வைத்த குறியினை உயிருள்ள அளவும் எவ்வாற்றாலேனும் அடையவே நினைத்தேன்; இஃது என் அன்பிருந்தவாறு.

திருநாட்டியத்தான்குடி

கலியேன் மானுட வாழ்க்கைஒன் றாகக்
கருதிடிற் கண்கள்நீர் மல்கும்
பலிதேர்ந் துண்பதொர் பண்புகண் டிகழேன்
பசுவே ஏறினும் பழியேன்
வலியே யாகிலும் வணங்குதல் ஒழியேன்
மாட்டேன் மறுமையை நினைய
நலியேன் ஒருவரை நான்உனை யல்லால்

நாட்டியத் தான்குடி நம்பீ. #153
திருநாட்டியத்தான்குடியில் எழுந்தருளியிருக்கின்ற நம்பியே, யான் இம்மானுட வாழக்கையை ஒருபொருளாக நினைத்துச் செருக்கேன்; இதன் நிலையாமை முதலியவற்றை நினைத்தால், கண்களில் நீர் பெருகும், ஆதலின் பிச்சை எடுத்து உண்ணும் உனது இயல்பைக் கண்டும், அதுபற்றி உன்னை இகழேன்; நீ எருதையே ஏறினாலும் அதுபற்றி உன்னைப்பழியேன்; எனக்கு மெலிவு நீங்க வலியே மிகினும், உன்னை வணங்குதலைத் தவிரேன்; மறுமை இன்பத்தையும் நினைக்கமாட்டேன்; உன்னையன்றி வேறொருவரை நீங்காது நின்று இரக்கமாட்டேன்; இஃது என் அன்பிருந்தவாறு.

திருநாட்டியத்தான்குடி

குண்டா டிச்சமண் சாக்கியப் பேய்கள்
கொண்டா ராகிலுங் கொள்ளக்
கண்டா லுங்கரு தேன்எரு தேறுங்
கண்ணா நின்னல தறியேன்
தொண்டா டித்தொழு வார்தொழக் கண்டு
தொழுதேன் என்வினை போக
நண்டா டும்வயல் தண்டலை வேலி
நாட்டியத் தான்குடி நம்பீ. #154
எருதினை ஏறுகின்ற, எனக்குக் கண்போலச் சிறந்தவனே, நண்டுகள் விளையாடும் வயல்களையும், சோலையாகிய வேலியையும் உடைய திருநாட்டியத்தான் குடியில் எழுந்தருளி யிருக்கின்ற நம்பியே, சமணரும், சாக்கியரும் ஆகிய பேய்கள் மூர்க்கத் தன்மையை மேற்கொண்டு தாங்கள் பிடித்தது சாதித்தார் என்பது கேள்வியால் அறியப்பட்டாலும், அதனை நேரே கண்டாலும் அதனை யான் ஒரு பொருளாக நினையேன்; உன்னையன்றி பிறிதொரு கடவுளை நான் அறியேன்; உனது தொண்டினை மேற்கொண்டு உன்னைத் தொழுகின்ற பெரியோர்கள் அங்ஙனம் தொழும்பொழுது கண்டு, அதுவே நெறியாக என் வினைகள் ஒழியுமாறு உன்னை யான் தொழத் தொடங்கினேன். இஃது என் அன்பிருந்தவாறு.

திருநாட்டியத்தான்குடி

கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற
கொடிறன் கோட்புலி சென்னி
நாடார் தொல்புகழ் நாட்டியத் தான்குடி
நம்பியை நாளும் மறவாச்
சேடார் பூங்குழற் சிங்கடி யப்பன்

திருவா ரூரன் உரைத்த
பாடீ ராகிலும் பாடுமின் தொண்டீர்
பாடநும் பாவம்பற் றறுமே. **#155**

அடியவர்களே, பிற பாடல்களை நீ பாட மறந்தாலும், பகையரசரை அவர் எதிர்ப்பட்ட ஞான்று தப்பிப் போக விடாது வென்ற கொடிறு போல்பவராகிய கோட்புலி நாயனார்க்கு இடமாயதும், சோழனது நாட்டில் உள்ளதும், பழமையான புகழை யுடையதும், ஆகிய திருநாட்டியத்தான்குடியில் எழுந்தருளி யிருக்கின்ற நம்பியை, அவனை ஒரு நாளும் மறவாத, திரட்சியமைந்த, பூவை யணிந்த கூந்தலையுடைய, 'சிங்கடி' என்பவளுக்குத் தந்தையாகிய, திருவுடைய நம்பியாரூரன் பாடிய பாடல்களைப் பாடுங்கள். பாடின், உங்கள் பாவங்கள் எல்லாம் பற்றற்று ஒழியும்.

திருக்கலையநல்லூர்

திருக்கலையநல்லூர்

திருக்கலையநல்லூர்,
பண் - தக்கராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அமிர்தகலைநாதர்.
தேவியார் : அமிர்தவல்லியம்மை.

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணத்தினைநன் கறிந்து
விரும்பும்வரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியஊர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலருங் கலயநல்லூர் காணே. **#156**

'தென்னங் குரும்பை போலும் தனங்களையும், பூவை யணிந்த கூந்தலையும் உடையவளாகிய உமையம்மை தவம் மேற்கொண்டிருத்தலை அறிந்து, அவளை மணக்குங் குறிப்போடும் அங்குச் சென்று அவளது அன்பினை ஆய்ந்தறிந்து, அவள் விரும்பிய வரத்தைக் கொடுத்து, அவளை மணஞ்செய்தருளிய தேவர் தலைவனும், கண்ணையுடைய நெற்றியை உடையவனும் ஆகிய இறைவனது ஊர் யாது?' என்று வினவின், பேரரும்புகளின் அருகே சென்று, 'சுரும்பு' என்னும் ஆண் வண்டுகள் இசை கூட்ட, ஏனைய பெண் வண்டுகள் பண்களைப்பாட, அழகிய மயில்கள் நடனம் ஆடுகின்ற அரங்காகிய அழகிய சோலையைச் சூழ்ந்த அயலிடத்தில், கரும்பின் அருகே கரிய குவளை மலர் கண்ணுறங்குகின்ற வயல்களில் தாமரைகள் முகமலரும் திருக்கலயநல்லூரே; அறிக.

திருக்கலையநல்லூர்

செருமேவு சலந்தரனைப் பிளந்தசுடர் ஆழி
செங்கண்மலர் பங்கயமாச் சிறந்தானுக் கருளி
இருள்மேவும் அந்தகன்மேல் திரிசூலம் பாய்ச்சி
இந்திரனைத் தோள்முரித்த இறையவன்ஊர் வினவில்
பெருமேதை மறையொலியும் பேரிமுழ வொலியும்
பிள்ளையினந் துள்ளிவிளை யாட்டொலியும் பெருகக்
கருமேதி புனல்மண்டக் கயல்மண்டக் கமலங்

களிவண்டின் கணம்இரியும் கலயநல்லூர் காணே. #157
'போரை விரும்பிய சலந்தராசுரனை அழித்த ஒளியையுடைய சக்கரத்தை, தன் சிவந்த கண்ணாகிய மலரையே தாமரை மலராகச் சாத்தி, வழிபாட்டிற் சிறந்து நின்றவனாகிய திருமாலுக்கு அளித்து, இருள் போலும் அந்தகாசுரன் மேல் கூர்மையான சூலத்தைப் பாய்ச்சி அழித்து, இந்திரனைத் தோள் முரித்த கடவுளது ஊர் யாது?' என்று வினவின், மிக்க பேரறிவைத்தரும் வேதத்தினது ஓசையும், முரசு, மத்தளம் ஆகிய வாச்சியங்களது ஓசையும், சிறுவர் கூட்டம் துள்ளி விளையாடுதலின் ஓசையும் மிக்கெழுதலினால், கரிய எருமை நீரிற் புக, அதனால் துள்ளி எழுந்த கயல் மீன்கள், தாமரை மலரின்மேல் நெருங்கி விழ, தாமரை மலரைச் சூழ்ந்திருந்த களிப்புடைய வண்டுகளின் கூட்டம் அஞ்சி ஓடுகின்ற திருக்கலயநல்லூரே; அறிக.

திருக்கலையநல்லூர்

இண்டைமலர் கொண்டுமணல் இலிங்கமது இயற்றி
இனத்தாவின் பாலாட்ட இடறியதா தையைத்தாள்
துண்டமிடு சண்டியடி அண்டர்தொழு தேத்தத்
தொடர்ந்தவனைப்பணிகொண்ட விடங்கனதூர்வினவில்
மண்டபமும் கோபுரமும் மாளிகைசூ ளிகையும்
மறைஒலியும் விழவொலியும் மறுகுநிறை வெய்திக்
கண்டவர்கள் மனங்கவரும் புண்டரிகப் பொய்கைக்
காரிகையார் குடைந்தாடுங் கலயநல்லூர் காணே. #158
'இண்டை மாலையும் விடுபூவும் திரட்டிக்கொண்டு சென்று மண்ணியாற்றில் மணல் இலிங்கத்தை அமைத்து, கூட்டமான பசுக்களின் பாலைக் கொணர்ந்து சொரிய, அதனைக்கண்டு வெகுண்டு காலால் இடறிய தந்தையின் தாளை வெட்டிய சண்டேசுர நாயனாரது திருவடிகளைத் தேவர்களும் தொழுது துதிக்கும்படி, அவரை விடாது சென்று ஆட்கொண்ட அழகனது ஊர் யாது?' என்று வினவின், மண்டபங்களிலும், கோபுரங்களிலும், மாளிகைகளிலும், சூளிகைகளிலும் வேதங்களின் ஓசையும், மங்கல ஓசைகளும் வீதிகளில் நிரம்புதல் பொருந்திக் கண்டவர்களது மனத்தைக் கவர்கின்ற, தாமரைப் பொய்கைகளில் மகளிர் மூழ்கி விளையாடுகின்ற திருக்கலயநல்லூரே; அறிக.

திருக்கலையநல்லூர்

மலைமடந்தை விளையாடி வளையாடு கரத்தான்
மகிழ்ந்தவள்கண் புதைத்தலுமே வல்லிருளாய் எல்லா
உலகுடன்றான் மூடவிருள் ஓடும்வகை நெற்றி

ஒற்றைக்கண் படைத்துகந்த உத்தமனூர் வினவில்
அலைஅடைந்த புனல்பெருகி யானைமருப் பிடறி
அகிலொடுசந் துந்திவரும் அரிசிலின்தென் கரைமேல்
கலையடைந்து கலிகடியந் தணர்ஓமப் புகையால்
கணமுகில்போன் றணிகிளருங் கலயநல்லூர் காணே. **#159**
'மலைமகள், விளையாட்டை மேற்கொண்டு மகிழ்ச்சி மேலிட்டவளாய், அவளது வளைபொருந்திய கைகளால் தனது கண்களை மூடினமையால், எல்லா உலகங்களையும் ஒருங்கே வலிய இருள் பரந்து மூடிக்கொள்ள, அவ்விருள் நீங்கும்படி நெற்றியிடத்து ஒரு கண்ணைத் தோற்றுவித்து அருள் புரிந்த மேலானவனது ஊர் யாது?' என்று வினவின், அலை பொருந்திய நீர் பெருக்கெடுத்து, யானைத் தந்தத்தைப் புரட்டி அகில் மரத்தையும், சந்தன மரத்தையும் தள்ளிக்கொண்டு வருகின்ற அரிசிலாற்றின் தென்கரைமேல் உள்ள, நூல்களை யுணர்ந்து அந்நெறியானே வறுமையை ஓட்டுகின்ற அந்தணர்களது வேள்விப்புகையால், கூட்டமாகிய மேகத்தின் தோற்றம் போன்ற அழகு மிகுகின்ற திருக்கலயநல்லூரே; அறிக.

<u>திருக்கலையநல்லூர்</u>

நிற்பானும் கமலத்தில் இருப்பானும் முதலா
நிறைந்தமரர் குறைந்திரப்ப நினைந்தருளி யவர்க்காய்
வெற்பார்வில் அரவுநாண் எரிஅம்பால் விரவார்
புரமூன்றும் எரிவித்த விகிர்தனூர் வினவில்
சொற்பால பொருட்பால சுருதிஒரு நான்கும்
தோத்திரமும் பலசொல்லித் துதித்திறைதன் திறத்தே
கற்பாருங் கேட்பாரு மாயெங்கும் நன்கார்
கலைபயில்அந் தணர்வாழுங் கலயநல்லூர் காணே. **#160**
'தன்னை வழிபடுவோர்க்கு நின்ற கோலமாய்த் தோன்றுபவனாகிய திருமாலும், தாமரை மலரில் இருப்பவனாகிய பிரமனும் முதல்வராகத் தேவர் பலரும் குறையுடையராய் நிறைந்து வந்து இரக்க, அவரது துன்பத்தைத் திருவுள்ளத்தடைத்து அவர் பொருட்டாக, மலையாகிய வில்லும், பாம்பாகிய நாணியும், தீயாகிய அம்பும் என்னும் இவற்றால் பகைவரது முப்புரங்களையும் எரித்தொழியச் செய்த, உலகியலுக்கு வேறுபட்டவனது ஊர் யாது?' என்று வினவின், சொல்வகைகள் பலவற்றையும், பொருள் வகைகள் பலவற்றையும் உடைய வேதங்கள் நான்கையும், தோத்திரங்கள் பலவற்றையும் சொல்லித் துதிக்குமாற்றால் இறைவனது நெறிக்கண் கற்பாரும் கேட்பாருமாய் நின்று, எவ்விடத்திலும் நன்மை யமைந்த நூல்களைப் பயில்கின்ற அந்தணர்கள்

வாழ்கின்ற திருக்கலயநல்லூரே காண்.

திருக்கலையநல்லூர்

பெற்றிமைஒன் றறியாத தக்கனது வேள்விப்
பெருந்தேவர் சிரந்தோள்பல் கரங்கள்பீ டழியச்
செற்றுமதிக் கலைசிதையத் திருவிரலால் தேய்வித்
தருள்பெருகு சிவபெருமான் சேர்தரும் ஊர் வினவில்
தெற்றுகொடி முல்லையொடு மல்லிகைசெண் பகமும்
திரைபொருது வருபுனல்சேர் அரிசிலின்தென் கரைமேல்
கற்றினம்நல் கரும்பின்முளை கறிகற்கக் கறவை
கமழ்கழுநீர் கவர்கழனிக் கலயநல்லூர் காணே. **#161**

'தக்கது சிறிதும் அறியாத தக்கனது வேள்வியில் பெரிய தேவர்கள், தங்கள் தலை, தோள், பல், கை, கண் என்னும் உறுப்புக்கள் வலிமையழிந் தொழியுமாறு ஒறுத்து, சந்திரனது கலைகள் சிதையும்படி கால் திருவிரலால் தேய்த்து, பின்பு அவர் எல்லாரிடத்தும் கருணையை மிக வழங்கிய சிவபெருமான் சேர்ந்திருக்கும் ஊர் யாது?' என்று வினவினால், பின்னிக்கிடக்கின்ற முல்லைக் கொடியோடு, 'மல்லிகைக் கொடி, சண்பகமரம்' என்னும் இவைகளும் அலைகளால் உந்தப்பட்டு வருகின்ற நீர் பொருந்திய அரிசிலாற்றின் தென்கரையில், கன்றுக்கூட்டம் நல்ல கரும்பின் முளையில் கறித்தலைப் பழக, பசுக் கூட்டம், மணம் வீசுகின்ற செங்கழுநீர்க் கொடியை மேய்கின்ற வயல்களையுடைய திருக்கலயநல்லூரே ; அறிக.

திருக்கலையநல்லூர்

இலங்கையர்கோன் சிரம்பத்தோ டிருபதுதிண் தோளும்
இற்றலற ஒற்றைவிரல் வெற்பதன்மேல் ஊன்றி
நிலங்கிளர்நீர் நெருப்பொடுகாற் றாகாசம் ஆகி
நிற்பனவும் நடப்பனவாம் நின்மலன்ஊர் வினவில்
பலங்கள்பல திரைஉந்திப் பருமணிபொன் கொழித்துப்
பாதிரிசந் தகிலினொடு கேதகையும் பருகிக்
கலங்குபுனல் அலம்பிவரும் அரிசிலின்தென் கரைமேல்
கயல்உகளும் வயல்புடைசூழ் கலயநல்லூர் காணே. **#162**

'இலங்கைக்கு அரசனாகிய இராவணன் தனது பத்துத் தலைகளும், இருபது தோள்களும் சிதைந்து அரற்றுமாறு ஒரு விரலைக் கயிலை மலையின்மேல் ஊன்றி, 'நிலம், மிக்க நீர், நெருப்பு, காற்று, வானம், என்னும் பெரும் பொருள்களாகியும், நிற்பனவும் நடப்பனவுமாகிய உயிர்களாகியும் நிற்கின்ற தூயவனுடைய ஊர் யாது?' என்று வினவினால், அலைகளால் பல பழங்களைத் தள்ளி, பெரிய

மாணிக்கங்களையும் பொன்னையும் கொழித்து, 'பாதிரி, சந்தனம், அகில்' என்ற மரங்களையும், தாழம் புதர்களையும் உள்வாங்கி. இவற்றால் எல்லாம் கலங்கல் பொருந்திய நீர், ஆரவாரித்து வருகின்ற அரிசிலாற்றின் தென்கரையில் உள்ள கயல் மீன்கள் பிறழும் வயல்கள் புடை சூழ்ந்த திருக்கலயநல்லூரே; அறிக.

திருக்கலையநல்லூர்

மாலயனுங் காண்பரிய மால்எரியாய் நிமிர்ந்தோன்
வன்னிமதி சென்னிமிசைவைத்தவன்மொய்த்தெழுந்த
வேலைவிடம் உண்டமணி கண்டன் விடை ஊரும்
விமலன்உமை யவளோடு மேவிய ஊர் வினவில்
சோலைமலி குயில்கூவக் கோலமயில் ஆலச்
சுரும்பொடுவண்டிசை முரலப்பசுங்கிளி சொல்துதிக்கக்
காலையிலும் மாலையிலும் கடவுள் அடி பணிந்து
கசிந்தமனத்தவர்பயிலுங் கலயநல்லூர் காணே. **#163**

'திருமாலும் பிரம்மனும் அடிமுடி தேடி அறியாதபடி நெருப்புருவமாய் நீண்டு நின்றவனும்,வன்னியும்,பிறையும் சடையிற் சூடியவனும்கடலிற் தோன்றியவிடத்தை உண்டு கறுத்த நீலமணி போலும் கண்டத்தை உடையவனும்,இடபவாகனத்தை ஊர்பவனும் ஆகிய இறைவன் உமாதேவியோடு விரும்பியிருக்கின்ற ஊர் யாது? 'என்று வினவினாள்,சோலைகளில் நிறைந்த குயில்கள் கூவவும்,அழகிய மயில்கள் ஆடவும்,சுரும்பும் வண்டும் இசை கூட்டவும்,பசிய கிளிகள்தாம் கேட்டவாறே சொல்லி இறைவனைத் துதிக்கும்படி,காலை,மாலை இரண்டு பொழுதிலும் இறைவனது திருவடிகளை வணங்கி,உருகிய மனத்தை உடைய அடியார்கள் மிக்கிருக்கின்ற திருகெகலயநல்லூரே;அறிக.

திருக்கலையநல்லூர்

பொரும்பலம் துடையசுரன் தாரகனைப் பொருது
பொன்றுவித்தபொருளினை முன்படைத்து கந்தபுனிதன்
கரும்புவிலின் மலர்வாளிக் காமன்உடல் வேவக்
கனல்விழித்த கண்ணுதலோன் கருதும்ஊர் வினவில்
இரும்புனலுவெண் டிரைபெருகி ஏலம்இல வங்கம்
இருகரையும் பொருதலைக்கும் அரிசிலின்தென்கரைமேல்
கரும்புனைவெண் முத்தரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின்காட்டுங் கடிபொழில்சூழ் கலயநல்லூர் காணே. **#164**

போர் செய்கின்ற வலிமையையுடைய அசுரனாகிய,'தாரகன்'என்பவனை போர் செய்து அழியச்செய்த

முதல்வனாகிய முருகனை முன்பு படைத்து, அவனைத் தன் மகனாக ரும்பிக்கொண்ட தூயவனும்,கரும்பினால் இயன்ற வில்லையும்,மலர்களால் இயன்ற அம்புகளையுடையவனாகிய மன்மதன் உடம்பு வெந்தொழியுமாறு நெருப்பாக நோக்க கண்ணையுடைய நெற்றியையுடையவனும் ஆகிய சிவபெருமான் தனக்கு இருப்பிடமாகக் கொள்ளும் ஊர் யாது?' என்று வினவினால், மிக்க நீரினது அலைகள் மேல் எழுந்துசென்று,'ஏலம்,இலவங்கம்'என்னும் மரங்களோடே இருகரைகளையும் மோதியழிக்கின்ற அரிசிலாற்றின் தென்கரையில்,பசிய புன்னை மரங்கள் வெள்ளிய முத்துக்களை அரும்பி,பொன்னை மலர்ந்து,பவளத்தினது அழகைக் காட்டுகின்ற நறுமனணச்சோலைகள் சூழ்ந்த திருக்கலயநல்லூரே;அறிக.

திருக்கலையநல்லூர்

தண்கமலப் பொய்கைபுடை சூழ்ந்தழகார் தலத்தில்
தடங்கொள்பெருங் கோயில்தனில் தக்கவகை யாலே
வண்கமலத் தயன்முன்னாள் வழிபாடு செய்ய
மகிழ்ந்தருளி இருந்தபரன் மருவியஊர் வினவில்
வெண்கவரி கரும்பீலி வேங்கையொடு கோங்கின்
விரைமலரும் விரவுபுனல் அரிசிலின்தென் கரைமேல்
கண்கமுகின் பூம்பாளை மதுவாசங் கலந்த
கமழ்தென்றல் புகுந்துலவு கலயநல்லூர் காணே. **#165**

குளிர்ச்சியை உடைய தாமரைக் குளங்கள் நாற்புரத்தும் சூழப்பெற்ற ஊரில், திரிக்குளத்தைக் கொண்ட பெருங்கோயிலின்கண் முறைப்படி,வளவிய தாமரை மலரில் இருக்கும் பிரமதேவன் முற்காலத்தில் வழிபாடு செய்ய, அதற்கு மகிழ்ச்சியுற்று இருந்த சிவபெருமான் எழுந்தருளியுள்ள ஊர் யாது?'என்ளு வினவினாள்,வெண்மையான கவரி மயிரும்,நீலமான மயில் இறகும்,வேங்கமரம்,கோங்கமரம் இவற்றினது வாசனை பொருந்திய மலர்கலும் கலந்து வருகின்ற நீரையுடைய அரிசிலாற்றின் தென்கரையில்,கணுக்களையுடைய கமுக மரத்தின் அழகிய பாளையில் வண்டுகள் சேர்த்த தேனினது வாசனையோடு கலந்த பல மணங்களை வீசும தென்ற ற் காற்றுப் புகுந்து உலாவுகின்ற திருக்கலயநல்லூரே;அறிக.

திருக்கலையநல்லூர்

தண்புனலும் வெண்மதியும் தாங்கியசெஞ் சடையன்
தாமரையோன் தலைகலனாக் காமரமுன் பாடி
உண்பலிகொண் டுழல்பரமன் உறையும்ஊர் நிறைநீர்

ஒழுகுபுனல் அரிசிலின்தென் கலயநல்லூர் அதனை
நண்புடைய நன்சடையன் இசைஞானி சிறுவன்
நாவலர்கோன் ஆரூரன் நாவின்நயந் துரைசெய்
பண்பயிலும் பத்தும் இவை பத்திசெய்து பாட
வல்லவர்கள் அல்லலொடு பாவம்இலர் தாமே. **#166**

குளிர்ந்த நீரையும், வெள்ளிய திங்களையும் தாங்கிய சடையை உடையவனும், பிரமதேவனது தலை ஓட்டினையே பாத்திரமாக ஏந்தி, முன்னதாக இசையைப் பாடிக்கொண்டு, உண்ணுகின்ற பிச்சைப் பொருள்களை ஏற்றுத் திரிகின்ற மேன்மையை உடையவனும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற ஊராகிய, நிறைந்த நீர் ஓடுகின்ற அரிசிலாற்றின் தென்கரையில் உள்ள திருக்கலயநல்லூரை, யாவரிடத்தும் நண்பாந் தன்மையையுடைய நல்லோராகிய சடையன், இசைஞானி என்பவர்க்கு மகனும், திருநாவலூருக்குத் தலைவனும் ஆகிய நம்பியாரூரன் விரும்பிப் பாடிய, இசை பொருந்திய பத்துப் பாடல்களாகிய இவற்றை அத்தலப் பெருமானிடத்து அன்பு செய்து நாள்தோறும் பாடவல்லவர்கள், துன்பமும், பாவமும் இலராவர்.

திருநாவலூர்

திருநாவலூர்

திருநாவலூர்,
பண் - நட்டராகம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நாவலீசுவரர்.
தேவியார் : சுந்தராம்பிகை.

கோவலன் நான்முகன் வானவர்
கோனுங்குற் றேவல்செய்ய
மேவலர் முப்புரம் தீயெழு
வித்தவர் ஓரம்பினால்
ஏவல னார்வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை ஆளுங்கொண்ட
நாவல னார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே. **#167**

ஓர் அம்பினாலே பகைவரது திரிபுரத்தில் தீ எழுமாறு செய்தவரும், அதனால், 'அம்பு எய்தலில் வல்லவர்' எனப் புகழத்தக்கவராயினாரும், என்னைத் திருவெண்ணெய்நல்லூரில் கொண்டு போய் நிறுத்தி அடிமையுங்கொண்ட வழக்கு வல்லவரும் ஆகிய இறைவருக்கு, 'திருமால், பிரமன், இந்திரன்' என்னும் இவரும் வந்து சிறிய பணி விடைகளைச் செய்யுமாறு இடமாய் இருப்பது, நமது திருநாவலூரே யாகும்.

திருநாவலூர்

தன்மையி னால்அடி யேனைத்தாம்
ஆட்கொண்ட நாட்சபைமுன்
வன்மைகள் பேசிட வன்றொண்டன்
என்பதோர் வாழ்வுதந்தார்
புன்மைகள் பேசவும் பொன்னைத்தந்
தென்னைப்போ கம்புணர்த்த
நன்மையி னார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே. **#168**

தமக்கு இயல்பாக உள்ள 'பேரருளுடைமை' என்னுங் குணத்தினால், என் பிழையைத் திருவுளங்கொள்ளாது, அடிமை என்பது ஒன்றையே கருதி, என்னைத் தாம் ஆட்கொள்ள வந்த அந்நாளின்கண் பலர் கூடியிருந்த சபை முன்பு தம்மைஎன் பேதைமையால் வசைச் சொற்கள் பல

சொல்லவும் அவற்றை இசைச் சொற்களாகவே மகிழ்ந்தேற்று எனக்கு, 'வன்றொண்டன்' என்பதொரு பதவியைத் தந்தவரும், பின்னரும் நான் கெழுதகைமையை அளவின்றிக்கொண்டு பல வசைப் பாடல்களைப் பாட அவற்றிற்கும் மகிழ்ந்து, எனக்கு வேண்டுமளவும் பொன்னைக் கொடுத்துப் போகத்தையும் இடையூறின்றி எய்துவித்த நன்றிச் செயலை உடையவரும் ஆகிய இறைவர்க்கு இடமாய் இருப்பது, நமது திருநாவலூரேயாகும்.

திருநாவலூர்

வேகங்கொண் டோடிய வெள்விடை
ஏறியோர் மெல்லியலை
ஆகங்கொண் டார்வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை ஆளுங்கொண்டார்
போகங்கொண் டார்கடற் கோடியின்
மோடியைப் பூண்பதாக
நாகங்கொண் டார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே. **#169**

விரைவைக் கொண்டு ஓடுகின்ற வெள்ளிய விடையை ஊர்பவரும், மெல்லிய இயல்பினை உடையாளாகிய மங்கை ஒருத்தியைத் திருமேனியிற் கொண்டவரும், என்னைத் திருவெண்ணெய்நல்லூரிற் கொண்டுபோய் நிறுத்தி அடிமையுங் கொண்டவரும், தென்கடல் முனையில் உள்ள கொற்றவையைக் கூடி இன்பங் கொண்டவரும், பாம்பை அணியும் பொருளாகக் கொண்டவரும் ஆகிய இறைவர்க்கு இடமாய் இருப்பது, நமது திருநாவலூரேயாகும்.

திருநாவலூர்

அஞ்சுங்கொண் டாடுவர் ஆவினிற்
சேவினை ஆட்சிகொண்டார்
தஞ்சங்கொண் டார்அடிச் சண்டியைத்
தாமென வைத்துகந்தார்
நெஞ்சங்கொண் டார்வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை ஆளுங்கொண்டு
நஞ்சங்கொண் டார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே. **#170**

ஆனிடத்துத் தோன்றுகின்ற ஐந்து பொருள்களை ஆடுதல் செய்பவரும், ஆனேற்றையே ஆளப்படும் பொருளாகக் கொண்டவரும், தம் அடியை யடைந்த சண்டேசுவர நாயனாரை அடைக்கலப் பொருளாகக் கொண்டு அவரைத் தம்மோடு ஒப்ப வைத்து மகிழ்ந்தவரும், என்னைத்

திருவெண்ணெய்நல்லூரிற் கொண்டுபோய் நிறுத்தி அடிமையும் கொண்டு, என் நெஞ்சத்தை ஈர்த்துக்கொண்டவரும், நஞ்சத்தை உண்டவருமாகிய இறைவர்க்கு இடமாய் இருப்பது, நமது திருநாவலூரேயாகும்.

திருநாவலூர்

உம்பரார் கோனைத்திண் தோள்முரித்
தார்உரித் தார்களிற்றைச்
செம்பொனார் தீவண்ணர் தூவண்ண
நீற்றர்ஓர் ஆவணத்தால்
எம்பிரா னார்வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை ஆளுங்கொண்ட
நம்பிரா னார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே. **#171**

தேவர்கட்கு அரசனாகிய இந்திரனைத் தோள் முரித்தவரும், யானையை உரித்தவரும், சிவந்த பொன்போல்வதும், நெருப்புப்போல்வதும் ஆகிய நிறத்தை உடையவரும், வெள்ளிய நிறத்தையுடைய நீற்றை அணிந்தவரும் என்போலும் அடியவர்கட்குத் தலைவரும், ஓர் ஆவணத்தினால் என்னைத் திருவெண்ணெய் நல்லூரில் கொண்டுபோய் நிறுத்தி அடிமையும் கொண்ட, நம் அனைவர்க்கும் தலைவரும் ஆகிய இறைவருக்கு இடமாயிருப்பது, நமது திருநாவலூரேயாகும்.

திருநாவலூர்

கோட்டங்கொண் டார்குட மூக்கிலுங்
கோவலுங் கோத்திட்டையும்
வேட்டங்கொண் டார்வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை ஆளுங்கொண்டார்
ஆட்டங்கொண் டார்தில்லைச் சிற்றம்
பலத்தே அருக்கனைமுன்
நாட்டங்கொண் டார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே. **#172**

திருக்குடமூக்கில் (கும்பகோணம்) திருக்கோவலூர், திருப்பரங்குன்றம் இத்தலங்களைக் கோயிலாகக் கொண்டவரும், வேட உருவம் கொண்டு வேட்டையை மேற்கொண்டவரும், என்னைத் திருவெண்ணெய்நல்லூரில் கொண்டுபோய் நிறுத்தி அடிமையும் கொண்டவரும், தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் நடனமாடுதலை மேற்கொண்டவரும், சூரியனை ('பகன்' என்பவனை)க் கண் பறித்தவரும் ஆகிய இறைவர்க்கு இடமாய் இருப்பது நமது திருநாவலூரேயாகும்.

திருநாவலூர்

தாயவ ளாய்த்தந்தை ஆகிச்
சாதல் பிறத்தலின்றிப்
போயக லாமைத்தன் பொன்னடிக்
கென்னைப் பொருந்தவைத்த
வேயவ னார்வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை ஆளுங்கொண்ட
நாயக னார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே. **#173**

எனக்குத் தாயாகியும், தந்தையாகியும் இறத்தல் பிறத்தல்கள் இல்லாதவாறு என்னைத் தமது பொன்போலும் திருவடிக்கண் அகலாதபடி இருக்க வைத்த, மூங்கில் இடத்தவரும், என்னைத் திருவெண்ணெய்நல்லூரில் கொண்டு போய் நிறுத்தி அடிமையும் கொண்ட தலைவரும் ஆகிய இறைவருக்கு இடமாயிருப்பது, நமது திருநாவலூரேயாகும்.

திருநாவலூர்

வாயாடி மாமறை ஓதிஓர்
வேதிய னாகிவந்து
தீயாடி யார்சினக் கேழலின்
பின்சென்றோர் வேடுவனாய்
வேயாடி யார்வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை ஆளுங்கொண்ட
நாயாடி யார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே. **#174**

தீயின்கண் நின்று ஆடுபவரும், சினம் பொருந்திய ஒரு பன்றியின் பின் வேடுவராய்ச் சென்று வில்தொழிலைப் புரிந்தவரும், பெருமை பொருந்திய வேதத்தை ஓதிக்கொண்டு வேதிய வடிவாய் வந்து சொல்லாடி என்னைத் திருவெண்ணெய்நல்லூரில் கொண்டுபோய் நிறுத்தி அடிமையும் கொண்ட தலைவராகிய இறைவருக்கு இடமாயிருப்பது, நமது திருநாவலூரேயாகும்.

திருநாவலூர்

படமாடு பாம்பணை யானுக்கும்
பாவைநல் லாள்தனக்கும்
வடமாடு மால்விடை ஏற்றுக்கும்
பாகனாய் வந்தொருநாள்

இடமாடி யார்வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை ஆளுங்கொண்ட
நடமாடி யார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே. **#175**

படமாடுகின்ற, பாம்பாகிய படுக்கையையுடைய திருமாலுக்கும், பாவைபோலும் நல்லாளாகிய உமாதேவிக்கும், மணிவடம் அசைகின்ற ஆனேற்றுக்கும், 'பாகன்' எனப்படும் தன்மையுடையவராய், ஒருநாள் என்னிடம் வந்து, தம் இடமாக ஆளப்பட்டுப் பொருந்தியுள்ள திருவெண்ணெய் நல்லூரில் என்னைக் கொண்டு போய் நிறுத்தி அடிமையும் கொண்ட, நடனமாடும் பெருமானாராகிய இறைவற்கு இடமாயிருப்பது, நமது திருநாவலூரேயாகும்.

<u>திருநாவலூர்</u>

மிடுக்குண்டென் றோடியோர் வெற்பெடுத்
தான்வலி யைநெரித்தார்
அடக்கங்கொண் டாவணங் காட்டிநல்
வெண்ணெயூர் ஆளுங்கொண்டார்
தடுக்கஒண் ணாததோர் வேழத்
தினையுரித் திட்டுமையை
நடுக்கங்கண் டார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே. **#176**

தனக்கு வலிமை உண்டு என்று செருக்கி விரைந்து சென்று தமது கயிலை மலையைப் பெயர்த்தவனாகிய இராவணனது வலிமையை நெரித்து அழித்தவரும், மூல ஆவணத்தை மறைவாக வைத்திருந்து அதனை நடுவுநிலையாளர் உள்ள திருவெண்ணெய் நல்லூரில் காட்டி என்னை அடிமையும் கொண்டவரும், தடுக்க வொண்ணாத வலிமையுடைய யானை ஒன்றினை உரித்து, உமையையும் நடுங்கச் செய்தவருமாகிய இறைவற்கு இடமாயிருப்பது நமது திருநாவலூரேயாகும்.

<u>திருநாவலூர்</u>

நாதனுக் கூர்நமக் கூர்நர
சிங்க முனையரையன்
ஆதரித் தீசனுக் காட்செயும்
ஊர்அணி நாவலூர்என்
றோதநற் றக்கவன் றொண்டன்ஆ
ரூரன் உரைத்ததமிழ்
காதலித் துங்கற்றுங் கேட்பவர்

தம்வினை கட்டறுமே. #177
முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுக்குரிய ஊரும், நமக்கு உரிய ஊரும், நரசிங்கமுனையரையன் அப்பெருமானுக்கு, விரும்பித் தொண்டு செய்யும் ஊரும் அழகிய திருநாவலூரே என்று அனைவரும் உணர்ந்து பாடுமாறு, நல்ல தகுதியை உடையவனும், 'வன்றொண்டன்' என்னும் பெயரைப் பெற்றவனுமாகிய நம்பியாரூரன் பாடிய இத் தமிழ்ப்பாடலை விரும்பியும், கற்றும் கேட்பவரது வினைகள் வலியற்று ஒழியும்.

திருவேள்விக்குடி

திருவேள்விக்குடி

திருவேள்விக்குடி,
பண் - நட்டராகம்

மூப்பதும் இல்லை பிறப்பதும்
இல்லை இறப்பதில்லை
சேர்ப்பது காட்டகத் தூரினு
மாகச்சிந் திக்கினல்லால்
காப்பது வேள்விக் குடிதண்
துருத்திஎங் கோன்அரைமேல்
ஆர்ப்பது நாகம் அறிந்தோமேல்
நாம்இவர்க் காட்படோமே. **#178**

ஆராயுங்கால் எங்கள் தலைவர், பிறத்தலும் இல்லை; பின்பு வளர்ந்து முதுமை அடைதலும் இல்லை; முடிவில் இறந்தொழிதலுமில்லை; உறைவிடம் காட்டிடத்துள்ளது; அதுவன்றி ஊர்களுள் தமக்கு உரித்தாகக் காப்பது திருவேள்விக்குடியும், தண்ணிய திருத்துருத்தியும், அன்றியும் அரைக்கண் இறுகக் கட்டுவது பாம்பு; இவற்றை முன்பே அறிந்தோமாயின், இவர்க்கு நாம் ஆட்படா தேயிருப்பேம். இவற்றை அறிந்தோமாயின், இவர்க்கு நாம் ஆட்படா தொழிவேமோ!

திருவேள்விக்குடி

கட்டக்காட் டின்னட மாடுவ
ரியாவர்க்கும் காட்சியொண்ணார்
சுட்டவெண் ணீறணிந் தாடுவர்
பாடுவர் தூயநெய்யால்
வட்டக்குண் டத்தில் எரிவளர்த்
தோம்பி மறைபயில்வார்
அட்டக்கொண் டுண்ப தறிந்தோமேல்
நாம்இவர்க் காட்படோமே. **#179**

எங்கள் தலைவர். இடரைத் தரும் காட்டிலே நடனம் ஆடுவார்; யாராலும் காண்பதற்கு அரியவர். சுடப்பட்ட வெள்ளிய சாம்பலைப் பூசிக்கொண்டு மகிழ்ச்சியாக ஆடல் பாடல்களைச் செய்வார்; வேதத்தைப் பலகாலும் பயில்கின்றவர்களாகிய அந்தணர்கள், வட்டமாகிய குழியில், தூயதாகிய நெய்யினால் எரியை வளர்த்துப் போற்றி, அதன்கண் பாகம் செய்த பொருள்களை ஏற்று உண்பார்; இவற்றையெல்லாம் அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே!

திருவேள்விக்குடி

பேருமோர் ஆயிரம் பேருடை
யார்பெண்ணோ டாணுமல்லர்
ஊரும தொற்றியூர் மற்றையூ
பெற்றவா நாமறியோம்
காருங் கருங்கடல் நஞ்சமு
துண்டுகண் டங்கறுத்தார்க்
காரம்பாம் பாவ தறிந்தோமேல்
நாம் இவர்க் காட்படோமே. **#180**

எங்கள் தலைவர். பெயரும் தமக்குரியனவாக ஆயிரம் உடையவர்; இவர் பெண்ணும் அல்லர்; ஆணும் அல்லர்; இவர்க்கு ஊரும் ஒற்றிஊரே; அதுவன்றி வேறோர் ஊரை உடையராதலை நாம் அறிந்திலோம்; இருண்ட கரிய கடலில் தோன்றிய நஞ்சினை உணவாக உண்டு. கண்டம் கறுப்பாயினார்; இவர்க்கு ஆரமாவது, பாம்பே; இவற்றையெல்லாம் அறிந்தோமேல், நாம் இவர்க்கு ஆட்படோமே!

திருவேள்விக்குடி

ஏனக்கொம் பும்மிள வாமையும்
பூண்டங்கோர் ஏறுமேறிக்
கானக்காட் டிற்றொண்டர் கண்டன
சொல்லியுங் காமுறவே
மானைத்தோல் ஒன்றுடுத் துப்புலித்
தோஒல் பியற்குமிட்டி
யானைத்தோல் போர்ப்ப தறிந்தோமேல்
நாம்இவர்க் காட்படோமே. **#181**

எங்கள் தலைவர் பன்றியின் கொம்பையும், இளமையான ஆமையின் ஓட்டினையும் அணிந்து, ஒற்றை எருதின்மேல் ஏறுபவராய், தம்மை அடியார்கள் காட்டில் கண்ட கோலங்களையெல்லாம் பலபடியாக எடுத்துச் சொல்லிய பின்பும், விருப்பம் உண்டாக, மானினது அழகிய தோல் ஒன்றை அரையில் உடுத்து, தோளின் கண்ணும் புலித்தோலை இட்டு, உடம்பின் மேல் யானைத் தோலைப் போர்த்துக் கொள்பவர். இவற்றையெல்லாம் அறிந்தோமேல், நாம் இவர்க்கு ஆட்படோமே!

திருவேள்விக்குடி

ஊட்டிக்கொண் டுண்பதோர் ஊணிலர்
ஊரிடு பிச்சையல்லால்
பூட்டிக்கொண் டேற்றினை ஏறுவர்

ஏறியொர் பூதந்தம்பால்
பாட்டிக்கொண் டுண்பவர் பாழிதொ
றும்பல பாம்புபற்றி
ஆட்டிக்கொண் டுண்ப தறிந்தோமேல்
நாம்இவர்க் காட்படோமே. **#182**

எங்கள் தலைவர் நாவிற்குச் சுவைகள் பலவற்றை ஊட்டி உண்பதற்கு, ஊரவர் இடுகின்ற பிச்சையையன்றி மற்றோர் உணவையும் இலர். ஒற்றை எருதைக் கயிற்றிற் கட்டி வைத்துக் கொண்டு, அதன் மேல் ஏறிச் செல்வர். சிறிய பூதங்கள் தம்மிடத்தில் பாட்டு ஈதலைக் கேட்டு நின்று இன்பம் நுகர்பவராவர். புற்றுக்கள் தோறும் சென்று பல பாம்புகளைப் பிடித்து ஆட்டிப் பிழைப்பர். இவற்றையெல்லாம் அறிந்தோமேல், நாம் இவர்க்கு ஆட்படோமே!

திருவேள்விக்குடி

குறவனார் தம்மகள் தம்மக
னார்மண வாட்டிகொல்லை
மறவனா ராய்அங்கோர் பன்றிப்பின்
போவது மாயங்கண்டீர்
இறைவனார் ஆதியார் சோதியா
ராய்அங்கோர் சோர்வுபடா
அறவனா ராவ தறிந்தோமேல்
நாம்இவர்க் காட்படோமே. **#183**

எங்கள் தலைவர்தம் புதல்வர்க்கு மனைவி, ஒரு குறவர் மகள்; இவரும் கொல்லும் தொழிலையுடைய வேடுவராய் முன்பு ஒரு பன்றிப்பின் சென்றார்; இவை மாயமாம். இவர் இப் பெற்றியரான இறைவரும், முன்னவரும், ஒளி வடிவினரும், அறவரும் ஆவதை அறிந்தோமேல், நாம் இவர்க்கு ஆட்படோமே!

திருவேள்விக்குடி

பித்தரை ஒத்தொரு பெற்றியர்
நற்றவை என்னைப்பெற்ற
முற்றவை தம்மனை தந்தைக்குந்
தவ்வைக்குந் தம்பிரானார்
செத்தவர் தந்தலை யிற்பலி
கொள்வதே செல்வமாகி
அத்தவ மாவ தறிந்தோமேல்
நாம்இவர்க் காட்படோமே. **#184**

என்னைப் பெற்ற நற்றாயும், வயது முதிர்ந்த அவள் தாயும், இவ்

விருவர்க்கும் அன்னை, தந்தை, தமக்கை என்பவரும் ஆகிய எல்லோர்க்கும் இறைவராய் உள்ள இவர். பித்தரைப் போன்ற ஒரு தன்மை உடையராய் இருக்கின்றார்; அன்றியும், இறந்தவர் தலையோட்டில் பிச்சை ஏற்பதே செல்வமாக, அன்னதொரு தவமுடையராதலை அறிந்தோமேல், நாம் இவர்க்கு ஆட்படோமே!

திருவேள்விக்குடி

உம்பரான் ஊழியான் ஆழியான்
ஓங்கி மலர் உறைவான்
தம்பர மல்லவர் சிந்திப்
பவர்தடு மாற்றறுப்பார்
எம்பர மல்லவர் என்னெஞ்சத்
துள்ளும் இருப்பதாகி
அம்பர மாவ தறிந்தோமேல்
நாம்இவர்க் காட்படோமே. **#185**

'இந்திரன், உருத்திரன், மால், அயன், என்னும் இவர்கள் அளவில் உள்ளரல்லர் என்றும், 'தம்மை நினைப்பவரது மனக்கவலையைப் போக்குபவர் எம்மளவல்லவர்' என்றும் சொல்லப்படுகின்ற இவர், என் மனத்திலும் இருத்தலுடையவராய் வேறு வெளியாதலை அறிந்தோமேல், நாம் இவர்க்கு ஆட்படோமே!

திருவேள்விக்குடி

இந்திர னுக்கும் இராவண
னுக்கும் அருள்புரிந்தார்
மந்திரம் ஓதுவர் மாமறை
பாடுவர் மான்மறியர்
சிந்துரக் கண்ணனும் நான்முக
னும்முட னாய்த்தனியே
அந்தரஞ் செல்வ தறிந்தோமேல்
நாம்இவர்க் காட்படோமே. **#186**

எங்கள் தலைவர் தேவர் கோமானாகிய இந்திரனுக்கும், அரக்கர் கோமானாகிய இராவணனுக்கும் அருள் புரிந்தார். அந்தணர்க்குரிய மந்திரம் ஓதுதல், மறைபாடுதல் என்பவற்றையும், வேடர்க்குரிய மான் கன்றைப் பிடித்தலையும் உடையவர். 'மால், அயன்' என்னும் இருவரும் உடனாயிருப்ப, அவரொடு நிற்றலேயன்றி, தாம் மட்டும் தனியே உயர்ந்தும் செல்வர். இவற்றையெல்லாம் அறிந்தோமேல், நாம் இவர்க்கு ஆட்படோமே!

<u>திருவேள்விக்குடி</u>

கூடலர் மன்னன் குலநாவ
லூர்க்கோன் நலத்தமிழைப்
பாடவல் லபர மன்னடி
யார்க்கடி மைவழுவா
நாடவல் லதொண்டன் ஆரூரன்
ஆட்படு மாறுசொல்லிப்
பாடவல் லார்பர லோகத்
திருப்பது பண்டமன்றே. **#187**

பகைவர்க்கு அவர் வணங்கும் அரசனும், மேன்மை பொருந்திய திருநாவலூர்க்குத் தலைவனும், நன்மையையுடைய தமிழைப் பாடவல்ல சிவனடியார்க்கு அடிமை வழுவாது செய்யுமாற்றால் அப்பெருமானை அடைய எண்ணுகின்றவனும் ஆகிய நம்பியாரூரன், தன் தலைவனுக்கு ஆட்படுதல் இவ்வாறெனச் சொல்லி இப்பதிகத்தைப் பாடவல்லவர், மேலான உலகத்தில் சென்று தங்குதல் பொருளன்று. (மிக எளிதாம்)

திருநின்றியூர்

திருநின்றியூர்

திருநின்றியூர்,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மகாலட்சுமியீசுவரர்.
தேவியார் : உலகநாயகியம்மை.

அற்றவ னாரடி யார்தமக்
காயிழை பங்கினராம்
பற்றவ னாரெம் பராபரர் என்று
பலர்விரும்பும்
கொற்றவ னார்குறு காதவர்
ஊர்நெடு வெஞ்சரத்தால்
செற்றவ னார்க்கிட மாவது
நந்திரு நின்றியூரே. #188

பிற பற்றுக்களின்றித் தம் அடியையே பற்றும் அரிய அடியவர்க்குத் தாமும் அவர்க்கு அருளுதலையன்றி வேறு செயலற்றவராய் இருப்பவரும், பெண்ணொரு பாகத்தராகின்ற பற்றினை உடையவரும், 'எம் இறைவர்' என்று பலராலும் விரும்பப்படுகின்ற தலைவரும், பகைவருடைய ஊரினை, பெரிய, கொடிய அம்பினால் அழித்தவரும் ஆகிய இறைவருக்கு இடமாய் நிற்பது நமது திருநின்றியூரே.

திருநின்றியூர்

வாசத்தி னார்மலர்க் கொன்றையுள்
ளார்வடி வார்ந்தநீறு
பூசத்தி னார்புக லிந்நகர் போற்றும்எம்
புண்ணியத்தார்
நேசத்தி னால்என்னை ஆளுங்கொண்
டார்நெடு மாகடல்சூழ்
தேசத்தி னார்க்கிட மாவது
நந்திரு நின்றியூரே. #189

மணம் நிறைந்த கொன்றை மாலையை அணிந்தவரும், அழகிய திருநீற்றைப் பூசுதலுடையவரும், சீகாழிப் பதியை உறைவிடமாகக் கொண்டு பாதுகாக்கின்ற புண்ணிய வடிவினரும், அருள் காரணமாக என்னை ஆளாகவும் கொண்டவரும், நீண்ட பெரிய கடல் சூழ்ந்த உலகத்தை உடையவரும் ஆகிய இறைவருக்கு இடமாய் நிற்பது, நமது

திருநின்றியூரே.

திருநின்றியூர்

அங்கையின் மூவிலை வேலர்
அமரர் அடிபரவச்
சங்கையை நீங்க அருளித்
தடங்கடல் நஞ்சமுண்டார்
மங்கையொர் பாகர் மகிழ்ந்த
இடம்வளம் மல்குபுனற்
செங்கயல் பாயும் வயல்பொலி
யுந்திரு நின்றியூரே. **#190**

அகங் கையில் மூவிலை வேலை (சூலத்தை) உடையவரும், தேவர்கள் தம் திருவடிகளைத் துதிக்க, அவர்கள் தம் மனக்கலக்கத்தை நீங்குமாறு அருள் சுரந்து, பெரிய கடலினின்றும் தோன்றிய நஞ்சினை உண்டவரும் ஆகிய இறைவர், உமாதேவியை ஒரு பாகத்தில் மகிழ்ச்சியுடன் வைத்து எழுந்தருளியிருக்கின்ற இடம், வளப்பம் நிறைந்த மிக்க நீரின் கண் செவ்விய கயல்கள் துள்ளுகின்ற வயல்கள் விளங்கும் திருநின்றியூரே.

திருநின்றியூர்

ஆறுகந் தார்அங்கம் நான்மறை
யார்எங்கு மாகிஅடல்
ஏறுகந் தார்இசை ஏழுகந் தார்முடிக்
கங்கைதன்னை
வேறுகந் தார்விரி நூலுகந்
தார்பரி சாந்தமதா
நீறுகந் தார்உறை யும்மிட
மாந்திரு நின்றியூரே. **#191**

வேதத்தின் ஆறு அங்கங்களை விரும்பிச் செய்தவரும், நான்கு வேதங்களையும் உடையவரும், எவ்விடத்தும் நிறைந்து நின்று, வெல்லுதலை உடைய எருதை விரும்பி ஏறுபவரும், ஏழிசைகளையும் விரும்பிக் கேட்பவரும், கங்காதேவியைச் சிறப்பாக விரும்பித் தலையில் மறைத்து வைத்திருப்பவரும், அகன்ற முப்புரி நூலை விரும்பி அணிபவரும், பூசிக்கொள்கின்ற சாந்தமாக திருநீற்றை விரும்புகின்ற வரும் ஆகிய இறைவர் எழுந்தருளியிருக்கின்ற இடம் திருநின்றியூரே.

திருநின்றியூர்

வஞ்சங்கொண் டார்மனஞ் சேரகில்
லார்நறு நெய்தயிர்பால்

அஞ்சுங்கொண் டாடிய வேட்கையி
னார்அதி கைப்பதியே
தஞ்சங்கொண்டார்தமக் கென்றும்
இருக்கை சரணடைந்தார்
நெஞ்சங்கொண் டார்க்கிட மாவது
நந்திரு நின்றியூரே. **#192**

வஞ்சனையை உடையவரது மனத்திற் சேராதவரும், 'நறுநெய், தயிர், பால்' முதலிய ஆனஞ்சினை ஈட்டிக் கொண்டு முழுகுகின்ற பெருவிருப்புடையவரும், திருவதிகைப் பதியினையே தமக்கு என்றும் இருக்கையாகும்படி அதனைத் தஞ்சமாகக் கொண்டவரும், தம்மையே புகலிடமாக அடைந்தவரது உள்ளத்தைக் காணியாகக் கொண்டவரும் ஆகிய இறைவர்க்கு இடமாய் நிற்பது, நமது திருநின்றியூரே.

திருநின்றியூர்

ஆர்த்தவர் ஆடர வம்மரை
மேற்புலி ஈருரிவை
போர்த்தவர் ஆனையின் தோலுடல்
வெம்புலால் கையகலப்
பார்த்தவர் இன்னுயிர் பார்படைத் தான்சிரம்
அஞ்சிலொன்றைச்
சேர்த்தவ ருக்குறை யும்மிட
மாந்திரு நின்றியூரே. **#193**

அரையில் புலியினது பசுந்தோலையும், ஆடுகின்ற பாம்பையும் கட்டியவரும், உடம்பில் யானையின் தோலைப் போர்த்தவரும், அவற்றால் தம்மிடத்துத் தீய புலால் நாற்றம் வீசாதவாறு செய்து கொண்டவரும், பூமியில் இனிய உயிர்களைப் படைத்தவனாகிய பிரம தேவனது தலைகள் ஐந்தில் ஒன்றைத் தம் கையில் வைத்துக்கொண்டவரும் ஆகிய இறைவருக்கு இடம் திருநின்றியூரேயாகும்.

திருநின்றியூர்

தலையிடை யார்பலி சென்றகந் தோறுந்
திரிந்தசெல்வர்
மலையுடை யாள்ஒரு பாகம்வைத்
தார்கற் றுதைந்தநன்னீர்
அலையுடை யார்சடை எட்டுஞ்
சுழல அருநடஞ்செய்
நிலையுடை யார்உறை யும்மிட

மாந்திரு நின்றியூரே. **#194**
தலை ஓட்டிற் பொருந்துகின்ற பிச்சைக்குச் சென்று இல்லங்கள் தோறும் திரிகின்ற தன்மையை உடையசெல்வரும், மலையைப் பிறந்த இடமாக உடையவளை ஒருபாகத்தில் வைத்தவரும், மலையின்கண் நிறைந்து வீழ்கின்ற நல்ல நீரினது அலையை உடைய நிறைந்த சடைகள் எட்டும் எட்டுத் திசைகளிலும் சுழலுமாறு அரிய நடனத்தைச் செய்கின்ற நிலையினை உடையவரும் ஆகிய இறைவர் எழுந்தருளியிருக்கின்ற இடம் திருநின்றியூரேயாம்.

<u>திருநின்றியூர்</u>

எட்டுகந் தார்திசை யேழுகந்
தார்எழுத் தாறுமன்பர்
இட்டுகந் தார்மலர்ப் பூசைஇச் சிக்கும்
இறைவர்முன்னாள்
பட்டுகும் பாரிடைக் காலனைக்
காய்ந்து பலியிரந்தூண்
சிட்டுகந் தார்க்கிட மாவது
நந்திரு நின்றியூரே. **#195**
திசைகள் எட்டினையும், ஏழ் எழுத்துக்களால் தோற்றுவிக்கப்படும் இசைகள் ஏழினையும், மனம் அடங்கப்பெற்ற அன்பர்கள் விரும்பியிடுதலால் நிறைந்த மலர்களையுடைய வழி பாட்டினையும் முன்னொருநாள் நிலத்தின்கண் இறந்து வீழ்ந்த கூற்றுவனை அவன் அங்ஙனம் ஆமாறு வெகுண்டமையோடு, பிச்சையேற்று உண்ணுதலை உடைய ஒழுக்கத்தினையும் விரும்புகின்றவராகிய இறைவருக்கு இடமாய் நிற்பது, நமது திருநின்றியூரே.

<u>திருநின்றியூர்</u>

காலமும் ஞாயிறு மாகிநின்
றார்கழல் பேணவல்லார்
சீலமுஞ் செய்கையுங் கண்டுகப்
பார்அடி போற்றிசைப்ப
மாலொடு நான்முகன் இந்திரன்
மந்திரத் தால்வணங்க
நீலநஞ் சுண்டவ ருக்கிட
மாந்திரு நின்றியூரே. **#196**
காலமும், அதனைப் பகுக்கின்ற கதிரவனும் ஆகி நிற்பவரும், தமது திருவடியையே அன்போடு பற்றவல்ல அடியவர்களது நோன்பினையும், செயல்களையும் கண்டு அவர்களை விரும்புகின்றவரும், நீலநிறம்

பொருந்திய நஞ்சினை உண்டவருமாகிய இறைவர்க்கு, அவரது திருவடிகளை அவ்வடியவர்கள் துதி செய்யவும் 'திருமால், பிரமன், இந்திரன்' முதலியோர் மந்திரம் சொல்லி வணங்கவும், திருநின்றியூரே இடமாய் நிற்கும்.

திருநின்றியூர்

வாயார் மனத்தால் நினைக்கு
மவருக் கருந்தவத்தில்
தூயார் சுடுபொடி ஆடிய மேனியர்
வானில்என்றும்
மேயார் விடையுகந் தேறிய
வித்தகர் பேர்ந்தவர்க்குச்
சேயார் அடியார்க் கணியவர்
ஊர்திரு நின்றியூரே. **#197**

வாயார வாழ்த்தி, மனத்தால் எப்பொழுதும் மறவாது நினைப்பவர்க்கு உண்மைப் பொருளாகின்றவரும், அரியதவக் கோலத்தை உடைய தூயவரும், வெந்த சாம்பலில் மூழ்கிய திருமேனியை உடையவரும் என்றும் பரவெளியிலே இருப்பவரும், இடபத்தை விரும்பி ஏறும் சதுரப்பாட்டினை உடையவரும், தம்மை அடையாதவருக்குச் சேய்மைக் கண்ணராகின்றவரும் ஆகிய இறைவரது ஊர் திருநின்றியூரே.

திருநின்றியூர்

சேரும் புகழ்த்தொண்டர் செய்கை
யறாத்திரு நின்றியூரிற
சீருஞ் சிவகதி யாய்இருந
தானைத் திருநாவல்ஆ
ரூரன் உரைத்த உறுதமிழ் பத்தும்வல்
லார்வினைபோய்ப்
பாரும் விசும்புந் தொழப்பர
மன்னடி கூடுவரே. **#198**

திரண்ட புகழையுடைய அடியார்களது தொண்டுகள் எந்நாளும் நீங்காதிருக்கின்ற திருநின்றியூரின் கண் சிறந்த வீடுபேறாய் எழுந்தருளியிருக்கின்ற இறைவனைத் திருநாவலூரினனாகிய நம்பியாரூரன் பாடிய, பொருத்தமான இத்தமிழ்ப் பாடல்கள் பத்தினையும் பாட வல்லவர், வினை நீங்கப் பெற்று, மண்ணுலகத்தவரும், விண்ணுலகத்தவரும் வணங்கும் படி, சிவபெருமானது திருவடியை அடைவார்கள்.

திருக்கோளிலி

திருக்கோளிலி

திருக்கோளிலி,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கோளிலிநாதர்.
தேவியார் : வண்டமர்பூங்குழலம்மை.

நீள நினைந்தடியேன் உனை
நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள
வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை
யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை
அட்டித் தரப்பணியே. #199 ★★★★★

திருக்கோளிலியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே, வாள்போலுங் கண்களையுடைய மடவாளாகிய என் இல்லாள் தனது வாழ்க்கையை நடத்த இயலாமை கருதிமெலிந்து வருந்தாதபடி குண்டையூரிலே சில நெல்லுப் பெற்றேன். அவைகளை அவள்பாற் சேர்ப்பிக்க எனக்கு ஆளில்லை; அடியேன், எஞ்ஞான்றும் உன்னையே நினைத்து நாள்தோறும் வணங்குந் தொழிலை உடையேன்; வேறு யாரை வேண்டுவேன்! அவைகளை அங்குச் சேர்ப்பித்து உதவ, நீ, எவர்க்கேனும் கட்டளையிட்டருள்.

திருக்கோளிலி

வண்டம ருங்குழலாள் உமை
நங்கைஓர் பங்குடையாய்
விண்டவர் தம்புரமூன் றெரி
செய்தஎம் வேதியனே
தெண்டிரை நீர்வயல்சூழ் திருக்
கோளிலி எம்பெருமான்
அண்டம தாயவனே அவை
அட்டித் தரப்பணியே. #200

வண்டுகள் விரும்பும் கூந்தலையுடையவளாகி, 'உமை' என்னும் நங்கையை ஒருபாகத்தில் உடையவனே, பகைமை கொண்டவர்களது முப்புரத்தை எத்த எங்கள் அந்தணனே, தெளந்த அலைகளையுடைய

நீரையுடைய வயல்கள் சூழ்ந்த திருக்கோளிலியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே, உலகெலாம் ஆகியவனே, அடியேன் குண்டையூரிலே சில நெல்லுப் பெற்றேன்; அவைகளை என் இல்லத்தில் சேர்ப்பிக்க எனக்கு ஆள் இல்லை; ஆதலின், அவைகளை அங்குச் சேர்ப்பித்து உதவ, நீ, எவர்க்கேனும் கட்டளை யிட்டருள்.

திருக்கோளிலி

பாதிஓர் பெண்ணைவைத்தாய் பட
ருஞ்சடைக் கங்கை வைத்தாய்
மாதர்நல் லார்வருத்தம் மது
நீயும் அறிதியன்றே
கோதில் பொழில்புடைசூழ் குண்டை
யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆதியே அற்புதனே அவை
அட்டித் தரப்பணியே. **#201**

திருக்கோளிலியில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானே, எல்லார்க்கும் முன்னவனே, யாவர்க்கும் மருட்கையைத் தரத்தக்க செயல்களைச் செய்ய வல்லவனே, நீ, உன் திருமேனியில் பாதியிற்றானே, 'உமை' என்னும் ஒரு மாதராளை வைத்தாய்; அதுவன்றி, விரிந்த சடையின்கண், 'கங்கை' என்னும் மற்றொரு மாதராளையும் வைத்தாய்; ஆதலின், நீயும் நற்பண்புடைய பெண்டிர் தம் வாழ்க்கை முட்டுற்றவிடத்து அடையும் வருத்தத்தினது தன்மையை நன்குணர்வாயன்றே? அதனால் உன்னை வேண்டுகின்றேன்; அடியேன் குற்றம் இல்லாத சோலைகள் புடைசூழ்ந்த குண்டையூரிற் சில நெல்லுப் பெற்றேன்; அவைகளை என் இல்லத்திற் சேர்ப்பிக்க எனக்கு ஆள் இல்லை; அவைகளை அங்குச் சேர்ப்பித்து உதவ, நீ எவர்க்கேனும் கட்டளையிட்டருள்.

திருக்கோளிலி

சொல்லுவ தென்உனைநான் தொண்டை
வாய்உமை நங்கையைநீ
புல்கி இடத்தில்வைத்தாய்க் கொரு
பூசல்செய் தார்உளரோ
கொல்லை வளம்புறவிற் குண்டை
யூர்ச்சில நெல்லுப் பெற்றேன
அல்லல் களைந்தடியேற் கவை
அட்டித் தரப்பணியே. **#202**

திருக்கோளிலியில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானே, உன்னிடம்

நான் எடுத்துச் சொல்ல வேண்டுவது என் உளது? நீ, கொவ்வைக்கனிபோலும் வாயினையுடைய, 'உமை' என்னும் நங்கையை முன்பு மணந்து, பின்பு இடப்பாகத்திலே வைத்தாய்; அது காரணமாக உன்னை ஒரு தூற்றுதல் செய்தார் எவரேனும் உளரோ? இல்லை ஆதலின், எனக்கு நீ என் இல்வாழ்க்கைக்கு உரியதனைச் செய்தாலும் உன்னைத் தூற்றுவார் ஒருவரும் இல்லை. அடியேன், சில நெற்களை, கொல்லையின் வளங்களையுடைய முல்லை நிலம் சூழ்ந்த குண்டையூரிற் பெற்றேன்; அவைகளை என் இல்லத்திற் சேர்ப்பிக்க எனக்கு ஆள் இல்லை; அடியேனுக்கு அந்த அல்லலை நீக்கி, அவற்றை அங்குச் சேர்த்து உதவ, நீ, எவர்க்கேனும் கட்டளையிட்டருள்.

திருக்கோளிலி

முல்லை முறுவலுமை ஒரு
பங்குடை முக்கணனே
பல்லயர் வெண்டலையிற் பலி
கொண்டுழல் பாசுபதா
கொல்லை வளம்புறவிற் றிருக்
கோளிலி எம்பெருமான்
அல்லல் களைந்தடியேற் கவை
அட்டித் தரப்பணியே. **#203**

முல்லையரும்புபோலும் பற்களையுடைய உமையவளை ஒரு பாகத்தில் உடைய முக்கட் கடவுளே, சிரிப்பது போலத் தோன்றும் வெள்ளிய தலையில் பிச்சை யேற்றுத் திரிகின்ற பாசுபத வேடத்தையுடையவனே, கொல்லையின் வளங்களையுடைய முல்லை நிலத்தையுடைய திருக்கோளிலியில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானே, அடியேன், குண்டையூரிற் சில நெல்லுப் பெற்றேன்; அவைகளை என் இல்லத்திற் சேர்ப்பிக்க எனக்கு ஆள் இல்லை. ஆதலின் அடியேனுக்கு அத்துன்பத்தை நீக்கி, அவற்றை அங்குச் சேர்ப்பித்து உதவ, நீ, எவர்க்கேனும் கட்டளையிட்டருள்.

திருக்கோளிலி

குரவம ருங்குழலாள் உமை
நங்கைஓ பங்குடையாய்
பரவை பசிவருத்தம் மது
நீயும் அறிதியன்றே
குரவம ரும்பொழில்சூழ் குண்டை
யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
அரவம் அசைத்தவனே அவை

அட்டித் தரப்பணியே. **#204**

குராமலர் பொருந்தியுள்ள கூந்தலையுடைய 'உமை' என்னும் நங்கையை ஒரு பாகத்தில் உடையவனே, பாம்பைக் கட்டியுள்ளவனே, திருக்கோளிலியில் எழுந்தருளியிருக்கின்ற எம் பெருமானே, நீ எல்லாவற்றையும் பிறர் அறிவிக்கவேண்டாது அறிபவனாகலின் பரவையது பசித்துன்பத்தையும் அறிவாயன்றே? அவள் பொருட்டு, அடியேன், குராமரம் பொருந்தியுள்ள சோலைகள் சூழ்ந்த குண்டையூரிற் சில நெல்லுப் பெற்றேன்; அவைகளை அவள் பாற்சேர்ப்பிக்க எனக்கு ஆள் இல்லை; அவற்றை அங்குச் சேர்ப்பித்து உதவ, நீ எவர்க்கேனும் கட்டளையிட்டருள்.

திருக்கோளிலி

எம்பெரு மான்உனையே நினைந்
தேத்துவன் எப்பொழுதும்
வம்பம ருங்குழலாள் ஒரு
பாகம் அமர்ந்தவனே
செம்பொனின் மாளிகைசூழ் திருக்
கோளிலி எம்பெருமான்
அன்பது வாய்அடியேற் கவை
அட்டித் தரப்பணியே. **#205**

மணம் பொருந்திய கூந்தலையுடைய உமையவளை ஒருபாகத்தில் விரும்பி வைத்துள்ளவனே, செம்பொன்னாலியன்ற மாளிகைகள் நிறைந்த திருக்கோளிலியில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானே, அடியேன் குண்டையூரிற் சில நெல்லுப் பெற்றேன்; அவைகளை என் இல்லத்திற் சேர்ப்பிக்க எனக்கு ஆள் இல்லை. எம் தலைவனாகிய உன்னையே எப்பொழுதும் நினைந்து துதிக்கும் தொழிலுடையேன் யான்; வேறுயாரை வேண்டுவேன்! என்னிடத்து அன்புடையையாய், அவற்றை அங்குச் சேர்த்து உதவ. நீ, எவர்க்கேனும் கட்டளையிட்டருள்.

திருக்கோளிலி

அரக்கன் முடிகரங்க ளடர்த்
திட்டஎம் மாதிப்பிரான்
பரக்கும் அரவல்குலாள் பர
வையவள் வாடுகின்றாள்
குரக்கினங் கள்குதிகொள் குண்டை
யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
இரக்கம தாய்அடியேற் கவை
அட்டித் தரப்பணியே. **#206**

இராவணனது தலைகளையும், கைகளையும் நெரித்திட்ட எங்கள் முதற்கடவுளே, திருக்கோளிலியில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானே. அகன்ற அல்குலையுடையாளாகிய என் இல்லாள் பரவை தன் வாழ்க்கையை நடத்தமாட்டாது மெலிகின்றாள்; அவள் பொருட்டு, அடியேன், சோலைகளில் குரங்குக் கூட்டங்கள் குதித்து விளையாடுகின்ற குண்டையூரிற் சில நெல்லுப் பெற்றேன்; அவைகளை அவள்பால் சேர்ப்பிக்க எனக்கு ஆள் இல்லை; நீ இரக்கமுடையையாய், அடியேன் பொருட்டு அவற்றை அங்குச் சேர்த்து உதவ, எவர்க்கேனும் கட்டளையிட்டருள்.

திருக்கோளிலி

பண்டைய மால்பிரமன் பறந்
தும்மிடந் தும்மயர்ந்தும்
கண்டில ராய்அவர்கள் கழல்
காண்பரி தாயபிரான்
தெண்டிரை நீர்வயல்சூழ் திருக்
கோளிலி எம்பெருமான்
அண்டம தாயவனே யவை
அட்டித் தரப்பணியே. **#207**

முற்காலத்திலே உன் அளவைக்காணப் புகுந்த திருமாலும் பிரமனும் அன்னமாய் விண்ணிற்பறந்து ஓடியும், ஏனமாய் மண்ணைப் பிளந்து நுழைந்தும் தங்களால் ஆமளவும் முயன்றும் அதனைக் காணாதவர்களேயாக, இன்றும் நின் திருவடி அவர்களால் காணுதற்கு அரிதேயாய கடவுளே, தௌந்த அலைகளையுடைய நீரையுடைய வயல்கள் சூழ்ந்த திருக்கோளிலியில் எழுந்தருளியிருக்கின்ற எம்பொருமானே, எல்லா உலகமும் ஆனவனே, அடியேன், குண்டையூரிலே சில நெல்லுப் பெற்றேன்; அவைகளை என் இல்லத்திற் சேர்ப்பிக்க எனக்கு ஆள் இல்லை; அவற்றை அங்குச் சேர்த்து உதவ, நீ, எவர்க்கேனும் கட்டளையிட்டருள்.

திருக்கோளிலி

கொல்லை வளம்புறவிற் றிருக்
கோளிலி மேயவனை
நல்லவர் தாம்பரவுந் திரு
நாவல வூரனவன்
நெல்லிட ஆட்கள்வேண்டி நினைந்
தேத்திய பத்தும்வல்லார்
அல்லல் களைந்துலகில் அண்டர்

வானுல காள்பவரே. **#208**
கொல்லையினது வளங்களையுடைய முல்லை நிலத்தையுடைய திருக்கோளிலியில் விரும்பியிருக்கின்ற பெருமானை, நல்லவர்கள் துதிக்கின்ற திருநாவலூரான், தனக்கு நெல் எடுக்க ஆட்களைத் தருமாறு வேண்டி, மனம் பொருந்திப் பாடிய இப்பத்துப் பாடல்களையும் பாடவல்லவர், இம்மையில் தங்கட்கு உள்ள இடர்களை நீக்கி, அம்மையிலும் தேவர்கட்கு மேலாய மேலுலகத்தை ஆள்வார்கள்.

திருக்கச்சிமேற்றளி

திருக்கச்சிமேற்றளி

திருக்கச்சிமேற்றளி,
பண் - நட்டராகம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருமேற்றளியீசுவரர்.
தேவியார் : காமாட்சியம்மை.

நொந்தா வொண்சுடரே நுனை
யேநி னைந்திருந்தேன்
வந்தாய் போயறியாய்
மனமேபு குந்துநின்ற
சிந்தாய் எந்தைபிரான் திரு
மேற்ற ளிஉறையும்
எந்தாய் உன்னையல்லால் இனி
ஏத்த மாட்டேனே. **#209**

அவியாத ஒளிபொருந்திய விளக்குப் போல்பவனே, என் தந்தைக்கும் பெருமானே, கச்சித்திருமேற்றளியில் எழுந்தருளியிருக்கின்ற என் தந்தையே, உன்னையே நினைந்திருந்த என் உள்ளத்திலே புகுந்துநின்ற சிந்தனைப் பொருளே, என் உள்ளத்தில் புகுந்த நீ பின் நீங்கியறியாய்; ஆதலின், இனி அடியேன் உன்னையன்றிப் பிறரைப் புகழவே மாட்டேன்.

திருக்கச்சிமேற்றளி

ஆட்டான் பட்டமையால் அடி
யார்க்குத் தொண்டுபட்டுக்
கேட்டேன் கேட்பதெல்லாம் பிற
வாமை கேட்டொழிந்தேன்
சேட்டார் மாளிகைசூழ் திரு
மேற்ற ளிஉறையும்
மாட்டே யுன்னையல்லால் மகிழ்ந்
தேத்த மாட்டேனே. **#210**

பெருமையையுடைய பல மாளிகைகள் சூழ்ந்த கச்சித் திருமேற்றளியில் எழுந்தருளியிருக்கின்ற என் செல்வமாய் உள்ளவனே, அடியேன் உனக்கு அடிமையாயினமையால், உன் அடியார்க்கு அடியனாகின்ற பேற்றைப் பெற்றேன். அதனால், உன்பால் அடியேன் வேண்டற்பாலன பலவற்றையும் வேண்டி, இறுதியாகப் பிறவாத நிலையை

வேண்டியொழிந்தேன். இனி, என் மகிழ்ச்சி மீதூர்வால் உன்னைப் புகழ்தலன்றிப் பிறரைப் புகழவே மாட்டேன்.

திருக்கச்சிமேற்றளி

மோறாந் தோரொருகால் நினை
யாதி ருந்தாலும
வேறா வந்தென்னுள்ளம் புக
வல்ல மெய்ப்பொருளே
சேறார் தண்கழனித் திரு
மேற்ற ளியுறையும்
ஏறே யுன்னையல்லால் இனி
ஏத்த மாட்டேனே. **#211**

அடியேன் ஓரொருகால் மயக்கம் உற்று உன்னை நினையாதிருப்பினும், நீதானே வந்து என் உள்ளத்தில் புகுந்து நினைப்பிக்கவல்ல உண்மைப் பொருளானவனே. சேறு நிறைந்த குளிர்ந்த கழனிகளையுடைய கச்சித் திருமேற்றளியில் எழுந்தருளியிருக்கின்ற ஆண் சிங்கம் போல்பவனே. இனி, அடியேன் உன்னையன்றிப் பிறரைப் புகழவே மாட்டேன்.

திருக்கச்சிமேற்றளி

உற்றார் சுற்றமெனும் மது
விட்டு நுன்னடைந்தேன்
எற்றால் என்குறைவென் இட
ரைத்து றந்தொழிந்தேன்.
செற்றாய் மும்மதிலுந் திரு
மேற்ற ளிஉறையும்
பற்றே நுன்னையல்லால் பணிந்
தேத்த மாட்டேனே. **#212**

மூன்று மதில்களையும் அழித்தவனே, கச்சித் திரு மேற்றளியில் எழுந்தருளியிருக்கின்ற துணையானவனே, அடியேன், என்னோடு நெருங்கிய உறவினர் பலர் உளர் என்றும், மற்றும் சுற்றத்தார் பலர் உளர் என்றும் நினைத்து, அவர்கள் தொடர்பிலே பட்டு, உய்ந்து போகமாட்டாது நிற்கின்ற அந்நிலையைத் துறந்து, உன்னையே புகலிடமாக அடைந்தேன். அதனால், இப்பொழுது, எத்தன்மையதான பொருளால், என்ன குறை அடியேனுக்கு இருக்கின்றது? ஒன்றும் இல்லை. என் துன்பங்களையெல்லாம் அடியோடு நீக்கிவிட்டேன். ஆதலின் இனி, உன்னையன்றிப் பிறரைப் பணிந்து புகழ்தலைச் செய்யவே மாட்டேன்.

திருக்கச்சிமேற்றளி

எம்மான் எம்மனையென் றவர்
இட்டி றந்தொழிந்தார்
மெய்ம்மா லாயினதீர்த் தருள்
செய்யும் மெய்ப்பொருளே
கைம்மா ஈருரியாய் கன
மேற்ற ளிஉறையும்
பெம்மான் உன்னையல்லால் பெரி
தேத்த மாட்டேனே. **#213**

உடம்பு இடமாக வருகின்ற மயக்கமாயினவற்றை எல்லாம் நீக்கி, மெய்யுணர்வைத் தந்தருளுகின்ற மெய்ப்பொருளாய் உள்ளவனே, யானையை உரித்த தோலை உடையவனே, பெருமை பொருந்திய கச்சித் திருமேற்றளியில் எழுந்தருளியிருக்கின்ற பெரியோனே, என்னைத் தாங்குகின்ற. 'என் தந்தை' என்றும், 'என் தாய்' என்றும் சொல்லப்பட்டவர்கள் என்னை இங்குத் தனியே வைத்து விட்டு இறந்துவிட்டார்கள்; ஆகவே, இனி, உன்னையன்றிப் பிறரை நான் பெரிய பொருளாக நினைத்துப் புகழவேமாட்டேன்.

திருக்கச்சிமேற்றளி

நானேல் உன்னடியே நினைந்
தேன்நி னைதலுமே
ஊனேர் இவ்வுடலம் புகுந்
தாய்என் ஒண்சுடரே
தேனே இன்னமுதே திரு
மேற்ற ளிஉறையும்
கோனே உன்னையல்லாற் குளிர்ந்
தேத்த மாட்டேனே. **#214**

எனது ஒளி பொருந்திய விளக்குப் போன்றவனே, தேன் போன்றவனே, இனிய அமுதம் போன்றவனே, கச்சித் திருமேற்றளியில் எழுந்தருளியிருக்கின்ற தலைவனே, நானோ எனில், உன் திருவடியை அடைய நினைத்தேன்; அங்ஙனம் நினைத்த அளவிலே நீ ஊன் பொருந்திய இவ்வுடலுள்ளே வந்து புகுந்துவிட்டாய்; ஆதலின், இத்தகைய பேரருளாளனாகிய உன்னையல்லது பிறரை அடியேன் உளங்குளிர்ந்து புகழவேமாட்டேன்.

திருக்கச்சிமேற்றளி

கையார் வெஞ்சிலைநா ணதன்

மேற்ச ரங்கோத்தே
எய்தாய் மும்மதிலும் மெரி
யுண்ண எம்பெருமான்
செய்யார் பைங்கமலத் திரு
மேற்ற ளிஉறையும்
ஐயா உன்னையல்லால் அறிந்
தேத்த மாட்டேனே. **#215**

எம் பெருமானே, வயலின்கண் பரவியுள்ள பசிய தாமரைகளையுடைய கச்சித் திருமேற்றளியில் எழுந்தருளியிருக்கின்ற தலைவனே, நீ உன் கையின்கண் பொருந்திய கொடிய வில்லினது நாணின்மேல் அம்பைத் தொடுத்து, மூன்று மதில்களையும் தீ உண்ணும் படி எரித்தாய்; ஆதலின், உன்னையன்றிப் பிறரைத் தேவராக எண்ணிப் புகழவேமாட்டேன்.

திருக்கச்சிமேற்றளி

விரையார் கொன்றையினாய் விம
லாஇனி உன்னையல்லால்
உரையேன் நாவதனால் உட
லில்உயிர் உள்ளளவும்
திரையார் தண்கழனித் திரு
மேற்ற ளிஉறையும்
அரையா உன்னையல்லால் அறிந்
தேத்த மாட்டேனே. **#216**

நறுமணம் பொருந்திய கொன்றைமாலையை உடையவனே. தூயவனே, அலைகள் நிறைந்த குளிர்ந்த கழனிகளையுடைய கச்சித் திருமேற்றளியின்கண் எழுந்தருளியிருக்கின்ற தலைவனே, அடியேன். என் உடலில் உயிர் உள்ளவரையிலும் இனி, உன்னையன்றிப் பிறரை, 'தேவர்' என்று என் நாவினாற் சொல்லவும் மாட்டேன்; உன்னையன்றிப் பிறரை உயர்ந்தவராக மதித்துப் புகழவும் மாட்டேன்; இது திண்ணம்.

திருக்கச்சிமேற்றளி

நிலையா நின்னடியே நினைந்
தேன்நி னைதலுமே
தலைவா நின்னினையப் பணித்
தாய்ச லமொழிந்தேன்
சிலையார் மாமதில்சூழ் திரு
மேற்ற ளிஉறையும்
மலையே உன்னையல்லால் மகிழ்ந்
தேத்த மாட்டேனே. **#217**

சந்திர காந்தக் கற்கள் நிறைந்த பெரிய மதில் சூழ்ந்த கச்சித் திருமேற்றளியின்கண் எழுந்தருளியிருக்கின்ற மலைபோன்றவனே. தலைவனே, அடியேன், உனது திருவடியையே நிலைத்த பொருளாக உணர்ந்தேன்; அவ்வாறு உணர்ந்த அளவிலே அவ்வாறே மாறாது என்றும் உன்னையே உணர்ந்து நிற்குமாறு எனக்கு உன் திருவருளைச் செய்தாய்; அதனால், அடியேன், என், துன்பமெல்லாம் ஒழிந்தவனாயினேன்; ஆகவே, இனி அடியேன், உன்னையன்றிப் பிறரை, மனம் மகிழ்ந்து புகழவேமாட்டேன்.

திருக்கச்சிமேற்றளி

பாரூர் பல்லவனூர் மதிற்
காஞ்சி மாநகர்வாய்ச்
சீரூ ரும்புறவிற் றிரு
மேற்ற ளிச்சிவனை
ஆரூ ரன்னடியான் அடித்
தொண்டன்ஆ ரூரன்சொன்ன
சீரூர் பாடல்வல்லார் சிவ
லோகஞ் சேர்வாரே. **#218**

நிலம் முழுதும் ஆணை செல்கின்ற பல்லவனது அரசிருக்கை ஊராகிய, மதிலை உடைய காஞ்சி மாநகரின்கண் சிறப்புப் பொருந்திய இடத்தில் விளங்கும் திரு மேற்றளியின்கண் உள்ள சிவபெருமானை, திருவாரூர்ப் பெருமானுக்கு அடியவனான அணுக்கத் தொண்டனாம் நம்பியாரூரன் பாடிய, தாள அறுதி பொருந்திய இப் பாடல்களைப் பாடவல்லவர், சிவலோகத்தை அடைவார்கள்.

திருப்பழமண்ணிப்படிக்கரை

திருப்பழமண்ணிப்படிக்கரை

திருப்பழமண்ணிப்படிக்கரை,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நீலகண்டேசுவரர்.
தேவியார் : வடிக்கண்ணமுதகரநாயகியம்மை.

முன்னவன் எங்கள்பிரான் முதல்
காண்பரி தாயபிரான்
சென்னியில் எங்கள்பிரான் திரு
நீல மிடற்றெம்பிரான்
மன்னிய எங்கள்பிரான் மறை
நான்குங்கல் லால்நிழற்கீழ்ப்
பன்னிய எங்கள்பிரான் பழ
மண்ணிப் படிக்கரையே. **#219**

எல்லார்க்கும் முன்னே உள்ளவனும், தனக்கு முன்னுள்ள பொருள் இல்லாதவனும், யாவரினும் தலையாயவனும் அழகிய நீலகண்டத்தை உடையவனும், என்றும் அழியாது நிலைபெற்றிருப்பவனும், நான்கு வேதங்களையும் கல்லால மர நிழலிலிருந்து சொல்லியவனுமாய், எங்கள் தலைவனுமாய் உள்ள இறைவன் எழுந்தருளியிருப்பது, 'திருப்பழமண்ணிப்படிக்கரை' என்னும் தலமே.

திருப்பழமண்ணிப்படிக்கரை

அண்ட கபாலஞ்சென்னி அடி
மேல்அலர் இட்டுநல்ல
தொண்டங் கடிபரவித் தொழு
தேத்திநின் றாடுமிடம்
வெண்டிங்கள் வெண்மழுவன் விரை
யார்கதிர் மூவிலைய
பண்டங்கன் மேயவிடம் பழ
மண்ணிப் படிக்கரையே. **#220**

திரண்ட தலையை அணிந்த முடியினையுடைய சிவபிரானது திருவடிகளில் நல்ல அடியார்கள் மலர்களை இட்டு அவ்வடிகளை வணங்கி, முன்னிலையாகவும் படர்க்கையாகவும் துதித்து ஆடுகின்றதும், வெண்மையான பிறையை அணிந்தவனும், வெள்ளிய மழுவை ஏந்தியவனும், பகைவர்மேல் விரைதல் பொருந்திய,

ஒளியையுடைய மூவிலை வேலை (சூலத்தை) உடைய, 'பண்டரங்கம்' என்னும் கூத்தினை உடையவனும் ஆகிய அப்பெருமான் விரும்பி எழுந்தருளியிருக்கின்றதும் ஆகிய இடம் 'திருப்பழமண்ணிப் படிக்கரை' என்னும் தலமே.

திருப்பழமண்ணிப்படிக்கரை

ஆடுமின் அன்புடையீர் அடிக்
காட்பட்ட தூளிகொண்டு
சூடுமின் தொண்டருள்ளீர் உம
ரோடெமர் சூழவந்து
வாடுமிவ் வாழ்க்கைதன்னை வருந்
தாமல் திருந்தச்சென்று
பாடுமின் பத்தருள்ளீர் பழ
மண்ணிப் படிக்கரையே. **#221**

அன்புடையவர்களே, அன்புக் கூத்தினை ஆடுங்கள்; தொண்டராய் உள்ளவர்களே, சிவபெருமானது திருவடிக்கு ஆட்பட்டவர்களது அடியில் உள்ள பொடியை எடுத்துத் தலைமேல் சூடிக்கொள்ளுங்கள்; பத்தராய் உள்ளவர்களே, உம்மவரோடு எம்மவரும் சூழ ஒன்று கூடி, மனம் மெலிதற்குக் காரணமான இல்வாழ்க்கையில் கிடந்து வருந்தாமல் நன்கு சென்று, திருப்பழமண்ணிப் படிக்கரையைப் பாடுங்கள்.

திருப்பழமண்ணிப்படிக்கரை

அடுதலை யேபுரிந்தான் அவை
அந்தர மூவெயிலும்
கெடுதலை யேபுரிந்தான் கிள
ருஞ்சிலை நாணியிற்கோல்
நடுதலை யேபுரிந்தான் நரி
கான்றிட்ட எச்சில் வெள்ளைப்
படுதலை யேபுரிந்தான் பழ
மண்ணிப் படிக்கரையே. **#222**

உலகத் தொகுதியை அழித்தலை விரும்பினவனும், வானத்தில் திரிந்த மூன்று மதில்கள் கெட்டொழிதலை விரும்பி வில் நாணில் அம்பைப் பூட்டுதலை விரும்பினவனும், நரி உமிழ்ந்த எச்சிலாகிய, வெண்மையான, அழிந்த தலையை விரும்பியவனும் ஆகிய இறைவன் எழுந்தருளியிருக்கும் இடம், 'திருப்பழமண்ணிப் படிக்கரை' என்னும் தலமே.

திருப்பழமண்ணிப்படிக்கரை

உங்கைக ளாற்கூப்பி உகந்
தேத்தித்தொழு மின்தொண்டீர்
மங்கையொர் கூறுடையான் வா
னோர்முத லாயபிரான்
அங்கையில் வெண்மழுவன் அலை
யார்கதிர் மூவிலைய
பங்கய பாதனிடம் பழ
மண்ணிப் படிக்கரையே. **#223**

தொண்டர்களே, உமையை ஒரு கூறில் உடையவனும், தேவர்களுக்கு முதற்பொருளாய தலைவனும், அகங்கையில் வெள்ளிய மழுவை உடையவனும், கொல்லுதல் பொருந்திய ஒளியை யுடைய முத்தலை வேலை (சூலத்தை) ஏந்திய, தாமரை மலர்போலும் பாதங்களையுடையவனும் ஆகிய இறைவனது இடமாகிய திருப்பழ மண்ணிப்படிக்கரையை விரும்பித் துதித்து உங்கள் கைகளால் கூப்பித் தொழுங்கள்.

<u>திருப்பழமண்ணிப்படிக்கரை</u>

செடிபடத் தீவிளைத்தான் சிலை
யார்மதிற் செம்புனஞ்சேர்
கொடிபடு மூரிவெள்ளை எரு
தேற்றையும் ஏறக்கொண்டான்
கடியவன் காலன்றன்னைக் கறுத்
தான்கழற் செம்பவளப்
படியவன் பாசுபதன் பழ
மண்ணிப் படிக்கரையே. **#224**

கற்கள் பொருந்திய கோட்டைகளில் தீமை உண்டாகத் தீயை எழுவித்தவனும், நல்ல புனங்களில் மேய்வதாகிய, தனது கொடியிற் பொருந்திய வலிய எருதாகிய ஆனேற்றை ஏறுதற்கு ஊர்தியாகவும் கொண்டவனும், பாதத்தால் கொடிய வலிய காலனைக் காய்ந்தவனும், செவ்விய பவளம் போலும் திருமேனியை உடையவனும், பாசுபத வேடத்தனும் ஆகிய இறைவன் எழுந்தருளியிருப்பது, 'திருப்பழமண்ணிப்படிக்கரை' என்னும் தலமே.

<u>திருப்பழமண்ணிப்படிக்கரை</u>

கடுத்தவன் தேர்கொண்டோடிக் கயி
லாயநன் மாமலையை
எடுத்தவன் ஈரைந்துவாய் அரக்
கன்முடி பத்தலற

விடுத்தவன் கைநரம்பால் வேத
கீதங்கள் பாடலுறப்
படுத்தவன் பால்வெண்ணீற்றன் பழ
மண்ணிப் படிக்கரையே. **#225**

அரக்கனும், தேரைச் செலுத்திக்கொண்டு சென்று, அதனைத் தடுத்தலால் சினங்கொண்டவனாய்க் கயிலாயமாகிய நல்ல பெரிய மலையை எடுத்தவனும் ஆகிய இராவணனது பத்து வாய்களும் பத்துத் தலைகளில் பொருந்தியிருந்து அலறும்படி ஆக்கியவனும், பின்பு அவன் கை நரம்பாகிய வீணையால் வேதத்தொடு கூடிய இசைகளைப் பாட, அவனை நலத்திற் பொருந்தச் செய்தவனும், பால் போலும் வெள்ளிய திருநீற்றை உடையவனும் ஆகிய இறைவன் எழுந்தருளியிருப்பது, 'திருப்பழமண்ணிப்படிக்கரை' என்னும் தலமே.

<u>திருப்பழமண்ணிப்படிக்கரை</u>

திரிவன மும்மதிலும் மெரித்
தான்இமை யோர்பெருமான்
அரியவன் அட்டபுட்பம் மவை
கொண்டடி போற்றிநல்ல
கரியவன் நான்முகனும் மடி
யும்முடி காண்பரிய
பரியவன் பாசுபதன் பழ
மண்ணிப் படிக்கரையே. **#226**

இடம் பெயர்ந்து திரிவனவாகிய மூன்று மதில்களை எரித்தவனும், தேவர்கட்குத் தலைவனும், அடைதற்கு அன்புடைய திருமாலும் பிரமனும் அட்ட புட்பங்களால் திருவடியில் அருச்சித்தும் அடியும் முடியும் காணமாட்டாத அளவிறந்தவனும், பாசுபத வேடத்தை உடையவனும் ஆகிய இறைவன் எழுந்தருளியிருப்பது, 'திருப்பழமண்ணிப்படிக்கரை' என்னும் தலமே.

<u>திருப்பழமண்ணிப்படிக்கரை</u>

வெற்றரைக் கற்றமணும் விரை
யாதுவிண் டாலமுண்ணும்
துற்றரைத் துற்றறுப்பான் துன்ன
ஆடைத் தொழிலுடையீர்
பெற்றரைப் பித்தரென்று கரு
தேன்மின் படிக்கரையுள்
பற்றரைப் பற்றிநின்று பழி
பாவங்கள் தீர்மின்களே. **#227**

மிகுந்த பற்றுக்களை அறுத்தற் பொருட்டு உடையில்லாத அரையினை உடையராதலைக் கற்ற சமணர் வேடத்திலே மனம் விரையாது நீங்கி, கீளொடு பிணைத்தலை உடைய கோவண ஆடையை அணிந்த தொண்டர்களே, நஞ்சினை உண்ணும் உணவுடையவரும், எருதாகிய ஊர்தியை உடையவருமாகிய சிவபெருமானாரை அதுபோல்வனவற்றை நோக்கிப் பித்தரென்று இகழ்ச்சியாக நினையாதீர்கள்; திருப்பழமண்ணிப்படிக்கரையுள் கோயில் கொண்டிருக்கும் அவரையே துணையாகப் பற்றிநின்று, பழிபாவங்களிலிருந்து நீங்குங்கள்.

திருப்பழமண்ணிப்படிக்கரை

பல்லுயிர் வாழுந்தெண்ணீர்ப் பழ
மண்ணிப் படிக்கரையை
அல்லியந் தாமரைத்தார் ஆ
ரூரன் உரைத்ததமிழ்
சொல்லுதல் கேட்டல்வல்லா ரவர்க்
குந்தமர்க் குங்கிளைக்கும்
எல்லியும் நன்பகலும் மிடர்
கூருதல் இல்லையன்றே. **#228**

பல உயிர்கள் வாழ்கின்ற தெளிந்த நீரையுடைய, 'திருப்பழமண்ணிப்படிக்கரை' என்னும் தலத்தை, அக இதழ்களையுடைய தாமரை மாலையை அணிந்த நம்பியாரூரன் புகழ்ந்து சொன்ன இத்தமிழ்ப் பாடலை இரவிலும், நல்ல பகலிலும் சொல்லுதலும் கேட்டலும் வல்லராகின்ற அத்தன்மையார்க்கும், அவரைச் சார்ந்து உற்றார்க்கும், அவ்வுற்றாரைப் பற்றி வரும் சுற்றத்தார்க்கும் துன்பம் மிகுதல் இல்லை.

திருக்கழிப்பாலை

திருக்கழிப்பாலை

திருக்கழிப்பாலை,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பால்வண்ணநாதர்.
தேவியார் : பொற்பதவேதநாயகியம்மை.

செடியேன் தீவினையில் தடு
மாறக் கண்டாலும்
அடியான் ஆவளனா தொழி
தல்த கவாமே
முடிமேல் மாமதியும் அர
வும்மு டன்துயிலும்
வடிவே தாம் உடையார் மகி
ழுங்கழிப் பாலையதே. **#229**

திருமுடியின் மேல், பெருமை பொருந்திய பிறையும், பாம்பும் பகையின்றி ஒருங்கு கூடித் துயில்கின்ற வடிவத்தை உடையவர், குணம் இல்லாதவனாகிய யான் தீவினையில் கிடந்து தடுமாறுவதை நேரே பார்த்தாலும், 'அந்தோ! இவன் நம் அடியவன்!' என்று இரங்காது தாம் மகிழ்ந்து எழுந்தருளியுள்ள திருக்கழிப்பாலையில், வாளா இருத்தல் தகுதியாகுமோ!

திருக்கழிப்பாலை

எங்கே னும்மிருந்துன் னடி
யேன்உ னைநினைந்தால்
அங்கே வந்தென்னொடும் முட
னாகி நின்றருளி
இங்கே என்வினையை யறுத்
திட்டெ னையாளுங்
கங்கா நாயகனே கழிப்
பாலை மேயானே. **#230**

திருக்கழிப்பாலையில் விரும்பி எழுந்தருளியிருக் கின்றவனே, நீயே உன் அடியவனாகிய யான் இப்பூமியிலே எங்காயினும் இருந்து உன்னை நினைத்தால், அங்கே வந்து என்னோடு கூடி நின்று, என் வினையை நீக்கி என்னை ஆண்டருள்கின்ற கங்கைக்கு நாயகன்.

திருக்கழிப்பாலை

ஒறுத்தாய் நின்னருளில் லடி
யேன்பி ழைத்தனகள்
பொறுத்தாய் எத்தனையுந் நா
யேனைப் பொருட்படுத்துச்
செறுத்தாய் வேலைவிடம் மறி
யாமல் உண்டுகண்டங்
கறுத்தாய் தண்கழனிக் கழிப்
பாலை மேயானே. **#231**

குளிர்ந்த கழனிகளையுடைய திருக்கழிப்பாலையில் விரும்பி எழுந்தருளியிருப்பவனே, உனது கருணையினாலே ஒரு பிழைக்காக முன்பு என்னை ஒறுத்தாய்; பின்பு அடியேன் செய்த பிழைகள் எத்தனையாயினும் அவை அனைத்தையும், நாய்போலும் என்னை ஒரு பொருளாக வைத்துப் பொறுத்துக் கொண்டாய்; தேவர்கள் இறவாதிருத்தற் பொருட்டுக் கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு கண்டத்தில் நிறுத்தினாய்; அதனால், அவ்விடம் கரிதாயினாய்; இவை உன் அருட்செயல்கள்.

திருக்கழிப்பாலை

சுரும்பார் விண்டமல ரவை
தூவித் தூங்குகண்ணீர்
அரும்பா நிற்குமனத் தடி
யாரொடும் அன்புசெய்வன்
விரும்பேன் உன்னையல்லால் ஒரு
தெய்வம் என்மனத்தால
கரும்பா ருங்கழனிக் கழிப்
பாலை மேயானே. **#232**

கரும்புகள் நிறைந்த கழனிகளையுடைய திருக்கழிப் பாலையில் விரும்பி எழுந்தருளியிருப்பவனே, வண்டுகள் ஒலிக்கின்ற, அப்பொழுது மலரும் மலர்களைத் தூவி, பாய்தற்குரிய கண்ணீர் அரும்புகின்றமைக்குக் காரணமான மனத்தையுடைய அடியார்களோடு கூடி அடியேன் உனக்கு அன்புசெய்வேன்; உன்னையன்றி வேறொரு தெய்வத்தை என் மனத்தாலும் விரும்பேன்; இஃது என் உணர்விருந்தவாறு.

திருக்கழிப்பாலை

ஒழிப்பாய் என்வினையை உகப்
பாய்மு னிந்தருளித்

தெழிப்பாய் மோதுவிப்பாய் விலை
ஆவ ணம்முடையாய்
சுழிப்பால் கண்டடங்கச் சுழி
யேந்து மாமறுகிற்
கழிப்பா லைமருவுங் கன
லேந்து கையானே. **#233**
நீர்ச் சுழிகளை, அவை கழியிடத்தையடைந்து அடங்குமாறு தாங்கி நிற்கின்ற தெருக்களையுடைய திருக்கழிப் பாலையில் எழுந்தருளியிருக்கின்ற தீயேந்திய கையினையுடையவனே, நீ என்னை உனக்கு உரியவனாக்கிக்கொண்ட விலைப் பத்திரத்தை உடையையாகலின். என்னை விரும்பி என்னோடு அளவளாவினும் அளவளாவுவாய்; பின் அது காரணமாக, என் வினையை நீக்கி என்னை இன்புறச் செய்யினும் செய்வாய்; அன்றி என்னை வெகுண்டு உரத்த கடுஞ்சொற்களால் இகழினும் இகழ்வாய்; பின் அது காரணமாக, என்னைத் தண்டிக்கச் செய்யினும் செய்வாய்; உன்னை 'இவ்வாறு செய்க' எனக் கட்டளையிடுவார் யார்?

திருக்கழிப்பாலை

ஆர்த்தாய் ஆடரவை அரை
ஆர்பு லியதள்மேற்
போர்த்தாய் யானையின்தோல் உரி
வைபு லால்நாறக்
காத்தாய் தொண்டுசெய்வார் வினை
கள்ள வைபோகப்
பார்த்தாய் நுற்கிடமாம் பழி
யில்கழிப் பாலையதே. **#234**
அரையின்கண் பொருந்திய புலித்தோலின்மேல், ஆடுகின்ற பாம்பைக் கட்டியவனே, யானையின் உரிக்கப்பட்டதாகிய தோலைப் புலால் நாற்றம் வீசும்படி போர்த்துக்கொண்டவனே, உனக்குத் தொண்டு செய்வாரது வினைகள் நீங்கும்படி திருக்கண் நோக்கம் வைத்து அவர்களைக் காத்தருளினவனே, உனக்கு இடமாவது, புகழையுடைய திருக்கழிப்பாலையே.

திருக்கழிப்பாலை

பருத்தாள் வன்பகட்டைப் பட
மாகமுன் பற்றியதள்
உரித்தாய் யானையின்தோல் உல
கந்தொழும் உத்தமனே

எரித்தாய் முப்புரமும் மிமை
யோர்க ளிடர்கடியுங்
கருத்தா தண்கழனிக் கழிப்
பாலை மேயானே. **#235**

உலகமெல்லாம் வணங்குகின்ற மேலானவனே, தேவர்களது துன்பத்தை நீக்கியருளுகின்ற தலைவனே. குளிர்ந்த கழனிகளையுடைய திருக்கழிப்பாலையில் விரும்பியெழுந்தருளியிருப்பவனே, நீ முன்பு யானையின் தோலைப் போர்வையாக விரும்பி, பருத்த கால்களையுடைய வலிய யானையைப் பிடித்து அதன் தோலை உரித்தாய்; முப்புரங்களையும் எரித்தாய்; இவை உனது வீரச் செயல்கள்.

<u>திருக்கழிப்பாலை</u>

படைத்தாய் ஞாலமெலாம் படர்
புன்சடை யெம்பரமா
உடைத்தாய் வேள்விதனை உமை
யாளையொர் கூறுடையாய்
அடர்த்தாய் வல்லரக்கன் தலை
பத்தொடு தோள்நெரியக்
கடற்சா ருங்கழனிக் கழிப்
பாலை மேயானே. **#236**

விரிந்த புல்லிய சடையினை யுடைய எங்கள் இறைவனே, உமையம்மையை ஒரு பாகத்தில் உடையவனே, கடலைச் சார்ந்த, கழனிகளையுடைய திருக்கழிப்பாலையில் விரும்பி எழுந்தருளியிருப்பவனே, நீ, உலகம் எல்லாவற்றையும் படைத்தாய்; தக்கனது வேள்வியை அழித்தாய்; வலிய அரக்கனாகிய இராவணனது பத்துத் தலைகளோடு இருபது தோள்களும் நெரியும்படி நெருக்கினாய்; இவை உன் வல்லமைகள்!

<u>திருக்கழிப்பாலை</u>

பொய்யா நாவதனாற் புகழ்
வார்கள் மனத்தினுள்ளே
மெய்யே நின்றெரியும் விளக்
கேயொத்த தேவர்பிரான்
செய்யா னுங்கரிய நிறத்
தானுந் தெரிவரியான்
மையார் கண்ணியொடும் மகிழ்
வான்கழிப் பாலையதே. **#237**

பொய் கூறுதல் இல்லாத நாவினால் புகழ்கின்றவர்களது மனத்தில்

அணையாது எரியும் விளக்கே போல விளங்கி நிற்கின்ற பெரிய தேவனும், செம்மை நிறமுடைய பிரமனும், கருமை நிறமுடைய திருமாலும் அறிதற்கரியவனும் ஆகிய சிவபிரான் திருக்கழிப்பாலையையே விரும்பி, மைபொருந்திய கண்களையுடைய உமா தேவியோடும் எழுந்தருளியிருப்பான்.

திருக்கழிப்பாலை

பழிசே ரில்புகழான் பர
மன்ப ரமேட்டி
கழியார் செல்வமல்குங் கழிப்
பாலை மேயானைத்
தொழுவான் நாவலர்கோன் ஆ
ரூரன் உரைத்ததமிழ்
வழுவா மாலைவல்லார் வா
னோருல காள்பவரே. **#238**

பழி பொருந்துதல் இல்லாத புகழையுடையவனும், யாவர்க்கும் மேலானவனும் மேலிடத்தில் உள்ளவனும் ஆகிய கழியின்கண் பொருந்திய செல்வங்கள் பெருகுகின்ற திருக்கழிப் பாலையில் விரும்பி எழுந்தருளியிருக்கின்ற சிவபிரானை, அவனையே தொழுபவனாகிய திருநாவலூரார்க்குத் தலைவனாம் நம்பியாரூரன் பாடிய இத் தமிழ்ப் பாடல்களைத் தவறு உண்டாகாதபடி பாடவல்லவர்கள், தேவர் உலகத்தை ஆள்பவராவர்.

திருமழபாடி

திருமழபாடி

திருமழபாடி,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வச்சிரத்தம்பநாதர்.
தேவியார் : அழகம்மை.

பொன்னார் மேனியனே புலித்
தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்
கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழ
பாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி
யாரை நினைக்கேனே. #239 ★★★★★

பொன்போலும் திருமேனியை உடையவனே, அரையின்கண் புலித்தோலை உடுத்து, மின்னல்போலும் சடையின் கண், விளங்குகின்ற கொன்றை மாலையை அணிந்தவனே, தலைவனே, விலையுயர்ந்த இரத்தினம் போல்பவனே, திருமழபாடியுள் திகழும் மாணிக்கம் போல்பவனே, எனக்குத் தாய்போல்பவனே, இப்பொழுது உன்னை யன்றி யான் வேறு யாரை நினைப்பேன்?

திருமழபாடி

கீளார் கோவணமுந் திரு
நீறுமெய் பூசியுன்றன்
தாளே வந்தடைந்தேன் தலை
வாஎனை ஏன்றுகொள்நீ
வாளார் கண்ணிபங்கா மழ
பாடியுள் மாணிக்கமே
கேளா நின்னையல்லால் இனி
யாரை நினைக்கேனே. #240

கீளின்கண் பொருந்திய கோவணத்தையும் உடுத்து, திருநீற்றையும் திருமேனியிற் பூசினவனே, யாவர்க்கும் தலைவனே, வாள்போலும் கண்களையுடைய உமாதேவியை உடைய ஒரு பங்கினனே, திருமழபாடியில் திகழும் மாணிக்கம் போல்பவனே, அடியேன், உனது திருவடியையே புகலிடமாக வந்து அடைந்தேன்; இனி

உன்னையல்லாது வேறு யாரை எனக்கு உறவாக நினைப்பேன்? என்னை நீ ஏற்றுக்கொள்.

திருமழபாடி

எம்மான் எம்மனையென் றனக்
கெட்டனைச் சார்வாகார்
இம்மா யப்பிறவி பிறந்
தேஇறந் தெய்த்தொழிந்தேன்
மைம்மாம் பூம்பொழில்சூழ் மழ
பாடியுள் மாணிக்கமே
அம்மான் நின்னையல்லால் இனி
யாரை நினைக்கேனே. **#241**

மேகம் தவழும் அழகிய மாஞ்சோலை சூழ்ந்த திருமழபாடியில் திகழும் மாணிக்கம் போல்பவனே, எங்கள் தலைவனே, 'என் தந்தை என் தாய்' என்று இவர்கள் எனக்கு எள்ளளவும் துணையாக மாட்டார்; அவர்களைத் துணையாக நினைத்துத்தான் இந்த நிலையில்லாத பிறவியை எடுத்துப் பின் பிறந்து இளைத்துப் போனேன்; ஆதலின், இப்பொழுது உன்னையல்லாது வேறு யாரை நினைப்பேன்?

திருமழபாடி

பண்டே நின்னடியேன் அடி
யாரடி யார்கட்கெல்லாம்
தொண்டே பூண்டொழிந்தேன் தொட
ராமைத் துரிசறுத்தேன்
வண்டார் பூம்பொழில்சூழ் மழ
பாடியுள் மாணிக்கமே
அண்டா நின்னையல்லால் இனி
யாரை நினைக்கேனே. **#242**

வண்டுகள் ஆரவாரிக்கின்ற பூஞ்சோலைகள் சூழ்ந்த திருமழபாடியில் திகழும் மாணிக்கம்போல்பவனே, வானுலகில் வாழ்பவனே, உனக்கு அடியவனாகிய யான் அப்பொழுதே உன் அடியார், அவர்க்கு அடியராயினார் ஆகிய எல்லார்க்கும் தொண்டு செய்தலை மேற்கொண்டு விட்டேன்; உன்னோடாயினும், உன் அடியாரோடாயினும் தொடர்புகொள்ளாத குற்றம் என்பால் இல்லாதவாறு அதனைக் களைந்தொழித்தேன்; ஆதலின் இனி, யான் உன்னை யன்றி வேறு யாரை நினைப்பேன்?

திருமழபாடி

கண்ணாய் ஏழுலகுங் கருத்
தாய அருத்தமுமாய்ப்
பண்ணார் இன்றமிழாய்ப் பர
மாய பரஞ்சுடரே
மண்ணார் பூம்பொழில்சூழ் மழ
பாடியுள் மாணிக்கமே
அண்ணா நின்னையல்லால் இனி
யாரை நினைக்கேனே. **#243**

ஏழுலகங்களிலும் உள்ள எல்லா உயிர்கட்கும் அறிவாகியும், அவை விரும்பப்படுகின்ற பொருள்களாகியும், பண் அமைந்த இனிய தமிழ்ப்பாடலாகியும், எல்லாப் பொருட்கும் மேலாயும் உள்ள மேலான ஒளியே, நிலம் நிறைந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த திருமழபாடியுள் திகழும் மாணிக்கம் போல்பவனே, தலைவனே, இப்பொழுது யான் உன்னைத் தவிர வேறு யாரை நினைப்பேன்?

<u>திருமழபாடி</u>

நாளார் வந்தணுகி நலி
யாமுனம் நின்றனக்கே
ஆளா வந்தடைந்தேன் அடி
யேனையும் ஏன்றுகொள்நீ
மாளா நாளருளும் மழ
பாடியுள் மாணிக்கமே
ஆளாய் நின்னையல்லால் இனி
யாரை நினைக்கேனே. **#244**

அடியவர்கட்கு, முடிவில்லாத வாழ்நாளைக் கொடுக்கின்ற, திருமழபாடியில் திகழ்கின்ற மாணிக்கம் போல்பவனே, உனக்கு நான் ஆளாயினபின், உன்னை யல்லது வேறு யாரை நினைப்பேன்? எனக்கு இறுதிநாள் வந்து நெருங்கித் துன்புறுத்துவதற்கு முன்பே உனக்கு நான் ஆளாதற்பொருட்டு வந்து உன்னை அடைந்தேனாதலின், அடியேனையும் உனக்கு உரியவனாக நீ ஏற்றுக் கொண்டருள்.

<u>திருமழபாடி</u>

சந்தா ருங்குழையாய் சடை
மேற்பிறை தாங்கிநல்ல
வெந்தார் வெண்பொடியாய் விடை
யேறிய வித்தகனே
மைந்தார் சோலைகள்சூழ் மழ
பாடியுள் மாணிக்கமே

எந்தாய் நின்னையல்லால் இனி
யாரை நினைக்கேனே. **#245**

பொருத்து வாய் உடைய குழையை அணிந்தவனே, சடையின்கண் பிறையைத் தாங்கியுள்ளவனே, வெந்து நிறைந்த நல்ல வெண்டிரு நீற்றை அணிந்தவனே, இடபத்தை ஏறும் ஊர்தியாகக் கொண்ட சதுரப்பாட்டினை உடையவனே, அழகு பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருமழபாடியுள் திகழும் மாணிக்கம்போல்பவனே, என் தந்தையே, நான் உன்னை யல்லாது வேறு யாரை நினைப்பேன்?

திருமழபாடி

வெய்ய விரிசுடரோன் மிகு தேவர்
கணங்களெல்லாம்
செய்ய மலர்களிட மிகு
செம்மையுள் நின்றவனே
மையார் பூம்பொழில்சூல் மழ
பாடியுள் மாணிக்கமே
ஐயா நின்னையல்லால் இனி
யாரை நினைக்கேனே. **#246**

வெப்பமான விரிகின்ற கதிர்களை யுடைய பகலவன் முதலாக மிகுந்த தேவர் கூட்டங்கள் எல்லாம், நல்ல மலர்களை இட்டு வழிபட, அவர்கட்கு மிகவும் நேர் நின்று அருள் செய்கின்றவனே, இருள் நிறைந்த அழகிய சோலைகள் சூழ்ந்த திருமழபாடியுள் திகழ்கின்ற மாணிக்கம் போல்பவனே, என் தலைவனே, அடியேன் இப்பொழுது உன்னை யல்லாது வேறு யாரை நினைப்பேன்?

திருமழபாடி

நெறியே நின்மலனே நெடு
மாலயன் போற்றிசெய்யும்
குறியே நீர்மையனே கொடி
யேரிடை யாள்தலைவா
மறிசேர் அங்கையனே மழ
பாடியுள் மாணிக்கமே
அறிவே நின்னையல்லால் இனி
யாரை நினைக்கேனே. **#247**

உயிர்களுக்கு நன்னெறியாய் நிற்பவனே, மலத்தாற் பற்றப்படாதவனே, நீண்ட திருமாலும் பிரமனும் ஏத்தெடுக்கும் தியானப் பொருளே, நற்பண்புடையவனே, கொடிபோலும் இடையினையுடைய உமாதேவிக்குக் கணவனே, மான் கன்று பொருந்திய அகங்கையை

யுடையவனே, திருமழபாடியுள் திகழும் மாணிக்கம் போல்பவனே, அறிவு வடிவானவனே, அடியேன், இப்பொழுது உன்னை யல்லாது வேறு யாரை நினைப்பேன்?

திருமழபாடி

ஏரார் முப்புரமும் மெரி
யச்சிலை தொட்டவனை
வாரார் கொங்கையுடன் மழ
பாடியுள் மேயவனைச்
சீரார் நாவலர்கோன் ஆ
ரூரன் உரைத்ததமிழ்
பாரோர் ஏத்தவல்லார் பர
லோகத் திருப்பாரே. **#248**

அழகு பொருந்திய மூன்று புரங்களும் எரிந் தொழியுமாறு வில்லை வளைத்தவனும், கச்சால் கட்டப்பட்ட தனங்களை யுடையவளாகிய உமாதேவியுடன் திருமழபாடியுள் விரும்பி வீற்றிருப்பவனும் ஆகிய சிவபெருமானை, புகழ் நிறைந்த திருநாவலூரில் உள்ளார்க்குத் தலைவனாகிய நம்பியாரூரன் பாடிய இத்தமிழ்ப் பாடல்களைப் பாட வல்லவர்களாகிய மக்கள், சிவலோகத்தில் இனிது வீற்றிருப்பார்கள்.

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம்,
பண் - நட்டராகம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பழமலைநாதர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

பொன்செய்த மேனியினீர் புலித் தோலை அரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலும் மெரித்
தீர்முது குன்றமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள் பர
வையிவள் தன்முகப்பே
என்செய்த வாறடிகேள் அடி
யேன்இட் டளங்கெடவே. **#249**

பொன்னைப்போலும் திருமேனியை உடையவரே, புலியினது தோலை அரையில் உடுத்தவரே, நன்கு செய்யப்பட்ட மூன்று மதில்களையும் முன்பு எரித்தவரே, திருமுதுகுன்றத்தில் விரும்பி இருப்பவரே, அடிகளே, மின்னல் போலும் நுண்ணிய இடையை யுடையவளும், 'பரவை' என்னும் பெயரினளுமாகிய இவள் முன்னே, அடியேனது துன்பங் கெடுதற்கு நீவிர் என் செய்தவாறு!

திருமுதுகுன்றம்

உம்பரும் வானவரும் முட
னேநிற்க வேயெனக்குச்
செம்பொனைத் தந்தருளித் திக
ழும்முது குன்றமர்ந்தீர்
வம்பம ருங்குழலாள் பர
வையிவள் வாடுகின்றாள்
எம்பெரு மான்அருளீர் அடி
யேன்இட் டளங்கெடவே. **#250**

எம் பெருமானிரே, நீர், முன்பு, வானத்தில் உள்ள தேவர்களும், அவர்கட்குமேல் உள்ள 'அயன், மால்' என்பவர்களும் கண்டுநிற்க எனக்குச் செம்பொன்னைக் கொடுத்து, விளங்குகின்ற திருமுதுகுன்றத்தில் எனக்குத் துணையாய் இருந்தீர்; இப்பொழுது, மணம் பொருந்திய கூந்தலையுடையவளும், 'பரவை' என்னும் பெயரினளும் ஆகிய இவள் பொருள் முட்டுப்பாட்டினால் மெலி

கின்றாள்; அது பற்றிய அடியேனது துன்பங் கெடுமாறு அருள்செய்தல் வேண்டும்.

திருமுதுகுன்றம்

பத்தா பத்தர்களுக் கருள்
செய்யும் பரம்பரனே
முத்தா முக்கணனே முது
குன்ற மமர்ந்தவனே
மைத்தா ருந்தடங்கண் பர
வையிவள் வாடாமே
அத்தா தந்தருளாய் அடி
யேன்இட் டளங்கெடவே. **#251**

எப்பொருட்கும் பற்றுக்கோடானவனே, அடியார்களுக்கு அருள் பண்ணுகின்ற மேலான பொருட்கும் மேலானவனே, இயல்பாகவே பாசத்தின் நீங்கினவனே, மூன்று கண்களையுடையவனே, திருமுதுகுன்றத்தில் விரும்பி இருப்பவனே, என் அப்பனே, மை தீட்டப்பட்டு அழகு நிறைந்த பெரிய கண்களையுடைய. 'பரவை' என்னும் பெயரினளாகிய இவள், பொருள் முட்டுப்பாட்டினால் வருந்தாதபடி, அடியேனது துன்பங்கெடுமாறு செம்பொன்னைத் தந்தருள்.

திருமுதுகுன்றம்

மங்கையொர் கூறமர்ந்தீர் மறை
நான்கும் விரித்துகந்தீர்
திங்கள் சடைக்கணிந்தீர் திக
ழும்முது குன்றமர்ந்தீர்
கொங்கைநல் லாள்பரவை குணங்
கொண்டிருந் தாள்முகப்பே
அங்கண னேயருளாய் அடி
யேன்இட் டளங்கெடவே. **#252**

உமையை ஒரு பாகத்தில் விரும்பி வைத்தவரே, வேதங்கள் நான்கினையும் விரித்து அருளிச்செய்து அதனை அறநூலாக விரும்பியவரே, சடையின்கண் சந்திரனை அணிந்தவரே, விளங்குகின்ற திருமுதுகுன்றத்தில் விரும்பி இருப்பவரே, கண்ணோட்டம் உடையவரே, தனங்கள் அழகியாளும், யான் சொல்லியதைச் சொல்லியவாறே கருதும் தன்மை உடையவளும், 'பரவை' என்னும் பெயரினளுமாகிய இவள் முன்னே, அடியேனது துன்பங் கெடுமாறு அருள்புரிதல் வேண்டும்.

திருமுதுகுன்றம்

மையா ரும்மிடற்றாய் மரு
வார்புர மூன்றெரித்த
செய்யார் மேனியனே திக
ழும்முது குன்றமர்ந்தாய்
பையா ரும்மரவே ரல்கு
லாளிவள் வாடுகின்றாள்
ஐயா தந்தருளாய் அடி
யேன்இட் டளங்கெடவே. **#253**

மைபோலப் பொருந்திய கண்டத்தை யுடையவனே, பகைவரது மூன்று ஊர்களை எரித்த, செவ்விய அழகு நிறைந்த திருமேனியையுடையவனே, விளங்குகின்ற திருமுதுகுன்றத்தில் விரும்பி இருப்பவனே, தலைவனே, பாம்பினிடத்துப் பொருந்தியுள்ள படம்போலும் எழுச்சியையுடைய அல்குலினையுடைய பரவையாகிய இவள் பொருளின்றி வருந்துகின்றாள்; ஆதலின் அதுபற்றிய அடியேனது துன்பங்கெடுமாறு, செம்பொன்னைத் தந்தருள்.

திருமுதுகுன்றம்

நெடியான் நான்முகனும் மிர
வியொடும் இந்திரனும்
முடியால் வந்திறைஞ்ச முது
குன்றம் அமர்ந்தவனே
படியா ரும்மியலாள் பர
வையிவள் தன்முகப்பே
யடிகேள் தந்தருளீர் அடி
யேன்இட் டளங்கெடவே. **#254**

திருமாலும், பிரமனும், சூரியனும், இந்திரனும் வந்து தலையால் வணங்கும்படி, திருமுதுகுன்றத்தில் விரும்பி இருப்பவனே, தலைவனே, பெண்மைப் பண்புகள் நிறைந்த இயல்பினை உடையவளும், "பரவை" என்னும் பெயரினளுமாகிய இவள் முன்னே, அடியேனது துன்பங் கெடுமாறு செம்பொன்னைத் தந்தருள்.

திருமுதுகுன்றம்

கொந்தண வும்பொழில்சூழ் குளிர்
மாமதில் மாளிகைமேல்
வந்தண வும்மதிசேர் சடை
மாமுது குன்றுடையாய்

பந்தண வும்விரலாள் பர
வையிவள் தன்முகப்பே
அந்தண னேயருளாய் அடி
யேன்இட் டளங்கெடவே. **#255**

கொத்துக்கள் பொருந்திய சோலைகள் சூழ்ந்த குளிர்ந்த பெரிய மதில்கள் மேலும், மாளிகைகள் மேலும் வந்து தவழ்கின்ற சந்திரன் பொருந்திய சடையினை உடைய பெரிய திருமுது குன்றத்தையுடையவனே, அந்தணனே, பந்து பொருந்திய விரலை உடையவளும், 'பரவை' என்னும் பெயரினளும் ஆகிய இவள் முன்னே, அடியேனது துன்பங் கெடுமாறு அருள்பண்ணுவாய்.

<u>திருமுதுகுன்றம்</u>

பரசா ருங்கரவா பதி
னெண்கண முஞ்சூழ
முரசார் வந்ததிர முது
குன்ற மமர்ந்தவனே.
விரைசே ருங்குழலாள் பர
வையிவள் தன்முகப்பே
அரசே தந்தருளாய் அடி
யேன்இட் டளங்கெடவே. **#256**

மழுப் பொருந்திய கையை யுடையவனே, பதினெண் கணங்களும் புடை சூழவும், முரசு அணுக வந்து முழங்கவும் திருமுதுகுன்றத்தில் விரும்பி இருப்பவனே, எல்லா உலகிற்கும் அரசனே, நறுமணம் பொருந்திய கூந்தலையுடையவளும், 'பரவை' என்னும் பெயரினளும் ஆகிய இவள் முன்னே, அடியேனது துன்பங்கெடுமாறு செம்பொன்னைத் தந்தருள்.

<u>திருமுதுகுன்றம்</u>

ஏத்தா திருந்தறியேன் இமை
யோர்தனி நாயகனே
மூத்தாய் உலகுக்கெல்லா முது
குன்ற மமர்ந்தவனே
பூத்தா ருங்குழலாள் பர
வையிவள் தன்முகப்பே
கூத்தா தந்தருளாய் கொடி
யேன்இட் டளங்கெடவே. **#257**

தேவர்கட்கு ஒப்பற்ற தலைவனே, எல்லா உயிர்கட்கும் மூத்தவனே, திருமுதுகுன்றத்தில் விரும்பி இருப்பவனே, கூத்துடையானே, உன்னை யான் பாடாமல் இருந்தறியேன்; ஆதலின், மலர்கள் மலர்ந்து

பொருந்துகின்ற கூந்தலையுடையவளும், 'பரவை' என்னும் பெயரினளும் ஆகிய இவள்முன்னே, அடியேனது துன்பங்கெடுமாறு செம்பொன்னைத் தந்தருள்.

திருமுதுகுன்றம்

பிறையா ருஞ்சடையெம் பெரு
மானரு ளாயென்று
முறையால் வந்தமரர் வணங்
கும்முது குன்றர்தம்மை
மறையார் தங்குரிசில் வயல்
நாவலா ரூரன்சொன்ன
இறையார் பாடல்வல்லார்க் கெள
தாஞ்சிவ லோகமதே. **#258**

தேவர்கள் பலரும் தம் வரிசைக்கேற்ப முறையாக வந்து வணங்கும் திருமுதுகுன்றரை, அந்தணர் தலைவனும், வயல்களையுடைய திருநாவலூரினனும் ஆகிய நம்பியாரூரன், 'பிறை பொருந்திய சடையினையுடைய எம்பெருமானே அருள்புரியாய்' என்று வேண்டிப்பாடிய, இறைவனது திருவருள் நிறைந்த இப் பாடல்களை நன்கு பாட வல்லவர்க்குச் சிவலோகம் எளிய பொருளாய் விடும்.

திருக்காளத்தி

திருக்காளத்தி

திருக்காளத்தி,
பண் - நட்டராகம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காளத்திநாதர்.
தேவியார் : ஞானப்பூங்கோதையம்மை.

செண்டா டும்விடையாய் சிவ
னேயென் செழுஞ்சுடரே
வண்டா ருங்குழலா ளுமை
பாக மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்குங் கண
நாதனெங் காளத்தியாய்
அண்டா வுன்னையல்லால் அறிந்
தேத்த மாட்டேனே. **#259**

விரைந்து நடக்கும் இடப வாகனத்தை உடையவனே, சிவபெருமானே, செழுமையான ஒளி வடிவினனே, வண்டுகள் நிறையச் சூழும் கூந்தலையுடைய உமையம்மையை ஒரு பாகத்தில் விரும்பிக் கொண்டவனே, உன்னைக் கண்டவர் பின்பு நீங்காது பேரன்பு செய்யப்படுபவனே, பூதக் கூட்டத்திற்கு அரசனே, திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே, பரவெளியில் விளங்குபவனே, அடியேன் உன்னை யல்லது பிறரைக் கடவுளராக அறிந்து போற்றுதலே இலன்; ஆதலின், அடியேனுக்கு அருள் பண்ணுதல் வேண்டும்.

திருக்காளத்தி

இமையோர் நாயகனே இறை
வாஎன் இடர்த்துணையே
கமையார் கருணையினாய் கரு
மாமுகில் போன்மிடற்றாய்
உமையோர் கூறுடையாய் உரு
வேதிருக் காளத்தியுள்
அமைவே யுன்னையல்லால் அறிந்
தேத்த மாட்டேனே. **#260**

தேவர்கட்குத் தலைவனே, கடவுளே, என் துன்பங்களை விலக்குதற்குத் துணையாய் நின்று உதவுபவனே, பொறுமை நிறைந்த அருளையுடையவனே, கரிய பெரிய மேகம் போலும் கண்டத்தை

யுடையவனே உமையம்மையை ஒரு பாகத்தில் உடைய அவ்வடிவத்தை உடையவனே, திருக்காளத்தியுள் எழுந்தருளியிருப்பவனே, அடியேன், உன்னை யன்றிப் பிறரைக் கடவுளராக அறிந்து போற்றுதலே இலன்; ஆதலின், எனக்கு அருள்பண்ணுதல் வேண்டும்.

திருக்காளத்தி

படையார் வெண்மழுவா பக
லோன்பல் லுகுத்தவனே
விடையார் வேதியனே விளங்
குங்குழைக் காதுடையாய்
கடையார் மாளிகைசூழ் கண
நாதனெங் காளத்தியாய்
உடையாய் உன்னையல்லால் உகந்
தேத்த மாட்டேனே. **#261**

படைக்கலமாகப் பொருந்திய வெள்ளிய மழுவை உடையவனே, சூரியனது பல்லை உதிர்த்தவனே, இடபத்தின்கண் பொருந்தும் அந்தணனே, ஒளிவிடுகின்ற குழையை யணிந்த காதினை உடையவனே, அழகிய வாயில்கள் பொருந்திய மாளிகைகள் சூழ்ந்த திருக்காளத்தியில் எழுந்தருளியிருப்பவனே; பூதகண நாதனே, என்னை உடையவனே, அடியேன், உன்னையல்லது, பிறரை விரும்பிப் போற்றுதலே இலன்; ஆதலின், எனக்கு அருள்பண்ணுதல் வேண்டும்.

திருக்காளத்தி

மறிசேர் கையினனே மத
மாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குரு
வேஉன்குற் றேவல்செய்வேன்
நெறியே நின்றடியார் நினைக்
குந்திருக் காளத்தியுள்
அறிவே யுன்னையல்லால் அறிந்
தேத்த மாட்டேனே. **#262**

மான் கன்று பொருந்திய கையை உடையவனே. மதம் பொருந்திய யானையின் தோலைப் போர்த்தவனே, யாவராலும் குறிக்கொள்ளப்படும் பொருளே, என்னை மாணாக்கனாக உடைய ஆசிரியனே, அடியவர்கள் நன்னெறிக் கண்ணே நின்று நினைக்கின்ற திருக்காளத்தியுள் எழுந்தருளியிருக்கின்ற அறிவுருவனே, அடியேன் உன்னையல்லது பிறரைக் கடவுளராக அறிந்து போற்றுதலே இலன்; உனது சிறு பணி விடைகளையே செய்வேன்; ஆதலின், எனக்கு அருள்

பண்ணுதல் வேண்டும்.

திருக்காளத்தி

செஞ்சே லன்னகண்ணார் திறத்
தேகிடந் துற்றலறி
நஞ்சேன் நானடியேன் நல
மொன்றறி யாமையினால்
துஞ்சேன் நானொருகாற் றொழு
தேன்றிருக் காளத்தியாய்
அஞ்சா துன்னையல்லால் அறிந்
தேத்த மாட்டேனே. **#263**

திருக்காளத்தியில் எழுந்தருளியிருப்பவனே, உன் அடியவனாகிய நான், நன்மை ஒன்றையே உணர்ந்து நில்லாத காரணத்தால், சிவந்த சேல்போலும் கண்களையுடைய மாதர் கூற்றிலே கிடந்து, மிகக்கதறி வருந்தினேன்; அதனிடையே ஓரொருகால், நான் மடிந்திராது உன்னை வணங்கினேன்; எவ்வாறாயினும் அச்சமின்றி, உன்னையல்லது பிறரைக் கடவுளராக அறிந்து போற்றுதலைச் செய்தலே இலன்; ஆதலின், எனக்கு அருள் பண்ணுதல் வேண்டும்.

திருக்காளத்தி

பொய்யவ னாயடியேன் புக
வேநெறியொன் றறியேன்
செய்யவ னாகிவந்திங் கிட
ரானவை தீர்த்தவனே
மெய்யவ னேதிருவே விளங்
குந்திருக் காளத்திஎன்
ஐயநுன் றன்னையல் லால் அறிந்
தேத்த மாட்டேனே. **#264**

நடுவு நிலைமையை உடையவனாகி வந்து, பொய்யை உடையவனும், நாய்போலும் அடியவனும், அழிவில் இன்பத்துள் புகுதற்கு வழி ஒன்றும் அறியாதவனும் ஆகிய எனது துன்பங்களை யெல்லாம் நீக்கி ஆட்கொண்ட பெருமானே, உண்மை வடிவினனே, பேரின்பமானவனே, புகழுடையதாகிய திருக்காளத்தியில் எழுந்தருளியிருப்பவனே, என் தலைவனே, அடியேன், உன்னையன்றிப் பிறரைக் கடவுளராக அறிந்து போற்றுதலே இலன்; ஆதலின், எனக்கு அருள் பண்ணுதல் வேண்டும்.

திருக்காளத்தி

கடியேன் காதன்மையாற் கழற்

போதறி யாதவென்னுள்
குடியாக் கோயில்கொண்ட குளிர்
வார்சடை யெங்குழகா
முடியால் வானவர்கள் முயங்
குந்திருக் காளத்தியாய்
அடியே னுன்னையல்லால் அறி
யேன்மற் றொருவரையே. **#265**

வன்கண்மை உடையவனும், அன்போடு உன் திருவடித் தாமரைகளை உணர்தலைச் செய்யாதவனும் ஆகிய என் நெஞ்சம் உனக்கு உறைவிடமாகுமாறு அதனைக் கோயிலாகக் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற குளிர்ந்த நீண்ட சடையை உடைய எங்கள் அழகனே, தேவர்கள் தம் தலையினால் திருவடியைச் சேர்கின்ற திருக்காளத்திப் பெருமானே, அடியேன் உன்னையன்றி மற்றொருவரைக் கடவுளராக அறிதலே இலன்; ஆதலின், எனக்கு அருள் பண்ணுதல் வேண்டும்.

திருக்காளத்தி

நீறார் மேனியனே நிம
லாநினை யன்றிமற்றுக்
கூறேன் நாவதனாற் கொழுந்
தேயென் குணக்கடலே
பாறார் வெண்டலையிற் பலி
கொண்டுழல் காளத்தியாய்
ஏறே யுன்னையல்லால் இனி
ஏத்த மாட்டேனே. **#266**

திருநீறு நிறைந்த திருமேனியை உடையவனே, தூயவனே, தலையாயவனே, எனக்கு அருட்கடலாய் நிற்பவனே, பருந்து சூழும் வெள்ளிய தலையில் பிச்சையேற்றுத் திரியும், திருக்காளத்திப் பெருமானே, ஆண் சிங்கம் போல்பவனே, அடியேன் உன்னையறிந்தபின் உன்னையன்றிப் பிறர் ஒருவரைப் போற்றுதலே இலன்; என் நாவால் ஒன்று செய்வதாயின், உன்னையன்றி மற்றொரு பொருளைச் சொல்லுதல்தானும் இலேன்; ஆதலின், எனக்கு அருள் பண்ணுதல் வேண்டும்.

திருக்காளத்தி

தளிர்போல் மெல்லடியாள் தனை
யாகத் தமர்ந்தருளி
எளிவாய் வந்தெனுள்ளம் புகு

தவல்ல எம்பெருமான்
களியார் வண்டறையுந் திருக்
காளத்தி யுள்ளிருந்த
ஒளியே யுன்னையல்லால் இனி
யொன்று முணரேனே. **#267**

தளிர்போலும் மெல்லிய பாதங்களையுடைய உமாதேவியைத் திருமேனியில் விரும்பி வைத்தருளி, எளிமை உண்டாக என் உள்ளத்தில் புகவல்ல எம்பெருமானே, மலர்களில் களிப்புப் பொருந்திய வண்டுகள் ஒலிக்கின்ற திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கின்ற அறிவு வடிவனே, அடியேன் உன்னையன்றி மற்றொரு பொருளையும் உணர்தலே இலன்; ஆதலின், எனக்கு அருள்பண்ணுதல் வேண்டும்.

திருக்காளத்தி

காரூ ரும்பொழில்சூழ் கண
நாதனெங் காளத்தியுள்
ஆரா இன்னமுதை அணி
நாவலா ரூரன்சொன்ன
சீரூர் செந்தமிழ்கள் செப்பு
வார்வினை யாயின
போய்ப்பேரா விண்ணுலகம் பெறு
வார்பிழைப் பொன்றிலரே. **#268**

மேகம் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருக்காளத்தியுள் எழுந்தருளியிருக்கின்ற எங்கள் சிவபெருமானாகிய தெவிட்டாத இனிய அமுதம் போல்வானை, அழகிய திருநாவலூரில் தோன்றிய நம்பியாரூரன் பாடிய புகழ் மிக்க இச்செந்தமிழ்ப் பாடல்களைச் சொல்லுகின்றவர்கள், வினையாய் உள்ளன யாவும் நீங்கப்பெற்று, சிவலோகத்தை அடைவார்கள்; குற்றம் யாதும் இலராவர்.

திருக்கற்குடி

திருக்கற்குடி

திருக்கற்குடி,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : உச்சிவரதநாயகர்.
தேவியார் : அஞ்சனாட்சியம்மை.

விடையா ருங்கொடியாய் வெறி
யார்மலர்க் கொன்றையினாய்
படையார் வெண்மழுவா பர
மாய பரம்பரனே
கடியார் பூம்பொழில்சூழ் திருக்
கற்குடி மன்னிநின்ற
அடிகே ளெம்பெருமான் அடி
யேனையும் அஞ்சலென்னே. **#269**

இடபம் எழுதப்பெற்ற கொடியை உடையவனே, நறுமணம் பொருந்திய கொன்றை மாலையை அணிந்தவனே, படைக்கலமாகப் பொருந்திய கூரிய மழுவை ஏந்தியவனே, மேலார்க்கும் மேலானவனே, மணம் நிறைந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த திருக்கற்குடியில் நிலையாக எழுந்தருளியிருக்கும் தலைவனே, எங்கள் கடவுளே, அடியேனையும், 'அஞ்சாதி' எனச் சொல்லி உய்யக் கொண்டருள்.

திருக்கற்குடி

மறையோர் வானவருந் தொழு
தேத்தி வணங்கநின்ற
இறைவா எம்பெருமான் எனக்
கின்னமு தாயவனே
கறையார் சோலைகள்சூழ் திருக்
கற்குடி மன்னிநின்ற
அறவா அங்கணனே அடி
யேனையும் அஞ்சலென்னே. **#270**

அந்தணரும், அமரரும் கைகூப்பித் தொழுது அடி பணிய நிற்கும் இறைவனே, எம்பெருமானே. எனக்கு இனிய அமுதமாய் உள்ளவனே, இருள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருக்கற்குடியில் நிலையாக எழுந்தருளியிருக்கின்ற அறவடிவினனே, அழகிய கண்களையுடையவனே, அடியேனையும், 'அஞ்சாதி' எனச் சொல்லி

உய்யக்கொண்டருள்.

திருக்கற்குடி

சிலையால் முப்புரங்கள் பொடி
யாகச் சிதைத்தவனே
மலைமேல் மாமருந்தே மட
மாதிடங் கொண்டவனே
கலைசேர் கையினனே திருக்
கற்குடி மன்னிநின்ற
அலைசேர் செஞ்சடையாய் அடி
யேனையும் அஞ்சலென்னே. **#271**

வில்லால், திரிபுரங்கள் சாம்பலாகும்படி அழித்தவனே, மலைமேல் உள்ள அரிய மருந்து போல்பவனே, இளமை பொருந்திய மாது ஒருத்தியை இடப்பாகத்திற் கொண்டவனே, மான் பொருந்திய கையை உடையவனே, திருக்கற்குடியில் நிலையாக எழுந்தருளியிருக்கின்ற, நீர் பொருந்திய சிவந்த சடையை உடையவனே, அடியேனையும், 'அஞ்சாதி' என்று சொல்லி உய்யக் கொண்டருள்.

திருக்கற்குடி

செய்யார் மேனியனே திரு
நீல மிடற்றினனே
மையார் கண்ணிபங்கா மத
யானை யுரித்தவனே
கையார் சூலத்தினாய் திருக்
கற்குடி மன்னிநின்ற
ஐயா எம்பெருமான் அடி
யேனையும் அஞ்சலென்னே. **#272**

செம்மை நிறம் பொருந்திய திருமேனியை உடையவனே, அழகிய நீல நிறமான கண்டத்தை உடையவனே, மை பொருந்திய கண்களை உடைய மங்கையது ஒருபாகத்தை விரும்பிக் கொண்டவனே, மதம் பொருந்திய யானையை உரித்தவனே, கையில் பொருந்திய சூலத்தை உடையவனே, திருக்கற்குடியில் நிலையாக எழுந்தருளியிருக்கின்ற தலைவனே, எங்கள் கடவுளே, அடியேனையும், 'அஞ்சாதி' என்று சொல்லி உய்யக்கொண்டருள்.

திருக்கற்குடி

சந்தார் வெண்குழையாய் சரி
கோவண ஆடையனே

பந்தா ரும்விரலாள்ஒரு
பாக மமர்ந்தவனே
கந்தார் சோலைகள்சூழ் திருக்
கற்குடி மன்னிநின்ற
எந்தாய் எம்பெருமான் அடி
யேனையும் ஏன்றுகொள்ளே. **#273**

அழகு நிறைந்த வெள்ளிய குழையை அணிந்தவனே, சரிந்த கோவணமாக உடுக்கப்பட்ட ஆடையை உடையவனே, பந்தின்கண் பொருந்திய விரல்களையுடைய உமையை ஒருபாகத்தில் விரும்பிக் கொண்டவனே, நறுமணம் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருக்கற்குடியில் நிலையாக எழுந்தருளியிருக்கின்ற என் தந்தையே, எங்கள் கடவுளே, அடியேனையும் ஏன்று உய்யக்கொண்டருள்.

திருக்கற்குடி

அரையார் கீளொடுகோ வண
மும்மர வும்மசைத்து
விரையார் கொன்றையுடன் விளங்
கும்பிறை மேலுடையாய்
கரையா ரும்வயல்சூழ் திருக்
கற்குடி மன்னிநின்ற
அரையா எம்பெருமான் அடி
யேனையும் அஞ்சலென்னே. **#274**

அரை வெறுவிதாகாது நிரம்புதற்குரிய கீளையுங் கோவணத்தையும் அரையின்கண் கட்டி, நறுமணம் பொருந்திய கொன்றை மாலையோடு, ஒளி விளங்குகின்ற பிறையையும் சடையிடத்து உடையவனே, வரம்புகள் நீரால் நிறையும் வயல்கள் சூழ்ந்த திருக்கற்குடியில் நிலையாக எழுந்தருளியிருக்கின்ற அரசனே, எங்கள் இறைவனே, அடியேனையும், 'அஞ்சாதி' என்று சொல்லி உய்யக் கொண்டருள்.

திருக்கற்குடி

பாரார் விண்ணவரும் பர
விப்பணிந் தேத்தநின்ற
சீரார் மேனியனே திகழ்
நீல மிடற்றினனே
காரார் பூம்பொழில்சூழ் திருக்
கற்குடி மன்னிநின்ற
ஆரா இன்னமுதே அடி
யேனையும் அஞ்சலென்னே. **#275**

மண்ணுலகத்தவரும், விண்ணுலகத்தவரும் பணிந்து முன்னிலையாகப் பரவவும், படர்க்கையாகப் புகழவும் நிற்கின்ற, அழகு பொருந்திய உருவத் திருமேனியை உடையவனே, விளங்குகின்ற நீல நிறத்தையுடைய கண்டத்தையுடையவனே, மேகங்கள் தவழும் பூஞ்சோலைகள் சூழ்ந்த திருக்கற்குடியில் நிலையாக எழுந்தருளியிருக்கின்ற, தெவிட்டாத அமுதமாய் உள்ளவனே, அடியேனையும், 'அஞ்சாதி' என்று சொல்லி உய்யக்கொண்டருள்.

திருக்கற்குடி

நிலனே நீர்வளிதீ நெடு
வானக மாகிநின்ற
புலனே புண்டரிகத் தயன்
மாலவன் போற்றிசெய்யும்
கனலே கற்பகமே திருக்
கற்குடி மன்னிநின்ற
அனல்சேர் கையினனே அடி
யேனையும் அஞ்சலென்னே. **#276**

நிலமே, நீரே, தீயே, காற்றே, நீண்டவானமே என்னும் ஐந்துமாகிநிற்கும் பெரும்பொருளாய் உள்ளவனே, தாமரை மலரில் உள்ள பிரமன், மாயோன் இருவரும் போற்றிநின்ற நெருப்பாகிய தோற்றத்தை உடையவனே, கற்பகத் தருப்போல்பவனே, திருக்கற்குடியில் நிலையாக எழுந்தருளியிருக்கின்ற, தீ யேந்திய கையை உடையவனே, அடியேனையும், 'அஞ்சாதி' என்று சொல்லி உய்யக் கொண்டருள்.

திருக்கற்குடி

வருங்கா லன்னுயிரை மடி
யத்திரு மெல்விரலால்
பெரும்பா லன்றனக்காய்ப் பிரி
வித்த பெருந்தகையே
கரும்பா ரும்வயல்சூழ் திருக்
கற்குடி மன்னிநின்ற
விரும்பா எம்பெருமான் அடி
யேனையும் வேண்டுதியே. **#277**

பெருமை பொருந்திய சிறுவனுக்குச் சார்பாகி, அவன்மேல் வந்த கூற்றுவன் மடியும்படி, அவனது உயிரைத் திருவடியிலுள்ள மெல்லிய விரல்களால் பிரியும்படி செய்த பெருந்தகையாளனே, கரும்புகள் நிறைந்த வயல்கள் சூழ்ந்த திருக்கற்குடியில் நிலையாக எழுந்தருளியிருக்கின்ற நம்பனே, எங்கள் இறைவனே, அடியேனையும்

நின் அருட்கு உரியவருள் ஒருவனாக விரும்பிக் கொள்.

திருக்கற்குடி

அலையார் தண்புனல்சூழ்ந் தழ
காகி விழவமரும்
கலையார் மாதவர்சேர் திருக்
கற்குடிக் கற்பகத்தைச்
சிலையார் வாணுதலாள் நல்ல
சிங்கடி யப்பனுரை
விலையார் மாலைவல்லார் வியன்
மூவுல காள்பவரே. **#278**

அலை நிறைந்த தண்ணிய நீரால் சூழப்பட்டு அழகுடையதாகி விழாக்கள் நீங்காதிருக்கின்ற, கலை ஞானங்கள் நிறைந்த பெரிய தவத்தவர் சேர்கின்ற திருக்கற்குடியில் எழுந்தருளியிருக்கின்ற கற்பகம் போல்பவனை, விற்போலும் ஒளி பொருந்திய நெற்றியையுடைய நல்ல, 'சிங்கடி' என்பாளுக்குத் தந்தையாகிய நம்பியாரூரன் பாடிய, விலை மிகுந்த இத்தமிழ்ப் பாமாலையைப் பாட வல்லவர்கள், அகன்ற மூன்றுலகத்தையும் ஆளுதற்கு உரியவராவர்.

திருக்கடவூர்வீரட்டம்

திருக்கடவூர்

திருக்கடவூர்வீரட்டம்,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அமிர்தகடேசுவரர்.
தேவியார் : அபிராமியம்மை.

பொடியார் மேனியனே புரி
நூலொரு பாற்பொருந்த
வடியார் மூவிலைவேல் வள
ரங்கையின் மங்கையொடும்
கடியார் கொன்றையனே கட
வூர்தனுள் வீரட்டத்தெம்
அடிகேள் என்னமுதே எனக்
கார்துணை நீயலதே. **#279**

திருவெண்ணீறு நிறைந்த திருமேனியை உடையவனே, புரியாகிய நூல், ஒருபால் மாதினோடும் மற்றொரு பாற்பொருந்தி விளங்க, கூர்மை பொருந்திய முத்தலை வேல் (சூலம்) நீங்காதிருக்கின்ற அகங்கையினை உடைய, நறுமணம் பொருந்திய கொன்றை மாலையை அணிந்தவனே, திருக்கடவூரினுள், 'வீரட்டம்' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற எங்கள் தலைவனே, என்னுடைய அமுதம் போல்பவனே, எனக்கு நீயல்லது வேறு யார் துணை!

திருக்கடவூர்

பிறையா ருஞ்சடையாய் பிர
மன்தலை யிற்பலிகொள்
மறையார் வானவனே மறை
யின்பொரு ளானவனே
கறையா ரும்மிடற்றாய் கட
வூர்தனு வீரட்டத்தெம்
இறைவா என்னமுதே எனக்
கார்துணை நீயலதே. **#280**

பிறை பொருந்திய சடையை உடையவனே, பிரமன் தலையைக் கையில் ஏந்தி அதிற் பிச்சையை ஏற்கின்ற, வேதத்தை ஓதுகின்ற தேவனே, வேதத்தின் பொருளாய் உள்ளவனே, நஞ்சு தங்கிய கண்டத்தை உடையவனே, திருக்கடவூரினுள், 'வீரட்டம்' என்னும் கோயிலில்

எழுந்தருளியிருக்கின்ற எங்கள் இறைவனே, என்னுடைய அமுதம் போல்பவனே, எனக்கு நீயல்லாது வேறு யாவர் துணை?

திருக்கடவூர்

அன்றா லின்னிழற்கீழ் அறம்
நால்வர்க் கருள்புரிந்து
கொன்றாய் காலனுயிர் கொடுத்
தாய்மறை யோனுக்குமான்
கன்றா ருங்கரவா கட
வூர்த்திரு வீரட்டத்துள்
என்றா தைபெருமான் எனக்
கார்துணை நீயலதே. **#281**

மான் கன்று பொருந்திய கையை உடையவனே, திருக்கடவூர்த் திருவீரட்டத்துள் எழுந்தருளியிருக்கின்ற என் தந்தையாகிய பெருமானே, நீ, அன்று ஆல் நிழலின்கண் இருந்து நால்வர் முனிவர்கட்கு அருள்பண்ணி, காலன் உயிரைக் கொன்ற வன்செயலையும் செய்தாய்; அந்தணச் சிறுவனுக்கு முடிவில்லாத வாழ்நாளைக் கொடுத்தாய்; இன்னதன்மையை உடைய நீயல்லாது வேறு யாவர் எனக்குத் துணை!

திருக்கடவூர்

போரா ருங்கரியின் னுரி
போர்த்துப்பொன் மேனியின்மேல்
வாரா ரும்முலையாள் ஒரு
பாக மகிழ்ந்தவனே
காரா ரும்மிடற்றாய் கட
வூர்தனுள் வீரட்டானத்
தாரா வென்னமுதே எனக்
கார்துணை நீயலதே. **#282**

போர்த் தொழில் பொருந்திய யானையின் தோலைப் பொன்போலும் மேனிமேல் போர்த்துக்கொண்டும், அம்மேனியின் ஒரு பாகத்தில் கச்சுப் பொருந்திய தனங்களையுடைய உமையை மகிழ்ந்து வைத்தும் உள்ளவனே, கருமை பொருந்திய கண்டத்தை உடையாய், திருக்கடவூரினுள் 'வீரட்டானம்' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற, தெவிட்டாத என்னுடைய அமுதம் போல்பவனே, எனக்கு நீயல்லாது வேறு யாவர் துணை!

திருக்கடவூர்

மையார் கண்டத்தினாய் மத

மாவுரி போர்த்தவனே
பொய்யா தென்னுயிருட் புகுந்
தாய் இன்னம் போந்தறியாய்
கையார் ஆடரவா கட
வூர்தனுள் வீரட்டத்தெம்
ஐயா என்னமுதே எனக்
கார்துணை நீயலதே. **#283**

கருமை பொருந்திய கண்டத்தையுடையவனே யானையின் தோலைப் போர்த்தவனே, கையின்கண் பொருந்திநிற்கும் படமெடுத்து ஆடுகின்ற பாம்பை உடையவனே, திருக்கடவூரினுள் 'வீரட்டானம்' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற எங்கள் தலைவனே, என்னுடைய அமுதம்போல்பவனே, நீ தப்பாது என் உயிரினுள் புகுந்தாய்; அங்ஙனம் புகுந்ததன்றி இதுகாறும் வெளிப் போந் தறியாய்; ஆதலின், எனக்கு நீயல்லாது வேறு யாவர் துணை!

திருக்கடவூர்

மண்ணீர் தீவெளிகால் வரு
பூதங்க ளாகிமற்றும்
பெண்ணோ டாணலியாய் பிற
வாவுரு வானவனே
கண்ணா ருண்மணியே கட
வூர்தனுள் வீரட்டத்தெம்
அண்ணா என்னமுதே
எனக் கார்துணை நீயலதே. **#284**

'நிலம், நீர், தீ, காற்று, வானம்' என்று சொல்ல வருகின்ற பூதங்களாகியும், அப் பூதங்களாலாகிய, 'பெண், ஆண், அலி' என்னும் உடம்புகளோடு காணப்படும் உயிர்களாகியும் அவற்றில் வேறற நின்று, நீ உருவங்கொள்ளுமிடத்து, யாதொரு பிறப்பினும் படாத திருமேனியைக் கொண்டு நிற்பவனே, கண்ணின் உள்ளாற் பொருந்தியுள்ள மணிபோல்பவனே, திருக்கடவூரினுள், 'வீரட்டானம்' என்னும் கோயிலில் எழுந்தருளியுள்ள எங்கள் தலைவனே, என்னுடைய அமுதம்போல்பவனே, எனக்கு நீயல்லாது வேறு யாவர் துணை!

திருக்கடவூர்

எரியார் புன்சடைமேல் இள
நாக மணிந்தவனே
நரியா ருஞ்சுடலை நகு
வெண்டலை கொண்டவனே

கரியா ரீருரியாய் கட
வூர்தனுள் வீரட்டத்தெம்
அரியாய் என்னமுதே எனக்
கார்துணை நீயலதே. **#285**

தீப்போலப் பொருந்தியுள்ள புல்லிய சடையின் மேல் இளமையான பாம்பை அணிந்தவனே, நரிகள் பொருந்திய சுடலைக்கண் உள்ள, சிரிக்கும் வெண்டலையைக் கையில் கொண்டவனே, யானையினிடத்துப் பொருந்தியிருந்து உரிக்கப்பட்ட தோலை உடையவனே, திருக்கடவூரினுள், 'வீரட்டானம்' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற, எங்கள் அரிய பொருளானவனே, என்னுடைய அமுதம் போல்பவனே, எனக்கு நீயல்லாது வேறு யார் துணை!

திருக்கடவூர்

வேறா உன்னடியேன் விளங்
குங்குழைக் காதுடையாய்
தேறேன் உன்னையல்லாற் சிவ
னேஎன் செழுஞ்சுடரே
காறார் வெண்மருப்பா கட
வூர்த்திரு வீரட்டத்துள்
ஆறார் செஞ்சடையாய் எனக்
கார்துணை நீயலதே. **#286**

ஒளி வீசுகின்ற குழையணிந்த காதினை உடையவனே, சிவனே, என்னுடைய செம்மையான விளக்கே, காறையாகப் பொருந்திய வெள்ளிய தந்தத்தை உடையவனே, திருக்கடவூரின்கண் உள்ள, 'வீரட்டானம்' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற, நீர் பொருந்திய சடையை உடையவனே, உன் அடியவனாகிய யான், உன்னையல்லது வேறுசிலர் கடவுளர் உளராக நினையேன்; ஆதலின், எனக்கு நீயல்லாது வேறு யார் துணை!

திருக்கடவூர்

அயனோ டன்றரியும் மடி
யும்முடி காண்பரிய
பயனே யெம்பரனே பர
மாய பரஞ்சுடரே
கயமா ருஞ்சடையாய் கட
வூர்த்திரு வீரட்டத்துள்
அயனே என்னமுதே எனக்
கார்துணை நீயலதே. **#287**

முன்னொரு ஞான்று, பிரமனும் திருமாலும் அடியும் முடியும் தேடிப்போய்க் காணுதல் இயலாது நின்ற பொருளாய் உள்ளவனே, எங்கள் கடவுளே, மேலான ஒளிக்கும் மேலான ஒளியாய் இருப்பவனே, மிக்க நீர் பொருந்திய சடையை உடையவனே, திருக்கடவூரின்கண் உள்ள, 'திருவீரட்டானம், என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற பிறப்பில்லாதவனே' என்னுடைய அமுதம் போல்பவனே, எனக்கு நீயல்லாது வேறு யார் துணை!

திருக்கடவூர்

காரா ரும்பொழில்சூழ் கட
வூர்த்திரு வீரட்டத்துள்
ஏரா ரும்மிறையைத் துணை
யாஎழில் நாவலர்கோன்
ஆரூ ரன்னடியான் அடித்
தொண்ட னுரைத்ததமிழ்
பாரோர் ஏத்தவல்லார் பர
லோகத் திருப்பாரே. **#288**

மேகங்கள் தவழ்கின்ற சோலைகள் சூழ்ந்த திருக்கடவூரின்கண் உள்ள, 'திருவீரட்டானம்' என்னும் கோயிலில் விளங்குதல் பொருந்திய இறைவனையே துணையாக விதந்து, அழகிய திருநாவலூரில் தோன்றியவனும், திருவாரூர்ப் பெருமானுக்கு அடிமையும் அப்பெருமான் அடிநிழலை நீங்காதிருந்து தொண்டு செய்பவனும் ஆகிய நம்பியாரூரன் பாடிய இத் தமிழ்ப் பாடல்களை நிலவுலகில் உள்ளவர் பாட வல்லாராயின், சிவலோகத்தில் இருத்தல் திண்ணம்.

திருக்குருகாவூர்

திருக்குருகாவூர்,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வெள்ளிடையப்பர்.
தேவியார் : காவியங்கண்ணியம்மை.

இத்தனை யாமாற்றை
யறிந்திலேன் எம்பெருமான்
பித்தனே யென்றுன்னைப்
பேசுவார் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை
மாணிக்க முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர்
வெள்ளடை நீயன்றே. **#289**

எங்கள் பெருமானே, திருக்குருகாவூர் வெள்ளடைக் கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, உனது திருவருட் செயல் இத்துணையதாயின காரணத்தை யான் அறிந்திலேன்; உன் இயல்பினை அறியாதவரெல்லாம் உன்னை, 'பித்தன்' என்று இகழ்ந்து பேசுவர்; அஃது அவ்வாறாக, நீ, முத்தையும் மாணிக்கத்தையும், பிற மணிகளையும் தோற்றுவித்த வித்தாய் வெளிப்பட்டவன் அன்றோ!

திருக்குருகாவூர்

ஆவியைப் போகாமே
தவிர்த்தென்னை யாட்கொண்டாய
வாவியிற் கயல்பாயக்
குளத்திடை மடைதோறுங்
காவியுங் குவளையுங்
கமலஞ்செங் கழுநீரும்
மேவிய குருகாவூர்
வெள்ளடை நீயன்றே. **#290**

வாவிகளில் கயல்மீன்கள் துள்ள, குளத்திலும், நீர்மடைகளிலும், கருங்குவளையும், செங்குவளையும், தாமரையும், செங்கழுநீரும் ஆகிய பூக்கள் பொருந்தி நிற்கும் திருக்குருகாவூர் வெள்ளடைக் கோயிலில் எழுந்தருளியிருப்பவனே. நீயன்றோ என்னை உயிரைப் போகாது நிறுத்தி ஆட்கொண்டருளினாய்!

திருக்குருகாவூர்

பாடுவார் பசிதீர்ப்பாய்
பரவுவார் பிணிகளைவாய்
ஒடுநன் கலனாக
உண்பலிக் குழல்வானே
காடுநல் லிடமாகக்
கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர்
வெள்ளடை நீயன்றே. **#291**

தலை ஓடே சிறந்த உண்கலமாயிருக்க, உண்ணுகின்ற பிச்சை ஏற்றற்குத் திரிபவனே, காடே சிறந்த அரங்காய் இருக்க, செறிந்த இருளிலே நடனமாடுகின்ற கோலத்தை உடையவனே, திருக்குருகாவூர் வெள்ளடைக் கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, நீ உன்னை இசைப்பாடலால் பாடுகின்றவரும், பிறவாற்றால் துதிக்கின்றவரும் ஆகிய அடியார்களது பசியைத் தீர்த்து, நோயைப் பற்றறுப் பாயன்றோ!

திருக்குருகாவூர்

வெப்பொடு பிணியெல்லாந்
தவிர்த்தென்னை யாட்கொண்டாய்
ஒப்புடை யொளிநீலம்
ஓங்கிய மலர்ப்பொய்கை
அப்படி யழகாய
அணிநடை மடவன்னம்
மெய்ப்படு குருகாவூர்
வெள்ளடை நீயன்றே. **#292**

ஒன்றோடு ஒன்று நிகரொத்த ஒளியையுடைய நீலப் பூக்கள் சிறந்து விளங்குகின்ற, மலர்களையுடைய பொய்கைகளில், மிகவும் அழகியவாய்த் தோன்றுகின்ற, அழகிய நடையையுடைய இளமையான அன்னங்கள் நிலைபெற்று வளர்கின்ற திருக்குருகாவூர் வெள்ளடைக் கோயிலில் எழுந்தருளியிருப்பவனே. நீயன்றோ, என்னை வெப்புநோயோடு பிற நோய்கள் எல்லாவற்றையும் நீக்கி உய்யக்கொண்டாய்!

திருக்குருகாவூர்

வரும்பழி வாராமே
தவிர்த்தென்னை யாட்கொண்டாய்
சுரும்புடை மர்க்கொன்றைச்

சுண்ணவெண் ணீற்றானே
அரும்புடை மலர்ப்பொய்கை
அல்லியும் மல்லிகையும்
விரும்பிய குருகாவூர்
வெள்ளடை நீயன்றே. **#293**

வண்டுகளை உடைய கொன்றை மலர் மாலையையும், பொடியாகிய வெள்ளிய திருநீற்றையும் உடையவனே, அரும்புகளையுடைய மலர்களைக் கொண்டுள்ள பொய்கைகளில் உள்ள ஆம்பல் மலர்களையும், பூங்காவில் உள்ள மல்லிகை மலர்களையும் மிகுதியாக உடைய திருக்குருகாவூர் வெள்ளடைக் கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, நீயன்றோ, எனக்கு வருதற்பாலதாய பழிவாராமல் தடுத்து, என்னை ஆட்கொண்டாய்!

<u>திருக்குருகாவூர்</u>

பண்ணிடைத் தமிழொப்பாய்
பழத்தினிற் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய்
கடுவிருட் சுடரொப்பாய்
மண்ணிடை யடியார்கள்
மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர்
வெள்ளடை நீயன்றே. **#294**

திருக்குருகாவூர் வெள்ளடைக் கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, பரவெளியின்கண் உள்ள நீ, இம் மண்ணுலகில் வாழும் அடியவர்களது மனத்தின்கண்யாதொரு துன்பமும் தோன்றாதவாறு, பண்ணின்கண் இனிமையைப் போன்றும், பழத்தின்கண் சுவையைப் போன்றும், கண்ணின்கண் மணியைப் போன்றும், மிக்க இருளின்கண் விளக்கைப் போன்றும் நிற்கின்றாயன்றோ!

<u>திருக்குருகாவூர்</u>

போந்தனை தரியாமே
நமன்றமர் புகுந்தென்னை
நோந்தன செய்தாலும்
நுன்னல தறியேன்நான்
சாந்தனை வருமேலுந்
தவிர்த்தென்னை யாட்கொண்ட
வேந்தனே குருகாவூர்
வெள்ளடை நீயன்றே. **#295**

இறக்கும் நிலை வரும் காலத்தை நீக்கி என்னை ஆட்கொண்ட தலைவனே, திருக்குருகாவூர் வெள்ளடைக் கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, எனது துன்பத்தைச் சிறிதும் பொறாயர்ய்ப் போந்தவன் நீயேயன்றோ! ஆதலின், இயமனுக்கு ஏவலராய் உள்ளார் வந்து எனக்கு யான் துன்புறும் செயல்களைச் செய்யினும், யான் உன்னையன்றி வேறொருவரைத் துணையாக அறியமாட்டேன்.

திருக்குருகாவூர்

மலக்கில்நின் னடியார்கள்
மனத்திடை மால்தீர்ப்பாய்
சலச்சல மிடுக்குடைய
தருமனார் தமரென்னைக்
கலக்குவான் வந்தாலுங்
கடுந்துயர் வாராமே
விலக்குவாய் குருகாவூர்
வெள்ளடை நீயன்றே. **#296**

அலைவில்லாத உள்ளத்தினையுடைய உன் அடியார்களது மனத்தில் உள்ள மயக்கத்தினைப் பற்றறக்களைபவனே, திருக்குருகாவூர் வெள்ளடைக் கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, துன்பத்தைத் தருகின்ற வெகுளியையும், மிடுக்கினையும் உடைய இயமன் தூதுவர் என்னை அச்சுறுத்த வந்தாலும், அவர்களால் வரும் மிக்க துயரத்தையும் வாராமலே விலக்குவோன் நீயேயன்றோ!

திருக்குருகாவூர்

படுவிப்பாய் உனக்கேயாட்
பலரையும் பணியாமே
தொடுவிப்பாய் துகிலொடுபொன்
தோலுடுத் துழல்வானே
கெடுவிப்பாய் அல்லாதார்க்
கேடிலாப் பொன்னடிக்கே
விடுவிப்பாய் குருகாவூர்
வெள்ளடை நீயன்றே. **#297**

திருக்குருகாவூர் வெள்ளடைக் கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, நல்லோரைப் பிறரை வணங்கித் துன்புறாதவாறு உனக்கே ஆட்படச் செய்பவனும், நீ தோலை உடுத்து எலும்பை அணியினும் அவர்கட்கு நல்லாடைகளை உடுப்பத்துப் பொன்னணிகளை அணிவிப்பவனும், முடிவில் அவர்களை அழிவில்லாத உனது பொன்போலும் செவ்விய திருவடிக்கண்ணே புகுவிப்பவனும், நல்லோரல்லாதாரைக்

கெடுவிப்பவனும் நீயேயன்றோ!

திருக்குருகாவூர்

வளங்கனி பொழின்மல்கு
வயலணிந் தழகாய
விளங்கொளி குருகாவூர்
வெள்ளடை யுறைவானை
இளங்கிளை யாரூரன்
வனப்பகை யவளப்பன்
உளங்குளிர் தமிழ்மாலை
பத்தர்கட் குரையாமே. **#298**

வளப்பம் மிகுந்த சோலைகளையும், நிறைந்த வயல்களையும் சூழக் கொண்டு அழகிதாய் நிற்கின்ற, வீசுகின்ற ஒளியினையுடைய திருக்குருகாவூர் வெள்ளடைக் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனை, சிங்கடிக்குத் தங்கையாகிய, 'வனப்பகை' என்பவளுக்குத் தந்தையாம் நம்பியாரூரன், மனம் இன்புற்றுப் பாடிய இத் தமிழ்மாலை, அவன் அடியார்கட்கு அவனைத் துதித்தற்கு உதவும் புகழ்மாலையாய் நிற்கும்.

திருக்கருப்பறியலூர்

திருக்கருப்பறியலூர்

திருக்கருப்பறியலூர்,
பண் - நட்டராகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : குற்றம்பொறுத்தவீசுவரர்.
தேவியார் : கோல்வளைநாயகியம்மை.

சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில் வைத்துகந்து
திறம்பா வண்ணம்
கைம்மாவி னுரிவைபோர்த் துமைவெருவக் கண்டானைக்
கருப்ப றியலூர்க்
கொய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட மயிலாடுங்
கொகுடிக் கோயில்
எம்மானை மனத்தினால் நினைந்தபோ தவர்நமக்
கினிய வாறே. **#299**

யானைத் தோலைப் போர்த்துநின்ற காலத்தில் உமையவள் அஞ்ச, அதனைக் கண்டு நின்றவனும், திருக்கருப்பறியலூரில் உள்ள, தளிர் கிள்ளுதற்குரிய மாமரங்களில் இருந்து குயில்கள் பாட, கீழே மயில்கள் ஆடுகின்ற சோலைகளையுடைய கொகுடிக் கோயிலின்கண் எழுந்தருளியுள்ள எம்பெருமானும் ஆகிய இறைவனை, நாம் உடலை நேரே நிறுத்திக் கண்களைச் சிறிது மூடியிருந்து உள்ளத்தில் அன்போடு நிலை பெயராது இருத்தி, இவ்வாறு மனத்தினால் நினைந்தபோது, அவன் நமக்கு இனியனாகின்ற தன்மை சொல்லுதற்கரிது.

திருக்கருப்பறியலூர்

நீற்றாரு மேனியராய் நினைவார்தம் உள்ளத்தே
நிறைந்து தோன்றும்
காற்றானைத் தீயானைக் கதிரானை மதியானைக்
கருப்ப றியலூர்க்
கூற்றானை கூற்றுதைத்துக் கோல்வளையா ளவளோடுங்
கொகுடிக் கோயில்
ஏற்றானை மனத்தினால் நினைந்தபோ தவர்நமக்
கினிய வாறே. **#300**

திருநீற்றால் நிறைந்த மேனியை உடையவராய் நினைக்கின்றவரது உள்ளத்தில் நிறைந்து தோன்றுபவனும், 'காற்று' தீ, ஞாயிறு, திங்கள்' என்னும் பொருள்களாய் நிற்பவனும், அழித்தல்

தொழிலையுடையவனும், கூற்றுவனை உதைத்தவனும், வரிசையாகப் பொருந்திய வளைகளையுடைய உமாதேவியோடும் திருக்கருப்பறியலூரில் உள்ள கொகுடிக் கோயிலைத் தனக்கு உரிய இடமாக ஏற்றுக் கொண்டவனும் ஆகிய இறைவனை நாம் மனத்தினால் நினைந்த போது, அவன் நமக்கு இனியனாகின்ற தன்மை சொல்லுதற்கரிது.

திருக்கருப்பறியலூர்

முட்டாமே நாள்தோறும் நீர்மூழ்கிப் பூப்பறித்து
மூன்று போதும்
கட்டார்ந்த இண்டைகொண் டடிசேர்த்தும் அந்தணர்தங்
கருப்ப றியலூர்க்
கொட்டாட்டுப் பாட்டாகி நின்றானைக் குழகனைக்
கொகுடிக் கோயில்
எட்டான மூர்த்தியை நினைந்தபோ தவர்நமக்
கினிய வாறே. **#301**

நாள்தோறும், 'காலை, நண்பகல், மாலை' என்னும் மூன்று பொழுதுகளிலும், தப்பாமல் நீரின்கண் மூழ்கிப் பூக்களைப் பறித்து, அவைகளை, கட்டுதல் பொருந்திய இண்டை மாலையாகச் செய்துகொண்டு, மனத்தைத் தனது திருவடிக்கண் சேர்த்துகின்ற அந்தணர்களது திருக்கருப்பறியலூரில் உள்ள கொகுடிக் கோயிலில், முழவம் முதலியவற்றின் கொட்டும், அவற்றிற்கேற்ற கூத்தும், பாட்டும் ஆகியவற்றை விரும்பி இருக்கின்ற அழகனும், எட்டுருவாயவனும் ஆகிய இறைவனை நாம் மனத்தினால் நினைந்தபோது, அவன் நமக்கு இனியனாகின்ற தன்மை சொல்லுதற்கரிது.

திருக்கருப்பறியலூர்

விருந்தாய சொன்மாலை கொண்டேத்தி வினைபோக
வேலி தோறும்
கருந்தாள வாழைமேற் செங்கனிகள் தேன்சொரியுங்
கருப்ப றியலூர்க்
குருந்தாய முள்ளெயிற்றுக் கோல்வளையா ளவளோடுங்
கொகுடிக் கோயில்
இருந்தானை மனத்தினால் நினைந்தபோ தவர்நமக்
கினிய வாறே. **#302**

கல்வியில் வல்ல அடியார்கள் புதியனவாகிய பல சொல்மாலைகளைக் கொண்டு புகழ்ந்து வினை நீங்கப் பெறுமாறு, வேலிகள் தோறும், பசிய அடியினையுடைய செவ்வாழைகளின்மேல் செவ்விய பழங்கள்

சாற்றைச் சொரிந்து நிற்கின்ற திருக்கருப்பறியலூரில் உள்ள கொகுடிக் கோயிலில் இளையவாகிய கூரிய பற்களையும், வரிசையான வளைகளையும் உடைவளாகிய உமாதேவியோடும் எழுந்தருளியிருக்கின்ற பெருமானை நாம் மனத்தினால் நினைந்த போது, அவன் நமக்கு இனியனாகின்ற தன்மை சொல்லுதற்கரிது.

திருக்கருப்பறியலூர்

பொடியேறு திருமேனிப் பெருமானைப் பொங்கரவக்
கச்சை யானைக்
கடிநாறும் பூம்பொய்கைக் கயல்வாளை குதிகொள்ளுங்
கருப்ப றியலூர்க்
கொடியேறி வண்டினமுந் தண்டேனும் பண்செய்யுங்
கொகுடிக் கோயில்
அடியேறு கழலானை நினைந்தபோ தவர்நமக்
கினிய வாறே. **#303**

நீறு மிகுந்திருக்கின்ற திருமேனியையுடைய பெருமானும், சீற்றம் மிக்க பாம்பாகிய அரைக்கச்சையை உடையவனும், நறுமணம் வீசுகின்ற பூப் பொய்கைகளில் கயல் மீனும், வாளை மீனும் குதிகொள்கின்ற திருக்கருப்பறியலூரில் உள்ள, கொடிப் பூக்களில், 'வண்டு' என்றும், 'தேன்' என்றும் சொல்லப்படுகின்ற அவற்றது கூட்டங்கள் மொய்த்து இசைபாடுகின்ற கொகுடிக் கோயிலில் எழுந்தருளியிருப்பவனும், திருவடியிற் பொருந்திய கழலையுடையவனும் ஆகிய இறைவனை நாம் மனத்தினால் நினைந்தபோது, அவன் நமக்கு இனியனாகின்ற தன்மை சொல்லுதற்கரிது.

திருக்கருப்பறியலூர்

பொய்யாத வாய்மையாற் பொடிபூசிப் போற்றிசைத்துப்
பூசை செய்து
கையினால் எரியோம்பி மறைவளர்க்கும் அந்தணர்தங்
கருப்ப றியலூர்க்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலுங்
கொகுடிக் கோயில்
ஐயனைஎன் மனத்தினால் நினைந்தபோ தவர்நமக்
கினிய வாறே. **#304**

பொய்கூறாத வாய்மையான உள்ளத்தோடு திருநீற்றை அணிந்து, 'போற்றி' எனச் சொல்லிப் பல வகை வழிபாடுகளையும் செய்து தங்கள் கையாலே தீயை எரிவித்து வேத ஒழுக்கத்தை வளர்க்கின்ற அந்தணர்களது திருக்கருப்பறியலூரில் உள்ள, கொய்தல் பொருந்திய

பூஞ்சோலைகளில் குயில்கள் கூவ, அவற்றோடு மயில்கள் ஆடுகின்ற கொகுடிக் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற தலைவனாகிய இறைவனை யான் என் மனத்தினால் நினைந்தபோது, அவன் நமக்கு இனியனாகின்ற தன்மை சொல்லுதற்கரிது.

திருக்கருப்பறியலூர்

செடிகொள்நோய உள்ளளவுந் தீவினையுந் தீர்ந்தொழியச்
சிந்தை செய்ம்மின்
கடிகொள்பூந் தடமண்டிக் கருமேதி கண்படுக்குங்
கருப்ப றியலூர்க்
கொடிகொள்பூ நுண்ணிடையாள் கோல்வளையா ளவளோடுங்
கொகுடிக் கோயில்
அடிகளையென் மனத்தினால் நினைந்தபோ தவர்நமக்
கினிய வாறே.. **#305**

நறுமணத்தைக் கொண்ட பூக்களையுடைய பொய்கையின் கரைகளில் கரிய எருமைகள் மிக்கு உறங்குகின்ற திருக்கருப்பறியலூரில் உள்ள கொகுடிக் கோயிலில் கொடிபோலும் அழகிய நுண்ணிய இடையினையும், வரிசையான வளைகளையும் உடைய உமையம்மையுடன் எழுந்தருளியிருக்கின்ற இறைவனை என் மனத்தினால் நினைந்தபோது அவன் நமக்கு இனியனாகின்ற தன்மை சொல்லுதற்கரிது; ஆதலின், துன்பந் தருவனவாய் உள்ள நோய்களும், தீவினைகளும் ஒருதலையாக நீங்குதற் பொருட்டு அவனை நினையுங்கள்.

திருக்கருப்பறியலூர்

பறையாத வல்வினைகள் பறைந்தொழியப் பன்னாளும்
பாடி யாடிக்
கறையார்ந்த கண்டத்தன் எண்டோளன் முக்கண்ணன்
கருப்ப றியலூர்க்
குறையாத மறைநாவர் குற்றேவ லொழியாத
கொகுடிக் கோயில்
உறைவானை மனத்தினால் நினைந்தபோ தவர்நமக்
கினிய வாறே. **#306**

கருமை நிறம் பொருந்திய கண்டத்தையும், எட்டுத் தோள்களையும், மூன்று கண்களையும் உடையவனும், திருக்கருப்பறியலூரில் உள்ள குறைவுபடாத வேதத்தை உடைய நாவினராகிய அந்தணர்கள் தம் சிறு பணிவிடைகளை நீங்காது செய்கின்ற கொகுடிக் கோயிலில் எழுந்தருளியுள்ளவனும் ஆகிய இறைவனை, நாம், நீங்குதற்கரிய வலிய

வினைகள் நீங்குமாறு பல நாளும் பாடியும், ஆடியும் மனத்தினால் நினைந்தபோது, அவன் நமக்கு இனியனாகின்ற தன்மை சொல்லுதற்கரிது.

திருக்கருப்பறியலூர்

சங்கேந்து கையானுந் தாமரையின் மேலானுந்
தன்மை காணாக்
கங்கார்ந்த வார்சடைக ளுடையானை விடையானைக்
கருப்ப றியலூர்க்
கொங்கார்ந்த பொழிற்சோலை சூழ்கனிகள் பலஉதிர்க்குங்
கொகுடிக் கோயில்
எங்கோனை மனத்தினால் நினைந்தபோ தவர்நமக்
கினிய வாறே. **#307**

சங்கினை ஏந்துகின்ற கையினை யுடையவனாகிய திருமாலும், தாமரைமலர்மேல் இருப்பவனாகிய பிரமனும்காண இயலாத, கங்கை பொருந்திய நீண்ட சடைகளையுடையவனும், இடபத்தை ஊர்பவனும், திருக்கருப்பறியலூரில் உள்ள, தேன் நிறைந்த பொழிலாகிய சோலைகள், சுற்றிலும் கனிகள் பலவற்றை உதிர்க்கின்ற கொகுடிக் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற எங்கள் தலைவனும் ஆகிய இறைவனை நாம் மனத்தினால் நினைந்தபோது, அவன் நமக்கு இனியனாகின்ற தன்மை சொல்லுதற்கரிது.

திருக்கருப்பறியலூர்

பண்டாழின் னிசைமுரலப் பன்னாளும் பாவித்துப்
பாடி யாடிக்
கண்டார்தங் கண்குளிருங் களிக்கமுகம் பூஞ்சோலைக்
கருப்ப றியலூர்க்
குண்டாடுஞ் சமணருஞ் சாக்கியரும் புறங்கூறுங்
கொகுடிக் கோயில்
எண்டோளெம் பெருமானை நினைந்தபோ தவர்நமக்
கினிய வாறே. **#308**

கண்டவரது கண்கள் குளிர்தற்கு வழியாகிய கமுகஞ் சோலைகளையும், களிப்பைத் தருகின்ற பூஞ்சோலைகளையும் உடைய திருக்கருப்பறியலூரில் உள்ள கொகுடிக் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற, கீழ்மைத் தொழில்களைப் பயில்கின்ற சமணராலும், புத்தராலும் புறங்கூறப்படுகின்ற, எட்டுத் தோள்களையுடைய எம்பெருமானை, நாம், பல நாள்களும் உள்ளத்திற் கருதி, பண்பொருந்துதற்கு அடிநிலையாகிய இனிய சுருதியை,

கூட்டுவார் கூட்டப் பல இசைப் பாடல்களைப் பாடியும், ஆடியும் மனத்தினால் நினைந்த போது, அவன் நமக்கு இனியனாகின்ற தன்மை சொல்லுதற்கரிது.

திருக்கருப்பறியலூர்

கலைமலிந்த தென்புலவர் கற்றோர்தம் மிடர்தீர்க்குங்
கருப்ப றியலூர்க்
குலைமலிந்த கோட்டெங்கு மட்டொழுகும் பூஞ்சோலைக்
கொகுடிக் கோயில்
இலைமலிந்த மழுவானை மனத்தினா லன்புசெய்
தின்ப மெய்தி
மலைமலிந்த தோளூரன் வனப்பகையப் பன்னுரைத்த
வண்ட மிழ்களே. **#309**

திருக்கருப்பறியலூரில் உள்ள, குலைகள் நிறைந்த வலிய தென்னை மரங்களையும், தேன் ஒழுகுகின்ற பூஞ்சோலைகளையும் உடைய கொகுடிக் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற, இலைத் தன்மை மிகுந்த மழுப்படையை உடைய இறைவனை, 'வனப் பகை' என்பவளுக்குத் தந்தையாகிய மலைபோலும் தோள்களையுடைய நம்பியாரூரன் மனத்தினால் நினைத்தலாகிய அன்புச் செயலைச் செய்து, அதனானே இன்பமுற்றுப் பாடிய வளப்பமான இத்தமிழ்ப் பாமாலையே, தன்னைக் கற்றவர்களாகிய கல்வி மிக்க தமிழ்ப் புலவர்களது துன்பத்தினைக் களையும்.

திருஇடையாற்றுத்தொகை

திருஇடையாற்றுத்தொகை,
பண் - கொல்லி

முந்தை யூர்முது குன்றங் குரங்கணின் முட்டம்
சிந்தை யூர்நன்று சென்றடை வான்திரு வாரூர்
பந்தை யூர்பழை யாறு பழனம்பைஞ் ஞீலி
எந்தையூ ரெய்த மானிடை யாறிடை மருதே. **#310**

அடியார்களது உள்ளமாகிய ஊரையே விரும்பிச் சென்று அடைபவனும், எம் தந்தையும், யாவராலும் அடையப்படும் பெருமானும் ஆகிய இறைவனது ஊர்கள், 'பழைய ஊராகிய முதுகுன்றம், குரங்கணின்முட்டம், ஆரூர், மகளிரது பந்துகள் உலாவுகின்ற பழையாறு, பழனம், பைஞ்ஞீலி, இடையாறு, இடைமருது' என்னும் இவைகளே.

திருஇடையாற்றுத்தொகை

சுற்று மூர்சுழி யல்திருச் சோபுரந் தொண்டர்
ஒற்று மூரொற்றி யூர்திரு வூற லொழியாப்
பெற்ற மேறிபெண் பாதியிடம் பெண்ணைத் தெண்ணீர்
எற்ற மூரெய்த மானிடை யாறிடைமருதே. **#311**

இடபத்தை ஒழியாது ஏறுகின்றவனும், பெண்ணினைக் கொண்ட பாதி உடம்பை உடையவனும், யாவராலும் அடையப்படும் பெருமானும் ஆகிய இறைவனது ஊர்கள், 'அடியார்கள் சென்று சூழும் ஊராகிய சுழியல், சோபுரம், அவர்கள் ஆராய்கின்ற ஒற்றியூர், ஊறல், பெண்ணையாற்றின் தெளவாகிய நீர் மோதுகின்ற இடையாறு, இடைமருது' என்னும் இவைகளே.

திருஇடையாற்றுத்தொகை

கடங்க ளூர்திருக் காரி கரைகயி லாயம்
விடங்க ளூர்திரு வெண்ணிஅண் ணாமலை வெய்ய
படங்க ளூர்கின்ற பாம்பரை யான்பரஞ் சோதி
இடங்கொ ளூரெய்த மானிடை யாறிடை மருதே. **#312**

கொடிய, படங்களோடு ஊர்ந்து செல்கின்ற பாம்புகளை அரையில் உடையவனும், மேலான ஒளியாய் உள்ளவனும், யாவராலும் அடையப்படுபவனுமாகிய இறைவன் தனக்கு இடமாகக் கொள்ளுகின்ற ஊர்கள், 'செய்கடன்கள் நிரம்ப நிகழ்கின்ற காரிகரை, கயிலாயம், நீரும்

தேனும் மிக்குப் பாய்கின்ற வெண்ணி, அண்ணாமலை, இடையாறு, இடைமருது' என்னும் இவைகளே.

திருஇடையாற்றுத்தொகை

கச்சை யூர்கா வங்கழுக் குன்றங்கா ரோம்
பிச்சை யூர்திரி வான்கட வூர்வட பேறூர்
கச்சி யூர்கச்சி சிக்கல்நெய்த் தானம் மிழலை
இச்சை யூரெய்த மானிடை யாறிடைமருதே. **#313**

பிச்சைக்கு ஊர்தோறும் திரிபவனும், யாவராலும் அடையப்படும் பெருமானும், ஆகிய இறைவன் விரும்புதல் செய்கின்ற ஊர்கள், 'கச்சையூர், பலகாக்கள், அழகிய கழுக்குன்றம், காரோணம், கடவூர், வடபேறூர், கச்சணிந்தவளாகிய காமக்கோட்டி யம்மையது ஊரெனப்படுகின்ற காஞ்சி, சிக்கல், நெய்த்தானம், வீழிமிழலை, இடையாறு, இடைமருது' என்னும் இவைகளே.

திருஇடையாற்றுத்தொகை

நிறைய னூர்நின்றி யூர்கொடுங் குன்ற மமர்ந்த
பிறைய னூர்பெரு மூர்பெரும் பற்றப் புலியூர்
மறைய னூர்மறைக் காடு வலஞ்சுழி வாய்த்த
இறைய னூரெய்த மானிடை யாறிடை மருதே. **#314**

எங்கும் நிறைந்தவனும், விரும்பிச் சூடிய பிறையை உடையவனும், வேதத்தை ஓதுபவனும், வலஞ்சுழியில் பொருந்தியுள்ள கடவுளும், யாவராலும் அடையப்படும் பெருமானும் ஆகிய இறைவனது ஊர்கள், 'நின்றியூர், கொடுங்குன்றம், பெருமூர், பெரும்பற்றப்புலியூர், மறைக்காடு, இடையாறு, இடைமருது' என்னும் இவைகளே.

திருஇடையாற்றுத்தொகை

திங்க ளூர்திரு வாதிரை யான்பட் டினமூர்
நங்க ளூர்நறை யூர்நனி நாலிசை நாலூர்
தங்க ளூர்தமி ழானென்று பாவிக்க வல்ல
எங்க ளூரெய்த மானிடை யாறிடை மருதே. **#315**

இறைவனை, 'தமிழில் விளங்குபவன்' என்று கருதவல்ல யாங்கள், எம்முள் அளவளாவுங்கால், எம்மை நீக்கி, 'எம்மினும் உயர்ந்த அடியவர்கட்கு உரிய ஊர்' என்றும், யாவரையும் உளப்படுத்து, 'நங்கள் ஊர்' என்றும், பிறரொடு சொல்லாடுங்கால், முன்னிலையாரை நீக்கி, 'எங்கள் ஊர்' என்றும் சொல்லுமாறு, யாவராலும் அடையப்படும் பெருமானாகிய இறைவனுக்கு உரியதாய் உள்ள ஊர்கள், 'திங்களூர், திருவாதிரையான் பட்டினம் என்னும் ஊர், நறையூர், மிகவும் பரவிய

புகழினையுடைய நாலூர், இடையாறு, இடைமருது' என்னும் இவைகளே.

திருஇடையாற்றுத்தொகை

கருக்க நஞ்சமு துண்டகல் லாலன்கொல் லேற்றன்
தருக்க ருக்கனைச் செற்றுகந் தான்றன் முடிமேல்
எருக்க நாண்மலர் இண்டையும் மத்தமுஞ் சூடி
இருக்கு மூரெய்த மானிடை யாறிடை மருதே. **#316**

தீக்கின்ற அந்த நஞ்சினை உண்டவனும், கல்லால மர நிழலில் இருப்பவனும், கொல்லும் இடபத்தை ஏறுபவனும், செருக்குற்ற சூரியனை ஒறுத்துப் பின் அருள்செய்தவனும், தனது முடியின் மேல் அன்று மலர்ந்த எருக்கம்பூவினாலாகிய இண்டை மாலையையும், ஊமத்தம் பூவினையும் சூடியவனும், யாவராலும் அடையப்படும் பெருமானும் ஆகிய இறைவன் வீற்றிருக்கும் ஊர்கள், 'இடையாறு, இடைமருது' என்னும் இவைகளே.

திருஇடையாற்றுத்தொகை

தேச னூர்வினை தேயநின் றான்திரு வாக்கூர்
பாச னூர்பர மேட்டி பவித்திர பாவ
நாச னூர்நனி பள்ளிநள் ளாற்றை யமர்ந்த
ஈச னூரெய்த மானிடை யாறிடை மருதே. **#317**

ஒளிவடிவினும், தீவினைகள் குறைய நிற்பவனும், திருவருளாகிய தொடர்பினை உடையவனும், மேலிடத்தில் இருப்பவனும், தூயவனும், பாவத்தைப் போக்குபவனும், 'நள்ளாறு' என்னும் தலத்தை விரும்பி இருக்கின்ற முதல்வனும், யாவராலும் அடையப்படும் பெருமானும் ஆகிய இறைவனது ஊர்கள், 'ஆக்கூர், நனிபள்ளி, இடையாறு, இடைமருது' என்னும் இவைகளே.

திருஇடையாற்றுத்தொகை

பேற னூர்பிறைச் சென்னியி னான்பெரு வேளூர்
தேற னூர்திரு மாமகள் கோன்திரு மாலோர்
கூற னூர்குரங் காடு துறைதிருக் கோவல்
ஏற னூரெய்த மானிடை யாறிடை மருதே. **#318**

எல்லா உயிர்கட்கும் பேறாகின்றவனும், பிறையை யணிந்த சடையை உடையவனும், தெளயப்படுபவனும், திருமகளுக்குத் தலைவனாகிய திருமாலை ஒரு பாகத்தில் உடையவனும், இடபத்தை உடையவனும், யாவராலும் அடையப்படும் பெருமானும் ஆகிய இறைவனது ஊர்கள், 'பெருவேளூர், குரங்காடுதுறை, கோவலூர், இடையாறு, இடைமருது'

என்னும் இவைகளே.

திருஇடையாற்றுத்தொகை

ஊறு வாயினன் நாடிய வன்றொண்ட னூரன்
தேறு வார்சிந்தை தேறு மிடஞ்செங்கண் வெள்ளே
றேறு வாரெய்த மானிடை யாறிடை மருதைக்
கூறு வார்வினை எவ்விட மெய் குளிர்வாரே. **#319**

சிவந்த கண்களையுடைய வெள்ளிய விடையை ஏறுகின்றவரும், யாவராலும் அடையப்படும் பெருமானுமாய் உள்ள இறைவரது இடையாற்றையும், இடைமருதையும், வன்றொண்டனாகிய நம்பியாரூரன் சுவை ஊறும் வாயினையுடையவனாய், தௌயத் தகுவாரது உள்ளங்கள் தௌதற்கு வாயிலாய் உள்ள தலங்களோடு நினைந்து பாடிய இப்பாடல்களைச் சொல்லுகின்றவர்கள், வினைத் துன்பம் நீங்க, உடல் குளிர்வார்கள்.

திருக்கோடிக்குழகர்

திருக்கோடிக்குழகர்

திருக்கோடிக்குழகர்,
பண் - கொல்லி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அமுதகடநாதர்.
தேவியார் : மையார்தடங்கணம்மை.

கடிதாய்க்கடற் காற்றுவந் தெற்றக் கரைமேல்
குடிதான் அய லேஇருந் தாற்குற்ற மாமோ
கொடியேன்கண்கள் கண்டன கோடிக் குழகீர்
அடிகேள்உமக் கார்துணை யாஇருந் தீரே. **#320**

கோடிக்குழகரே, அடிகளே, கடற்காற்றுக் கடிதாய் வந்து வீச, இக் கடற்கரையின்மேல், உமக்கு, யார் துணையாய் இருக்க இருக்கின்றீர்? நீர் இங்குத் தனித்து இருத்தலையே கொடியேனது கண்கள் கண்டன; குடிதான் வேறோர் இடத்திலே இருந்தால் யாதேனும் குற்றம் உண்டாகுமோ? சொல்லீர்.

திருக்கோடிக்குழகர்

முன்றான்கடல் நஞ்சமுண் டவ்வத னாலோ
பின்றான்பர வைக்குப காரஞ்செய் தாயோ
குன்றாப்பொழில் சூழ்தரு கோடிக் குழகா
என்றான்றனி யேஇருந் தாய்எம்பி ரானே. **#321**

குறையாத சோலைகள் சூழ்ந்த கோடிக்கரையில் உள்ள அழகனே, எம்பெருமானே, முன்பு கடலில் தோன்றிய நஞ்சினை உண்ட அதனால், மீட்டும் அவ்வாறு தோன்றின் அதனை உண்டற்பொருட்டோ? அல்லது கடல் தனியே இருத்தல் கருதி அதற்குத் துணையிருத்தற் பொருட்டோ? எக்காரணத்தால் இங்கு நீ தனியே இருக்கின்றாய்? சொல்.

திருக்கோடிக்குழகர்

மத்தம்மலி சூழ்மறைக் காடதன் தென்பால்
பத்தர்பலர் பாட இருந்த பரமா
கொத்தார்பொழில் சூழ்தரு கோடிக் குழகா
எத்தால்தனி யேஇருந் தாய்எம் பிரானே. **#322**

களிப்புடையவர் நிறையச் சூழ்ந்த திருமறைக் காட்டிற்குத் தென்பால், அடியார்கள் பலர் பாடித் துதிக்க எழுந்தருளியிருக்கும் பரமனே, பூங்கொத்துக்கள் பொருந்திய சோலைகள் சூழ்ந்த கோடிக்கரையின்கண்

உள்ள அழகனே, எம்பெருமானே, எக்காரணத்தால் நீ இங்குத் தனியே இருக்கின்றாய்? சொல்.

திருக்கோடிக்குழகர்

காடேல்மிக வாலிது காரிகை யஞ்சக்
கூடிப்பொந்தில் ஆந்தைகள் கூகை குழறல்
வேடித்தொண்டர் சாலவுந் தீயர் சழக்கர்
கோடிக்குழ காஇடங் கோயில்கொண் டாயே. **#323**

கோடிக்கரைக்கண் உள்ள அழகனே! இங்குள்ள காடோ மிகப் பெரிது; எப்பொழுதும் உன் தேவி அச்சங்கொள்ளுமாறு மரப் பொந்தில் உள்ள ஆந்தைகளும், கூகைகளும் பல கூடிக் கூக்குரலிடுதல் இடையறாது; வேட்டைத் தொழில் செய்து இங்கு வாழ்பவர் மிகவுங் கொடியவர்; வஞ்சனையுடையவர்; இவ்விடத்தில் உறைவிடத்தைக் கொண்டாயே; இஃது என்?

திருக்கோடிக்குழகர்

மையார்தடங் கண்ணிபங் காகங்கை யாளும்
மெய்யாகத் திருந்தனள் வேறிட மில்லை
கையார்வளைக் காடுகா ளோடு முடனாய்க்
கொய்யார்பொழிற் கோடியே கோயில்கொண் டாயே. **#324**

மை பொருந்திய கண்களையுடைய இறைவியின் பாகத்தை உடையவனே, 'கங்கை' என்பவளும் உனது அழிவில்லாத திருமேனியில் இருக்கின்றாளேயன்றி அவளுக்கு வேறிடம் இல்லை; இங்ஙனமாக, கையில் நிறைந்த வளைகளையுடைய காடுகாளோடும் கூடி, பூக்களைக் கொய்தல் பொருந்திய சோலைகளையுடைய கோடிக்கரையையே உறைவிடமாகக் கொண்டாய்; இஃது எவ்வாறு?

திருக்கோடிக்குழகர்

அரவேரல்கு லாளையொர் பாக மமர்ந்து
மரவங்கமழ் மாமறைக் காடதன் தென்பால்
குரவம்பொழில் சூழ்தரு கோடிக் குழகா
இரவேதுணை யாயிருந் தாய்எம்பி ரானே. **#325**

குங்கும மரத்தின் பூக்கள் மணம் வீசுகின்ற பெருமை பொருந்திய திருமறைக்காட்டிற்குத் தென்பால் குராமரச் சோலை சூழ்ந்த கோடிக்கரைக்கண் உள்ள அழகனே, எம்பெருமானே,

திருக்கோடிக்குழகர்

பறையுங்குழ லும்மொலி பாடல் இயம்ப

அறையுங்கழ லார்க்கநின் றாடும் அமுதே
குறையாப்பொழில் சூழ்தரு கோடிக் குழகா
இறைவாதனி யேஇருந் தாய்எம்பி ரானே. **#326**

பறையும், குழலும், ஒலிக்கின்ற பாடலும் முழங்க, ஒலிக்கின்ற கழல் ஆரவாரிக்கும்படி அம்பலத்தில் தோன்றி நின்று ஆடுகின்ற அமுதம்போல்பவனே, றைதல் இல்லாத சோலைகள் சூழ்ந்த கோடிக்கரைக்கண் உள்ள அழகனே, இறைவனே, எம்பெருமானே, நீ ஏன் இங்குத் தனியாய் இருக்கின்றாய்?

திருக்கோடிக்குழகர்

ஒற்றியூரென்ற ஊனத்தி னாலது தானோ
அற்றப்பட ஆரூர தென்றகன் றாயோ
முற்றாமதி சூடிய கோடிக் குழகா
எற்றால்தனி யேஇருந் தாய்எம்பி ரானே. **#327**

முற்றாத சந்திரனைச் சூடியுள்ள கோடிக்கரைக்கண் உள்ள அழகனே, எம்பெருமானே, ஒற்றி என்ற குறையினால் ஒற்றியூரையும், ஆருடையது என்ற காரணத்தால் ஆருரையும் அறுதியாக நீங்கிவிட்டாயோ? எதனால் இங்குத் தனியேவந்து இருக்கின்றாய்?

திருக்கோடிக்குழகர்

நெடியானொடு நான்முக னும்மறி வொண்ணாப்
படியான்பலி கொள்ளு மிடங்குடி யில்லை
கொடியார்பலர் வேடர்கள் வாழுங் கரைமேல்
அடிகேள்அன்ப தாய்இடங் கோயில்கொண் டாயே. **#328**

திருமாலும் பிரமனும்அறிய இயலாத தன்மையை உடையவனே, தலைவனே, நீ பிறரது வழிபாட்டினை ஏற்க நினைக்குமிடத்து, அதனைச் செய்தற்கு இங்கு நற்குடி ஒன்றேனும் இல்லை; அதற்கு மாறாக கொடிய வேடர்கள் பலர் வாழ்கின்றனர்; இத்தன்மையதான இக்கடற்கரைமேல் விருப்பம் உடையையாய், இவ்விடத்தை உறைவிடமாகக் கொண்டாயே; இஃது என்?

திருக்கோடிக்குழகர்

பாரூர்மலி சூழ்மறைக் காடதன் தென்பால்
ஏரார்பொழில் சூழ்தரு கோடிக் குழகை
ஆரூரன் உரைத்தன பத்திவை வல்லார்
சீரூர்சிவ லோகத் திருப்பவர் தாமே. **#329**

உலகில் உள்ள ஊர்களில் மகிழ்ச்சி பொருந்துதற்குக் காரணமான திருமறைக்காட்டின் தென்பால், அழகு நிறைந்த சோலைகள் சூழ்ந்த

கோடிக்கரைக்கண் உள்ள அழகனை நம்பியாரூரன் பாடியவையாகிய இப்பத்துப் பாடல்களையும் நன்கு பாட வல்லவர், சிறப்புப் பொருந்திய சிவலோகத்தில் இருப்பவர்களேயாவர்.

நமக்கடிகளாகிய - அடிகள்

நமக்கடிகளாகிய - அடிகள்

நமக்கடிகளாகிய - அடிகள்,
பண் - கொல்லி

பாறு தாங்கிய காட ரோபடு
தலைய ரோமலைப் பாவையோர்
கூறு தாங்கிய குழக ரோகுழைக்
காத ரோகுறுங் கோட்டிள
ஏறு தாங்கிய கொடிய ரோசுடு
பொடிய ரோஇலங் கும்பிறை
ஆறு தாங்கிய சடைய ரோநமக்
கடிக ளாகிய அடிகளே. **#330**

தொண்டீர், நமக்குத் தலைவராய் உள்ள தலைவர் பருந்துகளைச் சுமக்கும் முதுகாட்டில் வாழ்பவரோ? அழிந்த தலையை ஏந்தியவரோ? மலைமகளது ஒருபாகத்தைச் சுமக்கும் அழகரோ? குழையணிந்த காதினை உயைவரோ? சிறிய கொம்பினையுடைய இளமையான இடபத்தைக் கொண்டுள்ள கொடியை உடையவரோ? சுடப்பட்ட நீற்றை அணிந்தவரோ? விளங்குகின்ற பிறையோடு ஆற்றைச் சுமந்த சடையை உடையவரோ? சொல்லுமின்.

நமக்கடிகளாகிய - அடிகள்

இட்டி தாகவந் துரைமி னோநுமக்
கிசையு மாநினைந் தேத்துவீர்
கட்டி வாழ்வது நாக மோசடை
மேலும் நாறுக ரந்தையோ
பட்டி ஏறுகந் தேற ரோபடு
வெண்ட லைப்பலி கொண்டுவந்
தட்டி யாளவுங் கிற்ப ரோநமக்
கடிக ளாகிய அடிகளே. **#331**

இறைவரை உமக்கு ஏற்றவாற்றால் நினைந்து துதிக்கின்றவர்களே, அருகில் வந்து சொல்லுமின்; நமக்குத் தலைவராகிய தலைவர், கழுத்து, கை, அரை முதலிய இடங்களில் கட்டிக்கொண்டு வாழ்வது பாம்போ? சடைமேல் அணிவதும் மணம் வீசுகின்ற கரந்தையோ? அவர், தொழுவிற் கட்டப்படும் எருதையே விரும்பி ஏறுகின்றவரோ? தம் அடியார்களை, அழிந்த வெண்டலையில் பிச்சையேற்றுக்கொண்டு வந்து இட்டும் பணிகொள்ள வல்லரோ?

நமக்கடிகளாகிய - அடிகள்

ஒன்றி னீர்கள்வந் துரைமி னோநுமக்
கிசையு மாநினைந் தேத்துவீர்
குன்றி போல்வதோர் உருவ ரோகுறிப்
பாகி நீறுகொண் டணிவரோ
இன்றி யேஇல ராவரோ அன்றி
உடைய ராய்இல ராவரோ
அன்றி யேமிக அறவ ரோநமக்
கடிக ளாகியஅடிகளே. #332

இறைவரை உமக்கு ஏற்ற வகையில் நினைந்து துதிக் கின்றவர்களே, நீங்கள் ஒன்றுபட்டு வந்து சொல்லுங்கள், நமக்குத் தலைவராய் உள்ள தலைவர், குன்றிமணி போலும் நிறம் உடையவரோ? நீற்றையே குறிக்கோளாகக் கொண்டு அணிவரோ? யாதொன்றும் இலராய் இரத்தல் தொழிலைச் செய்வரோ? மற்று எல்லாம் உடையராய் இருந்தும் இரத்தல் தொழிலைச் செய்வரோ? இவையன்றி, துறவறத்தை மிக உடையரோ?

நமக்கடிகளாகிய - அடிகள்

தேனை யாடுமுக் கண்ண ரோமிகச்
செய்ய ரோவெள்ளை நீற்றரோ
பானெய் யாடலும் பயில்வ ரோதமைப்
பற்றி னார்கட்கு நல்லரே
மானை மேவிய கண்ணி னாள்மலை
மங்கை நங்கையை அஞ்சவோர்
ஆனை ஈருரி போர்ப்ப ரோநமக்
கடிக ளாகிய வடிகளே. #333

தொண்டீர், நமக்குத் தலைவராய் உள்ள தலைவர், மூன்று கண்களை உடையவரோ? மிகச் சிவந்தநிறம் உடையவரோ? வெண்மையான நீற்றை அணிந்தவரோ? பால், நெய், தேன் இவைகளை ஆடுதலையும் பலகாற் செய்வரோ? தம்மையே துணையாகப் பற்றி நிற்பவர்க்கு நல்லவரோ? மானை நிகர்த்த கண்களை உடையவளாகிய, மகளிருட் சிறந்த மலைமங்கையை அஞ்சுவித்தற்பொருட்டு ஓர் ஆனையை உரித்த தோலைப் போர்த்துக்கொண்டிருப்பரோ? சொல்லுமின்.

நமக்கடிகளாகிய - அடிகள்

கோணன் மாமதி சூட் ரோகொடு
கொட்டி காலொர் கழலரோ

வீணை தான்அவர் கருவி யோவிடை
யேறு வேதமு தல்வரோ
நாண தாகவொர் நாகங் கொண்டரைக
கார்ப்ப ரோநல மார்தர
ஆணை யாகநம் மடிக ளோநமக்
கடிக ளாகிய வடிகளே. #334

தொண்டீர், நமக்குத் தலைவராய் உள்ள தலைவர், வளைந்த பெருமை பொருந்திய பிறையைத் தலையிற் சூடுதல் உடையவரோ? 'கொடுகொட்டி' என்னும் கூத்தினை ஆடுபவரோ? காலில் ஒரு கழலை அணிவரோ? அவரது இசைக் கருவி வீணைதானோ? அவர் ஏறுவது விடையோ? அவர் வேதத்திற்குத் தலைவரோ? அரை நாணாகப் பாம்பு ஒன்றைப் பிடித்து அரையில் கட்டுவரோ? நம்மேல் ஆணையாக நமக்கு நன்மை நிரம்புமாறு நம்மை ஆளுவரோ? சொல்லுமின்.

நமக்கடிகளாகிய - அடிகள்

வந்து சொல்லுமின் மூட னேனுக்கு
வல்ல வாநினைந் தேத்துவீர்
வந்த சாயினை யறிவ ரோதம்மை
வாழ்த்தி னார்கட்கு நல்லரோ
புந்தி யாலுரை கொள்வ ரோஅன்றிப்
பொய்யின் மெய்யுரைத் தாள்வரோ
அன்றி யேமிக அறிவ ரோநமக்
கடிக ளாகிய வடிகளே. #335

இறைவரை நீர் வல்லவாற்றால் நினைந்து துதிக் கின்றவர்களே, யாதும் அறியாதேனாகிய எனக்கு நீங்கள் அருகில் வந்து சொல்லுங்கள்; நமக்குத் தலைவராய் உள்ள தலைவர் நமக்கு வருகின்ற மெலிவை அறிந்து தீர்ப்பரோ? தம்மை வாழ்த்துகின்றவர்கட்கு நலம் செய்வரோ? மனத்தொடு பொருந்தச் சொல்லுதலையே ஏற்பரோ? மற்றும் தாமும் பொய்யில்லாத மெய்யையே சொல்லி நம்மை ஆட்கொள்வரோ? அதுவன்றி அறிவை மிக உடையரோ? சொல்லுமின்.

நமக்கடிகளாகிய - அடிகள்

மெய்யென் சொல்லுமின் நமரங் காள்நுமக்
கிசைவு மாநினைந் தேத்துவீர்
கையிற் சூலம துடைய ரோகரி
காட ரோகறைக் கண்டரோ
வெய்ய பாம்பரை யார்ப்ப ரோவிடை
யேற ரோகடை தோறுஞ்சென்

றையங் கொள்ளுமவ் வடிக ளோநமக்
கடிக ளாகிய வடிகளே. **#336**

இறைவரை உமக்கு ஏற்குமாற்றால் நினைந்து துதிப் பீராகிய நம்மவர்களே! நீவிர் அறிந்த உண்மைகள் யாவை? அவற்றைச் சொல்லுமின்; நமக்குத் தலைவராய் உள்ள தலைவர், கையில் சூலம் உடையரோ? கரிந்த காட்டில் வாழ்வரோ? கறுப்பை உடைய கண்டத்தை உடையரோ? கொடிய பாம்பை அரையிற் கட்டுவரோ? விடையை ஏறுதல் உடையரோ?இல்லத்து வாயில்தோறும் சென்று பிச்சை ஏற்கின்ற, பற்றில்லாத துறவரோ?

நமக்கடிகளாகிய - அடிகள்

நீடு வாழ்பதி யுடைய ரோஅயன்
நெடிய மாலுக்கும் நெடியரோ
பாடு வாரையும் உடைய ரோதமைப்
பற்றி னார்கட்கு நல்லரோ
காடு தான் அரங் காக வேகைகள்
எட்டி னோடில யம்பட
ஆடு வாரெனப் படுவ ரோநமக்
கடிக ளாகிய வடிகளே. **#337**

தொண்டீர், நமக்குத் தலைவராய் உள்ள தலைவர், எஞ்ஞான்றும் ஒருதன்மையாய் வாழ்தற்குரிய உலகத்தை உடையரோ? 'பிரமன், நெடியோனாகிய மாயோன்' என்னும் இவர்கட்கும் பெரியரோ? தம்மைப் புகழ்ந்து பாடும் புரக்கப்படுவாரையும் உடையரோ? தம்மையே துணையாக அறிந்து பற்றினவர்கட்கு நலம் செய்வரோ? 'காடே அரங்காக எட்டுக் கைகளினாலும் குறிப்புணர்த்தி, தாளத்தொடு பொருந்த ஆடுவார்' எனச் சிறப்பித்துச் சொல்லப்படுபவரோ? சொல்லுமின்.

நமக்கடிகளாகிய - அடிகள்

நமண நந்தியுங் கரும வீரனுந்
தரும சேனனு மென்றிவர்
குமணன் மாமலைக் குன்று போல்நின்று
தங்கள் கூறையொன் றின்றியே
ஞமண ஞாஞண ஞாண ஞோணமென்
றோதி யாரையு நாணிலா
அமண ராற்பழிப் புடைய ரோநமக்
கடிக ளாகியவடிகளே. **#338**

தொண்டீர், நமக்குத் தலைவராய் உள்ள தலைவர், குமணனது பெரிய

மலையிடத்துள்ள் சிறிய குன்றுகள் போலத் தம்மிடத்தில் உடையொன்றும் இலராய் நின்றுகொண்டு, 'ஏமணம், ஞாஞணம், ஞாணம், ஞோணம்' என்று சில மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு, ஒருவரையும் நாணுதல் இல்லாத, 'நமண நந்தி, கரும வீரன், தருமசேனன்' என்ற இன்னோரன்ன பெயர்களை யுடையவர்களாகிய சமணர்களால் பழிக்கப்படுதலை உடையரோ? சொல்லுமின்.

நமக்கடிகளாகிய - அடிகள்

படிசெய் நீர்மையிற் பத்தர் காள்பணிந்
தேத்தி னேன்பணி யீரருள்
வடியி லான்திரு நாவ லூரன்
வனப்பகை யப்பன் வன்றொண்டன்
செடிய னாகிலுந் தீய னாகிலுந்
தம்மை யேமனஞ் சிந்திக்கும்
அடிய னூரனை யாள்வ ரோநமக்
கடிக ளாகிய வடிகளே. **#339**

அடியவர்களே, அடியவர்க்கு அடியராவர் செய்யும் செயல்களைப் படியெடுக்கும் தன்மையில், திருத்தம் இல்லாதவனும், திருநாவலூரில் தோன்றியவனும், வனப்பகைக்கு தந்தையும் ஆகிய வன்றொண்டனேன் உங்களை வணங்கித் துதித்தேன்; கீழ்மையை உடையவனாயினும், கொடியவனாயினும், தம்மையே எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்ற அடியவனாகிய நம்பியாரூரனை, நமக்குத் தலைவராய் உள்ள தலைவர் கைவிடாது ஆளுதல் செய்வரோ? அவரது திருவருள் இருந்தவாற்றைப் பணித் தருளுங்கள்.

திருப்புகலூர்

திருப்புகலூர்

திருப்புகலூர்,
பண் - கொல்லி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அக்கினியீசுவரர்.
தேவியார் : கருந்தார்க்குழலியம்மை.

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்கி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே. **#340**

புலவர்காள், எம் தந்தையாகிய சிவபிரான், தன்னையே பாடுவார்க்கு இம்மையிற்றானே நல்ல உண்டியும், ஆடையும், பிறவும் தந்து புரப்பான்; அதனால், புகழும் மிகும்; துன்பங் கெடுதலும் உண்டாம், இவையன்றி இவ்வுடம்பு நீங்கிய நிலையிற்றானே சிவலோகத்தை ஆளுதல் உளதாம் என்றற்கு, ஐயுறவைத் தருங்காரணம் யாதும் அறுதியாக இல்லை; ஆதலின், தமக்கு அடிமைகளாய்த் தம்மையே புகழ்ந்து, தமக்கு விருப்பமாயவற்றையே சொல்லி, அதன் மேலும் தம்மையே துணையாகச் சார்ந்து நிற்பினும், அங்ஙனம் சார்ந்தவர்க்கு ஒன்றுந் தருங்குணம் இல்லாத பொய்ம்மையை ஆளுதலையுடைய மக்களைப் பாடுதலை அறவே விடுத்து, அவனது திருப்புகலூரைப் பாடுமின்கள்.

திருப்புகலூர்

மிடுக்கி லாதானை வீம னேவிறல்
விசய னேவில்லுக் கிவனென்று
கொடுக்கி லாதானைப் பாரி யேயென்று
கூறி னுங்கொடுப் பாரிலை
பொடிக்கொள் மேனியெம் புண்ணி யன்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அடுக்கு மேலம ருலகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே. **#341**

புலவர்காள், வலியும் வீரமும் இல்லாதவனை, "இவன் மல்லுக்கு வீமனே

போல்வான், வில்லுக்கு வெற்றியையுடைய அருச்சுனனே போல்வான்' என்றும், கொடுத்தற்குணம் இல்லாதவனை, 'இவன் கொடைக்குப் பாரியே போல்வான்' என்றும் இல்லது கூறிப்பாடினும், நீவிர் வேண்டுவதை நுமக்குக் கொடுப்பார் இவ்வுலகில் ஒருவரும் இல்லை; ஆதலின், நீற்றைக்கொண்ட திருமேனியையுடைய எம் புண்ணிய வடிவினனாகிய சிவபிரானது திருப்புகலூரைப் பாடுமின்; பாடினால், பல உலக அடுக்கிற்கும் மேல் உள்ள அமரரது உலகத்தை ஆளுதல் உளதாம் என்றற்கு ஐயுறற் காரணம் யாதும் அறுதியாக இல்லை.

திருப்புகலூர்

காணி யேற்பெரி துடைய னேகற்று
நல்ல னேசுற்றம் நன்கிளை
பேணி யேவிருந் தோம்பு மேயென்று
பேசி னுங்கொடுப் பாரிலை
பூணி பூண்டுழப் புட்சி லம்புந்தண்
புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆணி யாய்அம ருலகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே. **#342**

புலவர்காள், நிலம் சிறிதும் இல்லாதவனை, 'காணியோ பெரிதுடையன்' என்றும், கல்வியில்லாத பேதையை, 'கற்று நலம் பெற்றவன்' என்றும், ஒருவரோடும் அளவளாவுதல் இல்லாதவனை, 'நண்பரையும், நல்ல சுற்றத்தாரையும் பேணுதலுடையவன்' என்றும், தானே தமியனாய் உண்டு களித்து ஈர்ங்கை விதிராதவனை, 'விருந்தினரை நன்கு புறந்தருவோன்' என்றும் பொய் சொல்லிப் பாடினும், நீவிர் வேண்டுவதனை நுமக்குக் கொடுப்பார் இவ்வுலகில் ஒருவரும் இல்லை; ஆதலின், உழவர் எருதுகளைப் பூட்டி நிலத்தை உழ, வயற் பறவைகள் ஒலிக்கின்ற, தண்ணிய திருப்புகலூரைப் பாடுமின்; பாடினால், அமரர் உலகமாகிய தேர்க்கு அச்சாணியாய் நின்று அதனை ஆளுதல் உளதாம் என்றற்கு ஐயுறற்காரணம் யாதும் அறுதியாக இல்லை.

திருப்புகலூர்

நரைகள் போந்துமெய் தளர்ந்து மூத்துடல்
நடுங்கி நிற்கும்இக் கிழவனை
வரைகள் போல்திரள் தோள னேயென்று
வாழ்த்தி னுங்கொடுப் பாரிலை
புரைவெள் ளேறுடைப் புண்ணி யன்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அரைய னாய்அம ருலகம் ஆள்வதற்

கியாதும் ஐயுற வில்லையே. **#343**
மெய்ம்முழுதும் நரைகள் வரப்பெற்று, மூப்பெய்தி, உடல் நடுக்கங் கண்டு, கால் தளர்ந்து நிற்கின்ற இத்தன்மையனாகிய கிழவனை, 'மலைகள் போலத்திரண்ட தோள்களையுடைய காளையே' என்று பொய்யாகப் புகழ்ந்து பாடினும், நீவிர் வேண்டுவதை நுமக்குக் கொடுப்பார் இவ்வுலகில் ஒருவரும் இல்லை; ஆதலின், உயர்ந்த வெள்ளிய இடபத்தினையுடைய புண்ணியனாகிய சிவபிரானது திருப்புகலூரைப் பாடுமின்; பாடினால், அமரர் உலகத்திற்குத் தலைவராய் அதனை ஆளுதல் உளதாம் என்றற்கு ஐயுறற் காரணம் யாதும் அறுதியாக இல்லை.

<u>திருப்புகலூர்</u>

வஞ்ச நெஞ்சனை மாச ழக்கனைப்
பாவி யையவழக் கில்லியைப்
பஞ்ச துட்டனைச் சாது வேயென்று
பாடி னுங்கொடுப் பாரிலை
பொன்செய் செஞ்சடைப் புண்ணி யன்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
நெஞ்சில் நோயறுத் துஞ்சு போவதற்
கியாதும் ஐயற வில்லையே. **#344**

புலவர்காள், வஞ்சம் பொருந்திய நெஞ்சை உடையவனும், பெரும்பொய்யனும், பாவத்தொழிலை உடையவனும், நீதி இல்லாதவனும், பஞ்ச மாபாதகங்களையும் செய்பவனும் ஆகியவனை, 'சான்றோனே' என்று உயர்த்திப் பாடினும், நீவிர் வேண்டுவதை நுமக்குக் கொடுப்பார் இவ்வுலகில் ஒருவரும் இல்லை; ஆதலின், பொன்போலும் சிவந்த சடையினையுடைய புண்ணியனாகிய சிவபிரானது திருப்புகலூரைப் பாடுமின்; பாடினால், மனத்தில் தோன்றும் துன்பங்களையெல்லாம் அறுத்தெறிந்து பிழைத்துப் போதல் உளதாம் என்றற்கு, ஐயுறற் காரணம் யாதும் அறுதியாக இல்லை.

<u>திருப்புகலூர்</u>

நலமி லாதானை நல்ல னேயென்று
நரைத்த மாந்தனை யிளையனே
குலமி லாதானைக் குல னேயென்று
கூறி னுங்கொடுப் பாரிலை
புலமெ லாம்வெறி கமழும் பூம்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அலம ராதம ருலக மாள்வதற்

கியாதும் ஐயுற வில்லையே. #345

புலவர்காள், அழகில்லாதவனை, 'அழகுடையவனே' என்றும், முழுதும் நரை எய்திய கிழவனை, 'இளையவனே' என்றும் இழிகுலத்தவனை, 'உயர்குலத்தவனே' என்றும் மாறிச் சொல்லிப்பாடினும், நீவிர் வேண்டுவதை நுமக்குக் கொடுப்பவர் இவ்வுலகில் ஒருவரும் இல்லை; ஆதலின், வயல்களெல்லாம் தாமரை முதலியவற்றின் மணங்கமழ்கின்ற அழகிய திருப்புகலூரைப் பாடுமின்; பாடினால், அலைவின்றி அமரர் உலகத்தை ஆளுதல் உளதாம் என்றற்கு, ஐயுறற் காரணம் யாதும் அறுதியாக இல்லை.

<u>திருப்புகலூர்</u>

நோய னைத்தடந் தோள னேயென்று
நொய்ய மாந்தனை விழுமிய
தாயன் றோபுல வோர்க்கெ லாமென்று
சாற்றி னுங்கொடுப் பாரிலை
போயு ழன்றுகண் குழியா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆய மின்றிப்போய் அண்ட மாள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே. #346

தொழுநோயால் வருந்துகின்றவனை, 'பெரிய தோள்களை யுடைய மல்லனே' என்றும், ஒன்றும் ஈயாத சிறுமைக் குணம் உடையவனை, 'இவன் புலவர்கட்கெல்லாம் பெருமை பொருந்திய தாய்போல்பவன் அன்றோ' என்றும், நுமக்கு வரும் இளிவரல் கருதாதே பலரும் அறியக் கூறிப்பாடினும், நீவிர் வேண்டுவதை நுமக்குக் கொடுப்பார் இவ்வுலகில் ஒருவரும் இல்லை; ஆதலின், உலகரிடத்துச் சென்று அலைந்து கண்குழிய மெலியாமல், எம் தந்தையாகிய சிவபிரானது திருப்புகலூரைப் பாடுமின்; பாடினால், வருத்தமின்றிச் சென்று வானுலகை ஆளுதல் உளதாம் என்றற்கு, ஐயுறற் காரணம் யாதும் அறுதியாக இல்லை.

<u>திருப்புகலூர்</u>

எள்வி ழுந்திடம் பார்க்கு மாகிலும்
ஈக்கும் ஈகில னாகிலும்
வள்ள லேஎங்கள் மைந்த னேயென்று
வாழ்த்தி னுங்கொடுப் பாரிலை
புள்ளெ லாஞ்சென்று சேரும் பூம்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அள்ளற் பட்டழுந் தாது போவதற்

கியாதும் ஐயுற வில்லையே. **#347**
புலவர்காள், எள் விழுந்த இடத்தை, அவ்விழப்பிற்கு வருந்திக் கூர்ந்து நோக்கித் தேடுபவனாயும், ஈக்கும் ஈயாது சிந்தியவற்றைச் சேர்ப்பவனாயும் உள்ளவனை, 'அள்ளி வீசும் வள்ளலே, எங்கட்கு வலிமையாய் உள்ளவனே' என்று சொல்லி வாழ்த்துதலைச் செய்யினும், நீவிர் வேண்டுவதை நுமக்குக் கொடுப்பவர் இவ்வுலகில் இல்லை; ஆதலின், பறவைகளெல்லாம் சென்று சேர்கின்ற அழகிய புகலூரைப் பாடுமின்; பாடினால், உலகியலாகிய சேற்றிற்பட்டு அழுந்தாது பிழைத்துப் போதல் உளதாம் என்றற்கு, ஐயுறற் காரணம் யாதும் அறுதியாக இல்லை.

திருப்புகலூர்

கற்றி லாதானைக் கற்று நல்லனே
காம தேவனை யொக்குமே
முற்றி லாதானை முற்ற னேயென்று
மொழியி னுங்கொடுப் பாரிலை
பொத்தி லாந்தைகள் பாட்ட றாப்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அத்த னாய்அம ருலகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே. **#348**
புலவர்காள், ஒருஞான்றும் ஒன்றனையும் கற்றறியாதவனை, 'மிகவும் கற்று வல்லனாயினானே' என்றும், அழகு சிறிதும் இல்லாதவனை, 'அழகில் காமதேவனை ஒப்பானே' என்றும், ஆண்டும் அறிவும் முதிராதவனை, அவற்றால் முதிர்ந்தவனே என்றும் புனைந்து கூறிப்பாடினும், நீவிர் வேண்டுவதை நுமக்குக் கொடுப்பார் இவ்வுலகில் ஒருவரும் இல்லை; ஆதலின், மரப்பொந்துகளில் ஆந்தைகளின் ஓசை இடையறாது ஒலிக்கின்ற திருப்புகலூரைப் பாடுமின்; பாடினால், அமரர் உலகிற்குத் தலைவராய், அதனை ஆளுதல் உளதாம் என்றற்கு, ஐயுறற் காரணம் யாதும் அறுதியாக இல்லை.

திருப்புகலூர்

தைய லாருக்கொர் காம னேசால
நலவ ழகுடை ஐயனே
கையு லாவிய வேல னேயென்று
கழறி னுங்கொடுப் பாரிலை
பொய்கை வாவியின் மேதி பாய்புக
லூரைப் பாடமின் புலவீர்காள்
ஐய னாய்அம ருலகம் ஆள்வதற்

கியாதும் ஐயுற வில்லையே. **#349**
புலவர்காள், யாவராலும் அருவருக்கப்படும் தோற்றத்தவனை, 'மகளிருள்ளத்திற்குக் காமன் போலத் தோன்றுபவனே, ஆடவர் யாவரினும் மிக இனிய அழகுடைய வியத்தகு தோற்றத்தை யுடையவனே, முருகனுக்கு வேறாய மற்றொரு முருகனே' என்று உறுதியாகச் சொல்லிப்பாடினும், நீவிர் வேண்டுவதை நுமக்குக் கொடுப்பார் இவ்வுலகில் ஒருவரும் இல்லை; ஆதலின், பெரிய பொய்கைகளிலும், சிறிய குளங்களிலும் எருமைகள் வீழந்து உழக்குகின்ற திருப்புகலூரைப் பாடுமின்; பாடினால், அமரருலகத்திற்குத் தலைவராய், அதனை ஆளுதல் உளதாம் என்றற்கு ஐயுறற் காரணம் யாதும் அறுதியாக இல்லை.

திருப்புகலூர்

செறுவி னிற்செழுங் கமலம் ஓங்குதென்
புகலூர் மேவிய செல்வனை
நறவம் பூம்பொழில் நாவ லூரன்
வனப்பகை யப்பன் சடையன்றன்
சிறுவன் வன்றொண்டன் ஊரன் பாடிய
பாடல் பத்திவை வல்லவர்
றவ னாரடி சென்று சேர்வதற்
கியாதும் ஐயுற வில்லையே. **#350**

வயல்களில் செந்தாமரைகள் செழிக்கின்ற அழகிய திருப்புகலூரில் விரும்பி எழுந்தருளியுள்ள செல்வனாய சிவபெருமானை, தேனையுடைய பூஞ்சோலைகளை உடைய திருநாவலூரனும், வனப்பகைக்குத் தந்தையும், சடையனார்க்கு மகனும், வன்றொண்டனும் ஆகிய நம்பியாரூரன் பாடிய பத்துப் பாடல்களாகிய இவைகளைப் பாட வல்லவர்கள், அறவடிவினனாகிய அப்பெருமானது அரிய திருவடிகளில் சென்று சேர்வர் என்றற்கு, ஐயுறற் காரணம் யாதும் அறுதியாக இல்லை.

திருப்புறம்பயம்

திருப்புறம்பயம்

திருப்புறம்பயம்,
பண் - கொல்லி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சாட்சிவரதேசுவரர்.
தேவியார் : கரும்படுசொல்லம்மை.

அங்கம் ஓதியோர் ஆறை மேற்றளி
நின்றும் போந்துவந் தின்னம்பர்த்
தங்கி னோமையும் இன்ன தென்றிலர்
ஈச னாரெழு நெஞ்சமே
கங்குல் ஏமங்கள் கொண்டு தேவர்கள்
ஏத்தி வானவர் தாந்தொழும்
பொங்கு மால்விடை ஏறி செல்வப்
புறம்ப யந்தொழப் போதுமே. #351

மனமே, ஆறங்கங்களையும் ஓதியவராகிய அந்தணர்களது திருவாறைமேற்றளியினின்றும் புறப்பட்டு வந்து திருவின்னம்பரில் பலநாள் தங்கியும் நம்மை இங்குள்ள இறைவர் இனி நாம்செய்யத்தக்கது இன்னது என்று தெளவித்தாரில்லை; ஆதலின், வானவர்கள் தம் நிலையினும் மேன்மேல் உயர்தற் பொருட்டு இரவெல்லாங் காத்து நின்று விடியலில் ஏத்தித் தொழுகின்ற, அழகு மிக்க பெரிய விடையை ஏறும் பெருமானது, செல்வம் நிறைந்த திருப்புறம்பயத்தை வணங்கச் செல்வோம்; புறப்படு.

திருப்புறம்பயம்

பதியுஞ் சுற்றமும் பெற்ற மக்களும்
பண்டை யாரலர் பெண்டிரும்
நிதியில் இம்மனை வாழும் வாழ்க்கையும்
நினைப்பொ ழிமட நெஞ்சமே
மதியஞ்சேர்சடைக் கங்கை யானிடம்
மகிழும் மல்லிகை செண்பகம்
புதிய பூமலர்ந் தெல்லி நாறும்
புறம்ப யந்தொழப் போதுமே. #352

அறியாமையுடைய மனமே, நாம் வாழ்கின்ற ஊரும், மணந்த மனைவியரும், பெற்ற மக்களும், பிற சுற்றத்தாரும், தேடிய பொருளும், அப்பொருளால் மனையில் வாழும் இவ் வாழ்க்கையும் எல்லாம் பண்டு

தொட்ட தொடர்பினரல்லர்; அதனால், என்றும் உடன் தொடர்ந்தும் வாரார். ஆதலின், அவர்களைப் பற்றிக் கவலுதல் ஒழி; இனி நாம், சந்திரன் சேர்ந்த சடையிடத்துக் கங்கையை அணிந்தவன் தன் இடமாக மகிழும், மல்லிகைக் கொடியும் சண்பக மரமும் புதிய பூக்களை மலர்ந்து இரவெல்லாம் மணம் வீசுகின்ற திருப்புறம்பயத்தை வணங்கச் செல்வோம்; புறப்படு.

திருப்புறம்பயம்

புறந்தி ரைந்து நரம்பெழுந்து
நரைத்து நீஉ ரை யாற்றளர்ந்
தறம்பு ரிந்துநி னைப்ப தாண்மை
யரிது காணிஃ தறிதியேல்
திறம்பி யாதெழு நெஞ்ச மேசிறு
காலை நாமுறு வாணியம்
புறம்ப யத்துறை பூத நாதன்
புறம்ப யந்தொழப் போதுமே. **#353**

மனமே, தோல் திரைந்து, நரம்புகள் வெளித் தோன்றி, வாய் குழறும் நிலை வந்த பின்பு அறத்தைச் செய்ய நினைப்பது பயனில்லாததாம்; இதனை நீ அறிவையாயின், நாம் இளமையிலே செய்து ஊதியம் பெறுதற்குரிய வாணிகம் இதுவேயாக, புறத்திலே அச்சத்தொடு சூழும் பூதங்களுக்குத் தலைவனாகிய இறைவனது திருப்புறம்பயத்தை வணங்கச் செல்வோம்; என்னைப் பிறழ்வியாது, விரையப் புறப்படு.

திருப்புறம்பயம்

குற்றொ ருவ்வரைக் கூறை கொண்டு
கொலைகள் சூழ்ந்த களவெலாம்
செற்றொ ருவ்வரைச் செய்த தீமைகள்
இம்மை யேவருந்திண்ணமே
மற்றொரு ருவ்வரைப் பற்றி லேன்மற
வாதெ ழுமட நெஞ்சமே
புற்ற ரவ்வுடைப் பெற்ற மேறி
புறம்ப யந்தொழப் போதுமே. **#354**

அறியாமையுடைய மனமே, பொருளைப் பறித்தல் வேண்டி அஃது உடைய ஒருவரைக் கருவியாற் குற்றி, அவர் உடையைப் பறித்து, மேலும் கொலைச் செயல்களைச் செய்யத் துணிந்த களவினால் ஆகிய பாவங்களும், முறையில் நிற்கும் ஒருவரை முறையின்றிப் பகைத்து, அப்பகை காரணமாக அவர்க்குத் தீங்கிழைத்த பாவங்களும் மறுமை வருங்காறும் நீட்டியாது இம்மையே வந்து வருத்தும்; இது திண்ணம்;

ஆதலின், அவைபோல்வன நிகழாதிருத்தற்கு உன்னையன்றிப் பிறர் ஒருவரையும் நான் துணையாகப் பற்றாது உன்னையே பற்றினேன்; புற்றில் வாழும் பாம்புகளை அணிகளாக உடைய, இடப வாகனனது திருப்புறம்பயத்தை வணங்கச் செல்வோம்; அவனை நினைந்து புறப்படு.

திருப்புறம்பயம்

கள்ளி நீசெய்த தீமை யுள்ளன
பாவ மும்பறை யும்படி
தெளளி தாஎழு நெஞ்ச மேசெங்கண்
சேவு டைச்சிவ லோகனூர்
துள்ளி வெள்ளிள வாளை பாய்வயல்
தோன்று தாமரைப் பூக்கள்மேல்
புள்ளி நள்ளிகள் பள்ளி கொள்ளும்
புறம்ப யந்தொழப் போதுமே. **#355**

மனமே, நீ வஞ்சித்துச் செய்த தீமையால் உளவாகிய பாவமும் நீங்கும்படி, இடபத்தையுடைய சிவலோகனது ஊராகிய, வெள்ளிய இளமையான வாளை மீன்கள் துள்ளிப் பாய்கின்ற வயல்களில் மலர்கின்ற தாமரைப் பூக்களின் மேல், புள்ளிகளையுடைய நண்டுகள் பள்ளி கொள்கின்ற திருப்புறம்பயத்தை வணங்கத் தெளவுடையையாய்ப் புறப்படு. விகுதியாதல் பிற்கால முறைமை. அப்பண்புப் பெயர் பண்பியின் மேல் நின்றது. ஈண்டுக் குறித்த பாவம் தமக்கு உளதாகத் துணிந்திலராயினும், 'உளதாயிருப்பின், அவையும் நீங்குமாறு வணங்குவோம்' என்று அருளினார், அஃது ஒன்றே அதற்குப் பயனாகாமையின்.

திருப்புறம்பயம்

படையெ லாம்பக டாரஆளிலும்
பெளவஞ் சூழ்ந்தர சாளிலும்
கடையெ லாம்பிணைத் தேரை வால்கவ
லாதெ ழுமட நெஞ்சமே
மடையெ லாங்கழு நீர்ம லர்ந்து
மருங்கெ லாங்கரும் பாடத்தேன்
புடையெ லாமணம் நாறு சோலைப்
றம்ப யந்தொழப் போதுமே. **#356**

அறியாமை பொருந்திய மனமே, யானைகள் நிரம்பியிருக்க, பல படைகளையும் ஏவல்கொண்டு வெற்றியைப் பெறினும். அவ்வெற்றியாலே கடல்சூழ்ந்த நிலம் முழுவதையும் ஆளினும், முடிவில் எல்லாம், தேரையோடு ஒட்டியுள்ள வால்போல ஆகிவிடும்; ஆதலால்,

நீர்மடைகளில் எல்லாம் கழுநீர்ப் பூக்கள் மலர்தலாலும், பல இடங்களிலும் கரும்பை ஆலையில் இட்டுப் பிழிதலாலும், எல்லாப் பக்கங்களிலும் தேனின் மணம் வீசுகின்ற சோலைகளையுடைய திருப்புறம்பயத்தை வணங்கச் செல்வோம்; அவைகளைப் பற்றிக் கவலைகொள்ளாது புறப்படு.

திருப்புறம்பயம்

முன்னைச் செய்வினை இம்மை யில்வந்து
மூடு மாதலின் முன்னமே
என்னை நீதியக் காதெ ழும்மட
நெஞ்ச மேஎந்தை தந்தையூர்
அன்னச் சேவலோ டூடிப் பேடைகள்
கூடிச் சேரு மணிபொழில்
புன்னைக் கன்னி களக்கரும்பு
புறம்ப யம்தொழப் போதுமே. **#357**

அறியாமையையுடைய மனமே, ஒருவர் முற்பிறப்பிற் செய்த வினை, இப்பிறப்பில் வந்து அவரைச் சூழ்ந்து கொள்ளும் என்பது உண்மையாதலின், அங்ஙனம் வந்து சூழ்வதற்கு முன்பே, எமக்கும் பிறர்க்கும் தந்தையாகிய சிவபெருமானது ஊராகிய அன்னப் பேடைகள், அவற்றின் சேவல்களோடு முன்னே ஊடல் கொண்டு, பின்பு கூடலைச் செய்து வாழ்கின்ற அழகிய சோலைகளில் உள்ள இளைய புன்னை மரங்கள் கழிக்கரையில் நின்று மணம் வீசுகின்ற திருப்புறம் பயத்தை வணங்கச் செல்வோம்; என்னை நீ கலங்கச் செய்யாது புறப்படு.

திருப்புறம்பயம்

மலமெ லாமறும் இம்மை யேமறு
மைக்கும் வல்வினை சார்கிலா
சலமெ லாமொழி நெஞ்ச மேஎங்கள்
சங்க ரன்வந்து தங்குமூர்
கலமெ லாங்கடல் மண்டு காவிரி
நங்கை யாடிய கங்கைநீர்
புலமெ லாமண்டிப் பொன்வி ளைக்கும்
புறம்ப யந்தொழப் போதுமே. **#358**

மனமே, இப்பிறப்பிற்றானே மலங்கள் யாவும் நீங்கும்; மறு பிறப்பிற்கு வாயிலாக வலிய வினைகள் வந்து அடைய மாட்டா; ஆதலின், நீ துன்பத்தை விட்டொழி; எங்கள் சங்கரன் வந்து தங்கியிருக்கும் ஊராகிய, காவிரிநதி என்கின்ற நங்கை முழுக ஓடுகின்ற, கடலிற் காணப்படுவது போல நாவாய்கள் மிகுந்து காணப்படுகின்ற கங்கைநதியின் நீர்

போலும் நீர், வயல்களிலெல்லாம் மிகப்பாய்ந்து பொன் போலும் செந்நெற்களை விளைவிக்கின்ற திருப்புறம் பயத்தை வணங்கச் செல்வோம்.

திருப்புறம்பயம்

பண்ட ரீயன செய்த தீமையும்
பாவ மும்பறை யும்படி
கண்ட ரீயன கேட்டி யேற்கவ
லாதெ ழுமட நெஞ்சமே
தொண்ட ரீயன பாடித் துள்ளிநின்
றாடி வானவர் தாந்தொழும்
புண்ட ரீகம லரும் பொய்கைப்
புறம்ப யந்தொழப் போதுமே. **#359**

அறியாமையையுடைய மனமே, முற்பிறப்பில் நீக்குதற்கு அரியனவாகச் செய்த தீய செயல்களின் பழக்கமும், அச்செயல்களால் வந்த பாவமும் விரைய நீங்கும்படி நான் கண்ட அரிய வழிகளை நீ கேட்டு நடப்பதாயின், தேவர்கள் அரிய பல தொண்டுகளைச் செய்து பாடியும், குதித்து நின்று ஆடியும் தொழுகின்ற, தாமரை மலர்கள் மலர்கின்ற பொய்கைகளை யுடைய திருப்புறம்பயத்தை வணங்கச் செல்வோம்; கவலையுறாமல் புறப்படு.

திருப்புறம்பயம்

துஞ்சி யும்பிறந் துஞ்சி றந்துந்
துயக்க றாத மயக்கிவை
அஞ்சி யூரன் திருப்பு றம்பயத்
தப்ப னைத்தமிழ்ச் சீரினால்
நெஞ்சி னாலே புறம்ப யந்தொழு
துய்து மென்று நினைத்தன
வஞ்சி யாதுரை செய்ய வல்லவர்
வல்ல வானுல காள்வரே. **#360**

இறந்தும், பின்பு பிறந்தும், அதன் பின் வளர்ந்தும் சுழலுதல் நீங்காத மயக்கத் தொழிலாகிய இவைகளுக்கு அஞ்சி, நம்பியாரூரன், 'திருப்புறம்பயத்தை வணங்கி உய்வோம்' என்று நெஞ்சினாலே நினைத்து, ஆங்கிருக்கின்ற தன் தந்தையைத் தமிழ்ச் சீர்களால் பாடிய இப்பாடல்களைக் கரவில்லாது பாட வல்லவர்கள், அவைகளை நீக்கவல்ல வானுலகத்தை ஆள்வார்கள்.

திருப்பைஞ்ஞீலி

திருப்பைஞ்ஞீலி

திருப்பைஞ்ஞீலி,
பண் - கொல்லி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மெய்ஞ்ஞான நீலகண்டேசுவரர்.
தேவியார் : விசாலாட்சியம்மை.

காரு லாவிய நஞ்சை யுண்டிருள்
கண்டர் வெண்டலை யோடுகொண்
டூரெ லாந்திரிந் தென்செய் வீர்பலி
ஓரி டத்திலே கொள்ளும் நீர்
பாரெ லாம்பணிந் தும்மை யேபர
விப்ப ணியும்பைஞ் ஞீலியீர்
ஆர மாவது நாக மோசொலும்
ஆர ணீய விடங்கரே. **#361**

கருமைநிறம் பொருந்திய நஞ்சினை உண்டமையால் இருண்ட கண்டத்தினையுடையவரே, நிலவுலகமெல்லாம் உம்மையே வணங்கித் துதித்துத் தொண்டுபுரியும் பெருமையுடைய, திருப்பைஞ்ஞீலி இறைவரே, காட்டில்வாழும் அழகரே, நீர் வெண்மையான தலையோட்டினைக் கையிற்கொண்டு ஊரெலாந் திரிந்து என்ன பெறப் போகின்றீர்? இவ் வோரிடத்திற்றானே நீர் வேண்டிய அளவினதாகிய பிச்சையைப் பெற்றுக்கொள்வீர்; அது நிற்க; உமக்கு முத்து வடமாவது, பாம்புதானோ? சொல்லீர்.

திருப்பைஞ்ஞீலி

சிலைத்து நோக்கும்வெள் ளேறு செந்தழல்
வாய பாம்பது மூசெனும்
பலிக்கு நீர்வரும் போது நுங்கையிற்
பாம்பு வேண்டா பிரானிரே
மலைத்த சந்தொடு வேங்கை கோங்கமும்
மன்னு காரகில் சண்பகம்
அலைக்கும் பைம்புனல் சூழ்பைஞ் ஞீலியில்
ஆர ணீய விடங்கரே. **#362**

இறைவரே, மலையின்கண் பிறந்த, 'சந்தனம், வேங்கை, கோங்கு, மிக்க கரிய அகில், சண்பகம்; என்னும் மரங்களை அலைத்துக்கொண்டு வரும், தண்ணிய நீர் சூழ்ந்த திருப்பைஞ்ஞீலியில் எழுந்தருளியிருக்கின்ற,

காட்டில் வாழும் அழகரே, நுமது வெள்விடை முழக்கமிட்டுச் சினந்து பார்க்கின்றது, சிவந்த நெருப்புப் போலும் நஞ்சினைக் கொண்ட வாயினையுடைய பாம்பு, 'மூசு' என்னும் ஓசையுண்டாகச் சீறுகின்றது; ஆதலின், நீர் பிச்சைக்கு வரும் போது கையில் பாம்பையேனும் கொண்டுவருதல் வேண்டா.

திருப்பைஞ்ஞீலி

தூய வர்கண்ணும் வாயும் மேனியுந்
துன்ன ஆடை சுடலையில்
பேயொ டாடலைத் தவிரும் நீரொரு
பித்த ரோஎம் பிரானிரே
பாயும் நீர்க்கிடங் கார்க மலமும்
பைந்தண் மாதவி புன்னையும்
ஆய பைம்பொழில் சூழ்பைஞ் ஞீலியில்
ஆர ணீய விடங்கரே. **#363**

எம்பெருமானிரே, பாயுந் தன்மையுடைய நீரைக் கொண்ட அகழியில் நிறைந்துள்ள தாமரைகளும், அதன் கரையில், மாதவியும், புன்னையும் பொருந்திய' சோலைகள் சூழ்ந்த திருப்பைஞ்ஞீலியில் எழுந்தருளியுள்ள, காட்டில் வாழும் அழகரே, நீர், கண்ணும், வாயும், மேனியும் அழகியராய் இருக்கின்றீர்; ஆயினும், தைத்த கோவணத்தை உடுத்து, சுடலையில் பேயோடு ஆடுதலை ஒழிய மாட்டீர்; நீர் ஒரு பித்தரோ? அவற்றை விட்டொழியும்.

திருப்பைஞ்ஞீலி

செந்த மிழ்த்திறம் வல்லி ரோசெங்கண்
அரவம் முன்கையில் ஆடவே
வந்து நிற்குமி தென்கொ லோபலி
மாற்ற மாட்டோ மிடகிலோம்
பைந்தண் மாமலர் உந்து சோலைகள்
கந்த நாறுபைஞ் ஞீலியீர்
அந்தி வானமும் மேனி யோசொலும்
ஆர ணீய விடங்கரே. **#364**

பசிய, தண்ணிய, சிறந்த பூக்களை உதிர்க்கின்ற சோலைகள் நறுமணம் வீசுகின்ற திருப்பைஞ்ஞீலியில் எழுந்தருளி இருப்பவரே. காட்டில் வாழும் அழகரே, நீர் மகளிர் மனத்தைக் கவர்தற்கு, 'இயல், இசை, நாடகம்' என்னும் முத்தமிழிலும் வல்லிரோ? நும்மேனியும் அந்தி வானம் போல்வதோ? சொல்லீர், அவை நிற்க; நீர், உமது முன்கையில் பாம்பு நின்று படம் எடுத்து ஆடும்படி வந்து நிற்பது என்? இதனால், நாங்கள்

கொண்டுவந்த பிச்சையை இடாது போக மாட்டேமும், இடமாட்டேமும் ஆகின்றேம்.

திருப்பைஞ்ஞீலி

நீறு நுந்திரு மேனி நித்திலம்
நீல்நெ டுங்கண்ணி னாளொடும்
கூற ராய்வந்து நிற்றி ராற்கொணர்ந்
திடகி லோம்பலி நடமினோ
பாறு வெண்டலை கையி லேந்திப்பைஞ்
ஞீலி யேனென்றீ ரடிகள்நீர்
ஆறு தாங்கிய சடைய ரோசொலும்
ஆர ணீய விடங்கரே. **#365**

தலைவரே, காட்டில் வாழும் அழகரே, நீர், அழிந்த வெண்மையான தலையோட்டினைக் கையில் ஏந்திக் கொண்டு, 'யான் இத் திருப்பைஞ்ஞீலியில் உள்ளேன்; சிறிது பிச்சை இடுமின்' என்றீர்; உமது திருமேனியில் உள்ள நீறு முத்துப்போல வெள்ளொளியை வீசுகின்றது. ஆயினும், கரிய நண்ட கண்களையுடைய பெண் ஒருத்தியோடும் கூடிய பாதி உருவத்தை யுடையிராய் வந்து நிற்கின்றீர்; அதன் மேலும் நீர், கங்கையைச் சுமந்த சடையை உடையவரோ? சொல்லீர்; இதனால், உமக்கு நாங்கள் பிச்சையைக் கொணர்ந்தும் இடேமாயினேம்; நடவீர்.

திருப்பைஞ்ஞீலி

குரவம் நாறிய குழலி னார்வளை
கொள்வ தேதொழி லாகிநீர்
இரவும் இம்மனை அறிதி ரேஇங்கே
நடந்து போகவும் வல்லிரே
பரவி நாடொறும் பாடு வார்வினை
பற்ற றுக்கும்பைஞ் ஞீலியீர்
அரவம் ஆட்டவும் வல்லி ரோசொலும்
ஆர ணீய விடங்கரே. **#366**

நாள்தோறும் பாடிப் பரவுவாரது வினைகளைப் பற்றறச் செய்யும் திருப்பைஞ்ஞீலி இறைவரே, காட்டில் வாழும் அழகரே, நீர், குராமலரின் மணத்தை வீசுகின்ற கூந்தலையுடைய மகளிரது வளைகளைக் கவர்ந்துகொள்வதே தொழிலாய், இங்குள்ள இல்லங்களை இரவிலும் வந்து அறிகின்றீர்; அதனால், நள்ளிரவில் இங்குநின்றும் நடந்துபோகவும் வல்லீரோ? அதுவன்றிப் பாம்பு ஆட்டவும் வல்லீரோ? சொல்லீர்.

திருப்பைஞ்ஞீலி

ஏடு லாமலர்க் கொன்றை சூடுதிர்
என்பெ லாமணிந் தென்செய்வீர்
காடு நும்பதி ஓடு கையது
காதல் செய்பவர் பெறுவதென்
பாடல் வண்டிசை யாலுஞ் சோலைப்பைஞ்
ஞீலி யேனென்று நிற்றிரால்
ஆடல் பாடலும் வல்லி ரோசொலும்
ஆர ணீய விடங்கரே. **#367**

காட்டில் வாழும் அழகரே, நீர், 'யான், பாடுதலையுடைய வண்டுகள் இசையை முழுக்குகின்ற சோலைகளையுடைய திருப்பைஞ்ஞீலியில் உள்ளேன்; சிறிது பிச்சையிடுமின்' என்று சொல்லி வந்து நிற்கின்றீர்; நீர், இதழ்கள் பொருந்திய கொன்றை மலர் மாலையைச் சூடுகின்றீர்; அதனோடு ஒழியாது, எலும்புகளையெல்லாம் அணிந்து என்ன பெறப்போகின்றீர்? அதுவன்றி, நும் ஊரோ, காடு; நும் கையில் இருப்பதோ, ஓடு; இவ்வாறாயின் உம்மைக் காதலிப்பவர் பெறும் பொருள் யாது? இந்நிலையில் நீர், ஆடல் பாடல்களிலும் வல்லீரோ? சொல்லீர்.

திருப்பைஞ்ஞீலி

மத்த மாமலர்க் கொன்றை வன்னியுங்
கங்கை யாளொடு திங்களும்
மொய்த்த வெண்டலை கொக்கி றஃகொடு
வெள்ளெ ருக்கமுஞ் சடையதாம்
பத்தர் சித்தர்கள் பாடி யாடும்பைஞ்
ஞீலி யேனென்று நிற்றிரால்
அத்தி யீருரி போர்த்தி ரோசொலும்
ஆர ணீய விடங்கரே. **#368**

காட்டில் வாழும் அழகரே, நீர், 'யான் அடியார்களும், சித்தர்களும் பத்திமிகுதியால் திருப்பாடல்களைப் பாடிக் கொண்டு ஆடுகின்ற திருப்பைஞ்ஞீலியில் உள்ளேன்; சிறிது பிச்சை இடுமின்' என்று சொல்லிவந்து நிற்கின்றீர்; 'ஊமத்தை, கொன்றை' என்னும் இவற்றின் சிறந்த மலர்களும், வன்னியின் இலையும், கங்கையும், பிறையும், அவற்றொடு நெருங்கிய வெண்டலையும், கொக்கிறகும், வெள்ளெருக்கும் உம் சடையிலே உள்ளன; அவைகளேயன்றி, யானையை உரித்த தோலையும் மேனிமேல் போர்த்துக் கொள்வீரோ? சொல்லீர்.

திருப்பைஞ்ஞீலி

தக்கை தண்ணுமை தாளம் வீணை
தகுணிச் சங்கிணை சல்லரி
கொக்க ரைகுட முழுவி னோடிசை
கூடிப் பாடிநின் றாடுவீர்
பக்க மேகுயில் பாடுஞ் சோலைப்பைஞ்
ஞீலி யேனென்று நிற்றிரால்
அக்கும் ஆமையும் பூண்டி ரோசொலும்
ஆர ணீய விடங்கரே. **#369**

காட்டில் வாழும் அழகரே, நீர், 'யான், எப்பக்கங்களிலும் குயில்கள் பாடுகின்ற திருப்பைஞ்ஞீலியில் உள்ளேன்; சிறிது பிச்சை இடுமின்' என்று சொல்லி வந்து நிற்கின்றீர். நீர், 'தக்கை, தண்ணுமை, தாளம், வீணை, தகுணிச்சம், கிணை, சல்லரி, சங்கு குடமுழா' என்னும் இவற்றொடு கூடி, பல இசைகளைப் பாடிக்கொண்டு முன்வந்து நின்று ஆடுவீர்; ஆயினும், அதற்கேற்ப நல்ல அணிகளை அணியாது, எலும்பையும், ஆமையோட்டையும் அணிந்து கொண்டீரோ? சொல்லீர்.

திருப்பைஞ்ஞீலி

கையொர் பாம்பரை யார்த்தொர் பாம்பு
கழுத்தொர் பாம்பவை பின்புதாழ்
மெய்யெ லாம்பொடிக் கொண்டு பூசுதிர்
வேதம் ஓதுதிர் கீதமும்
பைய வேவிடங் காக நின்றுபைஞ்
ஞீலி யேனென்றீ ரடிகள்நீர்
ஐயம் ஏற்குமி தென்கொ லோசொலும்
ஆர ணீய விடங்கரே. **#370**

தலைவரே, காட்டில் வாழும் அழகரே, உமக்குக்கையில் ஒரு பாம்பு; அரையில், கட்டிய ஒரு பாம்பு; கழுத்தில் ஒரு பாம்பு; அவையெல்லாம் பின்புறமும் ஊர்கின்ற மேனி முழுவதும் நீற்றினால் பூசியுள்ளீர்; அதனோடு வேதம் ஓதுகின்றீர்; இவற்றோடு இசையும் உம்மிடத்தில் மெல்ல அழகியதாய்த் தோன்ற வந்து நின்று, 'யான் திருப்பைஞ்ஞீலியில் உள்ளேன்; சிறிது பிச்சை இடுமின்' என்கின்றீர்; பிச்சை எடுக்கும் இக்கோலம் எத்தன்மையதோ? சொல்லீர்.

திருப்பைஞ்ஞீலி

அன்னஞ் சேர்வயல் சூழ்பைஞ் ஞீலியில்
ஆர ணீய விடங்கரை

மின்னு நுண்ணிடை மங்கை மார்பலர்
வேண்டிக் காதல் மொழிந்தசொல்
மன்னு தொல்புகழ் நாவ லூரன்வன்
றொண்டன் வாய்மொழி பாடல்பத்
துன்னி இன்னிசை பாடு வார்உமை
கேள்வன் சேவடி சேர்வரே. **#371**

அன்னங்கள் தங்குகின்ற வயல்கள் சூழ்ந்த திருப்பைஞ்ஞீலியில் எழுந்தருளியுள்ள, காட்டில் வாழும் அழகராகிய இறைவரை, தோன்றி மறைகின்ற நுண்ணிய இடையினையுடைய மங்கையர் பலர் காதலித்து அக் காதலை வெளிப்படுத்திய சொற்களையுடைய, நிலைபெற்ற பழைய புகழினையுடைய திருநாவலூரில் தோன்றினவனாகிய வன்றொண்டனது வாய்மொழியான இப்பாடல்கள் பத்தினையும், மனத்தில் புகக்கொண்டு, இனிய இசையாற் பாடுபவர், உமாதேவிக்குக் கணவனாகிய சிவபிரானது செவ்விய திருவடியை அடைவர்.

திருவாரூர்

திருவாரூர்

திருவாரூர்,
பண் - கொல்லி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வன்மீகநாதர்.
தேவியார் : அல்லியங்கோதையம்மை.

குருகுபா யக்கொழுங் கரும்புக ணெரிந்தசா
றருகுபா யும்வயல் அந்தண்ஆ ரூரரைப்
பருகுமா றும்பணிந் தேத்துமா றுந்நினைந்
துருகுமா றும்மிவை உணர்த்தவல் லீர்களே. **#372**

குருகுகளே, நீங்கள் பறந்து உலாவுவதனால் செழுமையான கரும்புகள் நெரிந்து பெருகிய சாறு, அருகாகச் சென்று பாய்கின்ற வயல்களையுடைய அழகிய தண்ணிய திருவாரூர் இறைவரை, யான் உள்ளத்தால் திளைக்கின்றவாறும், திசைநோக்கி வணங்கித் துதிக்கின்றவாறும், நினைந்து நெஞ்சு உருகுகின்றவாறும் ஆகிய இவைகளை என் பொருட்டு அவர்க்குத் தெரிவிக்க வல்லீர்களோ?

திருவாரூர்

பறக்குமெங் கிள்ளைகாள் பாடுமெம் பூவைகாள்
அறக்கணென் னத்தகும் அடிகள்ஆ ரூரரை
மறக்ககில் லாமையும் வளைகள்நில் லாமையும்
உறக்கமில் லாமையும் உணர்த்தவல் லீர்களே. **#373**

பறக்கும் இயல்புடைய எங்கள் கிளிகளே, பாடும் இயல்புடைய எங்கள் நாகணவாய்ப் புட்களே, அறத்திற்குக் கண் என்று சொல்லத் தக்க தலைவராகிய திருவாரூர் இறைவரை, யான் ஒரு ஞான்றும் மறக்க இயலாமையையும்,. அது காரணமாக எனது கைவளைகள் நில்லாது கழன்று வீழ்தலையும், கண்கள் உறங்குதல் இல்லாமையையும், என்பொருட்டு அவருக்குத் தெரிவிக்க வல்லீர்களோ?

திருவாரூர்

சூழுமோ டிச்சுழன் றுழலும்வெண் ணாரைகாள்
ஆளும்அம் பொற்கழல் அடிகள்ஆ ரூரர்க்கு
வாழுமா றும்வளை கழலுமா றும்மெனக்
கூழுமா றும்மிவை உணர்த்தவல் லீர்களே. **#374**

சுற்றிலும் ஓடிச் சுழன்று திரியும் வெள்ளிய நாரைகளே, அடியவர்களை

ஆளுகின்ற அழகிய பொன்போலும் திருவடிகளையுடைய தலைவராகிய திருவாரூர் இறைவருக்கு, யான் இவ்வுடம்பின் நீங்காது வாழுமாறும், என்வளைகள் கழலுமாறும், மாறாத முறையும் என்னிடத்து மாறி நிகழுமாறும் ஆகிய இவைகளை என் பொருட்டுத் தெரிவிக்க வல்லீர்களோ?

திருவாரூர்

சக்கிரவா கத்திளம் பேடைகாள் சேவல்காள்
அக்கிரமங் கள்செயும் அடிகள்ஆ ரூரர்க்கு
வக்கிரமில் லாமையும் வளைகள்நில் லாமையும்
உக்கிரமில் லாமையு முணர்த்தவல் லீர்களே. **#375**

'சக்கிரவாகம்' என்னும் இனத்து, இளைய பேடைகளே, சேவல்களே, முறையல்லாதவற்றைச் செய்கின்ற தலைவராகிய திருவாரூர் இறைவருக்கு, யான் மனம் மாறுபடாமையையும், எனது வளைகள் நில்லாது கழலுதலையும், அவர்மீது புலவி தோன்றாமையையும் என்பொருட்டுத் தெரிவிக்க வல்லீர்களோ?

திருவாரூர்

இலைகொள்சோ லைத்தலை இருக்கும்வெண் ணாரைகாள்
அலைகொள்சூ லப்படை யடிகள்ஆ ரூரர்க்குக்
கலைகள்சோர் கின்றதுங் கனவளை கழன்றதும்
முலைகள்பீர் கொண்டதும் மொழியவல் லீர்களே. **#376**

இலைகளைக் கொண்ட சோலையிடத்து இருக்கின்ற வெள்ளிய நாரைகளே, அழித்தல் தொழிலைக் கொண்ட சூலப்படையையுடைய தலைவராகிய திருவாரூர் இறைவருக்கு, எனது உடை நெகிழ்கின்றதையும், உயர்ந்த வளைகள் கழன்றொழிந்ததையும், கொங்கைகள் பசலை அடைந்ததையும் என்பொருட்டுச் சொல்ல வல்லர்களோ?

திருவாரூர்

வண்டுகாள் கொண்டல்காள் வார்மணற் குருகுகாள்
அண்டவா ணர்தொழும் அடிகள்ஆ ரூரரைக்
கண்டவா றுங்காமத் தீக்கனன் றெரிந்துமெய்
உண்டவா றும்மிவை உணர்த்தவல் லீர்களே. **#377**

வண்டுகளே, மேகங்களே, நுண்ணிய மணல்மேல் இருக்கின்ற குருகுகளே, வானத்தில் வாழ்வோராகிய தேவர்கள் வணங்குகின்ற தலைவராகிய திருவாரூர் இறைவரை ஒரு நாள் யான் கண்டவாறும், அன்றுமுதல் காமத் தீ, கனன்று எரிந்து என் உடம்பை உண்டுவிட்ட

வாறும் ஆகிய இவைகளை என்பொருட்டு அவருக்குத் தெரிவிக்க வல்லீர்களோ?

திருவாரூர்

தேனலங் கொண்டதேன் வண்டுகாள் கொண்டல்காள்
ஆனலங் கொண்டவெம் மடிகள்ஆ ரூரர்க்குப்
பானலங் கொண்டவெம் பணைமுலை பயந்துபொன்
ஊனலங் கொண்டதும் உணர்த்தவல் லீர்களே. **#378**

தேனினது இன்பத்தை நுகர்ந்த தேன்களே, வண்டுகளே, மேகங்களே, பசுவினது பயனாகிய பால் முதலியவற்றை உவந்து கொண்ட எம் தலைவராகிய திருவாரூர் இறைவருக்கு,பாலாகிய நற்பொருளைக் கொண்ட எனது பருத்த கொங்கைகள் பசப்பெய்தி, பொன்போலும் பசலை என் மேனியினது அழகையெல்லாம் கொள்ளை கொண்டமையை என் பொருட்டுத் தெரிவிக்கவும் வல்லீர்களோ?

திருவாரூர்

சுற்றுமுற் றுஞ்சுழன் றுழலும்வெண் ணாரைகாள்
அற்றமுற் றப்பகர்ந் தடிகள்ஆ ரூரர்க்குப்
பற்றுமற் றின்மையும் பாடுமற் றின்மையும்
உற்றுமற் றின்மையும் உணர்த்தவல் லீர்களே. **#379**

சுற்றியுள்ள இடம் முழுவதும் சுழன்று திரியும் வெள்ளிய நாரைகளே, யாவர்க்கும் தலைவராகிய திருவாரூர் இறைவருக்கு, எனது துன்பத்தை முடியச் சொல்லி, எனக்கு வேறு பற்றுக் கோடு இன்மையையும், யான் பலராலும் அவர் தூற்றப்படுதலையும், எனக்கு உறவாவார் வேறு இன்மையையும் என்பொருட்டுத் தெரிவிக்க வல்லீர்களோ?

திருவாரூர்

குரவநா றக்குயில் வண்டினம் பாடநின்
றரவமா டும்பொழில் அந்தண்ஆ ரூரரைப்
பரவிநா டும்மதும் பாடிநா டும்மதும்
உருகிநா டும்மதும் உணர்த்தவல் லீர்களே. **#380**

குராமரங்கள் தமது மலர்மணத்தை வீச, குயில்களும் வண்டுக் கூட்டமும் பாட, பாம்புகள் படமெடுத்து நின்று ஆடுகின்ற சோலைகளையுடைய அழகிய தண்ணிய திருவாரூர் இறைவரை யான் தொழுது தேடுகின்ற வகையையும், துதித்துத் தேடுகின்ற வகையையும், நெஞ்சுருகித் தேடுகின்ற வகையையும், என்பொருட்டு அவருக்குத் தெரிவிக்க வல்லீர்களோ?

திருவாரூர்

கூடும்அன் னப்பெடை காள்குயில் வண்டுகாள்
ஆடும்அம் பொற்கழ லடிகள்ஆ ரூரரைப்
பாடுமா றும்பணிந் தேத்துமா றுங்கூடி
ஊடுமா றும்மிவை யுணர்த்தவல் லீர்களே. **#381**

நும் சேவலொடு கூடுகின்ற அன்னப் பெடைகளே, குயில்களே, வண்டுகளே, நடனம் ஆடுகின்ற அழகிய பொன்போலும் திருவடிகளையுடைய திருவாரூர் இறைவரை அடையப் பெற்ற பின்புயான் அவரைப் பாடும் முறையையும், பணிந்து புகழும் முறையையும், அவரொடு கூடுதலும் ஊடுதலும் செய்யும் முறையையும் இவை என்று அவருக்கு என் பொருட்டுத் தெரிவிக்க வல்லீர்களோ?

திருவாரூர்

நித்தமா கந்நினைந் துள்ளமேத் தித்தொழும்
அத்தன்அம் பொற்கழ லடிகள்ஆ ரூரரைச்
சித்தம்வைத் தபுகழ்ச் சிங்கடி யப்பன்மெய்ப்
பத்தனூ ரன்சொன்ன பாடுமின் பத்தரே. **#382**

அடியவராய் உள்ளவர்களே. மெய்யுணர்ந்தோர் எல்லாம் உள்ளத்தால் நிலையாக நினைந்து, வாயால் துதித்து, கையால் தொழுகின்ற தந்தையாரும், அழகிய பொன்போலும் திருவடிகளையுடைய தலைவரும் ஆகிய திருவாரூர் இறைவரை, அவரையே எப்பொழுதும் சித்தத்தில் வைத்ததனால் வந்த புகழையுடையவனும், சிங்கடிக்குத் தந்தையும், உண்மையான திருத்தொண்டனும் ஆகிய நம்பியாரூரன் பாடிய இப் பாடல்களைப் பாடுமின்.

திருவதிகைத்திருவீரட்டானம்

திருஅதிகைவீரட்டானம்

திருவதிகைத்திருவீரட்டானம்,
பண் - கொல்லிக்கௌவாணம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீரட்டானேசுவரர்.
தேவியார் : திருவதிகைநாயகி.

தம்மானை யறியாத சாதியா ருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவி னுரியானைக் கரிகாட்டி லாட
லுடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்
தம்மான்தன் அடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. **#383**

உலகில், தம் தலைவனை உருவறியாத இயல் புடையவரும் உளரோ! இல்லை; அங்ஙனமாக, கருமை நிறத்தைக் கொண்ட கண்டத்தையுடைய அப்பெருமான், தனது திருவடியை எடுத்து என் தலைமேல் வைத்தேவிடுவான் என்னும் விருப்பத்தினாலே உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிற அறிவில்லாத, நாய்போலும் சிறுமையுடையேனாகிய யான், சடைமேற் சூடிக்கொண்ட பிறையை உடையவனும், விடைமேல் ஏறுகின்ற வேறுபாட்டினனும், யானையின் தோலைப் போர்பவனும், கரிந்த காட்டில் ஆடுதல் உடையவனும், விடையைக் கொடியாக உடையவனும், எம் தலைவனும் ஆகிய அலையெறியும் கெடில நதியின் வடகரைக்கண் உள்ள திரு வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானை, அவன் அதனைச்செய்ய வந்த சிறிது பொழுதினும் அறியாது இகழ்வேனாயினேன் போலும்; என்னே என் மடமை இருந்தவாறு! இனியொருகாலும் அது வாயாது போலும்!

திருஅதிகைவீரட்டானம்

முன்னேஎம் பெருமானை மறந்தென்கொல் மறவா
தொழிந்தென்கொல் மறவாத சிந்தையால் வாழ்வேன்
பொன்னேநன் மணியேவெண் முத்தேசெம் பவளக்
குன்றமே ஈசனென் றுன்னியே புகழ்வேன்
அன்னேஎன் னத்தாஎன் றமரரா லமரப்
படுவானை அதிகைமா நகருள்வாழ் பவனை

என்னேஎன் எறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோதும் இகழ்வன்போ லியானே. **#384**

எம்பெருமான் என்னை ஆட்கொள்வதற்கு முன்னே அவனை யான் மறந்து இழந்ததென்! மறவாதிருந்து பெற்றதென்! ஆட்கொண்ட பின்பு மறவாத மனத்தொடு வாழ்வேனாயினேன். அன்றியும், 'பொன்னே! நல்ல மாணிக்கமே! வெண்மையான முத்தே! செம்மையான பவள மலையே! முதல்வனே!' என்று, அவனை நினைத்துப் பாடுவேன். அங்ஙனமாக, 'எங்கள் தாய்போல்பவனே, தந்தை போல்பவன' என்று தேவர்களால் விரும்பி வழிபடப்படுபவனும், திருவதிகை மாநகரில் வாழ்பவனும், அலையெறிகின்ற கெடில நதியின் வடகரைக்கண் உள்ள திருவீரட்டானத்தில் எழுந்தருளி யிருக்கின்றவனும் ஆகிய என் இறைவனை, அவன் தனது திருவடியை என் தலைமேற் சூட்டவந்த சிறிதுபொழுதினும் யான், அறியாது இகழ் வேனாயினேன் போலும்; என்னே என் மடமை இருந்தவாறு! இனி யொருகாலும் அது வாயாது போலும்!

திருஅதிகைவீரட்டானம்

விரும்பினேற் கெனதுள்ளம் விடகிலா விதியே
விண்ணவர்தம் பெருமானே மண்ணவர்நின் றேத்துங்
கரும்பேஎன் கட்டியென் றுள்ளத்தால் உள்கிக்
காதல்சேர் மாதராள் கங்கையாள் நங்கை
வரும்புனலுஞ் சடைக்கணிந்து வளராத பிறையும்
வரியரவும் உடன்துயில வைத்தருளும் எந்தை
இரும்புனல்வந் தெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. **#385**

காதல் பொருந்திய உமையவள், உடம்பில் ஒரு கூறாய் இருத்தலின், கங்கையாளாகிய நங்கை உருமாறி வந்த நீரையும் சடையில் அணிந்து, அதனோடு இளைய பிறையையும், கீற்றுக்கள் பொருந்திய பாம்பையும் ஒன்றாய் உறங்கும்படி வைத்தருளிய எம் தந்தையாகிய, மிக்க நீர் வந்து மோதுகின்ற கெடில நதியின் வடகரைக் கண் உள்ள திருவீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனை, 'விண்ணுலகத்தார்க்குத் தலைவனே, மண்ணுலகத்தவர் எதிர் நின்று துதிக்கும் கரும்பே, என் கட்டியே' என்று மனத்தால் நினைந்து விரும்பிய எனக்கு, வினை என் உள்ளத்தை விட்டு நீங்காமையால், அவன் தனது திருவடியை என் தலைமேற் சூட்ட வந்த சிறுபொழுதினும் யான் அறியாது அவனை இகழ்வேனாயினேன் போலும்; என்னே என் மடமை இருந்தவாறு! இனியொருகாலும் அது வாயாது போலும்!

திருஅதிகைவீரட்டானம்

நாற்றானத் தொருவனை நானாய பரனை
நள்ளாற்று நம்பியை வெள்ளாற்று விதியைக்
காற்றானைத் தீயானைக் கடலானை மலையின்
தலையானைக் கடுங்கலுழிக் கங்கைநீர் வெள்ள
ஆற்றானைப் பிறையானை அம்மானை எம்மான் தம்மானை
யாவர்க்கும் அறிவரிய செங்கண்
ஏற்றானை எறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. **#386**

மும்மூர்த்திகட்கு மேலே உள்ள ஒப்பற்றவனும், என்னில் வேறறக் கலந்து நிற்கும் முதல்வனும், திருநள்ளாற்றில் உள்ள சிறந்தவனும், வெள்ளாற்றில் உள்ள அறநெறியாகியவனும், 'காற்று, தீ, கடல்' என்னும் பொருள்களாய் உள்ளவனும், கயிலாயத்தின் உச்சியில் இருப்பவனும், வேகமான 'கங்கையாறு' என்னும் வெள்ள நீரைத் தாங்கியவனும், பிறையைச் சூடினவனும், பெரியோனும், என் தந்தைக்கும் தலைவனும், யாவராலும் அறிதற்கு அரிய, சிவந்த கண்களையுடைய இடபவாகனனும், அலையெறிகின்ற கெடிலநதியின் வடகரைக்கண் உள்ள திருவீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கின்றவனும் ஆகிய இறைவனை, அவன் தனது திருவடியை என் தலைமேல் சூட்ட வந்த சிறிதுபோதினும், யான் அறியாது இகழ்வேனாயினேன் போலும்; என்னே என் மடமைஇருந்தவாறு! இனியொருகாலும் அது வாயாதுபோலும்!

திருஅதிகைவீரட்டானம்

சேந்தர்தாய் மலைமங்கை திருநிறமும் பரிவும்
உடையானை அதிகைமா நகருள்வாழ் பவனைக்
கூந்தல்தாழ் புனல்மங்கை குயிலன்ன மொழியாள்
சடையிடையிற் கயலினங்கள் குதிகொள்ளக் குலாவி
வாய்ந்தநீர் வரஉந்தி மராமரங்கள் வணக்கி
மறிகடலை இடங்கொள்வான் மலைஆரம் வாரி
ஏந்துநீர் எறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. **#387**

'முருகப்பிரானார், அவர்க்குத் தாயாகிய மலைமகள்' என்னும் இவர்களது அழகிய நிறத்தையும், அன்பையும் ஏற்றுடையவனும், திருவதிகைமாநகரில் வாழ்கின்றவனும், தாழ்ந்த கூந்தலையும், குயில் போலும் மொழியினையும் உடைய நீர்மகளைச் சடையிடத்திற் கொண்ட, கயல் மீனினது கூட்டங்கள் குதிகொள்ளுதலால்

விளக்கமுற்றுப் பொருந்திய நீர் பெருகி வர, அதனிடத்து உயர்ந்தெழுகின்ற அலைகள் மராமரங்களை முரித்துத் தள்ளிக்கொண்டு, அலை மறிகின்ற கடலை இடமாகக் கொள்ளும்படி, மலையிடத்துள்ள சந்தன மரங்களை வாரிக் கொணர்ந்து வீசுகின்ற கெடில நதியின் வடகரைக்கண் உள்ள திருவீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கின்றவனும் ஆகிய இறைவனை, அவன் தனது திருவடியை என் தலைமேல் சூட்டவந்த சிறிது பொழுதினும் யான், அறியாது இகழ்வேனாயினேன் போலும்; என்னே என் மடமை இருந்தவாறு! இனியொருகாலும் அது வாயாது போலும்!

திருஅதிகைவீரட்டானம்

மைம்மான மணிநீல கண்டத்தெம் பெருமான்
வல்லேனக் கொம்பணிந்த மாதவனை வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்மதியும் பாம்புந்
தடுமாறுஞ் சடையானைத் தாழ்வரைக்கை வென்ற
வெம்மான மதகரியி னுரியானை வேத
விதியானை வெண்ணீறு சண்ணித்த மேனி
எம்மானை எறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. **#388**

மேகம்போலும், பெருமையையுடைய கண்டத்தையுடைய எம்பெருமானும், வலிய பன்றியின் கொம்பை அணிந்த பெரிய தவக்கோலத்தை யுடையவனும், தேவர்கள் தலைவனும், யாவர்க்குந் தலைவனும், குளிர்ந்த சந்திரனும் பாம்பும் ஒன்றையொன்று அஞ்சி உழல்கின்ற சடையை யுடையவனும், தாழ்வரைக்கண் திரியும் துதிக்கையையுடைய, வெற்றி பொருந்திய, கொடிய, பெரிய, மதங்கொண்ட யானையின் தோலை உடையவனும், வேதத்தில் சொல்லப்பட்ட நெறிமுறைகளாய் உள்ளவனும், வெள்ளிய நீறு பூசப்பட்ட திருமேனியை உடைய எம் தலைவனும், அலையெறிகின்ற கெடில நதியின் வடபால் உள்ள திருவீரட்டானத்தில் எழுந்தருளியுள்ளவனும் ஆகிய இறைவனை, அவன் தனது திருவடியை என்தலைமேல் சூட்டவந்த சிறிது போதினும், யான், அறியாது இகழ்வேனாயினேன் போலும்; என்னே என் மடமை இருந்தவாறு! இனியொருகாலும் அது வாயாது போலும்!

திருஅதிகைவீரட்டானம்

வெய்தாய வினைக்கடலில் தடுமாறும் உயிர்க்கு
மிகஇரங்கி அருள்புரிந்து வீடுபே றாக்கம்
பெய்தானைப் பிஞ்ஞகனை மைஞ்ஞவிலுங் கண்டத்

தெண்டோள்ளம் பெருமானைப் பெண்பாகம் ஒருபால்
செய்தானைச் செக்கர்வா னொளியானைத் தீவாய்
அரவாடு சடையானைத் திரிபுரங்கள் வேவ
எய்தானை எறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. **#389**
கொடிதாகிய, 'வினை' என்னுங் கடலில் வீழ்ந்து தடுமாறும் எத்துணையோ உயிர்கட்குப் பெரிதும் இரங்கித் தனது திருவருளைக் கொடுத்து வீடுபேறாகிய நலத்தை வழங்கினவனும், தலைக்கோலங்களை உடையவனும், மைபோலுங் கண்டத்தையும், எட்டுத் தோள்களையும் உடைய எம்பெருமானும், தனது திருமேனியின் ஒரு கூற்றைப் பெண் கூறாகச் செய்தவனும், செவ்வானத்தின் ஒளி போல் பவனும், தீதாகிய வாயினையுடைய பாம்பு படமெடுத்து ஆடுகின்ற சடையையுடையவனும், மூன்று ஊர்கள் வெந்தொழியுமாறு அம்பை எய்தவனும், அலையெறியும் கெடில நதியின் வடபால் உள்ள திருவீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கின்றவனும் ஆகிய இறைவனை, அவன் தனது திருவடியை என் தலைமேற் சூட்டவந்த சிறிது போதினும், யான், அறியாது இகழ்வேனாயினேன் போலும்; என்னே என் மடமை இருந்தவாறு! இனியொருகாலும் அது வாயாது போலும்!

<u>திருஅதிகைவீரட்டானம்</u>

பொன்னானை மயிலூர்தி முருகவேள் தாதை
பொடியாடு திருமேனி நெடுமாறன் முடிமேல்
தென்னானைக் குடபாலின் வடபாலின் குணபாற்
சேராத சிந்தையான் செக்கர்வான் அந்தி
அன்னானை அமரர்கள்தம் பெருமானைக் கருமான்
உரியானை அதிகைமா நகருள்வாழ் பவனை
என்னானை எறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. **#390**
'அழகிய யானை முகத்தையுடைய விநாயகனும், மயிலூர்தியை உடைய முருக வேளும்' என்னும் இவர்க்குத் தந்தையும், ஞானசம்பந்தரால் திருநீற்றில் மூழ்கிய திருமேனியையும், 'மேற்கு, வடக்கு, கிழக்கு' என்னும் திசைகளில் உள்ள பிற நாடுகளின் மேற் செல்லும் மண்ணாசை யற்ற மனத்தையும் உடையவனாய்ச் சிறப்பெய்திய நெடுமாறனது முடியின்மேல் நின்ற தென்னாட்டவனும், அந்திச் செவ்வானம் போலும் நிறத்தை உடையவனும், தேவர்களுக்குத் தலைவனும், யானைத் தோலைப் போத்தவனும், திருவதிகை மாநகரில் வாழ்பவனும், எனக்கு உரியவனும், அலையெறியும் கெடில நதியின் வடபால் உள்ள

திருவீரட்டானத்தில் எழுந்தருளி யிருப்பவனும் ஆகிய இறைவனை, அவன் தனது திருவடியை என் தலைமேற் சூட்ட வந்த சிறிது பொழுதினும் யான், அறியாது இகழ் வேனாயினேன் போலும்; என்னே என் மடமை இருந்தவாறு! இனி யொருகாலும் அது வாயாது போலும்!

திருஅதிகைவீரட்டானம்

திருந்தாத வாளவுணர் புரமூன்றும் வேவச்
சிலைவளைவித் தொருகணையால் தொழில்பூண்ட சிவனைக்
கருந்தாள மதக்களிற்றி னுரியானைப் பெரிய
கண்மூன்றும் உடையானைக் கருதாத அரக்கன்
பெருந்தோள்கள் நாலைந்தும் ஈரைந்து முடியும்
உடையானைப் பேவுருவ மூன்றுமுற மலைமேல்
இருந்தானை எறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. **#391**

வில்லை வளைத்து எய்த ஓர் அம்பினாலே, பகைமை கொண்ட கொடிய அசுரர்களது ஊர்கள் மூன்றும் வெந்தொழியுமாறு போர்த்தொழிலை மேற்கொண்ட சிவபெருமானும், பெரிய கால்களையுடைய மதம் பொருந்திய யானையின் தோலைப் போர்த்தவனும், பெரிய மூன்று கண்களையும் உடையவனும், தன்னை மதியாத அரக்கனாகிய, இருபது பெரிய தோள்களையும், பத்துத் தலைகளையும் உடைய இராவணனது அச்சந்தரும் உருவத்தை ஊன்றிய, கயிலாய மலையின்மேல் நீங்காது இருப்பவனும், அலையெறியும் கெடில நதியின் வடபால் உள்ள திருவீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கின்றவனும் ஆகிய இறைவனை அவன் தனது திருவடியை என் முடிமேல் சூட்டவந்த சிறிதுபொழுதினும், யான், அறியாது, இகழ்வேனாயினேன் போலும்; என்னே என் மடமை இருந்தவாறு! இனியொருகாலும் அது வாயாது போலும்!

திருஅதிகைவீரட்டானம்

என்பினையே கலனாக அணிந்தானை எங்கள்
எருதேறும் பெருமானை இசைஞானி சிறுவன்
வன்பனைய வளர்பொழில்சூழ் வயல்நாவ லூர்க்கோன்
வன்றொண்டன் ஆரூரன் மதியாது சொன்ன
அன்பனை யாவர்க்கு மறிவரிய வத்தர்
பெருமானை அதிகைமா நகருள்வாழ் பவனை
என்பொன்னை எறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. **#392**

எலும்பையே அணிகலங்களாக அணிபனும், விடையை ஏறுகின்ற எங்கள் பெருமானும், இசைஞானிக்கு மகனும், வளர்ந்த வலிய

பனைகளையுடைய சோலைகள் சூழ்ந்த, வயல்கள் நிறைந்த திருநாவலூர்க்குத் தலைவனும், வன்றொண்டனுமான நம்பியாரூரனாகிய என்னால், மதியாது சில சொல்லப்பட்ட அன்புருவினனும், யாவருக்கும் அறிதற்கு அரிய தேவர் பெருமானும், திருவதிகை மாநகரில் வாழ்பவனும், எனக்குரிய பொன்போன்றவனும், அலையெறியும் கெடில நதியின் வடபால் உள்ள திரு வீரட்டானத்தில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய இறைவனை, அவன் தனது திருவடியை என் தலைமேல் சூட்டவந்த சிறிதுபொழுதினும், யான், அறியாது இகழ்வேனாயினேன்போலும்; என்னே என் மடமை இருந்தவாறு! இனியொருகாலும் அது வாயாது போலும்!

திருத்தொண்டத்தொகை

திருத்தொண்டத்தொகை

திருத்தொண்டத்தொகை,
பண் - கொல்லிக்கௌவாணம், இது சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாரூர்ப் பரவை நாச்சியார் திருமாளிகையிலிருந்து வீதிவிடங்கப் பெருமானைத் தரிசுக்கும்பொருட்டு ஆலயத்துக்குள் எழுந்தருளும்போது தேவாசரியமண்டபத்தில் வீற்றிருக்குஞ் சிவனடியார்களை உள்ளத்தால் வணங்கி "இவர்களுக்குநானடியே"னாகும்படி பரமசிவம் எதிரில் தரிசனங்கொடுத்தருளித் "தில்லைவாழ் பரமசிவம் எந்நாள் கிருபைசெய்யுமென்று செல்லுகையில் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று முதலடி எடுத்துக்கொடுக்கப் பாடித் துதிசெய்த பதிகம்.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. **#393** ★★★★★
இல்லை

திருத்தொண்டத்தொகை

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. **#394**
இல்லை

திருத்தொண்டத்தொகை

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவாற்கும் அடியேன் திருக்குறிப்புத்

தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. **#395**
இல்லை

<u>திருத்தொண்டத்தொகை</u>

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. **#396**
இல்லை

<u>திருத்தொண்டத்தொகை</u>

வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. **#397**
இல்லை

<u>திருத்தொண்டத்தொகை</u>

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கும் அடியேன்
சீரகொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. **#398**

இல்லை

திருத்தொண்டத்தொகை

பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. **#399**

இல்லை

திருத்தொண்டத்தொகை

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவாற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. **#400**

இல்லை

திருத்தொண்டத்தொகை

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. **#401**

இல்லை

திருத்தொண்டத்தொகை

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன் திருவாரூர்ப்
பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆருரன் ஆரூரில் அம்மானுக் காளே. **#402**
இல்லை

திருத்தொண்டத்தொகை

மன்னியசீர் மறைநாவன் நீன்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணாற் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆருரில் அம்மானுக் கன்பரா வாரே. **#403**
இல்லை

திருக்கானாட்டுமுள்ளூர்

திருக்கானாட்டுமுள்ளூர்

திருக்கானாட்டுமுள்ளூர்,
பண் - கொல்லிக்கௌவாணம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பதஞ்சலியீசுவரர்.
தேவியார் : கானார்குழலம்மை.

வள்வாய மதிமிளிரும் வளர்சடையி னானை
மறையவனை வாய்மொழியை வானவர்தங் கோனைப்
புள்வாயைக் கீண்டுலகம் விழுங்கிஉமிழ்ந் தானைப்
பொன்னிறத்தின் முப்புரிநூல் நான்முகத்தி னானை
முள்வாய மடல்தழுவி முடத்தாழை ஈன்று
மொட்டலர்ந்து விரைநாறு முருகுவிரி பொழில்சூழ்
கள்வாய கருங்குவளை கண்வளருங் கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. **#404**

கூரிய வாயை உடைய பிறை ஒளிரும் நீண்ட சடையை உடையவனும், 'வேதம், வாயாற் சொல்லப்படும் பிற சொற்கள், இந்திரன், திருமால், பிரமன்' என்னும் பொருள்களாய் உள்ளவனும் ஆகிய இறைவனை, அடியேன், தாழையரும்புகள், வளைந்த தாழை மரத்தினால் ஈன்றிடப்பட்டு, முட்களையுடைய வாயினையுடைய இதழ்களைப் பொருந்தி மலர்ந்து மணம் வீசுகின்ற, தேன் மிகுந்த சோலைகள் சூழ்ந்த, மதுவொழுகும் வாயினையுடைய கருங்குவளை மலர்கள் கண்ணுறங்குவது போலக் காணப்படுகின்ற வயல்களையுடைய திருக்கானாட்டு முள்ளூரிற் கண்டு வணங்கப்பெற்றேன்; இஃது என் தவப்பயன் இருந்தவாறு!

திருக்கானாட்டுமுள்ளூர்

ஒருமேக முகிலாகி யொத்துலகந் தானாய்
ஊர்வனவும் நிற்பனவும் ஊழிகளுந் தானாய்ப்
பொருமேவு கடலாகிப் பூதங்கள் ஐந்தாய்ப்
புனைந்தவனைப் புண்ணியனைப் புரிசடையி னானைத்
திருமேவு செல்வத்தார் தீமூன்றும் வளர்த்த
திருத்தக்க அந்தணர்கள் ஓதுநக ரெங்கும்
கருமேதி செந்தாம ரைமேயுங் கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. **#405**

உலகிற்கு ஒருபெருந் துணையாய் உள்ள மேகமாகியும், தம்முள் ஒத்த

உலகங்கள் பலவும் தானேயாகியும், அவற்றில் உள்ள ஊர்வனவும், நிற்பனவுமாகிய உயிர்களும், அவற்றின் தோற்ற ஒடுக்கங்கட்குக் காரணமாகிய ஊழிக் காலங்களும் தானே யாகியும், அலையால் கரையை மோதுகின்ற கடல்களாகியும், ஐந்து பூதங்களாகியும் அவற்றைப் படைத்து நிற்பவனும், அறவடிவினனும், புரிந்த சடையை உடையவனும் ஆகிய இறைவனை, அடியேன், திருமகளும் விரும்பத்தக்க செல்வத்தை உடையவர்களது மாளிகைகளும், முத்தீயையும் வளர்க்கின்ற மேலான தகுதியுடைய அந்தணர்கள் வேதத்தை ஓதி வாழ்கின்ற மாளிகைகளும் உள்ள இடங்களிலெல்லாம், கரிய எருமைகள் செந்தாமரை மலர்களை மேய்கின்ற வயல்களையுடைய திருக்கானாட்டுமுள்ளூரிற் கண்டு வணங்கப்பெற்றேன்; இஃது என் தவப்பயன் இருந்தவாறு!

திருக்கானாட்டுமுள்ளூர்

இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தி னானை
இறையவனை மறையவனை எண்குணத்தி னானைச்
சுரும்புயர்ந்த கொன்றையொடு தூமதியஞ் சூடுஞ்
சடையானை விடையானைச் சோதியெனுஞ் சுடரை
அரும்புயர்ந்த அரவிந்தத் தணிமலர்க ளேறி
அன்னங்கள் விளையாடும் அகன்றுறையி னருகே
கரும்புயர்ந்து பெருஞ்செந்நெல் நெருங்கிவிளை கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. **#406**

வலிமை மிகுந்த மூன்று இலைகளை உடைய சூலத்தை உடையவனும், இறைவனும், வேதத்தை ஓதுபவனும், எட்டுக் குணங்களை உடையவனும், வண்டுகள் மேலே சூழ்கின்ற கொன்றை மாலையோடு, வெள்ளிய சந்திரனைச் சூடிய சடையை உடையவனும், இடபத்தை ஏறுபவனும், 'சுயஞ்சோதி' எனப்படுகின்ற ஒளியானவனும் ஆகிய இறைவனை, அடியேன், அன்னப்பறவைகள், அரும்புகள் மேலெழுந்து காணப்படுகின்ற தாமரையினது ஒப்பற்ற மலர்களின்மேல் ஏறி விளையாடுகின்ற, அகன்ற நீர்த்துறையின் அருகே கரும்புகள் வளரப்பட்டு, செந்நெற்பயிர்கள் செறிந்து விளைகின்ற வயல்களையுடைய திருக்கானாட்டுமுள்ளூரிற் கண்டு வணங்கப்பெற்றேன்; இஃது என் தவப்பயன் இருந்தவாறு!

திருக்கானாட்டுமுள்ளூர்

பூளைபுனை கொன்றையொடு புரிசடையி னானைப்
புனலாகி யனலாகிப் பூதங்கள் ஐந்தாய்
நாளைஇன்று நெருநலாய் ஆகாய மாகி

ஞாயிறாய் மதியமாய் நின்றஎம் பரனைப்
பாளைபடு பைங்கமுகின் சூழல்இளந் தெங்கின்
படுமதஞ்செய் கொழுந்தேறல் வாய்மடுத்துப் பருகிக்
காளைவண்டு பாடமயில் ஆலும்வளர் சோலைக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. **#407**

பூளைப் பூவையும், அழகிய கொன்றை மாலையையும், புரித்த சடையின்கண் உடையவனும், நீராகியும், நெருப்பாகியும், ஐம்பூதங்களாகியும், 'நாளை, இன்று, நேற்று' என்னும் நாள்களாகியும், பரவெளியாகியும், சூரியனாகியும், சந்திரனாகியும் நிற்கின்ற எங்கள் இறைவனை, அடியேன், பாளைகள் உளவாகின்ற, பசிய கமுகுகளினது செறிவினிடத்தே உள்ள இளமையான தென்னையினது, மிக்க மயக்கத்தை உண்டாக்குகின்ற கள்ளினை இளைய ஆண் வண்டுகள் உட்கொண்டு திளைத்து இசையைப் பாட, மயில்கள் ஆடுகின்ற, உயர்ந்த சோலையையுடைய, திருக்கானாட்டுமுள்ளூரிற் கண்டு வணங்கப் பெற்றேன்; இஃது என் தவப்பயன் இருந்தவாறு!

திருக்கானாட்டுமுள்ளூர்

செருக்குவாய்ப் பைங்கண்வெள் ளரவரையி னானைத்
தேவர்கள்சூ ளாமணியைச் செங்கண்விடை யானை
முருக்குவாய் மலரொக்குந் திருமேனி யானை
முன்னிலையாய் முழுதுலக மாயபெரு மானை
இரக்குவாய் அந்தணர்கள் எழுபிறப்புள் ங்கும்
வேள்வியிருந் திருநிதியம் வழங்குநக ரெங்கும்
கருக்குவாய்ப் பெண்ணையொடு தெங்குமலி சோலைக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. **#408**

சீறுகின்ற வாயினையும், பசிய கண்களையும் உடைய, வெள்ளிய பாம்பினை அரையிற் கட்டியவனும், தேவர்கள் முடியிற் பதிக்கும் மணிபோன்றவனும், சிவந்த கண்களையுடைய இடப ஊர்தியை உடையவனும், முருக்கமரத்தின்கண் பொருந்தியுள்ள மலர்போலும் திருமேனியை உடையவனும், எல்லாவற்றிற்கும் சான்றாய் நிற்பவனும், உலகமுழுதும் தானேயாய் நிறைந்தவனும் ஆகிய இறைவனை, அடியேன், எழுவகைப் பிறப்பினவாகிய உயிர்கள் உள்ள இடங்களில் எல்லாம் வேதத்தை ஓதுகின்ற அந்தணர்கள்வேள்வி வேட்டிருத்தலால், அவர்கட்கு மிக்க நிதிகளை வழங்குகின்ற மாளிகையின் பக்கங்களில் எல்லாம், கருக்குவாயினையுடைய பனைமரங்களும், தென்னை மரங்களும் நிறைந்த சோலைகளையுடைய திருக்கானாட்டுமுள்ளூரிற் கண்டு வணங்கப்பெற்றேன்; இஃது என் தவப்பயன் இருந்தவாறு!

திருக்கானாட்டுமுள்ளூர்

விடையரவக் கொடியேந்தும் விண்ணவர்தங் கோனை
வெள்ளத்து மாலவனும் வேதமுத லானும்
அடியிணையுந் திருமுடியுங் காணவரி தாய
சங்கரனைத் தத்துவனைத் தையல்மட வார்கள்
உடையவிழக் குழலவிழக் கோதைகுடைந் தாடக்
குங்குமங்க ளுந்திவரு கொள்ளிடத்தின் கரைமேல்
கடைகள்விடு வார்குவளை களைவாருங் கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. **#409**

எருதினை எழுதிய ஒலிக்குங் கொடியை ஏந்துகின்ற தேவர் பெருமானும், நீரில் துயில்கின்ற திருமாலும், வேதத்திற்குத் தலைவனாகிய பிரமனும் அடி இணையையும், அழகிய முடியினையும் காண்டல் அரிதாகிய, 'சங்கரன்' என்னும் காரணப் பெயரை உடையவனும், மெய்ப்பொருளானவனும் ஆகிய இறைவனை, அடியேன், இளைய பெண்கள் தங்கள் உடை அவிழவும், மாலையை அணிந்த கூந்தல் அவிழவும் மூழ்கி விளையாடுதலால் கிடைத்த குங்குமச் சேற்றைத் தள்ளிக்கொண்டு வருகின்ற கொள்ளிடநதியின் கரைமேல் உள்ள, கடையர்கள் தாங்கள் களைந்த நீண்ட குவளைக் கொடிகளைச் சேர்த்து எடுக்கின்ற திருக்கானாட்டுமுள்ளூரிற் கண்டு வணங்கப் பெற்றேன். இஃது என் தவப்பயன் இருந்தவாறு.

திருக்கானாட்டுமுள்ளூர்

அருமணியை முத்தினை ஆனஞ்சும் ஆடும்
அமரர்கள்தம் பெருமானை அருமறையின் பொருளைத்
திருமணியைத் தீங்கரும்பின் ஊறலிருந் தேனைத்
தெரிவரிய மாமணியைத் திகழ்தருசெம் பொன்னைக்
குருமணிகள் கொழித்திழிந்து சுழித்திழியுந் திரைவாய்க்
கோல்வளையார் குடைந்தாடுங் கொள்ளிடத்தின் கரைமேல்
கருமணிகள் போல்நீலம் மலர்கின்ற கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. **#410**

அரிய மணியாகிய மாணிக்கம் போல்பவனும், முத்துப்போல்பவனும், ஆனைந்தினை ஆடுகின்ற தேவர் பெருமானும், அரிய வேதத்தின் பொருளாய் உள்ளவனும், அழகிய பிற மணிகள் போல்பவனும், இனிய கரும்பினின்றும் வடிதலையுடைய மிக்க சாறுபோல்பவனும், அறிதற்கரிய மணியாகிய சிந்தாமணி போல்பவனும், மாற்று விளங்குகின்ற செம்பொன் போல்பவனும் ஆகிய இறைவனை, அடியேன் முன்னே, நிறம் பொருந்திய மணிகளைக் கொழித்து

மலையினின்றும் பாய்ந்து, பின்பு நிலத்தில் சுழித்துக் கொண்டு ஓடுகின்ற, அலைகளுக்கிடையில், வரிசையான வளையல்களை அணிந்துள்ள மகளிர் மூழ்கி விளையாடுகின்ற கொள்ளிட நதியின் கரைமேல் உள்ள, நீலோற்பல மலர்கள் நீலமணிபோல மலர்கின்ற வயல்களையுடைய திருக்கானாட்டுமுள்ளூரிற் கண்டு வணங்கப்பெற்றேன்; இஃது என் தவப்பயன் இருந்தவாறு!

திருக்கானாட்டுமுள்ளூர்

இழைதழுவு வெண்ணூலும் மேவுதிரு மார்பின்
ஈசன்தன் எண்டோள்கள் வீசிஎரி யாடக்
குழைதழுவு தருக்காதிற் கோளரவ மசைத்துக்
கோவணங்கொள் குழகனைக் குளிர்சடையி னானைத்
தழைதழுவு தண்ணிறத்த செந்நெலத னயலே
தடந்தரள மென்கரும்பின் தாழ்கிடங்கின் அருகே
கழைதழுவித் தேன்தொடுக்குங் கழனிசூழ் பழனக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. **#411**

பாம்பாகிய அணிகலமும், அதனோடு சேர்ந்த வெண்மையான முப்புரிநூலும் பொருந்திய அழகிய மார்பினையுடைய கடவுளும், தனது எட்டுத் தோள்களையும் வீசி நடனம் ஆடுதற் பொருட்டு, குழைபொருந்திய காதில் கொடிய பாம்பையும் இட்டு, உடையைக் கோவணமாக உடுத்த அழகனும், கங்கை நீராற் குளிர்ந்த சடையை உடையவனும் ஆகிய இறைவனை, அடியேன், தழைத்தலையுடைய பசுமையான நிறத்தையுடைய செந்நெற் பயிரின் பக்கத்தில், பெரிய முத்துக்களை யுடைய மென்மையான கரும்பின் ஆழ்ந்த கிடங்குகளின் அருகே வண்டுகள் அக்கரும்பைப் பொருந்தித் தேன் கூட்டை அமைக்கின்ற வயல்கள் சூழ்ந்த பண்ணைகளையுடைய திருக்கானாட்டுமுள்ளூரிற் கண்டு வணங்கப்பெற்றேன்; இஃது என் தவப்பயன் இருந்தவாறு!

திருக்கானாட்டுமுள்ளூர்

குனியினிய கதிர்மதியஞ் சூடுசடை யானைக்
குண்டலஞ்சேர் காதவனை வண்டினங்கள் பாடப்
பனியுதிருஞ் சடையானைப் பால்வெண்ணீற் றானைப்
பலஉருவுந் தன்னுருவே யாயபெரு மானைத்
துனியினிய தூயமொழித் தொண்டைவாய் நல்லார்
தூநீலங் கண்வளருஞ் சூழ்கிடங்கி னருகே
கனியினிய கதலிவனந் தழுவுபொழிற் சோலைக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. **#412**

வளைந்த இனிய ஒளியையுடைய சந்திரனைச் சூடியதும், வண்டுக் கூட்டங்கள் பாட, நீர்த்துளிகள் சிந்துகின்றதுமாகிய சடையினையும், குண்டலம் பொருந்திய காதினையும் உடையவனும், பால்போலும் வெள்ளிய. நீற்றை அணிந்தவனும், எல்லா உருவங்களும் தன் உருவமேயாய் நிற்கின்ற பெருமானும் ஆகிய இறைவனை, அடியேன், தூய நீலோற்பலங்கள், ஊடலிலும் இனியனவாயும்தூயனவாயும் தோன்றும் மொழிகளையும், கொவ்வைக் கனிபோலும் வாயினையும் உடைய அழகிய பெண்கள்போலக் கண்வளர்கின்ற, நிறைந்த கிடங்கின் அருகில் உள்ள, பழங்களைப் பழுத்த, இனிய வாழைத் தோட்டங்களைப் பொருந்தியுள்ள சோலைகளையுடைய திருக்கானாட்டுமுள்ளூரிற் கண்டு வணங்கப்பெற்றேன்; இஃது என் தவப்பயன் இருந்தவாறு!

திருக்கானாட்டுமுள்ளூர்

தேவியம்பொன் மலைக்கோமான் றன்பாவை யாகத்
தனதுருவம் ஒருபாகஞ் சேர்த்துவித்த பெருமான்
மேவியவெந் நரகத்தில் அழுந்தாமை நமக்கு
மெய்ந்நெறியைத் தான்காட்டும் வேதமுத லானைத்
தூவியவாய் நாரையொடு குருகுபாய்ந் தார்ப்பத்
துறைக்கெண்டை மிளிர்ந்துகயல் துள்ளிவிளை யாடக்
காவிவாய் வண்டுபல பண்செய்யுங் கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. **#413**

அழகிய பொன்மலைக்கு அரசன் மகள் தனக்கு மனைவியாய் வாய்க்க, அவளைத் தனது திருமேனியில் ஒருபாகமாகச் சேர்ந்திருக்கும்படி வைத்த பெருமானும், பாவிகள் விரும்பும் கொடிய நரகத்தில் வீழாதபடி நமக்கு மெய்ந்நெறியைக் காட்டுகின்ற, வேதத்தால் துணியப்பட்ட முதற்கடவுளும் ஆகிய இறைவனை, சிறகுகள் வாய்ந்த நாரைகளும், குருகுகளும் பறந்து ஒலிக்க, நீர்த்துறைகளில் கெண்டை பிறழ, பிற மீன்கள் துள்ளி விளையாட, குவளைப்பூவின் கண் வண்டுகள் பலவகையான இசைகளைப் பாடுகின்ற வயல்களையுடைய திருக்கானாட்டுமுள்ளூரிற் கண்டு வணங்கப்பெற்றேன்; இஃது என் தவப்பயன் இருந்தவாறு!

திருக்கானாட்டுமுள்ளூர்

திரையினார் கடல்சூழ்ந்த தென்னிலங்கைக் கோனைச்
செற்றவனைச் செஞ்சடைமேல் வெண்மதியி னானைக்
கரையினார் புனல்தழுவு கொள்ளிடத்தின் கரைமேற்
கானாட்டு முள்ளூரிற் கண்டுகழல் தொழுது
உரையினார் மதயானை நாவலா ரூரன்

உரிமையால் உரைசெய்த ஒண்டமிழ்கள் வல்லார்
வரையினார் வகைஞால மாண்டவர்க்குந் தாம்போய்
வானர்க்குந் தலைவராய் நிற்பரவர் தாமே. **#414**

புகழ்மிகுந்து, மதம் பொருந்திய யானையையுடைய திருநாவலூரில் தோன்றிய நம்பியாரூரன், அலையால் நிறைந்த கடல்சூழ்ந்த தென்னிலங்கைக்கு அரசனாகிய இராவணனைச் செருக்கடக்கியவனும், செம்மையான சடையின்மேல் வெண்மையான சந்திரனை அணிந்தவனும் ஆகிய இறைவனை. கரையின்கண் நிரம்பிய நீரைப் பொருந்திய கொள்ளிட நதியின் கரைமேல் உள்ள திருக்கானாட்டுமுள்ளூரிற் கண்டு அடிவணங்கி, வணங்கப்பெற்ற அவ்வுரிமையினால் பாடிய இவ்வொளி பொருந்திய தமிழ்ப்பாடலைப் பாட வல்லவர்கள், எல்லையாற் பொருந்திய வகைகளையுடைய நிலவுலகத்தை ஆளுகின்ற அரசர்கட்கும் தலைவராய், பின்புசென்று வானுலகத்தார்க்கும் தலைவராய் நெடிது வாழ்வர்.

திருக்கச்சூர் ஆலக்கோயில்

திருக்கச்சூர் ஆலக்கோயில்,
பண் - கொல்லிக்கௌவாணம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. இந்தத் தலத்தில் பரமசிவம் அக்கிராகாரத்தில் அன்னம் பிட்சை வாங்கி வந்தளிக்க அருந்திப் பசிதீர்ந்து துதிசெய்த பதிகம். ,
சுவாமிபெயர் : தினம்விருந்திட்டநாதர்.
தேவியார் : கன்னியுமையம்மை.

முதுவாய் ஓரி கதற முதுகாட்
டெரிகொண் டாடல் முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீ சூடும்
மலையான் மகள்தன் மணவாளா
கதுவாய்த் தலையிற் பலிநீ கொள்ளக்
கண்டால் அடியார் கவலாரே
அதுவே யாமா றிதுவோ கச்சூர்
ஆலக் கோயில் அம்மானே. **#415**

பெரிய வாயை உடைய நரிகள் கூப்பிடப் புறங்காட்டில் தீயை ஏந்தி ஆடுதலைச் செய்பவனே, கொன்றையினது தேன் ஒழுகுகின்ற புதிய பூவைச் சூடுகின்ற, மலையான் மகள் மணவாளனே, திருக்கச்சூரில் உள்ள ஆலக் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானே, நீ சென்று, முரிந்த வாயையுடைய ஓட்டில் பிச்சை ஏற்றலைக் கண்டால் உண் அடியவர் கவலைகொள்ளாரோ?

திருக்கச்சூர் ஆலக்கோயில்

கச்சேர் அரவொன் றரையில் அசைத்துக்
கழலுஞ் சிலம்புங் கலிக்கப் பலிக்கென்
றுச்சம் போதா ஊரூர் திரியக்
கண்டால் அடியார் உருகாரே
இச்சை யறியோம் எங்கள் பெருமான்
ஏழேழ் பிறப்பும் எனையாள்வாய்
அச்ச மில்லாக் கச்சூர் வடபால்
ஆலக் கோயில் அம்மானே. **#416**

எங்கள் பெருமானே, இருவகை ஏழ் பிறப்புக் களிலும் என்னை ஆளாகக் கொண்டு ஆள்பவனே, திருக்கச்சூரின் வட பகுதிக்கண் உள்ள ஆலக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற அச்சம் இல்லாத பெருமானே,

நீ, அழகிய பாம்பு ஒன்றைக் கச்சாகக் கட்டி, கழலும் சிலம்பும் காலில் நின்று ஒலிக்க, பிச்சைக் கென்று, ஞாயிறு உச்சம் ஆகவும் ஊர்தோறும் திரிதலைக் கண்டால், உன் அடியவர் மனம் உருகமாட்டாரோ! உன் விருப்பம் இன்னது என்பதனை யாம் அறிய மாட்டோம்.

திருக்கச்சூர் ஆலக்கோயில்

சாலக் கோயில் உளநின் கோயில்
அவைஎன் தலைமேற் கொண்டாடி
மாலைத் தீர்ந்தேன் வினையுந் துரந்தேன்
வானோ ரறியா நெறியானே
கோலக் கோயில் குறையாக் கோயில்
குளிர்பூங் கச்சூர் வடபாலை
ஆலக் கோயிற் கல்லால் நிழற்கீழ்
அறங்க ளுரைத்த அம்மானே. **#417**

தேவரும் அறிய ஒண்ணாத நிலையையுடையவனே, அழகுடையதும், குறைவில்லாததும் ஆகிய, குளிர்ந்த அழகிய திருக்கச்சூர் வடபால் ஆலக்கோயிலில் எழுந்தருளி யிருக்கின்ற, கல்லால் நிழற்கீழ் நால்வர் முனிவர்க்கு அறங்களை உரைத்த பெருமானே, உனது கோயிலாகப் பல கோயில்கள் இம் மண்ணில் உள்ளன; அவற்றை யெல்லாம் என்தலைமேல் வைத்துப் புகழ்ந்து, மயக்கமுந் தீர்ந்தேன்; வினையையும் ஓட்டினேன்; இங்குள்ள கோயிலைப் புகழ்ந்து, நீ இரந்து சோறிடப்பெற்றேன்.

திருக்கச்சூர் ஆலக்கோயில்

விடையுங் கொடியுஞ் சடையும் உடையாய்
மின்னேர் உருவத் தொளியானே
கடையும் புடைசூழ் மணிமண் டபமுங்
கன்னி மாடங் கலந்தெங்கும்
புடையும் பொழிலும் புனலுந் தழுவிப்
பூமேல் திருமா மகள்புல்கி
அடையுங் கழனிப் பழனக் கச்சூர்
ஆலக் கோயில் அம்மானே. **#418**

இடப வாகனத்தையும், இடபக்கொடியையும், சடை முடியையும் உடையவனே, திருமேனியினது மின்னல்போலும் ஒளியையுடையவனே, எங்கும், அழகியவாயில்களையும், நிறைந்த மணிமண்டபங்களையும், அழிவில்லாத மாடங்களையும் கொண்டு, சூழ உள்ள இடங்களிலும் சோலைகளையும், நீர் நிலைகளையும் பெற்று விளங்குதலால், தாமரைமேல் இருக்கும் பெருமை வாய்ந்த திருமகள்

நீங்காது பற்றி உறைகின்ற, வயல்களையுடைய பண்ணை சூழ்ந்த திருக்கச்சூரில் உள்ள, ஆலக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானே, இஃது உன்கருணை இருந்தவாறேயோ!

திருக்கச்சூர் ஆலக்கோயில்

மேலை விதியே விதியின் பயனே
விரவார் புரமூன் றெரிசெய்தாய்
காலை யெழுந்து தொழுவார் தங்கள்
கவலை களைவாய் கறைக்கண்டா
மாலை மதியே மலைமேல் மருந்தே
மறவே னடியேன் வயல்சூழ்ந்த
ஆலைக் கழனிப் பழனக் கச்சூர்
ஆலக் கோயில் அம்மானே. **#419**

மேம்பட்டதாகிய அறநெறியாயும், அதன் பயனாயும் உள்ளவனே, பகைவரது திரிபுரங்களை எரித்தவனே,காலையில் எழுந்து உன்னை வணங்குவாரது மனக்கவலையை அடியோடு நீக்குபவனே, நீலகண்டத்தை யுடையவனே, மாலைக் காலத்தில் தோன்றும் சந்திரன்போல்பவனே, மலைமேல் இருக்கின்ற மருந்து போல்பவனே, வயல்கள் நிறைந்த, கரும்பாலையை உடைய இடங்களைக் கொண்ட பண்ணையை உடைய திருக்கச்சூரில் உள்ள ஆலக் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானே, அடியேன் உன்னை மறவேன்.

திருக்கச்சூர் ஆலக்கோயில்

பிறவாய் இறவாய் பேணாய் மூவாய்
பெற்ற மேறிப் பேய்சூழ்தல்
துறவாய் மறவாய் சுடுகா டென்றும்
இடமாக் கொண்டு நடமாடி
ஒறுவாய்த் தலையிற் பலிநீ கொள்ளக்
கண்டால் அடியார் உருகாரே
அறவே யொழியாய் கச்சூர் வடபால்
ஆலக் கோயில் அம்மானே. **#420**

பிறவாதவனே, இறவாதவனே, யாதொன்றையும் விரும்பாதவனே, மூப்படையாதவனே. இடபத்தை ஏறிப் பேயாற் சூழப்படுதலை விடாதவனே, மறதி இல்லாதவனே, என்றும் சுடுகாட்டையே இடமாகக்கொண்டு நடனம் ஆடுபவனே, திருக்கச்சூரில் வடபால் உள்ள ஆலக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானே, நீ, உடைந்த வாயையுடைய ஓட்டில் பிச்சை ஏற்றலைக் கண்டால், உன் அடியவர் மனம் வருந்தமாட்டாரோ? இதனை அறவே ஒழி.

திருக்கச்சூர் ஆலக்கோயில்

பொய்யே உன்னைப் புகழ்வார் புகழ்ந்தால்
அதுவும் பொருளாக் கொள்வானே
மெய்யே எங்கள் பெருமான் உன்னை
நினைவா ரவரை நினைகண்டாய்
மையார் தடங்கண் மடந்தை பங்கா
கங்கார் மதியஞ் சடைவைத்த
ஐயா செய்யாய் வெளியாய் கச்சூர்
ஆலக் கோயில் அம்மானே. **#421**

மை பொருந்திய பெரிய கண்களையுடைய மங்கை பங்காளனே, கங்கையையும், ஆத்திப் பூவையும், சந்திரனையும் சடையில் வைத்துள்ள தலைவனே, செம்மைநிறம் உடையவனே, வெண்மைநிறம் உடையவனே, திருக்கச்சூரில் உள்ள ஆலக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானே, உன்னைப் புகழ்கின்றவர்கள் பொய்யாகவே புகழ்ந்தாலும், அதனையும் மெய்யாகவே கொண்டு அருள்செய்கின்றவனே, எங்கள் பெருமானாகிய உன்னை மெய்யாகவே நினைக்கின்ற அடியவரை நீ நினை.

திருக்கச்சூர் ஆலக்கோயில்

ஊனைப் பெருக்கி உன்னை நினையா
தொழிந்தேன் செடியேன் உணர்வில்லேன்
கானக் கொன்றை கமழ மலருங்
கடிநா றுடையாய் கச்சூராய்
மானைப் புரையு மடமென் னோக்கி
மடவா ளஞ்ச மறைத்திட்ட
ஆனைத் தோலாய் ஞானக் கண்ணாய்
ஆலக் கோயில் அம்மானே. **#422**

காட்டில் உள்ள கொன்றை மலர், மணங் கமழ மலரும் புதுமணம் வீசுதலை உடையவனே, மானை நிகர்த்த இளைய மெல்லிய பார்வையை யுடையவளாகிய உமையவள் அஞ்சும்படி போர்த்துள்ள யானைத்தோலை உடையவனே, உயிர்களுக்கு ஞானக்கண்ணாய் விளங்குபவனே, திருக்கச்சூரில் உள்ளவனே, ஆலக் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானே, கீழ்மையுடையேனும், அறிவில்லாதேனும் ஆகிய யான், உடம்பை வளர்க்கும் செயலில் நின்று, உன்னை நினையாது விட்டேன்.

திருக்கச்சூர் ஆலக்கோயில்

காதல் செய்து களித்துப் பிதற்றிக்
கடிமா மலரிட் டுனையேத்தி
ஆதல் செய்யும் அடியார் இருக்க
ஐயங் கொள்ளல் அழகிதே
ஓதக் கண்டேன் உன்னை மறவேன்
உமையாள் கணவா எனையாள்வாய்
ஆதற் கழனிப் பழனக் கச் சூர்
ஆலக் கோயில் அம்மானே. **#423**

உமையம்மைக்குக் கணவனே, உனது தன்மைகளைப் பெரியோர் சொல்ல அறிந்து உன்னை மறவாதேனாகிய என்னையும் அடியாருள் வைத்து ஆள்கின்றவனே, விளைதலையுடைய கழனிகளையுடைய பண்ணையையுடைய திருக்கச்சூரில் உள்ள ஆலக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானே, உன்பால் பேரன்புகொண்டு, அதனால் இன்பம்மீதூரப்பெற்று, தம்மையறியாது வரும் சொற்களைச் சொல்லி, மணம்பொருந்திய மலர்களைத் தூவி உன்னைப் போற்றி உயர்வடைகின்ற அடியவர்கள் உனக்கு வேண்டும் பணிகளைச் செய்ய அவாவியிருக்க, நீ சென்று பிச்சை ஏற்பது அழகிதாமோ? ஆகாதன்றே?

திருக்கச்சூர் ஆலக்கோயில்

அன்னம் மன்னும் வயல்சூழ் கச்சூர்
ஆலக் கோயில் அம்மானை
உன்ன முன்னு மனத்தா ரூரன்
ஆரூ ரன்பேர் முடிவைத்த
மன்னு புலவன் வயல்நா வலர்கோன்
செஞ்சொல் நாவன் வன்றொண்டன்
பன்னு தமிழ்நூல் மாலை வல்லா
ரவர்என் தலைமேற் பயில்வாரே. **#424**

அன்னங்கள் நிலைத்து வாழும் வயல்கள் சூழ்ந்த திருக்கச்சூரில் உள்ள ஆலக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானை, அவனது கருணையையே நினைகின்ற மனத்தினால், 'ஆரூரன்' என்று, திருவாரூர் இறைவனது பெயரைத் தலையில் வைத்துள்ள மிக்க புலமையுடையவனும், செவ்விய சொல்லால் அமைந்த பாடல்களைப் பாடவல்ல நாவன்மையுடையவனும், வயல்களை உடைய திருநாவலூருக்குத் தலைவனும் வன்றொண்டனும் ஆகிய நம்பியாரூரன் பாடிய, தமிழ் இலக்கணம் அமைந்த இப்பாமாலையைப் பாடவல்லவர், என் தலைமேல் எப்பொழுதும் இருத்தற்கு உரியராவர்.

திரு வெஞ்சமாக்கூடல்

திரு வெஞ்சமாக்கூடல்

திரு வெஞ்சமாக்கூடல்,
பண் - கொல்லிக்கௌவாணம்,
இத்தலம் கொங்குநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : விகிர்தேசுவரர்.
தேவியார் : விகிர்தேசுவரி.

எறிக்குங்கதிர் வேயுதிர் முத்தம்மோ
டேலம்மில வங்கந்தக் கோலம்இஞ்சி
செறிக்கும்புன லுட்பெய்து கொண்டுமண்டித்
திளைத்தெற்றுசிற் றாறதன் கீழ்க்கரைமேல்
முறிக் குந்தழை மாமுடப் புன்னைஞாழல்
குருக்கத்திகள் மேற்குயில் கூவலறா
வெறிக்குங்கலை மாவெஞ்ச மாக்கூடல்
விகிர்தாஅடி யேனையும் வேண்டுதியே. **#425**

மூங்கிலினின்றும் உதிர்ந்த, ஒளிவீசும், முத்துக்களோடு, 'ஏலம், இலவங்கம், தக்கோலம், இஞ்சி' என்பவைகளை, எவ்விடங்களையும் நிரப்புகின்ற நீருள் இட்டுக்கொண்டு, கரையை நெருங்கிப் பொருந்தி மோதுகின்ற சிற்றாற்றின் கீழ்க்கரைமேல் உள்ள, 'தளிர்த்த தழைகளையுடைய மாமரம், வளைந்த புன்னை மரம், குங்கும மரம், குருக்கத்திப்பந்தர்' என்னும் இவைகளின்மேல் குயில்கள் இருந்து கூவுதல் ஒழியாத, அஞ்சுகின்ற கலைமானையுடைய திரு வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளியிருக்கின்ற, வேறுபட்ட இயல்பை உடையவனே, அடியேனையும் உன் சீரடியாருள் ஒருவனாக வைத்து விரும்பியருள்.

திரு வெஞ்சமாக்கூடல்

குளங்கள்பல வுங்குழி யுந்நிறையக்
குடமாமணி சந்தன மும்மகிலும்
துளங்கும்புன லுட்பெய்து கொண்டுமண்டித்
திளைத்தெற்றுசிற் றாறதன் கீழ்க்கரைமேல்
வளங்கொள்மதில் மாளிகை கோபுரமும்
மணிமண்டப மும்மிவை மஞ்சுதன்னுள்
விளங்கும்மதி தோய்வெஞ்ச மாக்கூடல்
விகிர்தாஅடி யேனையும் வேண்டுதியே. **#426**

பல குளங்களும், பல குழிகளும் நிறையும்படி, மேற்குத் திசையில் உள்ள

சிறந்த மணிகளையும், 'சந்தனமரம், அகில்மரம்' என்னும் இவற்றையும், அசைகின்ற நீருள் இட்டுக்கொண்டு, கரையை நெருங்கிப் பொருந்தி மோதுகின்ற சிற்றாற்றின் கீழ்க்கரை மேல் உள்ள, வளத்தைக்கொண்ட மதிலும், மாளிகையும் கோபுரமும், மணிமண்டபமும் ஆகிய இவை. மேகத்தில் விளங்குகின்ற சந்திரனை அளாவுகின்ற திருவெஞ்சமாக்கூடலில் எழுந்தருளியிருக்கின்ற வேறுபட்ட இயல்பை உடையவனே, அடியேனையும் உன் சீரடியாருள் ஒருவனாக வைத்து விரும்பியருள்.

திரு வெஞ்சமாக்கூடல்

வரைமான்அனை யார்மயிற் சாயல்நல்லார்
வடிவேற்கண்நல் லார்பலர் வந்திறைஞ்சத்
திரையார்புன லுட்பெய்து கொண்டுமண்டித்
திளைத்தெற்றுசிற் றாறதன் கீழ்க்கரைமேல்
நிரையார்கமு குந்நெடுந் தாட்டெங்குங்
குறுந்தாட்பல வும்விர விக்குளிரும்
விரையார்பொழில் சூழ்வெஞ்ச மாக்கூடல்
விகிர்தாஅடி யேனையும் வேண்டுதியே. **#427**

மலையில் உள்ள மான்போல்பவரும், மயில் போலும் சாயலை யுடையவரும், கூரிய வேல்போலும் கண்களை யுடையவரும் ஆகிய மகளிர் பலர் வந்து வழிபட, அவர்கள் தனக்கு அளித்த பொருளை, அலை நிறைந்த நீரில் இட்டுக்கொண்டு, கரையை நெருங்கிப் பொருந்தி மோதுகின்ற சிற்றாற்றின் கீழ்க்கரைமேல் உள்ள. வரிசையாகப் பொருந்திய கமுக மரங்களும், நீண்ட அடியினையுடைய தென்னை மரங்களும், குறிய அடியினையுடைய பலா மரங்களும் ஒன்றாய்ப் பொருந்துதலால் குளிர்ச்சியை அடைகின்ற, மணம் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருவெஞ்சமாக்கூடலில் எழுந்தருளியிருக்கின்ற, வேறுபட்ட இயல்பினையுடையவனே, அடியேனையும் உன் சீரடியாருள் ஒருவனாக வைத்து விரும்பியருள்.

திரு வெஞ்சமாக்கூடல்

பண்ணேர்மொழி யாளையொர் பங்குடையாய்
படுகாட்டகத் தென்றுமோர் பற்றொழியாய்
தண்ணார்அகி லுந்நல சாமரையும்
அலைத்தெற்றுசிற் றாறதன் கீழ்க்கரைமேல்
மண்ணார்முழ வுங்குழ லும்மியம்ப
மடவார்நட மாடு மணியரங்கில்
விண்ணார்மதி தோய்வெஞ்ச மாக்கூடல்

விகிர்தாஅடி யேனையும் வேண்டுதியே. **#428**

பண்போலும் மொழியினையுடைய உமாதேவியை ஒருபாகத்தில் உடையவனே, யாவரும் ஒடுங்குங் காட்டினிடத்தில் உள்ள ஒரு பற்றினை என்றும் நீங்காதவனே, இன்பத்தைத் தரும் அரிய அகிலையும், நல்ல கவரியையும் அலைத்துக்கொண்டு வந்து கரையை மோதுகின்ற சிற்றாற்றின் 'கீழ்க்கரைமேல் உள்ள, மண்பொருந்திய மத்தளமும், குழலும் ஒலிக்க, மாதர்கள் நடனம் ஆடுகின்ற அழகிய அரங்கின்மேல், வானத்தில் பொருந்திய ச்திரன் தவழ்கின்ற திருவெஞ்சமாக்கூடலில் எழுந்தருளியிருக்கின்ற வேறுபட்ட இயல்பினையுடையவனே, அடியேனையும் உன் சீரடியாருள் ஒருவனாக வைத்து விரும்பியருள்.

திரு வெஞ்சமாக்கூடல்

துளைவெண்குழை யுஞ்சுருள் வெண்டோடுந்
தூங்குங்கா திற்றுளங் கும்படியாய்
களையேகம ழும்மலர்க் கொன்றையினாய்
கலந்தார்க்கருள் செய்திடுங் கற்பகமே
பிளைவெண்பிறை யாய்பிறங் குஞ்சடையாய்
பிறவாதவ னேபெறு தற்கரியாய்
வெளைமால்விடை யாய்வெஞ்ச மாக்கூடல்
விகிர்தாஅடி யேனையும் வேண்டுதியே. **#429**

துளைக்கப்பட்ட வெள்ளிய குழையும், சுருண்ட வெள்ளிய தோடும் நீண்ட காதினிடத்தில் அசைகின்ற வடிவத்தை யுடையவனே, தேனினது மணத்தை வீசுகின்ற கொன்றை மலரைச் சூடியவனே, அடைந்தவர்க்கு அருள்செய்கின்ற கற்பகம் போல் பவனே, இளைய வெள்ளிய பிறையைச் சூடியவனே, விளங்குகின்ற சடைமுடியை உடையவனே, பிறத்தலைச் செய்யாதவனே, கிடைத்தற்கு அரியவனே வெண்மையான பெரிய விடையை உடையவனே, திருவெஞ்சமாக்கூடலில் எழுந்தருளியிருக்கின்ற, வேறுபட்ட இயல்பை உடையவனே, அடியேனையும் உன் சீரடியாருள் ஒருவனாக வைத்து விரும்பியருள்.

திரு வெஞ்சமாக்கூடல்

தொழுவார்க்கெளி யாய்துயர் தீரநின்றாய்
சுரும்பார்மலர்க் கொன்றைதுன் றுஞ்சடையாய்
உழுவாரக்கரி யவ்விடை யேறிஒன்னார்
புரந்தீயெழ ஓடுவித் தாய்அழகார்
முழவாரொலி பாடலொ டாடலறா
முதுகாடரங் காநட மாடவல்லாய்
விழவார்மறு கின்வெஞ்ச மாக்கூடல்

விகிர்தாஅடி யேனையும் வேண்டுதியே. #430

உன்னைத் தொழுகின்றவர்க்கு எளிதில் கிடைக்கும் பொருளாய் உள்ளவனே, அவர்களது துன்பந்தீர அவர்கட்கு என்றும் துணையாய், நின்றவனே, வண்டுகள் ஒலிக்கின்ற கொன்றை மலர் பொருந்திய சடையை உடையவனே, உழுவார்க்கு உதவாத விடையை ஏறுபவனே, பகைவரது திரிபுரத்தில் நெருப்பை மூளுமாறு ஏவியவனே, பேய்களின் ஓசையாகிய அழகுநிறைந்த மத்தளஒலியும், பாட்டும், குதிப்பும் நீங்காத புறங்காடே அரங்காக நடனமாட வல்லவனே, விழாக்கள் நிறைந்த தெருக்களையுடைய திருவெஞ்ச மாக்கூடலில் எழுந்தருளியிருக்கின்ற வேறுபட்ட இயல்பை உடையவனே, அடியேனையும் உன் சீரடியாருள் ஒருவனாக வைத்து விரும்பியருள்.

<u>திரு வெஞ்சமாக்கூடல்</u>

கடமாகளி யானை யுரித்தவனே
கரிகாடிட மாஅனல் வீசிநின்று
நடமாடவல் லாய்நரை யேறுகந்தாய்
நல்லாய்நறுங் கொன்றை நயந்தவனே
படமாயிர மாம்பருத் துத்திப்பைங்கண்
பகுவாய்எயிற் றோடழ லேயுமிழும்
விடவார் அர வாவெஞ்ச மாக்கூடல்
விகிர்தாஅடி யேனையும் வேண்டுதியே. #431

மதநீரையுடைய பெரிய மயக்கங்கொண்ட யானையை உரித்தவனே, கரிந்த காடே இடமாக நெருப்பை வீசிநின்று நடனமாட வல்லவனே, வெள்ளிய இடபத்தை விரும்பியவனே, நல்லோனே, கொன்றை மலரை மகிழ்ந்து அணிந்தவனே, புள்ளிகளையுடைய ஆயிரம் படங்கள் பொருந்திய, பருத்த, பசிய கண்களையுடைய, பிளந்த வாயில் பற்களோடு நெருப்பை உமிழ்கின்ற, நஞ்சினையுடைய அரிய பாம்பை அணிந்தவனே, திருவெஞ்சமாக் கூடலில் எழுந்தருளிருக்கின்ற வேறுபட்ட இயல்பையுடையவனே, அடியேனையும் உன் சீரடியாருள் ஒருவனாக வைத்து விரும்பியருள்.

<u>திரு வெஞ்சமாக்கூடல்</u>

காடும்மலை யுந்நாஅ டும்மிடறிக்
கதிர்மாமணி சந்தன மும்மகிலும்
சேடன்னுறை யும்மிடந் தான்விரும்பித்
திளைத்தெற்றுசிற் றாறதன் கீழ்க்கரைமேல்
பாடல்முழ வுங்குழ லும்மியம்பப்
பணைத்தோளியர் பாடலொ டாடலறா

வேடர்விரும் பும்வெஞ்ச மாக்கூடல்
விகிர்தாஅடி யேனையும் வேண்டுதியே. **#432**

ஒளியையுடைய சிறந்த மணிகளையும், சந்தனத்தையும், அகிலையும், 'முல்லை, குறிஞ்சி, மருதம்' என்னும் நிலங்களில் சிதறி, 'சேடன்' என்னும் அரவரசன் வாழ்கின்ற பாதலத்தை அடைய விரும்பி நிலத்தை அகழ்ந்து, கரையைப் பொருந்தி மோதுகின்ற சிற்றாற்றின் கீழ்க்கரைமேல் உள்ள, தம் பாடலுக்கு இயைந்த மத்தளமும், குழலும் ஒலிக்க, பருத்த தோள்களையுடைய மாதர்கள் பாடுதலோடு, ஆடுதலைச் செய்தல் ஒழியாத கூத்தர் விரும்பும் திருவெஞ்சமாக் கூடலில் எழுந்தருளியிருக்கின்ற வேறுபட்ட இயல்பையுடையவனே, அடியேனையும் உன் சீரடியாருள் ஒருவனாக வைத்து விரும்பியருள்.

<u>திரு வெஞ்சமாக்கூடல்</u>

கொங்கார்மலர்க் கொன்றையந் தாரவனே
கொடுகொட்டியொர் வீணை யுடையவனே
பொங்காடர வும்புன லுஞ்சடைமேற்
பொதியும்புனி தாபுனஞ் சூழ்ந்தழகார்
துங்கார்புன லுட்பெய்து கொண்டுமண்டித்
திளைத்தெற்றுசிற் றாறதன் கீழ்க்கரைமேல்
வெங்கார்வயல் சூழ்வெஞ்ச மாக்கூடல்
விகிர்தாஅடி யேனையும் வேண்டுதியே. **#433**

தேன் நிறைந்த கொன்றை மலர் மாலையை அணிந்தவனே, கொடுகொட்டியையும் வீணையொன்றையும் உடையவனே, சீற்றம் மிக்க, ஆடுகின்ற பாம்பும் தண்ணீரும் சடையில் நிறைந்துள்ள தூயவனே, காடுகளைச் சூழ்ந்து அழகுமிகுகின்ற, உயர்வு பொருந்திய நீருள், காடுபடு பொருள்கள் பலவற்றை இட்டுக்கொண்டு, கரையை நெருங்கிப் பொருந்தி மோதுகின்ற சிற்றாற்றின் கீழ்க்கரைமேல் உள்ள, விரும்பத்தக்க நீர் நிறைந்த வயல்கள் சூழ்ந்த திருவெஞ்சமாக்கூடலில் எழுந்தருளியிருக்கின்ற வேறுபட்ட இயல்பினையுடையவனே, அடியேனையும் உன் சீரடியாருள் ஒருவனாக வைத்து விரும்பியருள்.

<u>திரு வெஞ்சமாக்கூடல்</u>

வஞ்சிநுண்ணிடை யார்மயிற் சாயலன்னார்
வடிவேற்கண்நல் லார்பலர் வந்திறைஞ்சும்
வெஞ்சமாக்கூஉ டல்விகிர் தாஅடியே
னையும்வேண்டுதி யேஎன்று தான்விரும்பி
வஞ்சியாதளிக் கும்வயல் நாவலர்கோன்
வனப்பகை யப்பன்வன் றொண்டன்சொன்ன

செஞ்சொற்றமிழ் மாலைகள் பத்தும்வல்லார்
சிவலோகத்தி ருப்பது திண்ணமன்றே. #434
'வஞ்சிக் கொடிபோலும் நுண்ணிய இடையையுடையவரும், மயில்போலும் சாயலை யுடையவரும், கூர்மை பொருந்திய வேல்போலும் கண்களையுடையவரும் ஆகிய மகளிர் பலர் வந்து வணங்குகின்ற திருவெஞ்சமாக்கூடலில் எழுந்தருளியிருக்கின்ற, வேறுபட்ட இயல்பினையுடையவனே, அடியேனையும் உன் சீரடியாருள் ஒருவனாக வைத்து விரும்பியருள்' என்று, விளைவுகளை வஞ்சியாதளிக்கின்ற வயல்களையுடைய திருநாவலூரில் உள்ளார்க்குத் தலைவனும், வனப்பகைக்குத் தந்தையும் ஆகிய வன்றொண்டன் விரும்பிப் பாடிய செவ்விய சொற்களாலாகிய இத்தமிழ்மாலைகள் பத்தினையும் பாட வல்லவர் சிவலோகத்தில் வீற்றிருத்தல் திண்ணம்.

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம்

திருமுதுகுன்றம்,
பண் - கொல்லிக்கௌவாணம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பழமலைநாதர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

நஞ்சி இடைஇன்று நாளையென் றும்மை ந்சுவார்
துஞ்சியிட் டாற்பின்னைச் செய்வதென் னடிகேள்சொலீர்
பஞ்சி யிடப்புட்டில் கீறுமோபணி யீரருள்
முஞ்சி யிடைச்சங்கம் ஆர்க்குஞ் சீர்முது குன்றரே. **#435**

முஞ்சிப் புல்லின் புதல்மேல் சங்கு தங்கி ஒலிக்கின்ற புகழையுடைய திருமுதுகுன்றத்தில் எழுந்தருளியிருப்பவரே, எங்கள் தலைவரே, உம்மை நெஞ்சுருகி விரும்புகின்ற அடியவர், 'நீர் அருள் செய்யும் காலம் இன்று வாய்க்கும்; நாளை வாய்க்கும்' என்று எண்ணிக் கொண்டேயிருந்து இறந்துவிட்டால், அதன்பின்பு நீர் அவர்களுக்குச் செய்வது என்ன இருக்கின்றது? பஞ்சியை அடைப்பதனால் குடுக்கை உடைந்து விடுமோ? விரைந்து அருள்புரியீர்.

திருமுதுகுன்றம்

ஏரிக் கனகக் கமல மலரன்ன சேவடி
ஊரித் தனையுந் திரிந்தக் காலவை நோங்கொலோ
வாரிக் கட்சென்று வளைக்கப் பட்டு வருந்திப்போய்
மூரிக் களிறு முழக்க றாமுது குன்றரே. **#436**

பெரிய களிற்றியானை, வெள்ளத்தினிடத்திற்சென்று அதனால் வளைத்துக்கொள்ளப்பட்டு மீளமாட்டாது வருந்திப் பின் அரிதில் மீண்டு பிளிறுதல் நீங்காத திருமுதுகுன்றத்தில் எழுந்தருளியிருப்பவரே, உமது, அழகு பொருந்திய, பொற்றாமரை மலர் போலும் செவ்விய இத்திருவடிகள், இத்தனை ஊரிலும் திரிந்தால், அவை வருந்துமோ! வருந்தாவோ!

திருமுதுகுன்றம்

தொண்டர்கள் பாடவிண் ணோர்க ளேத்த உழிதர்வீர்
பண்டகந் தோறும் பலிக்குச் செல்வதும் பான்மையே
கண்டகர் வாளிகள் வில்லி கள்புறங் காக்குஞ்சீர்
மொண்டகை வேள்வி முழக்க றாமுது குன்றரே. **#437**

கைவாள் ஏந்தியவர், பெருவாள் ஏந்தியவர், வில் ஏந்தியவர் ஆகிய பலரும் புறத்து நின்று காக்கின்ற, புகழையுடைய, நெய் முதலியவற்றை முகந்து சொரிகின்ற கைகளால் வளர்க்கப்படுகின்ற வேள்விகளின் முழக்கம் நீங்காத திருமுதுகுன்றத்தில் எழுந்தருளியிருப்பவரே, நீர், அடியவர்கள் பாடவும், தேவர்கள் துதிக்கவும் தலைவராய்த் திரிவீர்; ஆதலின், பழைமையான இல்லங்கள்தோறும் பிச்சைக்குச் செல்வது தகுதியோ?

திருமுதுகுன்றம்

இளைப்பறி யீரிம்மை யேத்து வார்க்கம்மை செய்வதென்
விளைப்பறி யாதவெங் கால னையுயிர் வீட்டினீர்
அளைப்பிரி யாவர வல்கு லாளொடு கங்கைசேர்
முளைப்பிறைச் சென்னிச் சடைமு டிமுது குன்றரே. **#438**

தன் செயல் விளைப்பதறியாது வந்த கொடிய இயமனை உயிர்போக்கியவரே, புற்றினின்றும் நீங்காத பாம்பின் படம் போலும் அல்குலையுடைய உமையோடு கங்கையும் பொருந்திய, இளைய பிறையையுடைய, தலைக்கண் உள்ள சடைமுடியையுடைய, திருமுதுகுன்றத்தில் எழுந்தருளியிருப்பவரே, இப்பிறப்பில் உம்மைப் போற்றுகின்றவர்களது தளர்ச்சியை நினைக்கமாட்டீர்; வரும் பிறப்பில் நீர் அவர்கட்குச் செய்வது என்ன இருக்கின்றது?

திருமுதுகுன்றம்

ஆடி யசைந்தடி யாரும் நீரும் அகந்தொறும்
பாடிப் படைத்த பொருளெ லாமுமை யாளுக்கோ
மாட மதிலணி கோபு ரம்மணி மண்டபம்
மூடி முகில்தவழ் சோலை சூழ்முது குன்றரே. **#439**

மாடங்கள்மேலும், மதில்மேலும், அழகிய கோபுரங்கள் மேலும், மணிமண்டபங்கள்மேலும், மேகங்கள் மூடிக்கொண்டு தவழ்கின்ற, சோலை சூழ்ந்த திருமுதுகுன்றத்தில் எழுந்தருளியிருப்பவரே, அடியாரும் நீருமாகச் சென்று இல்லந்தோறும் ஆடியும், பாடியும் வருந்திச் சேர்த்த பொருள்களெல்லாம், உம் தேவிக்கு மட்டில்தான் உரியனவோ? எம்போல்வார்க்குச் சிறிதும் உரியது இல்லையோ?

திருமுதுகுன்றம்

இழைவளர் நுண்ணிடை மங்கை யோடிடு காட்டிடைக்
குழைவளர் காதுகள் மோத நின்று குனிப்பதே
மழைவள ருந்நெடுங் கோட்டி டைமத யானைகள்
முழைவள ராளி முழக்க றாமுது குன்றரே. **#440**

மேகங்கள் மிகுந்த நீண்ட சிகரங்களிடையே மதத்தையுடைய யானைகளும், குகைகளில் வளர்கின்ற யாளிகளும் முழங்குதல் நீங்காத திருமுதுகுன்றத்தில் எழுந்தருளியிருப்பவரே, நீர், நூல் தங்கியுள்ளதுபோலும், நுட்பமான இடையினையுடைய மங்கையோடு இடுகாட்டின்கண், குழை பொருந்திய காதுகள் பக்கங்களில் மோதும்படி முற்பட்டு நின்று நடனமாடுவதோ?

திருமுதுகுன்றம்

சென்றி லிடைச்செடி நாய்கு ரைக்கச் சேடிச்சிகள்
மன்றி லிடைப்பலி தேரப் போவது வாழக்கையே
குன்றி லிடைக்களி றாளி கொள்ளக் குறத்திகள்
முன்றி லிடைப்பிடி கன்றி டும்முது குன்றரே. **#441**

குன்றில் களிற்றியானையைச் சிங்கம் உண்டுவிட, அதன் பிடியானையையும், கன்றையும் குறத்திகள் தங்கள் குடிலின் முன் கட்டிவைத்துக் காக்கின்ற திருமுதுகுன்றத்தில் எழுந்தருளி யிருப்பவரே, நீர், பல இல்லங்களிலும் சென்று, அங்குள்ள இழிந்த நாய்கள் குரைக்க, தொழுத்திகள் தெருவில் வந்து இடுகின்ற அந்தப் பிச்சையை வாங்கச் செல்வது, மேற்கொள்ளத் தக்க வாழ்க்கையோ?

திருமுதுகுன்றம்

அந்தி திரிந்தடி யாரும்நீரும் அகந்தொறும்
சந்திகள் தோறும் பலிக்குச் செல்வது தக்கதே
மந்தி கடுவனுக் குண்பழம் நாடி மலைப்புறம்
முந்தி அடிதொழ நின்ற சீர்முது குன்றரே. **#442**

பெண் குரங்கிற்கும், ஆண் குரங்கிற்கும் உண்ணுதற் குரிய பழங்களை அவைகள் தேடிக்கொண்டு மலைப்புறங்களில் முற்பட்டுச் சென்றபொழுது அவைகள் கண்டு, அன்புகொண்டு வணங்குமாறு நின்றருளுகின்ற, புகழையுடைய திருமுதுகுன்றத்து இறைவரே, நீரும் அடியாருமாக இல்லந்தோறும், அந்தியிலும், சந்தியிலும் பிச்சைக்குச் சென்று திரிவது தக்கதோ?

திருமுதுகுன்றம்

செட்டிநின் காதலி ஊர்கள் தோறும் அறஞ்செய
அட்டுமின் சில்பலிக் கென்ற கங்கடை நிற்பதே
பட்டிவெள் ளேறுகந் தேறு வீர்பரி சென்கொலோ
முட்டி அடிதொழ நின்ற சீர்முது குன்றரே. **#443**

யாவரும் எதிர்வந்து அடிவணங்க நிற்கின்ற, புகழையுடைய திருமுதுகுன்றத்து இறைவரே, அளவறிந்து வாழ்பவளாகிய உம்

மனைவி ஊர்கள்தோறும், அறம் வளர்க்க, நீர், இல்லங்களின் வாயில் தோறும் சென்று `இடுமின்` என்று இரந்து, சிலவாகிய பிச்சைக்கு நிற்றல் பொருந்துமோ? கட்டுள் நில்லாத வெள்ளிய எருது ஒன்றை விரும்பி ஏறுவீராகிய உமது தன்மைதான் என்னோ?

திருமுதுகுன்றம்

எத்திசை யுந்திரிந் தேற்றக் காற்பிறர் என்சொலார்
பத்தியி னால்இடு வாரி டைப்பலி கொள்மினோ
எத்திசை யுந்திரை யேற மோதிக் கரைகள்மேல்
முத்திமுத் தாறு வலஞ்செய் யும்முது குன்றரே. **#444**

எப் பக்கங்களிலும் அலைபுரண்டு செல்லும்படி இரு கரைகளின்மேலும் மோதுகின்ற முத்தியைத் தருகின்ற முத்தாறு வலம்சூழ்ந்து செல்கின்ற திருமுதுகுன்றத்து இறைவரே, ஒன்றையும் நீக்காது எல்லா இடங்களிலும் திரிந்து பிச்சை ஏற்றால், பிறர் என்ன சொல்லமாட்டார்கள்? ஆகையால், அன்போடு இடுகின்றவர் இல்லத்தில் மட்டும் சென்று பிச்சை வாங்குமின்.

திருமுதுகுன்றம்

முத்திமுத் தாறு வலஞ்செ யும்முது குன்றரைப்
பித்தனொப் பான்அடித் தொண்ட னூரன் பிதற்றிவை
தத்துவ ஞானிக ளாயி னார்தடு மாற்றிலார்
எத்தவத் தோர்களும் ஏத்து வார்க்கிட ரில்லையே. **#445**

முத்தியைத் தருகின்ற முத்தாறு வலமாகச் சூழ்ந்து ஓடுகின்ற திருமுதுகுன்றத்து இறைவரை, அவர் திருவடிக்குத் தொண்டனாய் உள்ள, பித்துக்கொண்டவன் போன்ற நம்பியாரூரன் பிதற்றிய இப்பாடல்களை, தத்துவஞானிகளாயினும், பிறழாத உள்ளத்தை உடைய அன்பர்களாயினும், எத்தகைய தவத்தில் நிற்பவராயினும் பாடுகின்றவர்களுக்கு, துன்பம் இல்லையாகும்.

முடிப்பதுகங்கை

முடிப்பதுகங்கை

முடிப்பதுகங்கை,
பண் - கொல்லிக்கௌவாணம்

முடிப்பது கங்கையுந் திங்களுஞ்
செற்றது மூவெயில்
நொடிப்பது மாத்திரை நீறெ
ழக்கணை நூறினார்
கடிப்பதும் ஏறுமென் றஞ்சு
வன்திருக் கைகளால்
பிடிப்பது பாம்பன்றி இல்லை
யோஎம் பிரானுக்கே. **#446**

எம் பெருமான் தலையிற் சூடுவது கங்கையையும் சந்திரனையும், அழித்தது மூன்று மதில்களை, அவற்றைக் கை நொடிக்கும் அளவில் சாம்பலாய்த் தோன்றுமாறு அம்பினால் அழித்தார். தனது வலிய திருக்கைகளால் பிடிப்பது பாம்பு. அது கடித்தவுடன், நஞ்சு தலைக்கேறும் என்று யான் எப்பொழுதும் அஞ்சுவேன்; இவை தவிர எம்பெருமானுக்கு வேறு பொருள்கள் இல்லையோ!

முடிப்பதுகங்கை

தூறன்றி யாடரங் கில்லை
யோசுட லைப்பொடி
நீறன்றிச் சாந்தமற் றில்லை
யோஇம வான்மகள்
கூறன்றிக் கூறாவ தில்லை
யோகொல்லைச்சில்லைவெள்
ளேறன்றி யேறுவ தில்லை
யோஎம் பிரானுக்கே. **#447**

எம் பெருமானுக்கு, ஆடுகின்ற அரங்கு, காடன்றி வேறு இல்லையோ! சாந்து, சுடலைப்பொடியாகிய சாம்பலன்றி வேறு இல்லையோ! தனது திருமேனியில் ஒரு கூறாய் நிற்பது மலையரையன் மகளது கூறன்றி வேறு இல்லையோ! ஏறுவது, முல்லை நிலத்தில் உள்ள சிறுமையுடைய வெள்ளை எருதன்றி வேறு இல்லையோ!

முடிப்பதுகங்கை

தட்டெனுந் தட்டெனுந் தொண்டர்

காள்தடு மாற்றத்தை
ஒட்டெனும் ஒட்டெனு மாநி
லத்துயிர் கோறலைச்
சிட்டன் திரிபுரஞ் சுட்ட
தேவர்கள் தேவனை
வெட்டெனப் பேசன்மின் தொண்டர்
காள்எம் பிரானையே. **#448**

மன அலைவையும், எல்லாப் பொருட்கும் நிலைக் களமாகிய பெரிய நிலத்தின்கண் உள்ள உயிர்களைக் கொல்லுதலையும் நன்னெறிக்குத் தடை என்று உணர்ந்த அடியவர்களே, மேலானவனும், திரிபுரத்தை எரித்த தேவதேவனும் ஆகிய எம்பெருமானை, வெறுத்துப் பேசன்மின்.

<u>முடிப்பதுகங்கை</u>

நரிதலை கவ்வநின் றோரி
கூப்பிட நள்ளிருள்
எரிதலைப் பேய்புடை சூழ
வாரிருட் காட்டிடைச்
சிரிதலைமாலை சடைக்க
ணிந்தஎஞ் செல்வனைப்
பிரிதலைப் பேசன்மின் தொண்டர்
காள்எம் பிரானையே. **#449**

அடியவர்களே, நரிகள், இறந்தோரது தலைகளைக் கௌவி இழுக்க, ஓரிகள் கூக்குரலிட, செறிந்த இருட்காலத்தில், நெருப்பு எரிகின்ற இடத்தில், பேய்கள் புடைசூழ்ந்திருக்க அரிய இருளையுடைய காட்டில், சிரிப்பதுபோலும் தலைமாலையைச் சடையின்கண் அணிந்த எம் செல்வனாகிய எம்பெருமானை, விட்டு நீங்குதற்குரிய சொற்களைப் பேசன்மின்!

<u>முடிப்பதுகங்கை</u>

வேயன தோளி மலைம
களைவி ரும்பிய
மாயமில் மாமலை நாட
னாகிய மாண்பனை
ஆயன சொல்லிநின் றார்கள்
அல்ல லறுக்கினும்
பேயனே பித்தனே என்ப
ரால்எம் பிரானையே. **#450**

மூங்கில்போலும் தோள்களையுடையவளாகிய மலைமகளை

விரும்புகின்ற, வஞ்சனை இல்லாத, பெரிய மலையிடத் தவனாகிய மாட்சியையுடைய எம்பெருமானை, தம்மால் இயன்றவைகளைச் சொல்லிப் புகழ்ந்து நின்றவரது துன்பங்களைக் களைதலைக் கண்டும், அவனைச் சிலர் 'அவன் பேயோடாடுபவன்; பித்துக் கொண்டவன்' என்று இகழ்வர்; எம்பெருமான், அவர் அங்ஙனம் இகழுமாறு இருத்தல் என்!

முடிப்பதுகங்கை

இறைவ னென்றெம் பெருமானை
வானவர் ஏத்தப்போய்த்
துறையொன் றித்தூ மலரிட்
டடியிணை போற்றுவார்
மறையன்றிப் பாடுவ தில்லை
யோமல்கு வானிளம்
பிறையன்றிச் சூடுவ தில்லை
யோஎம் பிரானுக்கே. **#451**

தேவர் எம்பெருமானை இறைவன் என்று அறிந்து துதிக்கச்சென்று, நன்னெறியிற் பொருந்தி, தூய மலர்களைச் சொரிந்து அவன் அடியிணையைப் போற்றுவர்; அங்ஙனமாக, அவனுக்கு, பாடும்பாட்டு, மறைகளன்றி வேறு ஒன்றும் இல்லையோ! சூடும் கண்ணி, வானத்திற்செல்லும் இளம்பிறையன்றி, வேறு ஒன்றும் இல்லையோ!

முடிப்பதுகங்கை

தாருந்தண் கொன்றையுங் கூவி
ளந்தனி மத்தமும்
ஆரும் அளவறி யாத
ஆதியும் அந்தமும்
ஊரும்ஒன் றில்லை உலகெ
லாம்உகப் பார்தொழப்
பேரும்ஓ ராயிர மென்ப
ரால்எம் பிரானுக்கே. **#452**

எம் பெருமானுக்கு, மாலையும், 'தண்ணிய கொன்றைப் பூ, கூவிளையிலை, மிகத் தாழ்ந்த ஊமத்தம்பூ' என்பன. அளவும் யாராலும் அறியப்படாத முதலும், முடிவும்; உலகம் முழுதுமாம். சொல்வதற்குப் பேரும் ஒன்றல்ல; ஓர் ஆயிரம் என்று சொல்லி யாவரும் நகைப்பர்; அவன் இவ்வாறிருத்தல் என்னோ!

முடிப்பதுகங்கை

அரியொடு பூமிசை யானும்
ஆதியும் அறிகிலார்
வரிதரு பாம்பொடு வன்னி
திங்களும் மத்தமும்
புரிதரு புன்சடை வைத்த
எம்புனி தற்கினி
எரியன்றி அங்கைக்கொன் றில்லை
யோஎம் பிரானுக்கே. **#453**

கீற்றுக்களையுடைய பாம்போடு, 'வன்னி, ஊமத்தை, பிறை' என்பவைகளை, புரித்த புல்லிய சடையில் வைத்துள்ள எம் புனிதனாகிய எம்பெருமானை, திருமாலும், பூமேல் இருப்பவனாகிய பிரமனும் அடியும் முடியும் அறியமாட்டார்; பிறர் ஆர் அறிவார்! அங்கையில் ஏந்துவதற்கு நெருப்பன்றி அவனுக்கு வேறு இல்லையோ!

முடிப்பதுகங்கை

கரிய மனச்சமண் காடி
யாடு கழுக்களால்
எரிய வசவுணுந் தன்மை
யோஇம வான்மகள்
பெரிய மனந்தடு மாற
வேண்டிப்பெம் மான்மதக்
கரியின் உரியல்ல தில்லை
யோஎம் பிரானுக்கே. **#454**

எம் பெருமானுக்கு கரிய மனத்தையுடைய, கஞ்சியைக் குடிக்கின்ற, கழுமரங்கள் போலத் தோன்றுகின்ற சமணர்களால், மனம் எரிந்து இகழப்படுதல்தான் இயல்போ! மலையரையன் மகளாகிய தன் தேவியின் பெருமை பொருந்திய மனம் கலங்க வேண்டி, அவன் மதத்தையுடைய யானையினின்றும் உரித்த தோலல்லது போர்வை வேறு இல்லையோ!

முடிப்பதுகங்கை

காய்சின மால்விடை மாணிக்
கத்தெங் கறைக்கண்டத்
தீசனை ஊரன் எட்டோ
டிரண்டு விரும்பிய
ஆயின சீர்ப்பகை ஞானியப்
பனடித் தொண்டன்றான்
ஏசின பேசுமின் தொண்டர்

காள்எம் பிரானையே. **#455**
அடியவர்களே, காய்கின்ற சினத்தையுடைய, பெரிய விடையை ஏறுகின்ற எங்கள் மாணிக்கம் போல்பவனும், கறுப்புநிறத்தையுடைய கண்டத்தையுடைய இறைவனும் ஆகிய பெருமானை, அவன் அடித்தொண்டனும், மிக்க புகழையுடைய வனப்பகைக்கு ஞானத்தந்தையும் ஆகிய நம்பியாரூரன் விரும்பிப் பாடியனவும், ஏசிப் பாடியனவும் ஆகிய இப்பத்துப் பாடல்களால், எம் பெருமானைப் பாடுமின்.

திருஆமாத்தூர்

திருஆமாத்தூர்

திருஆமாத்தூர்,
பண் - கொல்லிக்கௌவாணம்,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அழகியநாதர்.
தேவியார் : அழகியநாயகியம்மை.

காண்டனன் காண்டனன் காரிகை
யாள்தன் கருத்தனாய்
ஆண்டனன் ஆண்டனன் ஆமாத்
தூர்எம் மடிகட்காட்
பூண்டனன் பூண்டனன் பொய்யன்று
சொல்லுவன் கேண்மின்கள்
மீண்டனன் மீண்டனன் வேதவித்
தல்லா தவர்கட்கே. **#456**

அடியேன், திருவாமாத்தூரில் எழுந்தருளியுள்ள எம் தலைவனை, உமையம்மைக்குக் கணவனாகக் கண்டேன்; அவனுக்கு அடிமை பூண்டேன்; அடிமையைப் பலகாலும் செய்தேன்; இவை பொய்யல்ல; இன்னும் சொல்லுவேன்; கேண்மின்; வேத நெறியைப் போற்றுவோரல்லாதவர்களை நீங்கினேன்.

திருஆமாத்தூர்

பாடுவன் பாடுவன் பார்ப்பதி
தன்னடி பற்றிநான்
தேடுவன் தேடுவன் திண்ணனப்
பற்றிச் செறிதர
ஆடுவன் ஆடுவன் ஆமாத்
தூர்எம் மடிகளைக்
கூடுவன் கூடுவன் குற்றம
தற்றென் குறிப்பொடே. **#457**

யான், இவ்வுலகிற்குத் தலைவனாகிய, திருவாமாத்தூரில் எழுந்தருளியுள்ள எம் இறைவனை, அவனது திருவடியைக் கருதிப் பாடுவேன்; உறுதியாகப் பற்றி அணைத்தற்குத் தேடுவேன்; தேடிக்கண்டு, என் கருத்தின் வண்ணம் குற்றம் நீங்கிக் கூடுவேன்; கூடிய களிப்பினால் ஆடுவேன்.

திருஆமாத்தூர்

காய்ந்தவன் காய்ந்தவன் கண்ணழ
லாலன்று காமனைப்
பாய்ந்தவன் பாய்ந்தவன் பாதத்தி
னாலன்று கூற்றத்தை
ஆய்ந்தவன் ஆய்ந்தவன் ஆமாத்
தூர்எம் மடிகளார்
ஏய்ந்தவன் ஏய்ந்தவன் எம்பி
ராட்டியைப் பாகமே. **#458**

திருவாமாத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற எம் தலைவன், அன்று காமனைத் தனது நெற்றிக்கண்ணில் உள்ள நெருப்பால் எரித்தவன்; அன்று, கூற்றுவன்மேற் காலாற் பாய்ந்து அவனை அழித்தவன்; எல்லாவற்றையும் நன்குணர்ந்தவன்; எம்பெருமாட்டியை ஒருபாகத்தில் ஆரப்பொருந்தியவன்.

திருஆமாத்தூர்

ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள்
ளேநின்ற ஒண்பொருள்
சேர்ந்தனன் சேர்ந்தனன் சென்று
திருவொற்றி யூர்புக்குச்
சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி
மென்றோள் தடமுலை
ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத்
தூர்ஐயன் அருளதே. **#459**

யான், என் உள்ளத்துள்ளே நிலை பெற்றுள்ள ஒளியுடைய பொருளை ஆராய்ந்தறிந்தேன்; அவ்வறிவின் வழியே சென்று அதனைத் தலைப்பட்டேன்; இனி, வெளியே, திருவொற்றியூரிற் புகுந்து, 'சங்கிலி' என்பாளது மெல்லிய தோளையும், பெரிய தனங்களையும் பொருந்தினேன்; இவ்விருவாற்றானும், இருவகை இன்பத்தையும் நிரம்ப நுகர்ந்தேன்; இது, திருவாமாத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற தலைவனது திருவருள்.

திருஆமாத்தூர்

வென்றவன் வென்றவன் வேள்வியில்
விண்ணவர் தங்களைச்
சென்றவன் சென்றவன் சில்பலிக்
கென்று தெருவிடை

நின்றவன் நின்றவன் நீதி
நிறைந்தவர் தங்கள்பால்
அன்றவன் அன்றவன் செய்யருள்
ஆமாத்தூர் ஐயனே. **#460**

திருவாமாத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற தலைவன், தக்கன் வேள்வியில் எல்லாத் தேவர்களையும் வென்றவன்; சிலவாகிய பிச்சைக்கென்று தெருவிற் சென்றவன்; நீதியிற் சிறிதும் குறையாதவரிடத்தில் நிலைபெற்று நின்றவன்; தன்னை அடைந்தார்க்கு அருள்செய்தல், அடைந்த அன்றேயாகின்றவன்.

திருஆமாத்தூர்

காண்டவன் காண்டவன் காண்டற்
கரிய கடவுளாய்
நீண்டவன் நீண்டவன் நாரணன்
நான்முகன் நேடவே
ஆண்டவன் ஆண்டவன் ஆமாத்
தூரையும் எனையுமாட்
பூண்டவன் பூண்டவன் மார்பிற்
புரிநூல் புரளவே. **#461**

திருவாமாத்தூரில் எழுந்தருளியுள்ள தலைவன், தன் அடியவர்கட்கு எளிதில் காணப்பட்டவன்; திருமாலும் பிரமனும் தேட, அவர்களால் காணுதற்கரிய கடவுளாய் நீண்டவன்; ஆமாத்தூரையும் ஆண்டவன்; என்னையும் ஆளாக வைத்து ஆண்டவன்; மார்பில் முப்புரி நூலைப் புரளப் பூண்டவன்.

திருஆமாத்தூர்

எண்ணவன் எண்ணவன் ஏழுல
கத்துயிர் தங்கட்குக்
கண்ணவன் கண்ணவன் காண்டும்என்
பாரவர் தங்கட்குப்
பெண்ணவன் பெண்ணவன் மேனியொர்
பாகமாம் பிஞ்ஞகன்
அண்ணவன் அண்ணவன் ஆமாத்
தூர்எம் மடிகளே. **#462**

திருவாமாத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற எம் தலைவன் ஏழுலகத்திலும் உள்ள உயிர்கட்குக் கருத்தாய் உள்ளவன்; தன்னை, 'காண்போம்' என்று அன்பால் முயல்கின்றவர்கட்குக் கண்ணாய் உள்ளவன்; திருமேனி ஒரு பாகம் பெண்ணாகியவன்; பொருந்திய தலைக்கோலத்தை உடையவன்;

அடையத் தக்கவன்.

திருஆமாத்தூர்

பொன்னவன் பொன்னவன் பொன்னைத்தந்
தென்னைப்போ கவிடா
மின்னவன் மின்னவன் வேதத்தி
னுட்பொரு ளாகிய
அன்னவன் அன்னவன் ஆமாத்தூர்
ஐயனை ஆர்வத்தால்
என்னவன் என்னவன் என்மனத்
தின்புற் றிருப்பனே. **#463**

திருவாமாத்தூரில் எழுந்தருளியுள்ள தலைவன், அடியார்களுக்குப் பொன்போல்பவனாய் உள்ளவன்; பொன்னைக் கொடுத்து என்னைத் தன்னினின்றும் நீங்கவொட்டாது பிணித்துக் கொண்ட ஒளிவடிவினன்; வேதத்தின் உட்பொருளாய் உள்ள அத் தன்மையை உடையவன்; எனக்கு உரிமையுடையவன்; அவனை, யான் என்மனத்தில் அன்பால் நினைந்து இன்பமுற்றிருப்பேன்;

திருஆமாத்தூர்

தேடுவன் தேடுவன் செம்மலர்ப்
பாதங்கள் நாள்தொறும்
நாடுவன் நாடுவன் நாபிக்கு
மேலேயோர் நால்விரல்
மாடுவன் மாடுவன் வன்கை
பிடித்து மகிழ்ந்துளே
ஆடுவன் ஆடுவன் ஆமாத்
தூஎம் மடிகளே. **#464**

யான், திருவாமாத்தூரில் எழுந்தருளியுள்ள எம் தலைவனது திருவடிகளை நாள்தோறும் தேடுவேன்; அவனை, உந்திக்குமேல் நால்விரல் அளவில் உள்ள இருதயத்தில் நினைப்பேன்; வெளியில் சென்றால் வலிய கையால் பிடித்து மகிழ்ந்து உள்ளே சேர்ப்பேன்; அவனுக்கு ஏற்புடையன ஆகும்படி கூத்துக்களை ஆடுவேன்.

திருஆமாத்தூர்

உற்றனன் உற்றவர் தம்மை
ஒழிந்துள்ளத் துள்பொருள்
பற்றினன் பற்றினன் பங்கயச்
சேவடிக் கேசெல்ல

அற்றனன் அற்றனன் ஆமாத்தூர்மேயான்
அடி யார்கட்காள்
பெற்றனன் பெற்றனன் பெயர்த்தும்
பெயர்த்தும்பிற வாமைக்கே. **#465**
யான், மீட்டும் மீட்டும் பிறவாமைப் பொருட்டு, உற்றாரை நீங்கி, உள்ளத்தில் உள்ள பொருளை அடைந்தேன்; திருவாமாத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனது, தாமரை மலர் போலும் செவ்விய திருவடியிடத்தே செல்ல அவற்றைத் துணையாகப் பற்றினேன்; அதனால் துன்பங்கள் நீங்கப்பெற்றேன்; அதன்பின். அவன் அடியவர்க்கு அடியனாகும் பேற்றையும் பெற்றேன்.

திருஆமாத்தூர்

ஐயனை அத்தனை ஆளுடை
ஆமாத்தூர் அண்ணலை
மெய்யனை மெய்யர்க்கு மெய்ப்பொரு
ளான விமலனை
மையனை மையணி கண்டனை
வன்றொண்ட னூரன்சொல்
பொய்யொன்று மின்றிப் புலம்புவார்
பொற்கழல் சேவரே. **#466**
யாவர்க்கும் தலைவனும், தந்தையும், என்றும் உள்ளவனும், மெய்ம்மையான உள்ளம் உடையவர்க்கு அநுபவப் பொருளாய் விளங்குகின்ற தூயவனும், திருவருள் மேகமானவனும், மைபோலும் அழகிய கண்டத்தை உடையவனும் ஆகிய திருவாமாத்தூரை ஆளுதலுடைய இறைவனை, வன்றொண்டனாகிய நம்பியாரூரன் பாடிய பாடல்களை, வஞ்சனை சிறிதும் இன்றிப் பாடுகின்றவர், அப்பெருமானது பொன்போலும் திருவடிகளை அடைவர்.

திருநாகைக்காரோணம்

திருநாகைக்காரோணம்

திருநாகைக்காரோணம்,
பண் - கொல்லிக்கெளவாணம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : காயாரோகணேசுவரர்.
தேவியார் : நீலாயதாட்சியம்மை.

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
பாவையரைக் கிறிபேசிப் படிறாடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்துவைத்தீர் எனக்கொருநாள் இரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
யவைபூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. #467

கடற்கரைக்கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே, நீர், பலவூர்களிற் சென்று, பல பாமாலைகளைப் பாடி இரந்து உண்பீர்; அங்ஙனம் இரக்குங்கால், பிச்சைஇட வருகின்ற, பாவைபோலும் மகளிரோடு பொய்யான சொற்களைப் பேசிக் கரவு கொண்டு திரிவீர்; இறந்தவரது எலும்புகளை மேலே பூண்டுகொண்டு, எருதின்மேல் ஏறித்திரிவீர்; இவைகளைப் போலவே, உள்ள பொருளை மறைத்துவைத்து, என்பொருட்டு ஒரு நாளும் மனம் இரங்காது, ஏதும் இல்லை என்பீர்; இவையெல்லாம் உமக்குச் சிறிதும் ஒவ்வா; இப்பொழுது யான் அணிவதற்கு முத்தாரமும், மேற்பட்டு விளங்குகின்ற மாணிக்கமாலை வயிரமாலைகளும் ஆகிய அவைகளைத் தந்து, உடம்பிற் பூசிக் கொள்வதற்கு, இனிதாக மணம் வீசுகின்ற கத்தூரியையும், அத்தகையதான சந்தனமும் நீர், தவிராது அளித்தருளல் வேண்டும்.

திருநாகைக்காரோணம்

வேம்பினொடு தீங்கரும்பு விரவியெனைத் தீற்றி
விருத்திநான் உமைவேண்டத் துருத்திபுக்கங் கிருந்தீர்
பாம்பினொடு படர்சடைக ளவைகாட்டி வெருட்டிப்
பகட்டநான் ஒட்டுவனோ பலகாலும் உழன்றேன்
சேம்பினொடு செங்கழுநீர் தண்கிடங்கிற் றிகழுந்
திருவாரூர் புக்கிருந்த தீவண்ணர் நீரே

காம்பினொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டுங்
கடல் நாகைக் காரோண மேவியிருந் தீரே. #468

கடற்கரைக்கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே, நீர், என்னை, கைப்புடைய வேம்பினையும், தித்திப்புடைய கரும்பினையும் கலந்து உண்பித்து, நான், இங்கு உம்மிடம் எனக்குப் பிழைப்பை வேண்டிக் கொண்டிருக்க, நீர் என்முன் நில்லாது, திருத்துருத்தியில் புகுந்து, அங்கே இருந்துவிட்டீர்; இப்பொழுது உம்மைக் கண்டேன்; நீர் பாம்பும், விரிந்த சடைகளுமாகிய இவைகளைக் காட்டி என்னை வெருட்டிப் பெருமை அடைந்து விடநினைத்தால் நான் அதற்கு ஒட்டுவேனோ! ஒட்டேன்; ஏனெனில், உம்பின் நான் பலகாலும் திரிந்துவிட்டேன்; நீர்ச்சேம்பும், செங்கழுநீரும், குளிர்ந்த அகழியில் விளங்குகின்ற திருவாரூரில் குடி புகுந்திருக்கும் தீவண்ணராகிய நீர், இப்பொழுது எனக்கு 'காம்பு' என்றும் 'நேத்திரம்' என்றும் பெயர் சொல்லப்படும் பட்டாடை வகைகளை அளித்தருளல் வேண்டும்.

திருநாகைக்காரோணம்

பூண்பதோர் இளவாமை பொருவிடைஒன் றேறிப்
பொல்லாத வேடங்கொண் டெல்லாருங் காணப்
பாண்பேசிப் படுதலையிற் பலிகொள்கை தவிரீர்
பாம்பினொடு படர்சடைமேல் மதிவைத்த பண்பீர்
வீண்பேசி மடவார்கை வெள்வளைகள் கொண்டால்
வெற்பரையன் மடப்பாவை பொறுக்குமோ சொல்லீர்
காண்பினிய மணிமாட நிறைந்தநெடு வீதிக்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. #469

விரிந்த சடையின்மேல் பாம்பையும், சந்திரனையும் வைத்த பெருமையுடையவரே, காண்பதற்கு இனிய மணிமாடங்கள் நிறைந்த நீண்ட தெருக்களையுடைய, கடற்கரைக் கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே, நீர், அணிந்த ஓர் இளைய ஆமையின் ஓட்டோடு போர் செய்யும் எருது ஒன்றை ஏறி, விரும்புதல் இல்லாத வேடத்தைப் பூண்டு எல்லாருங் காண, இசைபாடி, இறந்தோரது தலையில் பிச்சை ஏற்றலை ஒழிய மாட்டீர்; அங்ஙனம் பிச்சை ஏற்குங்கால் பிச்சையைக் கொண்டொழியாது, வீண் சொற்களைப் பேசி, பிச்சையிட வருகின்ற மகளிரது வெள்ளிய வளைகளைக்கவர்வீராயின், மலையரையன் மகளாகிய உம் தேவி மனம் பொறுப்பாளோ? சொல்லீர்.

திருநாகைக்காரோணம்

விட்டதோர் சடைதாழ வீணைவிடங் காக
வீதிவிடை யேறுவீர் வீணடிமை யுகந்தீர்
துட்டரா யினபேய்கள் சூழநட மாடிச்
சுந்தரராய்த் தூமதியஞ் சூடுவது சுவண்டே
வட்டவார் குழல்மடவார் தம்மைமயல் செய்தல்
மாதவமோ மாதிமையோ வாட்டமெலாந் தீரக்
கட்டிஎமக் கீவதுதான் எப்போது சொல்லீர்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. **#470**

கடற்கரைக்கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே. நீ வீணாக அடிமைகளை வைத்துக் கொண்டீர்; மற்றும், அவிழ்த்துவிட்ட சடைகள் கீழே விழ, வீணை அழகுடையதாய் விளங்க, தெருவில் விடையை ஏறிச் செல்வீர்; கொடி யனவாகிய பேய்கள் சூழநடன மாடுதலை மேற்கொண்டு. அழகுடையவராய், மாசற்ற பிறையைச் சூடுவது அழகோ? அன்றியும் வட்டமாக முடிக்கப்படுகின்ற நீண்ட கூந்தலையுடைய மகளிரை மயக்குவதுதான் உமக்குப் பெரிய தவமோ? அல்லது பெருமையோ? இவையெல்லாம் எவ்வாறாயினும் ஆக; எங்கள் துன்பமெல்லாம் நீங்கும்படி எங்கட்குப் பொற்கட்டியைக் கொடுப்பது எப்போது? சொல்லீர்.

<u>திருநாகைக்காரோணம்</u>

மிண்டாடித் திரிதந்து வெறுப்பனவே செய்து
வினைக்கேடு பலபேசி வேண்டியவா திரிவீர்
தொண்டாடித் திரிவேனைத் தொழும்புதலைக் கேற்றுஞ்
சுந்தரனே கந்தமுதல் ஆடைஆ பரணம்
பண்டாரத் தேயெனக்குப் பணித்தருள வேண்டும்
பண்டுதான் பிரமாண மொன்றுண்டே நும்மைக்
கண்டார்க்குங் காண்பரிதாய்க் கனலாகி நிமிர்ந்தீர்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. **#471**

அழகரே. கடற்கரைக்கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே, நீர், உமக்குத் தொண்டு செய்து திரிகின்ற என்னை அடிமையாக ஏற்றுக் கொண்டும் அருள் பண்ணாது. வன்கண்மை கொண்டு திரிந்தும், வெறுக்கப்படும் செய்கைகளையே செய்தும், காரியக்கேடு பலவற்றைச் சொல்லியும் உம் மனம் வேண்டியவாறே திரிவீர்; உம்மை நான் எவ்வாறு அகப்படக் காணுதல் கூடும்! ஏனெனில், முன்னே உம்மை அங்ஙனம் யாரேனும் கண்டார் என்பதற்கு யாதேனும் பிரமாணம் உண்டோ! 'கண்டோம்' என்பார்க்கும், அடிமுடி காணுதல் அரிதாம்படி நெருப்பாகியே. நீண்டு நின்றீரல்லிரோ?

அதனால், நும் இயல்பையெல்லாம் விடுத்து, உமது கருவூலத்திலிருந்து நறுமணம், ஆடை, ஆபரணம் முதலியவற்றை எனக்கு அளித்தருளல் வேண்டும்.

திருநாகைக்காரோணம்

இலவவிதழ் வாயுமையோ டெருதேறிப் பூதம்
இசைபாட இடுபிச்சைக் கெச்சுச்சம் போது
பலவகம்புக் குழிதர்வீர் பட்டோடு சாந்தம்
பணித்தருளா திருக்கின்ற பரிசென்ன படிறோ
உலவுதிரைக் கடல்நஞ்சை அன்றமரர் வேண்ட
உண்டருளிச் செய்ததுமக் கிருக்கொண்ணா திடவே
கலவமயி லியலவர்கள் நடமாடுஞ் செல்வக்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. **#472**

தோகையையுடைய மயில்போலுஞ் சாயலை யுடைய மகளிர் நடனம் புரிகின்ற, செல்வத்தையுடைய கடற்கரைக்கண் உள்ள திருநாகைக்காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே, நீர், இலவம்பூப்போலும் இதழ் பொருந்திய வாயை யுடைய உமையவளோடு எருதின்மேல் ஏறிக்கொண்டு, பூதங்கள் இசையைப் பாட, பலரும் இடுகின்ற பிச்சைக்கு, வேள்வியை உடைய உச்சிப் பொழுதில் பல இல்லங்களில் புகுந்து திரிவீர்; ஆயினும், நீ அன்று தேவர்கள் வேண்ட அசைகின்ற அலைகளையுடைய கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு அவர்களுக்கு அருள்செய்தது, அவர்தம் முறையீட்டைக் கேட்டு உமக்கு வாளா இருக்க வொண்ணாது கருணை மேலிட்டமையாலே; அங்ஙனமாக, இப்பொழுது எனக்குப் பட்டும், சாந்தும் பணித்தருளாதிருக்கின்ற தன்மை என்ன வஞ்சமோ!

திருநாகைக்காரோணம்

தூசுடைய அகலல்குல் தூமொழியாள் ஊடல்
தொலையாத காலத்தோர் சொற்பாடாய் வந்து
தேசுடைய இலங்கையர்கோன் வரையெடுக்க அடர்த்துத்
திப்பியகீ தம்பாடத் தேரொடுவாள் கொடுத்தீர்
நேசமுடை அடியவர்கள் வருந்தாமை அருந்த
நிறைமறையோர் உறைவீழி மிழலைதனில் நித்தல்
காசருளிச் செய்தீர்இன் றெனக்கருள வேண்டுங்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. **#473**

கடற்கரைக்கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே, நல்லாடையை உடுத்த அகன்ற அல்குலையும், தூய மொழியையும் உடைய உம் தேவி உம்பால் கொண்ட ஊடலை நீர்

தொலைக்க முயன்றும் தொலையாதிருந்த காலத்தில், நீர் சொல்ல வந்தவன் போல, ஒளியையுடைய இலங்கைக்கு அரசனாகிய இராவணன் வந்து உமது மலையைப் பெயர்க்க, அவனை முன்னர் ஒறுத்து, அவன் சிறந்த இசையைப் பாட, அவனுக்குத் தேரும், வாளும் கொடுத்தீர்; அதுவன்றி, வற்கடத்தில் அன்புடைய அடியார்கள் பசியால் வாடுதல் இன்றி நன்கு உணவருந்தி இருக்குமாறு, மறையவர் நிறைந்த திருவீழிமிழலையில் நாள்தோறும் அன்று படிக்காசு அருளினீர்; அதுபோல, இன்று எனக்கு அருளல்வேண்டும்.

திருநாகைக்காரோணம்

மாற்றமேல் ஒன்றுரையீர் வாளாநீ ரிருந்தீர்
வாழ்விப்பன் எனஆண்டீர் வழியடியேன் உமக்கு
ஆற்றவேல் திருவுடையீ நல்கூர்ந்தீ ரல்லீர்
அணியாரூர் புகப்பெய்த வருநிதிய மதனில்
தோற்றமிகு முக்கூற்றில் ஒருகூறு வேண்டுந்
தாரீரேல் ஒருபொழுதும் அடியெடுக்க லொட்டேன்
காற்றனைய கடும்பரிமா ஏறுவது வேண்டுங்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. **#474**

கடற்கரைக்கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே, யான் உமக்கு வழிவழியாக அடியேன்; அதுவன்றி, நீர் வலிந்து, என்னை, 'வாழ்விப்பேன்' என்று சொல்லி அடிமை கொண்டீர்; மிக்க செல்வம் உடையீர்; வறுமை யுடையீரும் அல்லீர்;ஆயினும், மறுமொழி ஒன்றும் சொல்லாது வாய் வாளாதிருக்கின்றீ; அழகிய திருவாரூரிலே சேரும்படி நீர் சேர்த்து வைத்துள்ள மிக்க பொருட் குவியலில், எனக்கு வேண்டுவதாய் என் உள்ளத்தில் மிக்குத் தோன்றுகின்ற முக்கூற்றில் ஒருகூறு எனக்கு அளித்தருளல் வேண்டும்; அதனோடு ஏறிப் போவதற்கு, காற்றோடு ஒத்த விரைந்த நடையினையுடைய குதிரை வேண்டும்; இவைகளை அளியாதொழியின், உம்மை ஒருபொழுதும் அப்பால் அடியெடுத்து வைக்க ஒட்டாது, உம் திருவடிகளைப் பிடித்துக் கொள்வேன்.

திருநாகைக்காரோணம்

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி
மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலிஉண் பெருவயிறன் கணபதிஒன் றறியான்
எம்பெருமான் இதுதகவோ இயம்பியருள் செய்யீர்
திண்ணெனஎன் னுடல்விருத்தி தாரீரே யாகில்
திருமேனி வருந்தவே வளைக்கின்றேன் நாளைக்

கண்ணறையன் கொடும்பாடன் என்றுரைக்க வேண்டா
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. #475

கடற்கரைக்கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே, எம்பெருமானே, மண்ணுலகிலும், விண்ணுலகிலும் ஆட்சி உம்முடையதே நடைபெறுகின்றது. ஆதலின, நான் உம்மையுந் தௌய மாட்டேன்; உம் தேவியாகிய மலையரையன் மகளையும், சிறுவனாகிய முருகனையும் தௌயமாட்டேன்; அளவின்றி உண்கின்ற பெருவயிற்றானாகிய கணபதி, தன் உணவையன்றி வேறொன்றையும் அறியானாகலின், அவனிடம் நான் சென்று எதனை வேண்டுவேன்? உம் குடிமுழுதும் இவ்வாறிருத்தல் தக்கதோ? சொல்லியருளீர்; இப்பொழுது உறுதியாக என் உடலிற்குப் பிழைப்பைத் தாரீரேயாகில், உம் திருமேனி வருந்தும்படி கட்டிப் பிடித்துகொள்வேன்; பின்பு, 'இவன் கண்ணோட்டம் சிறிதும் இல்லாதவன்; கொடுமையுடையவன்' என்று என்னை வெறுத்துரைக்க வேண்டா.

<u>திருநாகைக்காரோணம்</u>

மறியேறு கரதலத்தீர் மாதிமையே லுடையீ
மாநிதியந் தருவனென்று வல்லீராய் ஆண்டீர்
கிறிபேசிக் கீழ்வேளூர் புக்கிருந்தீர் அடிகேள்
கிறியும்மாற் படுவேனோ திருவாணை யுண்டேல்
பொறிவிரவு நற்புகர்கொள் பொற்சுரிகை மேலோர்
பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும்
கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டுங்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. #476

மான் கன்று பொருந்திய கையை உடையவரே. தலைவரே, கடற்கரைக்கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே, நீர், பெருமையோ மிக உடையீர்; 'மிக்க பொருட்குவையைத் தருவேன்' என்று சொல்லி, வழக்கில் வல்லீராய் என்னை ஆட்கொண்டீர்; ஆனால், இப்பொழுது பொருள் இல்லீர் போல வஞ்சனைகள் பேசி, திருக்கீழ்வேளூரிற் போய்த் தங்கியிருக்கின்றீர்; உமது உறுதிமொழி எனக்கு உள்ளது என்றால், நான் உம்மால் வஞ்சிக்கப்படுவேனோ! படேன், இலச்சினை பொருந்திய, நல்ல அழகினைக் கொண்ட பொன்னாலாகிய உடை வாளும், தலையில் சூடிக்கொள்ளும் பொற்றாமரைப் பூவும், பட்டுக் கச்சும் எனக்கு அளித்தருளல் வேண்டும். அன்றியும் மூன்று பொழுதிலும், கறியும், சோறும், அவை இரண்டோடும் கலக்கின்ற நெய்யும் ஆகிய இவைகளும் வேண்டும்.

திருநாகைக்காரோணம்

பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே மற்றாரை யுடையேன்
உண்மயத்த உமக்கடியேன் குறைதீர்க்க வேண்டும்
ஒளிமுத்தம் பூணாரம் ஒண்பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டுங்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரென்
றண்மயத்தால் அணிநாவல் ஆரூரன் சொன்ன
அருந்தமிழ்கள் இவைவல்லார் அமருலகாள் பவரே. **#477**

அழகிய திருநாவலூரில் தோன்றிய நம்பியாரூரன், திருநாகைக் காரோணத்துப் பெருமானாரை அடுத்துநின்ற தன்மையால், அவரை, 'கடற்கரைக்கண் உள்ள திருநாகைக் காரோணத்தில் விரும்பி எழுந்தருளியிருப்பவரே, இசையின் வண்ணமேயாய் உள்ள சொற்களையுடைய 'பரவை சங்கிலி' என்னும் இருவருக்கும், எனக்கும் சார்பாய் உள்ள பெருமானே, யான் உம்மையன்றி வேறு யாரைச் சார்பாக உடையேன்? உமக்கு நெஞ்சறிந்த வண்ணமே பூண்ட அடிமையையுடையேனாகிய என்குறையை நீக்கியருளல் வேண்டும்; ஒளியையுடைய முத்துக்களால் ஆக்கி அணிகின்ற மாலையும், ஒள்ளிய பட்டாடையும், பூவும், கண் நோக்கு நிறைந்த கத்தூரியின் மணம் கமழ்கின்ற, சந்தனமும் வேண்டும்' என்று வேண்டிப் பாடிய, அரிய தமிழ்ப் பாடல்களாகிய இவைகளைப் பாட வல்லவர்கள், அமரர் உலகத்தை ஆள்வார்கள்.

ஊர்த்தொகை

ஊர்த்தொகை,
பண் - பழம்பஞ்சுரம்

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே
கானப் பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே அழுந்தூ ரரசே
கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய்
பனங்காட் டூரானே
மாட்டூ ரறவா மறவா துன்னைப்
பாடப் பணியாயே. **#478**

காட்டூர் முதலிய தலங்களில் எழுந்தருளியிருக்கின்ற கடலும், மலையும், தளிரும், கொல்லுந் தன்மையுடைய சிங்க ஏறும் போல்பவனே, பாட்டினை மிகவுணர்ந்தவர் பலராலும், அப்பாட்டுக்களால் பரவப்படுபவனே, எருதை ஊர்கின்ற அறமுதல்வனே, அடியேன் உன்னை என்றும் மறவாது பாடுமாறு திருவருள்செய்யாய்.

ஊர்த்தொகை

கொங்கிற் குறும்பிற் குரக்குத் தளியாய்
குழகா குற்றாலா
மங்குற் றிரிவாய் வானோர் தலைவா
வாய்மூர் மணவாளா
சங்கக் குழையார் செவியா அழகா
அவியா அனலேந்திக்
கங்குற் புறங்காட் டாடீ அடியார்
கவலை களையாயே. **#479**

கொங்கு நாட்டில் பாலை நிலத்தில் உள்ள குரக்குத்தளி முதலிய தலங்களில் எழுந்தருளியிருப்பவனே, மூப்படையாதவனே, வானத்தில் திரிபவனே, தேவர்க்குத் தலைவனே, மணவாளக்கோலம் உடையவனே, சங்கக்குழை பொருந்திய காதினையுடையவனே, அழகனே, எஞ்ஞான்றும் அவியாது எரிகின்ற நெருப்பைக் கையில் ஏந்திக்கொண்டு, இரவில், புறங்காட்டில் ஆடுகின்றவனே, உன் அடியாரது மனக் கவலையைப் போக்கியருளாய்.

ஊர்த்தொகை

நிறைக்காட் டானே நெஞ்சத் தானே
நின்றி யூரானே
மிறைக்காட் டானே புனல்சேர் சடையாய்
அனல்சேர் கையானே
மறைக்காட் டானேதிருமாந் துறையாய்
மாகோ ணத்தானே
இறைக்காட் டானே எங்கட் குன்னை
எம்மான் தம்மானே. **#480**

நின்றியூர் முதலிய தலங்களில் எழுந்தருளியிருப்பவனே, நெறிபிறழாமையையுடைய, சான்றானவனே, அடியவர்கள் நெஞ்சத்தில் இருப்பவனே, அவர்கட்குச் சிறிதும் துன்பத்தைக் காட்டாதவனே, நீர் பொருந்திய சடையை யுடையவனே, நெருப்புப் பொருந்திய கையை யுடையவனே, எம்தந்தைக்குத் தந்தையே, நீ எங்கட்டு உன்னைச் சிறிதும் புலப்படுத்தாதவனோ?

<u>ஊர்த்தொகை</u>

ஆரூர் அத்தா ஐயாற் றமுதே
அளப்பூர் அம்மானே
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவிற்
கருகா வூரானே
பேரூர் உறைவாய்பட்டிப் பெருமான்
பிறவா நெறியானே
பாரூர் பலரும் பரவப் படுவாய்
பாசூர் அம்மானே. **#481**

ஆரூர் முதலிய தலங்களில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனே, அமுதம் போல்பவனே, பிறவாத நெறியை உடையவனே, நீயே இந்நிலவுலகில் நிறைந்துள்ள பலராலும் பரவப்படுபவன்.

<u>ஊர்த்தொகை</u>

மருகல் லுறைவாய் மாகா ளத்தாய்
மதியஞ் சடையானே
அருகற் பிணிநின் னடியார் மேல
அகல அருளாயே
கருகற் குரலாய் வெண்ணிக் கரும்பே
கானூர்க் கட்டியே
பருகப் பணியாய் அடியார்க் குன்னைப்
பவளப் படியானே. **#482**

மருகல் முதலிய தலங்களில் எழுந்தருளியிருப்பவனே. சந்திரனைச்

சடையில் அணிந்தவனே, கருகிய கண்டத்தை யுடையவனே, கரும்புபோல்பவனே, கட்டிபோல்பவனே, பவளம் போலும் வடிவத்தையுடையவனே, உன் அடியார்மேல் வருகின்ற, மெலிதற் காரணமான நோய்கள் விலகிச் செல்லவும், உன்னை அடைந்து இன்புறவும் அவர்கட்கு அருள் செய்யாய்.

ஊர்த்தொகை

தாங்கூர் பிணிநின் னடியார் மேல
அகல அருளாயே
வேங்கூர் உறைவாய் விளமர் நகராய்
விடையார் கொடியானே
நாங்கூர் உறைவாய் தேங்கூர் நகராய்
நல்லூர் நம்பானே
பாங்கூர் பலிதேர் பரனே பரமா
பழனப் பதியானே. **#483**

வேங்கூர் முதலிய தலங்களில் எழுந்தருளியிருப்பவனே, இடபம் பொருந்திய கொடியையுடையவனே, நம்பனே, பக்கங்களில் உள்ள ஊர்களிற் சென்று பிச்சை தேடுகின்ற வேறுபட்ட தன்மையனே, மேலானவனே, உன் அடியார்மேல் உள்ள பொறுத்தற்கரிய நோய்கள் விலகிச் செல்ல அருள்புரியாய்.

ஊர்த்தொகை

தேனைக் காவல் கொண்டு விண்ட
கொன்றைச் செழுந்தாராய்
வானைக் காவல் கொண்டு நின்றார்
அறியா நெறியானே
ஆனைக் காவில் அரனே பரனே
அண்ணா மலையானே
ஊனைக் காவல் கைவிட் டுன்னை
உகப்பார் உணர்வாரே. **#484**

'ஆனைக்கா, அண்ணாமலை' என்னும் தலங்களில் எழுந்தருளியிருப்பவனே, தேனைப் பாதுகாத்தலை மேற்கொண்டு மலர்ந்த கொன்றைப் பூவினால் ஆகிய வளப்பமான மாலையை அணிந்தவனே, வானுலகத்தைக் காத்தலை மேற்கொண்டு நிற்கின்ற தேவர்களால் அறியப்படாத நிலையை உடையவனே, அழித்தல் தொழிலை உடையவனே, மேலானவனே, உடலோம்புதலை விட்டு, உன்னை விரும்பித் தொழுகின்றவர்களே, உன்னை உணர்வார்கள்.

ஊர்த்தொகை

துருத்திச் சுடரே நெய்த்தா னத்தாய்
சொல்லாய் கல்லாலா
பலவாய்க் காற்றானாய்
திருத்தித் திருத்தி வந்தென் சிந்தை
இடங்கொள் கயிலாயா
அருத்தித் துன்னை அடைந்தார் வினைகள்
அகல அருளாயே. **#485**

துருத்தி முதலிய தலங்களில் எழுந்தருளியிருப்பவனே, ஒளிவடிவானவனே, சொல்லின்கண் உள்ளவனே, கல்லால மர நிழலில் இருப்பவனே, வெயிலாகியும், காற்றாகியும், மற்றும் பலவாகியும் நிற்பவனே, என் மனத்தை மேன்மேல் திருந்தச்செய்து, அதனை இடமாகக் கொண்டவனே, உன்னை அன்புசெய்து அடைந்தவர்களது வினைகள் நீங்க அவர்கட்கு அருள்செய்யாய்.

ஊர்த்தொகை

புலியூர்ச் சிற்றம் பலத்தாய் புகலூர்ப்
போதா மூதூரா
பொலிசேர் புரமூன் றெரியச் செற்ற
புரிபுன் சடையானே
வலிசேர் அரக்கன் தடக்கை ஐஞ்ஞான்
கடர்த்த மதிசூடீ
கலிசேர் புறவிற் கடவூ ராளீ
காண அருளாயே.. **#486**

புலியூர்ச் சிற்றம்பலம் முதலிய தலங்களில் எழுந்தருளியிருப்பவனே, ஞான வடிவினனே பழமையான சிவலோகத்தை உடையவனே, பொலிவு பொருந்திய மூன்று ஊர்கள் எரிந்தொழியுமாறு அழித்த, புரித்த, புல்லிய சடையையுடையவனே, வலிமை பொருந்திய அரக்கனாகிய இராவணனது பெரிய இருபது கைகளையும் நெரித்த, பிறையைச் சூடினவனே, உன்னைக் கண்ணாற் காண அருளாய்.

ஊர்த்தொகை

கைம்மா உரிவை அம்மான் காக்கும்
பலவூர் கருத்துன்னி
மைம்மாந் தடங்கண் மதுர மன்ன/**B>**
மொழியாள் மடச்சிங்கடி
தம்மான் ஊரன் சடையன் சிறுவன்

அடியன் தமிழ்மாலை
செம்மாந் திருந்து திருவாய் திறப்பார்
சிவலோ கத்தாரே. **#487**

மை தீட்டிய, மாவடுப்போலும் பெரிய கண்களையும், இனிமை நிலைபெற்ற அழகிய சொல்லையும், இளமையையும் உடையவளாகிய சிங்கடிக்குத் தந்தையும், சடையனாருக்கு மகனும், யானைத் தோலையுடைய பெருமானுக்கு அடியனும் ஆகிய நம்பியாரூரனது இத்தமிழ்மாலையை, அப்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற பல தலங்களையும் நினைந்து கவலையற்றிருந்து, சிறந்த வாயாற் பாடுவோர், சிவலோகத் திருப்பவரேயாவர்.

திருப்பாண்டிக்கொடுமுடி

திருப்பாண்டிக்கொடுமுடி

திருப்பாண்டிக்கொடுமுடி,
பண் - பழம்பஞ்சுரம்,
இத்தலம் கொங்குநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கொடுமுடிநாதர்.
தேவியார் : பண்மொழியாளம்மை.

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. **#488**

கற்றவர்கள் வணங்கித் துதிக்கின்ற புகழையுடைய கறையூரில் உள்ள, 'திருப்பாண்டிக் கொடுமுடி' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற, நல்ல தவவடிவினனே, எனக்கு வேறு துணையில்லையாகும்படி, உனது திருவடியையே துணையாக மனத்திலதுணியப்பெற்றேன்; அவ்வாறு துணியப்பெற்ற பின்பே, நான் மனிதனாய்ப் பிறந்தவனாயினேன்; அதுவன்றி, இனியொரு பிறப்பிற் சென்று பிறவாத தன்மையும் என்னை வந்து அடையப்பெற்றேன்; இனி உன்னை நான் மறந்தாலும், என் நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதனை, இடையறாது சொல்லும்.

திருப்பாண்டிக்கொடுமுடி

இட்ட னுன்னடி ஏத்து வார்இகழ்ந்
திட்ட நாள்மறந் திட்டநாள்
கெட்ட நாள்இவை என்ற லாற்கரு
தேன்கி ளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்ட டிதொழு
தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. **#489**

மிக்கு வருகின்ற நீரையுடைய காவிரியாறு, வளைவாக மேலால் விளங்க இடப்படும் மாலையைக் கொணர்ந்து உன் திருவடியை வணங்கித்

துதிக்கின்ற. 'திருப்பாண்டிக் கொடுமுடி, என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற, தோழமை கொண்டவனே, உன்னால் விரும்பப்பெற்றவனாகிய யான், உன் திருவடியைத் துதிக்கின்ற அடியவர்களால் 'இவன் நிலையில்லாத மனத்தையுடையவன்' என்று இகழப்பட்ட நாள்களும், அங்ஙனம் அவர்கள் இகழ்தற்கு ஏதுவாக நான் உன்னை மறந்துவிட்ட நாள்களும் ஆகிய இவைகளை, அடியேன் அழிந்த நாள் என்று கருதுவதன்றி வேறாகக் கருதமாட்டேன்; ஆதலின், நான் உன்னை மறக்கினும், என்நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதனை, இடையறாது சொல்லும்.

திருப்பாண்டிக்கொடுமுடி

ஓவு நாள்உணர் வழியும்நாள் உயிர்
போகும் நாள்உயர் பாடைமேல்
காவு நாள்இவை என்ற லாற்கரு
தேன்கி ளர்புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்தி ழிபரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. **#490**

மேலான ஒளியாய் உள்ளவனே, மிக்கு வருகின்ற நீரையுடைய காவிரியாற்றினது பரந்த வெள்ளம் வந்து பாய்கின்ற, 'திருப் பாண்டிக் கொடுமுடி' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற, நா வன்மை யுடையவனே, அடியேன் உன்னை நினையா தொழிந்த நாள்களை, என் உணர்வு அழிந்த நாள்களும், உயிர்போன நாள்களும், உயரத்தோன்றும் பாடையின்மேல் வைத்துச் சுமக்கப்படும் நாள்களும் என்னும் இவைகளாகக் கருதுதல் அன்றி, வேறு நல்ல நாளாகக் கருதமட்டேன; ஆதலின், உன்னை நான் மறந்தாலும், என் நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதனை, இடையறாது சொல்லும்.

திருப்பாண்டிக்கொடுமுடி

எல்லை யில்புகழ் எம்பிரான் எந்தை
தம்பி ரான்என்பொன் மாமணி
கல்லை யுந்தி வளம்பொ ழிந்திழி
காவி ரியதன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்ல வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. **#491**

எல்லையில்லாத புகழையுடைய எம்பெருமானே, எந் தந்தைக்கும் தலைவனே, என் பொன்போல்பவனே, என் மணி போல்பவனே,மணிகளைத் தள்ளிவந்து, எவ்விடத்திலும் செல்வத்தை மிகுதியாகச் சொரிந்து பாய்கின்ற காவிரியாற்றினது கரைக்கண். நல்லவர்களால் வணங்கித் துதிக்கப்படுகின்ற, புகழையுடைய கறையூரில் உள்ள, 'திருப்பாண்டிக் கொடுமுடி' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற எல்லாம் வல்லவனே, உன்னை நான் மறந்தாலும் என் நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதனை இடையறாது சொல்லும்.

திருப்பாண்டிக்கொடுமுடி

அஞ்சி னார்க்கர ணாதி என்றடி
யேனும் நான்மிக அஞ்சினேன்
அஞ்ச லென்றடித் தொண்ட னேற்கருள்
நல்கி னாய்க்கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. **#492**

ஊட்டப்பட்ட பஞ்சினை உடைய மெல்லிய அடிகளையுடைய பாவைபோலும் மகளிர் காவிரித்துறைக்கண் மூழ்கி விளையாடுகின்ற, 'திருப்பாண்டிக் கொடுமுடி' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற, நஞ்சணிந்த கண்டத்தை யுடையவனே, நீ அச்சமுற்று வந்து அடைந்தவர்க்குப் பாதுகாப்பாவாய் என்று அறிந்து, அடியேனாகிய யானும் மிகவும் அச்சமுற்று வந்து உன்னை அடைந்தேன்; அதனையறிந்து நீ அவ்வண்ணமே 'அஞ்சேல்' என்று சொல்லி அணைத்து, அடித்தொண்டனாகிய எனக்கு உன் திருவருளை அளித்தாய்; அதனால் உனக்குக் கெடுகின்றது ஒன்றின்மையைக் கண்டேன்; இன்ன பெருமையும் முதன்மையும் உடைய உன்னை நான் மறந்தாலும், என் நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதனை, இடையறாது சொல்லும்.

திருப்பாண்டிக்கொடுமுடி

ஏடு வான்இளந் திங்கள் சூடினை
என்பின் கொல்புலித் தோலின்மேல்
ஆடு பாம்ப தரைக்க சைத்த
அழக னேஅந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்தி ழிபரஞ்

சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேட னேஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. #493

கொல்லுகின்ற புலியினது தோலின் மேல், ஆடுகின்ற பாம்பை, அரையின்கண் கட்டியுள்ள அழகனே, அழகிய, ஆழ்ந்த காவிரியாற்றினது, ஒலிக்கின்ற குளிர்ந்த நீர் வந்து பாய்கின்ற, 'திருப்பாண்டிக் கொடுமுடி' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற மேலான ஒளியாய் உள்ளவனே, பெருமையுடையவனே நீ, வானத்தில் தோன்றுகின்ற, பூவிதழ்போலும் இளந்திங்களை முடியிற் சூடினாய்; அதன்பின் சான்று சொல்லவேண்டுவது என்! அதனால், உன்னை நான் மறந்தாலும், என் நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதனை, இடையறாது சொல்லும்.

திருப்பாண்டிக்கொடுமுடி

விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந்
தேன்வி னைகளும் விண்டன
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெ ழில்பெற
நின்ற காவிரிக்கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
விரும்ப னேஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. #494

தென்னங் குரும்பைபோலும், மெல்லிய கொங்கைகளையுடைய கன்னியர் மூழ்கி விளையாடுகின்ற காவிரியாற்றினது, வளப்பமான சோலைகள் நெருங்கிச் சூழ்ந்து அழகுண்டாக நிற்கின்ற கரைக்கண் உள்ள, 'திருப்பாண்டிக் கொடுமுடி' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற, விரும்பப்படுபவனே, அடியேன், உனது மலர் போலும் திருவடிகளையே விரும்பி நினைந்தேன்; அதனால், நீங்குதற்கரிய வினைகளும் நீங்கின; இனி, உன்னைநான் மறந்தாலும், என்நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதனை, இடையறாது சொல்லும்.

திருப்பாண்டிக்கொடுமுடி

செம்பொ னேர்சடை யாய்தி ரிபுரந்
தீயெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாக
மமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயில்

ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்ப னேஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. **#495**

செம்பொன்போலும் சடையையுடையவனே, திரிபுரத்தில் தீ உண்டாகும்படி வில்லை வளைத்தவனே, மணம் வீசுகின்ற கூந்தலையுடைய இறைவியை ஒருபாகத்தில் விரும்பி வைத்து, காவிரியாற்றினது கரையின்கண் உள்ள, சோலைகளில், கிளைகளின்மேற் குயில்கள் கூவ, சிறந்த மயில்கள் ஆடுகின்ற, 'திருப்பாண்டிக்கொடு முடி' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற நம்பனே, உன்னை நான் மறந்தாலும், என் நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதனை, இடையறாது சொல்லும்.

திருப்பாண்டிக்கொடுமுடி

சார ணன்தந்தை எம்பி ரான்எந்தை
தம்பி ரான்எம்பொன் மாமணீயென்று
பேரெ ணாயிர கோடி தேவர்
பிதற்றி நின்று பிரிகிலார்
நார ணண்பிர மன்தொ ழுங்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
கார ணாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. **#496**

திருமாலும், பிரமனும் வணங்குகின்ற, கறையூரில் உள்ள, 'திருப்பாண்டிக்கொடுமுடி' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற முதல்வனே, அளவற்ற தேவர்; 'எமக்குப் புகலிடமானவன்; எம்தந்தை; எம்தலைவன்; எம் தந்தைக்கும் தலைவன்; எங்கள் பொன்; எங்கள் மணி' என்று சொல்லி, உன் பெயர்கள் பலவற்றையும் பிதற்றி நின்று, உன்னைப் பிரியமாட்டார்; இன்ன பெரியோனாகிய உன்னை நான் மறந்தாலும், என் நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதனை, இடையறாது சொல்லும்.

திருப்பாண்டிக்கொடுமுடி

கோணி யபிறை சூடி யைக்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப்
பித்த னைப்பிறப் பில்லியைப்
பாணு லாவரி வண்ட றைகொன்றைத்
தார னைப்படப் பாம்பரை
நாண னைத்தொண்டன் ஊரன் சொல்லிவை

சொல்லு வார்க்கில்லை துன்பமே. **#497**
வளைந்த பிறையைச் சூடினவனும், தலைக் கோலம் உடையவனும், பேரருள் உடையவனும், பிறப்பில்லாதவனும், இசையோடு உலாவுகின்ற வரிகளையுடைய வண்டுகள் ஒலிக்கும் கொன்றைப் பூமாலையை அணிந்தவனும்' படத்தையுடைய பாம்பாகிய அரைநாணை உடையவனும் ஆகிய கறையூரில் உள்ள 'திருப்பாண்டிக்கொடுமுடி' என்னும் கோயிலை விரும்பி எழுந்தருளியிருக்கின்ற பெருமானை, அவன் தொண்டனாகிய நம்பியாரூரன் பாடிய இப்பாடல்களைப் பாடுவார்க்குத் துன்பம் இல்லையாம்.

திருமுருகன்பூண்டி

திருமுருகன்பூண்டி

திருமுருகன்பூண்டி,
பண் - பழம்பஞ்சுரம்,
இத்தலம் கொங்குநாட்டிலுள்ளது. கழறிற்றறிவாரென்னுஞ் சேரமான்பெருமானாயனார் கொடுத்த திரவியங்களை பரிசனங்கள் தலையில் எடுப்பித்துக்கொண்டு திருமுருகன்பூண்டிக்குச் சமீபத்தில் எழுந்தருளும்போது பரமசிவத்தின் கட்டளையினால் பூதங்கள் வேடுவர்களாகிவந்து அந்தப்பரிசனங்களை அடித்துப் பொருள்களைப் பறித்துப் போயின. அப்போது சுந்தரமூர்த்தி சுவாமிகள் இந்தப் பதிகமோதிப் பொருள்களைப் பெற்றுக்கொண்டது. ,
சுவாமிபெயர் : ஆவுடைநாயகர்.
தேவியார் : ஆவுடைநாயகியம்மை.

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்
விரவ லாமைசொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண்
டாற லைக்குமிடம்
முடுகு நாறிய வடுகர் வழ்முரு
கன்பூண்டி மாநகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும்
ஏத்துக் கிங்கிருந் தீர்எம்பி ரானீரே. **#498**

எம்பெருமானிரே, முடைநாற்றம் சேய்மையினும்விரையச்சென்று நாறுகின்ற உடம்பையுடைய வடுகர்கள் வாழ்கின்ற இம் முருகன்பூண்டி, வளைந்த கொடிய வில்லையுடைய வடுக வேடுவர், வருவோரைப் பொருந்தாத சொற்களைச் சொல்லி, 'திடுகு' என்றும், 'மொட்டு' என்றும் அதட்டி அச்சுறுத்தி ஆறலைத்து அவர்தம் உடைகளைப் பறித்துக் கொள்ளும் இடம்; இம்மாநகரிடத்து இங்குறுகிய, நுண்ணிய இடையையுடைய எம்பெருமாட்டியோடும் நீர் எதன்பொருட்டு இருக்கின்றீர்?

திருமுருகன்பூண்டி

வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர்
விரவ லாமைசொல்லிக்
கல்லி னாலெறிந் திட்டும் மோதியுங்
கூறை கொள்ளுமிடம்
முல்லைத் தாது மணங்க மழ்முரு

கன்பூண்டி மாநகர்வாய்
எல்லைக் காப்பதொன் றில்லை யாகில்நீர்
எத்துக் கிங்கிருந் தீர்எம் பிரானீரே. **#499**

எம்பெருமானிரே, முல்லை மலரின் மகரந்தம் நறு மணத்தை வீசுகின்ற இம் முருகன்பூண்டி மாநகர் வருவோரை, வேடுவர்கள், வில்லைக் காட்டி, வெருட்டியும், பொருந்தாத சொற்களைச் சொல்லிக் கல்லால் எறிந்தும், கையால் அறைந்தும் அவர்களது உடைகளைப் பறித்துக்கொள்ளும் இடம்; இதன் எல்லைக்குக் காவல் ஒன்றும் இல்லாமை நீர் அறிந்ததேயானால், இதன்கண் இங்கு எதன் பொருட்டு இருக்கின்றீ?

திருமுருகன்பூண்டி

பசுக்க ளேகொன்று தின்று பாவிகள்
பாவம் ஒன்றறியார்
உசிர்க்கொ லைபல நேர்ந்து நாள்தொறும்
கூறை கொள்ளுமிடம்
முசுக்கள் போற்பல வேடர் வாழ்முரு
கன்பூண்டி மாநகர்வாய்
இசுக்க ழியப் பயிக்கங் கொண்டுநீர்
எத்துக் கிங்கிருந் தீர்எம் பிரானீரே. **#500**

எம்பெருமானிரே, வேடர் பலர் குரங்குகள் போலப் பிறர்பொருளைப் பறித்து வாழ்கின்ற இம் முருகன் பூண்டி மாநகர், அப்பாவிகள், பாவம் என்பதொன்றையறியாராய், விலங்குகளையே கொன்று தின்று, நாள்தோறும் பலரது உயிர்களைக் கொல்லுதலைத் துணிந்து செய்து அவர்களது உடைகளைப் பறித்துக்கொள்ளும் இடம்; இதன்கண் நீர், இழுக்கு நீங்கப் பிச்சை ஏற்று, இங்கு எதன்பொருட்டு இருக்கின்றீர்?

திருமுருகன்பூண்டி

பீறற் கூறை உடுத்தொர் பத்திரங்
கட்டி வெட்டினராய்ச்
சூறைப் பங்கிய ராகி நாள்தொறுங்
கூறை கொள்ளுமிடம்
மோறை வேடுவர் கூடி வாழ்முரு
கன்பூண்டி மாநகர்வாய்
ஏறு கால்இற்ற தில்லை யாய்விடில்
எத்துக் கிங்கிருந் தீர்எம் பிரானீரே. **#501**

எம்பெருமானிரே, குற்றமுடைய வேடுவரே கூடி, ஆறலைத்த பொருளின் பங்காகிய பொருளை உடையவராய், வாழ்கின்ற இம் முருகன் பூண்டி

மாநகர், அவர்கள், கிழிந்த உடையை உடுத்துக்கொண்டு, அதற்குள் உடைவாளையுங் கட்டிக்கொண்டு, வருவோரை அவ்வுடைவாளால் வெட்டி, நாள்தோறும் அவர்களது உடைகளைப் பறித்துக்கொள்ளும் இடம்; உமது எருது கால் ஒடியாமல் நன்றாகவே இருக்கின்றதென்றால், அதன்மேல் ஏறி அப்பாற் போகாமல், இதன்கண் இங்கு எதன் பொருட்டு இருக்கின்றீர்?

திருமுருகன்பூண்டி

தயங்கு தோலை உடுத்துச் சங்கர
சாம வேதமோதி
மயங்கி ஊரிடு பிச்சை கொண்டுணும்
மார்க்க மொன்றறியீர்
முயங்கு பூண்முலை மங்கை யாளொடு
முருகன்பூண்டி மாநகர்வாய்
இயங்க வும்மிடுக் குடைய ராய்விடில்
எத்துக் கிங்கிருந் தீர்எம் பிரானீரே. **#502**

எம் பெருமானிரே, நீர், விளங்குகின்ற தோலை உடுத்து, இன்பத்தைச் செய்கின்ற சாம வேதத்தைப் பாடிக்கொண்டு அப்பாட்டினால் மயங்கி ஊரில் உள்ளார் இடுகின்ற பிச்சையை ஏற்று உண்பதற்கு வழி ஒன்றும் அறியீரோ? பல இடங்களுக்குச் செல்ல வலிமையும் உடையீரென்றால், தழுவுகின்ற, அணிகளை அணிந்த தனங்களையுடைய தேவியோடும், இம் முருகன்பூண்டி மாநகரிடத்து இங்கு எதன் பொருட்டு இருக்கின்றீர்?

திருமுருகன்பூண்டி

விட்டி சைப்பன கொக்க ரைகொடு
கொட்டி தத்தளகம்
கொட்டிப் பாடுமித் துந்து மியொடு
குடமுழா நீர்மகிழ்வீர்
மொட்ட லர்ந்து மணங் கமழ்முரு
கன்பூண்டி மாநகர்வாய்
இட்ட பிச்சைகொண் டுண்ப தாகில்நீர்
எத்துக் கிங்கிருந் தீர்எம் பிரானீரே. **#503**

எம்பெருமானிரே, நீர், கொட்டிப்பாடுதற்கு உரிய, தாள அறுதிக்கு ஏற்ப விட்டுவிட்டு ஒலிக்கின்ற' 'கொக்கரை, கொடு கொட்டி, தத்தளகம், துந்துமி, குடமுழா, என்னும் இவற்றை விரும்புவராய் உள்ளீரென்றால், மற்றும், ஊரவர் இட்ட பிச்சையை ஏற்று உண்பீரென்றால், பலவகை அரும்புகள் அலர்ந்து மணங்கமழ்கின்ற இம் முருகன் பூண்டி மாநகரிடத்து இங்கு எதன்பொருட்டு இருக்கின்றீர்?

திருமுருகன்பூண்டி

வேத மோதிவெண் ணீறு பூசிவெண்
கோவணந் தற்றயலே
ஓத மேவிய ஒற்றி யூரையும்
உத்திர நீர்மகிழ்வீர்
மோதி வேடுவர் கூறை கொள்ளு
முருகன்பூண்டி மாநகர்வாய்
ஏது காரண மேது காவல்கொண்
டெத்துக் கிங்கிருந் தீர்எம் பிரானீரே. **#504**

எம்பெருமானிரே, நீர், வேதத்தை ஓதிக்கொண்டு, வெண்ணீற்றைப் பூசிக்கொண்டு, வெள்ளிய கோவணத்தை உடுத்து, பக்கத்தில் அலை பொருந்திய திருவொற்றியூரை உத்திர நீர் விழாவின் பொருட்டு விரும்புவீர்; அங்குப் போகாமல், வேடர்கள், வருவோரைத் தாக்கி, அவரது உடையைப் பறித்துக் கொள்ளுகின்ற இம் முருகன் பூண்டி மாநகரிடத்து, யாது காரணத்தால், எதனைக் காத்துக் கொண்டு, எதன் பொருட்டு இங்கு இருக்கின்றீர்?

திருமுருகன்பூண்டி

படவ ரவுநுண் ணேரி டைப்பணைத்
தோள்வ ரிநெடுங்கண்
மடவ ரல்லுமை நங்கை தன்னையொர்
பாகம் வைத்துகந்தீர்
முடவ ரல்லீர் இடரி லீர்முருகன்
பூண்டி மாநகர்வாய்
இடவ மேறியும் போவ தாகில்நீர் எத்துக் கிங்கிருந் தீர்எம் பிரானீரே. **#505**

எம்பெருமானிரே, நீர், தனிமையாக இல்லாது, படத்தையுடைய பாம்புபோலும் மிக நுண்ணிய இடையினையும், பருத்த தோள்களையும், வரிகளையுடைய நீண்டகண்களையும் உடைய இளமை பொருந்திய, 'உமை' என்னும் நங்கையை ஒரு பாகத்தில் விரும்பி வைத்துள்ளீர்; முடவரல்லீர்; ஆகவே, பெயர்ந்து போதற்கண் இடரொன்றும் இல்லீர்; அன்றியும், நீர, விரும்பிய இடத்திற்கு இடபத்தின்மேல் ஏறியும் போவீர் என்றால், இம் முருகன் பூண்டி மாநகரிடத்து, இங்கு, எதன்பொருட்டு இருக்கின்றீர்?

திருமுருகன்பூண்டி

சாந்த மாகவெண் ணீறு பூசிவெண்

பற்ற லைகலனா
வேய்ந்த வெண்பிறைக் கண்ணி தன்னையொர்
பாகம் வைத்துகந்தீர்
மோந்தை யோடு முழக்க றாமுரு
கன்பூண்டி மாநகர்வாய்
ஏந்து பூண்முலை மங்கை தன்னொடும்
எத்துக் கிங்கிருந் தீர்எம் பிரானீரே. **#506**

எம் பெருமானிரே, வெள்ளிய நீற்றைச் சாந்தாகப் பூசிக்கொண்டு, வெள்ளிய பற்களையுடைய தலையேகலமாக ஏந்தி, முடியிற் சூடிய வெள்ளிய பிறையாகிய கண்ணியை அம் முடியின் ஒரு பாகத்தில் விரும்பி வைத்தவரே, நீர், 'மொந்தை' என்னும் வாச்சியத்தோடு, வேடர்கள் முழங்குதல் நீங்காத இம் முருகன் பூண்டி மாநகரிடத்து, அணிகளைத் தாங்கிய தனங்களையுடைய மங்கை ஒருத்தியோடு இங்கு எதன் பொருட்டு இருக்கின்றீர்?

திருமுருகன்பூண்டி

முந்தி வானவர் தாந்தொ ழும்முரு
கன்பூண்டி மாநகர்வாய்ப்
பந்த ணைவிரற் பாவை தன்னையொர்
பாகம் வைத்தவனைச்
சிந்தை யிற்சிவ தொண்ட னூரன்
உரைத்தன பத்துங்கொண்
டெந்தம் மடிகளை ஏத்து வார்இட
ரொன்றுந் தாமிலரே. **#507**

தேவர், ஒருவர் ஒருவரின் முற்பட்டு வணங்குகின்ற, திருமுருகன்பூண்டி மாநகரிடத்து எழுந்தருளியிருக்கின்ற பந்திற் பொருந்திய விரல்களையுடைய, பாவைபோலும் மங்கையை ஒரு பாகத்து வைத்துள்ள சிவபெருமானை, அவனுக்குத் தொண்டனாகிய நம்பியாரூரன் அன்பினாற் பாடிய இப் பத்துப் பாடல்களால் அவ்வெம்பெருமானைத் துதிப்பவர்கள், துன்பம் ஒன்றும் இல்லாதவராவர்.

திருப்புனவாயில்

திருப்புனவாயில்

திருப்புனவாயில்,
பண் - பழம்பஞ்சுரம்,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பழம்பதிநாயகர்.
தேவியார் : பரங்கருணைநாயகியம்மை.

சித்த நீநினை யென்னொடு சூளறு வைகலும்
மத்த யானையின் ஈருரி போர்த்த மணாளன்ஊர்
பத்தர் தாம்பலர் டிநின் றாடும் பழம்பதி
பொத்தில் ஆந்தைகள் பாட்ட றாப்புன வாயிலே. **#508**

மனமே, நீ, 'நும் நெறியாற் பயன் கிட்டாது' என்று இப்பொழுது என்னொடு சூள் செய்தலை ஒழி; மதத்தையுடைய யானையின், உரித்த தோலைப் போர்த்த அழகனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற ஊர், அடியார் பலர், திருப்பாடல்கள் பலவற்றைப்பாடி ஆடுகின்ற பழைய ஊராகிய மரப்பொந்துகளில் ஆந்தைகளின் பாட்டு ஒழியாத திருப்புனவாயிலே; அதனை நாள்தோறும் தப்பாது நினை; பின்னர் என்னொடு சொல்.

திருப்புனவாயில்

கருதி நீமனம் என்னொடு சூளறு வைகலும்
எருது மேற்கொளும் எம்பெரு மாற்கிட மாவது
மருத வானவா வைகும் இடம்மற வேடுவர்
பொருது சாத்தொடு பூசல றாப்புன வாயிலே. **#509**

மனமே, நீ, இப்பொழுது என்னொடு சூள் செய்தலை ஒழி; எருதினை ஊர்கின்ற எம்பெருமானுக்கு இடமாய் இருப்பது, இந்திரன் முதலிய தேவர் நீங்காதிருக்கின்ற இடமாகிய, வேடர்கள் வாணிகச் சாத்தோடு போர்செய்தலால், ஆரவாரம் ஒழியாத திருப்புனவாயிலே; அதனை நாள்தோறும் தப்பாது நினை; பின்னர் என்னொடு சொல்.

திருப்புனவாயில்

தொக்காய்மன மென்னொடு சூளறு வைகலும்
நக்கானமை ஆளுடை யான்நவி லும்மிடம்
அக்கோடர வார்த்தபி ரானடிக் கன்பராய்ப்
புக்காரவர் போற்றொழி யாப்புன வாயிலே. **#510**

அளவற்ற நினைவுகள் பொருந்தி ஆராய்கின்ற மனமே, நீ, இப்பொழுது

என்னொடு சூள்செய்தலை ஒழி. ஆடை யில்லாதிருப்பவனும், நம்மை ஆளாக உடையவனும் ஆகிய சிவ பெருமானுக்கு இடமாய் இருப்பது, எலும்பையும், பாம்பையும் அணிந்த அப்பெருமானுக்கு அன்பராய், அவனையே புகலிடமாக, அடைந்தவர் அவனைப் போற்றுதல் ஒழியாத திருப்புனவாயிலே; அதனை நாள்தோறும் தப்பாது நினை; பின்னர் என்னொடு சொல்.

திருப்புனவாயில்

வற்கென் றிருத்திகண் டாய்மன மென்னொடு சூளறு
பொற்குன்றஞ் சேர்ந்ததொர் காக்கைபொன் னாமதுவேபுகல்
கற்குன்றுந் தூறும் கடுவெளி யுங்கடற் கானல்வாய்ப்
புற்கென்று தோன்றிடு மெம்பெரு மான்புன வாயிலே. **#511**

மனமே, நீ, முருடுடையையாய் இருக்கின்றாய்; என்னொடு இப்பொழுது சூள்செய்தலை ஒழி; பொன்மலையைச் சேர்ந்த காக்கையும் பொன்னிறமாம் ஆதலின், கரையிடத்து, சிறிய கற்குன்றுகளும், புதர்களும், வெப்பம் மிக்க வெற்றிடமும் பொலிவிழந்து தோன்றுதற்குக் காரணமான எம் பெருமானது திருப்புனவாயிலாகிய அதனையே போற்று; பின்னர் என்னொடு சொல்.

திருப்புனவாயில்

நில்லாய்மன மென்னொடு சூளறு கைவலும்
நல்லான்நமை ஆளுடை யான்நவி லும்மிடம்
வில்வாய்க்கணை வேட்டுவ ராட்ட வெருண்டுபோய்ப்
புல்வாய்க்கணம் புக்கொளிக் கும்புன வாயிலே. **#512**

மனமே, நீ, இப்பொழுது என்னொடு சூள்செய்தலை ஒழி; நன்மையே வடிவமானவனும், நம்மை ஆளாக உடையவனுமாகிய சிவபெருமான் பெரிதும் உறையும் இடம், வேடர்கள், தம் வில்லின்கண் தொடுத்த அம்பினால் வெருட்ட வெருண்டு ஓடி, மான் கூடடம் புகுந்து ஒளிக்கின்ற திருப்புனவாயிலே; நாள்தோறும் அதன் கண் சென்று நில்; பின்னர் என்னொடு சொல்.

திருப்புனவாயில்

மறவல் நீமன மென்னொடு சூளறு வைகலும்
உறவும் ஊழியும் ஆயபெம் மாற்கிட மாவது
பிறவு கள்ளியின் நீள்கவட் டேறித்தன் பேடையைப்
புறவங் கூப்பிடப் பொன்புனஞ் சூழ்புன வாயிலே. **#513**

மனமே, நீ, இப்பொழுது என்னொடு சூள்செய்தலை ஒழி; எல்லா உயிர்கட்கும் உறவும், காலமுமாய் நிற்கும் சிவபெருமானுக்கு இடமாய்

இருப்பது, சேவற் புறா, தன் பெடை பிரிந்தபின்பு, அதனை, கள்ளிப் புதரின் வளர்ந்த கிளையில் ஏறிநின்று கூப்பிட, புனஙகளில் பொன் நிறைந்து காண்ப்படுகின்ற திருப்புனவாயிலே; அதனை மறவாது நினை; பின்னர் என்னொடு சொல்.

திருப்புனவாயில்

ஏசற்று நீநினை என்னொடு சூளறு கைவலும்
பாசற்றவர் பாடிநின் றாடும் பழம்பதி
தேசத் தடியவர் வந்திரு போதும் வணங்கிடப்
பூசற்றுடி பூசல றாப்புன வாயிலே. **#514**

மனமே, நீ, இப்பொழுது என்னொடு சூள்செய்தலை ஒழி; பாசம் நீங்கிய மெய்யுணர்வினர் புகழ்ந்து பாடி, நின்று ஆடுகின்ற பழைமையான ஊர், பல நாட்டிலும் உள்ள அடியவர் பலரும் வந்து காலையிலும், மாலையிலும் வணங்க, வேடுவர்களது போர்ப்பறை ஆரவாரத்தை ஒழியாத திருப்புனவாயிலே; அதனை, இகழ்தல் அற்று, நாள்தோறும் தப்பாது நினை; பின்னர் என்னொடு சொல்.

திருப்புனவாயில்

கொள்ளி வாயின கூரெயிற் றேனங் கிழிக்கவே
தெள்ளி மாமணி தீவிழிக் கும்மிடஞ் செந்தறை
கள்ளிவற் றிப்புற் றீந்துவெங் கானங் கழிக்கவே
புள்ளி மானினம் புக்கொளிக் கும்புன வாயிலே. **#515**

கொள்ளிபோல முனை சிவந்து நீண்ட வாயினை யுடையனவாகிய, கூரிய பற்களையுடைய பன்றிகள் நிலத்தைக் கிண்ட வெளிப்பட்ட சிறந்த மாணிக்க மணியோடு நெருப்புத் தோன்றுமிடத்துச சிவந்து காட்டும் நிலத்தின்கண் உள்ள கள்ளி உலர்ந்து, புல்தீந்து, கொடிய காடு அழிகையினாலே, புள்ளிமானின் கூட்டம் புகுந்து ஒளிக்கின்ற திருப்புனவாயிலே.

திருப்புனவாயில்

எற்றேநினை என்னொடு சூளறு வைகலும்
மற்றேதும் வேண்டா வல்வினை யாயின மாய்ந்தறக்
கற்றூ றுகார்க் காட்டிடை மேய்ந்தகார்க் கோழிபோய்ப்
புற்றேறிக் கூகூ எனஅழைக் கும்புன வாயிலே. **#516**

மனமே, நின் செயகைதான் எத்தன்மைத்து! என்னொடு சூள்செய்தலை ஒழி; நம் வலிய வினையெனப் படுவன யாவும் அடியொடு கெட்டொழிதற்கு மற்றுச் சூழ்ச்சி யாதும் வேண்டா; கல்லைச் சூழ்ந்த புதரிலும், கரிய காட்டிடத்தும் இரையை உண்ட கரிய கானங்கோழிகள்,

ஈயற் புற்றுக்களின் மேல் ஏறி நின்று, 'கூகூ' எனக் கூப்பிடுகின்ற திருப்புனவாயிலை நாள்தோறும் தப்பாது நினை.

திருப்புனவாயில்

பொடியாடு மேனியன் பொன்புனஞ் சூழ்புன வாயிலை
அடியா ரடியன் னாவல வூரன் உரைத்தன
மடியாது கற்றிவை ஏத்தவல் லார்வின மாய்ந்துபோய்க்
குடியாகிப் பாடிநின் றாடவல் லார்க்கில்லை குற்றமே. **#517**

நீற்றின்கண் மூழ்கிய திருமேனியனாகிய சிவ பெருமானது, புனங்களில் பொன் நிறைந்துள்ள திருப்புனவாயிலை அடியார்க்கு அடியானாகிய திருநாவலூரன் பாடிய இப்பாடல்களை,சாம்பியிராது கற்று, அவற்றால் அப்பெருமானை ஏத்த வல்லவர், முன்செய்த வினை எல்லாம் மாய்ந்துபோகப் பெற்று, அப்பெருமானுக்கே அடியராய் வாழ, அவற்றை இசைவழிப் பாடி நன்று ஆட வல்லவர்க்கு, செய்வன தவிர்வனவற்றிற் பிறழ்தலால் வருங் குற்றம் இல்லையாம்.

திருவாரூர்

திருவாரூர்

திருவாரூர்,
பண் - பழம்பஞ்சுரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. இது திருவொற்றியூரிற் சங்கிலிநாச்சியாருடன் இருக்கும்போது வீதிவிடங்கப்பெருமானுடைய திருவோலக்கதரிசன ஞாபகம்வர ஓதியருளிய பதிகம். ,
சுவாமிபெயர் : வன்மீகநாதர்.
தேவியார் : அல்லியங்கோதையம்மை.

பத்திமையும் மடிமையையுங்
கைவிடுவான் பாவியேன்
பொத்தினநோ யதுஇதனைப்
பொருளறிந்தேன் போய்த்தொழுவேன்
முத்தினைமா மணிதன்னை
வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாள் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. **#518**

பாவியும். மூடனும் ஆகிய யான், என் அன்பையும், அடிமையையும் விட்டொழியும்படி, முத்தும், சிறந்த மாணிக்கமும், வயிரமும் போன்ற எனது திருவாரூர் இறைவனைப் பிரிந்து எத்தனை நாள் இவ்விடத்திற்றானே இருப்பேன்! என்னை மூடியுள்ள நோயாகிய இவ்வுடம்பின் மெய்ம்மையை அறிந்துகொண்டேன்; ஆதலின் இங்கு இரேன்; விரையச் சென்று அவனை வணங்குவேன்.

திருவாரூர்

ஐவணமாம் பகழியுடை
அடல்மதனன் பொடியாகச்
செவ்வணமாந் திருநயனம்
விழிசெய்த சிவமூர்த்தி
மையணவும் கண்டத்து
வளர்சடையெம் மாரமுதை
எவ்வணம்நான் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. **#519**

ஐந்து வகையான அம்புகளைப் பெற்ற, வெற்றியை யுடைய மன்மதன் சாம்பலாகுமாறு, செந்நிறமான அழகிய நெற்றிக் கண்ணைத் திறந்த சிவமுர்த்தியாகிய, கருமை பொருந்திய கண்டத்தையும், நீண்ட

சடையினையும் உடைய, எங்கள் அரிய அமுதம் போன்ற எனது திருவாரூர் இறைவனைப் பிரிந்து, நான் எவ்வாறு இவ்விடத் திற்றானே இருப்பேன்! இரேன்; விரையச்சென்று அவனை வணங்குவேன்.

திருவாரூர்

சங்கலக்குந் தடங்கடல்வாய்
விடஞ்சுடவந் தமராதொழ
அங்கலக்கண் தீர்த்துவிடம்
உண்டுகந்த அம்மானை
இங்கலக்கும் உடற்பிறந்த
அறிவிலியேன் செறிவின்றி
எங்குலக்கப் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. **#520**

வருத்துதலைச் செய்கின்ற உடலிற்பட்டு இவ்வுலகிற் பிறந்த அறிவில்லேனாகிய யான், தேவர், சங்குகள் விளக்குகின்ற பெரிய கடலிடத்துத் தோன்றிய ஆலகாலவிடம் தம்மைச் சுடுகையினாலே அடைக்கலமாக வந்து வணங்க, அப்பொழுதே அவரது துன்பத்தை நீக்கி, அவ்விடத்தை உண்டு, அவரை விரும்பிக் காத்த பெரியோனாகிய எனது திருவாரூர் இறைவனை அடைதல் இன்றிப் பிரிந்து எவ்விடத்து இறத்தற்பொருட்டு இவ்விடத்திற்றானே இருப்பேன்! இரேன்; விரையச் சென்று அவனை வணங்குவேன்.

திருவாரூர்

இங்ஙனம்வந் திடர்ப்பிறவிப்
பிறந்தயர்வேன் அயராமே
அங்ஙனம்வந் தெனையாண்ட
அருமருந்தென் ஆரமுதை
வெங்கனல்மா மேனியனை
மான்மருவுங் கையானை
எங்ஙனம்நான் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே **#521**

இவ்வுலகில் வந்து, துன்பத்தைத் தருகின்ற பிறப்பிற் பிறந்து மயங்குவேனாகிய யான், அங்ஙனம் மயங்காதவாறு நான் பிறந்திருந்த ஊரிற்றானே வந்து என்னை அடிமையாக்கிக்கொண்ட அரிய மருந்தும், அமுதும் போல்பவனும், வெம்மையான நெருப்புப் போலும் சிறந்த திருமேனியை உடையவனும், மான் பொருந்திய கையை உடையவனும் ஆகிய எனது திருவாரூர் இறைவனைப் பிரிந்து, நான் எவ்வாறு இவ்விடத்திற்றானே இருப்பேன்! இரேன்; விரையச் சென்று அவனை

வணங்குவேன்.

திருவாரூர்

செப்பரிய அயனொடுமால்
சிந்தித்துந் தெரிவரிய
அப்பெரிய திருவினையே
அறியாதே யருவினையேன்
ஒப்பரிய குணத்தானை
இணையிலியை அணைவின்றி
எப்பரிசு பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. **#522**

நீக்குதற்கரிய வினையையுடையேனாகிய யான். சொல்லுதற்காய பெருமையையுடைய, 'பிரமதேவனும், திருமாலும்' என்னும் அவர்தாமும் நினைத்தற்கும், காண்பதற்கும் அரிய அத்தன்மைத்தாய பெரிய செல்வமாய் உள்ளவனும், பிறர் ஒருவரது குணமும் நிகர்த்தல் இல்லாத அருட்குணங்களை யுடையவனும்., பிறர் ஒருவரும் தனக்கு நிகரில்லாதவனும் ஆகிய எனது திருவாரூர் இறைவனை நினைத்தலும், அடைதலும் இன்றிப் பிரிந்து, எவ்வாறு இவ்விடத்திற்றானே இருப்பேன்! இரேன்; விரையச் சென்று அவனை வணங்குவேன்.

திருவாரூர்

வன்னாக நாண்வரைவில்
லங்கிகணை அரிபகழி
தன்னாகம் உறவாங்கிப்
புரமெரித்த தன்மையனை
முன்னாக நினையாத
மூர்க்கனேன் ஆக்கைசுமந்
தென்னாகப் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. **#523**

வலிய பாம்பு நாணியும், மலை வில்லும், திருமால் அம்பும், அங்கியங் கடவுள் அம்பின் முனையுமாகத் தன் மார்பிற் பொருந்த வலித்து முப்புரத்தை எரித்த தன்மையை உடையவனாகிய எனது திருவாரூர் இறைவனை முன்பே நினைந்து போக முயலாத மூடனேனாகிய யான், அவனைப் பிரிந்து, என்னாவதற்கு இவ்வுடலைச் சுமந்து இவ்விடத்திற்றானே இருப்பேன்! இரேன்; விரையச் சென்று அவனை வணங்குவேன்.

திருவாரூர்

வன்சயமா யடியான்மேல்
வருங்கூற்றின் உரங்கிழிய
முன்சயமார் பாதத்தான்
முனிந்துகந்த மூர்த்திதனை
மின்செயும்வார் சடையானை
விடையானை அடைவின்றி
என்செயநான் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. **#524**

பின்னிடாத வெற்றியையுடையவனாய்த் தன் அடியவன்மேல் வந்த கூற்றுவனை அவனது மார்பு பிளக்கும்படி வெற்றி பொருந்திய தனது திருவடியால் முன்பு உதைத்து, பின்பு எழுப்பிய மூர்த்தியும், மின்னலினது ஒளியை உண்டாக்குகின்ற நீண்ட சடையையும், விடையையும் உடையவனும் ஆகிய எனது திருவாரூர் இறைவனை அடைதல் இன்றிப்பிரிந்து, நான், என் செய்வதற்கு இவ்விடத்திற்றானே இருப்பேன்! இரேன்; விரையச் சென்று அவனை வணங்குவேன்.

<u>திருவாரூர்</u>

முன்னெறிவா னவர்கூடித்
தொழுதேத்து முழுமுதலை
அந்நெறியை யமராதொழும்
நாயகனை யடியார்கள்
செந்நெறியைத் தேவர்குலக்
கொழுந்தைமறந்திங்னனம்நான்
என்னறிவான் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. **#525**

பிற உயிர்கட்கு அவை செல்லுமாறு நிற்கும் நெறியாய் உள்ள பிரமனும், மாயோனும் கூடி வணங்கிப் போற்றுகின்ற முழுமுதற் பொருளானவனும், அப்பொருளை அடையும் நெறியாய் உள்ளவனும், ஏனைய தேவரும் வணங்கும் தலைவனும், எல்லாத் தேவருள்ளும் சிறந்த தேவனும், தன் அடியார்களுக்குச் செவ்விய நெறியாய் விளங்குபவனும் ஆகிய எனது திருவாரூர் இறைவனைப் பிரிந்து மறந்து, நான், எதனை அறிந்து அனுபவித்தற்பொருட்டு இவ்விடத்திற்றானே இருப்பேன்! இரேன்; விரையச் சென்று அவனை வணங்குவேன்.

<u>திருவாரூர்</u>

கற்றுளவான் கனியாய
கண்ணுதலைக் கருத்தார
உற்றுளனாம் ஒருவனைமுன்

இருவர்நினைந் தினிதேத்தப்
பெற்றுளனாம் பெருமையனைப்
பெரிதடியே கையகன்றிட்
டெற்றுளனாய்ப் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. **#526**
மெய்ந்நூல்களைக் கற்று நினைக்குமிடத்துச் சிறந்த கனிபோல இனிக்கின்ற, கண்ணையுடைய நெற்றியையுடையவனும், என் உள்ளத்தில் நிரம்பப் பொருந்தியுள்ளவனாகிய ஒப்பற்றவனும், முன்பு இருவராகிய மாலும் அயனும் நினைந்து நன்கு போற்றப் பெற்ற பெருமையை உடையவனும் ஆகிய எனது திருவாரூர் இறைவனை, அவன் அடியேனாகிய யான் எனது ஒழுக்கத்தைப் பெரிதும் நீங்கிப் பிரிந்து, எதன்பொருட்டு, இறவாது உள்ளேனாய், இவ்விடத்திற்றானே இருப்பேன்! இரேன் விரையச் சென்று அவனை வணங்குவேன்.

<u>திருவாரூர்</u>

ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந்
துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்
தந்தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. **#527**
ஏழிசைகளைப் போன்றும், அவ்விசைகளின் பயனாகிய பண்களைப் போன்றும், இனிய அமுதத்தைப் போன்றும் இன்பத்தைத் தந்து, அதன்மேல் என்னுடைய தோழனும் ஆகி, யான் செய்யும் குற்றங்களுக்கு உடன்பட்டு, மாவடுவின் வகிர்போலும், ஒளி பொருந்திய கண்களையுடைய பரவையை எனக்கு ஈந்து என்னை அடிமைகொண்டவனாகிய எனது திருவாரூர் இறைவனை, அறிவில்லாத எளியேன் பிரிந்து இவ்விடத்திற்றானே இருப்பேனோ! இரேன்; விரையச் சென்று அவனை வணங்குவேன்.

<u>திருவாரூர்</u>

வங்கமலி கடல்நஞ்சை
வானவர்கள் தாம்உய்ய
நுங்கிஅமு தவர்க்கருளி
நொய்யேனைப் பொருட்படுத்துச்
சங்கிலியோ டெனைப்புணர்த்த

தத்துவனைச் சழக்கனேன்
எங்குலக்கப் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. **#528**

தேவர்கள் பிழைத்தற்பொருட்டு, மரக்கலங்கள் நிறைந்த கடலில் தோன்றிய நஞ்சினைத் தான் உண்டு, அமுதத்தை அவர்கட்கு அருளினவனும், சிறியேனை ஒரு பொருளாகவைத்து என் வேண்டுகோளுக்கு இரங்கி, என்னைச் சங்கிலியோடு கூட்டுவித்த மெய்ப்பொருளாய் உள்ளவனும் ஆகிய எனது திருவாரூர் இறைவனைப் பொய்யனாகிய யான் எங்கு இறப்பதற்குப் பிரிந்து இவ்விடத்திற்றானே இருப்பேன்! இரேன்; விரையச் சென்று அவனை வணங்குவேன்

<u>திருவாரூர்</u>

பேரூரு மதகரியின்
உரியானைப் பெரியவர்தம்
சீரூருந் திருவாரூர்ச்
சிவனடியே திறம்விரும்பி
ஆரூரன் அடித்தொண்டன்
அடியன்சொல் அகலிடத்தில்
ஊரூர னிவைவல்லா
உலகவர்க்கு மேலாரே. **#529**

செயற்கரிய செய்த பெரியார் தம் புகழ்மிக்கு விளங்கும் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானது திருவடியைச் சென்று சேரும் திறத்தையே விரும்பி, புகழ்மிகுந்த மதயானையின் தோலையுடைய அவனை, அவன் அடித்தொண்டனாகிய, அவ்வுலகின்கண் எங்கும் செல்கின்ற நம்பியாரூரன் சொல்லிய இப்பாடல்களைப் பாடவல்லவர், உலகர் எல்லார்க்கும் மேலானவராவர்.

திருவாலங்காடு

திருவாலங்காடு

திருவாலங்காடு,
பண் - பழம்பஞ்சுரம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. இது திருவிளம்பூதூரென்று வழங்குகிறது. ,
சுவாமிபெயர் : ஊர்த்துவதாண்டவேசுவரர்.
தேவியார் : வண்டார்குழலியம்மை.

முத்தா முத்தி தரவல்ல
முகிழ்மென் முலையாள் உமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டுஞ்
சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும்
பரமா பழைய னூர்மேய
அத்தா ஆலங் காடாஉன்
னாடியார்க் கடியேன் ஆவேனே. **#530**

இயல்பாகவே கட்டில்லாதவனே, கட்டுற்ற உயிர்கட்கெல்லாம் வீடளிக்கவல்ல, அரும்புகின்ற மெல்லிய தனங்களை யுடையாளாகிய உமையவளது பாகத்தையுடையவனே, சித்திகளை எல்லாம் உடையவனே, அச்சித்திகளை அடையும் வழியைக் காட்டுகின்ற சிவபெருமானே, தேவர்களாகிய விலங்குகட்டுச் சிங்கம் போல்பவனே, அடியார்களுக்குப் பற்றாய் உள்ளவனே, அன்புடையார் பலரும் போற்றும் கடவுளே, பழையனூரை விரும்புகின்ற தலைவனே, திருவாலங்காட்டில் எழுந்தருளியிருப்பவனே, அடியேன் என்றும் உள் அடியார்க்கு அடியேனாகியே வாழ்வேன்.

திருவாலங்காடு

பொய்யே செய்து புறம்புறமே
திரிவேன் றன்னைப் போகாமே
மெய்யே வந்திங் கெனையாண்ட
மெய்யாமெய்யர் மெய்ப்பொருளே
பையா டரவம் அரைக்கசைத்த
பரமா பழைய னூர்மேய
ஐயா ஆலங் காடாஉன்
னடியார்க் கடியேன் ஆவேனே. **#531**

மனத்தொடு பொருந்தாத செயல்களையே செய்து, அதனால் உனக்கு

மிகவும் சேய்மையிலே திரிவேனாகிய என்னை, அங்ஙனம் அகன்றொழியாதவாறு தடுத்து இவ்வுலகில் நேரே வந்து என்னை ஆட்கொண்ட மெய்ம்மையுடையவனே, மெய்ம்மை யுடையவர்க்கு மெய்ப்பொருளாய் உள்ளவனே, படம் எடுத்து ஆடுகின்ற பாம்பை அரையிற் கட்டிய கடவுளே, பழையனூரை விரும்புகின்ற தலைவனே, திருவாலங்காட்டில் எழுந்தருளியிருப்பவனே, அடியேன் என்றும் உன் அடியார்க்கு அடியேனாகியே வாழவேன்.

திருவாலங்காடு

தூண்டா விளக்கின் நற்சோதீ
தொழுவார் தங்கள் துயர்தீர்ப்பாய்
பூண்டாய் எலும்பைப் புரம்மூன்றும்
பொடியாச் செற்ற புண்ணியனே
பாண்டாழ் வினைக ளவைதீர்க்கும்
பரமா பழைய னூர்மேய
ஆண்டா ஆலங் காடாஉன்
னடியார்க் கடியேன் ஆவேனே. **#532**

தூண்ட வேண்டாது ஒளிரும் விளக்குப் போலச் சிறந்த ஒளிவடிவினனே, வணங்குவாரது துன்பத்தை நீக்குபவனே, எலும்பையே அணியாகப் பூண்டவனே, முப்புரங்களையும் சாம்பலாகுமாறு அழித்த அறவுருவினனே, முன்பு செய்யப்பட்ட, அழுந்துதற்கு இடமான வினைகளாகிய அவற்றை நீக்கியருளுகின்ற கடவுளே, பழையனூரை விரும்புகின்ற தலைவனே, திருவாலங்காட்டில் எழுந்தருளியிருப்பவனே, அடியேன், உன் அடியார்க்கு அடியேனாகியே வாழ்வேன்.

திருவாலங்காடு

மறிநே ரொண்கண் மடநல்லார்
வலையிற் பட்டு மதிமயங்கி
அறிவே யழிந்தேன் ஐயாநான்
மையார் கண்ட முடையானே
பறியா வினைக ளவைதீர்க்கும்
பரமா பழைய னூர்மேய
அறிவே யாலங் காடாஉன்
னடியார்க் கடியேன் ஆவேனே. **#533**

தலைவனே, கருமைபொருந்திய கண்டத்தையுடையவனே, தீர்க்க இயலாத வினைகளையெல்லாம் தீர்த்தருளுகின்ற கடவுளே, பழையனூரை விரும்புகின்ற அறிவு வடிவானவனே, திருவாலங்காட்டில் எழுந்தருளி யிருப்பவனே, அடியேன், மான்போலும் ஒளிபொருந்திய

கண்களையுடைய, இளைய, அழகிய மாதா ஆசையாகிய வலையில் அகப்பட்டு, அறிய வேண்டுவன வற்றை அறியாது, அறிவு அடியோடே கெட்டேன்; அவ்வாறே இனியுங் கெட்டொழியாது, உன் அடியார்க்கு அடியேனாகியே வாழ்வேன்.

திருவாலங்காடு

வேலங் காடு தடங்கண்ணார்
வலையுட் பட்டுன் நெறிமறந்து
மாலங் காடி மறந்தொழிந்தேன்
மணியே முத்தே மரகதமே
பாலங் காடீ நெய்யாடீ
படர்புன் சடையாய் பழையனூர்
ஆலங் காடா உன்னுடைய
அடியார்க் கடியேன் ஆவேனே. **#534**

மாணிக்கம் போல்பவனே, முத்துப் போல்பவனே, மரகதம் போல்பவனே, பால் முழுக்கு ஆடுபவனே, நெய் முழுக்கு ஆடுபவனே, விரிந்த புல்லிய சடையை யுடையவனே, பழையனூரைச் சார்ந்த திருவாலங்காட்டில் எழுந்தருளியிருப்பவனே, அடியேன் வேல்போலும், பெரிய கண்களையுடைய மாதராசையாகிய வலையில் அகப்பட்டு, உன்னாற் சொல்லப்பட்ட நெறியை மறந்து, மயக்கம் மிகுந்து என்னையே மறந்தொழிந்தேன்; இனி அவ்வாறு இராது, என்றும் உன் அடியார்க்கு அடியனாகியே வாழ்வேன்.

திருவாலங்காடு

எண்ணார் தங்கள் எயில்எய்த
எந்தாய் எந்தை பெருமானே
கண்ணாய் உலகங் காக்கின்ற
கருத்தா திருத்த லாகாதாய்
பண்ணார் இசைக ளவைகொண்டு
பலரும் ஏத்தும் பழையனூர்
அண்ணா ஆலங் காடாஉன்
னடியார்க் கடியேன் ஆவேனே. **#535**

உன்னை மதியாதவரது மதில்களை அழித்த என் தந்தையே, என் தந்தைக்கும் பெருமானே, உலகத்திற்குக் கண்ணாய் நின்று அதனைக் காக்கின்ற முதல்வனே, குற்றமில்லாதவனே, பண்பொருந்திய இசைகளைக் கொண்டு பலரும் துதிக்கின்ற பழையனூர்த் தலைவனே, திருவாலங்காட்டில் எழுந்தருளியிருப்பவனே, அடியேன், என்றும் உன் அடியார்க்கு அடியேனாகியே வாழ்வேன்.

திருவாலங்காடு

வண்டார் குழலி உமைநங்கை
பங்கா கங்கை மணவாளா
விண்டார் புரங்கள் எரிசெய்த
விடையாய் வேத நெறியானே
பண்டாழ் வினைகள் பலதீர்க்கும்
பரமா பழையனூர்மேய
அண்டா ஆலங் காடாஉன்
னடியார்க் கடியேன் ஆவேனே. **#536**

வண்டுகள் நிறைந்த கூந்தலையுடையவளாகிய 'உமை' என்னும் நங்கைதன் பாகத்தையுடையவனே, கங்கைக்குக் கணவனே, பகைத்தவரது ஊர்களை எரித்த இடப வாகனனே, வேத நெறியை உடையவனே, முன்பு செய்யப்பட்ட, அழுந்துதற்கு இடமான வினைகள் பலவற்றையும் தீர்க்கின்ற கடவுளே, பழையனூரை விரும்புகின்ற தேவனே, திருவாலங்காட்டில் எழுந்தருளியிருப்பவனே, அடியேன், என்றும் உன் அடியார்க்கு அடியேனாகியே வாழ்வேன்.

திருவாலங்காடு

பேழ்வாய் அரவின் அணையானும்
பெரிய மலர்மேல் உறைவானும்
தாழா துன்றன் சரண்பணியத்
தழலாய் நின்ற தத்துவனே
பாழாம் வினைக ளவைதீர்க்கும்
பரமா பழைய னூர்தன்னை
ஆள்வாய் ஆலங் காடாஉன்
னடியார்க் கடியேன் ஆவேனே. **#537**

பெரிய வாயையுடைய பாம்பாகிய படுக்கையை உடையவனாகிய திருமாலும், பெரிதாகிய தாமரை மலர்மேல் இருப்பவனாகிய பிரமனும் விரைவில் உனது முதன்னையை உணர்ந்து உன் திருவடிகளை வணங்குமாறு, தீப்பிழம்பாய் நின்ற மெய்ப் பொருளானவனே, உயிர், பயனின்றிக் கெடுதற்கு ஏதுவான வினைகளை தீக்குகின்ற கடவுளே, பழையனூரை ஆள்கின்றவனே, திருவாலங்காட்டில் எழுந்தருளியிருப்பவனே, அடியேன், என்றும் உன் அடியார்க்கு அடியேனாகியே வாழ்வேன்.

திருவாலங்காடு

எம்மான் எந்தை மூத்தப்பன்

ஏழேழ் படிகால் எமையாண்ட
பெம்மான் ஈமப் புறங்காட்டிற்
பேயோ டாடல் புரிவானே
பன்மா மலர்க ளவைகொண்டு
பலரும் ஏத்தும் பழையனூர்
அம்மா ஆலங் காடாஉன்
னடியார்க் கடியேன் ஆவேனே. **#538**

என் தந்தை, என் தந்தைக்கு முன்னோனாகிய தந்தை முதலாக இருவகை ஏழ் தலைமுறைகளில் எங்களை அடிமை கொண்டுள்ள பெருமானே சுடுகாடாகிய புறங்காட்டில் பேய்களோடு ஆடல் செய்பவனே, பல சிறந்த மலர்களைக்கொண்டு பலரும் வணங்குகின்ற, பழையனூர்க்குத் தலைவனே, திருவாலங்காட்டில் எழுந்தருளியிருப்பவனே, அடியன், என்றும் உன் அடியார்க்கு அடியேனாகியே வாழ்வேன்.

திருவாலங்காடு

பத்தர் சித்தர் பலர்ஏத்தும்
பரமன் பழைய னூர்மேய
அத்தன் ஆலங் காடன்றன்
அடிமைத் திறமே அன்பாகிச்
சித்தர் சித்தம் வைத்தபுகழ்ச் சிறுவன் ஊரன் ஒண்டமிழ்கள் பத்தும் பாடி
ஆடுவார் பரமன் னடியே பணிவாரே. **#539**

அடியார் பலரும், சித்தர் பலரும் துதிக்கின்ற கடவுளும், பழையனூரை விரும்பிய தலைவனும், ஆகிய திருவாலங்காட்டு இறைவனது அடிமைத் திறத்தின் கண்ணே அன்புடையவராய், சித்தர்களும் தங்கள் சித்தத்திலே மறவாது வைத்துள்ள புகழையுடைய அடியானாகிய நம்பியாரூரனது இம் மெய்யுணர்வுத் தமிழ்ப் பாடல்களாகிய பத்தினையும் பாடி ஆடுவோர், சிவபெருமானது திருவடியையே எஞ்ஞான்றும் வணங்கி வாழ்பவராவர்.

திருக்கடவூர் மயானம்

திருக்கடவூர்மயானம்

திருக்கடவூர் மயானம்,
பண் - பழம்பஞ்சுரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரீசுவரர்.
தேவியார் : மலர்க்குழல்மின்னம்மை.

மருவார் கொன்றை மதிசூடி
மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு
மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்குந்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. **#540**

திருக்கடவூர் மயானத்தில் எழுந்தருளியிருக்கும் பெரிய பெருமானடிகளாகிய சிவபெருமானார், நறுமணம் நிறைந்த கொன்றைமலர் மாலையையும், பிறையையும், திருமுடியிற் சூடிக் கொண்டு, உமாதேவியோடு, பூதப்படைகள் களிப்புற்றுச் சூழ, வெள்ளி மலையின் மேல் ஒரு மாணிக்கமலை வருவதுபோல விடையின்மேல் வருவார்; 'திருமால், பிரமன், இந்திரன்' என்ற பெருந்தேவர்கட்கும், 'மற்றைய தேவர், நாகலோகத்தார், அசுரர்' என்பவர்கட்கும் அவரே தலைவர்.

திருக்கடவூர்மயானம்

விண்ணோர் தலைவர் வெண்புரிநூல்
மார்பர் வேத கீதத்தர்
கண்ணார் நுதலர் நகுதலையர்
கால காலர் கடவூரர்
எண்ணார் புரமூன் றெரிசெய்த
இறைவர் உமையோ ரொருபாகம்
பெண்ணா ணாவர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. **#541**

திருக்கடவூர் மயானத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெரிய பெருமானடிகளாகிய சிவபெருமானார், தேவர்கட்குத் தலைவரும், வெள்ளிய முப்புரிநூலை அணிந்த மார்பினை உடையவரும், வேதத்தை

உடைய இசையைப் பாடுகின்றவரும், கண் பொருந்திய நெற்றியையுடையவரும், சிரிப்பதுபோலத் தோன்றும் தலைஓட்டினை ஏந்தியவரும், காலனுக்குக் காலரும் திருக்கடவூரைத் தம் ஊராகக் கொண்டவரும, தம்மை மதியாதவரது ஊர்கள் மூன்றை எரித்த இறைவரும், உமை ஒருபாகமும் தாம் ஒருபாகமுமாய்ப் பெண்ணும் ஆணுமாய் நிற்கும் உருவத்தை உடையவரும் ஆவர்.

திருக்கடவூர்மயானம்

காயும் புலியி னதளுடையர்
கண்டர் எண்டோட் கடவூரர்
தாயுந் தந்தை பல்லுயிர்க்குந்
தாமே யாய தலைவனார்
பாயும் விடையொன் றதுவேறிப்
பலிதேர்ந் துண்ணும் பரமேட்டி
பேய்கள் வாழும் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. **#542**

பேய்கள் வாழ்கின்ற திருக்கடவூர் மயானத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெரிய பெருமானடிகளாகிய சிவபெருமானார், சினங் கொள்கின்ற புலியின் தோலாகிய உடையை உடையவா; நீல கண்டத்தை உடையவர்; எட்டுத் தோள்களை யுடையவர்; திருக்கடவூரைத் தம் ஊராகக் கொண்டவர்; எல்லா உயிர்கட்கும் தாமே தாயும், தந்தையும், தலைவருமானவர்; பாய்ந்து செல்லுகின்ற ஒற்றை எருதின்மேல் ஏறிப் பிச்சை கிடைக்கும் இடங்களை நாடிச் சென்று ஏற்று உண்பவர்; ஆயினும் யாவர்க்கும் மேலான இடத்தில் இருப்பவர்.

திருக்கடவூர்மயானம்

நறைசேர் மலர்ஐங் கணையானை
நயனத் தீயாற் பொடிசெய்த
இறையா ராவர் எல்லார்க்கும்
இல்லை யென்னா தருள்செய்வார்
பறையார் முழவம் பாட்டோடு
பயிலுந் தொண்டர் பயில்கடவூர்ப்
பிறையார் சடையார் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. **#543**

ஒலிக்கின்ற மத்தளம், பிற பறை இவைகளைப் பாட்டுக்களோடு பயில்கின்ற அடியார்கள் நிறைந்த திருக்கடவூர் மயானத்தில் எழுந்தருளியிருக்கும் பெரிய பெருமானடிகளாகிய சிவபெருமானார், தேன் பொருந்திய ஐந்துவகை மலர்களாகிய அம்புகளையுடைய

மன்மதனை, கண்ணில் உண்டாகிய நெருப்பாற் சாம்பலாக்கிய இறைவராவர்; 'இல்லை' என்று சொல்லாமல் யாவர்க்கும் அவரவர் விரும்பியவற்றை ஈபவர்; பிறை பொருந்திய சடையை யுடையவர்.

திருக்கடவூர்மயானம்

கொத்தார் கொன்றை மதிசூடிக்
கோணா கங்கள் பூணாக
மத்த யானை யுரிபோர்த்து
மருப்பு மாமைத் தாலியார்
பத்தி செய்து பாரிடங்கள்
பாடி யாடப் பலிகொள்ளும்
பித்தர் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. **#544**

திருக்கடவூர் மயானத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெரிய பெருமானடிகளாகிய சிவபெருமானார், கொத்தாகப் பொருந்திய கொன்றை மாலையையும் பிறையையும் திருமுடியிற்சூடி, சொல்லுந் தன்மையுடைய பாம்புகள் அணிகலங்களாய் இருக்க, மதத்தையுடைய யானைத் தோலைப்போர்த்து, பன்றியின் கொம்பையும், ஆமையின் ஓட்டையும் உடைய தாலியையுடையவராய், பூதகணங்கள் அன்புசெய்து பாடியும், ஆடியும் சூழப் பிச்சை ஏற்கின்ற பித்தர் கோலத்தவராவர்.

திருக்கடவூர்மயானம்

துணிவார் கீளுங் கோவணமுந்
துதைந்து சுடலைப் பொடியணிந்து
பணிமே லிட்ட பாசுபதா
பஞ்ச வடிமார் பினர்கடவூர்த்
திணிவார் குழையார் புரமூன்றுந்
தீவாய்ப் படுத்த சேவகனார்
பிணிவார் சடையார் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. **#545**

திருக்கடவூர் மயானத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெரிய பெருமானடிகளாகிய சிவபெருமானார், துணிபட்ட நீண்ட கீளும் கோவணமும் நெருங்கப்பட்டு, சுடலைச் சாம்பலைப் பூசி, பாம்புகளை மேலே அணிந்த பாசுபத வேடத்தையுடையவர்; பஞ்ச வடியை அணிந்த மார்பினையுடைய மாவிரத கோலத்தையுடையவர்; திண்ணிய நீண்ட குழையை அணிந்தவர்; புரங்கள் மூன்றையும் நெருப்பின் வாயிற்படுவித்த வீரத்தையுடையவர்; கட்டிய நீண்ட சடையையுடையவர்.

திருக்கடவூர்மயானம்

காரார் கடலின் நஞ்சுண்ட
கண்டர் கடவூ ருறைவாணர்
தேரார் அரக்கன் போய்வீழ்ந்து
சிதைய விரலால் ஊன்றினார்
ஊர்தா னாவ துலகேழும்
உடையார்க் கொற்றி யூர்ஆரூர்
பேரா யிரவர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. **#546**

திருக்கடவூர் மயானத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெரிய பெருமானடிகளாகிய சிவபெருமானார், கரிய, நிறைந்த கடலினின்றுந் தோன்றிய நஞ்சினையுண்ட கண்டத்தை யுடையவர்; திருக்கடவூரில் உறைகின்ற வாழ்க்கையையுடையவர்; தேர்மேற் பொருந்திய அரக்கனாகிய இராவணன், அதனை விட்டுக் கீழேபோய் வீழ்ந்து உடல் சிதையுமாறு கால்விரலால் தமது மலையை ஊன்றினவர்; ஏழுலகங்களையும் உடையவராகிய அவருக்கு ஊராவது, ஒற்றியாய் உள்ளது, அஃதொழிந்தால் யாருடைய ஊரோ! பெயர், ஆயிரம் உடையவர்.

திருக்கடவூர்மயானம்

வாடா முலையாள் தன்னோடும்
மகிழ்ந்து கானில் வேடுவனாய்க்
கோடார் கேழற் பின்சென்று
குறுகி விசயன் தவமழித்து
நாடா வண்ணஞ் செருச்செய்து
ஆவ நாழி நிலையருள்செய்
பீடார் சடையார் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. **#547**

திருக்கடவூர் மயானத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெரிய பெருமானடிகளாகிய சிவபெருமானார், தளராத தனங்களை யுடைய மங்கையொருத்தியோடு, வேடராய், கொம்பையுடைய பன்றியின்பின் சென்று, அருச்சுனனது தவத்தை அழித்து, அவன் தம்மை அறியாத நிலையில் நின்று போர்புரிந்து, பின்பு அவனுக்கு அம்பறாத் தூணியை நிலையாக வழங்கிய பெருமையைப் பொருந்திய, சடைமுடியை யுடையவர்.

திருக்கடவூர்மயானம்

வேழ முரிப்பர் மழுவாளர்
வேள்வி யழிப்பர் சிரமறுப்பர்
ஆழி யளிப்பர் அரிதனக்கு
ஆனஞ் சுகப்பா அறமுரைப்பர்
ஏழை தலைவர் கடவூரில்
இறைவர் சிறுமான் மறிக்கையர்
பேழைச் சடையர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. **#548**

திருக்கடவூர் மயானத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெரிய பெருமானடிகளாகிய சிவபெருமானார், யானையை உரிப்பர்; மழுப்படையை யுடையவர்; தக்கன் வேள்வியை அழிப்பர்; அவ் விடத்துப் பலரது தலைகளை அறுப்பர்; திருமாலுக்குச் சக்கரத்தைக் கொடுப்பர்; என்றும் பசுவினிடத்து உளவாகின்ற ஐந்து பொருள்களை விரும்புவர்; நால்வர் முனிவர்கட்டு அறம் உரைப்பர்; மங்கை யொருத்திக்குத் தலைவராவர்; திருக்கடவூரில் தங்குவர்; சிறிய மான்கன்றைப் பிடித்த கையை உடையவர்; விரிந்த சடையை யுடையவர்.

திருக்கடவூர்மயானம்

மாட மல்கு கடவூரின்
மறையோர் ஏத்து மயானத்துப்
பீடைதீர அடியாருக்
கருளும் பெருமா னடிகள்சீர்
நாடி நாவ லாரூரன்
நம்பி சொன்ன நற்றமிழ்கள்
பாடு மடியார் கேட்பார்மேற்
பாவ மான பறையுமே. **#549**

மாடங்கள் நிறைந்த திருக்கடவூரில், அந்தணர்கள் துதிக்கின்ற மயானத்தில் எழுந்தருளியிருக்கின்ற, அடியவர்களுக்கு, அவர்களது துன்பம் நீங்குமாறு அருள் செய்கின்ற பெருமானடிகளது புகழை, திருநாவலூரில் தோன்றிய, 'ஆரூரன்' என்னும் பெயரை யுடையவனாகிய நம்பி, ஆராய்ந்து பாடிய இந் நல்ல தமிழ்ப் பாடல்களைப் பாடுகின்ற அடியார், பாடக் கேட்டிகின்ற அடியார் இவர்கள்மேல் உள்ள பாவங்களெல்லாம் பறந்தொழிதல் திண்ணம்.

திருவொற்றியூர்

திருவொற்றியூர்

திருவொற்றியூர்,
பண் - தக்கேசி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. இது திருவிளம்பூதூரென்று வழங்குகிறது. இது உன்னைப்பிரிந்துபோவதில்லையென்று சங்கிலி நாச்சியாருக்குச் சூளுரைசெய்து மணந்துமகிழ்ந் திருக்கையில் திருவாரூர் வீதிவிடங்கப்பெருமானுடய திருவோலக்கத் தரிசனஞ்செய்வதற்கின்றி நெடுநாள் பிரிந்திருக்கின்றோமேயென்னும் ஞாபகமுண்டாகப் பரமசிவத்தின் திருவிளையாட்டால் முன்கூறிய சூளுரையைமறந்து திருவொற்றியூரெல்லையைக் கடந்தவளவில் நேத்திரங்களுக்கு அபாவந்தோன்ற வருந்தித் துதிசெய்த பதிகம். ,
சுவாமிபெயர் : படம்பக்கநாதர் - மாணிக்கத்தியாகர்.
தேவியார் : வடிவுடையம்மை.

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நான்படற் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப னாகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. **#550**

தலைவனே, 'ஒற்றியூர்' என்று பெயர் சொல்லப்படுகின்ற ஊரின்கண் எழுந்தருளியிருப்பவனே, அடியேன், உன் திருவடியை இடையீடின்றி யடையமாட்டாது, மாசுடைய உடம்பு கொண்டே அடைவேனாயினேன்; அவ் விழி நிலைதானும் நான் அடையத்தக்க தொன்றாகியேவிடுமாயின், ஒளியிழந்த என் கண்ணுக்கு ஊற்றத்தக்கதொரு மருந்தையேனும், என் வேண்டுகோளுக்கு விடையாக நீ சொல்லியருள்; ஏனெனில், பசு முதலிய வற்றினிடத்திற் பாலை விரும்புவோர், அவை இடுகின்ற சாணத்தை எடுத்தற் றொழிரைச் செய்தாயினும் அதனைக் கொள்வர்; அதுபோல, நீ என் குற்றங்களை நோக்கி, இகழாது, உயிர்களிடத்து நீ விரும்புவ தாகிய குணம் என்னிடத்து இருத்தலை நோக்கி என்னை ஏற்றருளுதல் வேண்டும். அக் குணமாவது; யான் எப் பிழைசெய்வேனாயினும், உன் திருவடிக்குப் பிழையைச் செய்யேன்; வழுக்கிவிழும் பொழுதும் உன் திருப்பெயரைச் சொல்லுதலன்றி, வேறொன்றை அறியேன்.

திருவொற்றியூர்

கட்ட னேன்பிறந் தேனுனக் காளாய்க்
காதற் சங்கிலி காரண மாக
எட்டி னால்திக ழுந்திரு மூத்தீ
என்செய் வான்அடி யேன்எடுத் துரைக்கேன்
பெட்ட னாகிலுந் திருவடிப் பிழையேன்
பிழைப்ப னாகிலுந் திருவடிக் கடிமை
ஒட்டி னேன்எனை நீசெய்வ தெல்லாம்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. **#551**

'எட்டு' என்னும் எண்ணின் வகையினால் விளங்குகின்ற சிறந்த வடிவங்களையுடையவனே, 'ஒற்றியூர்' என்று பெயர்சொல்லப் படுகின்ற ஊரின்கண் எழுந்தருளியிருப்பவனே, துன்பத்தைத் தரும் வினையையுடையேனாகிய யான, அவ்வினை காரணமாக, இம் மண்ணுலகிற் பிறந்தேன்; பிறந்து உனக்கு ஆளாகி, இடையே மாதரை விரும்பி மணந்தேனாயினும், உன் திருவடியை மறந்திலேன்; பிறவற்றைச் செய்யத் தவறினேனாயினும், திருவடிக்குச் செய்யும் அடிமையில் இடைவிடாது நின்றேன்; என்ன செய்தற் பொருட்டு அவற்றை நான் இப்பொழுது எடுத்துரைப்பேன்! இத் துன்பமெல்லாம், என்காதலுக்கு இடமாய் நின்ற சங்கிலி காரணமாக நீ செய்வனவேயாகும்.

திருவொற்றியூர்

கங்கை தங்கிய சடையுடைக் கரும்பே
கட்டி யேபலர்க் குங்களை கண்ணே
அங்கை நெல்லியின் பழத்திடை யமுதே
அத்தா என்னிடர் ஆர்க்கெடுத் துரைக்கேன்
சங்கும் இப்பியுஞ் சலஞ்சல முரல
வயிரம் முத்தொடு பொன்மணி வரன்றி
ஒங்கு மாகடல் ஓதம்வந் துலவும
ஒற்றி யீரெனும் ஊருறை வானே. **#552**

கங்கை பொருந்தியுள்ள சடையையுடையவனே, அடியார்கட்குக் கரும்பும், கட்டியும், அகங்கையிற்கிடைத்த நெல்லிக் கனியில் உள்ள அமுதமும் போல இனிமையைத் தருகின்றவனே, அனைவர்க்கும் பற்றுக்கோடாய் உள்ளவனே, தந்தையே, சங்குகளும், சிப்பிகளும், சலஞ்சலம் என்னும் சங்குகளும் ஒலிக்க, 'வயிரம், முத்து, பிற மணிகள், பொன்' என்பவற்றை வாரிக்கொண்டு, பெரிய கடலின் கண் உயர எழுகின்ற அலைகள் வந்து உலவுகின்ற, 'ஒற்றியூர்' என்று பெயர்

சொல்லப்படுகின்ற ஊரின்கண் எழுந்தருளியிருப்பவனே, நீயே எனக்குத் துன்பஞ் செய்வையாயின், அதனை நான் யாரிடம் நீக்குமாறு எடுத்துச்சொல்வேன்!

திருவொற்றியூர்

ஈன்று கொண்டதோர் சுற்றமொன் றன்றால்
யாவ ராகில்என் அன்புடை யார்கள்
தோன்ற நின்றருள் செய்தளித் திட்டாற்
சொல்லு வாரையல் லாதன சொல்லாய்
மூன்று கண்ணுடை யாய்அடி யேன்கண்
கொள்வ தேகணக் குவ்வழக் காகில்
ஊன்று கோலெனக் காவதொன் றருளாய
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. **#553**

ஒற்றியூ என்று பெயர் சொல்லப் படுகின்ற ஊரின்கண் எழுந்தருளியிருப்பவனே. 'தாய் பெற்றதனால் கொள்ளப் பட்டதொரு சுற்றம் என்பது ஒருபொருளன்று; அன்புடையவர்கள் யாராய் இருப்பினும் என் என்கின்ற இம்முறைமை பற்றி, நீ உன் னிடத்து அன்புசெய்பவரை, உனது இயற்கை வடிவம் அவர்கட்குப் புலனாகுமாறு வெளிநின்று ஆட்கொண்டுவிட்டால், அதன்பின் உன் பெயரையே சொல்லிக் கொண்டிருப்பவரை, நீ ஒரு ஞான்றும் கடுஞ்சொற்சொல்லுவாயல்லை; அங்ஙனமாகவும், மூன்று கண்களை யுடையையாகிய நீ உன் அடியேனது இரண்டு கண்களைப் பறித்துக் கொள்வது, யான் செய்த குற்றங் காரணமாக நீதி நூல்களில் உள்ள முறைமையே யாகில், எனக்கு உதவியாய் நிற்பதோர், ஊன்று கோலையேனும் அளித்தருள்.

திருவொற்றியூர்

வழித்த லைப்படு வான்முயல் கின்றேன்
உன்னைப் போல்என்னைப் பாவிக்க மாட்டேன்
சுழித்த லைப்பட்ட நீரது போலச்
சுழல்கின் றேன்சுழல் கின்றதென் னுள்ளம்
கழித்த லைப்பட்ட நாயது போல
ஒருவன் போல்பற்றிக் கறகற விழுக்கை
ஒழித்து நீஅரு ளாயின செய்யாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. **#554**

'ஒற்றியூர்' என்று பெயர்சொல்லப் படுகின்ற ஊரின்கண் எழுந்தருளியிருப்பவனே, யான் நன்னெறியைத் தலைப் படவே முயல்கின்றேன்; ஒருஞான்றும் என்னை உன்னைப்போல ஒன்றாலும்

தாக்குண்ணாத பெருமையேனாக நினைக்கின்றிலேன்; அங்ஙனமாகவும், நீ என் கண்ணைப் பறித்துக் கொண்டதனால், வழிதெரியாது, சுழியிடத்துப்பட்ட நீர் போலச் சுழலாநின்றேன். என் உள்ளமும் ஒன்றும் அறியாது சுழல்கின்றது; இவற்றையும், கழியிற் பொருந்திய நாயைப் போல ஒருவன் தரும் கோலை விடாதுபற்றி நின்று, அவனால், 'கறகற' என்று இழுக்கப்படுதலையும் ஒழித்து, நீ உனது திருவருள்களை எனக்கு அளித்தருள்.

திருவொற்றியூர்

மானை நோக்கியர் கண்வலைப் பட்டு
வருந்தி யானுற்ற வல்வினைக் கஞ்சித்
தேனை ஆடிய கொன்றையி னாய்உன்
சீல முங்குண முஞ்சிந்தி யாதே
நானு மித்தனை வேண்டுவ தடியேன்
உயிரொ டுந்நர கத்தழுந் தாமை
ஊள முள்ளன தீர்த்தருள் செய்யாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. **#555**

தேன் நிறைந்த கொன்றை மாலையை அணிந்தவனே, "ஒற்றியூர்" என்று பெயர் சொல்லப்படுகின்ற ஊரின் கண் எழுந்தருளியிருப்பவனே, யான் மான்போலும் பார்வையினை யுடைய மாதரது கண்ணோக்காகிய வலையில் அகப்பட்டு, உனது செயல்முறையையும், குணத்தையும் நினையாமலே செய்துவிட்ட பெரிய குற்றத்திற்கு அஞ்சியே, நானும் பிறர் போல உன்னை இத் துணை இரந்துவேண்டுவதாயிற்று; அதனால், என்றும் உன் அடியேனாகிய யான் உயிரோடே நரகத்தில் மூழ்காதபடி, எனக்கு உண்டாகிய குறையினை நீக்கி அருள் செய்யாய்.

திருவொற்றியூர்

மற்றுத் தேவரை நினைந்துனை மறவே
னெஞ்சி னாரொடு வாழவு மாட்டேன்
பெற்றி ருந்து பெறாதொழி கின்ற
பேதை யேன்பிழைத் திட்டதை யறியேன்
முற்று நீயெனை முனிந்திட அடியேன்
கடவ தென்னுனை நான்மற வேனேல்
உற்ற நோயுறு பிணிதவாத் தருளாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. **#556**

'ஒற்றியூ' என்று பெயர்சொல்லப் படுகின்ற ஊரின் கண் எழுந்தருளியிருப்பவனே, நான் பிறர் ஒருவர் தேவரை நினைந்து உன்னை மறந்தேனில்லை; அத்தன்மையான நெஞ்சை யுடையவருடன்

சேர்ந்திருக்கவும் மாட்டேன்; அங்ஙனமாக, நீ என்னை முற்றும் வெகுளுமாறு, உன்னை இனிதே பெற்றிருந்தும் பெறாதொழகின்ற பேதையேனாகிய யான் செய்த பிழைதான் இன்னதென்று அறிகின்றிலேன்; நான் உன்னை ஓர் இமைப்பொழுதும் மறவேனாயினேன். இதன்மேல், உன் அடியேனாகிய யான் செய்யக் கடவதாய் எஞ்சி நிற்பதொரு கடமை யாது! ஒன்றுமில்லையாதலின், யான் உற்ற துன்பத்தையும், மிக்க பிணியையும் நீக்கியருள்.

திருவொற்றியூர்

கூடி னாய்மலை மங்கையை நினையாய்
கங்கை யாயிர முகமுடை யாளைச்
சூடினாய் என்று சொல்லிய புக்கால்
தொழும்பனே னுக்குஞ் சொல்லலு மாமே
வாடி நீயிருந் தென்செய்தி மனமே
வருந்தி யானுற்ற வல்வினைக் கஞ்சி
ஊடி னால்இனி யாவதொன் றுண்டே
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. **#557**

'ஒற்றியூ' என்று பெயா சொல்லப் படுகின்ற ஊரின் கண் எழுந்தருளியிருப்பவனே, 'நீ முதலில் மலைமகளை ஒரு பாகமாகப் பொருந்தினாய்; பின்பு ஆயிரமுகமுடைய கங்கையாளை முடியில் சூடினாய்; இதனை நினைகின்றிலையே' என்று சொல்லப்புகுந்தால், அஃது அடிமையாகிய எனக்குக் கூடுமோ! 'மனமே நீ துன்ப முற்று என்ன பெறப்போகின்றாய்' என்று மனத்தோடே சொல்லிக் கொண்டு. யான் அடைந்த குற்றத்திற்கு அஞ்சி உன்னித்திலே பிணங்கினால், இனி வருவதொன்று உண்டோ?

திருவொற்றியூர்

மகத்திற் புக்கதோர் சனியெனக் கானாய்
மைந்த னேமணி யேமண வாளா
அகத்திற் பெண்டுகள் நானொன்று சொன்னால்
அழையல் போகுரு டாஎனத் தரியேன்
முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன்
முக்க ணாமுறை யோமறை யோதீ
உகைக்குந் தண்கடல் ஓதம்வந் துலவும்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. **#558**

வேதத்தை ஓதுபவனே, மணி முதலியவற்றைக் கரையிடத்துக் கொணர்ந்து சேர்க்கும் தண்ணிய கடல் அலைகள் வந்து உலவுகின்ற 'ஒற்றியூர்' என்று பெயர் சொல்லப்படுகின்ற ஊரின்கண்

எழுந்தருளியிருப்பவனே, எனக்கு வலிமையாய் உள்ளவனே, மணி போல்பவனே, அழகுடையவனே, நீ எனக்கு, 'மகம்' என்னும் நாண் மீன்கீழ் வந்த, 'சனி' என்னும் கோள்போல்பவனாயினை; அகத்தில் உள்ள பெண்டுகள், நான், ஆவது ஒரு காரியம் சொன்னால், 'கண்ணிலியே நீ என் அறிவாய்; கூவாதே; போ' என்று சொல்வதை நான் பொறுக்கமாட்டேன்; முகத்தில் கண்ணில்லாமல் நான் எவ்வாறு வாழ்வேன்? மூன்று கண்களையுடையவனே, இது முறையோ!

திருவொற்றியூர்

ஓதம் வந்துல வுங்கரை தன்மேல்
ஒற்றி யூருறை செல்வனை நாளும்
ஞாலந் தான்பர வப்படு கின்ற
நான்ம றைஅங்க மோதிய நாவன
சீலந் தான்பெரி தும்மிக வல்ல
சிறுவன் வன்றொண்டன் ஊரன் உரைத்த
பாடல் பத்திவை வல்லவர் தாம் போய்ப்
பரக திதிண்ணம் நண்ணுவர் தாமே. **#559**

கடல் அலைகள் வந்து உலவுகின்ற கரையின்மேல் உள்ள திருவொற்றியூரில் எழுந்தருளியிருக்கின்ற செல்வனை, என்றும் உலகத்தாரால்போற்றப்படுகின்ற நான்கு வேதம், வேதத்தின் ஆறு அங்கங்கள் இவற்றை ஓதிய நாவையுடையவனும், ஒழுக்கத்தில் மிகவல்ல இளமையை யுடையவனும் வன்றொண்டனும் ஆகிய நம்பி யாரூரன் பாடிய இப் பத்துப்பாடல்களாகிய இவைகளை வல்லவர்கள், மேலான கதியைப் போய் அடைவார்கள்; இது திண்ணம்.

திருப்புன்கூர்

திருப்புன்கூர்

திருப்புன்கூர்,
பண் - தக்கேசி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. சுந்தரமூர்த்திசுவாமிகள் திருப்புன்கூருக்கெழுந்தருளியபோது அந்தத்தலத்தார் கண்டு தொழுது சுவாமீ! இங்கு நெடுநாளாக மழைபொழிதலின்றி வருந்துகிறோம், ஆதலால் கிருபைபாலிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, மழைபொழிந்தால் சுவாமிக்கியாது தருவீர்களென்ன, அவர்கள் பன்னிரண்டு வேலி நிலந்தருகிறோமென்னக் கிருபை கூர்ந்து இந்தப்பதிகமோதியருளலும், மழை அதிகமாய்ப்பெய்ய அவர்களுடையவேண்டுதலினால் மழை தணிந்து பெய்யும்படிசெய்து முன்னமவர்கள் சொல்லிய பன்னிரண்டுவேலி நிலமேயன்றி மீட்டும் பன்னிரண்டுவேலி நிலங்கொடுக்கப்பெற்றருளியது. ,
சுவாமிபெயர் : சிவலோகநாதர்.
தேவியார் : சொக்கநாயகியம்மை.

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வன்மைகண் டடியேன்
எத்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே. **#560**

வளவிய சோலைகளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே, முனிவன் ஒருவன் உன்னை அடைக்கலமாக அடைய, அவனைக் காத்தல் நிமித்தமாக, அவன்மேல் வந்த கூற்றுவனது அரிய உயிரைக் கவர்ந்த உனக்கு அடியேனாகிய யான், உனது அவ்வாற்றலையறிந்து, என்னையும் இயமன் தூதர்கள் வந்து துன்புறுத்துவார்களாயின், என்தந்தையாகிய நீ, 'இவன் என் அடியான்; இவனைத் துன்புறுத்தாதீர்' என்று சொல்லி விலக்குவாய் என்னும் எண்ணத்தினால் வந்து உன் திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்றுகொண்டருள்.

திருப்புன்கூர்

வையக முற்று மாமழை மறந்து

வயலில் நீரிரை மாநிலந் தருகோம
உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன
ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்
செய்கை கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே. **#561**

வளவிய சோலைகளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே, இவ்வூரிலுள்ளவர், 'உலகமுழுதும் நிரம்பிய மழையின்மையால் வயலில் நீர் இல்லையாயிற்று; மிக்க நிலங்களை உனக்குத் தருவோம்; எங்களை உய்யக்கொள்க' என்று வேண்ட, ஒளியைக் கொண்ட வெண்முகிலாய்ப் பரந்திருந்தவை, அந்நிலைமாறி, எங்கும் பெய்த பெருமழையால் உண்டாகிய பெருவெள்ளத்தை நீக்கி, அதன் பொருட்டு அவர்களிடம் மீட்டும் பன்னிரு வேலி நிலத்தைப் பெற்றருளிய செயலையறிந்து வந்து, அடியேன் உன் திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்று கொண்டருள்.

திருப்புன்கூர்

ஏத நன்னிலம் ஈரறு வேலி
ஏயர் கோன்உற்ற இரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக்
கோல வெண்மணற் சிவன்றன்மேற் சென்ற
தாதை தாளற எறிந்த சண்டிக்குன்
சடைமி சைமலர் அருள்செயக் கண்டு
பூத வாளிநின் பொன்னடி யடைந்தேன்
பூம்பொ ழில்திருப் புன்கூரு ளானே. **#562**

பூதகணங்கட்குத் தலைவனே, அழகிய சோலைகளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே, நீ, நல்ல நிலங்கள் பன்னிருவேலி கொடுத்த ஏயர்கோன் அடைந்த, துன்பத்தைச் செய்யும் பெரிய நோயை இப்பொழுது தீர்த்ததனையும், முன்பு பசுக்களது மடியில் நிறைந்திருந்த பாலைக் கறந்து ஆட்ட அதனைப் பொறாது அங்ஙனம் ஆட்டப்பட்ட அழகிய வெண் மணலாலாகிய பெருமான்மேற் சென்ற தந்தையது பாதங்கள் துணி பட்டு விழுமாறு வெட்டிய சண்டேசுர நாயனாருக்கு உனது முடியின் மேற் சூடியுள்ள கொன்றைமாலையை எடுத்துச் சூட்டியருளியதையும் அறிந்து வந்து, அடியேன், உனது பொன்போலும் திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்று கொண்டருள்.

திருப்புன்கூர்

நற்ற மிழ்வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லன்என் றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூரு ளானே. **#563**

பொன்போலும், திரளாகிய அழகிய தாமரை மலர்கள் மலர்கின்ற பொய்கைகள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளி யிருப்பவனே, 'நல்ல தமிழைப் பாட வல்ல ஞானசம்பந்தனும், நாவுக்கரையனும், நாளைப்போவானும், சூதாடுதலை நன்கு கற்ற மூர்க்கனும், நல்ல சாக்கியனும், சிலந்தியும், கண்ணப்பனும், கணம் புல்லனும்' என்ற இவர்கள் குற்றமான செயல்களைச் செய்யவும், அவைகளைக் குணமான செயலாகவே கருதிய உனது திருவுள்ளத்தின் தன்மையை அறிந்து, வந்து, அடியேன், உனது ஒலிக்கின்ற கழலை யணிந்த திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்றுகொண்டருள்.

திருப்புன்கூர்

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோள ரவுசுற் றிக்கடைந் தெழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய
அமரர் கட்கருள் புரிவது கருதி
நீல மார்கடல் விடந்தனை யுண்டு
கண்டத் தேவைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே. **#564**

வளவிய சோலைகளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே, தேவர்கள், அழகிய பெரிய மலையை மத்தாக நாட்டி, கொடிய பாம்பைக் கயிறாகச் சுற்றிப் பாற்கடலைக் கடைந்து, அதில் அமுதந் தோன்றாது பெருவிடந் தோன்றியதைக் கண்டு அவர்கள் பெரிதும் ஓடிவந்து அடைய அவர்கட்கு உதவுதல் கருதி, கருமை நிறைந்த, அக் கடல் விடத்தை உண்டு, அஃது என்றும் நின்று விளங்குமாறு கண்டத்தே வைத்த பேரருளாளனே, நீ செய்த இந் நல்ல செய்கையையறிந்து வந்து, அடியேன் உன் திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்றுகொண்டருள்

திருப்புன்கூர்

இயக்கர் கின்னரர் ஞமனொடு வருணன்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்க மில்புலி வானரம் நாகம்
வசுக்கள் வானவர் தானவ ரெல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் திருவடி யதனை
யர்ச்சித் தார்பெறும் ஆரருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே. **#565**

வளவியசோலையையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே, இயக்கரும், கின்னரரும், இயமனும், வருணனும், அக்கினியும், இயங்குகின்ற வாயுவும், சூரியனும், சந்திரனும், வசுக்களும், ஏனைய தேவர்களும், அசுரர்களும், மற்றும் அறியாமை நீங்கின புலி, குரங்கு, பாம்பு முதலியனவும் உனது திருவடியை மறத்தல் சிறிதும் இன்றி வழிபட்டுப் பெற்ற அரிய திருவருளை யறிந்து அடியேனும், தடுமாற்றம் சிறிதும் இன்றி உன் திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்று கொண்டருள்.

திருப்புன்கூர்

போ?த்த நீள்செவி யாளர்அந் தணர்க்குப்
பொழில்கொளால் நிழற் கீழறம் புரிந்து
பார்த்த னுக்கன்று பாசுப தங்கொடுத்
தருளி னாய்பண்டு பகீரதன் வேண்ட
ஆர்த்து வந்திழி யும்புனற் கங்கை
நங்கை யாளைநின் சடைமிசைக் கரந்த
தீர்த்த னேநின்றன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே. **#566**

தூயவனே, வளவிய சோலைகளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே, நற்பொருள்களை உள்ளடக்கிய பெரிய செவிகளையுடைய முனிவர்களுக்கு, அன்று சோலைகளைச் சூழக்கொண்ட ஆலமரத்தின் கீழிருந்து அறத்தைச் சொல்லியும், அருச்சுனனுக்கு அன்று பாசுபதத்தைக் கொடுத்தும் பகீரதன் வேண்டிக்கொள்ள அவன்பொருட்டு, ஆரவாரித்து வீழ்ந்த நீர்வடிவாகிய கங்கையாளை முன்பு உனது சடையில், அடக்கியும் அருள்செய்தாய்; அவற்றை யெல்லாம் அறிந்து வந்து, அடியேன் உன் திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்றுகொண்டருள்.

திருப்புன்கூர்

மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில்
இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளர்என் றேவிய பின்னை
ஒருவன் நீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநடம் மகிழ
மணிமு ழாமுழக் கவருள் செய்த
தேவ தேவநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே. **#567**

தேவதேவனே, வளவிய சோலைளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே, நீ, முப்புரத்தை அழித்த காலத்தில் அழியாது பிழைத்த அசுரர் மூவரில் இருவரை உனது திருக்கோயிலின் வாயில் காவலராகும்படி பணித்தபின்பு, மற்றொருவனை, நீ, கரிந்த காடே அரங்கமாக, உமையவளை நோக்கி ஒப்பற்ற பெரிய நடனத்தை மகிழ்ந்து செய்யும் பொழுது அழகிய மத்தளத்தை முழக்கும் படி அருள்செய்ததை யறிந்து வந்து. அடியேன் உன் திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்றுகொண்டருள்.

திருப்புன்கூர்

அறிவி னால்மிக்க அறுவகைச் சமயத்
தவ்வவர்க் கங்கே ஆரருள் புரிந்து
எறியு மாகடல் இலங்கையர் கோனைத்
துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்
குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக்
கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே. **#568**

வளவிய சோலைகளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே, நூலறிவினால் மிக்க ஆறுவகைப் பட்ட சமயங்களில் உள்ள அவரவர்க்கும் அச்சமயத்திற்றானே, அரிய திருவருளைச் செய்தும், அலையெறியும் பெரிய கடலிடத்து உள்ள இலங்கையில் உள்ளார்க்கு அரசனாகிய இராவணனை, அவனுக்கு அறிவு தோன்றுமாறு பெரிய மலைக்கீழ் வைத்து நெரித்து, பின்பு அவன் பாடிய, உய்யும் கருத்தைக்கொண்ட பாடலினது இனிய இசையைக்கேட்டு, அழகிய வாளோடு, மிக்க வாழ்நாளையுங் கொடுத்தும் அருளிய உனது மிகுந்த திருவருளை அறிந்து வந்து, அடியேன் உன் திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்று

கொண்டருள்.

திருப்புன்கூர்

கம்ப மால்களிற் றின்னுரி யானைக்
காமற் காய்ந்ததோர் கண்ணுடை யானைச்
செம்பொ னேயொக்குந் திருவுரு வானைச்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானை
உம்ப ராளியை உமையவன் கோனை
ஊரன் வன்றொண்டன் உள்ளத் தாலுகந்
தம்பி னாற்சொன்ன அருந்தமி ழைந்தோ
டைந்தும் வல்லவர் அருவினை யிலரே. **#569**

அசைதலையுடைய பெரிய யானையினது தோலை உடையவனும், காமனை எரித்த ஒரு கண்ணை உடையவனும், செம்பொன்னே போல்வதாகிய அழகிய மேனியை உடையவனும், தேவர்களை ஆள்பவனும், உமையவளுக்குத் தலைவனும் ஆகிய, வளவிய சோலைகளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானை, வன்றொண்டனாகிய நம்பியாரூரன் மனத்தால் விரும்பி, அங்ஙனம் விரும்பிய அவ்வன்பானே சொல்லிய அரிய இத்தமிழ்ப் பாடல்கள் பத்தினையும் பாட வல்லவர், நீங்குதற்கரிய வினைகளை இல்லாதவராவர்; இது திண்ணம்.

திருநீடூர்

திருநீடூர்

திருநீடூர்,
பண் - தக்கேசி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சோமநாதேசுவரர்.
தேவியார் : வேயுறுதோளியம்மை.

ஊர்வ தோர்விடை ஒன்றுடை யானை
ஒண்ணு தற்றனிக் கண்ணுத லானைக்
கார தார்கறை மாமிற் றானைக்
கருத லார்புரம் மூன்றெரித் தானை
நீரில் வாளைவ ரால்குதி கொள்ளும்
நிறைபு னற்கழ னிச்செல்வ நீடூர்ப்
பாரு ளார்பர வித்தொழ நின்ற
பரம னைப்பணி யாவிட லாமே. **#570**

எருது ஒன்றினை ஓர் ஊர்தியாக உடையவனும், ஒளியையுடைய நெற்றியையுடைய ஒப்பற்ற சிவபெருமானும், கருமை பொருந்திய நஞ்சினையுடைய கண்டத்தை யுடையவனும், பகைவரது ஊர்கள் மூன்றை எரித்தவனும் ஆகிய, நீரில் வாழ்வனவாகிய வாளை மீனும், வரால் மீனும் குதிகொள்ளுகின்ற நிறைந்த நீரையுடைய கழனிகளை யுடைய செல்வம் பொருந்திய திருநீடூரின்கண், நிலவுலகில் உள்ளார் யாவரும் துதித்து வணங்குமாறு எழுந்தருளியிருக்கின்ற இறைவனை நாம் வணங்காது விடுதலாகுமோ! ஆகாதன்றே; அதனால், அங்குச் சென்று அவனை வணங்குவோம்.

திருநீடூர்

துன்னு வார்சடைத் தூமதி யானைத்
துயக்கு றாவகை தோன்றுவிப் பானைப்
பன்னு நான்மறை பாடவல் லானைப்
பார்த்த னுக்கருள் செய்தபி ரானை
என்னை இன்னருள் எய்துவிப் பானை
ஏதி லார்தமக் கேதிலன் றன்னைப்
புன்னை மாதவி போதலர் நீடூர்ப்
புனித னைப்பணி யாவிட லாமே. **#571**

நெருங்கிய நீண்ட சடையின்கண் தூய்தாகிய பிறையைச் சூடினவனும், மயக்கம் வாராதவாறு உய்யும் நெறியைக் காட்டுகின்றவனும்,

உயர்ந்தோர் ஓதும் நான்கு வேதங்களைச் செய்ய வல்லவனும், அருச்சுனனுக்கு அருள் புரிந்த தலைவனும், அவ்வினிய அருளை என்னை எய்துவிப்பவனும், அயலாய் நிற்பார்க்கு அயலாய் நிற்பவனும் ஆகிய, புன்னையும் குருக்கத்தியும் அரும்புகள் மலர்கின்ற திருநீடூரின்கண் எழுந்தருளியிருக்கின்ற இறைவனை நாம் வணங்காது விடுதலாகுமோ! ஆகாதன்றே; அதனால் அங்குச் சென்று அவனை வணங்குவோம்.

திருநீடூர்

கொல்லு மூவிலை வேலுடை யானைக்
கொடிய காலனை யுங்குமைத் தானை
நல்ல வாநெறி காட்டுவிப் பானை
நாளு நாமுகக் கின்றபி ரானை
அல்ல வில்லரு ளேபுரி வானை
ஆடு நீர்வயல் சூழ்புனல் நீடூர்க்
கொல்லை வெள்ளெரு தேறவல் லானைக்
கூறி நாம்பணி யாவிட லாமே. **#572**

கொல்லுதற் கருவியாகிய சூலத்தை உடையவனும், கொடிய இயமனையும் அழித்தவனும், நல்லனவாகிய நெறிகளையே காட்டுவிக்கின்றவனும், எந்நாளும் நாம் விரும்புகின்ற தலைவனும், துன்பம் இல்லாத திருவருளைச் செய்பவனும் ஆகிய, முழுகுதற்குரிய நீரையுடைய வயல்கள் சூழ்ந்த திருநீடூரின்கண் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானை நாம் வணங்காது விடுதலாகுமோ! ஆகாதன்றே; அதனால் அங்குச் சென்று அவனை வணங்குவோம்.

திருநீடூர்

தோடு காதிடு தூநெறி யானைத்
தோற்ற முந்துறப் பாயவன் றன்னைப்
பாடு மாமறை பாடவல் லானைப்
பைம்பொ ழிற்குயில் கூவிட மாடே
ஆடு மாமயில் அன்னமொ டாட
அலையு னற்கழ னித்திரு நீடூர்
வேட னாயபி ரானவன் றன்னை
விரும்பி நாம்பணி யாவிட லாமே. **#573**

தோட்டைக் காதிலே இட்ட, தூய நெறியாய் உள்ளவனும், உயிர்கட்குப் பிறப்பும் இறப்புமாய் நிற்பவனும், இசையொடு பாடுதற்குரிய சிறந்த வேதத்தைச் செய்ய வல்லவனும் ஆகிய, பசிய சோலைகளில் குயில்கள் கூவ, அவ்விடத்தே, ஆடுந் தன்மையுடைய சிறந்த மயில் அன்னத்துடன்

நின்று ஆட அலைகின்ற நீரையுடைய வயல்களையுடைய திருநீடூரின்கண் எழுந்தருளியிருக்கின்ற இறைவனை, நாம் விரும்பி வணங்காது விடுதலாகுமோ! ஆகாதன்றே; அதனால், அங்குச் சென்று அவனை வணங்குவோம்.

திருநீடூர்

குற்ற மொன்றடி யாரில ரானாற்
கூடு மாறுத னைக்கொடுப் பானைக
கற்ற கல்வியி லும்மினி யானைக்
காணப் பேணு மவர்க்கெளி யானை
முற்ற அஞ்சுந் துறந்திருப் பானை
மூவ ரின்முத லாயவன் றன்னைச்
சுற்று நீர்வயல் சூழ்திரு நீடூர்த்
தோன்ற லைப்பணி யாவிட லாமே. **#574**

அடியவர் குற்றம் சிறிதும் இலராயினாரெனின், அவர்கள் அடையுமாறு தன்னையே கொடுப்பவனும், வருந்திக் கற்ற கல்வியினும் மேலாக இனிமையைச் செய்கின்றவனும், ஐம்புலன்களையும் முற்றத்துறந்து பற்றின்றி இருப்பவனும், காரணக் கடவுளர் மூவருள் முதல்வனாயினவனும் ஆகிய, சுற்றிலும் நீரையுடைய வயல்கள் சூழ்ந்த திருநீடூரின்கண் எழுந்தருளியிருக்கின்ற இறைவனை நாம் வணங்காது விடுதலாகுமோ! ஆகாதன்றே; அதனால் அங்குச் சென்று அவனைவணங்குவோம்.

திருநீடூர்

காடி லாடிய கண்ணுத லானைக்
கால னைக்கடிந் திட்டபி ரானைப்
பாடியா டும்பரி சேபுரிந் தானைப்
பற்றி னோடுசுற் றம்மொழிப் பானைத்
தேடி மாலயன் காண்பரி யானைச்
சித்த முந்தெளி வார்க்கெளி யானைக்
கோடி தேவர்கள் கும்பிடு நீடூர்க்
கூத்த னைப்பணி யாவிட லாமே. **#575**

காட்டில் ஆடுகின்ற, கண்ணையுடைய நெற்றியை யுடையவனும், கூற்றுவனை அழித்த தலைவனும், அன்பினால் பாடி ஆடுகின்ற செயலையே விரும்புபவனும், பொருட்சார்புகளையும் உயிர்ச்சார்புகளையும் நீக்குபவனும், மாலும் அயனும் தேடிக் காணுதற்கு அரியவனும், சொல்லாலன்றி, உள்ளத்தாலும் தன்னைத் தெளிந்தவர்க்கு எளியவனும் ஆகிய, அளவற்ற தேவர்கள் தொழுகின்ற, திருநீடூரின்கண்

எழுந்தருளியுள்ள இறைவனை நாம் வணங்காது விடுதலாகுமோ! ஆகாதன்றே; அதனால், அங்குச் சென்று அவனை வணங்குவோம்.

திருநீடூர்

விட்டி லங்கெரி யார்கையி னானை
வீடி லாத வியன்புக ழானைக்
கட்டு வாங்கந் தரித்தபி ரானைக்
காதி லார்கன கக்குழை யானை
விட்டி லங்குபுரி நூலுடை யானை
வீந்த வர்தலை யோடுகை யானைக்
கட்டி யின்கரும் போங்கிய நீடூர்க்
கண்டு நாம்பணி யாவிட லாமே. **#576**

கவைவிட்டு விளங்குகின்ற தீப்பொருந்திய கையை யுடையவனும், அழியாத, பரந்த புகழையுடையவனும், மழுவை ஏந்திய தலைவனும், காதின்கண் பொருந்திய பொற்குழையை யுடையவனும், மார்பின்கண் எடுத்து விடப்பட்டு விளங்குன்ற முப்புரி நூலை உடையவனும், இறந்தவரது தலையோட்டைக் கையில் ஏந்தியவனும் ஆகிய இறைவனை. நாம் கட்டியைத் தரும் கரும்புகள் வளர்ந்துள்ள திருநீடுரின்கண் கண்டு வணங்காது விடுதலாகுமோ! ஆகாதன்றே; அதனால், நாம் அங்குச் சென்று அவனை வணங்குவோம்.

திருநீடூர்

மாய மாய மனங்கெடுப் பானை
மனத்து ளேமதி யாயிருப் பானைக்
காய மாயமு மாக்குவிப் பானைக்
காற்று மாய்க்கன லாய்க்கழிப் பானை
ஓயு மாறுறு நோய்புணர்ப் பானை
ஒல்லை வல்வினை கள்கெடுப் பானை
வேய்கொள் தோளுமை பாகனை நீடூ
வேந்த னைப்பணி யாவிட லாமே. **#577**

நிலையில்லாத பொருள்கள் மேற்செல்லுகின்ற மனத்தோடு ஒற்றித்து நின்று அதன்வழியே செல்லும் அறிவாய் இருப்பவனும், பின்னர் அம்மனத்தின் செயலைக்கெடுத்து அறிவை ஒரு நெறிப்படுத்துபவனும், காற்றும் தீயும் முதலிய கருவிகளாய் நின்று உடம்பாகிய காரியத்தைப் பண்ணுவிப்பவனும், பின்னர் அதனை அழிப்பவனும் உயிர்கள் வருந்துமாறு, அவற்றை அடையற் பாலனவாகிய வினைப்பயன்களைக் கூட்டுவிக்கின்றவனும், பின்னர் விரைவில் அவ்வினைகளை அழிப்பவனும், இவை எல்லாவற்றையும் செய்தற்கு மூங்கில் போலும்

தோள்களையுடைய உமையைத் துணையாகக் கொள்பவனும் ஆகிய, திருநீடூரின்கண் எழுந்தருளியுள்ள முதல்வனை நாம் வணங்காது விடுதலாகுமோ! ஆகாதன்றே; அதனால், அங்குச் சென்று அவனை வணங்குவோம்.

திருநீடூர்

கண்ட முங்கறுத் திட்டபி ரானைக்
காணப் பேணு மவர்க்கௌயானைத்
தொண்ட ரைப்பெரி தும்முகப் பானைத்
துன்ப முந்துறந் தின்பினி யானைப்
பண்டை வல்வினை கள்கெடுப் பானைப்
பாக மாமதி யானவன் றன்னைக்
கெண்டை வாளை கிளர்புனல் நீடூர்க்
கேண்மை யாற்பணி யாவிட லாமே. **#578**

கண்டத்தைக் கறுப்பாகவும் செய்து கொண்ட தலைவனும், தன்னைக் காண விரும்பும் அடியார்களுக்கு எளியவனும் தனக்குத் தொண்டு பூண்டவரைப் பெரிதும் விரும்புபவனும், துன்பம் இல்லாத இன்பத்தைத் தரும் இனியவனும், பழைய வலிய வினைகளையெல்லாம் அழிப்பவனும், பகுதிப் பட்ட சந்திரனுக்குக் களைகண் ஆயினவனும் ஆகிய இறைவனை, நாம் கெண்டை மீன்களும், வாளைமீன்களும் துள்ளுகின்ற நீரையுடைய திருநீடூரின்கண் கேண்மையோடு வணங்காது விடுதலாகுமோ! ஆகாதன்றே; அதனால், அங்குச் சென்று அவனை வணங்குவோம்.

திருநீடூர்

அல்ல லுள்ளன தீர்த்திடு வானை
அடைந்த வர்க்கமு தாயிடு வானைக்
கொல்லை வல்லர வம்மசைத் தானைக்
கோல மார்கரி யின்னுரி யானை
நல்ல வர்க்கணி யானவன் றன்னை
நானுங் காதல்செய் கின்றபி ரானை
எல்லி மல்லிகை யேகமழ் நீடூர்
ஏத்தி நாம்பணி யாவிட லாமே. **#579**

'துன்பம்' எனப்படுவனவற்றைப் போக்குகின்றவனும், தன்னை அடைந்தவர்கட்கு அமுதம் போன்று பயன் தருபவனும், கொல்லுதலையுடைய வலிய பாம்பைக் கட்டியிருப்பவனும், அழகு பொருந்திய யானையின் தோலையுடையவனும், நன்னெறியில் நிற்பவர்கட்கு அணிகலமாய்த் திகழ்பவனும், அடியேனும் விரும்புகின்ற

தலைவனும் ஆகிய இறைவனை, நாம், இரவில் மல்லிகை மலர்கள் மிகவும் மணம் வீசுகின்ற திருநீடூரின் கண் துதித்து வணங்காது விடுதலாகுமோ! ஆகாதன்றே; அங்குச் சென்று அவனை வணங்குவோம்.

திருநீடூர்

பேரோ ராயிர மும்முடை யானைப்
பேசி னாற்பெரி தும்மினி யானை
நீரூர் வார்வடை நின்மலன் றன்னை
நீடூர் நின்றுகந் திட்டபி ரானை
ஆரூ ரன்னடி காண்பதற் கன்பாய்
ஆத த்தழைத் திட்டஇம் மாலை
பாரூ ரும்பர வித்தொழ வல்லார்
பத்த ராய்முத்தி தாம்பெறு வாரே. **#580**

எல்லாப் பெயர்களையும் உடையவனும், வாயாற் பேசும்வழி பெரிதும் இனிப்பவனும், நீர் ததும்புகின்ற நீண்ட சடையினையுடைய தூயவனும் ஆகிய, திருநீடூரை விரும்பி எழுந்தருளியிருக்கின்ற இறைவனை, அவன் திருவடியைக்கண்டு வணங்குதற்கு அன்போடு விரும்பி, நம்பியாரூரன் அனைவரையும் அழைத்துப் பாடிய இத்தமிழ்மாலையால், நிலவுலகத்து உள்ள எவ்வூரின்கண்ணும் இறைவனைப் பாடி வணங்க வல்லவர், அவனுக்கு அடியவராகி, முத்தியைப் பெறுவார்கள்.

திருவாழ்கொளிபுத்தூர்

திருவாழ்கொளிபுத்தூர்

திருவாழ்கொளிபுத்தூர்,
பண் - தக்கேசி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாணிக்கவண்ணர்.
தேவியார் : வண்டமர்பூங்குழலம்மை.

தலைக்க லன்தலை மேல்தரித் தானைத்
தன்னைஎன் னைநினைக் கத்தரு வானைக்
கொலைக்கையா னையுரி போர்த்துகந் தானைக்
கூற்றுதைத் தகுரை சேர்கழ லானை
அலைத்தசெங் கண்விடை ஏறவல் லானை
ஆணை யால்அடி யேன்அடி நாயேன்
மலைத்தசெந் நெல்வயல் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே. **#581**

தலையாகிய அணிகலனைத் தலையில் அணிந்தவனும், தன்னை எனக்கு நினைக்குமாறு தருபவனும், கொலைத் தொழிலையும், கையையும் உடைய யானையின் தோலைப் போர்த்து மகிழ்ந்தவனும், கூற்றுவனை உதைத்த, ஒலித்தல் பொருந்திய கழலை யணிந்த திருவடியை உடையவனும், எதிர்த்தவரை வருத்தும் சிவந்த கண்களையுடைய இடபத்தை ஊர வல்லவனும் ஆகிய, பயிர்கள் தம் தலைமேற்கொண்ட செந்நெற்களையுடைய திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற மாணிக்கம் போல்பவனாகிய பெருமானை மறந்து, அவன் ஆணை வழியே அவனுக்கு அடிமையானேனாகிய அடிநாய் போன்ற யான், வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

திருவாழ்கொளிபுத்தூர்

படைக்கட் சூலம் பயிலவல் லானைப்
பாவிப் பார்மனம் பாவிக்கொண் டானைக்
கடைக்கட்பிச் சைக்கிச்சை காதலித் தானைக்
காமன்ஆ கந்தனைக் கட்டழித் தானைச்
சடைக்கட் கங்கையைத் தாழவைத் தானைத்
தண்ணீர்மண் ணிக்கரை யானைத்தக் கானை
மடைக்கண்நீ லம்மலர் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே. **#582**

படைகளுள் சூலத்தைப் பழக வல்லவனும், தன்னை நினைவாரது

உள்ளத்தில் பரவி அகப்படுத்துக் கொள்பவனும், வாயில்களில் நின்று ஏற்கும் பிச்சைக்கு விரும்புதலைச் செய்பவனும், காமனது உடலை அமைப்பு அழியச் செய்தவனும், கங்கையைச் சடையில் தங்கும்படி வைத்தவனும், தண்ணிய நீரையுடைய மண்ணியாற்றின் கரையில் இருப்பவனும், எல்லாத் தகுதிகளையும் உடையவனும் ஆகிய, நீர்மடைகளில் நீலோற்பல மலர் மலர்கின்ற திருவாழ்கொளி புத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற மாணிக்கம்போல்பவனாகிய பெருமானை மறந்து, யான், வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

திருவாழ்கொளிபுத்தூர்

வெந்த நீறுமெய் பூசவல் லானை
வேத மால்விடை ஏறவல் லானை
அந்தமா திஅறி தற்கரி யானை
ஆறலைத் தசடை யானைஅம் மானைச்
சிந்தை என்தடு மாற்றறுப் பானைத்
தேவ தேவன்என் சொல்முனி யாதே
வந்தென்உள் ளம்புகும் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே. **#583**

வெந்த சாம்பலை உடம்பிற் பூச வல்லவனும், வேத மாகிய சிறந்த விடையை ஊர வல்லவனும், முடிவும் முதலும் அறிதற்கு அரியவனும், ஆற்றுநீர் மோதுகின்ற சடையை உடையவனும், பெரியோனும், எனது மனக் கலக்கத்தைக் களைபவனும், தேவர்களுக்குத் தேவனும், யான் இகழ்ந்து சொல்லிய சொல்லை வெறாமல் வந்து என் உள்ளத்தில் புகுந்து நிற்பவனும் ஆகிய, திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற மாணிக்கம்போல்பவனாகிய பெருமானை மறந்து, யான், வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

திருவாழ்கொளிபுத்தூர்

தடங்கை யான்மலர் தூய்த்தொழு வாரைத்
தன்னடிக் கேசெல்லு மாறுவல் லானைப்
படங்கொள்நா கம்மரை யார்த்துகந் தானைப்
பல்லின்வெள் ளைத்தலை ஊணுடை யானை
நடுங்கஆ னையுரி போர்த்துகந் தானை
நஞ்சம்உண் டுகண் டங்கறுத் தானை
மடந்தை பாகனை வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே. **#584**

பெரிய கைகளால் மலர்களை எடுத்துத் தூவிக் கும்பிடுகின்றவர்கள், பிறவிடத்துச் செல்லாது, தன் திருவடியிடத்தே செல்லுமாறு செலுத்த

வல்லவனும், படத்தை உடைய பாம்பை அரையில் விரும்பிக் கட்டியுள்ளவனும், முன்னர் விளங்கும் பற்களையுடைய வெள்ளிய தலையில் உண்ணுதல் உடையவனும், தன் தேவியும் நடுங்கும்படி யானைத் தோலை விரும்பிப் போர்த்துள்ளவனும், நஞ்சினை உண்டு கண்டம்கரியதாகியவனும், மாதொரு பாகனும் ஆகிய, திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற மாணிக்கம் போல்பவனாகிய பெருமானை மறந்து யான், வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

திருவாழ்கொளிபுத்தூர்

வளைக்கைமுன் கைமலை மங்கை மணாளன்
மார னாருடல் நீறெழச் செற்றுத்
துளைத்தவங் கத்தொடு தூமலர்க் கொன்றை
தோலும்நூ லும்துதைந் தவரை மார்பன்
திளைக்குந் தெவ்வர் திரிபுர மூன்றும்
அவுணர் பெண்டிரும் மக்களும் வேவ
வளைத்த வில்லியை வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே. **#585**

வளையை அணிந்த முன் கையையுடைய மலை மகளுக்கு மணாளனும், மன்மதனது அரிய உடம்பு சாம்பலாய் ஒழியுமாறு அழித்தவனும், துளைசெய்யப்பட்ட எலும்பும், தூய கொன்றை மலரும், தோலும், நூலும் நெருங்கிய, கீற்றுக்களையுடைய மார்பையுடையவனும், வானத்தில் திரிகின்ற மூன்று அரண்களும், அதன்கண் வாழ்ந்து இன்பம் நுகர்கின்ற பகைவர் மூவரும், அவரைச் சார்ந்த அசுரரும், அவர்தம் பெண்டிரும், பிள்ளைகளும் வெந்தொழியுமாறு வளைத்த வில்லையுடையவனும் ஆகிய, திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியுள்ள மாணிக்கம் போல்பவனாகிய பெருமானை மறந்து, யான், வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

திருவாழ்கொளிபுத்தூர்

திருவின் நாயக னாகிய மாலுக்
கருள்கள் செய்திடும் தேவர் பிரானை
உருவி னானைஒன் றாஅறி வொண்ணா
மூர்த்தி யைவிச யற்கருள் செய்வான்
செருவில் லேந்திஓர் கேழற்பின் சென்று
செங்கண் வேடனாய் என்னொடும் வந்து
மருவி னான்றனை வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே. **#586**

திருமகளுக்குக் கணவனாகிய திருமாலுக்குப் பல பொழுதுகளிற் பல திருவருள்களைச் செய்த, தேவர் தலைவனும், உருவம் உடையவனும், அவ்வுருவம் ஒன்றாக அறியப்படாது, அளவற்றனவாய் அறியப்படுங் கடவுளும் அருச்சுனனுக்கு அருள்செய்தற் பொருட்டு போருக்குரியவில் ஒன்றை ஏந்திக்கொண்டு, ஒரு பன்றியின்பின்னே, சிவந்த கண்களையுடைய வேடனாய்ச் சென்றவனும், என்னிடத்திலும் வந்து பொருந்தியுள்ளவனும் ஆகிய, திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியுள்ள மாணிக்கம் போல்பவனாகிய பெருமானை மறந்து, யான், வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

திருவாழ்கொளிபுத்தூர்

எந்தை யைஎந்தை தந்தை பிரானை
ஏதமா யவ்விடர் தீர்க்க வல்லானை
முந்தை யாகிய மூவரின் மிக்க
மூர்த்தி யைமுதல் காண்பரி யானைக்
கந்தின்மிக் ககரி யின்மருப் போடு
கார கில்கவ ரிம்மயிர் மண்ணி
வந்து வந்திழி வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே. **#587**

என் தந்தையும், என் தந்தை தந்தைக்கும் தலைவனும், துன்பத்திற்கு வழியாகிய இடையூறுகளைப் போக்க வல்லவனும், யாவர்க்கும் முன்னோராகிய மும்மூர்த்திகளினும் மேலான மூர்த்தியும், தோற்றம் அறியப்படாதவனும் ஆகிய, மண்ணியாறு வழியாக, தறியிடத்தில் நின்று சினம் மிகுகின்ற யானையின் தந்தங்களும், கரிய அகிற் கட்டைகளும், கவரிமானின் மயிர்களும் வந்து வந்து வீழ்கின்ற திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற மாணிக்கம் போல் பவனாகிய பெருமானை மறந்து, யான், வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

திருவாழ்கொளிபுத்தூர்

தேனை யாடிய கொன்றையி னானைத்
தேவர் கைதொழுந் தேவர் பிரானை
ஊன மாயின தீர்க்கவல் லானை
ஒற்றை ஏற்றனை நெற்றிக்கண் ணானைக்
கான வானையின் கொம்பினைப் பீழ்ந்த
கள்ளப் பிள்ளைக்குங் காண்பரி தாய
வான நாடனை வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே. **#588**

தேனில் மூழ்கிய கொன்றைமலர் மாலையை உடையவனும், தேவர்கள் வணங்கும் தலையாய தேவனும் குறையாயவற்றை எல்லாம் போக்க வல்லவனும், ஒற்றை எருதை உடையவனும், நெற்றிக்கண்ணை உடையவனும், காட்டில் வாழும் யானையின் கொம்பை ஒடித்த கள்ளத்தன்மையுடைய சிறுவனுக்கும் காண அரிதான பொருளாய் உள்ளவனும், வானுலகத்தில் வாழ்பவனும் ஆகிய திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற மாணிக்கம் போல்பவனாகிய பெருமானை மறந்து, யான், வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

திருவாழ்கொளிபுத்தூர்

காளை யாகி வரையெடுத் தான்றன்
கைக ளிற்றவன் மொய்தலை யெல்லாம்
மூளை போத ஒருவிரல் வைத்த
மூர்த்தி யைமுதல் காண்பரி யானைப்
பாளை தெங்கின் பழம்விழ மண்டிச்
செங்கண் மேதிகள் சேடெறிந் தெங்கும்
வாளை பாய்வயல் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே. **#589**

காளைபோன்று கயிலாயத்தைப் பெயர்த்தவனாகிய இராவணனது கைகள் முரிந்து, நெருங்கிய தலைகளினின்றும் மூளை வெளிப்படுமாறு தனது கால்விரல் ஒன்றை ஊன்றிய கடவுளும், தோற்றம் அறியப்படாதவனும் ஆகிய, பாளையையுடைய தென்னை மரத்தினது நெற்றுக்கள் விழ, சிவந்த கண்களையுடைய எருமைகள், நெருங்கிச் சேறுசெய்ய, எங்கும் வாளை மீன்கள் துள்ளுகின்ற வயல்களையுடைய திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற மாணிக்கம் போல்பவனாகிய பெருமானை மறந்து, யான், வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

திருவாழ்கொளிபுத்தூர்

திருந்த நான்மறை பாடவல் லானைத்
தேவர்க் குந்தெரி தற்கரி யானைப்
பொருந்த மால்விடை ஏறவல் லானைப்
பூதிப் பைபுலித் தோலுடை யானை
இருந்துண் தேரரும் நின்றுணுஞ் சமணும்
ஏச நின்றவன் ஆருயிர்க் கெல்லாம்
மருந்த னான்றனை வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே. **#590**

நான்கு வேதங்களையும் செவ்வனே பாட வல்லவனும், தேவர்க்கும் அறிதற்கு அரியவனும், பெரிய விடையினை ஏற்புடைத்தாமாறு ஏற வல்லவனும், திருநீற்றுப் பையும், புலித் தோலுமாகிய இவற்றையுடையவனும், இருந்து உண்கின்ற சாக்கியரும், நின்று உண்கின்ற சமணரும் இகழ நிற்பவனும், அரிய உயிர்கட்கெல்லாம் அமுதம் போல்பவனும் ஆகிய, திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற மாணிக்கம் போல்பவனாகிய பெருமானை மறந்து, யான், வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

திருவாழ்கொளிபுத்தூர்

மெய்யனை மெய்யில் நின்றுணர் வானை
மெய்யி லாதவர் தங்களுக் கெல்லாம்
பொய்ய னைப்புரம் மூன்றெரித் தானைப்
புனித னைப்புலித் தோலுடை யானைச்
செய்ய னைவெளி யதிரு நீற்றில்
திகழு மேனியன் மான்மறி யேந்தும்
மைகொள் கண்டனை வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே. **#591**

என்றும் ஓர் அழிவில்லாதவனும், மெய்ம்மையில் நின்று உணரப்படுபவனும், அம் மெய்ம்மையை இல்லாதவர்க்கெல்லாம் உணரப்படாதவனும், முப்புரங்களை எரித்தவனும், குற்றமில்லாதவனும், புலித்தோலாகிய உடையை உடையவனும், சிவந்த நிறம் உடையதாய், வெள்ளிய திருநீற்றினால் விளங்குகின்ற திருமேனியை உடையவனும், மான்கன்றை ஏந்துகின்ற, கருமை நிறத்தைக் கொண்ட கண்டத்தையுடையனும் ஆகிய, திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற மாணிக்கம் போல்பவனாகிய பெருமானை மறந்து, யான், வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

திருவாழ்கொளிபுத்தூர்

வளங்கி ளர்பொழில் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேன்என்
றுளங்கு ளிர்தமிழ் ஊரன்வன் றொண்டன்
சடையன் காதலன் வனப்பகை யப்பன்
நலங்கி ளர்வயல் நாவலர் வேந்தன்
நங்கை சிங்கடி தந்தைப யந்த
பலங்கி ளர்தமிழ் பாடவல் லார்மேற்
பறையு மாஞ்செய்த பாவங்கள் தானே. **#592**

வன்றொண்டனும், சடையனார் மகனும், வனப்பகை, சிங்கடி என்னும்

நங்கையர்க்குத் தந்தையும், விளைவு மிகுகின்ற வயல்களையுடைய திருநாவலூரில் உள்ளார்க்குத் தலைவனும், இறைவனை உளங்குளிர்ந்து பாடும் தமிழையுடையவனும் ஆகிய நம்பியாரூரன், 'வளமை மிக்க சோலைகளையுடைய திருவாழ் கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற மாணிக்கம் போல்பவனாகிய பெருமானை மறந்து வேறு எதனை நினைப்பேன்' என்று சொல்லிப் பாடிய, பயன் மிகுந்த இத்தமிழ்ப் பாடல்களைப் பாட வல்லவர்களிடத் தினின்றும், அவர்கள் செய்த பாவங்கள் திண்ணமாகப் பறந்து நீங்கும்.

திருக்கழுமலம்

சீர்காழி

திருக்கழுமலம்,
பண் - தக்கேசி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : பிரமபுரியீசுவரர்.
தேவியார் : திருநிலைநாயகியம்மை.

சாதலும் பிறத்தலுந் தவிர்த்தெனை வகுத்துத்
தன்னருள் தந்தஎம் தலைவனை மலையின்
மாதினை மதித்தங்கொர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்தஎம் மானை
ஏதிலென் மனத்துக்கோர் இரும்புண்ட நீரை
எண்வகை ஒருவனை எங்கள்பி ரானைக்
காதில்வெண் குழையனைக் கடல்கொள மிதந்த
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. **#593**

இவ்வுடம்பின் கால எல்லையில் இதன் கண் நின்று சாதலும், பின்பு வேறோர் உடம்பிற் பிறத்தலும் என்னும் இரண்டனையும் விலக்கி, இவ்வொரு பிறப்பிலே என்னைப் படைத்து, அவ்வாற்றானே இதன்கண் வந்து தனது திருவருளை எனக்கு அளித்தருளியவனும், மலைமங்கையை நன்கு மதித்துத் தன் திருமேனியின் ஒருகூற்றில் வைத்த மாணிக்கம் போல்பவனும், வானினின்றும் வந்த வெள்ளத்தை சடையிடையில் வைத்தருளினவனும், அயலதாகிய என் நெஞ்சிற்கு, அயலாகாது, காய்ந்த இரும்பு கவர்ந்த நீர்போல, உள்ளே கலந்து நிற்பவனும், எட்டுவகைப் பொருளாய் நிற்கும் ஒருவனும், காதில் வெள்ளிய குழையை அணிந்தவனும் ஆகிய எங்கள் தலைவனை, அடியேன், அவன் கயிலையில் வீற்றிருந்தவாறே, ஊழிக்காலத்தில் உலகத்தைக் கடல் கொள்ளவும் தான் கொள்ளப்படாது மிதந்து நின்ற, 'திருக்கழுமலம்' என்னும் இவ்வள நகரிடத்திற் கண்டு கொண்டேன்; அதனால் இனி ஒரு குறையும் இலனாயினேன்.

சீர்காழி

மற்றொரு துணைஇனி மறுமைக்குங் காணேன்
வருந்தலுற் றேன்மற வாவரம் பெற்றேன்
சுற்றிய சுற்றமுந் துணையென்று கருதேன்
துணையென்று நான்தொழப் பட்டஒண் சுடரை
முத்தியும் ஞானமும் வானவ ரறியா

முறைமுறை பலபல நெறிகளுங் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை யடியேன்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. **#594**

சூழ்ந்துள்ள சுற்றத்தாரையும் துணையென்று நினையாது, 'இவனே துணை' என்று தெளந்து, நாள்தோறும் என்னால் வணங்கப்படுகின்ற, ஒளியையுடைய விளக்குப் போல்பவனும், வீடாவதும், ஞானமாவதும், அவற்றை அடைவிப்பனவாய் அமைந்த, தேவராலும் அறியப்படாத அளவற்ற நெறிகளாவனவும் இவை என்பதனைப் படிமுறையானே அறிவித்து, மெய்ப்பொருளை எனக்கு உணர்த்தியருளிய கடவுளும் ஆகிய பெருமானை, அவன் கயிலையில் வீற்றிருந்தவாறே, 'திருக்கழுமலம்' என்னும் இவ்வளநகரிற் கண்டு கொண்டேன்; அதனால், முன்பு அவனை மறந்து வருந்திய யான், இனி ஒருபோதும் அவனை மறவாதிருக்கும் திருவருளைப் பெற்றேன்; ஆகவே, இம்மைக்கேயன்றி மறுமைக்கும் இனி மற்றொரு துணையை நாடேன்.

சீர்காழி

திருத்தினை நகருறை சேந்தனப் பன்னென்
செய்வினை யறுத்திடுஞ் செம்பொனை அம்பொன்
ஒருத்தனை யல்லதிங் காரையு முணரேன்
உணர்வுபெற் றேன்உய்யுங் காரணந் தன்னால்
விருத்தனைப் பாலனைக் கனவிடை விரவி
விழித்தெங்குங் காணமாட் டாதுவிட் டிருந்தேன்
கருத்தனை நிருத்தஞ்செய் காலனை வேலைக்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. **#595**

திருத்தினை நகரின்கண் எழுந்தருளியிருக்கின்ற, முருகக்கடவுட்குத் தந்தையும், என்னுடைய முன்னை வினைகளை யெல்லாம் விலக்குகின்ற, செம்பொன்போலும் சிறப்புடையவனும், அழகிய பொன்போலும் திருமேனியையுடைய ஒப்பற்றவனும் ஆகிய எங்கள் சிவபெருமானையல்லது வேறு யாரையும் யான் இவ்வுலகில் இறைவராக உணரேன்; யான் உய்யுங் காரணங் கூடினமையால் இத்தகைய உணர்வைப் பெற்றேன்; ஆயினும், விருத்தனும், பாலனும் ஆகிய அவனை, யான் கனவில் என் அருகே கண்டு, நனவில் எங்குங் காணமாட்டாது பிரிந்திருந்தேன்; இதுபோழ்து, யாவர்க்கும் தலைவனும், நடனம் புரிகின்ற திருவடிகளையுடையவனும் ஆகிய அவனை, அவன் கயிலையில் வீற்றிருந்தவாறே, கடலை அடுத்துள்ள, 'திருக்கழுமலம்' என்னும் இவ் வளநகரிடத்துக் கண்டுகொண்டேன்; அதனால், இனி அப்பிரிவு இலனாயினேன்.

<u>சீர்காழி</u>

மழைக்கரும் பும்மலர்க் கொன்றையி னானை
வளைக்கலுற் றேன்மற வாமனம் பெற்றேன்
பிழைத்தொரு கால்இனிப் போய்ப்பிற வாமைப்
பெருமைபெற் றேன்பெற்ற தார்பெறு கிற்பார்
குழைக்கருங் கண்டனைக் கண்டுகொள் வானே
பாடுகின் றேன்சென்று கூடவும் வல்லேன்
கழைக்கரும் புங்கத லிப்பல சோலைக்e
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. **#596**

மழையினால் அரும்புகின்ற கொன்றையினது மலரைச் சூடினவனாகிய எங்கள் பெருமானை என்றும் மறவாது நினைக்கின்ற மனத்தைப் பெற்றேனாதலின், யான் அவனைப் புறம் போகவொட்டாது என்னிடத்தே பிணித்துக் கொள்ளுதலைப் பொருந்தினேன்; இனி ஒருபோதும் இந்நிலையினின்றும் தவறி உலகிற் போய்ப் பிறவாத பெருமையைப் பெற்றுவிட்டேன்; யான் பெற்ற இப்பேற்றினை வேறு யார் பெற வல்லார்! இவ்வாறாதலின், அவனை இனியொருகால் இவ்விடத்து யான் நேர்படக் காணாதேயும், இவ்வுடம்பு நீங்கியபின் அவனை அடையவும் வல்லேன்; என்றாலும், அவனைக் காணாது என் நெஞ்சம் அமையாமையின், காதிற் குழையையுடைய நீல கண்டனாகிய அவனை மீளக் காணுதல் வேண்டியே பாடி நிற்கின்றேன்; இந்நிலையில் அவனை, இதுபோழ்து, அவன் கயிலையில் வீற்றிருந்தவாறே, கழைக் கரும்பும், வாழையும் பல சோலையுடன் நிறைந்துள்ள, 'திருக்கழுமலம்' என்னும் இவ்வள நகரிடத்துக் கண்டு கொண்டேன்; இனியொரு குறையும் இலனாயினேன்.

<u>சீர்காழி</u>

குண்டலங் குழைதிகழ் காதனே யென்றுங்
கொடுமழு வாட்படைக் குழகனே யென்றும்
வண்டலம் பும்மலர்க் கொன்றைய னென்றும்
வாய்வெரு வித்தொழு தேன்விதி யாலே
பண்டைநம் பலமன முங்களைந் தொன்றாய்ப்
பசுபதி பதிவின விப்பல நாளுங்
கண்டலங் கழிக்கரை யோதம்வந் துலவுங்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. **#597**

யான், உறக்கத்தில், 'குண்டலமும், குழையும் விளங்குகின்ற காதினை உடையவனே' என்றும், 'கொடிய மழுவாகிய ஒளியையுடைய படையை உடையவனே' என்றும், 'வண்டுகள் ஒலிக்கின்ற கொன்றை மலரைச்

சூடியவனே' என்றும் வாய்பிதற்றி, விழித்த பின், பழக்கமாய் நமக்கு உள்ள பலவாறான மனத்தை ஒழித்து ஒரு நெறிப்பட்ட மனத்தையுடையேனாய், அவனது தலங்களை வினாவி அறிந்து, 'அத்தலத்திற் கிடைப்பான்' என்று எண்ணிப் பல நாளும் சென்று முறைப்படியே வணங்கினேன்; அவ்வாற்றால் வருமிடத்து, தாழைகளையுடைய கழிக்கரையிடத்துக் கடல் அலைகள் வந்து உலவுகின்ற, 'திருக்கழுமலம்' என்னும் இவ் வளநகரிடத்தே அவனை, அவன் கயிலையில் வீற்றிருந்தவாறே கண்டுகொண்டேன்; இனி, அக் குறையிலேனாயினேன்.

சீர்காழி

வரும்பெரு வல்வினை யென்றிருந் தெண்ணி
வருந்தலுற் றேன்மற வாமனம் பெற்றேன்
விரும்பிஎன் மனத்திடை மெய்குளிர்ப் பெய்தி
வேண்டிநின் றேதொழு தேன்விதி யாலே
அரும்பினை அலரினை அமுதினைத் தேனை
ஐயனை அறவன்என் பிறவிவேர் அறுக்குங்
கரும்பினைப் பெருஞ்செந்நெல் நெருங்கிய கழனிக்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. **#598**

'அளவற்ற வலிய வினைகள் வந்து வருத்துமே; என் செய்வது' என்று எண்ணியிருந்து வருந்தினேன்; அங்ஙனம் வருந்தாதபடி எம்பெருமானை மறவாத மனம் வாய்க்கப்பெற்றேன்; அதனால், என் மனத்தால் அவனை விரும்பி, மெய்சிலிர்த்து, என்னை இகழா தொழியுமாறு அவனை இரந்து நின்று, முறைப்படியே வணங்கினேன்; அதனால், அரும்பும், பூவும், அமுதும், தேனும், கரும்பும் போல இன்பம் தருபவனும், யாவர்க்கும் தலைவனும், அறவடிவினனும், எனது பிறவியை வேரோடு அறுப்பவனும் ஆகிய அவனை, அவன் கயிலையில் வீற்றிருந்தவாறே, மிக்க செந்நெல் நிறைந்த வயல்களையுடைய, 'திருக்கழுமலம்' என்னும் இவ் வளநகரிடத்துக் கண்டு கொண்டேன்.

சீர்காழி

அயலவர் பரவவும் அடியவர் தொழவும்
அன்பர்கள் சாயலுள் அடையலுற் றிருந்தேன்
முயல்பவர் பின்சென்று முயல்வலை யானை
படுமென மொழிந்தவர் வழிமுழு தெண்ணிப்
புயலினைத் திருவினைப் பொன்னின தொளியை
மின்னின துருவினை என்னிடைப் பொருளைக்
கயலினஞ் சேலொடு வயல்விளை யாடுங்

கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. **#599**
மேகமும், செல்வமும் போல்பவனும், பொன்னொளியும் மின்னொளியும் போலும் திருமேனியையுடையவனும், என்னிடத்துக் கிடைத்த பொருள் போல்பவனும் ஆகிய எங்கள் பெருமானை யான் அடைய நினைந்து, அதன் பொருட்டுச் சேய்மையில் உள்ளார் அவனைத் துதிக்கவும், அண்மையில் உள்ளார் அவனை வணங்கவும், அவற்றுள் ஒன்றையும் செய்யாது, அவனைத் தங்கள் வன்மையால் அடைய முயல்பவர்கள் பின்னே சென்று, 'முயல் அகப்படும் வலையில் யானை அகப்படும்' என்று சொல்லிய அவர்களது சொல்லைக்கேட்டு, அவ்வழியையே முற்றிலும் கடைப்பிடித்து, அவனிடத்து அன்புடையாரது தோற்றத்தை மேற்கொண்டிருந்தேன்; ஆயினும், எனது முன்னைத் தவத்தால், அவனை, அவன் கயிலையில் வீற்றிருந்தவாறே, கயல் மீன்களும், சேல்மீன்களும் வயலின்கண் விளையாடுகின்ற, 'திருக்கழுமலம்' என்னும் இவ் வளநகரிடத்துக் கண்டுகொண்டேன்; அதனால் எண்ணம் கைகூடப்பெற்றேன்.

சீர்காழி

நினைதரு பாவங்கள் நாசங்க ளாக
நினைந்துமுன் தொழுதெழப் பட்டஒண் சுடரை
மனைதரு மலைமகள் கணவனை வானோர்
மாமணி மாணிக்கத் தைம்மறைப் பொருளைப்
புனைதரு புகழினை எங்கள தொளியை
இருவரும் ஒருவனென் றுணர்வரி யவனைக்
கனைதரு கருங்கட லோதம்வந் துலவுங்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. **#600**

நினைத்து உணரப்படும் கருத்துப் பொருள்களாகிய பாவங்கள் அழிதல் உளவாகும்படி, யான், மனத்தால் நினைந்தும், கையால் தொழுதும் எழப்பட்ட, ஒளி பொருந்திய ஞாயிறு போல்பவனும், தனக்கு மனைவியைத் தர விரும்பிய மலைக்கு மகளாகிய உமைக்குக் கணவனும், தேவர்களது தலைமணியாகிய மாணிக்கம் போல்பவனும், வேதத்தின் பொருளாய் உள்ளவனும், அழகியவாகச் சொல்லப்படுகின்ற புகழை உடையவனும், எங்கள் விளக்குப் போல்பவனும், மாலும் அயனும், 'இன்னன்' என்று அறிதற்கு அரியவனும் ஆகிய இறைவனை, அடியேன், அவன் கயிலையில் வீற்றிருந்தவாறே, ஒலிக்கின்ற கரிய கடலினது அலைகள் வந்து உலவுகின்ற, 'திருக்கழுமலம்' என்னும் இவ் வளநகரிடத்துக் கண்டுகொண்டேன்.

சீர்காழி

மறையிடைத் துணிந்தவர் மனையிடை யிருப்ப
வஞ்சனை செய்தவர் பொய்கையுள் மாயத்
துறையுறக் குளித்துள தாகவைத் துய்த்த
துன்மை யெனுந்தக வின்மையை யோரேன்
பிறையுடைச் சடையனை எங்கள்பி ரானைப்
பேரரு ளாளனைக் காரிருள் போன்ற
கறையணி மிடறுடை யடிகளை அடியேன்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. **#601**

வேள்வி முதலிய கருமங்களையே மெய்யென்று துணிந்தவர்கள் பற்றுவிடமாட்டாது மனைவாழ்க்கையிலே கட்டுண்டு கிடத்தலும், முற்றத் துறந்தவர்போலக் காட்டினோரது பொய்யாகிய தவங்கள் ஏனையோரது முயற்சிகளோடொப்பக் கடிதில் அழிந்து போதலும் கண்கூடாய் இருக்க, அவற்றை மேற்கொண்டவர்கள், தாம் சேற்றில் அழுந்தியிருத்தலை அறியாது, நல்ல நீர்த்துறையிலே நன்கு மூழ்கியிருப்பதாகக் கருதி, பிறரையும் தம் வழியிலே செல்லக் காட்டிய தீநெறியாகிய பொருந்தா நெறியை, யான் பொருட்படுத்தாது வந்து, பிறையை யுடைய சடையை உடையவனும், எங்கள் தலைவனும், கருணையை மிக உடையவனும், ஆகிய சிவபெருமானை அடியேன், அவன் கயிலையில் வீற்றிருந்தவாறே, 'திருக்கழுமலம்' என்னும் இவ்வளநகரிடத்துக் கண்டுகொண்டேன்.

<u>சீர்காழி</u>

செழுமலர்க் கொன்றையுங் கூவிள மலரும்
விரவிய சடைமுடி யடிகளை நினைந்திட்
டழுமலர்க் கண்ணிணை அடியவர்க் கல்லால்
அறிவரி தவன்றிரு வடியிணை யிரண்டுங்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டூரன்
சடையன்றன் காதலன் பாடிய பத்துந்
தொழுமல ரெடுத்தகை அடியவர் தம்மைத்
துன்பமும் இடும்பையுஞ் சூழகி லாவே. **#602**

செழுமையான கொன்றையினது மலரும், வில்வ இலையாகிய மலரும் கலந்துள்ள சடைமுடியையுடைய தலைவனை நினைந்து, அன்பினால் அழுகின்ற மலர்போலும் கண்ணிணையுடைய அடியார்க்கல்லது அறிதற்கரிய இணையாகிய அவன் திருவடிகள் இரண்டினையும், 'திருக்கழுமலம்' என்னும் இவ் வளநகரிடத்துக் கண்டுகொண்டு, சடையனார்க்கு மகனாகிய நம்பியாரூரன் பாடிய இப்பத்துப் பாடல்களாலும் தொழுகின்ற, மலரைத் தாங்கிய கைகளையுடைய

அடியார்களை, துன்பமும், இடும்பையும் அணுகமாட்டா.

திருவாரூர்

திருவாரூர்

திருவாரூர்,
பண் - தக்கேசி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வன்மீகநாதர்.
தேவியார் : அல்லியங்கோதையம்மை.

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலு மாமே. **#603**

எனக்குப் பொன்னையும், மெய்யுணர்வையும், வழங்குபவனும், அவை வாயிலாக உலகின்பத்தையும், வீட்டின்பத்தையும் சேர்ப்பிக்கின்றவனும், அதன்பின் யான் அவ்வின்பங்களை நுகரும்பொழுது செய்கின்ற பிழைகளைப் பொறுத்துக்கொள்பவனும், பின்னர்ப் பிழைகளே வாராதவாறு அருள்செய்பவனும், இன்ன தன்மையை உடையவன் என்று வரையறுத்து உணர ஒண்ணாத எங்கள் தலைவனும், எனக்கு எளிவந்த பெருமானும் ஆகிய, அன்னங்கள் தங்கியுள்ள வயல்களை யுடைய பண்ணைகளையுடைய அழகிய திருவாரூர் இறைவனை யான் மறத்தலும் இயலுமோ!

திருவாரூர்

கட்ட மும்பிணி யுங்களை வானைக்
காலற் சீறிய காலுடை யானை
விட்ட வேட்கைவெந் நோய்களை வானை
விரவி னால்விடு தற்கரி யானைப்
பட்ட வார்த்தை படநின்ற வார்த்தை
வாரா மேதவி ரப்பணிப் பானை
அட்ட மூர்த்தியை மட்டவிழ் சோலை
ஆரூ ரானை மறக்கலு மாமே. **#604**

மனத்துன்பத்தையும் உடல்நோயையும் ஒழிக்கின்றவனும், கூற்றுவனை அழித்த காலை உடையவனும், துறக்கப்பட்ட ஆசை மீள வந்து

எழுதலாகிய கொடிய துன்பத்தைப் போக்குபவனும், கூடினால் பின்பு பிரிதற்கு இயலாதவனும், வந்த பழிச் சொல்லும், வரக் கடவ பழிச்சொல்லும் வாராது ஒழியும்படி அருள்செய்பவனும், அட்ட மூர்த்தங்களை யுடையவனும் ஆகிய, மலர்கள் தேனோடு மலர்கின்ற சோலைகளையுடைய திருவாரூர் இறைவனை யான் மறத்தலும் இயலுமோ!

திருவாரூர்

கார்க்குன் றமழை யாய்ப்பொழி வானைக்
கலைக்கெ லாம்பொரு ளாய்உடன் கூடிப்
பார்க்கின் றஉயிர்க் குப்பரிந் தானைப்
பகலுங் கங்குலு மாகிநின் றானை
ஓர்க்கின் றசெவி யைச்சுவை தன்னை
யுணரும் நாவினைக் காண்கின்ற கண்ணை
ஆர்க்கின் றகட லைமலை தன்னை
ஆரூ ரானை மறக்கலு மாமே. **#605**

மேகங்களையுடைய மலைமேல் மழையாய் நின்று பொழிபவனும், நூல்களுக்கெல்லாம் பொருளாய் அவற்றுட் பொருந்தி நின்று, காணப்படுகின்ற உயிர்களுக்கு இரங்குகின்றவனும், பகலாகியும் இரவாகியும் இருப்பவனும், ஓசையைக் கேட்கின்ற செவியாகியும், சுவையை உணர்கின்ற நாவாகியும், உருவத்தைக் காண்கின்ற கண்ணாகியும், ஒலிக்கின்ற கடலாகியும், மலையாகியும் உள்ள திருவாரூர் இறைவனை யான் மறத்தலும் இயலுமோ!

திருவாரூர்

செத்த போதினில் முன்னின்று நம்மைச்
சிலர்கள் கூடிச் சிரிப்பதன் முன்னம்
வைத்த சிந்தையுண் டேமன முண்டே
மதியுண் டேவிதி யின்பய னுண்டே.
முத்தன் எங்கள்பி ரானென்று வானோர்
தொழநின் றதிமில் ஏறுடை யானை
அத்தன் எந்தைபி ரான்எம்பி ரானை
ஆரூ ரானை மறக்கலு மாமே. **#606**

நாம் செத்தபொழுது சிலர் வந்து கூடி நம்மை இகழ்வதற்கு முன்னே, நமக்கு இறைவன் கொடுத்த கருத்து உளதன்றோ! நெஞ்சு உளதன்றோ! அறிவு உளதன்றோ! நாம் செய்த புண்ணியத்தின் பயன் உளதன்றோ! அவற்றால் தேவர்கள், 'இயல்பாகவே பாசம் இல்லாதவன்' என்றும், 'எங்கள் தலைவன்' என்றும் வணங்க நிற்கின்ற, முதுகில் திமிலையுடைய

எருதையுடையவனும், யாவர்க்கும் தந்தையும், என் தந்தைக்குத் தலைவனும், எமக்குத் தலைவனும் ஆகிய திருவாரூர் இறைவனை நாம் நினையாது மறத்தலும் இயலுமோ!

திருவாரூர்

செறிவுண் டேல்மனத் தால்தெள வுண்டேல்
தேற்றத் தால்வருஞ் சிக்கன வுண்டேல்
மறிவுண் டேல்மறு மைப்பிறப் புண்டேல்
வாணாள் மேற்செல்லும் வஞ்சனை யுண்டேல்
பொறிவண் டியாழ்செய்யும் பொன்மலர்க் கொன்றை
பொன்போ லுஞ்சடை மேற்புனைந் தானை
அறிவுண் டேஉட லத்துயி ருண்டே
ஆரூ ரானை மறக்கலு மாமே. **#607**

நன்மையைத்தரும் கல்வியும், அதன்பயனாகிய உள்ளத்தெளவும், அதன்பயனாகிய இறைவன் பற்றும் நமக்கு உள்ளன என்றால், அவற்றோடே இறப்பும், மறுபிறப்பும், வாழ்நாளை இடைமுரியச் செய்கின்ற தீங்குகளும் உள்ளன என்றால், இவற்றையெல்லாம் அறிகின்ற அறிவும். அவ்வறிவின்வழியே ஒழுகுதற்கு உயிர் உடம்பில் நிற்றலும் உள்ளனவாதலின், புள்ளிகளையுடைய வண்டுகள் யாழின் இசைபோல ஒலிக்கின்ற, பொன்போலும் கொன்றை மலர்க் கண்ணியை, பொன்போலும் சடைமேற் சூடிய திருவாரூர் இறைவனை நாம் மறத்தலும் இயலுமோ!

திருவாரூர்

பொள்ளல் இவ்வுட லைப்பொரு ளென்று
பொருளுஞ் சுற்றமும் போகமு மாகி
மெள்ள நின்றவர் செய்வன வெல்லாம்
வாரா மேதவிர்க் கும்விதி யானை
வள்ளல் எந்தமக் கேதுணை யென்று
நாணா ளும்அம ரர்தொழு தேத்தும்
அள்ள லங்கழ னிப்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலு மாமே. **#608**

எங்கும் பொள்ளல்களாய் உள்ள இவ்வுடம்பை உறுதி என்று கொண்டு, செல்வமும், படைகளும், இன்பமுமாய் நிற்கின்றவர்கள் செய்கின்ற மயக்கங்களையெல்லாம் நம்மிடத்து வாராதவாறு விலக்குகின்ற, நன்னெறியாய் உள்ளவனாகிய, தேவர்கள் நாள்தோறும், 'வள்ளல்' என்றும், 'எங்களுக்குத் துணை' என்றும் சொல்லித் துதிக்கின்ற, சேற்றையுடைய கழனிகளையுடைய பண்ணையிடத்ததாகிய அழகிய

திருவாரூர் இறைவனை யான் மறத்தலும் இயலுமோ!

திருவாரூர்

கரியா னைஉரி கொண்டகை யானைக்
கண்ணின் மேல்ஒரு கண்ணுடை யானை
வரியா னைவருத் தம்களை வானை
மறையா னைக்குறை மாமதி சூடற்
குரியா னைஉல கத்துயிர்க் கெல்லாம்
ஒளியா னைஉகந் துள்கிநண் ணாதார்க்
கரியா னைஅடி யேற்கெளி யானை
ஆரூ ரானை மறக்கலு மாமே. **#609**

கையையுடையதாகிய யானையினது தோலை உரித்த கையை உடையவனும், இரண்டு கண்களுக்கு மேலாக மற்றொரு கண்ணையுடையவனும், அழகையுடையவனும், அடைந்தாரது வருத்தங்களைப் போக்குபவனும், வேதத்தை உடையவனும், சிறந்த பிறையைச் சூடுதற்கு உரியவனும், உலகத்தில் உள்ள உயிர்கட்கெல்லாம் விளக்காய் உள்ளவனும். தன்னை விரும்பி நினைந்து அடையாதவர்கட்கு அரியவனும், அடியேற்கு எளியவனும் ஆகிய திருவாரூர் இறைவனை யான் மறத்தலும் இயலுமோ!

திருவாரூர்

வாளா நின்று தொழும்அடி யார்கள்
வானா ளப்பெறும் வார்த்தையைக் கேட்டும்
நாணா ளும்மல ரிட்டுவ ணங்கார்
நம்மையாள் கின்ற தன்மையை ஓரார்
கேளா நான்கிடந் தேஉழைக் கின்றேன்
கிளைக்கெ லாந்துணை யாமெனக் கருதி
ஆளா வான்பலர் முன்பழைக் கின்றேன்
ஆரூ ரானை மறக்கலு மாமே. **#610**

யாதும் வருந்தாமலே நின்று வணங்குகின்ற அவன் அடியார்கள் வானுலகத்தை ஆளுதலாகிய பெருஞ்செல்வத்தைப் பெற்று விடுகின்ற செய்தியைக் கேட்டபின்பும், சிலர், அவனை நாள்தோறும் மலர் தூவி வணங்குகின்றிலர். அங்ஙனம் வணங்குகின்ற நம்மை அவன் இம்மையிலேயே நன்கு புரத்தலையும் அறிகின்றாரிலர். ஆயினும், யான், எனக்கேயன்றி என் கிளைகளுக்கும் அவன் துணையாவான் என்று கருதி, அவனையே உறவாகக் கொண்டு, அவனுக்குப் பணிபுரிந்து நிற்கின்றேன்; அன்றியும், பலரையும் அவனுக்கு ஆளாகுமாறு முன் நின்று அழைக்கின்றேன்; ஆதலின், யான் அவனை மறத்தலும்

இயலுமோ!

திருவாரூர்

விடக்கை யேபெருக் கிப்பல நாளும்
வேட்கை யாற்பட்ட வேதனை தன்னைக்
கடக்கிலேன்நெறி காணவு மாட்டேன்
கண்கு ழிந்திரப் பார்கையில் ஒன்றும்
இடக்கி லேன்பர வைத்திரைக் கங்கைச்
சடையா னைஉமை யாளையோர் பாகத்
தடக்கி னானைஅந் தாமரைப் பொய்கை
ஆரூ ரானை மறக்கலு மாமே. **#611**

எல்லா நாள்களிலும் ஊனைப் பெருக்கவே முயன்று, அது காரணமாக எழுந்த ஆசையால் உளதாகிய துன்பத்தைக் கடக்கமாட்டாமலும், கடந்து நன்னெறியை உணரமாட்டாமலும், பசியால் கண்குழிந்து வந்து இரப்பவர் கையில் ஒன்றையும் இட மாட்டாமலும் உள்ள யான், பரத்தலையுடைய அலைகளைக் கொண்ட கங்கையாகிய நீரையுடைய சடையை யுடையவனும், உமையாளைத் தனது திருமேனியின் ஒரு பாகத்தில் அடக்கினவனும் ஆகிய, அழகிய தாமரைப் பொய்கைகளையுடைய தாமரைப் பொய்கைகளையுடைய திருவாரூர் இறைவனை யான் மறத்தலும் இயலுமோ!

திருவாரூர்

ஒட்டி ஆட்கொண்டு போயொளித் திட்ட
உச்சிப் போதனை நச்சர வார்த்த
பட்டி யைப்பக லையிருள் தன்னைப்
பாவிப் பார்மனத் தூறும்அத் தேனைக்
கட்டி யைக்கரும் பின்தௌ தன்னைக்
காத லாற்கடற் சூர்தடிந் திட்ட
செட்டி அப்பனைப் பட்டனைச் செல்வ
ஆரூ ரானை மறக்கலு மாமே. **#612**

என்னை, வழக்கிட்டு ஆட்கொண்டு அதன்பின் கோயிலுள் சென்று மறைந்த, நண்பகற் போது போலும் ஒளியுடையவனும், நஞ்சையுடைய பாம்பைக் கட்டியுள்ள உடையை உடையவனும், பகலாயும் இரவாயும் உள்ளவனும், தன்னை நினைப்பவரது உள்ளமாகிய தாமரையில் ஊறுகின்ற தேனாய் உள்ளவனும், கரும்பின் சாறும் அதன்கட்டியும் போல்பவனும், தேவர்மீது வைத்த அன்பினால், கடலில் மாமரமாய் நின்ற சூரனை அழித்த முருகனுக்குத் தந்தையும், வேதத்தில் வல்லவனும் ஆகிய, செல்வத்தையுடைய திருவாரூர் இறைவனை, யான் மறத்தலும்

இயலுமோ!

<u>திருவாரூர்</u>

ஓரூர் என்றுல கங்களுக் கெல்லாம்
உரைக்க லாம்பொரு ளாய்உடன் கூடிக்
காரூ ருங்கமழ் கொன்றைநன் மாலை
முடியன் காரிகை காரண மாக
ஆரூ ரைம்மறத் தற்கரி யானை
அம்மான் றன்திருப் பேர்கொண்ட தொண்டன்
ஆரூ ரன்னடி நாயுரை வல்லார்
அமர லோகத் திருப்பவர் தாமே. **#613**

'பரவை' என்பவள் முன்னிலையாக, எல்லா உலகங்கட்கும் தலைமையுடைய ஓர் ஊர் என்று சொல்லத் தக்க ஊராய், தான் அவளுடன் கூடி வாழ்ந்து மறத்தற்கியலாததாய் அமைந்துவிட்ட திருவாரூர் இறைவனை, கார் காலத்தில் பூக்கின்ற, மணங்கமழுங் கொன்றைமாலையை அணிந்த முடியையுடையவனாகிய அப்பெருமானது திருப்பெயரைக் கொண்ட அவன் அடிக்கீழ்க் கிடக்கும் நாய் போலும் தொண்டனாகிய நம்பியாரூரன் பாடிய இப்பதிகத்தைப் பாட வல்லவர், அமரலோகத்தில் வாழ்பவராதல் திண்ணம்.

திருவிடைமருதூர்

திருவிடைமருதூர்

திருவிடைமருதூர்,
பண் - தக்கேசி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மருதீசுவரர்.
தேவியார் : நலமுலைநாயகியம்மை.

கழுதை குங்குமந் தான்சுமந் தெய்த்தாற்
கைப்பர் பாழ்புக மற்றது போலப்
பழுது நானுழன் றுள்தடு மாறிப்
படுசு ழித்தலைப் பட்டனன் எந்தாய்
அழுது நீயிருந் தென்செய்தி மனனே
அங்க ணாஅர னேயென மாட்டா
இழுதை யேனுக்கொர் உய்வகை யருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே. **#614**

என் அப்பனே, திருவிடைமருதூரில் எழுந்தருளி யிருக்கின்ற எம் குலதேவனே, கழுதையானது குங்குமப் பொதியைச் சுமந்து மெய்வருந்தினால், அதனால் சிறப்பொன்றும் இல்லாமை கருதி, அனைவரும் நகைப்பர்; அது போல, அடியேன் உன் தொண்டினை மேற்கொண்டு அதன் மெய்ப்பயனைப் பெறாமல் மனந்தடுமாறி, வெள்ளத்தில் உண்டாகின்ற சுழியிடை அகப்பட்டவன் போல, இவ்வுலக வாழ்க்கையில் அலமருவேனாயினேன்; 'மனமே, நீ நம் இறைவனுக்கு மெய்த்தொண்டு செய்யாது கவலைப்பட்டிருந்து என்ன பெறப் போகின்றாய்' என்று நெஞ்சிற்கு அறிவுறுக்கவும், 'அங்கணனே, அரனே' என்று உன்னை அன்பினால் துதிக்கவும் மாட்டாத அறிவில்லேனாகிய எனக்கு, நீ, மனம் இரங்கி, உய்யும் நெறியொன்றை வழங்கியருளாய்.

திருவிடைமருதூர்

நரைப்பு மூப்பொடு பிணிவரும் இன்னே
நன்றி யில்வினை யேதுணிந் தெய்த்தேன்
அரைத்த மஞ்சள தாவதை யறிந்தேன்
அஞ்சி னேன்நம னாரவர் தம்மை
உரைப்பன் நானுன சேவடி சேர
உணரும் வாழ்க்கையை ஒன்றறி யாத
இரைப்ப னேனுக்கொர் உய்வகை யருளாய்

இடைம ருதுறை யெந்தைபி ரானே. #615
திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கின்ற எம் குலதேவனே, நரையும் மூப்பும் பிணியும் இப்பொழுதே வரும்; அவற்றால் இவ்வுடம்பு, அரைக்கப்பட்ட மஞ்சள் போல அழகிழந் தொழிவதாம்; இவற்றை அறிந்தேனாயினும், நன்மை இல்லாத செயல்களையே பற்றாகத் துணிந்துசெய்து இளைத்தேன். அதனால், கூற்றுவனுக்கு அஞ்சுதல் உடையனாயினேன்; ஆகவே, இதுபோழ்து நான் உன் திருவடிகளை அடைய உன்னை வேண்டுவேனாயினேன்; அறிவது அறிந்து வாழும் வாழ்க்கையைச் சிறிதும் அறியாத, ஆரவாரச் சொற்களையுடையேனாகிய எனக்கு. நீ, உய்யும் நெறியொன்றை வழங்கியருளாய்.

திருவிடைமருதூர்

புன்னு னைப்பனி வெங்கதிர் கண்டாற்
போலும் வாழ்க்கை பொருளிலை நாளும்
என்னெ னக்கினி இற்றைக்கு நாளை
என்றி ருந்திட ருற்றனன் எந்தாய்
முன்ன மேஉன சேவடி சேரா
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
இன்னம் என்றனக் குய்வகை யருளாய்
இடைம ருதுறை யெந்தைபி ரானே. #616
என் தந்தையே, திருவிடைமருதூரில் எழுந்தருளி யிருக்கின்ற எம் குலதேவனே, புல்லின் நுனியில் உள்ள பனித்துளி, வெவ்வியவாகிய கிரணங்களையுடைய பகலவனை எதிர்ப்பட்டாற் போல்வதாகிய இம்மானுட வாழ்க்கை ஒரு பொருளாதல் இல்லை; ஏனெனில், 'இன்றைக்கு இன்பம் உளதாகும்; நாளைக்கு இன்பம் உளதாகும்' என்று நாள்தோறும் நினைந்து ஏமாறினேன்; இனிமேற்றான், எனக்கு என்ன உண்டாக இருக்கின்றது! ஆதலால், முன்பே உன்னுடைய செவ்விய திருவடியைச் சேர விரும்பாது, கொண்டது விடாத மூர்க்கனான நிலையிலே காலமெல்லாம் போய்விட்டன; இப்பொழுதே எனக்கு நீ, உய்யும் நெறியொன்றை வழங்கியருளாய்.

திருவிடைமருதூர்

முந்திச் செய்வினை இம்மைக்கண் நலிய
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
சிந்தித் தேமனம் வைக்கவு மாட்டேன்
சிறுச்சிறி தேஇரப் பார்கட்கொன் றீயேன்
அந்தி வெண்பிறை சூடும்எம் மானே

ஆரூர் மேவிய அமரர்கள் தலைவா
எந்தை நீஎனக் குய்வகை யருளாய்
இடைம ருதுறை யெந்தைபி ரானே. **#617**

மாலைக்காலத்தில் தோன்றுகின்ற பிறையைச் சூடியவனே, திருவாரூரில் இருக்கும் தேவர் தலைவனே, என் தந்தையே திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கின்ற எம் குலதேவனே, முற்பிறப்பிற் செய்த வினைகள் இப்பிறப்பில் வந்து துன்புறுத்துதலினால், அவற்றின் வயப்பட்டு மூர்க்கனாகி நிற்றலிலே காலமெல்லாம் போயின; நன்மை தீமைகளைச் சிந்தித்து, உலகப்பற்றை அகற்றி உன்னை மனத்தில் இருத்தவும் மாட்டாதேனாயினேன்; உலகியலிலும், இரப்பவர்கட்கு அவர் விரும்பியதொன்றை ஒரு சிறிது ஈதலும் செய்திலேன்; எனக்கு, நீ. உய்யும் நெறியை வழங்கியருளாய்.

<u>திருவிடைமருதூர்</u>

அழிப்பர் ஐவர் புரவுடை யார்கள்
ஐவ ரும்புர வாசற ஆண்டு
கழித்துக் காற்பெய்து போயின பின்னைக்
கடைமு றைஉனக் கேபொறை யானேன்
விழித்துக் கண்டனன் மெய்ப்பொருள் தன்னை
வேண்டேன் மானுட வாழக்கைஈ தாகில்
இழித்தெ னென்றனக் குய்வகை யருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே. **#618**

திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கின்ற எம் குலதேவனே, நன்மைகளையெல்லாம் அழிப்பவராகிய ஓர் ஐவர் என்னை ஆளுதலுடையர்; அவ் வைவரும் என்னை ஆளுதலை நன்றாகச் செய்து, 'இனி இவனாற் பயனில்லை' என்று கழித்து, என்னைத் தங்கள் காற்கீழ்ப் போகட்டுப் போய்விட்ட பின்பு. முடிவில் உனக்கே நான் சுமையாயினேன்; அதன்பின்பே நான் விழிப்படைந்து, உண்மையை உணர்ந்தேன்; மானுடவாழ்க்கைதான் இத்தன்மையதேயென்றால், இனி இதனை யான் விரும்பேன்; இதனை மிக்க இழிவுடையதாக உணர்ந்துவிட்டேன்; எனக்கு, நீ, உய்யும் நெறியொன்றை வழங்கியருளாய்.

<u>திருவிடைமருதூர்</u>

குற்றந் தன்னொடு குணம்பல பெருக்கிக்
கோல நுண்ணிடை யாரொடு மயங்கிக்
கற்றி லேன்கலை கள்பல ஞானங்
கடிய வாயின கொடுமைகள் செய்தேன்

பற்ற லாவதோர் பற்றுமற் றில்லேன்
பாவி யேன்பல பாவங்கள் செய்தேன்
எற்று ளேன்எனக் குய்வகை யருளாய்
இடைம ருதுறை யெந்தைபி ரானே. #619

திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கின்ற எம் குலதேவனே, யான், அழகிய, நுண்ணிய இடையினையுடைய மகளிரோடு கூடி மயங்கி நின்று, தீவினையும் நல்வினையுமாகிய இருவினைகளை மிகுதியாகச் செய்தும், மெய்ந்நூல்கள் பலவற்றிற் புகுந்து ஞானத்தை யுணராதும் மிகவுங் கொடுமையான செயல்களைச் செய்தேன்; அதனால், பற்றத் தக்கதொரு பற்றுக்கோடு இலனாயினேன்; இவ்வாறு பலவாகிய பாவங்களைச் செய்து பாவியாகிய யான், எதன் பொருட்டு உயிர்வாழ்கின்றேன்! எனக்கு, நீ, உய்யும் நெறியொன்றை வழங்கியருளாய்.

திருவிடைமருதூர்

கொடுக்க கிற்றிலேன் ஒண்பொருள் தன்னைக்
குற்றஞ் செற்ற மிவைமுத லாக
விடுக்க கிற்றிலேன் வேட்கையுஞ் சினமும்
வேண்டில் ஐம்புலன் என்வச மல்ல
நடுக்க முற்றதோர் மூப்புவந் தெய்த
நமன்த மர்நர கத்திடல் அஞ்சி
இடுக்க ணுற்றனன் உய்வகை யருளாய்
இடைம ருதுறை யெந்தைபி ரானே. #620

திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கின்ற எம் குலதேவனே, ஈகை வழியாகப் புகழைத் தரத்தக்க பொருளை, உலோபமும், பகைமையும் காரணமாகப் பிறருக்குயான் கொடுக்க மாட்டேன்; ஆசையும், கோபமும் ஆகிய இவைகளை ஒழிக்கமாட்டேன்; ஐம்புலன்கள்மேற் செல்கின்ற ஆசைகளை விடநினைத்தால், யான் அவற்றின் வயத்தேனல்லது, அவை என் வயத்தன அல்ல; அதனால், உடல் நடுங்குதல் பொருந்தியதாகிய, 'மூப்பு' என்பதொன்று வந்து அடைய, அப்போது இயமனது ஏவலர் என்னைக் கொண்டு சென்று நரகத்தில் இடுதலை நினைத்து அஞ்சித் துன்புறுவேனாயினேன்; எனக்கு, நீ, உய்யும் நெறியொன்றை வழங்கி யருளாய்.

திருவிடைமருதூர்

ஐவ கைஅரை யர்அவர் ஆகி
ஆட்சி கொண்டொரு கால்அவர் நீங்கார்
அவ்வ கைஅவர் வேண்டுவ தானால்

அவர வர்வழி யொழுகிநான் வந்து
செய்வ கையறி யேன்சிவ லோகா
தீவ ணாசிவ னேஎரி யாடீ
எவ்வ கைஎனக் குய்வகை யருளாய்
இடைம ருதுறை யெந்தைபி ரானே. **#621**

சிவலோகத்திற்குத் தலைவனே, நெருப்புப் போலும் நிறம் உடையவனே, சிவபெருமானே, தீயோடு நின்று ஆடுபவனே, திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கின்ற எம் குலதேவனே, ஐவர் வேறுபட்ட தன்மையையுடைய அரசராய் என்னை ஆட்சி கொண்டு ஒருகாலும் விட்டு நீங்காதிருக்கின்றனர். அவ்வாறு ஆவர், தாம் தாம் வேறு வேறுவகையில் என்னை ஆள விரும்பினால், யான் அவர் வழியே அவர் வேண்டுமாற்றிலெல்லாம் சென்று நடந்து, செய்வது இன்னது என்று அறிகின்றிலேன்; எனக்கு உய்யும் நெறியாவது எந்நெறி? அதனை வழங்கியருளாய்.

திருவிடைமருதூர்

ஏழை மானுட வின்பினை நோக்கி
இளைய வர்வலைப் பட்டிருந் தின்னம்
வாழை தான்பழுக் குந்நமக் கென்று
வஞ்ச வல்வினை யுள்வலைப் பட்டுக்
கூழை மாந்தர்தஞ் செல்கதிப் பக்கம்
போத மும்பொரு ளொன்றறி யாத
ஏழை யேனுக்கோர் உய்வகை யருளாய்
இடைம ருதுறை யெந்தைபி ரானே. **#622**

திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கின்ற எம் குலதேவனே, அறிவில்லாத, மானுட இன்பத்தைக் கருதி, முன்னர்ப்பழத்தைத் தந்த வாழை, இனியும் நமக்கு அவ்வாறே தரும் என்று கருதுவாரைப் போல, இளமையுடையராய் இன்பம் தந்த மகளிர் என்றும் இவ்வாறே இருந்து இன்பம் தருவர் என்று கருதும் மயக்கமாகிய வலையுள் அகப்பட்டு, அதனானே, வஞ்சனையையுடைய வலிய வினையென்னும் வலையிலும் அகப்பட்டு, அறிவு முதிராத பொது மக்கள் செல்லும் வழியிடத்து நின்று, அறிவின் இயல்பையும், அதற்குப் புலனாய் நிற்கும் பொருளின் இயல்பையும் சிறிதும் அறியாத எளியேனுக்கு, உய்யும் நெறியொன்றை வழங்கியருளாய்.

திருவிடைமருதூர்

அரைக்குஞ் சந்தனத் தோடகில் உந்தி
ஐவ னஞ்சுமந் தார்ந்திரு பாலும்

இரைக்குங் காவிரித் தென்கரை தன்மேல்
இடைம ருதுறை எந்தைபி ரானை
உரைக்கும் ஊரன் ஒளிதிகழ் மாலை
உள்ளத் தால்உகந் தேத்தவல் லார்கள்
நரைப்பு மூப்பொடு நடலையு மின்றி
நாதன் சேவடி நண்ணுவர் தாமே. **#623**

அரைக்கப்படுகின்ற சந்தனக் கட்டையையும், அகிற் கட்டையையும் இருமருங்கும் தள்ளிக்கொண்டு, மலை நெல்லைத் தாளோடு மேல்இட்டுக்கொண்டு, நிறைந்து ஒலிக்கின்ற காவிரியாற்றின் தென்கரைமேல் உள்ள திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கின்ற எம் குலதேவனாகிய பெருமானைப் பாடிய, நம்பி யாரூரனாகிய எனது உணர்வு மிக்க இப்பாடல்களை, மனத்தால் விரும்பிப் பாட வல்லவர்கள், நரைத்தலும், மூத்தலும், இறத்தலும் இன்றி அவ்விறைவனது செவ்விய திருவடிகளை அடைவர்; இது திண்ணம்.

திருவேகம்பம்

திருஏகம்பம்

திருவேகம்பம்,
பண் - தக்கேசி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. இது திருவிளம்பூதூரென்று வழங்குகிறது. ,
சுவாமிபெயர் : ஏகாம்பரநாதர்.
தேவியார் : காமாட்சியம்மை.

ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. **#624**

நஞ்சினைத் தான் விரும்பி உண்டு, அமுதத்தைத் தேவர்களுக்கு உரியதாக்கியவனும், யாவர்க்கும், முதல்வனும், தேவர்கள் வணங்கித் துதிக்கின்ற பெருமையை மிக உடையவனும், தன்னை நினைப்பவரது நினைவில் விளங்குபவனும், மயிர்ச்சாந்து அணிந்த நீண்ட கூந்தலையுடையவளாகிய, 'உமை' என்னும் நங்கை, தான் எந்நாளும் துதித்து வழிபடுதலைப் பெற்றமைக்கு முதல்வனும், காலகாலனும் ஆகிய, திருவேகம்பத்தில் உள்ள எம் பெருமானைக் காணுதற்கு அடியேன், கண் பெற்றவாறு, வியப்பு!

திருஏகம்பம்

உற்ற வர்க்குத வும்பெரு மானை
ஊர்வ தொன்றுடை யான்உம்பர் கோனைப்
பற்றி னார்க்கென்றும் பற்றவன் றன்னைப்
பாவிப் பார்மனம் பாவிக்கொண் டானை
அற்ற மில்புக ழாள் உமை நங்கை
ஆத ரித்து வழிபடப் பெற்ற
கற்றை வார்சடைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. **#625**

தன்னைப் புகலிடமாக அடைந்தவர்க்கு நலம் செய்கின்ற பெருமானும், ஊர்தி எருதாகிய ஒன்றை உடையவனும், தேவர்கட்குத் தலைவனும்,

தன்னை விடாது பற்றினவர்க்கு, பெரிய பற்றுக்கோடாய் நிற்பவனும், தன்னை நினைப்பவரது மனத்தில் பரவி நின்று, அதனைத் தன் இடமாகக் கொண்டவனும் ஆகிய, அழிவில்லாத புகழையுடையவளாகிய, 'உமை' என்னும் நங்கை விரும்பி வழிபடப் பெற்ற, கற்றையான நீண்ட சடையையுடைய, திருவேகம்பத்தில் உள்ள எம்பெருமானைக் காணுதற்கு, அடியேன், கண் பெற்றவாறு, வியப்பு.

திருஏகம்பம்

திரியும் முப்புரந் தீப்பிழம் பாகச்
செங்கண் மால்விடை மேல்திகழ் வானைக்
கரியின் ஈருரி போர்த்துகந் தானைக்
காம னைக்கன லாவிழித் தானை
வரிகொள் வெள்வளை யாள்உமை நங்கை
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
பெரிய கம்பனை எங்கள்பி ரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. **#626**

வானத்தில் திரிகின்ற முப்புரங்கள் தீப்பிழம்பாய் எரிந்தொழியுமாறு செய்து, அக்காலை, சிவந்த கண்களையுடைய திருமாலாகிய விடையின்மேல் விளங்கியவனும், யானையின் உரித்த தோலை விரும்பிப் போர்த்தவனும், மன்மதனைத் தீயாய் எரியும்படி நெற்றிக்கண்ணைத் திறந்தவனும், வரிகளைக் கொண்ட வெள்ளிய வளைகளை அணிந்தவளாகிய, 'உமை' என்னும் நங்கை அணுகி நின்று, துதித்து வழிபடப் பெற்ற பெரியோனும் ஆகிய, திருவேகம்பத்தில் உள்ள பெருமானைக் காணுதற்கு, அடியேன், கண் பெற்றவாறு, வியப்பு.

திருஏகம்பம்

குண்ட லந்திகழ் காதுடை யானைக்
கூற்று தைத்த கொடுந்தொழி லானை
வண்டலம் பும்மலர்க் கொன்றையி னானை
வாள ராமதி சேர்சடை யானைக்
கெண்டை யந்தடங் கண்உமை நங்கை
கெழுமி ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ட நஞ்சுடைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. **#627**

குண்டலம் விளங்குகின்ற காதினையுடையவனும், கூற்றுவனை உதைத்துக் கொன்ற கொடுமையான தொழிலை உடையவனும், வண்டுகள் ஒலிக்கின்ற கொன்றை மலர் மாலையை அணிந்தவனும், கொலைத் தொழிலையுடைய பாம்பு பிறையைச் சேர்ந்து வாழும்

சடையை உடையவனும் ஆகிய, கெண்டைமீன் போலும் பெரிய கண்களையுடைய, 'உமை' என்னும் நங்கை அணுகி நின்று, துதித்து வழிபடப் பெற்ற, கண்டத்தில் நஞ்சினையுடைய, திருவேகம்பத்தில் உள்ள எம்பெருமானைக் காணுதற்கு, அடியேன், கண் பெற்றவாறு, வியப்பு.

திருஏகம்பம்

வெல்லும் வெண்மழு ஒன்றுடை யானை
வேலைநஞ் சுண்ட வித்தகன் றன்னை
அல்லல் தீர்த்தருள் செய்யவல் லானை
அரும றையவை அங்கம்வல் லானை
எல்லை யில்புக ழாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள்பி ரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. **#628**

யாவரையும் வெல்லும் தன்மையுடைய, வெள்ளிய மழு ஒன்றை உடையவனும், கடலில் தோன்றிய நஞ்சினை உண்ட சதுரப்பாடுடையவனும், அடியார்களுக்குத் துன்பங்களைப் போக்கி அருள்செய்ய வல்லவனும், அரிய வேதங்களையும் அவற்றின் அங்கங்களையும் செய்ய வல்லவனும் ஆகிய, அளவற்ற புகழை யுடையவளாகிய, 'உமை' என்னும் நங்கை, எந்நாளும், துதித்து வழிபடப்பெற்ற, நன்மையையுடைய, திருவேகம்பத்தில் உள்ள எங்கள் பெருமானைக் காணுதற்கு, அடியேன், கண் பெற்றவாறு, வியப்பு!

திருஏகம்பம்

திங்கள் தங்கிய சடையுடை யானைத்
தேவ தேவனைச் செழுங்கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடை யானைச்
சாம வேதம் பெரிதுகப் பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. **#629**

பிறை தங்கியுள்ள சடையையுடையவனும், தேவர்க்குத் தேவனும், வளவிய கடலில் வளர்கின்ற சங்கினால் இயன்ற, 'வெள்ளிய குழையை யணிந்த காதினையுடையவனும், சாம வேதத்தை மிக விரும்புபவனும் ஆகிய, என்றும் மங்கைப் பருவம் உடைய நங்கையாகிய மலைமகள் தவத்தாற் கண்டு அணுகி, துதித்து வழிபடப்பெற்ற, கங்கையை யணிந்த,

திருவேகம்பத்தில் உள்ள எம்பெருமானைக் காணுதற்கு, அடியேன், கண் பெற்றவாறு, வியப்பு.

திருஏகம்பம்

விண்ண வர்தொழு தேத்தநின் றானை
வேதந் தான்விரித் தோதவல் லானை
நண்ணி னார்க்கென்றும் நல்லவன் றன்னை
நாளும் நாமுகக் கின்றபி ரானை
எண்ணில் தொல்புக ழாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணு மூன்றுடைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. **#630**

தேவர்கள் தொழுது துதிக்க இருப்பவனும்,வேதங்களை விரித்துச் செய்ய வல்லவனும், தன்னை அடைந்தவர்கட்கு எந்நாளும் நலத்தையே செய்பவனும், நாள்தோறும் நாம் விரும்புகின்ற தலைவனும் ஆகிய, எண்ணில்லாத பழையவான புகழை யுடையவளாகிய, 'உமை' என்னும் நங்கை, எந்நாளும் துதித்து வழிபடப்பெற்ற, கண்களும் மூன்று உடைய, திருவேகம்பத்தில் உள்ள எம் பெருமானைக் காணுதற்கு, அடியேன், கண் பெற்றவாறு, வியப்பு.

திருஏகம்பம்

சிந்தித் தென்றும் நினைந்தெழு வார்கள்
சிந்தை யில்திக ழுஞ்சிவன் றன்னைப்
பந்தித் தவினைப் பற்றறுப் பானைப்
பாலொ டானஞ்சும் ஆட்டுகந் தானை
அந்த மில்புக ழாள்உமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. **#631**

நாள்தோறும் தன்னையே சிந்தித்து, துயிலெழுங் காலத்துத் தன்னையே நினைத்து எழுவார்களது உள்ளத்தில் விளங்குகின்ற மங்கலப் பொருளானவனும், உயிர்களைப் பிணித்துள்ள வினைத் தொடக்கை அறுப்பவனும், பால் முதலிய ஆனஞ்சும் ஆடுதலை விரும்பியவனும் ஆகிய, முடிவில்லாத புகழையுடையவளாகிய, 'உமை' என்னும் நங்கை விரும்பி வழிபடப்பெற்ற, கொன்றை முதலிய பூக்களின் மணத்தையுடைய, நீண்ட சடையையுடைய, திருவேகம்பத்தில் உள்ள எம் பெருமானைக்காணுதற்கு, அடியேன், கண் பெற்றவாறு, வியப்பு!

திருஏகம்பம்

வரங்கள் பெற்றுழல் வாளரக் கர்தம்
வாலி யபுர மூன்றெரித் தானை
நிரம்பி யதக்கன் றன்பெரு வேள்வி
நிரந்த ரஞ்செய்த நிர்க்கண் டகனைப்
பரந்த தொல்புக ழாள்உமை நங்கை
பரவி ஏத்தி வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. **#632**

தவத்தின் பயனாகிய வரங்களைப் பெற்றமையால், வானத்தில் உலாவும் ஆற்றலைப் பெற்ற கொடிய அசுரர்களது வலிய அரண்கள் மூன்றினை எரித்தவனும், தேவர் எல்லாரும் நிரம்பிய தக்கனது பெருவேள்வியை அழித்த வன்கண்மையுடையவனும் ஆகிய, பரவிய, பழைய புகழையுடையவளாகிய, 'உமை' என்னும் நங்கை முன்னிலையாகவும், படர்க்கையாகவும் துதித்து வழிபடப் பெற்ற, எட்டுக் கைகளையுடைய, திருவேகம்பத்தில் உள்ள எம்பெருமானைக் காணுதற்கு, அடியேன், கண் பெற்றவாறு, வியப்பு!

திருஏகம்பம்

எள்கல் இன்றி இமையவர் கோனை
ஈச னைவழி பாடுசெய் வாள்போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட வஞ்சி
வெருவிஓ டித்தழு வவெளிப் பட்ட
கள்ளக் கம்பனை எங்கள்பி ரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. **#633**

தேவர் பெருமானாகிய சிவபெருமானை, அவனது ஒரு கூறாகிய உமாதேவிதானே, தான் வழிபடவேண்டுவது இல்லை என்று இகழ்தல் செய்யாது வழிபட விரும்பி, ஏனைவழிபாடு செய்வாருள் ஒருத்திபோலவே நின்று, முன்னர் உள்ளத்துள்ளே நினைந்து செய்யும் வழிபாட்டினை முடித்து, பின்பு, புறத்தே வழிபடச் சென்று, அவ்வழிபாட்டில் தலைப்பட்டு நின்ற முறைமையைக் கண்டு, தான் அவ்விடத்துக் கம்பையாற்றின்கண் பெருவெள்ளத்தைத் தோற்றுவித்து வெருட்ட, வஞ்சிக்கொடி போல்பவளாகிய அவள் அஞ்சி ஓடித் தன்னைத் தழுவிக்கொள்ள, அதன்பின் அவள்முன் வெளிப்பட்டு நின்ற கள்வனாகிய, திருவேகம்பத்தில் உள்ள எங்கள் பெருமானைக்

காணுதற்கு, அடியேன், கண் பெற்றவாறு, வியப்பு!

திருஏகம்பம்

பெற்றம் ஏறுகந் தேறவல் லானைப்
பெரிய எம்பெரு மான்என்றெப் போதும்
கற்ற வர்பர வப்படு வானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற தென்று
கொற்ற வன்கம்பன் கூத்தன்எம் மானைக்
குளிர்பொ ழில்திரு நாவல்ஆ ரூரன்
நற்ற மிழிவை ஈரைந்தும் வல்லார்
நன்னெறிஉல கெய்துவர் தாமே. **#634**

குளிர்ந்த சோலைகளையுடைய திருநாவலூரனாகிய நம்பியாரூரன், ஆனேற்றை விரும்பி ஏற வல்லவனும், மெய்ந்நூல்களைக் கற்றவர்கள், 'இவன் எம் பெரிய பெருமான்' என்று எப்போதும் மறவாது துதிக்கப்படுபவனும், யாவர்க்கும் தலைவனும், கூத்தாடுதலை உடையவனும் ஆகிய, திருவேகம்பத்தில் உள்ள எம்பெருமானைக் காணுதற்கு அடியேன், கண்பெற்றவாறு வியப்பு என்று சொல்லிப் பாடிய நல்ல தமிழ்ப் பாடலாகிய இவை பத்தினையும் பாட வல்லவர். நன்னெறியாற்பெறும் உலகத்தைத் திண்ணமாக அடைவர்.

திருக்கோலக்கா

திருக்கோலக்கா

திருக்கோலக்கா,
பண் - தக்கேசி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சத்தபுரீசுவரர்.
தேவியார் : ஓசைகொடுத்தநாயகியம்மை.

புற்றில் வாளர வார்த்தபி ரானைப்
பூத நாதனைப் பாதமே தொழுவார்
பற்று வான்துணை எனக்கெளி வந்த
பாவ நாசனை மேவரி யானை
முற்ற லார்திரி புரம்ஒரு மூன்றும்
பொன்ற வென்றிமால் வரைஅரி அம்பாக்
கொற்ற வில்அங்கை ஏந்திய கோனைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. **#635**

புற்றில் வாழும் கொடிய பாம்பைக் கட்டியுள்ள பெருமானும், பூத கணங்கட்கு முதல்வனும், தன் திருவடியையே வணங்குவோர் விடாது பற்றுகின்ற சிறந்த துணைவனும், எனக்கு எளியவனாய் எதிர் வந்தவனும், அடியவரது பாவங்களைப் போக்கும் தொழிலை உடையவனும், யாவராலும் அடைதற்கு அரியவனும், செருக்கு மிக்கவர்களது மூன்று ஊர்கள் அழியுமாறு, திருமால் அம்பாகி நிற்க, வெற்றியைத் தரும் பெரிய மலையாகிய வில்லை அங்கையில் ஏந்திய தலைவனும் ஆகிய இறைவனை, அடியேன், திருக்கோலக்காவில் வெளிப்படக் கண்டுகொண்டேன்.

திருக்கோலக்கா

அங்கம் ஆறும்மா மறைஒரு நான்கும்
ஆய நம்பனை வேய்புரை தோளி
தங்கு மாதிரு வுருவுடை யானைத்
தழல்ம திசடை மேற்புனைந் தானை
வெங்கண் ஆனையின் ஈருரி யானை
விண்ணு ளாரொடு மண்ணுளார் பரசுங்
கொங்கு லாம்பொழிற் குரவெறி கமழுங்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. **#636**

துணை நூல்களாகிய ஆறும், முதல் நூல்களாகிய வேதம் நான்கும் ஆகி நிற்கின்ற நம்பனும், மூங்கில் போலும் தோள்களையுடைய உமாதேவி

பொருந்தியுள்ள, சிறந்த திருமேனியையுடையவனும், ஒளிர்கின்ற பிறையைச் சடையின் மேற் சூடியவனும், சினத்தால் எரிகின்ற கண்களையுடைய யானையினது உரித்த தோலையுடையவனும் ஆகிய இறைவனை, அடியேன், விண்ணில் உள்ளவர்களும், மண்ணில் உள்ளவர்களும் துதிக்கின்ற, தேன் பொருந்திய சோலையின்கண் குரா மலர்கள் மணங்கமழ்கின்ற திருக்கோலக்காவினில் வெளிப்படக் கண்டுகொண்டேன்.

திருக்கோலக்கா

பாட்ட கத்திசை யாகிநின் றானைப்
பத்தர் சித்தம் பரிவினி யானை
நாட்டகத் தேவர் செய்கையு ளானை
நட்டம் ஆடியை நம்பெரு மானைக்
காட்ட கத்துறு புலியுரி யானைக்
கண்ணொர் மூன்றுடை அண்ணலை அடியேன்
கோட்ட கப்புன லார்செழுங் கழனிக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. **#637**

பாட்டின்கண் இசைபோன்று எல்லாப் பொருளிலும் வேறறக் கலந்து நிற்பவனும், அடியார்களது உள்ளம் அன்பு செய்தற்கு இன்பமாகிய பயனாய் உள்ளவனும், மண்ணில் வாழும் தேவராகிய அந்தணர்களது வழிபாட்டின் கண் விளங்குகின்றவனும், நடனம் ஆடுபவனும், நமக்குத் தலைவனும், காட்டின்கண் வாழ்கின்ற புலியினது தோலை உடையவனும், கண்கள் மூன்று உடைய பெருமையுடையவனும் ஆகிய இறைவனை, அடியேன், வரம்பகத்து நீர் நிறைந்த செழுமையான வயல்களையுடைய திருக்கோலக்காவில் வெளிப்படக் கண்டுகொண்டேன்.

திருக்கோலக்கா

ஆத்த மென்றெனை ஆள்உகந் தானை
அமரர் நாதனைக் குமரனைப் பயந்த
வார்த்த யங்கிய முலைமட மானை
வைத்து வான்மிசைக் கங்கையைக் கரந்த
தீர்த்த னைச்சிவ னைச்செழுந் தேனைத்
தில்லை அம்பலத் துள்நிறைந் தாடுங்
கூத்த னைக்குரு மாமணி தன்னைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. **#638**

என்னை ஆளாகக் கொள்ளுதலே தனக்குவாய்மை யாவது என்று கருதி என்னை அவ்வாறே விரும்பி ஆண்டருளினவனும், தேவர்கட்குத்

தலைவனும், முருகனைப் பெற்ற கச்சின்கண் விளங்குகின்ற தனங்களையுடைய இளைய மான்போலும் தேவியை இடப்பாகத்தில் வைத்து, வானுலகத்தில் உள்ள கங்கையைச் சடையின் கண் மறைத்த தூயவனும், மங்கலம் உடையவனும், செழுமையான தேன்போல இனிப்பவனும், தில்லையம்பலத்துள் நிறைந்து நின்று ஆடுகின்ற கூத்தினை யுடையவனும், ஒளியையுடைய மாணிக்கம் போல்பவனும் ஆகிய இறைவனை, அடியேன், திருக்கோலக்காவில் வெளிப்படக் கண்டுகொண்டேன்.

திருக்கோலக்கா

அன்று வந்தெனை அகலிடத் தவர்முன்
ஆள தாகஎன் றாவணங் காட்டி
நின்று வெண்ணெய்நல் லூர்மிசை ஒளித்த
நித்தி லத்திரள் தொத்தினை முத்திக்
கொன்றி னான்றனை உம்பர்பி ரானை
உயரும் வல்லர ணங்கெடச் சீறுங்
குன்ற வில்லியை மெல்லிய லுடனே
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. **#639**

அன்று அந்தணனாய்த் திருநாவலூரில் வந்து, அகன்ற இப்பூமியில் உள்ளார் பலர் முன்பும், நீ எனக்குச் செய்யும் அடிமையைச் செய்க' என்று சொல்லி ஓலை காட்டி வழக்குப்பேசி நின்று, பின்பு, திருவெண்ணெய்நல்லூரில் சென்று மறைந்த, முத்தினது திரட்சியமைந்த கொத்துப் போல்பவனும், முத்தியளித்தற்குப் பொருந்தியவனும், தேவர்கட்குத் தலைவனும், உயர்ந்த வலிய மதில்கள் அழியுமாறு சினந்த, மலைவில்லை உடையவனும் ஆகிய இறைவனை, இறைவியுடனே, அடியேன் திருக்கோலக்காவில் வெளிப்படக் கண்டு கொண்டேன்.

திருக்கோலக்கா

காற்றுத் தீப்புன லாகிநின் றானைக்
கடவு ளைக்கொடு மால்விடை யானை
நீற்றுத் தீயுரு வாய்நிமிர்ந் தானை
நிரம்பு பல்கலை யின்பொரு ளாலே
போற்றித் தன்கழல் தொழுமவன் உயிரைப்
போக்கு வான்உயிர் நீக்கிடத் தாளாற்
கூற்றைத் தீங்குசெய் குரைகழ லானைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. **#640**

காற்றும், தீயும், நீரும் ஆகி நிற்பவனும், எல்லாப் பொருள்களையும் கடந்தவனும், கொடிய பெரிய இடப ஊர்தியை யுடையவனும், நீற்றைத்

தரும் நெருப்புருவாய் ஓங்கி நிற்பவனும், நிறைந்த பல நூல்களினது பொருள் வழியே துதித்துத் தன் திருவடியை வணங்குகின்ற அவனது உயிரைப் போக்குவோனது உயிர் நீங்கும்படி தனது திருவடியால் கூற்றுவனுக்கு அழிவைச் செய்த, ஒலிக்கின்ற கழலை யணிந்தவனும் ஆகிய இறைவனை, அடியேன் திருக்கோலக்காவில் வெளிப்படக் கண்டுகொண்டேன்.

திருக்கோலக்கா

அன்ற யன்சிரம் அரிந்ததிற் பலிகொண்
டமர ருக்கருள் வெளிப்படுத் தானைத்
துன்று பைங்கழ லிற்சிலம் பார்த்த
சோதி யைச்சுடர் போல்ஒளி யானை
மின்ற யங்கிய இடைமட மங்கை
மேவும் ஈசனை வாசமா முடிமேற்
கொன்றை அஞ்சடைக் குழகனை அழகார்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. **#641**

அன்று பிரமனது தலையை அரிந்து அதன்கண் பிச்சை ஏற்றுத் தேவர்கட்குத் தனது திருவருள் நிலையை வெளிப்படுத்தியவனும், நெருங்கிய பசிய கழலையணிதற்கு உரிய திருவடியில் சிலம்பையணிந்த ஒளிவவடிவினனும், விளக்குப்போலும் விளக்கம் உடையவனும், மின்னலினது தன்மை விளங்கிய இடையினையுடைய இளமங்கை விரும்பும் கடவுளும், மணங்கமழுமாறு தலையின் மேல் கொன்றை மாலையையணிந்த, அழகிய சடையை உடைய அழகனும் ஆகிய இறைவனை, அடியேன், அழகு நிறைந்த திருக்கோலக்காவில் வெளிப்படக் கண்டுகொண்டேன்.

திருக்கோலக்கா

நாளும் இன்னிசை யால்தமிழ் பரப்பும்
ஞான சம்பந்த னுக்குல கவர்முன்
தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்கும்
தன்மை யாளனை என்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின் றாடும்
அங்க ணன்றனை எண்கணம் இறைஞ்சும்
கோளி லிப்பெருங் கோயிலு ளானைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. **#642**

எந்நாளும் இனிய இசையால் தமிழ்ப்பாடலை எங்கணும் பரவச்செய்த திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்கு, அவர் தம் கைகளால் ஒற்றறுத்துப் பாடுதலுக்கு இரங்கி, பலரு காணத் தாளம் ஈந்த

கருணையாளனும், என் உள்ளத்துள் கொள்ளப்படும் பொருளாய் உள்ளவனும், தன்னால் ஆளப்படும் பூதங்கள் பாடல்களைப்பாட, அவற்றிற்கு ஏற்ப நின்று ஆடுகின்ற அருள் பொருந்திய கண்களையுடையவனும், பதினெண் கணங்களாலும் வணங்கப்படுபவனும், திருக்கோளிலியில் உள்ள பெருங்கோயிலில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய இறைவனை அடியேன், திருக்கோலக்காவில் வெளிப்படக் கண்டுகொண்டேன்.

திருக்கோலக்கா

அரக்கன் ஆற்றலை அழித்தவன் பாட்டுக்
கன்றி ரங்கிய வென்றியி னானைப்
பரக்கும் பாரளித் துண்டுகந் தவர்கள்
பரவி யும்பணி தற்கரி யானைச்
சிரக்கண் வாய்செவி மூக்குயர் காயம்
ஆகித் தீவினை தீர்த்தஎம் மானைக்
குரக்கி னங்குதி கொண்டுகள் வயல்சூழ்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. **#643**

அன்று இராவணனது வலிமையை முதலில் அழித்து, பின்பு அவன் பாடிய இசைக்கு இரங்கி அருள்புரிந்த வெற்றியை யுடையவனும், விரிந்த உலகத்தைப் படைத்தும், உண்டும் களித்தவர்கள் துதித்துப் பணிதற்கும் அரியனாய் உள்ளவனும், தலையில் அமைந்து, 'கண், வாய், காது, மூக்கு' என்பவற்றோடு, நீண்ட உடம்புமாய் நின்று, தீமையைத் தரும் வினையை ஒழித்த எம் பெருமானும் ஆகிய இறைவனை, அடியேன்,சோலைகளில் குரங்குக்கூட்டம் குதித்துத் திரிகின்ற, வயல் சூழ்ந்த, திருக்கோலக்காவில் வெளிப்படக் கண்டுகொண்டேன்.

திருக்கோலக்கா

கோட ரம்பயில் சடையுடைக் கரும்பைக்
கோலக் காவுள்எம் மானைமெய்ம் மானப்
பாட ரங்குடி அடியவர் விரும்பப்
பயிலும் நாவலா ரூரன்வன் றொண்டன்
நாடி ரங்கிமுன் அறியுமந் நெறியால்
நவின்ற பத்திவை விளம்பிய மாந்தர்
காட ரங்கென நடம்நவின் றான்பாற்
கதியும் எய்துவர் பதியவர்க் கதுவே. **#644**

ஆலம் விழுது போலும் சடைகளை யுடையவனும், கரும்பு போல இனிப்பவனும் ஆகிய, திருக்கோலக்கா வில் எழுந்தருளியுள்ள எம் இறைவனை, உண்மையமைந்த பெரிய பாடல்களைப் பாடும் வழிவழி

அடியவர் பலரும் விரும்புமாறு, அத்திருத் தொண்டிலே பழகும், திருநாவலூரில் தோன்றிய, வன்றொண்டனாகிய நம்பியாரூரன், உலகில் உள்ளவர்தாமும் மனம் உருகி அவனை முற்பட உணருமாற்றால் பாடிய பத்துப் பாடல்களாகிய இவைகளைப் பாடிய மாந்தர், காடே அரங்கமாக நடனம் செய்பவனாகிய சிவ பிரானிடத்து உயர்கதியையும் பெறுவர்; என்றும் நீடு வாழும் இடமும் அவர்க்கு அக்கதியேயாம்.

நம்பிஎன்ற திருப்பதிகம்

நம்பிஎன்ற திருப்பதிகம்

நம்பிஎன்ற திருப்பதிகம்,
பண் - தக்கேசி

மெய்யைமுற் றப்பொடிப் பூசியொர் நம்பி
வேதம்நான் கும்விரித் தோதியொர் நம்பி
கையில்ஓர் வெண்மழு வேந்தியொர் நம்பி
கண்ணும் மூன்றுடை யானொரு நம்பி
செய்யநம் பிசிறு செஞ்சடை நம்பி
திரிபுரந் தீயெழச் செற்றதோர் வில்லால்
எய்தநம் பியென்னை ஆளுடை நம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. **#645**

திருமேனி முழுதும் திருநீற்றைப் பூசியுள்ள ஒப்பற்ற நம்பியே, வேதங்கள் நான்கையும் விரித்துப் பாடிய ஒப்பற்ற நம்பியே, கையில் ஒரு வெள்ளிய மழுவை ஏந்திய ஒப்பற்ற நம்பியே, கண்கள் மூன்றை உடையவனாகிய நம்பியே, செம்மை நிறம் உடைய நம்பியே, புல்லிய, சிவந்த சடையை யுடைய நம்பியே, முப்புரங்களை, நெருப்பு எழுமாறு, வளைக்கப்பட்டதொரு வில்லால் எய்த நம்பியே, என்னை ஆளாக உடைய நம்பியே, நீயே எங்கட்கு எப்பிறப்பிலும் தலைவன்.

நம்பிஎன்ற திருப்பதிகம்

திங்கள்நம் பிமுடி மேல்அடி யார்பாற்
சிறந்தநம் பிபிறந் தவுயிர்க் கெல்லாம்
அங்கண்நம் பிஅருள் மால்விசும் பாளும்
அமரர்நம் பிகும ரன்முதல் தேவர்
தங்கள்நம் பிதவத் துக்கொரு நம்பி
தாதை என்றுன் சரண்பணிந் தேத்தும்
எங்கள்நம் பியென்னை ஆளுடை நம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. **#646**

திருமுடியில் பிறையை அணிந்த நம்பியே, அடியாரிடத்து இனிது விளங்கி நிற்கும் நம்பியே, பிறப்பினை எடுத்த உயிர்களுக்கெல்லாம் அவ்விடத்து மறைந்து நின்று அருள்செய்யும் நம்பியே, மயக்கத்தைத் தரும் வானுலகத்தை ஆள்கின்ற, தேவர்கட்குத் தலைவனாகிய நம்பியே, முருகன் முதலிய முத்தர்கட்குத் தலைவனாகிய நம்பியே, வழிபடப்படுதற்கு ஒப்பற்ற நம்பியே, 'நீயே உலகிற்குத் தந்தை' என்று தௌ?ந்து உன் திருவடிகளைப் பணிந்து துதிக்கின்ற எங்களுக்குச்

சிறந்து நிற்கின்ற நம்பியே, என்னை ஆளாக உடைய நம்பியே, நீயே எங்கட்கு எப்பிறப்பிலும் தலைவன்.

நம்பிஎன்ற திருப்பதிகம்

வருந்தஅன் றும்மத யானை யுரித்த
வழக்குநம் பிமுழக் குங்கடல் நஞ்சம்
அருந்துநம் பிஅம ரர்க்கமு தீந்த
அருளின்நம் பிபொரு ளாலரு நட்டம்
புரிந்தநம் பிபுரி நூலுடை நம்பி
பொழுதும் விண்ணும்முழு தும்பல வாகி
இருந்தநம் பிஎன்னை ஆளுடை நம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. **#647**

அன்று, மதத்தையுடைய யானையை அது வருந்துமாறு உரித்த நீதியை உடைய நம்பியே, ஓசையைச் செய்கின்ற கடலில் உண்டாகிய நஞ்சினை உண்ட நம்பியே, அதன்கண் தோன்றிய அமுதத்தைத் தேவர்களுக்கு ஈந்த அருளுடைய நம்பியே, அவ்வருளாகிய பொருள் காரணமாக அரிய நடனத்தைச் செய்கின்ற நம்பியே, முப்புரி நூலையுடைய நம்பியே, காலமும் வானமும் முதலிய எல்லாப் பொருள்களுமாய்ப் பலவாகி நிற்கின்ற நம்பியே, என்னை ஆளாக உடைய நம்பியே, நீயே எங்கட்கு எப்பிறப்பிலும் தலைவன்.

நம்பிஎன்ற திருப்பதிகம்

ஊறுநம்பிஅமுதாஉயிர்க்கெல்லாம்
உரியநம்பிதெரியம்மறைஅங்கம்
கூறுநம்பிமுனிவர்க்கருங்கூற்றைக்
குமைத்தநம்பிகுமையாப்புலன்ஐந்தும்
சீறுநம்பிதிருவெள்ளடைநம்பி
செங்கண்வெள்ளைச்செழுங்கோட்டெருதென்றும்
ஏறுநம்பிஎன்னைஆளுடைநம்பி
எழுபிறப்பும்எங்கள்நம்பிகண்டாயே. **#648**

உள்ளத்தில், அமுதம் போல ஊற்றெழுகின்ற நம்பியே, எல்லா உயிர்கட்கும் புகலிடமாகிய நம்பியே, முனிவர்கட்கு, வேதத்தையும், அதன் அங்கத்தையும் அறியக் கூறிய நம்பியே, அழித்தற்கரிய கூற்றுவனை அழித்த நம்பியே, அடக்குதற்கு அரிய ஐம்புல ஆசைகளையும் கடிந்தொதுக்கிய நம்பியே, திருவெள்ளடைக் கோயிலில் வாழும் நம்பியே, சிவந்த கண்களையும், செழுமையான கொம்புகளையும் உடைய, வெண்மையான எருதையே எந்நாளும் ஏறுகின்ற நம்பியே, என்னை ஆளாக உடைய நம்பியே, நீயே எங்கட்கு எப்பிறப்பிலும்

தலைவன்.

நம்பிஎன்ற திருப்பதிகம்

குற்றநம்பிகுறுகாரெயில்மூன்றைக்
குலைத்தநம்பிசிலையாவரைகையில்
பற்றுநம்பிபரமானந்தவெள்ளம்
பணிக்கும்நம்பியெனப்பாடுதலல்லால்
மற்றுநம்பிஉனக்கென்செயவல்லேன்
மதியிலியேன்படுவெந்துயரெல்லாம்
எற்றுநம்பிஎன்னைஆளுடைநம்பி
எழுபிறப்பும்எங்கள்நம்பிகண்டாயே. **#649**

அறிவிலேனாகிய யான் படுகின்ற கொடிய துன்பங்களை எல்லாம் ஓட்டுகின்ற நம்பியே, என்னை ஆளாக உடைய நம்பியே, உன்னை, 'மலையை வில்லாக வளைத்த நம்பியே, பின்பு அதனைக் கையிற்பிடித்து நின்ற நம்பியே, பின்பு அதனால் பகைவரது மதில்கள் மூன்றை அழித்த நம்பியே, அடியார்களுக்குப் பேரின்ப வெள்ளத்தை அளித்தருளுகின்ற நம்பியே' எனப் பாடுவதையன்றி ஒப்பற்ற பெரிய நம்பியாகிய உனக்கு யான் வேறு என் செய்ய வல்லேன்! நீயே எங்கட்கு எப்பிறப்பிலும் தலைவன்.

நம்பிஎன்ற திருப்பதிகம்

அரித்தநம் பிஅடி கைதொழு வார்நோய்
ஆண்டநம் பிமுன்னை ஈண்டுல கங்கள்
தெரித்தநம் பிஒரு சேவுடை நம்பி
சில்பலிக் கென்றகந் தோறுமெய் வேடம்
தரித்தநம் பிசம யங்களின் நம்பி
தக்கன்றன் வேள்விபுக் கன்றிமை யோரை
இரித்தநம் பிஎன்னை ஆளுடை நம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. **#650**

உனது திருவடியைக் கைகளால் தொழுகின்றவரது துன்பங்களை அரித்தொழிக்கின்ற நம்பியே, நெருங்கிய உலகங்கள் பலவற்றையும் முன்பு ஆக்கிய நம்பியே, பின்பு அவைகளைக் காக்கின்ற நம்பியே, ஒற்றை எருதையுடைய நம்பியே, இல்லந்தோறும் சென்று ஏற்கும் சில பிச்சைக்கென்று, திருமேனியில்? அதற்குரிய வேடத்தைப் பூண்ட நம்பியே, சமயங்கள் பலவற்றிற்கும் தலைவனாகிய நம்பியே, அன்று தக்கன் வேள்விச்சாலையிற் புகுந்து, ஆங்கிருந்த தேவரை எல்லாம் அஞ்சியோடச் செய்த நம்பியே, என்னை ஆளாக உடைய நம்பியே, நீயே எங்கட்கு எப்பிறப்பிலும் தலைவன்.

நம்பிஎன்ற திருப்பதிகம்

பின்னைநம் பும்புயத் தான்நெடு மாலும்
பிரமனும் என்றிவர் நாடியுங் காணா
உன்னைநம் பிஒரு வர்க்கெய்த லாமே
உலகுநம் பிஉரை செய்யும தல்லால்
முன்னைநம் பிபின்னும் வார்சடை நம்பி
முழுதிவை இத்தனை யுந்தொகுத் தாண்ட
தென்னைநம் பிஎம் பிரானாய நம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. **#651**

'நப்பின்னை' என்பவள் விரும்புகின்ற தோள்களையுடையவனாகிய நீண்ட உருவத்தையுடைய திருமாலும், பிரமனும் என்று சொல்லப்பட்ட இவர்கள் தேடியும் காணமாட்டாத நம்பியே, உலகிற்கு ஒருவனாய நம்பியே, உன்னை வாழ்த்துதலாகிய அதுவன்றி, அணுகுதல் ஒருவர்க்கு இயல்வதோ! எல்லாப் பொருட்கும் முன்னே உள்ள நம்பியே, பின்னிய நீண்டசடையையுடைய நம்பியே, உன் இயல்பெல்லாம் இவை போல்பவனே; ஆயினும், இத்தனையையும் தோன்றாவாறு அடக்கி, பெருநம்பியாகிய நீ எளிவந்து என்னை ஆண்டது என்னையோ? எமக்குப் பெருமானாகிய நம்பியே, நீயே எங்கட்கு எப்பிறப் பிலும் தலைவன்.

நம்பிஎன்ற திருப்பதிகம்

சொல்லைநம் பிபொரு ளாய்நின்ற நம்பி
தோற்றம் ஈறுமுத லாகிய நம்பி
வல்லைநம் பிஅடி யார்க்கருள் செய்ய
வருந்திநம் பிஉனக் காட்செய கில்லார்
அல்லல்நம் பிபடு கின்றதென் னாடி
அணங்கொரு பாகம்வைத் தெண்கணம் போற்ற
இல்லநம் பிஇடு பிச்சைகொள் நம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. **#652**

சொற்களாய் நிற்கும் நம்பியே, அச்சொற்களின் பொருள்களாய் நிற்கும் நம்பியே, எப்பொருளின் தோற்றத்திற்கும், ஒடுக்கத்திற்கும் முதல்வனாகிய நம்பியே, அடியார்க்கு அருள்செய்ய வல்லையாகிய நம்பியே, உனக்கு ஆட்செய்ய மாட்டாதார், உலகில் வருத்தத்தை அடைந்து அல்லல் படுதற்குக் காரணம் என் நம்பி நம்பீ? பதினெண் கணங்களும் போற்ற, உமையை ஒருபாகத்தில் வைத்திருந்தும், இல்லங்களை நாடிச்சென்று அங்கு உள்ளவர் இடுகின்ற பிச்சையை ஏற்கின்ற நம்பி. நம்பீ, நீயே எங்கட்கு எப்பிறப்பிலும் தலைவன்.

நம்பிஎன்ற திருப்பதிகம்

காண்டுநம் பிகழற் சேவடி என்றுங்
கலந்துனைக் காதலித் தாட்செய்கிற் பாரை
ஆண்டுநம் பிஅவர் முன்கதி சேர
அருளும்நம் பிகுரு மாப்பிறை பாம்பைத்
தீண்டுநம் பிசென்னி யிற்கன்னி தங்கத்
திருத்துநம் பிபொய்ச் சமண்பொரு ளாகி
ஈண்டுநம் பிஇமை யோர்தொழு நம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. **#653**

நம்பியாகிய உனது கழல் அணிந்த திருவடியைக் காண்போம் என்னும் உயிரோடும் மனம்பற்றி உன்னை விரும்பி உனக்கு ஆட்செய்கின்றவரை, நீ ஆட்கொண்டு அவர் விரைந்து உயர்கதி அடையுமாறு அருள்செய்கின்ற நம்பி நம்பி, ஒளியையுடைய சிறந்த பிறை பாம்பைப் பொருந்துகின்ற முடியில், 'கங்கை' என்னும் நங்கை தங்கும்படி இனிது வைத்துள்ள நம்பி நம்பீ, சமணர்க்குப் பொய்ப்பொருளாய் மறைந்து நின்று, எங்கட்கு மெய்ப்பொருளாய் வெளிநிற்கின்ற நம்பியே, தேவர்கள் வணங்குகின்ற நம்பியே, நீயே எங்கட்கு எப்பிறப்பிலும் தலைவன்.

நம்பிஎன்ற திருப்பதிகம்

கரக்கும்நம் பிகசி யாதவர் தம்மைக்
கசிந்தவர்க் கிம்மையோ டம்மையி லின்பம்
பெருக்குநம் பிபெரு கக்குருத்தா * * * **#654**

உன்னிடத்து மனம் உருகாதவருக்கு உன்னை மறைத்துக் கொள்கின்ற நம்பியே, அன்பு செய்பவர்க்கு இப்பிறப்பிலும், வரும் பிறப்பிலும் இன்பத்தை மிகத் தருகின்ற நம்பியே, ...

திருத்தினைநகர்

திருத்தினைநகர்

திருத்தினைநகர்,
பண் - தக்கேசி,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருநந்தீசுவரர்.
தேவியார் : இளங்கொம்பம்மை.

நீறு தாங்கிய திருநுத லானை
நெற்றிக் கண்ணனை நிரைவளை மடந்தை
கூறு தாங்கிய கொள்கையி னானைக்
குற்ற மில்லியைக் கற்றையஞ் சடைமேல்
ஆறு தாங்கிய அழகனை அமரர்க்
கரிய சோதியை வரிவரால் உகளும்
சேறு தாங்கிய திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. **#655**

மனமே, நீ, திருநீற்றை அணிந்துள்ள அழகிய நெற்றியையுடையவனும், அந்நெற்றியில் ஒரு கண்ணை உடையவனும், வரிசைப்பட்ட வளைகளையணிந்த உமையவளைத் தனது ஒரு கூற்றில் வைத்த செய்கையை யுடையவனும், குற்றம் சிறிதும் இல்லாதவனும், கற்றையாகிய அழகிய சடையின் கண் நீரைக் கட்டியுள்ள அழகனும், தேவர்களுக்கு அரிய ஒளியாய் உள்ளவனும் ஆகிய, வரியையுடைய வரால் மீன்கள் துள்ளுகின்ற, சேற்றையுடைய திருத்தினைநகரில் எழுந்தருளியிருக்கின்ற, நன்மையின் மேலெல்லை யாயுள்ள பெருமானை அணுகச் சென்று அடைவாயாக.

திருத்தினைநகர்

பிணிகொளாக்கை பிறப்பிறப் பென்னு
மிதனைநீக்கி ஈசன் திருவடி யிணைக்காள்
துணிய வேண்டிடிற் சொல்லுவன் கேள்நீ
அஞ்சல் நெஞ்சமே வஞ்சர்வாழ் மதில்மூன்
றணிகொள் வெஞ்சிலை யால்உகச் சீறும்
ஐயன் வையகம் பரவிநின் றேத்தும்
திணியும் வார்பொழில் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. **#656**

மனமே, நீ, நோயுடைய உடம்புகளிற் பிறத்தலும், பின்பு அவற்றினின்று இறத்தலும் ஆகிய இவ்வல்லலை ஒழித்து இறைவன் திருவடியிணைக்கு

ஆளாதலைத் துணிந்து நிற்க விரும்பினால், அதற்கு வழிசொல்லுவேன்; கேள்; வஞ்சனையை இயல்பாக உடைய அசுரர்கள் வாழ்ந்த மூன்று ஊர்களை, அழகிய, கொடிய வில்லால் அழியுமாறு வெகுண்ட தலைவனாகிய, செறிந்த, நீண்ட சோலைகளையுடைய திருத்தினை நகரில் எழுந்தருளியிருக்கின்ற, உலகமெல்லாம், முன்னிலையாகவும், படர்க்கையாகவும் நின்று துதிக்கின்ற, நன்மையின் மேலெல்லையாய் உள்ள பெருமானை, அணுகச் சென்று அடைவாயாக; மனமே, அஞ்சாதி.

திருத்தினைநகர்

வடிகொள் கண்ணிணை மடந்தையர் தம்பால்
மயல துற்றுவஞ் சனைக்கிட மாகி
முடியு மாகரு தேல்எரு தேறும்
மூர்த்தி யைமுத லாயபி ரானை
அடிகள் என்றடி யார்தொழு தேத்தும்
அப்பன் ஒப்பிலா முலைஉமை கோனைச்
செடிகொள் கான்மலி திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. **#657**

மனமே, நீ, மாவடுப்போலும் கண்ணிணைகளையுடைய மாதர்பாற் செல்கின்ற மையலைப் பொருந்தி, அம்மையல் காரணமாகத் தோன்றுகின்ற பல, வஞ்சனைகளுக்கும் இடமாய்க் கெட்டொழிய நினையாதி; மற்று, எருதில் ஏறுகின்ற மூர்த்தியும், எப்பொருட்கும் முதலாகிய பெருமானும், அடியார்கள், 'எம் அடிகள்' என்று வணங்கித் துதிக்கும் அப்பனும், இணையில்லாத பெருமையையுடைய தனங்களையுடைய உமைக்குத் தலைவனும் ஆகிய, புதல்களைக்கொண்ட காடுகள் நிறைந்த திருத்தினைநகரில் எழுந்தருளியிருக்கின்ற நன்மையின் மேலெல்லையாய் உள்ள பெருமானை அணுகச் சென்று அடைவாயாக.

திருத்தினைநகர்

பாவ மேபுரிந் தகலிடந் தன்னிற்
பலப கர்ந்தல மந்துயிர் வாழ்க்கைக்
காவ வென்றுழந் தயர்ந்துவி ழாதே
அண்ணல் தன்றிறம் அறிவினாற் கருதி
மாவின் ஈருரி உடைபுனைந் தானை
மணியை மைந்தனை வானவர்க் கமுதைத்
தேவ தேவனைத் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. **#658**

மனமே, நீ, அகன்ற நிலப்பரப்பின்கண் தீவினைகளையே செய்தும்,

பொய்கள் பலவற்றையே பேசியும் திரிந்து, உயிர்வாழ்வதற்கு இவையே ஏற்புடையன என்று கருதித் துன்பமுற்று மெலிந்து அழியாதி; மற்று, உலகிற்கு முதல்வனாய் உள்ளவனது இயல்புகளை, நல்லாசிரியர்பாற் பெற்ற அறிவினால் சிந்தித்து, புலியினது உரித்த தோலை உடுத்தவனும், மாணிக்கம் போல்பவனும், யாவர்க்கும் வலிய சார்பாய் உள்ளவனும், தேவர்களுக்கு அமுதம் போல்பவனும், அவர்கள் அனைவர்க்கும் இறைவனும் ஆகிய திருத்தினைநகரில் எழுந்தருளியிருக்கின்ற, நன்மையின் மேலெல்லையாய் உள்ள பெருமானை அணுகச் சென்று அடைவாயாக.

திருத்தினைநகர்

ஒன்ற லாவுயிர் வாழ்க்கையை நினைந்திட்
டுடல் தளர்ந்தரு மாநிதி யியற்றி
என்றும் வாழலாம் எமக்கெனப் பேசும்
இதுவும் பொய்யென வேநினை உளமே
குன்று லாவிய புயமுடை யானைக்
கூத்த னைக்குலா விக்குவ லயத்தோர்
சென்றெ லாம்பயில் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. **#659**

உளமே, ஒரு பொருளல்லாத உயிர் வாழ்க்கையைப் பெரிய பொருளாக நினைந்து, அந் நினைவின் வழியே, 'மெய் வருந்த, அரிய பெரிய பொருட்குவையை ஈட்டி என்றும் இனிது வாழ்தல் எமக்கு இயலும்' என்று உலகத்தார் பேசுகின்ற இச் செருக்குரைதானும் பொய் என்பதனை நினை; மனமே, மலைபோலும் தோள்களை உடையவனும், பல கூத்துக்களை வல்லவனும் ஆகிய உலகில் உள்ளவர் எல்லாம் சென்று பலகாலும் மகிழ்ந்து தங்குகின்ற திருத்தினை நகரில் எழுந்தருளியிக்கின்ற, நன்மையின் மேலெல்லையாய் உள்ள பெருமானை, அணுகச் சென்று அடைவாயாக.

திருத்தினைநகர்

வேந்த ராய்உல காண்டறம் புரிந்து
வீற்றி ருந்தஇவ் வுடலிது தன்னைத்
தேய்ந்தி றந்துவெந் துயருழந் திடும்இப்
பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே
பாந்த ளங்கையில் ஆட்டுகந் தானைப்
பரம னைக்கடற் சூர்தடிந் திட்ட
சேந்தர் தாதையைத் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. **#660**

மக்கள், அரசராய் நின்று உலகத்தை ஆண்டு, செங்கோல் செலுத்திப் பெருமிதத்துடன் அமர்ந்திருந்ததற்கு இடமாய் நின்ற மனித உடம்பாகிய இதனை, இதனொடு கொண்ட தொடர்பு நாள் தோறும் தேயப்பெற்று, பின்பு விட்டு நீங்கி, கொடிய துன்பத்தை நுகர்கின்ற இந்நிலையில்லாத வாழ்வினை, மனமே, சிறிதும் விரும்பாது விடு; மற்று, மனமே, பாம்பை அகங்கையிற் கொண்டு ஆட்டுதலை விரும்பியவனும், யாவர்க்கும் மேலானவனும், கடலில் மாமரமாய் நின்ற சூரனை அழித்த முருகப் பெருமானார்க்குத் தந்தையும் ஆகிய, திருத்தினை நகரில் எழுந்தருளியிருக்கின்ற, நன்மையின் மேலெல்லையாய் உள்ள பெருமானை, அணுகச் சென்று அடைவாயாக.

திருத்தினைநகர்

தன்னில் ஆசறு சித்தமும் இன்றித்
தவம்மு யன்றவ மாயின பேசிப்
பின்ன லார்சடை கட்டிஎன் பணிந்தாற்
பெரிதும் நீந்துவ தரிதது நிற்க
முன்னெ லாம்முழு முதலென்று வானோர்
மூர்த்தி யாகிய முதலவன் றன்னைச்
செந்நெ லார்வயல் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. **#661**

மனமே, தன்னிடத்துக் குற்றமின்றி நிற்கும் மனத்தை யுடையராகாது, தவத்தொழிலைச் செய்து, பயனில்லாத சொற்களைப் பேசி, பின்னுதல் பொருந்திய சடைகளைச் சேர்த்துக் கட்டிக்கொள்ளுதலுடன் எலும்பினை அணிந்து கொள்ளுதலாகிய வேடத்தைப் பூண்டு கொண்டாலே, மக்கள், பிறவியாகிய கடலை முற்றக் கடந்துவிடுதல் இயலாது; ஆதலின், அந்நிலை நின்னின் வேறாய் நிற்க, நீ, தேவர்கட்குத் தேவனாய் உள்ள பெருந்தேவனாகிய, செந்நெற் பயிர்கள் நிறைந்த வயல்களையுடைய திருத்தினை நகரில் எழுந்தருளியிருக்கின்ற, நன்மையின் மேலெல்லையாய் உள்ள பெருமானை, அணுகச் சென்று, இவனே, தொன்மையாய முழுமுதற் கடவுள் என்று துணிந்து அடைவாயாக.

திருத்தினைநகர்

பரிந்த சுற்றமும் மற்றுவன் றுணையும்
பலருங் கண்டழு தெழஉயிர் உடலைப்
பிரிந்து போம்இது நிச்சயம் அறிந்தாற்
பேதை வாழ்வெனும் பிணக்கினைத் தவிர்ந்து
கருந்தடங் கண்ணி பங்கனை உயிரைக்

கால காலனைக் கடவுளை விரும்பிச்
செருந்தி பொன்மலர் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. **#662**

மனமே, அன்புள்ள சுற்றத்தாரும், மற்றும் துணை யாயுள்ளாரும் ஆகிய பலருங் கண்டு, உடல்மேல் விழுந்து அழுது எழும்படி, உயிர் உடலைப் பிரிந்து அப்பாற் போய்விடும்; இது நிச்சயம். இதனை நீ அறிந்துளை என்றால், அறியாமையையுடைய வாழ்வாகிய இம் மாறுபட்ட நெறியை நீங்கி, கரிய பெரிய கண்களையுடையவளாகிய உமையது பாகத்தை உடையவனும், உயிர்களில் நிறைந்திருப்பவனும், காலனுக்குக் காலனும், எல்லாப் பொருளையும் கடந்துள்ளவனும் ஆகிய, செருந்தி மரங்கள் பொன்போலும் மலர்களை மலர்கின்ற திருத்தினை நகரில் எழுந்தருளியிருக்கின்ற, நன்மையின் மேலெல்லையாகிய பெருமானை, விரும்பி, அணுகச் சென்று அடைவாயாக.

<u>திருத்தினைநகர்</u>

நமையெ லாம்பலர் இகழ்ந்துரைப் பதன்முன்
நன்மை யொன்றிலாத் தேரர்புன் சமணாம்
சமய மாகிய தவத்தினார் அவத்தத்
தன்மை விட்டொழி நன்மையை வேண்டில்
உமையொர் கூறனை ஏறுகந் தானை
உம்ப ராதியை எம்பெரு மானைச்
சிமய மார்பொழில் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. **#663**

மனமே, நீ நன்மையை அடையவிரும்பினால், நன்மை சிறிதும் இல்லாத புத்தமும் சமணமும் ஆகிய சமயங்களைப் பொருந்திய தவத்தினரது பயனில்லாத செயல்களை விட்டொழி; நம்மைப் பலர் இகழ்ந்து பேசுதற்கு முன்பே, உமையை ஒரு பாகத்தில் உடையவனும், எருதை விரும்பி ஏறுபவனும், தேவர்கட்கு முதல்வனும், எங்கட்குத் தலைவனும் ஆகிய, மலைச்சிகரம் போலப் பொருந்திய சோலைகளையுடைய திருத்தினை நகரில் எழுந்தருளியிருக்கின்ற, நன்மையின் மேலெல்லையாகிய பெருமானை, அணுகச் சென்று அடைவாயாக.

<u>திருத்தினைநகர்</u>

நீடு பொக்கையிற் பிறவியைப் பழித்து
நீங்க லாமென்று மனத்தினைத் தெருட்டிச்
சேடு லாம்பொழில் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைத் திருவடி யிணைதான்
நாட லாம்புகழ் நாவலூ ராளி

நம்பி வன்றொண்ட னூரன் உரைத்த
பாட லாந்தமிழ் பத்திவை வல்லார்
முத்தி யாவது பரகதிப் பயனே. **#664**

எல்லையில்லாத, நிலையற்ற பிறவியை வெறுத்து, அதனினின்றும் நாம் நீங்குதலே பொருந்துவது என்று சொல்லி மனத்தைத் தெளவித்து, திரட்சி பொருந்திய சோலைகளையுடைய திருத்தினை நகரில் எழுந்தருளியிருக்கின்ற, நன்மையின் மேலெல்லையாயுள்ள பெருமானது திருவடியிணையை நினைத்தற்கு ஆகும், புகழையுடைய திருநாவலூர்க்குத் தலைவனும், வன்றொண்டனும் ஆகிய நம்பியாரூரன் பாடிய தமிழ்ப் பாடல்களாகிய இவை பத்தினையும் பாட வல்லவர் அடையும் இன்ப நிலையாவது, மிக மேலான நிலையாகிய முடிந்த பயனேயாம்.

திருநின்றியூர்

திருநின்றியூர்

திருநின்றியூர்,
பண் - தக்கேசி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : இலட்சுமிவரதர்.
தேவியார் : உலகநாயகியம்மை.

திருவும் வண்மையுந் திண்டிற லரசுஞ்
சிலந்தியார் செய்த செய்பணி கண்டு
மருவு கோச்செங்க ணான்றனக் களித்த
வார்த்தை கேட்டுநுன் மலரடி யடைந்தேன்
பெருகு பொன்னிவந் துந்துபன் மணியைப்
பிள்ளைப் பல்கணம் பண்ணையுள் நண்ணித்
தெருவுந் தெற்றியும் முற்றமும் பற்றித்
திரட்டுந் தென்திரு நின்றியூ ரானே. **#665**

பெருகி வருகின்ற காவிரியாற்றின் நீர், கொணர்ந்து தள்ளிய பல மணிகளை, சிறுமகாரது பல குழுக்கள், விளையாட்டிற் சென்று எடுத்து, தெருக்களிலும், திண்ணைகளிலும், முற்றங்களிலும் குவிக்கின்ற, அழகிய திருநின்றியூரில் உள்ள இறைவனே, நீ, சிலந்தி செய்த செய்கைத் தொண்டினைக் கண்டு, அதன் மறுபிறப்பாய் வந்த கோச்செங்கட் சோழ நாயனார்க்கு, செல்வத்தையும், கொடைத் தன்மையையும், திண்ணிய ஆற்றலை உடைய அரசாட்சியையும் அளித்த செய்தியைக் கேட்டு, அடியேன் உனது மலர் போலும் திருவடியைப் புகலிடமாக அடைந்தேன்; என்னை ஏன்று கொண்டருள்.

திருநின்றியூர்

அணிகொ ளாடையம் பூணணி மாலை
யமுது செய்தமு தம்பெறு சண்டி
இணைகொள் ஏழெழு நூறிரும் பனுவல்
ஈன்ற வன்திரு நாவினுக் கரையன்
கணைகொள் கண்ணப்பன் என்றிவர் பெற்ற
காதல் இன்னருள் ஆதரித் தடைந்தேன்
திணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியுஞ்
செல்வத் தென்திரு நின்றியூ ரானே. **#666**

திணை வரையறையைக் கொண்ட செவ்விய தமிழைப் பசிய கிளிகள் ஆராய்ந்து சொல்லுகின்ற, செல்வத்தையுடைய, அழகிய திருநின்றியூரில்

உள்ள இறைவனே, உன்பால், பாலைக் கொணர்ந்து ஆட்டி, அழகினைக் கொண்ட ஆடை, அழகிய அணிகலம், சூடுகின்ற மாலை, திருவமுது என்னும் இவற்றைப் பெற்ற சண்டேசுர நாயனாரும், தனக்குத்தானே நிகராய் உள்ள பாடல்கள் நாலாயிரத்து தொள்ளாயிரத்தை அருளிச் செய்தவராகிய திருநாவுக்கரசரும், அம்பைக் கையிலே கொண்ட கண்ணப்ப நாயனாரும் பெற்ற, அன்பின் பயனாகிய இனிய திருவருளை விரும்பி, அடியேன் உனது திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்று கொண்டருள்.

திருநின்றியூர்

மொய்த்த சீர்முந்நூற் றறுபது வேலி
மூன்று நூறுவே தியரோடு நுனக்கு
ஒத்த பொன்மணிக் கலசங்க ளேந்தி
ஓங்கு நின்றியூ ரென்றுனக் களிப்பப்
பத்தி செய்தவப் பரசுரா மற்குப்
பாதங் காட்டிய நீதிகண் டடைந்தேன்
சித்தர் வானவர் தானவர் வணங்குஞ்
செல்வத் தென்றிரு நின்றியூ ரானே. **#667**

சித்தர், தேவர், அசுரர், ஆகியோர் வணங்குகின்ற, செல்வத்தையுடைய, அழகிய திருநின்றியூரில் உள்ள இறைவனே, உன்னிடத்து அன்பு செய்த பரசுராமன் உனக்கு மிக்க புகழையுடைய முந்நூறு வேதியரோடு, முந்நூற்றறுபது வேலிப் பரப்புள்ள நிலத்தை, என்றும் விளங்கும் 'திருநின்றியூர்' என்று பெயரிட்டு, ஏற்புடைய, பொன்னாலாகிய அழகிய கலசங்களைக் கொண்டு நீர் வார்த்து அளிக்க, அவனுக்கு உன் திருவடியை அளித்த முறைமையை அறிந்து, அடியேன், உனது திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்று கொண்டருள்.

திருநின்றியூர்

இரவி நீள்சுடர் எழுவதன் முன்னம்
எழுந்து தன்முலைக் கலசங்க ளேந்திச்
சுரபி பால்சொரிந் தாட்டிநின் பாதந்
தொடர்ந்த வார்த்தை திடம்படக் கேட்டுப்
பரவி யுள்கிவன் பாசத்தை யறுத்துப்
பரம வந்துநுன் பாதத்தை யடைந்தேன்
நிரவி நித்திலம் அத்தகு செம்பொன்
அளிக்குந் தென்றிரு நின்றியூ ரானே. **#668**

மேலானவனே, நெற்பயிர்கள் முத்துக்களைப் பரப்பி, அம்முத்துக்களோடு ஒத்து மதிப்புடைய செம்பொன்போலும் நெற்களை

அளிக்கின்ற திருநின்றியூரில் உள்ள இறைவனே, உன்னை, பசு ஒன்று, சூரியனது நீண்ட ஒளி தோன்றுவதற்கு முன்பே எழுந்து, தன் மடியாகிய கலசத்தை ஏந்திப் பால் சொரிந்து வழிபட்டு நின் திருவடியை அடைந்த செய்தியை உறுதிப்படக் கேட்டு, அடியேன், உனது திருவடியை நினைத்துத் துதித்து, பற்றுக்களை எல்லாம் விடுத்து வந்து அடைந்தேன்; என்னை ஏன்று கொண்டருள்.

திருநின்றியூர்

வந்தொர் இந்திரன் வழிபட மகிழ்ந்து
வான நாடுநீ யாள்கென அருளிச்
சந்தி மூன்றிலுந் தாபர நிறுத்திச்
சகளி செய்திறைஞ் சகத்தியன் றனக்குச்
சிந்து மாமணி யணிதிருப் பொதியிற்
சேர்வு நல்கிய செல்வங்கண் டடைந்தேன்
செந்தண் மாமலர்த் திருமகள் மருவுஞ்
செல்வத் தென்றிரு நின்றியூ ரானே. **#669**

செவ்விய தண்ணிய சிறந்த தாமரை மலரின்கண் இருக்கும் திருமகள் வாழும், செல்வத்தை யுடைய, அழகிய திருநின்றியூரில் உள்ள இறைவனே, இந்திரன் ஒருவன், உன்னிடத்து வந்து உன்னை வழிபட, அதற்கு மகிழ்ந்து, அவனுக்கு, 'நீ, விண்ணுலகை ஆள்க' என்று சொல்லி வழங்கிய தலைமையையும், 'காலை, நண்பகல், மாலை' என்னும் மூன்று சந்திகளிலும், இலிங்க உருவத்தை நிறுவி, கலையுருவத்தை அமைத்து வழிபட்ட அகத்திய முனிவருக்கு, அருவிகள் மணிகளைச் சிதறுகின்ற, அழகிய திருப்பொதியில் மலையில் வீற்றிருக்க அருளிய பெருமையையும் அறிந்து, அடியேன், உனது திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்று கொண்டருள்.

திருநின்றியூர்

காது பொத்தரைக் கின்னரர் உழுவை
கடிக்கும் பன்னகம் பிடிப்பருஞ் சீயம்
கோதில் மாதவர் குழுவுடன் கேட்பக்
கோல ஆல்நிழற் கீழறம் பகர
வேதஞ் செய்தவர் எய்திய இன்பம்
யானுங் கேட்டுநின் இணையடி யடைந்தேன்
நீதி வேதியர் நிறைபுக ழுலகில்
நிலவு தென்றிரு நின்றியூ ரானே. **#670**

நீதியையுடைய அந்தணர்கள் நிறைந்திருத்தலால் உளதாகிய புகழ், உலகமுழுதும் விளங்குகின்ற, அழகிய திருநின்றியூரில் உள்ள

இறைவனே, கேள்வியால் துளைக்கப்பட்ட செவியினையுடைய நால்வர் முனிவர்கள், 'கின்னரர், புலி, கடிக்கும் இயல்புடைய பாம்பு, பற்றுதற்கு அரிய சிங்கம், குற்றம் அற்ற பெரிய தவத்தவர் குழாம்' என்ற இவருடன் இருந்து கேட்ப, நீ, அழகிய ஆல் நிழலில் இருந்து, அறத்தின் உண்மைகளை எல்லாம் சொல்ல, அவற்றைக் கேட்டுப் பின்பு வேதங்களை இயற்றி அவர்கள் அடைந்த இன்பத்தினைக் கேட்டறிந்து, அடியேனும், உனது திருவடியிணையை அடைந்தேன்; என்னை ஏன்று கொண்டருள்.

திருநின்றியூர்

கோடு நான்குடைக் குஞ்சரங் குலுங்க
நலங்கொள் பாதம்நின் றேத்திய பொழுதே
பீடு விண்மிசைப் பெருமையும் பெற்ற
பெற்றி கேட்டுநின் பொற்கழ லடைந்தேன்
பேடை மஞ்ஞையும் பிணைகளின் கன்றும்
பிள்ளைக் கிள்ளையும் எனப்பிறை நுதலார்
நீடு மாடங்கள் மாளிகை தோறு
நிலவு தென்திரு நின்றியூ ரானே. **#671**

பெண் மயில்கள் போலவும், இளைய பெண் மான்கள் போலவும், இளைய கிளிகள் போலவும், பிறை போலும் நெற்றியையுடைய மகளிர், உயர்ந்த மாடங்களையுடைய மாளிகை தோறும் விளங்குகின்ற, அழகிய திருநின்றியூரில் உள்ள இறைவனே, நான்கு கொம்புகளையுடைய யானை, உன்முன் நின்று, தனது உடல், அன்பினால் நடுங்கத் துதித்தபொழுதே, முன்னை வடிவத்தையும், விண்ணுலகத்தை அடையும் பெருமையையும் பெற்ற தன்மையைக் கேட்டு அடியேன், உனது பொன்போலும் திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்று கொண்டருள்.

திருவாவடுதுறை

திருஆவடுதுறை

திருவாவடுதுறை,
பண் - தக்கேசி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாசிலாமணியீசுவரர்.
தேவியார் : ஒப்பிலாமுலையம்மை.

மறைய வன்ஒரு மாணிவந் தடைய
வார மாய்அவன் ஆருயிர் நிறுத்தக்
கறைகொள் வேலுடைக் காலனைக் காலாற்
கடந்த காரணங் கண்டுகண் டடியேன்
இறைவன் எம்பெரு மான்என் றெப்போதும்
ஏத்தி ஏத்திநின் றஞ்சலி செய்துன்
அறைகொள் சேவடிக் கன்பொடும் அடைந்தேன்
ஆவ டுதுறை ஆதிஎம் மானே. #672

திருவாவடுதுறையில் எழுந்தருளியுள்ள, எங்கள் முதற்கடவுளே, உன்னை, அந்தணனாகிய பிரமசாரி ஒருவன் அன்புடன் வந்து அடைய, அவனது அரிய உயிரைப் போகாது நிறுத்த வேண்டி, உதிரத்தைக் கொண்ட சூலத்தையுடைய இயமனைக் காலால் உதைத்துக்கொன்ற காரணத்தை உணர்ந்து உணர்ந்து, அடியேன், 'யாவர்க்கும் முதல்வன்; எமக்குப் பெருமான்' என்று எப்பொழுதும் துதித்துத் துதித்து, அஞ்சலி கூப்பிநின்று, கழலும் சிலம்பும் ஒலித்தலைக் கொண்ட உனது செவ்விய திருவடியிடத்துக் கொண்ட அன்போடும் வந்து அடைந்தேன்; என்னை ஏற்றுக் கொண்டருள்.

திருஆவடுதுறை

தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி
சித்திரப் பந்தர் சிக்கென இயற்றச்
சுருண்ட செஞ்சடை யாய்அது தன்னைச்
சோழ னாக்கிய தொடர்ச்சிகண் டடியேன்
புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம்
போற்றி போற்றியென் றன்பொடு புலம்பி
அரண்டென் மேல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன்
ஆவ டுதுறை ஆதிஎம் மானே. #673

திருவாவடுதுறையில் எழுந்தருளியுள்ள, எங்கள் முதற்கடவுளே, தெளவுபெற்ற சிலந்தி ஒன்று, தனது வாயினின்றும் உண்டாகும் நூலால்

அழகிய பந்தரை உறுதிப்பட ஆக்க, அச்சிலந்தியை, சுருண்ட, சிவந்த சடையை உடையையாகிய நீ சோழனாய்ப் பிறக்கச்செய்த திருவருளை அறிந்து, அடியேன், எனது எதிர் வினைக்கு அஞ்சித் துணுக்குற்று, உனது அழகிய மலர்போலும் திருவடியில் விழுந்து புரண்டு, 'போற்றி! போற்றி!' என்று துதித்து, அன்பினால் அழுது, உன்னை வந்து அடைந்தேன்; என்னை ஏன்று கொண்டருள்.

திருஆவடுதுறை

திகழும் மாலவன் ஆயிர மலரால்
ஏத்து வான்ஒரு நீள்மலர் குறையப்
புகழி னால்அவன் கண்ணிடைந் திடலும்
புரிந்து சக்கரங் கொடுத்தல்கண் டடியேன்
திகழு நின்திருப் பாதங்கள் பரவித்
தேவ தேவநின் திறம்பல பிதற்றி
அகழும் வல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன்
ஆவ டுதுறை ஆதிஎம் மானே. **#674**

தேவர்கட்குத் தேவனே, திருவாவடுதுறையில் எழுந்தருளியுள்ள, எங்கள் முதற்கடவுளே, மிக்க புகழுடையவனாகிய திருமால் நாள்தோறும் ஆயிரந் தாமரைப் பூக்களால் உன்னை அருச்சிக் கின்றவன், ஒருநாள் ஒரு சிறந்த பூக்குறைய, அவன் அதற்கு மெலியாது, புகழத்தக்க உறுதிப் பாட்டுடன், தனது கண்களில் ஒன்றைப் பெயர்த்து உனக்குச் சாத்த, அதனைக் கண்டு மகிழ்ந்து அவனுக்கு நீ சிறந்த சக்கரப்படையை அளித்தமையை உணர்ந்து, அடியேன், என் நிலைமையைப் பெயர்த்து, நிலையில்லாது உழலச் செய்கின்ற வலிய வினைக்கு அஞ்சி, ஒளிவீசுகின்ற உனது திருவடிகளைத் துதித்து, உனது பெருமைகள் பலவற்றையும் பலகாற் பேசி, உன்னை வந்து அடைந்தேன்; என்னை ஏன்று கொண்டருள்.

திருஆவடுதுறை

வீரத் தால்ஒரு வேடுவ னாகி
விசைத்தொர் கேழலைத் துரந்துசென் றணைந்து
போரைத் தான்விச யன்றனக் கன்பாய்ப்
புரிந்து வான்படை கொடுத்தல்கண் டடியேன்
வாரத் தால்உன நாமங்கள் பரவி
வழிபட் டுன்திற மேநினைந் துருகி
ஆர்வத் தோடும்வந் தடியிணை அடைந்தேன்
ஆவ டுதுறை ஆதிஎம் மானே. **#675**

திருவாவடுதுறையில் எழுந்தருளியுள்ள, எங்கள் முதற்கடவுளே, நீ, ஒரு

வேடுவனாய் உருக்கொண்டு, ஒரு பன்றியை, வீரத்துடன் விரைந்து துரத்திச் சென்று, உன்னை நோக்கித் தவம் செய்து கொண்டிருந்த அருச்சுனனை அடைந்து, அவன்மேல் வைத்த விருப்பத்தால் அவனோடு போர் புரிந்து, பின்பு அவனுக்கு, சிறந்த படையாகிய பாசுபதக் கணையை அளித்தமையை அறிந்து, அடியேன் உனது தன்மைகளை நினைந்து உருகி, உனது திருப்பெயர்களை அன்போடு சொல்லி உன்னை வழிபட்டு, ஆர்வத்தோடு வந்து உன் திருவடியிணையை அடைந்தேன்; என்னை ஏன்று கொண்டருள்.

திருஆவடுதுறை

ஒக்க முப்புரம் ஓங்கெரி தூவ
உன்னை உன்னிய மூவர்நின் சரணம்
புக்கு மற்றவர் பொன்னுல காளப்
புகழி னால்அருள் ஈந்தமை யறிந்து
மிக்க நின்கழ லேதொழு தரற்றி
வேதி யாஆதி மூர்த்திநின் அரையில்
அக்க ணிந்தஎம் மானுனை யடைந்தேன்
ஆவ டுதுறை ஆதிஎம் மானே. **#676**

வேதம் ஓதுபவனே, உலகிற்கு முதலாய மூர்த்தியே, உன் அரையில் எலும்பை அணிந்த பெருமானே, திருவாவடுதுறையில் எழுந்தருளியுள்ள, எங்கள் முதற்கடவுளே, நீ, மூன்று ஊர்களில் ஓங்கி எரிகின்ற நெருப்பை ஒருசேர எழுப்பியபொழுது, அங்கு உன்னையே நினைத்திருந்த மூவராகிய அவர் மட்டில் உய்ந்து, உன் திருவடியை அடைந்து, மேல் உலகத்தை ஆளும் வண்ணம், அவர்கட்கு, புகழத்தக்க வகையில் திருவருள் ஈந்தமையை அறிந்து, அடியேன், மேலான உனது திருவடியையே தொழுது முறையிட்டு, உன்னை அடைந்தேன்; என்னை ஏன்று கொண்டருள்.

திருவலிவலம்

திருவலிவலம்

திருவலிவலம்,
பண் - தக்கேசி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மனத்துணைநாதர்.
தேவியார் : மாழையங்கண்ணியம்மை.

ஊனங் கத்துயிர்ப் பாய்உல கெல்லாம்
ஓங்கா ரத்துரு வாகிநின் றானை
வானங் கைத்தவர்க் கும்அளப் பரிய
வள்ள லைஅடி யார்கள்தம் உள்ளத்
தேனங் கைத்தமு தாகியுள் ளூறுந்
தேச னைத்திளைத் தற்கினி யானை
மானங் கைத்தலத் தேந்தவல் லானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. #677

புலால் வடிவாகிய உடம்பில் இருந்து உயிர்ப்பனவாகிய உயிர்களாய் நின்று அவைகட்கு உணர்வை உண்டாக்கி நிற்பவனும், விண்ணுலக இன்பத்தையும் வெறுத்துத் தவம் செய்வார்கட்கும் அளத்தற்கரிய வள்ளலாய் உள்ளவனும், தன் அடியவர்களது உள்ளத்தினுள்ளே, தேனும் கைப்ப, அமுதம் ஊற்றெழுவதுபோல எழுகின்ற ஒளிவடிவினனும், அழுந்துந்தோறும் இனிமை பயக்கின்றவனும், மானை அகங்கையிடத்து ஏந்த வல்லவனும் ஆகிய பெருமானை, அடியேன், 'திருவலிவலம்' என்னும் இத்தலத்தில் வந்து அடைந்தமையாற் கண்டேன்; இல்லாவிடில் எங்ஙனம் காண்பேன்!

திருவலிவலம்

பல்லடி யார்பணிக் குப்பரி வானைப்
பாடிஆ டும்பத்தர்க் கன்புடை யானைச்
செல்லடி யேநெருங் கித்திறம் பாது
சேர்ந்தவர்க் கேசித்தி முத்திசெய் வானை
நல்லடி யார்மனத் தெய்ப்பினில் வைப்பை
நான்உறு குறைஅறிந் தருள்புரி வானை
வல்லடி யார்மனத் திச்சையு ளானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. #678

பலதிறப்பட்ட அடியவரது தொண்டுகட்கும் இரங்குபவனும், இசையோடு பாடி, அதனோடு ஆடலையும் செய்கின்ற சீரடியார்களைத்

தன் தமர்களாகக் கொண்டு தொடர்புடையவனாகின்றவனும், தன்னை நோக்கிச் செல்லுகின்ற வழியிலே மாறுபடாது சென்று அணுகித் தன்னைப் பெற்றவர்கட்கே சித்தியையும் முத்தியையும் தருபவனும், நல்ல அடியார்களது மனத்தில், எய்ப்பிற்கு என்று வைத்துள்ள நிதியின் நினைவு போல நின்று அமைதியைத் தருபவனும், நான் அடைந்தனவும் அடையற்பாலனவுமாகிய குறைகளைத் தானே அறிந்து, அவற்றைக் களைந்தும், வாராது தடுத்தும் அருள்புரிபவனும், கற்றுவல்ல அடியார்களது உள்ளத்தில் தங்குவதற்கு விருப்பம் உடையவனும் ஆகிய பெருமானை, அடியேன், 'திருவலிவலம்' என்னும் இத் தலத்தில் வந்து அடைந்ததனாற் கண்டேன்; இல்லாவிடில் எங்ஙனங் காண்பேன்!

திருவலிவலம்

ஆழிய னாய்அகன் றேஉயர்ந் தானை
ஆதிஅந் தம்பணி வார்க்கணி யானைக்
கூழைய ராகிப்பொய் யேகுடி யோம்பிக்
குழைந்து மெய்யடி யார்குழுப் பெய்யும்
வாழியர்க் கேவழு வாநெறி காட்டி
மறுபிறப் பென்னை மாசறுத் தானை
மாழையொண் கண்உமை யைமகிழ்ந் தானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. **#679**

ஆழ்ந்தவனாகியும், அகன்றவனாகியும், உயர்ந்தவனாகியும் உள்ளவனும், பிறந்தது முதற் சாங்காறும் வழிபடுவார்க்கு அணியனாகின்றவனும், பணிவுடையவராய், குடியை, உள்ளத்தில் பற்றின்றிப் புரந்து, மனம் உருகிநின்று, தம்மை மெய்யடியார் கூட்டத்துள் வைத்தெண்ணும் வாழ்க்கையையுடையவர்க்கு அடிமை செய்தலில் தவறாத நெறியை உணர்த்து மாற்றால், என்னை மறுபிறப் பெடுத்தலாகிய குற்றத்தை அறுத்துத் தூயனாக்கியவனும், மாவடுப் போலும் கண்களையுடைய உமாதேவியை விரும்பி ஒருபாகத்தில் வைத்தவனும் ஆகிய பெருமானை, அடியேன், திருவலிவலம்' என்னும் இத்தலத்தில் வந்து அடைந்ததனாற் கண்டேன்; இல்லாவிடில் எங்ஙனங் காண்பேன்!

திருவலிவலம்

நாத்தான் தன்திற மேதிறம் பாது
நண்ணிஅண் ணித்தமு தம்பொதிந் தூறும்
ஆத்தா னைஅடி யேன்றனக் கென்றும்
அளவிறந் தபஃறேவர்கள் போற்றும்
சோத்தா னைச்சுடர் மூன்றிலும் ஒன்றித்

துருவி மால்பிர மன்னறி யாத
மாத்தா னைமாத் தெனக்குவைத் தானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. **#680**

அடியேற்கு, எனது நா, தனது புகழைச் சொல்லுதலில் என்றும் மாறுபடாதவாறு என்னிடத்துப் பொருந்தி, உள்ளே அமுதம் நிறைந்தாற்போல இனித்து ஊற்றெழுகின்ற துணைவனாய் உள்ளவனும், எண்ணில்லாத பல தேவர்களும் துதித்து வணங்குகின்ற வணக்கத்திற்கு உரியவனும். 'ஞாயிறு, திங்கள், தீ' என்னும் முச்சுடர்களிலும் வேறற நிற்பவனும், திருமாலும் பிரமனும் தேடி அறியப்படாத பெருமையை உடையவனும், எனக்குப் பெருமையை அளித்தவனும் ஆகிய பெருமானை, அடியேன், 'திருவலிவலம்' என்னும் இத் தலத்தில் வந்து அடைந்ததனாற் கண்டேன்; இல்லாவிடில் எங்ஙனங் காண்பேன்!

திருவலிவலம்

நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக்
கரையனும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானைத்
தொண்ட னேன்அறி யாமை யறிந்து
கல்லி யல்மனத் தைக்கசி வித்துக்
கழலடி காட்டிஎன் களைகளை அறுக்கும்
வல்லியல் வானவர் வணங்கநின் றானைவலிவ
லந்தனில் வந்துகண் டேனே. **#681**

சிறந்த இசைத்தமிழைப் பாடிய திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும் அருளிச்செய்த, தமிழ்ச் சொல்லால் அமைந்த மெய்யுணர்வு மாலையாகிய, முன்பு அவர்களால் சொல்லப்பட்டனவற்றையே பின்னும் பிறர் சொல்லிப் போற்றுதலை விரும்புபவனும், அடியேனது அறியாமையை அறிந்து, கல்லின் இயல்பைக் கொண்ட எனது மனத்தை உருகப்பண்ணி, கழல்

திருவலிவலம்

பாடுமா பாடிப்ப ணியுமா றறியேன்
பனுவுமாப னுவிப்ப ரவுமா றறியேன்
தேடுமா தேடித்தி ருத்துமா றறியேன்
செல்லுமா செல்லச்செ லுத்துமா றறியேன்
கூடுமோ றெங்ஙன மோஎன்று கூறக்
குறித்துக் காட்டிக் கொணர்ந்தெனை ஆண்டு
வாடிநீ வாளா வருந்தல்என் பானை

வலிவ லந்தனில் வந்துகண் டேனே. **#682**

யான், முன் உள்ள பாடல்களை, அவைகளைப் பாடும் நெறியாற் பாடி இறைவனை வழிபடுமாற்றை அறிந்திலேன்; புதிய பாடல்களை யாக்கும் நெறியால் யாத்துத் துதிக்கு மாற்றினையும் அறிந்திலேன்; மனத்தில் உள்ள குற்றங்களை ஆராயும் நெறியால் ஆராய்ந்து கண்டு அதனைத் திருத்தும் வகையை அறிந்திலேன்; அதனால், அதனை நன்னெறியிற் செல்லுமாறு செலுத்தும் வழிய அறிந்திலேன்; இவற்றால் 'இவன் நன்னிலையைப் பெறுதல் எவ்வாறோ!' என்று நல்லோர்கள் இரங்கிக்கூற இருக்கின்ற காலத்து, என்னையே சிறப்பாக யாவர்க்கும் காட்டி, 'இவன் எனக்கு அடிமை' என்று சொல்லி வெளிக்கொணர்ந்து, தனக்கு ஆளாகக் கொண்டு, 'இனி, நீ, பயனின்றி வாடி வருந்தலை' என்று தேற்றிய பெருமானை, அடியேன், 'திருவலிவலம்' என்னும் இத்தலத்தில் வந்து அடைந்ததனாற் கண்டேன்; இல்லாவிடில், எங்ஙனங் காண்பேன்!

திருவலிவலம்

பந்தித்தவ் வல்வினைப் பற்றறப் பிறவிப்
படுக டற்பரப் புத்தவிர்ப் பானைச்
சந்தித் ததிற லாற்பணி பூட்டித்
தவத்தை ஈட்டிய தன்னடி யார்க்குச்
சிந்தித் தற்கெளி தாய்த்திருப் பாதஞ்
சிவலோ கந்திறந் தேற்றவல் லானை
வந்திப் பார்தம் மனத்தினுள் ளானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. **#683**

பிணித்துள்ள வினைத் தொடர்பு அறுதலால் பிறவியாகிய கடலினது பரப்புச் சுருங்குமாறு செய்பவனும், தன்னை உணர்ந்த உணர்வின் வலிமையால், தம் செயல்களைத் தன்னிடத்தே சேர்த்து, அதனால், செய்யும் செயலெல்லாம் தவமேயாகக் குவித்த தன் அடியவர்கட்குத் தனது திருவடிகள், நினைத்தற்கு எளியவாய்க் கிடைத்தலானே, தனது சிவலோகத்தின் வாயிலைத் திறந்து, அதன்கண் அவர்களைப் புகச்செய்ய வல்லவனும், தன்னையே வணங்குகின்றவர்களது மனத்தில் விளங்குபவனும் ஆகிய பெருமானை, அடியேன், 'திருவலிவலம்' என்னும் இத்தலத்தில் வந்து அடைந்ததனாற் கண்டேன்; இல்லாவிடில், எங்ஙனங் காண்பேன்!

திருவலிவலம்

எவ்வெவர் தேவர்இ ருடிகள் மன்னர்
எண்ணிறந் தார்கள்மற் றெங்கும்நின் றேத்த

அவ்வவர் வேண்டிய தேயருள் செய்து
அடைந்தவர்க் கேஇட மாகிநின் றானை
இவ்விவ கருணைஎங் கற்பகக் கடலை
எம்பெரு மான்அரு ளாய்என்ற பின்னை
வவ்விஎன் ஆவிம னங்கலந் தானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. **#684**

தேவர்கள், இருடிகள், அரசர்கள் முதலாக எண்ணிறந்தவர்களாகிய எவரெவரும், எவ்விடத்திலும் இருந்து வழிபட, அவ்வெல்லா இடங்களிலும் நின்று அவர்களது வழி பாட்டினை ஏற்று, அவரவர் விரும்பியதை அவர்கட்கு அளித்து, இவ்வாற்றால், தன்னை அடைந்தவர்க்குப் புகலிடமாய் நிற்பவனும், இவ்வாறு உள்ள இவை இவையாகிய அருளைத் தருகின்ற எங்கள் கற்பகத் தருவும் கடலும் போல்பவனும், யான், 'எம் பெருமானே, எனக்கு அருள்செய்' என்று வேண்டிக்கொண்ட பின்பு, என் உயிரைத் தன்னுடையதாகக் கொண்டு, என் உள்ளத்திலே எஞ்ஞான்றும் நீங்காது இருப்பவனும் ஆகிய பெருமானை, அடியேன், 'திருவலிவலம்' என்னும் இத்தலத்தில் வந்து அடைந்ததனாற் கண்டேன்; இல்லாவிடில், எங்ஙனங் காண்பேன்!

திருவலிவலம்

திரியும் முப்புரஞ் செற்றதுங் குற்றத்
திறல்அ ரக்கனைச் செறுத்ததும் மற்றைப்
பெரிய நஞ்சமு துண்டதும் முற்றும்
பின்னையாய் முன்ன மேமுளைத் தானை
அரிய நான்மறை அந்தணர் ஓவா
தடிப ணிந்தறி தற்கரி யானை
வரையின் பாவைம ணாளன்எம் மானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. **#685**

வானத்தில் திரிகின்ற முப்புரங்களை அழித்ததும், குற்றம் செய்த, வலிமையுடைய அரக்கனாகிய இராவணனை ஒறுத்ததும், ஏனை, பெரிய ஆலகால விடத்தை அமுதமாக உண்டதும் முடிதற்குக் காரணனான பின்னோனாய், எப்பொருட்கும் முன்னே தோன்றினவனும், அரிய நான்கு வேதங்களை ஓதுகின்ற அந்தணர்கள், மனம் மாறுபடாது நின்று அடிபணிந்தும், அவர்களால் அறிதற்கு அரியவனும், மலைமகட்குக் கணவனும் ஆகிய எம் பெருமானை, அடியேன், 'திருவலிவலம்' என்னும் இத்தலத்தில் அடைந்ததனாற் கண்டேன்; இல்லாவிடில், எங்ஙனங் காண்பேன்!

திருவலிவலம்

ஏன்ற அந்தணன் தலையினை அறுத்து
நிறைக்க மால்உதி ரத்தினை ஏற்றுத்
தோன்று தோள்மிசைக் களேபரந் தன்னைச்
சுமந்த மாவிர தத்தகங் காளன்
சான்று காட்டுதற் கரியவன் எளியவன்
றன்னைத் தன்னி லாமனத் தார்க்கு
மான்று சென்றணை யாதவன் றன்னை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. **#686**

தன்னொடு மாறுபடுதலை ஏற்ற பிரமனது தலைகளில் ஒன்றை அறுத்து, அதனை நிரப்ப, மாயோனது உதிரத்தை ஏற்றவனும், யாவருக்கும் காணப்படுகின்ற தோளின் மேல் எலும்புக் கூட்டினைச் சுமக்கின்ற பெரிய விரதத்தையுடைய கங்காள வேடத்தையுடையவனும், தன்னைக் காண்பதற்குரிய வழியைக் காட்டுதற்கு அரியவனும், தன்னிடத்திற் பொருந்திய மனத்தையுடையவர்கட்கு எளியவனும், அறியாமை வழிச் சென்று அணுக இயலாதவனும் ஆகிய பெருமானை, அடியேன், 'திருவலிவலம்' என்னும் இத்தலத்தில் வந்து அடைந்ததனாற் கண்டேன்; இல்லாவிடில் எங்ஙனங் காண்பேன்!

திருவலிவலம்

கலிவ லங்கெட ஆரழல் ஓம்புங்
கற்ற நான்மறை முற்றனல் ஓம்பும்
வலிவ லந்தனில் வந்துகண் டடியேன்
மன்னு நாவல்ஆ ரூரன்வன் றொண்டன்
ஒலிகொள் இன்னிசைச் செந்தமிழ் பத்தும்
உள்ளத் தால்உகந் தேத்தவல் லார்போய்
மெலிவில் வானுல கத்தவர் ஏத்த
விரும்பி விண்ணுல கெய்துவர் தாமே. **#687**

வறுமையின் வலிமை கெடும்படி அரிய வேள்வித் தீயை வளர்த்தற்கு ஏதுவான, பெரியோர் பலரும் போற்றிக் கற்ற நான்கு வேதங்களின் முடிந்த பொருளாகிய தீப்போலும் உருவினனாகிய சிவபெருமானை, அவனை எஞ்ஞான்றும் தன்னிடத்து நீங்காது கொண்டு நிற்கும், 'திருவலிவலம்' என்னும் தலத்தில் வந்து கண்டு, அவன் அடியவனும், நிலை பெற்ற திருநாவலூரில் தோன்றியவனும், 'வன்றொண்டன்' எனப் பெயர்பெற்றவனும் ஆகிய நம்பியாரூரன் பாடிய, இனிய இசையையுடைய, செவ்விய தமிழால் ஆகிய பத்துப் பாடல்களையும், மனத்தால் விரும்பிப் பாடவல்லவர்கள், தேவர்கள் விரும்பிப் போற்ற, துன்பம் இல்லாத வானுலகத்தைப் போய் அடைவர்; இது திண்ணம்.

திருநள்ளாறு

திருநள்ளாறு

திருநள்ளாறு,
பண் - தக்கேசி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தெர்ப்பாரணியயீசுவரர்.
தேவியார் : போகமார்த்தபூண்முலையம்மை.

செம்பொன் மேனிவெண் ணீறணி வானைக்
கரிய கண்டனை மாலயன் காணாச்
சம்பு வைத்தழல் அங்கையி னானைச்
சாம வேதனைத் தன்னொப்பி லானைக்
கும்ப மாகரி யின்னுரி யானைக்
கோவின் மேல்வருங் கோவினை எங்கள்
நம்ப னைநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேனே. **#688**

செம்பொன் போலும் திருமேனியில் வெள்ளிய திருநீற்றை அணிபவனும், கரிய கண்டத்தை உடையவனும், திருமாலும் பிரமனும் காணாத சம்புவும், நெருப்பை அகங்கையில் ஏந்தியவனும், சாமவேதத்தை விரும்புபவனும், தனக்கு ஒப்பாவதொரு பொருள் இல்லாதவனும், குடம்போலும் தலையை உடைய பெரிய யானையின் தோலை உடையவனும், எருதின்மேல் ஏறிவரும் தலைவனும், எங்கள் அருந்துணைவனும், திருநள்ளாற்றில் எழுந்தருளியுள்ளவனும் ஆகிய அமுதம் போல்பவனை மறந்து, நாய்போலும் அடியேன், வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

திருநள்ளாறு

விரைசெய் மாமலர்க் கொன்றையி னானை
வேத கீதனை மிகச்சிறந் துருகிப்
பரசு வார்வினைப் பற்றறுப் பானைப்
பாலொ டானஞ்சும் ஆடவல் லானைக்
குரைக டல்வரை ஏழுல குடைய
கோனை ஞானக் கொழுந்தினைக் கொல்லை
நரைவிடை யுடைநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேனே. **#689**

மணத்தைத் தருகின்ற கொன்றைமலர் மாலையை அணிந்தவனும், வேதத்தின் இசையை விரும்புபவனும், அன்பு மிகச்சிறந்து, மனம்

உருகித் துதிப்பவர்களது வினைத்தொடர்பை அறுப்பவனும், பால் முதலிய ஆனைந்தினை ஆடவல்லவனும், ஒலிக்கின்ற கடலும், மலையும், உலகும் ஆகியவற்றை ஏழேழாக உடைய தலைவனும், ஞானத்திற்கு எல்லையாய் உள்ளவனும், முல்லை நிலத்திற்குரிய வெள்ளிய இடபத்தை உடையவனும், திருநள்ளாற்றில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய அமுதம்போல்பவனை மறந்து, நாய் போலும் அடியேன், வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

திருநள்ளாறு

பூவில்வா சத்தைப் பொன்னினை மணியைப்
புவியைக் காற்றினைப் புனல்அனல் வெளியைச்
சேவின் மேல்வருஞ் செல்வனைச் சிவனைத்
தேவ தேவனைத் தித்திக்குந் தேனைக்
காவியங் கண்ணி பங்கனைக் கங்கைச்
சடைய னைக்கா மரத்திசை பாட
நாவில் ஊறுநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேனே. **#690**

பூவில் உள்ள மணமும், பொன்னும், மணியும் ஆகிய இவைபோல்பவனும், 'மண், நீர், தீ, காற்று, வானம்' என்னும் ஐம்பெரும் பூதங்களாய் நிற்பவனும், எருதின்மேல் வரும் செல்வத்தை உடையவனும், நன்மையே வடிவானவனும். தேவர்கட்கெல்லாம் தேவனும், தித்திக்கும் தேன்போல இனிப்பவனும், குவளைப் பூப் போலும் கண்களையுடையவளாகிய மங்கைதன் பங்காளனும், கங்கையைத் தாங்கிய சடையை உடையவனும், 'சீகாமரம்' என்னும் இசையாற் பாடுமிடத்து, நாவில் இனிமை மிகுகின்றவனும், திருநள்ளாற்றில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய அமுதம்போல்பவனை மறந்து, நாய்போலும் அடியேன் வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

திருநள்ளாறு

தஞ்ச மென்றுதன் தாளது வடைந்த
பாலன்மேல் வந்த காலனை உருள
நெஞ்சில் ஓர்உதை கொண்டபி ரானை
நினைப்ப வர்மனம் நீங்ககில் லானை
விஞ்சை வானவர் தானவர் கூடிக்
கடைந்த வேலையுள் மிக்கெழுந் தெரியும்
நஞ்சம் உண்டநள் ளாறனை அமுதை

நாயி னேன்மறந் தென்நினைக் கேனே. **#691**
'அடைக்கலம்' என்று சொல்லித் தனது திருவடியை அடைந்த சிறுவன்மேல் சினந்து வந்த இயமனை, வீழ்ந்து உருளும்படி அவனது மார்பில் ஓர் உதை உதைத்தலை மேற்கொண்ட தலைவனும், தன்னை நினைப்பவரது மனத்தை விட்டு நீங்குதல் இல்லாதவனும், அறிவு மிக்க தேவர்களும், அசுரர்களும் கூடிக் கடைந்த கடலுள் மிகுதியாய்த் தோன்றி வெம்மையுற்று நின்ற நஞ்சினை உண்டவனும், திருநள்ளாற்றில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய அமுதம் போல்பவனை மறந்து, நாய்போலும் அடியேன், வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

திருநள்ளாறு

மங்கை பங்கனை மாசிலா மணியை
வான நாடனை ஏனமோ டன்னம
எங்கும் நாடியுங் காண்பரி யானை
ஏழை யேற்கெள வந்தபி ரானை
அங்கம் நான்மறை யான்நிறை கின்ற
அந்த ணாளர் அடியது போற்றும்
நங்கள் கோனைநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேன. **#692**

மங்கை ஒருத்தியது பங்கை உடையவனும், இயல்பாகவே மாசில்லாது விளங்கும் மணிபோல்பவனும், வானமாகிய நாட்டை உடையவனும், பன்றியும் அன்னமும் எவ்விடத்துத் தேடியும் காணுதல் அரியவனும், எளியேனுக்கு எளியனாய் எதிர்வந்த தலைவனும், ஆறு அங்கங்களையுடைய நான்கு வேதங்களோடு நிறைந்து நிற்கின்ற அந்தணர்கள் தனது திருவடியைப் போற்றுகின்ற நம் தலைவனும், திருநள்ளாற்றில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய அமுதம் போல்பவனை மறந்து, நாய் போலும் அடியேன். வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

திருநள்ளாறு

கற்ப கத்தினைக் கனகமால் வரையைக்
காம கோபனைக் கண்ணுத லானைச்
சொற்ப தப்பொருள் இருள்அறுத் தருளுந்
தூய சோதியை வெண்ணெய்நல் லூரில
அற்பு தப்பழ ஆவணங் காட்டி
அடிய னாஎன்னை ஆளது கொண்ட
நற்ப தத்தைநள் ளாறனை அமுதை

நாயி னேன்மறந் தென்நினைக் கேனே. **#693**

கற்பக தருவும் பெரிய பொன்மலையும் போல்பவனும், காமனைக் காய்ந்தவனும் கண்பொருந்திய நெற்றியை உடையவனும், சொல் நிலையில் நிற்கும் பொருள் உணர்வாகிய அறியாமையைக் களைந்து, பொருள்கள், நேரே விளங்குமாறு விளக்குகின்ற தூய ஒளியாய் நிற்பவனும், என்னை அடியவனாக, திருவெண்ணெய் நல்லூரில், யாவரும் வியக்கத் தக்க, பழமையதாகத் தீட்டப்பட்டதோர் ஓலையைக் காட்டி அடிமை கொண்ட நன்னிலையாய் உள்ளவனும், திருநள்ளாற்றில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய அமுதம் போல்பவனை மறந்து, நாய் போலும் அடியேன், வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

திருநள்ளாறு

மறவ னைஅன்று பன்றிப்பின் சென்ற
மாயனை நால்வர்க் காலின்கீழ் உரைத்த
அறவ னைஅம ரர்க்கரி யானை
அமரர் சேனைக்கு நாயக னான
குறவர் மங்கைதன் கேள்வனைப் பெற்ற
கோனை நான்செய்த குற்றங்கள் பொறுக்கும்
நறைவி ரியும்நள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேனே. **#694**

அன்று ஒரு பன்றியின்பின் அதனைத் துரத்திச் சென்ற வேடனும், அன்னதொரு மாயம் வல்லவனும், நால்வர் முனிவர்க்கு ஆல் நிழலில் இருந்து சொல்லிய அறத்தை உடையவனும், தேவர்கட்கு அரியனாய் நிற்பவனும், தேவர் சேனைக்குத் தலைவனாகிய, குறவர் மகளாகிய வள்ளிதன் கணவனைப் பெற்ற தலைவனும், நான் செய்த குற்றங்களைப் பொறுப்பவனும், பூக்களின் மணம் பரக்கின்ற திருநள்ளாற்றில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய அமுதம் போல்பவனை மறந்து, நாய்போலும் அடியேன், வேறு எதனை நினைப்பேன் ! ஒன்றையும் நினையேன்.

திருநள்ளாறு

மாதி னுக்குடம் பிடங்கொடுத் தானை
மணியி னைப்பணி வார்வினை கெடுக்கும்
வேதனை வேத வேள்வியர் வணங்கும்
விமல னைஅடி யேற்கெளி வந்த
தூதனைத் தன்னைத் தோழமை யருளித
தொண்ட னேன்செய்த துரிசுகள் பொறுக்கும

நாத னைநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேனே. **#695**

மாதராள் ஒருத்திக்குத் தனது உடம்பின் இடப் பக்கத்தைக் கொடுத்தவனும், மாணிக்கம் போல்பவனும், தன்னைப் பணிகின்றவர்களது வினையை அழிக்கின்ற, வேத முதல்வனாய் உள்ளவனும், வேதத்தின் வழி வேட்கின்ற வேள்வியை உடையவர்கள் வணங்குகின்ற தூயவனும், அடியேனுக்கு எளிமையாய்க் கிடைத்த தூதனும், தன்னை எனக்குத் தோழமை முறையினனாக அளித்து, அடியேன் செய்த குற்றங்களைப் பொறுக்கும் தலைவனும், திருநள்ளாற்றில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய அமுதம் போல்பவனை மறந்து, நாய் போலும் அடியேன் வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

<u>திருநள்ளாறு</u>

இலங்கை வேந்தன் எழில்திகழ் கயிலை
எடுப்ப ஆங்கிம வான்மகள் அஞ்சத்
துலங்கு நீள்முடி ஒருபதுந் தோள்கள
இருப துந்நெரித் தின்னிசை கேட்டு
வலங்கை வாளொடு நாமமுங் கொடுத்த
வள்ளலைப் பிள்ளை மாமதி சடைமேல
நலங்கொள் சோதிநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேனே. **#696**

இலங்கைக்கு அரசன் அழகு விளங்குகின்ற கயிலாய மலையைப் பெயர்க்க, அது போழ்து மலையரையன் மகளாகிய உமை அஞ்சுதலும், அவனது விளங்குகின்ற பெரிய முடியணிந்த தலைகள் ஒருபதையும், தோள்கள் இருபதையும் நெரித்து, பின்னர் அவன் செருக்கொழிந்து பாடிய இனிய இசையைக் கேட்டு, வலக்கையிற் பிடிக்கும் வாளினையும் 'இராவணன்' என்ற பெயரையும், அவனுக்கு அளித்த வள்ளலும், குழவிப் பருவத்தையுடைய சிறந்த சந்திரன், சடைமேல் தங்கி நன்மையுடன் வாழ்கின்ற ஒளியுருவினனும் திருநள்ளாற்றில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய அமுதம் போல்பவனை மறந்து, நாய்போலும் அடியேன், வேறு எதனை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்.

<u>திருநள்ளாறு</u>

செறிந்த சோலைகள் சூழ்ந்தநள் ளாற்றெஞ்
சிவனை நாவலூர்ச் சிங்கடி தந்தை
மறந்து நான்மற்று நினைப்பதே தென்று
வனப்பகை அப்பன் ஊரன்வன் றொண்டன

சிறந்த மாலைகள் அஞ்சினோ டஞ்சுஞ்
சிந்தைஉள் ளுருகிச் செப்ப வல்லார்க
கிறந்து போக்கில்லை வரவில்லை யாகி
இன்ப வெள்ளத்துள் இருப்பர்கள் இனிதே. **#697**

நெருங்கிய சோலைகள் சூழ்ந்த திருநள்ளாற்றில் எழுந்தருளியிருக்கின்ற எங்கள் சிவபெருமானை, திருநாவலூரில் தோன்றியவனும், 'சிங்கடி' என்பவளுக்கும் 'வனப்பகை' என்பவளுக்கும் தந்தையும், வன்றொண்டனும் ஆகிய நம்பியாரூரன், 'இப்பெருமானை மறந்து நான் நினைப்பது வேறு யாது' என்று சொல்லி, அன்பு மிகுந்து பாடிய பாடல்களாகிய இப்பத்தினையும் மனம் உள்ளுருகிப் பாட வல்லவர்க்கு, இறந்து போதலும், பிறந்து வருதலும் இல்லையாக, பேரின்ப வெள்ளத்துள் இனிதே இருப்பார்கள்.

திருவடமுல்லைவாயில்

திருவடமுல்லைவாயில்

திருவடமுல்லைவாயில்,
பண் - தக்கேசி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. இது திருவிளம்பூதூரென்று வழங்குகிறது. ,
சுவாமிபெயர் : மாசிலாமணியீசுவரர்.
தேவியார் : கொடியிடைநாயகியம்மை.

திருவும்மெய்ப் பொருளுஞ் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள்என் றெண்ணி
ஒருவரை மதியா துறாமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய
பாசுப தாபரஞ் சுடரே. **#698**

தேன் பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருமுல்லை வாயிலில் எழுந்தருளியிருப்பவனே, உயிர்களைக் காப்பவனே, மேலான ஒளியாய் உள்ளவனே, வீட்டின்பமும், அதனைத் தருகின்ற மெய்ப்பொருளும், இம்மையிற்பெறும் செல்வமும் எல்லாம் எனக்கு உனது புகழையுடைய திருவடிகளே என்று மனத்தால் நினைத்து, பிறர் ஒருவரையும் துணையாக நினையாது, அவர்களைப் பற்றாமைக்கு ஏதுவாகிய செயல்களையே செய்தும், அவர்கள் என்னைப் பற்றவரின், பிணங்கியும் உன்னிடத்து உறைத்த பற்றுடையேனாய்த் திரிவேன்; வாயினாலும் உன்னையே பாடிப் பரவுகின்ற அடியேனாகிய யான் படுகின்ற துன்பத்தை, நீ நீக்கியருளாய்.

திருவடமுல்லைவாயில்

கூடிய இலயஞ் சதிபிழை யாமைக்
கொடியிடை உமையவள் காண
ஆடிய அழகா அருமறைப் பொருளே
அங்கணா எங்குற்றாய் என்று
தேடிய வானோர் சேர்திரு முல்லை
வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பாடிய அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. **#699**

உன் தேவியாகிய கொடிபோலும் இடையினையுடைய உமையவள் கண்டு மகிழுமாறு, பல திறங்களும் கூடிய கூத்தினை, தாளவொற்றுப் பிழையாதவாறு ஆடுகின்ற அழகனே, அரிய வேதத்தின் முடிந்த பொருளாய் உள்ளவனே, கருணையாகிய அழகினையுடைய கண்களையுடையவனே, 'இறைவனே, நீ எங்குள்ளாய்?' என்று தேடிய தேவர்கள், நீ இருக்கும் இடம் அறிந்து வந்து சேர்கின்ற திருமுல்லை வாயிலில் எழுந்தருளியிருப்பவனே, உயிர்களைக் காப்பவனே, மேலான ஒளியாய் உள்ளவனே, உனது திருப்புகழைப் பலவிடங்களிலும் சென்று விருப்பத்தோடே பாடிய அடியேன், மேலும் அங்ஙனமே பாடுதற்கு, யான் படுகின்ற துன்பத்தை நீ நீக்கியருளாய்.

திருவடமுல்லைவாயில்

விண்பணிந் தேத்தும் வேதியா மாதர்
வெருவிட வேழம்அன் றுரித்தாய்
செண்பகச் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் தேவர்தம் அரசே
தண்பொழில் ஒற்றி மாநக ருடையாய்
சங்கிலிக் காஎன்கண் கொண்ட
பண்பநின் அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. **#700**

விண்ணுலகம் வணங்கித் துதிக்கின்ற அந்தணனே, மனையாள் கண்டு நடுக்கங் கொள்ளுமாறு அன்று யானையை உரித்து, அதன் தோலைப் போர்த்துக் கொண்டவனே, சண்பக மரங்களின் சோலை சூழ்ந்துள்ள திருமுல்லைவாயிலில் எழுந்தருளியிருப்பவனே, தேவர்களுக்குத் தலைவனே, தண்ணிய சோலைகளையுடைய திருவொற்றிமாநகரை உடையவனே, சங்கிலியின் பொருட்டு என் கண்ணைப் பறித்துக்கொண்ட செப்பமுடையவனே, உயிர்களைக் திருப்புகழை விருப்பத்தோடு, பல நலங்களையும் உடைய தமிழால் பாடுவேனாகிய எனக்கு அருள்செய்யாய்.

திருவடமுல்லைவாயில்

பொன்னலங் கழனிப் புதுவிரை மருவிப்
பொறிவரி வண்டிசை பாட
அந்நலங் கமலத் தவிசின்மேல் உறங்கும்
அலவன்வந் துலவிட அள்ளல்
செந்நெலங் கழனி சூழ்திரு முல்லை
வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பன்னலந் தமிழாற் பாடுவேற் கருளாய்

பாசுப தாபரஞ் சுடரே. #701
பொன்போலும் நெல்லைத் தருகின்ற நல்ல அழகிய வயல்களில், புள்ளிகளையும், கீற்றுக்களையும் உடைய வண்டுகள் புதிய நறுமணத்தை நுகர்ந்து இசையைப் பாட, அந்த நல்ல அழகிய தாமரை மலராகிய படுக்கையின்மேல் கிடந்து உறங்குகின்ற நண்டு, அந்த இசை நின்றபொழுது விழித்தெழுந்து வந்து உலாவுகின்ற அத்தன்மையதான சேற்றையுடைய செந்நெல்லையுடைய அழகிய வயல்கள் சூழ்ந்த திருமுல்லை வாயிலில் எழுந்தருளியிருப்பவனே, உயிர்களைக் காப்பவனே, மேலான ஒளியாய் உள்ளவனே, உனது திருப்புகழை விருப்பத்தோடு, பல நலங்களையும் உடைய தமிழால் பாடுவேனாகிய எனக்கு அருள்செய்யாய்.

திருவடமுல்லைவாயில்

சந்தன வேருங் காரகிற் குறடுந்
தண்மயிற் பீலியுங் கரியின்
தந்தமுந் தரளக் குவைகளும் பவளக்
கொடிகளுஞ் சுமந்துகொண் டுந்தி
வந்திழி பாலி வடகரை முல்லை
வாயிலாய் மாசிலா மணியே
பந்தனை கெடுத்தென் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. #702

சந்தன மரத்தின் வேரையும், கரிய அகிலினது கட்டையினையும், மென்மையான மயில் இறகினையும், யானையின் தந்தத்தையும், முத்துக் குவியல்களையும், பவளக் கொடிகளையும் மேல் இட்டுக்கொண்டும், பக்கங்களில் தள்ளியும் வந்து பாய்கின்ற பாலியாற்றின் வடகரைக்கண் உள்ள திருமுல்லைவாயிலில் எழுந்தருளியிருப்பவனே, மாசில்லாத மணி போல்பவனே, உயிர்களைக் காப்பவனே, மேலான ஒளியாய் உள்ளவனே, எனது பாவத்தைத் தொலைத்து யான் படுகின்ற துன்பத்தை நீக்கியருளாய்.

திருவடமுல்லைவாயில்

மற்றுநான் பெற்ற தார்பெற வல்லார்
வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமே செயினுங் குணமெனக் கொள்ளுங்
கொள்கையான் மிகைபல செய்தேன்
செற்றுமீ தோடுந் திரிபுரம் எரித்த
திருமுல்லை வாயிலாய் அடியேன்
பற்றிலேன் உற்ற படுதுயர் களையாய

பாசுப தாபரஞ் சுடரே. #703
மாற்றாது வழங்கும் வள்ளலே, வானத்தில் ஓடுகின்ற முப்புரங்களைப் பகைத்து எரித்தவனே, திருமுல்லைவாயிலில் எழுந்தருளியிருப்பவனே, உயிர்களைக் காப்பவனே, மேலான ஒளியாய் உள்ளவனே, யான் பொய்யையே பேசி, குற்றங்களையே செய்தாலும் அவைகளை நீ குணங்களாகவே கொள்ளும் அளவிற்கு உனது பேரருளைப் பெற்றேனாகலின், யான் பெற்ற பேறு, மற்று யார் பெற வல்லார்! அத்திருவருட் சார்பை நினைந்தே யான் குற்றங்கள் பலவற்றைச் செய்தேன்; அது, தவறுடைத்தே. ஆயினும், அது நோக்கி என்னை நீ கைவிடுவையாயின், அடியேன் வேறொரு துணை இல்லேன்; ஆதலின், அடியேனை அடைந்த துன்பத்தை நீ நீக்கியருளாய்.

திருவடமுல்லைவாயில்

மணிகெழு செவ்வாய் வெண்ணகைக் கரிய
வார்குழல் மாமயிற் சாயல்
அணிகெழு கொங்கை அங்கயற் கண்ணார்
அருநடம் ஆடல்அ றாத
திணிபொழில் தழுவு திருமுல்லை வாயிற்
செல்வனே எல்லியும் பகலும்
பணியது செய்வேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. #704

அழகு பொருந்திய சிவந்த வாயினையும், வெள்ளிய பற்களையும், கரிய நீண்ட கூந்தலையும், சிறந்த மயில் போலும் சாயலையும், அணிகலங்கள் பொருந்திய கொங்கைகளையும், அழகிய கயல்போலும் கண்களையுமுடைய ஆடல் மகளிர் அரிய நடனங்களை ஆடுதல் நீங்காததும், செறிந்த சோலைகள் சூழ்ந்ததும் ஆகிய திருமுல்லைவாயிலில் எழுந்தருளியிருக்கும் செல்வனே, உயிர்களைக் காப்பவனே, மேலான ஒளியாய் உள்ளவனே, இரவும் பகலும் உனக்குத் தொண்டு செய்வேனாகிய யான் படுகின்ற துன்பத்தை நீக்கியருளாய்.

திருவடமுல்லைவாயில்

நம்பனே அன்று வெண்ணெய்நல் லூரில்
நாயினேன் றன்னைஆட் கொண்ட
சம்புவே உம்ப ரார்தொழு தேத்துந
தடங்கடல் நஞ்சுண்ட கண்டா
செம்பொன்மா ளிகைசூழ் திருமுல்லை வாயில்
தேடியான் திரிதர்வேன் கண்ட
பைம்பொனே அடியேன் படுதுயர் களையாய்

பாசுப தாபரஞ் சுடரே. #705
யாவராலும் விரும்பத் தக்கவனே, அன்று திருவெண்ணெய்நல்லூரில் வந்து, நாய்போன்றவனாகிய என்னை ஆட்கொண்ட சம்புவே, வானுலகத்தவர் வணங்கித் துதிக்கின்ற, பெரிய கடலில் உண்டான நஞ்சினை உண்ட கண்டத்தையுடையவனே, உன்னைத் தேடித் திரிவேனாகிய யான், செம்பொன்னால் இயன்ற மாளிகைகள் நிறைந்த திருமுல்லைவாயிலில் கண்ட, பசிய பொன்போல்பவனே, உயிர்களைக் காப்பவனே, மேலான ஒளியாய் உள்ளவனே, அடியேன் படுகின்ற துன்பத்தை நீக்கியருளாய்.

திருவடமுல்லைவாயில்

மட்டுலா மலர்கொண் டடியிணை வணங்கும்
மாணிதன் மேல்மதி யாதே
கட்டுவான் வந்த காலனை மாளக
காலினால் ஆருயிர் செகுத்த
சிட்டனே செல்வத் திருமுல்லை வாயிற்
செல்வனே செழுமறை பகர்ந்த
பட்டனே அடியேன் படுதுயர் களையாய
பாசுப தாபரஞ் சுடரே. #706

தேன் பொருந்திய மலர்களைக் கொண்டு உனது திருவடியிணையை வழிபடுகின்ற மாணவன்மேல், அவன் பெருமையை எண்ணாமலே அவனைக் கட்டிப் போதற்கு வந்த இயமனை, அவன் இறக்கும்படி அவனது அரிய உயிரைக் காலால் அழித்த மேலோனே, செல்வத்தையுடைய திருமுல்லைவாயிலில் எழுந்தருளியிருக்கின்ற செல்வனே, சொல்வளமும், பொருள்வளமும் உடைய வேதங்களைச் சொன்ன ஆசிரியனே, உயிர்களைக் காப்பவனே, மேலான ஒளியாய் உள்ளவனே, அடியேன் படுகின்ற துன்பத்தை நீக்கியருளாய்.

திருவடமுல்லைவாயில்

சொல்லரும் புகழான் தொண்டை மான் களிற்றைச்
சூழ்கொடி முல்லையாற் கட்டிட்
டெல்லையில் இன்பம் அவன்பெற வெளிப்பட்
டருளிய இறைவனே என்றும்
நல்லவர் பரவுந் திருமுல்லை வாயில
நாதனே நரைவிடை ஏறீ
பல்கலைப் பொருளே படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. #707

சொல்லுதற்கரிய புகழை யுடையவனாகிய, 'தொண்டைமான்' என்னும்

அரசன், எல்லையில்லாத இன்பமாகிய பேரின்பத்தைப் பெறுமாறு அவனது யானையை, படர்ந்துகிடந்த முல்லைக் கொடியால் தடுத்து, பின்னர் அவனுக்கு வெளிப்பட்டருளிய இறைவனே, எந்நாளும் நல்லவர்கள் போற்றுகின்ற திருமுல்லைவாயிலில் எழுந்தருளியிருக்கின்ற தலைவனே, வெள்ளை விடையை ஏறுபவனே, பல கலைகளின் பொருளாயும் உள்ளவனே, உயிர்களைக் காப்பவனே, மேலான ஒளியாய் உள்ளவனே, அடியேன் படுகின்ற துன்பத்தை நீக்கியருளாய்.

திருவடமுல்லைவாயில்

விரைதரு மலர்மேல் அயனொடு மாலும்
வெருவிட நீண்டஎம் மானைத்
திரைதரு புனல்சூழ் திருமுல்லை வாயிற
செல்வனை நாவல் ரூரன்
உரைதரு மாலைஓர் அஞ்சினோ டஞ்சும்
உள்குளிர்ந் தேத்தவல் லார்கள்
நரைதிரை மூப்பும் நடலையும் இன்றி
நண்ணுவர் விண்ணவர்க் கரசே. **#708**

நறுமணத்தைத் தருகின்ற தாமரை மலர்மேல் இருக்கின்ற பிரமனும், திருமாலும் அச்சங் கொள்ளும்படி, அவர்கள் முன் தீப்பிழம்பாய் நீண்டு நின்றவனாகிய, அலைகளை வீசுகின்ற கடல்நீர் சூழ்ந்த திருமுல்லைவாயிலில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானை, திருநாவலூரில் தோன்றிய நம்பியாரூரன் பாடிய பாடல்களாகிய பத்தினையும், மனம் குளிர்ந்து பாட வல்லவர்கள், நரையும் திரையும் மூப்பும் சாக்காடும் இன்றி, தேவர்களுக்கு அரசராகும் நிலையை அடைவர்.

திருவாவடுதுறை

திருஆவடுதுறை

திருவாவடுதுறை,
பண் - தக்கேசி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மாசிலாமணியீசுவரர்.
தேவியார் : ஒப்பிலாமுலையம்மை.

கங்கை வார்சடை யாய்கண நாதா
கால காலனே காமனுக் கனலே
பொங்கு மாகடல் விடமிடற் றானே
பூத நாதனே புண்ணியா புனிதா
செங்கண் மால்விடை யாய்தெள தேனே
தீர்த்த னேதிரு வாவடு துறையுள்
அங்க ணாஎனை அஞ்சல்என் றருளாய்
ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. **#709**

கங்கையைத் தாங்கிய நீண்ட சடையை உடையவனே, பூத கணங்கட்குத் தலைவனே, காலனுக்குக் காலனே, காமன் உடலுக்கு நெருப்பாகியவனே, அலை மிகுகின்ற பெரிய கடலில் தோன்றிய நஞ்சினை உடைய கண்டத்தை உடையவனே, உயிர்கட்கு முதல்வனே, அறவடிவினனே, தூயோனே, சிவந்த கண்களை யுடைய திருமாலாகிய இடபத்தை யுடையவனே, தெளிந்த தேன் போல்பவனே, கடவுளே, தேவர்களாகிய விலங்குகட்கு ஆண் சிங்கமாய் உள்ளவனே, திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கின்ற கருணையாளனே, அடியேனுக்கு உறவாவார், உன்னையன்றி வேறு யாவர் உளர்! என்னை, 'அஞ்சேல்' என்று சொல்லித் தேற்றி எனக்கு அருள் செய்யாய்.

திருஆவடுதுறை

மண்ணின் மேல்மயங் கிக்கிடப் பேனை
வலிய வந்தெனை ஆண்டுகொண் டானே
கண்ணி லேன்உடம் பில்லடு நோயாற்
கருத்த ழிந்துனக் கேபொறை யானேன்
தெண்ணி லாஎறிக் குஞ்சடை யானே
தேவ னேதிரு வாவடு துறையுள்
அண்ண லேஎனை அஞ்சல்என் றருளாய்
ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. **#710**

நிலவுலகின்கண் மானுட வாழ்க்கையில் மயங்கிக் கிடக்கக்

கடவேனாகிய என்முன் நீயே வலிய வந்து என்னை ஆண்டு கொண்டவனே, தெளவாகிய நிலவொளியை வீசுகின்ற சடையை உடையவனே, இறைவனே, திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கின்ற அண்ணலே, தேவர்களாகிய, விலங்குகட்கு ஆண் சிங்கமாய் உள்ளவனே, யான் கண் இல்லேனாயினேன்; அதன்மேலும், உடம்பில் வந்து பற்றி வருத்துகின்ற நோயினால் மனம் வருந்தினமையால், உனக்குத்தான் சுமையாய் விட்டேன்; எனக்கு உறவாவார் உன்னையன்றி வேறு யாவர் உளர்! ஆதலின், என்னை 'அஞ்சேல்' என்று சொல்லித்தேற்றி, எனக்கு அருள்செய்யாய்.

திருஆவடுதுறை

ஒப்பி லாமுலை யாள்ஒரு பாகா
உத்தமா மத்தம் ஆர்தரு சடையாய்
முப்பு ரங்களைத் தீவளைத் தங்கே
மூவ ருக்கருள் செய்ய வல்லானே
செப்ப ஆல்நிழற் கீழ்இருந் தருளுஞ்
செல்வ னேதிரு வாவடு துறையுள்
அப்ப னேஎனை அஞ்சல்என் றருளாய்
ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. **#711**

நிகரற்ற தனங்களையுடைய உமையவளை ஒரு பாகத்தில் உடையவனே, மேலானவனே, ஊமத்தம் பூப் பொருந்திய சடையை உடையவனே, முப்புரங்களைத் தீவளையச் செய்து, அப்பொழுதே அவற்றில் இருந்தவர்களுள் மூவருக்கு மட்டில் அருள் செய்ய வல்லவனே, அறத்தைச் சொல்லுதற்கு ஆல் நிழலில் அமர்ந்தருளிய செல்வனே, திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கின்ற என் அப்பனே! தேவர்களாகிய விலங்குகளுக்கு ஆண் சிங்கமாய் உள்ளவனே, எனக்கு உறவாவார் உன்னையன்றி வேறு யாருளர்! என்னை 'அஞ்சேல்' என்று சொல்லித் தேற்றி, எனக்கு அருள் செய்யாய்.

திருஆவடுதுறை

கொதியி னால்வரு காளிதன் கோபங்
குறைய ஆடிய கூத்துடை யானே
மதியி லேன்உடம் பில்லடு நோயான்
மயங்கி னேன்மணி யேமண வாளா
விதியி னால்இமை யோர்தொழு தேத்தும்
விகிர்த னேதிரு வாவடு துறையுள்
அதிப னேஎனை அஞ்சல்என் றருளாய்
ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. **#712**

சீற்றத்தொடு வந்த காளியினது கோபம் தணியும்படி அவளோடு எதிர்நின்று ஆடிய நடனத்தை யுடையவனே, மாணிக்கம் போல்பவனே, மணவாளக் கோலத்தினனே, தேவர்கள், முறைப்படி வணங்கித் துதிக்கின்ற இறைவனே, திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கின்ற தலைவனே, தேவர்களாய் விலங்குகட்கு ஆண் சிங்கமாய் உள்ளவனே, அறிவில்லேனாகிய யான் உடம்பில் வந்து வருத்துகின்ற பிணியினால், செய்வது அறியாது மனம் கலங்குகின்றேன்! எனக்கு உறவாவார், உன்னையன்றி வேறு யாவர் உளர்! என்னை, 'அஞ்சேல்' என்று சொல்லித் தேற்றி, எனக்கு அருள் செய்யாய்.

<u>திருஆவடுதுறை</u>

வந்த வாள்அரக் கன்வலி தொலைத்து
வாழும் நாள்கொடுத் தாய்வழி முதலே
வெந்த வெண்பொடிப் பூசவல் லானே
வேட னாய்விச யற்கருள் புரிந்த இந்து சேகர னேஇமை யோர்சீர்
ஈச னேதிரு வாவடு துறையுள்
அந்த ணாஎனை அஞ்சல்என் றருளாய்
ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. **#713**

உலகமாகிய வழிக்கு முதலானவனே, வெந்ததனால் ஆகிய வெள்ளிய திருநீற்றைப் பூச வல்லவனே, அருச்சுனனுக்கு வேட உருவத்தில் சென்று அருள்செய்த சந்திர சேகரனே, தேவர்களுக்குப் புகழுடைய தலைவனே, திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கின்ற அந்தணனே, தேவர்களாகிய விலங்குகட்கு ஆண்சிங்கமாய் உள்ளவனே, எனக்கு உறவாவார், உன்னையன்றி வேறுயாவர் உளர்! அன்று நீ இருக்கும் இடத்தில் செருக்குக் கொண்டு வந்த கொடிய அரக்கனாகிய இராவணனது வலிமையை அழித்து, பின்பு அவனுக்கு வாழ்நாள் கொடுத்து விடுத்தாய்; இன்று, என்னை, 'அஞ்சேல்' என்று சொல்லித் தேற்றி, எனக்கு அருள் செய்யாய்.

<u>திருஆவடுதுறை</u>

குறைவி லாநிறை வேகுணக் குன்றே
கூத்த னேகுழைக் காதுடை யானே
உறவி லேன்உனை யன்றிமற் றடியேன்
ஒருபி ழைபொறுத் தால்இழி வுண்டே
சிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூர்ச்
செம்போ னேதிரு வாவடு துறையுள்
அறவ னேஎனை அஞ்சல்என் றருளாய்
ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. **#714**

'குறை' எனப்படுவது ஒன்றேனும் இல்லாத நிறைவுடையவனே, இறைமைக் குணங்கள் எல்லாவற்றானும் இயன்றதொரு மலை எனத் தக்கவனே, கூத்துடையவனே, குழையணிந்த காதினை யுடையவனே, சிறையை யுடைய வண்டுகள் ஒலிக்கின்ற சோலை சூழ்ந்த திருவாரூரில் உள்ள, செம்பொன் போல்பவனே, திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கின்ற அறவடிவினனே, தேவர்களாகிய விலங்குகட்கு ஆண் சிங்கமாய் உள்ளவனே, அடியேனும் உன்னையன்றி உறவினர் ஒருவரையும் உடையேன் அல்லேன்; எனக்கு உறவாரும் உன்னையன்றி வேறு யாவர் உளர்! ஆதலின், யான் செய்த ஒரு குற்றத்தை நீ பொறுத்துக்கொண்டால், உனக்கு வருவதொரு தாழ்வுண்டோ! என்னை, 'அஞ்சேல்' என்றுசொல்லித் தேற்றி, எனக்கு அருள்செய்யாய்.

திருஆவடுதுறை

வெய்ய மாகரி ஈருரி யானே
வேங்கை யாடையி னாய்விதி முதலே
மெய்ய னேஅட லாழியன் றரிதான்
வேண்ட நீகொடுத் தருள்புரி விகிர்தா
செய்ய மேனிய னேதிக ழொளியே
செங்க ணாதிரு வாவடு துறையுள்
ஐய னேஎனை அஞ்சல்என் றருளாய்
ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. **#715**

கொடிய, பெரிய யானையினது உரித்த தோலையுடையவனே, புலித்தோல் ஆடையை உடுத்தவனே, விதிவிலக்குக்களுக்குத் தலைவனே, மெய்ப்பொருளானவனே, அன்று திருமால் வேண்டிக்கொள்ள, வலிமையையுடைய சக்கரத்தை அவனுக்கு அளித்தருளிய இறைவனே, சிவந்த திருமேனியையுடையவனே, ஒளிகள் எலலாவற்றினும் மேம்பட்டு விளங்குகின்ற ஒளியாய் உள்ளவனே, நெருப்புக்கண்ணை உடையவனே, திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கின்ற தலைவனே, தேவர்களாகிய விலங்கு கட்கு ஆண் சிங்கமாய் உள்ளவனே, எனக்கு உறவாவர் உன்னையன்றி வேறுயாவர் உளர்! என்னை, 'அஞ்சேல்' என்று சொல்லித் தேற்றி, எனக்கு அருள் செய்யாய்.

திருஆவடுதுறை

கோதி லாஅமு தேஅருள் பெருகு
கோல மேஇமை யோர்தொழு கோவே
பாதி மாதொரு கூறுடை யானே

பசுப தீபர மாபர மேட்டி
தீதி லாமலை யேதிரு வருள்சேர்
சேவ காதிரு வாவடு துறையுள்
ஆதி யேஎனை அஞ்சல்என் றருளாய
ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. **#716**

கோதில்லாத அமுதம் போல்பவனே, அருள் வெள்ளம் பெருகுகின்ற தோற்றத்தை உடையவனே, தேவர்கள் வணங்குகின்ற தலைவனே, உடம்பின் ஒருபாதியில் மங்கை ஒருத்தியது ஒருபங்கினை உடையவனே, உயிர்கட்குத் தலைவனே, மேலானவனே, மேலிடத்தில் இருப்பவனே, நன்மையால் இயன்ற மலைபோல்பவனே, சிறப்புடைய அருள் பொருந்திய வீரனே, திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கின்ற முதற்பொருளானவனே, தேவர்களாகிய விலங்குகட்கு ஆண் சிங்கமாய் உள்ளவனே, எனக்கு உறவாவார், உன்னையன்றி வேறு யாவர் உளர்! என்னை, 'அஞ்சேல்' என்று சொல்லித் தேற்றி, எனக்கு அருள்செய்யாய்.

திருஆவடுதுறை

வான நாடனே வழித்துணை மருந்தே
மாசி லாமணி யேமறைப் பொருளே
ஏன மாஎயி றாமையும் எலும்பும்
ஈடு தாங்கிய மார்புடை யானே
தேனெய் பால்தயிர் ஆட்டுகந் தானே
தேவ னேதிரு வாவடு துறையுள்
ஆனை யேஎனை அஞ்சல்என் றருளாய்
ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. **#717**

ஆகாயமாகிய நாட்டை உடையவனே, செல்லும் வழிக்குத் துணையாகிய அமுதம் போல்பவனே, குற்றமில்லாத மாணிக்கம் போல்பவனே, வேதத்தின் பொருளாய் உள்ளவனே, பன்றியின் பெரிய கொம்பினையும், ஆமை ஓட்டையும், எலும்பையும், இடப்பட்ட அணிகளாகத் தாங்கிய மார்பையுடையவனே, 'தேன், நெய், பால், தயிர்' இவைகளால் மூழ்குவித்தலை விரும்புகின்றவனே, இறைவனே, திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கின்ற என் யானை போல்பவனே, தேவர்களாகிய விலங்குகட்கு ஆண் சிங்கமாய் உள்ளவனே, எனக்கு உறவாவார் உன்னையன்றி வேறு யாவர் உளர்! என்னை, 'அஞ்சேல்' என்று சொல்லித் தேற்றி எனக்கு அருள் செய்யாய்.

திருஆவடுதுறை

வெண்ட லைப்பிறை கொன்றையும் அரவும்

வேரி மத்தமும் விரவிமுன் முடித்த
இண்டை மாமலர்ச் செஞ்சடை யானை
ஈச னைத்திரு வாவடு துறையுள்
அண்ட வாணனைச் சிங்கடி யப்பன்
அணுக்க வன்றொண்டன் ஆர்வத்தால் உரைத்த
தண்ட மிழ்மலர் பத்தும்வல் லார்கள்
சாத லும்பிறப் பும்மறுப் பாரே. **#718**

வெண்டலையோடு பொருந்தும் பிறையையும், கொன்றைமலர் மாலையையும், பாம்பினையும், தேனையுடைய ஊமத்த மலரையும் ஒருங்கு விரவிச் சூடிக்கொண்ட சிறந்த இண்டை மாலையையுடைய, சிவந்த சடைமுடியையுடையவனும், முதற் கடவுளும், திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கின்ற சிவலோக வாணனும் ஆகிய இறைவனை, அவனுக்கு அணுக்கனாய் நிற்கின்ற வன்றொண்டனாகிய, சிங்கடிக்குத் தந்தை, மிக்க அன்போடும் பாடிய இத்தண்ணிய தமிழ்மாலைகளாகிய பாடல்கள் பத்தினையும் பாட வல்லவர்கள், இறத்தலையும் பிறத்தலையும் ஒழித்து, எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய் வாழ்வார்கள்.

திருமறைக்காடு

திருமறைக்காடு

திருமறைக்காடு,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : மறைக்காட்டீசுவரர்.
தேவியார் : யாழைப்பழித்தநாயகி.

யாழைப்பழித் தன்னமொழி
மங்கைஒரு பங்கன்
பேழைச்சடை முடிமேற்பிறை
வைத்தான்இடம் பேணில்
தாழைப்பொழி லூடேசென்று
பூழைத்தலை நுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங்
குண்ணும்மறைக் காடே. #719

யாழின் இசையைப் பழித்த அத்தன்மையையுடைய சொற்களை உடைய மங்கையை ஒரு பாகத்தில் உடையவனும், பேழை போலும் சடைமுடியில் பிறையைச் சூடினவனும் ஆகிய இறைவனது இடத்தை அறிந்து வழிபடவேண்டின், அது, எளிய குரங்குகள் தாழம் புதரூடே புகுந்து, சிறிய புழைகளில் நுழைந்து, வாழைப்பழத்தைப் பறித்து உண்கின்ற திருமறைக்காடேயாகும்.

திருமறைக்காடு

சிகரத்திடை இளவெண்பிறை
வைத்தான்இடந் தெரியில்
முகரத்திடை முத்தின்னொளி
பவளத்திர ளோதத்
தகரத்திடை தாழைத்திரள்
ஞாழற்றிரள் நீழல்
மகரத்தொடு சுறவங்கொணர்ந்
தெற்றும்மறைக் காடே. #720

தலையில் இளமையான பிறையைச் சூடின இறைவனது இடத்தை அறிய வேண்டின், சங்கினிடத்தில் தோன்றிய முத்துக்களினிடையே மறைகின்ற பவளக்கூட்டத்தை உடைய அலைகள், தகர மரங்களின் அடியிலும், தாழைமரம், குங்கும மரம் இவைகளின் நிழலிலும் மகர மீனையும், சுறா மீனையும் கொணர்ந்து எறிகின்ற

திருமறைக்காடேயாகும்.

திருமறைக்காடு

அங்கங்களும் மறைநான்குடன்
அங்கங்களும் மறைநான்குடன்
தெங்கங்களும் நெடும்பெண்ணையும்
பழம்வீழ்மணற் படப்பைச் சங்கங்களும் இலங்கிப்பியும்
வலம்புரிகளும் இடறி
வங்கங்களும் உயர்கூம்பொடு
வணங்கும்மறைக் காடே. **#721**

வேதங்கள் நான்கினோடு, அவற்றின் அங்கங்களையும் விரித்தவனாகிய இறைவனது இடத்தை யாம் அறிந்தோம்; அஃது எதுவெனின், தென்னை மரங்களும், நீண்ட பனை மரங்களும் தம் தம் பழங்கள் விழநிற்கின்ற மணலையுடைய தோட்டத்தில், சங்குகளும், விளங்குகின்ற இப்பிகளும், வலம்புரிச் சங்குகளும் அலைகளால் எறியப் பட, மரக்கலங்களும் உயர்ந்த பாய்மரங்களாகிய கூப்பிய கைகளுடன் வந்து வணங்குகின்ற திருமறைக்காடேயாகும்.

திருமறைக்காடு

நரைவிரவிய மயிர்தன்னொடு
பஞ்சவ்வடி மார்பன்
உரைவிரவிய உத்தமன்னிடம்
உணரல்லுறு மனமே
குரைவிரவிய குலைசேகரக்
கொண்டற்றலை விண்ட
வரைபுரைவன திரைபொருதிழிந்
தெற்றும்மறைக் காடே. **#722**

நரைபொருந்திய மயிரால் இயன்ற பஞ்சவடியை அணிந்த மார்பை உடையவனும், அதனால், புகழ் பொருந்திய மேலானவனும் ஆகிய சிவபெருமானது இடம் யாது என்று உணரப் புக்க மனமே, அது, ஒலி பொருந்திய கரைக்கண் உள்ள மாமரத்தினது, மேகங்கள் தவழ்கின்ற தலையில், உடைந்த மலைபோல்வனவாகிய அலைகள்மோதி மீள்கின்ற திருமறைக் காடேயாகும்.

திருமறைக்காடு

சங்கைப்பட நினையாதெழு
நெஞ்சேதொழு தேத்தக்
கங்கைச்சடை முடியுடையவற்

கிடமாவது பரவை
அங்கைக்கடல் அருமாமணி
உந்திக்கரைக் கேற்ற
வங்கத்தொடு சுறவங்கொணர்ந்
தெற்றும்மறைக் காடே. **#723**

மனமே, 'கங்கையைத் தாங்கிய சடைமுடியையுடையவனாகிய சிவபெருமானுக்கு இடமாவது, கடலினது கைகள் ஆகிய அலைகள் அக்கடலின்கண் உள்ள அரிய, சிறந்த மணிகளைத் தள்ளிக்கொண்டு, கரைக்கு ஏற்புடைய மரக்கலத்தோடு சுறா மீனையும் கொணர்ந்து சேர்க்கின்ற திருமறைக்காடேயாகும்' அது பற்றி ஐயமாக நினையாது, அங்குச் சென்று அவனை வணங்கித் துதித்தற்கு ஒருப்படு.

<u>திருமறைக்காடு</u>

அடல்விடை யினன்மழுவா
ளினன்நல்ஆர் அணிகொன்றைப்
படருஞ்சடை முடியுடையவற்
கிடமாவது பரவைக்
கடலிடையிடை கழியருகினிற்
கடிநாறுதண் கைதை
மடலிடையிடை வெண்குருகெழு
மணிநீர்மறைக் காடே. **#724**

வெற்றியை உடைய இடப ஊர்தியையுடையவனும், மழுப்படையை உடையவனும், நல்ல ஆத்திமாலையையும் அழகிய கொன்றை மாலையையும் அணிந்த விரிந்த சடைமுடியையுடைய சிவபெருமானுக்கு இடமாவது, பரந்துகிடத்தலையுடைய கடலின் இடைஇடையும், கழியின் அருகிலும்; மணம் வீசுகின்ற தண்ணிய தாழை மடல்களின் இடைஇடையும் வெள்ளிய குருகுகள் மேலெழுந்து பறக்கின்ற, நீலமணிபோலும் கடல் நீரையுடைய திருமறைக்காடேயாகும்.

<u>திருமறைக்காடு</u>

முளைவளரிள மதியுடையவன்
முன்செய்தவல் வினைகள்
களைகளைந்தெனை யாளல்லுறு
கண்டன்னிடஞ் செந்நெல்
வளைவிளைவயற் கயல்பாய்தரு
குணவார்மணற் கடல்வாய்
வளைவளையொடுசலஞ் சலங்கொணர்ந்
தெற்றும்மறைக் காடே. **#725**

புதுவதாகத் தோன்றிய, வளர்தற்குரிய, இளமையான பிறையை உடையவனும், யான் முன்னே செய்த வலிய வினைகளை, களை களைந்தாற்போலக் களைந்தெறிந்து என்னை ஆளுதல் பொருந்திய தலைவனுமாகிய சிவபெருமானது இடமாவது, செந்நெற்கதிர்கள் வளைந்து தோன்றுகின்ற, மிக விளையும் வயல்களிடத்துக் கயல் மீன்கள் பாய்வதும், ஒழுகிய மணலையுடைய கீழ்க்கடற் கரைக்கண் அக்கடல், வளைந்த சங்குகளோடு, சலஞ்சலத்தையும் கொணர்ந்து எறிவதும் ஆகிய திருமறைக் காடேயாகும்.

திருமறைக்காடு

நலம்பெரியன சுரும்பார்ந்தன
நங்கோனிட மறிந்தோம்
கலம்பெரியன சாருங்கடற
கரைபொருதிழி கங்கைச்
சலம்புரிசடை முடியுடையவற்
கிடமாவது பரவை
வலம்புரியொடு சலஞ்சலங்கொணர்ந்
தெற்றும்மறைக் காடே. **#726**

கங்கை நீரோடு திரித்த சடைமுடியை உடையவனாகிய சிவபெருமானுக்கு இடமாய் நிற்பது, நற்பொருள்கள் மிக்கனவும், வண்டுகள் நிறைந்தனவும், பொயனவுமாகிய மரக்கலங்கள் பொருந்திய கடலினது கரையைமோதி மீள்கின்ற அலைகள், வலம்புரிச் சங்குகளையும், சலஞ்சலச் சங்குகளையும் கொணர்ந்து வீசுகின்ற திருமறைக்காடேயாகும். இதனை அறிந்தோமாகலின், நாம் நம் பெருமானது இடத்தை அறிந்தோமாயினோம்.

திருமறைக்காடு

குண்டாடியுஞ் சமணாடியுங்
குற்றுடுக்கையர் தாமும்
கண்டார்கண்ட காரணம்மவை
கருதாதுகை தொழுமின்
எண்டோளினன் முக்கண்ணினன்
ஏழிசையினன் அறுகால்
வண்டாடுதண் பொழில்சூழ்ந்ததெழு
மணிநீர்மறைக் காடே. **#727**

உலகீர், சிறிய உடையை உடைய சிலர்தாமும் மூர்க்கத் தன்மை பேசியும், சமண சமயக் கொள்கைகளை உரைத்தும் சில பொருள்களை, தம் குறையறிவாற் கண்டார்; எனினும், அவைகளைப் பொருளாக

நினையாது, எட்டுத் தோள்களை உடையவனும், மூன்று கண்களையுடையவனும், ஏழிசைகளையுடையவனும் ஆகிய சிவபெருமானது, ஆறு கால்களையுடைய வண்டுகள் சூழ்கின்ற குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த ஓங்கும் நீலமணிபோலும் கடல் நீரையுடைய திருமறைக்காட்டைக் கைகூப்பித் தொழுமின்கள்.

திருமறைக்காடு

பாரூர்பல புடைசூழ்வள
வயல்நாவலர் வேந்தன்
வாரூர்வன முலையாள்உமை
பங்கன்மறைக் காட்டை
ஆருரன தமிழ்மாலைகள்
பாடும்மடித் தொண்டர்
நீரூர்தரு நிலனோடுயர்
புகழாகுவர் தாமே. **#728**

கச்சின்மேல் எழுகின்ற அழகிய தனங்களை யுடையவளாகிய உமாதேவி பங்கினனாகிய சிவபெருமானது திருமறைக்காட்டை, நிலத்தில் உள்ள ஊர்கள் பல சூழ்ந்துள்ளனவாகத் தலைமை பெற்று விளங்கும், வளவிய வயல்கள் சூழ்ந்த திருநாவலூரார்க்குத் தலைவனாகிய நம்பியாரூரனது தமிழ்ப்பாடல்களால் பாடுகின்ற, அப்பெருமானது திருவடித் தொண்டர்கள், நீர் சூழ்ந்த நிலத்தொடு உயர்ந்து விளங்கும் புகழ் மிகப்பெறுவார்கள்.

திருவலம்புரம்

திருவலம்புரம்

திருவலம்புரம்,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வலம்புரநாதர்.
தேவியார் : வடுவகிர்க்கண்ணம்மை.

எனக்கினித் தினைத்தனைப் புகலிட மறிந்தேன்
பனைக்கனி பழம்படும் பரவையின் கரைமேல்
எனக்கினி யவன்தமர்க் கினியவன் எழுமையும்
மனக்கினி யவன்றன திடம்வலம் புரமே. **#729**

எனக்கு இனியவனும், தனக்கு என்னைப்போலும் அன்பராய் உள்ளார்க்கு இனியவனும், எழுபிறப்பிலும் எங்கள் மனத்துக்கு இனியனாகின்றவனும் ஆகிய இறைவனது இடம், பனை மரத்தின்கண் பழுத்த பழங்கள் வீழ்கின்ற கடலினது கரைக்கண் உள்ள, 'திருவலம்புரம்' என்னும் தலமே. இதனை அறிந்தேனாகலின், எனக்கும் சிறிது புகலிடம் இங்கு உளதாதலை இப்பொழுது யான் அறிந்தேனாயினேன்.

திருவலம்புரம்

புரமவை எரிதர வளைந்தவில் லினனவன்
மரவுரி புலியதள் அரைமிசை மருவினன்
அரவுரி நிரந்தயல் இரந்துண விரும்பிநின்
றிரவெரி யாடிதன் இடம்வலம் புரமே. **#730**

திரிபுரங்கள் எரியுமாறு வளைந்த வில்லை உடையவனும், புதியவனும், மரவுரியையும் புலித்தோலையும் அரையிற் பொருந்தியவனும், பாம்பின் தோல் பொருந்தப்பட்டவனும் இரந்து உண்ண விரும்புபவனும், இரவின்கண் தீயில் நின்று ஆடுபவனும் ஆகிய இறைவனது இடம், 'திருவலம்புரம்' என்னும் தலமே.

திருவலம்புரம்

நீறணி மேனியன் நெருப்புமிழ் அரவினன்
கூறணி கொடுமழு வேந்தியோர் கையினன்
ஆறணி அவிர்சடை அழல்வளர் மழலைவெள்
ஏறணி அடிகள்தம் இடம்வலம் புரமே. **#731**

நீறணிந்த மேனியை யுடையவனும்., சினங் காரணமாகக் கண்களால் நெருப்பை உமிழ்கின்ற பாம்பை அணிந்தவனும், பிளத்தலைப்

பொருந்திய கொடிய மழுவை ஏந்திய ஒரு கையை உடையவனும், நீரை அணிந்த, ஒளிவிடும் சடையாகிய நெருப்பு வளரப்பெற்றவனும் ஆகிய, இளமையான வெள்ளிய இடபக் கொடியை உயர்த்துள்ள இறைவனது இடம், 'திருவலம்புரம்' என்னும் தலமே.

திருவலம்புரம்

கொங்கணை சுரும்புண நெருங்கிய குளிரிளந்
தெங்கொடு பனைபழம் படும்இடந் தேவர்கள்
தங்கிடும் இடந்தடங் கடற்றிரை புடைதர
எங்கள தடிகள்நல் லிடம்வலம் புரமே. **#732**

மலர்களில் உள்ள தேனை ஆங்கு வந்த வண்டுகள் உண்ண, நெருங்கிய, குளிர்ந்த, இளைய தென்னை மரங்களும், பனை மரங்களும் பழம் விளைகின்ற இடமும், பெரியகடலினது அலைகள் கரையை மோத, தேவர்கள் தங்கியிருக்கும் இடமும், எங்கள் இறைவனது நல்ல இடமும், 'திருவலம்புரம்' என்னும் தலமே.

திருவலம்புரம்

கொடுமழு விரகினன் கொலைமலி சிலையினன்
நெடுமதிள் சிறுமையின் நிரவவல் லவனிடம்
படுமணி முத்தமும் பவளமும் மிகச்சுமந்
திடுமணல் அடைகரை இடம்வலம் புரமே. **#733**

கொடிய மழுவை எடுக்க வல்லவனும், கொலை பொருந்திய வில்லையுடையவனும், மூன்று பெரிய மதில்களை ஓர் இமைப்பொழுதில் பொடியாக்க வல்லவனும் ஆகிய இறைவனது இடம், கடலில் உண்டாகின்ற மாணிக்கங்களையும், முத்துக்களையும், பவளங்களையும் மிகுதியாகத் தாங்கி நிற்கின்ற மணல் பொருந்திய கடற்கரையாகிய இடமும், திருவலம்புரம் எனப்படுவதும் ஆகிய தலமே.

திருவலம்புரம்

கருங்கடக் களிற்றுரிக் கடவுள திடங்கயல்
நெருங்கிய நெடும்பெணை அடும்பொடு விரவிய
மருங்கொடு வலம்புரி சலஞ்சலம் மணம்புணர்ந்
திருங்கடல் அடைகரை இடம்வலம் புரமே. **#734**

கரிய மதநீரையுடைய யானைத் தோலையுடைய இறைவனது இடம், நெருங்கிய, நீண்ட பனைமரங்கள், கயல் மீன்களோடும், அடும்பங் கொடிகளோடும் கலந்து நிற்கின்ற இடத்தின்கண், வலம்புரிச் சங்குகளும், சலஞ்சலச் சங்குகளும் தம் தம் பெண் சங்குகளோடு மணஞ்செய்து கொள்ளுதலைப் பொருந்தி, பெரிய கடலினின்றும்

வருகின்ற கடற்கரையாகிய இடமும், 'திருவலம்புரம்' எனப்படுவதும் ஆகிய தலமே.

திருவலம்புரம்

நரிபுரி காடரங் காநட மாடுவர்
வரிபுரி பாடநின் றாடும்எம் மானிடம்
புரிசுரி வரிகுழல் அரிவைஒர் பான்மகிழ்ந்
தெரிஎரி யாடிதன் இடம்வலம் புரமே. **#735**

நரிகள் விரும்புகின்ற காடே அரங்கமாக நடனம் ஆடுபவனும், யாழ் இசையைப்பாட நின்று ஆடுகின்ற எம்பெருமானும், பின்னிய, சுரிந்த, கட்டிய கூந்தலையுடைய மங்கையை ஒரு பாகத்தில் மகிழ்ந்து வைத்து, எரிகின்ற நெருப்பில் ஆடுபவனும் ஆகிய இறைவனது இடம், 'திருவலம்புரம்' என்னும் தலமே.

திருவலம்புரம்

பாறணி முடைதலை கலனென மருவிய
நீறணி நிமிர்சடை முடியினன் நிலவிய
மாறணி வருதிரை வயலணி பொழிலது
ஏறுடை யடிகள்தம் இடம்வலம் புரமே. **#736**

பருந்தைக்கொண்ட, முடைநாற்றம் பொருந்திய தலையை உண்கலமாகப் பொருந்தியவனும், நீற்றை அணிந்தவனும், நீண்ட சடைமுடியை உடையவனும் இடபத்தை உடைய தலைவனும் ஆகிய இறைவனது இடம், விளங்குகின்ற, மாறிமாறியும் கூட்டமாயும் வருகின்ற அலைகளையுடைய கடலையும், வயல்களையும் அழகிய சோலைகளையும் உடையதாகிய, 'திருவலம்புரம்' என்னும் தலமே.

திருவலம்புரம்

சடசட விடுபெணை பழம்படும் இடவகை
படவட கத்தொடு பலிகலந் துலவிய
கடைகடை பலிதிரி கபாலிதன் இடமது
இடிகரை மணலடை இடம்வலம் புரமே. **#737**

தோல் ஆடையை உடுத்துக்கொண்டும், சாம்பலைப் பூசிக்கொண்டும் உலாவுகின்றவனும், இல்லங்களின் வாயில் தோறும் பிச்சைக்குத் திரிகின்ற தலை ஓட்டினை உடையவனும் ஆகிய இறைவனது இடம், 'சடசட' என்னும் ஓசையை வெளிப்படுத்துகின்ற பனைமரங்கள் பழம் பழுக்கின்ற இடங்களின் வகை பலவும்மிகுமாறு, இடிகின்ற கரையை மணல்கள் அடைக்கின்ற இடமும், 'திருவலம்புரம்' எனப்படுவதும் ஆகிய தலமே.

திருவலம்புரம்

குண்டிகைப் படப்பினில் விடக்கினை யொழித்தவர்
கண்டவர் கண்டடி வீழ்ந்தவர் கனைகழல்
தண்டுடைத் தண்டிதன் இனமுடை அரவுடன்
எண்டிசைக் கொருசுடர் இடம்வலம் புரமே. **#738**

கரகத்தையுடைய உறியை உடையசமணர்களது பொய்ம்மையை நன்குணர்ந்தவர்களும், உணர்ந்து தனது திருவடியில் வீழ்ந்து வணங்கியவர்களும், ஒலிக்கின்ற கழலை அணிந்த, தண்டேந்தி நிற்கும் தண்டி முதலிய சிவகணத்தவர்களும் செய்கின்ற, 'அரகர' என்னும் ஓசையுடன், எட்டுத் திசைகட்கும் ஒரு விளக்குப் போல்பவனாகிய இறைவன் எழுந்தருளியிருக்கும் இடம், 'திருவலம்புரம்' என்னும் தலமே.

திருவலம்புரம்

வருங்கல மும்பல பேணுதல் கருங்கடல்
இருங்குலப் பிறப்பர்த மிடம்வலம் புரத்தினை
அருங்குலத் தருந்தமிழ் ஊரன்வன் றொண்டன்சொல்
பெருங்குலத் தவரொடு பிதற்றுதல் பெருமையே. **#739**

கரிய கடலின்கண் வருகின்ற மரக்கலங்கள் பலவற்றையும் பேணுதலுடைய உயர் குடிப் பிறப்பினரது இடமும், 'திருவலம்புரம்' எனப்படுவதும் ஆகிய தலத்தினை அரிய குலத்தில் தோன்றிய, அரிய தமிழ்ப் பாடலில் வல்ல, வன்றொண்டனாகிய நம்பியாரூரனது சொல்லால், பெரிய குழாமாகிய அடியவரோடும் கூடிநின்று துதித்தல், பெருமையைத் தருவதாம்.

திருவாரூர்

திருவாரூர்

திருவாரூர்,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வன்மீகநாதர்.
தேவியார் : அல்லியங்கோதையம்மை.

கரையுங் கடலும் மலையுங்
காலையும் மாலையும் எல்லாம்
உரையில் விரவி வருவான்
ஒருவன் உருத்திர லோகன்
வரையின் மடமகள் கேள்வன்
வானவ தானவர்க் கெல்லாம்
அரையன் இருப்பதும் ஆரூர் அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர். #740

தொண்டீர், நிலம், கடல், மலை முதலாய எவ்விடத்திலும், காலை, மாலை முதலிய எப்பொழுதிலும் எம் சொல்லிற் பொருந்திவருபவனும், ஒப்பற்றவனும், உருத்திர லோகத்தை உடையவனும், மலையின் இளமையான மகளுக்குக் கணவனும், தேவர், அசுரர் முதலிய யாவர்க்கும் தலைவனும் ஆகிய பெருமான் என்றும் எழுந்தருளியிருக்கின்ற இடமும், இத் திருவாரூரே யன்றோ! ஆதலின், அவர் எம்மையும் ஆண்டு கொள்வாரோ? அவரது திருவுள்ளத்தைக் கேட்டறிமின்.

திருவாரூர்

தனியன்என் றெள்கி யறியேன்
தன்னைப் பெரிதும் உகப்பன்
முனிபவர் தம்மை முனிவன்
முகம்பல பேசி மொழியேன்
கனிகள் பலவுடைச் சோலைக்
காய்க்குலை ஈன்ற கமுகின்
இனியன் இருப்பதும் ஆரூர் அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர். #741

தொண்டீர், இனிய பொருள்கள் எல்லாவற்றினும் இனியவனாகிய நம் பெருமானை, யான், 'தாயும், தந்தையும், பிற சுற்றத்தவரும் இல்லாத தனியன்' என்று இகழ்ந்தறியேன்; அதற்கு மாறாக அவனையே பெரிதும்

விரும்புவேன்; அவனை வெறுப்பவரை வெறுப்பேன்; மனத்தோடன்றி முகத்தான் மட்டும் இனிய பல சொற்களைச் சொல்லேன்; அவன் என்றும் எழுந்தருளியிருக்கின்ற இடமும், கனிகள் பலவற்றையுடைய சோலையின்கண் காயையுடைய குலைகளை ஈன்ற கமுக மரங்களையுடைய திருவாரூரேயன்றோ! ஆதலின், அவர் எம்மையும் ஆண்டு கொள்வாரோ? அவரது திருவுள்ளத்தைக் கேட்டறிமின்.

திருவாரூர்

சொல்லிற் குலாவன்றிச் சொல்லேன்
தொடர்ந்தவர்க் குந்துணை யல்லேன்
கல்லில் வலிய மனத்தேன்
கற்ற பெரும்புல வாணர்
அல்லல் பெரிதும் அறுப்பான்
அருமறை ஆறங்கம் ஓதும்
எல்லை இருப்பதும் ஆரூர் அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர். **#742**

தொண்டீர், யான் யாதேனும் ஒன்று சொல்வதாயின், எனது பெருமையை யன்றி வேறொன்றைச் சொல்லேன். அயலவர்க்கேயன்றி, உறவினர்க்கும் உதவுவேனல்லேன்; அத்துணைக் கல்லினும் வலிய மனத்தை யுடையேன். கல்வியை நிரம்பக் கற்ற பெரிய புலமை வாழ்க்கை உடையவர்களது துன்பத்தைப் பெரிதும் நீக்குகின்றவனும், அரிய வேதங்களும், ஆறு அங்கங்களும் சொல்லும் முடிந்த பொருளானவனும் ஆகிய பெருமான் என்றும் எழுந்தருளியிருக்கின்ற இடமும் இத் திருவாரூரே யன்றோ! ஆதலின், அவர் எம்மையும் ஆண்டு கொள்வாரோ? அவரது திருவுள்ளத்தைக் கேட்டறிமின்.

திருவாரூர்

நெறியும் அறிவுஞ் செறிவும்
நீதியும் நான்மிகப் பொல்லேன்
மிறையுந் தறியும் உகப்பன்
வேண்டிற்றுச் செய்து திரிவேன்
பிறையும் அரவும் புனலும்
பிறங்கிய செஞ்சடை வைத்த
இறைவன் இருப்பதும் ஆரூர் அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர். **#743**

தொண்டீர், யான், ஒழுகும் நெறியிலும், பொருள்களை அறிகின்ற அறிவிலும், பிறரோடு இணங்குகின்ற இணக்கத்திலும், சொல்லுகின்ற நீதியிலும்; மிக்கபொல்லாங்குடையேன்; பிறரை வருத்துதலையும்,

பிரித்தலையும் விரும்புவேன்; மற்றும் மனம் வேண்டியதனைச் செய்து திரிவேன்; பிறையையும், பாம்பையும், நீரையும் தனது விளக்கமான சிவந்த சடைமேல் வைத்துள்ள இறைவன் என்றும் எழுந்தருளியிருக்கின்ற இடமும் இத்திருவாரூரேயன்றோ! ஆதலின், அவர் எம்மையும் ஆண்டு கொள்வாரோ? அவரது திரு

திருவாரூர்

நீதியில் ஒன்றும் வழுவேன்
நிர்க்கண் டகஞ்செய்து வாழ்வேன்
வேதியர் தம்மை வெகுளேன்
வெகுண்டவர்க் குந்துணை யாகேன்
சோதியிற் சோதிஎம் மானை
சுண்ணவெண் ணீறணிந் திட்ட
ஆதி இருப்பதும் ஆரூர் அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர். **#744**

தொண்டீர், யான், நீதியினின்றும் சிறிதும் வழுவேன்; அவ்வாறு வழுவுதலை முற்றிலும் களைந்து வாழ்வேன்; அந்தணர்களை வெறுக்கமாட்டேன்; வெறுக்கின்றவர்களுக்கும் துணை செய்பவனாகமாட்டேன். ஒளிக்குள் ஒளியாய் உள்ளவனும், எங்கட்கு யானை போல்பவனும், பொடியாகிய வெள்ளிய நீற்றை அணிந்த முதல்வனும் ஆகிய இறைவன் என்றும் எழுந்தருளியிருக்கின்ற இடமும் இத் திருவாரூரே யன்றோ! ஆதலின், அவர் எம்மையும் ஆண்டுகொள்வாரோ? அவரது திருவுள்ளத்தைக் கேட்டறிமின்.

திருவாரூர்

அருத்தம் பெரிதும் உகப்பன்
அலவலை யேன்அலந் தார்கள்
ஒருத்தர்க் குதவியேன் அல்லேன்
உற்றவர்க் குந்துணை யல்லேன்
பொருத்தமேல் ஒன்றும் இலாதேன்
புற்றெடுத் திட்டிடங் கொண்ட
அருத்தன் இருப்பதும் ஆரூர் அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர். **#745**

தொண்டீர், யான், பொருளையே பெரிதும் விரும்புவேன்; அதன் பொருட்டு எங்கும் திரிதலையுடையேன்; துன்புற்றவர் ஒருவர்க்கேனும் உதவியுடையேனல்லேன்; உறவாயினார்க்கும் துணைவனல்லேன்; இன்ன பலவாற்றால், பொருந்துவதாய பண்பு எனிலோ, ஒன்றேனும் இல்லாதேனாயினேன். புற்றைப்படைத்து, அதனை இடமாகக் கொண்ட

மெய்ப்பொருளாயுள்ளவன் என்றும் எழுந்தருளியிருக்கின்ற இடமும் இத் திருவாரூரேயன்றோ! ஆதலின், அவர் எம்மையும் ஆண்டுகொள்வாரோ? அவரது திருவுள்ளத்தைக் கேட்டறிமின்.

திருவாரூர்

சார்ந்தவர் தம்மடிச் சாரேன்
முந்திப் பொருவிடை யேறி
மூவுல குந்திரி வானே
கந்தங் கமழ்கொன்றை மாலைக்
கண்ணியன் விண்ணவர் ஏத்தும்
எந்தை இருப்பதும் ஆரூர் அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர். **#746**

தொண்டீர், யான், வண்ணங்கள் பலவற்றை அமைத்துப் பாடுதல் மாட்டேன்; இறைவனை அடைந்த அடியாரது திருவடிகளை அடையமாட்டேன்; மணங்கமழ்கின்ற கொன்றை மலரால் ஆகிய மாலையையும், கண்ணியையும் அணிந்தவனும், தேவர்களால் துதிக்கப்படுபவனுமாகிய எம் தந்தை, போர் செய்கின்ற விடையை ஏறி மூவுலகிலும் முற்பட்டுத் திரிபவனேயாயினும், அவன் என்றும் எழுந்தருளியிருக்கின்ற இடமும் இத் திருவாரூரேயன்றோ! ஆதலின், அவர் எம்மையும் ஆண்டு கொள்வாரோ? அவரது, திருவுள்ளத்தைக் கேட்டறிமின்.

திருவாரூர்

நெண்டிக்கொண் டேயுங்க லாய்ப்பேன்
நிச்சய மேஇது திண்ணம்
மிண்டர்க்கு மிண்டலாற் பேசேன்
மெய்ப்பொரு ளன்றி யுணரேன்
பண்டங் கிலங்கையர் கோனைப்
பருவரைக் கீழடர்த் திட்ட
அண்டன் இருப்பதும் ஆரூர் அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர். **#747**

தொண்டீர், யான், மெய்ப்பொருளையன்றிப் பொய்ப்பொருளைப் பொருளாக நினையேன்; அதனால், அம்மெய்ப் பொருளை உணரமாட்டாத முருடர்க்கு முருடான சொற்களை யன்றிச் சொல்லமாட்டேன்; வலியச் சென்றும் அவர்களோடு வாதிடுவேன்; இஃது எனது துணிபும், தளர்வில்லாத குணமும் ஆகும். முன்பு, இலங்கையர் தலைவனாகிய இராவணனைப் பருத்த கயிலாய மலையின்கீழ் இட்டு நெரித்த கடவுள் என்றும் எழுந்தருளியிருக்கின்ற

இடமும் இத் திருவாரூரே யன்றோ! ஆதலின், அவர் எம்மையும் ஆண்டுகொள்வாரோ? அவரது திருவுள்ளத்தைக் கேட்டறிமின்.

திருவாரூர்

நமர்பிறர் என்ப தறியேன்
நான்கண்ட தேகண்டு வாழ்வேன்
தமரம் பெரிதும் உகப்பேன்
தக்கவா றொன்றுமி லாதேன்
குமரன் திருமால் பிரமன்
கூடிய தேவர் வணங்கும்
அமரன் இருப்பதும் ஆரூர் அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர். **#748**

தொண்டீர், யான், இவர் நம்மவர் என்பதும், அயலவர் என்பதும் அறியமாட்டேன்; நான் உண்மை என்று கண்டதையே கண்டு பிறர் சொல்வனவற்றை இகழ்ந்து நிற்பேன்; ஆரவாரத்தைப் பெரிதும் விரும்புவேன்; தக்க நெறி ஒன்றேனும் இல்லாதேன். முருகனும், திருமாலும், பிரமனும் ஒருங்கு கூடிய தேவர் பலரும் வணங்கும் தேவன் என்றும் எழுந்தருளியிருக்கின்ற இடமும் இத் திருவாரூரே யன்றோ! ஆதலின், அவர் எம்மையும் ஆண்டு கொள்வாரோ? அவரது திருவுள்ளத்தைக் கேட்டறிமின்.

திருவாரூர்

ஆசை பலஅறுக் கில்லேன்
ஆரையும் அன்றி யுரைப்பேன்
பேசிற் சழக்கலாற் பேசேன்
பிழைப்புடை யேன்மனந் தன்னால்
ஓசை பெரிதும் உகப்பேன்
ஒலிகடல் நஞ்சமு துண்ட
ஈசன் இருப்பதும் ஆரூர் அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர். **#749**

தொண்டீர், எனக்கு உள்ள அவாவோ பல; அவற்றுள் ஒன்றையும் நீக்கமாட்டேன்; அவ்வவாவினால் யாவரிடத்தும் வெகுளிதோன்றுதலின், எவரிடத்தும் பகைத்தே பேசுவேன்; ஒன்று சொல்லின், பொய்யல்லது சொல்லேன்; எனினும் புகழை மிக விரும்புவேன்; இவற்றால் மனத்தாலும் குற்றம் புரிதலுடையேன். ஒலிக்கின்ற கடலில் தோன்றிய நஞ்சினை அமுதமாக உண்ட பெருமான் என்றும் எழுந்தருளியிருக்கின்ற இடமும் இத் திருவாரூரேயன்றோ! ஆதலின், அவர் எம்மையும் ஆண்டுகொள்வாரோ? அவரது

திருவுள்ளத்தைக் கேட்டறிமின்.

திருவாரூர்

எந்தை இருப்பதும் ஆரூர் அவர்
எம்மையும் ஆள்வரோ என்று
சிந்தை செயுந்திறம் வல்லான்
திருமரு வுந்திரள் தோளன்
மந்த முழவம் இயம்பும்
வளவயல் நாவல்ஆ ரூரன்
சந்தம் இசையொடும் வல்லார்
தாம்புகழ் எய்துவர் தாமே. **#750**

வெற்றித் திருப் பொருந்திய திரண்ட தோள்களையுடையவனும், மெல்லென ஒலிக்கும் மத்தளம் முழுங்குவதும், வளவிய வயல்களையுடையதும் ஆகிய திருநாவலூரில் தோன்றியவனும் ஆகிய நம்பியாரூரன் 'எம் தந்தையாகிய இறைவன் என்றும் எழுந்தருளியிருக்கும் இடமும் இத் திருவாரூரே யன்றோ! ஆதலின், அவர் எம்மையும் ஆண்டுகொள்வாரோ' என்று அடியார்களோடு ஆராயும் திறம் வல்லனாய்ப் பாடிய இந்த இசைப் பாடல்களை, அவ்விசையொடும் பாட வல்லவர் புகழ் பெறுவர்.

திருத்துருத்தியும் - திருவேள்விக்குடியும்

திருத்துருத்தி

திருத்துருத்தியும் - திருவேள்விக்குடியும்,
பண் - காந்தாரம்

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடிபடக் கரையொடுந் திரைகொணர்ந் தெற்றும்
அன்னமாங் காவிரி அகன்கரை யுறைவார்
அடியிணை தொழுதெழும் அன்பராம் அடியார்
சொன்னவா றறிவார் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
என்னைநான் மறக்குமா றெம்பெரு மானை
யென்னுடம் படும்பிணி இடர்கெடுத் தானை. **#751**

மின்னலை உண்டாக்குகின்ற கரிய மேகங்கள் மழையைப் பொழிந்தபின், அருவிகளாய் ஓசையுண்டாகப் பாய்ந்து அலைகளைக் கொணர்ந்து கரையோடு மோதுவிக்கின்ற, அன்னப் பறவைகள் பொருந்திய காவிரியாற்றினது, அகன்ற கரையின்கண் பலவிடத்தும் எழுந்தருளியிருப்பவரும், திருத்துருத்தியிலும், திருவேள்விக்குடியிலும், வீற்றிருப்பவராகிய தலைவரும், தமது அடியிணையைத் தொழுது துயிலெழுகின்ற அன்பையுடையவராகிய அடியவர்கள் வேண்டிக்கொண்ட வகைகளை எல்லாம் நன்கு உணர்ந்து அவைகளை முடித்தருளுகின்றவரும், என் உடம்பை வருத்திய பிணியாகிய துன்பத்தைப் போக்கியவரும் ஆகிய எம்பெருமானாரை, குற்றமுடையேனும், நாய்போலும் கடையேனும் ஆகிய யான் மறக்குமாறு யாது!

திருத்துருத்தி

கூடுமா றுள்ளன கூடியுங் கோத்துங்
கொய்புன ஏனலோ டைவனஞ் சிதறி
மாடுமா கோங்கமே மருதமே பொருது
மலையெனக் குலைகளை மறிக்குமா றுந்தி
ஓடுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
பாடுமா றறிகிலேன் எம்பெரு மானைப்
பழவினை யுள்ளன பற்றறுத் தானை. **#752**

கூடத் தக்கனவாய் உள்ள யாறுகளோடு கூடியும், அவை வேறு காணப்படாதவாறு கோத்தும், கொய்யும் பருவத்தை அடைந்த

கொல்லைத் தினைக் கதிர்களையும், மலைநெற் கதிர்களையும் சிதறியும், இரு பக்கங்களிலும் கோங்கு மருது முதலிய மரங்களை முரித்தும், கரைகளை மலை தகர்ந்தாற் போலத் தகருமாறு இடித்தும் ஓடுகின்ற பெரிய காவிரியாற்றினது கரைக்கண் உள்ள திருத்துருத்தியிலும், திருவேள்விக்குடியிலும் உள்ளவராகிய தலைவரும், எனது பழவினைகளாய் உள்ளவற்றை அடியோடு தொலைத்தவரும் ஆகிய எம்பெருமான, குற்றமுடையேனும், நாய்போலும் கடையேனும் ஆகிய யான், பாடும் வகையை அறிகின்றிலேன்!

திருத்துருத்தி

கொல்லுமால் யானையின் கொம்பொடு வம்பார்
கொழுங்கனிச் செழும்பயன் கொண்டுகூட் டெய்திப்
புல்கியுந் தாழ்ந்தும்போந் துதவஞ் செய்யும்
போகரும் யோகரும் புலரிவாய் மூழ்கச்
செல்லுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
சொல்லுமா றறிகிலேன் எம்பெரு மானைத்
தொடர்ந்தடுங் கடும்பிணித் தொடர்வறுத் தானை. **#753**

கொல்லுகின்ற பெரிய யானையின் தந்தங்களையும், மணம் பொருந்திய கொழுமையான கனிகளாகிய வளவிய பயனையும் வாரிக்கொண்டு, அவற்றின் தொகுதியைப் பொருந்தி வந்து வலம் செய்தும், வணங்கியும் தவம் புரிகின்ற உலகியலாளரும், வீட்டுநெறியாளரும் விடியற்காலையில் வந்து மூழ்குமாறு ஓடுகின்ற பெரிய காவிரி யாற்றினது கரைக்கண் உள்ள திருத்துருத்தியிலும், திருவேள்விக்குடியிலும் வீற்றிருப்பவராகிய தலைவரும், என்னைத் தொடர்ந்து வருத்திய மிக்க பிணியினது தொடர்பை அறுத்தவரும் ஆகிய எம்பெருமானாரை, குற்றமுடையேனும், நாய்போலுங் கடையேனும் ஆகிய யான் புகழுமாற்றை அறிகின்றிலேன்!

திருத்துருத்தி

பொறியுமா சந்தனத் துண்டமோ டகிலும்
பொழிந்திழிந் தருவிகள் புன்புலங் கவரக்
கறியுமா மிளகொடு கதலியும் உந்திக்
கடலுற விளைப்பதே கருதித்தன் கைபோய்
எறியுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
அறியுமா றறிகிலேன் எம்பெரு மானை
அருவினை யுள்ளன ஆசறுத் தானை. **#754**

அருவிகள், பொரிந்த சந்தனக் கட்டைகளையும், அகிற் கட்டைகளையும் நிரம்பக் கொணர்ந்து குவித்துப் புன்செய் நிலத்தை மூடிக்கொள்ள, பின்பு, கரிக்கப்படும் சிறந்த மிளகுகளையும், வாழைகளையும் தள்ளிக்கொண்டு சென்று கடலில் பொருந்தச் சேர்ப்பதையே கருதிக்கொண்டு, தன் இரு மருங்கிலும் சென்று அலை வீசுகின்ற காவிரியாற்றினது கரையின்கண் உள்ள திருத்துருத்தியிலும், திருவேள்விக்குடியிலும் வீற்றிருப்பவராகிய தலைவரும், எனது அரிய வினைகளாய் உள்ள குற்றங்களைப் போக்கினவரும் ஆகிய எம்பெருமானாரை, குற்றமுடையேனும், நாய்போலும் கடையேனுமாகிய யான் அறியும் வகையை அறிகிலேன்!

திருத்துருத்தி

பொழிந்திழி மும்மதக் களிற்றின மருப்பும்
பொன்மலர் வேங்கையின் நன்மலர் உந்தி
இழிந்திழிந் தருவிகள் கடும்புனல் ஈண்டி
எண்டிசை யோர்களும் ஆடவந் திங்கே
சுழிந்திழி காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
ஒழிந்திலேன் பிதற்றுமா றெம்பெரு மானை
உற்றநோய் இற்றையே உறவொழித் தானை. **#755**

பொழியப்பட்டுப் பாய்கின்ற மும்மதங்களையுடைய யானையது தந்தங்களையும், பொன்னைப்போல மலர்கின்ற, வேங்கை மரத்தினது நல்ல மலர்களையும் தள்ளிக்கொண்டு அருவிகள் பலவும் வீழ்தலால் மிக்க நீர் நிரம்பி, எட்டுத் திக்கில் உள்ளவர்களும் வந்து முழுகுமாறு, இவ்விடத்தில் சுழித்துக்கொண்டு பாய்கின்ற காவிரியாற்றினது கரைக்கண் உள்ள திருத்துருத்தியிலும், திருவேள்விக்குடியிலும் வீற்றிருப்பவராகிய தலைவரும், என்னைப்பற்றிய நோயை இன்றே முற்றும் நீக்கியவரும் ஆகிய எம் பெருமானாரை, குற்றமுடையேனும், நாய் போலும் கடையேனும் ஆகிய யான் பிதற்றுதலை ஒழிந்திலேன்.

திருத்துருத்தி

புகழுமா சந்தனத் துண்டமோ டகிலும்
பொன்மணி வரன்றியும் நன்மலர் உந்தி
அகழுமா அருங்கரை வளம்படப் பெருகி
ஆடுவார் பாவந்தீர்த் தஞ்சனம் அலம்பித்
திகழுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
இகழுமா றறிகிலேன் எம்பெரு மானை

இழித்தநோய் இம்மையே ஒழிக்கவல் லானை. **#756**
புகழப்படுகின்ற சிறந்த சந்தனக் கட்டைகளையும், அகிற் கட்டைகளையும், பொன்னும் மணியுமாகிய இவைகளையும் வாரிக்கொண்டும், நல்ல மலர்களைத் தள்ளிக் கொண்டும், தன்னால் அகழப்படுகின்ற, பெரிய, அரிய கரைகள் செல்வம்படுமாறு பெருகி, முழுகுகின்றவர்களது பாவத்தைப் போக்கி, கண்ணில் தீட்டிய மைகளைக் கழுவி நிற்கின்ற காவிரியாற்றினது கரைக்கண் உள்ள திருத்துருத்தியிலும், திருவேள்விக்குடியிலும் வீற்றிருப்பவராகிய தலைவரும், என்னை இழிவடையச் செய்த நோயை இப்பிறப்பில் தானே ஒழிக்க வல்லவரும் ஆகிய எம் பெருமானாரை, குற்றம் உடையேனும், நாய்போலும் கடையேனும் ஆகிய யான், இகழுமாற்றை நினையமாட்டேன்!

<u>திருத்துருத்தி</u>

வரையின்மாங் கனியொடு வாழையின் கனியும்
வருடியும் வணக்கியும் மராமரம் பொருதும்
கரையுமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க்
காம்பீலி சுமந்தொளிர் நித்திலங் கைபோய்
விரையுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
உரையுமா றறிகிலேன் எம்பெரு மானை
உலகறி பழவினை அறவொழித் தானை. **#757**

அளவில்லாத மாம்பழங்களையும், வாழைப்பழங்களையும் வீழ்த்தியும், கிளைகளோடு சாய்த்தும், மராமரத்தை முரித்தும், கரைகள் அரிக்கப்படுகின்ற கரிய கடலைக் காண்பதையே கருத்தாகக் கொண்டு, மூங்கில்களையும் மயில் தோகைகளையும் சுமந்து, ஒளி விளங்குகின்ற முத்துக்கள் இருபக்கங்களும் தெறிக்க, விரைய ஓடுகின்ற பெரிய காவிரியாற்றினது கரைக்கண் உள்ள திருத்துருத்தியிலும், திருவேள்விக்குடியிலும் வீற்றிருப்பவராகிய தலைவரும், எனது, உலகறிந்த பழவினைகளை முற்றிலும் நீக்கினவரும் ஆகிய எம் பெருமானாரை, குற்றமுடையேனும், நாய்போலும் கடையேனும் ஆகிய யான் துதிக்குமாற்றை அறிகின்றிலேன்!

<u>திருத்துருத்தி</u>

ஊருமா தேசமே மனமுகந் துள்ளிப்
புள்ளினம் பலபடிந் தொண்கரை உகளக்
காருமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க்
கவரிமா மயிர்சுமந் தொண்பளிங் கிடறித்

தேருமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
ஆருமா றறிகிலேன் எம்பெரு மானை
அம்மைநோய் இம்மையே ஆசறுத் தானை. **#758**
அணியவான ஊர்களில் உள்ளவர்களும், பெரிதாகிய நாடு முழுதும் உள்ளவர்களும், மனம் விரும்பி நினைக்குமாறு, பறவைக் கூட்டங்கள் பல மூழ்கி எழுந்து, அழகிய கரைக்கண் உள்ள திருத்துருத்தியிலும், திருவேள்விக் குடியிலும் திரிய, நீர் நிறைந்த, பெரிய, கரிய கடலைக் காண்பதையே கருத்தாகக்கொண்டு கவரி மானினது சிறந்த மயிரைச் சுமந்து, ஒளியையுடைய பளிங்குக் கற்களை உடைத்து, நானிலங்களில் உள்ள பொருள்களையும் கண்டு செல்கின்ற, பெரிய காவிரியாற்றினது கரைக்கண் உள்ள திருத்துருத்தியிலும், திருவேள்விக்குடியிலும் வீற்றிருப்பவராகிய தலைவரும், எனக்கு வரும் பிறப்பில் வரக் கடவதாகிய துன்பமாகிய குற்றத்தை இப்பிறப்பிற்றானே களைந் தொழித்தவரும் ஆகிய எம்பெருமானாரை, குற்றமுடையேனும், நாய் போலும் கடையேனும் ஆகிய யான், துய்க்குமாற்றை அறிகின்றிலேன்!

திருத்துருத்தி

புலங்களை வளம்படப் போக்கறப் பெருகிப்
பொன்களே சுமந்தெங்கும் பூசல்செய் தார்ப்ப
இலங்குமா முத்தினோ டினமணி இடறி
இருகரைப் பெருமரம் பீழ்ந்துகொண் டெற்றிக்
கலங்குமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
விலங்குமா றறிகிலேன் எம்பெரு மானை
மேலைநோய் இம்மையே வீடுவித் தானை. **#759**
வயல்கள் வளம்படவும், அதனால் எல்லாக் குற்றங்களும் நீங்கவும், நீர்பெருகி பொற்கட்டிகளைச் சுமந்துகொண்டு, ஒளி விளங்குகின்ற சிறந்த முத்துக்களையும், மற்றும் பலவகை மணிகளையும் எறிந்து, இருகரைகளிலும் உள்ள பெரிய மரங்களை முரித்து ஈர்த்துக் கரையைத் தாக்கி, எவ்விடத்தில் உள்ளவர்களும் ஆரவாரம் செய்து ஒலிக்க, கலங்கி ஓடுகின்ற காவிரியாற்றினது கரைக்கண் உள்ள திருத்துருத்தியிலும், திருவேள்விக்குடியிலும் வீற்றிருப்பவராகிய தலைவரும், எனக்கு வரும்பிறப்பில் வரக்கடவதாகிய துன்பமாகிய குற்றத்தை இப்பிறப்பிற்றானே நீக்கியவரும் ஆகிய எம்பெருமானாரை, குற்றமுடையேனும், நாய்போலும் கடையேனும் ஆகிய யான் நீங்குமாற்றை எண்ணேன்!

<u>திருத்துருத்தி</u>

மங்கையோர் கூறுகந் தேறுகந் தேறி
மாறலார் திரிபுரம் நீறெழச் செற்ற
அங்கையான் கழலடி யன்றிமற் றறியான்
அடியவர்க் கடியவன் தொழுவன் ஆரூரன்
கங்கையார் காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் சேர்த்திய பாடல்
தங்கையால் தொழுதுதம் நாவின்மேற் கொள்வார்
தவநெறி சென்றமர் உலகம்ஆள் பவரே. **#760**

மங்கை ஒருத்தியை ஒரு பாகத்தில் விரும்பி வைத்தும், இடபத்தை விரும்பி ஊர்ந்தும் நிற்கின்ற, பகைத்தலையுடையவரது முப்புரங்களை நீறுபட அழித்த அகங்கையை உடையவனது கழலணிந்த திருவடிகளை யன்றி வேறொன்றை அறியாதவனாகியும், அவன் அடியார்க்கு அடியவனாகியும் அவனுக்கு அடியவனாகிய நம்பியாரூரன், கங்கை போலப் பொருந்திய காவிரியாற்றினது கரைக்கண் உள்ள திருக்துருத்தியிலும், திருவேள்விக் குடியிலும் வீற்றிருக்கின்ற தலைவருக்குச் சேர்ப்பித்த இப்பாடல்களை, தங்கள் கையால் தொழுது, தங்கள் நாவிற் கொள்பவர்கள், தவநெறிக் கண் சென்று, பின்னர்ச் சிவலோகத்தை ஆள்பவராதல் திண்ணம்.

திருவானைக்கா

திருவானைக்கா

திருவானைக்கா,
பண் - காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சம்புகேசுவரர்.
தேவியார் : அகிலாண்டநாயகியம்மை.

மறைக ளாயின நான்கும்
மற்றுள பொருள்களும் எல்லாத்
துறையும் தோத்திரத் திறையும்
தொன்மையும் நன்மையும் ஆய
அறையும் பூம்புனல் ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
இறைவன் என்றடி சேர்வார்
எம்மையும் ஆளுடை யாரே. #761 ★★★★★

வேதங்கள் நான்கும் மற்றைய பொருள்களும், பல சமயங்களும், அவற்றில் புகழ்ந்து சொல்லப்படும் கடவுள்களும், இவை அனைத்திற்கும் முன்னேயுள்ள முதற்பொருளும், வீடுபேறும் என்கின்ற இவை எல்லாமாய் நிற்கின்ற ஒலிக்கும் அழகிய நீரையுடைய திருவானைக்காவைத் தனதாக உடைய முதல்வனை, 'இவனே முதல்வன்' என்று அறிந்து, நாள்தோறும் அடிபணிகின்றவர், எம்மையும் அடிமைகொண்டு ஆளுதலுடையவராவர்.

திருவானைக்கா

வங்கம் மேவிய வேலை
நஞ்செழ வஞ்சர்கள் கூடித்
தங்கள் மேல்அட ராமை
உண்ணென உண்டிருள் கண்டன்
அங்கம் ஓதிய ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
எங்கள் ஈசன்என் பார்கள்
எம்மையும் ஆளுடை யாரே. #762

மரக்கலம் பொருந்திய கடலின்கண் நஞ்சு தோன்ற, தங்கள்மேல் வந்து தாக்காது தடுத்துக் கொள்ளுதற் பொருட்டுச் சூழ்ச்சி செய்த தேவர்கள் ஒருங்கு கூடிச்சென்று 'இந் நஞ்சினை உண்டருளாய்' என்று வேண்டிக்கொள்ள அவ்வேண்டுகோளை மறாது ஏற்று உண்டு,

அதனால், கறுத்த கண்டத்தை உடையவனாகியவனும், வேதத்திற்கு உரிய துணை நூல்களைச் செய்தவனும் ஆகிய, திருவானைக்காவைத் தனதாக உடைய முதல்வனை, 'இவனே எங்களுக்குத் தலைவன்' என்று நாள்தோறும் அன்பு செய்கின்றவர். எம்மையும் அடிமை கொண்டு ஆளுதலுடையவராவர்.

திருவானைக்கா

நீல வண்டறை கொன்றை
நேரிழை மங்கை ஓர்திங்கள்
சால வாள்அர வங்கள்
தங்கிய செஞ்சடை எந்தை
ஆல நீழலுள் ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
ஏலு மாறுவல் லார்கள்
எம்மையும் ஆளுடை யாரே. **#763**

நீல நிறத்தையுடைய வண்டுகள் ஒலிக்கின்ற கொன்றை மலரும், நுண்தொழில் அமைந்த அணிகளை அணிந்த மங்கை ஒருத்தியும், பிறை ஒன்றும், பல கொடிய பாம்புகளும் தங்கியிருக்கின்ற சிவந்த சடையையுடைய எம் தந்தையும், ஆல் நிழலில் இருப்பவனும் ஆகிய, திருவானைக்காவைத் தனதாக உடைய முதல்வனை, நாள்தோறும் அவன் தம்மொடு பொருந்தும் செயலினைச் செய்ய வல்லவர். எம்மையும் அடிமை கொண்டு ஆளுதலுடையவராவர்.

திருவானைக்கா

தந்தை தாய்உல குக்கோர்
தத்துவன் மெய்த்தவத் தோர்க்குப்
பந்த மாயின பெருமான்
பரிசுடை யவர்திரு வடிகள்
அந்தண் பூம்புனல் ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
எந்தை என்றடி சேர்வார்
எம்மையும் ஆளுடை யாரே. **#764**

உலகம் எல்லாவற்றிற்கும் தந்தையாய், ஒப்பற்ற மெய்ப்பொருளாய் உள்ளவனும், உண்மையான தவத்தைச் செய்வோர்க்கு உறவான பெருமானும், அன்புடையவர்க்குச் சிறந்த தலைவனும் ஆகிய, அழகிய, குளிர்ந்த பூக்களையுடைய, நீரையுடைய திருவானைக்காவைத் தனதாக உடைய முதல்வனை, 'இவனே எம் தந்தை' என்று அறிந்து, நாள்தோறும் அடிபணிகின்றவர், எம்மையும் அடிமைகொண்டு

ஆளுதலுடையவராவர்.

திருவானைக்கா

கணைசெந் தீஅர வம்நாண்
கல்வளை யுஞ்சிலை யாகத்
துணைசெ யும்மதில் மூன்றுஞ்
சுட்டவ னேயுல குய்ய
அணையும் பூம்புனல் ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
இணைகொள் சேவடி சேர்வார்
எம்மையும் ஆளுடை யாரே. **#765**

பொருந்திய உலகம் உய்தற்பொருட்டு, சிவந்த நெருப்பு அம்பாகியும், பாம்பு நாணியாகியும், மலை வளைகின்ற வில்லாகியும் நிற்க, ஒன்றற்கொன்று துணை செய்கின்ற மதில்கள் மூன்றையும் எரித்தவனாகிய, எங்கும் சென்று சேர்கின்ற அழகிய நீரையுடைய திருவானைக்காவைத் தனதாக உடைய முதல்வனை, நாள்தோறும் அவனது இரண்டு செவ்விய திருவடிக்கண் பணிகின்றவர், எம்மையும் அடிமைகொண்டு ஆளுதலுடையவராவர்.

திருவானைக்கா

விண்ணின் மாமதி சூடி
விலையிலி கலனணி விமலன்
பண்ணின் நேர்மொழி மங்கை
பங்கினன் பசுவுகந் தேறி
அண்ண லாகிய ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
எண்ணு மாறுவல் லார்கள்
எம்மையும் ஆளுடை யாரே. **#766**

விண்ணில் உள்ள சிறந்த பிறையைக் கண்ணியாகச் சூடி, விலைப்படும் தன்மை இல்லாத அணிகலங்களை அணிகின்ற தூயவனும், பண்ணினை ஒத்த சொல்லை உடைய மங்கையது பங்கை உடையவனும், ஆனேற்றை விரும்பி ஏறுபவனும், யாவர்க்கும் தலைவனும் ஆகிய, திருவானைக்காவைத் தனதாக உடைய முதல்வனை, நாள்தோறும் நினையுமாற்றினை வல்லவர், எம்மையும் அடிமைகொண்டு ஆளுதலுடையராவர்.

திருவானைக்கா

தார மாகிய பொன்னித்

தண்டுறை ஆடி விழுத்து
நீரில் நின்றடி போற்றி
நின்மலா கொள்ளென ஆங்கே ஆரங் கொண்டஎம் ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
ஈரம் உள்ளவர் நாளும்
எம்மையும் ஆளுடை யாரே. #767
சோழன் ஒருவன், பல பண்டங்களும் உளவாதற்கு ஏதுவாகிய காவிரியின் குளிர்ந்த துறையில் மூழ்கித் தனது முத்துவடத்தை வீழ்த்தி, வீழ்த்திய வருத்தத்தால் கரைஏறாது நீரிற்றானே நின்று, தனது திருவடியைத் துதித்து, 'இறைவனே, எனது முத்து மாலையை ஏற்றுக்கொள்' என்று வேண்ட, அங்ஙனமே அவ்வாரத்தைத் திருமஞ்சனக் குடத்துட் புகச்செய்து ஏற்றுக்கொண்ட, திருவானைக்காவைத் தனதாக உடைய முதல்வனுக்கு நாள்தோறும் அன்பு உடையவராய் இருப்பவர், நாள்தோறும் எம்மையும் அடிமை கொண்டு ஆளுதலுடையவராவர்.

திருவானைக்கா

உரவம் உள்ளதொர் உழையின்
உரிபுலி யதள்உடை யானை
விரைகொள் கொன்றையி னானை
விரிசடை மேற்பிறை யானை
அரவம் வீக்கிய ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
இரவும் எல்லையும் ஏத்து
வார்எம்மை ஆளுடை யாரே. #768
வலிமையுள்ள மானினது தோல், புலியினது தோல் இவைகளை யுடையவனும், நறுமணத்தைக் கொண்ட கொன்றைமலர் மாலையை அணிந்தவனும், விரிந்த சடையின்மேல் பிறையை உடையவனும், பாம்பை உடம்பிற் பல இடங்களில் கட்டியுள்ளவனும் ஆகிய, திருவானைக்காவைத் தனதாக உடைய முதல்வனை, நாள்தோறும், இரவிலும், பகலிலும் துதிப்பவர் எம்மையும் அடிமை கொண்டு ஆளுதலுடையவராவர்.

திருவானைக்கா

வலங்கொள் வாரவர் தங்கள்
வல்வினை தீர்க்கு மருந்து
கலங்கக் காலனைக் காலாற்
காமனைக் கண்சிவப் பானை

அலங்கல் நீர்பொரும் ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
இலங்கு சேவடி சேர்வார்
எம்மையும் ஆளுடை யாரே. **#769**

தன்னை வலம் செய்கின்றவர்களது வலிய வினையாகிய நோயைத் தீர்க்கின்ற மருந்தாய் உள்ளவனும், கூற்றுவனைக் காலாலும், காமனைக் கண்ணாலும் அவர்கள் கலங்கி அழியுமாறு வெகுண்டவனும் ஆகிய, அசைகின்ற நீர் கரையை மோதுகின்ற திருவானைக்காவைத் தனதாக உடைய முதல்வனை, நாள்தோறும் அவனது விளங்குகின்ற, செவ்விய திருவடியில் பணிகின்றவர், எம்மையும் அடிமைகொண்டு ஆளுதலுடையவராவர்.

திருவானைக்கா

ஆழி யாற்கருள் ஆனைக்
காவுடை ஆதிபொன் னடியின்
நீழ லேசர ணாக
நின்றருள் கூர நினைந்து
வாழ வல்லவன் றொண்டன்
வண்டமிழ் மாலைவல் லார்போய்
ஏழு மாபிறப் பற்று
எம்மையும் ஆளுடை யாரே. **#770**

சக்கரத்தை ஏந்தியவனாகிய திருமாலுக்கு அருள்புரிந்த, திருவானைக்காவைத் தனதாக உடைய முதல்வனது பொன்போலும் திருவடி நிழலையே நினைந்து வாழ வல்ல வன்றொண்டனாகிய நம்பியாரூரனது வளவிய இத்தமிழ்ப் பாடல்களைப் பாட வல்லவர், எழுவகைப்பட்ட அளவில்லாத பிறப்புக்களும் நீங்கப் பெற்று, மேலே சென்று, எம்மையும் அடிமைகொண்டு ஆளுதலுடையவராவர்.

திருவாஞ்சியம்

திருவாஞ்சியம்

திருவாஞ்சியம்,
பண் - பியந்தைக்காந்தாரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சுகவாஞ்சிநாதர்.
தேவியார் : வாழவந்தநாயகி.

பொருவ னார்புரி நூலர்
புணர்முலை உமையவ ளோடு
மருவ னார்மரு வார்பால்
வருவதும் இல்லைநம் மடிகள்
திருவ னார்பணிந் தேத்துந்
திகழ்திரு வாஞ்சியத் துறையும்
ஒருவனார் அடி யாரை
ஊழ்வினை நலியஒட் டாரே. **#771**

நம் இறைவர், தீயவரோடு மாறுபடுபவர்; முப்புரி நூலை அணிபவர்; நெருங்கிய தனங்களையுடைய உமையோடு கூடியிருத்தலை உடையவர்; தம்மை அடையாதவரிடத்தில் வருவதும் இல்லை; திருமகளை உடைய திருமால் வணங்கித் துதிக்கின்ற, புகழால் விளங்குகின்ற திருவாஞ்சியத்தில் எழுந்தருளியிருக்கும் ஒப்பற்றவராகிய அவர், தம் அடியவரை ஊழ்வினை வந்து நலிய ஒட்டாது ஒரு தலையாகக் காப்பர்.

திருவாஞ்சியம்

தொறுவில் ஆன்இள ஏறு
துண்ணென இடிகுரல் வெருவிச்
செறுவில் வாளைகள் ஓடச்
செங்கயல் பங்கயத் தொதுங்கக்
கறுவி லாமனத் தார்கள்
காண்தகு வாஞ்சியத் தடிகள்
மறுவி லாதவெண் ணீறு
பூசுதல் மன்னும்ஒன் றுடைத்தே. **#772**

பசுக் கூட்டத்துள், இளைய ஆனேறு, கேட்டவர் மனம் துண்ணென்று வெருவுமாறு ஒலிக்கின்ற குரலுக்கு அஞ்சி, வயல்களில் உள்ள வாளைமீன்கள் ஓடவும், செவ்வரிகளையுடைய கயல்மீன்கள் தாமரைப் பூக்களில் ஒளியவும், பகையில்லாத மனத்தை உடைய சான்றோர்

அவற்றைக்கண்டு இரங்குதல் பொருந்திய திருவாஞ்சியத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவர், குற்றமற்ற வெள்ளிய நீற்றைப் பூசுதல், சிறந்ததொரு கருத்தை உடையது.

திருவாஞ்சியம்

தூர்த்தர் மூவெயில் எய்து
சுடுநுனைப் பகழிய தொன்றால
பார்த்த னார்திரள் தோள்மேற்
பல்நுனைப் பகழிகள் பாய்ச்சித்
தீர்த்த மாமலர்ப் பொய்கைத்
திகழ்திரு வாஞ்சியத் தடிகள
சாத்து மாமணிக் கச்சங்
கொருதலை பலதலை யுடைத்தே. **#773**

தீர்த்தமாகிய, சிறந்த, பூக்களையுடைய பொய்கைகளையுடைய, புகழால் விளங்குகின்ற திருவாஞ்சியத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவர், நெறி பிறழ்ந்தவரது மூன்று மதில்களை, சுடுகின்ற முனையையுடைய ஓர் அம்பினால் அழித்து, ஒருவனாகிய அருச்சுனனது திரண்ட தோள்மீது பல கூரிய அம்புகளை அழுத்தி, தாம் கட்டுகின்ற பெரிய மாணிக்கத்தை உடைய கச்சு, ஒரு பக்கத்திலே பல தலைகளையுடையதாய் இருக்கின்றது; இது வியப்பு!

திருவாஞ்சியம்

சள்ளை வெள்ளையங் குருகு
தானது வாமெனக் கருதி
வள்ளை வெண்மலர் அஞ்சி
மறுகிஓர் வாளையின் வாயில்
துள்ளு தெளுநீர்ப் பொய்கைத்
துறைமல்கு வாஞ்சியத் தடிகள்
வெள்ளை நுண்பொடிப் பூசும்
விகிர்தம்ஒன் றொழிகிலர் தாமே. **#774**

'சள்ளை' என்னும் மீன், வள்ளைக் கொடியின் வெண்மையான மலரை, வெண்மையான குருகு என்று கருதி அஞ்சிச் சுழன்று, பின், வாளைமீனின் வாயிலே சென்று துள்ளுகின்ற, தெளவாகிய நீரையுடைய பொய்கைத் துறைகள் நிறைந்த திருவாஞ்சியத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவர், வெள்ளிய, நுண்ணிய சாம்பலைப் பூசுகின்ற வேறுபாடொன்றனை எஞ்ஞான்றும் ஒழியாதே உடையர்.

திருவாஞ்சியம்

மைகொள் கண்டர்எண் தோளர்
மலைமக ளுடனுறை வாழ்க்கைக்
கொய்த கூவிள மாலை
குலவிய சடைமுடிக் குழகர்
கைதை நெய்தலங் கழனி
கமழ்புகழ் வாஞ்சியத் தடிகள்
பைதல் வெண்பிறை யோடு
பாம்புடன் வைப்பது பரிசே. **#775**

கருமை நிறத்தைக் கொண்ட கண்டத்தையும், எட்டுத் தோள்களையும், மலைமகளோடு உடன்உறைகின்ற வாழ்க்கையையும், பறிக்கப்பட்ட கூவிளை இலையால் ஆகிய மாலை விளங்குகின்ற சடைமுடியையும் உடைய அழகராகிய, நெய்தற் பூக்களையுடைய அழகிய கழனிகளில், தாழம்பூக்கள் மணம் வீசுகின்ற, புகழையுடைய திருவாஞ்சியத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவர்க்கு, இளைய வெண்பிறையோடு பாம்பைச் சேர்த்து அணிவதுதான் இயல்பு.

<u>திருவாஞ்சியம்</u>

கரந்தை கூவிள மாலை
கடிமலர்க் கொன்றையுஞ் சூடிப்
பரந்த பாரிடஞ் சூழ
வருவர்நம் பரமர்தம் பரிசால்
திருந்து மாடங்கள் நீடு
திகழ்தரு வாஞ்சியத் துறையும்
மருந்த னார்அடி யாரை
வல்வினை நலியஒட் டாரே. **#776**

தம் இயல்பு காரணமாக, கரந்தைப் பூவினாலும், கூவிள இலையாலும், மணம் பொருந்திய கொன்றை மலராலும் ஆகிய மாலைகளைச் சூடிக்கொண்டு, மிக்க பூதகணங்கள் புடைசூழ வருபவரும், நம் இறைவரும் ஆகிய, திருத்தமான மாடங்கள் உயர்ந்து தோன்றுகின்ற, புகழால் விளங்குகின்ற திருவாஞ்சியத்தில் எழுந்தருளி இருக்கும் அமுதம் போல்பவர், தம் அடியாரை, வலிய வினைகள் வந்து துன்புறுத்த ஒட்டாது காப்பவரேயாவர்.

<u>திருவாஞ்சியம்</u>

அருவி பாய்தரு கழனி
அலர்தரு குவளையங் கண்ணார்
குருவி யாய்கிளி சேர்ப்பக்
குருகினம் இரிதரு கிடங்கில்

பருவ ரால்குதி கொள்ளும்
பைம்பொழில் வாஞ்சியத் துறையும்
இருவ ரால்அறி யொண்ணா
இறைவன தறைகழல் சரணே. **#777**

மலர்ந்த குவளைப் பூப்போலும் கண்களையுடைய மகளிர், நீர்த் திரள் பாய்கின்ற கழனிகளில் கதிர்களை ஆராய்கின்ற குருவிகளையும், கிளிகளையும் அங்கு நின்றும் நீங்கிச் சென்று சேரப் பண்ணுகையால், குருகுகளின் கூட்டம் அஞ்சி நீங்குகின்ற கால்வாய்களில் பருத்த வரால் மீன்கள் துள்ளுகின்ற, பசிய சோலைகள் சூழ்ந்த திருவாஞ்சியத்தில் எழுந்தருளியிருக்கும், 'மால், அயன்' என்பார்க்கு அறிய ஒண்ணாத இறைவரது, ஒலிக்கின்ற கழலணிந்த திருவடிகளே நமக்குப் புகலிடம்.

<u>திருவாஞ்சியம்</u>

களங்க ளார்தரு கழனி
அளிதரக் களிதரு வண்டு
உளங்க ளார்கலிப் பாடல்
உம்பரில் ஒலித்திடுங் காட்சி
குளங்க ளால்நிழற் கீழ்நற்
குயில்பயில் வாஞ்சியத் தடிகள்
விளங்கு தாமரைப் பாதம்
நினைப்பவர் வினைநலி விலரே. **#778**

ஏர்க்களம் நிறைதற்கு ஏதுவாகிய வயல்கள் அன்பைத் தர, அதனால் மகிழ்வுற்ற வண்டுகள், கேட்போர் உள்ளம் இன்பம் நிறைதற்குரிய ஆரவாரமான இசை, மேற்சென்று ஒலிக்கின்ற கேள்வியை, குளக்கரைகளில் உள்ள ஆலமரத்தின் கீழ்க்கிளையில் இருந்து நல்ல குயில்கள் பழகுகின்ற திருவாஞ்சியத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவரது, ஒளி வீசுகின்ற, தாமரை மலர்போலும் திருவடிகளை நினைப்பவர் வினையால் துன்புறுத்தப்படுதல் இலராவர்.

<u>திருவாஞ்சியம்</u>

வாழை யின்கனி தானும்
மதுவிம்மு வருக்கையின் சுளையும்
கூழை வானரந் தம்மிற்
கூறிது சிறிதெனக் குழறித்
தாழை வாழையந் தண்டாற்
செருச்செய்து தருக்குவாஞ் சியத்துள்
ஏழை பாகனை யல்லால்
இறையெனக் கருதுதல் இலமே. **#779**

வாழைப் பழங்களையும், சாறு மிக்கொழுகுகின்ற பலாப் பழத்தின் சுளைகளையும், 'எனக்கு வைத்த இப் பங்கு சிறிது' என்று இகழ்ந்து, அறிவு குறைந்த குரங்குகள் தமக்குள் கலாய்த்து, தாழை மட்டையும், வாழை மட்டையுமாகிய கோல்களால் போர் செய்து செருக்குக் கொள்கின்ற திருவாஞ்சியத்தில் எழுந்தருளியிருக்கும் மங்கை பங்காளனை யல்லது வேறொருவரை, யாம், 'கடவுள்' என்று நினைத்தல் இலம்.

திருவாஞ்சியம்

செந்நெ லங்கலங் கழனித்
திகழ்திரு வாஞ்சியத் துறையு
மின்ன லங்கலஞ் சடையெம்
மிறைவன தறைகழல் பரவும்
பொன்ன லங்கல்நன் மாடப்
பொழிலணி நாவல்ஆ ரூரன்
பன்ன லங்கனன் மாலை
பாடுமின் பத்தரு ளீரே. **#780**

செந்நெற்களையுடைய அழகிய மரக்கலம் போலும் கழனிகளையுடைய புகழால் விளங்குகின்ற திருவாஞ்சியத்தில் எழுந்தருளியிருக்கும், இனிய மாலைகளை யணிந்த சடையையுடைய எம் இறைவனது, ஒலிக்கின்ற கழலையணிந்த திருவடிகளைத் துதித்த, பொன்னரி மாலைகள் தூக்கப்பட்ட நல்ல மாடங்களையுடைய, சோலைகளையுடைய திருநாவலூரில் தோன்றிய நம்பியாரூரனது, பல அழகுகளையுடைய, கற்கத்தகுந்த நல்ல பாமாலையை, அடியராய் உள்ளவர்களே, பாடுமின்கள்.

திருவையாறு

திருஐயாறு

திருவையாறு,
பண் - காந்தாரபஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செம்பொற்சோதியீசுவரர்.
தேவியார் : அறம் வளர்த்த நாயகியம்மை.

பரவும் பரிசொன் றறியேன்நான்
பண்டே உம்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும்
எய்த நினைய மாட்டேன்நான்
கரவில் அருவி கமுகுண்ணத்
தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை
அரவந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகேளோ! #781

கரவின்றி வருகின்ற நீர்ப்பெருக்குக் கமுகங் குலையை விழுங்க, தென்னை மரங்களின் குலைக்கீழ் உள்ள கரும்பாலைகளின் ஓசையோடே கூடி ஒலிக்கின்ற அலைகளையுடைய, காவிரியாற்றங் கரைக்கண் உள்ள திருவையாற்றை உமதாக உடைய அடிகேள், யான் உம்மைத் துதிக்கும் முறையை இயற்கையில் சிறிதும் அறியாதேன் ஆகலின், முன்னமே உம்பால் வந்து வழிபடாதொழிந்தேன்; இரவும் பகலும் உம்மையே நினைவேன்; என்றாலும், அழுந்த நினையமாட்டேன்; ஓலம்!

திருஐயாறு

எங்கே போவே னாயிடினும்
அங்கே வந்தென் மனத்தீராய்ச்
சங்கை யொன்று மின்றியே
தலைநாள் கடைநா ளொக்கவே
கங்கை சடைமேற் கரந்தானே
கலைமான் மறியுங் கனல்மழுவும்
தங்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகேளோ! #782

அடியேன் எங்கே செல்வேனாயினும், முதல் நாளும் இறுதி நாளும் ஒரு பெற்றியவாக, சிறிதும் ஐயம் இன்றி, அங்கே வந்து என் மனத்தில் இருப்பீராய், சடைமேற் கங்கையும், கையில் மானின் ஆண் கன்றும்,

சுடுகின்ற மழுவுமாய்த் தங்குகின்ற, அலைகளையுடைய, காவிரியாற்றங்கரைக் கண் உள்ள திருவையாற்றை உமதாக உடைய அடிகேள் ஓலம்!

திருஐயாறு

மருவிப் பிரிய மாட்டேன் நான்
வழிநின் றொழிந்தேன் ஒழிகிலேன்
பருவி விச்சி மலைச்சாரற்
பட்டை கொண்டு பகடாடிக்
குருவி யோப்பிக் கிளிகடிவார்
குழல்மேல் மாலை கொண்டோட்டம்
தரவந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகேளோ! **#783**

நீர், பரந்து பெருகி தினை விதைக்கப்பட்ட மலைச்சாரலில் பல பிரிவுகளாய்க் காணப்பட்டு, யானைகளைப் புரட்டி, புனங்களில் குருவிகளையும் கிளிகளையும் ஓட்டித் தினையைக் காக்கும் மகளிரது கூந்தல்மேல் அணிந்த மாலைகளை ஈர்த்துக் கொண்டு ஓடுதலைச் செய்தலால் அழகிய அலைகளை உடைத்தாய் நிற்கும், காவிரிக் கரைக்கண் உள்ள திருவையாற்றை உமதாக உடைய அடிகேள், யான், சிலர்போல, உறுவது சீர் தூக்கி, உற்ற வழிக்கூடி, உறாதவழிப் பிரியமாட்டேன் ; என்றும் உம் வழியிலே நின்று விட்டேன் ; இனி ஒருகாலும் இந்நிலையினின்றும் நீங்கேன் ; ஓலம் !

திருஐயாறு

பழகா நின்று பணிசெய்வார்
பெற்ற பயனொன் றறிகிலேன்
இகழா துமக்காட் பட்டோர்க்கு
வேக படமொன் றரைச்சாத்திக்
குழகா வாழைக் குலைதெங்கு
கொணர்ந்து கரைமேல் எறியவே
அழகார் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகேளோ! **#784**

வாழைக் குலைகளையும், தென்னங் குலைகளையும் அழகாகக் கொணர்ந்து கரைமேல் எறிதலால் அழகு நிறைந்துள்ள அலைகளையுடைய, காவிரி யாற்றங்கரைக்கண் உள்ள திருவையாற்றை உமதாக உடைய அடிகேள், உமக்கு அடிமைப்பட்டவர் முன்னே, நீர் ஒற்றை ஆடையையே அரையில் பொருந்த உடுத்து நிற்றலால், உம்மை அணுகி நின்று உமக்குப் பணி செய்பவர், அதனால்பெற்ற பயன்

ஒன்றையும் யான் அறிகின்றிலேன் ; ஓலம்!

திருஐயாறு

பிழைத்த பிழையொன் றறியேன்நான்
பிழையைத் தீரப் பணியாயே
மழைக்கண் நல்லார் குடைந்தாட
மலையும் நிலனுங் கொள்ளாமைக்
கழைக்கொள் பிரசங் கலந்தெங்குங்
கழனி மண்டிக் கையேறி
அழைக்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகேளோ! **#785**

மழைபோலும் கண்களையுடைய அழகியராகிய மகளிர் நீரில் மூழ்கி விளையாட, மலையும் நிலமும் இடம் கொள்ளாதபடி பெருகி, மூங்கிலிடத்துப் பொருந்திய தேன் பொருந்தப்பெற்று, வயல்களில் எல்லாம் நிறைந்து, வரம்புகளின் மேல் ஏறி ஒலிக்கின்ற அலைகளையுடைய, காவிரி யாற்றங் கரைக்கண் உள்ள திருவையாற்றை உமதாகிய உடைய அடிகேள், அடியேன் உமக்குச் செய்த குற்றம் ஒன்று உளதாக அறிந்திலேன்; யான் அறியாதவாறு நிகழ்ந்த பிழை உளதாயின், அது நீங்க அருள்செய்; ஓலம்!

திருஐயாறு

கார்க்கொள் கொன்றை சடைமேலொன்
றுடையாய் விடையாய் கையினான்
மூர்க்கர் புரமூன் றெரிசெய்தாய்
முன்நீ பின்நீ முதல்வன்நீ
வார்கொள் அருவி பலவாரி
மணியும் முத்தும் பொன்னுங்கொண்
டார்க்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகேளோ! **#786**

கார்காலத்தைக் கொண்ட கொன்றைமலரின் மாலை யொன்றைச் சடைமேல் உடையவனே, விடையை ஏறுபவனே, அறிவில்லாதவரது ஊர்கள் மூன்றைச் சிரிப்பினால் எரித்தவனே, ஒழுகுதலைக்கொண்ட பல அருவிகள் வாரிக் கொண்டு வந்த மாணிக்கங்களையும் முத்துக்களையும் கைக்கொண்டு ஆரவாரிக்கின்ற அலைகளையுடைய, காவிரி யாற்றங்கரைக்கண் உள்ள திருவையாற்றை நினதாக உடைய அடிகேள், எல்லாவற்றுக்கும் முன்னுள்ளவனும் நீயே; பின்னுள்ளவனும் நீயே; எப்பொருட்கும் முதல்வனும் நீயே; ஓலம்!

திருஐயாறு

மலைக்கண் மடவாள் ஒருபாலாய்ப்
பற்றி உலகம் பலிதேர்வாய்
சிலைக்கொள் கணையால் எயில்எய்த
செங்கண் விடையாய் தீர்த்தன்நீ
மலைக்கொள் அருவி பலவாரி
மணியும் முத்தும் பொன்னுங்கொண்
டலைக்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகேளோ! **#787**

மலையிடத்துத் தோன்றிய மங்கையை ஒரு பாகத்திற் கொண்டு, உலக முழுவதும் பிச்சைக்குத் திரிபவனே, வில்லிடத்துக் கொண்ட அம்பினால் முப்புரத்தை அழித்த, சிவந்த கண்களையுடைய இடபத்தை யுடையவனே, மலையிடத்துப் பெருகிய பல அருவிகள் வாரிக்கொண்டு வந்த மாணிக்கங்களையும் முத்துக்களையும் கைக்கொண்டு இருபக்கங்களையும் அரிக்கின்ற அலைகளை உடைய, காவிரியாற்றங்கரைக்கண் உள்ள திருவையாற்றை நினதாக உடைய அடிகேள், இறைவனாவான் நீயே; ஓலம்!

திருஐயாறு

போழும் மதியும் புனக்கொன்றை
புனல்சேர் சென்னிப் புண்ணியா
சூழும் அரவச் சுடர்ச்சோதீ
உன்னைத் தொழுவார் துயர்போக
வாழும் அவர்கள் அங்கங்கே
வைத்த சிந்தை உய்த்தாட்ட
ஆழுந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகேளோ! **#788**

பகுக்கப்பட்ட சந்திரனும், புனங்களில் உள்ள கொன்றை மலரும், நீரும் பொருந்திய முடியையுடைய புண்ணிய வடிவினனே, சுற்றி ஊர்கின்ற பாம்பை அணிந்த, சுடர்களையுடைய ஒளி வடிவினனே, உன்னை வணங்குகின்றவர்களது துன்பம் நீங்குமாறும், ஆங்காங்கு வாழ்கின்றவர்கள் விருப்பத்தினால் வைத்த உள்ளங்கள் அவர்களைச் செலுத்தி மூழ்குவிக்குமாறும், மறித்து வீசுகின்ற அலைகளையுடைய, காவிரியாற்றங்கரைக்கண் உள்ள திருவையாற்றை நினதாக உடைய அடிகேள், ஓலம்!

திருஐயாறு

கதிர்க்கொள் பசியே யொத்தேநான்
கண்டே னும்மைக் காணாதேன்
எதிர்த்து நீந்த மாட்டேன்நான்
எம்மான் றம்மான் தம்மானே
அதிர்க்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகேளோ! **#789**

என் தந்தை தந்தைக்கும் பெருமானே, மேகங்கள் துளிகளைச்சிதறி மழையைப் பொழிதலால் வெள்ளம் நுரையைச் சிதறிப் பரந்து வருகையினாலே முழங்குகின்ற அலைகளையுடைய, காவிரியாற்றங்கரைக்கண் உள்ள திருவையாற்றை நுமதாக உடைய அடிகேள், நான் உம்மை, பசியுடையவன் நெற்கதிரைக் கண்டாற் போலக் கண்டேன்; அவன் உணவைக் கண்டாற்போலக் காணேனாயினேன்; நீரின் வேகத்தை எதிர்த்து நீந்தி அக்கரையை அடைய நான் வல்லேனல்லேன்; ஓலம்!

திருஐயாறு

கூசி அடியார் இருந்தாலுங்
குணமொன் றில்லீர் குறிப்பில்லீர்
தேச வேந்தன் திருமாலும்
மலர்மேல் அயனுங் காண்கிலார்
தேசம் எங்கும் தெளந்தாடத்
தெண்ணீர் அருவி கொணர்ந்தெங்கும்
வாசந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகேளோ! **#790**

நாடெங்கும் உள்ளவர்கள் ஐயமின்றி வந்து மூழ்குமாறு, தெளந்த நீராகிய அருவியைக் கொணர்ந்து எங்கும் தங்குகின்ற அலைகளையுடைய காவிரியாற்றங் கரைக்கண் உள்ள திருவையாற்றை நுமதாக உடைய அடிகேள், அடியார் தாம் தம் குறையைச் சொல்ல வெள்கியிருந்தாலும், நீரும் அவர்தம் குறையை அறிந்து தீர்க்கும் குணம் சிறிதும் இல்லீர்; அவ்வாறு தீர்த்தல் வேண்டும் என்னும் எண்ணமும் இல்லீர்; உம்மை, உலகிற்குத் தலைவனாகிய திருமாலும், தாமரை மலர்மேல் உள்ள பிரமனும் என்னும் இவர்தாமும் காண்கிலர்; பிறர் எங்ஙனங் காண்பார்! ஓலம்!

திருஐயாறு

கூடி அடியார் இருந்தாலும்
குணமொன் றில்லீர் குறிப்பில்லீர்
ஊடி இருந்தும் உணர்கிலேன்

உம்மைத் தொண்டன் ஊரனேன்
தேடி எங்குங் காண்கிலேன்
திருவா ரூரே சிந்திப்பன்
ஆடுந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகேளோ! #791

அசைகின்ற அலைகளையுடைய, காவிரியாற்றங்கரைக்கண் உள்ள திருவையாற்றை உமதாக உடைய அடிகேள், அடியார் உம்மைவிட்டு நீங்காது கூடியே இருந்தாலும் நீர், அவர்க்கு அருள்பண்ணும் குணம் சிறிதும் இல்லீர், 'அருள் பண்ணுதல் வேண்டும் என்னும் எண்ணமும் இல்லீர்; அது நிற்க, நீர் என்பால் பிணக்குக் கொண்டிருந்தும், யான் அதனை உணர்ந்திலேன்; உம் அடியேனும், 'நம்பியாரூரன்' என்னும் பெயரினேனும் ஆகிய யான் உம்மை இங்குப் பலவிடத்துந் தேடியும் காண்கின்றிலேன்; அதனால், உம்மை யான் நேர்படக்கண்ட திருவாரூரையே நினைப்பேனாயினேன்; ஓலம்!

திருக்கேதாரம்

திருக்கேதாரம்

திருக்கேதாரம்,
பண் - நட்டபாடை,
இத்தலம் வடநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கேதாரேசுவரர்.
தேவியார் : கேதாரேசுவரியம்மை.

வாழ்வாவது மாயம்மிது
மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல்
பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்ம்மின்தடங்
கண்ணான்மல ரோனும்
கீழ்மேலுற நின்றான்திருக்
கேதாரமெ னீரே. **#792**

உலகீர், பசிநோயை உண்டாக்குகின்ற உடம்பு நிலைத்திருத்தல் என்பது பொய்; இது மண்ணாய் மறைந்தொழிவதே மெய்; ஆதலின், இல்லாது ஒழிய வேண்டுவது பிறவியாகிய கடலே; அதன் பொருட்டு, நீவிர் நீட்டியாது விரைந்து அறத்தைச் செய்ம்மின்கள்; பெரிய கண்களையுடையவனாகிய திருமாலும், மலரில் இருப்பவனாகிய பிரமனும் நிலத்தின் கீழும், வானின்மேலும் சென்று தேடுமாறு நின்றவனாகிய இறைவன் எழுந்தருளியிருக்கின்ற, 'திருக்கேதாரம்' என்று சொல்லுமின்கள்.

திருக்கேதாரம்

பறியேசுமந் துழல்வீர்பறி
நரிகீறுவ தறியீர்
குறிகூவிய கூற்றங்கொளு
நாளால் அறம் உளவே
அறிவானிலும் அறிவான்நல
நறுநீரொடு சோறு
கிறிபேசிநின் றிடுவார்தொழு
கேதாரமெ னீரே. **#793**

வேறொன்றும் செய்யாது உடம்பைச் சுமந்தே திரிகின்றவர்களே, இவ்வுடம்பு நரிகளால் கிழித்து உண்ணப்படுவதாதலை அறிகின்றிலீர்; குறித்த நாளில் உம்மை அழைத்தற்குக் கூற்றுவன் நினைக்கின்ற நாளில்

உமக்கு அறங்கள் உளவாகுமோ? ஆகாவாகலின், இப்பொழுதே, அறிய வேண்டுவனவற்றை அறியும் வானுலகத்தவரினும் மேலான அறிவுடன், நல்ல நறுமணத்தையுடைய நீரையும், சோற்றையும் விருந்தினருக்கு, இன்சொற் பேசி இடுகின்றவர்கள் வணங்குகின்ற, 'திருக்கேதாரம்' என்று சொல்லுமின்கள்.

திருக்கேதாரம்

கொம்பைப்பிடித் தொருக்காலர்க
ளிருக்கான்மலர் தூவி
நம்பன்நமை யாள்வான்என்று
நடுநாளையும் பகலும்
கம்பக்களிற் றினமாய்நின்று
சுனைநீர்களைத் தூவிச்
செம்பொற்பொடி சிந்துந்திருக்
கேதாரமெ னீரே. **#794**

உலகீர், யோகதண்டத்தை ஊன்றி, ஒருவழிப்படுத்துகின்ற உயிர்ப்பினை உடைய யோகிகள், 'இவனே நம்மை ஆள்பவன்' என்று, நள்ளிரவிலும், பகலிலும் மந்திர ஒலியோடு மலர்களைத் தூவி விரும்பப்படுகின்ற இறைவனது, அசைதலையுடைய ஆண் யானையின் கூட்டம் தொடர்ந்துவந்து நின்று, பல சுனைகளின் நீரை இறைத்து, செம்பொன்னினது பொடியை உதிர்க்கின்ற, 'திருக்கேதாரம்' என்று சொல்லுமின்கள்.

திருக்கேதாரம்

உழக்கேயுண்டு படைத்தீட்டிவைத்
திழப்பார்களுஞ் சிலர்கள்
வழக்கேயெனிற் பிழைக்கேமென்பர்
மதிமாந்திய மாந்தர்
சழக்கேபறி நிறைப்பாரொடு
தவமாவது செயன்மின்
கிழக்கேசல மிடுவார்தொழு
கேதாரமெ னீரே. **#795**

அறிவை அழித்துக்கொண்ட மாந்தர்களே, பொருளைத்தேடி, உழக்கரிசியை அட்டு உண்ணுதல் ஒன்றைச் செய்து விட்டு, எஞ்சியவற்றைத் தொகுத்துவைத்துப் பின் இழந்து போவாரும் சிலர் இவ்வுலகில் உளர்; அவர்கள், 'அறம்' என்றாலோ, 'அஃது எமக்கு வேண்டா; யாம் உண்டு உயிர் வாழ்வேம்' என்று போவர். வஞ்சனையால் தம் வயிற்றை மட்டுமே நிரப்பிக்கொள்கின்ற

அவர்களோடு கூடி, அவர்களது நோன்பாகிய அச்செயலை நீவிர் செய்யன்மின்; விடியற்காலையில் பகலவன் வருகையை எதிர்நோக்கி நின்று, மந்திர நீரை இறைத்துக் காலைச் சந்தியை முடிக்கின்றவர்கள் வணங்குகின்ற, 'திருக்கேதாரம்' என்று சொல்லுமின்கள்.

திருக்கேதாரம்

வாளோடிய தடங்கண்ணியர்
வலையில்லழுந் தாதே
நாளோடிய நமனார்தமர்
நணுகாமுனம் நணுகி
ஆளாயும்மின் அடிகட்கிட
மதுவேயெனில் இதுவே
கீளோடர வசைத்தானிடங்
கேதாரமெ னீரே. **#796**

உலகீர், நாட்கள் ஓடிவிட்டன; ஆதலின், இயமன் தூதுவர் வருதற்கு முன்பு, வாள்போல இருபக்கமும் ஓடுகின்ற, அகன்ற கண்களையுடைய மகளிரது ஆசையாகிய வலையிற் சிக்காமல், இப்பொழுதே இறைவனை அடைந்து அவனுக்கு ஆளாகிப் பிழைமின்கள்; அங்ஙனம் பிழைத்தற்கு அவனுக்கு இடமாவதுதான் யாது எனில், இங்குச் சொல்லப்பட்டு வரும் இத் திருக்கேதாரமே. அரையில் கீளுடன் பாம்பைக் கட்டியுள்ள அவனது இடம்; ஆதலின், இதனைத் துதிமின்கள்.

திருக்கேதாரம்

தளிசாலைகள் தவமாவது
தம்மைப்பெறி லன்றே
குளியீருளங் குருக்கேத்திரங்
கோதாவிரி குமரி
தெளியீர்உளஞ் சீபர்ப்பதம்
தெற்குவடக் காகக்
கிளிவாழைஒண் கனிகீறியுண்
கேதாரமெ னீரே. **#797**

உலகீர், தேவகோட்டங்கள் தவச்சாலைகளாய் நின்று பயன் தருவது, மக்கள் அவ்விடங்களை அடைந்தாலன்றோ? இதனை மனத்துட் கொண்மின்கள்; கொண்டு, தெற்கென்னும் திசை கிடைக்க, 'கோதாவரி, குமரி' என்னும் தீர்த்தங்களிலும், வடக்கென்னும் திசைகிடைக்க, அழகிய குருக்கேத்திரத்தில் உள்ள தீர்த்தத்திலும் சென்று முழுகுமின்கள்; அவ்வாறே தெற்கில் சீபர்ப்பதத்தையும், வடக்கில் கிளிகள், பழத்தைக் கீறி உண்ணுகின்ற திருக்கேதாரத்தையும் சென்று வணங்கித்

துதிமின்கள்.

திருக்கேதாரம்

பண்ணின்தமிழ் இசைபாடலின்
பழவேய்முழ வதிரக்
கண்ணின்னொளி கனகச்சுனை
வயிரம்மவை சொரிய
மண்ணின்றன மதவேழங்கள்
மணிவாரிக்கொண் டெறியக்
கிண்ணென்றிசை முரலுந்திருக்
கேதாரமெ னீரே. **#798**

உலகீர், பண்ணாகிய, தமிழ்ப்பாடலினது இசையைப் பாடுமிடத்து, அதற்கியையப் பழைதாகிய வேய்ங்குழலும், மத்தளமும் ஒலித்தலினாலும், கண்ணுக்கு இனிதாகிய ஒளியையுடைய பொன் வண்ணமான சுனைகள் வயிரங்களை அலைகளால் எடுத்து வீசுதலினாலும், நிலத்தில் நிற்கின்ற மத யானைகள், மாணிக்கங்களை வாரி இறைத்தலினாலும், 'கிண்' என்கின்ற ஓசை இடையறாது ஒலிக்கின்ற, 'திருக்கேதாரம்' என்று சொல்லுமின்கள்.

திருக்கேதாரம்

முளைக்கைப்பிடி முகமன்சொலி
முதுவேய்களை இறுத்துத்
துளைக்கைக்களிற் றினமாய்நின்று
சுனைநீர்களைத் தூவி
வளைக்கைப்பொழி மழைகூர்தர
மயில்மான்பிணை நிலத்தைக்
கிளைக்கமணி சிந்துந்திருக்
கேதாரமெ னீரே. **#799**

உலகீர், சிறிய கையை உடைய பெண்யானைகள், துளையையுடைய கையையுடைய ஆண் யானைகட்கு உறவாய் நின்று, முகமன்கூறி, பெரிய மூங்கில்களை ஒடித்துக் கொடுத்து, சுனைகளின் நீரைத் தௌத்தலால், அவற்றின் வளைவையுடைய கையினின்றும் பொழிகின்ற மழை மிகுதியாக, மயிலும், பெண்மானும் நிலத்தைக் கிண்டுதலால் மாணிக்கங்கள் தெறிக்கின்ற, 'திருக்கேதாரம்' என்று சொல்லுமின்கள்.

திருக்கேதாரம்

பொதியேசுமந் துழல்வீர்பொதி

அவமாவதும் அறியீர்
மதிமாந்திய வழியேசென்று
குழிவீழ்வதும் வினையால்
கதிசூழ்கடல் இலங்கைக்கிறை
மலங்கவ்வரை யடர்த்துக்
கெதிபேறுசெய் திருந்தானிடங்
கேதாரமெ னீரே. **#800**

உலகீர், நீவிர், இறைச்சிப் பொதியாகிய உடம்பைச் சுமந்து திரிதல் ஒன்றையே செய்வீர்; அப்பொதிதான் பயனற்று ஒழிவதை அறியமாட்டீர்; அறிவை இழந்த வழியிலே சென்று நீவிர் குழியில் வீழ்வதும், நும் வினைப்பயனேயாம். இதனை விடுத்து, முழுதும் கடலாற் சூழப்பட்ட இலங்கைக்கு அரசனாகிய இராவணன் மெலிவடையும் படி அவனை மலையால் முன்பு நெருக்கிப் பின்பு நன்னிலையைப் பெறச்செய்து தான் அம்மலைமேல் இனிதிருந்தவனாகிய சிவ பெருமானது இடம் திருக்கேதாரமே; அதனைத் துதிமின்கள்.

திருக்கேதாரம்

நாவின்மிசை யரையன்னொடு
தமிழ்ஞானசம் பந்தன்
யாவர்சிவ னடியார்களுக்
கடியானடித் தொண்டன்
தேவன்திருக் கேதாரத்தை
ஊரன்னுரை செய்த
பாவின்றமிழ் வல்லாபர
லோகத்திருப் பாரே. **#801**

தமிழ்ப்பாடலைப் பாடிய திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும், மற்றும் எவராயினும், சிவனடியார்களுக்கு அடியனாகி, அவர்கட்கு அடித்தொண்டு செய்பவனாகிய நம்பியாரூரன், இறைவனது திருக்கேதாரத்தைப் பாடிய, இனிய தமிழ்ப் பாடலைப் பாட வல்லவர்கள், எல்லாவற்றிற்கும் மேலுள்ள உலகமாகிய சிவலோகத்தில் இருப்பவராவர்.

திருப்பருப்பதம்

திருப்பருப்பதம்

திருப்பருப்பதம்,
பண் - நட்டபாடை, "இத்தலம் வடநாட்டிலுள்ளது. இது ஸ்ரீசைலம் என்றும் மல்லிகார்ச்சுனம் என்றும் பெயர்பெறும். ",
சுவாமிபெயர் : பருவதநாதர்.
தேவியார் : பருவதநாயகியம்மை.

மானும்மரை இனமும்மயி
லினமுங்கலந் தெங்கும்
தாமேமிக மேய்ந்துதடஞ்
சுனைநீர்களைப் பருகிப்
பூமாமர முரிஞ்சிப்பொழி
லூடேசென்று புக்குத்
தேமாம்பொழில் நீழற்றுயில்
சீபர்ப்பத மலையே. **#802**

மான்களின் கூட்டமும், மரைகளின் கூட்டமும், மயில்களின் கூட்டமும் எங்கும் பொருந்தித் தம்விருப்பப்படியே தமக்குரிய உணவுகளைத் தேடி உண்டு, பெரிய சுனைகளில் உள்ள நீரைக் குடித்து, பூத்த பெரிய மரங்களில் உராய்ந்து அவற்றின் செறிவூடே சென்று, தேமாமரச் சோலையின் நிழலில் உறங்குகின்ற, 'திருப்பருப்பதம்' என்னும் மலையே, எங்கள் சிவபிரானது மலை.

திருப்பருப்பதம்

மலைச்சாரலும் பொழிற்சாரலும்
புறமேவரும் இனங்கள்
மலைப்பாற்கொணர்ந் திடித்தூட்டிட
மலங்கித்தம களிற்றை
அழைத்தோடியும் பிளிறீயவை
அலமந்துவந் தெய்த்துத்
திகைத்தோடித்தம் பிடிதேடுஞ்
சீபர்ப்பத மலையே. **#803**

குறவர்கள் தங்கள் மலைப்பக்கங்கட்கும் சோலைப் பக்கங்கட்கும் அப்பாற்பட்ட இடங்களினின்றும் வருகின்ற யானைகளைப் பற்றித் தங்கள் மலையிடத்துக் கொணர்ந்து பிணித்து வைத்து அவைகளைத் துன்புறுத்தி உணவை உண்பிக்க, அதனைக் கண்ட பெண் யானைகள் தமது ஆண் யானைகளும் அவர்களால் பற்றப்படுங்கொல் என

மனங்கலங்கி அவைகளை அழைத்து ஓடவும், அதனையறியாமல் அவ்வாண் யானைகள் தம் பெண் யானைகள் அவர்கள் கையகப்பட்டனகொல் என மருண்டு பிளிறுதலைச் செய்து, பல இடங்களில் திரிந்து அவைகளைக் காணாது இளைத்துவந்து, மீளவும் செய்வதறியாது திகைத்து அவைகளைத் தேடி ஓடுகின்ற, 'திருப் பருப்பதம்' என்னும் மலையே, எங்கள் சிவபிரானது மலை.

திருப்பருப்பதம்

மன்னிப்புனங் காவல்மட
மொழியாள்புனங் காக்கக்
கன்னிக்கிளி வந்துகவைக்
கோலிக்கதிர் கொய்ய
என்னைக்கிளி மதியாதென
எடுத்துக்கவ ணொலிப்பத்
தென்னற்கிளி திரிந்தேறிய
சீபர்ப்பத மலையே. **#804**

தினைப் புனத்தின் காவலையுடைய இளமைச் சொற்களையுடைய குறமகள் அங்குத் தங்கி அப்புனத்தைக் காத்திருக்குங்கால், இளம் பெண்போலும் கிளி வந்து, கிளைத்த தாளின்கண் உள்ள கதிர்களைக் கவர, அதனைக் கண்டு அவள், 'இக்கிளி என்னை மதியாதுபோலும்' என்று சினந்து, கவணை எடுத்து அதனாற் கல்லை, ஓசையுண்டாக வீச, அவ்வழகிய நல்ல கிளி, தன் எண்ணம் மாறி வெளியேறுகின்ற, 'திருப்பருப்பதம்' என்னும் மலையே, எங்கள் சிவபிரானது மலை.

திருப்பருப்பதம்

மய்யார்தடங் கண்ணாள்மட
மொழியாள்புனங் காக்கச்
செவ்வேதிரிந் தாயோவெனப்
போகாவிட விளிந்து
கய்பாவிய கவணான்மணி
எறியஇரிந் தோடிச்
செவ்வாயன கிளிபாடிடுஞ்
சீபர்ப்பத மலையே. **#805**

மை பொருந்திய பெரிய கண்களையுடையவளும், இளமையான சொற்களையுடையவளும் ஆகிய குறமகள் தினைப்புனத்தைக் காத்தற் பொருட்டுப் பலவிடத்தும் நன்றாகத்திரிந்து 'ஆயோ' என்று சொல்லி ஓட்டவும், போகாது விடுதலினாலே வருந்தி, கையிற் பொருந்திய கவணால் மணியாகிய கல்லை வீச, சிவந்த வாயினை யுடைய கிளி

அஞ்சி ஓடி ஒலிக்கின்ற, 'திருப்பருப்பதம்' என்னும் மலையே, எங்கள் சிவபிரானது மலை.

திருப்பருப்பதம்

ஆனைக்குலம் இரிந்தோடித்தன்
பிடிசூழலில் திரியத்
தானப்பிடி செவிதாழ்த்திட
அதற்குமிக இரங்கி
மானக்குற அடல்வேடர்கள்
இலையாற்கலை கோலித்
தேனைப்பிழிந் தினிதூட்டிடுஞ்
சீபர்ப்பத மலையே. **#806**

ஆண் யானைகளின் கூட்டம், தனது பெண் யானைகளின் கூட்டம், சாரலிற் பல இடங்களிலும் சென்று திரிதலினால் அதனைக் காணாது, தேடி ஓட, சென்ற இடங்களில் அப்பெண் யானைகளின் கூட்டமும் ஆண் யானைகளின் கூட்டத்தைக் காணாது அதன் குரலோசையைக் கேட்டற் பொருட்டுச் செவி தாழ்த்து நிற்க, அந் நிலைக்கு மிக இரங்கி, வீரத்தை உடைய குறவர்களாகிய, வெற்றி பொருந்திய வேடர்கள், இலைகளால் கல்லை செய்து அமைத்து, அவைகளில் தேனைப் பிழிந்து வார்த்து, அப்பெண்யானைக் கூட்டத்திற்கு இனிதாக ஊட்டுகின்ற, 'திருப்பருப்பதம்' என்னும் மலையே, எங்கள் சிவபிரானது மலை.

திருப்பருப்பதம்

மாற்றுக்களி றடைந்தாய் என்று
மதவேழங்கை யெடுத்து
மூற்றித்தழ லுமிழ்ந்தும்மதம்
பொழிந்தும்முகஞ் சுழியத்
தூற்றத்தரிக் கில்லேனென்று
சொல்லிஅய லறியத்
தேற்றிச்சென்று பிடிசூளறுஞ்
சீபர்ப்பத மலையே. **#807**

மதத்தை உடைய ஆண்யானை ஒன்று தன் பெண் யானையை, 'நீ மற்றோர் ஆண்யானையைச் சார்ந்தது என்' என்று சொல்லிக் கையை உயர எடுத்துச் சினம் மிகுந்து, கண்களினின்றும் நெருப்புப் பொறியைச் சிதறி, மதநீரைப் பொழிந்து முகத்தைச் சுளிக்க, அதனைக் கண்ட பெண்யானை, 'நீர் இவ்வாறு அடாப் பழி சொல்லித் தூற்றின் உயிர் தரிக்கலாற்றேன்' என்று, அயலறியத் தனது தவறின்மையைச் சூளறுத்துக் காட்டி அவ்வாண்யானையைத் தெளயப்பண்ணி அதனை

அடைகின்ற, 'திருப்பருப்பதம்' என்னும் மலையே எங்கள் சிவபெருமானது மலை.

திருப்பருப்பதம்

அப்போதுவந் துண்டீர்களுக்
கழையாதுமுன் னிருந்தேன்
எப்போதும்வந் துண்டால்எமை
எமர்கள்சுழி யாரோ
இப்போதுமக் கிதுவேதொழில்
என்றோடிஅக் கிளியைச்
செப்பேந்திள முலையாள்எறி
சீபர்ப்பத மலையே. **#808**

தினைப்புனத்தைக் காக்கின்ற, கிண்ணம் போலும், உயர்ந்து தோன்றும், இளமையான தனங்களையுடைய குறமகள், தினையை உண்ண வந்த கிளிகளைப் பார்த்து, 'முன்னே வந்து தினையை உண்ட உங்களுக்கு இரங்கி, உங்களை அதட்டாது அப்போது வாளா இருந்தேன்; ஆயினும், நீவிர் இடையறாது வந்து தினையை உண்டால் எங்களை, எங்கள் உறவினர் வெகுள மாட்டார்களோ? ஆதலின் இப்போது உமக்குச் செய்யத் தக்க செயல் இதுதான்' என்று சொல்லி, அவைகளைக் கவணால் எறிகின்ற, 'திருப்பருப்பதம்' என்னும் மலையே, எங்கள் சிவபெருமானது மலை.

திருப்பருப்பதம்

திரியும்புரம் நீறாக்கிய
செல்வன்றன கழலை
அரியதிரு மாலோடயன்
றானும்மவ ரறியார்
கரியின்னின மோடும்பிடி
தேனுண்டவை களித்துத்
திரிதந்தவை திகழ்வாற்பொலி
சீபாப்பத மலையே. **#809**

களிற்றியானைகளின் கூட்டத்தோடும் பிடியானைகளின் கூட்டம் தேனை உண்டு, பின், அவ் விருகூட்டங்களும் களித்துத் திரிதருகின்ற அழகு விளங்குதலால் பொலிவெய்திய திருப்பருப்பத மலையில், வானத்தில் திரிகின்ற முப்புரங்களை நீறாகச் செய்த செல்வனாகிய சிவபெருமானது திருவடிகளை, ஏனையோர்க்கு அரிய திருமாலும், பிரமனும் ஆகிய அவர்தாமும் காணமாட்டார்.

திருப்பருப்பதம்

ஏனத்திரள் கிளைக்களரி
போலமணி சிதற
ஏனல்லவை மலைச்சாரலிற்
றிரியுங்கர டீயும்
மானும்மரை இனமும்மயில்
மற்றும்பல வெல்லாம்
தேனுண்பொழில் சோலைமிகு
சீபர்ப்பத மலையே. **#810**

மலைச் சாரலில் பன்றியின் கூட்டம் நிலத்தை உழ, அவ்விடத்தினின்றும் நெருப்புப் போல மாணிக்கங்கள் வெளிப்பட, அவற்றைக் கண்டு, தினைக்கூட்டத்தையுடைய மலைச்சாரலை விடுத்து ஓடிய கரடியும், மானும், மரைக் கூட்டமும், மயிலும், மற்றும் பலவும் ஆகிய எல்லாம் பின்பு தேனை உண்டு களிக்கின்ற பூஞ்சோலைகளும், பிற சோலைகளும் மிகுந்திருக்கின்ற, 'திருப்பருப்பதம்' என்னும் மலையே, எங்கள் சிவபிரானது மலை.

திருப்பருப்பதம்

நல்லாரவர் பலர்வாழ்தரு
வயல்நாவல வூரன்
செல்லலுற வரியசிவன்
சீபர்ப்பத மலையை
அல்லலவை தீரச்சொன
தமிழ்மாலைகள் வல்லார்
ஒல்லைசெல வுயர்வானகம்
ஆண்டங்கிருப் பாரே. **#811**

துன்பம் உறுதல் இல்லாத சிவபெருமானது திருப்பருப்பத மலையை, நல்லவர் பலர் வாழ்வதும், வயல்களையுடையதுமான திருநாவலூரில் தோன்றிய நம்பியாரூரன், யாவரது துன்பமும் தீருமாறு பாடிய இத்தமிழ்ப் பாமாலைகளைப் பாட வல்லவர்கள், சிறிது காலம் செல்லும் அளவிலே உயர்ந்த விண்ணுலகத்தை ஆண்டு அங்கு இருப்பர்.

திருக்கேதீச்சரம்

திருக்கேதீச்சரம்,
பண் - நட்டபாடை,
இத்தலம் ஈழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : கேதீசுவரர்.
தேவியார் : கௌரியம்மை.

நத்தார்படை ஞானன்பசு
வேறிந்நனை கவுள்வாய்
மத்தம்மத யானையுரி
போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு
பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக்
கேதீச்சரத் தானே. #812

விரும்புதல் பொருந்திய பூதப் படைகளையுடைய ஞான உருவினனும், இடபத்தை ஏறுகின்றவனும், நனைய ஒழுகுகின்ற இடங்களில் மயக்கத்தைத் தரும் மதத்தையுடைய யானையினது தோலைப் போர்த்த மணவாளக் கோலத்தினனும் ஆகிய, திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளிய பெருமான், அன்பர்களாகிய அடியவர்கள் வணங்குகின்ற பாலாவியாற்றின் கரைமேல், இறந்தவர்களது எலும்பை அணிபவனாகக் காணப்படுகின்றான்.

திருக்கேதீச்சரம்

சுடுவார்பொடி நீறுந்நல
துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி
யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு
பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான்திருக்
கேதீச்சரத் தானே. #813

சுடப்பட்ட நுண்ணிய பொடியாகிய நீற்றையும், நல்ல பிளவாகிய பிறையையும், கீளினையும், மதம் நிறைந்த மயக்கத்தையுடைய, யானையினது தோலையும் அணிந்த கறுத்த கண்டத்தை உடையவனாகிய, திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியுள்ள பெருமான்,

பாலாவி யாற்றின் கரைமேல், பாம்பு போலும் இடையினையுடைய மங்கை ஒருத்தியோடு நிலையாக வாழ்பவனாய்க் காணப்படுகின்றான்.

திருக்கேதீச்சரம்

அங்கம்மொழி யன்னாரவர்
அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல்
மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன்
பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக்
கேதீச்சரத் தானே. **#814**

பிளவு செய்த பிறையைச் சூடினவனாகிய, திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமான், வேதத்தின் அங்கங்களைச் சொல்லுகின்ற அத்தன்மையையுடைய அந்தணர்களும், தேவர்களும் வணங்கித் துதிக்க, மரக்கலம் நிறைந்த கடல் சூழ்ந்த, 'மாதோட்டம்' என்னும் நல்ல நகரத்தில் பாலாவி ஆற்றின் கரைமேல், சினத்தாற் சிவந்த கண்ணையுடைய பாம்பைக் கட்டி யுள்ளவனாய்க் காணப்படுகின்றான்.

திருக்கேதீச்சரம்

கரியகறைக் கண்டன்நல
கண்மேல்ஒரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயும்
மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு
பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்திருக்
கேதீச்சரத் தானே. **#815**

கருமையாகிய, நஞ்சினையுடைய கண்டத்தை யுடையவனும், நல்ல இருகண்கள்மேலும் மற்றொரு கண்ணையுடையவனும் ஆகிய, திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமான், கீற்றுக்களையுடைய சிறகுகளையுடைய வண்டுகள் யாழின் இசையை உண்டாக்குகின்ற, 'மாதோட்டம்' என்னும் நல்ல நகரத்தில், பருத்த அலைகளை வீசிக்கொண்டு வருகின்ற பாலாவியாற்றின் கரைமேல், ஆராயத்தக்க வேதங்களை வல்லவனாய்க் காணப்படுகின்றான்.

திருக்கேதீச்சரம்

அங்கத்துறு நோய்கள்ளடி

யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல்
மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு
பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக்
கேதீச்சரத் தானே. #816

தன் அடியார்கள் மேலனவாய், அவர்களது உடம்பிற் பொருந்துகின்ற நோய்களை முற்றக் களைந்தருள்பவனாகிய சிவபெருமான், மரக்கலங்கள் நிறைந்த கடல் சூழ்ந்த, 'மாதோட்டம்' என்னும் நல்ல நகரத்தில், தனது திருமேனியின் ஒரு கூற்றை அழகு செய்கின்ற மங்கை ஒருத்தியுடன், பாலாவி யாற்றின் கரைமேல், தென்னஞ் சோலை சூழ்ந்த திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருப்பவனாய்க் காணப்படுகின்றான்.

திருக்கேதீச்சரம்

வெய்யவினை யாயவ்வடி
யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல்
மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளொடு
பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக்
கேதீச்சரத் தானே. #817

திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமான், தன் அடியவர்மேல் உள்ள கொடிய வினைகளாய் உள்ளனவற்றை முற்ற ஒழித்துநின்று, நிலவுலகத்தில் உள்ளார் உணர்ந்து மகிழ நிற்கின்ற, கடல் சூழ்ந்த, 'மாதோட்டம்' என்னும் நகரத்தில், பாம்பு போலும் இடையினை உடையவளாகிய ஒருத்தியோடு, பாலாவி யாற்றின் கரைமேல், சிவந்த சடைமுடியை உடையவனாய்க் காணப்படுகின்றான்.

திருக்கேதீச்சரம்

ஊனத்துறு நோய்கள்ளடி
யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல்
மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு
பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக்

கேதீச்சரத் தானே. #818

திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமான், தன் அடியார்கள் மேலனவாய், உடம்பிற் பொருந்தும் நோய்களை முற்ற ஒழித்துநின்று, அலைகளால் வானத்தைப் பொருந்துகின்ற, நீர் நிறைந்த கடல் சூழ்ந்த, 'மாதோட்டம்' என்னும் நல்ல நகரத்தில், பாலும் விரும்பத்தக்க மொழியை யுடையவளாகிய ஒருத்தியோடு, பாலாவி யாற்றின் கரைமேல், பன்றியின் கொம்பை அணிந்தவனாய்க் காணப்படுகின்றான்.

திருக்கேதீச்சரம்

அட்டன்னழ காகவ்வரை
தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில்
மாதோட்டநன் னகரில்
பட்டவ்வரி நுதலாளொடு
பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை யாள்வான்திருக்
கேதீச்சரத் தானே. #819

அட்ட மூர்த்தமாய் நிற்பவனாகிய. திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமான், தனது அரையில் பாம்பினை அழகாகக் கட்டிக்கொண்டு, வண்டுகள் தேனை உண்டு ஆரவாரிக்கின்ற சோலைகளையுடைய 'மாதோட்டம்' என்னும் நல்ல நகரத்தில், பட்டத்தை யணிந்த அழகிய நெற்றியை உடைய ஒருத்தியோடு, பாலாவி யாற்றின் கரைமேல், மேலானவனாயும், நம்மை ஆளுபவனாயும் காணப்படுகின்றான்.

திருக்கேதீச்சரம்

மூவரென இருவரென
முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில்
மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில்
பாலாவியின் கரைமேல்
தேவன்எனை ஆள்வான்திருக்
கேதீச்சரத் தானே. #820

மூன்று கண்களையுடைய மூர்த்தியாகிய, திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமான், மாமரங்களின் கனிகள் தாழத் தூங்குகின்ற சோலைகளையுடைய, 'மாதோட்டம்' என்னும் நல்ல

நகரத்தில் பாவத்தையும், இருவினைகளையும் அறுக்க விரும்புவோர் பலகாலும் வந்து மூழ்குகின்ற பாலாவியாற்றின் கரைமேல், மூவராகியும், இருவராகியும், முதற்கடவுளாகியும் நின்று, என்னை ஆள்பவனாய்க் காணப்படுகின்றான்.

திருக்கேதீச்சரம்

கரையார்கடல் சூழ்ந்தகழி
மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங்
கேதீச்சரத் தானை
மறையார்புகழ் ஊரன்னடித்
தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக்
கூடாகொடு வினையே. **#821**

கறுப்பு நிறம் பொருந்திய கடல் சூழ்ந்த, கழியையுடைய, 'மாதோட்டம்' என்னும் நல்ல நகரத்தின்கண் உள்ள, சிறகுகள் பொருந்திய வண்டுகள் யாழிசைபோலும் இசையை உண்டாக்குகின்ற சோலைகளையுடைய திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானை, அவனது அடிக்குத் தொண்டனாகி, வேதத்தைச் சொல்லுகின்ற, புகழையுடைய நம்பியாரூரன் பாடிய, குறைதல் இல்லாத இத் தமிழ்ப் பாடல்கள் பத்தினையும் பாட, கொடியனவாகிய வினைகள் வந்து பொருந்தமாட்டா.

திருக்கழுக்குன்றம்

திருக்கழுக்குன்றம்

திருக்கழுக்குன்றம்,
பண் - நட்டபாடை,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. இது திருவிளம்பூதூரென்று வழங்குகிறது. ,
சுவாமிபெயர் : வேதகிரியீசுவரர்.
தேவியார் : பெண்ணினல்லாளம்மை.

கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்ற பாவ வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. **#822**

உலகீர், தேவர்களுக்குத் தலைவனாகிய சிவபெருமானது இடம், பிடியானைகள் தங்கள் கன்றுகளோடு சூழ்ந்திருக்கும் தண்ணிய திருக்கழுக்குன்றமே; அதனை, பிற உயிர்களை வருத்து மாற்றாற் செய்த கொடுஞ்செயல்களால், பலரும் பல இகழுரைகளைச் சொல்லுமாறு இழிவெய்த நின்ற பாவமாகிய வினைகள் பலவும் நீங்குதற்பொருட்டுப் பலகாலும் சென்று வணங்குமின்கள்.

திருக்கழுக்குன்றம்

இறங்கிச் சென்று தொழுமின் இன்னிசை பாடியே
பிறங்கு கொன்றைச் சடையன் எங்கள் பிரானிடம்
நிறங்கள் செய்த மணிகள் நித்திலங் கொண்டிழி
கறங்கு வெள்ளை அருவித் தண்கழுக் குன்றமே. **#823**

உலகீர், விளங்குகின்ற, கொன்றை மாலையை அணிந்த சடையையுடைய எங்கள் பெருமானது இடம், பல நிறங்களையும் காட்டுகின்ற மணிகளோடு, முத்தினையும் தள்ளிக் கொண்டு பாய்கின்ற, ஒலிக்கும் வெண்மையான அருவிகளையுடைய, குளிர்ந்த திருக்கழுக்குன்றமே; அதனை, தலைவணங்கிச் சென்று, இனிய இசைகளைப் பாடி வழிபடுமின்கள்.

திருக்கழுக்குன்றம்

நீள நின்று தொழுமின் நித்தலும் நீதியால்
ஆளும் நம்ம வினைகள் அல்கி அழிந்திடத்
தோளும் எட்டு முடைய மாமணிச் சோதியான்
காள கண்டன் உறையுந் தண்கழுக் குன்றமே. **#824**

உலகீர், நம்மை ஆளுகின்ற நம் வினைகள் குறைந்து, முழுதும் ஒழிதற்பொருட்டு, தோள்கள் எட்டினையும் உடைய, சிறந்த மாணிக்கம்போலும் ஒளியை யுடையவனாகிய, நஞ்சணிந்த கண்டத்தை உடையவன் எழுந்தருளியிருக்கின்ற, குளிர்ந்த திருக்கழுக்குன்றத்தை, நாள்தோறும், முறைப்படி, நெடிது நின்று வழிபடுமின்கள்.

திருக்கழுக்குன்றம்

வெளிறு தீரத் தொழுமின் வெண்பொடி யாடியை
முளிறி லங்கு மழுவா ளன்முந்தி உறைவிடம்
பிளிறு தீரப் பெருங்கைப் பெய்மதம் மூன்றுடைக்
களிறி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. **#825**

உலகீர், வெம்மை பொருந்திய மழுப்படையை உடைய சிவபெருமான் முற்பட்டு எழுந்தருளியிருக்கின்ற இடம், பிளிறுகின்ற, மனவலியையும், பெரிய தும்பிக்கையையும், பொழிகின்ற மதங்கள் மூன்றையும் உடைய களிற்றி யானைகளோடு, பிடி யானைகள் சூழந்துள்ள, குளிர்ந்த திருக்கழுக்குன்றமே; ஆதலின், உங்கள் அறியாமை நீங்குதற்பொருட்டு, அங்குச்சென்று, திருநீற்றில் மூழ்குகின்றவனாகிய அப்பெருமானை வழிபடுமின்கள்.

திருக்கழுக்குன்றம்

புலைகள் தீரத் தொழுமின் புன்சடைப் புண்ணியன்
இலைகொள் சூலப் படையன் எந்தை பிரானிடம்
முலைகள் உண்டு தழுவுக் குட்டி யொடுமுசுக்
கலைகள் பாயும் புறவில் தண்கழுக் குன்றமே. **#826**

உலகீர், புல்லிய சடையை உடைய அற வடிவினனும், இலை வடிவத்தைக்கொண்ட சூலப் படையை உடைய எம் தந்தையும், எங்கள் தலைவனும் ஆகிய இறைவனது இடம், பாலை உண்டு தழுவுதலை உடைய குட்டியோடு பெண் முசுவும், அதனோடு, ஆண் முசுவும் மரக்கிளைகளில் தாவுகின்ற காட்டினையுடைய, குளிர்ந்த திருக்கழுக்குன்றமே; அதனை உங்கள் கீழ்மைகள் எல்லாம் நீங்கும் பொருட்டுச் சென்று வழிபடுமின்கள்.

திருக்கழுக்குன்றம்

மடமு டைய அடியார் தம்மனத் தேயுற
விடமு டைய மிடறன் விண்ணவர் மேலவன்
படமு டைய அரவன் றான்பயி லும்மிடம்
கடமு டைய புறவிற் றண்கழுக் குன்றமே. **#827**

நஞ்சினை உடைய கண்டத்தையுடையவனும், தேவர்கட்கு

மேலானவனும், படமுடைய பாம்பை யுடையவனும் ஆகிய சிவபெருமான், தன்னையன்றி வேறொன்றையும் அறியாத அடியவரது மனத்தில் பொருந்தும் வண்ணம் நீங்காது எழுந்தருளியிருக்கின்ற இடம், காட்டையுடைய, முல்லை நிலத்தோடு கூடிய குளிர்ந்த திருக்கழுக்குன்றமே.

திருக்கழுக்குன்றம்

ஊன மில்லா அடியார் தம்மனத் தேஉற
ஞான மூர்த்தி நட்ட மாடிநவி லும்மிடம்
தேனும் வண்டும் மதுவுண் டின்னிசை பாடவே
கான மஞ்ஞை உறையுந் தண்கழுக் குன்றமே. **#828**

ஞான வடிவினனும், நடனம் ஆடுபவனும் ஆகிய சிவபெருமான், குறைபாடு இல்லாத தன் அடியார்களது மனத்திற் பொருந்தும் வண்ணம், நீங்காது எழுந்தருளியிருக்கின்ற இடம், தேனும், வண்டும் தேனை உண்டு இனிய இசையைப்பாட, காட்டில் மயில்கள் அதனைக் கேட்டு இன்புற்றிருக்கின்ற திருக்கழுக்குன்றமே.

திருக்கழுக்குன்றம்

அந்தம் இல்லா அடியார் தம்மனத் தேஉற
வந்து நாளும் வணங்கி மாலொடு நான்முகன்
சிந்தை செய்த மலர்கள் நித்தலுஞ் சேரவே
சந்தம் நாறும் புறவிற் றண்கழுக் குன்றமே. **#829**

அளவற்ற அடியார்களது மனத்திற் பொருந்தும் வண்ணமும், திருமாலும் நான்முகனும் நாள்தோறும் வந்து வணங்கி வழிபட்ட, மலர்கள் நாள்தோறும் குவிந்து கிடக்கும் வண்ணமும், நடனமாடுகின்ற சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற இடம், சந்தன மரம் மணம் வீசுகின்ற, முல்லை நிலத்தோடு கூடிய, குளிர்ந்த திருக்கழுக்குன்றமே.

திருக்கழுக்குன்றம்

பிழைகள் தீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள் காதன் குழகன் றானுறை யும்மிடம
மழைகள் சாலக் கலித்து நீடுயர் வேயவை
கழைகொள் முத்தஞ் சொரியுந் தண்கழுக் குன்றமே. **#830**

உலகீர், பின்னிய சடையின்கண் தலைக் கோலங்களையுடையவனும், 'குழை' என்னும் அணியை அணிந்த காதினை உடையவனும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற இடம், மேகங்கள் மிக முழங்க, மிக உயர்ந்த வேயும், கழையுமாகிய மூங்கில்கள் முத்துக்களைச் சொரிகின்ற, குளிர்ந்த திருக்கழுக்குன்றமே; அதனை, உங்கள்

குற்றங்களெல்லாம் நீங்குதற் பொருட்டு வழிபடுமின்கள்.

<u>திருக்கழுக்குன்றம்</u>

பல்லின் வெள்ளைத் தலையன் றான்பயி லும்மிடம்
கல்லின் வெள்ளை அருவித் தண்கழுக் குன்றினை
மல்லின் மல்கு திரள்தோள் ஊரன் வனப்பினால்
சொல்லல் சொல்லித் தொழுவா ரைத்தொழு மின்களே. **#831**

உலகீர், பற்களையுடைய வெண்மையான தலையை உடையவன் நீங்காது எழுந்தருளியிருக்கின்ற இடம், பாறைகளின்மேல் வீழ்கின்ற வெண்மையான அருவிகளையுடைய, குளிர்ந்த திருக்கழுக்குன்றமே; அதனை, வலிமை மிக்க, திரண்ட தோள்களையுடையவனாகிய நம்பியாரூரனது வனப்புடைய பாடல்களால் துதித்து வழிபடுவோரை வழிபடுமின்கள்.

திருச்சுழியல்

திருச்சுழியல்

திருச்சுழியல்,
பண் - நட்டபாடை,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : இணைத்திருமேனிநாதர்.
தேவியார் : துணைமாலைநாயகியம்மை.

ஊனாய்உயிர் புகலாய்அக
லிடமாய்முகில் பொழியும்
வானாய்வரு மதியாய்விதி
வருவானிடம் பொழிலின
தேனாதரித் திசைவண்டினம்
மிழற்றுந்திருச் சுழியல்
நானாவிதம் நினைவார்தமை
நலியார்நமன் தமரே. **#832**

உடம்புகளாகியும், அவைகளில் புகுதலை யுடைய உயிர்களாகியும், அகன்ற நிலமாகியும், மேகங்கள் நின்று மழையைப் பொழியும் வானமாகியும், வினைப்பயன் வருதற்கு வழியாகிய உள்ளமாகியும் நிற்பவனாகிய இறைவனது இடம், சோலைகளில் தேனை விரும்பி வண்டுக் கூட்டம் இசைபாடுகின்ற திருச்சுழியலாகும். அதனைப் பல்லாற்றானும் நினைபவர்களை, கூற்றுவன் ஏவலர்கள் துன்புறுத்தமாட்டார்கள்.

திருச்சுழியல்

தண்டேர்மழுப் படையான்மழ
விடையான்எழு கடல்நஞ்
சுண்டேபுரம் எரியச்சிலை
வளைத்தான்இமை யவர்க்காத்
திண்டேர்மிசை நின்றான்அவன்
உறையுந்திருச் சுழியல்
தொண்டேசெய வல்லாரவர்
நல்லார்துயர் இலரே. **#833**

தண்டுபோல மழுப்படையை ஏந்தியவனும், இளமையான இடபத்தை யுடையவனும், தேவர்கள் பொருட்டு, கடலில் எழுந்த நஞ்சினையுண்டு, திரிபுரங்கள் எரியும்படி வில்லை வளைத்துத் திண்ணிய தேரின்மேல் நின்றவனும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற

திருச்சுழியலிற் சென்று அவனுக்குத் தொண்டு செய்ய வல்லவர்கள், இன்பம் உடையவரும், துன்பம் இல்லாதவரும் ஆவர்.

திருச்சுழியல்

கவ்வைக்கடல் கதறிக்கொணர்
முத்தங்கரைக் கேற்றக்
கொவ்வைத்துவர் வாயார்குடைந்
தாடுந்திருச் சுழியல்
தெய்வத்தினை வழிபாடுசெய்
தெழுவார்அடி தொழுவார்
அவ்வத்திசைக் கரசாகுவர்
அலராள் பிரியாளே. **#834**

ஓசையையுடைய கடல், முழக்கம்செய்து, தான் கொணர்ந்த முத்துக்களைக் கரையின்கண் சேர்க்க, அங்கு, கொவ்வைக் கனிபோலும் சிவந்த வாயையுடைய மகளிர் மூழ்கி விளையாடுகின்ற திருச்சுழியலில் எழுந்தருளியிருக்கின்ற கடவுளை வழிபட்டு மீள்கின்றவரது திருவடிகளை வணங்குவோர், தாம் தாம் வாழ்கின்ற நாட்டிற்கு அரசராய் விளங்குவர்; அவ்வரசிற்குரியவளாகிய திருமகள் அவர்களை விட்டு நீங்காள்.

திருச்சுழியல்

மலையான்மகள் மடமாதிட
மாகத்தவண் மற்றுக்
கொலையானையின் உரிபோர்த்தஎம்
பெருமான்திருச் சுழியல்
அலையார்சடை யுடையான்அடி
தொழுவார்பழு துள்ளம்
நிலையார்திகழ் புகழால்நெடு
வானத்துயர் வாரே. **#835**

மலையரையனுக்கு மகளாகிய இளைய மாது தனது திருமேனியின்கண் இடப் பகுதியினளாக, கொலைத் தொழிலையுடைய யானையின் தோலைப் போர்த்துள்ள எம் பெருமானாகிய, திருச்சுழியலில் எழுந்தருளியிருக்கின்ற, நீர் பொருந்திய சடையை உடையவனது திருவடியைத் தொழுபவர்கள், மனத்தில் குற்றம் பொருந்தாதவராவர்; இவ்வுலகில் விளங்குகின்ற புகழை நாட்டிய மகிழ்வோடு நீண்ட வானுலகத்திற்கும் மேற்செல்வார்கள்.

திருச்சுழியல்

உற்றான்நமக் குயரும்மதிச்
சடையான்புலன் ஐந்தும்
செற்றார்திரு மேனிப்பெரு
மான்ஊர்திருச் சுழியல்
பெற்றான்இனி துறையத்திறம்
பாமைத்திரு நாமம்
கற்றாரவர் கதியுட்செல்வர்
ஏத்தும்மது கடனே. **#836**

நமக்கு உறவாயுள்ளவனும், மேன்மை தங்கிய சந்திரனை யணிந்த சடையை யுடையவனும், ஐம்புலன்களையும் வென்று பொருந்திய திருமேனியையுடைய பெருமானும் ஆகிய இறைவனது ஊர் திருச்சுழியலே. அதன்கண் நீங்காது இனிது எழுந்தருளியிருக்கப்பெற்ற அவனது திருநாமத்தைப் பயின்றவர், உயர்கதியிற் செல்வர்; ஆதலின் உலகீர், அவனது திருப்பெயரைப் போற்றுமின்; அதுவே உங்கட்குக் கடமையாவது.

திருச்சுழியல்

மலந்தாங்கிய பாசப்பிறப்
பறுப்பீர்துறைக் கங்கைச்
சலந்தாங்கிய முடியான்அமர்ந்
திடமாந்திருச் சுழியல்
நிலந்தாங்கிய மலராற்கொழும்
புகையால்நினைந் தேத்தும்
தலந்தாங்கிய புகழான்மிகு
தவமாம்சது ராமே. **#837**

மாசினை உடைய பாசத்தால் வருகின்ற பிறப்பினை அறுக்க விரும்புகின்றவர்களே, துறைகளை உடையதாதற்கு உரிய கங்கையாகிய நீரினைத் தாங்கியுள்ள முடியையுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற இடமாகிய திருச்சுழியலை, நிலம் சுமந்து நிற்கின்ற மலர்களாலும், செழுமையான நறும்புகைகளாலும் வழிபட்டு, நினைந்து துதிமின்கள்; உமக்கு இவ்வுலகம் சுமக்கத்தக்க புகழோடு கூடிய மிக்க தவம் உளதாகும் திறல் உளதாகும்.

திருச்சுழியல்

சைவத்தசெவ் வுருவன்திரு
நீற்றன்னுரு மேற்றன்
கைவைத்தொரு சிலையால்அரண்
மூன்றும்மெரி செய்தான்

தெய்வத்தவர் தொழுதேத்திய
குழகன்திருச் சுழியல்
மெய்வைத்தடி நினைவார்வினை
தீர்தல்லெள தன்றே. **#838**

சிவாகமங்களிற் சொல்லப்பட்ட வேடத்தையுடைய சிவந்த திருமேனியை யுடையவனாய்த் திருநீற்றை யணிபவனும், இடிபோலும் குரலையுடைய இடபத்தை யுடையவனும், கையின்கண் வைத்த ஒரு வில்லாலே மூன்று கோட்டைகளையும் எரித்தவனும், தெய்வத் தன்மையையுடைய தவத்தோர் வணங்கித் துதிக்கின்ற அழகனும் ஆகிய இறைவனது திருச்சுழியலை உள்ளத்துள் வைத்து, அவனது திருவடியை நினைபவரது வினைகள் நீங்குதல் எளிது.

<u>திருச்சுழியல்</u>

பூவேந்திய பீடத்தவன்
றானும்மடல் அரியும்
கோவேந்திய வினயத்தொடு
குறுகப்புக லறியார்
சேவேந்திய கொடியானவன்
உறையுந்திருச் சுழியல்
மாவேந்திய கரத்தான்எம
சிரத்தான்றன தடியே. **#839**

எருதினை, ஏந்துகின்ற கொடியாகப் பெற்ற சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருச்சுழியலில், மானை ஏந்திய கையை யுடையவனும், எங்கள் தலைகளின்மேல் உள்ளவனும் ஆகிய அவனது திருவடிகளை, தலைமை அமைந்த வணக்கத்தோடு அணுகச்சென்று அடைதலை, மலராகிய, உயர்ந்த இருக்கையில் உள்ளவனாகிய பிரமனும், வலிமையுடைய திருமாலும் ஆகிய இவர்தாமும் அறியமாட்டார்.

<u>திருச்சுழியல்</u>

கொண்டாடுதல் புரியாவரு
தக்கன்பெரு வேள்வி
செண்டாடுதல் புரிந்தான்திருச்
சுழியற்பெரு மானைக்
குண்டாடிய சமணாதர்கள்
குடைச்சாக்கியர் அறியா
மிண்டாடிய அதுசெய்தது
வானால்வரு விதியே. **#840**

தன்னையே மதித்துக் கொள்ளுதலைச் செய்துநின்ற தக்கனது பெருவேள்வியை, பந்தாடுதல்போலத் தகர்த்து வீசி விளையாடினவனாகிய திருச்சுழியலில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனை, மூர்க்கத்தன்மை பேசுகின்ற சமணராகிய அறிவிலிகளும், குடையை உடையவராகிய புத்தர்களும் அறியாமல், வலிமை பொருந்திய வாதுசெய்து, அதன் வண்ணமே யாவார்களாயின், அஃது அவர் வினைப்பயனேயாகும்.

திருச்சுழியல்

நீருர்தரு நிமலன்திரு
மலையார்க்கயல் அருகே
தேரூர்தரும் அரக்கன்சிரம்
நெரித்தான்திருச் சுழியல்
பேரூரென வுறைவானடிப்
பெயர்நாவலர் கோமான்
ஆரூரன தமிழ்மாலைபத்
தறிவார்துய ரிலரே. **#841**

அருவிகள் பாய்கின்ற இறைவனது திருமலையில் எதிரொலி உண்டாக, அதன் அருகில் தனது ஊர்தியைச் செலுத்திய இராவணனது தலையை நெரித்தவனும், திருச்சுழியலைத் தனது பெரிய ஊராகக் கொண்டு எழுந்தருளியிருப்பவனும் ஆகிய இறைவனது திருவடிப் பெயரைப் புனைந்தவனும், திருநாவலூரார்க்குத் தலைவனும் ஆகிய நம்பியாரூரனது இத் தமிழ்ப் பாடல்கள் பத்தினையும் உணர்கின்றவர், துன்பம் யாதும் இலராவர்.

திருவாரூர்

திருவாரூர்

திருவாரூர்,
பண் - புறநீர்மை,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வன்மீகநாதர்.
தேவியார் : அல்லியங்கோதையம்மை.

அந்தியும் நண்பகலும் அஞ்சுப தம்சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக்
கெந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே. #842

முற்பட்டு வருகின்ற பழையனவாகிய வலிய வினைவந்து சூழும் முன்னே, என் தந்தைக்கும் தலைவராய் உள்ள இறைவரை, அடியேன், இரவும் பகலும் திருவைந்தெழுத்தை ஓதும் முறையில் சித்தத்தால் சிந்தித்துக்கொண்டு, அழகிய திருவாரூரினுட் சென்று தலைக்கூடப் பெறுவது எந்நாளோ!

திருவாரூர்

நின்ற வினைக்கொடுமை நீங்க இருபொழுதும்
துன்று மலரிட்டுச் சூழும் வலஞ்செய்து
தென்றன் மணங்கமழுந் தென்திரு வாரூர்புக்
கென்றன் மனங்குளிர என்றுகொல் எய்துவதே. #843

செய்யப்பட்டு நிற்கின்ற வினைகளது கொடுமை களெல்லாம் நீங்குமாறு, காலை மாலை இருபொழுதினும், நெருங்கிய மலர்களைத் தூவி, சுற்றிலும் வலமாக வந்து எனது மனம் குளிர்தற்கு, தென்றற் காற்று நறுமணங் கமழ வருகின்ற அழகிய திருவாரூரினுட் சென்று எந்தை பிரானாரை, அடியேன் தலைக்கூடப் பெறுவது எந்நாளோ!

திருவாரூர்

முன்னை முதற்பிறவி மூதறி யாமையினால்
பின்னை நினைந்தனவும் பேதுற வும்மொழியச்
செந்நெல் வயற்கழனித் தென்திரு வாரூர்புக்
கென்னுயிர்க் கின்னமுதை என்றுகொ லெய்துவதே. #844

தொன்று தொட்டு வருகின்ற பிறவிகளில், பெரிய அறியாமை காரணமாக, வருங்காலத்திற் பெற நினைத்த நினைவுகளும், அவற்றால் விளைகின்ற துன்பங்களும் ஒழியுமாறு, செந்நெற்களை

விளைவிக்கின்ற, நல்ல வயல்களாகிய கழனிகளையுடைய, அழகிய திருவாரூரினுட் சென்று, எனது உயிருக்கு இனிய அமுதம் போல்பவனை, யான் தலைக்கூடப் பெறுவது எந்நாளோ!

திருவாரூர்

நல்ல நினைப்பொழிய நாள்களில் ஆரூயிரைக்
கொல்ல நினைப்பனவும் குற்றமும் அற்றொழியச்
செல்வ வயற்கழனித் தென்திரு வாரூர்புக்
கெல்லை மிதித்தடியேன் என்றுகொல் எய்துவதே. **#845**

நல்ல எண்ணம் நீங்குதலால், அரிய உயிர்களை அவை உடம்போடு கூடி வாழும் நாட்களிலே கொல்லுதற்கு எண்ணுகின்ற எண்ணங்களும், மற்றும் பல குற்றங்களும் அடியோடு அகன்றொழியுமாறு, உயர்ந்த நெல்விளைகின்ற வயல்களையுடைய அழகிய திருவாரூரின் எல்லையை மிதித்து, அந்நகரினுட் சென்று, எனது உயிர்க்கு இனிய அமுதம் போல்பவனாகிய இறைவனை, அடியேன் தலைக்கூடப் பெறுவது எந்நாளோ!

திருவாரூர்

கடுவரி மாக்கடலுட் காய்ந்தவன் தாதையைமுன்
சுடுபொடி மெய்க்கணிந்த சோதியை வன்றலைவாய்
அடுபுலி ஆடையனை ஆதியை ஆரூர்புக்
கிடுபலி கொள்ளியைநான் என்றுகொல் எய்துவதே. **#846**

நஞ்சு போலும் நிறத்தையுடைய மாமரத்தைக் கடலின் நடுவண் அழித்தவனாகிய முருகனுக்குத் தந்தையும், எல்லாவற்றினும் முன்னதாக, சுடப்பட்ட சாம்பலை உடம்பின்கண் பூசிய ஒளிவடிவினனும், கொல்லும் தன்மை வாய்ந்த புலியினது தோலாகிய உடையை உடுத்தவனும், உலகிற்கு முதல்வனும், வலிய தலை ஓட்டின் கண், மகளிர் இடுகின்ற பிச்சையை ஏற்பவனும் ஆகிய எம் பெருமானை, திருவாரூரினுட் சென்று, அடியேன் தலைக்கூடப் பெறுவது எந்நாளோ!

திருவாரூர்

சூழொளி நீநிலந்தீத் தாழ்வளி ஆகாசம்
வாழுயர் வெங்கதிரோன் வண்டமிழ் வல்லவர்கள்
ஏழிசை ஏழ்நரம்பின் ஓசையை ஆரூர்புக்
கேழுல காளியைநான் என்றுகொல் எய்துவதே. **#847**

பல உயிர்களும் வாழ்கின்ற நிலமும், தாழ வீழும் நீரும், ஒளியையுடைய தீயும், யாண்டும் இயங்கும் காற்றும், உயர்ந்துள்ள ஆகாயமும், வெவ்விய கதிர்களை யுடையோனாகி பகலவனும், வளவிய தமிழில்

வல்லவர்கள் வகுத்த ஏழிசையாகிய ஏழுநரம்பின் ஓசையும் என்னும் இவை எல்லாமாய் நிற்பவனும், ஏழுலகமாகிய இவைகளைத் தன் வழிப் படுத்து ஆள்பவனும் ஆகிய எம் பெருமானை, திருவாரூரினுட் சென்று, அடியேன் தலைக்கூடப் பெறுவது எந்நாளோ!

திருவாரூர்

கொம்பன நுண்ணிடையாள் கூறனை நீறணிந்த
வம்பனை எவ்வுயிர்க்கும் வைப்பினை ஒப்பமரர்
செம்பொனை நன்மணியைத் தென்திரு வாரூர்புக்
கென்பொனை என்மணியை என்றுகொல் எய்துவதே. **#848**

இளங்கொம்புபோலும் நுண்ணிய இடையினையுடைய உமையது கூற்றினை யுடையவனும், திரு நீறாகிய நறுமணப் பூச்சினை அணிந்தவனும், எல்லா உயிர்கட்கும் சேமநிதிபோல் பவனும் தன்னோடு ஒப்புமையுடைய தேவர்கட்குச் செம்பொன்னும், நவமணியும் போல்பவனும் எனக்கு உரிய பொன்னும் மணியுமாய் இருப்பவனும் ஆகிய எம் பெருமானை, அழகிய திருவாரூரினுட் சென்று, அடியேன் தலைக்கூடப் பெறுவது எந்நாளோ!

திருவாரூர்

ஆறணி நீள்முடிமேல் ஆடர வஞ்சூடிப்
பாறணி வெண்டலையிற் பிச்சைகொள் நச்சரவன்
சேறணி தண்கழனித் தென்திரு வாரூர்புக்
கேறணி எம்மிறையை என்றுகொல் எய்துவதே. **#849**

கங்கையைத் தாங்கிய நீண்ட சடையின்மேல், பட மெடுத்து ஆடுகின்ற பாம்பைச் சூடுகின்றவனும் பருந்து சூழும் வெள்ளிய தலை ஓட்டில் பிச்சை ஏற்பவனும், நஞ்சினையுடைய பாம்பை அணிபவனும் ஆகிய இடபக் கொடியைக் கொண்ட எம் பெருமானை, சேற்றைக் கொண்ட குளிர்ந்த கழனிகளையுடைய அழகிய திருவாரூரினுட் சென்று, அடியேன் தலைக்கூடப் பெறுவது எந்நாளோ!

திருவாரூர்

மண்ணினை உண்டுமிழ்ந்த மாயனும் மாமலர்மேல்
அண்ணலும் நண்ணரிய ஆதியை மாதினொடும்
திண்ணிய மாமதில்சூழ் தென்திரு வாரூர்புக்
கெண்ணிய கண்குளிர என்றுகொல் எய்துவதே. **#850**

மண்ணுலகத்தை உண்டு உமிழ்ந்த திருமாலும், சிறந்த தாமரை மலர்மேல் இருக்கும் தலைவனாகிய பிரமனும் அணுகுதற்கரிய இறைவனை, இறைவியோடும் மறவாது நினைக்குமாறும் கண்டு கண்

குளிருமாறும், திண்ணிய, பெரிய மதில் சூழ்ந்த, அழகிய திருவாரூரினுட் சென்று, அடியேன் தலைக்கூடப் பெறுவது எந்நாளோ!

திருவாரூர்

மின்னெடுஞ் செஞ்சடையான் மேவிய ஆரூரை
நன்னெடுங் காதன்மையால் நாவலா கோன்ஊரன்
பன்னெடுஞ் சொன்மலர்கொண் டிட்டன பத்தும்வல்லார்
பொன்னுடை விண்ணுலகம் நண்ணுவர் புண்ணியரே. **#851**

மின்னல்போலும், நீண்ட சிவந்த சடையையுடைய இறைவன் விரும்பி எழுந்தருளியிருக்கின்ற திருவாரூரை, திருநாவலூரில் உள்ளார்க்குத் தலைவனாகிய நம்பி யாரூரன், நல்ல, நெடிய பேரன்பினால், பல, சிறந்த சொற்களாகிய மலர்களால் அணிசெய்து சாத்திய பாமாலைகள் பத்தினையும் அங்ஙனமே சாத்த வல்லவர்கள் புண்ணியம் உடையவர்களாய், பொன்னை முதற் கருவியாக உடைய விண்ணுலகத்தை அடைவார்கள்.

திருக்கானப்பேர்

திருக்கானப்பேர்

திருக்கானப்பேர்,
பண் - புறநீர்மை,
இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது. இதுவே காளையார் கோயில். ,
சுவாமிபெயர் : காளைநாதேசுவரர்.
தேவியார் : பொற்கொடியம்மை.

தொண்டர் அடித்தொழலும் சோதி இளம்பிறையும்
சூதன மென்முலையாள் பாகமும் ஆகிவரும்
புண்டரிகப் பரிசாம் மேனியும் வானவர்கள்
பூச லிடக்கடல்நஞ் சுண்ட கருத்தமரும்
கொண்ட லெனத்திகழுங் கண்டமு மெண்டோளுங்
கோல நறுஞ்சடைமேல் வண்ணமுங் கண்குளிரக்
கண்டு தொழப்பெறுவ தென்றுகொ லோஅடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. **#852**

அடியேன், மிக்க நீரையுடைய வயல்கள் சூழ்ந்த, 'திருக்கானப்பேர்' என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற காளை வடிவத்தினனாகிய பெருமானை, அவனது, அடியவர்கள் வணங்குகின்ற திருவடியையும், ஒளியையுடைய இளைய பிறைச்சூட்டினையும், சூதாடு கருவிபோலும், மெல்லிய தனங்களையுடைய உமையவளது கூறாய் விளங்கும் இடப்பாகத்தையும், ஒளிவிடுகின்ற செந்தாமரை மலர்போலும் திருமேனியையும், தேவர்கள் ஓலமிட, அதற்கு இரங்கிக் கடலில் தோன்றிய நஞ்சினை உண்ட நினைவுக்குறி நீங்காதிருக்கின்ற, மேகம்போல விளங்குகின்ற கண்டத்தையும், எட்டுத்தோள்களையும், அழகிய நல்ல சடையின்மேல் உள்ள அணிகளையும் கண்குளிரக் கண்டு வணங்கப் பெறுவது எந்நாளோ!

திருக்கானப்பேர்

கூத லிடுஞ்சடையும் கோளர வும்விரவுங்
கொக்கிற குங்குளிர்மா மத்தமும் ஒத்துனதாள்
ஓத லுணர்ந்தடியார் உன்பெரு மைக்குநினைந்
துள்ளுரு காவிரசும் மோசையைப் பாடலும்நீ
ஆத லுணர்ந்தவரோ டன்பு பெருத்தடியேன்
அங்கையின் மாமலர்கொண் டென்கண தல்லல்கெடக்
கால லுறத்தொழுவ தென்றுகொ லோஅடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. **#853**

மிக்க நீரையுடைய வயல்கள் சூழ்ந்த 'திருக்கானப்பேர்' என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற காளை வடிவுடைய தலைவனை, அடியேன், என்பால் உள்ள துன்பங்களெல்லாம் கெடுமாறு, அடியவர் உனது பெருமைகளை நினைந்து மனம் உருகி, செறிந்த இசையைப் பாடுதலும், அவர் நீயேயாகும் பேற்றைப் பெறுதலை உணர்ந்து, அவரோடு அன்பு மிகுந்து, உனது திருவடியை மனம் பொருந்திப் பாடுமாற்றைக் கற்று, உனது குளிர்மிகுந்த சடைமுடியையும், அதன்கண் பொருந்திய கொடிய பாம்பையும், கொக்கிறகையும், குளிர்ந்த ஊமத்த மலரையும், அன்பு மேலும் மேலும் பெருகுமாறு, அகங்கையிற் சிறந்த மலர்களைக் கொண்டு வணங்கப் பெறுவது எந்நாளோ!

திருக்கானப்பேர்

நானுடை மாடெனவே நன்மை தரும்பரனை
நற்பத மென்றுணர்வார் சொற்பத மார்சிவனைத்
தேனிடை இன்னமுதை மற்றத னிற்றெளிவைத்
தேவர்கள் நாயகனைப் பூவுயர் சென்னியனை
வானிடை மாமதியை மாசறு சோதியனை
மாருத மும்மனலும் மண்டல மும்மாய
கானிடை மாநடனென் றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. **#854**

நான் உடைமையாகப் பெற்றுள்ள செல்வம்போல எனக்கு நன்மையைத் தருகின்ற மேலானவனும், தன்னையே வீடு பேறாக உணர்பவரது சொல்நிலையில் நிறைந்து நிற்கும் மங்கல குணத்தினனும், தேனிடத்தும், அதன் தெளவிடத்தும் உள்ள சுவை போல்பவனும், தேவர்களுக்குத் தலைவனும், பூக்கள் உயர்ந்து தோன்றுகின்ற முடியை உடையவனும், வானத்தில் உள்ள சிறந்த சந்திரனும், குற்றம் அற்ற ஒளியையுடைய கதிரவனும், காற்றும், தீயும், நிலமும் ஆகி நிற்பவனும் ஆகிய மிக்க நீரையுடைய வயல்கள் சூழ்ந்த, 'திருக்கானப்பேர்' என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற, காளை வடிவத்தினனாகிய பெருமானை, 'காட்டில் சிறந்தநடனம் ஆடுபவன்' என்று சொல்லித் துதித்துத் தலைக்கூடப் பெறுவது எந்நாளோ!

திருக்கானப்பேர்

செற்றவர் முப்புரமன் றட்ட சிலைத்தொழிலார்
சேவக முந்நினைவார் பாவக முந்நெறியும்
குற்றமில் தன்னடியார் கூறு மிசைப்பரிசும்
கோசிக மும்மரையிற் கோவண மும்மதளும்
மற்றிகழ் திண்புயமும் மார்பிடை நீறுதுதை

மாமலை மங்கையுமை சேர்சுவ டும்புகழக்
கற்றன வும்பரவிக் கைதொழ லென்று கொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. **#855**

மிக்க நீரையுடைய வயல்கள் சூழந்த, 'திருக்கானப்பேர்' என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற, காளை வடிவினனாகிய பெருமானை, அவனது, பகைத்தவரது முப்புரங்களை அன்று அழித்த, வில்தொழில் பொருந்தி வீரத்தையும் தன்னை நினைவாரது நினைவின் வண்ணம் நிற்கும் நிலையையும், அவர்களை நடத்துகின்ற முறையையும், குற்றமில்லாத அவனது அடியார்கள் சொல்லுகின்ற புகழின் வகைகளையும், அரையில் உடுக்கின்ற கோவணமும், பட்டும், தோலும் ஆகிய உடைகளையும், வலிமை விளங்குகின்ற திண்ணிய தோள்களையும், நீறு செறிந்த மார்பின்கண், பெருமையையுடைய மலைமகள் தழுவியதனால் உண்டாகிய வடுவினையும், அடியேன், புகழ்ந்து பாடக்கற்றன பலவற்றாலும் துதித்துக் கைகூப்பி வணங்குதல் எந்நாளோ!

திருக்கானப்பேர்

கொல்லை விடைக்குழகுங் கோல நறுஞ்சடையிற்
கொத்தல ரும்மிதழித் தொத்தும் அதனருகே
முல்லை படைத்தநகை மெல்லிய லாளொருபால்
மோக மிகுத்திலகுங் கூறுசெ யெப்பரிசும்
தில்லை நகர்ப்பொதுவுற் றாடிய சீர்நடமுந்
திண்மழு வுங்கைமிசைக் கூரெரி யும்மடியார்
கல்ல வடப்பரிசுங் காணுவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. **#856**

மிக்க நீரையுடைய வயல்கள் சூழ்ந்த, 'திருக்கானப் பேர்' என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானது, முல்லை நிலத்திற்கு உரிய விடையினது அழகையும், அழகிய நல்ல சடையின் கண் கொத்தாய் உள்ள பூக்களையும், மார்பில் கொன்றை மலரின் மாலையையும், அதன் அருகே ஒரு பாகத்தில், முல்லை அரும்பின் தன்மையைக் கொண்ட நகையினையும், மெல்லிய இயல்பினையும் உடையவளாகிய உமாதேவி, காதலை மிகுதியாகக்கொண்டு விளங்குகின்ற அப்பகுதி தருகின்ற எல்லாத் தன்மைகளையும், தில்லை நகரில் உள்ள சபையிற் பொருந்தி நின்று ஆடுகின்ற புகழையுடைய நடனத்தையும், கையில் உள்ள வலிய மழு, மிக்க தீ என்னும் இவற்றையும், அடியவர் சாத்தும் மணிவடத்தின் அழகையும் காண்பது எந்நாளோ!

திருக்கானப்பேர்

பண்ணுத லைப்பயனார் பாடலும் நீடுதலும்
பங்கய மாதனையார் பத்தியு முத்தியளித்
தெண்ணுத லைப்பெருமான் என்றெழு வாரவர்தம்
மேசற வும்மிறையாம் எந்தையை யும்விரவி
நண்ணுத லைப்படுமா றெங்ஙன மென்றயலே
நையுறு மென்னைமதித் துய்யும்வ ணம்மருளுங்
கண்ணுத லைக்கனியைக் காண்பது மென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. **#857**

தாமரை மலரில் உள்ள திருமகளைப் போலும் மகளிரது, யாழை முறைப்படி யமைத்தலைப் பயன்படச் செய்கின்ற பாடலின் சிறப்பையும், அதன்கண்ணே அவர்கள் நெடிது நிற்றலையும், அதற்கு ஏதுவாகிய அவர்களது பத்தியையும், தான் ஒருவனே வீடுபேற்றை அளித்தலால், அதனை விரும்புவோர் யாவராலும் உள்ளத்து இருத்தப்படுகின்ற முதற்கடவுள் என்று தன்னை நினைந்து துயிலெழுகின்ற மெய்யுணர்வுடையோர், அதன் பொருட்டு அவன் முன் வாடிநிற்கும் வாட்டத்தினையும், யாவர்க்கும் இறைவனாகிய என் தந்தையையும் ஒருங்கு காணுதலைப் பொருந்துமாறு எவ்வாறு என்று, சேய்மையில் நின்று வருந்துகின்ற என்னையும் பொருளாக நினைந்து உய்தி பெறும்படி அருள்செய்யும் கண்ணுதற் கடவுளும், கனிபோல இனிப்பவனும் ஆகிய, மிக்க நீரையுடைய, 'திருக்கானப்பேர்' என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற, காளை வடிவினனாகிய பெருமானை அடியேன் காணப்பெறுவதும் எந்நாளோ!

திருக்கானப்பேர்

மாவை யுரித்ததள்கொண் டங்க மணிந்தவனை
வஞ்சர் மனத்திறையும் நெஞ்சணு காதவனை
மூவ ருருத்தனதாம் மூல முதற்கருவை
மூசிடு மால்விடையின் பாகனை ஆகமுறப்
பாவக மின்றிமெய்யே பற்று மவர்க்கமுதைப்
பால்நறு நெய்தயிர்ஐந் தாடு பரம்பரனைக்
காவல் எனக்கிறையென் றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. **#858**

யானையை உரித்து அத்தோலைப் போர்வையாகக் கொண்டு, எலும்பை மாலையாக அணிந்தவனும், வஞ்சனை யுடையவரது மனத்தின்கண் தனது நெஞ்சினாலும் சிறிதும் அணுகாதவனும், மும்மூர்த்திகளது உருவமும் தன் உருவமே யாகின்ற முதல்முதற் காரணனும், 'மூசு'

என்னும் ஒலியுண்டாக உயிர்க்கின்ற பெரிய இடபத்தை நடத்துகின்றவனும், போலியாகவன்றி உண்மையாகவே தன்னை மனத்துட் பொருந்தப் பற்றுகின்ற அவர்கட்கு அமுதம் போல்பவனும், பால், நறுநெய், தயி முதலிய ஐந்திலும் மூழ்குகின்றவனும், மேலோர்க்கெல்லாம் மேலானவனும் ஆகிய மிக்க நீரையுடைய வயல்கள் சூழ்ந்த, 'திருக்கானப்பேர்' என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற, காளை வடிவினனாகிய பெருமானை, அடியேன், எனக்குக் காவலனாகிய தலைவனாகக் கிடைக்கப்பெறுவது எந்நாளோ!

திருக்கானப்பேர்

தொண்டர் தமக்கெளய சோதியை வேதியனைத்
தூய மறைப்பொருளாம் நீதியை வார்கடல்நஞ்
சுண்ட தனுக்கிறவா தென்று மிருந்தவனை
ஊழி படைத்தவனோ டொள்ளரி யும்முணரா
அண்டனை அண்டர்தமக் காகம நூல்மொழியும்
ஆதியை மேதகுசீ ரோதியை வானவர்தம்
கண்டனை யன்பொடுசென் றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. **#859**

அடியார்களுக்கு எளிய ஒளியுருவினனும், வேதத்தை ஓதுபவனும், அத்தூய வேதத்தின் பொருளாய் உள்ள நீதி வடிவினனும், நீண்ட கடலில் எழுந்த நஞ்சினை உண்டு, அதனால் இறவாது எக்காலத்தும் இருப்பவனும், பல கற்பங்களில் உலகத்தைப் படைப்பவனாகிய பிரமனும், அழகிய திருமாலும் அறிய வொண்ணாத தேவனும், தேவர்களுக்கு ஞானநூலைச் சொல்லிய முதல்வனும். தேவர்களது கூற்றில் உள்ளவனும், தனது மேலான தகுதியையுடைய புகழைப் பலராலும் சொல்லப்படுபவனும் ஆகிய, மிக்க நீரையுடைய வயல்கள் சூழ்ந்த, 'திருக்கானப்பேர்' என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற, காளை வடிவினனாகிய பெருமானை அடியேன், அன்போடு சென்று அடையப்பெறுவது எந்நாளோ.

திருக்கானப்பேர்

நாதனை நாதமிகுத் தோசைய தானவனை
ஞான விளக்கொளியாம் ஊனுயி ரைப்பயிரை
மாதனை மேதகுதன் பத்தர் மனத்திறையும்
பற்றுவி டாதவனைக் குற்றமில் கொள்கையனைத்
தூதனை யென்றனையாள் தோழனை நாயகனைத்
தாழ்மக ரக்குழையுந் தோடு மணிந்ததிருக்

காதனை நாயடியேன் எய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. **#860**

உலகிற்குத் தலைவனும், நுண்ணிய எழுத்தோசையும், பரியதாகிய இசையோசையுமாயும், ஞானமாகிய விளக்கினது ஒளியாயும், உடம்பின்கண் உள்ள உயிரும்! நிலத்தில் வளரும் பயிருமாயும் நிற்பவனும், மாதொரு பாகத்தை உடையவனும். மேலான தகுதியையுடைய, தன் அடியார்களது உள்ளத்தின்மேல் வைத்துள்ள பற்றினைச் சிறிதும் நீங்காதவனும், குற்றம் இல்லாத கொள்கையையுடையவனும், என்னைத் தன் தொண்டினிடத்து ஆளுகின்ற என் தூதனும், தோழனும், தலைவனும் ஆகியவனும், தாழத் தூங்குகின்ற மகரக் குழையையும் தோட்டையும் அணிந்த அழகிய காதினையுடையவனும் ஆகிய, மிக்க நீரையுடைய, 'திருகானப்பேர்' என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற, காளை வடிவினனாகிய பெருமானை, நாய்போலும் அடியேன் தலைக்கூடப்பெறுவது எந்நாளோ!.

திருக்கானப்பேர்

கன்னலை இன்னமுதைக் கார்வயல் சூழ்கானப்
பேருறை காளையைஒண் சீருறை தண்டமிழால்
உன்னி மனத்தயரா உள்ளுரு கிப்பரவும்
ஒண்பொழில் நாவலர்கோ னாகிய ஆரூரன்
பன்னும் இசைக்கிளவி பத்திவை பாடவல்லார்
பத்தர் குணத்தினராய் எத்திசை யும்புகழ
மன்னி இருப்பவர்கள் வானின் இழிந்திடினும்
மண்டல நாயகராய் வாழ்வது நிச்சயமே. **#861**

கரும்பும், இனிய அமுதமும் போல்பவனாகிய, மிக்க நீரையுடைய வயல்கள் சூழ்ந்த, 'திருக்கானப்பேர்' என்னுந் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற, காளை வடிவினனாகிய பெருமானை, 'எய்துவது என்று கொலோ' என்று நினைந்து மனம் உளைந்து, உளம் உருகி, அழகிய, புகழ் பொருந்திய, தண்ணிய தமிழால் துதிக்க முயன்ற அழகிய சோலைகளையுடைய திருநாவலூரில் உள்ளார்க்குத் தலைவனாகிய நம்பியாரூரன் பாடிய இவ்விசைப் பாடல்கள் பத்தினையும் பாட வல்லவர்கள், சிவனடியார்க்கு உள்ள இயல்புகள் அனைத்தையும் எய்தி, எல்லாத் திசைகளும் புகழ நெடிது வாழ்ந்து, பின்பு ஒருகால் பிறவி எய்துவாராயினும், மண்ணுலகிற்குத் தலைவராய் வாழ்தல் திண்ணம்.

திருக்கூடலையாற்றூர்

திருக்கூடலையாற்றூர்

திருக்கூடலையாற்றூர்,
பண் - புறநீர்மை,
இத்தலம் நடுநாட்டிலுள்ளது. இது திருப்புறம்பயமென்னுந் தலத்தினின்று மெழுந்தருளித் திருக்கூடலையாற்றூருக்குச் சமீபமாகச்செல்லுகின்றவர், அந்தத் தலத்துக்குள் செல்லாமல், திருமுதுகுன்றை நோக்கிச்செல்லுங் கருத்தினராக, அந்தமார்க்கத்தில் பரமசிவம் ஒரு பிராமணராய் நிற்கக்கண்டு ஐயரே திருமுதுகுன்றுக்கு மார்க்கமெதுவென்ன, இந்தக் கூடலையாற்றூர் மார்க்கமாச் செல்லுகின்றதென்று சொல்லி வழிகாட்டிப் பின்செல்ல, சுந்தரமூர்த்தி சுவாமிகள் முன்சென்று கூடலையாற்றூருக்குச் சமீபமாகச் சார்ந்தபோது பின்வந்த பிராமணர் மறையக்கண்டு அதிசயங்கொண்டு ஓதியபதிகம். ,
சுவாமிபெயர் : நெறிகாட்டுநாயகர்.
தேவியார் : புரிகுழலாளம்மை.

வடியுடை மழுவேந்தி
மதகரியுரி போர்த்துப்
பொடியணி திருமேனிப்
புரிகுழ லுமையோடும்
கொடியணி நெடுமாடக்
கூடலை யாற்றூரில்
அடிகள்இவ் வழிபோந்த
அதிசயம் அறியேனே. **#862**

கூர்மையையுடைய மழுப்படையை ஏந்தி, மதத்தையுடைய யானையினது தோலைப் போர்த்துக்கொண்டு, பின்னிய கூந்தலையுடைய உமாதேவியோடும், கொடிகள் நாட்டிய உயர்ந்த மாடங்களையுடைய திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கின்ற, திருநீற்றை யணிந்த பெருமான், இவ்வழியிடை என்முன் வந்த வியத்தகு செயலை, அடியேன் அறியாதேயொழிந்தேன்; இஃதே என் ஏழைமை இருந்தவாறு!

திருக்கூடலையாற்றூர்

வையக முழுதுண்ட
மாலொடு நான்முகனும்
பையர வகலல்குற்
பாவையொ டும்முடனே

கொய்யணி மலர்ச்சோலைக்
கூடலை யாற்றூரில்
ஐயன்இவ் வழிபோந்த
அதிசயம் அறியேனே. **#863**

உலகம் முழுதையும் உண்ட திருமாலோடும் பிரமதேவனோடும், அரவப் படம்போலும் அல்குலையுடைய, இளைய, பாவைபோலும் உமாதேவியோடும் உடனாகி, கொய்யப்படுகின்ற அழகிய பூக்களையுடைய சோலைகளையுடைய திருக்கூடலை யாற்றூரில் எழுந்தருளியிருக்கின்ற தலைவன், இவ்வழியிடை என் முன் வந்த வியத்தகு செயலை, அடியேன் அறியாதேயொழிந்தேன்; இஃது என் ஏழைமை இருந்தவாறு!

திருக்கூடலையாற்றூர்

ஊர்தொறும் வெண்டலைகொண்
டுண்பலி யிடும்என்று
வார்தரு மென்முலையாள்
மங்கையொ டும்முடனே
கூர்நுனை மழுவேந்திக்
கூடலை யாற்றூரில்
ஆர்வன்இவ் வழிபோந்த
அதிசயம் அறியேனே. **#864**

ஊர்தோறும் சென்று, வெள்ளிய தலையோட்டை ஏந்தி, 'பிச்சை இடுமின்' என்று இரந்துண்டு, கச்சணிந்த, மெல்லிய தனங்களையுடையவளாகிய உமாதேவியோடும் உடனாய், கூரிய முனையையுடைய மழுவை ஏந்திக்கொண்டு, திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கின்ற, பேரன்புடையனாகிய பெருமான், இவ்வழியிடை என்முன் வந்த வியத்தகு செயலை, அடியேன் அறியாதே யொழிந்தேன்; இஃதே என் ஏழைமை இருந்தவாறு!

திருக்கூடலையாற்றூர்

சந்தண வும்புனலுந்
தாங்கிய தாழ்சடையன்
பந்தண வும்விரலாள்
பாவையொ டும்முடனே
கொந்தண வும்பொழில்சூழ்
கூடலை யாற்றூரில்
அந்தணன் வழிபோந்த
அதிசயம் அறியேனே. **#865**

பிறை முதலிய பிறவற்றோடு அழகு பொருந்திய நீரையும் தாங்கியிருக்கின்ற, நீண்ட சடைமுடியையுடையவனாய், பந்தின்கண் பொருந்திய விரலை யுடையாளாகிய, பாவைபோலும் உமையோடும் உடனாகி, பூங்கொத்துக்கள் பொருந்திய சோலை சூழ்ந்த திருச்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கின்ற, அழகிய கருணையை யுடையவனாகிய பெருமான், இவ்வழியிடை என்முன் போந்த வியத்தகு செயலை, அடியேன் அறியாதே யொழிந்தேன்; இஃதே என் ஏழைமை இருந்தவாறு!

திருக்கூடலையாற்றூர்

வேதியர் விண்ணவரும்
மண்ணவ ரும்தொழநற்
சோதிய துருவாகிச்
சுரிகுழ லுமையோடும்
கோதிய வண்டறையுங்
கூடலை யாற்றூரில்
ஆதிஇவ் வழிபோந்த
அதிசயம் அறியேனே. **#866**

அந்தணரும், தேவரும், மக்களும் வணங்கி நிற்க, நல்ல ஒளியுருவமாய், சுரிந்த கூந்தலையுடைய உமாதேவியோடும் பூக்களில் மகரந்தத்தைக்கிண்டிய வண்டுகள் ஓசையைச் செய்கின்ற திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கின்ற முதல்வன், இவ்வழி யிடை என்முன் வந்த வியத்தகு செயலை, அடியேன் அறியாதே யொழிந்தேன்; இஃதே என் ஏழைமை இருந்தவாறு!

திருக்கூடலையாற்றூர்

வித்தக வீணையொடும்
வெண்புரி நூல்பூண்டு
முத்தன வெண்முறுவல்
மங்கையொ டும்முடனே
கொத்தல ரும்பொழில்சூழ்
கூடலை யாற்றூரில்
அத்தன்இவ் வழிபோந்த
அதிசயம் அறியேனே. **#867**

தான் வல்லதாகிய வீணையோடும், வெள்ளிய முப்புரி நூலை அணிந்து, முத்துப்போலும் வெள்ளிய நகையினை யுடைய உமாதேவியோடும் உடனாகி, பூக்கள் கொத்தின்கண் மலர்கின்ற சோலைகள் சூழ்ந்த திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கின்ற எந்தை, இவ்வழியிடை

என்முன் வந்த வியத்தகு செயலை, அடியேன் அறியாதேயொழிந்தேன்; இஃதே என் ஏழைமை இருந்தவாறு!

திருக்கூடலையாற்றூர்

மழைநுழை மதியமொடு
வாளர வுஞ்சடைமேல்
இழைநுழை துகிலல்குல்
ஏந்திழை யாளோடும்
குழையணி திகழ்சோலைக்
கூடலை யாற்றூரில்
அழகன்இவ் வழிபோந்த
அதிசயம் அறியேனே. **#868**

மேகத்தில் நுழைகின்ற சந்திரனையும், கொடிய பாம்பையும் சடைக்கண்வைத்து, நுண்ணிய இழைபொருந்திய உயர்ந்த உடையை அணிந்த அல்குலையும், தாங்கிய அணிகலங்களையும் உடைய உமாதேவியோடும் உடனாகி, தளிர்களது அழகு விளங்குகின்ற சோலைகளையுடைய திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கின்ற அழகன், இவ்வழியிடை என்முன் வந்த வியத்தகு செயலை, அடியேன் அறியாதே யொழிந்தேன்; இஃதே என் ஏழைமை இருந்தவாறு!

திருக்கூடலையாற்றூர்

மறைமுதல் வானவரும்
மாலயன் இந்திரனும்
பிறைநுதல் மங்கையொடும்
பேய்க்கண முஞ்சூழக்
குறள்படை யதனோடுங்
கூடலை யாற்றூரில்
அறவன்இவ் வழிபோந்த
அதிசயம் அறியேனே. **#869**

வேதத்திற் சொல்லப்பட்ட தலைமைகளையுடைய பலராகிய தேவரும், அத்தேவர்க்கெல்லாம் தலைவனாகிய இந்திரனும், பேய்க்கூட்டமும் சூழ்ந்திருக்க, பிறைபோலும் நெற்றியையுடைய உமாதேவியோடும், பூதப் படையோடும், திருக்கூடலை யாற்றூரில் எழுந்தருளியிருக்கின்ற புண்ணியனாகிய பெருமான், இவ்வழியிடை என்முன் வந்த வியத்தகு செயலை, அடியேன் அறியாதேயொழிந்தேன்; இஃதே என் அறியாமை இருந்தவாறு!

திருக்கூடலையாற்றூர்

வேலையின் நஞ்சுண்டு
விடையது தான்ஏறிப்
பாலன மென்மொழியாள்
பாவையொ டும்முடனே
கோலம துருவாகிக்
கூடலை யாற்றூரில்
ஆலன்இவ் வழிபோந்த
அதிசயம் அறியேனே. **#870**

கடலின்கண் எழுந்த நஞ்சினை உண்டு விடையை ஊர்ந்து, பால்போலும் இனிய மொழியை உடையவளாகிய உமாதேவியோடும் உடனாய கோலமே தனது உருவமாகக்கொண்டு, திருக் கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கின்ற ஆல்நிழற்பெருமான், இவ் வழியிடை என்முன் வந்த வியத்தகு செயலை, அடியேன் அறியாதே யொழிந்தேன்; இஃதே என் அறியாமை இருந்தவாறு!

திருக்கூடலையாற்றூர்

கூடலை யாற்றூரிற்
கொடியிடை யவளோடும்
ஆட லுகந்தானை
அதிசயம் இதுவென்று
நாடிய இன்றமிழால்
நாவல வூரன்சொல்
பாடல்கள் பத்தும்வல்லார்
தம்வினை பற்றறுமே. **#871**

திருக்கூடலையாற்றூரில், கொடிபோலும் இடையினையுடையவளாகிய உமாதேவியோடும், அருள் விளையாட்டை விரும்பி எழுந்தருளியிருக்கின்ற பெருமானை, 'அவன் செய்த இச்செயல் அதிசயம்' என்று சொல்லி, ஆராய்ந்த இனிய தமிழால், திருநாவலூரனாகிய நம்பியாரூரன் பாடிய இப்பாடல்கள் பத்தினையும் பாட வல்லவர்களது வினை, பற்றறக் கெடுதல் திண்ணம்.

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்,
பண் - சீகாமரம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. இது திருவிளம்பூதூரென்று வழங்குகிறது. ,
சுவாமிபெயர் : பனங்காட்டீசுவரர்.
தேவியார் : அமிர்தவல்லியம்மை.

விடையின்மேல் வருவானை
வேதத்தின் பொருளானை
அடையில்அன் புடையானை
யாவர்க்கும் அறிவொண்ணா
மடையில்வா ளைகள்பாயும்
வன்பார்த்தான் பனங்காட்டூர்ச்
சடையிற்கங்கை தரித்தானைச்
சாராதார் சார்வென்னே. #872

இடபத்தின்மேல் ஏறி வருபவனும், வேதத்தின் பொருளாய் உள்ளவனும், தன்னை அடைந்தால், அங்ஙனம் அடைந்தார்மாட்டு, அன்புடையனாகின்றவனும் ஆகிய, நீர் மடைகளில் வாளை மீன்கள் துள்ளுகின்ற திருவன்பார்த்தான் பனங்காட்டூரில் எழுந்தருளியிருக்கின்ற, யாவராலும் அறியவொண்ணாத, சடைமுடியின்கண் கங்கையைத் தாங்கியுள்ள பெருமானை அடையாதவரது அடைவுதான் என்னே!

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

அறையும்பைங் கழலார்ப்ப
அரவாட அனலேந்திப்
பிறையுங்கங் கையுஞ்சூடிப்
பெயர்ந்தாடும் பெருமானார்
பறையுஞ்சங் கொலியோவாப்
படிறன்றன் பனங்காட்டூர்
உறையுமெங் கள்பிரானை
உணராதார் உணர்வென்னே. #873

ஒலிக்கின்ற, பசிய பொன்னாலாகிய கழல்கள் கலிப்பவும், அணியப்பட்ட பாம்புகள் சுழன்று ஆடவும், கையில் நெருப்பை ஏந்தி, தலையில் பிறையையும் கங்கையையும் அணிந்து கொண்டு, அடிபெயர்ந்து நின்று

நடனம் ஆடுகின்ற பெருமானாகிய, யாவராலும்
அறியவொண்ணாமையிற் கள்வனாய், முழங்குகின்ற பறைகளும்,
சங்குகளும் ஒலித்தல் ஒழியாத, தனது திருவன்பார்த்தான்
பனங்காட்டூரில் எழுந்தருளியிருக்கின்ற எங்கள் இறைவனை
உணராதாரது உணர்வுதான் என்னே!

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

தண்ணார்மா மதிசூடித்
தழல்போலுந் திருமேனிக்
கெண்ணார்நாண் மலர்கொண்டங்
கிசைந்தேத்து மடியார்கள்
பண்ணார்பா டலறாத
படிறன்றன் பனங்காட்டூர்
பெண்ணாணா யபிரானைப்
பேசாதார் பேச்சென்னே. **#874**

குளிர்ச்சி பொருந்திய சிறந்த சந்திரனை முடிமேற் சூடி, கள்வனாய்,
நெருப்புப்போலும் தனது திருமேனிக்கு உரியனவாக எண்ணுதல்
பொருந்திய, அன்று மலர்ந்த மலர்களைக்கொண்டு, மனம் பொருந்தித்
துதித்து வழிபடும் அடியார்களது பண்ணிறைந்த பாடலின் ஒலி நீங்காத,
தனது திரு வன்பார்த்தான் பனங்காட்டூரில் எழுந்தருளியிருக்கின்ற,
பெண்ணும் ஆணும் ஆய உருவத்தினனாகிய பெருமானைச்
சொல்லாதவரது சொல்தான் என்னே!

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

நெற்றிக்கண் ணுடையானை
நீறேறுந் திருமேனிக்
குற்றமில் குணத்தானைக்
கோணாதார் மனத்தானைப்
பற்றிப்பாம் பரையார்த்த
படிறன்றன் பனங்காட்டூர்ப்
பெற்றொன்றே றும்பிரானைப்
பேசாதார் பேச்சென்னே. **#875**

நெற்றியில் கண்ணை யுடையவனும், திருநீறு பொருந்திய திருமேனியை
உடையவனும், குற்றம் இல்லாத இயல்பை யுடையவனும், கோடுதல்
இல்லாதவரது மனத்தில் உள்ளவனும், பாம்பைப் பிடித்து அரையிற்
கட்டிய கள்வனும் ஆகிய, தனது திருவன்பார்த்தான் பனங்காட்டூரில்
எழுந்தருளியிருக்கின்ற, எருது ஒன்றின்மேல் ஏறுகின்ற கடவுளைச்
சொல்லாதவரது சொல்தான் என்னே!

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

உரமென்னும் பொருளானை
உருகிலுள் ளுறைவானைச்
சிரமென்னுங் கலனானைச்
செங்கண்மால் விடையானை
வரமுன்னம்அருள்செய்வான்
வன்பார்த்தான்பனங்காட்டூர்ப்
பரமன்எங் கள்பிரானைப்
பரவாதார் பரவென்னே. **#876**

'ஞானம்' என்று சொல்லப்படும் பொருளாய் உள்ளவனும், உள்ளம் அன்பால் உருகினால், அதன் கண் நீங்காது தங்குகின்றவனும், தலை ஓடாகிய உண்கலத்தை உடையவனும், சிவந்த கண்களை யுடைய பெரிய இடப வாகனத்தை உடையவனும், தன்னை வழிபடுவார் விரும்பும் வரத்தை விரைந்து அருளுபவனும், மேலானவனும் ஆகிய, திரு வன்பார்த்தான் பனங்காட்டூரில் எழுந்தருளியிருக்கின்ற எங்கள் இறைவனைத் துதியாதவரது துதிதான் என்னே!

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

எயிலார்பொக் கம்மெரித்த
எண்டோள்முக் கண்ணிறைவன்
வெயிலாய்க்காற் றெனவீசி
மின்னாய்த்தீ யெனநின்றான்
மயிலார்சோ லைகள்சூழ்ந்த
வன்பார்த்தான் பனங்காட்டூர்ப்
பயில்வானுக் கடிமைக்கட்
பயிலாதார் பயில்வென்னே. **#877**

பொலிவு நிறைந்த சில மதில்களை எரித்தவனும், எட்டுத் தோள்களையும், மூன்று கண்களையும் உடைய கடவுளும், வெயிலாய்க் காய்ந்து, காற்றாய் வீசி, மின்னாய் மின்னி, தீயாய் எரிந்து நிற்பவனும் ஆகிய, மயில்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருவன்பார்த்தான் பனங்காட்டூரில் நீங்காதிருக்கும் பெருமானுக்குச் செய்யும் தொண்டிற் பயிலாதவரது பயிற்சிதான் என்னே!

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

மெய்யன்வெண் பொடிபூசும்
விகிர்தன்வே தமுதல்வன்
கையின்மான் மழுவேந்திக்

காலன்கா லம்மறுத்தான்
பைகொள்பாம் பரையார்த்த
படிறன்றன் பனங்காட்டூர்
ஐயன்எங் கள்பிரானை
அறியாதார் அறிவென்னே. **#878**
மெய்ப்பொருளாய் உள்ளவனும், வெள்ளிய நீற்றைப் பூசுகின்ற,
வேறுபட்ட இயல்கினனும், வேதத்திற்குத் தலைவனும், கையில் மான்
மழுக்களை ஏந்துபவனும், காலனது காலத்தை இடைமுரிவித்தவனும்,
படத்தைக் கொண்ட பாம்பினை அரையின் கண் கட்டியுள்ள கள்வனும்,
யாவர்க்கும் தலைவனும் ஆகிய தனது திருவன்பார்த்தான்
பனங்காட்டூரில் எழுந்தருளியிருக்கின்ற எங்கள் பெருமானை
அறியாதவரது அறிவுதான் என்னே!

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

வஞ்சமற்ற மனத்தாரை
மறவாத பிறப்பிலியைப்
பஞ்சிச்சீ றடியாளைப்
பாகம்வைத் துகந்தானை
மஞ்சுற்ற மணிமாட
வன்பார்த்தான் பனங்காட்டூர்
நெஞ்சத்தெங் கள்பிரானை
நினையாதார் நினைவென்னே. **#879**
வஞ்சனையற்ற தூய மனம் உடையவரை என்றும் மறவாதவனும்,
பிறப்பில்லாதவனும், செம்பஞ்சு ஊட்டிய சிறிய அடிகளை
யுடையாளாகிய உமாதேவியை ஒரு பாகத்தில் விரும்பி
வைத்துள்ளவனும் ஆகிய, மேகங்கள் பொருந்திய, மணிகள் இழைத்த
மாடங்களையுடைய திரு வன்பார்த்தான் பனங்காட்டூரிலும், எங்கள்
நெஞ்சத்திலும் எழுந்தருளியிருக்கின்ற பெருமானை நினையாதவரது
நினைவுதான் என்னே!

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

மழையானுந் திகழ்கின்ற
மலரோனென் றிருவர்தாம்
உழையாநின் றவருள்க
உயர்வானத் துயர்வானைப்
பழையானைப் பனங்காட்டூர்
பதியாகத் திகழ்கின்ற
குழைகாதற் கடிமைக்கட்

குழையாதார் குழைவென்னே. **#880**
மேகம்போலும் நிறத்தினனாகிய திருமாலும், மலரில் இருப்பவனாகிய பிரமனும் என்ற இருவரும் பணி செய்கின்றவராய் நினைந்து நிற்க, உயர்ந்த வானத்தினும் உயர்ந்து நிற்பவனும், எல்லாரினும் பழையவனும் ஆகிய, திரு வன்பார்த்தான் பனங்காட்டூரைத் தனது ஊராகக் கொண்டு விளங்குகின்ற, குழையணிந்த காதினையுடைய பெருமானுக்குத் தொண்டுபடுதலில் மனம் நெகிழாத வரது மனநெகிழ்ச்சிதான் என்னே!

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்

பாரூரும் பனங்காட்டூர்ப்
பவளத்தின் படியானைச்
சீரூருந் திருவாரூர்ச்
சிவன்பேர்சென் னியில்வைத்த
ஆரூரன் னடித்தொண்டன்
அடியன்சொல் அடிநாய்சொல்
ஊரூரன் உரைசெய்வார்
உயர்வானத் துயர்வாரே. **#881**
தனது பெயா நிலம் முழுதும் பரவிய திருவன்பார்த்தான் பனங்காட்டூரில் எழுந்தருளியிருக்கின்ற பவளம் போலும் உருவத்தையுடைய பெருமானை, புகழ்மிக்க திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானது பெயரைத் தலையில் வைத்துள்ள, அப்பெருமானுக்கு அடித்தொண்டு செய்யும் அடியவனாகிய, அவன் அடிக்கீழ்க் கிடக்கும் நாய் போலும் நம்பியாரூரன் பாடிய இப்பாடல்கள், அவரவர் ஊரின்கண் உரைசெய்வாரும் சிவலோகத்தில் உயர்வு பெற்று விளங்குவர்.

திருப்பனையூர்

திருப்பனையூர்

திருப்பனையூர்,
பண் - சீகாமரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சவுந்தரேசர்.
தேவியார் : பெரியநாயகியம்மை.

மாட மாளிகை கோபு ரததொடு
மண்ட பம்வள ரும்வ ளர்பொழில்
பாடல் வண்டறையும் பழ னத்திருப் பனையூர்த்
தோடு பெய்தொரு காதி னிற்குழை
தூங்கத் தொண்டர்கள் துள்ளிப் பாடநின்
றாடு மாறுவல்லா ரவ ரேய ழகியரே. **#882**

உயர்ந்த மேல்மாடங்களும், சிறந்த மாளிகைகளும், கோபுரங்களும், மண்டபங்களும் நாளும் நாளும் பெருகுகின்ற, ஓங்கி வளர்கின்ற சோலைகளில் இசைபாடுதலை யுடைய வண்டுகள் ஒலிக்கின்ற, நல்ல வயல்களையுடைய திருப்பனையூரில் எழுந்தருளியிருக்கின்ற, ஒருகாதிற் குழை தூங்க, மறறொரு காதினில் தோட்டினை இட்டு, அடியார்கள் ஆடிப்பாட நின்று ஆடுமாறு வல்லவராகிய அவரே, யாவரினும் மிக்க அழகுடையவர்.

திருப்பனையூர்

நாறு செங்கழு நீர்ம லர்
நல்ல மல்லிகை சண்ப கத்தொடு
சேறுசெய் கழனிப் பழ னத்தி ருப்பனையூ
நீறு பூசிநெய் யாடித் தம்மை
நினைப்பவர் தம்ம னத்த ராகிநின்
றாறு சூடவல்லா ரவ ரேய ழகியரே. **#883**

மணம் வீசுகின்ற செங்கழுநீர் மலரையும், நல்ல மல்லிகை மலரையும், சண்பக மலரையும், சேறு செய்யப்பட்ட கழனியாகிய வயல்களையும் உடைய திருப்பனையூரில் எழுந்தருளியிருக்கின்ற, நீற்றைப் பூசி நெய்யில் மூழ்கி, தம்மை நினைப்பவரது மனத்தில் உறைபவராய் நிற்பவரும், நீரை முடியில் தாங்குகின்றவரும் ஆகிய அவரே, யாவரினும் மிக்க அழகுடையர்.

திருப்பனையூர்

செங்கண் மேதிகள் சேடெ றிந்து
தடம்ப டிதலிற் சேலி னத்தொடு
பைங்காண் வாளைகள்பாய் பழ னத்தி ருப்பனையூர்த்
திங்கள் சூடிய செல்வ னாரடி
யார்தம் மேல்வினை தீர்ப்ப ராய்விடில்
அங்கிருந் துறைவா ரவ ரேய ழகியரே. **#884**
சிவந்த கண்களையுடைய எருமைகள், வயலைச் சேறாக்கிக் குளங்களில் சென்று வீழ்தலினால், அங்குள்ள கயல்மீனின் கூட்டமும், பசிய கண்களையுடைய வாளை மீன்களும் துள்ளி வீழ்கின்ற வயல்களை யுடைய திருப்பனையூரில் எழுந்தருளியிருக்கின்ற, சந்திரனைச் சூடிய செல்வனார், தம் அடியார் மேல் வருகின்ற வினையைத் தீர்க்கின்றவராகிவிடுவாராயின், அத்தலத்தில் நீங்காது தங்கி வாழ்கின்ற அவரே, யாவரினும் மிக்க அழகுடையர்.'

திருப்பனையூர்

வாளை பாய மலங்கி ளங்கயல்
வரிவ ராலுக ளுங்க ழனியுள்
பாளை ஒண்கமுகம் புடை சூழ்தி ருப்பனையூர்த்
தோளும் ஆகமும் தோன்ற நட்டமிட்
டாடு வாரடித் தொண்டர் தங்களை
ஆளு மாறுவல்லா ரவ ரேய ழகியரே. **#885**
வாளை மீன்கள் துள்ள, மலங்கும், இளமையான கயலும், வரிகளையுடைய வராலும் ஆகிய மீன்கள் பிறழ்கின்ற கழனிகளில் பக்கம் எங்கும், பாளையையுடைய கமுக மரங்கள் சூழ்ந்துள்ள திருப்பனையூரின்கண் எழுந்தருளியிருக்கின்ற, திரண்ட தோள்களும், அகன்ற மார்பும் பொலிவுற நடனத்தை அமைத்து ஆடுபவரும், தம் அடிக்குத் தொண்டராயுள்ளாரை ஆளுமாறு வல்லவரும் ஆகிய அவரே, யாவரினும் மிக்க அழகுடையர்.

திருப்பனையூர்

கொங்கை யார்பல ருங்கு டைந்ந்
தாட நீர்க்குவ ளைம லர்தரப்
பங்க யம்மலரும் பழ னத்தி ருப்பனையூர்
மங்கை பாகமும் மாலொர் பாகமுந்
தாமுடையவர் மான்ம ழுவினொ
டங்கைத் தீயுகப்பா ரவ ரேய ழகியரே. **#886**
மகளிர் பலரும் மூழ்கி விளையாடுதலினால், குளத்து நீரில் குவளைப் பூக்கள் மலர, அவற்றிற்கு எதிராகத் தாமரை மலர்கள் மலர்கின்ற

வயல்களையுடைய திருப்பனையூரில் எழுந்தருளியிருக்கின்ற , உமையையுடைய ஒரு பாகத்தையும், திருமாலை உடைய ஒரு பாகத்தையும் உடையவரும், அகங்கையில், 'மான், மழு, தீ' என்னும் இவற்றை விரும்பி ஏந்துபவரும் ஆகிய அவரே, யாவரினும் மிக்க அழகுடையர்.

திருப்பனையூர்

காவி ரிபுடை சூழ்சோ ணாட்டவர்
தாம்ப ரவிய கருணை யங்கடற்
பாவி ரிபுலவர் பயி லுந்தி ருப்பனையூர்
மாவிரிமட நோக்கி அஞ்ச
மதக ரியுரி போர்த்து கந்தவர்
ஆவி லைந்துகப்பா ரவ ரேய ழகியரே. **#887**

பக்கம் எங்கும் காவிரி நதி சூழ்ந்த சோழநாட்டில் உள்ளவர்கள் துதிக்கின்ற கருணைக் கடலாய், பாக்களை விரித்துப் பாடுகின்ற புலவர்கள் பலகாலும் சொல்லும் திருப்பனையூரில் எழுந்தருளியிருக்கின்ற, மான் தோல்வியுறுகின்ற பார்வையை யுடையவளாகிய உமாதேவி அஞ்சுமாறு, மதம் பொருந்திய யானை யினது தோலை விரும்பிப் போர்த்தவரும், பசுவிற் றோன்றுகின்ற ஐந்தினை விரும்பி மூழ்குகின்றவரும் ஆகிய அவரே, யாவரினும் மிக்க அழகுடையார்.

திருப்பனையூர்

மரங்கள் மேல்மயி லால மண்டப
மாடமா ளிகை கோபு ரத்தின்மேல்
திரங்கல் வன்முகவன் புகப் பாய்தி ருப்பனையூர்த்
துரங்கன் வாள்பிளந் தானுந் தூமலர்த்
தோன்ற லும்மறி யாமை தோன்றிநின்
றரங்கி லாடவல்லா ரவ ரேய ழகியரே. **#888**

மரக்கிளைகளின்மேல் நின்று மயில்கள் ஆட, மண்டபம், மாடம், மாளிகை, கோபுரம் இவைகளின்மேல், தோல் சுருங்கிய முகத்தையுடைய குரங்குகள் தாவுகின்ற திருப்பனையூரில் எழுந்தருளியிருக்கின்ற, குதிரை உருவங்கொண்டு வந்த, 'கேசி' என்னும் அசுரனது வாயைப் பிளந்து அழித்த திருமாலும், தூய மலரின்கண் இருக்கும் தலைவனாகிய பிரமனும் அறியாதபடி விளங்கி நின்று, மன்றில் நடனம் ஆட வல்லாராகிய அவரே, யாவரினும் மிக்க அழகுடையர்.

திருப்பனையூர்

மண்ணி லாமுழ வம்ம திர்தர
மாட மாளிகை கோபு ரத்தின்மேல்
பண்ணி யாழ்முரலும் பழ னத்திரு ருப்பனையூர்
வெண்ணி லாச்சடை மேவிய
விண்ண வரொடு மண்ண வர்தொழ
அண்ண லாகிநின்றா ரவ ரேய ழகியரே. **#889**

மாடம், மாளிகை, கோபுரம் இவைகளில், மண் பொருந்திய மத்தளம் அதிர, யாழ்கள் பண்களை இசைக்கின்ற, நல்ல வயல்கள் சூழந்த திருப்பனையூரில் எழுந்தருளியிருக்கின்ற வெண்மையான சந்திரன் சடைமேல் பொருந்தப்பட்ட, விண்ணவரும்

திருப்பனையூர்

குரக்கி னங்குதி கொள்ளத் தேனுகக்
குண்டு தன்னயற் கெண்டை பாய்தரப்
பரக்குந் தண்கழனிப் பழ னத்தி ருப்பனையூர்
இரக்கம் இல்லவர் ஐந்தொ டைந்தலை
தோளி ருபது தான்நெ ரிதர
அரக்கனை யடர்த்தா ரவ ரேய ழகியரே. **#890**

குளத்தினுள் பூக்களில் உள்ள தேன் சிந்தும்படி குரங்கின் கூட்டம் குதிக்க, அவற்றின் அருகில் கெண்டை மீன் துள்ளும் படி பரந்திருக்கின்ற, குளிர்ந்த வயல்களாகிய பழனத்தையுடைய திருப்பனையூரில் எழுந்தருளியிருக்கின்ற, இரக்கமில்லாதவராய், அரக்கனாகிய இராவணன், அவனுடைய பத்துத் தலைகளும், இருபது தோள்களும் நொயும்படி, தமது காலால் நெருக்கியவராகிய அவரே, யாவரினும் மிக்க அழகுடையர்.

திருப்பனையூர்

வஞ்சி நுண்ணிடை மங்கை பங்கினர்
மாத வர்வள ரும்வ ளர்பொழில்
பஞ்சின் மெல்லடியார் பயி லுந்திருப் பனையூர்
வஞ்சி யும்வளர் நாவ லூரன்
வனப்ப கையவ ளப்பன் வன்றொண்டன்
செஞ்சொற் கேட்டுகப்பா ரவ ரேய ழகியரே. **#891**

வஞ்சிக் கொடிபோலும் நுண்ணிய இடையினை யுடைய உமையது பங்கை உடையவராய், பெரிய தவத்தவர்க்ள மிகுகின்ற, வளர்கின்ற சோலைகளையுடைய செம்பஞ்சு ஊட்டிய மெல்லிய அடிகளை

யுடையவராகிய மகளிர், ஆடல் பாடல்களைப் பயிலுகின்ற திருப்பனையூரில் எழுந்தருளியிருக்கின்ற, நொச்சியே யன்றி வஞ்சியும் வளர்கின்ற திருநாவலூரில் தோன்றியவனும் வனப்பகைக்குத் தந்தையும் ஆகிய வன்றொண்டனது செவ்விய சொற்களாகிய பாடல்களைக் கேட்டு மகிழ்கின்றவராகிய அவரே, யாவரினும் மிக்க அழகுடையர்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை

திருவீழிமிழலை,
பண் - சீகாமரம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வீழியழகர்.
தேவியார் : சுந்தரகுசாம்பிகையம்மை.

நம்பி னார்க்கருள் செய்யும் அந்தணர்
நான்ம றைக்கிட மாய வேள்வியுள்
செம்பொ னேர்மடவா ரணி பெற்ற திருமிழலை
உம்ப ரார்தொழு தேத்த மாமலை
யாளொ டும்முட னேயு றைவிடம்
அம்பொன் வீழிகொண்டீர் அடி யேற்கும் அருளுதிரே. **#892**

அந்தணர்களது நான்கு வேதங்களுக்கு இடமாகிய வேள்வியினுள் உம்மை விரும்பி வழிபடுவோர்க்கு அருள் செய்கின்றவரே, செம்பொன்னால் இயன்ற பாவைபோலும் மகளிர் அழகுபெற்று விளங்குகின்ற திருமிழலையுள், நீர் உயர்ந்த மலைமகளோடு உடனாகித் தேவர்கள் தொழுது துதிக்க உறைகின்ற இடத்தை, அழகிய பொன்போலச் சிறந்த வீழி மரத்தின் நிழலாகக் கொண்டவரே, அடியேனுக்கும் அருள் செய்யீர்.

திருவீழிமிழலை

விடங்கொள் மாமிடற் றீர்வெள் ளைச்சுருள்
ஒன்றிட்டு வட்ட காதி னீர்என்று
திடங்கொள் சிந்தையினார் கலி காக்கும் திருமிழலை
மடங்கல் பூண்ட விமானம் மண்மிசை
வந்தி ழிச்சிய வான நாட்டையும்
அடங்கல் வீழிகொண்டீர் அடி யேற்கும் அருளுதிரே. **#893**

'நஞ்சினை உண்ட கரிய கண்டத்தை உடையவரே, வெண்மையான சங்கக் குழை ஒன்றினை இட்டுத் தூங்கவிட்ட காதினை உடையவரே' என்று போற்றி, உறுதி கொண்ட உள்ளத்தையுடைய அந்தணர்கள், உலகிற்கு வறுமை வாராமல் காக்கின்ற திருமிழலையுள் சிங்கங்கள் தாங்குகின்ற விமானம் ஒன்றை, உம்பொருட்டு மண்மேல் வந்து இறங்கச் செய்த வானுலகத்தையும் தன்கீழ் அடக்குதலையுடைய வீழி மரத்தின் நிழலை இடமாகக் கொண்டவரே, அடியேனுக்கும் அருள் செய்யீர்,

திருவீழிமிழலை

ஊனை யுற்றுயி ராயி னீர்ஒளி
மூன்று மாய்த்தெள நீரோ டானஞ்சின்
தேனை ஆட்டுகந்தீர் செழு மாடத் திருமிழலை
மானை மேவிய கையி னீர்மழு
வேந்தி னீர்மங்கை பாகத் தீர்விண்ணில்
ஆன வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. **#894**

உடம்பைப் பொருந்திய உயிரானவரே, 'ஞாயிறு, திங்கள், தீ' என்னும் மூன்று ஒளிகளும் ஆனவரே' தெளவாகிய நீரோடு ஆனஞ்சினிடைத் தேனை ஆடுதலை விரும்புபவரே, மானைப் பொருந்திய கையை யுடையவரே, மழுவை ஏந்தியவரே, மலைமகள் பாகத்தை உடையவரே, வளவிய மாடங்களையுடைய திருமிழலையில், வானின்கண் ஓங்கிய வீழி மரத்தின் நிழலை இடமாகக் கொண்டவரே, அடியேனுக்கும் அருள்செய்யீர்.

திருவீழிமிழலை

பந்தம் வீடிவை பண்ணி னீர்படி
றீர்ம திப்பிதிர்க் கண்ணி யீரென்று
சிந்தைசெய் திருக்குஞ் செங்கை யாளர் திருமிழலை
வந்து நாடகம் வான நாடியர்
ஆட மாலயன் ஏத்த நாள்தொறும்
அந்தண் வீழிகொண்டீர் அடி யேற்கும் அருளுதிரே. **#895**

'உயிர்களுக்கு, 'பந்தம்' வீடு' என்னும் இரண்டையும் அமைத்தவரே, அவ்வாறு அமைத்தும் அவைகட்கு ஒளித்து நிற்பவரே நிலாத் துண்டமாகிய கண்ணியைச் சூடியவரே.' என்று நினைந்திருக்கும் செவ்விய ஒழுக்கத்தை யுடையவர்களது திருமிழலையுள், நாள்தோறும் வானுலகத்தில் உள்ள நாடக மகளிர்கள் வந்து நடனம் ஆடவும், திருமாலும் பிரமனும் துதிக்கவும், அழகிய குளிர்ந்த வீழி மரத்தின் அடியை இடமாகக் கொண்டவரே, அடியேனுக்கும் அருள் செய்யீர்.

திருவீழிமிழலை

புரிசை மூன்றையும் பொன்றக் குன்றவில்
ஏந்தி வேதப் புரவித் தேர்மிசைத்
திரிசெய் நான்மறையோர் சிறந் தேத்துந் திருமிழலைப்
பரிசி னால்அடி போற்றும் பத்தர்கள்
பாடியாடப் பரிந்து நல்கினீர்
அரிய வீழிகொண்டீர் அடி யேற்கும் அருளுதிரே. **#896**

வேதங்களாகிய குதிரைகளைப் பூண்ட தேரின் மேல், மலையாகிய வில்லை ஏந்தி நின்று, மதில்கள் மூன்றையும் அழியும்படி வேறுபடுத்தவரே, நான்கு வேதங்களையும் உணர்ந்த அந்தணர்கள், அறிவு மிகுந்து துதிக்கின்ற திருமிழலையுள், அரிய வீழி மரத்தினது நிழலை இடமாகக் கொண்டவரே, நீர், உமது திருவடியைப் போற்றுகின்ற அடியவர்கள் அன்பினால் பாடி ஆட, மனம் இரங்கி, அவர்க்கு வேண்டுவனவற்றை அளித்தீர்; அதுபோல, அடியேனுக்கும் அருள்செய்யீர்.

<u>திருவீழிமிழலை</u>

எறிந்த சண்டி இடந்த கண்ணப்பன்
ஏத்து பத்தர்கட் கேற்றம் நல்கினீர்
செறிந்த பூம்பொழில்தேன் துளிவீசுந் திருமிழலை
நிறைந்த அந்தணர் நித்த நாள்தொறும்
நேசத்தால் உமைப் பூசிக் கும்மிடம்
அறிந்து வீழிகொண்டீர் அடி யேற்கும் அருளுதிரே. **#897**

மரங்கள் நெருங்கிய பூஞ்சோலைகள், தம்மிடத்து வருவோர்க்குத் தேன் துளிகளை வழங்குகின்ற திருமிழலையுள், நிறைந்துள்ள அந்தணர் பலரும் நாள்தோறும் நிலையாக அன்பினால் உம்மை வழிபடும் இடத்தை அறிந்து, வீழி மரத்தின் நிழலை இடமாகக் கொண்டவரே, நீர், தந்தையது தாளை எறிந்த சண்டேசுர நாயனார், தமது கண்ணைப் பெயர்த்து அப்பிய கண்ணப்ப நாயனார் முதலாக, உம்மை வழிபட்ட அடியவர் பலருக்கு உயர்கதியைத் தந்தருளினீ; அதுபோல அடியேனுக்கும் அருள்செய்யீர்,

<u>திருவீழிமிழலை</u>

பணிந்த பார்த்தன் பகீர தன்பல
பத்தர் சித்தர்க்குப் பண்டு நல்கினீர்
திணிந்த மாடந்தொறுஞ் செல்வம் மல்கு திருமிழலைத்
தணிந்த அந்தணர் சந்தி நாடொறும்
அந்தி வானிடு பூச்சி றப்பவை
அணிந்து வீழிகொண்டீர் அடி யேற்கும் அருளுதிரே. **#898**

நெருங்கிய மாடங்கள்தோறும் செல்வம் நிறைந்த திருமிழலையுள், சினம் தவிர்ந்த அந்தணர்கள், காலை, நடுப்பகல் இவற்றிலும், அந்திக் காலத்திலும் உயர்வாக இடுகின்ற பூக்களின் ஒப்பனையை அணிந்துகொண்டு, வீழி மரத்தினது நிழலை இடமாகக் கொண்டவரே, நீர், உம்மை வணங்கிய அருச்சுனன், பகீரதன், பல அடியவர், சித்தர் முதலியோர்க்கு முற்காலத்தில் அருள் பண்ணினீர்; அதுபோல,

அடியேனுக்கும் அருள்செய்யீர்.

திருவீழிமிழலை

பரந்த பாரிடம் ஊரி டைப்பலி
பற்றிப் பாத்துணுஞ் சுற்ற மாயினீர்
தெரிந்த நான்மறையோர்க் கிட மாய திருமிழலை
இருந்து நீர்தமி ழோடி சைகேட்கும்
இச்சை யாற்காசு நித்தல் நல்கினீர்
அருந்தண் வீழிகொண்டீர் அடி யேற்கும் அருளுதிரே. **#899**

மிக்க பூத கணங்களை, ஊர்களில் பிச்சையேற்று அதனைப் பகுத்து உண்ணும் சுற்றமாக உடையவரே, ஆராய்ந்த நான்கு வேதங்களை உணர்ந்தோராகிய அந்தணர்க்கு இடமான திருமிழலையுள், அரிய, குளிர்ந்த வீழி மரத்தின் நிழலை இடமாகக்கொண்டவரே, நீர், இனிதிருந்து இசையைத் தமிழோடு கேட்கும் விருப்பத்தால் அத்தகைய தமிழைப் பாடியோர்க்குப் பொற்காசினை நாள்தோறும் வழங்கினீர்; அதுபோல, அடியேனுக்கும் அருள் செய்யீர்.

திருவீழிமிழலை

தூய நீரமு தாய வாறது
சொல்லு கென்றுமை கேட்கச் சொல்லினீர்
தீய றாக்குலையார் செழு மாடத் திருமிழலை
மேய நீர்பலி யேற்ற தென்னென்று
விண்ணப் பஞ்செய் பவர்க்கு மெய்ப்பொருள்
ஆய வீழிகொண்டீர் அடி யேற்கும் அருளுதிரே. **#900**

'தீ வளர்த்தலை ஒழியாத கூட்டத்தவராகிய அந்தணர்களது, வளவிய மாடங்களையுடைய திருமிழலையுள் விரும்பி வீற்றிருக்கின்ற நீர், 'பிச்சை எடுப்பது என்' என்று வினாவுவோர்க்கு மெய்ப்பொருளாய் விளங்குகின்ற, வீழி மரத்தின் நிழலை இடமாகக் கொண்டவரே, நீர், 'உமக்குத் தூய்மை யாகிய நீரே அமுத மாயினவாற்றினைச் சொல்லுக' என்று உமையவள் கேட்க, அதனைச் சொல்லியருளினீர்; அதுபோல, அடியேனுக்கும் அருள்செய்யீர்.

திருவீழிமிழலை

வேத வேதியர் வேத நீதிய
தோது வார்விரி நீர்மி ழலையுள்
ஆதி வீழிகொண்டீர் அடி யேற்கும் அருளுகென்று
நாத கீதம்வண் டோது வார்பொழில்
நாவ லூரன்வன் றொண்டன் நற்றமிழ்

பாதம் ஓதவல்லார் பர னோடு கூடுவரே. **#901**
'வேதத்தை ஓதுகின்ற வேதியர்களும், வேதத்தின் பொருளை விளங்குபவர்களும் வாழ்கின்ற, பரந்த நீரையுடைய திருமிழலையுள், பழைதாகிய வீழி மரத்தினது நிழலை இடமாகக் கொண்டவரே, அடியேனுக்கும் அருள் செய்யீர்' என்று பாடிய, இனிய இசையை வண்டுகள் பாடுகின்ற நீண்ட சோலைகளையுடைய திருநாவலூரில் தோன்றினவனும், வன்றொண்டனும் ஆகிய திருநாவலூரல் தோன்றினவனும் ஆகிய நம்பியாரூரனது இந்நல்ல தமிழ்ப்பாடல்களை, அப்பெருமான் திருவடிக்கீழ் நின்றுபாட வல்லவர், அவனோடு இரண்டறக் கலப்பர்.

திருவெண்பாக்கம்

திருவெண்பாக்கம்

திருவெண்பாக்கம்,
பண் - சீகாமரம்,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. இது திருவிளம்பூதூரென்று வழங்குகிறது. ,
சுவாமிபெயர் : வெண்பாக்கத்தீசுவரர்.
தேவியார் : கனிவாய்மொழியம்மை.

பிழையுளன பொறுத்திடுவர்
என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே
படலம்என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா
கோயிலுளா யேஎன்ன
உழையுடையான் உள்ளிருந்
துளோம்போகீர் என்றானே. **#902**

'குழை பொருந்திய, தூங்குங்காதினை உடையவனே, நம்மாட்டுப் பிழை உளவாவனவற்றை நம் பெருமானார் பொறுத்துக்கொள்வார் என்னும் துணிவினால் அடியேன் பிழை செய்தால், அதனைப் பொறாததனால் உனக்கு உளதாகும் பழியை நினையாமலே நீ என் கண்ணைப் படலத்தால் மறைத்து விட்டாய்; இதுபோது இக்கோயிலினுள்ளே இருக்கின்றாயோ?' என்று யான் வினாவ, மானை ஏந்திய அவன், 'உளோம்; போகீர்' என்று சொன்னானன்றே! இதுவோ அவனது கண்ணோட்டம்!

திருவெண்பாக்கம்

இடையறியேன் தலையறியேன்
எம்பெருமான் சரணம்என் பேன்
நடையுடையன் நம்மடியான்
என்றவற்றைப் பாராதே
விடையுடையான் விடநாகன்
வெண்ணீற்றன் புலியின்தோல்
உடையுடையான் எனையுடையான்
உளோம்போகீர் என்றானே. **#903**

யான் யாதொரு செயலிலும் 'முதல் இன்னது; நடு இன்னது; முடிவு இன்னது;' என்று அறியேன்; 'எம் பெருமானே எனக்குப் புகலிடம்;

ஆவது ஆகுக' என்று கவலையற்றிருப்பேன்; அதனையறிந்திருந்தும், இடப வாகனத்தை யுடையவனும், விடம் பொருந்திய பாம்பை அணிந்தவனும், வெண்மையான நீற்றைப் பூசுபவனும், புலியின் தோலாகிய உடையை உடையவனும், என்னை ஆளாக உடையவனும் ஆகிய இறைவன், 'இவன் நம்மையே அடைக்கலமாக அடைதலை யுடையவன்; நமக்கு அடியவன்' என்ற முறைமைகளை நினையாமலே, "உளோம் போகீர்" என்று சொன்னானன்றே; இதுவோ அவனது கண்ணோட்டம்!

திருவெண்பாக்கம்

செய்வினையொன் றறியாதேன்
திருவடியே சரணென்று
பொய்யடியேன் பிழைத்திடினும்
பொறுத்திடநீ வேண்டாவோ
பையரவா இங்கிருந்தா
யோஎன்னப் பரிந்தென்னை
உய்யஅருள் செய்யவல்லான்
உளோம்போகீர் என்றானே. **#904**

படத்தையுடைய பாம்பை அணிந்தவனே, 'உனது திருவடியே புகல்' என்று கருதி, 'செய்யத்தக்க செயல் இது; தகாத செயல் இது' என்பதைச் சிறிதும் அறியாத பொய்யடியேனாகிய யான்,அறியாமையாற் பிழைசெய்தேனாயினும், பொறுத்தல் உனக்குக் கடமையன்றோ; அங்ஙனம் பொறுத்து எனக்கு அருள் பண்ணாமையின், நீ இங்கே இருக்கின்றாயோ' என்று யான் உரிமையோடு வினாவ, எப்பொழுதும் என்மேல் அருள்கூர்ந்து, என்னை உய்யுமாறு தன் திருவருளைச் செய்ய வல்ல எம்பெருமான், இதுபோது, 'உளோம்; போகீர்' என்று சொன்னானன்றே; இதுவோ அவனது கண்ணோட்டம்!

திருவெண்பாக்கம்

கம்பமருங் கரியுரியன்
கறைமிடற்றன் காபாலி
செம்பவளத் திருவுருவன்
சேயிழையோ டுடனாகி
நம்பியிங்கே யிருந்தாயே
என்றுநான் கேட்டலுமே
உம்பர்தனித் துணையெனக்கு
ளோம்போகீ ரென்றானே. **#905**

'நம்பியே, நீ, செவ்விய அணியினை யுடைய மலை மகளோடு

உடனாயினவன் ஆதலின், இருவீரும் இங்கே இருக்கின்றீர்களோ' என்று நான் வினவ, அசைதல் பொருந்திய யானையினது தோலையும் கறுத்த கண்டத்தையும், கபாலத்தையும், செவ்விய பவளம்போலும் உருவத்தையும் உடையவனும், தேவர்களுக்கு ஒப்பற்ற துணைவனும் ஆகிய இறைவன், எனக்கு, 'உளோம்; போகீர்' என்று சொன்னானன்றே! இதுவோ அவனது கண்ணோட்டம்!

திருவெண்பாக்கம்

பொன்னிலங்கு நறுங்கொன்றை
புரிசடை மேற்பொலிந்திலங்க
மின்னிலங்கு நுண்ணிடையாள்
பாகமா எருதேறித்
துன்னியிரு பால்அடியார்
தொழுதேத்த அடியேனும்
உன்னமதாய்க் கேட்டலுமே
உளோம்போகீர் என்றானே. **#906**

பொன்போல விளங்குகின்ற, நறுமணம் பொருந்திய கொன்றைமலர், சடையின்மேற் பொருந்துதலால், மேலும் பொலிவுற்று விளங்க, மின்னலினது தன்மை விளங்குகின்ற நுண்ணிய இடையினை உடையவள் ஒருபாகத்தில் இருக்க, எருதை ஏறுபவனாகிய சிவபெருமானை, இருபாலும் அடியார்கள் நெருங்கி, வணங்கித் துதிக்க, யானும் உயர்ந்த முறைமையினாலே, 'கோயிலுளாயே' என்று கேட்க, அவன், 'உளோம்; போகீர்' என்று சொன்னானன்றே! இதுவோ அவனது கண்ணோட்டம்!

திருவெண்பாக்கம்

கண்ணுதலால் காமனையுங்
காய்ந்ததிறற் கங்கைமலர்
தெண்ணிலவு செஞ்சடைமேல்
தீமலர்ந்த கொன்றையினான்.
கண்மணியை மறைப்பித்தாய்
இங்கிருந்தா யோஎன்ன
ஒண்ணுதலி பெருமான்றான்
உளோம்போகீர் என்றானே. **#907**

யாவரையும் வெல்லுகின்ற காமனையும் தனது நெற்றிக்கண்ணால் எரித்த ஆற்றலையுடைய, கங்கை விளங்குகின்ற, தெளிய நிலவை அணிந்த சடையின்மேல் தீயின்கண் மலர்ந்தது போலத் தோன்றுகின்ற கொன்றை மலரை உடைய பெருமானை, அடியேன், 'என் கண்மணியை

மறைப்பித்தவனே, இங்கு இருக்கின்றாயோ?' என்று வினவ, ஒள்ளிய நெற்றியையுடைய வளாகிய உமையம்மைக்குத் தலைவன், 'உளோம்; போகீர்' என்று சொன்னானன்றே! இதுவோ அவனது கண்ணோட்டம்!

திருவெண்பாக்கம்

பார்நிலவு மறையோரும்
பத்தர்களும் பணிசெய்யத்
தார்நிலவு நறுங்கொன்றைச்
சடையனார் தாங்கரிய
கார்நிலவு மணிமிடற்றீர்
ஈங்கிருந்தீ ரேஎன்ன
ஊரரவம் அரைக்கசைத்தான்
உளோம்போகீர் என்றானே. **#908**

'மாலையாகப் பொருந்திய மணம் உடைய கொன்றைப் பூவை அணிந்த சடையை உடையவரே, தாங்குதற்கரிய நஞ்சுபொருந்திய, நீலமணிபோலும் கண்டத்தையுடையவரே, நீர், மண்ணுலகிற் பொருந்திய அந்தணர்களும், அடியவர்களும் பணிசெய்ய இங்கு இருக்கின்றீரோ? என்று யான் வினவ, ஊர்கின்ற பாம்பை அரையிற்கட்டிய இறைவன், 'உளோம்; போகீர்' என்றானன்றே! இதுவோ அவனது கண்ணோட்டம்!

திருவெண்பாக்கம்

வாரிடங்கொள் வனமுலையாள்
தன்னோடு மயானத்துப்
பாரிடங்கள் பலசூழப்
பயின்றாடும் பரமேட்டி
காரிடங்கொள் கண்டத்தன்
கருதுமிடந் திருவொற்றி
யூரிடங்கொண் டிருந்தபிரான்
உளோம்போகீர் என்றானே. **#909**

கச்சினது இடம் முழுவதையுங் கொண்ட அழகிய தனங்களை யுடையவளாகிய உமையோடு, பூதங்கள் பல சூழ, முதுகாட்டிற் பலகாலும் ஆடுகின்ற, மேலான நிலையில் உள்ளவனும், கருமை நிறம் தனக்கு இடமாகக் கொண்ட கண்டத்தை யுடையவனும், நான் விரும்பும் இடமாகிய திருவொற்றியூரையே தனக்கு இடமாகக் கொண்டவனும் ஆகிய இறைவன், யான் வினவியதற்கு, 'உளோம்; போகீர்' என்று சொன்னானன்றே! இதுவோ அவனது கண்ணோட்டம்!

திருவெண்பாக்கம்

பொன்னவிலுங் கொன்றையினாய்
போய்மகிழ்க் கீழிருவென்று
சொன்னஎனைக் காணாமே
சூளுறவு மகிழ்க்கீழே
என்னவல்ல பெருமானே
இங்கிருந்தா யோஎன்ன
ஒன்னலரைக் கண்டாற்போல்
உளேஉளோம்போகீர் என்றானே. **#910**

பொன்போலுங் கொன்றை மலரை அணிந்த பெருமானே, நீ, கோயிலை விட்டுப்போய் மகிழ மரத்தின் கீழ் இரு என்று சொன்ன என்னை, அதன் பொருட்டுக் காணாமலே, சங்கிலியிடம் சென்று, 'சூளுறவு, மகிழ மரத்தின் கீழே ஆகுக' என்று சொல்ல வல்ல பெருமானே, நீ, இங்கு இருக்கின்றாயோ என்று யான் வினவ, எம்பெருமான், என்னை, பகைவரைக் கண்டாற்போல வெறுத்து, 'உளோம்; போகீர்' என்று சொன்னானன்றே! இதுவோ அவனது கண்ணோட்டம்!

திருவெண்பாக்கம்

மான்றிகழுஞ் சங்கிலியைத்
தந்துவரு பயன்களெல்லாம்
தோன்றஅருள் செய்தளித்தாய்
என்றுரைக்க உலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயில்
இங்கிருந்தா யோஎன்ன
ஊன்றுவதோர் கோலருளி
உளோம்போகீர் என்றானே. **#911**

'மான் போல விளங்குகின்ற சங்கிலியை எனக்கு ஈந்து, அதனால் உளவாகின்ற பயன்களெல்லாம் எனக்கு நன்கு விளங்கும்படி திருவருள் செய்து காத்தாய்' என்று சொல்லுதற்கு, 'உலகத்தையெல்லாம் பெற்ற தந்தையே, வெண்கோயிலாகிய இவ்விடத்தில் நீ இருக்கின்றாயோ' என்று யான் வினவ, எம் பெருமான், ஊன்றுவதாகிய ஒருகோலை அருளி, 'உளோம்; போகீர்' என்றா னன்றே! இத்துணையது தானோ அவது கண்ணோட்டம்!

திருவெண்பாக்கம்

ஏராரும் பொழில்நிலவு
வெண்பாக்கம் இடங்கொண்ட

காராரும் மிடற்றானைக்
காதலித்திட் டன்பினொடும்
சீராருந் திருவாரூர்ச்
சிவன்பேர்சென் னியில்வைத்த
ஆரூரன் தமிழ்வல்லாக்
கடையாவல் வினைதானே. **#912**

புகழ் நிறைந்த திருவாரூரில் உள்ள சிவ பொருமானது திருப்பெயரைத் தலையில் வைத்துள்ள நம்பியாரூரன், அழகுநிறைந்த சோலைகள் விளங்குகின்ற திருவெண்பாக்கத்தை இடமாகக் கொண்ட, கருமை நிறைநத கண்டத்தை யுடையவனை மிக விரும்பி, அன்போடும் பாடிய இத்தமிழ்ப் பாடல்களைப் பாட வல்லவர்மேல், வலிய வினைகள் வந்து சாராவாம்.

கோயில்

கோயில்

கோயில்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : திருமூலத்தானநாயகர் (எ) சபாநாதர்.
தேவியார் : சிவகாமியம்மை.

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே மனனேநீ
வாழு நாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி லிடும்போது
தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும் எரிஅகலுங்
கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப்
பெற்றா மன்றே. **#913**

மனமே, நீ குஞ்சித்து ஆடுகின்ற தனது திருவடிக்குச் செய்யும் தொண்டின்கண் வாழாமல் உண்டு உடுத்தே வாழும் நாள்களிலும், உன்னை அவ்வாறே சென்று கெடாதவாறு தடுத்து, தனது இச்சைவழி நடாத்தி, பின்பு நீ முன்செய்த பாவத்தின்பொருட்டு உன்னைக் கூற்றுவனது ஏவலர்கள் ஒறுக்க முயலும்போது அதனையும் தடுத்து ஆட்கொள்பவனாகிய, கையில் தமருகத்தையும், நெருப்பு எரிகின்ற தகழியையும், சினந்த ஆடுகின்ற கரிய பாம்பையும் பிடித்துக்கொண்டு ஆடுகின்ற பெரும்பற்றப் புலியூரில் திருச்சிற்றம் பலத்தில் விளங்குகின்ற நம்பெருமானை அடைந்து விட்டோமன்றே; இனி நாம் பெறவேண்டுவது யாது!

கோயில்

பேராது காமத்திற் சென்றார்போ லன்றியே
பிரியா துள்கிச்
சீரார்ந்த அன்பராய்ச் சென்றுமுன் னடிவீழுந்
திருவி னாரை.
ஓராது தருமனார் தமர்செக்கி லிடும்போது
தடுத்தாட் கொள்வான்
பேராளர் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப்
பெற்றா மன்றே. **#914**

மனமே, சாங்காறும், நீங்காது உலக இன்பத்தில் சென்றவர்போலவன்றி,

புகழ் நிறைந்த அன்பையுடையவர்களாய், தன்னை இடைவிடாது நினைத்து, திருமுன் சென்று தனது திருவடியில் வீழ்ந்து வணங்கும் திருவுடையவரை, அவரது நிலையை அறியாமல், கூற்றுவனது ஏவலர்கள் ஒறுக்க முயலும்போது அதனைத் தடுத்து ஆட்கொள்பவனாகிய, பெருமையுடையவர்களது பெரும்பற்றப் புலியூரில் உள்ள திருச்சிற்றம்பலத்தில் விளங்குகின்ற நம் பெருமானை அடைந்து விட்டோமன்றே; இனி நாம் பெறவேண்டுவது யாது!

கோயில்

நரியார்தங் கள்ளத்தாற் பக்கான பரிசொழிந்து
நாளும் உள்கித்
திரியாத அன்பராய்ச் சென்றுமுன் னடிவீழுஞ்
சிந்தை யாரைத்
தரியாது தருமனார் தமர்செக்கி லிடும்போது
தடுத்தாட் கொள்வான்
பெரியோர்கள் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப்
பெற்றா மன்றே. **#915**

மனமே, நரியினது வஞ்சனைபேலும் வஞ்சனையினால் இரண்டுபட்ட தன்மையின் நீங்கி, நாள்தோறும் தன்னை நினைத்து, மாறுபடாத அன்பை உடையவராய்த் திருமுன்சென்று, தனது திருவடியில் வீழ்ந்து வணங்குங் கருத்துடையவரை, கூற்றுவனது ஏவலர்கள் ஒறுக்க முயலும்போது சிறிதும் தாழாது அதனைத் தடுத்து ஆட்கொள்பவனாகிய, பெரியோர்களது பெரும்பற்றப் புலியூரில் உள்ள திருச்சிற்றம்பலத்தில் விளங்குகின்ற நம் பெருமானை அடைந்து விட்டோமன்றே; இனி நாம் பெறவேண்டுவது யாது!

கோயில்

கருமையார் தருமனார் தமர்நம்மைக் கட்டியகட்
டறுப்பிப் பானை
அருமையாந் தன்னுலகந் தருவானை மண்ணுலகங்
காவல் பூண்ட
உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை
மறுக்கஞ் செய்யும்
பெருமையார் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப்
பெற்றா மன்றே. **#916**

மனமே, கருமை நிறம் பொருந்திய கூற்றுவனது ஏவலர் நம்மைக் கட்டுவராயின், அக் கட்டினை அறுத்தெறிபவனும், நமக்கு, பிறர் பெறுதற்கரிய தனது உலகத்தையே தருபவனும், பல்லவ மன்னன்

இந்நிலவுலகத்தை நன்நெறியில் வைத்துக் காத்தலை மேற் கொண்ட இயைபினால், அவனுக்குத் திறைகொடாது மாறுபடும் பிற மன்னர்களை வருத்துதல் செய்கின்றவனும் ஆகிய, பெருமை யுடையவர்களது பெரும்பற்றப்புலியூரில் உள்ள திருச்சிற்றம்பலத்தில் விளங்குகின்ற நம் பெருமானை அடைந்துவிட்டோமன்றே; இனி நாம் பெறவேண்டுவது யாது!

<u>கோயில்</u>

கருமானின் உரியாடைச் செஞ்சடைமேல் வெண்மதியக்
கண்ணி யானை
உருமன்ன கூற்றத்தை உருண்டோட உதைத்துகந்
துலவா இன்பம்
தருவானைத் தருமனார் தமர்செக்கி லிடும்போது
தடுத்தாட் கொள்வான்
பெருமானார் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப்
பெற்றா மன்றே. **#917**

மனமே, யானையினது தோலைப் போர்வையாக உடைய, சிவந்த சடைமேல் வெள்ளிய பிறையாகிய கண்ணியைச சூடினவனும், இடிபோல முழங்கும் கூற்றுவனை நிலத்தில் உருண்டு ஒழியும்படி உதைத்துப் பின் அருள் செய்து, அவனால் வெருட்டப் பட்ட சிறுவனுக்கு அழியாத இன்பத்தைத் தந்தவனும், நம்மை, அக்கூற்றுவனது ஏவலர்கள் ஒறுக்க முயலும்போது அதனைத் தடுத்து ஆட்கொள்பவனும் ஆகிய, பெருமை நீங்காதவர்களது பெரும்பற்றப் புலியூரில் உள்ள திருச்சிற்றம்பலத்தில் விளங்குகின்ற நம் பெருமானை அடைந்துவிட்டோமன்றே; இனி நாம் பெறவேண்டுவது யாது!

<u>கோயில்</u>

உய்த்தாடித் திரியாதே உள்ளமே ஒழிகண்டாய்
ஊன்க ணோட்டம்
எத்தாலுங் குறைவில்லை என்பர்காண் நெஞ்சமே
நம்மை நாளும்
பைத்தாடும் அரவினன் படர்சடையன் பரஞ்சோதி
பாவந் தீர்க்கும்
பித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப்
பெற்றா மன்றே. **#918**

மனமே, படம் எடுத்து ஆடும் பாம்பையும், விரிந்த சடையையும் உடையவனும், மேலான ஒளியாய் உள்ளவனும், அடைந்தவரது பாவங்களை நீக்குகின்றவனும், பித்துக்கொண்டு ஆடுகின்றவனும்

ஆகிய, பெரும்பற்றப் புலியூரில் உள்ள திருச்சிற்றம் பலத்தின்கண் விளங்குகின்ற நம் பெருமானை அடைந்துவிட்டோமன்றே; இனி நாம் பெற வேண்டுவது யாது! இதனால், நமக்கு எதனாலும் குறைவில்லாது வாழ்வு உளதாயிற்று என்று நம்மை நாள்தோறும் பலரும் புகழ்கின்றனர்; ஆதலின், மனமே, இனி நீ, உடம்பின் மேற் கண்ணோட்டம் செலுத்தி அலைந்து திரியாது, அதனை முற்றிலும் ஒழி.

கோயில்

முட்டாத முச்சந்தி மூவா யிரவர்க்கும்
மூர்த்தி என்னப்
பட்டானைப் பத்தராய்ப் பாவிப்பார் பாவமும்
வினையும் போக
விட்டானை மலைஎடுத்த இராவணனைத் தலைபத்தும்
நெரியக் காலால்
தொட்டானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப்
பெற்றா மன்றே. **#919**

மனமே, 'தப்பாத, முப்போதும் செய்யும் வழி பாட்டினையுடைய மூவாயிரவர் அந்தணர்க்கும் ஒரு மூர்த்தியே' என்று அனைவராலும் சொல்லப்பட்டவனும், அடியவராய் நின்று தன்னை நினைப்பவரது, பாவமும் புண்ணியமும் ஆகிய இரு வினைகளும் விலகுமாறு நீக்குகின்றவனும், தனது மலையை எடுத்த இராவணனை, அவனது பத்துத் தலைகளும் நெரியும்படி காலால் ஊன்றினவனும் ஆகிய, பெரும்பற்றப் புலியூரில் உள்ள திருச் சிற்றம்பலத்தின்கண் விளங்குகின்ற நம் பெருமானை அடைந்து விட்டோமன்றே, இனி நாம் பெறவேண்டுவது யாது!

கோயில்

கற்றானுங் குழையுமா றன்றியே கருதுமா
கருத கிற்றார்க்
கெற்றாலுங் குறைவில்லை என்பர்காண் உள்ளமே
நம்மை நாளுஞ்
செற்றாட்டித் தருமனார் தமர்செக்கி லிடும்போது
தடுத்தாட் கொள்வான்
பெற்றேறிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப்
பெற்றா மன்றே. **#920**

மனமே, கல்லும் தன் தன்மை மாறி உருகும்படி, தன்னை நினைக்கும் முறையில் நினைக்க வல்லராயினார்க்கு, எத்தன்மைத்தாய பொருளாலும் குறைவில்லை என்று பெரியோர் சொல்லுவர்;

அவ்வகையில் நாம், நம்மை, கூற்றுவனது ஏவலர்கள் பலகாலும் ஆட்டக்கருதிச் செக்கிலிட முயலும்போது, அதனைத் தடுத்து ஆட்கொள்ளுகின்ற, விடையேறுபவனாகிய, பெரும்பற்றப் புலியூரில் உள்ள திருச்சிற்றம்பலத்தின்கண் விளங்கும் நம் பெருமானை அடைந்துவிட்டோமன்றே; இனி நாம் பெறவேண்டுவது யாது!

கோயில்

நாடுடைய நாதன்பால் நன்றென்றுஞ் செய்மனமே
நம்மை நாளும்
தாடுடைய தருமனார் தமர்செக்கி லிடும்போது
தடுத்தாட் கொள்வான்
மோடுடைய சமணர்க்கும் முடையுடைய சாக்கியர்க்கும்
மூடம் வைத்த
பீடுடைய புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப்
பெற்றா மன்றே. **#921**

மனமே, நம்மை, தலைமையையுடைய கூற்றுவனது ஏவலர் பலநாளும் செக்கிலிட்டு ஆட்ட முயலும்போது, அதனைத் தடுத்து ஆட்கொள்பவனும், முடைநாற்றத்தையுடைய சமணர்கட்கும், வயிற்றையுடைய சாக்கியர்கட்கும் அறியாமையை வைத்த பெருமையை யுடையவனும் ஆகிய, பெரும்பற்றப்புலியூரில் உள்ள திருச்சிற்றம்பலத்தின்கண் விளங்குகின்ற நம் பெருமானை அடைந்து விட்டோமன்றே; இனி நாம் பெறவேண்டியது யாது! அதனால், உயர்ந்தோரால் விரும்பப்படுதலையுடைய அவ்விறைவனிடத்தில் என்றும் நன்றாய தொன்டினைச் செய்.

கோயில்

பாரூரும் அரவல்குல் உமைநங்கை யவள்பங்கன்
பைங்கண் ஏற்றன்
ஊரூரன் தருமனார் தமர்செக்கி லிடும்போது
தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் தம்பிரான் ஆரூரன் மீகொங்கில்
அணிகாஞ் சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே
பெற்றா மன்றே. **#922**

மனமே, நிலத்தில் ஊர்ந்து செல்கின்ற பாம்பினது படம்போலும் அல்குலையுடைய 'உமை' என்னும் நங்கையது பாகத்தையுடையவனும், பசிய கண்களையுடைய இடபத்தை யுடையவனும், ஊர் தோறும் எழுந்தருளியிருப்பவனும் நம்மை, கூற்றுவனது ஏவலர்கள் ஒறுக்க

முயலும் போது அதனைத் தடுத்து ஆட்கொள்பவனும், நம்பியாரூரனுக்குத் தலைவனும், திருவாரூரை உடையவனும், மேற்றிசையில் உள்ள கொங்கு நாட்டில், அழகிய காஞ்சிநதியின் கரையில் விளங்கும் பேரூரில் உள்ளவரது கடவுளும் ஆகிய இறைவனை, பெரும்பற்றப் புலியூரில் உள்ள திருச்சிற்றம்பலத்தில் அடைந்து விட்டோமன்றே; இனி நாம் பெறவேண்டுவது யாது!

திருவொற்றியூர்

திருவொற்றியூர்

திருவொற்றியூர்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. இது திருவிளம்பூதூரென்று வழங்குகிறது. ,
சுவாமிபெயர் : படம்பக்கநாதர் - மாணிக்கத்தியாகர்.
தேவியார் : வடிவுடையம்மை.

பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டு வினைகள் தீர்ப்பார் கோயில்
காட்டுங் கலமுந் திமிலுங் கரைக்கே
ஓட்டுந் திரைவாய் ஒற்றி யூரே. **#923**

உரையாற் சொல்லுதலேயன்றிப் பாட்டாலும் பாடித் துதித்து நிற்பார் செய்த வினைகளை நீக்குகின்ற இறைவரது இடம், மக்கள் தம் பால் சேர்க்கின்ற பெரிய மரக்கலங்களையும், சிறிய படகு களையும் கரையிற் சேர்க்கின்ற கடல் அலைகள் பொருந்திய திருவொற்றியூரே.

திருவொற்றியூர்

பந்துங் கிளியும் பயிலும் பாவை
சிந்தை கவர்வார் செந்தீ வண்ணர்
எந்தம் மடிகள் இறைவர்க் கிடம்போல்
உந்துந் திரைவாய் ஒற்றி யூரே. **#924**

பந்தாடுதலையும், கிளியை வளர்த்தலையும் பலகாலும் செய்கின்ற, பாவை போல்வாளாகிய உமையவளது மனத்தைக் கவர்பவரும், சிவந்த நெருப்புப்போலும் நிறத்தையுடைய வரும், எங்கள் தலைவரும் ஆகிய இறைவருக்கு இடமாவது, பல பொருள்களைத் தள்ளி வருகின்ற கடல் அலைகள் பொருந்திய திருவொற்றியூரே.

திருவொற்றியூர்

பவளக் கனிவாய்ப் பாவை பங்கன்
கவளக் களிற்றின் உரிவை போர்த்தான்
தவழும் மதிசேர் சடையாற் கிடம்போல்
உகளுந் திரைவாய் ஒற்றி யூரே. **#925**

பவளமும், கனியும் போலும் இதழையுடைய, பாவை போன்றவளாகிய உமையது பாகத்தை உடையவனும், கவளத்தை உண்கிற களிற்றி யானையினது தோலைப் போர்த்தவனும், தவழ்ந்து பெயரும் பிறை

பொருந்திய சடையையுடையவனும் ஆகிய இறைவனுக்கு இடமாவது, புரளுகின்ற கடல் அலைகள் பொருந்திய திருவொற்றியூரே.

திருவொற்றியூர்

என்ன தெழிலும் நிறையும் கவர்வான்
புன்னை மலரும் புறவில் திகழும்
தன்னை முன்னம் நினைக்கத் தருவான்
உன்னப் படுவான் ஒற்றி யூரே. **#926**

முதலில் யான் நினைக்குமாறு தன்னைத் தருபவனும், பின்பு என்னால் நினைக்கப்படுவனும் ஆகிய இறைவன், எனது அழகையும், மன உறுதியையும் கவர்தற்பொருட்டு, திருவொற்றியூரில், புன்னை மலர்கள் மலர்கின்ற கானலிடத்தே விளங்குவான்.

திருவொற்றியூர்

பணங்கொள் அரவம் பற்றி பரமன்
கணங்கொள் சூழக் கபாலம் ஏந்தி
வணங்கும் இடைமென் மடவார் இட்ட
உணங்கல் கவர்வான் ஒற்றி யூரே. **#927**

படத்தையுடைய பாம்பைக் கையில்பிடித்திருப்பவனும், மேலானவனும், பூத கணங்கள் சூழத் தலையோட்டை ஏந்திச் சென்று, துவளுகின்ற இடையினையுடய மகளிர் இடுகின்ற சோற்றை ஏற்பவனும் ஆகிய இறைவன் திருவொற்றியூரிலே நீங்காது எழுந்தருளியிருப்பான்.

திருவொற்றியூர்

படையார் மழுவன் பால்வெண் ணீற்றன்
விடையார் கொடியன் வேத நாவன்
அடைவார் வினைகள் அறுப்பான் என்னை
உடையான் உறையும் ஒற்றி யூரே. **#928**

படைக்கலத் தன்மை பொருந்திய மழுவையும், பால்போலும் வெள்ளிய திருநீற்றையும், இடபம் பொருந்திய கொடியையும், வேதத்தை ஓதுகின்ற நாவையும் உடையவனும், தன்னை அடைக்கலமாக அடைபவரது வினைகளை ஒழப்பவனும், என்னை ஆளாக உடையவனும் ஆகிய இறைவன்' திருவொற்றியூரிலே நீங்காது எழுந்தருளியிருப்பான்.

திருவொற்றியூர்

சென்ற புரங்கள் தீயில் வேவ
வென்ற விகிர்தன் வினையை வீட்ட
நன்று நல்ல நாதன் நரையே

றொன்றை உடையான் ஒற்றி யூரே. **#929**
வானத்தில் உலாவிய மதில்கள் நெருப்பில் வெந்தொழியுமாறு அவற்றை வென்ற, வேறுபட்ட தன்மையை உடையவனும், வினைகளைப் போக்குதற்கு மிகவும் நல்ல கடவுளும், வெண்மையான இடபம் ஒன்றை உடையவனும் ஆகிய இறைவன், திருவொற்றியூரிலே நீங்காது எழுந்தருளியிருப்பான்.

<u>திருவொற்றியூர்</u>

கலவ மயில்போல் வளைக்கை நல்லார்
பலரும் பரவும் பவளப் படியான்
உலகின் உள்ளார் வினைகள் தீர்ப்பான்
உலவுந் திரைவாய் ஒற்றி யூரே. **#930**

தோகையையுடைய மயில்போலும், வளையை அணிந்த கைகளையுடைய அழகிய மகளிர் பலரும் துதிக்கின்ற, பவளம்போலும் உருவத்தையுடையவனாகிய இறைவன், கரையில் வந்து உலாவுகின்ற கடல் அலைகள் பொருந்திய திருவொற்றியூரில் இருந்தே, உலகில் உள்ளவரது வினைகளை எல்லாம் தீர்ப்பான்.

<u>திருவொற்றியூர்</u>

பற்றி வரையை யெடுத்த அரக்கன்
இற்று முரிய விரலால் அடர்த்தார்
எற்றும் வினைகள் தீர்ப்பார் ஓதம்
ஒற்றுந் திரைவாய் ஒற்றி யூரே. **#931**

தமது மலையைப்பற்றி அசைத்த அரக்கனாகிய இராவணனை, அவனது உறுப்புக்கள் ஒடிந்து முரியும்படி நெருக்கின வராகிய இறைவர், கடல் நீர் சூழ்ந்த, அலைகள் பொருந்திய திருவொற்றியூரில் இருந்தே, அடியவரைத் தாக்குகின்ற வினைகளை நீக்குவார்.

<u>திருவொற்றியூர்</u>

ஒற்றி யூரும் அரவும் பிறையும்
பற்றி யூரும் பவளச் சடையான்
ஒற்றி யூர்மேல் ஊரன் உரைத்த
கற்றுப் பாடக் கழியும் வினையே. **#932**

ஒன்றை ஒன்று உராய்ந்து ஊர்கின்ற பாம்பும், பிறையும் பற்றுக்கோடாக நின்று ஊரும் பவளம்போலும் சடையை உடைய இறைவனது திருவொற்றியூர்மேல் நம்பியாரூரன் பாடிய இப்பாடல்களை நன்கு கற்றுப்பாடினால், வினைகள் நீங்கும்.

திருப்புக்கொளியூர் அவிநாசி

திருப்புக்கொளியூர் அவிநாசி

திருப்புக்கொளியூர் அவிநாசி,
பண் - குறிஞ்சி,
இத்தலம் கொங்குநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : அவிநாசியப்பர்.
தேவியார் : பெருங்கருணைநாயகி.

எற்றான் மறக்கேன் எழுமைக்கும்
எம்பெரு மானையே
உற்றாய்என் றுன்னையே உள்குகின்றேன்
உணர்ந் துள்ளத்தால்
புற்றா டரவா புக்கொளி
யூர்அவி னாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதி
யேபர மேட்டியே. #933

புற்றின்கண் வாழ்கின்ற, படமெடுத்து ஆடுகின்ற பாம்பை அணிந்தவனே, உயிர்களுக்கெல்லாம் தலைவனே, மேலான இடத்தில் உள்ளவனே, திருப்புக்கொளியூரில் உள்ள, 'அவனாசி' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, ஏழு பிறப்பிலும் எமக்குத் தலைவனாய் உள்ள உன்னையே எனக்கு உறவினன் என்று உணர்ந்து, மனத்தால் நினைக்கின்றேன்; உன்னையே எனக்குப் பற்றுக் கோடாகக் கொண்டு வாழ்வேன்; உன்னை எக்காரணத்தால் மறப்பேன்!

திருப்புக்கொளியூர் அவிநாசி

வழிபோவார் தம்மோடும் வந்துடன்
கூடிய மாணிநீ
ஒழிவ தழகோசொல் லாய்அரு
ளோங்கு சடையானே
பொழிலா ருஞ்சோலைப் புக்கொளி
யூரிற் குளத்திடை
இழியாக் குளித்த மாணிஎன்
னைக்கிறி செய்ததே. #934

அருள் மிக்க, தவக்கோலத்தையுடையவனே, பெருமரப் பொழில்களையும், நிறைந்த இளமரக் காக்களையும் உடைய திருப்புக்கொளியூரில் உள்ள குளத்தின்கண் இறங்கிக் குளித்த அந்தணச் சிறுவன் செய்த குற்றம் யாது? உன்னை வணங்கச் செல்பவர்களுடன்

வந்து உடன் சேர்ந்த அச்சிறுவன், உன் திருமுன்னே இறந்து போவது உனக்குப் பொருந்துவதோ? நீ சொல்லாய்.

திருப்புக்கொளியூர் அவிநாசி

எங்கேனும் போகினும் எம்பெரு
மானை நினைந்தக்கால்
கொங்கே புகினுங் கூறைகொண்
டாறலைப் பார்இலை
பொங்கா டரவா புக்கொளி
யூர்அவி னாசியே
எங்கோ னேஉனை வேண்டிக்கொள்
வேன்பிற வாமையே. **#935**

மிகுதியான, ஆடுகின்ற பாம்பை அணிந்தவனே, திருப்புக்கொளியூரில் உள்ள, 'அவினாசி' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, எங்கள் தலைவனே, எம்பெருமானாகிய உன்னை நினைத்தால், கொங்கு நாட்டிலே புகுந்தாலும், மற்றும் எங்கேனும் சென்றாலும், என்னை ஆறலைத்துக் கூறையைப் பறித்துக்கொள்பவர் இலராவர்; ஆகவே, உன்னிடம் நான் பிறவாமை ஒன்றையே வேண்டிக் கொள்வேன்.

திருப்புக்கொளியூர் அவிநாசி

உரைப்பார் உரைஉகந் துள்கவல்
லார்தங்கள் உச்சியாய்
அரைக்கா டரவா ஆதியும்
அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளி
யூர்அவி னாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளை
தரச்சொல்லு காலனையே. **#936**

உன்னைப் புகழ்கின்றவர்களது சொல்லை விரும்புபவனே, உன்னை எஞ்ஞான்றும் மறவாது நினைக்க வல்லவரது தலைமேல் இருப்பவனே, அரையின்கண் ஆடுகின்ற பாம்பைக் கட்டியுள்ளவனே, எல்லாப் பொருட்கும் முதலும் முடிவுமானவனே, சிறந்த முல்லை நிலத்தையும், சோலைகளையும் உடைய திருப்புக்கொளியூரில் உள்ள, 'அவினாசி' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, கூற்றுவனையும் முதலையையும், இக்குளக் கரைக்கண் பிள்ளையைக் கொணர்ந்து தருமாறு ஆணையிட்டருள்.

திருப்புக்கொளியூர் அவிநாசி

அரங்காவ தெல்லா மாயிடு
காடது அன்றியும்
சரங்கோலை வாங்கி வரிசிலை
நாணியிற் சந்தித்துப்
புரங்கோட எய்தாய் புக்கொளி
யூஅவி னாசியே
குரங்காடு சோலைக் கோயில்கொண்
டகுழைக் காதனே. **#937**

திருப்புக்கொளியூரில் உள்ள, குரங்குகள் குதித்து ஆடுகின்ற சோலையையுடைய, 'அவினாசி' என்னும் திருக்கோயிலை இடமாகக்கொண்ட, குழையை யணிந்த காதினை உடையவனே, உனக்கு நடனமாடும் இடமாய் இருப்பது, எல்லாரும் அழிகின்ற முதுகாடு; அதுவன்றியும், நீ அம்பை எடுத்து, வரிந்த வில்லில் உள்ள நாணியில் தொடுத்து, மூன்று ஊர்கள் அழிய அழித்தாய்.

<u>திருப்புக்கொளியூர் அவிநாசி</u>

நாத்தா னும்உனைப் பாடல்அன்
றிநவி லாதெனாச்
சோத்தென்று தேவர் தொழநின்ற
சுந்தரச் சோதியாய்
பூத்தாழ் சடையாய் புக்கொளி
யூர்அவி னாசியே
கூத்தா உனக்குநான் ஆட்பட்ட
குற்றமுங் குற்றமே. **#938**

'எங்கள் நாவும் உன்னைப் பாடுதலன்றி வேறொன்றைச் சொல்லாது' என்றும், 'உனக்கு வணக்கம்' என்றும் சொல்லித் தேவர்கள் வணங்க நிற்கின்ற அழகிய ஒளிவடிவாய் உள்ளவனே, பூவையணிந்த, நீண்ட சடையை உடையவனே, நடனம் ஆடுபவனே, திருப்புக்கொளியூரில் உள்ள, 'அவினாசி' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, நான் உனக்கு ஆளான தன்மையும் குற்றமோ?

<u>திருப்புக்கொளியூர் அவிநாசி</u>

மந்தி கடுவனுக் குண்பழம்
நாடி மலைப்புறம்
சந்திகள் தோறுஞ் சலம்புட்பம்
இட்டு வழிபடப்
புந்தி உறைவாய் புக்கொளி
யூர்அவி னாசியே

நந்தி உனைவேண்டிக் கொள்வேன்
நரகம் புகாமையே. **#939**

பெண்குரங்கு, ஆண்குரங்குக்கு, அது செல்லும் மலைப்புறங்களில், உண்ணத் தக்க பழங்கள் கிடைக்கவேண்டி, 'காலை, நண்பகல், மாலை' என்னும் காலங்கள் தோறும் நீரையும், பூவையும் இட்டு வழிபாடு செய்ய, அதன் மனத்திலும் புகுந்து இருப்பவனே, திருப்புக்கொளியூரில் உள்ள, 'அவினாசி' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளி இருக்கின்ற, 'நந்தி' என்னும் பெயரை உடையவனே, உன்னிடம் நான் நரகம் புகாதிருத்தலையே வேண்டிக் கொள்வேன்.

<u>திருப்புக்கொளியூர் அவிநாசி</u>

பேணா தொழிந்தேன் உன்னைஅல்
லாற்பிற தேவரைக்
காணா தொழந்தேன் காட்டுதி
யேல்இன்னங் காண்பன்நான்
பூணாண் அரவா புக்கொளி
யூர்அவி னாசியே
காணாத கண்கள் காட்டவல்
லகறைக் கண்டனே. **#940**

'அணிகலமாகவும், வில்நாணாகவும் பாம்பைக் கொண்டுள்ளவனே, திருப்புக்கொளியூரில் உள்ள, 'அவினாசி' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, அடியேன் உன்னையன்றிப் பிறதேவரை விரும்பாது நீங்கினேன்; அதனால் அவர்களைக் காணாதும் விட்டேன்; காணும் தன்மையற்ற என் கண்களைக் காணும்படி செய்யவல்ல, நஞ்சினையணிந்த கண்டத்தையுடையவனே, என் அறிவாகிய கண்ணையும் அங்ஙனம் அறியச் செய்வையாயின், உனது பெருமைகளை இன்னும் மிகுதியாக அறிந்து கொள்வேன்.

<u>திருப்புக்கொளியூர் அவிநாசி</u>

நள்ளாறு தெள்ளா றரத்துறை
வாய்எங்கள் நம்பனே
வெள்ளாடை வேண்டாய் வேங்கையின்
தோலை விரும்பினாய்
புள்ளேறு சோலைப் புக்கொளி
யூரிற் குளத்திடை
உள்ளாடப் புக்க மாணியென்
னைக்கிறி செய்ததே. **#941**

திருநள்ளாறு, திரு அரத்துறைகளில் உள்ள நம்பனே, வெள்ளாடையை

விரும்பாது, புலித்தோல் ஆடையை விரும்புபவனே, பறவைகள் தங்கும் சோலைகளையுடைய திருப்புக்கொளியூரில் உள்ள குளத்தில் உள்ளே முழுகப் புகுந்த அந்தணச் சிறுவன் செய்த மாயம் யாது?

திருப்புக்கொளியூர் அவிநாசி

நீரேற ஏறு நிமிர்புன்சடை
நின்மல மூர்த்தியைப்
போரேற தேறியைப் புக்கொளி
யூர்அவி னாசியைக்
காரேறு கண்டனைத் தொண்டன்ஆ
ரூரன் கருதிய
சீரேறு பாடல்கள் செப்பவல்
லார்க்கில்லை துன்பமே. **#942**

நீர் தங்குதலால் பருமை பெற்ற, நீண்ட புல்லிய சடையை உடைய, தூய பொருளானவனும், போர்செய்யும் எருதை ஏறுபவனும், கருமை பொருந்திய கண்டத்தையுடையவனும் ஆகிய, திருப்புக்கொளியூரிலுள்ள, 'அவினாசி' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானை, அவனது தொண்டனாகிய நம்பியாரூரன். ஒரு பயன்கருதிப் பாடிய, இப்புகழ்மிக்க பாடல்களைப் பாடவல்லவர்கட்குத் துன்பம் இல்லையாகும்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

திருநறையூர்ச்சித்தீச்சரம்

திருநறையூர்ச்சித்தீச்சரம்,
பண் - குறிஞ்சி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : சௌந்தரேசர்.
தேவியார் : திரிபுரசுந்தரியம்மை.

நீரும் மலரும் நிலவும் சடைமேல்
ஊரும் மரவும் உடையான் இடமாம்
வாரும் மருவி மணிபொன் கொழித்துச்
சேருந் நறையூர்ச் சித்தீச் சரமே. **#943**

இடையறாது ஒழுகும் நீர்ப்பெருக்கு, மணியையும் பொன்னையுங் கொழித்துக்கொண்டு சேர்கின்ற திருநறையூரில் உள்ள, 'சித்தீச்சரம்' என்னும் திருக்கோயிலே, சடையின்மேல் நீரையும், பல மலர்களையும் பிறையையும் ஊர்ந்து செல்லுகின்ற பாம்பையும் உடையவனாகிய இறைவனது இடமாகும்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

அளைப்பை அரவேர் இடையாள் அஞ்சத்
துளைக்கைக் கரித்தோல் உரித்தான் இடமாம்
வளைக்கைம் மடவார் மடுவில் தடநீர்த்
திளைக்குந் நறையூர்ச் சித்தீச் சரமே. **#944**

வளையையணிந்த கைகளையுடைய இளமகளிர், மிக்க நீரினுள் மூழ்கி இன்புறும் திருநறையூரில் உள்ள, 'சித்தீச்சரம்' என்னும் திருக்கோயிலே, புற்றில் வாழ்கின்ற, படத்தையுடைய பாம்பு போலும் இடையினையுடையவளாகிய தன் தேவி அஞ்சும்படி, துளையையுடைய துதிக்கையையுடைய யானையினது தோலை உரித்துப் போர்த்தவனாகி இறைவனது இடமாகும்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

இகழுந் தகையோர் எயில்மூன் றெரித்த
பகழி யொடுவில் உடையோன் பதிதான்
முகிழ்மென் முலையார் முகமே கமலம்
திகழுந் நறையூர்ச் சித்தீச் சரமே. **#945**

அரும்புபோலும், மெல்லிய தனங்களையுடைய மகளிரது முகங்களே, தாமரை மலர்போல விளங்குகின்ற திருநறையூரில் உள்ள, 'சித்தீச்சரம்'

என்னும் திருக்கோயிலே, தன்னை இகழுந் தன்மையைப் பெற்ற அசுரர்களது மதில்கள் மூன்றை எரித்த அம்பையும், வில்லையும் உடைய இறைவனது இடமாகும்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

மறக்கொள் அரக்கன் வரைதோள் வரையால்
இறக்கொள் விரற்கோன் இருக்கும் இடமாம்
நறக்கொள் கமலந் நனிபள் ளிஎழத்
திறக்குந் நறையூர்ச் சித்தீச் சரமே. **#946**

தேனைக் கொண்டுள்ள தாமரைமலரை, நன்கு துயிலெழும்படி வண்டுகள் திறக்கின்ற திருநறையூரில் உள்ள, 'சித்தீச்சரம் என்னும் திருக்கோயிலே, வீரத்தைக் கொண்ட இராவணனது மலைபோலும் தோள்களை, தனது மலையால் முரியச்செய்த விரலையுடைய தலைவனாகிய இறைவன் இருக்கும் இடமாகும்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

முழுநீ றணிமே னியன்மொய் குழலார்
எழுநீர் மைகொள்வான் அமரும் இடமாம்
கழுநீ கமழக் கயல்சேல் உகளும்
செழுநீ நறையூர்ச் சித்தீச் சரமே. **#947**

குளங்களில் செங்கழுநீப் பூவின் மணங் கமழுமாறு அவைகளின்மேல் கயல்மீன்களும், சேல் மீன்களும் துள்ளி வீழ்கின்ற, மிக்க நீரையுடைய திருநறையூரில் உள்ள, 'சித்தீச்சரம்' என்னும் திருகோயிலே, திருமேனிமுழுவதும் நீற்றை அணிந்தவனும், அடர்ந்த கூந்தலையுடைய மகளிரது உயர்ச்சி பொருந்திய பண்புகளைக் கொண்டவனும் ஆகிய இறைவன் விரும்பி எழுந்தருளியிருக்கின்ற இடமாகும்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

ஊனா ருடைவெண் டலைஉண் பலிகொண்
டானார் அடலே றமர்வான் இடமாம்
வானார் மதியம் பதிவண் பொழில்வாய்த்
தேனார் நறையூர்ச் சித்தீச் சரமே. **#948**

விண்ணிற் பொருந்திய சந்திரன் நுழைந்து செல்லும், வளவிய சோலைகளினிடத்தில் தேன் நிறைந்து நிற்கும் திருநறையூரில் உள்ள, 'சித்தீச்சரம்' என்னும் திருக்கோயிலே, ஊன் பொருந்திய, உடைந்த, வெள்ளிய தலையில், உண்ணுதற்குரிய பிச்சையை ஏற்று, ஆனினத்ததாகிய, வெற்றியையுடைய ஏற்றை விரும்புபவனாகிய இறைவனது இடமாகும்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

காரூர் கடலில் விடம்உண் டருள்செய்
நீரூர் சடையன் னிலவும் மிடமாம்
வாரூர் முலையார் மருவும் மறுகில்
தேரூர் நறையூர்ச் சித்தீச் சரமே. **#949**

கச்சு மேற்பொருந்தப்பெற்ற தனங்கைளயுடைய மகளிர் அழகுடன் நிறைந்து நிற்கும் தெருக்களில் தேர்கள் ஓடுகின்ற திருநறையூரில் உள்ள, 'சித்தீச்சரம்' என்னும் திருக்கோயிலே, கருமை நிறம் பொருந்திய கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு, தேவர்கட்கு அருள்செய்த, நீர்ததும்பும் சடையினையுடையவனாகிய இறைவன் விளங்கியிருக்கின்ற இடமாகும்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

கரியின் னுரியுங் கலைமான் மறியும்
எரியும் மழுவும் உடையான் இடமாம்
புரியும் மறையோர் நிறைசொற் பொருள்கள்
தெரியுந் நறையூர்ச் சித்தீச் சரமே. **#950**

தமது கடமைகளை விரும்பிச் செய்யும் அந்தணர்கள், நிறைந்த சொற்களின் பொருளை ஆராய்கின்ற திருநறையூரில் உள்ள, 'சித்தீச்சரம்' என்னும் திருக்கோயிலே, யானைத் தோலையும், ஆண் மான்கன்றையும், எரிகின்ற மழுவையும் உடையவனாகிய இறைவனது இடமாகும்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

பேணா முனிவான் பெருவேள் வியெலாம்
மாணா மைசெய்தான் மருவும் மிடமாம்
பாணார் குழலும் முழவும் விழவில்
சேணார் நறையூர்ச் சித்தீச் சரமே. **#951**

பண் நிறைந்த குழல்களின் ஓசையும், மத்தளங்களின் ஓசையும் விழாக்களில் சேய்மைக்கண் சென்று பொருந்துகின்ற திருநறையூரில் உள்ள, 'சித்தீச்சரம்' என்னும் திருக்கோயிலே, தன்னை விரும்பாது வெறுத்தவனாகிய தக்கனது பெருவேள்வியின் சிறப்புக்களை எல்லாம் சிறவாதபடி அழித்தவனாகிய இறைவன் பொருந்தியிருக்கும் இடமாகும்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

குறியில் வழுவாக் கொடுங்கூற் றுதைத்த
எறியும் மழுவாட் படையான் இடமாம்
நெறியில் வழுவா நியமத் தவர்கள்

நெறியுந் நறையூர்ச் சித்தீச் சரமே. **#952**
நன்னெறியினின்றும் வழுவாத கடப்பாட்டினை யுடைய உயர்ந்தோர்கள் மிக்குள்ள திருநறையூரில் உள்ள, 'சித்தீச்சரம்' என்னும் திருக்கோயிலே, கொடிய கூற்றுவனை உதைத்த, குறியினின்றும் தவறாது எறியும் மழுப்படையை உடையவனாகிய இறைவனது இடமாகும்.

திருநறையூர்ச்சித்தீச்சரம்

போரார் புரமெய் புனிதன் அமருஞ்
சீரார் நறையூர்ச் சித்தீச் சரத்தை
ஆரூ ரன்சொல் லிவைவல் லவர்கள்
ஏரார் இமையோர் உலகெய் துவரே. **#953**

போர் செய்தலை உடையவரது முப்புரத்தை அழித்த தூயவனாகிய இறைவன் விரும்பி எழுந்தருளியிருக்கின்ற, புகழ் நிறைந்த திருநறையூர்ச் சித்தீச்சரத்தை நம்பியாரூரன் பாடிய இப் பாடல்களைப் பாட வல்லவர்கள், எழுச்சிபொருந்திய தேவருலகத்தை அடைவார்கள்.

திருச்சோற்றுத்துறை

திருச்சோற்றுத்துறை

திருச்சோற்றுத்துறை,
பண் - கௌசிகம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : தொலையாச்செல்வர்.
தேவியார் : ஒப்பிலாம்பிகை.

அழல்நீர் ஒழுகி யனைய சடையும்
உழையீர் உரியும் முடையான் இடமாம்
கழைநீர் முத்துங் கனகக் குவையும்
சுழல்நீர்ப் பொன்னிச் சோற்றுத் துறையே. **#954**

மூங்கில்களிடத்து உளவாகிய சிறந்த முத்துக்களும், பொற்குவியல்களும் சுழிகளில் சுழல்கின்ற நீரையுடைய காவிரி யாற்றையுடைய, 'திருச்சோற்றுத்துறை' என்னும் தலமே, நெருப்பு நீர்த் தன்மையுடையதாய் ஒழுகினாற்போலும் சடையையும், மானையும், யானை, புலி இவைகளை உரித்த தோலையும் உடையவனாகிய இறைவனது இடமாகும்.

திருச்சோற்றுத்துறை

பண்டை வினைகள் பறிய நின்ற
அண்ட முதல்வன் அமலன் னிடமாம்
இண்டை கொண்டன் பிடைஅ றாத
தோண்டர் பரவுஞ் சோற்றுத் துறையே. **#955**

அன்பு, இடையில் அற்றுப்போதல் இல்லாத அடியார்கள், இண்டை மாலை முதலியவைகளைக் கொண்டுவழி படுகின்ற, 'திருச்சோற்றுத்துறை' என்னும் தலமே, உயிர்கள் செய்த பழைய, வலிமையான வினைகள் நீங்குமாறு நிற்கின்ற, உலகிற்கு முதல்வனும், தூயவனும் ஆகிய இறைவனது இடமாகும்.

திருச்சோற்றுத்துறை

கோல அரவுங் கொக்கின் இறகும்
மாலை மதியும் வைத்தான் இடமாம்
ஆலும் மயிலும் ஆடல் அளியும்
சோலை தருநீர்ச் சோற்றுத் துறையே. **#956**

சோலைகள், ஆடுகின்ற மயில்களையும், சுழலுதல் உடைய வண்டுகளையும் கொண்டு காட்டுகின்ற மிக்க நீரையுடைய,

'திருச்சோற்றுத்துறை' என்னும் தலமே, அழகிய பாம்பையும், கொக்கின் இறகையும், மாலைக் காலத்தில் தோன்றுகின்ற பிறையையும் முடியில் வைத்துள்ளவனாகிய இறைவனது இடமாகும்.

திருச்சோற்றுத்துறை

பளிக்குத் தாரை பவள வெற்பில்
குளிக்கும் போல்நூற் கோமாற் கிடமாம்
அளிக்கும் ஆர்த்தி அல்லால் மதுவம்
துளிக்கும் சோலைச் சோற்றுத் துறையே. **#957**

தேனை வண்டுகள் நிரம்ப உண்ணச்செய்து, மேலும் நிலத்திற் சிந்துகின்ற சோலைகளையுடைய, 'திருச்சோற்றுத்துறை' என்னும் தலமே, பவளமலையின்மேல் பதிந்து ஓடுகின்ற பளிங்கு அருவிபோலும் முப்புரி நூலை அணிந்த தலைவனாகிய இறைவனுக்கு இடமாகும்.

திருச்சோற்றுத்துறை

உதையுங் கூற்றுக் கொல்கா விதிக்கு
வதையுஞ் செய்த மைந்தன் இடமாம்
திதையுந் தாதுந் தேனுஞ் ஞிமிறும்
துதையும் பொன்னிச் சோற்றுத் துறையே. **#958**

நிலைபெற்ற மகரந்தமும், தேனும், வண்டும் சோலைகளில் நெருங்கியிருக்கின்ற, காவிரி யாற்றையுடைய, 'திருச்சோற்றுத்துறை' என்னுந் தலமே, கூற்றுவனுக்கு உதையையும், ஒன்றற்கும் தோலாத ஊழிற்கு அழிவையும் ஈந்த வலிமை உடையவனாகிய இறைவனுக்கு இடமாகும்.

திருச்சோற்றுத்துறை

ஓதக் கடல்நஞ் சினைஉண் டிட்ட
பேதைப் பெருமான் பேணும் பதியாம்
சீதப் புனல்உண் டெரியைக் காலும்
சூதப் பொழில்சூழ் சோற்றுத் துறையே. **#959**

குளிந்த நீரை உண்டு, தீயை உமிழ்கின்ற மாஞ் சோலைகள் சூழ்ந்த, 'திருச்சோற்றுத்துறை' என்னும் தலமே, மிக்க நீரையுடைய கடலில் உண்டாகிய நஞ்சினை உண்ட, அருள்மிகுந்த பெருமான் விரும்பும் ஊராகும்.

திருச்சோற்றுத்துறை

இறந்தார் என்பும் எருக்குஞ் சூடிப்
புறங்காட் டாடும் புனிதன் கோயில்

சிறந்தார் சுற்றந் திருவென் றின்ன
துறந்தார் சேருஞ் சோற்றுத் துறையே. **#960**
உயிர்போலச் சிறந்த மனைவி மக்களும், ஏனைய சுற்றத்தாரும்,
செல்வமும் என்று சொல்லப்பட்ட இன்னோரன்ன வற்றைத் துறந்த
ஞானியர் சேர்கின்ற, 'திருச்சோற்றுத்துறை' என்னும் தலமே,
இறந்தவரது எலும்புகளையும்' எருக்கம் பூவையும் அணிந்து கொண்டு,
புறங்காட்டில் ஆடுகின்ற தூயவனாகிய இறைவனது இடம்.

<u>திருச்சோற்றுத்துறை</u>

காமன் பொடியாக் கண்ஒன் றிமைத்த
ஓமக் கடலார் உகந்த இடமாம்
தேமென் குழலார் சேக்கை புகைத்த
தூமம் விசும்பார் சோற்றுத் துறையே. **#961**
தேன் பொருந்திய, மெல்லிய கூந்தலையுடைய மகளிர், தம்
இருக்கையில் இட்ட நறும்புகைகள், வானத்தில் சென்று நிறைகின்ற,
'திருச்சோற்றுத்துறை' என்னும் தலமே மன்மதன் சாம்பராகுமாறு கண்
ஒன்றைத் திறந்த, வேள்வியாகிய கடலையுடைய வராகிய இறைவர்
விரும்பும் இடமாகும்.

<u>திருச்சோற்றுத்துறை</u>

இலையால் அன்பால் ஏத்தும் அவர்க்கு
நிலையா வாழ்வை நீத்தார் இடமாம்
தலையால் தாழுந் தவத்தோர்க் கென்றும்
தொலையாச் செல்வச் சோற்றுத் துறையே. **#962**
தன்னைத் தலையால் வணங்குகின்ற தவத்தினை உடையோர்க்கு,
எஞ்ஞான்றும் அழியாத செல்வத்தைத் தரும், 'திருச்சோற்றுத்துறை'
என்னுந் தலமே, இலையாலாயினும் அன்போடு துதிக்கின்ற அவர்கட்கு,
நிலையாத இவ்வுலக வாழ்வை நீக்குபவராகிய இறைவனது இடமாகும்.

<u>திருச்சோற்றுத்துறை</u>

சுற்றார் தருநீர்ச் சோற்றுத் துறையுள்
முற்றா மதிசேர் முதல்வன் பாதத்
தற்றார் அடியார் அடிநாய் ஊரன்
சொற்றான் இவைகற் றார்துன் பிலரே. **#963**
பற்றற்றவராகிய அடியார்களது அடிக்கு நாய் போலும் நம்பியாரூரன்,
சுற்றிலும் நிறைந்த நீரையுடைய திருச்சோற்றுத்துறையில்
எழுந்தருளியிருக்கின்ற, இளமையான சந்திரனைச் சூடிய முதல்வனது
திருவடிக்கண் இப்பாடல்களைப் பாடினான்; இவைகளைக்

கற்றவராவார், யாதொரு துன்பமும் இல்லாதவராவர்.

திருவாரூர்

திருவாரூர்

திருவாரூர்,
பண் - செந்துருத்தி,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. காஞ்சீபுரத்தில் ஆலந்தானெனும் பதிகமோதி ஒருகண்பெற்று, இந்தத்தலத்தில் இந்தப்பதிகமோதி மற்றொரு கண்ணும் பெற்றது. ,
சுவாமிபெயர் : வன்மீகநாதர்.
தேவியார் : அல்லியங்கோதையம்மை.

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே. **#964** ★★★★★

திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானிரே, உம்மையன்றிப் பிறரை விரும்பாமலே, உமக்கே என்றும் மீளாத அடிமை செய்கின்ற ஆட்களாகி, அந்நிலையிலே பிறழாதிருக்கும் அடியார்கள், தங்கள் துன்பத்தை வெளியிட விரும்பாது, மூண்டெரி யாது கனன்று கொண்டிருக்கின்ற தீயைப்போல, மனத்தினுள்ளே வெதும்பி, தங்கள் வாட்டத்தினை முகத்தாலே பிறர் அறியநின்று பின்னர் அத்துன்பம் ஒருகாலைக் கொருகால் மிகுதலால் தாங்க மாட்டாது, அதனை, உம்பால் வந்து வாய்திறந்து சொல்வார்களாயின், நீர் அதனை கேட்டும் கேளாததுபோல வாளாவிருப்பீர்; இஃதே நும் இயல்பாயின், நீரே இனிது வாழ்ந்துபோமின்!

திருவாரூர்

விற்றுக் கொள்வீர் ஒற்றி யல்லேன்
விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்த தில்லை
கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர்
நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால்

வாழ்ந்து போதீரே. **#965**

அடிகளே, நீர் என்னைப் பிறருக்கு விற்கவும் உரிமையுடையீர்; ஏனெனில், யான் உமக்கு ஒற்றிக் கலம் அல்லேன்; உம்மை விரும்பி உமக்கு என்றும் ஆளாதற்றன்மையும் பட்டேன்; பின்னர் யான் குற்றம் ஒன்றும் செய்ததில்லை; இவ்வாறாகவும் என்னை நீர் குருடனாக்கிவிட்டீர்; எதன்பொருட்டு என் கண்ணைப் பறித்துக் கொண்டீர்? அதனால் நீர்தாம் பழியுட்பட்டீர்; எனக்குப் பழி யொன்றில்லை; பன்முறை வேண்டியபின் ஒரு கண்ணைத் தந்தீர்; மற்றொரு கண்ணைத்தர உடன்படாவிடின், நீரே இனிது வாழ்ந்துபோமின்!

திருவாரூர்

அன்றில் முட்டா தடையுஞ் சோலை
ஆரூ ரகத்தீரே
கன்று முட்டி உண்ணச் சுரந்த
காலி யவைபோல
என்றும் முட்டாப் பாடும் அடியார்
தங்கண் காணாது
குன்றின் முட்டிக் குழியில் விழுந்தால்
வாழ்ந்து போதீரே. **#966**

அன்றிற் பறவைகள் நாள்தோறும் தப்பாது வந்து சேர்கின்ற, சோலையையுடைய திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானிரே, கன்றுகள் முட்டி உண்ணத் தொடங்கிய பின்னே பால் சுரக்கின்ற பசுக்களிடத்தில் பாலை உண்ணும் அக் கன்றுகள் போல, நாள்தோறும் தப்பாது பாடியே உம்மிடத்துப் பயன்பெறுகின்ற அடியார்கள், பலநாள் பாடியபின்னும் தங்கள் கண் காணப்பெறாது, குன்றின்மேல் முட்டிக் குழியினுள் வீழ்ந்து வருந்துவராயின், நீரே இனிது வாழ்ந்துபோமின்!

திருவாரூர்

துருத்தி யுறைவீர் பழனம் பதியாச்
சோற்றுத் துறையாள்வீர்
இருக்கை திருவா ரூரே உடையீர்
மனமே யெனவேண்டா
அருத்தி யுடைய அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமைப் பணித்தால்
வாழ்ந்து போதீரே. **#967**

இருக்குமிடம் திருவாரூராகவே உடையவரே, நீர் இன்னும்,

'திருத்துருத்தி, திருப்பழனம்' என்பவைகளையும் ஊராகக் கொண்டு வாழ்வீர்; திருச்சோற்றுத்துறையையும் ஆட்சி செய்வீர்; ஆதலின், உமக்கு இடம் அடியவரது மனமே எனல் வேண்டா; அதனால் உம்பால் அன்புமிக்க அடியார்கள், தங்கள் அல்லலை உம்மிடம் வந்து சொன்னால், நீர் அவர்களை இப்பிறப்பில் வருத்தியே வைத்து, மறுபிறப்பிற்றான் நன்மையைச் செய்வதாயின், நீரே இனிது வாழ்ந்துபோமின்!

திருவாரூர்

செந்தண் பவளந் திகழுஞ் சோலை
இதுவோ திருவாரூர்
எந்தம் அடிகேள் இதுவே யாமா
றுமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடும் மடியார்
தங்கண் காணாது
வந்தெம் பெருமான் முறையோ என்றால்
வாழ்ந்து போதீரே. **#968**

எங்கள் தலைவரே, இது, செவ்விய தண்ணிய பவளம்போலும் இந்திரகோபங்கள் விளங்குகின்ற சோலையை யுடைய திருவாரூர் தானோ? நன்கு காண இயலாமையால் இதனைத் தெள?கின்றிலேன்; உமக்கு அடிமைப்பட்டோர்க்கு உண்டாகும் பயன், இதுதானோ? இசை வண்ணங்கள் பலவும் அமைந்த பாடலால் உம்மைப் பாடுகின்ற அடியார்கள், தங்கள் கண் காணப்பெறாது, உம்பால் வந்து, 'எம் பெருமானே, முறையோ' என்று சொல்லி நிற்றல் ஒன்றே உளதாகுமானால், நீரே இனிது வாழ்ந்துபோமின்!

திருவாரூர்

தினைத்தாள் அன்ன செங்கால் நாரை
சேருந் திருவாரூர்ப்
புனத்தார் கொன்றைப் பொன்போல் மாலைப்
புரிபுன் சடையீரே
தனத்தா லின்றித் தாந்தாம் மெலிந்து
தங்கண் காணாது
மனத்தால் வாடி அடியார் இருந்தால்
வாழ்ந்து போதீரே. **#969**

தினையது தாள்போலும் சிவந்த கால்களையுடைய நாரைகள் திளுகின்ற திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்ற, முல்லை நிலத்தில் உள்ள கொன்றையினது மலரால் ஆகிய பொன்மாலை போலும் மாலையை

அணிந்த, திரிக்கப்பட்ட புல்லிய சடையை யுடையவரே, உம் அடியவர், தாம் பொருளில்லாமையால் இன்றி, தங்கள் கண் காணப்பெறாது வருந்தி, மனத்தினுள்ளே வாட்ட முற்றிருப்பதனால், நீரே இனிது வாழ்ந்து போமின்!

திருவாரூர்

ஆயம் பேடை அடையுஞ் சோலை
ஆரூ ரகத்தீரே
ஏயெம் பெருமான் இதுவே ஆமா
றுமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி
மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால்
வாழ்ந்து போதீரே. **#970**

ஆண் பறவைக் கூட்டம், பெண் பறவைக் கூட்டத்துடன் வந்து சேர்கின்ற சோலையையுடைய திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்றவரே, எங்களுக்குப் பொருந்திய பெருமானிரே, உமக்கு அடிமைப்பட்டோர்க்கு உண்டாகும் பயன் இதுதானோ? நீர் எனக்கு உம்மை மறவாத மனத்தைக் கொடுத்து, பின்பு ஒரு மாயத்தை உண்டாக்கி, அது காரணமாகப் பிறவியிற் செலுத்தி, உடம்பைக் கொடுத்து, இப்போது கண்ணைப் பறித்துக்கொண்டால், நீரே இனிது வாழ்ந்துபோமின்!

திருவாரூர்

கழியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க்
கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோம் உம்மை
இகழா தேத்துவோம்
பழிதா னாவ தறியீர் அடிகேள்
பாடும் பத்தரோம்
வழிதான் காணா தலமந் திருந்தால்
வாழ்ந்து போதீரே. **#971**

அடிகளே, யாங்கள் இழிவில்லாத உயர்குலத்திலே பிறந்தோம்; அதற்கேற்ப உம்மை இகழ்தல் இன்றி, நீர், கழியும், கடலும், மரக்கலமும் நிலமுமாய்க் கலந்து நின்ற தன்மையைச் சொல்லும் சொற்களையுடையேமாய்த் துதிப்போம்; அவ்வாறாகலின் எம்மை வருத்துதலால் உமக்குப் பழி உண்டாதலை நினையீர்; அதனால், உம்மைப்பாடும் அடியேமாகிய யாங்கள், வழியைக் காணமாட்டாது

அலைந்து வாழ்வதாயின், நீரே இனிது வாழ்ந்து போமின்!

திருவாரூர்

பேயோ டேனும் பிரிவொன் றின்னா
தென்பா**?** பிறரெல்லாம்
காய்தான் வேண்டிற் கனிதா னன்றோ
கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும்
உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே. **#972**

திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானிரே, விரும்பப்பட்டது காயே எனினும், விரும்பிக் கைக் கொண்டால், அது கனியோடொப்பதேயன்றோ? அதனால் உம்மைத் தவிரப் பிறரெல்லாம், பேயோடு நட்புச்செய்யினும், பிரிவு' என்பதொன்று துன்பந்தருவதே என்று சொல்லி, அதனைப்பிரிய ஒருப்படார், ஆனால், நீரோ, உமது திருவோலக்கத்தின் நடுவே நாய்போல முறையிட்டுத் திரிந்தாலும், உமக்கு ஆட்பட்டவர்கட்கு, வாய்திறந்து ஒருசொல் சொல்லமாட்டீர்; இதுவே உமது நட்புத் தன்மையாயின், நீரே இனிது வாழ்ந்து போமின்!

திருவாரூர்

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை
இதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டா னம்மே
இடமாக் கொண்டீரே
இருந்தும் நின்றும் கிடந்தும் உம்மை
இகழா தேத்துவோம்
வருந்தி வந்தும் உமக்கொன் றுரைத்தால்
வாழ்ந்து போதீரே. **#973**

திருமூலட்டானத்தையே பொருந்தி இடமாகக் கொண்டவரே, இது, செருந்தி மரங்கள், தமது மலர்களாகிய செம் பொன்னை மலர்கின்ற திருவாரூர்தானோ? இருத்தல், நிற்றல், கிடத்தல் முதலிய எல்லா நிலைகளினும்' உம்மை இகழாது துதிப்பேமாகிய யாம், உம்பால் வருத்தமுற்று வந்து, ஒரு குறையை வாய்விட்டுச் சொன்னாலும், நீர் வாய்திறவாதிருப்பிராயின், நீரே இனிது வாழ்ந்து போமின்!

திருவாரூர்

காரூர் கண்டத் தெண்டோள் முக்கண்

கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே
அடிப்பேர் ஆரூரன்.
பாரூர் அறிய என்கண் கொண்டீர்
நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர்
வாழ்ந்து போதீரே. **#974**

பல நூல்களும் ஆகி, கருமை மிக்க கண்டத்தையும், எட்டுத் தோள்களையும், மூன்று கண்களையும் உடைய, திருவாரூர்த் திருமூலட்டானத்தில் எழுந்தருளியிருக்கின்ற கச்சுப்பொருந்திய தனங்களையுடையவளாகிய உமாதேவியது பாகத்தைக் கொண்டவரே, இவ்வுலகில் உள்ள ஊரெல்லாம் அறிய, நீர், உமது திருவடிப் பெயரைப் பெற்ற நம்பியாரூரனாகிய எனது கண்ணைப் பறித்துக் கொண்டீர்; அதனால் நீர்தாம் பழியுட்பட்டீர்; இனி நீர் இனிது வாழ்ந்து போமின்!

திருவாரூர்ப்பரவையுண்மண்டளி

திருவாரூர்ப்பரவையுண்மண்டளி

திருவாரூர்ப்பரவையுண்மண்டளி,
பண் - பஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : வன்மீகநாதர்.
தேவியார் : அல்லியங்கோதையம்மை.

தூவாயா தொண்டுசெய் வார்படு துக்கங்கள்
காவாயா கண்டுகொண் டார்ஐவர் காக்கிலும்
நாவாயால் உன்னையே நல்லன சொல்லுவேற்
காவாஎன் பரவையுண் மண்டளி அம்மானே. **#975**

தூய்தாகிய வாயினையுடையவனே, திருப்பரவையுண் மண்டளியில் எழுந்தருளி யிருக்கின்ற தலைவனே, உனக்குத் தொண்டு செய்பவர்கள் படுகின்ற துன்பங்களை நீக்கமாட்டாயோ! ஐவர்கள் என்னை எப்போதும் குறிக்கொண்டு நோக்கி, உன்னை அடையவொட்டாமல் தடுப்பினும், நாவையுடைய வாயால், உன்னையே, நல்லவற்றைச் சொல்லிப் புகழ்வேனாகிய எனக்கு, 'ஆவா' என்று இரங்கி, அச்சந் தீர்த்தருள்.

திருவாரூர்ப்பரவையுண்மண்டளி

பொன்னானே புலவர்க்கு நின்புகழ் போற்றலாம்
தன்னானே தன்னைப் புகழ்ந்திடுந் தற்சோதி
மின்னானே செக்கர்வா னத்திள ஞாயி
றன்னானே பரவையுண் மண்டளி அம்மானே. **#976**

பொன்போலச் சிறந்தவனே, தன்னாலே தன்னைப் புகழ்கின்ற, தானே விளங்குவதோர் ஒளியானவனே, ஒரோவொரு கால் தோன்றி மறைதலால் மின்னலொடு ஒப்பவனே, செக்கர் வானத்தில் தோன்றும் இளஞ்சூரியன் போலும் திருமேனியை உடையவனே, திருப்பரவையுண் மண்டளியில் எழுந்தருளி இருக்கின்ற தலைவனே, நின் புகழை எடுத்துரைத்தல், ஞானியர்க்கு இயல்வதாம்,

திருவாரூர்ப்பரவையுண்மண்டளி

நாமாறா துன்னையே நல்லன சொல்லுவார்
போமாறென் புண்ணியா புண்ணிய மானானே
பேய்மாறாப் பிணமிடு காடுகந் தாடுவாய்க்
காமாறென் பரவையுண் மண்டளி அம்மானே. **#977**

புண்ணியத்தின் பயனாயும், புண்ணியமாயும் உள்ளவனே, திருப்பரவையுண்மண்டளியுள் எழுந்தருளியிருக்கின்ற தலைவனே, நீ அருளாதுவிடின், நாப்பிறழாது உன்னையே நல்லனவற்றாற் புகழ்கின்றவர்கள் போவது எவ்வாறு? பேய்கள் நீங்காத, பிணத்தை இடுகின்ற காட்டில் விரும்பி ஆடுகின்ற உனக்கு அடியவராதல் எவ்வாறு?

திருவாரூர்ப்பரவையுண்மண்டளி

நோக்குவேன் உன்னையே நல்லன நோக்காமைக்
காக்கின்றார் கண்டுகொண் டார்ஐவர் காக்கிலும்
வாக்கென்னும் மாலைகொண் டுன்னை என்மனத்
தார்க்கின்றேன் பரவையுண் மண்டளி அம்மானே. **#978**

திருப்பரவையுண் மண்டளியில் எழுந்தருளியிருக்கின்ற தலைவனே, ஐவர் என்னை நல்லனவற்றை நோக்காது குறிக்கொண்டு காக்கின்றார். அவ்வாறு காத்து நிற்பினும், சொல்லென்னும் மாலையால், உன்னை என் மனத்தில் இருத்துகின்றேன்; உன்னையே நினைக்கின்றேன்.

திருவாரூர்ப்பரவையுண்மண்டளி

பஞ்சேரும் மெல்லடி யாளையொர் பாகமாய்
நஞ்சேரும் நன்மணி கண்டம் உடையானே
நெஞ்சேர நின்னையே உள்கி நினைவாரை
அஞ்சேலென் பரவையுண் மண்டளி அம்மானே. **#979**

செம்பஞ்சு காணப்படும் மெல்லிய அடிகளை யுடையவளாகிய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு, நஞ்சு காணப்படும், நல்ல நீலமணி போலும் கண்டத்தை உடையவனே, திருப்பரவையுண் மண்டளியில் எழுந்தருளியிருக்கின்ற தலைவனே, உன்னை நெஞ்சில் விளங்கும்படி அழுந்தி நினைக்கின்ற அடியார்களை, 'அஞ்சேல்' என்று சொல்லிக் காத்தருள்.

திருவாரூர்ப்பரவையுண்மண்டளி

அம்மானே ஆகம சீலர்க் கருள்நல்கும்
பெம்மானே பேரரு ளாளன் பிடவூரன்
தம்மானே தண்டமிழ் நூற்புல வாணர்க்கோர்
அம்மானே பரவையுண் மண்டளி அம்மானே. **#980**

யாவர்க்கும் தலைவனே, ஆகம ஒழுக்கத்தை உடையவர்கட்கு, உனது திருவருளைத் தருகின்ற பெரியோனே, திருப்பிடவூரில் உறையும் பேரருளாளனுக்குத் தலைவனே, தண்ணிய தமிழால் இயன்ற நூல்களை வல்ல புலமை வாழ்க்கை உடையவர்க்கு, ஒப்பற்ற முதல்வனே,

திருப்பரவையுண் மண்டளியில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனே, உன்னை மறவாது நினைக்கின்ற அடியார்களை 'அஞ்சேல்' என்று சொல்லிக் காத்தருள்.

திருவாரூர்ப்பரவையுண்மண்டளி

விண்டானே மேலையார் மேலையார் மேலாய
எண்டானே எழுத்தொடு சொற்பொருள் எல்லாமுன்
கண்டானே கண்டனைக் கொண்டிட்டுக் காட்டாயே
அண்டானே பரவையுண் மண்டளி யம்மானே. **#981**

'மேல் உள்ளார்க்கு மேல் உள்ளார்க்கு மேல் உள்ள வானம், எண், எழுத்து, சொல், பொருள் மற்றும் எல்லாவற்றையும் முதலிற் படைத்தவனே, வானுலகத்தில் உள்ளவனே, திருப்பரவையுண் மண்டளியில் எழுந்தருளியிருக்கின்ற தலைவனே, முன்பு என் கண்ணைக் கொண்டாய்; இப்பொழுது அதனைக் கொடுத்து உன்னைக் காட்டியருள்.

திருவாரூர்ப்பரவையுண்மண்டளி

காற்றானே கார்முகில் போல்வதொர் கண்டத்தெம்
கூற்றானே கோல்வளை யாளையொர் பாகமாய்
நீற்றானே நீள்சடை மேல்நிறை யுள்ளதோர்
ஆற்றானே பரவையுண் மண்டளி அம்மானே. **#982**

காற்றாய் உள்ளவனே, கரிய மேகம் போல்வதாகிய ஒப்பற்ற கண்டத்தையுடைய, எம் இனத்தவனே, கோல் தொழில் அமைந்த வளைகளை அணிந்தவளாகிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு திரு நீற்றை அணிந்தவனே, நீண்ட சடையின் மேல் நிறைவுள்ளதாகிய ஒரு நதியை உடையவனே, திருப்பரவையுண் மண்டளியில் எழுந்தருளியிருக்கின்ற தலைவனே.

திருவாரூர்ப்பரவையுண்மண்டளி

செடியேன்நான் செய்வினை நல்லன செய்யாத
கடியேன்நான் கண்டதே கண்டதே காமுறும்
கொடியேன்நான் கூறுமா றுன்பணி கூறாத
அடியேன் நான் பரவையுண் மண்டளி அம்மானே. **#983**

திருப்பரவையுண் மண்டளியில் எழுந்தருளியிருக்கின்ற தலைவனே, நான் குற்றமுடையேன்; செய்யும் செயல்களை நல்லனவாகச் செய்யாத தீமையேன்; கண்டதையெல்லாம் பெற விரும்பும் கொடியேன்; உன் ஆணையின் வண்ணம் உன்னைப் பாடு மாற்றாற் பாடாத ஓர் அடியேன்.

திருவாரூர்ப்பரவையுண்மண்டளி

கரந்தையும் வன்னியும் மத்தமுங் கூவிளம்
பரந்தசீர்ப் பரவையுண் மண்டளி அம்மானை
நிரம்பிய ஊரன் உரைத்தன பத்திவை
விரும்புவார் மேலையார் மேலையார் மேலாரே. **#984**

கரந்தை, வன்னி, ஊமத்தை, கூவிளை இவைகளை அணிந்த பரவிய புகழையுடைய திருப்பரவையுண் மண்டளியில் எழுந்தருளியிருக்கின்ற தலைவனை, அன்பு நிறைந்த நம்பியாரூரன் பாடிய பத்துப் பாடல்களாகிய இவைகளை விருப்புற்றுப் பாடுவோர், மேலோர்க்கு மேலோர்க்கு மேலோராவார்.

திருநனிபள்ளி

திருநனிபள்ளி

திருநனிபள்ளி,
பண் - பஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : நற்றுணையப்பர்.
தேவியார் : பர்வதராசபுத்திரி.

ஆதியன் ஆதிரையன் அயன்
மாலறி தற்கரிய
சோதியன் சொற்பொருளாய்ச் சுருங்
காமறை நான்கினையும்
ஓதியன் உம்பர்தங்கோன் உல
கத்தினுள் எவ்வுயிர்க்கும்
நாதியன் நம்பெருமான் நண்ணும்
ஊர்நனி பள்ளியதே. **#985**

எப்பொருட்கும் முதலானவனும், ஆதீரை நாண்மீனைத் தனக்கு உரியதாகக் கொண்டவனும், பிரமனும் திருமாலும் அறிதற்கரிய ஒளிவடிவானவனும், சொல்லும் சொற்பொருளுமாய் நின்று, சுருங்குதல் இல்லாத வேதங்கள் நான்கினையும் ஓதியவனும், தேவர்களுக்குத் தலைவனும், உலகில் உள்ள எல்லா உயிர்கட்கும் தந்தையும் ஆகிய இறைவன் பொருந்தியிருக்கின்ற ஊர், திருநனிபள்ளியே.

திருநனிபள்ளி

உறவிலி ஊனமிலி உண
ரார்புரம் மூன்றெரியச்
செறுவிலி தன்னினைவார் வினை
யாயின தேய்ந்தழிய
அறவில கும்மருளான் மரு
ளார்பொழில் வண்டறையும்
நறவிரி கொன்றையினான் நண்ணும்
ஊர்நனி பள்ளியதே. **#986**

உறவுத் தொடக்கு இல்லாதவனும், குறைவில்லாதவனும், தன்னை மதியாதவரது மூன்று ஊர்களும் எரிந்தொழியும்படி அழித்த வில்லை உடையவனும், தன்னை நினைபவரது வினையெல்லாம் வலிமை குன்றி அழியும்படி, மிகவும் விளங்குகின்ற திருவருளை உடையவனும், தேனோடு மலர்கின்ற கொன்றை மலர் மாலையை அணிந்தவனும்

ஆகிய இறைவன் பொருந்தியிருக்கின்ற ஊர், மயக்கத்தைத் தருகின்ற சோலைகளில் வண்டுகள் ஒலிக்கின்ற திருநனிபள்ளியே.

திருநனிபள்ளி

வானுடை யான்பெரியான மனத
தாலும் நினைப்பரியான்
ஆனிடை ஐந்தமர்ந்தான் அணு
வாகியொர் தீயுருக்கொண்
டூனுடை இவ்வுடலம் ஒடுங்
கிப்புகுந் தான்பரந்தான்
நானுடை மாடெம்பிரான் நண்ணும்
ஊர்நனி பள்ளியதே. **#987**

விண்ணுலகத்தைத் தனதாக உடையவனும், யாவரினும் பெரியோனும், மனத்தாலும் நினைத்தற்கரியவனும், பசுவினிடத்துத் தோன்றுகின்ற ஐந்து பொருள்களை விரும்புபவனும், நுண்ணிய பொருளாகி, சுடர் வடிவத்தைக்கொண்டு, ஊனையுடையதாகிய இவ்வுடம்பினுள் அடங்கிப் புகுந்தவனும், உலகம் எல்லாம் தன்னுள் அடங்க விரிந்தவனும், நான் உடைய செல்வமாய் இருப்பவனும் ஆகிய எம்பெருமான் பொருந்தியிருக்கின்ற ஊர் திருநனிபள்ளியே.

திருநனிபள்ளி

ஓடுடை யன்கலனா உடை
கோவண வன்னுமையோர்
பாடுடை யன்பலிதேர்ந் துணும்
பண்புடை யன்பயிலக்
காடுடை யன்னிடமா மலை
ஏழுங் கருங்கடல்சூழ்
நாடுடை நம்பெருமான் நண்ணும்
ஊர்நனி பள்ளியதே. **#988**

ஓட்டினை உண்கலமாகவும், கோவணத்தை உடையாகவும், உடையவனும், ஒரு பக்கத்தில் உமையை உடையவனும், பிச்சை எடுத்து உண்ணும் தன்மையை உடையவனும், வாழ்வதற்குரிய இடமாகக் காட்டை உடையவனும், ஏழு மலைகளையும், கரிய கடல் சூழ்ந்த ஏழு நாடுகளையும் உடையவனும் ஆகிய நம்பெருமான் பொருந்தியிருக்கின்ற ஊர், திருநனிபள்ளியே.

திருநனிபள்ளி

பண்ணற் கரியதொரு படை

ஆழி தனைப் படைத்துக்
கண்ணற் கருள்புரிந்தான்
கரு தாதவர் வேள்விஅவி
உண்ணற் கிமையவரை
உருண் டோட உதைத்துகந்து
நண்ணற் கரியபிரான் நண்ணும்
ஊர்நனி பள்ளியதே. **#989**

ஆக்குதற்கு அரிதாகிய சக்கரப்படை ஒன்றை ஆக்கி, அதனைத் திருமாலுக்கு அளித்தவனும், தன்னை மதியாதவனாகிய தக்கனது வேள்வியில் அவிசை உண்ணச் சென்ற தேவர் அனைவரையும் சிதறி ஓடும்படி தாக்கிப்பின் அவர்கட்கு அருள் செய்து, ஒருவராலும் அணுகுதற்கரிய தலைவனாகியவனும் ஆகிய இறைவன் பொருந்தியிருக்கும் ஊர், திருநனிபள்ளியே.

<u>திருநனிபள்ளி</u>

மல்கிய செஞ்சடைமேல் மதி
யும்மர வும்முடனே
புல்கிய ஆரணன்எம் புனி
தன்புரி நூல்விகிர்தன்
மெல்கிய விற்றொழிலான் விருப்
பன்பெரும் பார்த்தனுக்கு
நல்கிய நம்பெருமான் நண்ணும்
ஊர்நனி பள்ளியதே. **#990**

நிறைந்த, சிவந்த சடையின்மேல், சந்திரனும் பாம்பும் ஒருங்கியைந்து பொருந்திய திருமேனியனாகிய வேத முதல்வனும், எங்கள் தூயோனும், முப்புரி நூலையணிந்த, வேறுபட்ட தன்மையை உடையவனும், தன்மேல் அன்புடையவனாகிய மிக்க தவத்தையுடைய அருச்சுனனுக்கு, மெல்லிய வில்தொழிலினால் அருள்பண்ணினவனும் ஆகிய இறைவன் பொருந்தியிருக்கும் ஊர், திருநனிபள்ளியே.

<u>திருநனிபள்ளி</u>

அங்கமொ ராறவையும் அரு
மாமறை வேள்விகளும்
எங்கும் இருந்தந்தணர் எரி
மூன்றவை யோம்புமிடம்
பங்கய மாமுகத்தாள் உடை
பங்கன் உறைகோயில்
செங்கயல் பாயும்வயல் திரு

வூர்நனி பள்ளியதே. #991
தாமரை மலர்போலும் முகத்தையுடைய உமா தேவியைப் பாகத்தில் உடையவனாகிய இறைவன் எழுந்தருளியிருக்கின்ற இடம், அந்தணர்கள் மூன்று எரிகளோடே, ஆறு அங்கங்களையும், அரிய வேதங்களையும், வேள்விகளையும் எவ்விடத்தும் இருந்து வளர்க்கின்ற இடமாகிய, செவ்விய கயல்மீன்கள் துள்ளுகின்ற வயல்களையுடைய அழகிய ஊரான திருநனிபள்ளியே.

திருநனிபள்ளி

திங்கட் குறுந்தெரியல் திகழ்
கண்ணியன் நுண்ணியனாய்
நங்கட் பிணிகளைவான் அரு
மாமருந் தேழ்பிறப்பும்
மங்கத் திருவிரலால் அடர்த்
தான்வல் அரக்கனையும்
நங்கட் கருளும்பிரான் நண்ணும்
ஊர்நனி பள்ளியதே. #992

சிறிய பிறையாகிய, விளக்கம் அமைந்த கண்ணிமாலையைச் சூடியவனும், நுண்ணியனாய் நின்று, எழுவகைப் பிறப்புக்களும் கெடும்படி, நம்மிடத்து உள்ள வினையாகிய நோயை நீக்குகின்ற, உயர்ந்த அரிய பெரிய மருந்தாய் உள்ளவனும், வலிய அரக்கனாகிய இராவணனையும், அழகிய ஒரு விரலால் நெரித்தவனும் ஆகிய, நமக்கு அருள்செய்யும் பெருமான் பொருந்தியிருக்கின்ற ஊர், திருநனிபள்ளியே.

திருநனிபள்ளி

ஏன மருப்பினொடும் எழில்
ஆமையும் பூண்டுகந்து
வான மதிள்அரணம் மலை
யேசிலை யாவளைத்தான்
ஊனமில் காழிதன்னுள் ளுயர்
ஞானசம் பந்தர்க்கன்று
ஞானம் அருள்புரிந்தான் நண்ணும்
ஊர்நனி பள்ளியதே. #993

பன்றியின் கொம்பையும், அழகிய ஆமையோட்டையும் விரும்பியணிந்து, வானத்திற்செல்லும் மதிலாகிய அரணின்முன், மலையையே வில்லாக வளைத்து நின்றவனும், குறையில்லாத சீகாழிப்பதியுள் உயர்ந்தோராகிய ஞானசம்பந்தர்க்கு ஞானத்தை அருள்செய்தவனும் ஆகிய இறைவன் பொருந்தியிருக்கும் ஊர்,

திருநனிபள்ளியே.

திருநனிபள்ளி

காலமும் நாள்கழியுந் நனி
பள்ளி மனத்தின்உள்கிக்
கோலம தாயவனைக் குளிர்
நாவல ஊரன்சொன்ன
மாலை மதித்துரைப்பார் மண்
மறந்துவா னோர்உலகில்
சாலநல் லின்பமெய்தித் தவ
லோகத் திருப்பவரே. **#994**

காலமும் நாள்தோறும் கழியாநிற்கும், அதனால், குளிர்ந்த திருநாவலூரனாகிய நம்பியாரூரன், கருணையால் திருவுருக்கொண்ட இறைவனைத் திருநனிபள்ளியுள் வைத்து மனத்தில் நினைத்துப் பாடிய இப்பாமாலையின் பெருமையை உணர்ந்து பாடுவோர், தேவருலகில் மிக்க இன்பத்தைத் துய்த்து, பின்பு மண்ணுலகத்தில் வருதலை மறந்து, சிவலோகத்தில் இருப்பவரே யாவர்.

திருநன்னிலத்துப்பெருங்கோயில்

திருநன்னிலத்துப்பெருங்கோயில்

திருநன்னிலத்துப்பெருங்கோயில்,
பண் - பஞ்சமம்

தண்ணியல் வெம்மையினான் தலை
யிற்கடை தோறும்பலி
பண்ணியன் மென்மொழியா ரிடங்
கொண்டுழல் பண்டரங்கன்
புண்ணியநான்மறையோர் முறையா
லடிபோற் றிசைப்ப
ண்ணிய நன்னிலத்துப் பெருங்
கோயில் நயந்தவனே. **#995**

புண்ணியத்தைச் செய்கின்ற, நான்கு வேதங்களையும் உணர்ந்த அந்தணர்கள், முறைப்படி தனது, திருவடிக்குப் போற்றி சொல்லி வழிபடும்படி, பலரும் அடைந்து வணங்கும் திருநன்னிலத்தில் உள்ள பெருங்கோயிலை விரும்பி எழுந்தருளியிருக்கின்ற பெருமான், தண்ணிய இயல்பினையும், வெவ்விய இயல்பினையும் ஒருங்குடையவன்; வாயில்கள்தோறும் சென்று, பண்போலும் இயல்பினையுடைய இனிய மொழியையுடைய மகளிரிடம் தலையோட்டில் பிச்சை யேற்றுத்திரிகின்ற 'பாண்டரங்கம்' என்னும் கூத்தினை யுடையவன்.

திருநன்னிலத்துப்பெருங்கோயில்

வலங்கிளர் மாதவஞ்செய் மலை
மங்கையொர் பங்கினனாய்ச்
சலங்கிளர் கங்கைதங்கச் சடை
யொன்றிடை யேதரித்தான்
பலங்கிளர் பைம்பொழில்தண் பனி
வெண்மதி யைத்தடவ
நலங்கிளர் நன்னிலத்துப் பெருங்
கோயில் நயந்தவனே. **#996**

பயன் மிகுந்த, பசிய சோலைகள், குளிர்ந்த, வெள்ளிய சந்திரனைத் தடவுதலால் அழகு மிகுகின்ற திருநன்னிலத்தில் உள்ள பெருங்கோயிலை விரும்பி எழுந்தருளியிருக்கின்ற பெருமான், வெற்றி மிக்க, பெரிய தவத்தைச் செய்த மலைமகளை ஒருபாகத்தில் உடையவனாய், வெள்ளம் மிகுந்த கங்கையைத் தனது சடைகளுள் ஒன்றிலே தங்கும்படி தடுத்து வைத்துள்ளான்.

திருநன்னிலத்துப்பெருங்கோயில்

கச்சியன் இன்கருப்பூர் விருப்
பன்கரு திக்கசிவார்
உச்சியன் பிச்சையுண்ணி உல
கங்களெல் லாமுடையான்
நொச்சியம் பச்சிலையான் நுரை
தீர்புன லால்தொழுவார்
நச்சிய நன்னிலத்துப்
பெருங் கோயில் நயந்தவனே. **#997**

நொச்சியின் பச்சிலையும், நுரை இல்லாத தூய நீரும் கொண்டு வழிபடுவோர் விரும்புகின்ற திருநன்னிலத்தில் உள்ள பெருங்கோயிலை விரும்பி எழுந்தருளியிருக்கின்ற பெருமான். கச்சிப்பதியில் எழுந்தருளியிருப்பவன்; இனிய கரும்பின்கண் செல்லுகின்ற விருப்பம்போலும் விருப்பம் செல்லுதற்கு இடமானவன்; தன்னை நினைந்து உருகுபவரது தலைமேல் இருப்பவன்; பிச்சையேற்று உண்பவன்; உலகங்கள் எல்லாவற்றையும் உடையவன்.

திருநன்னிலத்துப்பெருங்கோயில்

பாடிய நான்மறையான் படு
பல்பிணக் காடரங்கா
ஆடிய மாநடத்தான் அடி
போற்றியென் றன்பினராய்ச்
சூடிய செங்கையினார் பலர்
தோத்திரம் வாய்த்தசொல்லி
நாடிய நன்னிலத்துப் பெருங்
கோயில் நயந்தவனே. **#998**

தலைமேற் குவித்த கையை உடைய பலர், மிக்க அன்புடையவர்களாய். 'திருவடி போற்றி' என்று, பொருந்திய தோதிரங்களைச் சொல்லி அடைகின்ற திருநன்னிலத்தில் உள்ள பெருங்கோயிலை விரும்பி எழுந்தருளியிருக்கின்ற இறைவன், தன்னால் பாடப்பட்ட நான்கு வேதங்களை யுடையவன்; இறந்த பல பிணங்களையுடைய காடே அரங்கமாக ஆடுகின்ற, சிறந்த நடனத்தையுடையவன்.

திருநன்னிலத்துப்பெருங்கோயில்

பிலந்தரு வாயினொடு
பெரி தும்வலி மிக்குடைய
சலந்தரன் ஆகம்இரு

பிள வாக்கிய சக்கரம்முன்
நிலந்தரு மாமகள்கோன்
நெடு மாற்கருள் செய்தபிரான்
நலந்தரு நன்னிலத்துப் பெருங்
கோயில் நயந்தவனே. **#999**

நன்மையைத் தருகின்ற திருநன்னிலத்தில் உள்ள பெருங்கோயிலை விரும்பி எழுந்தருளியிருக்கின்ற பெருமான், பிலம் போன்ற வாயையும், பெரிதும் மிகுந்த வலிமையையும் உடைய சலந்தராசுரனது உடலை இரண்டு பிளவாகச் செய்த சக்கராயுதத்தை, முன்பு, மண்ணை உண்டு உமிழ்ந்த திருமகள் கணவனாகிய திருமாலுக்கு அளித்த தலைவன்.

<u>திருநன்னிலத்துப்பெருங்கோயில்</u>

வெண்பொடி மேனியினான் கரு
நீல மணிமிடற்றான்
பெண்படி செஞ்சடையான் பிர
மன்சிரம் பீடழித்தான்
பண்புடை நான்மறையோர் பயின்
றேத்திப்பல் கால்வணங்கும்
நண்புடை நன்னிலத்துப் பெருங்
கோயில் நயந்தவனே. **#1000**

நல்ல பண்பினையுடைய நான்கு வேதங்களை உணர்ந்தவர்களாகிய அந்தணர்கள், பல மந்திரங்களையும் நன்கு பயின்று, பன்முறை துதித்து வணங்கும், நட்பாம் தன்மையுடைய திருநன்னிலத்தில் உள்ள பெருங்கோயிலை விரும்பி எழுந்தருளியிருக்கின்ற பெருமான், வெண்பொடியைப் பூசிய மேனியை உடையவன்; நீல மணிபோலும் கரிய கண்டத்தை யுடையவன்; கங்கையாகிய பெண் பொருந்தியுள்ள சடையை உடையவன்; பிரமதேவனது தலையை, பெருமை கெட அறுத்தவன்.

<u>திருநன்னிலத்துப்பெருங்கோயில்</u>

தொடைமலி கொன்றைதுறுஞ் சடை
யன்சுடர் வெண்மழுவாட்
படைமலி கையன்மெய்யிற் பகட்
டீருரிப் போர்வையினான்
மடைமலி வண்கமலம் மலர்
மேன்மட வன்னமன்னி
நடைமலி நன்னிலத்துப் பெருங்
கோயில் நயந்தவனே. **#1001**

இளமையான அன்னப் பறவைகள், நீர்மடைகளில் நிறைந்துள்ள, வளவிய தாமரை மலர்மேல் தங்கிப் பின் அப்பாற் சென்று நடத்தல் நிறைந்த திருநன்னிலத்தில் உள்ள பெருங்கோயிலை விரும்பி எழுந்தருளியிருக்கின்ற பெருமான், மாலையாக நிறைந்த கொன்றைமலர் பொருந்திய சடையை உடையவன்; ஒளிவீசுகின்ற வெள்ளிய மழுவாகிய ஆளும் படைக்கலம் நிறைந்த கையை உடையவன்; திருமேனியில் யானையினது உரித்த தோலாகிய போர்வையை உடையவன்.

திருநன்னிலத்துப்பெருங்கோயில்

குளிர்தரு திங்கள்கங்கை குர
வோடரக் கூவிளமும்
மிளிர்தரு புன்சடைமேல் உடை
யான்விடை யான்விரைசேர்
தளிர்தரு கோங்குவேங்கை தட
மாதவி சண்பகமும்
நளிர்தரு நன்னிலத்துப் பெருங்
கோயில் நயந்தவனே. **#1002**

நறுமணம் பொருந்திய, தளிர்களைத் தருகின்ற கோங்கு, வேங்கை, வளைவையுடைய குருக்கத்தி, சண்பகம் முதலிய பூமர வகைகள் பலவும் குளிர்ச்சியைத் தருகின்ற திருநன்னிலத்தில் உள்ள பெருங்கோயிலை விரும்பி எழுந்தருளியிருக்கின்ற பெருமான், தனது ஒளிவீசுகின்ற, புல்லிய சடையின்மேல், குளிர்ச்சியைத் தருகின்ற சந்திரன், கங்கை, பாம்பு, குராமலர், கூவிள இலை முதலிய இவைகளை உடையவன்; இடபத்தை ஊர்கின்றவன்;

திருநன்னிலத்துப்பெருங்கோயில்

கமர்பயில் வெஞ்சுரத்துக் கடுங்
கேழற்பின் கானவனாய்
அமர்பயில் வெய்தி அருச்
சுனற்கருள் செய்தபிரான்
தமர்பயில் தண்விழவில் தகு
சைவர்த வத்தின்மிக்க
நமர்பயில் நன்னிலத்துப் பெருங்
கோயில் நயந்தவனே. **#1003**

உலகத்தவர் மிக்குள்ள தண்ணிய விழாக்களையுடைய, தகுதிவாய்ந்த சைவர்களாகிய, தவத்திற் சிறந்த நம்மவர் மிக்கு வாழ்கின்ற திருநன்னிலத்தில் உள்ள பெருங்கோயிலை விரும்பி எழுந்தருளியிருக்கின்ற பெருமான், நிலப் பிளப்புக்கள் மிகுந்த கொடிய

கற்சுரத்தில், கொடிய பன்றியின்பின்னே வேடுவனாய்ச் சென்று அருச்சுனனோடு போராடுதலைப் பொருந்தி, அவனுக்குத் திருவருள் செய்த தலைவனாவான்.

திருநன்னிலத்துப்பெருங்கோயில்

கருவரை போல்அரக்கன் கயி
லைம்மலைக் கீழ்க்கதற
ஒருவிர லால்அடர்த்தின் னருள்
செய்த வுமாபதிதான்
திரைபொரு பொன்னிநன்னீர்த் துறை
வன்திகழ் செம்பியர்கோன்
நரபதி நன்னிலத்துப் பெருங்
கோயில் நயந்தவனே. **#1004**

அலை மோதுகின்ற காவிரியாற்றினது நல்ல நீர்த்துறையை உடையவனும், சோழர்கோமகனும் ஆகிய அரசன் செய்த, திருநன்னிலத்துப் பெருங்கோயிலை விரும்பி எழுந்தருளியிருக்கின்ற பெருமான், அரக்கனாகிய இராவணன், கயிலாய மலையின்கீழ், கரியமலைபோலக் கிடந்து கதறும்படி ஒரு விரலால் நெருக்கிப் பின்பு அவனுக்கு அருள்புரிந்த உமை கணவனாகும்.

திருநன்னிலத்துப்பெருங்கோயில்

கோடுயர் வெங்களிற்றுத் திகழ்
கோச்செங்க ணான்செய்கோயில்
நாடிய நன்னிலத்துப் பெருங்
கோயில்ந யந்தவனைச்
சேடியல் சிங்கிதந்தை சடை
யன்திரு வாரூரன்
பாடிய பத்தும்வல்லார் புகு
வார்பர லோகத்துளே. **#1005**

தந்தங்கள் உயர்ந்து காணப்படுகின்ற வெவ்விய யானையின்மேல் விளங்குகின்ற கோச்செங்கட்சோழ நாயனார் செய்த, யாவரும் விரும்புகின்ற, திருநன்னிலத்தில் உள்ள பெருங்கோயிலை விரும்பி எழுந்தருளியிருக்கின்ற பெருமானை, அழகு பொருந்திய சிங்கடிக்குத் தந்தையும், சடையனார்க்கு மகனும் ஆகிய நம்பியாரூரன் பாடிய இப்பத்துப் பாடல்களையும் பாட வல்லவர்கள், பரலோகத்துள் புகுவார்கள்.

திருநாகேச்சரம்

திருநாகேச்சரம்

திருநாகேச்சரம்,
பண் - பஞ்சமம்,
இத்தலம் சோழநாட்டிலுள்ளது. ,
சுவாமிபெயர் : செண்பகாரணியேசுவரர்.
தேவியார் : குன்றமுலையம்மை.

பிறையணி வாணுதலாள் உமை
யாளவள் பேழ்கணிக்க
நிறையணி நெஞ்சனுங்க நீல
மால்விடம் உண்டதென்னே
குறையணி குல்லைமுல்லை அளைந்
துகுளிர் மாதவிமேல்
சிறையணி வண்டுகள்சேர் திரு
நாகேச் சரத்தானே. **#1006**

சிறகுகளையுடைய அழகிய வண்டுகள், இன்றியமையாத, அழகிய துளசியிலும், முல்லை மலர்களிலும் மகரந்தத்தை அளைந்து, பின்பு குருக்கத்திக் கொடியின்மேல் சேர்கின்ற திருநாகேச்சரத்தில் எழுந்தருளியிருப்பவனே, நீ பிறைபோலும், அழகிய, ஒளிபொருந்திய நெற்றியை உடையவளாகிய உமையவள் மருளவும், திட்பம் பொருந்திய மனம் கலங்கவும், நீல நிறத்தை உடைய, பெரிய நஞ்சினை உண்டதற்குக் காரணம் யாது?

திருநாகேச்சரம்

அருந்தவ மாமுனிவர்க் கரு
ளாகியொர் ஆலதன்கீழ்
இருந்தற மேபுரிதற் கியல்
பாகிய தென்னைகொலாம்
குருந்தய லேகுரவம் மர
வின்னெயி றேற்றரும்பச்
செருந்திசெம் பொன்மலருந் திரு
நாகேச் சரத்தானே. **#1007**

குருந்த மரத்தின் பக்கத்தில் குராமரம், பாம்பினது பல்லைத் தாங்கினாற்போல அரும்புகளைத் தோற்றுவிக்க, செருந்தி மரம், செம்பொன்போலும் மலரைக் கொண்டு விளங்கும் திருநாகேச்சரத்தில் எழுந்தருளியிருப்பவனே, நீ, அரிய தவத்தையுடைய சிறந்த

முனிவர்கள்மேல் கருணை கூர்ந்து, ஓர் ஆலமரத்தின் கீழ் இருந்து அறத்தைச் சொல்ல இசைந்ததற்குக் காரணம் யாது?

திருநாகேச்சரம்

பாலன தாருயிர்மேற் பரி
யாது பகைத்தெழுந்த
காலனை வீடுவித்துக் கருத்
தாக்கிய தென்னைகொலாம்
கோல மலர்க்குவளைக் கழு
நீர்வயல் சூழ்கிடங்கில்
சேலொடு வாளைகள்பாய் திரு
நாகேச் சரத்தானே. **#1008**

அழகிய குவளை மலர்களையும், செங்கழுநீர் மலர்களையும் உடைய வயல்களைச் சூழ்ந்துள்ள வாய்க்கால்களில், சேர் மீன்களும், வாளை மீன்களும் துள்ளுகின்ற திருநாகேச்சரத்தில் எழுந்தருளியிருப்பவனே, நீ, சிறுவன் ஒருவன்மேல் இரக்கங்கொள்ளாது பகைத்து, அவனது அரிய உயிரைக் கவர வந்த இயமனை அழிவித்து, அச்சிறுவனுக்கு அருளை வழங்கியதற்குக் காரணம் யாது?

திருநாகேச்சரம்

குன்ற மலைக்குமரி கொடி
யேரிடை யாள்வெருவ
வென்றி மதகரியின் னுரி
போர்த்ததும் என்னைகொலாம்
முன்றில் இளங்கமுகின் முது
பாளை மதுஅளைந்து
தென்றல் புகுந்துலவுந் திரு
நாகேச் சரத்தானே. **#1009**

இல்லங்களின் முன்னுள்ள இளைய கமுகமரத்தின் பெரிய பாளைகளில் கட்டப்பட்ட தேன் கூடுகளில் உள்ள தேனை, தென்றற் காற்றுத் துழாவி, தெருக்களில் வந்து உலவுகின்ற திருநாகேச்சரத்தில் எழுந்தருளியிருப்பவனே, நீ, பல குன்றுகளையுடைய இமயமலையின் மகளாகிய, கொடிபோலும் இடையையுடைய உமை அஞ்சும்படி, வெற்றியையும், மதத்தையும் உடைய யானையின் தோலை உரித்ததே யன்றி, அதனைப் போர்வையாகப் போர்த்துக் கொண்டதற்குக் காரணம் யாது?

திருநாகேச்சரம்

அரைவிரி கோவணத்தோ டர
வார்த்தொரு நான்மறைநூல்
உரைபெரு கவ்வுரைத் தன்
றுகந்தருள் செய்ததென்னே.
வரைதரு மாமணியும் வரைச்
சந்தகி லோடும்உந்தித்
திரைபொரு தண்பழனத் திரு
நாகேச் சரத்தானே. #1010

மலைகள் தந்த சிறந்த மாணிக்கங்களையும், அவற்றில் உள்ள சந்தனக்கட்டை, அகிற்கட்டை என்பவைகளுடன் தள்ளிக்கொண்டு வந்து, அலைகள் மோதுகின்ற, குளிர்ந்த வயல்களையுடைய திருநாகேச்சரத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானே, நீ, அரையின்கண், அகன்ற கோவணத்தோடு பாம்பைக் கட்டிக்கொண்டு, ஒப்பற்ற நான்கு வேதங்களின் பொருளை, அன்று விரிவாகச் சொல்லி, அதனைக் கேட்டோரை விரும்பி, அவருக்கு அருள் செய்தற்குக் காரணம் யாது?

திருநாகேச்சரம்

தங்கிய மாதவத்தின் தழல்
வேள்வியி னின்றெழுந்த
சிங்கமும் நீள்புலியுஞ் செழு
மால்கரி யோடலறப்
பொங்கிய போர்புரிந்து பிளந்
தீருரி போர்த்ததென்னே
செங்கயல் பாய்கழனித் திரு
நாகேச் சரத்தானே. #1011

செவ்விய கயல்மீன்கள் துள்ளுகின்ற வயல்களையுடைய திருநாகேச்சரத்தில் எழுந்தருளியிருப்பவனே, நீ, நிலைபெற்ற பெரிய தவத்தினால், வேள்வித்தீயினின்றும் தோன்றிய சிங்கமும், நீண்ட புலியும், பருத்த பெரிய யானையோடே கதறி அழியும்படி மிக்க போரைச் செய்து கிழித்து, அவற்றினின்றும் உரித்த தோலைப் போர்த்ததற்குக் காரணம் யாது?

திருநாகேச்சரம்

நின்றஇம் மாதவத்தை யொழிப்
பான்சென் றணைந்துமிகப்
பொங்கிய பூங்கணைவேள் பொடி
யாக விழித்தலென்னே

பங்கய மாமலர்மேல் மது
வுண்டுவண் தேன்முரலச்
செங்கயல் பாய்வயல்சூழ் திரு
நாகேச் சரத்தானே. **#1012**

(இப்பாடல், ஏடெழுதினோராற் பிழைபட்டதும் மிகையாகப் பிரதிகளில் சேர்ந்தது போலும்! இதனை, ஒன்பதாந் திருப்பாடல் கொண்டு உணர்க.)

திருநாகேச்சரம்

வரியர நாணதாக மா
மேரு வில்லதாக
அரியன முப்புரங்கள் ளவை
ஆரழல் ஊட்டல்என்னே
விரிதரு மல்லிகையும் மலர்ச்
சண்பக மும்மளைந்து
திரிதரு வண்டுபண்செய் திரு
நாகேச் சரத்தானே. **#1013**

சோலைகளில் திரிகின்ற வண்டுகள், மலரும் நிலையில் உள்ள மல்லிகை மலரிலும், சண்பக மலரிலும் மகரந்தத்தை அளைந்து, இசையைப் பாடுகின்ற திருநாகேச்சரத்தில் எழுந்தருளியிருப்பவனே, நீ, கீற்றுப் பொருந்திய பாம்பே நாணியாகவும், மாமேரு மலையே வில்லாகவும் கொண்டு, அரியவான மூன்று ஊர்களை, அரிய தீ உண்ணும்படி செய்ததற்குக் காரணம் யாது?

திருநாகேச்சரம்

அங்கியல் யோகுதனை யழிப்
பான்சென் றணைந்துமிகப்
பொங்கிய பூங்கணைவேள் பொடி
யாக விழித்தல்என்னே
பங்கய மாமலர்மேல் மது
வுண்டுபண் வண்டறையச்
செங்கயல் நின்றுகளுந் திரு
நாகேச் சரத்தானே. **#1014**

குளங்களில், தாமரை மலர்களின் மேல் வண்டுகள் தேனை உண்டு இசையைப் பாட, செவ்விய கயல்மீன்கள், நிலைபெற்று நின்று துள்ளுகின்ற திருநாகேச்சரத்தில் எழுந்தருளியிருப்பவனே, நீ, கயிலையின்கண் செய்த யோகத்தைக் கெடுத்தற்குச் சென்று சேர்ந்து, பெரிதும் சினங்கொண்ட, மலர்க்கணையை உடைய மன்மதன் சாம்பராகும்படி ஒரு கண்ணைத் திறந்ததற்குக் காரணம் யாது?

திருநாகேச்சரம்

குண்டரைக் கூறையின்றித் திரி
யுஞ்சமண் சாக்கியப்பேய்
மிண்டரைக் கண்டதன்மை விர
வாக்கிய தென்னைகொலோ
தொண்டிரைத் துவணங்கித் தொழில்
பூண்டடி யார்பரவும்
தெண்டிரைத் தண்வயல்சூழ் திரு
நாகேச் சரத்தானே. **#1015**

அடியார்கள், அடிமைத்தொழில் பூண்டு, ஆரவாரித்து வணங்கித் துதிக்கின்ற, தெளந்த அலைகளையுடைய, குளிர்ந்த வயல்கள்சூழ்ந்த திருநாகேச்சரத்தில் எழுந்தருளியிருப்பவனே, மூர்க்கரும், மனவலிமையுடையவரும் ஆகிய, உடையின்றித் திரியும் சமணரும், புத்தரும் என்னும் பேய்போல்வாரை, அவர் கண்டதே கண்ட தன்மையைப் பொருந்தச் செய்ததற்குக் காரணம் யாது?

திருநாகேச்சரம்

கொங்கணை வண்டரற்றக் குயி
லும்மயி லும்பயிலும்
தெங்கமழ் பூம்பொழில்சூழ் திரு
நாகேச் சரத்தானை
வங்க மலிகடல்சூழ் வயல்
நாவல வூரன்சொன்ன
பங்கமில் பாடல்வல்லா ரவர்
தம்வினை பற்றறுமே. **#1016**

மகரந்தத்தை அடைந்த வண்டுகள் ஒலிக்க, குயிலும், மயிலும் பாடுதலையும், ஆடுதலையும் செய்கின்ற, தேனினது மணங் கமழ்கின்ற பூஞ்சோலைகள் சூழ்ந்த திருநாகேச்சரத்தில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனை, மரக்கலங்கள் நிறைந்த கடல்போலச் சூழ்ந்துள்ள வயல்களையுடைய திருநாவலூரானாகிய நம்பியாரூரன் பாடிய, குறையில்லாத இப்பாடல்களைப் பாட வல்லவர்களது வினை பற்றறக் கழியும்.

திருநொடித்தான்மலை

திருக்கயிலாயம்

திருநொடித்தான்மலை,
பண் - பஞ்சமம்

தானெனை முன்படைத்தான் அத
றிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயி
னேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்த
யானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்
தான்மலை உத்தமனே. #1017

திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வன், தானே முன்பு என்னை நிலவுலகில் தோற்றுவித்தருளினான்; தோற்றுவித்த அத்திருக் குறிப்பினையுணர்ந்து அவனது பொன்போலும் திருவடிகளுக்கு, அந்தோ, நான் எவ்வளவில் பாடல்கள் செய்தேன்! செய்யாதொழியவும், அப்புன்மை நோக்கி ஒழியாது, என்னை அடியவர்களுள் ஒருவனாக வைத்தெண்ணி, வானவர்களும் வந்து எதிர்கொள்ளுமாறு, பெரியதோர் யானை யூர்தியை எனக்கு அளித்து, எனது உடலொடு உயிரை உயர்வுபெறச் செய்தான்; அவனது திருவருள் இருந்தவாறு என்!

திருக்கயிலாயம்

ஆனை உரித்தபகை அடி
யேனொடு மீளக்கொலோ
ஊனை உயிர்வெருட்டி ஒள்ளி
யானை நினைந்திருந்தேன்
வானை மதித்தமரர் வலஞ்
செய்தெனை யேறவைக்க
ஆனை அருள்புரிந்தான் நொடித்
தான்மலை உத்தமனே. #1018

யான், கருவி கரணங்களை அறிவினால் அடக்கி, அறிவே வடிவாய் உள்ள தன்னை உள்கியிருத்தலாகிய ஒன்றே செய்தேன்; அவ்வளவிற்கே, திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந்தருளும் அம் முதல்வன், வானுலகத்தையே பெரிதாக மதித்துள்ள தேவர்கள் வந்து என்னை வலம்செய்து ஏற்றிச் செல்லுமாறு, ஓர் யானையூர்தியை எனக்கு அளித்தருளினான்; அஃது, அவன் முன்பு யானையை உரித்ததனால்

நிலைத்து நிற்கும் பகைமையை அடியேனால் நீங்கச்செய்து, அதற்கு அருள்பண்ணக் கருதியதனாலோ; அன்றி என்மாட்டு வைத்த பேரருளாலோ!

திருக்கயிலாயம்

மந்திரம் ஒன்றறியேன் மனை
வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரி
சேசெயுந் தொண்டன்எனை
அந்தர மால்விசும்பில் அழ
கானை யருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித்
தான்மலை உத்தமனே. **#1019**

நெஞ்சே, அடியேன், மறைமொழிகளை ஓதுதல் செய்யாது இல்வாழ்க்கையில் மயங்கி, அடியவர் வேடத்தை மேற்கொள்ளாது, அழகைத் தரும் வேடங்களைப் புனைந்து கொண்டு, இவ்வாறெல்லாம் பொருந்தாதனவற்றையே செய்து வாழும் ஒரு தொண்டன்; எனக்கு, திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வன், வெளியாகிய பெரிய வானத்திற் செல்லும் அழகுடைய யானையூர்தியை அளித்தருளியதும் என் தரத்ததோ!

திருக்கயிலாயம்

வாழ்வை உகந்தநெஞ்சே மட
வார் தங்கள் வல்வினைப்பட்
டாழ முகந்தவென்னை அது
மாற்றி அமரரெல்லாம்
சூழ அருள்புரிந்து தொண்ட
னேன் பரமல்லதொரு
வேழம் அருள்புரிந்தான் நொடித்
தான்மலை உத்தமனே. **#1020**

உலக இன்பத்தை விரும்பிய மனமே, பெண்டிரால் உண்டாகும் வலிய வினையாகிய குழியில் விழுந்து அழுந்திக் கிடந்த என்னை, திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வன், அந்நிலையினின்றும் நீக்கி, தேவரெல்லாரும் சூழ்ந்து அழைத்து வருமாறு ஆணையிட்டு, என் நிலைக்குப் பெரிதும் மேம்பட்டதாகிய ஓர் யானை யூர்தியை அருளித்தருளினான்; அவனது திருவருள் இருந்தவாறு என்!

திருக்கயிலாயம்

மண்ணுல கிற்பிறந்து நும்மை
வாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல் தொண்ட
னேன்இன்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்
பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்
தான்மலை உத்தமனே. **#1021**

'மண்ணுலகில் மக்களாய்ப் பிறந்து நும்மைப் பாடுகின்ற பழவடியார், பின்பு பொன்னுலகத்தைப் பெறுதலாகிய உரையளவைப் பொருளை, அடியேன் இன்று நேரிற்கண்டேன்' என்று தன்பால் வந்து சொல்லுமாறு, திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வன், தேவரும் கண்டு விருப்பங்கொள்ள, என் உடம்பை வெள்ளை யானையின்மேல் காணச் செய்தான்; அவனது திருவருள் இருந்தவாறு என்!

திருக்கயிலாயம்

அஞ்சினை ஒன்றிநின்று அலர்
கொண்டடி சேர்வறியா
வஞ்சனை யென்மனமே வைகி
வானநன் னாடர்முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்துத் தொண்ட
னேன்பர மல்லதொரு
வெஞ்சின ஆனைதந்தான் நொடித்
தான்மலை உத்தமனே. **#1022**

திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வன், ஐம்புலன்களைப் பொருந்தி நின்று, பூக்களைக் கொண்டு தனது திருவடியை அணுக அறியாத வஞ்சனையை யுடைத்தாகிய என் மனத்தின்கண்ணே வீற்றிருந்து, எனக்கு இறப்பை நீக்கி, தேவர்களது கண்முன்னே, என் நிலைக்குப் பெரிதும் மேம்பட்ட, வெவ்விய சினத்தையுடைய யானையூர்தியை அளித்தருளினான்; அவனது திருவருள் இருந்தவாறு என்!

திருக்கயிலாயம்

நிலைகெட விண்ணதிர நிலம்
எங்கும் அதிர்ந்தசைய
மலையிடை யானைஏறி வழி
யேவரு வேனெதிரே
அலைகட லால்அரையன் அலர்

கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையணை யாதவண்ணம் நொடித்
தான்மலை உத்தமனே. **#1023**

திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வன், விண்ணுலகம் தனது நிலைகெடுமாறு அதிரவும், நிலவுலகம் முழுதும் அதிரவும் மலையிடைத்திரியும் யானை மீது ஏறி, தனது திரு மலையை அடையும் வழியே வருகின்ற என் எதிரே, அலைகின்ற கடலுக்கு அரசனாகிய வருணன், பூக்களைக் கொண்டு, யாவரினும் முற்பட்டு வந்து வணங்குமாறு, உடல் அழியாதே உயர்ந்து நிற்கின்ற ஒரு நிலையை எனக்கு அளித்தருளினான்; அவனது திருவருள் இருந்தவாறு என்!

திருக்கயிலாயம்

அரவொலி ஆகமங்கள் அறி
வார்அறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெ
லாம்வந் தெதிர்ந்திசைப்ப
வரமலி வாணன்வந்து வழி
தந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித்
தான்மலை உத்தமனே. **#1024**

'அரகர' என்னும் ஒலியும், ஆகமங்களின் ஒலியும்,அறிவுடையோர் அறிந்து பாடும் பாட்டுக்களின் ஒலியும், பல்வேறு வகையாகப் பொருந்திய வேதங்களின் ஒலியும் ஆகாயம் முழுதும் நிறைந்து வந்து எதிரே ஒலிக்கவும், மேன்மை நிறைந்த, 'வாணன்' என்னும் கணத்தலைவன் வந்து, முன்னே வழிகாட்டிச் செல்லவும், ஏறத்தக்கதொரு முதன்மை நிறைந்த யானையை, திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வன் எனக்கு அளித்தருளினான்; அவனது திருவருள் இருந்தவாறு என்!

திருக்கயிலாயம்

இந்திரன் மால்பிரமன் னெழி
லார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்த
யானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவன்
ஆர்என எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்
தான்மலை உத்தமனே. **#1025**

திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வனாகிய எம்பெருமான், இந்திரன், திருமால், பிரமன், எழுச்சி பொருந்திய மிக்க தேவர் ஆகிய எல்லாரும் வந்து என்னை எதிர் கொள்ளுமாறு, எனக்கு யானை யூர்தியை அளித்தருளி, அங்கு, மந்திரங்களை ஓதுகின்ற முனிவர்கள், 'இவன் யார்' என்று வினவ, "இவன் நம் தோழன்; 'ஆரூரன்' என்னும் பெயரினன்" என்று திருவாய் மலர்ந்தருளினான்; அவனது திருவருள் இருந்தவாறு என்!

திருக்கயிலாயம்

ஊழிதொ றூழிமுற்றும் உயர்
பொன்நொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவை
நாவல ஊரன்சொன்ன
ஏழிசை இன்றமிழால் இசைந்
தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா அஞ்சை
யப்பர்க் கறிவிப்பதே. #1026

ஆழ்ந்ததாகிய கடலுக்கு அரசனே! உலகம் அழியுங்காலந்தோறும் உயர்வதும், பொன்வண்ணமாயதும் ஆகிய திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வனை, திரு நாவலூரில் தோன்றியவனாகிய யான், இசை நூலிற் சொல்லப்பட்ட, ஏழாகிய இசையினையுடைய, இனிய தமிழால், மிக்க புகழை யுடையனவாகவும், கரும்பின் சுவை போலும் சுவையினை யுடையனவாகவும் அப்பெருமானோடு ஒன்றுபட்டுப் பாடிய இப் பத்துப் பாடல்களையும், திருவஞ்சைக்களத்தில் வீற்றிருந்தருளும் பெருமானுக்கு, நீ அறிவித்தல் வேண்டும்.

ஏழாம் திருமுறை - திருப்பாட்டு முற்றும்

பன்னிருதிருமுறை

மாணிக்கவாசகர்

எட்டாம் திருமுறை - திருவாசகம் திருக்கோவையார்

தொகுப்பு: சங்கர்

சித்திரை **2017** வெளியீடு

பன்னிருதிருமுறை

எட்டாம் திருமுறை - திருவாசகம்
திருக்கோவையார்

மாணிக்கவாசகர் அருளியது

திருவாசகம் 51 பிரிவில் 636 பாடல்கள் கொண்டது திருக்கோவையார் (எ) திருச்சிற்றம்பலக் கோவையார் 400 பாடல்களை உடையது. இக்கோவையை மாணிக்க வாசகர் பாட தில்லை நடராசரே ஏட்டில் எழுதியதாக கூறுவார்கள்.

பன்னிருதிருமுறை

மாணிக்கவாசகர்

எட்டாம் திருமுறை - திருவாசகம் திருக்கோவையார்

தொகுப்பு: சங்கர்

சித்திரை **2017** வெளியீடு

திருவாசகம்

1.1.சிவபுராணம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் மோய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்

ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்

சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து. #1 ★★★★★

திருவைந்தெழுத்து மந்திரம் வாழ்க! திருவைந் தெழுத்தின் வடிவாக விளங்கும் இறைவனது திருவடி வாழ்க! இமைக்கும் நேரமும் கூட என் மனத்தினின்றும் நீங்காதவனது திருவடி வாழ்க! திருப்பெருந்துறையில் என்னை ஆட்கொண்ட குருமூர்த்தி யினது திருவடி வாழ்க! ஆகம வடிவாக நின்று இனிமையைத் தருபவனாகிய இறைவனது திருவடி வாழ்க! ஒன்றாயும் பலவாயும் உள்ள இறைவனது திருவடி வாழ்க! மன ஓட்டத்தைத் தொலைத்து என்னை அடிமை கொண்ட முழுமுதற் கடவுளது திருவடி வெற்றி பெறுக! பிறவித் தளையை அறுக்கின்ற இறைவனது வீரக் கழலணிந்த திருவடிகள் வெற்றி பெறுக! தன்னை வணங்காத அயலார்க்கு எட்டாத வனாயிருப்பவனது தாமரை மலர்போலும் திருவடிகள் வெற்றி பெறுக! கைகூம்பப் பெற்றவர்க்கு மனம் மகிழ்ந்து அருளுகின்ற இறைவன் திருவடிகள் வெற்றி பெறுக! கைகள் தலைமேல் கூம்பப் பெற்றவரை உயரச் செய்கிற

சிறப்புடையவனது திருவடி வெற்றி பெறுக!

ஈசனது திருவடிக்கு வணக்கம். எம் தந்தையினது திருவடிக்கு வணக்கம். ஒளியுருவை உடையவனது திருவடிக்கு வணக்கம். சிவ பிரானது திருவடிக்கு வணக்கம். அடியாரது அன்பின்கண் நிலைத்து நின்ற மாசற்றவனது திருவடிக்கு வணக்கம். நிலையாமையுடைய பிறவியை ஒழிக்கின்ற அரசனது திருவடிக்கு வணக்கம். சிறப்புப் பொருந்திய திருப்பெருந்துறையின்கண் எழுந்தருளிய நம்முடைய கடவுளது திருவடிக்கு வணக்கம். தெவிட்டாத இன்பத்தைக் கொடுக் கின்ற மலைபோலும் கருணையையுடையவனுக்கு வணக்கம். நெற்றிக்கண்ணுடைய சிவபெருமான் தனது அருட்கண் காட்ட, அதனால் அவன் திருமுன்பு வந்து அடைந்து, நினைத்தற்குக் கூடாத அழகு வாய்ந்த அவனது திருவடியை வணங்கியபின், சிவபெரு மானாகிய அவன் என் மனத்தில் நிலை பெற்றிருந்ததனால், அவ னுடைய திருவருளாலே அவனுடைய திருவடியை வணங்கி மனம் மகிழும்படியும், முன்னைய வினைமுழுமையும் கெடவும், சிவனது அநாதி முறைமையான பழமையை யான் சொல்லுவேன்.

வானமாகி நிறைந்தும் மண்ணாகி நிறைந்தும் மேலானவனே! இயல்பாய் விளங்குகின்ற ஒளிப்பிழம்பாகி மனத்தைக் கடந்து அளவின்றி நிற்பவனே! உன்னுடைய மிக்க சிறப்பை, கொடிய வினையை உடையவனாகிய யான், புகழுகின்ற விதம் சிறிதும் அறி கிலேன். புல்லாகியும், பூண்டாகியும், புழுவாகியும், மரமாகியும் பல மிருகங்களாகியும், பறவையாகியும், பாம்பாகியும், கல்லாகியும், மனிதராகியும், பேயாகியும், பூதகணங்களாகியும், வலிய அசுரராகி யும், முனிவராகியும், தேவராகியும் இயங்குகின்ற இந்த நிலையியற் பொருள் இயங்கியற் பொருள் என்னும் இருவகைப் பொருள் களுள்ளே எல்லாப் பிறவிகளிலும் பிறந்து, யான் மெலிவடைந்தேன். எம் பெருமானே! இப்பொழுது உண்மையாகவே, உன் அழகிய திருவடிகளைக் கண்டு வீடு பெற்றேன்.

நான் உய்யும்படி என் மனத்தில் பிரணவ உருவாய் நின்ற மெய்யனே! மாசற்றவனே! இடபவாகனனே! மறைகள், ஐயனே என்று துதிக்க உயர்ந்து ஆழ்ந்து பரந்த நுண் பொருளானவனே! வெம்மை யானவனே! தண்ணியனே! ஆன்மாவாய் நின்ற விமலனே! நிலையாத பொருள்கள் யாவும் என்னை விட்டு ஒழிய, குருவாய் எழுந்தருளி மெய்யுணர்வு வடிவமாய், விளங்குகின்ற உண்மை ஒளியே! எவ் வகை யான அறிவும்

இல்லாத எனக்கு இன்பத்தைத் தந்த இறைவனே! அஞ்ஞானத்தின் வாதனையை நீக்குகின்ற நல்ல ஞானமயமானவனே! தோற்றம், நிலை, முடிவு என்பவை இல்லாதவனே! எல்லா உலகங்களையும் படைப்பாய்; நிலை பெறுத்துவாய்; ஒடுக்குவாய்; அருள் செய்வாய்; அடியேனைப் பிறவியிற் செலுத்துவாய்; உன் தொண்டில் புகப் பண்ணுவாய்; பூவின் மணம் போல நுட்பமாய் இருப்பவனே! தொலைவில் இருப்பவனே! அண்மையில் இருப்பவனே! சொல்லும் மனமும் கடந்து நின்ற வேதப் பொருளாய் உள்ளவனே! சிறந்த அன்பரது மனத்துள் கறந்த பாலும் சருக்கரையும் நெய்யும் கூடின போல இன்பம் மிகுந்து நின்று, எடுத்த பிறப்பை ஒழிக்கின்ற எம் பெருமானே!

ஐந்து நிறங்களை உடையவனே! தேவர்கள் துதிக்க அவர்களுக்கு ஒளித்து இருந்தவனே! எம் பெருமானே! வலிய வினையையுடையவனாகிய என்னை, மறையும்படி மூடியுள்ள அறியாமையாகிய ஆணவம் கெடுதற்பொருட்டு, புண்ணிய பாவங்கள் என்கின்ற அருங்கயிற்றால் கட்டப்பெற்று, வெளியே தோலால் மூடி, எங்கும் புழுக்கள் நெளிகின்ற அழுக்கை மறைத்து ஆக்கிய, மலம் ஒழுகுகின்ற, ஒன்பது வாயிலையுடைய உடம்பாகிய குடிசை குலையும்படி, ஐம்புலன்களும் வஞ்சனை பண்ணுதலால் உன்னை விட்டு நீங்கும் மனத்தினாலே மாசற்றவனே! உன்பொருட்டுப் பொருந்தின அன்பை உடையேனாய், மனம் கசிந்து உருகுகின்ற நன்மையில்லாத சிறியேனுக்குக் கருணைபுரிந்து பூமியின்மேல் எழுந்தருளி நீண்ட திருவடிகளைக் காட்டி, நாயினும் கடையனாய்க் கிடந்த அடியேனுக்குத் தாயினும் மேலாகிய அருள் வடிவான உண்மைப் பொருளே!

களங்கமற்ற சோதியாகிய மரத்தில் பூத்த, பூப்போன்ற சுடரே! அளவிலாப் பேரொளியனே! தேனே! அரிய அமுதே! சிவபுரத்தை யுடையானே! பாசமாகிய தொடர்பையறுத்துக் காக்கின்ற ஆசிரியனே! அன்போடு கூடிய அருளைச் செய்து என் மனத்தில் உள்ள வஞ்சம் அழிய, பெயராமல் நின்ற பெருங்கருணையாகிய பெரிய நதியே! தெவிட்டாத அமிர்தமே! எல்லையில்லாத பெருமானே! ஆராயாதார் மனத்தில் மறைகின்ற ஒளியை யுடையானே! என் மனத்தை நீர் போல உருகச் செய்து என் அரிய உயிராய் நின்றவனே! சுகமும் துக்கமும் இயற்கையில் இல்லாதவனே! அன்பர் பொருட்டு அவைகளை உடையவனே! அன்பர்களிடத்து அன்புடைவனே! கலப்பினால் எல்லாப் பொருள்களும் ஆகி, தன்மையினால் அல்லாதவனும் ஆகின்ற பேரொளியை யுடையவனே! நிறைந்த இருளானவனே! புறத்தே

வெளிப்படாத பெருமை உடையவனே! முதல்வனே! முடிவும் நடுவும் ஆகி அவையல்லாது இருப்பவனே! என்னை இழுத்து ஆட்கொண்டருளின எமது தந்தையாகிய சிவபெருமானே! மிகுந்த உண்மை ஞானத்தால் சிந்தித்து அறிபவர் மனத்தினாலும், எதிரிட்டுக் காண்பதற்கு அரிதாகிய காட்சியே! ஒருவரால் நுட்பம் ஆக்குதல் இல்லாத இயற்கையில் நுட்பமாகிய அறிவே! போதலும் வருதலும் நிற்றலும் இல்லாத புண்ணியனே! எம்மைக் காப்பாற்றுகின்ற எம் அரசனே! காண்பதற்கரிய பெரிய ஒளியே! மகாநதி போன்ற இன்பப் பெருக்கே! அப்பனே! மேலோனே! நிலைபெற்ற தோற்றத்தையுடைய விளங்குகின்ற ஒளியாகியும் சொல்லப்படாத நுட்பமாகிய அறிவாகி யும் மாறுபடுதலையுடைய உலகத்தில் வெவ்வேறு பொருளாய்க் காணப்பட்டு வந்து, அறிவாய் விளங்கும் தெளிவானவனே! தெளி வின் தெளிவே! என் மனத்துள் ஊற்றுப் போன்ற பருகுதற்குப் ெபாருந்திய அமிர்தமே! தலைவனே!

வெவ்வேறு விகாரங்களையுடைய ஊனாலாகிய உடம் பினுள்ளே தங்கிக் கிடக்கப்பெற்று ஆற்றேன் ஆயினேன். எம் ஐயனே! சிவனே! ஓ என்று முறையிட்டு வணங்கித் திருப்புகழை ஓதியிருந்து அறியாமை நீங்கி அறிவுருவானவர்கள் மறுபடியும் இவ்வுலகில் வந்து, வினைப் பிறவியையடையாமல், வஞ்சகத்தை யுடைய ஐம்புலன்களுக்கு இடமான உடம்பாகிய கட்டினை அறுக்க வல்லவனே! நடு இரவில் கூத்தினைப் பலகாலும் பயிலும் தலைவனே! தில்லையுள் நடிப்பவனே! தென்பாண்டி நாட்டையுடையவனே! துன்பப் பிறப்பை அறுப்பவனே! ஓவென்று முறையிட்டுத் துதித்தற்கு அருமையானவனைத் துதித்து, அவனது திருவடியின் மீது பாடிய பாட்டின் பொருளையறிந்து துதிப்பவர், எல்லோரும் வணங்கித் துதிக்க, சிவநகரத்திலுள்ளவராய்ச் சிவபெருமானது திருவடிக்கீழ் சென்று நிலைபெறுவர்.

விளக்கவுரை

சிவபுராணம் - சிவபெருமானது பழையனவாகிய பெருமைகளைக் கூறும் பாட்டு. புராணம் - பழைமை; அது முதற்கண் பழையனவாகிய பெருமையையும், பின்னர் அதனைக் கூறும் பாட்டினையும் குறித்தலின், இருமடியாகு பெயர். 'சிவனது பழையனவாகிய பெருமை' என்னும் பொருளைத் தருமிடத்து, இரு பெயரொட்டாகுபெயராம். 'பழைமை' என்பது, இங்குக் காலம் பற்றியதாகாது, காலத்திற்கு அப்பாற்பட்ட நிலையே குறிப்பது. இந்நிலையை, அனாதி என்பராதலின், 'சிவபுராணம்' என்றதற்கு, சிவனது அனாதி முறைமையான பழைமை

எனக் கருத்துரைத்தனர், முன்னோர். இதுபோலும் கருத்துக்களைத் திருவாசகத்தின் பகுதிகள் எல்லாவற்றிற்கும் அவர் உரைத்திருத்தல் அறிக.

இங்கு, கலி வெண்பா என்றது, வெண்கலிப்பாவினை. இதனை, 'கலிவெண்பாட்டு' என்பர் தொல்காப்பியர். முழுதும் வெண்டளையே கொண்டு, ஈற்றடி முச்சீர்த்தாய் வருதலின், 'கலிவெண்பா' எனவும் பெயர் பெறுவதாயிற்று. எனினும், துள்ளலோசையே நிகழ்வதாகலின், கலிவகையேயாம்.

'பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்

ஆசிரி யப்பா வெண்பா என்றாங்

காயிரு பாவினு ளடங்கு மென்ப' -தொல். செய். *107*

என்பதும்,

'ஆசிரிய நடைத்தே வஞ்சி: ஏனை

வெண்பா நடைத்தே கலியென மொழிப' -தொல். செய். *108*

என்பதும் தொல்காப்பியமாதலின், கலிப்பாவும் ஓராற்றான் வெண்பாவேயாதல் அறிக. இதுபற்றியேபோலும், 'நெடு வெண் பாட்டு' எனத் தொல்காப்பியமும், 'பஃறொடை வெண்பா' எனப் பிற நூல்களும் கூறும். மிக்க அடிகளையுடைய வெண்பாவை, 'கலிவெண்பா' என்றும் வழங்கினர் பின்னோர். செப்பலோசையான் வருதலும், துள்ளலோசையான் வருதலும் வெண்பாவிற்கும், கலிப்பா விற்கும் உள்ள வேறுபாடாதல், நன்கறியப்பட்டது. ஆகவே, திரு வாசக உண்மையில், 'சிவபுராணத்து அகவல்' என்றமை ஆராய்தற் குரியது.

இது, 'திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது, என்பது, பதிப்புகளில் காணப்படுவது. இதுமுதலாகத் திருவாசகப் பகுதிகள் அருளிச் செய்யப்பட்ட தலங்களைப் புராணங்கள் பலதலைப் படக் கூறுகின்றன. நீத்தல் விண்ணப்பம், திருக்கழுக்குன்றப் பதிகம் தவிர, ஏனைய திருவாசகம், திருக்கோவையார் ஆகிய எல்லாவற்றை யும் அடிகள் தில்லையை அடைந்து ஆங்கு எழுந்தருளியிருந்த நாள்களில்

அருளினார் எனக் கொள்ளுதலே பொருந்துவதுபோலும்! இறைவன், 'தில்லைப் பொதுவில் வருக' என்றருளிய ஆணை வழியே ஆங்கு அடைந்த அடிகள், அதன் பின்னும் இறைவன் தம்மைத் தன் திருவடி நிழலிற் சேர்த்துக் கொள்ளாது வாளாவிருந்தமைபற்றி எழுந்த கையறவினாலே இப்பாடல்கள் எல்லாவற்றையும் பாடினாராவர். இக் கையறவு திருவாசக முழுதும் இனிது வெளிப்பட்டுக் கிடத்தலானும், 'தில்லைக்கு வருக' என்று இறைவன் பணித்தனன் என்பது தெளிவாகலானும், அவ்விடத்தை அடையும் முன்னரே அங்ஙனம் வருந்தினார் என்றல் பொருந்தாமையறிக. இவ்வாறாதலின், தில்லைக்குச் செல்லுங்கால் பிறதலங்களில் இறைவனை வணங்கும் அவாவால் அடிகள் ஆங்கெல்லாம் சென்று வணங்கித் தில்லையை நோக்கி விரைந்து சென்றதன்றித் திருப்பாடல்கள் பாடிற்றிலர் எனக் கொள்ளற்பாற்று.

1-16. அறிவாற் சிவனேயான திருவாதவூரடிகள், 'சிவபுராணம்' எனத் தாம் எடுத்துக்கொண்ட இத்திருப்பாட்டிற்கு முதற்கண் கூறும் மங்கல வாழ்த்தாக, இறைவனை, 'வாழ்க', வெல்க, போற்றி' எனப் பன்முறையான் வாழ்த்துகின்றார். அதனானே, இவ்வடிகள் மேல்வரும் அடிகளோடு தொடர்புற்று நிற்க, பாட்டு ஒன்றாயிற்று. இதனால், இத்திருப்பாட்டே தில்லையில் முதற்கண் அருளிச் செய்யப்பட்டது என்பது விளங்கும்.

---

1. 'நமச்சிவாய' என்னுந் தொடர், தன்னையே குறித்து நின்றது. இதனை முதற்கண் சிறந்தெடுத்தோதியவாற்றால், 'மந்திரங்கள் எல்லாவற்றுள்ளும் தலையாயதாகிய' என்னும் இசையெச்சம், முதற்கண் வருவித்துரைக்கப்படும். அதனானே, இதனின்மிக்க மங்கலச் சொல் இல்லையாதலும் பெறப்படும். இத்திருப்பாட்டினுட் போந்த உயிரளபெடை ஒற்றளபெடைகள் இல்லாது ஓதின், தளை சிதைதல் காண்க. 'நாதன்' என்றது, முன்னர்ப் போந்த மந்திரத்தால், 'சிவபெருமானை' என்பது விளங்கிற்று. நாதன் - தலைவன். நமச்சிவாய மந்திரம், மந்திரங்கள் எல்லாவற்றினும் மிக்கது. எனவே, 'அதற்குப் பொருளாய் உள்ள நாதனே, எல்லாத் தேவரினும் மிக்க முழுமுதற் கடவுள்' என்பது போந்தது. 'நாதன்' என்றதற்கு, 'நாத தத்துவத்தில் உள்ளவன்' என்று உரைப்பாரும் உளர். மந்திரம், இறைவன் திருவருளினது தடத்த நிலையும், அவனது திருவடி, அதன் உண்மைநிலையுமாம். அவற்றுள் மந்திரம் நம்மனோரால் அறியப் படுதல் பற்றி அதனை முதற்கண் வாழ்த்தி, பின்னர்த் திருவடியையே

பன்முறையானும் வாழ்த்துகின்றார்.

---

2. 'நெஞ்சின்' என்றதில் இன், நீக்கப் பொருட்கண் வந்த ஐந்தாம் உருபு. இல்லுருபாகக் கொள்ளினும் அப் பொருட்டேயாம்.

---

3. எடுத்துக்கோடற்கண்ணே அருளிச் செய்தமையால், 'கோகழி' என்பது திருப்பெருந்துறையேயாதல் பெறப்படும். எங்ஙன மெனின், அடிகள் அருள்பெற்ற தலம் அதுவேயாதலின். இச்சொற்குப் பொருள் பல கூறுப. இப்பெயர் பின்னர் வழக்கு வீழ்ந்தமையின், பலரும் தத்தமக்குத் தோன்றியவாறே வேறுவேறு தலங்களை இதற்குப் பொருளாகக் கூறுவர். 'ஆண்ட' என்ற இறந்த காலம், அடிகளை இறைவன் ஆட்கொண்ட காலம்பற்றி வந்தது. எனவே, 'கோகழியை ஆள்வோனாய் எழுந்தருளியிருந்த' என்பது அதற்குப் பொருளாம். 'குருமணி' என்றது, குரவருள் மேம்பட்டவன் என்னும் கருத்தினதாம்; எங்ஙனமெனின், மணியென்னும் உவம ஆகுபெயர், 'சிறப்பே காதல் நலனே வலி' (தொல். பொருள் - *275*). என்ற நான்கினுள் சிறப்பு நிலைக்களனாக வந்ததாகலின். எனவே, இது, 'பரமாசாரியன்' என்றவாறாயிற்று. இங்ஙனங்கூறுதல் இறைவன் ஒரு வனுக்கே உண்மையாயும், ஏனையோர்க்கு முகமனாயும் அமைதலை அறிந்துகொள்க.

---

4. ஆகமம், சிவாகமம். வேதம் பொது நூலாதலின், அதன் கண் பாலில் நெய்போல விளங்காது நிற்கும் இறைவனது உண்மை இயல்பு, சிறப்பு நூலாகிய சிவாகமங்களில், தயிரில் நெய்போல இனிது விளங்கி நிற்குமாதலின், 'ஆகமமாகி நின்று அண்ணிப்பான்' என்று அருளிச் செய்தார். அண்ணித்தல் - இனித்தல்.

---

5. இறைவன், ஏகனாய் நிற்றல் தன்னையே நோக்கி நிற்கும் உண்மை நிலையிலும், அநேகனாய் நிற்றல் உலகத்தை நோக்கி நின்று அதனைச் செயற்படுத்தும் பொது நிலையிலுமாம். 'சத்தும் அசத்தும் இலவாய் இருந்தபோது தனியே சிவபிரான் ஒருவனே இருந்தான்; அவன், நான் பலவாகுவேனாக என விரும்பினான்' என்றாற்போல உபநிடதங்களில் வருவனவற்றைக் காண்க. 'இறைவன்' என்பதற்கு, 'எல்லாப் பொருளிலும் தங்கியிருப்பவன்' என்பது சொற் பொருளாயினும், 'தலைவன்' என்பதன் மறுபெயராய் வழங்கும். 'இறு' என்பது இதன் முதனிலை. 'இற' என்பது அடியாக வந்ததென உரைப்பார்க்கு, 'கடவுள்' என்பதன் பொருளேயன்றி வேறு பொருள் இன்றாமாதலின், அது சிறவாமை அறிந்துகொள்க. இத்துணையும் வாழ்த்துக் கூறியது; இனி

வெற்றி கூறுப.

6. 'வேகம்' என்றது, 'யான், எனது' என்னும் முனைப்பினை. 'ஆண்ட' என இறந்த காலத்தாற் கூறினமையின், ஆண்டது, அடிகளையேயாயிற்று. வேந்தன் - ஞானத் தலைவன்.

7. 'பிறப்பறுக்கும்' என, 'முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை' கூறினமையின், இது, தம்மை உள்ளிட்ட அனைவர்க்கும் செய்தலாயிற்று. பிஞ்ஞகன் - தலைக்கோலம் உடையவன். சிவபிரானது தலைக்கோலம், மணிமுடியும், நறுமலர்க் கண்ணியும் முதலாய பிறர் தலைக்கோலங்கள் போலாது, சடைமுடியும், பிறைக் கண்ணியும், கங்கையும், பாம்பும் முதலியனவாக வேறுபட்டு நிற்ற லின், இப்பெயர், அவனுக்கே உரியதாயிற்று. பிஞ்ஞகம், 'பின்னகம்' என்பதன் மரூஉ. 'பெய்' என்றது, கழலுக்கு அடையாய், 'கட்டப் படுகின்ற' எனப் பொருள் தந்தது. இதனை இங்ஙனம் கிளந்தோதிய வதனால், 'சிவபிரானது வெற்றியே உண்மை வெற்றி' என்பது கொள்ளப்படும். 'யாவரது வெற்றியும் சிவபிரானது வெற்றியே' என்பதனைக் கேனோபநிடதம், சிவபிரான் ஓர் யட்ச வடிவில் எல்லாத் தேவர் முன்னும் தோன்றிச் செய்த திருவிளையாடலில் வைத்து விளக்குதல் காண்க.

8. புறத்தார் - சிவபிரானது திருவருட்குப் புறம்பானவர்; அஃதாவது, அவனது பெருமையை உணரமாட்டாது, ஏனைத் தேவர் பலருள்ளும் ஒருவனாக நினைப்பவர் என்றதாம்.

'சிவனோடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை;

அவனோடொப் பாரிங் கியாவரும் இல்லை;'

'அவனை யொழிய அமரரும் இல்லை;

. . . .

அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை;' -தி.10 திருமந்திரம் 5,6

என்றற் றொடக்கத்தனவாகத் திருமந்திரம், எடுத்துக் கோடற்கண்ணே சிவபிரானது தனிப் பெருஞ் சிறப்பினை இனிது விளங்க எடுத்தோதி விரித்தலும், அவ்வாறே ஏனைய திருமுறைகளும் அதனைப்

பல்லாற்றானும் ஆங்காங்கு வலியுறுத்தோதலும் காண்க.

சிவபிரான் உயிர்கட்குச் செய்யும் செயல் இருவகைத்து; ஒன்று மறைத்தல்; மற்றொன்று அருளல். (மறைத்தலின் வகையே, படைத்தல் முதலிய மூன்றும்). அவற்றுள் மறைத்தலும் அருட்செயலேயாயினும், அது, முன்னர்த் துன்பம் பயத்தலின் மறக்கருணையாய் நிற்க, அருளல் ஒன்றே அறக்கருணையாம். ஆதலின், 'திருவருள்' என்பது, அருளலையே குறிப்பதாயிற்று. இவ் அறக்கருணை, அவனது தனிப் பெருமையை உணர்ந்தார்க்கன்றிக் கூடாது என்பதனை, 'பொது நீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும் - பெருந்துணையை' *(தி.6 ப.1 பா.5)* என்னுந் திருத்தாண்டகத்தால் உணர்க.

சிவபிரானைப் பொதுநீக்கி உணரும் நிலையே 'சரியை, கிரியை, யோகம்' என்னும் தவங்களாம். இத் தவத்தாலே, சிவபிரான் குருவாய் நின்று அஞ்ஞானத்தையகற்றி, மெய்ஞ்ஞானத்தைக் கொடுத்துப் பிறப்பினையறுத்தல் உளதாகும். ஆகவே, சிவபிரானைப் பொதுநீக்கி உணரமாட்டாதவர், அவனது திருவருட்குப் புறம்பாதல் அறிக. 'புறத்தார்க்குச் சேயோன்' எனவே, அணியனாய் நின்று பிறப்பையறுத்தல், அவனைப் பொதுநீக்கி நினையும் அகத்தார்க் கென்பது பெறப்பட்டது. சிவபிரானைப் பொதுநீக்கி நினையும் நிலை, சத்திநிபாதத்து உத்தமர்க்கே உளதாகும் என்க.

'பூங்கழல்கள்' என்றதில், 'பூ' என்பது, 'பொலிவு' என்னும் பொருட்டாய், திருவடிக்கு அடையாயிற்று.

9, 10. 'குவிவார்' இரண்டன் பின்னும் இரண்டனுருபுகள் தொகுத்தலாயின. 'குவிப்பார்' என்னாது, 'குவிவார்' என்று அருளினமையால், 'தம் குறிப்பின்றி அவை தாமே குவியப் பெறுவார்' என, அவரது அன்பின் மிகுதி கொள்க. 'கரம்' என முன்னர்க் கூறிப் போந்தமையின், வாளா, 'சிரங்குவிவார்' என்று போயினார். எனவே, 'கரங்குவிவார்' என்றது, 'கைகள் தம்மளவில் குவியப் பெறுவார்' எனவும், 'சிரங்குவிவார்' என்றது, 'அவை சிரமேற் சென்று குவியப்பெறுவார்' எனவும் பொருள்படுமாறு உணர்ந்து கொள்க. கைகள் தம்மளவிற் குவியப்பெறுவாரினும், அவை தலைமேற் சென்று குவியப்பெறுவாரது வசமழிவு பெரிதாகலின், 'முன்னையோரை உள்மகிழ்தலும், பின்னையோரை ஓங்குவித்தலும் செய்வான்' என்று அருளிச் செய்தார். ஓங்குவித்தல் - ஏனையோர் பலரினும் உயர்ந்து விளங்கச் செய்தல்.

சிறந்த அறிவராய் (ஞானிய ராய்) விளங்குதலும் இதன்கண் அடங்கும் என்க. 'ஓங்குவிப்பான்' என்ற இதனால், உள்மகிழ்தல், பொதுப்பட நிற்கும் நலங்களை அருளுதலாயிற்று. சீர் - புகழ். இத்துணையும் வெற்றி கூறியது; இனி, போற்றி கூறுவார்.

---

11. ஈசன் - ஆள்பவன். 'போற்றி' என்பது 'வணக்கம்' என்னும் பொருளதாகிய தொழிற்பெயர். இதற்குமுன்னர், நான்கனுருபு விரிக்க.

---

12. தேசன் - ஒளி (ஞான) வடிவானவன். சிவன் - நிறைந்த மங்கலம் (நன்மை) உடையவன்.

---

13. நேயத்தே நிற்றல் - அன்பிலே விளங்கித் தோன்றுதல். 'நின்ற' என இறந்த காலத்தால் அருளியது, முன்னையோரது அநுபவம் பற்றி என்க.

---

14. மாயம் - நிலையின்மை. 'பிறப்பை மாய (கெட) அறுக்கும்' என்றும் ஆம். மேல்வரும் பிறப்புக்களை அறுத்தலை மேலே அருளிச் செய்தமையின், இங்கு, 'பிறப்பு' என்றது, எடுத்த பிறப்பை; அஃதாவது உடற்சிறையை என்க.

---

15. சீர் - அழகு. 'நம் தேவன்' என்றது, ஏனை அடியார்களையும் நினைந்து. 'தம்மையெல்லாம் ஆளாகக் கொண்டு, தமக்குத் தலைவனாய் நின்றருளினவன்' என, அவனது அருட்டிறத்தை நினைந்துருகியவாறு.

---

16. ஆராமை - நிரம்பாமை; தெவிட்டாமை. 'மலை' என்றது காதலின்கண் வந்த உவம ஆகுபெயர். இத்துணையும், 'வாழ்த்து, வெற்றி, போற்றி' என்னும் மூவகையில் முதற்கண் மங்கல வாழ்த்துக் கூறியவாறு. இவற்றுள், பொருளியல் புரைத்தலும் அமைந்து கிடந்தவாறு அறிக. 'கண்ணுதலான் ... ... எழிலார் கழல் இறைஞ்சி' என மேல்வரும் அடிகள் இரண்டனையும் இம் மங்கல வாழ்த்தின் பின்னர்க் கூட்டியுரைக்க.

17-20. 'சிவபுராணந்தன்னை' என்றதை முதலிலும், 'அவனருளாலே' என்றதை, 'தாள்' என்றதன் பின்னரும் வைத்து உரைக்க.

'சிவனவன்' என்றதில் 'அவன்', பகுதிப் பொருள் விகுதி. 'சிவன்' என்பதில் விகுதியும் உளதேனும், விகுதிமேல் விகுதி வருமிடத்து, முன்னை விகுதியும் பகுதிபோலக் கொள்ளப்படுமாறு அறிந்துகொள்க.

ஏகாரம், பிரிநிலை; இதனால் பிரிக்கப்பட்டு நின்றது, 'என் ஆற்றலால்' என்பது. 'வணங்கி மகிழ' என இயையும். 'மகிழ' என்றது, சினைவினை முதல் மேல் நின்றதாகலின், அது, 'வணங்கி' என்றதற்கு முடிபாதற்கு இழுக்கின்று. மகிழ - மகிழ்தல் ஒழியா திருக்குமாறு; இவ்வெச்சம், காரியப் பொருட்டாய், 'மோய' என்னும் காரணப் பொருட்டாய எச்சத்தொடு முடிந்தது. முற்பிறப்பிற் செய்யப் பட்ட வினைகளுள், முகந்து கொண்டவை போக எஞ்சி நின்றவை, இறைவனது அருளாற்றலாற் கெட்டொழிந்தமையின், இங்கு, 'முந்தை வினை' என்றது, முகந்து கொண்டவற்றையேயாம். மோய - நீங்க. இது, 'மோசனம்' என்னும் வடசொல்லின் திரிபாய்ப் பிறந்ததாம். இப்பாட்டினுள் யாண்டும், மோனை சிதைந்த தின்மையின் 'ஓய' எனக் கண்ணழித்தல் பொருந்தாமை அறிக. பிராரத்தம் சிறிது தாக்கினும் இறையின்பம் இடையறவுபட்டுத் துன்பமாமாதலின், 'சிறிதும் தாக்காமைப் பொருட்டு' என்பார், 'முழுதும் மோய' என்றும், அங்ஙனம் அவை முற்றக் கெடுதற்கு இறைவனை இடையறாது உணர்தலன்றிப் பிறிதாறு இன்மையின், 'சிவபுராணந்தன்னை உரைப்பன்' என்றும் அருளிச் செய்தார். 'சிவபுராணந்தன்னை' என, வேறொன்று போல அருளிச் செய்தாராயினும் 'சிவபுராணமாகிய இப்பாட்டினை' என்றலே கருத் தென்க. இஃது உணராதார் சிலர், அடிகள், தம் பாடற்றொகுதி முழுவதற்குமாகவே இப் பெயர் கூறினார் என மயங்கியுரைப்பர்; அவ்வாறாயின், 'கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி' முதலியன போல, இப்பாட்டிற்கும் வேறொரு பெயர் வேண்டுமென்று ஒழிக. 'முந்தை வினை முழுதும் மோய' என, முதலதாகிய இப்பாட்டினுள் அருளிச் செய்தமையின், இஃது, ஏனைய திருப்பாட்டிற்கும் கொள்ளப் படுவதாம். 'யான்' என்றதை, 'இறைஞ்சி' என்றதன் முன்னர்க் கூட்டுக.

21-22. காட்டுதல் - உருவத் திருமேனி கொண்டுவந்தே புலப்படுத்தல். காட்ட - காட்டுதற்பொருட்டு. எய்தி - எய்தியதனால்; ஆசிரியத் திருக்கோலத்துடன் வந்து வீற்றிருந்தமையால், இஃது, ஆட்கொண்டமையாகிய காரியந் தோன்ற நின்றது. 'எண்ணுதற்கும்' என்னும் இழிவு சிறப்பும்மை, தொகுத்தலாயிற்று. அடைதல், சொல்லுதல் இவற்றினும் எண்ணுதல் எண்மையுடைத்தாதலின், 'அதற்கும் வாராத திருவடி' என்றபடி. 'இறைஞ்சி' என்றது, மேல் மங்கல வாழ்த்தில் கூறியவாற்றை எல்லாம். 'கண்ணுதலானது எண்ணு தற்கும் எட்டாத எழிலார் கழல்களை, அவன் தனது கருணைக் கண்ணைக் காட்டுதற்பொருட்டு வந்து எய்தியதனால், யான் அநுபவ மாகவே இவ்வாறு இறைஞ்சி இச் சிவபுராணத்தை உரைப்பன்' என உரைத்துக்

கொள்க.

23-25. இவ்வடிகளில் உள்ள வினையெச்சங்கள் காரணப் பொருள. 'மிக்காய்' என்றது, 'மேல் உள்ளவனே' என, விளி. 'விளங்கொளியாய்' என்றது, 'தானே விளங்கும் அறிவு வடிவாய்' என, வினையெச்சம். எண் - எண்ணம்; சிந்தை. இது, சீவனைச் சிந்தை என்று கூறியது. *(சிவஞானசித்தி - சூ. 4. 28)* மேலும் கீழுமாய விண்ணையும், மண்ணையும் கூறவே, இடைநிற்கும் பிற பூதங்கள் யாவும் அடங்கின. 'பூதங்கள் தோறும் நின்றாய்' என்பது முதலியன, பின் வருவனவற்றுட் காணப்படும். 'விண்ணிலும் மண்ணிலும் நிறைந்து நிற்குமாற்றால் அவற்றின் மேல் உள்ளவனே! இயல்பாகவே விளங்கும் அறிவையுடையையாமாற்றால் ஆன்ம அறிவைக் கடந்து நின்று, அவ்வாற்றானே, வரம்பின்றிப் பரந்து நிற்பவனே' என்க. 'மிக்காய்' என்றதும், 'எண்ணிறந்து' என்றதும், 'எல்லாப் பொருள்களையும் தனது வியாபகத்துள் அடக்கிநிற்பவன்' எனவும், 'எல்லையிலாதான்' என்றது, 'தான் ஒன்றன் வியாபகத்துட் படாதவன்' எனவும் அருளியவாறு. இங்ஙனம் போந்தன பலவும், இறைவனது புகழ், அளவிடப் படாத பெரும் புகழாயிருத்தற்குரிய காரணத்தை உடம்பொடு புணர்த்தலால் தெரிவித்தற் பொருட்டுக் கூறியனவாம். பொல்லா வினை - தீவினை. இறைவனை மறக்கச் செய்வதில் நல்வினையினும் தீவினை வலிமையுடையது. ஆதலின், 'புகழுமாறு ஒன்றறியேன்' என்றார். 'புகழ்தல்' என்பது, இங்கு, 'சொல்லுதல்' என்னும் அளவாய் நின்றது. ஆறு - முறைமை. ஒன்று - சிறிது. 'ஒன்றும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. 'நல்வினையுடையோரும், வினை நீங்கப்பெற்றோரும் உனது பெருஞ்சீரினை முறையறிந்து சிறிது சொல்ல வல்லர்; யான் பொல்லா வினையேனாகலின், அவ்வாறு சிறிதும் மாட்டேனாயினேன்' என்றபடி. எனவே, 'இங்ஙனமாயினும், உரைப்பன் என்னும் அவாவினால் எனக்குத் தோன்றியவாறே நெறிப்பாடின்றிக் கூறுவன சிலவற்றை ஏற்றருளல் வேண்டும்' என வேண்டிக் கொண்டதாயிற்று. இஃது, அவையடக்கமாயும் நிற்றல் அறிக. அவை, அடியவரது திருக்கூட்டம்.

26-32. 'மிருகம்' என்பது, 'விருகம்' என மருவிற்று. கல்லினுள் வாழும் தேரை முதலியன போன்றவற்றை, 'கல்' என்று அருளினார். இனி, 'கல்தானே ஒருபிறப்பு' எனக் கொண்டு அதற்கும் வளர்ச்சி உண்டெனா உரைப்பாரும் உளர். கணங்கள் - பூதங்கள். 'வல் அசுரராகி' என்க. செல்லா நிற்றல் - உலகில் இடையறாது காணப்பட்டு வருதல். 'பிறப்பும்'

என்றதில், 'பிறப்பின்கண்ணும்' என ஏழாவது விரிக்க. 'பிறந்து' என்றதற்கு, 'பலமுறை பிறந்து' என உரைக்க. 'எம் பெருமான்' என்றது, விளி. 'இன்று' என்றதனை, இதன்பின்னும், 'மெய்யே' என்றதனை, 'வீடுற்றேன்' என்றதன்பின்னும் கூட்டுக. 'கண்டு வீடுற்றேன்' என்றது, 'உண்டு பசிதீர்ந்தான்' என்றாற்போலக் காரண காரியப் பொருட்டு. 'இன்று, கண்டு வீடுற்றேன்' என்றதனால், எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தது, இதனைக் காணாத முன்னை நாள்களில் என்பது பெறப்பட்டது. 'மெய்யே' என்னும் பயனிலைக்கு, 'இது' என்னும் எழுவாய் வருவிக்க. இவ்வாறு வலியுறுத்தோதியது, தாவரசங்கமங்களாய் உள்ள பலவகைப் பிறப்புக் களிலும் பலகாலும் பிறந்து, இனி என்னே உய்யுமாறு என்று இளைத் தற்குக் காரணமாயிருந்தன பலவும், உனது திருவடியைக் கண்ட துணையானே அற்றொழிந்தன; இஃது உன்பெருமை இருந்தவாறு' என வியந்தவாறு. இதன்பின், 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வரு வித்து, அதனை, முடிவில் 'அரனேயோ' என்றதில் உள்ள, 'உனக்கு ஓலம்' என்னும் பொருளதாகிய, 'ஓ' என்றதனோடு முடிக்க.

---

33. உள்ளத்துள் ஓங்காரமாய் நிற்றல் - அகர உகர மகர நாத விந்துக்களாய் நின்று அந்தக்கரணங்களை இயக்கிப் பொருள் உணர்வைத் தருதல். இதனை யோக நெறியாலும், ஞானத்தினாலும் உணர்வர் பெரியோர். அவற்றுள், யோக நெறியாய் உணர்தல் பாவனை மாத்திரத்தாலேயாம். ஞானத்தினால் உணர்தலே அநுபவமாக உணர்தலாகும். அடிகள் ஞானத்தினால் உணர்ந்த உணர்ச்சியால் அருளுதலின், 'உய்ய' எனவும், 'மெய்யா' எனவும் போந்த மகிழ்வுரைகள் எழுவவாயின.

---

34. விடை - எருது. அதனைச் செலுத்துவோனை, 'பாகன்' என்றது, மரபு வழுவமைதி.

---

35. ஐயன் - தலைவன். என - என்று சொல்லும்படி. 'வேதங்கள் சிவபிரானையே தலைவன் என முழங்குகின்றன' என்றதாம். இதனை, சுவேதாசுவதரம், அதர்வசிகை முதலிய உபநிடதங்களில் தெளிவாகக் காணலாம். 'ஓங்கி, ஆழ்ந்து, அகன்ற' என்ற மூன்றும், முறையே, 'மேல், கீழ், புடை' என்னும் இடங்களிற் பரவியிருத்தல் கூறியவாறு. இங்ஙனம் எல்லையின்றிப் பரந்து நிற்றலை, 'அகண்டாகாரம்' என்பர். 'நுண்ணியனே' என்றது, மேற்கூறியவாறு, எங்கும் வியாபகனாய் நிற்றற்குரிய இயைபினை விளக்கியவாறாம். 'ஓங்கி ஆழ்ந்து அகன்ற

நுண்ணியனாதலை யறிந்தே வேதங்கள். உன்னை, ஐயா எனத் துதிக்கின்றன' என்றபடி.

---

36. வெய்யாய் - வெப்பமுடையவனே. தணியாய் - தட்ப முடையவனே. இவ்விரண்டும் ஒறுத்தலையும், அருளலையும் குறித்துக் கூறியனவாம். இவற்றை முறையே 'அறக்கருணை, மறக் கருணை' என்பர். 'யஜமானன்' என்னும் ஆரியச் சொல், 'இயமானன்' என்று ஆயிற்று. இஃது உயிருக்குச் சொல்லப்படும் பெயர். 'இயமான னாய் எறியுங் காற்றுமாகி' *(தி.6 ப.94 பா.1)* என்றாற் போல்வனவுங் காண்க. 'அறக்கருணை, மறக்கருணை என்பவற்றை உயிர்களோடு வேற்றுமையின்றி நின்று செய்கின்றாய்' என்றதாம்.

---

37. முதலில் ஞானம்போலத் தோன்றி, பின் ஞானமன்றாய்ப் போதலின், விபரீத ஞானத்தை, 'பொய்' என்றும், அது பலவகை நிலைகளையுடைமையால், 'எல்லாம்' என்றும் கூறினார். 'போய் அகல' என்றதை, அகன்றுபோக என மாறிக் கூட்டுக. 'வந்தருளி' என்றதில் அருளி, துணைவினை. இறைவனைப் பற்றிவரும் வினைச் சொற்களில், இவ்வாறு வருமிடங்களைத் தெரிந்துகொள்க. வருதல், உள்ளத்தில்.

---

38. மெய் - நிலைபேறு. மிளிர்தல் - மின்னுதல். 'விளக்கு வந்து ஒளிவிடுங்காலத்து இருள் நீங்குதல் போல, நீ வந்து விளங்கிய காலத்து அஞ்ஞானம் அகன்றது' என்றவாறு. 'ஏனைய விளக்குக்கள் போல அணையும் விளக்கல்லை' என்பார். 'மெய்ச்சுடரே' என்று அருளினார். 'நொந்தா ஒண்சுடரே' *(தி. 7 ப.21 பா.1)* என்றாற்போல வருவனவுங்காண்க.

---

39. 'எஞ்ஞானம்' என்றதில் எகரவினா, எஞ்சாமைப் பொருட்டு. 'எஞ்ஞானமும்' என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று. 'இன்பப் பெருமானே' என்பதை முன்னர்க்கூட்டி, 'இல்லாதேனது அஞ்ஞானந்தன்னை' என இயைக்க.

---

40. நல்லறிவு - குற்றத்தொடுபடாத அறிவு. 'அறிவை உடையவனே' என்னாது, 'அறிவே' என்றார், அதனது மிகுதியுணர்த்தற்கு. முன்னர், 'மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற' என்றது பலர்க்கும், பின்னர், 'அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும்' என்றது 'தமக்கும்' எனக் கொள்க.

---

1. ஆக்கம் - தோற்றம். 'அளவு' என்றதனை, 'இறுதி' என்றதன் பின்னர்க்

கூட்டுக. இறுதி - அழிவு. 'இல்லாய்' ஆக்குவாய் முதலியனவும், ஏனையபோல விளிகளே.

42. ஆக்குதல் முதலிய மூன்றும் மறைத்தலின் வகையே யாதலின், அதனைவிடுத்து, 'அருள்தருவாய்' என்றருளினார்.

43. 'தொழும்பின்' என, பின்னர் வருகின்றமையின், வாளா, 'போக்குவாய்' என்றார். 'என்னை' என்பதை முதலிற் கூட்டுக. 'என்னை உன் தொண்டில் ஈடுபடாதவாறு நீக்குகின்றவனும் நீயே; அதன்கண் ஈடுபடச் செய்கின்றவனும் நீயே' என்றபடி. 'இருவேறு நிலையும் எனது பக்குவத்திற்கேற்ற படியாம்' என்றல் திருவுள்ளம்.

44. நாற்றத்தின் - பூவில் மணம்போல. நேரியன் - நுண்ணியன். இதன்பின், 'பரியாய்' என்பதனை வருவித்துக் கொள்க. நுண்மை, அறிதற்கரிய அவனது உண்மை இயல்பும், பருமை அவனது பொதுவியல்பும் என்க. உண்மை இயல்பு அறிதற்கரியதாயினும் அநுபவிக்கப்படும் என்றதற்கு, 'நாற்றத்தின்' என்று அருளிச் செய்தார். சேய்மை - மறைந்து நிற்கும் நிலை. நணிமை - வெளிப்பட்டு நிற்கும் நிலை.

45. மறையோன் - வேதத்தை அருளிச் செய்தவன்; இது, 'முதற் கடவுள்' என்னும் பெயர் மாத்திரையாய் நின்றது.

46. அப்பொழுது கறக்கப்பட்ட பால், சுவை மிகுதியுடைத் தாதல் அறிக. ஒடு, எண்ணிடைச்சொல். பின்னர், 'சிந்தனையுள் நின்று' என்றலின், இங்கு, 'நாவிற் கலந்தாற்போல' என உரைக்க. பால் முதலியவற்றை நினைப்பினும், சொல்லினும், காணினும் நாவில் நீர் ஊறும்; அவை நாவிற் கலப்பின் மிக்க இன்பம் பயக்கும் என்க.

47. 'சிறந்த' என்பதில், அகரம் தொகுத்தலாயிற்று. தேன் - இனிமை. 'தேனாய் ஊறி' என, ஆக்கம் வருவிக்க.

48. பிறந்த பிறப்பு - இப் பிறப்பு; உடம்பு. 'பிறந்த பிறப்பறுக்கும்' என அடைகொடுத்து ஓதுதலின், முன்னர் 'எம் பெருமான்'

(அடி. *31)* என்றதின் இது வேறாதலறிக. இங்ஙனமே, இதன்கண், ஒரு சொல் பலவிடத்தும் வருவன வேறு வேறு கருத்துடையவாதல்

உய்த்துணர்ந்து கொள்க.

---

49. 'ஐந்தும்' என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று. 'நினை வார் நினைவின் வண்ணம் எந்நிறத்துடனும் தோன்றுவாய்' என்றபடி. இனிச் சிவபிரானது திருமுகங்கள் ஐந்தனுள்ளும் ஒரோவொன்று ஒரோவொரு நிறம் உடையதாதலும் அறிந்து கொள்க.

---

50. இங்கு, 'மறைந்திருந்தாயாகிய எம்பெருமானே' என உரைக்க. 'அடியார்க்கு வெளிநிற்கும் நீ, தேவர்க்கு மறைந்து நிற்கின்றாய்' என்றபடி. 'வினை' என்றது, வினையை விரும்பும் தன்மையை. அஃதாவது, தூலப் பொருளாய் நிற்றல். 'இத்தன்மை யானே இருளால் மறைக்கப்பட்டேன்' என்றபடி.

---

51. மாயம் - அழிதற்றன்மை. இருள் - ஆணவ மலம். தடை மந்திரத்தால் தடுக்கப்பட்டபோது, நெருப்புத் தனது சுடுதற் சத்தி மடங்கி நிற்றல் போல, ஞானத்தால் தடுக்கப்பட்ட காலத்தில் தனது மறைத்தற் சத்தி மடங்கி நிற்றலே ஆணவ மலத்திற்கு நீக்கமாகும். அதனையே இங்கு, 'மாய்தல்' என்றார் என்க. 'இருளை' என்றதில் ஐ, முன்னிலை ஒருமை விகுதி. 'இருளின் பக்கத்தனாய் உள்ளாய்' என்றபடி.

---

52. 'அறம் பாவம்' என்றதனால், கன்ம மலங் கூறினார்.

---

53. போர்த்து - போர்க்குமாற்றால். 'எங்கும் உள்ள' என்க. 'புழுவையும் அழுக்கையும்' என எண்ணும்மை விரிக்க. மூடி - மூடப் பட்டு.

---

54. மலம் - அழுக்கு. சோரும் - வழிகின்ற. 'வாயிலையுடைய குடில்' என்க. இஃது உடம்பைக் குறித்த உருவகம். எனவே, மாயா மலத்தைக் கூறியதாயிற்று. 'குடிலை' என்றதில் உள்ள ஐயும், 'இருளை' என்றதில் உள்ள ஐ போல நின்று, 'குடிலிடத்தவனாய் உள்ளாய்' எனப் பொருள் தந்தது. 'இருளையாயும், குடிலையாயும் நின்று' என முற்றெச்சமாக்கி, மேல் வரும், 'நல்கி' என்பதனோடு முடிக்க.

55-61. மலங்க - யான் மனம் கலங்கும்படி; இது, 'வஞ்சனையைச் செய்ய' என்றதனோடு இயைந்தது. 'புலன்' என்றது பொறிகளை. வஞ்சனையாவது, நலஞ்செய்வதுபோலக் காட்டி வினைகளில் வீழ்த்துதல். 'செய்ய' என்னும் காரணப் பொருட்டாகிய வினையெச்சம். 'விலங்கும்' என்றதனோடு முடியும். 'உனக்கு அன்பாகி' என்க. கலந்த

அன்பு, உண்மை அன்பு. நல்குதல் - இரங்குதல்; 'நல்கி' என்னும் எச்சம் எண்ணின்கண் வந்தது. தயா, ஆகுபெயர். 'தயை உடையவன்' என்பது பொருள். 'நல்கியும், காட்டி யும் தயையுடையவனாய் நின்ற தத்துவனே' என்க. தத்துவன் - மெய்ப் பொருளாய் உள்ளவன்.

'நல்கி' என்றது, திரோதான சத்தியோடு இயைந்து நின்று மறைத்தலைச் செய்தலையும், 'கழல்கள் காட்டி' என்றது, அருட் சத்தியோடு இயைந்து நின்று அருளலைச் செய்தலையும் அருளினார் என்க. 'ஆணவம், கன்மம், மாயை' என்னும் மும்மலங்களையும், அவற்றொடு நின்று இறைவன் சத்தியே நடத்துகின்றது' என்பதையும், அதுபற்றியே அச்சத்தி, 'திரோதாயி (மறைப்பது) என்னும் பெயருடைத்தாய், 'மலம்' என்று சொல்லப்படுகின்றது' என்பதையும், 'ஆணவ மலம் பரிபாகம் அடைந்தபொழுது, அதுவே அருட் சத்தியாய் ஆன்மாவினிடத்தில் பதியும்' என்பதையும்,

---

'ஏயும்மும் மலங்கள் தத்தம் தொழிலினைச் செய்ய ஏவும்

தூயவன் றனதோர் சத்தி திரோதானகரி'

எனச் சிவஞான சித்தியும் *(சூ. 2.87).*

பாகமாம் வகைநின்று திரோதான சத்தி

பண்ணுதலால் மலம்எனவும் பகர்வர்; அது பரிந்து

நாகமா நதிமதியம் பொதிசடையான் அடிகள்

நணுகும்வகை கருணைமிக நயக்குந் தானே.

எனச் சிவப்பிரகாசமும் *(20)* கூறுதலால் அறிக.

இங்ஙனம் திரோதான சத்தியோடு இயைந்து நின்று மலங் களை ஏவி மயக்க உணர்வை உண்டாக்குதலாகிய மறைத்தலைச் செய்தலே, 'பந்தம்' என்றும், அருட்சத்தியோடு இயைந்து நின்று, மலங்களை நீக்கி மெய்யுணர்வை உண்டாக்குதலே, 'வீடு' என்றும் சொல்லப் படும். ஆகவே, பந்தமும், வீடும் இறைவன் இன்றி ஆகாவாகலின், 'பந்தமும் அவனே; வீடும் அவனே' என்கின்றன உண்மை நூல்கள்.

'பந்தம் வீடவை யாய பராபரன்' (தி.5 ப.7 பா.2)

'பந்தமும் வீடும் படைப்போன் காண்க'

(தி.8 திருவா. திருவண்-52)

'பந்தமு மாய்வீடு மாயினாருக்கு'

(தி.8 திருவா. திருப்பொற்-20)

என்றாற்போலும் திருமொழிகளைக் காண்க. மறைத்தலும், மலபரி பாகம் வருதற்பொருட்டேயாகலின், கருணையேயாம். இது, மறக் கருணை என்றும், அருளல் அறக்கருணை என்றும் சொல்லப்படும். ஆதலின், பந்தமாய் நின்று மறைத்து வந்ததையும், 'நல்கி' என அருளிச் செய்தார்.

62. 'அற்ற மலர், மலர்ந்த மலர்' எனத் தனித்தனி முடிக்க. சோதி - ஒளி; என்றது, ஞானத்தை. 'மலர்' என்றது, உள்ளத் தாமரையை. அஞ்ஞானம் நீங்க, மெய்ஞ்ஞானத்தைப் பெற்றோரது உள்ளத்தின்கண் இறைவன் ஒளியாய் இருப்பவனாதலறிக.

63. தேசன் - ஒளியாய் இருப்பவன். மேல், 'சுடர்' என்றது, வரையறைப்பட்டுச் சிறிதாய்த் தோன்றுதலையும், இது, அளவின்றிப் பேரொளியாய் நிற்றலையுங் குறித்தவாறு என்க.

'தேனும் அரிய அமுதமும் போல இனியவனே' என இன்ப நிலை கூறியவாறு. ஒளி, அறிவாகலின், அதனையடுத்து இன்பம் கூறினார். சிவபுரன் - சிவலோகத்தில் இருப்பவன். மேல், தன்மை கூறி, இதனால் இடம் குறித்தருளினார். இதனால் பதமுத்தி எய்துங்காலை அவனது இன்பம் தோன்றப் பெறுதல் அறியப்படும்

64. 'பாசமாம் பற்று' என்றது, காரியத்தைக் காரணமாகக் குறித்தபடி. பற்று, 'யான்' என்னும் அகப்பற்றும், 'எனது' என்னும் புறப்பற்றும். பாரித்தல் - வளர்த்தல். இதற்கு 'ஞானத்தை' என்னும் செயப்படுபொருள் வருவிக்க. ஆரியன் - ஆசிரியன்.

65. நேச அருள் - அடியவன் என்னும் தொடர்பு காரணமாகத் தோன்றும்

அருள்; எனவே, இஃது ஆட்கொண்ட பின்னர் உளதாவ தாயிற்று. புரிதல் - இடைவிடாது செய்தல். 'நெஞ்சில்' நின்ற என இயையும். வஞ்சனையாவது, பழையவாதனை பற்றி எழும் சில அவாக்கள். அவை அற்றம் பார்த்து நுழைந்து, பிறவிக் குழியில் வீழ்த்தலின், 'வஞ்சம்' எனப்பட்டன. 'ஒருவனை வஞ்சிப்பதோரும் அவா' *(குறள் - 366)* என்றருளியது காண்க.

---

66. அருள்பெற்றாரது நெஞ்சில், வாதனை தாக்காதொழிதல் வேண்டின், இறைவன் அதன்கண் பெயராதுநிற்றல் வேண்டுவதாதல் அறிக. 'பெருங் கருணைப் பேராறே' என்றது இது, முன்செய்த எல்லா வற்றினும் பேருதவியாதல் குறித்து.

---

67. ஆரா அமுது - தெவிட்டாத அமிர்தம்; என்றது, 'தேவா மிர்தத்தினும் வேறானது' என்றபடி. அளவின்மை - புதிது புதிதாக எல்லையின்றிப் புலப்பட்டுவருதல். இதனை, 'உணர்ந்தார்க் குணர் வரியோன்' என்னும் திருக்கோவைப் பாட்டுள், அடிகள், சிற்றின் பத்தில் வைத்து உணர்த்தியருளுமாறறிக. இதனால், வாதனாமலமும் நீங்கப் பெற்றார்க்கு இறைவன் அநுபவப் பொருளாய் நிற்கும் நிலையை விளக்கியவாறாம்.

---

68. இதனால், 'நீ இத்தன்மையையாயினும் உன்னை உணராதவர்க்குத் தோன்றாமலே நிற்கின்றாய்' என்று அருளினார். இந்நிலை, குருடர்க்கு ஒளியும் இருளேயாதல் போல்வது என்பார், 'ஒளியே' என்று அருளினார்.

ஊமன்கண் போல ஒளியும் மிகஇருளே

யாமன்கண் காணா வவை. -திருவருட்பயன் *19.*

என்ற திருவருட்பயனைக் காண்க.

---

69. 'ஓராதார்க்கு ஒளிக்கும் நீ, அடியேனுக்கு விளங்கி இன்பம் பயந்தாய்' என்றதாம்.

---

70. இன்பமும் துன்பமும் இல்லாமை தன்னளவிலும், அவை களையுடைமை உயிர்களோடு நிற்றலிலுமாம். இவைகளை, ஓராதா ரிடத்தும், தம்போலும் அடியவரிடத்துமாக மேற்கூறியவற்றோடு எதிர் நிரல் நிறையாக இயைக்க.

71. 'அன்பருக்கு அன்பன்' எனவே, அல்லாதார்க்கு அல்லாதானாதல் பெறப்பட்டது. யாவையுமாதல், கலப்பினால் ஒன்றாய் நிற்றலாலும், அல்லனாதல், பொருட்டன்மையால் வேறாய் நிற்றலாலும் என்க.

72. 'சோதியனே' என்றது, 'சத்தியாய் நிற்பவனே' என்றபடி;

'உலகெலா மாகிவேறாய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி'

(சிவஞான சித்தி. சூ.2.1) எனச் சத்தியை, 'ஒளி' என்றமை காண்க. துன் இருள் - செறிந்த இருள்; என்றது ஆணவமலத்தை. ஏகாரம், தேற்றம். தோன்றாமை - அடராமை. 'உயிர்கள்போல ஆணவமலத் தால் அணுகப்படாத பெருமையுடையவனே' என்றபடி.

73. 'அனாதிமுத்தனாகலின், அனாதிபெத்தமுடைய உயிர்களின் பொருட்டு உலகத்தைத் தோற்றுவிப்பவனாயினை; அங்ஙனமே முடிவில் ஒடுக்குபவனும், இடைக்கண் நிறுத்து விப்பவனும் ஆயினை' என்றபடி. இது, 'பதியாய் நிற்கும் நிலை' என்றும், இத்தொழில்களுள் யாதொன்றனையும் செய்யாதிருத்தல், 'சிவமாய் நிற்கும் நிலை' எனவும் சொல்லப்படும். மேல், 'ஆக்கு வாய்' என்றது முதலியன, 'அத்தொழில்களைச் செய்யும் தலைவன்' என்ற ஒன்றையே கூறியது எனவும், இது, அத்தன்மையனாதற்குரிய இயைபு உணர்த்தி, அவனது உண்மை நிலையையும் கூறியது எனவும் கருத்து வேறுபாடு கொள்க.

74. ஈர்த்து ஆட்கொண்டமை, வலிய வந்து உலகியற் செலவைத் தடுத்து ஆட்கொண்டமையாம். எந்தை பெருமான் - எனக்கு ஞானத் தந்தையான பெருமான்.

76. 'நோக்கு நோக்கே' என இயைத்து, 'நோக்குகின்ற குறிப் பொருளே' என உரைக்க. நுணுக்குதல் - நுண்ணிதாகச் செய்தல். 'நுணுக்கரிய' என்றதில் அருமை, இன்மை குறித்துநின்றது; 'இயல் பாக நுண்ணிதாய' என்றபடி, உணர்வுடையதனை, 'உணர்வு' என்றே கூறினார்.

77. 'போக்கும், வரவும்' என வேறு வேறாக எண்ணினமை யின், முறையே இறப்பினையும், பிறப்பினையும் குறித்து அருளியன வாம். புணர்வு - தோய்வு; இன்பத் துன்ப நுகர்ச்சிகள். புண்ணியன் - அறவடிவினன்.

78. 'காவலன்' என்றது, 'தலைவன்' என்னும் பொருளது. 'எம் காவலன்' என்றதனால், 'எம்மைக் காக்கும்' என்பது போந்தது. காண்பு - காணுதல். உன்னுடைய நிலையை முழுதுங் காணுதல் உயிர் கட்கு இயலாது என்றபடி.

அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்

இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்

எவ்வுருவோ நும்பெருமான் என்பார்கட் [கென்னுரைப்பேன்

எவ்வுருவோ நின்னுருவம் ஏது'

-அம்மை திருவந்தாதி. 61

கடல்அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும்

கடல்அளக்க வாராதாற் போலப் - படியில் அருத்திசெய்த அன்பரைவந் தாண்டதுவும் எல்லாம் கருத்திற்குச் சேயனாய்க் காண்.

-திருக்களிற்றுப்படியார்.90

என்றாற்போல்வன, இதனை விளக்குவனவேயாம்.

79, 80. 'இன்ப வெள்ள ஆறே' என மாற்றியுரைக்க. 'பெரு வெள்ளத்திற்கு யாறே காரணமாதல் போல, பேரின்பத்திற்கு நீயே காரணன்' என்றபடி. அத்தன் - அப்பன்; இஃது எவ்வுயிர்க்கும் என்க. மிக்கு ஆய்நின்ற தோற்றம் - மிகுந்து வளர்ந்துநின்ற காட்சி; தூலமாய் விளங்குதலை யுடைய சுடரொளி, நூலறிவு எனவும், சொல்லவாராத நுண்ணுணர்வு அநுபவ ஞானம் எனவும் கொள்க. 'சுடரொளியாயும், நுண்ணுணர்வாயும் வந்து' என்க.

81. 'வேறு வேறு' என்பது, 'வெவ்வேறு' என மருவிற்று. இது, மாறுபட்ட பல சமயங்களின் கோட்பாடுகளையும், அவற்றாற் பெறும் அநுபவங்களையும் குறித்தது. 'இங்ஙனம் பலவேறுவகைப்பட உணர்வு நிகழ்தற்குக் காரணம், உலகமாகிய பற்றுக்கோட்டினது இயல்பு' என்பார், 'மாற்றமாம் வையகத்தின்' என்றார்.

82. தேற்றம் - துணிவு; மெய்யுணர்வு; முன்னைய அறிவு களெல்லாம் பின்னர் அறியாமையாய்க் கழிய, இஃது ஒன்றே என்றும் அறிவாய் நிற்பதாகலான், 'அறிவாந் தேற்றமே' என்று அருளினார். தேற்றத் தெளிவு - துணிபுணர்வின் பயன்; இன்பம்.

83. 'சிந்தனையுள் எழும் ஊற்று' என்றமையால், 'உண்ணு தலும் சிந்தனையாலே' என்பது போந்தது. இவ்வாறு நிற்பதோர் அமிர்தம் இன்மையின், 'ஆரமுதே' என்று அருளினார். இது, வரம்பு படுதலும், வேறு நிற்றலும் இல்லாமை அருளியவாறு.

84-85. 'வேற்று, விகார, விடக்கு' என்ற மூன்றனையும், 'உடம்பு' என்றதனோடு தனித்தனி முடிக்க. வேற்றுடம்பு - தன்னின் வேறாயதாய உடம்பு. விகாரம் - மாறுதல். விடக்கு - ஊன். 'உடம் பினுள்' என்பதில் உள், ஏழனுருபு. 'கிடப்ப' என்ற செயவெனெச்சம், தொழிற் பெயர்ப் பொருளைத் தந்தது. ஆற்றேன் - பொறுக்க மாட்டேன்.

85-88. 'எம் ஐயா' என்றது முதலியன மெய்யானாரது மொழிகள். ஓ - ஓலம். 'என்றென்று' என்னும் அடுக்கு, பன்மை பற்றி வந்தது. போற்றியும் புகழ்ந்தும் என்க. 'போற்றுதல் - வணங்குதல். பொய் - பொய்யுணர்வு. கெட்டு- கெடப்பெற்று. மெய் - மெய்யுணர்வு. ஆனார் - நீங்கப்பெறாதார். குரம்பை - குடில். கட்டழித்தல் - அடியோடு நீக்குதல். 'குரம்பைக் கட்டு' என்பது பாடமாயின், 'உடம் பாகிய தளையை' என உரைக்க. ஏனையோர் பலரும் உடம்புடைய ராயே நிற்ப, தான் ஒருவனே அஃது இன்றி நிற்பவனாதலின், 'குரம்பை கட்டழிக்க வல்லானே' என்றார். தம் உடம்பை நீக்கியருள வேண்டுவார், மெய்யுணர்வில் நிலைபெற்றார்க்கு அருள் செய்யும் முறையை எடுத்தோதினார்.

89. நள்ளிருள் - செறிந்த இருள். இது, முற்றழிப்புக் காலத்தை உணர்த்துவது. 'பயில' என்பது, 'பயின்று' எனத் திரிந்தது; 'ஒழிவின்றி' என்பது பொருள். இந்நிலையிற் செய்யும் நடனம், 'சூக்கும நடனம்' எனப்படும்.

90. தில்லைக் கூத்துத் தூல நடனமாகும். சூக்கும நடனம், தூல நடனம் இரண்டினாலும், 'உலகிற்கு முதல்வன் நீயே' எனக் குறித்த வாறு. இறைவன் மதுரையிலும் அதனைச் சூழ்ந்த தலங்களிலும் அடியார்

பலருக்குப் பல திருவிளையாடலாக வெளிநின்று அருளின மையாலும், தமக்கும் உத்தரகோச மங்கைத் தலத்திலே கைவிடாது காத்தல் அருளினமையாலும், பாண்டிநாட்டையே இறைவனுக்கு உரிய நாடாகவும், உத்தரகோச மங்கையையே ஊராகவும் அடிகள் ஆங்காங்குச் சிறந்தெடுத்தோதி அருளுவர் என்க.

தெற்கு - சோழநாடு பற்றிக் கூறப்படுவது. இவற்றால் இறைவன் அடியார்கட்கு எளியனாய் வருதல் குறிக்கப்படும் என்றுணர்க.

---

91. 'இதுகாறும் கூறிவந்தன பலவும், பிறவியை நீக்குதல் கருதி' என்பார், 'அல்லற் பிறவி அறுப்பானே' என இறுதிக்கட் கூறினார். கூறவே, தமக்கு வேண்டுவதும் அதுவே என்றதாயிற்று. 'பிறவி' என்ற பொதுமையால், எடுத்து நின்ற உடம்புங் கொள்க. ஓ - ஓலம்; இதுவே இப்பாட்டிற்கு முடிபாகலின், இதனுடன் வினை முடித்து, 'என்று' என்றது, முதலியவற்றை, வேறெடுத்துக்கொண்டு உரைக்க. என்று - என இவ்வாறு.

92-95. 'சொல்லற்கரியானைச் சொல்லி' என்றதனால், யான் அறிந்த அளவிற் போற்றி என்க. செல்வர் - ஞானச் செல்வராவர். 'தம்மைப் பல்லோரும் ஏத்த, தாம் சிவபுரத்தில் சிவனடிக்கீழ் அவனைப் பணிந்து நிற்போராவர்' என, சொற்களை ஏற்குமாற்றாற் கூட்டியுரைக்க. 'சிவபுரத்தின் உள்ளார்' என்றது, தூய புலன்களை நுகர் தலை. ஞானச் செல்வராதல் கூறினமையின், அந்நுகர்ச்சியின் உவர்ப்புத் தோன்றியவழி, அங்கிருந்தே பரமுத்தியைத் தலைப்படுதல் பெறப்பட்டது. இதனால், இப்பாட்டினை ஓதுவார்க்கு வரும் பயன் கூறினமை காண்க.

இங்ஙனம், மங்கல வாழ்த்து முதலாக, பாட்டின் பயன் ஈறாகப் பாயிர உறுப்புக்கள் பலவும் அமைய இதனை அருளிச் செய்தமையின், அடிகள் தம் பெருமானைப் பலவாற்றானும் பாடி மகிழ விரும்பி அங்ஙனம் பாடத் தொடங்குங்கால், இதனையே முதற்கண் அருளிச் செய்தார் என்பது பெறுதும். இதனானே, இதனுட் கூறப்பட்ட பாயிரப் பகுதிகள் பலவும், பின்னர் அருளிச் செய்த பல பகுதிகட்கும் பொருந்து தல் கொள்க.

'சிவ புராணந்தன்னை உரைப்பன்' எனப் புகுந்த அடிகள், அதனைப் பலவாற்றானும் விளிமுகமாகவே அருளினமையின், அவை யாண்டு நிற்பினும் பொருந்துவனவேயாம். ஆதலின், 'எம் பெருமானே, முன்பு

பல்லூழிக் காலம் எல்லாப் பிறப்புக்களிலும் பிறந்து இளைத்துப்போனேன்; இதுபோழ்து உன் பொன்னடிகளைக் கண்டு வீடு பெற்றேன்; இது மெய்யே; ஆயினும், உடம்பினுட் கிடப்ப ஆற்றேன்; பொய்கெட்டு மெய் ஆனார்க்கு புலக் குரம்பை கட்டழிக்க வல்லானே! தில்லையுட் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே! அல்லற் பிறவி அறுப்பானே! 'ஓ' என வினைமுடித்துக் கொள்க.

1.2.கீர்த்தித் திருவகவல்

தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகுந்
துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்
என்னுடை யிருளை ஏறத் துரந்தும்
அடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பும்
மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமந் தோற்றுவித் தருளியும்
கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடும்
எஞ்சா தீண்டும் இன்னருள் விளைத்தும்
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்
விராவு கொங்கை நற்றடம் படிந்தும்
கேவேட ராகிக் கெளிறது படுத்தும்
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்து
உற்றஐம் முகங்க ளாற்பணித் தருளியும்
நந்தம் பாடியில் நான்மறை யோனாய்
அந்தமில் ஆரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்
நூறுநூ றாயிரம் இயல்பின தாகி
ஏறுடை ஈசன்இப் புவனியை உய்யக்
கூறுடை மங்கையும் தானும்வந் தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்

வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்
தற்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவும்
மொக்கணி யருளிய முழுத்தழல் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டி யன்தனக் குப்பரி மாவிற்று
ஈண்டு கனகம் இசையப் பெறாஅது
ஆண்டான் எங்கோன் அருள்வழி யிருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
அந்தண னாகி ஆண்டுகொண் டருளி
இந்திர ஞாலங் காட்டிய இயல்பும்
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்
ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்
உத்தர கோச மங்கையு ளிருந்து
வித்தக வேடங் காட்டிய இயல்பும்
பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்
திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்
பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசும்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவக னாகிய நன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனில்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்கு
அட்டமா சித்தி அருளிய அதுவும்
வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமும்

மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையும்
ஓரி யூரின் உகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்
பாண்டூர் தன்னில் ஈண்ட இருந்தும்
தேவூர் தென்பால் திகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையும்
தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்
இடைமரு ததனில் ஈண்ட இருந்து
படிமப் பாதம் வைத்தஅப் பரிசும்
ஏகம் பத்தின் இயல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசும்
திருவாஞ் சியத்திற் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்
சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்
கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்
ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்
ஐயா றதனிற் சைவ னாகியும்
துருத்தி தன்னில் அருத்தியோ டிருந்தும்
திருப்பனை யூரில் விருப்ப னாகியும்
கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனில் அறம்பல அருளியும்
குற்றா லத்துக் குறியா யிருந்தும்
அந்தமில் பெருமை அழலுருக் கரந்து
சுந்தர வேடத் தொருமுத லுருவுகொண்
டிந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபரன் எம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுள்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியும்
மந்திர மாமலை மகேந்திர வெற்பன்
அந்தமில் பெருமை அருளுடை அண்ணல்
எந்தமை ஆண்ட பரிசது பகரின்

ஆற்றல் அதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்
ஊனந் தன்னை யொருங்குடன் அறுக்கும்
ஆனந் தம்மே ஆறா அருளியும்
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாமல் ஆண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்
மூல மாகிய மும்மலம் அறுக்குந்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக எழில்பெற அணிந்தும்
அரியொடு பிரமற் களவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் அடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தர கோச மங்கையூ ராகவும்
ஆதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெய ராகவும்
இருள்கடிந் தருளிய இன்ப வூர்தி
அருளிய பெருமை அருண்மலை யாகவும்
எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்
அப்பரி சதனால் ஆண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுள்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை யீங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்
ஒன்ற வொன்ற உடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதார் எரியிற் பாயவும்
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியும்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி
நாத நாத என்றழு தரற்றிப்
பாத மெய்தினர் பாத மெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகஎன்று
இதஞ்சலிப் பெய்தநின் றேங்கினர் ஏங்கவும்

எழில்பெறும் இமயத் தியல்புடை யம்பொன்
பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடநவில்
கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்கு
அருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கயிலை உயர்கிழ வோனே. #2

தில்லையாகிய பழைய நகரில் நிருத்தம் செய்தருளிய திருவடிகளால், பல உயிர்களில் எல்லாம் தங்கிப் பல அருட் செயல்களைச் செய்தவனாகி, அளவில்லாத பல குணங்களோடு அழகு பெற விளங்கி மண்ணுலகிலும், விண்ணுலகிலும் மற்றைய தேவருலகிலும் பொருந்திய கல்வியைத் தோற்றுவித்தும், நீக்கியும், என்னுடைய அஞ்ஞான இருளை முழுதும் ஒழித்தும் அடியாருடைய உள்ளத்தில் அன்பானது பெருக, அதனைக் குடியிருப்பாகக் கொண்ட அருளும் தலைமையும் உடையவனாய், மேலுலகத்தில் தான் சொல்லிய ஆகமத்தை நிலைபெற்ற மகேந்திர மலையின்கண் வீற்றிருந்து நிலவுலகத்திற்கு வெளிப்படுத்தியும், கல்லாடம் என்னும் திருப்பதியில் இனிதாக உமாதேவியோடு, யாவரும் விரும்பும்படி ஒருமித்து எழுந்தருளியிருந்தும், பஞ்சப் பள்ளியென்னும் திருப் பதியில் பால் போன்ற மொழியையுடையவளாகிய உமாதேவி யோடும், குறையாமல் மிகும் இனிய அருள் செய்தும், வேடவுருவத் துடன் முருக்கம்பூப் போன்ற உதட்டையுடைய உமாதேவியின் நெருங்கின அழகான தனங்களாகிய குளத்தில் மூழ்கியும், வலைய ராகிக் கெளிற்று மீனைப் பிடித்து, பெருமை வாய்ந்த விருப்பத்தினை யுடைய ஆகமங்களை அக்கெளிற்றினிடமிருந்து கவர்ந்தும், அவ் வாகமங்களை மகேந்திரமலையில் இருந்து பொருந்திய ஐந்து திரு முகங்களாலும் உபதேசித்தருளியும், நந்தம்பாடி என்னும் திருப் பதியில் வேதியனாய், முடிவற்ற ஆசிரியனாய் எழுந்தருளியும், வெவ் வேறு திருவுருவங்களும் வெவ்வேறு குணங்களும், நூறு இலட்சம் வகையினையுடையனவாகி இடப வாகனத்தையுடைய சிவபெருமான், இவ்வுலகத்தை உய்விக்கும் பொருட்டு, தனது இடப் பாகத்தையுடைய உமாதேவியும் தானுமாய் எழுந்தருளி மேல் நாட்டுக் குதிரைகளைக் கொண்டு, அழகு பொருந்த வாணிகக் கூட்டமாய் தானே எழுந்தருளி வந்தும், வேலம்புத்தூர் என்னும் திருப்பதியில் வேற்படையைக் கொடுத்தருளித் தன் திருக்கோலத்தைச் சிறப்பாகக் காணுமாறு செய்த கோட்பாடும், சாந்தம்புத்தூரில் வில்லினால் போர் செய்கின்ற ஒரு வேடனுக்குக் கண்ணாடியில் வாட்படை முதலியவற்றைக் கொடுத்த பயனும், ஓர் அன்பர்க்கு அருளுதற் பொருட்டுக் குதிரைக்குக் கொள்ளுக்கட்டும்

தோற்பையில், மிக்க நெருப்புத் தோன்றத் தனது உருவத்தை அழகாகக் காட்டிய பழைமையும், திருமாலுக்கும் பிரமனுக் கும் அளவு அறியப்படாதவனாகிய சிவபெருமான், நரியைக் குதிரை களாகச் செய்த நன்மையும், பாண்டியனை ஆட்கொண்டருள, அப் பாண்டியனுக்குக் குதிரையை விற்று, அதற்கு அவன் கொடுத்த மிக்க பொன்னைப் பெறக் கருதாது, என்னை ஆண்டவனாகிய எம் இறைவனது அருள் வழியையே நான் நாடியிருக்குமாறு அழகு பொருந்திய பாதங்களை, மிக்க ஒளியுடன் காட்டியருளிய பழைமையும், வேதியனாகி, அடியேனை ஆட்கொண்டருளி மாயம் செய்து மறைந்த தன்மையும்; மதுரையாகிய பெரிய நல்ல பெருமை வாய்ந்த நகரத்திலிருந்து, குதிரை வீரனாய் வந்த கோட்பாடும், அந்த மதுரை நகரத்தில் அடியவளாகிய வந்தி என்பவள் பொருட்டு, மற்றவர்களுடன் மண் சுமந்தருளிய விதமும், திருவுத்தரகோச மங்கையிலிருந்து வித்தக வேடம் காட்டிய இயற்கையும், திருப்பூவணத்தில் விளங்கியிருந்தருளி, தூய்மையான அழகிய திருமேனியைப் பொன்னனையாள் என்பவளுக்குக் காட்டிய பழைமையும், திருவாதவூரில் எழுந்தருளி இனிய திருவருள் புரிந்து பாதச் சிலம்பு ஓசையைக் காட்டிய செயலும், அழகு நிறைந்த பெருந்துறைக்கு இறைவனாகி, மேன்மை பொருந்திய ஒளியில் மறைந்த வஞ்சகமும், திருப்பூவணத்தில் இனிதாக விளங்கியருளிப் பாவத்தை அழித்த விதமும், தண்ணீர்ப் பந்தலை வெற்றியுண்டாக வைத்து நல்ல நீரைத் தரும் ஆளாகியிருந்த நன்மையும், விருந்தாளியாகி, திருவெண்காட்டில் குருந்த மரத்தின் அடியில் அன்று வீற்றிருந்த கோலமும், திருப்பட்ட மங்கை என்னும் திருப்பதியில் சிறப்பாய் இருந்து அவ்விடத்தில் அட்டமா சித்திகளை அருளிய விதமும், வேடுவனாய் வந்து வேண்டும் வடிவைக் கொண்டு காட்டில் ஒளித்த வஞ்சகமும், படைகளின் உண்மையைக் காட்டச் செய்து, அதற்கு வேண்டிய வடிவம் கொண்டு மேன்மையுடைய ஒருவனாய்த் தோன்றிய தன்மையும், ஓரியூரில், இனிதாக எழுந்தருளி, பூமியில் பிறவாப் பெருமையுடைய குழந்தையாகிய தன்மையும், பாண்டூரில் மிக இருந்தும், தேவூருக்குத் தென்திசையில் விளங்குகின்ற தீவில் அரசக் கோலம் கொண்ட கோட்பாடும், தேன் பொருந்திய மலர்ச் சோலை சூழ்ந்த திருவாரூரில் ஞானத்தைக் கொடுத்த நன்மையும், திருவிடைமருதூரில் மிக இருந்து பரிசுத்தமான திருவடியை வைத்த அந்தத் தன்மையும், திருவேகம்பத்தில் இயற்கையாய் எழுந்தருளி யிருந்து பெண்ணை இடப்பாகத்தில் கொண்ட தன்மையும், திரு வாஞ்சியம் என்னும் தலத்தில் சிறப்புப் பொருந்த எழுந்தருளி மணம் நிறைந்த கூந்தலையுடைய உமாதேவியோடு மகிழ்ந்திருந்த விதமும்; வீரனாகி, வலிய வில்லைத் தாங்கி, பலப்பல வீரச் செயல் களைக்

காட்டிய தன்மையும், திருக்கடம்பூரில் இடமுண்டாக இருந் தும், திருவீங்கோய் மலையில் அழகைக் காட்டியும், திருவையாற்றில் சைவனாய் வந்தும், திருத்துருத்தி என்னும் திருப்பதியில் விருப்பத் தோடிருந்தும், திருப்பனையூர் என்னும் பதியில் விருப்பமுடைய வனாய் இருந்தும், சீகாழியில் திருவுருவினைக் காட்டியும், திருக்கழுக் குன்றத்தில் நீங்காது இருந்தும், திருப்புறம்பயத்தில் பல அறச்செயல் களை அருளிச் செய்தும், திருக்குற்றாலத்தில் அடையாளமாய் இருந்தும், முடிவில்லாத பெருமையையுடைய, நெருப்புப் போலும் உருவத்தை மறைத்து, அழகிய கோலத்தினையுடைய ஒப்பற்ற முதற் பொருளின் உருவம் கொண்டு இந்திர ஞாலம் போல எழுந்தருளி, எல்லாருடைய குணங்களும் தன்னிடத்து அடக்கித்தானொருவனே முதல்வனாய் நிற்கிற அருளினால் மேம்பட்ட எம் தலைவன் சந்திரதீபம் என்னும் தலத்தில் சாத்திரப் பொருளை உபதேசிப் பவனாய், ஆகாயத்தினின்றும் இறங்கி வந்து அழகு வாய்ந்த திருக் கழிப்பாலை என்னும் தலத்தில் அழகிய திருக்கோலத்தோடு பொருந்தி யிருந்தருளியும்; மறைமொழிகள் வெளிப்படுவதற்கு இடமான பெரிய மலையாகிய, மகேந்திர மலையையுடையவன் முடிவற்ற பெருமையையும் அருளையும் உடைய பெரியோன், எம்மை ஆண்டருளிய தன்மையைச் சொல்லின், வலிமையையுடைய அழகமைந்த திரு மேனியில், திருவெண்ணீற்றுக் கொடியை உயர்த்திக் காட்டியும், பிறவித் துன்பத்தை ஒருங்கே அழிக்கும் இன்பமே ஆறாகத் தந்தருளியும், உமாதேவியின் பாகத்தையுடைய, மிகவும் பெருங் கருணையையுடையவன், நாதமாகிய பெரிய பறை முழங்கி ஒலிக்கக் கண்டும், அன்பர் மனம் களங்கமடையாமல் ஆட்கொண்டருள்வோன் முத்தலை வேலினைக் கைப்பிடித்தருளியும், மூலகாரணமாகிய மும் மலம் நீக்குகிற பரிசுத்தமாகிய திருமேனியில் ஒளிவீசுகின்ற சோதியாய் உள்ளவன், அன்பரிடத்து அன்புடையவனாகிச் செங்கழுநீர் மலர் மாலையைப் பொருத்தமுடையதாக அழகுபெறத் தரித்தும், திருமாலுக்கும் பிரமனுக்கும் எல்லையறியப் படாதவன் குதிரையின் மீது ஏறி வந்த விதமும், மீண்டும் பிறவிக்கு வாராத முத்தி நெறியை அன்பர்க்குக் கொடுப்பவன், பாண்டி வளநாடே பழைய இடமாகக் கொண்டும், அன்பு செய்கின்ற அடியவரை மிகவும் மேலான முத்தியுலகத்தில் சேர்ப்பவன், திருவுத்தரகோச மங்கையைத் திருப்பதியாகக் கொண்டும், முதன்மையான மும்மூர்த்திகட்குத் திருவருள் செய்த மகாதேவன் என்பதே திருப்பெயராகக் கொண்டும், அடியார்கட்கு அஞ்ஞான இருளை நீக்கியதனால் ஆகிய பேரின்பமாகிய ஊர்தியைக் கொடுத்தருளிய பெருமையை உடைய அருளே மலையாகக் கொண்டும்,

எப்படிப்பட்ட பெருந் தன்மையையும் எவ்வகைப் பட்டவர் திறத்தினையும் அவ்வத் தன்மைகளால் ஆட்கொண்டருளி, நாய் போன்ற என்னை நன்மை மிகுந்த தில்லையுள் அழகு நிறைந்த 'அம்பலத்தில் வருக' என்று சொல்லி, பொருந்த அடியேனை இவ்வுலகத்திலே நிறுத்தி, அன்று தன்னோடு கூடப்போன அருள்பெற்ற அடியார், தன்னோடு பொருந்த அவரோடு தான் கலந்து மறைந்தருளியும், தன்னைக் கலக்க வாராதவர்களுள் சிலர், தீயில் குதிக்கவும், ஆசை கொண்டு மயக்கம் அடைந்தும், பூமியில் புரண்டு வீழ்ந்து அலறியும், நிற்க, காலால் வேகம் கொண்டு ஓடிக் கடலில் விழ நெருங்கி, 'நாதனே! நாதனே!' என்று அழுது புலம்பி, திருவடியை அடைந்தவர்கள் முத்திப்பேறு எய்தவும், பதஞ்சலி முனிவர்க்கு அருள் செய்த மேலான கூத்தனே என்று இதயம் வருந்த நின்று ஏங்கினவர் ஏங்கி நிற்கவும், ஒலிக்கின்ற கயிலாய மலையின் சிறந்த தலைவன் அழகு பெற்ற இமய மலையின் தன்மை வாய்ந்த அழகிய பொன்னினால் செய்யப்பட்டு விளங்குகின்ற தில்லையம்பலத்தினில் நடனம் செய்த, கொவ்வைக் கனி போன்ற சிவந்த வாயினையுடைய உமாதேவியோடு காளிக்கும் அருள் செய்த, திருக்கூத்தில், அழகு மிக்க புன்னகையையுடைய எம்பெருமான் தன் திருவடியைச் சரணாக அடைந்த தொண்டர்களுடனே விளங்குகின்ற புலியூரில் எழுந்தருளி இனிதாக எனக்கு அருள் செய்தனன்.

விளக்கவுரை

கீர்த்தித் திருஅகவல் - சிவபெருமானது அருட் புகழைக் கூறுகின்ற சிறந்த அகவற் பாட்டு. இதற்கு, முன்னோர் உரைத்த குறிப்பும், 'சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை' என்பதேயாகும்.

சிவபுராணத்துள், சிவபெருமானது திருவருட்பெருமையை, பண்பாக எடுத்துப் போற்றிய அடிகள், இதனுள் அதனைச் செயலாக எடுத்துப் போற்றுகின்றார். அச் செயல் பற்பல இடங்களில், பற்பல காலத்தில், பற்பல வகையில் நிகழ்ந்தனவாம். ஆகவே, இதனுட் கூறப்படுவன பலவும், இறைவனது அருட்டிருவிளையாடல்கள் என்பது பெறப்படும். அடிகளது காலப் பழைமையால், இதனுட் குறிக்கப்பட்ட தலங்களுள்ளும், வரலாறுகளுள்ளும் பல, பிற்காலத்தவரால் நன்கு அறிதற்கு அரியவாயின. அதனால், அவற்றை அவரவரும் தாம் தாம் கருதியவாற்றால் பலபடக் கூறிப் போந்தனர். ஆகவே, அவர் கூற்றுக்கள், ஏற்றபெற்றியே கொள்ளப்படும் என்க.

அடி 1-3

'திருவடி' என்றது, விடாத ஆகுபெயராய், அவைகளையுடைய இறைவன் எனப் பொருள் தந்தது. 'எல்லாம்' என்றதில், 'எல்லாவற்றுக்கண்ணும்' என ஏழாவது விரிக்க. பயிலுதல்- நீங்காது நின்று அருள் புரிதல்.

இறைவன் புறத்தே தில்லையிலும், அகத்தே நெஞ்சத் தாமரையிடத்தும் நடனம் புரிதலை இங்ஙனம் அருளிச் செய்தார். 'பல்குணம்' என்றதில், 'குணம்' ஆற்றல். அஃது, 'எழில்பெற' என்றதனோடு முடிந்தது. எழில் பெற - எழுச்சிபெற்று நிற்குமாறு. விளங்கி - தடத்தநிலையில் தூலமாய் நின்று. இவ்வெச்சம், 'தோற்றியும், அழித்தும், துரந்தும்' என வருவனவற்றோடு முடியும்.

அடி *4-8*

'மண், விண்' என்றது பூதங்களை. கீழும் மேலுமான இவற்றைக் கூறவே, இடை நிற்கும் பூதங்களும் அடங்கின. 'வானோருலகு' எனப் பின்னர் வருதலின், இவை மக்களுலகாயின. 'கல்வியும்' என, தொகுக்கப்பட்ட எண்ணும்மையை விரித்துரைக்க. 'சொல்லும், பொருளும்' என இரு கூற்றுலகத்தையும் குறித்தவாறு. என்னை*?* துணிபுணர்விற்குக் காரணமாய் நிற்கும் சொற்கள் பல வற்றையுமே ஈண்டு' 'கல்வி' என்றமையின், தோற்றலும், அழித்தலும் கூறவே, இடைநிற்கும் நிறுத்தலும் அடங்கிற்று; எனவே, 'முத்தொழில்களைச் செய்து' என்றவாறாயிற்று. இருள் - ஆணவமலம். 'இவ்வாற்றானே இருளைத் துரந்து' என்றபடி. எனவே, 'இறைவன் முத்தொழில் செய்தல், உயிர்களின் இயற்கை மலமாகிய ஆணவத்தைத் தொலைத்தற் பொருட்டு' என்பது போந்தது.

சொன்னஇத் தொழில்கள் என்ன
காரணந் தோற்ற என்னில்
முன்னவன் விளையாட் டென்று
மொழிதலும் ஆம்; உயிர்க்கு
மன்னிய புத்தி முத்தி
வழங்கவும், அருளால் முன்னே
துன்னிய மலங்க ளெல்லாம்
துடைப்பதும் சொல்ல லாமே.

என்னும் சிவஞான சித்தியைக் காண்க *(சூ. 1.36).*

சொற்பல்காமைப் பொருட்டுச் சுருங்க ஓதினாராயினும், 'என்னுடை இருளை ஏறத்துரந்து என் உள்ளத்து அன்பு மீதூரக் குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பும்' எனவும், 'ஏனை அடியார் பலருடைய இருளையும் ஏறத் துரந்து அவர் உள்ளத்து அன்பு மீதூரக் குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பும்' எனவும் வகுத்துரைத்தல் கருத்தென்க. இவ்விரண்டினையும் இத்திருப்பாட்டுள் எடுத்தோதுதல் காண்க. ஏற - கடைபோக; முற்றிலும். மீதூர்தல் - மேன்மேல் வளர்தல். 'அவற்றைக் குடியாக்கொண்ட' என்க. குடி - குடியிருக்கும் இடம். கொள்கை - கோட்பாடு. சிறப்பு - மேன்மை. 'கொள்கை சிறப்பு' என்ற

இரண்டும், முறையே, காரணப் பெயராயும், காரியப் பெயராயும் நின்று, 'கொண்ட' என்ற பெயரெச்சத்திற்கு முடிபாயின. இதனால், இறைவன் உயிர்கள் பொருட்டுச் செய்யும் திருவிளையாடல்களைத் தொகுத்துக் கூறியவாறு.

அடி *9-10*

'சொன்ன ஆகமம்' என்றதை முதலிற் கூட்டி, 'முன்னர்ப் பிரணவர் முதலியோர்க்குச் சொன்ன ஆகமங்களை' என உரைக்க. சுத்த புவனத்திற் சொல்லப்பட்டவற்றை நிலவுலகத்திற் புலப்படுத்தினமையின், 'தோற்றுவித்து' என்றருளினார். 'எழுதுவிக்கப்பட்டன' என்பதும் இதனானே கொள்க. என்னை? தோற்றுவித்தல் என்பது, 'கட்புலனாம்படி செய்தல்' எனவும் பொருள் தருமாகலின், எழுதினோர் சிவகணத்தவர் எனக் கொள்ளப்படும். 'மகேந்திரமலை வடக்கின்கண் உள்ளது' என ஒரு சாராரும், 'தெற்கின்கண் உள்ளது' என மற்றொரு சாராரும் கூறுப. அடிகள் தென்னாட்டில் நிகழ்ந்தவற்றையே அருளிச் செய்தலின், தெற்கின்கண் உள்ளதெனக் கோடலே பொருந்துவதாம். இப் பெயருடைய மலை தெற்கின்கண் உள்ளதென்றே இராமாயணத்தாலும் அறிகின்றோம். 'மன்னு மாமலை' என்றதனால், அது சிறப்புடைய மலையாதல் விளங்கும்

அடி *11-12*

கல்லாடம், ஒருதலம், கலந்து - வெளிப்பட்டு நின்று. நல்லாள், உமையம்மை. நயப்பு உறவு - மகிழ்ச்சியுறுதல்; அஃதாவது, 'சினந்தணிதல். மகேந்திரமலையில் தோற்றுவித்தருளிய ஆகமங்களை இறைவன் உமையம்மைக்கு அவ்விடத்தே அறிவுறுத்த, அவள் அவற்றை விருப்பமின்றிக் கேட்டாள்; அதனாற் சினங்கொண்ட இறைவன், நீ ஈங்கிருக்கற்பாலையல்லை எனக் கடிந்து நீக்க, அவள், 'கல்லாடம்' என்னும் தலத்தில் சென்று தன் பிழை நீங்க இறைவனை வழிபட்டாள்; அவ் வழிபாட்டினால் மகிழ்ந்த இறைவன் அங்கு அம்மைமுன் வெளிப்பட்டுத் தனது மகிழ்ச்சியைப் புலப்படுத்தி, நின் பிழையைப் பொறுத்தோம் என்று அருள்செய்தான்' என்பது இவ்வடிகளால் கொள்ளத்தகும் வரலாறு.

அடி *13-14*

பஞ்சப்பள்ளி, ஒருதலம். பால்மொழி, உமையம்மை. எஞ்சாது ஈண்டும் இன்னருள் - பிரியாது அணுகியிருக்கும் வரம். விளைத்து - கொடுத்து. அம்மை கல்லாடத்தில் வழிபட்டுக் குற்றம் பொறுத்தருளப் பெற்ற பின்னர்ப் பஞ்சப் பள்ளியில் வழிபட, இறைவன் ஆங்குத் தோன்றியருளியபோது, அம்மை இறைவனோடு நீங்காது உறையும்

வரத்தினை வேண்டுதலும், இறைவன் அம்மையை, 'வலைஞர் மகளாய்ச் சென்றிரு; பின்னர் வந்து மணம் புரிதும்' என்று அருளினான் என இங்குக் கொள்ளற்பாற்று. குற்றம் பொறுத்த பின்பும் அம்மையை வலைஞர் மகளாகச் செல்லப் பணித்தது, அது முற்றும் நீங்குதற்கு. இனி வலைஞர் தலைவனது தவமே இதற்குச் சிறந்த காரணம் என்க.

அடி *15-16*

வேடனைக் குறிக்கும் 'கிராதன்' என்னும் வடசொல், 'கொல்லும் தொழிலுடையவன்' என்னும் பொருளையுடைய தாதலின், இங்கு அத்தொழிலையுடைய வலைஞனுக்குக் காரணக் குறி யாயிற்று. *'மீன்வலை வீசிய கானவன்' (தி.8 திருப்படையாட்சி-1)* எனப் பின்னும் அருளுவர்.

'கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்நின் ஐயர்
உடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் நீயும்'
(-சிலப்.புகார். கானல் -17)

என வலைஞர்களது கொலைத் தொழிலைச் சிலப்பதிகாரமும் கூறுதல் காண்க. கிஞ்சுகம் - முள்முருக்கு; அதன் பூப்போலும் வாயவள், உமையம்மை. விராவு - நெருங்கிய. தடம் - பொய்கை. இன்பம் பற்றி வந்த உருவகம். வலைஞர் மகளாய்ச் சென்று வளர்ந்திருந்த அம்மையை இறைவன் ஓர் வலைஞனாய்ச் சென்று மணந்து அவளோடு கூடி இன்புற்றனன் என்பது இதனுட் குறிக்கப்பட்ட வரலாறு.

இதற்கு இவ்வாறன்றி, பார்த்தனுக்கு வேடனாய்ச் சென்று அருள் புரிந்த வரலாற்றைப் பொருளாகக் கூறின், அதனைக் கூறாமையிற் குன்றக் கூறலும், கிஞ்சுக வாயவளோடு இன்புற்றமையை விரித்தோதினமையின், மற்றொன்று விரித்தலுமாகிய குற்றங்கள் தங்கும் என்க. இவ்வரலாறு, அடுத்து வரும் வரலாற்றின் பின்னர்க் கூறற்பாலதாயினும், அம்மைக்கு அருள் புரிந்தவற்றோடு ஒருங்கு இயைதற்பொருட்டு இதனை முன்னரும், ஆகம வரலாறுகள் தம்முள் ஒருங்கியைய, அடுத்து வருவதனை இதன் பின்னரும் அருளினார் என்க. இத்துணையும், உமையம்மைக்கு அருள்புரிந்த திருவிளை யாடல்களாம்.

அடி *17-18*

கேவேடர் - வலைஞர். 'கேவேடருள்' என உருபு விரித்து, 'வலைஞருள் ஒருவனாய்ச் சென்று' என உரைக்க. 'கெளிறு' என்றது இங்கு அப்பெயருடைய மீனை உணர்த்தும் சிறப்புப்பொருள் தாராது, 'மீன்' என்னும் பொதுப்பொருளே தந்து, சுறாமீனைக் குறித்தது. மா ஏட்டு ஆகிய ஆகமம் - பெரிய சுவடிக்கண் பொருந்திய ஆகமங்கள். இறைவன் மகேந்திரமலையில் எழுந்தருளியிருந்து ஆகமங்களைச் சுவடிகளாக்கி வைத்தபின்னர், அவற்றின் பொருளை அம்மைக்கு

விளக்கத் திருவுளங்கொண்டு அவளுடன் தனிமையில் இருந்து, 'ஈண்டு யாரையும் புகவிடாதி' என நந்தி பெருமானுக்கு ஆணையிட்டு, அம்மைக்கு ஆகமப் பொருளை விளக்கி வருங்கால், அம்மை அவற்றை விருப்பின்றிக் கேட்டிருந்தாள்; அதனால் வெகுண்ட இறைவன் அவளைத் தன்பால் நில்லாது நீங்கச் செய்தான். இதனையறிந்த முருகப் பெருமான், சீற்றங் கொண்டு, நந்தி தேவரது தடைக்கு அஞ்சாது உட்புகுந்து, ஆகமச் சுவடிக் குவியல் முழுவதையும் தமது பன்னிருகைகளாலும் ஒருசேர வாரியெடுத்துக் கடலிற் புக எறிந்தார். அதனால், இறைவன் அவரை, 'நீ மதுரையில் மூங்கை மகனாய்ப் பிறக்க' எனவும், நந்திதேவரை, 'நீ கடலில் சுறாமீனாகி அலைக' எனவும் வெவ்வுரை கூற, முருகப் பெருமான் மதுரையில் 'உப்பூரி குடி' கிழானாகிய வணிகனுக்கு மூங்கைப் பிள்ளையாய்ப் பிறந்திருந்தார். உருத்திரனால் (சிவபெருமானால்) பெற்ற சன்மத்தை (பிறப்பை) உடைமையால், அப்பிள்ளையை, 'உருத்திர சன்மன்' என்பர். நந்திதேவர் கடலிற் சுறாமீனாகி முருகப் பெருமானால் எறியப்பட்ட ஆகமச் சுவடிகள் அனைத்தையும் வைத்துக் காத்துக் கொண்டு வலைஞர்களுக்கு அகப்படாது திரிந்து அவர்களை அலைத்துவர, அம்மை, மேற்கூறியவாறு கல்லாடத்திலும், பஞ்சப்பள்ளியிலும் இறைவனை வழிபட்டு வலைஞர்கோன், மகளாய்ச் சென்று வளர்ந்து மணப்பருவம் எய்தியிருக்க, முன்னர்க் குறித்த சுறாமீனைப் பிடித்துக் கொணர்வோருக்கு அவளைக் கொடுப்பதாக வலைஞர்கோன் அறிவித்தான். வலைஞர் மைந்தர் ஒருவரும் அச்சுறாமீனை அகப்படுத்த மாட்டாராய் இருப்ப, இறைவன் தானே ஒரு வலைஞர் மகனாய்ச் சென்று சுறாமீனை வலையுட் படுத்துக் கொணர்ந்தான். நந்தி தேவர் முன்னையுரு வெய்தி, ஆகமச் சுவடிகளை இறைவன் முன் வைத்து வணங்கினார். உண்மையையுணர்ந்து, வலைஞனாய் வந்தவர் சிவபெருமானே என்றும் அறிந்து அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர். பின்னர் இறைவன் அம்மையை மணந்து கொண்டு மகேந்திரமலைக்கு எழுந்தருளினான். முருகப் பெருமான் உருத்திரசன்மராய், சங்கத்தார்க்கு உதவியிருந்து, முன்னை நிலை எய்தினார். இவையே, 'கல்லாடத்துக் கலந்தினி தருளி' என்றதுமுதல் இதுகாறும் வந்த அடிகளில் குறிக்கப்பட்ட வரலாறுகள் என்க. இவற்றைத் திருவிளையாடற் புராணம் சிற்சில வேறுபாடுகளுடன் கூறுமாயினும், ஆளுடைய அடிகளது திருமொழியாற் கொள்ளத்தக்கன இவையே எனக் கொள்க.

அடி *19-20*

மற்று, வினைமாற்று. அவைதம்மை - அந்த ஆகமங்களை. சிவபெருமானது - திருமுகங்கள் ஐந்து, 'ஈசானம், தற்புருடம், அகோரம்,

வாமதேவம், சத்தியோசாதம்' என்பன.
காமிகம் முதல் வாதுளம் ஈறாக உள்ள சிவாகமங்கள் இருபத்தெட்டினையும் பிரணவர் முதலிய இருபத்தெண்மருக்கும் சிவபெருமான் ஒரோவொருவர்க்கு ஒரோ ஒன்றாக இவ்வைந்து திருமுகங்களானும் அருளிச் செய்தான்; அவற்றுள் முதற் பத்து ஆகமங்களையும் முன்னர்க் கேட்டவர்பால், ஒருவர் வழி ஒருவராக ஒரோவொன்றை மற்றும் இருவர் கேட்டனர். இங்ஙனம் இப்பத்து ஆகமங்களையும் கேட்ட முப்பதின்மரும், 'சிவர்' எனப்படுதலின் இவை சிவபேதம் என்னும் பெயருடையவாயின. ஏனைப் பதினெட்டு ஆகமங்களையும் முன்னர்க் கேட்டவர்பால் ஒரோவொன்றை மற்றும் ஒரோவொருவர் கேட்டனர். இங்ஙனம் இப்பதினெட்டு ஆகமங்களையும் கேட்ட முப்பத்தறுவரும், 'உருத்திரர்' எனப்படுதலின், இவை, 'உருத்திர பேதம்' என்னும் பெயருடையவாயின. இங்ஙனம், சிவாகமங்களைக் கேட்டவர் அறுபத்தறுவராகலின், அவரையெல்லாம் ஒருங்கே தொகுத்து,

அஞ்சன மேனி யரிவையோர் பாகத்தன்
அஞ்சோ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே.
(தி.10 திருமந்திரம் பா.57)

என்று, ஒருபெற்றியராகவே சுருங்க அருளிச் செய்தார் திருமூல நாயனார். இதனையே, அடிகள், 'சொன்ன ஆகமம்'(அடி 10) என மேலே குறித்தருளினார்.
காமிகம் முதலிய பத்து ஆகமங்களையும் சிவபெருமானிடமிருந்து கேட்ட சிவர்கள், 'பிரணவர், சுதாக்கியர், சுதீத்தர், காரணர், சுசிவர், ஈசர், சூக்குமர், காலர், அம்பு, தேசேசர்' என்போர். இவர்கள் பால் மேற்கூறிய ஆகமங்களை ஒருவர் வழி ஒருவராகக் கேட்ட இவ்விரு சிவர்கள், 'திரிகலர், அரர் - பசுமர், விபு - கோபதி, அம்பிகை - சருவருத்திரர், பிரசேசர் - சிவர், அச்சுதர் - திரிமூர்த்தி, உதாசனர் - வைச்சிரவணர், பிரபஞ்சனர் - வீமர், தருமர் - உக்கிரர், ஆதித்தர் - விக்கினேசர், சசி' என்போர். இவருள் இவ்விருவர் ஓர் ஆகமத்தை ஒருவர்பால் ஒருவராகக் கேட்டவர் என்பது மறவற்க.
ஏனைப் பதினெட்டாகமங்களையும் சிவபெருமான்பால் கேட்ட உருத்திரர்கள், 'அனாதிருத்திரர், தசாருணர், நிதனேசர், வியோமர், தேசர், பிரமேசர், சிவர், சருவோத்தமர், அனந்தர், பிரசாந்தர், சூலி, ஆலயேசர், விந்து, சிவநிட்டர், சோமதேவர், சீதேவி, தேவவிபு, சிவர்' என்போர். இவர் ஒரோவொருவரிடமும் அவ்வாகமங்களைக் கேட்ட

ஒரோ ஒருவர் முறையே, 'பரமேசர், பார்ப்பதி, பதுமபூ, உதாசனர், பிரசாபதி, நந்திகேசர், மகாதேவர், வீரபத்திரர், பிருகற்பதி, தசீசி, கவசர், இலளிதர், சண்டேசர், அசம்பாதர், நிருசிங்கர், உசனர், சம்வர்த்தர், மகாகாளர்' என்போர். இவரெல்லாரும், 'விஞ்ஞானகலர்' எனப்படுதலின், இவர்கள் கேட்டனவெல்லாம் சுத்தமாயாபுவனத்திலேயாம். இவ்வாகமங்களையே நிலவுலகில் இறைவன் மகேந்திரமலையில் வெளிப்படுத்திச் சுவடிகளாக்கினன் என அடிகள் மேல் *(அடி.10)* அருளிச் செய்தார் என்க. விஞ்ஞான கலராகிய அறுபத்தறுவருட் சிலரைப் பெயரொற்றுமை பற்றிப் பிறராக நினையற்க.
சிவபிரானது படைத்தல் முதலிய ஐவகை ஆற்றல்களே அவனது சத்தியோசாதம் முதலிய ஐந்து திருமுகங்களாகும். அவற்றுள் சத்தியோசாத முகத்தால் சொல்லப்பட்ட ஆகமங்கள், 'காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம்' என்னும் ஐந்துமாம். இவை, கௌசிக முனிவருக்குச் சொல்லப்பட்டன. வாமதேவ முகத்தாற் சொல்லப்பட்ட ஆகமங்கள், 'தீர்த்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிர பேதம்' என்னும் ஐந்துமாம். இவை, காசிப முனிவருக்குச் சொல்லப்பட்டன. அகோர முகத்தாற் சொல்லப்பட்ட ஆகமங்கள் 'விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம்' என்னும் ஐந்துமாம். இவை, பாரத்துவாச முனிவருக்குச் சொல்லப்பட்டன. தற்புருட முகத்தாற் சொல்லப்பட்ட ஆகமங்கள், 'இரௌரவம், மகுடம், விமலம், சந்திர ஞானம், முகவிம்பம்' என்னும் ஐந்துமாம். இவை, கௌதம முனிவருக்குச் சொல்லப்பட்டன. ஈசான முகத்தாற் சொல்லப் பட்ட ஆகமங்கள், 'புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சருவோத்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம்' என்னும் எட்டுமாம். இவை, அகத்திய முனிவருக்குச் சொல்லப்பட்டன. சுத்தமாயா புவனத்தில் பிரணவர் முதலிய அறுபத்தறுவர்க்குச் சொன்ன ஆகமங்களை, இங்ஙனம், மகேந்திரத்தில் ஐந்து திருமுகங்களால் ஐந்து முனிவர்கட்கு இறைவன் பணித்தருளினான் என்க. இம்முனிவர் ஐவரும் இல்லறத்தவராய் இருந்து தம் தம் குடி வழிகளில் தாம் தாம் கேட்ட ஆகம நெறிகளை நிலவுலகிற் பரவச் செய்தனர். இவர்தம் குடிவழிகள் முறையே, சிவ கோத்திரம், சிகா கோத்திரம், சோதி கோத்திரம், சாவித்திரி கோத்திரம், வியோம கோத்திரம் எனப் பெயர் பெற்று விளங்கின. இங்ஙனம் ஐம்முகங்களாலும் ஐவருக்கு எல்லா ஆகமங்களையும் சொல்லி முடித்தபின்பு திருக்கயிலையில் இவைகளை உமையம்மைக்குச் சொல்ல, அவற்றை அவள் முன்போல இல்லாமல் ஆர்வத்துடன் கேட்டு, அவற்றின் முறைப்படியே இறைவனைக்

காஞ்சியம்பதியில் வழிபட்டாள் என்பதையே சேக்கிழார்,
வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளித்
துள்ளு வார்புனல் வேணியார் அருள்செயத் தொழுது
தெள்ளு வாய்மையின் ஆகமத் திறனெலாம் தெளிய
உள்ள வாறுகேட் டருளினாள் உலகைஆ ளுடையாள்.
(தி.12 திருக்குறிப்புப் புரா. 50)
என்பது முதலாகக் கூறுகின்றார் எனக் கொள்ளற்பாற்று.
'நவ ஆகமம் எங்கள் நந்திபெற் றானே' *(தி.10 திருமந்திரம். 62)* எனத் திருமூலர் அருளியது, அம்மைக்கு எல்லா ஆகமங்களையும் சொல்லிய பின்பு, அவற்றுள் ஒன்பது ஆகமங்களையே இறைவன் நந்தி பெருமானுக்குச் சொன்னான் என்பதைக் குறிப்பதாகும். அவ்வொன்பது ஆகமங்கள் இவை என்பதை,
பெற்றநல் லாகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமளம் ஆகும் காலோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே. *-தி.10 திருமந்திரம்.63*
என்ற திருமந்திரத்தால் அறியலாகும். எனினும், இத்திருமந்திரத்துள் மூன்றாம் அடியின் பாடம் திரிபுடையது என்பர். என்னையெனின், அதனுட் கூறப்பட்ட யாமளம் மூலாகாமங்கள் இருபத்தெட்ட னுட்பட்டது அன்றாதலின். நந்தி தேவர் கேட்ட ஆகமங்கள் ஒன்பது என்பதற்கேற்ப, திருமந்திரம் ஒன்பது தந்திரமாக அருளிச் செய்யப்பெற்றமை கருதற்பாலது.
ஆகமங்கள் இறைவனால் சுத்தமாயா புவனத்தில் தோற்று விக்கப்பட்டுப் பிரகிருதி புவனத்திற்கு வந்த வரலாற்றை,
சிவமாம் பரத்தினில் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமேசர் தம்மில்தாம் பெற்ற
நவஆ கமம்எங்கள் நந்திபெற் றானே. *-தி.10 திருமந்திரம் 62*
எனக் கூறுகின்றது.
இனி,
'அண்ணல் அருளால் அருளும்திவ் யாகமம்
விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரிது
எண்ணில் எழுபது கோடிநூ றாயிரம்'
-தி.10 திருமந்திரம். பா.60
என்றாற்போல ஆகமங்களை அளவிலவாகக் கூறுதல், அவற்றின் பொருளைப் பற்பல காலங்களில் பற்பலருக்கு விளக்கிய உபாகமங்களையாம். திருமூலர், மூலாகமங்களை, 'இருபத்தெட்டு' என

வரையறுத்தருளிச் செய்தது போல, உபாகமங்களை, 'இரு நூற்றேழு' என வரையறுத்தருளிச் செய்யாமையறிக. இனி இதனை, 'ஆகமங்களிற் போந்த கிரந்தங்களை அளவில எனக் கூறியது' என்றலுமாம்.
இவற்றின் பின்னர்,

மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்று
ஏரியும் நின்றங் கிளைக்கின்ற காலத்தே
ஆரிய மும்தமி ழும்உட னேசொலிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே.
-தி.10 திருமந்திரம். பா.65

எனத் திருமூலர் அருளியது, ஆகமங்களின் பொருளை மக்கட்கு விளங்கச் செய்தற் பொருட்டே, 'ஆரியம், தமிழ்' என்னும் இருபெரு மொழிகளும் தோற்றுவிக்கப்பட்டன என்றவாறாம்.
'வார்பனி' என்றது, பகுத்துணர்வோடு கூடாத புலனுணர்வை. 'ஏரி' என்றது நிறைந்த ஞானத்தை. ஆரியமும், தமிழும் சிவாகமப் பொருளையே சிறந்தெடுத்துக் கூறும் என்பதனை,

அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறும்
சிமிழ்த்தலைப் பட்டுயிர் போகின்ற வாறும் தமிழ்ச்சொல் வடசொல் எனும்இவ் விரண்டும்
உணர்த்தும்; அதனை உணரலு மாமே. *-தி.10 திருமந்திரம்.66*

என்று அவர் இனிது விளங்க அருளிச் செய்தார்.
'தமிழ்ச்சொலும் வடசொலும் தாள்நிழற் சேர'
(தி. 1. ப.77 பா.4) என்ற ஆளுடைய பிள்ளையார் அருள்மொழியும் இங்கு நினைக்கத் தக்கது. 'ஆரியமும் தமிழும் உடனேசொலி' *(தி.10 திருமந்திரம். 65)* 'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்' *(தி.6 ப.23 பா.5)* என்றாற்போலச் சிலவிடங்களில் ஆரியத்தை முன் வைத்தும், 'தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ் விரண்டும்' *(தி.10 திருமந்திரம். 66)*, 'தமிழ்ச் சொலும் வடசொலும் தாள்நிழற்சேர *(தி.1 ப.77 பா.4)* என்றாற் போலச் சிலவிடங்களில் தமிழை முன்வைத்தும் அருளிச் செய்தலின், அவ்விருமொழியும் ஒப்ப உயர்ந்தனவாகவே உயர்ந்தோர் தழுவினர் என்பது பெறப்படும். படவே, அவற்றுள் ஒன்றனையே உயர்ந்தோர் மொழியெனக் கொண்டு, பிறிதொன்றனை அன்னது அன்றென இகழ்தல் கூடாமை அறிக.
இவ்விரண்டினாலும், ஆகமத்தை நிலவுலகில் நெறிப்பட வழங்குவித்தமை அருளியவாறு.
அடி 21-22
'நந்தம் பாடி' என்பது, சாத்தங்குடி, கொற்றங்குடி முதலியனபோல, 'நந்தன் பாடி' என்பதன் மரூஉவாதல் வேண்டும். பின்னர், 'வேலம்

புத்தூர்' என வருவதும், அன்னது. இப்பெயருடைய தலம் இஞ்ஞான்று அறியப்படாமையின், இதன்கண் இறைவன் நான்கு வேதங்களையும் முற்ற ஓதி உணர்ந்த வேதிய வடிவத்துடன், அவ் வேதங்களைச் செவ்வனே ஓதுவித்துப் பொருள் உணர்த்தும் ஆசிரியனாய் எழுந்தருளிய வரலாறும் அறியப்படவில்லை. இறைவன் மதுரையில் வேதத்துக்குப் பொருள் அருளிச் செய்த ஒரு திருவிளையாடல், பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்திற் காணப்படுகின்றது. இது, வேதத்தை விளங்கச் செய்தமை அருளியவாறு.

அடி *23-26*

'இயற்கை' என்றது, செயலை. நூறு நூறாயிரம் - கோடி; இஃது அளவின்மை குறித்து நின்றது. 'இயல்பினது' என்றது, பன்மை ஒருமை மயக்கம். 'இயல்பினவாகி' என்பதே, பாடம் எனல் சிறப்பு. 'ஆகி' என்றதன்பின், 'நிற்ப' என்பதும், 'உய்ய' என்றதன் பின், 'கொள்ள' என்பதும் எஞ்சி நின்றன.

'சொன்ன ஆகமம்' என்பது முதலாக இதுகாறும் வந்தவற்றுள் உள்ள, 'தோற்றுவித்தருளியும், எய்தியும், விளைத்தும், படிந்தும், வாங்கியும், பணித்தருளியும், அமர்ந்தருளியும், இயல்பினதாகி நிற்ப, உய்யக்கொள்ள' என வந்த வினையெச்சங்கள், 'வந்தருளி' என்ற எச்சத்தோடே முடிந்தன. ஆகவே, 'வந்தருளி' என்றது, 'இங்ஙனம் வந்தருளி' என மேற்போந்த செயல்களையே குறித்ததாயிற்று. அவை அனைத்திலும் இறைவன் அம்மையோடு உடனாய் நின்றமையறிக. 'தோற்றுவித்தருளியும்' என்றது முதலாக உம்மைகொடுத்து அருளிச் செய்து, 'வந்தருளி' என வாளா அருளினமையின் அவ்வெச்சங்கள் இவ்விடத்து முடிந்து நிற்கப் படுபொருளே பொருளாம் என்பது விளங்கும். ஆகவே, இவை மிகப் பழைய வரலாறுகள் என்பது உணரப்படும். அதனால், இதன்பின், 'பின்னர்' என வேறெடுத்துக் கொண்டு உரைக்கப்படும்.

அடி *27-28*

இதுமுதலாகப் பாண்டியன் பொருட்டுச் செய்யப் பட்ட அருள்விளையாடலை அருளுகின்றார். குடநாடு - மேற்கே உள்ள நாடு என்றது, பாண்டியன் நாட்டினையே. அதனை இங்ஙனங் கூறியது, திருப்பெருந்துறையிலிருந்து வருபவர்போல வந்தமையைக் குறித்தற்கு. சதுர்பட - திறமை தோன்ற. திறமை - குதிரையை நடத்துதற்கண் உள்ளது. சாத்து - வணிகக் கூட்டம். இறைவன், அடிகள் பொருட்டுச் சிவகணங்களைக் குதிரை வாணிகர்களாகக் கொண்டு, தான் அவர்கட்குத் தலைவனாய் நெடுந்தொலைவிலிருந்து காணப் பட்டு வந்து மதுரையில் பாண்டியனிடம் பல குதிரைகளைக் கொடுத்துச்

சென்ற வரலாறு பலவிடங்களிலும் சொல்லப்படுவதே. 'எழுந்தருளியும்' எனச் சுருங்க அருளினாராயினும், பின் வருவன வற்றோடு இயையுமாறு, 'எழுந்தருளிய அருளும்' என உரைக்க.

அடி *29-30*

வேலம் புத்தூர், 'வேலன் புத்தூர்' என்பதன் மரூஉ முடிபு. இப்பெயர், முருகக்கடவுளோடு இதற்கு உள்ள தொடர்பு பற்றி வந்ததாகலாம். 'வேலம் புத்தூரின்கண்' என ஏழாவது விரிக்க. விட்டேறு - வேற்படை. 'பொருவேடற்கு' எனப் பின்னர் வருகின்ற குறிப்பு, இதற்கும் பொருந்துவதாம். ஆகவே, இத்தலத்தில் வேல் வல்ல வீரன் ஒருவனுக்கு இறைவன் வேற்படை வழங்கி அவன் வாயிலாகப் பாண்டியனுக்கு வெற்றியுண்டாகச் செய்தனன் என்பது பெறுதும். இவ்வாறன்றி இதனைத் திருவிளையாடற் புராணங்கள் கூறும் உக்கிரகுமார பாண்டியர் வரலாற்றோடு இயைத்துரைத்தற்கு, அடிகள் வாக்கில் காணப்படுவதொரு குறிப்பும் இல்லை.

கோலம் பொலிவு - தனது அருட்கோலம் விளங்குதல். சொற்பொருள் இவ்வாறாயினும், 'பொலிதலை யுடைய கோலத்தைக் காட்டிய' என்பதே கருத்தாகக் கொள்க. கொள்கை, விளைவு முதலியனவாக இங்கு வருவன பலவும், செயலையே குறிப்பன என்க.

அடி *31-32*

'கண்ணாடி' என்னும் பொருளதாகிய, 'தர்ப்பணம்' என்னும் ஆரியச் சொல், 'தற்பணம்' எனத் திரிந்து நின்றது. குறிற்கீழ் ரகாரத்தை உடைய ஆரியச் சொல் தமிழில் வருங்கால், அதன்மேல் உகரம் பெற்று, 'தருப்பணம்' என்றாற் போல வருதலே பெரும்பான்மையாயினும், அம்மெய்யெழுத்து, பின்னர் வல்லொற்றோடு கூடி ஈரொற்றாய் நிற்கும் இடங்களில் தமிழில், செய்யுளில், ஏற்குமிடத்தில் வல்லின றகரமாய்த் திரிந்து, 'தற்பணம்' என்றாற்போல ஓரொற்றாய் நிற்றலும் பலவிடங்களிற் காணப்படுவதாம். இங்கு, 'விற்பொரு வேடற்கு' என்ற எதுகையையும் நோக்குக. இவ்வாறன்றி ஆரியத்தில் உள்ளவாறே தர்ப்பணம் என ஓதுதல் கூடாமையறிக. 'சாத்தம் புத்தூர்' என்பதே பாடமாதல் வேண்டும். இப்பெயர், அரிகர புத்திரராகிய மாசாத்தனாரோடு இத்தலத்திற்கு உண்டாகிய தொடர்பு பற்றி வந்ததாகலாம். வேடன் - மறவன். பொருவேடன் - போர் புரியும் மறவன்; வீரன். 'இவனுக்கு வில் ஈந்த விளைவும்' என்க. வேலம் புத்தூரில் வேல் வீரன் ஒருவனுக்கு நேரே தோன்றி வேல் கொடுத்தருளியது போல, சாத்தம் புத்தூரில் வில்வீரன் ஒருவனுக்குக் கண்ணாடியில் தீட்டப்பெற்றிருந்த வண்ண ஓவியத்தில் நின்று இறைவன் வில் வழங்கினான் என்பது பெறுதும். 'வில்' எனினும், அம்புப்

புட்டிலும் உடன் கொள்ளப்படுவதேயாம். இவனாலும் பிறிதொருகால் இறைவன் பாண்டிய மன்னனுக்கு வெற்றியுண்டாகச் செய்தான் என்க. இவையெல்லாம் பிற்காலத்தில், யானை எய்த திருவிளையாடல், நாகம் எய்த திருவிளையாடல் முதலியவற்றில் சிறிது சிறிது இயைபுபட்டுத் தோன்றுவவாயின.

அடி *33-34*

மொக்கணி - குதிரை வாயில் கொள்ளுக் கட்டும் பை. அருணகிரிநாதரும், *'சர்க்கரை மொக்கிய (கந்தர் அலங்காரம் - காப்புச் செய்யுள்).* என, வாய் நிறைய இட்டுக் குதட்டுதலை, 'மொக்குதல்' என்றார். 'தழல்போலும் மேனி' என்க. சொக்கு - அழகு; அது, விடாத ஆகுபெயராய், சொக்கலிங்க மூர்த்தியைக் குறித்தது. காட்டுதல் - தெளிவித்தல். 'குதிரை வாணிகனாய் வந்த கோலத்தைச் சொக்கலிங்கத்தின்கண் உளதாகப் பின்பு பாண்டியனுக்குத் தெளிவித்த பழைமையும்' என்றபடி. பழைமை - பழைய தொடர்பான செயல். எனவே, 'இவையெல்லாம் நம்மாட்டு உள்ள கருணையால் சிவபெருமானே செய்தருளினான்' எனப் பாண்டியன் பின்னர் உணர்ந்து வியந்து, அப்பெருமான்பால் அன்பு மீதூரப் பெற்றான் என்க. இவ்வாற்றால் வேலம்புத்தூர் முதலிய தலங்களும், பாண்டியன் நாட்டின்கண் உள்ளனவாதல் பெறப்பட்டது. முதற்கண் குறித்த குதிரை வாணிகனாய் வந்தது ஒன்றையே இங்கு மீள எடுத்தோதினாராயினும், ஏனைய அருள் விளையாடல்களும் கொள்ளப்படும். இனி, 'மொக்கணி' என்றதற்குப் பிறிது உரைப்பாரும் உளர். இதுகாறும் பாண்டியனுக்கு அருள் புரிந்தமை அருளியவாறு. இனித் தமக்கு அருள் செய்தவாற்றைக் கூறுவார்.

அடி *35-36*

இறைவன் அடிகள் பொருட்டு நரிகளைக் குதிரைகளாக்கிக் கொணர்ந்த வரலாறு நன்கறியப்பட்டது. இது மேல், சாத்தாய் எழுந்தருளியது எனக் குறிக்கப்பட்டதின் வேறன்றாயினும் அங்குப் பாண்டியன் முன் வந்து தோன்றிய திருவருளையும், இங்குத் தம்மைக் காக்க நினைந்து செய்த திருவருளையும், குறித்தற்கு வேறுவேறாக அருளிச் செய்தார் என்க.

அடி *37-41*

இங்கும், 'திருவடி' என்றது, 'அதனையுடையவன்' என்றே பொருள் தந்தது. 'விற்று' எனின், அகவலடி இனிது நிரம்பாமையின் 'விற்றும்' என்பதே பாடம் போலும். ஈண்டு கனகம் - மிகுந்த பொன். இசையப் பெறாது - நேர்தல் பெறாமையால். தூண்டு சோதி - மிக்க ஒளிவடிவினனாகிய அவ்விறைவன். தோற்றியது, பாண்டியன் முன் தோன்றி அடிகள் கொணர்ந்த பொன்னை எல்லாம் தானே ஏற்றுக்கொண்டமையை உணர்த்தி, அவரைத் தம் விருப்பப்படி

செல்லுமாறு விடப்பணித்தது என்க. இதனையும், 'தொன்மை' என்றார், முன்பு ஆண்ட கருணையை விடாது செய்தமை பற்றி. 'என்னை ஆண்டுகொண்டருளுதற் பொருட்டுப் பரிமாவிற்றும் கனகம் ஈடுசெய்யப் பெறாமையால் வருந்தி யான் அருள்வழி இருப்ப, அவன் தோற்றிய தொன்மையும்' என்க. இசையப் பெறாமை குதிரைகள் நரிகள் ஆனமையாலாம். குதிரைகள் பின்பு நரிகளாயின என்பது, 'நரியைக் குதிரையாக்கிய நன்மையும்' என மேலே கூறியதனால் அறியப்பட்டது. என்னை, அவை அங்ஙனம் ஆகாதிருப்பின், நரியைக் குதிரையாக்கியது அறியப்படுமாறில்லையாகலின். 'நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்' என ஈண்டு அடிகள் அருளிச் செய்தவாற்றால், அன்னதொரு திருவிளையாடல் நிகழ்ந்ததில்லை என்பாரது கூற்றுப் பொருந்தாமை விளங்கும்.

அடி *42-43*

'அருளி' என்றது, 'அருளினவன்' எனப் பெயரா யிற்று, 'இவ்வாறெல்லாம் இந்திர ஞாலங் காட்டிய' என்க. 'சாலம்' என்றாகற்பாலது, 'ஞாலம்' என்றாயிற்று. இந்திர சாலம் - பெரிய மாயவித்தை. அஃது, அதுபோலும் பல அருள் விளையாடல்களைக் குறித்தது.

அடி *44-45*

மதுரையில் குதிரைச் சேவகனாய் வந்தது, 'சௌந்தர சாமந்தன்' என்னும் அமைச்சன் பொருட்டு எனப் பரஞ்சோதியார் திருவிளையாடல் கூறும்.

அடி *46-47*

'ஆங்கது' என்றது ஒருசொல் நீர்மைத்து. 'அடியவள் வந்தியென்னும் பெயருடையாள்' எனக் கூறப்படுவதும் அவள் பொருட்டாக இறைவன் மண் சுமந்த வரலாறும் பலரும் அறிந்தவை. பாங்கு - செம்மை. செம்மையாய் மண் சுமந்தது, வந்தியின் பங்குக் கரையை நன்கு அடைத்தே சென்றது.

அடி *48-49*

வித்தக வேடம் - ஞானாசிரியக் கோலம். தூண்டு சோதி *(இறைவன்)* தோற்றியபின்னர், அடிகள் தம் விருப்பின் வழியே மீளத் திருப்பெருந்துறை செல்லுங்கால், வழியில் உத்தரகோசமங்கையில், 'இறைவன் இதுகாறும் திருப்பெருந்துறையுள் முன்போல இருந்து நம்மை ஏற்றருள்வானோ! ஏலாது விட்டுவிடுவானோ' என்னும் ஏக்கத்தால், நீத்தல் விண்ணப்பம் பாடி நின்றபொழுது, இறைவன் அடிகளை ஆட்கொண்ட அவ்வடிவிலே தோன்றி, 'திருப்பெருந்துறைக்கு வருக' என அருளினான் என்பது கொள்ளற்பாலதாம். என்னை*?* 'திருவார் பெருந்துறை' என வருகின்ற அதற்கு முன்னரே இதனை அருளினமையின். இதனைப் பின்னர் நிகழ்ந்ததாகப் புராணங்கள்

கூறும்.

அடி *50-51*

தூ வண்ண மேனி, பொன்னால் அமைக்கப்பட்ட திருமேனி. *'தொன்மை'* என்றதனால், இதன் வரலாறு, பரஞ்சோதியார் திருவிளையாடலுட் சொல்லப்பட்டவாறே கொள்ளத் தக்கது. இத்திருமேனியை அடிகள் திருப்பூவணத்தில் கண்டு வணங்கி மகிழ்ந்தார் என்க.

அடி *52-53*

திருப்பெருந்துறைக்குச் செல்லும் முன்பு அடிகள் தமது திருவவதாரத் தலமாகிய திருவாதவூரில் சென்று சின்னாள் தங்கியிருந்தாராக, இறைவன் அவரைத் தனது பாதச் சிலம்பொலியைக் கேட்பித்து அங்குநின்றும் போதரச் செய்தான் என்பது ஈண்டுப் பெறப்படுவதாகும். இங்ஙனம் போதரச் செய்த கருணைப் பெருக்கையே அடிகள், *'பண்பு'* எனப் போற்றியருளிச் செய்தார். இதனை, இறைவன் குதிரை கொணர்ந்த காலத்து நிகழ்ந்ததாக, நம்பி திருவிளையாடல் கூறும். *'காட்டிய'* என்றது. *'தோற்றுவித்த'* என்றவாறு.

அடி *54-55*

திருவார் பெருந்துறை - கடவுட்டன்மை நிறைந்த பெருந்துறையின்கண். செல்வன் - ஞான வள்ளல். ஆகி - ஆகி வீற்றிருந்து. *'கருவார் சோதி'* என்றது. *'இறைவன் வெளிப்படுதற்கும் மறைவதற்கும் இடமாய் நிற்கும் ஒளிப்பிழம்பு'* என, அதன் தன்மை கூறியவாறு. சிலரை யொழித்துச் சிலரொடு மாத்திரம் மறைந்து, மீண்டும் வெளிப்படாதொழிந்தமை பற்றி, *'கள்ளம்'* என்றார். திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் ஞானாசிரியனாய் வீற்றிருந்த இறைவன், *'நீ தில்லைக்கு வருக'* எனக் கட்டளையிட்டு, அவ்விடத்தே ஒளியைத் தோற்றுவித்து, அப்பொழுது அங்கிருந்த ஏனை அடியவர்களை அதனுட் புகச்செய்து, தானும் அதனுள் மறைந்தருளினான் என்க. பக்குவம் இன்மை நோக்கி இறைவன் சிலரை அப்பொழுது அங்கு இல்லாது நீங்கச் செய்தான் போலும்! இவ் வரலாற்றினைப் புராணங்கள் சிறிது வேறுபடக் கூறும்.

அடி *56-57*

'பூவலம்' என்றது, *'பூப் பிரதட்சிணம்'* என்னும் பொருட்டாய், அடிகளது சிவதல யாத்திரையைக் குறித்தது. *'இல்'* என்பது, *'உண்ணுதற்கண் வந்தான்'* என்பது போல, வினை செய்யிடத்தின்கண் வந்த ஏழனுருபு. இஃது உணராமையால், இதனை ஒரு தலத்தின் பெயராக மயங்குப. இறைவன் தம்மை உடன்கொண்டு செல்லாது, *'தில்லைக்கு வருக'* என்று சொல்லி மறைந்தது, தம் பாவத்தால் *(வினையால்)* எனவும், அவை அவன் எழுந்தருளியுள்ள தலங்கள் பலவற்றிலும் சென்று வணங்கினமையால் கெட்டொழிந்தன எனவும் அடிகள் கருதினார்

என்பது இவ்வடிகளால் விளங்கும். 'பொலிந்தினிதருளி' என்றது, தலங்கள்தோறும் எழுந்தருளியிருந்து திருவருள் செய்தமையை. இத்துணையும், இறைவன் தமக்கு அருள்புரிந்தமையைக் கூறியவாறு. பின்னர்ப் பிற தலங்களுட் செய்தவற்றைக் கூறுவாராகலின், மதுரையில் நிகழ்ந்தவற்றை முடித்தற்கு, குதிரைச் சேவகனாகியதனையும், மண் சுமந்ததனையும் இடையே பெய்துரைத்தார். இஃது உணராது, குதிரைச் சேவகன் ஆகியதை முன்னர் அடிகட்குச் செய்த அருளாகவே கொண்டு உரைப்பாரும் உளர். அடியவட்காக மண் சுமந்த வரலாற்றை அடிகள் வரலாற்றோடு வலிதிற் பிணைத்தமையும், இவ்வாற்றால் விளைந்ததேயாம். இனி, ஏனையோர் பலர்க்கு ஆங்காங்கும் அருள்புரிந்தமை கூறுவார்.

58-59. தண்ணீர்ப் பந்தர் வைத்தமை இன்ன இடத்து என்னாமையால், பின்னர் வரும், 'திருவெண்காடு' என்றே கொள்ளப்படும். அதனானே, சயம் (வெற்றி) பெறச் செய்தது, சோழனையாம். இதனைப் பாண்டியன் பொருட்டு மதுரையிற் செய்ததாகத் திருவிளையாடற் புராணங்கள் கூறும். நன்னீர் - நல்ல நீர்மை. 'சேவகன்' என்றது, தண்ணீரைத் தானே கொடுத்தமை பற்றி.

அடி *60-61*

திருவெண்காட்டில் இறைவன் விருந்தினனாய் வந்து குருந்தமரத்தடியில் அமர்ந்திருந்த வரலாறு அறியப்படவில்லை.

அடி *62-63*

இவ்வடிகளிற் குறிக்கப்பட்ட வரலாற்றைத் திருவிளையாடற் புராணங்களிற் காண்க.

அடி *64-67*

இவற்றுட் குறிக்கப்பட்ட இருவரலாறுகளையும் மதுரையில் நிகழ்ந்தனவாகத் திருவிளையாடற் புராணங்கள் கூறும். எனினும், பட்டமங்கையில் நிகழ்ந்தனவாதல் வேண்டும்.

அடி *68-69*

பார்ப் பாலகன் - மண்ணுலகக் குழந்தை. இருமை - பெருமை; அஃது, அருமைமேல் நின்றது, 'உகந்தினிதருளி' என்றதனால், முன்னர் விருத்தனாய் வந்து, பின்பு கட்டிளைஞனாய் நின்றமையும் கொள்ளப்படும். படவே, விருத்தகுமார பாலரான திருவிளையாடலே இது என்றல் பொருந்துவதாம்.

அடி *70*

ஈண்ட - மக்கள் பலரும் திரண்டு வந்து காண. இங்ஙனம் இறைவன் இங்கு வீற்றிருந்த வரலாறு அறியப்படவில்லை. எல்லாம் வல்ல சித்தரானது போல்வதொன்றாதல் வேண்டும்.

அடி *71-72*
தென்பால் தீவு, இலங்கையேயாம். ஆகவே, 'தேவூர்' என்றதனை அதற்கேற்பக் கொள்க. இராமேசுவரத்திற்கு, 'தேவை' என்னும் பெயர் தாயுமானவர் பாடலில் 'மலைவளர் காதலி' என்னும் பகுதியிற் காணப்படுகின்றது. கோவார் கோலம் - அரசத் தன்மை நிறைந்த வடிவம். 'கொண்ட' என்றதனால், ஈழநாட்டில் அன்புடைய அரசன் ஒருவனுக்கு இறைவன் அரச வடிவத்தில் வந்து அரசியல் முறையை விளக்கி மறைந்தனன் என்று கொள்ளலாகும். இதுவே, திருவிளையாடற் புராணங்களில், சிவபெருமான் சௌந்தர பாண்டியனாய் இருந்து அரசளித்த வரலாறாக அமைந்தது.
அடி *73-74*
ஞானம் நல்கியது அடியவர் பலர்க்காம். அதனானே, ஆரூர் அடியவர் திருக்கூட்டத்திற்கு இடமாயிற்று என்க.
அடி *75-76*
ஈண்ட - அடியவர் புடைசூழ. படிமப் பாதம் - தவ நெறி. வைத்த - நிலைநிறுத்திய. என்றது, 'தானே வழிபாடு செய்வோனாய் இருந்து வழிபட்டுக் காட்டிய தன்மை' என்றவாறு. திருவிடைமருதூர் இறைவன் தன்னைத் தானே பூசித்த தலமாதல் அறிக.
அடி *77-78*
இயல்பாய் இருத்தல் - சுயம்பு லிங்கமாய் எழுந் தருளியிருத்தல். கச்சி ஏகம்பத்தில் அம்மையது தவத்திற்கு இரங்கி இறைவன் மாவடியில் சுயம்பு லிங்கமாய்த் தோன்றினமையைப் பெரிய புராணத்துட் சேக்கிழார் கூறினமை காண்க. பின்பு அம்மை செய்த வழிபாட்டின் பயனாக அவளை இறைவன் தனது இடப் பாகத்தில் இருத்திக் கொண்டனன் என்க.
அடி *79-80*
மருவார் குழலி, உமையம்மை. அவளோடு மகிழ்ந்தது. அவளது வழிபாட்டினாலாம். அம்மை பூசித்த தலங்களாகச் சில தமிழ் நாட்டில் விளங்குதல் காண்க. இங்ஙனம் யாதானும் ஒரு சிறப்பு அம்மைக்கு உளதாய தலங்களில் மட்டுமே முதற்காலத்தில் அம்மைக்குத் தனிக்கோயில் இருந்ததென்பது, காஞ்சியில் காமக் கோட்டம் வேறோரிடத்தில் தனித்திருத்தலும், அங்குள்ள பல சிவாலயங்களுள் ஒன்றிலும் அம்மைக்குத் தனிக் கோயில் இல்லாமையும் பற்றி அறிந்து கொள்ளப்படும்.
அடி *81-82*
சேவகன் - வீரன். சிலை - வில். இறைவன் வில் வீரனாய்த் தோன்றிச் செய்த வீரச் செயல்கள் பலவும் அவனுக்கு நாடகமாத்திரையாய்

அமைதலின், அவற்றை, 'பாவகம்' என்றார். இங்ஙனம் காட்டிய திருவிளையாடல், திருவிளையாடற் புராணங்களிற் காணப்படும். ஆயினும், அதனைத் திருவாஞ்சியத்தில் நிகழ்ந்தது எனக் கொள்க. இத்துணையும் ஆங்காங்கு அடியவர் பலர்க்கு அருளினமை கூறியவாறு. இனி, தலங்கள் பலவற்றில் இறைவன் எழுந்தருளியிருக்கும் திறத்தினையே கூறுவர்.

தானெழுந்தருளியும் என்பது முதலாக இதுகாறும் உம்மை கொடுத்து எண்ணிவந்தவைகள் அனைத்தையும், 'ஆகிய இவை யெல்லாம் எந்தமை யாண்ட பரிசுகளாம்' எனப் பின்வரும் நூற்றிரண்டாம் அடியுடன் தொகுத்து முடிக்க.

அடி *89-91*

இடம்பெற - நீங்காது விளங்க. ஈங்கோய் மலையில் உள்ள பெருமான் மரகத வடிவில் அழகுடன் விளங்குதல் காண்க. 'சைவன்' என்பதும், 'சிவன்' என்னும் பொருளதேயாம். இதற்கு வரலாறு ஒன்றனைக் கூறுவர் பலரும். 'அருத்தி'- விருப்பம். வழுக்காது - நீங்காது. அறம்பல அருளியும் என்றது, ஆல் நிழற் கடவுளாய் வீற்றிருத்தலை. குறியாய் - குறியாக; அத்தலத்தில் இருத்தலே குறிக்கோளாக.

அடி *92-96*

இவ்வடிகளில், இறைவன் தேவர்கள் முன்னே செய்த ஒரு திருவிளையாடல் குறிக்கப்படுகின்றது. அது வருமாறு:- தேவர் பலரும் கூடி ஒருகால் அசுரரை வென்று பெருமிதம் கொண்ட காலை, மால், அயன், இந்திரன், அக்கினி, வாயு முதலிய பலரும், 'வெற்றி என்னால் விளைந்ததே' எனத் தனித்தனியே ஒவ்வொருவரும் கூறித் தம்முட் கலாய்த்தனர். அவ்விடத்தில் சிவபெருமான் அளவற்ற பேரழகுடன் ஓர் யட்சனாய்த் தோன்றி ஓரிடத்தில் துரும்பு ஒன்றை நட்டு, அதன் அருகில் இறுமாந்து அமர்ந்திருந்தார். அவ்யட்சனை இன்னான் என்று அறியாத தேவர்கள், 'நீ யார்? உனக்கு இத்துணை இறுமாப்பிற்குக் காரணம் என்னை?' என்று வினவினர். சிவபெருமான் 'நான் யாராயினும் ஆகுக; உங்களில் யாரேனும் இத்துரும்பை அசைத்தல் கூடுமோ?' என்று வினவினார். தேவர்கள் அவரது வினாவைக் கேட்டு நகைத்து அத்துரும்பை அசைக்க முயன்றனர். அஃது இயலவில்லை. இந்திரன் வச்சிராயுதத்தால் வெட்டியபொழுது, வச்சிராயுதமே கூர்மழுங்கிற்று. அக்கினிதேவன் அத் துரும்பை எரிக்க முயன்றான்; வாயுதேவன் அசைக்க முயன்றான்; பிறரும் வேறு வேறு முயன்றனர். ஒருவராலும் அத் துரும்பை ஒன்றும் செய்ய இயலவில்லை. அதனால், தேவர் பலரும் நாணமுற்றிருக்கையில் பெருமான் மறைந்தருளினான். 'வந்தவன் யாவன்!' என்று, தேவர்கள் திகைத்தனர். அப்பொழுது அவர்கள்முன்

அம்பிகை வெளிப்பட்டு நின்று, 'வந்தவர் சிவபெருமானே' என்பதை அறிவித்து, 'ஒரு துரும்பை அசைக்க மாட்டாத நீங்களோ அசுரரை வென்றீர்கள்; உங்களுக்கு வெற்றியைத் தந்தவன் சிவபெருமானே' எனக் கூறி மறைந்தாள். அதனால் தேவர்கள், 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்று உணர்ந்து தம் செருக்கு நீங்கினர். இது, கேனோப நிடதத்துச் சொல்லப்பட்டது. இதனைக் காஞ்சிப் புராணம் விரித்துக் கூறும். இவ் வரலாற்றையே இங்கு அடிகள் அருளியிருத்தலை, ஊன்றி நோக்கி உணர்க. 'சுந்தர வேடம்' என்றது, அழகிய யட்ச வடிவத்தை. முதல் உருவு - தலைவன் வடிவம். இந்திர ஞாலம் போல வந்தது, தேவர் வியப்பப் பொருக்கெனத் தோன்றினமையாம். எவ்வெவர் தன்மையும் தன்வயிற்படுத்தமை - எல்லாத் தேவர்களது ஆற்றலும் தன்முன் மடங்கச் செய்தமை. தானேயாகியது - அனைத்திற்கும் முதல்வன் தானேயாதலை விளக்கினமை. இவ் வரலாற்றை இங்கு எடுத்தோதியது, அடுத்து வரும் திருவிளையாடல் இதனோடு ஒத்திருத்தல் பற்றியாம். ஆகவே, இஃது உடம்பொடு புணர்த்தலாயிற்று.

அடி *97-99*

சந்திர தீபம், ஒரு தலம். அன்றி, 'ஒரு தீவு' என்றலுமாம். சாத்திரன் - ஞானநூற் பொருளை யுணர்த்துவோன். 'அந்தரத்தினின்றும் இழிந்து வந்து' என்க. பாலை, ஒரு மரம். அது தழையிலது ஆயினும், இறைவன் அமர்ந்திருந்தமையின் அழகுடையதாயிற்று. 'பாலையுள்' என்றதில் 'உள்' என்பது, 'கீழ்' என்னும் பொருளது. சுந்தரத் தன்மை - அழகிய வடிவம். துதைந்து - நீங்காது பொருந்தி. இன்னதொரு வரலாறு இங்குக் குறிக்கப்பட்டது என்க.

அடி *100-102*

ஆகமங்களையே, 'மந்திரம்' என்றார். மகேந்திர மலை பற்றி மேலே *(*அடி*.9-10)* கூறப்பட்டது. 'எந்தமை' என்றது, தம்மையும், பிற அடியார்களையுமாம். பரிசு - தன்மை; திருவருட் செயல்கள்.

'மகேந்திர வெற்பனாகிய அவ் வருளுடையண்ணல் *(*அடி *100-101)* இருந்தும் *(*அடி *83),* காட்டியும் *(*அடி *84)... ... ...* துதைந்திருந்தருளியும் *(*அடி *99)* 'எந்தமை ஆண்ட பரிசது பகரின்' என்க. இவைகளால் இறைவனது திருவருட் செயல்களைச் சிறப்பு வகையிற் பல்லாற்றானும் அருளிச் செய்தவாறு. இனி, 'பரிசது பகரின்' எனத் தொடங்கித் தசாங்கம் கூறுகின்றார்.

தசாங்கம் - பத்து உறுப்பு. அரசர்க்குரிய சிறப்புப் பொருள்களே, இங்கு, 'உறுப்பு' எனப்படுகின்றன. அவை இங்கு, 'கொடி, யாறு, முரசு, படைக்கலம், மாலை, ஊர்தி, நாடு, ஊர், பெயர், மலை' என்னும் முறையிற் கூறப்படுகின்றன. இவை, 'படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு,

அரண்' (குறள் 381) என்ற முறையானன்றி, வேறொரு வகையாற் கூறுப்படுவன. இவைபற்றி அரசர்கள்மீது அகலக் கவிகளை இயற்றும் வழக்கம் பிற்காலத்தில் சிறந்து விளங்கியது. அதனால், அடிகள் இறைவனை அவ்வாற்றாற் பாடுகின்றார்.

அடி 103-104

'திருவுருவில் உள்ள' என்க. நீறு - திருநீறு. கொடி, 'கோடி' என நீண்டது. 'கொடீஇ' என்பதொரு பாடமும் உண்டு. பின்னர் வரும் 'தசாங்கம்' என்னும் பகுதியுள் கூறப்படுவனவற்றோடு இங்குக் கூறப்படுவன சிறிது வேறுபடும். அங்ஙனம் படும் இடங்களில், இரண்டும் கொள்ளற்பாலனவாம். அவ்வாற்றால் இங்குத் திருநீற்றுக் கொடி கூறப்பட்டது; அங்கு ஏற்றுக் கொடி கூறுப. திருவுருவில் உள்ள திருநீற்றின் முக்குறித் தொகுதிபோல எழுதப்பட்ட வடிவத்தை, 'திருவுரு நீறு' என்று அருளினார். 'நிமிர்ந்து' என்றதனை, 'நிமிர' எனத் திரிக்க. நிமிர்தல் - உயர்தல்.

இவற்றால், 'இறைவனுக்கு, திருநீறே கொடி' என்பது, கூறப் பட்டது. இக்கொடி ஞானாசிரியனாய் இருக்கும் நிலையிலாம்.

அடி 103-106

ஊனம் - குறைகள்; துன்பங்கள். ஒருங்கு - ஒரு சேர. உடன் - விரைவாக. 'துன்பங்கள் அனைத்தையும் வாராது ஒரு சேர நீக்கும் ஆனந்தம்' என்றதனால், அது பேரின்பமாயிற்று.

இவற்றால், 'இறைவனுக்குப் பேரின்பமே யாறு' என்பது கூறப்பட்டது. எதுகை நயத்தை நோக்கும்வழி, 'ஊனந்தம்மை' என்பதே பாடம்போலும் எனலாம்.

அடி 107-108

மாதிற் கூறுடை - உமையிடத்தில் ஒரு கூற்றை உடைய. நாதம் - சூக்குமை வாக்கு. இதுவே, வேதம் முதலிய நூல்கட் கெல்லாம் பிறப்பிடமாகலின், இறைவனுக்குச் சிறந்த பறையாயிற்று. 'பறை' என்றது, முரசினை. நவின்று - தொடர்ந்து. கறங்கவும் என்ப தற்கு, 'ஒலிக்கச் செய்தும்' என உரைக்க.

இவற்றால், 'இறைவனுக்குச் சூக்குமை வாக்கே முரசு' என்பது கூறப்பட்டது.

அடி 109-110

அழுக்கு - குற்றம்; வினை; என்றது ஆகாமியத்தை. கழுக்கடை - முத்தலை வேல்; சூலம்.

இவற்றால், 'இறைவனுக்குச் சூலமே படைக்கலம்' என்பது கூறப்பட்டது.

அடி 111-114

மூலம், பிறவிக்கு என்க. 'அறுக்கும் சோதி, தூய மேனிச்சோதி' எனத்

தனித்தனி இயையும். சோதி, இறைவன். காதலன்-பேரன்பன்; அருளாளன்; என்றது ஞானாசிரியனை. கழுநீர்- செங்கழுநீர்ப் பூ. ஏல் - ஏற்பு; முதனிலைத் தொழிற்பெயர்.

இவற்றால், 'இறைவனுக்குச் செங்கழுநீர் மாலையே மாலை' என்பது கூறப்பட்டது. இதுவும், ஞானாசிரியக் கோலத்தில் என்க.

அடி *115-116*

பரிமா - குதிரை. 'வண்ணமும்' என்றாரேனும், 'வண்ணனாகியும்' என உரைக்க.

இவற்றால், 'இறைவனுக்குக் குதிரையே ஊர்தி' என்பது கூறப்பட்டது. இஃது அடிகள் தாம் கண்ட காட்சி பற்றிக் கூறியதாம்.

அடி *117-118*

மீண்டு வாரா வழி - மறித்துப் பிறப்பில் வாராத நெறி; வீட்டு நெறி, 'மற்றீண்டு வாரா நெறி' என்னுந் திருக்குறளை *(356)* நோக்குக. 'பதி' என்றது நாட்டினை. இது முதலாக நான்கிடத்தும், 'ஆகவும்' என்பதற்கு, 'ஆகக் கொண்டும்' என உரைக்க.

இவற்றால், 'இறைவனுக்குப் பாண்டிநாடே நாடு' என்பது கூறப்பட்டது. இதுவும், இறைவன் தம் பொருட்டுக் குதிரை வாணிகனாய் வந்தது முதலிய பெருங்கருணைத் திறம் பற்றிக் கூறியதாம்.

அடி *119-120*

பரம்பரம் - மேலுள்ளதற்கு மேலுள்ளது; பரமுத்தி நிலை. 'அப்பாலைக் கப்பாலைப் பாடுதும்' என்பர் தி.*8* திருவம்மானையிலும் *(11)*.

உய்ப்பவன் - செலுத்துபவன்.

இவற்றால், 'இறைவனுக்கு உத்தரகோச மங்கையே ஊர்' என்பது கூறப்பட்டது. இதன்கண் அடிகளுக்கு இறைவன் மீள ஞானாசிரியனாய் வெளிப்பட்டு அபயம் அளித்தமை மேலே *(*அடி. *48-49)*. காட்டப்பட்டது.

அடி *121-122*

ஆதி மூர்த்திகள் - மும்மூர்த்திகள். இவர்களுக்குப் பரமசிவன் வெளிப்பட்டுத் தோன்றி, படைத்தல் முதலிய முத்தொழிலையும் இயற்றும் நிலையை வழங்கியதனையே, 'அருள் புரிந்தருளிய' என்றார். 'ஆதி மூர்த்திகட்கு அருள் புரிந்தருளிய' என்றது, 'தேவ தேவன்' என்னும் பெயர்க் காரணத்தை விளக்கியவாறு. 'தேவ தேவன்' என்பது, 'தேவர்கட்குத் தேவன்' எனப் பொருள்படும். 'மகாதேவன்' என்பதும் இப்பொருளது. 'தேவ தேவன்' அதுவே திருப்பெயராகக் கொண்டும்' என்க.

அடி *123-124*

இங்கு, 'ஊர்தி' என்றது, மீதூர்ந்து ஓடுவதாகிய யாற்றைக் குறித்தது. 'ஊனந்தன்னை ஒருங்குடன் அறுக்கும் ஆனந்தம்' என

மேற்கூறியதனையே, இங்கு, 'இருள்கடிந்தருளிய இன்பம்' என்றார். எனவே, 'அப்பேரின்பமாகிய யாற்றை உண்டாக்கிய பெருமையையுடைய அருளையே மலையாகக் கொண்டும்' என்பது பொருளாயிற்று.

இவற்றால், 'இறைவனுக்கு அவனது திருவருளே மலை' என்பது கூறப்பட்டது. இங்ஙனம் கொடி முதலாக, மலை ஈறாகப் பத்து உறுப்புக்களும் கூறப்பட்டமை காண்க.

அடி *125-126*

'அப்பரிசதனால்' என்றதை, 'எப்பெருந் தன்மையும்' என்றதற்கு முன்னர் வைத்து, இங்ஙனம், 'இத்தசாங்கங்களைக் கொண்டு விளங்கும் தன்மையாலே' என உரைக்க. தன்மை, இயற்கையும் செயற்கையுமாகிய நிலைகள். திறம், ஆற்றல். 'உலக வேந்தர்கள் பத்து உறுப்புக்களோடும் கூடி நிற்றலால், எத்தகையோரையும் தம் ஆணைவழிப்படுத்து ஆளுதல் போல, ஞான வேந்தனாகிய இறைவன் எத்தகையோரையும் தன் அருள் வழிப்படுத்து ஆட் கொள்கின்றான்' என்றபடி. அதற்கு, அமைச்சராய் இருந்து ஆளான அடிகளே சான்றாவர். அத்தகையோரான மற்றும் பல அடியார்களை அடிகள் திருப்பெருந்துறையில் கண்டனர் என்பது, பின்வரும் அடிகளால் விளங்கும்.

அடி *127-131*

'என்னை' என்றதனை முதலில் வைத்து, 'என் ஐ' எனப் பிரித்துப் பொருள் உரைக்க. 'ஏற்ப' என்பது, பகரவுகரம் தொக, 'ஏல' என நின்றது. 'என் வினைக்கேற்ப' என்றவாறு. இதனை, 'நாயினேனை' என்றதன் பின்னர்க் கூட்டுக. கோலம்-அழகு. பொது-சபை; அம்பலம். ஈங்கு-இவ்வுலகத்தில். உடன் சென்றது, சோதியிற் கலந்து என்க. அருள் பெறும் - திருவருளை முற்றப் பெறும் தகுதியுடைய. ஒன்ற - தன்னோடு ஒன்றுபட. 'அஃதாவது, பிறிதொன் றனையும் அறியாது தன்னையே அறிந்து நிற்க' என்றபடி, இதுவே, 'ஞாதுரு ஞான ஞேயங்கள் அற்ற நிலை, பேச்சற்ற நிலை' என்றெல்லாம் சொல்லப்படுவது. எனவே, பரமுத்தி நிலை என்பது பெறப்பட்டது. 'ஒன்ற ஒன்ற' என்ற அடுக்கு, பன்மைபற்றி வந்தது. 'உடன் கலந்தருளி' என்ற அடுக்கு, பன்மை பற்றி வந்தது. 'உடன் கலந்தருளி' என்றதற்கு, 'அவர்களோடு தானும் நீக்கமின்றிக் கலந்தும்' என்க. இது, தானும் சோதியிற் கரந்ததைக் குறித்தவாறு. இஃது, அவர்கட்குப் 'போகமாய்த் தான் விளையும் பொற்பி'னைக் (சிவஞான போதம் - சூ. *11* அதி. *1)* குறித்ததாம். 'கலந்தருளியும்' என்றது 'கலந்தருளிய பின்னும்' என்னும் பொருட்டு; உம்மை, எதிரது தழுவிய எச்சம்; என்னை*?* பின்வரும், 'பாயவும்' என்பது முதலியவற்றைத் தழுவி நிற்றலின்.

அடி *132-139*

எய்த - சோதியிற் கலத்தல் தமக்குக் கிடைக்கும்படி. வந்திலாதார் - ஆண்டு விரைந்து வாராதவர். மால் - பித்து. மயக்கம் - மூர்ச்சை. 'புரண்டு வீழ்ந்து' என்றதனை, 'வீழ்ந்து புரண்டு' என மாற்றிக் கொள்க. 'மண்டி, அரற்றி' என்றவற்றின் பின்னரும், எண்ணும்மை விரிக்க. இறைவன் தோற்றுவித்த சோதியிற் கலக்கும் பேறில்லாதவர்கள், தீப்பாய்தல் முதலிய பலவாற்றால் அவன் திரு வடியை அடைந்தனர்; அது மாட்டாதார், உலக இன்பத்திலும் வெறுப்புடையராய் ஏக்கமுற்றனர் என்க.

பரம நாடகம் - மேலான கூத்து. இதம் - இன்பம்; இஃது உலகின்பத்தைக் குறித்தது. சலிப்பு - வெறுப்பு.

அடி *140-146*

'ஒலிதரு கயிலை உயர்கிழவோன்' என்றதை முதலிற் கூட்டுக. இமயத்து இயல்பு, பொன்மயமாய் நிற்றல். 'அம் பொற் பொது' எனவும், 'நடம் நவில் இறைவன்' எனவும் இயையும். புலியூர் - பெரும்பற்றப் புலியூர்; தில்லை. 'கனி தரு' என்றதில் உள்ள தரு, உவம உருபு. உமைக்கு அருளிய நகை மகிழ்வு நகை எனவும், காளிக்கு அருளிய நகை வெகுளி நகை எனவும் கொள்க. இவற்றால் முறையே, அளியும், தெறலும் அருளப்பட்டன. காளிக்கு நகை அருளியது நடனப் போரிலாம். ஈண்டிய அடியவர், திருப்பெருந் துறையிற் பல்லாற்றானும் தன்னையடைந்து திரண்ட அடியவர். 'புக்கினி தருளினன்' என்றதை, 'இனிது புக்கருளினன்' என மாற்றி யுரைக்க. ஒலி, அரவொலி, ஆகம ஒலி, அறிவார் அறி தோத்திர ஒலி முதலியன. *(தி. 7 ப.100 பா. 8)*

'கயிலையின்கண் உள்ள உயர்ந்த கிழவோன்' என்க. கிழவோன் - எல்லாப் பொருளையும் தனக்கு உரிமையாக உடையவன். 'கயிலையில் உள்ளவனாயினும் புலியூரில் நடம் நவில் இறைவன் ஆதலின், புலியூர் புக்கருளினன்' என்றபடி. இங்ஙனமே திருநாவுக்கரசரும், புக்க திருத்தாண்டகத்தில், சிவ பெருமான் பல்வேறு தலங்களிற் காணப்படினும், புலியூர்சிற்றம்பலமே புக்கதாக அருளிச் செய்தல் காண்க. அன்றித் தம்மை, 'கோலமார்தரு பொதுவினில் வருக' என்று அருளிப் போயினமை பற்றிக் கூறினார் என்றலுமாம்.

இனி இத்திருவகவலில், 'தில்லை மூதூரில் ஆடிய திருவடியை யுடையான், பல்லுயிர்களிலும் பயின்றோனாகித் தனது எண்ணில்லாத பல குணங்களும் எழுச்சிபெறுமாறு விளங்கிநின்று, தோற்றல், அழித்தல் முதலியவற்றால் உயிர்களது அகவிருளை முற்றும் நீக்கி, அவைகளது உள்ளத்தில் அன்பு மீதூரும்படி அவ்வுள்ளங்களையே குடியாக் கொண்ட செயல்களும், அவற்றின் மேன்மைகளும் யாவை யெனின், ஆகமம்

தோற்றுவித் தருளியும் ... ... ஆரியனாய் அமர்ந்தருளியும் இவ்வாறு மங்கையும் தானுமாய் வந்தருளி, அதன் பின், சாத்தாய்த் தானெழுந்தருளியது முதலாகப் பாவகம் பலபல காட்டிய பரிசு ஈறாக உள்ளனவாம். இனி அவற்றின்மேலும், கடம்பூர் முதலாகச் சந்திரதீபம் ஈறாகக் கூறிய தலங்களில் கோயில் கொண்டிருந்து, மகேந்திர வெற்பனாகிய அவ்வண்ணல் எங்களை ஆட்கொண்ட தன்மையை விளங்கக் கூறுமிடத்து, திருநீறாகிய கொடி முதலாகவும், திருவருளாகிய மலையீறாகவும் உள்ள பத்து உறுப்புக்களையும் கொண்டு நின்று, எத்தகையோரையும் தனது திருவருளின் வழிப்படுத்து ஆண்டுகொண்டு, அவர்களில் நாயினேனை, என் வினையிருந்தவாற்றிற்கு ஏற்ப, 'தில்லையில் வருக' எனப் பணித்து விட்டுத் தகுதி மிக்க அடியார்களோடு தான் திருவுருக்கரந்தருளிய பின்னும், அப் பேறில்லாதவருட் சிலர் எரியிற் பாய்தல் முதலியவற்றால் தனது திருவடியை அடையவும், அவை மாட்டாதார் ஏக்கமுற்று நிற்கவும், கயிலை உயர்கிழவோனாகிய புலியூர்ப் பொதுவினில் நடம் நவிலும் அவ்விறைவன், அவ்விடத்து மீள வெளிப்படாதே, தன்னை அடைந்த அடியார்களோடும் புலியூரில் இனிது புகுந்தருளினான்' என்னும் வகையில் சொற்களை இயைத்துப் பொருள்கொள்க.

இங்ஙனம் இத்திருப்பாட்டில் இறைவனது திருவருள் விளையாட்டுக்களைப் பொது வகையானும், சிறப்பு வகையானும் அடிகள் அருளிச் செய்தமை காண்க.

1.3.திருவண்டப் பகுதி

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரில் துன்அணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் தெரியின்
வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமுஞ் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பே ரூழியும் நீக்கமும் நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்து
கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்
படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போற் காக்குங் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள் திருத்தகும்
அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோன் நாள்தொறும்
அருக்கனிற் சோதி அமைத்தோன் திருத்தகு
மதியின் தண்மை வைத்தோன் திண்திறல்
தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கங் கண்டோன் நிழல்திகழ்
நீரின் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணின் திண்மை வைத்தோன் என்றென்று
எனைப்பல கோடி யெனைப் பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயின் அடைத்தோன் அஃதான்று
முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் தானே காண்க
ஏனத் தொல்லெயி றணிந்தோன் காண்க
கானப் புலியுரி அரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்
இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க
அன்னதொன் றவ்வயின் அறிந்தோன் காண்க

பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
ஒருவன் என்னும் ஒருவன் காண்க
விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தருந் தன்மைஇல் ஐயோன் காண்க
இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க
அரியதில் அரிய அரியோன் காண்க
மருவிஎப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க
அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செல்வதும் ஆனோன் காண்க
கற்பமும் இறுதியுங் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறும் ஈசன் காண்க
தேவரும் அறியாச் சிவனே காண்க
பெண்ஆண் அலியெனும் பெற்றியன் காண்க
கண்ணால் யானுங் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை ஆட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளுந் தானும் உடனே காண்க
பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலின் தோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
ஐம்புலப் பந்தனை வாளர விரிய
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழில் தோன்றி வாலொளி மிளிர
எந்தம் பிறவியிற் கோபம் மிகுத்து

முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்
பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட
எஞ்சா இன்னருள் நுண்துளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளம் திசைதிசை தெவிட்ட வரையுறக்
கேதக் குட்டங் கையற வோங்கி
இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரும் நெடுங்கண் மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாபம் நீங்கா தசைந்தன
ஆயிடை வானப் பேரியாற் றகவயின்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்து
ஊழூழ் ஓங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்ப றித்தெழுந்து
உருவ அருள் நீர் ஓட்டா அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகில்
மாப்புகைக் கறை சேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலின் நோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட உழவ ராரத் தந்த
அண்டத் தரும்பெறல் மேகன் வாழ்க
கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க் கருளும் ஆதி வாழ்க
அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலும் ஈர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க
எய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க் கேதிலெம் இறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க
நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை யேற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி நாற்றிசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச்

சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியும் இல்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவின் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரும் ஆக்கை ஒழியச்செய்த ஒண்பொருள்
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
ஆற்றா இன்பம் அலர்ந்தலை செய்யப்
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்து
உற்றவர் வருந்த உறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தின் அவ்வயின் ஒளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கெளவி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென ஒளித்தும் சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலின்
தாள்தளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்
பற்றுமின் என்றவர் பற்றுமுற் றொளித்தும்
தன்னே ரில்லோன் தானேயான தன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி

அறைகூவி ஆட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்
உளையா அன்பென் புருக வோலமிட்டு
அலைகடல் திரையின் ஆர்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவும்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்
ஏற்றார் மூதூர் எழில்நகை எரியின்
வீழ்வித் தாங்கன்று
அருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தான்எனைச் செய்தது
தெரியேன் ஆவா செத்தேன் அடியேற்கு
அருளிய தறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரைபுரைவித்து
உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவ
துள்ளங் கொண்டோர் உருச்செய் தாங்கெனக்
கள்ளூ றாக்கை யமைத்தனன் ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன் என்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே. **#3**
ஆராயுமிடத்து அண்டம் எனப்படும் பேருலகின் பகுதியாகிய,
உருண்டை வடிவின் விளக்கமும் அளத்தற்கரிதாகிய தன்மையும்

வளமான பெருங்காட்சியும் ஒன்றுக்கொன்று தொடர்ந்து நின்ற அழகைச் சொல்லுமிடத்து நூற்றொரு கோடியினும் மேற்பட்டு விரிந்துள்ளன, அவை, வீட்டில் நுழைகின்ற சூரிய கிரணத்தில் நெருங்கிய அணுக்களை நிகர்க்கச் சிறியவையாகும்படி பெரியவனாய் இருப்பவன்.

பிரமனும் அவனைச் சூழ்ந்தவரும் ஆகிய அவரது தொகுதி யோடு திருமாலும் அவரைச் சூழ்ந்தோரது மிக்க கூட்டமும் உலகத்தினது உற்பத்தியும் நிலைபேறும் ஆகியவற்றை இறுதியடையச்செய்த மிகப் பெரிய ஊழிக்காலமும், அவ்வூழியின் நீக்கமும் அந்நீக்கத்தின் பின் உலகம் முன்போலத் தோன்றி நிலைபெறுதலும் பெரிதாகவும் சிறிதாகவும் வீசுகின்ற சூறைக் காற்றாகிய வீசும் வளியில் அகப்பட்ட பொருள் போலச் சுழல, அவற்றை நிலை பெயர்க்கின்ற அழகன்.

எல்லாப் பொருள்களையும் படைக்கும் பிரமனைப் படைக் கின்ற பழையவன்.

படைக்கப்பட்ட பொருளைக் காப்போனாகிய திருமாலைக் காக்கின்ற கடவுள்.

காக்கப்பட்ட பொருளை அழிப்பவன்.

அழிக்கப்பட்டவற்றை நினையாத கருத்தையுடைய கடவுள்.

சிறப்புப் பொருந்திய அறுவகைப்பட்ட சமயத்தையுடைய, ஆறுவகை ஒழுக்கத்தை உடையவர்க்கும் முத்திப் பேறாய் நின்றும், தேவர் பகுதிகள் புழுக்களை ஒக்க நிற்கின்ற பெரியோன், தினந்தோறும் சூரியனில் ஒளியை அமைத்தவன்.

அழகு பொருந்திய சந்திரனில் குளிர்ச்சியை வைத்தவன்.

வலிய வெற்றியையுடைய நெருப்பில் வெப்பத்தை உண்டாக்கினவன்.

உண்மையாகிய ஆகாயத்தில் வியாபிக்கும் தன்மையை வைத்தவன்.

மேன்மை பொருந்திய காற்றில் அசைவை அமைத்தவன்.

நிழல் பொருந்திய நீரினிடத்து இனிய சுவையை வைத்தவன்.

வெளிப்படையாக மண்ணிடத்து வலிமையை அமைத்தவன்.

இவ்வாறே எந்நாளிலும் எவ்வளவு பல கோடியாகிய எவ்வளவோ பல பிற பொருள்களிலும், அவற்றின் தன்மையை அவ்வப் பொருள்களில் அமைத்து வைத்தவன்.

அதுவன்றி எப்பொருட்கும் முன்னே உள்ளவன்.

முழுதும் நிறைந்தவன்.

தனக்கு நிகர் இல்லாதவன்.

பழைமையாகிய பன்றியின் பல்லை அணிந்தவன்.

புலியினது தோலை அரையில் உடுத்தவன்.

திருவெண்ணீற்றை அணிந்தவன்.

அவனது பிரிவை நினைக்கும்தோறும் பொறுக்கமாட்டேன்.
ஐயோ! நான் கெட்டொழிவேன்.
இனிய இசை வீணையில் பொருந்தியிருப்பது போல, உயிர்களில் நிறைந்து இருப்பவன்.
அப்படிப்பட்டதாகிய வீணை இசை ஒன்றை அவ்விடத்து அறிந்தவன்.
மேலோன்.
பழையவன்.
பிரமனும் திருமாலும் காணவொண்ணாத பெரியவன்.
வியத்தகு தன்மைகள் உடையவன்.
எல்லாப் பொருளுமாய் இருப்பவன்.
சொல்லின் நிலையைக் கடந்த பழையோன்.
மனம் சென்று பற்றாத தூரத்தில் இருப்பவன்.
பத்தியாகிய வலையில் அகப்படுவோன்.
ஒருவன் என்னும் சொல்லால் குறிப்பிடப்படும் ஒருவன்.
பரந்த உலகம் முழுவதுமாகிப் பரந்தவன்.
அணுப் போன்ற தன்மையினையுடைய நுண்ணியவன்.
ஒப்புச் சொல்லுதற்கு அரிய பொருள்யாதினும் அரிய பொருளாகிய அரியவன்.
பொருந்தி எல்லாப் பொருளையும் காப்பவன்.
நூலறிவால் உணரப்படாத நுட்பம் உடையவன்.
மேலும் கீழுமாகிய எவ்விடத்திலும் பரவி நிற்பவன்.
முடிவும் முதலும் நீங்கினவன்.
உயிர்கட்குப் பிறவியாகிய கட்டும், வீடுபேறும் உண்டாக்குவோன்.
இயங்காப் பொருளும் ஆனவன்.
கற்ப காலத்தையும் அதன் முடிவையும் கண்டவன்.
எல்லோரும் அடையும் பொருட்டு எழுந்தருளுகின்ற தலைவன்.
தேவரும் அறிய முடியாத சிவபெருமான்.
பெண் ஆண் அலி என்னும் பாகுபாடுகளில் கலந்துள்ள தன்மையன்.
அப்பெருமானை நானும் கண்ணால் கண்டேன்.
அருள் மிகவும் சுரக்கின்ற அமிர்தம்.
அப்பொருளினது பெருங்கருணையின் ஏற்றத்தைக் கண்டேன்.
அவன் தன் திருவடிகள் பூமியில் படும்படி எழுந்தருளி வந்தான்.
அவனைச் சிவபிரான் என்று நானும் தெளிந்து கொண்டேன்.
அவன் என்னை அடிமை கொண்டருளினன்.
நீலமலர் போலும் கண்களையுடைய உமாதேவியின் பாகன்.
அத்தகைய உமாதேவியும் தானும் பிரிவின்றியே இருப்பவன்.
மேன்மையான பேரின்பக் கடல் முழுவதுமே, சூல் கொண்ட கரிய

பெருமேகம் போல வடிவெடுத்து, அழகு நிறைந்த திருப்பெருந்துறை என்னும் மலைமேல் ஏறித் தக்க அருளாகிய மின்னல் வெளிச்ச மானது ஒவ்வொரு திசையிலும் பரவ, ஐவகை வேட்கைப் பிணிப் பாகிய, வாள் போன்ற கொடிய பாம்புகள் கெட்டு ஓட, பிறவி என்னும் கடுந்துன்பமாகிய வேனிலானது தனது விரிந்த தலையை மறைத்துக் கொள்ள, மிகுந்த அழகுடைய தோன்றிச் செடி போலத் தோன்றிய ஆசிரியரது ஞானவொளி விளங்க, எங்கள் பிறவிகளாகிய தம்பலப் பூச்சிகள் செறிந்து தோன்ற, இறைவனின் இரக்கமானது இனிய முரசு அடித்தாற் போல முழக்கம் செய்ய, பூப்போன்றனவாயுள்ள அடியவர் கூப்பிய கைகள் காந்தள் மலர்போல விளங்க, குறையாத இன்பம் தரும் அருளானது சிறிய துளிகளின் வடிவத்தைக் கொள்ள, நேர்மையான பேரறிவாகிய வெள்ளம் திக்கெங்கும் பரவ, துன்பமாகிய குளம் கரையழிய, மலைச் சிகரமளவுக்குப் பொருந்துமாறு உயர்ந்தும், ஆறு சமயங்களாகிய கானல் நீரினை நீர் வேட்கையுண்டாக வந்த நீண்ட கண்களையுடைய மான் கூட்டம் போன்ற சிற்றறிவு உயிர்கள் தமது அகன்ற பெருவாயினால் பருகியும், நடந்த தளர்ச்சியும் மிகுந்த தாகமும் நீங்கப் பெறாமல் உழன்றன.

அத்தருணத்தில், அந்த வானப் பேராற்றின் உள்ளிடத்தே புகுந்து பெருகி, இன்பப் பெருஞ் சுழலினை உண்டாக்கி, மெய்யாகிய மணிகளை வாரிக் கொண்டு, எமது பாசக்கட்டாகிய கரைகளை மோதி அலைத்து உடைத்து, முறை முறையாய் வளர்ந்து வந்த எங்களுடைய நல்வினை தீவினை என்னும் இருவினைகளாகிய பெரிய மரங்களை வேரோடு பிடுங்கி மிகுந்து வந்த அழகுமிக்க அருள் வெள்ளத்தைச் செலுத்தித் தொண்டராகிய உழவர், கடத்தற்கரிய எல்லையையுடைய சாந்தம் என்னும் பெரிய அணையைக் கட்டி, தேனோடு விரிந்த வாசனையுடைய மலர் போன்ற இருதயமாகிய குளத்திற்கு உண்மையாகிய நீர் வாயினை அமைத்து, பொறியடக்கம் என்னும் சிறந்த அகிற் புகை சேரும் வரம்பினையுடைய ஓங்காரமாகிய வண்டு ஒலிக்கும் உள்ளமாகிய குளத்திலே அருள் வெள்ளமானது மிகுதியாக மேலும் மேலும் நிறைவதைப் பார்த்து, வழிபாடு என்னும் வயலுள் அன்பு என்னும் வித்தை விதைத்துச் சிவபோகமாகிய விளைவைத் துய்க்குமாறு உதவிய உலகெங்கும் பெறுதற்கரிய மேகம் போன்றவன் வாழ்க!

கரிய படமுடைய பாம்பைக் கச்சையாக அணிந்த கடவுள் வாழ்க.

அரிய தவத்தினருக்கு அருளுகின்ற முதல்வன் வாழ்க.

பிறவி அச்சத்தை நீக்கின வீரன் வாழ்க.

நாள்தோறும் அடியார்களை வலிய இழுத்து ஆட்கொள்வோன் வாழ்க.

எம்மை வளைத்துக் கொள்கின்ற பெருந்துன்பத்தை நீக்குவோன் வாழ்க.

தன்னை அடைந்தவர்க்கு ஆர் அமுது அளிப்போன் வாழ்க.
மிகுந்த இருளில் பல வகைக் கூத்தொடு நடிப்போன் வாழ்க.
பெரிய மூங்கில் போலும் தோள்களை உடைய உமாதேவிக்கு அன்பன் வாழ்க.
தன்னை வணங்காது அயலாய் இருப்பார்க்கு அயலவனாயிருக்கிற எம் தலைவன் வாழ்க.
அன்பர்க்கு இளைத்த காலத்தில் சேமநிதி போல்வான் வாழ்க.
நஞ்சையுடைய பாம்பை ஆட்டிய நம் பெருமானுக்கு வணக்கம்.
எம்மைத் தனது அருட்பித்தேற்றின பெரியவனுக்கு வணக்கம்.
திருவெண்ணீற்றுப் பூச்சொடு தோன்ற வல்லவனுக்கு வணக்கம்.
நான்கு திக்கிலும் நடப்பவற்றை நடத்தி கிடப்பவற்றைக் கிடத்தி, நிற்பவற்றை நிறுத்திச் சொல்லளவைக் கடந்த பழையோன்.
மன உணர்ச்சியால் கொள்ளப் படாதவன், கண் முதலாகிய பொறி களுக்குக் காணவும் படாதவன்.
ஆகாயம் முதலிய பூதங்களை வெளிப்படையாகத் தோன்றப் படைத்தவன்.
மலரின் மணம் போன்று ஓங்கி எவ்விடத்தும் நீக்கமில்லாமல் நிறைந்து பொருந்திய தன்மையை இப்பொழுது, அடியேனுக்கு எளிதாக வந்து உணர்த்தியருளி அழிகின்ற இவ்வுடம்பை ஒழியச் செய்த சிறந்த பொருளானவன்.
இன்று எனக்கு எளியவனாய் என் உள்ளத்தில் வீற்றிருந்தவனுக்கு வணக்கம்; கனிந்து உருகுகின்ற உடம்பை அருள் செய்தவனுக்கு வணக்கம்; இன்ப ஊற்றாயிருந்து மனத்தை மகிழ்விப்பவனுக்கு வணக்கம்.
தாங்க ஒண்ணாத இன்பவெள்ளம் பரவி அலை வீச அதனை ஏற்றுப் போற்றாத உடம்பைத் தாங்குதலை விரும்பேன்.
பச்சை மணியின் குவியலும் சிறந்த செம்மணியின் பெருக்கமும், மின்னலின் ஒளியைத் தன்னிடத்தே கொண்ட ஒரு பொன்னொளி போல் விளங்க, மேலும் கீழும் போய்த் தேடின பிரமனுக்கும் திருமாலுக்கும் மறைந்தும், யோக முறைப்படி ஒன்றி நின்று முயன்றவர்க்கு மறைந்தும், ஒருமைப்பாடு கொண்டு நோக்குகின்ற மனத்தையுடைய உறவினர் வருந்தும்படி உறுதியோடு இருப்பவர்க்கு மறைந்தும் வேதங்களின் பொருட் கூறுபாடுகளை ஆராய்ந்து பார்த்து வருந்தினவர்க்கு மறைந்தும், இவ்வுபாயம் வழியாகக் காண்போம் என்று இருந்தவர்க்கு, அவ்வுபாயத்தில், அவ்விடத்திலே மறைந்தும், கோபம் இல்லாமல் பார்த்து மிகுதியாகப் பற்றி, ஆண் போலத் தோன்றியும், அலிபோல இயங்கியும், ஒளிபொருந்திய நெற்றியை உடைய பெண் போலக்

காணப்படும் தன் இயல்பைக் காட்டாது மறைந்தும், தூரத்தில் ஐம்புலன்களைப் போக நீக்கி அரிய மலைதோறும் சென்று, பொருந்தின பற்றுகளை எல்லாம் விட்ட வெற்றுயிரோடு கூடிய உடம்பையுடைய அரிய தவத்தினர் நோக்குக்கும் செம்மையாக மறைந்தும், ஒரு பொருள் உண்டு என்றும் இல்லை என்றும் ஐயுற்ற அறிவுக்கு மறைந்தும், முன்னே பழகிய காலத்திலும் இப்பொழுது பழகுங்காலத்திலும் எப்பொழுதும் மறைகின்ற கள்ளனைக் கண்டோம்.

ஆரவாரியுங்கள்; ஆரவாரியுங்கள்; புதிய மலர் மாலைகளால் திருவடியைக் கட்டுங்கள்; சுற்றுங்கள்; சூழுங்கள்; பின் தொடருங்கள்; விடாதீர் பிடியுங்கள் என்று சொல்லியவர்களது பற்றுதலுக்கு முழுதும் மறைந்தும், தனக்கு நிகரில்லாதவன் தானேயாகிய தன்மையை என் போல்வார் கேட்கும்படி வந்து சொல்லி வலிந்து அழைத்து, அடிமை கொண்டருளி வேதியர் கோலத்தைக் காட்டியருளுதலும் வருந்தி என்பு உருக அன்பினால் முறையிட்டு, அசைகின்ற கடல் அலைகள் போல இடையறாது ஆரவாரித்து மேலெழுந்து தலைதடுமாறி வீழ்ந்து புரண்டு அரற்றி, பித்தர் போல் மயங்கி, வெறி பிடித்தவர் போலக் களித்து, நாட்டார் மயக்கம் கொள்ளவும் கேட்டவர் வியப்புக் கொள்ளவும் மதயானையும் ஏற்கப் பெறாத மிகப்பெரிய மதத்தால் தரியேனாக, என் உறுப்புகளைத் தீஞ்சுவையினைத் தருகின்ற கொம்புத்தேன் கொண்டு ஆக்கினான்.

பகைவருடைய பழைய ஊராகிய மூன்று புரங்களை அழகிய நகையாகிய நெருப்பினால் அழித்தது போல, அக் காலத்தில் அருளாகிய பெரிய நெருப்பினால், அடியோங்களுக்கு உரிய குடிலாகிய உடம்பை ஒருத்தரேனும் தவறாதபடி அடங்கப் பண்ணினான்.

அடியேனுக்குப் பெரிய கையிலுள்ள நெல்லிக்கனி போன்றிருந்தான்.

இவ்வாறு எனக்கு எளி வந்த கருணையின் பெருமையை யான் சொல்லுமாறு அறியேன்.

அவன் வாழ்க.

அவன் என்னைச் செய்த நிலையை நாயினேன் ஆற்றேன்.

அதன் காரணத்தையும் அறிந்திலேன்.

இது எனக்குச் செய்யும் முறையோ? ஐயோ செத்தேன்; அடியேனுக்குச் செய்த அருளையும் அறியேன்.

சிறுகச் சிறுகக் குடித்தும் நிறைவு பெற்றிலேன்: முழுதுமாய் விழுங்கியும் பொறுக்க மாட்டேன்.

செழுமையாகிய குளிர்ந்த பாற்கடலின் அலைகளை உயரச்செய்து நிறைமதி நாளில் பெருகும் கடலில் பொருந்திய நீர்போல உள்ளத்தினுள்ளே பொங்க, சொல்லிறந்த அமுதமானது ஒவ்வொரு

மயிர்க் காலிலும் நிறையச் செய்தனன்; நாயினேனது உடலின் கண்ணே இருக்கை கொண்டு கொடியேனுடைய மாமிசம் செழித்த ஒவ்வொரு மடையிலும், இனிய தேனைச் பாய்ச்சி நிறைந்த ஆச்சரியமான அமுத தாரைகளை எலும்புத் துளை தோறும் ஏறச் செய்தனன்.
உருகுவதாகிய மனத்தைக் கொண்டு ஓர் உருவம் அமைத்தாற் போல அடியேனுக்கு மிகுதியும் உருகுகின்ற உடம்பை அமைத்தான்.
இனிதாகிய கனியைத் தேடுகின்ற யானை போல இறுதியில், அடியேனையும் அவனையே நாடி இருப்பதாகச் செய்தருளினன்.
என்னுள்ளே அருளாகிய பெருந்தேன் பாயும்படி, அருளொடு எழுந்தருளி மிக்க அமுதத்தினையும் அமைத்தான்.
பிரமனும் திருமாலும் தேடியும் அறியாத தன்மையுடையான்.

விளக்கவுரை

இது தில்லையில் அருளிச்செய்யப்பட்டதாகவே, யாண்டும் கூறப்படுகின்றது.
'திருவண்டப் பகுதி' என்பது, முதற் குறிப்பாற் பெற்ற பெயர், 'ஆத்திசூடி' முதலியனபோல.
இதன்கண் அடிகள் இறைவனது பெருமைகள் பலவற்றையும் விரித்துக் கூறி, அன்ன பெருமைகளையுடையவன், தமக்கு மிக எளிவந்து அருள் புரிந்தமையை வியந்து, வாழ்த்துதலும், போற்றுதலும் செய்கின்றார்.
'சிவனது தூல சூக்குமத்தை வியந்தது' என்னும் பழைய குறிப்பும் இதனை ஒருவாறு உணர்த்தும்.
தொல்காப்பியனார், 'குட்டம் வந்த ஆசிரியம்' என்றதனைப் பிற்காலத்தார், 'இணைக் குறள் ஆசிரியப்பா' என்றனர்.
1-6, அண்டப் பகுதி - அண்டங்களாகிய இடப் பகுதிகள்.
உருண்டை, 'உண்டை' என மருவி, அத்தன்மைத்தாய வடிவத்தை உணர்த்திற்று.
பிறக்கம் - விளக்கம்; பொலிவு.
'அளப்பருந் தன்மையை யுடைய காட்சி' என்க; 'காட்சியோடு' என உருபு விரிக்க.
'ஒன்றனுக் கொன்று' என்றதன்பின், 'பெரிதாய்' என்பது எஞ்சிநின்றது.
'நின்ற' என்பதன் அகரம் தொகுத்தலாயிற்று.
எழில் - எழுச்சி; பரப்பு.
'நூற்றொரு கோடியின்' என்றது, 'ஒருநூறு கோடி' என்றவாறு.
'கோடி' என்றது, அவ்வளவினதாகிய யோசனையைக் குறித்த ஆகுபெயர்.
'கோடியினின்றும் மிகுதிப்பட விரிந்தன' என்க.
'பிருதிவி தத்துவம் முதலாகத் தொடங்கி மேற்செல்லும் தத்துவங்களுள்

பிருதிவி தத்துவத்தின் அண்டம் எப்பக்கத்திலும் நூறு கோடி யோசனை பரப்புடையது' என்றும், 'அதன் மேல் மூலப் பகுதிகாறும் உள்ள அண்டங்களுள் ஒன்றுபோல மற்றொன்று பத்து மடங்கு பரப்புடையது' என்றும், 'அவற்றிற்கு மேல், நூறு மடங்கு, ஆயிர மடங்கு என்று இவ்வாறு சிவதத்துவம் முடிய உள்ள தத்துவ அண்டங்கள் விரிந்து கிடக்கின்றன' என்றும் ஆகமங்கள் கூறுதலின், இவ்வாறு அருளிச் செய்தார்.

'விரிந்தன' என்ற சொற் குறிப்பானும், இங்குப் பெருமை கூறுதலே கருத்தாகலானும், 'நூற்றொரு கோடி' என்றது, விரிவையன்றித் தொகையை யன்றென்க.

'விரிந்தன' என்றது 'விரிந்தனவாம்' என வினைப்பெயர்.

இதன்பின், 'அவை' என்னும் சுட்டுப் பெயர் வருவிக்க.

இல்நுழை கதிரில் துன் அணுப் புரைய - இல்லத்துள் புழைவழியாகப் புகும் ஞாயிற்றின் ஒளியில் நெருங்கித் தோன்றும் நுண்துகள் போல.

சிறிய ஆக - சிறியவாய்த் தோன்றும்படி.

பெரியோன் - பெரியோனாய் நிற்பவன்.

இறைவனது பெரு வடிவொடு நோக்க, மேற் கூறிய அண்டங்கள் சிறுதுகள்களாம் என்றபடி.

இதனானே, இந்நுண்துகள்கள் மேற்கூறிய அண்டங்கள் போலப் பெரியவாய்த் தோன்றும்படி அத்துணைச் சிறியோனாய் நிற்பவன் என்பதும் பெறப்படும்.

'அண்டங்க ளெல்லாம் அணுவாக அணுக்க ளெல்லாம் அண்டங்க ளாகப் பெரிதாய்ச்சிறி தாயி னானும்' என்ற *(பாயிரம்.7)* பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம் காண்க.

இதனால், இறைவனது வியாபகத் தன்மை கூறியவாறு.

7-12. மேற்போந்த, 'தெரியின்' என்பதனை இங்குக் கூட்டி, 'அவனது பெருமைகளை ஆராயுமிடத்து' என உரைக்க.

வேதியன் - பிரமன்.

தொகை - கூட்டம்.

மிகுதி - பரப்பு.

பிரம விட்டுணுக்கள் இவ்வண்டத்தில் உள்ளவாறே ஏனைய பல்கோடி அண்டங்களினும் உளராகலின், அவர்களையே, 'தொகை' என்றும், 'மிகுதி' என்றும் அருளினார்.

இவ்வண்டத்தில் உள்ளாரோடு ஒத்த பிரம விட்டுணுக்களது கூட்டத்தை, இவர்களுடைய கூட்டம் என உடைமையாக்கி ஓதினார், இனம் பற்றி.

சிறப்பு - வளர்ச்சி; எனவே, நிலைத்தலாயிற்று.

'பிரமரது தொகுதியும், மாயோரது மிகுதியும் தோன்றுதலையும்,

நிற்றலையும், இறுதியோடே புணர்ந்த ஊழி' என்க.
'புணரிய ஊழி' என்பதில், பெயரெச்சம் காலப்பெயர் கொண்டது.
ஊழி, வடமொழியில், 'கற்பம்' எனப்படும்.
பிரமனும், மாயோனும் செயலொழிந்து துயிலுங் காலம், அவரவர்க்கு 'நித்திய கற்பம்' என்றும், அவர் இறந்துபடுங் காலம் அவரவர்க்கு, 'மகாகற்பம்' என்றும் கூறப்படுமாகலின், அவற்றுள் அவர் இறந்துபடுங் காலமாகிய மகாகற்பம் என்பது அறிவித்தற்கு, 'மாப்பேரூழி' என்றார்.
ஆகவே, அவற்றுள், 'அவரது தோன்றல், நிற்றல், அழிதல்' என்னும் மூன்றும் நிகழ்ந்து முற்றுப் பெறுமாதலின், அதனை, 'தோற்றமும் சிறப்பும் ஈற்றொடு புணரிய' என்று விளக்கினார்.
'ஊழி' என்னும் அஃறிணை இயற்பெயர், ஈண்டுப் பன்மையின் மேலது.
'ஊழியும்' என்றது, 'ஊழியினது தோற்றமும்' என்றவாறு.
எனவே, பின்னர்க் குறித்த நீங்குதலும் (முடிவெய்துதலும்) நிலைத்தலும் (நிகழ்தலும்) ஊழியினுடையவேயாயின.
'முதலும் முடிவும்' எனக் கூறி, நடுவை இறுதிக்கட் கூறலும் மரபாகலின், நீக்கத்தை இடை வைத்தார்.
சூக்கமொடுதூலத்து - நுண்மையும், பருமையும் ஆய இருநிலைகளிடத்தும்; இதனை, 'கொட்க' என வருவதனோடு இயைக்க.
நுண்மை, ஒடுக்கமும், பருமை, தோற்றம் நிகழ்ச்சி என்னும் இரண்டும் ஆதல் அறிக.
'சூறை மாருதத்து' என்பதனை இதனோடே கூட்டி நாற்சீரடியாக்கி, 'எறியது வளியின்' என்பதனை இருசீரடி ஆக்குவாரும் உளர்.
அகவற்பாவினுள் வரும் இருசீரடிக்கு மூவசைச் சீராதல், ஆசிரிய உரிச்சீராதல், இரண்டுமாதல் அடுத்துவந்து நிற்பதே இன்னோசை பயப்பதாகலின், அது பொருந்தாமையறிக.
இவ்வாறு அடிவரையறை செய்யவே, ஓசை வேறு பாட்டானும், ஈண்டுரைக்கப்படும் பொருளே தோன்றுதல் காண்க.
சூறை மாருதம் - சூறாவளி; சுழல்காற்று.
மாருதத்து - மாருத மான நிலையில்.
'எறி வளி' என இயையும்.
'அவ்வளி' எனச் சுட்டாக ஓதற்பாலதனை, 'அது வளி' என இரு பெயரொட்டாக ஓதினார், 'அது காலை, அது போழ்து' என்றற் றொடக்கத்தனபோல.
வளியின் - வளி போல.
இதனை, 'பெயர்க்கும்' என வருவதனோடு இயைக்க.
'மாப் பேரூழிகளது தோற்றங்களும், நிகழ்ச்சிகளும், முடிவுகளும், 'நுண்மை, பருமை' என்னும் இருவகை நிலைகளில் தமக்கு ஏற்ற

நிலையிற் பொருந்திச் சுழன்று வருமாறு, சுழல் காற்றைப் போலச் சுழற்றுகின்ற குழகன்' என்க.

பிரம விட்டுணுக்கள் என்னும் காரணக் கடவுளர் முதலியோரையும், தோன்றி நின்று அழியச் செய்வது, ஊழி முதலிய பெயர்களைப் பெற்று விளங்கும் காலம்; அதனைத் தோன்றி நின்று அழியுமாறு செய்கின்றவன் இறைவன் என, அவனது முதன்மையை வியந்தவாறு.

மாப்பேரூழியது அளவை, சூறாவளியில் அகப்பட்டு விரையச் சுழலும் சிறு பொருள்களது சுழற்சியளவோடு ஒப்புமைப்படுத்தியது என்னையெனின், 'அது தானும் நிலையுடையதன்றி மாறித் தோன்றுவதேயாம்' என அதனது நிலையாமையை இனிது விளக்குதற் பொருட்டென்க.

உறங்கு வதுபோலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு

எனத் திருவள்ளுவ நாயனாரும் *(குறள். 339.)*
நிலையாமையை இவ்வாறு விளக்குதல் காண்க.

எல்லாவற்றையும் ஆக்கிக் காத்து அழித்துச் சுழற்றி நிற்பது காலம்; அதனை அங்ஙனம் சுழலச் செய்பவன் இறைவன் என்றதனால், அவற்றின்வழிச் சுழல்வனவற்றையும் அங்ஙனம் சுழற்றுபவன் அவனே என்பது, தெற்றென விளங்கிக் கிடந்தது.

எனவே காலத்துட்படாதவன் இறைவன் ஒருவனேயன்றிப் பிறர் இல்லை என்பது பெறப்பட்டது.

சிவபெருமான் காலனைக் காலால் உதைத்தமை, 'அவன் காலத்தைத் தன்வழி நடாத்துபவன்' என்பதையும், மார்க்கண்டேயர் அப்பெருமானை வழிபட்டு என்றும் பதினாறு வயதாய் இருக்கப் பெற்றமை, அவனை அடைந்தவரே காலத்தைக் கடப்பவராவர் என்பதையும் விளக்குவனவாம்.

இவ்வரலாறு இங்ஙனம் உலகறிய வழங்கி வருவதாகவும், அப்பெருமானை வழிபடுதலினும் சிறப்பாக ஒன்பான் கோள்கள் முதலிய காலக் கடவுளரை வழிபட்டுக் காலம் போக்குவாரது நிலையை நாம் என்னென்பது! காலம் தன்வயம் உடையதன்று; இறைவன் ஒருவனே தன்வயம் உடையவன்; காலம் அவன்வழிப்பட்டதே என்பதை, காலமே

கடவுளாகக் கண்டனம் தொழிலுக்கென்னிற்
காலமோ அறிவின் றாகும்; ஆயினும் காரியங்கள்
காலமே தரவே காண்டும்; காரணன் விதியினுக்குக்
காலமும் கடவுள் ஏவ லால்துணைக் கார ணங்கான்.

என விளக்குகின்றது, சிவஞான சித்தி *(சூ.1.10.)*.

'குழகன்' என்றார், எல்லாவற்றையும் கொட்கப் பெயர்ப்பினும் தான்

அப்பெயர்ச்சியுட்படாது, என்றும் ஒரு பெற்றியனாயே நிற்பான் என்பது அறிவித்தற்கு.
எனவே, 'கொட்கப் பெயர்க்கும்' என்றதனால், அவனது முடிவிலாற்றலையும், 'குழகன்' என்றதனால் அவனது தன்வயமுடைமையையும் குறித்தவாறாயிற்று.
13-19. 'முழுவதும்' என்றதனை இவற்றொடு கூட்டிப் பொருள் கொள்க.
'முழுவதும்' என்றது, அவரவரது எல்லைக் குட்பட்டன எல்லாவற்றையும் என்றதாம்.
'படைப்போன், காப்போன்' என்ற விடத்துச் சொல்லுவாரது குறிப்பு, பொருள் மாத்திரையன்றித் தொழிலொடு கூடிய பொருள் மேலதாதலின், அவை அத்தொழிலையுடைய பலர்க்கும் பொருந்துவனவாம்.
இவ்வாறு வருவதனை, 'ஒருபாற் கிளவி எனைப்பாற் கண்ணும்
வருவகை தாமே வழக்கென மொழிப'
என்று அமைத்தார் தொல்காப்பியர் *(பொருள்.222).*
இதனை, 'சாதியொருமை' என்ப.
'படைப்போன், காப்போன்' என்றவற்றில் ஐயுருபு தொக்கு நிற்றல் வெளிப்படை.
'பழையோன்' என்றதனால், அவனுக்கு முன்னே நின்று அவனைப் படைப்போர் ஒருவருமிலர் என்றவாறு ஆயிற்று.
இங்ஙனம் ஒருவராற் படைக்கப்படாது நிற்கும் நிலையை, 'அனாதி' என்ப.
'காப்போனையும் காக்கும் முதல்வன்' என்றற்கு, 'காப்போற் காக்கும் கடவுள்' என்றாராயினும், அதனானே, முன்னர் அவனைப் படைத்தலும் அடங்கிற்று.
கரப்போன் - அழிப்பவன்.
'படைப்போன், காப்போன்' என்ற அவரோடொப்பக் கரப்போனாகிய உருத்திரனைச் சுட்டி, 'கரப்போற் கரக்குங் கடவுள்' என்னாது, சிவபெருமானையே கரப்போனாக அருளிச்செய்தார்.
அவன் ஏனை இருவர் போலச் சகலருட்பட்டு மீளப் பிறத்தலின்றி, அதிகாரமல வாசனை, பின்பு போகமல வாசனையாயும் இலயமல வாசனையாயும் தேய்ந்தொழிய வீடெய்துவானாகலின்.
எனவே, 'அழித்தல்' என்பது, மீளப் பிறப்பாரிடத்தே செய்யப்படுவதாம் என்பது தெளிக.
'கரப்பவைகருதா' என்றதற்கு, 'அழிக்கப்படும் அவற்றை அவை நிலையுறுதலுறுங் காலத்து அழிக்கக் கருதாத' எனப் பொருள் கூறுக.
இதனால், அழித்தலைத் தனது ஆற்றல் வெளிப்படுத்தல் கருதி யாதல், பிறிதொன்று கருதியாதல் தன் பொருட்டாகச் செய்யாது, உயிர் களின்

பொருட்டாகவே செய்தல் பெறப்பட்டது.
படவே 'கருத்துடை' என்றதற்கு, 'அருளுள்ளத்தை யுடைய' என்பது பொருளாயிற்று.
அழித்தல் உயிர்களை இளைப்பாற்றுதற் பொருட்டு என்பதனை, 'அழிப்பிளைப் பாற்றல்........................... பார்த்திடில் அருளே எல்லாம்' எனச் சிவஞான சித்தி விளக்குதல் காண்க (சூ.1.37.).
'கருதா' என்றதற்கு இவ்வாறன்றி, 'அழித்தவைகளை இளைப்பு நீங்குங்காறும் படைக்கக் கருதாதவன்' என உரைப்பாரும் உளர்; 'கரந்தவை' என ஓதாது, 'கரப்பவை' என ஓதினமையின், அது பொருந்தாமையறிக.
இனி, 'கருதா' என்றதனை வினையெச்சமாக்கி, 'கருத்துடை கடவுள்' எனப் பாடம் வேறாக ஓதி, 'அழித்தலுட்பட்ட உயிர்கட்கு அருளக் கருதி, அவற்றின் பிறப்பை நீக்கும் கடவுள்' என்று உரைப்பாரும் உளர்.
17-19. திருத்தகும் என்றதனை இங்குக் கூட்டி, 'சிறப்புத் தக்கிருக்கின்ற' என உரைக்க.
'அறுவகைச் சமயத்தால் அறுவகைப்பட்டோர்க்கும்' என்க.
ஒரோவொரு சமயத்தினும் கொள்கையும், ஒழுக்கமும் பற்றிய சிறுசிறு வேறுபாடுகள் உளவாதல்பற்றி, 'ஆறு சமயம்' என்னாது, 'அறுவகைச் சமயம்' என்று அருளினார்.
'திருத்தகும்', எனச் சிறப்பித்தது, கடவுட் கொள்கையுடையவற்றையே பிரித்துணர்த்தற்கு.
அதனால், அவை, ஆருகதம், ஐரணிய கருப்பம், வைணவம், சௌரம், சௌமியம், வாமம்' என்றேனும், பிறவாறேனும் கொள்ளப்படும்.
அருகன், இரணிய கருப்பன் (பிரமன்), விண்டு (மாயோன்), சூரியன், சந்திரன், சத்தி என்போர் இச் சமயங்களின் தெய்வங்களாவர்.
'உலகாயதம், பௌத்தம், மீமாஞ்சை' என்னும் மதங்கள் கடவுட் கொள்கையில்லாதனவாதலாலும், வைசேடிகமும், நையாயிகமும் கடவுளையடைதல் முத்தி என்று கொள்ளாமையாலும், 'காணாபத்தியம், கௌமாரம், சாத்தேயம், வைரவம், பாசுபதம், மாவிரதம்' என்னும் மதங்களின் தேவர்கள் இழித்துரைக்கற்பாலர் அல்லராதலாலும், மேற்கூறியவாறு ஏற்புடைய சமயங்களையே ஈண்டுக் கொள்க.
வாமமதத்தவர், 'சத்தி' எனக் கூறுதல் சிவசத்தியை அன்று; விண்ணோர் குழுவுட் பெண் பாலார் சிலரையேயாம்; ஆதலின், அஃது ஈண்டுக் கொள்ளத்தகும் என்க.
இனி, ஒன்றிரண்டு குறைவனவாயினும், 'அறுசமயம்' என்னும் வழக்குப்பற்றிக் கூறினார் எனக் கொண்டு, சிலவற்றையே கொள்ளினும் அமையும்.

பிரமன் மாயோன் இருவரது நிலை முன்னரே கூறப்பட்டமையின், மீண்டும் அவரை ஈண்டுக் கூறல் வேண்டா எனின், ஆண்டுக் காரணக் கடவுளராதல் பற்றி வேறெடுத்துக் கூறினார்; ஈண்டுச் சமயக் கடவுளராதல் பற்றிப் பிறதெய்வங்களோடொப்ப ஒருங்கெடுத்துக் கூறினார்.
அதனான் அஃது இழுக்கன்றென்க.
இக் கடவுளர்தாம் சிவபிரான்போல ஒருவரேயாகாது பலராதலின், 'விண்ணோர்' என்று ஒழியாது, 'பகுதி' என்றார்.
எல்லாச் சமயத்தவர்க்கும் அவரவர்கொண்ட முதற்பொருளே வீடுபேறாதல் அறிக.
எல்லா முதன்மையும் உடைய இறைவனொடு நோக்க, ஒரோவொரு முதன்மையையுடைய இக் கடவுளர்கள் மிகத் தாழ்ந்த புழுப் போல்வாராகலின், 'கீடம் புரையும்' என்று அருளினார்.
கீடம் - புழு.
கிழவோன் - எல்லாப் பொருளையும் தனக்கு உரியனவாக உடையவன்; 'முழுமுதற் கடவுள்' என்றபடி.
ஈண்டு, சிவபிரானை முதற்கடவுளாக உணரும் பேறில்லாது பிற கடவுளரையே முதற் கடவுளராக நினைந்து வழிபடுவாரது நிலைக்கு இரங்குதல் கருத்தன்றி மற்றைத் தேவரது இழிபுணர்த்துதல் கருத்தன்றாகலின், 'சமயம்' என்றது, கடவுட்கொள்கையுடைய சமயங்களையே எனக் கொள்ளுதலே பொருந்துவதன்றி, எச் சமயத் தாராயினும் அவர் கொண்ட தத்துவத்தின் தலைவரே வீடுபேறாய் நிற்பராகலின், 'சமயம்' என்றது, அனைத்துச் சமயங்களையுமாம் எனக் கொள்ளுதல் பொருந்தாமையறிக.
இனி, 'வீடுபேறாய் நின்ற கிழவோன்' என இயைத்துரைப்பின் 'விண்ணோர் பகுதி கீடம்புரையும்' என்பது, கவர்பொருட்டாய் இடை நிற்றல் பொருந்தாமையறிக.
இவற்றால் சிவபெருமானது முழுமுதற்றன்மை கூறியவாறு.
20-28. அருக்கன் - சூரியன்.
அவனது சோதி, நாள்தோறும் புதுவதாய்ப் புறப்பட்டு வருதலின், அதனை நாள்தோறும் அமைத்துத் தந்ததுபோலக் கூறினார்.
இறந்த காலத்தாற் கூறியது, முன் கண்ட நாள்களில் அது நன்கறியப்பட்டமை குறித்து, திருத்தகுமதி - அழகு தக்கிருக்கின்ற சந்திரன்.
திண்திறல் - இளையாத வலிமை; என்றது, எல்லாவற்றையும் நீறாக்கும் ஆற்றலை.
பொய் - பொய்த்தல்; இல்லை யாதல்.

இது, 'விசும்பென்பது ஒன்று இல்லை என்பாரது கூற்று மெய்யாகாமை குறித்தது' விசும்பு, தனக்குக் கீழுள்ள எல்லாப் பொருட் கண்ணும் உளதாதல் அறிக.
அங்ஙனம் எல்லாவற்றிலும் நிறைந்திருத் தலையே 'கலப்பு' என்றார்.
விசும்பேயன்றி ஏனைய பூதங்களும் தங் கீழ் உள்ளவற்றின் வியாபகம் உடையன என்க.
மேதகு - மேன்மை தக்கிருக்கின்ற.
காற்றிற்கு மேன்மை, விசும்போடு ஒருபுடை ஒத்து யாண்டும் சென்று இயங்குதலும், உயிர்கட்கு உடம்பை நிலைபெறுவித்தலுமாம்.
ஊக்கம் - கிளர்ச்சி; இயக்கம்.
கண்டோன் - ஆக்கினோன்.
நீரின்கண் பிறபொருள்களின் நிழல் தோன்றுதல் அதனது தூய்மையாலாதலின், அதனை எடுத்தோதினார்.
இன்சுவை என்றது மென்மையை.
இஃது இதனைச் செய்யும் ஆற்றல் மேல் நின்றது.
'நிகழ்த்தினோன்' எனற்பாலது, 'நிகழ்ந்தோன்' எனத் தொகுக்கப்பட்டது.
திண்மை - தாங்கும் வலிமை.
ஏனைய பொருள்கள் போலன்றி உயிர்கட்கு நிலத்தின்மேல் நிற்றல் எஞ்ஞான்றும் இடையறவு படாமையின், அதனது திண்மைக் குணம் மிக வெளிப்படையாக அறியப்படுவதாயிற்று.
'என்றென்றும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று'.
எத்தனையோ பல கோடியாய தன்மைகளை எத்தனையோ பலவாகிய பிற பொருள்களில் அது அது அவ்வத்தன்மை யுடையதாம் படி அவற்றின்கண் பொருந்தச் செய்தோன்' என்க.
'அனைத்தனைத் தாக' என ஆக்கம் வருவித்துக்கொள்க.
'அவ்' என்னும் வகரவீற்றுச் சுட்டுப்பெயர், 'வயின்' என்னும் ஏழனுருபு ஏற்று, 'அவ்வயின்' என நின்றது.
அஃதான்று அதுவன்றி.
இவற்றால், படைப்பின் வியத்தகு நிலைகளை விரிக்கும் முகத்தால், இறைவனது திறப்பாட்டினை வியந்தவாறு.
29-65 இவ்வடிகள் பலவற்றினும் வரும், 'காண்க' என்பன யாவும் அசைநிலைகள்.
29. கண்டாய், கண்டீர் முதலியன இறந்த காலத்தவாய் நின்ற அசையாகும்; இஃது எதிர்காலத்ததாய் நின்று அசையாயிற்று.
முன்னோன் எல்லாப் பொருள்கட்கும் முன்னிடத்தில் உள்ளவன்; தலைவன்.
முன், இடமுன்.

காலமுன், 'படைப்போற் படைக்கும் பழையோன்' (அடி.13) என்றதனால் பெறப்பட்டது.
முழுதோன் - எல்லாப் பொருள்களிலும் நிறைந்து நிற்பவன்.
30.தன் நேர் - தன்னோடு ஒக்கும் பொருள்.
'தானே' என்றதில் தான், ஏ இரண்டும் அசைநிலைகள்.
31. ஏனம் - பன்றி.
அதனது தொன்மை, அதன் எயிற்றின் மேல் ஏற்றப்பட்டது.
எயிறு - பல்.
ஒருகால் பிரளய வெள்ளத்தில் அழுந்திய நிலத்தைத் திருமால் சுவேதவராக (வெள்ளைப்பன்றி) உருக்கொண்டு கொம்பின்மீது ஏற்றிக் காத்து, பின்னர் அச்செருக்கால் உயிர்கட்கு இடர் விளைக்க, சிவபிரான் அப்பன்றியை அழித்து, அதன் கொம்பினை மார்பில் அணிந்துகொண்டான் என்பது வரலாறு.
32.கானம் - காடு.
இஃது இனம்பற்றி வந்த அடை.
உரி - தோல்.
தாருகாவனத்து முனிவர்கள் விடுத்த புலியைச் சிவபிரான் அழித்து அதன் தோலை உடுத்துக்கொண்டனன் என்பது அறிக.
33-34. நீற்றோன் - திருநீற்றை அணிந்தவன்.
'நினை தொறும் கெடுவேன்' என்றது, இடைக்கண் ஆற்றாமை மீதூரக் கூறியதாம்.
'அவனை நினைதோறும்' என்க.
ஆற்றேன் - அவனைக் காணாது நிற்கலாற்றேன்.
கெடுவேன் - இனி, யான் அழிந்தொழி வேன்.
35. 'இன்னிசை வீணையில்' என்றதனை, 'வீணை இன்னிசையில்' என மாற்றிப் பொருள்கொள்க.
வீணையில், இல் - போல.
இசைந்தோன் - எல்லாப் பொருளிலும் நுண்ணியனாய்க் கலந்தவன்.
முன்னர் வாளா, 'முழுதோன்' என்றார், ஈண்டு அதனை உவமை முகத்தால் இனிது விளக்கினார்.
36. அன்னதொன்று - வீணைஇசைபோல்வதோர் இன்பம்.
அவ்வயின் - தான் நிறைந்து நின்ற அவ்விடத்து; என்றது உயிரையே எனக்கொள்க.
அறிந்தோன் - உயிர்கள் பொருட்டு அறிந்து நிற்பவன்.
இறைவன் பெத்தம் முத்தி இரண்டினும் உயிர்கட்கு விடயங்களை அறிவித்தலேயன்றி, அறிந்தும் நின்று உதவுவன் என்பதைச் சிவஞானபோதப் பதினொன்றாம் சூத்திரத்து முதல் அதிகரண

பாடியத்துள் இனிது விளங்க விரித்துரைத்தமை காண்க.
37. பரமன் - மேலானவன்.
பழையோன் - மேன்மையை என்றுமே இயல்பாக உடையவன்.
39. அற்புதன் - பிறவிடத்துக் காணலாகாத தன்மைகளை யுடையவன்.
அநேகன் - பொருளால் ஒருவனாயினும், கலப்பினால் எண்ணில்லாதவனாய் இருப்பவன்.
இஃது ஒருவனே பல பொருளாய் இருத்தலை வியந்தவாறு. 40.
சொற்பதம் - சூக்குமை வாக்கின் நிலை.
அது, நாத தத்துவம்.
சத்தப் பிரமவாதிகள் 'நாதமே பிரமம்; அதனின் மேற்பட்ட பொருள் இல்லை' என்பர்; அஃது உண்மையன்று என்றற்கு, 'அதனைக் கடந்த தொல்லோன் இறைவன்' என்று அருளினார்.
41. 'சிந்தையைச் சீவன் என்றும், சீவனைச் சிந்தை என்றும்' சிவஞான சித்தி சூ 4.28. கூறுதல் வழக்கமாதலின், இங்கு, 'சித்தம்' என்றது, உயிரினது அறிவையாம்.
அஃது அந்நாத தத்துவத்தையும் கடந்து தன்னையே பொருளாக உணர்ந்து நிற்பதாகும்.
இனி, 'சொல்' என்றதை மத்திமை வைகரி வாக்குக்களாகக் கொள்ளின், சித்தம், அந் தக் கரணமேயாம்.
இப்பொருட்கு, 'பதம், அளவு' என்றாகும்.
மாண், மாட்சி என வருதல்போல் சேண், 'சேட்சி' என வந்தது.
சேண் - தொலைவு.
இதனை, 'வலை' என்றது ஏகதேச உருவகமாகலின், அதனுள் அகப்படுகின்ற மான் ஆகின்றவன் என உரைக்க.
உரைக்கவே, அது பெரியோன் என்னும் பொருளையும் தோற்றுவித்தல் காண்க.
'முதற்பொருள் ஒன்றே' என்றல் அனைவர்க்கும் உடன்பாடாதலின், முழுமுதற் கடவுளாய சிவ பெருமானையே 'ஒருவன் (ஏகன்)' என்று உபநிடதம் கூறுதல் பற்றி, (சுவேதாசுவதரம்.
), 'ஒருவன் என்னும் ஒருவன்' என்று அருளினார்.
'ஒருவன் என்று ஏத்த நின்ற நளிர்மதிச் சடையன்' (திருவாய்மொழி) எனப் பிறரும் கூறினார்.
44. பொழில் - உலகம். முன்னர் ஒடுங்கிநின்று, பின்னர் விரிந்ததென்பார், 'விரிபொழில்' என்றும், விரியுங்கால் தானே விரிய மாட்டாதாகலின், அதற்குப் பற்றுக்கோடாய் நின்று விரியச்செய்து, பின்னும் நீங்காது நிற்கின்றான் என்பார். 'முழுதாய் விரிந்தோன்' என்றும் அருளினார். 'பற்றி யுலகை விடாதாய் போற்றி' (தி.6.ப.55.பா.6)

என்றருளியதும் இதுபற்றி. 'பிரபஞ்சம்' என்னும் வட சொற்கும், 'விரிவுடையது' என்பதே பொருளாதல் அறிக.
45. அணுத் தரும் தன்மை இல் - 'ஆணவத்தால் தரப்படுகின்ற தன்மை இல்லாத; அதனால் பற்றப்படுதல் இல்லாத' என்றபடி. அணுத் தன்மையைச் செய்வதனை 'அணு' என்றார். 'ஐயன்' என்பது, 'ஐயோன்' என்று ஆயிற்று.
ஐயன் - வியப்பினன். பிறர் எல்லாரும் அணுத் தன்மை எய்தியிருக்கத் தான் ஒருவனும் அதனை எய்தாதிருத்தலின் வியப்பாயிற்று.
46. இணைப்ப அரும் பெருமை இல் - தனது பெருமையோடு ஒப்பிப்பதொரு பெருமை இல்லாத.
47. 'அரியோன்' என்றது, வாளா பெயராய் நின்றது.
48. மருவி - வேறறக் கலந்து நின்று. அறிவில் பொருள்களில் அவற்றின் குணங்களையும், அறிவுடைப் பொருளில் அவற்றின் அறிவுகளையும் வளர்க்கின்றான் ஆதலின், 'எப்பொருளும்' என்றார்.
49. 'நூல்' எனப் பொதுப்படக் கூறினும், ஈண்டுச் சமய நூல்களே கொள்ளப்படும். எல்லாப் பொருள்களையும் அறிதல்போல அவற்றால் அளவிட்டறிதற்கு வாராமையின், அவைபற்றி உணரும் உணர்விற்கு உணரவாரான் என்றார்.
'எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ'*(தி.3.ப.54.பா.3)*
எனவும்,
'ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான்புகில் அளவில்லை கிளக்க வேண்டா
. . . . எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்க தக்கார்'
(தி.3.ப.54.பா.4) எனவும்,
'ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர் விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்'
(தி.3 ப.54 பா.3, 4, 5) எனவும்,
'நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக'
(தி.11 அற்புதத் திருவந்தாதி-33) எனவும் பிற திருமுறைகளினும் இவ்வாறே அருளிச்செய்தல் காண்க.
50. மேலொடு கீழாய் விரிதல். எல்லாப் பொருளையும் தனது வியாபகத்துள் அடக்கிநிற்றல்.
51. அந்தம் - அழிவு. ஆதி - தோற்றம்.
52. பந்தம் - பிறப்பு நிலை. வீடு - அது நீங்கிய நிலை. இவ் விரண்டையும் உயிர்கட்கு உளவாக்குவோன் இறைவனே யாதல் அறிக. இவையே,

'மறைத்தல். அருளல்' என்னும் இருதொழில்களாகக் கூறப்படுகின்றன; மறைத்தலின் விரிவே, படைத்தல் முதலிய மூன்றும்.
53. நிற்பது - அசரம். செல்வது - சரம். இவற்றால் பல்வகைப் பிறவிகளையும் குறித்தவாறு.
54. 'கற்பம், ஊழி' என்பது முன்பே கூறப்பட்டது. அதன் நிகழ்ச்சி முழுவதையும், அதன் முடிவிற்குப் பின்னுள்ள நிலையையும் காண்பார் இறைவனையன்றிப் பிறர் இன்மையானும், அவை எண்ணில்லாதனவற்றை அவன் கண்டவன் ஆகலானும், 'கற்பமும் இறுதியும் கண்டோன்' என்றார்.
55. யாவரும் பெற உறும் - முடிவில் யாவராலும் பெறுதற்கு உரியவனாய் நிற்கின்ற. முடிவு - அறியாமையால் உழன்றுதீர்தல். எனவே, 'தேவராலும்' என்றது, அதற்கு இடையிலாயிற்று. 'பெறுதல், உறுதல்' என வந்த சொற் குறிப்புக்களையும் ஓர்ந்துணர்க.
56. 'தேவரும்' என்ற சிறப்பும்மையால் ஒருவரேனும் அறியாமை பெறப்பட்டது.
57. உயிரில் பொருளை, 'அலி' என்றல் வடநூல் வழக்கு. இவ்வழக்குப்பற்றி அடிகள் சில விடங்களில் ஓதுதலைப் பின்னருங் காண்க. பெற்றி - தன்மை. உயிர்ப்பொருள்கள் பலவும் 'பெண், ஆண்' என்னும் இருகூற்றனவாய்க் கூடிக்கலந்து வாழவும், உயிரில் பொருள்களை அவ்வாழ்விற்கு உதவவும் வைத்து. தான் அவையே யாய் நிற்கும் நிலையை, 'பெண் ஆண் அலி எனும் பெற்றியன்' என்று வியந்தார். உயிர்ப்பொருளிடத்தே உள்ள, 'அலி' என்பதொரு பிறப்பும் ஈண்டுக் கூறியதனுள் அடங்குதல் காண்க. உயிருடைய அலிப் பிறப்பு, இன்பமொழித்து ஒழிந்த புருடார்த்தங்களுள் அறத்தை யேனும், வீட்டையேனும் எய்துமாயின், வேறெண்ணப்படும்; இல்லையேல், உயிரில்லவற்றோடு ஒன்றாயொழியும் என்க;
58-65. 'அத்தகையோனை யானும் கண்ணால் கண்டேன்' என உரைக்க. அவனைக் கண்ணால் கண்டவர் சிலர்; அவருள் யானும் ஒருவன் என்பது பொருளாகலின், உம்மை இறந்தது தழுவிற்றாம். 'சுரக்கும்' எனக் குறிப்புருவகம் செய்து, சொற்பல்காவாறு ஓதினமை யின், 'அவன் அருளாகிய அமுதத்தைச் சுரப்பதோர் ஊற்றென்றல் மெய்யேகாண்' என, தாம் கண்ணாற் கண்டு பெற்ற அநுபவத்தைக் கிளந்தோதியவாறாக உரைக்க. பின்வரும் தொடர்களும் அன்னவாம். அவற்றை, 'அவனது கருணையின் பெருமை எத்தகையது என யான் கண்டேன்; அஃதாவது, தனது சிவந்த திருவடிகளை என் பொருட்டு நிலத்தில் தோயவைத்து வந்தான்; அவன் நம்மனோர் போலக் காணப்படினும், பிறப்பிற்பட்டுத் தோன்றாத அருட்டிரு மேனியே அவனது திருமேனி என்று யான்

தெளிவாக உணர்ந்தேன்; ஆகவே, சிவபெருமான்தான் என்னை வந்து ஆட்கொண்டான்; அவன் மாதொரு கூறன்தான்; எஞ்ஞான்றும் அவளும் தானுமாகப் பிரியாது உடனாய் இருப்பவனே' என முடிக்க.

அடிகள், சிவபிரான் தம்மை வந்து ஆண்டுகொண்டருளிய உண்மையை அநுபவமாக மிகவும் தெளிவுபட இப்பகுதியில் இனி தெடுத்து அருளிச் செய்திருத்தல் நம்மனோர்க்கும் பெரிதும் பயன் தருவதாம்.

சிவபெருமான், பிறப்பிறப்பில்லாதவன் ஆகலானும், தம்மை ஆளவந்த திருமேனி நம்மனோரது உடம்புகள் போல எழு வகைத் தாதுக்களாலாயதாக் காணப்படாது, தண்ணிய சேயொளிப் பிழம்பாய்க் காணப்பட்டமையானும், சிவபெருமானே நேர்பட வந்து தம்மை ஆட்கொண்டான் என அடிகள் தெளிந்தார் எனவும், சிவபெருமான் மாதொரு கூறனாய் நிற்றல், தான் எத்துணையும் பெரியோனாயினும், எத்துணையும் சிறியவாய உயிர்கள் மாட்டுக் கைம்மாறு கருதாத பேரிரக்கமாகிய பண்பினையும், அது காரணமாக யாவரையும் அவரவரது நிலைக்கேற்ப இயைந்து நின்று ஆட்கொள்ளுதலாகிய செயலையும் உடையவன் என்பதை விளக்கு வதேயாகலானும், அப்பண்பையும், செயலையும், அடிகள் நேரே கண்டமையானும், தம்மை ஆட்கொண்ட பெருமான் மாதொரு கூறனாய், அவளோடு நீங்காதே நிற்பவன்தான் என்பதையும் தெற்றெனத் தெளிந்தார் எனவும் கொள்க.

உடனாய் இருப்பவரை, 'உடன்' என்று அருளினார். சிவபெருமான் மாதொரு கூறனாய் நிற்றல் மேற்கூறியவற்றையே வலியுறுத்தும் என்பதனை,

'தீதுறுவ னானால் சிவபதிதான் கைவிடுமோ
மாதொருகூ றல்லனோ மற்று'

(திருக்களிற்றுப்படியார்-42) என விளக்குதல் காண்க. 'உடனே' என்றதன்பின், 'ஆகலின்' என்னும் சொல்லெச்சம் வருவித்து, அதனை, 'மேகன்' என்னும் *(அடி.95)* வினைக்குறிப்போடு முடிக்க.

66-95. இப்பகுதியில், அடிகள், சிவபெருமான் தம்மைத் திருப்பெருந்துறையில் வந்து ஆட்கொண்டு அருள்புரிந்த சிறப்பினை நீண்டதொரு முற்றுருவகத்தால் மிக்க அழகுபட விரித்தருளுகின்றார்.

பரமானந்தம் - மேலான இன்பம்; பேரின்பம். அது, பகுதிப் பொருள் விகுதி. ஏகாரம், பிற பொருளினின்றும் பிரித்தலின், பிரி நிலை. கருமாமுகில், சிலேடையுருவகம்; 'உருவமென்னும் சிறந்த சூல் கொண்ட கரிய மேகம்' என்பது பொருள். முகிலின் - முகிலாய், வரை- மலை. 'திரு மின்' என இயைத்து, 'அழகென்னும் மின்னல்' என உரைக்க, பந்தனை - கட்டு. 'பந்தனையாகிய அரவு (பாம்பு)' என்க. வாள் - கொடிய. இரிய - அஞ்சி நீங்க. வெந்துயர் - கொடிய துன்பம். மா - பெரிய. 'கோடை தனது

பெரிய தலையை மறைத்துக்கொள்ள' என்க. பெரிய கோடை முழுதும் நீங்கினமையைப் பான்மை வழக்கால் இங்ஙனங் கூறினார். நீடு எழில் தோன்றி - பெருகும் இன்பமாகிய தோன்றிப் பூ. வாள் ஒளி மிளிர - மிக்க ஒளி விட்டு விளங்க. 'துயர் கரப்ப' என்றமையால், தோன்ற வேண்டுவது இன்பமேயாம் ஆதலின், 'எழில்' என்று, அதனைத் தருவதாய இன்பத்தைக் குறித்து. எமது பிறவியின்மேற் கோபம் மிகக் கொண்டு என்றது. மழைக்காலம், 'இந்திர கோபம்' என்னும் வண்டினை மிகக் கொண்டிருத்தலைச் சிலேடை வகையாற் குறித்தவாறு. எனவே, இறைவன் அடிகளது பிறவிமேற்கொண்ட கோபமே இந்திர கோபமாக உருவகிக்கப்பட்ட வாறாயிற்று. முரசு எறிந்து - முர செறிந்தாற்போல. 'முழங்கி' என்றது, அழைத்தருளினமையை; 'அறைகூவி ஆட்கொண்டு' என்றல் காண்க.

அஞ்சலி - கூப்பிய கை. காந்தள் கைக்கு உவமையாதலும், மழைக்காலத்துத் தோன்றுவதாதலும் அறிக. 'பூ' எனப்பட்ட உவமையாகிய தாமரையும், உருவகத்தின்கண் வந்த காந்தளும் அரும்பெனவே கொள்க. 'காட்ட' என்றது, 'தோன்ற' என்றபடி. எஞ்சா - குறையாத. 'அருள்' என்றது, அருண்மொழியாகிய உபதேசத்தையும், திருநோக்கு பரிசம் முதலிய செயல்களையும். இவற்றை, 'தீக்கை' என ஆகமங்கள் கூறும். துளிகொள்ள - குறிப்புருவகம். 'பெய்ய' என்றவாறு. செஞ்சுடர் வெள்ளம், சிலேடை யுருவகம். 'சிவந்த ஒளியை யுடைய வெள்ளம்' என்றும் 'செவ்விய ஞானமாகிய வெள்ளம்' என்றும் பொருள் தந்தது. புதுவெள்ளம் சிவந்து தோன்றுதல் இயல்பு, தீக்கைகள் பலவாய் நிற்றலின் அவற்றை மழைத்துளிகளாகவும், அவை அனைத்தினாலும் விளங்கும் ஞானம் ஒன்றாய் மிக்கெழுதலின் உருவகம் செய்தார். திசை - இடம். 'திசை தோறும்' என்க. 'திசை' என்றது, அடியவரை, தெவிட்டுதல் - நிரம்புதல். வரையுற - மலைபோல; இதனை, 'ஓங்கி' என்பதற்கு முன் கூட்டுக. கேதம் - குற்றங்கள். அவை, காமம், குரோதம் முதலியன. குட்டம் - பள்ளங்கள். கை அற - தூர்ந்து இடம் அற்றுப்போகுமாறு. ஓங்கி - மேலெழுந்து. இருமுச்சமயம், 'உலகாயதம் பௌத்தம், மீமாஞ்சை , மாயாவாதம் , நையாயிகம், பாஞ்சராத்திரம்' என்னும் இவையென்க. இவைகளை அடிகள் சில விடங்களிற் கிளந்தோதுதல் அறிக. பேய்த்தேர் - கானல் நீர், சமயங்களைக் கானல் நீர் எனவே, 'மான் கணம் எனப்பட்டோர், வீடுபேறு வேண்டி அவற்றில் நின்றோர் என்பது அமைந்து கிடந்தது. மான்களின் கண்கள் அழகும் மருண்ட பார்வையும் உடையனவாய் நுனித்து நோக்கும் இயல்பினவாதலின், 'நெடுங்கண்' என்றார். அதனானே பொருட்கண்ணும், மெய்ப் பொருளை ஆராயும் ஆராய்ச்சியைத் தலைப்பட்டுப் பலநூல்பற்றிப் பலவாறாக ஐயுற்று

நுனித்து ஆராயும் அவரது தன்மை பெறப்பட்டது. 'தவமாகிய வாய்' என்க. வேட்கை மிகுதியால் பருகுதல் தோன்ற, 'பெருவாய்' என்றார். அதனானே, ஞானத்திற்குத் தவமே சிறந்த வாயில் என்பதும் குறித்தவாறாயிற்று. பெருமணல்வெளியில் கடுங் கோடைக்கண் கானல் தம் அருகிலே நிரம்பத் தோன்றுமாதலின், அதனை மான்கள் வாய்வைத்துப் பருகும் என்க. பருகினும் வெறுந் தோற்ற மாவதன்றி, நீராய் வாயிடைப் புக்கு வேட்கையைத் தணியா மையின், 'அசைந்தன' என்றார். அசைதல் - சோர்தல், அவம், தவத்திற்கு எதிரியதாதலை, 'தவம் செய்வார் தங்கருமம் செய்வார் மற்றல்லார் - அவம் செய்வார்' *(குறள் - 266)* என்றாற்போல்வன வற்றிற் காண்க. அஃதாவது பற்று நீங்காமை. தாபம் - நீர்வேட்கை. 'அசைந்தனவாகிய அவ்விடத்து' என்க. இது காலத்தைக் குறித்தது. வானப் பேரியாற்று - பெரிய ஆகாய கங்கையைப் போல. அகவயின்-உள்ளிடத்து; என்றது அறிவினை. 'அவ்விடத்தை மூடி மேலெழுந்து, இன்பமாகிய பெரிய சுழிகளை ஆங்காங்கு அழகுபடக் காட்டி' என்றது, 'ஆன்ம போதத்தை விழுங்கிக் கொண்டு, பேரின்ப மாகிய கவர்ச்சியைப் பல நிலைகளிலும் தோற்றுவித்து' என்றதாம். சுழித்தல் - கோபித்தல். 'சுளித்தல்' என வருவதும் இதுவே. பந்தம் - மயக்க உணர்வாகிய கட்டு. அஃது அறிவை ஏகதேசப்படுத்தலின், கரையாக உருவகம் செய்தார். 'கரையை இடித்து' என்க. 'ஊழ் ஊழ் ஓங்கிய' என்றது, 'முறைமுறையாக வளர்ந்த' எனவும், 'ஊழின் பயன் தோறும் உண்டாகிப் பெருகிய' எனவும் இருபொருள் தந்தது. மா மரம்-பெரிய மரத்தை. வேர் பறித்து - வேரோடு பறித்து வீழ்த்தி. எழுந்து - பெருகி. 'உருவ அருள் நீர்' என்றதை, 'அருள் உருவநீர்' எனப் பின் முன்னாக்கி உரைக்க. 'அருள் உருவம்' என்றது, திருக்கோயிலுள் இருக்கும் திருமேனியை. அஃது அதனைச் சிவனெனவே காணும் உணர்வையே குறித்தது. ஓட்டா - பல கால்கள் வழியாக எங்கும் ஓடப்பண்ணி. வெள்ளம் பிண்டமும், நீர் பிண்டிக்கப் பட்ட பொருளும் போலக் கோடலின், 'வெள்ளம், நீரை ஓடப் பண்ணி யது' என்றார். இவ்வாறே,பொருளினும். சிவஞானம் பிண்டமும், திருமேனியைச் சிவனெனவே காணுதல் முதலியன பிண்டிக்கப்பட்ட பொருளுமாகக் கொள்க. 'கால்கள்' பல தலங்கள் என்க. 'அருவரைச் சந்தின்' என்றதனை, 'சந்து அருவரையின்' என மாற்றி, இடை நிலங்களையுடைய அரிய மலைகள் போல என உரைக்க. வான் சிறை- பெரிய கரை; என்றது, கோயிலின் சுற்றுச் சுவர்களை. கட்டி - கட்டப் பட்டு; மட்டு அவிழ் - தேனோடு மலர்கின்ற. வெறி - வாசனை. குளவாய் - குளப் பரப்பு; என்றது கோயிலின் உள்ளிடத்தை. அங்கு மலர்கள் கொணர்ந்து நிறைக்கப் பெறுதலின், 'மலரை யுடைய குளம்' என்றற்கு

ஏற்புடையதாயிற்று. கோலி - வரையறுக்கப்பட்டு. கோயிலி னுள் எழுப்பப்படும் கரிய அகிற்புகையை வண்டாக உருவகித்தார். எனவே, 'குளம்' என்றது திருக்கோயிலையாயிற்று. கறை - கறுப்பு. 'கரைசேர்' என்பது பாடமன்று. மீக்கொள - மீக்கொள்ளுகையால். மகிழ்வார் - ஞானத்தைப் பெற்றவர். 'அது நோக்கி' எனச் செயப்படு பொருள் வருவிக்க. சிவஞானத்தை அடைந்தோர் அதன்பின்னர்த் திருக்கோயில் வழிபாட்டினைச்செய்து, அதனால் அந்த ஞானம் பெருகி இன்பம் பயத்தலை அறிந்து மகிழ்தல் இயல்பாதலை யறிக. தொண்ட உழவர் - தொண்டராகிய உழவர். 'தொண்டர்' என்றது, சத்திநிபாதத்து உத்தமராய் ஞானத்தைப் பெற விரும்புவோரை. இரு பெயரொட்டும், உயர்திணையாயின், புணரியல் நிலையிடை உணரத் தோன்றாது; (தொல் - எழுத்து 482.) ஏனெனில், 'தொண்ட உழவன், தொண்ட உழத்தி, தொண்ட உழவர்' என்னுங்கால், நிலை மொழி, உயர்திணை முப்பாலையும் உணர்த்தி நிற்றலின் என்க. அண்டத்து அரும்பெறல் மேகன் - எவ்வண்டத்திலும் பெறுதற்கரிய மேகம் போன்றவனாயினான். இங்கு 'மேகம்போன்றவன்' என உவமை வகையாற் கூறியதனை மேல், உருவக வகையால் 'கருமாமுகிலின் தோன்றி' என்றாராகலின், கூறியது கூறலாகாமை யறிக.

இவ்வுருவகங்களைத் தொகுத்துக் காணுங்கால், 'பேரின்ப மாகிய கடல், ஆசிரியக் கோலமாகிய மேகமாய்த் தோன்றித் திருப் பெருந்துறையாகிய மலையை அடைந்து, எமது பிறவியின் மேற் கோபம் மிகுத்து, முரசு எறிந்தாற்போல அழைப்பொலியாகிய இடி முழக்கத்தைச் செய்து, அருட்செயல்களும் அருள் மொழிகளுமாகிய நுண்டுளிகளைச் சொரிய, அதன்பயனாக செவ்விய ஞானமாகிய வெள்ளம் பலவிடத்தும் உள்ள அடியார்களாகிய இடங்களெல்லாம் நிறையும்படி மலைபோல ஓங்கியெழுந்து, எம் உள்ளத்திடத்துப் பாய்ந்து, இன்பமாகிய சுழிகளை ஆங்காங்கு உளவாக்கி, உருவ வழி பாட்டுணர்வாகிய நீரைப் பல தலங்களாகிய கால்களிலும் ஓடச்செய்து, திருக்கோயிலாகிய குளத்தில் நிறைய, அதனால் சிவஞானம் பெற்ற அப்பெரியோர் மேன்மேலும் மகிழ்ந்து இன்புறுதலின், அதனைக் கண்டு தொண்டர்களாகிய உழவர்கள், வழிபாடாகிய வயலுள், அன் பாகிய விதையை விதைத்து, சிவபோகமாகிய விளைவை நிரம்பத் துய்க்குமாறு அருள்புரிந்த மேகம் போன்றவனாயினான்' என்றாகும்.

இவற்றிடையே, அருளாகிய மழை பொழியுங்கால், திரு மேனியின் அழகாகிய மின்னலின் ஒளி எத்திசைகளிலும் விரிந்தன; அழைப்பொலியாகிய இடி முழக்கினால், ஐம்புல அவாவாகிய பாம்புகள் அஞ்சியோடின; அதன்பின் துன்பமாகிய கோடை முழுதும் ஒழிந்தது;

இன்பமாகிய தோன்றிப் பூக்கள் அழகாக மலர்ந்தன; அடியவர்களது கூப்பிய கைகளாகிய காந்தள் அரும்புகள் காணப்பட்டன; ஞானமாகிய வெள்ளம் குற்றங்களாகிய பள்ளங் களைத் தூர்த்து, அறியாமையாகிய கரையைத் தாக்கி அலைத்து இடித்துவிட்டது; வினையாகிய பெரிய மரங்களை வேரோடு பறித்து வீழ்த்திற்று; நல்லோராகிய மான்களின் கூட்டம் ஆறு சமயங்களாகிய கானல் நீரைத் தம் தவமாகிய வாய் வழியே பருகியும் ஞானமாகிய நீரைப் பெற்று வீண்முயற்சிகளாகிய தாகம் தணியாது சோர்ந்திருக்குங் காலத்தில், இவையெல்லாம் எங்கள்பால் நிகழ்ந்தன' எனக் கூறப் பட்டது. இவற்றால், இறைவன் திருப்பெருந்துறையில் ஞானாசிரியனாய் வந்து அடிகளையுள்ளிட்ட அடியார் சிலர்க்கு ஞானத்தை அருளினமை, அவர்களேயன்றி, அஞ்ஞான்று பக்குவம் எய்தி னோரும், பின்னர்ப் பக்குவம் எய்துவோரும் ஆகிய ஏனைய அடியவர்களும் பயன்பெறுதற்கு ஏதுவாயினமையை விரித்தவாறு.

இங்ஙனம் இறைவன் அருளாகிய மழையைப் பொழிந்து அடியார்களை வாழ்வித்த சிறப்பினைப் பெரிதும் வியந்து, அவனை வாழ்த்திய அடிகள், இதனைத் தொடர்ந்து மேலும் பலவாற்றால் அவனுக்கு வாழ்த்தும், போற்றியும் கூறுகின்றார்.

96. பணம் - பாம்பின் படம்; அஃது ஆகுபெயராய், அதனையுடைய பாம்பைக் குறித்தது, முன்னின்ற, 'கருமை' யென்னும் அடை, ஆகுபெயர்ப் பொருளாகிய பாம்பை விசேடித்தது, கரிய கச்சு அழகைத் தருவதாதல் அறிக.

97. ஆதி - முதல்வன்,

98. அச்சம் - பிறவிபற்றி வருவது. சேவகன் - வீரன்; இது, பிறர் அது மாட்டாமை உணர நின்றது.

99. நிச்சல் - நித்தல்; போலி. ஈர்த்து ஆளுதல், வலிய அழைத்து ஆட்கொள்ளுதல் பல்வேறிடங்களில், பல்வேறு அடியார்களைப் பல்வேறு வாயால் ஆட்கொள்ளுதலை, இடையறாது செய்தலின், 'நிச்சலும்' என்றார். 'அடியார்களை' என்பது வருவிக்க.

100. சிவஞானத்திற்குத் தடையாகப் பலவாற்றால் வரும் பிராரத்த கன்மங்களின் விளைவை, 'சூழ் இருந்துன்பம்' என்றார். துடைத்தல், - விரைந்து வந்து நீக்குதல்; இஃது இப்பொருளதாலை, 'விழுமம் துடைத்தவர்' (குறள் - 107.) என்பதன் உரையிற் காண்க.

101. எய்தினர் - தன்னை அடைந்தவர். ஆரமுது - தேவர் உலகத்திலும் கிடைத்தற்கரிய அமுதம்; பேரின்பம்.

102. கூர் இருள் - மிக்க இருளின்கண்; இது மகாசங்கார காலத்தை உணர்த்தும். கூத்தொடு - பலவகைப்பட்ட கூத்து நிலை களுடன்.

குனிப்போன் - நடிப்பவன்.
103. அமை - மூங்கில்,
104. ஏது - இயைபு. 'தன்னோடு இயைதல் இல்லாதவர்க்குத் தானும் இயைதல் இல்லாத இறைவன்' என்க. தமக்கு அவ்வாறின்றிப் பெரிதும் இயைபுடைமை தோன்ற ' எம் இறைவன்' என்றார்.
105. காதலர் - பேரன்புடையவர். எய்ப்பு - இளைத்தல்; இஃது இங்கு, கைப்பொருள் இன்றி வருந்துதலைக் குறித்தது. வைப்பு - இருப்பாக வைக்கப்பட்ட பொருள்; சேமநிதி. 'பொருள் வரவு இல்லாது மெலிவுற்ற நிலையில், முன்பு வைத்துள்ள பொருள் உதவுதல் போல, அடியார்களுக்கு உதவுபவன்' என்றதாம். 'எய்ப்பினில் வைப்பு' என்றது உவம ஆகு பெயர்.
106. சிவபெருமான் உடம்பெங்கும் பாம்பை அணிந்திருப்பினும், ஒரு பாம்பைக் கையிற் பிடித்து ஆட்டுகின்றான் என்பது யாண்டும் கூறப்படும். ஆதலின், 'அரவு ஆட்டிய நம்பன்' என்றார். இவ்வாறு கூறுதலைப் பின்னும், தேவாரம் முதலிய திருமுறைகளினும் காண்க. இது பிச்சைக் கோலத்தில் சிறப்பாகக் குறிக்கப்படும். இனி இதற்கு, 'புறம்பயம்' என்னும் தலத்தில் சிவபெருமான் பாம்பாட்டி யாய் வந்து விடந்தீர்த்தான் என்பதொரு வரலாற்றினைப் பொருளாக உரைப்பாரும் உளர். நம்பன் - நம்புதற்கு (விரும்பதற்கு) உரியவன்.
107. அறிவை விழுங்கி யெழும் பேரன்பு பித்துப் போல நிற்றலின், அதனை, 'பித்து' என வழங்குப. 'எமைப் பித்தேற்றிய' என்றதை, 'குடும்பத்தைக் குற்றம் மறைத்தான்' (குறள் - 1029) என்பது போலக் கொள்க.
108. நீறு - திருநீற்றுப் பூச்சு. இஃது இங்கு ஆசிரியக் கோலத்தைக் குறிப்பால் உணர்த்திற்று. 'வல்லோன்' என்றது, 'அவ்வாறு தோன்றி அடியார்களை ஆளவல்லவன்' என்றபடி. 'நாற்றிசை யின்கண்ணும்' என உருபும், முற்றும்மையும் விரிக்க.
109 - 110. நடப்பன - சரம்; நிற்பன - அசரம்; இவை இரண்டு உயிர் வகைகள். 'கிடப்பன' என்றது, 'செயல் இல்லன' என்னும் பொருட்டாய், உயிரில் பொருளைக் குறித்தது.
இஃது இறுதிக்கண் வைக்கற்பாலதாயினும், இசையின்பம் நோக்கி இடைக்கண் வைத்தார். 'நட, கிட' என்னும் தன் வினைப் பகுதிகள், இறுதி நீண்டு அளபெடுத்து, பிறவினைப் பகுதிகளாயின. 'எழூஉ, உறூஉ' முதலியனபோல. எனவே, ஈண்டுப் போந்த அளபெடைகள் யாவும் சொல்லிசை நிறைக்கவே வந்தனவாதல் அறிக. 'நடாஅய், கிடாஅய்' என்றவற்றில், யகரமெய் வினையெச்ச விகுதி. 'ஆய், போய்' என்பவற்றிற் போல. 'நடப்பனவற்றை நடத்தி, கிடப்பனவற்றைக்

கிடத்தி, நிற்பனவற்றை நிறுத்தி' என்றது, 'பல்வேறு வகையான எல்லாப் பொருள்களையும் படைத்து' என்றவாறு.
111. இங்ஙனம், எல்லாவற்றையும் படைப்பினும், தான் அவற்றிற்கு அகப்படாது அப்பாற்பட்டவன் என்றற்கும், 'அவை போலத் தோன்றி ஒடுங்குபவன் அல்லன்' என்றற்கும், 'சொற்பதங் கடந்த' என்றும், 'தொல்லோன்' என்றும் கூறினார். 'சொற்பதம்' என்றதற்குப் பொருள் மேலே உரைக்கப்பட்டது.
112. உள்ளத்து உணர்ச்சி - கருதலளவை. கொள்ளவும் - கருதவும். கொள்ளுதல், கருதுதல் ஆதலை, 'கொள்கை, கோட்பாடு' என்பவற்றால் அறிக.
113. 'புலன்' என்றது, பொறியை. 'காட்சி' என்பது, காணப் படுதலைக் குறித்து நிற்றலும் வழக்கேயாதலின், ஈண்டு அவ்வாறு நின்றது.
114. வெளிப்பட - தோன்றும்படி. வகுத்தோன் - வகைபடத் தோற்றுவித்தோன்.
115. உயர்ந்து - சிறந்து. பூவிற்கு நாற்றம் சிறந்தவாறு போல எல்லாப் பொருட்கும் சிறந்தவன் இறைவன் என்றபடி.
116-117. 'பெருமை எளிவந்து' என, பண்பு பண்பியோடு சார்த்தி முடிக்கப்பட்டது. இவ்வாறன்றி, 'இன்றெனக்கு எளிவந்து இருந்தனன்' எனப் பின்னர் வருவதன் பொருளே இதற்கும் பொருளாக உரைப்பர். 'எளிது' என்பது ஈறு குன்றி, 'வருதல்' என்பதனோடு புணர்ந்து, 'எளிவருதல்' என நிற்றல் செய்யுள் முடிபு. அவ்வாற்றானே இங்கு 'எளிவந்து' என வந்தது என்க, 'அருளி' என்றது, துணை வினை. இதனானே, எளிவந்தது, அருளால் என்பது போந்தது.
118. ஆக்கை - உடம்பு; என்றது, அதன் தன்மையை.
'யாக்கைத் - தன்பரிசும் வினையிரண்டும் சாரும்மலம் [மூன்றும் அற அன்புபிழம் பாய்த்திரிவார்'
(தி.12 கண்ணப்பர் புரா. *154)* என்று அருளிச்செய்தார் சேக்கிழார் நாயனாரும். ஒண்பொருள் - தூய்தாகிய பொருளாய் உள்ளவன். 'ஆதலின், எனது யாக்கையின் மாசினை ஒழித்தான்' என்றதாம்.
119. 'இருந்தனன்' என்றது வினையாகலின், 'அவனுக்கு' என்பது வருவிக்க.
120. அளிதரல் - நெகிழ்தல்; இஃது அன்பினால் ஆவதாம். எனவே, மேல், 'அன்புபிழம்பாய்த் திரிவார்' எனக் காட்டிய நிலையே அடிகள் மாட்டும் அமைந்தமையறிக.
121. ஊற்று இருந்து - இன்ப ஊற்றாய் உள்ளிருந்து, உள்ளம் - அடியார்களது உள்ளங்களை. களிப்போன் - களிக்கச் செய்வோன். 'களிப்பிப்போன்' என்பது, 'களிப்போன்' எனக் குறைந்து நின்றது.

'செய்தோன், களிப்போன்' என்பவற்றில் நான்கனுருபு தொகுத்தலாயிற்று.
122-123. மேல் இறைவனது பெருமையை விதந்தோதிப் போற்றியவர் இனி அவனது அருமையை விதந்தருளிச் செய்கின்றார். தாங்கற்கரிய பேரின்ப வெள்ளம் எங்கும் பரந்து அலையெறியாநிற்ப, அதனைப் பெற்றுப் பேணமாட்டாத மாசுடம்பினைச் சுமத்தலாகிய துன்ப நிலையை யான் விண்ணப்பித்திலேன்; 'ஆயினும்' என்பது இவ்வடிகளின் பொருள். 'ஆயினும்' என்பது சொல்லெச்சம். இது, 'காட்டியருளலும்' என வருவதனோடு *(அடி 149)* முடியும்.
124-126. மரகதம் - பச்சைமணி. குவால் - குவியல். மா மணி- சிறந்த மணி. பிறக்கம் - மிகுதி; இதுவும் குவியல் என்றவாறாம். மரகதக் குவியலும் மாணிக்கக் குவியலும் இணைந்து மின்னுகின்ற ஒளியை உடைய ஓர் அழகிய ஒளி; சிவசோதி. இது, 'சத்தியின் கூறாகிய நீல ஒளியையும், தன் கூறாகிய செவ்வொளியையும் கொண்டது' என்பதை 'கிருஷ்ண பிங்களம்' என மகாநாராயணோபநிடதம் கூறுமாற்றால் அறிக. திகழ - தம்முன் விளங்க. திசை, இங்குக் கீழும், மேலும். முகன், 'முகம்' என்பதன் போலி, 'பக்கம்' என்பது இதன் பொருள். சிவசோதியை, கீழும் மேலும் சென்று அதன் அடியையும் முடியையும் தேடினோர் திருமாலும், பிரமனும் என்பதும், அவர் அங்ஙனம் தேடிக் கண்டிலர் என்பதும் வெளிப்படை. இது முதலாக, 'ஒளித்தும்' என வருவன பலவற்றுள்ளும் உள்ள உம்மைகள் உயர்வு சிறப்பினவாம். இது தேவர்க்கு அரியனாயினமையை அருளியவாறு.
127. முறையுளி - முறைப்படி. ஒற்றி - மனத்தைப் பொருத்தி. முயன்றவர் - சரியை கிரியைகளைச் செய்தவர், அவர்கட்கும் இறைவன் மறைந்து நின்றே பயன் தருதலின், 'ஒளித்தும்' என்றார்.
128-129. யோகநெறியில் தியான சமாதிகளில் நிற்பவரை, 'ஒற்றுமைகொண்டு நோக்கும் உள்ளத்து உறைப்பவர்' என்றார். உறைத்தல் - பிறழாது அழுந்தி நிற்றல். உலகருள் இவர் தம் சுற்றத்தார் இவரது செயலைக்கண்டு இரங்குவராதலின், 'உற்றவர் வருந்த' என்றார். இவர்கள் இறைவனைக் காண்பதும் பாவனையே யாதலின், அவர்கட்கும் இறைவன் தோன்றானாயினான்.
130. மறைத்திறம் - வேதத்தினது கூறுபாடுகள். அவை, 'கன்ம காண்டம், உபாசனா காண்டம், ஞான காண்டம்' என்பன. இவை முறையே, வேள்வி முதலிய கன்மங்களையும் தகர வித்தை முதலிய உபாசனைகளையும், 'தத்துவ ஞானம்' எனப்படும் மெய்ப்பொருள் உணர்வையும் கூறும். வேதத்தின் ஞான காண்டம் முதற்பொருளின் இயல்பைச் சூத்திரம்போலக் குறிப்பாற் கூறுதலல்லது, உரைபோல

இனிது விளங்கக் கூறாமையின், அதன்வழியானும் இறைவனை உணர்தல் கூடாதாயிற்று. வேதத்தின் ஏனைய பகுதிகளின்வழி உணர லாகாமை வெளிப்படை. 'மறைத்திறத்தால்' என, மூன்றாவது விரிக்க.
131-132. 'தந்திரம்' என்றது, சிவாகமங்களல்லாத பிற ஆகமங்களை. காண்டும் - காண்போம். இன் இரண்டும் ஏதுப் பொருளவாய ஐந்தனுருபுகள். 'அவ்வயின்' என்றது, முன்னர்ப்போந்த 'காண்டும்' என்றதனைச் சுட்டிநிற்றலின், 'அங்ஙனம் காணுதற்கண்' என உரைக்க. இதன்பின், 'ஒளித்தும்' என்றது, சிறிதும் தோன்றாமையை. சிறிதும் தோன்றாது மறைதல், புத்த அருக ஆகமங்களின்வழிக் காணலுறுவார்க்காம். அவர் இறைவனைக் காண முயல்வாரல்லரெனின், அஃ து உண்மையாயினும், பேரா இயற்கை *(குறள்- 370.)*யாகிய வீடுபேற்றைப்பெற விழைந்து முயலுதலானும், வீடு சிவ பெருமானின் வேறன்றாதலானும் இங்ஙனம் கூறினார். தந்திரம், 'நூல்' எனவும் பொருள் தருமாதலின், சாங்கியம் போல்வனவும் கொள்ளப்படும் என்க.
133-135. பாஞ்சராத்திரம், பாசுபதம் முதலிய ஆகமங்களின் வழிக் காண முயல்பவர்களில் சிலர்க்கு ஆண்வடிவாயும், சிலர்க்குப் பெண்வடிவாயும், சிலர்க்கு அஃறிணைப் பொருள் வடிவாயும் தோன்றி மறைந்து தனது உண்மை நிலையைக் காட்டாதொழிதலை இவற்றுட் குறித்தருளினார். ஆண் வடிவில் தோன்றுதல் பாஞ்ச ராத்திரம், பாசுபதம் முதலிய தந்திரங்களின்வழிக் காணப்புகுவார்க்கு எனவும், பெண்வடிவில் தோன்றுதல் யாமளம், வாமம், முதலிய தந்திரங்களின் வழிக் காணப்புகுவார்க்கு எனவும், அஃறிணைப் பொருள் வடிவில் தோன்றுதல் மிருதி முதலியவற்றின்வழிக் காணப் புகுவார்க்கு எனவும் கொள்க. மிருதி முதலியவற்றின்வழி நிற்போர் மந்திரங்கள், ஞாயிறு முதலிய சுடர்கள், கங்கை முதலிய பல தீர்த்தங்கள் முதலானவையே பயன் தருவன எனக்கருதி வழிபடு வோராதல் அறிக. இவர்களை இறைவன் புத்தர் முதலியோரைப்போல் வெறுத்தொதுக்காது, அருளோடு நோக்கி, இன்னும் தன்னை மிக அணுகிவருமாறு பற்றிக்கொண்டு, இவ்வாற்றாலெல்லாம் பயன் தருதலால், 'முனிவற நோக்கி நனிவரக் கௌவி' என்றும், அவ்வாறு அருளினும் தனது உண்மை இயல்பை இவர்கட்குக் காட்டாமையின், 'ஒளித்தும்' என்றும் அருளிச் செய்தார். எனவே, 'அவ்வயின் ஒளித்தும்' என்றது, இத்தந்திரத்திற் காண்டும் என்று இருந்தோருள் ஒரு சாரார்க்கு என்பதும், தோன்றி, பெயர்ந்து ஒளித்தும்' என்றது, அவருள் வேறு சில சாரார்க்கு என்பதும் போந்தன. இத்துணையும் மக்களுள் இல்லற நிலையில் நிற்பார்க்கு அரியனாயினமை கூறிய வாறு.

136-138. 'சேண்வயின்' என்றதனை, இவற்றொடு கூட்டுக. ஐம்புலன் - ஐம்புல ஆசை; 'அவற்றைச் சேண்வயின் நீங்கப் போக்கி' என்க. சேண்வயின் - சேயதாய இடம். அருவரை - ஏறுதற்கு அரிய மலை. துற்றவை - உண்டவை; நுகர்ந்த இன்பங்கள். 'துறந்த' என்றது, 'வெறுத்துநின்ற' என்றவாறு. 'வெற்றாக்கை, உயிராக்கை' எனத் தனித்தனி இயையும். உணவைத் தானும் உண்ணாது விடுத்தலின், 'வெற்றாக்கை' என்றார். 'வெற்றாக்கை' என்றே ஒழியின், 'உயிரில்லது' எனப் பொருள்படுமாகலின், 'உயிராக்கை' என்றும் அருளினார். தவர் - நீர்பலகால் மூழ்கல் முதலிய நாலிருவழக்கினையுடைய தாபதர்கள் (புறப்பொருள் வெண்பா மாலை-*168.*). காட்சி - அறிவு. திருந்த - அறிவராய் (ஞானிகளாய்)த் திருந்துமாறு. இது, துறவற நிலையில் நின்றார்க்கு அரியனாயினமை அருளியவாறு. இவர் கிரியா குருவைப் பெற்று இந்நிலையில் நின்றதல்லது ஞான குருவைப் பெறாமையின், இவர்க்கு இறைவனது உண்மை இயல்பு விளங்காதாயிற்று.
139. அறிவு, அநுபவமுடைய நல்லாசிரியரால் அறிவுறுக்கப் பெற்ற உண்மைப் பொருளைப் பெற்ற அறிவு. அது, பின்னர் அப் பொருளை அளவைகளானும் பொருந்துமாற்றானும் ஆராய்தலை, 'ஒன்று உண்டு, இல்லை என்ற' என்றார். 'ஒன்றாகிய மெய்ப்பொருள் உண்டு என்றும், இல்லை என்றும் ஆராய்ந்த' என உரைக்க. இங்ஙனம் ஆராயுங்காலத்து, இறைவன் எல்லாமாய் நிற்கும் கலப்புநிலை விளங்குவதன்றி, அவன் தன்னியல்பில் நிற்கும் உண்மைநிலை விளங்காமையின், இறைவன் இவர்க்கும் ஒளிப்பவனேயாகின்றான். 'என்ற' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.
140-145. பண்டு, சரியை கிரியை யோகங்களைச் செய்து போந்த காலம். நல்லாசிரியர்பாற் கேட்டுச் சிந்தித்தகாலத்தை, 'இன்று' என்றனர் என்க. ஏகாரங்கள் இரண்டும் பிரிநிலை. அவற்றாற் பிரிக்கப் பட்டு நின்றவை, அவை அடுத்து நின்ற காலத்திற்குப் பிற்பட்ட காலங்கள். சோரன் - கள்வன். தெளிதல் உணர்வில் விளங்கிய அருள் நிலையைக் கண்டு, 'கண்டனம்' என்றனர். எனினும், நிட்டை நிலையை அடையாமையின், தம்முனைப்பால் பல கூறுவாராயினர். ஆர்மின் - கட்டுங்கள். கள்வன் அகப்படிற் கட்டுதல் இயல்பு. அடுக்கு, விரைவுபற்றி வந்தது. எனவே, இந்நிலையிலும் ஒளிப்பான் எனக் கருதினமை பெறப்பட்டது. நாள் மலர்ப் பிணையல் - அன்றலர்ந்த மலர்களாலாகிய மாலை. தாள் - கால். தளை - விலங்கு. ஒளித்தல் பற்றி, 'சோரன்' என்றார்களாயினும், அன்பாற் செய்யும் வழிபாட்டி னாலல்லது அவனை அகப்படுத்தல் இயலாது என்பதை உணர்வார் ஆதலின், 'நாண்மலர்ப் பிணையலில் தாள்தளை இடுமின்' என்றனர். கட்டுதலும், தளையிடுதலும் வேறு

வேறாதல் அறிக. இங்ஙனம் விரையவும், நீங்க முயலுதல்பற்றி, 'சுற்றுமின்' (வளையுங்கள்) என்றும், அஃது இயலாமையின், 'சூழ்மின் (என்செய்வதென்று ஆராயுங்கள்)' என்றும், அங்ஙனம் ஆராய்வதற்குள் நீங்கினமையின், 'தொடர்மின், விடேன்மின், பற்றுமின்' என்றுங் கூறி அலமந்தனர். அவர் அங்ஙனம் அலமரவும். இறைவன் அவரது பற்றினின்று (பிடியினின்றும்) முற்ற ஒளித்தான். அஃதாவது அருள் நிலையைத் தந்ததன்றி, ஆனந்த நிலையைத் தாராதொழிந்தனன் என்றதாம். 'பற்றின்' என, நீக்கப்பொருட்கண் வந்த இன்னுருபு விரிக்க. 'முற்ற' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.
'ஒளித்தும், ஒளித்தும்' எனவந்த எச்சங்கள் எல்லாம், 'என்னேரனையோர் கேட்க வந்து' என்றதில் 'வந்து' என்றதனோடு முடியும்.
'தன்னேரில்லோன்' என்றது, 'இறைவன்' என்னும் அளவாய் நின்றது, 'மேற்கூறியவாறெல்லாம் முயன்றார் பலர்க்கும் தனது உண்மை நிலையைக் காட்டாது ஒளித்த இறைவன், அதனை என் போல்வார் கேட்டுணரும்படி நேரே எழுந்தருளி வந்து இயம்பியருளினான்' என்று அடிகள் அன்புமீதூரப்பெற்று அருளுதல் காண்க. 'நேரனையோர்' ஒரு பொருட் பன்மொழி. 'என்போல்வார்' என்றது, மேற்கூறிய முயற்சிகளுள் ஒன்றும் செய்யாது, உலகியலில் நின்றவர்களை. இறைவனது பெருங்கருணைத்திறத்தை அடிகள் இங்ஙனம் அருளிச் செய்தாராயினும், இவரது முன்னைத் தவமுதிர்ச்சியின் பயனே அங்ஙனம் இறைவன் நேர்நின்று ஆட்கொண்டது என்க. இஃது இத்திருமுறையுள் யாண்டும் ஒக்கும், முயலாது நின்ற நிலையில் வலிய வந்து ஆண்டருளியதையே 'அறைகூவி ஆட்கொண்டருளி' என்று அருளிச் செய்தார். இயம்பி ஆட்கொண்ட பின்னரும் நீங்காது உடனிருந்தமை தோன்ற, 'மறையோர் கோலத்தனாய் வந்து ஆட்கொண்டருளி' என்னாது, 'வந்து ஆட்கொண்டருளி, 'மறையோர் கோலம் காட்டியருளலும்' என்றார். 'காட்டியருளலும் ஆற்றேனாக' என இயையும்.
150-157. உளையா அன்பு - வருந்திப்பெறாத - இயல்பாகத் தோன்றிய அன்பு. 'உலையா அன்பு' என்பதே பாடமாகல்வேண்டும். 'அன்பினால்' என உருபு விரிக்க, 'என்பும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொக்கது. உருகும் இயல்பின்மை, எலும்பிற்கு இழிவு என்க. அலைகடல் - அலைகின்ற கடல்நீர். திரையின் - அலைகள் போல. ஆர்த்து - ஆரவாரித்து, கடலில் ஆரவாரம் செய்வன அலைகளேயாதல் அறிக. ஓங்கி - துள்ளி. தலை தடுமாறா - தலை கீழாம்படி. மத்தம் - உன்மத்தம். பித்து, தொடக்க நிலை; மத்தம், முதிர்ந்த நிலை. மதித்தல் - மத்திட்டுக் கலக்குதல்; இங்கு அதுபோல உலகில் உள்ளாரது உள்ளங்களை வியப்பாலும், அச்சத்தாலும் நிலை குலையச் செய்தமையைக் குறித்தது.

ஆனேற்றை, 'ஏற்றா' என்றார். 'தடப்பெரு' ஒரு பொருட் பன்மொழி. ஆனேறுகளும் மதங்கொள்ளு தல் இயல்பு. 'களிறு ஏற்றா இவற்றின் மிகப்பெருமதம் அவற்றால் ஆற்ற வொண்ணாமைபோல, இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற களிப்பை யான் ஆற்றேனாய் நிற்க என்க. 'ஆற்றேனாக' என்றதன் பின், 'அந்நிலையில்' என்பது வருவிக்க. 'அவயவம்' என்றதற்கு, 'என் உறுப்புக்களை' என உரைக்க. கோல் தேன் - கொம்புத்தேன். 'செய்தனன்' என்றது, 'செய்தாற்போல ஆக்கினன்' என்றபடி. அஃதாவது 'உள்ளமும் உடலும் ஒருங்கே இன்பவெள்ளத்தில் மூழ்கச் செய்தனன்' என்றதாம்.

158-162. ஏற்றார் - தனது போரினை ஏற்றுக் கொண்டவர், 'மூதூர்' என்றது, திரிபுரத்தை, 'மூதூரை வீழ்வித்து' என இயையும். ஆங்கு, உவம உருபு. 'அன்று' என்றதனை, முதற்கண், கூட்டுக. 'அருட்பெருந் தீ' என்றது, சோதியை, 'கருவார் சோதி' *(கீர்த்தி-55)* என்றது காண்க. அடிக்குடில் - முதலிற் கிடைத்த சிறிய இல்லம்; உடம்பு. 'வாழாமை' என்பது குறுகிநின்றது. 'அடியோங்களது அடிக் குடிலுள் ஒருத்தரும் வாழாதபடி, அருட்பெருந்தீயின் ஒடுக்கினன்' என்க. 'எனக்கு' எனப் பின்னர்த் தம்மை வேறு கூறலின், 'ஒருத்தரும்' என்றது, அடிகளை ஒழிந்தோரையேயாம். ஆயினும், யானும் அக்குடிலில் இருக்க 'என்னை ஒடுக்கா தொழிந்தனன்' என்பது தோன்ற, 'அடியார் அடிக்குடில்' என்னாது, 'அடியோம் அடிக்குடில்' என்றார். இறைவன் அந்தணனாய் வந்து நிகழ்த்தியன பலவுங் கூறுகின்றாராதலின், பிறர்க்கு அருளியவற்றையும் கூறினார் என்க. தடக் கை - பெரிய கை; என்றது, தடங்கண், தடஞ்சோலை முதலியன போல, அகன்ற அகங்கையைக் குறித்தது. சுவையுடைய பொருள்களில், கனிகள் சிறந்தவை. அது, 'கனியிருப்பக் காய் கவர்ந் தற்று', (குறள்-*100*) 'கனிதந்தால் கனி உண்ணவும் வல்லிரே' *(தி. 5. ப.91. பா. 7)* என்றாற்போல்வனவற்றாலும் அறியப்படும். இனி, கனி களுள் நெல்லிக்கனி சிறந்தது என்பது, ஔவையார்க்கு அதியமான் நெல்லிக்கனியளித்தமை முதலியவற்றால் விளங்கும். அதனால், 'அங்கை நெல்லிக்கனி' என்னும் உவமை, 'யானைதன் - கோட்டிடை வைத்த கவளம்' *(புறம் -101)* என்பதுபோல, தப்பாது பயன் படுதலைக் குறிப்பதாம். ஆகவே, இப்பகுதியால், பலருக்கு ஒளித்த இறைவன், என்போல்வாரை அறைகூவியாட்கொள்ளுதலை மேற் கொண்டு, எனக்கும் ஆசிரியத் திருமேனியைக் காட்டி, உள்ளத்தையேயன்றி உடம்பையும் இன்ப வடிவாக்கி, பின் உடம்பளவில் நில்லாது எங்குமாய் நிறைந்து நுகரும் இன்பத்தினை ஒருதலையாக எய்துவிக்க இசைந்தனன் என்றவாறாயிற்று. இறைவன் தமக்கு எங்குமாய் நிறைந்து நுகரும்

இன்பத்தினை எய்துவித்தல் ஒருதலை' என்பதை, அவன் வாளா செல்லாது, 'நலமலி தில்லையுட் கோலமார் தரு பொதுவினில் வருக' *(தி.8 கீர்த்தி-127-128)* என்று அருளிச் சென்றமையால் உணர்ந்தார் என்க. இஃது உணர்ந்தாராயினும், 'ஏனைய அடியார்கட்கு இறைவன் வாயுட் புக்க நெல்லிக் கனியாயினன்; எனக்குக் கையிற்புக்க நெல்லிக்கனியாயினன்' என்ற பொருளையும், 'எனக்குத் தடக்கையின் நெல்லிக்கனியாயினன்' என்ற உவமையால் தோற்றுவித்தார். எனவே, இனி வருகின்ற ஐந்தடி களையும் தமக்கு அருளிய அருமையும், ஏனையோர்போல விரைந்து செல்ல அருளாமையும் என்னும் இருகருத்தும் பற்றியே வருவன வாகக் கொள்க.
163-167. வாழி, அசைநிலை. செய்தது - இந்நிலையினன் ஆக்கியது. 'ஆவா, செத்தேன்' என்னும் இடைச்சொற்கள், 'வியப்பும், அவலமும்' என்னும் இருகுறிப்பினும் வருவனவாம். ஒல்ல கில்லேன் - ஆற்றமாட்டேன்; முற்றப் பெற்றிலேன். 'வாரிக் கொண்டு - விழுங்குகின்றேன் விக்கினேன்' *(தி.8* அடைக்கலப் பத்து-*10)* என்று அருளுதலும் காண்க.
168-177. இனி, 'அவயவம் கோற்றேன் கொண்டுசெய்தனன்' என மேல் தொகுத்துணர்த்தியதனை, ஈண்டு வகுத்து உணர்த்து கின்றார். புரைவித்து - ஒப்பாகச் செய்து. உவா - பௌர்ணமி. நள்ளுநீர் - மிகுகின்ற நீர். 'உவா நாளிற் கடலின் கண் மிகுகின்ற நீர் போல, நெஞ்சிடமெல்லாம் நிறையும்படி' என்க. 'இறந்த என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'வாக்கிறந் தமுதம்' என்றதனை 'உவாக்கடல்' என்ற அடியின் முன்னே கூட்டி, இரண்டனையும், 'செழுந்தண் பாற்கடல்' என்பதற்கு முன்னே வைத்துரைக்க. வாக்கிறந்த அமுதம் - சொல்ல வாராத பேரின்பம். 'அஃது உள்ளகத் தில் ததும்புமாறு பாற்கடல் திரைபோல் வித்து' என்க. உவாநாளிற் பொங்கக் காண்டல் நீர்க்கடலிடத்தே யாதலின், மிகுதற்கு அதனையே உவமை கூறினார். இனிமைக்குப் பாற்கடலை உவமை கூறினார். நாய் - நாய்போலும் எனது. குரம்பை - கட்டு; குடில். 'குரம்பைகொண்டு' என்றது, 'இடமாகக்கொண்டு' என்றபடி. குரம்பைதோறும் - உடம்பில் உள்ள பல கட்டுக்களில் எல்லாம். 'புன்புலால் யாக்கை புரைபுரை கனிய' *(தி.8* பிடித்த பத்து-*10)* எனப் பின்னரும் வருவது காண்க. 'குரம்பைதோறும்' என்றதை, 'குரம்பை கொண்டு' என்றதன் பின்னர்க் கூட்டுக. மேல், உள்ளத்தை நிறைத்தமை கூறினார்; இங்கு, உடம்பினுள் பல பகுதிகளை நிறைத்தமை கூறினார். 'பாய்' என்னும் தன்வினைப் பகுதி, பிறவினை யுணர்த்தும் துவ்வீறு பெற்று, 'பாய்த்து' என நிற்றலின், வினையெச்சத்தின்கண் இகர ஈறாயிற்று. இது, 'பாய்ச்சி' என வருதல்

பெரும்பான்மை. அற்புதம் - அதிசயம். என்பு - 'எற்பு' எனத் திரிந்தது, 'உருகும் உள்ளம் என்ற ஒன்று கொண்டே ஓர் உடம்பைச் செய்தாற் போல, அன்பு சுரந்து பெருகுகின்ற உடம்பை எனக்கு அமைத்தனன்' என்க. அன்பு பெருகும் வழியே இன்பமும் பெருகுமாதலின், இதனையும் அருளிச் செய்தார். அள் - மிகுதி.

178-181. 'என்னையும் கடைமுறை களிறு என இருப்பதாக்கினன்' என இயைக்க. 'என்னையும்' என்ற உம்மை, உயர்வு சிறப்பு. உயர்வு, மேற்கூறியவாற்றால், பொருளும், பேரன்பும், பேரின்பமும் பெற்றமை. 'ஒள்ளிய' என்றது, 'உணவாதற்குச் சிறந்த' என்றவாறு. கன்னல் - கரும்பு. கனி, வாழை முதலியனவாக ஏற்பன கொள்க. உம்மைத் தொகை திரிந்து முடிதலும் உண்மையின் 'கன்னற்கனி' என நின்றது. தேர்தல் - தேடி உழலுதல். 'இருப்பது' என்பது, தொழிற்பெயராய், வினைமுதற்கு ஆயிற்று. 'இறைவன் பிறர்க்குப் போல எனக்கு அரியனாகாது எளியனாய் வந்து அருள் செய்தும், இறுதியில், தனது பெருவாயையும் பெருவயிற்றையும் நிரப்புதற்பொருட்டு இனிய உணவுகளையே எஞ்ஞான்றும் தேடித் திரிகின்ற யானையைப் போல், உணவைத் தேடி உண்டு இப்பூமியின்கண் இருக்கும்படி விட்டுச் சென்றான்' என்றபடி. 'இருகை யானையை ஒத்திருந் தென்னுளக் - கருவை யான் கண்டிலேன்' *(தி.8 திருச்சதகம்-41)*, 'பொய்யனேன் நான் உண்டுடுத்திங் கிருப்பதானேன்' *(தி.8 திருச்சதகம் -52)* எனப் பின்னரும் கூறுதல் காண்க. 'இருப்பதாக்கினன்' என்றதன்பின், 'ஆகையால்' என்பது வருவிக்க. 'என்னின் அமுதாக்கினன்' என இயையும். என்னின் - என்னால். கருணை வான் தேன் கலக்க - தனது திருவருளாகிய உயர்ந்ததேன் கலந்திருக்க. அருளொடு - அவ்வருள் நினைவோடே. பராவு - துதிக்கின்ற. அமுது - அமுதம் போன்ற பாடல்களை. ஆக்கினன் - உளவாகச் செய்தான். இதனால், திருவாசகம், திருக்கோவையார் என்னும் இருதிறத்துத் திருபாட்டுக்களும் வெளிவந்து உலகிற்குப் பெரும் பயன் தருதற் பொருட்டே அடிகளை இறைவன் இந்நிலவுலகத்திற் சிறிதுகாலம் எழுந்தருளியிருக்கும்படி விட்டுச்சென்றனன் என்பது நன்கு பெறப்படுதல் காண்க. இன்னும் இதனானே, மேல், 'பரமானந்தப் பழங்கடல்' என்பது முதலாக உருவக வகையால் விரித்தோதி, இறுதியில், 'தொண்ட உழவர் ஆரத் தந்த' என்றதும், அனைவரும் தன்னைப் பாடிப் பரவித் தனது திருவடிக்கண் அன்பு மிக்குத் தனது பேரின்பத்தைப் பெறுமாறு அடிகளது திருமொழியை இறைவன் உலகிற்கு அளித்தருளினான் என்பதனையே குறிப்பான் உணர்த்தியதாதல் பெறப்படும். இது கொண்டே சிவப்பிரகாச அடிகள், *(நால்வர் நாண்மணி மாலை, பா.16)*

'வலமழுவுயரிய' என்னும் பாட்டினுள் 'திருவாசகம் எனும் பெருநீர்' என உருவகித்து முன்னும் பின்னும் முற்றுருவக நலம் நனிசிறந்து விளங்க அடிகளது திருமொழியின் பெருமையை இனிது விளக்கினார் என்க. 'நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை' (தி.8 திருக்கோத்தும்பி-12.) எனப் பின்னரும் வருதல் காணத்தக்கது. 'பத்திமையாற் பணிந்தடியேன் றன்னைப் பன்னாள் - பாமாலை பலபாடப் பயில்வித்தானை' (தி. 6. ப.54. பா. 3) என்றருளிச்செய்தார். திருநாவுக்கரசு சுவாமிகளும். ஞானசம்பந்தரும், நம்பியாரூரரும் போல நாவுக்கரசரும், வாதவூரடிகளும் தம் திருமொழியின் பெருமை களைப் பலவிடத்தும் இனிது விளங்க எடுத்தோதியருளாது போயினும், இவ்வாறு ஒரோவிடத்துக் குறிப்பால் தோன்ற அருளிச் செய்தலைக் குறிக்கொண்டு உணர்தல் நம்மனோர்க்குத் தலையாய கடனாகும்.
182. பெற்றி - தன்மை 'பிரமன் மால் அறியாப் பெற்றி யோன்' என்றது, 'அவன்' என்னும் சுட்டுப் பெயரளவாய் நின்றது. இதனை, 'ஓல்லகில்லேன்' (அடி 167) என்றதன் பின்னர்க் கூட்டி, இதன் பின்னர், 'இவ்வாறு' என்பது வருவித்துரைக்க.
இத்திருப்பாட்டில் சொற்கள் பொருள் இயைபுபட நிற்குமாறு:-
ஆறாம் அடியிற் போந்த, 'பெரியோன்' என்னும் குறிப்பு வினைப்பெயர் எழுவாயாய் நின்று, பன்னிரண்டாம் அடியிற் போந்த 'குழகன்' என்பது முதலாக, தொண்ணூற்றைந்தாம் அடியிற்போந்த, 'மேகன்' என்பது ஈறாக நின்ற பெயர்ப் பயனிலைகளைக் கொண்டு முடிந்தது.
'மேகன்' என்றதன்பின் எஞ்சி நின்ற 'அவன்' என்பது முதலாக, நூற்றைந்தாம் அடியிற்போந்த, 'வைப்பு' என்பது ஈறாக நின்ற பெயர்கள் பலவும் எழுவாயாய் நின்று, ஆங்காங்கே போந்த 'வாழ்க' என்னும் வினைப்பயனிலையோடே முடிந்தன.
நூற்று ஆறாவது முதலிய மூன்றடிகளிலும் போந்த, 'நம்பன்' முதலிய மூன்று பெயர்களும், தொக்கு நின்ற நான்கனுருபை ஏற்று, ஆங்காங்குப் போந்த, 'போற்றி' என்ற தொழிற் பெயர்ப் பயனிலைகளோடு முடிந்தன. நான்கனுருபு பெயரோடு முடிதலும் இயல்பே.
நூற்றுப் பதினொன்றாம் அடியிற் போந்த, 'தொல்லோன்' என்பது முதலாக, நூற்றுப் பதினெட்டாம் அடியிற் போந்த, 'ஒண்பொருள்' என்பது ஈறாக நின்ற ஐந்து பெயர்களும் எழுவாயாய் நின்று, நூற்றுப் பத்தொன்பதாம் அடியிற் போந்த 'இருந்தனன்' என்னும் வினைப்பயனிலையைக் கொண்டு முடிய அதன்பின் எஞ்சி நின்ற, 'அவனுக்கு' என்பது, அவ்விடத்தே நின்ற, 'போற்றி' என்பத னோடு முடிந்தது. நூற்றிருபது, இருபத்தொன்றாம் அடிகளின் முடிபுகளும் அவ்வாறாதல் வெளிப்படை.

நூற்று இருபத்திரண்டாவது முதலாக, நூற்று ஐம்பத்தேழாவது ஈறாக உள்ள அடிகளிற் போந்த சொற்கள், 'யான்' புகலேனாகவும், தன்னேரில்லோன் பலர்க்கும் ஒளித்தும், என்னேரனையோர் கேட்க வந்து தானேயான தன்மையை இயம்பி ஆட்கொண்டருளி மறையோர் கோலம் காட்டியருளலும், யான் ஓலமிட்டு, ஆர்த்தார்த்து, ஓங்கி வீழ்ந்து புரண்டு, அலறி, மயங்கி, மதித்து ஆற்றேனாகும்படி, என் அவயவங்களைக் கோற்றேன் கொண்டு செய்தனன்' என முடிந்தன. நூற்று ஐம்பத்தெட்டு முதலாக, நூற்று அறுபத்திரண்டு ஈறாக உள்ள அடிகளுக்கு மேற்போந்த பெயர்களே எழுவாயாய் நின்று, 'ஒடுக்கினன்', 'ஆயினன்' என்னும் வினைப் பயனிலைகளைக் கொண்டு முடிந்தன. நூற்று அறுபத்துமூன்று முதலாக, நூற்று அறுபத்தேழு ஈறாக உள்ள அடிகளில், 'யான்' என்பது தோன்றா எழுவாயாய் நின்று 'அறியேன்' என்பது முதலாக 'ஒல்லகில்லேன்' என்பது ஈறாகப் போந்த வினைப் பயனிலைகளைக் கொண்டு முடிந்தது.
ஈற்றடி, நூற்று அறுபத்தேழாம் அடியின் பின் வந்து நிற்ப, அதன்கண் உள்ள, 'பெற்றியோன்' என்னும் பெயர் எழுவாயாய், நூற்று அறுபத்தெட்டாவது முதலாக, நூற்று எண்பத்தொன்றாவது ஈறாக உள்ள அடிகளிற் போந்த, 'புரைவித்து, தேக்கிடச்செய்தனன், இன்தேன் பாய்த்தி அமுத தாரைகள் ஏற்றினன், அள்ளூறாக்கை அமைத்தனன், என்னையும் இருப்பதாக்கினன், என்னின் பாரவமுது ஆக்கினன்' என்னும் பயனிலைகளோடு முடிந்தன. 'கண்ணால் யானும் கண்டேன்' என்பது முதலிய ஆறடிகளும் இடைநிலையாயும், அவற்றை அடுத்துப்போந்த இரண்டடிகளும், பின் வருவனவற்றிற்குத் தோற்றுவாயாயும் நின்றன. 'நினைதொறும் ஆற்றேன் அந்தோ கெடுவேன்' என்றனவும் இடைநிலையேயாம். இங்ஙனமாகவே, இதனுள் முதற்கண் இறைவனது பெருமைகளை வியந்து கூறி, இடைக்கண் அவனை வாழ்த்துதலும், போற்றுதலும் செய்து, இறுதிக்கண் தமக்கு அவன் செய்த திருவருள் முறையினைக் கூறி முடித்தருளியவாறாதல் காண்க.

1.4.போற்றித் திருவகவல்

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்று
அடிமுடி யறியும் ஆதர வதனிற்
கடுமுரண் ஏன மாகி முன்கலந்து
ஏழ்தலம் உருவ இடந்து பின்னெய்த்து
ஊழி முதல்வ சயசய என்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கடல் உலகினில்
யானை முதலா எறும்பீ றாய
ஊனமில் யோனியி னுள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும்
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
ஆண்டுகள் தோறும் அடைந்தஅக் காலை
ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல் நெருங்கியுள் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்து
எய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்து
ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்

பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம் பாய பலதுறைப் பிழைத்தும்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின
ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியரும்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னும்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்து
உலோகா யதனெனும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவும்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுளம் உருகி அழுதுடல் கம்பித்
தாடியும் அலறியும் பாடியும் பரவியுங்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறா அன்பிற்
பசுமரத் தாணி அறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதுரிழந் தறிமால் கொண்டு சாரும்
கதியது பரமா அதிசய மாகக்

கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலும் நினையா
தருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி அருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா தத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதஎன் றரற்றி
உரைதடு மாறி உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதயம் மலரக்
கண்களி கூர நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி
கூடல் இலங்கு குருமணி போற்றி
தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னா ருருவ விகிர்தா போற்றி
கல்நார் உரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா என்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரைசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி

உடையாய் போற்றி உணர்வே போற்றி
கடையேன் அடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேயருள் அரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றி என் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர் விறந்த ஒருவ போற்றி
விரிகடல் உலகின் விளைவே போற்றி
அருமையில் எளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையும் ஒருவ னாக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதுங் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மானோர் நோக்கி மணாளா போற்றி
வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவர் உள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலும் நாயேற் கருளினை போற்றி
இடைமரு துறையும் எந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி

ஆரூ ரமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி
ஏகம் பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்
கத்திக் கருளிய அரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி
ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி
களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்ற நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி

பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி
இலங்கு சுடரெம் ஈசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி அறுகின் தாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்தர மாமலை மேயாய் போற்றி
எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி

புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றிபோற்றி புராண காரண
போற்ற போற்றி சயசய போற்றி **225**

. #4

பிரமன் முதலாகத் தேவர்கள் யாவரும் தொழுது நிற்க, இரண்டு திருவடிகளாலே மூன்று உலகங்களையும் அளந்து, நான்கு திக்கிலுள்ள முனிவர்களும் ஐம்புலன்களும் மகிழும்படி வணங்குகின்ற, ஒளி பொருந்திய திருமுடியையுடைய அழகிய நெடுமால், அந்நாளில் திருவடியின் முடிவையறிய வேண்டுமென்ற விருப்பத்தால், வேகமும் வலிமையுமுடைய பன்றியாகி முன்வந்து ஏழுலகங்களும் ஊடுருவும்படி தோண்டிச் சென்று பின்னே இளைத்து 'ஊழியை நடத்தும் முதல்வனே வெல்க வெல்க' என்று துதித்தும் காணப் பெறாத தாமரை மலர் போலும் திருவடிகள், துதித்தற்கு எளிதாகி,நெடிய கடலாற் சூழப்பட்ட உலகத்தில்,

யானை முதலாக, எறும்பு இறுதியாகிய குறைவில்லாத கருப்பைகளினின்றும் உள்ள நல்வினையால் தப்பியும், மனிதப் பிறப்பில் தாயின் வயிற்றில் அதனை அழித்தற்குச் செய்யும் குறை வில்லாத புழுக்களின் போருக்குத் தப்பியும், முதல் மாதத்தில் தான்றிக்காய் அளவுடைய கரு இரண்டாகப் பிளவுபடுவதனின்றும் தப்பியும், இரண்டாம் மாதத்தில் விளைக்கின்ற விளைவினால் உருக்கெடுவதினின்று தப்பியும் மூன்றாம் மாதத்தில் தாயின் மதநீர்ப் பெருக்குக்குத் தப்பியும், நான்காம் மாதத்தில் அம்மதநீர் நிறைவினால் உண்டாகும், பெரிய இருளுக்குத் தப்பியும், ஐந்தாம் மாதத்தில் உயிர் பெறாது இருத்தலினின்று தப்பியும், ஆறாம் மாதத்தில் கருப்பையில் தினவு மிகுதியால் உண்டாகிய துன்பத்தினின்றும் தப்பியும், ஏழாவது மாதத்தில் கருப்பை தாங்காமையால் பூமியில் காயாய் விழுவதனின்று தப்பியும், எட்டாவது மாதத்தில் வளர்ச்சி நெருக்கத்தினால் உண்டாகும் துன்பத்தினின்றும் தப்பியும், ஒன்பதாவது மாதத்தில் வெளிப்பட முயல்வதனால் வரும் துன்பத்தினின்று தப்பியும், குழவி வெளிப்படுதற்குத் தகுதியாகிய பத்தாவது மாதத்தில், தாய்படுகின்றதனோடு தான்படுகின்ற, கடல் போன்ற துயரத்தினின்று தப்பியும், பூமியிற் பிறந்த பின்பு, வளர்ச்சியடையும் வருடங்கள் தோறும் தாய் தந்தையர் முதலியோர் நெருக்கியும், அழுத்தியும் செய்கின்ற எத்தனையோ பல துன்பங்களில் தப்பியும் காலைப் பொழுதில் மலத்தாலும், உச்சிப் பொழுதில் பசியாலும், இராப்பொழுதில்

தூக்கத்தாலும், ஊர்ப்பயணங்களாலும் உண்டா கின்ற துன்பங்களினின்று தப்பியும், கரிய கூந்தலையும் சிவந்த வாயினையும், வெண்மையாகிய பற்களையும், கார்காலத்து மயில் போலப் பொருந்திய. சாயலையும், நெருக்கமாகி உள்ளே களிப்புக் கொண்டு, கச்சு அறும்படி நிமிர்ந்து ஒளி பெற்று முன்னே பருத்து, இடை இளைத்து வருந்தும்படி எழுந்து பக்கங்களில் பரவி ஈர்க்குக் குச்சியும் இடையே நுழையப் பெறாத இளங்கொங்கைகளையும் உடைய மாதருடைய கூர்மையாகிய கண்களின் கொள்ளைக்குத் தப்பியும், மயக்கம் கொண்ட உலகினரது பெரிய மத்தக்களிறு என்று சொல்லத் தக்க ஆசைக்குத் தப்பியும், கல்விஎன்கின்ற பலவாகிய கடலுக்குத் தப்பியும், செல்வமென்கின்ற துன்பத்தினின்று தப்பியும், வறுமை என்கின்ற பழமையாகிய விடத்தினின்று தப்பியும், சிறிய எல்லைகளையுடைய பல வகைப்பட்ட முயற்சிகளில் தப்பியும்,

தெய்வம் உண்டு என்பதாகிய ஒரு நினைப்பு உண்டாகி, வெறுப்பில்லாததாகிய ஒரு பொருளை நாடுதலும்,ஆறுகோடியெனத் தக்கனவாய் மயக்கம் செய்யவல்ல சடவுலக ஆற்றல்கள், வேறு வேறாகிய தம் மாயைகளைச் செய்யத் தொடங்கினவாகவும், அயலா ராயினோரும் கடவுள் இல்லையென்று பொய் வழக்குப் பேசி நாவில் தழும்பேறப் பெற்றனர். உறவினர் என்கின்ற பசுக்கூட்டங்கள் பின் பற்றி அழைத்துப் பதறிப் பெருகவும், மறையோரும், விரதத்தையே மேன்மையான சாதனம் என்று தம் கொள்கை உண்மையாகும் படி நூற்பிரமாணங்களைக் காட்டினார்களாகவும், சமயவாதிகள் எல்லாம் தம்தம் மதங்களே ஏற்புடைய மதங்களாகும் எனச் சொல்லி ஆர வாரித்துப் பூசலிட்டார்களாகவும், உறுதியான மாயாவாதம் என்கிற பெருங்காற்றானது சுழன்று வீசி முழங்கவும், உலோகாயத மதம் என்கிற, ஒள்ளிய வலிமையுடைய பாம்பினது கலை வேறுபாடு களையுடைய கொடிய நஞ்சு வந்து சேர்ந்து அதிலுள்ள பெருஞ் சூழ்ச்சிகள் எத்தனையோ பலவாகச் சுற்றித் தொடரவும்,

முற்கூறிய அவற்றால் வழுவாது தாம் பிடித்த கொள்கையை விட்டு விடாமல், நெருப்பினிற் பட்ட மெழுகுபோல வணங்கி மனம் உருகி, அழுது உடல் நடுக்கமடைந்து ஆடுதல் செய்தும், அலறுதல் செய்தும், பாடுதல் செய்தும், வழிபட்டும், குறடும் மூடனும் தாம் பிடித்ததை விடா என்கிற முறைமையேயாகி நல்ல, இடையறாத கடவுள் பத்தியில் பச்சை மரத்தில் அடித்த ஆணி திண்மையாய்ப் பற்றி நிற்பது போல உறைத்து நின்று உருக்கம் மிகுந்து கடல் அலைபோல அலைவுற்று மனம் வாடி, அதற்கு ஏற்ப உடல் அசைவுற்று உலகவர் பேய் என்று தம்மை இகழ்ந்து சிரிக்க வெட்கமென்பது தவிர்ந்து, நாட்டில் உள்ளவர் கூறும்

குறைச்சொற்களை அணியாக ஏற்று, மனம் கோணுதல் இல்லாமல், தமது திறமை ஒழிந்து, சிவஞானம் என்னும் உணர்வினால் அடையப் பெறுகின்ற மேலான வியப்பாகக் கருதி கன்றினை உடைய பசுவின் மனம் போல அலறியும் நடுங்கியும், வேறொரு தெய்வத்தைக் கனவிலும் நினையாமல், அரிய மேலான ஒருவன் பூமியில் வந்து குருமூர்த்தியாகி அருள் செய்த பெருமையை எளிமையாக எண்ணி அசட்டை செய்யாது திருவடிகள் இரண்டையும் உருவைவிட்டு அகலாத நிழலைப் போல வெறுக்காமல், முன்பின்னும் நீங்காது நின்று அந்தத் திசை நோக்கி நினைந்து எலும்பு மெலிவுற்று உருக, மிகக் கனிவுற்று இரங்கிப் பத்தியென்னும் நதியானது கரை புரண்டு ஒட, நல்ல புலனறிவு ஒருமைப்பட்டு, 'நாதனே!' என்று கூவி அழைத்துச் சொற்கள் குழறி, மயிர்சிலிர்க்க, கைம்மலர் குவித்து நெஞ்சத் தாமரை விரிய, கண்கள் களிப்பு மிக நுண்ணிய துளிகள் அரும்பத் தளராத பேரன்பினை, தினந்தோறும், வளர்ப்பவர்களுக்குத் தாயாகியே அவர்களை வளர்த்தவனே! வணக்கம்.

மெய்யுணர்வை நல்கும் மறையோனாகி, வினைகள் நீங்க, கைகொடுத்துக் காப்பாற்ற வல்ல கடவுளே! வணக்கம். பொன்மயமா யிருக்கிற மதுரைக்கு அரசனே! வணக்கம். கூடற்பதியில் விளங்கு கின்ற நன்னிற மாணிக்கமே! வணக்கம். தென்தில்லையம்பலத்தில் ஆடுவோனே! வணக்கம். இன்று எனக்கு அரிய அமிர்தமாயினவனே! வணக்கம். கெடாத நான்கு வேதங்களுக்கும் முதல்வனே! வணக்கம். இடபம் பொருந்திய வெற்றிக் கொடியை உடைய சிவபிரானே! வணக்கம். மின்னல் ஒளி பொருந்திய பல அழகிய வேறுவேறு உருவங்களை உடையவனே! வணக்கம். கல்லில் நார் உரித்தது போல என் மனத்தை இளகச் செய்த கனியே! வணக்கம். பொன்மலை போன்றவனே! காத்தருள்வாய். வணக்கம். ஐயோ! எனக்கருள் செய்வாய். நினக்கு வணக்கங்கள். எல்லா உலகங்களையும் படைப் பவனே! காப்பவனே! ஒடுக்குபவனே! வணக்கம். பிறவித்துன்பத்தை நீக்கி அருள் புரிகின்ற எம் தந்தையே! வணக்கம். ஆண்டவனே! வணக்கம். எங்கும் நிறைந்தவனே! வணக்கம். ஒளியை வீசுகின்ற படிகத்தின் திரட்சியே! வணக்கம்.

தலைவனே! வணக்கம். சாவாமையைத் தரும் மருந்தான வனே! வணக்கம். நறுமணம் பொருந்திய திருவடியையுடைய நீதியாளனே! வணக்கம். வேதத்தை உடையவனே! வணக்கம். குற்ற மற்றவனே! வணக்கம். முதல்வனே! வணக்கம். அறிவாய் இருப் பவனே! வணக்கம், வீட்டு நெறியானவனே! வணக்கம். கனியின் சுவை போன்றவனே! வணக்கம். கங்கையாறு தங்கிய சிவந்த சடையை யுடைய நம்பனே!

வணக்கம். எல்லாப் பொருள்களையும் உடைய வனே! வணக்கம். உயிர்களின் உணர்விற்கு உணர்வாய் இருப்பவனே! வணக்கம். கடையேனுடைய அடிமையைக் கடைக்கணித்து ஏற்றுக் கொண்டவனே! வணக்கம். பெரியோனே! வணக்கம். நுண்ணியனே! வணக்கம். சைவனே! வணக்கம், தலைவனே! வணக்கம், அனற் பிழம்பாகிய இலிங்கவடிவினனே! வணக்கம். எண்குணங்கள் உடையவனே! வணக்கம். நல்வழியானவனே! வணக்கம். உயிர்களின் நினைவில் கலந்துள்ளவனே! வணக்கம். தேவர்களுக்கும் அரிதாகிய மருந்தானவனே! வணக்கம். மற்றையோர்க்கு எளிமையான இறைவனே! வணக்கம். இருபத்தொரு தலை முறையில் வருகின்ற சுற்றத்தார் வலிய நரகத்தில் ஆழ்ந்து போகாமல் அருள் செய்கின்ற அரசனே! வணக்கம். தோழனே! வணக்கம். துணைபுரிபவனே! வணக்கம். என்னுடைய வாழ்வானவனே! வணக்கம். என் நிதியானவனே! வணக்கம். இயல்பாகவே பாசங்கள் இல்லாதவனே! வணக்கம். தலைவனே! வணக்கம். அப்பனே! வணக்கம். பாசத்தை அழிப்பவனே! வணக்கம். சொல்லையும் அறிவையும் கடந்த ஒப்பற்றவனே! வணக்கம். விரிந்த கடல் சூழ்ந்த உலக வாழ்வின் பயனே! வணக்கம்.

அருமையாய் இருந்தும் எளிமையாய் வந்தருளும் அழகனே! வணக்கம். கார்மேகம் போல அருள் புரிகின்ற கண் போன்றவனே! வணக்கம். நிலைபெற்ற பெருங்கருணை மலையே! வணக்கம். என்னையும் ஓர் அடியவனாக்கிப் பெருமையாகிய திருவடியை என் தலையில் வைத்த வீரனே! வணக்கம். வணங்கிய கையினரின் துன்பங்களை நீக்குவோனே! வணக்கம். அழிவில்லாத இன்பக்கடலே! வணக்கம். ஒடுக்கமும் தோற்றமும் கடந்தவனே! வணக்கம். எல்லாம் கடந்த முதல்வனே! வணக்கம். மானை நிகர்த்த நோக்கத்தையுடைய உமா தேவியின் மணவாளனே! வணக்கம். விண்ணுலகத்திலுள்ள தேவர்களுக்குத் தாய் போன்றவனே! வணக்கம். பூமியில் ஐந்து தன்மைகளாய்ப் பரவியிருப்பவனே! வணக்கம். நீரில் நான்கு தன்மைகளாய் நிறைந்து இருப்பவனே! வணக்கம். நெருப்பில் மூன்று தன்மைகளாய்த் தெரிபவனே! வணக்கம். காற்றில் இரண்டு தன்மைகளாய் மகிழ்ந்து இருப்பவனே! வணக்கம். ஆகாயத்தில் ஒரு தன்மையாய்த் தோன்றியவனே! வணக்கம். கனிபவருடைய மனத்தில் அமுதமாய் இருப்பவனே! வணக்கம். கனவிலும் தேவர்கட்கு அருமையானவனே! வணக்கம். நாய் போன்ற எனக்கு விழிப்பிலும் அருள் செய்தவனே! வணக்கம்.

திருவிடை மருதூரில் வீற்றிருக்கும் எம் அப்பனே! வணக்கம். சடையில்

கங்கையைத் தாங்கியவனே! வணக்கம். திருவாரூரில் தங்கியருளிய தலைவனே! வணக்கம். சிறப்புப் பொருந்திய திருவையாற்றில் உள்ளவனே! வணக்கம். அண்ணாமலையிலுள்ள எம்மேலோனே! வணக்கம். கண்ணால் நுகரப்படும் அமுதக் கடலாய் உள்ளவனே! வணக்கம். திருவேகம்பத்தில் வாழ்கின்ற எந்தையே! வணக்கம். அங்கு ஒரு பாகம் பெண்ணுருவாகியவனே! வணக்கம். திருப்பராய்த் துறையில் பொருந்திய மேலோனே! வணக்கம். திருச்சிராப்பள்ளியில் எழுந்தருளிய சிவபிரானே! வணக்கம். இவ்விடத்து உன்னையன்றி மற்றொருபற்றையும் யான் அறிந்திலேன் ஆதலின் வணக்கம். திருக்குற்றாலத்தில் எழுந்தருளியுள்ள எம் கூத்தனே! வணக்கம். திருப் பெருந்துறையில் பொருந்திய இறைவனே! வணக்கம். திரு ஈங்கோய் மலையில் வாழ்கின்ற எம் தந்தையே! வணக்கம். வனப்பு நிறைந்த திருப்பழனத்தில் உள்ள அழகனே! வணக்கம். திருக்கடம்பூரில் எழுந்தருளிய சுயம்புவே! வணக்கம்.
உன்னை அடுத்தவர்க்கு அருள் செய்கின்ற அப்பனே! வணக்கம். கல்லால மரத்தின் கீழ் இயக்கியர் அறுவருக்கும், வெள்ளானைக்கும் அருள் செய்த அரசனே! வணக்கம். மற்றும்பல தலங்கள் உள்ள தென்னாடுடைய சிவபிரானே! வணக்கம். வேறு பல நாட்டவர்களுக்கும் வழிபடு தெய்வமானவனே! வணக்கம். பன்றிக்குட்டிகளுக்குக் கருணை காட்டி அருளியவனே! வணக்கம். பெரிய கயிலாயமலையில் இருப்பவனே! வணக்கம். அம்மானே! அருள் செய்ய வேண்டும். அஞ்ஞான இருள் அழியும்படி அருள் செய்கின்ற இறைவனே! வணக்கம். அடியேன் துணையற்றவனாய்த் தளர்ச்சி அடைந்தேன்; வணக்கம். நிலையான இடத்தைப் பெற எண்ணும்படி அருள்புரிவாய், வணக்கம். அஞ்சாதே என்று இப்பொழுது எனக்கு அருள் செய்ய வேண்டும்; வணக்கம். நஞ்சையே அமுதமாக விரும்பினவனே! வணக்கம், அப்பனே! வணக்கம், குருவே! வணக்கம். என்றும் உள்ளவனே! வணக்கம். குற்றம் அற்றவனே! வணக்கம். தலைவனே! வணக்கம். எவற்றுக்கும் பிறப்பிடமானவனே! வணக்கம். பெரியவனே! வணக்கம். வள்ளலே! வணக்கம், அரியவனே! வணக்கம். பாசம் இல்லாதவனே! வணக்கம். அந்தணர் கோலத்தோடு வந்து அருள் புரிந்த நீதியானவனே! வணக்கம். முறையோ பொறுக்க மாட்டேன். முதல்வனே! வணக்கம். சுற்றமானவனே! வணக்கம். உயிர்க்கு உயிராய் இருப்பவனே! வணக்கம். சிறந்த பொருளான வனே! வணக்கம். மங்கலப் பொருளானவனே! வணக்கம். ஆற்ற லுடையவனே! வணக்கம். அழகுடையவனே! வணக்கம். செம்பஞ்சுக் குழம்பு பூசிய அழகிய பாதங்களை உடைய உமாதேவி பாகனே! வணக்கம். நாயினேன்

வருத்த முற்றேன். நின் அடியவன் நினக்கு வணக்கம். விளங்குகின்ற ஒளியையுடைய எம் ஆண்டவனே! வணக்கம். கவைத்தலை என்னும் திருப்பதியில் விரும்பி எழுந்தருளிய கண் போன்றவனே! வணக்கம். குவைப்பதி என்னும் ஊரிலே மகிழ்ந்து இருந்த இறைவனே! வணக்கம். மலைநாட்டை உடைய மன்னனே! வணக்கம். கல்வி மிகுந்த அரிகேசரி யென்னும் ஊரினை உடையாய்! வணக்கம். திருக்கழுக்குன்றிலுள்ள செல்வனே! வணக்கம். கயிலை மலையில் வீற்றிருக்கும், திருப்பூவணத் திலுள்ள பெருமானே! வணக்கம். அருவம் உருவம் என்னும் திருமேனிகளைக் கொண்டவனே! வணக்கம். என்னிடத்தில் வந்து பொருந்திய அருள் மலையே! வணக்கம்.

சாக்கிரம் முதலிய நான்கு நிலையும் கடந்த பேரறிவே! வணக்கம். அறிதற்கு அருமையாகிய தெளிவே! வணக்கம். துளைக்கப் படாத தூய முகத்தின் சோதியே! வணக்கம். அடிமையானவர்க்கு அன்பனே! வணக்கம். தெவிட்டாத அமுதமே! திருவருளே! வணக்கம். ஆயிரம் திருப்பெயர்களை உடைய பெருமானே! வணக்கம். நீண்ட தாளினையுடைய அறுகம்புல் கட்டிய மாலை அணிந் தவனே! வணக்கம். பேரொளி வடிவாகிய கூத்தப் பெருமானே! வணக்கம். சந்தனக் குழம்பை அணிந்த அழகனே! வணக்கம். நினைத்தற்கரிய சிவமே! வணக்கம். மந்திர நூல் வெளிப்பட்ட பெரிய மகேந்திர மலையில் வீற்றிருந்தவனே! வணக்கம். எங்களை உய்யும்படி ஆட்கொள்வோனே! வணக்கம். புலியின் பாலை மானுக்கு ஊட்டுமாறு அருளினவனே! வணக்கம். அசையாநின்ற கடலின் மேல் நடந்தவனே! வணக்கம். கரிக் குருவிக்கு அன்று அருள் செய்தவனே! வணக்கம். வலிய ஐம்புல வேட்கைகள் அற்றொழியும் உள்ளம் பொருந்தி அருளினவனே! வணக்கம். நிலத்தின் கண் பொருந்தப் பழகிய பல்வகைத் தோற்ற முடையவனே! வணக்கம். உலகத்திற்கு எல்லாம் முதலும் நடுவும் முடிவுமானவனே! வணக்கம். நாகம், விண்ணுலகம், நிலவுலகம் என்ற மூவிடத்தும் புகாதபடி பாண்டியனுக்கு மேலான வீட்டுலகை நல்கி அருளியவனே! வணக்கம். எங்கும் நீக்கமற நிறைந்த ஒருவனே! வணக்கம். செழுமை மிக்க மலர் நிறைந்த திருப்பெருந்துறைத் தலைவனே! வணக்கம். செங்கழுநீர் மாலையை அணிந்த கடவுளே! வணக்கம். வணங்குவோருடைய மயக்கத்தை அறுப்பவனே! வணக்கம். தவறு யாது? பொருத்தம் யாது? என்று அறியாத நாயினேன் குழைந்து சொன்ன சொல் மாலையைக் கொண்டருள வேண்டும்; வணக்கம். மூன்றுபுரங்களை எரித்த பழையோனே! வணக்கம். மேலான ஒளியை உடைய மேலோனே! வணக்கம். பாம்பை அணிந்த பெரியோனே! வணக்கம். பழமையானவனே! எல்லாவற்றிற்கும் மூல காரணனே!

வணக்கம். வணக்கம். வெற்றியுண்டாக வணக்கம்! வணக்கம்!.

விளக்கவுரை

போற்றித் திருஅகவல் - 'போற்றி' என்னும் சொல்லையுடைய திரு அகவல். 'போற்றுதலை உடைய' எனப் பொருள் மேல் வைத்துரைப்பின், அஃது ஏனைய பகுதிகட்கும் பிறவற்றிற்கும் பொதுவாதல் அறிக. இத் திருப்பாட்டில் இறைவனை அடிகள் பலபெயர்க் கோவையாற் போற்றுகின்றார்.

இதற்கு, 'சகத்தின் உற்பத்தி' என முன்னோர் உரைத்த குறிப்பு, முதற் போற்றி வரையில் உள்ள பகுதி பற்றியே கூறியதாம். அங்ஙனம் கூறும் வழியும், 'உலகம்' எனப் பொருள்தரும், 'சகம்' என்பது, மக்களுலகையே குறித்துக் கூறியதாம்.

1-10. இதனுள் முதல் மூன்று அடிகளில் எண்ணலங்காரம் வந்தது, திருமால் காத்தற் கடவுளாதலின், போகத்தைத் தரும் கடவுளாவன். அதனால், ஐம்புலன்களும் நிரம்பக் கிடைத்தற் பொருட்டுப் போற்றப்படுவனாயினன். ஆகவே, இங்கு 'முனிவர்' என்றது, சுவர்க்க இன்பத்தை வேண்டித் தவம் செய்வோரையாயிற்று. மலர - நிரம்ப உளவாதற் பொருட்டு. கதிர்முடி - மணிமுடி. கடவுளரிற் சிறந்தமையின், மாலை, 'திருமால்' என்ப. அவன் கடவுளரிற் சிறந்தோனாதலை,

'தேவில் திருமால் எனச் சிறந்த'

என்னும் திருவள்ளுவ மாலையானும் *(36)* அறிக. இதில் 'தே' என்பது அஃறிணைச் சொல்லாய், பன்மைமேல் நின்றது. 'புருடோத்தமன்' என்றலும் இதுபற்றி. நிலங்கடந்த (உலகத்தை அளந்த) அண்ணல் என்பார், 'கதிர்முடி நெடுமால்' என்று அருளினார். பிரமன், மால் இருவரும் சிவசோதியினது அடி, முடி, இரண்டையுங்காணவே புகுந்தனராதலின்,'அடி முடி அறியும் ஆதரவு' என்றார். ஆதரவு - விருப்பம். அது, பகுதிப் பொருள் விகுதி. இன், ஏதுப்பொருட்கண் வந்த ஐந்தாம் உருபு.

கடுமுரண் - மிக்க வலிமை. ஏனம் - பன்றி. முன் கலந்து - நிலத்தைச் சார்ந்து. 'முன்' என்றது ஆகுபெயராய், முன்னே காணப்படும் நிலத்தைக் குறித்தது. ஆகாயம், அண்ணாந்து நோக்கிய வழியே காணப்படுமாதலின், அது முன்னர்க் காணப்படுவதன்றா யிற்று, ஏழ்தலம், கீழ் உலகம் ஏழு; அவை 'அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகாதலம், பாதலம்' என்பன. உருவுதல் - கடந்து போதல். எய்த்தது, பிரகிருதியுடம்பு உடைமையின், பாதலத்திற்குக் கீழ்ச் செல்ல இயலாமையால் என்க. எய்த்தல் - இளைத்தல் 'ஊழி முதல்வன்' என்றது, 'காலத்தை நடத்துபவன்' என்றவாறு. எல்லாப் பொருளும் காலத்திற்கு உட்பட்டு நிற்றலின், 'காலத்திற்கு முதல்வன்' என்றது, 'எல்லாப்

பொருட்கும் முதல்வன்' என்றவாறாம்.
சயசய - நீ வெல்க! வெல்க! வழுத்துதல் - துதித்தல். 'அடி இணைகள்' என்றதனை, 'இணை அடிகள்' என மாற்றிக்கொள்க. இணை அடிகள் சிவபிரானுடையன என்பது, திருமால் தேடிக் காணாத வரலாறு கூறியவதனால் பெறப் பட்டது.
'எளிது' என்ற ஒருமை அப்பண்பின் மேல் நின்று ஆகு பெயராயிற்று. 'ஆய்' என்ற வினையெச்சம் காரணப் பொருட் டாய்,'தாம் பிடித்தது சலியா' (அடி.59) என்பது முதலியவற்றில் வரும் 'சலியா' முதலிய வினைகளோடு இயைந்து நின்றது. வார் - நீண்ட.
11-12. இது முதலாகவரும் நாற்பத்தொன்பது அடிகளால் உயிர்கட்கு இறையுணர்வு உண்டாவதன் அருமையை விரித்தோதி யருளுகின்றார். யானையினும் பெரிய பிறவியும், எறும்பினும் சிறிய
பிறவியும் உளவாயினும் பெருமை சிறுமைகளின் எல்லைக்கு அவற்றைக்கூறும் வழக்குப் பற்றி அங்ஙனமே ஓதியருளினார். ஊனம் - குறைவு. 'குறைவில்லாத' என்றது, 'பலவாகிய' என்பதனைக் குறித்தது. யோனி - பிறப்பின் வகைகள். இவ் வடசொல் முதற்கண் இகரம் பெற்று வந்தது. ஏழுவகைப் பிறப்பிலும் உள்ள யோனி பேதம் எண்பத்து நான்கு நூறாயிரம் என்பதை,

அண்டசம் சுவேத சங்கள்
உற்பிச்சம் சராயு சத்தோ
டெண்டரு நால்எண் பத்து
நான்குநூ றாயி ரத்தால்
உண்டுபல் யோனி எல்லாம்
ஒழித்துமா னுடத்து தித்தல்
கண்டிடிற் கடலைக் கையால்
நீந்தினன் காரி யங்காண்.

என்னும் சிவஞான சித்தியிலும் (சூ, 2. 89),

தோற்றியிடும் அண்டங்கள் சுவேதசங்கள் பாரில் துதைந்துவரும்
உற்பீசம் சராயுசங்கள் நான்கில்
ஊற்றமிகு தாபரங்கள் பத்தொன்ப தென்றும்
ஊர்வபதி னைந்தமரர் பதினொன்றொ டுலவா
மாற்றருநீர் உறைவனநற் பறவைகள்நாற் காலி
மன்னியிடும் பப்பத்து மானுடர்ஒன் பதுமா
ஏற்றிஒரு தொகையதனில் இயம்புவர்கள் யோனி
எண்பத்து நான்குநூ றாயிரமென் றெடுத்தே.

என்னும் சிவப்பிரகாசத்திலும் (47) காண்க. எண்பத்து நான்கிற்குச் சிவப்பிரகாசத்துட் கூறப்பட்ட வகையை,

ஊர்வ பதினொன்றாம் ஒன்பது மானுடம்
நீர்ப்பறவை நாற்கால்ஓர் பப்பத்துச் - சீரிய
பந்தமாந் தேவர் பதினால் அயன்படைத்த
அந்தமில் சீர்த் தாவரம்நா லைந்து.

என (குறள்.62 - பரிமேலழகர் உரை)ச் சிறிது வேறுபடவும் கூறுவர் என்பது தோன்றவே சிவப்பிரகாசத்துள் 'ஒரு தொகையதனில் இயம்புவர்' என்று அருளினார் போலும்!

'யோனியினுள்' என்றதன்பின், 'செலுத்தும்' என்பது தொகுத்தலாய் நின்றது. 'வினையினின்றும் பிழைத்தும்' என்க. பிழைத்தல் - தப்புதல். 'பிழைத்தும்' என வரும் உம்மைகள் யாவும், வினைக்கண் வந்த எண்ணிடைச் சொற்கள். உயிர்கட்கு இறையுணர்வு உண்டாதற்கு உளவாகும் இடையூறுகள் பலவற்றையும் இங்கு முறைமைப்பட வைத்து அருளிச் செய்கின்றாராதலின், 'பிழைத்தும்' என வருவனவற்றின் பின்னெல்லாம், 'அதன்பின்' என்பது வருவித்து அம் முறைமை தோன்ற உரைக்க. 'பிழைத்து' என வருவன பலவும், 'உண்டாகி' (அடி.42) என்பதனோடே முடியும்.

13-14. உயிர்கள் நிலவுலகில் கருப்பையினுள் தோன்றும் பிறப்பிற்புகுங்கால், முதற்கண் தான் நின்ற நுண்ணுடம்போடு உணவு வழியாக ஆண் உடம்பிற் புகுந்து தங்கி, பின் அதனது வெண்ணீர் வழியாகப் பெண்ணினது வயிற்றில் உள்ள கருப்பையினுட் புகுந்து புல் நுனியில் நிற்கும் பனியினது சிறு திவலையினும் சிறிதாகிய நுண்டுளியளவில் கருவாகி நின்று,பின் சிறிது சிறிதாக வளர்ந்து நிரம்பும் பருவுடம்புடனே பிறக்கும். பெண்ணினது வயிற்றில் நுண்டுளியளவில் நின்று வளர்ந்து பிறத்தற்கு இடையே அதற்கு உண்டாகும் அழிவு நிலைகள் எத்துணையோ உளவாம். மக்களாய்ப் பிறக்கும் உயிர்களும், அத்துணை அழிவுகட்கும் தப்பியே பிறத்தல் வேண்டும் என்பதனை இது முதற்பதின்மூன்று அடிகளில் அருளிச் செய்கின்றார்.

உதரம் - வயிறு; அஃது இங்கு அதனிடத்துள்ள கருப்பையைக் குறித்தது. ஈனம் இல் - குன்றுதல் இல்லாத; என்றது, 'பலவான' என்றபடி. எனவே அவற்றின் செருவிற்குத் தப்புதலின் அருமை குறித்தவாறாயிற்று. 'கிருமி' என்றது, அக்கருவை உண்ண விரையும் அவற்றை. அவற்றினின்றும் தப்புதல், அவ்விடத்து அக்கிருமிகளை அழித்தொழிக்கும் நற்பொருள்களாலேயாம். அப்பொருள்கள் அவ்விடத்து உளவாதல் அக்கருவிடத்து உள்ள உயிரது நல்வினை யானேயாம் ஆதலின்; 'அவ்வாற்றான் அவ்வுயிர் அவற்றது செருவி னின்றும் பிழைத்தும்' என்று அருளினார்.

15. ஒருமதி - ஒரு திங்கள் அளவில், ஈண்டு, 'திங்கள்' என்பது,

'சாந்திரமானம்' எனப்படும் மதியளவாகிய இருபத்தேழுநாட் காலமே யாம்; அது, 'திங்கள்' என்பதனானே இனிது பெறப்படும். தான்றி - தான்றிக் காய்; என்றது, அவ்வளவினதாகிய வடிவத்தைக் குறித்தது. 'தான்றியின் கண்' என ஏழாம் உருபு விரித்து, தான்றிக்காய் அளவினதாய வடிவம் பெறும் அளவில்' என உரைக்க. 'இருமை' என்றது, இங்கு, சிதைவுறும் தன்மையைக் குறித்தது. இம் மெல்லிய நிலையிலே தாயது அறியாமை முதலிய பற்பல காரணங்களால் கருச்சிதைந்தொழிதல் எளிதாதலின்,' அதனின்றும் தப்பியும்' என்றார். இந்நிலையில் தப்புதல், தாயது வயிற்றில் நின்று அக்கருவை ஊட்டி வலியுற நிறுத்தும் நற்பொருள்களாலேயாம்.

16. இருமதி விளைவின் - இரண்டு திங்கள் என்னும் அளவில் உண்டாகின்ற வளர்ச்சிக்கண். ஒருமையின் பிழைத்தும் - ஒரு திங்கள் அளவில் இருந்தவாறே இருத்தலினின்றும் தப்பியும்; என்றது, முதற்றிங்களில் தான்றிக்காய் அளவாய் முட்டைபோற் பருத்து நின்ற கரு, இரண்டாந் திங்கள் முதலாக உறுப்புக்கள் பிரிந்து தோன்றும் நிலையைப்பெற்று வளர்ச்சியுறுமாகலானும், அந்நிலையில் அக்கரு அங்ஙனம் வளர்தற்கு வேண்டும் பொருள்கள் அதற்குக் கிடையா தொழியின், முதற்றிங்களில் நின்ற நிலையிலே நின்று கெட்டொழியு மாகலானும், 'அங்ஙனம் கெடுதலினின்றும் தப்பியும்' என்றவாறு. புல்நுனிமேல் பனித்திவலையினும் சிறிய நுண்டுளியாய் நிற்குமதுவே வித்தாயினும், நிலத்தின் கட்பதிந்து நீர் முதலியவற்றால் பதனெய்திய விதையே பின் முளையைத் தோற்றுவித்தல்போல, அந்நுண்டுளி ஒரு திங்கள் காறும் பருத்துத் தான்றிக்காயளவினதாய் நின்றபின்பே பின்னர்க் கழுத்து, தலை முதலிய உறுப்புக்களைத் தோற்றுவிக்குமாதலின், அதுகாறும் உள்ள நிலையை வித்தெனவே கொண்டு, பின்னர் இரண்டாந் திங்கள் முதலாக உறுப்பு முதலியவை தோன்றப்பெறும் நிலைகளையே, 'விளைவு' என்று அருளினார். ஒருமை - ஒன்றன் தன்மை. 'ஒன்று' என்று முன்னர் ஒருதிங்களாகிய காலத்தைக் குறித்து, பின்னர் அக்காலத்தில் நிகழும் நிகழ்ச்சியைக் குறித்தது.

17. மும்மதிதன்னுள் - மூன்று திங்கள் என்னும் அளவில். மதம் - மயக்கம். சூல்கொண்ட மகளிர் மூன்றாந் திங்களில் பித்தம் மிகப்பெற்று உணவேலாது மயக்கமுற்றுக் கிடக்கும் நிலையை, 'மயற்கை' என வழங்குதல் பலரும் அறிந்ததாகலின் அதனை 'அம்மதம்' எனப் பண்டறிசுட்டாற் சுட்டிப் போயினார். இம் மயற்கைக் காலத்தில் மகளிர், கருவைக் காத்துக்கொள்ளுதலில் கருத்தின்றி, புளிப்புப் பண்டங்களையே யன்றி மண்ணை உண்ணுதல் முதலிய வற்றையும் செய்வர், ஆதலின், அவற்றிற்கெல்லாம் அக் கரு, தப்பி வளர்தல்

வேண்டும் என்று அருளிச் செய்தார். கருவுற்ற மகளிர் மண்ணை விரும்பியுண்டல்,

'1வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது
பகைவ ருண்ணா வருமண் ணினையே' -புறநானூறு, 20

எனக் கூறப்பட்டதும் காண்க.

18. ஈரிரு திங்கள் - நான்கு திங்களளவில். பேரிருள் - யாதும் அறியாமை. மூன்றாந் திங்களில் மயற்கையுற்ற மகளிர், நான்காந் திங்களில் அம்மயற்கை நீங்கப் பெறுவர். அந் நிலையில் முன்னர் உற்று நின்ற கரு மயற்கைக் காலத்துக் கெட்டொழியாது நிலைபெற்றதோ, அன்றி நிலைபெறாதே கெட்டொழிந்ததோ என எழும் ஐயத்தின்கண் யாதும் துணியப்படுதற்கு வழியின்றி நிற்குமாதலின், அந் நிலையையே, 'பேரிருள்' என்றார். எனவே, அந்நிலையிலும் அக்கரு நிலைபெறாதொழிதல் கூடுமாகலின், 'அவ்விடத்தும் கெடாது நிலை பெற்று' என்பார், 'ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்' என்றார்.

19. ஐந்து, அஞ்சு என மருவிற்று. அஞ்சு திங்கள் - ஐந்து திங்களின் என்னும் அளவில். முஞ்சுதல் - சாதல். தாயது வயிற்றினின்றும் போந்து நிலத்தையடைதற்குப் பத்துத் திங்களை எல்லையாக உடைய கருப்பைக் குழவி, அதனிற் பாதியளவினதாகிய ஐந்து திங்கள் காறும் பெரும்பான்மையும் நிலையாமையையே உடையதாம். அதனுள்ளும், மயற்கைக் காலத்து அழிந்தொழியாது நிலைபெற்று நான்காந் திங்களில் மெலிந்துநிற்கும் கருக்குழவியை, ஐந்தாந் திங்களிற் பல்லாற்றானும் குறிக்கொண்டு காவாதொழியின், வலுப்பெற்று முதிர மாட்டாது அழிந்தொழியும்; அதனால், ஐந்தாந் திங்களைக் கரு அழியுங் காலமாக அருளினார்.

20. ஆறு திங்களின் - ஆறு திங்கள் என்னும் அளவில். நூறு அலர் பிழைத்தும் - கருப்பையைக் கிழிக்கின்ற பூவினது செயலுக்குத் தப்பியும். அலர் - பூ. மரவகைகளிடத்துக் காய் தோன்றுதற்கு வழியாய் நிற்கும் பூப்போல, கருப்பையுள் கருவை ஏற்று ஈனும் பிறப்புக்களது கருப்பை யினுள், தாயினது செந்நீரில் குமிழிபோலத் தோன்றுவதொரு பொருள் உண்டு. அதற்கும் பூவைப்போல அரும்புதல், மலர்தல், கூம்புதல்கள் உள. அதனது மலர்ச்சிக் காலத்தில் பெண்ணிற்கு ஆணோடு கூட்டம் உண்டாயின், கரு வாய்க்கும். அக்காலத்தன்றி, அரும்பற் காலத்தும், கூம்பற் காலத்தும் உளவாம் கூட்டத்தாற் கருவுண்டாதல் இல்லை. கருவை ஏற்றலின்றி வாளா கூம்பிய பூ, சின்னாளில் கெட்டு வெளிப் போந்தொழியும், தாயது வயிற்றிற் பூவுண்டாயினமை அது புறத்துப் போந்துழியே அறியப்படுதலின், அதனையே, 'பூப்பு' என வழங்குப முதற் பூ, கருவை ஏற்றலின்றி அழியற்பாலதே; ஏனெனின், அது கரு

வந்தடைதற்கு வாயிலில்லாத காலத்தே உண்டாவது. அது கெட்டபின், தான் உள்ளே நில்லாது வெளிப்போதுங்கால், வாயிலை உண்டாக்கிப் போதருதலின், பின்னர்த் தோன்றும் பூக்கள் கருப் பெறுதற்கு உரியன வாம். முதற் பூத் தான் பயனின்றி ஒழியினும், பின்னர்த் தோன்றுவன அனைத்தும் பயனுடையவாதற்கு ஏதுவாய் வீழ்தலின், அவ் வீழ்ச்சியையே, சிறப்பாக, 'பூப்பு' எனக் குறிப்பர். ஒரு பூ அரும்பி மலர்ந்து நிற்கும் காலம், முன்னைப் பூ வீழ்ந்த நாள் முதலாகப் பதினைந்து நாள் எல்லை என்பதும், அதன் பின்னர் அது கூம்புதல் உளதாம் என்பதும்,
'பூப்பின் புறப்பா டீராறு நாளும்'
என்பதனான் அறியப்படும் (தொல் - பொருள்; *185*). 'பூ வீழ்ந்த நாள்முதலாக மூன்று நாட்கள் பூப்பின் அகப்பாட்டு நாள்களாம்' என்பதனை அச்சூத்திர உரைகளான் அறிக.

கருப்பையுடைய பிறப்புக்களில் மக்கட் பிறப்பிலும் மாக்களுள் ஒருசார் பிறப்பிலும் உள்ள பெண்களது கருப்பையில் ஒரு முறையில் பெரும்பாலும் ஒரு பூவும் சிறுபான்மை சில முறைகளில் ஒன்றற்கு மேற்பட்ட பூக்களும் தோன்றும்; ஆதலின், அவற்றால் ஓர் ஈற்றில் பெரும்பான்மையும் ஒரு குழவியும், சிறுபான்மை ஒன்றற்கு மேற்பட்ட குழவிகளும் பிறக்கும்.

மாக்களுள் ஒரு சாரனவற்றுப் பெண்களது கருப்பையில் ஒருமுறையில் பல பூக்கள் தோன்றுதலின், அவற்றிடமாக ஓர் ஈற்றில் பல குழவிகள் பிறப்பனவாம். ஆகவே, கருப்பையுள் தோன்றும் கருவிற்கும், மரவகைகளிற்போல, அக்கருப்பையினுள் அரும்பி மலரும் பூவே காரணம் என்பது புலப்படும்.

இத்தகைய பூ, மக்கட் பிறப்பின் மகளிரிடத்துக் கருவை ஏற்றுக் குழவி உருவத்தைப் பெறத்தொடங்குவது, அஃது ஐந்தாந் திங்களிற் கெடாது வலியுற்று நின்ற பின்னரேயாம். அஃது அங்ஙனம் உருப்பெற்று வளர்கின்றுழி. அது கருப்பையைத் தாக்குதல் உளதாம். அக்காலத்து அத்தாக்குதலால் ஒரோவழி, கருப்பை கிழிந்து, அவ்வுருவம் அரையும் குறையுமாய் நிலத்தில் வீழ்தலும் உண்டு. அந் நிலையினும் குழவி தப்புதல் வேண்டும் என்பதனையே, 'ஆறு திங்களின் நூறலர் பிழைத்தும்' என்று அருளிச்செய்தார். மக்களுள் மலடரல்லராயும், மகவை உருவோடு பெறும் நல்வினை இல்லாத மகளிர் தம் கருவை இழத்தல், பெரும்பான்மையும் இத்தன்மைத்தாய ஆறாந்திங்களிலேயாம். ஆதலின், அதனைக் கடந்த பின்னரே, சூல் காப்பு முதலிய சடங்குகளைச் செய்தல் முறைமையாயிற்று. நூறுதல் - சிதைத்தல். 'அலர்' என்றது ஆகு பெயராய் அதனது தொழிலைக் குறித்தது. கருவை ஏற்ற பூ, காய் எனப்படுதல், குழவி உருவம் நிரம்பப் பெற்ற ஏழாந் திங்களிலே யாதலின்,

ஆறாந்திங்களில் நின்ற உருவத் தினை, 'பூ' (அலர்) என்றே அருளினார்.
21. ஏழு திங்களில் - ஏழென்னும் திங்களளவில். புவி - நிலம். அஃது ஆகுபெயராய், அதனுள் தோன்றும் பிறப்புக்களை உணர்த் திற்று. கரு ஆறாந் திங்களில் வீழாதே நிற்பினும், குழவி நன்முறையில் வளராதொழியின், மக்கட்டன்மை நிரம்பப்பெறாது, ஏழாந் திங்களில் மாக்கள் போலப் பிறப்பதாம். அப்பிறப்பு வகைகளை,
'சிறப்பில் சிதடும், உறுப்பில் பிண்டமும்,
கூனும், குறளும், ஊமும், செவிடும்,
மாவும் மருளும்'
என வந்த புறப்பாட்டுள் (28) 'உறுப்பில் பிண்டம்' என்றது ஒழிந்தன எனக் கொள்க. இவ்வாறெல்லாம் பிறத்தல் மக்களுலகில் தொன்று தொட்டே காணப்படுவது என்பதனை,
'............... இவையெல்லாம்
பேதைமை யல்ல தூதிய மில்லென
முன்னும் அறிந்தோர் கூறினர்'
என அப்பாட்டுட் கிளந்தோதியவாற்றான் அறிக.
இனி மக்கள் வயிற்றினும் ஒரோவொருகால் மாக்களும் பாம்பு போலும் சில ஊர்வனவும், பிறவும் பிறத்தல் உள என்ப; அவை யெல்லாம் ஏழாந்திங்களில் குழவியது வளர்ச்சிக் குறைபாட்டால் நிகழ்வனவே யாதலின், மானுடப் பிறப்பினுட் புகுந்தும், தீவினை வயத்தால் அவ்வாறெல்லாம் ஆகாது தப்புதல் வேண்டும் என்ப தனையே, 'தாழ்புவி பிழைத்தும்' என்று அருளினார், இஃது உண்டாகாமைப் பொருட்டும் ஏழாந் திங்களிற் கடவுட் பராவலை, அறிந்தோர் செய்ப.
இனி, மக்கட் குழவி பிறப்பது பெரும்பான்மையும் பத்தாம் திங்களிலேயாயினும், சிறுபான்மை அதற்கு முற்பட்ட ஒன்பது, எட்டு ஏழென்னும் திங்களிலும் பிறத்தல் நிகழ்ச்சிகள் உள. அவை ஒன்றினொன்று சிறுபான்மைத்தாக நிகழும். அவற்றுள் ஏழாம் திங்களிற் பிறக்குங் குழவி உயிரொடு பிறத்தல் சிறுபான்மை. உயிரொடு பிறந்த வழியும் பின்னர் நெடிது வாழ்தல் மிகச் சிறுபான்மை. அதனால், அங்ஙனம் ஏழாம் திங்களிற் பிறத்தலினும் தப்புதல் வேண்டும் என்பதனையே இவ்வடியுள் அருளினார் எனக் கொண்டு, அதற்கேற்ப 'தாழ்புவி' என்றதனை 'புவிதாழ்' என பின்முன்னாக மாற்றி ஏழாந் திங்களிற் றானே நிலத்தில் வந்து பிறத்தலினின்றுந் தப்பியும்' என உரைத்தலுமாம். இவ்விரண்டனையும் இவ்வடியின் பொருளாகக் கொள்க.
22. எட்டுத் திங்களில் - எட்டென்னும் திங்களளவில். கட்டம் - மெய்வருத்தம். அஃதாவது, ஏழாம் திங்களில் உருநிரம்பப் பெற்ற குழவி, அவ்வுருவம் நன்கு முதிர்ந்து வளரும் வளர்ச்சியால் கருப்பையினுட்

கட்டுண்டு கிடக்கமாட்டாது வருந்தும் வருத்தமாம். இக்காலத்தில் அது, அக்கருப்பையோடே அசைவுறுதலும் உண்டு.

23. 'ஒன்பது', ஆகுபெயர்; 'ஒன்பது திங்கள் என்னும் அளவில்' என்றபடி. துன்பம் - மனக்கவலை. எட்டாம் திங்களில் நன்கு முதிர்ந்து வளர்ச்சியுற்ற குழவி, ஒன்பதாம் திங்களில் கருப்பையுட் கட்டுண்டு கிடக்கும் நிலையை உணர்ந்து ' இனி இதனினின்றும் புறப்படுமாறு எவ்வாறு' என நினைந்து கவலையுறும். 'அக்காலை அஃது இனிப் பிறவி வாராமல் அருள வேண்டும் என இறைவனைக் கைகூப்பி வேண்டும்' எனவும் சொல்லுப. இவ் எட்டு ஒன்பதாம் திங்களில் உள வாகும் உடல் வருத்தம், மன வருத்தம் என்பவற்றைத் தாங்கும் உடல் வலிமையும், மனவலியும் இல்லாததாய் இருப்பின், குழவி அக் காலத்தே இறந்துபடுமாகலின், அவற்றினின்றுந் தப்புதல் வேண்டும் என்பார், ' எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்' என்றும் 'ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்' என்றும் அருளினார். 'கட்டமும் துன்பமும்' என்ற உம்மைகள் எச்சப் பொருள.

24-25. தக்க தச மதி - குழவி குறையின்றிப் பிறப்பதற்கு ஏற்புடைத்தாய பத்துத் திங்கள் என்னும் அளவில் 'தாயொடு' என்ற ஒடு, எண்ணொடு. துக்க சாகாரத் துயர் - துக்கமாகிய. கடல்போலும் துயர். 'துக்கம், துயர் ' என்பன ஒரு பொருளவாயினும், அடையடுத்து வந்தமையின், சிறப்பும் பொதுவுமாய் இருபெயரொட்டாய் நின்றன. குழவி பிறக்குங்கால் தாயும், குழவியும் படும் துன்பம் பெருந்துன்ப மாதல் வெளிப்படை. குழவிக்கும் தாய்க்கும் உளவாந் துன்பங்கள், குழவி தான் வெளிப்போதற்குச் செய்யும் முயற்சியால் வருவன
வாம். தாய் தனக்கு உளதாய துன்பமிகுதியால் குழவி இனிது பிறத்தற்கு ஏற்ப நில்லாமையானாதல், குழவி தனக்கு உண்டாய துன்ப மிகுதியால் வெளிப்போதும் முயற்சியிற் சோர்வுறுதலானாதல் குழவி பிறவாது வயிற்றிலே இறத்தலும் உண்டு.

அதனால், அவ்விருவகை இன்னலினும் தப்புதல் வேண்டு மாகலின், 'தாயொடு தான்படுந் துக்கசாகரத் துயரிடைப் பிழைத்தும்' என்று அருளினார்.

26-27. 'ஆண்டுகள் தோறும்' என்றதனை, ' இருத்தியும்' என்றதன் பின்னர்க் கூட்டுக. 'பிறந்த பின்னர், தாயர் முதலியோர் தம்பால் நெருங்க அணைத்தும் ஓரிடத்தே இருக்க வைத்தும் ஆண்டு களின் வளர்ச்சிதோறும் அவர் செய்யும் எத்துணையோ பல செயல் களினின்றும் தப்பியும்' என்க.

'ஈண்டுவித்தும்' என்பது, தொகுத்தலாயிற்று. எனைப் பலவாவன, பாலூட்டல், நீராட்டல், மருந்தூட்டல், சீராட்டல் முதலியன, இவை

குழவிக்கு நலஞ்செய்யுமாயினும், காலம் அளவு முதலியன ஒவ்வாதவழித் தீங்கு பயக்குமாதலானும், அவ்வொவ்வாமையை அவர் அறிதல் அரிதாகலானும், அவற்றினும் தப்புதல் வேண்டும் என்றார்.
28-29. மேலெல்லாம், உயிர், மக்கட் பிறப்பிற் புக்க வழியும் இனிது பிறவாதவாறும், பிறந்தபின் நன்கு வளராதவாறும் நிகழும் இடையூறுகளினின்றும் தப்புதல் கூறினார்; இனி, வளர்ந்த பின்னரும் உள்ளம் தெய்வத்தின் பாலன்றிப் பிறவற்றிற் செல்லுதற்கு வாயிலாவன வற்றினின்றுந் தப்புதல் கூறுகின்றார்.
'வேலை' என்றதை, 'காலை', 'கடும்பகல்' என்ற வற்றிற்குங் கூட்டுக. வேலை - பொழுது, மலம் - வயிற்றில் உள்ள மலத் தால் உளதாம் துன்பம். இது காலைக்கண் பெரிதாம், பசி - பசித் துன்பம், நிசி - இரவு. நித்திரை - உறக்கம். இது நன்றாயினும் தெய்வத்தை நினைத்தற்கு இடங்கொடாது, தானே வந்து பற்றுதலின், தடையாயிற்று. 'நித்திரை பிழைத்தும், யாத்திரை பிழைத்தும்' எனத் தனித்தனி கூட்டுக. நாள்தோறும் தவறாது நிகழும் மலம் முதலிய மூன்றனையும் ஒருங்கெண்ணி, 'அவற்றிற் பிழைத்தும்' எனவும், இடையீடுற்று வேண்டுங்காலத்து நிகழும் யாத்திரையை வேறு வைத்து, 'யாத்திரை பிழைத்தும்' எனவும் அருளினார் என்க. யாத்திரை - வழிச் செலவு. மலம், ஆகுபெயர்.
30-35. இப் பகுதியுள் மகளிரது அழகு ஆடவரது மனத்தைக் கொள்ளை கொள்ளுமாற்றினை விரித்தருளிச் செய்கின்றார். சிறப்பு பற்றி ஆடவரது உள்ளத்தையே கூறினாராயினும், இதனானே ஆடவரது அழகும் பெண்டிரது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுதலும் பெறப்படுவதேயாம், கார்மயில் - கார்காலத்து மயில், கார்காலத்தில் மயில் மேகத்தைக் கண்டு களித்தலும், அக் களிப்பினால் தோகையை விரித்து அழகுற ஆடுதலும் இயல்பு. ஒருங்கிய சாயல் - ஒழுங்கு பட்ட தோற்றம். பிற்கால வழக்கில் சாயல் என்னும் சொல் தோற்றம் எனப் பொருள் தரும் என்க. 'மயில்போலும் சாயல்' என்க. நெருங்கி - ஒன்றை ஒன்று அணுகி. மதர்த்து - விம்மி. கதிர்த்து - அழகு மிக்கு, 'முன்'என்றதனை, 'நிமிர்ந்து' என்றதற்கு முன்னேகூட்டுக. பணைத்து - பருத்து. 'இடை எய்த்து வருந்த' என்க. வருந்தல் பாரம் தாங்கமாட்டாமையானாம். எழுந்து - வளர்ச்சியுற்று. புடைபரந்து - மார்பிடம் எங்கும் பரவி. 'ஈர்க்கிடை போகா இளமுலை' என்பது. பொருநராற்றுப் படையுள்ளும் *(36)* வந்தமை காண்க. 'குழலையும், வாயையும், நகையையும், சாயலையும், முலையையும் உடைய மாதர் என்க. கூர்த்த - கூர்மை பெற்ற, நயனம் - கண். பிற உறுப்புக்களும் உள்ளத்தைக் கவருமாயினும், அவை நின்ற நிலையில் நிற்றலன்றிக்

கண்போலப் புடைபெயர்ந்து அகப் படுத்த மாட்டாமையின் அக் கவர்ச்சிகள் சிறியவாக, கண் அவ்வாறன்றிப் புடைபெயர்ந்து அதனை அகப்படுத்தலின் அக்கவர்ச்சி பெரிதாதல்பற்றி அதனையே உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாக அருளினார்.

36-37. பித்து,'பித்தம்' என நின்று, வேற்றுமைக்கன் இறுதி யொற்றுக் கெட்டது. உலகர் - உலக வாழ்க்கையையன்றிப் பிறி தொன்றை நோக்காதவர். அவ்வியல்பு அவரறிவின் கண் உள்ள மயக்கத்தாலாயிற்றாகலின், அதனை, 'பித்து' என்றார். பெருந்துறைப் பரப்பு - பெரியவாகிய துறைகளையுடைய நீர்ப்பரப்பு. 'பரப்பு' என்றது, வாழ்க்கையை, அதுதான், அரசாட்சியும் அமைச்சு முதலிய அரச வினைகளும், உழவும் வாணிபமும் முதலாகப் பற்பல துறை களையுடைமையின் 'பெருந்துறைப் பரப்பு' என்றார். 'துறை, பரப்பு' என்றவை குறிப்பு உருவகம். பெருமை, இங்கு, பன்மை குறித்தது. 'பரப்பினுள் ' என்றதன் பின்,'நின்று கலக்கும்' என்பது வருவிக்க. 'வாழ்க்கையாகிய நீர்ப்பரப்பினுள் நின்று அதனைக் கலக்கும் மத யானை என்று சொல்லத்தக்க ஆசை என்க. வாழ்க்கைக்கண் உளதாம் ஆசையாவது, பல தொழில் துறைகளில் நிற்குங்கால் அவற்றை இவை உடலோம்பல் மாத்திரைக்கே ஆவன' என்று அறிந்து புறத்தால் தழுவி, அகத்தில் பற்றின்றி யொழுகாது, அவையே உயிராகக் கருதி, அவற்றின்கண் மேன்மேல் உயர விரும்புதல். அவ் விருப்பம், அறிவை அறத்தையும் வீட்டையும் நோக்கவொட்டாது மயக்கி, அதனானே, வாழ்க்கைத் துறைகளிலும் பொய், களவு முதலிய பலவற்றைப் புரிந்து ஒழுகச் செய்தலின் அதனை நீர்ப்பரப்பைக் கலக்கும் மதயானையாக உருவகம் செய்தார் 'அவாவிடை' என்ற ஏழனுருபை ஐந்தனுருபாகத் திரிக்க.

38. 'கல்வி கரையில' *(*நாலடி *- 135.)* என்றபடி, கல்வி, அள வில்லாத துறைகளையுடைத்தாய், ஒவ்வொரு துறையும் மிகப் பரந்து கிடப்ப நிற்றலானும், அவை அனைத்திலும் வேட்கை செலுத்தின், நிரம்பப் பயன் எய்துதல் கூடாமையானும், நீர்வேட்கை கொண்டோன், அது தணிதற்கு வேண்டும் நீரை முகந்துண்டு தன் காரியத்திற் செல்லுதல்லது, தன் முன் காணப்படும் ஆறு, குளம் முதலியவற்றி லுள்ள நீரையெல்லாம் முகக்கக் கருதாமைபோல, பரந்துபட்ட கல்வியுள் உலகியலில் தமக்கு வேண்டுந்துணையே கற்று அமைந்து, உயிர்க்குறுதிதேட முயறலன்றி எல்லாக் கல்வியையும் முற்றக் கற்க முயலுதல் அறிவுடைமை யன்றாகலானும், 'கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்' என்றார்.

39. ஈட்டல், காத்தல், அழித்தல் முதலிய எல்லாவற்றானும் பொருள் துன்பமே பயத்தலின், 'செல்வம் என்னும் அல்லல்' என்று அருளினார்.

அல்லலைத் தருவது, 'அல்லல்' எனப்பட்டது. இதனின்றுந் தப்புதலாவது, இதன்கண் பற்றுச் செய்யாமையாம்.

40. நல்குரவு - வறுமை, விடம் - நஞ்சு. செல்வம் அல்லல் பயப்பினும், அறிவுடையார்க்காயின், அறத்தையும் உடன் பயக்கும், வறுமை அவ்வாறின்றி அவர்க்கும் இருமுது குரவர் முதலாயினாரை இனிது ஓம்பமாட்டாமை முதலிய பல குற்றங்களைப் பயந்து இருமையையுங் கெடுத்தலின், அதனை நஞ்சாக உருவகித்தார். இதனானே, வறுமையுட் பட்டார்க்கு அறிவு மெய்யுணர்தற்கட் செல்லாமையும் பெறப்பட்டது.

'வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பி'

(சூ. *2-91)* என்றார் சித்தியாரினும். வறுமை இருமையையுங் கெடுத்தலை,

இன்மை யென ஒருபாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும். *(-*குறள்*, 1042)*

என்பதனானும் அறிக. இவ்வாறு நல்குரவு இருமையுங் கெடுத்தலைப் பலரும் பண்டே அறிந்து அஞ்சப்படுவதென்பதனையே, 'தொல் விடம்' என்றார் என்க.

இதனினின்றும் தப்புதல்.

தெண்ணீ ரடுபுற்கை யாயினும் தாள்தந்த
துண்ணலி னூங்கினிய தில். -குறள், *1065*

என்று மகிழ்ந்திருக்கும் பண்பு, தமக்கும், தம் சுற்றத்திற்கும் வாய்த் தலால் உண்டாவதாம்.

41. புல் வரம்பாய பல துறை - இழிந்த நிலையினவாகிய பல தொழில்கள். அவை, கள் விற்றல், மீன்படுத்தல், ஊன் விற்றல் போல்வன. இவை அறிவின்கண் நல்லன புகவொட்டாமையின், தெய்வ உணர்விற்கும் தடையாதல் அறிக. இத்தொழில்கள் தாமே சாதிகளாய் நிற்றலின்,

'தரைதனிற் கீழை விட்டுத் தவம்செய்சா தியினில் வந்து'

எனச் சிவஞானசித்தி *(*சூ *2-90)* யுட் கூறப்பட்டது.

42-45. தெய்வம் என்பது ஓர் சித்தம் - கடவுள் என்று உணர்வ தோர் உணர்ச்சி. உண்டாகி - தோன்றப் பெற்று. முனிவிலாதது ஓர் பொருள் கருதலும் - எஞ்ஞான்றும் வெறுக்கப் படாததாகிய அவ் வொப்பற்ற பொருளை அடைய விரும்பிய அளவிலே. அளவில்லாத மாயையின் ஆற்றல்கள் தனித் தனியே தம் மயக்கும் செயல்களைச் செய்யத் தொடங்கிவிட்டன என்க.

தெய்வம், 'கடவுள்' - பரம்பொருள் என்னும் பொருளதாய் நின்றது. 'அம் முனிவிலாததோர் பொருள்' எனச் சுட்டு வருவித் துரைக்க. அதுபகுதிப் பொருள் விகுதி. 'மாயா சத்திகள்' எனப் பட்டன. உலகியல்களாம். 'ஆறுகோடி' என்றது, அளவின்மை குறித்தவாறாம். கோடி என்றே

போகாது 'ஆறுகோடி ' என்றது மாயா காரியங்கள் அனைத்தும் 'அத்துவா' எனப்படும், 'மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை' என்னும் ஆறாய் அடங்குதல் பற்றிப் போலும்! இனி, இதனை, 'காமம், குரோதம்' முதலிய அகப் பகை ஆறென்றல் பற்றிக் கூறியதாக உரைப்பின், அவை ஆணவத்தின் காரியமாதலேயன்றி, மேல், மாதர்தம் மயக்கம் முதலாகக் கூறிய வற்றுள் அடங்கினவாதலும் அறிக.
மேல் கடவுளுணர்வு தோன்றுதற்குத் தடையாயுள்ளனவற்றை வகுத்தருளிச் செய்தார்; இனி, அது தோன்றிய பின்னரும், நிலை பெறாதொழிலைச் செய்வனவற்றை அவ்வாறருளிச் செய்வாராய், 'மாயா சத்திகள் தம் மாயைகள் தொடங்கின' என்றார். எனவே, இனி வருவன அம் மாயா சத்திகளின் செயல்களே யாதல் அறிக.
உணர்வை, 'சித்தம்' என்றார். உலகப் பொருள்கள் முன்னர் இனியவாய்த் தோன்றி விரும்பப்பட்டு, பின்னர் இன்னாதனவாய் வெறுக்கப்படுதல் போலன்றி, பரம்பொருள் எஞ்ஞான்றும் இனிதாயே நிற்றலின், அடையற்பாலது அஃது ஒன்றுமே என்பது உணர்த்து வார்,'முனிவிலாததோர் பொருள்' என்றார்.
46-47. 'ஆத்தமானாரும் அயலவரும் கூடி' என்க. ஆத்தம்- மெய்ம்மை. ஆனார் - நீங்காதவர்; என்றது, 'உறுதியுரைக்கும் நண்பர்' என்றவாறு. இனி. 'ஆத்தம்' என்னும் பண்புப் பெயர், அதனை உடையார்மேல் நின்றதெனக் கொண்டு, 'ஆத்தராயினார்' என்று உரைத்தலுமாம். அயலவரும் அவரொடு கூடியது அவர் கூற்றை வலியுறுத்தற்பொருட்டாம், இவர்கள் பேசும் நாத்திக உரைகளாவன, 'இப்பொழுது கிடைத்துள்ள செல்வமும், மாடமாளிகையும், மகளிரும் முதலாய பொருள்களைத் துறந்து, இனி எய்தற் பாலதாய கடவுளை அடைதற்கு இப்பொழுது விரும்புதல் வேண்டா; பின்னர்ப் பார்த்துக் கொள்வோம் என்றாற் போல மெய்ந்நெறியினை நெகிழவிடக் கூறுவனவாம், கடவுளும் வினைப்பயனும் மறுபிறப்பும் போல்வன வற்றை, 'இல்லை' என அழித்துரைக்கும் நாத்திகரைப் பின்னர்க் குறித் தருளுப. 'நாத்தழும் பேறினர்' என்றதனால் இவற்றைப் பல்காலும் இடையறாது கூறி ஆமளவும் கடவுள் உணர்வை மாற்ற முயறல் குறிக்கப்பட்டது. 'நாத்தழும் பேறினர்' என சினைவினை, முதல்மேல் நின்றது. 'பெருகவும் சூழவும்' எனப் பின்னர் வருதலின், அவற்றிற் கேற்ப ஏனையிடங்களிலும், 'நாத்தழும்பேறினராகவும், 'சாத்திரங் காட்டினராகவும்' என்றாற்போல, ஆக்கமும், உம்மையும் விரித் துரைக்க.
48-49. சுற்றம் - உறவினர். கடவுள் நெறியது நலப் பாட்டினை அறியமாட்டாமையின், அதனை அடைய விரும்புவாரைத் தமக்கும் தம் தமர்க்கும் உறுதியுணராதவராக நினைத்து அவலம் எய்தலின்,

அத்தன்மையராய உறவினரை விலங்குகளோடு ஒப்பித்து, 'பசுக் குழாங்கள்' என்று அருளிச் செய்தார். எனவே, சுற்றம் என்னும் குழாங்கள்' என்றது இகழ்ச்சிக்கண் உயர்திணை அஃறிணையாய், பின் வரும், 'பதறினர்' என்பதனோடு திணை மயக்கமாயிற்று என்க. இனி, 'பதறின' என்பதே பாடம் என்றலுமாம். தொன்று தொட்டு வந்த உறவுடையர் என்பார், 'தொல்பசுக்குழாங்கள்' என்றார். பற்றி அழைத்தல் - கை கால்களைப் பற்றிக்கொண்டு 'அந்தோ! துறத்தல் வேண்டா' எனக் கூப்பீடு செய்தல். பதறுதல் - துன்பத்தால் விதிர் விதிர்த்தல். 'பதறினராய்ப் பெருக' என்க. பெருகுதல், பலராய்ச் சூழ்ந்து கொள்ளுதல். உம்மை, வினைக்கண் வந்த எண்ணிடைச் சொல். 'சூழவும்' எனப் பின்னர் *(அடி 58)* வருவதும் அது.

ஒருவர்க்கு ஒரு காரியம் பற்றிச் சொல்பவருள் ஆத்த நண்பர் முன்னிற்பராகலானும், அவர் தம் கருத்தை யுரைத்தலைக் கேட்கும் வாய்ப்புப் பெற்றுழி, அயலாரும் அவரோடு உடம்பட்டுச் சில சொல்லுபவாகலானும் அவ்விருவரையும் முன்னர் வைத்தும், அவர்தம் உரைப்படியேனும், அவற்றிற்கு மாறாக வேனும் செயலை மேற்கொள்ளும் வழியே, சுற்றத்தார் அறிந்து தாம் கூறுவனவற்றைக் கூறுவராகலின், அவரை அவ்விருவருக்கும் பின்னர் வைத்தும் அருளிச் செய்தார். இவரெல்லாம் உலகவராய் நீங்க, இனிச் சமயத்தார் செய்வனவற்றை அருளுவார்.

50-51. விரதம் - நோன்புகள், பரம் - மெய்ப்பொருள். 'உயிர்கள் செய்யும் வினைகளே, அவற்றிற்கு நன்மை தீமைகளைப் பயக்கும்; உயிர்கட்கும், அவை செய்யும் வினைகட்கும் வேறாய் மூன்றாவதொரு பொருள் இல்லை என்பவர், வேதத்துட் கரும காண்டத்தையே சிறப்புடைய பகுதியாகக் கொண்டு. ஏனைய பகுதிகளைப் பொதுவகையால் தழுவுபவர். இவர், வேதத்தின் முற்பகுதியாகிய கரும காண்டம் ஒன்றனையுமே ஆராய்பவராகலின் 'பூருவ மீமாஞ்சகர்' எனவும், கரும காண்டம் ஒன்றனையுமே சிறந்த பிரமாணமாகக் கொள்ளுதலின், 'கருமகாண்டிகள்' எனவும், 'கருமமே கடவுள்' என்றலின் 'கருமப்பிரமவாதிகள்' எனவும் பெயர் கூறப்படுவர். எனவே, இங்கு, 'வேதியர்' என்றது, இவர்களையே யாம்.

'ஆதிமறை ஓதி அதன்பயனொன் றும்மறியா
வேதியர்சொல் மெய்யென்று மேவாதே'

என்றார், நெஞ்சுவிடு தூதினும் *(116,117)*.

சரதம் - உண்மை. 'சாத்திரம்' என்றது, இவரது நூலாகிய பூருவ மீமாஞ்சையை. இது, சைமினி முனிவரால் செய்யப்பட்டது. அந்நூல், இவர் தம் கொள்கையை மிகத் திறம்பட நிறுவலின், 'சரதமாகவே

காட்டினர்' என்று அருளினார், எவ்வாறுரைப்பினும், இவர் தம் கூற்று உண்மையல்ல என்பார், 'பரமாக' எனவும், 'சரதமாகவே'எனவும் ஈரிடத்தும் ஆக்கச் சொற்புணர்த்து அருளிச் செய்தார். 'ஆகவே' என்றது, 'போலத் தோன்றும்படியே' என்றவாறு. இன்னும், 'உணர்த்தினர்' என்னாது, 'காட்டினர்' என்றார், அஃது அறிவுடையோர் உணர்வைப் பற்றாது நீங்கலின். வேதத்துட் கரும காண்டம் முன் நிற்றல் பற்றி, இவரை முன்னர்க் கூறினார்.

52-53, 'சமய வாதிகள்' என்றது, வேதத்துள் உபாசனா காண்டமும், அதுபோலும் பிற நூல்களும் பற்றி ஒரு தெய்வத்தை யாதல், பல தெய்வங்களையாதல் வழிபடும் கிரியா மார்க்கத்தவரை யாம். உபாசனா காண்டம், கரும காண்டத்தின் பின்னர்த்தாதல் பற்றி, இவரை மீமாஞ்சர்க்குப் பின்னர் வைத்து அருளிச்செய்தார். மதம் - தாம் தாம் தெய்வம் எனக் கொண்ட பொருள் பற்றிய கொள்கை. அமைதலுக்கு வினைமுதல், மேல் 'பரம்' என்றதேயாம். அதனால், அதனை இங்கும் இயைத்துரைக்க. இங்கும், 'அமைவதாக' என்றார், பரம் பொருள் அவர் தம் மதங்களில் அமையாமையின். அமைதல் - அடங்குதல். 'அரற்றி' என்றதும் அதுபற்றி. அரற்றுதல் - வாய் விட்டழுதல். இவருள் ஒருவர் கொண்ட தெய்வத்தை மற்றையோர் உடம்படாது மறுத்துரைத்துக் கலாய்த்தலின், 'மலைந்தனர்' என்றும் அருளிச் செய்தார்.

54-55. மிண்டிய - வலிமைபெற்றெழுந்த. மாயாவாதம் - 'உலகம் உள்பொருளன்று' என்னும் கூற்று. உலகம், கடவுள் போல என்றும் ஒருநிலையாய் நில்லாது, தோன்றி நின்று மறைதல் பற்றி, 'பொய்' எனவும், 'அசத்து' எனவும் ஆன்றோர் கூறினாராக, அக்கருத் துணராது, 'கயிற்றில் அரவு போலவும் கானலின் நீர் போலவும் கடவுளிடத்தே தோன்றுவதொரு பொய்த் தோற்றமே உலகம்' எனவும், 'அன்னதொரு தோற்றமே மாயை' எனவும் கொண்டு' 'நாம் காண்பன அனைத்தும் மாயையே' என வாதித்தலின், அவ்வாதம், 'மாயா வாதம்' எனப்பட்டது. இவ்வாதத்தினை வலியுறுத்தும் உத்தரமீமாஞ்சை யாகிய பிரம சூத்திரம் என்னும் முதனூலைச் செய்தவர் வேதவியாத முனிவராதலின், அதற்கு அந்நூலோடு இயைந்த உரையை வகுத்துப் பெருமைபெற்ற சங்கரர் காலத்திற்றான் இவ்வாதம் தோன்றிற்று என்றல் உண்மையுணராதார் கூற்றேயாமென்க,

இனி, மாயாவாதம் சங்கரர் காலத்திற்கு முன்னரே தோன் றிற்றாயினும், அது தமிழகத்திற் பரவியது, அவரது காலத்திற்றான் என்பது உண்மையேயாயினும், அடிகள் போன்ற பேறறிவுடை யார்க்குச் சங்கரர் காலத்திற்கு முன்னர் அதனை அறிதல் இயலா தென்றல் பொருந்துவதன்றாம், மாயாவாத நூல் வேதவியாத முனிவ ரால்

செய்யப்பட்டது என்பதனை, 'இங்ஙனம் நால்வேறு வகைப்பட்ட ஏகான்மவாத நூல் செய்தவன் வியாதமுனிவன்' எனச் சிவஞானபாடியத்துட் கூறியவாற்றான் உணர்க. ஏகான்மவாதவகை நான்கனுள் மாயாவாதமே தலையாயதென்பது வெளிப்படை.
இவ்வாற்றான், சிவநெறியாளர்க்கு வடமொழியில் சிவாகமமே சிறப்பு நூலாவதன்றிப் பிற நூல்களுள் யாதொன்றும் அன்னதாகாமை பெறப்பட்டது. இவ்வரையறையில் நில்லாது, வியாத முனிவரது ஏகான்ம நூலைச் சிவநெறி நூலாக மேற்கொண்டு உரை வகுக்கப் புகுந்தமையால், நீலகண்ட சிவாசாரியர் சைவசித்தாந்தத்தோடு உள்ளத்தால் முரணாராயும், உரையால் முரணி நிற்பாராயினார் என்க, வேதத்தை வகைப்படுத்திப் பதினெண் புராணங்களையும் செய்த வியாத முனிவரது நூலை, இவ்வாறு பிரமாணம் அன்றென விலக்குதல் குற்றமாமன்றோ எனின், ஆகாது; எவ்வாறு எனின்,
'வேதந் துறைசெய்தான் மெய்துணியான் கைதுணிந்தான்'
எனப் பிற்காலத்தார் தாமே (குமரகுருபர அடிகள் - சிதம்பரச் செய்யுட் கோவை - 13.) ஓதினாராகலானும், அவர் அங்ஙனம் ஓதுதற்கு முதலாய்,
'கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்'
(சிவஞான முனிவர் மொழிபெயர்ப்பு; இதன் மூலம் சிவாசாரியர் பஞ்ச சுலோக வாக்கியம்) எனக் குறிக்கப்படும் பண்டை வரலாறு உண்மையானும், வேதவியாதர் குணவயப்பட்டு மயங்கினமை பெறப்படுதலான் என்க.
'மாயாவாதம் சங்கரர் காலத்திலன்றோ தோன்றியது என்பார்க்கு இங்ஙனம் செவ்வனே விடையிறுக்கமாட்டாதார், ஈண்டு அடிகள், 'மாயாவாதம்' என்றது, சூனியவாதமாகிய புத்த மதத்தை எனக் கூறி இடர்ப்படுவர், 'மாயை' என்னும் வாய்பாடு வைதிக மதங்கட்கன்றி, அவற்றிற்குப் புறமாய மதங்கட்கு ஏலாமைதானே, அவர் கூற்றுப் பொருந்தாமையை இனிது விளக்கும். அன்றியும் அடிகள் ஈண்டு வைதிக மதங்களை எடுத்தோதியதன்றி அவைதிக மதங்களை எடுத்தோதினாரல்லர். ஓதினாரெனின், ஆருக மதத்தையும் கூறியிருத்தல் வேண்டும் என்க. உலகாயத மதம் ஏனை மதங்கள் அனைத்திற்குமே புறம்பாவதென்பதுணர்க.
இம் மாயாவாதம், கடவுட்கும் உயிர்க்கும் இடையே உள்ளதாய், யாண்டும் உயர்ந்தோர் பலராலும் போற்றிக் கொள்ளப்பட்டு வரும் ஆண்டான் அடிமைத் திறத்தினை, முனிவர் ஒருவரது நூலைத் துணைக்கொண்டு போக்க உறுதி கொண்டு நிற்றலின், 'மிண்டிய' என அடைபுணர்த்தும், ஈன்று புறந்தந்து விளங்குவாளை, 'இவள் மலடி'

என்பார் கூற்றுப்போல, யாவராலும் உள்ளதாய்க் காணப்பட்டுப் பயன் தந்து வரும் உலகினை, விடாய் கொண்டோர்க்கு அதனைத் தணிக்க மாட்டாது வெறுந் தோற்றமாத்திரையாய் ஒழியும் கானல்நீர் முதலியவற்றோடு ஒப்பித்து, 'இஃதோர் பொய்த் தோற்றம்'எனக் கூறும் தமது முருட்டு வாதத்தினை, 'தற்கம், வாதம், செற்பம், விதண்டை, சலம், சாதி' முதலிய பாகுபாட்டுரைகளாற் சொற்சாலம் படவிரிக்கும் அவரது ஆரவார உரைகள், யாதுமறியா மக்களுள்ளத்தை மருட்சிக்குள்ளாக்குதலின், அதனை, சுழன்றடித்துப் பொருள்களைத் தலைதடுமாறாகப் புரட்டி மக்களை அல்லற்படுத்தும் பேய்க்காற்றின் செயலோடொப்பித்து, மாயாவாதமென்னும் சண்ட மாருதம் சுழித் தடித்து ஆஅர்த்து' என உருவகித்தும் அருளிச் செய்தார். 'மாயாவாதிகள்' என அதனை உடையார் மேல் வைத்து அருளாது 'மாயாவாதம்' என அவ்வாதத்தின் மேலே வைத்து அருளியதும், அதனது மயக்க மிகுதியைப் புலப்படுத்தற் பொருட்டாம். 'அதிற்பெரு மாயை எனைப் பல சூழவும்' எனப் பின்னர் வருவதனை (அடி58) இதற்குங் கூட்டியுரைக்க.

இவ்வாதம், வேதத்துள் உபாசனா காண்டத்தின் பின்னர்த் தாய் இறுதியில் நிற்கும் ஞான காண்டத்தையே பற்றிநிற்றலின், மேற்கூறிய கிரியாமார்க்கச் சமயங்களின் பின்னர் வைத்து அருளினார். இதனானே, இதன்நூல், 'உத்தர மீமாஞ்சை' எனவும், இம்மதம், 'வேதாந்தம்' எனவும் பெயர் பெறுவவாயின. உபநிடதங்களுள் 'அத்துவிதம்' எனவரும் சொல்லினைச் சிறப்பாகப் பற்றிக்கோடலின். 'இவ்வாதிகள் தம் மதத்தினை' 'அத்துவித மதம்' எனவும், தம்மை 'அத்துவிதிகள்' எனவும் கூறிக்கொள்ளினும், 'ஏகான்ம வாதம்' என்பது இதற்கு ஏற்புடைய பெயராகும், 'மாயாவாதம்' என்பது சிவநெறியாளர் இதற்கு இட்ட பெயராம்.

உத்தர மீமாஞ்சை வேதத்தின் ஞானகாண்டத்தை ஆராய்வ தாயின், அதனை இகழ்தல் குற்றமாமன்றோ எனின் அன்றாம். என்னையெனின், வேதத்தின் பொருளை ஒருதலையாக இனிது விளங்க எழுந்தவையே சிவாகமங்களாதலின் அவற்றை இகழ்ந் தொதுக்கி, அவற்றொடு மாறுபட எழுந்த பிற நூல்களைக் கொள்வதே குற்றமாதலின் என்க, இதனை,

'............ நீண்மறையின் ஒழிபொருள், வேதாந்தத்
தீதில் பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம்; பிறநூல்
திகழ்பூர்வம்; சிவாகமங்கள் சித்தாந்த மாகும்'

என்றும் (சிவஞான சித்தி - சூ. 8-15) 'வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்' என்றும் (சிவப்பிரகாசம்-7.) சிவநெறியாசிரியன்மார் இனிது விளக்கிப் போந்தவாறறிக. இன்னும் அவர், சிவாகமங்களை யொழித்து

வேதத்தின் சார்பாய் எழுந்த நுல்கள் அனைத்தும் பசுத்தன்மை யுடையோரால், தாம்தாம் அறிந்தவாற்றாற் செய்யப் பட்டன என்பதை,

அருமறை,ஆ கமம் முதல்நூல், அனைத்தும் உரைக்
கையினால்;
அளப்பரிதாம் அப்பொருளை; அரனருளால் அணுக்கள்
தருவர்கள்,பின் தனித்தனியே தாமறிந்த அளவில்
தர்க்கமொடுத் தரங்களினால் சமயம்சா தித்து
-சிவஞானசித்தி, சூ. 8-14

என எடுத்தோதியதுங் காண்க.

56-57. 'உலகாயதர்' எனப் பன்மையாற் கூறாது ஒருமையாற் கூறினார். அவரது மதம் ஏனை எல்லா மதங்களினுங் கீழ்ப்பட்டதாய அதனது இழிபுணர்த்தற் பொருட்டு.

'காட்சி ஒன்றே அளவை; அதற்கு வாராதவாறு உரைப்பன வெல்லாம் போலிகள்; ஆகவே, முற்பிறப்பு மறு பிறப்பு, வீடுபேறு முதலியவற்றைக் கூறி, உலகத்தாரை, அலைக்கழித்தல் வேண்டா' என்பதே உலகாயதமதம். 'நாத்திகம்' எனப்படுவதும் இதுவே. உலகாயதருள்ளும், 'உடம்பே உயிர். மனமே உயர், பிராணவாயுவே உயிர்' என்றாற்போலும் வேறுபட்ட கொள்கை நூல்களையுடையார் உளராகலின், அந்நூல் வேறுபாடுகளை, 'கலாபேதம்' என்றார், கலா- கலை; நூல். உலகாயதரது கொள்கைகள் பலவும் அந்நூல்களில் கிடைத்தலால், அந்நூற்பொருளை அம்மதமாகிய பாம்பினது கடிய விடமாக உருவகித்தார். கடுவிடம் - பெருநஞ்சு; 'அஃதாவது மீளுதற்கரிய நஞ்சு' என்றவாறு. உலகாயதம், ஏனை மதங்கள்போல மக்களை உள்ளவாறு நெறிப்பட்டொழுகச் செய்யாது 'அச்சமே கீழ்கள தாசாரம்; எச்சம் - அவாவுண்டேல் உண்டாம் சிறிது' (குறள் - 1075) என்றபடி அரசனாணையும், பிறவுமாகிய புறப்பொருள்கள் சார்பாக நெறிப்பட்டொழுகச் செய்தலால், உள்ளத்தால் பழி பாவங்கட்கு அஞ்சுதலைப் போக்கிக் கேடு பயத்தலின், அதனைக் கடுவிடமாக உருவகிப்பார், அதற்கேற்ப, அதனையுடையாரைப் பாம்பாக உருவகித்தார்,

58. உலகத்தைபொய்த்தோற்றம் எனவும், அதனால் கடவுட்கும், உயிர்க்கும் இடையே காணப்படும் ஆண்டவன் அடிமைத் திறமும் அன்னதே எனவும் உபதேசிக்கும் மாயாவாதிகளது உபதேச மொழியைக் கேட்டோர், கடவுளும், புண்ணிய பாவங்களும் சுவர்க்க நரகங்களும் இல்லை என்பதனை வலியுறுத்தி உணர்த்தும் உலகாய தரது நாத்திக மதத்தில் எளிதின் வீழ்ந்து கெடுவர் என்பது தோன்ற, அவர்களை மாயாவாதிகளை அடுக்க வைத்து அவர் கூற்றினைக்

கடவுளுணர்விற்கு மாறாவன பலவற்றினும் நேர்மாறாவதெனக் குறிப்பான் உணர்த்தி முடித்தார். எய்தி - எய்துதலால், மாயை - மயக்கம். எனைப் பல - எத்துணையோ பல.
59. தப்பாமே - தவறிப்போகாதபடி. 'தாம்பிடித்தது' எனச் செயப்படுபொருள் வினைமுதல் போலக் கூறப்பட்டது. பிடித்தது, முன்னர்க் கூறிய, முனிவிலாத பொருளை அடையக் கருதிய. கருத்து (அடி.*43*). 'சலியாது' என்பது ஈறு குறைந்தது. இதன்பின்னர். 'நின்று' என்பது எஞ்சி நின்றது, 'ஆத்தமானார்' (அடி.*46*) என்றது முதலாக இதுகாறும் வந்தவற்றை, ஏறவும், பெருகவும், காட்டவும், மலையவும், ஆர்த்தலால் சூழவும், எய்தலால் சூழவும், தாம் பிடித்தது தப்பாமே சலியாது நின்று' என முடிக்க. இதனுள் 'தாம்' என்றது, பின்னர், 'தழைப்பவர்' (அடி.*86*) எனப் படுவாரைக் குறித்தது,
60-61. 'தழலது', 'மெழுகது' என்றவற்றில் அது, பகுதிப் பொருள் விகுதி. 'மெழுகுபோல உளம் உருகித் தொழுது' என மாற்றி உரைக்க. கம்பித்து - நடுங்கி. தொழுவது, சிவபெருமானை என்பது உய்த்துணர வைக்கப்பட்டது, ஞானத்தைத் தருபவன் அவனே என்பது வெளிப்படை என்பது தோன்றுதற் பொருட்டு.
62-64. பரவி - துதித்து., கொடிறு - 'குறடு' என்னும் கருவி, 'விடாது'என்றதனைத் தனித்தனி கூட்டியுரைக்க, 'படியேயாகி' என்றது, 'இறுகப் பற்றிக் கொண்டு' என்றவாறு,
65-67. 'ஆணி அறைந்தாற்போல' என்றாராயினும், 'அறைந்த ஆணிபோல' என்பதே கருத்து. 'பசுமரத்தின் கண் அறையப் பட்ட ஆணிபோல இடையறாது நிற்கும் நல்ல அன்பினால் கசிவது' என்க. நல்லன்பு - மெய்யன்பு. கசிவது- துளிப்பதாகி. கண்ணீர், 'அது பெருகிக் கடல் என்னும்படி மறுகப்பெற்று' என்க. மறுகுதல், இங்கு, வீழ்தலைக் குறித்தது, அகம் குழைந்து - மனம் கரைந்து; என்றது, 'அந்தக் கரணங்களும் அன்பு வடிவாகப் பெற்று' என்றபடி. 'அனுகுலமாய் அகங்குழைந்து'என மாறிக் கூட்டுக. 'அனுகூலமாய்' என்றது குறுகிநின்றது, 'அந்தக்கரணங்கள் முன்னர் மாறிநின்ற ஐம்புல வழியே தம்மை ஈர்த்து அலைத்தாற்போல அலையாது, தம்மோடு ஒத்துநிற்கப் பெற்று என்றவாறு. மெய்விதிர்த்து - உடல் நடுங்கி இவை யெல்லாம் இடையறாத நல்லன்பின் செயலாக அருளினமையின், முன்னர், உளம் உருகுதல் முதலாகப் பரவுதல் ஈறாக அருளியவை ஒரோவழி நிகழும் பொதுவன்பின் செயலாம் என்பது உணர்க.
68-71. சகம் - உலகம், 'தம்மைப் பேய் என்று சிரிப்ப' என மாற்றிக் கொள்க. பேய் என்றலாவது, 'அறிவை இழந்தார்' என்றலாம். சிரித்தல் - எள்ளி நகையாடுதல். 'சகம் சிரிக்கும்படி நாண் நீங்கப் பெற்று' என்க.

நாண் நீங்குதல் நன்றாமோ எனின், 'அவமதிப்பும் ஆன்றமதிப்பும் இரண்டும் - மிகைமக்களான் மதிக்கற் பால' *(நாலடி 163.)* என்பவாகலின், உலகர் இகழ்ச்சிக்கு இறைவன் அடியார் நாணார் என்க. 'நாடவர்'என்றது, 'அவர்' என்னும் சுட்டுப் பெயரளவாய் நின்றது. பூணாக - அணிகலனாய் நிற்ப, உலகத்தாரால் இகழப் பெறுதல் இறைவன் அடியார்க்குச் சிறுமையாகாமையே யன்றிப் பெருமையாயும் நிற்றலின்,'பழித்துரை பூணதுவாக' என்றார். நாணது, பூணது என்றவற்றில் அது, பகுதிப் பொருள் விகுதி, 'பூணது' என ஒருமையாகக் கூறியது, 'பூண்' என்னும் இனத்தை நோக்கி. கோணுதல் - மனம் திரிதல்; திரிவு, வெகுளியான் என்க, சதுர் - திறமை, அஃதாவது, அவர் போலத் தாமும் உலகியலில் வல்லராகல். அந்நிலை மனத்தினும் தோன்றாது ஒழிதலின், 'இழந்து' என்றார். அறிமால் - அறிகின்ற மயக்கம்; அஃதாவதுஉலகியலை அறிந்தே அதனைப் பொருட்படுத்தாது நிற்றல். எனவே, பித்துக்கொண்டோர் உலகியலை அறியாது மயங்கி அலமரும் மயக்கம் போல்வதன்று என்றவாறாயிற்று. அறிவதையே, 'மால்' என்றமையின், 'அறி' என்னும் காலங்கரந்த பெயரெச்சம் வினைப் பெயர் கொண்டதாம், 'அறிதுயில்' என்பதற்கும் இது பொருந்தும்.

72-87. சாருங் கதி - அடையத்தக்க நிலை; வீடுபேறு. 'கதியது' என்றதில் அது, பகுதிப் பொருள்விகுதி. 'கதியதனை' என இரண்டனுருபு விரித்து,' என வருவதனோடு முடிக்க. பரமா அதிசயமாக - மேலான பெருவியப்பாம்படி; இதனையும், அத னோடே முடிக்க. கற்றா - கன்று ஆ; கன்றையுடைய பசு. 'கதறியும் பதறியும்' என்றது, 'அன்பு மீதூரப் பெற்று' என்னும் பொருட்டாய், 'மனமென' என்றதற்கு முடிபாயிற்று. இது, 'நினையாது' என வரு வதில், நினைத்தல் வினையோடே முடிந்தது. எனவே, 'பிறதெய் வங்களிடத்து அன்பு செலுத்துதலைச் செய்யாது' என்றவாறாயிற்று. இறைவன் குருவாகி அருளுதற்குமுன் முப்பொருள்களின் இயல்பு அனுபவமாய்த் தோன்றாமையின், அக்காலத்தில் ஏனைத் தெய்வங் களையும் சிவபெருமானோடு ஒப்பக்கொண்டு தொழுதல் உண்டாக, அவன் குருவாகிவந்து அருளியபின்பு அவை அனுபவமாய்த் தோன்ற லின், மற்றோர் தெய்வத்தைக் கனவிலும் நினையாத நிலை உளதாதல் பற்றி, 'மற்றோர் தெய்வம் கனவிலும் நினையாது - குருபரனாகிவந்து அருளிய பெருமை' என்று அருளினார்.

'நினையாது' என்றதனை, 'நினையாமே' எனத் திரித்து, 'நினையாமே வந்து அருளிய' என முடிக்க. 'அரும்பரம்' என்பது,' அருபரம்' எனக் குறைந்துநின்றது. அரும்பரத்து ஒருவன் - அரிய பரம் பொருளாகிய இறைவன். 'பரத்து' என்றதில் அத்து, அல்வழிக்கண் வந்த சாரியை.

அவனி - பூமி, 'வந்து குருபரனாகி அருளிய பெருமை' என்றதனை, 'குருபரனாகி வந்து அருளிய பெருமை' என மாற்றியுரைக்க. 'பெருமை', 'சிறுமை' என்றன, அவ்வளவினவான கருணையைக் குறித்தது. பெருங்கருணையாவது, அருளப்படுவாரது தரத்தினளவாகாது, அதனின் மிகப் பெரிதாவது. அஃது ஏனக் குருளைக்குத் தாயாய் வந்து பால் கொடுத்தமை போல்வது. இதனை, 'நாய்க்குத் தவிசிட்டாற் போல' என அடிகள் பலவிடத்தும் எடுத்தோதியருளுவார். அதனை அறியாது, 'எம்தரத்திற்கு இஃது அவனாற் செயற்பாலதே என இகழாது' என்பார். 'சிறுமையென்று இகழாதே' என்றார். தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகிய பின்னர் ஒரோவழி உளம் உருகி ஆடிப் பாடித் தொழுதலும், அதன் பின்னர்ப் பலநாள் செல்ல, சகம் பேய் என்று தம்மைச் சிரித்தலைப் பொருட்படுத்தாது இடையறா அன்பின் இறைவனையே நாடி நிற்றலும் செய்யினும், அனாதி தொட்டு அளவிலா ஊழிக் காலங்காறும், ஓர் இமைப்பொழுதும் நீங்காது உயிர்க்குயிராய் உடன் நின்று நோக்கி உபகரித்து வந்த அவனது அருட்டிறத்தைச் சிறிதும் நினையாது மறந்தமையேயன்றி அதனை மறத்தலாகாது' என, அறிவோர் உரைத்த பல அருளுரைகளையும் அழித்துப் பேசிவந்த பெருங் குற்றத்தைச் சிறிதும் திருவுளத்தடையாது, இடையறா அன்பு தோன்றிய துணையானே வெளிநின்று அருள் புரிந்த திறத்தினை அங்ஙனம் அருளப் பட்டாரது தரத்தினளவானதே என்றல் எத்துணை ஓர் அறியாமையாதல் உணர்க.
இதனானே, முதற்கண் ஒரோவழி உளம் உருகித் தொழுதலும், பின்னர் இடையறா அன்பின் சதுர் இழந்து அறிமால் கொண்டு நிற்றலும் நிகழும் என்பதும், அது நிகழ்ந்தபின்னரே இறைவன் குருபரனாகி வந்து அருளுவான் என்பதும் போந்தன. குருபரனாகி அருளுவதற்குமுன் நிகழும் அந்நிலைகளே சத்திநிபாதமாவன. அவற்றுள், முன்னையது 'மந்ததரம், மந்தம்' என இருவகைப்பட்டும், பின்னையது, 'தீவிரம், தீவிரதரம்' என இருவகைப்பட்டும் நிகழும். அவற்றுள், 'நாணது ஒழிந்து' என்றது முதல், 'அறிமால் கொண்டு' என்றது ஈறாக அருளப்பட்டன தீவிரதர சத்திநிபாதமாம் என்க, 'இகழாதே' என்பது முதலியன, இறைவன் குருபரனாகிவந்து அருளியதன் பின்னர் நிகழும் ஞானச் செய்திகளாம்.
'நிழலது' என்றதில் அது,பகுதிப் பொருள் விகுதி. 'கரையது' என்றதும் அது. 'அத்திசை முன்பின்னாகி' எனக் கூட்டுக, அத்திசை - அவ்விடத்து; என்றது, திருவடியுள்ள இடத்தை. அடியார்க்குத் துணையாவன ஆசிரியனது அடியிணையே யாதலின், அதனையே அருளிச் செய்தார்,

முன்பின் ஆகி - முன்னாதல் பின்னாதல் அணுகி. முனியாது - வெறாது நின்று; வெறுத்தல், மெய்வருத்தம் காரணமாக உளதாவது. அன்பு மீதூர்ந்தவிடத்து அவ்வருத்தந் தோன்றாமையின், 'முனியாது' என்றார். அதனை,

'.......... மெய்ம்மையின் வேறு கொள்ளாச்
செவ்விய அன்பு தாங்கித்
திருக்கையிற் சிலையுந் தாங்கி
மைவரை என்ன ஐயர்
மருங்குநின் றகலா நின்றார்'

எனவும்,

சார்வருந் தவங்கள் செய்து
முனிவரும் அமரர் தாமும்
கார்வரை அடவி சேர்ந்துங்
காணுதற் கரியார் தம்மை
ஆர்வமுன் பெருக ஆரா
அன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார்
நீளிருள் நீங்க நின்றார்.

எனவும்,

'கருங்கடல் என்ன நின்று
கண்துயி லாத வீரர்'

எனவும்,

'எப்பொழுதும் மேன்மேல் வந் தெழும் அன்பால் காளத்தி
அப்பர்எதிர் அல்உறங்கார்; பகல் வேட்டை யாடுவார்'

எனவும்,

'கருமுகில் என்ன நின்ற
கண்படா வில்லி யார் தாம்'

எனவும் *(தி.12* கண்ணப்பர் புராணம்*-127,128,132, 151, 166.)* சேக்கிழார் நாயனார் இனிது விளங்க அருளிச் செய்தமை யறிக,

இந்நிலை நோக்கியன்றே,

'கண்ணைப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்'

(தி.8 திருக்கோத்தும்பி *- 4)*என அடிகள் தாமே தம் நிலைக்கு இரங்கி யருளிச் செய்தார் என்க.

'நெக்கு நெக்கு' என்றதற்கு வினை முதலாகிய, 'மனம்' என்பது வருவிக்க.
'புலன்' என்றது, ஐம்புலன்கண்மேற் செல்லும் அறிவை, அஃது ஒன்றுதலாவது, அவற்றின்மேற் செல்லாது, ஆசான் மூர்த்தியையே அறிந்து நிற்றல், அவ்வழிக்காண்டல் கேட்டல் முதலியன

அவன்பொருட்டே நிகழ்தலின், அங்ஙனம் ஒன்றும் தன்மை எய்திய அதனை, 'நன்புலன்' எனச் சிறப்பித்தார், நாத - தலைவனே, அரற்றுதல், பிரிவுக் குறிப்புத் தோன்றிய பொழுதாம். மொட்டித்தல் - அரும்புதல்; என்றது, குவிதலை. கரம் மொட்டித்து இருதயம் மலர' என்றது நயம், 'மலர்' என்றதனை இருதயத்திற்குங் கூட்டுக. இதனானே, முன்னர், இருதயம் மொட்டித்து, கரம் மலர்ந்திருந்தமை பெறப்பட்டது. கண்களிகூர்தல், ஆசிரியத் திருமேனியைக் காணும் காட்சி யாலாம், 'கண்' என முன்னர் வந்தமையின், பின்னர் வாளா, 'நுண்துளி அரும்ப' என்றார். நிறுப்பவும் நில்லாது வெளிப்படுதல் தோன்ற, 'நுண்துளி' எனவும், 'அரும்ப' எனவும் அருளிச் செய்தார். 'ஆர்வலர் புன்கணீர்' *(குறள்-71)* என்றார் திருவள்ளுவ நாயனாரும். கண்ணீரை நிறுத்த முயல்வது, மெய்யடியார் முன் தாமும் பேரன்புடைய அடியராய்த் தோன்றுதற்கு வெள்கி என்க.

சாயா - மெலியாத. தழைப்பவர் - பெருக நிற்பவர். பெருகுதல், ஆசான் மூர்த்தியைக் காண்டல், அவனது அருட்டிறத்தை நினைதல் முதலியவற்றால் இயல்பாகவே நிகழும் என்க. 'தாயே' என்னும் பிரிநிலை ஏகாரம், சிறப்புணர்த்தி நின்றது. வளர்த்தது, ஞானத்தையாம். 'வளர்த்தனை' என்றது வினையாலணையும் பெயர். அதன் பின்னர் நான்கனுருபு விரிக்க, போற்றி - வணக்கம்.

இதனுள் 'உடல் கம்பித்து, அகம் குழைந்து, கரமலர் மொட்டித்து' என்றாற்போல வந்த பல சினைவினையும் குணவினை யும், அவற்றையுடைய முதல்மேலும், குணிமேலும் நின்றன, 'யானை முதலா' என்றது முதலாக இதுகாறும் வந்தன பலவற்றையும், பிறர்மேல் வைத்துப் பொதுப்பட அருளிச் செய்தாரா யினும் தம் அனுபவச் செயலையே அவ்வாறு அருளினார் என்பது உணர்ந்துகொள்க.

88, 89. மெய் - உண்மை ஞானம். 'வேதியன்' என்றது, ஆசாரியனை. வினை, முன்னே செய்யப்பட்டுக் கிடந்தனவும், இஞ் ஞான்று செய்யப்படுவனவுமாம். இவை முறையே, 'சஞ்சிதம்' எனவும், 'ஆகாமியம்' எனவும் சொல்லப்படும். சஞ்சிதத்தினின்றும் இப் பிறப்பிற்கு நுகர்ச்சியாய் அமைந்தவை 'பிராரத்தம்' எனப்படும். இவற்றுள் முன்வினையை அருட்பார்வையால், நெருப்புச் சேர்ந்த விறகுபோல அழிந்தொழியப் போக்கியும், இஞ்ஞான்றை வினையை, உணக்கிலாத வித்துப் போல மெலிவித்தும் கெடுத்தலால், சஞ்சிதத்தினின்று பிராரத்தம்; பிராரத்தத்தினின்று ஆகாமியம் என்று ஆகி, மீளவும் ஆகாமியம் சஞ்சிதமாய் வளர்தலாகிய தொடர்ச்சி அற்றொழிதலால், 'வினை கெடக் கைதர வல்ல கடவுள்' என்றார்.

உற்றுழி உதவுதலை, 'கை கொடுத்தல்' என்னும் வழக்குப்பற்றி, 'கைதர வல்ல' என்றார். 'பிறவிக் கடலின் ஆழாது, கைகொடுத்து ஏற்ற வல்ல' என்றது குறிப்பு. ஏனையோர் அது மாட்டாமையின், 'வல்ல' என்றார். இறைவற்குக் கையாவது திருவருளே என்க.

முதற்கண் அன்பரை ஆட்கொள்ளும் முறையை விரிவாக எடுத்தோதிப் போற்றி, அப்பால், முன்னர் மதுரையிலும், இறுதியில் தில்லையிலும் தமக்கு அருள்புரிந்தும், புரியவும் நிற்கும் நிலையினை நினைந்து போற்றுகின்றார்,

90-91. ஆடக மதுரை - பொன்மயமான மதுரை. இது, செல்வச் சிறப்பை விளக்கிற்று, அரசு - தலைவன், அரசனாய் இருந் தான் எனக் கூறப்படும் வரலாற்றோடு இயைய உரைப்பாரும் உளர். மதுரையை, முதற்கண் கூறினமையின, அஃதே அடிகள் முன்னர் வாழ்ந்த இடம் என்பது பெறுதும். மதுரை கூடல், எனப் பெயர் பெற்றமைக்கு வரலாறு ஒன்று கூறப்படினும், 'சங்கம் இருக்கும் இடம்' என்பதே பொருளாதல் வேண்டும். 'உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்' என்று அருளுவார்.

திருக்கோவையாருள்ளும். 'கூடல், கூட்டம்' என்பன ஒருபொருட் சொற்கள். சங்கத்தை, 'புணர் கூட்டு' *(*மதுரைக் காஞ்சி - அடி*.762)* என்றார் மாங்குடி மருதனார். எனவே, 'மதுரை' என்றது திருக்கோயிலில் இருத்தல் நோக்கியும், 'கூடல்' என்றது, சங்கத்தில் இருத்தல் நோக்கியும் அருளியவாறாயிற்று. அல்லாக்கால், 'மதுரை' என்றதனையே, மீளவும் பிறிதொரு பெயராற் குறித்தல் வேண்டாமையறிக. குருமணி - மேலான ஆசிரியன், சங்கத்தார்க்குத் தலைமை பூண்டு நின்றமை பற்றி, இவ்வாறு அருளிச் செய்தார்,

92-93. தமிழகம், பரதகண்டத்தின் தென்பகுதியாதல் பற்றி, அதன்கண் உள்ள தலங்களைத் தெற்கின்கண் உள்ளனவாகக் கூறுப; அதனால், 'தென்தில்லை' என்றார். பின்னும் இவ்வாறு வருவன பல உள. இதற்கு, 'தென் - அழகு' என்றே உரை கூறிப் போதலும் செய்ப. ஆடி - ஆடுபவன்; இப்பெயர் விளியேற்று நின்றது, இன்று - உன்னை யான் அடையப் பெற்ற இக்காலத்தில். 'ஆரமுது' என்றது, அமுதம் கிடைத்தற்கரிய பொருளாதலை விதந்தவாறு. அதனால், இறைவன் காண்டற்கரியன் என்பது உணர்த்தப்பட்டது. 'அமுது' முதலியன வாக இங்கு வருவன பலவும் உவம ஆகுபெயராதல் அறிக. இவ்விரு தலங்களையும் அருளிய பின்னர், அவனது பெருமைகளை எடுத் தோதிப் போற்றுகின்றார்.

94-95. மூவா - கெடாத. மறைகளை *(*வேதங்களை*)*, 'நான்கு' என்றல், 'அறம், பொருள், இன்பம், வீடு' என்னும் பொருள் பற்றிய வழக்கென்றலே பொருந்துவதாம், என்னையெனின் சொல்பற்றி 'மூன்று'

எனவும், 'நான்கு' எனவும் 'அளவில்லன' எனவும் பலவாறு கூறப்படுதலின், 'மறை' என்பதற்கும், 'வேதம்' என்பதற்கும் சொற் பொருள் யாதாயினும், 'உண்மை முதனூல்' என்பதே பொருளாம். அஃது எக்காலத்திலும் எவ்விடத்திலும் எம்மொழியிலும் தோன்றுதல் கூடும். அத் தோற்றம் இறைவன் திருவருள் முன்னிற்றலானேயாம், ஆதலின், 'மறைகள் ஈசன் சொல்' *(சிவஞான சித்தி. சூ. 2.30)* என்றல் பொருந்துவதேயாகும்.

'உற்ற குறியழியும் ஓதுங்காற் பாடைகளில் சற்றும் பொருள்தான் சலியாது'

(உண்மை விளக்கம்- 41.) என்றபடி, சொல்லுக்கன்றிப் பொருட்கு அழிவின்மையின், 'மூவா நான்மறை' என்று அருளினார். இனி, நான்மறையாவன இருக்கு முதலியவே எனினும், மூவாமை, பொருள் பற்றிக் கூறியதாமன்றிச் சொல் பற்றியதாகாமையறிக. 'முதல்வன்', 'ஆக்கியோனும், அவற்றால்' உணர்த்தப்படும் தலைவனும் என்க. சேஆர் - இடபம் பொருந்திய. 'வெல்கொடி' என்ற வினைத் தொகையில், 'கொடி' என்பது, 'ஆறு சென்றவியர்' என்பதில், 'வியர்' என்பது போலக் காரியப் பெயர்.

96-97. 'மின் ஆர்' எனப் பிரித்து, 'ஒளி பொருந்திய' என்றும், 'மின்னார்' என ஒரு சொல்லாகவே கொண்டு. 'உமையை உடைய' என்றும் பொருள் கொள்க. விகிர்தன் - உலகியலின் வேறுபட்டவன். கல் - கல்லினின்றும். 'வானத்தை வில்லா வளைத்தல், மணலைக் கயிறாத் திரித்தல்' என்பன போல 'கல்லில் நார் உரித்தல்' என்பதும், செயற்கருஞ் செயலைச் செய்தலைக் குறித்து வழங்கப்படுவதோர் உவம வழக்கு. இதுவும் ஒட்டணியின் பாற்படும். எனவே, 'கல்லில் நார் உரித்தது போலும் வியக்கத் தக்கதொரு செயலைச்செய்தவனே' என்பது பொருளாயிற்று. இது, தம்மை அன்பராக்கிய செயலைக் குறித்தே அருளியதாம். தம் வன்கண்மையை உணர்த்தத் தம்மை, 'கல்' என்று அருளி, இறைவனது அருளுடைமையை உணர்த்த, 'கனி' என்று அருளிச் செய்தார். 'நார் என்பது, அன்பினையும் குறித்துநிற்றல்' காண்க.

98-99. 'காவாய்' என்றது, 'முன்னர்உலகியலின் நீக்கி அங்ஙனம் ஆண்டுகொண்டவாறே, இனியும் அதன்கண் செல்லாத வாறு காத்தருள்' என வேண்டியதாம். கனகம் - பொன். ஆ என்னும் இடைச்சொல் அடுக்கி, 'ஆவா' என வந்தது, இஃது, 'இரக்கம் வியப்பு' என்பவற்றைக் குறிக்கும் இடைச்சொல்; இங்கு இரக்கங்குறித்து நின்றது. 'அருளாய்' என்றது, 'உனது திருவடிப் பேற்றினை அளித் தருள்' என்றதாம். 'ஆவா' என்றது, அது பெறாமையால் உளதாகும் வருத்தம் பற்றி. 'எனக்கு' என்பது, 'என்றனக்கு' எனச் சாரியை பெற்று வந்தது; 'என்றெனக்கு'

எனப் பாடம் ஓதுதலுமாம்.
100-101. 'படைப்பாய்' முதலிய மூன்றும் விளிகள். இடர்- பந்தம்; அதனைக் களைதல் கூறவே, அஃது, 'அருளல்' என்பதைக் கூறியதாயிற்று. எந்தாய் - எம் தந்தையே.
102-103. ஈசன் - ஐசுவரியம் உடையவன்; இவ் வட சொல்லைத் தமிழில், 'செல்வன்' என்பர் ஆசிரியன்மார். இறைவன் - எப்பொருளிலும் தங்குவோன். 'தேசு' எனக் குற்றியலுகர ஈறாய் நிற்கும் வடசொல், அம்முப்பெற்று, 'தேசம்' என வந்தது. 'குன்று, குன்றம்; மன்று மன்றம்' என்றற்றொடக்கத்தன போல. இன்னோரன்ன வற்றை, 'குற்றிய லுகரம் அக்குச்சாரியை பெற்றன' (தொல் எழுத்து *-418)* என்பர் ஆசிரியர் தொல்காப்பியர். சிவபெருமான், தீத்திரள்போலும் திருமேனியையன்றித் தூய பளிங்குத் திரள் போலும் திருமேனியையும் உடையவனேயாம். இனி, இதனை, திருநீற்றுப் பூச்சுப் பற்றிக் கூறப்படுவதாகவும் உரைப்பர்.
104-105. அரைசு - அரசன். விரை - வாசனை. சரணம் - திருவடி. 'விரைசேர்' என்றது, மலர்போறலைக் குறித்தது.
106-107, வேதி - வேதத்தை உடையவன். விமலன் - மாசில்லாதவன். ஆதி - எப்பொருட்கும் முதலானவன். அறிவு - அறிவே வடிவாயுள்ளவன்.
108-109. கதி - எவ்வுயிரும் சென்று சேரும் இடமாய் உள்ள வன். இன்பவடிவினனாதல் பற்றி, 'கனியே' என்றார். நம்பன் - விரும்புதற்குரியவன்.
110-111. உடையான் - எப்பொருளையும் தனக்கு உடைமையாகவும், எவ்வுயிரையும் தனக்கு அடிமையாகவும் உடையவன். உணர்வு - உயிர்கட்கு அறிவைப் பயப்பவன். 'கடையேனது அடிமைத் தன்மையையும் பொருட்படுத்தி நோக்கினாய்' என்றது, 'அதனை மகிழ்ந்து ஏற்றுக் கொண்டாய்' என்றபடி.
112-113. ஐயன் - வியக்கத் தக்கவன்; வியப்பு, பல்கோடி அண்டங்களையும் தன்னுள் அடக்கிநிற்கும் பெரியனாய் நிற்கும் நிலைபற்றித் தோன்றுவது. அணு - அவ்வாறே சிறியதிற் சிறியனு மாயவன். சைவன் - சிவம் (மங்கலம்) உடையவன். தலைவன் - யாவர்க்கும் தலைவன்.
114-115. குறி - உலகில் காணப்படும் ஆண் பெண் வடிவங் கள். குணம் - அவற்றிற்கு அமைந்த இயல்புகள். நெறி - அவற்றிற்கு அமைந்த ஒழுகலாறுகள். நினைவு - அவ்வொழுகலாறுகட்கிடையே அவற்றது உள்ளங்களில் எழும் எண்ணங்கள். இவை அனைத்திலும் இறைவன் கலந்து நிற்கும் கலப்புப் பற்றி அவனை அவையேயாக அருளினார். பின்னரும் இவ்வாறு அருளப் படுவனவற்றை அறிந்து கொள்க.

116-117. மருந்து - அமுதம். தேவர்கட்குக் கிடைத்துள்ள அமுதம் அன்று என்பார், 'வானோர்க்கரிய மருந்து' என்றார். ஏனோர், மக்கள். வானோர், தம் சுவர்க்கபோகத்தில் மயங்கி வழி படாது காலங்கழித்தலின், இறைவன் அவர்கட்கு அரியனாயும், மக்கள் அவ்வாறன்றி உலகியலின் துன்பத்தை உணர்ந்து அதனை நீக்க வேண்டி வழிபட்டு நிற்றலின் அவர்க்கு எளியனாயும் நிற்கின்றான் என்க. 'இப்பூமி - சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு' *(தி.8 திருப்பள்ளி. 10)* எனப் பின்னரும் அருளிச் செய்வார்.

118-119. சுற்றம் - வழித்தோன்றல்கள். மூவேழ் தலை முறையாவன, தன் தந்தைவழி, தாய்வழி, தன் மனைவிக்குத் தந்தைவழி என்பவற்றுள் ஒவ்வொன்றினும் ஏழாய் நிற்கும் தலை முறைகளாம். இவைகளைச் சென்றகாலம் பற்றியும், வருங்காலம் பற்றியும் கொள்க. ஒரு குடியுள் ஒருவன் செய்த நன்மை தீமைகள், முன்னும் பின்னும் அவனது இம் மூவேழ் தலைமுறையில் உள்ளாரை யும் சென்று பற்றும் என்பது வைதிக நூற்றுணிபு. அதனால், 'தன்னால் ஆட்கொள்ளப்பட்ட அடியவரது மூவேழ் சுற்றங்களையும் நரகின்கண் அழுந்தாது மீட்டருள்வான்' என்று அருளிச் செய்தார். இவ்வாறே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும்,

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம்; மடநெஞ்சே, அரன்நாமம்
கேளாய்; நம் கிளைகிளைக்கும் கேடுபடாத் திறம்அருளிக்
கேளாய நீக்குமவன் கோளிலிஎம் பெருமானே.

(தி.1. ப.62. பா.1) என அருளிச் செய்தல் காண்க.

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

(குறள் - 62.) என்று அருளியதும், இதுபற்றி.

'மனம் தூயார்க்கு எச்சம் நன்றாகும்'

(குறள் - 456.) என்றமையால் நன்மக்கட்பேற்றிற்கு மனமொழி மெய்களின் தூய்மையும், தவமும் வேண்டும் என்பது விளங்கும். விளங்கவே,

'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்'.

என்னும் அருமைத் திருக்குறளை*(138)*ப் பொன்னேபோற் பொதிந்து போற்றுதல் இன்றியமையாததொன்று என்பது போதரும். இவ்வாறு சுற்றத்தையும் காக்கும் வன்மையுடையன் என்பார், 'அருள் அரே' என்று அருளினார். முரண் - வலிமை.

120-121. அடியவர், தம் அடிமைத் திறம் திறம்பாது நிற்பினும், இறைவன்

தான் அவரொடு தோழமை முறையிலும், உடன் பிறந்தார் முறையிலும் எளியனாய் நின்று அருளுதலை, 'தோழா, துணைவா' என்பவற்றால், அருளிச் செய்தார். வாழ்வு - நல்ல வாழ்க்கை. வைப்பு - சேம நிதி.

122-123. முத்தன் - பாசத்தினின்றும் நீங்கினவன். இஃது இயல்பாகவே நீங்கியதாம். இஃது,'அனாதி முத்தத் தன்மை' எனப்படும். முதல்வன் - எப்பொருட்கும் முன்னுள்ளவன். அத்தன் - தந்தை. அரன் - பாசங்களைத் தேய்ப்பவன்.

124-125. 'உரை' என்பது, 'பாச ஞானம்' எனவும், 'உணர்வு' என்றது, 'பசு ஞானம்' எனவும் கொள்ளப்படும். 'உரை யுணர்வு', உம்மைத்தொகை. இறந்த - கடந்த. ஒருவன் - தனக்கு நிகராவது ஒரு பொருளும் இல்லாதவன். விளைவு - நிகழ்ச்சி; அஃது ஆகுபெயராய், அதனது காரணத்தின் மேல் நின்றது, காணப்படும் சிறப்புப் பற்றி, கடல் சூழ்ந்த உலகத்தையே எடுத்தோதினார்.

126-127. அருமை, காணலாகாத நிலை; அது, கருவி கரணங்களாகிய உடம்பொடு நிற்கும் நிலையாம், அதன் கண்ணே உள்ள எளிமையாவது, அந்நிலையிற்றானே கண்ணாற் காண எழுந் தருளி வருதலாம். அழகு - அழகிய திருமேனியையுடையவன்; இரு மடியாகுபெயர். 'இன்பமாகிய மழையைப் பொழிதலின், கண்போலச் சிறந்து நிற்பவனே' என்பார், 'கருமுகிலாகிய கண்ணே' என்றார்.

128-130. ஏனை மலைகளின் வேறுபடுத்தற்கு, 'மன்னிய' எனவும், 'திருவருள்' எனவும் அருளிச் செய்தார். 'மலை' என்றது, பெருமை பற்றி வந்த உவமை. சேவகன் - வீரன். சேவகம், ஒரு சொல்லால் தம்மை வழிப்படுத்த திறல்; 'மன்ன என்னை ஓர் வார்த்தையுட் படுத்துப் பற்றினாய்' *(தி.8* செத்திலாப் பத்து*-2)* எனப் பின்னரும் அருளுப.

131-134. தொழுத கை - வணங்கிய உடன், 'கை' என்பது இங்குக் காலத்தை உணர்த்திற்று. இனி, 'தொழு தகை' என்றானும், 'தொழுத கை' என்றானும் பிரித்து, 'தொழுந் தகைமையுடையார், தொழுத கையினை யுடையார்' எனப்பொருள் கொள்ளலுமாம். துடைத்தல் - விரையச் சென்று முற்றத் தொலைத்தல், வாரி - கடல். முழுதும் - பசுக்களும், பாசங்களுமாகிய எல்லாப் பொருள் களையும்.

135-136. நோக்கி - பார்வையையுடையவள். தாய் - தாய்போலச் சிறந்தவள்.

137-142. பார் - நிலம். ஐந்து, 'நாற்றம்,சுவை, உருவம், ஊறு, ஒலி' என்னும் குணங்கள். இவற்றுள் நாற்றம் முதல் ஒரோவொன்றாக முறையே நீக்கி, ஏனையவற்றை நீர் முதலிய ஏனை நான்கு பூதங் களினும் உள்ளன என்க. அளிபவர் - மனம் இளகுபவர்.

143-144. தமக்கு நனவிலும் வந்து அருளிய அருட்டிறம் இனிது விளங்க,

கனவிலும் தேவர்க்கு அரியனாதலை, முன்னர் எடுத் தோதினார். இங்ஙனம் இறைவனை அவனது பெருமைகள் பல வற்றையும் விதந்து போற்றிய பின்னர், மதுரையும், தில்லையும் தவிர ஏனைய தலங்கள் பலவற்றிலும் எழுந்தருளியிருக்கும் நிலையை விதந்து போற்றுகின்றார்.
149-150. 'அண்ணால்' என்பது, 'அண்ணா' என மருவிற்று. கண் ஆர் - கண்ணால் பருகும். ஆர்தல் - நிறைதல். அஃது இங்கு நிறையப் பருகுதலைக் குறித்தது.
155. இஃது இடைநிலையாய் வந்தது. அன்பு மிகுதியால் இன்னோரன்னவை இடை இடையே அடிகள் வாக்கில் நிகழ்தல் காண்க.
159. பாங்கு - அழகு.
160. விடங்கன் - ஒருவராற் செய்யப்படாது, இயல்பாய் அமைந்த திருவுருவத்தை யுடையவன். 'அழகன்' என்றுமாம்.
162-163. இத்தி - கல்லால மரம். இருமூவர், அட்டமா சித்தி வேண்டி நோற்ற மகளிர் அறுவர். அத்தி - வெள்ளானை. 'மகளிர்க்கும், அத்திக்கும் அருளியவன்' என்க, இவ்வரலாறுகளைத் திருவிளை யாடற் புராணம் சிறிது வேறுபடக் கூறும்.
164-165. தென்னாடு - பாண்டிநாடு. தமக்கு அருளிய நிலை பற்றி, அதனையே அடிகள் இறைவனுக்கு உரிய நாடாகப் பல விடத்தும் அருளுவர். எனினும், எல்லா நாடும் அவனுடையனவே என்பது தெரித்தற்கு, அடுத்த, 'எந்நாட்டவர்க்கும் இறைவா' என்று அருளினார். இறுதிக் கண் எந்நாட்டையும் எடுத்தோதி முடித்து, இனியும் முன்போலப் பிறவாற்றாற் போற்றுகின்றார்.
166-167. பன்றிக்குட்டிகட்கு இறைவன் தாய்ப் பன்றியாய்ச் சென்று பால் கொடுத்த வரலாற்றைத் திருவிளையாடற்புராணத்துட் காண்க. ஏனம் - பன்றி. குருளை - குட்டி. மானம் - பெருமை.
168-169. அம்மான் - தலைவன். இருள் - துன்பம்; நரகமு மாம்; உவமையாகுபெயர்.
171. களங்கொளக் கருத - உன்னை என் நெஞ்சார நினைக்கும்படி. நெஞ்சத்தையே இங்கு, 'களம்' என்றார் என்க.
172. இங்கு - இப்பொழுது.
174-176. 'அத்தன், ஐயன்' என்பன முன்னர்க் கூறப்பட்ட வாயினும், நித்தன் முதலாகப் பின்னர் வருவனவற்றோடு ஒருங்கு நின்று சிறப்பித்தற் பொருட்டு ஈண்டும் கூறினார். நித்தன் - அழி வில்லாதவன். நிமலன் - மலம் இல்லாதவன். பத்தா - தலைவன்; வட சொல்; இஃது இயல்பாய் நின்று, அண்மை விளி ஏற்றது, 'பத்தன்' எனக் கொண்டு, 'அன்புடையவன்' என்றும் உரைப்ப. பவன் - எவ்விடத்தும்

தோன்றுபவன்; 'எவையும் தோன்றுதற்கு இடமாயுள்ளவன்' என்றுமாம்,
177-178. பிரான் - கடவுள். அமலன் - மலம் இல்லாதவன்; 'விமலன், அமலன், நிமலன்' என்பன ஒரு பொருட்சொற்களாயினும், பலவகையாகப் போற்றுதல் செய்யும் போற்றிக் கோவையில் பொருள் வகை ஒன்றானே போற்றுதல் வேண்டும் என்பதோர் யாப்புறவில்லை; சொல்வகையானும் பலவகையாகப் போற்றுதல் செய்யப்படும்; அதனால், இன்னோரன்ன சொற்களால் பன்முறையானும் போற்றினார் என்க.
179-180. கோலம் - வடிவம்; 'அதனையுடைய நெறி யாளனே' என்க. நெறியாளன் - உய்யும் நெறியை உணர்த்துபவன்; ஞானாசிரியன். தரியேன் - இனிப் பொறேன்; 'வீடுதந்தருள்' என்பது கருத்து. 'முறையோ' என்ற முறையீட்டுச் சொல்லை, இதன்பின் கூட்டியுரைக்க. 'முதல்வா' என்றதனை, 'ஈண்டு எனது முறையீட்டைக் கேட்பது உனக்குக் கடப்பாடு' என்னுங் கருத்தாற் கூறினார்.
181-182. உறவு - உறவினன். உயிர் - உயிரின்கண் கலந்து நிற்பவன். சிறவு - சிறப்பு; சிறப்புடையவன். சிவம் - மங்கலம்; மங்கலம் உடையவன்.
183-184. 'மைந்தன்' என்பது, 'மஞ்சன்' எனப்போலி யாயிற்று. 'வலிமை யுடையவன்' என்பது பொருள். மணாளன் - 'மண வாளன்' என்பதன் மரூஉ. 'கலியாணகோலம் உடையவன்' என்பது பொருள். சிவபிரான் வடிவங்களுள், கலியாண கோலமும் ஒன்றாதல் உணர்க. பஞ்சு ஏர் அடி - செம்பஞ்சினையும், அழகினையும் உடைய பாதம்.
185-186. அலந்தேன் - உழன்றேன், நாயேன் அடியேன் - நாய்போன்றேனாகிய அடியேன். இலங்கு சுடர்- விளங்குகின்ற விளக்குப்போலும்.
187-190. இந்நான்கடிகளிலும் சிவபிரான், தமிழ்நாடன்றிப் பிற நாடுகளிலும் கோயில் கொண்டிருத்தலை எடுத்தோதிப் போற்று கின்றார். 'கவைத்தலை, குவைப்பதி, அரிகேசரி' என்பன தலங்களாம், அவை இக்காலத்து அறிதற்கரியவாயின. சேரநாடும் மலைநாடு எனப்படுமாயினும் இங்கு, 'மலைநாடு' என்றது, இமயத்தைச் சார்ந்த நிலப்பகுதியையாம். அங்குக் கேதாரம், பசுபதீச்சரம், அனேகதங்காவதம், இந்திர நீலப் பருப்பதம் முதலிய சிவதலங்கள் இருத்தல் வெளிப்படை. 'கலை ஆர்' என்றது, 'நூல்கள் நிரம்பிய' என்றும், 'மான் கூட்டங்கள் நிறைந்த' என்றும் பொருள் கொள்ளுதற்கு உரித்து. அத்தொடரால் சிறப்பிக்கப்பட்ட தலம் அறியப்படாமையின், அத்தொடர்க்கும் பொருள்காண்டல் அரிதாகும். கவைத்தலை முதலியவற்றைத் தலங்களாகக் கொள்ளாது, சொற்பொருள் கூறுவாரும்

உளர்.
191-192. பிற நாட்டுத் தலங்களை நினைந்த தொடர்பானே, தமக்கு மீளவும் குருவடிவத்தைக் காட்டியருளிய திருக்கழுக் குன்றத்தையும், தமது பாண்டிநாட்டில் பொன்னுருவில் நின்று அருள் புரியும் திருப்பூவணத்தையும் நினைந்து, இவ்விரண்டடிகளிலும் போற்றி செய்தார்.
193-194. மூவகைத் திருமேனிகளுள் அருவத் திருமேனி, உருவத் திருமேனி என்னும் இரண்டனைக் கூறவே இடைநிற்கும் அருவுருவத் திருமேனியும் தானே பெறப்பட்டது. முன்னர், 'மன்னிய திருவருள் மலை' (அடி.*128*) என்றார்; இங்கு, 'மருவிய கருணை மலை' என்றார். மருவுதல் - அடியவர் உள்ளத்து நீங்காது பொருந்துதல்.
195-196. 'நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப் படங்கல்' என்னும் ஐந்து நிலைகளும் வடமொழியில் முறையே, 'சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்' எனப்படும். இவை, 'இருள்நிலை, பொருள்நிலை, அருள்நிலை' என்னும் மூன்று நிலைகளிலும் நிகழ்வன. இருள்நிலையில், ஒன்றைவிட மற்றொன்றில இருள் (அறியாமை) மிகும்; பொருள் நிலையில், ஒன்றைவிட மற்றொன்றில் உலகப் பொருள் மிக்கு விளங்கும்; அருள்நிலையில் ஒன்றைவிட மற்றொன்றில் இறைவனது திருவருள் மிக்கு விளங்கும். அவற்றுள் அருள்நிலையில் உள்ள துரிய நிலையே இங்குக் குறிக்கப் பட்டது. அந்நிலையில் பேரின்பம் சிறிது அரும்புதலன்றி, வெள்ள மாய்ப் பெருகி உயிரை விழுங்கிக் கொள்ளும் நிலை உண்டாகாது. அதனால், இந்நிலையில் நின்றோர், பேரின்ப வெள்ளத்துள் மூழ்கித் திளைத்திருத்தலன்றி, உலகத்தை நோக்கி நிற்றலும் உடையராவர். இதனைக் கடந்த அதீத நிலையிலே அது கூடுவதாகும். அதனைப் பெற்றோரே சிவனது உண்மை நிலையைத் தலைப்பட்டவராவர். அவர்க்கு அந்நிலையினின்றும் மீட்சி இல்லை. ஆதலின், அப்பெரு மானை, 'துரியமும் இறந்த சுடர்' என்று அருளினார். இருள்நிலை முதலிய மூன்றும் முறையே. 'கேவலம், சகலம், சுத்தம்' எனப்படும், உம்மை, சிறப்பும்மை. தெளிவு அரிது - கருவிகளால் அறியப்படாதது. தெளிவு - அனுபவப்பொருள்.
197-198 தோளா - துளையிடாத. முத்தம் - முத்து. துளையிடாத முத்தில் ஒளி குறைபாடின்றி விளங்கும். மாணிக்கம் முதலிய பிறவற்றின் ஒளிகளினும், முத்தின் ஒளி தண்ணிதாதல் பற்றி, அதனையே உவமித்தார். திருநீற்றுப் பூச்சினால் விளங்கும் வெண்மை பற்றி உவமித்தார் என்றலுமாம். இறைவன் தனக்கு அடியரானார்க்கு அன்பனாதலை, 'தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்ப போற்றி'

எனப் பின்னரும் *(தி.8 திருச்சதகம்-69)* அருளுவார்.
199-200. ஆராமை - நிரம்பாமை. பேர் - பெயர். ஆயிரம், மிகுதிக்கு ஓர் எண் காட்டியவாறு. எல்லாம் உடைய பெருமானாகலின் அவைபற்றி வரும் பெயர்கள் அளவிலவாயின. பெம்மான் - பெரியோன்.
201-202. தாளி அறுகு - தழைத்துப் படர்ந்த அறுகம்புல். இது, பனையினுள் ஒருவகை, *'தாளிப்பனை'* என்னும் பெயர்த்தாதல் பற்றி யும் அறியப்படும். *'இதனைக் கன்றுகள் விரும்பி மேயும்'* என்பதும், அவ்வாறு மேயப்பட்டு வேனிற் காலத்தில் பட்டுக்கிடப்பினும் மழைக் காலத்தில் செழித்துப்படரும் என்பதும் இதனை அங்ஙனமே வளர விட்டால், அரும்புவிட்டுப் பூக்கும் என்பதும், அப்பூ நீலநிறத்துடன் அழகியதாய் விளங்கும் என்பதும், அதனை, மணவினைக்காலத்தில் மணமகளுக்கு வாகை இலையொடு விரவத் தொடுத்து அணிவர் என்பதும், பின்வரும் அகநானூற்றுப் பாடலின் *(136.)* அடிகளால் அறியப்படும்.
*'மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை
பழங்கன்று கறித்த பயம்பமல் அறுகைத்
தழங்குகுரல் வானின் தலைப்பெயற் கீன்ற
மண்ணுமணி யன்ன மாயிதழ்ப் பாவைத்
தண்ணறு முகையொடு வெண்ணூல் சூட்டி.'*
அறுகம் புல், பண்டைத் தமிழ்ச் செய்யுட்களில், *'அறுகை'* என வழங்கும். இதனால், இவ்வறுகு தமிழகத்தில் பண்டு கண்கவர் வனப் பினதாய்ச் சிறந்த ஒரு மங்கலப் பொருளாய் விளங்கினமை பெறப் படும். அதனானே வாழ்த்துக் கூறுவோர், மஞ்சளரிசியுடன் இதனை யும் சேர்த்துத் தூவி வாழ்த்துதல் பண்டை மரபாய் இருந்தது.
'அறுகு சிறுபூளை நெல்லொடு தூஉய்' என்னும் வரி, சிலப் பதிகாரத்துள் *(கனாத்திறம் உரைத்த காதை - 43)* கடவுள் வழிபாடு கூறுமிடத்துக் காணப்படுகின்றது. இவ்வாற்றனே, ஞானாசிரியர்க்கு அவர்தம் அடியவர் தழைத்து வளர்ந்த அறுகம் புல்லாலாய மாலையை அணிவித்து அவரை வழிபட்டு நிற்றல் மரபாய் இருந்தமை பெறப் படும். செங்கழுநீர்ப் பூமாலையும் அவ்வாறு ஞானாசிரியர்க்கு அணியப்படுவதாம், அதனைப் பின்னர் *(அடி.217)* கூறுப. சிவபிரான் அடிமுடி தோன்றாத நீண்ட ஒளிப்பிழம்பாய்த் தோன்றியது, மால் அயன் முன்பு என்க. நிருத்தன் - நடனம் புரிபவன்.
203. இறைவன் தன் அடியவர் சாத்தும் சந்தனக் குழம்பினை அணிந்து அழகுடன் விளங்குதல் வெளிப்படை.
205-206. *'மந்திர மாமலை, மகேந்திரமலை'* என்பது, கீர்த்தித் திருவகவலில் காட்டப்பட்டது. உய்யக்கொள்வாய் - உய்யுமாறு உலகியலினின்றும் மீட்டுக் கொள்பவனே. *'எந்தமை'* என்றது,

அடியவர்களை.
207-208. 'புலிமுலை புல்வாய்க்கு அருளினை'*(அடி 207)* என்ற இதுவும் 'கல்நார் உரித்த' *(அடி 97)* என்றாற்போல 'நினது அரிய திருவருளை எனக்கு வழங்கினாய் என, அன்னதொரு செயலைக் குறிப்பது. 'புலியொன்றைத் தாயை இழந்த மான்கன்று ஒன்றிற்குப் பால்கொடுக்கச் செய்தனன்' என்ற வரலாறொன்றும் உண்டு. அலை கடல் - அலைகின்ற கடல்நீர். 'இவ்வடி, வலைவீசிய திருவிளையாடலைக் குறித்தது' என்ப. 'மீமி' எனவும், 'நடந்தாய்' எனவும் போந்த சொற்கள், அங்ஙனம் பொருள்படுதற்கு ஏலாமையின், பிரளய வெள்ளத்துட்படாது நின்று, அதனுட்பட்டு அலந்த மாயோன் முதலியோர்க்குத் தோன்றி அருள்புரிந்தமையைக் குறித்தது என்றல் பொருந்தும்.
209-210. கரிக்குருவிக்கு அருள்புரிந்தமை திருவிளையாடற் புராணத்துட் கூறப்பட்டது. அதுவும், எளியோர்க்கு அருளுதலையே விளக்கி நிற்கும், இரும் புலன் - வரம்பில்லனவாய் எழும் ஐம்புல வேட்கைகள். நிரம்புதலை, 'விடிதல்' என்னும் வழக்குப் பற்றி, புலர என்றார். அஃதாவது. 'இனி இவை அமையும்' என்று ஒழிதல். இசைந் தனை - வந்து பொருந்தினாய். 'உனக்கு வணக்கம்' என்க.
211-212. படி உறப் பயின்ற - நிலத்தின்கண்ணே பல நாள் எம்முடன் மிகப் பழகின. பாவக - வேடத்தையுடையவனே. இறைவன் குருவாகி வந்த கோலத்தை, 'வேடம்' என்றார். தன்பொருட்டன்றிப் பிறர்பொருட்டுக் கொண்டதாகலின், 'ஒருவனே இராவணாதி பாவகம் உற்றாற் போல'*(சிவஞான சித்தி, சூ. 1.67)* என்றதும் காண்க. அடி நடு ஈறு - உலகத்தின் தோற்றம் நிலை இறுதி. அவற்றைச் செய்பவனை அவையாகவே அருளினார்.
213-214. நானிலம் - பூமி. 'நாகலோகம் முதலிய மூவுலகத்தி லும் புகாமல்' என்றது 'பிறவி எய்தாமல்' என்றபடி. பரகதி - மேலான நிலை; வீடுபேறு. பாண்டியற்கு அருளியது, அடிகள் நிமித்தமாக அவனும் காண எழுந்தருளிவந்தது.
215-216. ஒழிவு அற - எப்பொருளும் எஞ்சுதல் இல்லையாக. நிறைந்த - எல்லாவற்றிலும் நிறைந்து நிற்கின்ற. செழுமலர்ச் சிவபுரம்- உலகமாகிய கொடிக்குச் செம்மையான பூப்போலச் சிறந்து நிற்கும் சிவலோகம்; குறிப்புருவகம். திருக்கயிலையைச் சேக்கிழார் இங்ஙனம் *(தி.12* திருமலைச் சிறப்பு. *3)* சிறப்பித்தல் காண்க, ஒளிவடிவாய் நிற்றல் பற்றிச் செழுமை கூறினார்.
217-218. கழுநீர் மாலை பற்றி மேலே *(அடி.201.)* கூறப் பட்டது. மையல் - மயக்கம்; திரிபுணர்வு. துணித்தல் - அறுத்தல்.
219-220. பிழைப்பு - பொருந்தாதது. வாய்ப்பு - பொருந்து வது.

இத்தொழிற் பெயர்கள் இரண்டும் ஆகுபெயராய் நின்று இவற்றை யுடைய பொருளைக் குறித்தன. *'ஒன்றும்'* என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. *'குழைத்த'* என்பது, உன்னைக் *'குழைவித்தற்குச் செய்த'* எனக் காரணத்தின்மேல் நின்றது. *'அன்போடியைந்த வழக்கு'* *(குறள். 73)*. என்றதில், *'இயைந்த'* என்றதுபோல.

221- 222. திரிபுரம் வகையால் மூன்றாயினும், அதனுட்பட்ட நகரங்கள் பலவாதல் பற்றி, *'பல'* என்றார். அன்றி. ஒன்றல்லன வெல்லாம், *'பல'* எனப்படுதல் பற்றி, அவ்வாறு அருளினார் என்றலு மாம். புராணன் - பழையோன். பரம் பரஞ்சோதி - மேலானவற்றினும் மேலான ஒளி; பேரறிவு. *'அதனையுடைய பரன்'* என்க, *'பரன்'* என்றது, வாளா பெயராய் நின்றது.

223-225. புயங்கன் - பாம்பையணிந்தவன். *'புயங்கம் என்ப தொருநடனத்தைச் செய்பவன்'* எனவும் உரைப்ப. புராண காரணன் - காரணங்கள் பலவற்றிற்கும் காரணமாய் நிற்பவன். சயசய - வெல்க வெல்க.

இத் திருப்பாட்டும் கீர்த்தித்திருவகவலேபோல, நிலை மண்டில ஆசிரியம் என்க.

1.5.திருச்சதகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரை
யார்கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக்
கண்டுகொள்ளே. #5 ★★★★★

எல்லாவற்றையும் உடையவனே! உனது, மணம் நிறைந்த திருவடியைப் பெறுதற்கு என் உடல் புளகித்து, நடுநடுங்கி கைகளைத் தலைமேல் வைத்து, கண்களில் நீர் வடிந்து, மனம் புழுங்கி, பொய்நீங்கி, உன்னைக் குறித்து வணங்கித் துதிக்கின்ற ஒழுக்கத்தை நான் தளர விட மாட்டேன். ஆதலால் எனது நிலைமையை, நீ நோக்கி உன் அடியாருள் ஒருவனாக ஏற்றுக் கொள்வாயாக!

விளக்கவுரை

மெய்யுணர்தல்

கட்டளைக் கலித்துறை

இப்பாட்டினை, 'உடையாய், யான், உன் கழற்கு, மெய் மயிர் அரும்பி, விதிர்விதிர்த்து, கண் நீர் ததும்பி, உள்ளம் வெதும்பி, பொய் தவிர்ந்து, கை தலைவைத்து, 'போற்றி! சய! சய! போற்றி' என்று உன்னைத் துதிக்கும் கையை நெகிழ விடேன்; ஆதலின் என்னை நீ கண்டுகொள்' என இயைத்து, வேண்டும் சொற்களை வருவித்துரைக்க. பின்னரும் இவ்வாறு, சொல்லெச்சமாயும், இசையெச்சமாயும் நிற்கும் சொற்களை வருவித்துரைத்தலை அறிந்து கொள்க. 'உனது திருவடிக்கண் நீங்காது அன்பு செய்து ஒழுகுகின்றேன்; எனக்கு இரங்கியருள்' என்பது இத் திருப்பாட்டின் திரண்ட பொருள். இதனுள், 'மனம், மொழி, மெய்' என்னும் மூன்றும் அன்பு வழிய வாயினமை அமைந்து கிடந்தவாறறிக. 'மெய்தான்' முதலிய நான்கிடத்தும் வந்த 'தான்' அசை நிலை. விதிர்விதிர்த்தல் - நடுநடுங்குதல். இதுவும் அன்பால் உளதாவதே. 'துடிதுடித்தல்' என்பதுபோல, 'விதிர்விதிர்த்தல்' என்பது இரட்டைக் கிளவி. விரை - வாசனை. இஃது அடியவர் சூட்டும் மலர்களால் ஆவது. கழற்கு - கழற் பெறுதற் பொருட்டு. இந்நான்கனுருபு பொருட்டுப் பொருளதன்று; ஏதுப் பொருளது. நான்கனுருபு இப்பொருட்டாய் வருதலை, 'அடிபுனை தொடுகழல் மையணற் காளைக்கென் தொடிகழித்

திடுதல்யான் யாய் அஞ்சுவலே' (புறம்-83)
என்றாற்போல்வனவற்றுள்ளுங் காண்க. 'கை' இரண்டனுள், பின்னையது ஒழுக்கம். உள்ளம் வெதும்புதல் திருவடிப் பேறு கிடையாமையினாலாம். 'உன்னை' என்பது 'என்னும்' என்பதனுள் எஞ்சிநின்ற துதித்தல் வினையோடு முடிந்தது. கண்டுகொள் - எனது நிலையை நோக்கி அருள் செய்யத் திருவுளங்கொள். 'அரும்பி, ததும்பி' என்பன, முன்னர், இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றனவாய், பின்னர், 'விதிர்விதிர்த்து', 'வெதும்பி' என்பவற்றோடு ஒரு நிகரனவாய், சினை வினை முதல் மேல் நின்றனவாயின.

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு
குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர
கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே இருக்கப்
பெறின்இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாதெங்கள்
உத்தமனே. **#6**

எங்கள் மேலோனே! தலைவனே! உன் திருவருளோடு கூடி இருக்கப் பெறுவேனாயின், இந்திரன், திருமால், பிரமன் ஆகிய இவர்களுடைய வாழ்வினைப் பொருளாக ஏற்க மாட்டேன். எனது குடி அழிந்தாலும் உன் அடியாரோடன்றிப் பிறரோடு நட்புக் கொள்ள மாட்டேன். நரகத்திற் புகுந்தாலும் அதனை இகழமாட்டேன். உன்னை அன்றி வேறு தெய்வங்களை மனத்தாலும் நினைக்க மாட்டேன்.

விளக்கவுரை

மெய்யுணர்தல்

கட்டளைக் கலித்துறை

பொருள்கோள்:- 'இறைவா, எங்கள் உத்தமனே, யான், உனது திருவருள் வழியே இருக்கப்பெறின், நரகம் புகினும் அதனை எள்ளேன்; அதனை மறந்து இருப்பதாயின், புரந்தரன், மால், அயன் முதலியோரது பதவிகளில் இருப்பதாயினும் அவற்றைக் கொள்ளேன்; யானன்றி என் குடியே கெடுவதாயினும், அடியாரொடல்லால் பிறரோடு நட்புச் செய்தலும், உன்னையல்லாது பிற தெய்வங்களைத் துணையாக எண்ணுதலும் செய்யேன்'. 'ஆதலின், என்னைக் கடைக்கணித்தருள்' என, மேலைத் திருப் பாட்டில் உள்ள, 'என்னைக் கண்டுகொள்' என்றதனை, ஈண்டும் வருவித்து முடிக்க. 'சிவஞானம் ஒன்றே பிறவித் துன்பத்தை நீக்குவ தாதலின், அதன்கண் விருப்பமும், அஃதல்லாத பிற

எவையும் அத் துன்பத்தை ஆக்குவன ஆதலின் அவற்றின் கண் விருப்பம் இன்மை யும் கொண்ட தமது நிலையை இதனுள் எடுத்து விளக்கி வேண்டினார். புரந்தரன் - இந்திரன். 'வாழ்வும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. 'குடி' என்றதில் தொக்குநின்ற பிரிநிலை ஏகாரம் சிறப்புணர்த்தி நின்றது. 'கெடினும், புகினும்' என்ற உம்மைகள், எதிர்மறை. இவற்றால், இறைவன் அடியரல்லாதவரோடு நட்புச் செய்யாமையால் குடிகெடுதலும், திருவருளை மறவாமையால் நரகம் புகுதலும் இல்லை என்பது போந்தது. 'நினது அடியார்' என, உயர்திணைக் கிழமைப் பொருளில் குவ்வுருபு வாராமல், அதுவுருபு வருதல் பிற்கால வழக்கு. எள்ளாமைக்கு, 'திருவருளாலே இருக்கப் பெறுதலாகிய காரணத்தைக் கூறியவதனால், கொள்ளாமைக்கு, அதன் மறுதலையாகிய காரணம் பெறப்பட்டது. 'பிற தெய்வம்' என்பதில், 'தெய்வம்' என்றது, 'உன்னையன்றிப் பிறரெல்லாம் எழுவகைப் பிறப்பினுள் ஒன்றாய தெய்வப் பிறப்பினர்' எனவும், 'அதனால் அவரை எனக்குத் துணையாக நினையேன்' எனவும் குறிப்பினால் அருளிச்செய்தவாறு. 'மேலானவன்' என்னும் பொருளதாகிய, 'உத்தமன்' என்பது, இங்கு, 'தலைவன்' என்னும் அளவாய் நின்றது.

உத்தமன் அத்தன் உடையான் அடியே
நினைந்துருகி
மத்த மனத்தொடு மால்இவன் என்ன
மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட ஊரூர்
திரிந்தெவருந்
தத்தம் மனத்தன பேசஎஞ் ஞான்றுகொல்
சாவதுவே. #7

உத்தமனும் எமது தந்தையும், எம்மை அடிமையாக உடையவனும் ஆகிய இறைவனது திருவடியைக் கருதி உருகி, உன் மத்தம் கொண்ட மனத்துடன் கூடிய பித்தன் இவன் எனக்கண்டோர் சொல்லவும், ஊர்தோறும் திரிந்து அவரவர் மனக் கருத்துக்கு இசைந் தனவாகிய பல சொற்களைச் சொல்லவும், யாவரும் தங்கள் தங்கள் மனத்துக்கு இசைந்தவற்றைப் பேசவும் கேட்டு மனம் இறக்கப் பெறுவது எக்காலமோ?

விளக்கவுரை

மெய்யுணர்தல்

கட்டளைக் கலித்துறை

பொருள்கோள்:- 'உத்தமன்.....அடியேநினைந்து உருகி, கண்டோர்,

'இவன் மால்' என்னத் தம் மனநினைவில் ஒத்தன ஒத்தன சொல்லிட, மத்த மனத்தொடு ஊர் ஊர் திரிந்து, எவரும் தத்தம் மனத்தன பேசச் சாவது எஞ்ஞான்று' 'கொல்', அசைநிலை. 'உடையான் அடியே' என்ற பிரி நிலை ஏகாரம், 'பிறிதொன்றையும் நினையாது' என்பதை விளக்கிற்று. மத்தம் - உன்மத்தம்; பித்து; என்றது பேரன்பினை. மால் - மயக்கம்; இஃது ஆகுபெயராய், 'மால் கொண்டான் (அறிவு மயங்கினான்) எனப் பொருள்தந்தது. 'நினைவில்' என்றது, ஏதுப்பொருளில்வந்த ஐந்தாம் வேற்றுமை. 'ஒத்தன' என்றது, 'இவன் மால்' என்னக் கருதிய அவ்வொருபொருளே பற்றிவரும் சொற்களையும், 'தத்தம் மனத்தன' என்றது, நல்லனவும், தீயனவுமாய பல பொருள்களைப் பற்றிவரும் சொற்களையும் என்க. 'ஊர்க்கண் ஊர்க்கண் திரிந்து' என உருபு விரிக்க. 'பல ஊர்களில் திரிந்து' என்றவாறு. இங்ஙனம் திரிய வேண்டியது, உலகியலுள் அகப்படாமைப் பொருட்டு. அடிகள் உலகியலின் நீங்கியே நின்றாராயினும், 'மீளவும் அதன்கண் அகப்படுவேங்கொல்லோ' என்னும் அச்சத்தினால் இங்ஙனந் திரியவேண்டினார் என்க. 'திரிந்து' என்னும் எச்சம், எண்ணின்கண் வந்தது. 'சாவது எஞ்ஞான்று' என்றது, சாவின்கண் உள்ள விருப்பத் தாலன்றி, உடம்பின்கண் உள்ள வெறுப்பினாலாகலின், அதற்கு. 'இவ்வுடம்பு நீங்கப் பெறுதல் எஞ்ஞான்று என்பதே பொருளாயிற்று. 'ஊரூர் திரிந்து' என்றதனால், மனநினைவில் ஒத்தன சொல்வார், அவ்வாறு திரியக் கண்டோர் என்பது பெறப்பட்டது. எவரும் - யாவரும். இறந்தவரைப் பற்றிப் பலரும் பல சொல்லுதல் இயல்பாத லறிக. உடம்புள்ள துணையும் உலகியலிற் றொடக்குண்ணாது நிற்கவும், உடம்பு விரைய நீங்கப் பெறவும் வேண்டியவாறு.

சாவமுன் னாள்தக்கன் வேள்வித் தகர்தின்று
நஞ்சம்அஞ்சி
ஆவஎந் தாய்என் றவிதா விடும்நம்
மவரவரே
மூவரென் றேஎம்பி ரானொடும் எண்ணிவிண்
ணாண்டுமண்மேல்
தேவரென் றேஇறு மாந்தென்ன பாவந்
திரிதவரே.

#8

முற்காலத்தில் தக்கனானவன் இறக்க, யாகத்தில் கொல்லப்பட்ட ஆட்டைத் தின்று, பாற்கடலில் தோன்றிய நஞ்சை அஞ்சி ஐயோ! எந்தையே! என்று முறையிட்ட நம்மவராகிய, அவர்கள் தாமே எம்பெருமானோடு, மூவர் என்று எண்ணப்பட்டு விண்ணுலகை ஆண்டு,

மண்ணுலகில் தேவர் என்று சொல்லப்பட்டு, செருக்கடைந்து திரிகின்ற இறைவர்கள்? என்ன பாவமோ?

விளக்கவுரை

மெய்யுணர்தல்

கட்டளைக் கலித்துறை

பொருள்கோள்:- 'முன் நாள், ஒருமுறை, தாம் சாவ, தக்கன் வேள்விக்கண் தகர் தின்று, மற்றொருமுறை நஞ்சத்திற்கு அஞ்சி, 'எந்தாய்! ஆவா! அவிதா' என்று முறையிடும் நம்மனோராகிய அவரையே, 'மூவர் கடவுளர்' என எம்பிரானொடும் வைத்து எண்ணி, அதன் பயனாக விண்ணாள்வதற்கு அமைந்து, 'யாம் மண்மேல் தேவர்' என்றே இறுமாந்து 'திரிதருவர் சிலர்; இஃது என்ன பாவம்!' சாவ - சாமாறு. இது வீரபத்திரரால் நிகழ்ந்தது. 'தகர்தின்று' என்றது, நஞ்சினை உண்ண மாட்டாமையையும், தக்கனைக் கடிய மாட்டாமையையும் உணர்த்தி நின்றது. 'இவற்றாலும், முறையிட்டமையாலும் பசுவருக்கத்தினர் என்பது தெற்றென விளங்கவும், அவரைப் பதியாகிய சிவபெருமானோடு ஒருங்குவைத்தெண்ணுவர்' என்றவாறு. 'அவிதா' என்பது, ஓர் முறையீட்டுச் சொல். 'நம்மவர்' என்றது, 'பசு வருக்கத்தினர்' என்றதாம். 'அவர்' என்றதில் இரண்டனுருபு தொகுத்தலாயிற்று. 'அவரே' என்ற பிரிநிலை ஏகாரம், இழிவுணர்த்தி நின்றது. 'ஆண்டு' என்பது, பான்மை வழக்கால். 'ஆளுதற்கு அமைந்து' எனப் பொருள் தந்தது, 'அன்போடியைந்த வழக்கு' *(குறள்-73)* என்பதில், 'இயைந்த' என்பதுபோல. 'பூசுரர்' என்பதை, 'மண்மேல் தேவர்' என்று அருளினார். 'நிலவுலகிற் காணப்படும் தேவர்' என்பது இதன்பொருள். எனவே, 'ஆசிரியன்மார்' என்றதாம். இங்ஙனமாகவே, இவர், தாம் வீடடையாமையேயன்றிப் பிறரையும் அடையவொட்டாது மயக்கம் உறுவிக்கின்றனர் என்று இரங்கியவாறாயிற்று. என்ன பாவம் - என்னே அவர்தம் வினையிருந்தவாறு. 'திரிதருவர்' என்பது தொகுத்தலாயிற்று. மக்கட்பிறப்பின் பயனாகிய வீடெய்தாது, அதனை வீண்போக்கலின், 'திரிதருவர்' என்றார். இங்ஙனம் திரிதருவார், சிவாகமங்களைக் கொள்ளாது இகழ்ந்து, வேதம் ஒன்றையே போற்றும் வேதியர். சிறப்பு நூலைக் கொள்ளாது இகழ்ந்து பொதுநூல் ஒன்றனையே கொண்டு, அதற்குத் தாம் வேண்டியவாறே பொருள்கூறித் தருக்குதல் பற்றி, அவரை இவ்வாறு அருளிச் செய்வாராயினர். மண்மேல் தேவர் என்று இறுமாந்து திரிபவர், பூர்வ மீமாஞ்சகர், உத்தர மீமாஞ்சகர் என்னும் இருசாராருமே யாவர். அவருள், பூர்வ மீமாஞ்சகர், 'வேதம், தெய்வம் உண்டு என்னும் பொருள் படக் கூறும் கூற்றுக்கள் புனைந்துரையன்றி

உண்மையல்ல; ஆயினும், அக்கூற்றுக்கள் நல்வழி நிற்றற்கு உதவுவதால் உண்மை என்று கொள்ளத்தக்கன' என்பர் ஆதலாலும், உத்தர மீமாஞ்சகர், 'பல் வேறு வகைப்பட்ட தேவர்கள், மற்றைய உயிர்கள், பலவகை உலகங்கள் ஆகிய யாவும், உண்மையில் கயிற்றில் அரவுபோலப் பொய்யே; ஆயினும், அவ்வுண்மையை உணரும் பக்குவம் வரும் வரையில் அவைகளை உண்மைபோலக் கொண்டு ஒழுகல் வேண்டும்' என்பர் ஆதலாலும், இவ்விருசாராரும் எல்லாத் தேவர்களையும் ஒரு தன்மையராகக் கொள்வதன்றி, அவருள் எவரையும் தனிச்சிறப்பு உடையராகக் கொள்ளார்; ஆகவே, 'சிவபெருமான் ஒருவனே பதி; ஏனையோரெல்லாம் பசுவருக்கத்தினர்' என உணரும் உண்மை ஞானம் அவர்க்கு ஆகமங்களின் வழியேனும்; அநுபவத்தின் வழியேனும் உண்டாதற்கு ஏதுவின்மை யறிக. 'சிவபெருமான் ஒருவனே பதி' என்பது, வேதத்துள் குறிப்பாகவும், சிவாகமத்துள் வெளிப்படையாகவும் சொல்லப்படுதலை உணரமாட்டாராயினும், புராணங்களில் அது பல வரலாறுகள் வாயிலாக இனிதுணர்த்தப்படுதலின், அவைகளையேனும் உணர்கிலர் என்பார், தக்கன் வேள்வித் தகர்தின்றது, நஞ்சம் அஞ்சி அவிதா இட்டது ஆகிய புராண வரலாறுகளை உடம்பொடு புணர்த்துக் காட்டியருளினார். அதனால், 'உலகிற்கு இந்திரன் முதலிய பலரும் முதல்வர்' எனவும், 'மும்மூர்த்திகளும் முதல்வர்' எனவும் அனேகேசுரவாதங் கூறும் பௌராணிகர் கூற்றுப் பொருந்தாமை பெறப்பட்டது. மூவருள் சிவபிரானோடு வைத்து எண்ணப்படும் ஏனையிருவர், மாலும் அயனும் என்பது வெளிப்படை. இவ்விருவரோடு ஒருவாற்றான் ஒப்பவைத்து எண்ணுதற்குரியவன் குணருத்திரனேயன்றி, குணாதீதனாகிய, 'மகாருத்திரன்' எனப்படும் சிவபிரான் அல்லன் என்க. இனி, இக்குணருத்திரன், மால், அயன் முதலியோருள் ஒரோவொருவரைப் பதியாகக் கருதும் பாசுபதர் முதலியோரை இங்குக் கூறாராயினார், அவர், முதல்வரல்லாதாரை முதல்வர் எனக் கருதலன்றிப் பலரையும் முதல்வர் என்னாமையானும், முதல்வரல்லாத சிலரையும், முதல்வனோடு ஒப்பவைத்து முதல்வர் எனக் கருதுதல் உண்மை ஞானத்திற்குப் பெரிதும் புறம்பாய் வீடுபயவாமைபற்றியே இரங்கி அருளிச்செய்கின்றாராக லானும் என்க.

தவமே புரிந்திலன் தண்மலர் இட்டுமுட்
டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை யேன்உனக்
கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி லேன்நின்

திருவடிக்காம்
பவமே யருளுகண் டாய்அடி யேற்கெம்
பரம்பரனே. #9

தவத்தையோ செய்திலேன்; குளிர்ந்த மலர்களால் அருச்சித்துக் குறைபாடின்றி வணங்க மாட்டேன், வீணாகவே பிறந்த பாதகன் நான்; பத்தர்களுக்குச் சொந்தமாகிய சிவபோதம் என்னும் அரிய செல்வத்தை நான் பெற்றிலேன்; உன்னை அடைவதற்கான நல்ல பிறவியை எனக்குத் தருவாயாக.

விளக்கவுரை

மெய்யுணர்தல்

கட்டளைக் கலித்துறை

'மேலானவர்க்கு மேலானவன்' எனப் பொருள்தரும், 'பரம்பரன்' என்னும் தொகைச்சொல் ஒருசொல் நடைத்தாய், 'கடவுள்' என்னும் அளவில் நின்று 'எம்' என்றதற்கு முடிபாயிற்று. இத் தொடரை முதலில் வைத்து 'யான்' என்னும் எழுவாய் வருவித் துரைக்க. மலரிட்டு இறைஞ்சுதலாகிய கிரியைத் தொண்டினைப் பின்னர்க் கூறுதலின், 'தவம்' என்றது யோகத்தையாயிற்று. சரியையும் கிரியையுள் அடங்கும். சரியையும், கிரியையும், 'சிவதருமம்' என ஒன்றாகக் கூறப்படுதல் காண்க. சரியையை, 'புத்தேளிர் கோமான்நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்' என, அடிகள் பின்னர் அருளுதல் காண்க (தி.*8* திருச்சதகம் பா.*14*). 'தவமே' என்ற ஏகாரம், தேற்றப் பொருட்டாய், 'சிறிதும்' எனப் பொருள்தந்தது, முட்டாது - தவறாது. 'சரியை கிரியை யோகங்களைச் செய்யேன்' என்றது, அடிகள் அமைச்சராய் இருந்தமையைக் குறிக்கும். 'இறைஞ்சேன்' என்றதன்பின், 'அதனால்' என்பது வருவிக்க. அவம் - வீண். 'அருவினையேன்' என்றதன்பின், 'ஆயினேன்' என்பது தொகுத்தலாயிற்று. 'அவம்படவே பிறந்த வினையேனாகிவிட்டேன்' என்க. இனி, 'வீண் என்பது உண்டாதற்கு இடமாகிய வினையேன் ஆகிவிட்டேன்' எனினுமாம். 'இவ்வாற்றால் உன் அடியார் நடுவுள் இருக்கும் பேற்றினைப் பெற்றிலேன்' என்றார் என்க. சிவம் - நன்மை. திரு - நல்லூழ். 'எனினும், உன் திருவடியிற் சேர்கின்ற பயனையே எனக்கு அருள வேண்டும்' என வேண்டுவார், அதற்குக் காரணமாக, 'யானும் அவ்வடியவர்போல உன்னால் ஆட்கொள்ளப் பட்டவனன்றோ' என்பதனை, 'அடியேற்கு' என உடம்பொடு புணர்த்தருளினார். பவம் - உண்மை. அது, செயல் நிகழ்தலைக் குறிக்கும். இது, 'சம்பவம்' எனவும் வரும். 'அருளு' என, ஏவற்கண் உகரச்சாரியை வந்தது. கண்டாய், அசைநிலை.

பரந்துபல் ஆய்மலர் இட்டுமுட் டாதடி
யேஇறைஞ்சி
இரந்தஎல் லாம்எமக் கேபெற லாம்என்னும்
அன்பருள்ளம்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற்
கன்பெனக்கும்
நிரந்தர மாய்அரு ளாய்நின்னை ஏத்த
முழுவதுமே. **#10**

பரவி, பலவகையாயிருக்கிற, ஆராய்ந்து எடுக்கப் பெற்ற மலர்களை உன் திருவடிகளில் இட்டு, குறைபாடின்றி, உன் திருவடிகளையே வணங்கி, வேண்டினவை எல்லாம் எங்களுக்கே பெறுதல் கூடும் என்று நிச்சயித்த அடியார்களுடைய மனத்தை ஒளித்து மற்றோரிடத்தில் நில்லாத கள்வா! பூரணமாக உன்னைத் துதிக்க, அடியேனுக்கும் உன் நெடிய கழலை அணிந்த திருவடிகளுக்குச் செய்ய வேண்டிய அன்பை இடையீடின்றி அருள் செய்வாயாக.

விளக்கவுரை

மெய்யுணர்தல்

கட்டளைக் கலித்துறை

பரந்து - வலம் வந்து. ஆயப்படாத மலரினை இடுதலும், நாளும் செய்யாது இடை இடையே விட்டொழிதலும் கூடாமையின், 'ஆய்மலர் இட்டு முட்டாது இறைஞ்சி' என்று அருளினார். இரந்த எல்லாம் - (தம் பிழையைப் பொறுக்குமாறு) வேண்டித் துதித்த செய்கைகள் யாவும். எமக்கே பெறல் ஆம் - நமக்கே பேறாவனவாம். என்னும் அன்பர் - என்று உணர்கின்ற மெய்யன்பினை உடைய வர்களது. 'இறைவனை வழிபடப் பெறுதலே பெரும்பேறு என உணர்கின்றவரே மெய்யன்பர்' என, அவரது இயல்பினை விதந்தோதியவாறு. உள்ளம் - உள்ளத்தின்கண். 'விளங்கிநிற்கின்ற பெருமானே' என்னாது, 'கரந்து நில்லாக் கள்வனே' என்றது 'அன்பரல்லாத பிறரது உள்ளத்தில் சிறிதும் விளங்காது நிற்பவன்' என்று கூறும் கருத்தி னாலாம். 'யானும் நின்னை முழுவதும் ஏத்த', 'எனக்கும் நின்றன் வார் கழற்கு அன்பை நிரந்தரமாக அருளாய்' என்க. வார்கழல், அடையடுத்த ஆகுபெயர். நிரந்தரம் - இடைவிடாமை.

முழுவதுங் கண்டவ னைப்படைத் தான்முடி
சாய்த்துமுன்னாள்
செழுமலர் கொண்டெங்குந் தேடஅப் பாலன்இப்
பால்எம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடக மாடிக்

கதியிலியாய்
உழுவையின் தோலுடுத் துன்மத்தம் மேல்கொண்
டுழிதருமே. #11

உலகம் முழுமையும் படைத்தவனாகிய பிரமனை படைத்தவனாகிய திருமாலும், தலைவளைத்து முற்காலத்தில் செழுமையாகிய மலர்களை ஏந்திக் கொண்டு எவ்விடத்தும் தேடி நிற்க, அப்பாற் பட்டிருந்தவன்; இவ்விடத்தில் எமக்கு உபகாரியாய் சுடுகாட்டில் பேய்களோடு கூடி நடனம் செய்து கதியில்லாதவனாகி புலித்தோலைத் தரித்து உன்மத்த குணத்தை மேற்கொண்டு திரிந்து நிற்பவன். இஃது என்ன ஆச்சரியம்?

விளக்கவுரை

மெய்யுணர்தல்

கட்டளைக் கலித்துறை

முழுவதும் - உலகங்கள் எல்லாவற்றையும். கண்ட வன்-படைத்தவன்; பிரமதேவன். பிரமதேவனைப் படைத்தவன் திருமால். முடிசாய்த்து - தலைவணங்கி. தேடியது. வழிபடற் பொருட்டு. அப்பாலன் - அகப்படாது ஒளித்தவனாகிய எம்பிரான் என்க. திருமால் சிவபிரான் திருவடியைத் தேடிக் காணாமையேயன்றி. வழிபட விரும்பித் தேடியபொழுதும் அவர் காணாதவாறு சிவபிரான் ஒளித்த வரலாறு ஒன்றும் உண்டு என்பது, இதனாற் பெறப்படுகின்றது. 'அதர்வசிரசு' என்னும் உபநிடதத்திலும், இலிங்க புராணத்திலும், 'தேவர்கள் தம்முன் காணப்பட்ட உருத்திரரை இன்னார் என்று அறியாது, 'நீர் யார் ' என வினாவ, அவர் தமது பெருமைகளைக்கூறி மறைந்தார்; பின்பு தேவர்கள் 'அவரைக் கண்டிலர்' என்று ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது. 'கண்டிலர்' என்பது, எதிர்ப்பட்டவர் உருத்திரரே என்று அறிந்த தேவர்கள் தமது அறியாமைக்கு வருந்தி, அவரை வழிபட விரும்பித் தேடியபொழுது கண்டிலர் என்னும் குறிப் புடையதேயாதல் வேண்டும். அவ்வரலாறே இங்குத் தேவர் என்னாது, திருமால் எனப்பட்டது போலும்! கழுது - பேய். நாடகம் - நடனம். கதியிலி - புகலிடம் இல்லாதவன். உழுவை - புலி. உன்மத்தம் - பித்து. உழி தரும் - திரிவான். 'தேவருலகத்தில் திருமால் முதலியவர்கட்கு எட்டாதவன், இம் மண்ணுலகத்தில் மிக எளியனாய்க் காணப்படுகின்றான்' என்றபடி. தனக்கோர் ஆதாரம் இன்றித் தானே அனைத்திற்கும் ஆதாரமாய் நிற்றலை, 'கதியிலி' என்றும், உலகத்தாரொடும் ஒத்து நில்லாது வேறுபட்டு நிற்கும் நிலையை, 'உன்மத்தம்' என்றும் பழிப்பதுபோலக் கூறிப் புகழ்ந்தருளினார். 'கழுதொடு காட்டிடை நாடகம் ஆடுதல்' என்பது. உண்மையில் எல்லாவற்றையும் அழித்த நிலையில் உயிர்களோடு நின்று சூக்கும

ஐந்தொழில் செய்வதேயாயினும், அந்நிலையை மக்கள் இவ்வுலகத்தில் சுடுகாட்டுள் ஆடுவானாகவே கண்டு வழிபட, அவர்க்கு அருள் புரிதல்பற்றி, 'இப்பால் உழிதரும்' என்று அருளிச்செய்தார்.

உழிதரு காலும் கனலும் புனலொடு
மண்ணும்விண்ணும்
இழிதரு காலம்எக் காலம் வருவது
வந்ததற்பின்
உழிதரு காலத்த உன்னடி யேன்செய்த
வல்வினையைக்
கழிதரு காலமு மாய்அவை காத்தெம்மைக்
காப்பவனே. #12

சஞ்சரிக்கிற வாயுவும் அக்கினியும் நீருடன் பூமியும் ஆகாயமும் நசிக்கின்ற காலமானது எக்காலத்துண்டாவது, அவ்வாறு அக்காலமுண்டான பின்பும், நீடு வாழ்கின்ற திருவடியையுடைய எம் தந்தையே! உன் தொண்டனேன் செய்த வலிய வினைகளை நீக்கி அருளுக. காலதத்துவங்களாகிய அவைகளைக் காத்து எங்களையும் காக்கின்ற இறைவனே!

விளக்கவுரை

மெய்யுணர்தல்

கட்டளைக் கலித்துறை

சொற்கிடக்கை முறை வேறாயினும், 'எக்காலம் வருவது' என்பதனை, 'வருவது எக்காலம்' என மாற்றி இறுதியில் வைத்துரைத்தல் கருத்தாதல் அறிக. 'உழிதரு காலத்த' என்றதனை முதலிற் கொள்க. உழிதரல் - நில்லாது பெயர்தல். இப்பண்பு காற்றிற்கும் காலத்திற்கும் உளதாதல் அறிக. கால் - காற்று. இழிதரல் - விட்டு நீங்குதல். 'காலம் ' என்னும் முதனிலை அன்விகுதியோடு புணருமிடத்து இடையே அத்துச் சாரியை பெற்று, 'காலத்தன்' என நின்று விளியேற்றது. 'நில்லாது பெயர்கின்ற காலதத்துவமாய் நிற்பவனே' என்பது பொருள். 'வல்வினையைக் கழிதரு காலமு மாய்' என்றது, 'காலதத்துவமாய் நிற்பதனால், உன் அடியேனாகிய யான், பல பல பிறப்புக்களில் செய்த வல்வினையினின்று நீங்குகின்ற காலமுமாய் நின்று' என்றபடி. 'அடியேன் கழிதரு' என இயையும். அவை - வல்வினைகளை. காத்து - வந்து பற்றாதவாறு தடுத்து. 'எம்மை' என்றது, தம்மோடொத்த பிறரையும் உளப்படுத்து. 'ஐம்பெரும் பூதங்கள் முதலிய தத்துவங்கள் என்னின் வேறாக என்னால் அறியப்பட்டு நீங்குங்காலமே என் வல்வினை கழியுங் காலம்; அதுபோது என்னை நீ உன் திருவடியிற்

சேர்த்து உய்யக் கொள்வாய்; அத்தகைய காலம் எனக்கு வாய்ப்பது எப்பொழுது' என்பது இப்பாட்டின் திரண்ட கருத்து. பூதங்களையே கூறினாரா யினும், பிற தத்துவங்களையும் தழுவிக்கொள்ளுதல் கருத்தென்க.

பவன்எம் பிரான்பனி மாமதிக் கண்ணிவிண்
ணோர்பெருமான்
சிவன்எம் பிரான்என்னை ஆண்டுகொண் டான்என்
சிறுமைகண்டும்
அவன்எம் பிரான்என்ன நான்அடி யேன்என்ன
இப்பரிசே
புவன்எம் பிரான்தெரி யும்பரி சாவ
தியம்புகவே. **#13**

பவன் என்னும் திருப்பெயர் உடையவன்; எமக்கு உபகாரகன்; குளிர்ச்சி பொருந்திய பெருமையமைந்த தலைமாலையை அணிந்தவன்; தேவர் பெருமான்; சிவன் என்னும் பெயர் உடையவன்; எமக்குபகார சீலன்; என் தாழ்வைக் கண்டு வைத்தும் என்னை ஆண்டு கொண்டருளினன். ஆதலால் இவ்வுலகத்தார் அவனே எமக்குத் தலைவன் என்றும் நான் அடியவன் என்றும் இவ்வாறே தெரியும் தன்மையைச் சொல்லுக.

விளக்கவுரை

மெய்யுணர்தல்

கட்டளைக் கலித்துறை

'பவனாகிய எம்பிரான், சிவனாகிய எம்பிரான்' என்க. இப்பரிசே எம்பிரான் தெரியும் பரிசாவது - இம் முறைமையிலே எம் இறைவன் என்னைக் கடைக்கணித்தற்குக் காரணத்தை. புவன் இயம்புக - இவ்வுலகம் அறிந்து கூறுவதாக. 'அவனது பேரருளல்லது பிறிது காரணம் இல்லை' என்றவாறு. 'புவனம்' என்பது கடைக் குறைந்துநின்றது.

புகவே தகேன்உனக் கன்பருள் யான்என்பொல்
லாமணியே
தகவே எனைஉனக் காட்கொண்ட தன்மைஎப்
புன்மையரை
மிகவே உயர்த்திவிண் ணோரைப் பணித்திஅண்
ணாஅமுதே
நகவே தகும்எம் பிரான்என்னை நீசெய்த
நாடகமே. **#14**

என் தொளைக்காத மாணிக்கமே! நான் உன் அடியார்களுக்கு இடையே

வாழவும், தகுதி உடையவன் அல்லன். அங்ஙனமாக அடியேனை உனக்கு ஆளாக்கிக் கொண்ட தன்மை யானது தகுதியோ? எவ்வகைப் புன்மையோரையும் மிகவும் உயர்வித்துத் தேவர்களைப் பணியச் செய்கிறாய். கிடைக்கலாகாத அமிர்தமே! எம்பிரானே! என்னை நீ செய்த கூத்து நகைப்பதற்கு உரியதே ஆகும்.

விளக்கவுரை

மெய்யுணர்தல்

கட்டளைக் கலித்துறை

பொருள்கோள்:- 'என் பொல்லா மணியே, அண்ணா அமுதே, எம்பிரான், யான் உனக்கு அன்பருள் புகவே தகேன்; அங்ஙனமாக என்னை உனக்கு ஆளாகக் கொண்ட தன்மை தகவே? சிலபோது, நீ, எப்புன்மையரை மிகவே உயர்த்தி, விண்ணோரைப் பணித்தி; ஆதலின், என்னை நீ செய்த நாடகம் நகவே தகும்'. ஏகாரங்களுள் 'தகவே' என்பது வினாப்பொருளிலும், 'நகவே' என்பது பிரிநிலைப் பொருளிலும் வந்தன. 'புகவே, மிகவே' என்பன, தேற்றப் பொருள. பொல்லா - பொள்ளா; துளை யிடாத. 'தோளா முத்தச் சுடரே' என முன்னருங் கூறினார். *(தி.8 போற்றித்- 197)*. எப் புன்மையர் - எத்துணைக் கீழானோரையும்; உம்மை, தொகுத்தல். பணித்தி - தாழ்விப்பாய். செய்த - இவ்வாறு ஆக்கிய. 'நாடகம்' என்றது, இங்கு வினோதக் கூத்தைக் குறித்தது.

நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து
நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும்
விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா
அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம்
உடையானே. **#15** ★★★★★

நான் உன்னிடத்து அன்பு இல்லாதவனாய் இருந்தும் உன் அன்பர் போல் நடித்து முத்தி உலகத்தில் புகும் பொருட்டு விழைகின்றேன். ஆதலால் இனியாயினும் உன்னிடத்து அன்பு செய்யும்படி எனக்கு அருள் செய்யவேண்டும்.

விளக்கவுரை

அறிவுறுத்தல்

நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா

இவ்விரண்டாம் பத்து, சிலவற்றை இறைவனிடமும், சிலவற்றை நெஞ்சினிடமும் கூறுவதாக அமைந்திருத்தலின், இதற்கு, 'அறிவுறுத்தல்' எனக் குறிப்புரைத்தனர்போலும் முன்னோர்! 'தரவு கொச்சகம்' என்பன தொல்காப்பியத்தும் காணப்படும். நடுவே - அவர்களுக்கு இடையில். 'வீடகத்து' என்றது, 'உனது இல்லத்தினுள்' என்ற நயத்தினையும் தோற்றுவித்தது. தக்கார் பலர் குழுமிப்புகும் ஓரிடத்து அவர்போல நடிப்பவனும் அவர்கட் கிடையே அங்குப்புக மிக விரைந்து செல்லுதல் உலகியல்பு. அவ் வியல்புபற்றிக் கூறியவதனால், அடிகளுக்கு வீடடைதற்கண் உள்ள விரைவு எத்துணையது என்பது புலனாகும். எய்த வந்திலாதார் எரியிற் பாய்ந்தமை*(தி.8 கீர்த்தி - 132)* முதலியவற்றைச் செய்ததுபோலத் தாம் செய்யாமை பற்றித் தமது செயலை நாடகம் என்று அருளினார். ஆடகச் சீர் மணி - பொன்னின்கண் பொருந்திய மணி. சீர்த்தல் - பொருந்துதல். உனக்கு - உன் பொருட்டு. 'ஊடகத்தே' என்பதனை, 'அகத்தூடே' என மாற்றிக்கொள்க. அகம் - மனம். நின்று - நிற்க. 'அதனால் அஃது உருக' என்க. 'உருக' என்ற செயவெனெச்சம், தொழிற்பெயர்ப் பொருளைத் தந்து நின்றது. 'எம்மை உடையானே' என, இரண்டாவது விரிக்க. 'உடையான்' தலைவன் எனக்கொண்டு, நான்காவது விரித்தலுமாம்.

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்
கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான்
மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேஎம்
பெருமான்எம்
மானேஉன் அருள்பெறுநாள் என்றென்றே
வருந்துவனே. **#16** ★★★★★

நான் பிறவித் துன்பத்துக்கு அஞ்ச மாட்டேன். இறப்புத் துன்பத்துக்கு அஞ்சுகின்றிலேன். மண்ணுலகத்தையும், விண்ணுலகத்தையும் ஆளவிரும்பேன். உன் திருவருளுக்கு உரியே னாகுங் காலம், எக்காலமோ என்று வருந்துவேன். ஆதலால் என் பிறவியை ஒழித்தருள வேண்டும்.

விளக்கவுரை

அறிவுறுத்தல்

நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா

என் கடவேன் - என்ன கடப்பாடு உடையேன்; ஒன்றுமில்லை. எனவே, 'இறப்பைப் பற்றியும் கவலையுறுகின்றிலேன்' என்றவாறு. 'வானேயும்'

என்றதில் ஏகாரமும், உம்மையுமாகிய இரண்டு இடைச் சொற்கள் ஒருங்குவந்தன. ஏகாரம் தேற்றமும், உம்மை உயர்வு சிறப்புமாய் நின்றன. தேன் ஏயும் - தேன் பொருந்திய. 'மலர்க் கொன்றை' என்றதனை. 'கொன்றை மலர்' என மாற்றி யுரைக்க. 'பெருமான், மான்' என்றவற்றுள் ஒன்றற்கு, 'தலைவன்' எனவும், மற்றொன்றற்கு, 'பெரியோன்' எனவும் பொருள் உரைக்க. 'பிறப்பு' இறப்புக்களாகிய துன்பங்களை நீக்கிக் கொள்வது எவ்வாறு என்றோ, சுவர்க்கபோகமும், இவ்வுலகத்தை ஆளும் செல்வமும் ஆகிய இன்பத்தைப் பெறுவது எவ்வாறு என்றோ யான் கவலையுறு கின்றேனல்லேன்; உன் அருளைப் பெறுவது எந்நாள் என்ற அவ் வொன்றை நினைந்தே நான் கவலையுறுகின்றேன்' என்றவாறு. 'அருள்' என்றது, இவ்வுடம்பின் நீக்கித் தன்னோடு உடனாகச் செய்தலை.

வருந்துவன்நின் மலர்ப்பாத மவைகாண்பான்
நாயடியேன்
இருந்துநல மலர்புனையேன் ஏத்தேன்நாத்
தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தாய் அருளமுதம்
புரியாயேல்
வருந்துவனத் தமியேன்மற் றென்னேநான்
ஆமாறே. **#17**

நான் உன் திருடியைக் காணும் பொருட்டு மலர் சூட்டேன்; நாத்தழும்பு உண்டாகத் துதியேன்; இவை காரணமாக நீ உன் அருளாகிய அமிர்தத்தைத் தந்தருளாயானால், நான் வருந்துதலே யன்றி உனக்காளாகும் விதம் யாது?

விளக்கவுரை

அறிவுறுத்தல்

நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா

'வருந்துவன் நின் மலர்ப்பாதமவை காண்பான்' என மேற்போந்ததனையே மறித்துங் கூறினார், 'அங்ஙனம் வருந்துலன்றி, அதற்கு ஆவனவற்றுள் ஒன்றும் செய்திலேன்' எனத் தமது ஏழைமையை விண்ணப்பித்தற்பொருட்டு. 'புனையேன்' என்றதற்கு, 'சாத்தி வழிபடேன்' என்றாயினும், 'மாலை முதலியனவாகத் தொடேன்' என்றாயினும் உரைக்க. இவ்விரண்டும் இருந்து செய்யற் பாலனவாதல் அறிக. அதனைக் கிளந்தோதியது, 'எனது உலகியல் நாட்டம் என்னை இவற்றின்கண் விடுகின்றிலது' என்பதைத் தெரிவித்தற் பொருட்டு. 'நத் தமியேன்' எனப் பிரித்து, 'மிகவும் தமியேனாகிய யான்' எனப் பொருள்

உரைக்க. 'ந' என்னும் இடைச் சொல் சிறப்புணர்த்தியும் வருமாகலின், அது, பின் வரும் தனிமையின் மிகுதியை உணர்த்திற்று. 'அதுவன்றி நான் ஆமாறு மற்று என்' என்க. ஆமாறு - அடையும் நிலை.

ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன்
அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன்
புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில் தூகேன்மெழுகேன்
கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே
சார்வானே. **#18**

அறிஞர் அறிவுக்குப் புலப்படுவோனே! உன் திருவடிக்கு ஆளாகும் பொருட்டு மனம் உருகுதலும் அன்பு செலுத்து தலும், பூமாலை புனைந்தேத்துதலும், புகழ்ந்துரைத்தலும், திருக் கோயில் பெருக்குதலும், மெழுக்கிடுதலும் கூத்தாடுதலும் முதலியவற் றில் யாதும் செய்யேன். ஆயினும் இந்த உலக வாழ்வை நீக்கி உன் திரு வடியைப் பெற விரும்புகிறேன். உன் பெருங்கருணையால் என் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும்.

விளக்கவுரை

அறிவுறுத்தல்

நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா

'உன் திருவடிக்கு ஆமாறு' என மாற்றுக. ஏகாரம், அசை நிலை. 'அன்பினால் அகம் குழையேன்; உருகேன்' என்க. குழைதல் - இளகல். உருகல் - ஓட்டெடுத்தல். 'தூகேன்' என்பதற்கு, 'தூ' என்பது முதனிலை. 'விளக்குதல்' என்பது இதன் பொருள். இதனை, 'திருவலகிடுதல்' என்றல் மரபு. 'விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றியாகும்' *(தி.4.ப.77.பா.3)* என்று அருளிச் செய்தமை காண்க. 'சதுராலே சாமாறே விரைகின்றேன்' எனக் கூட்டி, 'உலகியல் துழனிகளால் இறப்பதற்கே விரைந்து செல்லுகின்றேன்' என உரைக்க. 'விரைகின்றேன்' எனத் தம் குறிப்பின்றி நிகழ்வதனைத் தம் குறிப்பொடு நிகழ்வது போல அருளினார். சார்வானே - எல்லாப் பொருட்கும் சார்பாய் நிற்பவனே. இப்பாட்டில் மூன்றாம் அடி ஐஞ்சீரடியாய் மயங்கிற்று.

வானாகி மண்ணாகி வளியாகி
ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய்
இன்மையுமாய்க்

கோனாகி யான்எனதென் றவரவரைக்
கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி
வாழ்த்துவனே. #19 ★★★★★
ஆகாயம், மண், காற்று, ஒளி, ஊன், உயிர் முதலாகிய எல்லாப்
பொருள்களாகியும், அவற்றின் உண்மை இன்மை களாகியும் அவற்றை
இயங்குவிப்போன் ஆகியும் யான், எனது என்று அவரவர்களையும்
கூத்தாட்டுவானாகியும் இருக்கின்ற உன்னை என்ன சொல்லிப்
புகழ்வேன்?

விளக்கவுரை

அறிவுறுத்தல்

நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா

வளி - காற்று. ஒளி, ஞாயிறு முதலியவை. ஊன் - உடம்பு; ஆகுபெயர். 'பூதங்களும், அவற்றின் காரியங்களும் ஆகி இருப்பவன்' என்றபடி. இறைவன் இப்பொருள்கள் எல்லாமாய் நிற்பது, உடலுயிர்போல வேறறக் கலந்து நிற்கும் கலப்பினாலாம். 'உண்மை, இன்மை' என்றவை, அவற்றையுடைய பொருளைக் குறித்தன. இறைவன், அநுபவமாக உணர்வார்க்கு உள்பொருளா யும் அவ்வாறன்றி ஆய்ந்துணர்வார்க்கு இல்பொருளாயும் நிற்பான் என்க. கோன் - எப்பொருட்கும் தலைவன். அவர் அவரை - ஒவ்வொருவரையும். 'யான் எனது என்று ' என்னும் எச்சம், 'ஆட்டு வான்' என்னும் பிறவினையுள் தன்வினையொடு முடியும். எனவே, 'ஆட்டுவான்' என்பது, 'ஆடுமாறு செய்வான்' என இரு சொல் தன்மை எய்தி நின்றதாம். உலகியலை, 'கூத்து' என்றது. நிலையற்றதாதல் கருதி, கூத்து, ஒரு கால எல்லையளவில் நிகழ்ந்து, பின் நீங்குவதாதல் அறிக. 'ஒத்த சிறப்பினவாய் அளவின்றிக் கிடக்கும் உனது பெருமைகளுள் எவற்றைச் சொல்வேன்! எவற்றைச் சொல்லாது விடுவேன்!' என்பது இத்திருப்பாட்டின் தெளிபொருள்.

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான்
மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மைஎல்லாந்
தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை
நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானும்உன்னைப்
பரவுவனே. #20
தேவர் உன்னைத் துதிப்பது, தாம் உயர்வடைந்து தம்மை எல்லாரும்

தொழ விரும்பியேயாம். வண்டுகள் மொய்த்து ஒலிக்கின்ற கொன்றை மாலையை அணிந்தவனே! நான் அப்படி யின்றி என் பிறவித் தளையை அறுத்துக் கொள்ள விரும்பியே உன்னைத் துதிக்கின்றேன்.

விளக்கவுரை

அறிவுறுத்தல்

நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா

எல்லாம் - எல்லாரும். 'சூழ்ந்து' என்பது வலித் தலாயிற்று. மதுகரம் - வண்டு. தாரோயை - மாலையை அணிந்த உன்னை. நாயடியேன் - நாய்போலும் அடியேன். 'நாயடியேனாகிய யானும்' என, 'யானும்' என்றதனை இதன் பின் கூட்டுக. பாழ்த்த - இன்பம் அற்ற. பரவுவன் - துதிப்பேன். 'தேவர்களும் உன்னை வணங்குகின்றார்கள்; யானும் உன்னை வணங்குகின்றேன், தேவர்கள் போகத்தை வேண்டுகின்றனர்; எனக்கு அது வேண்டுவதில்லை; உனது திருவடி நிழலே வேண்டும்' என்பது கருத்து. இதனானே, 'இதனை அருளுதல் உனக்கு இயல்பேயாய் இருத்தலின், எனக்கு விரைந்து அருள்புரிக' என்ற குறிப்பும் பெறப்பட்டது. இறைவன் போகத்தை வழங்குதல், உயிர்களின் இழிநிலை குறித்தன்றித் தன் விருப்பத்தினாலன்றாதலும், வீடுபேற்றைத் தருதலே அவனது கருத்தாதலும் அறிந்து கொள்க. உம்மைகள், எச்சப்பொருள.

பரவுவார் இமையோர்கள் பாடுவன
நால்வேதம்
குரவுவார் குழல்மடவாள் கூறுடையாள்
ஒருபாகம்
விரவுவார் மெய்யன்பின் அடியார்கள்
மேன்மேல்உன்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ
அரியானே. **#21**

கடவுளே! உன் அருமை நோக்கித் தேவர் உன்னைப் பரவுகின்றனர். வேதங்கள் ஓதி மகிழ்கின்றன. உமாதேவி ஒரு பாகத்தை நீங்காது இருக்கின்றனள். மெய்யடியார்கள் கூடிக் காண்கின்றனர். நான் ஒன்றும் செய்திலேன். ஆயினும் என்னை உன் பெருங் கருணையால் ஆட்கொள்ள வேண்டும்.

விளக்கவுரை

அறிவுறுத்தல்

நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா

குரவு - குராமலரையணிந்த. அரவு - பாம்பை யணிந்த. 'வார்கழல்' என்றது அடையடுத்த ஆகுபெயராய், 'திருவடி' என்னும் பொருட்டாய் நின்றது. 'கழலிணைகள் என்றதனை 'இணையாகிய கழல்கள்' எனக்கொள்க. 'உன் திருமுன்பில் தேவர்கள் உன்னைத் துதித்து நிற்பார்கள்; வேதங்கள் முழங்கும்; உமையம்மை உனது திருமேனியில் ஒரு கூறாய் விளங்குவாள்; ஆயினும், அடியார்களே மெய்யன்பினால் உன்னை அடைவார்கள்; ஆதலின், அவர்களே உனது திருவடிகளை மேன்மேலும் கண்டு இன்புறுவார்கள்போலும்' என்றவாறு. ஓகாரம் சிறப்புப் பொருட்டு. அம்மையும் இறைவனை வழிபடுதல் முதலியவற்றால் இறைவன் திருவடியைக் காண முயல்பவள்போலக் காணப்படுவதால், 'தேவர், வேதங்கள்' என்னும் இவரோடு உடன் கூறினார். 'அவள் இறைவனின் வேறாதலின்மை யின், கண்டு இன்புறுவாருள் ஒருத்தியாகாள்' என்றபடி. எனவே, 'ஒரோவொருகாரணத்தால் இமையோர் முதலியவர் திருவடியைக் காணாராக, அடியார்களே அவற்றைக் கண்டு இன்புறுவார்' என்ற தாயிற்று. இமையவர்கட்கு மெய்யன்பு இன்மையானும், வேதம் மாயாகாரியமேயாகலானும் திருவடியைக் காணலாகாமை யறிக. அரியானே - யாவர்க்கும் காண்டற்கு அரியவனே.

அரியானே யாவர்க்கும் அம்பரவா
அம்பலத்தெம்
பெரியானே சிறியேனை ஆட்கொண்ட
பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறேன்
நயந்துருகேன்
தரியேன்நான் ஆமாறென் சாவேன்நான்
சாவேனே. **#22**

கடவுளே! சிறியேனை ஆட்கொண்டருளின உன் திருவடியைப் பாடுதல், மலர் தூவி மகிழ்தல், வியந்து அலறல், நயந்து உருகுதல் முதலியவற்றைச் செய்து உய்யும் வகை அறியாமல் உயிர் வாழ்கின்றேன். எனவே நான் இறப்பதே தகுதியாகும்.

விளக்கவுரை

அறிவுறுத்தல்

நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா

'யாவர்க்கும் அரியானே' என மாற்றுக. அம்பரம் - ஆகாயம். சிதம்பரம் - சிதாகாசம்; ஞானவெளி. அதனுள் விளங்குதல் பற்றி, 'அம்பரவா'

என்றார். அம்பலம் - மன்று; சபை, பெய்கழல் - கட்டப்பட்ட கழலையுடைய திருவடி, 'கீழ்' என்றது ஏழனுருபு. அலறுதல் - கூப்பிடுதல், நயந்து - விரும்பி; அன்புகொண்டு. தரியேன்- அத்திருவடிகளை உள்ளத்துக்கொள்ளேன்; நினையேன். 'ஆதலின், நான் ஆமாறு என்! நான் சாவேன்! சாவேன்!!' என்க. 'சாவேன்' என்றது, 'பயனின்றி இறப்பேன்' என்றபடி. அடுக்கு, துணிவுபற்றி வந்தது.

வேனில்வேள் மலர்க்கணைக்கும்வெண்ணகைச்செவ்
வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும்
பாழ்நெஞ்சே
ஊனெலாம் நின்றுருகப் புகுந்தாண்டான்
இன்றுபோய்
வானுளான் காணாய்நீ மாளாவாழ்
கின்றாயே. **#23**

நெஞ்சமே! மலர்க்கணைக்கும் மாதர்க்கும் பதைத்து உருகி நின்ற நீ, இறைவனது பிரிவுக்கு ஆற்றாது உருகியிறந்து படுவாய் அல்லை; ஆதலால் நீ பயன் அடையாது ஒழிகின்றனை.

விளக்கவுரை

அறிவுறுத்தல்

நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா

வேனில்வேள் - மன்மதன், அவன் வேனிற் காலத்தை உரிமையாக உடைமைபற்றி, 'வேனில்வேள்' எனப்பட்டான். 'வெண்ணகைச் செவ்வாய்க்கரிய பானலார் கண்ணியர்' என்றாரா யினும், 'அவரது நகை முதலியவற்றுக்கு' என்று உரைத்தலே கருத் தென்க. குவ்வுருபுகளை ஆனுருபாகத் திரிக்க. 'இன்றுபோய், வான் உளான்' என்றதனால், 'புகுந்து ஆண்டது அன்று' என்பது பெறப் பட்டது. வான் - சிவலோகம், நீகாணாய் - அவன் பிரிந்து நிற்றற்கு ஏதுவாகிய உன் இழிநிலையை நீ நினைக்கின்றிலை; 'அதனால் இறவாது உயிர் வாழ்கின்றாய்; உனது வன்மை இருந்தவாறு என்' என்க. இதன்கண் நெஞ்சினை உயிருடையது போல அருளினார்.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே
வல்வினைப்பட்
டாழ்கின்றாய் ஆழாமற் காப்பானை
ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன்
பல்காலும்

வீழ்கின்றாய் நீஅவலக் கடலாய
வெள்ளத்தே. #24

நெஞ்சமே! வாழ்வது போல் நினைத்து வாழாது இருக்கின்றாயே! நான் வற்புறுத்திச் சொல்லியும் இறைவனை வழி படுதல் இல்லாமல், உனக்கு நீயே கேடு சூழ்ந்து துன்பக் கடலில் விழுந்து அழுந்துகின்றாய். உன் அறியாமைக்கு நான் என் செய்வேன்?

விளக்கவுரை

அறிவுறுத்தல்

நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா

'வாழாத நெஞ்சமே' என்றதனை முதலில்வைத்து 'இறைவனை அடைந்து வாழமாட்டாத மனமே' என உரைக்க, 'வாழ்கின்றாய்' என்றது, வாழ்தலையோ செய்கின்றாய்' எனப் பொருள் தருதலை எடுத்தலோசையாற் கூறிக்காண்க. அங்ஙனம் பொருள் படவே; 'இல்லை' என்பது அதன்பின் வருவிக்கப்படுவ தாம். 'உனக்கு' என்றது முன்னரும் சென்று, 'ஏத்தாதே உனக்குக் கேடு சூழ்கின்றாய்' என இயையும். 'உனக்குப் பல்காலும் சொல்கின்றேன்' என மாற்றியுரைக்க, 'சொல்கின்றேன்' எனத் தொடங்கியதனையே, ஈற்றடியிற் சொல்லி முடித்தார். எனவே, 'உய்யப் பார்' என அறி வுறுத்தியவாறாயிற்று. அவலக் கடலாய வெள்ளம் - 'துன்பக் கடல்' எனப் பெயர்பெற்ற வெள்ளம்.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை யாண்டாய்க்
குள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையு மரமாம்தீ வினையி னேற்கே. #25

கங்கை நீர்ப் பெருக்குத் தங்கிய, விரிந்த சடையினை யுடையாய்! எருதினை ஊர்தியாக உடையாய்! தேவர் தலைவனே! என்று அன்பர் சொல்லக் கேட்டவுடன், ஆர்வம் மிகுந்த மனத்தினராய், பள்ளத்தில் விழுகின்ற மிகுந்த நீர் போல, மேல் கீழாக விழுந்து, வணங்கி நெஞ்சம் துடிக்கும் அடியார் பலர் நிற்க, என்னைப் பெருங்கருணையால் ஆண்டு கொண்ட உன் பொருட்டு என் உள்ளங்கால் முதல் உச்சி வரையுள்ள உடம்பின் பகுதிமுற்றும், மனத்தின் இயல்புடையதாய் உருகாது, உடம்பு எல்லாம், கண்ணின் இயல்புடையதாய் நீர்ப்பெருக்குப் பாயவில்லை;

ஆகையால் கொடிய வினையை உடையேனுக்கு நெஞ்சானது கல்லினால் அமைந்ததே யாம். இருகண்களும் மரத்தினால் ஆனவையாம்.

விளக்கவுரை

சுட்டறுத்தல்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இம் மூன்றாம் பத்துள் முதல் திருப்பாட்டில் பேரன்பின் நிலையையும், எட்டாம் திருப்பாட்டில் இறைவன் தமக்கு வியாபக உணர்வு அளித்தமையையும், ஒன்பதாம் திருப்பாட்டில் இறைவனது பெருநிலையையும் குறித்திருத்தல் பற்றி இதற்கு, 'சுட்டறுத்தல்' எனக் குறிப்புரைத்தனர்போலும் முன்னோர். சுட்டு - சுட்டுணர்வு. அஃது, ஒருகாலத்துப் பலவற்றை உணராது ஒன்றனை மட்டுமே உணர்தல். இஃது, 'ஏகதேச உணர்வு' எனவும் படும். ஒருகாலத்தில் பலவற்றையும் ஒருங்குணர்தல், 'வியாபக உணர்வாகும்'. உணர்வை, 'ஞானம்' என்ப. இவையே, 'சிற்றறிவு, முற்றறிவு' எனப்படுவனவாம். என - என்றுதுதிப்பவர் துதிக்க. வேட்ட - (உன்னைக் காண) அவாவிய. நெஞ்சு - நெஞ்சினர்; ஆகுபெயர். பள்ளம்தாழ் - பள்ளத்தின்கண் வீழ்கின்ற. உறுபுனலின் - மிகுந்த நீர்போல. 'உறு புனலின் பதைத்து' என இயையும். 'கீழ்' என்றது, கீழ் நிற்பனவாகிய கால்களை. பதைத்து - விரைந்து; ஓடி. ஓடுதல், இறைவன் வெளிப்படும் இடத்தை நாடியாம். அவர் - அத்தகைய பேரன்பர். 'நிற்க' என்றது, உன்னைக் காணாது நிற்க எனவும், 'ஆண்டாய்' என்றது, 'எதிர் வந்து ஆண்டாய்' எனவும் பொருள்தந்தன, ஆண்டாய்க்கு - ஆண்ட உன்பொருட்டு. உடம்பு 'முழுதும் நெஞ்சேயாய் உருக வேண்டியிருக்க, உள்ள நெஞ்சும் உருகவில்லை; உடம்பு முழுதும் கண்களேயாய் நீர்சொரிய வேண்டுவதாக, உள்ள கண்களும் சிறிதும் நீரைச் சிந்தவில்லை; இங்ஙனமாகவே, என் நெஞ்சு கல்லே; என் கண்கள் மரத்தின்கண் உள்ள கண்களே' என்ற படி. 'மரம்' என்றது அதன் கண்களை. மரத்தின்கண் உள்ள துளைகட்கு, 'கண்' என்னும் பெயருண்மை பற்றி, இகழப்படும் கண்களை, அவைகளாகக் கூறும் வழக்கினை, 'மரக்கண்ணோ மண்ணாள்வார் கண்' என்னும் முத்தொள்ளாயிரச் செய்யுளால் உணர்க. 'அண்ணால்' என்பது 'அண்ணா' என மருவிற்று.

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேடன் என்பாய் போல
இனையன்நான் என்றுன்னை அறிவித் தென்னை
ஆட்கொண்டெம் பிரானானாய்க் கிரும்பின் பாவை

அனையநான் பாடேன்நின் றாடேன் அந்தோ
அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன்
முனைவனே முறையோநான் ஆன வாறு
முடிவறியேன் முதல்அந்தம் ஆயி னானே. **#26**

தோற்றத்துக்கும் முடிவுக்கும் காரணமானவனே! வினைப் பாசத்தில் அகப்பட்டுக் கிடந்த என்பால் வலிய எதிர்ப்பட்டு வந்து நின்று, நீ வா, நான் வினையை ஒழிக்க வல்லேன் என்று கூறுவாய் போல, 'நான் இத்தன்மையன்' என்று உன்னியல்பை எனக்கு அறி வுறுத்தியருளி, என்னை அடிமை கொண்டு, எமக்குத் தலைவனாய் நின்ற உன் பொருட்டு, இருப்பினாற் செய்த பதுமை போன்ற நான், நின்று கூத்தாட மாட்டேன்; முதல்வனே! நான் இவ்வாறாய முறையின் முடிவு என்ன என்று அறிய மாட்டேன்; இது முறையாகுமோ?

விளக்கவுரை

சுட்டறுத்தல்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

புகுந்து- எதிர்வந்து. போது - வா. வினைக் கேடன் - வினைகட்கு அழிவைச் செய்பவன். இனையன் - இன்னான்; உருகுந் தன்மை இல்லாமை பற்றித் தம்மை இருப்புப் பாவையோடு ஒப்பித்தார். உலறுதல் - வற்றுதல்; மெலிதல். சோர்தல் - நீங்குதல், முனைவன் - முன் (முதற்கண்) நிற்பவன். 'நான் இங்ஙனம் ஆனவாறு முறையாகுமோ' என்க. முடிவு - (இவ்வாறு இருப்பதன்) விளைவு. 'கிடந்தேனை உன்னை அறிவித்து' என்றது, 'களித்தானைக் காரணங்காட்டுதல்' (குறள் *929*) என்றதுபோல நின்றது.

ஆயநான் மறையவனும் நீயே யாதல்
அறிந்தியான் யாவரினுங் கடைய னாய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டு
நாதனே நானுனக்கோர் அன்பன் என்பேன்
ஆயினேன் ஆதலால் ஆண்டு கொண்டாய்
அடியார்தாம் இல்லையே அன்றி மற்றோர்
பேயனேன் இதுதான்நின் பெருமை யன்றே
எம்பெருமான் என்சொல்லிப் பேசு கேனே. **#27**

நான்கு வேதப் பொருளாய் இருப்பவன் நீ என்பதையும் எல்லாரினும் இழிந்தவன் நான் என்பதையும் அறிந்து உனக்கு நானும் ஓரடியான் என்றேன். ஆதலால், ஆண்டு கொண்டனை. அத்தனையே அன்றி, உனக்கு அடியார் இல்லாத குறையினால் அன்று, உன் பெருங்குணத்தைக் குறித்து நான் என்ன சொல்லிப் புகழ்வேன்?

விளக்கவுரை

சுட்டறுத்தல்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆய - பெருகிய. நான்மறையவனும் - நான்கு வேதங்களையும் அருளினவனும்; என்றது, ஒழுக்க நெறிகள் பலவற்றையும், உலகிற்கு நன்கு உணர்த்தியவன்' என்றவாறு. 'நீயே' என்ற ஏகாரம், பிரிநிலை. 'கடையன்' என்றது. 'ஒழுக்க நெறிகளுள் ஒன்றிலும் நில்லாதவன்' என்றதாம். 'நோக்கி' என்றது முன்னர், 'அறிந்து' என்றதனோடு இயைய வைத்து எண்ணப்பட்டது. கண்டு- பின், உண்மையை உணர்ந்து. உண்மையாவது, 'சிறியோர்க்கு இரங்குதல் பெரியோர்க்கு இயல்பு' என்பது. 'நாதனே, எம் பெருமான்' என்ற இரண்டையும் முதலில் கூட்டுக. 'நானும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. அன்பன் - அன்பனாதற்கு உரியவன். என்பேனாயினேன் - என்று எண்ணும் இயல்புடை யேனாயினேன். ஆதலால் - ஒழுக்க நெறிகளால் சான்றோனாகா விடினும், இவ்வாறு உன் பெருமையைச் சிறிதேனும் உணரப் பெற்றமையால். இதனால், இறைவன் குருவாகி வந்து ஆட் கொள்வதற்கு முன்பே அடிகள் இறைவன் திருவருளில் நாட்டமுற்று நின்றமை பெறப்படும். 'அடியார் தாம் இல்லையே' என்றது, 'உனக்கு அடியவர் இல்லையாயின் குறையோ' என்னும் பொருளது. ஏகாரம், வினா. 'அன்றி' என்றதனை, இதற்கு முன்னே கூட்டுக. பெருமை - பெரியோரது தன்மை; அது, சிறியோரை இகழாது, குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டல். 'ஓர் பேயனேன் மற்று என் சொல்லிப் பேசுகேன்' என இயையும். பேசுதல், இங்கு, 'விளக்குதல்' என்னும் பொருட்டு. விளக்குதல், தம்மை ஆட்கொண்ட காரணத்தை என்க.

பேசிற்றாம் ஈசனே எந்தாய் எந்தை
பெருமானே என்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்றாம் திருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே என்று பின்றா
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே அவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே எந்தாய் அந்தோ
என்னைநீ ஆட்கொண்ட வண்ணந் தானே. **#28**

இறைவனே, பேசும் பொழுதும் உன் திருப் பெயரைப் பேசியும் பூசும்பொழுதும் திருநீற்றையே நிறையப் பூசும் நல் அன்பரை ஆண்டருளும் இயல்பினை உடைய நீ, அன்பில்லாத என்னை ஆண்டருளினது வியக்கத் தக்கதாயிருக்கின்றது.

விளக்கவுரை
சுட்டறுத்தல்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'தாம் பேசின்'. 'தாம் பூசின்' என மாற்றுக. 'பேசின், பூசின்' என்றவை, பேசுதல், பூசுதல் இவற்றின் அருமையைக் குறியாது, 'பேசும் பொழுதெல்லாம், பூசும்பொழுதெல்லாம்' எனப் பொருள் தந்தன. பின்றா நேசம் - சலியாத அன்பு. கடந்தார் - கடந்தவராவார்; இது, துணிவு பற்றி எதிர்காலம் இறந்தகாலமாக வந்ததாம். துணிவு, தகுதி பற்றி வந்தது. 'பின்றா நேசத்தாரை ஆண்டானே, நீ, அவா வெள்ளக் கள்வனேனை ஆட்கொண்ட வண்ணந்தான் என்னை' என வியந்தவாறு காண்க.

வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்று
அநேகன்ஏகன் அணுஅணுவில் இறந்தாய் என்றங்கு
எண்ணந்தான் தடுமாறி இமையோர் கூட்டம்
எய்துமா றறியாத எந்தாய் உன்றன்
வண்ணந்தா னதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்க ளவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்
எம்பெருமான் என்சொல்லிச் சிந்திக் கேனே. **#29**

தேவர்கள் உன் திறம் முதலானவற்றையும் உள் உருவம் ஒன்றா? பலவா? என்பதனையும் அறியாமல் தடுமாறி நிற்க, என்னைத் தடுத்து உன் வண்ணம்காட்டி, திருவடி காட்டி, வடிவு காட்டி என்னை ஆட்கொண்டனையே! உன்னைக் குறித்து என்னவென்று புகழ்வேன்?

விளக்கவுரை
சுட்டறுத்தல்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'வண்ணம்'என்றதற்கு முன், 'உன்' என்பதும் 'அனேகன்' என்றதற்குமுன், 'நீ' என்பதும் வருவித்து, அனேகன் முதலிய நான்கின்பின்னும் 'அல்லை' என்பதைத் தனித்தனி விரித்தும் உரைக்க, 'சேயது, வெளிது' என்றவை பண்பின்மேல் நின்றன. அணு-சிறியாய்; ஆகுபெயர். அணுவில் இறந்தாய் - பெரியாய், அங்கு-அறியப்புகும் அக்காலத்து. எண்ணம் - கொள்கை. தடு மாற்றம், அநுபவமாகாமையால் வந்தது. காட்டி - அநுபவமாகக் காணும்படி காட்டி. இப்பகுதியை, 'அதுபழச் சுவையென' என்ற திருப்பாட்டின் *(தி.8 திருப்பள்ளி.7)* பகுதியோடு ஒருங்குவைத்துக் காண்க. வழி - உய்யும் வழி. 'திண்ணமாக' என ஆக்கம் வருவிக்க.

திண்ணமாவது, பிறவாமையே. 'தான்' என வந்தன பலவும் அசை நிலைகள். சிந்திக்கேன் - நினைப்பேன். 'என்' என்றதனை, 'சிந்திக்கேன்' என்றதற்குங் கூட்டுக, 'எச்சொல்லால் சொல்லி, எந் நினைவால் நினைப்பேன்! சொல்லுக்கும், நினைவுக்கும் அடங்காத தாய் உள்ளது உனது திருவருட் பெருமை' என்றவாறு.

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்கள் ஆர
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே. **#30**

கடவுளே! இருமை வகை தெரியாத என் மனத்தை நின்திருவுருக்காக்கி, கண்களை நின் திருவடிகளுக்கு ஆக்கி, வழி பாட்டையும் அம்மலர் அடிகளுக்கே ஆக்கி, வாக்கினை உன் திரு வார்த்தைக்கு ஆக்கி, ஐம்புலன்கள் பயனுற என்னை அடிமை கொண்ட உனது பெருங் குணத்தை என்ன வென்று புகழ்வேன்?

விளக்கவுரை

சுட்டறுத்தல்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிந்தனை - நினைத்தல்; இஃது இறைவன் வடிவம் முழுவதையும் பற்றி அகத்தே நிகழவேண்டுமாதலின், 'நின்றனக்கு ஆக்கி' என்றும், ஏனைய காட்சியும், தொழுகையும் புறத்தில் திரு வடியை நோக்கிச் செய்தலே சிறப்பாகலின், 'அவற்றைத் திருவடி மலர்க்கே ஆக்கி' எனவும் அருளினார். வார்த்தை - செய்தி; இங்குப் புகழைக் குறித்தது. அடிகள் புலமைத்திறம் முழுவதையும் இறைவன் புகழுக்கே ஆக்கினமை அறிக. 'மணி' என்றது சிறப்புப்பற்றிக் கூறப்பட்டது. இறைவன்புகழே யாவர் புகழினும் சிறந்ததாதல் அறிக. இறைவன் புகழை இங்ஙனம், 'மணிவார்த்தை' எனக் குறிப்பிட்டமை யானே, அஃதொன்றையே பாடியருளிய அடிகள், 'மாணிக்கவாசகர்' எனப் பெயர் பெற்றார் என்ப, 'ஆக்கி' என்னும் எச்சங்கள், 'ஆர' என்றதனோடு முடியும். அது, சினைவினையாயினும் முதல்மேல் நின்றதாகலின் அவ்வெச்சங்கட்கு முடிபாதற்கு இழுக்கின்று. 'ஐம்புலன்களும்' என்னும் உம்மை தொகுத்தல். 'புலன்கள்' என்றது, பொறிகளை. ஆர - நிரம்ப; என்றது, 'இன்புறுமாறு' என்றபடி; இஃது எதிர்காலத்ததாய் நின்றமையின்,

'ஆக்கி' என்னும் எச்சங்களும் 'உழுது வருவான்' என்பது போல, எதிர்காலத்தனவாம். என்னை? 'செய்தெ னெச்சத் திறந்த காலம் எய்திட னுடைத்தே வாராக் காலம்' என்பது தொல்காப்பியமாகலின். (தொல் - சொல் *241.)* இறைவன் ஆசிரியத் திருமேனியனாய் வந்து உடன், இருந்த காலத்தில் அடிகள் முதலியோரது ஐம்பொறிகளுள் நாப்பொறி இன்பம் எய்தியது, அவன் அளித்து உண்பித்தசுவைப் பொருள்களாலாம். இனி, 'ஐம்புலன்கள்' என்றது பெரும்பான்மைபற்றிக் கூறிய தெனினும் இழுக்காது; 'இவ்வூனக் கண்களாலே காண வந்தாய்' என்பதே கருத்து. 'உணர்வின் நேர்பெற வருஞ்சிவ போகத்தை ஒழிவின்றி உருவின்கண் அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர அருளினை' (தி.*12* பெரி. பு. ஞான. சம். *161.)* என்று அருளிச்செய்தது காண்க. வந்தனை- எதிர்வந்தாய்; இஃது எச்சப்பொருட்டாய் நின்றது. விச்சை - வித்தை. மால் - மருட்கை; வியப்பு. 'விச்சையை யுடைய, வியப்பைத் தருகின்ற அமுதப்பெருங்கடலே' என்க. தருதல், 'தடையின்றிச் சார்ந்து இன்புறவைத்தல். இரண்டு; இகம், பரம். அவை இல்லையாயது, அவற்றிற்கேற்ற அறிவும், ஒழுக்கமும் இன்மை யினாலாம். தனியன் - பற்றுக்கோடில்லாதவன். 'ஒரு பயனும் இன்றி யொழியற்பாலனாகிய எளியேனை, மிக மேலான பயனைப் பெறச் செய்தாய்' என்றபடி. 'உனது கருணையை என்னென்று புகழ்வேன்' என்பது குறிப்பெச்சம்.

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதல் அந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே. **#31**

தனியனாய்ப் பிறவிப் பெருங்கடலில் விழுந்து, பலவகைத் துன்பங்களாகிய அலைகளால் எறியப்பட்டு, மற்றோர் உதவியும் இன்றி, மாதர் என்னும் பெருங்காற்றால் கலங்கி, காமமாகிய பெருஞ்சுறாவின் வாயிற்சிக்கி, இனிப்பிழைக்கும் வழி யாதென்று சிந்தித்து, உன் ஐந்தெழுத்தாகிய புணையைப் பற்றிக் கிடக்கின்ற என்னை முத்தியாகிய கரையில் ஏற்றி அருளினை.

விளக்கவுரை

சுட்டறுத்தல்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இதனுள், 'பிறவி, துன்பம், மகளிர், காமம்; திருவைந் தெழுத்து, பிறப்பின்மை, என்னும் இவைகளை முறையே. 'கடல், அலை, சூறாவளி, சுறாமீன், புணை, கரை, என்னும் இவைகளாக முற்றுருவகம்பட வைத்து அருளிச்செய்தவாறு காண்க. மல்லல் - வளம். மூர்க்கன் - கொண்டது விடாதவன். 'எனக்கும் உண்மையை உணர்த்தி என்னை ஆட்கொண்டாய்' என்றபடி. 'உனது சதுரப்பாடு இருந்தவாறு என்' என்பது குறிப்பெச்சம். 'கல்நாருரித்த கனியே' *(தி.8 போற்றித். 97)* என முன்னரும் அருளிச் செய்தார், 'இனி என்னே உய்யுமாறு என்று எண்ணி, அஞ்செழுத்தைத் துணையாகப் பற்றி யிருந்த தம்மை, 'மூர்க்கனேன்' என்றது, மாதராசை துன்பந்தருவது என்று அறிந்தும் அதனை விடாது நின்றது பற்றியாம். இதனாலும், அடிகள், இறைவனால் ஆட்கொள்ளப் படுவதற்கு முன்னர், 'சரியை, கிரியை, யோகம் என்னும் நிலைகளில் நின்றமை பெறப்படும். தனியனேனாய்க்கிடக்கின்ற என்னை, அவ்விடத்து மூர்க்கனேற்குக் கரையைக் காட்டி ஆட்கொண்டாய்' என முடிக்க. 'தனியனேன் என்றது கேவல நிலையைக் குறித்தது', எனக் கொண்டு, 'கேவலம், சகலம், சுத்தம்' என்னும் மூன்று நிலைகளும் இதனுட் கூறப்பட்டன எனக் காட்டுவாரும் உளர்.

கேட்டாரும் அறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே எல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே. **#32**

ஒருவராலும் கேட்டு அறியாதவனும், தனக்கு ஒரு கேடில்லாதவனும், உறவு இல்லாதவனும், கேளாமலே எல்லாம் கேட்பவனும் ஆகிய இறைவன், என் சிறுமை நோக்காது நாய்க்குத் தவிசிட்டாற் போலத் (தவிசு - இருக்கை; ஆசனம்) தன் அருகில் இருத்தி, காட்டுதற்கரிய தன் உண்மை நிலையைக் காட்டி, நான் எக் காலத்திலும் கேட்காத வேத சிவாகமங்களின் பொருள்களைக் கேட்பித்து, மீட்டும் நான் பிறவாமல் என்னைத் தடுத்து ஆட் கொண்டான். இது ஒரு விந்தையாகும்.

விளக்கவுரை

சுட்டறுத்தல்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'ஆரும் கேட்டு அறியாதான்' என மாற்றுக. 'ஆரும்' என்றது,

சத்திநிபாதர்களைச் சுட்டியன்றி, உலகரைச் சுட்டியேயாம். இவர்களை, 'நாடவர்' எனவும். 'நாட்டார்' எனவும் அடிகள் குறித்தலையறிக. உலகரால் கேட்டறியப் படாமை, அவர்கள் அறிவிற்கு உணரவாராமையின் தமராய்ச் சொல்லுவார் இன்மை யினாலும், அறிவர் உரைக்கும் உரைகள் அவர்கட்குப் பொருள் படாமையினாலுமாம். கேடு - அழிவு. ஒன்று - சிறிது. 'கேட்டாரும் அறியாமையால், இலனால் இல்லை' என்றபடி. கேளாதே எல்லாம் கேட்டான் - பிறர் அறிவிக்க வேண்டாது, தானே எல்லாவற்றையும் நன்குணர்ந்தவன். இது, கிளையின்மையால் அறியப்படும் என்பார், அதனை முற்கூறினார். கிளை, இருமுதுகுரவரும், பிறதமரும். இத் தன்மையனாகலின், பிறவாமற் காத்து ஆட்கொண்டான், என்பார், இவற்றை முதற்கண் கிளந்தோதினார். ஏக்கற்றுநின்றாரை, 'விழித்து நின்றார்' என்றல் வழக்கு. அடிகள்பெற்ற பேற்றினையறிந்தபின், உலகவர் தமக்கு அஃது இன்மையை நினைந்து ஏக்கற்றனர் என்க. உயர்ந்தோர்க்குச் செய்யத்தக்கன, இழிந்தோர்க்குச் செய்யின், அதனை, 'நாய் மேல் தவிசிட்டவாறு' என்றல் மரபு. தவிசு - இருக்கை. இஃது, யானையேறுவார் அதன்மேல் இடுவது. 'நாய்மேல் தவிசிடு மாறு' *(பழமொழி நானூறு - 105),* எனவும் 'அடுகளிற் றெருத்தின் இட்ட - வண்ணப்பூந் தவிசுதன்னை ஞமலிமேல் இட்டதொக்கும்' *(சீவகசிந்தாமணி-202)* எனவும் சொல்லப் பட்டமை காண்க. 'இவ்வாறாகவே, 'இட்டு' என்றது, இட்டது போலும் செய்கையைச் செய்து' என்றவாறு. அச்செயலாவது, ஒரு மொழியாகிய ஐந்தெழுத்தின் உண்மையை அறிவுறுத்தியதாம். 'பின்னும்' என்றதனை இதன்பின் கூட்டுக. 'நாயினேற்கே' என்றது, 'எனக்கே' என்னும் அளவாய் நின்றது. காட்டாதன, உணர்த்தியவாறே உணரும் உணர்வு மதுகை இல்லாதார்க்கு உணர்த்தலாகாதன. அவை, பொருட் பெற்றிகள்; இவற்றை, 'தத்துவம்' என்ப. கேளாதன, உணர்த்தியவாறே ஒழுகும் ஆர்வம் இல்லாதவரால் கேட்கலாகாதன; இதற்கும், 'சொல்லலாகாதன' என்பதே கருத்து. அவை, சாதனங்களும், அவற்றாற் சாதிக்கும் முறைகளுமாம். 'மீட்டேயும்' என்றதில் உள்ள தேற்றேகாரத்தைப் பிரித்து, 'பிறவாமல்' என்றதனோடு கூட்டுக. 'விச்சைதான்' என்ற எழுவாய்க்குப் பயனிலையாகிய, 'இது' என்பது எஞ்சி நின்றது. 'இவையும் உயர்ந்தோர்க்கே செய்யற்பாலன; இவற்றையும் எனக்குச் செய்தான்' என்பது கருத்து.

விச்சைதான் இதுவொப்ப துண்டோ கேட்கின்
மிகுகாதல் அடியார்தம் அடிய னாக்கி
அச்சந்தீர்த் தாட்கொண்டான் அமுதம் ஊறி

அகம்நெகவே புகுந்தாண்டான் அன்பு கூர
அச்சன்ஆண் பெண்ணலிஆ காச மாகி
ஆரழலாய் அந்தமாய் அப்பால் நின்ற
செச்சைமா மலர்புரையும் மேனி எங்கள்
சிவபெருமான் எம்பெருமான் தேவர் கோவே. **#33**

ஆண், பெண், அலி என்னும் உருவங்கள் இல்லாதவனாய் ஐம்பூத உருவினனாய், அவற்றுக்குக் காரணமாகிய மூலப் பகுதியாய், அதனையும் கடந்து நின்ற சிவபெருமான், சிறியேனைத் தன் அடியவன் ஆக்கிப் பிறவித்துன்பம் நீங்கும் வண்ணம் ஆட்கொண்டருளி, என் மனம் உருகும்படி அதனுள்ளே நுழைந்து நிலைத்திருந்தான். உலகத்தில் இது போன்ற விந்தையொன்று உண்டோ?

விளக்கவுரை

சுட்டறுத்தல்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பொருள்கோள்: 'அச்சன்......தேவர்கோ, (என்னை) ஆக்கி ஆட்கொண்டான்; அன்புகூர, அமுதம் ஊறி, அகம் நெகப் புகுந்து ஆண்டான்; கேட்கின், இது ஒப்பது விச்சை உண்டோ'. கேட்டல் - ஆராய்தல். 'கேட்பான்புகில் அளவில்லை', என் புழியும் (தி.3.ப.54பா.4) கேட்டல் என்பது, இப்பொருட்டாதல் அறிக. அச்சம், பிறவி பற்றியது. 'அமுதம்' என்றது, இன்பத்தை. அன்பினாலும், இன்பத்தாலும் மனம் நெகிழப்பெறும் என்க. 'நெகவே' என்னும் ஏகாரம், தேற்றம். புகுந்தது, அகத்து என்க. 'ஆண்டான்' என்றது, 'அருளினான்' என்னும் பொருட்டு. அச்சன் - தந்தை. பூதங்களுள் இரண்டைக் கூறவே, ஏனையவும் கொள்ளப் படும். அந்தத்தில் உள்ள நாத தத்துவத்தை, 'அந்தம்' என்றார்; ஆகுபெயர். செச்சை - வெட்சி.

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கும் மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினோம் அவனடியார் அடியா ரோடும்
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே. **#34**

தேவர்களால் அறியப் பெறாதவனும் மூவர் களுக்கும் மேலானவனும் ஆகிய இறைவன் தானே எழுந்தருளி என் சிறுமை கருதாது என்னைத் தடுத்தாட் கொண்டமையால், இனி நாம் யார்க்கும் குடிகளல்லோம்;

எதற்கும் அஞ்சோம்; அவன் அடியார்க்கு அடியாரோடு சேர்ந்தோம்.
மேன்மேலும் ஆனந்தக் கடலில் குடைந் தாடுவோம்.

விளக்கவுரை

சுட்டறுத்தல்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தேவர் கோ - இந்திரன். பொழில்கள் - உலகங்கள். பயந்து - பெற்று; படைத்து. மற்றை - தன்னின் வேறாகிய, மூவர்: அயன், அரி, அரன். 'இவர்கள் குணமூர்த்திகளாதலின், நிற்குண னாகிய பரமசிவனின் வேறே' எனவும், 'அன்னரரயினும், அவனது அதிகார சத்தியைப் பெறுதற்கு உரிமையுடையரரயினமையின், ஏனைத் தேவரின் மேம்பட்டவர்' எனவும் உணர்த்தற்கு, 'மற்றை' என்றார். இதனானே, மூவருள் ஒருவனாகிய உருத்திரன் பரமசிவனின் வேறென்பதும், பரமசிவனாகிய சிவபெருமான் இம் மூவரின் வேறாய நான்காவது பொருள் என்பதும் தெற்றென விளங்கும். மாண்டூக்யம் *(1-7)* என்ற உபநிடத வாக்கியத்தையும் நோக்குக. மூர்த்தி - மூவர் முதலிய பலரையும் தனது வடிவாக உடையவன். வாயிலை *(அதிட்டானத்தை)* வடிவு என்று பாற்படுத்துக் கூறுதல் மரபு. மூதாதை - பாட்டன்; என்றது, இம் மூவர்க்கும் மேற்பட்ட வித்தியேசுரர் முதலியோர்க்கும் முன்னோ னாதல்பற்றி. மாது ஆளும் பாகத்து - உமையம்மையால் ஆளப்படும் கூற்றினையுடைய. 'யாவர்க்கும்' என்னும் குவ்வுருபும் உம்மையும் தொகுத்தலாயின. குடி - அடிமை. குடைந்து ஆடி - அவ்வின்பத்தில் மூழ்கி விளையாடி. ஆடுவோம் - களித்தாடுவோம். 'நாமார்க்குங் குடியல்லோம்' என்னும் திருத் தாண்டகத்தை *(தி.6.ப.98.பா.1)* இதனுடன் ஒருங்குவைத்துக் காண்க.

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்
கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வதொன் றறியேனே. **#35**

நெஞ்சே! இறைவனது திருவடிக்கு அன்பு செய்கின்றிலை; அவ்வன்பின் மிகுதியால் கூத்தாடுதல் செய்கிலை; எலும்பு உருகும் வண்ணம் பாடுகின்றிலை; இவை எல்லாம் செய்ய வில்லையே என்று பதைப்பதும் செய்கிலை; திருவடி மலர்களைச் சூடவும் முயன்றிலை, சூட்டவும்

முயன்றிலை; இறை புகழ் தேடலும் இல்லை; தேடித் தேடி அலையவும் இல்லை; நீ இப்படியான பின்பு, நான் செய்யும் வகை ஒன்றும் அறியவில்லை.

விளக்கவுரை

ஆத்துமசுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இதனுள், அடிகள் தம் தாழ்நிலையையே தம் நெஞ்சின் மேலும், தம்மேலும் வைத்துக் கூறியருளும் முகத்தால், அந்நிலையை நீக்கிக்கொள்ள முயலுதல்பற்றி, 'ஆத்தும சுத்தி' என இதற்குக் குறிப்புரைத்தனர் போலும் முன்னோர். 'பிண நெஞ்சே, உடையான் கழற்கு அன்பிலை' என் றெடுத்துக்கொண்டு, 'அதனால் துணையிலி ஆகின்றாய்' 'செய்வது ஒன்று அறியேன்' என முடிக்க. உடையான் - நம்மை ஆளாக உடையவன்; 'அந்தணனாய் வந்து அறைகூவி ஆட்கொண்டருளியவன்' என்றபடி. இவ்வாறன்றி, 'கூத்து உடையான்' என்றியைத் துரைத்தல் ஈண்டுச் சிறவாமை அறிக. 'கூத்து' என்ற விதப்பு, 'அஃது அன்பராயினார்க்கன்றிச் செய்யவாராது' என அதனது பெருமை யுணர்த்தியவாறு. பதைத்தல், செய்வதறியாமையான் வருவது. 'பாதமலர்' என்றது, முன்னும் சென்று இயையும். 'அவனது பாதமலர்' எனவும், 'அவனைத் தேடுகின்றிலை' எனவும் உரைக்க. 'மலர் சூடுகின்றிலை' என்றதனால், 'சென்னிமேற் கொள்கின்றிலை' என்பது பொருளாயிற்று. சூட்டுதலுக்கு, 'மலர்' என்னும் செயப்படு பொருள் வருவித்து, 'அவற்றின்கண் சூட்டுகின்றதும் இலை' என்க. உம்மை, எச்சம். 'பிண நெஞ்சு', உவமத்தொகை. உவமை, அறிவின்மை பற்றிக் கூறப்பட்டது. அவன் வந்து ஆட்கொள்வதற்கு முன்னர், அறியாமையால் அவனை நினையாதிருந்த குற்றம் பொறுக்கப்பட்டது; ஆட்கொண்ட பின்னரும் அவ்வாறிருப்பின் பொறுக்கப்படுமாறில்லை என்பார், 'செய்வதொன்றறியேன்' என்று அருளினார். 'தன்னை அறிவித்துத் தான்தானாச் செய்தானைப் பின்னை மறத்தல் பிழை' (சிவஞானபோதம். சூ. *12*. அதிகரணம்.*4)* என்றது காண்க, எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (குறள்-*110.)* என்றது பற்றி எழுந்தவாறுமாம். 'இலை' நின்ற ஐகாரம், முன்னிலை ஒருமை விகுதி; சாரியையன்று.

அறிவி லாதஎ னைப்புகுந் தாண்டுகொண்
டறிவதை யருளிமேல்
நெறியெ லாம்புல மாக்கிய எந்தையைப்
பந்தனை யறுப்பானைப்

பிறிவி லாதஇன் னருள்கள்பெற் றிருந்துமா
றாடுதி பிணநெஞ்சே
கிறியெ லாம்மிகக் கீழ்ப்படுத் தாய்கெடுத்
தாய்என்னைக் கெடுமாறே. **#36**

நெஞ்சமே! அறிவு இல்லாத என்னைத்தானே வலிய வந்து ஆண்டருளி மேலாகிய நெறிகளை எல்லாம் எனக்குப் புலப்படுத்தினவனும்; என் பிறவித்தளையை அறுப்பவனுமாகிய இறைவனை நினையாமல் மாறுபடுகின்றனை; ஆதலால் என்னைக் கெடுத்து விட்டாய்.

விளக்கவுரை

ஆத்துமசுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அறிவு - மெய்யறிவு; என்றது, உள்ளவாறு உணரும் தன்மையை. 'அறிவதை' என்றதில் அது, பகுதிப் பொருள் விகுதி. மேல் - பின். நெறி - அறியும் முறைமை. புலமாக்குதல் - அறிவித்தல். பந்தனை அறுத்தல் - பாசத்தைப் பற்றறத் துடைத்தல். இது, பின்னர் நிகழ்தற்பாலதாதலின், எதிர்காலத்தாற் கூறினார். 'அறுப்பானைப் பிறி விலாத' என இயையும். பிறிவிலாத அருள் - பிரிவில்லாமைக்கு ஏது வாய அருள். தன்னை வேண்டாது, உலகின்பத்தை வேண்டுவார்க்கு அப்பயனையும் இறைவன் அருளுதலின், அது, பிரிவுடைய அருளாம். அவ்வாறன்றித் தன்னையே தருவது, பிரிவிலாத அருள் என்க. இதனை, 'இன்னருள்' என்றார், ஏனையது இன்னாமையையும் விளைத்தல் பற்றி. இவ்வருள்தான், அருளும் முறைமையாற் பலவாதல் பற்றி, 'அருள்கள்' எனப் பன்மையாற் கூறினார். அவற்றையே, 'பலவிதம் ஆசான் பாச மோசனந்தான் பண்ணும் படி' (சிவஞானசித்தி - சூ. *8.3.)* என ஓராற்றான் உணரக் கூறுப. 'உரையாடுதல், சொல்லாடுதல்' என்பனபோல, 'மாறாடுதல்' என்பது ஒரு சொல்; 'பிணங்குதல்' என்பது பொருள். அஃதாவது, 'பிரிவிலாது நிற்க விரும்புகின்ற என்னோடு ஒருப்பட்டு நில்லாது, மாறு கொண்டு நிற்கின்றாய்' என்றபடி. இந்நிலை, மலவாதனையால் வருவது. இதனானே, இறைவனை அடைந்து இன்பத்துள் நீங்காது நிற்க விரும்புதலே உயிர்க்கு இயல்பென்பதும், அவ்விருப்பத்திற்கு மாறாய் அவனை அடையவொட்டாது தடுத்து அதனைத் துன்பத்துள் வீழ்த்துவது மலம் என்பதும் பெறப்படுமாறறிக. கிறி - பொய்; என்றது, திரிபுணர்வை. அதுதான், உணரப் படும் பொருளாற் பலவாமாகலின், 'எல்லாம்' என்றார். மிக - மேம்பட்டுத் தோன்ற. கீழ்ப்படுத்தாய் - அவற்றின்கீழ்க் கிடக்கச் செய்தாய். 'கெடுமாற்றானே கெடுத்தாய்' என்க. கெடுமாற்றானே கெடுத்தலாவது,

கெடும் வழி அறிந்து அவ்வழியிலே செலுத்திக் கெடுத்தல்; நெஞ்சினை அறிவுடையதுபோலக் கூறிய பான்மைக் கூற்று. 'உனது மாறாட்டத்தால், என்னைக் கீழ்ப்படுத்தாய்; கெடுத்தாய்' என்க. 'அருளீமேல்' என மூவசைச் சீராதலே பாடம் போலும்.

மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையைஎம்
மதியிலி மடநெஞ்சே
தேறு கின்றிலம் இனியுனைச் சிக்கெனச்
சிவனவன் திரள்தோள்மேல்
நீறு நின்றது கண்டனை யாயினும்
நெக்கிலை இக்காயம்
கீறு கின்றிலை கெடுவதுன் பரிசிது
கேட்கவுங் கில்லேனே. **#37**

நெஞ்சே! நீ என்னோடு மாறுபட்டு இவ்வாறு கெடுத்த உன்னை உறுதியாகத் தெளிந்திலேன். சிவபெருமானது திரண்ட தோளின் மீதுள்ள திருவெண்ணீற்றின் அழகைக் கண்டு மகிழ்ந்தும் இனியும் உருகினாயல்லை; இந்தப் பாழுடம்பைக் கிழித் திலை; உன் தன்மையைக் கேட்கவும் சகிக்க மாட்டேன்.

விளக்கவுரை

ஆத்துமசுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'கெடுப்ப' என்பது, 'கெட' எனத் தொகுத்தலாயிற்று. 'கிடந்த' என்பதன் ஈற்று அகரமும் அன்னது. அனையை - அத்தன்மையை உடையை. 'அனையையாகிய நெஞ்சே' என்க. 'மடநெஞ்சு' என்பது, வாளா பெயராய் நின்றது. 'எம்' என்ற பன்மை, 'எனக்கேயன்றி என் குடியிலுள்ளார்க்கும் நலஞ்செய்ய அமைந்த நெஞ்சே' எனப் புகழ்தல் வாய்பாட்டால் இகழ்ந்தவாறு. 'தேறுகின்றிலம்' என்றதும், தம் தமரையும் உளப்படுத்து. தேறுதல் - தெளிதல். சிக்கென - உறுதியாக. 'சிக்கெனத் தேறுகின்றிலம்' என இயையும். 'இனித் தேறுகின்றிலம்' என்றது முன்னர்ப் பலகாலும் தேறிக் கெட்டமை பற்றி. 'கண்டனை; ஆயினும் நெக்கிலை' என இரு தொடராக்கியுரைக்க. சிவபிரான் திருமேனியில் உள்ள திருநீறு, தேவர் முதல் யாவரும், எப்பொருளும் நிலையாது ஒழிதலையும், அனைவரையும், அனைத்தையும் அவனே தாங்குபவனாதலையும் விளக்கி நிற்கும். 'ஆதலின் அதனை உணர்ந்தும் அவனிடத்து அன்பு செய்கின்றாயில்லை' என்றவாறு. தாங்குதலை இனிது விளக்குதல் தோன்றத் தோள்மேல் உள்ளதை அருளினார். காயம் - உடம்பு. அதனைச் சிதைத்தல் பிரிவாற்றாமையாலாம். கெடுதற்கு

ஏதுவாவதனை, 'கெடுவது' என்றார். இது - இத்தன்மையை. கேட்கவும் கில்லேன் - ஏற்றுக்கொள்ளாமையேயன்றி, இவ்வாறானது என்று சொல்லுதலைச் செவியால் கேட்டுணரவும் பொறேன்.

கிற்ற வாமன மேகெடு வாய்உடை
யான்அடி நாயேனை
விற்றெ லாம்மிக ஆள்வதற் குரியவன்
விரைமலர்த் திருப்பாதம்
முற்றி லாஇளந் தளிர்பிரிந் திருந்துநீ
உண்டன எல்லாம்முன்
அற்ற வாறும்நின் னறிவும்நின் பெருமையும்
அளவறுக் கில்லேனே. **#38**

மனமே! நீ கெடுவாய். இறைவனது திருவடியைப் பிரிந்து நீ அனுபவித்த விடய இன்பங்களையும், அவை அழிந்த விதத்தையும், உன் அறிவையும், உன் பெருமையையும் அளவு செய்ய வல்லேன் அல்லேன்.

விளக்கவுரை

ஆத்துமசுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'உடையானும், உரியவனும் ஆகியவனது திருப்பாதத் தளிர்' என்க. எல்லாம் - எல்லாவற்றானும். 'பிரிந்திருந்தும் நீ உண்டன' என்றதனால், பிரிவுபற்றி வருந்தாதிருத்தலும், 'அற்றன' என்றதனால், அவை அறாது நிற்கும் எனக் கருதி அவற்றை அவாவின மையும் குறிக்கப்பட்டன. நிலையாதவற்றை நிலையுடையன எனக் கருதிய அறியாமையை, 'அறிவு' என்றும் அவற்றைப் பெற்ற அளவானே மகிழ்ந்து செருக்கும் சிறுமையை, 'பெருமை' என்றும் அருளினார், இகழ்ச்சி தோன்றுதற் பொருட்டு. அறியாமை, சிறுமை என்பவற்றை உண்டவற்றோடு ஒருங்கெண்ணி, 'அளவுபடா' என்றார், இவை அவ்வுண்டவைபற்றியே அறியப்படுதலின். கிற்றவா - நீ வல்ல வாறு; 'இது' எனச் சொல்லெச்சம் வருவிக்க. கெடுவாய் - இச்செய்கையால் நீ கெட்டொழிதல் திண்ணம். 'கிற்றவா, கெடுவாய்' என்றவற்றை இறுதியில் வைத்து முடிக்க.

அளவ றுப்பதற் கரியவன் இமையவர்க்
கடியவர்க் கெளியான்நம்
களவ றுத்துநின் றாண்டமை கருத்தினுட்
கசிந்துணர்ந் திருந்தேயும்
உளக றுத்துனை நினைந்துளம் பெருங்களன்
செய்தது மிலைநெஞ்சே
பளக றுத்துடை யான்கழல் பணிந்திலை

பரகதி புகுவானே. #39

நெஞ்சே! தேவர்களும் அளவு செய்தற்கு அரியவன்; அடியார்க்கு எளியவன்; அத்தன்மையனாகிய இறைவன், நம்மையோர் பொருளாக்கி நமது குற்றம் களைந்து ஆண்டருளி னமையை அறிந்திருந்தும் பரகதியடைதற் பொருட்டு அவனது திருவடியை வணங்கினாயல்லை. உன் தன்மை இருந்தவாறு என்னை?

விளக்கவுரை

ஆத்துமசுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'இமையவர்க்கு அளவறுப்பதற்கு அரியவன்' என்க. இமையவர்க்கு அருமைகூறவே, ஏனையோர்க்கு அருமைகூற வேண்டாவாயிற்று. களவு - யான் எனது என்பன. இறைவன் செய்ததை, 'யான் செய்தேன்' என்றும், இறைவனுடையதை 'எனது' என்றும் கருதுதலின், களவாயிற்று. 'கருத்தினுள் உணர்ந்து' என இயையும். 'இருந்து ' என்பது துணைவினை. 'உலகு' என்பது, எதுகை நோக்கி, 'உளகு' எனத் திரிந்தது. பளகு - குற்றம். இறைவன் உன்னை ஆட்கொண்ட கருணையை நீ உணர்ந்திருந்தாயாயினும், உன்னை அவன் நினைந்து, இவ்வுலகத் தொடர்பை அறுத்து, உன் உள்ளத்தைத் தான் உறையும் பெரிய இடமாகச் செய்தமை காணப்படவில்லை, அஃது ஏன்? நீ அவ்வுணர்ச்சியளவில் நில்லாது, பரகதியிற் புக விரும்பி உன் குற்றங்களைக் களைந்து அவனது திருவடிகளை வணங்கும் செயலில் நின்றிலை' என்றவாறு. இதனால், மெய்யுணர்ந்து பின்னர், அதன்கண் உறைத்து நிற்க வேண்டுதல் பெறப்பட்டது. இறைவனால் மீள நினைக்கப்படுதல் முதலிய தம், செயல்களை நெஞ்சினுடையனபோல அருளிச்செய்தார். இதனுள், இறுதியிரண்டடிக்கும் பிறவாறு உரைப்பாரும் உளர்.

புகுவ தாவதும் போதர வில்லதும்
பொன்னகர் புகப்போதற்
குகுவ தாவதும் எந்தையெம் பிரான்என்னை
ஆண்டவன் கழற்கன்பு
நெகுவ தாவதும் நித்தலும் அமுதொடு
தேனொடு பால்கட்டி
மிகுவ தாவதும் இன்றெனின் மற்றிதற்
கென்செய்கேன் வினையேனே. #40

சென்று அடைதற்கு உரியதும், சென்றால் மீளுத லில்லாததும் ஆகிய, சிவலோகம், புகுதற் பொருட்டுச் செல்லுவதற்குத் தடையான பற்றுக்

கழல்வதும் எம் தந்தையும், எம் தலைவனும், என்னை ஆண்டருளினவனும் ஆகிய இறைவனது திருவடிக்கு அன்பினால் நெஞ்சம் உருகுதலும் நாள் தோறும், அமுதத்துடன் தேன் பால் கற்கண்டினும் மேற்பட்ட பேரின்பம் விளைவதும் இல்லை யாயின் இதற்குத் தீவினையுடையேன் யாது செய்ய வல்லேன்?

விளக்கவுரை

ஆத்துமசுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

புகுவது முதலிய நான்கும் அவ்வத்தொழில்மேல் நின்றன. சிவலோகத்தைக் குறித்த. 'பொன்னகர்' என்பதனை முதலிற் கூட்டுக. 'ஆவது' என்பன பலவற்றிற்கும், 'உண்டாதல்' எனப் பொருளுரைக்கப்படும். போதரவு - மீண்டு வருதல். 'இல்லது, இன்று' என்பன அப்பண்பின்மேல் நின்றன. தாம் விரும்புவன பலவற்றையும் நினைந்து இரங்குகின்றாராகலின், புகுந்தபின் நிகழற்பாலதாகிய போதரவு இன்மையையும் அருளிச்செய்தார். உகுவது - நீங்குவது; இதற்கு, 'உடம்பு' என்னும் வினைமுதல் வருவிக்க. நெகுவது - ஊறு வது. ஒடு. எண்ணிடைச்சொல். தேன் முதலிய மூன்றும் ஆகு பெய ராய், அவைபோலும் இன்பத்தைக் குறித்தன. மற்று, வினை மாற்று.

வினைஎன் போல் உடை யார்பிறர் ஆர்உடை
யான்அடி நாயேனைத்
தினையின் பாகமும் பிறிவது திருக்குறிப்
பன்றுமற் றதனாலே
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான்
முட்டிலேன் தலைகீறேன்
இனையன் பாவனை இரும்புகல் மனம்செவி
இன்னதென் றறியேனே. **#41**

என்னைப் போலத் தீவினை உடையவர், பிறர் யாருளர்? என் முதல்வன் நாய் போன்ற அடியேனைத் தினையளவும், நீங்கியிருப்பது அவனது திருக்குறிப்பு அன்று; ஆதலால் இறைவனது திருவடியாகிய நல்ல மலரை, நானே நீங்கியிருந்தும் தலையைக் கல் முதலியவற்றில் முட்டிக் கொள்கிலேன்; பிளந்து கொள்ளேன்; இத் தன்மையேனாகிய என்னுடைய பாவனை இரும்பாகும்; மனமானது கல்லாகும்; காது இன்ன பொருள் என்று அறியேன்?

விளக்கவுரை

ஆத்துமசுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
'உடையானுக்கு' என்னும் நான்கனுருபு தொகுத்த லாயிற்று. 'தினையின் பாகம்' என்றது, 'மிகச் சிறிது' என்னும் பொருட்டாய், அவ்வளவிற்றாகிய காலத்தை உணர்த்திற்று. மற்று அசைநிலை. 'நான் பிரிந்து' என மாற்றி, 'நானே' எனப் பிரிநிலை ஏகாரம் விரித்துரைக்க. 'அதனால்' என்றது, இக்கூற்றிற்கே ஏது உணர்த்திநின்றது. 'இருந்து' என்றே ஒழியாது, 'இருந்தும்' என உம்மை விரித்து ஓதுதல் பாடமாகாமை அறிந்துகொள்க. 'தலை' என்றது, முன்னரும் சென்று இயையும். முட்டுதல், கல் முதலியவற்றினும், கீறுதல், கருவியாலும் என்க. 'இருந்து முட்டிலேன் கீறேன்' என்றாரா யினும், 'முட்டாமலும், கீறாமலும் இருக்கின்றேன்' என்றலே கருத் தென்க. 'கீறிலேன்' என்றதன்பின்னும் 'ஆகலான்' என்னும் சொல் லெச்சம் வருவிக்க. இனையன் - இத்தன்மையுடையேனது. 'வேடம்' எனப்பொருள் தரும் 'பாவனை' என்பது, இங்கு, உடம்பைக் குறித்தது. 'இரும்பு, கல், இன்னது' என்றன, 'அவற்றான் இயன்றது' எனப் பொருள் தந்து நின்றன.

ஏனை யாவரும் எய்திட லுற்றுமற்
றின்னதென் றறியாத
தேனை ஆன்நெயைக் கரும்பின்இன் தேறலைச்
சிவனைஎன் சிவலோகக்
கோனை மான்அன நோக்கிதன் கூறனைக்
குறுகிலேன் நெடுங்காலம்
ஊனை யான்இருந் தோம்புகின் றேன்கெடு
வேன்உயிர் ஓயாதே. **#42**

மற்றையோர் எல்லாரும் இன்னது என்று அறியப் படாத தேன் போல்வானும், பசுவின் நெய் போல்வானும், கரும்பின் இனிமையான சாறு போல்வானும், சிவனும் எனது சிவலோகத் தரசனும், பெண்மானின் நோக்கம் போன்ற திரு நோக்கத்தை யுடையவளாகிய உமாதேவியின் ஒரு பாகத்தை உடையவனும் ஆகிய இறைவனை அணுகிலேன். நீண்ட நாள்கள் இருந்து உடம்பை வளர்க்கின்றேன். கெடுவேனாகிய எனது உயிர் ஒழியவில்லையே!

விளக்கவுரை

ஆத்துமசுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
தேன் முதலிய மூன்றும் ஆகுபெயராய், 'அவை போல்பவன்' எனப் பொருள் தந்து, 'அறியாத' என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாயின. 'சிவன்' என்றது, இறைவனைச் சிறப்பு வகையாற் குறித்தவாறு. இதனை,

'கூறனை' என்றதன் பின்னர் வைத்து, 'சிவனை, ஏனை யாவரும் எய்திடலுற்றும், யான் நெடுங்காலம் குறுகிலேன், உயிர் ஓயாதே இருந்து ஊனை ஓம்புகின்றேன்; கெடு வேன்' எனக் கூட்டியுரைக்க. ஏனை யாவரும் - என்னை யொழித்து ஒழிந்த அடியவர் எல்லாரும். 'நெடுங்காலம்' என்றதன்பின், செல்ல என்னும் பொருட்டாகிய, 'ஆக' என்பதும், அதன்பின் உம்மையும் விரிக்க. கெடுவேன் என்றதன் பின்னும் இரக்கப் பொருட்டாகிய ஓகாரம் விரித்து, 'இந்நிலையிற்றானே இருந்து, அழிந்தொழிவேன் போலும்' என உரைக்க.

ஒய்வி லாதன உவமனில் இறந்தன
ஒண்மலர்த் தாள்தந்து
நாயி லாகிய குலத்தினுங் கடைப்படும்
என்னைநன் னெறிகாட்டித்
தாயி லாகிய இன்னருள் புரிந்தஎன்
தலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள்கிலேன்
செழுங்கடல் புகுவேனே. **#43**

அழியாததும் உவமை இல்லாததும் ஆகிய தன் திருவடியை அருள் செய்து, நாயினும் இழிந்தவனாகிய என்னை நல்வழி காட்டி ஆண்டருளி, தாயினும் சிறந்த அருள் செய்த இறை வனைக் காணாத நான், தீப்பாய்தல் முதலியவற்றைச் செய்திலேன். என்மன வலியிருந்தவாறு என்னை?

விளக்கவுரை

ஆத்துமசுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஓய்வு - மெலிதல்; 'உயிர்களைத் தாங்குதலில் தளர்ச்சி யில்லாத' என்றபடி. 'உவமம்' என்பது, 'உவமன்' என ஈறு திரிந்தது. 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை' (தொல், பொருள் - 274) என்றாங்கு, 'எவ்விடத்தும், பொருளின் உவமம் சிறந்து காட்டுதல் மர பாய் இருக்க, இவை அவ்வாறன்றி, உவமம் யாதாயினும், அதனினும் சிறந்து நிற்பன' என வியந்தருளிச் செய்தவாறு. உவமம், தாமரைமலர், பொன், தளிர் முதலியன. 'இலாதனவும், இறந்தனவும் ஆகிய தாள்' என்க. 'நாய்' என்பது, அதன் பண்பின்மேலும், 'குலம்' என்றது, அதனிற் பிறந்த உயிரின்மேலும் நின்றன. 'நாய் என்னும் அத்தன்மை யிற் பொருந்திய குலத்திற் பிறந்த அவ்வுயிரினும் கடைப்பட்ட' என்றபடி. 'என்னை' என்றதை, 'எனக்கு' எனத் திரிக்க. தாயில் ஆகிய இன்னருள் புரிந்த - தாயினது அன்பு போலச் சுரந்த இனிய திருவருளை விரும்பிச் செய்த.

'நனி' என்னும் உரிச்சொல், 'காணேன்' என்பதன் முதனிலையைச் சிறப்பித்தது; 'இடையறாது கண்டிருக்கும் பேற்றைப் பெற்றிலேன்' என்றபடி. இதன்பின், 'அதன்பொருட்டு' என்பது வருவிக்க. 'புகுவேனே' என்றதில் உள்ள ஏகாரம் எதிர் மறையாகலின், 'தீயில் விழமாட்டாதவனும், திண்வரையினின்றும் உருளமாட்டாதவனும் ஆகிய யான், செழுமையான கடலிலே புகுவேனோ; மாட்டேன்' என உரைக்க.

வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடும்
அதுதனை நினையாதே
மான்நி லாவிய நோக்கியர் படிறிடை
மத்திடு தயிராகித்
தேன்நி லாவிய திருவருள் புரிந்தஎன்
சிவன்நகர் புகப்போகேன்
ஊனில் ஆவியை ஓம்புதற் பொருட்டினும்
உண்டுடுத் திருந்தேனே. **#44**

மாதர் மயக்கத்தில் சிக்கி, உழன்ற என்னை ஆட் கொண்டருளின இறைவனது சிவபுரத்தை அடையாமல், உடம்பையும் உயிரையும் காப்பாற்றும் பொருட்டு இன்னமும் உண்டும் உடுத்தும் இருந்தேன். என்னே என் நிலை?

விளக்கவுரை

ஆத்துமசுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வேனில் வேள் - மன்மதன். மதி - சந்திரன். படிறு - வஞ்சனை, என்றது அன்னதாகிய பார்வையை என்பது, 'நோக்கியர்' என்றதனால் பெறப்பட்டது. 'படிறிடை' என்றதன்பின், 'பட்டு' என ஒருசொல் வருவித்து, அதனையே 'நினையாது' என்ற எச்சத்திற்கு முடிபாக்குக. 'மகளிரது கடைக்கண் நோக்கில் அகப்படின், வேள் கணை கிழிக்கவும், மதிசுடவும் துயருறும் நிலை உண்டாம் என்பதனை நோக்காது அகப்பட்டேன்' என்றதாம். 'மத்திடு தயிராகியதனால்' போகேனாய் இன்னும் இருந்தேன்' என்க. மேல் 'உடையான் அடிநாயேனைத் தினையின் பாகமும் பிறிவது திருக் குறிப்பன்று' (பாட்டு-*41*) என்றதனால், இறைவன் அடிகளை, 'கோலமார்தரு பொதுவினில் வருக' என ஈங்கே நிறுத்தி, ஏனையடியார்களை மட்டில் அழைத்துச் சென்றதற்குக் காரணம், தமது கருத்து வகையேயன்றி, இறைவனது திருவுளப்பாங்கு அன்று என்பதை அருளிச்செய்தார். இதனுள் அக்கருத்து இன்னதென்பதை எடுத்தோதியருளினார். 'மான் நிலாவிய

நோக்கியர்' எனப் பொதுமையிற் கூறினாரேனும், அஃது அடிகள்மாட்டுப் பேரன்புடையராய் அவரையின்றியமையாராகிய ஒருவரையே குறிக்கும். அவரை அடிகள் தம் மனைவியார் என்றலே பொருந்துவதன்றிப் பிறவாறு கோடல் பொருந்தாது. அவரும் இறைவன் அடிகளை ஆட்கொள்வதற்கு அண்மைக் காலத்தே மணந்தவராதல் வேண்டும். அடிகளை அவர் இன்றியமையாதிருந் தமையையும், அந்நிலையை அடிகள் நினைந்து அவர் அறியாதே இறைவனோடு செல்லமாட்டாராயினமையையும் வருத்த மிகுதியால் காமம் காரணமாக அமைந்தனபோலத் தாம் அருளிச்செய்தாராயினும், அன்பினால் அமைந்தன என்றே கொள்ளப்படும். படவே, அடிகள் பாண்டியனை விட்டு நீங்கியபின்னும் இறைவன் 'தில்லையில் வருக' என்று பணித்த பின்னும் சிறிது காலம் அவ்வம்மையாரோடு திருவாத வூரில் இருந்து, பின்னர் இறைவன் திருவருட்பேற்றின் பெருமையை அவர்க்கும் அறிவுறுத்தித் தில்லைக்குப் புறப்பட்டார் என்பதும் அவ் வம்மையாரும் வருத்தமின்றி, அடிகளையும் இறைவனையும் வழி பட்டிருந்து இறைவன் திருவடியை அடைந்தார் என்பதும் உய்த் துணர்ந்து கொள்ளற்பாலன. அடிகள் தாம் இறைவனோடு செல்லாது நின்ற காரணத்தை, இனிவரும், 'முடித்தவாறும்' என்ற திருப் பாடலிலும் அருளுவர், சுந்தரர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட பின்னரும் மனைவியார் இருவருடன் வாழ்ந்திருந்தமை நன்கறியப்பட்டதாகலின், அன்னதொரு நிலை அடிகட்கும் இருந்ததெனக் கொள்ளுதல் எவ்வாற்றானும் தவறுடைத்தாகாமையே யன்றி, இன்னோரன்ன அருட்டிரு மொழிகளை, மனம் உலகப் பற்றினாலும், பிறவாற்றாலும் சிறிதும் துயருறாதிருக்கவும், உற்றது போல, 'மாதர் வலையில் அகப்பட்டு வருந்துகின்றேன்; ஆக்கைக்கு இரைதேடி அலைவதிலே காலம் கழிக்கின்றேன்' என்றெல்லாம் பாடுவார் சிலரது பாடல்களோடு ஒப்பவைத்துப் பொருள் செய்தல் குற்றமாதலும் அறிந்துகொள்க. இங்ஙனம், சிறுபற்றுக் காரணமாக அடிகள் உலகில் நின்றபின், மீள இறைவன் திருவடி கூடுங்காலம் சிறிது நீட்டித்தமையின், அந் நீட்டிப்பைப்பொறாமையால், அடிகள், தம்மைத் தாமே பலகாலும் நொந்து பல பாடல்களை அருளிச்செய்தார்; அவ்வருளிச்செயல் உல கிற்குப் பேருபகாரமாய் முடிந்தது எனக் கொள்க.

இருகை யானையை ஒத்திருந் தென்னுளக்
கருவை யான்கண்டி லேன் கண்ட தெவ்வமே
வருக வென்றுப ணித்தனை வானுளோர்க்கு
ஒருவ னேகிற்றி லேன் கிற்பன் உண்ணவே. **#45**

நீ என் மனத்தில் எழுந்தருளியிருந்து நான் துன்பம் நுகர்தற்கு இரங்கி,

வருக என்று கட்டளை இட்டு அருளினை; அந்தச் சுகத்தை நான் அநுபவிக்கப் பெற்றிலேன்.

விளக்கவுரை

கைம்மாறு கொடுத்தல்

கலிவிருத்தம்

இப்பகுதிக்கு, 'கைம்மாறு கொடுத்தல்' எனக் குறிப் புரைத்தனர் முன்னோர். 'கொடுத்தல்' என்பது 'கொடுத்தல் பற்றியது' என்னும் பொருட்டாய், கொடுத்தல் இயலாமையையே குறிக்கும். இஃது இப்பகுதியில் ஒன்பதாந் திருப்பாட்டின் பொருள் பற்றி உரைக்கப்பட்டது. பொருள்கோள்: 'வானுளோர்க்கு ஒருவனே, (நீ என்னை) வருக என்று பணித்தனை; (ஆயினும் யான்) அது செய்கின்றிலேன்; (மற்று) உண்ணவே கிற்பன்; (அதனால்,) யான் இருகை யானையை ஒத்திருந்து, என் உள்ளக் கருவைக் கண்டிலேன்; கண்டது எவ்வமே'. இருகை யானை, இல்பொருள் உவமை. விலங்கொடு தமக்கு வேற்றுமை கையுடைமை என்பது கூறுவார், யானையாகிய விலங் கிற்கு கையுண்மை கருதி, அதனின் வேறு படுத்து, 'இருகை யானை யை ஒத்து' என்றார். கரு - உட்பொருள். உள்ளத்தின்கண் உள்ள உட் பொருளாவது, முதற் பொருள்; சிவம். 'கருவை' என்றது, 'கருவாகிய நின்னை' என்னும் பொருட்டாகலின், முன்னிலைக்கண் படர்க்கை வந்த மயக்கமாம். கிற்றிலேன் - வல்லேனல்லேன். கிற்பன்- வல்லேன்.

உண்டொர் ஒண்பொரு ளென்றுணர் வார்க்கெலாம்
பெண்டிர் ஆண்அலி யென்றறி யொண்கிலை
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலேன் என்னகண் மாயமே. **#46**

மேலான பொருள் ஒன்று உண்டு என்று அறிந்தார்க்கும் அறிதற்கரிய நீ, எனக்கு உள்ளபடி எழுந்தருளிக் காட்சி தந்தருளினை. அப்படி காட்சி கொடுத்த உன்னைக் கண்டும் காணாத வன் போல மயங்குகின்றேன். இது என்ன கண்மாயம்?

விளக்கவுரை

கைம்மாறு கொடுத்தல்

கலிவிருத்தம்

ஒண்பொருள் - சிறந்த பொருள்; பரம்பொருள். உண்டு என்று உணர்வார் - உண்மை மாத்திரையின் உணர்வார். அவர், சிந்தனையறிவின்றிக்

கேட்டலறிவு ஒன்றேயுடையார் என்க. அவர்க்கு அப்பொருளின் இயல்பு அறியவாராமையை, பெண்டிர் ஆண் அலியென்று அறிய ஒண்கிலை என்றார். எனவே 'பெண்டிர் ஆண் அலி' என்றது, 'இன்னது' என்னும் அளவாய் நின்றது. 'உள்ளவா' என்றது, 'நின் இயல்பு முழுதும் இனிது விளங்கும் வகையில்' என்றபடி. கண்டும் தோன்றியபொழுது அநுபவமாகக் கண்டும். கண்டிலேன் - பின்னர்க் காணவில்லை. 'அவ்வநுபவம் நீங் காது நிற்கப் பெறுகிலேன்' என்றபடி. கண்மாயம் - கட்பொறி பற்றிய மாயம். அது நன்கு காணப்பட்ட பொருள் ஓர் இமைப் பொழுதில் விரைய மறைதல். கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரி தாதல் போல, (குறள். *377)* அநுபவத்தைத் தலைப்பட்டும், நிலைக்கப் பெற்றிலேன்; இஃது ஓர் வினைப்பயன் இருந்தவாறு என்பதாம்.

மேலை வானவ ரும்மறி யாததோர்
கோல மேயெனை ஆட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேஇவை வந்துபோம்
கால மேஉனை யென்றுகொல் காண்பதே. **#47**

மேன்மையுடைய தேவர்களும் அறிய காட்சிக்கு எட்டாத திருவுருவத்தை உடைய நடராஜப் பெருமானே! நீ என்னை ஆட்கொண்டு உள்ளாய். பிரபஞ்சத்தின் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக் கும் சாட்சியாய் இருக்கும் கால சொரூபம் நீ. உன்னை நான் எப்போது காண்பேன்?

விளக்கவுரை

கைம்மாறு கொடுத்தல்

கலிவிருத்தம்

'மேலை' என்றதில் ஐ சாரியை. மேலை வானவர் - மேலிடத்துள்ள தேவர். எனவே. 'வானவர்' என்றது, வாளா பெய ராய் நின்றதாம். கோலம் - வடிவம். அஃது ஆகுபெயராய், அதனை உடையவனைக் குறித்தது. வானவராலும் அறியப்படாமை கோலத் திற்கு அடையாதல் அறிக. 'கூத்தன்' என்றது தான்செய்யும் செயலால் தொடக்குண்ணாதவன் என்பது குறித்து நின்றது. மண், விண் முதலிய எல்லாவற்றிலும் அவையேயாய்க் கலந்து நிற்றல்பற்றி இறைவனை அவையாகவே ஓதினார். அதனானே, பின்னர் அவைகளை 'இவை' எனச் சுட்டினார். பின்னர், 'காலமே' என்றதும் அது. ஏகாரத்தை எண்ணுப்பொருள தாக்குவாரும் உளர்; அவர், பின்னர், 'காலமே' என்றதற்கு வேறு கூற மாட்டாதவராவர். போம் என்ற பெயரெச்சம் காலம் என்ற ஏதுப்பெயர் கொண்டது. 'காலம்' என்பது காலப் பெயரன்றோவெனின், அன்று; என்னையெனின், 'நிலனே காலம் கருவி' (தொல். சொல் - *113.)* என்றவிடத்து, 'காலம்' என்றது, அவ்வவ்

வினைநிகழ்ச்சிக்குரிய சிறப்புக் காலத்தையன்றி, எல்லா வற்றிற்கும் ஏதுவெனப்படும் பொதுக்காலத்தை அன்றாகலானும், ஈண்டுக் கருதியது பொதுக் காலத்தையன்றிச் சிறப்புக் காலத்தை அன்றாகலானும், இப்பொதுக்காலம், பிறபொருள்களோடு ஒப்பப் பொருள் எனப்படுமாகலானும் என்க.

காண லாம்பர மேகட்கி றந்ததோர்
வாணி லாம்பொரு ளேஇங்கொர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே. **#48**

இறைவா! ஊனக் கண்ணால் அன்றி, ஞானக் கண்ணாலேயே காண்பதற்குரிய பரஞ்சோதி நீ! பறவைக் குஞ்சு கூட்டை விட்டுப் பறக்க முடியாது இருப்பது போன்று பாழாய்ப் போன நான் பொய்யுடலை விட்டுப் பிரிந்து உன்னோடு பொருந்தி இருக்கும் நெறியை அறியாது இருக்கிறேன். ஐம்புலன்களில் வைத்துள்ள பற்றுதலே அதற்குக் காரணம். பொறிவாயில் ஐந்தையும் எரிந்து போனவைகளாக ஒதுக்கி வைத்துப் பழகுவேனாக!

விளக்கவுரை

கைம்மாறு கொடுத்தல்

கலிவிருத்தம்

காணலாம் பரமே - ஞானக்கண்ணாலன்றி ஊனக் கண்ணாலும் காணத்தக்க பரம்பொருளே; இஃது அடியவர்க்கு அநுபவமாதல் குறித்தபடி. கட்கு இறந்தது ஓர் வாள் நிலாம் பொருளே- கண்ணொளியைக் கடந்ததாகிய ஒரு பேரொளி நிலை பெற்றுள்ள பொருளே; இஃது இறைவனது திருமேனியின் சிறப்புக் கூறியவாறு. 'நிலாப் பொருள்' என்பது, பாடம் ஆகாமையறிக. பார்ப்பு - பறவைக்குஞ்சு. 'பாழ்நனேன்' என்பது, எதுகை நோக்கி, 'பாணனேன்' எனத் திரிந்துநின்றது. 'பாழ்த்த பிறப்பு' *(தி.8 திருவாசகம் - 20)* என்றாற்போல, 'பாழ்' என்பது வினைப் பகுதியாயும் நிற்றலின், நகர இடைநிலை பெற்றது. 'பாழாகின்ற யான்' என்பது பொருள். 'புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய' *(தி.8 சிவபுராணம் அடி 55)* என்றாராகலின் அவ்வஞ்சனைக்கு இடமாகிய உடம்பை, 'படிற்று ஆக்கை' என்று அருளினார். பூணுதல் - பொருந்தக் கொள்ளுதல். போற்றி - பாதுகாத்து; என்றது, 'அவற்றை விடுக்குதலின்றி நின்று' என்றபடி. 'பார்ப்பெனப் படிற்றாக் கையைவிட்டு உனைப் பூணுமாறு அறிகின்றிலேன்' என்க. 'குடம்பை தனித்தொழியப் புள் பறத்தல் போல், *(குறள் - 338)* உடம்பு தனித்துக்கிடப்ப யான் அதனினின்றும் புறப்பட்டு'

என்பார், 'பார்ப்பென ஆக்கையை விட்டு' என்றார்.

போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்தும்நின்
றாற்றன் மிக்கஅன் பாலழைக் கின்றிலேன்
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறுங்
கூற்றம் அன்னதொர் கொள்கையென் கொள்கையே. **#49**

இறைவா! உன்னை வாயால் துதித்தும் உடம்பால் அங்கப் பிரதட்சணம் செய்தும் பல விதங்களில் புகழ்ந்துரைத்தும் பத்தியில் நிலை நின்று அந்த உறுதியான பக்தியின் வலிமையைக் கொண்டு உன்னை அழைக்கின்றேன் இல்லை. மார்க்கண்டேயனைப் பிடித்தல் பொருட்டு உன்னை எதிர்த்து வந்த கூற்றுவன் உன் திருவடியை அடைந்தான். என்னுடைய போக்கும் அத்தகையதாய் இருக்கிறது.

விளக்கவுரை

கைம்மாறு கொடுத்தல்

கலிவிருத்தம்

போற்றி என்றல் - வணக்கங் கூறுதல். புரளுதல், ஆற்றாமைபற்றி. நின்று - அன்பு நெறியிலே நின்று. 'ஆற்றமிக்க', ஒருபொருட் பன்மொழி. 'ஆற்றல் மிக்க', என்பது பாடமாயின், உன்னை யடைவிக்கும் 'ஆற்றல் மிகுந்த' என உரைக்க. 'அழைக் கின்றிலேன்' என்றதன்பின், 'அதனால்' என்பது வருவிக்க. 'ஏற்று வந்து எதிர்' என்றதை, 'எதிரேற்று வந்து' என மாற்றிக்கொள்க. எதி ரேற்றல் - பகையாய் ஏற்றுக்கொள்ளுதல். கூற்றம் - இயமன்; என்றது அவனது செயலை. 'கொள்கை' என்றதும், செயலையே. 'உன்னை அன்பால் அழைத்து அடையப் பெறாது ஐம்புல இன்பங்களில் திளைத்திருக்கின்ற என்னை, நீ ஒறுத்துஉன்பால் அழைக்கவே உன்னை யான் பெறுவேன்போலும்' என்பார், இறைவனை அன்பால் வழிபட்டு அவன் திருவடியைப் பெறாது, பகையாய் வந்து அதனைப்பெற்ற கூற்றுவனது செயலை உவமை கூறினார். 'காலன் அறிந்தான் அறிதற் கரியான் கழலடியே' *(தி.4.ப.113.பா.11)* என்றார், ஆளுடைய அரசுகளும்.

கொள்ளுங் கொல்லெனை அன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அறாமலர்க் கொன்றையான்
நள்ளுங் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே. **#50**

கொன்றை மாலையை அணிந்த இறைவனே! எள்ளும் எண்ணெயும் போல எல்லாப் பொருள்களிலும் நீக்கமின்றி நிறைந்து இருப்பவனே! உன்னை அடையும் வழியை அறியாத என்னையும் உன் அன்பரைப் போலக் கூவி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

விளக்கவுரை

கைம்மாறு கொடுத்தல்

கலிவிருத்தம்

'கொள்ளுங்கில்' என்பது பிழைப்பட்ட பாடம். 'எனையும்' என்ற உம்மை தொகுத்தலாயிற்று. அன்பரின் - ஏனைய அடியார்களைப்போல. கூய் - அழைத்து; 'பணி கொள்ளுங் கொல்' என இயைக்க. நள் - நடு. 'நடு, கீழ், மேல்' என்பன, அவ்வவ்விடத்தை யுணர்த்தி நின்றன.

எந்தை யாய்எம்பி ரான்மற்றும் யாவர்க்கும்
தந்தை தாய்தம்பி ரான்தனக் கஃதிலான்
முந்தி என்னுள் புகுந்தனன் யாவருஞ்
சிந்தை யாலும் அறிவருஞ் செல்வனே. **#51**

சிவன், எனக்குத் தந்தையும் தாயும் தலைவனும் ஆனவன். அவன் உயிர்கள் அனைத்துக்கும் தந்தையும் தாயும் தலைவனும் ஆகின்றான். மற்றுத் தனக்கு அம்முறை உரிமை ஒன்றும் இல்லாதவன். சொல்லால் மட்டும் அன்றி மனத்தாலும் யாராலும் அறிய முடியாத ஞானநற்செல்வத்தை உடையவன். அவனை நான் அறிதற்கு முன்பே அவன் என் உள்ளத்தில் குடிகொண்டு உள்ளான்.

விளக்கவுரை

கைம்மாறு கொடுத்தல்

கலிவிருத்தம்

'எந்தை, யாய், எம்பிரான்' என்றது தமக்கும், 'தந்தை, தாய், தம்பிரான்' என்றது பிறர்க்குமாம். 'யாய்' என்றது, எனக்குத்தாய் என்னும் பொருளாதலை 'யாயும் ஞாயும் யாரா கியரோ' (குறுந்தொகை-*40)* என்றதனானும் அறிக, அஃது - அம் முறைமை. முந்தி - தானே முற்பட்டு. 'முந்தி என்னுள் புகுந்தனன்' என்றதை இறுதிக்கண் வைத்துரைக்க. 'பிறர் முயன்றும் அடைதற் கரியவன், தானே வந்து என்னுள் புகுந்தனன்' என்றபடி. செல்வன் - எல்லாம் உடையவன்.

செல்வம் நல்குர வின்றிவிண் ணோர்புழுப்
புல்வரம் பின்றி யார்க்கும் அரும்பொருள்
எல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே. **#52**

செல்வர்களுக்கு இடையிலும் வறியோர்களுக்கு இடையிலும் தேவர்களுக்கு இடையிலும் புழுப்போன்ற அற்ப உயிர்களுக்கு இடையிலும் புல் போன்ற தாவரங்களுக்கு இடையிலும் சிவனருள்

பாகுபாடு இன்றி நிறைந்து இருக்கிறது. அந்த அகண்ட சொரூபத்தைக் காணப்பெற்ற பின்பும் அப்பெரு நிலையினின்றும் வழுவியவன் ஆனேன். முற்றிலும் மலபரிபாகம் அடையாததே இந்தக் துன்பநிலைக்குக் காரணம் ஆகும்.

விளக்கவுரை

கைம்மாறு கொடுத்தல்

கலிவிருத்தம்

'செல்வம், நல்குரவு' என்றவை அவற்றை யுடைவரைக் குறித்தன. 'புழு, புல்' என்றவற்றை, 'தாழ்ந்த பிறவி' என ஒருபகுதியாகக் கொள்க. 'வரம்பு' என்றது, 'பாகுபாடு' என்னும் பொருட்டாய் நின்றது. 'இறைவனை அறிதல் அறியாமைகட்கு, உலக முறை பற்றிக் காணப்படும் இப்பாகுபாடுகள் காரணமல்ல; அருள்வழி நிற்றலும், நில்லாமைகளுமே காரணம்' என்பார். உலகியலை எடுத் தோதி, 'யார்க்கும் அரும்பொருள்' என்று அருளினார். விண்ணோரது உயர்வைக் குறித்தற்குப் புழுப் புற்களை எடுத்தோதி யதன்றிப் பிறிதின்மையின், 'யாவர்க்கும்' என்பது கூறாராயினார். அரும்பொருளாகிய இறைவனை, 'அரும்பொருள்' என்றது பான்மை வழக்கு. கல் வகை மனம் - கல்லென்னும் வகை போலும் மனம். 'வகை' என்றது, அதனையுடைய பொருள் மேல் நின்றது. 'பட்ட கட்டம்' என்னும் எழுவாய்க்குரிய 'இது' என்னும் பயனிலை எஞ்சி நின்றது. 'இது' என்பது, 'இழிக்கத் தக்கது' என்னும் குறிப்பினது.

கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீறு
இட்ட அன்பரொ டியாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடிரண் டும்அறி யேனையே. **#53**

எண் மூர்த்திகளின் தத்துவத்தையும் அர்த்த நாரீசுவர தத்துவத்தையும் அறிந்து கொள்ளாத எனது பாசத் தளையைக் களைந்து, என்னை ஆட்கொண்டாய். அது மட்டுமன்று. திருநீறு பூசிய உன் மெய்யன்பர்கள் கூட்டத்தில் இருக்க நான் தகுதி வாய்ந்தவன் என்று உலகம் அறியும்படி என்னை அவர்களது சபையில் சேர்த்து வைத்தாய்.

விளக்கவுரை

கைம்மாறு கொடுத்தல்

கலிவிருத்தம்
கட்டு - பாசம். கண் ஆர நீறிடுதல் - காண்கின்ற கண்கள் மகிழ்வுறும்படி திருநீற்றை அணிதல். பட்டி மண்டபம் - கூட்ட மண்டபம்; என்றது, கேள்வி மண்டபத்தை. அஃதாவது, அறிவார் ஒருவர் உரைக்கும் அரும் பொருள்களைப் பலர் இருந்து கேட்கும் மண்டபம். இறைவன் திருப்பெருந்துறையில் ஆசிரியக் கோலத்துடன் குருந்த மரத்தடியில் அடியவர் பலருடன் வீற்றிருந்த நிலையையே அடிகள் இங்கு, 'பட்டி மண்டபம்' என்றார் என்க. 'எட்டினோடு' என்பதில் ஓடு, எண்ணிடைச்சொல். எனவே, 'எட்டினோடு இரண்டும்' என்றது, 'எட்டும் இரண்டும் கூட்டியுணரத் தெரியாதவன்' என்னும் பொருட்டாய், 'கல்லாதவன்' என்பதைக் குறிக்கும். யோக நெறியில், அகார உகரங்களாகிய பிரணவத்தை உணராதவன் என்பதைக் குறிக்கும். உபதேச முறையில் எட்டும் இரண்டும் கூடிய பத்தென்னும் எண்ணினைக் குறிக்கும் யகரமாகிய எழுத்தின் பொருளை - ஆன்மா இயல்பை அறியாதவன் என்பதைக் குறிக்கும். இவற்றுள் அடிகள் அருளியது யோகநெறிப் பொருள் பற்றியேயாம், ஞானோபதேசத்திற்கு முற்பட்ட நிலை அதுவே யாகலின். 'தவமே புரிந்திலன்' என மேலும் (பா. *9)* அருளிச்செய்தமை யறிக. 'ஏற்றினை' என வந்த இரண்டனுள், பின்னையதன்பொருள், 'இடபவாகனத்தையுடைய நீ' என்பது. 'அறியேனைப் பட்டி மண்டபம் ஏற்றினை; இது நின் கருணை இருந்தவாறு' என்க.

அறிவ னேஅமு தேஅடி நாயினேன்
அறிவ னாகக்கொண் டோஎனை ஆண்டது
அறிவி லாமையன் றேகண்ட தாண்டநாள்
அறிவ னோஅல்ல னோஅரு ளீசனே. **#54**

பேரறிவு சொரூபியே! அமிர்த சொரூபியே! அற்ப னாகிய என்னை ஒரு ஞானியாக்குதற் பொருட்டு அன்றோ, நீ, என்னை ஆட்கொண்டது. நீ ஆட்கொண்டதற்கு முன்பு நான் அறிவிலி யாய் இருந்தது வெளிப்படை. இன்று நான் ஞானியோ அல்லனோ. எனக்கு விளங்கவில்லை. என் நிலைமையைச் சற்றே கூர்ந்து தெளிவு செய்வாயாக!

விளக்கவுரை

கைம்மாறு கொடுத்தல்

கலிவிருத்தம்
பொருள்கோள்; 'அறிவனே, அமுதே. ஈசனே, நீ என்னை ஆண்ட நாளில், அடிநாயினேன் அறிவனாகக் கொண்டோ ஆண்டது*!* (என்பால் நீ)

கண்டது அறிவிலாமையன்றே! (அங்ஙனமாக, யான் என்றும்) அறிவனோ? அல்லனோ? அருள்'. இதனுள், 'அறிவு' என வந்தன பலவற்றிற்கும், 'பேரறிவு' என உரைக்க. இது, சொற்பொருட்பின் வருநிலையணி. 'சிற்றறி வுடைமையே என் இயல்பாதல் அறிந்த நீ, என் பிழை கருதி என்னை விலக்கியது பொருந்துமோ', என முறையிட்டவாறு. அருள் - சொல்லு.

ஈசனே என் எம்மானே
எந்தை பெருமான் என்பிறவி
நாசனே நான் யாதுமொன்று
அல்லாப் பொல்லா நாயான
நீச னேனை ஆண்டாய்க்கு
நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேஅம் பலவனே
செய்வ தொன்றும் அறியேனே. **#55**

இறைவா! பெருமை வாய்ந்த எம் தந்தையே! நீ பிறவி நோயைப் போக்கியுள்ளாய். சிற்றம்பலச் செழுஞ்சுடரே! உடல் உணர்ச்சியில் உழன்று கிடந்த என்னை நீ, உயர்ந்த பேறும் அடையப் பெற்றவன் ஆக்கினாய். உன்னை விட்டுப் பிழைபடுகிற மனத்தை உடைய எனக்கு, என்ன செய்வது என்று விளங்கவில்லை.

விளக்கவுரை

அநுபோக சுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இப் பகுதிக்கு முன்னோர் கூறிய குறிப்பு, 'அநுபோக சுத்தி' என்பது, 'தடையில்லாச்சிவாநுபவம்' என்று இதற்குப் பொருள் கொள்ளலாம். அடிகள் இப் பகுதியில் அதனையே விரும்பிப் பாடுதல் காணலாம். 'ஈசனே' என்றதன்பின் உள்ள, 'என்' என்றதனை இறுதிக் கண் கூட்டி, வினாவாக்கி, 'இதற்குக் காரணம் என்' என உரைத்து, 'என்மாட்டுள்ள மலமாசே காரணம்' என்பது கருத்தாக்குக. எந்தை பெருமான் - என் தந்தையாகிய பெருமானே. நாசன் - போக்குபவன். 'யாதும் ஒன்று' என்றதனை, 'யாதொன்றும்' என மாற்றியுரைக்க. 'உலகில் உள்ள பொருள்களில் யாதொன்றும் ஆகாத நீசனேன்' என்க. யாதொன்றும் ஆகாமையாவது, எப்பொருளினும் யாதேனும் ஓர் குணம் உளதாகும்; என்னிடத்தில் குணம் யாதும் உண்டாயிற்றில்லை என்றபடி. இங்ஙனங் கூறியபின், 'பொல்லா நாயான நீசனேன்' என்றது, இத்துணை இழிந்தவரை நாயோடு ஒப்புமைப் படுத்தும் வழக்கு நோக்கி. 'அதுதானும் என் மாட்டு ஒவ்வாது' என்றற்கு, பொல்லா நாய் -

நன்றியறிவில்லாத நாய் என் றார். இஃது இல்பொருள் உவமை. நீசன் - இழிந்தவன். 'ஆண்டாய் க்கு' என்றதன்பின், 'கைம் மாறாக' என்பது வருவிக்க. 'நினைக்கவும்' என்ற உம்மை தொகுத்த லாயிற்று. கண்டாயே - இதனை நீ கண்டாயன்றோ. செய்வது - இதை நீக்குதற்குச் செய்யும் வழி. அறியேன் - அறியாது திகைக்கின்றேன்.

செய்வ தறியாச் சிறுநாயேன்
செம்பொற் பாத மலர்காணாப்
பொய்யர் பெறும்பே றத்தனையும்
பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாதம்
மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்ய னேன்நான் உண்டுடுத்திங்
கிருப்ப தானேன் போரேறே. **#56**

செய்ய வேண்டுவது இது என்று அறியாத நாயினேன் உன் திருவடியைக் காணாத பொய்யர் பெறும் பேறெல்லாம் பெறுதற்குரியேனாகி, உன் மெய்யன்பர் உன் திருவடியை அடையக் கண்டும் கேட்டும் அதனை அடைய முயலாமல் பொய்யனாய் உண்டும் உடுத்தும் காலம் கழிக்கின்றேன்.

விளக்கவுரை

அநுபோக சுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'செய்வது' என்றது, அருள் பெற்றபின் செயற் பாலதனை. இது, அவ்வருட்கு முதல்வனாகிய இறைவனையன்றிப் பிறிதொன்றனை நாடாமையாம். 'அதனை அறிந்திலேன்' என்றது, பின்னும் இவ்வுலகத்தை நாடினமைபற்றி. அதனானே, 'சிறுநாயேன்' என வருந்தியுரைத்தார். சிறுமை, நாய்க்கு அடை. 'அருள் பெற்றபின் செயற்பாலதனைச் செய்யாதொழிந்தமையின், அருள் பெறாதவரது நிலையையே நான் எய்தற்குரியனாயினேன்' என்பார், 'பாதமலர் காணாப் பொய்யர் பெறும்பேறு அத்தனையும் பெறுதற்கு உரியேன்' என்றார். இதன் பின்னர், 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவித்து, அதனை, 'இருப்பதானேன்' என்றதனோடு இயைத்து, 'இஃதொரு வினையிருந்தவாறு' எனக் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க. 'செம்பொற் பாதமலர், மலர்ப்பாதம்' என்றவற்றிற்குமுன், 'நின்' என்பது எஞ்சிநின்றது. பொய்யர் பெறும் இழப்பினை, 'பேறு' என்றது இகழ்ச்சி பற்றி. வெறி - வாசனை. பொய் - உலகியல். மெய்- வீட்டு நெறி. மெய்யர் பாதம் மேவலை அடிகள் கேட்டது, கண்ணப்பர் முதலியோரது

வரலாற்றில் என்க. 'அக் கேள்வி யறிவேயும் அமையும், யான் இவ்வுலகியலைத் துறத்தற்கு' என்பார், அதனையும் உடன் கூறினார். இக் காட்சியறிவு கேள்வியறிவுகளாலும் என் உள்ளம் திருந்திற்றில்லை என்பார், 'உண்டு உடுத்து இருப்பதானேன்' என்று அருளினார். உண்டலையும், உடுத்தலையும் எடுத்தோதியது, அவற்றைப் பெற்றதனோடு மகிழ்ந்து, பிறிது நாட்டமின்றியிருக்கின் றேன் என்றற்கு. ஏறு - சிங்க ஏறு, என்பது, 'போர்' என்னும் அடை யாற் பெறுதும். தேவரின் மிக்கானாதல் கருதிச் சிவபெருமான், 'சிங் கம்' எனப்படுதலை, 'மூவாச் சிங்கமே" (தி.6.ப.99.பா.2), 'சிவனே தேவர் சிங்கமே' (தி.7.ப.52.பா.1) என்றாற்போலுந் திருமொழி பற்றி அறிந்து கொள்க. ஏறு போல்வானை, 'ஏறு' என்றது, உவமை யாகுபெயர்.

போரே றேநின் பொன்னகர்வாய்
நீபோந் தருளி யிருள்நீக்கி
வாரே றிளமென் முலையாளோ
டுடன்வந் தருள அருள்பெற்ற
சீரே றடியார் நின்பாதஞ்
சேரக் கண்டுங் கண்கெட்ட
ஊரே றாய்இங் குழல்வேனோ
கொடியேன் உயிர்தான் உலவாதே. **#57**

இறைவனே! நீ உன் சிவபுரத்தில் நின்றும் எம் பிராட்டியோடும் இவ்விடத்து எழுந்தருளி அருள் செய்யப்பெற்ற உன் அன்பர், உன் திருவடியை அடையக் கண்டும், கண்கெட்ட ஊர் எருது போன்று இவ்வுலகத்தில் உழல்வேனோ? இத்தன்மையேனது உயிர் நீங்காதோ?

விளக்கவுரை

அநுபோக சுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'போந்தருளி' என்ற செய்தெனெச்சத்தை, 'போந் தருள' எனத்திரித்தும், 'இருள்நீக்கி' என்றதனை, 'உடன் வந்து' என்றதன்பின்னர்க் கூட்டியும், 'கொடியேன், உயிர் உலவாது, கண்கெட்ட ஊர் ஏறாய் இங்கு உழல்வேனோ' என மாற்றியும் பொருள் கொள்க. 'நீ' என்றது, பின்னரும் சென்றியையும். 'நீ நின் பொன்னகர் வாய் போந்தருளவும், அருள்பெற்ற சீரேறு அடியார் நின்பாதம் சேரவும் அவற்றைக் கண்டும் உயிர் உலவாது கொடியேன் இங்கு உழல்வேனோ' என வினைமுடிக்க. 'உடன்' என்றதில், 'உடனாய்' என ஆக்கம் வருவித் துரைக்க. திருப்பெருந்துறையில் இறைவன் ஆசான் மூர்த்தியாய் வந்த பொழுது அம்மையோடு உடனாய் இருந்திலனாயினும், அம்மை யாவாள்

அருளன்றி வேறல்லளாகலானும், இறைவன் அருளன்றி யிலனாகலானும், அவளோடு உடனாய் வந்தருளியதாகப் பல விடத்தும் அருளுவர்; மேலும் அவ்வாறு அருளினமை காட்டப் பட்டது. இறைவன் அருளன்றி இலனாதலை, 'அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே அருளு மவனன்றி யில்லை - அருளின் றவனன்றே இல்லை' (சிவஞானபோதம் சூ-5. அதி-2) என்பதனால் அறிக. ஏறு - எருது. காட்டேற்றினின்றும் பிரித்தற்கு, 'ஊரேறு' என்றார். ஊர் ஏறுகள் மேய்தற் பொருட்டுக் காட்டிற் செல்லுமாயினும், மேய்ந்த பின்னர் ஊரை அடையும். அவற்றுள் கண்கெட்ட, ஏறு ஒன்று இருக்குமாயின், அஃது ஏனையவற்றோடு கூடிச் செல்லமாட்டாது காட்டிலே கிடந்து தன் இனத்தையும், தலைவனையும் நினைந்து கதறி அலமருதலின், அதனை, அருளைப் பெறுதற் பொருட்டு இவ்வுலகில் வந்தவர் பலரும் அதனைப் பெற்றுச் சிவன் நகருக்குச் சென்றுவிட, அவர்களோடு செல்லாது இவ்வுலகில் நின்று அவர்களையும், இறைவனையும் நினைந்து அழுது அலமரும் தமக்கு உவமை கூறினார். 'என் உயிர்' என்பது ஒற்றுமை வழக்காயினும், உறுப்புத் தற்கிழமை வழக்கோ டொத்தலின், 'உலவாது' என்பது, சினைவினை முதல்மேல் நின்ற வாறு; இவ்வாறன்றி இதனை வேறு தொடராக்கி உரைத்தலுமாம்.

உலவாக் காலந் தவமெய்தி
உறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப்
பாவி யேனைப் பணிகொண்டாய்
மலமாக் குரம்பை இதுமாய்க்க
மாட்டேன் மணியே உனைக்காண்பான்
அலவா நிற்கும் அன்பிலேன்
என்கொண் டெழுகேன் எம்மானே. **#58**

அளவில்லாத காலம் உடலை வெறுத்துத் தவம் புரிந்த பல முனிவரும் வருந்தி நிற்க, பாவியாகிய என்னைப் பணி கொண்டனை. அங்ஙனமாகவும் இந்தமல உடம்பை ஒழிக்க முயலேன். உன்னிடத்து அன்பு இல்லாத நான் இனி எவ்வகையால் உயர்வேன்?

விளக்கவுரை

அநுபோக சுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பொருள்கோள்: 'மணியே, எம்மானே' உனைக் காண்பான், பல மாமுனிவர், உறுப்பும் வெறுத்து, இங்கு உலவாக் காலம் தவம் எய்தி நனிவாட, அவர்களைப் பணிகொள்ளாமல் உன்னைக்

காணும்பொருட்டு யாதும் செய்யாத பாவியேனைப் பணி கொண்டாய்; *(யானோ)* உடம்பை நீக்கிக் கொள்ளும் விருப்பம் இல்லேன்; உன்னைக்காண விரும்பி அலைகின்ற அன்பும் இல்லேன்; எவ்வாற்றால் உன்னைத் தொடர்வேன்'. தவம், உண்டி சுருக்கல் முதலாயின. உடம்பினை, 'அங்கம்' என்னும் வடநூல் வழக்குப்பற்றி, 'உறுப்பு' என்றார். 'உறுப்பொத்தல் மக்கள்ஒப் பன்றால்' *(குறள்.993)* எனவும், 'குறித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை உறுப்போ ரனையரால் வேறு' *(குறள்.704)* எனவும் வருவனபோல்வனவற்றைக் காண்க.

மானோர் நோக்கி உமையாள்
பங்கா வந்திங் காட்கொண்ட
தேனே அமுதே கரும்பின்
தெளிவே சிவனே தென்தில்லைக்
கோனே உன்தன் திருக்குறிப்புக்
கூடு வார்நின் கழல்கூட
ஊனார் புழுக்கூ டிதுகாத்திங்
கிருப்ப தானேன் உடையானே. **#59**

மான்விழி போன்ற விழியினை உடைய அம்பிகையின் வலப்பாகா! சிதம்பர நாதா! நீ பரிபூரணப் பரம் பொருளாகத் தோன்றி உன் அடியார்க்கு அமிர்தம் ஆகின்றாய். உன்னை நினைவதே மானுட வாழ்க்கையின் குறிக்கோள் என்று நீ காட்டியருளியதை அறிந்து கொண்ட நின் அன்பர், உன்னையே நினைந்து உன்னை அடைந்தார். உன் உடைமையாகிய நானோ உடலையே நினைந்து நிலவுலகுக்கு உரியவன் ஆனேன்.

விளக்கவுரை

அநுபோக சுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கூடுவார் - பொருந்துபவர்; ஒத்து நடப்பவர். 'கூட' என்றதன்பின், 'கூடாதேனாகிய யான்' என்னும் எழுவாய் வருவிக்க. 'இஃது என் வினையிருந்தவாறு' என்பது குறிப்பெச்சமாய், இறுதிக் கண் எஞ்சி நின்றது. 'உமையாள்,' 'கரும்பின்' என்பன மூவசை யிடத்து ஈரசை வந்த சீர் மயக்கம்.

உடையா னேநின் றனைஉள்கி
உள்ளம் உருகும் பெருங்காதல்
உடையார் உடையாய் நின்பாதஞ்
சேரக் கண்டிங் கூர்நாயிற்
கடையா னேன்நெஞ் சுருகாதேன்

கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங்
கிருப்ப தாக முடித்தாயே. **#60**

உயிர்கள் அனைத்தும், இறைவா! உனக்குச் சொந்தம் ஆயினும் பேரன்போடு உன்னையே நினைப்பவர் மட்டும் உன்னை அடைகின்றனர். இதை நான் கண்டிருந்தும் என் நெஞ்சம் உருகவில்லை. எனக்கு விவேகம் வரவில்லை. உள்ளக் கனிவு உண்டாகவில்லை. துர்நாற்றம் வீசும் உடலில் விருப்பம் வைத்து ஊர் நாய்க்கும் கீழ்ப்பட்டவனாக இங்கு வாழ்ந்து இருக்கிறேன்.

விளக்கவுரை

அநுபோக சுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'உடையாயாகிய நின் பாதம்' என்க. 'கண்டும்' என்னும் உம்மை தொக்கது. இஃது, 'இருப்பதாக' என்றதில், 'ஆக' என்பதனோடு முடியும். ஊர் நாய் - வளர்ப்பார் இல்லாத நாய்; 'அஃதா யினும் தான் செய்தற்பாலதனைச் செய்யும்; யான் அஃதில்லேன்' என்பார், 'ஊர்நாயிற் கடையானேன்' என்றார். ஊர் நாய் செய்வது, ஊரைக் காத்தல். 'கசியாதேன்' முதலிய எழுவாய்கள், 'இருப்பது' என்னும் தொழிற்பெயரொடு முடியும். ஆக - நிகழும்படி. முடித்தாய்- வரையறுத்தாய். ஏகாரம், தேற்றம். 'இதுதான் என்னை வந்திங்காட் கொண்ட கருணைக்குரிய செயலோ' என்பது குறிப்பெச்சம்.

முடித்த வாறும் என்றனக்கே
தக்க தேமுன் னடியாரைப்
பிடித்த வாறும் சோராமற்
சோர னேன்இங் கொருத்திவாய்
துடித்த வாறும் துகிலிறையே
சோர்ந்த வாறும் முகங்குறுவேர்
பொடித்த வாறும் இவையுணர்ந்து
கேடென் றனக்கே சூழ்ந்தேனே. **#61**

நீ முடித்த விதம் எனக்குத் தக்கதே. நான் அடியவரைப்பற்றியிருந்தும், என்னை மாயையாகிய பெண் வருத்த வருந்தினேன். எனக்கு நானே கெடுதியுண்டாக்கிக் கொண்டேன்.

விளக்கவுரை

அநுபோக சுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
'சோரனேன்' என்பது முதலாக இறுதிகாறும் உள்ளவற்றை, எஞ்சிநின்ற, 'ஆதலின்' என்பதனோடு முதலிற் கூட்டி, 'தக்கதே' என்றதைப் பின்னும் இயைத்து, 'அவருக்கு' என்பது வருவித்து, 'முடித்தவாறும் என்றனக்கே தக்கதே; அடியாரைச் சோராமல் முன் பிடித்தவாறும் அவருக்கே தக்கதே' என உரைக்க. 'அவரவருக்குச் செயற்பாலதனையே செய்தாய்; ஆதலின், யான் இங்கு நின்று துன்புறுவது நின்பிழை அன்று; என் பிழையே' என்றவாறு. முன்னைத் திருப்பாட்டில், 'இறைவன் செய்தது முறையன்று' என்பதுபோல அருளினமையின், இத் திருப்பாட்டில், 'அது முறையே' என்றார் என்க. கழிபடர் (மிக்க துன்பம்) உற்றோர் இங்ஙனம் பல வகையாலுங் கூறி இரங்குதல் இயல்பென்க. 'ஒருத்தி' என்றது, தம் மனைவியாரையேயாதல் வேண்டும் என்பது மேலே (*தி.8. திருச்சத கம் பா. 44*) கூறப்பட்டது. வாய்துடித்தமை முதலியவாகக் கூறியன, அடிகள் பிரிந்து வருங்காலத்து, அவ்வம்மையார்பால் நிகழ்ந்த ஆற்றா மைக் குறிப்பே என்றும், அங்ஙனம் ஆற்றாமை எய்திய அவரை, 'விரைந்து வருதும்' என அடிகள் தேற்றிப்பிரிந்தார் என்றும், அதனால், இறைவன் தம்மைப் பிரிந்து செல்லும்பொழுது தாம் அத்தேற்றச் சொல்லைக் கடக்கமாட்டாராயினார் என்றும் கொள்ளற்பாலன.

தேனைப் பாலைக் கன்னலின்
தெளிவை ஒளியைத் தெளிந்தார்தம்
ஊனை உருக்கும் உடையானை
உம்ப ரானை வம்பனேன்
நானின் னடியேன் நீஎன்னை
ஆண்டாய் என்றால் அடியேற்குத்
தானுஞ் சிரித்தே யருளலாந்
தன்மை யாம்என் தன்மையே. **#62**

மனம் தெளிந்தவர்களுக்குப் பரமானந்தத்தை ஊட்டும் ஞானப் பிரகாசன் நீ. அவர்களுக்கு ஒப்பற்ற மேலாம் பொருள் நீ. மற்றுப் பக்குவம் அடையாத நான் உனக்கு அடிமை என்றும் நீ எனக்குத் தலைவன் என்றும், சொந்தம் பாராட்டினால் ஒரு புன்சிரிப்பின் மூலம் நீ அதை மறுப்பாய். உன் அருளுக்குத் தகுதியற்ற நான் அதற்குத் தகுதியுடையவன் என்று சொல்லுவது தகாது.

விளக்கவுரை

அநுபோக சுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
கன்னல் - கரும்பு; இஃது அதன் சாற்றைக் குறித்தது. உம்பர் - மேலிடம்.

உம்பரான் - மேலிடத்தில் இருப்பவன். 'உம்பர் ஆனை' என இருசொல்லாக அறுத்து, 'தேவர்ஆ (பசு - காமதேனு)' என்றும் உரைப்பர். என்றால் - என்று உறவு கூறினால். 'தானும் சிரித்து' என்றது, 'பிறர் சிரித்தலேயன்றி' என்னும் பொருளைத் தருத லின், உம்மை, எச்சப் பொருட்டு. சிரித்தல், 'வருக என்று பணித்த போதும் வாராதொழிந்த இவன்தானோ என் அடியான்! இவனைத் தானோ நான் ஆண்டுகொண்டது! நன்றாயுள்ளது இவன் கூற்று!' என்னும் இகழ்ச்சிக் குறிப்பினாலாம். 'சிரித்தே' என்ற ஏகாரம், தேற்றம். 'அங்ஙனம் இகழினும், தனக்கு இயல்பாய அருட்டன்மை யால், முன்பு வந்து ஆண்டதுபோல, இனியும் என்னைத் தன்பால் கூவிக்கொள்வான்' என்பார், 'சிரித்தே ஒழியலாம்' என்னாது, 'சிரித்தே அருளலாம்' என்று அருளினார்.

தன்மை பிறரால் அறியாத
தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை ஆண்டையா
புறமே போக விடுவாயோ
என்னை நோக்கு வார்யாரே
என்நான் செய்கேன் எம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி
எந்தாய் எங்குப் புகுவேனே. **#63**

உன்னுடைய இயல்பு, பிறர் பலராலும் அறியப் பெறாதது. அத்தகைய இறைவனே! புன்மையுடைய என்னை ஆண்டருளிப் புறத்தே செல்ல விடுகிறாயோ? நீயே அப்படிச் செய்தால் நான் என் செய்வேன்? எவ்விடத்தில் புகுவேன்? என்னை நோக்குவோர் யார்?

விளக்கவுரை

அநுபோக சுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பிறர் - உன்னையொழிந்த மற்றையோர். சிவாநுபூதிச் செல்வராயினும், சிவனது தன்மை முற்றும் அறியப்படாமையறிக. அறியாத - அறியப்படாத. 'பொல்லாநாய்' என்றதற்கு மேல் (பா. 55) உரைத்தாம். 'புன்மையேனை ஆண்டு விடுவாயோ' என்றது, 'என் புன்மை நோக்காது முன்பு என்னை ஆண்டுகொண்டு, பின்பு அது நோக்கி விட்டு விடுவாயோ' என்றவாறு. 'அங்ஙனம் செய்யின், அஃது ஆண்டவற்கு அழகாகாது' என்பது குறிப்பு. ஓகாரம், இரக்கப் பொருட்டு. 'விடுவாயோ' என்றதன்பின், 'விடின்' என்பது எஞ்சி நின்றது. 'நோக்குவார்' என்றது, 'நோக்கி இரங்குவார்' என்னும் பொருட்டு. 'யாரே' என்னும் ஏகாரம்,

அசைநிலை. 'பொன்' என்றது, அதன் ஒளியை, 'எங்கு' என்றது, 'எவரிடத்தில்' என்றபடி.

புகுவேன் எனதே நின்பாதம்
போற்றும் அடியா ருள்நின்று
நகுவேன் பண்டு தோள்நோக்கி
நாண மில்லா நாயினேன்
நெகும்அன் பில்லை நினைக்காண
நீஆண் டருள அடியேனுந்
தகுவ னேஎன் தன்மையே
எந்தாய் அந்தோ தரியேனே. **#64**

இறைவனே! உன் திருவடிகளில் சரண் புகுவேன். உன் அடியார் நடுவில் கூடியிருந்து நகைத்தல் ஒன்றுமே செய்வேன். ஆனால் சரியான அன்பிலேன். இத்தகையோனான என்னை நீ ஆண்டருளல் தகுதியாமோ?

விளக்கவுரை

அநுபோக சுத்தி

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'எந்தாய், நின் பாதத்தில் யான் புகுவேன்; *(அதற்கு)* அஃது என்னுடையதோ! *(நீ கொடுக்க அன்றே பெறற்பாலது!)* அதனை நீ கொடுத்து ஆண்டருள *(ஏனைய அடியார்போல)* அடியேனும் தகுவனோ? *(தகேன்; ஏனெனில்,)* நாணமில்லா நாயினேன், பண்டு, போற்றும் அடியாருள் நின்று நின் தோள்களை நோக்கி மகிழ்வேனாயினும், *(இன்று எனக்கு)* நினைக்காண நெகும் அன்பில்லை; அந்தோ, என் தன்மையை *(யான்)* தரியேன்' எனப் பொருள் கொள்க. இறைவன் திருப்பெருந்துறையில் ஆசான் மூர்த்தியாய் எழுந்தருளியிருந்த கோலம், அடியார் உள்ளத்தைக் கவருந் தன்மையதாய், இருந்தமையின் தம் உள்ளமும் அதனால் ஈர்ப்புண்டது என்பதை, 'பண்டு தோள்நோக்கி நகுவேன்' என்றார். 'சிவனவன் திரள்தோள்மேல் - நீறு நின்றது கண்டனையாயினும் நெக்கிலை' என முன்னரும் *(தி. 8. திருச்சதகம் பா. 37)* அருளினார். 'நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும் - பேணாமை பேதை தொழில்' *(குறள்-833)* என்பவாகலின், 'நாணமில்லா நாயினேன்' என்றது, 'பேதையேன்' என்னும் பொருளதாதலும், பெற்ற திருவருளைப் பேணுந்தன்மை இன்மையால், 'பேதையேன்' என்றார் என்பதும் பெறப்படும். 'பேணாது நின்றே பயன்பெற விழைகின்றேன்; அஃது இயல்வதோ' என்பார், 'புகுவேன் எனதே நின்பாதம்' என்றார்.

தரிக்கிலேன் காய வாழ்க்கை
சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள்
விடலையே போற்றி ஒப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர்
தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள்
நின்மலா போற்றி போற்றி. **#65**

கடவுளே! சங்கரனே! விருத்தனே! ஒப்பில்லாத தலைவனே! தேவர் தலைவனே! வணக்கம். இந்த உடம்போடு கூடி வாழும் வாழ்க்கையைச் சகித்திலேன். ஆதலால் இதனை ஒழித்து உன் திருவடியை அடைவிக்க வேண்டும்.

விளக்கவுரை

காருணியத்திரங்கல்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இப்பகுதிக்கு, 'காருணியத்திரங்கல்' என முன்னோர் உரைத்த குறிப்பு, 'இறைவன் தனது கருணைத் தன்மையால் திருவுளம் இரங்குதலைக் குறித்தது' என்றே பொருள் கொள்ளற்பாற்று; என்னையெனின், இதனுள் அடிகள், 'தரிக்கிலேன் காய வாழ்க்கை' என்று எடுத்துக் கொண்டு 'உடல் இது களைந்திட்டு ஒல்லை உம்பர் தந்தருளு,ஒழித்திடு இவ்வாழ்வு, வருக என்று என்னை நின்பால் வாங்கிட வேண்டும்' என்றாற்போலப் பன்முறையும் வேண்டுகின்றா ராகலின். இதனானே, இதனுள், 'போற்றி' என வருவன பலவும், அங்ஙனம் இரங்குமாறு வேண்டிக்கொள்ளும் வணக்கவுரையாதல் பெறப்படும். தரிக்கிலேன் - பொறுக்கமாட்டேன். 'காய வாழ்க்கை தரிக்கிலேன்' என்க. வானம் - பரலோகம். 'அதன்கண் உள்ள' என்க. நீ எவ்வாறும் ஆவாய் என்பார், 'எங்கள் விருத்தனே, விடலையே' என்றார். விருத்தன் - முதியோன். விடலை- இளையோன். 'தம்பிரான்' என்றதில் தம், சாரியை. பிரான் - தலைவன்.

போற்றிஓம் நமச்சி வாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றிஓம் நமச்சி வாய
புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றிஓம் நமச்சி வாய
புறம்எனைப் போக்கல் கண்டாய்
போற்றிஓம் நமச்சி வாய

சயசய போற்றி போற்றி **#66**

இறைவனே! போற்றி! போற்றி! இந்தப் பொய்யுலக வாசனையால் மயங்குகின்றேன். உன்னையன்றி எனக்கு வேறு புகலிடம் இல்லை. ஆதலால் என்னைக் கைவிடாமல் காத் தருளல் வேண்டும்.

விளக்கவுரை

காருணியத்திரங்கல்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'ஓம் நமச்சிவாய' என்றது, 'இம்மந்திரத்தின் பொருளாய் உள்ளவனே' என்றவாறு. 'போற்றியோ' எனப் பிரித்து, ஓகாரத்தை, இரக்கப்பொருளது எனினுமாம். புயங்கம் - பாம்பு; 'ஒரு வகை நடனம்' எனவும் கூறுப. மயங்குதல் - செய்வதறியாது திகைத்தல். 'என்னைப் புறம் போக்கல்' என்க. கண்டாய், முன்னிலை அசை. சயசய - வெல்க வெல்க.

போற்றிஎன் போலும் பொய்யர்
தம்மைஆட் கொள்ளும் வள்ளல்
போற்றிநின் பாதம் போற்றி
நாதனே போற்றிபோற்றி
போற்றிநின் கருணை வெள்ளப்
புதுமதுப் புவனம் நீர்தீக்
காற்றிய மானன் வானம்
இருசுடர்க் கடவு ளானே **#67**

பொய்யுடலில் ஆசை வைத்துள்ள என் போன்றவர்களுக்கு அருள் புரிவதால், நீ, வள்ளல் ஆகின்றாய். உன் கருணைக்குப் புதிய தேன் ஒப்பானது. ஐம்பெரும் பூதங்கள், சூரியன் சந்திரன், உயிர் ஆகிய எட்டு மூர்த்திகளாய் நீ இருக்கின்றாய். இப்படி யெல்லாம், இருக்கிற உனக்கு மேலும் மேலும் வணக்கம் கூறுகிறேன்.

விளக்கவுரை

காருணியத்திரங்கல்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'பொய்யர் தம்மை ஆட்கொள்ளும்' என்றது. அருட்டிறத்தை அருளியவாறு. 'கருணையாகிய புதுமது வெள்ளம்' என்றபடி. மது - தேன். புவனம் - நிலம். இயமானன் - உயிர். இருசுடர், ஞாயிறும் திங்களும். 'இவ்வெட்டுமாய் நிற்கும் இறைவனே' என்றபடி. கடவுளான் - எல்லாவற்றையும் கடத்தலை உடையவன். 'இறை, தெய்வம்' என்னும்

தெய்வஞ்சுட்டிய பெயர்நிலைக் கிளவிகள், 'இறைவன், தேவன்' என உயர்திணை மருங்கிற் பால்பிரிந்திசைத்தல் போல, 'கடவுள்' என்னும் பெயரும் 'கடவுளான்' எனப் பால்பிரிந்து இசைத்தது என்க (தொல். சொல் -4).

கடவுளே போற்றி என்னைக்
கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே உருக்கி என்னை
ஆண்டிட வேண்டும் போற்றி
உடலிது களைந்திட் டொல்லை
உம்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த
சங்கரா போற்றி போற்றி **#68**

நான் தகவிலன் என்பதை அறிந்து என்னை ஆட்கொள். என் உள்ளத்தை உருக்கி அதை இளகச் செய். உடலை ஒதுக்கிவிட்டு விரைவில் முத்தியடையும்படி செய். கங்காதரா! உன்னை நான் மீண்டும் வணங்குகிறேன். நான் தகாதவன் எனினும் நீ சங்கரன் ஆதலால் என்னை ஆட்கொண்டருள்க.

விளக்கவுரை

காருணியத்திரங்கல்
அறு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'கண்டுகொண்டு' என்றதில் கொள், தற்பொருட்டுப் பொருண்மை விகுதி, 'உனக்குள் நீதானே கண்டு' என்பது பொருள். 'உன்னை வலிசெய்வார் ஒருவரிலர்; நீதானே இரங்குதல் வேண்டும்' என்றபடி. விட - (உலகப்பற்று) நீங்குமாறு. 'என்னை உள்ளே உருக்கி ஆண்டிட வேண்டும்' என்க. உருக்கி - உருகப்பண்ணி. உம்பர் - மேலுலகம்; சிவலோகம். 'அருள்' என்னும் முதனிலை, ஏவலிடத்து, உகரம் பெற்றது.

சங்கரா போற்றி மற்றோர்
சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா அல்குற் செவ்வாய்
வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி
மால்விடை யூர்தி போற்றி
இங்கிவாழ் வாற்ற கில்லேன்
எம்பிரான் இழித்திட் டேனே. **#69**

சங்கரனே! மங்கை பங்கனே! மால்விடை யுடையானே! வேறோர் புகலிடம் இல்லேன். இந்தப் பொய் வாழ்வைச் சகிக்கிலேன் ஆதலால்,

என்னைக் கைவிடல் உனக்குத் தகுதியன்று.

விளக்கவுரை

காருணியத்திரங்கல்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சங்கரன் - இன்பத்தைச் செய்பவன். சரண் - புகலிடம். பொங்கு அரா - சினம் மிகுகின்ற பாம்பு; இஃது ஆகுபெயராய் அதன் படத்தைக் குறித்தது. மால் விடை - பெரிய இடபம். 'ஊர்தி' என்பதில் இகரம், செயப்படுபொருட் பொருளதாய் நின்று, 'ஊரப்படுவது' எனவும், வினைமுதற் பொருளதாய் நின்று 'ஊர்பவன்' என்னும் பொருளையும் தரும். இங்கு அஃது வினைமுதற் பொருளதாய் நின்றது. 'இவ்வாழ்வு' என்னும் வகரம் தொகுத்தலாயிற்று. இழித் திட்டேன் - அருவருத்தேன். 'ஆதலின், நீக்கியருள்' என்பது குறிப் பெச்சம்.

இழித்தனன் என்னை யானே
எம்பிரான் போற்றி போற்றி
பழித்திலேன் உன்னை என்னை
ஆளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை எல்லாம்
பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி
உம்பர்நாட் டெம்பி ரானே. **#70**

எம்பிரானே! என்னை நானே தாழ்த்துவது அன்றி உன்னை நிந்தித்திலேன். சிறியவர் செய்த குற்றங்களைப் பெரியவர் பொறுத்தல் கடமையாதலால் என் குற்றங்களைப் பொறுத்து, இந்தப் பொய் வாழ்க்கையை ஒழித்தருளல் வேண்டும்.

விளக்கவுரை

காருணியத்திரங்கல்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'யான் உன்னைப் பழித்திலேன்; என்னையே இழித் தனன்' என்க. இழித்தனன் - இகழ்ந்துகொண்டேன். பழித்திலேன் - பழிகூறிற்றிலேன். 'என்னைப் பிரிவது உனக்குத் திருக்குறிப் பன்றாக வும், *(தி.8. திருச்சதகம் பா. 41)* யானே பிரிந்து நின்றேன்; சிறியோரது பிழையைப் பொறுத்து அவர்க்கு உதவுதல் பெரியோரது கடனாகலின், நீ எனது பிழையைப் பொறுத்து இவ்வாழ்வை ஒழித்திடல் வேண்டும்' என வேண்டியவாறு. உம்பர் நாடு - மேலுலகம்; 'அதன்கண் உள்ள எம் பிரானே' என்க.

எம்பிரான் போற்றி வானத்
தவரவர் ஏறு போற்றி
கொம்பரார் மருங்குல் மங்கை
கூறவெண் ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத்
திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி என்னை
ஆளுடை ஒருவ போற்றி. **#71**

தேவர் பிரானே! உமாதேவி பாகனே! திரு வெண்ணீறு உடையவனே! செவ்விய பெருமானே! திருச்சிற்றம் பலத்தை உடையவனே! முத்தி உலகை உடையவனே! என்னை அடிமையாக உடையவனே! என்னைக் காத்தருளல் வேண்டும்.

விளக்கவுரை

காருணியத்திரங்கல்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வானத்து அவரவர் - வானுலகில் உள்ள அவ்வவர்க்கு. 'அவரவர்' என்றது, ஒவ்வொரு பகுதியிலும் உள்ளாரைக் குறித்து. 'ஏறு' என்றது, 'தலைவன்' என்னும் பொருட்டாய் நின்றது. தெய்வப் பகுதியினராவார், உலகை நடத்துதற்கண் ஒவ்வொரு தொழிற்கு உரியராய் நின்று, அவ்வவ்வளவில், 'முதல்வர்' எனப்படுவராதலாலும், அம் முதன்மைகள் பலவும் 'சிவபெருமானது' முழுமுதன்மை யின் ஒவ்வொரு கூறாய் நிற்பனவாதலாலும், அப்பெருமானை 'வானத்து அவரவர் ஏறு' என்று அருளிச்செய்தார். கொம்பர் - பூங்கொம்பு. ஆர்- (அதன் தன்மை) பொருந்திய. 'கொம்பர்போலப் பொருந்திய' என்று மாம், செம் பிரான் - சிவப்பு நிறக் கடவுள். பிரமனை, 'பொன்னன்' என்றும், திருமாலை, 'மாயோன்' என்றும் கூறுதல்போல, சிவபிரானை, 'செம்பிரான்' என்றார். 'உம்பர்' என்பதன் அடியாகத் தோன்றிய, 'உம்பரான்' என்பது விளியேற்று, 'உம்பரா' என நின்றது.

ஒருவனே போற்றி ஒப்பில்
அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள்
கோமளக் கொழுந்து போற்றி
வருகஎன் றென்னை நின்பால்
வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி
தமியனேன் தனிமை தீர்த்தே. **#72**

பலவாகத் தோன்றும் பொழுதும் நீ ஒருவன்தான் இருக்கிறாய். உயிர்கள் அனைத்துக்கும் நீ சிறந்த தந்தையாய் இருக் கிறாய். தேவர்களுக்கெல்லாம் நீ மூத்தவன். உயிர்கள் உள்ளத்தில் நீ நித்திய திருவுருவத்தில் இருக்கிறாய். உனக்கும் எனக்கும் உள்ள உறவை நீ உறுதிப்படுத்து. என்னை உன் மயம் ஆக்குக. எனது உயிர் போதத்தை அகற்றி விடு. உனது மகிமையை நினைந்து நான் உன்னையே போற்றுகிறேன்.

விளக்கவுரை

காருணியத்திரங்கல்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
'ஒருவன்' என்பது, கடவுளைக் குறிப்பதொரு சொல். ஒப்பில் அப்பன் - 'தந்தை' எனப்படுவாருள் ஒருவரும் ஒப்பில்லாத தந்தை. 'குரவன்' என்பது, எதுகைநோக்கி, 'குருவன்' என நின்றது. மக்களுக்கு உய்யும் நெறிகாட்டுவார் ஆசிரியராதல்போல, தேவர் கட்கு உய்யும் நெறிகாட்டுவான் சிவபெருமானே யாதல்பற்றி, 'வானோர் குரவனே' என்றார்.
கோமளக் கொழுந்து - அழகின்மேல் எல்லை. சிவபிரானது அழகின் சிறு கூறுகளே ஏனைய யாவரிடத்தும், எப்பொருளிடத்தும் காணப்படும் அழகுகளாதல் தெளிவு.
இதனை, அப்பெருமான் பேரழகுடன் தோன்றிய வரலாறுகள் பல தெளிவுறுத்தும். 'உடலினின்றும் பிரித்து ஏற்றுக்கொள்ளுதலை' 'வாங்கிட வேண்டும்' என்றார். 'தமியனேன் தனிமை தீர்த்து நின்பாதம் தருக' எனக் கூட்டுக.

தீர்ந்தஅன் பாய அன்பர்க்
கவரினும் அன்ப போற்றி
பேர்ந்தும்என் பொய்ம்மை யாட்கொண்
டருளிடும் பெருமை போற்றி
வார்ந்தநஞ் சயின்று வானோர்க்
கமுதம்ஈ வள்ளல் போற்றி
ஆர்ந்தநின் பாதம் நாயேற்
கருளிட வேண்டும் போற்றி #73

அன்பரிடத்தில் மிகுந்த அன்பு செய்பவனே! என் பொய்ம்மை ஒழியும் வண்ணம் என்னை ஆண்டருளினவனே! விடத்தை உண்டு தேவர்களுக்கு அமிர்தத்தைக் கொடுத்தவனே! உன் திருவடியை எனக்குத் தந்தருளல் வேண்டும்.

விளக்கவுரை

காருணியத்திரங்கல்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தீர்ந்த அன்பு - முதிரவேண்டுமளவும் முதிர்ந்து முடிந்த அன்பு; 'பேரன்பு' என்றவாறு. அன்பாய - அன்பே வடிவமாகிய; 'அன்பு பிழம்பாய்த் திரிவார்'(தி.12 கண்ணப்பர் புரா. 154), 'அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு' (தி.12 கண்ணப்பர் புரா. 157) என்றாற்போல வருவன காண்க. 'அன்பர்' என்றது. 'அடியவர்' என்னும் அளவாய் நின்றது. 'அவரினும் அன்பன்' என்றது, அவரது அன்பளவினன்றிப் பன்மடங்கு பெரிதாய பேரருளை அவர்கட்கு வழங்குபவன் என்றவாறு. அவ்வருளாவது, ஊனக்கண்ணைப் பெயர்த்தளித்த அன்பர்க்குப் பரிசாக, 'என் அன்புடைத் தோன்றல்' (நக்கீரர் திருமறம்) என விளித்தும், தனது திருக்கையாலே அவரது திருக் கையைப் பிடித்தும், தன்னைப் பயன் கருதியன்றி அன்பே காரணமாக வணங்குவார் பலரும் அவரைத் தன்னினும் மேலாக வைத்து வணங்கு மாறு, தன் வலப்பக்கத்தே அவரை என்றும் நீங்காது நிற்கச்செய்தும் உயர்த்தினமை போல்வதாம். இது பற்றியன்றே, 'பேறினியிதன் மேலுண்டோ' (தி.12 கண்ணப்பர் புரா. 185) என இச்சிறப்பினைப் போற்றிக் கூறியது! 'அற்றவர்க்கு அற்ற சிவன்' என்று அருளிச் செய்தார் ஆளுடைய பிள்ளையாரும் (தி.3.ப.120.பா.2) என்க. 'பேர்த்தும்' என்பது மெலிந்து நின்றது; 'மீளவும்' என்பது பொருள். தம்மை ஆட் கொள்வதைத் தம்பொய்ம்மையை ஆட்கொள்வதாக அருளினார். முன்னர் இருந்த பொய்ம்மை, மெய்ந்நெறியிற்' செல்லாது உலகியலில் இருந்தது. பின்னர் உள்ள பொய்ம்மை, இறைவனுடன் செல்லாது இவ்வுலகில் நின்றது. 'பெரியோனாகலின், மீளவும் பொறுத்து அருள்புரிவான் என்று துணியலாகும்' என்னும் கருத்தினால், 'ஆட்கொண்டருளிடும் பெருமை போற்றி' என்றார். எனவே, இஃது எதிர்காலம் நோக்கிக் கூறியதாயிற்று. இங்ஙனம் துணிதல் கூடுமாயினும், அவனது திருக்குறிப்பை வரையறுத்தல் கூடாமையின், 'நின்பாதம் நாயேற்கு அருளிட வேண்டும்' என்று வேண்டினார். அங்ஙனம் வேண்டுகின்றவர் சிறியேனது குற்றத்தை எண்ணாத அவனது திருவருளின் பெருமையைக் குறித்தற்பொருட்டு, 'நஞ்சயின்று வானோர்க்கு அமுதம் ஈ வள்ளல்' என்று அருளினார். வள்ளல், விளி. வார்ந்த - ஒழுகிய. ஆர்ந்த - (இன்பம்) நிறைந்த.

போற்றிஇப் புவனம் நீர்தீக்
காலொடு வான மானாய்
போற்றிஎவ் வுயிர்க்குந் தோற்றம்

ஆகிநீ தோற்ற மில்லாய்
போற்றிஎல் லாஉ யிர்க்கும்
ஈறாய்ஈ றின்மை யானாய்
போற்றிஐம் புலன்கள்நின்னைப்
புணர்கிலாப் புணர்க்கை யானே. **#74**

பஞ்ச பூதங்களாக இருப்பவனே! எல்லா உயிர் களுக்கும் பிறப்பிடமாய் இருப்பவனே! பிறப்பு இல்லாதவனே! எல்லா உயிர்களுக்கும் இறுதியும் உனக்கு இறுதி இன்மையும் ஆனவனே! ஐம்புலன்களும் தொடரப்பெறாத மாயத்தை உடையவனே! என்னைக் காத்தருளல் வேண்டும்.

விளக்கவுரை

காருணியத்திரங்கல்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'தோற்றமாகி', 'ஈறாய்' என்றவற்றில், 'தோற்றம், ஈறு' என்றவை, 'அவற்றிற்குக் காரணன்' எனப் பொருள் தந்தன. 'ஆனாய்' எனவும், 'இல்லாய்' எனவும் வந்தன, விளிகள். புணர்க்கை - புணர்ப்பு; சூழ்ச்சி; என்றது, வல்லமையை.

புணர்ப்ப தொக்க எந்தை என்னை யாண்டு
பூண நோக்கினாய்
புணர்ப்ப தன்றி தென்ற போது நின்னொ
டென்னொ டென்னிதாம்
புணர்ப்ப தாக அன்றி தாக அன்பு
நின்க ழற்கணே
புணர்ப்ப தாக அங்க ணாள புங்க
மான போகமே. **#75**

ஆண்டவனே! உன்னோடு மாறுபட்டுத் திரிகின்ற அடிமையை நால்வகை உபாயங்களாலும் உன்னடிமை என்று உன் னோடு கூட்டிக் கொள்வது போல, மெய்யடியார் குணங்கள் ஒன்றும் இல்லாத என்னை, ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளித் தடுத்து ஆட் கொண்டு மெய்யடியார் மீது வைக்கும் அருள் நோக்கத்தை அடியேன் உணர்வுக்கு உள்ளும் புறமுமாக வைத்தருளினை! பிரமாதிகளுக்கும் அரிய இவ்வருள் நோக்கம் அடியேனுக்குக் கிடைத்தல் அரிதென்று அதன் அருமை அறிந்தபோது எனதாயிருந்த சகசமலம் ஒன்றும் என்னை நின்னொடு இரண்டறக் கூட்டுவதாகவும், இப் பிரபஞ்சத்தின் மேல் நின்ற அன்பு உன் திருவடிக்கண் மீளாது நிற்பதாக வும் ஆயின. அழகிய கண்ணாளா! திருமால், பிரமன் அகியவருடைய உலக போகங் களையும் கடந்து

இருக்கும் சிவானந்த போகமே! இந்தக் காருண்ணி யத்துக்கு நாயேனால் செய்யப்படுவதாகிய கைம்மாறும் உண்டோ?

விளக்கவுரை

ஆனந்தத்தழுந்தல்

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இப்பகுதியில் அடிகள் இறைவன் மாட்டு முறுகி எழும் பேரன்பினையே சிறப்பாக வேண்டிப் பாடுகின்றார். அன்பே இன்பிற்குக் காரணம் ஆதலின், இதற்கு, 'ஆனந்தத்தழுந்தல்' எனக் குறிப்புரைத்தனர்போலும் முன்னோர்! புணர்ப்பது ஒக்க - என்னை உன்னுடன் இரண்டறச் சேர்த்துக்கொள்வதுபோலவே. 'ஒக்கவே' என்னும் தேற்றே காரம், தொகுத்தலாயிற்று. இதனால், இறைவன் மாட்டுக் குறையின்மை பெறப்பட்டது. பூண நோக்கினாய் - நிரம்பத் திருவருளை நல்கினாய். நோக்குதல் அருளுதலாதலை, 'கண் பார்த்தல்' எனக் கூறும் வழக்குப் பற்றி உணர்க. 'புணர்ப்பது' நான்கில் இடை இரண்டனுள் அது, பகுதிப்பொருள் விகுதி. இது புணர்ப்பன்று என்றபோது இது நின்னொடு என்னொடு என் ஆம் - இங்ஙனம் நல்கிய அருள் என்னை நின்னொடு ஒன்றாகச் செய்யும் உபாயம் அன்று எனப்பட்ட பொழுது. இவ்வருள் உன்னோடு என்னிடை என்ன பயனை உடையதாம்? 'இஃது உபாயம் அன்று எனப்பட்டது' என்றது, அருள் புரிந்த உடனே இறைவனுடன் ஒன்றுபடாமல் உலகில் நின்று விட்டமையை யாவரும் அறிந்தமைபற்றி. இங்ஙனம் அருளியது அருளின் மாட்டாமை கூறியதன்று; தமது பக்குவம் இன்மை கூறியதாம். இது புணர்ப்பாக அன்றாக - இவ்வருள் என்னை உன்னோடு ஒன்று படுத்தும் உபாயமாகுக, அன்றாகுக; என்றது, இதற்குமேல் செயற்பாலதனை நோக்கல் வேண்டும் என்றபடி. அன்பு நின்கழற்கண் புங்கமான போகம் புணப்பதாக - இனி அன்பென்னும் உபாயமே உனது திருவடிக்கண் உண்டாகும் பேரின்ப நுகர்ச்சியில் என்னைச் சேர்ப்பதாக; 'அத்தகைய அன்பினை எனக்கு அருளுதல் வேண்டும்' என்பது கருத்து. எனவே, 'திருவருள் பயன்படுவது அன்புடையாரிடத் தேயாம் என்பது பெறப்பட்டது. அடிகள் அன்பில்லாதவரல்லர்; அன்று உடன்சென்ற அருள் பெறும் அடியவரது *(தி.8 கீர்த்தித் திருவகவல் - 130.)* அன்பு போன்ற அன்பும், கண்ணப்பரது *(தி.8 திருக்கோத்தும்பி - 4)* அன்பு போன்ற அன்பும் தமக்கு இல்லை என்பதையே குறித்தருளுகின்றார். புங்கம் - உயர்ச்சி.

போகம் வேண்டி வேண்டி லேன்பு ரந்த
ராதி இன்பமும்
ஏக நின்க ழல்இ ணைய லாதி

லேனென் எம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி
அஞ்ச லிக்கணே
ஆக என்கை கண்கள் தாரை ஆற
தாக ஐயனே. **#76**

ஐயனே! இந்திரன் முதலியோருடைய போகங் களையும் விரும்பிலேன். உன் திருவடியையன்றி மற்றோர் பற்று மிலேன். என்கைகள் உன்னை அஞ்சலிக்கவும் என் கண்களில் நீர் ஆறு போலப் பெருகவும் வேண்டும்.

விளக்கவுரை

ஆனந்தத்தழுந்தல்

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

போகம் வேண்டி - இன்பத்தை விரும்பி. 'புரந்த ராதிகளது இன்பமும் வேண்டிலேன்' என்க. புரந்தரன் - இந்திரன். 'இன்பம்' என்றது இன்ப வாழ்க்கையை. 'மக்களுள் மன்னர் முதலியோரது வாழ்வையேயன்றி' எனப் பொருள் தருதலின், 'இன்பமும்' என்ற உம்மை, இறந்தது தழுவிற்று. ஏக - ஏகனே. 'இலேன்' என்றதற்கு, 'பற்றுக்கோடு' என்னும் செயப்படுபொருள் வருவிக்க. இதன்பின் 'ஆதலின்' என்பதும் எஞ்சிநின்றது. ஆகம் - உடம்பு. விண்டு - உருகி. கம்பம் - நடுக்கம். வந்து - வரப்பெற்று; இதனை, 'வரப்பெற' எனத் திரித்துக்கொள்க. குஞ்சி - தலைமயிர். 'என் கை குஞ்சிக்கண் அஞ்சலித்தற்கண் ஆக' என்க. அஞ்சலித்தல் - கும்பிடுதல். 'என்கை குஞ்சிக்கண் அஞ்சலியாக' எனினுமாம். 'கண் களில் தாரை ஆறதாக' என்க. 'தாரை - இடையறாது விழும் வீழ்ச்சி. 'அதனையுடைய ஆறு' என்க. அது, பகுதிப்பொருள் விகுதி. 'ஆறதாக' என்றது பன்மை ஒருமை மயக்கம். 'இந்திராதியரது இன்பங்களை உவர்த்து உனது திருவடியொன்றினையே பற்றுக் கோடாகக் கொண்டவரிடத்து இத்தகைய அன்பின் நிகழ்ச்சிகள் நிகழு மன்றே; அடியேன் அவை நிகழப் பெற்றிலேன்' என்று இரங்கி, அவற்றை வேண்டியவாறு. 'கழலிணை' என, விகாரமின்றியே ஓதுதல் பாடமாகாமை யறிக.

ஐய நின்ன தல்ல தில்லை மற்றொர்
பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை பொய்ம்மை
யேன்என் எம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க வந்து
நின்க ழற்கணே
மெய்க லந்த அன்ப ரன்பெ னக்கு

மாக வேண்டுமே. **#77**

ஐயனே! உன்னையன்றி வேறொரு பற்றிலேன். நான் முழுப் பொய்யனாயினும் உன் திருவடியை அடைந்த மெய்யன்பரது அன்பு போன்ற அன்பை எனக்கு அருள் புரிய வேண்டும்.

விளக்கவுரை

ஆனந்தத்தழுந்தல்

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பற்று - துணை. பொய் - நிலையில்லாத உலக வாழ்க்கை, 'அதனைக் கலந்ததல்லது வேறு பேறில்லேன்' என்றது, திருவடிப்பேற்றினைப் பெறாமைக் கருதி. பொய்ம்மை ஏன் - 'எனக்கு உலகவாழ்க்கையில் பற்றில்லை' என்று சொல்லுகின்ற பொய்ம்மையை நான் ஏன் சொல்லவேண்டும்? சொல்லமாட்டேன்; 'ஆதலின் எனக்குத் துணைபுரிய வேண்டும்' என்றபடி. 'நின் கழற் கணே வந்து மெய்கலந்த அன்பர்' என்க. மெய் - நிலைபெற்ற இன்பம். ஆக வேண்டும் - உண்டாக வேண்டும். முதற்றொடரை இறுதியிற் கூட்டுக.

வேண்டும் நின்க ழற்க ணன்பு பொய்ம்மை
தீர்த்து மெய்ம்மையே
ஆண்டு கொண்டு நாயி னேனை ஆவ
என்ற ருளுநீ
பூண்டு கொண் டடிய னேனும் போற்றி
போற்றி யென்றுமென்றும்
மாண்டு மாண்டு வந்து வந்து மன்ன
நின்வ ணங்கவே. **#78**

இறைவா! எனது உயிர்போதத்தை நீக்கிச்சிவ போதத்தை உறுதியாக்கி, என்மீது இரக்கம் வைத்து எனக்குப் பேரன்பைக் கொடுத்து அருளுக. பேரன்பு பூண்டு உன்னைப் போற்றும் வாய்ப்புக் கிடைக்கும் இடத்துப் பிறப்பு இறப்பு எத்தனை வந்தாலும் அதனால் எனக்குத்துன்பம் இல்லை.

விளக்கவுரை

ஆனந்தத்தழுந்தல்

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பொருள்கோள்: 'மன்ன, நின் கழற்கண் அன்பு பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையே வேண்டும்; அதன்பொருட்டு நீ நாயினேனை ஆண்டுகொண்டு ஆவ என்று அருளு; அடியனேனும், மாண்டு மாண்டு வந்து வந்து பூண்டுகொண்டு போற்றி போற்றி என்று மென்றும் நின்

வணங்க' எனக் கூட்டியுரைக்க, இஃது, 'இப்பிறப்பில் அத்தகைய பேரன்பு அடியேனுக்கு எய்தாதாயின், பல பிறப்புக்கள் பிறந்தாயினும் அதனைப் பெறு வேனாக' என்றபடி. எனவே, ஆண்டுகொண்டு ஆவ என்று அருளு தலும் அப்பிறவிதோறும் என்பதாயிற்று. ஆவ என்று - ஆஆ என்று இரங்கி. பூணுதல், அத்திருவரு ளை. 'என்றென்று' என்னும் அடுக்குச் சிறப்பும்மையுடன் நின்றது. வண ங்க, அகர ஈற்று வியங்கோள். இதனால், இறைவன் திருவடிக்கண் பொய்யற்ற மெய்யன்பைப் பெறுதல் எத்துணை அரும்பேறு என்பது விளங்கும்.

வணங்கும் நின்னை மண்ணும் விண்ணும் வேதம்
நான்கும் ஓலமிட்டு
உணங்கு நின்னை எய்த லுற்று மற்றொ
ருண்மை இன்மையின்
வணங்கி யாம்வி டேங்க ளென்ன வந்து
நின்ற ருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க என்கொ
லோநி னைப்பதே. **#79**

உமாதேவி பங்கனே! மண்ணுலகும் விண்ணுலகும் உன்னை வணங்கி நிற்கும். நான்கு வேதங்களும் உன்னையறிய முயன்று அறியவொண்ணாமையால் இளைக்கும். அவ்வாறான பின்பு, யாம் உன்னை வணங்கி உன் திருவடியை விடோம் என்று சொல்ல, நீ வந்து எமக்கு அருள் செய்தற்கு உன் திருவுளம் யாதோ?

விளக்கவுரை

ஆனந்தத்தழுந்தல்

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பொருள்கோள்: 'மங்கை பங்க, நின்னை மண்ணும் விண்ணும் வணங்கும்; வேதம் நான்கும் ஓலம் இட்டு உணங்கும்; இவற்றால், மற்றோர் மெய்ப்பொருள் இல்லாமை தெளியப்படுதலின், யாம் நின்னை எய்தலுற்று வணங்கி, 'விடேங்கள்' என்று கூறி நிற்கவும், வந்துநின்று அருளுதற்கு நினைப்பது என்கொலோ'. 'ஓலம் இடுதல்' என்பது இங்கு, 'துதித்தல்' என்னும் பொருளது. உணங்கும் - இளைக்கும். 'விடேம்' என்னும் தன்மைப் பன்மை முற்றுவினை, 'கள்' என்னும் விகுதிமேல் விகுதியைப் பெற்றது. 'என்னவும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. வந்து நின்று - மீளத் தோன்றிநின்று. அருளுதல் - பொய்ம்மை தீர்ந்த மெய்யன்பினைப் பெறச் செய்தல். இணங்கு - நெருங்கிய. நினைப்பது - நினைத்தல்; ஆராய்தல். 'இனி உன்னை யாங்கள் பிரிவதில்லை என்று உறுதி கூறவும், எங்களுக்கு அருள் செய்ய ஆராய்வது என்னை'

என்றபடி. இதனுள், தம்மைப் பன்மையாக அருளினார்.

நினைப்ப தாக சிந்தை செல்லு மெல்லை
யேய வாக்கினால்
தினைத்த னையு மாவ தில்லை சொல்ல
லாவ கேட்பவே
அனைத்து லகு மாய நின்னை ஐம்பு
லன்கள் காண்கிலா
எனைத்தெ னைத்த தெப்பு றத்த தெந்தை
பாத மெய்தவே. **#80**

பரமனே! உலகனைத்தும் ஆகியிருக்கிறான். எனினும் அவனை அநுபூதியில் அடைவதற்கு மனம் உதவாது; வாக்கு உதவாது; ஐம்பொறிகளும் உதவமாட்டா. அந்தக் கரணங்கள் யாவும் பிரபஞ்சத்தை நுகர்வதற்கே உதவுகின்றன. பஞ்சபூதப் பொருளாகிய பரமனை வழிபடுதற்குச் சிறிதேனும் அவைகள் பயன்படா.

விளக்கவுரை

ஆனந்தத்தழுந்தல்

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'நினைப்பதாக' என்றதனை இறுதிக்கண் வைத்து உரைக்க. ஏய - பொருந்த. 'சொல்லல்' என்றது, சொல்லப்படும் பொருள்களைக் குறித்தது. 'ஆவன' என்பது, அன்பெறாது நின்றது. கேட்பவே - அறிந்தார் சொல்லக் கேட்பனவே; சொல்வோர் கேள்வியுணர்வே உடையவர் என்க. காண்கிலா - காணமாட்டா; இதன்பின், 'இங்ஙனமாகலின்' என்பது வருவிக்க. 'எந்தை பாதம் எய்த எனைத்தெனைத்தது, எப்புறத்தது' எனக் கூட்டுக. நினைப்பு அது ஆக - இவ்வாறாயினும், என் எண்ணம் நின்பாதத்தை எய்துதலாகிய அதுவேயாகுக. 'நினைபஃதாக' எனப் பாடம் ஓதினும் அமையும். 'மனம் செல்லும் அளவில், வாக்குச் செல்லாது. மற்று, அஃது உன்னைப்பற்றிப் பலவற்றைச் சொல்லுகின்றதே என்றால், அவையனைத்தும் பிறர் சொல்லியவற்றைக் கேட்டு அங்ஙனமே சொல்வனவன்றி வேறில்லை. ஐம்புலன்கள் அடியோடு உன்னை அணுகவே மாட்டாது நிற்கும் என்றால், உனது பாதத்தை உயிர்கள் அடைதல் என்பது எந்த அளவில் இயல்வது! எத்துணைச் சேய்மையில் உள்ளது! ஆயினும், எண்ணம் மாறாதிருப்பின் என்றேனும் எய்தலாம்' என்றபடி. 'வைத்த உள்ளம் மாற்ற வேண்டா, வம்மின்மனத் தீரே' என ஆளுடைய நம்பிகளும் அருளிச்செய்தார் *(தி.7.ப.7.பா.1)*. 'புலன்கள்' என்றது பொறிகளை. அவை இறைவனை அணுக மாட்டாமைக்கு ஏதுக்கூறுவார்,

'அனைத்துலகுமாய நின்னை' என்றார். 'அனைத்துலஃகும்' என்பதே பாடமாதல் வேண்டும். 'எய்த' என்ற வினையெச்சம் தொழிற் பெயர்ப் பொருள் தந்தது; 'எய்தலே' என்பதே பாடம் எனினும் அமையும்.

எய்த லாவ தென்று நின்னை எம்பி
ரான்இவ் வஞ்சனேற்கு
உய்த லாவ துன்க ணன்றி மற்றொ
ருண்மை யின்மையின்
பைத லாவ தென்று பாது காத்தி
ரங்கு பாவியேற்கு
ஈத லாது நின்க ணொன்றும் வண்ண
மில்லை யீசனே. **#81**

சிவனே! நான் உன்னை அடைய இருப்பது எப்பொழுதோ? எனக்கு உன்னையன்றி வேறு புகலிடம் இல்லாமை யால், என் துன்பத்தை நோக்கி இரங்கிக் காத்தருளல் வேண்டும். இவ்வாறு நீயே ஆட்கொண்டருளினாலன்றி, நான் உன்னை அடையும் வகையில்லை.

விளக்கவுரை

ஆனந்தத்தழுந்தல்

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பொருள்கோள்: 'எம்பிரான், ஈசனே, நின்னை யான் எய்தலாவது என்று? வஞ்சனேற்கு உய்தலாவது நின்கண் (ஒன்றுதலாகிய உண்மை) யன்றி மற்றொர் உண்மை இன்மையின் (நீ என்னைப் புறக்கணித்துவிட்டால்) ஆவது பைதல் என்று நினைந்து பாவியேற்கு இரங்கிப் பாதுகாத்தருள்; ஈதலாது (யான்) நின்கண் ஒன்றும் வண்ணம் இல்லை'. 'ஆவது' மூன்றில் முதலது, உண்டாவது; இடையது, இடைச்சொல், இறுதியது, விளைதல். பைதல் - துன்பம். 'பாதுகாத்து இரங்கு' என்றதனை, 'இரங்கிப் பாதுகா' எனப் பின் முன்னாக்கி உரைக்க. 'ஈது' என்றது, இதனையே சுட்டிற்று. ஒன்றும் வண்ணம் - ஒன்றாதற்கு வழி; அன்றி, 'வண்ணம் ஒன்றும் இல்லை' என மாற்றி, 'இதுவல்லது உன்னிடம் நான் வேண்டு வது ஒன்றும் இல்லை' என்று உரைத்தலுமாம். மூன்றாம் அடியில் 'பைதல்' என்றதன் முதலெழுத்து ஒன்றரை மாத்திரையாய் நின்று எதுகையாயினமையின், நான்காம் அடியின் முதலெழுத்து இரண்டு மாத்திரையாய் நின்று எதுகையாயிற்று. மூன்றாமடியில், 'பய்தல்' என்று பாடம் ஓதுதலும், அவ்விடத்து, 'நான்காம் அடியின் முதலெழுத்து ஓசையொப்புமையான் எதுகையாயிற்று; இன்னோரன்னவை உயர்ந்தோர் செய்யுட் கண்வரும் ஒப்பியல் என்று உரைத்தலுமே சிறப்புடைய வாம். இவ்வொப்பியலை, 'ஆரிடப் போலி' என்பர்.

ஈச னேநீ அல்ல தில்லை இங்கும்
அங்கும் என்பதும்
பேசி னேனொர் பேத மின்மை பேதை
யேனென் எம்பிரான்
நீச னேனை ஆண்டு கொண்ட நின்ம
லாஓர் நின்னலால்
தேச னேஓர் தேவ ருண்மை சிந்தி
யாது சிந்தையே. **#82**

இறைவா! இவ்வுலகம் அவ்வுலகம் ஆகிய எல்லாம் நீயே ஆகியிருப்பதால், உனக்கு வேறான பொருள் ஒன்றும் இல்லை என்று என் அறிவுக்கு எட்டியவாறு நான் கருதுவேன். அங்ஙனம் எண்ணவில்லையேல் நான் நீசன் ஆவேன். உனக்குப் புறம்பாக வேறு ஒரு பொருள் இல்லாததால் நீ பரம்பொருள். எங்கும் ஒரே ஒளிப்பிழம்பாக நீ இருப்பதால் நான் சிந்திப்பதற்கு மற்றோர் ஒளி வடிவம் ஏதும் இல்லை.

விளக்கவுரை

ஆனந்தத்தழுந்தல்

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பொருள்கோள்: 'ஈசனே, எம்பிரான், நீசனேனை ஆண்டுகொண்ட நின்மலா, தேசனே, இங்கும் அங்கும் நீயல்லது இல்லை என்பதும், ஓர் பேதம் இன்மையும் பேதையேன் பேசினேன்; என் சிந்தை, ஓர் நின்னலால் ஓர் தேவர் உண்மை சிந்தியாது' எனக் கூட்டி, 'ஆதலின் எனக்கு இரங்கியருள்' எனக் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க. இங்கும் - உலக நிலையிலும். அங்கும் - வீட்டு நிலையிலும். இல்லை - வேறு துணை இல்லை. ஓர் பேதம் - சிறிது வேற்றுமை; என்றது, எல்லாப் பொருளிலும் வேறறக் கலந்து நிற்றல். 'ஓர் பேதமும்' என்னும் இழிவு சிறப்பும்மையும், 'இன்மை யும்' என்னும் எண்ணும்மையும் தொகுத்தலாயின. ஓர் நின்னலால் - ஒப்பற்ற உன்னையன்றி. 'பேதமின்மையை எடுத்தோதியது' எல்லாவற்றையும் சிவமாகக் காணும் உணர்வு பெற்றமையைக் குறித்தற்கு.

சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீரில்
ஐம்பு லன்களான்
முந்தை யான காலம் நின்னை எய்தி
டாத மூர்க்கனேன்
வெந்தை யாவி முந்தி லேனென் உள்ளம்
வெள்கி விண்டிலேன்

எந்தை யாய நின்னை இன்னம் எய்த
லுற்றி ருப்பனே. **#83**
மனம் முதலியவற்றால் முற்காலத்தில் உன்னை அடையாத
மூர்க்கனாகிய நான், வெந்தொழிந்தேனில்லை. என் மனம் குன்றி, வாய்
விட்டலறினேனில்லை. இன்னும் உன்னையடைய
நினைத்திருக்கிறேன்.

விளக்கவுரை

ஆனந்தத்தழுந்தல்

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இதனுள், 'செய்கை' என்றது, அதற்குக் கருவியாகிய கன்மேந்திரியங்களைக் குறித்தன. இசை யோசையைக் கேட்கும் வழியன்றி எழுத்தோசையைக் கேட்கும் வழிச் செவி ஐம்பொறிகளின் வேறு வைத்து எண்ணப்படுமாகலின், அதனை, 'கேள்வி' என வேறாக ஓதினார். சீர் இல் - சிறப்பில்லாத. இது தாப்பிசையாய், முன்னரும் சென்று இயையும். 'புலன்கள்' என்றது பொறிகளை. மெய்ந்நெறியில் தொழிற்படும் கருவி கரணங்கள் சிறப்புடையன (வீட்டுநிலையின) ஆகலின், உலகியலிற் செல்லும் அவற்றை, 'சிறப்பில்லன' என்றார். 'சிறப்பில்லன' என்றது, 'இழிவுடையன' என்னும் பொருட்டு. இழிவு, பிறவியில் வீழ்த்தல். இம் முதலடியில், அடிகள் இறைவனை அடைதற்குத் தடைசெய்தவற்றை விதந்தோதியருளினார், முந்தை யான காலம் - முதலாய் நின்ற காலம்; அஃது இறைவனால் ஆட் கொள்ளப்பட்ட காலமாம். இதற்கு, 'ஆட்கொள்ளப்படுதற்கு முற்பட்ட காலம்' என உரைப்பாரும் உளர். அப்பொழுது எய்தாதொழிந் தமைக்கு அடிகள் இத்துணை இரங்குதற்கு ஓர் இயைபின்மையின், அஃது உரையாகாமை அறிக. விழுந்திலேன் - அழிந்திலேன். இனி, 'வெந்து விழுந்திலேன்' என்றதனை, 'விழுந்து வெந்திலேன்' எனப் பின் முன்னாக்கி, 'தீயின்கண்' என்பதனை வருவித்து உரைப்பாரும் உளர். உள்ளம் வெள்கி விண்டிலேன் - நெஞ்சம் வெள்கிப் பிளந்திலேன். 'நின்னை எய்தலுற்று இன்னம் இருப்பன்' என்க. எய்தலுற்று - எய்த விரும்பி. இருப்பன் - உயிர்வாழ்வேன். 'அன்று நீ அழைத்த காலத்தில் அடையாது, இன்று அடைவதற்கு அவாவு கின்றேன்; இஃது என் அறியாமை இருந்தபடி' என்பதாம். முன்னர் இறைவனது குறிப்பின்வழிச் செல்லாது தம் குறிப்பின்படியே நின்றமை குறித்து, 'மூர்க்கனேன்' என்று அருளிச்செய்தார். 'அம் மூர்க்கத் தன்மையின் பயனை இப்போது அடைகின்றேன்' என வருந்தியவாறு. இத் திருப்பாட்டு, அடிகளது உண்மையுள்ளத்தை எத்துணைத் தெளிவாகக் காட்டுகின்றது!

இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை ஆண்டு
கொண்ட நின்னதாட்
கருப்பு மட்டு வாய்ம டுத்தெ னைக்க
லந்து போகவும்
நெருப்பு முண்டு யானு முண்டி ருந்த
துண்ட தாயினும்
விருப்பு முண்டு நின்கண் என்கண் என்ப
தென்ன விச்சையே.

#84

இரும்பு போலும் வன் மனத்தையுடைய நான், என்னை ஆண்டருளின உன் திருவடியைப் பிரிந்தும், தீப்பாய்ந்து மடிந்திலேன். இத்தன்மையேனாகிய என்னிடத்தில், உனக்குச் செய்ய வேண்டிய அன்பிருக்கின்றது என்பது என்ன மாய வித்தை?

விளக்கவுரை

ஆனந்தத்தழுந்தல்

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'நின' என்பது, விரித்தல்பெற்றது. 'தாள்' என்றது, அதன்கண் எழும் இன்பத்தைக் குறித்தது. கருப்பு மட்டு - கருப்பஞ் சாறு. எனைக் கலந்து - என்னை அடைந்து; 'எனக்குக் கிடைத்து' என்றபடி. 'எனைக் கலந்து வாய்மடுத்து' என மாற்றி, 'கலந்தமையால் யான் வாய்மடுத்த பின், நீங்கிப் போகவும்' என உரைக்க. 'போகவும் இருந்தது' என இயையும். 'நெருப்பும் உண்டு' என்றதன்பின்னும், 'யானும் உண்டு' என்றதன் பின்னும், 'ஆக' என்பது வருவிக்க. 'உண்டு' என்பது மூவிடத்திற்கும் பொதுவாய் வருதல், பிற்கால வழக்கு. இருந்தது - நெருப்பில் வீழாது உயிர்வாழ்ந்திருந்தது. அதாயினும் - அந்நிலை உண்டாய பின்னும். 'அஃதாயினும்' எனப்பாடம் ஓதுதல் பொருந்தும். 'என்கண் நின்கண் விருப்பும் உண்டு' என மாறுக. விருப்பு - அன்பு. 'உயிர்வாழ்தலோடு இதுவும் உண்டு' எனப் பொருள் தருதலின், 'விருப்பும்' என்ற உம்மை, இறந்தது தழுவிய எச்சம். என்ன விச்சை - என்ன மாய வித்தை. ஒருவரது அன்பிற்குரிய பொருள் நீங்கியபின் அவர் உயிர்வாழ்தலும், ஒருபொருள் நீங்கியபின்னும் உயிர்வாழ்வார் அப்பொருள்மேல் அன்புடையர் எனப்படுதலும் இயல்வன அல்ல ஆகலின், 'நின்ன தாள் கருப்புமட்டுப் போகவும் யான் இருந்ததுண்டு; அதாயினும் என்கண் நின்கண் விருப்பும் உண்டு என்பது என்ன விச்சை' என்றார். 'நெருப்பும் உண்டு; யானும் உண்டு' என்றது, 'யான் நெருப்பில் வீழாமைக்கு நின்பால் அன்பின்மையே காரணம்; பிறிதொரு காரணம் இல்லை' என்பதனை

வலியுறுத்தவாறு. 'என் அவிச்சை' எனப் பிரித்து, 'உன்பால் எனக்கு அன்பு உண்டு என்பது என் அறியாமையே' என்று உரைப்பாரும் உளர்.

விச்சுக் கேடுபொய்க் காகா தென்றிங்
கெனைவைத்தாய்
இச்சைக் கானா ரெல்லாரும் வந்துன்
தாள்சேர்ந்தார்
அச்சத் தாலே ஆழ்ந்திடு கின்றேன்
ஆரூர்எம்
பிச்சைத் தேவா என்னான் செய்கேன்
பேசாயே. **#85**

இறைவனே! பொய்க்கு வேறொரு இடம் இல்லை என்று என்னை இங்கு வைத்தாய். உன் மெய்யன்பர் யாவரும் உன் திருவடியை அடைந்தார்கள். நான் பிறவி அச்சமாகிய கடலில் மூழ்குதலன்றி வேறு என்ன செய்யக் கடவேன்?

விளக்கவுரை

ஆனந்த பரவசம்

கலிநிலைத்துறை

இப்பகுதியில் அடிகள், ஏனைய அடியார்கள் பெற்ற பெரும்பேற்றை நினைந்து தமக்கு அதுவாயாமைக்கு வருந்தி, அதனைத் தந்தருளுமாறு பல்லாற்றானும் வேண்டுகின்றார். இவ் வருத்தத்தினையே, 'ஆனந்த பரவசம்' என்றனர் போலும் முன்னோர்! விச்சு, 'வித்து' என்பதன் போலி. கேடு - அழிவு. 'பொய்ம்மைக்கு விதைக்கேடு உண்டாதல் கூடாது என்னும் கருத்தினால் என்னை இவ்வுலகத்தில் வைத்தாய்' என்க. எனவே, 'பொய்ம்மைக்கு விதை தாமல்லது பிறரில்லை' என்றவாறாயிற்று. 'என்னை வகுத்திலை யேல்இடும் பைக்கிடம் யாது சொல்லே' என்ற திருநாவுக்கரசர் திருமொழியையும் *(தி.4.ப.105.பா.2)* காண்க. பொய்ம்மையாவது, பிறவி. பிறக்கும் உயிர்கள் பல உளவேனும், அப் பிறவி நீங்கும் வாயிலைப் பெற்றபின்னும் அதன்வழியே பிறவியை ஒழிக்கக் கருதாது மீளப் பிறவிக்கு வாயிலைப் பற்றி நிற்பதோர் உயிரில்லை என்னும் கருத்தால், இவ்வாறு கூறினார். கூறவே, 'அவ்வாயிலைப் பெற்ற ஏனைய அடியவர் பலரும் பிறவா நெறியை அடைந்தனர்; யான் அதனை அடைந்திலேன்' என்பது போதரலின், அதனையே இரண்டாம் அடியில் கிளந்தோதினர் என்க. இச்சைக்கு ஆனார் - உன் விருப்பத்திற்கு உடன்பட்டவர்கள்; என்றதனால், அடிகள் அதற்கு உடம்பட்டிலாமை பெறப்பட்டது. அச்சம், பிறவிபற்றியது. 'இஃது இப்பொழுது உள்ள எனது நிலை' என்றபடி.

'யான் செய்யத் தக்கதைச் சொல்' என்பதாம்.

பேசப் பட்டேன் நின்னடி யாரில்
திருநீறே
பூசப் பட்டேன் பூதல ரால்உன்
அடியானென்று
ஏசப் பட்டேன் இனிப்படு கின்ற
தமையாதால்
ஆசைப் பட்டேன் ஆட்பட் டேன்உன்
அடியேனே. **#86**

உன் அடியாருள் ஒருவனாகச் சொல்லப்பட்டேன். திருவெண்ணீற்றால் பூசப்பட்டேன். இறைவனே! உன் அடியவன் என்று உலகத்தோரால் இகழப்பட்டேன். இவ்வளவும் போதாது என்று மேலும் உனக்கு ஆசைப்பட்டேன். அடிமைப்பட்டேன்.

விளக்கவுரை

ஆனந்த பரவசம்

கலிநிலைத்துறை

பொருள்கோள்: 'திருநீறே (உன்னால்) பூசப்பட்டேன்; அதனால், பூதலரால் (முன்) உன் அடியாரில் (வைத்துப்) பேசப் பட்டேன்; (இப்பொழுது அவர்களால்) உன் அடியான் (படுகின்ற துன்பம் இது) என்று ஏசப்பட்டேன்; இனி (இத் துன்பத்தைப்) படுகின்றது (உன் அடியான் என்ற நிலைமைக்குப்) பொருந்தாது; (ஆதலின்) உனக்கு ஆட்பட்டேனாகிய உன் அடியேன், அவ்வடி யார்க்கு உரிய அந்நிலையைப் பெற ஆசைப்பட்டேன்.' 'திருநீறே பூசப்பட்டேன்' என்றதில் உள்ள ஏகாரம், ஏனைய அடியார்கள்போல உடன்வரும் நிலைமையை அருளாமையைப் பிரித்து நின்றது. 'அடியான்' என்னும் சொல், பிறிதொரு சொற் குறிப்பானன்றித் தானே இழிவுணர்த்தாமையின், இது தன்னையே இகழுரையாக உரைத்தல் பொருந்தாமையறிக. 'ஏசப்பட்டேன்' என்றமையால், 'இனிப்படுகின்றது' என்றது, துன்பத்தை என்பதும், 'உன் அடியேன்' என்றதனால் ஆசைப்பட்டது அதற்கேற்ற நிலையை என்பதும் பெறப்பட்டன. 'அதனைத் தந்தருள்' எனக் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க.

அடியேன் அல்லேன்கொல்லோ தானெனை ஆட்கொண்டிலை
கொல்லோ
அடியா ரானா ரெல்லாரும் வந்துன்
தாள்சேர்ந்தார்
செடிசேர் உடலம்இது நீக்க மாட்டேன் எங்கள்

சிவலோகா
கடியேன் உன்னைக் கண்ணாரக் காணுமாறு
காணேனே. #87
நான் உன் அடியனல்லேனோ? நீ என்னை ஆட்கொண்டது
இல்லையோ? உன் அடியார் எல்லோரும் உன் திருவடியை அடையவும்
நான் இந்த உடம்பை ஒழியாதிருக்கிறேன். கொடியேன் உன்னைக்
காணும் வழி கண்டிலேன்.

விளக்கவுரை

ஆனந்த பரவசம்

கலிநிலைத்துறை

முதலடியை ஈற்றில் வைத்து உரைக்க. 'கடியேன்' என்றதனை, 'சேர்ந்தார்' என்றதன்பின்னர்க் கூட்டுக. செடி - துன்பம். காணுமாறு - காணும் வாயிலை. 'காணேன்' என்றதன்பின், 'அதனால்' என்பது வருவிக்க. ஆட்கொள்ளப்பட்டு அடியராயினார் பெற்ற பயன் தமக்கு எய்தாமையின், 'இறைவன் தம்மை ஆட் கொண்டதாக நினைப்பது மயக்கமோ' என்று ஐயுறுவார்போல அருளி னார். பாவினங்களின் அடிகட்கும் பிற்காலத்தார் சீர்வரையறுத்தாரா யினும், அவற்றுள் சில அடிகள் சீர்மிக்கு வருதலும் முன்னைய வழக் கென்பது சிலப்பதிகாரம் சிந்தாமணி முதலியவற்றாலும் அறியப்படும். அவ்வாற்றானே இத்திருப்பாட்டுள் இரண்டாமடி யொழிந்தவை அறுசீரடியாயின. மேல் வருவனவற்றுள்ளும் சில பாடலிற் சிலவும், பலவும் இவ்வாறு வருதல் காண்க. பத்துத் திருப் பாடலையும் ஓரினச் செய்யுளாகவே செய்யப் புகுந்தமையின், நான்கடியும் அறுசீராயினவும் ஈண்டு, 'கலித்துறை' என்றே கொள்ளப் படும்.

காணு மாறு காணேன் உன்னை
அந்நாட்கண்டேனும்
பாணே பேசி என்தன்னைப் படுத்ததென்ன
பரஞ்சோதி
ஆணே பெண்ணே ஆரமுதே அத்தாசெத்தே
போயினேன்
ஏணா ணில்லா நாயினேன் என்கொண்டெழுகேன்
எம்மானே. #88

பரஞ்சோதியே! ஆணே! பெண்ணே! ஆர் அமுதே! அத்தா! எம்மானே!
உன்னை அடையும் மார்க்கத்தை நான் கண்டிலேன். அன்று உன்னைக்
கண்டபின் நான் வீண்பேச்சுப் பேசி ஒரு நலனையும் அடைந்திலேன்.
செத்துப்போன நிலையில் இப்போது இருக்கிறேன். என் கீழ்மையைக்

குறித்து நான் வெட்கப்பட வில்லை. மேல்நிலை அடைவதற்கான ஆற்றல் என்னிடத்து இல்லை. நான் எப்படி உய்வேன்?

விளக்கவுரை

ஆனந்த பரவசம்

கலிநிலைத்துறை

'கண்டேனேனும்' என்பது 'கண்டேனும்' எனத் தொகுத்தலாயிற்று. பாண் - பாணர் மொழி; இன்சொல். 'உன்னை யான் அந் நாட்கண்டேனேனும் இன்று காணுமாற்றைக் காணேன்; அதனால், என்னை அன்று இன்சொற் பேசி உன்பாற் படுத்தது என் கருதி' என உரைக்க. 'உனது காட்சியை முன்போல வழங்கி, ஏனையோர் போல என்னையும் அழைத்துச் செல்லவேண்டும்' என்பது கருத்து. இறைவன், 'ஆண், பெண்' என்னும் இருவகைப் பிறப்பினையுடைய எல்லா உயிர்களிலும் கலந்துள்ளமை பற்றி, 'ஆணே பெண்ணே' எனவும், 'அருளாதொழியின் நான் அழிந் தொழிதல் திண்ணம்' என்றற்கு, 'செத்தேபோயினேன்' எனவும் அருளினார். ஏண் - வலிமை. 'நாண்' என்றதன்பின், 'இரண்டும்' என்பது தொகுத்தலாயிற்று. என் கொண்டு - எதனைத் துணையாகக் கொண்டு. எழுகேன் - கரையேறுவேன்.

மானேர் நோக்கி யுடையாள் பங்காமறையீ
றறியாமறையோனே
தேனே அமுதே சிந்தைக்கரியாய் சிறியேன்
பிழைபொறுக்குங்
கோனே சிறிதே கொடுமை பறைந்தேன்
சிவமாநகர்குறுகப்
போனா ரடியார் யானும் பொய்யும்புறமே
போந்தோமே. **#89**

மான் விழி போன்ற விழிகளையுடைய உமாதேவி யாரின் பாகா! வேத வேதாந்தத்துக்கு எட்டாத மறைபொருளே! தேனே! அமிர்தமே! மனத்துக்கு எட்டாதவனே! என் குற்றத்தை மன்னித்து அருளும் அரசே! என் குறைபாட்டை நான் பரிந்து உன் னிடம் முறையிட்டேன். அதாவது உன் அடியார்கள் உனக்கு உரியவர் கள் ஆயினர். நானோ பொய்யாகிய பிரபஞ்சத்துக்கு உரியனாய், நானும் பிரபஞ்சமும் உனக்கு வேறாக இருந்து வருகிறோம்.

விளக்கவுரை

ஆனந்த பரவசம்

கலிநிலைத்துறை

'கொடுமை' என்றதில், பொருட்டுப் பொருளதாகிய குவ்வுருபு விரிக்க. பறைந்தேன் - விரைந்தேன். 'கொடுமை செய்வதற்குச் சிறிதே விரைந்தேன்' என்றபடி. இறைவன் தம் முன் இருந்து மறைந்த அந்நாளில் உடன் செல்ல மாட்டாதிருந்தமையையே அடிகள், சிறிது கொடுமை செய்ய விரைந்ததாக அருளினார். அஃது இறைவன் திருக்குறிப்பிற்கு மாறாதல்பற்றி, 'கொடுமை' என்றார். எனினும், 'பிழை' என்பதே பொருளாகக் கொள்ளற்பாற்று. 'நீ அடியவர் செய்யும் பிழையைப் பொறுக்கும் தலைவனாதலின் பொறுத்தருளவேண்டும்' என்பார், 'சிறியேன் பிழைபொறுக்குங் கோனே' என விளித்தார். 'யான் அடியவரோடு சிவமாநகர் குறுகப் போகாமல், பொய்ம்மையோடு வேறோரிடம் குறுகப் போனேன்' என்பார், 'யானும் பொய்யும் புறமே போந்தோம்' என்றார். இங்ஙனம் பொய்ம்மையைத் தம்மோடு ஒப்பவைத்து எண்ணியது, 'அது வல்லது எனக்கு நட்புப் பிறிதில்லை' எனக் கூறுமுகத்தால், அப் பொய்ம்மையால் தமக்குக் கேடு விளைந்தமையைக் குறித்தற்கு. பொய்ம்மை, இறைவன் வழியையன்றித் தம்வழியைப் பொருளாகத் துணிந்தமை. சிவமாநகர்க்குப் புறமாவது இவ்வுலகு. 'நின்னிற் சிறந்த பொருள் பிறிதில்லையாகவும் உளதாக எனது பேதைமையால் நினைந்தேன்' என்றற்பொருட்டே முதற்கண் இறைவனை, 'தேனே! அமுதே!' என்றற்றொடக்கத்தனவாகப் பலவற்றான் விளித்தருளிச் செய்தார்.

புறமே போந்தோம் பொய்யும் யானும்
மெய்யன்பு
பெறவே வல்லேன் அல்லா வண்ணம்
பெற்றேன்யான்
அறவே நின்னைச் சேர்ந்த அடியார்
மற்றொன்றறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே
நின்தாள்சேர்ந்தாரே. **#90**

ஆன்மாவாகிய நானும் உலகம் ஆகிய மாயையும் உனக்குப் புறம்பானோம். உன்பால் பத்தி பண்ணுவதற்கான உறுதி யான தெய்வீகத் தன்மை என்னிடம் இல்லை. உன்னைத் தவிர வேறு எதையும் அறியாத பரிபக்குவ உயிர்கள் தங்கள் ஆன்ம போதத்தை அகற்றி உன்பால் இரண்டறக் கலந்தன. அதற்காக அவர்கள் பத்தி மார்க்கத்தைத் தீவிரமாகக் கையாண்டனர்.

விளக்கவுரை

ஆனந்த பரவசம்

கலிநிலைத்துறை

வல்லேன் - மாட்டேன்; இது, 'வல்லுதல்' என்னும் தொழிலடியாகப் பிறந்த எதிர்மறைவினை; 'வன்மை' என்னும் பண்படியாகப் பிறந்ததாயின், 'வன்மையுடையேன்' எனப் பொருள் படும். இதன்பின், 'ஆதலின்' என்பது வருவித்து, 'மாட்டாமையான் அல்லாத தன்மையை (பொய்யன்பை)ப் பெற்றேன்' என உரைக்க. 'இஃது என் தன்மை, நின்னை முற்றச் சார்ந்த அடியவரே உன்னை யன்றிப் பிறிதொன்றைப் பொருளாக அறியாதவர்; அதனால், வீடு பேற்றிற்குரியவற்றையே செய்து உனது திருவடியை அடைந்தார்' என்பது பின்னிரண்டடிகளின் பொருள். அறவே - முற்றிலும். சிறவு - சிறப்பு; வீடுபேறு; இஃது இதற்கு ஏதுவாய செயல்களைக் குறித்தது. நிரம்பிய அடிமையை உடையவரது செயல்கள் இவை எனவே, இவற்றின் மறுதலையாயவை தமது செயல்கள் என்பதும், அதனால் தாம் இறைவன்தாள் சேராராயினார் என்பதும் கூறியவாறாயிற்று. ஆகவே, 'யான் இங்குக் கிடந்து அலமருதல் என் குற்றமன்றி உன் குற்றம் அன்று' என்பதும் குறித்தவாறாம். 'என்னா லறியாப் பதந்தந்தாய் யான் அதறியாதே கெட்டேன் - உன்னால் ஒன்றுங் குறைவில்லை' *(தி.8 ஆனந்த மாலை 2.)* எனப் பின்னர் வெளிப்படையாகவே அருளிச்செய்வர்.

தாராய் உடையாய் அடியேற் குன்தா
ளிணையன்பு
பேரா உலகம் புக்கா ரடியார்
புறமேபோந்தேன்யான்
ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்திங்
குன்தாளிணையன்புக்கு
ஆரா அடியேன் அயலே மயல்கொண்
டழுகேனே. **#91**

இறைவனே! அடியேன் உன் திருவடிக்கு அன்பு செய்யும்படிச் செய்தருள வேண்டும். அடியார் முத்தியுலகம் புக, யான் புறம் போந்தேன். ஊர்ப் பசுக்கள் மேய்தற்கு வரக் கூடவே குருட்டுப் பசுவும் வந்ததுபோல, அன்பர் உன் திருவடிகளுக்கு அன்பு செய்ய நானும் அன்பு செய்ய விரும்பி அழுகின்றேன்.

விளக்கவுரை

ஆனந்த பரவசம்

கலிநிலைத்துறை

முதலடியை இறுதியிற் கூட்டி உரைக்க. மிலைத்தல் - கனைத்தல். 'ஊர்

ஆ மிலைக்கக் குருட்டு ஆ மிலைத்து' என்றது. ஊரிலுள்ள ஏனைய பசுக்கள் மாலைக்காலத்தில் தம் இல்லத்தை அணுகியபொழுது தம் கன்றுகளைக் கனைத்து அழைக்க, குருட்டுப் பசுவும் தன் இல்லத்தை அணிமையிற் கண்டது போலத் தன் கன் றினைக் கனைத்து அழைத்தலையாம். 'மிலைத்து' என்றது, 'மிலைத் தது' போன்ற செயலைச் செய்து' என உவமை குறித்து நின்றது. 'கனி இருக்கக் காய் கவர்ந்த கள்வனேன்', 'பனிநீராற் பரவை செயப் பாவித் தேன்' *(தி.4.ப.5.பா.1,4)* என்றாற்போல. இதனால், 'மெய்யடியார்கள் நீ பேரின்பப் பொருளாதலை உணர்ந்து உன்னை, 'தேனே அமுதே கரும்பின் தெளிவே, என்று இன்புற்றுப் புகழ, அதனைக் கண்டு யானும் அவ்வாறே புகழ்கின்றேன்' எனக் குறித்தவாறாம். 'மிலைத்து ஆரா' என இயையும். மிலைத்து - மிலைத்தலால். ஆரா - பொருந்தாத; ஏற்புடையேனாகாத. வருகின்ற திருப்பாட்டு, 'அழுகேன்' எனத் தொடங்குதலால், இப்பாட்டின் இறுதிச் சொல்லை, 'எழுகேன்' என ஓதுதல் பாடமாகாமையறிக. 'மிலைத் திங்கு' என்ற பாடத்தை, மிலைத்தாங்கு' என ஓதி, அதனை, அன்பு வேண்டி அழு தற்கு வந்த உவமையாக்கி உரைப்பாரும் உளர். 'மயல் கொண்டு' என்றதற்கு, 'ஆசைப்பட்டு' எனப் பொருள் உரைப்பாரும் உளர். மோனை கருதி, 'போரா உலகம்' எனப் பாடம் ஓதி, 'போதா' என்பது, 'போரா' என மருவிற்று எனக் கொள்ளுதலும் உண்டு.

அழுகேன் நின்பால் அன்பாம் மனமாய்
அழல்சேர்ந்த
மெழுகே அன்னார் மின்னார் பொன்னார்
கழல்கண்டு
தொழுதே உன்னைத் தொடர்ந்தா ரோடுந்
தொடராதே
பழுதே பிறந்தேன் என்கொண் டுன்னைப்
பணிகேனே. **#92**

உன்னிடத்து மெய்யன்பு உடையவராய் ஒளி பொருந்திய பொன் போன்ற உன் திருவடிகளைக் கண்டு தீயில் இட்ட மெழுகை ஒத்தவராய் உன் அன்பர்கள் தொழுது உன்னைப் பின் பற்றினர். அவர்களைப் பின்பற்றாமல் நான் புன்மைக் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறேன். எம்முறையைக் கையாண்டு நான் உன்னை வழுத்துவது என்று எனக்கு விளங்கவில்லை.

விளக்கவுரை

ஆனந்த பரவசம்

கலிநிலைத்துறை
'அழல்சேர்ந்த மெழுகே அன்னாராகிய தொடர்ந்தார்' என்க. 'மெழுகே அன்னார் தொடர்ந்தார்; அவரோடும்' என ஓதற் பாலதனை இங்ஙனம் சுருங்க ஓதினார். பழுது - குற்றம். 'பிறந்தேன்' என, இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது. என்கொண்டு - என்ன முறைமையைக் கொண்டு. 'பணிகேன்' என்றது, 'பணிந்து இரக்கேன்' என்னும் பொருளதாய் நின்றது. இரத்தல், பேரா உலகத்தையாம். அன்பாம் மனத்தோடு அழுதல் உண்மையே; ஆயினும், உன்னைத் தொடர்ந்தாரோடு கூடி உன்னைத் தொடராது நின்ற யான் இப்பொழுது என்ன முறைமைபற்றி என்னை உன்பால் அழைத்துக் கொள்ளும்படி உன்னை வேண்டுவேன்' என்றவாறு. 'பிறந்தேன்,' வினையாலணையும் பெயர்.

பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய
அடியார்க்குன்
அணியார் பாதங் கொடுத்தி அதுவும்
அரிதென்றால்
திணியார் மூங்கி லனையேன் வினையைப்
பொடியாக்கித்
தணியார் பாதம் வந்தொல்லை தாராய்
பொய்தீர்மெய்யானே. **#93**

இறைவனே! அடியவர்க்குப் பிறவிப் பிணியை நீக்கியருளி உன் திருவடியைத் தந்தருள்வது அருமையானால், மனக் கோட்டத்தை உடையவனாகிய என் வினைகளை நீறாக்கி உன் திருவடியை எனக்குத் தந்தருள்வது அருமையே. ஆயினும் எனக்கு உன்னை அன்றி வேறு புகலிடம் இல்லாமையால் என்னைத் திருத்தி ஆட்கொண்டு உன் திருவடியைத் தந்தருளல் வேண்டும்.

விளக்கவுரை

ஆனந்த பரவசம்

கலிநிலைத்துறை
'பணிவார்' என்றது முற்று. 'பழைய அடியார்' எனப் பின்னர் வருகின்றமையின் வாளா, 'பணிவார்' என்றார். எனவே, 'பழைய அடியார் உன்னையே பணிவார்; அவர்க்குப் பிணி தீர்த்தருளி உன்பாதங் கொடுத்தி' என உரைத்தல் உரையாயிற்று. புனல் காலே உண்டியாக, கானின்று வற்றியும் புற்றெழுந்து செய்யும் தவங்களினும் இறைவனை வணங்குதல் எளிதிற் செயற்பாலதாகலின், 'அதுவும் அரிதென்றால்' என்றார். 'யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை'

(தி.10 திருமந்திரம்-252) என்று அருளியதும் காண்க. 'வினையைப் பொடியாக்கி' என்றதனால், 'அதனையும் எனக்கு அரிதாகச் செய்தது என்வினை என்றால், அவ்வினையை முதற்கண் நீக்கி உன்னைப் பணியச்செய்து, பின்பு வந்து உன் பாதம் தாராய்' என்பது பொருளாயிற்று. 'ஒல்லை' என்றதனை, 'பொடியாக்கி' என்றதற்கு முன்னே கூட்டுக. பொய்தீர் மெய்யானே - பொய்யை நீக்கியருளுகின்ற மெய்ப்பொருளாய் உள்ளவனே.

யானேபொய் என்நெஞ்சும் பொய் என்அன்பும்
பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப்
பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே
தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந்
துறுமாறே. **#94**

இறைவனே! நானும் என் மனம் முதலியனவும் பொய்ம்மையுடையவர்கள் ஆனோம். ஆனால் அழுதால் உன்னைப் பெறலாமோ? தேனே! அமுதே! கரும்பின் தெளிவே! நான் உன்னைப் பெறும் வழியை எனக்கு அறிவித்தல் வேண்டும்.

விளக்கவுரை

ஆனந்த பரவசம்

கலிநிலைத்துறை

'யானே' என்னும் பிரிநிலை ஏகாரம் சிறப்புணர்த்தி நின்றது. சிறப்பு, 'உறுப்பும், பண்பும்' ஆகியவற்றிற்கு முதலாய் நிற்றல். 'நெஞ்சு' என்றது நினைப்பினை. 'யானே பொய்' என்றதனால், 'நெஞ்சும் பொய், அன்பும் பொய்' என்றவை, வலியுறுத்தல் மாத்திரை யாய் நின்றன. 'இங்ஙனமாயின் வருந்தினால் மட்டும் உன்னைப் பெறுதல் கூடுமோ? கூடாதாகலின், அடியேன் உன்னை வந்து அடையும் வழியை அருளாய்' என்பது ஏனைய அடிகளின் பொருள். 'உருகுவது உள்ளங்கொண்டு ஓர்உருச் செய்தாங்கு எனக்கு அள்ளூறாக்கை அமைத்தனன்' *(தி.8 திருவண்ட-175-177.)* 'மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து...கண்ணீரரும்பி....உன்னைப் போற்றி சயசய போற்றி என்னும் கைதான் நெகிழ விடேன்' *(தி.8 திருச்சதகம்-1)* என்றாற் போல் முன்னரும் இவ்வாறே பின்னரும் அடிகள் பல விடத்தும் அருளுதலின், அவர் இறைவன் மாட்டு உள்ளம் நெக்குருகி இடையறாது கண்ணீர் பெருக்கி நின்றமை தெளிவாதலின், அவர் அந் நிலையைப் பெறாது

அதனையே அவாவி நின்றாராக வைத்து, 'பெறலாமே' என்றதற்கு, 'பெறுதல் கூடும்' என உடன்பாடாகப் பொருளுரைத்தல் பொருந்தாமையறிக. இங்ஙனமாகவே, 'என் அன்பும் பொய்' என்றது, மெய்விதிர்த்தல், கண்ணீரரும்புதல் முதலியவை நிகழாமை பற்றிக் கூறியதாகாது, 'முனைவன் பாதநன் மலர் பிரிந்திருந்தும் நான் முட்டிலேன் தலைகீறேன்' 'தீயில் வீழ்கிலேன் திண்வரையுருள்கிலேன்' *(தி.8 திருச்சதகம்-37,39)* என்றாற் போல அருளிய நிலைபற்றியே வருந்தி அருளிச்செய்ததாதல் அறியப்படும். படவே, எய்தவந்திலாதார் எரியிற் பாய்ந்தமை *(தி.8 கீர்த்தி-132)* போல்வதொரு செயலால் இறைவன் திருவடியைப் பெறுதல் கூடு மன்றி, அதுமாட்டாது ஏங்கி அழுதலால் மட்டும் பெறுதல் கூடாது' என்பதனையே, 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்று அருளினார் என்பது இனிது விளங்கும். இன்னும், 'பெறுதல் கூடும்' என்பது கருத்தாயின், 'ஆனாலும்' என உம்மை கொடுத்து ஓதுதல் வேண்டும் என்க.

மாறி லாதமாக் கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர்கொள் தாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
மெய்ம்மை அன்பர்உன் மெய்ம்மை மேவினார்
ஈறி லாதநீ எளியை யாகிவந்
தொளிசெய் மானுட மாக நோக்கியுங்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
கடையன் ஆயினேன் பட்ட கீழ்மையே. **#95**

இறைவனே! உன் மெய்யன்பர் முந்திவந்து உன் திருவடிக்கு அன்பு செய்து உன் மெய்ந்நிலையை அடைந்தார்கள். முடிவில்லாத பெரியோனாகிய நீ ஒளியையாகி எழுந்தருளி என்னைக் கடைக்கண் நோக்கியருளியும் மனமுருகாத நான் கடைப்பட்டேன். இது என் தீவினைப் பயனேயாம்.

விளக்கவுரை

ஆனந்தாதீதம்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

முன்னைப் பகுதியில், இறைவன் பிரிவினால் உயிர் விடத் தக்க ஆற்றாமையைத் தரும் பேரன்பினை வேண்டிய அடிகள், இவ் இறுதிப் பகுதியில், அவ்வன்பின் முடிந்த பயனாகிய திருவடி கூடுதலையே வேண்டுகின்றார். இது பற்றியே இதற்கு, 'ஆனந்தாதீதம்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். ஆனந்த அதீதம் - இன்பத்தை வேறாக உணரும் உணர்வும் அடங்கப் பெற்று, அவ்வின்பத்தில் அழுந்திநிற்கும்

நிலை. மாறுஇலாத - வற்றுதல் இல்லாத. 'வந்து முந்தி' என்றதனை, உன் மெய்ம்மை மேவினார் என்றதற்கு முன்னர்க் கூட்டி 'உன்பால் வந்து, என்னின் முற்பட்டு' என உரைக்க; மலர்கொள் - மலர்தலைக் கொண்ட; எங்கும் நிறைந்த. 'தாளிணையின்' என, நீக்கப் பொருட்கண் வந்த இன்னுருபு விரிக்க. வேறு இலாப் பதம் - வேறாதல் இல்லாத பக்குவம். பரிசு - தன்மை. மெய்ம்மை - நிலையான இன்பம்; ஆகுபெயர். 'என் உடம்பு ஒளிசெய் மானுட மாம்படி நோக்கியும்' என உரைக்க. ஒளிசெய்தலை, ஞானத்தைத் தருதலாகக் கொண்டு இறை வற்கு ஆக்கின், 'ஆக' என்றதனை, 'ஆகி' என ஓதுதல் வேண்டும். கீறிலாத - கிழிக்க இயலாத; வலிய. 'ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தாம் அடங்காதவர், ஓதி உணராத பேதையாரினும் பெரும்பேதை யாராதல் போல, நீ எதிர்வந்து அருள்செய்யப்பெற்றும் உருகாத நெஞ் சத்தையுடைய நான், அவ்வாறு அருள்செய்யப்பெறாத கடையரினும் பெரிதும் கடையனாயினேன்' என்றதாம். 'நான் பட்டகீழ்மை இது' எனப் பயனிலை வருவித்து முடிக்க. 'இக்கீழ்மையை நீக்கி, உன் மெய்ம்மை அன்பர் பெற்ற நிலையை எனக்கும் அளித்தருள்' என்பது குறிப்பெச்சம்.

மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ணம் என்றலால்
அரியை யென்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்ம்மை அன்பர்உன் மெய்ம்மை மேவினார்
பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ
போவ தோசொலாய் பொருத்த மாவதே. **#96**

இறைவனே! நீயே எழுந்தருளி என்னை ஆட்கொண்ட பிறகு உன்னை எளிதாய் நினைத்ததே அன்றி அரிதாய் நினைத்தேனில்லை. ஆயினும் உன் மெய்யடியார் உன் உண்மை நிலையையடைய, நானொருவனுமே இந்தவுலகத்தில் தங்கியிருக்க விட்டு நீ போவது உனக்குத் தகுதியாமோ?

விளக்கவுரை

ஆனந்தாதீதம்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

மழ - மழவு; குழவி. 'என்று' என்றதனை, 'என' என்று திரித்து, உவம உருபாக்குக. 'மழக் கையிலங்கு பொற்கிண்ணம் என்றலால்' என ஓதினாரேனும், 'கையிலங்கு பொற்கிண்ணத்தை மழவு எண்ணுதல் என அல்லால்' எனப் பொருளுக்கேற்ப மாறுதல் கருத்தாதல் அறிக.

'பொற்கிண்ணம் குழவி கையிற் கிடைத்ததாயின், அதனை அஃது ஏனைய சில பொருள்களோடொப்ப எளிய பொருளாகக் கருதுதல் போலவே, என்முன் வந்து என்னைப் பணிகொண்ட உன்னை நான் ஏனைய சிலரோடொப்ப எளியையாகக் கருதினேனன்றி அரியையாகக் கருதிற்றிலேன்' என இதனை விரித்துரைத்துக்கொள்க. 'என் இயல்பு இதுவாயிற்று' என்பார் இறந்த காலத்தாற் கூறாது, நிகழ்காலத்தாற் கூறினார். 'எளியனாகக் கருதினேன்' என்றது, அழைத்தபொழுது செல்லாமல், 'பின்னர்ச் சென்று அடைவோம்' என்று பிற்பட்டு நின்றமையை என்க. 'உன் மெய்ம்மை அன்பர் இவ்வாறின்மையால், உன்னை முன்பே வந்து அடைந்து விட்டார்கள்; யான் பிற்பட்டு நின்றது எனது அறியாமையாலே என்பர், 'பொய் இலங்கு எனை' என்றும், 'யான் எனது அறியாமை காரணமாகப் பிற்பட்டு நிற்பினும், என்னை வற்புறுத்தி உடன்கொண்டு செல்லாது மீளவும் முன்போலவே உலகியலில் புகும்படி விட்டுப் போவது, அறைகூவி ஆட்கொண்ட உனது அருளுக்குப் பொருத்தமாகுமோ? சொல்' என்பார், 'புகுதவிட்டு நீ போவதோ பொருத்தமாவது சொலாய்' என்றும் அருளிச் செய்தார்.

பொருத்த மின்மையேன் பொய்ம்மை யுண்மையேன்
போத என்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்
நீயும் அங்கெழுந் தருளி இங்கெனை
இருத்தி னாய்முறை யோஎ னெம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே. **#97**

பொய்யனாகிய என்னை விரும்பி நோக்கவும் நோக்கின உதவியை நினைந்து நான் வருந்தி மாண்டிலேன். இறைவனே! உன் அன்பரும் நீயும் சிவபுரத்துக்கு எழுந்தருளி என்னை இவ்வுலகத்தில் இருத்துதல் உனக்கு முறையாமோ? என் தீவினைக்கு இறுதி இல்லையோ!

விளக்கவுரை

ஆனந்தாதீதம்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'பொய்ம்மை உண்மையேன்' என்றதன்பின், 'ஆயினும்' எனவும், 'வஞ்சம் உண்மையேன்' என்றதன்பின், 'ஆதலின்' எனவும் நின்ற சொல்லெச்சங்களை வருவித்துரைக்க. போத - போதுக; வருக. புரிந்து - விரும்பி. வஞ்சம் - வேறோர் எண்ணம்; என்றது, உலகியற் பற்றினை. 'மாண்டிலேன்' என்றதற்கு, 'பிரிவாற்றாமையால்' என்னும் காரணம்,

ஆற்றலாற் கொள்ளக் கிடந்தது. 'மலர்க் கமலம்' என்பது. பின் முன்னாக நின்ற ஆறாவதன் தொகை. அரத்தம் - சிவப்பு. 'அருள்செய் அன்பர்' என்றது, செயப்படு பொருள்மேல், தொக்க வினைத்தொகை. 'அன்பரும் நீயும் அங்கு எழுந்தருளி' எனவும், 'எனை இங்கு இருத்தினாய்' 'வம்பனேன் வினைக்கு இறுதி இல்லையே' எனவும் போந்த சொற்கள், அடிகளது ஆற்றாமை நனிமிக விளக்குவனவாம். முறையோ - நேர்மையோ. வம்பன் - பயனில்லாதவன்.

இல்லை நின்கழற் கன்ப தென்கணே
ஏலம் ஏலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப னாக்கினாய்
எல்லை யில்லைநின் கருணை யெம்பிரான்
ஏது கொண்டுநான் ஏது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னும் உன் கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே. **#98**

இறைவனே! எனக்கு உன் திருவடிக் கண் அன்பு இல்லையாகவும், கல்லைக் குழைத்த வித்தையைக் கொண்டு என்னைத் திருத்தி உன் திருவடிக்கு அன்பனாக்கினாய். ஆதலால் உன் கருணைக்கு ஓர் எல்லை இல்லை.

விளக்கவுரை

ஆனந்தாதீதம்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'அன்பது' என்றதில் அது, பகுதிப்பொருள் விகுதி. ஏலம் - மயிர்ச்சாந்து. ஏலும் - பொருந்தும். 'நற்குழலி' என்றதில் நன்மை - அழகு. ஆக்கும் விச்சை - ஆக்குகின்ற வித்தை போல்வ தொரு வித்தை. 'கருணை' என்றதில் நான்கனுருபு தொகுத்தலாயிற்று. 'நின்கருணைக்கு எல்லை இல்லை' என மாற்றி, 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. 'வல்லை' என்றதை 'மீட்கவும்' என்றதன் பின்னர்க் கூட்டுக. மறு - குற்றம். குற்றமில்லாத வானம், சிவலோகம். 'என்கணே நின்கழற்கு அன்பு இல்லையாகவும், நின் கருணைக்கு எல்லை இல்லை ஆதலின், கல்லை மென்கனியாக்கும் விச்சை கொண்டு என்னை முன்பு நின்கழற்கு அன்பனாக்கினாய்; அது போலவே, நான் இப்பொழுது ஏதுகொண்டு ஏது செய்யினும் இன்னும் எனக்கு உன்கழல்காட்டி மீட்கவும் வல்லையே' என்க. 'கொண்டு' என்பது மூன்றாவதன் பொருள்தரும் இடைச் சொல்லாதலின், 'எக் காரணத்தால் எதனைச் செய்யினும்' எனப் பொருள் கூறுக. 'வல்லையே' என்றதில் உள்ள ஏகாரம் தேற்றம். எனவே,

'இனியும் என்னை மீட்க நீ வல்லாய் என்னும் துணிவுடையேன்' என்பது பொருளாயிற்று. 'மீட்கவும்' என்ற உம்மை, சிறப்பு.

வான நாடரும் அறியொ ணாதநீ
மறையில் ஈறுமுன் தொடரொ ணாதநீ
ஏனை நாடருந் தெரியொ ணாதநீ
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா
உருகி நான்உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே. **#99**

இறைவனே! தேவர்கள், மறைகள், ஏனை நாட்டவர்கள் ஆகியோர்க்கும் அரியையான நீ, அடியேனை ஆட்கொள்ளுதல் முதலாயினவற்றை நோக்கும் இடத்தில், அஃது எனக்கு இவ்வுலக சம்பந்தமான அஞ்ஞானம் அழிதற்கேயாகும்.

விளக்கவுரை

ஆனந்தாதீதம்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இறைவனது அருமை தோன்ற, 'நீ' என்றதனைப் பலமுறை கூறினார். மறையில் ஈறும் - வேதத்தில் முடிவாயுள்ள பகுதியும். உம்மை, சிறப்பு. ஏனை நாடர் - தேவருலகிற்கு மேற்பட்ட சத்தியலோகம் முதலியவற்றில் உள்ளவர். அவர், பிரமன் முதலியோர். 'இனிதாய்' என்பது, விரித்தலாயிற்று. 'ஆண்டுகொண்டவா' என்றது முதலிய நான்கிடத்தும், 'ஆறு' என்பது கடைக்குறைந்து நின்றது. அவற்றிலெல்லாம் எண்ணும்மை விரித்து, அவற்றை, எஞ்சிநின்ற, வியப்பைத் தருவன' என்பதனோடு முடிக்க. ஊனை - உடம்பை. உடம்பை ஆடச் செய்த நாடகம், உலகியல். ஞானநாடகம், ஆனந்தக் கூத்து, எனவே, 'முன்பு உடம்பை ஊன நாடகம் ஆடுவித்தவாறும், பின்பு உயிரை ஞானநாடகம் ஆடுவித்தவாறும்' என்றதாயிற்று. 'ஊன நாடகம்' எனப் பாடம் ஓதி, ஆடுவித்தமை இரண்டிற்கும், 'என்னை' என்பதனைச் செயப்படுபொருளாகக் கொள்ளுதலே சிறக்கும். பருகுதல் - அனுபவித்தல். வையகத்து உடைய விச்சை நைய - உலகின்கண் யான் கொண்டிருந்த பாச ஞானம் கெட. இதனை, 'ஞான நாடகம் ஆடுவித்தவா' என்றதற்கு முன்னே கூட்டுக. 'இச்சை' எனப் பிரித்தல், அந்தாதிக்கு ஒவ்வாமையறிக.

விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்

வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனைஉன் கோயில் வாயிலிற்
பிச்ச னாக்கினாய் பெரிய அன்பருக்
குரிய னாக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயி னுங்கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே. **#100**

இறைவனே! எல்லா உலகங்களையும் வித்தில்லாமல் தோற்றுவிப்பாய். என்னை உன் கோயில் வாயில் பித்தனாக்கி, உன் அன்பரது திருப்பணிக்கும் உரியேனாகச் செய் தனை. உலகத்தார், தாம் வளர்த்தது ஆதலின் நச்சு மரமாயினும் வெட்டார்; அடியேனும் உனக்கு அத்தன்மையேன்.

விளக்கவுரை

ஆனந்தாதீதம்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

விச்சு - வித்து. 'வித்தில்லாமலே விளைவை உண்டாக்குவாய்' என்றது, 'அதுபோன்ற செயல்களைச் செய்வாய்' என்றபடி. 'விச்சின்றி நாறுசெய் வானும்' *(தி.4.ப.4.பா.2.)* என்று அருளிச்செய்ததும் இவ்வாறாம். இறைவன் இங்ஙனம் செய்தல் என்பது, சில காரியங்களை அவற்றிற்குரிய நியத காரணம் இல்லையாகவும், பிற காரணமே காரணமாய் அமைய அவற்றை நிகழச் செய்தலாம். அது, நாவுக்கரசர்க்குக் கல்லே தெப்பமாய் அமையக் கடலைக் கடந்து கரையேறச் செய்தமை, ஞானசம்பந்தருக்கு ஆண்பனைகளே பெண் பனைகளாய்க் காய்தரச் செய்தமை, சுந்தரருக்குச் செங்கல்லே பொன் னாகிப் பயன்படச் செய்தமை போல்வனவாம். இவைபோலும் செயல்கள் பிறவும் கேட்கப்படுதலின், அவை பற்றியே அடிகள் இவ்வாறு அருளிச்செய்தாராவர். எனினும், தமக்கு இறைவனைக் காணும் முயற்சியின்றியும் அவன் தானே வந்து தம்மைத் தலையளித்தாட் கொண்டமையைக் குறிப்பிடுதலே கருத்தென்க. இனி இப்பகுதி, உயிர்களின் முதற்பிறப்பிற்கு வினையாகிய காரணம் இல்லையாகவும், அவைகட்கு முதற்கண் நுண்ணுடம்பைக் கொடுத்துப் பின் அதன்வழித் தோன்றிய வினைக்கீடான பிறவியைத் தருதலைக் குறிப்பதாகச் சிவஞானபோத மாபாடியத்துள் உரைக்கப்பட்ட வாற்றையும் அறிக. வைச்சு - வைத்து. வைப்பது உயிர்களிடம் என்க. கோயில், திருப்பெருந்துறையில் உள்ளது. 'திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி' *(தி.8. திருப்பள்ளி. 8)* எனப் பின்னரும் அருளிச் செய்வர். பிச்சன் - பித்தன். உரியன் - அடியவன். 'தாம்' என்றது மக்களை

என்பது, பின்னர் வருவனவற்றால் விளங்கிக் கிடந்தது. ஓர்- ஒரு. இது சிறப்பின்மை குறித்தது. மா - பெரிய. 'மா நச்சு மரம்' என மாற்றிக்கொள்க. 'மிக்க நஞ்சாய மரம்' என்றது, காய் கனி முதலிய வற்றை உண்டாரை அப்பொழுதே கொல்லும் எட்டி மரம் போலும் மரங்களை. 'அம்மரங்களால் தீங்கு உண்டாதல் அறிந்திருந்தாலும், வளர்த்தவர் வெட்டமாட்டார்கள்' என்றபடி. 'வளர்த்தது' என்றதற்கு, 'அறியாது வளர்த்தது' எனவும், 'ஆயினும்' என்றதற்கு, 'ஆதல்' அறியப்படினும்' எனவும் உரைப்பினும் அமையும். 'நானும் அங்ஙனே' என்றது, 'நானும் உனக்கு அத்தன்மையனே' என்றபடி. உவமைக்கண், வளர்த்தது, கொல்லுதல் என்றவற்றிற்கு ஏற்பப் பொருட்கண் கருதப்பட்டன, கோயில் வாயிலில் பிச்சனாக்கி அன்பருக்கு உரியனாக்கினமையையும், பின் கைவிடுதலையுமாம்.

உடைய நாதனே போற்றி நின்னலால்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
உடைய னோபணி போற்றி உம்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினுங்
கடைய னாயினேன் போற்றி என்பெருங்
கருணை யாளனே போற்றி என்னைநின்
அடிய னாக்கினாய் போற்றி ஆதியும்
அந்த மாயினாய் போற்றி அப்பனே. **#101**

நீ என்னை உடையவன் ஆதலால் எனக்கு உன்னை அல்லது வேறு புகலிடம் ஏதேனும் உளதோ? பகர்ந்தருள் வாயாக. தேவர்களுக்கெல்லாம். மேலாகிய மேலோனே! உன்னை வணங்குகிறேன். இனி யானோ எவர்க்கும் கீழ்ப்பட்டவன். அத்தகைய என்னை உன் கருணையினால் உனக்கு அடிமை யாக்கினாய். எனக்குத் தொடக்கமும் முடிவும் நீயே. அத்தகைய அப்பனே! உன்னை வணங்குகிறேன்.

விளக்கவுரை

ஆனந்தாதீதம்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆவது - நன்மை தருவது. 'எனக்கு ஆவது பற்று மற்று இனி ஒன்று உடையனோ' என்க. பணி - சொல்லு. உம்பரார் - தேவர். பராபரன் - முன்னும் பின்னும் உள்ளவன். இத் திருப்பாட்டில் வணக்கமே கூறினார்.

அப்ப னேயெனக் கமுத னேஆ
னந்த னேஅகம் நெகஅள் ளூறுதேன்
ஒப்ப னேஉனக் குரிய அன்பரில்

உரிய னாய்உனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேஎனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கள் மன்னனே. **#102**

எனக்குத் தந்தையே! அமிர்தமே! ஆனந்தமே! உள்ளம் உருகுதற்கும் வாய் ஊறுதற்கும் ஏதுவாயுள்ள தேன் போன்றவனே! உனக்கு உரிமையுடைய மெய்யன்பரைப் போல நானும் உரிமையாளனாகி உன்னைப் புசித்து உயிர் வாழ்வதற்கான ஒப்பற்ற உணவே! ஒளி விளங்கும் திருமுடியை உடையவனே! மாறாத் துணையாய் இருப்பவனே! தொண்டர் தளர்வுற்று இருக்கும்பொழுது உதவும் செல்வமே! இப்பொய் உலக வாழ்க்கையில் நான் துன்புற்று இருக்கும்படி வைப்பது முறையாகுமோ? எங்கள் அரசே! கூறுவாயாக.

விளக்கவுரை

ஆனந்தாதீதம்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அள் ஊறு - உள்ளே சுரக்கின்ற. அன்பரில் - அன்பரைப்போல. துப்பன் - பற்றுக்கோடானவன். 'என்னை வையகத்து நைய வைப்பதோ' என மாற்றி, 'வைப்பதோ பொருத்தம்' எனச் சொல்லெச்சம் வருவித்து முடிக்க.

மன்ன எம்பிரான் வருக என்னெனை
மாலும் நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன எம்பிரான் வருக என்னெனை
முழுதும் யாவையும் இறுதி யுற்றநாள்
பின்ன எம்பிரான் வருக என்னெனைப்
பெய்க ழற்கண்அன் பாயென் நாவினாற்
பன்ன எம்பிரான் வருக என்னெனைப்
பாவ நாசநின் சீர்கள் பாடவே. **#103**

என்றும் நிலை பேறுடைய எங்கள் தலைவனே! அடியேனை வருக என்று கட்டளை இடுவாயாக. திருமாலுக்கும் நான்முகனுக்கும் மூலப் பொருளே! என்னை வருக என்று ஏற்றுக் கொள்வாயாக. சம்கார காலத்தில், எல்லாம் ஒடுங்கி இருக்கும் போது எஞ்சித்தன்மயமாயிருக்கும் எம் தலைவ, என்னை வருக என்று அழைப்பாயாக. உன்னை வந்து அடைந்தவர்களது பாவத்தைப் போக்குபவனே! நான் உன்னைப் புகழவும் உனது சிறப்பினைப் பாடவும் என்னை உன்னோடு சேர்த்துக் கொள்வாயாக.

விளக்கவுரை

ஆனந்தாதீதம்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'மன்ன, முன்ன, பின்ன, பன்ன' எனவும், 'எம்பிரான்' எனவும் வந்தன விளிகள். பன்னன் - துதிக்கப்பட்டவன். இத் திருப் பாட்டில், 'நின் சீர்கள் பாட என்னை வருக என்று அழை' என்பதே அருளிச் செய்தார். பாடுதல், சிவலோகத்தில் என்க.

1.6.நீத்தல் விண்ணப்பம்

கடையவ னேனைக் கருணையி னாற்கலந்
தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல்
வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரான்என்னைத்
தாங்கிக்கொள்ளே. **#104**

கடையேனைப் பெருங்கருணையால், வலிய வந்தடைந்து ஆண்டு கொண்டருளினை. இடபவாகனனே! அடி யேனை விட்டுவிடுவாயா? வலிமையுடைய, புலியின்தோலாகிய ஆடையை உடுத்தவனே! நிலைபெற்ற திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! சடையையுடையவனே! சோர்ந்தேன்; எம்பெருமானே! என்னைத் தாங்கிக் கொள்வாயாக.

விளக்கவுரை

'எம்பிரான்' என்றதை, 'சடையவனே' என்றதன் பின்னரும், 'விடுதிகண்டாய்' என்றதை இதன்பின்னரும் கூட்டுக. விறல் - வெற்றி; வலிமையுமாம். உடையவன் - உடையை உடைய வன். 'தோலாகிய உடையை உடையவன்' என்க. விட்டிடுதி - விடுகின்றாய். இகர ஈறு, இங்கு எதிர்காலத்தில் வந்தது. 'கண்டாய்' என்னும் முன்னிலையசைச் சொல், 'போலும்' என்னும் உரையசைப் பொருளில் நின்று, 'விடாதி; விட்டாற் கெட்டொழிவேன்' என்னும் பொருளைத் தந்தது. இவை இப்பகுதியின் எல்லாத் திருப்பாட்டிலும் ஒக்கும். 'கருணையினாற் கலந்தாண்டு கொண்ட' என்றதனால், 'அக் கருணை இடையில் ஒழிதற்பாலதோ' என்பது திருவுள்ளமாயிற்று. இறைவன் தம்மை ஆட்கொண்ட பின்னர்ப் பாண்டியனிடம் தம்மைச் செல்லுமாறுவிடுத்து, நரியைப் பரியாக்கிக் கொணர்ந்தளித்து மறைந்ததனால், இந்நிலையிலேயே தம்மை இருக்க வைத்து விடுவானோ என்று அடிகள் ஐயுற்று வருந்தி இங்ஙனம் விண்ணப் பிக்கின்றார் என்க. அடிகள் திருப்பெருந்துறையை அடைந்தமையும், அங்கு இறைவன் முன்னைத் திருவுருவத்தோடும் விளங்கியிருந்து இவரை, 'தில்லைக்கு வருக' என்று சொல்லி நிறுத்திவிட்டு, ஏனை அடியார்களோடு மறைந்தமையும், இதன்பின் நிகழ்ந்தன என்று கொள்ளுதலே பொருந்தும்; என்னை? 'தில்லைக்கு வருக' என்று பணித்தபின் அடிகள் இத்துணை வருந்தி வேண்டாராகலின்.

கொள்ளேர் பிளவக லாத்தடங் கொங்கையர்
கொவ்வைச்செவ்வாய்
விள்ளேன் எனினும் விடுதிகண் டாய்நின்
விழுத்தொழும்பின்
உள்ளேன் புறமல்லேன் உத்தர கோசமங்
கைக்கரசே
கள்ளேன் ஒழியவுங் கண்டுகொண் டாண்டதெக்
காரணமே. **#105**

உத்தரகோச மங்கைக்குத் தலைவனே! கள்வனாகிய நான், உன்னை நீங்கி நிற்கப் பார்த்தும் என்னை அடிமை கொண்டது, எக்காரணத்தைக் கொண்டோ?. உன்னுடைய மேலாகிய தொண்டில் உள்ளேன்; அடியேன் புறத்தேன் அல்லேன்; மாதரது கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயினை விடேனாயினும், விட்டு விடுவாயோ?.

விளக்கவுரை

'விடுதிகண்டாய்' என்றதனை இறுதியிற் கூட்டி யுரைக்க. 'கொள் ஏர்' என்றதனை, 'ஏர் கொள்' என மாற்றிக் கொள்க. ஏர் - எழுச்சி. பிளவு அகலா - வேறாகி நீங்காத; 'நெருங்கிய' என்ற படி. விள்ளேன் - நீங்கேன். விழுத் தொழும்பின் உள்ளேன் - உனது மேலான தொண்டிற்கு உள்ளாயினேன்; என்றது, உன்னால் 'ஆட் கொள்ளப்பட்டு விட்டேன்' என்றதாம். அதனால், 'இனிப் புறமாவே னல்லேன்' என்க. கள்ளேன் - களவுடையேனாய்; ஒழியவும் - உன்னை அணுகாதிருக்கவும். கண்டுகொண்டு - அருள்நோக்கம் செய்து. ஆண்டது எக்காரணம் - ஆட்கொண்டது எக்காரணத்தால்; 'விடாது பற்றிக் கொள்ளுதற்கே யன்றோ' என்பது கருத்து. 'காரணத் தால்' என்னும் உருபு, தொகுத்தலாயிற்று.

காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங்
கரைமரமாய்
வேருறு வேனை விடுதிகண் டாய்விளங்
குந்திருவா
ரூருறை வாய்மன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
வாருறு பூண்முலை யாள்பங்க என்னை
வளர்ப்பவனே. **#106**

புகழால் திகழும் திருவாரூரில் வீற்றிருப்பவனே! நிலைபெற்ற திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! கச்சு அணியப் பெற்ற, ஆபரணங்களோடு கூடிய, கொங்கைகளையுடையவளாகிய உமாதேவியின் பாகனே! என்னைப் பாதுகாப்பவனே! கருமை மிகுந்த

கண்களை உடைய மாதரது ஐம்புல இன்பத்தில் ஆற்றங்கரையிலே நிற்கின்ற மரம்போல, வேர் ஊன்றுகின்ற என்னை விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

கார்உறு - கருமை பொருந்திய. 'கண்ணியரது ஐம் புலனில் வேர் உறுவேன்' என்க. ஐம்புலன் - கண்ணுக்குப் புலனாகின்ற அழகு முதலியன. வேர் உறுதல் - ஊன்றி நிற்றல். 'ஆற்றங்கரை மரமாய்' என்றதில் ஆக்கம், உவமை குறித்து நின்றது. 'ஆற்றங் கரையில் உள்ள மரம் அவ்விடத்தில் வேர் ஊன்றுதல் போல' என்பது பொருள். 'இஃது அவ்வேர் நிலைபெறாது அவ்வாற்றுநீராலே அழிக்கப்படுதல் போல, யானும் அவரது ஐம்புல இன்பங்களாலே அழிக்கப் படுவேன்' என்பதை உணர்த்தி நிற்றலின், தொழில் பற்றி வந்த உவமை. வளர்ப்பவன் - முன்னர் அறிவை மிகுவித்துப் பின்னர் அதனால் அன்பையும், அதன்பின்னர் அவ்வன்பினால் இன்பத்தை யும் மிகுவிப்பவன்.

வளர்கின்ற நின்கரு ணைக்கையில் வாங்கவும்
நீங்கிஇப்பால்
மிளிர்கின்ற என்னை விடுதிகண் டாய்வெண்
மதிக்கொழுந்தொன்
றொளிர்கின்ற நீள்முடி உத்தர கோசமங்
கைக்கரசே
தெளிகின்ற பொன்னுமின் னும்மன்ன தோற்றச்
செழுஞ்சுடரே. #107

வெண்மையாகிய ஓர் இளம் பிறையானது விளங்கு கின்ற, நீண்ட சடை முடியையுடைய, திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! தெளிகின்ற பொன்னையும், மின்னலையும் ஒத்த காட்சியையுடைய செழுமையாகிய சோதியே! வளர்ந்து கொண் டிருக்கிற, உனது கருணைக் கரத்தில் வளைத்துப் பிடிக்கவும் விலகி, இவ்வுலக வாழ்விலே புரளுகின்ற என்னை விட்டுவிடுவாயோ?

விளக்கவுரை

வளர்கின்ற - எல்லா உயிர்களும் வளரும் இடமாகிய. கருணைக் கை, உருவகம். வாங்கவும் - எடுக்கவும். மிளிர்கின்ற - பிறழ்கின்ற; குதிக்கின்ற. தெளிகின்ற - விளங்குகின்ற.

செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி
யாரிற்பன்னாள்
விழுகின்ற என்னை விடுதிகண் டாய்வெறி
வாய்அறுகால்
உழுகின்ற பூமுடி உத்தர கோசமங்

கைக்கரசே
வழிநின்று நின்னரு ளாரமு தூட்ட
மறுத்தனனே. #108

தேன் பொருந்திய வாயினையுடைய வண்டுகள், கிண்டுகின்ற மலரை அணிந்த, திருமுடியையுடைய, திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! வழியில் மறித்து நின்று, உன் அருளாகிய அரிய அமுதத்தை நீ உண்பிக்க, மறுத்தேன். வளர்கின்ற விளக்குத் தீயில் விழுகின்ற விட்டிற் பூச்சியைப் போல, சிலவாகிய மொழிகளை உடைய மகளிரிடத்துப் பலநாளும் விருப்பங் கொள்கின்ற அடியேனை விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

'செழிக்கின்ற' என்பது, இடைக் குறைந்து நின்றது. தீ- விளக்குத் தீ. விட்டில் - *'விட்டில்'* என்னும் வண்டு. விட்டிலின் - விட்டில் போல. சின்மொழி - *சிலவாகிய மொழி;* இது நாணத்தால் பல பேசாமையைக் குறித்தது. மொழியாரில் - மொழியாரிடத்து. *'பன்னாள் விழுகின்ற'* என்றதனால், உவமையிலும் பன்முறை வீழ்தல் பெறப்பட்டது. படவே, விட்டில் விளக்கினைக் கண்டு அவ் வொளியால் மயங்கி அணுகுந்தொறும் அதன் வெப்பத்தால் தாக் குண்டு, அங்ஙனம் தாக்குண்ட பின்னரும் விடாது சென்று முடிவில் அதன் கண்ணே வீழ்ந்து இறக்கும் தன்மை பொருளிலும் கொள்ளற் பாலதாயிற்று. வெறிவாய் - தேனின்கண். அறுகால் - வண்டு. வழிநின்று - யான் செல்லும் வழியில் வந்து நின்று. *'மறுத்தனனே'* என்ற தெற்றேகாரம், *'என்னே என் அறியாமையின் மிகுதி'* என இரக்கங் குறித்துநின்றது. மறுத்தது, உடன் செல்ல இயையாது நின்றது.

மறுத்தனன் யான்உன் அருள்அறி யாமையின்
என்மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண் டாய்வினை
யின்தொகுதி
ஒறுத்தெனை ஆண்டுகொள் உத்தர கோசமங்
கைக்கரசே
பொறுப்பரன் றேபெரி யோர்சிறு நாய்கள்தம்
பொய்யினையே. #109

என் மாணிக்கமே! திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! நான் உன் திருவருளின் பெருமையை அறியாமல் அதனை வேண்டாவென்று மறுத்தேன்; நீ அதற்காக அடியேனை வெறுத்து விட்டு விடுவாயோ? மேலோர், சிறிய நாய் போல்வாரது குற்றத்தை மன்னிப்பார்கள் அல்லரோ? நீ என்னுடைய வினை அனைத் தையும் அழித்து, என்னை

ஆண்டு கொண்டு அருள வேண்டும்.

விளக்கவுரை

'அறியாமையின் யான் உன் அருளை மறுத்தனன்' என்க. ஒறுத்து - அழித்து. 'நாய்கள்' என்றது உவமையாகு பெயராய், 'நாய்கள் போன்றவர்' எனப் பொருள் தந்தது. சிறுமை - இழிவு. ஈற்றடி, 'வேற்றுப்பொருள் வைப்பு' என்னும் அணிபட வந்தது.

பொய்யவ னேனைப் பொருளென ஆண்டொன்று
பொத்திக்கொண்ட
மெய்யவ னேவிட் டிடுதிகண் டாய்விட
முண்மிடற்று
மையவ னேமன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
செய்யவ னேசிவ னேசிறி யேன்பவந்
தீர்ப்பவனே. **#110**

நஞ்சுண்ட கண்டத்தில் கருமையையுடையவனே! நிலை பெற்ற திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! செம்மேனி யனே! மங்கலப் பொருளானவனே! சிறியேனது பிறவியை நீக்கு வோனே! பொய்யவனாகிய என்னை ஒரு பொருளாகக் கருதி ஆண் டருளி, என் சிறுமையை மறைத்துக் கொண்ட உண்மைப் பொருளே! என்னை விட்டுவிடுவாயோ?

விளக்கவுரை

'ஒன்று ஆண்டு' என மாற்றியுரைக்க. ஒன்று - ஒரு பொழுது. பொத்திக் கொண்ட மெய்யவன் - மறைத்துக் கொண்ட திரு மேனியை உடையவன். விடம் உண் - நஞ்சு உண்டதனாலாகிய. மிடற்று மை - கழுத்தின்கண் உள்ள கருமை நிறம். செய்யவன் - சிவப்பு நிறத்தை உடையவன். பவம் - பிறப்பு.

தீர்க்கின்ற வாறென் பிழையைநின் சீரருள்
என்கொல்என்று
வேர்க்கின்ற என்னை விடுதிகண் டாய்விர
வார்வெருவ
ஆர்க்கின்ற தார்விடை உத்தர கோசமங்
கைக்கரசே
ஈர்க்கின்ற அஞ்சொடச் சம்வினை யேனை
இருதலையே. **#111**

பகைவர் அஞ்சும்படி ஒலிக்கின்ற, கிண்கிணி மாலை அணிந்த காளையையுடைய, திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! ஐம்புல

ஆசைகளும் உன் திருவடியை நீங்குகின்ற அச்ச மும், தீவினையுடையேனை இரண்டு பக்கத்திலும், இழுக்கின்றன. ஆதலின் என் குற்றங்களை உன் பேரருளானது நீக்குகின்ற விதம் எவ்வாறு என்று மனம் புழுங்குகின்ற என்னை விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

'வினையேனை அஞ்சொடு அச்சம் இருதலை ஈர்க் கின்ற; (அதனால்) என் பிழையை நின் சீர் அருள் தீர்க்கின்றவாறு என்கொல் என்று வேர்க்கின்ற என்னை விடுதி கண்டாய்' எனக் கூட்டுக. என்கொல் என்று - எவ்வாறோ என்று. வேர்த்தல் - இளைத்தல்; வருந்துதல். விரவார் - பகைவர். வெருவ - அஞ்சும்படி. ஆர்க்கின்ற தார் விடை - ஒலிக்கின்ற கிண்கிணி மாலையை அணிந்த இடபத்தையுடைய. அஞ்சு - ஐம்புல ஆசை. அச்சம், அவற்றின் வழிச் செல்ல அஞ்சுதல், 'இந்த இரண்டும் இருமுகமாக மாறி மாறி ஈர்க் கின்றன' என்றபடி.

இருதலைக் கொள்ளியி னுள்ளெறும் பொத்து
நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண் டாய்வியன்
மூவுலகுக்
கொருதலை வா மன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
பொருதலை மூவிலை வேல்வலன் ஏந்திப்
பொலிபவனே. **#112**

பெருமை அமைந்த மூன்று உலகங்களுக்கும், ஒப் பற்ற முதல்வனே! நிலைபெற்ற திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! போர்க்குரிய நுனியோடு கூடிய மூன்று இலை வடிவின தாகிய சூலத்தை, வலப்பக்கத்தில் தாங்கி விளங்குபவனே! இருபுறமும் எரிகின்ற கொள்ளிக் கட்டையின் உள்ளிடத்தே அகப்பட்ட எறும்பு போன்று துயருற்று உன்னை விட்டு நீங்கின என்னை, தலைவிரி கோலம் உடைய சடையோனே! விட்டுவிடுவாயோ?

விளக்கவுரை

அடிகள் தாம் இருதலைக் கொள்ளியினுள் எறும்பை ஒத்திருத்தல் இவ்வாற்றால் என்பதை முன்னைத் திருப்பாட்டில் அருளிச் செய்தமையின், இதனுள் அதனை எடுத்தோதாராயினார். 'பிரிந்த' என்றது, 'பிரிந்து வருந்துகின்ற' என்னும் பொருளது.
விரிதலை - விரிந்த தலைமயிர்; இடவாகு பெயர். தலைமயிர் விரிந்து கிடத்தலைக் கூறியது. எங்கும் ஓடி அலமருதலைக் குறித்த குறிப்புமொழி. பொருது அலை - பகைவரொடு போர் செய்து அவரை

வருத்துகின்ற. மூவிலை வேல் - சூலம். வலன் - வலப்பக்கம்.

பொலிகின்ற நின்தாள் புகுதப்பெற் றாக்கையைப்
போக்கப்பெற்று
மெலிகின்ற என்னை விடுதிகண் டாய்அளி
தேர்விளரி
ஒலிநின்ற பூம்பொழில் உத்தர கோசமங்
கைக்கரசே
வலிநின்ற திண்சிலை யாலெரித் தாய்புரம்
மாறுபட்டே. **#113**

வண்டுகள், ஆராய்ந்து பாடுகின்ற, விளரி இசை யின் ஒலியோசை இடையறாது நிலைபெற்றிருக்கிற, பூஞ்சோலைகள் சூழ்ந்த திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! பகைத்து முப் புரங்களை வலிமை நிலைத்த உறுதியான வில்லினால் அழித்தவனே! விளங்குகின்ற, உன் திருவடிகளில் புகப்பெற்று, உடம்பை உன்னுடையதாகவே கொடுக்கப் பெற்றும் வருந்துகின்ற அடியேனை விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

'புகுதப் பெற்ற' என்றதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. புகுதப் பெற்றமை, புகுந்துவணங்கப் பெற்றமை. போக்கப்பெற்று - உன்னால் விலக்கப்பட்டு; இதன்கண் 'பெற்று' என்னும் வினைக்கு வினைமுதல் அடிகளாதலின், 'ஆக்கையை' என்னும் இரண்டாவது, 'போக்க' என்றதனோடு முடியும். 'தில்லைக்கு வருக' என்று நிறுத்திச் சென்றதனை, 'போக்க' என்றார்.

அளி - வண்டுகள். தேர் விளரி ஒலி - தேனை ஆராய்கின்ற, விளரி இசையினது ஓசை. எரித்தாய் - எரித்தவனே.

மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்ப யான்உன்
மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதிகண் டாய்வினை
யேன்மனத்தே
ஊறுமட் டேமன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
நீறுபட் டேஒளி காட்டும்பொன் மேனி
நெடுந்தகையே. **#114**

தீவினையேனது மனத்தின்கண் சுரக்கின்ற தேனே! நிலைபெற்ற திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! திரு வெண்ணீறு பூசப்பட்டு ஒளியைச் செய்கின்ற பொன்போலும் திரு மேனியையுடைய பெருந்தன்மையனே! ஐம்பொறிகள் பகைத்து என்னை வஞ்சித்தலால்

நான் உனது வீரக் கழலணிந்த தாமரை மலரை ஒத்த திருவடியை நீங்கினேன்; அத்தகைய என்னை அங்ஙனமே விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

அஞ்சு - ஐம்புலன். 'தாளின் வேறுபட்டேனை' என்க. மட்டு - தேன். நீறுபட்டு - திருநீறு பொருந்தப்பட்டு.

நெடுந்தகை நீஎன்னை ஆட்கொள்ள யான்ஐம்
புலன்கள்கொண்டு
விடுந்தகை யேனை விடுதிகண் டாய்விர
வார்வெருவ
அடுந்தகை வேல்வல்ல உத்தர கோசமங்
கைக்கரசே
கடுந்தகை யேன்உண் ணுந் தெண்ணீர் அமுதப்
பெருங்கடலே. **#115**

பகைவர் அஞ்சும்படி கொல்லும் தன்மையுடைய வேற்போரில் வல்லவனாகிய திருவுத்தரகோச மங்கைக்குத் தலை வனே! கொடிய தன்மையுடையேன் பருகுதற்குரிய பெரிய அமுதக் கடலே! பெருந்தன்மையனே! நீ, என்னை அடிமை கொள்ளவும்; நான் ஐம்புலன்களின் ஆசை கொண்டு, அதனால் உன்னை விடும் தன்மையனாயினேன்; அத்தகைய என்னை விட்டுவிடுவாயோ?

விளக்கவுரை

தகையேனை - தன்மையுடைய என்னை. அடும் தகை வேல் வல்ல - கொல்லும் தன்மையையுடைய சூலத்தை ஆளுதல் வல்ல. கடுந்தகையேன் - கடிய குணமுடைய யான்; 'எனக்குத் தெண்ணீர் கிடைத்தல் அரிது' என்பது குறிப்பு. 'தெண்ணீராகிய அமுதம்' என்க. நாவறட்சியைத் தணித்து உயிரை நிலைபெறுத்தலின், தெண்ணீர், 'அமுது' எனப்பட்டது. இறைவனால் தணிக்கப்படுவது வினை வெப்பமாம்.

கடலினுள் நாய்நக்கி யாங்குன் கருணைக்
கடலின்உள்ளம்
விடலரி யேனை விடுதிகண் டாய்விட
லில்லடியார்
உடலில மேமன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
மடலின்மட் டேமணி யேஅமு தேயென்
மதுவெள்ளமே. **#116**

உன் திருவடியை விடுதல் இல்லாத அடியாரது உடலாகிய வீட்டின்

கண்ணே நிலைபெறுகின்ற, திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! பூந்தேனே! மாணிக்கமே! அமுதமே! என் மதுப்பெருக்கே! கடல் நீரில் நாய் நக்கிப் பருகினது போல உனது கருணைக் கடலினுள்ளே, உள்ளத்தை அழுந்திச் செல்ல விடாத என்னை விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

'விடலரியேனை' என்றாரேனும், 'முழுதும் மூழ்கும் படி விட்டுப் பருகாது, சிறிதே சுவைத்து ஒழிவேனை' என உவமைக்கேற்ப உரைத்தலே கருத்தென்க. உடல் இல்லம் - உடம்பாகிய வீடு, 'உடலிடங்கொண்டாய்' *(தி.8 கோயில்.10)* என்றாற்போலப் பின்னரும் அருளிச் செய்வர். யாண்டும் 'அடியவர் உடம்பில் நிற்கும் உள்ளத்தை இடமாகக் கொண்டிருப்பவன்' என்பதே பொருளாம்; 'நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந்தன்னுள் நிலாவாத புலால் உடம்பே புகுந்து நின்ற-கற்பகமே' *(தி.6.ப.95.பா.4)* என்ற அப்பர் திரு மொழியையும் காண்க.
மடலின் மட்டு - பூவிதழில் துளிக்கின்ற தேன். மதுவெள்ளம்- தேன் வெள்ளம். முன்னர்ச் சிறிதாயுள்ள தேனைக் கூறினார்; பின்பு அது பெருக்கெடுத்தலைக் கூறினார்.

வெள்ளத்துள் நாவற் றியாங்குன் அருள்பெற்றுத்
துன்பத்தின்றும்
விள்ளக்கி லேனை விடுதிகண் டாய்விரும்
பும்அடியார்
உள்ளத்துள் ளாய்மன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
கள்ளத்து ளேற்கரு ளாய்களி யாத
களியெனக்கே. **#117**

விரும்புகின்ற அடியாருடைய உள்ளத்தில் நிலைத்து இருப்பவனே! நிலை பெற்றிருக்கின்ற திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! நீர்ப் பெருக்கின் நடுவில் இருந்தே ஒருவன் நீர் பருகாது தாகத்தால் நா உலர்ந்து போனாற்போல, உன்னருள் பெற்றிருந்தே, துன்பத்தினின்றும் இப்பொழுதும் நீங்குவதற்கு ஆற்றல் இல்லாது இருக்கின்ற என்னை விட்டுவிடுவாயோ? வஞ்சகச் செய லுடையேனாகிய எனக்கு இதுகாறும் கண்டறியாத பேரின்பத்தைத் தந்தருள்க.

விளக்கவுரை

'வெள்ளத்துள் நாவற்றியாங்கு' என்றது இல்பொருள் உவமை. 'விள்ளகிலேனை' என்பது விரித்தல் பெற்றது. கள்ளத்து உளேற்கு - பொய்யன்பில் நிற்பேனுக்கு. களியாத களி - நான் இது காறும் மகிழ்ந்தறியாத மகிழ்ச்சி. 'அருளாய்' என்றது இரட்டுற மொழிதலாய்,

முன்னர், 'இரங்காய்' எனப் பொருள்தந்து, 'கள்ளத் துளேற்கு' என்றதனோடும், பின்னர், 'ஈவாய்' எனப் பொருள்தந்து, 'எனக்கு' என்பதனோடும் இயைதற்குரித்தாயிற்று. ஈற்றில் நின்ற ஏகாரத்தைப் பிரித்து, 'களி' என்றதனோடு கூட்டிப் பிரிநிலை யாக்கியுரைக்க.

களிவந்த சிந்தையொ டுன்கழல் கண்டுங்
கலந்தருள
வெளிவந்தி லேனை விடுதிகண் டாய்மெய்ச்
சுடருக்கெல்லாம்
ஒளிவந்த பூங்கழல் உத்தர கோசமங்
கைக்கரசே
எளிவந்த எந்தை பிரான்என்னை ஆளுடைய
என்னப்பனே. #118

உண்மையான ஒளிகட்கெல்லாம், ஒளியைத் தந்த பொலிவாகிய திருவடியையுடைய திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! எனக்கு எளிதில் கிடைத்த எனக்குத் தந்தையும், தலைவனும் ஆகியவனே! என்னை அடிமையாகவுடைய என் ஞானத் தந்தையே! மகிழ்வோடு கூடிய மனத்தோடு, உன் திருவடியைக் காணப் பெற்றும், நீ என்னோடு கலந்து அருள் செய்யுமாறு உலகப் பற்றிலிருந் தும் வெளிவாராத என்னை, விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

வெளிவருதல் - புறப்படுதல்; 'உலகியலைவிட்டுப் புறப்படுதல்' என்க. மெய்ச்சுடர் - உலகத்தவர்க்குக் கண்கூடாகக் காணப்படும் ஒளிகள்; அவை, 'ஞாயிறு, திங்கள், விண்மீன், தீ, என்பன. வந்த - வருதற்குக் காரணமான; என்றது, 'மிக்க ஒளியினை யுடைய' என்றவாறு. சொற்பொருள் இதுவாயினும், 'அச்சுடருக் கெல்லாம் ஒளியைத் தருகின்ற' என்னும் பொருள்மேலும் இது நோக்குடைத்து.

என்னைஅப் பாஅஞ்சல் என்பவர் இன்றிநின்
றெய்த்தலைந்தேன்
மின்னையொப் பாய்விட் டிடுதிகண் டாய்உவ
மிக்கின்மெய்யே
உன்னையொப் பாய்மன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
அன்னையொப் பாய்எனக் கத்தன்ஒப் பாய்என்
அரும்பொருளே. #119

உனது திருமேனிக்கு உவமை சொல்லின் மின்னலை ஒப்பாய், உனக்கு நீயே நிகராவாய், நிலை பெற்றிருக்கின்ற திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! எனக்குத் தாயை ஒப்பாய், தந்தையை ஒப்பாய். எனக்குக்

கிடைத்தற்கு அரிய பொருளேயாவாய். அடியேனை, 'அப்பா!
பயப்படாதே!' என்று சொல்லுவாரில்லாமல் நின்று இளைத்துத்
திரிந்தேன்; ஆகையால் என்னை விட்டுவிடு வாயோ?

விளக்கவுரை

'என்னை அஞ்சல்' என்பவர் இன்றி நின்று எய்த்து அலைந்தேன்; விடுதி கண்டாய்' என்றதனை ஈற்றில் தந்துரைக்க. 'உவமிக்கின் மெய் மின்னை ஒப்பாய்' என இயையும். 'மெய்யே' என்ற ஏகாரம், அசைநிலை. உன்னை ஒப்பாய் - உன்னை நீயே ஒப்பாய்; 'ஒப்பார் பிறர் இல்லாதவனே' என்றபடி.

பொருளே தமியேன் புகலிட மேநின்
புகழ்இகழ்வார்
வெருளே எனைவிட் டிடுதிகண் டாய்மெய்ம்மை
யார்விழுங்கும்
அருளே அணிபொழில் உத்தர கோசமங்
கைக்கரசே
இருளே வெளியே இகபர மாகி
யிருந்தவனே. **#120**

உண்மை அன்பர் விழுங்கும் அருட்கனியே! அழகிய சோலை சூழ்ந்த,
திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! இருளாய் இருப்பவனே!
ஒளியாய் இருப்பவனே! இம்மை மறுமை களாகி இருந்தவனே!
உண்மைப் பொருளானவனே! தனியனாகிய எனக்குச் சரண் புகும்
இடமே! உன் புகழை நிந்திப்பவர்கட்கு அச்சத் துக்கும் காரணமாய்
இருப்பவனே! என்னை விட்டுவிடுவாயோ?

விளக்கவுரை

பொருள் - 'பொருள்' என்று சிறப்பித்துச் சொல்லுதற் குரிய பொருள்; மெய்ப்பொருள். 'இகழ்வார்க்கு' என்னும் நான்க னுருபு தொகுத்தலாயிற்று. வெருள் - அச்சம்; அஃது, 'அதனைத் தருவது' என்னும் பொருளதாய் நின்றது. 'விழுங்கும்' என்றது. 'ஆர்வத்தோடு முற்ற நுகரும்' என்றபடி. இது குறிப்புருவகம். இத னால், 'அருளே' என்றது, 'அருளாகிய அமுத உருவினனே' என்றதா யிற்று. இருள் - மறைப்பு; வெளி - விளக்கம்; இவை இரண்டும், முறையே கட்டு வீடுகளைக் குறித்தன. இகம் - இம்மை. பரம் -மறுமை.

இருந்தென்னை ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை
என்னினல்லால்
விருந்தின னேனை விடுதிகண் டாய்மிக்க
நஞ்சமுதா

அருந்தின னேமன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
மருந்தின னேபிற விப்பிணிப் பட்டு
மடங்கினர்க்கே. #121

மிகுதியாக நஞ்சை அமுதமாக உண்டவனே! நிலைபெற்ற திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! பிறவியாகிய நோயிற் சிக்கி முடங்கிக் கிடந்தவர்க்கு மருந்தாய் இருப்பவனே! எழுந்தருளியிருந்து அடியேனை ஆண்டு கொள்வாய்; விற்றுக் கொள்வாய்; ஒற்றி வைப்பாய்; என்ற இவை போன்ற செயல்களில் என்னை உனக்கு உரியவனாகக் கொள்வதல்லது, புதிய அடியே னாகிய என்னை விட்டுவிடுவாயோ?

விளக்கவுரை

'என்னின் இருந்து' எனக்கூட்டி 'என்பால் வீற்றிருந்து' எனப் பொருள் கூறுக. இஃது, 'என்னை ஏற்றுக் கொண்டு' என்றருளிய வாறு. ஆண்டுகொள் - உன் தொண்டில் ஈடுபடுத்திக்கொள். அல்லால்- இங்ஙனம் செய்யாது. 'அல்லால் விடுதி கண்டாய்' என இயைத்து, வேறு தொடராக்குக. விருந்தினன் - புத்தடியேன். 'அல்லால்' என்ற தன் பின், 'வேறொன்றறியாத' என்பதனையும், 'இருந்து' என்றதற்கு முன், 'என்னுடன்' என்பதனையும் வருவித்து, சொற்களைக் கிடந்த வாறே வைத்து உரைப்பாரும் உளர். 'மடங்கினர்' என்றது நோயுட் பட்டவர் செயலற்றுக் கிடத்தலைக் குறித்தது.

மடங்களன் வல்வினைக் காட்டைநின் மன்னருள்
தீக்கொளுவும்
விடங்க என்றன்னை விடுதிகண் டாய்என்
பிறவியைவே
ரொடுங்களைந் தாண்டுகொள் உத்தர கோசமங்
கைக்கரசே
கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித் தாய்வஞ்சிக்
கொம்பினையே. #122

திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! கொடிய யானையாகிய மலையினை உரித்து வஞ்சிக் கொடி போன்ற உமையம்மையை அஞ்சுவித்தவனே! எனது கொடிய வினையாகிய காட்டினை அழியும்படி உனது நிலைபெற்ற அருளாகிய, நெருப்பை இட்டு எரிக்கின்ற வீரனே! என்னை விட்டுவிடுவாயோ? எனது பிறவி யாகிய மரத்தை வேரொடும் களைந்து ஆட் கொண்டருள்வாயாக.

விளக்கவுரை

மடங்குதல், இங்கு அழிதலின் மேற்று. மன் - நிலை பெற்ற. 'அருளால்' என உருபு விரிக்க. தீக்கொளுவுதல் - எரித்தல். விடங்கன் - ஆண்மையுடையவன். 'வஞ்சிக்கொம்பு' என்றது, உமை யம்மையை. யானையை உரித்த செயலைக் கண்டு அம்மை அஞ்சி னாள் என்க. 'அஞ்சுவித்தாய்' என்னும் விளி, 'உனக்கு என் வினையை அஞ்சப் பண்ணுதல் எளிது' என்னும் குறிப்பினது.

கொம்பரில் லாக்கொடி போல்அல மந்தனன்
கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண் டாய்விண்ணர்
நண்ணுகில்லா
உம்பருள் ளாய்மன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
அம்பர மேநில னேஅனல் காலொடப்
பானவனே. #123

தேவர்களும் அணுகக் கூடாத மேலிடத்து இருப் பவனே! நிலைபெற்ற திருவுத்தரகோச மங்கைக்குத் தலைவனே! ஆகாயமே! பூமியே! நெருப்பு, காற்று என்பவைகளோடு நீரும் ஆனவனே! இளமை நலமுடையோனே! கொழு கொம்பில்லாத கொடியைப்போலச் சுழன்றேன்; இவ்வாறு வருந்துகின்ற என்னை விட்டுவிடுவாயோ?

விளக்கவுரை

கொம்பர் - கொம்பு; போலி. அலமந்தனன் - அலைந் தேன்; இதனை எச்சமாக்கி, 'வெம்புகின்றேனை' என்பதனோடு முடிக்க. கோமளம் - அழகு. 'அழகனே' என்னாது, 'அழகே' என்றது, 'அழகே ஓர் வடிவங்கொண்டு நின்றாற் போல்பவனே' என அதன் மிகுதியுணர்த்தற்பொருட்டு. வெம்புதல் - வருந்துதல். உம்பர் - மேலி டம்; சிவலோகம். அம்பரம் - ஆகாயம். கால் - காற்று. அப்பு - நீர்.

ஆனைவெம் போரிற் குறுந்தூ றெனப்புல
னால்அலைப்புண்
டேனையெந் தாய்விட் டிடுதிகண் டாய்வினை
யேன்மனத்துத்
தேனையும் பாலையும் கன்னலை யும்அமு
தத்தையும்ஒத்
தூனையும் என்பி னையும்உருக் காநின்ற
ஒண்மையனே. #124

என் அப்பனே! தீவினையேனது உள்ளத்தின்கண், தேனினையும், பாலினையும், கருப்பஞ்சாற்றையும், அமுதத்தினையும் நிகர்த்து உடம்பையும் உடம்பில் இருக்கும் எலும்பையும் உருகச் செய் கின்ற

ஒளியுடையோனே! யானையினது கொடிய சண்டையில் அகப் பட்ட
சிறு புதர் போல ஐம்புலன்களால் அலைக்கப்பட்ட என்னை விட்டு
விடுவாயோ?

விளக்கவுரை

ஐம்புலன்களுக்கு உவமையாகக்கூறலின், ஆனைகளை ஐந்தாகக் கொள்க. குறுந்தூறு - சிறுபுதல். 'ஐந்து யானைகள் தம்முள் மாறுபட்டுச் செய்யும் போர்க்கிடையில் ஒரு சிறுபுதல் அகப்பட்டுக் கொள்ளுமாயின், அஃது எவ்வாறு அவற்றால் மிதிப்புண்ணுமோ அதுபோல, ஐம்புலன்களின் மாறுபாட்டிற்கிடையில் அகப்பட்டுள்ள யான் அவற்றால் அலைப்புண்கின்றேன்' என்றபடி. கன்னல் - கரும்பு. ஒண்மையன் - ஞான வடிவினன்.

ஒண்மைய னேதிரு நீற்றைஉத் தூளித்
தொளிமிளிரும்
வெண்மைய னேவிட் டிடுதிகண் டாய்மெய்
யடியவர்கட்
கண்மைய னேஎன்றுஞ் சேயாய் பிறற்கறி
தற்கரிதாம் பெண்மைய னேதொன்மை ஆண்மைய னேஅலிப்
பெற்றியனே. **#125**

ஒளிப்பிழம்பாய் உள்ளவனே! திருவெண்ணீற்றை நிறையப் பூசி ஒளி மிளிரும் வெண்மை நிறம் உடையவனே! மெய்யடி யார்க்குப் பக்கத்தில் இருப்பவனே! அடியாரல்லாத ஏனையோர்க்கு எக்காலத்தும் தூரத்தில் இருப்பவனே! அறிதற்கரியதாகிய பொருளாய் இருப்பவனே! பெண்ணாய் இருப்பவனே! பழமையானவனே! ஆணாய் இருப்பவனே! அலித் தன்மையாய் இருப்பவனே! என்னை விட்டுவிடுவாயோ?

விளக்கவுரை

உத்தூளித்தல் - மேலே பூசுதல். 'மெய்யடியவர்கட்கு என்றும் அண்மையனே, பிறர்க்கு என்றும் சேயாய்' என்க. அரிதாம் - அரிய பொருளாகிய. பெண்மையன் முதலிய மூன்று பெயரானும் தனித்தனியே விளித்தாரேனும், 'பெண்தன்மை, ஆண்தன்மை, அலித்தன்மை என்னும் இம்மூன்று தன்மைகளையும் உடையவனாய் இருப்பவனே' என்றலே கருத்து. ஒருவனே மூன்று தன்மைகளை உடையவனாய் இருத்தலின், இன்ன தன்மையன் என ஒரு பெற்றி யனாக அறிதல் அரிதாயிற்று. அறிதற்கு அரிதாதல், யாவர்க்கும் என்க. ஒருவனே மூன்று தன்மைகளையுடையவனாய் இருத்தலின், இவை அவனது பொதுவியல்பே என்பதும், உண்மை இயல்பு இவை அனைத் தினும் வேறு என்பதும் பெறப்படும்.

பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச்
சுருக்குமன்பின்
வெற்றடி யேனை விடுதிகண் டாய்விடி
லோகெடுவேன்
மற்றடி யேன்றன்னைத் தாங்குநர் இல்லைஎன்
வாழ்முதலே
உற்றடி யேன்மிகத் தேறிநின் றேன்எனக்
குள்ளவனே. **#126**

என் வாழ்க்கைக்குக் காரணமான முதற் பொருளே! எனக்குப் பற்றுக்கோடாய் உள்ளவனே! உன்னை விட்டு விலகியதனால் வரும் துன்பத்தை அனுபவித்து, அடியேன் இவ்வுலகம் இத் தன்மையது என்பதை மிகவும் தெளிவாக அறிந்து நின்றேன். எனக்கு இவ்வுலகத்தில் கிடைத்ததைப் பற்றிக் கொண்டு, குற்றத்தையே பெருகச் செய்து, அன்பைச் சுருங்கச் செய்கின்ற, பயனற்ற அடியேனை விட்டுவிடுவாயோ? விட்டு விட்டாலோ, அடியேனைத் தாங்குவோர், வேறு ஒருவரும் இல்லை. அதனால் நான் அழிவேன்.

விளக்கவுரை

பெற்றது, முன்பு உலகியலில் பெற்ற இன்பம். 'பெற்றதே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தல். கொண்டு - மீளவும் பெற்று. 'பிழை' என்றது, உலகியலை. 'அன்பு' என்றதற்கு, 'உன்திருவடிக்குச் செய்யும் அன்பு' என உரைக்க. வெற்றடியேன் - ஆட்கொண்டதனால் பயன் ஒன்றும் இல்லாத அடியேன். 'மற்று' என்றதனை, 'இல்லை' என்றதற்கு முன்னே கூட்டுக. 'என் முதல்' என இயையும். 'வாழ் முதல்' என்ற வினைத்தொகை, ஏதுப் பொருட்கண் வந்தது. உற்று - உலகியலிற் பொருந்தி. தேறிநின்றேன் - அதனால் தெளிவெய்தி நின்றேன். தெளிந்தது, 'தாங்குநர் மற்றில்லை' என்பதையும், 'விடிற் கெடுவேன்' என்பதையுமாம். 'தாங்குநர்' என முன்னர் வந்தமையின், 'உள்ளவன்' என்றதற்கு, 'எனக்குப் பற்றுக் கோடாய் உள்ளவனே' என உரைக்க.

உள்ளன வேநிற்க இல்லன செய்யும்மை
யற்றுழனி
வெள்ளன லேனை விடுதிகண் டாய்வியன்
மாத்தடக்கைப்
பொள்ளனல் வேழத் துரியாய் புலன்நின்கட்
போதலொட்டா
மெள்ளென வேமொய்க்கும் நெய்க்குடந் தன்னை
எறும்பெனவே. **#127**

மிகவும் பெரிய நீண்ட துதிக்கையின்கண், துளையினையுடைய அழகிய

யானையின் தோலையுடையானே! ஐம்புலன்களும், உன்பால் செல்ல ஒட்டாமல், நெய்க்குடத்தை எறும்பு மொய்ப்பது போல, என்னை மெல்லென மொய்க்கின்றன; உண்மையானவை இருக்க, பொய்யாயினவற்றையே செய்கிற, மயக்கத்தையும் ஆரவாரத்தையும் உடைய தூயவன் அல்லாதவனாகிய என்னை விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

'உள்ளன, இல்லன' என்றவற்றிற்கு, 'பயன்' என்னும் வினைமுதல் வருவிக்க. பிரிநிலை ஏகாரத்தைப் பிரித்து, 'இல்லன' என்றதனோடு கூட்டுக. மையல் - மயக்கம். 'துழனி வெள்ளன்' என்றதனை, 'வெண்துழனியனை' எனப் பின் முன்னோக்கி, உருபு விரித்துரைக்க. வெண்துழனி - வெற்றார வாரம். அல்லேனை - மெய்ந்நெறிக்கு உரியனல்லாத என்னை. 'வியன் உரி' எனவும், 'மாவேழம்' எனவும் இயையும். கைப் பொள்ளல் - கையின்கண் உள்ள புழையையுடைய; சொற்கிடக்கை இவ்வாறாயினும், 'பொள்ளற் கை' என்பதே பொருள் என்க, 'நல்வேழம்' என்றதில் நன்மை, வலிமை மேல் நின்றது. 'ஒட்டாது' என்னும் வினையெச்சம் ஈறு குறைந்தது; 'முற்றே எச்சப் பொருட்டாயிற்று' என்றலுமாம். 'மொய்க்கும்' எனப் பொருட்கண் கூறினமையின், உவமைக்கண், 'எறும்பெனவே' வாளா கூறிப் போயினார். ஆதலின், 'எறும்புகள் நெய்க்குடந்தன்னை மொய்த்தல் என, புலன்கள் என்னை மொய்க்கும்' என்பது பொருளாயிற்று. அற்றம் பார்த்து வருதலின், 'மெள்ளென' என்றார், குறிப்புச் சொல். 'செவ்வனம்' என்பதுபோல, 'மெள்ளனம்' என வருதலன்றி, 'மெள்ளன' என வாராதாகலின், 'மெள்ளனவே' என்பது பாடம் அன்று.

எறும்பிடை நாங்கூ ழெனப்புல னால்அரிப்
புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண் டாய்வெய்ய
கூற்றொடுங்க
உறுங்கடிப் போதவை யேஉணர் வுற்றவர்
உம்பரும்பர்
பெறும்பத மேஅடி யார்பெய ராத
பெருமையனே. **#128**

கொடிய இயமன் ஒடுங்கும்படி, அவன் மேல் பொருந்திய மணம் நிறைந்த தாமரை மலர்களையொத்த உன் திருவடிகளாகிய அவற்றையே அழுத்தி அறிந்தவர்கள் பெறுகின்ற மிக மேலான பதவியாய் உள்ளவனே! அடியவராயினர், பின்பு உன்னை விட்டு நீங்காத பெருமையுடையவனே! எறும்புகட்கு இடையே அகப்பட்ட, நாங்கூழ் புழு அரிப்புண்டு வருந்தினாற்போல, புலன் களிடையே

அரிப்புண்டு அரித்துத் தின்னப்பட்டு வருந்திய தனி யேனை விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

பொருட்கண், 'அரிப்புண்டு' என வருகின்றமையின், உவமைக்கண்ணும், 'எறும்பிடை நாங்கூழ் அரிப்புண்டால் என' என்றுரைக்கப்படும். 'வெறுந்தமியேன்' என்றது. 'வெறுமையேனை, தமியேனை' என்றபடி. வெறுமை - பயனின்மை. தமி - துணை யின்மை. 'கூற்று ஒடுங்குமாறு அவன் மேல் உறும்போது' என்க.
கடி - நறுமணம். போதுஅவையே - போதுகளாகிய அவற்றையே. போது - மலர்; என்றது திருவடியை. உம்பர் உம்பர் - தேவர்க்கும் மேலுள்ள இடம், 'உம்பர் உம்பர்க்கண்' என உருபுவிரிக்க.
பதம் - நிலை; என்றது வீட்டினை. இறைவனே வீடாகலின், 'பதமே' என்று அருளினார். அடியர் - அடியாராயினார். பெயராத - நீங்காத. நீங்காமைக்கு ஏது, பேரின்பம்.
'மேவினார் பிரிய மாட்டா விமலனார்'
(தி.12. பெரிய. புரா. கண்ணப். 174) என்றது காண்க. பெயராமையே பெருமை என்றலின், 'பெயராத பெருமை' என்றதில், பெயரெச்சம் வினைப் பெயர் கொண்டதாம்.

பெருநீ ரறச்சிறு மீன்துவண் டாங்கு
நினைப்பிரிந்து
வெருநீர்மை யேனை விடுதிகண் டாய்வியன்
கங்கைபொங்கி
வருநீர் மடுவுள் மலைச்சிறு தோணி
வடிவின்வெள்ளைக்
குருநீர் மதிபொதி யுஞ்சடை வானக்
கொழுமணியே. **#129**

பெரிய கங்கையாகிய பெருகுகின்ற நீரையுடைய பள்ளத்துள், எதிர்த்து நிற்றலையுடைய சிறிய தோணியின், தோற்றம் போல வெண்மை நிறமும் குளிர்ச்சியும் பொருந்திய பிறைச்சந்திரன் தவழ்கின்ற சடையினையுடைய, பரமாகாயத்திலுள்ள, செழுமை யாகிய மாணிக்கமே! மிகுந்த நீரானது வற்றிப்போக, சிறிய மீன்கள் வாடினாற்போல உன்னை விட்டு நீங்கிய என்னை விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

பெருமை, சிறுமை என்பன, இடமும், இடத்து நிகழ் பொருளுமாய் நிற்கும் அவற்றது இயல்புணர்த்தி நிற்றலின், இவை பின்மை நீக்கிய விசேடணங்களாம். துவளுதல் - மெலிதல். 'வெருவு நீர்மை' என்பது

குறைந்து நின்றது. வெருவுதல் - அஞ்சுதல்; அச்சம், ஐம்புலன் நோக்கி. உவமையோடு இயையாமையின், பிரிந்த' என்பது பாடம் அன்று. 'கங்கை என்னும் பொங்கி வரும் நீராகிய மடு' எனவும், 'மலைத்தலை (எதிர்த்தலை)யுடைய சிறுதோணி' எனவும் உரைக்க. வெள்ளைக் குரு நீர் - வெண்மை நிறமாகிய தன்மை. வானக் கொழு மணி - மேலுலகில் உள்ள சிறந்த இரத்தினம்; தலைமைக் கடவுள் என்றபடி.

கொழுமணி யேர்நகை யார்கொங்கைக் குன்றிடைச்
சென்றுகுன்றி
விழுமடி யேனை விடுதிகண் டாய்மெய்ம்
முழுதுங்கம்பித்
தழுமடி யாரிடை ஆர்த்துவைத் தாட்கொண்
டருளிஎன்னைக்
கழுமணி யேஇன்னுங் காட்டுகண் டாய்நின்
புலன்கழலே. **#130**

உடல் முழுதும் நடுங்கப் பெற்று, அழுகின்ற அடியார் நடுவே, என்னைப் பொருத்தி வைத்து அடிமை கொண் டருளி, தூய்மை செய்த மாணிக்கமே! செழுமையாகிய முத்துப் போன்ற அழகிய பல்லினை உடைய மாதரது வலையில் போய் மயங்கி விழுகின்ற அடியேனை விட்டு விடுவாயோ? இனியும் முன்போல உனது ஞானமாகிய திருவடியை அடியேனுக்குக் காட்டுவாயாக.

விளக்கவுரை

'மெய்ம்முழுதும்' என்றது முதலாக, 'கழுமணியே' என்பது ஈறாக உள்ளவற்றை முதற்கண் வைத்துரைக்க. 'கொழுமணி' என்றதில் மணி, முத்து. 'குன்றிடைச் சென்று குன்றி' என்றது, சொற்பின் வருநிலை. 'குன்றிவிழும்' என்றது, உடனிலைவகையால், அறிவு குன்றி விரும்புதலையும், மலையிடைச் சென்றோர் வலிமை குன்றி விழுதலையும் குறித்தது. கம்பித்தல் - நடுங்குதல்; இஃது அன்பினாலாம். ஆர்த்து வைத்தல் - அகலாதிருக்கச் செய்தல். கழுவுதல் - பாசத்தை நீக்குதல். 'கழுமணி', இறந்தகால வினைத் தொகை. புலன் கழல் - ஞானத்தின் திருவுருவாகிய திருவடி. 'இன்னும் நின்கழல் காட்டு கண்டாய்' என்ற இதனால் 'இறைவன் முன்புபோல மற்றும் ஒருமுறை தோன்றியருளல் வேண்டும்' என அடிகள் விரும்பினார் என்பது பெறுதும்.

புலன்கள் திகைப்பிக்க யானுந் திகைத்திங்கொர்
பொய்ந்நெறிக்கே
விலங்குகின் றேனை விடுதிகண் டாய்விண்ணும்
மண்ணுமெல்லாங்

கலங்கமுந் நீர்நஞ் சமுதுசெய் தாய்கரு
ணாகரனே
துலங்குகின் றேன்அடி யேன்உடை யாய்என்
தொழுகுலமே. **#131**

விண்ணுலகமும் மண்ணுலகமும் முழுவதும், அஞ்சிக் கலக்கமுற்றபோது, கடலில் எழுந்த விடத்தை அமுதமாக உண்டவனே! அருட்கடலே! என்னை ஆளாக உடையவனே! என் வேதியனே! அடியேன் பிறப்புக்கு அஞ்சி நடுங்குகின்றேன். ஐம் புலன்களும், திகைக்கச் செய்ய, திகைப்பை அடைந்து, இவ்விடத்தில் ஒரு பொய் வழியிலே, உன்னை விட்டு விலகித் திரிகின்ற என்னை விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

'யானும்' என்ற உம்மை, 'உனக்கு அடியவன் ஆகிய யானும்' என்னும் சிறப்புணர்த்திற்று. 'நெறிக்கு' என்ற நான்கனுருபை ஏழனுருபாகத் திரிக்க. விண், மண் என்பன அவ்விடத்து வாழ்வாரை உணர்த்தின. 'கலங்க' என்றதன்பின் 'கண்டு' என ஒருசொல் வருவிக்க. கருணாகரன் - அருளுக்கு இருப்பிடமாய் உள்ளவன். முன்பு, 'உற்றடியேன் மிகத் தேறிநின்றேன்' *(பா. 23)* என்றதுபோல இங்கும் 'துலங்குகின்றேன்' - *(அறிவு விளங்கப் பெறுகிறேன்)* என்றார். இதற்கு இவ்வாறன்றி, துளங்குகின்றேன் என்பது பொருளாக உரைப்பாரும் உளர்; அது பொருந்தாமை வெளிப்படை. தொழு குலம் - வணங்கப்படும் இனம். இஃது ஆகுபெயராய், அவ்வினத்தவரைக் குறித்தது; அவர், தாய், தந்தை, மூத்தோர், ஆசிரியன்மார், தெய்வங்கள். 'எனக்கு இவரெல்லாருமாய் உள்ளவனே!' என்றபடி. திருநாவுக்கரசரும், 'அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ - அன்புடைய மாமனும் மாமியும்நீ' *(தி.6.ப.95.பா.1)* என்று அருளிச் செய்தல் காண்க.

குலங்களைந் தாய்களைந் தாய்என்னைக் குற்றங்கொற்
றச்சிலையாம்
விலங்கல்எந் தாய்விட் டிடுதிகண் டாய்பொன்னின்
மின்னுகொன்றை
அலங்கலந் தாமரை மேனிஅப் பாஒப்
பிலாதவனே
மலங்களைந் தாற்சுழல் வன்தயி ரிற்பொரு
மத்துறவே. **#132**

பொன்போல மின்னுகின்ற, கொன்றை மாலை அணிந்த, செந்தாமரை மலர் போன்ற திருமேனியை உடைய அப்பனே! ஒப்பற்றவனே! என் சுற்றத் தொடர்பை அறுத்தவனே! என்னைக் குற்றத்தினின்றும் நீக்கியவனே! வெற்றி வில்லாகிய மேருவையுடைய எந்தையே!

கடைகின்ற மத்துப் பொருந்தினவுடன் சுழல்கின்ற தயிர்போல, ஐந்து மலங்களாலும் அலைவுற்று வருந்து வேன். என்னை விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

'என்னைக் குலம் களைந்தாய்; குற்றம் களைந்தாய்; என்க. சிலை - வில். விலங்கல் - மலை; மகாமேரு. 'கொற்றச் சிலை யாம் விலங்கல் எந்தாய்' என்றாரேனும், 'விலங்கலாம் கொற்றச் சிலை எந்தாய்' என்பதே கருத்தாம். 'அலங்கலமேனி' எனவும், 'அம் தாமரை மேனி' எனவும் தனித்தனி இயையும். 'தாமரை' என்றது, செந்தாமரை மலரை. 'செந்தாமரைக்காடனைய மேனித் தனிச் சுடரே' *(தி.8 திருச்சதகம் 26)* என முன்னரும் கூறினார். மலங்கள் ஐந்து; ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி. மலங்கள் ஐந்தாகக் கூறப்படுதலை,

'மாறா மலம்ஐந்தால் மன்னும் அவத்தையின்
வேறாய மாயா தனுகர ணாதிக்கிங்
கீறாகா தேஎவ் வுயிரும் பிறந்திறந்
தாறாத வல்வினை யால்அடி யுண்ணுமே'

என்றாற்போலக் *(தி.10 திருமந்திரம் 2160)* கூறப்படுதல் காண்க. 'பொருமத்துத் தயிரின் உறவே சுழல்வன்' எனக் கூட்டுக. பொருமத்து- கலக்குகின்ற மத்தினைக் கொண்ட. தயிரின் - தயிர் போல. உறவே - மிகவும்.

மத்துறு தண்தயி ரிற்புலன் தீக்கது
வக்கலங்கி
வித்துறு வேனை விடுதிகண் டாய்வெண்
டலைமிலைச்சிக்
கொத்துறு போது மிலைந்து குடர்நெடு
மாலைசுற்றித்
தத்துறு நீறுடன் ஆரச்செஞ் சாந்தணி
சச்சையனே. **#133**

வெண்டலை மாலையை அணிந்து கொத்துக் களாகப் பொருந்திய கொன்றை மலர் மாலையைச் சூடி நெடு மாலையைச் சுற்றிப் பரவின திருவெண்ணீற்றுடன், சந்தனத்தின் செம்மையான சாந்தினை அணிந்த இளமையை உடைய தலைவனே! புலன்களாகிய நெருப்புப் பற்ற மத்துப் பொருந்திய குளிர்ந்த தயிரைப் போலக் கலங்கி, வேருறுவேனை விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

தீக் கதுவ - நெருப்புப்போல வந்து பற்ற. இது வேறுவமை

கூறியதாகலின், முன்னை யுவமைக்கு இழுக்கின்மை யுணர்க. வித்து - நடுக்கம். இது, 'விதுப்பு' என்பது, முதனிலை மாத்திர மாய் நின்று ஒற்றிரட்டி இப்பொருள் தந்தது. இனி, 'அறிவு' என்றானும், 'அறிவுடையவன்' என்றானும் பொருள்படும் வட சொல்லாகக் கொண்டு, அதற்கேற்ப உரைத்தலும் ஆம். மிலைச்சி - தலையில் அணிந்து. தாருகாவன முனிவர்கள் விடுத்த வெண்டலையைச் சிவபிரான் தனது சடையில் அணிந்து கொண்டமை அறிக. போது - மலர். 'குடர் போலும் மாலை' என்க. இது கணவிர (செவ் வலரி) மாலை. சுற்றியது, சடையில். வெண்டலை கிடத்தலின், அதனைச் சூழ்ந்துள்ள மாலையும் குடர்போலத் தோன்றுவதாயிற்று. தத்துறு - பரந்திருக்கின்ற. ஆரம் - சந்தனக்கட்டை. சாந்து - அதனைத் தேய்த்த தேய்வை. குங்குமப் பூக்கலத்தலால், சாந்து செம்மை நிறம் பெற்றது. 'செச்சை' என்பது, மோனைநயம் நோக்கி, 'சச்சை' எனத் திரிக்கப்பட்டது. செச்சை - வெட்சி. 'வெட்சிப் பூப்போலும் திரு மேனியையுடையவனே' என்க. இதனுள், சிவபெருமான் திருக் கோலத்தில் செம்மையும், வெண்மையும் விரவிக் கிடத்தலை விதந்த வாறு காண்க.

சச்சைய னேமிக்க தண்புனல் விண்கால்
நிலம்நெருப்பாம்
விச்சைய னேவிட் டிடுதிகண் டாய்வெளி
யாய்கரியாய்
பச்சைய னேசெய்ய மேனிய னேயொண்
படஅரவக்
கச்சைய னேகடந் தாய்தடந் தாள
அடற்கரியே. **#134**

இளமையுடைய தலைவனே! மிக்க குளிர்ச்சியுள்ள நீரும், ஆகாயமும், காற்றும், நிலமும், தீயுமாக நிற்கின்ற வித்தை யுடையவனே! வெண்மை நிறமுடையவனே! கருமை நிற முடையவனே! பசுமை நிறமுடையவனே! செம்மேனியுடையவனே! அழகிய படத்தையுடைய பாம்பாகிய அரைக் கச்சினை அணிந் தவனே! பெரிய அடிகளையுடைய வலி அமைந்த யானையை வென்ற வனே! விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

அந்தாதி யாதற்பொருட்டு, இங்கும் செச்சை, சச்சை' எனப்பட்டது. புனல் - நீர். கால் - காற்று. விச்சை - வித்தை; வியத்தகு தன்மை. வெளியாய் - வெண்மை நிறம் உடையவனே. 'நிறங்கள் ஓர் ஐந்துடையாய்' (தி.8. சிவபுராணம் 49) என்றதன் குறிப்பைக் காண்க. தடந் தாள அடல் கரி - பெரிய கால்களையுடைய வலிய யானை. 'கரியைக் கடந்தாய்' என இயையும்; இதுவும் விளியே.

அடற்கரி போல்ஐம் புலன்களுக் கஞ்சி
அழிந்தஎன்னை
விடற்கரி யாய்விட் டிடுதிகண் டாய்விழுத்
தொண்டர்க்கல்லால்
தொடற்கரி யாய்சுடர் மாமணி யேசுடு
தீச்சுழலக்
கடற்கரி தாய்எழு நஞ்சமு தாக்குங்
கறைக்கண்டனே. **#135**

மேலாகிய அடியார்களுக்கு அல்லாது ஏனை யோர்க்குப் பற்றுதற்கு அருமையானவனே! ஒளி விளங்கும் பெரிய மாணிக்கமே! சுடும் தீயாகிய ஒரு பூதமும் நிலைகலங்க, கடலின் கண் அருமையாய் உண்டாகிய நஞ்சை அமுதாக்கிய நீலகண்டப் பெருமானே! விடுதற்கு அருமையானவனே! வலி பொருந்திய யானையைப் போன்ற ஐம்புல ஆசைக்குப் பயந்து உள்ளம் ஒடுங்கிய என்னை விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

அழிந்த - வலி இழந்த. 'என்னை விட்டிடுதி கண்டாய்' என இயையும். விடற்கு அரியாய் - உன்னைப் பற்றினோர், பின்னர் விடுதற்கு அரியவனே; 'அவர்களை வசிகரித்துக் கொள்பவனே' என்றபடி. 'அடியார் பெயராத பெருமையனே' என்றார் முன்னும் *(பா. 25)*. அருமை, இங்கு இன்மைமேல் நின்றது. தொடல் - தீண்டல்; அணுகுதல். தீச் சுழல - நெருப்புப் பரக்குமாறு, 'கடற்கு' என்றதனை, 'கடற்கண்' எனத் திரிக்க. 'கடத்தற்கு' என்பது குறைந்து நின்றது' எனினுமாம்.

கண்டது செய்து கருணைமட் டுப்பரு
கிக்களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண் டாய்நின்
விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போற் பணித்துப் பணிசெயக்
கூவித்தென்னைக்
கொண்டென்எந் தாய்களை யாய்களை யாய்
குதுகுதுப்பே. **#136**

எம் தந்தையே! உன் கருணையாகிய தேனைப் பருகிக் களிப்படைந்து, மனம் போனவாறு செய்து, செருக்கித் திரி கின்ற என்னை விட்டு விடுவாயோ? உனது, மணம் அமைந்த தாமரை மலர் போன்ற திருவடியை முன்னே கொடுத்து அருளினாற் போல கொடுத்தருளி, உன் திருத்தொண்டினைச் செய்ய அழைப்பித்து என்னை ஏற்றுக் கொண்டு வீடுபேற்றுக்கு இடையூறாய் உள்ள களிப் பினைக் களைவாயாக.

விளக்கவுரை

கண்டது, அவ்வப்பொழுது மனத்திற்குத் தோன்றியது; 'ஒரு நெறிப்படாத செயல்கள்' என்றபடி. இவ்வாறு செய்தல், எல்லாம் உனது அருள் வழியாக நினைத்து அதனை மறவாமையால் என்பார், 'கருணை மட்டுப் பருகிக் களித்து' என்றும், 'அதனால் யாதோர் அச்சமும் இன்றி இருக்கின்றேன்' என்பார், 'மிண்டுகின்றேனை' என்றும் அருளினார். மட்டு - தேன். மிண்டுதல் - திண்மையுறுதல். 'பண்டுதந்தாற்போல' என்றதனால், 'பணித்து' என்றதற்கு, 'இன்றும் பணித்து' என உரைக்கப்படும். பணித்தல் - காணக் காட்டுதல். 'கூவுவித்து' என்பது, கூவித்து எனக் குறைந்து நின்றது; 'நீயே அழை யாது பிறரால் அழைப்பிப்பினும் நன்றே' என்பார், 'கூவி' என்னாது, 'கூவுவித்து என்றார். இதனால், அடியார்க்கு அடியராய் நிற்கவும் ஒருப்பட்டமை பெறப்படுகின்றது. கொண்டு - ஏற்றுக் கொண்டு. களையாய - *(சிவபோதத்திற்குத்)* தடையாய் உள்ள. குதுகுதுப்பு - அடக்கம் இன்மை; பரபரப்பு. இது, பேரறிவின்மையால் உளதாவது. இதனை, 'நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும் - பேணாமை பேதை தொழில்' *(குறள் - 833)* என்பதில், 'நாடாமை' என்றார், திருவள்ளுவ நாயனார். இக்காலத்தார் இதனை, 'குறுகுறுத்தல்' எனக் கூறுப. எனவே, இது மேல், 'கண்டது செய்து' என்றதனையே குறித்த தாயிற்று. அடிகள் இறைவனை மீண்டுங் காண விரும்பினமை, இதனுள் வெளிப்படையாகவே அறியக் கிடக்கின்றது.

குதுகுதுப் பின்றிநின் றென்குறிப் பேசெய்து
நின்குறிப்பில்
விதுவிதுப் பேனை விடுதிகண் டாய்விரை
யார்ந்தினிய
மதுமதுப் போன்றென்னை வாழைப் பழத்தின்
மனங்கனிவித்
தெதிர்வதெப் போது பயில்விக் கயிலைப்
பரம்பரனே. **#137**

நிறைந்த மலர்களையுடைய கயிலையில் வாழ் கின்ற மிகமேலானவனே! உன் திருவுளக் கருத்திற்கியைய நடப்பதில் மகிழ்ச்சியின்றி நின்று என் குறிப்பின்படி செய்து, உன் குறிப்பினை அறிவதில் விரைகின்ற என்னை விட்டு விடுவாயோ? வாழைப் பழத்தைப் போல என்னை மனம் குழையச் செய்து, மணம் நிறைந்து இனிதாய் இருக்கின்ற ஓர் இனிமையில் மற்றோர் இனிமை கலந்தது போன்று நீ எதிர்ப்படுவது எக்காலம்?

விளக்கவுரை

'நின் குறிப்பில் குதுகுதுப்பின்றி' எனக் கூட்டுக. நின் குறிப்பு - உனது கருத்து. 'உன் திருவுள்ளக் குறிப்பின் வழி நிற்றலில் விரைதல் இன்றி' என்றவாறு. என் குறிப்பு - எனது கருத்து; என்றது, 'யான் கருதிய செயல்' என்றபடி. விதுவிதுப்பேன் - மிக்க விரைவினை உடையேன். விரைவு, இறைவனை அடைதற்கு என்க. 'நின் குறிப்பின் வழி ஒழுகாமலே உன்னை அடைவதற்கு மிக விரைகின்றேன்' என்ற படி. 'மது' இரண்டனுள் முன்னது, நீர்; பின்னது, தேன். 'விலாமிச்சை வேர் முதலிய வாசனைப் பொருள்கள் இடப்பட்டு இனிதாய நீரும், தேனும்போல நீ என் எதிர்வருதல் எப்போது' என்க. 'வாழைப் பழத்தின் மனம் கனிவித்து' என்றதனை, 'விடுதிகண்டாய்' என்றதன் பின்னர்க் கூட்டுக. பயில்வி - மிக்க தூய்மையையுடைய (கயிலை). இத்திருப்பாட்டிலும் முன்னைப் பாட்டிற் கூறிய கருத்து இனிது விளங்கிக் கிடத்தல் காண்க.

பரம்பர னேநின் பழஅடி யாரொடும்
என்படிறு
விரும்பர னேவிட் டிடுதிகண் டாய்மென்
முயற்கறையின்
அரும்பர நேர்வைத் தணிந்தாய் பிறவிஐ
வாயரவம்
பொரும்பெ ருமான்வினை யேன்மனம் அஞ்சிப்
பொதும்புறவே. **#138**

மெல்லிய மதிக்கொழுந்தையும், பாம்பையும் சமமாக வைத்து அணிந்தவனே! எம் பிரானே! தீவினையுடைய நான், மனம் நடுங்கிப் புகலிடம் அடையும்படி, பிறப்பாகிய ஐந்தலை நாகம் தாக்குகின்றது. மிக மேலானவனே! உன் பழைய அடியார்களது உண்மைத் தொண்டோடும், எனது வஞ்சத் தொண்டினையும் ஏற்றுக் கொள்ளுகின்ற சங்காரக் கடவுளே! என்னை விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

'பழ அடியார்' என்றது ஆகு பெயராய், அவரது மெய்யன்பினைக் குறித்தது. மூன்றாம் பிறை முதற்கண் தோன்றுவ தாகலின், அதனை, 'அரும்பு' என்றார். 'அரா' என்பது, 'அர' என நின்றது. நேர்வைத்து அணிதல் - எதிர் எதிராக வைத்து அணிதல். 'சந்திரனும், பாம்பும் பகைப் பொருள்களாக, அவற்றைப் பகையின்றி இயைந்திருக்க வைத்து அணிந்தாய்' என்றபடி. 'பாம்பும் மதியும் புனலும் தம்மிற் பகைதீர்த் துடன்வைத்த பண்பா போற்றி' எனத் திருநாவுக்கரசு சுவாமிகளும் *(தி.6.ப.5.பா.4)* அருளினார். 'பிறவியாகிய விடத்தைத் தருகின்ற

ஐந்தலை அரவம்' என்க. அது, புலன்கள்மேல் செல்கின்ற அவா. அவா ஒன்றாயினும், புலன்கள் ஐந்தன் மேலும் செல்லுதலின், 'ஐவாய் அரவம்' என்றார். பிறவியை விடம் என்னாமையின் ஏகதேச உருவகமும், 'அவா' என்பதனை வெளிப்படக் கூறாது, வாளாதே, 'ஐவாய் அரவம்' என்றமையின், குறிப்புருவகமும் வந்தனவாம். இனி, 'வாய்' என்றது, பொறிகளை எனக் கொண்டு, அஃது ஆகுபெயராய்ப் புலன்களைக் குறித்தன எனினும் ஆம். இப்பொருட்கு, 'அரவம், பன்மையாம், பொரும் - போர் செய்யும். 'விடில் பொரும்' என்பதாம். பெருமான், விளி. 'பொதும்புஉற' என்றதற்கு, 'துன்பமாகிய காட்டில் புகும்படி' என உரைக்க. 'பொதும்பு உறப்பொரும்' எனக் கூட்டுக.

பொதும்புறு தீப்போற் புகைந்தெரி யப்புலன்
தீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண் டாய்விரை
யார்நறவந்
ததும்புமந் தாரத்தில் தாரம் பயின்றுமந்
தம்முரல்வண்
டதும்புங் கொழுந்தேன் அவிர்சடை வார்யி
தடலரைசே. **#139**
மனம் நிறைந்த, தேன் ததும்புகின்ற மந்தார மலரில் தாரமாகிய வல்லிசையைப் பழகி, பின் மந்தமாகிய மெல்லிசையை ஒலிக்கின்ற, வண்டுகள் அழுந்தித் திளைக்கின்ற செழுமையாகிய தேனோடு கூடி விளங்குகின்ற சடையினையுடைய, பரமாகாயத்தி லுள்ள வலிமை மிக்க அரசனே! மரப்பொந்தினை அடைந்த நெருப்புப் போல, புகைந்து எரிகின்ற அந்தப் புலன்களாகிய நெருப்புப் பற்று தலால் வெப்பமுறுகின்ற என்னை விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

பொதும்பு - காடு 'பொதும்புறு தீப்போல்' என்று அருளினாராயினும், 'தீயுறு பொதும்புபோல்' என்றலே திருவுள்ள மாம். புகைந்து எரிதற்கு, 'உள்ளம்' என்னும் வினை முதல் வருவிக்க. தீக் கதுவ - தீயனவாய் வந்து பற்ற. வெதும்புறுதல் - வருந்துதல். நறவம் - தேன். தாரம் - வல்லிசை. மந்தம் - மெல்லிசை. இவற்றிற்கு இடைப்பட்டதனை, 'மத்திமம்' என்ப.
'மந்தரத்தும் மத்திமத்தும் தாரத்தும் வரன்முறை யால்
தந்திரிகள் மெலிவித்தும் சமங்கொண்டும் வலிவித்தும்'
(தி.12 பெரி. புரா. ஆனாய. 27) என்றதுங் காண்க. முரல் - ஒலிக்கின்ற. 'அசும்பும்' என்பது, 'அதும்பும்' எனத் திரிந்தது; 'சிந்தும்' என்பது பொருள். வண்டினையும், தேனையும் உடைய 'சடையாகிய வானம்' என்க. வானம், செவ்வானம்.

அரைசே அறியாச் சிறியேன் பிழைக்கஞ்ச
லென்னினல்லால்
விரைசேர் முடியாய் விடுதிகண் டாய்வெண்
நகைக்கருங்கண்
திரைசேர் மடந்தை மணந்த திருப்பொற்
பதப்புயங்கா
வரைசேர்ந் தடர்ந்தென்ன வல்வினை தான்வந்
தடர்வனவே. **#140**

வெண்மையான பல்லினையும், கருமையான கண்ணையும் உடைய, திருப்பாற்கடலில் தோன்றிய திருமகள் வணங்கிப் பொருந்திய அழகிய திருப்பாதங்களையுடைய, பாம் பணிந்த பெருமானே! அரசனே! மணம் பொருந்திய முடியினையுடை யவனே! மலைகள் ஒன்று சேர்ந்து தாக்கினாற்போல, கொடிய வினைப் பயன்கள் வந்து தாக்குகின்றன. அறிவில்லாத சிறியேனது குற்றத் திற்குத் தீர்வாக, அஞ்சற்க என்று நீ அருள் செய்தல் அல்லாது விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

பிழைக்கு - பிழையை நீக்குதல் காரணமாக. 'அஞ்சல் என்னின் அல்லால் வல்வினைதாம் வந்து அடர் வனவே' என இயையும். 'விடுதி கண்டாய்' என்றதனை இறுதிக்கண் கூட்டி, இதற்கு முன், 'அதனை அறிந்தும்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. திரை சேர் மடந்தை - கங்கை. 'கண்ணாகிய கடல் பொருந்திய மடந்தை' என்று உரைத்து, 'உமையம்மையை மணந்த' என்றலுமாம். 'மணந்த புயங்கா' என இயையும். வரைசேர்ந்து அடர்ந்தென்ன - மலைகள் பல ஒருங்கு கூடி நெருங்கினாற்போல.

அடர்புல னால்நிற் பிரிந்தஞ்சி அஞ்சொல்நல்
லாரவர்தம்
விடர்விட லேனை விடுதிகண் டாய்விரிந்
தேயெரியுஞ்
சுடரனை யாய்சுடு காட்டர சேதொழும்
பர்க்கமுதே
தொடர்வரி யாய்தமி யேன்தனி நீக்குந்
தனித்துணையே. **#141**

பரந்து எரிகின்ற நெருப்பை ஒத்தவனே! சுடு காட்டின் அரசனே! தொண்டர்க்கு அமுதமே! அணுகுதற்கு அரிய வனே! தனியேனது, தனிமையை நீக்குகின்ற தனித்துணையே! வருந்து கின்ற புலன்களால் உன்னைப் பிரிந்து அஞ்சி, இன்சொற்களையுடைய மாதர்களது மயக்கினை விட்டு நீங்கும் ஆற்றல் இல்லாத என்னை

விட்டுவிடுவாயோ?

விளக்கவுரை

அஞ்சுதல், பிறவிபற்றி. 'அவ்வச்சம் ஒருபால் உளதா யினும், ஒருபால் மாதராசையும் நீங்கமாட்டாதவனாய் இருக்கின் றேன்' என்பார், 'அஞ்சி விடர் விடலேன்' என்று அருளிச் செய்தார். 'அவர்தம்' என வேற்றுமைத்தொகை பட அருளினமையின், பண்புத் தொகையாக உரைத்தல் ஏற்புடைத்தன்றாம். சுடர் - தீ; ஆகுபெயர். 'பிறர்க்குத் தொடர்வரியாய்' என்றபடி.

தனித்துணை நீநிற்க யான்தருக் கித்தலை
யால்நடந்த
வினைத்துணை யேனை விடுதிகண் டாய்வினை
யேனுடைய
மனத்துணை யேஎன் றன் வாழ்முத லேஎனக்
கெய்ப்பில்வைப்பே
தினைத்துணை யேனும்பொ றேன்துய ராக்கையின்
திண்வலையே. **#142**

வினையேனது, மனத்துக்குத் துணையே! என்னுடைய வாழ்வுக்குக் காரணமானவனே! எனக்கு இளைத்த காலத்தில் நிதியாய் இருப்பவனே! துன்பங்களுக்கு ஆதாரமாகிய உடம்பென்னும் திண்ணிய வலையிற் கிடப்பதைத் தினை அளவு நேரங்கூடப் பொறுக்கமாட்டேன். ஒப்பற்ற துணையாகிய நீ இருக்க, செருக்கடைந்து, தலையாலே நடந்த வினையைத் துணையாகவுடைய என்னை விட்டுவிடுவாயோ?

விளக்கவுரை

தனித்துணை - ஒப்பற்ற துணைவன். 'ஒப்பற்ற துணை வனாகிய நீ நிற்க உன் வழிநில்லாது, யான் தனியே என் ஆற்றலையே துணையாகக் கொண்டு செருக்குற்று முறைமாறாக நடந்தேன்; அதனால், எனக்கு அந்நடையின் பயனாக விளைந்த வினைதான் துணையாக முடிந்தது; என்னை விடுதிகண்டாய்' என்றபடி.

'நடந்த வினைத்துணையேன்' என்ற வினைமுதற் பெயர் கொண்ட பெயரெச்சத்திற்கு முன்னர், 'யான்' என எழுவாய் புணர்த்தமையின், 'யான் தருக்கி நடந்தேன்; அங்ஙனம் நடந்த என்னை' என உரைக்க. பின்னரும் இவ்வாறு வருவன உள; அவற்றை அறிந்து கொள்க. 'ஆக்கையின்' என்றதில் இன், அல்வழிக்கண்வந்த சாரியை.

வலைத்தலை மானன்ன நோக்கியர் நோக்கின்
வலையிற்பட்டு
மிலைத்தலைந் தேனை விடுதிகண் டாய்வெண்

மதியின்ஒற்றைக்
கலைத்தலை யாய்கரு ணாகர னேகயி
லாயமென்னும்
மலைத்தலை வாமலை யாள்மண வாளஎன்
வாழ்முதலே. #143

வெள்ளிய சந்திரனது ஒரு கலையைத் தலையில் அணிந்தவனே! கருணைக்கு இருப்பிடமானவனே! கயிலாயம் என்கிற மலைக்குத் தலைவனே! மலை மகளாகிய உமாதேவிக்கு மணாளனே! என் வாழ்வுக்கு மூலமே! வலையினிடத்து அகப்பட்ட மான் போன்ற கண்களை உடைய மாதரது பார்வையாகிய வலையிற்சிக்கி, மயங்கி அலைந்த என்னை விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

'வலைத்தலை' என்றதில் தலை ஏழனுருபு. நோக்கு - பார்வை. 'நோக்கின்' என்றதில் இன், அல்வழிக்கண் வந்த சாரியை. மிலைத்து - மேற்கொண்டு. மேற்கொண்டது, உலகியலை என்க. கலைத்தலையாய் - கலையை அணிந்த முடியையுடையவனே. மலையாள் - மலைமகள்.

முதலைச்செவ் வாய்ச்சியர் வேட்கைவெந் நீரிற்
கடிப்பமூழ்கி
விதலைச்செய் வேனை விடுதிகண் டாய்விடக்
கூன்மிடைந்த
சிதலைச்செய் காயம் பொ றேன்சிவ னேமுறை
யோமுறையோ
திதலைச்செய் பூண்முலை மங்கைபங் காஎன்
சிவகதியே. #144

தேமல் படர்ந்த அணி பூண்ட கொங்கைகளை யுடைய உமை பாகனே! என் இன்ப நெறியே! சிவபெருமானே! முதலைபோன்ற கொடுமையையுடைய, சிவந்த வாயைக் கொண்டுள்ள மாதரது ஆசையாகிய வெப்பம் மிகுந்த நீரில் ஆழ முழுகி, நடுக்கம் உறு கின்ற என்னை, விட்டு விடுவாயோ? புலால் நாற்றமுடைய தசை நிறைந்த, நோய்க்கு இடமாகிய உடம்பைத் தாங்க மாட்டேன். இந் நிலை தகுமோ? தகுமோ?

விளக்கவுரை

'முதலைச் செவ்வாய்ச்சியர்' என்றதனை, 'செவ்வாய்ச்சியர் முதலை' என மாற்றிக்கொள்க. வெந்நீர் - கொடிய நீர்; சுழலையுடைய நீர். கௌவுதலை, 'கடித்தல்' என்றார். விதலை - நடுங்குதல். விடக்கு ஊன்,

ஒருபொருட் பன் மொழி.
சிதலை - நோய். 'முறையோ' என்பது, முறையீட்டுச் சொல். திதலை - சுணங்கு (தேமல்). சிவகதி - நற்கதி; வீடு. முதல் அடி தவிர ஏனைய அடிகளின் முதற்சீரில் சகர ஒற்றுக்கள் விரித்தலாய் வந்தன.

கதியடி யேற்குன் கழல்தந் தருளவும்
ஊன்கழியா
விதியடி யேனை விடுதிகண் டாய்வெண்
டலைமுழையிற்
பதியுடை வாளரப் பார்த்திறை பைத்துச்
சுருங்கஅஞ்சி
மதிநெடு நீரிற் குளித்தொளிக் குஞ்சடை
மன்னவனே. **#145**

வெண்மையான தலையாகிய வளையை இருப்பிடமாக உடைய ஒளியையுடைய பாம்பானது, நோக்கிச் சற்றுப் படமெடுத்து அதனைச் சுருக்கிக் கொள்ளவும், பிறைச்சந்திரன், அதனைக் கண்டு பயந்து, கங்கையாகிய பெரிய நீர் நிலையில் மூழ்கி மறைந்து கொள்ளும் சடையையுடைய தலைவனே! அடியேனுக்கு உயர் ஞான நெறியை உன் திருவடிகள் கொடுத்தருளவும், உடல் நீங்கப் பெறவில்லை. ஊழ்வினையுடைய அடியேனை விட்டு விடு வாயோ?

விளக்கவுரை

'கதியாக' என, ஆக்கம் வருவிக்க. ஊன் கழியா - உடம்பை நீக்கமாட்டாத. விதி அடியேனை - வினையை உடைய என்னை. பதி உடை - பொருந்துதல் உடைய. வாள் அர - கொடிய பாம்பு. இறை பைத்து - சிறிது படம் எடுத்து. சுருங்க - பின் அவ் விடத்தே ஒடுங்க. 'அஞ்சி' என்றதனை, 'மதி' என்றதன் பின்னர்க் கூட்டுக. நெடுநீர் - கங்கையாகிய மிக்க நீர். மதி, நிறைவின்றிப் பிறையாய்த் தோன்றுதலின், பாம்பு அதன்பால் செல்லாதாயிற்று. எனவே, பார்த்தமை, நிரம்பினமை அறிதற்பொருட்டாயிற்று.

மன்னவ னேஒன்று மாறறி யாச்சிறி
யேன்மகிழ்ச்சி
மின்னவ னேவிட் டிடுதிகண் டாய்மிக்க
வேதமெய்ந்நூல்
சொன்னவ னேசொற் கழிந்தவ னேகழி
யாத்தொழும்பர்
முன்னவ னேபின்னும் ஆனவ னேஇம்
முழுதையுமே. **#146**

மேலான வேதமாகிய உண்மை நூலினைச் சொன்னவனே!

சொல்லினுக்கு அப்பாற்பட்டவனே! நீங்காத அடியார்க்கு முன் நிற்பவனே! அவர்க்கு ஆதரவாகப் பின் நிற்பவனும், இவ்வெல்லாமும் ஆனவனே! தலைவனே! உன்னை வந்து கலக்கும் விதத்தை அறியாத சிறியேனுக்கு இன்ப விளக்கமாய்த் திகழ்பவனே! விட்டு விடுவாயோ?

விளக்கவுரை

மாறு - பிழை. இஃது, உலகியல் வகையில் பிழை ஒன்றும் செய்யாமையைக் குறித்ததாம். 'ஆறு' எனப்பிரித்து, 'வழி' எனவும் பொருள் உரைப்பர். மின்னவன் - மின்னலைச் செய்தவன். இறைவன் தோன்றி மறைந்தமையின், 'மகிழ்ச்சியாகிய மின்னலைச் செய்தவன்' என்று அருளினார். கழியா - விட்டு நீங்காத. முன்னவன்- கண்முன் தோன்றுபவன். 'பின்னும்' என்றது, 'மற்றும்' எனப் பொருள்தந்தது. இம் முழுதையும் ஆனவனே என மாற்றியுரைக்க. இகரச் சுட்டின் ஈற்றில் நின்ற வகரமெய், மகரமாய்த் திரிந்தது. 'முழுதையும்' என்றதில் ஐ, சாரியை. 'இவை முழுதும் ஆனவனே' என்பது பொருள். 'நிலம் நீர் முதலாகக் காணப்படுவனவற்றை' 'இவ்' எனச் சுட்டிக் கூறினார்.

முழுதயில் வேற்கண் ணியரெனும் மூரித்
தழல்முழுகும்
விழுதனை யேனை விடுதிகண் டாய்நின்
வெறிமலர்த்தாள்
தொழுதுசெல் வான்நற் றொழும்பரிற் கூட்டிடு
சோத்தெம்பிரான்
பழுதுசெய் வேனைவி டேல்உடை யாய்உன்னைப்
பாடுவனே. **#147**

எம் பெருமானே! உடையவனே! முழுக் கூர்மையை உடைய வேற்படை போன்ற கண்களையுடைய மாதரார் என்கிற பெரு நெருப்பில் முழுகுகின்ற வெண்ணெய் போன்ற என்னை விட்டு விடுவாயோ? உன்னை நான் புகழ்ந்து பாடுவேன். உனது மணம் பொருந்திய தாமரை மலர் போன்ற திருவடியை வணங்கிச் செல்லுகின்ற பரவெளித் தொண்டரோடு சேர்ப்பாயாக. குற்றம் செய்யும் என்னைக் கைவிடாதே! வணக்கம்.

விளக்கவுரை

'முழுதும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. 'கண்ணியர்' என்றது ஆகுபெயராய், அவர் மேற்செல்லும் ஆசையைக் குறித்தது. 'முழுதும் முழுகும்' என இயையும்.

மூரித்தழல்- பெரிய நெருப்பு. விழுது - இழுது; வெண்ணெய். செல் - சென்ற. வான் நல் தொழும்பர் - வீட்டுலகத்தில் உள்ள நல்ல அடியார்.

அவர்களை, 'நற்றொழும்பர்' என்றது, தாம் அன்ன ராகாமையை விளக்குதற்கு. சோத்து - வணக்கம்; இஃது இழிந்தோர் கூற்றாயே வரும். செய்வேன் என்றது செய்யும் இயல்பினேன் என்றதாம். 'ஆயினும் உன்னைப் பாடுதல் செய்வேன்; ஆதலின், விடுதல் ஆகாது' என்பார், மறித்தும், 'விடேல்' என விண்ணப்பித்தார்.

பாடிற்றி லேன்பணி யேன்மணி நீஒளித்
தாய்க்குப்பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண் டாய்வியந்
தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவன் எவ்விடத் தான்எவர்
கண்டனர்என்
றோடிற்றி லேன்கிடந் துள்ளுரு கேன்நின்
றுழைத்தனனே. **#148**

மாணிக்கமே! நின் புகழைப் பாடமாட்டேன். நின்னை வணங்கேன். எனக்கு ஒளித்துக் கொண்ட உன் பொருட்டே, பசிய ஊனுடம்பைத் தொலைத்திடாத என்னை விட்டுவிடுவாயோ? வியப்படைந்து அவ்விடத்தே, அலறித் தேடிற்றிலேன்; சிவபெருமான் எவ்விடத்திலுள்ளான்? யார் அவனைக் கண்டனர்? என்று கேட்டு ஓடிற்றிலேன். மனம் கசிந்து அன்பு செய்யேன்; வீணே நின்று வருந்தினேன்.

விளக்கவுரை

'வீடிற்றிலேனை' என்றது, 'வீடிற்றிலேன்; என்னை,' என இருசொற்பொருட்டாய் நின்றது. 'மணி' என்றது, விளி. 'நீ விடுதிகண்டாய்' என இயையும். வியந்து - மருண்டு. 'மணியே' ஒளித்த உன் பொருட்டுப் பாடிற்றிலேன்; பணியேன்; வியந்து ... ... உருகேன்; பச்சூன் வீடிற்றிலேன்; நின்று உழைத்தனன்; என்னை நீ விடுதிகண்டாய்' என்க. 'உயிர்நின்ற உடம்பு' என்பார், 'பச்சூன்' என்று அருளினார். உழைத்தனன் - அலந்தேன்.

உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத்
தீயினொப்பாய்
விழைதரு வேனை விடுதிகண் டாய்விடின்
வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி மானிடன்
தேய்மதியன்
பழைதரு மாபரன் என்றென் றறைவன்
பழிப்பினையே. **#149**

மான்போன்ற பார்வையையுடைய பெண்டிரது, கொங்கையின்கண்

பலாக்கனியில் மொய்க்கும் ஈயை ஒத்து விரும் புகின்ற என்னை விட்டுவிடுவாயோ? விட்டுவிடுவாயாயின், கடல் விடமுண்ட மேகம் போன்ற கருமையான கழுத்தை உடையவன்; குணம் இல்லாதவன்; மானிடன்; குறைந்த அறிவுடையவன்; பழைய பெரிய பரதேசி; என்று அடிக்கடி உன் இகழ்ச்சியை எடுத்துச் சொல்வேன்.

விளக்கவுரை

உழை - மான். தரு, உவம உருபு. 'கொங்கைக் கண்' என உருபு விரிக்க. 'ஈயின்' என்றதில் இன், வேண்டா வழிச் சாரியை. பலாப்பழத்து ஈ, அதன்கண் வீழ்ந்து மீள மாட்டாது அழிதலாகிய தொழில்பற்றி வந்த உவமை. இதற்கு, கொங்கையைப் பலாப்பழத் தோடு உவமித்ததாக உரைத்து, அதன்மேலும் பல நயம் கூறுவாரும் உளர். 'நஞ்சுண் கறைக்கண்டன் முதலிய சொற்களெல்லாம் பழிப் பினையே புலப்படுத்துவன' என்றபடி, நஞ்சுண்டல், பேரறிவில்லா தாரது செயல்; கண்டத்தில் கறுப்புண்மை உடல் அழகிற்கு ஓர் மறு; மானிடன் - தேவனல்லன். தேய் மதியன் - குறைந்த அறிவையுடைய வன். பழை - பழைமை. தரு - பொருந்திய; என்றது, 'யாவராலும் அறியப்பட்ட' என்றபடி. மா அபரன் என்றே பிரித்து, மிகவும் கீழானவன்' என உரைக்க. இனி மா பரன் என்றே பிரித்து 'யாவர்க்கும் மிக அயலான்' என்று உரைப்பினும் ஆம். 'என்னை ஏன்று கொள்ளாது விட்டுவிடின், இப்பெயர்கள் எல்லாம் இங்ஙனம் கூறும் பொருளையே உடையனவாய் விடும்' என்றபடி. இங்ஙனம் இச்சொற்களை வேறு பொருள்பட வைத்தமை அடிகளது புலமைத் திறத்தையும் உணர்த்துகின்றது. இப் பாட்டிலும், 'சிரிப்பிப்பன்' எனப் பின்னர் வருகின்ற பாட்டிலும் அடிகள் தம்மை இறைவன் ஆட்கொண்ட உரிமையாற் சில கூறினமை அறிந்து இன்புறற்பாலது. குணம் இலி - மாயா குணங் களாகிய முக்குணங்களுள் ஒன்றும் இல்லாதவன். மான் இடன் - பெண்ணை அல்லது மானை இடப்பக்கத்தில் கொண்டவன். தேய் மதியன் - தேய்ந்த சந்திரனை அழிந்தொழியாதபடி அணிந்தவன். பழை தரு மா பரன் - அனாதியான பெரிய மேலானவன். இவையே இச்சொற்கள் குறிக்கும் உண்மைப் பொருள்.

பழிப்பில்நின் பாதப் பழந்தொழும் பெய்தி
விழப்பழித்து
விழித்திருந் தேனை விடுதிகண் டாய்வெண்
மணிப்பணிலங்
கொழித்துமந் தாரம்மந் தாகினி நுந்தும்பந்
தப்பெருமை
தழிச்சிறை நீரிற் பிறைக்கலஞ் சேர்தரு

தாரவனே. #150

ஆகாய கங்கை, வெண்மையான மணியாகிய முத்தினையும், சங்கினையும், ஒதுக்கி மந்தார மலர்களைத் தள்ளுகின்ற அணையாகிய பெருமையைப் பொருந்திய சிறைப்பட்ட அந்நீரில், பிறையாகிய தோணி சேர்தற்கிடமாகிய, கொன்றை மாலையை யுடையவனே! பழிப்பற்ற உன் திருவடியின் பழம் தொண்டினை அடைந்து, அது நழுவி விழ, உன்னை நிந்தித்துக் கொண்டு, திகைத் திருந்த என்னை விட்டுவிடுவாயோ?

விளக்கவுரை

விழ - அஃது என்னிடத்தினின்றும் தவறிவிட. பழித்து- அதனால் என்னையே பழித்துக்கொண்டு. 'பழித்து - பழிக்கப்பட்டு' எனினுமாம். வெண்மணி - முத்து. பணிலம் - சங்கு. மந்தாரம் - மந்தார மலர்; இஃது இறைவன் சடையில் உள்ளது. 'நுந்தும் மந்தாகினி' என மாறுக. நுந்தும் - தள்ளுகின்ற. மந்தாகினி - கங்கை. 'மந்தாகினியாகிய நீரில்' என்க. 'பந்தப் பெருமை தழி' என்பதனை, 'வெண்மணி' என்றதற்கு முன்னே கூட்டுக. பந்தப் பெருமை - (உன்னோடு) தொடர்புற்று வாழும் பெருமை. 'தழீஇ' என்பது குறுகி நின்றது. சிறை நீரில் - தடுத்து வைக்கப்பட்ட நீரில். கலம் - மரக்கலம்; தோணி. தார் - மாலை. இது, கொன்றை மாலையே என்பது அறியப்பட்டது.

தாரகை போலுந் தலைத்தலை மாலைத்
தழலரப்பூண்
வீரஎன் றன்னை விடுதிகண் டாய்விடில்
என்னைமிக்கார்
ஆரடி யான்என்னின் உத்தர கோசமங்
கைக்கரசின்
சீரடி யாரடி யான்என்று நின்னைச்
சிரிப்பிப்பனே. #151

நட்சத்திரம் போல, தலையில் தலைமாலையை யும், நெருப்புப் போற்கொடிய பாம்பாகிய ஆபரணத்தையும் அணிந்த வீரனே! என்னை விட்டுவிடுவாயோ? விட்டுவிடில் மேலோர் என்னை நோக்கி, யாருடைய அடியான் என்று கேட்டால், திருவுத்தரகோச மங்கைக்கு வேந்தனாகிய சிவபிரானது சிறப்புடைய அடியாருக்கு அடியவன் என்று சொல்லி, அவர்கள் உன்னைச் சிரிக்கும்படி செய்வேன்.

விளக்கவுரை

தாரகை - விண்மீன். தாரகை போலும் தலையில் உள்ள தலைமாலையையும், தழல்போலக் கொடிய அரவமாகிய அணி

கலத்தையும் உடைய வீரனே' என்க. 'தலைமாலை தலைக்கணிந்து' *(தி.4.ப.9.பா.1)* எனவும், 'தலைக்குத் தலை மாலை அணிந்த தென்னே' *(தி.7.ப.4.பா.1)* எனவும் வந்தனவற்றால், சிவபிரான் தலையிலும் தலைமாலை யணிந்திருத்தல் அறியப்படும். மிக்கார் - உயர்ந்தோர். 'ஆரடியான்' என்றதற்கு 'நீ' என்னும் எழுவாய் வரு விக்க. என்னின் - என்று வினாவின். என்று - என்று விடை சொல்லி. 'சிரிப்பிப்பன்' என்றது. இவ்விடையைக் கேட்ட அளவில், 'இவனை ஆட்கொண்டது இவ்வாறுதானோ' என்று நின்னை அவர்கள் எள்ளி நகையாடுவார்கள் என்றபடி. எனவே, 'சிரிப்பிப்பன்' என்பதற்கு, 'சிரித்தற்குக் காரணனாய் நிற்பேன்' என்றதாம்.

சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத் தொழும்பையும்
ஈசற்கென்று
விரிப்பிப்பன் என்னை விடுதிகண் டாய்விடின்
வெங்கரியின்
உரிப்பிச்சன் தோலுடைப் பிச்சன்நஞ் சூண்பிச்சன்
ஊர்ச்சுடுகாட்
டெரிப்பிச்சன் என்னையும் ஆளுடைப்பிச் சன்என்
றேசுவனே. **#152**

என்னை நீ விட்டு விடுவாயோ? விட்டுவிட்டால், என்னை நீ சினந்து தள்ளிய குற்றத்தை, பிறர் நகையாடும்படி செய்வேன். எனது தொண்டையும் ஈசனுக்கே என்று எல்லோரும் சொல்லும்படி செய்வேன். கொடிய யானையின் தோலைப் பூண்ட பித்தன்; புலித்தோல் ஆடையணிந்த பித்தன்; விடத்தை உண்ட பித்தன்; ஊர்ச் சுடுகாட்டு நெருப்போடு ஆடும் பித்தன்; என்னையும் அடிமையாகக் கொண்ட பித்தன்; என்று உன்னை இகழ்ந்து உரைப்பேன்.

விளக்கவுரை

'என்னை விடுதிகண்டாய்; விடின்' என்றதனை, 'முதலிலும், என்னையும் ஆளுடைப் பிச்சன்' என்றதனை, 'வெங்கரி யின்' என்றதற்கு முன்னும் கூட்டுக. 'சீறும் பிழைப்பைச் சிரிப்பிப் பன்' என மாற்றிக் கொள்க. சீறும் பிழைப்பு - ஆட்கொண்டபின் என்னை வெறுக்கும் உனது தவறான செயலை. சிரிப்பிப்பன் - பிறர் இகழுமாறு செய்வன். தொழும்பையும் ஈசற்கு என்றே விரிப்பிப் பன்-'இவனது அடிமைத்திறமும் சிவபெருமானுக்குத் தான்' என்று பலரும் தம்முள் விரிவாக எடுத்துப் பேசும்படி செய்வேன். பிச்சன் - பித்தன். எரிப் பிச்சன் - தீயில் நின்று ஆடும் பித்தன். 'என்னையும்' என்றதில் உள்ள உம்மை, 'ஏனை அடியார்களோடு' என இறந்தது தழுவிற்று.

ஏசினும் யான்உன்னை ஏத்தினும் என்பிழைக்

கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண் டாய்செம்
பவளவெற்பின்
தேசுடை யாய்என்னை ஆளுடை யாய்சிற்
றுயிர்க்கிரங்கிக்
காய்சின ஆலமுண் டாய்அமு துண்ணக்
கடையவனே. **#153**

செந்நிறமுடைய பவள மலை போன்ற ஒளியுடைய திருமேனியனே! என்னை அடிமையாக உடையவனே! சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய தேவர்களுக்கு இரங்கி, அவர்கள் அமுதம் உண்ணுதற் பொருட்டு, கொல்லும் வேகத்தோடு எழுந்த ஆல கால விடத்தை உண்டவனே! கடைப்பட்டவனாகிய நான் உன்னை இகழ்ந்து பேசினாலும், வாழ்த்தினாலும், எனது குற்றத்தின் பொருட்டே மனம் வாடி, துக்கப்படுவேன்; அவ்வாறுள்ள என்னை விட்டுவிடுவாயோ?

விளக்கவுரை

ஏசுதல் - இகழ்தல். ஏத்துதல் - புகழ்தல். பிழைக்கு - பிழை செய்தது கருதி. குழைந்து - மெலிந்து. வேசறுவேன் - வருந்து வேன். இங்கும், 'வேசறுவேனை' என்றதற்கு, 'வேசறுவேன்' 'அத்தன்மையனாகிய என்னை' என இருசொற்பொருட்டாக உரைக்க. 'சிற்றுயிர்' என்றது, இயைபின்மை நீக்கிய விசேடணம். இது தேவர் முதலிய யாவரையும் குறித்தது. எங்கும் பரந்து கொல்லத் தொடங்கிய செயலை, 'காய்கின்ற சினம்' என்றார். ஆலம் - நஞ்சு. 'சிற்றுயிர்க்கு இரங்கி, அவை அமுதுண்ணுதற் பொருட்டு ஆலமுண்டவனே' என்க. 'கடையவன்' என்றது, முதற்கண் நின்ற, 'யான்' என்றதனோடு இயையும். இதனால், இறுதிக்கண் சில திருப்பாட்டுக்களில் அடிகள் இறைவனை இகழ்வதுபோலக் கூறினமைக்கு வருந்தி 'என் வாயினின்றும் எழுந்த சொற்கள், ஏசுதல், ஏத்துதல் என்பவற்றுள் எவ்வடிவில் அமைந்திருப்பினும், என் கருத்து, என் பிழையைக் கருதி வருந்துவதல்லது உன்னைப் பழிப்பதன்று என்பது நீ அறிந்ததன்றோ' என விண்ணப்பித்து, தம்மைக் கைவிடாது ஏற்றருளுமாறு வேண்டி னமை காண்க. 'ஆலம் உண்டாய்' என்றதும், 'பிழையைப் பொறுக்கற் பாலை' என்னும் குறிப்பினதே. இத்திருப்பாட்டின் இறுதிச் சீர், முதல் திருப்பாட்டில் எடுத்த, 'கடையவன்' என்னும் சொல்லேயாய், அதனோடு சென்றியைந்து மண்டலித்தல் காண்க.

1.7.திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய். **#154** ★★★★★

ஒளி பொருந்திய நீண்ட கண்களை உடைய பெண்ணே! முதலும் முடிவும் இல்லாத அரும் பெருஞ்சோதியை யுடைய இறைவனை நாங்கள் பாடுவதைக் கேட்டும், உறங்குகின்ற னையோ? உன் காது ஓசை புகாத வலிய காதோ? மகாதேவனுடைய நெடிய சிலம்பணிந்த திருவடிகளை நாங்கள் புகழ்ந்து பாடிய வாழ்த்துப் பாடல்களின் ஒலி சென்று, தெருவின் கண் கேட்ட அளவிலேயே, எங்கள் தோழி ஒருத்தி பொருமி அழுது, உடம்பை மறந்து மலர் நிறைந்த படுக்கையின் மீதிருந்து புரண்டு விழுந்து இந் நிலத்தே, ஒன்றுக்கும் ஆகாதவள் போல மூர்ச்சித்துக் கிடந்தாள். இஃது அவள் தன்மை என்ன வியப்பு!

விளக்கவுரை

இதுமுதலாக மகளிர் விளையாட்டு வகையில் வருவன பலவும், பாடாண் கொற்ற வள்ளையோடு ஒத்த வகையினவாய் நிற்கும் கடவுட் பாட்டுக்களாம் என்பது, மேலெல்லாம் கூறியவாறு பற்றிக் கொள்ளக்கிடந்தமை காண்க.

இதன்கண்ணும் *(தி.8, 7.திருவெம். பா.18),* அடுத்து வரும் *தி.8* திருவம்மானையிலும் *(பா.10)* 'அண்ணா மலையான்' என எடுத்தோதியருளினமை பற்றி, இவ்விரண்டனையும் அடிகள், 'திரு வண்ணாமலையில் அருளிச் செய்தார்' எனத் திருவாதவூரர் புராணங் கூறிற்று. அதனால், இவை, அங்ஙனமே கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும், இதன்கண் 'சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி ... ... ஆடு' *(தி.8, 7.திருவெம்.பா.14)* என்று அருளிச் செய்ததன்றி, 'அண்ணா மலையானைப் பாடி ஆடு' என அடிகள் அருளிச் செய்திலர். திருவம் மானையில், 'அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்' *(தி.8, 8.திருவம்மானை.பா.10)* என்று அருளினாராயினும், 'ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய்' *(பா.13)* என்றும், 'ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்' *(பா.17)* என்றும், பிறவாறும் அருளிச் செய்தார். ஆதலின், இவையெல்லாம், 'தென்னானைக்

காவானைத் தென்பாண்டி நாட்டானைப் ... ... பாடுதும்' (தி.8 திருவம்மானை - பா. 19) என்றாற்போலத் தில்லைக்கண் இருந்து பாடுங்கால் நினைந்து பாடியனவாகக் கொள்ளுதற்கும் உரியனவேயாம். நம்பி திருவிளையாடல், 'இவ்விரண்டும் திருப் பெருந்துறையில் அருளியவை' என்கின்றது.

இது முதல் எட்டுத் திருப்பாடல்கள், நீராடுதற்கு விடியலில் எழுந்து செல்லற்பாலராகிய மகளிருள் முன்னர் எழுந்தார் சிலர் ஒருங்குகூடி, எழாதார் வாயிலிற் சென்று அவரைத் துயிலுணர்த்து மாறாக அருளிச் செய்யப்பட்டன.

மகளிர் விளையாட்டுப் பாடல்களில் அவை இன்ன பாடல் வகை என்பதனை அறிவிக்கும் முறையால் அப்பாடல் பற்றிய சொல்லேனும், சொற்றொடரேனும் ஈற்றில் நின்று அப்பாடல்களை முடிக்கும். அதனால், 'அவை அங்ஙனம் வருதல் மரபு' என்னும் அளவாய்ப் பாடலை நிரப்பி நிற்பதன்றி வேறு பொருள்படாமையின், அவையெல்லாம் அசைநிலை போலவே கொள்ளப்படும். படவே, இவ்விடத்தும், 'ஏலோர் எம்பாவாய்' என்பதும் அவ்வாறே கொள்ளப் படும் என்பது, தானே பெறப்பட்டது. இதனுள், 'மாதே' என்றதனை முதலிற் கொள்க. சோதி - ஒளி வடிவினன்; ஆகுபெயர். உயர்ந்தோர் உறங்குதலை, 'கண்வளர்தல்' என்றல் வழக்கு. இங்கு, எழாதவளை எள்ளுகின்றார்களாதலின், 'கண் வளருதியோ' என்கின்றவர்கள், அக்கண்களை, 'வாள் தடங்கண்' என்றும் சிறப்பித்துக் கூறினார்கள். வாள் தடங்கண் - வாள்போலும் பெரியகண்; இது, மகளிர் கண் நன்கமைந்திருத்தலைக் குறிக்கும் தொடர். இதனை இங்குக் கூறியது, 'உன் கண்கள் நன்கமைந்திருத்தல் உறங்கிக் கிடத்தற்குத்தானோ' என்றற்காம். 'இயல்பாய் விழிக்கற் பாலனவாகிய கண்கள் விழித்தில' 'எனக் கண்களை இகழ்ந்தவர்கள்,' எழுப்பும் ஓசையைக் கேட்கற்பாலனவாகிய செவிகளும் கேளாது ஒழிந்தனவோ எனச் செவிகளையும் இகழ்வாராய், 'வன்செவியோ நின்செவிதான்' என்றார்கள். வன்மை - ஓசையை ஏலாமை. இங்ஙனங் கூறியதனால், முன்னர், 'கேட்டேயும்' என்றது, 'தன்னை அழைக்க எனக் கருதியிருந்தாள்' என்னும் கருத்தினாற் கூறிய தாயிற்று. 'செவி' என்றது, 'செவிப்பொறி' என்னும் பொருளதாதலின், 'செவிதான்' என ஒருமையாற் சொல்லப்பட்டது. தான் அசைநிலை.

இத்துணையும், சென்ற மகளிர் உறங்குவாளை நோக்கிக் கூறியன; இனி வருவன அவளைப் பற்றி அவர்கள் தங்களுள் நகை யாடிக் கூறுவன. இவையும், அவள் கேட்டு எழுந்து வருவாள் என்னும் கருத்தினாற் கூறுவனவேயாம். 'என்னே என்னே' என்றதனை, 'பரிசு' என்றதன் பின்னர்க் கூட்டுக. 'நம் தோழி உறக்கத்தால் எழா திருக்கின்றாளல்லள்:

நமது பாடல் வீதியில் எழும்பொழுதே அதனைக் கேட்டு மனம் உருகிப் படுக்கையிற்றானே மெய்ம்மறந்து கிடக் கின்றாள்; இவளது அன்பின் பெருமை எத்தகையது' என்பது இப் பகுதியின் திரண்ட பொருள். 'மெய்ம்மறந்து புரண்டு' என இயையும். போது ஆர் அமளி - மலர் நிறைந்த படுக்கை. 'இறைவன் பாடலைக் கேட்டு உருகுதற்கு அமளி இடம் அன்று' என்றற்கு அதனை இங்ஙனம் சிறப்பித்துக் கூறினார்கள். 'அமளியின் மேனின்றும் புரண்டு' என்றது, 'ஒருபால் நின்று மற்றொரு பாற் புரண்டு' என்றவாறு. 'புரண்டு கீழே வீழ்ந்து' எனச் சில சொல் வருவித்து முடிப்பாரும் உளர். இங்ஙன்-இப் பொழுதைக்கு; என்றது, 'நாம் மேற்கொண்ட செயலுக்கு' என்றபடி. ஏதேனும் ஆகாள் - சிறிதும் உதவாள். 'ஆகாளாய்க் கிடந்தாள்' என்க. 'ஈதே' என்ற ஏகாரம் தேற்றம். கூறுவார்களும், கேட்பார்களுமாயவர்களுள், கூறுகின்றவர்கள், உறங்குகின்றவளது இகழ்ச்சி தோன்ற, 'எம் தோழி' எனத் தமக்கே உறவுடையாள் போலக் கூறினார்கள்.

இனி இப்பகுதிக்கு, 'எம் தோழி' என்றது பிறள் ஒருத்தியை எனக்கொண்டு, அவளது மெய்யன்பின் சிறப்பை உறங்குகின்றவட்கு அறிவித்தவாறாகப் பொருள் உரைப்பர்; இறைவனிடத்து அன்புடைய வர்க்கு விடியலில் அவனைப் பாடும் பாட்டொலி கேட்கும்பொழுது விரைந்தெழுந்து பின்னர் அவனது அருட்குணங்களில் ஈடுபடுதல் இயல்பாமல்லது, எழாது, கிடந்த கிடையிலே விம்மி விம்மி அழுதல் முதலியன இயல்பாகாவாகலானும் ஆமெனினும் ஈண்டைக்கு அதனை எடுத்துக் கூறுதலாற் பயன் இன்மையானும், அது பயன்பட வேண்டு மாயின், கிடந்தமை மாத்திரையே கூறியொழியாது, பின்னர் எழுந்து வந்தமையையும் ஒருதலையாகக் கூறவேண்டுதலின், அங்ஙனங் கூறாமையானும், பிறவாற்றானும் அது பொருந்தாமை அறிக. மேற் கூறியவாறு பொருள் உரைப்பாருள், 'கிடந்தாள்' என்றது முடியவே பிறள் ஒருத்தியைக் குறித்ததாக வைத்து, அதற்கு, 'ஒருத்தி' என்பதோர் எழுவாயை வலிந்து வருவித்தும், 'எந்தோழி' என்றது. முன்னிலைக் கண் படர்க்கை வந்த வழுவமைதியாக்கியும் உரைப்பாரும் உளர். சென்றவர்கள் இவ்வாறு நகையாடிச் சில கூறியபின், உறங்கிக் கிடந்தவள் எழுந்து வந்து அவர்களுடன் கூடினாள் என்க. பின் வருகின்ற பாடல்களிலும் இவ்வாறே கொள்க.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்

கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய். **#155**
சிறந்த அணிகளை அணிந்தவளே! இரவும் பகலும் நாம் பேசும் பொழுது எப்பொழுதும் என் அன்பு, மேலான ஒளிப் பிழம்பான இறைவனுக்கு என்று கூறுவாய். இப்பொழுது அருமை யாகிய படுக்கைக்கே, அன்பு வைத்தனையோ? பெண்களே! சீச்சி நீங்கள் பேசும் நகை மொழிகளில் இவையும் சிலவாகுமோ! என் னோடு விளையாடிப் பழித்தற்குரிய சமயம் இதுதானோ? தேவர்களும் வழிபடுதற்கு நாணுகின்ற தாமரை மலர் போன்ற திருவடியை அன்பருக்குக் கொடுத்தருள எழுந்தருளும் ஒளி உருவன்; தில்லைச் சிற்றம்பலத்து இறைவனுக்கு, அன்பு பொருந்திய நாம் உனக்கு யார்?

விளக்கவுரை

'நேரிழையாய் இராப்பகல் நாம் பேசும்போது எப்போது, அப்போது பரஞ்சோதிக்குப் பாசம் என்பாய்; இப்போது, ஆரமளிக்கே நேசமும் வைத்தனையோ' என்க. அன்பு 'நார்' எனப் படுதல் பற்றி இங்கு அதனை, 'பாசம்' என்று அருளினார்.
'பரஞ்சோதிக்கே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்த லாயிற்று. இதன்பின், உரியது என்பதும், 'எப்போது' என்றதன் பின்னர், 'அப்போது' என்பதும் எஞ்சி நின்றன. 'இராப்பகல்' என்றது, 'இரவாக, பகலாக' என்றபடி. ஆரமளி - அரிய படுக்கை. 'நேசமும்' என்ற சிறப்பும்மையால்' அன்பு முழுவதையும்' என்பது பெறப்பட்டது. 'நீ, பாசம் பரஞ்சோதிக்கு' எனினும் உண்மையில் அது நேரிழைக்கே என்றற்கு, 'நேரிழையாய்' என்றனர். இதுகாறும், சென்ற மகளிர் கூறியன.
இனி வருவன, இங்ஙனம் நகையாடிக் கூறியவர்களை நோக்கி உறங்கினவள் கூறுவன. தன்னை, 'நேரிழையாய்' என்றவர் களைத் தானும் அவ்வாறு அழைத்தாள். 'சீசீ' என்ற ஒரு சொல்லடுக் கில், பின்னின்றது, குறுக்கல் விகாரம் பெற்றது. 'சீசீ' என்றே பாடம் ஓதுவாரும் உளர். எள்ளற் குறிப்பிடைச் சொல்லாகிய 'சீ' என்பது, இங்குப் பெயர்த் தன்மைப்பட்டு, 'சீ எனல்' எனப் பொருள் தந்தது. 'சீ ஏதும் இல்லாது என் செய்பணிகள் கொண்டருளும்' (*தி.8. திருக்கோத்தும்பி 12*) என்னுமிடத்தும் இஃது இவ்வாறு நிற்றல் காண்க. இங்ஙனமாகவே, 'சீசீ என்றலாகிய இவையும் சிலவோ' என்றது பொருளாயிற்று. சிலவோ - நண்பரிடத்துச் சொல்லுகின்ற சொற்களுள் சிலவோ. 'இடம்' என்றது, பொழுதை. வாளா, 'ஏசுமிடம்' என்னாது, 'விளையாடி ஏசுமிடம்' என்றதனால், 'நகை யாடிப் பேசுதற்கும் இது

சமையமன்று' என்றதாம். கூசுதல் - நாணுதல்.
'நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே'
*(தி. 5.ப.90.பா.9)*என வந்தமை காண்க 'நாணுதல்' என்பது, நாணிக் காட்டாதொழிதலாகிய தன் காரியந் தோன்ற நின்றது. 'தேவர் களுக்குக் காட்டாது மறைக்கும் திருவடியை நமக்குத் தர வருபவன்' என்றபடி, 'ஈசனார்' என்பது, ஒருமைப் பன்மை மயக்கம். 'பாசம் பரஞ்சோதிக்கு' என்று சொல்லுபவள் 'நான் மட்டும் அன்று; நம் எல்லோருந்தாம்' என்பாள், 'ஈசனார்க் கன்பார் யாம் ஆர்' என்றாள். 'ஆர்' என்றது, 'அன்பரல்லது மற்று யார்' என்றபடியாம்.
இனி, 'விண்ணோர்கள் ஏத்துதற்கு' என்பது முதலியவற்றை, சென்றோர் மறித்தும் கூறியவாறாக வைத்து, அதற்கேற்பத் தாம் தாம் வேண்டுஞ் சொற்கள் பலவற்றை வருவித்து உரைப்பாரும் உளர்.
'இவ்வாறு, ஒருவர் ஒன்றுகூற, மற்றொருவர் அதற்கு மாறு சொல்லுதலாக வரும் பொருள், கலிப்பாவினாற் பாடப்படும்' என்றும், அஃது, 'உறழ் கலிப்பா' எனப்படும் என்றும் தொல்காப்பியர் கூறுதலை,
'ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சகம் உறழொடு கலிநால் வகைத்தே'
(தொல்.பொருள்.435) எனவும்,
'கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்து
போக்கின் றாகல் உறழ்கலிக் கியல்பே'
(தொல். பொருள். 458) எனவும் வரும் நூற்பாக்களான் அறிக.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். **#156**

முத்தைப் போன்ற வெண்மையான பற்களை யுடையவளே! நாள்தோறும் எங்களுக்கு முன்னே எழுந்து எதிரே வந்து, எந் தந்தை இன்ப வடிவினன்; அமுதம் போன்றவன் என்று வாழ்த்தி வாய் மிகுதியும் ஊறி, இனிமை பயக்கும்படிப் பேசுவாய். எழுந்து வந்து உன் வாயிற் கதவைத் திறவாய். நீங்கள் இறை வனிடத்தில் பேரன்புடையீர்! இறைவனது பழமையான அடிமை யுடையீர்! ஒழுங்குடையீர்! புதிய அடியவராகிய எங்களது, சிறுமையை ஒழித்து அடிமை கொண்டால், தீமையாய் முடியுமோ? உன் அன்புடைமை வஞ்சனையோ? உன் அன்பு

உண்மை என்பதை நாங்கள் எல்லாம் அறிய மாட்டோமோ? மனம் செம்மையுடையவர் நம் சிவபெருமானைப் பாட மாட்டார்களோ? உன்னை எழுப்ப வந்த எங்களுக்கு இவ்வளவும் வேண்டும்.

விளக்கவுரை

'பேசுவாய்' என்றதும், 'பேசுகின்றவளே' என விளித்ததேயாம். இவ்வாறு விளித்தது முன்னாள் இவள், 'நீவிர் வரும் முன்னமே நான் எழுந்திருந்து, நீவிர் வரும்பொழுது உங்கள் எதிரே வந்து இறைவனை மனம் உருகித் துதிப்பேன்' என்று சொல்லி, இது பொழுது அவ்வாறு செய்யாது உறங்கிக் கிடந்தமையைச் சுட்டியாம். ஆகவே, 'முன்வந்து எதிர்எழுந்து' என்றது 'முன் எழுந்து எதிர் வந்து' என மாற்றியுரைக்கற்பாலதாயிற்று. இதனானே, 'முத்தன்ன வெண்ணகையாய்' என்றதும் 'எதனையும் திட்பமின்றிப் பேதை நீரையாய்ச் சொல்லளவில் இனிமைப்படச் சிரித்துக்கொண்டு கூறுகின்றவளே' என்றவாறாம். கடை - வாயில். முதற்றொட்டு, 'கடை திறவாய்' என்றதுகாறும் சென்றமகளிர் கூறியது. இதனை அடுத்து வரும் இரண்டடிகளும் உறங்கினவள் கூறுவன. பத்து - அடியார்க்குரிய இலக்கணமாகிய பத்து. இவற்றை, 'புறத்திலக்கணம் பத்து' எனவும், 'அகத்திலக்கணம் பத்து' எனவும் இரண்டாக்கி உபதேச காண்டங்கூறும். அவற்றுள் புறத்திலக்கணம் பத்தாவன: திருநீறும் கண்டிகையும் அணிதல். பெரியோரை வணங்கல், சிவனைப் புகழ்ந்துபாடுதல், சிவநாமங்களை உச்சரித்தல், சிவபூஜை செய்தல், சிவபுண்ணியங்களைச் செய்தல், சிவபுராணங் களைக் கேட்டல், சிவாலயவழிபாடு செய்தல், சிவனடியாரிடத்தன்றி உண்ணாமை, சிவனடியார்க்கு வேண்டுவன கொடுத்தல் என்பன. அகத்திலக்கணம் பத்தாவன; சிவபெருமானது புகழைக் கேட்குங்கால் மிடறு விம்மல், நாத்தழுதழுத்தல், இதழ் துடித்தல், உடல் குலுங்கல், மயிர் சிலிர்த்தல், வியர்த்தல், சொல்லெழாமை, கண்ணீர் அரும்புதல், வாய்விட்டழுதல், மெய்ம்மறத்தல் என்பன.

'பத்துக் கொலாம் அடியார் செய்கை தானே' *(தி.4. ப.18. பா. 10)* என்றருளினார் திருநாவுக்கரசரும். இவற்றை, சித்தாந்த நூல்களிற் காணப்படும் தசகாரியமாகவும் சொல்லுப. 'பத்தும்' என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று. இனி, 'பற்று என்பது எதுகை நோக்கி, பத்தென ஆயிற்று' என்றும் உரைப்பர். பழைமை, புதுமைகளை முன் எழுதல், பின் எழுதல் பற்றிக் கூறினாள். பாங்கு - எல்லாம் நிரம்பிய தன்மை. 'நீங்கள் தாம் நிரம்பிய அடியார்கள்' என, தன்னை நகைத்துரைத்தவர்களைத் தான் நகைத்துரைத்தாள் என்க. இகலிக் கூறுகின்றாளாகலின், தன்னோடொத்த பிறரையும் உளப்படுத்து, 'அடியோம்' எனவும், 'எமக்கு' எனவும் பன்மையாற் கூறினாள். புன்மை - குற்றம். பொல்லாது - தீமை;

'தீமை உண்டோ' என உரைக்க. அடுத்து வரும் மூன்றடிகளும் சென்றோர் மறித்தும் கூறுவன.
'நின் அன்புடைமை எத்தோ' என மாற்றுக. எத்து-வஞ்சனை. *'எத்தனாகிவந் தில்புகுந்து' (தி.8 சென்னிப். 4)* என்றாற் போலப் பின்னரும் வருதல் காண்க. தங்களை, 'மெய்யடியார்கள்' என்று அவள் நகையுள்ளுறுத்துக் கூறக்கேட்டவர்கள், 'உன்னுடைய மெய்யன்பை நாங்கள் அறிந்திலமோ' என மறித்தும் நகைபடக் கூறிப் பின்னர், 'உள்ளத்தில் மெய்யன்புடைய மகளிரானவர், விடியலில் எழுந்து நம்பெருமானைப் பாடமாட்டார்களோ' என வெளிப்படை யாகவே கழறினர். 'விடியலில் எழுந்து' என்பது, இடத்தால் வந்து இயைந்தது. இதன்பின், உறங்கியிருந்தவள், 'சிறிது அயர்த்துப் போய் விடியலில் எழாது துயின்று கிடந்த எனக்கு இத்துணையும் வேண்டுவது தான்' என்று தன் நெஞ்சோடே சொல்லிக் கொண்டு வந்து உடன் கலந்தாள். ஈற்றடியையும், சென்ற பெண்கள் கூற்றாகவே கொண்டு 'இவ்வளவே எமக்கு வேண்டும்' எனவும் உரைப்பர்.

ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். **#157**

ஒளியையுடைய முத்துப் போன்ற பல்லினை உடையாய்! இன்னும் உனக்குப் பொழுது விடியவில்லையா?. அழகிய கிளியின் சொல்லின் இனிமை போன்ற சொல்லினை உடைய தோழியர், எல்லோரும் வந்து விட்டார்களோ? எண்ணிக் கொண்டு, உள்ளபடியே சொல்லுவோம்; ஆனால், அத்துணைக் காலமும் நீ கண்ணுறங்கி வீணே காலத்தைக் கழிக்காதே. தேவர்களுக்கு ஒப்பற்ற அமுதம் போல்வானை, வேதத்தில் சொல்லப்படுகின்ற மேலான பொருளான வனை, கண்ணுக்கு இனிய காட்சி தருவானைப் புகழ்ந்து பாடி, மனம் குழைந்து உள்ளே நெகிழ்ந்து நின்று உருகுவதன் பொருட்டு நாங்கள் எண்ணிச் சொல்லமாட்டோம். நீயே எழுந்து வந்து எண்ணிப் பார்த்து, எண்ணிக்கை குறையுமானால் மீண்டும் போய்த் தூங்குவாயாக.

விளக்கவுரை

'ஒள் நகை' என இயையும். இது புன்முறுவலைக் குறிக்கும். புன்முறுவல் பெருமிதமுடையார் செயலாகலின், 'ஒள் நித்தில நகையாய்' என்றது,

பெருமிதமுடைமையைக் குறிப்பாற் கூறியவாறாம். இவளது பெருமிதத்திற்கு ஏற்ப, சென்ற மகளிர், 'இன்னம் பொழுது புலர்ந்திலதோ' என்னும் துணையே கூறினர். அவளும் அதற்கேற்ப, 'நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால், எல் லோரும் எழுந்து வந்து விட்டனர்; நான் மாத்திரமே எழாதிருக் கின்றேன் போலத் தோன்றுகின்றது' என்னும் பொருள்பட, 'வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ' என்றாள். அங்ஙனங் கூறுகின்றவள், அதனிடையே, 'உங்கள் பேச்சு மிக நன்றாய் இருக் கின்றது' என்று இகழ்வாள், பிறரைக் கூறுவாள் போல அவர்களது சொல்லைச் சிறப்பித்துக் கூறினாள். சென்ற மகளிர் அது கேட்டுக் கூறுவன ஏனைய பகுதி.
'கொண்டு' என்பது, 'கொடு' என மருவிற்று. 'உள்ளவாறு' என்பது கடைக்குறைந்து நின்றது. 'சொல்லுகோமாக' என ஆக்கம் வருவித்து, 'சொல்லிக்கொண்டிருக்க' என உரைக்க. அவ்வளவும் - அத்துணைக் காலமும். 'கண்ணை' என்றதில் ஐ, பகுதிப் பொருள் விகுதி. அவமே - பயன்படாமலே. 'போக்காது' என்னும் எச்சம் தேற்றேகாரம் பெற்று வந்தது. 'விண்' என்றது விண்ணவரை. ஒரு மருந்து - ஒப்பற்ற அமுதம். 'அவருக்குக் கிடைத்துள்ள அமுதத்தின் வேறுபட்டது' என்பதாம். கசிந்து - கண்ணீர் சிந்தி. 'உள்ளம் உள் நின்று நெக்குருக' என மாற்றிக் கொள்க. 'நீ காலத்தைப் போக்காமைப் பொருட்டும், நாங்கள் இறைவனைப் பாடி உருகுதற் பொருட்டும் அதனை (எண்ணிச் சொல்லுதலை)ச் செய்யமாட்டோம்' என்றனர் என்க. 'குறையில்' என்றது, 'வரற்பாலோர் வாராதிருப்பின்' என்ற வாறு. 'நீ மீண்டு சென்று துயில் கொள்வாயாக' என்றது, துயிலில் உள்ள ஆர்வத்தினைச் சுட்டி இகழ்ந்தது. 'பாடிக் கசிந்து உருக' என்றதும், 'நீ அதற்கு ஆகாய்' என இகழ்ந்ததேயாம்.

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். **#158**

திருமால் அறிய முடியாத 'பிரமன் காணமுடியாத அண்ணாமலையை, நாம் அறியக் கூடும் என்று, உனக்குத் தெரிந்துள்ள பொய்களையே பேசுகின்ற, பால் சுரக்கின்ற, தேன்போல இனிக்கும் வாயினையுடைய, வஞ்சகீ, வாயிற்கதவைத் திறப்பாயாக. இந்நிலவுல கினரும்,

வானுலகினரும், பிற உலகினரும் அறிவதற்கு அருமை யானவனது அழகையும், நம்மை அடிமை கொண்டருளிக் குற்றத்தை நீக்கிச் சீராட்டும் பெருங்குணத்தையும் வியந்து பாடிச் சிவனே! சிவனே!! என்று, முறையிடினும் அறியாய், துயில் நீங்காது இருக் கிறாய். இதுதானோ மயிர்ச்சாந்தணிந்த கூந்தலையுடைய உனது தன்மை?

விளக்கவுரை

'அறியா, காணா' என்றவை, எதிர்மறைப் பெயரெச்ச அடுக்கு. மலை - மலைவடிவானவன். 'மலை' என்றே கொண்டு, 'அண்ணாமலையை' என்றலும் பொருந்துவதே. போல் அசைநிலை. உள்ள பொக்கங்கள் - உலகில் உள்ள பொய்களை எல்லாம். 'தேன்' என்றதை, 'பால்' என்றதன் பின்னர்க் கூட்டுக. பால், தேன் என்பன, மிக்க இனிமையைக் குறித்து நின்றன. படிறீ - பொய்ம்மை யுடையவளே; இது, வாளா பெயராய் நின்றது. இவள் சொற்சாலம் செய்பவள் என்பதை அனைவரும் எப்பொழுதும் அவள் அறியக் கூறுவர் என்பதும், அதுபற்றி இவள் சினந்து கொள்வதில்லை என்பதும், சென்ற மகளிர் இவளை இங்ஙனம் வெளிப்படையாகவே கூறி விளித்தமையாற் பெறப்படும். 'ஓலம் இடினும் உணராய் உணராய்' என்றதும், அவளது எளிய நிலை கருதியேயாம். அவளது சொற்சாலத்துக்கு ஓர் எல்லையாகவே, 'மாலறியா நான்முகனும் காணாமலையினை நாம் அறிவோம்' எனக் கூறுதலை எடுத்துக் காட்டினர். இதனானே, சிவபெருமானை ஏனைத் தேவரோடு ஒப்பவைத்துக் கூறுவாரது தன்மையும் அடிகள் புலப்படுத்தியவாறு பெறப்பட்டது.

கூவ லாமை குரைகட லாமையைக்
கூவ லோடொக்கு மோகடல் என்றல்போல்
பாவ காரிகள் பார்ப்பரி தென்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே.

(தி.5.ப.100.பா.5) என ஆளுடைய அரசுகள் அருளிச் செய்தலுங் காண்க 'ஞாலமே' முதலிய மூன்று ஏகாரங்களும் எண்ணுப் பொருள. இவற்றால் எண்ணப்பட்டன, அவ்வவ்வுலகங்களாம். இவற்றின்பின், 'ஆகிய உலகங்களால்' என்பது தொகுத்தலாயிற்று. கோதாட்டுதல் - திருத்துதல். 'கோதுதலைச் செய்தல்' என்பது சொற் பொருள். சீலம் - செய்கை. உணராய் - துயில் நீங்காய். காண், முன்னிலை அசை. 'ஏலக்குழலியாகிய உன் பரிசு இது' என, ஒருசொல் வருவித்து முடிக்க. ஏலம் - மயிர்ச்சாந்து. 'வாயால் இனிமைபடப் பேசுதல்போலவே, உடலையும் நன்கு ஒப்பனை செய்து கொள்வாய்' என்பார், 'ஏலக்குழலி' என்றனர்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே

போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். **#159**

பெண்ணே! நீ, நேற்று, நாளைக்கு வந்து உம்மை எழுப்புவேன் என்று சொன்ன சொல்லுக்கும், வெட்கப்படாமல், நீ போன திக்கைச் சொல்வாய். இன்னும் பொழுது விடியவில்லையோ?. வானுலகத்தவரும், நிலவுலகத்தவரும், பிறவுலகத்தவரும், அறிதற்கு அருமையானவன் தானாகவே வலிய வந்து எம்மைக் காத்து அடிமை கொண்டருளுகின்ற மேலாகிய, நெடிய கழலணிந்த திருவடியைப் பாடி, வந்தவர்களாகிய எங்களுக்கு, நீ, உன் வாய் திறவாது இருக் கின்றாய். உடலும் உருகப் பெறாது இருக்கின்றாய். இவ்வொழுக்கும் உனக்குத்தான் பொருந்தும். எமக்கும் பிறர்க்கும் தலைவனாய் இருப் பவனை எழுந்து வந்து பாடுவாயாக!

விளக்கவுரை

மானே - மான்போன்ற பார்வையை உடையவளே; 'அச்சத்தால் பின்வருமாறு கூறினாய்' என்பார், இவ்வாறு விளித்தனர். நென்னல் - நேற்று; ஐகாரம், சாரியை. என்றலும் - என்று சொல்லிய செயலையும். 'செயலையும்' என இரண்டனுருபு விரியாது, 'செயலுக்கும்' என நான்கனுருபு விரிப்பின், பிற்கால வழக்காம். 'நீ போன திசை பகராய்' என்க. திசை - இடம். பகராய் - சொல்லு. 'நேற்றுச் சொன்ன சொற்படி நீ வந்து எங்களை எழுப்புதற்கு, இன்னும் பொழுது புலரவில்லை போலும்!' என நகைத்துக் கூறினர் என்க. 'வானே நிலனே பிறவே அறிவரியான்' என்றதற்கு, மேல் உரைத்தாங்குரைக்க. தலையளித்து - தலையளிசெய்து; தலையளி - மேலான கருணை. அருளும் கழல் - தரப்படுகின்ற திருவடி. வாய் திறவாய் - ஒன்றும் மறுமாற்றம் கூறாது உறங்குகின்றாய். ஊனே உருகாய் - உடல் மெலியமாட்டாய். மெலிதல், நாணத்தினானாதல், அச்சத்தினானாதல் நிகழற்பாலது என்பதாம். உனக்கே உறும் - இவையெல்லாம் உனக்கே தகும். 'இனியேனும் எழுந்து வந்து எங்களோடு இறைவனைப் பாடு' என இறுதியிற் கூறி முடித்தனர்.

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். **#160**

தாயே! உன் குணங்களில் இவையும் சிலபோலும். பல தேவர்கள் உன்னற்கு அரியவனும், ஒப்பற்றவனும், பெருஞ் சிறப்புடையவனுமாகிய இறைவனைப் பற்றிய, சங்கு முதலியவற்றின் ஒலிகள் கேட்க, சிவசிவ என்று சொல்லியே வாயைத் திறப்பாய். தென்னவனே என்று சொல்வதற்கு முன்பே, தீயிடைப்பட்ட மெழுகு போல உருகுவாய். என் பெருந்துணைவன், என் அரசன், இன்னமு தானவன், என்று யாம் எல்லோரும் வெவ்வேறு விதமாகப் புகழ்ந் தோம். நீ கேட்பாயாக. இன்னமும் உறங்குகின்றனையோ? திண்ணிய மனமுடைய அறிவிலார் போல, சும்மா படுத்திருக்கின்றாயே! தூக்கத் தின் சிறப்புத் தான் என்னென்று உரைப்பது.

விளக்கவுரை

இங்கு எழுப்பப்படுபவள் சிவபெருமானிடத்துப் பேரன்புடையள் என்பது, சென்ற மகளிர் பின்னர்க் கூறும் அவற்றான் இனிது விளங்கும். அதனால், இவளை அனைவரும் 'அன்னையே' என்று விளித்தனர். செய்யுளாதலின், 'இவையும்' என்ற சுட்டுப் பெயர் முன்வந்தது. இது, பின்வருகின்ற, மிக்க துயில், எழுப்பிய பொழுதும் வாய்வாளாது கிடத்தல் என்பவற்றைச் சுட்டிற்று. சிலவோ- உன் தன்மைகளிற் சிலவோ. ஒருவன் - ஒப்பற்றவன். இருஞ்சீரான் - 'பெரிய புகழையுடையவன்'. அரியானும், ஒருவனும், சீரானும் ஆகியவனது சின்னங்கள் என்க. 'விடியலில் திருச்சின்னங்கள் ஊதுதல் கேட்கப்படும்பொழுதே துயிலுணர்ந்து சிவ சிவ என்று சொல்லுவாய்; பின்பு, எழுந்த அடியவர்கள் பாண்டிநாட்டையுடைய பெருமானே என்று பாடுதற்கு முன்பே நெருப்பைச் சேர்ந்த மெழுகு போல உள்ளமும் உடலும் உருகுவாய்; ஆயினும், இன்று யாங்கள் உன்வாயிலில் வந்து, இறைவனைத் தனித்தனியே பலவாறாகப் பாடினோம்; இன்னமும் உறங்குகின்றாய்; இறைவனிடத்து அன் பில்லாத வலிய நெஞ்சத்தையுடைய பெண்டிர்போல வாயும் திறவாது கிடக்கின்றாய்; உறக்கத்தின் பெருமைதான் என்னே' என, எழுப்ப வந்த மகளிர் இவளது நிலையை எல்லாம் விரித்துக் கூறினர்.

'கேட்பவே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. 'துயிலுணர்ந்தபின் முதற் சொல்லாகத் திருவைந்தெழுத்தையே சொல்லுவாய்' என்றற்கு, 'சிவனென்றே வாய்திறப்பாய்' என்றனர். 'தென்னா என்னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்' என்றது, 'அம்பு

படுமுன் தலை துணிந்தது' என்றல்போல, விரைவு மிகுதி குறித்தது. இதனை, 'காரியம் முந்தூறூஉங் காரணநிலை' எனக்கூறி, ஏதுவணி யின்பாற் படுப்பர், அணிநூலுடையார். 'ஆனை' என்றது, காதற் சொல். அரையன் - அரசன்; தலைவன். தனித்தனியே பாடினமையின் 'என்' என ஒருமையாற் கூறினர். 'எல்லாம்' என்பதே தன்மை யிடத்தை யுணர்த்துமாயினும், அது திரிபுடைத்து. 'எல்லோம்' என்பது அதனைத் திரிபின்றி யுணர்த்தும். 'எல்லாரும், எல்லீரும்' என்னும் படர்க்கை முன்னிலைப் பெயர்கள்போல, 'எல்லோமும்' என்னும் தன்மைப் பெயரும், இறுதியில் உம்மையொடு நின்றது. 'கேள்' என்றதனை' 'அன்னே' என்றதன் பின்னர்க் கூட்டுக. 'வெவ் வேறாய்ச் சொன்னோம்' என இயையும். 'இன்னமும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. பேதையர் - பெண்டிர்; 'அறிவில்லாதவர்' என்பதும் நயம். 'துயில்' என்றதற்கு, 'எல்லாரையும் ஆட்கொள்கின்ற உறக்கம்' என உரைக்க. 'பரிசு' என்றது பெருமையை. கொடுமை யாகிய இழிவை, 'பெருமை' என்றது இகழ்ச்சிப்பற்றி.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். **#161**

கோழி கூவ, எங்கும் மற்றைய பறவைகள் ஓசையை எழுப்பும்; வாத்தியங்கள் ஏழிசை முறையில் இசைக்க, எவ்விடத்தும் வெண்மையான சங்கமானது முழங்கும்; ஒப்பற்ற மேலான கருணை யுடைய சிவபெருமானது, நிகரில்லாத உயர்ந்த புகழை நாங்கள் பாடினோம். அவற்றை நீ கேட்கவில்லையா? வாழ்வாயாக; இது எத்தகையதான தூக்கமோ? வாயைத் திறக்க மாட்டேன் என்கிறாயே! பாற்கடலில் பள்ளி கொள்ளும் திருமால் போல இறைவனிடத்தில் அன்புடையவளான திறமும் இப்படித்தானோ? பேரூழியின் இறுதியில் தலைவனாய் நின்ற ஒருத்தனாகிய உமை பாகனையே பாடுவாயாக.

விளக்கவுரை

'வாழி' என்றதனை முதலில் வைத்து, 'வாழ்தலுடைய வளே' என உரைக்க. 'நன்கு வாழ விரும்புபவளுக்கு இத்துணைப் பேருறக்கம் தகாது' என்பார், இவ்வாறு விளித்தனர். 'ஏழில்' என்றதில் உள்ள, 'இல்' என்னும் பெயரை இதன்பின்னருங் கூட்டுக. இல்லங்களில் கோழி கூவ,

எவ்விடத்தும் பிற பறவைகள் ஒலிக்கின்றன. இல்லங்களில் ஏழிசைகளையுடைய இசைக்கருவிகள் ஒலிக்க, எவ்விடத்தும் சங்குகள் ஒலிக்கின்றன' என்க. 'ஏழ்' என்றது, முன்னர் இசையையும், பின்னர் அவற்றை வெளியிடும் கருவியையும் உணர்த்தினமையின், இருமடியாகுபெயர். இசைக்கருவிகளுள் மிடற்றுக் கருவியும் ஒன்றாதலின், மிடற்றுப் பாடலும் அடங்கிற்று. திருப்பள்ளி எழுச்சி பாடுவாரும், இசை பயில்வோரும் விடியலில் பாடுதல் அறிந்து கொள்க. 'ஏழில்' என்பதே ஒரு கருவியின் பெயராக வும் உரைப்ப.
கேழ் - உவமை. பரம் - மேன்மை. சோதியையும், கருணையையும் உடையவனை, 'சோதி, கருணை' என்றது, ஆகு பெயர். 'சோதியும், கருணையும் ஆயவனது பொருள்கள் பாடினோம்' என்க. பொருள்கள் - இயல்புகள். 'ஈதென்ன உறக்கமோ' என்றது, 'இத்துணை ஓசைகளாலும் நீங்காத இவ்வுறக்கம் எத்தன்மைத்தாய உறக்கமோ; அறிகின்றிலேம்' என்று இகழ்ந்தவாறு. ஆழியான் - மாயோன். அவனது அன்புபோலும் அன்பினை, 'ஆழியான் அன்பு' என்றனர். 'மாயோன் சிவபெருமானுக்குத் தன் கண்ணைப் பறித்துச் சாத்தச் சக்கரம் பெற்றமைபோல, யானும் நெறிமுறை பிழையாது அப் பெருமானை வழிபட்டுப் பெருவாழ்வு பெறுவேன்' என்று கூறுகின்றவள் இவள் என்பது, 'ஆழியான் அன்புடைமை யாமாறும் இவ்வாறோ' என்ற ஏச்சுரையாற் பெறப்பட்டது. 'நெறிமுறை பிறழாது சிவனை வழிபடுவேன்' என்ற நீதானோ, இத்துணை ஓசை எழவும் எழாது உறங்குகின்றாய்; 'நீதானோ பெருவாழ்வு பெறப்போகின்றவள்' என்பது கருத்து. 'மாயோனது அன்பினை நீயும் பெறுதற்கு, அவன் எழாதே உறங்குதல்போல நீயும் உறங்குகின்றாய் போலும்' என்பது உள்ளுறை நகை.
ஊழி முதல்வன் - ஊழிகள் பலவற்றிற்கும் முதல்வன்; 'அவற்றால் தாக்குண்ணாத முதல்வன்' என்றபடி. ஏழை - பெண்; உமை. 'பங்காளனையே' என்ற பிரிநிலை ஏகாரம், 'நீ வழிபடுவேன் என்று சொல்லும் அவனையே பாடு என்கின்றோம்; பிறரைப் பாடு என்கின்றிலோம்' எனப் பொருள் தந்து நின்றது.
இத்துணையும் வந்த திருப்பாட்டுக்கள், மகளிருள் முன் எழுந்தோர், பின்னர் எழற்பாலாரை அவர்தம் வாயிலிற் சென்று அவரை எழுப்பியன. அடுத்துவரும் திருப்பாட்டு அவர் எல்லாரும் ஒருங்கு கூடியபின், முதற்கண் இறைவனைப் பரவுவது.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்

அன்னவரே எம்கணவ ராவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய். **#162**

முற்பட்டனவாகிய பழமையானபொருள்களுக்கும் முற்பட்ட பழமையான பொருளே! பிற்பட்டனவாகிய புதிய பொருள் களுக்கும் புதிய பொருளாகி நின்ற அத்தன்மையனே! உன்னை ஆண்டவனாகப் பெற்ற உன் சிறப்பு மிக்க அடிமைகளாகிய யாங்கள் உன் தொண்டர்களின் திருவடிகளை வணங்குவோம்; அங்கே அவர்களுக்கு உரிமை உடையவர்களாவோம்; அவர்களே எங்கள் கணவராவார்கள். அவர்கள் விரும்பிக் கட்டளையிட்ட வண்ணமே, அவர்கட்கு அடிமையாய் நின்று ஏவல் செய்வோம்; எங்கள் பெருமானே! எங்களுக்கு இம்முறையே கிடைக்குமாறு அருள் புரிவாயாயின் எவ்வகையான குறைபாடும் இல்லாதவர்களாய் இருப்போம்.

விளக்கவுரை

முன்னைப் பழம்பொருள் - முன்னே தோன்றிநின்று மறைந்த பொருள். மறையாது நிற்கும் பொருளும் இதன்கண் அடங்கும். இவை இரண்டற்கும் முன்னேயுள்ள பழையோன் இறைவன். பின்னைப் புதுமை - இனித் தோன்ற இருக்கின்ற புதுப் பொருள். இதற்கும் முற்கூறியதுபோலவே பின்னேயுள்ளவன் இறைவன். இறைவன் பொருள்களைத் தோற்றுவிக்குங்கால், காலத்தின் வழி முற்பிற்பாடு தோன்றத் தோற்றுவித்து, தான் அதற்கு அப்பாற்பட்டு நிற்றலையே இங்ஙனங் குறித்தனர். 'உன்னையே' என்னும் பிரிநிலை ஏகாரம் விரிக்க. பிரான் - முதல்வன். பெறுதல், அறிவினால் என்க. பாங்கு - துணை. ஆவார் - ஆதற்கு உரியார். 'தொழும்பாய்' என்றது, 'மனத்தோடு பொருந்தி' என்றவாறு.
இதனால், கன்னிமையுடையராகிய இம் மகளிர், இளமைக் கண்ணே சிவபெருமானுக்கு அன்புடையராய் ஒழுகும் ஆடவரே தமக்குக் கணவராய் வாய்த்தல் வேண்டும் என அப்பெருமானை வேண்டினமை கூறப்பட்டது.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்

ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். **#163**

இறைவன் திருவடிக் கமலங்கள், கீழ் உலகம் ஏழினுக்கும் கீழாய், சொல்லுக்கு அளவு படாதவையாய் இருக்கும்; மலர்கள் நிறைந்து அழகு செய்யப்பட்ட அவனது திருமுடியும், மேலுள்ள பொருள் எல்லாவற்றுக்கும் மேலுள்ள முடிவிடமாய் இருக்கும்; அவன் ஒரேவகையானவன் அல்லன்; ஒரு பக்கம் பெண்ணுருவாய் இருப்பவன்; வேதமுதலாக, விண்ணுலகத்தாரும், மண்ணுலகத்தாரும் புகழ்ந்தாலும், சொல்லுதற்கு முடியாத ஒப்பற்ற நண்பன்; அடியார் நடுவுள் இருப்பவன். அத்தன்மையனாகிய சிவபெருமானது ஆலயத்திலுள்ள, குற்றமில்லாத குலத்தையுடைய, பணிப்பெண்களே! அவன் ஊர் யாது? அவன் பெயர் யாது? அவனுக்கு உறவினர் யாவர்? அவனுக்கு அந்நியர் யாவர்? அவனைப் பாடும் வகை யாது?

விளக்கவுரை

இத்திருப்பாட்டு இல்லங்களின்றும் எழுந்து சென்று குழாங்கூடிய மகளிர், சிவபிரானைப் பரவிய பின்னர் நீர்த்துறையை அடைந்து, அங்குத் தமக்கு முன்னே வந்துள்ள அப்பெருமான் கோயி லிற் பணிபுரியும் மகளிரைக் கண்டு அவர்களோடு கூடி அவன் புகழைப் பேசி மகிழ்ந்தது.

பொருள்கோள்: *'கோதில் குலத்துத் தோன்றிய, அரன்றன் கோயிற் பிணாப் பிள்ளைகாள்! அவன்றன் பாதமலர் பாதாளம் ஏழினும் கீழ்; போது ஆர் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவு; அவன் திருமேனி ஒன்றல்லன்; ஒருபால் பேதை; வேத முதல்; விண் ணோரும் மண்ணும் துதித்தாலும், ஓத உலவா ஒரு தோழன்; தொண்டர் உளன்: ஆதலின், அவன் ஊர் ஏது? அவன் பேர் ஏது? அவனுக்கு ஆர் உற்றார்? ஆர் அயலார்? அவனைப் பாடும் பரிசு ஏது?'*

திருக்கோயிற் பணிபுரியும் மகளிர் என்றும் கன்னிமை யுடையர். இந்நிலை, அவர் தாமே விரும்பி மேற்கொள்வது. அவரது மனநிலையை அறிந்து அவர்தம் பெற்றோரும் அதற்கிசைந்து விடை கொடுப்பர். பின்னர் கோயிற்கு அணித்தாய் உள்ள கன்னி மாடத்தில் தங்கிக் கோயிலினின்றும் பெறும் உணவு உடைகளால் வாழ்ந்து கோயிற் பணிகளையே செய்வர். இறைவன் ஆணைவழிப் பின்னர் நம்பியாரூரை மணந்த சங்கிலியார், முன்னர் மேற்கொண்டிருந்த நிலை இதுவே என்பதை, வரலாறு நோக்கி அறிந்து கொள்க. இவருள் இறுதிகாறும் கன்னியராய் இராது மணம் புரிந்து கொள்ளும் நிலை உண்டாகுமாயின், அங்ஙனம் செய்து கொள்ளுதலும் உண்டு என்பதற்கும் அவ்வரலாறே சான்றாம்.

சொற்கழிவு - சொல்செல்லாது நின்ற இடம். போது ஆர் - மலர் நிறைந்த.

புனை - அழகிய. 'முடிவும்' என்னும் உம்மை தொகுத்த லாயிற்று. முடிவும் - முடிவுமாகிய இடம். முடிவுக்கு மேல் உள்ள இடத்தையே 'முடிவு' என்றார். 'சொற்கழிவு' என்றதனால், பொருள் இன்மையையும், 'பொருள் முடிவு' என்றதனால், சொல்செல்லா மையையும் உணரவைத்தார். இவற்றால் வியாபகத் தன்மை குறிக்கப் பட்டது. 'ஒன்று' என்றது, ஒரு தன்மையை. திருமேனி ஒன்றாகாமைக்குக் காரணமாக, 'ஒருபால் பேதை' என்றார். 'ஒருபால்' என்றதற்கு, 'திருமேனியின் ஒரு கூற்றில்' என்க. பேதை - பெண்; என்றது, பெண்ணுருவினை. இதன்பின் 'உளது' என்பது எஞ்சி நின்றது. 'ஓருடம் பிருவ ராகி' *(தி.4.ப.22.பா.6)* என்று அருளிச் செய்தார், திருநாவுக்கரசு சுவாமிகளும் வேத முதல் - வேதத்திற்கு முதல்வன். 'மண்' என்றதும், மண்ணோரையே. துதித்தல் - புகழ்தல். 'அவர் ஓத உலவா' என்க. 'ஓத' என்றதும், 'துதிக்க' என்றதாம். புகழது உலவாமையை அதனை உடையான்மேல் வைத்துக் கூறினார். உலத்தல் - முடிதல். ஒரு தோழன் - ஒப்பற்ற தோழன். இறைவனோடு ஆண்டான் அடிமைத் திறத்திலன்றித் தோழமை முறையிலும் அடியவர் உரிமை கொள்ளுதல் பற்றி இறைவனை, 'தோழன்' என்றார். 'தோழா போற்றி' *(அடி 120)* எனப் போற்றித்திருவகவலிலும் அருளிச் செய்தமை காண்க. 'விரும்பி நின்ற - பத்தாம் அடியார்க்கோர் பாங்கனுமாம்' *(தி.6.ப.15.பா.2)* என்ற திருநாவுக்கரசர் திருமொழியையும் காண்க. 'ஒருதோழந் தொண்டருளன்' என்பதே பாடம் எனவும், 'தோழம்' என்பது, 'பேரெண்' எனப் பொருள்படும் எனவும் கூறுவாரும் உளர். அவர், 'உளன்' என்றதற்கு 'உடையன்' எனப் பொருள் உரைப்பர். தொண்டர் உளன் - அடியவர் உள்ளத்திலிருப்பவன். இதன்பின், 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. 'யாது' என்பது, 'ஏது' என மருவி வழங்கும். இவ்வினா, ஈண்டுப் பல இடத்தும், யாதும் இன்மையைக் குறித்து நின்றது. 'பரிசு' என்றது, வகையை. 'கருவி கரணங்களால் ஏகதேசப்பட்டு நிற்பவர்க்கே ஊரும், பேரும், உற்றாரும், அயலாரும், பாடும் வகையும் உள்ளன; அவ்வாறன்றி வியாபகனாய் நிற்கும் இறைவனுக்கு அவை இலவாதலின், இயன்ற அளவிலே நாம் பாடுகின்றேம்' என்றவாறு.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். **#164**

நிறைந்த நெருப்புப் போன்ற செந்நிறம் உடைய வனே! வெண்மையான திருநீற்றுப் பொடியில் மூழ்கியவனே! ஈசனே! சிற்றிடையையும், மைபொருந்திய பெரிய கண்களையும் உடைய உமையம்மையின் கணவனே! அழகனே! வண்டுகள் மொய்த்தலைப் பொருந்திய அகன்ற தடாகத்தில், முகேர் என்ற ஒலி எழும்படி புகுந்து, கையால் குடைந்து குடைந்து மூழ்கி, உன் திருவடியைப் புகழ்ந்து பாடி, பரம்பரை அடிமைகளாகிய நாங்கள், வாழ்ந்தோம்; தலைவனே! நீ எங்களை அடிமை கொண்டருளுகின்ற திருவிளையாட்டினால், துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தைப் பெறுபவர்கள் அவற்றைப் பெறும் வகைகளை எல்லாம் யாங்களும் படிமுறையில் பெற்று விட்டோம். இனி, நாங்கள் பிறவியில் இளைக்காதபடி எங்களைக் காத்தருள்வாயாக.

விளக்கவுரை

விளிகளை எல்லாம் முதலிற் கூட்டி, 'வழியடியோம் பொய்கை புக்கு முகேர் என்னக் குடைந்து உன் கழல்பாடி வாழ்ந் தோம்' எனவும், 'நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் உய்ந்தொழிந் தோம்; இனி எம்மை எய்யாமற் காப்பாய்' எனவும் வினைமுடிக்க. மொய் ஆர் - மொய்த்தல் (நெருங்குதல்) பொருந்திய. மொய்த்தலுக்கு வினைமுதல் நீராடுவோர். மலர்களை நாடி வரும் வண்டுகளையும் கொள்வர். தடம் பொய்கை - பெரிய குளம். 'முகேர்' என்றது, ஒலிக்குறிப்பு. குடைதல் - துழாவுதல். பாடும் பொழுது நீரைக் கையால் துழாவிநிற்றல் இயல்பு. வழியடியோம் - குடிமுழுதுமாகத் தொன்றுதொட்டு அடியராயினோம். காண், முன்னிலை அசை. 'கழல்பாடி வாழ்ந்தோம்' என்றது, 'பாடுதலாகிய பேற்றைப் பெற்றோம்' என்றபடி. இவை, முன்னர் நிகழ்ந்தன. ஆரழல் போல் செய்யன் - அணுகுதற்கரிய தீப்போலச் சிவந்த திருமேனியை யுடையவன். 'ஆட்கொண்டருளும் விளையாட்டு' என்றது, 'படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்' என்னும் ஐந்தொழிலையுமாம் என்பது, வருகின்ற திருப்பாட்டுள், 'காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி' என்பதனால் விளங்கும். ஐந் தொழில்களுள் அருளலையன்றி ஏனையவற்றையும் ஆட்கொண் டருளுதலாக அருளிச் செய்தது, அவையெல்லாம் அருளலுக்கு ஏதுவாம் முறைமை பற்றியே செய்யப்படுதலாம். இத் தொழில்களை இறைவனுக்கு விளையாட்டு என்றல், 'ஐங்கலப் பாரம் சுமத்தல் சாத்தற்கு விளையாட்டு' என்பது போல, எளிதிற் செய்தல் பற்றியே யாம் என்பதனை, மாதவச் சிவஞான யோகிகள் சிவஞான போத மாபாடியத்தும், சிவஞான சித்தி உரையிடத்தும் இனிது விளக்கிப் போந்தமை காண்க. உய்வார்கள் உய்யும் வகை, அவரவர் நிலைக் கேற்ப, மண்ணுலக இன்பங்களையும், விண்ணுலக இன்பங்களையும், வீட்டுலகத்தில் உடம்பொடுநின்று நுகரும்

இன்பங்களையும் பெறும் நிலைகளாம். வகை எல்லாம் - வகையால் எல்லாம். 'உய்ந்தொழிந் தோம்' என்றதில் ஒழிதல், துணிவுப் பொருள்பற்றி வந்தது. எய்த்தல்- பிறவியிற் சென்று இளைத்தல். எனவே, மேற்கூறியவாறு உய்ந்தவை அனைத்தும் பிறவி நீங்கிய நிலையாகாமை பெறப்பட்டது. இங்ஙனம் எல்லாவற்றையும் வெறுத்து, பிறவியற்ற நிலையாகிய பரமுத்தியை வேண்டுதல் அடிகளது விருப்பமேயாம். எனினும், இதனைப் பெண்கள் கூற்றாக அவர் அருளிச் செய்தமையின், 'எய்யாமல் காப்பாய்' என்றதற்கு, அப் பெண்கள் இந்நிலையினையே விரும்பும் ஆடவருக்கே தாம் வாழ்க்கைப்படுமாறு அருளுதல் வேண்டும் என வேண்டினார் என உரைத்துக்கொள்க. 'காவாய்' என்னும் ஏவல் வினையை மரூஉ வழக்காக, 'காப்பாய்' என முன்னிலை வினை போல அருளினார், இளமகளிர் கூற்றாதல் பற்றி. இத் திருப்பாட்டு, இல்லங்களினின்றும் போந்த மகளிர் நீராடுதற்கண் இறைவனைப் பரவியது.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தம் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். **#165**

நம்மைப் பிணித்த பிறவித் துன்பம் ஒழியும்படி, நாம் மகிழ்ந்து ஆடுகின்ற தீர்த்தமாய் உள்ளவன், அழகிய தில்லையின் கண்ணுள்ள ஞான சபையில் அனலேந்தி ஆடுகின்ற கூத்தப்பிரான். விண்ணுலகத்தையும் நிலவுலகத்தையும் நம் எல்லோரையும், தோற்று வித்தும் நிலை பெறுத்தியும், நீக்கியும், விளையாடுபவனாகிய இறை வனது பொருள் சேர் புகழை உரைத்து, வளையல்கள் ஒலிக்கவும், நீண்ட மேகலை முதலிய அணிகள் அசைந்து ஓசை எழுப்பவும் அழகிய கூந்தலின் மேல், வண்டுகள் எழுந்து முழங்கவும் மலர்கள் விளங்குகின்ற பொய்கையில் ஆடி, நம்மை உடைய இறைவனது பொன் போன்ற திருவடிகளைத் துதித்துப் பெரிய மலைச் சுனை நீரில் மூழ்குவாயாக.

விளக்கவுரை

இது முதலாக வரும் நான்கு பாடல்கள், அன்ன மகளிர் இறைவனைப் பாடிக்கொண்டே நீராடுவன. இவற்றுள், ஒருவரை முன்னிலைப்படுத்தியேனும், பலரையும் உளப்படுத்தியேனும் சில சொல்லி ஆடுவர்.

ஆர்த்த - பிணித்துள்ள. 'துயர்' என்றது வெப்பத்தை. ஆர்த்து- ஆரவாரித்து; 'மகிழ்ந்து' என்றபடி. தீர்த்தன் - தீர்த்தமாய் உள்ளவன். தீ ஆடும் - தீயோடு ஆடுகின்ற. கூத்தப் பெருமான் திருக்கைகளில் ஒன்றில் தீயேந்தியிருத்தல் அறிக. குவலயம் - பூ மண்டலம். 'எல்லோமும்' எனத்தன்மை யிடத்தால் ஓதினமையின், 'நம் எல்லோரையும்' என்று உரைக்க. 'நம்' என்றது மக்கள் எல்லாரையும் உளப்படுத்து. இவ்வாறு மக்கள் இனத்தை வேறு கூறினர், அவர் சிறப்புடைய உலகமாதல் பற்றி. 'இறைவனால் ஆட்கொள்ளப்படும் பேற்றால், தேவரினும் மக்களே சிறப்புடையர்' என அடிகள் பல விடத்தும் ஓதியருளுதல் காண்க. 'விளையாடி' என்றது, முன்னர், 'கூத்தன்' என்றதனோடு இயைந்து நின்ற பெயர். 'கூத்தனும், விளையாடியும் ஆகியவனது வார்த்தை' என்க. வார்த்தை - செய்தி; புகழ், 'வார்த்தையும்' என்ற உம்மை சிறப்பு. சிலம்ப - ஒலிக்க. வார் - நீண்ட. மேகலைகளை, 'கலைகள்' என்றது, முதற்குறை. ஆர்ப்பு - ஆரவாரிப்பு. அரவம் - ஒலி 'ஆரவாரிப்பாகிய ஒலி' என்க. 'குடைந்த பின்' என்பது, 'குடைந்து' எனத் திரிந்து நின்றது. குடைந்து - முழுகி. 'உடையான் பொற்பாதம் ஏத்தி' என்றதன்பின், வளைசிலம்புதல் முதலியவற்றைச் சுட்டும், 'அவ்வாறு, என்பது வருவிக்க. நீராடு மகளிர், பொய்கை, சுனை, அருவி, மடு, யாறு, கடல் என்னும் அனைத்திலும் ஆடுதல் இயல்பு. அவற்றுள், இது சுனையாடுவார் கூறியது.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். **#166**

பசுமையான குவளையின் கருமையான மலர் களை உடைமையாலும், செந்தாமரையின் குளிர்ந்த மலர்களை உடைமையாலும், கையில் வளையற் கூட்டத்தை உடைமையாலும் பின்னிக் கிடக்கின்ற பாம்பினாலும் தங்கள் மலம் கழுவுவார் வந்து நீக்கிக் கொள்ள அடைதலாலும், எம்பெருமாட்டியையும் எங்கள் பெருமானையும் போன்று பொருந்திய நீர் பொங்குகின்ற மடுவை யுடைய பொய்கையில் புகும்படி வீழ்ந்து, மூழ்கி, நம் சங்கு வளையல்கள் கலகலக்கவும் காற்சிலம்புகள் கலந்து ஒலிக்கவும் தனங்கள் பூரிக்கவும், முழ்குகின்ற நீர் பொங்கவும் தாமரை மலர்கள் நிறைந்த நீரில் பாய்ந்து ஆடுவாயாக.

விளக்கவுரை

இத்திருப்பாட்டுள், அன்ன மகளிர், தாம் ஆடச் சென்ற மடுவினை மாதொருகூறன் வடிவமாகக் கண்டு மகிழ்ந்து கூறுதல் சொல்லப்படுகின்றது.
கார் மலர் - கரிய மலர். குவளையின் கரியமலர் இறைவியது நிறத்தையும், செந்தாமரை மலர் இறைவனது நிறத்தையும் காட்டும். குருகு - பறவை; சொற் பொதுமையால் இது அம்மையது வளையையும் உடனிலையாகச் சுட்டிற்று. பின்னும் அரவத்தால் - மேலும் மேலும் எழுகின்ற ஒலியால். இதுவும் அவ்வாற்றால், இறைவன் மீது ஒன்றோடொன்று பொருந்தி ஊரும் பாம்பினைக் குறித்தது. 'மலம்' என்றது, மடுவிற்கு ஆங்கால் உடல் அழுக்கையும், இறைவன் இறைவியர்க்கு ஆங்கால் உயிர் அழுக்கையும் குறிக்கும். இசைந்த - பொருந்திய. பொங்கு மடு - மிகுந்த மடு. கலந்து - ஏனைய காலணிகளுடன் சேர்ந்து. விளையாட்டு மகிழ்ச்சியால் உடல் பூரித்தலின், கொங்கைகளும் பூரிப்பவாயின. மடுவிலும் தாமரைகள் நிரம்பி இருக்குமாகலின், 'பங்கயப் பூம்புனல்' என்று அருளினார். இது, மடுவாடுவார் கூறியது.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். **#167**

காதில் பொருந்திய குழை அசையவும், பசிய பொன்னால் ஆகிய அணிகள் அசையவும் பூமாலை கூந்தலில் இருந்து அசையவும் மாலையைச் சுற்றும் வண்டின் கூட்டம் அசையவும், குளிர்ச்சியாகிய நீரில் மூழ்கித் தில்லைச் சிற்றம்பலத்தைப் புகழ்ந்து பாடி, வேதப் பொருளாகிய சிவபிரானைப் பாடி, அப்பொருள் நமக்கு ஆகும் வண்ணம் பாடிப் பரஞ்சோதியின் தன்மையைப் பாடி, இறைவன் சென்னியில் சூழ்ந்துள்ள கொன்றையைப் பாடி, அவன் ஆதியான தன்மையைப் பாடி, அவன் அந்தமான முறையைப் பாடி, பக்குவமுறைகட்கு ஏற்ப வேறுபடுத்தி, நம்மை ஆக்கமாய வேறுபாடுறுத்தி உயர்த்திய, வளையலை உடைய உமாதேவியின் திருவடியின் தன்மையைப் பாடி ஆடுவாயாக.

விளக்கவுரை

இத்திருப்பாட்டுள், அன்ன மகளிர் இறைவனையும், இறைவியையும்

பலபடியாகப் பாடி ஆடுதல் கூறப்படுகின்றது. 'சிற்றம்பலம் பாடி' என்றது தொடங்கி, 'பாதத் திறம் பாடி' என்றதுகாறும் உள்ளவற்றை முதற்கண் கூட்டுக. காது ஆர் - காதில் பொருந்திய. 'பைங் கலன்' என இயையும். பசிய பொன்னாற் செய்யப்பட்டமையின், கலனும் பசுமையுடைத் தாயிற்று. 'கலன்' என்பது பொதுச் சொல்லாதலின், 'பூண்கலன்' என அடைபுணர்க்கப்பட்டது. பூண்கலன், வினைத்தொகை. கோதை - மாலை. 'மாலை கூந்தலின்கண் ஆட' என்க. 'கோதைக் குழலாட' எனவும் பாடம் ஓதுவர். சீதப் புனல் - தண்ணிய நீர். இஃது, 'ஆடுதற்கு இனிதாம்' எனக்குறித்தவாறு. 'புனலின்கண்' என ஏழாவது விரிக்க. வேதப் பொருள் - வேதத்துள் கூறப்பட்ட முதற் பொருளின் இயல்பு. அப்பொருள் - அவ்வியல்பையுடைய பொருள். ஆமாறு - ஆமாற் றினை; என்றது, 'சிவபெருமானிடமே அவ்வியல்பு காணப்படுமாற் றினை' என்றபடி. 'ஆமாறு' என்றதனை 'ஆதி' என்றதற்கும், கூட்டுக. 'சோதி' என்றது 'சிவன்' என்னும் அளவாய் நின்றது. சூழ் - மார் பினைச் சூழ்ந்துள்ள. 'தார்' என்றது, அதனது சிறப்பினை. ஆதியும், அந்தமும் ஆதல், 'உலகிற்கு' என்க. பேதித்தல் - ஒருகாலைக் கொருகால் அறிவு வேறாகச் செய்தல். 'வளர்த்து' என்றதனால், இது ஆக்க மாய வேறுபாட்டையே குறிக்கும். எடுத்த - உயர்த்திய. இறை வனது அருட் சத்தியே முன்னர் மறைப்புச் சத்தியாயும், பின்னர் விளக்கற் சத்தியாயும் நின்று அறிவை வளர்த்தலின், 'வளர்த்தெடுத்த பெய்வளை' என்றார். மறைத்தல் அதற்கியல்பாகாது விளக்குதலே இயல்பாகலின், விளக்கத் தொடங்கும் நிலையே, 'சத்திநிபாதம்' எனப்படுகின்றது. மறைத்தலேயன்றி, விளக்குதலாகிய சத்தி நிபாதமும், 'மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம்' என நால்வகைப் பட்டு, அவற்றுள் ஒன்று நான்காயும், மற்றும் அவ்வாற்றால் பலவாயும் நிகழ்தலின், 'பேதித்து' என்று அருளிச் செய்தார். புனல் ஆடி ஆடு - நீரின்கண் விளையாடி மூழ்கு. 'சிற்றம்பலம்பாடி' என்றதனால், இது, கோயிற்றிருக்குளம் ஆடுவார் கூறியதாம். இத் திருக்குளம், 'சிவகங்கை' எனப்படுகின்றது.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். **#168**

கச்சணிந்த அழகிய அணியுடன் கூடிய கொங்கை களை உடையீர்! ஒவ்வொரு சமயத்தில், எம்பெருமான் என்று சொல்லி வந்து இப்பொழுது நம்மிறைவனது பெருமையை ஒருகாலும் வாயினாள் கூறுதலை நீங்காதவளாகிய இவள் மனம் மகிழ்ச்சி மிக விழிகளினின்றும், ஒருபொழுதும் நீங்காத நீரின் நீண்ட தாரைகள் ஒழுகப் பூமியின்மேல் ஒருமுறையே வீழ்ந்து எழாது வணங்குவாள். பிற தேவரைத் தான் வணங்கமாட்டாள். பெரிய தலைவனாகிய இறைவன் பொருட்டு ஒருவர் பித்தராகுமாறும் இவ்வாறோ? இவ் வாறு பிறரை அடிமை கொள்ளும் ஞான உருவினர் யார் ஒருவரோ, அவருடைய திருவடியை நாம் வாயாரப் புகழ்ந்து பாடி, அழகிய தோற்றமுடைய மலர்கள் நிறைந்த நீரில் நீர் குதித்து ஆடுவீராக.

விளக்கவுரை

இத்திருப்பாட்டு, அன்னமகளிர், சிவபெருமானது பேரின்ப நிலையை வியந்து பாடி ஆடியது. 'வாருருவப் பூண்முலை யீர்' என்றதனை முதலிற் கொள்க.
ஓரொருகால் - ஒரோவொரு சமயத்தில். எம்பெருமான் என்றென்றே - சிவபெருமான் என்று சொல்லியே. சித்தம் களிகூர - பின்பு உள்ளம் மகிழ்ச்சி மிக. கண் நெடுந்தாரை நீர் ஓவா பனிப்ப - கண்கள் இடையறாத தாரையாகிய நீரை ஒழியாது பெய்ய. நம் பெருமான் சீர் ஒருகால் வாய் ஓவாள் - சிவபெருமானது புகழை ஒரு காலும் வாயினின்றும் ஒழியாதவளாயின இவள். பாரொருகால் வந்தனையாள் - இப்பொழுது நிலத்தில் ஒருமுறையே வணங்கி எழாது கிடக்கின்றாள். விண்ணோரைப் பணியாள் - பிற தேவரை ஒருபோதும் வணங்காள். இங்ஙன் இவ்வண்ணம் ஒருவர் பேரரையற்குப் பித்தும் ஆமாறு - இவ்வுலகத்திலே இவ்வாறு ஒருவர் தம் கடவுள் பொருட்டுப் பித்தும் கொண்டவர் ஆகும்படி. ஆட்கொள்ளும் வித்தகர் ஆர் ஒருவர்- ஆட்கொண்டருளும் தேவர் யாரொருவர் உளர்; ஒருவரும் இலர். தாள் - (ஆதலின், இவ்வாறு ஆட்கொள்பவனாகிய நம் சிவ பெருமானது) திருவடிகளை. (நாம் வாயாரப் பாடிப் புனல் பாய்ந்து ஆடுவோம்). 'சிவபெருமானது பெயரை முதற்கண் சிலபொழுது பொதுவாகச் சொல்லியவள், பின்னர் அதன் பயனாகத் தன்னை மறந்த பேரன்புடையவளாயினாள்; இங்ஙனம் தன்னை அடைந்தவரை வசீகரித்துப் பேரருள் புரியும் தேவர் பிறர் யாவர் உளர்' என வியந்தபடி. 'சீரொருகால்' என்றதில், 'ஒருகாலும்' என்னும் உம்மை தொகுத்தல். 'விண்ணோரைத் தான்பணியாள்' என்றதில் தான், அசை நிலை. 'ஆமாறும்' என்ற சிறப்பும்மையை 'பித்து' என்றதனோடு கூட்டுக. 'தாள்' என்பதற்குமுன், 'அவர்' என்பது வருவிக்க. ஏர் உருவப்புனல் - எழுந்து

தோன்றுகின்ற உருவத்தையுடைய நீர்; என்றது அருவிநீரை. பூம்புனல் - அழகிய நீர். 'ஆட' என்னும் வியங் கோளின் இறுதி அகரம் தொகுத்தலாயிற்று. இஃது அருவி யாடுவார் கூறியது.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். **#169**

மேகமே! முதலில் இந்தக் கடல் நீரை உட்கொண்டு, மேல் எழுந்து எம்மையுடையாளாகிய அம்மையினது திருமேனி போல நீலநிறத்தோடு விளங்கி எம்மை அடிமையாக உடையவளது சிற்றிடை போல மின்னி விளங்கி, எம்பிராட்டி திருவடிமேல் அணிந்த பொன்னினால் செய்யப்பட்ட சிலம்பு போல ஒலித்து, அவளது திருப்புருவம் போல் வானவில் விட்டு, நம்மை அடிமையாக உடையாளாகிய அவ்வம்மையினின்றும் பிரிதல் இல்லாத, எங்கள் தலைவனாகிய இறைவனது, அடியார்களுக்கும், பெண்களாகிய நமக்கும், அவள் திருவுளம் கொண்டு முந்திச் சுரக்கின்ற இனிய அருளே போன்று பொழிவாயாக.

விளக்கவுரை

இத்திருப்பாட்டு, அன்ன மகளிர் உலக நலத்தின் பொருட்டு மழையை நோக்கி வேண்டியது. அங்ஙனம் வேண்டுங்கால், தம் பெண்மைக் கேற்ப, இறைவி தன் சிறப்பே தோன்றக் கூறி வேண்டுவர்.

இதனுள் 'மழை' என்றதனை முதலிற் கொள்க. மழை - மேகம். முன் இக்கடலைச் சுருக்கி - முதற்கண் இக் கடல் நீரைக் குறையப்பண்ணி. குறையப்பண்ணுதல் - முகத்தல். உடையாள் - எப்பொருள்களையும் தனக்கு உரிமையாக உடையவள்; இறைவி. 'இறைவி' என்றது அவளது திருமேனியை. எம்மை ஆளுடையாள் - எம்மை ஆளுதல் உடையவள்; என்றது, 'உலகியலின் நீக்கித் தன்வழி ஒழுகச் செய்பவள்' என்றபடி. இது முதலாக இறைவியைக் குறித்து வரும் மூன்று பெயர்களும், இறுதியில் நிற்கும், 'அவள்' என்பது போலச் சுட்டுப் பெயரளவேயாய் நின்றன. இட்டிடையின் - சிறிய இடைபோல. சிலை - வில். 'குலவுவித்து' என்பது, 'குலவி' என நின்றது. குலவுதல் - விளங்குதல். 'தன்னின்' என்றதில் உள்ள தன், சாரியை. 'எங்கோமான் தன் அன்பர்க்கு முன் அவள் நமக்கு முன்னிச் சுரக்கும் இன்னருள்' என இயைத்துக் கொள்க. அன்பர்க்கு முன்

- அன்பர்க்குச் சுரக்குமுன். முன்னி - நினைத்து. நினைத்தது, பின் நிகழ்வதனை. 'சுரக்கும்' என்றது, சுரந்து பொழிகின்ற எனத் தன் காரியந் தோன்ற நின்றது. 'பொழியாய் மழை' என்றாராயினும், எம்பெருமானது அருளால் பொழியாய் என்பதே கருத்தாகும். 'இக்கடலை' என்றமையால் இது, கடலாடுவார் கூறியதாம். மழையை நினைவு கூர்தல், அவர்க்கே பெரிதும் இயைவதாதல் அறிக.

செங்கண வன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். **#170**

மணம் பொருந்திய கரிய கூந்தலை உடைய பெண்ணே! சிவந்த கண்களையுடைய திருமாலிடத்தும், நான்முக னிடத்தும், பிற தேவர்களிடத்தும், எங்கும் மற்றவர்களிடத்தும் இல்லாததாகிய, ஒப்பற்ற ஆனந்தம் நம்மிடத்து ஆகும்படி, நம்மைப் பெருமைப் படுத்தி, இவ்வுலகிலே நம் வீடுகள் தோறும் எழுந்தருளி வந்து, செந்தாமரை போன்ற அழகிய திருவடியைக் கொடுத்தருளு கின்ற வீரனை, அழகிய கருணை நோக்குடைய மன்னனை, அடிமை களாகிய நமக்கு அமுதம் போல்வானை, நம் தலைவனைப் புகழ்ந்து பாடி, நன்மைகள் பெருக, தாமரை மலர் நிறைந்த நீரில் குதித்து ஆடுவாயாக.

விளக்கவுரை

இத்திருப்பாட்டு, அன்ன மகளிர், இறைவன் தம் இல்லங்கள்தோறும் எழுந்தருளிவந்து அருள்செய்தலை நினைந்து உருகிப் பாடி ஆடியது. இதனுள், 'கொங்குண் கருங்குழலி' என்றதை முதலிற் கொள்க; இது விளி. கொங்கு உண் - வண்டுகள் தேனை உண்கின்ற.
செங்கணவன் - திருமால். 'கண்ணவன்' என்பதில், ணகரம் தொகுக்கப்பட்டது. 'கண்ணவன், தோளவன், நல்லவன்' என்றாற் போல, அகரம் புணர்ந்து வழங்குதல், பிற்கால வழக்கு. எங்கும் இலாததோர் இன்பம், வரம்பிலின்பம். நம்பாலதா - நம்மிடத்ததாதற் பொருட்டு. 'நந்தம்மைக் கோதாட்டி' என்றதனை, 'எழுந்தருளி' என்றதன் பின்னர்க் கூட்டுக. இங்கு - இவ்வுலகத்தில். 'இல்லங்கள் தோறும் எழுந்தருளிப் பொற்பாதம் தந்தருளும்' என, முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கையாகக் கூறினமையின், *(*தொல். சொல் *242)* எழுந்தருளுதல், விழாக்காலத்திற் பலதிருவுருவங்களிலும், எழுந்தருளுதலாம். 'நின்

அடியார் பழங்குடில்தொறும் எழுந்தருளிய பரனே' *(தி.8 திருப்பள்ளி. 8)* என்புழி, 'எழுந்தருளிய' என, இறந்த காலத்தாற் கூறினமையின், அஃது அடியவர் இல்லத்தே தன்னைக் கண்டு வழிபட எழுந்தருளியிருத்தலைக் குறித்ததாம். இனி இவ் விரண்டும் முறையே, குரு சங்கமங்களில், வருதலையும், மதுரையில் இருந்த அடியவள் ஒருத்தி தன் இல்லத்திற் சென்று பிட்டுப் பெற்றமை போன்ற அருட்செயல்களையும் குறிக்கும். இவற்றிற்கு இவ்விரு வகைப் பொருளையும் கொள்க. கோதாட்டி - செம்மைப்படுத்தி. சேவகன் - வீரன். அங்கண் அரசு - அருளால் அழகுபெற்ற கண்களை யுடைய தலைவன். பங்கயப் பூம்புனல், தாமரைப் பூவையுடைய நீர்; வாளாதே, 'பங்கயப் பூம்புனல்' என்றமையின், குளத்து நீர் எனக் கொள்ளப்படுமாகலின், இது பொய்கையாடுவார் கூறியதாம்.

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். **#171**

தோழியே! திரு அண்ணாமலை அண்ணலது திருவடித் தாமரையைப் போய் வணங்குகின்ற தேவர்களது முடி யிலுள்ள இரத்தினங்களின் தொகுதி, ஒளி இழந்தாற்போல கண் களுக்கு நிறையும் சூரியன் தனது கிரணங்களுடன் தோன்றின மையால், இருளானது மறைய நட்சத்திரங்கள் குளிர்ச்சி பொருந்திய ஒளி குன்றி ஒழிய அப்போழ்தில், பெண்ணாகியும், ஆணாகியும், அலி யாகியும், விளங்குகின்ற ஒளி பொருந்திய ஆகாயமாகியும் பூமியாகியும் இத்தனைக்கும் வேறுபட்டும் கண்ணால் பருகப்படுகின்ற அமுதமாய் நின்றவனாகிய இறைவனது திருவடியைப் பாடி இப்புது நீரில் வீழ்ந்து ஆடுவாயாக.

விளக்கவுரை

இதனுள் சிவபெருமான் தேவதேவனாய உயர் வுடையனாதலை நினைந்து பேசுதல் கூறப்படுகின்றது.

வீறு - பெருமை; என்றது, ஒளியை. சிவபெருமானது இரு திருவடியினது ஒளியின்முன், தேவர் பலரது முடியின்கண்ணும் உள்ள அளவிறந்த மணிகளும் ஒருங்குகூடிய கூட்டத்து எழுந்த பேரொளியும் மழுங்கும் என்க. இங்குக் கூறியது பொருளுவமம்;

'பொருளே உவமம் செய்தனர் மொழியினும்

மருளறு சிறப்பினஃதுவம மாகும்'
என்னும் உவமவியல் நூற்பாவினைக் காண்க. இதற்கு உரையாசிரியர் உரைத்த உரை பொருந்துவதன்று. இதனை அணி இயலார், 'விபரீத உவமை' என்றும், 'எதிர்நிலை உவமை' என்றும் கூறுவர். தேவர் பலரது முடிகளும் சிவபெருமானது திருவடியின் முன் குழூமுதல், அவர்கள் அப்பெருமானது அடியில் தங்கள் முடிபட வணங்குதலாம். கண் ஆர் இரவி - கண்ணுக்குத் துணையாய்ப் பொருந்துகின்ற கதிரவன். வந்து - வருதலால். கார் - கருமை; அஃது ஆகுபெயராய், இருளை உணர்த்திற்று. தண் ஆர் ஒளி - குளிர்ச்சி பொருந்திய ஒளி. தாரகைகள் - விண்மீன்கள். அகலுதல் - காணப்படாது மறைதல். 'பிறங்கொளி' என்றதில் ஒளி என்றது, அதனையுடைய பொருள்களைக் குறித்தது. இறைவன் தன் கலப்பினை நோக்கிய வழி உலகமேயாயும், தன் தன்மையை நோக்கியவழி அதனின் வேறாயும் அறியப்படுதல்பற்றி, 'பெண் முதலிய பலவுமாகி, இத்தனையும் வேறாகி' என்று அருளினார். கண் ஆர் அமுதம் - கண்ணால் பருகும் அமுதம்; இது, 'தேவரமுதத்தின் வேறு என்றவாறு; இதனை விலக்குருவகத்தின் பாற்படுத்துக. 'கண்ணாரமுதக் கடலே போற்றி' *(தி.8* போற்றி. *150)* என முன்னருங் கூறினார்.
மேற்கூறியவாறன்றி இவ்வாறும் ஆமென்றலின், 'அமுதமுமாய்' என்ற உம்மை. இறந்தது தழுவிற்று, வாளாதே 'இப்பூம்புனல்' என்றமையின், 'கிடைத்த இந்நீரின்கண்' என்க. இது, விண்மீன்கள் ஒளி மழுங்கிக் கதிரவன் தோன்றுங் காலம் வருதலின், தீர்த்தமாயுள்ளவற்றிற் செல்லாது, கிடைத்த நீரில் ஆடுவார் கூறியது. தீர்த்தமன்மை குறிப்பார். 'இப்புனல்' என்றும், தீர்த்தமன்றாயினும் ஆடப்படுதற்குரியதே என்பார், 'பூம்புனல்' என்றுங் கூறினர்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய். **#172**

எங்கள் தலைவனே! உன் கையில், என் குழந்தை அடைக்கலப் பொருளாகும் என்று வழங்கிவரும் அப்பழமொழியைப் புதுப்பிக்கின்றோம் என்று அஞ்சி, உனக்கு ஒரு விண்ணப்பத்தைச் செய்கின்றோம். கேட்டருள்வாயாக. எங்கள் தனங்கள் உன்னடியவர் அல்லாதார் தோள்களைத் தழுவாதிருக்க; எம் கைகள் உனக்கன்றிப்

பிறதேவர்க்கு எவ்வகையான தொண்டும் செய்யாதிருக்க; இரவும், பகலும், எம் கண்கள் உன்னையன்றி வேறு எந்தப் பொருளையும் காணாதிருக்க; இந்நிலவுலகில் இம்முறையே எங்கள் தலைவனே! நீ எங்களுக்கு அருளுவாயாயின், சூரியன் எத்திக்கில் உதித்தால் எங்களுக்கு என்ன?

விளக்கவுரை

இஃது, அன்ன மகளிர், தமக்குச் சிவபெருமானிடத்து அன்புடையரல்லாத ஆடவர் கணவராய் வருதல் கூடாதவாறு அருளுமாறு இறைவனை வேண்டியது.

'உன்கை' என்பது, 'உங்கை' என, எதுகை நோக்கித் திரிந்தது. இன எதுகையும் பொருந்தும் ஆகலின், 'உன்கை என்பதே பாடம்' எனினும் ஆம். 'உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்றாற்போல' என்பது, ஒரு பொருளைக் காப்பதில் தாமே பெரு விருப்புடையராகிய ஒருவரை நோக்கிப் பிறர், 'நீவிர் இதனைக் குறிக் கொண்டு காப்பீராக' என வேண்டிக் கொள்ளுமிடத்து, 'அவ்வேண்டு கோள் மிகை' என்பதை விளக்கப் பண்டைக் காலத்தில் கூறப்பட்டு வந்ததொரு பழமொழி என்பது, இங்கு அறியப்படுகின்றது.

'தாமே தரும்அவரைத் தம்வலியி னாற்கருத
லாமே இவனா ரதற்கு'

என்னும் திருவருட்பயனை *(70)* இங்கு இதனோடு ஒருவாற்றான் ஒப்பிடலாம். ஆகவே, ஒரு குழவியை, 'கருத்தோடு பாதுகாக்க' என்று அதன் தாய்க்குப் பிறர் கூறுங் கூற்று இது என்பது விளங்கும். இதனை, மணவினை யிடத்து மணமகளை மணமகனிடத்துக் கையடையாகக் கொடுக்குங்காலத்து இருமுதுகுரவர் கூறுவதொரு சொற்றொடர் என்பாரும் உளர். இதனுட் கிடக்கும் சொற்கள் அவ்வாறு பொருள் படுதற்கு ஏலாமையானும், என்றுமே இறைவனிடத்து அடங்கிநின்று, அவனால் நன்கு புறந்தரப்படும் உயிர்களுட் சிலராகிய இம் மகளிர்க்கு, முதற்காலத்தில் இருமுதுகுரவர்க்கு உரியளாய் இருந்து பின்னர் மணமகன் முதலியோரது வேண்டுகோட்கிணங்கி அவனுக்கு அவரால் கொடுக்கப்படுகின்ற கன்னிகை உவமையாதல் கூடாமையானும், அவ்வாறு உரைத்தல் பொருந்தாமை அறிந்துகொள்க.

'என்ற' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'அங்கு அச்சொல்' என்றது, ஒருசொல் நீர்மைத்து. புதுக்கும் அச்சம் - புதுக்குதலால் உளதாம் அச்சம். புதுக்குதல், அதனைத் தாம் பொருளுடையதாக்க முயலுதல். அது பொருளற்றதென யாவராலும் அறியப்பட்டுப் பொருந்தாததாகலின், இறைவற்கு வெகுளிதோன்றுங் கொல் என, மகளிர் அஞ்சுவாராயினர். ஆயினும், அவாமிகுதியால் அதனைச்

செய்யவே துணிந்து, 'எம் அறியாமை நோக்கி முனியாது எம் விண்ணப்பத்தைக் கேட்டருள்' என முன்னர் வேண்டிப் பின்னர்த் தாம் கூறக் கருதியவற்றைக் கூறுகின்றனர்.

நான்கு, ஐந்து, ஆறாம் அடிகளால், மகளிர், சிவபெருமா னிடத்து அன்புடையரல்லாத ஆடவர், தமக்கு எவ்வாற்றானும் கணவராய் அமைதல் கூடாது என்பதனையே பலவாற்றான் வேண்டி னர். பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து தன் சேவடியே சேர்ந்திருக்கும் *(தி.11 அற்புதத் திருவந்தாதி - 1)* மகளிரை அவர் தம் இயல்பிற்கு மாறாய இயல்பினையுடைய ஆடவர்க்கு உரியராக்க இறைவன் நினையானாயினும், தம் வினை காரணமாக ஒரோ வொருகால் அவ்வாறு நிகழினும் நிகழுமோ என்னும் அச்சத்தாலே இம்மகளிர் இங்ஙனம் வேண்டினர். இதனால், சிவபிரானுக்கு வழிவழி அடிமையாய் வருங் குடியிற் பிறந்த ஆடவர்க்காயினும், பெண்டிர்க் காயினும் ஒருவர்மாட்டு ஒருவர்க்குக் காதல் பிறத்தற்கு வாயிலாக முதற்கண் நிற்பது, அவர்க்குச் சிவபிரானிடத்துள்ள அன்பே என்பதும், மெய்ந்நிறைந்த அழகும், கைந்நிறைந்த பொருளும் முதலாயின வெல்லாம் அதன் பின்னிடத்தனவாம் என்பதும் நன்கு விளங்கும். நம்பியாரூரரோடு பரவையாரிடத்துக் காதல் நிகழ்ந்த விடத்தும், சங்கிலியாரைக் கண்டபொழுது அவர்பால் நம்பியாரூரர்க்குக் காதல் நிகழ்ந்தவிடத்தும் இதனையே காண்கின்றோம். இனிச் சங்கிலியாருக்கு நம்பியாரூரர் பால் காதல் பிறப்பிக்க அவரைப்பற்றி இறைவன் அருளியவற்றில், 'சால நம்பால் அன்புடையான்' என்பதையே முதற்கண் அருளியதும் காணத் தக்கது. இத்தகைய நற்குடிப்பிறப்பே ஞானம் பெறுதற்கு வாயில் என்பதனையே, மெய்கண்ட தேவர்,

'... ... ... தவம்செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றார்சூழ் சொல்லுமாங் கண்டு'

(சூத். 8. அதி. 1) என்று அருளிச் செய்தார்.

'தரையினிற் கீழை விட்டுத்
தவம்செய்சா தியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப்
பாக்கியம் பண்ணொணாதே'

(சூ. 2.90) எனச் சிவஞானசித்தி கூறியதூஉம் இதுபற்றி.

ஒன்பதாம் திருப்பாட்டுள் மகளிர், 'சிவபிரானுக்கு அன்புடை யவரைக் கணவராக அடைதல் வேண்டும்' என, உடம்பாட்டு முகத்தான் வேண்டினர். இதனுள், 'அன்னரல்லாதாரைக் கணவராக அடைதல் கூடாது' என, அதனை மறைமுகத்தான் வேண்டினர்; இவை

இவ்விரண்டிற்கும் வேற்றுமை.
சிவபிரானுக்கு அன்பரல்லாதவர்க்கு வாழ்க்கைப்படின், கைகள் பயனற்ற சில பணிகளைச் செய்தலும், கண்கள் பயனில்லாத சில காட்சிகளைக் காணுதலும் உடையனவாதல் கூடுமாகலின், அவற்றை வேண்டா எனக் கூறும் முகத்தால், அன்ன தன்மையர் கணவ ராய் வருதல் வேண்டாமையைக் குறித்தனர். முன்னர், 'உனக் கல்லாது' என்றமையின், 'மற்றொன்றும்' என்றதற்கும், 'உன்னை யல்லாது மற்றொன்றும்' என்று உரைக்கப்படும். தெய்வங்களும் அஃறிணையாகக் கூறப்படுமாதலின், 'மற்றொன்று' என்றதில் அவையும் அடங்கும். இங்கு - இவ்வுலகத்தில். இப்பரிசே - இவ் வாறே. 'எங்கோன்' என்றது இடவழுவமைதி. நல்குதியேல் - அருள் செய்வாயாயின். 'ஞாயிறு எங்கு எழில் எமக்கு என்' என்க. 'எங்கெழி லென் ஞாயிறு' என்பது, கவலையற்றோர் கூறுவதொரு தொடர். கதிரவன் திசைமாறித் தோன்றுதல் முதலிய, இயற்கைக்கு மாறான செயல்கள் நிகழுமாயின், அவை உலகம் கெடுவது காட்டும் குறி *(உற்பாதம்)* என்பர். ஆதலின், ஒன்றானும் குறைவில்லாதோர், இவ்வாறு கூறுதல் வழக்கு.
'வெம்பவரு கிற்பதன்று கூற்றம் நம்மேல்
வெய்ய வினைப்பகையும் பைய நையும்
எம்பரிவுந் தீர்ந்தோம் இடுக்கண் இல்லோம்
எங்கெழிலென் ஞாயிறு எளியோ மல்லோம்'
(தி.6.ப.95.பா.2) என்ற திருத்தாண்டகத்தையும், 'எங்கெழிலென் ஞாயிறெமக் கென்றுகுறை வின்றி'
வெய்ய வினைப்பகையும் பைய நையும்
எம்பரிவுந் தீர்ந்தோம் இடுக்கண் இல்லோம
எங்கெழிலென் ஞாயிறு எளியோ மல்லோம்'
(தி.6.ப.95.பா.2) என்ற திருத்தாண்டகத்தையும்,
'எங்கெழிலென் ஞாயிறெமக் கென்றுகுறை வின்றி'
என்ற சிவஞான சித்தியையும் *(சூ. 8. 31)* காண்க.
'எங்கெழிலென் ஞாயிறென இன்னணம் வளர்ந்தேம்'
என்றாற்போலப் *(சீவகசிந்தாமணி. கனகமாலை - 237)* பிறவிடத்தும் வரும்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்

போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய். #173

எப்பொருளுக்கும் முதலாயுள்ள உன் திருவடி மலருக்கு வணக்கம். எவற்றுக்கும் முடிவாயுள்ள, செந்தளிர் போலும் திருவடிகளுக்கு வணக்கம்; எல்லாவுயிர்களுக்கும் தோன்றுதற்குக் காரணமாகிய பொன்போன்ற திருவடிகளுக்கு வணக்கம், எல்லாவுயிர் களுக்கும் நிலைபெறுதற்குரிய பாதுகாப்பாகிய அழகிய கழலணிந்த திருவடிகளுக்கு வணக்கம். எல்லாவுயிர்களுக்கும் முடிவு எய்துதற்குக் காரணமாகிய திருவடிகள் இரண்டிற்கும் வணக்கம். திருமாலும், பிரமனும், காணமுடியாத திருவடித் தாமரை மலருக்கு வணக்கம். நாம் உய்யும்படி ஆட்கொண்டருளுகின்ற தாமரை மலர்போலும் திருவடி களுக்கு வணக்கம். இங்ஙனம் கூறிப் போற்றி இறைவனை வணங்கி, நாம் மூழ்குவதற்குரிய மார்கழி நீரில் ஆடுவோமாக.

விளக்கவுரை

இத்திருப்பாட்டினுள், அன்ன மகளிர் இறைவனது திருவடியே எல்லாமாய் இருத்தலை உணர்ந்து அவற்றைப் பல முறையானும் போற்றுதல் கூறப்படுகின்றது.

முதல் இரண்டடிகளிலும் உள்ள, 'போற்றி அருளுக' என்பவற்றை அவ்வவ்வடியின் இறுதிக்கண் கூட்டி இருதொடராக்குக. மேலைத் திருப்பாட்டில் உள்ள, 'எங்கள் பெருமான்' என்னும் விளி, இதனுள்ளும் முதற்கண் வந்து இயையும். இதன்கண் திருவடியைக் குறிக்குமிடத்தெல்லாம் நான்காம் வேற்றுமை விரிக்கப்படும். போற்றி- வணக்கம். அருளுக - எமக்கு இரங்குவனவாகுக. இதற்கு 'அவை' என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க. சத்தியே பாதமாகலின், அருளுதல் முதலியன பொருந்துமாறறிக. செந்தளிர், உவமையாகு பெயர். மூன்றாம் அடி முதலிய ஐந்தினும், முறையே, 'உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்' என்னும் ஐந்தொழிலும் கூறப்பட்டமை காண்க. திருமந்திரம் தவிர ஏனைய திருமுறைகளுள் ஐந்தொழிலையும் இனிது விளங்கக் கூறும் திருப்பாட்டு இஃதொன்றேயாம். அதனால், இது சிவாகமங்களுள், 'பஞ்சப்பிரம மந்திரம்' எனக் கூறப்படும் மந்திரங்களோடு ஒருங் கொத்தது. ஐந்தொழிலும் சகலநிலைபற்றிக் கூறப்படுவனவாகலின், 'ஆதி' எனவும், 'அந்தம்' எனவும் வந்தவை. முறையே, கேவல நிலையையும், சுத்த நிலையையும் கூறியவாறாம். சகல நிலைக்கு வாராத உயிர்களும் உளவாதலின், 'ஆம்' என்றார். ஆகவே, எஞ் ஞான்றும் உலகிற்கு நிலைக்களம் இறைவனது திருவடியே என்பதனை இனிது விளங்க அருளிச் செய்தமை காண்க. 'வித்துண்டா மூலம் முளைத்தவா தாரகமாம்

- அத்தன்தாள் நிற்றல்' என்று அருளிச் செய்தார் மெய்கண்ட தேவரும் (சிவஞானபோதம் - சூ. 1. அதி 2). பொன்மலர்கள் பொன்னால் ஆகிய மலர். மலராவது, தாமரை மலரே. 'செந்தளிர்கள், புண்டரிகம், பொன்மலர்கள், என்பன உவமை யாகுபெயர்கள். 'ஆதி, அந்தம்' என அவ்வந் நிலைக்கண் நிற்பன வற்றை அவையேயாகவும், 'தோற்றம் போகம், ஈறு' என, அவற் றிற்குக் காரணமாய் நிற்பவற்றைக் காரியமாகவும் பாற்படுத்து ஓதி யருளினார். 'பொன்மலர்' என்றதன்பின், 'என' என்பது தொகுத் தலாயிற்று. இறுதிக்கண் நின்ற, 'போற்றி' என்பது வினையெச்சம். மார்கழி நீர் - மார்கழியில் ஆடப்படும் நீர். 'மார்கழி' என்பது, அம்மாதத்திற்கேயன்றி, 'மிருகசீரிடம்' என்னும் நாண்மீனுக்கும் பெயர். அதனால், இஃது ஆதிரை மீனையும் குறிக்கும்; என்னை? மிருகசீரிடத்தோடு தொடர்புடைய ஆதிரையையே சிறந்ததெனக் கொள்ப ஆதலின். ஈண்டும், 'ஆட' என்னும் வியங்கோள் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. பொய்கை, சுனை முதலிய பலவற்றினும் ஆடுவார் கூற்றுக்களாக அனைத்தையும் கூறியது அங்ஙனம் அவற்றிற் சென்று ஆடுவார் பலர்க்கும் அத்திருப்பாடல்கள் ஏற்ற பெற்றியாற் பயன் தருதற் பொருட்டென்க. எனவே, இப்பகுதி முழுவதும், எல்லார்க்கும் எல்லாநாளினும் ஒருபெற்றியே நிகழ்வனவற்றைக் கூறியதாகாது, பலர்க்கும் பலநாளினும் பலவாறாக நிகழ்வனவற்றைக் கூறியதே யாதல் பெறப்படும்.

தலைவாயில் முகப்பு பதிகத் தலைப்பு

1.8.திருவம்மானை

செங்கண் நெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
/sபொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
/s தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
/s அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய். #174

திருமாலும் காண்பதற்கரிதாகிய திருவடி இந்தப் பூமியில் படும்படி திருப்பெருந்துறையில் எழுந்தருளி, எம்மையும் எம்மினத்தையும் ஆட்கொண்டு எமக்கு முத்தி நெறியையும் அருள் செய்தமையால் அந்த இறைவனது கருணையையும், திருவடியின் பெருமையையும் யாம் புகழ்ந்து பாடுவோம்.

விளக்கவுரை

இப்பகுதியில், அடிகள் தமக்கு இறைவன் செய்த திருவருளின் பெருமையையே பாடிப் பரவசம் எய்துகின்றாராகலின், இதற்கு, 'ஆனந்தக் களிப்பு' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். ஆனந்தக் களிப்பு - இன்பத்தால் எழுந்த பெருமகிழ்ச்சி. இன்பம், இங்குப் பேரின்பம். பொருள்கோள்: 'பெருந்துறையான், அங்கணன் அந்தணனாய், பாதம் பூதலத்தே போந்தருளி, அறைகூவி ஆட்கொண்டு, பிறப்பறுத் திட்டு வீடருளும் கருணை வார்கழலே அம்மானாய்ப் பாடுதும்'. 'போந்தருளி' என்றதை, 'போந்தருள' எனத் திரிக்க.
'சென்று இடந்தும்' என்றதனை 'இடந்து சென்றும்' என மாறுக. இடத்தல் - நிலத்தைக் கிண்டுதல். 'பொங்கு பாதம்' என இயையும். பொங்கு - ஒளிமிகுகின்ற. தரம் - நிலை. 'ஆட்கொண்டு' என்றது, இங்கு, 'ஏற்றுக்கொண்டு' என்னும் பொருளதாய்நின்றது. தெங்கு - தென்னைமரம். 'தென்னன்' என்பது, இங்கு, 'தென் நன்' எனப் பிரித்து, 'அழகிய நல்ல' எனப் பொருளுரைத்தலன்றிப் பிறவாறு உரைத்தற்கு ஏலாமை அறிக. அறை கூவி - வலிய அழைத்து. தாம் வேண்டாதமுன்பே வந்து அருள்செய்தான்' என்றபடி. காண், முன்னிலையசை. 'அம்மானையாய்' என்பது, 'அம்மானாய்' எனத் தொகுத்தலாயிற்று. அம்மானை - அம்மானைப் பாட்டு. 'ஆய்' என்றதனை, 'ஆக' எனத் திரித்துக்கொள்க. 'அம்மானையாகப் பாடுதும்' என இயையும். 'அம்மானாய்' என்றது, 'அம்மானை' என்றது விளியேற்று வந்தது எனக் கொண்டு, 'விளித்தது முன்னின்றார்களை' எனவும், அம்மானைக் காயை எனவும் பலவாறு உரைப்பர்.

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்

/s ஆராலும் காண்டற் கரியான் எமக்கெளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
/s வாரா வழியருளி வந்தென் உளம்புகுந்த
ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
/s பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மானாய். **#175**

மண்ணுலகத்தார் விண்ணுலகத்தவர் முதலிய எல்லாராலும் காண்பதற்கரியனானவனும், திருப்பெருந்துறையில் எழுந்தருளி என்னைப் பித்தனாக்கினவனும், முத்தி வழியை அறிவித்தவனும், வலை வீசுதல் முதலிய திருவிளையாடல்களைச் செய்தவனும் கருணைக் கடலும் ஆகிய சிவபிரானைப் புகழ்ந்து பாடுவோம்.

விளக்கவுரை

'பார், விசும்பு, பாதாளம்' என்றது இவ்வண்டத்தைக் குறித்தும். *'புறம்'* என்றது, பிற அண்டங்களைக் குறித்துமாம். பேராளன் - புகழுடையவன். *'பெருமையுடையவன்'* என்பாரும் உளர். பித்து, *'பிச்சு'* என வந்தது. *'ஏற்றி'* என்றது, *'ஏற்றியவன்'* எனப் பெயர்; வினையெச்சமாகக்கொண்டு உரைத்தலும் ஆம்.

வாரா வழி - வீட்டு நெறி. *'மீன்'* என்றதில் நான்கனுருபு தொகுத்தல். விசுறுதற்கு, *'வலை'* என்னும் செயப்படுபொருள் எஞ்சிநின்றது. *'ஆசை'* என்பது, இங்கு, கருணையின்மேல் நின்றது. வாரியன் - கடலாய் உள்ளவன்.

இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
/s அந்தரமே நிற்கச் சிவன்அவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
/s சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்தந்த
/s அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய். **#176**

இந்திரன் முதலான தேவர்களும் முனிவர் முதலானோரும் விண்ணிலே நிற்க, எங்களை ஆட்கொள்ளும் பொருட்டுப் பூவுலகில் எழுந்தருளி, எங்கள் மனத்தை உருகச் செய்த திருப்பெருந்துறையான், எமக்கு அருள் செய்த முடிவற்ற இன்பத்தைப் புகழ்ந்து பாடுவோம்.

விளக்கவுரை

'அந்தரத்தே' எனற்பாலதாகிய சாரியை சிறுபான்மை வாராதொழிதலும், *'புலம் புக்கனனே'* *(புறம் - 258)* என்றதனோடு ஒப்பக் கொள்ளப்படும். அந்தரம் - வானுலகம்; *'நிலையின்றி வருந்த'* என்பது நயம். *'தோட்கொண்ட நீறு உள்ளத்தைக் கவர்தலுடையது'* என்பது, மேலே உரைக்கப்பட்டது. *(தி.8 திருச்சதகம் - 33.)* *'நீற்றனாய் வந்து*

சிந்தனையை உருக்கும்' என்க. பந்தம் பறிய - பாசம் நீங்குதலால். 'பறியத் தந்த' என இயையும். 'பரிமேற்கொண்டான் தந்த ஆனந்தம்', என்றது, அடிகள் பொருட்டே. இறைவன் குதிரைகொணர்ந் தனன் என்பதை இனிது விளக்கும். இதுபற்றியே, 'பாய்பரியோன் தந்த பரமானந் தப்பயன்' *(திருக்களிற்றுப் படியார் - 73)* என்றது.

வான்வந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனும்
/s கான்நின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு
/s ஊன்வந்து ரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து
தேன்வந்து அமுதின் தெளிவின் ஒளிவந்த
/s வான்வந்த வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய். **#177**

சாதாரண தேவர்களும், திருமால் பிரமன் இந்திரன் முதலான பெரிய தேவர்களும், காட்டில் சென்று கடுந் தவம் செய்தும் காண்பதற்கு அரியனாகிய சிவபெருமான் தானே வலிய வந்து, அடியேனைத் தாய்போலக் கருணை செய்து, என் உடல் உயிர்கள் உருகச் செய்தமையால், அவன் திருவடியைப் புகழ்ந்து பாடுவோம்.

விளக்கவுரை

வான் வந்த தேவர் - விண்ணுலகில் தோன்றிய தேவர். கான் - காடும். 'தேவர்களும் நிலவுலகத்திற்போந்து தவம் புரிகின்றனர்' என்றபடி. இந்திரன் சீகாழிப்பதியில் தங்கித் தவம் புரிந்தமையைக் கந்த புராணம் விரித்துரைத்தல் காண்க. 'தான்' என்றது 'பரிமேற்கொண்டான்' என மேற் கூறப்பட்ட அவன்' என்ற படி. 'ஊன் உரோமங்கள் வந்து' என மாறுக. வருதல், இங்கு, மேலெழு தல்; சிலிர்த்தல். இதனை, 'வர' எனத் திரிக்க. உயிர்ப்பு - உயிர்த்தல்; மூச்செறிதல்; அன்பினால் இதுவும் உளதாகும். எய்து - எய்துதற்குக் காரணமான; இது, 'கழல்' என்றதனோடு இயையும். 'அமுதின் தெளிவின் தேன்வந்து ஒளிவந்த கழல்' என்க. தேன் வந்து - இனிமை மிகுந்து. வான் வந்த கழல் - பெருமை பொருந்திய திருவடி. வார் கழல், அடையடுத்த ஆகுபெயர்.

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
/s வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
/s வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலம்மன்னும்
/s ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய். **#178**

கற்றறிவு இல்லாமையால் கடையாகிய என்னையும் ஒரு பொருளாய் மதித்து ஆட்கொண்டு, கல்லை நிகர்த்த என் மனத்தைக் குழைத்துத் தன் கருணைக் கடலில் அழுந்தும் படிசெய்து என் வினையை ஒழித்தருளிய

நம் சிற்றம்பலவனைப் புகழ்ந்து பாடுவோம்.

விளக்கவுரை

கல்லாம் மனம் - கல்போன்ற மனம். பிச்சேற்றி - பேரன்பு கொள்ளச் செய்து. 'ஏற்றி' என்றது, 'ஏற்றியதனால்' என்ற வாறு. 'கல்லைப் பிசைந்து கனியாக்கி' என்றது. 'அன்னதொரு செயலைச் செய்து' என்றபடி; 'கல்நார் உரித்த கனியே' *(தி.8 போற்றி -97.)* என முன்னரும் அருளினார். இங்ஙனம் செய்தமைபற்றி, 'வல்லாளன்' என்றார். 'கருணை' என்றது, கருணையால் விளை கின்ற இன்பத்தை. 'பிச்சேற்றி' கருணை வெள்ளத்தழுத்தி' என்றதனால், 'அன்பே இன்பத்திற்குக் காரணம்' என்பது போந்தது. என்றும் இருத்தலை, 'புக்கு மன்னும்' என்றது, பான்மை வழக்கு. ஒல்லை விடை - விரையச் செல்லும் இடபம். இவ்வைந்து திருப்பாட்டுக்களும், பிரிவிடை ஆற்றாளாகிய தலைவியை ஆற்றுவித்தற்பொருட்டுத் தோழி தலைவனை இயற் பழித்தவழி, தலைவி இயற்பட மொழிந்தவாறாக அருளிச்செய்யப் பட்டன. பாடாண் பாட்டில் கைக்கிளை வகையேயன்றி ஐந்திணை வகை வருதலும் உண்டென்க. கடவுள் நெறியாகிய மெய்ந்நெறிப் பொருள் காமப் பொருளாய் வருமிடத்து, இறைவன் தலைவனும், உயிர் தலைவியும், நெஞ்சு தோழியும், பிற தத்துவங்களின் கூட்டம் ஆயத்தார் முதலிய பிறரது கூட்டமுமாய் அமையும். பிறவும் இங்ஙனம் ஏற்ற பெற்றியால் அறிந்து கொள்ளப்படும். இவ்விடத்து, இயற் பழித்தல் உலகியலின் வழிநின்று கூறுதலும், இயற்படமொழிதல் அனுபவம் பற்றிக் கூறுதலுமாம்.

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
/s தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டி
/s தாள்தா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
/s ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய். **#179**

தோழி! திருப்பெருந்துறையான் காட்டாதன எல்லாம் காட்டி, சிவகதியைக் காட்டி, தன் திருவடியைக் காட்டி, தன் கருணையாகிய தேனைக் காட்டி, உலகத்தார் நகைக்கவும், யாம் மேன்மையாகிய முத்தியை அடையவும் எம்மை அடிமை கொண்ட வரலாற்றைப் புகழ்ந்து பாடுவோம்.

விளக்கவுரை

தோழி, ஒருவன் என்னைக் கிறி செய்தவாறு கேட்டாயோ? கேட்டிலையேல் கேள்' எனத் தோற்றுவாய் செய்துரைக்க. பிரிவிடை ஆற்றாளாய்க் கூறுதலின், 'கிறி' என்றாள். கிறி - வஞ்சனை. இஃது

இயற்பழித்தது. 'ஒருவனாவான் இவன்' என்பதை, 'பெருந்துறையான்' என்று விளக்கினாள். 'காட்டாதன வெல்லாம் காட்டி' *(தி.8 திருச்சதகம் - 28)* என்றது, முன்னும் கூறப்பட்டது. 'சிவம் காட்டி'; எனப் பின்னர் வருகின்றமையின், 'எல்லாம்' என்றது அஃதொழிந்த பிறவற்றை என்க. சிவம் - மெய்ப்பொருள், உணர்த்திய முறைமை கூறுகின்றாராதலின், மெய்ப்பொருளை வேறு போலக் கூறினார். 'தாள் தாமரை காட்டி' என்றது, 'கொம்பரில்லாக் கொடி போலப் பற்றுக்கோடின்றித் தமியளாய் அலமந்த எனக்கு அவற்றைப் பற்றுக்கோடாகத் தந்து' என்றபடி. 'கருணைத் தேன்' என்றது, அதனால்விளைகின்ற இன்பத்தை. நாட்டார் - உலகவர். அவர் நகைப்பது, அகலிடத்தார் ஆசாரத்தை அகன்றமை *(தி. 6.ப.25. பா.7.)* பற்றியாம். மேலை வீடு - முடிந்த நிலையாகிய வீடுபேறு; இதனை, 'பரமுத்தி' என்ப. 'நமக்குளதாகும் இப்பெறற்கரும் பேற்றினை அறியாமையால் நாட்டார் நகைக்கின்றாராதலின், அதனான் நமக்கு வருவதோர் தாழ்வில்லை' என்றபடி. 'ஆட்டான்' என்றதில் தான், அசைநிலை. 'ஆண்டான்' அவ்வாற்றைப் பாடுதும்' என்க. ஆண்டவாறே தன்னை அவன் உடன்கொண்டு போகாது நீத்தமையின், இத்துணைத் தலையளியையும், 'கிறி' என்றாள். எனவே, இத் திருப்பாட்டு, 'தலைவர் நம்மை மறந்தொழிவாரல்லர்' எனத் தோழி வற்புறுத்தியவழி, தலைவி வன்புறை எதிரழிந்து அவனை இயற்பழித்ததாம். தோழி தூது செல்வாளாவது இதன் பயன்.

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
/s சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
/s நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
/s ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய். **#180**

இடைவிடாமல் நினைப்பவர்களுடைய மனத்தில் தங்கியிருப்பவனும், நினையாதவர்க்குத் தூரமாய் இருப்பவனும், திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருப்பவனும் வேதங்களை ஓதுபவனும், பெண்பாகனும், எம்மை ஆட்கொண்ட தலைவனும், தாய் போலும் மெய்யன்பு உடையவனும், உலகு ஏழிலும் தானே நிறைந்து அவற்றை ஆள்பவனும் ஆகிய சிவபெருமானைப் புகழ்ந்து பாடுவோம்.

விளக்கவுரை

ஓயாது - மெலியாது; 'சலிப்பின்றி' என்றபடி. எனவே, ஒருகாலைக்கொருகால் இன்பம் மீதூரப்பெறுதல் பெறப்பட்டது. உள்ளான் - உள்ளீடாய் இருப்பவன். 'உள்ளத்தின் உள்ளேநின்ற கருவே' *(தி.6. ப.47. பா.1.)* என அருளிச்செய்தார் திருநாவுக் கரசரும். 'பிறர்க்குச்

சேயான்' என்க.
பாதி - பாதியுடம்பு. தாய் - எல்லாப் பொருட்கும் பிறப்பிடம். தத்துவன் - மெய்ப்பொருளாய் உள்ளவன். ஆள்வான் - யாவரையும் அடியராகக் கொள்பவன்.

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
/s பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
/s கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
/s புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய். **#181**

அன்பர் பாடும் பாடலைப் பரிசிலாகக் கொண்டருள் கின்ற பெண்பாகனும், திருப்பெருந்துறையை உடையவனும், தேவலோகத்தவரும் புகழும்படியான புகழை உடையவனும், மண்ணுலகத் தலைவனும், நெற்றிக் கண்ணனும் ஆகிய கடவுள் கூடற் பதியில், மண் சுமந்து கொண்டு பாண்டியன் கைப்பிரம்படியால் புண் பட்ட பொன்போலும் திருமேனியைப் புகழ்ந்து பாடுவோம்.

விளக்கவுரை

'பாடற்குப் படைத்தருளும்' என்க. பரிசு - பரிசில்; என்றது, 'இம்மை, மறுமை, வீடு' என்னும் மூன்றனையுமாம். 'இசைப் பாடலால் பாடுவோர்க்குப் பேரருள் செய்வன் இறைவன்' என்பதனை இவ்வாறு அருளினார்.

'கோழைமிட றாககவி கோளுமில வாகஇசை
கூடும் வகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொன்மகிழும்
ஈசன்'
(தி.3.ப.71. பா.1.) என ஆளுடைய பிள்ளையாரும்,
'அளப்பில கீதம் சொன்னார்க்
கடிகள்தாம் அருளுமாறே'
(தி. 4.ப.77. பா.3) எனத் திருநாவுக்கரசரும் அருளிச்செய்தல் காண்க.

இனி, 'அடிகள் இவ்வாறு அருளிச்செய்தது, மூவர் தேவாரத் திற்கும், பாணபத்திரர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்னும் இவர் களது இசைக்கும் இறைவன் மகிழ்ந்து அருள் புரிந்தமை பற்றி' என்று உரைப்பாரும் உளர்; அவையெல்லாம், அடிகள், அவர்தம் காலத் திற்குப் பிற்பட்டவரென்பது துணியப்பட்ட வழியே பொருந்து வனவாம்.
விண்சுமந்த கீர்த்தி - விண்ணைச் சுமந்த புகழ்; என்றது, 'வானளாவிய புகழ்' என்றபடி. 'கீர்த்தியை யுடைய மண்டலம்' என்க. 'தலம்' என்பது வடசொல்லாதலின், 'மண்' என்பதன் ஈறு இயல் பாயிற்று.

எல்லாவுலகுக்கும் தலைவனாகிய இறைவனை, நிலவுலகத் திற்கே தலைவன்போலக் கூறியது, இங்குள்ளாரையே தான் வலிய வந்து ஆட்கொள்ளுதல் பற்றி. கலி - ஆரவாரம்.

துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
/s கொண்ட புரிநூலான் கோலமா ஊர்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்றான்
/s அண்டமுத லாயினான் அந்தமிலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும்
/s அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண் அம்மானாய். **#182**

பிறைச்சந்திரனை உடையவனும், வேதப் பொருளானவனும், திருப்பெருந்துறையானும், முப்புரி நூலை உடையவனும், இடபவாகனனும், நீலகண்டனும், சிவந்த திரு மேனியையுடையவனும், திருவெண்ணீற்றை உடையவனும், பஞ்ச பூதங்களின் பலனும் ஆகிய சிவபெருமான் தன் பழவடியார்க்கு முடி வற்ற இன்பத்தைக் கொடுத்தருள்பவன். ஆதலால் அவனது பெருங் குணத்தை உலகம் எல்லாம் அதிசயிக்கும்படி புகழ்ந்து பாடுவோம்.

விளக்கவுரை

கோல மா - அழகிய குதிரை. அண்ட முதல் - உலகிற்கு முதல்.
பழவடியார் - முன்னரே ஆட்கொள்ளப்பெற்ற அடியவர். அவர், தன்னால் ஆட்கொள்ளப்பட்ட பின்னரும் பிராரத்தம் காரணமாக உலகியலைத் தழுவி நிற்பாராயின் அப்பிராரத்தவினை ஒழிவில் அவர் மீளப் பிறவியிற் செல்லாதவாறு தடுத்துத் தனது வரம்பிலின்பத்தை அவர்க்கு அளித்தருளுதலையே இதன்கண் அருளிச்செய்தார் என்க.
இறைவன் தான் தன் அடியவரை ஆட்கொள்ளும் பொழுது, 'அவர்க்கு அந்தமிலா ஆனந்தத்தை அளித்தருளுதும்' என்றே ஆட் கொண்டருளுவன் ஆதலின், அதனை, 'பண்டைப் பரிசு' என்று அருளினார். இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றவர்கள் பிராரத்தம் கழிந்த பின் இங்ஙனம் அந்தமிலா ஆனந்தம் பெற்று உய்தலையே,
'காயமொழிந் தாற்சுத்த னாகி ஆன்மா
. . . .
மாயமெலாம் நீங்கிஅரன் மலரடிக்கீழ் இருப்பன்,
மாறாத சிவாநுபவம் மருவிக் கொண்டே'
என்று விளக்கியது சிவஞான சித்தி *(சூ.11.1.)*. இதனானே, அவர் தம் பிராரத்தவினையை நுகருங் காலத்து ஒருதலையாக விளைதற் பாலதாய ஆகாமிய வினையையும் அது முறுகிச் சஞ்சிதமாகாவாறு இறைவன் அழித்தொழிப்பான் என்பதும் பெறப்பட்டது. இதனையே,
'தொல்லையின் வருதல் போலத்

தோன்றிரு வினைய துண்டேல்
அல்லொளி புரையு ஞானத்
தழலுற வழிந்து போமே'
எனச் சிவப்பிரகாசமும் *(89),*
ஏன்ற வினைஉடலோ டேகும்;இடை ஏறும்வினை
தோன்றில் அருளே சுடும்.
எனத் திருவருட்பயனும் *(98)* கூறின.

இனி, இறை இன்பமே உயிர்க்கு இயற்கையும், அதனைத் தடுத்து நின்றது அனாதி செயற்கையாகிய ஆணவமுமாகலின், அவ்வாணவம் நீங்கியபின் அடையும் இன்பத்தை, 'பண்டைப் பரிசு' என்று அருளினார் என்றலுமாம்.

இப்பொருட்கு 'பழவடியாராவார், இறைவன் தந்தருளிய திருவருளை மறவாது சிந்தித்தும், தெளிந்தும் நிட்டை கூடியவர்' என்று பொருள் உரைக்கப்படும். 'பரிசை' என்ற ஏகாரம், தேற்றம். 'ஈந்தருளும், வியப்புறும்' என வந்த பெயரெச்சங்கள் அடுக்கி, 'ஆறு' என்ற ஒருபெயர் கொண்டன.

அண்டம் - புவனம்; இஃது ஆகுபெயராய், அவற்றின் உள்ளாரைக் குறித்தது. வியப்புறுதல், 'அவர்செய்த பாதகமும் பணி யாயது நோக்கியாம்.' இங்ஙனம் இவையெல்லாம் பிறரிடத்து நிகழ்வனபோல அருளிச் செய்தாராயினும், தம்மியல்பு கூறுதலே அடி கட்குக் கருத்தென்க.

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
/s மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
/s பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
/s அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய். **#183**

தேவதேவனும், அரசர்க்கரசனும், திருப்பாண்டி நாட்டை உடையவனும், பெண்பாகனும், அடியேனை ஆட்கொண்ட வனும் ஆகிய சிவபிரானைப் புகழ்ந்து பாடுவோம்.

விளக்கவுரை

மன்னவர்க்கு, அவர்க்கு உண்டாகின்ற மாண்பாகி நின்றானை' என்க. மாண்பு - பெருமை; என்றது நீதியால் விளையும் பயனை. அது,
இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.
(குறள் - 547.) என்றபடி, செங்கோல்முறை முட்டவந்துழியும் அதற்கு இளையாது, அதனை முட்டாமற் செலுத்திய வழி, அதனான்

அப்பொழுது எய்தும் தீங்கினையும் எய்தாது நீக்குதல். இது மகனை முறைசெய்த சோழன், அதனால் இழந்த மைந்தன் உயிர்த்தெழப் பெற்றமையும், தன் கையைக் குறைத்துக்கொண்ட பாண்டியன், பின்னும் முன்போலக் கைவளரப் பெற்றமையும் போல்வனவற்றால் அறியப்பட்டது.

'நாவில் நடுவுரையாய் நின்றாய் நீயே' *(தி.6.ப.38.பா.8)*

'.....நிலவேந்தர் பரிசாக நினைவுற் றோங்கும்
பேரவன்காண்' *(தி.6.ப.87.பா.6)*

'மன்னானாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்' *(தி.6.ப.95. பா.7)*

எனத் திருநாவுக்கரசரும் அருளிச்செய்தல் காண்க.

தமிழ்ச் சங்கத்தில் தானும் ஒரு புலவனாய் இருந்து தமிழை ஆராய்ந்தமை பற்றி, 'தமிழளிக்கும்' என்றார்.

'சிறைவான் புனல்தில்லைச் சிற்றம் பலத்தும்என்
சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்தஒண்
தீந்தமிழ்'

எனத் தி.*8* திருக்கோவை*(20)*யுள்ளும் அருளிச் செய்வார். 'அளிக்கும்' என்றது, 'நாட்டான்' என்றதன் இறுதிநிலையோடு முடியும். 'பேணு' என்றது, 'அடியவர்கள் விரும்பிப் போற்றுகின்ற' என வந்த அடையே; 'பேணு பெருந்துறை' என்னுந் தலம் இதனின் வேறு . 'பெருந்துறையில் நாயேனை ஆட்கொண்ட' என்றதற்கு, பெண்கள் கூற்றில் இப்பெண் அங்ஙனம் ஆட்கொள்ளப்பட்டவளாகப் பொருள்கொள்ளப்படும். பின்னர் இவ்வாறு வருவனவற்றிற்கும் இது பொருந்தும். இப்பெண்டிர்க்கெல்லாம் இயற்பெயர் கூறாமையின், இதுவும் பொருந்துவதேயாம்.

செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
/s தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
/s அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தா ருள்ளிருக்கும்
/s அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய். **#184**

உமாதேவிபங்கனும், திருப்பெருந்துறையானும், திருவடியை அடைந்தவரின் மனம் உருக்கும் குணத்தை உடைய வனும், பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்கினவனும், தன் திருவடி யில் மனம் வைத்த அன்பர் மனத்தில் இருப்பவனும் ஆகிய சிவ பெருமானைப் புகழ்ந்து பாடுவோம்.

விளக்கவுரை

செப்பு - கிண்ணம். ஆர், உவம உருபு. 'தப்பாமே உருக்கும்' என இயையும். தப்பாமே - நீங்கிப்போகாதபடி; 'தன்னை அடைந்தவரது நெஞ்சம் பிறிதொன்றை நினையாதவாறு இன்புறச் செய்பவன்' என்றதாம். 'சங்கமிருந்தது முதலியவற்றால் பலராலும் நன்கறியப்பட்டது' என்பார், 'அப்பாண்டிநாடு' என்றார். அதனைச் சிவலோகம் ஆக்குவித்தது, வலை வீசுதல், குதிரை கொணர்தல், மண் சுமத்தல் முதலிய திருவிளையாடலின் பொருட்டுத் தான் பலகாலும், பலவிடத்தும் எழுந்தருளி வந்தமையாலாம். இனி, 'வரகுணன்' என்னும் பாண்டியனுக்கு மதுரையையே சிவலோகமாகக் காட்டிய திருவிளையாடல் ஒன்றும் பரஞ்சோதியார் திருவிளையாடலிற் காணப்படுகின்றது. அப்பு - நீர். 'ஒப்பு' என்றது விலையை. 'தம் நெஞ்சை விற்றற்கு விலையாகப் பெறும் பொருள் கழலே யாகும்படி' என்றவாறு. ஒப்புவித்தல் - விற்றுவிடுதல். 'ஒப்பு' என்றதனை, 'ஒற்றிக்கலம்' எனக்கொண்டு 'கழற்கே' என உருபு விரித்துரைப்பாரும் உளர்; 'கழற்கே' எனினும் யாப்புக் கெடாதாக, அவ்வாறோதாமை யானும் அடியவர், தம் நெஞ்சினை இறைவனுக்கு மீளா அடிமை ஆக்குதல் அன்றி ஒற்றியாக வைத்தல் இலராகலானும், 'ஒப்புவித்தல்' என்னும் சொல், 'ஒற்றியாக வைத்தல்' எனப் பொருள்படாதாகலானும் அது பொருந்துவதன்றாம்.

'விற்றுக் கொள்வீர் ஒற்றி யல்லேன்
விரும்பி யாட்பட்டேன்' *(தி. 7.ப.95. பா.2.)*

என ஆளுடைய நம்பிகள் அருளிச்செய்ததனைக் காண்க. அப்பால் - மாயைக்கு அப்பால் உள்ளது; என்றது உயிரை. உலகத்தையும், உயிரறிவையும் கடந்து நிற்பவன் இறைவன் ஆதலின், 'அப்பாலுக் கப்பால்' என்று அருளிச்செய்தார்.

மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயனோ டிந்திரனும்
/s எப்பிறவி யுந்தேட என்னையுந்தன் இன்னருளால்
இப்பிறவி ஆட்கொண் டினிப்பிறவா மேகாத்து
/s மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்குந் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
/s அப்பொருளாம் நம்சிவனைப் பாடுதுங்காண் அம்மானாய். **#185**

திருமால் முதலியோர் தேடி நிற்க, என்னையும் தனது இனிய அருளால் இந்தப் பிறப்பில் ஆட்கொண்டு இனிமேலும் பிறவாமல் காத்தவனாய் உண்மையாகிய இடத்தில் தோற்றுபவனாய், எல்லா உயிர்களுக்கும் தானே ஒருமுதற் பொருளாய், எல்லா உயிர் களுக்கும் வீடுபேற்றுக்கு ஏதுவாய் இருக்கிறவன் ஆகிய சிவ பெருமானைப் புகழ்ந்து பாடுவோம்.

விளக்கவுரை

'எப்பிறவியும் தேட' என்றது, பெரிதும் அருமை குறித்தவாறு.

'இப்பிறவிக்கண்' என உருபு விரிக்க. 'காத்து' என்ற வினையெச்சம், 'ஆகும்' என்பதனோடு முடியும். இவ்வெச்சம் எண்ணின்கண் வந்தமையின், 'காத்தவனும், வீடாகும் அப்பொருளு மாம் நம்சிவன்' என்பதே பொருளாம்.
மெய்ப்பொருளை அறிதற்கருவியாகிய மெய்யறிவை ஆகுபெயரால், 'மெய்ப் பொருள்' என்றார்; 'பொன்னும் மெய்ப் பொருளும் தருவானை' *(தி.7.ப.59.பா.1)* என்றதும் காண்க. 'தோற்றம்' என்றது, அவ்வாற்றால், தோன்றுதலுடைய பொருள்மேல் நின்றது. மெய் - மெய்ம்மை; ஒருவாற்றானும் திரிபின்றி, என்றும் ஒரு படித்தாயிருத்தல். வடமொழியுள், 'சத்து' எனப்படுவதும் இதுவே. 'நிலைபேறு' என்றது, அதனையுடைய தன்மையைக் குறித்தது. ஒரு பொருட்குத் தன்னியல்பு என்றும் நீங்காது நிற்குமாதலின், அதனை, 'நிலைபேறு' என்றார். எனவே, 'சத்தாதற்றன்மையைத் தனக்கு இயல்பாக உடையதாய்' என்பது பொருளாயிற்று. 'தன்னியல்பு, சுபாவம், இயற்கை' என்பன ஒருபொருட் சொற்கள். இதனை, 'சொரூப லக்கணம்' எனவும், 'உண்மை இயல்பு' எனவும் கூறுவர். 'எப்பொருட்கும்' என்றதன்பின், 'முதல்' என்பது எஞ்சிநின்றது. முதலாவது, நிலைக்களம்; இதனை, 'தாரகம்' என்ப. 'யாவற்றுக்கும்' என்னும் சாரியை தொகுத்தல். 'வீடாகும்' என்பதனால், 'யாவை' என்பது, அறிவுடைப் பொருளாகிய உயிர்களையே குறித்தது, வீடுபெறுதற்குரியன அவையேயாகலின். வீடாவது, பந்தத்தினின்றும் நீங்குதல். கயிறற்றமையால் அதனினின்றும் நீங்கிய ஊசற்குப் புகலிடம் நிலமன்றி வேறில்லாமைபோல, பந்தம் மெலியப் பெற்றமையால் அதனினின்றும் நீங்கிய உயிருக்குப் புகலிடம் இறைவனன்றி வேறில்லையாதலின், அவனை, 'யாவைக்கும் வீடாகும் அப் பொருள்' என்றார். விடுதலின்பின் எய்தற்பாலதாய பொருளை, 'வீடு' என்றல், காரியவாகுபெயராம். பந்தத்தினின்றும் நீங்கிய உயிர்க்குப் புகலிடம் இறைவன் திருவடியன்றி வேறில்லை என்பதை, மெய்கண்ட தேவ நாயனார்,
'விட்டு - அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே'
(சிவஞானபோதம் சூ.8.) எனவும்,
'இனி, இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேறாவான் காணவே தமதுமுதல் சீபாதத்தை அணையும் என்றது.'
'ஊசல் கயிறற்றால் தாய் தரையேயாந் துணையான்' *(-சிவஞானபோதம்.சூ.8.அதி.4.)*
எனவும் விளக்கினார். 'தோற்றமாய்' எனவும், 'தானேயாய்' எனவும் வந்த செய்தெனெச்சங்கள் காரணப் பொருளவாய் நின்று, பின்னர் வந்த, 'நிலைபேறாய்' 'வீடாகும்' என்றவற்றோடு முறையே முடிந்தன.

இவற்றால், பொய்யறிவின்கண் தோன்றாது, மெய் யறிவின்கண் தோன்றுதலால், மெய்ம்மையையே தனக்கியல்பாக உடையதாயும், எப்பொருட்கும் முதல் தானேயாதலால், யாவைக்கும் வீடாயும் நிற்கும் என்றவாறறிக.

'பொய்ப்பொருளால் விளங்கிப் பொய்ப்பொருளையே அறிவது பொய்யறிவு' எனவும், 'மெய்ப்பொருளால் விளங்கி மெய்ப்பொருளையே அறிவது மெய்யறிவு' எனவும் உணர்க. இவற்றை முறையே 'பாசஞானம்' எனவும், 'பதிஞானம்' எனவும் சைவசித்தாந்த நூல்களும் கூறும். இவ்விரண்டுமின்றிப் பசுஞான மாகிய உயிரறிவு தனித்து நில்லாதாகலின், அதனைத் தனித்து நிற்பதாக அறியும் பசுஞானமும் பொய்யறிவேயாதலறிக.

'பொய், மெய்' என்பன, நிலைபெறுதலும், நிலைபெறாமையு மாகிய இயல்புகளைக் குறிப்பனவன்றி, இன்மை உண்மை மாத்திரையே குறித்தொழிவனவல்ல.

மெய்ப்பொருட்கண் தோற்றமாதல் முதலியனவே பரம்பொரு ளின் இயல்பென்பது மறைகளின் முடிபு என்பார், 'இத்தன்மை களையுடைய அப்பொருள்' என முன்னர் பொதுப்படச் சுட்டி, பின்னர், 'சிவபெருமானையன்றிப் பரம்பொருளாவார் பிறரில்லை' என்னும் உண்மையை விளக்குவார், சிறப்பாக, 'நம் சிவனை' என்று அருளிச் செய்தார்.

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
/s மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
/s கையானை எங்குஞ் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க் கல்லாத வேதியனை
/s ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய். **#186**

செந்நிறம் உடையவனும், திருவெண்ணீறு அணிந்தவனும், ஒருவராலும் அறிய முடியாதவனும், அன்பர்க்கு மெய்யனும், அன்பர் அல்லாதார்க்குப் பொய்யனும், அந்தணனும், திருவையாற்றில் வீற்றிருப்பவனும் ஆகிய சிவபெருமானைப் புகழ்ந்து பாடுவோம்.

விளக்கவுரை

மை ஆர் - மேகம்போலும். தேன், கூந்தலில் முடித்த பூவில் உள்ளது. 'சிலம்ப, ஆட, ஒலிப்ப' என்பவற்றை, 'ஆடி' என, ஒருசொல் வருவித்து முடிக்க. சேர்ந்தறியாக் கை - ஒரு பொருளிலும் தோய்ந்தறியாத ஒழுக்கம்; இது, பின், 'எங்கும் செறிந்தானை' என்பதனோடு முரணிநின்று, 'எப்பொருளிலும் நிறைந்திருப்பினும், ஒன்றிலும் தோய்வின்றி நிற்றலை உணர்த்திற்று.' 'செய்யானை' என்றது முதலிய மூன்றடிகளிலும்,

முரண்தொடை அமையவே அடிகள் அருளிச் செய்திருத்தல் அறிக. இங்ஙனமாகவும், 'சேர்ந்தறியாக் கையானை' என்றதற்கு, 'ஒருவரைத் தொழுதறியாத கைகளை யுடையவன்' எனப் பொரு ளுரைப்பாரும் உளர்; இறைவனுக்கு அப்பொருள் சிறப்புத் தாராமை யறிக. மெய்யான் - அநுபவப் பொருளாய் உள்ளவன்.

ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
/s ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
ஊனையும் நின்றுருக்கி என்வினையை ஓட்டுகந்து
/s தேனையும் பாலையுங் கன்னலையும் ஒத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்தொழும்பிற் கொண்டருளும்
/s வானவன் பூங்கழலே பாடுதுங்காண் அம்மானாய். **#187**

யானை முதலாகிய எல்லாப் பிறவிகளிலும் பிறந்தும் இறந்தும் இளைத்த என்னை உடலுருகச் செய்து, என்வினைகளை ஒழித்து, தேன் போல எனக்கு இனிமையைத் தந்து என்னைத் தன் திருத்தொண்டுக்கு உரியனாக்கின அச்சிவபெருமானது திருவடியைப் புகழ்ந்து பாடுவோம்.

விளக்கவுரை

கீடம் - புழு. ஓட்டு - ஓட்டுதல். முதனிலைத் தொழிற் பெயர். 'ஓட்டுதலை உகந்து' என்க. உகந்து - விரும்பி. கன்னல் - கரும்பு; என்றது, அதன் சாற்றை. இனிய கோன், ஞானாசிரியன். அவன், பகுதிப்பொருள் விகுதி. இறைவன் கொண்ட வேடமாகலின், 'கோனவன்போல்' என்று அருளினார். எனவே, 'ஆசிரியனைப் போல் வேடங்கொண்டு வந்து' என்றவாறாயிற்று. இது, பெண்கள் கூற்றில், 'இனிய தலைவன் தானேயாதல் தோன்ற' எனப் பொருள்தரும்.

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினில்
/s இந்திரனைத் தோள்நெரித்திட் டெச்சன் தலையரிந்
தந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்
/s சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
/s மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய். **#188**

சந்திரன் உடலைத் தேய்த்தும் இந்திரனின் தோளை நெரித்தும் எச்சன் என்னும் போலித் தெய்வத்தின் தலையை அரிந்தும் சூரியனின் பல்லைத் தகர்த்தும் தேவர்களை விரட்டியும் தக்கன் யாகத்தில் அவமானப்படுத்தித் தண்டித்த சிவபெருமானது மந்தார மலர் மாலையைப் புகழ்ந்து பாடுவோம்.

விளக்கவுரை

'தக்கன்றன் வேள்வியினில்' என்றதை முதலிற் கொள்க. தக்கன் செய்த

வேள்வியில் வீரபத்திரரைக்கொண்டு சிவபெருமான் தேவர் பலரையும் பலவாறு ஒறுத்தமை நன்கறியப்பட்ட வரலாறு. எச்சன் - வேள்வித் தெய்வம். 'அந்தரத்தே' என்னும் சாரியை தொகுத்தலாயிற்று. அந்தரம் - ஆகாயம். அலர் கதிரோன் - விரிகின்ற பல கதிர்களையுடையவன். 'தேவர்களைத் திசைதிசையே சிந்தி ஓட்டுகந்த' என்க. சிந்தி - சிதறி. 'ஓட்டு' என்ற பிறவினை 'ஓடச் செய்தல்' எனப் பொருள்படுதலின், அதனுள் நின்ற, 'ஓட' என்பது. 'சிந்தி' என்னும் வினையெச்சத்திற்கு முடிபாயிற்று. இனி, சிந்துதல், 'சிதறச்செய்தல்' எனவும் பொருள்படுமாகலின், அதனை இறைவற்கு ஆக்கி உரைத்தலுமாம். செம்மை, இங்கு அழகைக் குறித்தது. தார் - பூ. மந்தாரம், விண்ணுலகத் தருக்களில் ஒன்று. இதன் பூவால் இயன்ற மாலையைச் சிவபிரானுக்குக் கூறியது, 'தேவர் தலைவன்' என்பதைக் குறிப்பிட்டு. 'அவனையின்றித் தேவர் தக்கன் வேள்வியில் அவி யுண்ணச் சென்றமையின் அவரை ஒறுத்துத் தனது தலைமையை நிலைநிறுத்தினான்' என்பது உணர்த்துதற்கு. இஃது, இம்மாலையைப் பெற விரும்பினாள் கூற்றாதற்குச் சிறந்தது.

ஊனாய் உயிராய் உணர்வாய்என் னுட்கலந்து
/s தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழிஎமக்குத் தந்தருளும்
/s தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா அறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்கும்
/s கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய். **#189**

உடல், உயிர், உணர்வு, உருவங்களாகி, எம் முள்ளே கலந்திருந்து, தேன் போல இனிமை தந்து முத்தி நெறியை எமக்கு உணர்த்தியருளிய சிவபெருமான், அளவற்ற பல உயிர் களுக்கும் தலைவனாய் நின்ற விதத்தைப் புகழ்ந்து பேசுவோம்.

விளக்கவுரை

ஊன் - உடம்பு; ஆகுபெயர். சேவகன் - வீரன்; உயர்வுப்பன்மையாக, 'சேவகனார்' என்றார். சீர் - சிறப்பு. ஒளி - விளக்கம். ஆனா - நீங்காத. 'சீரொளிசேர் அறிவு, ஆனா அறிவு' எனத் தனித்தனி முடிக்க, இவ்வாறு முடியக் கூறினாரேனும், 'சீரொளிசேர் அறிவாய் ஆனாது' என்றலே கருத்து எனக்கொண்டு, அத்தொடரை முதற்கண்ணே கூட்டியுரைக்க. இப்பத்துத் திருப்பாட்டுக்களும், முதல் ஐந்து திருப்பாட்டுக்கள் போல இயற்பட மொழிந்தனவேயாம்.

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
/s கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்று
ஊடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்

/s தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வேன் அனலேந்தி
/s ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய். **#190**

கொன்றைமலர் மாலையைச் சூடிச் சிவபெருமான் திருத்தோள்களைக் கூடித் தழுவி மயங்கி நின்று பிணங்குவேன்; அவனது செவ்வாயின் பொருட்டு உருகுவேன்; மனமுருகி அவன் திருவடியைத் தேடிச் சிந்திப்பேன்; வாடுவேன்; மகிழ்வேன். இங்ஙன மெல்லாம் செய்து நாம் புகழ்ந்து பாடுவோம்.

விளக்கவுரை

இதனுட் கூறப்படுவனவெல்லாம், சிவபெருமானைக் காணப்பெறின் நிகழும் என்னும் கருத்தினவாகலின், முதற்கண், 'சிவன் வரின்' என்பதனை வருவித்து, 'அவன் பூங்கொன்றை சூடுவேன்', 'அவன் திரள்தோள் கூடுவேன்' என்றாற்போல உரைக்க. 'ஆடுவான்' என்றதற்கும், 'ஆடுவானாகிய அப்பெருமானது' என்றே உரைக்க. 'முயங்கி' என மறித்துங்கூறியது. 'கவவுக்கை நெகிழாது நின்று' என்றபடி. மயங்குதல் - வசமழிதல். 'நின்று' என்றதன் பின்னர், 'பின்னொருகால்' என்பது எஞ்சிநின்றது. தலைவி ஊடுவது புறத்தேயாகலின், செவ்வாய்க்கு உருகுதல், அது போழ்து நெஞ்சி னுள்ளே நிகழ்வதாம். தேடுதல், தலைவி ஊடல் தனியாளாய் நின்ற பொழுது தலைவன் மறைந்தமையாலாம். கழலைச் சிந்தித்தல், அதற்குப் பணி செய்தற்கு உரியளாகத் தான் கொள்ளப்படவேண்டும் என்று கருதியாம். வாடுதல், 'தன்னை அவன் இனி நோக்கான்' என்னும் கருத்தினாலும், மலர்தல், 'அவன் தன்னைக் கைவிடான்' என்னும் துணிவினாலுமாம். 'மலர்வேன்' என்றதன்பின், 'ஆதலின்' என்பது வருவிக்க. அங்ஙனம் வருவித்துரைக்கவே, 'அவனது சேவடியைப் பாடின் சிறிது ஆற்றுவேன்' என்பது கருத்தாம்.

இத் திருப்பாட்டினைக் காமப்பொருள் பற்றியே அருளிச் செய்தார், வரிப்பாட்டிற்கு அஃது இயல்பென்பது தோன்றுதற்கு. எனவே, இக்கூற்றினை நிகழ்த்தினாள், 'சிவபெருமான்மேற் கொண்ட காதல் மீதூரப்பெற்றாள் ஒருத்தி' என்க. இங்ஙனம் இப்பொருளே பயப்ப அருளிச்செய்தாராயினும், அடிகள் தமக்கு இறைவன் மீளத் தோன்றி அருள்புரியின், அவனது திருவடியின்பத்தைச் சிறிதும் தடை யின்றி வேண்டியவாறே நுகர்தல் உளதாகும் என்னும் தம் விருப்பத் தினையே உள்ளுறுத்து அருளினார் என்க. எனவே, 'கவவுக்கை நெகிழாது நின்று' என்றது, 'இறைவனது திருவடி நிழலினின்றும் சிறிதும் மீளாது உறைத்து நின்று' என்றபடியாம். திருவடி நிழலிலிருந்து மீளுதலாவது, இறைவனை உணர்தல் ஒழிந்து, தன்னையும், பிற வற்றையும் உணர்தல். அங்ஙனம்

உணரச் செய்வது மலத்தின் வாதனை. அஃது உண்டாயவிடத்து உளதாவது துன்பமே. 'அதனால், எவ்வாற்றானும் திருவடியினின்றும் சிறிதும் பிரிதல் கூடாது' என்ப தனையே, 'முயங்கி' என்பதனால் குறித்தருளினார். இதனானே, திருவள்ளுவ நாயனார், காமத்துப்பாலில்,
முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல். *(-குறள்.1238)*
எனவும்,
முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண். *(-குறள்.1239)*
'கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு' -குறள்.*1240*
எனவும் ஓதியது, இம்மெய்ந்நெறியின் நுண்பொருளையும் அவை பற்றி உய்த்துணர்ந்துகொள்ளுதற் பொருட்டேயாம் என்பது பெறப் படும். அவற்றுள், 'தண்வளி போழ - சிறுகாற்று ஊடறுக்க' என்றது, மலவாதனை சிறிதே புகுந்து உயிரைத் திருவடி நிழலினின்று பிரித் தலையும், கண் பசந்தன என்றது அப்பிரிவு நிகழ்ந்தவழி ஆன்ம அறிவு துன்புற்று மெலிதலையும் உணர்த்தும். இஃது 'ஆற்றுவல்' என்றது.

கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
/s வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
/s எளிவந் திருந்திரங்கி எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்தென் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ
/s அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய். **#191**

கிளிமொழியாளாகிய உமாதேவி பாகனும், மால், அயன் என்போர் காண்பதற்கு அரிதாகிய அறிவுருவனும், அன்பர்க்குத் தெளிந்த தேன்போல்பவனும், திருப்பெருந்துறையில் எளிதில் வந்து எனக்கு அருள் செய்த அந்தணனும் ஆகிய சிவ பெருமானைப் புகழ்ந்து பாடுவோம்.

விளக்கவுரை

கிளிவந்த - கிளியினது தன்மை வந்த. 'மென் மொழியாளது கேழ்' என்க. கேழ் - நிறம். கிளரும் - விளங்கும். பாதி - பாதி உருவம். வெளிவந்த - 'காண்போம்' என்று புறப்பட்ட. தெளி வந்த தேறல் - தெளிவு உண்டாகியதேன்; 'வடித்தெடுத்ததேன்' என்ற படி. 'இன்னருளால் எளிவந்து பெருந்துறையில் இருந்து என் உள்ளத் தின் ஒளி வந்து உள்ளே ஒளிதிகழ இரங்கி அளிவந்த அந்தணன்' எனக் கூட்டியுரைக்க. ஒளி இரண்டனுள், முன்னது, 'தூய்மை' என்னும் பொருளையும், பின்னது 'ஞானம்' என்னும் பொருளையும் குறித்தன. 'ஒளிவந்து' என்றது, ஒளி

வருதலால் எனக் காரணப் பொருட்டாய் நின்றது. அளிவந்த - அளித்தல் *(ஆட்கொள்ளுதல்)* பொருந்திய. அந்தணன் - அந்தணக்கோலம் உடையவன்.

முன்னானை மூவர்க்கும் முற்றுமாய் முற்றுக்கும்
/s பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
/s தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என்னப்பன் என்பார்கட் கின்னமுதை
/s அன்னானை அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய். **#192**

மூவர்க்கும் முதல்வனும், எல்லாம் தானேயான வனும், அவை அழிந்த பின்னே இருப்பவனும், திருப்பெருந்துறையில் நிலைபெற்றவனும், பெண்பாகனும், திருவானைக்காவில் எழுந்தருளி இருப்பவனும், பாண்டி நாட்டை உடையவனும், என் காளை போல் பவனும், என்னப்பன் என்று புகழ்வோர்க்கு இனிய அமிர்தம் போல் பவனும், எம் தந்தையும் ஆகிய சிவபெருமானைப் புகழ்ந்து பாடு வோம்.

விளக்கவுரை

'மூவர்க்கும் முன்னானை' என மாற்றிக் கொள்க. மூவரும் ஆதி மூர்த்திகள் *(தி.8 கீர்த்தி - 121.)* ஆதலின், 'அவர்க்கு முன்னோன்' என்றது, 'அநாதிமூர்த்தி' என்றவாறு. 'முற்றுக்கும் பின்னான்' என்றதும், 'அவர்கள் ஒடுங்கிய பின்னும் நிற்பவன்' என, இதனையே வேறோராற்றான் விளக்கியவாறு. இதனையே,

'அறுதியில் அரனே எல்லாம்
அழித்தலால் அவனால் இன்னும்
பெறுதும்நாம் ஆக்கம் நோக்கம்
பேரதி கரணத் தாலே'

எனச் சிவஞான சித்தி *(சூ. 1-35)* விளக்கிற்று. முற்றும் - தோற்றம் நிலை இறுதிகளையுடைய பொருள்கள் முழுதும். 'மன்னனை' என்பது, நீட்டலாயிற்று. 'மன்னானவனை' என்பது தொகுத்தலாயிற்று எனினுமாம். 'என் ஆனை என் அப்பன்' என்பன, காதல்பற்றியெழும் சொற்கள். அன்னான் - ஒத்தவன். இனி, 'இன்னமுதை' என்றதனை வேறு தொடராக்கி. 'அன்னான் - 'அன்னபெருமைகளையுடையவன்' என்று உரைத்தலுமாம். அன்ன பெருமைகள், மேற்கூறியனவாம்.

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
/s கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
/s சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றிஇப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்

/s பற்றியபே ரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய். #193

தன் அடியார்க்கு அன்றித் தன் குணங்களை அள விடற்குப் பிறர்க்கரியனாகிய திருப்பெருந்துறையானும், குதிரைச் சேவகனாய் எழுந்தருளித் தன் அடியார் குற்றங்களை ஒழித்துக் குணத்தை ஏற்றுக் கொண்டு எம்மைச் சீராட்டி, சுற்றத்தவர் தொடர்பை விடுவித்தவனுமாகிய சிவபெருமானது புகழையே பற்றி, இப்பாசப் பற்றறும்படி நாம் பற்றின பேரின்பத்தைப் புகழ்ந்து பாடி இன்பம் அடைவோம்.

விளக்கவுரை

பெற்றி - தனது தன்மை. 'அடியார்' எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, 'பிறர்க்கு' என்றார். 'கோதாட்டுதல்' என்பதுதானே, 'திருத்துதல்' எனப் பொருள் தருமாதலின், 'குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு' என்றது, 'கோதாட்டுமாறு இவ்வாறு' என்பதனை விதந்தவாறாம். 'மிகப்பெரிய சுற்றம்' என்பார். 'சுற்றிய சுற்றம்' என்றார். தொடர்வு - தொடர்பு; பற்று. 'அறுப்பான்' என வேறொருவன் போலக் கூறினாராயினும், 'அறுப்பானாகிய தனது' எனப் பொருள் உரைக்க. பற்றி - துணையாகப் பற்றி. 'பற்றறச் செய்ய' என ஒரு சொல் வருவிக்க. அன்றி, 'பாசத்தை' என்ற ஐகாரத்தை, 'சாரியை' என்றலுமாம், நாம் பற்றுவான் - நம்மால் பற்றப்படுபவன். பற்றிய பேரானந்தம் - நம்மைப் பற்றியதனால் விளைந்த பேரின் பத்தை. இவையும் இயற்பட மொழிதல்.

1.9.திருப்பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. #194

தோழியர்களே! முத்துக்களாலாகிய நல்ல மாலையையும், பூமாலையையும் தொங்கவிட்டு முளைப் பாலிகையை யும், குங்குலியத் தூபத்தையும் நல்ல விளக்கையும் வையுங்கள். உருத்திராணியும், திருமகளும், நிலமகளும் கலை மகளோடு கூடித் திருப்பல்லாண்டு பாடுங்கள். கணபதியின் சத்தியும், கௌமாரியும், மகேசுவரியும், கங்காதேவியும், முன்வந்து வெண் சாமரை வீசுங்கள். எமது தந்தையும் திருவையாற்றை உடையவனுமாகிய எம் தலைவனைப் பாடி, அவன்

நிரம்ப அணிதற் பொருட்டுப் பொன் போலும் வாசனைப்பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

முத்துநல் தாமம் - முத்தினாலாகிய நல்ல மாலை. தூக்கி- தொங்கவிட்டு. மாலை தூக்குதல் முதலியன, மனை எங்குமாம். சத்தி என்பது, உருத்திராணியைக் குறிக்கும். சோமி - திருமகள்; 'சந்திரனுக்குப் பின் பிறந்தவள்' என்பது இப்பெயரின் பொருள். 'பாற் கடல் கடையப்பட்ட பொழுது, சந்திரனும், திருமகளும் அதன்கண் தோன்றினர் என்பது புராணம். பார்மகள் - நிலமகள். திருமகள், நிலமகள் இருவரும் திருமாலுக்குத் தேவியராதலையும், நாமகள் நான்முகன் தேவியாதலையும் அறிக. இவரது பெயர்களெல்லாம் இங்குப் பெண்களுக்கு இடப்பட்டவை எனக் கொள்க. பல்லாண்டு, 'பல்லாண்டுக் காலம் வாழ்க' என வாழ்த்திப் பாடும் பாடல். 'சித்தி' முதலிய மூன்றும் உமையம்மைதன் பெயர்களே. அவற்றையுடைய வேறு வேறு மகளிர், இங்குக் குறிக்கப் பட்டனர். சித்தி - ஞான வடிவினள். கௌரி - செம்மைநிறம் உடையவள். 'உமையம்மை ஒரு பொழுது செம்மை நிறமுடையளாய்த் தோன்றினாள்' என்பதும் புராணம். பார்ப்பதி - மலைமகள். 'ஐயாறன்' என்றதன்பின், 'ஆகிய' என்பது விரிக்க. 'அவன் ஆட' எனச் சுட்டுப் பெயர் வருவித்துரைக்க. ஆட - மூழ்க; என்றது இங்கு நெய்பூசி மூழ்குதலைக் குறித்தது. நெய் பூசியபின், நறுஞ்சுண்ணம் திமிர்ந்து மூழ்குதல் அறிக.

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நி லாமே
குனிமின் தொழுமின்எம் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே. **#195**

அழகு பொருந்திய நீண்ட சடையுடைய எம் பெருமானுக்கு அழகிய பொற்சுண்ணத்தை இடிக்க வேண்டும். மாம் பிஞ்சின் பிளவை ஒத்த கண்களையுடைய பெண்களே! வாருங்கள்! வந்து விரைவிற் பாடுங்கள்! அடியார்கள் வெளியில் இல்லாதபடி அவர்களை அழையுங்கள்! ஆடுங்கள்! வணங்குங்கள். எமது இறை வனாகிய கூத்தப் பிரான் இறைவியும் தானுமாய் எழுந்தருளி வந்து எம் வழிபாட்டை ஏற்று எம்மை அடிமைகொள்ளும் பொருட்டுச் செம் பொன்போல ஒளிவிடும் வாசனைப் பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

பூ இயல் - பூக்கள் பொருந்திய. பொன் திருச்சுண்ணம்- பொன் போலும் அழகிய சுண்ணம். 'இடிக்க' என்பது, தொழிற் பெயர்ப் பொருள் தந்தது. கூவுமின் - அழையுங்கள். 'தொண்டர் புறம் நில்லாதவாறு அவரை இங்கு அழையுங்கள்' என்க. குனிமின் - நடனம் செய்யுங்கள். ஆள - ஆளுதற்பொருட்டு. 'வேண்டும்' என்பது, செய் வினை வாய்பாடாய் நின்று, ' வேண்டப்படும்' எனப் பொருள் தந்து இன்றியமையாமை குறிப்பதொரு செய்யுமென்முற்று. சொல் வார்க்கும், கேட்பார்க்கும் உள்ள தகுதி வேறுபாடுகளால், இஃது இரத்தற் குறிப்பையும், விதித்தற் குறிப்பையும் உடன் உணர்த்தி நிற்கும். இவ்வேறுபாட்டானே இது தன்மை முன்னிலைகளினும், படர்க்கைப் பலர்பாலினும் வருதல் பொருந்துவதாயிற்று. இஃது இயல் பாய் ஏனை வினைச் சொற்கள் போலவரும் 'வேண்டும்' என்பதனின் வேறுபட்டதென்க.

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆள்உமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ணம் இடித்தும் நாமே. **#196**

அழகிய திருநீற்றை அணிந்து கொண்டு தரையை மெழுகுதல் செய்து மாற்றுயர்ந்த பொற்பொடிகளைச் சிதறி, நவமணி களைப் பரப்பி இந்திரன் உலகிலுள்ள கற்பக மரத்தின் தோகைகளை நட்டு எவ்விடத்தும் அழகிய தீபங்கள் வைத்துக்கொடிகளை ஏற்றுங்கள். விண்ணவர்க்குத் தலைவனும் பிரமனுக்கு முதல்வனும் சக்கரத்தையுடைய திருமாலுக்கு நாயகனும் அழகிய முருகனுக்குத் தந்தையும் எம் நிலையில் உள்ளாரையும் ஆட்கொள்ளுகின்ற உமா தேவியின் கணவனுமாகிய இறைவனுக்குப் பொருந்திய பொன் போலும் வாசனைப் பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

நீறணிதல், மகளிர் நெற்றியிலாம். 'நீறணிந்தும் மெழுகி' என்ற மகர ஒற்று, விரித்தல். 'எங்கும்' என்றதனை, 'மெழுகி' என்ற தற்கு முன்னர்க் கூட்டுக. எங்கும் - மனையகமெல்லாம். அந்தரர் - விண்ணோர். ஆழியான் - திருமால். விண்ணோர் முதலிய மூவர்க்கும் தலைவன் என்பதை வலியுறுப்பார், பொருட்பின் வருநிலையாக, 'கோன்,

பெருமான், நாதன்' என அப்பெயர்தோறும் தலைமைச் சொற் கொடுத்து அருளிச் செய்தார், 'இன்ன பெருமானுக்குச் சுண்ணம் இடிக்கின்றோமாகலின், இந்திரன் கற்பகம் நமக்கு அரிதன்று, என்பாள், இந்திரன் கற்பகம் நாட்டுமின்' என்றாள். 'தாதை' என்ற தன்பின் 'ஆகிய' என்பது விரிக்க.

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடிய வர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. **#197**

உலக்கைகளுக்கெல்லாம் மணிவடங்களைக் கட்டுங்கள். கருமை நிறமுடைய உரல்களுக்குப் பட்டுத்துணியைச் சுற்றுங்கள். இறைவனிடத்து அன்புடைய அடியவர்கள் நிலைபெற்று விளங்குக என்று வாழ்த்தி உலகமெல்லாம் புகழ்ந்து கொண்டாடுகின்ற காஞ்சிமா நகரிலுள்ள திருவேகம்பனது செம்பொன்னால் செய்யப் பட்ட திருக்கோயிலைப் பாடி, தளையாகிய இரு வினைகளை நீக்கி நின்று திருவருளைப்பாடிப் பொன்போலும் வாசனைப்பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

காசு - மணி, இரத்தினம். காம்பு - பட்டாடை. 'கறுப்பு' என்னும் பொருளதாகிய, 'கறை' என்பது, இங்கு அந்நிறத்தையுடைய கல்லைக் குறித்தது. 'தேசமெல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித் திரு வேகம்பம்' என அடிகள் அருளிச் செய்தமை, அத்தலத்தின் பெருமை இனிது விளங்குதற் பொருட்டே என்பது, நன்குணர நிற்பதொன்று. இவ்விடத்தே, 'அன்புடையவர்கள் என்றும் நின்று நிலாவுக' என அடியார்களை வாழ்த்தியதும், அடிகளை அங்கு நல்வரவேற்று வணங்கி மகிழ்ந்த அடியவர் குழாத்தினை நினைந்தே போலும்! இத் திருப்பாட்டில் இத்துணை வெளிப்படையான சொற்கள் பொருந்தி யிருப்பவும், அடுத்துவரும் திருப்பாட்டும் இவ்வாறாகவும் இப் பகுதியை இத்தலத்தில் அருளிச் செய்ததாக ஒருவருங்கூறாது போயது வியப்பேயாம். பாசவினை - வினை பாசத்தை என மாறிக் கூட்டுக. முன்னர், 'கோயில்பாடி என்றமையின், இங்கு, 'பாடி' என்றது, அவனது புகழ் முதலிய பிறவற்றையும் பாடி' என்றவாறாம்.

அறுகெடுப் பார்அய னும்மரியும்

அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. #198

பிரமனும் திருமாலும் அறுகம்புல்லை எடுத்த லாகிய பணியைச் செய்வார்கள். அவர்களைத் தவிர ஏனையோராகிய இந்திரன் முதலிய வானுலகத்தவர்களும் முணுமுணுக்கின்ற தேவர் கணங்களும் நமக்குப் பின் அல்லாமல் அவ்வறுகினை எடுக்கவிட மாட்டோம். நெருங்கிய முப்புரத்தை எய்து அழித்த வில்லையுடைய வனாகிய திருவேகம்பனது செம்பொன்னாலாகிய கோயிலைப் பாடி நகையோடு கூடிய சிவந்த வாயினையுடையீர்! மூன்று கண்களை யுடைய எம்தந்தைக்குப் பூசிக் கொள்ளும் பொருட்டுப் பொன் போலும் வாசனைப் பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

அறுகு - அறுகம் புல். எடுப்பார் - எடுப்பதற்கு முற்படுவார். ஒருவரை மங்கல நீராட்டுவார் முதற்கண் அறுகம் புல்லை நெய்யில் தோய்த்து எடுத்து அதனால் நெய்யேற்றிப் பின் சுண்ணந்திமிர்ந்து நீராட்டுதல் மரபு. அவ்வாறு செய்யுமிடத்து நெய்யேற்றுதற்கண் முற்பிற்பாட்டு முறைமை அதனைச் செய்வாரது தகுதி வேறுபாட்டிற்கு ஏற்ப அமையும். அம்முறைமைக்கண், தகுதி வேறுபாடு தெற்றென விளங்காதாரிடையே பிணக்குண்டாதலும் உண்டு. அவ்வாற்றால் இறைவனுக்குத் திருமஞ்சனம் ஆட்டுதற்கண் நெய்யேற்றுதற்கு மக்களினும் தேவர் முற்பட்டு அறுகம் புல்லை எடுப்பார் என்பாள், 'அறுகெடுப்பார் அயனும் அரியும் ...... எல்லாம்' என்றாள். அன்றி - அவரன்றியும், 'இந்திரனோடு' என்றதனால், 'அமரர்' என்றது, ஏனைத் திசைக்காவலரை என்க. அயன், மால், திசைக்காவலர் என்னும் இவரிடைத் தகுதி வேறுபாடு தெற்றென விளங்கிக் கிடத்தலின், முற்பிற்பாட்டு முறைமைக்கண் இவர் மாட்டுப் பிணக்கு நிகழாமை பற்றி அவர்களை வாளாதே சுட்டி, ஏனைத் தேவரிடையே அவ்வேறுபாடு தெரித்துக்காட்ட வாராமையின், அவர்தங் குழாங்கட்கிடையே பிணக்கு நிகழும் என்பது பற்றி அக் குழாங்களை, 'நறுமுறுதேவர்கணங்கள்' என்றாள். 'நறுமுறுத்தல்' என்பதை இக் காலத்தார், 'முணுமுணுத்தல்' என்பர். இஃது உள்ளத் தெழுந்த வெகுளியைத் தெற்றென வெளிப்படுத்தமாட்டாதார் செய்வது, 'தம்மில் பிணங்காதும், பிணங்கியும் முற்படும் தேவர் அனைவரும் நம்மைக்

கண்டவழி அஞ்சி நமக்கும் பிற்படுவர்; அவ்வாறின்றி முற்படவே துணிவராயினும், நம் உரிமையை நாம் நிலைநிறுத்திக் கொள்ள வல்லோம்' என்பாள், 'எல்லாம் நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோம்' எனக்கூறினாள்.
இவள் இங்ஙனம் கூறியது, எப்புன்மையரையும் மிகவே உயர்த்தி விண்ணோரைப் பணிக்கும் *(தி.8 திருச்சதகம்-10)* தனது கருணைத் திறத்தினால், தேவர்க்கும் வழங்காத பெருநிலையைத் தங்கட்கு வழங்கி ஆட்கொண்ட அணுக்கம் பற்றியாம். 'நம்மின்' எனத் தலைவியையும் உளப்படுத்திக் கூறினாளாதலின், தோழி, குற்றேவல் பிழைத்தாளல்லள் என்க. இஃது ஏனையிடங்கட்கும் ஒக்கும். 'எடுக்க ஒட்டோம்' என்றதன்பின் 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவித்து, அதனை, 'சுண்ணத்தினைத் தாழாது இடிப்போம்' என உரைத்து முடிக்க.
தேவர்க்கும் எட்டாத பெருமான் தமக்கு எளிவந்து அருளிய அருட்டிறத்தை இடையறாது எண்ணி எண்ணி நெஞ்சம் கரைந்துருகும் அடிகள், தம் உள்ளத்துணர்ச்சியை இத்திருப்பாட்டின் கண் செய்யுள் நலம்பொதுளத் தெளித்துள்ள அருமையை உணரின், நெஞ்சம் நெக்குருகாதார் யாவர்!

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதா தென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே. **#199**

இவ்வுலகம் முழுவதும் உரல்களை வைப்பதற்கு இடம் போதாது என்று சொல்லும்படி பெரியவர் பலர் பல உலக்கை களைக் கொண்டு ஓங்கி இடிப்பார்கள். உலகங்கள் பலவும் இடம் போதமாட்டா என்னும்படி அடியவர் ஒன்று கூடிப் பார்ப்பதற்கு வந்து நின்றனர். நாம் நன்மையடைய, அடியார்களாகிய நம்மை ஆட் கொண்டருளி அன்றலர் தாமரை மலர் போன்ற திருவடிகளை நாம் சென்னிமேல் சூடிக்கொள்ளும்படி கொடுத்த இமவான் மருமகனாகிய பெருமானைப் பல்கால் பாடிக் களித்துப் பொன்போலும் நிறமுடைய வாசனைப் பொடியை இடிப்போம்.

விளக்கவுரை

பொருள்கோள்; 'பெரியர் உலக்கை பலவற்றைக் கொணர்ந்து ஓச்சுவார்; அதனால், உலகமெலாம் உரலாயினும் போதாது என்று சொல்லி,

அடியவர் நம்மோடு கலந்து பணிசெய்ய, காண உலகங்கள் போதா என்னும்படி வந்து நின்றார்; ஆதலின்...... நாம் பாடிப்பாடி மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும்'. சிவபெருமானது வருகையை முன் உணர்ந்தோர் அதனை முன்னிட்டு நிகழும் ஆர வாரங்களை நினைந்து கூறினராகலின், 'ஓச்சுவார்' என எதிர்காலத் தாற் கூறினர். பெரியர் - அடியவர். 'ஆயினும்' என்பது தொகுத்தல். நலக்க - நலம் அடைய.

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பரா பரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. **#200**

கைவளையும் தோள்வளையும் பலகாலும் ஒலிக்க, அடியார் கூட்டம் புறப்பட்டு அரகரவென்று அடிக்கடி முழங்க, நாட்டில் உள்ளார் நம் இயல்பினை நோக்கி நம்மை இகழ்ந்து சிரிக்க, நாமும் அவர்கள் அறியாமையை எண்ணி நகை செய்ய, கால் அணி மென்மையான பாதங்களில் ஒலிக்கும் உமாதேவியை ஒரு பாகமாக உடையவனாகிய எங்களுக்கு மிக மேலானவனும் பெரிய பொன் மலையை ஒத்த தலைவனுமாகிய இறைவனுக்குத் திருமுழுக்கின் பொருட்டுப் பொன்போலும் வாசனைப் பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

சூடகம் - கை வளை. 'ஆர்ப்ப' என்றன பலவும், நிகழ் காலத்தின் கண் வந்தன. நாடவர் ஆர்ப்ப, நாமும் ஆர்ப்ப' என்ற இரண்டிடத்தும் உள்ள ஆர்த்தல், 'சிரித்தல் என்னும்' பொருள, நாடவர் அடியவரைச் சிரித்தல், சிற்றின்பத்தை இகழ்தல் பற்றி. அடியவர் நாடவரைச் சிரித்தல், பேரின்பத்தை இகழ்தல் பற்றி. அடுக்குக்கள், இடைவிடாமைப் பொருளன. பாடகம் ஒருவகைக் காலணி. 'மெல்லடியின் கண் பாடகம் ஆர்க்கும் மங்கை' என்க. சிவபெருமான் பொன்னார் மேனியனாகலின். 'ஆடக மாமலை அன்னகோ' என்றாள். ஆடகம் - பொன்,

வாள்தடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை

ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. #201

வாள்போன்ற பெரிய கண்களையும் இளமையு முடைய மங்கைப் பருவப் பெண்களே! வரிகளையுடைய வளையல் கள் ஒலிக்கவும் வளப்பம் மிகுந்த தனங்கள் பூரிக்கவும், தோளிலும் நெற்றியிலும் திருநீறுபிரகாசிக்கவும் எம்பெருமானே வணக்கம் என்று பலகாற் கூறி அப்பொழுது பறித்த அன்றலர்ந்த மலர்கள் சூட்டப் பெற்ற திருவடியைக் காட்டி நாயினும் கீழ்ப்பட்ட நம்மை இப்பிறவியிலே ஆண்டுகொண்ட முறைகளைப் பலகாற் பாடி இறைவன் திருமுழுக் கிற்குப் பொன்போலும் வாசனைப் பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

வரி - கீற்று; இஃது அழகிற்காக இடப்படுவது. பொங்க- பூரிக்க. துதைந்து இலங்குதலுக்கு. 'நீறு' என்னும் வினைமுதல் வருவித்து, 'தோளிலும், அழகிய நெற்றியிலும் திருநீறு நிறைந்து விளங்க' என உரைக்க. 'எம்பிரானே சோத்து' என்க. நாட்கொண்ட - மலரும் நாளைப் பொருந்திய' 'நாள மலர்' என்பதில், அகரம் தொகுத்தல். நாளம் - தாமரைத் தண்டு.

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந் துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. #202

உலகமுழுவதும் உரலாகக் கொண்டு மகாமேரு என்கிற உலக்கையை உள்ளத்திலே நிலைநாட்டி, உண்மை என்கிற மஞ்சளை நிறைய இட்டு மேன்மை தங்கிய அழகிய நல்ல திருப்பெருந்துறையில் இருப்பவனது செம்மையாகிய திருவடியைப் பலகாற்பாடிச் செம்பொன் மயமான உலக்கையை வலக்கையில் பிடித்துத் தலைவனாகிய அழகிய தில்லைவாணனுக்குத் திருமுழுக்கின் பொருட்டுப் பொன்போலும் வாசனைப் பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

'வையகம்' என்றது முதலாக, 'அட்டி' என்றது இறுதி யாக உள்ள பகுதியால், 'மக்கள் இறைவன் பொருட்டுப் பொற் சுண்ணம் இடிக்குங்கால், உரலை நிலவுலகமாகவும், உலக்கையை

மேருமலையாகவும், இடிக்கப்படும் பொருள்களை உண்மை அன்பாகவும் கருதிக்கொண்டு இடித்தல் வேண்டும்' என்பது குறிப் பிடப் பட்டது. இதனால். 'இறைவன் ஆடுவது அன்பர் அன்பிலன்றி, அவர் ஆட்டும் பொருளில் அன்று' என்பது திருவுள்ளம். 'நேயமே நெய்யும் பாலா' *(தி.4.ப.76.பா.4)* என்று அருளிச்செய்தார் திருநாவுக்கரசு சுவாமிகளும். உண்மையன்பைப் பிற பொருட்கண் செலுத்தாது இறைவனிடத்திற் செலுத்துதலே, இடித்தல் தொழிலாம். ஆகவே, எல்லாவற்றையும் தாங்கும் நிலமும், அதற்கு உறுதியாய் நிற்கும் மேருமலையும் அத்தொழிற்கே துணைபுரிவனவாதல் வேண்டும் என்ற வாறு. மெய், ஆகுபெயர். 'மஞ்சள்' என்றாரேனும், ஏனையவும் உடன் கொள்ளப்படும். மேதகு - மேன்மை தக்கிருக்கின்ற. 'காசணி மின்கள் உலக்கை எல்லாம்' என்றமையின் அதற்குப் பொன்னணியும் பூட்டுதல் பெறப்படுதலின், 'செம்பொன்' என்றதும் அதனினாய அணியை என்க. 'செம்பொன்னாலாகிய உலக்கை' என்றே உரைப்பாரும் உளர். இருகையும், பணிசெய்ய வேண்டுதலின், 'வலக்கை, வலிமையையுடைய கை' என்க.

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. **#203**

முத்துவடமணிந்த தனங்கள் அசைந்து ஆடவும், நெருங்கிய கூந்தலிலுள்ள வண்டுக் கூட்டங்கள் எழுந்து ஆடவும், மனமானது சிவபெருமானிடத்தில் நீங்காதிருக்கவும், செங்கயல் மீன் போன்ற கண்கள் நீர்த்துளியை இடைவிடாது சிந்த, அன்பு எம்பெரு மானிடத்தில் மேன்மேற்பெருகவும் பிறவியானது உலகப் பற்றுள்ள பிறரோடும் சூழ்ந்து செல்லவும், எம் தந்தையாகிய சிவபெருமான் அருளோடு நம்முன் விளங்கித் தோன்றவும் அவன் திருமுழுக்கின் பொருட்டுப் பொன்போலும் வாசனைப் பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

முத்து அணி - முத்து மாலையை அணிந்த. 'சூழலின் கண்' எனவும், 'நம் சித்தம்' எனவும், 'நம் செங்கயற்கண்களில்' எனவும், 'நம் பித்து' எனவும், உரைக்க. கண் பனி ஆட' என, இடத்து நிகழ்பொருளின் தொழில், இடத்தின்மேல் நின்றது. பனி - பனித்தலை *(சிந்துதலை)* உடைய நீர்.

பித்து - பேரன்பு. 'ஆட' என்பது, 'சிவனொடும் ஆட' என்றாற் போல்வனவற்றில், 'பொருந்த' என்னும் பொருளைத் தந்து நின்றது. 'பிறரொடும்' என்ற இழிவு சிறப்பும்மையைப் பிரித்து, 'பிறவி' என்றதனோடு கூட்டுக. உம்மை, பிறவிக்கு இடமின்மை காட்டி நின்றது. 'அத்தன் ஆட' என இயையும்; இங்கு, 'ஆட' என்றது, 'மூழ்க' என்றதாம். இது, முன் வந்தவற்றோடு ஒரு நிகர்த்ததாகாது வேறாதலின், மும்முறை அடுக்கியருளினார். இங்கும் அடுக்குக்கள் மேல் வந்தனபோல நின்றன.

மாடு நகைவாள் நிலாஎ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. **#204**

பெண்களே! பக்கங்களில் பல்லினது ஒளி, நிலவு போன்று ஒளிவீசவும், அழகிய பவளம் போன்ற உதடுகள் துடிக்கவும், வாயைத் திறந்து பாடுங்கள். நம்மவன் ஆண்டு கொண்ட வழியையும் இறைபணியிலே நிற்கச் செய்ததையும் அவ்வாறு இடைவிடாது பாடி எம்பெருமானைத் தேடுங்கள். அவ்வாறு தேடி மனம் உன்மத்த நிலையையடைய, தடுமாறிப் பின்னர் மனம் தெளிந்து ஆடுங்கள். தில்லையம்பலத்தில் நடனஞ் செய்தவனுக்குத் திருமுழுக்கின் பொருட்டுப் பொன் போலும் வாசனைப் பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

மாடு - பக்கம். நகை வாள் - பற்களின் ஒளி. நிலா எறிப்ப - நிலவை வீச. 'வாய்திறந்து' என்றதை, 'பாடுமின்' என்றதற்கு முன்னே கூட்டுக. பவளம் போலும் இதழை, 'பவளம்' என்றது உவமையாகுபெயர். 'எறிப்ப, துடிப்ப' என்றவை 'பாடுமின்' என்றதனோடு முடியும். 'நந்தம்மை ஆண்டவாறும் பணிகொண்ட வண்ணமும் வாய்திறந்து பாடுமின்; பாடி எம், பெருமானைத் திகைத்துத் தேடுமின்; தேடித் தேறிச் சித்தங் களிப்ப ஆடுமின்' எனக் கூட்டியுரைக்க. பெருமான் வரவுணர்ந்து எல்லாம் செய்கின்றவள் நீட்டித்தல் நோக்கி,'பலதிசையினும் சென்றுபார்மின்' என்பாள், 'திகைத்துத் தேடுமின்' என்றும், 'அங்ஙனம் பார்க்குமிடத்து யாதேனும் ஒரு திசையில் பெருமான் வரக் காணின், அவ்விடத்து அவனை மகிழ்ச்சியோடு எதிர்கொண்மின்' என்பாள், 'தேறிச் சித்தங் களிப்ப ஆடுமின்' என்றும் கூறினாள். 'தேடுமின், ஆடுமின்' என்ற இரண்டும் ஆயத்தாருள் ஒரு சிலரை நோக்கிக் கூறியனவும், ஏனையவை

பலரையும் நோக்கிக் கூறியனவுமாகலின், இவை தம்முள் இயையாமை இல்லை என்க. தேடச் செல்லுகின்றவர்களும் சிறிது நேரம் எம்முடன் பாடிப் பின்னர்ச் செல்லுக என்பாள், 'பாடித் தேடுமின்' என்றாள். 'பாடிப் பாடி என்றதனை அடுக்காக்காது பிரித்து, ஒன்றனை, 'ஆண்ட வாறும்' என்றதனோடு கூட்டுக. 'பாடி' எனவும், 'தேடி' எனவும் பெயர்த்துங் கூறியது, 'இது செய்த பின் இது செய்க' என முறைதெரித்தற் பொருட்டு. எனவே, அவை' பாடியபின், தேடியபின்' என்னும் பொருளவாம்.

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. **#205**

தாமரை மலர் போன்ற செவ்வரிபடர்ந்த இரண்டு கண்களையும் பொன் வளையணிந்த தோள்களையும் பாம்பின் படம் போன்ற அல்குலையுமுடைய மடந்தைப் பருவத்தையுடைய பெண்களே! கருமையமைந்த கழுத்தினையுடையவனும் விண்ணுலகத் தாருக்கு அமுதமாயிருப்பவனும் செம்மை நிறமுடைய கூத்தனும், தேவனும், தேவர்க்குத் தலைவனும் நம்மைத் தன் வசப்படுத்தி அடிமை கொண்டு தனது அரிய தன்மையைப் புலப்படுத்தினவனும் பொய்ம்மை யாளருக்குப் பொய்ம்மையானவனும் மெய்ம்மையாளருக்கு மெய்ம் மையானவனுமாகிய இறைவனைப் பாடிப் பொன்போலும் வாசனைப் பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

மை - கருமை நிறம். வானநாடர் மருந்து - அமுதம். மாணிக்கக் கூத்து - மாணிக்கம் போலும் உயர்ந்த கூத்து. ஐயன் - தலைவன். ஐயர் - தேவர்; இதுவும், ஒரு சார் தலைமை பற்றி வந்த பெயரேயாம். அகப்படுத்து - தன்வழிப்படுத்து. அருமை காட்டும் - தனது அரியனாந் தன்மையைக் காட்டுகின்ற; என்றது, 'நாம் பல்கால் வேண்டியும் எளிதின் வந்திலன்' என்றதாம், 'முன்பு அகப்படுத்து ஆட்கொண்டு, இப்பொழுது அருமை காட்டுகின்றான்' என்றபடி. பொய்யன் - வெளிப்படாது நிற்பவன். மெய்யன் - வெளிப்பட்டு அருள் செய்பவன். 'யாம் பொய்யரல்லேம்; மெய்யேமாகலின் வாரா தொழியான்' என்பது குறிப்பு. போது அரிக் கண் - பூப்போலும். வரிகளையுடைய கண்; 'அவற்றது இணை' என்க. 'பையரவல்குல்' என்பதில், 'பையரவு' என்பது, 'முன்றில்' என்பது

போலப் பின் முன்னாகத் தொக்க ஆறாவதன் தொகை.

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு தெங்க ளப்பன்
எம்பெரு மான்இம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்த கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. **#206**

மின்னல் கொடி போன்ற இடையினையும் செம்பவளம் போன்ற இதழினையும் கருமையான கண்களையும் வெண்மையான பற்களையும் இசைபொருந்திய மென்மையான மொழியினையும் உடையவர்களே! பொன்னாபரணம் அணிந்த தனங்களையுடைய மங்கைப் பருவப் பெண்களே! என்னையுடைய அமுதம் போன்றவனும் எங்கள் அப்பனும் எம்பெருமானும் மலையரசன் மகளாகிய பார்வதிக்கு அவளை உடைய நாயகனும் மகனும் தந்தையும் முன்பிறந்தானுமாகிய எங்கள் கடவுளது திருவடி களைப் பாடிப் பொன் போலும் அழகிய வாசனைப் பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

பண் அமர் - பண்ணின் தன்மை பொருந்திய. தன் உடை- தன் உடைப் பொருளாகிய. 'தன்' என்பது, இமவான் மகளை. 'தன் உடைப்பொருளாகிய கேள்வன்' என்றது, கணவன் மனைவி யரிடையுள்ள இயைபை விதந்தோதியவாறு. 'பிறன் பொருளாள்' என்னும் திருக்குறளில் *(141)* திருவள்ளுவரும், ஒருவன் மனைவியை, 'அவனது உடைமைப் பொருள்' எனக் கூறினார். மனைவியை, 'உரிமை ' என்னும் பெயராற் குறித்தலும் இதுபற்றியே யாம். 'சிவத்தையும் சத்தியையும் முறையே தந்தையும் மகளுமாகக் கூறுதல், சிவமும், நாதமும் ஆகிய சிவபேதங்களினின்றும் முறையே சத்தியும், விந்துவுமாகிய சத்தி பேதங்கள் தோன்றுதல் பற்றியாம். சத்தியையும், சிவத்தையும் முறையே தாயும், மகனுமாகக் கூறுதல், சத்திபேதங்களுள் ஒன்றாகிய சத்தியினின்றும், நாதமாகிய சிவபேதம் தோன்றுதல் பற்றியாம். சிவத்தையும், சத்தியையும் முறையே தமை யனும், தங்கையுமாகக் கூறுதல், சத்தி பேதமாகிய விந்துவினின்றும், சிவபேதமாகிய சதாசிவன் முன்னும், சத்தி பேதமாகிய மனோன்மனி பின்னும் தோன்றுதல் பற்றியாம். சிவமும், சத்தியும் சதாசிவன், மனோன்மனி முதலிய சிவபேத சத்தி பேதங்களாய் நின்று எல்லாப் பொருள்களையும் பயத்தலின், அவ்விருவரும் கணவனும் மனைவியு

மாகவும், உலகிற்கு அப்பனும் அம்மையுமாகவும் கூறப்படுவர்; இறுதியிற் கூறிய இஃது ஒன்றே பெரும்பான்மை. 'மனோன் மனியைப் பெற்ற - தாயிலானைத் தழுவும்என் ஆவியே' *(தி.5. ப.91. பா.1.)* என்றருளியதில்,'மனோன்மனி' என்றது, பொதுமையில், 'சத்தி' என்னும் பொருளதாம். இச் சிவபேத சத்தி பேதங்களின் இயல்பை எல்லாம் சிவஞானசித்தியினும், சிவ ஞானபோத மாபாடியத்தினும் தெளியக் காண்க; ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இத்தத்துவ முறைபற்றி இங்கு இவ்வாறருளிச் செய்த அடிகள், திருக்கோவையுள்ளும், 'தவளத்த நீறணியுந் தடந்தோள் அண்ணல், தன் ஒருபாலவள் அத்தனாம்; மகனாம்' *(தி.8 கோவையார்-12)* என்று இங்ஙனமே அருளுதலையும், 'சிவ தத்துவத்தினின்றும் சத்தி தத்துவம் தோன்றலின் அவள் அத்தனாம் என்றும், சத்தி தத்துவத் தினின்றும் சதாசிவதத்துவம் தோன்றலின் மகனாம் என்றும் கூறினார், 'இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்' என்பதூஉம் அப்பொருண் மேல் வந்தது'

என்று அதற்குப் பேராசிரியர் உரை உரைத்தலும் காண்க.

'வாயும் மனமும் கடந்த மனோன்மனி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும்நல் தாரமும் ஆமே.'

(தி.10 திருமந்திரம் - 1178) என்பது திருமூலர் திருவாய்மொழி.

'கனகமார் கவின்செய் மன்றில்
அனகநா டகற்கெம் அன்னை
மனைவிதாய் தங்கை மகள்'

எனக் குமரகுருபரரும் அருளிச் செய்தார்*(சிதம்பரச் செய்யுட் கோவை-33)*

'பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும்
பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக்
கண்டனுக்கு
மூத்தவளே' *(-அபிராமியந்தாதி - 13)*

எனவும்,

'தவளே இவள் எங்கள் சங்கர னார்மனை;
மங்கலமாம்
அவளே அவர்தமக் கன்னையு மாயினள்;' *(-அபிராமியந்தாதி - 44)*

எனவும் கூறியதும் இதுபற்றி. ஒருவரையே இங்ஙனம் ஒவ்வாத பல முறையினராகக் கூறுதல், 'இவையெல்லாம் ஒரு பயன் கருதி நாடக மாத்திரையால் அவர் மேற்கொள்வனவேயன்றி, உண்மையில் அவர்

இவ்வாறு திரிபுற்று நிற்பவரல்லர்; அவர்தம் உண்மை இயல்பு, இவை அனைத்தினும் வேறு' என்பது உணர்த்துதற் பொருட்டேயாம். இதனை, 'ஒருவனே இராவணாதி பாவகம் உற்றாற் போலத் - தருவன் இவ்வடிவம் எல்லாம் தன்மையும் திரியானாகும்' என விளக்குகின்றது சிவஞானசித்தி *(சூ. 1-67).*

இவற்றையெல்லாம், 'அபரஞானம்' எனப்படும் நூலுணர் வினால் நம்மனோரும் பரக்கக் கூறுதல் கூடுமாயினும், பரஞானமாகிய அநுபூதியைப் பெற்ற அடிகள் போன்றவர்கட்கே இவையெல்லாம் உண்மையான் விளங்குவன என்பதையும் அந்நூல்,

'சிவம்சத்தி தன்னை ஈன்றும்
சத்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்திரு வரும்பு ணர்ந்திங்
குலகுயி ரெல்லாம் ஈன்றும்
பவன்பிரம சாரி யாகும்
பான்மொழி கன்னி யாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித்
தன்மைதான் தெரியு மன்றே.'

என விளக்குகின்றது *(சூ.2.77.).* கேள்வன் முதலிய பெயர்களைச் செய்யுள் நோக்கி முறைபிறழ வைத்தார்.

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராஇ ரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. **#207**

செம்மையாகிய அணிகளையுடைய பெண்களே! சங்க வளையல் ஒலிக்கவும், காற்சிலம்பு ஒலிக்கவும், நெடிய கூந்தலில் சுற்றிய பூமாலை அசையவும், வாயில் உள்ள சிவந்த கொவ்வைக் கனிபோலும் உதடு துடிக்கவும், சிவபுரத்தின் பெருமையைப் பாடி, கங்கை வெள்ளம் ஒலிக்க, பாம்பு நடுங்கி ஒலிக்கின்ற திரட்சியான சடையையுடைய இறைவனது திருவடிக்கு மிகுந்த விருப்பத்தால் தனங்கள் விம்மப் பொன்போலும் அழகிய வாசனைப் பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

இரைப்ப - ஒலிக்க; இஃது உடனிகழ்ச்சியாகிய எதிர்காலத்தின்கண் வந்தது.

'நீரொலிக்க அரா இரைக்க நிலா முகிழ்க்கும் திருமுடியார்' (தி.*12* பெ. பு. திருக்குறிப்பு. *113.)* என்றதும் காணத்தக்கது. 'கழற்கே பொங்கிய' என இயையும். 'காதலால் கொங்கைகள் பொங்க' என்க. இக் காமப் பொருள், 'இறைவன் திருவடியில் பேரன்புடையார்க்கு அது காரணமாக உடல் பூரிக்கும்' என்பதைக் குறிக்கும்.

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. **#208**

கருங்குவளை மலர் போன்ற பெரிய கண்களையுடைய இளம் பெண்களே! ஞானமாகிய கருப்பஞ்சாற்றின் தெளிவானவனும், அதன் பாகானவனும், தேடுவதற்கு அருமையான நன்மைப் பொருளானவனும், சுவை கெடாத தேனானவனும், முக்கனிகளின் சுவையானவனும், மனத்தில் புகுந்து இனிக்க வல்ல தலைவனும், பிறவித்தளையை அறுத்து ஆண்டுகொண்டருளின கூத்தப் பெருமானுமாகிய இறைவனை நாவில் வடுவுண்டாகும்படி, துதித்துப் பாடிப் பொன் போலும் வாசனைப் பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

ஞானக் கரும்பு, உருவகம். தெளிவு - அதன் சாறு. பாகு-அச்சாற்றைக் காய்ச்சுவதனாலாவது. நாடல் - நினைத்தல். கிடைத்தல் கூடாமையால், நினைத்தற்கும் அரியதாயிற்று. நலம், அதனையுடைய பொருட்கு ஆகுபெயர். நந்தா - கெடாத. 'சித்தம் புகுந்து தித்திக்க வல்ல தேனை' எனக் கூட்டுக. பானல் - நீலோற்பல மலர்.

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொ டியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே. **#209**

நாமும் அன்பரோடு கூடி வந்து உய்யும் வகையில் பணிசெய்யும் வகைகளைப் பாடி விண்ணுலகத்திலுள்ள தேவர்கள் கனவிலும்

கண்டறியாத செந்தாமரை மலர்போலும் திருவடிகளை எமக்குக் காட்டுகின்ற செல்வமாகிய காளையை அகத்தே கொண்ட வெற்றியையுடைய கொடியையுடையவனும் சிவபெருமானும், முப்புரங்களை அழித்த வெற்றியையுடைய வீரனுமாகிய இறைவன் திருநாமங்களைப் பரவிச் சிவந்த பொன் போல ஒளியைத் தருகின்ற வாசனைப் பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

ஆவகை - உயர்வெய்தும் வகையில். வந்து - சென்று; இடவழுவமைதி.
'கனவிலும் தேவர்க் கரியாய் போற்றி'
(தி.8. போற்றித்திருவகவல் 143)
என முன்னரும் அருளிச் செய்தார். 'பாதங்களை நமக்குக் காட்டும்' என்க. சே அகம் ஏந்திய கொடி - எருதைத் தன்னகத்துக் கொண்ட கொடி. கொற்றம் - வெற்றி. சேவகம் - வீரம்.

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்திருச் சுண்ணம் இடித்தும் நாமே. **#210**

சிவபெருமானது தேன்நிறைந்த உள்ளிடத்தை யுடைய பெருமை பொருந்திய கொன்றை மலரைப் பாடி, சிவ லோகத்தைப் பாடி, அழகிய சடையின் மேலுள்ள விண்ணிடத்து உலாவுகின்ற பெருமையமைந்த இளம்பிறையைப் பாடி, பெரிய இடபத்தைப் பாடி, வலக்கையில் தாங்கிய, தசை தன்னிடத்தில் பொருந்திய மழுவினையும் முத்தலை வேலினையும் பாடி, விண் ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் பிழைக்கும் வண்ணம் அந்நாளில் விடத்தை உணவாக உண்டதைப் பாடிப் பொன் போலும் அழகிய வாசனைப் பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

தேன் அக மா மலர் - தேனை அகத்திலே உடைய சிறந்த மலர். 'தேனகக் கொன்றை மலர்' என மாற்றிப் பொருள் கொள்க. வானகம் - விண்ணில் இயங்குதற்குரிய, மதிப்பிள்ளை - பிள்ளை மதி; மூன்றாம் பிறை. மால் விடை - பெரிய இடபம். ஊனகமாமழு - பகைவரது ஊனை அகத்திலே உடைய பெரிய மழு. உம்பர் - மேலுலகம். இம்பர் - கீழுலகம். போனகம் - உணவு.

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. **#211**

சிவபெருமான் பிரமன் தலையைக் கொய்து பந்தாடினமையைப் பாடி, சூரியனது பல்லைத் தகர்த்தமையைப் பாடி, யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்துக் கொண்டமையைப் பாடி, இயமனைக் காலால் உதைத்ததைப் பாடி, ஒருங்கே உலவிய திரிபுரங்களை அம்பால் எய்து அழித்தமையைப் பாடி, சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய எங்களை ஆட்கொண்ட நன்மையினைப் பாடி, பாடலுக்கேற்ப நின்று தொடர்ந்து ஆடி இறைவனுக்கு வாசனைப் பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

பிரமன் தலைகளுள் ஒன்றைச் சிவபெருமான் கைந் நகத்தால் கிள்ளி எறிந்தபொழுது அதனைச் செண்டாடினார் என்பது இதனால் பெறப்படுகின்றது.

'அரி அயன்தலை வெட்டிவட் டாடினார்' *(தி.5.ப.85.பா.2.)*

என்ற அப்பர் திருமொழியும் இங்கு நினைக்கத் தக்கது. அருக்கன் - சூரியன். இவனது பல்லைச் சிவபெருமான் பறித்தது தக்கன் வேள்வியில். கயம் - யானை. யானையுருக் கொண்ட அசுரன் கயாசுரன். இயைந்தன முப்புரம் - ஒருங்கு கூடி இயங்கிய மூன்று கோட்டைகள். நயம் - விருப்பம்; என்றது, திருவருளை.

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. **#212**

சிவபெருமானது வட்ட வடிவாகிய கொன்றை மலர் மாலையைப் பாடி, ஊமத்தமலரையும் பாடி, பிறையையும் பாடிப் பெரியோர் வாழ்கின்ற அழகிய தில்லை நகரைப் பாடிச் சிற்றம்பலத்து ஞானசபையிலுள்ள எமது செல்வமாகிய பெருமானைப் பாடி, அரையிற் கட்டிய பாம்புக்

கச்சையினைப் பாடி, கையிற் சுற்றியுள்ள கங்கணத்தைப் பாடி, மூடினகையின்மேல் வைக்கப்பட்டுப் பட மெடுத்து ஆடுகின்ற பாம்பைப் பாடி, இறைவனுக்கு வாசனைப் பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

'வட்ட மாலை' என இயையும். இஃது இண்டையைக் குறித்தது. மத்தம் - ஊமத்த மலர். சிட்டர் - மேலோர்; இது தில்லை வாழந்தணர்களைக் கூறியதாம். செல்வம் - செல்வம் போல உள்ள சிவபெருமான். மாசுணம் - பாம்பு. கச்சை - அரையில் உடைமேல் இறுகக் கட்டுவது. 'மாசுணம்' என்றது, 'கங்கணம்' என்றதனோடும் இயையும். சிவபெருமான் கையில் ஒரு பாம்பைத் தனியாக வைத்து ஆட்டுதலும் பலவிடங்களிற் கூறப்படும்.

வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயி னாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. **#213**

வேதநூலும் அவற்றுள் கூறப்படும் யாகங்களும் ஆனவரும், மெய்ப்பொருளும் பொய்ப் பொருளும் ஆனவரும், ஒளியுமாகி, இருளும் ஆனவரும், துன்பமுமாகி இன்பமும் ஆனவ ரும், பாதியுமாகி முழுதுமானவரும், உயிர்களுக்குப் பந்தமும் ஆகி வீடும் ஆனவரும், உலகுக்கு முதலும் முடிவுமானவரும் ஆகிய இறைவருக்கு, நீராடும் பொருட்டுப் பொன்போலும் வாசனைப் பொடியை நாம் இடிப்போம்.

விளக்கவுரை

பின் வருவனபோல மறுதலைப் பொருள்பட, 'வேதம்' என்றதற்கு,'வேதமுடிபினால் உணர்த்தப்படுவதாகிய ஞானம்' எனப்பொருள் கூறுக. 'வேள்வி' என்றது, கன்ம காண்டத் துள் சொல்லப்பட்ட வேள்விகளையாம். மெய்ம்மை - நிலைத்த பொருள். பொய்ம்மை - நிலையாத பொருள். சோதி - ஒளி; ஞானம். இருள் - அஞ்ஞானம். பாதியாதல், ஒரு வடிவத்தில் பாதி வடிவமே தானாய் இருத்தல். மற்றைப் பாதி வடிவம் அம்மை என்க. இது, மாதொரு கூறானவடிவம். முற்றுமாதல், முழுவடிவமும் தானேயாதல்; இது உமாமகேசுரவடிவம் முதலாகப் பலவாம். இவ்வடிவங்களில், அம்மை தனித்துக் காணப்படுவாள்,

'பெண்உரு ஒரு திறன் ஆகின்று; அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்'

எனப் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தினும் இவ்விருவகை வடிவும் கூறப்பட்டன. பந்தம் - கட்டு; பிறப்பு நிலை. வீடு - பிறப்பு நீங்கிய நிலை. இறைவன் மெய்ப்பொருளாதல் வெளிப்படை. எல்லாப் பொருளிலும் உடலில் உயிர்போலக் கலந்து நிற்றலால், நிலையாப் பொருளும் ஆகின்றான். ஞானம், இறைவனது இயற்கை தன்மை, அஞ்ஞானத்தைத் தருகின்ற ஆணவத்திலும் திரோதான சத்தியாய் இயைந்து நிற்றலின், அஞ்ஞானமும் ஆகின்றான். மறைத்தல் தொழிலால் பிறவித் துன்பத்தை விளைவித்தலின், துன்பமாகின்றான். இன்பம் - பேரின்பம். இஃது அவனிடத்தில் இயல்பாய் உள்ளது, பந்தம் - திரோதான சத்தி வாயிலாக ஆணவத்தின் சத்தியை நடத்தி உயிர்களைப் பிறப்பினுள் அழுத்தல். ஐந்தொழில்களுள், 'மறைத்தல்' என்பது இதுவே. வீடாவான் இறைவனே என்பதும், அவனே உலகிற்கு ஆதியும், அந்தமும் என்பதும் வெளிப்படை. இவ்வாற்றால், 'அவனையன்றி யாதும் இல்லை' என்பது உணர்த்தியவாறு.

1.10.திருக்கோத்தும்பி

பூவேறு கோனும்
புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும்
நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும்
வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே
சென்றூதாய் கோத்தும்பீ. **#214**

அரசவண்டே! நீ, பிரமன், இந்திரன், சரசுவதி, திருமால், நான்கு வேதங்கள், முச்சுடர்கள், மற்றைத் தேவர்கள், ஆகிய எல்லாரும் அறியவொண்ணாத இடபவாகனனாகிய சிவபெருமானது திருவடியிற் போய் ஊதுவாயாக.

விளக்கவுரை

எல்லா இடத்தும், 'கோத்தும்பீ' என வருவதனை முதலிற் கொள்க.
பூ ஏறு கோன் - தாமரை மலர்மேல் ஏறி வீற்றிருக்கும் தலைவன்; பிரமதேவன். பொற்பு - அழகு. நா ஏறு செல்வி - எல்லார் நாவிலும் சென்று தங்கும் அரசி; கலைமகள். மா - பெருமை. 'ஏற்றுச் சோதி' எனற்பாலது, எதுகை நோக்கி, 'ஏறு சோதி' என நின்றது; 'இடபத்தினை உடைய ஒளி வடிவினன்; உருத்திரன்' என்பது இதன் பொருள். சே ஏறு சேவடி - இடபத்தின்கண் ஏறும் செவ்விய திருவடி. சேவடிக்கு - சேவடிக்கண்; உருபுமயக்கம். ஏகாரம் பிரிநிலை. பின்வருவனவற்றிற்கும் இவை பொருந்தும். 'குணமூர்த்தியாகிய உருத்திரனுக்கும், நிற்குணமூர்த்தியாகிய பரமசிவனுக்கும் வடிவு, பெயர் முதலியன ஒருவகையினவாயினும், உருத்திரன் ஆன்ம வருக்கத்தினன் எனவும், பரமசிவன் யாவர்க்கும் பதியாகிய முதற் கடவுள் எனவும் பகுத்துணர்ந்து கோடல் வேண்டும் என்பது உணர்த்துதற்கு இருவர்க்கும் இடப வாகனம் உண்மையை விதந் தோதியருளினார். வானவரோடு உடன் வைத்து எண்ணினமை யானும், 'அறியா' என்றதனானும், 'மா ஏறு சோதி' உருத்திரன் என்பதும், 'ஒருவரும் அறியாச் சேவடி' என்றமையால், அவை பரமசிவனுடையன என்பதும் இனிது விளங்கின.
வண்டினைப் பரமசிவன் பால் சென்று ஊது என ஏவுகின்றவள், ஏனையோரை அப்பெருமான் என எண்ணி மயங்காமைப் பொருட்டு, எல்லார் அடையாளங்களையும் தெரித்துக் கூறினாள்.
'அவ்வடையாளங்களுள், வானவரோடு ஒருங்கு நிற்றலும், அவர் அனைவரும் வணங்க அவர்கட்கு மேல் நிற்றலும் உருத்திரனோடு

பரமசிவனிடையுள்ள வேற்றுமை' என்பதை உடம்பொடு புணர்த்திக் கூறினாள். இவற்றிடையே, 'வானவரும் நாவேறு செவ்வியும், நான்மறையும் இசையைத் தந்து நிற்றல் உண்டாக்கலின், இசையில் விருப்புடைய நீ அவ்விடத்தும் மயங்கி யொழியற்க' என்பதையும் கூறினாள் என்க. சேவடி, செங்கமல மலர்போல்வன ஆகலின் அது வண்டிற்கு மிகவும் இன்பம் செய்யும் என்பது கருதி, 'அவற்றின்கண் சென்று ஊது' என்றாள். இதனானே, 'ஆன்மாக்களாகிய வண்டுகட்கு அச்சேவடி அறிவாகிய மணத்தினையும், ஆனந்தமாகிய தேனினை யும் அளித்துப் பிறிதொன்றனையும் அறியாது இன்பம் ஒன்றையே துய்த்துத் தம்மிடத்தே கிடக்கச்செய்யும்' என்பதும் போதரும்.
தும்பி சென்று ஊதும் பொழுதே அதனது நறுமணத்தாலும், பிறவற்றாலும் அது தன்னிடத்துத் தும்பி என்பதனை உணர்ந்து, தன்னை நினைந்து வருவான் என்னும் துணிவினளாதலின், 'இன்னது சொல்' எனக் கூறாமல், ஊதுதலால் தும்பிக்கு உளதாகும் பயனை மட்டுமே குறித்து, 'ஊதாய்' என்று ஒழிந்தாள். ஊதுதல் - ஒலித்தல்.

நானார்என் உள்ளமார் ஞானங்க
ளாரென்னை யாரறிவார்
வானோர் பிரானென்னை
ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊனா ருடைதலையில்
உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே
சென்றூதாய் கோத்தும்பீ. **#215**

அரசவண்டே! தேவர் பெருமானாகிய இறைவன் வலிய வந்து என்னை ஆண்டருளாவிடின், நான் யார்? என் மனம் யார்? ஞானங்கள் யார்? என்னையறிவார் யார்? ஒன்றுமில்லையாய் முடியும். ஆதலால், நீ பிரம கபாலத்தில் உணவேற்கின்ற அம்பல வாணனது திருவடிக்கண்ணே சென்று ஊதுவாயாக.

விளக்கவுரை

'வானோர் பிரான் மதிமயங்கி என்னை ஆண்டில னேல், நான் ஆர்.....யாரறிவார்' என்க. 'ஆர்' என்றது, 'யார்' என்னும் வினா வினைக் குறிப்பின் மரூஉ. இஃது, உயர்திணை முப்பாற்கும் பொதுவாய் 'எத்தன்மையன், எத்தன்மையள், எத் தன்மையர்' என்னும் மூன்று பொருள்களுள் ஒன்றை இடத்துக்கேற்பத் தந்துநிற்கும். இஃது இங்கு 'நான் ஆர்' எனத் தன்மையில் வந்தது இட வழுவமைதி.
'ஊதைகூட் டுண்ணும் உகுபனி யாமத்தெங்
கோதைகூட் டுண்ணிய தான்யார்மன் - போதெல்லாம்

தாதொடு தாழுந்தார்க் கச்சி வளநாடன்
தூதொடு வாராத வண்டு'
(தொல். சொல். சேனாவரையம் - 210.) என்றாற்போல அஃறிணைக் கண் வருதல் திணைவழுவமைதி. அவ்வாற்றான் இங்கு 'என்உள்ளம் ஆர்', 'ஞானங்கள் ஆர்' என வந்தது. இவையெல்லாம் பிற்கால வழக்கு. இவ்வாற்றால், 'நான் ஆர்' என்றது, 'நான் எத்தன்மை யேனாய் இருப்பேன்' எனவும், 'என் உள்ளம் ஆர்' என்றது, என் மனம் எத்தன்மையதாய் இருக்கும்' எனவும், 'ஞானங்கள் ஆர்' என்றது, 'என் அறிவுகள் எத்தன்மையனவாய் இருக்கும்' எனவும் பொருள் தருமாறு அறிக. என்னை யார் அறிவார் - என்னை ஒரு மகனாக இவ்வுலகில் யாவர் அறிந்து நிற்பார். 'ஆண்டிலனாயின் இவ்வாறு ஆம்' எனவே, 'ஆண்டதனால் இப்பொழுது நான் இறை வனுக்குப் பேரன்பனாயினேன்; என் உள்ளம் அவனையே நினைந்து உருகுகின்றது; என் அறிவுகள் எல்லாம் அவனையே பொருளாக அறிந்து நிற்கின்றன; என்னை எல்லாரும் சிவனடியான் என்று அறிந்து நிற்கின்றனர்' என்பது தானே பெறப்பட்டது. தலைவி கூற்றில் இவை, தலைவனால் தமக்கு முதுக் குறைவுண்டாயிற்றாக ஊரெல்லாம் சொல்லப்படுதலைக் குறிக்கும். அறிவு ஒன்றேயாயினும், அறியப் பட்ட பொருள்பற்றி வேறுவேறாய்த் தோன்றலின், 'ஞானங்கள்' எனப் பன்மையாற் கூறினார்.
இம் முதலடி ஐஞ்சீருடையதாய்க் கொச்சகக் கலிப்பாவின் கண் மயங்கி வந்தது, அஃது யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையதாகலின் (தொல்.செய்.452.).
'வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்
ஐஞ்சீ ரடியும் உளஎன மொழிப'
(தொல். பொருள்.369) என்றதனைக் கலிப்பாவின் இலக்கணமாகவே கொண்டார் பேராசிரியர்.
'அருகிக் கலியில் அகவன் மருங்கின்ஐஞ் சீரடியும்
வருதற் குரித்தென்பர் வான்றமிழ் நாவலர்'
(யாப்பருங்கலக்காரிகை)
எனப் பிற்காலத்தாரும், கலிப்பாவின்கண் சிறுபான்மை ஐஞ்சீரடி மயங்கிவரும் எனக் கூறினமை காண்க. சீர் மிகுதியாக வந்தமையின் இடையே வெண்டளையாதல், கலித்தளையாதல் வருதலின்றி ஆசிரியத்தளை வந்தது. பின்னரும் இக் கொச்சகக் கலிப்பாவில் ஐஞ்சீரடி வருவன உள; அவற்றை அறிந்துகொள்க.
'மதிமயங்கி' என்றது, அருளது மிகுதியைக் குறித்தவாறு. இதனானே, இறைவற்கு மயக்கம் உண்மை கூறிய குற்றம் எய்தாதாயிற்று.

இங்ஙனமாகவும், 'மயங்கி' என்றதனைப் பெயர் எனக் கொண்டு அதனைப் பிரமனுக்கு ஆக்கி, பின்வரும், 'ஊனார் உடைதலை' என்றதனை, 'அத்தலை பிரமன் தலை' என விதந்த வாறாக உரைப்பாரும் உளர். புணர்ச்சிப் பத்தின் ஒன்பதாம் திருப் பாட்டுள், 'நாயேன்றனை ஆண்டபேதாய்' என வருவதற்கு அவரும் வேறுரையாது, 'அன்பினால் கூறியது' என்றே போதலின், ஈண்டும் அவ்வாறு உரைத்துப் போதலே தக்கது என்க. 'மதிமயங்கி, பேதை' என்றாற் போல்வன சொல்வகையால் இறைவனை இகழ்ந்துரைப்பன போலத் தோன்றினும், கருத்துவகையால், 'அவன் நம்மை ஆட் கொள்ளுதற்குரிய தகுதி ஒன்றேனும் நம்மிடத்தில்லா தொழியினும், தனது பேரருள் ஒன்றானே நம்மை ஆட்கொண்டருளினான்' என அவனது கருணையின் பெருமையைப் பெரிதும் புகழ்ந்துரைப்பனவே யாதலின். அவை குற்றமாதல் யாண்டையது என்க. இன்னோரன்ன வற்றைக் குற்றமெனின், தேவாரத் திருமுறையுள் இறைவனைப் 'பித்தா' என்றும். 'மதியுடையவர் செய்கை செய்யீர்' என்றும் *(தி.7. ப.1.பா.1;ப.5.பா.3.)* பிறவாறும் வந்தனவும், இங்கும்,

'வெங்கரியின் - உரிப்பிச்சன் தோலுடைப் பிச்சன்நஞ்
சூண்பிச்சன் ஊர்ச்சுடுகாட்டு
எரிப்பிச்சன்' *(தி.8 நீத்தல் விண்ணப்பம்.49)*

என வந்தனவும், பிறவும் எல்லாம் குற்றமாயொழியும். அவை யெல்லாம் சிறிதே கடுமையுடையன; இஃது அன்னதன்றெனின், 'இறைவனிடம் சிறு குற்றங்களைச் செய்தல் பிழையன்று' என்பது பட்டு முறைமையன்றாமென்றொழிக.

'என்னை இங்ஙனம் முதுக்குறைவு எய்தினாளாக ஊரவர் பலரும் சொல்லுமாறு வந்து கலந்த தலைவனை மீட்டும் அவ்வாறேயாக வருமாறு சென்று ஊது' என்கின்றாளாகலின், 'நானார்' என்றது முதலியவை, 'சென்று ஊதாய்' என்பதனோடு இயைந்து நிற்றல் அறிக. 'ஊன் ஆர் தலை, உடை தலை' என்க. உடைதல் - சிதைதல். தலை ஓடு சிதைவில் வழி, பலிப்பாத்திரமாதற்கு ஏலாமை உணர்க. 'கமலம்' என்றது, உருவக வகையால், திருவடியை உணர்த்திற்று. 'கமலத்தே' என்னும் சாரியை தொகுத்தலாயிற்று.

தினைத்தனை உள்ளதோர்
பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்தொறும்
பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக
ஆனந்தத் தேன்சொரியுங்

குனிப்புடை யானுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ. **#216**

அரசவண்டே! நீ, மிகவும் சிறிதாகிய மலர்த்தேனை உண்ணாமல், நினைத்தல், காண்டல், பேசுதல் என்னும் இவற்றைச் செய்கிற, எல்லாக் காலங்களிலும் வலிய எலும்புகளும் உருகும்படி இன்பத்தேனைப் பொழிகின்ற கூத்தப்பிரானிடத்தே சென்று ஊதுவாயாக.

விளக்கவுரை

'பூவினில்' என்றதனை முதலிற் கொள்க. உள்ளது - உள்ளதாகிய. ஓர் - சிறிய. 'உண்ணாதே', 'உண்ணாதை' என்பதன் மரூஉ. ஆனந்தத் தேன், உருவகம். குனிப்பு - நடனம். 'என் சொற் கேட்பின், நின் முயற்சியினும் நீ பெரும்பயன் எய்துவாய்' என்பாள் இவ்வாறு கூறினாள். இதனுள், 'பூ' என்றது உலகத்தையும், 'தினைத் தனை உள்ள தோர் தேன்' என்றது, அதன்கண் உள்ள சிற்றின்பத்தை யும் குறித்து நிற்றல் காண்க. இதனானே, திருவருள் பெற்ற பின்னரும் ஆன்மபோதம் உலக இன்பத்தை வேம்பு தின்ற புழுப்போல *(சிவஞானபோதம். சூ.9.அதி.3.)* மீண்டும் நோக்குதல் உண்மை பெறப்பட்டது.

கண்ணப்பன் ஒப்பதோர்
அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில்
என்னையும் ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை
வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே
சென்றூதாய் கோத்தும்பீ. **#217**

அரசவண்டே! கண்ணப்பனது அன்பு போன்ற அன்பு என்னிடத் தில்லையாதலைக் கண்டும், என்மீதுள்ள பெருங் கருணையால் வாவென்று கூவியாட்கொண்ட சிவபெருமானிடம் சென்று ஊதுவாயாக.

விளக்கவுரை

கண்ணப்பன், கண்ணப்ப நாயனார். அவரது வரலாறு நன்கறியப்பட்டது. 'அவர்' இறைவனுக்குச், செய்தனவெல்லாம் அடியராவார்க்குச் சிறிதும் ஒவ்வாதனவேயாயினும் இறைவன் அவ்வொவ்வாச் செயல்களை நோக்காது அவரை மகிழ்ந்தேற்றுக் கொண்டது, அவரது ஒப்புயர்வற்ற அன்பு கருதியேயாம்; அங்ஙன மாக, என்னிடத்து உள்ள ஒவ்வாச் செயல்களை நோக்காது என்னை அவன் ஆட்கொள்ள வேண்டுமாயின், அவரது அன்புபோலும் அன்பு

என்னிடத்தில் உண்டாதல் வேண்டும்; அஃது இல்லையாகவும், என்னை அவன் ஆட்கொண்டது வியப்பினும் வியப்பே' என்பது இத் திருப்பாட்டிற் குறிக்கப்பட்டது.
'அன்பு' எனப் பின்னர் வருகின்றமையின், 'கண்ணப்பன்' என்றதும், ஆகுபெயரால், அவரது அன்பினையே குறிக்கும். 'என் ஒப்பு இல் என்னையும்' என்றது, 'குற்றம் புரிதலில் எனக்கு நிகர் வேறொருவர் இல்லாத என்னையும்' என்றபடி.
'உன்னைஎப் போதும் மறந்திட்
டுனக்கினி தாயிருக்கும்
என்னைஒப் பார்உள ரோசொல்லு
வாழி இறையவனே' *(தி.4.ப.112 பா.4)*.
என்ற அப்பர் திருமொழியை நோக்குக.
'வண்ணம் பணித்து' என்பது வலிந்து நின்றது; 'உய்யும் வகையை அருளிச்செய்து' என்பது பொருள். எல்லாரும், 'வண்ண' எனச் செயவெனெச்சமாக்கி உரைத்தார்: இஃது அங்ஙனம் என ஆமாறு இன்றென்க. 'வா என்ற' என்றது. 'என்பால் வருக என அழைத்துத் தனக்கு அடிமையாக்கிக் கொண்ட' என்றவாறு, 'வருக என்று பணித்தனை' *(தி.8 திருச்சதகம்-41)* என முன்னருங் கூறினார். சுண்ண நீறு - நீற்றுச் சுண்ணம்; 'திருநீற்றையே நறுமணப் பொடியாகப் பூசிக் கொள்பவன்' என்றபடி. பொன் - அழகு, தலைவி கூற்றில் இது, 'முன்பு அன்புடையேனாய்த் தோன்றிய அவர்க்கு யான் இன்று அன்பில்லாதவளாய்த் தோன்றுகின்றேன்' என்னும் கருத்தினதாம்.

அத்தேவர் தேவர்
அவர்தேவர் என்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப்
புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாதென்
பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவற்கே
சென்றூதாய் கோத்தும்பீ. **#218**

அரசவண்டே! அந்தத் தேவரே தேவர் என்று பொய்த்தேவரைப் புகழ்ந்து பேசிப் புலம்புகின்ற இவ்வுலகத்தில் என்பிறவித் தொடர்பு சிறிதும் இல்லாமல் ஒழியும்படி நான் பற்றி நிற்கின்ற மெய்த் தேவனாகிய சிவபிரானுக்கே சென்று ஊதுவாயாக.

விளக்கவுரை

'தேவர், அவர்' என்பன உயர்வின்கண் வந்த பன்மை. அத்தேவர் தேவர் - அந்தக்கடவுளே முதற்கடவுள். 'அவர்' என்றது, முன்னர்க் கூறியவரைச்

சுட்டியதன்று; வேறொருவரைச் சுட்டியதாம்; 'என்று இங்ஙன்' என்றது, 'என்று இவ்வாறு ஒரோவொரு கடவுளைச் சுட்டி' என்றவாறு. பொய்த்தேவு பேசி - பொய்யான கடவுட் டன்மையைக் கூறி. தேவு - கடவுட்டன்மை. 'அவரெல்லாம் முதற் கடவுளராகாமை, வேதங்களாலும், புராணங்களாலும் இனிது விளங்கிக்கிடப்பது' என்பது திருவுள்ளம். பற்று, 'பத்து' எனத்திரிந்தது. பற்று ஏதும் இல்லாது - வேறொரு துணையும் இல்லாது தான் ஒருவனுமே துணையாக. பற்றுஅற - எனது உலகப்பற்று நீங்கும் வண்ணம், 'தேவர் தேவர்' என்றது, 'தேவர்க்குத் தேவர்' என்னும் பொருட்டாய், 'முதற்கடவுள்' எனப்பொருள் தந்து, 'மெய்' என்ற அடைபெற்று, 'உண்மை முதற் கடவுள்' என்றவாறாயிற்று. 'பலரும் பொய்த்தேவு பேசிப் பிறவிக் கடலினின்றும் ஏறமாட்டாது புலம்பு கின்ற இப்பூதலத்தே, நான் மெய்த்தேவை உணர்ந்து பற்றிக் கரை யேறும் பேறுடையனாயினேன்' என மகிழ்ந்தருளிச்செய்தவாறு, தலைவி கூற்றில் இது, வேற்று வரைவை விரும்பாமையைக் குறிக்கும்.

வைத்த நிதிபெண்டீர்
மக்கள்குலம் கல்வியென்னும்
பித்த உலகிற்
பிறப்போ டிறப்பென்னும்
சித்த விகாரக்
கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவற்கே
சென்றூதாய் கோத்தும்பீ. **#219**

அரசவண்டே! செல்வம், மாதர், மக்கள், குலம், கல்வி என்று பிதற்றித்திரிகின்ற இந்தப் பித்தவுலகில், பிறப்பு இறப்பு என்கிற மனவிகாரக் கலக்கத்தை எனக்கு ஒழித்தருளின ஞானவுரு வனாகிய இறைவனிடத்திற்சென்று ஊதுவாயாக.

விளக்கவுரை

'அச் சித்த விகாரம்' எனச் சுட்டு வருவித்துரைக்க. விகாரம் - திரிபு; மாற்றம். 'விகாரமாகிய கலக்கம்' என்க. கலக்கம் - திகைப்பு. பிறப்போடு இறப்பு என்னும் கலக்கம் - பிறப்பிற்கும், இறப் பிற்கும் காரணமாகிய கலக்கம். வித்தகம் - திறல்; இது, பிறர் இது செய்யமாட்டாமை உணரநின்றது. 'தீரா நோய் தீர்த்தருள வல்லான் றன்னை' *(தி.6.ப.54.பா.8)* என்று திருநாவுக்கரசரும் அருளிச் செய்தார்.

சட்டோ நினைக்க
மனத்தமுதாஞ் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனோ
கேடுபடாத் திருவடியை

ஒட்டாத பாவித்
தொழும்பரைநாம் உருவறியோம்
சிட்டாய சிட்டற்கே
சென்றூதாய் கோத்தும்பீ. **#220**

அரசவண்டே! மனத்துக்கு அமுதம் போலும் சிவ பெருமானை நினைத்தால் எமக்குச் சேதமுண்டாமோ? உண்டாகாது. ஆதலால், அவனை மறவேன். அவனை நினைத்தற் கிசையாத துட்டரை யாம் காணவும் அருவருப்போம். அந்தப் பெரியோனிடத்தே சென்று ஊதுவாயாக.

விளக்கவுரை

'சங்கரனைச் சட்டோ நினைக்க மனத்து அமுதாம்; ஆதலின் அவனது திருவடியை மறப்பேனோ' என்க.

'சட்ட' என்பது, *'சட்டோ'* எனத் திரிந்து நின்றது.

'சுட்டி யுணர்வதனைச் சுட்டி அசத்தென்னச்
சட்ட இனியுளது சத்தேகாண்'

(சிவஞானபோதம் - சூ - 9. அதி - 2.) என்பதன் உரையில், *'சட்ட என்பது செப்பப் பொருட்டாயதோர் அகரவீற்றிடைச் சொல்; அது, 'சட்டம்' என இழிவழக்கில் மகரவீறாய் மரீஇயிற்று'* என மாபாடியம் உடையார் உரைத்தமை காண்க.

'சங்கரன்' என்பது, *'இன்பத்தை செய்பவன்'* என்னும் பொருளதாதலின், *'உள்ளத்தில் அமுதம் ஊற்றெடுக்கச் செய்பவன்'* என்பதனைக் கூறுமிடத்தில் இறைவனை அப்பெயராற் குறித் தருளினார். *'கெட்டேன்'* என்பது, அவலக் குறிப்பு உணர்த்துவதோர் இடைச்சொல். இதனை, *'அத்தனுக் கென்கொல் கெட்டேன் அடுத்தது' (தி.12. பெ.புரா.கண்ணப்பர். 168.)* என்றாற்போல் வனவற்றிற் காண்க. ஒட்டாத - அப்பெருமானிடத்து உள்ளம் பொருந்தாத. *'பாவி'* என்றது பன்மை யொருமை மயக்கம். தொழும்பர் - அடிமைகள். எல்லாரும் இறைவன் அடிமைகளே யாதலின், அவர் எல்லாரையும் தாங்கும் தன் கடனைச் செய்து நிற்கின்றான் இறைவன். ஆயினும், அவனது தாங்குதலைப் பெற்றும், தம் கடனாகிய பணியை *(தி. 5. ப.19. பா.9.)* அவனுக்குச் செய்யாது பிறதொழில்களைச் செய்தே காலம் கழிப்பவரை, *'பாவித் தொழும்பர்'* என்று அருளினார். உரு - பொருள். *'உருவாக'* என ஆக்கம் வருவிக்க. அறியோம் - மதியோம். *'சிட்டமாய'* என்பதில், *'அம்'* என்பது குறைந்து நின்றது. சிட்டம் - மேன்மை. மேன்மையுடையாரை ஈண்டு, *'மேன்மை'* என்றதனை,

'இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல்'

(குறள் - 627.) என்புழி, மேலோரை, 'மேல்' என்றது போலக் கொள்க. கொள்ளவே, *'சிட்டாய சிட்டன்'* என்பது, 'மேன்மையுடையாருள் மேன்மையுடையான்' என்றவாறாயிற்று. 'பாவித் தொழும்பர்' என்றது, தலைவி கூற்றில், இயற்பழித்தலும், தூது செல்லாமையும் உடைய தோழியைக் குறிக்கும்.

ஒன்றாய் முளைத்தெழுந்
தெத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை
நாய்சிவிகை ஏற்றுவித்த
என்றாதை தாதைக்கும்
எம்மனைக்கும் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே
சென்றூதாய் கோத்தும்பீ. **#221**

அரசவண்டே! பிரபஞ்சத்திற்கு முதற்பொருளும், பிரபஞ்சரூபியும், ஒன்றுக்கும் பற்றாத சிறியேனைத் தன் அடியார் நடுவில் இருக்கச் செய்த என் தந்தையும், என் குடும்பத்திற்குத் தலைவனும், அழியாத செல்வமுடையவனுமாகிய சிவபெருமானிடத்துச் சென்று ஊதுவாயாக.

விளக்கவுரை

'முளைத்தெழுந்து' எனவும், 'கவடுவிட்டு' எனவும் வந்தமையின், 'ஒன்றாய்' என்றது 'ஒருமரமாய்' எனக் குறிப்புருவகமாயிற்று. இறைவன் தன்னியல்பில் ஒருவனேயாய் இருந்தும், உலகத்தைத் தொழிற்படுத்துதற்பொருட்டு அளவிறந்த வடிவும், பெயரும் உடைவனாய்த் தோன்றலின், 'ஒன்றாய் முளைத்தெழுந்து எத்தனையோ கவடுவிட்டு' என்றார். 'தம்மை ஆட்கொண்டதும் அத்துணைச் செயல்களுள் ஒன்று' என்றற்கு இதனை எடுத்துக் கூறினார். நன்று ஆக வைத்து - நன்மை உண்டாகும்படி திருத்தி. 'ஏற்று வித்த' 'ஏற்றுவித்தது போலச் செய்வித்த' என்னும் பொருட்டாக லின், அஃது, 'என்னை' என்னும் இரண்டாவதற்கு முடிபாயிற்று.

தாதை தாதை - தந்தைக்குத் தந்தை. அன்னையை வேறு கூறினார், அவளது குடிக்கும் பெருமானாயினமைபற்றி. ஒருவர்க்குத் தந்தைவழி, தாய்வழி இரண்டும் சிவநெறி வழியாதல் அருமை என்பதனை, 'மரபிரண்டும் சைவநெறி வழிவந்த கேண்மையராய்'
(தி.12 திருஞான. 17.) என்ற சேக்கிழார் திருமொழியான் அறிக. குன்றாத செல்வம், அறிவும் இன்பமும்; இவற்றை 'அருள்' எனினும் இழுக்காது.

கரணங்கள் எல்லாங்
கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று

சார்தலுமே தான்எனக்கு
மரணம் பிறப்பென்
றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ. #222

அரசவண்டே! கரணங்களை எல்லாம் கடந்து நின்றவனும், தன் திருவடியை அடைதலும் என் இறப்புப் பிறப்புக் களை ஒழித்தவனும், கருணைக்கடலும் ஆகிய சிவபெருமானிடத்தே சென்று ஊதுவாயாக.

விளக்கவுரை

'கரணங்கள் எல்லாம்' என்றது, ஞானேந்திரியம், கன்மேந்திரியங்களாகிய புறக்கரணங்களும், மனம் முதலிய அந்தக் கரணங்களும் ஆகிய அனைத்தும் அடங்கவாம். அராகம் முதலிய உள்ளந்தக் கரணங்களையும் குறித்தல் பொருந்துவதே. *'மயக்கு'* என்றது இங்கு இளைப்பினை. *'இரண்டின் மயக்கு'* என்ற ஆறாவதன் தொகை, *'வாளது தழும்பு'* என்பதுபோலக் காரியக் கிழமைப் பொருட்டு.

நோயுற்று மூத்துநான்
நுந்துகன்றாய் இங்கிருந்து
நாயுற்ற செல்வம்
நயந்தறியா வண்ணமெல்லாம்
தாயுற்று வந்தென்னை
ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே
சென்றூதாய் கோத்தும்பீ. #223

அரசவண்டே! பிறவிப் பிணியை அடைந்து முதிர்ந்து, இங்கு இருந்து - நான் தாய்ப் பசுவால் தள்ளப்பட்ட கன்று போல இவ்வுலகத்திலிருந்து வருந்தி நின்ற என்னைத் தாய் போலக் கருணை செய்தாண்டருளின இறைவனிடத்தே சென்று ஊதுவாயாக.

விளக்கவுரை

'நான் நுந்து கன்றாய் இங்கிருந்து' என்றதனை முதலிற் கூட்டுக. *'உற்று, மூத்து'* என்ற எச்சங்கள், *'அறியா'* என்றதனோடு முடிந்தன. நுந்துகன்று - தாய்ப்பசுவால் உதைத்துத் தள்ளப்பட்ட கன்று. *'செல்வம்'* என்றதன் பின், *'போல'* என்னும் உவம உருபு விரிக்க. *'குணுங்கர்நாய் பாற்சோற்றின் - செவ்வி கொளல் தேற்றாது' (நாலடி-322), 'பொற்கலத் தூட்டிப் புறந்தரினும் நாய்பிறர் - எச்சிற் கிமையாது பார்த்திருக்கும்' (நாலடி-345)* என்றாற்போல்வன, நாய் நல்லனவற்றை அறியாமையைக் குறித்தல் காண்க. *'நாயுற்ற செல்வம் போல'* என்றாராயினும், *'செல்வம்

உற்றநாய் அதன் சிறப்பை அறியாதவாறுபோல' என்பதே கருத்தாம். 'நயந்து' என்றதனை, 'நயப்ப' எனத் திரித்து, உவம உருபாக்குக. அறியாதது, இறைவன் செய்த திருவருள் நலத்தையாம். 'அறியா' என்றதனை 'அழியா' எனப் பாடம் ஓதுதல் பொருந்துவது போலும். 'வண்ண மெல்லாம் சென்று ஊதாய்' என இயைக்க. தாய் - தாயது தன்மை; பேரருள். 'ஒளி' எனப் பொருள்தரும், 'தேயு' என்னும் வட சொல்லின் ஈற்று உகரம் தொகுத்தலாயிற்று.

வன்னெஞ்சக் கள்வன்
மனவலியன் என்னாதே
கன்னெஞ் சுருக்கிக்
கருணையினால் ஆண்டுகொண்ட
அன்னந் திளைக்கும்
அணிதில்லை அம்பலவன்
பொன்னங் கழலுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ. **#224**

அரசவண்டே! வலிய கல்லை நிகர்த்த மனத்தை உடையவனென்று வெறுக்காமல் என் வன்மனத்தை உருக்கித் தன் கருணையினால் என்னை ஆண்டு கொண்டருளின தில்லையம்பல வாணனது பொன்போலும் திருவடியின் கண்ணே சென்று ஊது வாயாக.

விளக்கவுரை

மன வலியன் - மனத்தால் வலியன். 'வலிய மனம் உடையவன்' என்பது கருத்து. 'கள்வன், வலியன்' என்பன ஆண்பாற் படர்க்கைச் சொல்லாயினும், தலைவி கூற்றில் தன்மை யொருமைச் சொற்களாகக் கொள்ளப்படும். 'பொய்கைகளில் அன்னப்பறவைகள் ஆடி இன்புறும் தில்லை' என்க.

நாயேனைத் தன்னடிகள்
பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப்
பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென்
செய்பணிகள் கொண்டருளுந்
தாயான ஈசற்கே
சென்றூதாய் கோத்தும்பீ. **#225**

அரசவண்டே! நாயினேனைக் கொண்டு தன்னைப் புகழ்வித்துக் கொண்டவனும், பேயினேனது மனக் குற்றங்களைப் பொறுக்கின்ற பெருமையுடையவனும் என் பணிவிடையை இகழாமல் ஏற்றுக் கொண்டருள்கின்ற தாய் போன்றவனும் ஆகிய இறைவனிடத்தே

சென்று ஊதுவாயாக.

விளக்கவுரை

இறைவன் அடிகளை, 'கோலமார்தரு பொதுவினில் வருக' *(கீர்த்தி - 128.)* என இங்கு நிறுத்திச் சென்றமை யானே அவர் அவனைப் பாடும் நிலை உண்டாயினமைபற்றி, 'நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகன்' என்று அருளினார். இது தலைவி கூற்றில் வள்ளை, ஊசல் முதலியவை பாடி இரங்குதலைக் குறிக்கும்.

உள்ளப் பிழை - மனக் குற்றம்; அது, அவனது திருவருளைப் பேணாமை. தலைவி கூற்றில் குறிவழிச் செல்லாமை முதலியனவாம். இகழ்ச்சிக் குறிப்பிடைச் சொல்லாகிய *'சீ'* என்பது, பெயர்த்தன்மைப் பட்டு நின்றமை மேலே *(தி.8* திருவெம்பாவை. பா.*2.)* குறிக்கப்பட்டது.

நான்தனக் கன்பின்மை
நானும்தா னும்அறிவோம்
தானென்னை ஆட்கொண்ட
தெல்லாருந் தாமறிவார்
ஆன கருணையும்
அங்குற்றே தானவனே
கோனென்னைக் கூடக்
குளிர்ந்தூதாய் கோத்தும்பீ. **#226**

அரசவண்டே! இறைவனிடத்து நான் அன்புடையேன் அல்லாமை நானும் அவனும் அறிவோம். மற்றையர் அறியார். அவன் என்னை ஆட்கொண்டதை எல்லாரும் அறிவார். ஆதலால் என்னிடத்துண்டாகிய கருணையும் அவனதே. அவன் என்னை வந்து சேரும்படி நீ சென்று ஊதுவாயாக.

விளக்கவுரை

'அறிவோம்' என்றதன்பின், 'அவ்வாறாகவும்' என்பதும் 'அறிவார்' என்றதன்பின், 'ஆகலான்' என்பதும் 'அங்கு' என்றதன்பின், 'இன்றும்' என்பதும் வருவிக்க. ஆன - அன்று உண்டான. 'ஆன கருணையும்' என்ற உம்மை சிறப்பு. அங்கு - அவ்வாறு. 'தான்' என்றது அசைநிலை. 'கோன் அவனே' என மாற்றிப் பொருள்கொள்க.

கருவாய் உலகினுக்
கப்புறமாய் இப்புறத்தே
மருவார் மலர்க்குழல்
மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயில்
அந்தணனாய் ஆண்டுகொண்ட

திருவான தேவற்கே
சென்றூதாய் கோத்தும்பீ. **#227**

அரசவண்டே! உலகத்துக்குப் பிறப்பிடமாய், அப்பாலாய், இவ்விடத்து எம்பெருமாட்டியோடும் எழுந்தருளி அருவாய் அந்தணனாகி, என்னை அடிமைகொண்ட அழகிய சிவ பெருமானிடத்தே சென்று ஊதுவாயாக.

விளக்கவுரை

கரு - முதல். *'உலகினுக்கு'* என்றது தாப்பிசையாய், முன்னும் சென்றியையும். இப்புறம் - இவ்விடம்; நிலவுலகு. மாதி னொடும் வந்தாளுதல்பற்றி மேலே *(தி. 8. திருவண்டப்பகுதி. அடி 63-65. உரை)* கூறப்பட்டது. அரு வாய் மறை - அரிய, உண்மையான வேதம். திரு ஆன தேவன் - மங்கலம். என்றும் நீங்காது பொருந்தி யுள்ள இறைவன்; *'சிவன்'* என்றபடி.

நானும்என் சிந்தையும்
நாயகனுக் கெவ்விடத்தோம்
தானுந்தன் தையலும்
தாழ்சடையோன் ஆண்டிலனேல்
வானுந் திசைகளும்
மாகடலும் ஆயபிரான்
தேனுந்து சேவடிக்கே
சென்றூதாய் கோத்தும்பீ. **#228**

அரசவண்டே! சிவபெருமான் தானும் எம் பிராட்டியுமாக எழுந்தருளி என்னை ஆட்கொள்ளாவிடின், நானும் என் மனமும் இறைவனுக்கு உரியராதல் இயலாது. ஆதலால் ஆகாயம் முதலிய எல்லாப் பொருள்களும் தானேயாகிய சிவபெருமானது திருவடிக்கண்ணே சென்று ஊதுவாயாக.

விளக்கவுரை

எவ்விடத்தோம் - எத்துணைச் சேய்மையில் இருப் போம். அவ்வாறின்றித் தன் கருணை காரணமாக மிக அணியராம் வகை என்னை ஆண்டு கொண்ட அப்பெருமானது சேவடிக்கே சென்று ஊதாய்*'* என்க. சிந்தை-மனம். அதனை வேறுபோல அருளினார், தம் வழிப்படாது தன்வழியே செல்லுதலும் உடைமை பற்றி. இது தலைவி கூற்றிற்கும் பொருந்தும், *'பிரான்'* என்றதற்கு, *'அப் பிரான்'* எனச் சுட்டு வருவித்துரைக்க. தேன் உந்து - தேனைச் சொரிகின்ற; என்றது குறிப்புருவகம்.

உள்ளப் படாத
திருவுருவை உள்ளுதலும்

கள்ளப் படாத
களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரான்எம்
பிரான்என்னை வேறேஆட்
கொள்ளப் பிரானுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ. #229

அரசவண்டே! ஒருவராலும் நினைத்தறியப்படாத தன் திருவுருவத்தை நான் நினைத்தலும், கருணை வெள்ளமாகிய சிவபிரான் என்னைத் தனித்தடிமை கொண்டானாதலால், அந்த உபகாரியிடத்தே சென்று ஊதுவாயாக.

விளக்கவுரை

உள்ளப்படாத - நினைக்கவாராது மறைந்து நிற்கின்ற. இது, தன்முனைப்பின்வழி நினைக்குமிடத்தாம். உள்ளுதல், அருள்வழி நின்று நினைத்தலாம். அவ்விடத்து அவன் கள்ளந்தீர்ந்து வெளிப்பட்டு இன்பம் தருதலை, 'கள்ளப்படாத களிவந்த வான் கருணை வெள்ளப் பிரான்' என்று அருளினார். வேறே - தனியே; என்றது, தவம் முயலாதிருக்கும் பொழுதும் தானாகவே வந்து ஆண்டமையை. 'கொள் அப்பிரான்' என்க.

பொய்யாய செல்வத்தே
புக்கழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக்
கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயாஎன் ஆருயிரே
அம்பலவா என்றவன்றன்
செய்யார் மலரடிக்கே
சென்றூதாய் கோத்தும்பீ. #230

அரசவண்டே! பொய்யாகிய செல்வத்தின் கண்ணே சென்றழுந்தி அதனை மெய்யாகிய செல்வமென்று மதித்துக் கிடந்த என்னை, அடிமை கொண்ட ஐயனே! என் அரியவுயிரே! அம்பலவனே! என்று என்னால் தோத்திரம் பண்ணப்பட்ட அவனது செந்தாமரைமலர் போலும் திருவடிக்கண்ணே சென்று ஊதுவாயாக.

விளக்கவுரை

பொய்யாய - நிலையாத. 'செல்வத்தே புக்கழுந்தி' என்றதனால், 'அடிகள் பெருஞ்செல்வத்திருந்தார்' என்பது பெறப் படும். படவே, அமைச்சராயிருந்தார் என்றல் பொருந்துவதேயாயிற்று. தன் சொல்லை அவ்வாறே கூறப் பணிக்கின்றாளாதலின், 'என்னை ஆட்கொண்ட ஐயா! என் ஆருயிரே! அம்பலவா என்று ஊதாய்' என்றாள்.

தோலும் துகிலுங்
குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும்
பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க
வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக்
குளிர்ந்தூதாய் கோத்தும்பீ. #231

அரசவண்டே! தோல், துகில், குழை, தோடு, நீறு, சாந்து, கிளி, சூலம், வளை என்பவற்றையுடைய இறைவனது திருக் கோலத்தை நோக்கிக் குளிர்ந்து ஊதுவாயாக.

விளக்கவுரை

இத் திருப்பாட்டு, இறைவன் மாதொரு கூறனாய் இருக்கும் நிலையை விளக்குகின்றது. தோல், குழை, வெள்ளை நீறு, சூலம் இவை வலப்பாகத்துக் காணப்படும் ஆணுருவத்தில் உள்ளவை. துகில், தோடு, சாந்து, வளை இவை இடப்பாகத்துக் காணப்படும் பெண்ணுருவில் உள்ளவை. பைங்கிளியும் அம்மை கையில் உள்ளதே. ஆதலின் அதனை, 'பைங்கிளியும் தொக்கவளையும்' எனக் கூட்டி உரைக்க. தொக்க - கூடிய; 'மிகுதியான' என்றபடி. இது, முதற்பொருள் சிவமும், சத்தியும் என இருதிறப்பட்டு இயைந்து நிற்கும் இயற்கை வடிவமாகலின், 'தொன்மைக் கோலம்' என்றும், இதனைக் காணின் இன்பம் தானே பெருகும் என்றற்கு, 'குளிர்ந்து' என்றும் அருளிச் செய்தார்.

கள்வன் கடியன்
கலதிஇவன் என்னாதே
வள்ளல் வரவர
வந்தொழிந்தான் என்மனத்தே
உள்ளத் துறுதுயர்
ஒன்றொழியா வண்ணமெல்லாம்
தெள்ளுங் கழலுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ. #232

அரசவண்டே! என்னைக் கள்வனாகிய மூதேவி என்றிகழாமல் வள்ளலாகிய சிவபெருமான் என் மனத்தின் கண்ணே எழுந்தருளினான். ஆதலால் என் மனத்துயரம் எல்லாவற்றையும் அவனது திருவடிக் கண்ணே சென்று விண்ணப்பம் செய்து ஊதுவாயாக.

விளக்கவுரை

கள்வன் - வஞ்சகன். கடியன் - கடுமையுடையவன். கலதி - முகடி

(மூதேவி). இது 'நற்குணம் இல்லாதவன்' என்னும் பொருட்டு. இவை இப்பொருளவாயினும். தலைவி கூற்றில், முதல் இரண்டும் தன்மைக்கண் வந்த குறிப்பு வினைப் பெயராகவும், 'இவன்' என்றது, 'ஈவன்' என்னும் தன்மை வினை முற்றின் குறுக்கமாகவும் கொள்ளப்படும். 'வர வர' என்றது, 'மெல்ல மெல்ல' என்னும் பொருளதாய் நின்றது. 'எல்லாவற்றையும் தெள்ளும்' என்க. தெள்ளுதல் - ஆராய்ந்து களைதல்.

பூமேல் அயனோடு
மாலும் புகலரிதென்
றேமாறி நிற்க
அடியேன் இறுமாக்க
நாய்மேல் தவிசிட்டு
நன்றாப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ. **#233**

அரசவண்டே! பிரமவிட்டுணுக்கள் தடுமாறவும், நான் இறுமாந்திருக்கவும், நாய்க்கு ஆசனமிட்டாற்போல என்னைப் பொருள்படுத்தி அடிமை கொண்ட நெருப்புப் போலும் திருமேனியை யுடைய சிவபெருமானிடத்தே சென்று ஊதுவாயாக.

விளக்கவுரை

புகல் - கிட்டுதல். அயன் மாலும் முடியையும், அடியையும் கண்டுவிட இயலும் என்று எண்ணிய தம் எண்ணத்தை இழந்தாராகலின், 'ஏமாறி நிற்க' என்றார். ஏமாறுதல் - எண்ணம் இழத்தல். 'நாய்மேல் தவிசிட்டு' என்றது, 'அதுபோலும் செய்கையைச் செய்து' என்றபடி. நன்றாக - பெரிதும். தீமேனி - நெருப்புப் போலும் திருமேனி.

1.11.திருத்தெள்ளேணம்

திருமாலும் பன்றியாய்ச்
சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியஓர்
அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓருருவம்
ஒன்றுமில்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம்
தெள்ளேணங் கொட்டாமோ. **#234**

திருமாலும் வராகவுருவங் கொண்டு நிலத்தைப் பிளந்து சென்றும் அறியாத திருவடியை யாம் அறிந்துய்யும்படி ஒரு அந்தணனாய்

எழுந்தருளி எம்மை ஆண்டு கொண்டவனும், திரு நாமங்கள், வடிவங்கள் இல்லாதவனுமாகிய சிவபெருமானுக்கு ஆயிரம் திருப்பெயர்களைச் சொல்லி நாம் தெள்ளேணம் கொட்டுவோம்.

விளக்கவுரை

'திருவடியை உரு அறிய' என்றதில் ஐயுருபு, 'குடும் பத்தைக் குற்றம் மறைப்பான்' (குறள் - *1029)* என்பதிற்போல வந்தது. 'திருவடியை அறிய' என்று கூறாது, 'உருவறிய' என்றார். 'நன்குணரப் பெற்றேம்' என்பது உணர்த்துதற்கு. நாமம் - பெயர். உருவம் - வடிவம். இவை இரண்டையுங் கூறவே, அவற்றிற்குரிய தொழிலும் உடன் கொள்ளப்படும். ஒன்றும் - சிறிதும். இறைவன், யாதொரு வடிவும், பெயரும், தொழிலும் இன்றி நிற்றல், உலகத்தை நோக்காது தன்னியல்பில் நிற்கும் நிலையிலாம். இதுவே அவனது 'உண்மை இயல்பு - சொரூபலக்கணம்' எனப்படுவது. இவ்வியல்பில் நிற்பவன் உலகத்தைத் தொழிற்படுத்தி நிற்கும் நிலையில் அளவற்ற வடிவும், பெயரும், தொழிலும் உடையவனாய் நிற்றலின், 'அவ னுக்கே ஆயிரம் திருநாமம்பாடி' என்றார். இது, 'பொதுவியல்பு' எனப் படும் தடத்தலக்கணம். நாமம் கூறவே, ஏனைய வடிவும், தொழிலும் தாமே பெறப்பட்டன. 'கொட்டுவாம்' என்பதில் முதனிலையீற்று உகர மும், இடைநிலை வகரமும் தொகுத்தலாயின. ஓகாரம், அசைநிலை. இவை, பின்னர் வருகின்ற 'ஆடாமோ' என்றதற்கும் ஒக்கும். இவற் றிற்கு இவ்வாறே நன்னூற் காண்டிகையுரையுள் இலக்கணங் கூறினார் நாவலர். ஓகாரத்தை எதிர்மறை எனக் கொண்டு, 'கொட்டாம், ஆடாம்' என்னும் எதிர்மறை வினைகள், பின்னர் வந்த ஓகாரத்தொடு கூடி உடன்பாட்டுப் பொருளைத் தந்தன எனக் கொள்ளின், அவ்வாறு வருதல் தேற்றத்தின்கணாதலானும், ஈண்டு ஐயமின்மையின் தேற்றுதல் வேண்டாமையானும் அவ்வாறுரைத்தல் பொருந்தாதாம்.

திருவார் பெருந்துறை
மேயபிரான் என்பிறவிக்
கருவேர் அறுத்தபின்
யாவரையுங் கண்டதில்லை
அருவாய் உருவமும்
ஆயபிரான் அவன்மருவுந்
திருவாரூர் பாடிநாம்
தெள்ளேணங் கொட்டாமோ. **#235**

திருப்பெருந்துறையில் எழுந்தருளின சிவ பெருமான் என் பிறவியை வேரறுத்தபின், யான் அவனையன்றி வேறொருவரையும் கண்டதில்லை. அருவாகியும் உருவாகியும் நின்ற அந்த இறைவன் எழுந்தருளி இருக்கிற

திருவாரூரைப் புகழ்ந்து பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம்.

விளக்கவுரை

கரு - முதல், பிறவிக்கு முதல் - பாசம். 'அதனை வேரோடு அறுத்தான்' என்க. கண்டது - பொருளாக அறிந்தது 'அரு' என்றது, 'அகளம்' என்னும் பொருளிலும், 'உரு' என்றது, 'சகளம்' என்னும் பொருளிலும் வந்தன. அவை முறையே அவனது உண்மை இயல்பு, பொதுவியல்புகளை உணர்த்தும். அகளமாய் உள்ளவன், சகளமாய் வருதல் அருள்காரணத்தினாலாம். ஓர் இடத்திருந்து பாடுங்கால், முன்பு தாம் கண்டு வணங்கிய இடத்தும், வணங்க நினைக்கும் இடத்தும் உள்ள பெருமானது கோலத்தை நினைந்து பாடுதல் அடியவர்க்கு யாண்டும் இயல்பாதல், தேவாரத் திருமுறை களால் நன்கறியக் கிடத்தலின், ஈண்டும் அவ்வாறே, 'திருவாரூர் பாடி' என்று அருளினார். திருக்கோவையுள்ளும் இவ்வாறு பல தலங்களும் கூறப்படுதல் காண்க.

அரிக்கும் பிரமற்கும்
அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி
நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளும்
என்பதுகேட் டுலகமெல்லாம்
சிரிக்குந் திறம்பாடித்
தெள்ளேணங் கொட்டாமோ. **#236**

திருமால் பிரமன் முதலியோர்க்கும் இன்னபடி யென்று தெரிவிக்கலாகாமல் நின்ற பரமசிவமே எழுந்தருளி நம்மை மனமுருகப் பண்ணி ஆண்டுகொள்ளும் என்னும் செய்தியைக் கேட்டு உலகத்தாரெல்லாரும் நகைக்கும் விதத்தைப்பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம்.

விளக்கவுரை

தெரித்தல் - முற்றும் உணர வகுத்துக் கூறுதல். 'இது கூடாது' எனவே, ஒரு சிறிதுணர்தல் பெறப்பட்டது. படி - நிலைமை. படித்து - நிலைமையையுடையது. 'சிவம்' என்றது, 'சிவமுதற் பொருள்' என்றவாறு. 'நம்மை' என்பது, இசையெச்சத்தால், 'ஒன்றற் கும் பற்றாத நம்மை' எனப் பொருள் தந்தது. 'உருக்கிற்று, பணி கொண்டது' என இறந்த காலத்தாற் கூறற்பாலவற்றை, 'உருக்கும், பணிகொள்ளும்' என எதிர்காலத்தால் அருளினார், அவை அச் செயலளவில் நில்லாது, 'இன்னோரன்னவும் அம்முதற்பொருட்கு இயல்பாம்' என அதனது தன்மை உணர்த்தி நிற்றற்கு. எனவே, உலகமெல்லாம் சிரித்தல்,

'அப்பெரும்பொருட்கு இஃது இயல்பாமோ' எனக் கருதி என்பதாயிற்று. பரம்பொருளினது பேரருள் தன்மையை உலகர் உணராராகலின், இங்ஙனம் கருதிச் சிரிப்பாராயினர் என்க. இதனானே, 'பரம்பொருளால் ஏற்றுக்கொள்ளப்படுதல் நம்ம னோர்க்கு இயல்வதோ என அயர்த்தொழியாது, அந்நிலையைப் பெறும் தவத்தின்கண் உறைத்து நிற்றல் வேண்டும்' என்பதும் பெறப் பட்டது. இவ்வுண்மையே, திருநாவுக்கரசரது திருக்கயிலை யாத்திரை யுள் இறைவன் முனிவர் வடிவிற் போந்து, 'கயிலை மால்வரையாவது காசினி மருங்கு - பயிலும் மானுடப் பான்மையோர் அடைவதற் கெளிதோ', 'மீளும் அத்தனை உமக்கினிக் கடன்' என அயர்ப்பித்த வழியும் நாவுக்கரசர் அயராது, 'ஆளும் நாயகன் கயிலையில் இருக்கைகண் டல்லால் - மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்' என மறுத்தவிடத்து இனிது விளங்கிநிற்கின்றது. புராண இதிகாசங்களிலும் இதுபோலும் நிகழ்ச்சிகள் கூறப்படுதல் வெளிப்படை.

அவமாய தேவர்
அவகதியில் அழுந்தாமே
பவமாயங் காத்தென்னை
ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர்
நல்குதலும் நாம்ஒழிந்து
சிவமான வாபாடித்
தெள்ளேணங் கொட்டாமோ. **#237**

பிறவியை ஒழித்து என்னை ஆண்டருளின சிவபெருமான் தனது புதுமையாகிய ஒளியை எனக்குக் காட்டியருளு தலும், நாம் பயனற்ற தேவர்களுடைய துர்க்கதிகளில் அழுந்தாமல் சிவரூபமான விதத்தைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்.

விளக்கவுரை

அவம் - பயன் இன்மை. பிறவி நீங்கப் பெறுதலே, பயன்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்த பயனாகலானும், சிவபெருமானை யன்றிப் பிற தேவராதல், அவர்தம் பதவியாதல் அதனை நீக்க மாட்டாமையானும் தேவரையும் அவர்தம் பதவியையும், 'அவமாய தேவர்' என்றும் 'அவகதி' என்றும் அருளிச்செய்தார். பவம் - பிறப்பு. மாயம் - நிலையற்ற நிலைமை; சுழற்சி என்றபடி. காத்து - அஃது அணுகாவகை தடுத்து. நவமாய செஞ்சுடர் - புதிதாகிய செவ்விய ஒளி; என்றது சிவஞானத்தை. 'நாம்' என்றதும், 'நாம்' என்னும் உணர்வை; இதுவே, 'செருக்கு' என்றும், 'தன் முனைப்பு' என்றும் சொல்லப்படுவது. சிவமாயினமை, சிவத்தினது எண் குணங்களும் தம்மாட்டு விளங்கப் பெற்றமை. 'அடுத்தது காட்டும்

பளிங்குபோல்' *(குறள் - 706.)* என்றபடி, அடுத்து நிற்கின்ற பொருளின் தன்மையே தன் தன்மையாகக் கொண்டு காட்டுதல் பளிங்கிற்கு இயல்பாதல்போல, அடுத்த பொருளின் இயல்பே தன் இயல்பாகக்கொண்டு நிற்றல் ஆன்மாவிற்கு உள்ள இயல்பு. அதனால், அனாதியே பாசத்தின் தன்மையை எய்திப் பாசமாகியே கிடந்த உயிர், பாசம் நீங்கப்பெற்ற பின்னர்ச் சிவத்தினது எண் குணங்களும் தன்னிடத்து இனிது விளங்கப்பெற்றுச் சிவமாகியே விளங்கும் என்க.

அருமந்த தேவர்
அயன்திருமாற் கரியசிவம்
உருவந்து பூதலத்தோர்
உகப்பெய்தக் கொண்டருளிக்
கருவெந்து வீழக்
கடைக்கணித்தென் உளம்புகுந்த
திருவந்த வாபாடித்
தெள்ளேணங் கொட்டாமோ. **#238**

திருமால், பிரமன் என்னும் அருமையாகிய தேவர்களுக்கும் அருமையாகிய பரமசிவம் உலகத்துள்ளோர் வியப் படையும் வண்ணம் மானுடவுருவமாய் எழுந்தருளி என்னை அடிமை கொண்டு என்பிறவிக் காடுவெந்து நீறாகும்படி கடைக்கணித்து என் மனம் புகுந்ததனால் எனக்குளதாகிய பெருஞ்செல்வத்தைப் புகழ்ந்து பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்.

விளக்கவுரை

'அருமருந்தன்ன' என்பது. 'அருமந்த' என மருவிற்று. அருமருந்தை உண்ணும் அத்தேவர்' என்க. அருமருந்து - அமுதம். 'தேவர், அயன், திருமால்' என்றது செவ்வெண்ணாகலானும், சிறப்புடையவரையே எடுத்து எண்ணினமையானும் 'திருமால்' என்றதன்பின், 'இவர்க்கும்' என, ஒரு பெயரும், சிறப்பும்மையும் விரிக்க. 'உருவாய் வந்து' என ஆக்கம் வருவிக்க. உகப்பு - உயர்ச்சி. 'தேவர்க்குக் கனவிலும் காண இயலாத பெருமான், மக்க ளுள்ளார்க்குத் தானே தோன்றி வந்து அருளுகின்றான்' என, அடிகள் பால் நிகழ்ந்த நிகழ்ச்சியால் மக்கள் உயர்வு படைத்தனர் என்க. இது, தலைவி கூற்றிற்குப் பெரிதும் பொருந்துவதாம். கொண்டருளி - நம்மை ஆட்கொண்டருளி. கரு - பிறப்பு, கடைக்கணித்தல் - கடைக்கண்ணால் நோக்குதல். இஃது அருளுதலைக் குறிப்பதொரு பான்மை வழக்கு. இதனை, 'கடாட்சித்தல், என வடசொல்லாற் கூறுவர். புகுந்த திரு - புகுந்ததாகிய நன்மை. வந்தவாபாடி - கிடைத்த வாற்றைப்பாடி.

அரையாடு நாகம்

அசைத்தபிரான் அவனியின்மேல்
வரையாடு மங்கைதன்
பங்கொடும்வந் தாண்டதிறம்
உரையாடஉள் ளொளியாட
ஒண்மாமலர்க் கண்களில்நீர்த்
திரையாடு மாபாடித்
தெள்ளேணங் கொட்டாமோ. **#239**

திருவரையில் பாம்பைக் கச்சையாகக் கட்டின சிவபெருமான் பார்வதி தேவியாரோடும் பூமியில் எழுந்தருளி, எம்மை ஆண்டருளின விதத்தைச் சொற்கள் தடுமாறவும், அவனது பேரொளி என் மனத்தில் நிறையவும், கண்களில் நீர்ததும்பவும் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்.

விளக்கவுரை

'ஆடு நாகம் அரை அசைத்த பிரான்' எனக் கூட்டுக. அசைத்தல் - கட்டுதல். வரை ஆடு மங்கை - மலையில் விளையாடிய (வளர்ந்த) நங்கை. உரை ஆட - நம் சொற்களில் பொருந்த, உள்ளொளி ஆட - ஞானம் மிக. இதன் மூன்றாம் அடியுள், கனிச்சீர் மயங்கி வந்தது. 'உரையாடஉள்' என்றதில் டகரம் தனித்து நிற்கு மெனின், 'உள்' என்பதனைக் கூனாக்குக.

ஆவா அரிஅயன்இந்
திரன்வானோர்க் கரியசிவன்
வாவாஎன் றென்னையும்பூ
தலத்தேவலித் தாண்டுகொண்டான்
பூவார் அடிச்சுவடென்
தலைமேற்பொ றித்தலுமே
தேவான வாபாடித்
தெள்ளேணங் கொட்டாமோ. **#240**

திருமால், பிரமன் முதலியோர்க்கும் அருமை யாகிய பரமசிவம், ஒன்றுக்கும் பற்றாத சிறியேனையும் வலிந்தாண்டு கொண்டு, என் தலைமேல் தன் திருவடியைப் பதித்த அளவில் என் தலைக்கு ஓர் அழகுண்டான விதத்தைப் பாடித் தெள்ளேணம் கொட்டு வோம்.

விளக்கவுரை

'ஆவா' என்றது வியப்புக் குறிப்பு. அடுக்கு, விரைவுப் பொருட்டு. 'பூதலத்தே' என வேண்டா கூறியது, இவ்வுலகின் சிறப்புத் தோன்றுதற்கு, வலித்து - ஈர்த்து. பூ ஆர் அடி - பூப்போலப் பொருந்திய பாதம். தே ஆனவா - சிவமாயினவாற்றை, இதன் கண்ணும் இரண்டாம் அடியில் கனிச்சீர் மயங்கிற்று.

கறங்கோலை போல்வதோர்
காயப்பிறப்போ டிறப்பென்னும்
அறம்பாவம் என்றிரண்
டச்சந் தவிர்த்தென்னை ஆண்டுகொண்டான்
மறந்தேயுந் தன்கழல்நான்
மறவா வண்ணம் நல்கியஅத்
திறம்பாடல் பாடிநாம்
தெள்ளேணங் கொட்டாமோ. **#241**
ஓலைச் சுருள் போல்வதாகிய உடம்பின் பிறப்பு, இறப்புகளால் நேரிடுகிற புண்ணிய பாவங்கள் என்கிற இரண்டு அச்சங் களையும் ஒழித்து என்னை ஆண்டு கொண்டவனாகிய சிவபெருமான் தன் திருவடியை நான் மறவாதபடி அருள் செய்த அவ்விதத்தைப்பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம்.

விளக்கவுரை

கறங்கு - காற்றாடி, அதன்கண் உள்ள ஓலைகள் மாறி மாறி வருதல் விரைய நிகழ்தலின், அவை, அவ்வாறு வரும் பிறப்பிறப் பிற்கு உவமையாயின.
காயம் - உடம்பு, பிறப்பும், இறப்பும் உடற் கன்றி உயிர்க் கின்மையின், 'காயப் பிறப்போ டிறப்பு' என்றார். அறமும் பிறப்பை விளைத்தலின், அஞ்சப்படுவதாயிற்று. 'என்று' என்ற எண்ணிடைச் சொல் ஈற்றில் நின்று, முன்னதனோடும் இயைந்தது. இரண்டு அச்சம் - இரண்டனாலும் வரும் அச்சம். 'மறந்தேயும்' என்றது, 'சோர்ந்தும்' என்றவாறு.
'துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாடொறும்'
(தி. 3. ப.22. பா.1) எனத் திருஞானசம்பந்தரும்
'துஞ்சும் போதும் சுடர்விடு சோதியை
நெஞ்சுள் நின்று நினைப்பிக்கும் நீதியை'
(தி.5. ப.93. பா.8) எனத் திருநாவுக்கரசரும் அருளிச் செய்தல் காண்க.
துஞ்சுதல் - உறங்குதல்; 'உறங்குதல்' என்பது சுழுத்தி நிலையை ஆதலானும், சுழுத்தியில் மனம், புத்தி, அகங்காரம் என்பன இல்லையெனினும், சித்தம் உண்டு என்பது உண்மை நூல்களின் துணி பாகலானும் ஈண்டுக் கூறிய நினைவெல்லாம் சித்தத்தின் தொழிற் பாட்டினையாம். உறக்கத்தின் கண்ணும் சித்தம் தொழிற்படும் என்பது, உறங்கி எழுங்காலத்து, முன்னர்த் தெளியாதிருந்த ஒன்று தெளிவுற்று விளங்குதல் பற்றியும் அறிந்துகொள்ளப்படும். இதனானே, 'பெரிதும் விரும்பப்படுகின்ற ஒன்றனைப் பற்றிய நினைவு உறக்கத்திலும் சித்தத்தைவிட்டு அகலாது நிற்கும்' என்பதும், 'அதுவே, விழித்

தெழுந்தவுடன் ஏனை அந்தக் கரணங்களினும் பொருந்தி விளங்கும்' என்பதும் பெறப்பட்டன. இவையெல்லாம் பற்றியே.
'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்'
(குறள் - 55) எனவும்,
'தம்மையே - சிந்தியா எழுவார்வினை தீர்ப்பரால்'
(தி.3. ப.54.பா.3.) எனவும்,
'எந்தையார் திருநாம நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பில் இருக்கலாமே'
(தி.6.ப.93.பா.10) எனவும்,
'சிந்தித்தெழு வார்க்குநெல் லிக்கனியே'
(தி.7.ப.4.பா.3) எனவும்,
'தொழுதெழுவார் வினைவளம் நீறெழ'
(தி.8 திருக்கோவை. 118) எனவும் திருவாக்குக்கள் எழுந்தன.
இறைவனையன்றிப் பிறிதொன்றிற் பற்றில்லாதவர்க்கன்றித் துயிலெழுங்காலத்து இறைவனைப் பற்றிய நினைவு தோன்றுதல் கூடாமை அறிக.
நல்கிய - அருள் செய்த. 'திறம்' என்றது, கருணை. 'பாடல் பாடி' என்றது, 'உண்ணலும் உண்ணேன்' *(கலி - பாலை - 22)* என்றாற்போல நின்றது.
இதன் முதல் மூன்றடிகள் ஐஞ்சீராய் மயங்கின.

கல்நா ருரித்தென்ன
என்னையுந்தன் கருணையினாற்
பொன்னார் கழல்பணித்
தாண்டபிரான் புகழ்பாடி
மின்னேர் நுடங்கிடைச்
செந்துவர்வாய் வெண்ணகையீர்
தென்னாதென் னாஎன்று
தெள்ளேணங் கொட்டாமோ. **#242**

கல்லில் நார் உரித்தாற்போல என்னையும் தன் பெருங்கருணையினால் தனது பொன்போலும் அருமையாகிய திருவடியைப் பணிவித்து ஆட்கொண்ட எம்பெருமானது பெரும் புகழைப் பாடி அக்களிப்பால் தென்னா தென்னாவென்று தெள்ளேணம் கொட்டுவோம்.

விளக்கவுரை

'உரித்தென்ன ஆண்டபிரான்' என இயையும். பணித்து - கொடுத்து', 'தென்னா தென்னா' என்பது, பாடற்கு இசை கூட்டும் முறை.

கனவேயும் தேவர்கள்
காண்பரிய கனைகழலோன்
புனவே யனவளைத்

தோளியொடும் புகுந்தருளி
நனவே எனைப்பிடித்தாட்
கொண்டவா நயந்துநெஞ்சம்
சினவேற்கண் நீர்மல்கத்
தெள்ளேணங் கொட்டாமோ. #243

தேவர்கள் கனவிலும் காண்பதற்கு அரிதாகிய திருவடியையுடைய இறைவன் உமாதேவியாரோடும் எழுந்தருளி நனவின் கண்ணே என்னை வலிந்து ஆட்கொண்ட விதத்தை மனத் தால் சிந்தித்து கண்களில் நீர் ததும்பத் தெள்ளேணம் கொட்டுவோம்.

விளக்கவுரை

கனவேயும் - கனவின்கண்ணேயும். ஏகாரம் பிரிநிலை; உம்மை, இழிவு சிறப்பு. புனம் - காடு. வேய் - மூங்கில், 'வேயன தோளி' என இயையும். 'நெஞ்சம் நயந்து' எனமாறுக.
நயத்தல் - விரும்புதல். சினம், வேலுக்கு அடை. பான்மை வழக்கால், உடையவரது சினத்தை வேலின்மேல் ஏற்றிக் கூறுப.

கயல்மாண்ட கண்ணிதன்
பங்கன் எனைக்கலந் தாண்டலுமே
அயல்மாண் டருவினைச்
சுற்றமும்மாண் டவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள
வாசகம்மாண் டென்னுடைய
செயல்மாண்ட வாபாடித்
தெள்ளேணங் கொட்டாமோ. #244

உமாதேவி பங்கனாகிய சிவபெருமான் என்னை ஆட்கொள்ளுதலும் நான் அவனுக்கு அயலாம் தன்மை ஒழிந்து, சுற்றத்தாரை நீங்கி, பிரபஞ்ச ஆசை அற்று, மற்றுள்ள சொற்களெல்லாம் ஒழிந்து, என்னுடைய செயலற்றொழிந்த விதத்தைப் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம்.

விளக்கவுரை

'கயல்போல மாண்ட கண்ணி' என்க. 'மாண்ட' எனவும், 'மாண்டு' எனவும் வந்தன பலவற்றுள், முதற்கண் நின்ற தொன்றும் 'மாண்' என்பது அடியாகவும், ஏனையவை, 'மாள்' என்பது அடியாகவும் வந்தன. அயல் - (இறைவனுக்கு) அயலாம் தன்மை; இஃது அறியாமையால் உளதாவது. அருவினைச் சுற்றம் - நீக்குதற் கரிய வினையால் வந்த சுற்றம். மக்களுட் பலர் தம்முட் சுற்றமாய் இயைதல் வினைகாரணமாகவன்றிப் பிறிதின்மையின், இவ்வாறு அருளினார். அவனியின்மேல் மயல் - உலகத்தின்மேல் கொள்ளும் மோகம். 'மனம், மொழி, மெய்' என்னும்

மூன்றனுள், மயல் மனத்தின் கண்ணதாகலின், ஏனைய மொழி மெய்களின் கண்ணவாகிய சொல்லையும், செயலையும். 'மற்றுள்ள' என்றார். இவற்றில், பசுகரணம் நீங்கிப் பதிகரணம் பெற்றவாறு குறிக்கப்பட்டது. 'என்னுடைய' என்பது கடைநிலைத் தீவகமாய், முன்னின்றவற் றோடும் இயையும். இதன் முதலடி ஐஞ்சீரடியாய் வந்தது.

முத்திக் குழன்று
முனிவர்குழாம் நனிவாட
அத்திக் கருளி
அடியேனை ஆண்டுகொண்டு
பத்திக் கடலுட்
பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித்
தெள்ளேணங் கொட்டாமோ. **#245**

முனிவர் கூட்டம் முத்தியை விரும்பி உழன் றிருக்க, யானைக்கு அருள் செய்து அடியேனையும் ஆண்டு கொண் டருளி, என்னை, பத்தியாகிய கடலில் அழுந்துவித்த சிவபெருமான் எனக்கு இனிக்கும் விதத்தைப் பாடி நாம் தெள்ளேணம் கொட்டு வோம்.

விளக்கவுரை

முத்திக்கு - வீடுபெறுதற்கு. உழன்று - வழிதேடி அலைந்து. 'வாட' என்றது, 'அவர்க்கு அருளாமல் வாடச் செய்து' என்றபடி, அத்தி - யானை. அடிகள், தம்மை' இருகை யானை' *(தி.8 திருச்சதகம் - 41)* எனக் கூறிக்கொள்வராகலின், 'யானைக்கு அருள்செய்த வகையிலே எனக்கும் அருள்செய்தான்' என்றற்கு 'அத்திக்கருளி அடியேனை ஆண்டுகொண்டு' என்றார். யானைக்கு அருள்செய்தது மதுரையிலும், மற்றும் திருவானைக்கா, திருக்காளத்தி என்னும் தலங்களிலும் நிகழ்ந்தமை வெளிப்படை. 'ஆண்டுகொண்டு பத்திக் கடலுட் பதித்த' என்றதனான், இறைவனிடத்து அன்பு தோன்றுவது, அவன் அருள் வழியே' என்பதும், அதன்பின்னர், 'தித்திக்குமா பாடி' என்றதனான். 'அன்பினால் இன்பம் விளையும்' என்பதும் பெற்றாம்.

பார்பாடும் பாதாளர்
பாடும்விண்ணோர் தம்பாடும்
ஆர்பாடுஞ் சாரா
வகையருளி ஆண்டுகொண்ட
நேர்பாடல் பாடி
நினைப்பரிய தனிப்பெரியோன்
சீர்பாடல் பாடிநாம்
தெள்ளேணங் கொட்டாமோ. **#246**

மண்ணுலகம், பாதாளம், விண்ணுலகம் என்னும் மூன்றுலகத்தாரிடத்தும் வேறுள்ள எவ்வுலகத்தாரிடத்தும், யான் சென்று பிறவாமல் என்னை ஆட்கொண்டருளின சிவபெருமானது நேர்மையையும் சீர்பாடலையும் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம்.

விளக்கவுரை

'பாதாளர்' எனவும், 'விண்ணோர்' எனவும் பின்னர் வருதலின் அவற்றோடு இயைய, 'பாரோர்' என்பதன் இறுதிநிலை தொகுத்தலாயிற்று என்க; மூவுலகத்தாரையும் கூறிய வாறாயிற்று. பாடு-பக்கம். ஆர் பாடும் சாராவகை அருளி, ஒருவரிடத்தும் சென்று அவரை வேண்டிக்கொள்ளாதபடி அருள்செய்து. நேர் - செம்மை; என்றது வெளிப்பட்டு நின்றமையை. இங்கும், 'பாடல்பாடி' என்றதற்கு, மேல் *(தி.8 திருத்தெள்ளேணம். பா.8)* உரைத்தாங்கு உரைக்க. இதன் முதலடிக்கண், 'பாடும் விண்ணோர்' என்றதில் மகர ஒற்றுக் குறுக்கமாய் அலகுபெறா தொழிதலின், 'பாடு' என்றதனை நேர்பசையாகக் கொள்ள, அச்சீர் மூவசைச் சீராதல் அறிக. இனி, 'பாதாளர்' என்றதனை, 'பாதாளத்தார்' எனப் பாடம் ஓதி, இவ்வடியையும் ஐஞ்சீரடியாக்குவாரும் உளர்.

மாலே பிரமனே
மற்றொழிந்த தேவர்களே
நூலே நுழைவரியான்
நுண்ணியனாய் வந்தடியேன்
பாலே புகுந்து
பரிந்துருக்கும் பாவகத்தாற்
சேலேர்கண் நீர்மல்கத்
தெள்ளேணங் கொட்டாமோ. **#247**

திருமால் முதலியோர்க்கும் அரியனாகிய சிவபெருமான் என்னிடத்தே எழுந்தருளி என் மனத்தை உருகப் பண்ணிய பெருங்கருணையை நினைந்து கண்களில் நீர்ததும்பத் தெள்ளேணம் கொட்டுவோம்.

விளக்கவுரை

ஏகாரங்கள் எண்ணுப்பொருள. 'ஒழிந்த மற்றுத் தேவர்கள்' என மாற்றி, 'அவர் ஒழிந்த ஏனைத் தேவர்கள்' என உரைக்க. இனி, 'மற்று, அசைநிலை' எனலுமாம். அணுகமாட்டாத இயைபுபற்றி, நூலையும் உடன் எண்ணினார். நுழைவு - அணுகுதல். 'அரியான்' என்றது பெயர். நுண்ணியன் - நுண்பொருளை உணர்த்துபவன்; ஞானாசிரியன். பரிந்து - இரங்கி. பாவகம் - நினைவு. 'பாவகத்தால்' என்றதில் ஆல் உருபு, ஒடு உருபின் பொருளில் வந்தது. 'தூங்கு கையான் ஓங்கு நடைய' *(புறம் - 22)*.

என்றதிற் போல.

உருகிப் பெருகி
உளங்குளிர முகந்துகொண்டு
பருகற் கினிய
பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன்
வார்கழலே நினைந்தடியோம்
திருவைப் பரவிநாம்
தெள்ளேணங் கொட்டாமோ. **#248**

உருகுதல் முதலியவற்றைச் செய்து பருகுதற் கினிதாகிய பெருங் கருணைக் கடலாகிய சிவபெருமானது திருவடியையே சிந்தித்து, சிந்தித்தற்குரிய அடியோங்களுடைய பெரும் புண்ணியத்தைத் துதித்து நாம் தெள்ளேணம் கொட்டுவோம்.

விளக்கவுரை

உருகி - மனம் நெகிழ்ந்து. பெருகி - அன்பு மிகுந்து. 'உருகி, பெருகி, முகந்துகொண்டு' என்ற எச்சங்கள், 'பருகற்கு' என்றதனோடு முடிந்தன. 'தென்னன்' என்றதில் ஐயுருபு தொகுத்தல். 'வார்கழலே நினைந்து' என்றதனை 'திருவை' என்றதன் பின்னர்க் கூட்டுக. அடியோம் திரு - அடியோங்களது செல்வம். ஐயுருபுகள், 'பரவி' என்றதனோடு முடியும்.

புத்தன் புரந்தராதியர்
அயன்மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை
மேயபிரான் பிறப்பறுத்த
அத்தன் அணிதில்லை
அம்பலவன் அருட்கழல்கள்
சித்தம் புகுந்தவா
தெள்ளேணங் கொட்டாமோ. **#249**

புதுமையானவனும், இந்திராதியர் வணங்கும் படியாகிய பித்தனும், திருப்பெருந்துறையை உடையவனும், எமது பிறவியை ஒழித்தருளின அத்தனும், தில்லையம்பலத்தை உடையவனு மாகிய சிவபெருமானது அருவுருவமாகிய திருவடிகள் என் மனத்தில் தங்கியிருக்கும் விதத்தைப் புகழ்ந்து நாம் தெள்ளேணம் கொட்டு வோம்.

விளக்கவுரை

'திருமால் புத்தனாய்த் திரிபுரத்தவரிடம் சென்று புத்த மதத்தைப் போதித்து, அவரது சிவபத்தியைப் போக்கியதனால் சூழ்ந்த பெரும்பாவத்தைச் சிவபூசை செய்து நீக்கிக் கொண்டான்' என்பது

புராணமாகலின், அவ்வரலாற்றைக் குறிக்க, 'புத்தன்' என வேறு கூறி, பின்னர்த், தேவர் பலராலும் வணங்கப்படுதலைக் குறிக்கும்வழி, 'மால்' என்பதும் கூறினார். அதனால் அது, கூறியது கூறிற்றும், ஈண்டைக்கு இயைபின்மையுடையதும் ஆகாமை யறிக. இதற்குப் பிறரெல்லாம், 'புதியோன்' என்றும், 'ஞானம் உடையவன்' என்றும் உரைத்து, சிவபிரானுக்கே ஆக்கியுரைப்பாரும், 'புத்த மதத்தின் ஆசிரியனை ஈண்டுக் கூறுதற்கு ஓர் இயைபின்று' என மறுப்பாரும் ஆயினர். 'புத்த மதத்தை ஆக்கியவனும் மக்களுள் ஒருவனே' என இக் காலத்தார் கூறும் கருத்து அடிகட்கு இல்லாமை யறிக. புரந்தராதியர் - இந்திரன் முதலிய தேவர். 'நம் சித்தம் புகுந்தவா' என்க. 'புகுந்தவா' என்றதன்பின்னர், 'பாடி' என்பது' எஞ்சிநின்றது.

உவலைச் சமயங்கள்
ஒவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடல்உளனாய்க்
கிடந்து தடுமாறும்
கவலைக் கெடுத்துக்
கழலிணைகள் தந்தருளும்
செயலைப் பரவிநாம்
தெள்ளேணங் கொட்டாமோ. **#250**

பொய்ச்சமய சாத்திரக் கடலில் வீழ்ந்து தடுமாறுகின்ற என் துன்பத்தை ஒழித்துத் தன் திருவடியை எனக்குக் கொடுத்தருளின இறைவனது திருவருட்செயலைப் புகழ்ந்து நாம் தெள்ளேணம் கொட்டுவோம்.

விளக்கவுரை

உவலை - பொய். 'உவலைச்சமயங்களது சாத்திரம்' என்க. ஒவ்வாத - பொருந்தாத. சவலை - மெலிவு. 'மெலிவைத் தருகின்ற கடல்' என்க. 'கவலைக் கெடுத்து' என்றதில் ககர ஒற்று, விரித்தல். அன்றி, 'கவலுதலைக் கெடுத்து' என்றும் ஆம். இதனால், அடிகள் இறைவனால் ஆட்கொள்ளப்படுதற்கு முன்னர்ப் பல சமய சாத்திரங்களை ஆராய்ந்து, தெளிவு பெறாதிருந்தமை பெறப்படும். அவனது செயலை என எடுத்துக்கொண்டு உரைக்க.

வான்கெட்டு மாருதம்
மாய்ந்தழல் நீர் மண்கெடினும்
தான்கெட்ட லின்றிச்
சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட் டுயிர்கெட்
டுணர்வுகெட்டென் உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித்

தெள்ளேணங் கொட்டாமோ. #251

ஆகாயம் முதலாகிய பஞ்சபூதங்களும் அழிந்த காலத்தும் தான் அழியாதிருப்பவனாகிய சிவபெருமானைக் குறித்து, உடல், உயிர், உணர்வு என்பவை அழிந்து நான் என்பதும் அழிந்த விதத்தைப் பாடி தெள்ளேணம் கொட்டுவோம்.

விளக்கவுரை

வான் - ஆகாயம், மாருதம் - காற்று. அழல் - நெருப்பு. அழிப்புக் காலத்தில் ஒன்றும் இன்றாதலை வலிவுறுத்தற்கு, கெடுதலை ஐம்பூதங்களிலும் தனித்தனி அருளிச்செய்தார். 'கெட்டலின்றி' என்பதில் டகர ஒற்று விரித்தல். கெடுதல் - அழிதல். சலித்தல் - தளர்ச்சி யுறுதல். தன்மையனுக்கு - தன்மையன்பொருட்டு. 'உயிர்' என்றது பிராணவாயுவை. 'கெட்டு' என்பன, எண்ணின்கண் வந்த எச்சங்கள். 'நான்' என்றதும், 'நாம்' என்றதுபோல *(தி.8. திருத்தெள்ளேணம். பா.4)* 'நான்' என்னும் உணர்வையேயாம்.

விண்ணோர் முழுமுதல்
பாதாளத் தார்வித்து
மண்ணோர் மருந்தயன்
மாலுடைய வைப்படியோம்
கண்ணார வந்துநின்றான்
கருணைக் கழல்பாடித்
தென்னாதென் னாஎன்று
தெள்ளேணங் கொட்டாமோ. #252

தேவர் முதலானோர்க்கு முதல்வனும் பிரம விட்டுணுக்களுக்கு நிதிபோல்பவனும் எமது கண்ணுக்குப் புலப்பட்டு நின்றவனும் ஆகிய சிவபெருமானது திருவடியைப் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம்.

விளக்கவுரை

இறைவன் தேவர்கட்கு ஒவ்வொரு தலைமையை வழங்கி அவர்கள் அனைவர்க்கும் தலைவனாய் இருத்தலின், 'விண் ணோர் முழுமுதல்' என்றும், பாதல உலகத்தார் தம் பாவங்காரணமாக அவ்விடத்துக் கிடப்பராதலானும், அவரை அப்பாவத்தினின்று நீக்கி நல்வினையால் மேல் ஏறி இன்பம் பெறச் செய்தல் பற்றி, 'பாதாளத் தார் வித்து' என்றும், மனிதரை ஆணவமலமாகிய மிருத்துவைக் கடந்து வீடுபெற்று என்றும் ஒரு பெற்றியராய் வாழுமாறு செய்தலின், 'மண்ணோர் மருந்து' என்றும், (மருந்து - அமுதம்) அயன், மால் இருவரையும் அணுக்கராகக் கொண்டு, தானும் அவருள் ஒருவனாய், காரணக் கடவுளராகும் பெருந்தலைமையைத் தந்து மிக்க இன்பத்தைப் பயத்தலின், 'அயன்

மாலுடைய வைப்பு' என்றும், (வைப்பு - சேமநிதி) 'இவ்வாறு அவரவர் தகுதிக்கேற்ப வேறுவேறுவகையாக அருள் புரிகின்ற அவன், யாதொரு தகுதியும் இல்லாத நமக்கு இவ்வூனக் கண்ணாலும் நிரம்பக் கண்டு இன்புறும்படி வந்து தங்கி அருள் புரிந்தான்' என்பார், 'அடியோம் கண்ணார வந்து நின்றான்' என்றும், 'அத்தகைய பேரருள் திறத்தை எஞ்ஞான்றும் மறவாது போற்றுவதன்றி நாம் அவனுக்குச் செய்யும் கைம்மாறு யாது' என்பார், 'கருணைக் கழல்பாடி....தெள்ளேணம் கொட்டாமோ' என்றும் அருளிச்செய்தார்.

குலம்பாடிக் கொக்கிற
கும்பாடிக் கோல்வளையாள்
நலம்பாடி நஞ்சுண்ட
வாபாடி நாள்தோறும்
அலம்பார் புனல்தில்லை
அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பாடல் பாடிநாம்
தெள்ளேணங் கொட்டாமோ. **#253**

இறைவனது மேன்மையையும் குதிரைச் சேவகனாய் வந்த சிறப்பையும் உமாதேவியினது நன்மையையும் பாடி, இறைவன் நஞ்சுண்ட செய்தியைப் பாடி, தில்லையம்பலத்தில் நடிக்கின்ற திருவடிச்சிலம்பினது வெற்றியைப் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம்.

விளக்கவுரை

'குலம் - சிவபெருமானை வணங்கும் தேவர் கூட்ட மும், அடியார் கூட்டமும். கொக்கிறகு - கொக்குருவங்கொண்ட அசுரனை அழித்து, அதன் அடையாளமாகச் சிவபெருமான் தன் தலையில் அணிந்தது. இவ்வசுரனை, 'குரண்டாசுரன்' எனக் குறிப்பிட்டு, இவ் வரலாற்றைக் கந்த புராணமும், உபதேச காண்டமும் கூறுதல் காண்க. இனி, 'கொக்கிறகு' என்பது, 'கொக்கு மந்தாரை' என்பதொரு மலரே என்பாரும் உளர். கோல்வளையாள் நலம் - உமையம்மையது திருமேனியழகு. 'நாள்தோறும் பாடி' என முன்னே சென்று இயையும். 'நாள்தோறும் கொட்டாமோ' என்றியைத்தலுமாம். அலம்பு ஆர் புனல் - ஒலித்தல் பொருந்திய நீர். 'ஆடுகின்ற ஆடல்' என இயையும். சிலம்போடு கூடிய ஆடல்.

1.12.திருச்சாழல்

பூசுவதும் வெண்ணீறு
பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால்

மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும்
பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும்
இயல்பானான் சாழலோ. #254 ★★★★★

பூசுவது வெண்ணீறு; அணிவது பாம்பு; பேசுவது வேதம்; உங்கள் தெய்வத்தின் தன்மையிருந்தபடி என்னேடி? என்று புத்தன் வினாவ, பூசுவது, பூண்பது, பேசுவது என்னும் இவற்றைக் கொண்டு உனக்காகுங் காரியம் ஒன்றுமில்லை; அந்த பரமசிவன் எல்லா உயிர்களுக்கும் தக்க பயன் அளிப்பவனாய் இருக்கிறான் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

விளக்கவுரை

இதனுள் எல்லா இடத்தும், 'ஏடீ' என்றதனை முதலிற் கொள்க. 'பூண்பது' என்றது, இனம் பற்றி ஒருமை. இயற்பழிக் கின்றாள் கூற்றாகலின், 'திருவாய்' என்றது, பழித்தலை உட்கொண்ட தாம். மறை - பொருள் விளங்காத சொல். 'வேதம்' என்பது, உண்மைப் பொருள். காண், முன்னிலை அசை. 'ஏடி' என்பது தோழி முன்னிலைப் பெயர். கொண்டு - பற்றி. 'இயல்பாய்' என ஆக்கம் வருவித்து, 'அவன் இயல்பாய் எவ்வுயிர்க்கும் ஈசன் ஆனான்' என்க. ஈசன் - தலைவன், 'இயல்பாய்' என்றது'அத்தலைமை அவனுக்குப் பிறர்தர வந்ததன்றி, தன்னோடு அவற்றிடை இயல்பாய் உள்ள ஏற்றத் தாழ்வுகளால் தானே அமைந்தது' என்றதாம். எனவே, பிறரது தலைமைபோல அவனது தலைமையை, பூசுவது, பூண்பது முதலியன கொண்டு அறியவேண்டு வது இல்லை என்றதாயிற்று.

'சிவன் சாந்தாகப் பூசுவதும் சாம்பல்; அணியாக அணிவதும் பாம்பு; சொல்வதும் பொருள் விளங்காத சொல் என்றால், அவன் உயர்ந்தோனாதல் எவ்வாறு?' என்பது இதனுள் எழுப்பப்பட்ட தடை, 'எல்லா உயிர்க்கும் அவனே தலைவன் என்பது யாவராலும் நன்கறியப்பட்டதானபொழுது, அவன் பூசுவது முதலியனபற்றி ஐயுற வேண்டுவது என்' என்பது மேல் நிகழ்த்தப்பட்ட தடைக்கு விடை.

என்னப்பன் எம்பிரான்
எல்லார்க்குந் தான்ஈசன்
துன்னம்பெய் கோவணமாக்
கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள்
மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச்

சாத்தினன்காண் சாழலோ. #255

என் அப்பன், எம்பிரான், எல்லார்க்கும் தலைவன், அப்படிப் பட்டவன் தைத்த துணியைக் கோவணமாகக் கொண்ட தற்குக் காரணம் யாது? என்று புத்தன் வினவ, கலைகளையும், வேதங் களையும் சரடாகக் கொண்டமைந்த பொருளாகிய கோவணத்தைச் சாத்திக் கொண்டான் என்று ஊமைப்பெண் விடை சொன்னாள்.

விளக்கவுரை

'தான்' என்றதன்பின் தொகுக்கப்பட்ட பிரிநிலை ஏகாரத்தை விரிக்க, 'அப்பனும், பிரானும், ஈசனுமாகிய, அவன்' என்க. இது தோழி கூறியதைத் தலைவி கொண்டு கூறியது, 'அப்பன்' என்றது, 'அன்பினால் அப்பன்போல்பவன்' என்றபடி. துன்னம் பெய் கோவணம் - கீளொடு பொருந்தத் தைத்த கோவணம். 'கோவணமாகக் கொள்ளும் அது, என்றது, 'கோவணத்தையே உடையாகக் கொள்ளு கின்ற அத்தன்மை' என்னும் பொருளது. மன்னுகலை துன்னுபொருள் மறை - நிலை பெற்ற நூல்களில் பொருந்திய பொருள்களையுடைய வேதம். இது, வேதத்தின் பொருளையே மற்றைய நூல்கொண்டு நிற் கின்றன என்றதாம். சரடு - கயிறு. அஃது இங்கு துறவர் கட்டும் கீளினைக் குறித்தல், 'வான் சரடு' எனச் சிறப்பித்ததனால் பெறப் படும். தன்னையே - அப்பொருளையே. மறை பற்றுக்கோடும், பொருள் அதனைப் பற்றி நிற்பதும் ஆதல்பற்றி, அவை முறையே சரடும், கோவணமும் ஆயின.

'பூசுவது, பூண்பது முதலியன எவ்வாறாயினும், ஆடை இன்றி யமையாததன்றோ? அதுவும் இல்லாதவன் யாவர்க்கும் தலைவனாதல் எவ்வாறு' என்பது இதன்கண் நிகழ்த்திய தடை.

'அவனது சாங்க உபாங்கம் முதலியன பலவும் பிறர்போல அவன் தனக்கெனக் கொண்டனவன்றி, உயிர்கள் பொருட்டுக் கொண்டனவாகலின், அவை ஏற்ற பெற்றியான் எவ்வாறும் ஆம்' என்பது அதற்குக் கூறப்பட்ட விடை.

கோயில் சுடுகாடு
கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி
தான்தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி
தான்தனியன் ஆயிடினுங்
காயில் உலகனைத்துங்
கற்பொடிகாண் சாழலோ. #256

சுடுகாட்டைக் கோயிலாகவும், புலித்தோலை ஆடையாகவும் கொண்டான். அன்றியும் அவனுக்குத் தாய் தந்தை யரும் இல்லை;

இத்தன்மையனோ உங்கள் கடவுள்? என்று புத்தன் வினாவ, எங்கள் கடவுளுக்குத் தாய் தந்தையர் இல்லாவிடினும், அவன் சினந்தால் உலகம் முழுவதும் கற்பொடியாய் விடும் என்று ஊமைப்பெண் விடை சொன்னாள்.

விளக்கவுரை

கோயில் - அரண்மனை; நல்லாடை - உயர்ந்த உடை. இதன்பின் 'ஆகுக' என்பது வருவிக்க. 'தந்தை' என்றவிடத்து எச்ச வும்மை தொகுத்தலாயிற்று. 'தாயும் இலி தந்தையும் இலி தான் தனியன்' என்றது, ஒருவரும் துணையில்லாத தனிமையன்' என்று இகழ்ந்ததாம். காயில் - வெகுண்டால்.

'உன்னாற் புகழப்பட்ட தலைவனுக்குச் சுடுகாடே அரண் மனையும், புலித்தோலே பொன்னாடையுமாதல் ஒருபால் நிற்க; அவன், துணையற்ற தனியனாய் இருத்தல் பொருந்துமோ' என்பது தடை. 'அவன் வெகுண்டவழி முன்னிற்பது ஒன்றுமில்லையாதலின், அவனுக்குத் துணை வேண்டுவது எற்றுக்கு' என்பது விடை.

'தாயும் இலி தந்தை இலி' என்றதனால் 'பிறப்பற்றவன்' என் பது கூறப்பட்டது. 'தந்தையாரொடு தாயிலர்' *(தி.3 ப.54 பா.3)* என்று அருளிச்செய்தார் ஞானசம்பந்தர். இதன் மூன்றாம் அடி, மடக்காய் வந்தது, இவ்வாறு இனி வரும் பாட்டுக்களினும் வருதல் காண்க.

அயனை அநங்கனை
அந்தகனைச் சந்திரனை
வயனங்கண் மாயா
வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய
நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத்
தாழ்குழலாய் சாழலோ. **#257**

பிரமனையும், மன்மதனையும், யமனையும், சந்திரனையும் வடுப்படுத்தினன்; இதுதானோ உங்கள் கடவுளின் தன்மை? என்று புத்தன் வினாவ, முக்கண்ணனாகிய எமது கடவுளே தண்டித்தால், தேவர்களுக்கு அதுவும் வெற்றியன்றோ என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

விளக்கவுரை

வசனம், 'வயனம்' என்றாயிற்று. 'சொல்' என்னும் பொருட்டாகிய இது, இங்கு வசைச் சொல்லைக் குறித்து நின்றது. மாயா-கெடாத. வடு - அடையாளம். அயன் - பிரமன்; அவனை வடுச்செய்தது, அவன்

தலைகளுள் ஒன்றைக் கிள்ளியது. அனங்கன் - மன்மதன்; அவனை வடுச் செய்தது, உருவிலி ஆக்கியது. 'அனங்கன்' என்பதும் அதனாற் பெற்ற பெயரேயாம். அந்தகன் - கூற்றுவன். அவனை வடுச் செய்தது, காலால் உதைத்து உருட்டியது, இதனால், அவன் மார்பில் தழும்புடையனானான் என்றலுமாம். சந்திரனை வடுச்செய்தது, தக்கன் வேள்வியில் காலால் தேய்த்தது. இதுவே, அவனுக்கு மறுவாயிற்று என்றலுமாம். நயனம் - கண். 'நாயகனே' என்ற பிரிநிலை ஏகாரம், சிறப்புணர்த்திற்று. 'தன்னின் மெலியார் மாட்டு அன்பும், அருளும் இல்லாது அவரை நலிகின்றவன் தலைவனாதல் எவ்வாறு' என்பது தடை.
'தந்தை தாயர், தம் மக்களை ஒறுத்தல் அவரது நலத்தின் பொருட்டேயன்றிப் பிறிதில்லாமைபோல, சிவபெருமானும் அயன் முதலியோரை ஒறுத்தது அவர் தம் குற்றத்தின் நீங்கி உய்தி பெறற் பொருட்டேயாகலின், அஃது அவர்கட்கு நன்மை செய்ததேயாம்' என்பது விடை.
'கொன்றது வினையைக் கொன்று
நின்றஅக் குணம்என் றோரார்'
(-சிவஞானசித்தி. சூ.1.51)
எனவும்,
தந்தைதாய் பெற்ற தத்தம்
புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்
வந்திடா விடினு றுக்கி
வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர்; எல்லாம்
பார்த்திடிற் பரிவே யாகும்;
இந்தநீர் முறைமை யன்றோ
ஈசனார் முனிவும் என்றும்.
-சிவஞானசித்தி. *சூ.2.16*
எனவும் கூறிய விளக்கங்களைக் காண்க. இவ்வாறு ஒறுக்கும் திருவருள், 'மறக்கருணை' என்றும், வேண்டுவார்க்கு அவர் வேண்டுவதை அளித்து மகிழ்விக்கும் திருவருள், 'அறக்கருணை' என்றும் சொல்லப்படும் என்க. நெற்றிக்கண் வியாபக உணர்வாகிய ஞானத்தைக் குறிப்ப தாகலின், 'அஃதுடையவன், அதனை இல்லாதவர்கட்குத் தலைவனாய் மறக்கருணை அறக்கருணைகளை அவர்கட்கு ஏற்ற பெற்றியாற் செய்து அவர்களை உய்யக்கொள்ளுதல் இயல்பு' என்பதைக் குறிப் பாற்பெற வைத்தமையின், 'நயனங்கள் மூன்றுடைய நாயகன்' என்றது உடம்பொடு புணர்த்தல். நன்மையை, 'வெற்றி' என்று அருளினார்.

தக்கனையும் எச்சனையுந்

தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனவந் தவர்தம்மைத்
தொலைத்ததுதான் என்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத்
தொலைத்தருளி அருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற்
றருளினன்காண் சாழலோ. **#258**

தக்கனையும், யாகத்து அதிதேவரையும் தலை அரிந்து, கூடி வந்த தேவர்களையும் அழித்தது என்ன காரியம்? என்று புத்தன் வினாவ, தேவர்களை அழித்தாலும் மறுபடியும் அவர்களை உயிர் பெறச் செய்து, யாகத்தினை நடத்தியவனாகிய தக்கனுக்கு ஆட்டின் தலையை அருள் செய்தான் என்று ஊமைப் பெண் விடை கூறினாள்.

விளக்கவுரை

எச்சன் - வேள்வித் தேவன். இவனைத் தக்கன் வேள்வி யில் வீரபத்திரர் தலையறுத்தமை,

மணனயர் சாலையில் மகத்தின் தெய்வதம்
பிணைஎன வெருக்கொடு பெயர்ந்து போதலும்
குணமிகு வரிசிலை குனித்து வீரன் ஓர்
கணைதொடுத்து அவன்தலை களத்தின் வீட்டினான்.
-தட்சகாண்டம் - யாகசங்காரம்.பா.*37*
'இரிந்திடு கின்றதோர் எச்சன் என்பவன்
சிரந்துணி படுதலும்' -தட்சகாண்டம் - யாகசங்காரம்.பா.*38*

எனக் கந்தபுராணத்துட் கூறப்பட்டமை காண்க. பிணை - மான். 'வந்தவழி' என்பது, 'வந்து' எனத்திரிந்து நின்றது. அவர் - அக்கணத்தவர். வேள்வி செய்பவனையும், வேள்வித் தெய்வத்தையும் குறிப்பதாய, 'எச்சன்' என்னும் பல பொருள் ஒரு சொல், 'மிகைத்தலை மற்று அருளினன்' எனப் பின்னர் வந்த குறிப்பினால், வேள்வி செய்தவனாகிய தக்கனையே சுட்டி நின்றது. மிகைத்தலை - வேண்டாத, (நாணத்தக்க) தலை; அஃது யாட்டுத்தலை. 'மிகைத்தலையாக' என ஆக்கம் வருவிக்க. மற்று - மற்றொன்று (தேவர்க்குப் பொருந்தாத ஒன்று). தக்கன் வேள்வியில் தேவர்களை வீரபத்திரர் ஒறுத்தஞான்று, தக்கன் தலையை மட்டில் தீக்கிரை ஆக்கியதையும் அதனால் பின்பு சிவபெருமான் இறந்தவரை உயிர்பெற்றெழச் செய்தபொழுது தக்கன் எழாதொழிய, வேள்வியின் பொருட்டு வெட்டப்பட்ட யாட்டின் தலைகளுள் ஒன்றை அவன் உடலிற் பொருத்தி எழச் செய்ததையும் கந்தபுராணம்,

கண்டு மற்றது வீரபத் திரன்எனும் கடவுள்
கொண்ட சீற்றமொ டேகியே தக்கனைக் குறுகி

அண்ட ரோடுநீ ஈசனை இகழ்ந்தனை அதனால்
தண்டம் ஈதென வாள்கொடே அவன்தலை தடிந்தான்.
-தட்சகாண்டம் - யாகசங்காரம்.பா.*50*
அற்ற தோர்சென்னி வீழுமுன் இறைவன் அங்கையினால்
பற்றி ஆயிடை அலமரும் பாவகற் பாராத்
திற்றி ஈதெனக் கொடுத்தனன் கொடுத்தலும் செந்தீ
மற்றொர் மாத்திரைப் போதினில் மிசைந்தது மன்னோ.
-தட்சகாண்டம் - யாகசங்காரம்.பா.*51*
எனவும்,
வித்தக வலிகொள் பூதன்
வீரபத் திரன்றன் முன்னர்
உய்த்தலும் அதன்மேல் வேள்விக்
குண்டியாம் பசுவுள் வீந்த
மைத்தலை கண்டு சேர்த்தி
எழுகென்றான் மறைகள் போற்றும்
அத்தனை இகழும் நீரர்
ஆவர்இப் பரிசே என்னா.
-தட்சகாண்டம் - யாகசங்காரம்.பா.*163*
என்றலும் உயிர்பெற் றங்கண்
எழுந்தஅத் தக்கன் முன்னம்
நின்றதோர் வீரற் கண்டு
நெஞ்சுதுண் ணென்ன அஞ்சித்
தன்தக விழந்து பெற்ற
தலைகொடு வணங்கி நாணி
அன்றிசெய் நிலைமை நாடி
அரந்தையங் கடலுட் பட்டான்.
-தட்சகாண்டம் - யாகசங்காரம்.பா.*164*
எனவும் விளக்கிற்று. மை-யாடு. அரந்தை- துன்பம்.
யாவரும் உயிர்பெற்றெழுந்த பின்னர், வேள்வித்தேவன் முதலிய தேவர் பலருடன் தக்கனும் சிவபெருமானை வணங்கி அருள் பெற்றனன் என்பதையும்,
மீத்தகு விண்ணு ளோரும்,
வேள்வியந் தேவும், மாலும்,
பூத்திகழ் கமலத் தோனும்
புதல்வனும், முனிவர் தாமும்
ஏத்தினர் வணங்கி நிற்ப
எம்மைஆ ளுடைய முக்கண்

ஆத்தன்அங் கவரை நோக்கி
இவைசில அருளிச் செய்வான்.
-தட்சகாண்டம் - யாகசங்காரம்.பா.*169.*

என அவ்விடத்துக் கூறப்பட்டமை அறிக. புதல்வன் - பிரமன் மகன்; தக்கன்.

தக்கனையன்றிப் பிறர் ஒருவர்க்கும் சிவபெருமான் மாற்றுத் தலை அருளாமையின், இங்கு, இறுதிக்கண் வந்த 'எச்சன்', என்றது, பிறர் ஒருவர்க்கும் ஆகாமை அறிக.

'வடுச்செய்தது பொருந்துமாயினும், பலரைக் கொன் றொழித்தது பொருந்துமோ' என்பது தடை.

'பலரைக் கொன்றொழித்துப் போயினான் அல்லன்; மீளவும் அவரை உயிர்பெற்றெழச் செய்து அருள்வழங்கியே சென்றான்; அவருள் முன்னின்றவனையும் அழித்தொழியாது எழச்செய்து, மாற்றுத்தலையால் அவனது குற்றத்தின் முதன்மை எஞ்ஞான்றும் விளங்கச் செய்தான்; அதனால், அவர் தம்மைத் தொலைத்தது மாத்திரையே கூறிப் பழித்தல் பொருந்தாது' என்பது விடை.

தக்கன் வேள்வி நிகழ்ச்சியை இவ் இருதிருப்பாட்டுக்களில் அடிகள் எடுத்தோதி வலியுறுத்ததனானே, பின்னர் ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் தம் திருப்பதிகங்களுள் இதனை யாண்டும் பயில எடுத்து அருளிச்செய்தனர்.

அலரவனும் மாலவனும்
அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டமுற
நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீழ் அண்டமுற
நின்றிலனேல் இருவருந்தம்
சலமுகத்தால் ஆங்காரந்
தவிரார்காண் சாழலோ. **#259**

பிரம விட்டுணுக்கள் அறிய வொண்ணாமல் நெருப் புருவாய் நின்றது யாதுக்கு? என்று புத்தன் வினாவ, அப்படி எம் மிறைவன் நில்லாவிடின், அவ்விருவரும் தமது ஆங்காரத்தை விடார் என்று ஊமைப்பெண் விடை சொன்னாள்.

விளக்கவுரை

முதல் - அடி, அண்டத்திற்கு அப்பாற்பட்டதையே அண்டம் என்றார். 'நிலத்தடியின்கீழும் அண்டத்திற்கு அப்பாலும் உற'- என்க.

சலம் - மிக்க வெகுளி. 'சலமுகத்தாற்செய்த' என ஒரு சொல் வருவிக்க. முகம்-வாயில்; காரணம். 'அகங்காரம் ஆங்காரம்' என மரு விற்று. இஃது

ஆகுபெயராய், இதனால் விளைந்த போரை உணர்த் திற்று.
'அயனும், மாலும் ஒரு பிரமகற்பத் தொடக்கத்தில் தாங்களே உலகிற்கு முதல்வர் என்று தம்முட் கலாய்த்துச் செய்த போரினால் உலகம் பெரிதும் இன்னற்படுவதை அறிந்து தேவர்கள் செய்த முறை யீட்டிற்கிரங்கிய சிவபெருமான், பாதலத்தின் கீழும் அண்ட முகட்டின் மேலும் ஊடுருவி நிற்கும் ஒரு ஒளித்தம்பமாய்த் தோன்ற, அதனைக் கண்ட அவர்கள் அஞ்சி நின்று, 'இதன் அடியையும், முடியையும் காண்பவரே உலகிற்கு முதல்வர்' எனத் தம்முள் முடிவு செய்து கொண்டு, திருமால் பன்றி வடிவங்கொண்டு நிலத்தின் கீழ்ச் சென்றும், அயன் அன்ன வடிவங்கொண்டு விண்ணின் மேற் சென்றும் அடி முடிகளைக் காண இயலாது மீண்டு வந்து, அது சிவபெருமான் கொண்ட வடிவமே என்பதறிந்து, அப்பெருமானை வணங்கித் தம் செருக்கொழிந்தனர்' என்னும் புராண வரலாறு நன்கறியப்பட்ட தொன்று.
இதனை இங்கு அடிகள் அருளிச்செய்தவாறே, கந்தபுராண ஆசிரியர், யாக சங்காரப் படலத்தையடுத்து, 'அடி முடிதேடு படலம்' என அமைத்துக் கூறினமை காண்க. இவ்வரலாற்றை அடிகள் திருத் தோணோக்கத்துப் பன்னிரண்டாம் திருப்பாட்டுள் இன்னும் சிறிது விளக்கமாக அருளிச்செய்வார்.
இங்ஙனம் இவர் இதனைப் பல விடத்தும் பெரிதும் அருளிச் செய்ததனானே பின்வந்த இருபேராசிரியரும் (ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும்) இதனை முன்னை வரலாற்றினும் பெரும்பான்மை யாக ஆங்காங்கு எடுத்து அருளிச்செய்து போந்தனர்,
'சிலரை வெளிப்பட்டு நின்று ஒறுத்தல் பொருந்துவதாயினும், சிலரை மறைந்து நின்று மருட்டுதல் தலைவராயினார்க்குப் பொருந் துமோ' என்பது தடை.
'நோய்க்குத் தகவே மருத்துவன் மருந்து கொடுத்தல் போல, அவரவர்க்கு ஏற்ற முறையானே அவரவரைத் திருத்துதல் வேண்டு மாகலின், மறைந்து நின்று மருட்டித் திருத்துதலும் குற்றமாகாது' என்பது விடை.

மலைமகளை யொருபாகம்
வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையிற்
பாயுமது என்னேடீ
சலமுகத்தால் அவன்சடையிற்
பாய்ந்திலளேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து
பெருங்கேடாஞ் சாழலோ. **#260**

பார்வதியை ஒரு பாகத்தில் அமைத்துக் கொள்ளு தலும்,

மற்றொருத்தியாகிய கங்கை நீருருவாகி அவன் சடையில் பாய் வதற்குக் காரணம் யாதென்று? புத்தன் வினாவ, 'நீருருவாகி அவ் விறைவனது சடையில் பாயாவிடின், பூமி முழுதும் பாதாளத்தில் வீழ்ந்துபெருங்கேடு அடையும்' என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

விளக்கவுரை

மலைமகள் - உமாதேவி. மற்றொருத்தி, கங்கை. சல முகத்தால் - நீர்வடிவமாய்; 'வஞ்சனையால்' என்பது நயம்.
தரணி - பூமி. பிலம் - பாதாளத்திற்குச் செல்லும் வழி. பெருங்கேடு ஆம் - பேரழிவு உண்டாகும்; உண்டாகியிருக்கும்.
பகீரதன் பொருட்டு நிலவுலகத்திற்கு வந்த கங்கையைச் சிவ பெருமான் தனது சடையில் தாங்கி நின்றமை புராண வரலாறாதல் வெளிப்படை.
'ஒருத்தியை மணந்தபின் மற்றொருத்தியை அவளறியாமல் மறைத்து வைத்திருத்தல் உயர்ந்த தலைவராவார்க்குப் பொருந்துமோ' என்பது தடை.
'மற்றொருத்தியாவாள் உண்மையில் உலகை அழிக்க வந்தவளேயாகலானும், அவளைச் சடையில் வைத்திருத்தல் உலகத்தைக் காத்தற் பொருட்டேயன்றி, கரவினால் இன்பம் நுகர்தற் பொருட்டன்றாகலானும் அஃது அவற்குப் புகழாவதன்றிக் குற்றமாதல் எவ்வாறு' என்பது விடை.

கோலால மாகிக்
குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான்
அவன்சதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலனேல்
அன்றயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம்
வீடுவர்காண் சாழலோ. **#261**

அக்காலத்தில் பாற்கடலில் உண்டாகிய நஞ்சை யுண்டான்; அதற்குக் காரணம் யாதென்று? புத்தன் வினாவ, அந்த நஞ்சை எம்மிறைவன் உண்டிலனாயின் பிரம விட்டுணுக்கள் முதலான தேவர்கள் எல்லாரும் அன்றே மடிந்து ஒழிவார்கள் என்று ஊமைப் பெண் விடை கூறினாள்.

விளக்கவுரை

'கோலாகலம்' என்பது, 'கோலாலம்' எனக் குறைந்து நின்றது, 'ஆரவாரம்' என்பது பொருள். 'ஆகியதன்பின்' என்பது, 'ஆகி' எனத் திரிந்து நின்றது. 'அமரரெல்லாம் ஆரவாரம் செய்து கடைந்தபொழுது' என்பதுபொருள். ஆலாலம் - நஞ்சு. 'ஆலாலம் உண்டான்' என்றது 'அமுதம் உண்ணாது

நஞ்சம் உண்டான்' என்றவாறு. சதுர்- திறல். 'என்' என்றது.
'எத்தன்மைத்து' என இகழ்தற்குறிப்பாய் நின்றது. 'உள்ளிட்ட' என்றது, 'அயன், மால்' என்பவரது சிறப்புணர்த்தி நின்றது. வீடுவர் - அழிவர்; அழிந்திருப்பர்.
'கனியிருப்பக் காய்கவர்தல்போல, அமுதத்தை உண்ணாது நஞ்சினை உண்டது பித்தர் செயலாவதல்லது. அறிவுடையார் செய லாதல் எவ்வாறு' என்பது தடை.
'நஞ்சினை உண்டும் அவன் இறவாமையும், அமுதம் உண்டும் பிறர் இறத்தலும் கேட்கப்படுதலின், அச்செயல் அவன் அவர் களை முன்பே இறவாது காக்கச்செய்த அருட்செயலாதல் தெளிவு.
அதனால், அஃது அறிவும், அருளும் உடைமையாவதல்லது, பித்தாதல் யாங்ஙனம்' என்பது விடை.

தென்பா லுகந்தாடுந்
தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான்
பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற்
பேதாய் இருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி
வீடுவர்காண் சாழலோ. **#262**

தென்திசை நோக்கி நடிக்கின்ற தில்லைச் சிற்றம் பலத்தான் பெண் பாகத்தை விரும்பினான், இவன் பெரும் பித்தனோ? என்று புத்தன் வினாவ, எம்மிறைவன் பெண்பாகத்தை விரும்பில னாயின், நிலவுலகத்தோர் யாவரும் யோகத்தை அடைந்து மேலுல கத்தைச் சேர்வார்கள் என்று ஊமைப்பெண் விடை கூறினாள்.

விளக்கவுரை

தென்பால் உகந்து - தென்றிசையை விரும்பி. இது, கூத்தப்பெருமான் தெற்குநோக்கி நிற்றலைக் குறித்தது. பெண் பால் உகந்தான் - ஒருத்தியைப் பக்கத்தே நீங்காது கொண்டான். உகத்தல் - விரும்புதல், அஃது எஞ்ஞான்றும் உடனாயிருக்கும் தன் காரியத்தைத் தோற்றி நின்றது, 'ஆதலின் பெரும்பித்தன்' என்க. பேதாய் - பெண்ணே; 'அறிவிலியே' என்பது நயம். 'விண்பால்' என்றதன்பின், 'நோக்கி' என்பது வருவிக்க. 'யோகம்' என்பது, 'யோகு' என நின்றது. 'நிலத்தோர்' என்றது, 'உலகிலுள்ளோர் அனைவரும்' என்றபடி.
'தவமும் தவமுடையார்க் காகும்; அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது.'
(குறள் - 262.) என்றவாறு, துறவறத்திற்கு உரியரல்லாதவர் அதனை

மேற்கொள்ளின் இரண்டறங்களையும் இழந்து கெடுவராதலின், 'இருநிலத்தோர், விண்பாலியோகெய்தி வீடுவர்' என்று அருளினார். 'உடலின் தொழிற்பாட்டிற்கு உயிரின் இயைபு இன்றியமையாத வாறுபோல, உயிர்களின் தொழிற்பாட்டிற்கு இறைவனது இயைபு இன்றியமையாமையின், அவன் அவரவருக்கு ஏற்றவாற்றான் இயைந்து நிற்றல் வேண்டும். அதனால், சிலர்க்குப் போகியாகியும், சிலருக்கு யோகியாகியும் நிற்பன்; இவ்வாறின்றி யோகியாயே நிற்பின், யோகத்திற்கு உரியவாகாது போகத்திற்கே உரியவாய உயிர் கள் கேடுறும்' என்பது இத்திருப்பாட்டின் கருத்து.

போகியாய் இருந்து யிர்க்குப்
போகத்தைப் புரிதல் ஓரார்;
யோகியாய் யோக முத்தி
உதவுத லதுவும் ஓரார்;
வேகியா னாற்போல் செய்த
வினையினை வீட்டல் ஓரார்;
ஊகியா மூட ரெல்லாம்
உம்பரின் ஒருவன் என்பர்.

(சிவஞானசித்தி சூ. *1,50.)* என்றது காண்க.

இறைவன் போகியாய் இல்லாதொழியின் உயிர்கட்குப் போகம் அமையமாட்டாது என்பதை, 'அவன் யோகியாய் இருந்து சன காதி நால்வர்க்கு ஞானத்தை அருளியபொழுது யாதோர் உயிர்க்கும் போகமில்லையாய்ப் பிரமனது படைப்புத்தொழிலும் இல்லை யாயிற்று' எனவும், 'பின்னர் அவ்யோகம் நீங்கி மலைமகளை மணந்த பொழுதே உயிர்கட்குப்போகம் அமைந்தது' எனவும் வரும் கந்த புராண வரலாறு நன்கு உணர்த்தும். இன்னும், 'போகத்தைப் பயப் பிக்கும் கடவுள் காமனேபோலத் தோன்றினும், உண்மையில் அவன் அதற்கு உரியவன் அல்லன்; எல்லார்க்கும் எல்லாவற்றையும் தரு பவன் சிவபெருமானே' என்பதும், அப்பெருமான் காமனை எரித் தமையைக்கூறும் அப்புராணத்தால் அறியப்படும். அதனால்,

கண்ணுதல் யோகி ருப்பக்
காமன்நின் றிடவேட் கைக்கு
விண்ணுறு தேவ ராதி
மெலிந்தமை ஓரார்; மால்தான்
எண்ணிவேள் மதனை ஏவ
எரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப்
பேரின்பம் அளித்த தோரார்.

(சிவஞானசித்தி சூ.1.53.) என்றார் அருணந்தி சிவாசாரியார்.
'உலகவர்போல மனைவியை உடையனாய் இருப்பவன் கடவுளாவனோ' என்பது இங்கு எழுப்பப்பட்ட தடை.
'அவ்வாறிருத்தல் தன்பொருட்டன்றி உயிர்கள் பொருட்டே ஆகலானும், அங்ஙனமாகவே, அஃது இளஞ்சிறாரை மகிழ்விக்க அவரொடு விளையாட்டயரும் பெற்றோரது செயல்போல நாடக மாத்திரையான் மேற்கொள்வதாதலன்றி, உண்மையான் விரும்பிக் கொள்வதன்றாதல் இனிது விளங்குதலானும், அஃது உலகத்தை நடத்தும் இறைவற்கு இன்றியமையாததொரு செயலாவதன்றி, இறைமைத் தன்மையொடு மாறாதல் எங்ஙனம்' என்பது விடை.
இது, கடவுள் மாட்டு நயப்புற்றவளது கூற்றேயாகலின், கடவுட்டன்மைபற்றிக் கூறலும் பொருந்துவதாதல் அறிக.

தானந்தம் இல்லான்
தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்
தழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத்
தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர்
வான்பொருள்காண் சாழலோ. **#263**

தான் முடிவு இல்லாதவனாயிருந்தும் தன்னை அடைந்த என்னை ஆனந்த சாகரத்தில் அமுந்தச் செய்தான், இது என்ன புதுமை? என்று புத்தன் வினாவ, ஆனந்த சாகரத்தில் அமுந்தச் செய்த திருவடிகள் தேவர்களுக்கு மேன்மையான பொருளாகும் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

விளக்கவுரை

'தானோ' எனச் சிறப்பு ஓகாரம் விரித்து, 'நாயேனை ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்தான்; அஃது எவ்வாறு' என இசையெச்சம் வருவித்து உரைக்க. 'தனையடைந்த' என்றது, தலைவி தனக்கு வேட்கையுண்மையை உடம்பட்டும், அடிகள் தாம் தம்மை ஆளவந்த ஆசிரியன்வழி நின்றமையை உடம்பட்டும் கூறியதாம். உந்துதல் - செலுத்துதல்; அது. வலவன் ஏவா வான ஊர்தியை *(புறம் - 27.)* என்க. வான் பொருள் - எட்டாத பொருள். ஆனந்த வெள்ளத்து அழுத்துவிப்பன அவன் திருவடிகளே என்பது அனுவாத முகத்தாற் பெறவைத்துக் கூறலின், முதல்வனைப்பற்றி வினாவியவட்கு, அவனது திருவடிகளது சிறப்புக் கூறினமை விடைவழுவாகாமை அறிக. உயிர்கட்கு இன்பமாவது இறைவனது சத்தியாதலானும் திருவடியே உயிர்களை

ஆனந்த வெள்ளத்து அழுத்துவிப்பனவாதல் அறிக. இத்திருப்பாட்டின் சொல்நடை 'ஆனந்த வெள்ளத் தழுந்துமொ ராருயிர்' *(தி.8 கோவையார் - 307)* என்னும் பாட்டோடு ஒத்திருத்தல் அறியத்தக்கது.

'ஆதி அந்தம் இல்லாத கடவுள் மானிடப் பெண்டிர்க்கும் இன்பம் தருவானோ; தாரான் ஆதலின், எனக்குப் பேரின்பம் தந்தவன் அத்தகைய கடவுளாதல் எவ்வாறு' என்பது தலைவி கூற்றிற்கு இயைய எழுந்த தடை. 'தகுதி' இல்லாதார்க்கும் வீடு தருவானோ' என்பது அடிகளது அனுபவத்திற்கியைய இதன்கண் உள்ளுறையாய் அமைந்து நிற்பது.

'அவ்வாறு உனக்கு அவன் எதிர்வந்து பேரின்பம் அளித்தது அவன் கருணையாலே காண்; அக்கருணை உனது முன்னைத் தவத் தால் உனக்கு எளிதிற்கிடைத்ததாயினும், அது, வானத்திற் பறக்கும் தேவர்களுக்கும் எட்டாததொன்று' என்பது விடை.

நங்காய் இதென்னதவம்
நரம்போ டெலும்பணிந்து
கங்காளம் தோள்மேலே
காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள்
காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத்
தரித்தனன்காண் சாழலோ. **#264**

நரம்போடு கூடிய எலும்புக் கூட்டினை அணிந்து முழுவெலும்பைத் தோளில் சுமந்தான். இது என்ன தவமோ? என்று புத்தன் வினாவ முழுவெலும்பு வந்த விதத்தைக் கேள். கால, கால வேற்றுமையால் பிரம விட்டுணுக்கள் இறக்க, அவர்கள் எலும்புக் கூட்டினை தரித்தான் என்று ஊமைப்பெண் விடை சொன்னாள்.

விளக்கவுரை

'தவம்' என்றது ஆகுபெயரால், தவக்கோலத்தை உணர்த்திற்று, 'தவமறைந்தல்லவை செய்தல்' *(குறள்.274)* என்புழிப்போல. பின்னர், 'தோள்மேல்' என வருகின்றமையின், முன்னர் 'மார்பின்மேல்' என்பது வருவிக்க, எலும்பை நரம்போடு அணிந்து என்றதனால், அவை நரம்பினால் தொடுக்கப்படும் என்பது பெறுதும். 'அணிந்து' என்றதற்கு அணிந்த தன்றியும் என உரைக்க. கங்காளம் - எலும்புக்கூடு.

'மாயோன் ஒருவனது வாழ்நாளில் பிரமர் நூற்றுவர் தோன்றி வாழ்ந்து அழிவர்' என்பதும், 'அவ்வழி நூறாவது எண்ணு முறைமைக் கண் வரும் பிரமன் இறக்குங்காலத்து மாலும் இறக்க, அவ்விருவரது எலும்புக் கூட்டினையும் சிவபெருமான் தனது இரு தோள்களிலும் ஏற்று

நடம்புரிவன்' என்பதும் புராண வரலாறாதல்பற்றி எழுந்தவை, இத்திருப்பாட்டின்கண் உள்ள தடை விடைகள்.
ஆமா கேள் - அவனுக்கு ஏற்புடையவாயினவாற்றைக் கேள். அந்தரம் - முடிவு. 'காலாந்தரத்து' என்றதனை, 'தரித்தனன்' என்ற தற்கு முன்னர்க் கூட்டுக. 'இருவர்' என்றது, தொகைக் குறிப்பாய், 'அயன், மால்' என்பவரை உணர்த்திற்று. 'காலம்' என்றதும், அதனது முடிவை. 'செய்ய' என்ற பொதுவினை, 'காட்ட' எனச் சிறப்பு வினை யாய் நின்றது. 'அவர் காலாந்தரத்துத் தரித்தனன்' எனச் சுட்டுப்பெயர் வருவித்துரைக்க.
'சடை, கல்லாடை முதலியவற்றைக் கூறின், நீ அவை தவக் கோலம் என்பாய்; அருளுக்கு மாறாய நரம்போடு எலும்புகளும் அன்னவாயொழியினும், கங்காளமும் தவக்கோலமோ' என்பது தடை.
'கங்காளம் காதலித்தது, தவக்கோலம் அன்று; அயன், மால் என்பவரும் நிலையாமையுடையரே என்பது உணர்த்துதற் பொருட் டாம்' என்பது விடை.
இதனால், 'சிவபிரானது திருவேடங்கள் பலவும், பலப்பல உண்மைகளை உணர்த்து முகத்தான், உண்மை ஞானத்தைப் பயக்கும் என்பது' போந்தது. இதனை, 'மருந்துவேண்டில் இவை' என்னும் திருந்துதேவன்குடிப் பதிகத்துள், (தி.3 ப.25) ஞானசம்பந்தர்,
'வீதிபோக் காவன, வினையைவீட் டுவ்வன,
ஓதிஓர்க் கப்படாப் பொருளைஓர் விப்பன
........அடிகள்வே டங்களே. '
'விண்ணுலா வும்நெறி, வீடுகாட் டும்நெறி
மண்ணுலா வும்நெறி, மயக்கந்தீர்க் கும்நெறி
........அடிகள்வே டங்களே'
என்றாற்போலப் பலபட விளக்கியும், 'இவ்வாற்றால் இவை பழித்தற்குரியனவல்ல; பெரிதும் புகழ்தற்குரியன' என்பதை,
'பங்கமென் னப்படர் பழிகளென் னப்படா,
புங்கமென் னப்படர் புகழ்களென் னப்படும்
....அடிகள்வே டங்களே'
என வலியுறுத்தியும் அருளிச்செய்தல் காண்க. இங்கு அடிகள் எடுத்தோதி வலியுறுத்தருளிய இக் கங்காள வேடத்தின் வரலாற்றை,
பெருங்கடல் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போய்
இருங்கடன் மூடி இறக்கும்; இறந்தான் களேபரமும்,
கருங்கடல் வண்ணன் களேபரமுங் கொண்டு கங்காளராய்
வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே.
(தி.4 ப.112 பா.7). என அப்பரும் வலியுறுத்தருளுதல் காண்க.
அயன், மால் இருவரது காயத்தை (எலும்புக் கூட்டினை)

மேலேற்றிக்கொள்ளுதல் பற்றிக் கங்காள மூர்த்தி, 'காயா ரோகண மூர்த்தி' எனவும் படுவர்; அவர் சிறந்து விளங்குந்தலமும் 'காயாரோகணம்' எனப்படும். காயாரோகணம் என்பதே 'காரோணம்' என மருவி வழங்கும்.
அதனால், காஞ்சிப் புராணக் காயாரோகணப் படலத்துள் இவ்வரலாறு இனிது விளக்கப்படுகின்றது. அதனுள், ஈண்டைக்கு இன்றியமையாததொரு செய்யுள் வருமாறு.
இருவரும் ஒருங்கே இறவருங் காலம்
எந்தையே ஒடுக்கிஆங் கவர்தம்
உருவம்மீ தேற்றிக் கோடலால் காயா
ரோகணப் பெயர்அதற் குறுமால்;
வருமுறை இவ்வா றெண்ணிலா விரிஞ்சர்
மாயவர் காயம்மேல் தாங்கிக்
கருணையால் அங்கண் நடம்புரிந் தருளும்
காலமாய்க் காலமுங் கடந்தோன்.
-காஞ்சிப்புராணம்
இங்குக் காட்டிய சிறந்த பல மேற்கோள்களால் கங்காளத்தின் இயல்பு இனிது விளங்குதலின், 'கங்காளமாவது, சிவபிரான் வாமனனை அழித்து, அவன் முதுகெலும்பைத் தண்டாகப் பற்றிய அதுவே' என்பாரது கூற்றுப் பொருந்தாமை அறிந்துகொள்க.

கானார் புலித்தோல்
உடைதலைஊண் காடுபதி
ஆனால் அவனுக்கிங்
காட்படுவார் ஆரேடீ
ஆனாலுங் கேளாய்
அயனுந் திருமாலும்
வானாடர் கோவும்
வழியடியார் சாழலோ. **#265**

புலித்தோலே ஆடையும், தலைஓடே உண் கலமும், மயானமே இடமும் ஆனால், அவனுக்கு அடிமைப் படுவோர் யாவர்? என்று புத்தன் வினாவ, புலித்தோல் முதலியவற்றை உடைய வனாயினும் பிரமன், திருமால், இந்திரன் என்பவர் அவனுக்கு வழித் தொண்டர் என்று ஊமைப் பெண் கூறினாள்.

விளக்கவுரை

கான் - காடு. தலை - தலை ஓடு. 'தலையில் ஊண்' என்க. ஊண் - உண்ணுதல். இனி, 'இஃது ஆகுபெயராய் உண்கலத்தை உணர்த்திற்று' எனினும் அமையும். காடு - சுடுகாடு. பதி - உறைவிடம்.

'உடை முதலியன இவ்வாறாக உடையவனை அன்பினால் அடைபவர் யார்' என்பது தடை,
'அவை அவ்வாறு இருப்பவும் உயர்ந்த தேவர் பலரும் தொன்றுதொட்ட அன்பராயிருத்தல் உண்மையானபின், அவை பற்றி ஐயம் என்' என்பது விடை.
முன்னர் *(தி.8 திருச்சாழல் பா.3)* 'காயில் உலகனைத்தும் கற்பொடிகாண்' எனப் பலரும் அச்சத்தால் அடங்கி நிற்றல் கூறப்பட்டமையின், இங்கு, 'ஆட்படுவார்' என்றது, அன்பினால் ஆட்படுவாரையேயாம்.
இதனானே, புலித்தோலாடை முதலியவைபற்றி மீண்டும் கூறியது பிறிதொரு கருத்துப் பற்றியாதலும் அறிந்துகொள்க.
'அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ'
(தி.5 ப.23 பா.9) என்றருளிச்செய்தமையின், அடியராதல் அச்சமும், அன்பும் என்னும் இருவகையானல்லது இல்லாமையறிக. பயன் கருதிச் செய்யும் அன்பும், 'அன்பு' என்றதன்கண் அடங்கும்.

மலையரையன் பொற்பாவை
வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான்
என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளா
தொழிந்தனனேல் உலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாங்
கலங்கிடுங்காண் சாழலோ. **#266**

மலையரசன் மகளாகிய உமாதேவியை, உலகம் அறியத் தீ முன்னே மணம் செய்தனன் என்பது என்ன காரியம்? என்று புத்தன் வினாவ, இறைவன் உலகமறிய மணம் செய்து கொள்ளாது ஒழிந்தால் உலகம் முழுதும் சாத்திரப் பொருள்களும் நிலைமாறிவிடும் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

விளக்கவுரை

'பாவை' முதலிய மூன்றும் ஒருபொருள்மேல் வந்த பலபெயர்கள்.
பெண்திரு - பெண்ணினத்தின் செல்வம். தீ வேட்டான்- தீ முன்னர் மணந்தான். என்னும் அது என் - என்று அறிந்தோர் சொல்லும் அச்செய்திக்குக் காரணம் யாது? கலை நவின்ற பொருள்கள் - மணமுறையைக் கூறும் நூல்களில் தான் சொல்லிய பொருள்கள்.
கலங்கிடும் - இனிது விளங்காதொழியும்.
'சிவபெருமானும் தன் தேவியைத் தீமுன்னர்ச் சடங்கு செய்து திருமணம் புரிந்தான் எனில், அங்கியங்கடவுள் முதலானவரன்றோ அனைவர்க்கும்

சான்றாய் நிற்கும் கடவுளர்' என்பது தடை.
'சிவபெருமான் அங்ஙனம் செய்தது, கற்பிப்பான் ஒருவன் தான் கற்பிக்கும் கலை, மாணாக்கர்க்கு இனிது விளங்கித் தெளி வெய்துதற் பொருட்டுத் தானே அதனைப் பயிலுதல்போலத் தான் உலகர்க்கு வகுத்த விதி இனிது விளங்குதற்பொருட்டுத் தானே மேற் கொண்டு செய்துகாட்டியதன்றி வேறில்லையாதலின், அதுபற்றி அங்கியங்கடவுள் முதலானோர் அவனின் மிக்காராதல் இல்லை' என்பது விடை.
'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப'
(தொல். பொருள் -143.) என்றதனால், மணமுறைச் சடங்குகள் முனி வராற் கட்டப்பட்டனவே என்பது இனிது விளங்கிக் கிடப்பவும், அவற்றைச் சிவபெருமானே செய்தனவாக வைத்துத் தடை விடை களான் ஆராய்ந்ததனால், 'பற்றிகல் இன்றிச் செய்வாரது செயல்களை எல்லாம் இறைவன் தன்செயலாக ஏற்றுக்கொள்வன்' என்பது நல்லாசிரியரது துணிபு என்பது பெறப்படும்.

தேன்புக்க தண்பணைசூழ்
தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம்
பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம்
பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக்
கூட்டாங்காண் சாழலோ. **#267**

தில்லைச் சிற்றம்பலத்தான் நடனம் செய்தற்குக் காரணம் யாது? என்று புத்தன் வினாவ, இறைவன் நடனம் செய்யாது ஒழிந்தால், உலகம் முழுதும் காளிக்கு உணவாய் விடும் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

விளக்கவுரை

பணை - வயல். தான் புக்கு நட்டம் பயிலும் அது - தான் காளிமுன் ஒருநிகராய்ச் சென்று நடனம் செய்த அச்செயல். 'காளிமுன்' என்பது ஆற்றலான் வந்து இயைந்தது. என் - என்ன காரணத்தால். தரணி - உலகம். ஊன் புக்க வேல் - அசுரரது புலால் பொருந்திய சூலம். 'ஊட்டு' என்ற முதனிலைத் தொழிற்பெயர் ஆகுபெயராய், ஊட்டப் படும் உணவைக் குறித்தது.
'தில்லைச் சிற்றம்பலவன்' என்றதனால், 'அடியார்கள் பொருட்டு ஆனந்த நடனத்தைச் செய்பவன்' என்பது போந்தது. போதரவே, 'இத்தகையோன் ஒரு பெண்முன் சென்று அவளோடு நடனப் போரினை

மேற்கொண்டு செய்தது ஏன்' என்பது தடையாயிற்று.
'காளி, தாரகன் என்னும் அசுரனை அழித்து அவன் உதிரத்தைக் குடித்த செருக்கினால் உலகினைத் துன்புறுத்த, சிவ பெருமான், அவள்முன் சென்று நடனப்போர் செய்து அச்செருக்கினை அடக்கினார்' என்பதே புராண வரலாறு ஆதலின், அதுவே இங்கு விடையாயினமை அறிக. இவ்வரலாற்றைத் திருநாவுக்கரசர் தமது தசபுராணத் திருப் பதிகத்துள் *(தி.4 ப.14 பா.4)* எடுத்தோதுதல் காண்க. இவ்வரலாற்றை 'நிசும்பன், சும்பன்' என்னும் அசுரரால் நிகழ்ந்த வரலாறாகவும் புராணங்கள் கூறும்.

கடகரியும் பரிமாவும்
தேரும்உகந் தேறாதே
இடபம்உகந் தேறியவா
றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றுந்
தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான்
திருமால்காண் சாழலோ. **#268**

மதயானை குதிரை தேர் இவற்றின் மீது ஏறாமல் இடபத்தின் மீது சிவபெருமான் ஏறினதற்குக் காரணம் யாது என்று புத்தன் வினாவ, முப்புரங்களை எரித்த காலத்தில் தேரின் அச்சு முறியத் திருமால் இடப உருவாய்த் தாங்கினான் என்று ஊமைப்பெண் சொன்னாள்.

விளக்கவுரை

கட கரி - மதத்தை உடைய யானை. பரிமா - குதிரை. உகந்து - விரும்பி. திரிபுரம் எரித்த காலத்தில் திருமால் இடப உருவங் கொண்டு சிவபெருமானைத் தாங்கிய வரலாற்றினைக் கந்த புராண மும் குறிப்பிடுதல் *(தட்சகாண்டம், ததீசி யுத்தரப் படலம் - 314.)* காண்க.
'செல்வராவார்க்கு யானையும், குதிரையும், தேரும்போல் வனவன்றே ஊர்தியாவன? அவை இல்லாது எருதின்மேல் ஏறி வருபவன் செல்வனாவனோ' என்பது தடை.
'அஃது ஒருகாலத்து நிகழ்ந்த நிகழ்ச்சியாயினும், அக் காலத்தில் பணிபுரிந்த மாயோனுக்கு மகிழ்ச்சி உண்டாதற் பொருட்டு அதனையே தான் மேற்கொண்டான்' என்பது விடை.
இறைவனுக்கு உண்மையில் இடபமாய் இருப்பது அறக் கடவுளே. இதனையே கந்த புராணமும் விரித்துக் கூறிற்று. எனினும், இவ்வரலாற்றையே இங்கு விடையாகக் கூறியது, 'அவ்வளவின் அவன் மகிழ்க' என்னும் நயம் பற்றிப் பருப்பொருளாய் எல்லார்க்கும் இனிது விளங்குதற் பொருட்டாம்.

நன்றாக நால்வர்க்கு

நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங்
கறமுரைத்தான் காணேடீ
அன்றாலின் கீழிருந்தங்
கறமுரைத்தான் ஆயிடினும்
கொன்றான்காண் புரமூன்றுங்
கூட்டோடே சாழலோ. **#269**

சனகர் முதலிய நால்வருக்கும் நான்கு வேதங் களின் உட்பொருள்களை ஆலமர நீழலிருந்து சொன்னான், அது என்ன? என்று புத்தன் வினாவ, அன்று ஆலநீழலிருந்து அறங்கூறினா னாயினும் முப்புரங்களை வேரோடு அழித்தான் என்று ஊமைப் பெண் சொன்னாள்.

விளக்கவுரை

நால்வராவார் சனகாதியர் என்பர். அன்று - முற் காலத்தில். ஆல் - கல்லால மரம். 'அறமாக' என ஆக்கம் வருவித்து உரைக்க. கொன்றான் - அழித்தான். கூட்டு - கூட்டம்; அசுரக் குழாம்.

'நால்வர் முனிவர்கட்கு ஆலின்கீழ் இருந்து அறம் கூறுவானா யினமையின், அவன் துறவோர்க்குத் துணையாய் வீடுதருதலல்லது, இல்வாழ்வார்க்குத் துணையாய்ப் பொருள் இன்பங்களைத் தாரான்; ஆதலின், இல்வாழ்வார், பிற தேவரையே அடைதல் வேண்டும்' என்பது தடை.

'அவன் அஃது ஒன்றே செய்தொழியாது, முப்புரத்தை அழித்துத் தேவர்கட்கு வாழ்வளித்தலையும் செய்தானாதலின், இல் வாழ்வார்க்கும் பொருள் இன்பங்களைத் தருபவனேகாண்' என்பது விடை.

'பொருள் இன்பங்களைத் தருவாராகப் பிறர் கூறும் தேவர் கட்கும் முப்புரத்தவராகிய பகையை அழித்து வாழ்வருளிய பெருமான் அவனேயாகலின், போகம். மோட்சம் இரண்டிற்கும் அவனையன்றி முதல்வர் யாவர் உளர்' என்பது திருவுள்ளம்.

மெய்கண்ட தேவரும் இவ்வாறே, 'கல்லால் நிழல் மலைவில்லார்' (சிவஞானபோதம் - காப்பு) என இவ்விரண் டனையும் குறிப்பிட்டு, அவனது முழு முதல் தன்மையைக் குறிப்பித்தல் காண்க.

அம்பலத்தே கூத்தாடி
அமுது செயப் பலிதிரியும்
நம்பனையுந் தேவனென்று
நண்ணுமது என்னேடீ
நம்பனையும் ஆமாகேள்
நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசாவென்

றேத்தினகாண் சாழலோ. #270

அம்பலத்தில் கூத்தாடி, பிச்சை எடுத்துண்டு உழல் கின்ற சிவனையும் தேவனென்று அடைவது என்ன அறியாமை? என்று புத்தன் வினாவ, அவனை நான்மறைகள் அறியாதவைகளாய் எம் பெருமானே! ஈசனே! என்று துதித்தன என்று அவள் கூறினாள்.

விளக்கவுரை

அமுது செய - உணவைத் தேட. பலி - பிச்சை. 'பலிக்கு' என நான்காவது விரிக்க. நம்பன் - சிவன். நண்ணுதல் - அடைதல். மூன்றாம் அடியில், 'நம்பனையும்' என்ற உம்மையைப் பிரித்து, 'மறைகள்' என்றதனோடு கூட்டுக.

இது சிறப்பும்மை. 'நம்பனை நான் மறைகளும் தாம் அறியா; மற்று அவை ஆமாறு கேள்; எம்பெருமானே, ஈசா என்று துதித்து நிற்கும்' என உரைக்க. இஃது, 'ஈசானஸ் ஸர்வ வித்யானாம்' என்று தொடங்கும் வேதமந்திரத்தை உட்கொண்டு அருளிச் செய்தது. 'அறியா' என்றது, 'அளவிட்டுணரமாட்டா' என்றபடி.

'பலருங் காண அம்பலத்திலே நின்று கூத்தாடி அவரை மகிழ்வித்தும், உணவின் பொருட்டுப் பிச்சைக்கு அலைந்தும் நிற்கின்ற சிவனையும் சிலர் கடவுள் என்று அடைவது என்' என்பது தடை.

'சிவனை வேதங்களும் அளவிட்டுணரமாட்டாவாய்த் துதித் தமைகின்றன என்றால், அவனை முதற் கடவுள் என்று அறிந்து அடைபவர் அறிவாற் பெரியோரேயன்றிப் பிறரல்லர் என்பது சொல்ல வேண்டுமோ' என்பது விடை.

சலமுடைய சலந்தரன்றன்
உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன்
றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்தன்
நயனம்இடந் தரனடிக்கீழ்
அலராக இடஆழி
அருளினன்காண் சாழலோ. #271

சலந்தரன் உடம்பைச் சேதித்த சக்கரத்தைத் திருமாலுக்குக் கொடுத்தற்குக் காரணம் யாது? என்று புத்தன் வினாவ, திருமால் தன் கண்ணைப் பறித்து மலராகத் திருவடியிற் சாத்தினதால் கொடுத்தான் என்று ஊமைப் பெண் விடை கூறினாள்.

விளக்கவுரை

சலம் - சினம். பிரமனது சீற்றத்திற் பிறந்த அசுரனே சலந்தராசுரன்.

இவனைச் சிவபெருமான் தாம் உண்டாக்கிய சக்கரப் படையால் அழியச்செய்தார்.
சலந்தராசுரனது தோற்றம் முதலிய வரலாறுகளையும், அவனை அழித்த சக்கரத்தைத் திருமால் சிவ பெருமானை வழிபட்டுப் பெற்றதையும் கந்த புராணத் ததீசி உத்தரப் படலத்துட் காண்க. நயனம்- கண். இடந்து - பெயர்த்து. அலராக - மலராக. ஆழி - சக்கரம்.
'தனக்கு வெற்றியைத் தந்த படைக்கலத்தைப் போற்றிக் கொள்ளாமல் எளிதாகப் பிறருக்கு அளித்தவனது செயல் எங்ஙனம் சிறந்ததாகும்' என்பது தடை.
'அச் செயல், தன்னை வழிபடுவார்க்கு அவர் வேண்டிய வற்றை வேண்டியவாறே கொடுக்கும் வள்ளன்மை உடையவன், தனக்கென ஒன்றையும் விரும்பாதவன் என்னும் உயர்வுகளை உணர்த்துமன்றித் தாழ்வினை உணர்த்துதல் எவ்வாறு' என்பது விடை.

அம்பரமாம் புள்ளித்தோல்
ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமான் உண்டசதுர்
எனக்கறிய இயம்பேடீ
எம்பெருமான் ஏதுடுத்தங்
கேதமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத்
தன்மையன்காண் சாழலோ. **#272**

புலித்தோல் ஆடையாகும்; அமுது ஆலகால விடம் ஆகும்; இது என்ன தன்மை? என்று புத்தன் வினாவ, எம் பெருமான் எதை உடுத்து எதை அமுது செய்தாலும், தன் பெருமையைத்தான் அறியாத தன்மையன் என்று ஊமைப் பெண் கூறினாள்.

விளக்கவுரை

'புள்ளித்தோல் அம்பரமாம்' என்க. 'உண்ட' என்றது, இங்கு, 'அடைந்த' என்றும், 'சதுர்' என்றது 'பெருமை' என்றும் பொருள் தந்தன. அல்லாக்கால், 'உண்ட' என்றது, 'அம்பரம்' என்றதனோடு இயையுமாறு இல்லை. 'தம்' என்றது, ஒருமை பன்மை மயக்கம். 'தன் பெருமை' எனின், இனவெதுகையாய்ப் பொருந்துமாதலின் அதுவே பாடம் போலும்.
'அறியாமை', இங்கு, எண்ணாமை. எனவே, 'தன்பெருமையை நோக்காது எளிவந்து எதனையும் செய்வான்' என்பது பொருளாயிற்று.
'எம்பெருமான் எதனை உடுத்து எதனை உண்டாலும் அவற்றாலெல்லாம் அவன் தன் பெருமையைத் தான் அறியாத அருளாளனேயாவன்' என்றபடி.
'முழுதும் தானும் காண்கிலன் இன்னமும் தன்பெருந் தலைமை'

(மகேந்திரகாண்டம். சூரன் அமைச்சியற்படலம் -128.) என்னும் கந்தபுராண அடியின் பொருள் யாதாயினும், ஈண்டு இதற்கு இதுவே பொருள் என்க.
'காயில் உலகனைத்தும் கற்பொடி' *(தி.8 திருச்சாழல். பா.3)* எனவும், 'அயனும் திருமாலும் வானாடர் கோவும் வழியடியார்' *(தி.8 திருச்சாழல். பா.12)* எனவும், நீ சொல்லியவாறு அவன் பேராற்றலும், பெருந்தலைமையும் உடையவனாய் இருப்பினும், புலித்தோலை உடுப்பதும், நஞ்சை உண்பதும் போன்றவை (பிச்சை எடுத்தல் முதலியவை) அவனுக்குச் சிறிதும் பொருந்தாகாண்' என்பது மீட்டும் மேலன பற்றி எழுந்த தடை.
'தம் பெருமை ஒன்றே கருதிப் பிறருக்கு உதவி செய்யாத வன்கண்மை யுடையார்க்காயின் நீ சொல்வது பொருந்தும்; சிவ பெருமான் அவ்வாறு தன் பெருமை கருதாது பிறர் நலம் ஒன்றையே கருதுதலின், அவை அவனது பேரருட்கு அழகு செய்து நிற்பனவே காண்' என்பது விடை.

அருந்தவருக் காலின்கீழ்
அறமுதலா நான்கனையும்
இருந்தவருக் கருளுமது
எனக்கறிய இயம்பேடீ
அருந்தவருக் கறமுதல்நான்
கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை
தெரியாகாண் சாழலோ. **#273**

சனகாதியர்க்கு ஆல மர நீழலிருந்து அறம் முதலியவற்றை அருள் செய்த வரலாறு எற்றுக்கு? என்று புத்தன் வினாவ, அறம் முதலியவற்றை இறைவன் அருள் செய்யாவிடின் அவர்கட்கு உலக இயற்கைகள் தெரியமாட்டா என்று அப்பெண் கூறினாள்.

விளக்கவுரை

'அருந்தவருக்கு ஆலின்கீழ் இருந்து, அறம் முதலாய நான்கனையும் அவருக்கு அருளும் அது' எனக் கூட்டுக. அருந் தவருக்கு இருந்து - அரிய தவத்தோர்க்கு அருள் செய்வதற்கென்று ஆசிரியக் கோலத்துடன் எழுந்தருளியிருந்து. 'அவர்க்கு' என்றது, 'அத்தன்மையோர்க்கு' என்னும் பொருட்டாய் மேற்போந்த *(தி.8 திருச்சாழல் பா.16)* நால்வரைக் குறித்தது. திருந்து அவருக்கு - நன்னெறியில் ஒழுக விரும்புபவர்க்கு. உலகியற்கை - உலகுயிர்களின் ஒழுக்கநெறி. அஃது, 'அறவொழுக்கம், பொருளொழுக்கம், இன்பவொழுக்கம், வீட் டொழுக்கம்' என நால்வகைப்படுதலின், 'தெரியா' எனப் பன்மை யாற் கூறினார், 'முதற்கண் இறைவன் ஆசிரியனாய் எழுந்தருளி யிருந்து தக்கார்க்கு

ஒழுக்க நெறியை உணர்த்த, அவர்வழியாகவே உலகத்தில் ஒழுக்க நெறிகள் உளவாயின' என்பது நல்லாசிரியர் அனைவர்க்கும் ஒத்த துணிபு என்பதனை,

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

என்னும் திருக்குறளான் *(6)* அறிக. இங்கு அடிகள் அருளிச் செய்த வாறே,

'அழிந்த சிந்தை அந்த ணாளர்க்
கறம்பொருளின்பம் வீடு
மொழிந்த வாயான் முக்கண் ஆதி
மேயதுமுது குன்றே'

(தி.1ப.53பா.6) என்றாற்போல, மூவர் முதலிகளும் தம் திருப் பதிகங்களுள் இதனைப் பலவிடத்தும் தெளிய அருளிச் செய்தல் காண்க. 'சிலருக்கு அறம் முதலியவற்றைக் கற்பிக்கும் ஆசிரியத் தொழிலுடையவன், உலகிற்கெல்லாம் ஒப்பற்ற தலைவனாதல் எவ்வாறு' என்பது தடை. 'உலகிற்கு முதல்வனாவான் அன்றி, உலகிற்கு ஒழுக்க நெறியை உணர்த்துவோர் பிறர் யாவர்' என்பது விடை. அடிகள், சிவபுராணத்தால் இறைவனைத் துதிக்கும் முறையை வகுத்தும், கீர்த்தித் திருவகவலில் அவன் பலவிடத்தும் பலருக்கும் செய்த திருவருட் சிறப்புக்களையெல்லாம் தொகுத்தும், திருவண்டப் பகுதியில் அவனது ஏனை இயல்புகளை எல்லாம் விளக்கியும், இதனுள் புறச்சமயங்கள் பற்றியாதல், தமக்கே யாதல் நன்மக்கட்கு நிகழும் ஐயங்களைத் தடைவிடைகளால் அகற்றி, சிவபெருமானது முதன்மையை நிறுவியும், திருக்கோவையால் அகப்பொருள் வகையிலெல்லாம் சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாக்கிப் புகழ்ந்தும், மற்றும் பலவாற்றானும் பெரியதோர் இலக்கியக் கரு வூலத்தை அருளிச்செய்து, சிவநெறிக்குப் பெரியதோர் ஆக்கம் விளைத்தமையின், இந்நெறியின் பண்டைப் பேரருளாசிரியராய் விளங்குதலும், அவர்வழியே பின்னை ஆசிரியர்களும் சிவநெறியை நன்கு வளர்த்தமையும் ஈண்டு ஓர்ந்துணர்ந்து கொள்ளத் தக்கனவாம்.

1.13.திருப்பூவல்லி

இணையார் திருவடிஎன்
தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள்
அத்தனையுந் துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை
அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப்
பூவல்லி கொய்யாமோ. **#274**

இரண்டாகிய அரிய திருவடியை, என் தலையின் மீது வைத்தவுடன், இதுவரையில் துணையென்று நினைத்திருந்த உறவினரெல்லாரையும், விட்டு நீங்கினேன். கரைகோலித் தடுக்கப் பட்ட நீர் சூழ்ந்த தில்லைநகர்க் கண்ணதாகிய, அம்பலத்தில் நடிக்கின்ற, நமதுபிறவிக் கடலுக்கு ஓர் மரக்கலம் போல்பவனாகிய சிவபெரு மானது பெருமையைப் புகழ்ந்து பாடி அல்லி மலர்களைப் பறிப்போம்.

விளக்கவுரை

இணை ஆர் - இணையாகப் பொருந்திய. இங்குக் கூறும் தலைவி சிவபெருமானிடத்தில் பேரின்பம் பெற்ற பெண்ணாக வும் கொள்ளப்படுதலின், திருவடி சென்னிமேற் சூட்டப்பெற்றதாகக் கூறலும் பொருந்துவதே.

துணையான - முன்பு எனக்குத் துணையாய் இருந்த; என்றது, 'அவை துணையாதல் போலி' என்றபடி. 'துறந் தொழிந்தேன்' என்றது ஒரு சொல் நீர்மைத்தாய், துணிவுப் பொருள் உணர்த்திற்று. இதன் பின், 'ஆதலின்' என்பது எஞ்சிநின்றது.

அணை ஆர் - மடையினால் தடுக்கப்படுகின்ற. புணை யாளன் - திருவருளாகிய புணையை உடையவன். திருவருள் புணை யாதல், பிறவிக் கடலுக்காம். எனவே, 'புணை' என்றது, சிறப்புருவக மாயிற்று. 'அப் புணையாளன்' எனச் சுட்டு வருவித்துரைக்க. சீர் - புகழ். இதனுள் இறைவனது புகழ் பலவும் வருதல் காண்க. இங்கும், 'கொய்வாமோ' என்பது, 'கொய்யாமோ' என மருவியதாக உரைக்க.

எந்தைஎந் தாய்சுற்றம்
மற்றுமெல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை
ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில்
ஆனந்தத் தேனிருந்த

பொந்தைப் பரவிநாம்
பூவல்லி கொய்யாமோ. **#275**

எனது தந்தையும், எனது தாயும் உறவினரும், மற்றெல்லாப் பொருள்களும் என்னுடைய பிறவிக் கட்டைச் சேதித்து, என்னை ஆண்டருளின, பாண்டிப் பிரானே, ஆதலால் அந்தத் திருவிடை மருதூரின்கண், இன்பத்தேன் தங்கியிருந்த பொந்தினைத் துதித்து நாம் பூவல்லி கொய்யாமோ.

விளக்கவுரை

'எந்தை' என்பதற்கு 'எம் தாய்' என்றதனோடு இயைய, 'எம் தந்தை' என உரைக்க. 'எம்' என்றதனை, 'சுற்றம்' என்றதற்கும் கூட்டி, 'எம் மற்றுச் சுற்றம்' என மாற்றியுரைக்க. 'சுற்றம்' என்றதன்பின், 'என்கின்ற' என்பது வருவித்து, 'எந்தை, எம்தாய், எம் மற்றுச் சுற்றம் என்கின்ற என்னுடைய பந்தம் எல்லாம் அறுத்து' எனக் கூட்டுக. அந்தம் - அழகு. 'கொத்து, கொந்து' என்பன ஒரு பொருளவாய் நிற்றல் போல, 'பொத்து, பொந்து' என்பன ஒரு பொருளவாய் நிற்கும். பொந்துகளிலும் தேன் ஈக்கள் தேனைச் சேர்த்து வைத்தல் உண்டு. 'பாண்டிப்பிரானாகிய பொந்து' என்க.

நாயிற் கடைப்பட்ட
நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதுந்
தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத்
தாண்டானென் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப்
பூவல்லி கொய்யாமோ. **#276**

நாயினுங் கடையான, எங்களையும், ஓர் பொருளாக்கி, தாயினும், மிகவும் தயையுடையவனான, தம்பிரான், என் வலிய இருவினைகளின் வாயில், புழுதியைக் கொட்டி, மாயப்பிறவியைச் சேதித்து ஆண்டருளினன், ஆதலால் பூவல்லி கொய்யாமோ.

விளக்கவுரை

தயா - தயவு; கருணை. உயிர்களை, 'தாம்' என்றல் மரபு என்பதை, 'தம்பிரான்' என்னும் வழக்குப்பற்றி அறிந்து கொள்க. மாயம் - நிலையின்மை. 'ஆண்டான்' என்றதன் பின், 'ஆதலின்' என்பது எஞ்சிநின்றது.

பொடி - மண். அட்டி - சொரிந்து. எண்ணம் இழந்தவரை, 'வாயில் மண்ணிட்டுக் கொண்டார்' என்னும் வழக்குப் பற்றி, 'வினையின் வாயில்

பொடி அட்டி' என்று அருளினார். இன்னோ ரன்னவை உவமவாயிற்படுத்துரைக்கும் பான்மை வழக்குக்கள். 'வினையைத் தோல்வியடையச் செய்து' என்பது பொருள். இது, வினை தோற்றோடுமாறு இறைவன் புகழைப் பாடுதலைக் குறித்தது.

பண்பட்ட தில்லைப்
பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன்
அருக்கனெச்சன் இந்துஅனல்
விண்பட்ட பூதப்
படைவீர பத்திரரால்
புண்பட்ட வாபாடிப்
பூவல்லி கொய்யாமோ. **#277**

மதிப்புப் பெற்ற தக்கனும், சூரியனும், எச்சன் என்பவனும், சந்திரனும், அக்கினியும், அலங்கரித்தலமைந்த, தில்லை நகர்க்கு இறைவனாகிய சிவபெருமானை, துதியாதவர்களாய், மேன்மை பொருந்திய பூதப்படையையுடைய, வீரபத்திரக் கடவுளால் காயப்பட்ட விதத்தை எடுத்துப்பாடி, பூவல்லி கொய்யாமோ.

விளக்கவுரை

பண்படுதல் - செம்மைப் படுதல். எண்பட்ட - வேறோர் எண்ணத்தைப் பொருந்திய. அருக்கண் - சூரியன். எச்சன் - வேள்வித் தேவன். இந்து - சந்திரன். விண்பட்ட - வானத்தினின்றும் பாய்ந்த.

தேனாடு கொன்றை
சடைக்கணிந்த சிவபெருமான்
ஊனாடி நாடிவந்
துள்புகுந்தான் உலகர் முன்னே
நானாடி ஆடிநின்
றோலமிட நடம்பயிலும்
வானாடர் கோவுக்கே
பூவல்லி கொய்யாமோ. **#278**

தேன் பொருந்திய கொன்றை மலர் மாலையை, சடையின்கண் தரித்த சிவபிரான் பலகால் மானுடவுடம்பெடுத்து வந்து, உலகத்தாருக்கு எதிரில் என் மனத்தில் புகுந்தான். அதனால் நான் ஆடியாடி நின்று, முறையிட, நடனம் செய்கிற தேவர் பிரானுக்கே பூவல்லி கொய்யாமோ.

விளக்கவுரை

தேன் நாடு - வண்டுகள் தேடி அடைகின்ற. ஊன் - உடம்பு. 'என் ஊன்' என்க. 'நாடி நாடி' என்ற அடுக்கு, பல முறை வந்தமை குறித்தது,

பலமுறையாவன, திருப்பெருந்துறையிலும், மதுரையிலும், உத்தரகோச மங்கையிலும், கழுக்குன்றத்திலும், வந்தருளியனவாம். 'உலகர் முன்னே வந்து' என முன்னே கூட்டுக. 'இம்மைக்கண் வந்து அருள் புரிந்தான்' என்பார், 'ஊன் நாடி வந்து' என்றார். நாடி ஆடி நின்று - தேடி அலைந்து நின்று. நடம் பயிலும் - நாடகம் புரியும்; என்றது, 'முன்பு தானே வந்து ஆட்கொண் டருளினான்; இப்பொழுது, நான் நாடி ஆடி ஓலமிடவும் தோன்றாது நாடகம் செய்கின்றான்' என்றவாறு. 'கோவுக்கே' என்றதன்பின், 'பாடி' என ஒரு சொல் வருவிக்க.

எரிமூன்று தேவர்க்
கிரங்கியருள் செய்தருளிச்
சிரமூன் றறத்தன்
திருப்புருவம் நெரித்தருளி
உருமூன்று மாகி
உணர்வரிதாம் ஒருவனுமே
புரமூன் றெரித்தவா
பூவல்லி கொய்யாமோ. **#279**

மும்மூர்த்திகளாகி, அறிதற்கரிய பொருளாயுள்ள ஒருவனுமே, முத்தீயின் வழியாக அவியை ஏற்கின்ற தேவர்களுக்கு, இரங்கி அருள் செய்து, திரிபுரத்தவர்கள் தலை சுற்றி விழும்படி, தனது திருப்புருவத்தை வளைத்தருளி, மூன்று புரங்களையும் எரித்த விதத்தைப் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ?

விளக்கவுரை

எரி மூன்று தேவர் - முத்தீ வேள்வியை விரும்புகின்ற தேவர்கள். 'சிரம் மூன்று அற' என்றது, 'பெருவலியுடைய அசுரர் மூவர் அழிந்தொழிய' எனப் பொதுப்பொருளே தந்து நின்றது. புருவம் நெரித்தல், சினத்தால் நிகழ்வது. உருமூன்று - மும்மூர்த்திகள். 'அருவம் உருவம், அருவுருவம்' என்றும், 'போகவடிவம், யோக வடிவம், வேகவடிவம்' என்றும் உரைப்பர். அரிதாம் - அரிய பொரு ளாகிய. 'ஒருவனும்' என்ற உம்மை, முற்றும்மை. 'ஒருவனே மூன்று புரங்களை அழித்தமை வியப்பு' என்றவாறு, 'எரித்தவா' என்றதன் பின், 'பாடி, என்பது எஞ்சிநின்றது. 'தேவர்கள்மேல் இரக்கம் வைத்தும். மூவர் அசுரர்மேல் சினங்கொண்டும் ஒருவனே மூன்று புரங்களை எரித்தான்' என்பது இப்பாட்டின் திரண்டபொருள். இனி, மேற்போந்த *(தி.8 திருப்பூவல்லி. பா-4)* தக்கன்றன் வேள்வி நிகழ்ச்சியே இங்கும் முதல் இரண்டடிகளில் குறிக்கப்பட்டதெனக் கொண்டு, அதற்கியைய உரைப்பர் பிறரெல்லாம்.

வணங்கத் தலைவைத்து
வார்கழல்வாய் வாழ்த்தவைத்து

இணங்கத்தன் சீரடியார்
கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை
அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம்
பூவல்லி கொய்யாமோ. **#280**

எம் இறைவன் தன்னை வணங்கும் பொருட்டு, எனக்குச் சிரசை அமைத்து, தன் பெரிய திருவடியைத் துதிக்கும் பொருட்டு எனக்கு வாயை அமைத்து அடியேன் நட்பமையும் பொருட்டு, தன் சிறப்பமைந்த அடியார் குழாத்தையும் அமைத்து அழ கோடு, அழகாகிய தில்லையம்பலத்தில் நடனம் செய்கின்ற கல்யாண குணத்தை மிகுதியாகப் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ?

விளக்கவுரை

'எம் பெருமான்' என்றதை முதலிற் கூட்டி, அதன்பின், 'மக்களாய் உள்ளார்க்கு' என்பது வருவிக்க. 'வார்கழல்' என்றது தாப்பிசையாய், முன்னரும் சென்று இயையும். 'வாய்' என்றதனை, 'வாழ்த்த' என்றதன் பின்னர்க் கூட்டுக. இணங்க - கூடியிருக்க. சீரடியார் - சிறப்புடைய அடியவர்; அவர், 'கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி, வீடும் வேண்டா விறலினோர்' *(தி.12* பெ.புரா. திருக்கூட்ட*.8)* என்க. அவரையும், 'வைத்து' என்றதனால், அவர்கட்குத் தன் திருவடி கூடுதலை விரைய அருளாது இந்நிலவுலகில் சின்னாள் உலாவச் செய்தலும் உலக நலத்தின் பொருட்டென்பது போந்தது. இதனை,
'அன்ன தன்மையர் கயிலையை அணைவதற் கருளார்
மன்னு தீந்தமிழ் புவியின்மேற் பின்னையும் வழுத்த'
(தி.12 பெ. புரா. திருநாவுக்கரசர். *361)* என்றதனானும் அறிக.
அடிகளிடத்தும் இந்நிலை காணப்படுவது என்க.
'எம் பெருமான்' என்றது, 'வைத்து' என்றவற்றோடு முடியு மாகலின், ஆடுதலுக்கு, 'தான்' என்னும் எழுவாய் வருவிக்க. அணங் கொடு - தேவியோடு. இதனை, 'அம்பலத்தே' என்றதன் பின்னர்க் கூட்டி, ஒடு, உருபினை 'நின்று' என்பது வருவித்து முடிக்க. இவ்வாறு முடியாது, 'தொடியொடு - தொல்கவின் வாடிய தோள்' *(குறள் - 1235)* என்றது போல, 'ஒடு' வேறு வினைப் பொருளில் வந்தது' எனக் கொண்டு, 'அணங்கு காண' என்பது கருத்தாக உரைப்பினும் அமையும்.
'குணம்'என்றது அருளை. கூரப்பாடி - மிகப்பாடி. இத் திருப்பாட்டுள், இறைவன் உயிர்களை உய்விக்குமாறெல்லாம் வகுத்தோது முகத்தான், அவன் செய்வனவெல்லாம் உயிர்கள் பொருட்டேயாதலாகிய பேரருள் கூறப்பட்டது.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.

(தி.5 ப.90 பா. 7) என்ற திருநாவுக்கரசர் திருமொழி இங்கு நினைக்கத் தக்கது.

நெறிசெய் தருளித்தன்
சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை
ஆண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை
முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப்
பூவல்லி கொய்யாமோ. **#281**

எனக்கு நல்வழியை உண்டாக்கியருளி, தன் சிறப்பை உடைய அடியார்களுடைய பொன்னடிகளுக்கே, இலக் காக்கிக் கொண்டு, என்னை ஆண்டருளின இறைவனது, மங்கள குணங்களைப் புகழ்ந்து, எம்மை முழுமையும் அடிமையாக்கி வருத்து கின்ற, பழவினைகளைப் பொய்யாக்கின (இல்லையாகச் செய்த) விதத்தைப் புகழ்ந்து பாடிப் பூவல்லி கொய்யாமோ?

விளக்கவுரை

'என்னை' என்றதனை முதலிற் கொள்க. நெறி செய்து-நல்வழிப்படுத்தி. குறிசெய்து *(உரிய பொருளாக்கத்)* திரு வுளங்கொண்டு. கொண்டு - ஏற்றுக்கொண்டு. பரவி - பரவுதலால், *'பரவிக் கிறிசெய்த'* என இயையும். முறிசெய்து - ஆவணம் செய்து கொண்டு*;* ஆவணம், இங்கு, அடிமைப் பத்திரம். முழுது - அன்று தொட்டு இன்றுகாறும் இடைவிடாது நின்று. உடற்றும் - வருத்துகின்ற. கிறிசெய்து - பொய்யாக்கி*;* இல்லையாகச் செய்து. *'ஆண்டபிரான் குணம் பரவி வல்வினையைக் கிறிசெய்தவா'* என்றதனால்*,* இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார்மாட்டு இருள்சேர் இருவினையும் சேராமை *(குறள் - 5)*. பெறப்பட்டது.

பன்னாட் பரவிப்
பணிசெய்யப் பாதமலர்
என்ஆகம் துன்னவைத்த
பெரியோன் எழிற்சுடராய்க்
கல்நா ருரித்தென்னை
யாண்டுகொண்டான் கழலிணைகள்
பொன்னான வாபாடிப்

பூவல்லி கொய்யாமோ. **#282**

யான், அநேகநாள் துதித்து, பணிவிடை செய்யும் படி, தன் திருவடி மலரை, என் மனத்தில் பொருந்த அமைத்த பெருமையையுடையான், அழகிய சோதியாகி, முற்படக் கல்லில் நார் உரித்த பிறகு என்னை ஆண்டருளினவனுடைய இரண்டு திருவடிகள் அழகியனவாயிருந்த விதத்தைப் புகழ்ந்து பாடிப் பூவல்லி கொய்யாமோ?

விளக்கவுரை

ஆகம் - மார்பு; அஃது இருதயத்தைக் குறித்தது. இனி, 'அகம் என்பது நீட்டலாயிற்று' எனினுமாம், பெரியோனாகிய ஆண்டுகொண்டானது கழலிணைகள்' என்க. 'கழலிணைகள்' எனப்பட்டது பற்றிய குறிப்பு மேலே *(தி.8* திருத்தெள்ளேணம் பா.*17)* தரப்பட்டது. சுடர் - ஞான விளக்கு; என்றது, ஆசான மூர்த்தியை, பொன் - நிதி. 'நமக்குப் பொன்னானவா' என்க.

பேராசை யாமிந்தப்
பிண்டமறப் பெருந்துறையான்
சீரார் திருவடிஎன்
தலைமேல் வைத்தபிரான்
காரார் கடல் நஞ்சை
உண்டுகந்த காபாலி
போரார் புரம்பாடிப்
பூவல்லி கொய்யாமோ. **#283**

பேராசையால் உண்டாகிய இந்த உடம்பின் தொடர்பு அற்றுப்போம்படி, திருப்பெருந்துறையை உடையானும், சிறப்பமைந்த திருவடியை, என்சிரசின் மேல் வைத்த பெருமானும், கருமை நிறைந்த பாற்கடலில் தோன்றிய நஞ்சை உண்டு மகிழ்ந்த காபாலியும் ஆகிய சிவபெருமானது போர்க்கிலக்காயிருந்த முப்புரத்தின் வரலாற்றைப் பாடிப் பூவல்லி கொய்யாமோ?

விளக்கவுரை

பிண்டம் - உடம்பு. உடம்பு ஆசையால் வருதலின். அதனை ஆசையாகவே ஒற்றுமைப்படுத்து ஓதியருளினார். 'பிண்டம் அறப்பாடி' என இயைக்க. போர்ஆர்புரம் - போர் பொருந்திய ஊர்; தலங்கள். சிவபிரானது போர்ச் செயல்களைக் குறிக்கும் தலங்கள் எட்டு. அவை, 'அட்ட வீரட்டம்' எனப்படும். அவற்றை, *1*பூமன் சிரம் கண்டி*2* அந்தகன் கோவல்

*3*புரம் அதிகை

*4*மாமன் பறியல் *5*சலந்தரன் விற்குடி

*6*மா வழுவூர்
*7*காமன் குறுக்கை *8*யமன் கட வூர்இந்தக்
காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களும் சூடிதன்
சேவகமே.

என்னும் தனிப்பாடலால் அறிக. சிவநெறியை அழித்துப் புத்தராய் நின்று பின் சிவபெருமானோடு போரேற்று அழிந்த அசுரரது திரி புரங்களை, அப்பெருமானிடத்து அன்புடையார் பாடாராகலின், 'புரம்' என்றதற்கு, 'திரிபுரம்' என உரைத்தல் பொருந்தாமை வெளிப் படை. 'புரத்துப் போரார்தல்' என மாற்றி உரைத்தும் எனின், அது 'புர மூன்று எரித்தவா' என மேலே (தி.8 திருப்பூவல்லி. பா-6.) கூறப்பட்டமை காண்க.
இனி, இவ்வாறன்றி, 'பேரானந்தம் பாடி' (தி.8 திருப்பூவல்லி. பா-18.) எனப் பின்னர் மோனையின்றி வருதல்போல, ஈண்டும், 'பேரார் புரம்' எனப் பாடம் ஓதி, 'புகழ் பொருந்திய சிவலோகம்' என்று உரைப்பினுமாம்.

பாலும் அமுதமுந்
தேனுடனாம் பராபரமாய்க்
கோலங் குளிர்ந்துள்ளங்
கொண்டபிரான் குரைகழல்கள்
ஞாலம் பரவுவார்
நன்னெறியாம் அந்நெறியே
போலும் புகழ்பாடிப்
பூவல்லி கொய்யாமோ. **#284**

பாலையும், அமிர்தத்தையும், தேனையும் ஒத்த பராபரப் பொருளாகி, குளிர்ச்சியாகிய திருவுருக் கொண்டு வந்து, என் மனத்தைக் கவர்ந்து கொண்ட இறைவனது ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்த திருவடிகளை உலகத்தில் வழிபடுவோர்களுடைய நல்வழி யாகி, அவ்வழியையே நிகர்ப்பதாகிய, இறைவனது புகழைப் பாடிப் பூவல்லி கொய்யாமோ?.

விளக்கவுரை

'தேன்' என்றவிடத்தும் உம்மை விரிக்க. உடனாம் - ஒருங்கு கலந்தது போலும்.
பராபரமாய் - மிக மேலான இன்பமாய். 'கோலம் குளிர்ந்து' என, இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின் மேல் நின்றது. 'கோலத்தை இனிதாகக் கொண்டு' என்பது பொருள். 'கழல்களை ஞாலத்துப் பரவுவார்' எனவும்', பரவுவாரது நன்னெறியாகிய அந்நெறியானே புகழைப் பாடி' எனவும் உரைக்க .
'போலும்' என்றது அசைநிலை. உண்மையான் நோக்குமிடத்து

இறைவனது பேராற்றலுக்கு யாதொரு செயலும் அரியதன்றாதலின், 'போலும் புகழ்' என்றார் என்றலுமாம்.

வானவன் மாலயன்
மற்றுமுள்ள தேவர்கட்கும்
கோனவ னாய் நின்று
கூடலிலாக் குணக்குறியோன்
ஆன நெடுங்கடல்
ஆலாலம் அமுதுசெய்யப்
போனகம் ஆனவா
பூவல்லி கொய்யாமோ. **#285**

இந்திரன், திருமால், பிரமன் மற்றுமுண்டாகிய தேவர்கள் ஆகிய எல்லார்க்கும் அரசனாயிருந்தும், ஒருவரும் சென்றணுக வொண்ணாத குணங்குறிகளை உடையவன், நெடியபாற் கடலிலுண்டாகிய ஆலகால விஷத்தைத் திருவமுது செய்யவே, அது உணவாயினவாறென்ன வியப்பு என்று பூவல்லி கொய்யாமோ?

விளக்கவுரை

'கோனவன்' என்றதில் 'அவன்', பகுதிப் பொருள் விகுதி. 'கூடல் இலாக் குணக் குறியோன்' என்றது, 'அறிந்து அடைதற் கேற்ற குணமும், குறியும் இல்லாதவன்' என்றபடி. போனகம்- நல்உணவு. ஆன - பொருந்திய. இங்கும், 'ஆனவா' என்றதன் பின், 'பாடி' என்பது வருவிக்க.

அன்றால நீழற்கீழ்
அருமறைகள் தானருளி
நன்றாக வானவர்
மாமுனிவர் நாள்தோறும்
நின்றார ஏத்தும்
நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்றாது பாடிநாம்
பூவல்லி கொய்யாமோ. **#286**

அக்காலத்தில் கல்லாலின் நீழலில் எழுந்தருளி, அருமையாகிய வேதப் பொருள்களை அருளிச் செய்து, தேவர்களும் பெரிய முனிவர்களும் தினந்தோறும் நிலைத்திருந்து வாயாரத் துதிக் கும்படியான நிறைகழலை அணிந்த திருவடிகளை உடையோன் அணிந்த கொன்றைப் பூவின் சிறப்பைப் புகழ்ந்து பாடி நாம் பூவல்லி கொய்யாமோ?

விளக்கவுரை

'தான்' என்றதனை முதற்கண்வைத்து எழுவாயாக்கி, அதனை, 'அருளி, கழலோன்' என்னும் பெயர்ப் பயனிலைகள் கொடுத்து முடித்து, 'அவன்

புனைகொன்றைப் பொன்தாது பாடி' எனச் சுட்டுப்பெயர் வருவித்துரைக்க. 'புனைகொன்றை', வினைத் தொகை. 'பொற்றாது' என்பது, எதுகை நோக்கி மெலிந்து நின்றது; பொன்போலும் தாது, மகரந்தம்.

படமாக என்னுள்ளே
தன்னிணைப்போ தவையளித்திங்கு
இடமாகக் கொண்டிருந்
தேகம்பம் மேயபிரான்
தடமார் மதில்தில்லை
அம்பலமே தானிடமா
நடமாடு மாபாடிப்
பூவல்லி கொய்யாமோ. **#287**

என் மனமே எழுதுபடமாகத் தன்னிரண்டு திருவடி மலர்களைப் பதியவைத்து, இவ்விடத்தை இடமாகக் கொண்டிருந்தும் திருவேகம்பத்திலும் பொருந்தியிருந்த பெருமான், விசாலம் பொருந்திய மதில்சூழ்ந்த தில்லையம்பலத்தையே இடமாகக் கொண்டு, நடனம் செய்யும் முறைமையைப் பாடிப் பூவல்லி கொய்யாமோ?

விளக்கவுரை

படம் - ஓவியம். 'உள்ளக்கிழியின் உருவெழுதி' *(தி.6 ப.25 பா.1)* என்றருளினார் திருநாவுக்கரசரும். 'போது' என்றது, உவமையாகு பெயராய்த் திருவடியை உணர்த்திற்று. 'இங்கு இருந்து' என இயையும். 'இங்கு' என்றதனால் 'நிலமே இடமாக' என்பது, தானேபோதரும், தடம் ஆர் - குளங்கள் நிறைந்த, தான், அசைநிலை.

அங்கி அருக்கன்
இராவணன்அந் தகன்கூற்றன்
செங்கண் அரிஅயன்
இந்திரனுஞ் சந்திரனும்
பங்கமில் தக்கனும்
எச்சனுந்தம் பரிசழியப்
பொங்கியசீர் பாடிநாம்
பூவல்லி கொய்யாமோ. **#288**

அக்கினித் தேவனும், சூரியனும், இராவணனும், சனியும், நமனும், செந்தாமரைக் கண்ணனாகிய திருமாலும், பிரமனும், தேவர்கோனும், சந்திரனும், அழிவற்ற தக்கனும், எச்சன் என்பவனும், தமது தன்மையழியும்படி, கோபித்த சிறப்பைப் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ?

விளக்கவுரை

அந்தகன் - அந்தகாசுரன், பரிசு - தன்மை; என்றது வலிமையை. பொங்கிய சீர் - மிக்குப் பரவிய புகழ். 'பரிசு அழிந்த மையால் பொங்கிய சீர்' என்க. இங்குக் கூறப்பட்டவருள் இராவண னும், அந்தகாசுரனும் ஒழித்து ஒழிந்தோர் அனைவரும் தக்கன் வேள்வியில் ஒறுக்கப்பட்டவர் என்க.

திண்போர் விடையான்
சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையிற்
பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன்
தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம்
பூவல்லி கொய்யாமோ. **#289**

திடமான, போர்க்குரிய இடபத்தை உடையவன், சிவநகரத்தார்ப் போரேறாயிருப்பவன், அவன் மண்ணுலகில் மதுரைப் பதியில், பிட்டினைத் திருவமுது செய்தருளி, பிரப்பந் தண்டினால் பாண்டியன் தன்னைப் பணிகொண்டதனால் உண்டாகிய, புண்ணைப் பற்றிய பாடலைப் பாடி, நாம் பூவல்லி கொய்யாமோ?

விளக்கவுரை

சிவபுரம் - சிவலோகம். அங்கு உள்ளார்க்குத் தலைவ னாய் நின்று இடர்களைதலின், 'சிவபுரத்தார் போர் ஏறு' என்று அருளினார். மண்பால் - மண்ணுலகத்தில். அமுது செய்து - உண்டு. 'தண்டு' என்றது பிரம்பினை. 'தன்னை' என்றது, 'விடையான்' எனவும், 'ஏறு' எனவும் கூறப்பட்டவனைக் குறித்தது. 'தன்னைப் பாண்டியன் தண்டாலே பணிகொண்ட புண்' என்க. பணிகொள்ளுதல் - ஏவல்கொள்ளுதல். 'பணிகொண்ட புண்' என்றது, 'ஆறுசென்ற வியர்' என்பது போல நின்றது. 'பாடல் பாடி' என்றதற்கு மேல் *(தி.8* திருத்தெள்ளேணம். பா-*8)* உரைத்தவாறு உரைக்க.

முன்னாய மாலயனும்
வானவருந் தானவரும்
பொன்னார் திருவடி
தாமறியார் போற்றுவதே
என்னாகம் உள்புகுந்
தாண்டுகொண்டான் இலங்கணியாம்
பன்னாகம் பாடிநாம்

பூவல்லி கொய்யாமோ. #290
தேவர்களுக்குள் முன்னவர்களாகிய திருமாலும், பிரமனும், தேவர்களும், அவுணரும் பொன்போலும் அரிய திரு வடியைத்தாம் அறியமாட்டார்கள். அப்படியிருக்க எம்மால் வணங்கப் படுவதோ? என் மனத்தினுள்ளே புகுந்து என்னை ஆண்டு கொண்ட வனுடைய, ஆபரணமாகிய பல நாகங்களைப் புகழ்ந்து பாடி நாம் பூவல்லி கொய்யாமோ?

விளக்கவுரை

முன் ஆய - தேவருள் முன்நிற்கின்ற. தானவர் - அசுரர். 'இலங்கு அணியாம் பன்னாகம்' எனப் பின்னர் வருதலின், 'பொன்னார் திருவடி' என்றவை, பன்னாகம் அணிந்த அப் பெருமானுடையவை ஆயின. 'பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்' எனச் சிவபெருமானது திருவடிகளை, 'பொன்னார் திருவடி' *(தி.4 ப.109பா.1)* என அப்பரும் அருளிச் செய்தார். 'ஆகத்துக்கண் உள் புகுந்து' என்க. 'உள்' என்றது, மனத்தை. ஆண்டு கொண்டானது அணி' என்பதாம். இலங்கு அணி - விளங்குகின்ற ஆபரணம். பல் நாகம் - பல பாம்புகள். தாருகாவன முனிவர்களது மனைவிமார்கள் முன் சிவ பெருமான் பிச்சைக்கோலத்துடன் சென்றபொழுது அம்மகளிர் அவரது அழகில் ஈடுபட்டுத் தம் கற்பினை இழந்தமை பற்றிச் சினந்த அம் முனிவர்கள் கொடுவேள்வி ஒன்றைச் செய்து அதனினின்றும் உண்டாக்கி அனுப்பிய பொருள்களுள், பாம்புகளும் சில; அவற்றை யும், காசிப முனிவர் மனைவியருள், 'வினதை' என்பவள் பெற்ற மகனாகிய கருடனுக்கு அஞ்சி அடைக்கலம் புகுந்த, அம்முனிவர் மனைவியருள் மற்றொருத்தியாகிய கத்துரு என்பவள் பெற்ற பாம்புகளையும் சிவபெருமான் அணிகலங்களாக அணிந்து கொண்டனர் என்பது புராண வரலாறு.

சீரார் திருவடித்
திண்சிலம்பு சிலம்பொலிக்கே
ஆராத ஆசையதாய்
அடியேன் அகமகிழத்
தேரார்ந்த வீதிப்
பெருந்துறையான் திருநடஞ்செய்
பேரானந் தம்பாடிப்
பூவல்லி கொய்யாமோ. #291

சிறப்புப் பொருந்திய திருவடி மேலணிந்த, திடமான சிலம்புகள், ஒலிக்கின்ற ஒலிக்கே, வெறுக்காத ஆசை கொண்டு அடிமையாகிய நான் மனமகிழுமாறு தேரோடுகிற தெருக்களோடு கூடிய

திருப்பெருந்துறையை உடையவன் திரு நடனம் பண்ணுவதனால் உண்டாகிற பேரின்பத்தைப் புகழ்ந்து பாடிப் பூவல்லி கொய்யாமோ?

விளக்கவுரை

'திருவடிக்கண் அணிந்த சிலம்பு சிலம்பு ஒலி' என்க. சிலம்பு ஒலி - ஒலிக்கின்ற ஒலி. ஆசையது - ஆசையை உடையது. 'ஆய' என்பதன் இறுதிநிலை தொகுத்தலாயிற்று. 'ஆசையதாய அகம்' என்க. 'அகம் மகிழ நடம்செய்' என இயையும். நடம்புரியும் பொழுது சிலம்பொலி கேட்கப்படுதலின், ஆசைப்பட்ட அகம், அது கேட்டு மகிழ்வதாயிற்று, செய் பேரானந்தம் - செய்ததனால் விளையும் பெரிய இன்பம்.

அத்தி யுரித்தது
போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவுகொண்
டிவ்வுலகிற் பிள்ளையுமாம்
முத்தி முழுமுதலுத்
தரகோச மங்கைவள்ளல்
புத்தி புகுந்தவா
பூவல்லி கொய்யாமோ. **#292**

யானையை உரித்து, அந்தத் தோலைப் போர்த் தருளிய திருப்பெருந்துறையை உடையான், பித்த வேடங் கொண்டு இந்த உலகத்தில் சிலர்க்குப் பிள்ளையுமாகி, முத்தி முழுமுதற் பொருளுமா, திருவுத்தரகோச மங்கையில் எழுந்தருளிய வள்ளலுமா இருக்கிறதனோடு அவன் என் மனத்துள் புகுந்த படியைப் புகழ்ந்து பூவல்லி கொய்யாமோ?

விளக்கவுரை

அத்தி - யானை, 'அது' என்றது, உரிக்கப்பட்ட தோலினை, தோலைப் போர்வையும், ஆடையுமாகக் கொண்டது முதலியவற்றையே, 'பித்தவடிவு' என்றார். பிள்ளை - மகவு. சிவ பெருமான் மகவாய் வந்தமையை, 'ஓரி யூரின் உவந்தினி தருளிப் - பாரிரும் பாலக னாகிய பரிசும்' *(தி.8 கீர்த்தி - 68-69)* என முன்னே அருளிச் செய்தார். 'பிள்ளையுமாம்' என்ற உம்மையால், காளையு மாதல் தழுவப்பட்டது. தாருகாவன முனிவர் மனைவியர் முன் சென்றது முதலியவை காளைவடிவமாதல் அறிக. இவற்றால் இவை யனைத்தும் நாடகமாதலல்லது. அவனது உண்மை இயல்பு அன்றென்பது குறித்தவாறாம். இவ்வாற்றானே, அவன் முத்தி முழுமுதலாதல் தெளிவிக்கப்பட்டது. முத்தியாவது பிறவியற்ற நிலையாதலானும், சிவபிரான் ஒருவனே பிறப்பில்லாதவன் ஆதலானும், அவனல்லது அந்நிலையை அருள்வார் பிறர் இன்மையின், 'முத்தி முழுமுதல்' என்று

அருளிச் செய்தார். முழு முதல் - முடிந்த தலைவன். 'ஏனையோர் பலரும் இடைநிலையாய சிலவற்றைத் தருபவரே' என்றதற்கு, இவ்வாறு அருளினார். 'புகுந்தவா பாடி' என வருவித்துரைக்க.

மாவார ஏறி
மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந்
திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக்
குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல்பரவிப்
பூவல்லி கொய்யாமோ. **#293**

திருப் பெருந்துறையான், குதிரையைப் பொருந்த ஏறி, மதுரை நகரத்தில் புகுந்தருளி, தெய்வத்தன்மை பொருந்திய திருவுருவம் விளங்க, தலைவனாய் வந்து, எம்மை ஆட் கொண் டருளும், செந்தாமரை மலர் போலும் திருவடிகளைத் துதித்துப் பாடிப் பூவல்லி கொய்யாமோ?.

விளக்கவுரை

மா - குதிரையை. ஆர ஏறி - நன்கு ஊர்ந்து. 'புகுந்தருளி' என்றது, 'கோவாகி' என்றதனோடு முடியும். 'குதிரை மேல் வந்தபொழுதும் அவனது உருவம் வியக்கத்தக்கதாய் இருந்தது' என்றதற்கு, 'தேவார்ந்த கோலம் திகழ' என்றார். கோ - தலைவன். 'சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன்' (சிவஞான போதம்-சூ. *10, அதி.2.)* ஆதலின், அங்ஙனம் காக்க வந்த நிலையை, 'கோவாகி' என்று அருளினார். இத் திருப்பாட்டினால், இறைவன் அடிகளைக் காத்தற்பொருட்டு மதுரை நகரில் குதிரை ஏறி வந்தமை இனிது பெறப்படும். பூ ஆர் - மலர் போலப் பொருந்திய. பூ, பொலிவுமாம். 'பலரும் தூவி வணங்கும் மலர்கள் பொருந்திய கழல்' எனலுமாம். இப் பாட்டும், அடுத்துவரும் திருவுந்தியாரின் இறுதிப்பாட்டும் சில பிரதி களில் இல்லை என்பர்; அவ்வாற்றான் இவை இடைச் செருகலாயின், பத்தொன்பது பாட்டுக்களால் ஆயினமை பற்றியே இது, திருச்சாழலின் பின் வைத்துக் கோக்கப்பட்டதாகும்.

1.14.திருவுந்தியார்

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற. **#294**

இறைவனது வில் வளைந்தது; வளைதலும் போர் மூண்டது; மூளுதலும் முப்புரங்களும் ஒருமிக்க வெந்து நீறாயின. அந்தத் திரிபுரத்தை அழித்த

நற் செய்தியை நினைத்தால் வியக்கத்தக்க தாக இருக்கிறது என்று உந்தீபறப்பாயாக!

விளக்கவுரை

'வில்' என்பது. ஈற்றில் உகரம் பெற்று வந்தது. 'வில் சிவ பெருமானுடையது' என்பதும், 'பூசல் (போர்) அசுரருடையது என்பதும் ஆற்றலான் விளங்கின.
உளைந்தன - துயருற்றன. 'முப்புரம்' என்றது இரட்டுற மொழிதலாய் முன்னர் அதன்கண் வாழ்வார் மேல் நின்று, உளைதல் வினையோடும், பின்னர் முப்புரத்தின் மேலதேயாய் வேதல் வினையோடும் இயைந்தது.
ஒருங்கு - ஒருசேர. 'உடன்' என்றது. 'நொடியில்' என விரைவு குறித்தவாறு. 'வெந்த வாறு' என்றதன்பின், 'பாடி' என்பது வருவிக்க. இதனுள் இனிவரும் திருப்பாட்டுக்களிலும் வேண்டு மிடங்களில் இவ்வாறே இதனை வருவித்து முடிக்க.

ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற. **#295**

இறைவர் திருக்கரத்தில் இரண்டு அம்பிருக்கக் கண்டிலேம்; கண்டது ஓரம்பே; அந்த ஓர் அம்பும் திரிபுரம் எரித்தற்கு அதிகமேயாயிற்று என்று உந்தீபறப்பாயாக!

விளக்கவுரை

'ஏகம்பர் தங்கையில்' என்றதனை முதலில் வைத்து. 'ஓரம்பே' என்றதன்பின், 'கண்டனம்' என்பது வருவிக்க, 'முப்புரம்' என்று அருளினாராயினும், 'புரம் மூன்று' என உரைத்தல் திருவுள்ள மாம். ஆகவே, 'இறைவர் கையில் இருந்தது ஓரம்பே; பகையாய் எதிர்ந்த புரங்களோ மூன்று; எனினும், அவைகளை அழித்தற்கு அவ் ஓர் அம்புதானும் சிறிதும் வேண்டப்படாதாயிற்று' என்பது பொருளாதல் அறிக. சிவபெருமான் திரிபுரங்களை அம்பு முதலிய வற்றால் அழியாது, புன்சிரிப்பானே அழித்தமையின், அவ் ஓர் அம்பும் வேண்டப்படாததாயிற்று. இதனால், இறைவன், எல்லாவற்றையும் கரணத்தானன்றிச் சங்கற்பத்தானே செய்தலைக், கூறியவாறு. 'பெருமிகை' என்றதன்பின், 'என்று' என்பது வருவிக்க.

தச்சு விடுத்தலும் தாமடி யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புரம் உந்தீபற. **#296**

தேவர்கள் தேரினை இணைத்து விடுத்ததும், அத் தேரில் இறைவன் திருவடியை வைத்ததும், தேரினது அச்சு முறிந்தது; எனினும் முப்புரங்கள்

அழிந்தன என்று உந்தீபறப்பாயாக!

விளக்கவுரை

'தைத்து' என்பது 'தச்சு' எனப் போலியாயிற்று. 'தைத்தல், அழகுபடச்செய்தல் என்பது, 'வேலன் தைஇய வெறியயர் களனும்' *(தி.11 திருமுருகா -222.)* என்றற்றொடக்கத்தனவாக வருவனவற்றான் அறிக. மகளிர்க்கு, 'தையலார்' என்னும் பெயரும், தம்மை ஒப்பனை செய்துகொள்ளுதலாகிய காரணம் பற்றிவந்ததாம். 'தையல்' என ஒருமைக்கண் வருதல் ஆகுபெயர். இப்பொருட்டாகிய 'தையல், தைத்தல்' என்பன பிற்காலத்தில், துன்னத்திற்கும், துன்னம் செய்தற்கும் உரியவாயின. ஒருவகைத் தொழிலை உணர்த்தும் 'தச்சு' என்னும் பெயர்ச் சொல், இங்கு, வினையெச்சமாய் வந்த 'தச்சு' என்பதனின் வேறு. 'தச்சு' என்பது அடியாக, 'தச்சன், தச்சர்' முதலிய ஒட்டுப் பெயர்கள் பிறக்கும். 'தச்சு' என்றதற்கு, 'தேர்' என்னும் செயப்படு பொருளும், அச்சுமுரிதலுக்கு, அஃது என்னும் எழுவாயும், வருவிக்க.
'தாம்' என்றது, முன்னை திருப்பாட்டில், 'ஏகம்பர்' எனக் குறிக்கப்பட்டவரை என்பது வெளிப்படை. 'இடலும்' என்பது விரித்தல் விகாரம் பெற்றது. 'அடியிட்டபொழுதே அச்சு முறிந்தமை அவரது வன்மையையும், பிறரது மென்மையையும் எளிதின் விளக்கும்' என்பதும், 'தேர் அச்சு முறிந்ததாயினும் அவர் முப்புரத்தை அழிக்கக்கருதியது முடிந்தேவிட்டது' என்பதும் குறித்தவாறு. 'அழிந்தன' என்றதற்குமுன், 'ஆயினும்' என்பது வருவிக்க.

உய்யவல் லாரொரு மூவரைக் காவல்கொண்டு
எய்யவல் லானுக்கே உந்தீபற
இளமுலை பங்கனென் றுந்தீபற. **#297**

பிழைக்க வல்லவராயிருந்த மூவரையும் கயிலைக்குத் துவார பாலகராகச் செய்து முப்புரத்தை அம்பேவி எரிக்க வல்லவனாகிய உமாதேவி பாகனைக்குறித்து உந்தீபறப்பாயாக!

விளக்கவுரை

உய்ய வல்லார் - யார் யார் எத்துணை மயக்க உரை களைக் கூறினும் அவற்றைக் கேளாது நன்னெறியைக் கடைப்பிடிக்க வல்லவர், ஒரு மூவராவார், 'சுதன்மன், சுசீலன், சுபுத்தி' என்னும் பெய ருடைய அசுரர். இவர்கள் திரிபுரத்தில் வாழ்ந்தவர்கள். திரிபுரத் தலைவர்களாகிய, 'தாரகாக்கன், கமலாக்கன், வித்தியுன்மாலி' என்பவர், முதலில் தாங்களும் சிவநெறியில் ஒழுகிப் பிறரையும் ஒழுகச்செய்து, பின்பு திருமால் புத்த வடிவம் கொண்டு நாரத முனிவ ருடன் சென்று புத்த சமயத்தைப் போதித்தபொழுது புத்தர்களாய்ச் சிவநெறியைக் கைவிட,

ஏனையோரும் அவ்வாறே சிவநெறியைக் கைவிடவும், இம்மூவர் மட்டில் சிவநெறியிலே நின்றமைபற்றி இவரை, 'உய்ய வல்லார்' என்றும், சிவபெருமான் திரிபுரத்தை எரித்த பொழுது இம்மூவரை மட்டில் அழியாதவாறு காத்து ஏனைய பலரை யும் அழித்தமை பற்றி 'ஒரு மூவரைக் காவல்கொண்டு எய்ய வல்லான்' என்றும் அருளிச்செய்தார்.

'மூவார் புரங்கள் எரித்த அன்று
மூவர்க் கருள்செய்தார்' -தி.*1* ப.*69* பா.*1*

என இதனைத் திருஞானசம்பந்தரும் எடுத்தருளிச்செய்தல் காண்க. 'திரிபுரங்கள் அழிக்கப்பட்ட பொழுது அழியாது பிழைத்தவர் மேற்குறித்த மூவரே' என்பதையும், பின்பு அவர்கள், சிவபெருமான் திருவருளால் அப்பெருமானது வாயில் காவலராயினர்' என்பதையும்,

முப்பு ரங்களின் மூவர் புத்தன்
மொழித்தி றத்தின் மயங்கிடாது
அப்ப ணிந்தவர் தாள்ப ணிந்தரு
ளாற்றின் நின்றனர் ஆதலால்
பொய்ப்பு ரந்தபு காலை நீற்றறை
நாவின் மன்னவர் போல்எரி
தப்பி வாழ்ந்தனர் ஈசன் ஆணையில்
நிற்ப வர்க்கிடர் சாருமோ.
சுதன்மன் என்று சுசீலன் என்று
சுபுத்தி என்று சொலப்படும்
அதன்மம் நீத்தஅம் மூவருக்கும்
அருள்சு ரந்துமை பாகனார்
இதம்வி ளங்க வரங்கள் வேட்ட
விளம்பு மின்என அங்கவர்
பதம்வ ணங்குபு நின்தி ருப்பணி
வாயில் காப்பருள் என்றனர்.

என்றற் றொடக்கத்துக் காஞ்சிப் புராணச் செய்யுட்காளான் அறிக. காஞ்சிப் புராணத்துள் இங்ஙனம் 'வாயில் காப்பு' எனப் பொதுப்படக் கூறி இருப்பினும், 'மூவருள் இருவர் வாயில் காவலரும், ஒருவன் இறைவனது திருக்கூத்திற்கு மத்தளம் முழக்குபவனும் ஆயினர்' என்பதை,

மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில்
இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளர்என் றேவிய பின்னை
ஒருவன் நீகரி காடரங்காக
மானை நோக்கியோர் மாநடம் மகிழ

மணிமு ழாமுழக் கவ்வருள் செய்த
தேவ தேவநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூருளானே.

(தி.7 ப.55 பா.8) என்னும் சுந்தரர் திருமொழியான் உணர்க. 'சுதன்மன், சுசீலன், சுபுத்தி' என்ற முறைபற்றி, 'இறுதியிற் சொல்லப் படுபவனே மத்தளம் முழக்குவோனாயினன்' என்று கொள்ள இடம் உண்டு. வாயில் காவலரை இப்பொழுது, 'திண்டி, முண்டி' என்கின்றனர். இவ்வசுரர்கள் சிவபெருமான் கோயிலில் வாயில் காவலர் ஆயினமையை அடிகளும் திருத்தோணோக்கத்து ஒன்பதாம் திருப்பாட்டில் குறித்தருளுதல் காண்க. 'வல்லானுக்கு' என்றதும், 'என்று' என்றதும் எஞ்சிநின்ற, 'பாடி' என்பதனோடு முடியும். பாடுதலுக்கு இறைவனைச் செயப்படு பொருளாகவன்றிக் கொள்வோனாகக் கருதினமையின், 'வல்லானுக்கு' எனக் குவ்வுருபு கொடுத்து ஓதினார்; பின்வருவனவற்றிற்கும் இது பொருந்தும். இத் திருப்பாட்டால், சிவபெருமானது அருளையும், ஆற்றலையும் வியந்தவாறு.

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடிய வாபாடி உந்தீபற
உருத்திர நாதனுக் குந்தீபற. **#298**

தக்கனது யாகம் குலைதலும் தேவர்கள் ஓடின விதத்தைப் பாடி உந்தீபற; உருத்திர மூர்த்தியாகிய இறைவன் பொருட்டு உந்தீபறப்பாயாக!

விளக்கவுரை

'சாடிய' என்றது உடம்பொடு புணர்த்ததாகலின் 'சாடியதனால்' என்பது கருத்தாயிற்று. இங்கு 'வேள்வி' எனப்படுவது, தக்கனுடையதே என்பது இனிது விளங்கிக் கிடக்கும். உருத்திரநாதன், இருபெயரொட்டு. 'உருத்திர நாதனுக்குப் பாடி' என இயையும். இனி, 'உருத்திரநாதனாகிய ஒருவனுக்குத் தேவர் பலர் உடைந்தோடிய வாற்றைப் பாடி' என உரைப்பினுமாம்.

ஆவா திருமால் அவிப்பாகங் கொண்டன்று
சாவா திருந்தானென் றுந்தீபற
சதுர்முகன் தாதையென் றுந்தீபற. **#299**

பிரம தேவனுக்குத் தந்தையாகிய, திருமாலானவன் தக்கன் வேள்வியில் அவியுணவைக் கொண்டு, அந்நாளில் வீரபத்திர ரால் பெரிதும் தாக்கப்பட்டு உயிர் ஒன்றையுமே உடையவனாய் இருந்தான் என்று சொல்லி, உந்தீபறப்பாயாக!

விளக்கவுரை

ஆவா, இரக்கக் குறிப்பு; இதனை, 'இருந்தான்' என்றதன் பின்னர்க்

கூட்டுக. 'சாவாதிருந்தான்' என்றது. 'உயிர் போதல் ஒன்றொழிய ஏனை எல்லாத் துன்பங்களையும் எய்தினான்' என்றவாறு. வீரபத்திரரது தண்டத்தால் மார்பில் அடியுண்டு மூர்ச்சை யுற்றுக் கிடந்த நிலையை இவ்வாறு அருளிச் செய்தார். திருமால் எய்தியதாக யாண்டுங்காணப்படும் இந்நிலையையே அடிகள் அருளிச் செய்ததன்றி, அவன் தலையறுப்புண்டதாக ஒரோவிடத்துக் கூறப் படும். அதனை அடிகள் அருளிச்செய்திலர். 'உலகையெல்லாம் படைப்பவனைப் படைத்த பெரியோன்' என அவனது பெருமையை எடுத்துக் கூறுவார், 'சதுர்முகன் தாதை' என்று மறித்தும் அருளிச் செய்தார்.

வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென் றுந்தீபற
கலங்கிற்று வேள்வியென் றுந்தீபற. **#300**

கொடியவனாகிய அக்கினிதேவன் அவியுண்ண வளைத்த கையை வெட்டினான் என்று உந்தீபற, வெட்டுதலும் யாகம் கலங்கிற்று என்று உந்தீபறப்பாயாக!

விளக்கவுரை

'வெம்மை யுடைவன்' என்னும் பொருளதாகிய, 'வெய்யவன்' என்பது, 'கொடியவன்' என்னும் நயத்தைத் தோற்று வித்து, ஒறுக்கப்படுதற்குரிய இயைபுணர்த்திநின்றது. 'விருப்பமுடைய வனாய்' எனவும் உரைப்ப. திரட்டுதலுக்கு, 'அவிப்பாகம்' என்னும் செயப்படுபொருள், முன்னைத் திருப்பாட்டினின்றும் வந்து இயையும்.

பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேஏடி யுந்தீபற
பணைமுலை பாகனுக் குந்தீபற. **#301**

பார்வதி தேவியைப் பகைத்துப் பேசின தக்கனை உயிரோடு வைத்துப் பார்ப்பதனால் சிவபெருமானுக்கு என்ன பயன்? என்று உந்தீபறப்பாயாக!

விளக்கவுரை

'பர்வதம்' என்பது, 'பருப்பதம்' என வருதல் போல, 'பார்வதி' என்பது, 'பார்ப்பதி' எனவந்தது. 'மலைமகள்' என்பதே இதன் பொருள்; எனினும், இங்கு, 'இறைவி' என்னும் பொருளதாய் நின்றது. பார்ப்பது - கண்ணோடுவது. 'இறைவி என்று கருதாமல் ஏனையோர்போலக் கருதிய அறிவிலியாகிய அவன்மீது கண்ணோட்டஞ் செய்து இகழாதொழிதல் வேண்டா' என்றபடி. எனவே, 'அவனை மிக இகழ்ந்தும், சிவனை மிகப்புகழ்ந்தும் பாடி ஆடு' என்றதாயிற்று. குற்றம் செய்தவரை ஒறுத்தல் அரசர்க்கு முறைமையாதல்போல, குற்றம்

செய்தவரை இகழ்தலும் அறிவுடை யோர்க்கு முறைமையாதலின், இவ்வாறு அருளிச்செய்தார்

புரந்தர னாரொரு பூங்குயி லாகி
மரந்தனி லேறினார் உந்தீபற
வானவர் கோனென்றே உந்தீபற. #302

இந்திரன் ஒரு குயில் உருக் கொண்டு ஒரு மரத்தில் ஏறினான்; அவன் தேவர்களுக்கு அரசன் என்று உந்தீபறப்பாயாக!

விளக்கவுரை

புரந்தரன் - இந்திரன். பூ - அழகு. 'தக்கன் வேள்வியில் வீரபத்திரருக்கு அஞ்சி இந்திரன் குயில் உருவங்கொண்டு ஓடி ஒளிந்தான்' என்பது வரலாறு. 'வானவர் கோன்' என்றதும், முன்னர் 'சதுர்முகன் தாதை' *(தி.8 திருவுந்தியார். பா-6.)* என்றதனோடு ஒப்பது. 'கோன்' என்றது, பன்மை யொருமை மயக்கம்.

வெஞ்சின வேள்வி வியாத்திர னார்தலை
துஞ்சின வாபாடி உந்தீபற
தொடர்ந்த பிறப்பற உந்தீபற. #303

கடுஞ்சினத்தால் தொடங்கின யாகத்துக்கு அதி தேவதையின் தலை அற்ற விதத்தை நமது பிறவித் தொடர் அற்று ஒழி யும் வண்ணம் பாடி உந்தீபறப்பாயாக!

விளக்கவுரை

'வெஞ்சினத்தால் தொடங்கிய வேள்வியையுடைய வியாத்திரனார்' என்க. வெஞ்சினம், சிவபெருமான்மீதெழுந்தது. வியாத்திரன் - மாறுபட்ட செலவினையுடையவன்; தக்கன். 'மெச்சன் வியாத்திரன் தலையும் வேறாக் கொண்டார்' *(தி.6 ப.96 பா.9)* என்னும் திருத்தாண்டகத் தொடருள், 'வேறாக' என்றதனால், இப்பெயர் தக்கனைக் குறித்தல் இனிதுணரப்படும். துஞ்சுதல் - அழிதல். ஈண்டுச் சிவபெருமானது வெற்றியையே பெரிதும் பாடுதல் பற்றி, தக்கன் உயிர்த்தெழுந்தமையை அருளாது, அவன் துஞ்சியது மாத்திரையே அருளினார். தொடர்ந்த - பண்டுதொட்டு விடாது வந்த, 'பிறப்பு அறப்பாடி' என இயையும்.

ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி உந்தீபற
கொங்கை குலுங்கநின் றுந்தீபற. #304

சிறுவிதியின் தலையற்றுப் போக அதற்குப் பிரதியாக ஆட்டின் தலையைப் பொருத்தின விதத்தைப் பாடித் தனங் குலுங்க நின்று உந்தீபறப்பாயாக!

விளக்கவுரை

விதி - சிறுவிதி; தக்கன். 'சிறுவிதி' என்னும் பெயர், பிரமன் மகனாயினமை பற்றிக் கூறப்படுவது. யாட்டின் தலையை அமைத்ததும் ஒறுப்பேயாகலின், இதுவும் வெற்றி கூறியதேயாயிற்று.

உண்ணப் புகுந்த பகனொளித் தோடாமே
கண்ணைப் பறித்தவா றுந்தீபற
கருக்கெட நாமெலாம் உந்தீபற. **#305**

நமது பிறவி ஒழியும் வண்ணம் அவிர்பாகத்தை உண்ண வந்த பகனது கண்ணை அவன் ஓடாமற் பறித்த விதத்தைப் பாடி உந்தீபறப்பாயாக!

விளக்கவுரை

'அவியை உண்ண' என வருவித்துரைக்க. பகன், ஆதித்தர் பன்னிருவருள் ஒருவன். 'நாமெலாம் கருக்கெட' என மாற்றி, எஞ்சி நின்ற 'பாடி' என்பதனோடு முடிக்க. 'கரு' என்றது, 'கருவில் வீழ்தல்' எனப் பொருள் தருதலின், 'நாமெலாம் கருக் கெட' எனத் தொழில், முதலொடு சார்த்தி முடிக்கப்பட்டதாம்.

நாமகள்நாசி சிரம்பிர மன்படச்
சோமன் முகன்னெரித் துந்தீபற
தொல்லை வினைகெட உந்தீபற. **#306**

நமது பழவினை ஒழிய, சரசுவதியின் மூக்கும் பிரமன் சிரமும் அற்று விழச் செய்து, சந்திரனைத் தேய்த்து, யாக பங்கம் செய்த செய்தியைக் குறித்துப் பாடி உந்தீபறப்பாயாக!

விளக்கவுரை

'பட' என்றதனை, 'நாசி' என்றதனோடும் கூட்டி, 'நாமகள் நாசி படவும், பிரமன் சிரம்படவும்' என உரைக்க. சோமன் - சந்திரன். முகன் - முகம்; போலி. னகரவொற்று விரித்தல். 'முகம்' என்பது பாடமாயின், நகர வொற்று விரித்தலாம். 'நெரித்தது' என்பது குறைந்து, 'நெரித்து' என நின்றது. நெரித்தது - காலால் தேய்த்தது. இதன்பின், 'பாடி' என்பது எஞ்சிநின்றது. 'நெரிந்து' எனப்பாடம் ஓதி, அதனையும், 'நெரிந்தது' எனக் கொண்டுரைத்தல் சிறக்கும். இதனுள், வீரபத்திரரால் நாமகள் மூக்கிழந்தும், பிரமன் தலையிழந்தும், சந்திரன் தேய்க்கப்பட்டும் போயினமை அருளப்பட்டது. இதனுள், 'பிரமன்' என்றது, முன்னர், 'விதி' என்றதுபோல, தக்கனையே குறித்தது என்பாரும் உளர். தக்கனை, 'சிறுவிதி' என்றல்போல, 'சிறு பிரமன்' என்றல் வழக்கின்கண் இன்மையானும், தக்கன் தலையிழந்து மாற்றுத் தலை பெற்றமை முன்னர்க் கூறப்பட்டமை யானும் அது பொருந்து மாறில்லை.

நான்மறை யோனு மகத்திய மான்படப்

போம்வழி தேடுமா றுந்தீபற
புரந்தரன் வேள்வியில் உந்தீபற. **#307**
பிரமனும் யாகாதிபனாகிய தக்கனும் இறந்து வீழ்தலும் இந்திரன் ஓடிப்போய் வழியைத் தேடுகிற விதத்தைக் குறித்து உந்தீபறப்பாயாக!

விளக்கவுரை

'வேள்வியில்' என்றதனை முதலிற்கொள்க. நான் மறையோன் - பிரமன். அகத்து இயமான் - நடுவிடத்தில் இருந்த தலைவன்; தக்கன். 'இயமானன்' என்பது, குறைந்து நின்றது; இது வேட்போனைக் குறிக்கும் ஆரியச் சொற்சிதைவு. 'இயமானன்' என்றதன்பின்னும் உம்மை விரிக்க. 'மகத்தியமான்' எனவும் பிரிப்பர். 'பட' என்பது, 'பட்டமையால்' எனக் காரணப்பொருளில் வந்தது. 'புரந்தரன் தேடுமாறு' என இயையும். முன்னர், 'இந்திரனைத் தோள் நெரித்திட்டு' (*தி.8 திருவம்மானை-15.)* என்றமையால், இங்கு, 'போம் வழிதேடுதல்' என்றது, அங்ஙனம் தோள் நெரிந்து மன வலியிழந்தமையையேயாம். ஆகவே, 'நான் மறையோனும், அகத்தியமானும் பட' என்றது மனவலி இழத்தற்குக் காரணங்கூறும் அளவிற்றாய் வந்ததாம். 'வேட்பிப்போனும், வேட்போனும் பட்டமையின், அவியைப் பெறுவோருள் முதல்வனாகிய இந்திரன் ஆங்கு நிற்க வல்லனோ' என்றபடி. முதற்கண் அவிபெறுவோனாகிய இந்திரனது எளிமை மிகுதியுணர்த்தற்கு அவன் குயிலாகி ஓடினமை முன்னர்க் கூறப்பட்டதாயினும், 'தோள்நெரிந்த பின்னரே அவ்வாறு ஓடினான்' என்றற்கு, இதனை அருளிச்செய்தார் என்க.

சூரிய னார்தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவா றுந்தீபற
மயங்கிற்று வேள்வியென் றுந்தீபற. **#308**
சூரியனது பற்களைத் தகர்த்த விதத்தைக் குறித்தும் வேள்வி கலக்கமடைந்ததைக் குறித்தும் உந்தீபறப்பாயாக!

விளக்கவுரை

'கண் பறிக்கப்பட்டான்' (*தி.8 திருவுந்தியார். பா-12.)* என முன்னர்க் கூறப்பட்ட சூரியன், 'பகன் என்னும் பெயரினன் என்பது அங்கு எடுத்து ஓதப்பட்டது.
அதனால், இங்குப் பல் தகர்க்கப் பட்டவனாகக் குறிக்கப்படும் சூரியன் வேறொருவன் என்பது வெளிப்படை. இவன் பெயர், 'பூடன்' எனப்படுகின்றது.

தக்கனார் அன்றே தலையிழந் தார்தக்கன்
மக்களைச் சூழநின் றுந்தீபற

மடிந்தது வேள்வியென் றுந்தீபற. #309

தக்கன் தன் மக்களால் சூழப்பட்டிருந்தும் தலை யிழக்கப் பெற்றான் என்றும் வேள்வி அழிந்தது என்றும் உந்தீபறப் பாயாக!

விளக்கவுரை

'அன்றே என்பது, 'முன்னரே' எனப் பொருள் தந்தது. 'தக்கன் முன்னரே இறந்தமையால், வேள்வி, பின்னர் அவன் மக்களைச் சூழ நின்று மடிந்தது' என்க. மடிதல் உயிர்கட்கன்றிப் பிறவற்றிற்கின்மையின், வேள்வியில் வந்தாரது தொழில் வேள்வி மேல் ஏற்றி, 'மடிந்தது வேள்வி' எனப்பட்டது. இதனானே, 'சூழநின்று' என்றதும், அவ்வாற்றாற் கூறப்பட்டதேயாயிற்று.

இதனுடன் தக்கன் வேள்வி பற்றியவற்றை முடிக்கின்றா ராகலின், இறுதிக்கண் இவ்வாறு தொகுத்தருளிச்செய்தார். தக்கன் வேள்வி செய்த ஞான்று அவன் மைந்தர் ஆண்டிருந்திலர் என்பது கந்த புராணத்தால் அறியப்படுதல்பற்றி, ஈண்டு, 'மக்கள்' எனப்பட்டார் பெண்மக்களே என்பர். எனினும், அடிகள் திருமொழிக்கு அவ் வரலாற்றினை அடியாகக்கொண்டு உரையாது, வேறுபட உரைத்தல் இழுக்காது.

பாலக னார்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே யுந்தீபற
குமரன்தன் தாதைக்கே உந்தீபற. #310

முன்னாளில் ஒரு பாலகனுக்குப் பாற்கடலைத் தந்தருளின சிவபெருமான் பொருட்டு உந்தீபற; குமரவேள் தந்தையின் பொருட்டு உந்தீபறப்பாயாக!

விளக்கவுரை

பாலகனார், உபமன்னிய முனிவர். இவர் வியாக்கிர பாத முனிவர் மைந்தர். இவர் தம் தாய்மாமனாராகிய வசிட்ட முனிவர் இல்லத்தில் காமதேனுவின் பாலை உண்டு வளர்ந்து, பின் தம் தந்தையார் இல்லத்தை அடைந்தபொழுது பால் வேண்டி அழ, அவர், 'சிவபெருமானை வேண்டி அழுக' என, அவ்வாறே வேண்டி அழுத பொழுது, சிவபெருமான் திருப்பாற்கடலையே அச்சிறு முனிவரிடம் வரச் செய்தார் என்பது புராண வரலாறு. இதனைக் கோயிற் புராணம் விரித்து விளக்கும். இது, 'பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற் கடல் ஈந்தபிரான்' *(தி.9 பா.9)* எனத் திருப்பல்லாண்டினும், 'அத்தர் தந்த அருட் பாற் கடல்உண்டு - சித்தம் ஆர்ந்து தெவிட்டி வளர்ந்தவன்' *(தி.12 திருமலைச் சிறப்பு. 15.)* எனத் திருத்தொண்டர் புராணத்தினும் கூறப் பட்டது. கோலம் - அழகு. குமரன் - முருகன். 'மகனைப் பெற்றவ னாதலின் மகவருமை அறிந்து அளித்தான்' என்றபடி. இரண்டிடத்தும்,

'பாடி' என்பது வருவிக்க. 'பெரிதாகிய பாற்கடலைச் சிறுவர்பால் வருவித்தான்' என வெற்றி கூறியவாறு.

நல்ல மலரின்மேல் நான்முக னார்தலை
ஒல்லை யரிந்ததென் றுந்தீபற
உகிரால் அரிந்ததென் றுந்தீபற. **#311**

பிரமனது சிரம் விரைவில் அரியப்பட்டது என்றும் அதுவும்
சிவபெருமானது நகத்தால் அரியப்பட்டது என்றும் உந்தீபறப் பாயாக!

விளக்கவுரை

நன்மை - அழகு. 'அழகிய மலரின்மேல் அழகுடன் வீற்றிருந்த அவன், தலை இழத்தலாகிய பேரிழிவை எய்தினான்' என்பது நயம். ஒல்லை - விரைவு. உகிர் - நகம். பிரமனும், திருமாலும் தாங்களே முதற்கடவுளர் எனத் தருக்கித் தம்மிற்போர் செய்தபொழுது சிவபெருமான் ஒரு சோதி வடிவாய்த் தோன்ற, திருமால் அவரை வணங்கினார். பிரமனோ, தனது ஐந்து தலைகளுள் உச்சித் தலையினால் சிவபெருமானை இகழ, சிவபெருமான் வைரவக் கடவுளைத் தோற்றுவித்து, அவரால் அவ்வுச்சித் தலையைக் கிள்ளி விடச் செய்தனர் என்னும் வரலாற்றைக் கந்த புராணம் ததீசி யுத்தரப் படலத்துட் காண்க.

தேரை நிறுத்தி மலையெடுத் தான்சிரம்
ஈரைந்தும் இற்றவா றுந்தீபற
இருபதும் இற்றதென் றுந்தீபற. **#312**

தன் தேரை நிறுத்திக் கயிலாய மலையைத் தூக்கின இராவணனுடைய
பத்துத் தலைகளும் இருபது தோள்களும் நெரிந்த விதத்தைக் குறித்து
உந்தீபறப்பாயாக!

விளக்கவுரை

தேர் - புட்பக விமானம். இது, குபேரனிடத்தினின்றும் திக்குவிசயத்தில் கொண்டது. மலை, கயிலாயமலை. இராவணன் கயிலாய மலையைப் பெயர்த்தெடுத்தபொழுது சிவபெருமான் தமது திருவடிப் பெருவிரல் ஒன்றினால் சிறிது ஊன்ற, அவன் அம்மலையின் கீழ், பன்னாள் அழுதுகொண்டு கிடந்தான் என்னும் வரலாறு நன்கறியப் பட்டது. 'சிரம் ஈரைந்து' என்றமையால், 'இருபது' என்றது தோள்களாதல் வெளிப்படை. 'இருபதும்' என ஒருங்கு தொகுத்தமையின் 'இற்றது' என்று அருளினார்.

'பொருள்மன்ன னைப்பற்றிப் புட்பகங் கொண்ட
மருள்மன்ன னைஎற்றி' *(தி. 4 ப.17 பா. 11)*

என்று திருநாவுக்கரசர் அருளிச்செய்தமை காண்க.

ஏகாச மிட்ட இருடிகள் போகாமல்

ஆகாசங் காவலென் றுந்தீபற
அதற் கப்பாலுங் காவலென் றுந்தீபற. #313
மேலாடை அணிந்துள்ள, முனிவர்கள் அழிந்து போகாமல், ஆகாயத்தில் இறைவன் இருக்கின்றான் என்றும், ஆகாயத் துக்கு அப்பாலுள்ளவர்க்கும் அவனே காவல் என்றும் உந்தீபறப் பாயாக!

விளக்கவுரை

ஏகாசம் - உத்தரீயம். 'போர்வை' எனவுங் கூறுவர். முனிவர்கள் 'சூரிய மண்டலத்தருகில் இயங்குவர் என்பதனால், 'அங்கு அவர்களையும், அவர்கட்குமேல் உள்ள மற்றையோரையும் காப்பது சிவபெருமானது திருவருள்' என்பது இதன் திரண்டபொருள். முனிவர்கள் சூரிய மண்டலத்தருகில் இயங்குதலை, 'நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத் - தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக் - காலுணா வாகச் சுடரொடு கொட்கும் - அவிர்சடை முனிவர்' *(புறம் - 43.)* என்பதனானும் அறிக. 'ஆகாசத்தில்' என உருபு விரிக்க. இரண்டிடத்தும் 'காவல்' என்ற எழுவாய்க்கு 'உள்ளது' என்னும் பயனிலை எஞ்சிநின்றது. 'அதற்கு' என்றது, கூன்.

1.15.திருத்தோணோக்கம்

பூத்தாரும் பொய்கைப்
புனலிதுவே எனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும்
பேதைகுண மாகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை
அம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தா உன் சேவடி
கூடும்வண்ணம் தோணோக்கம். #314

விளங்குகின்ற தில்லை அம்பலத்தின் கண்ணே திருநடனம் செய்கின்ற கூத்தனே! உனது செம்மையான திருவடியை அடையும்படி, மலர்கள் பூத்து நிரம்பி இருக்கின்ற தடாகநீர் இதுதான் என்று எண்ணிக் கானலை முகக்கின்ற அறிவிலியினது குணம், எங்களுக்கு உண்டாகாமல் நீக்கினவனே! என்று பாடி நாம் தோணோக்கம் ஆடுவோம்.

விளக்கவுரை

'பூத்து ஆரும்' என்றதற்கு, 'பூக்கள்' என்னும் வினை முதல் வருவிக்க. இஃது, இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின் மேல் நின்றவாறு. பேய்த்தேர் - கானல். உறு, துணைவினை. பேதை குணம் - அறிவிலியின் தன்மை. 'பேதைதன் குணம் எனக்கும் ஆகாமே எனது பேதைமையைத் தீர்த்தாய்' என்க. அஃதாவது 'நிலை யில்லாத உலக இன்பத்தை

நிலையானதாகக் கருதி நுகர விரும்பும் தன்மை உண்டாகாதபடி, அதற்கு ஏதுவாகிய பேதைமையைப் போக்கினாய்' என்றபடி.
'தோணோக்கம்' என்னும் எழுவாய்க்குரிய, 'ஆடப்படு கின்றது' என்னும் பயனிலை எஞ்சிநின்றது.
எனவே, 'உன் புகழையே பாடி ஆடுகின்றோம்' என்பது கருத்தாயிற்று.
இது, முன்னிலைப் பரவல், இனி வருவன, படர்க்கைப் பரவல், 'ஏனை யொன்றே, தேவர்ப் பாராய முன்னிலைக் கண்ணே' *(தொல்.செய்.133.)* என்றமைபற்றி, முன்னிலைக்கண் வருதலை. 'பரவல்' என்றும், படர்க்கைக்கண் வருதலை, 'புகழ்தல்' என்றும் வேறுபடுத்தும் கூறுப.

என்றும் பிறந்திறந்
தாழாமே ஆண்டுகொண்டான்
கன்றால் விளவெறிந்
தான்பிரமன் காண்பரிய
குன்றாத சீர்த்தில்லை
அம்பலவன் குணம்பரவித்
துன்றார் குழலினீர்
தோணோக்கம் ஆடாமோ. **#315**

நெருங்கிப் பொருந்திய கூந்தலையுடையீர்! எக்காலத்தும் பிறந்தும் இறந்தும் துன்பக் கடலில் அழுந்தாமல் என்னை அடிமை கொண்டவனும், கன்றைக் கொண்டு விளங்கனியை எறிந்த வனாகிய திருமாலும் பிரமனும் காணுதற்கு அருமையான குறையாத பெருமையையுடைய தில்லை அம்பலத்தை உடையவனுமாகிய இறை வனது அருட்குணத்தைப் போற்றி நாம் தோணோக்கம் ஆடுவோம்.

விளக்கவுரை

'ஆண்டுகொண்டானாகிய அம்பலவன்' என்க. திரு மால் கண்ணனாய்த் தோன்றியிருந்தபொழுது கன்றால் விளங்கனியை எறிந்த வரலாற்றைக் கிருட்டின பாகவதத்துட் காண்க. துன்று ஆர் - நெருங்குதல் பொருந்திய.

பொருட்பற்றிச் செய்கின்ற
பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி
வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார்
சேடறிய மெய்குளிர்ந்தங்கு
அருட்பெற்று நின்றவா
தோணோக்கம் ஆடாமோ. **#316**

வேடராகிய கண்ணப்பரது பெருமையை உலகம் அறிய அவரது செருப்பு அணிந்து சிறந்த அடியும் வாயாகிய குடமும் மாமிசமாகிய உணவும்

ஆகமப் பொருள் பற்றிச் செய்கின்ற பூசைகள் போல விளங்கும்படி விருப்பமாய் ஏற்று இறைவன் திருமேனி குளிர, அப்பொழுதே அவர் திருவருள் பெற்று நின்ற வரலாற்றைப் பாடி நாம் தோணோக்கம் ஆடுவோம்.

விளக்கவுரை

'பொருள்பற்றி, அருள்பெற்று' என நிற்கற்பாலன; எதுகை நோக்கி, ளகரம் திரிந்து நின்றன. பொருள் - ஆகமங்களிற் சொல்லப்பட்ட விதிகள். 'அவற்றிற்கு முரணாகக் குற்றம்படச்செய்தும் அருளைப்பெற்று நின்ற வியப்பைப் பாடி ஆடுவோம்' என்றபடி. 'விளங்குமாறு அதனை விரும்பி' என உரைக்க. 'கலசம்' என்றது, அதன்கண் நீரைக் குறித்தது. 'அடி, கலசம், அமுதம்' என்ற செவ் வெண்ணின்பின், 'இவை' என்னும் பெயரும், 'இவற்றை' என்னும் உருபும் தொகுத்தலாயின. வாய்க்கலசம், இருபெயரொட்டு; உருவகம் அன்று, அமுதம் - உணவு. 'வேடனார், கண்ணப்ப நாயனார்' என்பது வெளிப்படை. 'வேடனாரது சேடு' என்க. சேடு - பெருமை, என்றது, அன்பின் சிறப்பை. 'அறிய' என்றது, 'மதிக்க' என்னும் பொருட்டாய், மகிழ்தலைக் குறித்தது. முன்னைத் திருப்பாட்டில், 'தில்லை அம்பலவன்' என்றது இதற்கு எழுவாயாய் வந்து இயையும். காரணப் பொருளில் வந்த, 'அறிய' என்ற எச்சம், 'பெற்றுநின்றவா' என்ற வற்றோடு முடியும். மெய் - உடல். நின்றவா - என்றும் இறைவன் வலப் பக்கத்தில் மாறிலாது நின்றவகை. 'கண்ணப்ப நாயனாரது அன்பின் சிறப்புக்கருதி அவரது பொருந்தாச் செயல்களை இறைவன் சிறந்த வேதாகம முறைப்படியே செய்கின்ற பூசைபோல ஏற்று மகிழ்ந்து அருள்புரிந்தான்' என, அன்பு ஒன்றையே விரும்பும் அவனது அருளின் பெருமையை வியந்தவாறு.

கற்போலும் நெஞ்சசங்
கசிந்துருகக் கருணையினால்
நிற்பானைப் போலஎன்
நெஞ்சினுள்ளே புகுந்தருளி
நற்பாற் படுத்தென்னை
நாடறியத் தான்இங்ஙன்
சொற்பால தானவா
தோணோக்கம் ஆடாமோ. **#317**

வலிமையான கல்லை ஒத்த என் மனமானது நைந்து உருக, கருணையினால் இறைவனைப் போலத் தோன்றி என் மனத்தின் கண்ணே நுழைந்தருளி என்னை நன்மைப் பகுதியிற்படுத்தி உலகம் அறியும் வண்ணம் பலரும் பேசும் நிலைமையை உடைய பொருள் ஆனாவற்றைச் சொல்லி நாம் தோணோக்கம் ஆடுவோம்.

விளக்கவுரை

'என் நெஞ்சம் கசிந்துருக' என உரைக்க. நிற்பானைப் போல - ஏனையோர்போல என்றும் புலப்பட்டு நிற்பவனைப் போல; இதற்கு, 'வந்து' என்னும் முடிபு வருவிக்க. நற்பால் - நன்னெறி. 'நாடறிய நற்பாற்படுத்து' என, முன்னே கூட்டுக. 'தான்' என்றதும், தில்லை அம்பலவனையே என்பது வெளிப்படை. சொற்பாலது ஆனவா - சொல்லின்கண்ணதாம் பொருளானவாற்றை (ப்பாடி); 'இது அவன் திருவுரு; இவன் அவன்' *(தி.8 திருப்பள்ளி.7.)* என உணர்ந்து சொல்லும்படி விளங்கியவாற்றைப்பாடி' என்றவாறு, 'தான், என் நெஞ்சம் உருகும்படி கருணையினால் வந்து புகுந்தருளி என்னை நற்பாற் படுத்து இங்ஙன் ஆனவா' என வினைமுடிக்க.

நிலம்நீர் நெருப்புயிர்
நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ
டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகே ழெனத்திசை
பத்தெனத்தான் ஒருவனுமே
பலவாகி நின்றவா
தோணோக்கம் ஆடாமோ. **#318**

இறைவன் ஒருவனே, நிலமும், நீரும் தீயும், வாயுவும், பெரிய ஆகாயமும், சந்திரனும் சூரியனும், அறிவுருவாய ஆன்மாவும் என்னும் எட்டு வகைப் பொருள்களாய் அவற்றோடு கலந்து இருப்பவனாய் ஏழுலகங்களும் திக்குகள் பத்தும் ஆகப் பல பொருள்களாக நின்ற வகையைப் பாடி நாம் தோணோக்கம் ஆடுவோம்.

விளக்கவுரை

உயிர் - காற்று. விசும்பு - ஆகாயம். நிலா - சந்திரன். பகலோன் - சூரியன். புலன் - புலம்; அறிவு; போலி. ஆன்மாவை, 'மைந்தன்' என்றார், 'புருடன்' என்னும் வடநூல் வழக்குப்பற்றி. 'ஐம்பூதம், இருசுடர், ஆன்மா' என்னும் எட்டும் இறைவனுக்கு, 'அட்ட மூர்த்தம் - எட்டுரு' எனப்படுதலின், 'எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்' என்று அருளினார்.

திருநாவுக்கரசரும் இவ்வாறே,

'இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாய்எறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தி யாகி' *(தி.6 ப.94 பா.1)*

என்று அருளிச்செய்தல் காண்க. 'தான் ஒருவனுமே ஏழ் உலகெனப்

பத்துத் திசையெனப் பலவாகி நின்றவா (பாடி)' என்க. 'என' என்றவை, 'எண்ணிடைச் சொற்கள்'.

ஈறாய்முத லொன்றாய்இரு பெண்ஆண்குணம் மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாய்உடன் ஆனான்இடம் வீழிம்மிழ லையே.

என்ற திருஞானசம்பந்தரது திருமொழியை (தி.1 ப.11 பா.2) இங்கு உடன்வைத்து நோக்குக.

புத்தன் முதலாய
புல்லறிவிற் பல்சமயம்
தத்தம் மதங்களில்
தட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச்
செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினால்
தோணோக்கம் ஆடாமோ. **#319**

புத்தன் முதலான சிறு அறிவினையுடைய பல சமயத்தவர் தங்கள் தங்கள் சமயங்களில் தடுமாற்றம் அடைந்து நிற்க, என் சித்தத்தைச் சிவமயமாகச் செய்து யான் செய்த செயல்களையே, தவமாகச் செய்த எம் இறைவனது கருணையைப் பாடி நாம் தோணோக்கம் ஆடுவோம்.

விளக்கவுரை

திருவள்ளுவராற் செய்யப்பட்ட நூலை, 'திருவள்ளுவர்' என்றல்போல, புத்தனால் ஆக்கப்பட்ட சமயத்தை, 'புத்தன்' என்றது, கருத்தாவாகுபெயர். இதனை, 'வினை முதல் உரைக்கும் கிளவி' என்பர் தொல்காப்பியர் (சொல். 115.).

மதம் - கொள்கை. தட்டுளுப்பு - நிலைதளர்தல்; அஃதாவது பயன்பெறா தொழிதல். சமயிகளது செயல், சமயங்களின்மேல் ஏற்றப் பட்டது. 'நம் சித்தம்' எனவும், 'நாம் செய்தன' எனவும் எடுத்துக் கொண்டு உரைக்க. சிவம் - சிவகரணம். கருணையினால் - கருணையைப் பாடும் பாட்டோடு.

தீதில்லை மாணி
சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன்
தாதைதனைத் தாளிரண்டுஞ்
சேதிப்ப ஈசன்
திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு
பற்றினவா தோணோக்கம். **#320**

தீமை சிறிதும் இல்லாத பிரமசாரியாகிய சண்டேசுர நாயனார் சிவபூஜையை அழித்தவனும் குலத்தால் அந்தணனும், முறையால் தந்தையுமாகிய எச்சதத்தனைக் கால்கள் இரண்டையும் வெட்ட அப்பாவச் செயலாலேயே இறைவனது திருவருளினால் தேவர்கள் தம்மை வணங்கும்படி இறைவனது பரிகலம் முதலிய வற்றைப் பெற்ற வரலாற்றைப் பாடி நாம் தோணோக்கம் ஆடுவோம்.

விளக்கவுரை

தீது - குற்றம். 'இல்' என்பது, 'இல்லென் கிளவி' என்னும் நூற்பாவின்வழி, *(தொல் - எழுத்து. 373.)* ஈற்றில் ஐகாரச் சாரியை பெற்றது. மாணி - பிரமசாரி; விசாரசருமர். இவரே பின் சண்டேசுர பதவியைப் பெற்றுச் சண்டேசுர நாயனாராயினார். இவரது வரலாற்றைத் திருத்தொண்டர் புராணத்துள் விளங்கக் காண்க. 'மாணி' என்றதில் தொக்குநின்ற ஆறனுருபு, 'சாத்தனது செலவு' என்பது போல, வினைக் கிழமைக்கண் வந்தது. 'கருமம்' என்றது, தொண்டினை. 'சாதியாலும்' என்னும், ஏதுப் பொருட்டாகிய மூன்றாம் உருபு, தொகுத்தலாயிற்று. 'வேதியனாகிய தாதை' என்க. 'சிதைத் தான், தாதை' என்றவை, ஒருபொருள்மேற் பல பெயர். 'தாதை தனைத் தாள் இரண்டு சேதிப்ப' என்றது, 'யானையைக் கோடுகுறைத் தான்' என்பதுபோல நின்றது.

சேதித்தல் - வெட்டுதல். 'அப்பாதகமே' எனச் சுட்டு வருவித்து, 'சேதிப்ப' என்றதன் பின்னர்க் கூட்டுக. பாதகத்தைத் தரும் செயலை, 'பாதகம்' என்றது, காரியவாகுபெயர். 'கூழ்' என்பது போல, 'சோறு' என்பதும் உணவைக் குறிப்பதொரு சொல்; அஃது இங்கு, 'பயன்' என்னும் பொருட்டாய் நின்றது, இனி, 'சிவபிரானுக்கு நிவேதிக்கப்பட்ட திருவமுதின் பகுதியையே குறித்தது' என்றலுமாம்; என்னை*?* இந்நாயனார்க்குச் சிவபெருமான்,

'நாம் - உண்டகலமும் உடுப்பனவும்
சூடு வனவும் உனக்காக' *(-தி.12* பெ.புரா.சண்டேசுரர்*.56)*

என அருள் புரிந்தமையான் என்க. 'பாதகமே பற்றினவா' எனக் கருவி வினைமுதல்போலக் கூறப்பட்டது. எனவே, 'பாதகந்தானே சிறந்த நன்மையைப் பெறுதற்கு வழியாயினவாற்றைப் பாடி' என்பது பொருளாயிற்று.

மானம் அழிந்தோம்
மதிமறந்தோம் மங்கைநல்லீர்
வானந் தொழுந்தென்னன்
வார்கழலே நினைந்தடியோம்
ஆனந்தக் கூத்தன்

அருள்பெறில்நாம் அவ்வணமே
ஆனந்த மாகிநின்
றாடாமோ தோணோக்கம். **#321**
மங்கைப் பருவத்தை உடைய நல்ல பெண்களே! அடியோங்கள் ஆனந்தத் தாண்டவம் செய்கின்ற இறைவனது திரு வருளைப் பெற்றுள்ளோம் என்றால் உலகியலில் மானம் அழிந்தோமா யினோம்; நம்மை மறந்தோமாயினோம்;
ஆகையால், நாம் அவ்வாறே விண்ணுலகத்தவர் வணங்குகின்ற தென்னவனாகிய அவனது நீண்ட வீரக்கழலை அணிந்த திருவடிகளையே நினைந்து ஆனந்தமே வடிவாய் நின்று தோணோக்கம் ஆடுவோம்.

விளக்கவுரை

'மானம் அழிந்தோம்; மதிமறந்தோம்' என்றதனை, *'அடியோம்'* என்றதன்பின்னர்க் கூட்டி, அதன் பின்னர், *'இவ்வாறு'* என்பது வருவிக்க. மானம், உலகத்தாரால் நன்கு மதிக்கப்படும் நிலை. மதி - அதனைப் பெறுதற்கு ஆவனவற்றை அறியும் அறிவு. தென்னன்-தென்னாட்டில் விளங்குபவன்.
நினைந்து - நினைதலால். *'பெறில்'* என்றது, *'நீரின் றமையா துலகெனின்'* *(குறள் - 20)* என்பதுபோல, *'பெற்றது உண்மையாயின்'* எனப் பொருள் தந்தது. அவ்வண்ணமே - அவ்வருள்வழியே.

எண்ணுடை மூவர்
இராக்கதர்கள் எரிபிழைத்துக்
கண்ணுதல் எந்தை
கடைத்தலைமுன் நின்றதற்பின்
எண்ணிலி இந்திரர்
எத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால்பலர்
மாண்டனர்காண் தோணோக்கம். **#322**
உயர்வாக எண்ணத் தகுந்த மூவர், அரக்கர்கள் முப்புரம் எரித்த போது பிழைத்து, நெற்றிக்கண்ணை உடைய எம் தந்தையின், வாயிற்படியில் துவாரபாலகராய் நின்ற பிறகு அளவு கடந்த இந்திரர்களும், எத்தனையோ பிரமர்களும் இறந்தனர் என்று நாம் தோணோக்கம் ஆடுவோம்.

விளக்கவுரை

எண் உடை - என்றும் சிவபெருமானை மறவாது நினைத்தலையுடைய. அசுரர்களை, *'இராக்கதர்'* என்று அருளினார். இவர், திரிபுரத்தில்

அழியாது உய்ந்தவர். இவரைப் பற்றிய குறிப்பை மேலே (*தி.8 திருவுந்தியார். பா.4- உரை.*) காண்க. 'எண்ணிலி' என்பதே ஓர் எண்போல அருளினார். மண் மிசை - மண்ணை உண்கின்ற. 'மால்கள்' என்பதில் கள்விகுதி தொகுத்தலாயிற்று. இதனால், இறைவனது திருவருளைப் பெறாதோர் காலவயப்பட்டு இறத்தலையும், அதனைப் பெற்றோர் காலத்தைக் கடந்து வீடு பெறுதலையும் கூறியவாறு.

பங்கயம் ஆயிரம்
பூவினிலோர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன்
சேவடிமேல் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான்
சக்கரம்மாற் கருளியவாறு
எங்கும் பரவிநாம்
தோணோக்கம் ஆடாமோ. **#323**

ஆயிரம் தாமரைமலர்களுள் ஒரு மலர் குறைய தமது கண்ணைத் தோண்டி, சிவபெருமானது திருவடி மீது சாத்தலும் சங்கரனாகிய எம்மிறைவன், திருமாலுக்குச் சக்கரப்படை அளித்த வரலாற்றை எங்கும் நாம் துதித்துத் தோணோக்கம் ஆடுவோம்.

விளக்கவுரை

'ஆயிரம்' என்றதன்பின், 'எனக்கொண்ட' என்பது வருவிக்க. 'திருமால் சிவபெருமானிடம் சக்கரம் பெறுதற்கு நாள் தோறும் ஆயிரந் தாமரை மலர் கொண்டு அருச்சிப்பேன் எனக் கருதிக்கொண்டு அவ்வாறு அருச்சித்துவருகையில், ஒருநாள் ஒரு மலரைச் சிவபெருமான் மறைத்துவிட, அதற்கு ஈடாகத் திருமால் தனது கண்ணைப் பறித்து அருச்சித்ததனால் சிவபெருமான் மகிழ்ச்சியுற்றுச் சக்கரத்தை அளித்தருளினார்' என்பது புராண வரலாறு.

இதனை, காஞ்சிப் புராணத் திருமாற்றுதிப் படலத்திற் காண்க. இவ்வாறு *தி.8* திருச்சாழல் பதினெட்டாம் திருப்பாட்டிலும் குறிக்கப் பட்டது.

'தம்கண்' என்றது, ஒருமை பன்மை மயக்கம். 'தன்கண்' என்றே பாடம் ஓதுதலுமாம். பரவி - துதித்து.

காமன் உடலுயிர்
காலன்பல் காய்கதிரோன்
நாமகள் நாசிசிரம்
பிரமன் கரம்எரியைச்
சோமன் கலைதலை
தக்கனையும் எச்சனையும்
தூய்மைகள் செய்தவா

தோணோக்கம் ஆடாமோ. **#324**
மன்மதனின் உடலையும் இயமனின் உயிரையும் சுடுகின்ற
கிரகணங்களையுடைய சூரியனின் பல்லையும் கலைமகளின் மூக்கையும்
பிரமனின் தலையையும் அக்கினி தேவனின் கைகளையும், சந்திரனின்
கலைகளையும் தக்கனின் யாக தேவனின் தலையையும் நீக்கிப்
பாவத்தைப் போக்கித் தூய்மை செய்த விதத்தைப் பாடி நாம்
தோணோக்கம் ஆடுவோம்.

விளக்கவுரை

'காலன் உயிர், கதிரோன் பல், பிரமன் சிரம், எரியைக் கரம். தக்கனையும் எச்சனையும், தலை' என மாறிக் கூட்டுக. பிற இடங்களிலும் ஐயுருபுகள் தொகுத்தலாயின. அவை அனைத்தும், 'தூய்மைகள் செய்த' என்பதனோடு முடியும்.
'எரியைக் கரம் தூய்மைகள் செய்த' என்றது, 'யானையைக் கோடு குறைத்த' என்பது போல நின்றது. 'எச்சன், வேள்வித் தேவன்' என்பதும், 'அவனும் தலையறுக்கப்பட்டான்' என்பதும் மேலே (தி.8 திருச்சாழல். பா.5-2-உரை.) கூறப்பட்டன. 'தக்கன் வேள்வியிலும், பிறவிடங்களிலும் தேவர்கள் ஒறுக்கப்பட்டமையால், குற்றம் நீங்கித் தூயராயினர்' என்றபடி.

பிரமன் அரியென்
றிருவருந்தம் பேதைமையால்
பரமம் யாம்பரம்
என்றவர்கள் பதைப்பொடுங்க
அரனார் அழலுருவாய்
அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா
தோணோக்கம் ஆடாமோ. **#325**
பிரமன் திருமால் என்று சொல்லப்பட்ட அவ் விருவரும் தமது
அறியாமையால் யாமே பரம்பொருள் என்று, வாது செய்தவர்களுடைய
செருக்கு அடங்க, சிவபெருமான், நெருப்புரு வாகி அவ்விடத்தே அளவு
கடந்து மேலான பொருளாகி நின்ற வரலாற்றைப் பாடி நாம்
தோணோக்கம் ஆடுவோம்.

விளக்கவுரை

பரமம், பரம் - முதற்பொருள். 'என்று அவர்கள்' எனப் பிரித்து, 'என்று' என்றதனை, 'என' எனத் திரிக்க. பதைப்பு - முனைப்பு. இதனுட் குறிக்கப்பட்ட வரலாறு முன்னர்த் திருச்சாழல் ஆறாம் திருப்பாட்டிலும் குறிக்கப்பட்டமை காண்க.

ஏழைத் தொழும்பனேன்
எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன்
பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத
நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா
தோணோக்கம் ஆடாமோ. **#326**

அறிவில்லாத அடியவனாகிய நான் எத்தனையோ காலம் முழுதும் மேலான கடவுளை வணங்காமல் வீணாகக் கழித்தேன். அங்ஙனமிருந்தும் ஊழி முதல்வனும் அழியாத சிறந்த மாணிக்கம் போல்பவனுமாகிய சிவபெருமான் எழுந்தருளி வந்து என் பிறவியின் வேரைப் பறித்து எறிந்த விதத்தைப் பாடி நாம் தோணோக்கம் ஆடுவோம்.

விளக்கவுரை

ஏழை - அறிவிலி. தொழும்பனேன் - தொண்டனேன். பாழ் - வறுநிலம். 'பரம்பரனைப் பணியாதே பாழுக்கிறைத்தேன்' என இயைக்க. 'பாழுக்கிறைத்தேன்' என்றது, 'அன்ன செயலைச் செய்தேன்' என்ற பான்மை வழக்கு. அஃதாவது, 'உலகியலில் நின்று உழைத்தேன்' என்றபடி. ஊழி முதல் - ஊழிக்கு முதலாய் நிற்கும் பொருள். சிந்தாத - கெடாத. தாழ் - பூட்டு. இது, தளையிடத்துள்ளது என்க. பறித்த - தகர்த்த. 'பாசமெனுந் தாழ் உருவி' *(தி.8 அச்சோ-7.)* எனப் பின்னரும் அருளுவார்.

உரைமாண்ட உள்ளொளி
உத்தமன்வந் துளம்புகலும்
கரைமாண்ட காமப்
பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப்
பறவை இரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித்
தோணோக்கம் ஆடாமோ. **#327**

சொற்கள் தம் ஆற்றல் அடங்குதற்குக் காரணமான உள்ளொளியாகிய உத்தமனாகிய சிவபெருமான் எழுந்தருளி வந்து என் மனத்தில் புகுதலும் கரையற்ற ஆசையாகிய பெரிய கடலைத் தாண்டுதலும் தமக்கு உணவு அற்ற இந்திரியங்களாகிய பறவைகள் அஞ்சி ஓட, நமது தன் முனைப்புக் கெட்ட விதத்தைப் பாடி தோணோக்கம் ஆடுவோம்.

விளக்கவுரை

உரை மாண்ட - சொல் அற்ற; என்றது, 'அதற்கு அப்பாற்பட்ட' என்றபடி. 'உள்ளொளியாகிய உத்தமன்' என்க. ஆன்மா ஒளியும், இறைவன் அதன் உள்ளொளியும் ஆதல் அறிக. 'சோதியுட் சோதி' (தி.5 ப.97 பா.3) என்றலும் இதுபற்றி. கரை மாண்ட - கரை அற்ற. காமம் - ஆசை; உலகியல் பற்றித் தோன்றும் ஆசை. ஒருகாலும் நிரம்பாது மேன்மேல் வளர்வதாகலின், அது கரையற்ற கடல் போல்வதும், இறைவன் திருவருள் உணரப்பட்ட பின்னர், அவ்வாசை தீர்ந்தொழிதலின், அவ்வாற்றாற் கடக்கப் படுவதும் ஆயினவாறு கண்டுகொள்க. 'இந்திரியமாகிய பறவைகட்கு இரை' என்றது, மனத்தை. உலகியல் ஆசையற்றபின் மனம் இந்திரியத் தின் வழிப்படாமையின், அப்பறவைகள் இரிந்தோடலாயின. இரிந்து - நீங்கி. 'துரை, மிகுதிப்பாடு' (சிவஞான சித்தி. சூ.2.32. உரை.) என்பர், மாதவச் சிவஞான யோகிகள். எனவே, 'தன் முனைப்பு' என்பது பொருளாயிற்று.

1.16.திருப்பொன்னூசல்

சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாரா யணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ. **#328** ★★★★★

போருக்கு அமைந்த கூரிய வேலையொத்த கண்களையுடைய பெண்களே! மேன்மை பொருந்திய பவளம் கால்களாகவும், முத்து வடம் கயிறு ஆகவும் உடைய, அழகு பொருந்திய பொன்னாலாகிய ஊஞ்சல் பலகையில் ஏறி இனிமையாய் இருந்து, திருமால் அறியாத அன்றலர்ந்த தாமரை போலும் திருவடியை நாய் போன்ற அடியேனுக்கு உறைவிடமாக தந்தருளிய திருவுத்தர கோச மங்கையில் எழுந்தருளியிருக்கிற தெவிட்டாத அமுதம் போன்ற வனது அருளாகிய இரண்டு திருவடியைப் புகழ்ந்து பாடி நாம் பொன்னாலாகிய ஊஞ்சலில் இருந்து ஆடுவோம்.

விளக்கவுரை

'கால், கயிறு' என்பவற்றின் பின் தனித்தனி எச்ச உம்மை விரித்து, அவற்றை 'ஆக' என்றதனோடு முடிக்க. 'ஆக, அமர்ந்து, பாடி ஆடாமோ' என வினைமுடிக்க. நாள் மலர் - அன்றலர்ந்த தாமரை மலர்போலும். ஊராக - வாழும் இடமாகும்படி.

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்தங்கு தேவர்களுங் காணா மலரடிகள்

தேன்தங்கித் தித்தித் தமுதூறித் தான்தெளிந்தங்கு
ஊன்தங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்தங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூசல் ஆடாமோ. **#329**

மயிலைப் போன்ற சாயலைப் பெற்று, அன்னத்தைப் போன்ற நடையையுடைய பெண்களே! விளங்குகின்ற மூன்று கண்களை உடையவனும், கெடாத விண்ணுலகில் தங்கி யிருக்கும் தேவர்களும் காணமுடியாத தாமரை போன்ற திருவடி தேன் கலந்தது போன்று இனித்து அமுதாய் ஊற்றெடுத்து அது விளங்கி உடலில் பொருந்தி உருக்குகின்ற திருவுத்தர கோச மங்கைக்குத் தலைவனுமாகிய இறைவன் எழுந்தருளி இருக்கும் திருவிடை மருதூரைப் பாடி நாம் பொன்னாலாகிய ஊஞ்சலில் இருந்து ஆடு வோம்.

விளக்கவுரை

'அங்கு இலங்கு மூன்றாகிய நயனத்தான்' என மாற்றி யுரைக்க. 'அங்கு' என்றது பண்டறி சுட்டாய், ஆகாயத்தைக் குறித்தது. மூன்று, முச்சுடர். முச்சுடர்களுள் தீ நிலத்தின்கண் உள்ள தாயினும், பெரும்பான்மைபற்றி, 'அங்கு' என்று அருளிச்செய்தார். 'தேன் தங்கியாங்கு' எனவும், 'அமுதூறியாங்கு' எனவும் உவம உருபு விரிக்க. 'தித்தித்து' என்றதனை, 'தித்திக்க' எனத் திரிக்க, தெளிந்து - தெளியப்பட்டு. 'தான் தெளிந்து ஊன் தங்கி நின்று அங்கு அமுதூறி உருக்கும்கோன்' என இயைக்க.
குலம் - மேன்மை. 'போன்ற' என்பதன் இறுதி அகரம் தொகுத்தலாயிற்று. 'போன்றங்கு' என்றதில் 'அங்கு' என்ற அசை நிலை இடைச்சொல், 'பொன்னூசல் ஆடாமோ' என்றதன் முன்னர்க் கூட்டப்படும்.

முன்ஈறும் ஆதியும் இல்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி இமையோர்கள் தாம்நிற்பத்
தன்நீ றெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி உத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. **#330**

பொன் பொருந்திய ஆபரணங்கள் அணிந்த முலை களையுடைய பெண்களே! நினைக்கப்பட்ட முடிவும் முதலும் இல்லாத வன் முனிவர் கூட்டமும் பல நூறுகோடி விண்ணவரும் காத்து நிற்க, தனது திருநீற்றை எனக்கு அளித்து, தனது அருள் வெள்ளத்திலே, மிகு தியாக யான் ஆழ்ந்து கிடக்கும்படி எழுந்தருளியிருக்கின்றவனுடைய அழகிய உத்தரகோச மங்கையில் மாடங்களையுடைய அகன்ற கோயி லைப் பாடி நாம் பொன்னாலாகிய ஊஞ்சலில் இருந்து ஆடுவோம்.

விளக்கவுரை

முன் - 'நினைக்கப்படுகின்ற. 'ஈறும் ஆதியும் இல்லானாகிய மணி' என்க. 'முனிவர் குழாமும், பல்நூறுகோடி இமையவர்கள் தாமும் நிற்பத் தனது திருநீற்றை எனக்கு அருளித் தனது கருணையாகிய வெள்ளத்தில் யான் பெரிதும் ஊறிக் கிடக்குமாறு என் உள்ளத்தில் நிலைபெற்று நிற்கும் மாணிக்கம் போல்பவனது உத்தரகோச மங்கைத் தலத்தின் மாளிகையைப் பாடி ஆடாமோ' என்றபடி.

திருநீறு, சிவபெருமானது திருவருளின் வடிவாகலின், 'தன்நீறு' என்று அருளினார். 'திருவடி நீறு' *(தி. 4 ப.109 பா.2)* என்று அருளிச்செய்தார் திருநாவுக்கரசரும். 'மணி' உவமையாகு பெயர். மின் - ஒளி. 'மாளிகை' என்றது, கோயிலை.

நஞ்சமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தர கோசமங்கை
அஞ்சொலாள் தன்னோடுங் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுதம் ஊறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூசல் ஆடாமோ. **#331**

தொகுதியாகப் பொருந்திய, வெண்மையான வளையலை அணிந்த பெண்களே! விடம் தங்கிய கண்டத்தை யுடையவனும், தேவலோகத்தவர்க்குத் தலைவனும், மேகங்கள் படிகின்ற மேல் மாடங்களையுடைய அழகிய திருவுத்தர கோச மங்கை யில் இனிய மொழியையுடைய உமாதேவியோடு கூடியவனும் அடி யாரது மனத்துள்ளே நிலைத்து நின்று அமுதம் சுரப்பவனும் இறப்புப் பிறப்புகளைத் தவிர்ப்பவனுமாகிய தூய்மையானவனின் புகழினைப் பாடி நாம் பொன்னாலாகிய ஊஞ்சலில் இருந்து ஆடுவோம்.

விளக்கவுரை

மஞ்சு - மேகம். இங்கும், 'அமுதம் ஊறி' என்றதற்கு, மேல் *(தி.8 திருப்பொன்னூசல். பா.2)* உரைத்தவாறே உரைக்க. துஞ்சல் - இறத்தல். 'பிறப்பு' என்றதும், 'பிறத்தல்' என அத்தொழிலையே குறித்தது. புஞ்சம் - தொகுதி.

ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே உய்யஆட் கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோணார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூசல் ஆடாமோ. **#332**

ஆபரணங்கள் நிறைந்த அழகிய முலைகளை யுடைய பெண்களே! ஆண் இனமோ, அலி இனமோ, பெண் ணினமோ, என்று அயன் மாலாகிய இருவரும் காண முடியாத கட வுளும் தன் பெருங்கருணையால் தேவர் கூட்டம் நாணம் அடையாமல் பிழைக்கும்படி அடிமை கொண்டருளி, பாற்கடலில் தோன்றிய ஆலகால விடத்தை உணவாக உண்டருளியவனும், திருவுத்தர கோச மங்கையிலுள்ள, வளைவுள்ள பிறையணிந்த சடையையுடையவனு மாகிய இறைவனது குணத்தைத் துதித்து நாம் பொன்னாலாகிய ஊஞ்சலில் இருந்து ஆடுவோம்.

விளக்கவுரை

அரிவை - பெண். 'இருவர்' என்றது, தொகைக் குறிப்பாய், அயன் மாலைக் குறித்தது. 'இருவர்தாமும்' என உயர்வு சிறப்பும்மை விரிக்க. அவர்தாமே காணாராயின பின், பிறர் காணாமை சொல்லவேண்டாவாயிற்று. 'நாணுதல்' இங்குத் தோல்வியுறுதல். அது 'தோற்று அழியாதபடி' எனப் பொருள்தந்தது. 'ஆட்கொண்டு' என்றது, அபயம் அளித்தமையை. கோண் ஆர் - வளைவு பொருந்திய.

மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டென் தொல்பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. **#333**

அரும்பு போன்ற அணிகளோடு கூடிய முலைகளையுடைய பெண்களே! மங்கை தங்கு பங்கையுடையவனும், திருவுத்தர கோச மங்கையிலுள்ள, மகரந்தங்களையுடைய கொன்றை மாலையை அணிந்த சடையையுடையவனும், தன்னடியார்களுள்ளே நாய் போன்ற என்னைச் சீராட்டி அடிமை கொண்டு என் முற்பிறப்பில் உண்டாகிய வினை மேலெழுந்து பற்றாதபடி, யான் ஞானத்தோடு விளங்கப் பிறவித் தளையை அறுப்பவனுமாகிய இறைவனது திருச்செவிகளில் ஆடுகின்ற குண்டலங்களைப் பாடி, அன்பால் உருகி நாம் பொன்னாலாகிய ஊஞ்சலில் இருந்து ஆடுவோம்.

விளக்கவுரை

முதற்கண் உள்ள 'ஆடு' இரண்டும், 'பொருந்திய' எனப் பொருள்தந்தன. 'நாயேனை ஆட்கொண்டு தன் அடியாருள் வைத்துக் கோதாட்டி' என்க. பிறவித் தீது - பிறவிக்கு ஏதுவாய தீமை; என்றது ஆகாமிய வினையை, ஓடா வண்ணம் - கிளைக்காத நிலைமை; அஃதாவது, திருவடி ஞானம் அல்லது திருவருள் உணர்வு. திகழ - திகழ்தலால்; 'அவ்வுணர்வு

திகழுமாறு செய்பவனும் அவனே' என்றதாயிற்று. காதணி, இறைவற்கும், ஆசிரியர்க்கும் சிறப்புடைய தோர் அணிகலமாகலின், 'காதாடு குண்டலங்கள் பாடி' என அதனையே விதந்தருளிச் செய்தார். போது - பூமாலை; ஆகு பெயர்.

உன்னற் கரியதிரு உத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி ஆடும்அணி மயில்போல்
என்னத்தன் என்னையும்ஆட் கொண்டான் எழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. **#334**

அணிகளை அணிந்த பொன்னை நிகர்த்த தனங்களையுடைய பெண்களே! நினைத்தற்கரிய, திருவுத்தர கோச மங்கையில் நிலைபெற்று, விளங்குகின்ற பெருமையுடைய வேதி யனும் தனது புகழினையே பலகாலும் சொல்லித் தாழ்ந்து வணங்க, பாவங்களின் பிடிப்பை ஒழிப்பவனும், என் அப்பனும் என்னையும் ஒரு பொருளாக அடிமை கொண்டவனுமாகிய இறைவனது, அழகினைப்பாடி அன்னப்பறவையின் மீது ஏறி ஆடுகின்ற அழகிய மயிலைப் போன்று நாம் பொன்னாலாகிய ஊஞ்சலில் ஏறி இருந்து ஆடுவோம்.

விளக்கவுரை

மறையோன் - அந்தணன். 'மறையோனும், அறுப் பானும், ஆட்கொண்டானும் ஆகிய அவனது எழிலைப்பாடி' என்க. நான்காம் அடியை, 'பொன்னூசல்' என்றதற்கு முன்னர்க் கூட்டுக. இவ் வடி, இல்பொருள் உவமை. மெல்ல அசைந்தாடும் ஊசலுக்கு, அத் தன்மையான நடையை உடைய அன்னம் உவமையாயிற்று. 'சுணங்கு' எனப்படும் அழகிய தேமலால், தனங்கள் பொன்போல விளங்குவ வாயின என்க.

கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகங்குழைந்து பொன்னூசல் ஆடாமோ. **#335**

உலகம் உய்யும்படி அழகிய கயிலை மலையின் உச்சியினின்றும் குவலயத்து நிலவுலகில் இறங்கி வந்து, வந்தி தரும் பிட்டினை நிரம்ப உண்டும், மிக ஆழமான கடலில் வலைஞனாய்க் கட்டு மரத்தின் மீது ஏறியும் பரிமேலழகனாய்க் குதிரை மீது வந்தும், நம்மை ஆண்டருளினவனாகிய நல்லொழுக்கம் விளங்குகின்ற, திருவுத்தர கோச

மங்கையிலுள்ள, திருமாலுக்கும் காணுதற்கு அருமையான இறைவனை நாம் வாய் நிரம்பப் பாடி உடல் பூரித்து, மனம் நெகிழ்ந்து, பொன்னாலாகிய ஊஞ்சலில் ஏறி ஆடுவோம்.

விளக்கவுரை

கோலவரைக் குடுமி வந்து - அழகிய திருக்கயிலை மலைச் சிகரத்தினின்றும் போந்து. 'அமுது' என்றது, வந்தி தந்த பிட்டினை. 'சிவபுரத்தார் போரேறு - மண்பால் மதுரையில் பிட்டமுது செய்தருளி' *(தி.8 திருப்பூவல்லி. பா.16)* என முன்னர் அருளிச் செய்தது காண்க. கடலின் மீது எழுந்து சென்றது, வலைவீசிய திரு விளையாடலிலாம். 'உண்டு, எழுந்து' என்ற எச்சங்கள், எண்ணின் கண் வந்தன. ஞாலம் மிக - மண்ணுலகமே மேலான உலகமாம்படி. 'பரிமேற்கொண்டு நமை ஆண்டான்' என்றதனால், இறைவன் மதுரையில் குதிரை வாணிகனாய் வந்தது, அடிகள் பொருட்டே என்பது ஐயமின்றித் துணியப்படுவதாம். 'ஆண்டானாகிய அரியானை' என்க. 'பூரித்து' என்பது எதுகைநோக்கி, 'பூலித்து' எனத் திரிந்தது. பூரித்தல் - மகிழ்தல்.

தெங்குலவு சோலைத் திருஉத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. **#336**

விளக்கம் பொருந்திய, ஆபரணங்களை அணிந்த முலைகளையுடைய பெண்களே! தென்னை மரங்கள் பரவியுள்ள சோலையையுடைய திருவுத்தர கோச மங்கையில் தங்குதல் பொருந்திய ஒளிமயமான, ஒப்பற்ற திருவுருவத்தை உடைய இறைவன் வந்தருளி, எங்கள் பிறவியைத் தொலைத்து எம் போல் வாரையும் அடிமை கொள்ளும் பொருட்டு, ஒரு பாகமாகப் பொருந்திய மங்கையும் தானுமாய்த் தோன்றி, என் குற்றேவலைக் கொண்ட, மணம் தங்கிய கொன்றை மாலையணிந்த சடையை யுடையவனது குணத்தைப் புகழ்ந்து, நாம் பொன்னாலாகிய ஊஞ்சலில் ஏறி ஆடுவோம்.

விளக்கவுரை

இதனுள், 'உலவு' என்றன பலவும், 'பொருந்திய' எனப் பொருள் தந்தன. தெங்கு - தென்னை மரம். தங்கு - தங்குதல்; முதனிலைத் தொழிற்பெயர். 'சோதி உருவம்' என்றது, இலிங்க வடிவத்தை. ஆட்கொள்வான் - ஆட்கொள்ளுதற்பொருட்டு. 'எங்களைப் பணிகொண்ட' என்க. 'கொண்ட' என்றது, 'கொண்டதுபோன்ற' என்னும் பொருளது. கொங்கு -

தேன். திருவுத்தரகோச மங்கைத் தலத்தில் உள்ள இலிங்க மூர்த்தி முன்னர் நின்று, 'என்னை விடுதிகண்டாய்' என அடிகள் வேண்டிய உடன் இறைவன் முன்போலவே ஆசிரியத் திருமேனியுடன் எழுந்தருளி வந்து அருள் செய்தமையின், அவ்வுருவமே வந்து பணிகொண்டது போன்ற கொன்றைச் சடையான்' என்று அருளிச்செய்தார். பொங்கு - பொங்குதல்; பூரித்தல்.

1.17.அன்னைப்பத்து

வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதர்இந் நாதனார் அன்னே என்னும். **#337**

தாயே! வேதங்களாகிய சொல்லையுடையவர்; வெண்மையான திருநீற்றினை அணிந்தவர்; செம்மையான திரு மேனியை உடையவர்; நாதமாகிய பறையினையுடையவர் என்று நின் மகள் சொல்லுவாள். மேலும், தாயே! நாதமாகிய பறையையுடைய இத் தலைவரே, பிரம விட்டுணுக்களுக்கும் தலைவராவார் என்று சொல்லுவாள்.

விளக்கவுரை

வேதமொழியர் - வேதமாகிய சொல்லை உடையவர்; என்றது, 'அவரது சொல்லே வேதம்' என்றபடி. நாதப் பறையினர் - நாததத்துவமாகிய பறையை யுடையவர். இத்தத்துவம், வாக்கு களுக்குக் காரணமாதல்பற்றி, 'பறை' என்றார். இதனானே, சிவபெரு மான் கரத்தில் துடியாய் இருப்பது இத்தத்துவமே என்பதும் பெறப் படும். பின்னர் வரும் இத்தொடருக்கு, 'நாதப் பறையினராயதன் மேலும்' என வழிமொழிந்ததாக உரைக்க. 'இந்நாதனார்' எனச் சுட்டியது உருவெளியை. இப்பெயர், மொழியர் முதலிய பயனிலை கட்கு எழுவாயாய் இறுதிக்கண் நின்றது. 'இவ்வாறெல்லாம் தலைவி தனது காதல் மிகுதியால் தலைவனையே நினைந்து பிதற்றுகின்றாள்' எனப்படைத்து மொழியாலும், மெய்ந்நிலை வகையாலும் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கின்றாள் என்க. 'நான்முகன் மால்' என்றதன் இறுதியில், 'இருவர்' என்னும் தொகை எஞ்சி நின்றது'.

கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உண்ணின் றுருக்குவர் அன்னே என்னும்
உண்ணின் றுருக்கி உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும். **#338**

தாயே! கண்ணில் தீட்டப்பட்ட மையையுடையவர்; கருணைக் கடலாயிருப்பவர்; உள்ளத்தில் நின்று உருக்குவர் என்று நின்மகள்

சொல்லுவாள்; மேலும், தாயே! உள்ளத்தில் நின்று உருக்கி அழிவில்லாத ஆனந்தக் கண்ணீரை உண்டாக்குவர் என்று சொல்லு வாள்.

விளக்கவுரை

'எனது கண்ணில் தீட்டியுள்ள அஞ்சனத்தில் உள்ளார்' என்க. அஞ்சனம் - மை. மை தீட்டுதல் கண்ணினுள் ஆதலும், அவ் விடமே தலைவர் நிற்குமிடம் ஆதலும் பற்றி, 'கண் அஞ்சனத்தர்' என்றாள். இதனை,

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து.

(குறள் - 1127) என்பதனானும் அறிக. கருணைக் கடலினர் - கருணை யாகிய கடலை உடையவர்; என்றது, 'கடல்போலும் கருணை யுடையவர்' என்றவாறாம். உலப்பு - கெடுதல்; வற்றுதல்.

நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத் திருப்பரால் அன்னே என்னும்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர்ஆ னந்தரால் அன்னே என்னும். **#339**

தாயே! என்றும் மணவிழாக் கோலமுடையவர்; பேரழகை உடையவர்; என் மனத்தில் இருப்பவர் என்றும் நின்மகள் சொல்லுவாள்; மேலும், தாயே! என் மனத்தில் இருக்கின்ற அவர், தென்னாட்டில் உள்ள பெருந்துறைக் கடவுள் என்றும் சொல்லுவாள்.

விளக்கவுரை

நித்த மணாளர் - அழிவில்லாத மணவாளக்கோலம் உடையவர்; 'என்றும் ஒருபெற்றியராய் உள்ளவர்' என்றபடி. அத்தர் - தலைவர்.

ஆடரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றோர்
வேடம் இருந்தவா றன்னே என்னும்
வேடம் இருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்
வாடும் இதுஎன்னே அன்னே என்னும். **#340**

தாயே! ஆபரணமாகிய ஆடும் பாம்பும், உடை யாகிய புலித்தோலும், பூசப்பட்டதாகிய திருநீறும் அமைந்த ஓர் ஒப்பற்ற வேடம் இருந்தவாறு என்னே? என்று நின் மகள் சொல்வாள்; மேலும், தாயே! வேடம் இருந்த விதத்தை நோக்கி நோக்கி, என் மனம் வாடுகின்றது; இது என்ன காரணம்? என்று சொல்லுவாள்.

விளக்கவுரை

'அரா' என்பதன் ஈற்று அகரம், செய்யுளிடத்துக் குறுகிநின்றது. 'தோல் உடை' என்பது, பின்முன்னாகி நின்றது. 'பூணும் உடையும் உடைய பொடிபூசிற்றோர் வேடம் இருந்தவாறு' என்க. 'பொடிப் பூசிற்று' என்னும் பகரம் விரித்தல். வாடுதல், காதல் மிகுதி யாலாம். 'என்னே'

என்றதனை, முன்னுள்ள, 'இருந்தவாறு' என்றதனோடும் கூட்டுக.

நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன் னாடரால் அன்னே என்னும்
பாண்டிநன் னாடர் பரந்தெழு சிந்தையை
ஆண்டன்பு செய்வரால் அன்னே என்னும். **#341**

தாயே! நீண்ட கையினையுடையவர்; வளை வுடைய சடையை உடையவர்; நல்ல பாண்டிய நாட்டை உடையவர், என்று நின்மகள் சொல்லுவாள், மேலும் நல்ல பாண்டி நாட்டையுடைய அவர் விரிந்து செல்லுகின்ற மனத்தை அடக்கியாண்டு அருள் செய்வர் என்று சொல்லுவாள்.

விளக்கவுரை

'நீண்ட கரம்' என்றது, நீட்டியதனால் நீண்டமையைக் குறித்தவாறு; இஃது ஆடல் நிகழ்த்தும் நிலையைக் குறித்தபடி. நெறி தல் -சுருளுதல். சடையையே இங்கு, 'குஞ்சி - தலைமயிர்' என்றார். பரந்தெழு சிந்தை - பலவழியானும் ஓடுகின்ற உள்ளம். ஆளுதல் - ஒரு வழிப்படச் செலுத்துதல். ஆள்வோனும், ஆளப்படுவோருமாய் நிற்கும் இயைபுபற்றி இறைவனது அருளை, 'அன்பு' எனினும் இழுக்காது என்னும் கருத்தால், 'அன்பு செய்வர்' என்று அருளினார்.

உன்னற் கரியசீர் உத்தர மங்கையர்
மன்னுவ தென்நெஞ்சில் அன்னே என்னும்
மன்னுவ தென்நெஞ்சில் மாலயன் காண்கிலார்
என்ன அதிசயம் அன்னே என்னும். **#342**

தாயே! நினைத்தற்கு அருமையான சிறப்புப் பொருந்திய திருவுத்தரகோச மங்கையை உடையவர்; என் நெஞ்சில் நிலைபெற்றிருப்பார் என்று நின் மகள் சொல்லுவாள். மேலும், தாயே! திருமால், அயனாலும் காணமுடியாதவர் என் நெஞ்சில் நிலைபெற்றிருப்பது என்ன ஆச்சரியம்? என்று சொல்லுவாள்.

விளக்கவுரை

'உத்தரகோச மங்கை' என்பதனை, 'உத்தர மங்கை' எனத் தொகுத்து அருளிச் செய்தார். 'என்நெஞ்சில்' என்றது, 'இசை யெச்சத்தால்', 'நாயினுங் கடையேனாகிய எனது நெஞ்சில்' எனப் பொருள் தந்தது. மறித்து வந்த தொடர்க்கண், 'என் நெஞ்சில் மன்னுவ தாக' என ஆக்கம் வருவிக்க.

வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேற்கொண்டென்

உள்ளங் கவர்வரால் அன்னே என்னும். **#343**

தாயே! வெள்ளை ஆடையையுடையவர்; வெள்ளிய திருநீறணிந்த நெற்றியையுடையவர்; குதிரையேற்றத்திற்கு உரிய சட்டையை அணிந்தவர் என்று நின்மகள் சொல்லுவாள். மேலும், தாயே! குதிரையேற்றத்திற்கு உரிய சட்டையை அணிந்தவர், பாய்ந்து செல்லும் குதிரைமேல் வந்து என் உள்ளம் கவர்வர் என்று சொல்லுவாள்.

விளக்கவுரை

கலிங்கம் - ஆடை. முண்டம் - நெற்றி. அது, திருநீற்றால் வெள்ளிதாயிற்று. பள்ளி - படுக்கையாதற்குரிய, குப்பாயம் - போர்வை. வெள்ளைக் கலிங்கமும், பள்ளிக் குப்பாயமும் சிவ பெருமான், குதிரைமேல் வந்த காலத்துக் காணப்பட்டவை என்க. எனவே, இத் திருப்பாட்டு, பாய்பரிமேல் வந்த திருக்கோலத்தின் இயல் புரைத்ததாயிற்று. குதிரை வாணிகர், தாம் தங்குமிடத்தில் தமது போர்வையையே நிலத்தின்மேல் விரித்து அதன்மேற் கிடந்து உறங்குதல் தோன்ற, *'பள்ளிக் குப்பாயத்தர்'* என்று அருளினார்.

தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆளெம்மை ஆள்வரால் அன்னே என்னும்
ஆளெம்மை ஆளும் அடிகளார் தங்கையில்
தாள மிருந்தவா றன்னே என்னும். **#344**

தாயே! அறுகம் புல்லினால் தொடுக்கப்பட்ட மாலை அணிந்தவர்; சந்தனக் கலவையைப் பூசியவர்; அடிமையாக எங்களை ஆண்டருளுவர், என்று நின் மகள் சொல்லுவாள். மேலும், தாயே! அடிமையாக எங்களை ஆண்டருளுகின்ற தலைவர் கையில் தாளம் இருந்த விதம் என்னே! என்று சொல்லுவாள்.

விளக்கவுரை

'தாளியறுகு' (தி.8 போற்றித் திருவகவல் - அடி-201. உரை) என்பது பற்றி மேலே கூறப்பட்டது *'ஆளாக'* என ஆக்கம் விரிக்க. அடிகளார் - தலைவர். தாளம், பிச்சைக் கோலத்திற் கொள்ளப் படுவது *'இருந்தவாறு'* என்றதன்பின், *'என்னே'* என்பது எஞ்சி நின்றது. *'எம்மை ஆளாகக் கொண்டு ஆளுகின்ற தலைவர் எனப் படுவார், பிச்சைக் கோலத்தராய் நிற்றல் என்'* என்று மருண்டவாறு.

தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்தவர் போதலும் என்னுள்ளம்
நையும்இது என்னே அன்னே என்னும். **#345**

தாயே! பெண்ணை ஒரு பாகத்தில் உடையவர்; தவ வேடத்தை

உடையவர்; பிச்சை ஏற்பவர் என்று, நின் மகள் சொல்லுவாள், மேலும், தாயே! அவர் பிச்சை எடுத்துத் தெருவில் போகும்போது என் மனம் வருந்தும் இது என்ன காரணம்? என்று சொல்லுவாள்.

விளக்கவுரை

தாபத வேடம் - துறவுக் கோலம். 'வேடத்தராய்' என எச்சமாக்குக. ஐயம் புகுதல் - பிச்சைக்குச் செல்லுதல். 'தையலோர் பங்கும், தாபத வேடமும் ஒன்றோடொன்றொவ்வாத கோலங்கள்; அவற்றை ஒருவனே உடையனாயிருத்தல் வியப்பு' என்றபடி, நைதல்- உருகுதல்.

கொன்றை மதியமுங் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம்உன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே என்னும். **#346**

தாயே! கொன்றை மலரோடு பிறையும் வில்வத்தோடு ஊமத்தமும் பொருந்திய சடையை உடையவர் என்று நின் மகள் சொல்லுவாள், மேலும், தாயே! சடையில் பொருந்திய ஊமத்த மலர் இப்பொழுது எனக்குப் பெரும்பித்தை உண்டுபண்ணின வாறு என்னே? என்று சொல்லுவாள்.

விளக்கவுரை

'கொன்றை, கூவிளம்' என்றவற்றில் உம்மை தொகுத்தலாயிற்று. கூவிளம் - வில்வம். துன்றிய - நெருங்கிய. மத்தம்-ஊமத்தம் பூ. உன்மத்தம் - பித்து; அஃது ஆகுபெயராய், அதற்கு ஏதுவைக் குறித்தது. 'ஆனவாறு' என்றதன்பின், 'என்னே' என்பது எஞ்சிநின்றது. 'சிவபெருமானது சென்னியில் உள்ள ஊமத்த மலர், இன்று எனக்குப் பித்துத் தருவதாயினமை வியப்பு' என்றபடி. இதனால், பொருள் யாதாயினும், அதனை யுடையாரது தன்மையால் அதன் தன்மை வேறுபடும் என்பது பெறப்பட்டது. படவே, தலைவியது பித்திற்குச் சிவபெருமான் ஏதுவாயினமையால், அவன் அணிந்துள்ள ஊமத்த மலரும் அன்னதாயிற்று என்பது போதரும்.

1.18.குயிற்பத்து

கீதம் இனிய குயிலே
கேட்டியேல் எங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவில்
பாதாள மேழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற்
சொல்லிறந் துநின்ற தொன்மை
ஆதி குணமொன்று மில்லான

அந்தமி லான்வரக் கூவாய். #347

இசை இனிமையாய் உள்ள குயிலே! எம் பெருமான் திருவடி இரண்டும் எங்குள்ளன? எனக் கேட்டால், அவை கீழுலகம் ஏழினுக்கும் அப்பால் உள்ளன எனலாம். அவனது ஒளி பொருந்திய அழகிய திருமுடி எங்குளது? என்று சொல்லப்புகின், அது சொல்லின் அளவைக் கடந்து நின்ற பழமையுடையது எனப்படும். இவைகளைக் கேட்டாயாயின் முதலும் குணமும் இல்லாதவனும், முடிவு இல்லாதவனுமாகிய அவனை நீ இங்கு வரும்படி கூவி அழைப்பாயாக.

விளக்கவுரை

'கேட்டியேல்' என்றதனை, 'நின்ற' என்றதன் பின்னரும், 'ஆதி' என்றதனை, 'அந்தம்' என்றதன் முன்னரும் கூட்டுக. கீதம் - இசை. 'இனிய' என்ற பெயரெச்சக் குறிப்பு, இடப் பெயர் கொண்டது. கேட்டியேல் - இவற்றைக் கேட்டுணர்ந்தாயாயின் (அவன் வரக்கூவாய் என்க). 'இரண்டு, முடி' என்றவை, அவற்றின் அளவைக் குறித்தன. பாதாளம், 'பாதலம்' என்பதன் மரூஉ; 'கீழுலகம்' என்பது பொருள். 'அப்பாலும், இறந்தும்' என உம்மை விரித்து, அவற்றை, 'நின்ற' என்றதனோடு முடிக்க. மணி - அழகு. தொன்மை- அனாதி. இஃது, ஒரு பெயர்த் தன்மைப்பட்டு நின்ற, 'ஆதிகுணம் ஒன்றும் இல்லான் அந்தம் இல்லான்,' என்றதனோடு, இரண்டாவதன் பொருள்படத் தொக்கது. 'தொன்மை ஆதி' என்றே இயைத்து, 'அதனையே வேறொரு பெயராகக்கொண்டு உணர்த்தலுமாம். குணம், மாயையின் காரியமாகிய குணம். 'ஒன்றும்' என்றது, 'ஒன்றேனும்' என்ற இழிவு சிறப்பு. எனவே, 'சாத்துவிகம்' இராசதம், தாமதம்' என்னும் முக்குணங்களுள் ஒன்றேனும் இல்லாதவன் என்றதாம். முக் குணங்களுள் ஒன்றேனும் இல்லாதவன் என்றற்கே முதல்வனை, 'நிற் குணன்' என்றதன்றி, அறுகுணம் அல்லது எண் குணம் எனப்படும் அருட்குணமும் இல்லாதவன் என்றற்கு அன்று. இஃதறியாதார் 'நிற்குணம்' என்பது பற்றி, முதற்பொருட்கு குணகுணித்தன்மையால் வேறுபாடு கூறுதல் தானும் குற்றமாம்' எனவும், அதனால் அங்ஙனங் கூறுவோர் சகுணோபாசனையாகிய கீழ்நிலையில் நிற்பவர் எனவும் கூறித் தமது ஞானத்தின் தன்மையைப் புலப்படுப்பர்.

ஏர்தரும் ஏழுல கேத்த
எவ்வுரு வுந்தன் னுருவாம்
ஆர்கலி சூழ்தென் னிலங்கை
அழகமர் வண்டோ தரிக்குப்
பேரரு ளின்ப மளித்த
பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே

தென்பாண்டி நாடனைக் கூவாய். **#348**

குயிலே! அழகுடன் விளங்கும் ஏழுலகத்தாரும் வணங்க எவ்வகை உருவங்களும், தன் உருவமாகவே உடைய வனாய், நிறைந்த முழக்கமுடைய கடல் சூழ்ந்த தென்னிலங்கையில், அழகு பொருந்திய இராவணன் மனைவியாகிய மண்டோதரிக்குப் பெருங்கருணையால் இன்பத்தைக் கொடுத்த, திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள பெருமானைத் தென்பாண்டி நாட்டையுடைய வனைச் சிறந்த உன் வாயினால் கூவி அழைப்பாயாக.

விளக்கவுரை

ஏர் தரும் - அழகைப் புலப்படுத்துகின்ற. எவ்வுருவும் தன் உருவாய் நிற்றலாவது, எப்பொருளிலும் தான் அவையேயாய்க் கலந்திருத்தல், 'உருவாய்' என்ற வினையெச்சம், எண்ணின்கண் வந்தது, 'உருவாம்' என்பதும் பாடம். ஆர்கலி - கடல். வண்டோதரி, இராவணன் மனைவி. தசக்கிரீவன் சிவபெருமானது கயிலாய மலையைப் பெயர்த்து அப்பெருமானால் ஒறுக்கப்பட்டுப் பின்னர்ச் சாமகானம் பாடி வாளொடுநாளும், 'இராவணன்' என்னும் பெயரும் பெற்று மீண்டபின், இலங்கையில் சிவபூசையை விடாது செய்து வந்தமை, புராணங்களினும், இதிகாசங்களிலும் இனிது விளங்கிக் கிடப்பது. இராவணன் சிவபத்தன் ஆயினமையின், அவன் மனைவி மக்கள் முதலிய சுற்றத்தாரும், பிறரும் எல்லாம் சிவவழிபாட்டில் ஈடுபட்டிருந்தமை பெறப்படும். 'அவ்வாற்றால் சிவபெருமானிடத்து அன்பு கொண்டிருந்த, இராவணன் மனைவி மண்டோதரி, அப் பெருமானைக் குழந்தை வடிவில் எடுத்தணைத்து இன்புற வேண்டி னாள்' எனவும், 'அவ்வாறே ஒருநாள் சிவபெருமான் அவளுக்குக் குழந்தை வடிவில் காட்சியளிக்க, மண்டோதரி எடுத்தணைத்து இன்புற் றிருக்கும்பொழுது இராவணன் வர, அவனிடமும் சிவபெருமானது திருவருட் செயலைக்கூறிக் குழந்தையைக் கொடுக்க அவனும் எடுத் தணைத்து மகிழ்கையில் சிவபெருமான் மறைந்தருளினார்' எனவும் சொல்லப்படும் பழைய வரலாறு பற்றி, 'மண்டோதரிக்குப் பேரருள் இன்பம் அளித்தபிரான்' என்று அருளிச்செய்தார். அடிகள் திரு மொழியுள்ளே இது காணப்படுதல் பற்றி, இவ்வரலாறு திருவுத்தரகோச மங்கைத்தலத்தோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகிறதுபோலும்! 'சிவபெருமான் மண்டோதரிக்குக் குழந்தையாகத் தோன்றி அவளது குறையை நிரப்பி இன்பம் அடையச் செய்தார்' என்னும் இதனைப் புறச்சமயிகள், 'காமாதுரராய் அவள் பாற்சென்று, இராவணன் வந்தபொழுது மறைந்தார்' எனத் திரித்துக் கூறுவர். திரி புரத்தவர்போலாது இராவணன் தான் சாங்காறும் சிவவழிபாடுடைய னாய் இருந்தனன்

என்பதையும் அவர் நினைந்திலர் போலும்! அற நெறியிற் பிழைத்தவனை அழித்தமையால் புண்ணியம் ஒருபால் எய்திற்றாயினும், சிவவழிபாடுடையவனை அழித்தமையால் உளதாய பாதகமும் ஒருபால் வந்து பற்ற, அதனை நீக்கிக் கொள்ளுதற் பொருட்டு அத்தென்கடற் கரையிற்றானே, இராமன் தன் மனைவி முதலாயினாரோடும் சிவபிரானை வழிபட்டு நலம் பெற்றான் என யாண்டும் பெருவார்த்தையாய் விளங்கிவரும் வரலாற்றினை உடம் படமாட்டாது பிணங்குகின்ற அவர், இன்னோரன்னவற்றைப் படைத்துக் கொண்டு மொழிதல் வியப்பன்று. சிவபெருமான் காமனை எரித்தவர் என்பதையும், காமனுக்கு அத்தொழிலும் அப்பெருமானால் அளிக்கப்பட்டது என்பதையும் அவர் அறியார். ஈண்டு அடிகள், சிவ பெருமான் அளித்த இன்பத்தை, 'பேரின்பம்' எனவும், 'அருள் இன்பம்' எனவும் விதந்தருளிச் செய்தமையானும், திருவார்த்தைப் பகுதி இரண்டாம் திருப்பாட்டினுள், 'பந்தணை மெல்விரலாட்கு அருளும் பரிசு' என்றே அருளிப் போதலானும் புறச் சமயிகளது கூற்றுப்பற்றி மயங்குதற்கு இடனின்மை அறிந்து கொள்க. அன்றியும், இது சிவபிரான் புகழ்ப்பாடலேயன்றி, வேறாகாமையும் நோக்கி யுணர்க.

நீல உருவிற் குயிலே
நீள்மணி மாடம் நிலாவும்
கோல அழகிற் றிகழுங்
கொடிமங்கை உள்ளுறை கோயிற்
சீலம் பெரிதும் இனிய
திருவுத் தரகோச மங்கை
ஞாலம் விளங்க இருந்த
நாயக னைவரக் கூவாய். **#349**

நீல நிறத்தை உடைய குயிலே! நீள் மணிகள் பதித்த பெரிய மாடங்கள் விளங்குவதும், நல்லொழுக்கத்தால் மிக இனியது மான, திருவுத்தரகோச மங்கையில் பொருந்தியுள்ள திருக்கோயிலில் அழகிய வடிவில் விளங்கும் பூங்கொடி போன்ற உமாதேவியுடன் உலகத்திற்கு விளக்கம் உண்டாகும்படி வீற்றிருந்த தலைவனை வரும் படி கூவி அழைப்பாயாக.

விளக்கவுரை

'நிலாவும் கோயில், உள்ளுறை கோயில், எனத் தனித் தனி முடிக்க. கோல உருவின் - அழகிய உருவத்துடன். கொடி மங்கை - பூங்கொடிபோலும் உமையம்மை. 'அவள் உள்ளிடத்தே உறையும் கோயிலையுடைய உத்தரகோச மங்கைக்கண் இருந்த நாயகன்' என்க. இங்ஙனங் கூறவே, 'அவ்வம்மை உடனாக இருந்தவன்' என்பது பெறப்பட்டது, இத்தலத்தில் நல்லொழுக்கம் சிறந்து விளங்குதலின்,

'சீலம் பெரிதும் இனிய திருவுத்தரகோச மங்கை' என்று அருளிச் செய்தார்.

தேன்பழச் சோலை பயிலுஞ்
சிறுகுயி லேஇது கேள்நீ
வான்பழித் திம்மண் புகுந்து
மனிதரை ஆட்கொண்ட வள்ளல்
ஊன்பழித் துள்ளம் புகுந்தென்
உணர்வது வாய ஒருத்தன்
மான்பழித் தாண்டமென் னோக்கி
மணாளனை நீவரக் கூவாய். **#350**

தேன் நிறைந்த பழங்களையுடைய சோலைகளில் வசிக்கின்ற சிறிய குயிலே! நீ இதனைக் கேட்பாயாக! விண்ணுலகத்தை விட்டு நீங்கி இம்மண்ணுலகத்து எழுந்தருளி, மக்களை அடிமை கொண்ட அருளாளனும் என் உடம்பினை இகழ்ந்து என் நெஞ்சினுள் புகுந்து, என் உணர்வில் கலந்த ஒப்பற்றவனும், மானினது பார்வையை இகழ்வதாயும், ஆளும் தன்மையுடையதாயும், இனிமையுடையதாயு முள்ள பார்வையையுடைய உமாதேவிக்கு நாயகனுமாகிய இறை வனை வரும்படி நீ கூவி அழைப்பாயாக.

விளக்கவுரை

தேன்பழம், உம்மைத் தொகை. 'சோலை பயிலும்' என ஏழாவதன் தொகைக்கண் வல்லினம் மிகாதாயிற்று. தேவர்களை ஆட்கொள்ளாமையால், 'வான்பழித்து' என்று அருளினார். ஊன் பழித்து - உடம்பினை இழிந்தது எனச் சொல்லி. என் உணர்வு அது ஆய - என் அறிவாகிய அப்பொருளேயாய்க் கலந்துநின்ற. மான் பழித்து ஆண்ட - மானை வென்று அடிமைகொண்ட. மென்மை, இங்கு, தண்மை குறித்து நின்றது.

சுந்தரத் தின்பக் குயிலே
சூழ்சுடர் ஞாயிறு போல
அந்தரத் தேநின் றிழிந்திங்
கடியவர் ஆசை அறுப்பான்
முந்தும் நடுவும் முடிவு
மாகிய மூவ ரறியாச்
சிந்துரச் சேவடி யானைச்
சேவக னைவரக் கூவாய். **#351**

அழகிய இன்பக் குயிலே! சூழ்ந்த கிரணங்களை யுடைய சூரியனைப் போல ஆகாயத்தினின்றும் இறங்கி இம் மண்ணுலகிலுள்ள அடியார்களுடைய பற்றுக்களை ஒழிப்பவனும் உலகத்திற்கு முதலும்

இடையும் இறுதியும் ஆகியவனும் பிரமன் திருமால் உருத்திரன் ஆகிய மூவரும் அறியமுடியாத செஞ்சாந்து போன்ற சிவந்த திருவடியை உடையவனும் வீரனுமாகிய பெருமானை வரும்படி கூவி அழைப்பாயாக.

விளக்கவுரை

சுந்தரம் - அழகு, வருமொழி பெயராய இரண்டாவதன் தொகைக்கண், 'சுந்தரத்து' என அத்துச்சாரியை பெற்றது. சூழ் சுடர் ஞாயிறு - சுற்றிலும் பரவுகின்ற கதிர்களையுடைய கதிரவன். ஆசை யறுத்தல், பாசத்தை நீக்குமுகத்தான் என்க. முந்து முதலிய மூன்றும் உலகத்தினுடையன. அவற்றைச் செய்யும் பிரமன் முதலிய மூவரையும் அவையேயாக அருளினார். சிந்துரம் - செஞ்சாந்து. 'அதுபோலும் செவ்விய வாய அடிகளை உடையவன்' என்க. சேவகன் - பாசங்களை அழிக்கும் வீரன்.

இன்பந் தருவன் குயிலே
ஏழுல கும்முழு தாளி
அன்பன் அமுதளித் தூறும்
ஆனந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவ டொத்த
நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே
கோகழி நாதனைக் கூவாய். **#352**

குயிலே! மரக்கிளையில் இருந்து கூவுகின்ற குயிலே! உனக்கு இன்பத்தைச் செய்வேன். ஏழு உலகத்தையும் முற்றும் ஆள்வோனும், அன்பனும், இனிய அமுதத்தைப் பெய்து அடியார் உள்ளத்தே ஊறுகின்ற ஆனந்த வடிவானவனும், விண்ணினின்றும் எழுந்தருளிய தேவனும், உயர்ந்த பொன்னில் மாணிக்கங்களைப் பதித்தது போன்ற, நல்ல குதிரையின் மீது வந்தவனும், திருப்பெருந் துறைத் தலைவனுமாகிய பெருமானைக் கூவி அழைப்பாயாக.

விளக்கவுரை

முதற்கண் நின்ற, 'குயிலே' என்பதனை, 'உனக்கு இன்பம் தருவன்' என்றும், இறுதிக்கண் நின்ற, 'குயிலே' என்பதனை, 'கூவாய்' என்றும் முடிக்க. 'தருபவன் இவன்' என்பது பின்னர் வருகின்றமையின், 'இன்பந் தருவன்' என்பது வாளா கூறப்பட்டது. 'ஏழுலகும்' என்ற முற்றும்மை, அவ்வுலகங்களை எஞ்சாமல் ஆளு தலையும், 'முழுது' என்றது, அவற்றுள் எல்லா இடங்களையும் எஞ்சாமல் ஆளுதலையும் குறித்தன. அன்பன் - அன்புடையவன். 'அமுது' என்றது, இன்பப் பொருளாகிய அவனையேயாம். ஊறும் - மேன்மேல் மிகுகின்ற. ஆனந்தன் -

இன்பவடிவினன். வான்வந்த தேவன் - வானத்தில் தேவர்களில் ஒருவனாயும் காணப்படுபவன். நன் பொன் மணிச்சுவடு - நல்ல பொன்னினது அழகிய உரை. இது, சிவபெருமானது திருமேனிக்கு உவமை. 'அழகிய இடத்தில் இருந்து, இனிமையாகக் கூவ வல்லாய்' என்பாள், 'கொம்பின் மிழற்றும் குயிலே' என மறித்துங் கூறினாள்.

உன்னை உகப்பன் குயிலே
உன்துணைத் தோழியும் ஆவன்
பொன்னை அழித்தநன் மேனிப்
புகழில் திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த
வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன்
சீர்ப்புயங் கன்வரக் கூவாய். **#353**

குயிலே! உன்னை விரும்புவேன்; உனக்குத் துணை புரியும் தோழியுமாவேன்; பொன்னை வென்ற, அழகிய திருமேனியை யுடைய, புகழினால் விளங்குகின்ற, அழகனும் அரசனும் குதிரைமேல் ஏறிவந்த அருளாளனும் திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள பாண்டியனும், சேரனும், சோழனும், சிறந்த பாம்பு அணிகளை உடையவனுமாகிய பெருமானை வரும்படி கூவி அழைப்பாயாக.

விளக்கவுரை

'உகப்பன், ஆவன்' என்றவை, தன்மை வினை முற்றுக்கள். உகத்தல் - விரும்புதல். இங்குக் குயிலாவது, பெடைக் குயிலே, யாதலின், 'உனக்குத் துணையாகிய தோழியும் ஆவேன்' என்றாள். பெடைக்குயில் என்பதனை, 'செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீ' எனப் பின் வருகின்ற பகுதியுட் (*தி.8 திருத்தசாங்கம் 4*) கூறுமாற்றானும் அறிக. இனிச் சேவல் என்றே கொண்டு, 'துணை' என்றது அதன் பெடையை என வைத்து, 'உன் துணைக்குரிய தோழியும் ஆவன்' என உரைத்தலுமாம். இவற்றைப் படர்க்கை வினையாகக் கொண்டு, இறைவற்கு ஆக்கியும் உரைப்ப. 'புகழின் திகழும் அழகன்' என்றது, 'புகழையே அழகாக உடையவன்' என்றபடி. 'தென்னவன், சேரலன், சோழன்' என்றது, 'தமிழகத்தைச் சிறப்பிடமாகக் கொண்டவன்' என்றதாம்.

வாவிங்கே நீகுயிற் பிள்ளாய்
மாலொடு நான்முகன் தேடி
ஓவி யவர் உன்னி நிற்ப
ஒண்டழல் விண்பிளந் தோங்கி
மேவிஅன் றண்டங் கடந்து
விரிசுட ராய்நின்ற மெய்யன்

தாவி வரும்பரிப் பாகன்
தாழ்சடை யோன்வரக் கூவாய். **#354**

இளங்குயிலே! நீ இவ்விடத்து வருவாயாக. திருமாலோடு பிரமனும், அடிமுடிகளைத் தேடி, தேடுவதை விட்டு அவ்விருவரும், தன்னைத் தியானித்து நிற்கும்படி அக்காலத்தில் ஒளி மிக்க அனற் பிழம்பாய், ஆகாயத்தைப் பிளந்து உயர்ந்து, பொருந்தி, விண்ணுலகங்களையும் தாண்டி, பரந்த சுடர்களை விட்டுக்கொண்டு நின்ற உண்மைப் பொருளானவனும், தாவி வருகின்ற குதிரைப் பாகனாயிருப்பவனும், நீண்ட சடையை உடையவனுமாகிய தலைவனை வரும்படி கூவி அழைப்பாயாக.

விளக்கவுரை

பிள்ளைப் பறவைகளிற் குயிலும் ஒன்றாதல் பற்றி, *'குயிற் பிள்ளாய்'* என விளித்தாள். *'இங்கே வா'* என அருகில் அழைத்தது, *'மறைபொருளைக் கேட்டற்குரிய நண்பினை'* என்பது புலப்படவாம். தேடி ஓவி - தேடிக் காண மாட்டாது அத்தொழிலை விடுத்து, *'பின்பு அவர் அன்பால் நினைந்து நிற்குமாறு'* என்க. *'மேவி'* என்றதனை, *'மேவ'* எனத் திரிக்க.

காருடைப் பொன்திகழ் மேனிக்
கடிபொழில் வாழுங் குயிலே
சீருடைச் செங்கம லத்திற்
றிகழுரு வாகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப்
பாசம் அறுத்தெனை யாண்ட
ஆருடை அம்பொனின் மேனி
அமுதினை நீவரக் கூவாய். **#355**

கரிய நிறத்தோடு பொன்னைப் போன்று ஒளி விளங்கும் உடம்பை உடைய, மணம் நிறைந்த சோலையில் வாழ்கின்ற குயிலே! சிறப்பினையுடைய செந்தாமரை போல விளங்குகின்ற திருமேனியையுடைய செல்வனும், நிலவுலகத்தில் திருவடிகளைக் காட்டிப்பற்றுக்களை ஒழித்து என்னை ஆண்டருளிய, ஆத்தி மாலையையுடைய அழகிய பொன்போலும் மேனியையுடைய அமுதம் போல்பவனுமாகிய எம் பெருமானை வரும்படி நீ கூவி அழைப்பாயாக.

விளக்கவுரை

கார் - கருமை நிறம். *'உடைய'* என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. பொன் - அழகு. *'காருடை மேனி, பொன்திகழ் மேனி'* எனத் தனித்தனி முடிக்க. கடி - நறுமணம். செங்கமலத்தின் - செந்தாமரை மலர்போல; *'செந்தாமரைக்காடு அனைய மேனித் தனிச் சுடரே' (தி.8*

திருச்சதகம்-26) என்று அருளினார். ஆர் - ஆத்தி மாலை.

கொந்தண வும்பொழிற் சோலைக்
கூங்குயி லேயிது கேள்நீ
அந்தண னாகிவந் திங்கே
அழகிய சேவடி காட்டி
எந்தம ராம்இவன் என்றிங்
கென்னையும் ஆட்கொண் டருளும்
செந்தழல் போல்திரு மேனித்
தேவர் பிரான்வரக் கூவாய். **#356**

பூங்கொத்துக்கள் நெருங்கிய பெரிதாகிய சோலையில் கூவுகின்ற குயிலே! நீ இதனைக் கேட்பாயாக. இங்கே அந்தணன் ஆகி வந்து அழகிய செம்மையாகிய திருவடியைக் காட்டி, என் அன்பரில் ஒருவனாம் இவன் என்று இவ்விடத்தில் என்னையும் அடிமை கொண்டருளிய சிவந்த தீப்போலும் திருமேனியையுடைய தேவர் பெருமான் வரும்படி கூவி அழைப்பாயாக.

விளக்கவுரை

கொந்து - பூங்கொத்து. அணவும் - பொருந்திய. 'கூவும்' என்னும் பெயரெச்சத்து உயிர்மெய் கெட்டது. எம்தமர் - எம் உறவினர். 'தமர்' என்றது பன்மை யொருமை மயக்கம். என்று - என்று இரங்கி.

1.19.திருத்தசாங்கம்

ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம் தேர்ந்துரையாய் - ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்
எம்பெருமான் தேவர்பிரான் என்று. **#357**

அழகு பொருந்திய இளமையான கிளியே! எம்முடைய திருப்பெருந்துறை மன்னனது சிறப்புப் பொருந்திய திருப்பெயரைத் தூய தாமரை மலர் மேலிருக்கும் பிரமன், பாற்கடலில் பள்ளி கொள்ளும் திருமால், ஆகியோர் சொல்வதுபோல, திரு ஆரூரன்; சிவந்த திருமேனியையுடையவன்; எம்பிரான்; தேவர் பெருமான் என்று ஆராய்ந்து சொல்வாயாக.

விளக்கவுரை

தசாங்கத்துள் இது பெயர் கூறுகின்றது. தலைவனது பிரிவினால் ஆற்றாளாய தலைவி தலைவனது பெயர் முதலியவற்றைப் பிறர் சொல்லக்கேட்பினும் அவனைக்கூடி மகிழ்ந்தாற் போலும் இன்பம் உண்டாகும் என்னும் நினைவினளாய், அது கிடைக்கப் பெறாமையின், கிளியை நோக்கி அவற்றைக் கூறுமாறு வேண்டிக் கொள்கின்றாள்.

இவ்வாறே,

சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன்; மொய்பவளத் தொடுதரளம்
துறையாரும் கடல்தோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயோ.
-தி.1 ப.60 பா.10

என்றாற்போல தேவாரத் திருமுறைகளிலும் வருவன காண்க. ஏர் ஆர் - அழகு பொருந்திய. நாமம் - பெயர். ஆரூரன் - திருவாரூரில் எழுந்தருளியிருப்பவன். செம்பெருமான் - சிவந்த நிறத்தையுடைய பெருமான். வெண்மை, இங்கு, தூய்மைமேல் நின்றது. 'கிளியே, மலரானும், பாற்கடலானும் செப்புவபோல நீ, பெருந்துறைக்கோனது திருநாமங்கள் பலவற்றையும் ஆராய்ந்து, ஆரூரன், செம்பெருமான், எம்பெருமான், தேவர்பிரான் என்று உரையாய்' என வினை முடிக்க. இங்ஙனம் பல பெயர்களைக் கூறினாராயினும், 'தேவர்பிரான்' என்பதே முதன்மைப் பெயர் என்றல் திருவுள்ளமாதலை, 'தேவதேவன் திருப்பெயராகவும்' *(தி.8 கீர்த்தி. 122)* என முன்னே அருளிச்செய்தமையான் அறிக.

ஏதமிலா இன்சொல் மரகதமே ஏழ்பொழிற்கும்
நாதன்நமை ஆளுடையான் நாடுரையாய் - காதலவர்க்
கன்பாண்டு மீளா அருள்புரிவான் நாடென்றும்
தென்பாண்டி நாடே தெளி. **#358**

குற்றமில்லாத இனிய சொல்லையுடைய மரகதம் போன்ற பச்சைக் கிளியே! தன்மீது அன்புள்ளவர்க்கு, அன்பினால் ஆட்கொண்டு, பிறவிக்கு மீண்டு வாராதபடி அருள் செய்வோனாகிய பெருமானது நாடாவது, எப்பொழுதும் தென்பாண்டி நாடேயாம்; இதனை நீ அறிவாயாக; அறிந்து ஏழுலகுக்கும் தலைவனும் நம்மை அடிமையாக வுடையவனுமாகிய அவனது நாட்டைச் சொல்வாயாக.

விளக்கவுரை

ஏதம் - குற்றம். 'குற்றம் இல்லாத சொல்' என்க. 'மரகதம்' என்றது உவமையாகுபெயராய்க் கிளியை உணர்த்திற்று. பொழில் - உலகம். 'காதலவர்க்கு அருள்புரிவான்' என இயையும். 'அன்பால் ஆண்டு' என மூன்றாம் உருபு விரிக்க. 'நாடு உரையாய்; அங்ஙனம் உரைத்தற்கு அவன் நாடு யாதெனின்' என்று எடுத்துக்கொண்டு, 'அவன் நாடு தென்பாண்டி நாடே' என முடிக்க. இது பின்வருவனவற்றிற்கும் பொருந்தும். 'தென்பாண்டி நாடு' என்றதனை, 'தென்குமரி' என்பதுபோலக் கொள்க. 'பாண்டி நாடே பழம்பதியாகவும்' *(தி.8 கீர்த்தி - 118)* என்று முன்னரும் அருளினார்.

தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமையாளும்
மாதாடும் பாகத்தன் வாழ்பதிஎன் - கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடும்
உத்தர கோசமங்கை ஊர். **#359**

மகரந்தம் பொருந்திய பூக்களையுடைய சோலையிலுள்ள கிளியே! நம்மை ஆண்டருள்கின்ற, உமாதேவி அமர்ந்த பாகத்தையுடையவன், வாழ்கின்ற ஊர் பூமியின்மேல் பத்தர் எல்லோரும் சீராட்டிச் சிவநகர் போலப் புகழ்ந்து போற்றும் திருவுத்தரகோச மங்கையாகிய ஊர் என்று சொல்வாயாக.

விளக்கவுரை

தாது ஆடு - மகரந்தம் நிறைந்த, தத்தை - கிளி. பதி - ஊர். என் - எது; இது, 'மெய்யவற்குக் காட்டல்' என்னும் வினா. 'உத்தரகோச மங்கையே அவனது ஊர்' என்க. அதனை அறிந்து சொல், என்பது குறிப்பெச்சம்.

செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீநம் சிந்தைசேர்
ஐயன் பெருந்துறையான் ஆறுரையாய் - தையலாய்
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்
ஆனந்தங் காண்உடையான் ஆறு. **#360**

சிவந்த வாயினையும், பசுமையான சிறகினையும் உடைய செல்வியே! பெண்ணே! மேன்மை பொருந்திய சிந்தையிலே யுள்ள குற்றங்களைப் போக்க வந்து இறங்குகின்ற ஆனந்தமே, எம்மை ஆளாகவுடையவனது ஆறாகும். சிந்தையைச் சேர்ந்த தந்தையாகிய திருப்பெருந்துறையையுடைய அவனது அந்த ஆற்றினை உரைப் பாயாக.

விளக்கவுரை

'சிறகின்' என, வருமொழி பெயராதலின், சாரியை நிற்க இரண்டாம் உருபு தொக்கது. 'செல்வி' என்னும் பெயரின் இறுதி இகரம், விளியேற்றற்கண் நீண்டது, 'செல்வீ, தையலாய்' என்றவை உயர்த்தற்கண் அஃறிணை உயர்திணையாயவாறு. வான் - உயர்வு. 'உயர்வு வரப்பெற்ற சிந்தை' என்றது, ஞானம் கைவரப்பெற்ற உள்ளத்தை. 'சிந்தையது மலத்தை' என்க. கழுவுதல் - பற்றறக் களைதல். 'ஆனந்தம்மே ஆறா' *(தி.8 கீர்த்தி. 106)* என்றே முன்னரும் அருளிச் செய்தார்.

கிஞ்சுகவாய் அஞ்சுகமே கேடில் பெருந்துறைக்கோன்
மஞ்சன் மருவும் மலைபகராய் - நெஞ்சத்
திருளகல வாள்வீசி இன்பமரு முத்தி
அருளுமலை என்பதுகாண் ஆய்ந்து. **#361**

முருக்கம்பூப் போலச் சிவந்த வாயினையுடைய அழகிய கிளியே! அழிதல் இல்லாத திருப்பெருந்துறை மன்னனாகிய மேகம் போல்பவன், தங்கியிருக்கின்ற மலை, மனத்திலேயுள்ள அறியாமையாகிய இருள் நீங்க ஞானமாகிய ஒளியை வீசி இன்பம் நிலைத்திருக்கும் வீடுபேற்றினை அளிக்கின்ற அருளாகிய மலை என்பதை ஆராய்ந்து சொல்வாயாக.

விளக்கவுரை

கிஞ்சுகம் - முள்முருக்கு; அஃது ஆகுபெயராய், அதன் பூவைக் குறித்தது. அம் சுகம் - அழகிய கிளி. மஞ்சன், 'மைந்தன்' என்பதன் போலி; 'வலிமையுடையவன்' என்பது பொருள். வாள் - ஒளி. 'இருள், ஒளி' என்பன முறையே, அஞ்ஞானத்தையும், ஞானத்தையும் உணர்த்தி நின்றன. 'அருளும்' என்னும் பெய ரெச்சத்திற்கு முடிபாகிய 'அருள்' என்பது தொகுத்தலாயிற்று. 'இருள் கடிந் தருளிய இன்ப ஊர்தி - அருளிய பெருமை அருள் மலையாக வும்' *(தி.8 கீர்த்தி. 123, 124)* என்று முன்னர் அருளியவாறு அறிக. 'அருளே, அறிவரால் ஆராய்ந்து மலை எனப்படுவது' என்க. 'காண்' என்றதனை ஈண்டு அசையாக்காது, 'மலை என்பதனை ஆய்ந்து காண்' என முடிப்பாரும் உளர்.

இப்பாடே வந்தியம்பு கூடுபுகல் என்கிளியே
ஒப்பாடாச் சீருடையான் ஊர்வதென்னே **-** எப்போதும்
தேன்புரையுஞ் சிந்தையராய்த் தெய்வப்பெண் ணேத்திசைப்ப
வான்புரவி ஊரும் மகிழ்ந்து**. #362**

எனது கிளியே! கூட்டில் புகாதே! உவமையில்லாத சிறப்பையுடைய பெருமான் ஊர்தியாகக் கொள்வது எது எனில், எக்காலத்தும் தெய்வப் பெண்கள் தேன்போலும் இனிய சிந்தனையை யுடையவராய், துதிபாட மகிழ்ச்சி கொண்டு பெருமையுடைய வேத மாகிய குதிரையை ஏறி அவன் வருவான். இவ்விடத்தே வந்து அதனைச் சொல்வாயாக.

விளக்கவுரை

இப்பாடு - இவ்விடம். 'இப்பாடே வந்து இயம்பு' என்றதனை இறுதியிற் கூட்டுக. கூடுபுகல் - கூட்டினுள் புகுந்து விடாதே. ஒப்பு ஆடா - உவமை சொல்ல ஒண்ணாத. ஆடுதல், சொல்லாடுதல். சீர் - புகழ். 'தேன்புரையும் சிந்தை' என்றது, 'இன்பத்தையுடைய மனம்' என்றவாறு. 'பெண்கள்' என்பதன் இறுதிநிலை தொகுக்கப்பட்டது. 'புரவியை வானத்து ஊரும்' என்க. வானத்து ஊர்தல், வானகதியாகச் செலுத்துதல். அதனானே தெய்வ மகளிர் இன்புற்று ஏத்துவர் என்க. 'பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்' *(தி.8 கீர்த்தி. 116)* என முன்னரும் அருளிச் செய்தார்.

கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில்பெருந்துறைக்கோன்

மாற்றாரை வெல்லும் படைபகராய் - ஏற்றார்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயுங்
கழுக்கடைகாண் கைக்கொள் படை. **#363**

கொம்புத் தேன் போன்ற இனிய மொழியையுடைய கிளியே! குற்றமில்லாத திருப்பெருந்துறைக்கு மன்னன், தனது கையில் ஏந்தும் ஆயுதம், தன்னால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடியவரது களங்கம் அடையாத மனம் உருகும்படி மும்மலங்களையும் அறுப்ப தான சூலமே. பகைவரை வெல்லுகின்ற அந்த ஆயுதத்தினைக் கூறு வாயாக.

விளக்கவுரை

கோல் தேன் - கொம்புத்தேன். ஏற்றார் - ஏற்றுக் கொள்ளப்பட்டார்; ஆட்கொள்ளப்பட்டார். 'ஏற்றாரது நெஞ்சு உருக' என்க. 'அவரதுருடைய மும்மலங்களின்மேல் பாயும்' என வேண்டுஞ் சொற் களை விரித்துரைக்க. கழுக்கடை - சூலம். 'கழுக்கடை தன்னைக் கொண்டருளியும்' *(தி.8 கீர்த்தி. 110)* என்றே முன்னரும் அருளிச் செய்தார்.

இன்பால் மொழிக்கிள்ளாய் எங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும் முரசியம்பாய் - அன்பாற்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை. **#364**

இனிய பால்போன்ற மொழியினையுடைய கிளியே! எங்கள் திருப்பெருந்துறை மன்னனது முன்பு ஒலிக்கின்ற முரசினைப் பற்றிக் கூறுவாயாக. அன்பு காரணமாக அடியவரது பிறவி யாகிய பகை கலங்கி அழிய, பேரின்ப நிலையிலே மிக்கு ஒலிக்கும் பருமைமிகுந்த நாதமே பறையாகும்.

விளக்கவுரை

பால்மொழி - பால்போலும் சொல். முன்பால் - முன்பக்கத்தில். 'முற்பால்' என்பது, மெலிந்து நின்றது. 'முன்பு' எனப் பிரித்து, 'ஆல், அசைநிலை' என்றலுமாம். பேரின்பத்து - பேரின்பத் துடன்; என்றது, 'பேரின்பம் உண்டாக' என்றபடி. ஓங்கும் - மிக ஒலிக்கின்ற. பருமையை உணர்த்தும், 'பரு' என்னும் உரிச்சொல், இங்குப் பெருமைமேல் நின்றது. நாதம் - நாத தத்துவம். இஃது ஏனை எல்லாத் தத்துவங்களினும் பெரிதாதலை அறிந்துகொள்க. 'நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்' *(தி.8 கீர்த்தி - 108)* என முன்னரும் அருளிச் செய்தார். இதன் ஈற்றடி எதுகையின்றி வந்தது; இதனை, 'இன்னிசை வெண்பா' என்பர்.

ஆய மொழிக்கிள்ளாய் அள்ளூறும் அன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த்தார்என் - தீயவினை

நாளுமணு காவண்ணம் நாயேனை ஆளுடையான்
தாளிஅறு காம்உவந்த தார். **#365**

இனிமை பொருந்திய மொழிகளையுடைய கிளியே! தீவினைகள் நாளும் அணுகா வண்ணம் நாயேனை ஆளாக உடையவன், விரும்பி அணிந்த மாலை அறுகம்புல் மாலையேயாம்; அதுவே, என்பும் உருகுகின்ற அன்பரிடத்துப் பொருந்துகின்ற திருப் பெருந்துறை மன்னனது உண்மையாகிய மாலை என்று சொல்வாயாக.

விளக்கவுரை

ஆய - கற்றதனால் உளதாய. அள் ஊறும் அன்பர் - மிகச் சுரக்கின்ற அன்பினை உடையவர். மெய் - திருமேனி. 'அவன் உவந்த தார்' எனச் சுட்டுப் பெயர் வருவிக்க. முன்னர்க் 'கழுநீர்மாலை' கூறியதற்குக் காரணம், ஆண்டு*(தி.8 கீர்த்தி. 113)*க் காட்டப்பட்டது.

சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங் கொடிகூறாய் - சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி ஏர்காட்டுங்
கோதிலா ஏறாம் கொடி. **#366**

சோலையில் வாழ்கின்ற பச்சைக் கிளியே! தூய்மையான நீர் சூழ்ந்த திருப்பெருந்துறை மன்னனது கொடியாவது, பகைவர் மிகவும் திடுக்கிட்டு அஞ்சும்படி மேலே விளங்கி, அழகைக் காட்டுகின்ற குற்றமில்லாத இடபமேயாகும். அழகு விளங்கும் அக்கொடியினைக் கூறுவாயாக.

விளக்கவுரை

ஏதிலார் - பகைவர். 'சாலவும் துண்ணென்ன' என இயையும். துண்ணென் - மனம் நடுங்கல், ஏர் - அழகு. ஏறு - இடபம். 'கொடி ஏறாம்' என்க. முன்னர் நீற்றுக் கொடி கூறியதற்கும் காரணம் ஆண்டு*(தி.8 கீர்த்தி. 104)*க் கூறப்பட்டது.

1.20.திருப்பள்ளியெழுச்சி

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. #367 ★★★★★

என் வாழ்வுக்குத் தாரகமாகிய பொருளே! சேற்றினிடத்து இதழ்களையுடைய தாமரை மலர்கள் மலர்கின்ற குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த, திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவபிரானே! உயர்ந்த இடபக் கொடியை உடையவனே! என்னை அடிமையாக உடையவனே! எம் தலைவனே! வணக்கம். பொழுது விடிந்தது; தாமரை போலும் திருவடிகளுக்கு ஒப்பாக இரண்டு மலர் களைக் கொண்டு சாத்தி அதன் பயனாக உன்னுடைய திருமுகத்தில் எங்களுக்கு அருளோடு மலர்கின்ற அழகிய நகையினைக் கண்டு உன் திருவடியைத் தொழுவோம்; பள்ளி எழுந்தருள்வாயாக.

விளக்கவுரை

முதல் - நிதி. 'என்' என்றது, 'முதல்' என்றதனோடு இயைய, 'வாழ்' என்றது இடைநிலையாய், ஏதுப் பொருண்மேல் வந்த வினைத்தொகை நிலைபட அதனோடு தொக்கது. இனி, 'வாழ்' என்றதனை முதனிலைத் தொழிற் பெயராகக் கொண்டு, 'வாழ்விற்கு' என உருபு விரித்தலுமாம். இப்பொருட்கு, முதல், 'காரணம்' என்னும் பொருளதாம். 'நின் பூங்கழற்கு இணையான துணைமலர்களைக் கையில் கொண்டு ஏற்றி' என்க. 'துணை' என்றது கூட்டத்தை. 'மலர்கள்' என்றது, பலவகை மலர்களையும். பொலிவு பற்றி எம் மலரும் இறைவனது திருவடிகளுக்கு ஒப்பாவனவாம். ஏற்றி - தூவி. மலரும் - வெளிப்படுகின்ற. 'மலரைக் கொடுத்து, நகையைப் பெறு வோம்' என்பது நயம். 'சேற்றின்கண் மலரும்' என இயையும். 'ஏற்றுக் கொடி, உயர் கொடி' எனத் தனித்தனி இயைக்க. 'முதலாகிய பொருளே, சிவபெருமானே,கொடி உடையாய், எனை உடையாய்,' எம்பெருமானே, போற்றி! (நீ எழுந்தருளினால் நாங்கள்) மலர் கொண்டு ஏற்றி, நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்; பள்ளி எழுந்தருளாய்' என வினைமுடிக்க. 'போற்றி' என்றது, தலைவர்க்கு ஒரு காரியம் சொல்லுவார், முதற்கண் அவர்க்கு வாழ்த்தும், வணக்க மும் கூறுதலாகிய மரபுபற்றியாம். 'எனை

உடையாய்' என்றதனால், இஃது ஒருவர் கூற்றாகவே அருளிச் செய்யப்பட்டதாம்.

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. **#368**

பெரியோய்! திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவபிரானே! அருட்செல்வத்தைக் கொடுக்க வருகின்ற இன்ப மலையே! அலைகளையுடைய கடல் போன்றவனே! சூரியன் தேர்ப் பாகன் இந்திரன் திசையாகிய கீழ்த்திசை அடைந்தான். இருள் முழுதும் நீங்கிவிட்டது. உதய மலையில் உனது திருமுகத்தினின்றும் தோன்று கின்ற கருணையைப் போல, சூரியன் மேல் எழுந்தோறும் உனது கண் போன்ற வாசனை பொருந்திய தாமரை விரிய, அவ்விடத்தில் பொருந் திய கூட்டமாகவும் வரிசையாகவும் விளங்குகின்ற வண்டுகள் இசை பாடுகின்றன. இவற்றைத் திருவுள்ளம் பற்றுக! பள்ளி எழுந்தருள் வாயாக.

விளக்கவுரை

சூரிய உதயத்திற்கு முன்னர்த் தோன்றும் சிவந்த நிறத்தை, 'அருணன்' என்றும், 'அவன் சூரியனது தேரை ஓட்டுபவன்' என்றும், 'அவன் கால் இல்லாதவன்' என்றும் கூறுதல் புராண வழக்கு. 'போய் அகன்றது' என்றது, ஒரு பொருட்பன்மொழி. 'சூரியன்' என்றதனை, இறுதியொற்றுக் கெட்டு நின்ற, 'உதயம்' என்றதன் பின்னர்க் கூட்டுக. 'முகத்தினது' என்பதில், சாரியை நிற்க, உருபு தொக்கது. ஒப்புப் பொருட்கண் வந்த, 'கருணையின்' என்னும் இன்னுருபின் ஈறு திரிந்த றகரம், ஓசையின்பம் நோக்கி மெலிந்து நின்றது. நயனக் கடிமலர் - உனது கண்போலும் விளக்கம் பொருந்திய தாமரை மலர். 'உதயஞ் செய்த சூரியன், நின் திருமுகத்தினது கருணையைப் போல, மேன்மேல் எழுந்தோறும் தாமரை மலர் மேலும் மேலும் மலர்தலைச் செய்ய' என்பது பொருள். அண்ணல் - தலைமையையுடைய (அறுபதம்). முன்னர், 'கோத்தும்பி' என்றது காண்க. இதனை விளியாக்கி, இறைவனைக் குறித்ததாக உரைப்பாரும் உளர். அங்கண் ஆம் - அவ்விடத்து அடைந்த. திரள் நிரை - திரண்ட வரிசைப்பட்ட. அறு பதம் - ஆறுகால்களையுடையவை; வண்டுகள். இவ்வாறே, 'அறுபதம் முரலும்

வேணுபுரம்' *(தி.1 ப.128 அடி.25)* எனத் திருஞானசம்பந்தரும் அருளிச்செய்தார், அலை கடல் - அலையும் கடல்; இஃது, உவம ஆகுபெயர். 'புலரிக் காலமும் நீங்கி, அருணோதயமும், சூரியோதமும் ஆகித் தாமரை மலர்களும் மலர்ந்துவிட்டன; பெருமானே, பள்ளி எழுந்தருள்' என்பது இதன் திரண்ட பொருள்.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளிஒளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. **#369**

தேவனே! திருப்பெருந்துறை உறை சிவபெரு மானே! யாவரும் அறிதற்கு அரியவனே! எங்களுக்கு எளியவனே! எம் தலைவனே! அழகிய குயில்கள் கூவின; கோழிகள் கூவின; பறவைகள் ஒலித்தன; சங்குகள் முழங்கின; நட்சத்திரங்களின் ஒளி மங்கியது. உதய காலத்து வெளிச்சம் தோன்றுகிறது. எமக்கு அன்புடன் சிறந்த நெருங்கிய வீரக்கழலை அணிந்த திருவடிகள் இரண்டையும் காட்டுவாயாக! பள்ளியெழுந்தருள்வாயாக.

விளக்கவுரை

குருகுகள் - *(பிற)* பறவைகள். இயம்பின - ஒலித்தன. ஓவின - நீங்கின. தாரகை - விண்மீன். 'தாரகைகள் ஒளி நீங்கின' என உரைக்க. 'உதயத்து ஒளி ஒருப்படுகின்றது' என மாற்றிக் கொள்க. ஒருப்படுகின்றது - நிலத்தின்கண் வந்து பொருந்தாநின்றது. 'ஒருப் படுகின்றது' என ஒருமையாற் கூறினமையின், 'ஒளி' என்றதற்கு, 'கதிர்கள்' என்றும், 'ஒருப்படுகின்றது' என்றதற்கு, 'ஒருங்கு திரண்டன' என்றும் உரைத்தல் கூடாமை யறிக.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. **#370**

திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவபிரானே! அடியேனையும்

அடிமை கொண்டு, இனிய அருளைச் செய்கின்ற எம் தலைவனே! இனிய ஓசையையுடைய வீணையை யுடையவரும் யாழினையுடையவரும் ஒரு பக்கத்தில், வேதங்களோடு தோத்திரம் இயம்பினர் ஒருபக்கத்தில்; நெருங்கிய தொடுக்கப்பட்ட மலர்களாகிய மாலைகளை ஏந்திய கையை உடையவர் ஒரு பக்கத்தில்; வணங்குதலை உடையவரும், அழுகை உடையவரும், துவளுதலை யுடையவரும் சூழ்ந்து ஒரு பக்கத்தில்; தலையின் மீது, இருகைகளை யும் குவித்துக் கும்பிடுபவர் ஒரு பக்கத்தில் உள்ளார். அவர்களுக் கெல்லாம் அருள்புரிய பள்ளி எழுந்தருள்வாயாக.

விளக்கவுரை

இதனால், வீணையும், யாழும் வேறுவேறு என்பது விளங்கும். 'பண்ணொடியாழ் வீணை பயின்றாய் போற்றி' என்ற திருநாவுக்கரசர் திருமொழியும் காண்க. 'இன்னிசை' என்றது, இரண்டையுங் குறித்தேயாம்.
இருக்கு - வேதம். தோத்திரம் - பிற பாட்டுக்கள். 'திருப் பதிகம்' என்னாது, பொதுப்பட, 'தோத்திரம்' என்றமையால், இது, தேவாரத் திருமுறைகளைக் குறியாமை அறிக. துன்னிய - பிணைத்துக் கட்டிய. பிணை - மாலை. 'மலர்ப் பிணைக் கையினர்' என மாற்றுக. 'ஒருபால்' என்றதனை, 'தொழுகையர், அழுகையர்' என்பவற்றுக்கும் கூட்டுக. தொழுதல் - மார்பிற்கும், முகத்திற்கும் நேராகக் கைகுவித்துக் கும்பிடுதல். துவள்கை - மெலிதல்; இஃது அருள் பெறாமையால் வருவது. ஒருபால் என்பவற்றின் பின்னர், 'நிற்கின்றனர்' என்பன, எஞ்சிநின்றன.

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்
தேதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. **#371**

குளிர்ச்சியைக் கொண்ட, வயல் சூழ்ந்த திருப் பெருந்துறைக்கு அரசனே! நினைத்தற்கும் அருமையானவனே! எங்கள் எதிரில் எழுந்தருளி வந்து, குற்றங்களைப் போக்கி எங்களை ஆட்கொண்டருளுகின்ற எம் பெருமானே! உன்னை, எல்லாப் பூதங்களிலும் நின்றாய் என்று பலரும் சொல்வதும், போதலும் வருதலும் இல்லாதவன் என்று அறிவுடையோர் இசைப்பாடல்களைப் பாடுவதும்; ஆனந்தக் கூத்தாடுவதும் தவிர

உன்னை நேரே பார்த்தறிந் தவர்களை நாங்கள் கேட்டு அறிந்ததும் இல்லை. ஆயினும், யாங்கள் நேரே காணும்படி பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக.

விளக்கவுரை

பின்னர், 'புலவோர்' என்றலின், முதற்கண்' 'பலரும்' என்பது வருவிக்கப்படும். இடைக்குறையாய் நின்ற, 'நின்னை' என்பதை முதலிற் கூட்டுக. 'எனின்' என்றதன் பின், 'என்றல்' என்பது எஞ்சிநின்றது. 'புலவோர்' என்றது, ஆடல் வல்லாரையும் குறித்தாதலின், வாளா, 'ஆடுதல்' என்றார். 'அல்லால்' இரண்டும், வினைக்குறிப்புச் செவ்வெண்ணாய் நின்றன.

'உனைக் கண்டறிவாரை' என்றது, 'ஏனைப் பொருள்களைக் கண்டறிதல் போல, பாச அறிவு பசு அறிவுகளால் உன்னையும் கண்டறிவாரை' என்றபடி. 'இவ்வாறு சிந்தனைக்கும் அரியவனாய் இருப்பவனே, இருந்தும் எங்கள் முன்வந்து எம்மை ஆண்டு அருள்புரியும் எம்பெருமானே, பள்ளி எழுந்தருள்வாய்' என்க.

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. **#372**

உமையம்மைக்கு மணவாளனே! கிண்ணம் போன்ற தாமரை மலர்கள் விரியப்பெற்ற குளிர்ச்சி பொருந்திய வயல்கள் சூழ்ந்த திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவபிரானே! இந்தப் பிறவியை நீக்கி எங்களை ஆட்கொண்டு அருள் செய்கின்ற எம் பெருமானே! மனவிரிவு ஒடுங்க பற்றற்று இருந்து உணருகின்ற உன் அன்பர்கள் உன்பால் அடைந்து பிறவித்தளையை அறுத்தவராய் உள்ளவர்களும் மை பொருந்திய கண்களையுடைய பெண்களும் மனித இயல்பில் நின்றே உன்னை வணங்கி நிற்கின்றார்கள்; பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக.

விளக்கவுரை

'பரப்பு' என்பது இடைக்குறைந்து, 'பப்பு' என நின்றது. பரப்பு - பரத்தல்; விரிதல், இதற்கு வினைமுதலாகிய 'மனம்' என்பது வருவிக்க. 'மனம் பரப்பற' எனவே, 'குவிந்து ஒருவழிப்பட்டு' என்ற தாயிற்று. வீடு -

வீட்டுநிலை; என்றது, நிட்டையை. வந்து - பிறந்து. 'பிறந்து பந்தனை அறுத்தார்' என்றது, 'பிறப்பின் பயனைப் பெற்றுவிட்டார்' என்றவாறு. இதன்பின், 'அவ்வாறாயினும்' என்பது எஞ்சி நின்றது. மைப்பு - மைத்தல்; மைதீட்டப்படுதல். 'மைப்புறு கண்ணியர்' என்றதன்பின், ஒடு உருபு விரிக்க. மானுடத்து இயல்பின்- மகளிர் மேல் நிகழும் மானுடரது இயல்பை உடையவராய்; என்றது, 'காமத்தை வெறாதார் போல' என்றவாறு. இன்னோரன்ன வழி பாடுகள் எல்லாம், இல்லறத்தைத் துறவாது அதனோடு கூடி நிற்பார்க்கே இயல்வனவாகலின், அவ்வாற்றான் வந்துநின்ற அடியார் களைக் கண்டு, அவரது உண்மை நிலையையும் உற்றுணர்ந்து அடிகள் இவ்வாறு அருளிச் செய்தார் என்க. செப்பு உறு - கிண்ணத்தின் தன்மையை எய்தும் (தாமரை மலர்கள்). மலரும் - அவ்வாற்றான் மலர்கின்ற. இப்பிறப்பு - எடுத்துள்ள இவ்வுடம்பு. அதனை அறுத்துப் பரமுத்தியை அருளுதல் மேல் நிகழற்பாலதாகலின், 'அருள்புரியும்' என எதிர்காலத்தாற் கூறியருளினார்.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. **#373**

பழம் பொருளானது கனியின் சுவைபோன்றது எனவும், அமுதத்தை ஒத்தது எனவும் அறிவதற்கு அருமையானது எனவும், அறிதற்கு எளிமையானது எனவும் வாதிட்டு, தேவரும் உண்மையை அறியாத நிலையில் எம்பெருமான் இருப்பார்; இதுவே அப்பரமனது திருவடிவம்; திருவுருக்கொண்டு வந்த சிவனே அப்பெருமான், என்று நாங்கள் தெளிவாகச் சொல்லும் படியாகவே, இவ்வுலகத்தில் எழுந்தருளுகின்ற, தேன் பெருகுகின்ற சோலை சூழ்ந்த திருவுத்தரகோசமங்கையில் எழுந்தருளி இருப்பவனே! திருப் பெருந்துறைக்கு அரசனே! எம் பெருமானே! எம்மைப் பணி கொளும் விதம் யாது? அதனைக் கேட்டு அதன்படி நடப்போம். பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக.

விளக்கவுரை

'முதற்பொருளை, 'அது' என்றல் வடமொழி வழக்கும், 'அவன்' என்றல் தமிழ் வழக்குமாதலின், 'முதற்பொருள் பழத்தின் சுவைபோல்வது என்றாதல், அமுதம் போல்வது என்றாதல், அறிதற்கு அரியது என்றாதல்,

அறிதற்கு எளியது என்றாதல் தேவரும் அறியாராக, யாங்கள் அம்முதல்வன் இவனே என்றும், அவன் பெற்றியும் இதுவே என்றும் இனிதுணர்ந்து உரைக்குமாறு, இந்நில வுலகத்தின்கண்ணே எழுந்தருளிவந்து எங்களை ஆண்டுகொள்ளும், உத்தரகோசமங்கைக் கண் உள்ளவனே, திருப்பெருந்துறைத் தலைவனே, எம்பெருமானே, இன்று நீ எம்மைப் பணிகொள்ளுமாறு எதுவோ அதனைக் கேட்டு நாங்கள் மேற்கொள்வோம்; பள்ளி எழுந்தருள்' என்பது இத்திருப்பாட்டின் பொருளாயிற்று.

'பழச்சுவையென' என்றது முதலிய நான்கும், 'கறுப்பென்றோ சிவப்பென்றோ அறியேன்' என்பதுபோல, இன்னதென ஒருவாற்றானும் அறியாமையைக் குறிக்கும் குறிப்பு மொழிகளாய் நின்றன. அதனால், 'என' நான்கும் விகற்பப் பொருளவாயின. 'அறியாராக' என, ஆக்கம் வருவித்து உரைக்க. செய்யுட்கு ஏற்ப அருளிச் செய்தாராயினும், 'அவன் , இவன்' என மாற்றி முன்னர் வைத்துரைத்தலும், 'இங்கெழுந்தருளி எங்களை ஆண்டுகொள்ளும்' என மாற்றி உரைத்தலுமே கருத்தாதல் அறிந்து கொள்க. 'அமரரும் அறியாராக இங்கு எழுந்தருளி எம்மை ஆண்டு கொள்ளும்' என்றது, அத்தகைய அவனது அருளின் பெருமையை விதந்தவாறு. இவ்வாறு திருவருளின் சிறப்பை விதந்தோதி, ' எது எமைப் பணிகொளுமாறு அது கேட்போம்' என, அத் திருவருளின் வழி நிற்றலையே பொருளாக வைத்து அருளிச் செய்தமையின், அங்ஙனம் நிற்க விரும்புவார்க்கு இப்பகுதியுள் இத்திருப்பாட்டு இன்றியமையாச் சிறப்பிற்றாதலை ஓர்ந்துணர்ந்துகொள்க.

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. **#374**

அருமையான அமுதமே! எப்பொருளுக்கும் முற்பட்ட முதலும், நடுவும் முடிவும் ஆனவனே! மும்மூர்த்திகளும் உன்னை அறியமாட்டார்; வேறு யாவர் அறியக்கூடியவர். பந்தை ஏந்திய விரல்களை உடைய உமையம்மையும் நீயுமாக உன்னுடைய அடியார்களுடைய பழைய சிறு வீடுதோறும் எழுந்தருளின மேலானவனே! சிவந்த நெருப்பை ஒத்த வடிவத்தையும் காட்டித் திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற

திருக்கோயிலையும் காட்டி, அழகிய தண்ணிய அருளாளன் ஆதலையும் காட்டி வந்து ஆட்கொண் டவனே! பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக.

விளக்கவுரை

முந்திய முதல் - முத்தொழில்களுள் முற்பட்ட தோற்றம். உலகிற்கு, 'தோற்றம், நிலை, இறுதி' என்னும் முத்தொழிலையும் உளவாக்குதல் பற்றி இறைவனை அவையேயாக அருளிச் செய்தார். இதனானே, ஒருவனேயாய் நிற்கின்ற அவன், மூவராய் நிற்றலும் கூறியவாறாயிற்று. ஆகவே, 'மூவரும் அறிகிலர்' எனப்பின்னர்க் கூறிய மூவர், அம் முத்தொழிலுள் ஒரோவொன்றைச் செய்யும் தொழிற்கடவுளராதல் இனிது விளங்கும். முத்தொழிலின் முதன் மையையும் ஒருங்குடைய முதல்வன் அருள்காரணமாக மூவராய் நிற்கும் நிலைகளை, 'சம்பு பட்சம்' எனவும், புண்ணியங் காரணமாக முதற்கடவுளது தொழில்களுள் ஒரோவொன்றைப் பெற்றுநிற்கும் கடவுளர் பகுதியை, 'அணு பட்சம்' என்றும் ஆகமங்கள் தெரித்துக் கூறும். அதனால்,

'ஆதி - அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரனாய்அழிப்பவனும் தானே', -ஞான உலா -5

'வீரன் அயன்அரி, வெற்பலர் நீர்,எரி பொன்எழிலார்
கார்,ஒண் கடுக்கை கமலம் துழாய்,விடை தொல்பறவை
பேர்,ஒண் பதி,நிறம்,தார்,இவர் ஊர்திவெவ் வேறென்பரால்
ஆரும் அறியா வகைஎங்கள் ஈசர் பரிசுகளே'
-தி.11 பொன்வண்ணத்தந்தாதி - 95

என்றாற்போலும் திருமொழிகள், சம்பு பட்சம் பற்றி வந்தனவும்,

'திருமாலும் நான்முகனும் தேர்ந்துணரா தன்றங்
கருமா லுறஅழலாய் நின்ற - பெருமான்'
-ஞான உலா 1

என்றாற்போலும் திருமொழிகள் அணு பட்சம் பற்றி வந்தனவுமாதல் தெளிவாம்.

'மூவரும்' என்ற உம்மை, சிறப்பு. 'அறிகிலர்' என்றதன் பின், 'எனின்' என்பது வருவித்து, 'உன்னை மூவர்தாமே அறிய மாட்டார் எனின், மற்று யாவர் அறிய வல்லார்' என உரைக்க. இத் துணை அரியவனாகிய நீ, உன் அடியவரது எளிய குடில்தோறும் உன் தேவியோடும் சென்று வீற்றிருக்கின்றாய்' என்பார், 'பந்தணை விரலியும் ... ... எழுந்தருளிய பரனே' என்று அருளினார். பந்து அணை விரலி - பந்தைப் பற்றி ஆடும் விரலை உடையவள். 'பந்து - கை' எனக் கொண்டு, அதன்கண் பொருந்திய விரல் என்று உரைப் பினுமாம். இவ்வாறு உரைப்பின், கையினது அழகைப் புகழ்ந்த வாறாம். அடியார் பழங்குடில் தோறும் எழுந்தருளியிருத்தல், அங்கு அவர்கள் நாள்தோறும் வழிபடுமாறு

திருவுருக்கொண்டு விளங்குதல். இவ்வுருவத்தை, 'ஆன்மார்த்த மூர்த்தி' என ஆகமங்கள் கூறினும், இஃது அவ்வில்லத்துள்ளார் அனைவர்க்கும் அருள்புரிதற்கு எழுந் தருளிய மூர்த்தி என்பதே கருத்து என்க. இதனானே, 'என்றும் உள்ள மூர்த்தியாக எழுந்தருள்வித்துச் செய்யும் ஆன்மார்த்த பூசை, இல்லறத் தார்க்கும், மாணாக்கர் வழிபட இருக்கும் ஆசிரியர்க்குமே உரியது' என்பதும், 'ஏனையோர்க்கு அவ்வப்பொழுது அமைத்து வழிபட்டுப் பின் விடப்படும் திருவுருவத்திலும், திருக்கோயில்களில் விளங்கும் திருவுருவத்திலும் செய்யும் ஆன்மார்த்த பூசையே உரியது' என்பதும் பெறப்படும். இனி, 'பழங்குடில்தொறும்' எழுந்தருளுதல், விழாக் காலத்து' என்றும் சொல்லுப; 'எழுந்தருளிய' என இறந்த காலத்தாற் கூறினமையின், அது, பொருந்துமாறு இல்லை என்க. 'பழங்குடில் தொறும்' என எஞ்சாது கொண்டு கூறினமையின், 'இது, சில திரு விளையாடல்களைக் குறிக்கும்' என்றலும் பொருந்தாமை அறிக. திருப்பெருந்துறையில் இறைவன் குருந்தமர நிழலில் எழுந்தருளியிருந்து அடிகட்குக் காட்சி வழங்கிய இடத்தையே அடிகள், 'திருப்பெருந்துறை உறைகோயில்' என்று அருளினார்; இது, 'திருப்பெருந்துறைக்கோயில்'என்னாது, 'திருப்பெருந்துறை உறைகோயில்' என்றதனானே பெறப்படும். 'திருப்பெருந்துறைக்கண் நீ எழுந்தருளியிருந்த கோயில்' என்பது இதன் பொருளாதல் வெளிப் படை. இவ்விடத்தையே பின்னர் அடிகள் கோயில் ஆக்கினார் என்க.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. **#375**

விண்ணில் வாழும் தேவர்களும், அணுகவும் முடியாத, மேலான பொருளாயுள்ளவனே! உன்னுடைய தொண் டினைச் செய்கின்ற அடியார்களாகிய எங்களை மண்ணகத்தே வந்து வாழச் செய்தோனே! பரம்பரை அடியாராகிய எங்களுடைய கண்ணில் களிப்பைத் தருகின்ற தேன் போன்றவனே! கரும்பு போன்றவனே! அன்பு செய்கின்ற அடியவரது எண்ணத்தில் இருப்பவனே! உலகம் அனைத்துக்கும் உயிரானவனே! பள்ளியினின்றும் எழுந்தருள் வாயாக.

விளக்கவுரை

'அருள்பெற மாட்டாமையேயன்றி அணுகவும் மாட்டார்' என்றமையின்,

'நண்ணவும்' என்ற உம்மை இழிவு சிறப்பு. விழுப்பொருள் - சீரிய பொருள். 'தொழும்பு' என்னும் மென்றோடர்க் குற்றுகரத்தின் மெல்லெழுத்து, வேற்றுமைப் புணர்ச்சிக்கண் வல்லொற்றாய்த் திரிந்தது. 'தொழும்பினை உடைய அடியோங்கள்' என்க. தொழும்பு - தொண்டு. 'வந்து' என்னும் வினையெச்சம், 'வருதலால்' எனக் காரணப்பொருட்டாய் நின்றது. எனவே, 'வாழ்தற்பொருட்டு அடியோங்களை மண்ணகத்தே வரச்செய்தாய்' என்பது கருத்தாயிற்று. 'மண்ணுலகத்திலன்றி விண்ணுலகத்தில் ஞானங் கூடாது' என்பதனை அடிகள் யாண்டும் குறிப்பித்தல் அறிக. களி - களிப்பு. 'எண்' என்னும் முதனிலைத் தொழிற்பெயர் ஆகுபெயராய், எண்ணுதற் கருவியாகிய மனத்தைக் குறித்தது.

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. **#376**

திருப்பெருந்துறையில் வீற்றிருப்பவனே! திருமாலாகிய அவன், பூமியில் சென்று பிறவாமையினால் யாம் வீணாகவே நாளைக் கழிக்கின்றோம்; இந்தப் பூமியானது சிவபெருமான் நாம் உய்யும்படி அடிமை கொள்கின்ற இடமென்று பார்த்து விருப்பத்தை அடையவும், பிரமன் ஆசைப்படவும் அர்ச்சிக்கவும் உனது பரந்த உண்மையான திருவருட்சத்தியும், நீயுமாகப் பூமியில் எழுந்தருளி வந்து எங்களை ஆட்கொள்ள வல்லவனே! அருமையான அமுதம் போன்றவனே! திருப்பள்ளி யினின்றும் எழுந்தருள்வாயாக.

விளக்கவுரை

பொருள்கோள்: 'திருப்பெருந்துறை உறைவாய், சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு இந்தப்பூமி; ஆதலின் புவனியில் போய்ப் பிறவாமையின், நாம் நாள் அவமே போக்குகின்றோம் என்று நோக்கித் திருமாலாம் ... ... எழுந்தருளாயே'.

புவனி - புவனம்; என்றது, மண்ணுலகத்தை. 'இந்த' என்றது, அடிகள் தம் கூற்றாக அருளியது. இடத்தை, 'ஆறு' என்றார், வாயிலாதல் பற்றி. அவர்தம் ஏக்கறவு மிகுதியை உணர்த்தற்கு, 'விருப்பெய்தவும், ஆசைப்படவும்' எனத் தனி விதந்தோதி யருளினார். அலர்ந்த - பரந்த; மெய்ம்மை - நிலைபேறு. 'கருணை யொடு' என அடையாக்காது,

'கருணையும்' என வேறு பொருளாக ஓதினார், அதன் அருமை புலப்படுத்தற்கு. அவனி - மண்ணுலகு. பாசத்தை அறுத்து ஞானத்தை எய்துவிக்கும் திறன் நோக்கி. 'வல்லாய்' என்றும், ஞானத்தை எய்தியபின், இன்ப உருவாய் விளங்குதல்பற்றி, 'ஆரமுதே' என்றும் அருளிச்செய்தார்.

1.21.கோயில் மூத்த திருப்பதிகம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே. #377

பொற்சபையில் ஆடுகின்ற, எம் ஈறில்லா முதல்வனே! எம்மை ஆளாகவுடைய உமையம்மை, சொரூப நிலையில் உன்னிடையே அடங்கித் தோன்றுவாள்; உடையவளாகிய உமையம்மையினிடத்தே, தடத்த நிலையில் நீ அடங்கித் தோன்றுவாய்; அடியேன் இடையே நீங்கள் இருவீரும் இருப்பது உண்மையானால், என் எண்ணம் நிறைவேறும்படி எனக்கு முன்னே நின்று, அடியேனாகிய யான், உனது அடியார் நடுவில் இருக்கின்ற திருவருளைச் செய்வாயாக.

விளக்கவுரை

உடையாள் - எல்லாவற்றையும் தனக்கு அடிமை யாகவும், உடைமையாகவும் உடையவள்; இறைவி. அகத்தை 'நடு' என்று அருளிச்செய்தார். 'அகம், புறம்' என்பன முறையே, வியாப்பிய நிலையையும், வியாபக நிலையையும் குறிக்கும். 'உடையாள் உன்றன் நடுவிருக்கும்; உடையாள் நடுவுள் நீ இருத்தி' என்றது, 'சிவமும், சத்தியும் எவ்வாற்றானும் தம்முள் வேறல்ல' என்றற்கு. இதனை எடுத்தோதியது, இறைவன் பேரருளும், பேராற்றலும் உடைய னாதலைக் குறிப்பித்தற்கு. 'அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானால்' என்றது, பதிப்பொருள் எஞ்ஞான்றும் உயிரினிடத்து நீங்காது நிற்றலைக் குறித்தபடி. இதனை எடுத்தோதியது, அத்தன்மைய னாகிய இறைவன் தமக்கு அருள்புரிதற்கு இயைபுண்மையைக் குறித்தற் பொருட்டாம். 'இருப்பது' என்பதன்பின் தொகுக்கப்பட்ட, 'மெய்ம்மை' என்பது, இவ்விருதிறனும், 'மெய்ம்மையானால்' எனப், பின்னர் வருவதனை வற்புறுத்தற்கு ஏதுவாய் நின்றது. 'அடியார்' என்றது. தமக்கு முன்னே, இறைவனை

அடைந்தவர்களை. 'எம் முதல்' என இயையும். 'அவர்கட்கு மட்டும் அன்றி எனக்கும் நீ தலைவன் ஆதலின், என்னையும் உன்பால் வருவித்துக் கொள்ளற்பாலை' என்பார், 'எம்முதலே' என்று அழைத்தார். முடியா - அழியாத. 'என் இக் கருத்து' எனச் சுட்டு வருவித்து உரைக்க. முன்நிற்றலாவது, முடித்தலை மேற்கொண்டு நிற்றல்.

'முன்னவனே முன்னின்றால் முடியாத பொருள்உளதோ'

என்றருளினார், சேக்கிழார் நாயனாரும் *(தி.12 பெ.புரா.மநு-47).* அதனுள், 'பொருள்' என்றது, செயலை. இத்திருப்பாட்டுள், முதல் மூன்று தொடர்களையும் திருவைந்தெழுத்தின் *(பஞ்சாக்கரத்தின்)* பேதங்களைக் குறிக்கும் குழூஉக் குறியாக ஆள்வாரும் உளர். அவற்றுள் முதல் இரண்டு தொடர்களும், திருவைந்தெழுத்துள் சிவத்தைக் குறிக்கும் சிகாரமும், சத்தியைக் குறிக்கும் வகாரமுமாகிய இரண்டெழுத்துக்களாலாகிய சொல்லைப் பலமுறை சொல்லுங்கால் அமையும் நிலையைக் குறித்தற்கும், மூன்றாவது தொடர், அவ்விரண்டு எழுத்துக்களுடன், ஆன்மாவைக் குறிக்கும் யகாரத்தையும் உடன் சேர்த்துப் பலமுறை கூறுங்கால் அமையும் முறையைக் குறித்தற்கும் ஏற்புடையவாதல் அறிக. இனி, 'சிவம், சத்தி, ஆன்மா' என்னும் மூன்றையும் குறிக்கும் சிகார வகார யகாரங்கட்குப் பின்னர் முதல் இரண்டெழுத்தைப் பின்முன்னாக மாற்றி வகார சிகாரங்களாக வைத்து ஒரு தொடராகக் கூறும் முறையும் உண்டு. இது, முதலிலும், முடிவிலும் சிவத்தைக் குறிக்கும் சிகாரத்தைக் கொண்டு நிற்றலால், 'இருதலை மாணிக்கம்' என்றும், அதனுள் உள்ள எழுத்துக்களை முதற்றொடங்கி இறுதிகாறும் வரச்சொல்லினும், இறுதி தொடங்கி முதல்காறும் வரச் சொல்லினும், 'விகடகவி' என்பதுபோல, வேறுபடாது ஒருவகையாகவே யமைதலின், அதனை, 'விகடகவி' என்றும் குறியீடாக வழங்குவர்; அம்முறை, இத்தொடர்களில் யாண்டும் அமைந்திலது என்க.

முன்னின் றாண்டாய் எனைமுன்னம்
யானும் அதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன்
பிற்பட் டொழிந்தேன் பெம்மானே
என்னின் றருளி வரநின்று
போந்தி டென்னா விடில்அடியார்
உன்னின் றிவனார் என்னாரோ
பொன்னம் பலக்கூத் துகந்தானே. **#378**

பொற்சபையில் திருநடனம் செய்வதை விரும்பி யவனே! பெருமானே! முன்னே, என் எதிரே தோன்றி ஆட்கொண் டாய். நானும் அதன் பொருட்டாகவே முயன்று உன்வழியில் நின்று பணி செய்கின்றேன்.

ஆயினும் பின்னடைந்து விட்டேன். என்னை இன்று உன்பால் வரும்படி அருளி, 'வா' என்று அழையாவிடில் அடிய வர் உன்னிடத்தில் நின்று, இவர் யார் என்று கேட்க மாட்டார்களோ?

விளக்கவுரை

முன்னம் - முன்பு. 'முன்னம் என்னை முன்நின்று ஆண்டாய்' எனக் கூட்டுக. யானும் அதுவே முயல்வுற்று - நானும் அங்ஙனம் உனக்கு ஆளாய் இருக்கவே முயன்று. பின் நின்று - உன் வழி நின்று. ஏவல் செய்கின்றேன் - பணிபுரிந்து நிற்கின்றேன். இதன் பின், 'ஆயினும்' என்பது எஞ்சிநின்றது. பிற்பட்டொழிந்தேன் - உன் அடியாரோடு உடன்செல்லாமல் பின்தங்கிவிட்டேன். இதன்பின், 'ஆதலால்' என்பது வருவிக்க. என் - என்னை, 'வர இன்று அருளி நின்று' என மாற்றுக. வர - உன்பால் வருமாறு. அருளிநின்று - அருள் செய்து. அடியார் - முன்பு உன்னுடன் வந்த அடியார்கள். உன் நின்று - உன்பால் நின்று. இவன் ஆர் என்னாரோ - இப்பொழுது இங்கு வருவதற்கு இவன் என்ன உரிமையுடையவன் என்று சொல்ல மாட்டார்களோ. 'இந்நிலை நீ, என்னை இங்கு விட்டுச் சென்றதனால் உண்டாயது என்பது கருத்து. 'ஆதலின், என்னை விரைந்து உன்பால் அழைத்துக்கொள்ளவேண்டும்' என்பது குறிப்பெச்சம்.

உகந்தா னேஅன் புடைஅடிமைக்
குருகா உள்ளத் துணர்விலியேன்
சகந்தான் அறிய முறையிட்டால்
தக்க வாறன் றென்னாரோ
மகந்தான் செய்து வழிவந்தார்
வாழ வாழ்ந்தாய் அடியேற்குன்
முகந்தான் தாரா விடின்முடிவேன்
பொன்னம் பலத்தெம் முழுமுதலே. **#379**

பொன்னம்பலத்தில் ஆடுகின்ற எங்கள் முழுமுதற் பொருளே! அன்போடு செய்யப்படும் தொண்டின் பொருட்டு, என்னை விரும்பி ஏற்றுக் கொண்டவனே! தம் உடலையே அவியாகத் தீயில் இட்டு, உன் வழியிலே வந்தவர்கள், பேரின்பத்தில் வாழும்படி எழுந்தருளி இருப்பவனே! உருகாத மனத்தையுடைய, அறிவு இல்லாத நான், உலகம் அறிய எனது துன்பத்தைச் சொல்லி முறையிட்டுக் கொண்டால், அருளாது ஒழிவது உனக்குத் தகுதி அன்று என்று உன் அடியார்கள் சொல்ல மாட்டார்களோ? அடியேனுக்கு உனது திரு முகத்தைக் காட்டாவிட்டால் யான் இறந்து படுவேன்.

விளக்கவுரை

'அன்புடை அடிமைக்கு உகந்தானே' என மாற்றி, குவ் வுருபை ஐயுருபாகத் திரிக்க. 'நான், உருகா உள்ளத்து உணர்விலி யாதலின், என்னை நீ விடுத்துச் சென்றதைப் பலரிடமும் சொல்லி முறையிட்டால், அம்முறையீடு தகுதிவாய்ந்த முறையீடன்று என்று தான் சொல்வார்கள்; ஆதலின், நீயே என்னை மறித்து நோக்கி அழையாவிடில், யான், தீயில் வீழ்தல், திண்வரை பாய்தல் முதலிய வற்றைச் செய்து உயிரைப் போக்கிக் கொள்வேன்' என்பது இங்குக் கூறப்பட்டதாம். 'தீயில் வீழ்தல் முதலியவற்றால் உயிரைத் துறத்தலும் ஒருவகை வேள்வியே' என்றும், 'அங்ஙனம் செய்து நின்பால் வந்தாரும் சிலர் உளர்' என்றும் கூறுவார், 'மகந்தான் செய்து வழி வந்தார் வாழ வாழ்ந்தாய்' என்று அருளினார். 'எய்தவந்திலாதார் எரியிற் பாய்ந்து இறைவனை அடைந்தார்' என அடிகள் முன்னர் அருளிச்செய்தது காண்க *(தி.8 கீர்த்தி. 132)*. முகம் தருதல் - புறங் காட்டாது திரும்பி நோக்குதல்.

முழுமுத லேஐம் புலனுக்கும்
மூவர்க் கும்என்த னக்கும்
வழிமுத லேநின் பழவடி
யார்தி ரள்வான் குழுமிக்
கெழுமுத லேயருள் தந்திருக்க
இரங்குங் கொல்லோ என்று
அழுமது வேயன்றி மற்றென்
செய்கேன் பொன்னம் பலத்தரைசே. **#380**

பொற்சபையில் ஆடுகின்ற நாதனே! எல்லா வற்றுக்கும் ஆதியான பொருளே! ஐம்புலன்களுக்கும் முத்தேவர் களுக்கும், எனக்குச் செல்லும் வழிக்கும் முதலானவனே! உன்னுடைய பழைய அடியார் கூட்டத்தோடு பெருமை மிக்க சிவலோகத்தில் கூடி சேர்ந்திருத்தலைத் திருவருளால் கொடுத்தருள இரங்குமோ என்று அழுவது அல்லாமல் வேறு என்ன செய்ய வல்லேன்?

விளக்கவுரை

மூவர் - 'அயன், அரி, அரன்' என்பவர். முன் நிற்கற் பாலதாய, 'மூவர்' என்பது. செய்யுள் நோக்கிப் பின் நின்றது. 'ஐம்புலன்' என்றது, பூதம் முதலிய பிரகிருதி காரியம் அனைத்திற்கும் உபலக்கணமாய் நின்றது. 'மூவர்க்கும் ஐம்புலனுக்கும் முதல்' என்றது, 'செய்வார்க்கும், செயப்படுபொருட்கும் முதல்' என்றபடி. 'முழுமுதல்' என்றது இரட்டுற மொழிதலாய், 'பெருந் தலைவன்' எனவும். சிறந்த நிலைக்களம் (பரம ஆதாரம் - தாரகம்) எனவும், பொருள் தந்து, முறையே 'மூவர்' என்றதனோடும், 'ஐம்புலன்' என்றதனோடும் இயைந்தது. 'என்றனக்கும் வழி முதலே' என்றது. 'எனக்கும், வழிவழியாய் நின்ற தலைவனே'

என்றபடி. 'என் குடிமுழு தாண்டு வாழ்வற வாழ்வித்த மருந்தே' (தி.8 பிடித்த பத்து 1) என்பர் பின்னரும். 'திரளோடு' எனவும், 'வானின்கண்' எனவும், 'கெழு முதற்கு' எனவும், உருபுகள் விரிக்க. கெழுமுதல் - கூடுதல். 'தந் திருக்க' என்றதில் இரு, அசைநிலை. 'மற்றென் செய்கேன்' என்றது. 'உன்னை வற்புறுத்துதற்கு என்ன உரிமை உடையேன்' என்றவாறு. இத்திருப்பாட்டுள் அடியும் சீரும் வேறுவேறாய் வந்து மயங்கின.

அரைசே பொன்னம் பலத்தாடும்
அமுதே என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல்
ஏசற் றிருந்தே வேசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் னடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசா திருந்தால் ஏசாரோ. **#381**

அரசனே! பொற்சபையில் நடிக்கின்ற அமுதே! என்று வாழ்த்தி உன் திருவருளை எதிர்பார்த்து, இரையைத் தேடுகின்ற கொக்கினைப் போன்று இரவும் பகலும் கவலைப் பட்டிருந்து இளைத் தேன். முத்திக்கரையை அடைந்த உன்னடியார் மகிழ்ந்திருப்ப, நீ காட்சி கொடுத்தருளி உன்னடியேனாகிய என்னிடத்தில், பிரை ஊற்றிய பாலில் நெய் இருப்பது போல, வெளிப்படாமல் மறைந்து இருந்தால் உலகத்தார் ஏச மாட்டார்களோ?

விளக்கவுரை

அருள் நோக்கி - அருள் வரும் என்று கருதி. 'இரை தேர் கொக்கொத்து' என்றது, 'பதைப்பின்றி அடங்கி இருந்து' என்ற படி. 'கொக்கொக்க கூம்பும் பருவத்து' (குறள் - 490) என்றவாறு, பயன் கிடைக்கும் காலத்தை நோக்கியிருந்து அலுத்து விட்டேன்' என்றபடி. ஏசறுதல் - வருந்துதல். வேசறுதல் - இளைத்தல். வேசறுதலை இக்காலத்தார். 'வேசாறுதல்' என்ப. கரை - பிறவிக் கடலின் கரை; முத்தி. 'பிரைசேர் பால்' என்றது, 'முதிராத தயிர்' என்றபடி. இது, பிரையிட்ட உடனே காணப்படும் நிலை. பிரையிடாத பாலில் நெய் வெளிப்படும் என நோக்கப்படாமையின் வாளா, 'பாலின் நெய் போல' என்னாது, இவ்வாறு அருளிச்செய்தார். ஆகவே, 'பிரையிட்டு அது தோய்ந்து முதிர்ந்து வெண்ணெய் வெளிப்படும் என நோக்கியிருப்பார்முன், அஃது அங்ஙனம் முதிராது, பிரையிட்ட நிலையிலே இருப்பது போல இருக்கின்றாய்' என்றதாயிற்று. ஒன்றும் செய்யாதிருத்தலை, 'பேசாதிருத்தல் - மௌனம் சாதித்தல்' என்றல் வழக்கு. 'அடியராயினாருள் சிலருக்குக் காட்சி வழங்கிக்

களிப்பையும், சிலருக்குப் பேசாதிருந்து துயரையும்தரின், நடுவு நிலையாளர் உன்னை ஏச மாட்டார்களோ' என்றபடி.

ஏசா நிற்பர் என்னைஉனக்கு
அடியான் என்று பிறரெல்லாம்
பேசா நிற்பர் யான்தானும்
பேணா நிற்பேன் நின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந்
திருவோ லக்கம் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடும்
எந்தாய் இனித்தான் இரங்காயே. **#382**

ஒளியுருவானவனே! எல்லாம் உடையவனே! பொற்சபையில் நடிக்கின்ற எந்தையே! அடியேனை மற்றவர்கள் எல்லாம் அன்பில்லாதவன் என்று இகழ்வார்கள். உன்னருளையே விரும்பி நிற்கிறேன். ஆதலின் அடியார் சூழ்ந்திருக்கின்ற, உன் திருச் சபையைக் காண்பதற்கு, இனி இரங்கி அருள்வாயாக.

விளக்கவுரை

'ஏசாநிற்பர்' என்று, எதிர்காலத்தில் நிகழ்காலம், 'பேணா' என்றது, 'செய்யா' என்னும் வினையெச்சம். 'இனித்தான்' என்றதில், தான், அசைநிலை. திருவோலக்கம் - கொலு. பிறர் எல்லாம் - உலகத்தார் அனைவரும். 'ஏசா நிற்பர்' என்றதற்குமுன், 'ஆதலின்' என்பது வருவித்துக் கூட்டி, அத்தொடரை, இரண்டாம் அடியின் இறுதிக்கண் வைத்து உரைக்க. தேசன் - ஒளியுடையவன். 'உலகத்தார் எல்லாம் என்னை உனக்கு அடியவன் என்றே சொல்லுவர்; யானும் உனது அருள் ஒன்றையே விரும்பி நிற்பேன்; ஆதலின், யான் உன்னை அடையாது அல்லல் உறின், யாவரும் இருவரையும் ஏசுவர்; அவ்வாறாகாமல் உன் திருவோலக்கம் சேவிக்க இப்பொழுதே இரங்கியருள்' என்பது இதன் திரண்டபொருள்.

இரங்கும் நமக்கம் பலக்கூத்தன்
என்றென் றேமாந் திருப்பேனை
அருங்கற் பனைகற் பித்தாண்டாய்
ஆள்வா ரிலிமா டாவேனோ
நெருங்கும் அடியார் களும்நீயும்
நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரஎங்கள்
வாழ்வே வாவென் றருளாயே. **#383**

எங்களது வாழ்வாயுள்ளவனே! அம்பலத்தாடும் பெருமான் நமக்கு அருள்புரிவான் என்று, பலகால் நினைந்து இன்புற்றிருக்கும்

எளியேனை, அருமையான உபதேசத்தை அருள் செய்து ஆட்கொண்டாய். அவ்வாறு இருக்க, நான் இப்போது ஆள்வாரில்லாத செல்வம் போலப் பயனற்று ஒழிவேனோ? நெருங்கிய பழவடியார்களும் நீயும் நின்று விளங்கி விளையாடுகின்ற பக்கத்திலே நெருங்கி வரும்படி என்னை 'வா' என்று அழைத்து அருள் செய்வாயாக.

விளக்கவுரை

பொருள்கோள்: *'எங்கள் வாழ்வே, (என்னை முன்பு) அருங்கற்பனை கற்பித்து ஆண்டாய்; (இப்பொழுது) ஆள்வார், இலிமாடு ஆவேனோ! ஏமாந்திருப்பேனை வா என்று அருளாய்'.* ஏமாந்து - களிப்புக்கொண்டு. அருங் கற்பனை - அரிய போதனை; அறிதற்கரிய உண்மையை உரைத்தல். மாடு - செல்வம். செல்வம் பயன்படும் பொருளாயினும், அதற்கு உரிமையுடையவர் அருகில் இல்லாதபொழுது அது பயனில்லாதவாறுபோல, என்னை உடையவனாகிய நீ என்னைப் புறக்கணித்திருப்பின் நான் கெடுவேன்' என்றது இவ்வுவமையின் பொருள். பசுக்களை, 'மாடு' என வழங்குதல் உயர்ந்தோர் வழக்கிற் காணப்படாமையின், 'மாடு' என்றதற்கு, 'பசு' என்று உரைத்தல் ஆகாது என்க. 'ஆள்வார் இலி மாடு ஆவேனோ' என்றதில் ஆக்கம் 'உவமை குறித்தது' என்பர், மாதவச் சிவஞான யோகிகள் (சிவஞானபோதம்-சூ.7, அதி.3, சிவ ஞானசித்தி - சூ.8.29.) 'ஏமாத்தல், ஏமாறுதல்' என்னும் சொற்களிடை வேறுபாடு அறியாதார் 'ஏமாத்தல்' என்பதற்கும், 'ஏமாறுதல்' என்பதன் பொருளே பொருளாக உரைப்பர்; அது பொருந்தாமையை, சான்றோர் செய்யுட்கள் நோக்கி அறிந்துகொள்க. 'ஏமாறுதல்' என்பது, 'ஏமம் மாறுதல்' என்பதன் மரூஉ. எனவே, இது, பிற்கால மரூஉ மொழிகளுள் ஒன்று என்க.

அருளா தொழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆர்இங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட
பொன்னே பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து
வருந்து வேனை வாவென்றுன்
தெருளார் கூட்டங் காட்டாயேல்
செத்தே போனாற் சிரியாரோ. **#384**

என்னை ஒரு பொருளாகக் கொண்டு வலிய வந்து ஆட்கொண்ட பொன் போன்றவனே! பொற்சபையில் நடிக்கின்ற கூத்தனே! நீ அருள் செய்யாது ஒழிந்தனையாயின், என்னை இவ் வுலகில் அஞ்சாதே என்பவர் யாருளர்? மயக்கம் பொருந்திய மனத் துடன் உன்னைவிட்டு விலகித் துன்பப்படுகின்ற என்னை 'வா' என்று அழைத்து உன் தெளிவு

பொருந்திய கூட்டத்தைக் காட்டாவிடில், யான் இறந்து போனால் உலகத்தார் சிரிக்க மாட்டார்களோ?

விளக்கவுரை

மருள் ஆர் மனம் - மயக்கம் பொருந்திய மனம். 'தெருளார்' என்றது, 'தெளிவையுடைய அடியார்' என்னும் பொருட்டாய், 'உன்' என்றதற்கு முடிபாயிற்று. 'செத்தே போனால்' என்று, அனுவாதமாக அருளிச்செய்ததாகலின், 'காட்டாயேல் செத்தே போவேன்; அவ்வாறு போனால் சிரியாரோ' என்று உரை உரைக்கப் படும். 'செத்தே' என்ற ஏகாரம், தேற்றம். பிராரத்த கன்ம முடிவின் கண் சூக்கும உடம்பு நீங்காது தூல உடம்பு மாத்திரை நீங்குதலே, 'சாதல்' எனப்படும். இரண்டு உடம்பும் ஒருங்கு நீங்குதல், 'சாதல்' எனப்படாது; என்னையெனின், முன்னது ஒருபிறப்பை விடுத்து மற்றொரு பிறப்பிற் செல்வதேயாகலானும், பின்னது பிறவியிற் செல்லாது, வீடு பெறுதலேயாகலானும் என்க. எனவே, 'சாவா வரம் பெறுதல்' என்பதற்கும், 'மீளப் பிறக்கும்நிலையில் உடம்பு நீங்கப் பெறாத வரம்' என்பதே கருத்தாவதன்றி, எப்பொழுதும் உடம்பொடு கூடியிருத்தல் என்பது கருத்தன்றாம். என்னை? அறிவுடையோர், யாதானும் ஒருகாரணம் பற்றிச் சிலநாள் மிகுதியாக உடம்பொடு நிற்க விரும்புதலன்றி, எஞ்ஞான்றும் உடம்பொடுகூடி நிற்க விரும்பா ராதலின். 'உடம்பு அருவருக்கத்தக்கதன்றி விரும்பத்தக்க பொருளன்று' என்பது மேல் இனிது விளக்கப்பட்டது. இவ்வாற்றால் அடிகள், 'செத்தே போவேன்' என்றது, 'நீ என்னைப் புறக்கணிப்பின், மீளப் பிறவியில் வீழ்வேன்; அதுகண்டு உன் அடியார்கள், அருள் பெற்ற பின்னரும் அதனைப் பேணாது பிறவியில் வீழ்ந்தான்; என்னே இவனது அறிவிருந்தவாறு என எள்ளி நகையாடுவாரல்லரோ' என்று அருளிச்செய்தவாறாம். இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார் பின்னர்ப் பிறவியில் வீழ்தல் எஞ்ஞான்றும் இல்லையாயினும், அடி களது வீடு பேற்று அவா, அவ்வாறு அவரை அஞ்சப்பண்ணியது என்க.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் திருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந்
தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே. **#385**

தலைவனே! பழைய அடியார்கள் சிரிப்பார்கள்; மகிழ்வார்கள்;

இன்புறுவார்கள்; கூடிக்கூடி உனது திருநாமத்தைக் கூறுவார்கள்; சிலர் கேட்பார்கள்; அதனைப் பாராட்டுவார்கள்; தனித்தனியே இருந்து உனது திருப்பெயரை மனத்திலே ஊன்று வார்கள்; பொற்சபையின் கண்ணே நடிக்கின்ற இறைவா என்று துதிப் பார்கள். அவர்கள் எதிரிலே நாய் போன்றவனாகிய யான் இகழ்ச்சி யுடையவனாய் இருப்பேனோ? இனியேனும் அருள் புரிவாயாக.

விளக்கவுரை

முன்னைத் திருப்பாட்டில் வந்ததனை இத்திருப்பாட்டில் வந்த, 'உன் தெருளார்' என்பதனை இங்கும் உய்த்து, 'திரண்டு திரண்டு' என்றதனை முதலில் வைத்துரைக்க. தேனிப்பார் - இன்புறுவார். இதனை, 'தியானிப்பு' என்பதன் மரூஉ என்பாரும் உளர். 'தியானித்தல்' என்பது, 'சானித்தல்' என வருவதனையே காண்கின்றோம். 'ஒண்கருட சானத்தில் தீர்விடம்போல்', 'கோதண்டம் சானிக்கில்' (சிவஞானபோதம். சூத்.*9.* அதி.*2.3.)*. வார்த்தை - புகழ். மெச்சுவார் - பாராட்டுவார். வெவ்வேறிருந்து - தனித்தனியே இருந்து, 'நாமம்'; திருவைந் தெழுத்து. தரித்தல், நாவினும், மனத்தினும். நரிப்பாய் - துன்பம் உடையவனாய். இறை உலகத்தை அடைந்த அடியார்கள் தூய உடம்பு உடையராய் எங்கும் இயங்குவராதலின், என்னைக் கண்டு இரங்குவர் என்பார், 'அவர்முன் நரிப்பாய் இருப்பேனோ' என்று அருளிச் செய்தார். நரிப்பு - துன்பத்தால் தாக்கப்படுதல். இது, 'நெரிப்பு' என்பதன் மரூஉப் போலும்! அன்றி ஒருதேய வழக்கெனினுமாம். ஓகாரம் இரக்கப்பொருட்டு. நல்காய் - இரங்காய்.

நல்கா தொழியான் நமக்கென்றுன்
நாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா
வணங்கா மனத்தால் நினைந்துருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப்
பரவிப் பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி
யருளாய் என்னை உடையானே. **#386**

என்னை ஆளாக உடையவனே! நமக்கு இறைவன் அருள் புரியாது போகான் என்று எண்ணி, உனது திருநாமமாகிய அஞ்செழுத்தைப் பலகால் கூறி, கண்கள் நீர் பெருகி, வாயால் வாழ்த்தி, மெய்யால் வணங்கி, மனத்தினாலே எண்ணிக் கனிந்து, பலகாலும் உனது உருவத்தைத் தியானித்து பொற்சபை என்றே துதித்துத் தளர்வு உற்றிருக்கும் உயிராகிய எனக்கு இரங்கி அருள் புரிவாயாக.

விளக்கவுரை

'பொருளறிந்து நன்கு போற்றாது அறிந்த அளவில் எப்பொழுதும், எவ்விடத்தும் சொல்லுகின்றேன்' என்பார், 'பிதற்றி' என்றார். 'மல்கா' முதலிய நான்கும், 'செய்யா' என்னும் வினையெச்சங்கள். பாவித்து - நினைத்து. பரவி - துதித்து. ஒல்கா நிற்கும் -மெலிகின்ற. தம்மையே தமது எளிமையும் அயன்மையும் தோன்ற, 'உயிர்க்கு' எனத் திணையும், இடமும், வேறாக அருளிச் செய்தார்.

1.22.கோயில் திருப்பதிகம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடைய அன்பே. #387

தேனின் தெளிவானவனே! சிவபிரானே! திருப் பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவனே! அளவு இல்லாத பதவிகள் எல்லாவற்றையும் கடந்து நின்ற ஆனந்தமே! என்னுடைய அன்பு உருவமே! பகைத்து, என்னை மயக்கச் செய்யும் வஞ்சனையைச் செய்கின்ற ஐம்புலன்களின், வாயில்களையும் அடைத்து அமுதமே சுரந்து நின்று என்னகத்தே தோன்றுகின்ற ஒளியே! உன்னை நான் உள்ளவாறு காணும்படி வந்தருள்வாயாக.

விளக்கவுரை

மாறிநின்று - தம்முள் ஒன்றோடு மற்றொன்று மாறுபட்டு நின்று; என்றது, 'ஒன்று வந்து பற்றும்பொழுது, மற்றொன்று அதனை விலக்கி வந்து இவ்வாறு இடையறாது சூழ்ந்து' என்றபடி. இதற்கு இவ் வாறன்றி, 'என்னோடு பகைத்து நின்று' என உரைப்பின், 'மயக்கிடும்' எனவும் 'வஞ்சம்' எனவும் வருவனவற்றாற் பெறப்படுவதற்கு வேறாய்ப் பெறப்படுவது ஒன்று இன்மை அறிக. வஞ்சம், அற்றம் பார்த்து வருதல். 'ஒருவனை வஞ்சிப்பதோரும் அவா' (குறள்-366) என்றதும் காண்க. 'வழி' என்றது, பொறிகளை; 'பொறிவாயில் ஐந்து' என்றது காண்க (குறள்-6). 'அமுது' என்றது, அதன் இன்பம் போலும் இன்பத்தை. 'அமுதே' என்ற ஏகாரம், பிரிநிலை. 'ஊறி நின்று' என்றதனை, 'ஊறி நிற்க' எனத் திரிக்க. எழுதல் - தோன்றி வளர்தல். ஆசான் மூர்த்தியாய் வந்து ஆட்கொண்ட கோலம், இறைவனது இயற்கைக் கோலம் அன்றாதலின், இயற்கைக்

கோலத்தில் காணுதலை, 'உள்ளவா காணுதல்' என்றார். இக்காட்சி, சிவலோகத்தே காணப்படும்.
'சிவலோகம் அல்லது சிவபுரம்' என்பது, சுத்த தத்துவ புவனங்கள், அனைத்திற்கும் பெயர். இப்புவனங்கள் ஏனைய அசுத்த தத்துவ புவனங்கட்கு உள்ளீடாய் அவற்றோடு உடன் நிற்பனவும், அவை அனைத்திற்கும் மேலாய் அவற்றைக் கடந்து நிற்பனவும் என இரு கூறுபட்டு நிற்கும். அவ் இருகூற்றுள், அசுத்த தத்துவ புவனங் களோடு உடனாய் நிற்கும் சிவலோகம், 'பதமுத்தித் தானம்' என்றும், அவற்றிக்கு அப்பாற்பட்டு நிற்கும் சிவலோகம், 'அபரமுத்தித் தானம்' என்றும் சொல்லப்படும். அவற்றுள் பதமுத்தித்தானம், 'சரியை, கிரியை, யோகம்' என்னும் மூன்று நிலைகளின் நின்றோர் சென்று அடையும் இடமும், அபரமுத்தித்தானம், ஞானத்தில், 'கேட்டல், சிந்தித்தல், தெளிதல்' என்னும் நிலைகளில் நின்றோர் சென்று அடையும் இடமுமாம். நிட்டையை அடைந்து மீளாது நின்றோர், இவை அனைத்தையும் கடந்து சிவனோடு இரண்டறக் கலப்பர்.
நிட்டையிலே நிலைத்து நில்லாது மீட்சி எய்துவோர், அபரமுத்தித் தானத்திற் சென்று தடத்த சிவனை அடைந்து, அவனது அருள் வழியே பின்னர்ச் சொரூப சிவனை அடைவர், பதமுத்தித் தானத்தை அடைந்தோர் தாம் செய்த சரியை முதலியவாகிய தவத்தின் வன்மை மென்மைகட்கு ஏற்ப அங்கு நின்றே ஞானத்தை அடைந்து, அபரமுத்தி, பரமுத்திகளில் ஏற்ற பெற்றியாற் செல்லுதலும், மீள இந்நிலவுலகிற் பிறந்து ஞானத்தை அடைந்து, கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்பவற்றால் பின்னர் அபரமுத்தி, பரமுத்தி களை அவ்வாற்றான், அடைதலும் உடையராவர். அபரமுத்தித் தானத்தை அடைந்தோருள் அசுத்தவுலகை நோக்குவோர் அரியராக லின், அவர்க்குப் பிறப்பு உண்டாதல் மிகச் சிறுபான்மையே. 'அபர முத்தர்க்குப் பிறப்பில்லை' என்பதும் பெரும்பான்மை பற்றியேயாம். ஆயினும் நிட்டை கூடாதவழி, அசுத்த உலகை நோக்கும் நோக்கு ஒழியாது ஆகலானும், அந்நோக்கினை, கேட்டல் முதலிய மூன்று ஞானங்களும் மெலிவித்தலும், கெடுத்தலும் பெரும்பான்மை யாயினும், சிறுபான்மை அது தப்புதலும் கூடுமாகலின், பிறத்தல் அவர்க்கும் சிறுபான்மை உளதேயாம்.
'காண அருளாய்' என இயையும். வந்து - மீளத் தோன்றி, தேறல் - தேன். தெளிவு - வடித்தெடுத்து. ஈறிலாப் பதங்கள் - அள வில்லாத உலகங்கள். 'ஈறிலா' என்றதனை, இன்பத்திற்கு அடை யாக்குவாரும் உளர். 'யாவையும்' என்றதனால், அபர முத்தித் தானமாகிய சுத்த மாயா புவனங்களும் அடங்கின. 'இவை அனைத்தை யும் கடந்த இன்பம்'

என்றதனால், அது பரமுத்தி இன்பமாதல் வெளிப்படை.
இவ்வின்பத்தைப் பயக்கும் அன்பு, 'காண்பான், காட்சி, காட்சிப்பொருள்' என்னும் வேற்றுமை தோன்றாது காட்சிப் பொருளாகிய சிவம் ஒன்றே தோன்ற நிற்கும் அதீத நிலைக்கண்ண தாகிய பேரன்பாகலின், அதனை இறைவனின் வேறாக அருளாது. 'என்னுடைய அன்பே' என, ஒன்றாகவே அருளிச்செய்தார். எனவே,

அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவதும் ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

(தி.10 திருமந்திரம் - 270.) என்றருளிய அன்பும் இதுவேயாதல் பெறப்பட்டது.
அடிகள் இறைவனை இவ்வாறு விளித்தமையால் அவர் விரும்பியது பரமுத்தி இன்பத்தையன்றி வேறொன்றையன்று என்பது தெள்ளிதாதலின், அவர் பலவிடத்தும் தமக்குத் தருமாறு வேண்டும். சிவலோகம் அல்லது சிவபுரம் என்பது, அபரமுத்தித்தானத்தையன்றிப் பதமுத்தித் தானத்தையன்றென்பது இனிது விளங்கும். அன்னதா யினும், அடிகள் பரமுத்தியை வேண்டாது, அபர முத்தியையே வேண்டுதல் என்னையெனின், திருப்பெருந்துறையில் தம்மோடு உடன் இருந்து அருள்பெற்ற அடியார்கள் பலரும் அடைந்தது அபர முத்தியே என்னும் கருத்தினால், தமக்கும் அதுவே தரற்பாலது என்னும் உணர்வினாற்போலும் என்க. அபரமுத்தித் தானத்தில் அடை யும் நிலைகள் வாளா, 'சாலோகம், சாமீபம், சாரூபம்' எனக் கூறப் படாது, 'சுத்த சாலோகம், சுத்த சாமீபம், சுத்த சாரூபம்' என வேறு வைத்துக் கூறப்படும்; அந்நிலையே அடிகளால் குறிப்பிடப்படுவது என்க. அதனை அடிகள் வேண்டுவதும் அவற்றில் உள்ள விருப் பத்தால் அன்று; அதனையடைந்துவிடின், பின்னர்ப் பிறப்பில்லையாய் ஒழியும் என்னும் துணிவினாலேயாம் என்க.

அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யான்இதற் கிலன்ஓர் கைம்மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே. **#388**

எல்லாவற்றிற்கும் முன்னுமாய், பின்னுமாய் முழுதுமாய் வியாபித்த

மலமற்றவனே! எல்லையற்ற பரம்பொருளே! அழகிய திருப்பெருந்துறையை உடையவனே! சிவபிரானே! சிறப்புப் பொருந்திய சிவபுரத்துக்கு அரசனே! அன்பின் மிகுதியால் அடியேனை உயிரோடு உடம்பும் இன்ப வெள்ளமாய்க் கசிந்து உருகும்படி என் நிலைக்குத் தகுதி இல்லாத இனிய அருளைப் புரிந்தாய். இந்தப் பேருதவிக்கு நான் உனக்குத் திரும்பச் செய்யக் கூடிய உதவி இல்லாதவனாய் இருக்கிறேன்.

விளக்கவுரை

ஆக்கை (உடம்பு) உயிரின் வழியே நிற்பதாகலின், அதனை, 'ஆவியோடு' என, உயிரொடு சார்த்திக் கூறினார். பரம் - தரம்; தகுதி. 'முன்பு, பின்பு' என்றவை, காலப் பெயராய், அவற்றின் கண்ணவாகிய பொருளைக் குறித்தன. 'பின்பும்' என்றதன்பின்னும், 'ஆய்' என்பது விரிக்க. இனி 'முன்பும் பின்புமாய்' என மாறிக் கூட்ட லும் ஒன்று. 'முழுதும்' என்றது, இடம்பற்றி. 'முன்புமாய்' முதலிய வற்றை முதற்கண் கூட்டி உரைக்க.

அரைசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்த்தே. **#389**

அடியார்களுக்கு இறைவனே! அடியேனுடைய தந்தையே! உயிரோடு உடம்பும் அடுக்குத்தோறும் நெகிழ்ச்சி யுண்டாகும்படி உள்ளத்தே புகுந்து நின்று உருகச்செய்து, பொய்யாகிய அஞ்ஞானத்தைப் போக்கிய உண்மை ஞானமே! அலை மோதாது நிலையான அமுதமாகிய தெளிந்த கடலே! திருப்பெருந் துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே! வாக்கும் மனமும் கடந்து நின்று திருவருளால் உணரும்படி நான் உன்னைப் புகழ்ந்து உரைக்கின்ற வழியை உணர்த்துவாயாக.

விளக்கவுரை

'அன்பர்க்கு அரைசனே' எனக் கூட்டுக. அரைசன் - அரசன்; போலி. 'காவல் குழவி கொள்பவரின் ஓம்பும்' (புறம்-5.) அரசர்போல, இறைவன் தன் அன்பரை ஓம்புதலின், அவனை அவர்க்கு அரசன் என்று அருளினார். 'உடைய' என்றது, ஆறாம் வேற்றுமைப் பொருள் தருவதோர் இடைச்சொல்; அஃது இங்கு நான்காவதன் பொருட்கண்

மயங்கி வந்தது. புரை - உள்ளறை. அஃது, ஆக்கையிடத்து, தூலதேகத்தின்கண் உள்ள சத்த தாதுக்களையும், மற்றும், சூக்கும தேகம், பரதேகம் என்பவற்றையும், உயிரிடத்து, பாச ஞான பசுஞான பதிஞானங்களையும் குறித்தற்பொருட்டு, அடுக்கி நின்றது. கனிய - இளகும்படி. பதிஞானத்தால் இறைவனை உணரும் பொழுதன்றியும், பாசஞானங்களால் உலகினை உணரும் பொழுதும் அன்பர்கட்கு வேண்டுவது இறையன்பே. இனி, 'புரைபுரை' என்றதனை ஆக்கை ஒன்றிற்கே கொள்ளுதலுமாம். மிகுதலின், ஆவியும் புரை புரை கனிவதாக அருளிச்செய்தார். 'இருள் - அறியாமை; ஆணவ மலம்' என்பதும், 'அது முத்திக் காலத்தில் சத்தி கெட்டு நிற்கும் இயல் புடையதாதலின் இல்பொருள்போல வைத்துப் பொய் எனப்பட்டது' என்பதும் சிவஞானபோதத்து ஆறாம் சூத்திர மாபாடியத் தொடக் கத்துக் கூறப்பட்டமை காண்க. மெய்ச்சுடர் - அழிவில்லாத என்றும் நிலைபெற்று நிற்கும் ஒளி. 'பொராது' என்னும் எதிர்மறை வினையெச் சத்து ஈறு கெட்டது. மன்னுதல் - நிலைபெறுதல். 'திரை பொரா மன்னும் அமுதத் தெண்கடல்' என்னும் இல்பொருள் உவமப் பெயர், ஆகு பெயராய் உவமிக்கப்படும் பொருளை உணர்த்திற்று. இறைவன் என்றும் ஒருபெற்றியனாய் நிற்றலைக் குறிக்க, 'திரைபொரா மன்னும்' என்றும், இன்ப மயனாதலைக் குறிக்க, 'அமுதம்' என்றும், அறிவு வடிவினனாதலைக் குறிக்க. 'தெள்' என்றும் அடைபுணர்த்து அருளிச்செய்தார். எனவே, இம்மூன்று அடைகளானும் முறையே, 'சத்து, ஆனந்தம், சித்து' என்னும் இயல்புகள் குறிக்கப்பட்டவாறு அறிக. இது, மெய்ச் சுடராதலைப் பிறிதோராற்றான் இனிது விளக்கிய வாறு. 'உரையுணர்வு' என்னும் உம்மைத் தொகை, 'இறந்து' என்றதனோடு இரண்டாவதன் பொருள்படத் தொக்கது. 'இறைவன் வாக்குமனாதீதன்' என்பதில் 'வாக்கு' என்பது பாசஞானத்தையும், 'மனம்' என்பது பசுஞானத்தையுமே குறிக்கும் என்பது சிவஞான போதத்து ஆறாம் சூத்திரத்தின் இரண்டாம் அதிகரண மாபாடியத்தான் இனிது விளங்கிக் கிடப்பது. அதனால், இங்கு, 'உரை' என்றது பாச ஞானத்தையும், 'உணர்வு' என்றது பசுஞானத்தையுமாதல் தெளிவு. இறத்தல் - கடத்தல். இவ்விருஞானத்தானும் இறைவன் உணரப் படானாகலின், 'உரையுணர்வு இறந்து நின்று' எனவும். இவற்றான் உணரப்படானாயினும், பதிஞானத்தால் உணரப்படுதலின், 'உணர்வது' எனவும், அவன் இங்ஙனம் நிற்றல், சூக்கும சித்தாய் நிற்கும் தனது தனித் தன்மையாலாதலின், 'ஓர் உணர்வே' என்றும் அருளிச்செய்தார். 'உணர்ந்தார்க்கு உணர் வரியோன்' *(தி.8 கோவையார் - 9)* என்பதில், 'உணர்ந்தார்க்கு' என்பதற்கு, 'அருள்நிலையில் நின்று வேறாக

உணர்ந்தார்க்கு' என்பதும், 'உணர்வரியோன்' என்பதற்கு, 'அங்ஙனம் வேறு நில்லாது அவரைத் தன் திருவடி வியாபகத்துள் அடக்கி ஆனந்தத்துள் திளைத்திருக்கச் செய்பவன்' என்பதுமே பொருளாகலின், அஃது இதனோடு மலையாமை அறிக. இத் திருக்கோவைப் பகுதிக்குப் பேராசிரியர் உரைத்த உரைக்கும் இதுவே கருத்தாதல் அறிந்துகொள்க. 'உணர்ந்தார்க்கு' என்பதற்குப் பிறிதொரு பொருளும் அவர் இரண்டாவதாகவே உரைப்பார். 'உரையுணர்வு இறந்தவனாதலின், உன்னை உரைக்குமாறு இல்லை' என்பார், 'யான் உன்னை உரைக்குமாறு உணர்த்து' என்று அருளினார், எனவே, 'இயன்ற அளவில் உன்னைப் பாடுவேன்' என்றதாம்.

உணர்ந்தமா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப் பறுக்கும்எம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள்தா மில்லா இன்பமே உன்னைக்
குறிகினேற் கினியென்ன குறையே. **#390**

கற்று உணர்ந்த, பெரிய முனிவரும், தேவருடன், ஏனையோரது உணர்ச்சிக்கும் உணர்வுக்கும் அருமையான பொருளே! ஒப்பில்லாதவனே! எல்லா உயிர்களுக்கும் உயிரானவனே! பிறப்புப் பிணியைப் போக்கி உய்விக்கின்ற மருந்து போன்றவனே! செறிந்த இருளில் தெளிவாய்க் காணப்பட்ட தூய ஒளியே! திருப்பெருந் துறையில் வீற்றிருக்கும் பெருமானே! குணங்கள் இல்லாத ஆனந்தமே! உன்னை அடைந்த எனக்கு இனி என்ன குறை உள்ளது?

விளக்கவுரை

உணர்ந்த - கலைஞானத்தைப் பெற்ற. உம்பர் - தேவர். ஒழிந்தார் - ஏனையோர்; என்றது, அயன் மால் முதலியோரை. தேவர் பூதனாசரீரம் இன்றிப் பூதசார சரீரமே உடையராதலும், அயன் மால் முதலியோர் காரணக் கடவுளராதலும் பற்றி, அவர்தம் 'உணர்விற்கும் தெரிவரும் பொருளே' என எடுத்தோதினார். இணங்கிலி - நிகரில் லாதவனே; அண்மை விளி. 'இணங்கிலீ' எனப் பாடம் ஓதுதலுமாம். 'பிறப்பறுக்கும்' என்றது, 'ஆட்கொள்கின்ற' என்னும் பொருளது. பிறவி, நோயாகலின், 'அதற்கு மருந்தாய் இருப்பவனே' என்றார். திணிந்தது - செறிந்தது. ஓர் இருள் - பேர் இருள். தெளிந்த - இனிது விளங்கிய. வெளி - ஒளி. இஃது உவமையாகுபெயர். எனவே, 'செறிந்த இருளில் கிடந்து அலமருவோர்க்கு, அங்கு இனிது தோன்றிய ஒளிபோன்றவனே' என்பது

பொருளாயிற்று. 'அறியாமையில் மூழ்கி யிருந்த என்முன் நீ பொருக்கெனத் தோன்றி என்னை அறிவனாக் கினாய்' என்பதனை, இவ்வாறு அருளிச்செய்தார். குணங்கள் - முக் குணங்கள். இல்லா - கலவாத. முக் குணங்களுள் சாத்துவிகத்தால் தோன்றிப் பின் ஏனை இரண்டனாலும் வரும் துன்பத்தாலும் மயக்கத் தாலும் அழிவெய்தும் இன்பமன்றி, என்றும் நிலைபெற்று, துன்பம் மயக்கம் என்பவற்றோடு கலவாத பேரின்பமாகலின், 'குணங்கள்தாம் இல்லா இன்பமே' என்றும் அருளினார். குறுகினேற்கு - அடைந்த எனக்கு. 'என்ன' எனத் திரிந்து நின்ற, 'எவன்' என்னும் வினாப் பெயர், இன்மை குறித்து நின்றது, 'கற்றதனாலாய பயனென்கொல்' (குறள்-2.) என்புழிப்போல. பொன்மலையைச் சார்ந்த காக்கையும் பொன்னிறத்ததாவது போல, ('கனக மலையருகே - போயின காக்கையும். அன்றே படைத்தது பொன்வண்ணமே' தி.11 பொன்வண்ணத் தந்தாதி - 100.) உன்னை அடைந்தோரும் உன்னைப்போலவே குணங்கள் தாம் இல்லா இன்ப வடிவினராவராதலின், உன்னை அடைந்த எனக்கு இனிப் பெறக்கடவதாய் எஞ்சிநிற்கும் பொருள் யாது உளது என்பார், 'உன்னைக் குறுகினேற்கு இனி என்ன குறை' என்று அருளினார்.

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே. **#391**

முடிவில்லாத செழிப்பான ஒளி மலையே! வேதமாகிய மறையின் பொருளாகி என்னுடைய மனத்தின்கண் வந்து, நிலை பெற்ற தலைவனே! கட்டுப்படுத்தப்படாத வெள்ளம் போல என் சித்தத்தின் கண் பாய்கின்ற திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே! ஆன்ம நாதனே! நீ இப்பிறவியிலேயே என் உடம்பையே கோயிலாகக் கொண்டாய். இனிமேல் உன்னை யான் வேண்டிக் கொள்வது என்ன இருக்கிறது?

விளக்கவுரை

எவ்வாற்றானும் யாதொரு பொருளையும் வேண்டுந் தன்மை இல்லாத பேரின்பமயன் என்பதை நன்கு வலியுறுத்தற் பொருட்டு, 'நிறைவே' என்று போகாது, 'குறைவிலா நிறைவே' என்று எதிர்மறை முகத்தானும் அருளினார். தீமை சிறிதும் இல்லாது நன்மையே வடிவாய பொருள்

இறைவனையன்றிப் பிறிதில்லாமை அறிக. இதுபற்றியே இறைவனுக்குரிய பெயர்கள் பலவற்றுள்ளும், *'சிவன்'* என்னும் பெயர் தலையாயதாயிற்று. இப்பெயர் பிறர் ஒருவருக்கும் பொருந்தாமையை, *'சிவன் எனும் நாமம் தனக்கே யுடைய செம் மேனியெம்மான்' (தி.4 ப.112 பா.9)* என்று எடுத் தோதியருளினார் நாவுக்கரசர். *'குறைவிலா நிறைவே' (தி. 7. ப.70. பா. 6.)* என்னும் இவ்வரிய தொடரை ஆளுடைய நம்பிகளும் எடுத்தருளிச்செய்தல் அறிந்துகொள்ளத்தக்கது. கோது - பயன்படாத பகுதி; இஃது அமுதின்கண் இன்மையால், *'கோதிலா அமுதே'* என்றார். ஈறு - அழிவு. கொழுஞ் சுடர்க் குன்று - பேரொளியுடைய மலை; இஃது ஆகுபெயராய், ஞானமே உருவாய் உள்ள இறைவனைக் குறித்தது. *'மறை'* என்றது கலை ஞானத்தையும், *'மறையின் பொருள்'* என்றது அநுபவஞானத்தையுமாம். மன் - தலைவன். சிறை - அணை. *'நீர்'* என்றது, வெள்ளத்தை. தண்மையும் பெருமையும் பற்றிப் பேரின்ப வடிவினனாகிய இறைவனுக்கு வெள்ள நீர் உவமையாயிற்று. *'சிந்தைவாய்'* என்றதில் வாய், ஏழனுருபு. *'சிந்தை'* என்றது, தெளிவுபெற்ற சிந்தையை என்றது ஆற்றலான் விளங்கிற்று. உடல் என்றது உள்ளத்தை. *'நிலாவாத புலால் உடம்பே புகுந்து நின்ற - கற்பகமே' (தி.6 ப.95 பா.4)* என்று அருளிச்செய்தார் திருநாவுக்கரசரும். *'இனி உன்னை என் இரக்கேன்'* என்றது, *'இன்பமே வடிவான நீ, இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காது நின்றபின், உன்பால் யான் வேண்டிக் கொள்ளத் தக்கது யாதுளது'* என்றபடி.

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆய்அவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே. **#392**

உன் திருவருளை இடைவிடாது வேண்டி உருகும் போது என்னுடைய மனத்தினுள்ளே தோன்றுகின்ற ஒளியே! தேவர்கள் தலைமீது விளங்குகின்ற தாமரைமலர் போன்ற திருவடியை உடையவனே! திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவ பெருமானே! எங்கும் நிறைந்து ஆகாசமும் நீரும் பூமியும், நெருப்பும், காற்றும் ஆகி, அவை அல்லாதவனாய் அவ்வாறு அருளாலன்றி காணப்படாத வடிவத்தை உடையவனே! இப்பொழுது உன்னைக் கண்ணாரக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

விளக்கவுரை

இரந்து இரந்து - முனைப்பு நீங்கி உன்னைப் பல்காலும் வேண்டிநின்று. உருக - அன்பு செய்ய. 'இரந்திரந்து' என்று அடுக்கி னால், 'உருக' என்றதனையும் அடுக்காக வைத்துரைத்தல் பெறப் பட்டது. அடுக்குக்களில் முன்னது பன்மைப் பொருளிலும், பின்னது தொறுப்பொருளிலும் வந்தன. இவற்றால் இறைவனை அனுபவமாகப் பெறுமாறு அருளிச் செய்யப்பட்டது. 'ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்-ஆரேனும் காணா அரன்' (திருகளிற்றுப் படி-15) என்ற திருவாக்கினையும் நோக்குக. 'இமையோர் சிரந்தனிற் பொலியும் சேவடியாய்' என்றதனால், அவர்க்கு ஒரோஒருகால் புறத்துக் காணப் படுவதன்றி, அகத்தே எஞ்ஞான்றும் நின்று நிலவும் அநுபவப் பொருளாகாமை பெறப்படும். நிரந்த - முறைப்பட்ட. இறுதிக்கண் நிற்றற்குரிய, 'ஆகாயம்' என்பது, செய்யுள் நோக்கி முன் நின்றது, நீர், இரண்டாவதாகும், இறைவன் எல்லாப் பொருளிலும், கலப்பினால் அவையேயாயும், பொருள் தன்மையால் அவற்றின் வேறாகியும் நிற்றலின், 'ஐம்பூதங்களாய் அல்லையாய்' என்றும், 'இங்ஙனம் கலந்து நிற்பினும் ஒருவர்க்கும் தோன்றாதே நிற்கின்ற உன்னை நான் என் கண்ணாரக்கண்டு களித்தேன்' என்பார். 'ஆங்கே.....இன்றே' என்றும் அருளிச்செய்தார். ஓர் உரு - ஒப்பற்ற பொருள்.

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும் நீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே. **#393**

உன்னை அன்றி வேறு ஒரு பொருள் இல்லையாக. பிற எல்லாப் பொருளையும் விட்டுவிட்டு அணு அளவாய்க் குறுகிக் கூட்டப்படுகின்ற திருப்பெருந்துறை சிவனே! காணப்படுகின்ற ஒரு பொருளும் நீ அல்லை; உன்னை அல்லாது பிற பொருளும் இல்லை. யாவர் உன்னை அறிய வல்லவர்? இப்பொழுது எனக்கு அருள் புரிந்து அறியாமை இருளைப் போக்கி, மனத்தே தோன்றுகின்ற சூரியனே போல வெளிவந்து நின்ற உன்னுடைய இயல்பை, தற்போதத் தினையே எதிரிட்டு நினையாமல் அருள் வழியிலே நின்று நினைந்தேன்.

விளக்கவுரை

'சென்று சென்று' என்பது முதலிய பகுதிகளை முதலிற் கூட்டி, 'சிவனே, ஒன்றும் நீயல்லை; அன்றி ஒன்றில்லை; ஆதலின், உன்னை அறியகிற்பார் யார்? ஆயினும், நீ இன்று எனக்கு அருளி என் உள்ளத்து நின்ற நின்தன்மையால், நீயலால் பிறிது இன்மையை யான் நினைப்பற நினைந்து நின்றேன்' என வினை முடிக்க.
இன்று - எனக்கு அருளும் காலம் எய்திய இந்நாளில். எனக்கு அருளி - என்மேல் கருணைகூர்ந்து. 'இருள் கடிந்து' என்றதனை, 'நின்ற' என்பதற்கு முன்னே கூட்டுக. 'எழுகின்ற ஞாயிறு' என்றமையால், பொருட்கண்ணும், 'எழுந்து' என்பது பெறப்படும்.
முன்னைத் திருப்பாட்டில், இறைவன் தன் அடியார்களது உள்ளத்தில் தோன்றுகின்ற முறையை விளக்கியவாற்றிற் கேற்பவே இங்கும், 'ஞாயிறே' என்னாது, 'எழுகின்ற ஞாயிறே போன்று' எனக் காலையில் முளைத்தெழுந்து மேலே செல்லுகின்ற கதிரவனையே உவமையாகக் கூறினார். 'மன்னும் இருளை மதிதுரந்தவாறு' என்னும் சிவஞானபோதத்தையும், *(சூ.11.அதி.2.)* அதன் உரையையும் காண்க.
'உள்ளத்து எழுந்து நின்ற' என இயையும். 'தன்மை' என்றது செயலை. 'தன்மையால்' என்னும் உருபு தொகுத்தலாயிற்று. நினைப்பு அற - கருவிகளின்வழியும், தற்போதத்தின்வழியும் உணர்தல் அற்றுப் போக. நினைந்தேன் - உனது திருவருளின் வழியே உணரப் பெற் றேன். பிறிது - வேறொருபொருள். மற்று, அசைநிலை. 'இன்மை' என்றவிடத்து இரண்டாம் வேற்றுமை இறுதிக் கண் தொக்கது. 'நீயலால் பிறிது இன்மையை உணர்ந்தேன்' என்றது, உன்னையன்றிப் பிறிதொரு பொருளும் மெய்ப்பொருளாகாமையை உணர்ந்தேன்; அஃதாவது உண்மை ஞானத்தைப் பெற்றேன்' என்றவாறு. எனவே, 'காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே' *(தி.6 ப.95 பா.3)* என்றதுபோல, இதுவும், 'நீ கருணை கூர்ந்து என் உள்ளத்தில் தோன்றி அறியாமையைப் போக்கி நீங்காது நிலைபெற்றமையால், யான் நினது மெய்ம்மையை உணர்ந்தேனல்லாது, வேறு எவ்வாற்றான் உணர் வேன்' என்று அருளிச்செய்ததாம், 'பிறிதொருபொருள் இல்லை' எனப் பொதுப்படக் கூறப்பட்டதாயினும், 'பொருளல்லவற்றைப் பொருள் என்றுணரும் - மருள்' *(குறள்-351.)* என்புழிப்போல, 'பிறிதொரு மெய்ப்பொருள்' என்று சிறப்பு வகையாகவே கொள்ளப்படும். அல்லாக்கால், 'எனக்கு அருளி' 'இருள் கடிந்து', 'நின்தன்மையை நான் நினைந்தேன்' என்றற்றொடக்கத்துத் திருமொழிகள் பலவும் மாறுகொளக் கூறலாய் முடியும்.
சென்று சென்று - பாசக்கூட்டங்களினின்றும் நீங்கி நீங்கி; அடுக்கு, சிறிது சிறிதாக நீங்குதல்பற்றி வந்தது. 'யாதனின் யாதனின் நீங்கியான்'

(குறள் - 341) என்றார் திருவள்ளுவ நாயனாரும். 'தேய்ந்து தேய்ந்து அணுவாய் ஒன்றாம்' என மாறிக்கூட்டுக. தேய்வதும், அணுவாவதும், ஒன்றாவதும் ஆன்மாவே என்க. ஆன்மா நித்தப்பொருளாதலின், தேய்தல் முதலியன அதன் வியாபாரமாம். முத்தி நிலையில் ஆன்மா இறைவனைத்தவிர பிறிதொரு பொருளை அறிதலும், இச்சித்தலும், அநுபவித்தலும் இன்றி, இறைவனையே அறிந்து, இறைவனையே இச்சித்து, இறைவனையே அநுபவித்து நிற்குமாதலின், அவ்விடத்து அஃது உலகை மறந்திருத்தலேயன்றித் தன்னையே தான் மறந்து நிற்கும். அதனால், அந்நிலையில் அதற்கு இறை அநுபவம் ஒன்றைத் தவிர்த்து, ஏனைய வியாபாரங்களுள் ஒன்றும் இல்லையாதல் அறிக.
இந்நிலையில், 'உயிர்தானும் சிவாநுபவம் ஒன்றினுக்கும் உரித்தே' (சிவஞானசித்தி சூ.11-10.) என்கின்றார் அருணந்தி சிவாசாரியார்.
இவ்வாறு ஆன்மா சிவனது திருவடி வியாபகத்துள் அடங்கித் தனித்த ஒரு முதலாய்க் காணப்படாது நிற்றலே ஆன்மா சிவத்தொடு ஒன்றாதல் அல்லது இரண்டறக் கலத்தல்' எனவும், 'இவ்வாறன்றி, ஆன்மா முத்தியில்தானே பிரமமாம் என்னும் ஏகான்ம வாதம் முதலியன பொருள்படுமாறில்லை' எனவும் சித்தாந்த நூல்கள் பலவிடத்தும், பலபடியாக இனிது விளங்க விளக்குதலை அறிந்துகொள்க.
'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்' என்னும் தொடரை உமாபதிசிவனார், தமது சங்கற்ப நிராகரண நூலுள் சைவவாதி நிராகரணத்துள் எடுத்தோதினமையும், அதுவே, 'பரம சித்தாந்தம்' எனச் சிவஞானபோதத்துப் பத்தாம் சூத்திர முதல் அதிகரண பாடியத்துள் கூறப்பட்டமையும் அவ்விடங்களிற் காண்க.
இத்திருப்பாட்டுள் இங்ஙனம் பரம சித்தாந்தத்தை அருளிச் செய்தமையின், இதனை, 'திருவாசகத்தின் இருதயமான பாட்டு' என்பர் அறிஞர்.
'அணு' புலனாகாமைபற்றிக் கூறப்பட்ட உவமையாகு பெயர், சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் நிலையை, திருவைந்தெழுத்தை மூன்றெழுத்தாகவும், பின்னர் இரண்டெழுத்தாகவும், பின்னர் ஓர் எழுத்தாகவும் கணிக்கும் முறையில் வைத்து உணருமாறு அருளப்பட்டது என்பதும் அப் பாடியத்தே கூறினமை காண்க. திருவைந்தெழுத்தை ஓர் எழுத்தாகக் கணித்தல் இங்குப் பிறர்மதம் பற்றிக் கூறப்பட்டது. 'ஆம்' என்னும் பெயரெச்சம், 'சிவன்' என்னும் செயப்படுபொருட் பெயர் கொண்டது. 'ஒன்றாதல்' என்பது, 'ஒற்றித்து நின்று உணர்தல்' என்னும் பொருட்டாகலின், அதற்குச் செயப்படுபொருள் உண்மை அறிக.
எனவே, 'இவ்வாற்றானன்றி வேறாய் நின்று அறியப்படு வாயல்லை'

என்பதை எடுத்தோதி, 'யார் உன்னை அறிய வல்லார்' என்றதாயிற்று. 'யார்' என்னும் வினா. ஒருவருமிலர் எனப் பொருள் தந்ததாயினும் பெரிதும் அரியர் என்றல் திருவுள்ள மாதல் அறிக. இங்ஙனங் கூறவே, 'பெரிதும் அரிய வருள் நாயேனையும் ஒருவ னாக்கிய நின் கருணையை என்னென்று புகழ்வேன்' என்பதும் பெறப் பட்டது. 'ஒன்றும் நீயல்லை, அன்றி ஒன்று இல்லை' என்ற இரண்டிடத் தும், 'ஆயினும்' என்பது வருவித்து, 'நீ இவ்வுலகப் பொருள்களுள் ஒன்றும் அல்லையாயினும், நீ இல்லாத பொருளே இல்லை; ஆயினும், உன்னை காண்பவர் எவரேனும் உளரோ' என உரைக்க.

பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் கார்அய லுள்ளார்
ஆனந்த மாக்குமென் சோதீ. **#394**

பூமியும் மேலே உள்ள பதங்களும் இவற்றை உள்ளடக்கிய பல்வேறு அண்டமும் ஆகிய எல்லாப் பொருளுமாய்த் தோன்றி விரிந்ததாகிய ஒளிப்பிழம்பே! நீரில் கலந்துள்ள நெருப்பு போன்றவனே! நினைப்பதற்கு அருமையான தூய பொருளே! உனது திருவருளாகிய வெள்ளம் பாய்கின்ற சிறப்புப் பொருந்திய சித்தத்தில் உண்டாகியதாகிய ஒப்பற்ற தேன் போன்றவனே! திருப்பெருந் துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே! எனக்கு இன்பத்தை உண்டாக்குகின்ற என்னொளியுடைய பொருளே! இவ்விடத்தில் உறவாயிருப்பவர் யார்? அயலாய் இருப்பவர் யார்?

விளக்கவுரை

பார் - பூமி, 'பதம்' என்றது, சுவர்க்கத்தை. 'தன் நிலையில் தான் ஒருவனேயாய் இருந்த இறைவன் நான் பலவாகு வேனாக எனச் சங்கற்பித்து, அனைத்தையும் உண்டாக்கி அவற்றினுள் நிறைந்து நின்றான்' என்பதே இறைவனது அருட்செயலாகச் சொல்லப் படுதலின், 'பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் பரந்த தோர் படரொளிப் பரப்பே' என்று அருளினார்.

'தீயே' என்றதனால், 'நீர்', வெந்நீர் என்பது வெளிப்படை. தீ, வெந்நீரில் பொருளாய்ப் புலப்பட்டு நில்லாது, ஆற்றல் வடிவமாய்ப் புலப்படாது யாண்டும் நிறைந்து வேறற நிற்றல்போல, இறைவன் எல்லாப் பொருளிலும் புலப் பட்டு நில்லாது சத்தி வடிவமாய் யாண்டும் நீக்கமற

நிறைந்து நிற்றல் பற்றி, 'நீருறு தீயே' என்றார்.
'எங்கும் எவையும் எரியுறு நீர்போல் ஏகம்
தங்குமவன் தானே தனி'
எனத் திருவருட் பயனும் (பா.8) கூறிற்று.
நினைவதேல் - நினைவது என்றால், 'நின் அருள்வெள்ள மாகிய சீரிய பொருளின்கண் பொருந்திய சிந்தைக்கண் எழுந்த ஒப்பற்ற தேனே' என்க.
இங்கு - இவ்வுலகத்தில். 'உறவினராதல் அயலவராதல் யார் உள்ளார்; ஒருவரும் இல்லை' எனவே, 'நீயே எனக்கு எல்லாம்' என்பது குறிப்பெச்சமாயிற்று. ஆக்கும் - விளைக்கின்ற.

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே. **#395**

ஒளியாய்த் தோன்றும் உருவமே! உருவம் இல்லாத ஒப்பற்றவனே! வாக்கினால் சொல்லுவதற்கு அருமையான எப்பொருட்கும் முதலும் இடையும் கடையுமாய் உள்ளவனே! பிறவித் தளையை ஒழிக்கின்ற பேரின்பப் பெருங்கடலே! தீமை கலவாத நன்மையுடைய, திருவருள் மலையே! திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே! குருவாய் எழுந்தருளி வந்து உன் திருவடியை எனக்கு அருளிய பின், நீ என்னை விட்டுப் போகின்ற வகை எங்ஙனம்? அதை எனக்குச் சொல்வாயாக.

விளக்கவுரை

இறைவன் கொள்ளுகின்ற திருமேனி ஒளிவடிவாய்த் தோன்றலின், 'சோதியாய்த் தோன்றும் உருவமே' என்றார். அருவமே - அருவமாயும் நிற்பவனே. 'ஆதி' முதலிய மூன்றும் ஒரு பொருள்மேற் பல பெயர்களாதலின், அவை அனைத்தும், 'அரிய' என்றதற்கு முடிபாயின. அம்மூன்றும் அவற்றைச் செய்பவன் மேல்நின்றன. 'தீதிலா நன்மைத் திருவருட்குன்றே' என்றது, மேல். 'குறைவிலா நிறைவே' (தி.8 கோயில் திருப்பதிகம். பா.5), என்றாற் போல்வது. 'வந்து நின் இணையடி தந்து நீ போவது ஓர்வகை யாது' எனக் கூட்டுக. இஃது, இறைவன் தம்மை இந்நிலவுலகில் விடுத்துப் போயினமை பற்றிய ஆற்றாமையால் அருளியது.

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே. **#396**

எனது சித்தத்தையே, திருக்கோயிலாகக் கொண்டு எழுந்தருளிய எம் தலைவனே! திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் பெருமானே! எம் தந்தையே! ஈசனே! எனது உடலை இடமாகக் கொண்டவனே! சங்கரனே! எனக்கு நீ கொடுத்தது உன்னை; அதற்கு ஈடாக என்னை நீ ஏற்றுக் கொண்டாய்; யான் முடிவு இல்லாத பேரின்பத்தை அடைந்தேன். ஆயினும் நீ என்பால் பெற்றது என்ன? ஒன்றும் இல்லை. இக்கொள்ளல் கொடுத்தல்களைச் செய்த நம் இருவரில் திறமையுடையவர் யார்? இவ்வுதவிக்கு நான் ஒரு கைம்மாறும் செய்ய முடியாதவனாயினேன்.

விளக்கவுரை

இறைவன் தன் அடியார்க்குத் தன்னையே பரிசாகத் தருதலின், 'தந்தது உன்றன்னை' என்றார். இங்ஙனம் அடியார் களுக்குத் தன்னையே தருகின்ற இறைவன், அவர்கள்மேல் வைத்த கருணை காரணமாக, 'இவன் செய்தியெல்லாம் என் செய்தி' என்றும், இவனுக்குச் 'செய்தது எனக்குச் செய்தது' என்றும் கொண்டு. பாதகத்தைச் செய்திடினும் அதனைப் பணியே யாக்கி *(சிவஞான சித்தி. சூ.10-1.)* அவர்க்கு வருவதொரு துன்பமும் இல்லாமல், அவர்தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தானே தன்னுடையனவாக ஏற்றுக்கொண்டு நிற்றலை ஈண்டு நயம்படக் கூறுதற் பொருட்டு, தன்னைத் தந்ததற்கு மாற்றாகத் தம்மைக் கொண்ட தாக அருளிச்செய்தார். இறைவன் தன் அடியார்களை இங்ஙனம் யாதொரு தொடக்கும் உறாமல் காத்தலையே, 'கிடைக்கத் தகுமேநற் கேண்மையார்க் கல்லால் - எடுத்துச் சுமப்பானை இன்று' என்றது திருவருட்பயன் *(65)*. 'ஆர்கொலோ சதுரர்' என்றதனை, 'என்பால்' என்றதன் பின்னர் எஞ்சி நின்ற, 'ஆதலின்' என்பதன் பின்னர்க் கூட்டுக. 'நீ' எனவும், 'என்பால்' எனவும் பின்னர் வருகின்றமையின், முன்னர், 'யான்' என்பதும். 'நின்பால்' என்பதும் வருவித்து 'இப்பண்டமாற்றில் யான் நின்பால் அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்; நீ என்பால் பெற்றது ஒன்று யாது? ஒன்றும் இல்லை; ஆதலின், நம்முள் சதுரர் யார்' என உரைக்கப்படுமாறு அறிக. 'நெல்லைக் கொடுத்துப் பதரைப்பெற்ற பித்தன்போல் ஆயினை நீ' எனப்

பழிப்பதுபோலக்கூறி, இறைவனது கைம்மாறு கருதாப் பெருங்கருணைத் திறத்தைப் போற்றியவாறு, கொல், ஓ இரண்டும் அசைநிலைகள். சதுரர் - திறல் படைத்தவர். 'சிந்தையே' என்றதற்கு, 'அடியவரது சிந்தையையே' எனவும், 'உடல் இடம் கொண்டாய்' என்றதற்கு, 'என் உடலையும் இடமாகக் கொண்டாய்' எனவும் உரைக்க. 'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்' *(தி.5 ப.2 பா.1)* எனவும். 'காலையும் மாலையும் கைதொழுவார் மனம் - ஆலையம் ஆரூர் அரனெறி யார்க்கே' *(தி.4 ப.17 பா.8)* எனவும் அப்பரும் அருளிச்செய்தார். 'உடலிடங் கொண்டாய்' என்பது பற்றி மேலே *(22. தி.8* கோயில் திருப்பதிகம். பா*-5.)* கூறப்பட்டவைகளைக் காண்க.

1.23.செத்திலாப்பத்து

பொய்யனேன் அகம்நெகப் புகுந்தமு தூறும்
புதும லர்க்கழ லிணையடி பிரிந்துங்
கையனேன் இன்னுஞ் செத்திலேன் அந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை இழந்தேன்
ஐயனே அரசே அருட்பெருங் கடலே
அத்த னேஅயன் மாற்கறி யொண்ணாச்
செய்யமே னியனே செய்வகை அறியேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. **#397**

தலைவனே! மன்னனே! அருளையுடைய பெரிய கடலே! தந்தையே! பிரமன்மால் அறியமுடியாத சிவந்த திருமேனியை உடையவனே! திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமானே! பொய்யனாகிய என்னுடைய உள்ளம் நெகிழும்படி அதன்கண் புகுந்து அருள் செய்தாய். ஆயினும் அமுதம் சுரக்கின்ற அன்றலர்ந்த தாமரை மலர் போன்ற, வீரக்கண்டை அணிந்த இரண்டு திருவடிகளைப் பிரிந்தும், சிறியேனாகிய நான் இன்னும் சாகாமல் இருக்கிறேன். ஐயோ! கண் விழித்திருந்தும், மனத்தில் உள்ள நினைவை இழந்து விட்டேன். இனி செய்வது இன்னது என்று அறியேன்.

விளக்கவுரை

பொய்யனேன் - உண்மை அன்பு (நிரம்பிய அன்பு) இல்லாதவன். புகுந்ததும், அமுதம் ஊறுவதுபோல ஊறியதும் அகத்தே யாம். கையனேன் - சிறியனேன்; 'வஞ்சன்' எனப்பொருள் தரும் திசைச்சொல் வேறு. 'விழித்திருந்தும்' என்னும் சிறப்பும்மை தொகுத்த லாயிற்று. 'கருத்து' என்றது, கருதப்பட்ட பொருள்மேல் நின்றது. 'தூங்குவோர் தாம் விரும்பிய பொருளை இழந்து ஏமாறுதல் இயல்பு. நான் அவ்வாறின்றி விழித்திருந்தே இழந்தேன்' எனத் தம் ஊழ் வலியை நினைந்து

நொந்துகொண்டவாறு. 'தூங்குதல், விழித்தல்' என்பன, ஞானம்பெறாமையையும், பெற்றமையையும் குறித்து நின்றன. 'இனி அதனைப் பெறுதற்குச் செய்யும் வகையை அறிந் திலேன்' என்க.

புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
உண்டி யாய்அண்ட வாணரும் பிறரும்
வற்றி யாரும்நின் மலரடி காணா
மன்ன என்னையோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றினாய் பதையேன் மனம்மிக உருகேன்
பரிகி லேன்பரி யாவுடல் தன்னைச்
செற்றி லேன்இன்னுந் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. **#398**

திருப்பெருந்துறையில் இருக்கும் பெருமானே! தேவரும், மற்றையோரும் தங்கள் உடம்பின்மேல் புற்று வளரப் பெற்றும் மரம் வளரப் பெற்றும், நீரும் காற்றுமே உணவாக அமைய மெலிந்து வாழும் அவருள் ஒருவரும் உன் தாமரை மலர் போலும் திருவடிகளைக் காணமுடியாத அரசனே! அடியேனை ஒரு சொல்லில் அகப்படுத்தி ஆட்கொண்டாய். இருந்தும், நெஞ்சம் துடிக்கமாட்டேன்; மனம் மிகவும் உருகமாட்டேன்; உன்னிடம் அன்பு செய்யமாட்டேன்; இன்னும் உலகில் அலைந்து கொண்டிருக்கின்றேன்.

விளக்கவுரை

தவம் செய்யுமிடத்துத் தம் உடம்பின் மேல் வளரும் புற்றுக்களுள்ளும், மரங்களுள்ளும் தம் உடம்பு மறைந்து கிடத்தல் பற்றி, அவரையே புற்றும், மரமும் ஆயினார்போலக் கூறினார். உம்மை, சிறப்பு. கால் - காற்று, 'உண்டியாய்' என, செயப்படு பொருளின் தொழில் வினைமுதல்மேல் ஏற்றிக் கூறப்பட்டது. இவ்வாறன்றி, 'ஆய்' என்றவற்றை எல்லாம் 'ஆக' எனத் திரிப்பினு மாம். வற்றி - உடல் மெலிந்து. 'வற்றியும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தல். ஓர் வார்த்தை - ஒரு தொடர்மொழி. அது, திருவைந் தெழுத்து மந்திரம். அதன் கருத்து, 'நீ என் அடியவன்' என்பது. 'நம்பியாரூரர் திருமணத்தில் வல்வழக்கிட்டுச் சென்றபொழுது இறைவன் கூறியதும் அந்த வார்த்தையே என்பது, 'என் அடியான் - இந்நாவல்நகர் ஊரன்' எனவும், அது முற்றிலும் பொருள் பொதிந்த மெய்ம்மொழியே என்பது,

'தேவரையும் மாலயன் முதல்திருவின் மிக்கார்
யாவரையும் வேறடிமை யாஉடைய எம்மான்'

(தி.12.தடுத்.பா.37) எனவும் அருளிய சேக்கிழார் திருமொழிகளால் நன்கு தெளிவாதல் காண்க. 'ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து' எனச் சிவஞான போதமும், *(சூ. 8)* இதனையே குறிப்பிடுதலை அறிக.

'இங்ஙனம் உணர்த்தாதமுன்னர் பதைத்தலும், உருகலும் போல்வன இல்லாமை குற்றமன்று; உணர்த்திய பின்னரும், அவை இல்லா திருக்கின்றேன்' என இரங்கியவாறு. பரிதல் - அன்பு மிகுதல். பரியா உடல் - அன்பிற்குரிய மெய்ப்பாடுகள் இல்லா

புலைய னேனையும் பொருளென நினைந்துன்
அருள்பு ரிந்தனை புரிதலுங் களித்துத்
தலையி னால்நடந் தேன்விடைப் பாகா
சங்க ராஎண்ணில் வானவர்க் கெல்லாம்
நிலைய னேஅலை நீர்விட முண்ட
நித்த னேஅடை யார்புர மெரித்த
சிலைய னேஎனைச் செத்திடப் பணியாய்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. **#399**

இடபவாகனனே! சங்கரனே! எண்ணிறந்த தேவர் கட்கு எல்லாம், ஆதாரமானவனே! அலைகளை உடைய கடலில் தோன்றிய நஞ்சினை அருந்திய அழியாதவனே! பகைவரது திரி புரத்தை நீறாக்கின வில்லை உடையவனே! திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற பெருமானே! புல்லறிவாளனாகிய என்னையும் ஒரு பொருளாக எண்ணி உன்னுடைய திருவருளை அளித்தனை. அவ்வாறு கருணை காட்டிலும் தலையினால் நடப்பது போலச் செருக் குற்றேன். அடியேனை உடம்பினின்றும் நீங்கும்படி அருள்வாய்.

விளக்கவுரை

'தலையினால் நடந்தேன்' என்றது, அன்னதொரு செயலைச் செய்தமையைக் குறித்து, ஒப்புமை பற்றிவந்த இலக்கணைச் சொல். இதனை, 'தலைகால் தெரியாமல் களிக்கின்றான்' என்பர் உலகோர். 'அருள்புரிந்தனை புரிதலும் களித்துத் தலையினால் நடந்தேன்' என்று அடிகள் அருளிச் செய்தமையால், அவர், 'தாம் விரும்புங் காலத்துத் தம்மை இறைவன் தன்பால் வருவித்துக் கொள்வான்' என்னும் துணிவினராய் இருந்தமையும், அதற்கு மாறாக அது நிகழ்தற்குக் காலம் பெரிதும் நீட்டித்தமையும் பெறப்படும். மேல் 'தருக்கித் தலையால் நடந்த வினைத்துணையேன்' *(தி.8 நீத்தல் விண்ணப்பம் - பா- 39.)* என்றது, வேறொரு கருத்துப் பற்றி என்க. நிலையன் - நிலைபேற்றைத் தருபவன்; பற்றுக் கோடாய் இருப்பவன்.

அன்ப ராகிமற் றருந்தவம் முயல்வார்
அயனும் மாலுமற் றழலுறு மெழுகாம்
என்ப ராய்நினை வார்எ னைப்பலர்
நிற்க இங்கெனை எற்றினுக் காண்டாய்
வன்ப ராய்முரு டொக்கும்என் சிந்தை

மரக்கண் என்செவி இரும்பினும் வலிது
தென்ப ராய்த்துறை யாய்சிவ லோகா
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. **#400**

அழகிய திருப்பராய்த்துறை என்னும் பதியை உடையவனே! சிவலோகனே! திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் பெருமானே! என் மனமானது, வலிய பராய் மரத்தின் கணுப் போன்றது. என் கண் மரத்தினால் ஆனது. என்னுடைய காது இரும்பைக் காட்டிலும் வன்மை உடையது. பிரமனும், திருமாலும், உன்னிடத்து அன்புடையவராகி, செய்தற்கு அரிய தவத்தைச் செய் கின்றனர். நெருப்பைச் சேர்ந்த மெழுகு போல உள்ளம் உருகுகின்ற வராய், எலும்பு வடிவினராய், உன்னை நினைப்பவர்கள் இன்னும் எத்தனையோ பேர் உளர். அவர் எல்லாம் இருக்க, இவ்விடத்து அடியேனை நீ எதற்காக ஆட்கொண்டருளினாய்?

விளக்கவுரை

பொருள்கோள்: *'தென்பராய்த் துறையாய் ... ... சிவனே'* என் சிந்தை வன்பராய் முருடொக்கும்; *(என்கண்)* மரக்கண்; என்செவி இரும்பினும் வலிது; *(அங்ஙனமாக)* அருந்தவம் முயல் வாராய அயனும் மாலும், அழலுறு மெழுகாம் என்பராய் நினைவார் மற்று எனைப் பலரும் நிற்க இங்கு எனை எற்றினுக்கு ஆண்டாய்? *(ஆண்டதற்குக் காரணம் உண்டெனின், அக்காரணத்தானே இன்றும் என்னை நின்பால் வந்திடப்பணி).*

'அழலுறு மெழுகாம் என்பராய்' என்றது, 'எலும்பும் உருகப் பெறும் நிலையினையுடையவராய்' என்றபடி. வன் பராய் - வலிய பராய் மரம். இது சிறிதும் செம்மையின்றி எங்கும் முடங்கியும், திருகி யும் முருடுபட்டிருக்கும் என்பது அறியப்படுகின்றது. 'என்கண்' என்பது எஞ்சி நின்றது. 'கண்ணிணையும் மரமாம் தீவினை யினேற்கே' *(தி.8 திருச்சதகம். பா-21)* என முன்னே வந்தது காண்க. 'மரக்கண்' என்றது மரத்தின்கண் உள்ள துளையை. பராய்த்துறை, ஒருதலம். 'பராய்த் துறை மேவிய பரனே போற்றி' *(தி.8 போற்றித். 153)* என்றார் முன்னரும்.

ஆட்டுத் தேவர்தம் விதியொழித் தன்பால்
ஐயனே என்றுன் அருள்வழி யிருப்பேன்
நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே
நாத னேஉனைப் பிரிவுறா அருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவர்தந் தேவர் பிரானே
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. **#401**

தலைவனே! உலகத்தார் சொல்லுகின்ற பற்பல தேவர்களும், நாடி

அடைவதற்கு அருமையான பொருளே! இறை வனே! தேவனே! கூட்டமான பல தேவர்களுக்குத் தலைவரான பெருந் தேவர் தலைவனே! திருப்பெருந் துறையில் வீற்றிருக்கும் பெருமானே! உலகத்தை ஆட்டுகின்ற தேவரது கட்டளையை அறவே நீக்கி அன்பினால் எப்போது அடியேன் உன்னுடைய திருவருள் நெறியிலே நிற்பேன்? உன்னை விட்டு நீங்காத திருவருளை எனக்கு அளித்து, உன் திருவடிகளையும் கொடுத்து என் உடம்பாகிய பொய்யினைப் போக்கித் திருவருள் புரிவாயாக.

விளக்கவுரை

தேவர் தம் விதி - தேவரை வழிபட்டு அத்தேவராம் முறை; அவை சுவர்க்கபோகத்தைப் பயக்கும் காமிய வேள்விகள். அவற்றால் அப்பதவியை அடைந்தோரது இழிவினை உணர்த்துவார், 'ஆட்டுத் தேவர்' என்று அருளினார். ஆட்டுத் தேவர் - ஆட்டினை உண்ணும் தேவர். ஆடு, வேள்வியில் தரப்படுவது. 'முன்னாள் தக்கன் வேள்வித் தகர்தின்று' *(தி.8 திருச்சதகம்.பா.4.)* என முன்னரும் அருளினார். அருள்வழி இருத்தலை, 'அன்பால்' என்றமையின், தேவர் விதிவழிச் செல்லுதலுக்கு, 'ஆசையால்' என்பது வருவிக்கப் படும். எனவே, 'ஆசையால் கைக்கொள்ளப்படும் ஆட்டுத் தேவர் தம் விதிகளை ஒழித்து, அன்பால், உன்னையே ஐயனே - யாவர்க்கும் முதல்வனே என்று அழைத்து உன் அருள் வழியே இருப்பேனாகிய எனக்கு, முன்போலப் பிரிவுறும் அருளைக் காட்டாமல் என்றும் பிரிவுறா அருளைக் காட்டிக் காயமாயத்தைக் கழித்தருள் செய்யாய்' என வேண்டியவாறாயிற்று. 'கழலிணை காட்டி' என்றது மீளவும் எதிர்ப்படுதலை. அதனால், அதனை, அருளைக் காட்டுதலுக்கு முற்பட வைத்துரைக்க. காய மாயம் - உடம்பாகிய இவ் அழிபொருளை. கழித்தருள் செய்யாய் - விரைவில் நீக்கியருள்,

நாட்டுத் தேவர் - நிலத் தேவர்; பூசுரர். 'மண்மேல் தேவர் என்றே இறுமாந்து' *(தி.8 திருச்சதகம்.பா.4.)* என முன்னரும் கூறினார். காமியங்கருதி அவரையே தெய்வமாக மதிக்கும் உலகினர் கருத்துப் பற்றி, 'நாட்டுத் தேவரும்' எனச் சிறப்பும்மை கொடுத்து, ஆட்டுத் தேவர் தம் விதிவழியன்றிப் பிறிதொன்றை அறியாராகிய அவர், 'ஆவ எந்தாய் என்று அவிதாவிடும் நம்மவராகிய அவரையே எம்பிரானொடும் தேவர் என, ஒருங்கு வைத்தெண்ணி உண்மை உணர்ந்தாராக இறுமாந்து ஒழிதலன்றிச் சிவபிரானைப் பொதுநீக்கி அறியும்பேறு சிறிதேனும் இலராதல் பற்றி, 'நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே' என்றும் அருளிச் செய்தார். சேட்டைத் தேவர் - தொழிற்படும் தேவர். இவரை, 'பிரதி தேவர்' என்பர். அவர்தம் தேவர். அதிதேவர்; இவர் தம் பிரதி தேவரைத்

தொழிற்படுத்துவோர். மால் அயன் என்போரும் இவருள் அடங்குவர். சிவபெருமானை, 'இவர் அனைவர்க்கும் பிரானே' என்று அழைத்து இன்புறுகின்றார் அடிகள். 'தேவர்பிரானே' எனப் பொதுப்பட அருளிப்போகாது, 'சேட்டைத் தேவர் தம் தேவர் பிரானே' என வகுத்தோதியருளினார், 'பெருந்தேவர் எனப்படுவாரது இன்பமெல்லாம், தம்கீழ்ச் சிலரைத் தொழிற்படுத்தி அதனால் மகிழும் சிறிய இன்பமே' என்பது விளங்குதற் பொருட்டு. இவரைத்தான், 'தேவர்' என எம்பிரானோடும் எண்ணித் தாமும் மயக்கத்தில் ஆழ்ந்து, பிறரையும் மயக்கத்தில் ஆழ்த்தியொழிகின்றது வேதியர் குழாம் என்றற்கே, 'நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே' என முற்பட அருளிச் செய்தார். இத் திருப்பாட்டுள், 'தேவர்' என வந்தன பலவற்றிற்குப் பலரும் பலப் பலவாறு உரைகாண்பர்; அவற்றையெல்லாம் அவரவர் உரையிற் காண்க.

அறுக்கி லேன்உடல் துணிபடத் தீப்புக்
கார்கி லேன்திரு வருள்வகை யறியேன்
பொறுக்கி லேன்உடல் போக்கிடங் காணேன்
போற்றி போற்றியென் போர்விடைப் பாகா
இறக்கி லேன்உனைப் பிரிந்தினி திருக்க
என்செய் கேன்இது செய்கஎன் றருளாய்
சிறைக்க ணேபுனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. **#402**

போரில் வல்ல விடையை ஊர்பவனே! வரம்பி னுள்ளே, நீர் நிலை பெற்ற வயல் சூழ்ந்த திருப்பெருந்துறையில் பொருந்திய பெருமானே! வணக்கம், வணக்கம். உடம்பு துண்டாகும் படி வெட்டமாட்டேன்; தீயின்கண் புகுந்து அமைதி பெறமாட்டேன்; திருவருளின் முறையையும் அறியமாட்டேன்; உடற் சுமையையும் தாங்க மாட்டேன்; இதனை விட்டு நீங்கி அடையும் இடத்தையும் காணேன்; உன்னை விட்டு நீங்கி உயிரையும் விடவில்லை; இன்பமாய் இருக்க யான் என்ன செய்யவேண்டும்? இதனைச் செய்க என்று அருள் புரிவாயாக.

விளக்கவுரை

'உடலைத் துணிபட அறுக்கிலேன்' என இயைக்க. ஆர்கிலேன் - நிறைவு பெறமாட்டேன். 'திருவருளுக்கு வகை அறியேன்' என உருபு விரித்துரைக்க. 'உடலைப் பொறுக்கிலேன்; உடல் போக்கிடங் காணேன் என்க. போக்கு இடம் - போதற்கு வழி. சிறைக்கண் - வரம்பின்மீது.

மாய னேமறி கடல்விடம் உண்ட
வான வாமணி கண்டத்தெம் அமுதே

நாயி னேன்உனை நினையவும் மாட்டேன்
நமச்சி வாயஎன் றுன்னடி பணியாப்
பேய னாகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய னாகிநின் றலறுவ தழகோ
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. **#403**

மாயம் செய்பவனே! அலைகள் மடங்கி வீழ்கின்ற கடலில் எழுந்த நஞ்சை உண்ட தேவனே! நீலகண்டத்தை உடைய எமது அமுதம் போன்றவனே! பிறை விளங்குகின்ற சடையுடைய தலைக்கோலமுடையவனே! திருப்பெருந்துறையில் பொருந்திய பெருமானே! தூரத்தில் உள்ளவனாகி நின்று, நான் கதறுவது முறை யாகுமோ? ஓலம். நாய் போன்ற நான் உன்னை மனத்தால் நினைக்கவும் மாட்டேன். நமச்சிவாய என்ற திருவைந்தெழுத்தை வாயினாற் கூறி உனது திருவடியை மெய்யினால் வணக்கம் செய்யாத பேய்த்தன்மை உடையேன். எனினும், முத்தி நெறியைக் காட்டியருள்வாயாக.

விளக்கவுரை

மாயனே - மாயம் செய்ய வல்லவனே; என்றது. கண்முன் தோன்றி மறைந்தருளி மீண்டும் தோன்றாதிருந்தமைபற்றி. பெருநெறி - வீடடையும் வழி. சேயன் - தூரத்தில் உள்ளவன்.

போது சேரயன் பொருகடற் கிடந்தோன்
புரந்த ராதிகள் நிற்கமற் றென்னைக்
கோது மாட்டிநின் குரைகழல் காட்டிக்
குறிக்கொள் கென்றுநின் தொண்டரிற் [கூட்டாய்
யாது செய்வதென் றிருந்தனன் மருந்தே
அடிய னேன்இடர்ப் படுவதும் இனிதோ
சீத வார்புனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. **#404**

தாமரைப் பூவில் உறைகின்ற பிரமன், அலைகள் மோதுகின்ற பாற்கடலில் பள்ளி கொண்ட திருமால், இந்திரன் முதலிய தேவர்கள் நிற்கவும், அடியேனைச் சீராட்டி ஆட்கொண்டவனே! குளிர்ச்சி பொருந்திய நீர் நிலை பெற்ற வயல் சூழ்ந்த, திருப்பெருந் துறையைப் பொருந்திய பெருமானே! அமுதமே! யாது செய்யத்தக்கது என்று திகைத்து இருக்கிறேன். அடியேன் துன்பப்படுவதும் நல்ல தாகுமோ? உன்னுடைய ஒலிக்கின்ற வீரக் கழல் அணிந்த திரு வடியைக் காட்டி, அத்திருவடியையே குறியாகக் கொள்வாய் என்றருளி என்னை உன் தொண்டரோடு சேர்ப்பாயாக.

விளக்கவுரை

'அயன் முதலியோர் நிற்க என்னைக் கோது மாட்டியவனே' என்க. கோது மாட்டுதல் - குற்றங்களைந்து ஆட் கொள்ளுதல். 'குறிக்கொள்க' என்பது, தொண்டருக்கு இடும் ஆணை.

இருந்தேன் - திகைத்திருக்கின்றேன். மருந்தே - அமுதமே. 'கோது மாட்டியவனே' மருந்தே, சிவனே, யான் யாது செய்வது என்று இருந்தனன்; உன் அடியேன் இவ்வாறு இடருள் அகப்பட்டுக் கிடத்தல் உனக்கு இன்பம் தருவதோ! நின் தொண்டரிற் கூட்டாய்' என வினை முடிவு செய்க.

ஞாலம் இந்திரன் நான்முகன் வானவர்
நிற்க மற்றெனை நயந்தினி தாண்டாய்
காலன் ஆர்உயிர் கொண்டபூங் கழலாய்
கங்கை யாய்அங்கி தங்கிய கையாய்
மாலும் ஓலமிட் டலறும்அம் மலர்க்கே
மரக்க ணேனையும் வந்திடப் பணியாய்
சேலும் நீலமும் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. **#405**

இயமனது அரிய உயிரைக் கவர்ந்த தாமரைப் பூப்போன்ற திருவடியையுடையவனே! கங்கையைச் சடையில் தரித்தவனே! நெருப்பை ஏந்திய கையை உடையவனே! கெண்டை மீன் களும், நீல நிறமுடைய பூக்களும் பொருந்திய வயல் சூழ்ந்த திருப்பெருந்துறையில் பொருந்திய பெருமானே! உலகத்தவரும், தேவர் கோனும், பிரமனும், தேவரும், உன்னருளைப் பெற நிற்கவும், என்னை விரும்பி இனிமையாக ஆட்கொண்டருளினாய். திருமாலும் முறையிட்டுக் கதறுவதற்குரிய அப்பாதமலர்க்கே, மரக்கண் போன்ற கண்ணை உடைய என்னையும் வந்து சேரும்படி அருள் செய்வாயாக.

விளக்கவுரை

ஞாலம் - நிலவுலகத்துப் பெரியோர். 'எனை நயந்தினி தாண்டாய்; ஆதலின், மாலும் ஓலம் இட்டு அலறும் அத்தகைய நின்மலர் போலும் திருவடி நிழற்கண்ணே, மரத்தினது கண்போன்று அன்பு நீர் மல்காத கண்களையுடைய என்னையும் வருமாறு பணித் தருள்: (விட்டிடாதே)' என முடிக்க.

நீலம் - நீலப் பூ; குவளை மலர்.

வளைக்கை யானொடு மலரவன் அறியா
வான வாமலை மாதொரு பாகா
களிப்பெ லாம்மிகக் கலங்கிடு கின்றேன்

கயிலை மாமலை மேவிய கடலே
அளித்து வந்தெனக் காவஎன் றருளி
அச்சந் தீர்த்தநின் அருட்பெருங் கடலில்
திளைத்துந் தேக்கியும் பருகியும் உருகேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. #406

திருப்பெருந்துறையில் பொருந்திய சிவனே! சங்கேந்திய கையினையுடைய திருமாலோடு பிரமனும், அறிய முடியாத தேவனே! மலைமகளை ஒரு பாகத்திலுடையவனே! பெரிய கயிலாய மலையின்கண் எழுந்தருளிய கருணைக்கடலே! அடி யேனுக்குக் கருணை செய்ய வந்து, ஐயோ என்றிரங்கியருளி என் அச்சத்தைப் போக்கிய உன்னருளாகிய பெரிய கடலினிடத்து மூழ்கி மகிழ்ந்தும், நிரம்ப இன்புற்றும் குடித்தும் மனம் உருகமாட்டேன். மகிழ்ச்சி முழுவதும் நீங்க அதிகமாகக் கலங்கப் பெற்றவனாகின்றேன்.

விளக்கவுரை

அளித்து - என்மேல் இரக்கங்கொண்டு, 'ஆவ' என்னும் இரக்கச்சொல், 'அஞ்சேல்' என அபயமளித்தலைக் குறித்தது. திளைத் தல் - மூழ்கி ஆடுதல். தேக்குதல் - உண்டு தேக்கெறிதல். உருகுதல், இங்கு, 'இன்புறுதல்' என்னும் பொருளது. 'நீ இரங்கிவந்து அருள் செய்தும், உனது பேரின்பத்தினை வேண்டியவாறு நுகரும் பேறு பெற்றிலேன்' என்றபடி. இத்தொடரைச் சிறப்பாகக் கொண்டே, இப்பகுதிக்கு, 'சிவானந்தம் அளவறுக்கொணாமை' என்ற குறிப் பினைக் கூறினர் முன்னோர் என்க. வளை - சங்கு. 'களிப்பெலாம்' என்ற எழுவாய்க்கு, 'கெட' என்னும் பயனிலை எஞ்சி நின்றது. களிப்பு, இறைவன் கடிதே தம்மைத் தன் திருவடிக் கீழ்ச் சேர்த்துக் கொள்வான் என்னும் துணிவினால் நிகழ்ந்தது.

1.24.அடைக்கலப்பத்து

செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந்
தமைந்த
பழுத்தமனத் தடியர்உடன் போயினர்யான்
பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி
ஞானமிலா
அழுக்குமனத் தடியேன் உடையாய்உன்
அடைக்கலமே. #407

இறைவனே! தாமரை மலர் போன்ற உன் திருவடியைச் சேர்ந்த அடியார் உன்னோடு சென்றார்கள். புழுக்கள் வாழ்தற்கு இடமாகிய இழிந்த

உடலுடன் கல்வியும் ஞானமும் இல்லாத பொல்லா அழுக்கு மனத்தை உடைய பாவியேனாகிய நானும் உன் அடைக்கலமே!.

விளக்கவுரை

இம் முதல் திருப்பாட்டு, நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா.
'செழுங்கமலம்' என்பது, எதுகை நோக்கி வலிந்து நின்றது.
செழுங்கமலம் - செங்கமலம். 'அடியார் போயினர்' என இயையும். உடன் - விரைவாக. போயினர் - சிவலோகம் சென்றனர். புழுக்கண் உடை - புழுக்கள் வாழ்வதற்கு இடத்தைக் கொண்டுள்ள. குரம்பை - குடில்போலும் உடம்பு. 'குரம்பையை உடைய, பொல்லாத, அழுக்கு மனத்தை உடைய அடியேன்' என்க.

வெறுப்பனவே செய்யும்என் சிறுமையைநின்
பெருமையினால்
பொறுப்பவ னேஅராப் பூண்பவ னேபொங்கு
கங்கைசடைச்
செறுப்பவ னேநின் திருவரு ளால்என்
பிறவியைவேர்
அறுப்பவ னேஉடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே. **#408**

இறைவனே! தீமைகளையே செய்கின்ற என் இழிவை உன் பெருங்குணத்தால் பொறுப்பவனே! பாம்பைப் பூண்டிருப்பவனே! கங்கைச் சடையோனே; உன் திருவருள் என்னும் வாளால் என் பிறவியை வேரறுப்பவனே! அடியேன் உன் அடைக் கலமே!.

விளக்கவுரை

இவ்விரண்டாம் திருப்பாட்டு, முதலடி சிறிதே வேறுபடவந்த கட்டளைக் கலித்துறை. இங்ஙனம் சிறுபான்மை வேறுபட வரும் யாப்புக்களை, 'ஒப்பியல்' என வழங்குவர். அவ் வாற்றான் இஃது, ஒப்பியற் கட்டளைக் கலித்துறையாம்.
சிறுமை - குற்றம். பெருமை - பிறர் குற்றத்தை உளங் கொள்ளாமை. கங்கை சடைச் செறுப்பவன் - கங்கை நீரைச் சடையில் தடுத்து நிறுத்துபவன்.

பெரும்பெரு மான்என் பிறவியை வேரறுத்
துப்பெரும்பிச்சுத்
தரும்பெரு மான்சது ரப்பெரு மான்என்
மனத்தினுள்ளே
வரும்பெரு மான்மல ரோன்நெடு மாலறி
யாமல்நின்ற

அரும்பெரு மான்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே. #409

இறைவனே! பெரிய பெருமானும், என் பிறவியை வேரறுத்து எனக்குப் பெரும் பித்தேற்றும் பெருமானும்; சதுரப் பெருமானும்; என் மனத்தில் எழுந்தருளும் பெருமானும்; பிரம விட்டுணுக்கள் அறியவொண்ணாமல் நின்ற அரும்பெருமானும் ஆகிய தலைவனே! அடியேன் உன் அடைக்கலமே!.

விளக்கவுரை

இதுவும் முன்னைத் திருப்பாட்டுப் போன்றது.

'பெரும்பெருமான்' என்றதில், 'பெருமான்' என்றது, 'கடவுள்' என்னும் பொருட்டாய், 'பெருமை' என்னும் அடைபெற்று, 'முதற் கடவுள்' எனப் பொருள் தந்தது. பிச்சு - பித்து. சதுர் - திறல். 'பெருமான்' என வந்தன பலவும் விளிகளே.

பொழிகின்ற துன்பப் புயல்வெள்ளத் தில்நின்
கழற்புணைகொண்
டிழிகின்ற அன்பர்கள் ஏறினர் வான்யான்
இடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக் காமச்
சுறவெறிய
அழிகின் றனன்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே. #410

இறைவனே! துன்பப் பெருக்கில் உன் திருவடி யாகிய துணையைப் பற்றிக் கொண்டிறங்கின அன்பர் வானேறினர்; நான் துன்பப் பெருக்கின் சுழியில் அகப்பட்டு, மாதராகிய அலை மோத, காமமாகிய மகரமீன் எறிய அழிய நின்றேன். அடியேன் உன் அடைக்கலமே!.

விளக்கவுரை

இதுமுதல் மூன்று திருப்பாட்டுக்கள் கட்டளைக் கலித்துறை இலக்கணம் நிரம்பின.

'துன்பப் புயல் பொழிகின்ற வெள்ளம்' என்க. துன்பப் புயல்- துன்பத்தைச் சொரிகின்ற மேகம்; இஃது இல்பொருள் பற்றிவந்த உருவகமாய் நின்றது. 'துன்பத்தைச் சொரிகின்ற மேகம்' எனவே, 'அதன் பொழிவால் உளதாகும் வெள்ளம் துன்ப வெள்ளமே' என்பது சொல்ல வேண்டாவாயிற்று. 'வெள்ளத்தில் இழிகின்ற அன்பர்கள், நின் கழற்புணை கொண்டு வான் ஏறினர்' என்க. 'இழிகின்ற அன்பர்கள்' என்னோடு ஒருங்கிருந்த அடியார்கள் என்னும் பொருளது. இதனுள் வானைக் கரையாக உருவகம் செய்யாமையின், இது வியநிலை

உருவகத்தின் பாற்படும். 'இடர்க்கடல்' என்பது, 'அவ்வெள்ளம்' என்னும் பொருட்டாய் நின்றது. 'மாதர்' என்றது ஆகுபெயராய் அவர் மேல் உள்ள ஆசையைக் குறித்து அஃறிணையாய் நின்றமையின், தகர ஒற்று மிக்கது,

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து எவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு.

(தி.8 திருச்சதகம். பா-27.) என முன்னர் வந்ததனை நோக்குக.

சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன்
திறம்மறந்திங்
கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன்
மைத்தடங்கண்
வெருள்புரி மான்அன்ன நோக்கிதன் பங்கவிண்
ணோர்பெருமான்
அருள்புரி யாய்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே. **#411**

இறைவனே! மாதர் வஞ்சனையால் சிக்கி உன்னை மறந்து இவ்வுடம்பில் கிடந்து இளைத்தேன். வெருட்சி கொள்ளும் மான் போன்ற கண்ணிமைகளையுடைய உமையம்மையின் பங்கனே! விண்ணோர் பெருமானே! இனியாயினும் அருள் செய்யவேண்டும்.

விளக்கவுரை

சுருள் புரி - சுருளைச் செய்யும். கூழை - கூந்தல். இருள் - அறியாமை; மயக்கம். 'பெருமான்', விளி.

மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத்
திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போல் தளர்ந்தேன்
தடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள் வணங்குவன்
வல்வினையேன்
ஆழியப் பாஉடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே. **#412**

இறைவனே! மாதர் மத்திட்டுக் கடையச் சிதறி மிடாவில் பரவிச் சுழல்கின்ற தயிர்போலச் சுழன்று தளர்ந்தேன். இனி எக்காலம் வந்து உன் திருவடியை வணங்குவேன். நின் திருவடி வாழ்க. யாவரினும் மேலானவனே அடியேன் உன் அடைக்கலமே!.

விளக்கவுரை

'மாழைக் கண், மை பாவு கண்' என்க. மாழை - மா வடு. 'மைப் பாவிய' என்னும் பகரமெய், விரித்தல். 'கண்ணியரது ஆசை யாகிய மத்து' என்றபடி. 'வாழி', அசை. ஆழி அப்பன் - ஆழ்ந் திருக்கின்ற இறைவன். 'பெரியோன்' என்றபடி. 'பெரியோனாதலின், அடைக்கலம் என்று வந்தேனைக் கைவிடமாட்டாய்' என்பது குறிப்பு.

மின்கணினார் நுடங்கும்இடையார் வெகுளிவலையில்
அகப்பட்டுப்
புன்கண னாய்ப் புரள்வேனைப் புரளாமற்
புகுந்தருளி
என்கணிலே அமுதூறித் தித்தித்தென்
பிழைக்கிரங்கும்
அங்கணனே உடையாய் அடியேன்உன்
அடைக்கலமே. **#413**

இறைவனே! மாதர் வசத்தில் அகப்பட்டுத் துன்பப்படுகின்ற என்னைத் துன்பத்தை ஒழித்து ஆண்டருளியும் இடையறாது என் கண்ணிலே நின் திருவுருவைக் காட்டியருளியும் அருள் வழங்கும் இனியவனே! என் பிழைக்கு இரங்குகின்ற அருள் நோக்கம் உடையவனே! அடியேன் உன் அடைக்கலமே!.

விளக்கவுரை

இத் திருப்பாட்டு, ஒருவாற்றான் அமைந்த கொச்சகக் கலிப்பா. மின்கண் - ஒளி வீசும் கண். 'வெகுளி' என்றது ஊடலை. 'ஊடுதல் காமத்திற்கின்பம்' (குறள் - *1330)* ஆதலின், அஃது ஆடவரை அவரின் நீங்காது பிணிக்கும் வலையாயிற்று. புன்கண் - துன்பம். புரளுதல் - துடித்தல்; துன்புறுதல். 'அமுது' என்றது முன்னர்க் கண்ட திருவுருவத்தின் தோற்றத்தை. இடையறாது நிற்றலை, 'ஊறுதல்' என்றார். 'இரங்கும்' என்றது, தெளிவின்கண் வந்த எதிர் காலவினை, 'இரங்கும் நமக்கம் பலக்கூத்தன்' *(தி.8* கோயில் மூத்த திருப்பதிகம் - பா.*7.)* என்றாற்போல.

மாவடு வகிரன்ன கண்ணிபங் காநின்
மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக் கேயிடு வாய்நின்
குறிப்பறியேன்
பாவிடை யாடுகுழல் போற் கரந்து
பரந்ததுள்ளம்
ஆகெடு வேன்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே. **#414**

இறைவனே! மாவடு வகிர் போலும் கண்ணை யுடைய உமாதேவி பங்கனே! என்னை உன் திருவடிக்கீழ் சேர்த்துக் கொள்; அன்றேல்

நரகுக்கு ஆளாக்கு; உன் திருவுளக்குறிப்பை நான் அறிந்திலேன்; பாவின் கண் ஆடுகின்ற குழல்போல என் மனம் அலைந்து நின்றது. அடியேன் உன் அடைக்கலமே!.

விளக்கவுரை

இதுவும், முதலடி சிறிதே சிதைந்த கட்டளைக் கலித்துறை. 'மலரடிக்கே கூவிடுவாய்; கும்பிக்கே இடுவாய்; என்ற விகற்பத் தொடர், 'நீ என்னை எவ்வாறு செய்வதன்றி, நான் இன்னதே செய்க எனக் கட்டளை செய்ய உரியேனோ' என்றபடி. கூவுதல் - அழைத்தல். கும்பி - நரகம். குறிப்பு - திருவுள்ளம். பா - ஆடையாக்குதற்கண் நேரே நீண்டு கிடக்கும் இழைகளின் தொகுதி. குழல், அத் தொகுதியின் ஊடே குறுக்காக இழைகளைப் புகுத்தும் கருவி. இஃது ஒருபால் நில்லாது, ஆடை ஆக்குவோனது வலத்தினும் இடத்தினும் மாறி மாறி ஓடும். இஃது இங்ஙனம் ஓடினாலன்றி ஆடை தோன்றாதாகலின், ஆடை ஆக்குவோன் தன்னால் இயன்ற அளவில் இதனை விரைய ஓட்டுவான். அதனால், ஓரிடத்தில் நில்லாது விரைய ஓடும் இதனைத் தம் அலமரலுக்கு அடிகள் எடுத்துக்காட்டி இறைவன் பால் முறையிட்டருளினார். கரத்தலை, குழலுக்குப் பாவின் ஊடே கரந்து செல்லுதலாகவும், உள்ளத்திற்கு, மூவாசைகளின் மூழ்கிச் செல்லுதலாகவும் உரைக்க. பரத்தல் - சுழலல்.

பிறிவறி யாஅன்பர் நின்அருட் பெய்கழல்
தாளிணைக்கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்துபெற் றார்உன்னை
வந்திப்பதோர்
நெறியறி யேன்நின்னை யேஅறி யேன்நின்னை
யேஅறியும்
அறிவறி யேன்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே. **#415**

இறைவனே! உன்னைப் பிரியாத அன்பர் உன் திருவடிப் பேற்றோடு முத்திச் செல்வத்தையும் அடைந்தார்கள். நான் உன்னைப் புகழும் வழியறியேன். உன்னையும் அறியேன். உன்னை அறியும் அறிவுமிலேன். ஆயினும் அடியேன் உன் அடைக்கலமே.

விளக்கவுரை

இதுவும், இறுதித் திருப்பாட்டும் கட்டளைக் கலித்துறைகளே. 'பிரிவு' என்பதில் றகரம் சிறுபான்மை உறழ்ந்து வரும். 'பிறிவறியா' என்றது, 'பிரிந்திருக்க மாட்டாத' எனப் பொருள் தந்தது. 'அருள் தாள், பெய்கழல் தாள்' என்க. மறிவு - மீளுதல். 'வந்து' என்ற தனை, 'கீழ்'

என்றதன் பின்னர்க் கூட்டுக. முன்னர், 'அன்பர்' என்ற மையின், 'பெற்றார்' என்றதன்பின், 'யான்' என்பது கிளந் தெடுத்துக் கூறற்பாற்று. 'நின்னையே அறியும் அறிவு' என்றது. 'பிறி தொன்றை யும் அறியாது உன்னையே அறிந்து நிற்கும் அறிவு' என்றபடி. இதனையே கேட்டல் முதலியவற்றுள் நான்காவதாகிய, 'நிட்டை' என்பர்.

வழங்குகின் றாய்க்குன் அருளா ரமுதத்தை
வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கி னேன்வினை யேன்என்
விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந்
துய்யக்கொள்ளாய்
அழுங்குகின் றேன்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே. **#416**

இறைவனே! உன் அருளாகிய அமிர்தத்தை நீ கொடுக்க, நான் அள்ளியுண்டு நல்லூழின்மையால் விக்கி வருந்து கின்றேன். ஆதலால் எனக்குத் தேன் அன்ன உன் கருணையாகிய தண்ணீரைக் கொடுத்து உய்யக் கொண்டருள வேண்டும். அடியேன் உன் அடைக்கலமே!.

விளக்கவுரை

'வழங்குகின்றாய்க்கு' என்ற நான்கனுருபை ஏழனுரு பாகத் திரிக்க. அருள் ஆர் அமுதம் - அருளாகிய அரிய உணவு. இறை வனது திருவருளை அடிகள் வாரிவிழுங்கியது, துன்ப மிகுதியாலாம். துன்பம், உலகியலைத் துறக்கமாட்டாத நிலையால் உண்டாயது. அதனால், ஏனை அடியார்களைப்போல உடன் செல்லாது, பின்னர் இறைவனை அடையக் கருதிய பேருரிமை எண்ணத்தையே, வாரிக்கொண்டு விழுங்கியதாகவும், தம் எண்ணத்தின்படி அடையமாட்டாது நிற்றலையே, விக்கியதாகவும் அருளிச் செய்தார். எனவே, 'தண்ணீர்' என்பது, இறைவன் மீளத் தோன்றுதலையே யாயிற்று 'வழங்குகின்றாய், விழுங்குகின்றேன்' என்றவை, இறந்த காலத்தில் நிகழ்காலம். விதி - ஊழ். 'தழங்கு நீர்' என இயையும். தழங்குதல் - ஒலித்தல். அருந்தேன் - கிடைத்தற்கரிய தேன்; என்பது பெறுதும். உணவு மிடற்றுக்கிடையில் விக்கப்பெற்றவன், அதுபோழ்து கிடைக்கும் நீரை நீராக நினையாது, அரிய தேனாகவே நினைப்பான் என்பது தோன்ற, 'அருந்தேன் அன்ன தண்ணீர்' என்று அருளினார். உணவு மிடற்றில் விக்கி இறவாதபடி பருகத் தண்ணீர் தந்து காப் பாற்றுதல், உண்ண உணவு இட்டவனுக்குக் கடமை என்பார், 'தண்ணீர் பருகத் தந்து உய்யக்கொள்ளாய்' என்று அருளிச் செய்தார். இஃது, 'ஒட்டு' என்னும் அணிவகையின் பாற்பட அருளியதாம்.

1.25.ஆசைப்பத்து

கருடக் கொடியோன் காண மாட்டாக்
கழற்சே வடியென்னும்
பொருளைத் தந்திங் கென்னை யாண்ட
பொல்லா மணியேயோ
இருளைத் துரந்திட் டிங்கேவா
வென்றங் கேகூவும்
அருளைப் பெறுவான் ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. #417

அம்மானே! திருமாலும் காணவொண்ணாத திருவடி என்னும் பொருளை எனக்குக் கொடுத்து என்னை ஆண்டருளின பொல்லா மணியே! எனது அஞ்ஞான இருளைப் போக்கி இங்கே வாவென்று உன்னிடத்துக்கு அழைக்கும்படியான உன் அருளைப் பெறுதற்கு ஆசைப்பட்டேன்.

விளக்கவுரை

கருடக் கொடியோன், திருமால். பொல்லா மணி - துளையிடாத இரத்தினம். 'அங்கே' என்றதன்பின், 'வர' என்பது வருவிக்க. 'அங்கு' என்றது சிவலோகத்தை.
ஆசைப்பட்டேன் - விருப்பத்துள் பொருந்தினேன்.

மொய்ப்பால் நரம்பு கயிறாக
மூளை என்பு தோல்போர்த்த
குப்பா யம்புக் கிருக்ககில்லேன்
கூவிக் கொள்ளாய் கோவேயோ
எப்பா லவர்க்கும் அப்பாலாம்
என்னா ரமுதேயோ
அப்பா காண ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. #418

அம்மானே! நரம்பு முதலானவற்றால் செய்யப்பட்ட இந்த உடம்பில் தங்கி இருக்க மாட்டேன். என்னை அழைத்துக் கொள்ள வேண்டும். எவ்வகைப் பெருமை உடையார்க்கும் அறிய இயலாத என் ஆரமுதே! அப்பனே! உன்னைக் காண ஆசைப் பட்டேன்.

விளக்கவுரை

மொய்ப்பால் நரம்பு - நெருங்கும் பகுதியவாகிய நரம்பு. 'மூளை என்புகளைத் தோலால் போர்த்த' என்க. குப்பாயம் - போர்வை; உடம்பு. 'உன்னைக் காண' என்க.

சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு திரியுஞ்
சிறுகுடி லிதுசிதையக்

கூவாய் கோவே கூத்தா காத்தாட்
கொள்ளுங் குருமணியே
தேவா தேவர்க் கரியானே சிவனே
சிறிதென் முகநோக்கி
ஆவா என்ன ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. #419

அம்மானே! சீயொழுகி, ஈக்கள் மொய்த்து மலங்களுடன் கூடித் திரிகின்ற இந்த உடம்பழிய என்னை நீ அழைத்துக் கொள்ள வேண்டும். நீ என் முகத்தைப் பார்த்து ஐயோ என்றிரங்கும்படி ஆசைப்பட்டேன்.

விளக்கவுரை

வார்ந்து - ஒழுகப்பட்டு. மொய்த்து - மொய்க்கப்பட்டு. ஆ - அந்தோ. வா - வருக. என்ன - என்று என்னை அழைக்க. இனி, 'ஆவா என இரங்கிக் கூற' என்றே உரைத்தலுமாம்.

மிடைந்தெலும் பூத்தைமிக் கழுக்கூறல்
வீறிலி நடைக்கூடந்
தொடர்ந்தெனை நலியத் துயருறு கின்றேன்
சோத்தம்எம் பெருமானே
உடைந்துநைந் துருகி உன்னொளி நோக்கி
உன்திரு மலர்ப்பாதம்
அடைந்துநின் றிடுவான் ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. #420

அம்மானே! இந்த உடம்பு என்னைத் தொடர்ந்து வருதலால் வருந்தி நின்றேன். உனக்கு வணக்கம்; மனம் நெகிழ்ந்துருகி உன்னொளியை நோக்கி உன் திருவடியை அடைந்து நிற்க ஆசைப் பட்டேன்.

விளக்கவுரை

மிடைந்து - நெருங்கி. மிடைந்து, மிக்கு என்னும் எச்சங்கள் எண்ணின்கண் வந்தன. ஊத்தை - அழுக்கு. 'ஊறல்' என்றதனால், 'அழுக்கு' என்றது, அழுக்கு நீரையாயிற்று, 'ஊறலை யுடைய கூடம்' என்க, வீறு இலி - பெருமை இலதாகிய (இழிவை உடைய கூடம்). நடைக் கூடம் - இயங்குதலையுடைய மாளிகை; உடம்பு. சோத்தம் - வணக்கம்.

அளிபுண் ணகத்துப் புறந்தோல் மூடி
அடியே னுடையாக்கை
புளியம் பழமொத் திருந்தேன் இருந்தும்
விடையாய் பொடியாடீ
எளிவந் தென்னை ஆண்டு கொண்ட

என்னா ரமுதேயோ
அளியன் என்ன ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. **#421**

அம்மானே! இந்த உடம்பினை அருவருத்துப் புளியம் பழம் போன்று பிரிந்தேயிருந்தேன். எளிதாக வந்து என்னை ஆண்டருளின என் ஆர் அமுதே! நான் உன்னால் காக்கப்படுதற்கு உரியவனாகிய எளியவன் என்று கண்டோர் சொல்ல ஆசைப் பட்டேன்.

விளக்கவுரை

: *'யாக்கை'* அகத்து உள்ள அளிந்த புண்ணைப் புறத்துத் தோலால் மூடியதனால் புளியம் பழம் ஒத்து என்க. புளியம் பழம், உள்ளே நைந்து அழகின்றியிருந்தும், வெளியே உறுதியுடையதுபோல அழகாகக் காணப்படுதலால், அதனை, உள்ளே உதிரம் முதலியவற்றோடு கூடிய மெல்லிய உறுப்புக்கள் அழகின்றிக் கிடப்பவும், வெளியே ஒன்றும் தோன்றாது அழகாகக் காணப்படும் உடம்பிற்கு உவமையாகக் கூறினார்.

'ஒத்து' என்றதனை, 'ஒப்ப' எனத் திரிக்க. இருந்தேன் - இதனுள் அருவருப்பின்றியிருந்தேன் (இது முன்னைய நிலை). 'இருந்தும் எளிவந்து என்னை ஆண்டுகொண்ட என்னாரமுதே' என்க. 'இப்பொழுது, அந்தோ? இவன் இரங்கத் தக்கவன் என்று நீ சொல்ல ஆசைப்பட்டேன்' என்றதாம். இப்பாட்டின் முதற்சீரில் உள்ள எழுத்துக்களை நோக்கினும், அளியேன்' என்பது பாடமாகாமை விளங்கும்.

எய்த்தேன் நாயேன் இனியிங்கிருக்க
கில்லேன் இவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோர் அறியா
மலர்ச்சே வடியானே
முத்தா உன்தன் முகவொளி நோக்கி
முறுவல் நகைகாண
அத்தா சால ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. **#422**

அம்மானே! நாயேன் இளைத்தேன். இனி இங்கு இருக்கிலேன். இந்தப் பொய்யான வாழ்க்கையினின்றும் என்னை நீக்க வேண்டும். தேவர்களும் அறியாத திருவடியை உடையவனே! உன் முக ஒளியையும், உன் திருப்புன்னகையையும் காண ஆசைப் பட்டேன்.

விளக்கவுரை

'வைத்தவனே வாங்குதல் வேண்டுமன்றிப் பிறர் யார் அது செய்வார்'

என்பார், 'வைத்தாய் வாங்காய்' என்று அருளினார். இவ்வுலக வாழ்க்கையை வைத்தல் படைத்தலும், வாங்கல் அருளலுமாகும். 'நகை' என்றதும் ஒளியேயாம்.

பாரோர் விண்ணோர் பரவி யேத்தும்
பரனே பரஞ்சோதீ
வாராய் வாரா உலகந் தந்து
வந்தாட் கொள்வானே
பேரா யிரமும் பரவித் திரிந்தெம்
பெருமான் எனஏத்த
ஆரா அமுதே ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. **#423**

மண்ணுலகத்தாரும், விண்ணுலகத்தாரும் வழி பட்டுத் துதிக்கின்ற மேலானவனே! முத்தியுலகைத் தந்து வந்தாட் கொள்வோனே! உன் திருப்பெயர்கள் ஆயிரத்தையும் உச்சரித்து எம் பெருமானே என்று துதிக்க ஆசைப்பட்டேன்.

விளக்கவுரை

'வாராய்' என்பதனை இறுதியில் வைத்துரைக்க. 'வந்து தந்து ஆட்கொள்வோன்' என்க. திரிந்து ஏத்துதல், சிவலோகத் திலாம்.

கையால் தொழுதுன் கழற்சே வடிகள்
கழுமத் தழுவிக்கொண்
டெய்யா தென்றன் தலைமேல் வைத்தெம்
பெருமான் பெருமானென்
றையா என்றன் வாயா லரற்றி
அழல்சேர் மெழுகொப்ப
ஐயாற் றரசே ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. **#424**

அம்மானே! உன் திருவடியைக் கையால் தழுவிக் கொண்டு, என் தலைமேல் வைத்துக் கொண்டு எம்பெருமானே! ஐயனே! என்று அரற்றித் தீயைச் சேர்ந்த மெழுகை நிகர்த்துருக ஆசைப் பட்டேன்.

விளக்கவுரை

இதனுள் கூறப்படும் கையால் தொழுதல் முதலிய பலவும் சிவலோகத்தின்கண் வைத்து என்க. கழும - இறுக. எய்யாது - இளையாமல். ஒப்ப - ஒத்து நிற்க.

செடியா ராக்கைத் திறமற வீசிச்
சிவபுர நகர்புக்குக்
கடியார் சோதி கண்டு கொண்டென்

கண்ணிணை களிகூரப்
படிதா னில்லாப் பரம்பர னேஉன்
பழஅடி யார்கூட்டம்
அடியேன் காண ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. **#425**

அம்மானே! குற்றம் நிறைந்த இந்த உடம்பின் தொடர்பைப் பற்றற நீக்கி, சிவநகரில் புகுந்து விளக்கமாகிய ஒளியைக் கண்டு கொண்டு, என் இரண்டு கண்களும் மகிழ்ச்சி எய்தவும் உன் பழவடியார் கூட்டத்தைக் காணவும் அடியேன் ஆசைப்பட்டேன்.

விளக்கவுரை

செடி - குற்றம். திறம் - கூறுபாடு. அற வீசி - முற்றிலும் கழித்து. கடி - விளக்கம். சோதி - இறைவன் திருமேனி. படி - ஒப்பு.

வெஞ்சே லனைய கண்ணார்தம்
வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச்சுடரே
நானோர் துணைகாணேன்
பஞ்சே ரடியாள் பாகத் தொருவா
பவளத் திருவாயால்
அஞ்சேல் என்ன ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. **#426**

அம்மானே! மாதரது வெகுளி வலையில் அகப் பட்டு நாயினேன் நைந்தேன்; ஞான சூரியனே! உமாதேவி பங்கனே! நான் ஒரு துணையையும் காணேன். ஆதலால் உன் பவளத் திரு வாயால் அஞ்ச வேண்டா என்று நீ சொல்லும்படி நான் ஆசைப் பட்டேன்.

விளக்கவுரை

'வெங் கண்' என இயையும். 'வெகுளி வலையில் அகப்பட்டு' *(தி.8. அடைக்கலப்பத்து - பா.7.)* என்பது, முன்னும் வந்தமை காண்க. நைஞ்சேன் - நைந்தேன்; வருந்தினேன்; போலி.

1.26.அதிசயப் பத்து

வைப்பு மாடென்று மாணிக்கத் தொளியென்று
மனத்திடை உருகாதே
செப்பு நேர்முலை மடவர லியர்தங்கள்
திறத்திடை நைவேனை
ஒப்பி லாதன உவமனி லிறந்தன
ஒண்மலர்த் திருப்பாதத்
தப்பன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. **#427**

எமக்கு இடம், செல்வம் முதலியனவையாய் இருப்பவன் சிவபெருமான் என்று மனத்தில் எண்ணியுருகாமல் மாதர் வஞ்சனையில் அகப்பட்டு வருந்துகின்றவனாகிய என்னை, உவமை யில்லாத திருவடியை உடைய எமது தந்தையாகிய இறைவன் ஆண்டு கொண்டு தன்னடியார் கூட்டத்தில் சேர்த்த அதிசயத்தைக் கண்டோம்.

விளக்கவுரை

வைப்பு மாடு - சேம வைப்பாக வைத்த செல்வம். என்றும் என்றும் என உம்மை கொடுத்து ஓதினுமாம். செப்பு - கிண்ணம். திறம் - கூறுபாடு; அவை கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று நின்று நுகரப்படுவன. ஒப்பு இலாதன - ஒருவாற்றாலேனும் ஒப் பாகக் கூறப்படும் பொருள் இல்லாதவாறு நிற்பன. உவமனில் இறந் தன - அரிதிற்கண்டு ஒருவாறு ஒப்புமைகூறும் பொருள்கள் அனைத் திற்கும் மேலாய் நிற்பன. கண்டாம் - கண்கூடாக யாம் கண்டோம். 'மடவரலியர் திறத்தைத் துச்சமாக வெறுத்து, தன்னை வைப்பு மாடென்றும் மாணிக்கத்தொளியென்றும் நினைந்து மனம் உருகி நிற்கும் அடியவர் கூட்டத்தில், அவர்க்கு நேர்மாறான குணத்தை யுடைய என்னை இறைவன் சேர்த்தருளியது அதிசயம்' என்றவாறு.

நீதி யாவன யாவையும் நினைக்கிலேன்
நினைப்பவ ரொடுங்கூடேன்
ஏத மேபிறந் திறந்துழல் வேன்றனை
என்னடி யானென்று
பாதி மாதொடுங் கூடிய பரம்பரன்
நிரந்தர மாய்நின்ற
ஆதி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. **#428**

நீதியாய் இருப்பவனவற்றை நினையேன்; அவற்றை நினைப்பவர்களோடும் கூடேன்; துன்பத்துக்கே ஆளாகிப் பிறந்து

இறந்து உழல்வேன்; இப்படிப்பட்ட என்னையும் இறைவன் தன்னடியான் எனக் கொண்டு ஆண்டருளித் தன் அடியாரோடு சேர்த்து வைத்த அதிசயத்தைக் கண்டோம்.

விளக்கவுரை

'நீதி' என்றது, உலகியலிலும், மெய் ஒழுக்கங்களை. ஏதமே *(ஏதமாகவே)* - துன்பமே மிகும்படி. நிரந்தரமாய் நின்ற ஆதி - என்றும் உள்ள பொருளாய் நிற்கும் முதல்வன். *'ஒழுக்கம் மிக்காராகிய தன் அடியவர் கூட்டத்தில், ஒழுக்கத்தோடு சிறிதும் இயைபில்லாத என்னையும் இறைவன் சேர்த்தருளியது அதிசயம்'* என்றபடி.

முன்னை என்னுடைய வல்வினை போயிட
முக்கண துடையெந்தை
தன்னை யாவரும் அறிவதற் கரியவன்
எளியவன் அடியார்க்குப்
பொன்னை வென்றதோர் புரிசடை முடிதனில்
இளமதி யதுவைத்த
அன்னை ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. **#429**

நான் முற்பிறவிகளில் செய்த வலிய வினைகள் நசிக்கும்படி, முக்கண்ணுடைய எந்தையும், யாவரும் அறிதற்கரியவனும், அடியார்க்கு எளியவனும் ஆகிய சிவபெருமான் ஆண்டருளித் தன் அடியாரோடு சேர்த்த அதிசயத்தைக் கண்டோம்.

விளக்கவுரை

'முன்னை உள்ள என்னுடை வல்வினை' என்க. *'வல்வினை போயிட ஆண்டு'* என இயையும். *'அடியார்க்கு எளியன்'* எனக் கூட்டுக. *'அன்னை'* என்றது, உவமைக் கண் வந்த பால்வழு வமைதி, *'தவமிக்காராகிய தன் அடியவர் கூட்டத்தில், வினையே மிக்கோனாகிய என்னையும் இறைவன் சேர்த்தருளியது அதிசயம்'* என்றபடி.

பித்த னென்றெனை உலகவர் பகர்வதோர்
காரணம் இதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் திருவருள் கூடிடும்
உபாயம தறியாமே
செத்துப் போய்அரு நரகிடை வீழ்வதற்
கொருப்படு கின்றேனை
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. **#430**

இறைவன் தனது திருவருளை அடைதற்குரிய உபாயத்தை அறியாமல்,

வீணாயிறந்து போய் நரகத்தில் வீழ்வதற்கு மனமிசைந்திருந்த என்னை அங்ஙனம் வீழவொட்டாமல் தடுத்தாட் கொண்டு தன் அடியாரோடு சேர்த்த அதிசயத்தைக் கண்டோம் அல்லவா? இதுதான் உலகத்தவர் என்னைப் பித்தனென்று சொல் வதற்குக் காரணமாய் இருந்தது.

விளக்கவுரை

முதலடியை இறுதியிற் கூட்டுக.
ஒத்துச் செல்லுதல் - நூல்களானும், உபதேசத்தானும் உணரப் பட்ட இறைவன் திருவுளக் குறிப்போடு இயைந்து நடத்தல். 'இதுவே இறைவன் திருவருளைப் பெறும் முறை' என்பது உணர்த்தியவாறு. இதற்கு நேர்மாறான செயலே மூன்றாம் அடியுட் கூறப்பட்டது. எனவே, 'திருவருளை அடையும் நெறியிற் சிறிதும் பிறழாது ஒழுகும் தன் அடியவர் கூட்டத்தில், அதற்கு நேர்மாறான ஒழுக்கத்தையே உடைய என்னை இறைவன் சேர்த்தருளியது அதிசயம்' என்ற வாறாயிற்று. 'இங்ஙனம் சேர்த்தருளிய அதிசயச் செயலால் நானும் இறை வனையே நினைத்து பிதற்றும் பித்துடையேனாயினேன்; அஃது அறி யாது உலகப் பித்தன்போல என்னையும் உலகவர் கருதுகின்றனர்' என்பது முதலடியின் பொருள்.
கேளீர் - அறிந்துகொண்மின். இது தம்மோடு ஒத்து நின்று தம் நிலையை அறிய விரும்பும் நன்மக்களை நோக்கிக் கூறியது.

பரவு வாரவர் பாடுசென் றணைகிலேன்
பன்மலர் பறித்தேத்தேன்
குரவு வார்குழ லார்திறத் தேநின்று
குடிகெடு கின்றேனை
இரவு நின்றெரி யாடிய எம்மிறை
எரிசடை மிளிர்கின்ற
அரவன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. **#431**

அடியாரிடத்துச் சென்று சேர்கிலேன்; பல மலர் களைப் பறித்து அருச்சித்துத் துதியேன்; மாதர் விடயத்தில் சிக்கிக் குடி கெடா நின்ற என்னை, சிவபெருமான் ஆண்டருளித் தன் அடியாரோடு சேர்த்த அதிசயத்தைக் கண்டோம்.

விளக்கவுரை

பரவுதல் - துதித்தல்; இஃது இறைவனை என்க.
பாடு - பக்கம். குரவு - குராமலரை அணிந்த. 'எரி நின்று ஆடிய' என மாற்றுக. அரவன் - பாம்பை அணிந்தவன். தன்னைத் துதித்தலும், பன்மலர் பறித்துத் தூவி வழிபடுதலுமே தொழிலாக உடைய தன்

அடியவர் கூட்டத்தில், அத்தகையோர் அருகிலும் சென்ற றியாத என்னை இறைவன் சேர்த்தருளியது அதிசயம்' என்றவாறு.

எண்ணி லேன்திரு நாமஅஞ் செழுத்தும்என்
ஏழைமை யதனாலே
நண்ணி லேன்கலை ஞானிகள் தம்மொடு
நல்வினை நயவாதே
மண்ணி லேபிறந் திறந்துமண் ணாவதற்
கொருப்படு கின்றேனை
அண்ணல் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. **#432**

இறைவனது திருநாமமாகிய ஐந்தெழுத்தையும் என் அறியாமையால் நினைந்திலேன்; அன்பரோடும் சேர்ந்திலேன்; நற்கருமங்களை விரும்பாமல் இவ்வுலகத்தில் பிறந்து இறந்து மண்ணா வதற்கு இசைகின்ற என்னை, பெரியோனாகிய சிவபெருமான் ஆண்டருளித் தன் அடியாரோடு சேர்த்த அதிசயத்தைக் கண்டோம்.

விளக்கவுரை

'திருநாமமாகிய அஞ்சு எழுத்தும்' என்க. ஏழைமை - அறியாமை. இத் திருநாமத்தின் பெருமையைக் கலைஞானிகளும் ஒருவாற்றான் உணர்ந்துரைப்பாராக, அவர் பாலும் அணுகிலேன்' என்றபடி. 'நல்வினையைச் செய்ய விரும்பாது மண்ணாவதற்கு ஒருப்படுகின்றேன்' என்க. 'அஞ்செழுத்தின் உண்மைப் பொருளை அறிந்து அந்நிலையிலே நிற்கும் தன் அடியவர் கூட்டத்தில், அதுபற்றிச் சிறிதும் அறிந்திலேனாகிய என்னையும் இறைவன் சேர்த்தருளியது அதிசயம்' என்றபடி.

பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும்
பொழுகிய பொய்க்கூரை
இத்தை மெய்யெனக் கருதிநின் றிடர்க்கடற்
சுழித்தலைப் படுவேனை
முத்து மாமணி மாணிக்க வயிரத்த
பவளத்தின் முழுச்சோதி
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதியங் கண்டாமே. **#433**

இந்தப் பொய்யுடம்பை மெய்யென நினைத்துத் துன்பக் கடலில் அழுந்தின என்னை, எம் தந்தையாகிய சிவபெருமான் ஆண்டருளித் தன் அடியாரோடு சேர்த்த அதிசயத்தைக் கண்டோம்.

விளக்கவுரை

'பொத்து' என்பது ஈற்றில் ஐகாரம் பெற்றது. 'ஓட்டை' என்பது பொருள். இஃது அதனையுடையதற்காயிற்று. சுவர் - சுவர்களால் ஆகியது. இவை இரண்டும் ஒருபொருள்மேல் வந்த பெயர்கள். பொதிந்து - நிரம்பப் பெற்று. உளுத்து - உள்ளழிந்து. அசும்பு - மாசுகளின் கசிவு. பொய்க்கூரை - விரைவில் இடிந்து விழும் வீடு. இத்தை, 'இதனை' என்பதன் மரூஉ.

மெய் - நிலையானது. முத்துமாமணி - முத்தென்னும் சிறந்த இரத்தினம். 'மாமணி' முதலிய நான்கும், சோதி என்பதனோடு ஏற்ற பெற்றியான் வேற்றுமைத் தொகைநிலையாகவும், தொகா நிலையாகவும் தொடர்ந்தன. 'சோதியை உடைய அத்தன்' என்க. சிவபிரான் திருநீற்றினால் வெள்ளொளியும் உடையனாய் இருத்தலின், முத்தின் ஒளியும், வயிரத்தின் ஒளியும் கூறப்பட்டன. 'காயத்தின் மெய்ம்மையை உணர்ந்து அதன் கண் பற்றின்றி இருக்கும் தன் அடியவர் கூட்டத்தில், அதனையே மெய்யென்று கொண்டு திரிந்த என்னையும் இறைவன் சேர்த்தருளியது அதிசயம்' என்றபடி.

நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை
குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து
நுகமின்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத்
தெழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. **#434**

என்னை ஆதியில் பிரிவித்து, இந்த உடம்பில் புகுத்தி, பரிபாக காலம் பார்த்து, ஒரு சொல்லைச் சொல்லி, என் பிறவித் துன்பத்தால் வந்த குற்றம் போக்கின ஒளியுருவனாகிய சிவ பெருமான், என்னையும் ஓர் பொருளாக்கி ஆண்டருளித் தன் அடியா ரோடு சேர்த்த அதிசயத்தைக் கண்டோம்.

விளக்கவுரை

'முன் என்னைத் தன்னொடு நில்லாவகை நீக்கிக் குரம்பையில் (உடம்பினுள்) புகப்பெய்து' என அடிகள் மிகத் தெளிவு பட இங்கு அருளிச் செய்தமையின், 'இவர் முன்பு திருக்கயிலையில் உள்ள சிவகணநாதர்களுள் ஒருவராய் இருந்து, இறைவனது ஆணை யாலே இவ்வுலகில் தோன்றியவர்' என்பது நன்கு தெளிவாகின்றது. ஆதலின், இவரை, 'கணநாதருள் ஒருவர்' எனத் திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணம் கூறுதல், அங்ஙனமே கொள்ளத்தக்கதாம். இத்துணைத் தெளிவுபட எழுந்துள்ள இத் திருமொழிக்கு வேறு

பொருளுரைத்துப் போக்குதல் நேர்மையாகாது. 'தன்னொடு நில்லாவகை நீக்கி' என்றதற்கு, 'கேவல நிலையினின்றும் சகலத்திற் செலுத்தி' என உரைத்தல் பொருந்தாமையை விளக்கவேண்டுவது இன்று. நோக்கி - என்னை ஆண்டுகொள்ளும் காலத்தை எதிர்நோக்கி யிருந்து. 'நுண்ணியனவும், நொடியனவும் ஆகிய சொல்' என்க. பொருள்களின் நுட்பம் சொல்மேல் ஏற்றப்பட்டது. நொடியன- 'நொடி' என்னும் கால அளவில் முடிவன; 'மிகச் சுருங்கிய சொற்கள்' என்றபடி. 'சொல் சொல்லி' என்னாது, 'சொற்செய்து' என்றார். அவை, தாம் என்றும் கேட்டிராத புதுமையுடையனவாய் இருந்தமை பற்றி. நுகம் - நுகத்தடி; இஃது ஏர் உழும் எருதுகள் இரண்டினையும் ஒருங்கிணைத்தற்கு அவற்றின் கழுத்தில் வைத்துப் பூட்டப்படுவது. விளாக்கை - உழுதல்; இது 'விளாவுகை' என்பதன் மரூஉ. 'பாழ்ச்செய் விளாவி' *(தி.8 குலாப்பத்து - பா. 9.)* எனப் பின்னரும் அருளிச் செய் வார். 'விளாக்கை' என்னும் பெயரடியாகவே, விளாக்கைத்து என் னும் வினையெச்சம் பிறந்தது. எனவே 'விளாவுகை செய்து - உழது' என்பது அதன் பொருளாயிற்று. நுகமின்றி உழுது என்றது, நுகத்தடி யின்றியே இரண்டெருதுகளை ஒன்றுபடப் பிணைத்து உழுதாற் போலப் பருப்பொருளாகிய கயிறு முதலியன இல்லாமலே என்னைத் தன் திருவடியை விட்டு நீங்காது அவற்றிடத்தே கட்டுண்டு கிடக்கச் செய்து நடத்தி' என்றதாம். தூக்கி - என்னை உலகியலினின்றும் எடுத்து. முன் செய்த பொய் அற - அங்ஙனம் எடுப்பதற்கு முன்னே யான் செய்து கொண்டிருந்த பயனில்லாத முயற்சிகள் நீங்கி யொழியும் வண்ணம். துகள் அறுத்து - அம்முயற்சிகட்குக் காரணமாய் இருந்த அறியாமையாகிய குற்றத்தைப் போக்கி. எழுதரு சுடர்ச்சோதி - என் உள்ளத்தில் மேன்மேல் ஓங்கி எழுந்த ஒளியையுடைய விளக்காகிய இறைவன். 'அறுத்து எழுதரு' என்றது, 'சுவைத்து உண்டான்' என்பது போல உடனிகழ்ச்சி வினையென்க. சோதி, ஆகுபெயர். ஆக்கி - என்னைச் செப்பம் செய்து. 'கிளவியாக்கம்' என்புழி *(தொல்.சொல்.சூ.1 உரை)* 'ஆக்கம்' என்பதற்கு இவ்வாறே பொருளுரைப்பர் சேனாவரையர். 'முன்னர்த் தன்னிடத்தினின்றும் நீக்கிப் பின்னர்த் தானே வந்து என்னை ஆட்கொண்ட செயல்கள் வியக்கத்தக்கன' என்றவாறு.

உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர்
எழுதரு நாற்றம்போல்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள்
அப்பொருள் பாராதே
பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும்

பித்தர்சொல் தெளியாமே
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. **#435**

பூவில் மணம்போல இந்தச் சரீரத்திலுள்ள மனோவாக்குக் காயங்களுக்கு எட்டாத இறைவனை நோக்காமல் இம்மைப் பயனையே நுகரும் பித்தர் சொல்லை நான் நம்பாதிருக்கும் படி, என்னை ஆண்டருளித் தன் அடியாரோடு சேர்த்த அதிசயத்தைக் கண்டோம்.

விளக்கவுரை

உற்ற ஆக்கை - கிடைத்த உடம்பு; என்றது, மக்கள் உடம்பை. பரம்பொருளை உணரும் உணர்விற்கு மக்கட் பிறப்பினது இன்றியாமை உணர்த்துதற் பொருட்டு, 'உற்ற ஆக்கையின் உறுபொருள்' என்றாரேனும், 'அவ்வாக்கையின் கண்ணதாகிய உயிரினிடத்து உறுபொருள்' என்பதே கருத்தாம். நறிய மலரின்கண் எழுதரு நாற்றத்தை அம்மலரிடமாகப் பற்றி நுகர்தலன்றி வேறாகப் பற்றி நுகரவாராமைபோல, பரம்பொருளை உயிர் தன்னிடத்து உணர்ந்து பற்றுதலன்றித் தனக்கு வேறாக உணர்ந்து பற்றுதல் கூடாமை பற்றி, 'நறுமலர் எழுதரு நாற்றம்போல் பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்' என்று அருளினார். எனவே, 'நறுமலர் எழுதரு நாற்றம்போல்' என்ற உவமை, வேறாக வைத்துப் பற்றலாகாமையை விளக்குதற்பொருட்டு வந்ததாம். இப்பொருளே,

'பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது'

என்ற தி.*10* திருமந்திரத்தினும் *(1459.)* கூறப்பட்டது. 'ஆக்கையின் உறுபொருளும், பற்றலாவதொர் நிலையிலாப் பரம்பொருளும் ஆகிய அப்பொருள்' என்க. 'அப்பொருள்' என்ற சுட்டு, என்றும், உள்ளதாயப் பேரறிவாயும், பேரின்பமாயும் நிற்கும் அத்தன்மை யுடையது' என அதன் சிறப்பை எல்லாம் சுட்டி நின்ற பண்டறி சுட்டு; ஆதலின், 'அதனைப் பாராதே பெற்றவா பெற்ற பயனது நுகர்வோரை, 'பித்தர்' என்று அருளினார். 'பெற்ற பயனைப் பெற்றவா நுகர்ந்திடும்' என மாறுக. பெற்றது வினைவழி யாகலின், 'அது பின்னர் இடர் விளைப்பது' என்பதும் போந்தது. அது, பகுதிப் பொருள் விகுதி. பயன்தோறும் இவ்வாறே நின்று நுகர்தலின் ஒருமையாற் கூறினார். 'பெற்றவா' என்றது, 'அதன் மெய்ம்மை யறிந்து வெறுத்துப் பிறிது பயனுக்கு முயலாது' என்றபடி. இவ்வாறு வினைப்பயனையே நுகர்ந்திருப்போர் உலகர்.' 'இப் பயனன்றிப் பிறிது பயன் உண்டு என்பதை யாவர் கண்டார்' என்பதே அவர் சொல்லும் சொல்லாதலின், அவர் சொல்வழி நில்லாதவாறு இறைவன் தம்மை ஆட்கொண்டருளினான் என்றார்.

'பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தர் கூட்டத்தில் இருந்த என்னை, பற்றலாவதோர்' நிலையிலாப் பரம்பொருளாகிய தன்னைப் பற்றும் வண்ணம் செய்து, அத்தன்மையராகிய தன் அடியவர் கூட்டத்தில் இறைவன் சேர்த்தருளியது வியப்பு' என்றவாறு. இத்திருப்பாட்டுள் அருளப்பட்ட பரம்பொருளின் இயல்பைத் திருமுருகாற்றுப்படை உரை இறுதிக்கண் நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டினமை காண்க.

இருள்தி ணிந்தெழுந் திட்டதோர் வல்வினைச்
சிறுகுடி லிதுஇத்தைப்
பொருளெ னக்களித் தருநர கத்திடை
விழப்புகு கின்றேனைத்
தெருளும் மும்மதில் நொடிவரை இடிதரச்
சினப்பதத் தொடுசெந்தீ
அருளும் மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய
அதிசயங் கண்டாமே. **#436**

அஞ்ஞானவிருள் செறிந்த வலிய வினைகளால் எடுக்கப்பட்ட இந்தப் பொய்யுடம்பை மெய்யாகக் கருதிக்களித்து நரகுக்கு ஆளாகிய என்னைத் திரிபுராந்தகனாகிய பெருமான் பொய்ந் நெறியினின்று நீக்கி ஆண்டருளின அதிசயத்தைக் கண்டோம்.

விளக்கவுரை

இருள் - அறியாமை; ஆணவம். திணிதல் - செறிதல். திணிந்து - திணிதலால் 'எழுந்திட்டதோர் குடில்' என்க. 'இதன் தன்மை இதுவாக இதனை உயர்ந்த பொருள் என்று எண்ணிக் களித்தேன்' என்றார். தெருளும் - பகைவரது புரமாதல் தெளியப்பட்ட. நொடி வரை - நொடி நேரத்துள். சினப் பதம் - வெகுளி நிலை. அருளும் - செலுத்திய. மெய்ந்நெறியைத் தருபவனை, பான்மை வழக்கால், 'மெய்ந்நெறி' என்று அருளினார். பொய்ந்நெறி - நிலையாமையைச் சேர்ப்பிக்கும் நெறி. 'முப்புரமாவது மும்மல காரியம்' *(தி.10 திருமந்திரம்- 343)* என்று அருளியபடி. இறைவன் முப்புரம் எரித்தமை அவன் உயிர்களின் மும்மலங்களைப் போக்குவோனாதலை விளக்குதல் பற்றி, இங்கு அவன் முப்புரம் எரித்தமையை விரித்தோதியருளினார். 'முப்புரங்களையும் நொடிவரை இடிதர அழித்தாற்போல, இறைவன் எனது மலங்களையும் நொடிப்பொழுதில் நோக்கினமை வியப்பு' என்றவாறு.

1.27.புணர்ச்சிப் பத்து

சுடர்பொற் குன்றைத் தோளா முத்தை
வாளா தொழும்புகந்து

கடைபட் டேனை ஆண்டு கொண்ட
கருணா லயனைக் கருமால் பிரமன்
தடைபட் டின்னுஞ் சார மாட்டாத்
தன்னைத் தந்த என்னா ரமுதைப்
புடைபட் டிருப்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. **#437**

ஒளிவிடுகின்ற பொன்மலையைப் போன்றவனும், துளைக்கப்படாத முத்தைப் போன்றவனும், காரணமின்றி, எனது தொண்டினை விரும்பக், கடையாய நிலையில் உள்ள என்னை, ஆட் கொண்டருளின கருணைக்கு இருப்பிடமானவனும், கரிய நிறமுடைய திருமாலும் பிரமனும் செருக்கில் அகப்பட்டு இன்னும் அடைய முடியாத தன்னை, எனக்கு அறியும்படி கொடுத்த அரிய அமுதம் போன்றவனும், செதுக்கப்படாத மாணிக்கம் போன்றவனுமாகிய இறைவனைச் சேர்ந்து அவனிடத்திலே பொருந்தியிருப்பது எந் நாளோ!

விளக்கவுரை

சுடர் பொற்குன்று - ஒருகாலைக் கொருகால் ஒளியை மிக விடுகின்ற பொன்மலை. இப்பொருள் தோன்றுதற் பொருட்டு, 'சுடர்ப் பொற்குன்று' என வேற்றுமைத் தொகை பட ஓதாது, வினைத் தொகைபட ஓதியருளினார். அதனானே, ஏனைய மூன்று அடிகளினும் மிகுத்தோதற்பாலனவாய பகர ஒற்றுக்களையும் தொகுத்தோதியருளி னார். 'பொற்குன்று' முதலிய பலவும், ஒருபொருள்மேல் வந்த பெயர்கள். வாளா தொழும்பு உகந்து - 'தகுதி' என்னும் காரண மின்றியே எனது தொண்டினை விரும்பி; இதனை, 'கடைப் பட்டேனை' என்றதன் பின்னர்க் கூட்டுக.

கருணாலயன் - அருளுக்கு இருப்பிடமானவன். தடை - மலத் தடை. பட்டு - அதனுட்படுதலால். 'தன்னை எனக்குத் தந்த' என்க. 'புடைபட்டிருப்பது என்று கொல்லோ' என்றதனை இறுதியில் வைத்து உரைக்க. இஃது ஏனைய திருப்பாட்டிற்கும் ஒக்கும். புணர்ந்து- தலைக்கூடி.

ஆற்ற கில்லேன் அடியேன் அரசே
அவனி தலத்தைம் புலனாய
சேற்றி லழுந்தாச் சிந்தை செய்து
சிவனெம் பெருமான் என்றேத்தி
ஊற்று மணல்போல் நெக்குநெக்
குள்ளே உருகி ஓலமிட்டுப்
போற்றி நிற்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. **#438**

அடியேன், பூதலத்திலே ஐம்புலன்களாகிய சேற்றில் அழுந்தி, பொறுக்கமாட்டாதவனாய் உள்ளேன். எனது செதுக்கப் படாத மாணிக்கம் போன்ற இறைவனைச் சேர்ந்து அவனையே நினைத்து, அரசனே! சிவனே! எம்பெருமானே! என்று துதித்து ஊற்றினையுடைய மணலைப் போன்று நெகிழ்ந்து மனமானது உருகி, முறையிட்டு வணங்கி நிற்பது எந்நாளோ!

விளக்கவுரை

பொருள்கோள்: 'ஐம்புலனாய சேற்றில் அழுந்தாது, என் பொல்லா மணியைப் புணர்ந்து சிந்தை செய்து, அரசே, சிவனே, எம்பெருமானே, அடியேன் அவனிதலத்து ஆற்றிகில்லேன் என்று ஏத்தி, உள்ளே நெக்கு உருகி, ஓலமிட்டுப் போற்றி நிற்பது என்று கொல்லோ'.
'ஆற்றகில்லேன்' என்றது, இறந்தகால மறைவினை. எனவே, 'அடியேன் நிலவுலகில் உன்னைப் பிரிந்து நின்று ஆற்ற மாட்டாதவனாயினேன்' என்பது பொருளாயிற்று, ஆகவே' என்னை அவ்வாறு நில்லாது நின்பால் வருவித்த நின்கருணைக்கு யாது கைம்மாறு செய்யவல்லேன்' என்று உருகி ஓலமிட்டுப் போற்றி நிற்றலை விரும்புதல் பெறப்பட்டது. ஊற்று மணல் - உள்ளே ஊற்றினை உடைய மணல்; இது செறிந்து நில்லாது நெக்குவிட்டுக் குழைதல் நன்கறியப்பட்டது. உள்ளே - உள்ளிடத்தே; மனத்தின்கண்.

நீண்ட மாலும் அயனும் வெருவ
நீண்ட நெருப்பை விருப்பி லேனை
ஆண்டு கொண்ட என்ஆ ரமுதை
அள்ளூ றுள்ளத் தடியார்முன்
வேண்டுந் தனையும் வாய்விட் டலறி
விரையார் மலர்தூவிப்
பூண்டு கிடப்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. **#439**

நெடிய திருமாலும், பிரமனும் ஏனைய தேவரும் இந்திரனும் முன்னின்று துதிக்கும் பெருமையை உடையவனும் ஓங்கி நின்ற அழற்பிழம்பானவனும், தன்னிடத்து ஆசை இல்லாத என்னை ஆட்கொண்டருளின, என்னுடைய அருமையான அமுதம் போன்ற வனுமாகிய இறைவனை மிகுதியாக உருகுகின்ற மனத்தினை உடைய அடியவர்கள் முன்னிலையில் வேண்டுமளவும் வாய்திறந்து அரற்றி, மணம் பொருந்திய மலர்களை அருச்சித்து என் பொல்லா மணியைச் சேர்ந்து திருவடியைச் சிரமேற் கொண்டு கிடப்பது எந்நாளோ!

விளக்கவுரை

'நெடியவனினும் நெடியவன்' என்பார், 'நீண்ட மாலும் வெருவ நீண்ட நெருப்பு' என்றார். மாயோன் நீண்டது, உலகினை அளக்க. விருப்பு - அன்பு. அள்ளூறு உள்ளம் - அன்புமிகவும் சுரக்கின்ற மனம். 'அடியார்முன் அலறித் தூவிப் பூண்டுகிடப்பது' என இயையும். பூண்டு கிடத்தல் - திருவடியை விடாது பற்றிக்கொண்டு கிடத்தல்.

அல்லிக் கமலத் தயனும் மாலும்
அல்லா தவரும் அமரர் கோனுஞ்
சொல்லிப் பரவும் நாமத் தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறைஇன் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. **#440**

அக இதழ்களை உடைய தாமரை மலரிலுள்ள பிரமனும், திருமாலும், தேவர் தலைவனாகிய இந்திரனும், மற்றைத் தேவரும், சொல்லித் துதிக்கின்ற திருப்பெயரை உடையவனும், சொல்லுலகத்தையும் பொருளுலகத்தையும் கடந்த ஒளியானவனும், நெல்லிக் கனியைப் போன்றவனும், தேனையும், பாலையும் நிறைந்த இனிய அமுதத்தையும், அமுதத்தின் சுவையையும் ஒப்பவனும் என்னுடைய செதுக்கப்படாத மாணிக்கத்தைப் போன்றவனும் ஆகிய இறைவனைச் சேர்ந்து நான் தழுவி இருப்பது எந்நாளோ!

விளக்கவுரை

அல்லி - அகவிதழ். 'அல்லாதவரும்' என்றதனை 'அமரர் கோனும்' என்றதன் பின்னர்க் கூட்டுக. 'பொருள்' என்றது, சொல்லால் உணர்த்தப்படும் பொருளை. 'சொல்லும், அதனான் உணர்த்தப்படும் பொருளும் சடமே யாகலின், சித்தாகிய இறைவன் அவற்றினுள் அகப்படான்' என்பார் 'சொல்லும் பொருளும் இறந்த சுடரை' என்றார். இங்ஙனம் கூறியதனால், அயன், மால் முதலிய பலரும் பல நாமங்களால் சொல்லிப் பரவுவன எல்லாம், அம்புலியைப்பற்ற விரும்பும் குழவிக்குக் கண்ணாடியிற் காட்டித் தரப்படும் அதன் நிழல்போல்வனவாய பொது வியல்புகளையேயாம் என்பது போதரும். இனி, அவன் சொல்லையும், பொருளையும் இறந்து நின்று உணர்வார்க்கு அறிவினுள்ளே இன்னதென உரைக்க வாராத இன்ப ஊற்றாய் நின்று இனித்தலை உணர்த்துவார், 'நெல்லிக் கனியைத் தேனைப் பாலை நிறை இன்னமுதை அமுதின் சுவையை' எனப் பலவாறு அருளிச் செய்தார். புல்லிப் புணர்வது - பற்றிக் கூடுவது. பற்றாது வேறுநின்று அளவளாவுதலும், ஈருடலும் ஓருடலாம்படி தழுவுதலும் என்னும் கூடுதல்

இரண்டனுள் ஒன்றுபடத் தழுவுதலைக் குறிப்பார், 'புல்லிப் புணர்வது' என்று அருளினார். இங்ஙனம் உலகியல் வாய்பாட்டான் அருளிச் செய்தாராயினும், 'அப்பணைந்த உப்பேபோல் (சிவஞான சித்தி - சூ.*11.12.)* அவனாகியே நிற்கும் அத்துவித நிலையைப் பெறுவது என்று கொல்லோ' என்றலே திருவுள்ளம் என்க. 'புணர்ந்து புணர்வது' என்றமையால், முன்னர்ச் சிவலோகத்தில் அடியார் குழாத்தொடு கூடி நின்று நுகரும் இன்பத்தை அடிகள் விரும்பினமை பெறப்படும்.

திகழத் திகழும் அடியும் முடியுங்
காண்பான் கீழ்மேல் அயனும் மாலும்
அகழப் பறந்துங் காண மாட்டா
அம்மான் இம்மா நிலமுழுதும்
நிகழப் பணிகொண் டென்னை ஆட்கொண்
டாவா என்ற நீர்மை யெல்லாம்
புகழப் பெறுவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. **#441**

மிகவும் விளங்குகின்ற திருவடியையும் திரு முடியையும் காணும் பொருட்டுக்கீழும் மேலுமாகத் திருமாலும் பிரம னும், மண்ணை அகழ்ந்தும் விண்ணில் பறந்தும் காணமுடியாத அந்தப் பெரியோன் இந்தப் பெரிய உலகம் முழுவதும் விளங்க, என்னை ஆளாகக் கொண்டு எனது தொண்டினை ஏற்று, அந்தோ என்று இரங் கின குணங்களை எல்லாம், என்னுடைய செதுக்கப்படாத மாணிக்கம் போன்ற அப்பெருமானைச் சேர்ந்து புகழ்ந்து பேசுவது எந்நாளோ!

விளக்கவுரை

திகழத் திகழும் - பிறபொருள்கள் யாவும் ஒளி மய மாய்த் திகழுமாறு விளங்கிய. 'அயனும் மாலும்' என்றதை எதிர்நிரல் நிறையாகக் கொள்க. 'அகழ' என்றதனை 'அகழ்ந்து' எனத் திரித்து, தொகுக்கப்பட்ட உம்மையை விரிக்க. மாநில முழுதும் நிகழ்ந்தது, 'பணிகொண்டான்' என்னும் சொல். புகழப்பெறுவது - நேர்நின்று புகழுதலைப் பெறுவது.

பரிந்து வந்து பரமானந்தம்
பண்டே அடியேற் கருள்செய்யப்
பிரிந்து போந்து பெருமா நிலத்தில்
அருமா லுற்றேன் என்றென்று
சொரிந்த கண்ணீர் சொரிய உள் நீர்
உரோமஞ் சிலிர்ப்ப உகந்தன்பாய்ப்
புரிந்து நிற்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. **#442**

பெருமான் விரும்பி வந்து, முன்னமே, அடி யேனுக்கு மேலான

இன்பத்தை அருள் செய்யவும், பிரிந்து வந்து பெரிய நிலவுலகத்தில் பெரிய மயக்கத்தை அடைந்தேன். இதனைப் பலகால் எண்ணி, நீரைப் பொழியும் கண்கள் நீரைப் பொழிந்து கொண்டேயிருக்க, உள்ளன்பினால் மயிர்க்கூச் செறிய, மகிழ்ச்சியுற்று அன்போடு, என்னுடைய, செதுக்கப்படாத மாணிக்கத்தைச் சேர்ந்து விரும்பி நிற்பது எந்நாளோ!

விளக்கவுரை

பரிந்து - இரங்கி. 'செய்யவும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. பெருமாநிலம், ஒரு பொருட்பன்மொழி. அரு மால் - நீங்குதற்கு அரிய மயக்கம். சொரிய - சொரிந்தவாறே நிற்க. நீர்மை, நீர் என நின்றது. 'உள்நீரால்' என உருபு விரிக்க. புரிந்து - பணிசெய்து.

நினையப் பிறருக் கரிய நெருப்பை
நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனையொப் பாரை யில்லாத் தனியை
நோக்கித் தழைத்துத் தழுத்த கண்டங்
கனையக் கண்ணீர் அருவி பாயக்
கையுங் கூப்பிக் கடிமலராற்
புனையப் பெறுவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. **#443**

அன்பரல்லாத பிறருக்கு நினைத்தற்கு அருமை யான நெருப்பு, நீர், காற்று, நிலம், விண் ஆகிய பொருளாகிய இறை வனைப் பார்த்து, என்னுடைய செதுக்கப்படாத மாணிக்கம் போன்ற அப்பெருமானைச் சேர்ந்து, உடல் பூரித்துத் தழுதழுத்த கண்டம் கனைக்க, கண்களினின்றும் நீர் அருவியாகப் பாய, கரங்களையும் குவித்து மணமுடைய மலர்களைக் கொண்டு அணியப் பெறுவது எந் நாளோ!

விளக்கவுரை

பிறர் - அயலார்; அடியரல்லாதவர். நெருப்பை முதலிய ஐந்தும் 'அரிய' என்ற எச்சத்திற்குத் தனித்தனி முடிபாயின. தழைத்து- உடல் பூரித்து. 'தழுதழுத்து' எனற்பாலது, 'தழுத்து' என நின்றது. நாவிற்குரிய இதனைக் கண்டத்திற்கு ஏற்றினார். 'கனைப்ப' எனற்பாலது 'கனைய' என நின்றது. 'தழுத்த கண்டம் கனைய' என்றதனால், சொற்கள் நன்கெழாமை குறிக்கப்பட்டது.

நெக்கு நெக்குள் உருகி உருகி
நின்றும் இருந்துங் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதுந் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தாற் கூத்தும் நவிற்றிச்

செக்கர் போலுந் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சி லிர்த்துப்
புக்கு நிற்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. **#444**

மனம் நெகிழ்ந்து நெகிழ்ந்து இடைவிடாது உருகி நின்றும் அமர்ந்தும், படுத்தும், எழுந்தும், சிரித்தும், அழுதும், வணங்கியும் வாயாரத் துதித்துப் பல வகையாகக் கூத்துக்களை இயற்றிச் செவ்வானம் போன்ற திருமேனியை விளங்கப் பார்த்து, மயிர் சிலிர்த்து, என்னுடைய செதுக்கப்படாத மாணிக்கத்தைச் சேர்ந்து புகுந்து நிற்பது எந்நாளோ!

விளக்கவுரை

உள் நெக்கு நெக்கு - உள்ளம் நெகிழ்ந்து. நக்கும் - சிரித்தும். நானாவிதத்தால் - பற்பல வகையாக. நவிற்றி - செய்து. செக்கர் - செவ்வானம். திகழ நோக்கி - நன்கு பார்த்து. புக்கு நிற்பது - அடியவர் கூட்டத்துள் புகுந்து நிற்பது.

தாதாய் மூவே ழுலகுக்குந்
தாயே நாயேன் தனையாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
பெருந்தேன் பில்க எப்போது
மேதா மணியே என்றென் றேத்தி
இரவும் பகலும் எழிலார் பாதப்
போதாய்ந் தணைவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. **#445**

பழமையான ஏழு உலகங்களுக்கும் தந்தையான வனே! தாயானவனே! நாய் போன்ற என்னை ஆட்கொண்ட பித்துடையவனே! பிறவி நோய்க்கு ஒப்பற்ற மருந்து போன்றவனே! பேரறிவாளனே! என்று பலகால் துதித்து என்னுடைய செதுக்கப்படாத மாணிக்கத்தைச் சேர்ந்து பேரின்பமாகிய மிக்க தேன் சிந்த இடைவிடாது இரவும் பகலும் அழகு நிறைந்து திருவடியாகிய தாமரை இதழ்களை ஆராய்ந்து சேர்வது எக்காலமோ!

விளக்கவுரை

தாதாய் - தாதையே. 'மூவேழுலகம்' என்றதனை, 'மூவுலகம். ஏழுலகம்' என இரண்டாக்கியுரைக்க. 'ஈரேழுலகம்' என்னாது, 'ஏழுலகம்' என்றே கூறும்வழி, அது பூலோகம் முதலாக மேலுள்ளனவற்றையே குறிக்கும். 'மூவுலகம்' என்றவற்றுள் மேலுலகங்களும் அடங்குமாயினும், அவற்றைப் பின்னரும் வேறுபிரித்தோதினார், அவை கீழுலகங்களினும் பல்லாற்றாற் சிறந்துநிற்றல் கருதி. இனி, 'மூத்த ஏழுலகங்கள்' என்று

உரைப்பாரும் உளர். 'பேதாய்' என்றது, 'பேரருளுடையவனே' என்றும் பொருளைத் தந்து, பழிப்பதுபோலப் புகழ்ந்த குறிப்புச் சொல்லாய் நின்றது. பெருந்தேன் - குறையாது நிற்கும் தேன். பில்க - சிந்த. 'ஏதும் ஆம் மணியே' என்பது, உம்மை தொக, 'ஏதாம் மணியே' என நின்றது. 'எப்போதும் ஏதும் ஆம் மணியே' என்றதனால், இறைவன், வேண்டுவார் வேண்டும் பொருளாய் நின்று பயன் தருதல் குறிக்கப்பட்டது. இனி, 'மேதா மணியே' எனப் பிரிப்பின், மோனை நயம் கெடுதலேயன்றி, 'பில்க' என்னும் எச்சத்திற்கும் முடிபு இன்றாம் என்க. 'பாதப் போதினை ஆய்ந்து அணைவது என்றுகொல்லோ' என்க. ஆய்தல் - அவற்றின் பெருமையைப் பல்காலும் நினைத்தல்.

காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதுங்
கண்ணார் விசும்பின் விண்ணோர்க் கெல்லாம்
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே எனையாண்ட
பார்ப்பா னேஎம் பரமாஎன்று
பாடிப் பாடிப் பணிந்து பாதப்
பூப்போ தணைவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. **#446**

எல்லா உலகத்தையும் காப்பவனே! படைப் பவனே! ஒடுக்குபவனே! பெருமை நிறைந்த விண்ணுலகிலுள்ள தேவர் களுக்கு எல்லாம் மூத்திருப்பவனே! முதுமை எய்தாத இளையோனாய் நின்ற முதல்வனே! முன்னே என்னை ஆட்கொண்டருளின எம் முடைய மேலோனே! என்று பலகால் பாடி வணங்கி என்னுடைய செதுக்கப்படாத மாணிக்கத்தைச் சேர்ந்த பொலிவினையுடைய தாமரை மலரை அணுகப் பெறுவது எந்நாளோ!

விளக்கவுரை

இடைநிற்கற்பாலதாய, 'காப்பாய்' என்பது, செய்யுள் நோக்கி முன் நின்றது. 'முழுதும்' என்றதில், இரண்டாவது இறுதிக்கண் தொக்கது. கண் ஆர் - இடம் நிறைந்த. மூப்பாய் - உயர்ந்து நிற்பவனே. இவ்விடத்து இச்சொற்கு இதுவே பொருளாகச் சிவஞானமுனிவரர், 'பேறிழ வின்பமோடு'(சிவஞானசித்தி செய்யுள் சூ.*2.9.)* என்னும் செய்யுள் உரையில் குறித்தல் காண்க. மூவா - கெடாத. மூத்தொழியும் முதல்களாய் நிற்பவரும் உளராகலான் அவரிற் பிரித்தற்கு, 'மூவா முதலாய் நின்ற முதல்வா' என்று அருளிச்செய்தார். பார்ப்பானே - பார்ப்பன வேடம் பூண்டவனே. பூ - பொலிவு. இது, 'பூம்போது' என மெல்லெழுத்து மிக்கு முடிதலேயன்றி, இவ்வாறு வல்லொற்று மிக்கு முடிதலும் இலக்கணமாதல் உணர்க.

1.28.வாழாப்பத்து

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. #447

மண்முதல் விண் ஈறாகக் கலந்து விளங்கும், எமது மேலோனே! சிறப்பொடு விளங்குகின்றவனே! சிவலோகநாதனே! திருப்பெருந்துறையில் வாழ்கின்ற சிவபெருமானே! என்னை ஆண்டருளின நீயே அருள் செய்யவில்லை என்றால் நான் யாரோடு நொந்து கொள்வேன்? யாரிடம் இதை எடுத்துச் சொல்வேன்? நான் வேறு பற்றுக் கோடு இல்லேன். நெடிய கடல் சூழ்ந்த இவ்வுலகில் வாழ ஒருப்படேன்: என்னை வருவாய் என்று அழைத்து அருள் செய்வாயாக!

விளக்கவுரை

பார் - பூமி. 'சீர்' என்றது, செம்மையை. 'என்றும் செம்மையோடு விளங்குபவனே' என்பது கருத்து. 'நான்மற்றுப் பற்றிலேன்' என இயையும், 'ஆண்ட நீ 'அருளிலையானால் யாரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைக்கேன்' என்க. 'ஆண்ட நீ' என்றதனால், 'அயலாராகிய பிறர் யாரொடு' என்பது பெறப்படும். 'உன்னைப் பிரிந்து வாழ்கிலேன்' என்க. கண்டாய், முன்னிலையசை.

வம்பனேன் தன்னை ஆண்டமா மணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்
குணர்விறந் துலகமூ டுருவும்
செம்பெரு மானே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எம்பெரு மானே என்னையாள் வானே
என்னைநீ கூவிக்கொண் டருளே. #448

வீணனாகிய என்னை ஆண்டருளின பெருமையை யுடைய மாணிக்கமே! தேவரும் அறிய முடியாத ஒருவனே! திருமால் பிரமனாகிய இருவருக்கும் உள்ள உணர்ச்சியைக் கடந்து, எல்லா உலகங்களிலும் ஊடுருவிச் சென்ற செம்மேனி அம்மானே! சிவலோக நாதனே! திருப் பெருந்துறையின் சிவனே! எம் தலைவனே! என்னை ஆளாக

வுடையானே! நான் வேறு பற்றுக் கோடு இல்லேன்; அடியேனை, நீ அழைத்துக் கொண்டு அருள் புரிவாயாக.

விளக்கவுரை

வம்பன் - வீணன். 'ஒன்றுக்கும் ஆகாத என்னை உயர்ந்தவனாகச் செய்த பெரியோனே' என்றபடி. இருவர், மாலும் அயனும். உணர்வு இறந்து - உணரும் நிலையைக் கடந்து. 'செம்பெரு மானே' என்றது, 'நெருப்புருவாகிய பெருமானே' என்றவாறு. கொண்டு - ஏற்றுக் கொண்டு.

பாடிமால் புகழும் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஊடுவ துன்னோ டுவப்பதும் உன்னை
உணர்த்துவ துனக்கெனக் குறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. **#449**

சிவலோக நாதனே! திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே! திருமால் புகழ்ந்து பாடுகின்ற உன்னு டைய திருவடியை அன்றி நான் வேறு ஒரு பற்றுக்கோடும் இல்லேன். என்னைத் தேடிவந்து நீ ஆண்டருளினை; பிணங்குவது உன்னோடு, நான் மகிழ்வதும் உன்னையே; உன்னிடத்தில் நான் தெரிந்து கொள்வது என் உயிர்க்கு நன்மை ஆவதேயாம்; நான் துணை இன்மை யால் வாடியிருக்கிறேன்; இவ்வுலகில் வாழ ஒருப்படேன்; வருவாய் என்று அழைத்து அருள் செய்வாயாக!.

விளக்கவுரை

'ஊடுவதும்' என்று உம்மை தொகுத்தல். ஊடுதல் - வருந்திப் பேசுதல். உவப்பது - மகிழ்ந்து புகழ்தல். 'இவை யிரண்டிற்கும் புலனாவார் உன்னையன்றி எனக்குப் பிறர் இலர்' என்ற படி. 'உறுதியே' என்னும் பிரிநிலை ஏகாரம், தொகுத்தல். 'உனக்கு யான் உணர்த்துவது, எனக்கு உறுதி (நன்மை) யாவனவற்றையே' என்க. நின் திருவுள்ளமும் எனக்கு உறுதியருள்வதே யாகலின், எனது வேண்டுகோளைக் கேட்டு அருள்செய்' என்றவாறு.

வல்லைவா ளரக்கர் புரமெரித் தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே

எல்லைமூ வுலகும் உருவியன் றிருவர்
காணும்நாள் ஆதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. **#450**
விரைவிலே வாளை ஏந்திய அரக்கரது முப்புரங் களையும்
நீறாக்கியவனே! தில்லையில் வீளங்குகின்ற கூத்தப் பெருமானே!
சிவலோக நாதனே! திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும்
சிவபெருமானே! விண், நிலம், பாதலம் என்னும் எல்லைகளையுடைய
மூன்று உலகத்தையும் கடந்து அக்காலத்தில், திருமால் பிரமனாகிய
இருவரும் காணப்புகுந்த நாளில், முதலும் முடிவும் இன்றித் தோன்ற
வல்லவனாய் வளர்ந்தவனே! நான் வேறு பற்றுக்கோடு இல்லேன்.
வாழமாட்டேன். வருவாய் என்று அழைத்து அருள்புரிவாயாக!.

விளக்கவுரை

'அரக்கர் புரத்தை வல்லை எரித்தோனே' என இயையும். வல்லை - விரைவில். 'மூவுலகின் எல்லையையும் உருவி' என்க. 'ஆதி ஈறு என்னும் இரண்டு இலனாக வல்லையாய்' என உரைக்க. இன்மை, ஆகுபெயர். 'இன்மையாக' என ஆக்கம் வருவிக்க.

பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. **#451**
பண்ணினை ஒத்த மொழியாளாகிய உமையம்மை யின் பங்கனே!
என்னை உண்மையாகவே ஆட்கொண்டருளியவனே! சிவலோக
நாதனே! திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் பெருமானே!
உன்னையன்றி நான் வேறு ஒரு பற்றுக் கோடு இல்லேன். என் நினைவு,
மெய், வாய், நாசியொடு, செவிகளும், கண்களும் உன்னிடத்தே
வைத்ததனால் மண்ணுலகத்தினிடம் நான் வாழ மாட்டேன். வருவாய்
என்று அழைத்து அருள் செய்வாயாக!.

விளக்கவுரை

'பண்ணின்' என்றதில் இன், வேண்டாவழிச் சாரியை. திண்ணமே ஆண்டாய் - ஐயத்திற்கிடனின்றி என்னை உனக்கு அடியவ னாகக் கொண்டாய். 'ஆண்டாய்' என்றது முற்று. இதன்பின், 'ஆத லால்' என்பது

வருவித்து, அதனை, 'வருக என்று அருள்புரியாய்' என்றதனோடு முடிக்க. எண்ணம் - மனம். 'மண்ணின்மேல் வாழினும், எண்ணம் முதலியவற்றை உன்பால் வைத்து வாழின் கேடில்லை; யான் அவ்வாறு வாழவல்லனல்லேன்; ஆதலின், நின்பால் வருக என்று அருள்புரியாய்' என்றவாறு.

பஞ்சின்மெல் லடியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ அளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. **#452**

பஞ்சினும் மென்மையான பாதங்களை உடைய உமையம்மையின் பங்கனே! உன்னையன்றி நான் வேறு ஒரு பற்றுக்கோடும் இல்லேன். மிகவும் செம்மையாகவே ஆண்டருளினை! சிவலோக நாதனே! திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் பெருமானே! நாய்போன்ற நான் பயப்படுகின்றேன். நீ ஆட்கொண்டு வழங்கிய கருணையை மயக்கத்தினால் மறந்த வஞ்சகனாகிய நான் இவ்வுலகில் வாழமாட்டேன். வருவாய் என்றழைத்து அருள்புரிவாயாக!.

விளக்கவுரை

செஞ்செவே - மிகச் செம்மையாக; ஒருபொருட் பன்மொழி. 'அருளினை மறந்தமையால் மீளவும் முன்னை நிலையே ஆகுங்கொலோ என்று அஞ்சுகின்றேன்' என்பது பொருளாதல் அறிக. வஞ்சன் - நாடகமாத்திரையாக நடிப்பவன்.

பரிதிவாழ் ஒளியாய் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர் கோலச் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துளம் உருகிக்
கலந்துநான் வாழுமா றறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. **#453**

சூரிய மண்டலத்தில் எழுந்தருளியிருக்கும் ஒளி வடிவானவனே! செல்வத்தாற்சிறந்த அழகிய சிவலோக நாதனே! திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் பெருமானே! உன் திருவடியை அன்றி நான் வேறு ஒரு பற்றுக் கோடும் இல்லேன்; நான் உன் திருவருளையே கருதி உள்ளம்

கனிந்து உருகி உன்னோடு கலந்து, வாழும் வகையினை அறியாத மயக்க உணர்வினையுடையேன். இவ் வுலகத்தில் வாழமாட்டேன். ஆதலால், வருவாய் என்றழைத்து அருள் புரிவாயாக!.

விளக்கவுரை

பரிதி வாழ் - சூரிய மண்டலத்தின்கண் வாழ்கின்ற. ஒளியாய் - ஒளியுருவினனே, சூரிய மண்டலத்தின் நடுவில் 'இறைவன் சதாசிவ மூர்த்தியாய் எழுந்தருளியுள்ளான்' என்பது, சைவாகமநூல் துணிபு. சைவர் பகலவன்பால், இம்மூர்த்தியை நோக்கியே வணங்குவர்.

'அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்க னாவான் அரனுரு அல்லனோ'

(தி.5 ப.100 பா.8) என்ற அப்பர் திருமொழியையும் காண்க. 'காயத்திரி மறையின் பொருளும் இம்மூர்த்தியேயல்லது, சூரியனல்லன்' என்பதை,

'இருக்கு நான்மறை ஈசனை யேதொழும்
கருத்தி னைநினை யார்கன் மனவரே'

என்னும் அத்திருப்பாட்டின் பிற்பகுதி உறுதிப்பட விளக்குகின்றது. இனி, 'பரிதியினிடத்துள்ள ஒளிபோலும் உருவினனே' என உரைப் பாரும் உளர். திரு - அழகு. கோலம் - வடிவம். 'வாழுமாறு அறியா மருளனேன்' என்றது, முன்னர் உடன்செல்ல ஒருப்படாது நின்றமையை.

பந்தணை விரலாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அந்தமில் அமுதே அரும்பெரும் பொருளே
ஆரமு தேஅடி யேனை
வந்துய ஆண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. **#454**

பந்து பொருந்திய விரலினை உடைய உமையம்மை யின் பங்கனே! நீ அன்றி நான் வேறு ஒரு பற்றுக் கோடும் இல்லேன்; செம்மையான நெருப்புப் போன்றவனே! சிவலோக நாதனே! திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே! அழிவில்லா அமுதமே! சுவை முடிவில்லா பரம்பொருளே! அருமையான அமுதமே! நீயே வந்து அடியேனை உய்யும் வண்ணம் ஆட்கொண் டருளினை. இவ்வுலகில் வாழமாட்டேன்; வருவாய் என்றழைத்து அருள்புரிவாயாக!.

விளக்கவுரை

'அந்தம் இல் அமுது', 'ஆரமுது' என்றவை, இல் பொருள் உவமைகள். அருமை, தேவரும் பெறுதற்கருமை. அஃது இனிது விளங்குதற்பொருட்டு

இருதொடராக்கி அருளிச் செய்தார்.

பாவநா சாஉன் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ இருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரி யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. **#455**

பாவத்தை நீக்குபவனே! தேவர்தம் தலைவனே! சிவலோக நாதனே! திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் பெருமானே! மூன்று உலகங்களும் ஊடுருவும் வண்ணம் திருமால் பிரமனாகிய இருவரும், கீழும் மேலுமாய்த் தேட ஒலிக்கின்ற அனற்பிழம்பாகி வளர்ந்தவனே! யானைத் தோலுடையானே! உன் திருவடியே அன்றி நான் வேறு ஒரு பற்றுக்கோடு இல்லேன்; இவ்வுலகில் நான் வாழமாட்டேன்; வருவாய் என்றழைத்து அருள் புரிவாயாக!.

விளக்கவுரை

பாவநாசன் - பாவத்தை அழிப்பவன். சிவனை மறந்து செய்வன பலவும் பாவமே என்பதே சிவஞானியர் கருத்து. 'கீழ்மேலாய்' என்றதனை, 'கீழ்மேலாக' எனத்திரிக்க. மா - யானை.

பழுதில்தொல் புகழாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி அணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடை யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. **#456**

குற்றம் இல்லாத தொன்மையான புகழை உடைய உமையம்மையின் பங்கனே! இளங்காளையை ஊர்தியாக உடையவனே! செழுமையதாகிய பிறையை அணிந்தவனே! சிவலோக நாதனே! திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் பெருமானே! உன்னையன்றி நான் வேறு ஒரு பற்றுக்கோடும் இல்லேன். ஆதலால், பிற தெய்வங்களை வணங்குவேனோ? வாயால் வாழ்த்துவேனோ? எனக்கு ஒரு துணை என்று மனத்தால் நினைப்பேனோ? சொல் வாயாக; இவ்வுலகத்தில் வாழமாட்டேன்; வருவாய் என்று அழைத்து அருள் புரிவாயாக!

விளக்கவுரை

பழுது, பதியைவிட்டு நீங்கியிருத்தல். அஃது உமை யம்மைக்கு எக்காலத்தும் இன்மையால், 'பழுதில்' என்றும், அங்ஙனம் நிற்றல் அனாதியாகலின், அதனை, 'தொல்புகழ்' என்றும் அருளிச் செய்தார். செழுமை - இளமை. 'சொல்லாய்' என்றது, 'இவ் வுறுதிப்பாடு நீ அறிந்ததேயன்றோ' என்னும் குறிப்பினது.

1.29.அருட்பத்து

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. **#457**

சோதிப் பிழம்பானவனே! ஒளிப் பிழம்பில் உள்ள கதிர்களாய் உள்ளவனே! சூழ்ந்த ஒளியை உடைய விளக்குப் போன்ற வனே! சுருண்ட கூந்தலை உடைய உமாதேவியின் பாகத்தை உடைய வனே! மேலானவனே! பாலினது நிறத்தைக் கொண்ட, வெண்ணீற்றை அணிந்தவனே! தாமரை மலரை இடமாக உடைய பிரமனும், திருமாலும் அறியமுடியாத நீதியானவனே! செல்வம் மிக்க திருப் பெருந்துறையில் நிறைந்த மலர்களையுடைய குருந்த மரநிழலில் பொருந்திய சிறப்புடைய முன்னவனே! அடியேனாகிய நான், உன்னை விரும்பி அழைத்தால், அதென்ன? என்று கேட்டு அருள் புரிவாயாக!.

விளக்கவுரை

சோதி - எல்லாவற்றையும் அடக்கி விளங்கும் பேரொளி. இஃது இறைவனது தன்னியல்பாகிய, 'சிவம்' என்னும் நிலையைக் குறித்து அருளிச் செய்தது. சுடர் - அப்பேரொளியின் கூறு. இது, 'சத்தி' என்னும் நிலையைக் குறித்து அருளிச்செய்தது. சூழ் ஒளி விளக்கு - ஓர் எல்லையளவில் பரவும் ஒளியை உடைய விளக்கு. இது சத்தியின் வியாபாரத்தால் வரும் பலவகை நிலைகளைக் குறித்து அருளிச் செய்தது. இம்மூன்றும் உவமையாகுபெயர்கள். சுரி குழல் - கடை குழன்ற கூந்தல். 'மடந்தையது பாதியை உடையவனே' என்க. பால் கொள் - பாலினது தன்மையைக் கொண்ட, தன்மையாவது, நிறம். 'மாலும்' என்னும் உம்மை தொகுத்தல். 'நீதி' என்றது, 'நீதியையே வடிவமாக உடைய கடவுள்' என்னும் பொருட்டாய் நின்ற ஆகுபெயர். எனவே, 'அறியா'

என்றது, ஆகுபெயர்ப் பொருளையே சிறப்பித்து நிற்றல் அறிக. செல்வம் - அருட் செல்வம். குருந்தம் - குருந்தமர நிழல். சீர் - புகழையுடைய. ஆதி - எப்பொருட்கும் முதல். ஆதரித்து - விரும்பி. 'அழைத்தால்' என்றது, 'அழைக்கின்றேனாதலின்' என்னும் பொருட்டு. அதெந்து' என்பது, 'காரணம்' என்னும் பொருளையுடைய தோர் திசைச்சொல் என்ப. எனவே, 'என் அழைப்புக் காரணம் உடையதே எனக் கருதி எனக்கு அருள் செய்' என்பது பொருளாம். இவ்வாறன்றி, 'அதெந்துவே என்பது, அஃது என் என்னும் பொருளை யுடைய திசைச்சொல்' எனவும், 'அஞ்சாதே என்னும் பொருளை யுடைய திசைச்சொல்' எனவும் பலவாறு கூறுவாரும் உளர்.

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட் டலறி
உலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. **#458**

கூத்தப் பெருமானே! மலம் இல்லாதவனே! வெண்ணீற்றை உடையானே! நெற்றிக்கண்ணை உடையானே! தேவர் பிரானே! ஒப்பற்றவனே! முறையிட்டு அரற்றி உலகம் முழுதும் தேடியும் உன்னை நான் பார்க்கவில்லை. தீர்த்தமாகிய பொய்கையை யுடைய திருப்பெருந்துறையின்கண் வளப்பமான மலர்களை உடைய குருந்தமர நிழலில் பொருந்திய சிறப்புடைய செல்வனே! தொண்ட னாகிய நான் அன்புடன் அழைத்தால், அஞ்சாதே என்று சொல்லி அருள் புரிவாயாக!.

விளக்கவுரை

நிருத்தன் - நடனம் புரிபவன். ஒருத்தன் - ஒப்பற்றவன். திருத்தம், 'தீர்த்தம்' என்பதன் சிதைவு. அருத்தன் - மெய்ப்பொருளாய் உள்ளவன்.

எங்கணா யகனே என்னுயிர்த் தலைவா
ஏலவார் குழலிமார் இருவர்
தங்கணா யகனே தக்கநற் காமன்
தனதுடல் தழலெழ விழித்த
செங்கணா யகனே திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அங்கணா அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. **#459**

எங்கள் நாதனே! என்னுயிர்த் தலைவனே! மயிர்ச் சாந்தணிந்த நீண்ட

கூந்தலையுடைய இருதேவியர்க்கு நாதனே! சிறந்த அழகுடைய மன்மதனது உடம்பு நெருப்பு எழும்படி பார்த்த செம்மை யாகிய கண்ணையுடைய நாயகனே! திருப்பெருந்துறையின்கண் செழுமையான மலர்களையுடைய குருந்தமர நிழலில் பொருந்திய சிறப்புடைய அழகிய கண்ணை உடையவனே! அடியேனாகிய நான் அன்புடன் அழைத்தால் அஞ்சாதே என்று அருள் புரிவாயாக!.

விளக்கவுரை

'எங்கள்' என்றது, அடியவர் பலரையும். ஏலம் - மயிர்ச்சாந்து. இருவர், உமையும் கங்கையும். தக்க - மயக்குதல் தொழி லுக்குப் பொருந்திய. நற்காமன் - அழகிய மன்மதன். செங்கண் - நெருப்புருவாகிய கண். அங்கணன் - கருணையுடையவன்.

கமலநான் முகனும் கார்முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற் கரிய
விமலனே எமக்கு வெளிப்படா யென்ன
வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய்
திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அமலனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. **#460**

தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பிரமனும் கார் மேகம் போன்ற நிறத்தையுடைய திருமாலும் நண்ணுதற்கு அருமை யான தூயவனே! எங்களுக்கு வெளிப்பட்டுத் தோன்ற வேண்டும் என்று வேண்ட பெரிய அழலுருவத்தில் இருந்து தோன்றிய எந்தையே! பேரொலியை உடைய நான்கு வேதங்களும் பயில்கின்ற பெருந்துறையின்கண் செழுமையான மலர்களை உடைய குருந்தமர நிழலைப் பொருந்திய சிறப்புடைய மாசு இல்லாதவனே! அடியே னாகிய நான் அன்பொடு அழைத்தால் அஞ்சாதே என்று சொல்லி அருள் புரிவாயாக!.

விளக்கவுரை

வெளிப்படாய் என்ன - வெளிப்பட்டு அருள் புரி வாயாக என்று வேண்ட. இங்ஙனம் வேண்டினோர் திருப்பெருந் துறையில் இருந்த அடியார்கள். எனவே இதற்கு, 'அடியார்கள்' என்னும் தோன்றா எழுவாய் வருவிக்க. வியன்தழல் - பெரிய நெருப்பு. இது திருப்பெருந்துறையில் தோன்றியது. இவ்வாறன்றி 'நான்முகனும், கண்ணனும் வேண்ட அவர்கட்கு அவர் முன் நின்ற தழற்பிழம்பினின்றும் வெளிப்பட்ட' என்று உரைப்பாரும் உளர். திமிலம் - பேரொலி.

துடிகொள்நே ரிடையாள் சுரிகுழல் மடந்தை

துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோல் இரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அடிகளே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. **#461**

உடுக்கை வடிவம் கொண்ட நுண்ணிய இடையினை உடையாளாகிய சுருண்ட கூந்தலையுடைய உமையம்மையின் இரண்டு முலைக்கண்கள் அழுந்திய தழும்புகள், நீறுபூத்த, பெரிய நெருப்பின்மேல் உள்ள இரண்டு புள்ளிகளைப் போல மிக்க ஒளி பொருந்திய, மார்பை உடையவனே! செடிகள் அடர்ந்துள்ள, பெரிய சோலைகள் சூழ்ந்த பெருந்துறையின்கண் செழுமையான மலர்களை யுடைய குருந்தமர நிழலைப் பொருந்திய சிறப்புடைய கடவுளே! அடியேன் அன்போடு அழைத்தால் அஞ்சாதே என்று சொல்லி அருள் புரிவாயாக!.

விளக்கவுரை

துடிகொள் - உடுக்கையின் தன்மையைக்கொண்ட, தன்மை, வடிவம். பொடி - சாம்பல். 'நீறுபூத்த நெருப்பு' என்னும் இவ்வுவமை, திருநீற்றை யணிந்த சிவபெருமானது செம்மேனியின் தன்மையை விளக்க வந்தது. 'நீறுபூத்த நெருப்பின்மேல் இரண்டிடத் தில் சிறிது அந்நீற்றினை நீக்கினால், முழுவதும் வெண்மையாய் உள்ள அந்நெருப்பின் நடுவில், இரண்டு மாணிக்கங்களைப் பதித்ததுபோன்ற இரண்டு செம்புள்ளிகள் எவ்வாறு காணப்படுமோ அவ்வாறு காணப் படுகின்றன, உமையம்மை தழுவிய வடுவினையுடைய சிவ பெருமானது திருநீற்றையணிந்த மார்பில் தோன்றும் செம்புள்ளிகள்' என அடிகள் அருமையாக வியந்தருளிச் செய்கின்றார். கச்சியம் பதியில் கம்பையாற்றில் உமையம்மை சிவபெருமானை இலிங்க உருவில் வழிபட்டிருக்குங்கால், சிவபெருமான் கம்பையாறு பெருக் கெடுத்து வரச்செய்ய, அதனைக்கண்ட அம்மை பெருமானது திரு மேனிக்கு யாது நேருமோ என அஞ்சித் தனது இரு கைகளாலும், மார்பினாலும் பெருமானை அணைத்துத் தழுவிக் கொண்டமையைக் காஞ்சிப் புராணத்தில் விளங்கக் காண்க. 'எழுந்ததிரை நதித்திவலை' என்னும் திருத்தாண்டகத்துள் நாவுக்கரசரும், 'எள்க லின்றி இமை யவர் கோனை' என்னும் திருப்பாடலுள் நம்பியாரூரரும் இவ்வர லாற்றை இனிதெடுத்து அருளிச்செய்திருத்தலை அறிக. செடி - புதல்.

துப்பனே தூயாய் தூயவெண் ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்து

ஒப்பனே உன்னை உள்குவார் மனத்தின்
உறுசுவை அளிக்கும்ஆ ரமுதே
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அப்பனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. **#462**

பவளம் போன்றவனே! தூய்மையானவனே! தூய்மையான வெண்ணீறு படிந்து தோன்றுகின்ற விளக்கமாகிய ஒளி, வயிரம் போன்று பிரகாசிப்பவனே! உன்னை இடைவிடாது நினைக்கின்றவர் மனத்தில் மிகுந்த சுவையைக் கொடுக்கின்ற அரிய அமுதமே! திருத்தமாகிய வேதங்கள் ஒலிக்கின்ற திருப்பெருந்துறையின்கண் செழுமையான மலர்களையுடைய குருந்த மரநிழலைப் பொருந்திய சிறந்த தந்தையே! அடியேன் அன்போடு அழைத்தால் அஞ்சாதே என்று சொல்லி அருள்புரிவாயாக!.

விளக்கவுரை

துப்பன் - உயிர்கட்குத் துணைவலியாய் உள்ளவன். துதைந்து - நிறைதலால். துளங்கு ஒளி - வீசுகின்ற ஒளியானது. 'வயிரம்' என்றது அதன் ஒளியை, 'வயிரத்து' என்றதில் அத்து, 'வேண்டாவழிச் சாரியை. உறுசுவை - மிக்க சுவை. 'தேவர் அமுதம், உண்பார் நாவிலன்றி உள்குவார் மனத்தில் சுவைதாராமை போலாது, உள்குவார் மனத்தின் உறு சுவை அளிக்கும் அரிய அமுதம் நீ' என்ற படி. செப்பமாம் - திருத்தமாகிய.

மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
மேவலர் புரங்கள்மூன் றெரித்த
கையனே காலாற் காலனைக் காய்ந்த
கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
ஐயனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. **#463**

மெய்ப் பொருளானவனே! பலவடிவம் கொள் பவனே! மகாமேரு மலையையே வில்லாகக் கொண்டு பகைவரது கோட்டை மூன்றையும் எரித்து நீறாக்கின கையை உடையவனே! திருவடியால், காலனை உதைத்து, வெகுண்ட கடுமையான தீத்திரள் போன்ற உடலின் செந்நிறமுடையவனே! செல்வம் நிறைந்த திருப் பெருந்துறையின்கண் செழுமையான மலர்களையுடைய குருந்தமர நிழலைப் பொருந்திய சிறப்புடைய தலைவனே! அடியேன் அன்போடு அழைத்தால் அஞ்சாதே

என்று சொல்லி அருள் புரிவாயாக!.

விளக்கவுரை

விகிர்தன் - உலகியலின் வேறுபட்டவன். மேவலர் - பகைவர். வில் ஏந்தியது கையாகலின், அதுவே திரிபுரத்தை எரித்ததாக அருளிச் செய்தார்.

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. **#464**

இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியவனே! முதல்வனே! மூன்று கண்களையுடையவனே! முனிவனே! அரும்புத் தன்மை நீங்காத மலர்களைப் பறித்து அருச்சித்து, அன்போடு நினைத்து வழிபடுவோர்க்கு, வீடுபேறு கொடுத்து அருள்கின்ற ஞானமயனே! செல்வம் நிறைந்த திருப்பெருந்துறையின்கண் செழுமையான மலர்களையுடைய குருந்தமர நிழலைப் பொருந்திய சிறப்புடைய தந்தையே! நான் அன்போடு அழைத்தால், அஞ்சாதே என்று சொல்லி அருள் புரிவாயாக!.

விளக்கவுரை

சிறந்த தவக்கோலம் உடைமை பற்றிச் சிவ பெருமானை, 'முனிவன்' எனக்கூறுவர் பெரியோர் 'படர் புன்சடை - முனியாய் நீ உலகம் முழுதாளினும் - தனியாய்' *(தி.5 ப.96 பா.3)* என்றாற்போலவரும் திருமொழிகளைக் காண்க. ' விஸ்வாதிகோ ருத்ரோ மகர்ஷி' என உபநிடதமும் கூறும். மொட்டு - அரும்பு; என்றது போதினை *(பேரரும்பை)*. 'போதாய நிலையைக் கடவாத மலர்' என்க. கதி - முத்தி. சித்தன் - வியத்தகு செயலைச் செய்பவன்; தாழ்நிலையில் நின்றாரை உயர் நிலையில் வைத்தல்பற்றி இங்ஙனம் அருளிச்செய்தார். அத்தன் - அப்பன்; தலைவனுமாம்.

மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவா ளரவம்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளுநான் மறைசேர் திருப்பெருந் துறையில்

செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருளனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. #465

மயங்கும் தன்மை உடையேனது மனத்தை, மயக்கம் தீர்ந்திருக்கக் கண்ணால் பார்த்து, மறுபிறவியையும் ஒழித்த மெய்ப் பொருளானவனே! தூய்மையானவனே! சீறுகின்ற வாள் அரவமாகிய கொடிய பாம்பும் கங்கையாறும் தங்கிய சிவந்த சடையை உடைய வனே! தெளிவையுண்டுபண்ணும், நான்கு மறைகள் ஒலிக்கின்ற திருப்பெருந் துறையின்கண் செழுமையான மலர்களையுடைய குருந்தமர நிழலைப் பொருந்திய சிறந்த அருளை உடைய வனே! நான் அன்போடு அழைத்தால் அஞ்சாதே என்று அருள் வாயாக!.

விளக்கவுரை

நோக்குதல் - கருதுதல். மனத்தைக் கருதுதலாவது, 'இஃது இவ்வாறு ஆகுக' என எண்ணுதல். இங்ஙனம் எண்ணுதலை, 'மான தீக்கை' என்ப. மறுமை - மறு பிறப்பு. இப்பிறப்பைக் கெடுத்தலாவது, உலகியலில் உழலாது சீவன் முத்தத்தன்மையை அடையச் செய்தல். பொருளன் - பரம்பொருளானவன். அருளன் - அருளுடையவன்.

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
இருந்தவா றெண்ணி ஏசறா நினைந்திட்டு
என்னுடை யெம்பிரான் என்றென்
றருந்தவா நினைந்தே ஆதரித் தழைத்தால்
அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்
போதராய் என்றரு ளாயே. #466

அரிய தவக்கோலத்தை உடையவனே! திருந்திய நீண்ட சோலை சூழ்ந்த திருப்பெருந்துறையின்கண் செழுமையான மலர்களையுடைய குருந்த மர நிழலைப் பொருந்திய முறையை ஆராய்ந்து, வருந்தி என்னுடைய எம்பிரான் என்றென்று பலகாலும் நினைந்து அன்போடு அழைத்தால், அலைகடல் நடுவில் உள்ள உலகத்தினின்றும் அழைத்து, எனது கயிலாயத்தைச் சேரும் வழி இதுதான்; வருவாயாக! என்று சொல்லி அருள்புரிவாயாக!.

விளக்கவுரை

திருந்து - திருந்திய; அழகுபெற்ற. சீர் - நிலை. இருந்தவாறு - இருந்த படியை. ஏசறா நினைந்து - துன்புற்று நினைத்து. இட்டு, அசைநிலை. 'என்றென்று பன்முறை நினைந்து' என்க. அருந் தவா - அரிய

தவக்கோலத்தை உடையவனே. 'எண்ணி, நினைந்திட்டு, நினைந்து' என்றவை வேறுவேறு பொருளைச் சார்ந்து வந்தமை அறிக. 'அலைகடல்' என்றது, பெருந்துன்பத்தைக் குறித்த சிறப்புருவகம். அது, பகுதிப்பொருள் விகுதி. 'நின்று' என்றது, நீக்கப் பொருளின் வரும் ஐந்தாம் வேற்றுமைப் பொருளதாகிய இடைச் சொல். எனவே, அலைகடலின் அகத்தினின்றும் வா' என்பது பொருளாயிற்று. 'கயிலை' எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, 'பொருந்த வா' என்றார். எனவே, 'கயிலையைப் பொருந்த வா; அதன்கண் புகும் நெறி இது; அந்நெறியே போதராய் என்று அருளாய்' என்றதாயிற்று. 'இது' என்றது. 'இது எனக்காட்டி' என்றபடி. போதராய் - வருவாயாக.

1.30.திருக்கழுக்குன்றப் பதிகம்

பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மான்உன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கி லாததோர் இன்ப மேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. **#467**

பெருந்துறைப் பெருமானே! உன் திருப் பெயர்களைப் புகழ்ந்து பேசுவோர்க்கு ஒப்பற்ற ஆனந்தமே! என் இருவினை ஒத்தபிறகு, என் பிறவி வித்து இனிமேல் முளையாதபடி, நீ திருக்கழுக் குன்றிலே எழுந்தருளி உன் திருக்கோலத்தைக் காட்டி அருளினாய். உன் பெருங்கருணை இருந்தவாறு என்னே?.

விளக்கவுரை

'பிணக்கிலாத பெருமான்' என இயையும். பிணக் கிலாமை, சிறியோரையும் ஆட்கொள்ளும் வள்ளன்மை. இணக்கு - இணங்குதல்; பிறிதொன்றனோடு நிகர்த்தல். 'இன்பமே துன்பமே துடைத்து வரும்' என மாற்றியுரைக்க. ஏகாரம் இரண்டனுள் முன்னது பிரிநிலை; பின்னது தேற்றம். உணக்கிலாதது ஓர் வித்து - உலர்த்தப் படாத ஒரு விதை; 'ஒன்று' என்பது, ஒருவகையைக் குறித்தது. 'விளையாமையை ஒத்தபின்' என இயையும். 'விளையாமல்' என்பது பாடமன்று. விதைகள் யாவும் விளைவின் பின்னர் ஈரம் புலர உலர்த்தப்பட்ட பின்பே முளையைத் தோற்றுவித்தற்குரிய பக்குவத்தை எய்தும்; அவ்வாறின்றி ஈரத்தோடே நிழலிலே கிடப்பின், அதன்கண் உள்ள முளைத்தற் சத்தி கெட்டொழியும். அவ்வாறே செய்யப்பட்ட வினையாகிய ஆகாமியம் அதன்கண்

மேலும்மேலும் நிகழும் விருப்பு, வெறுப்புக்களால் முறுகி நின்ற வழியே பின்னர்ப் பிறவியைத் தோற்று விக்கும். இவ்விருப்பு வெறுப்புக்கள் அஞ்ஞானத்தால் நிகழ்வன. இறைவன், அருளிய ஞானத்தில் உறைத்து நிற்பின், அஞ்ஞானங்கெட, விருப்பு வெறுப்புக்கள் எழமாட்டா. அவை எழாதொழியவே, ஒரோ வழிப் பயிற்சி வயத்தால் செய்யப்படும் ஆகாமிய வினை முறுகிநின்று பின்னர்ப் பிறவியைத் தோற்றுவிக்கமாட்டாது கெட்டு விடுமாகலின், 'என்வினை உணக்கிலாததோர் வித்து மேல்விளையாமையை ஒத்தபின்' என்று அருளிச்செய்தார்.

எனவே, அடிகள் தாம் முன்னைப் பயிற்சி காரணமாக இறைவன் அருள்வழியினின்றும் சிறிது நீங்கினமையால் விளைந்த குற்றம், கடிதில் அந்நிலையினின்றும் நீங்கி முன்போலவே அருளில் உறைத்து நின்றமையாற் கெட்டொழிந்த பின்னர், இறைவன் தமக்கு முன்போலத் தோன்றியருளினமையைத் தெரித்தவாறாயிற்று. சஞ்சித வினை கெடுதலுக்கு, காய்ந்த விதை வறுக்கப்படுதலை உவமையாகக் கூறுவர். அடிகள் இங்கு ஆகாமிய வினை கெடுதலுக்கு, விதை உணக்கப்படாதொழிதலை உவமை கூறினார். ஞானியர்க்கு, 'சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம்' என்னும் மூவகை வினைகளும் கெடுமாற்றினை,

எல்லைஇல் பிறவி நல்கும்
இருவினை எரிசேர் வித்தின்
ஒல்லையின் அகலும்; ஏன்ற
உடற்பழ வினைகள் ஊட்டும்
தொல்லையின் வருதல் போலத்
தோன்றிரு வினைய துண்டேல்
அல்லொளி புரையு ஞானத்
தழல்உற அழிந்து போமே.

(சிவப்பிரகாசம் - 89) எனவும்,

'ஏன்ற வினைஉடலோ டேகும்இடை ஏறும்வினை
தோன்றில் அருளே சுடும்'

(திருவருட்பயன் - 98) எனவும் மெய்ந்நூல்கள் விளக்குதல் காண்க.

தன்னை அறிந்திடு ம் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே.

என்ற தி.*10* திருமந்திரத்தையும் *(2611)* காண்க. முன்னை வினை, சஞ்சிதம். பின்னைவினை, ஆகாமியம். 'வினை ஒத்தபின்' என்றதற்கு இவ்வாறன்றிப் பிராரத்த நுகர்ச்சிக்கண் வரும் இருவினை

யொப்பினைப் பொருளாகக் கூறின், அது திருவருள் பெறுவதற்கு முன் நிகழ்ச்சியாதலின், அடிகள் நிலைக்குச் சிறிதும் ஒவ்வாமை யறிக. 'கணக்கு' என்றது முதலும், முடிவுமாய எல்லையை. இறைவன் அடியார்களுக்கு அருட்டிருமேனிகொண்டு அருளுதல் என்றும் உள்ள செயலாதல் அறிக. இனி, 'அளவில்லாத பெருமையையுடைய திருக்கோலம்' எனினுமாம். இறுதிக்கண், 'இதற்கு யான் செய்யும் கைம்மாறு யாது' என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க. இஃது ஏனைய திருப்பாட்டிற்கும் ஒக்கும்.

பிட்டு நேர்பட மண்சு மந்த
பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்தி லாத
சழக்க னேன்உனைச் சார்ந்திலேன்
சிட்ட னேசிவ லோக னேசிறு
நாயி னுங்கடை யாயவெங்
கட்ட னேனையும் ஆட்கொள் வான்வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. **#468**

பிட்டுக்கு மண் சுமந்த பெருந்துறைப் பெருமானே! உன் கட்டளைக்கு இணங்கி வாராத குற்றத்தை உடைய நான் உன்னை அடைந்திலேன்; ஆயினும், நாயினும் கடைப்பட்ட என்னையும் ஆட்கொள்ளும் பொருட்டுத் திருக்கழுக்குன்றில் எழுந்தருளி உன் திருக்கோலத்தைக் காட்டி அருளினாய்; உன் பெருங்கருணை இருந்தவாறு என்னே?.

விளக்கவுரை

பிட்டு நேர்பட - உண்ட பிட்டுக்கு அளவொப்ப, 'சட்ட' என்பது பற்றிமேலே (*தி.8 திருக்கோத்தும்பி - பா.7- உரை*) கூறப்பட் டது. நேர்பட (*உன்னோடு நன்கு*) தலைக்கூட, சழக்கன் - பொய்யன். சிட்டன் - உயர்ந்தோன்.

வெங் கட்டன் - கொடிய துன்பத்தை யுடையவன். இதனுள், காட்டுதலுக்குச் செயப்படு பொருளாகிய, 'கோலம்' என்பதை, வேண்டும் இடங்களில் வருவிக்க.

மலங்கி னேன்கண்ணின் நீரை மாற்றி
மலங்கெ டுத்தபெ ருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேன்இனி
மேல்வி ளைவ தறிந்திலேன்
இலங்கு கின்றநின் சேவ டிகள்
இரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கி னேன்கலங் காமலே வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. **#469**

என் கண்ணீர் துடைத்து என் மலத்தை அழித்து ஆட்கொண்ட திருப்பெருந்துறைப் பெருமானே! நான் உன்னை விட்டு நீங்கினேன்; மேல் விளையும் காரியத்தை அறிந்திலேன்; உன் திருவடி இரண்டையும் வைக்கத் தூய்மையான இடம் இல்லாமல் கலங்கினேன்; நான் கலங்காதபடி நீ திருக்கழுக்குன்றிலே எழுந்தருளி, உன் திருக் கோலத்தைக் காட்டி அருளினாய்; உன் பெருங்கருணை இருந்தவாறு என்னே?.

விளக்கவுரை

'மலங்கினேனது கண்ணின்நீர்' என்க. மலங்குதல் - மயங்குதல். 'கெடுத்த' என்ற பெயரெச்சம், 'பெருந்துறை' என்ற இடப்பெயர் கொண்டது. 'பெருந்துறைக்கண் உன்னோடு வாராமல் நின்றுவிட்டேன்' என்க. வினைக்கேடன் - வினையாகிய கெடு நெறியை உடையேன். இனி - இப்பொழுது; இது, விலங்கினேன்; என்றதனோடு முடியும்.
மேல் விளைவது, நின் திருவடியைப் பெறுதல், பிறவிக்கடலில் வீழ்தல் என்னும் இரண்டில் இன்னது என்பது, 'சேவடிகள் வைப்பிடம் இன்றி' என்றது, 'நீ மீளத் தோன்றியருளும் இடம் கிடைக்கப்பெறாமல்' என்றபடி.

பூணொ ணாததொ ரன்பு பூண்டு
பொருந்தி நாள்தொறும் போற்றவும்
நாணொ ணாததொர் நாணம் எய்தி
நடுக்கட லுள்அ ழுந்திநான்
பேணொ ணாதபெ ருந்து றைப்பெருந்
தோணி பற்றி யுகைத்தலுங்
காணொ ணாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்க்கழுக் குன்றிலே. **#470**

உன் அன்பர் உன்னிடத்தில் பேரன்பு பூண்டு வணங்கக் கண்டு, நான் மிக்க நாணம் அடைந்து, துன்பக் கடலில் அழுந்தி, திருப்பெருந்துறையாகிய பெருந்தெப்பத்தைப் பற்றிச் செலுத்தலும், நீ திருக்கழுக்குன்றிலே எழுந்தருளி, காணமுடியாத உன் திருக்கோலத்தைக் காட்டி அருளினாய். உன் பெருங்கருணை இருந்தவாறு என்னே?.

விளக்கவுரை

பூணொணாததொர் அன்பு - என் தரத்திற்கு மேற்பட்ட ஓர் அன்பு.
நாணொணாததோர் நாணம் - என் நிலைக்கு வேண்டாத ஓர் நாணம்.
'அந்நாணமாகிய கடல்' என்க, 'பேணொணாத தோணி' என இயையும்.
பேணொணாத - எளிதில் பாதுகாத்துக் கொள்ளுதற்கு இயலாத.
பெருந்துறைப் பெருந்தோணி - திருப்பெருந்துறைக்கண் கிடைத்த

திருவருளாகிய தோணி.
உகைத்தல் - ஓட்டுதல். காணொணா-ஒருவர்க்கும் காண இயலாத. 'யான் உன்மாட்டுப் பேரன்பு உடையேனாய் இருந்தும் உன்னொடு வரும் பேற்றினைப் பெறாமையால், அப்பேற்றினைப் பெற்றோர் எள்ளும் எள்ளலுக்குப் பெருநாணங்கொண்டு, அந்நிலை நீங்குதற்கு நீ திருப்பெருந்துறைக் கண், தில்லையில் வருக என்று அருளிச் செய்த திருவருளையே பற்றுக்கோடாகக் கொண்டு பல தலங்களிலும் சென்று உன்னை வணங்கிவர, திருக்கழுக்குன்றத்தில் உனது அரிய திருக்காட்சியை எனக்குக் காட்டியருளினாய்' என்பது இதன் திரண்ட பொருள். 'கடல்' என்றது, துன்பத்தை எனினுமாம்.

கோல மேனிவ ராக மேகுண
மாம்பெ ருந்துறைக் கொண்டலே
சீல மேதும் அறிந்தி லாதஎன்
சிந்தை வைத்த சிகாமணி
ஞால மேகரி யாக நான்உனை
நச்சி நச்சிட வந்திடும்
கால மேஉனை ஓதநீ வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. **#471**

அழகிய திருவுருவம் உடையவனே! திருப்பெருந் துறைக் கொண்டலே! சற்றும் நல்லொழுக்கத்தை அறியாத என் மனத் தில் வைக்கப் பட்டிருக்கிற சிகாமணியே! உலகமே சாட்சியாக நான் உன்னைப் புகழும்படி திருக்கழுக்குன்றிலே எழுந்தருளி எனக்குத் திருக்கோலத்தைக் காட்டி அருளினாய். உன் பெருங்கருணை இருந்தவாறு என்னே?.

விளக்கவுரை

கோல மேனி வராகமே - அழகிய திருமேனியைப் பன்றியுருவாகக் கொண்டவனே, இது பன்றிக்குட்டிகட்கு இறைவன் தாய்ப்பன்றியாய்ச் சென்று பால்கொடுத்த திருவிளையாடல் பற்றி வந்தது. 'குணமாம் கொண்டலே' என இயையும். குணம், அருட் குணங்களாகிய தன்வயமுடைமை முதலியன. 'குணமே வடிவாகிய கொண்டல்' என்க. எனவே, 'அக்கொண்டலால் தரப்படுவதும் குணமே' என்பது போந்தது. 'என் சிந்தைதன் அகத்தே பொருந்த வைத்துக் கொண்ட சிகாமணியே' என்றபடி.
கரி - சான்று. நச்சுதல் - விரும்புதல். நச்சி - நச்சுதலால். அடிகள் இறைவனையன்றிப் பிறிதொன்றையும் விரும்பாமையை உலகம் அறியுமாகலின், 'ஞாலமே கரியாக நான் உனை நச்சி' என்றார். 'நச்சி' என்னும் எச்சம், 'வந்திடும்' என்றதனோடு முடிந்தது. நச்சிட வந்திடும் காலமே - என்றும் இடையறாது அன்பு செய்யுமாறு உன்பால் யான்

வருதற்குரிய காலத்திலே; ஏகாரம், பிரிநிலை. 'காலமே காட்டினாய்' என இயையும். ஓத - இங்ஙனம் மகிழ்ந்து பாடும்படி.

பேதம் இல்ல தொர்கற் பளித்த
பெருந்து றைப்பெரு வெள்ளமே
ஏத மேபல பேச நீஎனை
ஏதி லார்முனம் என்செய்தாய்
சாதல் சாதல்பொல் லாமை யற்ற
தனிச்ச ரண்சர ணாமெனக்
காத லால்உனை ஓத நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. **#472**

வேறுபடுதல் இல்லாத ஒப்பற்ற கல்வியாகிய ஞானத்தை அருள்செய்த திருப்பெருந்துறை இன்பப் பெருக்கே! பல தீமைகள் பேசும்படி என்னை அயலார் முன்னே நீ என்ன காரியம் செய்து வைத்தாய்?. முடிவற்றனவும், தீங்கற்றனவுமாகின உன் திருவடிகளே எனக்குப் புகலிடம் எனக் கருதி ஆசையோடு உன்னைப் புகழும் வண்ணம் நீ திருக்கழுக்குன்றிலே எழுந்தருளி, உன் திருக்கோலத்தைக் காட்டி அருளினாய். உன் பெருங்கருணை இருந்தவாறு என்னே?.

விளக்கவுரை

பேதம் - வேறுபடுதல். கற்பு - கல்வி; என்றது ஞானத்தை, உண்மை ஞானம் என்றும் வேறுபடாது நிலைத்து நிற்பதாதல் அறிக. வெள்ளம் - இன்ப வெள்ளம். ஏதம் - குற்றம்; இஃது அடிகள்மேல் ஏதிலார் ஏற்றிக் கூறுவது.

ஏதிலார் - அயலார். இவர்கள் அடிகளது அன்பு நிலையையும், இறைவனது அருள் நிலையையும் அறியாராகலின், அடிகள் உலகியலின் நீங்கிய பின்னர் அல்லல் உறுவதை, அவர் செயத்தக்கது அறியாது செய்தமையால் விளைந்ததாக அவரைப் பழித்தனர் என்க. 'என்செய்தாய்' என்றது, 'தகாதது செய்தாய்' என்னும் பொருட்டு. தகாதது, தன் அடியவரை அல்லல் உறுவித்தது. 'என்செய்தாய்' என்றதன் பின்னர், 'ஆயினும்' என்பது வருவிக்க. 'சாதல் சாதல்' என்ற அடுக்கு, பன்மை பற்றி வந்தது. 'சாதலாகிய பொல்லாமை, என்க.

பொல்லாமை - தீங்கு. தனிச்சரண் - ஒப்பற்ற உனது திருவடியே. சரண் ஆம் என - நமக்குப் புகலிடமாகும் என்று. உனை ஓத - நான் உன்னைப் புகழ்ந்து பாடும்படி,

இயக்கி மார்அறு பத்து நால்வரை
எண்குணம் செய்த ஈசனே
மயக்க மாயதோர் மும்ம லப்பழ
வல்வி னைக்குள் அழுந்தவும்

துயக்க றுத்தெனை ஆண்டு கொண்டுநின்
தூய்ம லர்க்கழல் தந்தெனைக்
கயக்க வைத்தடி யார்மு னேவந்து
காட்டினாய் கழுக் குன்றிலே. **#473**

இயக்கிமார் அறுபத்து நால்வரைத் தன் ஞானோபதேசத்தால் எண்குணமும் அடையச் செய்த ஈசனே! மயக்கத்துக்கு ஏதுவாகிய மும்மல சம்பந்தமாகிய வல்வினைக் கடலில் அடியேன் அழுந்தி நிற்கவும் என் தளர்ச்சியை நீக்கி, என்னை ஆண்டருளி, உன் திருவடிகளைத் தந்து அடியார்களுக்கு எதிரில் திருக்கழுக்குன்றிலே எழுந்தருளி, உன் திருக்கோலத்தைக் காட்டி அருளினாய். உன் பெருங்கருணை இருந்தவாறு என்னே?.

விளக்கவுரை

'யட்சன்' என்னும் ஆரியச்சொல், தமிழில், 'இயக்கன்' எனத் திரிந்து வருதலின், 'இயக்கிமார்' என்றது. தேவகணத்தவருள் ஒருவகையினராகிய *'இயக்கர்'* என்பவருள் பெண்பாலாரை என்பது வெளிப்படை. இம்மாதர் அறுபத்து நால்வருக்குச் சிவபெருமான் ஞானோபதேசம் செய்து, தனது எண்குணங்களையும் அடையச் செய்தான் என்பது, இத்திருப்பாட்டின் முதலடியிற் கூறப்பட்டது. இத்தகைய வரலாறு ஒன்று உத்தரகோசமங்கைப் புராணத்தில் காணப்படுகின்றது. மயக்கத்தால் விளைந்ததனை, *'மயக்கம்'* என்றார். *'மயக்கமாயதோர் வினை'* என இயையும். மும்மல வினை, மும்மலங்களால் உண்டாக்கிய வினை. *'இருவினைப் பாசம் மும்மலக்கல் ஆர்த்தலின்' (தி.12 பெ. புரா. நாவுக். 129)* என்புழிப்போல, மூலகன்மத்தை வேறு வைத்து, *'மும்மலம்'* என்று அருளினார். துயக்கு - மெலிவு. *'தூமலர்'* என வருதலேயன்றி, *'தூய்மலர்'* என வருதலும் வழக்கென்க. *'கயங்க'* என்பது வலிந்து நின்றது. கயங்குதல் - கலங்குதல். *'அடியார் முன்னே கயக்க வைத்து'* என்க. *'முன்பு கயக்க வைத்து, இப்பொழுது காட்டினாய்'* என்க.

1.31.கண்ட பத்து

இந்திரிய வயமயங்கி
இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய்
அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம்

அணிகொள்தில்லை கண்டேனே. #474

பொறிகளின் வயப்பட்டு மயக்கமடைந்து அழிவதற்கே காரணாகிப் பல புவனங்களிலும் அலைந்து சென்று, கடத்தற்கருமையான நரகத்தில் வீழ்வேனாகிய எனக்கு, மனத்தைத் தூய்மையாக்கிச் சிவத்தன்மையை வெளிப்படுத்தி என்னை ஆண்டருளிய, முடிவில்லாத ஆனந்தமூர்த்தியை அழகிய தில்லையம்பலத்தில் கண்டேன்.

விளக்கவுரை

'இந்திரிய வயத்தால் மயங்கி' என்க. காரணமாய் - காரணம் உண்டாகப்பெற்று. அந்தரம் - வானுலகம். இஃது இயமன் உலகத்தைக் குறித்தது. வீழ்வேற்கு - வீழ்தற்கு உரியவனாய் இருந்த எனக்கு. 'தெளிவித்து' என்றது, 'தெளிவித்தலாகிய நலத்தைப் புரிந்து' என்னும் பொருட்டாய் நின்று, 'வீழ்வேற்கு' என்னும் நான்கா வதற்கு முடிபாயிற்று. 'எனைச் சிவமாக்கி ஆண்ட' என்க. 'சிவமாக்கி' என வேறு போல அருளிச்செய்தாராயினும், 'தானாக்கி' என்பதே கருத்தாதல் அறிக. 'ஆக்கி ஆண்ட' என்றது, 'ஓடி வந்தான்' என்பது போல, ஒருவினைப் பொருட்டு. ஆனந்தம் - ஆனந்த வடிவத்தை.

வினைப்பிறவி என்கின்ற
வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே
தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டென்
பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகுந் தொழுந்தில்லை
அம்பலத்தே கண்டேனே. #475

வினையினால் உண்டாகிய பிறவியாகிய துன்பத்தில் சிக்கி, இறைவனாகிய தன்னைச் சற்றும் நினையாமலேயே மெலிவடைந்து இருக்கும் என்னை, மிகப்பெரிதும் ஆட்கொண்டு என் பிறவித்தளையை நீக்கின ஒப்பிலாப் பெருமானை, எல்லா உலகங்களும் வணங்குகின்ற தில்லையம்பலத்தில் கண்டேன்.

விளக்கவுரை

வினைப் பிறவி - வினையால் வரும் பிறவி. எனைப் பெரிதும் - எத்துணையோ மிகுதியாக. மிகுதி, தம் தரம் நோக்கிக் கூறியது.

உருத்தெரியாக் காலத்தே
உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக்
கருணையினால் ஆண்டு கொண்ட

திருத்துருத்தி மேயானைத்
தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன்
அணிகொள்தில்லை கண்டேனே. **#476**

என்னுடைய உருவம் தோற்றப்பெறாத காலத்திலே என் உள்ளே புகுந்து என் மனத்தில் நிலைபெற்று, ஞானத்தைப் பதியச் செய்து உடம்பிற்புகுந்து தன் பெருங்கருணையினால் ஆட்கொண் டருளின, திருத்துருத்தி என்ற தலத்திலே எழுந்தருளியவனை, ஆசை யினால் நாய்போன்ற அடியேன் அழகு பொருந்திய தில்லையம் பலத்தில் கண்டேன்.

விளக்கவுரை

உருத் தெரியாக் காலம் - தாய் வயிற்றில் உடம்பு உருப் பெறாதிருந்த தொடக்கக் காலம். *'காலத்தே'* என்ற ஏகாரம், பிரிநிலை.
உள்புகுந்து - கருவினுள் புகுந்து. உளம் - சூக்கும தேகமாய் நின்ற மனம் . கரு திருத்தி - பின்னர்க் கருவைச் செம்மையாக வளர்த்து. ஊன் புக்கு - பின் பிறந்து வளர்ந்த உடம்பினுள்ளும் நின்று; என்றது, *'உலகியலில் உழன்ற காலத்தும் அதற்குத் துணையாய் நின்று'* என்றபடி. இறைவனது திருமேனியை, *'ஊன்'* என்றல் பொருந்தாமை யின், *'ஊன்புக்கு'* என்றதற்கு *'ஆசான் மூர்த்தியாய் எழுந்தருளி வந்து'* என உரைத்தல் கூடாமை அறிக. திருத்துருத்தி, சோழநாட்டுத் தலம். தித்திக்கும் - இனிக்கின்ற; என்றது, *'இன்பம் மிகுகின்ற'* என்ற படி. சிவபதத்தை - வீடு பேறாய் உள்ளவனை. அருத்தி - விருப்பம். இதனுள் அடிகள் கருவிலே திருவுடையராய் இருந்தமை புலப்படுதல் காண்க. *'கருவாய்க் கிடந்து உன்கழலே நினையும் கருத்துடையேன்' (தி.4 ப.94 பா.6)* என்று நாவுக்கரசரும் அருளிச்செய்தார்.

கல்லாத புல்லறிவிற்
கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து
வனப்பெய்தி யிருக்கும்வண்ணம்
பல்லோருங் காணஎன்றன்
பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை
அம்பலத்தே கண்டேனே. **#477**

கல்லாத அற்ப அறிவினால் கடையவனாகிய நாய் போன்றவனை எல்லாம் வல்லானாய் வந்து திருவருள் பெற்றிருக்கும் படி பலரும் காண என்னுடைய ஆன்ம அறிவைப் பற்றியுள்ள மும் மலக்கட்டினையும் போக்கினவனை எல்லோரும் வந்து வணங்குகின்ற தில்லையம்பலத்தில்

கண்டேன்.

விளக்கவுரை

புல்லறிவின் - புல்லறிவினால். வல்லாளனாய் - வலிதின் ஆளுதல் உடையவனாய். வனப்பு - அழகு; என்றது சிறப் பினை. 'யான் வனப்பெய்தி இருக்கும் வண்ணம்' என உரைக்க. பசு பாசம் - பசுவாம் தன்மையைச் செய்யும் பாசம்.

சாதிகுலம் பிறப்பென்னுஞ்
சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை
அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம்
யானெனதென் னுரைமாய்த்துக்
கோதில்அமு தானானைக்
குலாவுதில்லை கண்டேனே. **#478**

சாதி, குலம், பிறவி என்கின்ற சூழலிலே அகப்பட்டு அறிவு கலங்குகின்ற அன்பில்லாத நாய் போன்ற எனது துன்பத்தினைக் களைந்து, அடிமை கொண்டு அறியாமைக் குணத்தையும் அன்னியருடைய வடிவம் என்ற எண்ணத்தையும் நான், எனது என்று சொல்லும் வார்த்தையையும் அறவே அழித்து, குற்றம் இல்லாத அமுதமானவனைத் தில்லையம்பலத்தில் கண்டேன்.

விளக்கவுரை

அந்தணர் முதலிய நான்கு வருணங்களும், பிறப் பினாலும், ஒழுக்கத்தினாலும் உளவாகும். அவற்றுள் ஒழுக்கத்தினால் உளவாவனவற்றை, 'சாதி' என்றார், அவ்வவ்வருணத்துள்ளும் அவ்வவ்வொழுக்கமுடையாரை, 'சாதியந்தணர்' முதலியோராகக் கூறும் வழக்குப்பற்றி.

குலம் - குடிமை; இஃது ஒவ்வொரு வருணத்தினும் உள்ள பகுதி; இதனை, 'கோத்திரம்' என்பர் வடமொழியாளர். பிறப்பு - பிறந்த வருணம். சுழிப்பட்டு - வெள்ளச் சுழலில் அகப்பட்டு. சாதி முதலிய மூன்றும் உலகியலில் தருக்கினை உண்டாக்கி அதனுள்ளே அழுந்தச் செய்தலின் இவற்றை, 'சுழி' என்றார்.

ஆதம் - ஆதரவு. 'குணம்' என்றது, தொழிலை. பேதையது தொழில், ஏதம் கொண்டு ஊதியம் போக விடல்*(குறள் - 831)*, நாணாமை, நாடாமை, நாரின்மை, யாதொன்றும் பேணாமை *(குறள் - 833)* முதலியன. 'பிறர் உருவம்' என்றது, பிறர் எனக் கருதி உறவும், பகையும் கொள்ளுதற் கேற்ற உருவ வேறுபாட்டுணர்வினை. உரை - செருக்குச் சொல்.

'இவைகளை மாய்த்து' என்க.

பிறவிதனை அறமாற்றிப்
பிணிமூப்பென் றிவையிரண்டும்
உறவினொடும் ஒழியச்சென்
றுலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த்
திருச்சிற்றம் பலம்மன்னி
மறையவரும் வானவரும்
வணங்கிடநான் கண்டேனே. #479

பிறவியை முற்றிலும் நீக்கி, நோய், முதுமை ஆகிய இவை இரண்டையும், சுற்றமாகிய பற்றோடுங் கூட நீங்கிப் போய் உலகத்தையுடைய ஒப்பற்ற முதல்வனை நெருங்கிய சோலை சூழ்ந்த தில்லையம்பதியில் திருச்சிற்றம்பலத்தை அடைந்து அந்தணரும் தேவரும் தொழுதிட நான் கண்டேன்.

விளக்கவுரை

பிறவிக்கு ஏதுவாய மயக்கத்தை, 'பிறவி' என்றார். உறவு - கிளைஞர்மேல் செய்யும் பற்று. மன்னி - பொருந்தி. மறைய வர், தில்லைவாழந்தணர். 'மாற்றி, சென்று, மன்னி, ஒருமுதலை மறையவரும் வானவரும் வணங்கிட நான் கண்டேன், என வினை முடிக்க.

பத்திமையும் பரிசுமிலாப்
பசுபாசம் அறுத்தருளிப்
பித்தன்இவன் எனஎன்னை
ஆக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றால்
திருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல்
விளங்குதில்லை கண்டேனே. #480

அன்புடைமையும் நல்லொழுக்கமும் இல்லாமைக்கு ஏதுவாகிய, ஆன்ம அறிவைத் தடை செய்கின்ற பாசத்தை நீக்கி, அடியேனை இவன் பித்துப் பிடித்தவன் என்று கண்டோர் கூறும்படி செய்து, நான் தமது திருவடியை விட்டு அகலாமல் மனம் என்கிற திண்கயிற்றால் கட்டுண்டு கிடக்கும்படி செய்த ஞானவடிவினனாகிய சிவபெருமானது திருவிளையாடலைத் தில்லையம்பலத்தில் கண்டேன்.

விளக்கவுரை

பத்திமை - அன்பு. பரிசு - பக்குவம்; தகுதி. 'இவை இரண்டும் இல்லாமையாகிய பசுத்துவத்தைச் செய்யும் பாசம்' என்க. 'பேராமே

கட்டுவித்த' என இயையும். சித்தம் - மறவாத மனம். 'நாயகன் சேவடி தைவரும் சிந்தையும்' *(தி.12 பெ. புரா. நாவு. 140)*, என்றார் சேக்கிழாரும். 'திருப்பாதத்தில் கட்டுவித்த' என்க.

அளவிலாப் பாவகத்தால்
அமுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்றும் அறியாதே
வெறுவியனாய்க் கிடப்பேனுக்
களவிலா ஆனந்தம்
அளித்தென்னை ஆண்டானைக்
களவிலா வானவருந்
தொழுந்தில்லை கண்டேனே. **#481**

அளவற்ற எண்ணங்களால் அழுந்தப்பட்டு இவ் வுலகத்தில் அறிவில்லாமல் இனிமேல் நிகழப்போவதைச் சிறிதும் அறியாமல் பயனற்றவனாயிருக்கின்ற எனக்கு அளவற்ற இன்பத்தைக் கொடுத்து என்னை ஆண்டருளினவனை வஞ்சமில்லாத் தேவரும் வணங்குகின்ற தில்லையம்பலத்தில் கண்டேன்.

விளக்கவுரை

பாவகம் - நினைவு; இஃது உள்ளத்தின் பண்பு. இது, 'தன்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதன்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அனைசுவரியம்' எனத் தொகையான் எட்டாகவும், வகையான் ஐம்பதாகவும் *(சிவப்பிரகாசம் - 42)* விரியான் அறுநூற்றுப் பன்னிரண்டாகவும் *(சிவஞானமாபாடியம் சூ. 2. அதி. 2)* ஒருவாற்றான் வரையறுத்துக் கூறப்படுமாயினும், அளவின்றி விரிவது என்பதே உண்மையாகலின், 'அளவிலாப் பாவகத்தால்' என்றும், இந்நினைவுகள் பலவும் கறங்கோலையின் முனைபோல உள்ளத்துக் கண் மாறி மாறி இடையறாது தோன்றி உயிரைப் பந்தித்தலின், 'அமுக்குண்டு' என்றும், இப் பந்தத்தான் உண்மை ஞானம் தோன்றுதற்கு வழி இல்லாது போதலின், 'அறிவின்றி' என்றும் அருளினார்.
'அளவிலாப் பாவகம்' என்றது அறுநூற்றுப் பன்னிரண்டாய பேரெண் பற்றியே எனச் சிவாகமங்களோடு ஒருங்கியைய உரைத்த லும் ஒன்று.
ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல.
(குறள் 337) எனவும்,
'உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன'
(நல்வழி - 28) எனவும் பிறவிடங்களில் பொதுப்படவே கூறப்பட்டன.
வெறுவியன் - ஒருபயனும் இல்லாதவன். களவு - நல்லோரை வஞ்சித்தல்.

பாங்கினொடு பரிசொன்றும்
அறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர
உலப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலம்அறுத்து
வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை
அம்பலத்தே கண்டேனே. **#482**

இறைவனையடையக் கூடிய முறையோடு அதனால் வரும் பயன் சிறிதும் அறியாத நாய்போன்ற என்னை மனத்தின்கண் ஞானஒளி மிகுந்து வளர முடிவில்லாத அன்பினை அருளிச்செய்து, வினைப்பயன் என்னை அடையாதவாறு நீக்கி, ஆணவ மலத்தை அடக்கி மேலான கருணையைக் கொடுத்தவனை நான்கு வேதங்களும் முழங்குகின்ற தில்லையம்பலத்தில் கண்டேன்.

விளக்கவுரை

பாங்கு - நன்மை. பரிசு - அதனை அடையும் முறை. *'ஒளி உள்ளத்து ஓங்கி வளர'* என்க. வாங்குதல் - நீக்குதல். *'வினை வாங்கி'* என மாறிக் கூட்டுக. மலம் - ஆணவம். *'அருமறை நான்கினோடு ஆறங்கமும் பயின்று வல்ல' (தி.12 பெ.புரா. தில்லைவாழ். 5)* அந்தணர்கள் நிறைந்திருத்தலின், *'நான்கு மறை பயில் தில்லை'* என்றார்.

பூதங்கள் ஐந்தாகிப்
புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப்
பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட
கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும்
விளங்குதில்லை கண்டேனே. **#483**

ஐம்பூதங்களாகிச் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற புலன்களாகி ஏனைய எல்லாப் பொருள்களுமாகி, அவற்றிற் கேற்ப வேறுபாடுகளுமாய்த் தான் வேறுபடுதலில்லாத பெருமை யுடையவனாய்த் துன்பங்களைப் போக்கி எம்மை ஆண்டு அருளிய ஒளிப்பொருளானவனைப் பச்சைமணி போன்றவனை வேதங்கள் வணங்கித் துதிக்கின்ற தில்லையம்பலத்தில் கண்டேன்.

விளக்கவுரை

'புலன்' என்றது, பொறியை. பொருள், *'ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்'*

என்பவற்றை. பேதங்கள் உடையவற்றை, 'பேதங்கள்' என்றார். எனவே, 'பல்வேறு வகைப்பட்ட பொருள்கள் எல்லாமாகியும்' என்றதாயிற்று. பேதமிலாப் பெருமை, பேதங்களை யுடைய பொருள்கள் எல்லாவற்றிலும் அவையேயாய்க் கலந்து நிற்பினும், தன் தன்மை திரியாத பெருமை. கேதங்கள் - துன்பங்கள்.

1.32.பிரார்த்தனைப் பத்து

கலந்து நின்னடியா ரோடன்று
வாளா களித்தி ருந்தேன்
புலர்ந்து போன காலங்கள்
புகுந்து நின்ற திடர்பின்னாள்
உலர்ந்து போனேன் உடையானே
உலவா இன்பச் சுடர்காண்பான்
அலந்து போனேன் அருள்செய்யாய்
ஆர்வங் கூர அடியேற்கே. **#484**

உடையவனே! நீ என்னை ஆட்கொண்ட அந்நாளில் உன் அடியார்களுடன் கூடியிருத்தலை மாத்திரம் செய்து வீணே களித்திருந்தேன். நாள்கள் கழிந்து போயின. பிற்காலத்தில் அவர்களை விட்டுப்பிரிந்ததும் துன்பம் புகுந்து நிலைபெற்றது. அதனால் வாடிப் போனேன். கெடாத இன்பத்தைத் தருகிற ஒளி வடிவினனாகிய உன்னைக் காணுபொருட்டு வருந்தினேன். அடியேனாகிய எனக்கு உன்மீது அன்பு மிகும்படி அருள் செய்வாயாக.

விளக்கவுரை

பொருள்கோள்: 'உடையானே, அன்று நின் அடியா ரோடு கலந்து வாளா களித்திருந்தேன்; காலங்கள் புலர்ந்து போன; பின்னாள் இடர் புகுந்து நின்றது; அதனால், உலவா இன்பச் சுடர் காண்பான் அலந்து போனேன்' அடியேற்கு ஆர்வம் கூர அருள் செய்யாய்'.

அன்று - என்னை ஆட்கொண்ட அந்நாள். வாளா - கவலை யின்றி. இறைவன் ஆட்கொண்ட காலத்தில் அடிகள் அடியார் பலரோடும் கலந்து கவலையின்றிக் களித்திருந்ததாக அருளின மையால், பின்னே அவர் இறைவனோடு செல்லாது நின்றது, உலகியல் மயக்கத்தாலன்றிப் பிறர்மாட்டு வைத்த இரக்கத்தால் என்பது பெறப்படும். காலங்கள் புலர்ந்துபோன - இத்தகைய களிப்பு நிலை யிலே பல காலங்கள் கழிந்தன. பின்னாள் - நீ அடியாருடன் மறைந் தருளியதற்குப் பின்னாய நாட்களில். இடர் - உலகியல் துன்பம். உலர்ந்து போனேன் - உள்ளமும், உடலும் வலியற்றுப் போயினேன். 'இன்பச் சுடர்' எனப் படர்க்கையாகச் சொல்லப்பட்டதாயினும், 'இன்பச் சுடராகிய உன்னை' என்பதே

பொருள். அலந்துபோனேன் - அலைந்துநின்றேன். ஆர்வம் கூர - உன்மாட்டு எனக்கு அன்பு மிக. 'அன்பு மிகுமாயின் நான் உன்னை அடைதல் திண்ணம்' என்பது கருத்து.

அடியார் சிலர்உன் அருள்பெற்றார்
ஆர்வங் கூர யான்அவமே
முடையார் பிணத்தின் முடிவின்றி
முனிவால் அடியேன் மூக்கின்றேன்
கடியே னுடைய கடுவினையைக்
களைந்துன் கருணைக் கடல்பொங்க
உடையாய் அடியேன் உள்ளத்தே
ஓவா துருக அருளாயே. **#485**

உடையவனே! உன் அடியார்களில் சிலர் உன் னிடத்தில் அன்புமிக உன்னுடைய அருளைப் பெற்றார்கள். அடியவ னாகிய நானோ வீணே முடைநாற்றமுடைய பிணத்தைப் போன்று அழிவின்றி வெறுப்பினால் வயதுமுதிர்கின்றேன். இளகாத மனமுடை யேனுடைய கொடுமையான வினைகளை நீக்கி அடியேனுடைய உள்ளத்தில் உன்னுடைய கருணையாகிய கடல் பொங்கும் வண்ணம் இடைவிடாது உருகும்படி அருள் புரிவாயாக.

விளக்கவுரை

'ஆர்வம் கூர்தலால் அருள் பெற்றார்' என்க. அவமே மூக்கின்றேன் - வீணாக மூப்படைகின்றேன். பிணத்தின் - பிணத்தின் கண். வெறுப்புக் காரணமாக உடம்பை, 'பிணம்' என்றார். 'முடிவின்றி இருந்து' என ஒருசொல் வருவிக்க. முனிவால் - அந்த வெறுப்போடே. 'கருணைக் கடல் பொங்குமாறு உருக' என்க. 'உருக' என்றது, 'உருக்கம் உண்டாக' எனப் பொருள்தந்து நின்றது.

அருளா ரமுதப் பெருங்கடல்வாய்
அடியா ரெல்லாம் புக்கழுந்த
இருளார் ஆக்கை இதுபொறுத்தே
எய்த்தேன் கண்டாய் எம்மானே
மருளார் மனத்தோர் உன்மத்தன்
வருமால் என்றிங் கெனைக்கண்டார்
வெருளா வண்ணம் மெய்யன்பை
உடையாய் பெறநான் வேண்டுமே. **#486**

எம்பெருமானே! உடையவனே! திருவருளாகிய அரிய அமுதம் போன்ற பெரிய கடலின்கண் உன் அடியார்கள் எல்லாம் புகுந்து திளைத்திருக்க அறியாமை நிறைந்த உடம்பாகிய இதனைச் சுமந்து இளைத்தேன். மயக்கம் பொருந்திய மனத்தை யுடைய ஒருபித்தன் வருகிறான் என்று

இவ்வுலகில் என்னைப் பார்ப்பவர்கள் அஞ்சாவண்ணம் நான் வீடுபேறடையும் பொருட்டு உண்மையான அன்பினைப் பெறவேண்டும்.

விளக்கவுரை

அருள் ஆரமுதப் பெருங்கடல்வாய் - அருளாகிய அரிய அமுதப் பெருங்கடலின்கண். 'அமுதப் பெருங்கடல்' என்பது இல்பொருள் உவமையாய், அருளுக்கு உருவகமாயிற்று, உன்மத்தன்- பித்தன். 'உன்னை அடையும் மெய்யன்பை யான் பெறாவிடில், உலகியலோடு தொடர்பின்றி ஒழுகும் எனது ஒழுக்கத்திற்குப் பயன், என்னைக் கண்டவர்கள், 'இஃதோ பித்தன் ஒருவன் வருகின்றான்' என்று அஞ்சி ஓடுவதன்றி வேறில்லை' என்பதாம்.

வேண்டும் வேண்டு மெய்யடியா
ருள்ளே விரும்பி எனைஅருளால்
ஆண்டாய் அடியேன் இடர்களைந்த
அமுதே அருமா மணிமுத்தே
தூண்டா விளக்கின் சுடரனையாய்
தொண்ட னேற்கும் உண்டாங்கொல்
வேண்டா தொன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே. **#487**

உன்னை வேண்டுகின்ற மெய்யடியார்களிடையே கருணையால் என்னை முன்னம் ஆட்கொண்டருளினை. அதனால் அடியேனது துன்பத்தையும் நீக்கின அமுதே! அருமையான பெரிய மணியாகிய முத்தே! தூண்டாத விளக்கின் சுடர்க்கொழுந்து போன்றவனே! அடியேன், விரும்பத்தகாத ஒன்றையும் விரும்பாது மிகுந்த அன்பினையே பொருந்துதல் உண்டாகுமோ? அதுவே எனக்கு வேண்டும்.

விளக்கவுரை

'வேண்டும்' இரண்டனுள், முன்னது விரும்புதற் பொருளையும், பின்னது இன்றியமையாமைப் பொருளையும் தந்தன. மெய்யடியாரை ஆட்கொள்ளுதலை இறைவன் தனக்கு இன்றியமை யாக கடனாகக் கொள்வன் என்க. இரண்டும் பெயரெச்சங்கள். 'மெய்யடியாருள்ளே ஒருவனாக' என ஒரு சொல் வருவிக்க. 'அருளால் ஆண்டாய்' என்றதனால், 'தகுதியால் ஆண்டிலை' என்பது பெறப்பட்டது. 'அவ்வாறு ஆண்டு இடர்களைந்த அமுதே' என்க. 'உண்டாங்கொல்' என்றதனை இறுதிக்கண் கூட்டுக. கொல், அசைநிலை. 'வேண்டாதொன்றும்' என்றதில், 'வேண்டாத' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.

வேண்டாதது - பயனில்லா தது. வேண்டாது - விரும்பாமல். மேவுதல் - பொருந்துதல்.

மேவும் உன்றன் அடியாருள்
விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணாள்
பங்கா உன்றன் கருணையினால்
பாவி யேற்கும் உண்டாமோ
பரமா னந்தப் பழங்கடல்சேர்ந்து
ஆவி யாக்கை யானெனதென்
றியாது மின்றி அறுதலே. **#488**

நீலமலரின் தன்மையமைந்த மீன் போன்ற கண்ணையுடைய உமையம்மையின் பாகனே! பொருந்திய உன்னுடைய அடியார் நடுவில் ஒருவனாய் நானும் உண்மையையே விரும்பி உன்னுடைய திருவருளால் பேரின்பமாகிய பழையகடலை அடைந்து உயிரும் உடம்பும் நான் எனது என்னும் பற்றுக்களும் சிறிது மில்லாது அற்றுப்போதல் பாவியாகிய எனக்கும் உண்டாகுமோ?

விளக்கவுரை

பொருள்கோள்: காவிசேரும் கயற்கண்ணாள் பங்கா, உன்றன் கருணையினால், யானும் மெய்ம்மையே விரும்பி, மேவும் உன்றன் அடியாருள் பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து, ஆவி, யாக்கை, யான், எனது என்ற யாதும் இன்றி அறுதல் பாவியேற்கும் உண்டாமோ. மேவும் - (உன்னை உண்மையாகவே) விரும்புகின்ற. மெய்ம்மையே விரும்பி. மெய்யாகவே அன்பு செய்து. 'காவியும் கயலும்போலும் கண்ணாள்' என்பதனை இவ்வாறு ஓதினார். காவி - நீலோற்பலம். 'என்ற' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'யானும்' என்றது, 'அறுதல்' என்ற தொழிற்பெயர் எழுவாய்க்கு அடையாய் வந்தது. 'என்றவற்றுள் யாதும் இன்றி' என்க.

அறவே பெற்றார் நின்னன்பர்
அந்த மின்றி அகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன்
புலம்பு கின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
பேரா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவிலா
மாளா இன்ப மாகடலே. **#489**

உடையவனே! உன் அன்பர்கள் நிலைபெயராத, நீங்காத வேறுபடாத, மறப்பும் நினைப்பும் இல்லாத, எல்லையில்லாத அழிவு இல்லாத

பேரின்பக் கடலை முற்றிலும் பெற்றவர்களாய் முடிவின்றி மனம் உருகவும் கீழ்த்தன்மையுடைய நாய் போன்ற யான் அவர்கள் கூட்டத்துக்கு வெளியே கிடந்து வருந்துகின்றேன். ஆகையால் அவ்வின்பக் கடலைப் பெறுவதற்கு ஏதுவான உண்மை அன்பை யான் பெறவே வேண்டும்.

விளக்கவுரை

அறவே - முழுதும். 'பெற்றாராகிய அன்பர்' என்க. பெறுதலுக்கு, 'அருள்' என்னும் செயப்படுபொருள் வருவிக்க. அந்தம் இன்றி - இடையறாது. 'யான் மெய்யன்பு பெறவே வேண்டும்' என்க. 'பேரா' முதலிய ஏழும் இன்பத்திற்கு அடை. பேர்தல், அடைந்தோர் பின் நீங்குதலும், ஒழிதல் தான் நீங்குதலுமாம். பிரிவு - வேறாதல். அளவு - எல்லை. மாளுதல் - அழிதல். ஏழ் அடையாலும், ஏழ் இன்பக் கடல் கூறியவாறாக இதற்கு நயம் உரைப்பர். 'கடலே' என்றது, விளி. 'அன்பைப் பெற்றால், அவ் வின்பக்கடலைப் பெறலாம்' என்றதாம்.

கடலே அனைய ஆனந்தம்
கண்டா ரெல்லாங் கவர்ந்துண்ண
இடரே பெருக்கி ஏசற்றிங்
கிருத்த லழகோ அடிநாயேன்
உடையாய் நீயே அருளுதியென்
றுணர்த்தா தொழிந்தே கழிந்தொழிந்தேன்
சுடரார் அருளால் இருள்நீங்கச்
சோதீ இனித்தான் துணியாயே. **#490**

உடையவனே! ஒளிப்பொருளானவனே! கடல் போன்ற அவ்வளவு பேரானந்தத்தை, உன்னைப் பார்த்த அடியார் எல்லோரும் அள்ளிப் பருக, அடிமையாகிய நாயேன், துன்பத்தையே அதிகரிக்கச் செய்து, வருந்தி இவ்வுலகத்தில் இருப்பது அழகாகுமோ? நீ தான் எனக்கு அருள் செய்வாய் என்று அறிந்து, அதுபற்றி உன்னிடம் வேண்டிக்கொள்ளாது இருந்து, பிரிந்துகெட்டேன். கதிரவன் போன்ற திருவருளால், என் அறியாமையாகிய இருள் நீங்கும்படி இனியாவது நீ திருவுளம் பற்றுவாயாக.

விளக்கவுரை

கண்டார், உன்னைக் கண்டவர். 'இடர்' என்றது அதற்கு ஏதுவாவனவற்றை. ஏசற்று - துன்புற்று. நீயே அருளுதி என்று- நான் கேளாமல் நீயே தருவாய் என்று நினைத்து. உணர்த்தாதொழிந்து- கேளாமல்விட்டு.
கழிந்தொழிந்தேன் - இத்துணை நாளும் விலகி விட்டேன். 'சுடர் ஆர்

அருளால்' என்றதனை, 'அருள் அருஞ் சுடரால்' எனப் பின்முன்னாக்கி உரைக்க.
இருள், 'அறியாமையாகிய இருள்' எனச்சிறப்புருவகம். துணியாய் - சிதைத்துவிடு. அறியாமை நீங்கின், உளதாம் என்க.

துணியா உருகா அருள்பெருகத்
தோன்றுந் தொண்ட ரிடைப்புகுந்து
திணியார் மூங்கிற் சிந்தையேன்
சிவனே நின்று தேய்கின்றேன்
அணியா ரடியார் உனக்குள்ள
அன்புந் தாராய் அருளளியத்
தணியா தொல்லை வந்தருளித்
தளிர்பொற் பாதந் தாராயே. **#491**

சிவபெருமானே! துணிந்து, மனம் உருகி, உன் அருள் பெருகும்படி, விளங்கும் அடியாரிடையே கூடி, வலிமை பொருந்திய, மூங்கிலைப் போன்ற, சித்தத்தையுடைய யான், இருந்து மெலிகின்றேன். உன் உள்ளத்தில் அருள்மிகுந்து, கூட்டமாகப் பொருந்திய, உன் அடியார்கள் உன்பால் கொண்டுள்ள மெய்யன்பையும் எனக்குத் தருவாயாக. காலம் தாழ்த்தாது விரைவாக எழுந்தருளி, தளிர் போன்ற பொன்னடிகளையும் தருவாயாக.

விளக்கவுரை

துணியா - உன்னையே பொருளாகத் துணிந்து. உருகா- மனம் உருகி. அருள் பெருக - அதனால் உனது திருவருள் பெருகப் பெற்று. தோன்றும் - காணப்படுகின்ற. 'இத்தகைய அடியாரிடையே அன்பில்லாத யான் புகுந்தேன்' என்றது, முன்பு ஆட்கொள்ளப் பட்டமையை. திணி ஆர் மூங்கில் - உட்டுளை இல்லாத மூங்கில்; இது வலிய மனத்திற்கு உவமையாயிற்று. உனக்கு உள்ள - உன் பொருட்டுக் கொண்டுள்ள. 'அடியார்க்கு' என்பதே பாடம் போலும்! 'அன்பும்' என்ற உம்மை எதிரது தழுவிய எச்சம். அருள் அளிய - உனது கருணை மிக்கு நிகழ. இதனைத் தாப்பிசையாய் முன்னுங்கூட்டி, முன்னர் எதிர்காலமாகவும், பின்னர் இறந்த காலமாகவும் உரைக்க. தணியாது- மெத்தென வாராது.

தாரா அருளொன் றின்றியே
தந்தாய் என்றுன் தமரெல்லாம்
ஆரா நின்றார் அடியேனும்
அயலார் போல அயர்வேனோ
சீரார் அருளாற் சிந்தனையைத்
திருத்தி ஆண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை

வைக்க வேண்டும் பெருமானே. #492
பெருமையுடையோனே! எமக்குத் தாராத அருள், ஒன்றும் இல்லாது முழுவதும் தந்தனையென்று, உன்னடியார் எல் லோரும் மகிழ்ந்திருந்தனர். அடியேனாகிய யான் மட்டும் வேற்றவர் போல, வருந்துவேனோ? சிறப்புப் பொருந்திய உன் திருவருளால், என் சித்தத்தைத் திருத்தி, ஆண்டருளின சிவலோக நாதனே! பேரின்பமான நிலையில் என்னை நீங்காமல் வைத்தல் வேண்டும்.

விளக்கவுரை

தமர் - சுற்றத்தார்; அடியவர். ஆராநின்றார் - இன்பத்தை நிரம்பத் துய்க்கின்றார்கள். அடியேனும் - அடியேன் ஒருவன் மட்டும். பேராமை - நீங்காமல்.

மானேோர் பங்கா வந்திப்பார்
மதுரக் கனியே மனநெகா
நானோர் தோளாச் சுரையொத்தால்
நம்பி இத்தால் வாழ்ந்தாயே
ஊனே புகுந்த உனையுணர்ந்தே
உருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே அருளுங் காலந்தான்
கொடியேற் கென்றோ கூடுவதே. #493

மானைப் போன்ற பார்வையையுடைய உமையம்மையை ஒரு பாகமாக உடையவனே! வந்திப்பார்க்கு அஃதாவது வணங்குவோர்க்கு இனிய கனி போன்று இன்பம் அளிப் பவனே! இறைவனே! நம்பியே! மனம் நெகிழாமல் நான் துளைக்கப் படாத ஒரு சுரைக்காயைப் போன்று இருந்தால், இதனால் நீ வாழ்ந்து விட்டாயோ? உடம்பிலே முன்னரே புகுந்த உன்னையறிந்து, இளகிப் பூரிக்கும் மனத்தை, நீ அருள் புரியும் காலமானது கொடுமையை யுடைய எனக்கு, கூடுவது எப்பொழுதோ?

விளக்கவுரை

மான் - பெண். வந்திப்பார் - வணங்குவார்க்கு, மனம் நெகா - மனம் உருகாது, தோளாச்சுரை - துளையிடாத சுரைக் குடுக்கை. இதனுள் ஒன்றும் புகாது; ஆதலின், அன்பும் அருளும் புகும் நிலையில்லாதவர்கட்கு இஃது உவமையாகச் சொல்லப்படும். நம்பி - நம்பியே. இத்தால் வாழ்ந்தாயே - என்னை இந்நிலையில் வைத்து விட்ட இதனால் நீ வாழ்ந்தே விட்டாய்போலும்! இஃது ஊடியுரைக்கும் சொல்.
'ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர்

வாழ்ந்து போதீரே'
(தி. 7 ப.95 பா.1) என்றார் நம்பியாரூரரும்.

கூடிக் கூடி உன்னடியார்
குனிப்பார் சிரிப்பார் களிப்பாராய்
வாடி வாடி வழியற்றேன்
வற்றல் மரம்போல் நிற்பேனோ
ஊடி ஊடி உடையாயொடு
கலந்துள் ளுருகிப் பெருகிநெக்கு
ஆடி ஆடி ஆனந்தம்
அதுவே யாக அருள்கலந்தே. **#494**

உன் அடியார்கள், சேர்ந்து கூத்தாடுவர்; நகைப்பார்; களிப்பாராக; நெறி கெட்டவனாகிய நான் மட்டும் வாட்ட முற்று , பட்ட மரத்தைப் போன்று இருப்பேனோ? பிணங்கிப் பிணங்கி, உடையவனாகிய உன்னுடன், சேர்ந்து, மனமுருகி, பூரித்து, நெகிழ்ந்து, கூத்தாடிக் கூத்தாடி, ஆனந்தமயமாகும்படி, ஒன்றாய்க் கலந்து அருள் செய்வாயாக.

விளக்கவுரை

குனிப்பார் - கூத்தாடுவார். 'களிப்பாராக' என்பது ஈறு கெட்டு நின்றது. வழியற்றேன் - பிழைக்கும் வழியாதும் இல்லாத யான். 'வாடி வாடி வற்றல் மரம்போல் நிற்பேனோ' என்க. வற்றல் மரம் - உயிரற்றுக் காய்ந்துபோன மரம். 'வற்றல்' என்பது மரவகைகளுள் ஒன்று எனவும், அவ்வகையினதாகிய மரம், தளிர் முதலியன இன்றி வறுங்கொம்பாகவே வளரும் எனவும் கூறுவாரும் உளர்.
ஓகாரம், இரக்கப் பொருட்டு. 'உடையாயொடு ஊடி ஊடிக் கலந்து' என்க. உடையாயொடு - தலைவனாகிய உன்னோடு. 'ஊடுதல் காமத்திற் கின்பம்' *(குறள்- 1330.)* என்பது பற்றி இறை இன்பத்தை அவ்வின்பத்தோடு ஒப்பிப்பார், இங்ஙனம் அருளிச் செய்தார். இறை இன்பத்தை இவ்வாறு காம இன்பத்தோடு ஒப்பித்துக் கூறுதல், உலகத்தார் உணரும் பேரின்பமாகிய அவ்வின்பத்தினியல்பு பற்றி, உண்மைப் பேரின்பமாகிய இறைவனின்பத்தினது சிறப்பை உணர்தற் பொருட்டாம். இறை இன்பத்தில் ஊடுதலாவது, 'உங்களுக்காள் செய்யமாட்டோம்' *(தி.7 ப.5 பா.2)* என்றாற்போல, உரிமை தோன்றச் சிலவற்றை வலியுறுத்தி வேண்டல். 'அருள் கலந்து' என்றதனை, 'கலந்து அருள்' என மாற்றிப் பொருள் கொள்க. கலந்து - என் முன் தோன்றி. அருள் - அருள்செய். இதன் ஈற்றுச்சொல், முதல் திருப் பாட்டின் முதற்சொல்லாய் அமைந்து நிற்றல் காண்க.

1.33.குழைத்த பத்து

குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய்
காவாய் உடையாய் கொடுவினையேன்
உழைத்தால் உறுதி யுண்டோதான்
உமையாள் கணவா எனைஆள்வாய்
பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய் முறையோஎன்று
அழைத்தால் அருளா தொழிவதே
அம்மா னேஉன் னடியேற்கே.

#495

உடையவனே, உமையம்மையின் தலைவனே! என்னை ஆள்பவனே! பிறை தங்கிய சடையையுடையவனே! தலைவனே! பழைய, கொடிய வினையாகிய நோய் என்னை வாட்டினால், நீ காத்தருளவில்லை. ஆதலால், கொடுமையான வினையையுடையேன் நானாக முயன்றால், நன்மை உண்டாகுமோ? நான் பிழை செய்தால் அதனை மன்னித்துக் காக்க வேண்டாவோ? முறையோ என்று உன்னை ஓலமிட்டு அழைத்தால் உன் அடியானாகிய எனக்கு, நீ அருள் செய்யாது போவது தகுதியோ?

விளக்கவுரை

'கொடுவினையேன் (உன்னைக்) குழைத்தால், பண்டைக் கொடுவினைநோய் காவாய்' எனக் கூட்டுக. குழைத்தால் - உன் உள்ளம் குழையுமாறு இரந்து வேண்டுவேனாயின்; என்றது, 'அங்ஙனம் வேண்டி நிற்கின்றேனாதலின்' என்றபடி, வினைநோய் - வினையாகிய நோய். காவாய் - வந்து சாராதபடி தடுத்தருள். உழைத்தால் - அவ்வினையால் நான் துன்புறுவேனாயின். உறுதி உண்டோ - உனக்காயினும், எனக்காயினும் யாதேனும் நன்மை உண்டோ. பிழைத்தால் - வினைவந்து மீளப் பற்றுதற்கு ஏதுவாக யான் பிழைசெய்துவிட்டேன் என்றால். அருளாதொழிவதே - கருணை செய்யாதுவிடுதல் பொருந்துவதோ. 'அம்மானே', 'உன் அடியேற்கே' என்ற அடிமையாகிய யான் பிழை செய்தால் அதனைப் பொறாதொழிதலும், முறையோ என்று அழைத்தால் கேளா தொழிதலும் தலைவனாகிய உனக்குப் பொருந்துவனவோ என்னும் குறிப்பினதாகிய உடம்பொடு புணர்த்தல்.

அடியேன் அல்லல் எல்லாம்முன்
அகல ஆண்டாய் என்றிருந்தேன்
கொடியே ரிடையாள் கூறாஎம்
கோவே ஆஆ என்றருளிச்

செடிசேர் உடலைச் சிதையாத
தெத்துக் கெங்கள் சிவலோகா
உடையாய் கூவிப் பணிகொள்ளா
தொறுத்தால் ஒன்றும் போதுமே. **#496**

கொடி போன்ற இடையையுடைய உமையம்மை யின் பாகனே! எங்கள் தலைவனே! எங்கள் சிவலோக நாதனே! உடையவனே! அடியேனது துன்பங்கள் எல்லாம் நீங்கும்படி, முன்னே வந்து ஆண்டருளினை என்று எண்ணி மகிழ்ந்து இருந்தேன். அங்ஙனம் இருக்க ஐயோ என்று மனம் இரங்கி, துன்பத்தைத் தருகின்ற உடம்பை அழித்து இன்பத்தைத் தாராது இருத்தல் ஏன்? விரைவில் அழைத்து உன் பணியில் நிற்கச் செய்யாது, உடம்பிலே வைத்துத் துன்புறுத்தினால் மட்டும் போதுமோ?

விளக்கவுரை

'முன்' என்றனை முதலிற் கூட்டுக. 'அல்லல் எல்லாம் அகல ஆண்டாய் என்று இருந்தேன்' என்றது, 'ஆண்டபின்பும் என்னை அல்லற்பட வைப்பாய் என்பதை அறிந்திலேன்' என்றபடி. எத்துக்கு, 'எற்றுக்கு' என்பதன் மரூஉ. 'அடிமையைக் குற்றம் நோக்கி ஒறுத்தலும், மற்றுப்பற்று இன்மை நோக்கி அருளுதலும் ஆகிய இரண்டும் செயற்பாலனவாக அவற்றுள் ஒறுத்தலாகிய ஒன்றைமட்டும் செய்தொழிவது தலைவராயினார்க்கு நிரம்புமோ' என்பார், 'கூவிப் பணிகொள்ளாது ஒறுத்தால் ஒன்றும் போதுமோ' என்று அருளிச் செய்தார். 'ஒன்றும்' என்றதற்கு முன்னர், 'அஃது' என்னும் சுட்டுப் பெயர் வருவிக்க. 'போது' என்பது, 'நிரம்பு' என்பதனோடு ஒரு பொருட்டாய வினையடி. இதனினின்றும் பல வினைவிகற்பங்களும் பிறக்கும். இதற்கு, 'பற்று' என்னும் முதனிலை ஒருபொருட் கிளவி யாகக் கூறப்படும். 'போதாது, பற்றாது' என்பவற்றை, 'காணாது' என வழங்குவர் இக்காலத்தார்.

ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோதான்
ஏழை பங்கா எம்கோவே
குன்றே அனைய குற்றங்கள்
குணமாம் என்றே நீகொண்டால்
என்தான் கெட்ட திரங்கிடாய்
எண்தோள் முக்கண் எம்மானே. **#497**

உமையொரு பாகனே! எங்கள் தலைவனே! எட்டுத் தோள்களையும், மூன்று கண்களையுமுடைய எம் பெரியோனே! ஒன்றுக்கும் பற்றாத நாய் போன்ற என்னை அன்று உய்யக் கொண்டருளிய உன்னுடைய

கருணையானது, இன்று இல்லாமற் போய்விட்டதோ? மலையைப் போன்ற தவறுகளையும், குணங்கள் என்றே நீ ஏற்றுக் கொண்டால், எனக்கு எதுவும் இல்லை. ஆகையால் இரங்கியருள்வாயாக.

விளக்கவுரை

'ஒன்றற்கும்' என உருபு விரிக்க. 'ஒன்றற்கும் நிரம்பாத' என்றது, ஒரு பொருளோடும் ஒருநிகராதற்கு நிரம்பாத; எல்லாப் பொருளினும் கீழ்ப்பட்ட' என்றபடி. 'இன்று இன்றிப் போய்த்தோ' எனப் பின்னர் வருதலின், 'உய்யக் கொண்ட' என்பதற்கு, 'அன்று' என்பது வருவிக்கப்படும். 'போயிற்று' என்பது 'போயித்து' என மருவிப்பின் 'போய்த்து' என்றாயிற்று. 'ஆயிற்று' என்பதும் இவ்வாறே 'ஆய்த்து' என வருதல் உண்டு. இவ்விரண்டும் இவ்வாறன்றி இடைக் கண் இன் பெறற்பாலன சிறுபான்மை தகர ஒற்றுப் பெற்று வந்தன என்றலும் ஒன்று. ஓவும், தானும் அசை நிலைகள். ஏழை - பெண், 'எளியவர் என்பது நயம். 'நீ கொண்டால் என்தான் கெட்டது' என்றது. இறைவனது தன்வயம் உடைமை மாத்திரையே குறித்ததன்றிக் கோட்ட முடையனாகக் கூறியதன்றாம். அஃது அவன் அங்ஙனங் கொள்ளாமை பற்றிக் கூறியவதனானே பெறப்படும். இறைவன் தன் அடியார்கள், 'பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கிவிடும்' (சிவஞானசித்தி சூ.*10.1.)* என்பவாகலின், அவற்கும் கோட்டமுண்மை பெறப்படு மன்றோ எனின், படாது; என்னையெனின், பாதகத்தைச் செய்திடினும்' என்பது, அருள் வழிக் கண் தம்மிழப்பில் நின்று செய்தலையாக லானும் அவ்வாறு தம்மை இழவாது, 'பிழையுளனபொறுத்திடுவர்' *(தி.7ப.89பா.1)* என்று கருதிப் பிழைப்பின் பொறாது, 'ஒன்ன லரைக் கண்டாற்போல்' *(தி.7ப.89பா.9)* உதாசீனம் செய்து போதல் ஆளுடைய நம்பிகளிடத்து நிகழ்ந்த நிகழ்ச்சியான் நன்கறியப்படுத லானும் என்க. எனவே, அடிகள் தாம் செய்தனவாகக் கூறும் குற்றங்களைத் தம் வழியினின்று செய்தனவாகவே அவர் கூறுதலின், 'அவற்றைக் குணமாகக் கொண்டால் கெடுவதொன்றில்லை' என்றது, இறைவனது தன்வயமுடைமை மாத்திரையே பற்றித் தமது ஆற்றாமை மிகுதியாற் கூறியதேயாம். அன்னதாயினும், முன்னும், பின்னும் உளவாகிய அவரது திருமொழிகள் அவர் திருவருள் வழிநிற்றலிற் பிறழாமை நன்குணரப்படுதலின், அவரைத் தற்போதமுடையரெனக் கருதி மலைதல் கூடாமையறிக. 'கெடுவது' என்னும் எதிர்காலச் சொல், 'கெட்டது' எனத் தெளிவு பற்றி இறந்த காலமாகச் சொல்லப் பட்டது.

மானேர் நோக்கி மணவாளா
மன்னே நின்சீர் மறப்பித்திவ்
ஊனே புகஎன் றனைநூக்கி

உழலப் பண்ணு வித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை
அறிந்து நீயே அருள்செய்து
கோனே கூவிக் கொள்ளும்நாள்
என்றென் றுன்னைக் கூறுவதே. **#498**

மானைப் போன்ற பார்வையுடைய உமையம்மை யின் கணவனே! நிலைபெற்றவனே! தலைவனே! உனது பெருமையை, மறக்கும்படிசெய்து, இவ்வுடம்பின் கண்ணே புகுமாறு, என்னைத் தள்ளி, இவ்வுலகில் அலையும்படி செய்துவிட்டாய். உன் செயல் இதுவாயின் இனி நீயே அடியேனது பேதைமையை உணர்ந்து அருள் புரிந்து என்னை மீள உன்பால் அழைத்துக் கொள்ளும் நாள் எப்போது? அதன்பின் நான் உன்னைப் புகழ்ந்து பாடுவது எப்போது?

விளக்கவுரை

மன்னே - தலைவனே. சீர் - புகழ், என்றது, அதனைச் சொல்லுதலை. நூக்கி - வீழ்த்தி. மலசத்திகளைத் தூண்டிவிடுவதையும் இறைவனே செய்வதாகக் கூறுவர் ஆசிரியராகலின், 'நின்சீர் மறப்பித்து' எனவும், 'ஊனேபுக நூக்கி' எனவும், 'உழலப் பண்ணு வித்திட்டாய்' எனவும் அருளிச் செய்தார்,

'சிந்தையைத் திகைப்பி யாதே
செறிவுடை அடிமை செய்ய*(தி.4 ப.23 பா.4)* எனவும்,
வஞ்சமே செய்தி யாலோ
வானவர் தலைவ னேநீ' *(தி.4 ப.23 பா.9)*
எனவும்,
'நின்னை எப்போதும் நினையலொட் டாய்நீ
நினையப்புகின்
பின்னை அப்போதே மறப்பித்துப் பேர்த்தொன்று
நாடுவித்தி' *(தி.4 ப.112 பா.4)*

எனவும் அருளிச் செய்தனவும் காண்க. இங்ஙனம் மலசத்திகளைத் தூண்டி, அவை உயிரினது அறிவை மறைக்குமாறு செய்யும் சத்தியையே, 'திரோதான சத்தி' என்றும், அவ்வாற்றால் நிகழும் மறைப்பையே, ஐந்தொழில்களுள் ஒன்றாய மறைத்தல் என்றும் மெய்ந்நூல்கள் கூறும். ஆனால் - நிகழ்ச்சி இதுவாகுமாயின். 'என்று' இரண்டனுள் பின்னதனை இறுதிக்கண் கூட்டுக. கூறுவது - மறவாது நின்று புகழ்வது.

கூறும் நாவே முதலாகக்
கூறுங் கரணம் எல்லாம்நீ
தேறும் வகைநீ திகைப்பும்நீ

தீமை நன்மை முழுதும்நீ
வேறோர் பரிசிங் கொன்றில்லை
மெய்ம்மை உன்னை விரித்துரைக்கில்
தேறும் வகைஎன் சிவலோகா
திகைத்தால் தேற்ற வேண்டாவோ. **#499**

சிவலோக நாதனே! பேசுகின்ற நாக்கு முதலாக சொல்லப்படுகின்ற கருவிகள் எல்லாம் நீயே! தெளிவடையும் வழியும் நீயே! தெளியாமல் திகைத்தலைச் செய்பவனும் நீயே! தீமை நன்மைகள் முழுவதும் நீயே! உண்மையாக உன்னைப் பற்றிச் சொன்னால் இவ்விடத்தில் வேறு ஒரு பொருள் சிறிதும் இல்லை. ஆதலால் நான் தெளிவை அடையும் வழி உன்னையன்றி ஏது? ஆகையால் யான் திகைப்படைந்தால், என்னை நீ தெளிவிக்க வேண்டாவோ?

விளக்கவுரை

'உன்னை விரித்துரைக்கில் ' என்றதனை, 'கூறும் நாவே' என்றதற்கு முன்னர்க் கூட்டி, 'உன்னை' என்றதற்கு, 'உன் இயல்பை' என உரைக்க. 'உரைக்கில்' என்றமையான், அங்ஙனம் உரைக்கும் நாவை முதலாவதாகக் கூறினார். 'மனம், மொழி, மெய்' எனக் கரணம் மூன்றாகலின்' நாவொழிந்த பிற கரணங்கள் இவை என்பது உணர்க. 'கரணம்' எனினும், 'கருவி' எனினும் ஒக்கும்.

தேறுதல் - தெளிதல். வகை - வழி; உபாயம். திகைத்தல் - கலங்குதல், 'தேறும் வகை' என்றதனால், 'திகைப்பு' என்றதும். திகைக்கும் வழியையாயிற்று. முன்நிற்கற்பாலனவாகிய திகைப்பும் தீமையும், செய்யுள் நோக்கிப் பின்னின்றன. வேறு ஓர் பரிசு - உனக்கு வேறாய் நிற்பதொரு தன்மை. தன்மையுடையதனை, 'தன்மை' என்றார். 'ஒன்றில்லை' என்றது 'யாதும் இல்லை' என்னும் பொருட்டு; உம்மை. தொகுத்தல். 'மெய்ம்மை' என்றதன்பின், 'ஆதலின்' என்பது வருவித்து, 'இஃது உண்மையாதலின், நீ தேற்றினா லன்றி யான் தேறும் வகையாது' என உரைக்க.

இதன்பின்னும், 'அதனால்' என்பது வருவிக்க. 'தேற்ற' என்ற செயவெனெச்சம் தொழிற்பெயர்ப் பொருள்தந்தது. 'வேண் டாவோ' என்னும் எதிர்மறை வாய்பாடு, 'உனக்கு இன்றியமையாக் கடனன்றோ, என்பதை விளக்கி நின்றது. இஃது இறைவனது எல்லாமாய் நிற்கும் இயல்பை எடுத்தோதி, தமது மயக்கத்தைப் போக்கியருள வேண்டும்' என வேண்டியது.

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ

வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டின்அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே. **#500**

உயிர்களுக்குத் தேவையானது இது என்று அறிவோன் நீயே! மேலும் அவ்வுயிர்கள் எவற்றை வேண்டினாலும், அவையெல்லாவற்றையும் அருளுபவனும் நீயே! உன்னைக் காண விரும்பிய பிரமன், திருமால் என்பவருக்கும் அருமையாய் நின்ற வனாகிய நீ நீயாகவே விரும்பி, என்னையாளாகக் கொண்டனை. என் பொருட்டு நீ விரும்பி எதனை அருள் செய்தனை; அதனையே யானும் விரும்புவதல்லது, நானாக விரும்புகின்ற பொருள் ஒன்று, உளதாகு மெனில் அந்தப் பொருளும் உன்னிடத்தில் நான் வைக்கின்ற அன்பே யன்றோ?

விளக்கவுரை

வேண்டத் தக்கது - இரந்து பெறத்தக்க பொருள். 'தாம் சாவ மருந்துண்ணார்' என்பதுபோலத் தமக்கு நன்மை பயப்பதனை யன்றித் தீமை பயப்பதனை ஒருவரும் இறைவன்பால் வேண்டார் எனினும் தீமை பயப்பதனைத் தீமைபயப்பது என்று அறியும் ஆற்றல் இலராகலின், இறைவன்பால் வேண்டத் தக்கது இதுவென்பதனையும் அவனே அறிதலன்றி, உயிரினத்தவருள் ஒருவரும் அறியார் என்க. 'வேண்ட' என்றது. 'தம் அறியாமையால் உயிர்கள் எவற்றை வேண்டினும்' என்றவாறு. தீமைபயப்பதனையும் இறைவன் மறாது தருதல்' அவற்றின்கண் பற்று நீங்குதற்பொருட்டாம். வேண்டும் அயன் மால் - உன்னை அளவிட்டறிய விரும்பிய பிரமனும் மாலும். இவர்க்கு அரியனாதலைக் கூறியது, தமக்கு எளிவந்தமையைப் புலப்படுத்தற்கு. எனவே, 'அரியோயாகிய நீ' என ஒரு சொற்றன்மைப் படுத்து உரைக்கப்படும். 'பணி கொண்டாய்' என்றதன்பின், 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. வேண்டி - எனக்கு உரியதாகக் கருதி. அருள் செய்தாய் - உணர்த்தியருளினாய். 'அதுவே யானும் வேண்டினல்லால்' என மாற்றுக. வேண்டும் பரிசு ஒன்று உண்டென்னில் - பயிற்சிவயத்தால் ஒரோவொருகால் நான் உன்பால் இரக்கும் பொருள் வேறு ஒன்று இருக்குமாயின் அதுவும் உன்றன் விருப்பன்றே - அவ்வாறிருத்தலும் உன்றன் திருவருளே யன்றோ; என்றது, 'வேண்டத் தக்கது அறிவோய் நீ என்பது முதலியவற்றை யான் அறிந்து உன் அருள்வழியே நிற்பேனாயினும், ஒரோவொருகால் பயிற்சி வயத்தால் அந்நிலையினின்றும் பிறழ்தலும் உனது திரோதான சத்தியின் செயலே' என்பதை விண்ணப்பித்து, 'அக்குற்றத்தைப் பொறுத்து என்னை

நின்பால் வருவித்துக் கொள்ளுதல் வேண்டும்' என வேண்டியதாம். இதன் இறுதிப் பகுதிக்கு மாதவச் சிவஞான யோகிகள் இவ்வாறே பொருள்கொள்ளுதல் காண்க. *(சிவஞான சித்தி.சூ.10.3.)*

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

#501

எட்டுத் தோள்களையும் மூன்று கண்களையும் உடைய, எம் தலைவனே! மலையை ஒத்த பெரியோனே! என்னை ஆட்கொள்ள வந்த அன்றே, என்னை ஆட்கொண்ட அப்பொழுதே, என்னுடைய உயிரையும், உடம்பையும், பொருள் எல்லாவற்றையும் உன்னுடையனவாக ஏற்றுக் கொள்ளவில்லையோ? அங்ஙனமாக இப்பொழுது ஒரு துன்பம் எனக்கு உண்டாகுமோ? உண்டாகாது. ஆதலின், எனக்கு நீ நன்மையே செய்வாய் எனினும், தீமையே செய்வாய் எனினும் இத்தன்மைக்குத் தலைவன் யானோ?

விளக்கவுரை

'அன்றே' என்றதனை இறுதிக்கண் கூட்டி, அதன்பின், 'ஆதலின், நின் திருவுள்ளத்திற்கு ஏற்றது செய்க' என்னும் கையறு கிளவியாகிய குறிப்பெச்சம் வருவித்து முடிக்க. இவ்வாறன்றி, வலியுறுத்தற் பொருட்டு, 'அன்றே, என்னை ஆட்கொண்ட போதே' என இருகாற் கூறினார் என்றலுமாம். ஆவியாவது, சீவபோதம். உடைமையாவது, பிராரத்தமும், ஆகாமியமும் ஆகிய வினைகள். இறைவனுக்கு ஆட்பட்டார் பிற உடைமையை முன்னரே துறந்தமை யின், அவர்க்கு உடைமையாவன இவையன்றி இல்லை என்க. சிறுபான்மை எக்காரணத்தாலேனும் பிற உடைமை உளவாயின், அவையும், 'உடைமை' என்பதனுள் அடங்கும். உடைமையை, 'பொருள்' என்று கூறி, 'உடல், பொருள், ஆவி மூன்றையும் இறைவன் பால் ஆக்குவிப்பவரே ஞானியர்' என்பது வழக்கு. 'ஆவியும் உன்னுடையதாயினமையின், இப்பொழுது எனக்கென்று வரும் இடையூறு ஒன்று இல்லை' எனவும், 'வருகின்ற இடையூற்றைத் தடுத்தும், வந்த இடையூற்றைப் போக்கியும் என்னை நான் காத்துக்கொள்ளுதலும், காவாது தீமையுறுதலும் ஆகிய செயல்களும் எனக்கு இல்லை; எல்லாவற்றிற்கும் உரியவன் நீயே'

எனவும் கூறுவார், இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ? நன்றே செய்வாய்; பிழை செய்வாய்; நானோ இதற்கு நாயகம்' என்றும் அருளினார்.
'செய்வாய்' என்றவை, 'உன் விருப்பப்படி செய்தற்குரியை' என்னும் பொருளன. நன்று, பிழை என்னும் இரண்டனுள் தம்பால் செய்யப்படுவது ஒன்றேயாதலின், 'இதற்கு' என ஒருமையாற் கூறப்பட்டது. நாயகம் - தலைமை; இஃது ஆகுபெயராய், 'தலைவன்' எனப் பொருள் தந்தது.

நாயிற் கடையாம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட் டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான்
என்ன தோஇங் கதிகாரம்
காயத் திடுவாய் உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே. **#502**

நெற்றிக் கண்ணையுடைய பெருமானே! நாயினும் கீழான, அடியேனை விரும்பி, நீயே அடிமை கொண்டாய். மாயா காரியமான இப்பிறப்பை உன்னிடம் ஒப்புவித்து உன் ஆணைவழி நடப்பதன்றி ஆராயும் தன்மை நானோ உடையேன்? இவ்விடத்தில் அதிகாரம் என்னுடையதோ? இல்லை; ஆதலால் என்னை நீ இந்த உடம்பில் வைப்பினும் வைப்பாய். உன்னுடைய திருவடி நீழலில் சேர்ப்பினும் சேர்ப்பாய். அஃது உன் விருப்பம்.

விளக்கவுரை

நயந்து - விரும்பி. 'நீயே நயந்து முன்பு என்னை ஆட்கொண்டாய்; அதனால், இன்றும் நீ என்னைப் பிறப்பில் விடினும் விடுவாய்; உன் திருவடிநிழலில் இருத்தினும் இருத்துவாய்; ஆதலின், உடம்பையும் உனக்குரியதாகவே வைத்து நான் வாளா இருப்பதன்றி, என்னை என்னசெய்தல் வேண்டும் என்று ஆராய்ந்து முடிவு செய்தற்கு உரியவன் நான்தானோ? அதிகாரம் இங்கு என்னதோ? உன் விருப்பப் படி செய்தருள்' என்க. 'உன் விருப்பப்படி செய்தருள்' என்பது குறிப்பெச்சம். மாயப் பிறவி - நிலையில்லாத உடம்பு. ஓகாரம் வினாப் பொருளிலும், தான் பிரிநிலை ஏகாரப் பொருளிலும் வந்தன. அதிகாரம் - தலைமை.

கண்ணார் நுதலோய் கழலிணைகள்
கண்டேன் கண்கள் களிகூர
எண்ணா திரவும் பகலும்நா
னவையே எண்ணும் அதுவல்லால்

மண்மேல் யாக்கை விடுமாறும்
வந்துன் கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ
அடிமை சால அழகுடைத்தே. **#503**

கண்ணமைந்த நெற்றியையுடையோனே! தலைவனே! என் கண்கள் இன்பம் மிகும்படி, உன் இரு திருவடிகளை யும் தரிசித்தேன். வேறொன்றையும் எண்ணாமல் இரவிலும் பகலிலும் யான் அந்தத் திருவடிகளையே நினைப்பதல்லாது உடம்பை மண்ணின்மீது கழித்தொழிக்கும் விதத்தையும், வந்து வந்து உன்னுடைய திருவடியில் சேரும் விதத்தையும் நினைக்க நான் உரிமையுடையேனோ? உடையேன் எனின், எனது அடிமைத் தன்மை மிகவும் அழகுடையது!

விளக்கவுரை

'கண்கள் களிகூரக் கண்டேன்' என்க. 'எண்ணாது' என்றதற்கு, 'வேறொன்றையும் எண்ணாது' எனச் செயப்படுபொருள் வருவித்துரைக்க. 'யாக்கையை மண்மேல் விடுவது எவ்வாறு என்றும், நான் வானில் வந்து உன் கழற்குப் புகுவது எவ்வாறு என்றும் ஆராய்தற்கு உரிமை உடையேனோ? உடையேனாயின், நான் உன்னிடத்துப்பட்ட அடிமைத் தன்மை மிகவும் அழகுடைய தாமன்றோ' என்றபடி.

'இங்ஙனங் கூறவே, இவற்றை எண்ணி, பொருந்துவது செய்தற்குரியவன் தலைவனாகிய நீயே' என்பது பெறப்படும். 'கழற்கு' என்றதனை, 'கழற்கண்' எனத் திரிக்க. 'அழகுடைத்து' என்றது, 'அழகிலது' என்னும் குறிப்புமொழி.

அழகே புரிந்திட் டடிநாயேன்
அரற்று கின்றேன் உடையானே
திகழா நின்ற திருமேனி
காட்டி என்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதம்எனக்குப்
புராண நீதந் தருளாதே
குழகா கோல மறையோனே
கோனே என்னைக் குழைத்தாயே. **#504**

பழமையானவனே! அழகனே! அந்தணக் கோலம் உடையவனே! இறைவனே! உன்னுடைய அழகையே காண விரும்பி, உன் அடிமையாகிய யான் நாய் போன்று அழுகின்றேன். விளங்கு கின்ற உன்னுடைய திருமேனியைக் காட்டி, என்னையாளாகக் கொண்டாய். புகழை மிக உடைய உன் திருவடிப் பேற்றினை எனக்கு நீ கொடுத்தருளாமல் என்னை வாடச் செய்தாயே! இது முறையோ!

விளக்கவுரை

இங்கும், 'அழகு' என்றது, அழகல்லாததையே என்க. புகழே பெரிய பதம் - புகழ் பெரிதாகிய நிலை; சிவலோகம். குழைத்தாய் - வாடச்செய்தாய்; 'இது, பணி கொண்ட உனக்கு அழகோ' என்பது குறிப்பெச்சம். இதனுள் மூன்றாமெழுத்தெதுகை வந்தது. இடையிரண்டடிகளில் ஏனையடிகளின் மூன்றாமெழுத்து வந்தமையும் நோக்கற்பாற்று.

1.34.உயிருண்ணிப் பத்து

பைந்நாப்பட அரவேரல்குல்
உமைபாகம தாய்என்
மெய்ந்நாள்தொறும் பிரியாவினைக்
கேடாவிடைப் பாகா
செந்நாவலர் பரசும்புகழ்த்
திருப்பெருந்துறை உறைவாய்
எந்நாள்களித் தெந்நாள்இறு
மாக்கேன் இனியானே. **#505**

பசிய நாவினையுடைய, பாம்பினது, படம் போன்ற, அழகிய அல்குலையுடைய உமையம்மையினது பாகத்தை யுடையவனாய்; என் உடம்பைத் தினந்தோறும் விட்டு நீங்காது விளங்கி நிற்கின்ற வினையை அறுப்பவனே! காளையூர்தியை உடைய வனே! செம்மையான நாவன்மை யுடையோர், துதிக்கும் புகழை யுடைய திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருப்பவனே! நான் இனிமேல், எந்நாளில் உன்னைக் கண்டு களித்து, எந்நாளில் இறுமாந் திருப்பேன்?

விளக்கவுரை

பைந் நா - பசிய நாக்கு. 'அரவப் படவேரல்குல்' என்பது பின்முன்னாக மாறி நின்றது. 'பையரவல்குற்பாண்டி மாதேவி' *(தி. 3 ப.120 பா.5)* 'பையிள அரவல்குற் பாவை யொடும் உடனே' *(தி.7 ப.85 பா.2)* என்று இங்ஙனம் வருதல் பெரும் பான்மை. ஏர், உவம உருபு. மெய் - உடல். வினைக் கேடா - வினையைக் கெடுத்தல் உடையவனே. செந்நாவலர் - செவ்விய நாவன்மையுடைய புலவர். இல்லது கூறிப் புகழாத நாவினை யுடையவர் என்பார், அவரது நாவினை, 'செந்நா' என்றார். 'செய்யா கூறிக் கிளத்தல் - எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே' *(புறம்-148.)* என்ற சான்றோர் செய்யுளும் காண்க. பரசும் - புகழ்கின்ற. அடிகட்குக் களிப்பும், இறுமாப்பும் சிவானந்த மேலீட்டாலன்றி உளவாகாவாகலின், 'அதனைப் பெறுதல் எந்நாள்' என்பதே கருத்தாதல் தெளிவு. 'எந்நாள்' என மறித்தும் கூறியது, களித்த பின்னும் இறுமாப்புண்டாதற்குச் சிறிது காலம் இடையிடுதலும் கூடும் என்னும் கருத்தினாலாம்.

நானாரடி அணைவான்ஒரு
நாய்க்குத் தவிசிட்டிங்கு
ஊனாருடல் புகுந்தான்உயிர்
கலந்தான்உளம் பிரியான்
தேனார்சடைமுடியான்மன்னு
திருப்பெருந்துறை உறைவான்
வானோர்களும் அறியாததோர்
வளம்ஈந்தனன் எனக்கே. **#506**

திருவடியைச் சேர்வதற்கு எனக்கு என்ன தகுதியுள்ளது? எனினும், தேன் வண்டு நிறைந்த சடையையுடைய வனும், திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருப்பவனுமாகிய இறைவன் நாய் ஒன்றிற்கு ஆசனம் கொடுத்தது போல எனக்கு அவன் திருவருளைக் கொடுத்து, இவ்விடத்தில், தசை பொதிந்த உடம்பின் கண் புகுந்தான். என் உயிரில் கலந்தான். என் மனத்தினின்றும் பிரிய மாட்டான். இவ்வாற்றால் தேவர்களும் அறிய முடியாததாகிய, ஒரு செல்வத்தை எனக்கு அவன் தந்தருளினான்.

விளக்கவுரை

பொருள்கோள்: 'அடியணைவான் நான் ஆர்! திருப் பெருந்துறை உறைவான், ஒரு நாய்க்குத் தவிசிட்டது போன்று இங்கு எனக்கு வானோர்களும் அறியாததோர் வளம் ஈந்தனன்; உடல் புகுந்தான்; உயிர்கலந்தான்; உளம்பிரியான்; அதனால், அப்பேற்றைப் பெற உரியனானேன்'. அடி அணைவான் நான் ஆர் - அவனது திருவடியை அடைவதற்கு நான் என்ன உரிமையுடையேன்'. 'அதனால் அப்பேற்றைப்பெற உரியனானேன்' என்பது குறிப்பெச்சம்.

எனைநானென்ப தறியேன்பகல்
இரவாவதும் அறியேன்
மனவாசகங் கடந்தான்எனை
மத்தோன்மத்த னாக்கிச்
சினமால்விடை உடையான்மன்னு
திருப்பெருந்துறை உறையும்
பனவன்எனைச் செய்தபடி
றறியேன் பரஞ்சுடரே. **#507**

மனத்துக்கும், வாக்குக்கும் அப்பாற்பட்டவனும், கோபத்தையுடைய பெரிய இடபத்தையுடையவனும், நிலை பெற்ற திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும், அந்தணனும், மேலான சுடரானவனுமாகிய இறைவன், அடியேனைப் பெரும் பித்தனாக்கி, எனக்குச் செய்த வஞ்சனையை அறியேன். என்னை, நான் என்று உணர்வது? அறியேன்.

பகல் இரவு செல்வதையும் அறியேன்.

விளக்கவுரை

நான் என்பது - நான் என்று உணர்வதை. பகல் இரவு ஆவது - பகல் இரவு என்னும் வேறுபாடு. 'இங்ஙனம் ஏதும் தோன்றாத படி இறைவன் என்னைப் பெரும்பித்தனாகச் செய்து என்னை வேறுபடுத்த மாயத்தை யான் அறிகின்றிலேன்' என்க. உன்மத்தம், பித்து ஆகலின், மத்தோன்மத்தம், பெரும்பித்து. பனவன் - பார்ப்பான். 'செய்த' என்றது, 'வேறுபடுத்த' என்னும் பொருட்டு. 'படிறு' என்றது, பழிப்பது போலப் புகழ்ந்தது. பரஞ்சுடர் - மேலான ஒளி; இதுவும் இறைவனையே குறித்தது.

வினைக்கேடரும் உளரோபிறர்
சொல்லீர்விய னுலகில்
எனைத்தான்புகுந் தாண்டான்என
தென்பின்புரை யுருக்கிப்
பினைத்தான்புகுந் தெல்லேபெருந்
துறையில்உறை பெம்மான்
மனத்தான் கண்ணின்
அகத்தான்மறு மாற்றத்திடையானே. **#508**

பகலில் திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற பெருமான், அடியேனைத் தானே எழுந்தருளி வந்து ஆண்டு கொண்டான். என்னுடைய என்பினது உள் துளைகளையும் உருகச் செய்து, மேலும் வந்து, என் மனத்தினுள்ளானாயினான். கண்ணிலும் உள்ளானாயினான். மற்றும் வாக்கினும் உள்ளானாயினான். பரந்த உலகத்தில் இவனைப் போல வினையைக் கெடுப்பவர் பிறரும் இருக்கின்றார்களோ? சொல்லுங்கள்.

விளக்கவுரை

வினைக்கேடரும் - வினையைக் கெடுப்பவரும்; 'பிறர் உளரோ' என மாற்றுக. 'வியனுலகில் உளரோ' என இயையும். புரை - துளை. பினைத்தான் புகுந்து - பின்னும் வந்து; எல்லே - பகலிற்றானே; என்றது, 'யாங்கள் கனவிலன்றி நனவிலும் இனிது காணும்படி' என்ற வாறு. 'எல்லே பெருந்துறையில் உறைபெம்மான்' என்றதை, இரண்டாம் அடியின் முதலிற் கூட்டுக. மறு மாற்றம் - பின்னும் தொடர்ந்து எழும்சொல். 'மறு' என்றதனை, 'மற்று' என்பதன் இடைக் குறை என்பாரும் உளர்.

பற்றாங்கவை அற்றீர்பற்றும்
பற்றாங்கது பற்றி
நற்றாங்கதி அடைவோமெனிற்

கெடுவீரோடி வம்மின்
தெற்றார்சடை முடியான்மன்னு
திருப்பெருந்துறை இறைசீர்
கற்றாங்கவன் கழல்பேணின ரொடுங்கூடுமின் கலந்தே. **#509**
உலகப் பற்றுக்களாகிய அவைகளை ஒழித்தவராய், இறைவனைப் பற்றுகின்ற, ஆதரவாகிய அதனைப் பிடித்து நல்லதோர் பதவியினை அடைய விரும்பினால், அந்தோ! ஓடி வாருங்கள். பின்னலையுடைய சடையையுடையவனும் நிலை பெற்ற திருப்பெருந் துறையில் எழுந்தருளியிருக்கும் இறைவனுமாகிய பெருமானது, புகழைக் கற்றவாறே அவனது திருவடியை, விரும்பினவராகிய அடியாரோடும், கலந்து அடைவீர்களாக!

விளக்கவுரை

பற்று அவை அற்றீர் - மனைவி, மக்கள் முதலிய பற்றுக் களாகிய அவை அனைத்தையும் விட்டவர்களே. பின்வரும் பற்றினை, 'பற்றும் பற்று' என்றலின், இவை, பற்றலாகாத பற்றுக்கள் என்பது போந்தது. பற்றலாகாத பற்றுக்களாவன, தன்னைப் பற்றின வனை யாற்றுள் ஆழ்த்தும் அம்மிபோலப் பிறவிக் கடலுள் ஆழ்த்தும் பற்றுக்கள். 'அம்மி துணையாக ஆறிழிந்த வாறொக்கும்' (நல்வழி-*20)* என்பது காண்க. பற்றும் பற்றாவது, தன்னைப் பற்றினவனைக் கரை சேர்க்கும் புணைபோலப் பிறவிக் கடலைக் கடப்பிக்கும் பற்று, அஃது இறைவன் திருவடி. 'யான்' என்னும் 'அகப்பற்று', பற்றற்றானது பற்றினைப் பற்றியன்றி நீங்கலாகாமை யின், 'பற்றற்றீர்' என்ற பற்றுக்கள் சிறுபான்மை அஃது இன்றியும் நிலையின்மை, தூய்மையின்மை முதலியவற்றை உணர்ந்த துணை யானே நீங்கற்பாலனவாய மனைவி, மக்கள் முதலாய எனது என்னும் புறப்பற்றுக்கள் சிலவேயாம். இரண்டிடத்தும், 'பற்று' என்றது, பற்றப்படும் பொருளைக் குறித்தது, 'நன்று' என்பது, 'நற்று' என வலித்தல் பெற்றது. இனி ஒருமொழி முடிபு வரையறைப்படாமையின், 'நல்' என்னும் முதனிலை யீற்று லகரம் றகரமாய்த் திரிதலும் உண்டு என்றலுமாம். அடைவோ மெனின் - நாம் அனைவரும் அடைய வேண்டுமாயின்; தம்மையும் அவர்களோடு வைத்து, இவ்வாறு ஓதினார். 'அடைவோமெனின் வம்மின்' என இயையும். 'கெடுவீர்' என்றது,
'விடுத்த தூதுவர் வந்து வினைக்குழிப்
படுத்த போது பயனிலை பாவிகாள்'
(தி. 5ப.86 பா.2)
'ஆவிதான் போயினபின் யாரே யநுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்'

(நல்வழி-22)
என்றாற்போலும் இடங்களில், 'பாவிகாள்' என்றற்றொடக்கத்தன போல, இரக்கம் பற்றி வந்த வெஞ்சொல்; இன்னோரன்ன சொற்கள், வேம்பும் கடுவும்போல வெய்யவாயினும் *(தொல் - பொருள் 427.)* தாங்குதலின்றி வழிநனி பயத்தல்பற்றிப் பெருமக்களால் ஒரோ விடத்துக் கூறப்படுமாறுணர்க.
தெற்று ஆர் - பின்னுதல் பொருந்திய. பின்னுதல் - ஒன்றை யொன்று பற்றிக்கிடத்தல். சீர் - புகழ். கற்று - பல காலும் ஓதி. 'ஆங்கு' மூன்றும் அசைநிலைகள். கலந்து கூடுமின்' என்க; இவை ஒருபொருட் சொற்கள். நிலையாமை முதலியவை நோக்கிச் சுற்றம் முதலியவை களைத் துறந்தோர், பின்னர்ப் பற்றற்றான் பற்றினைப் பற்ற நினையாது அவற்றைத் துறந்த அளவிலே நிற்பின், இகம், பரம் என்னும் இரண்டனையும் வீணே இழந்து நிற்பராதலின் அத்தன்மை யாரை நோக்கியிரங்கி இங்ஙனம் கூறினார்.
இத்தன்மையோரை, 'பாக்கியம் இன்றி இருதலைப் போகமும் பற்றும் விட்டார்' *(தி. 1 ப.110 பா.10)* என ஞானசம்பந்தப் பெருமானார் அருளிச்செய்தல் காண்க. இது தம்மோடு ஒத்தாரது நிலைக்கு இரங்குமுகத்தான், தமது நிலையையும் குறித்தவாறு.

கடலின்திரை யதுபோல்வரு
கலக்கம்மலம் அறுத்தென்
உடலும்என துயிரும்புகுந்
தொழியாவணம் நிறைந்தான்
சுடரும்சுடர் மதிசூடிய
திருப்பெருந்துறை உறையும்
படருஞ்சடை மகுடத்தெங்கள்
பரன்தான்செய்த படிறே. **#510**

கடலின் அலைகள் போல ஓயாது வருகின்ற கலக்கச் செய்யும் பாசங்களைத் தொலைத்து, என் உடம்பிலும், என் உயிரிலும் நுழைந்து, ஓர் இடமும் எஞ்சி நில்லாதபடி நிறைந்தனன். இதுவே, ஒளிபரப்பும் கதிர்களையுடைய பிறையை அணிந்த திருப்பெருந் துறையில் வீற்றிருந்தருளும் விரிந்த சடையாகிய முடியையுடைய, எம் மேலோன் செய்த கள்ளம்.

விளக்கவுரை

கடலின் திரை, இடையறாது தொடர்ந்து வருதல் குறித்து வந்த வினையுவமை. கலக்கம் - துன்பம். 'கலக்கமும் மலமும் அறுத்து' என்க. 'உடலின்கண்ணும், உயிரின்கண்ணும்' என உருபு விரிக்க.
ஒழியா வண்ணம் - யாதோர் இடமும் எஞ்சாதபடி. சுடரும் சுடர் மதி -

வீசுகின்ற ஒளியையுடைய சந்திரன். படிறு - மாய வித்தை. தாம் அறியாதவாறே தம்மிடத்து இவற்றைச் செய்தமையின், 'படிறு' என்றார். 'செய்த படிறு இது' என ஒருசொல் வருவித்து முடிக்க.

வேண்டேன்புகழ் வேண்டேன்செல்வம்
வேண்டேன்மண் ணும்விண்ணும்
வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம்
வேண்டார் தமைநாளும்
தீண்டேன்சென்று சேர்ந்தேன்மன்னு
திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன்புறம் போகேன்இனிப்
புறம்போகலொட் டேனே. **#511**

நான் பிறந்தும் இறந்தும் உழல்வதை விரும்ப வில்லை. ஆகையால் புகழை விரும்பேன். பொருளை விரும்பேன். மண்ணுலக வாழ்க்கையும் விண்ணுலக வாழ்க்கையும் விரும்பேன். சிவத்தை விரும்பாத புறத்தாரை, ஒரு நாளும் தொடமாட்டேன். நிலை பெற்ற, திருப்பெருந்துறை இறைவனது திருவடியைச் சென்று அடைந் தேன். அதனையே அணிந்து கொண்டேன். இனிமேல் அதனைவிட்டு நீங்கேன். என்னை விட்டு அது நீங்குவதற்கும் இசையமாட்டேன்.

விளக்கவுரை

முதற்றொட்டு, 'பிறப்பிறப்பு' என்றது காறும் உள்ள தொடர்களில் இரண்டாம் வேற்றுமையும், 'சேர்ந்தேன் மன்னு திருப்பெருந்துறை' என்றதில் ஏழாம் வேற்றுமையும் இறுதிக்கண் தொக்கன. வேண்டேன் - விரும்பமாட்டேன். சிவம் - மங்கலமே உடையதாகிய முதற்பொருளை. நாளும் தீண்டேன் - எந்நாளும் மனத்தால் தீண்டேன்; இங்ஙனம் உரைப்பவே, மெய்யால் தீண்டாமை தானே பெறப்படும். 'அங்கு இறைதாள் பூண்டேன்' என்க. பூணுதல் - மேற்கொள்ளுதல். 'அதனால் நானும் அவற்றிற்குப் புறமாகச் செல்லேன்; அவற்றையும் எனக்குப் புறமாகச் செல்லவிடேன்' என்க. இதனுள், அடிகள் இம்மை மறுமை இன்பங்களைச் சிறிதும் விரும்பாத பெருமை இனிது பெறப்பட்டது.

கோற்றேன்எனக் கென்கோகுரை
கடல்வாய்அமு தென்கோ
ஆற்றேன்எங்கள் அரனேஅரு
மருந்தேஎன தரசே
சேற்றார்வயல் புடைசூழ்தரு
திருப்பெருந்துறை உறையும்
நீற்றார்தரு திருமேனிநின்
மலனேஉனை யானே. **#512**

எங்கள் சிவபெருமானே! அருமையான மருந்தே! எனக்கு அரசனே! சேற்றினால் நிறைந்த நன்செய் பக்கங்களில் சூழப்பெற்ற திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற, திருவெண்ணீற் றால் நிறைந்த, திருமேனியையுடைய, நின்மலனே! உன்னை அடியேன் எனக்குக் கிடைத்த கொம்புத்தேன் என்பேனோ? ஒலிக் கின்ற பாற்கடலில் தோன்றிய அமுதம் என்பேனோ? சொல்ல முடியா தவன் ஆயினேன்.

விளக்கவுரை

இதனுள், 'எங்கள் அரனே' என்பது முதலாகத் தொடங்கி நேரே சென்று பொருள் உரைக்க. அங்ஙனம் உரைக்கும் வழி, 'எனக்கு' என்றதனை, 'கோற்றேன்' என்றதற்கு முன்னர் வைத் துரைக்க. கோல் தேன் - கொம்புத்தேன். என்கோ - என்று சொல் வேனோ. குரைகடல்வாய் - ஒலிக்கின்ற கடலின்கண் தோன்றிய. ஆற்றேன் - உனது இன்பத்தை முழுதும் துய்க்க வல்லேனல்லேன். அரன் - பாசத்தை அரிப்பவன். நீற்று ஆர்தரு - திருநீற்றினால் நிறைந்த.

எச்சம்அறி வேன்நான்எனக்
கிருக்கின்றதை அறியேன்
அச்சோஎங்கள் அரனேஅரு
மருந்தேஎன தமுதே
செச்சைமலர் புரைமேனியன்
திருப்பெருந்துறை உறைவான்
நிச்சம்என நெஞ்சில்மன்னி
யானாகி நின்றானே. **#513**

எங்கள் சிவபெருமானே! அருமையான மருந்தானவனே! என்னுடைய அமுதமானவனே! வெட்சி மலரைப் போன்ற செம்மேனியையுடையவனாகியும், திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்றவனாகியும், நாடோறும் என்னுடைய நெஞ்சத்தில் தங்கி, நானேயாய்க் கலந்து நின்றவனே! நான் எஞ்சிய பிறவற்றை அறிவேன். எனக்கு இருக்கின்ற குறைபாட்டை அறிய மாட்டேன். இது என்ன வியப்பு?

விளக்கவுரை

'எச்சம்' என்றது முதலாக, 'அச்சோ' என்பது ஈறாக உள்ள பகுதியை இறுதியிலும், மூன்றாம் அடியை முதலிலும் கூட்டுக. ஏகாரங்கள், தேற்றம். எச்சம் - பெறாத பொருள். இருக்கின்றது - பெற்றுள்ள பொருள். அச்சோ, வியப்பிடைச் சொல். செச்சை - வெட்சி, 'நித்தம்' என்பது, 'நிச்சம்' எனப் போலியாயிற்று. 'திருப்பெருந்துறையில் உறையும் பெருமான் எனக்குப் பெருநலம் விளைப்பவன்; அவன் என் நெஞ்சில்

மன்னித் தோன்றாது நிற்கின்றான்; இதனை நான் அறியாமல் துன்புறுகின்றேன்' என்பது இதன் திரண்ட பொருள். 'சீவன் முத்தி நிலையில் இருப்பினும் அதனால் அமைதி பெறாமல், பரமுத்தியை விரும்புகின்றேன்' என்றபடி. இது சிறப்புடையதேயாயினும், உடம்புள்ள அளவும் இறைவன் அருள் வழியே அமைந்திராது, விரைந்து வலியுறுத்தி அவனை இரந்து நிற்கும் நிலைபற்றி இவ்வாறு கூறினார். பெற்றுள்ளதை அறியாத ஒன்றை வியப்பாகக் கொண்டு, 'அச்சோ' என்றார்.

வான்பாவிய உலகத்தவர்
தவமேசெய அவமே
ஊன்பாவிய உடலைச்சுமந்
தடவிமர மானேன்
தேன்பாய்மலர்க் கொன்றைமன்னு
திருப்பெருந்துறை உறைவாய்
நான்பாவியன் ஆனால்உனை
நல்காய்என லாமே. **#514**

தேன் பெருகுகின்ற மலர்களையுடைய கொன்றை மரங்கள் நிறைந்து விளங்கும், திருப்பெருந்துறையில் வீற்றிருப் பவனே! விண்ணிலே பொருந்திய உலகத்தவராகிய தேவர்களும், தவத்தையே செய்து கொண்டிருக்க, வீணே, தசை பொருந்திய உடம்பைத் தாங்கி, காட்டில் உள்ள மரம் போல ஆகிவிட்டேன். நான் இவ்வாறு பாவியாகப் போய்விட்ட பின்பு, உன்னை அருளாதவன் என்று கூறுதல் கூடுமோ?

விளக்கவுரை

வான் பாவிய - விண்ணிற் பரந்துள்ள. 'உலகத்தவரும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. தேவரும் உன்னை அடையத் தவம் செய்துநிற்க, நான், வாளாதே உன்னை அடைய முயன்று வேண்டுகின்றேன்; எனது தவமின்மை குறித்து அருள் பண்ணாதிருத்தல் முறையேயாக, நான் பாவியாகவே இருந்து கொண்டு, உன்னை மனம் இரங்காதவன் என்று வெறுத்தல் முறையோ' என்கின்றார். அடவி - காடு. காட்டில் உள்ள மரம் ஒன்றற்கும் பயன் படாது வீணே முதிர்ந்து வற்றி மட்கி மடியும்; அல்லது எரிந்தொழியும் என்க.

1.35.அச்சப் பத்து

புற்றில்வா ளரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி

மற்றும்ஓர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. **#515**

புற்றிலேயுள்ள கொடிய பாம்பிற்கும் அஞ்ச மாட்டேன். பொய்யர்களது மெய் போன்ற சொற்களுக்கும் அஞ்ச மாட்டேன். திரட்சியான நீண்ட சடையையுடைய, எம் பெரியோனாகிய, நெற்றிக் கண்ணையுடைய இறைவனது திருவடியை அடைந்தும், வேறொரு தெய்வத்தை இருப்பதாக எண்ணி, எம் பெருமானைப் போற்றாதாரைக் காணின், ஐயோ! நாம் அஞ்சுகின்ற வகை சொல்லும் அளவன்று.

விளக்கவுரை

புற்றில் அரவு - புற்றில் வாழும் பாம்பு. வாளரவு - கொடிய பாம்பு. மெய் - மெய்யென்று நாட்ட முயலும் சொல்; இச் சொல், தன்னைத் தெளிந்தாரை வஞ்சித்துக் கேட்டின்கண் வீழ்த்தலின் அஞ்சப்படுவதாயிற்று. 'நண்ணியபின்' என்பது, 'நண்ணி' எனத் திரிந்து நின்றது. தெய்வப் பிறவியை எய்தினோர் யாவரிடத்தும் உள்ள தெய்வத்தன்மைகள் பலவும் சிவபெருமானது அருளாற்றலின் கூறேயாதலின், அவனை உணர்ந்த பின்னர்ப் பிறிதொரு தெய்வத்தைச் சுதந்திரமாய் நின்று அருள்செய்வதாகக் கருதுதல் குற்றமாயிற்று. எனவே, பிறிதொரு தெய்வத்தை அவன் அருள்வழிநின்று அருள் செய்யும் அதிகார தெய்வமாகக் கருதின் குற்றமின்றாதல் பெறப்படும். இப் பகுதியின் எல்லாத் திருப்பாடல்களின் ஈற்றடியும் மோனை நயம் கெடாதே வருதலின், இங்கும், 'பெம்மான் கற்றிலாதவர்' எனப் பாடங்கொண்டு, 'அவனது பெருமையை உணராதவர்' என்று உரையாது, 'பெம்மாற்கு அற்றிலாதவர்' என்றே பாடங்கொண்டு, 'அவன் பொருட்டுப் பிற தெய்வங்களிடத்துள்ள பற்றுக்கள் நீங்கப் பெறாதவர்' என்றே உரைக்க. அம்ம, வியப்பிடைச்சொல். 'அஞ்சு மாறு' பெரிது' எனச் சொல்லெச்சம் வருவித்து முடிக்க. இதனானே, 'அஞ்சேன்' என்றதும் 'மிக அஞ்சேன்' என்னும் கருத்துடையதாம். முன்னர் 'அஞ்சேன்' என்று கூறிப் பின்னர் 'நாம் அஞ்சுமாறு' என்றது உயர்வுபற்றி வந்த பால்வழுவமைதி. உயர்வு, 'அஞ்சுவது அஞ்சல்' *(குறள் - 428)*. 'இங்ஙனம்' நெறிபிறழாது நிற்கும்பேறு எமக்கு வாய்த்தது' என மகிழ்ந்தருளிச் செய்தவாறு. இதனுள் 'அஞ்சேன்' என்பன பலவும், அவ்வச்சத்திற்குக் காரணமாகிய பொருள்களால் கெடுவது உடல் நலத்தைத்தரும் உலகியலேயன்றி உயிர்நலம் அன்றாதல் பற்றியும், 'அஞ்சுமாறுபெரிது' என்றது, அவ்வச்சத்திற்குக் காரணமாகிய பொருள்கள் அவ்வாறன்றி உயிர் நலத்தைத் தரும் சிவஞானத்தை

அழித்தல் பற்றியுமாதல் வெளிப்படை.

வெருவரேன் வேட்கை வந்தால்
வினைக்கடல் கொளினும் அஞ்சேன்
இருவரால் மாறு காணா
எம்பிரான் தம்பி ரானாம்
திருவுரு அன்றி மற்றோர்
தேவர்எத் தேவ ரென்ன
அருவரா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. **#516**

ஆசை மிகுந்து வந்தாலும் அஞ்சமாட்டேன். வினை யாகிற கடல் என்னைச் சூழ்ந்து கொண்டாலும் அஞ்சமாட்டேன். பிரம விட்டுணுகளாகிய இருவராலும் மாறுபட்டுக் காண முடியாத, எம் தலைவனாகிய, இறைவனது திருவடிவத்தையே கண்டு களிப்பதன்றி, மற்றைய தேவர்களை என்ன தேவரென்று, அருவருப்புக் கொள்ளாத வரைக் காணின், ஐயோ! நாம் அஞ்சுகின்ற வகை சொல்லும் அள வன்று.

விளக்கவுரை

வெருவரேன் - அஞ்சேன். வேட்கை - ஐம்புல ஆசை. 'வினை' என்றது, பிராரத்தத்தை, அது. சிவஞானத்தில் உறைந்து நிற் பாரை யாதும் செய்யமாட்டாதாகலின், அது பற்றி எழும் ஐம்புல வேட்கையும் அவர்க்கு உடல் ஊழாயே கழியும்; ஆதலின், அகத்து நிற்கும் நுண் பொருளாகிய அவை இரண்டும் அத்துணையாக அஞ்சப் படாவாம். இனிச் சிவஞானிகள் அல்லாதாரது கூட்டுறவு உண்டாயின், அது புறத்துத்தூலமாய் நின்று சிவஞானத்தைக் கெடுக்குமாகலின், அது பெரிதும் அஞ்சத் தக்கதாம். 'தேவருட் சிறந்தார் மூவர்' என்பது பலர்க்கும் உடன்பாடாக அவருள் ஏனை இருவரால் அளவிட்டறிய ஒண்ணாதவன் சிவபெருமான் என்பது தெரியப்பட்ட பின்னர், பிற தேவரைத் தலைவராக எண்ணுதல் என் என்பார், இருவரால் அறியப் படாமையை எடுத்தோதினார். சிவபெருமானை மூவருள் ஒருவனாக வைத்தெண்ணுவார் கொள்கைபற்றியே நோக்கினும், இவ்வரலாற்றால் அவனது முதன்மை தெற்றென விளங்கும் என்பது கருத்து. மாறு - பகைமை. 'மாற்றின்கண்' என்னும் ஏழாம் வேற்றுமைத் தொகைக்கண் றகரம் இரட்டாமை இலேசினாற் கொள்க. எம் பிரான் - எமக்குத் தலை வன். தம்பிரான் - எல்லா உயிர்க்கும் தலைவன் 'தேவர்' எனப் பின் னர் வருகின்றமையின், 'திருவுருவே தேவரன்றி' என உரைக்க. சிவ பெருமானது சொரூபநிலை புறச் சமயிகளால் உணரவாராமையின், அவனது தடத்தமாகிய திருவுருவையே குறித்தருளினார். எத் தேவர் -

என்ன முதன்மையுடைய தேவர். அருவருத்தல் - வெறுத்தல்.

வன்புலால் வேலும் அஞ்சேன்
வளைக்கையார் கடைக்க ணஞ்சேன்
என்பெலாம் உருக நோக்கி
அம்பலத் தாடு கின்ற
என்பொலா மணியை ஏத்தி
இனிதருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. **#517**

வலிமையான மாமிசம் பொருந்திய வேற்படைக் கும் அஞ்சமாட்டேன். வளையலை அணிந்த பெண்களுடைய கடைக் கண் பார்வைக்கும் அஞ்சமாட்டேன். எலும்புகளெல்லாம் உருகும் படியாகப் பார்த்துப் பொன்னம்பலத்தில் நடிக்கின்ற, எனது துளை யிடப்படாத மாணிக்கத்தைத் துதித்து அவனது திருவருளை நன்கு நுகர மாட்டாத, அன்பற்றவரைக் காணின், ஐயோ! நாம் அஞ்சுகின்ற வகை சொல்லும் அளவன்று.

விளக்கவுரை

'வல் வேல்' என இயையும். புலால் - எதிர்ந்தவரது மார்பின் தசை. வளைக் கையார், மாதர்; என்றது, ஆடவர் பலரையும் வலிதின் மயக்கும் பொதுமகளிரை. அவர் கடைக்கண் அனைவராலும் பழிக்கப்படுதலின், அதன் மயக்கத்தின்கண் அகப்படாது நீங்குதல் எளிது; சிவபெருமானிடத்து அன்பில்லாதவர் அங்ஙனமன்றித் தம்மை உய்யும் நெறியுடையோராக மதித்துப் பிறர்க்கு உறுதிகூற முற்படு தலின், அவரது மயக்கின்கண் அகப்படாது நீங்குதல் அரிது' என்பது கருத்து. வளைக்கையார் கடைக்கணும் ஒருவகை வேலாதல் அறிக.

கிளியனார் கிளவி அஞ்சேன்
அவர்கிறி முறுவல் அஞ்சேன்
வெளியநீ றாடும் மேனி
வேதியன் பாதம் நண்ணித்
துளியுலாம் கண்ண ராகித்
தொழுதழு துள்ளம் நெக்கிங்
களியிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. **#518**

மொழியால் கிளி போன்ற மாதரது இனிய சொற்களுக்கு அஞ்சமாட்டேன். அவரது வஞ்சனையுடைய புன்சிரிப்புக்கும் அஞ்சமாட்டேன். வெண்மையான திருநீற்றில் மூழ்கிய திருமேனியையுடைய அந்தணனது திருவடியை அடைந்து நீர்த்துளிகள்

சிந்துகின்ற கண்களையுடையவராய் வணங்கி அழுது, உள்ளம் நெகிழ்ந்து இவ்விடத்தில் கனிதல் இல்லாதவரைக் காணின், ஐயோ! நாம் அஞ்சுகின்ற வகை சொல்லும் அளவன்று.

விளக்கவுரை

கிளவி - சொல். 'மயக்கும் மகளிரது கிளிபோலும் மொழி' என்பதனை, கிளியனார் கிளவி எனச்சுருங்க ஓதினார். கிறி - பொய். முறுவல், அவர் சிரிப்பது, உண்மை மகிழ்ச்சி பற்றியன்றி, மயக்குதல் மாத்திரைக்கேயாகலின், 'கிறி முறுவல்' என்று அருளினார். அவர்க்குக் கண்ணினும் இவை சிறந்தமையின், இவற்றை இங்கு வேறெடுத்தருளிச்செய்தார். அளி - அன்பு. முன்னைத் திருப் பாட்டில், அன்பு சிறிதும் இல்லாதவரைக் குறித்து அருளிச் செய்தார்; இதன்கண் பேரன்பு இல்லாதவரைக் குறித்து அருளிச்செய்தார் என்க. எனவே, இவரும் ஓராற்றான் அஞ்சுதற்கு உரியராதல் அறிக. பயனில் சொல்லை விலக்க வந்த திருவள்ளுவ நாயனாரும்,

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல். -குறள் *198*

என, சிறுபயன் தரும் சொல்லையும் விலக்கியவாறு அறிக.

பிணியெலாம் வரினும் அஞ்சேன்
பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியி னான்றன்
தொழும்ப ரோடழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச்
சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. **#519**

எல்லா வகையான நோய்களும் வந்தாலும் அஞ்ச மாட்டேன். பிறப்புக்கும் இறப்புக்கும் அஞ்சமாட்டேன். துண்டப் பிறையை அணிகலனாகவுடைய சிவபெருமானது, தொண்டரோடு பொருந்தி, அத்திருமால், வலிமையான நிலத்தை அகழ்ந்தும் காண மாட்டாத சிவந்த திருவடியைத் துதித்து திருவெண்ணீறு அணியாத வரைக் காணின், ஐயோ! நாம் அஞ்சுகின்ற வகை சொல்லும் அள வன்று.

விளக்கவுரை

துணி நிலா - துண்டாகிய சந்திரன். அழுந்தி - அன்பில் திளைத்து. மால் - திருமால்; 'அம்மால்' என்றது, பண்டறிசுட்டு. 'வெண்ணீறணிகிலாதவரைக் கூறுவார்' அதனை அணியும் முறையை விதந்தோதினார். எனவே, அம்முறையால் அணியாது, வாளா

கோலஞ்செய்தல் மாத்திரையாக அணிபவரும் ஒருவாற்றான் அஞ்சத்தக்கவராதல் பெறப்படும். 'வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்'(*தி.10 திருமந்திரம் - 240*) என்று அருளிச் செய்தார் திருமூலரும். 'பயன்' என்ற பொதுமையால், தமக்கும், பிறர்க்கும் பயன் படாமை பெறப்படும்; படவே, அப்பயனுக்கு அவர்தம் வேடம் ஓராற்றால் தடையாதலும் பெறுதும். திணி - திணிந்த; உறுதியான.

வாளுலாம் எரியும் அஞ்சேன்
வரைபுரண் டிடினும் அஞ்சேன்
தோளுலாம் நீற்றன் ஏற்றன்
சொற்பதம் கடந்த அப்பன்
தாளதா மரைக ளேத்தித்
தடமலர் புனைந்து நையும்
ஆளலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. **#520**

ஒளிவீசுகின்ற நெருப்புக்கும் அஞ்சமாட்டேன். மலை, தலைகீழாகப் பிறழ்ந்திட்டாலும் அஞ்சமாட்டேன். தோள்களில் விளங்குகின்ற திருவெண்ணீற்றையுடையவனும், காளையை ஊர்தி யாக உடையவனும்,சொல் அளவையைக் கடந்த அப்பனுமாகிய இறைவனது திருவடித் தாமரைகளைத் துதித்து, பெருமை பொருந்திய மலர்களைச் சார்த்தி மனம் உருகுகின்ற அடிமைகள் அல்லாதவர் களைக் காணின் ஐயோ! நாம் அஞ்சுகின்ற வகை சொல்லும் அள வன்று.

விளக்கவுரை

வாள் - ஒளி. வரை - மலை, 'தாள' என்ற அகரம், விரித்தல். பெருமையை உணர்த்தும் தட என்னும் உரிச்சொல், இங்கு மிகுதியை உணர்த்திற்று. நைதல் - உருகுதல். 'ஆள்' என்றது, 'அடிமை' என்னும் பொருட்டு.

தகைவிலாப் பழியும் அஞ்சேன்
சாதலை முன்னம் அஞ்சேன்
புகைமுகந் தெரிகை வீசிப்
பொலிந்தஅம் பலத்து ளாடும்
முகைநகைக் கொன்றை மாலை
முன்னவன் பாத மேத்தி
அகம்நெகா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. **#521**

தவிர்க்க முடியாத பழிக்கும் அஞ்சமாட்டேன். இறத்தல் முதலானவற்றிற்கும் அஞ்சமாட்டேன். புகையைக் கொண்ட நெருப்பைக் கையிலே ஏந்தி வீசிக் கொண்டு, விளங்குகின்ற பொன்னம்பலத்தில் ஆடுகின்ற அரும்பு மலர்கின்ற கொன்றை மாலையை அணிந்த

முதல்வனது திருவடியைத் துதித்து, மனம் நெகிழாதவரைக் காணின், ஐயோ! நாம் அஞ்சுகின்ற வகை சொல்லும் அளவன்று.

விளக்கவுரை

தகைவு இலா - தடுக்கலாகாத; ஒருதலையாக வரற்பாலதாய. முன்னம் அஞ்சேன் - முதற்கண் அஞ்சேன்; என்றது, 'யான் அஞ்சாத பொருள்களுள் அதுவே முதற் கண்ணது' என்றபடி. 'முகந்த' என்பதன் ஈற்றகரம், தொகுத்தல். முகைநகை - அரும்பவிழ்கின்ற. இது வாயார வாழ்த்தாதவரைக் கூறியது,

தறிசெறி களிறும் அஞ்சேன்
தழல்விழி உழுவை அஞ்சேன்
வெறிகமழ் சடையன் அப்பன்
விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு கழல்க ளேத்திச்
சிறந்தினி திருக்க மாட்டா
அறிவிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. **#522**

கட்டுத்தறியிலே பொருந்தியிருக்கும் ஆண் யானைக்கும் அஞ்சமாட்டேன். நெருப்புப் போன்ற கண்களையுடைய புலிக்கும் அஞ்சமாட்டேன். மணம் வீசுகின்ற சடையையுடையவனும் தந்தையுமாகிய இறைவனது, தேவர்களாலும் அடைய முடியாத நெருங்கிய கழலணிந்த திருவடிகளைத் துதித்துச் சிறப்புற்று, இன்பமாக இருக்க மாட்டாத அறிவிலிகளைக் காணின் ஐயோ! நாம் அஞ்சுகின்ற வகை சொல்லும் அளவன்று.

விளக்கவுரை

தறி செறி களிறு - தறியின்கண் கட்டிவைக்கப் படுகின்ற யானை; என்றது, 'பெரும்பாலும் அவிழ்த்து ஓட்டப்படாத, அவிழ்த்து ஓட்டின்,கொலைத் தண்டத்திற்கு உரியார் மீது ஓட்டப்படுகின்ற கொலையானை' என்றபடி. இன்னதொன்றே பல்லவ மன்னன் ஆணையால் நாவுக்கரசர்மீது ஏவப் பட்டது. 'தறிசெறு களிறு' என்பதே பாடம் என்பாரும் உளர். உழுவை - புலி. வெறி - வாசனை. 'அப்பன் கழல்கள்' என இயையும். செறிதரு - கட்டப்பட்ட. 'அப்பன், நண்ண மாட்டா' என்பன, 'கழல்கள்' என்பதன் ஆகுபெயர்ப் பொருளையே சிறப்பித்தன. இது சிவஞானத்தால் இன்புற்றிருக்கமாட்டாதவரைக் குறித்தது.

மஞ்சுலாம் உருமும் அஞ்சேன்
மன்னரோ டுறவும் அஞ்சேன்

நஞ்சமே அமுத மாக்கும்
நம்பிரான் எம்பி ரானாய்ச்
செஞ்செவே ஆண்டு கொண்டான்
திருமுண்டம் தீட்ட மாட்டா
தஞ்சுவா ரவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. **#523**

மேகத்தில் உலாவுகின்ற இடிக்கும் அஞ்ச மாட்டேன். அரசரது நட்புக்கும் அஞ்சமாட்டேன். விடத்தையே அமுத மாக ஏற்றுக் கொண்ட இறைவனானவன், எம் தலைவனாகிச் செம்மை யாகவே எம்மை ஆட்கொண்டான். அவனது செல்வமாகிய திரு வெண்ணீற்றைத் தமது நெற்றியில் பூச மாட்டாமல் அஞ்சுவோராகிய அவரைக் காணின், ஐயோ! நாம் அஞ்சுகின்ற வகை சொல்லும் அளவன்று.

விளக்கவுரை

மஞ்சு உலாம் - மேகத்தின்கண் பொருந்திய. உரும் - இடி. மன்னரோடு உறவு தீக்காய்தல் போல்வதொன்றாகலின், *(குறள்- 691)* அதுவும் அஞ்சப்படுவதாதல் அறிக. நம்பிரான் - பலர்க்கும் தலைவன். எம்பிரானாய் - எமக்குத் தலைவனாய் வந்து. 'செஞ் செவே' *(தி.8* வாழாப்பத்து. பா.*6)* என்றதனை முன்னரும் காண்க. 'திரு' என்றது, 'விபூதி' என்னும் பொருட்டாய், திருநீற்றை யுணர்த்திற்று. முண்டம் - நெற்றியினிடத்து. தீட்டுதல் - பூசுதலாதலை, 'தீட்டார் மதில்' *(தி.8* திருவம்மானை.பா.*6)* என்றதனாலும் அறிக. இனி, 'முண்டம் என்பதே, ஆகுபெயராய், அதன்கண் தீட்டப்படும் திருநீற்றை உணர்த்தும்' என்பாரும் உளர். 'அஞ்சுவர்' என்றது, 'கூசுவார்' என்றபடி. முன்னர், 'வெண்ணீறு அணிகிலாதவரை' *(தி.8* அச்சப்பத்து. பா.*5.)* என்றது, அதனைப் புறக்கணித்திருப்பாரையும், இஃது, அதனை அணியக் கூசுவாரையும் கூறியன என்க.
திருவெண்ணீற்றை அணியக்கூசுதல், உலகவர் இகழ்ச்சிக்கு ஏதுவாய் நிற்கும் சாம்பலாதல் பற்றி.

கோணிலா வாளி அஞ்சேன்
கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீணிலா அணியி னானை
நினைந்துநைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர
வாழ்த்திநின் றேத்த மாட்டா
ஆணலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. **#524**

கொலைத் தன்மை தங்கிய அம்புக்கு அஞ்ச மாட்டேன். இயமனது

கோபத்துக்கும் அஞ்சமாட்டேன். நீண்ட பிறையாகிய,
அணிகலத்தையுடைய சிவபெருமானை எண்ணிக் கசிந்து உருகி,
நெகிழ்ந்து ஒளிபொருந்திய விழிகளில் ஆனந்தக் கண்ணீர் பெருகத்
துதித்து நின்று புகழ மாட்டாத ஆண்மை யுடையரல்லாரைக் காணின்
ஐயோ! நாம் அஞ்சுகின்ற வகை சொல்லும் அளவன்று.

விளக்கவுரை

கோண் இலா வாளி - வளைதல் இல்லாத அம்பு. 'கோள் நிலா வாளி' எனப் பிரித்து, 'உயிரைக் கொள்ளுதல் பொருந்திய அம்பு' என்று உரைப்பாரும் உளர். நீள் - வளர்தற்குரிய. வாள் நிலாம் - ஒளி பொருந்திய. 'நீர் சோர' என ஒரு சொல் வருவிக்க. ஆண் - புருடத்தன்மை; அஃது அதனையுடையாரைக் குறித்தது. சிறந்த புருடார்த்தத்தை அறியாமையின், சிவபெருமானை வாழ்த்தாதவரை, 'புருடத்தன்மை உடையரல்லாதவர்' என்றார். எனவே, இது, மக்கட் பிறப்பின் பயனை அடைய நினையாதவரைக் குறித்தவாறாயிற்று.

1.36.திருப்பாண்டிப் பதிகம்

பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற்
காரமுதாம்
ஒருவரை ஒன்று மிலாதவ ரைக்கழற்
போதிறைஞ்சித்
தெரிவர நின்றுருக் கிப்பரி மேற்கொண்ட
சேவகனார்
ஒருவரை யன்றி உருவறி யாதென்றன்
உள்ளமதே. **#525**

பருமையான மலையரசனது பெண்ணாகிய உமையம்மையின், பாகரும்,
பாண்டிய மன்னனுக்கு அருமையான அமுதமாகிய ஒருவரும் பற்று
ஒன்று இல்லாதவரும் தமது திருவடித் தாமரை மலரை வணங்கி, கண்டு
மகிழும்படி வெளிப்பட்டு நின்று, மனத்தை உருக்கிக் குதிரையின் மேல்
வந்த வீரருமாகிய சிவ பெருமான் ஒருவரையல்லாமல், என் மனமானது
பிற தெய்வங் களின் வடிவத்தை அறியாது.

விளக்கவுரை

பருவரை - பரியதாகிய (பருத்த உருவினதாகிய) மலை. இதனுள் இறைவனைப் பன்மை வாய்பாட்டால் அருளிச் செய்கின்றார். பாண்டியனுக்குப் பேரின்பத்தை அளித்தமை பற்றி, 'பாண்டியற்கு ஆரமுதாம் ஒருவர்' என்றார். மேல்,
'நரகொடு சுவர்க்க நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி'

(தி.8 போற்றித். 213 - 14) என்று அருளிச் செய்தமை காண்க. ஒருவர் - ஒப்பற்றவர். ஒன்றும் இலாதவர் - உயிரியல்புகளுள் ஒன்றும் இல்லாதவர். கழல் போது இறைஞ்சித் தெரிவர நின்று - மக்கள் தமது திருவடி மலரை வணங்கித் தம்மைக் கண்களால் காணுதல் உண்டாகும் படி வெளிநின்று. உருக்கி - அனைவரது உள்ளங்களையும் உருகச் செய்து. 'சேவகனாராகிய ஒருவர்' என இருபெயரொட்டாக்குக. 'உருவாக' என ஆக்கம் வருவிக்க. பொருளை, 'உரு' என்றல் வழக்காதல் உணர்க. இனி, ஐயுருபை அதுவுருபாகக் கொண்டு, 'ஒருவரது உருவை நினைதலன்றிப் பிறரது உருவத்தை என் உள்ளம் நினையாது' என்று உரைத்தலும் ஒன்று.

சதுரை மறந்தறி மால்கொள்வர் சார்ந்தவர்
சாற்றிச்சொன்னோம்
கதிரை மறைத்தன்ன சோதி கழுக்கடை
கைப்பிடித்துக்
குதிரையின் மேல்வந்து கூடிடு மேற்குடி
கேடுகண்டீர்
மதுரையர் மன்னன் மறுபிறப் போட
மறித்திடுமே. **#526**

சூரியனையும் மறைக்கத்தக்க பேரொளி வடிவினனாகிய இறைவன் சூலத்தைக் கையில் ஏந்தி குதிரையின் மேல் வந்து சேர்வானாயின் அதனைக் காணச் சென்றவர் தம் பெருமையை மறந்து ஞானப்பித்தை அடைவார். ஏனெனில் மதுரையில் உள்ள வர்க்கு அரசனாகிய பாண்டியனது மறுபிறப்பு நீங்கும்படி இவ்வாறு வந்துதான் தடுத்தாட்கொண்டான். ஆகவே அவன் குதிரை மேல் வருகின்ற காட்சியைச் சென்று காண்பது நம் குடி கெடுவதற்கு ஏதுவாகும்: பறையறைந்தாற் போலக் கூறினோம். அறிந்து கொள்ளுங்கள்.

விளக்கவுரை

பொருள்கோள்: 'சோதி, மதுரையர் மன்னன் மறுபிறப்பு ஓட மறித்திடும்; ஆதலின், அவன் கழுக்கடை தன்னைக் கைப்பிடித்துக் குதிரையின்மேல் வந்து கூடிடுமேல் இங்குள்ளாரது குடிகெடுதலை நீயிருங் கண்டீர்; அதனால் சொன்னோம்; அவனைச் சார்ந்தவர் சதுரை மறந்து அறிமால் கொள்வர்'.

சதுரை மறந்து - தம் பெருமையை மறந்து. அறிமால் கொள் வர் - ஞானப் பித்துக் கொள்வார்கள். முன்னர், 'சதுரிழந் தறிமால் கொண்டு' *(தி.8 போற்றித் - 71)* என்று அருளியது காண்க. சாற்றிச் சொன்னோம் - பறை சாற்றிச் சொல்கின்றோம். கதிரை மறைத்தன்ன சோதி - பகலவன் ஒளியை விழுங்கினாலொத்த பேரொளியை உடைய இறைவன்.

கழுக்கடை - சூலம். குடிகெடுதல், உலகியலைத் துறத்தலால் நிகழ்வது. மதுரையர் மன்னன் - பாண்டியன். 'அவனை மறித்திடும்' என்க. மறித்தல் - தடுத்தாட்கொள்ளல். மறு பிறப்பு ஓட மறித்து ஆட்கொள்ளுதல் அவனது இயல்பாதலை விளக்க, 'மறித்த னன்' என்னாது, 'மறித்திடும்' என்று அருளினார். பழிப்பதுபோலப் புகழ்ந்த இது, தமது நிலையைப் பிறர்மேல் வைத்து அருளிச் செய்ததாம்.

நீரின்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற
நெஞ்சங்கொண்டீர்
பாரின்ப வெள்ளங் கொளப்பரி மேற்கொண்ட
பாண்டியனார்
ஓரின்ப வெள்ளத் துருக்கொண்டு தொண்டரை
உள்ளங்கொண்டார்
பேரின்ப வெள்ளத்துட் பெய்கழ லேசென்று
பேணுமினே. **#527**

நீர்மேல் எழுத்துப் போன்ற அழிந்து போகிற இன்ப வெள்ளத்துள், நீந்தித் திளைக்கின்ற மனத்தையுடையீர்! உலகோர் இன்ப வெள்ளத்தில் மூழ்கும்படி, குதிரையின்மேல் ஏறி வந்த பாண்டிய மன்னனாகிய சிவபெருமான் ஒப்பற்ற இன்ப வெள்ளமாய்த் தோன்றி அடியாரது மனத்தைக் கவர்ந்தான். அப்பேரின்பப் பெருக்கினுள் சென்றடைந்து அவன் வீரக் கழலணிந்த திருவடியையே வழிபடுவீராக!.

விளக்கவுரை

நீர் இன்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங் கொண்டீர் - வெயில் வெப்பம் நீங்க நீராகிய இனிய வெள்ளத்துள் விருப்பம்போல விளையாடி முழுகுகின்ற விருப்பத்தை உடையவர் களே; என்றது, 'அஃதே அமையுமோ' என்றபடி. பார் - பூமியில் உள்ளவர்கள். கொள்ள - பெறும்படி, பாண்டி நாட்டை உடைமைபற்றி, 'பாண்டியனார்' என்றார். 'ஓர் உரு' என இயையும். 'தொண்டரை உள்ளங்கொண்டார்' என்றதனை, 'யானையைக் கோடு குறைத்தான்' என்பதுபோலக் கொள்க. இது, தமது நிலையைப் பிறர்மேல் வைத்து அருளிச் செய்தது.

செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லன்மின்
தென்னன்நன்னாட்
டிறைவன் கிளர்கின்ற காலம்இக் காலம்எக்
காலத்துள்ளும்
அறிவொண் கதிர்வாள் உறைகழித் தானந்த
மாக்கடவி
எறியும் பிறப்பை எதிர்ந்தார் புரள
இருநிலத்தே. **#528**

நல்லவராயுள்ளவர், அடர்ந்து வருகின்ற பிறப் புக்குச் செல்லாதீர். எல்லாக் காலத்தையும்விட பாண்டியனது நன்மை மிகுந்த நாட்டுக்கு இறைவனாகிய சிவபெருமான், விளங்கியருளு கின்ற காலம், இந்தக் காலமேயாகும். ஞானமாகிய ஒளிக்கதிரை வீசு கின்ற வாளை, உறையினின்றும் எடுத்து ஆனந்தமாகிய குதிரையைச் செலுத்தி, பரந்த உலகத்திலே எதிர்ப்பட்டவரது பிறவியாகிய மரத்தைப்புரண்டு விழும்படி வெட்டிச் சாய்க்கின்றான். அவன்முன் செல்லுங்கள்.

விளக்கவுரை

பொருள்கோள்: 'இறைவன், எக்காலத்துள்ளும் வாள் உறை கழித்து மாக்கடவி, எதிர்ந்தார் புரள இருநிலத்தே பிறப்பை எறியும்; ஆயினும், அவன் கிளர்கின்ற காலம் இக்காலம்; ஆதலின், பிறவிக்கு நல்லவர் அவன் எதிரில் செல்லன்மின்'

நல்லர் - நண்பர். செறியும் - நெருங்கிய. 'அவன் காட்சியைக் காணாதார் பிறப்பில் வீழ்வர்' என்னும் இகழ்ச்சி தோன்ற, 'பிறவிக்கு நல்லவர் செல்லன்மின்' என்றார். 'தென்னன் நன்னாட்டுக்கு இறைவன்' என்க. கிளர்கின்ற காலம் - எழுச்சியோடு வருகின்ற காலம். எக்காலத்துள்ளும் - எப்பொழுதும். அறிவு ஒண்கதிர் வாள் - ஞான மாகிய ஒள்ளிய சுடரை உடையவாள். உறை கழித்தல் - வெளிப் படுத்தல். ஆனந்த மாக்கடவி - பேரின்பமாகிய குதிரையை ஊர்ந்து. திருவுருவம் இன்ப வெள்ளத்தின் இடைநிற்பதாகத் தோன்றலின், அதனைக் குதிரையாக உருவகம் செய்தார். 'பிறவி' என்றதற்கு, 'பிறவியாகிய பகைப் படையை' என உரைக்க. 'அறிவொண் கதிர் வாள் உறைகழித்து ஆனந்தமாக் கடவி' என்ற உருவகங்கள், இஞ் ஞான்று அவன் உண்மையாகவே சூலத்தை ஏந்திக் குதிரைமேல் வரு தலை உட்கொண்டு நின்றது. எறியும் - வெட்டியொழிப்பான். எதிர்ந் தார் - தம் எதிரே வந்தவர். புரள - தன் அடியில் வீழ்ந்து பணியும்படி. 'பிறப்பு' என்றது, 'உடம்பு' எனவும், 'புரள' என்றது, 'மாண் டொழிய' எனவும் மற்றும் ஓரோர் பொருளைத் தோற்றுவித்தன. 'எக் காலத்துள்ளும் இக்காலம் கிளர்கின்ற காலம்' என முன்னே கூட்டி உரைப்பாரும் உளர்; அவ்வாறுரைப்பின், உருவகங்களைக்கொண்ட இறுதி இரண்டடிகள் நின்று வற்றுதல் காண்க. 'பிறப்பிற்கு நல்லவர்' என்றதும், 'செல்லன்மின்' என்றதும், 'எதிர்ந்தார் புரளப் பிறப்பை ஏறியும்' என்றதும், பழிப்பதுபோலப் புகழ்தல். இஃது இறைவன் குதிரைமேல் வருதலை முன் அறிந்து கூறுவார் ஒருவரது கூற்றாக அருளிச் செய்தது.

காலமுண் டாகவே காதல்செய் துய்ம்மின்
கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர்

நண்ணரிய
ஆலமுண் டான்எங்கள் பாண்டிப் பிரான்தன்
அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து
முந்துமினே. **#529**

நினைத்தற்கு அருமையான உலகத்தை உண்ட திரு மாலோடு, பிரமர், மற்றைய தேவர்களும் அடைதற்கு அரிய, அருமை யான நஞ்சத்தை அமுதாகக் கொண்டவனாகிய, எங்கள் பாண்டிப் பெருமானாகிய இறைவன் தன் அடியவர்களுக்குத் தனது முதற் கருவூலத்தைத் திறந்து அள்ளி வழங்குகின்றான். அதனைப் பெறு வதற்கு விரைவாக வந்து முந்திக் கொள்ளுங்கள். முன்னதாகவே, அவனிடத்தில் அன்பு செய்து பிழையுங்கள்.

விளக்கவுரை

காலம் உண்டாக - காலம் மிகவும் உளதாகும்படி; என்றது, 'மிகவும் முன்னதாக' என்றதாம். 'வேண்டின் உண்டாகத் துறக்க' *(குறள் - 342)* என்றார் திருவள்ளுவரும். இதனை, 'காலை யில் எழுக' என்பதனை, 'காலம் பெற எழுக' எனக்கூறும் வழக்குப் பற்றியும் அறிக. மூல பண்டாரம் - சேம நிதிக் கருவூலம்; இஃது ஆகு பெயராய், அதன்கண் உள்ள பொருளைக் குறித்தது. கருவூலத்தைத் திறந்து வாரி வழங்குதல் ஓரோர் சிறப்புக் காலத்திலன்றி எப்பொழுதும் அன்றாகலானும், அக்காலந்தான் விரைந்து நீங்கிப் பின்னர் வந்து கூடுதல் அரிதாகலானும், 'வந்து முந்துமின்' என்று அருளிச் செய்தார். 'இறைவனது மூல பண்டாரப் பொருள்' என்றது, அவனது திருவருட் செல்வத்தை. அதனை வழங்கும் சிறப்புக் காலம், அவன் மதுரையில் குதிரை மேல் வந்து நின்ற காலம். இஃது அவன் அவ்வாறு நின்ற பொழுதை எதிர்பெய்து கொண்டு அருளிச் செய்தது.

ஈண்டிய மாயா இருள்கெட எப்பொரு
ளும்விளங்கத்
தூண்டிய சோதியை மீனவ னுஞ்சொல்ல
வல்லன்அல்லன்
வேண்டிய போதே விலக்கிலை வாய்தல்
விரும்புமின்தாள்
பாண்டிய னார்அருள் செய்கின்ற முத்திப்
பரிசிதுவே. **#530**

நெருங்கிய, கெடாத அறியாமையாகிய இருள் விலகவும், எல்லாப் பொருள்களும் தெளிவாக விளங்கவும் அருளிய சோதிப் பிழம்பினைப் பாண்டிய மன்னனும், சொல்லக்கூடிய திறமையுடையவன் அல்லன்.

ஆயினும் விருப்பம் கொண்டபொழுது, அவனை அடையத் தடையில்லை. ஆகையால் அவன் திருவடியைப் பெறுதலை விரும்புங்கள். சோமசுந்தரப் பாண்டியனாராகிய இறைவர் அருள் செய்கின்ற முத்தியின் தன்மை இதுவேயாகும்.

விளக்கவுரை

ஈண்டிய - நெருங்கியுள்ள, மாயா இருள் - மாயையின் காரியங்களாகிய பொருளால் உண்டாகும் மயக்கம். தூண்டிய - மெய்யுணர்வை எழுப்பிய. சோதியை - ஒளியாகிய இறைவனை. மயக்கத்தை, 'இருள்' என்றமைக்கேற்ப, இறைவனை, 'சோதி' என்றார். மீனவன் - பாண்டியன். அவன், இறைவன் குதிரைமேல் நேரே வந்து நிற்கக்கண்ட பேறுடையனாகலின், 'பாண்டியனும்' எனச் சிறப்பும்மை கொடுத்தோதினார். சொல்ல வல்லனல்லன் - இவன் இறைவன்தான் என்று அறிந்து போற்ற வல்லனல்லனாய் இருந்தான். இதன்பின், 'ஆதலின்' என்பது வருவிக்க. வேண்டிய போதே வாய்தல் விலக்கிலை - அவன் அருள்செய்ய விரும்பும் பொழுதே அது நமக்குக் கைகூடுதற்குத் தடை இல்லை. தாள் விரும்பு மின் - அவனது திருவடியை விரும்பியிருங்கள். 'அருள்செய்கின்ற முத்திப் பரிசு இதுவே' என்றாராயினும், 'முத்தி அருள் செய்கின்ற பரிசு இதுவே' என்பது கருத்தென்க. 'இது' என்றது, பாண்டியனுக்கு வந்து அருள்செய்ததுபோல, உரிய காலத்தில் தானே வந்து அருள் செய்தலை. இதனால், 'என்றேனும் நமக்கு அருள் செய்தலை இறைவன் தனக்குக் கடனாகக் கொண்டிருத்தலின், என்றும் அவனது திருவடியை விரும்பியிருத்தலே நமக்குக் கடன்' என்பது உணர்த்திய வாறு.

மாயவ னப்பரி மேல்கொண்டு மற்றவர்
கைக்கொளளலும்
போயறும் இப்பிறப் பென்னும் பகைகள்
புகுந்தவருக்
காய அரும்பெருஞ் சீருடைத் தன்னரு
ளேஅருளுஞ்
சேய நெடுங்கொடைத் தென்னவன் சேவடி
சேர்மின்களே. **#531**

தான் மாயமாகிய அழகிய குதிரையின் மேல் வர அதனை அறியாது, பிறர் எல்லாரும் அதனை உண்மை என்றே ஏற்றுக் கொண்டவுடன், இப்பிறவியாகிய பகைகள் அற்று ஒழிகின்றன. ஆகவே தன்னைச் சரணாக அடைந்தவருக்குப் பொருந்திய, அருமையான, பெரிய சிறப்பையுடைய தனது திருவருளையே அவன் கொடுத்தருளுவான் என்பது தெளிவாகியது. ஆதலின், செம்மையாகிய பெரிய

கொடையையுடைய, தென்னாடுடைய அச்சிவபிரான் திருவடிகளையே புகலிடமாக அடையுங்கள்.

விளக்கவுரை

மாய வனப்பரி - மாயமான காட்டுக் குதிரை; என்றது, 'நரியாகிய குதிரை' என்றபடி. இறைவன் ஏறி வந்தது வேறு குதிரை யாயினும், கொடுக்கக் கொணர்ந்தவை அன்னவாதல் பற்றி, அதனை யும் இதுவாகக் கூறினார். மற்றவர் கைக்கொளலும் - பிறர் அக் குதிரையைப் பெற்றுக்கொண்டவுடன். 'அவருக்கு இப்பிறப்பென்னும் பகைகள் போயறும்' என்க. 'இப்பிறப்பு' என்றது 'இது போலும் பிறப்புக்கள்', என்றவாறு; 'போயறும்' என்றதன்பின், 'எனின்' என்பது வருவித்து, 'தென்னவன் சேவடி சேர்மின்கள்' என முடிக்க. புகுந்தவருக்கு - தன்னிடத்து அடைக்கலம் புகுந்தவர்க்கு. 'இவ்வாறு தன் அருளையே அருளும் கொடைத் தென்னவன்' என்க. ஆய - பொருந்திய. சேய நெடுங்கொடை - அகன்ற பெரிய கொடை. 'தென்னவன்' என்றது இறைவனை. இதனுள், 'மற்றவர்' எனப் பாண்டியனையும், 'புகுந்தவருக்கு' எனத் தம்மையும் பிறர்போலக் கூறினார். பாண்டியன் குதிரையைப் பெற்றுக்கொண்ட பின்னரும் சில நிகழ்ந்தன எனினும், அவை விரைய நிகழ்ந்தமை பற்றி, 'கைக்கொள லும் பிறப்பென்னும் பகைகள் போயறும்' என்று அருளிச் செய்தார்.

அழிவின்றி நின்றதொர் ஆனந்த வெள்ளத்
திடையழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக் கடிய
வினையகற்றிப்
பழமலம் பற்றறுத் தாண்டவன் பாண்டிப்
பெரும்பதமே
முழுதுல குந்தரு வான்கொடை யேசென்று
முந்துமினே. **#532**

அழிவு இல்லாமல் நிலை பெற்றிருத்தலாகிய, ஓர் ஒப்பற்ற, பேரின்ப வெள்ளத்தில் திளைக்கச் செய்து நீங்காத அருளைப் புரிந்து, கொடுமையான இருவினைகளைப் போக்கிப் பழமையாகிய ஆணவ மலத்தை முழுதும் நீக்கி, ஆட்கொண்ட பாண்டி நாட்டுப் பெருமான் பாண்டி நாட்டு ஆட்சியாகிய பெரிய பதவியை மட்டுமோ, உலகம் முழுமையும் தந்தருளுவான். ஆதலின் அவனது பரிசிலைப் பெறுவதற்கே சென்று முந்துங்கள்.

விளக்கவுரை

அழுத்தி - அழுத்துமாற்றால். கழிவில் கருணை - என்றும் நீங்காத அருள்.

பாண்டிப் பெரும்பதம் - பாண்டி நாட்டு ஆட்சி யாகிய பெரிய நிலை. 'பதமே' என்ற ஏகாரம், 'அஃதொன்றோ' என்னும் எண்ணிடைச்சொல். முழுதுலகும் - எல்லா உலகங்களின் ஆட்சியையும். 'அவன் கொடையே சென்று முந்துமின்' என்க. 'கொடையே' என்றதில், 'எதிர்' என்னும் பொருட்டாய கண்ணுருபு விரிக்க. இது, பாண்டியனுக்கு அருள் புரிந்தவாற்றை உட்கொண்டு அருளிச் செய்தது.

விரவிய தீவினை மேலைப் பிறப்புமுந்
நீர்கடக்கப்
பரவிய அன்பரை என்புருக் கும்பரம்
பாண்டியனார்
புரவியின் மேல்வரப் புந்திகொ ளப்பட்ட
பூங்கொடியார்
மரவியன் மேல்கொண்டு தம்மையுந் தாம்அறி
யார்மறந்தே. **#533**

கொடிய வினைகள் கலந்ததால் விளையும் இனி வரும் பிறவியாகிய, கடலைக் கடப்பதற்காக, வழிபட்ட அடியார் களை, எலும்பையும் உருகச் செய்கின்ற மேலான பாண்டிப் பிரானாராகிய இறைவர் குதிரையின் மேல் எழுந்தருளி வர அதனைக் கண்டு அக்காட்சியால், மனம் கவரப்பட்ட, பூங்கொடி போன்ற பெண்டிர் மரத்தின் தன்மையை அடைந்து எல்லாவற்றையும் மறந்து, தம்மையும் தாம் அறியாராயினார்.

விளக்கவுரை

விரவிய - பொருந்திய. 'வினையும் பிறப்புமாகிய முந்நீர்' என்க. முந்நீர் - கடல். 'வினைக் கடல் கொளினும் அஞ்சேன்' *(தி.8 அச்சப்பத்து பா.2),* என அடிகள் வினையையும் கடலாக உருவகித்தமை காண்க. கடக்க - கடத்தற்பொருட்டு. பரவிய - துதித்த. பரம் - மேலான பொருளாகிய. புரவி - குதிரை. புந்தி கொளப்பட்ட பூங்கொடியார் - அவ்வருகையால் உள்ளம் கொள்ளை கொளப்பட்ட பூங்கொடிபோலும் மகளிர். மரஇயல், நிலைபெயராது நிற்கும் தன்மை. 'நாண் முதலிய பலவற்றையும் மறந்து தம்மையும் தாம் அறியார்' என்க. குதிரை மேல் வந்த இறைவனது திருமேனியழகினை இவ்வாறு புலப்படுத்தருளினார். முன்னர் வந்தன பலவற்றாலும், இதனாலும் இறைவன் குதிரைமேல் வந்து அளித்தருளிய காட்சி, எத்திறத்தோர் நெஞ்சையும் உருகச் செய்வதாய் இருந்ததென்பது இனிது பெறப் படுகின்றது.

கூற்றைவென் றாங்கைவர் கோக்களை யும்வென்
றிருந்தழகால்
வீற்றிருந் தான்பெருந் தேவியுந் தானும்ஓர்
மீனவன்பால்

ஏற்றுவந் தாருயிர் உண்ட திறல்ஒற்றைச்
சேவகனே
தேற்றமி லாதவர் சேவடி சிக்கெனச்
சேர்மின்களே. **#534**

இயமனை வென்று அவ்வாறே ஐம்புலன்களாகிய அரசரையும் அடக்கிக் கொண்டு, பெரிய சத்தியும் தானுமாக, அழகாய் எழுந்தருளியிருந்தானாகிய இறைவன், ஒப்பற்ற பாண்டிய மன்னனுக்காக, எதிர்த்து வந்தவர்களது உயிரை வாங்கின வலிமையுள்ள ஓர் வீரனாயினான். ஆகையால் தெளிவில்லாதவர்கள் அவனது சிவந்த திருவடியை உறுதியாகச் சென்று பற்றிக் கொள்ளுங்கள்.

விளக்கவுரை

'ஒற்றைச் சேவகனே, கூற்றைவென்று, ஐவர் கோக்களையும் வென்று, தானும் தேவியுமாய் வீற்றிருந்தான்; அவன் சேவடி சேர்மின்கள்' என்க. கோக்கள் - அரசர். 'ஐவர் அரசர்' என்றது, ஐம்பொறிகளை. 'இருந்து' என்றது, அசை நிலை. ஏற்று - குதிரை வாணிகனாய் வருதலை மேற்கொண்டு. ஆருயிர் உண்ட - அவனது அரிய உயிரை உண்ட; என்றது, 'சீவபோதத்தை நீக்கிய' என்றபடி. திறல் - ஆற்றலையுடைய. ஒற்றைச் சேவகன் - தான் ஒருவனேயாகிய வீரன். 'ஒருவனே பலரை வென்றது வியப்பன்றோ' என்றபடி. அப் பலருள் பாண்டியனையும் ஒருவனாக்குதற்பொருட்டு, 'ஆருயிர் உண்ட' என்றார். தேற்றம் இலாதவர் - தெளிவில்லாதவர்களே, 'தெளி வில்லாதவராகிய நீவிர் இந்நிகழ்ச்சிகளால் தெளிந்து சேர்மின்கள்' என்றபடி. சிக்கென - உறுதியாக.

1.37.பிடித்த பத்து

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. **#535**

தேவர்களுக்கு அரசனே! எல்லாப் பொருள்களிலும் நீக்கமறக் கலந்திருப்பவனே! அழுக்கு உடம்பை உடையேனாகிய எனக்குப் புதிய பொருள்போலத் தோன்றி என் குடி முழுவதும் ஆண்டருளி, உலக

வாழ்வு நீங்க சிவப்பேறு உண்டாகும்படி வாழ்வித்த அமுதமே! துணியப்பட்ட செம்பொருளே! சிறப்பை யுடைய திருவடியையுடையவனே! அருட் செல்வமாயிருப்பவனே! சிவபிரானே! எங்கள் பொருட்டாக உன்னை உறுதியாகப் பற்றினேன். நீ இனிமேல் என்னை விட்டு எங்கே எழுந்தருளிச் செல்வது?

விளக்கவுரை

ஒழிவற - யாதொருபொருளும் எஞ்சாதவாறு எல்லாப் பொருளிலும். யோகம் - கலப்பு. கலப்புடைய பொருளை, 'கலப்பு' என்றார். ஊற்றையேன் - அழுக்கினை உடையேன். 'அழுக்கு' என்றது அழுக்குடைய உடம்பை. ஊத்தை, ஊற்றை எனத் திரிந்து வந்தது. 'ஊத்தையேன்' என்றே ஓதினுமாம். வம்பு எனப் பழுத்து - புதிய பொருள் போல மிக்குத் தோன்றி. மிக்குத் தோன்றல் - வெளிநிற்றல். என்றும் உள் நின்று உணர்த்திவந்த பொருளேயாதலின், 'வம்பென' என்றும், தம்மை ஆண்டமையால் தம் குடி முழுதும் உய்ந்தமையின், 'என் குடிமுழுதாண்டு' என்றும் கூறினார். வாழ்வு அற - வினை வாழ்க்கை நீங்க. வாழ்வித்த - அருள் வாழ்வு வாழச் செய்த. மருந்து - அமுதம். செம்பொருள் துணிவு - மெய்ப்பொருளாகிய துணிபொருள். 'துணிவு' என்னும் தொழிற்பெயர். துணியப்படும் பொருளுக்கு ஆகி வந்தது. 'மெய்ப்பொருளை ஆராய்ந்துணர்வார் பலரானும் ஒருபடித் தாக மெய்ப்பொருள் என்று துணியப்படுபவனே' என்பது பொருள். கழல் - திருவடி. திருவடியையுடையவனை. 'திருவடி' என்றது பான்மை வழக்கு. 'தில்லை மூதூர் ஆடிய திருவடி' எனவும் *(தி.8 கீர்த்தித். 1)* 'ஆண்டுகொண்டருள அழகுறு திருவடி' *(தி.8 கீர்த்தித். 37)* எனவும் முன்னரும் கூறப்பட்டன. இனி, 'சீருடைக் கடலே' என்பதே பாடம் என்பாரும் உளர். செல்வமே - அடியார்க்குச் செல்வமானவனே, தம் குடி முழுது ஆண்டமையின், அவர் அனைவரையும் உளப்படுத்து, 'எம் பொருட்டு' என்றார். எம் பொருட்டு - எமக்குத் தீங்கு உண்டாகாமைப் பொருட்டு. தீங்கு, வினையும், அது காரணமாக வரும் பிறப்பும். சிக்கென - உறுதியாக. 'இனி எங்கு எழுந்தருளுவது' என்க. எழுந்தருளுவது - செல்வது. 'என்னைவிட்டு இனி நீ எவ்வாறு நீங்க முடியும்? முடியாது' என்பது கருத்து. இங்ஙனம் தமது உறுதிப் பாட்டினைப் புலப்படுத்தியவாறு.

'அழலார் வண்ணத் தம்மானை
அன்பில் அணைத்து வைத்தேனே'.
(தி. 4 .ப. 15. பா.7)

'மேலை வானோர் பெருமானை
விருப்பால் விழுங்கி யிட்டேனே'
(தி. 4 .ப. 15. பா.8)

ஆர்வல்லார் காண அரனவனை அன்பென்னும்
போர்வை யதனாலே போர்த்தமைத்துச் - சீர்வல்ல
தாயத்தால் நாமும் தனிநெஞ்சி னுள்அடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து.
(தி.11 அற்புதத் திருவந்தாதி - 96) எனப் பிறவிடங்களிலும் இவ்வாறே ஓதியருளுதல் காண்க.

விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
வினையனே னுடையமெய்ப் பொருளே
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணாய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணம் காத்தெனை ஆண்ட
கடவுளே கருணைமா கடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. **#536**

இடபத்தை விடாமல் விரும்பின தேவர் பெரு மானே! வினையை உடையேனாகிய என் உண்மையான பொருளே! அடியேன் புலால் நாற்றம் நீங்காது முழுவதும் புழு நிறைந்த கூட்டினிற் கிடந்து, மிகவும் மூப்பு எய்திப் பாழாய்க் கீழ்மையடையா வகை தடுத்து என்னை ஆண்டருளின கருணையாகிய பெருங்கடலே! இடை யறாமல் உன்னை உறுதியாகப் பற்றினேன். நீ இனிமேல் எங்கே எழுந் தருளிச் செல்வது?.

விளக்கவுரை

விடை விடாது - எருதை நீக்காமல். உகந்த - விரும்பிய. ஊர்தி வேண்டுவார் எருதை விரும்பாமை குறித்தவாறு. 'முடை' என்றது, 'முடை நாற்றம் உடைய உடம்பை. 'மண்ணாய்' என்றது, 'இறந்து' என்றபடி. பின் வருவன அடுத்த பிறப்பைக் குறிப்பன. 'கடைப்படா' என்பது, தொகுத்தல் பெற்றது.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. **#537**

தாயே! தந்தையே! நிகரில்லாத மாணிக்கமே! அன்பாகிய கடலில் உண்டாகிய அருமையான அமுதமே! பொய்ம்மையான செயல்களையே அதிகமாகச் செய்து காலத்தை வீணாகக் கழிக்கின்ற புழுவையுடைய

இடமாகிய உடம்பில் உள்ள கீழ்மையேனுக்கு, மிக மேன்மையான சிவபதத்தைக் கொடுத்தருளின அருட்செல்வமே! சிவபிரானே! இவ்வுலகிலேயே உன்னை உறுதி யாகப் பற்றினேன், நீ இனிமேல் எங்கே எழுந்தருளிச் செல்வது?.

விளக்கவுரை

அம்மையும் அப்பனுமாதல் எவ்வுயிர்க்கும் என்க. 'ஆரமுது' என்றது, இன்பத்தை. சிவபிரானிடத்தில் வைக்கும் அன்பின் விளைவே சிவானந்தமாதல் அறிந்துகொள்க. பொய்ம்மை - உலக வாழ்க்கை. சுருக்கும் - வீணாக்குகின்ற. புழுத்தலைப் புலையன் - புழுவையுடைய தலையையுடைய கீழ்மகன்; 'உடலைத்தானும் தூய்மைசெய்து கொள்ளமாட்டாத கீழ்மகன்' என்றபடி. 'புழுத்து அலை' எனப் பிரிப்பின் பகரம் மிகலாகாமையும், பொருள்படாமை யும் அறிக. செம்மை - மெய்ம்மை; திரிபின்மை. செம்மையுடைய தனை, 'செம்மை' என்றார். சிவபதம் - இன்பநிலை. 'செம்பொருளை ஆய்ந்துணர்தற்கு, 'சிவ' என்னும் மந்திரத்தை உபதேசித்தருளிய செல்வமே' எனவும் உரைப்பர்.

அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திறல் அருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. **#538**

அளியையுடைய சுடரே! பக்குவப்பட்ட ஒப்பற்ற கனியே! பேராற்றலையுடைய அருமையான தவத்தினையுடை யோர்க்கு, அரசனே! மெய்ப் பொருளை விளக்கும் நூலானவனே! நூல்கள் புகழும் புகழ்ச்சிக்கு அடங்காத இன்பமே! யோகக் காட்சியில் விளங்குகின்றவனே! தெளிவாகிய இடத்தையுடைய அடியார்களது சித்தத்தில் தங்கிய செல்வமே! சிவபிரானே! இருள் நிறைந்த இவ் வுலகத்தில் உன்னை உறுதியாகப் பற்றினேன். நீ இனிமேல் எங்கே எழுந்தருளிச் செல்வது.

விளக்கவுரை

இரக்கம் இல்லாத சுடரின் வேறுபடுத்தற்கு, 'அருளுடைச் சுடரே' என்றார். 'சுடர்' என்றது, அறிவு பற்றி. 'கனி' என்றது, இன்பம் பற்றி. பொருளுடைக் கலை - மெய்ந்நூல்; 'அவற்றின் பொருளாய் இருப்பவனே' என்றபடி. புகழ்ச்சி - 'இவ்வாறு இருந்தது' என

எடுத்துரைத்தல். யோகம் - ஒன்றிநிற்றல். பொலிவு - அவ்வாறு நிற்குமிடத்தில் விளங்குதல். தெருள் - தெளிவு. இருள் இடம் - அறியாமையை உடைய இவ்வுலகம்.

ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா வீறிலி யேற்கு
விழுமிய தளித்ததோ ரன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. **#539**

உனக்கு ஒருவரும் நிகரில்லாத ஒருத்தனே! அடி யேனது மனத்தில் விளங்குகின்ற ஒளியே! உண்மையான நிலையை அறியாத பெருமையில்லா எனக்கு மேன்மையான பதத்தைக் கொடுத் ததாகிய ஒப்பற்ற அன்பானவனே! சொல்வதற்கு அருமையான வளமையான சுடர் வடிவினனே! அருட் செல்வமே! சிவபிரானே! இளைத்த இடத்தில் உன்னை உறுதியாகப் பற்றினேன். நீ இனிமேல் எங்கு எழுந் தருளிச் செல்வது?.

விளக்கவுரை

மெய்ப்பதம் - உண்மைப் பொருள். வீறு - பெருமை. விழுமியது - சிறப்புடைய பேறு. எய்ப்பிடத்து - இளைப்பின்கண். இளைப்பு, எல்லாப் பிறப்பும், பிறந்ததனாலாயது.

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்
டளவிலா ஆனந்த மருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியஎம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெரு மானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. **#540**

ஆதரவு அற்றவனாகிய என்னுடைய மனத்தையே கோயிலாகக் கொண்டு ஆட்கொண்டு எல்லையற்ற இன்பத்தை அளித்து என்னுடைய பிறப்பின் வேரைக் களைந்து என் குடும்பம் முழுவதையும் ஆட்கொண்ட தலைக்கோலம் உடையவனே! பெருமை யான எமது மெய்ப்பொருளே! திறந்த வெளியிலே காணப்பட்ட காட்சிப் பொருளே! அடியேனது அருட்செல்வமே! சிவபிரானே! இறுதியிலே, உன்னை உறுதியாகப் பற்றினேன். நீ இனிமேல் எங்கே எழுந்தருளிச் செல்வது?.

விளக்கவுரை

அறவை - துணையிலி. திறவு - திறப்பு; அறியாமை நீங்கிய நிலை. இறவு - அழிவு; பயனின்றிக் கெடும் நிலை. 'உறு' என்பதடியாக, 'உறவு' என வருதல் போல, 'இறு' என்பதடியாக, 'இறவு' என வந்தது.

பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. **#541**

பற்றுக்களின் வேரைக் களைகின்ற பழமையான பொருளே! பற்றிக் கொள்கின்ற வழியை, அடியேனாகிய எனக்கு அருள் புரிந்து, எனது வழிபாட்டினை விரும்பி, என் சித்தத்துள் புகுந்து தாமரை மலர் போன்ற திருவடிகளைக் காட்டிய மெய்ப்பொருளே! ஒளியையுடைய விளக்கே! விளக்கினுள் தோன்றும் வளமையான சுடர் போலும் வடிவினனே! அருட்செல்வமே! சிவபிரானே! இறைவனே! உன்னை உறுதியாகப் பற்றினேன். நீ இனிமேல் எங்கே எழுந்தருளிச் செல்வது?.

விளக்கவுரை

'பாசவேர் அறுக்கும் பழம்பொருள்' என்பது, முன்னிலைக்கண் படர்க்கை வந்த இடவழுவமைதி. பூசனை, ஆசிரியக் கோலத்திற்கண்டு செய்தது. 'பூங்கழல்' என்றது, பான்மை வழக்கால், அருள் இன்பத்தைக் குறித்தது. செழுஞ்சுடர் மூர்த்தி - பேரொளி வடிவே.

அத்தனே அண்டர் அண்டமாய் நின்ற
ஆதியே யாதும்ஈ றில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. **#542**

தந்தையே! தேவராயும் தேவர் உலகமாயும் நின்ற முதல்வனே! சிறிதும் முடிவு இல்லாத ஞானவடிவினனே! அடியார்கள் உறுதியாகப் பற்றின அருட் செல்வமே! சிவபிரானே! அன்பர் பால் பேரன்பு கொண்டவனே! எல்லா உயிர்களுமாய்க் கலந்து விளங்கியும் நீங்கி, அவையல்லாமல்

தன்மையால் வேறாய் இருக்கின்ற மாயம் உடையவனே! உன்னை உறுதியாகப் பற்றினேன். நீ இனிமேல் எங்கே எழுந்தருளிச் செல்வது?.

விளக்கவுரை

அண்டர் அண்டம் - தேவர் உலகம். ஆதி - முதல்வன். யாதும் - 'இடம், காலம்' என்பவற்றுள் ஒன்றானும், சித்தன் - வியத்தகு நிலையினன். 'அவை அல்லையாய்ப் பிழைத்து நிற்கும் எத்தனே' எனக் கூட்டுக. பிழைத்து நிற்றல் - அவற்றின் நீங்கி நிற்றல். எத்தன் - சூழ்ச்சியுடையவன்.

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறத் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. **#543**

பாலை, காலமறிந்து கொடுக்கின்ற தாயைக் காட்டிலும் மிகவும் அன்பு கொண்டு, நீ பாவியாகிய என்னுடைய உடம்பை உருக்கி, உள்ளத்தில் ஞானத்தை பெருக்கி, அழியாத இன்பமாகிய தேனைப் பொழிந்து நான்கு புறங்களிலும் உடன் திரிந்த அருட்செல்வமே! சிவபிரானே! நான் உன்னைத் தொடர்ந்து உறுதி யாகப் பற்றியுள்ளேன். நீ இனிமேல் எங்கே எழுந்தருளிச் செல்வது?.

விளக்கவுரை

நினைந்து ஊட்டுதல் - பச்சிளங் குழவிக்குக் கால மறிந்து தானே ஊட்டுதல். தாய் தனது முக்குண வேறுபாட்டால் ஒரோ வழித் தன் குழவியைப் புறக்கணித்தலும் உடையவளாதலின், அக் குணங்கள் இல்லாது அருள் வடிவினனாகிய இறைவன், தாயினும் மிகப் பரிவுடையனாதல் அறிக. ஊன் - உடம்பு; உள்ளமேயன்றி உடலும் அன்பினால் உருகப் பண்ணினமையின், 'ஊனினை உருக்கி' என்று அருளிச் செய்தார். உள்ளொளி - ஒளியினுள் ஒளி. ஒளி - உயிரி னது அறிவு. அதனுள் ஒளியாய் நிற்பது சிவம். அதனைப் பெருக்கு தலாவது, இனிது விளங்கச் செய்தல்; 'இவ்வாறு அருளிச் செய்யினும் உள்ளொளியாகிய உன்னை இனிது உணரச் செய்து' என்பதே கருத்து. உலப்பு - அழிவு. 'அழிவிலா ஆனந்த வாரி' *(தி.8 போற்றித் - 132)* என முன்னரும் அருளிச் செய்தார். உலப்பிலா ஆனந்தத்தைத் தேனாக உருவகித்தது, அறிந்திலாத அதனியல்பை ஒருவாற்றான் அறிந்து

கொள்ளுதற்பொருட்டு. தொடர்ந்து - முயன்று. முயற்சி, சிந்தித்தலும் தெளிதலும்.

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. **#544**

அற்பமாகிய புலால் உடம்பு, மயிர்க்கால்தொறும் நெகிழ்ச்சியையுடைய அது, பொன்னாலாகிய பெரிய கோயிலாகும் படி, அதனுள் எழுந்தருளியிருந்து, என்னுடைய எலும்புகளை யெல்லாம் உருகும்படி செய்து, எளியவனாகி ஆட்கொண்டருளிய ஆண்டவனே! குற்றமற்ற மாணிக்கமே! துன்பமும் பிறப்பும் இறப்பினோடு மயக்கமும் ஆகிய பற்றுக்களெல்லாம் அறுத்தருளின மேலான சோதியே! ஆனந்தமே! உன்னை உறுதியாகப் பற்றினேன். நீ இனிமேல் எங்கே எழுந்தருளிச் செல்வது?.

விளக்கவுரை

'புரைபுரை கனிய' (தி.8 கோயில் திருப்பதிகம். பா-3) என்றதை முன்னருங் காண்க. யாக்கையையே, *'கோயில்'* என்றார் என்க. *'காயமே கோயிலாக' (தி. 4 ப.76 பா.4)* என்று அருளினார் நாவுக்கரசரும், *'மயக்கு'* என்றதிலும், எண்ணேகாரம் விரிக்க. *'ஆம்'* என்றது எண்ணின் தொகைப் பொருட்டாய் நின்றது. தொடக்கு - கட்டு. நற்சோதி - ஞான ஒளி.

<u>**1.38.**திருவேசறவு</u>

இரும்புதரு மனத்தேனை
ஈர்த்தீர்த்தென் என்புருக்கிக்
கரும்புதரு சுவைஎனக்குக்
காட்டினைஉன் கழலிணைகள்
ஒருங்குதிரை உலவுசடை
உடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை ஆக்கியவா
றன்றேஉன் பேரருளே. **#545**

அடங்கிய அலைகளையுடைய கங்கையின் நீர் ததும்புகின்ற சடையை உடையவனே! இரும்பு போன்ற வலிமையான நெஞ்சையுடையவனாகிய என்னைப் பலகாலும் உன் வசமாக இழுத்து

என் எலும்பினை உருகும்படி செய்து உன் இரண்டு திருவடிகளில் கரும்பு தருகின்ற இனிமை போன்ற இனிமையை எனக்கு உண்டாக்கி யருளினாய். இத்தகைய உன்னுடைய பெருங்கருணை நரிகள் எல்லா வற்றையும் பெரிய குதிரைகளாக ஆக்கியது போன்றது அன்றோ?

விளக்கவுரை

தரும், உவம உருபு - 'இணைக் கழல்கள்' என மாற்றிக்கொள்க. இரண்டாம் அடியில் ஏழாவது இறுதிக்கண் தொக்கது. ஒருங்கு திரை - அடங்கியுள்ள அலை. உலவு - பொருந்திய. 'இப்பேரருள்' எனச் சுட்டு வருவித்து, 'உனது இப்பேரருள், நரிகளை எல்லாம் குதிரைகளாக்கிய அதனோடு ஒத்ததேயன்றோ' என உரைக்க. இறுதிக்கண், 'அப்பேரருளின் பெருமையை முன்பு உணராது இப்பொழுது உணர்கின்றேன்' எனக் குறிப்பெச்சம் வருவித்து, ஏசறவாக முடிக்க. இஃது இதனுள் ஏற்குமிடங்கட்கும் பொருந்தும்.

பண்ணார்ந்த மொழிமங்கை
பங்காநின் ஆளானார்க்
குண்ணார்ந்த ஆரமுதே
உடையானே அடியேனை
மண்ணார்ந்த பிறப்பறுத்திட்
டாள்வாய்நீ வாஎன்னக்
கண்ணார உய்ந்தவா
றன்றேஉன் கழல்கண்டே. **#546**

இசை நிரம்பிய சொல்லையுடைய உமையம்மை யின் பாகனே! உனக்கு அடிமையானார்க்கு, உண்ணுதல் பொருந்திய அருமையான அமுதமே! உடையவனே! அடியேனை, மண்ணுலகில் பொருந்திய பிறப்புகளை அறுத்து, ஆட்கொள்ளும் பொருட்டு, நீ வருக என்று அழைத்ததனால் அன்றோ உன் திருவடிகளைக் கண் நிரம்பக் கண்டு அடியேன் உய்ந்த முறை ஏற்பட்டது.

விளக்கவுரை

உண் ஆர்ந்த - உண்ணுதல் பொருந்திய. மண் ஆர்ந்த பிறப்பு - இப்பிறப்பு. 'மண் ஆர்ந்த பிறப்பு அறுத்திட்டு ஆள்வாய்' என்றதை இறுதிக்கண் கூட்டுக. வா என்ன - வா என்று அழைத்தமை யால். 'நான் உய்ந்தவாறு, நீ வா என்று அழைத்தலால் உன் கழல்கள் கண்ணாரக் கண்டன்றே' என்க. முன்னைத் திருப்பாட்டில் குறிப்பெச்ச மாக உரைத்ததனை இங்கு இறுதியடியின்பின் இசையெச்சமாக வைத்துரைக்க.

ஆதமிலி யான்பிறப்

பிறப்பென்னும் அருநரகில்
ஆர்தமரும் இன்றியே
அழுந்துவேற்கு ஆஆவென்று
ஓதமலி நஞ்சுண்ட
உடையானே அடியேற்குன்
பாதமலர் காட்டியவா
றன்றேஎம் பரம்பரனே. **#547**

கடலிற் பெருகிய விடத்தை உண்ட கழுத்தை உடையவனே! எம் மேலோனே! அன்பில்லாதவனாகிச் சுற்றத்தார் ஒருவரும் இல்லாமலே, பிறப்பு இறப்பு என்கிற, தப்புதற்கு அருமை யான நரகத்தில் மூழ்குகின்றவனான என்பொருட்டு, ஐயோ என்று இரங்கி அடியேனாகிய எனக்கு உன் திருவடித் தாமரை மலரைக் காட்டிய வகையன்றோ உனது திருவருள்.

விளக்கவுரை

'யான் ஆதமிலி' எனத் தனித்தொடராக்குக. ஆதம் - ஆதரவு. நரகம்போலும் துன்பம் உடைமைபற்றிப் பிறப்பிறப்புக்களை நரகமாக உருவகம் செய்தார். 'தமர் ஆரும் இன்றி' என மாற்றுக. 'அடியேற்கு' என மறித்தும் கூறியது, தம் சிறுமையை வலியுறுத்தற்கு. 'பாதமலர் காட்டியவாறு உன் அருளேயன்றோ' என, சில சொல் வருவிக்க.

பச்சைத்தால் அரவாட்டீ
படர்சடையாய் பாதமலர்
உச்சத்தார் பெருமானே
அடியேனை உய்யக்கொண்
டெச்சத்தார் சிறுதெய்வம்
ஏத்தாதே அச்சோஎன்
சித்தத்தா றுய்ந்தவா
றன்றே உன் திறம்நினைந்தே. **#548**

பசுமையான நாக்கினையுடைய பாம்பை ஆட்டு பவனே! விரிந்த சடையையுடையவனே! திருவடியைத் தம்முடைய உச்சியிலே கொண்டிருப்பவருடைய பெருமானே! அடியேனாகிய என்னை, உய்யக் கொண்டதனாலன்றோ, ஐயோ, குறைபாடுகள் நிறைந்த சிறிய தெய்வங்களை வழிபடாமல், உன்னுடைய அருள் திறத்தினையே எண்ணி, என் எண்ணத்தின்படியே யான் கடைத்தேறிய நிலை உண்டாயிற்று?

விளக்கவுரை

பச்சைத் தால் அரவு - பசிய நாவையுடைய பாம்பு. தால், 'தாலு' என்னும்

ஆரியச் சொற்சிதைவு. 'பச்சைத்தாள் அரவு என்பது பாடம் ஆகாமையில்லை' எனக்கொண்டு, 'தாள்' என்பதற்கு, 'புற்று' என உரைத்துப்போவாரும் உளர். 'பாதமலரை உச்சியில் உடையவர்' என்க. எச்சத்தார் - வேள்வியை உடையவர்கள்; இவர்கள் தேவர் பலரையும் வழிபடுவர். அச்சோ, வியப்பிடைச்சொல். சித்தத் தாறு - விருப்பப்படியே. 'உய்ந்தவாறு உன் திறம் நினைந்தே யன்றோ' எனக் கூட்டுக. உய்ந்தவாறு - இறவாமல் பிழைத்திருக்கும் வகை. திறம் - முன்னே வந்து ஆண்ட திருவருள். இதன்கண் இறந்துபடாமையால் வந்த நாணம் புலப்படும்.

கற்றறியேன் கலைஞானம்
கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம்
வாக்கியலால் வார்கழல்வந்
துற்றிறுமாந் திருந்தேன்எம்
பெருமானே அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா
றன்றேநின் பொன்னருளே. **#549**

எம்பிரானே! ஞான நூல்களைப் படித்து அறியேன்; மனம் கசிந்து உருகவும் மாட்டேன்; ஆயினும் வாக்கின் தன்மையால் வேறு தெய்வங்களைத் துதித்து அறியேன்; அதனால் உன்னுடைய நீண்ட திருவடிகளை வந்து அடைந்து இறுமாப்பு கொண்டு இருந்தேன். அடியேனாகிய எனக்கு உன் பொன் போன்ற திருவருளைப் புரிந்த செயல் நாயினுக்குப் பொன்னாலாகிய ஆசனத்தை இட்டது போலன்றோ?

விளக்கவுரை

மற்று, அசைநிலை. 'பிறதெய்வம் அறியேன்' என மாற்றி, அதன்பின், 'அதனால்' என்பது வருவிக்க. வாக்கியலால் - உனது உபதேசத்தால். 'அன்று இறுமாந்திருந்தேன்; இன்று இஃது இல்லை' என்றபடி. இறுமாப்பு. அரசனையும் மதியாமை. இங்கும், 'அப் பொன்னருள்' எனச் சுட்டு வருவிக்க.

பஞ்சாய அடிமடவார்
கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர
நடுங்குவேன் நின்னருளால்
உய்ஞ்சேன்எம் பெருமானே
உடையானே அடியேனை
அஞ்சேலென் றாண்டவா

றன்றேஅம் பலத்தமுதே. #550
எம்பிரானே! உடையவனே! அம்பலத்திலாடுகின்ற அமுதமே! அடியேனை உனது திருவருளால் அஞ்சாதே என்று ஆட்கொண்ட முறைமையாலன்றோ, செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப் பெற்ற பாதத்தையுடைய பெண்டிரது, கடைக்கண் பார்வையால் துன்பப்பட்டு நஞ்சு போன்ற துன்பம் மிக, நடுங்குகின்றவனாகிய நான் பிழைத்தேன்.

விளக்கவுரை

'அவ்வருளாவது, அஞ்சேல் என்று ஆண்டவாறன்றே' என்க.

என்பாலைப் பிறப்பறுத்திங்
கிமையவர்க்கும் அறியவொண்ணாத்
தென்பாலைத் திருப்பெருந்
துறையுறையுஞ் சிவபெருமான்
அன்பால்நீ அகம்நெகவே
புகுந்தருளி ஆட்கொண்ட
தென்பாலே நோக்கியவா
றன்றேஎம் பெருமானே. #551

எம்பிரானே! தேவர்களுக்கும் அறிய முடியாத, தென்திசையிலுள்ள திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவ பிரானாகிய நீ இவ்விடத்தில், என்னிடத்திலுள்ள பிறப்பை அறுத்து அன்பினால் என் மனம் நெகிழும் படியாகவே எழுந்தருளி ஆண்டு கொண்டது, என்னிடத்திலே திருவருள் நோக்கம் செய்ததனால் அன்றோ?

விளக்கவுரை

ஐகாரம் இரண்டும் சாரியை. சிவபெருமான், விளி. நோக்கியவாறு - கடைக்கண்ணால் பார்த்தபடி.

'அன்றே' என்றதை, 'ஆட்கொண்டது' என்றதன்பின் கூட்டுக.

மூத்தானே மூவாத
முதலானே முடிவில்லா
ஓத்தானே பொருளானே
உண்மையுமாய் இன்மையுமாய்ப்
பூத்தானே புகுந்திங்குப்
புரள்வேனைக் கருணையினால்
பேர்த்தேநீ ஆண்டவா
றன்றேஎம் பெருமானே. #552

எம்பிரானே! எப்பொருட்கும் மூத்தவனே! மூப் படையாத முதல்வனே! எல்லையற்ற வேதமானவனே! அவ் வேதத்தின் பொருளுமானவனே! மெய்யர்க்கு மெய்யனாய் அல்லாத வர்க்கு அல்லாதவனாய்த்

தோன்றினவனே! இவ்வுலகத்தில் உழல் கின்ற என்னை, நீ புகுந்தருளி, உழல்கின்ற நிலையை நீக்கி, ஆண்டருளியது உன்னுடைய கருணையினால் அன்றோ?

விளக்கவுரை

மூத்தான் - உயர்ந்தவன். மூவாத - மூப்படையாத. ஓத்து - வேதம். பொருள் - அதன் பொருள். உண்மை - உள்ள பொருளாய் அனுபவமாதல். இன்மை - இல்பொருள் போலக் கரந்து நிற்றல். பூத்தான் - விளங்குபவன். புரள்வேன் - கெடுவேன். பேர்த்து- உலகியலினின்று நீக்கி. 'நீ ஆண்டவாறு கருணையினாலன்றே' என்க.

மருவினிய மலர்ப்பாதம்
மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச்
சிவபெருமா னென்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத்
தடங்கடலிற் படிவாமா
றருளெனக்கிங் கிடைமருதே
இடங்கொண்ட அம்மானே. **#553**

திருவிடைமருதூரையே, ஊராகக் கொண்ட எம் தந்தையே! கூடுவதற்கு இனிமையான, தாமரை மலர் போன்ற திருவடி உள்ளத்தில் மலர்ந்து உள்ளம் உருக, தெருத்தோறும் மிகவும் ஓலமிட்டு அலறி, சிவபெருமானே என்று துதித்து நுகர்ந்த மேலான கருணை யாகிய பெரிய கடலில் படிந்து மூழ்கும் வண்ணம், அடியேனுக்கு இங்கு அருள் செய்வாயாக.

விளக்கவுரை

'மருவ இனிய பாதம்' என்க. வளர்ந்து - வளர்தலால். வளர்தல் - விளங்குதல். உள் உருக - உள்ளம் உருக. படிவு ஆமாறு - மூழ்குதல் உண்டாகும்படி. 'படியுமாறு அருள்' என்றதும், 'படியுமாறு அறியாதவனாயினேன்' என ஏசற்றதாம் என்க.

நானேயோ தவஞ்செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த்
தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே. **#554**

தேன்போன்றும், இனிமையான அமுதத்தைப் போன்றும் இனிக்கின்ற சிவபிரானானவன் தானே எழுந்தருளி வந்து, என் மனத்துள் புகுந்து உடம்போடு கூடிய உயிர் வாழ்க்கையை வெறுத்து நீக்கும்படி அடியேனாகிய எனக்கு அருள் புரிந்தான். அதனால் சூக்கும பஞ்சாக்கரத்தைச் சொல்லப் பெற்றேன். இப் பேற்றைப் பெறுவதற்கு நானோ முற்பிறப்பில் தவம் செய்தேன்?.

விளக்கவுரை

முதல் அடியை இறுதியிற் கூட்டுக. 'உயிர் வாழ்க்கையை ஒறுத்து அன்றே வெறுத்திட அருள் செய்தான்; அதனால், சிவாயநம எனப் பெற்றேன்; அதற்கு அன்னதொரு தவத்தை நான் செய்தேனோ' என்க. ஒறுத்தல் - வருத்துதல்.

1.39.திருப்புலம்பல்

பூங்கமலத் தயனொடுமால்
அறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள்
கூறாவெண் ணீறாடி
ஓங்கெயில்சூழ் திருவாரூர்
உடையானே அடியேன்நின்
பூங்கழல்கள் அவையல்லா
தெவையாதும் புகழேனே. **#555**
அழகிய தாமரை மலரிலுள்ள பிரமனோடு, திருமாலும் அறியவொண்ணாத இயல்பையுடையவனே! கோங்க மலர் போன்ற குவிந்த தனங்களையுடைய உமையம்மையின் பாகனே! திருவெண்ணீறு அணிவோனே! உயர்ந்த மதில் சூழ்ந்த திருவாரூரை இடமாக உடையவனே! அடியேனாகிய நான் உனது, தாமரை மலர் போன்ற திருவடிகளாகிய அவற்றையன்றி வேறு எவற்றையும் ஒரு சிறிதும் புகழமாட்டேன்.

விளக்கவுரை

நெறி - நிலை. கோங்கலர் - கோங்கம் பூ. சேர், உவம உருபு. ஓங்கு எயில் - உயர்ந்த மதில். 'எவற்றையும் சிறிதும் புகழேன்' என்க.

சடையானே தழலாடீ
தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதி
பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ்
பெருந்துறையாய் அடியேன்நான்
உடையானே உனையல்லா
துறுதுணைமற் றறியேனே. **#556**
சடாபாரத்தையுடையவனே! அழலாடுவோனே! விளங்குகின்ற மூவிலைகளையுடைய சூலப்படையை யுடையவனே! மேலான சோதியே! பசுபதியே! இளமை பொருந்திய வெண்மையான இடபத்தை யுடையவனே! விரிந்த சோலை சூழ்ந்த திருப்பெருந் துறையில் வீற்றிருப்பவனே! உடையவனே! அடியேனாகிய நான் உன்னையன்றி, வேறு உற்ற துணையை அறிந்திடுவேன் அல்லேன்.

விளக்கவுரை

தயங்கும் - விளங்குகின்ற. மழ - இளமை. 'அடியேனாகிய நான் உறுதுணை மற்று அறியேன்' என்க.

உற்றாரை யான்வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங்
கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே. **#557**

திருக்குற்றாலத்தில் விரும்பி வீற்றிருக்கின்ற, கூத்தப் பெருமானே! உறவினரை யான் விரும்புவேனல்லேன்; வாழ்வதற்கு ஊரை விரும்புவேன் அல்லேன்; புகழை விரும்புவேன் அல்லேன்; கல்வியை மட்டும் கற்றவரை யான் விரும்பமாட்டேன். கற்க வேண்டிய கல்விகளும் இனி எனக்குப் போதும். உனது ஒலிக்கின்ற கழலையுடைய திருவடிக்கண் கன்றையுடைய பசுவினது மனத்தைப் போலக் கனிந்து உருகுவதை யான் உன்பால் விரும்புகின்றேன்.

விளக்கவுரை

உற்றார் - கிளைஞர். வேண்டேன் - விரும்பமாட்டேன். ஊர் - யான் பிறந்த ஊர். பேர் - புகழ். கற்றார் - கல்வியைமட்டும் கற்று, அதன் பயனை அறியாதவர். கற்பன - கற்கத் தகும் நூல்கள். அமையும் - போதும். 'கல்வியின் பயன் கிடைத்துவிட்டபின் கல்வி எதற்கு' என்றபடி. குரை கழல் - ஒலிக்கின்ற கழல் அணிந்த திருவடி. கற்றா - கன்று ஆ; கன்றையுடைய பசு. 'இதன் மனம் கன்றை நினைந்து கசிந்து உருகுதல்போல உருக விரும்புகின்றேன்' என்க.

1.40.குலாப் பத்து

ஓடுங் கவந்தியுமே
உறவென்றிட் டுள்கசிந்து
தேடும் பொருளுஞ்
சிவன்கழலே எனத்தெளிந்து
கூடும் உயிருங்
குமண்டையிடக் குனித்தடியேன்
ஆடுங் குலாத்தில்லை
ஆண்டானைக் கொண்டன்றே. **#558**

அடியேன் திருவோட்டையும் கோவணத்தையுமே, பற்றெனத் துணிந்து, மனம் கனிந்து, தேடுதற்குரிய பொருளும் சிவ பெருமானது திருவடியே என்று தேறி, உடம்பும், உயிரும், நிறைந்து தெவிட்ட வளைந்து ஆடி நடனம் செய்யும் செயல் விளக்கம் பொருந்திய தில்லை ஆண்டவனைப்

பற்றிக் கொண்டே அல்லவா?

விளக்கவுரை

ஓடு - பிச்சைப் பாத்திரம். கவந்தி - கோவணம்; வட்டுடையுமாம். உறவு - பற்று; என்றது, ஒருபொருளிலும் பற்றில்லாமையைக் குறித்தது, தேடும்பொருள் - முயன்று பெறும் பொருள். 'கழலே' என்னும் ஏகாரம், 'பிறிதியாதும் அன்று' என்பதை விளக்கி நின்றது. கூடு - உடம்பு. குமண்டை - களியாட்டம். குனித்து - கூத்தாடி. குலாத் தில்லை - விளக்கத்தை உடைய தில்லை. கொண்டு - கொண்டேன்; பெற்றுவிட்டேன். இஃது இறந்தகாலத் தன்மையொருமை வினைமுற்று. 'இஃது என் தவம் இருந்தவாறு' எனக் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க. அன்றே, அசைநிலை.

துடியேர் இடுகிடைத்
தூய்மொழியார் தோள்நசையால்
செடியேறு தீமைகள்
எத்தனையுஞ் செய்திடினும்
முடியேன் பிறவேன்
எனைத்தனதாள் முயங்குவித்த
அடியேன் குலாத்தில்லை
ஆண்டானைக் கொண்டன்றே. **#559**

என்னைத் தன் திருவடியின் கண் கூடும்படி செய்த விளக்கம் பொருந்திய தில்லை ஆண்டவனை அடியேன் பற்றிக் கொண்டேன் அல்லவா? ஆதலின், உடுக்கையை ஒத்த அழகிய சிறிய இடையையும், இனிய சொல்லையும் உடைய மாதரது தோள்களின் மேலுள்ள விருப்பத்தால் பாவம் மிகுவதற்குக் காரணமான தீய செயல்கள் எவ்வளவு செய்தாலும் நான் இனி இறக்க மாட்டேன். அதனால், பிறக்கவும் மாட்டேன்.

விளக்கவுரை

துடியேர் இடுகிடை - உடுக்கைபோலும் சுருங்கிய இடை. செடி ஏறு - குற்றம் மிகுதற்குக் காரணமான. 'முடியேனாயும், பிறவேனாயும் தில்லை ஆண்டானைக் கொண்டேன்' என்க. முடிதல் இறத்தல். 'அடியேன்' என்றதை முதலிற் கொள்க.

என்புள் ளுருக்கி
இருவினையை ஈடழித்துத்
துன்பங் களைந்து
துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்புள்ள வற்றை
முழுதழிய உள்புகுந்த

அன்பன் குலாத்தில்லை
ஆண்டானைக் கொண்டன்றே. **#560**
எலும்பையும் உள்ளே உருகச் செய்து இருவினை களாகிய சஞ்சிதம், பிராரத்தத்தின் வலியினை ஒழித்து அவற்றால் உண்டாகின்ற துன்பத்தைப் போக்கி, தொடர்புகளையும் அறுத்துப் பரிசுத்தமாக்கி முன்னேயுள்ள சஞ்சித வினை முற்றிலும் தொலையும் வண்ணம், என் நெஞ்சத்தே எழுந்தருளிய அன்பினையுடைய தில்லை ஆண்டவனை அடியேன் பற்றிக் கொண்டேன் அல்லவா?

விளக்கவுரை

ஈடு - வலிமை. துவந்துவம் - பற்று. முன்பு உள்ள - முன்பு உள்ளன; அவை மலங் காரணமாக வந்த குற்றங்கள். அற்றை - அன்றே. 'அன்பின் என்பது பாடமாயின், னகரம் திரிதல் வேண்டும்.

குறியும் நெறியுங்
குணமுமிலார் குழாங்கள்தமைப்
பிறியும் மனத்தார்
பிறிவரிய பெற்றியனைச்
செறியுங் கருத்தில்
உருத்தமுதாஞ் சிவபதத்தை
அறியுங் குலாத்தில்லை
ஆண்டானைக் கொண்டன்றே. **#561**

குறிக்கோளும் அதனையடையும் வழியும் அவ் வழியில் செல்லும் பண்பும் இல்லாதவருடைய கூட்டங்களைப் பிரிந்து வாழ்கின்ற மனத்தையுடைய மெய்யடியார்களைப் பிரியாத தன்மை யனும் அன்பு நிறைந்த உள்ளத்தில், உருக்கொண்டு அமுதம் போன்று இனிக்கும் சிவபதமாயிருப்பவனும், எல்லாவற்றையும் அறிகின்ற விளக்கம் பொருந்திய தில்லை ஆண்டவனுமாகிய இறைவனை அடி யேன் பற்றிக் கொண்டேன் அல்லவா?

விளக்கவுரை

குறி - குறிக்கோள். செறியும் கருத்து - தன்னையே பற்றி நிற்கும் உள்ளம். உருத்து - உருப்பட்டுத் தோன்றி. அறியும் - எல்லா வற்றையும் அறிகின்ற. 'அறியும் ஆண்டான்' என இயையும்.

பேருங் குணமும்
பிணிப்புறும்இப் பிறவிதனைத்
தூரும் பரிசு துரிசறுத்துத்
தொண்ட ரெல்லாஞ்
சேரும் வகையாற்

சிவன்கருணைத் தேன்பருகி
ஆருங் குலாத்தில்லை
ஆண்டானைக் கொண்டன்றே. #562

இந்தப் பிறவிக் குழியைத் தூர்த்து இல்லையாய்ப் போகும் வண்ணம் குற்றங்களை நீக்கிக் கொண்டு அடியார் எல்லாம் இறைவனைக் கூடும் விதத்தால் சிவனது கருணையாகிய தேனை உண்டு நிறைவுறுகின்ற விளக்கம் மிக்க தில்லை ஆண்டவனை அடியேன் பற்றிக்கொண்டேன் அல்லவா?

விளக்கவுரை

பேர் - பெயர். இஃது உடம்பிற்கு இடப்படுவது. குணம், முக்குணம். இவை இரண்டும் உயிரைப் பிணித்தல் செய்வது, பிறவி யினாலாம். பேரால் வரும் பிணிப்பாவது, உடம்பையே தான் என மயங்கி நிற்றல். குறிப்புருவகமாதலின், 'பிறவி' என்றதற்கு, 'பிறவி யாகிய குழி' என உரைக்க. 'சிவன்' என்றது, 'தன்' என்றபடி. 'சிவன் கருணைத் தேன் பருகிச் சேரும் வகையால்' என மாற்றியுரைக்க.

கொம்பில் அரும்பாய்க்
குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடலம்
மாண்டிங்ஙன் போகாமே
நம்புமென் சிந்தை
நணுகும்வண்ணம் நானணுகும்
அம்பொன் குலாத்தில்லை
ஆண்டானைக் கொண்டன்றே. #563

இவ்வுடம்பு மரக்கிளையில் உண்டாகின்ற அரும்பு போல உருவெடுத்தும், முன் குவிந்திருந்து பின் மலர்ந்த மலர் போலப் பிறந்தும் காய் போல வளர்ந்தும், பழம் போல முதுமை அடைந்தும், வீணே, இவ்வாறு அழிந்து போகாத வண்ணம் எனக்குத் துணையாக, நான் விரும்புகின்ற என் மனமானது இறைவனைச் சேரும்படி, நான் அடைகின்ற அழகிய பொன்னாலாகிய விளக்கம் பொருந்திய தில்லைச் சிற்றம்பலத்து ஆண்டவனை அடியேன் பற்றிக் கொண்டேன் அல்லவா?

விளக்கவுரை

வாளா, 'அரும்பாய்' என்ற வழிப் பொருள் இனிது விளங்காமையின், 'கொம்பில் அரும்பாய்' என்று அருளினார். குவிமலராய் - முன்னர்ப் போதாய்க் குவிந்து நின்ற மலராய், 'வம்பாக' என ஆக்கம் வருவிக்க. வம்பு - வீண். இங்ஙன் - இவ்வாறு. நணுகும் வகை - தன்னைச் சேரும்படி. 'உலகத்தார் போல யானும் வளர்ந்து மூத்து வாளா

இறந்தொழியாமல், யான் சேர்ந்திருக்கின்ற தில்லை ஆண்டான்' என்றபடி.

மதிக்குந் திறலுடைய
வல்அரக்கன் தோள்நெரிய
மிதிக்குந் திருவடி
என்தலைமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசுபாசம்
ஒன்றுமிலோம் எனக்களித்திங்
கதிர்க்குங் குலாத்தில்லை
ஆண்டானைக் கொண்டன்றே. **#564**

யாவரும் மதித்தற்குரிய வெற்றியையுடைய, வலிமை வாய்ந்த அரக்கனாகிய இராவணனது, தோள் நெரியும்படி ஊன்றின திருவடியானது, எனது தலைமேல் பொருந்தியிருக்க, பெருகுகின்ற பசுத் தன்மையை உண்டாக்குகின்ற பாசங்களில் யாதொன்றும் இல்லேமாயினோம் என்று மகிழ்ந்து இங்கு ஆரவாரித்தற்குக் காரணமாகிய விளக்கம் பொருந்திய தில்லை ஆண்டவனை அடியேன் பற்றிக்கொண்டேன் அல்லவா?

விளக்கவுரை

அரக்கன், இராவணன். 'அவன் தோள் நெரிய மிதிக்கும் திருவடி' என்றது, 'பசுபாசத்தை மேலெழாதவாறு அடர்க்கும் திருவடி' எனக் குறிப்பான் உணர்த்தியவாறு. வீற்றிருப்ப - வீற்றிருத்தலால். கதிக்கும் - மேல் எழுகின்ற. 'களித்துக் கொண்டு' என இயையும். அதிர்த்தல், ஆடலில் சிலம்பை ஒலிப்பித்தல்.

இடக்குங் கருமுருட்
டேனப்பின் கானகத்தே
நடக்குந் திருவடி
என்தலைமேல் நட்டமையாற்
கடக்குந் திறல்ஐவர்
கண்டகர்தம் வல்லரட்டை
அடக்குங் குலாத்தில்லை
ஆண்டானைக் கொண்டன்றே. **#565**

பூமியைத் தோண்டும் இயல்புடைய கருமையான முரட்டுத் தனமுள்ள பன்றியின் பின்னே, காட்டில் நடந்த திருவடிகளை என்னுடைய தலையின் மேல் இருக்க வைத்தமையால், என்னை வெல்லும் திறமையுடைய ஐம்பொறிகளாகிய கொடியவர்களுடைய வலிமையான சேட்டைகளை அடக்குகின்ற விளக்கம் பொருந்திய தில்லை ஆண்டவனை அடியேன் பற்றிக் கொண்டேன் அல்லவா?

விளக்கவுரை

இடக்கும் - நிலத்தைக் கிண்டுகின்ற, 'முருடு' என்பதை, இக்காலத்தார், 'முரடு' என வழங்குப. ஏனம் - பன்றி. இறைவன் கானகத்தில் பன்றிப் பின் சென்றது, அருச்சுனன் பொருட்டு. 'நட்டமையால் கொண்டு' என முடிக்க. கண்டகர் - கொடியவர். 'ஐவர் கண்டகர்' என்றது ஐம்பொறிகளை. வல் அரட்டு - வலிய குறும்பு. 'அரட்டர் ஐவர்' (தி.5 ப.7 பா.5) என நாவுக்கரசரும் ஓதியருளுதல் காண்க. 'வல்லாட்டை' என்பது பாடமன்று.

பாழ்ச்செய் விளாவிப்
பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தாற்
கிழியீடு நேர்பட்டுத்
தாட்செய்ய தாமரைச்
சைவனுக்கென் புன்தலையால்
ஆட்செய் குலாத்தில்லை
ஆண்டானைக் கொண்டன்றே. **#566**

விளையாத வயலை உழுது விளையச் செய்து பயன்பெறாமல் இருக்கின்ற எனக்கு, முற்பிறப்பில் செய்த தவத்தினால் புதையல் அகப்பட்டது போன்ற அருள் கிடைக்கப் பெற, திருவடி யாகிய சிவந்த தாமரை மலரையுடைய சைவனுக்கு எனது இழிவான தலையினால் அடிமை செய்து விளக்கம் பொருந்திய தில்லை ஆண்டவனை அடியேன் பற்றிக்கொண்டேன் அல்லவா?

விளக்கவுரை

செய் - வயல், விளாவி - உழுது. கீழ் - முற்பிறப்புக்கள். கிழி ஈடு - பொன் முடிப்பு வழியில் இடப்பட்டுக் கிடத்தல். நேர்பட்டு - எதிர்ப்பட்டாற்போல. தாள் - திருவடி. 'தாளாகிய செய்ய தாமரை' என்க. சைவன் - சிவம் உடையவன். 'சிவநெறித் தலைவன்' எனலு மாம். ஆட்செய்தல் - பணிசெய்தல்.

கொம்மை வரிமுலைக்
கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால்
திருப்பணிகள் செய்வேனுக்
கிம்மை தரும்பயன்
இத்தனையும் ஈங்கொழிக்கும்
அம்மை குலாத்தில்லை
ஆண்டானைக் கொண்டன்றே. **#567**

திரட்சியும் தேமலும் உள்ள தனங்களையுடைய பூங்கொம்பு போன்ற உமையம்மையின் பங்கை உடையவனுக்கு, அன்போடு கூடிய மனத்தினால் திருத்தொண்டுகள் செய்கின்ற எனக்கு, இப்பிறப்பில் உண்டாகக்கூடிய வினைப் பயன்கள் முழுமையையும் இவ்வுலகிலேயே ஒழிக்கவல்ல தாயாகிய விளக்கம் மிக்க தில்லை ஆண்டவனை, அடியேன் பற்றிக் கொண்டேன் அல்லவா?

விளக்கவுரை

கொம்மை - திரட்சி. வரி - சந்தனம் முதலியவற்றால் எழுதும் கோலம்; தேமலுமாம். இம்மை தரும் பயன் - இப் பிறப்போடு ஒழியும் பயன்கள்; அவை, ஐம்புல இன்பங்கள். அம்மை - தாய்.

1.41.அற்புதப் பத்து

மைய லாய்இந்த மண்ணிடை வாழ்வெனும்
ஆழியுள் அகப்பட்டுத்
தைய லாரெனுஞ் சுழித்தலைப் பட்டுநான்
தலைதடு மாறாமே
பொய்யெ லாம்விடத் திருவருள் தந்துதன்
பொன்னடி யிணைகாட்டி
மெய்ய னாய்வெளி காட்டிமுன் நின்றதோர்
அற்புதம் விளம்பேனே. **#568**

மயக்கவுணர்ச்சியுடையவனாய் இந்த மண்ணுலக வாழ்வு என்கிற கடலில் அகப்பட்டுப் பெண்கள் என்கிற சுழலினிடத்துச் சிக்கி, நான் நிலை கெட்டுப் போகாதபடி, உண்மைப் பொருளாய்த் தோன்றித் தன் அழகிய திருவடிகள் இரண்டையும் யான் காணும்படி காட்டி, பொய்ப்பொருளெல்லாம் விட்டு நீங்கும் வண்ணம் திருவருள் புரிந்து, ஞான ஒளியைக் கொடுத்து எதிரே நின்றதாகிய ஒப்பற்ற அதிசயச் செயலின் பெருமையை யான் சொல்ல வல்லேனல்லேன்.

விளக்கவுரை

மையல் - மயக்கம். ஆழி - கடல். சுழி - கடற்சுழி. தலை தடுமாறல் - நெறிபிறழ்ந்து நடத்தல். மெய்யனாய் - மெய்யுணர்வைத் தரும் ஆசிரியனாய். வெளி - பரவெளி. திருவருள் தருதல் முதலியவற்றிற்கு, 'எம்பெருமான்' என்னும் வினைமுதல் வருவிக்க. விளம்பேன் - சொல்லும் வகையை அறியேன். 'சொற்கு அடங்காதது' என்றபடி.

ஏய்ந்த மாமல ரிட்டுமுட் டாததோர்
இயல்பொடும் வணங்காதே
சாந்த மார்முலைத் தையல்நல் லாரொடுந்
தலைதடு மாறாகிப்

போந்தி யான்துயர் புகாவணம் அருள்செய்து
பொற்கழ லிணைகாட்டி
வேந்த னாய்வெளி யேஎன்முன் நின்றதோர்
அற்புதம் விளம்பேனே. #569

பொருத்தமான சிறந்த பூக்களைத் தூவித் தடைப் படாதாகிய ஒரு தன்மையோடு வழிபடாமலே சந்தனக் குழம்பு பூசப் பெற்ற தனங்களையுடைய, பெண்களோடும், நிலை கலங்கிச் சேர்ந்து நான் துன்பம் அடையாதபடி, எங்கள் பெருமான், எனக்கு அருள் புரிந்து, அழகிய தனது திருவடியைக் காட்டித் தலைவனாய் எனக்கு எதிரே நின்றதாகிய ஒப்பற்ற அதிசயச் செயலின் பெருமையை யான் சொல்ல வல்லேனல்லேன்.

விளக்கவுரை

ஏய்ந்த - பொருந்திய. வேந்தனாய் - ஞான அரசனாய்.

நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நானென தெனும்மாயக்
கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெருமறை தேடிய
அரும்பொருள் அடியேனை
அடித்த டித்துவக் காரமுன் தீற்றிய
அற்புதம் அறியேனே. #570

மண்ணுலகத்தில் உண்மையுள்ளவன் போல நடித்துச் செயலில் பொய்யான பல காரியங்களைச் செய்து, யான், எனது என்கின்ற மயக்கமாகிய பாம்பு கடித்த வாயிலிருந்து முற் காலத்துச் செய்த வினையாகிய விடமானது மிகுதலால் புலம்பித் திரி கின்றவனும் தனக்கு அடியவனுமாகிய என்னை, அந்தப் பெரிய வேதங்கள் தேடியறியாத அரிய பொருளான எங்கள் பெருமான், முன் வந்து பிடித்துக் கொண்டு பலகாலும் அடித்துத் திருவருளாகிய சர்க்கரைக் கட்டியை முன் அருத்திய, அதிசயச் செயலின் பெருமையை யான் அறிய வல்லேனல்லேன்.

விளக்கவுரை

நடித்து - உண்மையுடையவன் போலக் காட்டி. மாயம் பொய்; அது பொய்யாகிய செருக்கினைக் குறித்தது. 'மாயத்தினது வாய்' என்க. கடித்த வாய் - பல்லினால் இறுகப் பிடித்த வாய். மிக - மிக்கு விளைய. கழறுதல், இங்கு, பிதற்றலின்மேற்று. 'அரும்பொருள் அடியேனை முன்னின்று பிடித்து' என மாற்றுக. அக்காரம் - கண்டம் (சர்க்கரை). முன்

தீற்றிய - முன்பு (விரைந்து) தின்னச் செய்த. 'மருந்தை அடித்தடித்து ஊட்டுவர்; இவன் இனிப்பை எனக்கு அடித் தடித்து ஊட்டினான்' என்றபடி. 'அக்காரம்' என்றது, திருவடி இன்பத்தை. குற்றியலுகரம் உயிர்வரக்கெடாது, உடம்படுமெய் பெற்றது. அற்புதம் - அற்புதச் செயலுக்குக் காரணம். 'அறியேன்' என்றது, 'அருளல்லது வேறில்லை' என்றபடி.

பொருந்தும் இப்பிறப் பிறப்பிவை நினையாது
பொய்களே புகன்றுபோய்க்
கருங்கு ழலினார் கண்களால் ஏறுண்டு
கலங்கியே கிடப்பேனைத்
திருந்து சேவடிச் சிலம்பவை சிலம்பிடத்
திருவொடும் அகலாதே
அருந்து ணைவனாய் ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே. **#571**

வருகின்ற இப்பிறப்பு இறப்புகளாகிய இவற்றின் துன்பநிலையை எண்ணாது, பொய்களையே சொல்லித் திரிந்து கரிய கூந்தலுடைய பெண்களது கண்களாகிய வேலினால் தாக்கப்பட்டு, கலக்கமுற்றுக் கிடக்கும் என்னை, எங்கள் பெருமான் திருத்தமாகிய திருவடியில் அணியப்பட்ட சிலம்புகளாகிய அவை ஒலித்திட உமையம்மையோடும் நீங்காது எனக்கு அருமையான துணைவனாகி ஆண்டுகொண்டருளின அதிசயச் செயலின் பெருமையை யான் அறிய வல்லேனல்லேன்.

விளக்கவுரை

'இவை' என்றது, 'இவற்றினால் விளையும் துன்பங்கள்' என்றபடி. ஏறுண்டு - தாக்குண்டு. திரு - திருவருள்.

மாடுஞ் சுற்றமும் மற்றுள போகமும்
மங்கையர் தம்மோடுங்
கூடி அங்குள குணங்களால் ஏறுண்டு
குலாவியே திரிவேனை
வீடுதந் தென்றன் வெந்தொழில் வீட்டிட
மென்மலர்க் கழல்காட்டி
ஆடு வித்தென தகம்புகுந் தாண்டதோர்
அற்புதம் அறியேனே. **#572**

செல்வமும், உறவும் இன்னுமுள்ள அனுபவப் பொருள்களும் என்னும் இவைகளோடும், பெண்களோடும் சேர்ந்து அவ்விடங்களில் உள்ள தன்மைகளால் தாக்கப்பட்டு களித்துத் திரிகின்ற என்னை, எனக்கு அவற்றினின்றும் விடுபடுதலை அருளி எனது தீவினைகளை நீக்குதற் பொருட்டு, எங்கள் பெருமான், மென்மையான தாமரை மலர் போன்ற

தன் திருவடியைக் காட்டி என் மனத்தில் புகுந்து ஆட்கொண்ட
ஆனந்தத்தால் ஒப்பற்ற அதிசயச் செயலின் பெருமையை அறிய
வல்லேனல்லேன்.

விளக்கவுரை

மாடு - பொன்னும், மணியும். அங்குள குணங்கள் - அவரிடம் உள்ள தன்மைகள். 'மங்கையர்.......ஏறுண்டு' என்றதை முதற்கண் கூட்டுக. குலாவி - கொண்டாடி. வெந்தொழில், இங்குக் கூறியன. ஆடுதல், களிப்பினால் என்க. அகம் - மனம்.

வணங்கும் இப்பிறப் பிறப்பிவை நினையாது
மங்கையர் தம்மோடும்
பிணைந்து வாயிதழ்ப் பெருவெள்ளத் தழுந்திநான்
பித்தனாய்த் திரிவேனைக்
குணங்க ளுங்குறி களுமிலாக் குணக்கடல்
கோமளத் தொடுங்கூடி
அணைந்து வந்தெனை ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே. **#573**

யாவரும் கீழ்ப்படுதற்குரிய இத்தன்மையுடைய பிறப்பு இறப்புகளாகிய
இவைகளை நீக்கும் வழியினை, எண்ணாது பெண்களோடும், சேர்ந்து,
வாய் இதழில் ஊறும், பெரிய நீர்ப் பெருக்கில் முழுகித் திளைத்து மயங்கி
அலைகின்ற என்னை, குணங் களும், அடையாளங்களுமில்லாத,
அருட்கடலாகிய இறைவன், அழகுடைய வளாகிய
உமையம்மையோடும் கூடி அணுகி வந்து ஆட் கொண்டருளின,
அதிசயச் செயலின் பெருமையை யான் அறிய வல்லேனல்லேன்.

விளக்கவுரை

வணங்கும் - தாழ்கின்ற; இழிகின்ற. இதழ் - இதழூறல் நுகர்ச்சியால் விளையும் இன்பம். கோமளம் - அழகு; அஃது அம்மையைக் குறித்தது.

இப்பி றப்பினில் இணைமலர் கொய்துநான்
இயல்பொடஞ் செழுத்தோதித்
தப்பி லாதுபொற் கழல்களுக் கிடாதுநான்
தடமுலை யார்தங்கள்
மைப்பு லாங்கண்ணால் ஏறுண்டு கிடப்பேனை
மலரடி யிணைகாட்டி
அப்பன் என்னைவந் தாண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே. **#574**

இப்பிறவியில் பொருத்தமான மலரைப் பறித்துத்
திருவைந்தெழுத்தினைச் சொல்ல வேண்டிய முறைப்படி சொல்லிப்

பிழைத்தல் இல்லாமல், அவனது பொன்னடிகள் மேல் சொரியாமல், பெரிய தனங்களையுடைய பெண்களது மை தீட்டுதல் பொருந்திய கண்ணாகிய வேலினால் எறியப்பட்டுக் கிடக்கின்றவனாகிய என்னை, என் தந்தையாகிய சிவபெருமான் எழுந்தருளி வந்து தன் தாமரை மலர் போலும் திருவடியினைக் காட்டி ஆட்கொண்டருளின அதியச் செயலின் பெருமையை யான் அறிய வல்லேனல்லேன்.

விளக்கவுரை

இணை மலர் - இணைத்தற்கு (தொடுத்தற்கு) உரிய பூ. தப்பிலாது - தவறாது.

மைப்பு உலாம் - மைதீட்டுதல் பொருந்திய. 'கிடப்பேனை' என்றதை, 'கிடப்பேற்கு' எனத் திரிக்க.

ஊச லாட்டுமிவ் வுடலுயி ராயின
இருவினை அறுத்தென்னை
ஓசை யாலுணர் வார்க்குணர் வரியவன்
உணர்வுதந் தொளியாக்கிப்
பாச மானவை பற்றறுத் துயர்ந்ததன்
பரம்பெருங் கருணையால்
ஆசை தீர்த்தடி யாரடிக் கூட்டிய
அற்புதம் அறியேனே. **#575**

பிறப்பு இறப்புகளாகிய ஊசலில் வைத்து ஆட்டுகின்ற உடம்பின்கண் உள்ள உயிரிலே பொருந்திய நல்வினை தீவினை என்னும் இரண்டையும் களைந்து, அடியேனை, நூலறிவால் அறிய முற்படுவார்க்கு, அறிய முடியாதவனாகிய இறைவன், உயர்வாகிய தனது மேலான பெரிய கருணையால் ஞானத்தைக் கொடுத்து ஞானமயமாக்கி மும்மலக்கட்டுகளை அறவே தொலைத்து, அவாவையறுத்து, தன் அடியார்களது அடியின்கீழ்ச் சேர்த்த, அதியச் செயலின் பெருமையை யான் அறிய வல்லேனல்லேன்.

விளக்கவுரை

'உடல் உயிராயினவற்றை ஊசல் ஆட்டும் இருவினை' என்க. 'ஓசை' என்பது, 'சொல்' என்னும் பொருளதாய், சொல்லாலாகிய நூலைக் குறித்தது.

ஒளி ஆக்கி - ஒளிப்பொருளாகிய மெய்ப்பொருளைத் தோற்றுவித்து.

பரம் - மேன்மை. 'உலகப் பற்றை அறுத்து அடிக்கீழ்க் கூட்டிய' என்க.

பொச்சை யானஇப் பிறவியிற் கிடந்துநான்
புழுத்தலை நாய்போல
இச்சை யாயின ஏழையர்க் கேசெய்தங்

கிணங்கியே திரிவேனை
இச்ச கத்தரி அயனுமெட் டாததன்
விரைமலர்க் கழல்காட்டி
அச்சன் என்னையும் ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே. **#576**

காட்டை ஒத்த இப்பிறவியில் பொருந்தி யான் புழுப் பொருந்திய தலையினையுடைய நாய் போன்று பெண்களுக்கே அவர்கள் விரும்பிய பணிகளைச் செய்து அவர்களோடு, சேர்ந்து அலைகின்ற எனக்கு, யாவர்க்கும் தந்தையாகிய சிவபெருமான் திருமாலும் பிரமனும் காண மாட்டாத தன் மணம் பொருந்திய தாமரை மலர் போலும் திருவடிகளை இவ்வுலகத்தில் வந்து காட்டியருளி, அடியேனையும் ஒரு பொருளாக நினைத்து ஆட்கொண்டருளிய அதிசயச் செயலின் பெருமையை யான் அறிய வல்லேனல்லேன்.

விளக்கவுரை

பொச்சையான - காடாகிய. இருளும், பிற துன்பங் களும், பரப்பும் உடைமை பற்றிப் பிறப்பினைக் காடாக உருவகம் செய்தார். புழுத்தலை நாய் - புழுவையுடைய தலையையுடைய நாய். பிற உறுப்புக்களிற் புழுக் கொள்வதினும், தலையிற் புழுக்கொள்ளுதல், துன்பமும், இழிவும் தருவதாகலின், தலையையே கூறினார். 'இனி, புழுத்து அலை நாய்' என்பாரும் உளர். ஏழையர்க்கு - ஏழையர்மாட்டு; உருபு மயக்கம். ஏழையர் - பெண்கள். இச் சகம் - இவ்வுலகம். 'இச்ச கத்து' எனின், வாளாதே மோனை கெடுதலாலும். பொருட் சிறப்பும் இன்மையானும், 'விச்சகத்து' என்பதே பாடம் போலும்! 'விச்சையகத்து' என்பது தொகுத்தலாய், 'விச்சகத்து' என வருதல் பொருந்துவதே. அச்சன் - தந்தை.

செறியும் இப்பிறப் பிறப்பிவை நினையாது
செறிகுழ லார்செய்யுங்
கிறியுங் கீழ்மையுங் கெண்டையங் கண்களும்
உன்னியே கிடப்பேனை
இறைவன் எம்பிரான் எல்லையில் லாததன்
இணைமலர்க் கழல்காட்டி
அறிவு தந்தெனை ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே. **#577**

நெருங்கி மேன்மேல் வரும், இப்பிறப்பு இறப்புகளாகிய இவைகளை நீக்கும் வழியை எண்ணாமல், அடர்ந்த கூந்தலை உடையவராகிய பெண்கள் செய்கின்ற பொய்ந் நடையை யும் தாழ்மையான தன்மையையும், கயல் மீன் போன்ற கண்களையும் நினைத்தே

கிடக்கின்றவனாகிய என்னை, யாவர்க்கும் தலைவனாகிய எம் தலைவன் எல்லையற்ற. தனது திருவடித் தாமரைகள் இரண்டையுங் காட்டியருளி, உண்மை அறிவினைக் கொடுத்து ஆட்கொண்டருளிய, அதிசயச் செயலின் பெருமையை யான் அறிய வல்லேனல்லேன்.

விளக்கவுரை

செறியும் - அடர்ந்துள்ள. கிறி - பொய்ம்மை; அவை இன்மொழியும், இனிய செயலும் போல்வன. அவற்றுள் பார்வை சிறப்புடைமையின், அதனை வேறு கூறினார். கீழ்மை - நாணமின்றி யொழுகுதல்.

1.42.சென்னிப் பத்து

தேவ தேவன்மெய்ச் சேவகன்
தென்பெ ருந்துறை நாயகன்
மூவ ராலும் அரியொ ணாமுத
லாய ஆனந்த மூர்த்தியான்
யாவ ராயினும் அன்ப ரன்றி
அறியொ ணாமலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவ டிக்கண்நம்
சென்னி மன்னிச் சுடருமே. **#578**

தேவர் பிரானும், உண்மையான வீரனும் அழகிய திருப்பெருந்துறைக்குத் தலைவனும், மும்மூர்த்திகளாலும், அறிய முடியாத முதல்வனாகிய, இன்ப வடிவினனும் அன்பரல்லாத பிறர் எவராயினும் அவர்களால் அறியக் கூடாத செந்தாமரை மலர் போன்ற ஒளியையுடையவனும் ஆகிய இறைவனுடைய தூய்மையான சிறந்த தாமரை மலர் போன்ற சிவந்த திருவடியின் கீழே, நமது தலை நிலை பெற்று நின்று விளங்கும்.

விளக்கவுரை

தேவ தேவன் - தேவர்கட்குத் தேவன். மெய்ச் சேவகன் - உண்மை வீரன். உண்மை வீரமாவது அஞ்ஞானத்தை அழித்தல். யாவராயினும் - எத்துணை உயர்ந்தோராயினும். மன்னி - மன்னுதலால். சுடரும் - ஒளிவிடும். 'தூய' என்றது, இனவெதுகை.

அட்ட மூர்த்தி அழகன் இன்னமு
தாய ஆனந்த வெள்ளத்தான்
சிட்டன் மெய்ச்சிவ லோக நாயகன்
தென்பெ ருந்துறைச் சேவகன்
மட்டு வார்குழல் மங்கை யாளையோர்
பாகம் வைத்த அழகன்றன்
வட்ட மாமலர்ச் சேவ டிக்கண்நம்
சென்னி மன்னி மலருமே. **#579**

அட்ட மூர்த்தங்களையுடையவனும், அழகை யுடையவனும் இனிய அமுத மயமான பேரின்பக் கடலானவனும், மேலானவனும் அழியாத சிவபுரத்துக்குத் தலைவனும், அழகிய திருப்பெருந்துறையில் எழுந்தருளிய வீரனும் தேன் மணம் கமழும், கூந்தலையுடைய உமையம்மையை ஒரு பாகத்தே வைத்த அழகனும் ஆகிய இறைவனது வட்ட வடிவமாகிய சிறந்த தாமரை மலர் போன்ற சிவந்த திருவடியின் கீழே, நமது தலை நிலை பெற்று நின்று பொலிவு பெற்று விளங்கும்.

விளக்கவுரை

சிட்டன் - மேலானவன். மட்டு - தேன். வட்டமாமலர் - தாமரை மலர். மலரும் - பொலிவுபெறும்.

நங்கை மீரெனை நோக்கு மின்நங்கள்
நாதன் நம்பணி கொண்டவன்
தெங்கு சோலைகள் சூழ்பெ ருந்துறை
மேய சேவகன் நாயகன்
மங்கை மார்கையில் வளையுங் கொண்டெம்
உயிருங் கொண்டெம் பணிகொள்வான்
பொங்கு மாமலர்ச் சேவ டிக்கண்நம்
சென்னி மன்னிப் பொலியுமே. **#580**

பெண்களே! என்னைப் பாருங்கள். நம் எல்லோர்க்கும் தலைவனும் நம்முடைய தொண்டை ஏற்றுக் கொண்ட வனும் தென்னஞ்சோலைகள் சூழ்ந்த பெருந்துறையிற் பொருந்திய வீரனும் யாவர்க்கும் தலைவனும் பெண்களுடைய கையிலுள்ள வளையல்களையும் கவர்ந்து கொண்டு எம்முடைய உயிரையும் கொள்ளை கொண்டு எமது தொண்டினை ஏற்றுக் கொள்பவனும் ஆகிய பெருமானுடைய மலரைப் போன்ற சிவந்த திருவடியின் கீழே, நம்முடைய தலை நிலை பெற்று நின்று விளங்கும்.

விளக்கவுரை

இத்திருப்பாட்டு, அகப்பொருள் நெறிபற்றி அருளிச் செய்தது. மங்கைமார், தாருகாவன முனிவர் பத்தினியர். 'அவர்பால் வளையே கொண்டொழிந்தான்; எம்பால் உயிரையே கொண்டான்' என்றாள். இஃது அடிகளை இறைவன் தன் அடிமையாக் கொண்டதைக் குறித்தது. முதற்கண், 'நம் பணி கொண்டவன்' என்றது, பொதுவாகவும், இறுதியில் 'எம்பணி கொள்வான்' என்றது சிறப்பாகவும் அருளிச் செய்தன. அன்றியும், 'எம் பணிகொள்வான்' என்றது, எம்மை ஆட்கொள்வான்' என்னும் பொருளதேயாம். ஆயினும், 'நம் பணிகொண்டவன்' எனப் பாடம் ஓதாது, 'அம்பணி கொண்டவன்' எனப் பாடம் ஓதி, 'நீரை அணியாகக் கொண்டவன்' என்று உரைப்பாரும் உளர்.

பத்தர் சூழப் பராபரன்
பாரில் வந்துபார்ப் பானெனச்
சித்தர் சூழச் சிவபிரான்
தில்லை மூதூர் நடஞ்செய்வான்
எத்த னாகிவந் தில்பு குந்தெமை
ஆளுங் கொண்டெம் பணிகொள்வான்
வைத்த மாமலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே. **#581**

தில்லையாகிய பழமையான பதியிலே நிருத்தம் புரிபவனும், மிகவும் மேலானவனும் ஆகிய, சித்தர்கள் சூழ்ந்து வணங்கும் அந்தச் சிவபெருமான் அடியார் புடை சூழ, பூமியில் வந்து அந்தணக் கோலத்தோடு ஏமாற்றுபவனாய் வந்து எங்கள் வீடுகளில் புகுந்து எம்மை அடிமை கொண்டு எமது தொண்டினை ஏற்றுக் கொள்ளும் படியாகச் சூட்டிய சிறந்த தாமரை மலர் போன்ற சிவந்த திருவடியின் கீழே, நமது தலை நிலைபெற்று பொலிவு பெற்று விளங்கும்.

விளக்கவுரை

சித்தர் - யோகிகள்; பதஞ்சலி முதலியோர். வலிய வந்து ஆட்கொண்டமையை, 'இல் புகுந்து' என்றார். வைத்த - சூட்டிய.

மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி
மதித்தி டாவகை நல்கினான்
வேய தோளுமை பங்கன் எங்கள்
திருப் பெருந்துறை மேவினான்
காயத் துள்ளமு தூற ஊறநீ
கண்டு கொள்ளென்று காட்டிய
சேய மாமலர்ச் சேவ டிக்கண்நம்
சென்னி மன்னித் திகழுமே. **#582**

பொய்யான உலக வாழ்க்கையை உண்மையானது என்று நினைத்து அதனைப் பாராட்டாதபடி, எமக்கு ஞானத்தைக் கொடுத்தவனும் மூங்கிலை ஒத்த தோளினையுடைய உமையம்மை யின் பாகனும் எமது திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய இறைவன், எனது உடம்பினுள் அமுதம் இடைவிடாது பெருகு மாறு 'நீ பார்' என்று காட்டி அருளிய சிறந்த செந்தாமரை மலர் போன்ற சிறந்த திருவடியின் கீழே, நம் தலை நிலைபெற்று நின்று விளங்கும்.

விளக்கவுரை

நல்கினான் - அருள்செய்தான், 'திருப்பெருந்துறை மேவினான்' என்பது, 'இறைவன்' என ஒருசொல் தன்மைப் பட்டு நின்று, 'எங்கள்'

என்றதனோடு நான்காவதன் பொருள் படத் தொக்கது. நிட்டை கைவந்த பின்னர், உடம்புள்ள பொழுதே உயிரினிடத்துச் சிவானந்தம் பெருகுமாதலின் அதனைக் காயத்துள் ஊறுவதாக அருளிச் செய்தார். கண்டு கொள் - இத்திருவடிகளின் இயல்பை அறிந்துகொள். சேய - செம்மையான.

சித்த மேபுகுந் தெம்மை யாட்கொண்டு
தீவி னைகெடுத் துய்யலாம்
பத்தி தந்துதன் பொற்க ழற்கணே
பன்ம லர்கொய்து சேர்த்தலும்
முத்தி தந்திந்த மூவு லகுக்கும்
அப்பு றத்தெமை வைத்திடு
மத்தன் மாமலர்ச் சேவ டிக்கண்நம்
சென்னி மன்னி மலருமே. **#583**

சித்தத்திலே புகுந்து எம்மை அடிமையாகக் கொண்டருளி, தீயவாகிய வினைகளை அழித்து உய்வதற்குரிய அன்பினைக் கொடுத்துத் தனது அழகிய திருவடியின் கண்ணே பல வகையான மலர்களைப் பறித்து இடுதலும், விடுதலையைக் கொடுத்து இந்த மூன்று உலகங்களுக்கும் அப்பால் எம்மைப் பேரின்பத்தில் வைக்கின்ற, ஊமத்தம்பூவை அணிகின்ற இறைவனது சிறந்த தாமரை மலர் போன்ற சிவந்த திருவடியின் கீழே, நமது தலை நிலைபெற்று நின்று பொலிவுபெற்று விளங்கும்.

விளக்கவுரை

'ஆம்' என்றது பெயரெச்சம். அது, 'பத்தி'என்னும் கருவிப் பெயர்கொண்டது.
முத்தி - சீவன் முத்திநிலை. மத்தன் - ஊமத்த மலரைச் சூடியவன். மோனை கெடுதலின், 'அத்தன்' எனப் பாடமோதுதல் சிறப் பன்று.

பிறவி யென்னுமிக் கடலை நீந்தத்தன்
பேர ருள்தந் தருளினான்
அறவை யென்றடி யார்கள் தங்க
ளருட்கு ழாம்புக விட்டுநல்
உறவு செய்தெனை உய்யக் கொண்ட
பிரான்தன் உண்மைப் பெருக்கமாம்
திறமை காட்டிய சேவ டிக்கண்நம்
சென்னி மன்னித் திகழுமே. **#584**

பிறவியாகிய இந்தக் கடலை நீந்துவதற்குத் தன்னுடைய பேரருளாகிய தெப்பத்தை கொடுத்தருளினவனும், துணையில்லாதவன் என்று எண்ணி, அடியார்களுடைய அருட் கூட்டத்தில் புகுவித்து அவர்களோடு

நல்ல உறவை உண்டாக்கி என்னைப் பிழைக்கும்படி ஆட்கொண்ட தலைவனுமாகிய இறை வனது உண்மையான பேரருளாகிய தனது வல்லமையைக் காட்டிய சிவந்த திருவடியின் கீழே, நமது தலை நிலைபெற்று நின்று விளங்கும்.

விளக்கவுரை

அறவை என்று - இவன் துணையிலி என்று இரங்கி. உண்மைப் பெருக்கமாம் திறமை - உண்மையினது மிகுதியாகிய ஆற்றல். அதனைக் காட்டினமை, சென்னியிற் சூட்டிய பொழுதே மயக்கெலாம் அற்று அன்பு பிழம்பாகச் செய்தது.

புழுவி னாற்பொதிந் திடுகு ரம்பையிற்
பொய்த னையொழி வித்திடும்
எழில்கொள் சோதியெம் ஈசன் எம்பிரான்
என்னுடை யப்பன் என்றென்று
தொழுத கையின ராகித் தூய்மலர்க்
கண்கள் நீர்மல்குந் தொண்டர்க்கு
வழுவிலாமலர்ச் சேவ டிக்கண்நம்
சென்னி மன்னி மலருமே. **#585**

புழுக்களால் நிறைந்துள்ள உடம்பில் பொருந்தி நிற்கும் நிலையற்ற வாழ்வை ஒழிக்கின்ற அழகையுடைய சோதியே! எம்மை ஆள்பவனே! எம்பெருமானே! என்னுடைய தந்தையே! என்று பலகால் சொல்லிக் கூப்பிய கையையுடையவராய், தூய்மையான தாமரை மலர் போன்ற கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரியும் அடியார்களுக்குத் தவறாது கிடைக்கின்ற தாமரை மலர் போன்ற சிவந்த திருவடியின்கீழே, நமது தலை நிலை பெற்று நின்று பொலிவு பெற்று விளங்கும்.

விளக்கவுரை

பொதிந்து - நிறைத்து. இடு, துணைவினை. பொய் - நிலையாத வாழ்வு. வழுவிலா - தவறாத, ஒருதலையாகக் கிடைக்கின்ற.

வம்ப னாய்த்திரி வேனை வாவென்று
வல்வி னைப்பகை மாய்த்திடும்
உம்ப ரான்உல கூடறுத்தப்
புறத்த னாய்நின்ற எம்பிரான்
அன்ப ரானவர்க் கருளி மெய்யடி
யார்கட் கின்பந் தழைத்திடுஞ்
செம்பொன் மாமலர்ச் சேவ டிக்கண்நம்
சென்னி மன்னித் திகழுமே. **#586**

வீணனாய்த் திரிகின்ற என்னை வா என்று அழைத்து வலிமையான

வினையாகிய பகையினை அழிக்கின்ற மேலிடத்தில் உள்ளவனும் உலகங்களை எல்லாம் ஊடுருவிச் சென்று அப்பாற் பட்டவனாய எமது தலைவனும் அன்பர்களுக்கு இரங்கி அருள் செய்பவனுமாகிய இறைவனது உண்மையான அடியார்களுக்கு இன்பம் பெருக நிற்கின்ற செவ்விய பொன் போன்ற சிறந்த தாமரை மலர் போலச் சிவந்த திருவடியின் கீழே, நம்முடைய தலை நிலை பெற்று விளங்கும்.

விளக்கவுரை

வம்பன் - வீணன். 'அருளி' என்றது பெயர். 'அருளிதன் சேவடி' என்க.

முத்த னைமுதற் சோதியை முக்கண்
அப்ப னைமுதல் வித்தினைச்
சித்த னைச்சிவ லோக னைத்திரு
நாமம் பாடித் திரிதரும்
பத்தர் காள்இங்கே வம்மின் நீர்உங்கள்
பாசந் தீரப் பணிமினோ
சித்த மார்தருஞ் சேவ டிக்கண்நம்
சென்னி மன்னித் திகழுமே. **#587**

இயல்பாகவே பாசங்களில் நீங்கியவனும் ஒளிப் பொருள்களுக்கெல்லாம் மூல ஒளியாய் உள்ளவனும் மூன்று கண்களையுடைய தந்தையும் காரணங்களுக்கெல்லாம் முன்னேயுள்ள காரணமானவனும் ஞான மயமானவனும் சிவபுரத்தவனும் ஆகிய இறைவன் திருப்பெயர்களைப் பரவித் திரிகின்ற அன்பர்களே! நீங்கள் இங்கு வாருங்கள். அவனை உங்களது பந்தங்கள் நீங்கும் பொருட்டு வணங்குங்கள். அங்ஙனம் வணங்கினால் உள்ளத்தில் நிறைந்த சிவந்த அவனது திருவடியின் கீழே நமது தலை நிலைபெற்று விளங்குதல் திண்ணம்.

விளக்கவுரை

முதற் சோதி - ஒளிப் பொருள்கட்கெல்லாம் ஒளி வழங்கும் ஒளி. இதனானே, 'எவ்வுயிர்க்கும் அறிவைப் பயப்பிக்கும் அறிவு' என்பதும் முடிந்தது. முதல் வித்து - முதற் காரணன்; 'பரம காரணன்' என்றபடி. இடைநிலைக் காரணர் பலர் உளராதல் அறிந்து கொள்க, 'பணிமின்' என்றதன் பின், 'என்னையெனின்' என்பது வருவிக்க. ஓகாரம், அசை நிலை. 'என்றும் உள்ளத்திருக்கும் சேவடி, பணிவார்க்கு வெளிநிற்கும்' என்றபடி.

1.43.திருவாசகம் - திருவார்த்தை

மாதிவர் பாகன் மறைபயின்ற
வாசகன் மாமலர் மேயசோதி
கோதில் பரங்கரு ணையடி

யார்குலாவுநீ திகுணமாக நல்கும்
போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்து
ஆதிப் பிரமம் வெளிப்படுத்த
அருளறிவார் எம்பிரா னாவாரே. **#588**

பெண் பொருந்திய பாகத்தனும், வேதம் சொன்ன மொழியையுடையவனும், உயர்ந்த இதய மலரில் வீற்றிருக்கும் ஒளிப்பிழம்பானவனும், குற்றமற்ற மேலான கருணையாளனும், அடியார்கள் கொண்டாடுகின்ற நீதியினையே குணமாக, அவர்களுக்கு அருள்புரியும், அரும்புகள் மலர்கின்ற சோலை சூழ்ந்த திருப்பெருந் துறையில் எழுந்தருளியிருக்கும் எமது புண்ணியப் பொருளானவனும் ஆகிய இறைவன் மண்ணுலகத்தில் வந்து இறங்கி, எல்லாவற்றுக்கும் முதலாயுள்ள பெரும் பொருளாகிய தன் தன்மையை வெளிப்படுத்திய அருளின் அருமையை அறியவல்லவர்கள் எம் பிரான் ஆவார்கள்.

விளக்கவுரை

இவர் - மேம்பட்டு விளங்குகின்ற. வாசகன் - சொல்லை யுடையவன். *'சோதி, நீதி'* என்பனபோல, *'கருணை'* என்பதும் இறைவனையே குறித்தது. போது அலர் - போதுகள் மலர்கின்ற. *'வந்திழிந்து'* என அளபெடையின்றி ஓதுதல் பொருந்தாமையறிக. ஆதிப் பிரமம் - எல்லாவற்றிற்கும் முதலாகிய பெரும் பொருளை. வெளிப்படுத்த - எமக்குப் புலப்படுத்திய. இப்பெயரெச்சம். *'அருள்'* என்னும் காரணப்பெயர் கொண்டது. *'அருளினது பெருமையை உணர்பவர் எமக்குக் கடவுளாவார்'* என்க. இங்ஙனங் கூறியது, *'அவரே சிவனடியார்'* என்றபடி. *'கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில் - அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவுளாரே'* *(தி. 6 ப.95 பா.10)* என்னும் திருத்தாண்டகத்தைக்காண்க.

மாலயன் வானவர் கோனும்வந்து
வணங்க அவர்க்கருள் செய்தஈசன்
ஞாலம தனிடை வந்திழிந்து
நன்னெறி காட்டி நலம்திகழுங்
கோல மணியணி மாடநீடு
குலாவு மிடவை மடநல்லாட்குச்
சீல மிகக்கரு ணையளிக்குந்
திறமறிவார் எம்பிரா னாவாரே. **#589**

திருமாலும் பிரமனும் தேவர் பிரானாகிய இந்திரனும் வந்து வழிபட அவர்களுக்கு அருள்புரிந்த ஆண்டவன் உலகத்தின் கண்ணே வந்து தோன்றி நல்ல வழியினைக் காட்டி நன்மை விளங்குகின்ற அழகிய

மணிகளால் அலங்கரிக்கப்பட்ட மாடங்கள் நெடிது விளங்குகின்ற திருவிடை மருதூரில் இளம் பெண் ஒருத்திக்கு, ஒழுக்கம் விளங்கும்படி கருணைபுரிந்த தன்மையினை அறிய வல்லவர்கள் எமக்குத் தலைவராவார்கள்.

விளக்கவுரை

நீடு குலாவும் - நெடிது விளங்குகின்ற. 'இடவை' என்பது, 'வந்தி' என்பவள் வாழ்ந்த இடத்தின் பெயர் போலும்! வந்தி பொருட்டு இறைவன் மண்சுமந்த வரலாறு வெளிப்படை. 'இடவை - இடைமருது' என உரைத்து, 'அதன்கண் மடநல்லாட்கு அருள்புரிந்த வரலாறு அறியப்பட்டிலது' என்று போவாரும், இடைமருதில் வரகுணன் அன்பிற்காக இறைவன் அவன் மனைவியை ஏற்றதனைப் பொருத்துவாரும் உளர்.

அணிமுடி ஆதி அமரர்கோமான்
ஆனந்தக் கூத்தன் அறுசமயம்
பணிவகை செய்து படவதேறிப்
பாரொடு விண்ணும் பரவியேத்தப்
பிணிகெட நல்கும் பெருந்துறையெம்
பேரரு ளாளன்பெண் பாலுகந்து
மணிவலை கொண்டுவான் மீன்விசிறும்
வகையறி வார் எம்பிரா னாவாரே. **#590**

அழகிய சடைமுடியையுடைய முதல்வனும் தேவர் கட்குத் தலைவனும் ஆனந்தக் கூத்துடையவனும், அறு சமயங்களும் தன்னை வணங்கும்படியாகச் செய்து மண்ணுலகத்தாரும், விண் ணுலகத்தாரும், வாழ்த்தி வணங்க, பிறவி நோய் நீங்கும் வண்ணம் அவர்கட்கு அருள்செய்கின்ற திருப்பெருந்துறையிலுள்ள எம் பெருங் கருணையாளனுமாகிய இறைவன் வலைப்பெண்ணாய் வந்த உமையம்மையை மணக்க விரும்பித் தோணியில் ஏறி, அழகிய வலையைக் கொண்டு பெரிய கௌிற்று மீனைப் பிடித்த திறத்தை அறிய வல்லவர்கள் எமக்குத் தலைவராவார்கள்.

விளக்கவுரை

பிஞ்ஞகனாகலின், அவனது முடியை, 'அணிமுடி' என்றார். ஆதி - முதல்வன். அறுசமயம், அகச்சமயங்கள். 'அவை தன்னைப் பணியும் வகைசெய்து' என்றது, 'அறுசமயங்களை' வகுத்து என்றபடி. படவை, இக்காலத்தார், 'படகு' என்ப. மணி - அழகு. 'வலைகொண்டு விசிறும்' என இயைக்க. வான் மீன் - பெரிய மீன். 'மீன்மேல் விசிறும்' என்க. இறைவன் வலை வீசிய திருவிளையாடல் வெளிப்படை.

வேடுரு வாகி மகேந்திரத்து
மிகுகுறை வானவர் வந்துதன்னைத்
தேட இருந்த சிவபெருமாஅன்
சிந்தனை செய்தடி யோங்களுய்ய
ஆடல் அமர்ந்த பரிமாஏறி
ஐயன் பெருந்துறை ஆதிஅந்நாள்
ஏடர் களையெங்கும் ஆண்டுகொண்ட
இயல்பறிவார் எம்பிரா னாவாரே. **#591**

யாவர்க்கும் தலைவனும் திருப்பெருந்துறையில் உள்ள முதல்வனும், 'வேடுவனது உருவங் கொண்டு மகேந்திர மலையின்கண் மிக்க குறைகளையுடைய தேவர்கள் வந்து தன்னைத் தேடும்படியாய் மறைந்திருந்தவனுமாகிய சிவபெருமான் அடியேங்கள் உய்யும் வண்ணம் திருவுளங் கொண்டு அக்காலத்தில் ஆடலை விரும்பிய குதிரைமேல் ஏறி வந்து தோழர்களை எவ்விடத்தும் ஆட்கொண்டருளிய, தன்மையை அறிய வல்லவர்கள் எமக்குத் தலைவராவார்கள்.

விளக்கவுரை

மிகு குறைவானவர் - மிக்க குறையுடைய தேவர். சிந்தனை செய்து - தனது திருவருளை நினைந்து. ஏடர்கள் - தோழர்கள்; அடியார்கள். 'வானவர் தேட மகேந்திரத்து இருந்த சிவபெருமான், ஐயன், பெருந்துறை ஆதி, அடியோங்கள் சிந்தனை செய்து உய்ய, அந்நாள் வேடுருவாகி, பரிமா ஏறி எங்கும் ஏடர்களை ஆண்டு கொண்ட இயல்பு அறிவார் எம்பிரானாவார்' எனக் கொண்டு கூட்டி முடிக்க. குதிரை வீரன் வடிவத்தை, 'வேடுரு' என்றார். சிவ பிரான் மதுரையில் குதிரை கொணர்ந்த திருவிளையாடல் வெளிப்படை.

வந்திமை யோர்கள் வணங்கியேத்த
மாக்கரு ணைக்கட லாய்அடியார்
பந்தனை விண்டற நல்கும்எங்கள்
பரமன் பெருந்துறை ஆதிஅந்நாள்
உந்து திரைக்கட லைக்கடந்தன்
றோங்கு மதிலிலங் கைஅதனிற்
பந்தணை மெல்விர லாட்கருளும்
பரிசறிவார் எம்பிரா னாவாரே. **#592**

தேவர்கள் வந்து வழிபட்டுத் துதிக்க, அவர் களுக்குப் பேரருள் புரியும் கடலாய், அடியவர்களது பாசக்கட்டு விட்டு நீங்கும்படி அருளுகின்ற எங்கள் மேலானாகிய திருப்பெருந்துறை முதல்வன் அக்காலத்தில் மேன்மேல் பரவுகின்ற அலைகளையுடைய கடலைத் தாண்டிச் சென்று உயர்ந்த மதிலையுடைய இலங்கையில் பந்து பொருந்திய

மென்மையான விரல்களையுடைய மண்டோதரிக்கு அவள் நினைத்த அன்றே அருள் செய்த தன்மையை அறியக் கூடியவர்கள் எமக்குத் தலைவராவார்கள்.

விளக்கவுரை

இலங்கையில் வண்டோதரிக்கு அருள்புரிந்த வரலாறு (தி.8 குயிற்பத்து பா.2 உரை) முன்னர்க் கூறப்பட்டது.

வேவத் திரிபுரம் செற்றவில்லி
வேடுவ னாய்க்கடி நாய்கள்சூழ
ஏவற் செயல்செய்யுந் தேவர்முன்னே
எம்பெரு மான்தான் இயங்குகாட்டில்
ஏவுண்ட பன்றிக் கிரங்கியீசன்
எந்தை பெருந்துறை ஆதிஅன்று
கேவலங் கேழலாய்ப் பால்கொடுத்த
கிடப்பறிவார் எம்பிரா னாவாரே. **#593**

முப்புரம் தீயில் வெந்தொழிய அழித்த வில்லை யுடையவனும், ஆண்டவனும், எந்தையும் ஆகிய திருப்பெருந்துறை முதல்வன், பணியைச் செய்யும் தேவர்களது முன்னிலையில், கடிக் கின்ற நாய்கள் சூழ்ந்து வர, தான் வேடனாகிச் சென்ற காட்டிலே, அம்பு தைத்து இறந்த பன்றிக்குத் திருவுளம் இரங்கி அக்காலத்தில் அற்ப மாகிய தாய்ப்பன்றியாகி அதன் குட்டிகளுக்குப் பால்கொடுத்த திரு வுள்ளப் பாங்கை அறிய வல்லவர்கள் எமக்குத் தலைவர் ஆவார்கள்.

விளக்கவுரை

'வேடுவனாய்' என்றது முதல், 'இயங்கு காட்டில்' என்றது காறும் உள்ளவை, சிவபெருமான் அருச்சுனன் பொருட்டுப் பன்றிப்பின் வேடனாய்ச் சென்ற வரலாற்றைக் குறிப்பன. அக்காலத் தில் தேவர்கள் ஏவல் செய்யும் வேடுவராய் வந்தனர் என்பதும் வரலாறு. சிவபெருமான் பன்றிக் குட்டிகட்குப் பால் கொடுத்த காட்டினை, அருச்சுனன் பொருட்டுச் சென்ற காடாகக் கூறியது, 'நீவிர் உண்ணும் சோறே யாம் உண்பதும்' என்றல்போல, 'காடு' என்னும் பொதுமை பற்றி. ஏவுண்ட பன்றி - அம்பு தைக்கப்பட்டு இறந்த தாய்ப் பன்றி. கேவலம் - தனிமை; சிறப்புச் சிறிதும் இன்மை. 'கேவலமாக' என ஆக்கம் வருவித்துரைக்க. இங்ஙனம் ஆக்க வினை தொகுக்கப் பட்ட தொகாநிலை யாதலின், 'கேவலங் கேழலாய்' என, மகரம் இனமெல்லெழுத்தாய்த் திரிந்தது. கேழல் - பன்றி. 'பன்றியுள் ஒருவகை கேழல்' என்பதன்றி, 'கேழல் ஆண் பன்றி' என்றல் எங்கும் இல்லை. அதனால், 'ஒருசாரார் அங்ஙனம் கூறுப' என்னும் துணையே குறித்துப்போவர் தொல்காப்பிய உரையாளர்.

கிடப்பு - கிடை. தாய்ப்பன்றி கிடந்தவழியன்றி அதன் இளங்குட்டிகள் பாலுண்ண மாட்டாமையறிக. 'கிடை' என்றது, கிடத்தற்கு ஏதுவாய அருளைக் குறித்தது. இறைவன் பன்றிக் குட்டிகட்குப் பால் கொடுத்த திருவிளை யாடல் வெளிப்படை.

நாதம் உடையதோர் நற்கமலப்
போதினில் நண்ணிய நன்னுதலார்
ஓதிப் பணிந்தலர் தூவியேத்த
ஒளிவளர் சோதியெம் ஈசன்மன்னும்
போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்துதோன்றிப்
பேதங் கெடுத்தருள் செய்பெருமை
அறியவல்லார் எம்பிரா னாவாரே. **#594**

வண்டின் ரீங்கார ஒலியையுடையதாகிய ஒப்பற்ற தாமரை மலரில் பொருந்திய கலைமகள் திருமகள் என்னும் மகளிர் இருவரும் வாழ்த்தி வணங்கி மலர் தூவி வழிபட, ஒளி மிகுகின்ற சோதி வடிவமான எமது ஆண்டவனும், நிலைபெற்ற மலர்கள் விரிகின்ற சோலை சூழ்ந்த திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் எமது புண்ணிய மூர்த்தியுமாகிய இறைவன், பூமியில் வந்து காட்சி கொடுத்து, வேற்றுமைகளைக் களைந்து அருள் புரிகின்ற பெருமையினை அறிய வல்லவர்கள் எமக்குத் தலைவர் ஆவார்கள்.

விளக்கவுரை

நாதம் - வண்டுகளின் ஒலி. கமலப்போதினில் நண்ணிய நன்னுதலார் - திருமகளும், கலைமகளும். அவ்விருவரும் முறையே திருவாரூரிலும், திருக்கண்டியூரிலும் சிவபெருமானை வழிபட்டுத் தத்தம் கணவர் உயிர்பெற்றெழும் வரத்தைப் பெற்றமையை அவ்வத் தல புராணங்களுட் காண்க.

இவற்றுள், திருமகள் திருவாரூரில் வழிபட்டு வரம் பெற்ற வரலாறு பலரும் அறிந்தது. கண்டியூர் அட்ட வீரட்டங்களுள் ஒன்றாதலும், அது பிரமனது சிரத்தைக் கொய்த வீரட்டமாதலும் அறியற் பாலன. 'காபாலி - போரார் புரம் பாடிப் பூவல்லி கொய்யாமோ' *(தி.8 திருப்பூவல்லி-10)* என்றதில், அடிகள் அட்ட வீரட்டங்களைக் குறித்தல் நினைவு கூரற் பாலது. மாலுக்கும், அயனுக்கும் சிவபெருமான் அருள்புரிந்தமையைப் பலவிடத்தும் அருளிச் செய்த அடிகள், இங்கு. அவர்தம் தேவியர்க்கு அருள் புரிந்தமையை அருளிச்செய்தார் என்க.

பூவலர் கொன்றைய மாலைமார்பன்
போருகிர் வன்புலி கொன்றவீரன்
மாதுநல் லாளுமை மங்கைபங்கன்

வண்பொழில் சூழ்தென் பெருந்துறைக்கோன்
ஏதில் பெரும்புகழ் எங்கள்ஈசன்
இருங்கடல் வாணற்குத் தீயில்தோன்றும்
ஓவிய மங்கையர் தோள்புணரும்
உருவறிவார் எம்பிரா னாவாரே. **#595**

மலர்கள் விரிகின்ற அழகிய கொன்றை மாலையை அணிந்த, மார்பையுடையவனும் போர்த்தொழிலுக்குரிய நகங்களை யுடைய வலிமை மிகுந்த புலியைக் கொன்ற வீரனும், மாதரிற் சிறந்தவளாகிய உமையம்மையின் பாகனும், வளமையான சோலை சூழ்ந்த அழகிய திருப்பெருந்துறை அரசனும் ஆகிய குற்றமில்லாத பெரும் புகழையுடைய எங்கள் ஆண்டவன் பெரிய கடலில் வாழ்பவனாகிய வருணனுக்கு நெருப்பில் தோன்றிய சித்திரம் போன்ற பெண்களுடைய தோள்களைத் தழுவிய உருவத்தின் தன்மையை அறிய வல்லவர்கள் எமக்குத் தலைவர் ஆவார்கள்.

விளக்கவுரை

'கொன்றைய பூ அலரும் மாலை' என்க. 'போர்ப் புலி' என இயையும். 'ஏதம் இல்' என்பது கடைக் குறைந்து, 'ஏதில்' என்றா யிற்று. கடல் வாணன் - கடல் வாழ்க்கையுடையவன்; வலைஞன். தீயில் தோன்றும் - தீயிடத்துத் தோன்றிய. ஓவிய மங்கையர் - சித்திரம் போலும் அழகுடைய மகள். வலைஞர்கோனிடத்து மகளாயிருந்த உமையம்மையைச் சிவபிரான் வலைஞர் மகனாய்ச் சென்று மணந்த திருவிளையாடல் வெளிப்படை.

முன்பு மூன்றாம் திருப்பாட்டில், வலைவீசி நந்தி சாபத்தை நீக்கினமை கூறினார். இங்கு வலையர் மகளாகியிருந்த அம்மையை மணந்தமை கூறினார். இங்குக் குறிக்கப்பட்ட வரலாறு பற்றி யாதும் கூறாது போவார் போக, கூறப்புகுந்தோர் யாவரும் இங்குக் கூறிய இவ் வரலாற்றையே கூறினார்; எனினும், 'தீயில் தோன்றும்' என்ற வேறுபாடு ஒருபால் நிற்பினும், 'மங்கையர்' எனப் பன்மை கூறினமையின், இவ்வரலாறு இன்னும் ஆய்ந்துணரற்பாலதே. 'ஓவிய' என்பது, நீங்கிய எனவும் பொருள்கொளற்குரியது. 'மங்கைதன் தோள்' என்பது பாடமாயின் மேற்குறித்த வரலாற்றைக் கொள்ளத் தடையில்லை.

தூவெள்ளை நீறணி எம்பெருமான்
சோதி மகேந்திர நாதன்வந்து
தேவர் தொழும்பதம் வைத்தஈசன்
தென்னன் பெருந்துறை ஆளிஅன்று
காதல் பெருகக் கருணைகாட்டித்
தன்கழல் காட்டிக் கசிந்துருகக்

கேதங் கெடுத்தென்னை ஆண்டருளுங்
கிடப்பறிவார் எம்பிரா னாவாரே. #596
தூய்மையான திருவெண்ணீற்றையணிந்த, எம்பிரானும்,
ஒளியையுடைய மகேந்திர மலைக்குத் தலைவனும் தேவர்கள் வந்து
வணங்கும்படியான தன் திருவடியை அடியார்கள் மேல் வைத்தருளிய
ஆண்டவனும் அழகிய நல்ல திருப்பெருந் துறையை ஆள்பவனும் ஆகிய
இறைவன் அக்காலத்தில் எனக்கு அன்பு மிகும்படி, திருவருள் புரிந்து
தன் திருவடியைக் காட்டியருளி, மனம் நைந்து உருகும்படி துன்பத்தை
ஒழித்து என்னை ஆட்கொண்டருளின திருவுள்ளக் கிடக்கையை அறிய
வல்லவர்கள் எமக்குத் தலைவர் ஆவார்கள்.

விளக்கவுரை

'தேவர் தொழும் பாதத்தை எம் முடிமேல் வைத்த ஈசன்' என்க. கேதம் - துன்பம். 'ஆண்டருளும்' என்றது, 'இனியும் வந்து ஆட்கொண்டருளுகின்ற' என எதிர்காலச் சொல்லாம்.
கிடப்பு - கிடைப்பு. 'கிடைப்பு' என்பதே பாடம் என்றலு மாம். இறைவன் தம்மைத் தில்லைக்கு வருக எனப்பணித்தமையின், காலம் நீட்டித் தொழியினும் என்றேனும் ஒருநாள் தோன்றித் தம்மை ஏற்றருளல் ஒரு தலை என்பது பற்றி இங்ஙனம் அருளிச் செய்தார். இதனால், அடிகளை இறுதிக் கண் இறைவன் எவ்வாற்றாலேனும் தானே நேர்நின்று தன்பால் அழைத்துக்கொண்டான் என முடித்தலே முடிபாமன்றி, அவரது வாழ்க்கை வரலாற்றினைப் பிறிதோராற்றால் முடித்தல் முடிபாகாது. பிற முடிபே முடிபாயின், திருப்பெருந்துறையில் இறைவனு டன் செல்ல விரும்பிய அடிகளை, 'தில்லைக்கு வருக' என இறைவன் பணித்த சொல்லும், அடிகள் திருவாசகம் முழுதும் தம்மை மீளத் தோன்றி அழைத்துக் கொள்ளல் வேண்டும் எனச் செய்து கொண்ட விண்ணப்ப மொழிகளும் எல்லாம் பயனில் சொற்களாய்ப் போமாறு அறிக.

அங்கணன் எங்கள் அமரர்பெம்மான்
அடியார்க் கமுதன் அவனிவந்த
எங்கள் பிரான்இரும் பாசந்தீர
இகபர மாயதோர் இன்பமெய்தச்
சங்கங் கவர்ந்துவண் சாத்தினோடுஞ்
சதுரன் பெருந்துறை ஆளிஅன்று
மங்கையர் மல்கும் மதுரைசேர்ந்த
வகையறிவார் எம்பிரா னாவாரே. #597
அழகிய கண்ணையுடையவனும், எங்கள் தேவ தேவனும்
அடியவர்களுக்கு அமுதம் போன்றவனும் பூமியில் குரு வாகி வந்த
எங்கள் பெருமானும் மிக்க திறமையுடையவனும் ஆகிய,

திருப்பெருந்துறை இறைவன், பெரிய பாசம் நீங்கவும், இம்மை மறுமைப் பயனாய் இருப்பதாகிய ஒப்பற்ற ஆனந்தத்தையடையவும், அந்நாளில் சங்கினாலாகிய வளையல்களை முனிபத்தினியர்களிடம் கவர்ந்து கொண்டு வளமையான வணிகக் குழாத்தினோடும் வணிகப் பெண்டிர் நிறைந்துள்ள மதுரையம்பதியை அடைந்த தன்மையினை அறியக் கூடியவர்கள் எமக்குத் தலைவராவார்கள்.

விளக்கவுரை

'(யாங்கள்) பாசந் தீரவும், இன்பம் எய்தவும் மதுரை சேர்ந்த வகை' என்க. சங்கம் - வளையல். 'வளையலைக் கவர்ந்து' என்றது, 'மங்கையரைக் காதல் கூரப் பண்ணினான்' என்றபடி. சாத்து- வாணிகக் குழாம். சதுரன் - திறமையுடையவன். நான்காம் திருப் பாட்டில் குதிரை கொணர்ந்தமையை அருளிச் செய்தார்; இதனுள், குதிரை வாணிகத் தலைவனாய் வந்த பொழுது காணப்பட்ட அவனது பேரழகினை அருளிச் செய்தார்.

1.44.எண்ணப்பதிகம்

பாருரு வாய பிறப்பற வேண்டும்
பத்திமை யும்பெற வேண்டும்
சீருரு வாய சிவபெரு மானே
செங்கம லம்மலர்போல்
ஆருரு வாயஎன் ஆரமு தேஉன்
அடியவர் தொகைநடுவே
ஓருரு வாயநின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக்கொண் டருளே. **#598**

சிறப்பையே வடிவாக உடைய சிவபிரானே! செந்தாமரை மலர்போன்ற அரிய உருவத்தையுடைய எனது அரிய அமுதமானவனே! பூவுலகில் தோன்றுகின்ற உடம்புகளாகிய பிறவிகள் வாராது ஒழிய வேண்டும். அதற்கு உன்னிடத்தில் வைக்கின்ற அன்பையும் நான் அடைய வேண்டும். அது நிலைக்க உன்னடியார் கூட்டத்தின் நடுவில் ஒப்பற்ற வடிவமாகிய உன்னுடைய திருவருளைக் காட்டி அடியேனையும் உய்தி பெறும்படி சேர்த்துக் கொண்டருள் வாயாக.

விளக்கவுரை

பார் உரு - நிலவுலகத்திற்கு ஒத்த உடம்பு; என்றது, இப்பிறப்பினை. இஃது அற்றவழி இறைவன் திருவடி கூடுதல் திண்ண மாதலின், இப்பிறப்பறுதல் மாத்திரையே கூறினார். 'வேண்டும்' என்றது, 'இன்றிமையாதது' என்றதாம், பத்திமை பெறுதல், பிறப்பு அறுந்துணையும் என்க. இதனால், 'பிறப்பு அற்றபின் பத்திமை

வேண்டா' என்றதன்று. ஆண்டுப் பத்திமைக்குத் தடையின்மையின் அதுதானே நிகழும்; பிறப்பு உள்ளபொழுதே அஃது அரிதாகலின், அங்ஙனம் அரிதாகற்கு ஏதுவாய தடைகள் நீங்குதல் வேண்டும் என்றவாறு. சீர் உரு - சிறப்புடைய பொருள். 'செங்கமல மலர் போல்' என விகாரமின்ற யோதுதல் பாடமாகாமையறிக. 'செங்கமல மலர் போலும்' எனப் பாடம் ஓதுவாரும் உளர். ஆர் உரு - பொருந்திய வடிவம். ஓர் உரு - ஒப்பற்ற வடிவம். இறைவனது வடிவம் அருளே யாதலின், அதனை, 'திருவருள்' என்றார்.

உரியேன் அல்லேன் உனக்கடிமை
உன்னைப் பிரிந்திங் கொருபொழுதுந்
தரியேன் நாயேன் இன்னதென்
றறியேன் சங்கரா கருணையினாற்
பெரியோன் ஒருவன் கண்டுகொள்
என்றுன் பெய்கழல் அடிகாட்டிப்
பிரியேன் என்றென் றருளிய அருளும்
பொய்யோ எங்கள் பெருமானே. **#599**

சங்கரனே! எம் தலைவனே! உனக்கு அடிமையா யிருப்பதற்கு உரிய தகுதியுடையேனல்லேன். எனினும் உன்னை விட்டு நீங்கி இவ்விடத்தில் ஒருகணமும் தங்கியிருக்கமாட்டேன். இரக்கத்தால் பெரிய ஒப்பற்றவனாகிய நீ உன் கழலையணிந்த திருவடியைப் பார்த்துக் கொள்வாயாக என்று காட்டி உன்னைப் பிரிய மாட்டேன் என்று அருளிச் செய்த உன் திருவருளும் பொய்தானோ?. நாயனையான் அதன் தன்மை இன்னதென்று அறியமாட்டேன்.

விளக்கவுரை

'செய்ய' என ஒருசொல் வருவித்து, 'உனக்கு அடிமை செய்ய உரியேன் அல்லேன்' என மாற்றிக்கொள்க. 'பொழுது' என்றது மிகச்சிறிய நொடிப்பொழுதை. 'இதற்குக் காரணம் இன்னது என்று அறியேன்' எனவும், நீ, கருணையினால் யான் பெரியோன் ஒருவன் கண்டுகொள்க என்று' எனவும் கொள்க. 'என்றென்று' என்ற அடுக்கு வலியுறுத்தற்கண் வந்தது. தாம் வேண்டியும் வாராது பிரிந்து நிற்றலின், 'பிரியேன் என்று அருளிய அருளும் பொய்யோ' என்றார்.

என்பேஉருக நின்அருள் அளித்துன்
இணைமலர் அடிகாட்டி
முன்பே என்னை ஆண்டு கொண்ட
முனிவா முனிவர் முழுமுதலே
இன்பே அருளி எனையுருக்கி
உயிருண் கின்ற எம்மானே

நண்பே யருளாய் என்னுயிர்
நாதா நின்னருள் நாணாமே. #600

என் எலும்புகளெல்லாம் உருகும் வண்ணம் உன் திருவருளைத் தந்து உன்னுடைய இரண்டு தாமரை மலர் போன்ற திருவடியைக் காட்டி முன்னமே என்னை ஆட்கொண்ட முனிவனே! முனிவர்கட் கெல்லாம் முதற்பொருளானவனே! பேரின்பமே கொடுத் தருளி என்னை உருகுவித்து என் பசுபோதத்தை நீக்குகின்ற எங்கள் பெரியோனே! எனது உயிர்த் தலைவனே! உன்னுடைய திருவருளால் கூசாமல் உன்னுடைய நட்பை எனக்கு அருளிச் செய்யவேண்டும்.

விளக்கவுரை

முனிவன் - ஆசிரியன். முனிவர் முழுமுதல் - முற்றத் துறந்த முனிவர் பற்றும் முழுமுதற் கடவுள். 'உயிர்' என்றது, அதன் போதத்தை. நண்பே - நண்பனே 'நின் அருளை அடியேனுக்கு நீ நாணாமே அருளாய்' என்க. நாணுதல் இறைவன் தனது பெருமையை யும் இவரது சிறுமையையும் கருதியாம். 'நண்பே' என்றது இன வெதுகை.

பத்தில னேனும் பணிந்தில னேனும்உன்
உயர்ந்தபைங் கழல்காணப்
பித்தில னேனும் பிதற்றில னேனும்
பிறப்பறுப் பாய்எம் பெருமானே
முத்தனை யானே மணியனை யானே
முதல்வனே முறையோஎன்
றெத்தனை யானும் யான்தொடர்ந் துன்னை
இனிப்பிரிந் தாற்றேனே. #601

எம்பிரானே! முத்துப் போன்றவனே! மாணிக் கத்தைப் போன்றவனே! தலைவனே! முறையோவென்று எவ்வள வாயினும் நான் உன்னைப் பற்றித் தொடர்ந்து இனிமேல் பிரிந்திருக்கப் பொறுக்க இயலாதவனாகின்றேன். ஆதலின் பற்று இல்லாதவனாயினும், வணங்குதல் இல்லாதவனாயினும் உனது மேலான பசுமையான கழலையணிந்த திருவடிகளைக் காண்பற்கு விருப்பமில்லாதவனாயினும், துதித்திலேனாயினும் என் பிறவியைப் போக்கியருள்வாயாக.

விளக்கவுரை

பற்று, 'பத்து' எனத் திரிந்தது. 'முத்தனையானே' என்பது முதலியன வேறு தொடர். எத்தனை வகையானும் உன்னைத் தொடர்ந்து' என்க. பிரிந்து ஆற்றேன் - பிரிந்து ஆற்றேனாவேன்; என்றது, 'பிரியேனாவேன்' என்றபடி.

காணும தொழிந்தேன் நின்திருப் பாதங்
கண்டுகண் களிகூரப்
பேணும தொழிந்தேன் பிதற்றும தொழிந்தேன்
பின்னைஎம் பெருமானே
தாணுவே அழிந்தேன் நின்னினைந் துருகுந்
தன்மைஎன் புன்மைகளாற்
காணும தொழிந்தேன் நீயினி வரினுங்
காணவும் நாணுவனே. **#602**

எம் பிரானே! நிலையானவனே! உன் திருவடியைப் பிரிந்திருத்தலால் காண்பதை ஒழிந்தேன். கண்கள் களிப்பு மிகும்படி பார்த்துப் போற்றுவது ஒழிந்தேன். வாயால் துதிப்பதையும் விட்டேன். உன்னை எண்ணி உருகுகின்ற இயல்பும் என்னுடைய அற்பத் தன்மையால் தோன்றுதல் இல்லேனாயினேன். இவற்றால் பிறகு கெட்டேன். அதனால் நீ இனிமேல் என் முன் வந்தாலும் பார்ப்பதற்கும் கூசுவேன்.

விளக்கவுரை

'காணும் அது' என்றற்றொடக்கத்தனவற்றுள், முற்றியலுகரமும் குற்றியலுகரம்போல உயிர்வருமிடத்துக் கெட்டது. 'நின் திருப்பாதத்தைக் காணும் அது' எனவும், 'உருகும் தன்மையைக் காணும் அது' எனவும், இயைக்க. 'என்புன்மைகளால்' என்றது, 'ஒழிந்தேன்' என்றன பலவற்றிற்குமாம். 'வரினும்' என்ற உம்மை, எதிர்மறை, 'காணவும்' என்ற உம்மை, இழிவு சிறப்பு. நாணுதல், முன்பெல்லாம் ஒழிந்தமை பற்றி.

பாற்றிரு நீற்றெம் பரமனைப்
பரங்கரு ணையோடும் எதிர்ந்து
தோற்றிமெய் யடியார்க் கருட்டுறை யளிக்குஞ்
சோதியை நீதியிலேன்
போற்றியென் அமுதே எனநினைந் தேத்திப்
புகழ்ந்தழைத் தலறியென் னுள்ளே
ஆற்றுவனாக உடையவ னேஎனை
ஆவஎன் றருளாயே. **#603**

என்னை அடிமையாக உடையவனே! பால்போல வெண்மையாகிய திருநீற்றையணிந்த எம் மேலோனும், மேலான கருணையோடும் எதிரே வந்து காணப்பட்டு உண்மை அடியவர் களுக்கு அருள் வழிநல்கும் ஒளிப்பிழம்பும், ஆகிய உன்னை அறநெறி யில்லாத யான் என் அமுதமே என்று எண்ணித் துதித்துப் போற்றி அழைத்து நின்று என் மனத்தில் ஆறுதல் அடையும்படி, அடியேனுக்கு ஐயோ என்று இரங்கி அருள் புரிவாயாக.

விளக்கவுரை

பால் திருநீறு - பால்போலும் திருநீறு. எதிர்ந்து தோற்றி- முன்வந்து தோன்றி. அருள் துறை - அருளாகிய திசை. ஆற்றுவனாக - ஆற்றுவேனாதலின். 'எம் பரமனை' முதலியன, முன்னிலைக்கண் படர்க்கை வந்த இடவழுவமைதி.

1.45.யாத்திரைப் பத்து

பூவார் சென்னி மன்னனெம்
புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவா துள்ளம் கலந்துணர்வாய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆஆ என்னப் பட்டன்பாய்
ஆட்பட் டீர்வந் தொருப் படுமின்
போவோம் காலம் வந்ததுகாண்
பொய்விட் டுடையான் கழல்புகவே. **#604**

மலர் நிறைந்த முடியையுடைய அரசனாகிய பாம்பணிந்த எங்கள் பெருமான், சிறியவர்களாகிய நம்மை, இடை யறாமல் உள்ளத்தில் கலந்து உணர்வுருவாய் உருக்குகின்ற பெருகிய கருணையினால், ஐயோ என்று இரங்கியருளப்பட்டு அன்பு உருவாய் ஆட்பட்டவர், நிலையில்லாத வாழ்க்கையை விட்டு நம்மை ஆளாக உடைய இறைவனது திருவடியை அடையக் காலம் வந்துவிட்டது. போவோம். வந்து முற்படுங்கள்.

விளக்கவுரை

புயங்கம் - பாம்பு; 'ஒருவகை நடனம்' எனவும் கூறுப. சிறியோமை ஓவாது - சிறியேங்களை விட்டு நீங்காது.
என்னப்பட்டு - என்று இரங்கி அருள் செய்யப்பட்டு. காண், முன்னிலையசை. பொய் - நிலையில்லாத உடம்பு. 'ஆட்பட்டீர், பொய்விட்டு உடையான் கழல் புகக் காலம் வந்தது, போவோம்; ஒருப்படுமின்' என வினை முடிக்க.

புகவே வேண்டா புலன்களில்நீர்
புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கவெல்லாம்
வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத் துள்புகுந்து
நாயே அனைய நமையாண்ட
தகவே யுடையான் தனைச்சாரத்
தளரா திருப்பார் தாந்தாமே. **#605**

நாட்டார் நகை செய்ய, உலகில் எழுந்தருளி நாயைப் போன்ற நம்மை ஆட்கொண்ட பெருமையையுடைய இறைவனை அடைந்தால் அவரவர் தளர்ச்சி நீங்கி இருப்பார்கள். ஆதலின் அடியவர்களே! நீங்கள் ஐம்புல விடயங்களில் செல்ல வேண்டா. பாம்பணிந்த பெருமானுடைய தாமரை மலரை ஒத்த திருவடிகளை மிகுதியாக நினையுங்கள். எஞ்சியவையெல்லாம் நமக்கு வேண்டா. அவைகளை நம்மிடத்திலிருந்து நீங்கும்படி விட்டு விடுங்கள்.

விளக்கவுரை

பின் இரண்டடிகளை முதலிற் கொள்க. மிக்க - எஞ்சியவை. நக - தன்னைத் தன் அடியார்கள் எல்லாம் நகைக்கும்படி. சார - சார்ந்தால், தாம் தாம் தளராது இருப்பார் - யாவரும் துன்பமின்றியிருப்பார்கள்; இவ்விடத்து; 'ஆதலால்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க.

தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார்
என்ன மாயம் இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே. **#606**

ஒவ்வொருவருக்கும் உறவினரும் அவரே. நடை முறைகளை வகுத்துக் கொள்பவரும் அவரே. ஆதலால் அடியவர் களே! நீங்கள், நாம் யார்? எம்முடையது என்பது யாது? பாசம் என்பது எது? இவையெல்லாம் என்ன மயக்கங்கள்? என்று உணர்ந்து இவை நம்மை விட்டு நீங்க இறைவனுடைய பழைய அடியாரொடும் சேர்ந்து அவ்விறைவனது திருவுளக் குறிப்பையே உறுதியாகப் பற்றிக் கொண்டு, பொய் வாழ்வை நீத்துப் பாம்பணிந்தவனும், எமையாள் வோனுமாகிய பெருமானது பொன்போல ஒளிரும் திருவடிக்கீழ் போய்ச் சேரும் நெறியில் பொருந்தி நில்லுங்கள்.

விளக்கவுரை

'தாமே' என்றது, பொதுமையில் மக்களைச் சுட்டியது. அதனால், 'அவரவரே அவரவர்க்கு உறவினரும், விதிமுறையும் ஆவர்' என்பது, முதல் அடியின் பொருளாகும். சுற்றத்தையும், விதியையும் கூறவே, 'அவற்றின் மறுதலையாய பகையும், விலக்கும் அவரவர்க்கு அவரவரே' என்பதும் போந்தது. 'பிறப்பு வீடு என்னும் இருவகைப் பயன்களையும் முறையே தருவனவாகிய வினையையும், தவத்தையும் செய்து

அப்பயன்களைப் பெறுவார் அவரவரே' என்பதனை இவ்வாறு அருளிச் செய்தார்.

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்'

என்னும் திருக்குறளும் *(505)* இப்பொருளையுடையது.

இவ்வாறாயின், 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே' *(தி.6 ப.95 பா.3)* என்றாற்போலும் திருமொழிகட்குக் கருத் தென்னையோ என்றெழும் ஐயப்பாட்டின்கண் பலர் பலபடத் தம் கருத்தினைப் புலப்படுப்பர். ஆட்டுவிப்பான் ஒருவன் பிறனை ஆட்டுவிக்கின்றுழி, ஆடுவான், முதற்கண்ணே ஆட்டுவிப்பான் குறிப்பின்வழியே ஆடல் இலக்கணம் எல்லாம் நிரம்ப ஆடுதல் இல்லை; முதற்கண் ஆட்டுவிப்பானது குறிப்பினின்றும் பெரிதும் வேறு பட ஆடிப் பின்னரே சிறிது சிறிதாக அவன் குறிப்பின் வழி நிற்கும் நிலையினைப் பெறுவன். அவ்வாறே ஈண்டுமாகலின், அதுபற்றி, 'தாமே தமக்குச் சுற்றமும், தாமே தமக்கு விதிவகையும்' என்றற்கு இழுக்கென்னை என்க.

இங்ஙனமல்லாக்கால், 'ஆட்டுவிப்பான்' எனவும், 'ஆடுவான்' எனவும் பொருள்களை இருவேறாகப் பகுத்துக் கூறுதற்குப் பயன் என்னையோ என்பது. எனவே, 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே' என்றாற்போலும் திருமொழிகட்கு, 'ஆடுந் தன்மையுடையானிடத்து அவ் வாடுதற்றொழில் ஆட்டுவிப்பானை யின்றி அமையாதவாறு போல, அறியுந்தன்மையும் செய்யுந் தன்மை யும் உடைய உயிர்களிடத்து அவ்வறிதலும் செய்தலும், அறிவிப் பவனும், செய்விப்பவனுமாகிய இறைவனையின்றி அமையா' என்பதும், 'அவ்வாறாயினும், ஆடுதற்றொழிற்கண் உளவாகும் குறைவு நிறைவுகள் ஆடுவானுடையனவன்றி ஆட்டுவிப்பா னுடையனவாகாமை போல அறிதல் செய்தலின்கண் உளவாகும் தீமை நன்மைகள் உயிரினுடையனவன்றி இறைவனுடையன ஆகா' என்பதும், 'அங்ஙனமாயினும், அறிவு செயல்களுக்கு இறைவனது அருள் இன்றியமையாமை பற்றி, அவற்றால் விளையும் தீமை நன்மைகளையும் அவனுடையன போல ஒரோவழி முகமனாகக் கூறுவர்' என்பதும், இறைவன் இவ்வாறு உயிர்களை அறிவித்தும், செய்வித்தும் நிற்பது அவற்றிற்கு எவ்வாற்றானும் நன்மை பயப்பதே யாதலின், அவற்றை அவன் எஞ்ஞான்றும் அங்ஙனம் செயற்படுத்தி நிற்பன்' என்பதுமே கருத்தாதல் அறிந்து கொள்க.

'யார்' என்பதன் மரூஉவாகிய 'ஆர்' என்பன பலவும், 'என்ன பொருள்' என்னும் கருத்தின. 'இறைவன் முன்னே, உயிர்களும், அவைகள் 'எமது' என்று பற்றுச் செய்தற்கு உரியனவும், அங்ஙனம் பற்றுச் செய்தற்கு

ஏதுவாய் அவற்றை மறைத்து நிற்கும் பாசங்களும் பொருளோ' என்றதாம். என்ன மாயம் - இவையெல்லாம் எத்துணை மயக்கங்கள். உயிர், தன்னையே தலைமைப் பொருளாக நினைத்தல் மயக்க உணர்வேயாதல் பற்றி அதனையும், 'மாயம்' என்றார். 'இவை போகப் போமாறு' என இயையும். 'பண்டைத் தொண்டர் முன்பே போயி னாராயினும், அவர் போயினவழியே போவோம்' என்பார், 'பண் டைத் தொண்டரொடும் போமாறு' எனவும், 'அவன்றன் குறிப்பு, நம் மைப் பிரிதல் அன்று' என்பார், 'அவன்றன் குறிப்பே குறிக் கொண்டு போமாறு' எனவும் கூறினார். அமைமின் - ஒருப்படுங்கள். பொய், உலகியல்; 'புயங்கனும் ஆள்வானும் ஆகியவனது பொன்னடி' என்க.

அடியார் ஆனீர் எல்லீரும்
அகல விடுமின் விளையாட்டைக்
கடிசே ரடியே வந்தடைந்து
கடைக்கொண் டிருமின் திருக்குறிப்பைச்
செடிசே ருடலைச் செலநீக்கிச்
சிவலோ கத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்தன்
பூவார் கழற்கே புகவிடுமே. #607

அடியாராகிய நீங்கள் எல்லாரும் உலக இன்பங் களில் ஈடுபட்டுப் பொழுது போக்குகின்ற நிலையை நீங்கிப் போமாறு விட்டு ஒழியுங்கள். மணம் தங்கிய திருவடியை வந்து பொருந்தி திருவுள்ளக் குறிப்பை உறுதியாகப் பற்றிக் கொண்டிருங்கள். திரு வெண்ணீறு பூசப்பெற்ற திருமேனியையுடைய பாம்பணிந்த பெருமான் குற்றம் பொருந்திய உடம்பைப் போகும்படி நீக்கிச் சிவபுரத்தே நம்மை வைப்பான். தன் தாமரை மலர் போன்ற திருவடி நிழலிலே புகும்படி செய்வான்.

விளக்கவுரை

விளையாட்டு - கவலையின்றிக் களித்திருத்தல். கடி - நறுமணம். கடைக்கொண்டு - கடைபோகக் கொண்டு. செடி - கீழ்மை. பொடி - திருவெண்ணீறு. 'பொடிசேர் மேனிப் புயங்கன், நம்மை, முன்னர்ச் சிவலோகத்தே வைப்பான்; பின்னர்த் தன் கழற்கே புக விடுவான்' என்க. 'கழற்கு' என்றது உருபு மயக்கம். ஏகாரம், பிரி நிலை. 'வைப்பான்; புகவிடும்' என்றவை, 'இவை நிகழ்தல் திண்ணம்' என்னும் பொருளன. அதனால், இறுதியிரண்டடிகளை முதலில் வைத்து, 'புகவிடும்' என்றதன் பின்னர், 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவித்துரைத்தல் கருத்தாயிற்று.

விடுமின் வெகுளி வேட்கைநோய்
மிகஓர் காலம் இனியில்லை

உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ
டுடன்போ வதற்கே ஒருப்படுமின்
அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள்
அணியார் கதவ தடையாமே
புடைபட் டுருகிப் போற்றுவோம்
புயங்கன் ஆள்வான் புகழ்களையே. **#608**

மேன்மைப்படுவதற்கு இனிமேல் ஒருகாலம் கிடையாது. ஆகையால் சிவலோகத்தின் அழகிய கதவு நமக்கு அடைக்கப்படாதிருக்கும்படி கோபத்தையும் காம நோயையும் விட்டு விடுங்கள். நம்மை உடைய பெருமானுடைய திருவடிக்கீழ் பெரிய கூட்டத்தோடு உடன் செல்வதற்கு மனம் இசையுங்கள். பாம்பை அணிந்தவனும் நம்மை ஆள்பவனுமாகிய இறைவனுடைய பெருமை களை எங்கும் சூழ்ந்து மனமுருகிப் போற்றுவோம். போற்றினால் சிவலோகத்தில் நாம் போய்ச் சேர்ந்து விடுவோம்.

விளக்கவுரை

'வெகுளியையும், வேட்கை நோயையும் விடுமின்'; எனவும், 'சிவபுரத்துள் அடைவோம்; அதற்கு முன்னே அதன் அணி யார் கதவது அடையாமே, ஆள்வான் புகழ்களைப் போற்றுவோம்' எனவும் கொள்க. வேட்கை - ஆசை. மிக - நாம் உயர்வடைவதற்கு. சாத்து - கூட்டம். 'அடைவோம்' என்றது, 'அடைப்பதற்குள் அடை வோம்' என்றதாம். புடைபட்டு - அதன் அருகிற்பொருந்தி. 'புடை பட்டு உருகிப் போற்றுவோம்' என்றது, 'நுழைவோம்' என்றபடி.

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கன் தாளே புந்திவைத்திட்
டிகழ்மின் எல்லா அல்லலையும்
இனியோர் இடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே. **#609**

நாம் இனிமேல் ஒரு துன்பம் வந்து சேராவண்ணம் விளங்குகின்ற சிறப்பமைந்த சிவபுரத்துக்குப் போய், சிவபெருமான் திருவடியை வணங்கி அங்கே வாழும் அடியார் முன்னே சென்று மனம் உருகி நிற்போம்; அதற்குப் பாம்பணிந்த பெருமான் திருவடியைப் புகழுங்கள்; வணங்குங்கள். அவைகளுக்கு மலர் சூட்டுங்கள்; அவற்றையே நினைவில் வைத்துக் கொண்டு பிற எல்லாத் துன்பங்களையும் இகழுங்கள்.

விளக்கவுரை

'புயங்கன் தாளே புந்தி வைத்திட்டுப் புகழ்மின்! தொழுமின்! பூப்புனைமின்!' எனவும், 'எல்லா அல்லலையும் இகழ் மின்' எனவும் கூட்டுக. முன்னைத் திருப்பாட்டிலும், இத்திருப்பாட்டி லும், 'விடுமின்' முதலிய பயனிலைகளை முதலில் வைத்து அருளிச் செய்தமை, உணர்ச்சி மீதூர்வினாலாதல் அறிக. அடையாமே - வாராதபடி; இது, 'சென்று' என்பதனோடு முடியும். 'நிற்போம்' என்றதும், 'அடியார் ஆனீர் எல்லாரும்' என்ற திருப்பாட்டில், 'வைப்பான், புகவிடும்' என்றன போல, 'நிற்றல் திண்ணம்' என்னும் பொருளது. அதனால், இத்திருப்பாட்டிலும் 'இனியோர் இடையூ றடையாமே' என்றது முதலாகத் தொடங்கி, 'நிற்போம்' என்றதன் பின், 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவித்து மேலே கூட்டி யுரைத்தல் கருத்தாயிற்று. ஆகவே, புகழ்தல் முதலியன, இதுகாறும் பொதுப்படச் செய்துவந்தாற் போல்வனவாகாது, சிவபெருமான் தம்மைத் தன்பால் வருவிக்கத் திருவுளம்பற்றிய திருவருள் நோக்கிச் சிறப்புறச் செய்வனவாதல் விளங்கும்.

நிற்பார் நிற்கநில் லாவுலகில்
நில்லோம் இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாந் திருமேனிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாந் தாழாதே
நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தாற்
பெறுதற் கரியன் பெருமானே. **#610**

அழகினால் தனக்குத் தானே நிகரான திருமேனியையுடைய, பாம்பணிந்த பெருமானது பொன் போன்ற திருவடியை அடைவதற்கு நிற்கின்றவர்களே! நிலையில்லாத உலகின் கண், விரும்புவார் நிற்கட்டும். நாம் இங்கு இனி நிற்க மாட்டோம்; சென்று விடுவோம்; செல்லாமல் தங்கி நின்று பின்பு மனம் வருந்தினால் எம் பெருமான் பெறுதற்கு அரியவனாவான். ஆதலால் எல்லோரும் காலந்தாழ்த்தாது நீங்கள் நினைந்தபடியே செல்ல மனம் இசையுங்கள்.

விளக்கவுரை

பொருள்கோள்: 'நில்லா உலகில் நிற்பார் நிற்க; நாம் இனி நில்லோம்; ஆள்வான் பொன்னடிக்கே செல்வோம்; பிற்பால் நின்று பேழ்கணித்தால், பெருமான் பெறுதற்கரியன்; அதனால், நிற்பீர் எல்லாம் நிற்கும் பரிசே தாழாது ஒருப்படுமின்'
பொற்பு - அழகு. 'அழகால் தன்னையே தான் ஒப்பாம் திரு மேனி' என்க.

பால் - பகுதி; அது காலப் பகுதியை நோக்கிற்று. பேழ் கணித்தல் - கழிந்ததற்கு இரங்கல். நிற்பீர் - ஆள்வான் பொன்னடியே நோக்கிநிற்பீர். 'அங்ஙனம் நிற்கும் பரிசுக்கே தாழாது ஒருப்படுமின்' என்க. ஒருப்படுதல் - இசைதல். பொன்னடியையே பொதுவாக நோக்கி நிற்பினும், அதன்கீழ்ச் செல்லுதற்குச் சிறப்பாக ஒருப்படச் சிறிது தாழ்க்கினும், அவன் திருக்குறிப்பைப் பெற்ற காலம் கழிந் தொழியுமாதலின், 'தாழாதே ஒருப்படுமின்' என்றார்.

பெருமான் பேரா னந்தத்துப்
பிரியா திருக்கப் பெற்றீர்காள்
அருமா லுற்றுப் பின்னைநீர்
அம்மா அழுங்கி அரற்றாதே
திருமா மணிசேர் திருக்கதவந்
திறந்த போதே சிவபுரத்துத்
திருமா லறியாத் திருப்புயங்கன்
திருத்தாள் சென்று சேர்வோமே. **#611**

இறைவனது பேரின்பத்தில் பிரியாமல் மூழ்கி யிருக்கப் பெற்றவர்களே! நீங்கள் அருமையான மயக்கத்தில் பொருந்திப் பின்பு ஐயோ என்று, வருந்தி அலறாவண்ணம் அழகிய சிறந்த மணிகள் இழைக்கப் பெற்ற திருக்கதவு, திறந்திருக்கும் போதே, சிவபுரத்திலுள்ள, திருமாலறியாத, அழகிய பாம்பணிந்த பெருமானது திருவடியை நாம் சென்றடைவோம்.

விளக்கவுரை

'இருக்கப்பெற்றீர்கள்' என்றது, 'இருக்க விரும்பு தலைப் பெற்றீர்கள்' என்றவாறு. 'திருக்கதவம் திறந்த போதே' என்றதனால், இறைவன் அடிகளைத் தன்பால் வரப்பணித்தமை பெறப் பட்டது. 'சிவபுரத்துத் திருத்தாள் சென்று சேர்வோம்' என்றதனால், சிவலோகஞ் சேர்தலையும் திருவடி கூடுதலாக அடிகள் அருளிச் செய்தல் பெறப்பட்டது.

சேரக் கருதிச் சிந்தனையைத்
திருந்த வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணாள்
பங்கன் புயங்கன் அருளமுதம்
ஆரப் பருகி ஆராத
ஆர்வங் கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன்கழற்கே
பொய்யிற் கிடந்து புரளாதே. **#612**

போரில் விளங்குகின்ற வேல் போன்ற கண்களை யுடைய உமையம்மையின் பாகனும், பாம்பை அணிந்தவனுமாகிய இறைவனது திருவருள் அமுதத்தை நிரம்பப் பருகித் தணியாத ஆசை மிக

மூழ்கியிருப்பவர்களே! பொய்யான வாழ்வில் கிடந்து புரளாமல் சிவபெருமானது திருவடியிலே அடைய விரும்புங்கள். அதனையடைய எண்ணிச் சித்தத்தைத் தூய்மையாக வைத்துக் கொண்டு இடைவிடாமல் நினையுங்கள்.

விளக்கவுரை

இடையிரண்டடிகளை முதலிற் கொள்க.
போரிற் பொலியும் வேல், சிவந்த நிறத்தொடு நிற்கும். அழுந்துவீர் - பேரின்பத்தில் அழுந்துதற்குரியவர்களே. போர, 'போத' என்பதன் மரூஉ. இதனை, 'போதும்' என்பதனை, 'போரும்' என்னும் வழக்கால் உணர்க. போத - மிகவும், புரிமின் - விரும்புங்கள். 'கழற்கே' என்பதனை, 'கழலையே' எனத் திரிக்க. பொய் - பொய்யான உலக வாழ்க்கை.

புரள்வார் தொழுவார் புகழ்வாராய்
இன்றே வந்தாள் ஆகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார்
மதிஉட் கலங்கி மயங்குவீர்
தெருள்வீ ராகில் இதுசெய்மின்
சிவலோ கக்கோன் திருப்புயங்கன்
அருள்ஆர் பெறுவார் அகலிடத்தே
அந்தோ அந்தோ அந்தோவே. **#613**

புரள்பவராயும் வணங்குபவராயும் இப்பொழுதே வந்து ஆட்படாதவர்களாய், மயங்குகின்றவர்களே! பின்பு, அறிவினும் கலக்கமடைந்து மயங்கியிருப்பீர்கள். உங்களை மதிப்பவர் யாவர்?. தெளிவடைய விரும்புவீரானால் எம்பெருமானிடம் ஆட்படுதலாகிய இதனைச் செய்யுங்கள். சிவலோக நாதனாகிய பாம்பணிந்த பெருமானது திருவருளை, அகன்ற உலகின்கண் யார் பெறவல்லார்கள்? ஐயோ! ஐயோ!! ஐயோ!!!.

விளக்கவுரை

புரளுதலும், அன்பினால் என்க. 'பூதலமதனிற் புரண்டு வீழ்ந்து' *(தி.8 கீர்த்தித். 134)* என்றார் முன்னரும். விரையாது நிற்றல் நோக்கி, 'இன்றே வந்து ஆள் ஆகாதீர்' என்றார். ஆகாதீர் - ஆகா திருப்பவர்களே. இதன்பின், 'இவ்வாறிருப்பின்' என்பது வருவித்து, 'பின்னை மருள்வீர்; உம்மை மதிப்பார் ஆர்! மதி உட் கலங்கி மயங்கு வீர்!' என்க. 'சிவலோகக் கோன், திருப்புயங்கன் அருள், அகலிடத்தே ஆர் பெறுவார்! அந்தோ! இஃது அரும்பெறற் பேறு என்பதனைத் தெருள்வீராகில், இதனையே (அவன் அழைக்கும் பொழுதே அவனை அடைதல் ஒன்றையே) செய்மின்' என்க. 'அகலிடத்தே ஆர் பெறுவார்'

என்றதனால், அடிகள் உலகத்தார் அறிய இறைவனை அடைந்தமை பெற்றாம்.

1.46.திருப்படையெழுச்சி

ஞானவாள் ஏந்தும்ஐயர்
நாதப் பறையறைமின்
மானமா ஏறும்ஐயர்
மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம்
அடையப் புகுமின்கள்
வானஊர் கொள்வோம்நாம்
மாயப்படை வாராமே. **#614**

ஞானமாகிய வாளைத் தாங்கிய இறைவரது பிரணவமாகிய நாதப்பறையை முழக்குங்கள்! பெருமையாகிய குதிரையை ஏறுகின்ற இறைவனை அறிகின்ற அறிவு என்கிற வெண்குடையைக் கவியுங்கள்! திருநீறாகிய கவசத்திற்குள் புகுந்து கொள்ளுங்கள்! இவ்வண்ணம் செய்வீர்களாயின் மாயப் படையை வென்று முத்தி உலகைக் கைக்கொள்ளலாம்.

விளக்கவுரை

'மாயப் படை வாராமே' என்றதை முதற்கண் கூட்டுக. அறியாமையும், மயக்க உணர்வும் ஆகிய பகையை அழிப்பது மெய்யறிவே யாதலின், அவ்வாற்றால் அவற்றைப் போக்குகின்ற இறைவனுக்கு, 'ஞானமே வாள்' என்று அருளினார். 'இறைவனுக்கு நாதமே பறை' *(தி.8 கீர்த்தி. 108;தசாங்கம். 8)* என முன்னர் அருளியவற்றைக் காண்க. அதனை அறைதலாவது, 'நமச்சிவாய வாழ்க' என்றற் றொடக்கத்தன போல, வாழ்த்து வகையானும், வணக்க வகையானும், வெற்றி வகையானும் சிவநாமங்களை வானளாவ முழக்குதல். மான மா - பெருமையமைந்த குதிரை; இஃது அடிகள் தமக்கு வந்து அருள்செய்த வகைபற்றிக் கூறியது. மதிவெண்குடை, சிலேடை. வெண்மை கூறினமையின், மதி, மலந்தீர்ந்த உயிரினது அறிவு; அதனுள் இறைவன் சோதிக்குட் சோதியாய்த் தோன்றலின், அதனை அவற்குக் குடையாகக் கூறினார். ஆன - பொருந்திய. 'கவசம் புகுமின்கள்' என இயையும். அடைய - முழுதும். 'இவ்வாற்றால் நாம் வான ஊரைத் தப்பாது கொள்வோம்' என்க. வானம் - சிவலோகம். மாயப் படை - நிலையாமையாகிய படை.

தொண்டர்காள் தூசிசெல்லீர்
பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே
பேரணி உந்தீர்கள்

திண்டிறல் சித்தர்களே
கடைக்கூழை சென்மின்கள்
அண்டர்நா டாள்வோம்நாம்
அல்லற்படை வாராமே. #615

தொண்டர்களே! நீங்கள் முன்னணியாய்ச் செல்லுங்கள்! பத்தர்களே! நீங்கள் சூழ்ந்து செல்லுங்கள்! யோகிகளே! நீங்கள் பெரிய அணியைச் செலுத்துங்கள்! சித்தர்களே, நீங்கள், பின்னணியாய்ச் செல்லுங்கள்! இப்படிச் செய்வீர்களாயின் நாம் தேவர் உலகத்தை ஆளலாம்.

விளக்கவுரை

இங்கும், 'அல்லற்படை வாராமே' என்றதை முதலிற் கூட்டுக. தொண்டர்கள் - கைத்தொண்டு செய்வோர்; விரைந்து செயலாற்றுவதே தூசிப்படையாதலின், அதற்குத் தொண்டர்களை அமைத்தார். தூசிப் படை - முன்னணிப் படை. பத்தர்கள் - அன்பு மிக்கவர்கள். இறைவனது புகழைப் பாடுதலிலும், கேட்டலிலும், விரித்துரைத்தலிலும் ஆர்வம் மிக்கவர்கள். இவர்களை இருமருங்கும் அமைத்தார், படைஞர்கள் உள்ளம் அயராது வீறுகொண்டிருத்தற்கு. யோகிகள் - சிவயோகத்தில் இருப்பவர்கள்; இவர்கள் மனத்தைத் தம்வழி நிறுத்தும் வன்மையுடையராதலின், 'ஒண்திறல் யோகிகள்' என்றார். இவ்வாற்றால் இவரை இறுதி வெற்றிக்குரிய நடுப்படை யாகிய பெரிய அணிகளில் நிறுத்தினார். 'அணியை உந்தீர்கள்' என்றது, 'அணி என்னும் முறையை நிகழ்த்துங்கள்' என்றபடி. சித்தர்கள் - இறைவனது அருளால் வியத்தகு செயல்கள் செய்து அவ் வருளின் பெருமையை உலகிற்கு உணர்த்துபவர்கள். இவர்களைப் பின்னணிப் படையில் நிறுத்தினார், பின்னிடுவார் உளராயின், அவரது தளர்ச்சியைப் போக்கி முன்செல்லச் செய்தற் பொருட்டு. கடைக் கூழை - பின்னணிப் படை. தூசிப் படைதானே வெல்லற்பாலதாயி னும், ஏனைப் படைகளும் முறைப்படி அமைத்தல் செயற்பாலதாக லின், இங்ஙனம் அனைத்தையும் வகுத்தமைத்தார் என்க. தொண்டர் முதலாக இங்குக் கூறப்பட்டோர் அனைவரும் ஞானநிலைக்கண் நிற்பவர்களேயன்றிப் பிறரல்லர் என்க. அண்டர் - சிவபெருமானார்; அவரது நாடு சிவலோகம். 'அண்டர்நாடு ஆள்வோம் நாம்' என்றதற்கு, மேல், 'வானவூர் கொள்வோம் நாம்' என்றதற்கு உரைத்தவாறு உரைக்க. அல்லற்படை - துன்பமாகிய படை.

1.47.திருவெண்பா

வெய்ய வினையிரண்டும் வெந்தகல மெய்யுருகிப்
பொய்யும் பொடியாகா தென்செய்கேன் - செய்ய
திருவார் பெருந்துறையான் தேனுந்து செந்தீ

மருவா திருந்தேன் மனத்து. **#616**

திருப்பெருந்துறையை உடையவனாகிய இறை வனை அடையாது இருந்தேன்; என் மனத்தில் கொடிய வினை ஒழிய உடல் உருகிப் பொய்யும் பொடியாகாதுள்ளது. இதற்கு நான் என் செய்வேன்?.

விளக்கவுரை

'செய்ய' என்றது முதலாகத் தொடங்கியுரைக்க. மெய் - வடிவம். பொய் - பொய்யான உடல். 'வினை கெட, உடல் தன்வடிவு கரைந்து பொடியாயிற்றில்லை; யான் என்செய்வேன்' என்க. செய்ய - செப்பமாகிய (திருப்பெருந்துறை). 'பெருந்துறை யானாகிய தேன் உந்து செந்தீயை மனத்து மருவாதிருந்தேன்' என்க. 'இவ்வாறிருந்தும் இறவாதிருக்கின்றேன்' என்றபடி.

ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என்செய்கேன் -தீர்ப்பரிய
ஆனந்த மாலேற்றும் அத்தன் பெருந்துறையான்
தானென்பார் ஆரொருவர் தாழ்ந்து. **#617**

என்னோடு கூடி நின்று, இன்பப் பித்தேற்றுவான் திருப்பெருந்துறை இறைவனே என்று என்பால் தெளிவிப்பார் ஒருவர் உளராயின் அவரைப் பணிந்து ஆரவாரிப்பேனோ?. அரற்று வேனோ?. ஆடுவேனோ?. பாடுவேனோ?. நான் என் செய்து பாராட்டுவேன்?.

விளக்கவுரை

இங்கும், 'தீர்ப்பரிய' என்றது முதலாகத் தொடங்கி உரைக்க. 'பரம்பரனே' என்றது, இயல்பானே முன்னிற்கும். 'ஆர்க்கோ' என்றது முதலிய ஐந்தும், ஐயத்தின்கண் வந்த ஓகாரம் ஏற்ற, குவ்வீற்றுத் தன்மை யொருமை வினைமுற்றுக்கள். ஆர்த்தல் - புகழ்தல். அரற்றுதல் - அன்பினால் வாய்விட்டழுதல். பார்த்தல் - உற்றுநோக்குதல். என்செய்கேன்' என்றது, களிப்பு மீதூர் வால் வந்த செயலறுதி. தீர்ப்பரிய மால் - நீக்குதற்கரிய பித்து. ஆனந்த மால் - பேரின்பப் பித்து. தான், அசைநிலை. 'ஆரொருவர்' என்றதன் பின், 'அவரை' என்பது எஞ்சிநின்றது. தாழ்ந்து - வணங்கி.

செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதே
உய்யும் வகையின் உயிர்ப்பறியேன் - வையத்
திருந்துறையுள் வேல்மடுத்தென் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான். **#618**

திருப்பெருந்துறை இறைவன் தன் வேலை என் மனத்துக் கோத்தான்; இதற்குக் காரணமாக நான் செய்த பிழையை அறிந்திலேன்; அவனது திருவடியையே கைதொழுது உய்யும் வகையின் நிலையையும்

அறிந்திலேன்.

விளக்கவுரை

பெருந்துறையில் மேயபிரான், வையத்து இருந்து உறையுள் இருந்த வேலை மடுத்து என் சிந்தனைக்கே கோத்தான்; யான் செய்த பிழையறியேன். உய்யும் வகையறியேன் உயிர்ப்பும் அறியேன்' என வினைமுடிக்க. இது, ஞானத்தை அருளினமையை, பழிப்பது போலப் புகழ்ந்தது.

உய்யும் வகை - பிழைக்கும் வழி; அதனினின்றும் தப்புமாறு. உயிர்ப்பு - சுவாசித்தல்; தற்போதம் எழுதல். 'உறை' என்றது, திரோ தான சத்தியையும், 'வேல்' என்றது. சிவஞானத்தையும் என்க. சிந்தனைக்கு, உருபு மயக்கம். சிந்தனை - மார்பு; மனம். மடுத்துக் கோத்தான் - நுழைத்து உருவச் செய்தான்.

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் - தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கும் மருந்து. **#619**

மேல்வரக் கடவனவாகிய பிறவிகளை நீக்கும் பெரி யோனும், தென்னனும், திருப்பெருந்துறையை உடையவனும், பெருங் கருணையாளனும், வரும் துன்பங்களைத் தீர்க்கும் மருந்தாய் இருப் பவனும் ஆகிய சிவபெருமான், நான் முன்செய்தவினை இரண்டையும் வேரறுத்து எனக்கு எதிரே நின்றான்.

விளக்கவுரை

பொருள்கோள்: 'பெருங்கருணையாளனாகிய இறைவன், முன்னின்றான்; பேராளன்; துயரந் தீர்க்கும் மருந்து'

பேராளன் - பெருமையுடையவன். வரும் துயரம் - இனி வரு கின்ற துன்பங்கள். 'துயரம் தீர்க்கும் மருந்து' என்றது, ஏகதேச உருவகம்.

அறையோ அறிவார்க் கனைத்துலகும் ஈன்ற
மறையோனும் மாலும்மால் கொள்ளும் - இறையோன்
பெருந்துறையுள் மேய பெருமான் பிரியா
திருந்துறையும் என்நெஞ்சத் தின்று. **#620**

அறியப் புகுவார்க்குச் சொல்லளவேயாமோ?. பிரமனும் திருமாலும் அறியாது மயக்கத்தை அடைகின்ற இறைவனும் திருப்பெருந்துறையில் எழுந்தருளினவனும் ஆகிய சிவபிரான், இன்று என் மனத்தில் தங்கி வாழ்கின்றான்.

விளக்கவுரை

'அறிவார்க்கு அறையோ' என மாற்றி, இறுதிக் கண் வைத்துரைக்க.

அறையோ - அறைகூவல் விடுகின்றேன். மால் கொள்ளும் - காணாமல் மயங்குகின்ற. இன்று - இந்நாள். இறைவன் தம் நெஞ்சத்து உறைதலை அறிவுடையோர் எளிதில் உடன்படார் என்று கருதி 'அவர்க்கு அறையோ' என்றார்.

பித்தென்னை ஏற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மத்தமே யாக்கும்வந் தென்மனத்தை - அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும்
மருந்திறவாப் பேரின்பம் வந்து. **#621**

திருப்பெருந்துறை இறைவன், வந்து என்னைப் பித்தேற்றுவான்; என் பிறவியை அறுப்பான்; துதித்தற்கு அரியனான இறைவன் என் மனத்தைக் களிப்படையச் செய்வான்.

விளக்கவுரை

'அத்தன்' என்றது முதலாகத் தொடங்கி உரைக்க.
'என்னைப் பித்தேற்றும்' எனவும் 'என் மனத்தைப் பேச்சரிதாம் மத்தம ஆக்கும்' எனவும் மாற்றுக. 'பித்து' என்றது, அன்பை. மத்தம் - களிப்பு. 'அத்தன், பெருந்துறையான், மருந்து பேரின்பம்' என்றவை, ஒரு பொருள் மேல் வந்த பல பெயர்கள்.

வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா அமுதாய் அமைந்தன்றே - சீரார்
திருத்தென் பெருந்துறையான் என்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி. **#622**

திருப்பெருந்துறை இறைவனும், என் மனத்தில் எழுந்தருளி இருக்கும் ஒருவனுமாகிய இறைவன் பெருக்கிய ஒளி வந்து இனிப் பிறவிக்கு வாராத வழியை அருளி, எனக்கு ஆராவமுதாக அமைந்து இருந்தது அன்றோ?.

விளக்கவுரை

'ஒளி அமைந்தன்று' என வினைமுடிக்க. அருளி - கொடுத்து 'எனக்கு' என்றதை, 'என்கண்' எனத் திரிக்க. 'என்கண் வந்து மாறின்றி' என்க. மாறின்றி - நீங்காது நின்று. அமைந்தன்று - அமைந்தது. ஏகாரம், தேற்றம்.

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழாம் அடியேனை - யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை. **#623**

எல்லார்க்கும் மேலாகிய இறைவன், எல்லா வற்றிலும் கீழாகிய என்னைப் பேரின்பத்துள் வைத்தான். அவனுக்குக் கைம்மாறு செய்யும்

வகை அறியேன்.

விளக்கவுரை

'சீருடையான்' என்றதும், விளி. 'எம்பெருமான்' என்றது, 'தலைவன்' என்னுந் துணையாய் நின்று, 'என் எம் பெருமான்' என வந்தது. மற்று - மாறு; கைம்மாறு. 'மற்றுச் செய்யும் வகை அறியேன்' என இயையும்.

மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவருங் காணாச் சிவபெருமான் - மாவேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும். **#624**

மும்மூர்த்திகளும், முப்பத்து மூன்று தேவர்களும், மற்றைத் தேவர்களும் கண்டறியாத சிவபெருமானுடைய திருவடி களை வணங்கினால், உண்மையாகிய மனத்தின்கண் ஆனந்தம் திகழும்.

விளக்கவுரை

மூவர் - மும்மூர்த்திகள்; முப்பத்து மூவர் - உருத்திரர் பதினொருவர்; ஆதித்தர் பன்னிருவர்; மருத்துவர் இருவர்; வசுக்கள் எண்மர். மற்றொழிந்த தேவர், இவர்தம் பரிவாரங்களும், இந்திரன் முதலிய திசைக்காவலரும், இனி, பதினெண் கணங்களுட் சில கூட்டத் தினரும் தேவர் எனப்படுவர் என்க. மா - குதிரை. மெய்யகத்தே - உடம்பினிடத்திற்றானே, உடம்பின்கண் இன்பம் மிகுதல் கூறவே, உயிரின்கண் இன்பம் மிகுதல் சொல்லவேண்டாவாயிற்று.

இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்து
இருந்திரந்து கொள்நெஞ்சே எல்லாந் - தருங்காண்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவாய் என்மனத்தே வந்து. **#625**

நெஞ்சே! என்னை ஆண்டருளினவனாகிய இறைவனது திருவடியைச் சிந்தித்துக் கொண்டிருந்து, வேண்டும் பொருள்களை எல்லாம் வேண்டிக் கொள். வேண்டினால் திருப்பெருந் துறையான் நீ வேண்டுவனவற்றை எல்லாம் தந்தருளுவான்.

விளக்கவுரை

'பெருந்துறையின் மேய' என்றது தொடங்கி உரைக்க. 'ஆண்டான்' என்றதனை முற்றாக்கி, 'அவன் இணை யடியே' என எடுத்துக் கொண்டு உரைக்க 'கொள்' என்றது, துணை வினை. 'கொண்டால், எல்லாம் தரும்' என்க. காண், முன்னிலையசை. மருந்துருவாய் - அமுதமாய்.

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றுந்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய் - அன்பமைத்துச்

சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து. #626

திருப்பெருந்துறையான் ஆனந்தம் பெருகச் செய்து அஞ்ஞான இருளை அகற்றித் துன்பத்தை வேரறுத்துத் தன்னிடத்து அன்பையும் எனக்கு அருள் செய்து, என் மனத்தையே தனக்குத் திருக்கோயிலாகக் கொண்டான்.

விளக்கவுரை

பொருள்கோள்: 'பெருந்துறையான், சோதியாய் இருளகற்றித் துன்பம் தொடர்வு அறுத்து, அன்பமைத்து இன்பம் பெருக்கி, என்னுடைய சிந்தையே உவந்து எஞ்ஞான்றும் ஊராகக் கொண்டான். தொடர்வு - தொடர்தல்.

1.48.பண்டாய நான்மறை

பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனுங்
கண்டாரு மில்லைக் கடையேனைத் - தொண்டாகக்
கொண்டருளுங் கோகழிஎங் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மா றுரை. #627

நெஞ்சே! பழமையாகிய நான்கு வேதங்களும் பக்கத்தில் அணுகமாட்டா; திருமால் பிரமன் என்போரும் கண்டறி யார்; அப்படிப்பட்ட கோகழி எம்கோமான் கடையேனைத் தொண்டு கொண்டதற்கு நாம் செய்யும் கைம்மாறு உளதோ?

விளக்கவுரை

பண்டையதாய பொருளை, 'பண்டு' என்றார், 'அவன் பால் அணுகா' எனவும், 'அவனைக் கண்டார் இல்லை' எனவும், செய்யுட்கண் முன்வரற்பாலனவாய சுட்டுப் பெயர்கள் வருவிக்க. 'கண்டாரும்' என்ற உம்மை, இழிவு சிறப்பு. 'இல்லை' என்றதன் பின், 'அங்ஙனமாக' என்பது வருவிக்க.

உள்ள மலமூன்றும் மாய உகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த - வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவுங் கெடும்பிறவிக் காடு. #628

தொண்டர்களே! நமது மும்மலங்கள் கெடும்படி இன்பப் பெருந் தேனைச் சொரிகின்ற இறைவன் எழுந்தருளி இருக்கிற திருப்பெருந்துறையை வாழ்த்துங்கள்! வாழ்த்தினால் நம் பிறவிக்காடு வேரோடு கெடும்.

விளக்கவுரை

உள்ள மலம் - அறிவின்கண் பற்றிய மலம். மாய - கெட. 'பிறவிக் காடு

கருவும் கெடும்' என மாற்றுக. கருவுங் கெடுத லாவது, முதலும் இல்லாது அழிதல்.

காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிபாகன் நம்வினையை - வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளுங் கெடநெஞ்சே வாழ்த்து. **#629**

நெஞ்சே! காட்டில் வேடனாய் வந்தவனும், கடலில் வலையனாய் வந்தவனும், பாண்டி நாட்டில் குதிரைப் பாகனாய் வந்த வனும், நமது வினைகளைக் கெடுத்து நம்மை ஆண்டருள் செய்கின்ற திருப்பெருந்துறையானும் ஆகிய சிவபெருமான் திருவடியை நமது மருள் கெடும் வண்ணம் வாழ்த்துவாயாக!

விளக்கவுரை

காட்டகத்து வேடனாயது, அருச்சுனன் பொருட்டு, கடலில் வலைவாணனாயது, நந்திபெருமான், உமையம்மை இவர் களது சாபந்தீர்த்து ஏற்றருளுதற்பொருட்டு. பரி பாகன் (குதிரை செலுத்துவோன்) ஆயது அடிகட்கு அருளுதற் பொருட்டு. 'காடு' என்றதில் குறிஞ்சியும் அடங்குதலின், 'நானிலத்தும் தோன்றி அருள் செய்பவன்' என அருளிச்செய்தவாறு. நெஞ்சே அருளும் பெருந்துறை யான், வேடன்; வலைவாணன்; பரிபாகன்; அவன் அம் கமல பாதம் வாழ்த்து' என வினைமுடிக்க. மருள் - மயக்கம்; திரிபுணர்வு. 'மருளும்' என்ற உம்மை, முன்போந்த. 'வினை' என்றதைத் தழுவி நின்ற எச்சம்.

வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாருந்
தாழ்ந்துலகம் ஏத்தத் தகுவாருஞ் - சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி ஏத்தும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி ஏத்தும் நமர். **#630**

திருப்பெருந்துறையை வணங்கித் துதிக்கின்ற அன்பர்கள், வாழ்ந்தோராவர்; வலிய வினைகளைக் கெடுப்பவர் களும், உலகம் வணங்கித் துதித்தற்கு உரியோரும் ஆவர்.

விளக்கவுரை

'உலகம் தாழ்ந்து ஏத்த' என்க. தாழ்தல் - வணங்குதல்.

நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழுகோ கழிக்கரசைப் - பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண். **#631**

நெஞ்சே! கோகழிக்கு அரசனும், எம்பிராட்டியோடு திருவுத்தரகோச மங்கையில் நிலை பெற்று நீங்காது இருப்பவனுமாகிய

சிவபெருமானைச் சிந்தித்து எழுவாயாக! வழிபடுவாயாக!

விளக்கவுரை

'நம் இடர்கள் போயகல எண்ணிப் பெருந்துறையை நண்ணி எழு கோகழிக்கரை' என்றது. 'அப்பெருமானை' என்னும் பொருளதாய் நின்றது. 'கோகழிக்கரசனாயும், உத்தரகோசமங்கை மன்னிக் கழியாதிருந்தவனும் ஆகிய பெருமானைக் காண்' என்பதும் பொருள். 'காணின், நலம் பெறலாம்' என்பது குறிப்பெச்சம்.

காணுங் கரணங்கள் எல்லாம்பே ரின்பமெனப்
பேணும் அடியார் பிறப்பகலக் - காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாயாரப் பேசு. **#632**

நெஞ்சே! கருவிகள் யாவும் பேரின்ப உருவமாய்ப் போற்றுகின்ற அடியார்கள் தம் பிறவி ஒழியும்படி வழிபடுகின்ற பெரியோனும் திருப்பெருந்துறையை எப்பொழுதும் பிரியாதவனு மாகிய பெருமானை வாயாரப் புகழ்ந்து பேசுவாயாக!

விளக்கவுரை

காணும் கரணங்கள் எல்லாம் - அறிதற்குரிய கருவிகள் யாவும். பேரின்பமெனப் பேணும் அடியார் - பேரின்பத்தை நுகரும் கருவிகளேயாகும் வண்ணம் குறிக்கொண்டு நிற்கும் அடியார்களது; என்றது, 'பிராரத்த வினை நுகர்ச்சி தோன்றும்வழி அதனைத் தம் செயலும் பிறர் செயலுமாகக் கொண்டு நுகராது, முதல்வன் செயலேயாகக்கொண்டு நுகரும் அடியார்கள்' என்றபடி. அங்ஙனம் நுகரும்வழிப் பெற்ற சிற்றின்பந்தானே பேரின்பமாய் விளையு மாகலின் *(தி.8 திருவுந்தியார் 33),* அவர்க்கு ஆகாமியம் இல்லையாம். அஃது இல்லையாகவே பிறப்பும் இல்லாதொழியும். அங்ஙனம் செய்வது திருவருளேயாகலின், 'அவரது பிறப்பு அகலக் காணும் பெரி யான்' என்று அருளிச்செய்தார். காணுதல் - நோக்குதல். பேரின்பம் நுகர்தற்கருவிகளை, பேரின்பம்' என்றார். இவ்வநுபவ நிலைக்கு இத் திருப்பாட்டினைச் சிவஞானமா பாடியத்துள் *(சூ.11, அதி.1.)* எடுத்துக்காட்டினமை காண்க.

பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை - பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து. **#633**

நல்ல அமிர்தம் போல்பவனாகிய பெருமானது திருவடியை என்மனத்தில் இருத்திச் சொல்லளவைக் கடந்த, அவனது திருவார்த்தையைப் பேசி,

அவன் திருப்பெருந்துறையை வாழ்த்தி என் பிறவித் தளையை ஒழித்தேன்.

விளக்கவுரை

பேசும் பொருளுக்கு - பேசுதற்குக் கொள்ளப்படும் பொருளின் இயல்பிற்கு. 'பொருள்' என்றது அதன் இயல்பிற் காயிற்று. 'இலக்கியம்' என்பது 'இலக்கிதம்' என வந்தது. 'இலக்கித மாம் மணி' என இயையும். எனவே, 'மக்கள் தம் வாயாற் பேசுதற்கு உரிய பொருள் இறைவனே' என்றவாறாயிற்று. 'பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன்' என்றதை இறுதிக்கண் கூட்டுக. பிறவியாகிய தீராப் பெரும் பிணியை நீக்கும் மருந்து ஆதலின், 'நல்ல மருந்து', என்று அருளிச்செய்தார். 'அடி' என்றது, மருந்திற்கும் ஏற்புடைய தாமாறு அறிக.

1.49.திருப்படையாட்சி

கண்க ளிரண்டும் அவன்கழல் கண்டு
களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்வில்என் வாழ்வு
கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு
மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும்
வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல்
பயின்றிடு மாகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள்
பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படு மாயிடிலே. **#634**

மீனைப் பிடிக்கும் பொருட்டு வலை வீசிய வேடனாகிய இறைவன், எழுந்தருளித் தோன்றுவனாயின், இரண்டு கண்களும், அவன் திருவடியைக் கண்டு களிப்பன ஆகாது போகுமோ? எனது வாழ்க்கை மகளிரொடு கூடிவாழ்வதில் முடிவு பெற்றுவிடுதல் ஆகாது போகுமோ? மண்ணுலகத்தில் வந்து பிறந்திடும் விதத்தை மறத்தல் ஆகாது போகுமோ? திருமால் அறியாத தாமரை மலர் போன்ற திருவடிகள் இரண்டையும் வழிபடுவதும் ஆகாது போகுமோ? இசையினால் மிக்க மகிழ்ச்சியைத் தருகின்ற பாட்டுடன், ஆட்டம் பழகுதல் ஆகாது

போகுமோ? நல்ல பாண்டி நாட்டையுடைய இறைவன் தனது படையாகிய அடியார்களை ஆளும் தன்மைகளைப் பாடுதல் ஆகாது போகுமோ? விண்ணவரும் மகிழ்ச்சி மிகத் தக்க ஒரு மாற்றம் தோன்றுதல் ஆகாது போகுமோ?

விளக்கவுரை

இதன்கண் எல்லாத் திருப்பாட்டுக்களிலும், ஈற்றடியை முதலிற்கொள்க. ஆகாது - உண்டாகாது; நிகழாது. 'ஆகாதே' என்றது, பன்மை ஒருமை மயக்கம். இவ்வாறு பின்னும் வருவன காண்க. ஏகாரம், எதிர்மறுத்துரைத்தற்கண் வந்த வினாப்பொருட்டு (தொல். சொல். *246.).* இது, பின்வருவன பலவற்றிற்கும் ஒக்கும். வாழ்வில் - வாழ்வுபோல. கடைப்படும் - சுதந்திரமின்றி இறைவன் வழிப்படும். இதனைப் பெயரெச்சமாக்கி, 'அது' என்னும் சொல்லெச்சம் வருவித்து முடிக்க. இன்னோரன்ன வினைமுற்றுக்கள் பலவும், இங்குத் தொழிற் பெயர்ப் பொருள் தந்தன என்று போவாரும் உளர். பிறந்திடுமாற்றை மறத்தல், இனி அது நிகழாது என்னும் துணிவினாலாம். பாதம் வணங்குதலாக இங்கு அருளிச்செய்வன பலவும், 'நேர்படக் கண்டு வணங்குதலாகிய அநுபவ வணக்கத்தையே என்க. அவற்றுள் இது, பாதம் மாலறியா அருமையுடைமையை நினைந்து அருளிச் செய்தது. 'வணங்குதும்' என்றன்பின், 'அஃது' என்னும் தோன்றா எழுவாய் வருவித்து, 'ஆகாதே' என்றதனை வேறு தொடராக்கி உரைக்க. இவ் வாறும் வருவன பின்னும் உள. 'களிகூர்தரு பண் பாடலொடு' என மாறுக. பயின்றிடும் - பயிலப்பட்டிடும். 'பாண்டிநன்னாடுடை யானாகிய சிவபிரான், தன்தொண்டர்களாகிய படையை ஆளும் திறங்கள் பாடுதும்' என்க. விண் - விண்ணோர். 'களி' என்றது, வியப்பினை. வேதகம் - வேறுபடுத்தும் பொருள்; அஃது, இங்குத் திருவருள். அது வெளிப்படுதல் - தனது செயலைப் புலப்படுத்தல். விண்ணோர் வியத்தல், மண்ணோர், தம்மினும் மேலோராய் மாறினமை குறித்தாம். வலைவாணரை அடிகள் வேடர் எனவும் குறித்தலை, 'கிராத வேடமொடு' *(தி.8 கீர்த்தித். 15.)* என்றவிடத்தும் காண்க.

ஒன்றினொ டொன்றுமோ ரைந்தினொ டைந்தும்
உயிர்ப்பறு மாகாதே
உன்னடி யார்அடி யார்அடி யோமென
உய்ந்தன வாகாதே
கன்றை நினைந்தெழு தாயென வந்த
கணக்கது வாகாதே
காரண மாகும் அனாதி குணங்கள்
கருத்துறு மாகாதே

நன்றிது தீதென வந்த நடுக்கம்
நடந்தன ஆகாதே
நாமுமெ லாம்அடி யாருட னேசெல
நண்ணுது மாகாதே
என்றுமென் அன்பு நிறைந்த பராவமு
தெய்துவ தாகாதே
ஏறுடை யான்எனை ஆளுடை நாயகன்
என்னுள் புகுந்திடிலே. **#635**

இடபவாகனத்தை உடையவனும், என்னை அடிமையாகவுடைய தலைவனுமாகிய சிவபெருமான் என்னுள்ளே புகுவானாயின், உயிரோடு உடம்பும் ஒப்பற்ற ஐம்பொறிகளோடு ஐம்புலன்களும் கலந்து உயிர்க்கும் தன்மை அறுதல் ஆகாது போகுமோ? இறைவனே! உன் அடியார்க்கு அடியோம் என்று சொல்லித் துன்பங்கள் பலவும் நீங்குதல் ஆகாது போகுமோ? கன்றை எண்ணி எழுகின்ற தாய்ப் பசுவைப் போல இறைவன் முன் வந்து உருகுகின்ற தன்மை ஆகாது போகுமோ? எல்லாச் செயல்களுக்கும் காரணமாகிய இறைவனுடைய குணங்கள் என் மனத்தில் பொருந்துதல் ஆகாது போகுமோ? இது நல்லது இது தீயது என்று ஆராய்ந்து அதனால் உண்டாகிய மனக் கலக்கம் நீங்குதல் ஆகாது போகுமோ? முன்னைய அடியார்களுடன் வீட்டுலகிற் சென்று சேர ஒன்று கூடுவதும் ஆகாது போகுமோ? எந்நாளும் எனது அன்பு நிறைந்த மேலான அமுதம் அடைவது ஆகாது போகுமோ?

விளக்கவுரை

ஒன்றினொடு ஒன்றும் - ஒன்றாகிய உயிரோடு பொருந்துகின்ற. ஐந்தினொடு ஐந்து - ஞானேந்திரியங்களும், கன்மேந்திரியங்களும், உயிர்ப்பு அறும் - செயலறும். 'அடியாரடி யோம்' என்னாது, 'அடியா ரடியா ரடியோம்' என்றார், 'தமது தகுதி அத்துணையதே' என்றற்கு. என - என்று சொல்லி. உய்ந்தன - உய்ந்த செயல்கள்; இது, துணிவினால் எதிர்காலம் இறந்தகாலம் ஆயவாறு; இவ்வாறு பின்னும் வருவன உள. வந்தவன் இறைவன். கணக்கு - நிலைமை. அது, பகுதிப்பொருள் விகுதி. காரணமாகும் - எப் பொருட்கும் காரணன் ஆகின்ற. அனாதி - ஆதியில்லாதவன்; இறைவன். 'அவனது குணங்கள் எட்டு' என்பதனைப் பின்னர் (தி.*8* திருப்படையாட்சி பா.*7*) அருளிச் செய்தல் காண்க. கருத்து உறும் - எம் உள்ளத்தில் பொருந்தும். 'இது' என்றது, தாப்பிசையாய், முன்னரும் சென்று இயையும். நடுக்கம் - துன்பம்; அது, துன்பத்திற் ஏதுவாகிய விருப்பு வெறுப்புக்களைக் குறித்தது. நடந்தன - விலகுவன. செல - இறையுலகத்திற்குச் செல்ல. நண்ணுதும் - தொடங்குவோம். அன்பு நிறைந்த - அன்பு சென்று நிறைந்ததாகிய. பராவமுது - எங்கும்

நிறைந்த இன்பம்.

பந்த விகார குணங்கள் பறிந்து
மறிந்திடு மாகாதே
பாவனை யாய கருத்தினில் வந்த
பராவமு தாகாதே
அந்த மிலாத அகண்டமும் நம்முள்
அகப்படு மாகாதே
ஆதி முதற்பர மாய பரஞ்சுடர்
அண்ணுவ தாகாதே
செந்துவர் வாய்மட வாரிட ரானவை
சிந்திடு மாகாதே
சேலன கண்கள் அவன்திரு மேனி
திளைப்பன ஆகாதே
இந்திர ஞால இடர்ப்பிற வித்துயர்
ஏகுவ தாகாதே
என்னுடை நாயக னாகிய ஈசன்
எதிர்ப்படு மாயிடிலே. **#636**

என்னுடைய தலைவனாகிய ஈசன் எதிரே தோன்று வனாயின் பாசத் தொடர்பினால் உண்டாகும் மாறுபட்ட குணங்கள் அழிவதும் ஆகாது போகுமோ? பாவனை செய்கின்ற மனத்தினில் ஊறுகின்ற மேலான அமுதம் ஆகாது போகுமோ? எல்லையில்லாத உலகப் பொருள்களும் நமது உள்ளத்தில் அகப்படுதல் ஆகாது போகுமோ? எல்லாவற்றிக்கும் முதலான பரஞ்சுடர் நெருங்கும்பழி ஆகாது போகுமோ? மிகச் சிவந்த வாயினையுடைய பெண்களால் வரும் துன்பங்களானவை ஒழிந்து போதல் ஆகாது போகுமோ? சேல் மீன் போன்ற கண்கள் அவனது திருமேனி அழகில் ஈடுபடுதல் ஆகாது போகுமோ? இந்திர சாலம் போன்ற மயக்குகின்ற பிறவித் துன்பம் ஒழிதல் ஆகாது போகுமோ?

விளக்கவுரை

பந்த விகார குணங்கள் - கட்டுண்டற்கு ஏதுவாகிய வேறுபட்ட குணங்கள்; அவை முக்குணங்கள். பறிந்து - தொடர்பு அற்று. மறிந்திடும் - வந்தவழியே நீங்கும். பாவனையாய கருத்து - பாவிப்பதாகிய உள்ளம். 'வந்த பராவமுது' என்றதனை, 'பராவமுது வந்தது' என மாற்றியுரைக்க. வந்தது - அநுபவமாயது. அந்தம் - அழிவு. அகண்டம் - பூரணப் பொருள். உம்மை, சிறப்பு; 'அது, நம்முள் அகப்பட்டுத் தோன்றும்' என்க. ஆதிமுதற் பரமாய பரஞ்சுடர் அண்ணுவது - எப்பொருட்கும் முதலும், எல்லா முதன்மையும் உடையதும் ஆகிய மேலான ஒளியை நாம் அணுகுவது. தம் கண்களை, 'சேலன கண்கள்' என்றார், அவன் திருமேனி அழகு

எம்மைப் பெண்மைப் படுத்தியது என்றற்கு.
'இந்திர ஞாலம் போலும் பிறவி' என்க, இது, கடிதின் மறைந்தும் தோன்றியும் வருதல் பற்றி வந்த உவமை. 'இடர்' என்றது, பிறவியது தன்மையையும், 'துயர்' என்றது அதனால் விளையும் நிலையையும் கூறியவாறு.

என்னணி யார்முலை ஆகம் அளைந்துடன்
இன்புறு மாகாதே
எல்லையில் மாக்கரு ணைக்கடல் இன்றினி
தாடுது மாகாதே
நன்மணி நாதம் முழங்கியென் உள்ளுற
நண்ணுவ தாகாதே
நாதன் அணித்திரு நீற்றினை நித்தலும்
நண்ணுவ தாகாதே
மன்னிய அன்பரில் என்பணி முந்துற
வைகுவ தாகாதே
மாமறை யும்அறி யாமலர்ப் பாதம்
வணங்குது மாகாதே
இன்னியற் செங்கழு நீர்மலர் என்தலை
எய்துவ தாகாதே
என்னை யுடைப்பெரு மான்அருள் ஈசன்
எழுந்தரு ளப்பெறிலே. **#637**

என்னை ஆளாக உடைய பெருமானும், அருளு கின்ற ஈசனும் ஆகிய இறைவன் எழுந்தருளி வரப் பெற்றால் என்னுடைய அழகு பொருந்திய தனங்கள் இறைவனது திருமார்போடு பொருந்தி உடனாக இன்புறுதல் ஆகாது போகுமோ? பெரிய கருணைக் கடல் இனிது இன்பமாக ஆடுவதும் ஆகாதே போகுமோ? நல்ல மணி ஓசை என் உள்ளத்திலே பொருந்த அதனை நான் அடைதல் ஆகாது போகுமோ? இறைவனது அழகிய திருநீற்றை நாள்தோறும் அணிவது ஆகாது போகுமோ? நிலை பெற்ற அன்பரில் எனது பணி யானது முற்பட நிகழ்வது ஆகாது போகுமோ? பெருமை பொருந்திய வேதங்களும் அறிய முடியாத தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்குதலும் ஆகாது போகுமோ? இனிய தன்மையுடைய செங்கழு நீர்மலர் மாலை, என்மேல் பொருந்துதல் ஆகாது போகுமோ?

விளக்கவுரை

ஆகம் - இறைவனது மார்பு. அளைந்து - கலந்து; இதனை, 'அளைய' எனத் திரிக்க. உடன் - ஒருங்கு. 'யான் பெண்மை யுடையேனாய் அவனொடு கலந்தாற்போலும் இன்பத்தை அடையும் அத்தன்மை

ஆகாதே' என்பது முதலடியின் பொருள். இதுவும், மேல் 'சேலன கண்கள் அவன் திருமேனி திளைப்பன' என்றாற்போல, இறைவன் திருமேனியது அழகைச் சிறப்பித்ததாம். 'நன்மணி ......நண்ணுவது' என்றது, 'யோகநிலை தானே கைவரும்' என்றதாம். நித்தலும் 'நண்ணுவது' என்றது, நண்ணுதலாகிய அதன் பயன்மேல் நின்றது; அப்பயனாவது மும்மலங்களும் நீங்கப் பெறுதல். வைகுவது - பொருந்துவது. அடிகள் சிவபிரானுக்குச் செங்கழுநீர் மாலை கூறுவராகலின் *(தி.8 கீர்த்தித். 113-114)* அது நேரே தமக்குக் கிடைக்கப்பெறும் என்றார். பெறில் - அப்பேற்றினை யாம் பெற்றால்.

மண்ணினில் மாயை மதித்து வகுத்த
மயக்கறு மாகாதே
வானவ ரும்அறி யாமலர்ப் பாதம்
வணங்குது மாகாதே
கண்ணிலி காலம் அனைத்தினும் வந்த
கலக்கறு மாகாதே
காதல்செ யும்அடி யார்மனம் இன்று
களித்திடு மாகாதே
பெண்ணலி ஆணென நாமென வந்த
பிணக்கறு மாகாதே
பேரறி யாத அநேக பவங்கள்
பிழைத்தன ஆகாதே
எண்ணிலி யாகிய சித்திகள் வந்தெனை
எய்துவ தாகாதே
என்னை யுடைப்பெரு மான்அருள் ஈசன்
எழுந்தரு ளப்பெறிலே. **#638**

என்னை ஆளாக உடைய பெருமானும் அருளு கின்ற ஈசனுமாகிய இறைவன் எழுந்தருளப் பெற்றால் உலகினில் மாயா காரியங்களை விரும்பிச் செய்த்தனால் உண்டாகிய மயக்க உணர்ச்சியறுதலும் ஆகாது போகுமோ? தேவரும் அறிய முடியாத தாமரை மலர் போன்ற திருவடியை வழிபடுதல் ஆகாது போகுமோ? ஆணவ இருளில் அழுந்தி அழிவில்லாது கிடந்த காலம் முழுவதினும் வந்த கலக்கமானது அற்று ஒழிதல் ஆகாது போகுமோ? அன்பு செய்கின்ற அடியவரது மனமானது இப்பொழுது களிப்புற்றிருத்தல் ஆகாது போகுமோ? பெண் அலி ஆண் என்றும் நிலம், நீர் என்றும், உண்டாகிய மாறுபாடு அற்று ஒழிதல் ஆகாது போகுமோ? பெயர் களை அறியாத பல பிறவிகளினின்றும் தப்புதல் முடியாது போகுமோ? எண்ணிலாத அற்புதச் செயல்கள் வந்து என்னை அடைதல், ஆகாது போகுமோ?

விளக்கவுரை

இறைவன் மதித்து வகுத்த மாயா காரியங்களை, மாயையே மதித்து வகுத்ததுபோல அருளிச்செய்தார். இங்கு, பாதம், வானவரும் அறியாத அருமையுடைமையை நினைந்து அருளிச் செய்தார். கண் இலி - கண்ணோட்டம் இல்லாத கூற்றுவன். 'ஆட்பார்த் துழலும் அருளில் கூற்று' (நாலடி - *20*) என்றார் பிறரும். காலம் - இறுதிக்காலம். வந்த கலக்கு - வந்ததனால் உண்டாகிய கலக்கம். அடியார் மனம் களித்தல், தாம் பெற்ற பேறு தம் தமர்க்கும் கிடைத்தமை பற்றி. 'பிறர்' என்பதனை 'பெண் அலி ஆண்' என வகுத்தோதினார். உணர்வு அங்ஙனம் வேறுபடுதல் பற்றி. பிணக்கு - ஞானத்திற்கு மாறாய உணர்வு. பேர் அறியாத - இன்ன என அறிந்து சொல்ல இயலாத. இனி, பேர்தல், (நீங்குதல்) அறியாத என்றுமாம். பவங்கள் - பிறப்புக்கள். பிழைத்தன - தப்பிய செயல்கள். பிறவியினின்றும் நீங்கு தல் ஒன்றேயாயினும், பல பிறவிகட்கும் காரணமாய வினைகளை நோக்கப் பலவாம் என்பது பற்றி, 'பிழைத்தன' என்றார். சித்திகள் தாமே வருவன என்க.

பொன்னிய லுந்திரு மேனிவெண் ணீறு
பொலிந்திடு மாகாதே
பூமழை மாதவர் கைகள் குவிந்து
பொழிந்திடு மாகாதே
மின்னியல் நுண்ணிடை யார்கள் கருத்து
வெளிப்படு மாகாதே
வீணை முரன்றெழும் ஓசையில் இன்பம்
மிகுத்திடு மாகாதே
தன்னடி யார்அடி என்தலை மீது
தழைப்பன ஆகாதே
தானடி யோம்உட னேஉய வந்து
தலைப்படு மாகாதே
இன்னியம் எங்கும் நிறைந்தினி தாக
இயம்பிடு மாகாதே
என்னைமுன் ஆளுடை ஈசன்என் அத்தன்
எழுந்தரு ளப்பெறிலே. **#639**

என்னை முன்னே ஆளாகவுடைய ஈசனும், தந்தையுமாகிய இறைவன் எழுந்தருளப் பெற்றால் பொன்னிறம் பொருந்திய திருமேனியில் திருவெண்ணீறு விளங்கித் தோன்றுதல் ஆகாது போகுமோ? பெரிய முனிவர்களுடைய கைகள் குவிக்கப் பெற்று மலர் மாரியைப் பெய்தல் ஆகாது போகுமோ? மின்னலைப் போன்று நுட்பமான இடையை உடைய பெண்ணினது வஞ்சனை யான எண்ணம் வெளிப்படுதல்

ஆகாது போகுமோ? வீணையானது முழங்குதலால் உண்டாகின்ற ஒலியைப் போன்ற இன்பமானது மிகுந்திடுதல் ஆகாது போகுமோ? அவன் அடியாருடைய திருவடிகள் என் தலை மீது விளங்குதல் ஆகாது போகுமோ? அடியோங்கள் உய்தி பெறும்படி, தான் எழுந்தருளி வந்து எங்களுடன் கலத்தல் ஆகாது போகுமோ? எவ்விடத்தும் இனிய ஓசைகள் நிறைந்து இனிமையாக ஒலித்தல் ஆகாது போகுமோ?

விளக்கவுரை

திருமேனி, இறைவனுடையது. பொலிந்திடும் - கண்முன் விளங்கும். 'பூமழையைப் பொழிந்திடும்' என்க. நல்லன நிகழுங்கால், தேவரும், முனிவரும் பூமழை பொழிந்து வாழ்த்துவர் என்க. 'கருத்து' என்றது, வஞ்சனையை. தான் - இறைவன். உடனே - ஒருசேர. தலைப்படுதல் - அளவளாவுதல். இயம் - வாச்சியம்.

சொல்லிய லாதெழு தூமணி யோசை
சுவைதரு மாகாதே
துண்ணென என்னுளம் மன்னிய சோதி
தொடர்ந்தெழு மாகாதே
பல்லியல் பாய பரப்பற வந்த
பராபர மாகாதே
பண்டறி யாதப ரானுப வங்கள்
பரந்தெழு மாகாதே
வில்லியல் நன்னுத லார்மயல் இன்று
விளைந்திடு மாகாதே
விண்ணவ ரும்அறி யாத விழுப்பொருள்
இப்பொரு ளாகாதே
எல்லையி லாதன எண்குண மானவை
எய்திடு மாகாதே
இந்து சிகாமணி எங்களை ஆள
எழுந்தரு ளப்பெறிலே. **#640**

சந்திரனைத் தலைமணியாக அணிந்த பெருமான், எங்களை ஆளும்பொருட்டு எழுந்தருளப் பெற்றால் சொல்லுவதற்கு முடியாதபடி உண்டாகின்ற, தூய்மையான மணி ஓசை இன்பத்தைத் தருதல் ஆகாது போகுமோ? மிக விரைவாக, என் உள்ளத்தில் பொருந் திய சோதி இடைவிடாது வளர்தல் ஆகாது போகுமோ? பல வகையான மன அலைவு கெடும்படி வந்தருளின, பரம்பொருளினது பயன் உண்டாகாது, போகுமோ? முற்காலத்திலும் அறிந்திராத மேலான அனுபவங்கள் விரிந்து தோன்றுதலும் உண்டாகாது போகுமோ? வில்லைப் போன்ற அழகிய நெற்றியை உடைய பெண் களது ஆசை போன்றதோர் ஆசை,

இப்பொழுது முடிவு உண்டாகாது போகுமோ? தேவரும் அறியாத மேன்மையான பொருள் இந்தப் பொருள்தான் என்ற உணர்வு தோன்றாது போகுமோ? வரம்பு இல்லாதனவாகிய எண் குணங்களானவை என்னிடத்துப் பொருந்துதல் ஆகாது போகுமோ?

விளக்கவுரை

சொல் இயலாது - சொல் நிகழ்ச்சி அற்றவிடத்து. 'இயலாதவழி' என்பது, 'இயலாது' எனத் திரிந்தது. தூமணி ஓசை - திருச்சிலம்பின் நாதம். இது நிராதார யோகத்திற் கேட்கப்படும் என்பதனை,

'ஓசையெலாம் அற்றால் ஒலிக்கும் திருச்சிலம்பின்
ஓசைவழி யேசென் றொத்தொடுங்கின்'

என்னும் திருக்களிற்றுப்படி*(33)*யான் உணர்க. துண்ணென - விரைவாக. பல்லியல்பு - மாயாகாரியங்களான் விளைவன. பராபரம் - மேலும் கீழுமாய் (எங்குமாய்) நிற்கும் பொருள். இங்கும், 'பாரபரம் வந்தது' என மாற்றி உரைக்க. பர அநுபவங்கள் - மேலான அநுபவங்கள். 'நன்னுதலார் மயல் போலும் மயல் எனக்கு விளைந்திடும்' என்றபடி. இஃது இறைவனிடத்தே தமக்கு உளதாகும் காதலைப் புலப்படுத்தியது. இப்பொருள் - இங்கு வந்து நிற்கும் பொருள். எல்லை இலாதன - அழிவில்லாத. எண் குணங்கள், 'தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், முடிவிலாற்ற லுடைமை, பேரருளுடைமை, வரம்பிலின்பமுடைமை' என்னும் இவை. இவை இறைவனுடைய அருட் குணங்களாகும்.

'எட்டு வான்குணத் தீசன்எம் மான்றனை' -தி.*5* ப.*89* பா.*8*

எனவும்,

'இறையவனை மறையவனை எண்குணத்தி னானை'
-தி.*7* ப.*40* பா.*3*

எனவும் போந்த திருமொழிகளையும் காண்க.

கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.-குறள்.*9*

எனத் திருவள்ளுவரும் கூறினார். இந்து சிகாமணி - சந்திரனைத் தலைமணியாகச் சூடியவன்.

சங்கு திரண்டு முரன்றெழும் ஓசை
தழைப்பன ஆகாதே
சாதி விடாத குணங்கள் நம்மோடு
சலித்திடு மாகாதே
அங்கிது நன்றிது நன்றெனு மாயை
அடங்கிடு மாகாதே

அசைஎ லாம்அடி யாரடி யோம்எனும்
அத்தனை யாகாதே
செங்கயல் ஒண்கண் மடந்தையர் சிந்தை
திளைப்பன ஆகாதே
சீரடி யார்கள் சிவாநு பவங்கள்
தெரிந்திடு மாகாதே
எங்கும் நிறைந்தமு தூறு பரஞ்சுடர்
எய்துவ தாகாதே
ஈறறி யாமறை யோன்எனை ஆள
எழுந்தரு ளப்பெறிலே. **#641**

முடிவு அறியப்படாத, மறையோனாகிய இறைவன், என்னை ஆளும் பொருட்டு எழுந்தருளப் பெற்றால் பல சங்குகள் ஒன்று சேர்ந்து முழங்கினால் எழுகின்ற ஓசையில் விளையும் இன்பம் போன்றதோர் இன்பம், மிகுதிப்படுதல் ஆகாது போகுமோ? பிறந்த இனம் பற்றி விடாது வருகிற தன்மைகள் நம்மிடம் இருந்து நீங்குதலும் ஆகாது போகுமோ? அப்பொழுது, இது நன்று, இது நன்று எனும் மயக்கம் தணிதல் ஆகாது போகுமோ? ஆசை முழுவதும் யாம் இறைவன் அடியார்க்கு அடியோம் என்னும் அவ்வளவே ஆகாது போகுமோ? சிவந்த கயல் மீன் போன்ற ஒளிமிக்க கண்களை உடைய, பெண்களது மனமானது நன்கு விளங்குதல் ஆகாது போகுமோ? சிறப்பினையுடைய அடியார்களது சிவாநுபவங்களை உணர்தல் ஆகாது போகுமோ? எவ்விடத்தும் நிறைந்து பேரின்பத்தைப் பொழிகின்ற மேலான சோதியை அடைதல் ஆகாது போகுமோ?

விளக்கவுரை

'சங்கு திரண்டு....தழைப்பன' என்றதும், மேல், *'நன்மணி நாதம் முழங்கி'* *(தி.8 திருப்படையாட்சி பா.4)* என்றாற் போல, யோகப் பயனைக் கூறியதாம். சாதி விடாத குணங்கள் - சாதிபற்றி நீங்காதிருக்கின்ற குணங்கள். நம்மோடு - நம்பால். சலித்திடும் - தளர்ச்சி யெய்தும். அங்கு - அவை சலித்த விடத்து. *'இது, இது'* என வந்த சுட்டுக்கள் வேறு வேறு பொருளைச் சுட்டின. *'அங்கது'* எனப்பாடம் ஓதுதலே சிறக்கும். மாயை - மயக்கம். *'அத்தனை'* என்றது, *'அதற்குமேற் செல்லாது'* என்றவாறு. சிந்தை திளைத்தல் - எண்ணத்தை நன்குணர்தல். தெரிந்திடும் - நம் அறிவிலும் நன்கு விளங்கும்.

1.50.ஆனந்த மாலை

மின்னே ரனைய பூங்கழல்க
ளடைந்தார் கடந்தார் வியனுலகம்

பொன்னே ரனைய மலர்கொண்டு
போற்றா நின்றார் அமரரெல்லாம்
கன்னே ரனைய மனக்கடையாய்க்
கழிப்புண் டவலக் கடல்வீழ்ந்த
என்னே ரனையேன் இனியுன்னைக்
கூடும் வண்ணம் இயம்பாயே. **#642**

இறைவனே! உன் திருவடியை அடைந்த அன்பர்கள் இவ்வுலக மாயையைக் கடந்தார்கள். தேவர்கள் எல்லாம் மலர்களால் அருச்சித்து வணங்கி நின்றார்கள். அப்படி இருக்கும் போது, கல்லை நிகர்த்த மனத்தை உடையவனாய்க் கழிக்கப்பட்டுத் துன்பக் கடலில் வீழ்ந்த யான், இனி உன்னை அடையும் வகையைச் சொல்வாயாக.

விளக்கவுரை

மின் ஏர் அனைய - மின்னலினது அழகையொத்த. உலகம், மண்ணுலகம். பொன் ஏர் அனைய மலர் - பொன்னினது அழகையொத்த பூக்கள்; இவை கற்பகத் தருக்களில் உள்ளவை. அமரர் போற்றியது, அடியார்கள் அடைந்த பெரும்பேற்றினை. 'கடை யேனாய்' என உயர்திணையாக ஓதற்பாலதனை, 'கடையாய்' என அஃறிணையாக ஓதினார், இழிவு பற்றி. கழிப்புண்டு - உன்னால் நீக்கப் பட்டு. 'என்நேர் அனையேன்' என்றது. 'இழிவினால் எனக்கு ஒப்பார் பிறரின்றி, என்னையே ஒத்த யான்' என்றபடி.

என்னால் அறியாப் பதம்தந்தாய்
யான தறியா தேகெட்டேன்
உன்னால் ஒன்றுங் குறைவில்லை
உடையாய் அடிமைக் காரென்பேன்
பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடிய ரொடுங்கூடா
தென்னா யகமே பிற்பட்டிங்
கிருந்தேன் நோய்க்கு விருந்தாயே. **#643**

இறைவனே! என்னால் அறிய முடியாத பதவியைக் கொடுத்தாய்; நான் அதனை அறியாமல் கெட்டேன்; உன்னால் ஒரு குறைவும் இல்லை; அடியேனுக்குப் பற்று யாருளர்? எப்பொழுதும் உன்னைப் பணிந்து வழிபடுகின்ற உன் பழவடி யாரோடு கூடாமல் பின்னிட்டு நோய்களுக்கு விருந்தாக இங்கு இருந்தேன்

விளக்கவுரை

அறியா - அறிதற்கியலாத. பதம் - நிலை. 'அஃது அறியாதே கெட்டேன்' என்றது, 'மழக் கை இலங்கு பொற்கிண்ணத் தின் அருமையை அம்மழவு

அறியாததுபோல *(தி.8 திருச்சதகம்-92)* அறியாது கெட்டேன்' என்றபடி. 'உன்னால் ஒன்றும் குறைவில்லை' என்ற தனை, 'தந்தாய்' என்றதன் பின்னர்க் கூட்டுக. 'உனக்கு அடிமை செய்தற்கு நான் யார் (என்ன உரிமை யுடையேன்)' என்க. இவ்வாறன்றி, 'உன் அடிமையாகிய எனக்குத் துணை யார்' என்பது பொருளாயின், இதனை இறுதிக்கண் கூட்டுக. மேலைப் பொருளே பொருளாயவழி, 'என்செய்கேன்' எனக் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க.

சீல மின்றி நோன்பின்றிச்
செறிவே யின்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலுங் காட்டி வழிகாட்டி
வாரா உலக நெறியேறக்
கோலங் காட்டி ஆண்டானைக்
கொடியேன் என்றோ கூடுவதே. **#644**

ஒழுக்கம் முதலானவை இல்லாமல் தோற்பாவை யின் கூத்தை நிகழ்த்திச் சுழன்று கிடக்கின்ற என்னைத் தன்னிடத்து அன்பு முதலியவற்றைக் கொடுத்து ஆண்டருளின இறைவனைக் கொடியேன் சேர்வது எந்நாளோ?

விளக்கவுரை

செறிவு - உறவு; அன்பு. சீலம் முதலிய நான்கும் சரியை முதலிய நான்குமாக உரைப்பாரும் உளர். மால் - அன்பு. வழி - ஞானம், 'மாலுங் காட்டி, வழி காட்டி' என்றதனை, 'கோலங் காட்டி' என்றதன் பின்னர்க் கூட்டுக. 'ஏற ஆண்டான்' என இயையும். கோலம் - திருமேனி. ஏனையவற்றொடு நோக்க, 'ஆண்டாயை' என்பதே பாடம் என்றல் கூடும்.

கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்
கேடி லாதாய் பழிகொண்டாய்
படுவேன் படுவ தெல்லாம்நான்
பட்டாற் பின்னைப் பயனென்னே
கொடுமா நரகத் தழுந்தாமே
காத்தாட் கொள்ளுங் குருமணியே
நடுவாய் நில்லா தொழிந்தக்கால்
நன்றோ எங்கள் நாயகமே. **#645**

கெடுவேன், கெடுமாறு கெடுகின்றேன். கெடுதி இல்லாத நீ அதனால் பழியை அடைந்தாய்; படுதற்குரிய துன்பங்களை எல்லாம் நான் பட்டால் காட்டும் உனக்குப் பயன் என்னை? கொடிய நரகத்தில் ஆளாகாது

காத்தருளும் குருவே! நீ நடுவு நிலைமையில் நில்லாது ஒழிந்தால் அது உனக்கு அழகாகுமோ!

விளக்கவுரை

'கெடும் இயல்புடையேனாகிய யான், அங்ஙனம் கெடுமாற்றானே கெடுகின்றேன்; அஃது என் குற்றமாயின், இக் குற்றமுடையேனை ஆட்கொண்டாய் என்ற பழியைக் கேடு சிறிதும் இல்லாத நீ பெற்றாயாவாய்; நான் படவேண்டுவனவாய துன்பங்கள் அனைத்தையும் பட்டுக்கிடப்பேனாயின், அதனால் உனக்கு உளதாம் பயன் யாது?' என்க. நடுவாய் நிற்றல் - ஆட்கொண்ட அடிமையை எவ்வாற்றாலேனும் அணைத்துக்கொள்ளல் வேண்டும் என்னும் முறைமைக்கண் வழுவாது நிற்றல்.

தாயாய் முலையைத் தருவானே
தாரா தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பி யினித்தான் நல்குதியே
தாயே யென்றுன் தாளடைந்தேன்
தயாநீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக
ஆண்டாய் நான்தான் வேண்டாவோ. **#646**

தாயாகி முலை உண்பிப்போனே! முலை தாரா விடின் நாயேன் சவலையாய் ஒழிவேனோ? இனியாயினும் அருள் செய்வாய்; தாயே என்று உன் திருவடியை அடைந்தேன். நீ என் னிடத்து அருள் நிறைந்தவனாகி இருக்க வில்லையோ? நாயினேனது அடிமைத் திறம் வேண்டி என்னை ஆண்டருளினை; அடிமைத் திறமே யன்றி அடியேன் வேண்டாவோ?

விளக்கவுரை

தாயாய் - உயிர்கட்கெல்லாந் தாயாய்நின்று. முலையைத் தருவானே - அவள் பாலூட்டுதல்போல நலம் செய் பவனே. சவலையாய் - சவலைப் பிள்ளை - தாய் இருந்தும் அவள் பாலை உண்ணப் பெறாத பிள்ளை. தயா - தயவுடையவன்; ஆகு பெயர். இதன்பின், 'தயாவாய்' என ஆக்கம் வருவிக்க. 'இல்லையே' என்னும் ஏகாரம், தேற்றம். 'நாயேனாகிய அடிமை உன் உடனாம்படி முன்பு ஆண்டாய்; இப்பொழுது நான் வேண்டாவோ' என்க.

கோவே யருள வேண்டாவோ
கொடியேன் கெடவே அமையுமே
ஆவா என்னா விடில்என்னை

அஞ்சேல் என்பார் ஆரோதான்
சாவா ரெல்லாம் என்னளவோ
தக்க வாறன் றென்னாரோ
தேவே தில்லை நடமாட
திகைத்தேன் இனித்தான் தேற்றாயே. **#647**

இறைவனே! நீ அருள வேண்டாவோ? கொடியேன் கெடவே அமையுமோ? அந்தோ! என்று நீ இரங்காவிடின் என்னை அஞ்சேல் என்பார் யாருளர்? பிறவிப்பயன் அடையாமல் இறப்பவர் எல்லாம் என்னளவு தானோ? என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி அன்று என்று ஒருவரும் சொல்லாரோ? நான் திகைத்தேன்; இனியா யினும் தெளிவிப்பாயாக.

விளக்கவுரை

கோவே - தலைவனே. கெடவே - கெடுதல்தான். அமையுமே - தகுமோ. சாவார் - உலகில் வாளா இறப்பவர். என் அளவோ - எனது நிலைமையினரோ; 'உன்னால் ஆட்கொள்ளப்பட்ட வர்களோ' என்றபடி. 'அல்லாராதலின்' அவர்களைப்போலவே நானும் இறத்தல் பொருந்துவதோ' என்பது குறிப்பு. 'அவ்வாறு இறந்தால், உனது அருட்செயலுக்குப் பொருந்தும் முறைமை அன்று என்று உயர்ந்தோர் கூறமாட்டாரோ' என்க.

நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசி
அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதீ
செய்வ தொன்றும் அறியேனே. **#648**

நரியைப் பரியாக்கி உலகம் எல்லாம் பரவச் செய்து, மதுரைப் பகுதி முழுதும் பித்தேற்றிய பெருந்துறைப் பெருமானே! அரும் பொருளே! அவினாசி அப்பனே! பாண்டி நாட்டின் கடலே! தெரிதற்கரிய மேலான ஒளியே! நான் உய்யும் பொருட்டு விடுப்ப தாகிய காரியத்தைச் சிறிதும் அறிந்திலேன்.

விளக்கவுரை

பரி - ஊர்தி. அவினாசி. கொங்குநாட்டுத் தலம். இனி, 'அழிவில்லாதவன் என்றுமாம். பாண்டி - பாண்டிநாடு. வெள்ளம் - கருணை வெள்ளம்.

1.51.அச்சோப் பதிகம்

முத்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப்
பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே. **#649** ★★★★★

முத்தி வழியை அறியாத மூர்க்கரோடு கூடி அவர் வழியில் முயல்கின்ற எனக்குப் பத்தி வழியை அறிவித்து, என் பழவினைகள் ஓடும்படி மனமாசு அகற்றிச் சிவ வடிவமாக்கி என்னை ஆண்டருளினன், எமது தந்தையாகிய சிவபெருமான். அப்பெருமான் அருள் செய்த பேற்றைப் பெற வல்லவர் வேறு யாவர்?

விளக்கவுரை

முயலுதல் - செயல் செய்தல். மூர்க்கரோடு சேர்ந்து செய்யும் செயல் தீதாம் என்பது சொல்லவேண்டா. பாறும் வண்ணம் - அழியும்படி. சித்தம் - உள்ளம்; என்றது, அறிவை. 'தானாக்கி' என்பதனை, 'சிவமாக்கி' என்றார். ஆளுதல் - தன் இன்பத்தை நுகரச் செய்தல். 'அருளிய முறைமையை இவ்வுலகில் யார் பெறுவார்' என்க. அச்சோ - இது வியப்பு.

நெறியல்லா நெறிதன்னை
நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே
திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத
கூத்தன்தன் கூத்தையெனக்
கறியும் வண்ணம் அருளியவா
றார்பெறுவார் அச்சோவே. **#650**

கெட்ட வழியை நல்ல வழியாக நினைக்கின்ற எனக்குத் தாழ்ந்த வழிகளில் சேராதபடி தன் திருவருளையே சேரும் வண்ணம் இறைவன் தன் திருவிளையாடலைச் செய்தான். அவ்விறைவன் அருளிய பேற்றைப் பெறவல்லார் வேறு யாவர்?

விளக்கவுரை

குறி - அறிதற்குரிய அடையாளம்; அவை, உருவும் பெயரும் முதலாயின. 'அவற்றுள் ஒன்றும் இல்லாத' என்றபடி. தன் கூத்து - தனது திருவிளையாட்டு; அஃது அனைவரையும் தானாகச் செய்யும் செயல்.

அறியும் வண்ணம் அருளியது - அஃது அநுபவமாம்படி செய்தது.

பொய்யெல்லாம் மெய்யென்று
புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை
மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான்
தன்கழலே சேரும்வண்ணம்
ஐயன்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே. **#651**

பொய்யை மெய்யென்பது கருதி மாதர் இன்பத்தில் மயங்கி நின்ற என்னை, அழியாமல் காத்தருளித் தனது திருவடியையே அடையும் வண்ணம் இறைவன் அருள் பாலித்தான். எனக்கருள் செய்த இப்பேற்றைப் பெற வல்லார் வேறு யாவர்?

விளக்கவுரை

பொய் - நிலையாதனவாய இவ்வுலகப் பொருள்கள். 'கழலே' என்னும் ஏகாரம், பிரிநிலை. 'ஐயன்' என்றதனை, 'பிரான்' என்றதன்பின் கூட்டுக.

மண்ணதனிற் பிறந்தெய்த்து
மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி
எனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத்
தூய்நெறியே சேரும் வண்ணம்
அண்ணல்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே. **#652**

மண்ணுலகில் பிறந்து இளைத்து மடிந்து விழக் கட வேனுக்கு அளவுபடாத அன்பை அருள் செய்து என்னை ஆண்டான். மேலும் எனக்குத் தன் திருவெண்ணீறு அணிவித்து, தூய்மையாகிய முத்தி நெறியை அடையும் வண்ணம் அருள்செய்தான். அவ்விறைவன் எனக்கு அருள் செய்த பேற்றைப் பெறவல்லவர் யாவர்?

விளக்கவுரை

எண்ணம் இலா அன்பு - நான் எதிர்பாராத அன்பு.

பஞ்சாய அடிமடவார்
கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர
நிற்பேன்உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேன்நான் உடையானே

அடியேனை வருகஎன்று
அஞ்சேல்என் றருளியவா
றார்பெறுவார் அச்சோவே. **#653**

பெண்ணுடைய கடைக்கண்ணால் துன்பம் அடைந்து நிற்கின்ற நான் உன்னருளைப் பெற்றேன். அதனால் பிழைத்தேன். அடியேனை வாவென்று அழைத்து அஞ்சேல் என்றருளின அப்பேற்றைப் பெற வல்லார் வேறு யாவர்?

விளக்கவுரை

பஞ்சு ஆய - பஞ்சு பொருந்திய. நெஞ்சு ஆய - உள்ளத்திற் பொருந்திய. கூர - மிக்கெழ. 'நீ எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார்' என்க.

வெந்துவிழும் உடற்பிறவி
மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழல் கோல்வளையார்
குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு
பரிசறஎன் துரிசுமறுத்
தந்தமெனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே. **#654**

இந்தப் பிறவியை மெய்யெனக் கருதித் தீவினைகளைப் பெருக்கிப் பெண்ணின் தனங்களின் மேல் விழுகின்ற என்பற்றினை நீக்கி என்னை ஆண்டருளி, என் குற்றங்களையும் அழித்தான். மற்றும் முடிவான பொருளை எனக்கு அருள் செய்தான். அவன் செய்த பேற்றைப் பெற வல்லார் வேறு யாவர்?

விளக்கவுரை

'உடலாகிய இப்பிறவி' எனச் சுட்டு வருவிக்க. பரிசு - கைம்மாறு. துரிசு - குற்றம். அந்தம் - அருள வேண்டும் அளவு.

தையலார் மையலிலே
தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து
பாசமெனுந் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட்
டோங்காரத் துட்பொருளை
ஐயன்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே. **#655**

பெண்கள் மயக்கத்தில் தாழ்ந்து விழக் கடவேனாகிய என்னை, மெல்லக் கொண்டுவந்து பாசம் என்கிற தாழைக் கழற்றி, உய்யும் வழியைக்

காட்டி, ஓங்காரப் பொருளையும் எனக்கு அருள் செய்தான்.
அப்பேற்றைப் பெற வல்லார் வேறு யாவர்?

விளக்கவுரை

பையக் கொடுபோந்து - மெல்லத் தன்பால் வருவித்து; இது குதிரை வாங்குதல் முன்னிலையாகத் திருப்பெருந்துறையை அடையச் செய்தமையைக் குறித்தல் கூடும். தாழ் - பூட்டு; விலங்கு. உருவி - நீக்கி. 'தாள், தாழ்' என வந்தது என்பாரும் உளர்; அதற்குப் 'பாசத்தின்' என்னாது, 'பாசம் எனும்' என்ற பாடம் ஏலாமை அறிக. ஓங்காரத்து உட்பொருள், உயிர்களின் அறிவுக்கு அறிவாய் நின்று அறிவிப்பவன்தானே (இறைவனே) என்னும் உண்மை. அருளியது, அநுபவமாக உணரச் செய்தது.

சாதல்பிறப் பென்னுந்
தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின்மிக் கணியிழையார்
கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான்
தன்கழலே சேரும்வண்ணம்
ஆதியெனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே. **#656**

இறப்பும் பிறப்பும் என்கிற பெரிய சுழிகளில் சிக்கித் தடுமாறி பெண்கள்
இன்பத்தில் வீழ்கின்ற நான், தன் திருவடியை அடையும் வண்ணம்
இறைவன் அருள் செய்த பேற்றைப் பெற வல்லார் வேறு யாவர்?

விளக்கவுரை

தடஞ்சுழி - பெரிய சுழல். 'ஆதி' என்றதனை, 'பிரான்' என்றதன் பின் கூட்டுக.

செம்மைநலம் அறியாத
சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து
முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி
நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே. **#657**

செப்பமாகிய நல்வழியை அறியாத அறிவிலி களோடு கூடித் திரிகின்ற
என்னை முதல்வனாகிய பெருமான் மும்மலங்களையும் அறும்படி
செய்து, எம்மையும் ஓர் பொருளாக்கி, இந்நாயைச் சிவிகையில்

ஏற்றினான். எனக்கு அருள் செய்த பேற்றைப் பெற வல்லார் வேறு யாவர்?

விளக்கவுரை

செம்மை நலம் - செப்பத்தின் நன்மை. செப்பமாவது, திருவருள் நெறி, இதற்கு மாறாவது, கொடுமை *(கோணல்)* அது, தற்போத நெறி. சிதடர் - குருடர்; ஞானம் இல்லாதவர் என்றபடி. *'மும்மை'* என்றது *'மூன்று'* என்னும் துணை நின்றது, 'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' *(பரிபாடல்-திரட்டு-4)* என்புழிப்போல, முதலாய முதல்வன் - முதல்வர்க்கெல்லாம் முதல்வனாகிய முதல்வன்; ஏற்றுவித்த - ஏற்றுவித்தாற்போன்ற செயலைச் செய்த. அம்மை - தாய் போல்பவன்.

திருக்கோவையார்

2.1.இயற்கைப் புணர்ச்சி

திருவளர் தாமரை சீர்வளர்
காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங்
காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி
னொல்கி யனநடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக்
கொடிபோன் றொளிர்கின்றதே. **#658**

இதன் பொருள்:திருவளர் தாமரை திருவளருந் தாமரைப் பூவினையும்; சீர்வளர் காவிகள் அழகு வளரு நீலப் பூக்களையும்; ஈசர்தில்லைக் குருவளர் பூ குமிழ் ஈசர் தில்லைவரைப்பின் கணுண்டாகிய பூங்குமிழினது நிறம்வளரும் பூவினையும்; கோங்கு கோங்கரும்புகளையும்; பைங்காந்தள் கொண்டு செவ்விக் காந்தட்பூக்களையும் உறுப்பாகக் கொண்டு; ஓங்கு தெய்வ மரு வளர் மாலை ஒர் வல்லியின் ஒல்கி மேம்பட்ட தெய்வ மணம் வளரும் மாலை ஒருவல்லிபோல நுடங்கி; அன நடை வாய்ந்து அன்னத்தினடைபோல நடைவாய்ந்து; உரு வளர் காமன்தன் வென்றிக் கொடி போன்று ஒளிர்கின்றது வடிவுவளருங் காமனது வெற்றிக் கொடி போன்று விளங்காநின்றது; என்ன வியப்போ! என்றவாறு.

திருவென்பது கண்டாரால் விரும்பப்படுந்தன்மை நோக்கம் என்றவாறு. திருமகடங்குந் தாமரையெனினுமமையும். பூங்குமி ழென்பது, முதலாகிய தன் பொருட்கேற்ற அடையடுத்து நின்ற தோராகுபெயர். ஈசர் தில்லையென்பதனை எல்லாவற்றோடுங் கூட்டுக. பல நிலங்கட்குமுரிய பூக்களைக் கூறியவதனால், நில மயக்கங் கூறியவாறாயிற்று. ஆகவே, பல நிலங்களினுஞ் சென்று துய்க்கு மின்பமெல்லாந் தில்லையின் வாழ்வார் ஆண்டிருந்தே துய்ப்ப ரென்பது போதரும். போதர, இம்மையின்பத்திற்குத் தில்லையே காரணமென்பது கூறியவாறாயிற்று. ஆகவே, ஈசர் தில்லை யென்றதனான், மறுமையின்பத்திற்குங் காரணமாதல் சொல்லாமையே விளங்கும். செய்யுளாதலாற் செவ்வெண்ணின்றொகை தொக்கு நின்றது. ஓங்கு மாலையெனவியையும். தெய்வ மருவளர்மாலை யென்றதனால், தாமரை முதலாயினவற்றானியன்ற பிறமாலையோடு இதற்கு வேற்றுமை கூறியவாறாம். வாய்ந்தென்பது நடையின் வினையாகலாற் சினைவினைப்பாற்பட்டு முதல்வினையோடு முடிந்தது.

உருவளர்காமன்றன் வென்றிக் கொடியென்றது நுதல் விழிக்குத்தோற்று உருவிழப்பதன் முன் மடியாவாணையனாய் நின்றுயர்த்த கொடியை.
அன நடைவாய்ந்தென்பதற்கு அவ்வவ் வியல்பு வாய்ப்பப் பெற்றெனினுமமையும்.
திருவென்பது கண்டாரால் விரும்பப்படுந் தன்மைநோக்க மென்றது அழகு. இஃதென் சொல்லியவாறோவெனின், யாவ னொருவன் யாதொரு பொருளைக் கண்டானோ அக்கண்டவற்கு அப்பொருண்மேற் சென்ற விருப்பத்தோடே கூடிய அழகு. அதன்மேலவற்கு விருப்பஞ்சேறல் அதனிற் சிறந்தவுருவும் நலனும் ஒளியுமெவ்வகையானும் பிறிதொன்றற்கில்லாமையால், திரு வென்றது அழகுக்கே பெயராயிற்று. அங்ஙனமாயின் இது செய்யுளினொழிய வழக்கினும் வருவதுண்டோவெனின், உண்டு; கோயிலைத் திருக்கோயிலென்றும், கோயில் வாயிலைத் திருவாயி லென்றும், அலகைத் திருவலகென்றும், பாதுகையைத் திருவடிநிலை யென்றும் வழங்கும் இத்தொடக்கத்தனவெல்லாந் திருமகளை நோக்கியெழுந்தனவல்ல. அது கண்டவனுடைய விருப்பத்தானே யெழுந்தது. ஆதலானுந் திருவென்பது அழகென்றே யறிக. அதனாற்றிருவென்பது கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கமே. அல்லதூஉந் தான் கண்டவடிவின் பெருமையைப் பாராட்டுவானாகலான், ஒருத்தியிருந்த தவிசை இவளுக்கு முகமாகக் கூறுதல் வழுவாம். ஆதலாற் றான்கண்ட வடிவினுயர்ச்சியையே கூறினானாமெனக் கொள்க.
வளரென்பதற்கு வளருமென்றும்மைகொடுத்து உரை வாய்பாடு காட்டியதெற்றிற்கு மேலாலோ வளரக்கடவதென்பது கடா. அதற்குவிடை வளர்ந்த தாமரை வளராநின்ற தாமரையென்று கழிகாலத்தையும் நிகழ்காலத்தையுங்கூறாது, மேல்வருங்காலத்தைக் கூறவேண்டியது. கழிகாலத்தைக் கூறினாற் கழிந்ததனைக் கூறிற்றாம். நிகழ்காலத்தைக் கூறினால் முன்னும் பின்னுமின்றி இப்பொழு துள்ளதனைக் கூறிற்றாம். ஆகலான் வளருமென்று வருங்காலங் கூறியவாறன்று; மூன்று காலத்திற்கும் பொதுவாகிய சொற்றோன்றவே கூறினார். ஆயின் உம்மைச்சொன் மூன்று காலத்திற்கும் பொதுவாகி வந்தவாறென்னை?. இது செய்யுட் சொல்லாதலால் வந்தது. செய்யுளி னொழிய வழக்கினும் வருவதுண்டோவெனின், உண்டு; அது ஞாயிறு திங்களியங்கும், யாறொழுகும், மலைநிற்கும் என்றற்றொடக்கத்தன வற்றானறிக. அன்றியும்,
முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை #9;
யெம்முறைச் சொல்லு நிகழுங் காலத்து ; ; ; ; ; மெய்நிலைப்

பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்
- தொல். சொல். வினை-43

என்றாராகலின், உம்மைச்சொல் வருங்காலத்தையே காட்டாது மூன்று காலத்திற்கும் பொதுவாய் நிற்குமென்றேயறிக.

இனித் திருமகடங்குந் தாமரை யெனினு மமையுமென்று அமைவுரைத்ததென்னை, இதனையுவமையாக்கக் குறையென்னை யெனின், திருமகளாலே தாமரையுயர்ந்ததாம். தாமரையினது சிறப்புக் கூறிற்றில்லையாம். என்னை, எல்லாராலும் விரும்பப்பட்ட அழகு அவட்குண்டாகையாலே திருமகளென்று பெயராயிற்று. அங்ஙனம் பெருமையுடையவளும் இதன் சிறப்பு நோக்கியேயிதனி லிருந்தாளல்லது தன்னாலேயிதற்குச் சிறப்புப்பெற வேண்டியிருந் தாளல்லள், ஆகலாற் றாமரைக் கொத்ததும் மிக்கதுமில்லை. அங்ஙனம் பெருமையுடையவளாலும் விரும்பப்பட்டதாகலான் திருவென்பது கண்டாரால் விரும்பப்படுந்தன்மை நோக்கம் என்பது பெற்றாம்.

இனித் திருவளர்தாமரை சீர்வளர்காவி யென்றனபோல இதனையுங் குருவளர் குமிழென்னாது பூங்குமிழென்ற தெற்றிற் கெனின், முன்னும் பின்னும் வருகின்ற எண்ணிற் பூவைநோக்கியன்று, ஈண்டுச்செய்யுளின்பத்தை நோக்கியும் இதற்காகுபெயரை நோக்கியு மெனவறிக. அஃதென்போலவெனின், 'தளிபெறு தண்புலத்துத் தலைப்பெயற் கரும்பீன்று முளிமுதற் பொதுளிய முட்புறப் பிடவமும்' (முல்லைக்கலி-1) என்பது போல. கோங்கென இதனை யொழிந்த நான்கிற்கு மடைகொடுத்து இதற்கடை கொடாதது பாலை நிலஞ் சொல்லுதனோக்கி. என்னை, பாலைக்கு நிலமின்றாகலான். ஆயின் மற்றைய நிலம்போலப் பாலைக்கு நிலமின் மையாற் கூறினாராகின்றார் மகளிர்க் குறுப்பிற் சிறந்தவுறுப்பாகிய முலைக்கு வமையாகப் புணர்க்கப்பட்ட கோங்கிற்கு அடைகொடுக்கக் கடவதன்றோவெனின், அடைகொடுப்பிற் பிறவுறுப்புக்களுடன் இதனையுமொப்பித்ததாம். ஆகலான் இதற்கடைகொடாமையே முலைக்கேற்றத்தை விளக்கி நின்றது, அஃது முற்கூறிய வகையில் திருக்கோயில் திருவாயில் திருவலகு என்றவற்றிற்கு அடைகொடுத்து நாயகராகிய நாயனாரைத் திருநாயனாரென்னாதது போலவெனக் கொள்க.

இனி உடனிலைச் சிலேடையாவது ஒரு பாட்டிரண்டு வகையாற் பொருள் கொண்டு நிற்பது. அவ்விரண்டனுள்ளும் இத்திருக் கோவையின்கணுரைக்கின்ற பொருளாவது காமனது வென்றிக் கொடிபோன்று விளங்கி அன்னநடைத்தாய்த் தாமரையே நெய்தலே குமிழே கோங்கே காந்தளே யென்றிப்பூக்களாற் றொடுக்கப் பட்டோங்குந் தெய்வமருவளர்மாலையின் வரலாறு விரித்துரைக்கப்

படுகின்றதென்பது. என்றது என்சொல்லியவாறோ வெனின், தாமரை மருதநிலத்துப்பூவாதலான் மருதமும், நெய்தல் நெய்தனிலத்துப் பூவாதலான் நெய்தலும், குமிழ் முல்லைநிலத்துப் பூவாதலான் முல்லையும், கோங்கு பாலைநிலத்துப் பூவாதலாற் பாலையும், காந்தள் குறிஞ்சி நிலத்துப் பூவாதலாற் குறிஞ்சியுமென இவ்வைந்து பூவினாலும் ஐந்திணையுஞ் சுட்டினார். ஆகலாற்றா மெடுத்துக் கொண்ட அகத்தமிழின் பெருமைகூறாது தில்லைநகரின் பெருமை கூறினார், நிலமயக்கங் கூறுதலான். அற்றன்று அஃதே கூறினார். என்னை, சொல்லின் முடிவினப் பொருண் முடித்த லென்னுந் தந்திரவுத்தியாற் புணர்தலும் புணர்தனிமித்தமுமாகிய குறிஞ்சியே கூறினார். என்னை, பைங்காந்தளென்று குறிஞ்சிக்குரிய பூவிலே முடித்தலான். அன்றியும் பூவினானே நிலமுணர்த்தியவாறு இத்திருக்கோவையின்கண் முன்னர்க் 'குறப்பாவை நின்குழல் வேங்கையம் போதொடு கோங்கம்விராய்' (தி.8 கோவை பா.205) என்னும் பாட்டினுட் கண்டு கொள்க. அல்லதூஉஞ் 'சினையிற்கூறு முதலறிகிளவி' (தொல் - வேற்றுமைமயங்கியல் - 31) என்னுமாகு பெயரானுமாம். ஆயின் குறிஞ்சியே கூறவமையாதோ நிலமயக்கங் கூறவேண்டியது எற்றிற்கெனின், ஓரிடத்தொரு கலியாணமுண்டா னால் எல்லாரிடத்து முண்டாகிய ஆபரணங்களெல்லாம் அவ்விடத் துக்கூடி அக்கலியாணத்தைச் சிறப்பித்தாற்போலப் பல நிலங்களும் இக்குறிஞ்சியையே சிறப்பித்து நின்றன. உருவளர் காமன்றன் வென்றிக்கொடியென்றமையின், அன்பினானே நிகழ்ந்த காமப் பொருளைச்சுட்டினார். யாருங்கேட்போரின்றித் தன்னெஞ்சிற்குச் சொன்னமையின், கந்தருவரொழுக்கத்தையே யொத்த களவொழுக் கத்தையே சுட்டினார். ஈசர்தில்லை யென்றமையின், வீடுபேற்றின் பயத்ததெனச் சுட்டினார். களவொழுக்கமென்னும் பெயர்பெற்று வீடுபேற்றின் பயத்ததாய் அன்பினானிகழ்ந்த காமப்பொருணுதலிக் கந்தருவ ரொழுக்கத்தோடொத்துக் காமனது வென்றிக்கொடிபோன்று ஐந்திணையின்கண்ணும் வென்று விளங்காநின்ற கடிமலர்மாலையின் வரலாறு இத்திருக்கோவையின்கணுரைக்கப்படுகின்றதென்றவாறு. களவொழுக்கத்தினை ஒரு மாலையாகவுட்கொண்டு உருவகவாய் பாட்டா னுணர்த்தினாரென்பது. இன்பத்தை நுதலியதென்றா ராயினும், இன்பந் தலைக்கீடாக அறம் பொருள் இன்பம் வீடென நான்கு பொருளையும் நுதலிற்று. அவற்றுள் வீடுநுதலியவாறு மேலே சொன்னோம். ஒழிந்த மூன்றனையும் நுதலிய வாறென்னையெனின், ஈண்டுத் தலைமகனும் தலைமகளுமென்று நாட்டினார். இவனுக்கு ஆண்குழுவினுள் மிக்காருமொப்பாருமில்லை இழிந்தாரல்லது;

இவளுமன்னள். இவர் ஒருவர்கண்ணொருவர் இன்றியமையாத அன்புடையராகலான், இவர்கண்ணே அம்மூன்றுமுளவாம். இவ் வொழுக்கத்தினது சுவைமிகுதி கேட்கவே விழைவு விடுத்த விழுமி யோருள்ளமும் விழைவின்கட்டாழுமாதலின், காமனது வென்றிக் கொடியெனவே வென்றிகொள்ளாநின்றது என்றானென்பது. முதற்கட் கிடந்த இப்பாட்டுக் காட்சியின்மேற்று. இப்பாட்டால் வேட்கை இவன்கணுண்டாயவாறென்னை பெறுமாறெனின், உருவளர் காமன்றன் வென்றிக்கொடியென்றமையிற் பெற்றாம்.

உவகைமிகுதியாற் சொன்னானாகலின், இப்பாட்டிற்கு மெய்ப்பாடு: உவகை. உவகையாவது சிருங்காரம்; அது காமப் பொருண் முதலாய வின்பத்தின்மேற்று. உவகையென்பது காரணக்குறி, உவப்பித்தலினுவகையாயிற்று. உவந்த நெஞ்சினனாய் அவளையோர் தெய்வப் பூமாலையாக வுருவகங்கொண்டு காமனது வென்றிக்கொடியோடுவமித்துச் சொன்னானென்பது. என்னை மாலையாமாறு,

பூப்புனை மாலையு மாலைபுனை மாதருந்
தோற்புனை வின்னாண் டொடர்கைக் கட்டியுங்
கோச்சேரன் பெயருங் கோதையென் றாகும்
-திவாகரம், 11ஆவது

என்பதனாற் பெண்ணுக்கு மாலையென்று பெயராயிற்று. ஆயின் யாரொருவரையுங் கேசாதி பாதமாதல் பாதாதிகேசாமாதல் வருணிக்கவேண்டும். அவற்றுள், இது கேசாதிபாதமாக வருணிக்கப் பட்டது. என்னை, திருவளர் தாமரை யென்று முகமுதலாகவெடுத்துக் கொண்டு அன்னநடையென்று பாதத்திலே முடித்தலான். ஆயின், இதில் நடைகண்டானாயின் மேல் ஐயநிலையுணர்த்தல் வழுவா மெனின், இவன் நடைகண்டானல்லன், இம்மாலை நடக்குமாயின் அன்னநடையையொக்குமென்றான். வாய்ந்தென்பது நடையின் வினையாகலிற் சினைவினைப்பாற்பட்டு முதல்வினையோடு முடிந்த தென்றது அன்னத்திற்குச்சினை கால், காலிற்கு வினை நடை, ஆகையால் முதலென்றது அன்னத்தை.

அங்ஙனமுவமித்துச் சொன்னதனாற் பயன் மகிழ்தல். என்னை, 'சொல்லெதிர் பெறாஅன் சொல்லியின் புறுதல், புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே' (தொல். பொருள். அகத்திணை - 50) என்று அகத்திணையியற் சூத்திரத்திற் சொன்னாராகலினென்பது.

அஃதேல் உவகையென்னும் மெய்ப்பாட்டானே மகிழ்ச்சி பெற்றாம். இனியிச்சொற்கள் விசேடித்து மகிழ்வித்தவா றென்னை யெனின், நெஞ்சின் மிக்கது வாய்சோர்ந்து தான் வேட்ட பொருள் வயிற்

றன்குறிப்பன்றியேயுஞ் சொன்னிகழும்; நிகழுந் தோறும் மகிழ்ச்சி தோன்றுமென்பது. என்போல வெனின், ஒருவன் தான்வழிபடுந் தெய்வத்தைப் பரவிய செய்யுட்களை யோதியுணர்ந் திருந்தானெனினும், அவற்றான் அத்தெய்வத்தை வழிபடும்போழ்து கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்பக் காண்டும். அல்லதூஉஞ் சுற்றத்தாரது சாக்காடு முற்றவுணர்ந்தானேயெனினுஞ் செத்தாரிடனாக உரையாடினபொழுது துன்பமீதூரக் கலுழக்காண்டும்; இவை போலவென்பது. ஆகலின் நினைப்பின்வழியதுரையாயினும் நினைப்பின் உரைப்பயன் விசேடமுடைத்தென்பது.

நெஞ்சின்மிக்கது வாய்சோர்ந்து சொன்னிகழுமென்பதனை இக்கோவையின் எண்வகை மெய்ப்பாட்டின்கண்ணுந் தந்துரைத்துக் கொள்க. பயனென்பது நெஞ்சினடுத்ததோர் மெய்ப்பாடு காரணமாகத் தன்வயினிகழ்ந்த சொல்லானெய்துவது. மெய்ப்பாடென்பது புறத்துக் கண்டதோர் பொருள் காரணமாக நெஞ்சின் கட்டோன்றிய விகாரத்தின் விளைவு. எழுவாய்க் கிடந்த இப்பாட்டு நுதலிய பொருள் பொழிப்பினாலுரைத்தாம். நுண்ணிதாக வுரைப்பான்புகின் வரம் பின்றிப் பெருகுமென்பது.

விளக்கவுரை

1.1. காட்சி

காட்சி என்பது தலைமகளைத் தலைமகன் கண்ணுற்று இஃதொருவியப் பெண்ணென்றல். அதற்குச் செய்யுள்

1.1 மதிவாணுதல் வளர்வஞ்சியைக்
கதிர்வேலவன் கண்ணுற்றது.

திருவாதவூரடிகள் இத்திருக்கோவையை என்னுதலி யெடுத்துக் கொண்டாரோவெனின்,

அறிவோ னறிவில தெனவிரண் டாகு
நெறியினிற் றொகைபெற்று நிரல்பட விரிந்த
மண்புன லனல்வளி மாவிசும் பெனாஅ
வெண்மதி செஞ்சுடர் வேட்போ னெனாஅ
வெண்வகை நிலைஇய வெவ்வகைப் பொருளுந்
தோற்றநிலை யிறுதி கட்டுவீ டென்னு
மாற்றருஞ் செயல்வழி மாறாது செயப்பட்டு
வெருவா வுள்ளத்து வேட்போன் றான்செய்
யிருவினைப் பயன்றுய்த்து மும்மல னொரீஇப்
பொருவறு சிவகதி பொற்பினிற் பொருந்தவு
மேனைய தத்தங் குணநிலை புணரவு
நிலைஇ யவ்வயி னிமித்த மாகி

யலகு தவிர்த்த பலவகை யண்டமு
மின்னுழை வெயிலின் றுன்னணுப் புரைந்து
தன்னு ளடங்கவுந் தானவற் றுள்ளு
நுண்ணுணர் வாயு நோக்கரு நுழையிற்
சிறுமை பெருமைக் கிருவரம் பெய்திப்
போக்கும் வரவும் புணர்வு மின்றி
யாக்கமுங் கேடு மாதியு மந்தமு
நடுவு மிகந்து ஞானத் திரளா
யடியு முடியு மளவா தயர்ந்து
நெடியோ னான்முக னான்மறை போற்ற
வெரிசுடர்க் கனலியி னீங்காது விரிசுடர்
வெப்பமும் விளக்கமு மொப்பவோர் பொழுதினிற்
றுப்புற வியற்றுவ தெனவெப் பொருளுங்
காண்டலு மியற்றலு மியல்பா மாண்டுடன்
றன்னினீங் காது தானவின்று விளங்கிய
வெண்ணெண் கலையுஞ் சிலம்புஞ் சிலம்படிப்
பண்ணமை தேமொழிப் பார்ப்பதி காண
வையா றதன்மிசை யெட்டுத்தலை யிட்ட
மையில் வான்கலை மெய்யுடன் பொருந்தித்
தில்லை மூதூர்ப் பொதுவினிற் றோன்றி
யெல்லையி லானந்த நடம்புரி கின்ற
பரம காரணன் றிருவரு ளதனால்
திருவாத வூர்மகிழ் செழுமறை முனிவர்
ஐம்பொறி கையிகந் தறிவா யறியாச்
செம்புலச் செல்வ ராயினர் ஆதலின்
அறிவனூற் பொருளு முலகநூல் வழக்குமென
இருபொருளு நுதலி யெடுத்துக் கொண்டனர்
ஆங்கவ் விரண்டனுள்
ஆகமநூல் வழியி னுதலிய ஞான
யோகநுண் பொருளினை யுணர்த்து தற்கரி
துலகநூல் வழியி னுதலிய பொருளெனு
மலகி றீம்பாற் பரவைக் கண்ணெம்
புலனெனுங் கொள்கலன் முகந்த வகைசிறி
துலையா மரபி னுரைக்கற் பாற்று.

அஃதியாதோவெனின், எழுவாய்க்கிடந்தபாட்டின் பொருளு ரைக்கவே விளங்கும். அஃதேல், இப்பாட்டென்னுதலிற்றோவெனின், அறம், பொருள், இன்பம், வீடென்னு நான்கு பொருளினும் இன்பத் தை நுதலி

இத்திருக்கோவையின்கணுரைக்கின்ற களவியற் பொருளி னது பொழிப்பிலக்கணத்தையும், அதற்குறுப்பாகிய கைக்கிளைத் திணையின்கண் முதற்கிடந்த காட்சியென்னும் ஒருதலைக் காமத்தினையும், உடனிலைச் சிலேடையாகவுணர்த்துதனுதலிற்று.
திருவளர்தாமரை ... போன்றொளிர்கின்றதே.
மதிவாணுதல் ... கண்ணுற்றது.

போதோ விசும்போ புனலோ
பணிக ளதுபதியோ
யாதோ வறிகுவ தேது
மரிதி யமன்விடுத்த
தூதோ வனங்கன் றுணையோ
விணையிலி தொல்லைத்தில்லை
மாதோ மடமயி லோவென
நின்றவர் வாழ்பதியே. **#659**

இதன் பொருள்:யமன் விடுத்த தூதோ யமனால் விடுக்கப் பட்ட தூதோ; அனங்கன் துணையோ வசித்தற்கரியாரை வசித்தற்கு அனங்கற்குண்டாயிற்றோர் துணையோ; இணையிலி தொல்லைத் தில்லை மாதோ - ஒப்பில்லாதானது பழையதாகிய இத்தில்லைக்கண் வாழ்வாரோர்மாதரோ; மட மயிலோ என நின்றவர் வாழ்பதி - மடப்பத்தையுடைய மயிலோவென்று சொல்லும்வண்ணம் நின்றவரது வாழ்பதி; போதோ - தாமரைப்பூவோ; விசும்போ - ஆகாயமோ; புனலோ - நீரோ; பணிகளது பதியோ - பாம்புகளது பதியாகிய நாகருலகமோ; யாதோ ஏதும் அறிகுவது அரிது - யாதோ சிறிதுந் துணிதலரிது என்றவாறு.

யமன் தூதும், அனங்கன்றுணையும், மடமயிலும் ஐயநிலை யுவமைக்கணுவமையாய் நின்றன. தில்லைமாது: உவமிக்கப்படும் பொருள். ஐயநிகழ்ந்தது திருமகள் முதலாகிய தெய்வமோ மக்க ளுள்ளாளோவென்றென்க. மக்களுள்ளாளாதல் சிறுபான்மை யாகலிற் கூறிற்றிலர்.

தில்லைமாதோ வென்பதற்குத் தில்லைக்கண் வாழ்வாரோர் மானுடமாதரோ வென்றுரைப்பாருமுளர். தில்லைமானுடமாது மகளிர்க்குவமையாகப் புணர்க்கப்படுவனவற்றி னொன்றன்மையால் உவமையாகாது. உவமிக்கப்படும் பொருளெனின், ஐயமின்றித் துணிவாம். அதனால், தில்லைமாதோவென்பது மானுடம் தெய்வ மென்னும் வேறுபாடுகருதாது மகளிரென்னும் பொதுமை பற்றி நின்றது. தில்லை நின்றவரெனக் கூட்டினுமமையும்.
தெய்வமென்ன - தெய்வமோ அல்லளோவென.

மெய்ப்பாடு : உவகையைச் சார்ந்த மருட்கை. என்னை,
புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு #9;
மதிமை சாலா மருட்கை நான்கே
- தொல். பொருள். மெய்ப்பாட்டியல் - 7
என்றாராகலின். ஈண்டு வனப்பினது பெருமையை வியந்தா னென்பது.
அவ்வியப்பு மருட்கைப்பாற்படும். பயன்: ஐயந்தீர்தல்.

விளக்கவுரை

1.2. ஐயம்

ஐயம் என்பது கண்ணுற்ற பின்னர் இங்ஙனந் தோன்றாநின்ற இம்மாது திருமகள் முதலாகிய தெய்வமோ அன்றி மக்களுள்ளாள் கொல்லோ வென்றையுறாநிற்றல். அதற்குச் செய்யுள்

1.2. தெரியவரியதோர் தெய்வமென்ன
அருவரைநாடன் ஐயுற்றது.

பாயும் விடையரன் றில்லையன்
னாள்படைக் கண்ணிமைக்குந்
தோயு நிலத்தடி தூமலர்
வாடுந் துயரமெய்தி
ஆயு மனனே யணங்கல்ல
ளம்மா முலைசுமந்து
தேயு மருங்குற் பெரும்பணைத்
தோளிச் சிறுநுதலே. **#660**

இதன் பொருள்:பாயும் விடை அரன் தில்லை அன்னாள் பாய்ந்து செல்லும் விடையையுடைய அரனது தில்லையை யொப்பாளுடைய; படைகண் இமைக்கும் படைபோலுங் கண்கள் இமையா நின்றன; நிலத்து அடி தோயும் நிலத்தின் கண் அடி தீண்டா நின்றன; தூமலர் வாடும் தூய மலர்கள் வாடா நின்றன, ஆதலின் துயரம் எய்தி ஆயும் மனனே துயரத்தையெய்தி ஆராயும் மனனே ; அம் மாமுலை சுமந்து அழகிய பெரியவாகிய முலைகளைச் சுமந்து; தேயும் மருங்குல் தேயாநின்ற மருங்குலையும்; பணை பெருந்தோள் பணைபோலும் பெரிய தோள்களையும் உடைய; இச்சிறு நுதல் அணங்கு அல்லள் இச்சிறு நுதல் தெய்வம் அல்லள் எ-று.

துயரமெய்தி யாயுமனனே யென்றதனால், தெளிதல் கூறப்பட்டதாம்.
மெய்ப்பாடு: மருட்கையின் நீங்கிய பெருமிதம். என்னை,
கல்வி தறுக ணிசைமை கொடையெனச் #9;
சொல்லப் பட்ட பெருமித நான்கே
-தொல். பொருள். மெய்ப்பாட்டியல் - 9
என்றாராகலின், தெளிதலுங் கல்வியின் பாற்படும். பயன்: தெளிதல்.

அவ்வகை தெய்வம் கொல்லோவென்றையுற்று நின்றான் இவ்வகை குறிகண்டு தெய்வமல்லள் மக்களுள்ளாளெனத் துணிந்தா னென்பது. எனவே, தெய்வமல்லளாதற்குக் காரணம் இனையன குறியே வேற்றுமை இல்லை என்பது துணிவு.

விளக்கவுரை

1.3. தெளிதல் தெளிதல் என்பது ஐயுற்றபின்னர் அவயவமியங்கக்கண்டு இவள் தெய்வமல்லளென்று தெளியாநிற்றல். அதற்குச் செய்யுள்

1.3 அணங்கல்லளென் றயில்வேலவன்
குணங்களைநோக்கிக் குறித்துரைத்தது.

அகல்கின்ற வல்குற் றடமது
கொங்கை யவையவநீ
புகல்கின்ற தென்னைநெஞ் சுண்டே
யிடையடை யார்புரங்கள்
இகல்குன்ற வில்லிற்செற் றோன்றில்லை
யீசனெம் மானெதிர்ந்த
பகல்குன்றப் பல்லுகுத் தோன்பழ
னம்மன்ன பல்வளைக்கே. **#661**

இதன் பொருள்:

அகல்கின்ற அல்குல் தடம் அது அகலா நின்ற வல்குலாகிய தடம் அது; கொங்கை அவை முலை அவை; நெஞ்சு அவம் நீ புகல்கின்றது என்னை நெஞ்சே காரணமின்றி நீ சொல்லுகின்றதென்!; அடையார் புரங்கள் இகல் குன்றவில்லில் செற்றோன் அடையாதார் புரங்களது இகலைக் குன்றமாகிய வில்லாற் செற்றவன்; தில்லை ஈசன் தில்லைக்கணுளனாகிய வீசன்; எம்மான் எம்முடைய இறைவன்; எதிர்ந்த பகல் குன்ற பல் உகுத்தோன் மாறுபட்ட ஆதித்தனது பெருமை குன்றப் பல்லை உகுத்தோன்; பழனம் அன்ன பல்வளைக்கு இடை உண்டு அவனது திருப்பழனத்தை யொக்கும் பல்வளைக்கு இடையுண்டு எ-று.

தடம் உயர்ந்தவிடம். அல்குற்றடமது கொங்கையவை என்புழி அல்குற்பெருமையானும் முலைப்பெருமையானும் இடையுண்டு என்றவாறு அன்று; அல்குலும் முலையும் உண்மையான் இடை உண்டு என்றவாறு. அல்குற்றடமதுவென்றும் முலையவை யென்றும் பெருமை கூறியது அவை விளங்கித் தோன்றுதனோக்கி. இகல்குன்றவில்லிற் செற்றோனென்பதற்கு இகல்குறைய வில்லாற் செற்றோனெனினும் அமையும். நயந்த அண்ணல் - மக்களுள்ளா ளென்று துணிதலால் நயந்த அண்ணல். உள்ளியது - கூட்டத்தை நினைந்தது. மெய்ப்பாடு: உவகையைச் சார்ந்த மருட்கை, வியந்துரைத்தலின். பயன்: ஐயந்தீர்ந்து

மகிழ்தல்.
இந்நான்கு பாட்டும் ஒருவர் உள்ளக் கருத்தை ஒருவர் அறியாதவொருதலைக் காமம் ஆதலிற் கைக்கிளைப்பால. அகத் திணையின்கண் கைக்கிளை வருதல் திணைமயக்காம்பிறவெனின், கைக்கிளைமுதற் பெருந்திணை இறுவாய் எழுதிணையின்உள்ளும் கைக்கிளையும் பெருந்திணையும் அகத்தைச் சார்ந்த புறமாயினும், கிளவிக்கோவையின் எடுத்துக்கோடற்கட் காட்சி முதலாயின சொல்லுதல் வனப்புடைமை நோக்கிக் கைக்கிளை தழீஇயினார். பெருந்திணை தழுவுதல் சிறப்பின்மையினீக்கினார். இது நலம் பாராட்டல்.

விளக்கவுரை

1.4. நயப்பு

நயப்பு என்பது தெய்வம் அல்லளென்று தெளிந்த பின்னர் மக்களுள்ளாள் என்று நயந்து இடை யில்லைகொலென்ற நெஞ்சிற்கு அல்குலும் முலையுங்காட்டி இடையுண்டென்று சென்றெய்த நினையாநிற்றல்.

அதற்குச் செய்யுள்

1.4 வண்டமர் புரிகுழ லொண்டொடி மடந்தையை நயந்த அண்ணல் வியந்துள் ளியது.

அணியு மமிழ்துமென் னாவியு
மாயவன் றில்லைச்சிந்தா
மணியும்ப ராரறி யாமறை
யோனடி வாழ்த்தலரிற்
பிணியு மதற்கு மருந்தும்
பிறழப் பிறழமின்னும்
பணியும் புரைமருங் குற்பெருந்
தோளி படைக்கண்களே. **#662**

இதன் பொருள்:

மின்னும் பணியும் புரை மருங்குல் பெருந்தோளி படை கண்கள் மின்னையும் பாம்பையுமொக்கும் இடையினையும் பெருந்தோளினையும் உடையாளது படைபோலும் கண்கள்; பிறழ பிறழ பிணியும் பிறழுந்தோறும் பிறழுந்தோறும் பொதுநோக்கத்தாற் பிணியும்; அதற்கு மருந்தும் உள்ளக் கருத்து வெளிப்படுக்கு நாணோடுகூடிய நோக்கத்தால் அதற்கு மருந்தும் ஆகாநின்றன எ-று.

அணியும் அமிழ்தும் என் ஆவியும் ஆயவன் எனக்காபரணமும் அமிழ்தும் என்னுயிருமாயவன்; தில்லைச் சிந்தாமணி தில்லைக்கட் சிந்தாமணிபோல அன்பர்க்கு, நினைத்தவை கொடுப்போன்; உம்பரார் அறியாமறையோன் அன்பரல்லாத தேவர்களறியாத வந்தணன்; அடி

வாழ்த்தலரின் பிணியும் அவனுடைய திருவடிகளை
வழுத்தாதவரைப்போல உறும் பிணியுமெனக் கூட்டுக.
அணியென்றார் அழகு செய்தலான். அமிழ்தென்றார் கழி
பெருஞ்சுவையோடு உறுதிபயத்தல் உடைமையான். ஆவி யென்றார்
காதலிக்கப்படும் பொருள்களெல்லாவற்றினுஞ் சிறந்தமையான்.
ஈறிலின்பம் பயக்கும் இறைவனோடு சார்த்த அணியும் அமிழ்தும்
ஆவியும் இறப்ப இழிந்தனவே ஆயினும்,

பொருளது புரைவே புணர்ப்போன் குறிப்பின்,
மருளற வரூஉ மரபிற் றென்ப

என்பதனான் ஈண்டுச் சொல்லுவானது கருத்து வகையானும், உலகத்துப் பொருள்களுள் அவற்றினூங்கு மிக்கனவின்மையானும், உயர்ந்தனவாயுவமையாயின. உம்பராலென்பது பாடமாயின், உம்பரானறியப் படாதவெனவுரைக்க. பிறழப் பிறழும் என்பது பாடமாயின், பிணியும் மருந்தும் மாறி மாறி வரப்படைக்கண்கள் பிறழும் என உரைக்க. இஃது உட்கோள். இவை ஐந்தும் கைக்கிளை.

திணை: குறிஞ்சி. கைகோள்: களவு. கூற்று: தலைமகன் கூற்று. கேட்பது: நெஞ்சு. நெஞ்சென்பது பாட்டின்கண் இல்லையாலோ வெனின் எஞ்சிற்றென்பதாம்; வறிதே கூறினா னெனினுமமையும். இடம்: முன்னிலை. காலம்: நிகழ்காலம். எச்சம்: இப்பெருந்தோளி படைக்கண்களென்புழி இவ்வென்னுஞ் சுட்டுச்சொல்லெஞ்சிற்று. மெய்ப்பாடு: உவகையைச் சார்ந்த பெருமிதம். ஈண்டு மெய்ப்பாட்டுப் பொருள்கோள் கண்ணினான் யாப்புறவறிதல். என்னை,

கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதி னுணரு
முணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியி
னன்னயப் பொருள்கோ ளெண்ணருங் குரைத்தே.
-தொல். பொருள். மெய்ப்பாட்டியல் - 27

என்றாராகலின். பயன்: தலைமகளது குறிப்பறிந்து மகிழ்தல். பிணியுமதற்கு மருந்துமாம் பெருந்தோளி படைக்கண்களென் றமையின், அவளுடம்பாட்டுக் குறிப்புஅவள் நாட்டத்தானுணர்ந்தா னென்பது. என்னை,

நாட்ட மிரண்டு மறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும்.
-தொல். பொருள். களவியல் - 5

என்றாராகலின்.

விளக்கவுரை

1.5. உட்கோள்

உட்கோள் என்பது மக்களுள்ளாளென்று நயந்து சென்றெய்த

நினையாநின்றவன் தன்னிடத்து அவளுக்குண்டா கிய காதல் அவள் கண்ணிற்கண்டு தன்னுட் கொள்ளாநிற்றல். அதற்குச் செய்யுள்

1.5. இறைதிருக் கரத்து மறிமா னோக்கி
யுள்ளக் கருத்து வள்ள லறிந்தது.

வளைபயில் கீழ்கட னின்றிட
மேல்கடல் வான்நுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத்
தில்லைத்தொல் லோன்கயிலைக்
கிளைவயின் நீக்கியிக் கெண்டையங்
கண்ணியைக் கொண்டுதந்த
விளைவையல் லால்விய வேன்நய
வேன்தெய்வ மிக்கனவே. **#663**

இதன் பொருள்:வளை பயில் கீழ் கடல் நின்று இட சங்கு நெருங்கின கீழ்த்திசைக்கடலிலே நின்று இட; நேர்கழி மேல் கடல் வான் நுகத்தின் துளைவழி கோத்தென அவ்வொத்தகழி மேற்றிசைக் கடலில் இட்ட பெரிய நுகத்தினது துளைக்கட்சென்று கோத்தாற் போல; தில்லைத் தொல்லோன் கயிலை கிளை வயின் நீக்கி தில்லை யிடத்துப் பழையோனது கயிலைக்கண் ஆயத்தாரிடத்து நின்று நீக்கி; இ கெண்டை கண்ணியைக் கொண்டு தந்த விளைவை அல்லால் இக்கெண்டை போலும் கண்ணையுடையாளைக் கைக் கொண்டு தந்த நல்வினையின் விளைவாகிய தெய்வத்தை அல்லது; மிக்கன தெய்வம் வியவேன் நயவேன் மிக்கனவாகிய பிற தெய்வத்தை வியப்பதுஞ் செய்யேன்; நயப்பதுஞ் செய்யேன் எ-று.

கயிலைக்கட் கொண்டுதந்த வெனவியையும். இவளைத்தந்த தெய்வத்தையல்லது நயவேனென்று அவளது நலத்தை மிகுத்த மையின், இதுவும் நலம் பாராட்டல். பயந்தோர்ப்பழிச்சற் (தலைவி யின் பெற்றோரைத் தலைவன் வாழ்த்துதல்) பாற்படுத்தினுமமையும். மெய்ப்பாடு: உவகையைச் சார்ந்த மருட்கை. பயன்: மகிழ்தல்.

விளக்கவுரை

1.6. தெய்வத்தை மகிழ்தல்

தெய்வத்தை மகிழ்தல் என்பது உட்கொண்டு நின்று, என்னிடத்து விருப்பத்தையுடைய இவளைத்தந்த தெய்வத்தை அல்லது வேறொரு தெய்வத்தை யான் வியவேனெனத் தெய்வத்தை மகிழ்ந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

1.6 அன்ன மென்னடை அரிவையைத் தந்த
மன்னிருந் தெய்வத்தை மகிழ்ந்து ரைத்தது.

ஏழுடை யான்பொழி லெட்டுடை

யான்புய மென்னைமுன்னாள்
ஊழுடை யான்புலி யூரன்ன
பொன்னிவ் வுயர்பொழில்வாய்ச்
சூழுடை யாயத்தை நீக்கும்
விதிதுணை யாமனனே
யாழுடை யார்மணங் காணணங்
காய்வந் தகப்பட்டதே. **#664**

இதன் பொருள்:பொழில் ஏழு உடையான் பொழில் ஏழு உடையான்; புயம் எட்டு உடையான் புயம் எட்டுடையான்; முன் என்னை ஆள் ஊழ் உடையான் எனக்கு ஆட்படுந்தன்மை உண்டா வதற்கு முன்னே என்னை ஆள்வதொரு புதிதாகிய முறைமையை யுடையான்; புலியூர் அன்ன பொன் அவனது புலியூரையொக்கும் பொன்னனையாள்; இ உயர் பொழில் வாய் சூழ் உடை ஆயத்தை நீக்கும் விதி துணையாக இவ்வுயர்ந்த மொழிலிடத்து ஒருபொழுதும் விடாது சூழ்தலை உடைய ஆயத்தை நீக்குதற்குக் காரணமாகிய விதி துணையாக; மனனே மனமே; யாழ் உடையார் மணங்காண் அணங்கு ஆய் வந்து அகப்பட்டது கந்தருவர் மணங்காண் முன் வருத்துவதாய் வந்து அகப்பட்டது; இனிக் கூட்டத்துக்கு உடன்படு வாயாக என்றவாறு.

பொன்னீக்குமெனவியையும். ஆகவென்பது ஆ வென நின்ற செய்யுண்முடிபு; புறனடையாற் கொள்க. அணங்காய் வந்தென்றான், உள்ளஞ்செல்லவும் இது தகாதென்று விலக்குதலால் முன் வருத்தமாயினமையின். தெய்வத்தன்மை உடைத்தாய் வந்து எனினும் அமையும். அகப்பட்டதென்று இறந்த காலத்தாற் கூறினான், புணர்ச்சி துணிந்தமையான். இதுவும் உட்கோட்பாற்படும்.

இவை இரண்டும் ஒருதலைக்காம மல்லவெனினும் புணர்ச்சி நிகழாமையிற் கைக்கிளைப் பாற்படும். புணர்ச்சி நிகழாமை, தெய்வப் புணர்ச்சி செம்மல் துணிந்தது என்பதனானறிக. பேதையைப் புணர்ச்சி துணிந்தது, விதிதுணையாகக் கந்தருவர் மணம் ஒரு பெண் வடிவு கொண்டு எனக்கு எய்திற்று என்றமையின். இவனோடு இவளி டையுண்டாய அன்பிற்குக் காரணம் விதியல்லாமை ஈண்டுப் பெற்றாம். பாங்கற்கூட்டம் தோழியிற் கூட்டம் என்று இவற்றில் அவர் துணையாயவாறுபோல விதியும் இவரை ஆயத்தினீக்கிக் கூட்டின மாத்திரையே அன்றி அன்பிற்குக் காரணமன்றென்பது. அல்லதூஉம், விதியாவது செயப்படும் வினையினது நியதியன்றே, அதனானே அன்பு தோன்றிப் புணர்ந்தாரெனின், அதுவுஞ் செயற்கைப் புணர்ச்சியாய் முடியும், அது மறுத்தற் பொருட்டன்றே தொல்லோரி தனை இயற்கைப் புணர்ச்சியென்று குறியிட்டது. அல்லதூஉம், நல்வினை துய்த்தக்கால்

முடிவெய்தும், இவர்களன்பு துய்த்தாலு முடிவெய்தாது எஞ்ஞான்றும் ஒருபெற்றியே நிற்கும் என்பது. அல்லதூஉம், 'பிறப்பா னடுப்பினும் பின்னுந் துன்னத்தகும் பெற்றியர்' (திருக்கோவை, 205,) என்றலானும், இவர்கள் அன்பிற்குக் காரணம் விதியன்றென்பது. பலபிறப்பினும் ஒத்த அன்பென்றாராகலின், பலபிறப்பினு மொத்து நிற்பதோர் வினை யில்லை என்பது. அஃதேல், மேலைச் செய்யுளில் வினைவிளைவே கூட்டிற்றாக விசேடித்துச் சொல்ல வேண்டிய தென்னையெனின், இம்மையிற் பாங்கனையுந் தோழியையுங் குறையுற அவர்கள் தங்களினாகிய கூட்டம் கூட்டினார்கள். உம்மை நல்வினையைக் குறையுற்று வைத்து இம்மை அதனை மறந்தான்; மறப்புழியும், அது தான்மறவாது இவர்களையுங் கண்ணுறுவித்து இவர்க்குத் துப்பு மாயிற்றாகலான், விசேடிக்கப்பட்டது. அல்லதூஉம், 'பாங்கனை யானன்ன பண்பனை' (தி.8 கோவை பா.19) என்று அவனை விசேடித்தும், 'முத்தகஞ்சேர் மென்னகைப் பெருந்தோளி' (தி.8 கோவை பா.106) என்று அவளை விசேடித்தும், அவர்களினாலாய கூட்டத்திற்குக் கூறினமையின், நல்வினைப் பயனும் அம்மாத்திரையே விசேடித்தது என்பது.

விளக்கவுரை

1.7. புணர்ச்சி துணிதல்

புணர்ச்சி துணிதல் என்பது தெய்வத்தை மகிழாநின்றவன் இது நமக்குத் தெய்வப் புணர்ச்சி எனத் தன்னெஞ்சிற்குச் சொல்லி அவளோடு புணரத் துணியாநிற்றல். அதற்குச் செய்யுள் *1.7* கொவ்வைச் செவ்வாய்க் கொடியிடைப் பேதையைத்
தெய்வப் புணர்ச்சி செம்மல் துணிந்தது.

சொற்பா லமுதிவள் யான்சுவை
யென்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று
நானிவ ளாம்பகுதிப்
பொற்பா ரறிவார் புலியூர்ப்
புனிதன் பொதியில்வெற்பிற்
கற்பா வியவரை வாய்க்கடி
தோட்ட களவகத்தே. **#665**

இதன் பொருள்:

சொல்பால் அமுது இவள் யான் சுவை துணிந்து என்ன இங்ஙன் நல்பால் வினை தெய்வம் தந்து என்றது. சொல்லும் பகுதியில் அமுதிவள் யானதன் சுவையென்று துணிந்து சொல்ல இவ்வண்ணமே நல்ல கூற்றின் வினையாகிய தெய்வந்தர என்றவாறு. என்றது சுவையை

உடைய பொருட்கும், சுவைக்கும் வேறுபாடு இல்லாதவாறு போல எனக்கும் இவட்கும் வேறுபாடில்லை என்றவாறு. இன்று நான் இவள் ஆம் பகுதி பொற்பு ஆர் அறிவார் என்றது. இவ்வாறு வேறுபாடில்லையாயினும், புணர்ச்சியான் வரும் இன்பம் துய்த்தற்பொருட்டாக இன்று யானென்றும் இவளென்றும் வேறுபாட்டோடு கூடிய அழகை யாரறிவார் இதனை அனுபவிக்கின்ற யானே அறியினல்லது! என்றவாறு. புலியூர் புனிதன் பொதியில் வெற்பில் கல்பாவிய வரைவாய் கடிதோட்டகளவகத்து என்றது. புலியூர்க் கணுளனாகிய தூயோனது பொதியிலாகிய வெற்பிற் கற்பரந்த தாள்வரையிடத்துக் காவலை வாங்கிய களவிடத்து என்றவாறு. களவகத்துப் பொற்பெனக்கூட்டுக. தந்தென்பது தரவெனத் திரிக்கப்பட்டது. தந்தின்றென்பது தந்தது என்னும் பொருள்படாமை அறிந்து கொள்க. தந்தன்றென்பதூஉம் பாடம்போலும். கடிதோட்ட என்பதற்குக் கடியப்பட்ட தொகுதியை உடைய களவென்று உரைப்பினும் அமையும். தோட்டவென்றது தலைமகளாயத்தையுந் தன்னிளைஞரையும். கடிதொட்ட வென்பது பாடமாயின், மணந் தொடங்கிய களவென்றுரைக்க. கொடியிடையொடுகலவி கொடியிடையோடு நிகழ்ந்த கலவி. மெய்ப்பாடு: உவகை. பயன்: மகிழ்ச்சி; தலைமகளை மகிழ்வித்தலுமாம். நல்வினைத் தெய்வம் இவளைக் களவின்கட்கூட்ட அமுதமும் அதன்கட் கரந்து நின்ற சுவையுமென்ன என்னெஞ்சம் இவள்கண்ணே ஒடுங்க யானென்பதோர் தன்மை காணாதொழிய இருவர் உள்ளங்களும் ஒருவேமாமாறுகரப்ப ஒருவேமாகிய ஏகாந்தத்தின்கட் பிறந்த புணர்ச்சிப் பேரின்ப வெள்ளம் யாவரா னறிப்படுமென்று மகிழ்ந் துரைத்தான்; உரைப்பக்கேட்ட தலைமகளும் எம்பெருமான் என்கண் வைத்த அருளினானன்றோ இவ்வகை யருளியதென்று இறப்பவு மகிழ்வாளாம்.

விளக்கவுரை

1.8. கலவியுரைத்தல்

கலவியுரைத்தல் என்பது தெய்வப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன் புணர்ச்சி இன்பத்தின் இயல்பு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள் *1.8*
கொலைவேலவன் கொடியிடையொடு
கலவியின்பம் கட்டுரைத்தது.

உணர்ந்தார்க் குணர்வரி யோன்றில்லைச்
சிற்றம் பலத்தொருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்செவ்
வாயிக் கொடியிடைதோள்
புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும்

போகம்பின் னும்புதிதாய்
மணந்தாழ் புரிகுழ லாளல்குல்
போல வளர்கின்றதே. #666
இதன் பொருள்:
உணர்ந்த்தார்க்கு உணர்வு அரியோன் ஒருகால் தன்னை உணர்ந்தவர்கட்குப் பின்னுணர்தற்குக் கருவியாகிய சித்தவிருத்தியும் ஒடுங்குதலான் மீட்டு உணர்வரியோன்; தில்லைச் சிற்றம்பலத்து ஒருத்தன் தில்லையிற் சிற்றம்பலத்தின்கணுளனாகிய ஒப்பில்லாதான்; குணம் வெளிப்பட்ட கொவ்வை செவ்வாய் இ கொடி இடை தோள் புணர்ந்தால் அவனது குணமாகிய ஆனந்தம் வெளிப்பட்டாற்போலுங் கொவ்வைக் கனிபோலும் செவ்வாயை உடைய இக்கொடியிடை தோளைக் கூடினாலும்; புணரும் தொறும் பெரும்போகம் பின்னும் புதிதாய் கூடுந்தோறும் பெரிதாகிய இன்பம் முன்புபோலப் பின்னும் புதிதாய் ; மணம் தாழ் புரி குழலாள் அல்குல் போல வளர்கின்றது மணந்தங்கிய சுருண்ட குழலையுடையாளது அல்குல் போல வளராநின்றது எ-று.
உணர்ந்தார்க்குக் குணந்தான் வெளிப்பட்டவென இயைத் துரைப்பினுமமையும். உணர்ந்தார்க்குணர்வரியோ னென்பதற்குத் தவத்தானும் தியானத்தானும் எல்லாப் பொருள்களையும் உணர்ந்தார்க்கும் என உம்மை வருவித்து உரைக்கப்பட்டது. குணந்தான் வெளிப்பட்ட கொடியிடை என்புழி உவமையோடு பொருட் கொற்றுமை கருதி உவமைவினை உவமிக்கப்படும் பொருண்மேலேற்றப்பட்டது. புணர்ந்தாற் புதிதாயெனவியையும். புணர்ந்தாலுமென இதற்கும் உம்மை வருவித்து உரைக்கப்பட்டது. இன்பத்தன்பு - இன்பத்தான் வந்த செயற்கை அன்பு. மெய்ப்பாடும் பயனும்: அவை. புணர்ச்சிக்கட்டோன்றி ஒருகாலைக்கு ஒருகாற் பெருகாநின்ற பேரின்பவெள்ளத்தைத் தாங்கலாற்றாத தலைமகன் ஆற்றுதல் பயனெனினும் அமையும். வளர்கின்றது என்றமையிற் புணர்ந்ததனாற் பயனென்னை யெனின், புணராத முன்னின்ற வேட்கை புணர்ச்சிக்கட்குறைபடும், அக்குறைபாட்டைக் கூட்டத்தின்கட் டம்மிற்பெற்ற குணங்களினா னாகிய அன்பு நிறைக்கும், நிறைக்க எஞ்ஞான்றும் ஒரு பெற்றித்தாய் நிற்குமென்பது. அல்குல்போல வளர்கின்ற தென்றவழி ஒருகாலைக்கு ஒருகால் வளருமென்றார் அல்லர். என்னை, குறைபாடு உள்ளதற்கு அன்றே வளர்ச்சியுண்டாவது; அல்லதூஉம் எஞ்ஞான்றும் வளருமெனின், அல்குற்கு வரம்பு இன்மையும் தோன்றும். மற்றென்னை கருதியதெனின், இயற்கைப்புணர்ச்சி புணர்கின்ற காலத்து இவள் பதினோர் ஆண்டும் பத்துத் திங்களும் புக்காள் ஆகலின் இவளது

அல்குல் இலக்கணக் குறைபாடு இன்றியே வளராநின்றது. வளர்ந்து பன்னீராண்டு நிரம்பினால் ஒருபெற்றியே நிற்கும். அதுபோல இவன் காதலும் உள்ளம் உள்ளளவு நிறைந்து பின்னைக் குறைபாடின்றி ஒரு பெற்றியே நிற்குமென்பது.

விளக்கவுரை

1.9. இருவயினொத்தல்

இருவயினொத்தல் என்பது புணராத முன்னின்ற வேட்கை யன்பு புணர்ந்த பின்னும் அப்பெற்றியே நின்று வளர்ந்து சேற லால் தலைமகளை மகிழ்ந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

1.9 ஆரா வின்பத் தன்பு மீதூர

வாரார் முலையை மகிழ்ந்து ரைத்தது.

அளவியை யார்க்கு மறிவரி
யோன்றில்லை யம்பலம்போல்
வளவிய வான்கொங்கை வாட்டடங்
கண்ணுதல் மாமதியின்
பிளவியல் மின்னிடை பேரமை
தோளிது பெற்றியென்றாற்
கிளவியை யென்னோ வினிக்கிள்ளை
யார்வாயிற் கேட்கின்றதே. **#667**

இதன் பொருள்:அளவியை யார்க்கும் அறிவு அரியோன் தில்லை அம்பலம் போல் வான் கொங்கை வளவிய அளவை யார்க்கும் அறிவு அரியவனது தில்லையம்பலம் போலப் பெருங்கொங்கைகள் வளத்தையுடையன; தடங்கண் வாள் பெரிய கண்கள் வாளோ டொக்கும்; நுதல் மா மதியின் பிளவு இயல் நுதல் பெரிய மதியின் பாகத்தி னியல்பையுடைத்து; இடைமின் இடை மின்னோடொக்கும்; தோள் பெரு அமை தோள்கள் பெரிய வேயோடொக்கும்; பெற்றி இது என்றால் இவற்றது தன்மை இதுவானால்; கிள்ளையார் வாயில் கிளவியை இனி கேட்கின்றது என் கிள்ளைபோல்வாள் வாயின் மொழியை இனிக் கேட்க வேண்டுகின்றதுஎன்? இப்பெற்றிக்குத் தக்கதே இருக்கும் என்றவாறு.

துறவு துறவியென நின்றாற்போல அளவு அளவியென நின்றது. மொழி கிளிமொழியோ டொக்குமென்பது போதரக் கிள்ளையாரென் றான். வயினென்பது பாடமாயின், வாயினென்பது குறுகி நின்றதாக உரைக்க. வயின் இடமெனினும் அமையும். அவயங்கண்டென்புழி உறுதன் முதலாகிய நான்கையும் கண்டு என்றார். மெய்ப்பாடு: உவகை, பயன்: நயப்புணர்த்துதல்.

விளக்கவுரை

1.10. கிளவிவேட்டல்

கிளவி வேட்டல் என்பது இருவயினொத்து இன்புறாநின்ற தலைமகன் உறுதன்முதலாகிய நான்கு புணர்ச்சியும் பெற்றுச் செவிப் புணர்ச்சி பெறாமையின் ஒருசொல்வேட்டு வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்
1.10 அன்னமன்னவ ளவயவங்கண்டு மென்மொழிகேட்க விருப்புற்றது.

கூம்பலங் கைத்தலத் தன்பரென்
பூடுரு கக்குனிக்கும்
பாம்பலங் காரப் பரன்றில்லை
யம்பலம் பாடலரின்
தேம்பலஞ் சிற்றிடை யீங்கிவள்
தீங்கனி வாய்கமழும்
ஆம்பலம் போதுள வோஅளி
காள்நும் அகன்பணையே. **#668**

இதன் பொருள்:அளிகாள் நும் அகன் பணை வண்டுகாள் நுமதகன்ற மருதநிலத்து; தேம்பு சிற்றிடை ஈங்கிவள் தேம்புஞ் சிறிய விடையை உடைய இவளது; தீம் கனிவாய் கமழும் ஆம்பல்போது உளவோ இனியதாகிய கனிந்த வாய்போல நாறும் ஆம்பற் பூக்களுளவோ?; சொல்லுமின் என்றவாறு.

கூம்புகைத்தலத்து அன்பர் என்பு ஊடு உருக குனிக்கும் கூம்புங் கைத்தலங்களை உடைய அன்பரது என்பும் உள்ளுருகக் கூத்தாடா நின்ற; பாம்பு அலங்காரப் பரன் தில்லை அம்பலம் பாடலரின் தேம்பு பாம்பாகிய அணியை யுடைய பரமனது தில்லையம்பலத்தைப் பாடாதாரைப் போலத் தேம்புமெனக் கூட்டுக.

அல்லும் அம்மும்: அல்வழிச்சாரியை. பாம்பலங்காரம்: மெலிந்து நின்றது. ஈங்கிவளென்பது ஒருசொல். கனிவாய் கனிபோலும் வாயெனினும் அமையும். புனைநலம் என்றது புனையப் பட்ட இயற்கை நலத்தை. அயர்வு நீங்கியது - சொல்லாடாமையின் உண்டாகிய வருத்த நீங்கியது. மெய்ப்பாடு: உவகை. பயன்: நயப்புணர்த்துத்தல். இயற்கை அன்பினானும் அவள் குணங்களால் தோன்றிய செயற்கை அன்பினானும் கடாவப்பட்டு நின்ற தலைமகன் தனது அன்பு மிகுதியை உணர்த்துதல் நயப்புணர்த்துதல் என்பது.

விளக்கவுரை

1.11. நலம்புனைத்துரைத்தல்

நலம்புனைந்து உரைத்தல் என்பது கிளவிவேட்டு வருந்தக் கண்ட தலைமகள் மூரன் முறுவல் செய்ய, தலைமகன் அதுபெற்றுச்

சொல்லாடாமையான் உண்டாகிய வருத்த நீங்கி, நுமதகன்ற மருத நிலத்துக் குறிஞ்சிநிலத்துஇவள் வாய்போல நாறும் ஆம்பற் பூக்களுளவோவென அந்நிலத்து வண்டோடு வினவா நிற்றல். அதற்குச் செய்யுள்- *1.11* பொங்கி ழையைப் புனைந லம்புகழ்ந் தங்கதிர் வேலோன் அயர்வு நீங்கியது.

சிந்தா மணிதெண் கடலமிர்
தந்தில்லை யானருளால்
வந்தா லிகழப் படுமே
மடமான் விழிமயிலே
அந்தா மரையன்ன மேநின்னை
யானகன் றாற்றுவனோ
சிந்தா குலமுற்றென் னோவென்னை
வாட்டந் திருத்துவதே. **#669**

இதன் பொருள்:சிந்தாமணி தெள்கடல் அமிர்தம் தில்லையான் அருளால் வந்தால் ஒருவன் தவஞ்செய்து பெறும் சிந்தாமணியும் தெளிந்த கடலின் அமிர்தமும் வருத்தம் இன்றித் தில்லையான் அருளாற்றாமேவந்தால்; இகழப்படுமே அவை அவனாலிகழப் படுமா?; மட மான் விழி மயிலே மடமான் விழிபோலும் விழியை உடைய மயிலே! ; அம் தாமரை அன்னமே அழகிய தாமரைக்கண் வாழும் அன்னமே; நின்னை யான் அகன்று ஆற்றுவனோ நின்னை யான் பிரிந்து ஆற்றி உளனாவனோ?; சிந்தாகுலம் உற்று என்னை வாட்டந் திருத்துவது என்னோ சிந்தையின் மயக்கமுற்று என்னை வாட்டுவதென்னோ? என்றவாறு.
அந்தாமரை அன்னம் திரு என்பாருமுளர். நின்னை என்புழி உயிரினுஞ் சிறந்த நின்னையென் றும், யான் என்புழி இருதலைப் புள்ளினோருயிரேனாகிய யானென் றும், அச் சொற்களான் விளங்கின. வாட்டந்திருத்துவதே என்னுஞ் சொற்கள் ஒரு சொன்னீரவாய், வாட்டுவதே என்று பொருள் பட்டு, இரண்டாவதற்கு முடிபாயின. வாட்டத்திருத்துவது என்று பாட மாயின், வாட்டத்தின் கணிருத்துவது என்றுரைக்க. பயிர்ப்பு - பயிலாத பொருட்கண் வந்த அருவருப்பு. ஈண்டுப் பயிலாத பொருள் பிரிவு. பிரிவுணர்த்தல் - அகன்றாற்றுவனோ எனப் பிரிவென்பதும் ஒன்றுண்டு என்பதுபட மொழிதல். மெய்ப்பாடு: அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்: பிரிவச்சம் உணர்த்துதல்.

விளக்கவுரை

1.12. பிரிவுணர்த்தல்

பிரிவுணர்த்தல் என்பது ஐவகைப்புணர்ச்சியும் *(*கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று, அறிதல் என்பன*)* பெற்றுப் புணர்வதன் முன்னும் புணர்ந்தபின்னும் ஒத்தவன்பினனாய் நின்ற தலைமகன் பிரியுமாறு

என்னையெனின், இப்புணர்ச்சி நெடுங்காலம் செல்லக்கடவதாக இருவரையுங் கூட்டிய தெய்வந்தானே பிரியாமற் பிரிவிக்கும். அது பிரிவிக்குமாறு, தலைமகன் தனது ஆதரவினான் நலம் பாராட்டக் கேட்டு, எம்பெருமான் முன்னின்று வாய்திறந்து பெரியதோர் நாணின்மை செய்தேனெனத் தலைமகள் நாணிவருந்தாநிற்ப, அதுகண்டு இவள் வருந்துகின்றது யான்பிரிவேனாக நினைந்தாக வேண்டுமென்று உட்கொண்டு, அவளுக்குத் தான் பிரிவின்மை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

1.12 பணிவள ரல்குலைப் பயிர்ப்பு றுத்திப்
பிணிமலர்த் தாரோன் பிரிவுணர்த் தியது.

கோங்கிற் பொலியரும் பேய்கொங்கை
பங்கன் குறுகலரூர்
தீங்கிற் புகச்செற்ற கொற்றவன்
சிற்றம் பலமனையாள்
நீங்கிற் புணர்வரி தென்றோ
நெடிதிங்ங னேயிருந்தால்
ஆங்கிற் பழியா மெனவோ
அறியே னயர்கின்றதே. **#670**

இதன் பொருள்:கோங்கின் பொலி அரும்பு ஏய் கொங்கை பங்கன் கோங்கின்கணுண்டாகிய பொலிந்த வரும்பையொக்கு முலையை உடையாளது பங்கையுடையான்; குறுகலர் ஊர் தீங்கில் புக செற்ற கொற்றவன் குறுகாதார் புரங்கள் பாசண்ட தருமமாகிய (வேதாசாரவிரோதம்) தீங்கிலே புகுதலான் அவற்றைக் கெடுத்த வெற்றியை உடையான்; சிற்றம்பலம் அனையாள் அயர்கின்றது நீங்கின்புணர்வு அரிது என்றோ அவனது திருச்சிற்றம்பலத்தை ஒப்பாள் வருந்துகின்றது பிரிந்தாற் கூடுதல் அரிதென்று நினைந்தோ; நெடிது இங்ஙன் இருந்தால் ஆங்கு இற்பழி ஆம் எனவோ நெடும் பொழுது இவ்வாறு இருந்தால் அவ்விடத்துக் குடிப்பழியாம் என்று நினைந்தோ; அறியேன் அறிகிலேன் என்றவாறு.

தீங்கிற்புக என்பதற்குத் துன்பம் அறியாதார் துன்பத்திற்புக எனினும் அமையும். ஆங்கென்றது சுற்றத்தாரிடத்தும் அயலா ரிடத்தும்; ஆங்கு அசை நிலை எனினும் அமையும். பிரியல் உறுகின்றான் ஆகலின், இற்பழி யாம் என்று வேறுபட்டாளாயின் நன்று என்பது கருத்து.

மெய்ப்பாடு: அச்சத்தைச் சார்ந்த மருட்கை. பயன்: ஐயந்தீர்தல்.

அவ்வகை தலைமகளது ஆற்றாமைத்தன்மை தலைமகற்குப் புலனாயிற்று; புலனாகத் தலை மகன் இவ்வகை தன்னெஞ்சோடுசாவி ஆற்றானாயினானென்பது.

விளக்கவுரை

1.13. பருவரலறிதல்

பருவரலறிதல் என்பது பிரிவின்மை கூறக்கேட்ட தலை மகள் பிரிவென்பதும் ஒன்று உண்டு போலும் என உட்கொண்டு முன்னாணினாற் சென்று எய்திய வருத்த நீங்கிப் பெரியதோர் வருத்தமெய்த அதுகண்டு, இவள் மேலும் மேலும் வருந்துகின்றது பிரிந்தாற் கூடுதல் அரிதென்று நினைந்தோ நெடும்பொழுது இவ்வாறிருந்தால் அவ்விடத்துக் குடிப்பழியாமென்று நினைந்தோ அறிகிலேனென அவள் வருத்தம் அறியா நிற்றல். அதற்குச் செய்யுள்

1.13 பிரிவுணர்ந்த பெண்கொடிதன்
பருவரலின் பரிசுநினைந்தது.

தேவரிற் பெற்றநஞ் செல்வக்
கடிவடி வார்திருவே
யாவரிற் பெற்றினி யார்சிதைப்
பாரிமை யாதமுக்கண்
மூவரிற் பெற்றவர் சிற்றம்
பலமணி மொய்பொழில்வாய்ப்
பூவரிற் பெற்ற குழலியென்
வாடிப் புலம்புவதே. **#671**

இதன் பொருள்:தேவரில் பெற்ற நம் செல்வக்கடி முயற்சியும் உளப்பாடும் இன்றித் தேவராலே பெற்ற நமது அழகிய மணத்தை; வடிவு ஆர் திருவே வடிவார்ந்த திருவே; இனி யாவரின் பெற்று யார் சிதைப்பார் இனிச் சிதைத்தற்கு ஈடாகிய தன்மையை யாவராலே பெற்று யாவர் சிதைப்பார் ; இமையாத முக்கண் மூவரின் பெற்றவர் சிற்றம்பலம் அணி இமையாத மூன்று கண்ணையும் மூவராலே பெற்றவரது சிற்றம்பலத்தை அழகுசெய்த; மொய்பொழில் வாய் பூ அரில் பெற்ற குழலி செறிந்த பொழிலிடத் துளவாகிய பூக்களது பிணக்கத்தைப் பெற்ற குழலையுடையாய்; வாடி புலம்புவது என் நீ பொலிவழிந்து துன்பப்படுகின்றது என்னோ?. என்றவாறு.

மூவர் சந்திரர், ஆதித்தர், செந்தீக்கடவுள். பிரிவுணர்த்தினான் ஆகலின் பிரிந் தால் என்னாமென்னும் ஐயம் நீங்கக் கூறினான். இக் கடியையாவராற் பெற்றெனினும் அமையும். மெய்ப்பாடு: பெருமிதம், பயன்: வன் புறை. பெரியதோருவகை மீதூர இவ்வகை வற்புறீஇயி னான் என்பது.

விளக்கவுரை

1.14. அருட்குணமுரைத்தல்

அருட்குணமுரைத்தல் என்பது இற்பழியாமென்று நினைந்தோவென்று கூறக்கேட்ட தலைமகள் இது நந்தோழி அறியின் என்னாங்கொல்லோ என்று பிரிவுட்கொண்டு பிரிவாற் றாது வருந்தா நிற்ப, அக்குறிப்பு அறிந்து அவள் பிரிவு உடம்படு வது காரணமாகத் தலைமகன் யாம் பிரிந்தேமாயினும் பிரிவில் லை எனத் தெய்வத்தின் அருள் கூறாநிற்றல்.
அதற்குச் செய்யுள்-

1.14 கூட்டிய தெய்வத் தின்ன ருட்குணம்
வாட்ட மின்மை வள்ள லுரைத்தது.

வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லை
யம்பல வன்மலயத்
திருங்குன்ற வாண ரிளங்கொடி
யேயிட ரெய்தலெம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்கள
பத்தொளி பாயநும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுக
மேய்க்குங் கனங்குழையே. **#672**

இதன் பொருள்:வரும் குன்றம் ஒன்று உரித்தோன் இயங்கு மலையொன்றை உரித்தவன்; தில்லை அம்பலவன் தில்லை அம்ப லத்தை உடையான்; மலயத்து இரு குன்ற வாணர் இளங் கொடியே அவனது பொதியின் மலையிடத்துப் பெரிய குன்றத்தின் கண் வாழ் வாருடைய மகளே; இடர் எய்தல் - வருத்தத்தை விடு; கனங்குழையே கனங்குழாய்; எம் ஊர் பரு குன்றம் மாளிகை நுண் களபத்து ஒளி பாய- எம்மூரிடத்துப் பெரிய குன்றம் போலும் மாளிகைகளின் நுண் ணிதாகிய சாந்தினொளி பரந்து; நும் ஊர் கரு குன்றம் வெள் நிறம் கஞ்சுகம் ஏய்க்கும் - நும்மூர்க்கணுண்டாகிய கரியகுன்றம் வெள்ளை நிறத்தை உடைய சட்டை இட்டதனோடு ஒக்கும் என்றவாறு.
கருங்குன்ற வெண்ணிறமென்பது பாடமாயின், நுண்கள பத்தொளி பரப்ப அவ்வொளி நும்மூர்க் கருங்குன்றத்திற்கு இட்ட வெண்ணிறக் கஞ்சுகத்தோடு ஒக்கும் என்று உரைக்க. ஈண்டுரைத்த வாற்றால், தலைமகன் மிக்கோனாதல் வேண்டும், வேண்டவே ஒப்பு என்னை பொருந்துமாறெனின், 'மிக்கோனாயினும் கடிவரை யின்றே' (தொல். பொருள். களவியல்.2.) என்பதோத்தாகலிற் பொருந்து மென்க. வற்புறுத்தி - வலியுறுத்தி. இடமணித்தென்றலே வற்புறுத்தலாக உரைப்பினும் அமையும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: இடமணித்தென்று வற்புறுத்தல்.

விளக்கவுரை

1.15. இடமணித்துக் கூறி வற்புறுத்தல்

இடமணித்துக் கூறி வற்புறுத்தல் என்பது அருட்குணம் உரைத்து வற்புறுத்தவும் ஆற்றாமை நீங்காத தலைமகட்கு, நும் மூரிடத்திற்கு எம்மூரிடம் இத்தன்மைத்தெனத் தன்னூரி னணிமைகூறி வற்புறுத்தா நிற்றல். அதற்குச் செய்யுள்

1.15 மடவரலை வற்புறுத்தி

இடமணித்தென் றவனியம்பியது.

தெளிவளர் வான்சிலை செங்கனி
வெண்முத்தந் திங்களின்வாய்ந்
தளிவளர் வல்லியன் னாய்முன்னி
யாடுபின் யானளவா
ஒளிவளர் தில்லை யொருவன்
கயிலை யுகுபெருந்தேன்
துளிவளர் சாரற் கரந்துங்ங
னேவந்து தோன்றுவனே. **#673**

இதன் பொருள்:வளர் வான் சிலை செம் கனி வெள் முத்தம் திங்களின் வாய்ந்து அளி வளர் வல்லி அன்னாய் கால் நிமிர்ந்த பெரிய சிலைகளும் சிவந்த கொவ்வைக்கனியும் வெள்ளிய முத்தங் களும் ஒரு திங்களின்கண்ணே வாய்ப்ப அளிகள் தங்கும் வல்லியை ஒப்பாய்; தெளி யான் சொன்னவற்றைத் தெளிவாயாக; முன்னி ஆடு இனி முற்பட்டு விளையாடுவாயாக; ஒளி வளர் தில்லை அளவா ஒருவன் கயிலை உகுபெரு தேன் துளி வளர் சாரல் கரந்து ஒளிவளராநின்ற தில்லைக்கண் உளனாகிய அளக்கப்படாத ஒருவனது கயிலையிடத்து உகாநின்ற பெருந்தேன்றுளிகள் பெருகுஞ் சாரற் பொதும்பரி லொளித்து; யான் பின் உங்ஙன் வந்து தோன்று வன் யான் பின்னும் உவ்விடத்தே வந்து தோன்றுவேன் என்றவாறு.

தெளி வளர் வான்சிலை என்பதற்கு ஒளிவளரும் சிலை யென்று உரைப்பினும் அமையும். திங்களை வல்லிக் கண்ணதாகக் கொள்க. வாய்ந்து என்பது வாய்ப்ப என்பதன் திரிபாகலின், அளிவள ரென்னும் பிறவினை கொண்டது. சாரலென்பது: ஆகுபெயர். வன்புறையின் - வற்புறுத்தும் சொற்களால். மெய்ப்பாடு: அது. பயன்: இடம் குறித்து வற்புறுத்தல்.

விளக்கவுரை

1.16. ஆடிடத் துய்த்தல்

ஆடிடத் துய்த்தல் என்பது அணிமை கூறி யகலாநின்றவன், இனி நீ முற்பட்டு விளையாடு; யான் இங்ஙனம் போய் அங்ஙனம் வாராநின்றேன் என அவளை ஆடிடத்துச் செலுத்தாநிற்றல். அதற்குச் செய்யுள்

1.16 வன்புறையின் வற்புறுத்தி
அன்புறுமொழியை அருகுஅகன்றது.

புணர்ப்போன் நிலனும் விசும்பும்
பொருப்புந்தன் பூங்கழலின்
துணர்ப்போ தெனக்கணி யாக்குந்தொல்
லோன்தில்லைச் சூழ்பொழில்வாய்
இணர்ப்போ தணிகுழ லேழைதன்
னீர்மையிந் நீர்மையென்றாற்
புணர்ப்போ கனவோ பிறிதோ
அறியேன் புகுந்ததுவே. **#674**

இதன் பொருள்:போது இணர் அணி குழல் ஏழை தன் நீர்மை இந்நீர்மை என்றால் - பூங்கொத்துக்களை அணிந்த குழலையுடைய ஏழைதனது நீர்மை இத்தன்மையாயின்; நிலனும் விசும்பும் பொருப் பும் புணர்ப்போன் - மண்ணையும் விண்ணையும் மண்ணின் கண் உள்ள மலையையும் படைப்போன்; தன் பூ கழல் துணர்ப்போது எனக்கு அணி ஆக்கும் தொல்லோன் தன்னுடைய பொலிவினை உடைய திருவடியாகிய துணர்ப்போதுகளை எனக்கு முடியணி யாக்கும் பழையோன்; தில்லை சூழ் பொழில் வாய் புகுந்தது அவனது தில்லைக்கண் உண்டாகிய சூழ்பொழிலிடத்து இவள் புகுந்தது; புணர்ப்போ கனவோ பிறிதோ அறியேன் மாயமோ கனவோ! இரண்டும் அன்றி வேறொன்றோ! இன்னதென்றறியேன் என்றவாறு. பூங்கழலென்பது பூப்போலும் கழலென உவமைத் தொகையாய்க் கழலென்னும் துணையாய் நின்றது எனினும் அமையும், வீரக்கழலையுடைய துணர்ப்போதென்று உரைப்பினும் அமையும். பொழில்வாயிணர்ப்போதென்பாருமுளர். பிறிதோ வென்பதற்கு நனவோ என்பாருமுளர். புகுந்ததுவே என்பதில், வகாரம்: விகாரவகையான் வந்தது. சுற்றம் ஆயம். இடம் அந்நிலம். சூழல் - அந்நிலத்துள்ளும் புகுதற்கரிய அப்பொழில். மெய்ப்பாடு: மருட்கை. பயன்: தலைமகளது அருமையுணர்தல்.

விளக்கவுரை

1.17. அருமையறிதல்
அருமை அறிதல் என்பது ஆடிடத் துய்த்து அகலாநின்ற வன் ஆயவெள்ளத்தையும் அவ்விடத்தையும் நோக்கி, இவளை யான் எய்தினேன் என்பது மாயமோ*?* கனவோ*?* இன்னதென்று அறியேன்*;* இனியிவள் நமக்கு எய்தற்கு அரியவளென அவளது அருமை அறிந்து வருந்தா நிற்றல். அதற்குச் செய்யுள் -
1.17 சுற்றமு மிடனுஞ் சூழலு நோக்கி

மற்றவ ளருமை மன்ன னறிந்தது.

உயிரொன் றுளமுமொன் றொன்றே
சிறப்பிவட் கென்னொடென்னப்
பயில்கின்ற சென்று செவியுற
நீள்படைக் கண்கள்விண்வாய்ச்
செயிரொன்று முப்புரஞ் செற்றவன்
தில்லைச்சிற் றம்பலத்துப்
பயில்கின்ற கூத்த னருளென
லாகும் பணிமொழிக்கே. **#675**

இதன் பொருள்:என்னொடு இவட்கு உயிர் ஒன்று உளமும் ஒன்று சிறப்பு ஒன்று என்ன என்னோடு இவட்கு உயிருமொன்று மனமுமொன்று குரவர்களாற் செய்யப்படுஞ் சிறப்புக்களும் ஒன்றென்று சொல்லி; பணி மொழிக்கு தாழ்ந்த மொழியை உடையாட்கு; செவி உற நீள் படை கண்கள் சென்று பயில்கின்ற செவியுறும் வண்ணம் நீண்ட படைபோலும் கண்கள் இவள்கட் சென்று பயிலாநின்றன; அதனால் இவள் போலுமிவட்குச் சிறந்தாள் என்றவாறு.

விண் வாய் செயிர் ஒன்று முப்புரம் செற்றவன் விண்ணிடத்துக் குற்றத்தைப் பொருந்தின மூன்று புரத்தையும் கெடுத்தவன் தில்லை சிற்றம்பலத்துப் பயில்கின்ற கூத்தன் தில்லைச் சிற்றம்பலத்தின்கண் இடை விடாது ஆடுகின்ற கூத்தையுடையான் அருள் எனல் ஆகும் பணிமொழிக்கு அவன் அருளென்று துணியலாம் பணிமொழிக்கு எனக் கூட்டுக.

அருளென்றது அருளான்வரும் ஆனந்தத்தை. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: ஆற்றாமை நீங்குதல்.

இப்பதினெட்டுப் பாட்டும் இயற்கைப்புணர்ச்சியையும் அது நிமித்தமாகிய கிளவியையும் நுதலின. இதனை இயற்கைப் புணர்ச்சியெனினும், தெய்வப்புணர்ச்சி எனினும், முன்னுறுபுணர்ச்சி எனினும், காமப்புணர்ச்சி எனினும் ஒக்கும்.

விளக்கவுரை

1.18. பாங்கியையறிதல்

பாங்கியை அறிதல் என்பது அருமையறிந்து வருந்தாநின்ற தலைமகன் ஆயத்தோடு செல்லாநின்ற தலைமகளை நோக்க, அந்நிலைமைக்கண் அவளும் இப்புணர்ச்சி இவளுக்குப் புலனாங்கொல்லோவென உட்கொண்டு எல்லாரையும் போல அன்றித் தன் காதல் தோழியைப் பல்காற் கடைக்கண்ணாற் பார்க்கக்கண்டு, இவள்போலும் இவட்குச் சிறந்தாள்; இதுவும் எனக்கோர் சார்பாமென உட்கொண்டு அவள் காதல் தோழியை அறியாநிற்றல். அதற்குச் செய்யுள்:

1.18 கடல்புரை யாயத்துக் காதற் றோழியை
மடவரல் காட்ட மன்ன னறிந்தது.

2.2.பாங்கற்கூட்டம்

பூங்கனை யார்புனற் றென்புலி
யூர்புரிந் தம்பலத்துள்
ஆங்கெனை யாண்டு கொண் டாடும்
பிரானடித் தாமரைக்கே
பாங்கனை யானன்ன பண்பனைக்
கண்டிப் பரிசுரைத்தால்
ஈங்கெனை யார்தடுப் பார்மடப்
பாவையை யெய்துதற்கே. **#676**

இதன் பொருள்: பூ கனை ஆர் புனல் தென் புலியூர் அம்பலத்து புரிந்து பூக்களையுடைத்தாய் முழங்குதனிறைந்த புனலையுடைத் தாகிய தென்புலியூரம்பலத்தின்கண் விரும்பி; ஆங்கு எனை ஆண்டு கொண்டு ஆடும் பிரான் அடி தாமரைக்கே பாங்கனை அவ் வாறென்னை யாண்டுகொண்டு ஆடும் பிரானுடைய அடியாகிய தாமரைகட்கே பாங்காயுள்ளானை; யான் அன்ன பண்பனை என்னையொக்கு மியல்பையுடையானை; கண்டு இப்பரிசு உரைத்தால் கண்டு நிகழ்ந்த விப்பரிசையுரைத்தால்; மடம் பாவையை எய்துதற்கு ஈங்கு எனை தடுப்பார் யார் மடப் பாவையை எய்துதற்கு இவ்வுலகத்தின்கண் என்னைத்தடுப்பார் யாவர்? ஒருவருமில்லை எ -று.
அம்பலத்துளாடும் பிரானெனவியையும். தென்புலியூர் புரிந்தம்பலத்துளாங்கெனை யாண்டு கொண்டென்பதற்குப் பிறவு முரைப்ப. ஆங்கென்றார் ஆண்டவாறு சொல்லுதற் கருமையான். ஏழையினென்புழி. இன்: ஏழனுருபு; அது புறனடையாற் கொள்ளப் பட்டது. பையுள் - நோய்; மயக்கமெனினு மமையும். மெய்ப்பாடு: அசைவுபற்றி வந்த அழுகை. என்னை,
இளிவே யிழவே யசைவே வறுமையென
விளிவில் கொள்கை யழுகை நான்கே
-தொல்.பொருள்.மெய்ப்பாட்டியல்.5
என்றாராகலின். பயன்: ஆற்றாமை நீங்குதல். மேற்றோழியால் என்குறை முடிக்கலாமன்று கருதிப் பெயர்ந்த தலைமகன் பாங்கனால் முடிப்பலெனக்கருதினானென்பது. என்னை, தமரான் முடியாக் கரும முளவாயினன்றே பிறரைக் குறையுற வேண்டுவதென்பது.

விளக்கவுரை

2.1 பாங்கனை நினைதல்

பாங்கனை நினைதல் என்பது தெய்வப்புணர்ச்சிய திறுதிக்கட் சென்றெய்துதற் கருமைநினைந்து வருந்தாநின்ற தலைமகன் அவள் கண்ணாலறியப்பட்ட காதற்றோழியை நயந்து, இவள் அவட்குச்சிறந்த துணையன்றே; அத்துணை எனக்குச் சிறந்தாளல்லள்; எனக்குச் சிறந்தானைக்கண்டு இப்பரிசுரைத்தாற் பின்னிவளைச் சென்றெய்தக் குறையில்லையெனத் தன்காதற் பாங்கனை நினையாநிற்றல். அதற்குச் செய்யுள்

எய்துதற் கருமை யேழையிற் றோன்றப்
பையு ளுற்றவன் பாங்கனை நினைந்தது.

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலின்
ஆய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி
யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ
லாம்புகுந் தெய்தியதே. **#677**

இதன் பொருள்: சிறை வான் புனல் தில்லை சிற்றம்பலத்தும் என்சிந்தையுள்ளும் உறைவான் காவலாயுள்ள மிக்க நீரையுடைய தில்லைச்சிற்றம்பலமாகிய நல்லவிடத்தும் என்னெஞ்சமாகிய தீயவிடத்தும் ஒப்பத்தங்குமவனது; உயர் மதில் கூடலின் ஆய்ந்த ஒள் தீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோ உயர்ந்த மதிலையுடைய கூடலின்கணாராய்ந்த ஒள்ளிய வினிய தமிழின்றுறைகளிடத்து நுழைந்தாயோ?; அன்றி ஏழிசை சூழல் புக்கோ அன்றி ஏழிசை யினது சூழலின்கட் புகுதலானோ; இறைவா இறைவனே; தடவரை தோட்கு புகுந்து எய்தியது என் கொலாம் பெரிய வரைபோலு நின்றோள்கட்கு மெலியப்புகுந்தெய்தியதென்னோ? எ-று.

தமிழின் றுறைகளாவன ஈண்டு அகமும் புறமுமாகிய பொருட்கூறு. ஏழிசை யாவன குரல் முதலாயின. சூழலென்றது அவற்றானியன்ற பண்ணும் பாடலு முதலாயினவற்றை. கொல்; கொலாமென வீறுதிரிந்தது; ஆம்: அசைநிலை யெனினுமமையும். கலி புகழான் வருமாரவாரம்; தழை த்த வெனினுமமையும். மெய்ப்பாடு: அணங்குபற்றிவந்த அச்சம். என்னை,

அணங்கே விலங்கே கள்வர்தம் மிறையெனப் #9;
பிணங்கல் சாலா வச்ச நான்கே #9;
-தொல். பொருள். மெய்ப்பாட்டியல் -8.

என்றாராகலின். பயன்: தலைமகற்கு உற்றதுணர்தல்.

விளக்கவுரை

2.2 பாங்கன் வினாதல்

பாங்கன் வினாதல் என்பது தன்னை நினைந்து வாராநின்ற தலைமகனைத் தான் எதிர்ப்பட்டு அடியிற்கொண்டு முடிகாறு நோக்கி, நின்னுடைய தோள்கள் மெலிந்து நீ யிவ்வாறாதற்குக் காரண மென்னோவென்று பாங்கன் முந்துற்று வினாவாநிற்றல். அதற்குச் செய்யுள்

கலிகெழு திரள்தோள் மெலிவது கண்ட
இன்னுயிர்ப் பாங்கன் மன்னனை வினாயது.

கோம்பிக் கொதுங்கிமே யாமஞ்ஞை
குஞ்சரங் கோளிழைக்கும்
பாம்பைப் பிடித்துப் படங்கிழித்
தாங்கப் பணைமுலைக்கே
தேம்பற் றுடியிடை மான்மட
நோக்கிதில் லைச்சிவன்றாள்
ஆம்பொற் றடமலர் சூடுமென்
னாற்ற லகற்றியதே. **#678**

இதன் பொருள்: கோம்பிக்கு ஒதுங்கி மேயா மஞ்ஞை ஓந்திக் கொதுங்கிப் புறப்பட்டிரைகவராத மயில்; குஞ்சரம் கோள் இழைக்கும் பாம்பைப் பிடித்து படம் கிழித்தாங்கு குஞ்சரத்தைக் கோளிழைக்க வல்ல பாம்பைப் பிடித்துப் படத்தைக் கிழித்தாற்போல; மான் மடம் நோக்கிஅ பணை முலைக்கு தேம்பல் துடி இடை மானின் மடநோக்குப்போலும் நோக்கையுடையாளுடைய அப்பணை முலையானே தேய்தலையுடைய துடிபோலுமிடை; தில்லை சிவன் தாள் ஆம் பொன் தட மலர் சூடும் என் ஆற்றல் அகற்றியது தில்லைக் கணுளனாகிய சிவனுடைய தாளாகிய பொன் போற் சிறப்புடைய பெரிய தாமரைப்பூவைச் சூடுகின்ற எனது வலியை நீக்கிற்று எ - று.

குஞ்சரம் தான் உவமையன்றி உவமைக்கடையாய் அதனாற் றல் விளக்கி நின்றது. தடமலர் தான் உவமிக்கப்படும் பொருளன்றி உவமிக்கப்படும் பொருட்கடையாய் அதனாற்றல் விளக்கி நின்றது. அப்பணைமுலைக்கே யென்றிழித்தது இவள் முலையை நோக்கி யன்று, முலையென்னுஞ் சாதியைநோக்கி. துடியிடையை யுடைய மான்மடநோக்கி என்னாற்ற லகற்றியது மஞ்ஞை பாம்பைப் பிடித்துப் படத்தைக் கிழித்தாற்போலுமெனக் கூட்டியுரைப்பாருமுளர்.

மெய்ப்பாடு: அழுகை. பயன்: பாங்கற் குணர்த்துதல்.

விளக்கவுரை

2.3 உற்றதுரைத்தல்
உற்றதுரைத்தல் என்பது எதிர்ப்பட்டு வினாவாநின்ற பாங்கனுக்கு, நெருநலைநாட் கயிலைப்பொழிற்கட் சென்றேன்; அவ்விடத்து ஒரு சிற்றிடைச்சிறுமான்விழிக் குறத்தியால் இவ்வாறாயினேனெனத் தனக்குற்றது கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
மற்றவன் வினவ
உற்ற துரைத்தது.

உளமாம் வகைநம்மை யுய்யவந்
தாண்டுசென் றும்பருய்யக்
களமாம் விடமமிர் தாக்கிய
தில்லைத்தொல் லோன்கயிலை
வளமாம் பொதும்பரின் வஞ்சித்து
நின்றொர்வஞ் சிம்மருங்குல்
இளமான் விழித்ததென் றோஇன்றெம்
மண்ண லிரங்கியதே. **#679**

இதன் பொருள்:உளம் ஆம் வகை உய்ய வந்து நம்மை ஆண்டு உளமாயும் இலமாயும் மாறிவாராது நாமொருபடியே உளமாம் வண்ணம் பிறவித் துன்பத்திற் பிழைக்கத் தான்வந்து நம்மையாண்டு; உம்பர் சென்று உய்ய உம்பரெல்லாந் தன்கட்சென்று பிழைக்க; களம் ஆம் விடம் அமிர்து ஆக்கிய தில்லை தொல்லோன் கயிலை மிடற்றின்கணுளதாகு நஞ்சை யமிர்தமாக்கிய தில்லைக் கணுளனாகிய பழையோனது கயிலையில்; வளம் மா பொதும்பரின் வஞ்சித்து நின்ற வளவிய மாஞ்சோலைக்கண் வருத்துவதென்றறியாமல் நின்று; வஞ்சி மருங்குல் ஒர் இளமான் விழித்தது என்றோ எம் அண்ணல் இன்று இரங்கியது வஞ்சிபோலு மருங்குலையுடைய தோரிளமான் விழித்ததென்றோ எம்மண்ணல் இன்றிரங்கியது! இது நின்பெருமைக்குத் தகாது எ-று. நம்மையென்றது தம்மைப் போல் வாரை. களமார்விட மென் பதூஉம் பாடம். மெய்ப்பாடு: எள்ளல்பற்றி வந்த நகை. என்னை,

எள்ள லிளமை பேதைமை மடனென்
றுள்ளப் பட்ட நகைநான் கென்ப
-தொல். பொருள். மெய்ப்பட்டியல்-4

என்றாராகலின். பயன்: கழறுதல்.

விளக்கவுரை

2.4 கழறியுரைத்தல்
கழறியுரைத்தல் என்பது உற்றதுரைப்பக்கேட்ட பாங்கன், இஃது இவன்றலைமைப் பாட்டிற்குப் போதாதென உட்கொண்டு, நீ ஒரு சிறுமான் விழிக்கு யான் இவ்வாறாயினேனென்றல் நின் கற்பனைக்குப்

போதாதெனக் கழறிக்கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
வெற்பனைத்தன் மெய்ப்பாங்கன்
கற்பனையிற் கழறியது.

சேணிற் பொலிசெம்பொன் மாளிகைத்
தில்லைச்சிற் றம்பலத்து
மாணிக்கக் கூத்தன் வடவான்
கயிலை மயிலைமன்னும்
பூணிற் பொலிகொங்கை யாவியை
யோவியப் பொற்கொழுந்தைக்
காணிற் கழறலை கண்டிலை
மென்றோட் கரும்பினையே. **#680**

இதன் பொருள்:சேணில் பொலி செம்பொன் மாளிகை தில்லைச் சிற்றம்பலத்து சேய்மைக்கண் விளங்கித் தோன்றாநின்ற செம்பொனா னியன்ற மாளிகையையுடைய தில்லைச் சிற்றம்பலத்தின்கணுள னாகிய; மாணிக்கம் கூத்தன் வட வான் கயிலை மயிலை மாணிக்கம் போலுங் கூத்தனது வடக்கின்கணுண்டாகிய பெரிய கயிலைக்கண் வாழுமயிலை; மன்னும் பூணின் பொலி கொங்கை ஆவியை பொருந்திய பூண்களாற் பொலிகின்ற கொங்கையையுடைய என்னுயிரை; ஓவியம் பொன் கொழுந்தை காணின் கழறலை ஓவியமாகிய பொற்கொழுந்தைக் கண்டனையாயிற் கழறாய்; மென்தோள் கரும்பினை கண்டிலை மென்றோளையுடைய கரும்பைக் கண்டிலை எ - று.

மாணிக்கக்கூத்தன் என்புழி மாணிக்கத்தைக் கூத்திற் குவமையாக வுரைப்பினுமமையும். பொற்கொழுந்து பொன்னை வண்ணமாகக் கொண்டெழுதிய கொழுந்து. மென்றோட் கரும்பினை யென்பதற்கு மெல்லிய தோளிலெழுதிய கரும்பையுடையாளை யெனினுமமையும்.

மெய்ப்பாடு: அழுகையைச்சார்ந்து வருத்தம் பற்றிவந்த விளிவரல். என்னை,

மூப்பே பிணியே வருத்த மென்மையோ
டியாப்புற வந்த விளிவர னான்கே
-தொல்.பொருள்.மெய்ப்பாட்டியல்-6

என்றாராகலின். பயன்: பாங்கனை யுடம்படுவித்தல். பாங்கன் கழறவும் இவ்வகை மறுத்துரைத்தானென்பது.

விளக்கவுரை

2.5 கழற்றெதிர்மறுத்தல்

கழற்றெதிர்மறுத்தல் என்பது காதற்பாங்கன் கழறவும் கேளானாய்ப் பின்னும் வேட்கைவயத்தனாய்நின்று, என்னாற் காணப்பட்ட வடிவை நீ கண்டிலை; கண்டனையாயிற் கழறா யென்று அவனொடு

மறுத்துரைத்து வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்
ஆங்குயி ரன்ன பாங்கன் கழற
வளந்தரு வெற்ப னுளந்தளர்ந் துரைத்தது.

விலங்கலைக் கால்விண்டு மேன்மே
லிடவிண்ணு மண்ணுமுந்நீர்க்
கலங்கலைச் சென்றஅன் றுங்கலங்
காய்கமழ் கொன்றைதுன்றும்
அலங்கலைச் சூழ்ந்தசிற் றம்பலத்
தானரு ளில்லவர்போல்
துலங்கலைச் சென்றிதென் னோவள்ள
லுள்ளந் துயர்கின்றதே. **#681**

இதன் பொருள்:விலங்கலை கால் விண்டு மேன்மேல் இட மலைகளைக் காற்றுப்பிளந்து மேலுமேலுமிட; விண்ணும் மண்ணும் முந்நீர் கலங்கலை சென்ற அன்றும் கலங்காய் வானுலகும் மண்ணுலகும் முந்நீராற் கலங்குதலையடைந்த விடத்துங் கலங்குந் தன்மையை யல்லை; கமழ் கொன்றை துன்றும் அலங்கலை சூழ்ந்த சிற்றம்பலத்தான் அருள் இல்லவர் போல் துலங்கலை சென்று கமழாநின்ற கொன்றைப்பூ நெருங்கிய மாலையை முடிமாலையாகச் சுற்றிய சிற்றம்பலத்தானது அருளையுடையரல்லதாரைப் போலத் துளங்குதலையடைந்து; வள்ளல் உள்ளம் துயர்கின்றது இது என் னோ - வள்ளலே, நினதுள்ளந் துயர்கின்றது இஃதென்னோ! எ - று.

விண்டென்பது பிளந்தென்பது போலச் செய்வதன் றொழிற்குஞ் செய்விப்பதன்றொழிற்கும் பொது. இவனது கலக்கத்திற்குக் காரணமாய் அதற்கு முன்னிகழ்தனோக்கிச் சென்ற வன்றுமென இறந்தகாலத்தாற் கூறினான். வள்ளலென்பது: ஈண்டு முன்னிலைக் கண்வந்தது. இதென்னோவென்பது வினாவுதல் கருதாது அவனது கவற்சியை விளக்கிநின்றது. கலக்கஞ் செய்பாங்கன் கலங்கிய பாங்கன்; தலைமகனைக்கலக்கிய பாங்கனெனினுமமையும். மெய்ப் பாடு: இளிவரல். பயன்: கழறுதல். மேற்பொது வகையாற் கழறினான், ஈண்டு விசேடவகையாற் கழறினானென்பது.

விளக்கவுரை

2.6 கவன்றுரைத்தல்

கவன்றுரைத்தல் என்பது மறுத்துரைத்து வருந்தாநிற்பக் கண்ட பாங்கன் ஒருகாலத்துங் கலங்காதவுள்ளம் இவ்வாறு கலங்குதற்குக் காரணமென்னோவெனத் தலைவனுடன் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
கொலைக்களிற் றண்ணல் குறைநயந் துரைப்பக்

கலக்கஞ்செய் பாங்கன் கவன்று ரைத்தது.

தலைப்படு சால்பினுக் குந்தள
ரேன்சித்தம் பித்தனென்று
மலைத்தறி வாரில்லை யாரையுந்
தேற்றுவ னெத்துணையுங்
கலைச்சிறு திங்கள் மிலைத்தசிற்
றம்பல வன்கயிலை
மலைச்சிறு மான்விழி யாலழி
வுற்று மயங்கினனே. **#682**

இதன் பொருள்:தலைப்படு சால்பினுக்கும் தளரேன் முன் தலைமையாய அமைதியானு முள்ளந் தளரேன்; சித்தம் பித்தன் என்று மலைத்து அறிவார் இல்லை பிறழவுணர்ந்தாயென்று மாறுபட்டறி வாருமில்லை; யாரையும் எத்துணையும் தேற்றுவன் பிறழவுணர்ந் தார் யாவரையும் மிகவுந் தெளிவியாநிற்பேன்; கலை சிறு திங்கள் மிலைத்த சிற்றம்பலவன் கயிலை மலை சிறு மான் விழியால் அழிவுற்று மயங்கினன் இப்பொழுது ஒரு கலையாகிய சிறிய பிறையைச் சூடிய சிற்றம்பலவனது கயிலைமலைக்கணுண்டாகிய சிறுமானினது விழியால் அழிந்து மயங்கினேன் எ - று.

சால்பழிந்துள்ளந்தளரேனென்பான் சால்பினுக்குந் தளரே னென்றான். தலைப்படு சால்பென்பதற்கு எல்லாப் பொருளுஞ் சிவனைத்தலைப்பட்டுச் சென்றொடுங்கும் ஊழியிறுதி யென்றுரைப் பினுமமையும். நிறையும் பொறையுஞ் சால்பும் தலைப்படும் சால்பென்றதனாற்பெற்றாம். பித்தனென்று மலைத்தறி வாரில்லை யென்றதனால் தேற்றம் பெற்றாம். யாரையுந் தேற்றுவனென்றதனால் நீதிபெற்றாம், கலங்கினாரைத் தெளிவித்தல் நீதியாகலான். ஈண்டுத்தன்னை யுயர்த்தலென்னுங் குற்றந்தங்காது, சால்பு முதலாயின வற்றை இப்பொழுதுடையே னென்னாமையின். சால்பு 'அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ டைந்துசால் பூன்றிய தூண்' (குறள் - 983) என்பத னானறிக. நோக்கிற்கு நோக்கினால். மெய்ப்பாடு: அழுகை. பயன்: ஆற்றாமையுணர்த்தல். இதுவும் மேலதேபோல மறுத்துரைத்தானென்பது.

விளக்கவுரை

2.7 வலியழிவுரைத்தல்

வலியழிவுரைத்தல் என்பது பாங்கன் கவன்றுரையா நிற்ப, முன்பு இத்தன்மையேனாகிய யான் இன்று ஒருசிறுமான் விழிக்கு இவ்வாறாயினேனெனத் தலைமகன் தன் வலியழிந்தமை கூறி வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்

நிறைபொறை தேற்றம் நீதியொடு சால்பு
மறியுறு நோக்கிற்கு வாடினே னென்றது.

நல்வினை யும்நயந் தந்தின்று
வந்து நடுங்குமின்மேற்
கொல்வினை வல்லன கோங்கரும்
பாமென்று பாங்கன்சொல்ல வில்வினை மேருவில் வைத்தவன்
தில்லை தொழாரின்வெள்கித்
தொல்வினை யாற்றுய ரும்மென
தாருயிர் துப்புறவே. **#683**

இதன் பொருள்:கொல் வினை வல்லன நடுங்கு மின் மேல் கோங்கு அரும்பு ஆம் என்று பாங்கன் சொல்ல கொல்லுந் தொழிலை வல்லன நடுங்கு மின் மேலுண்டாகிய கோங்கரும்புகளாமென்று யான் பற்றுக்கோடாக நினைந்திருந்த பாங்கன்றானே இகழ்ந்து சொல்லு தலால்; வெள்கி தொல் வினையால் துயரும் எனது ஆர் உயிர் துப்புற நாணிப் பழையதாகிய தீவினையாற்றுயருறாநின்ற எனது அரிய வுயிர் வலியுறும்வண்ணம்; நல்வினையும் வந்து நயம் தந்தின்று யான் உம்மைச்செய்த நல்வினையும் வந்து பயன்றந்ததில்லை எ - று. வில் வினை மேருவில் வைத்தவன் தில்லை தொழாரின் வெள்கி வில்லின்றொழிலினை மேருவின்கண் வைத்தவனது தில்லை தொழாதாரைப்போல வெள்கி யெனக்கூட்டுக.

உம்மை: எச்சவும்மை, கல்வியேயுமன்றி யென்றவாறு. நல்வினை தீவினையைக் கெடுக்குமாயினும் யான்செய்த நல்வினை அது செய்ததில்லையென்பது கருத்து. நாணினார் மேனி வெள்கு தலான் வெள்கியென்றான். துப்புறவென்னுமெச்சம் தந்தின்றென்பதில் தருதலென்பதனோடு முடிந்தது. துப்புறத் துயருமென்றியைத்து மிகவுந் துயருமென முற்றாகவுரைப்பினுமமையும். நல்வினையுந் நயந்தந்ததென்பது பாடமாயின், குறிப்பு நிலையாகக் கொள்க.

மெய்ப்பாடும்பயனும்: அவை.

விளக்கவுரை

2.8 விதியொடுவெறுத்தல்

விதியொடுவெறுத்தல் என்பது வலியழிந்தமைகூறி வருந்தா நின்ற தலைமகன் பாங்கனொடுபுலந்து வெள்கி, யான் செய்த நல்வினையும் வந்து பயன்றந்ததில்லையெனத் தன் விதியொடு வெறுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

கல்விமிகு பாங்கன் கழற வெள்கிச்
செல்வமிகு சிலம்பன் தெரிந்து செப்பியது.

ஆலத்தி னாலமிர் தாக்கிய

கோன்தில்லை யம்பலம்போற்
கோலத்தி னாள் பொருட் டாக
வமிர்தங் குணங்கெடினுங்
காலத்தி னான்மழை மாறினும்
மாறாக் கவிகைநின்பொற்
சீலத்தை நீயும் நினையா
தொழிவதென் தீவினையே. **#684**

இதன் பொருள்: ஆலத்தினால் அமிர்து ஆக்கிய கோன் தில்லை அம்பலம்போற் கோலத்தினாள் பொருட்டு ஆக நஞ்சால் அமிர்தத்தையுண்டாக்கிய இறைவனது தில்லையம்பலம்போலும் அழகையுடையாளொருத்தி காரணமாக; அமிர்தம் குணம் கெடினும் காலத்தினான் மழை மாறினும் அமிர்தம் தன்குணங்கெடினும் பெய்யுங் காலத்து மழை பெய்யாது மாறினும்; மாறாக் கவி கை நின் பொன் சீலத்தை மாறாதவண்மையை உடைய நினது பொன் போலப் பெறுதற்கரிய ஒழுக்கத்தை; நீயும் அறிவதறிந்த நீயும்; நினையாது ஒழிவது என் தீவினை அறியா தொழிகின்றது எனது தீவினைப் பயன் எ - று.

நஞ்சின்றன்மையொழித்து அமிர்தஞ்செய்யுங் காரியத்தைச் செய்தலின், அமிர்தாக்கியவென்றார். ஆலத்தினாலென்னு மூன்றா வது பாலாற்றயிராக்கிய வென்பது போல நின்றது. நஞ்சினாலோர் போனகத்தையுண்டாக்கிய வெனினுமமையும். அம்பலம் போலு மென்னு முவமை பட்டாங்கு சொல்லுதற்கண் வந்தது; புகழ்தற்கண் வந்ததென்பார் அம்பலம்போற் கோலத்தினாள் பொருட்டே யாயினுமாகவென முற்றாகவுரைப்ப. மாறாக்கவிகையென வண்மை மிகுத்துக்கூறினான், தானு மொன்றிரக்கின்றானாகலின். மாறாக் கவிகைநீயுமெனக் கூட்டினுமமையும். மெய்ப்பாடு: இளிவரல். பயன்: தலைமகனைத் தெருட்டல்.

விளக்கவுரை

2.9 பாங்கனொந்துரைத்தல் பாங்கனொந்துரைத்தல் என்பது விதியொடுவெறுத்து வருந்தாநிற்பக் கண்டபாங்கன், அமிர்தமும் மழையும் தங்குணங் கெடினும் நின்குணங்கெடாதநீ ஒருத்தி காரணமாக நின்சீலத்தை நினையாதவாறு இவ்வாறாகியது எனது தீவினையின் பயனாம் இத்தனையன்றோவெனத் தானும் அவனோடுகூட வருந்தா நிற்றல். அதற்குச் செய்யுள்

இன்னுயிர்ப் பாங்கன் ஏழையைச் சுட்டி
நின்னது தன்மை நினைந்திலை யென்றது.

நின்னுடை நீர்மையும் நீயு

மிவ்வாறு நினைத்தெருட்டும்
என்னுடை நீர்மையி தென்னென்ப
தேதில்லை யேர்கொண்முக்கண்
மன்னுடை மால்வரை யோமல
ரோவிசும் போசிலம்பா
என்னிடம் யாதியல் நின்னையின்
னேசெய்த ஈர்ங்கொடிக்கே. **#685**

இதன் பொருள்:நின்னுடை நீர்மையும் இவ்வாறு நின் னுடைய வியல்பாகிய குணமும் இவ்வாறாயிற்று; நீயும் இவ்வாறு ஒருகாலத்துங் கலங்காத நீயும் இத்தன்மையையாயினாய் நினைத் தெருட்டும் என்னுடைய நீர்மையிது என் என்பதே; இனி நின்னைத் தெளிவிக்கும் என்னுடையவியல்பு யாதென்று சொல்வதோ! அது கிட க்க; சிலம்பா சிலம்பா; நின்னை இன்னே செய்த ஈர்ங் கொடிக்கு நின்னை யித்தன்மையையாகச் செய்த இனியகொடிக்கு; தில்லை ஏர் கொள் முக்கண் மன்னுடை மால்வரையோ மலரோ விசும்போ இடம் என் இயல் யாது தில்லைக்கணுளனாகிய அழகு பொருந்திய மூன்று கண்ணையுடைய மன்னனது பெரிய கயிலை மலையோ தாமரைப் பூவோ வானோ இடம் யாது? இயல் யாது? கூறுவாயாக எ-று. என்னென்பதேயென்னும் ஏகாரம்: வினா; அசைநிலை யெனினுமமையும். பிறர்கண்போலாது மூன்றாயிருந்தனவாயினும் அவைதாம் ஓரழகுடையவென்னுங் கருத்தால், ஏர்கொண் முக்கணென்றார். கழுமல் மயக்கம். மெய்ப்பாடு: அச்சம். பயன்: தலைமகனை யாற்றுவித்தல்.

விளக்கவுரை

2.10 இயலிடங்கேட்டல் இயலிடங்கேட்டல் என்பது தலைமகனுடன்கூட வருந்தா நின்ற பாங்கன் யானும் இவனுடன்கூட வருந்தினால் இவனை ஆற்றுவிப்பாரில்லையென அது பற்றுக்கோடாகத் தானாற்றி நின்று, அது கிடக்க, நின்னாற்காணப்பட்ட வடிவுக்கு இயல் யாது*?* இடம் யாது*?* கூறுவாயாகவென அவளுடைய இயலும் இடமுங் கேளாநிற்றல்.
அதற்குச் செய்யுள் கழும லெய்திய காதற் றோழன்
செழுமலை நாடனைத் தெரிந்து வினாயது.

விழியாற் பிணையாம் விளங்கிய
லான்மயி லாம்மிழற்று
மொழியாற் கிளியாம் முதுவா
னவர்தம் முடித்தொகைகள்
கழியாக் கழற்றில்லைக் கூத்தன்
கயிலைமுத் தம்மலைத்தேன்

கொழியாத் திகழும் பொழிற்கெழி
லாமெங் குலதெய்வமே. #686

இதன் பொருள்:முது வானவர் தம் முடித் தொகைகள் கழியாக் கழல் தலைவராகிய இந்திரன் முதலாகிய தேவர்களுடைய முடித் திரள்கள் நீங்காத கழலையுடைய; தில்லைக் கூத்தன் கயிலை தில்லைக் கூத்தனது கயிலைமலையிடத்து; முத்தம் மலைத்தேன் கொழியாத் திகழும் பொழிற்கு எழில் ஆம் எம் குலதெய்வம் முத்துக்களைப் பெருந்தேன் கொழித்து விளங்கும் பொழிற்கு அழகாம் எம்முடைய நல்லதெய்வம்; விழியான்பிணை ஆம் விழிகளாற் பிணையாம்; விளங்கு இயலான் மயில் ஆம் விளங்கா நின்ற இயலான் மயிலாம் மிழற்று மொழியான் கிளியாம் கொஞ்சு மொழியாற் கிளியாம் எ - று.

இயல் இன்னவென்றும் இடம் கயிலைப் பொழிலென்றுங் கூறப்பட்டனவாம். முத்தம் யானைக்கோட்டினும், வேயினும் பிறந்த முத்து. அழுங்கல் இரக்கம். செழுமை வளமை. மெய்ப்பாடு: உவகை. பயன் : பாங்கற் குணர்த்தல்.

விளக்கவுரை

2.11 இயலிடங்கூறல் இயலிடங்கூறல் என்பது இயலிடங்கேட்ட பாங்கனுக்குத் தான் அவளை யெய்தினாற் போலப் பெரியதோராற்று தலையுடையனாய் நின்று, என்னாற் காணப்பட்ட வடிவுக்கு இயல் இவை*;* இடம் இது*;* என்று இயலும் இடமுங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

அழுங்க லெய்திய ஆருயிர்ப் பாங்கற்குச்
செழுங்கதிர் வேலோன் தெரிந்து செப்பியது.

குயிலைச் சிலம்படிக் கொம்பினைத்
தில்லையெங் கூத்தப்பிரான்
கயிலைச் சிலம்பிற்பைம் பூம்புனங்
காக்குங் கருங்கட்செவ்வாய்
மயிலைச் சிலம்பகண்டி யான்போய்
வருவன்வண் பூங்கொடிகள்
பயிலச் சிலம்பெதிர் கூய்ப்பண்ணை
நண்ணும் பளிக்கறையே. #687

இதன் பொருள்:சிலம்ப சிலம்பனே; குயிலை குயிலை; சிலம்பு அடிக் கொம்பினை சிலம்படியையுடையதோர் கொம்பை; தில்லை எம் கூத்தப்பிரான் கயிலைச் சிலம்பில் பைம் பூம்புனம் காக்கும் கரும் கண் செவ்வாய் மயிலை தில்லைக்கணுளனாகிய எம்முடைய கூத்தப்பிரானது கயிலையாகிய சிலம்பின்கட் பைம்பூம் புனத்தைக் காக்குங் கரிய கண்ணையுஞ் சிவந்த வாயையுமுடையதோர் மயிலை; வண் பூங்

கொடிகள் பயிலச் சிலம்பு எதிர் கூய்ப்பண்ணை நண்ணும் பளிக்கு அறை யான் போய் வனவிய பூவை உடைய கொடிகள் போலும் ஆயத்தார் நெருங்க அவரோடு சிலம்பிற் கெதிர் கூவித்தான் விளையாட்டைப் பொருந்தும் பளிக்கறைக்கண் யான் சென்று; கண்டு வருவன் கண்டு வருவேன்; நீ யாற்றுவாயாக எ-று.

கூத்தப்பிரான் என்பது கூத்தனாயினும் பிரானாயுள்ளான் என்றவாறு. பெயர்ந்துரைத்தல் - கழறமறுத்துரைத்தல்; ஆற்றாத் தன்மையனாய்ப் பெயர்ந்து இயலும் இடனுங் கூறியவெனினு மமையும். வயவென்னுமுரிச்சொல் விகார வகையால் வயமென நின்றது. சிறுபான்மை மெல்லெழுத்துப் பெற்றதெனினுமமையும். கெழு: சாரியை. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: வற்புறுத்தல்.

விளக்கவுரை

2.12 வற்புறுத்தல் வற்புறுத்தல் என்பது இயலிடங்கூறக் கேட்ட பாங்கன் நீ சொன்ன கயிலையிடத்தே சென்று இப்பெற்றியாளைக்கண்டு இப்பொழுதே வருவன்*;* அவ்வளவும் நீ யாற்றுவாயாதல் வேண்டுமெனத் தலைமகனை வற்புறுத்தாநிற்றல். அதற்குச் செய்யுள்
பெயர்ந்து ரைத்த பெருவரை நாடனை
வயங்கெழு புகழோன் வற்புறுத் தியது.

கொடுங்கால் குலவரை யேழேழ்
பொழிலெழில் குன்றுமன்று
நடுங்கா தவனை நடுங்க
நுடங்கு நடுவுடைய
விடங்கா லயிற்கண்ணி மேவுங்கொ
லாந்தில்லை யீசன்வெற்பில்
தடங்கார் தருபெரு வான்பொழில்
நீழலந் தண்புனத்தே. **#688**

இதன் பொருள்:கொடுங் கால் குலவரை ஏழு ஏழ்பொழில் எழில் குன்றும் அன்றும் நடுங்காதவனைகொடியகாற்றாற் குலமலை களேழும் பொழிலேழும் அழகுகெடும் ஊழியிறுதியாகிய அன்றும் நடுங்காதவனை; நடுங்க நுடங்கும் நடு உடைய விடம் கால் அயிற்கண்ணி நடுங்குவிக்கும் இடையையுடைய நஞ்சைக் காலும் வேல் போலுங் கண்ணையுடையாள்; தில்லை ஈசன் வெற்பில் தடம் கார் தரு பெருவான் பொழில் நீழல் தண் புனத்து மேவும் கொலாம் தில்லைக்கணுளனாகிய ஈசனது வெற்பிடத்துப் பெரிய முகில்போலும் மிகவும் பெரிய பொழிலி னீழலையுடைய குளிர்ந்த புனத்தின்கண் மேவுமோ மேவாளோ? எ - று.

கொடுங்காலெனச் சந்தநோக்கித் திரியாது நின்றது. கொடுங் காலுமென

வெண்ணினுமமையும். நடுங்க நுடங்குமென்னுஞ் சொற்கள் ஒருசொன்னீரவாய் நடுக்குமென்னும் பொருள் பட்டு இரண் டாவதற்கு முடிபாயின. ஐகாரம்: அசைநிலையெனினுமமையும். தருவென்பது ஓருவமைவாய்பாடு. தடங்கார் தருபெருவான் பொழிலென்பதற்குக் கார்தங்கும் பொழி லெனினுமையும். நிறை ஐம்பொறிகளையுமடக்குதல். மெய்ப்பாடு: பெருமிதஞ் சார்ந்த மருட்கை. பயன்: உசாவியுணர்தல்.

விளக்கவுரை

2.13 குறிவழிச்சேறல்

குறிவழிச்சேறல் என்பது தலைமகனை வற்புறுத்தி அவன் குறிவழிச் செல்லாநின்ற பாங்கன் இத்தன்மையாளை யான் அவ்விடத்துக்காணலாங் கொல்லோவென அந்நினைவோடு செல்லா நிற்றல். அதற்குச் செய்யுள்

அறைகழ லண்ணல் அருளின வழியே
நிறையுடைப் பாங்கன் நினைவொடு சென்றது.

வடிக்க ணிவைவஞ்சி யஞ்சும்
இடையிது வாய்பவளந்
துடிக்கின்ற வாவெற்பன் சொற்பரி
சேயான் றொடர்ந்துவிடா
அடிச்சந்த மாமல ரண்ணல்விண்
ணோர்வணங் கம்பலம்போற்
படிச்சந் தமுமிது வேயிவ
ளேஅப் பணிமொழியே. **#689**

இதன் பொருள்:வடிக்கண் இவை அவன்கூறிய வடுவகிர் போலுங்கண்களும் இவையே; வஞ்சி அஞ்சும் இடை இது வஞ்சிக் கொம்பஞ்சு மிடையும் இதுவே; வெற்பன் சொற்பரிசே வெற்பன் சொற்பரிசே; வாய் பவளம் துடிக்கின்ற வா வாய் பவளந் துடித்தாற் போலத் துடிக்கின்றவாறென்! அதனால் யான் தொடர்ந்து விடா அடிச் சந்த மா மலர் அண்ணல் விண்ணோர் வணங்கு அம்பலம் போல் படிச்சந்தமும் இதுவே ஓருணவுர்விமில்லாதயானும் பற்றிவிட மாட்டாத அடியாகிய சந்த மாமலரையுடைய தலைவனது விண்ணோர் வந்து வணங்கும் அம்பலம்போலும் ஒப்பும் இதுவே; அப்பணி மொழி இவளே அப்பணிமொழியும் இவளே! எ-று.

வெற்பன் சொற்பரிசே யென்றது இதனையவன் தப்பாமற் கூறியவாறென்னை என்றவாறு. வடியென்பது வடுவகிருக்கோர் பெயர். அதரத்திற்குத் துடித்தல் இயல்பாகக் கூறுப. பவளந் துடிக்கின்றவா என்பதற்குப் பவளம்போலப் பாடம் செய்கின்றவாறு என்னென்றுரைப்பாருமுளர். படிச்சந்தமென்பது வடமொழித்திரிபு.

மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தெளிதல்.

விளக்கவுரை

2.14 குறிவழிக்காண்டல்

குறிவழிக்காண்டல் என்பது குறிவழிச்சென்ற பாங்கன் தன்னை அவள் காணாமல் தானவளைக் காண்பதோரணிமைக் கணின்று, அவன் சொன்ன இடமும் இதுவே; இயலும் இவையே; இவளும் அவளே யென்று ஐயமறத் தெளியக்காணாநிற்றல். அதற்குச் செய்யுள்

குளிர்வரை நாடன் குறிவழிச் சென்று
தளிர்புரை மெல்லடித் தையலைக் கண்டது.

குவளைக் களத்தம் பலவன்
குரைகழல் போற்கமலத்
தவளைப் பயங்கர மாகநின்
றாண்ட அவயவத்தின்
இவளைக்கண் டிங்குநின் றங்குவந்
தத்துணை யும்பகர்ந்த
கவளக் களிற்றண்ண லேதிண்ணி
யானிக் கடலிடத்தே. **#690**

இதன் பொருள்:குவளைக் களத்து அம்பலவன் குரை கழல் போற் கமலத்தவளை குவளைப்பூப்போலுந் திருமிடற்றையுடைய அம்பலவனுடைய ஒலிக்குங் கழலையுடைய திருவடிபோலுந் தாமரைப் பூவிலிருக்குந் திருமகளை; பயங்கரம் ஆக நின்று ஆண்ட அவயவத்தின் இவளைக் கண்டு இங்குநின்று அங்கு வந்து தாமவட்குப் பயத்தைச் செய்வனவாக நின்று அடிமை கொண்ட உறுப்புக்களையுடைய இவளைக்கண்டு பிரிந்து இங்குநின்றும் அவ்விடத்து வந்து; அத்துணையும் பகர்ந்த கவளக் களிற்று அண்ணலே இக்கடலிடத்துத் திண்ணியான் யான் கழறவும் ஆற்றி அவ்வளவெல்லாங்கூறிய கவளக்களிற்றையுடைய அண்ணலே இவ்வுலகத்துத் திண்ணியான் எ - று.

இவளைக் கண்டென்றது இவளுடைய நலத்தைக் கொண்டடிய வாறன்று, முன்னங்கே தலைவனுடைய பொலிவழிவு கண்டு இங்கே வந்தவன் இங்கு மிவளுடைய பொலிவழிவுகண்டு கிலேசித்து இவளித்தன்மையளாக இங்கே இவளைப்பிரிந்து அங்கே வந்து அத்துணையும் பகர்ந்தவனே திண்ணியானென்று இருவருடைய அனுராகமுங் கூறியவாறு. கவளக்களிறு தான் விரும்புங் கவளம் பெற்று வளர்ந்த களிறு. நயந்த தலைமகனயந்த. மெய்ப்பாடு: மருட்கையைச்சார்ந்த அச்சம். பயன்: தலைமகனை வியத்தல்.

விளக்கவுரை

2.15 தலைவனை வியந்துரைத்தல்

தலைவனை வியந்துரைத்தல் என்பது குறிவழிக்கண்ட பாங்கன் இவ்வுறுப்புக்களையுடைய இவளைக்கண்டு பிரிந்து இங்கு நின்று அங்குவந்து யான்கழறவும் ஆற்றி அத்தனையுந் தப்பாமற் சொன்ன அண்ணலே திண்ணியானெனத் தலைமகனை வியந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள் நயந்த வுருவும் நலனுங் கண்டு வியந்த வனையே மிகுத்து ரைத்தது.

பணந்தா ழரவரைச் சிற்றம்
பலவர்பைம் பொற்கயிலைப்
புணர்ந்தாங் ககன்ற பொருகரி
யுன்னிப் புனத்தயலே
மணந்தாழ் பொழிற்கண் வடிக்கண்
பரப்பி மடப்பிடிவாய்
நிணந்தாழ் சுடரிலை வேலகண்
டேனொன்று நின்றதுவே. **#691**

இதன் பொருள்:வாய் நிணம் தாழ் சுடர் இலை வேல வாய்க் கணிணந்தங்கிய சுடரிலைவேலை யுடையாய்; பணம் தாழ் அரவு அரைச் சிற்றம்பலவர் பைம்பொன் கயிலை பணந்தாழ்ந்த அரவை யணிந்த அரையையுடைய சிற்றம்பலவரது பசும்பொன்னையுடைய கயிலைக்கண்; புணர்ந்து ஆங்கு அகன்ற பொருகரி உன்னி கூடி அவ்விடத்து நின்று மகன்ற பொருகரியை நினைந்து; புனத்து அயலே மணம் தாழ் பொழிற்கண் வடிக்கண் பரப்பி மடப்பிடி ஒன்று நின்றது கண்டேன் புனத்திற்கயலே மணந்தங்கிய பொழிற்கண் வடுவகிர் போலுங் கண்களைப்பரப்பி மடப்பிடியொன்று நின்றதனைக் கண்டேன் எ - று.

பணந்தாழ்தல் முடிந்துவிடுதலாற்றொங்கல் போலத் தாழ்தல்; தங்குதலெனினுமமையும். ஆங்ககன்றவென்புழி நின்றென ஐந்தாம் வேற்றுமைப் பொருளுணர நிற்பதோரிடைச் சொல் வருவித்துரைக்கப் பட்டது. புனத்தயலே யென்றான், புனத்து விளையாடும் ஆயத்தை நீங்கி நிற்றலின். வடிக்கண்பரப்பி யென்றான், இன்ன திசையால் வருமென்றறியாது சுற்றெங்கு நோக்குதலின். கயிலைக்கணென்பதூஉம், புனத்தயலென்பதூஉம், பொழிற்கணென்பதூஉம், நின்றதென்னுந் தொழிற்பெயரோடு முடியும். நின்றதுவேயென்புழி வகாரஞ்சந்த நோக்கி வந்தது; விரிக்கும்வழி விரித்தற்பாற்படும். மெய்ப்பாடு: உவகை பயன்: தலைமகனை யாற்றுவித்தல்.

விளக்கவுரை

2.16 கண்டமைகூறல்

கண்டமை கூறல் என்பது தலைமகனை வியந்துரைத்த பாங்கன் விரைந்து சென்று, தான் அவளைக் கண்டமை தலை மகனுக்குப் பிடிமிசைவைத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள் பிடிமிசை வைத்துப் பேதையது நிலைமை
அடுதிற லண்ணற் கறிய வுரைத்தது.

கயலுள வேகம லத்தலர்
மீது கனிபவளத்
தயலுள வேமுத்த மொத்த
நிரையரன் அம்பலத்தின்
இயலுள வேயிணைச் செப்புவெற்
பாநின தீர்ங்கொடிமேற்
புயலுள வேமலர் சூழ்ந்திருள்
தூங்கிப் புரள்வனவே. **#692**

இதன் பொருள்:வெற்பா வெற்பா; நினது ஈர்ங் கொடி மேல் கமலத்து அலர் மீது கயல் உளவே நினது ஈர்ங்கொடிக்கண் தாமரைப் பூவின்மேற் கிடப்பன சிலகயல்களுளவே; கனி பவளத்து அயல் ஒத்த நிரை முத்தம் உளவே கனிந்த பவளத்திற்கயல் இனமொத்த நிரையாகிய முத்துக்களுளவே; இணைச்செப்பு அரன் அம்பலத்தின் இயல் உளவே இணையாகிய செப்பு அரனது அம்பலத்தி னியல்பை யுடையனவுளவே; மலர் சூழ்ந்து இருள் தூங்கிப் புரள்வன புயல் உளவே மாலைசூழ்ந்து இருள் செறிந்து கிடந்து புரள்வன புயலுள வே? உளவாயின் யான்கண்ட வுருவம் நீ கூறியவுருவமாம் எ - று. அரனம்பலத்தினியல்: ஆறாம் வேற்றுமைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. சூழ்ந்தென்பதூஉம், தூங்கியென்பதூஉம் சினைவினைப்பாற்பட்டு முதல்வினைகொண்டன. மலர்சினை போலக் குழற்கின்றியமையாமையிற் சினைப்பாற்பட்டது. புயல் திரண்டாற்போலுமென்பது போதரப் புரள்வனவெனப் பன்மையாற் கூறினான். மெய்ப்பாடும் பயனும் : அவை.

விளக்கவுரை

2.17 செவ்வி செப்பல்

செவ்வி செப்பல் என்பது பிடிமிசை வைத்துக் கூறக்கேட்ட தலைமகன் அது தனக்குச் செவ்விபோதாமையிற் பின்னும் ஆற்றாமை நீங்கானாயினான். அது கண்டு அவனை ஆற்று விப்பது காரணமாக அவனுக்கு அவளவயவங்கூறாநிற்றல். அதற்குச் செய்யுள் அற்புதன் கைலை மற்பொலி சிலம்பற்

கவ்வுருக் கண்டவன் செவ்வி செப்பியது.

எயிற்குல மூன்றிருந் தீயெய்த
வெய்தவன் தில்லையொத்துக்
குயிற்குலங் கொண்டுதொண் டைக்கனி
வாய்க்குளிர் முத்தநிரைத்
தயிற்குல வேல்கம லத்திற்
கிடத்தி அனநடக்கும்
மயிற்குலங் கண்டதுண் டேலது
வென்னுடை மன்னுயிரே. **#693**

இதன் பொருள்:எயில் குலம் மூன்றும் இரும் தீ எய்த எய்தவன் தில்லை ஒத்து எயிற்சாதி மூன்றும் பெரிய தீயை யெய்த அவற்றை யெய்தவனது தில்லையை யொத்து; குயில் குலம் கொண்டு குயிலாகிய சாதியைக்கொண்டு; தொண்டைக் கனிவாய்க் குளிர் முத்தம் நிரைத்து தொண்டைக் கனியிடத்துக் குளிர்ந்த முத்தங்களை நிரைத்து; அயில் குல வேல் கமலத்தில் கிடத்தி கூர்மையையுடைய நல்ல வேலைக் கமலத்தின்கட்கிடத்தி; அனம் நடக்கும் மயில் குலம் கண்டது உண்டேல் அது என்னுடை மன் உயிர் அன்னம்போல நடப்பதோர் மயிற்சாதி காணப்பட்டதுண்டாயின். அது எனது நிலை பெறுமுயிர் எ - று. எயிற்குலமூன்றென்றார், அவை இரும்பும், வெள்ளியும், பொன்னுமாகிய சாதி வேறுபாடுடைமையின். குயிற் குலங்கொண்டென்றான், மொழியாற் குயிற்றன்மையையுடைத்தாகலின். தொண்டைக் கனிவாயென்பதற்குத் தொண்டைக்கனி போலும் வாயென்பாருமுளர். மெய்ப்பாடு: உவகை. பயன்: ஆற்றாமை நீங்குதல்.
இவை நிற்க இடந்தலை தனக்குமாமாறு சொல்லுமாறு.

விளக்கவுரை

2.18 அவ்விடத்தேகல்

அவ்விடத் தேகல் என்பது செவ்விசெப்பக் கேட்ட தலை மகன் இவ்வாறு காணப்பட்டதுண்டாயின் அது வென்னுயிரெனத் தானவ்விடநோக்கிச் செல்லாநிற்றல். அதற்குச் செய்யுள் அரிவையதுநிலைமை யறிந்தவனுரைப்ப
எரிகதிர்வேலோ னேகியது.

ஆவியன் னாய்கவ லேல்அக
லேமென் றளித்தொளித்த
ஆவியன் னார்மிக்க வாவின
ராய்க்கெழு மற்கழிவுற்
றாவியன் னார்மன்னி யாடிடஞ்
சேர்வர்கொ லம்பலத்தெம்

ஆவியன் னான்பயி லுங்கயி
லாயத் தருவரையே. #694

இதன் பொருள்:அளித்து ஆவி அன்னாய் கவலேல் அகலேம் என்று ஒளித்த ஆவி அன்னார் தலையளிசெய்து ஆவியை யொப்பாய் கவலாதொழி நின்னை நீங்கேமென்று சொல்லி மறைந்த என்னாவியை யொப்பார்; மிக்க அவாவினர் ஆய்க் கெழுமற்கு அழிவுற்று மிக்க விருப்பத்தையுடையராய்க் கெழுமுதல் காரணமாக நெஞ்சழிதலான், இடமறியாது; அம்பலத்து எம் ஆவி அன்னான் பயிலும் கயிலாயத்து அருவரை அம்பலத்தின்கணுளனாகிய எம் மாவியையொப்பான் அடுத்து வாழுங் கயிலாயத்தின்கட் பிறரா னெய்துதற்கரிய தாழ்வரையிடத்து; ஆவி அன்னார் மன்னி ஆடு இடம் சேர்வர் கொல் ஆவியை யொக்கும் ஆயத்தார் நிலை பெற்று விளையாடும் அவ்விடத்து அவர்காண வந்து பொருந்துவரோ! எ-று.

அளித்தல்:பிரிகின்ற காலத்துச்செய்த தலையளியெனினு மமையும். மிக்கவென்பது: கடைக்குறைந்து நின்றது. ஆயத்திடை வருவர்கொல்லென ஐயத்துள் ஒருதலையே, கூறினாள், பெருநாணி னளாகலின். மெய்ப்பாடு: அச்சத்தைச்சார்ந்த மருட்கை. பயன்: உசாவி ஆற்றாமை நீங்குதல். ஆயவெள்ளத்துள்ளே வருவர்கொல் லோவென்னும் பெருநாணினானும், ஆற்றாமையான்இறந்து பட்டனர்கொல்லோவென்னும் பேரச்சத்தினானும் மீதூரப்பட்டுத் தன்றன்மையளன்றி நின்று இவ்வகை உசாவினா ளென்பது. #9;

விளக்கவுரை

2.19 மின்னிடை மெலிதல்

மின்னிடை மெலிதல் என்பது நெருநலைநாளில் தலையளி செய்து நின்னிற்பிரியேன், பிரியினும் ஆற்றேனென்று கூறிப்பிரிந் தவர் வேட்கைமிகுதியால் இடமறியாது ஆயத்திடைவருவார் கொல்லோவென்னும் பெருநாணினானும், ஆற்றாமையான் இறந்துபட்டார் கொல்லோ வென்னும் பேரச்சத்தினானும், யாருமில்லொருசிறைத் தனியேநின்று, தலைமகனை நினைந்து தலைமகள் மெலியாநிற்றல். அதற்குச் செய்யுள்

மன்னனை நினைந்து
மின்னிடை மெலிந்தது.

காம்பிணை யாற்களி மாமயி
லாற்கதிர் மாமணியால்
வாம்பிணை யால்வல்லி யொல்குத
லால்மன்னு மம்பலவன்
பாம்பிணை யாக்குழை கொண்டோன்

கயிலைப் பயில்புனமுந்
தேம்பிணை வார்குழ லாளெனத்
தோன்றுமென் சிந்தனைக்கே. **#695**

இதன் பொருள்:காம்பு இணையால் வேயிணையானும்; களிமா மயிலால் களிப்பையுடைய கரிய மயிலானும் கதிர் மா மணி யால் ஒளியையுடைய பெரிய நீலமணியானும்; வாம் பிணையால் வாவும் பிணையானும்; வல்லி ஒல்குதலால் வல்லி நுடங்குதலானும்; கயிலைப் பயில் புனமும் என் சிந்தனைக்குத் தேம்பிணை வார் குழலாள் எனத் தோன்றும் கயிலைக்கணுண்டாகிய அவள் பயிலும் புனமும் இன்புறுத்துதலால் என்மனத்திற்குத் தேம்பிணையை யுடைய நெடிய குழலையுடையாளென்றே தோன்றா நின்றது எ-று.

மன்னும் அம்பலவன் பாம்பு இணையாக் குழை கொண்டோன் கயிலை நிலைபெறு மம்பலத்தையுடையவன் பாம்பை ஒன்று மொவ் வாத குழையாகக்கொண்டவன் அவனது கயிலை யெனக்கூட்டுக.
பாம்பையிணைத்துக் குழையாகக்கொண்டவ னெனினுமமை யும்.
தேம்பிணை தேனையுடையதொடை. தேம்பிணை வார்குழலா ளெனத் தோன்றுமென்பதற்கு அவளைப் போலப் புனமும் யானின் புறத் தோன்றாநின்ற தென்பாருமுளர். மெய்ப்பாடு: உவகை. பயன்: மகிழ்தல்.
நெருநலைநாளில் தலைமகளைக் கூடின பொழிலிடம் புகுந்து இவ்வகை சொன்னானென்பது.

விளக்கவுரை

2.20 பொழில்கண்டு மகிழ்தல்

பொழில்கண்டு மகிழ்தல் என்பது தலைமகளை நோக்கிச் செல்லாநின்ற தலைமகன் முன்னைஞான்று அவளைக்கண்ணுற்ற பொழிலைச் சென்றணைந்து, அப்பொழிலிடை அவளுறுப்புக்க ளைக் கண்டு, இப்பொழில் என்சிந்தனைக்கு அவள்தானேயெ னத் தோன்றாநின்றதென்று இன்புறாநிற்றல். அதற்கு செய்யுள்

மணங்கமழ்பொழிலின் வடிவுகண்
டணங்கெனநினைந் தயர்வுநீங்கியது.

நேயத்த தாய்நென்ன லென்னைப்
புணர்ந்துநெஞ் சம்நெகப்போய்
ஆயத்த தாயமிழ் தாயணங்
காயர னம்பலம்போல்
தேயத்த தாயென்றன் சிந்தைய
தாய்த்தெரி யிற்பெரிது
மாயத்த தாகி யிதோவந்து
நின்றதென் மன்னுயிரே. **#696**

இதன் பொருள்:நென்னல்நேயத்தது ஆய் என்னைப் புணர்ந்து நெருநல் உள்ளநெகிழ்ச்சியையுடைத்தாய் என்னைக்கூடி; நெஞ்சம் நெகப் போய் பின் நேயமில்லதுபோல என்னெஞ் சுடையும் வண்ண நீங்கிப்போய்; ஆயத்தது ஆய் ஆயத்தின் கண்ணதாய்; அமிழ்து ஆய் இன்பத்தைச் செய்தலின் அமிர்தமாய்; அணங்கு ஆய் துன்பத்தைச் செய்தலின் அணங்காய்; அரன் அம்பலம் போல் தேயத்தது ஆய் புலப்பாட்டான் அரனதம்பலம் போலும் ஒளியை யுடைத்தாய்; என்றன் சிந்தையது ஆய் புலப்படாது வந்து என் சிந்தைக்கண்ணதாய்; தெரியின் பெரிதும் மாயத்தது ஆகி வந்து நின்றது இதோ என் மன் உயிர் ஆராயிற் பெரிதும் மாயத்தை யுடைத்தாய் வந்து நின்றது இதுவோ எனது மன்னுயிர் எ - று. நேயமுடைமையும் நேயமின்மையும் இன்பஞ்செய்தலும் துன்பஞ் செய்தலும் புலப்படுதலும் புலப்படாமையும் ஒரு பொருட் கியையாமையின், பெரிதுமாயத்ததாகியென்றான். தேயம்: வட மொழிச்சிதைவு. அம்பலம்போலுந் தேசத்தின் கண்ணதா யென்றுரைப் பினுமமையும். ஓகாரம்: அசைநிலையெனினுமமையும். என்மாட் டருளுடைத்தாய் முற்காலத்து என்னைவந்துகூடி அருளில்லதுபோல என்னெஞ்சுடையும் வண்ணம்போய்த் தன் மெய்யடியார் குழாத்த தாய் நினைதோறும் அமிர்தம்போல இன்பஞ்செய்து கட்புலனாகாமை யிற் றுன்பஞ்செய்து அம்பலம் போலும் நல்ல தேசங்களின் கண்ணதாய் வந்து என்மனத்தகத்ததாய் இத்தன்மைத்தாகலிற் பெரிதும் மாயத்தை யுடைத்தாய் எனது நிலைபெறுமுயிர் வந்து தோன்றாநின்றதென வேறு மொருபொருள் விளங்கியவாறு கண்டு கொள்க. பொழிலின் வியன்பொதும்பர் பொழிலில் மரஞ்செறிந்தவிடம். மெய்ப்பாடும் பயனும்: அவை.

விளக்கவுரை

2.21 உயிரென வியத்தல்

உயிரென வியத்தல் என்பது பொழில்கண்டு மகிழ்ந்து அப்பொழிலிடைச்சென்று புக்கு, அவளைக்கண்டதுணையான் என்னுயிர் இவ்வாறு செய்தோநிற்பதென வியந்துகூறாநிற்றல். அதற்குச் செய்யுள் வெறியுறு பொழிலின் வியன்பொ தும்பரின் நெறியுறு குழலி நிலைமை கண்டது.

தாதிவர் போதுகொய் யார்தைய
லாரங்கை கூப்பநின்று
சோதி வரிப்பந் தடியார்
சுனைப்புன லாடல்செய்யார்
போதிவர் கற்பக நாடுபுல்
லென்னத்தம் பொன்னடிப்பாய்

யாதிவர் மாதவம் அம்பலத்
தான்மலை யெய்துதற்கே. **#697**

இதன் பொருள்:தாது இவர் போது கொய்யார் தாதுபரந்த பூக்களைக் கொய்கின்றிலர்; தையலார் அங்கை கூப்ப நின்று சோதி வரிப்பந்து அடியார் ஆயத்தாராகிய தையலார் அங்கைகளைக் கூப்பநின்று ஒளியையும் வரியையுமுடைய பந்தை அடிக்கின்றிலர்; சுனைப் புனல் ஆடல் செய்யார் சுனைப்புனலாடுதலைச் செய்கின்றிலர்; போது இவர் கற்பக நாடு புல்லென்னத்தம் பொன் அடிப்பாய் அம்பலத்தான்மலை எய்துதற்கு இவர் மாதவம் யாது அதனாற் போதுபரந்த கற்பகங்களையுடைய தேவருலகம் பொலி வழிய நிலந்தோயாத தமது பொன்போலுமடியை நிலத்தின்கட்பாவி அம்பலத்தானது கயிலையை யெய்துதற்கு இவர் செய்யக் கருதுகின்ற பெரியதவம் யாது! எ - று. தவஞ்செய்வார் புறத்தொழில்களை விட்டு அகத்தா னொன்றையுன்னி மலைக்கட்டங்குவரன்றே, இவளும் பூக்கொய்தல் முதலாகிய தொழில்களைவிட்டு மனத்தாற்றன் னை நினைந்து வரையிடத்து நிற்றலான் யாதிவர் மாதவமென்றான். மெய்ப்பாடும் பயனும்: அவை.

விளக்கவுரை

2.22 தளர்வகன்றுரைத்தல்

தளர்வகன்றுரைத்தல் என்பது உயிரென வியந்துசென்று, பூக்கொய்தன் முதலிய விளையாட்டையொழிந்து யாருமில் லொரு சிறைத் தனியேநின்று இவர்செய்யாநின்ற பெரியதவம் யாதோவென அவளைப் பெரும்பான்மைகூறித் தளர்வு நீங்கா நிற்றல். அதற்குச் செய்யுள்

பனிமதி நுதலியைப் பைம்பொ ழிலிடைத்
தனிநிலை கண்டு தளர்வகன் றுரைத்தது.

காவிநின் றேர்தரு கண்டர்வண்
தில்லைக்கண் ணார்கமலத்
தேவியென் றேயையஞ் சென்றதன்
றேயறி யச்சிறிது
மாவியன் றன்னமென் னோக்கிநின்
வாய்திற வாவிடினென்
ஆவியன் றேயமிழ் தேயணங்
கேயின் றழிகின்றதே. **#698**

இதன் பொருள்:மா இயன்றன்ன மெல் நோக்கி மானோக்கத் தான் இயன்றாற்போலும் மெல்லிய நோக்கையுடையாய்; காவி நின்று ஏர்தரு கண்டர் வண் தில்லை கண் ஆர் கமலத் தேவி என்றே ஐயம் சென்றது அன்றே நஞ்சாகிய நீலப்பூ நின்று அழகைக் கொடுக்கும் மிடற்றையுடையவரது வளவிய தில்லைக்கணுண்டாகிய கண்ணி ற்கு

ஆருந் தாமரைப்பூவின் வாழுந் தேவியோவென்று ஐயநிகழ்ந்தது; அறியச் சிறிது நின் வாய் திறவா விடின் தெளிந்தறியச் சிறிதாயினும் நின்வாய் திறவாதொழியின்; அமிழ்தே அமிழ்தமே; அணங்கே அணங்கே; இன்று அழிகின்றது என் ஆவி அன்றே இப்பொழுதழி கின்றது என்னுயிரன்றே, இதனை நீ கருதாதொழிகின்ற தென்னை! எ-று.

தேவியென்பது பெரும்பான்மையாகலின், தேவியென்றே யையஞ்சென்றதென ஐயத்துள் ஒருதலையே பற்றிக் கூறினான். அறியவென்னும் வினையெச்சமும் சிறிதென்னும் வினையெச்சமும் திறவாவிடி னென்னுமெதிர்மறையிற் றிறத்தலோடு முடிந்தன. அமி ழ்தே யணங்கேயென்றான், இன்பமுந் துன்பமும் ஒருங்கு நிகழ்தலின். மெய்ப்பாடு: அழுகை. பயன்: ஆற்றாமையுணர்த்துதல்.

விளக்கவுரை

2.23 மொழிபெறவருந்தல்

மொழிபெற வருந்தல் என்பது தளர்வுநீங்கிய பின்னர்ச் சார்தலுறாநின்றவன் ஒருசொற் பெறுமுறையாற் சென்றுசார வேண்டிப் பின்னும் அவளைப்பெரும்பான்மைகூறி ஒரு சொல் வேண்டி வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்

கூடற் கரிதென

வாடி உரைத்தது.

அகலிடந் தாவிய வானோ
னறிந்திறைஞ் சம்பலத்தின்
இகலிடந் தாவிடை யீசற்றொ
ழாரினின் னற்கிடமாய்
உகலிடந் தான்சென் றெனதுயிர்
நையா வகையொ துங்கப்
புகலிடந் தாபொழில் வாயெழில்
வாய்தரு பூங்கொடியே. **#699**

இதன் பொருள்:அகலிடம் தாவிய வானோன் அறிந்து இறைஞ்சு அம்பலத்தின் இகல் இடம் தா விடை ஈசன் தொழாரின் உலகத்தைத் தாவி யளந்த வானவன் வணங்கப்படுவதென்றறிந்து வணங்கும் அம்பலத்தின்கணுளனாகிய இகலையுடைய விடங்களிலே தாவும் விடையையுடைய ஈசனைத் தொழாதாரைப்போல; இன்னற்கு இடம் ஆய் உகல் இடம் தான் சென்று எனது உயிர் நையாவகை துன்பத்திற்கிடமாய் அழியுமளவைத் தானடைந்து எனதுயிர் நையாதவண்ணம்; பொழில் வாய் எழில் வாய்தரு பூங் கொடியே பொழிலிடத்துளவாகிய அழகுவாய்ந்த பூவை யுடையகொடியே;

ஒதுங்கப் புகலிடம் தா யானொதுங்குதற்குப் புகலிடந் தருவாயாக எ-று. உகலிடம் உகுதற்கிடம்; உகுதலையுடைய விடமெனினு மமையும். ஆயிடை தலைமகன் அவ்வாறு கூறியவிடத்து. தனி நின்று ஆற்றுவிப்பாரையின்றி நின்று. ஆற்றாது நாணினானாற்றாது. வேய் வேய்த்தன்மை. மெய்ப்பாடு: அச்சம். பயன்: ஆற்றாமை நீங்குதல்.

விளக்கவுரை

2.24 நாணிக்கண்புதைத்தல்

நாணிக்கண்புதைத்தல் என்பது தலைமகன் தன்முன்னின்று பெரும்பான்மை கூறக்கேட்ட தலைமகள் பெருநாணினளாதலின் அவன் முன்னிற்கலாகாது நாணி, ஒருகொடியினொதுங்கி, தன் கண்புதைத்து வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்

ஆயிடைத் தனிநின் றாற்றா தழிந்து
வேயுடைத் தோளியோர் மென்கொடி மறைந்தது.

தாழச்செய் தார்முடி தன்னடிக்
கீழ்வைத் தவரைவிண்ணோர்
சூழச்செய் தானம் பலங்கை
தொழாரினுள் ளந்துளங்கப்
போழச்செய் யாமல்வை வேற்கண்
புதைத்துப்பொன் னேயென்னைநீ
வாழச்செய் தாய்சுற்று முற்றும்
புதைநின்னை வாணுதலே. **#700**

இதன் பொருள்:தாழச்செய்தார் முடி தன் அடிக்கீழ் வைத்து தன் கட்டாழ்ந்தவர்களுடைய முடிகளைத் தன் திருவடிக்கீழ் வைத்து; அவரை விண்ணோர் சூழச் செய்தான் அம்பலம் கைதொழாரின் அவர்களை விண்ணோர் பரிவாரமாய்ச் சூழும் வண்ணஞ் செய்த வனது அம்பலத்தைக் கைதொழாதாரைப் போல; உள்ளம் துளங்க போழச்செய்யாமல் வை வேல் கண்புதைத்து நெஞ்சந் துளங்கப் போழாமற் கூரிய வேல்போலுங் கண்களைப் புதைத்து; பொன்னே பொன்னே; நீ என்னை வாழச் செய்தாய் நீ என்னை வாழும் வண்ணஞ் செய்தாய்; வாள் நுதலே வாணுதலையுடையாய்; நின்னைச் சுற்று முற்றும் புதை என்னுள்ளந் துளங்காமை வேண்டின் நின்னைச் சுற்று முழுதும் புதைப்பாயாக எ - று.

தாழச்செய்தாரென்ப தனை ஒருசொல்லாக்காது தாழும் வண்ணம் முற்றவஞ் செய்தாரென் றானும், தம்மைச்செய்தாரென் றானும் ஒருசொல் வருவித்தும், போழச்செய்யாமலென்புழியும் போழும் வண்ணமொரு தொழிலைச் செய்யாமலென ஒரு சொல் வருவித்தும், விரித்துரைப்பினுமமையும். வாழச்செய்தாயென்பது: குறிப்புநிலை.

புதைத்த வென்பதூஉம் பாடம். வேற்றருங்கண் வேல்போலுங்கண்.
மெய்ப்பாடு: அழுகை. பயன்: ஆற்றாமை யுணர்த்தல்.

விளக்கவுரை

2.25 கண்புதைக்கவருந்தல்

கண்புதைக்க வருந்தல் என்பது தலைமகள் நாணிக்கண் புதையாநிற்ப, இவள் கண் புதையாநின்றது தன்னுடைய கண்கள் என்னை வருத்தத்தைச் செய்யுமென் றாகாதேயென உட் கொண்டு, யான் வருந்தாதொழிய வேண்டுவையாயின் நின் மேனி முழுதும் புதைப்பாயாகவெனத் தலைமகன் தன்வருத்த மிகுதி கூறாநிற்றல்.

அதற்குச் செய்யுள்

வேற்றருங் கண்ணிணை மிளிர்வன வன்றுநின்
கூற்றரு மேனியே கூற்றெனக் கென்றது.

குருநாண் மலர்ப்பொழில் சூழ்தில்லைக்
கூத்தனை யேத்தலர்போல்
வருநாள் பிறவற்க வாழியரோ
மற்றென் கண்மணிபோன்
றொருநாள் பிரியா துயிரிற்
பழகி யுடன்வளர்ந்த
அருநா ணளிய வழல்சேர்
மெழுகொத் தழிகின்றதே. **#701**

இதன் பொருள்:என் கண்மணி போன்று - இன்றியமையாமை யால் என் கண்மணியை யொத்து; உயிரின் பழகி உயிர் போலச் சிறப்புடைத்தாய்ப் பழகி; ஒருநாள் பிரியாது ஒருபொழுதும் பிரியாது; உடன் வளர்ந்த என்னுடனே வளர்ந்த; அரு அளிய நாண் பெறுதற்கரிய அளித்தாகிய நாண்; அழல் சேர் மெழுகு ஒத்து அழிகின்றது அழலைச்சேர்ந்த மெழுகையொத்து என்கணில்லாது அழியாநின்றது, அதனான் குரு நாள் மலர்ப் பொழில் சூழ்தில்லைக் கூத்தனை ஏத்தலர் போல் வருநாள் பிறவற்க நிறத்தையுடையவாகிய நாண்மலர்களையுடைய பொழில்களாற் சூழப்பட்ட தில்லைக் கணுள்ளனாகிய கூத்தனையேத்தாதார் துன்புறும் பிறவியிற் பிறப் பாரன்றே அவர்களைப் போல மேல் வரக்கடவநாளில் யான் இவ்வாறு பிறவாதொழிக எ-று.

வருநாள் பிறவற்க வென்பதற்கு ஏத்தாதாரைப்போல வருந்த இவ்வாறு பயின்றாரைப் பிரியவரு நாள்கள் உளவாகா தொழிகவெனி னுமமையும். வாழியென்பது இத்தன்மைத்தாகிய இடுக்கணின்றி இந் நாண் வாழ்வதாக வென்றவாறு. அரோவும் மற்றும்: அசைநிலை. ஆங்ஙனங் கண்டு - அவ்வாற்றானாகக் கண்டு. மெய்ப்பாடு: அழுகை.

பயன்: ஆற்றாமை நீங்குதல்.

விளக்கவுரை

2.26 நாண்விடவருந்தல்

நாண்விட வருந்தல் என்பது தலைமகன் தனது ஆற்றாமை மிகுதிகூறக்கேட்டு, ஒருஞான்றுந் தன்னைவிட்டு நீங்காதநாண் அழலைச் சேர்ந்த மெழுகுபோலத் தன்னைவிட்டு நீங்காநிற்ப, தலைமகள் அதற்குப் பிரிவாற்றாது வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்

ஆங்ங னம்கண் டாற்றா ளாகி
நீங்கின நாணொடு நேரிழை நின்றது.

கோலத் தனிக்கொம்ப ரும்பர்புக்
கஃதே குறைப்பவர்தஞ்
சீலத் தனகொங்கை தேற்றகி
லேஞ்சிவன் தில்லையன்னாள்
நுலொத்த நேரிடை நொய்ம்மையெண்
ணாதுநுண் தேன்நசையாற்
சாலத் தகாதுகண் டீர்வண்டு
காள்கொண்டை சார்வதுவே. **#702**

இதன் பொருள்:கோலத் தனிக் கொம்பர் உம்பர் புக்கு அஃதே குறைப்பவர் தம் சீலத்தன கொங்கை அழகையுடைய தனியாகிய கொம்பின்மேலேறி அதனையே அடிக்கட் குறைப்பார் தமது தன்மையையுடையவாயிருந்தன கொங்கைகள்; தேற்றகிலேம் இவை இத்தன்மையவாயிருத்தலான் இது வாழுமென்றியாந் தெளிகின்றிலம், அதனால் வண்டுகாள் வண்டுகாள்; சிவன் தில்லை அன்னாள் நூல் ஒத்த நேர் இடை நொய்ம்மை எண்ணாது சிவனது தில்லையை யொப்பாளுடைய நுலை யொத்த நேரிய விடையினது நொய்ம்மையைக் கருதாது; நுண் தேன் நசையால் கொண்டை சார்வது சாலத்தகாது நுண்ணிய தேன்மேலுண்டாகிய நசையால் நீயிர்கொண்டையைச்சார்தல் மிகவுந் தகாது எ-று.

தேற்றகிலேமென்பது 'தேற்றாப் புன்சொ னோற்றிசின்' (புறம் - 202) என்பதுபோலத் தெளிதற்கண் வந்தது. முலைகளைத் தெளிவிக்க மாட்டேமென்பாருமுளர். பின்வருமேதத்தை நோக்கின் நீயிர் பயனாக நினைக்கின்ற இஃது இறப்பச்சிறிதென்னுங் கருத்தால், நுண்டேனென்றான். கண்டீரென்பது: முன்னிலையசைச்சொல். அளிகுலம்: வடமொழிமுடிபு. விலக்கியணைந்தது விலக்கா நின்ற ணைந்தது. மெய்ப்பாடு: உவகை. பயன்: சார்தல். அவ்வகை நின்றமை குறிப்பினானுணர்ந்த தலைமகன் இவ்வகை சொல்லிச் சார்ந்தா னென்பது.

விளக்கவுரை

2.27 மருங்கணைதல்

மருங்கணைதல் என்பது தலைமகள் நாணிழந்து வருந்தா நிற்பச் சென்று சார்தலாகாமையின், தலைமகன் தன்னாதரவினால் அவ்வருத்தந்தணிப்பான் போன்று முலையொடுமுனிந்து, ஒரு கையால் இறுமருங்குறாங்கியும், ஒருகையால் அளிகுலம் விலக்கி அளகந்தொட்டும், சென்று அணையாநிற்றல். அதற்குச் செய்யுள்
ஒளிதிகழ் வார்குழல் அளிகுலம் விலக்கிக்
கருங்களிற் றண்ணல் மருங்க ணைந்தது.

நீங்கரும் பொற்கழற் சிற்றம்
பலவர் நெடுவிசும்பும்
வாங்கிருந் தெண்கடல் வையமு
மெய்தினும் யான்மறவேன்
தீங்கரும் பும்மமிழ் துஞ்செழுந்
தேனும் பொதிந்துசெப்புங்
கோங்கரும் புந்தொலைத் தென்னையு
மாட்கொண்ட கொங்கைகளே. **#703**

இதன் பொருள்:நீங்கரும் பொன் கழல் சிற்றம்பலவர் நெடு விசும்பும் வாங்கு இரும் தெண் கடல் வையமும் எய்தினும் விடுதற் கரிய பொன்னானியன்ற கழலையுடைத்தாகிய திருவடியையுடைய சிற்றம்பலவரது நெடிதாகிய தேவருலகையும் வளைந்த பெரிய தெண்கடலாற் சூழப்பட்ட நிலத்தையும் ஒருங்கு பெற வரினும்; தீம் கரும்பும் அமிழ்தும் செழு தேனும் பொதிந்து இனிய கரும்பின் சாற்றையும் அமிர்தத்தையும் கொழுவிய தேனையும் உள்ளடக்கி; செப்பும் கோங்கு அரும்பும் தொலைத்து செம்பையுங் கோங் கரும்பையும் வென்று; என்னையும் ஆட்கொண்ட கொங்கைகள் என்னையும் அடிமைகொண்ட கொங்கைகளை; யான் மறவேன் யான் மறவேன் எ - று.

விசும்பும் நிலனும் ஒருங்குபெற வரினும் இக்கொங்கைகளை மறந்து அதன்கண் முயலுமாறில்லையெனத் தன்னின்றியமையாமை கூறியவாறாயிற்று; என்னையுமென்ற வும்மை எச்சவும்மை. தொழிற்படுத்தலொற்றுமையால் தன்வினை யாயிற்று. மெய்ப்பாடு: அது. பயன்: நயப் புணர்த்துதல்.

விளக்கவுரை

2.28 இன்றியமையாமைகூறல்

இன்றியமையாமை கூறல் என்பது புணர்ச்சி யிறுதிக்கண் விசும்பும்

நிலனும் ஒருங்குபெற வரினும் இக்கொங்கைகளை மறந்து அதன்கண் முயலேனெனப் பிரிவுதோன்றத் தலைமகன் தனது இன்றியமையாமை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

வென்றி வேலவன் மெல்லி யல்தனக்
கின்றி யமையாமை யெடுத்து ரைத்தது.

சூளா மணியும்பர்க் காயவன்
சூழ்பொழிற் றில்லையன்னாய்க்
காளா யொழிந்ததென் னாருயிர்
ஆரமிழ் தேயணங்கே
தோளா மணியே பிணையே
பலசொல்லி யென்னை துன்னும்
நாளார் மலர்ப்பொழில் வாயெழி
லாயம் நணுகுகவே. **#704**

இதன் பொருள்:உம்பர்க்குச் சூளாமணி ஆயவன் சூழ் பொழில் தில்லை அன்னாய்க்கு என் ஆர் உயிர் ஆளாயொழிந்தது வானவர்க்கு முடிமணியாயவனது சூழ்ந்த பொழிலையுடைய தில்லையையொக்கும் நினக்கு எனதாருயிர் அடியையாயிற்று; பல சொல்லி என்னை ஆதலாற் பலசொல்லிப் பெறுவதென்! ஆர் அமிழ்தே நிறைந்த வமிர்தே; அணங்கே அணங்கே; தோளா மணியே துளைக்கப்படாத மாணிக்கமே; பிணையே மான் பிணையே துன்னும் ஆர் நாள் மலர்ப் பொழில்வாய் எழில் ஆயம் நணுகுக; நீ பலகாலுஞ் சேர்ந்து விளையாடும் நிறைந்த நாண்மலரை யுடைய பொழிற்கண் விளையாடும் அழகிய ஆயத்தை இனிச் சேர்வாயாக எ - று.

அடுக்கிய விளிகளாற் காதற்சிறப்பு விளங்கும். பலசொல்லி யென்னையென்றது உயிர் நினக்கு ஆளாகியபின் வேறுபல சொல்லுதல் பயனில கூறலன்றே யென்றவாறு. சொல்லியென்னும் வினையெச்சத்திற்குப் பெறுவதென ஒருசொல் வருவித்துரைக்கப் பட்டது. பொழில்வாய் நணுகுகவென இயைப்பினு மமையும். மெய்ப் பாடு: பெருமிதம். பயன்: பிரியலுறுந் தலைமகன் வற்புறுத்தல்.

விளக்கவுரை

2.29 ஆயத்துய்த்தல்

ஆயத் துய்த்தல் என்பது இன்றியமையாமை கூறிப் பிரியலுறாநின்றவன்*,* இனிப் பலசொல்லி யென்னை*?* என்னுயிர் நினக்கடிமையாயிற்று*;* இனிச்சென்று நின்னாயத்திடைச் சேர்வாயாக வெனத் தன் பிரிவின்மை கூறித் தலைமகளை ஆயத்துச் செலுத்தாநிற்றல். அதற்குச் செய்யுள்

தேங்கமழ் சிலம்பன்

பாங்கிற் கூட்டியது.

பொய்யுடை யார்க்கரன் போலக
லும்மகன் றாற்புணரின்
மெய்யுடை யார்க்கவன் அம்பலம்
போல மிகநணுகும்
மையுடை வாட்கண் மணியுடைப்
பூண்முலை வாணுதல்வான்
பையுடை வாளர வத்தல்குல்
காக்கும்பைம் பூம்புனமே. **#705**

இதன் பொருள்:மை உடை வாள்கண் மணி உடைப் பூண்முலை வாள் நுதல் மையையுடைய வாள்போலுங் கண்ணையும் மணியையுடைய பூணணிந்த முலையையுமுடைய வாணுதல் ; வான் பைஉடை வாள் அரவத்து அல்குல் பெரிய படத்தை யுடைத்தாகிய ஒளியையுடைய அரவுபோலும் அல்குலையுடையாள்; காக்கும் பூம் பைம்புனம் அவள் காக்கும் பூக்களையுடைய பசிய புனம் அகன்றால்; தன்னை யானகன்றால் பொய் உடையார்க்கு அரன் போல் அகலும் பொய்யையுடையவர்க்கு அரன்றுன்பத்தைச் செய்து சேயனாமாறுபோல மிக்க துயரத்தைச்செய்து எனக்குச்சேய்த்தாம்; புணரின் அணைந்தால்; மெய் உடையார்க்கு அவன் அம்பலம் போல மிக நணுகும் மெய்யையுடையவர்க்கு அவனது அம்பலம் பேரின்பத்தைச் செய்து அணித்தாமாறுபோலக் கழியுவகைசெய்து எனக்கு மிகவும் அணித்தாம். ஆதலான் நீங்குதல் பெரிதும் அரிது எ-று.
வாணுதலையு மென்றெண்ணினும் அமையும். மெய்ப்பாடு: அழுகை. பயன்: ஆற்றாமை நீங்குதல்.

விளக்கவுரை

2.30 நின்றுவருந்தல் நின்றுவருந்தல் என்பது தலைமகளை ஆயத்துய்த்துத் தான் அவ்விடத்தே நின்று அப்புனத்தியல்பு கூறித் தலைமகன் பிரிவாற்றாது வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள் பாங்கிற் கூட்டிப் பதிவயிற் பெயர்வோன்
நீங்கற் கருமை நின்று நினைந்தது.

2.3.இடந்தலைப்பாடு

என்னறி வால்வந்த தன்றிது
முன்னும்இன் னும்முயன்றால்
மன்னெறி தந்த திருந்தன்று
தெய்வம் வருந்தல்நெஞ்சே
மின்னெறி செஞ்சடைக் கூத்தப்
பிரான்வியன் தில்லைமுந்நீர்
பொன்னெறி வார்துறை வாய்ச்சென்று
மின்றோய் பொழிலிடத்தே. **#706**

இதன் பொருள்:

பொழிலிடைச்சேறல் ஒன்றும் இடந்தலைப்பாட்டிற்கே உரியது. இதனையும் மேலைப் பாங்கற் கூட்டம் உணர்த்திய சூத்திரத்தில் 'ஈங்கிவைநிற்க இடந்தலைதனக்கும்' எனக் கூறியவாறே மின்னிடைமெலிதல் முதல் நின்றுவருந்துதல் ஈறாகக் கூறப்பட்ட கிளவிகளோடு கூட்டி இடந்தலைப் பாடாமென்று வகுத்துரைத்துக் கொள்க. அவை பாங்கற்கூட்டத்திற்கும், இடந் தலைப்பாட்டிற்கும் உரியவாமாறு என்னையெனின், பாங்கற்கூட்டம் நிகழாதாயின் இடந்தலைப்பாடு நிகழும், இடந்தலைப்பாடு நிகழாதாயின் பாங்கற்கூட்டம் நிகழும் ஆகலின்.

ஐயரிக் கண்ணியை யாடிடத் தேசென்
றெய்துவன் னெனநினைந் தேந்தல் சென்றது.

இதன் பொருள்:

இது முன்னும் என்னறிவால் வந்தது அன்று இப்புணர்ச்சி நெருநலும் என்னறிவோடு கூடிய முயற்சியான் வந்ததன்று; தெய்வந்தர வந்தது முயன்றால் மன் நெறி தந்தது தெய்வம் இன்னும் இருந்தன்று; இன்னுஞ் சிறிது முயன்றான் மன்னிய நெறியாகிய இவ்வொழுக்கத்தைத் தந்ததாகிய தெய்வம் இன்னும் இருந்தது; அது முடிக்கும், அதனான்; நெஞ்சே நெஞ்சமே; வருந்தல் வருந்தாதொழி; மின் எறி செஞ்சடைக் கூத்தப் பிரான் வியன் தில்லை முந்நீர் மின்னை வெல்கின்ற சிவந்த சடையை உடைய கூத்தப்பிரானது அகன்ற தில்லையைச் சூழ்ந்த கடற்றிரை; பொன் எறி வார் துறைவாய் மின்தோய் பொழிலிடத்துச் சென்றும் பொன்னைக் கொணர்ந்து எறிகின்ற நெடிய துறையிடத்து மின்னையுடைய முகிலைத்தோயும் பொழிற்கட் செல்லுதும் எ-று. இன்னும் இருந்தன்று எனக்கூட்டி முயன்றால் என்னும் வினையெச்சத்திற்கு முடிக்குமென ஒருசொல் வருவித்து உரைக்கப்பட்டது. மின்போலும் நெறித்த சடையெனினும் அமையும்.

கரையிற் பொன்னைத் திரையெறியும் துறையெனினும் அமையும். இருந்தின்று என்பது பாடமாயின், இருந்தின்றோவென ஓகாரம் வருவித்து இருந்ததில்லையோ என உரைக்க. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: இடந்தலைப்படுதல். (இடத்திலே எதிர்ப்படுதல்; தலைவன் முன்னாட் கூடின இடத்திலே வந்து தலைவியை எதிர்ப்படுதல்) இதற்கு மின்னிடைமெலிதன் முதலாக நின்று வருந்தல் ஈறாக வருங்கிளவி எல்லாம் எடுத்துரைத்துக்கொள்க. என்னை, இவ்விரண்டனுள்ளும் ஒன்றே நிகழுமாகலின்.

விளக்கவுரை

3.1 பொழிலிடைச் சேறல் பொழிலிடைச்சேறல் என்பது இயற்கைப்புணர்ச்சிய திறுதிக்கட் சென்றெய்துதற்கு அருமை நினைந்து வருந்தாநின்ற தலைமகன் இப்புணர்ச்சி நெருநலும் என்னறிவோடுகூடிய முயற்சியான் வந்ததன்று; தெய்வந்தர வந்தது. இன்னும் அத் தெய்வந் தானே தரும். யாம் அப்பொழிலிடைச் செல்வேமெனத் தன் நெஞ்சொடு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

2.4.மதியுடம்படுத்தல்

எளிதன் றினிக்கனி வாய்வல்லி
புல்ல லெழின்மதிக்கீற்
றொளிசென்ற செஞ்சடைக் கூத்தப்
பிரானையுன் னாரினென்கண்
தெளிசென்ற வேற்கண் வருவித்த
செல்லலெல் லாந்தெளிவித்
தளிசென்ற பூங்குழற் றோழிக்கு
வாழி யறிவிப்பனே. **#707**

இதன் பொருள்: கனி வாய் வல்லி புல்லல் இனி எளிது அன்றுதொண்டைக்கனிபோலும் வாயையுடைய வல்லியைப் புல்லுதல் இனி எளிதன்று, அதனால் எழில் மதிக் கீற்று ஒளி சென்ற செம்சடைக் கூத்தப்பிரானை உன்னாரின் எழிலையுடைய மதியாகிய கீற்றி னொளிபரந்த சிவந்தசடையையுடைய கூத்தப்பிரானை நினை யாதாரைப்போல வருந்த; என்கண் தெளி சென்ற வேல் கண் வருவித்த செல்லல் எல்லாம் என்னிடத்துத் தெளிதலையடைந்த வேல் போலுங் கண்கள் வருவித்த இன்னாமை முழுதையும்; அளி சென்ற பூ குழல் தோழிக்குத் தெளிவித்து அறிவிப்பன் வண்டடைந்த பூங்குழலை யுடைய தோழிக்குக் குறிப்பினாலே தெளிவியாநின்று சொல்லுவேன் எ - று. இரண்டாவது விகாரவகையாற்றொக்கது; வல்லியது புல்லலெனினுமமையும். வருந்தவென வொருசொல் வருவித்து

உரைக்கப்பட்டது. கண்ணோடாது பிறர்க்குத் துன்பஞ் செய்தலின், உன்னாதாரைக் கண்ணிற்கு உவமையாகவுரைப்பினு மமையும். செல்லலெல்லாந் தெளிவித்தென்பதற்குச் செல்லலெல்லா வற்றையு நீக்கிவென்பாருமுளர். வாழி: அசைநிலை. கரந்துறைகிளவி உள்ளக் குறிப்புக் கரந்துறைமொழி.மெய்ப்பாடு: அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன்: தோழிக்குணர்த்தி அவளான் முடிப்பலெனக் கருதி ஆற்றாமை நீங்குதல்.

விளக்கவுரை

4.1 பாங்கியிடைச்சேறல்

பாங்கியிடைச்சேறல் என்பது இரண்டனுள் ஒன்றாற் சென் றெய்திப் புணர்ந்து நீங்கிய தலைமகன் இனியிவளைச் சென்றெய்துதல் எளிதன்று; யாம் அவள் கண்ணாற் காட்டப்பட்ட காதற்றோழிக்கு நங்குறையுள்ளது சொல்வேமென்று அவளை நோக்கிச் செல்லாநிற்றல். அதற்குச் செய்யுள் மதியுடம்படுத்தல் - இதன் பொருள்:பாங்கியிடைச் சேறல், குறையுறத் துணிதல், வேழம்வினாதல், கலைமான்வினாதல், வழிவினாதல், பதிவினாதல், பெயர்வினாதல், மொழிபெறாதுகூறல், கருத்தறிவித் தல், இடைவினாதல் என விவை பத்தும் மதியுடம்படுத்தலாம் எ - று. அவற்றுள்

கரந்துறை கிளவியிற் காதற் றோழியை
இரந்துகுறை யுறுவலென் றேந்தல் சென்றது.

குவளைக் கருங்கட் கொடியே
ரிடையிக் கொடிகடைக்கண்
உவளைத் தனதுயி ரென்றது
தன்னோ டுவமையில்லா
தவளைத்தன் பால்வைத்த சிற்றம்
பலத்தா னருளிலர்போல்
துவளத் தலைவந்த இன்னலின்
னேயினிச் சொல்லுவனே. **#708**

இதன் பொருள்: குவளை கருங் கண் கொடி ஏர் இடை இக் கொடி கடைக்கண் குவளைப்பூப்போலுங் கரியகண்ணினையுங் கொடியை யொத்த இடையினையுமுடைய இக்கொடியினது கடைக்கண்; உவளைத் தனது உயிர் என்றது உவளைத் தன்னுடைய வுயிரென்று சொல்லிற்று, அதனால்; தன்னோடு உவமை இல்லாதவளைத் தன் பால் வைத்த சிற்றம்பலத்தான் அருள் இலர் போல் துவளத் தலைவந்த இன்னல் தனக்கொப்பில்லாதவளைத் தன்னொருகூற்றின்கண் வைத்த சிற்றம்பலத்தானது அருளையுடையரல்லாதாரைப் போல் யான் வருந்தும்வண்ணம் என்னிடத்து வந்த இன்னாமையை; இனி இன்னே

சொல்லுவன் இவட்கு இனி இப்பொழுதே சொல்லுவேன் எ - று. கடைக்கணுவளை யுயிரென்றது எனக்கிவ்விடர் செய்த கடைக்கண் இடர் நீந்தும் வாயிலுந் தானே கூறிற்றென்றவாறு. இன்னேயென்பது இவர்கூடிய இப்பொழுதே என்றவாறு. இனியென்றது இவளிவட் கின்றியமையாமை யறிந்தபின் னென்பது படநின்றது. ஒருங்குகண்டு ஒருகாலத்துக் கண்டு. மெய்ப்பாடு: அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன்: மதியுடம்படுத்தற் கொருப்படுதல்.

விளக்கவுரை

4.2 குறையுறத்துணிதல் குறையுறத் துணிதல் என்பது பாங்கியை நினைந்து செல்லா நின்றவன் தெய்வத்தினருளால் அவ்விருவரும் ஓரிடத்தெதிர் நிற்பக்கண்டு, இவள் இவட்குச் சிறந்தாள்; இனியென்குறை யுள்ளது சொல்லுவேனெனத் தன்குறைகூறத் துணியாநிற்றல். அதற்குச் செய்யுள்
ஓரிடத் தவரை யொருங்கு கண்டுதன்
பேரிடர் பெருந்தகை பேசத் துணிந்தது.

இருங்களி யாயின் றியானிறு
மாப்பஇன் பம்பணிவோர்
மருங்களி யாஅன லாடவல்
லோன்றில்லை யான்மலையீங்
கொருங்களி யார்ப்ப வுமிழ்மும்
மதத்திரு கோட்டொருநீள்
கருங்களி யார்மத யானையுண்
டோவரக் கண்டதுவே. **#709**

இதன் பொருள்: பணிவோர் மருங்கு இரும் களியாய் யான் இன்று இறுமாப்ப இன்பம் அளியா அனல் ஆட வல்லோன் அடியவரிடத்தே அவரோடு கூடிப் பெரிய களிப்பை யுடையேனாய் யான் இன்றிறு மாக்கும் வண்ணம் இன்பத்தை யெனக்களித்துத் தீயாடவல்லோன்; தில்லையான் தில்லையான்; மலை ஈங்கு அவனது மலையின் இவ்விடத்து; அளி ஒருங்கு ஆர்ப்ப அளி களொருங்கார்ப்ப; உமிழ் மும்மதத்து இரு கோட்டு நீள் கரும் களி ஆர் ஒரு மதயானை வரக் கண்டது உண்டோ உமிழப்படா நின்ற மூன்று மதத்தையும் இரண்டு கோட்டையுமுடைய நீண்ட கரிய களி யார்ந்த ஒருமதயானை வாராநிற்பக் கண்டதுண்டோ? உரைமின் எ-று.
மருங்கிறுமாப்பவெனக் கூடிற்று. அனலாடவென்பது அன லோடாடவென விரியும். ஆர்ப்ப வரவெனக் கூட்டுக. ஆர்ப்பவு மிழுமெனினுமமையும். நீட்சி - விலங்குக்குண்டாகிய நெடுமை. களி உள்ளச்செருக்கு. மதயானை - மதமிடையறாத யானை.

விளக்கவுரை

4.3 வேழம்வினாதல் வேழம் வினாதல் என்பது குறைகூறத் துணியாநின்றவன் என்குறை யின்னதென்று இவளுக்கு வெளிப்படக் கூறுவேனா யின் இவள் மறுக்கவுங்கூடுமென உட்கொண்டு, என்குறை இன்னதென்று இவடானேயுணரு மளவும் கரந்தமொழியாற் சில சொல்லிப்பின் குறையுறுவதே காரியம் என, வேட்டை கருதிச் சென்றானாக அவ்விருவருழைச்சென்று நின்று, தன்காதறோன்ற இவ்விடத்தொரு மதயானைவரக் கண்டீரோ வென வேழம் வினாவாநிற்றல். அதற்குச் செய்யுள்

ஏழைய ரிருவரு மிருந்த செவ்வியுள்
வேழம் வினாஅய் வெற்பன் சென்றது.

கருங்கண் ணனையறி யாமைநின்
றோன்றில்லைக் கார்ப்பொழில்வாய்
வருங்கண் ணனையவண் டாடும்
வளரிள வல்லியன்னீர்
இருங்கண் ணனைய கணைபொரு
புண்புண ரிப்புனத்தின்
மருங்கண் ணனையதுண் டோவந்த
தீங்கொரு வான்கலையே. **#710**

இதன் பொருள்: கரும் கண்ணனை அறியாமை நின்றோன் தில்லைக்கார்ப் பொழில் வாய் கரியமாலை அவனறியாமற் றன்னை யொளித்து நின்றவனது தில்லை வரைப்பி னுண்டாகிய கரிய பொழிலிடத்து; வரும் கள் நனைய வண்டு ஆடும் வளர் இளவல்லி அன்னீர் புறப்படாநின்ற கள்ளாற் றம்மேனி நனையும் வண்ணம் வண்டுகளாடும் வளராநின்ற இளைய வல்லியை யொப்பீர்; இரும் கண் அனைய கணை பொரு புண் புணர் ஒரு வான் கலை அனையது இப்புனத்தின் மருங்கண் ஈங்கு வந்தது உண்டோ நும்முடைய பெரிய கண்கள் போலுங் கணைபொருதலாலுண்டாகிய புண்ணைப் புணர்ந்த ஒரு வான் கலை அத்தன்மையது இப்புனத்தின் மருங்கு ஈங்கு வந்ததுண்டோ? எ - று.

கண்ணன் என்பது: கரியோனென்னும் பொருளதோர் பாகதச் சிதைவு. அஃது அப்பண்பு குறியாது ஈண்டுப் பெயராய் நின்றமையின், கருங்கண்ணனென்றார். சேற்றிற்பங்கயமென்றாற் போல. அறியாமை நின்றோனென்னுஞ் சொற்கள் ஒருசொன்னீர வாய் ஒளித் தோனென்னும் பொருள்பட்டு, இரண்டாவதற்கு முடிபாயின. ஐகாரம்: அசைநிலை யெனினு மமையும். வருங் கண்ணனைய வென்பதற்கு உண்டாகக்கடவ கள்ளையுடைய அரும்புகளையுடை மையான் வண்டு

காலம்பார்த்து ஆடுமாறு போல, நும் முள்ளத்து நெகிழ்ச்சி யுண்டாமளவும் நுமதுபக்கம் விடாது உழல்கின்றே னென்பது பயப்ப வருங்கண்ணனையையுடைய வென்றுரைப்பினுமமையும். மருங்கென்பது மருங்கண்ணென ஈறுதிரிந்து நின்றது. அணித்தாக வென்னும் பொருட்டாய், அணி அண்ணெனக் குறைந்து நின்றதெனினுமமையும். மருங்கண்ணனைய துண்டோ வென்பதற்கு மருங்கு அண்ணல் நையதென்று, புனத்தின் மருங்கு தலைமை நைதலையுடைய தெனினுமமையும்.

விளக்கவுரை

4.4 கலைமான்வினாதல் கலைமான் வினாதல் என்பது வேழம்வினாவி உட்புகுந்த பின்னர், தான் கண்ணாலிடர்ப்பட்டமை தோன்ற நின்று, நும்முடைய கண்கள் போலுங் கணைபொருதலா னுண்டாகிய புண்ணோடு இப்புனத்தின்கண் ஒருகலைமான் வரக் கண்டீரோ வென்று கலைமான் வினாவாநிற்றல். அதற்கு செய்யுள்
சிலைமா னண்ணல்
கலைமான் வினாயது.

சிலம்பணி கொண்டசெஞ் சீறடி
பங்கன்றன் சீரடியார்
குலம்பணி கொள்ள வெனைக்கொடுத்
தோன்கொண்டு தானணியுங்
கலம்பணி கொண்டிடம் அம்பலங்
கொண்டவன் கார்க்கயிலைச்
சிலம்பணி கொண்டநும் சீறூர்க்
குரைமின்கள் சென்னெறியே. **#711**

இதன் பொருள்: சிலம்பு அணி கொண்ட செம் சீறடி பங்கன் சிலம்புதானழகுபெற்ற செய்ய சிறிய அடியையுடையாளது கூற்றை யுடையான்; தன் சீர் அடியார் குலம் பணி கொள்ள எனைக் கொடுத்தோன் தன் மெய்யடியாரது கூட்டங் குற்றேவல் கொள்ள என்னைக்கொடுத்தவன்; தான் கொண்டு அணியும் கலம் பணி கொண்டு அம்பலம் இடம் கொண்டவன் தான் கொண்டணியும் அணிகலம் பாம்பாகக் கொண்டு அம்பலத்தை இடமாகக் கொண்டவன்; கார்க்கயிலைச் சிலம்பு அணி கொண்ட நும் சீறூர்க்குச் செல் நெறி உரைமின்கள் அவனது முகில்களையுடைய கயிலைக்கட் சிலம்பழகு பெற்ற நுமது சிறியவூர்க்குச் செல்லு நெறியை உரைமின் எ - று. கொண்டுகொடுத்தோனென இயைப்பாருமுளர். தனக்குத் தக்க தையலை இடத்து வைத்தானென்றுந் தன்னடியார்க்குத் தகாத என்னை அவர்க்குக் கொடுத்தானென்றும், அணிதற்குத் தகாத பாம்பை

அணிந்தானென்றும், தனக்குத் தகுமம்பலத்தை இடமாகக் கொண்டா னென்றும் மாறுபாட்டொழுக்கங் கூறியவாறாம். கருத்து வேறறிய வினாயதற்கு மறுமொழி பெறாது பின்னுமொன்றை வினவுதலான் இவன்கருத்து வேறென்று தோழியறிய. சின்னெறி யென்று பாட மாயின், சிறியநெறி யென்றுரைக்க. சின்னெறியென்பது அந்நிலத்துப் பண்பு.

விளக்கவுரை

4.5 வழிவினாதல் வழிவினாதல் என்பது கலைமான் வினாவாநின்றவன், இவன் கருத்து வேறென்று தோழியறிய, அதனோடு மாறுபடநின்று, அது கூறீராயின் நும்மூர்க்குச் செல்லுநெறி கூறுமினென்று வழிவினாவாநிற்றல். அதற்குச் செய்யுள்

கலைமான் வினாய கருத்து வேறறிய
மலைமா னண்ணல் வழிவி னாயது.

ஒருங்கட மூவெயி லொற்றைக்
கணைகொள்சிற் றம்பலவன்
கருங்கடம் மூன்றுகு நால்வாய்க்
கரியுரித் தோன்கயிலை
இருங்கடம் மூடும் பொழிலெழிற்
கொம்பரன் னீர்களின்னே
வருங்கடம் மூர்பகர்ந் தாற்பழி
யோவிங்கு வாழ்பவர்க்கே. **#712**

இதன் பொருள்: மூவெயில் ஒருங்கு அட ஒற்றைக் கணைகொள் சிற்றம்பலவன் மூவெயிலையும் ஒருங்கே அடவேண்டித் தனியம்பைக் கொண்ட சிற்றம்பலவன்; கரும் கடம் மூன்று உகு நால்வாய்க் கரி உரித்தோன் கரிய மதமூன்று மொழுகாநின்ற நான்றவாயையுடைய கரியையுரித்தவன்; கயிலை இரும் கடம் மூடும் பொழில் எழில் கொம்பர் அன்னீர்கள் இன்னே வருங்கள் அவனது கயிலைக்கட் பெரிய காட்டான் மூடப்படும் பொழிற்கணிற்கின்ற எழிலையுடைய கொம்பையொப்பீராகிய நீங்கள் இங்கேவாரும்; தம் ஊர் பகர்ந்தால் இங்கு வாழ்பவர்க்குப் பழியோ தமதூரை யுரைத்தால் இம்மலைவாழ்வார்க்குப் பழியாமோ? பழியாயின் உரைக்கற் பாலீரல்லீர் எ - று.

இரண்டு மதங் கடத்திற் பிறத்தலிற் பன்மைபற்றிக் கட மென்றார். கொம்பரன்னீர்களென்பது: முன்னிலைப் பெயர். இன்னே வருங்களென்பது எதிர்முகமாக்கியவாறு. வாருமென்பது குறுகி நின்றது

விளக்கவுரை

4.6 பதிவினாதல் பதி வினாதல் என்பது மாறுபடநின்று வழி வினாவவும் அதற்கு மறுமொழி கொடாதாரை எதிர்முகமாகநின்று, வழிகூறீரா யின் நும்பதி கூறுதல் பழியன்றே; அது கூறுவீராமினென்று அவர்பதி வினாவாநிற்றல். அதற்குச் செய்யுள்

பதியொடு பிறவினாய் மொழிபல மொழிந்து
மதியுடம் படுக்க மன்னன் வலிந்தது.

தாரென்ன வோங்குஞ் சடைமுடி
மேற்றனித் திங்கள்வைத்த
காரென்ன வாருங் கறைமிடற்
றம்பல வன்கயிலை
யூரென்ன வென்னவும் வாய்திற
வீரொழி வீர்பழியேற்
பேரென்ன வோவுரை யீர்விரை
யீர்ங்குழற் பேதையரே. **#713**

இதன் பொருள்: ஓங்கும் சடை முடிமேல் தார் என்னத் தனித் திங்கள் வைத்த உயர்ந்த சடையானியன்ற முடிமேல் தாராக ஒருகலையாகிய திங்களை வைத்த; கார் என்ன ஆரும் கறை மிடற்று அம்பலவன் கயிலை கொண்டலென்று சொல்லும் வண்ணம் நிறைந்த கறுப்பையுடைத்தாகிய மிடற்றையுடைய அம்பலவனது கயிலைக்கண்; ஊர் என்ன என்னவும் வாய்திறவீர் நும்முடைய ஊர்கள் பெயர் முதலாயினவற்றான் எத்தன்மைய வென்று சொல்லவும் வாய்திறக்கின்றிலீர்; பழியேல் ஒழிவீர் ஊர் கூறுதல் பழியாயின் அதனையொழிமின்; பேர் என்னவோ விரை ஈர்ங் குழல் பேதையரே உரையீர் நும்முடைய பெயர்கள் எத்தன்மை யவோ நறுநாற்றத்தையும் நெய்ப்பையுமுடையவாகிய குழலை யுடைய பேதையீர், உரைப்பீராமின் எ - று.

தனித்திங்கள் ஒப்பில்லாத திங்களெனினுமமையும். ஓகாரம்: வினா. தலைமகளுந் தோழியும் ஓரூராரல்லரென்று கருதினான் போல ஊரென்னவெனப் பன்மையாற் கூறினான். என்னை,

இரந்து குறையுறாது கிழவியுந் தோழியு
மொருங்குதலைப் பெய்த செவ்வி நோக்கிப்
பதியும் பெயரும் பிறவும் வினாஅய்ப்
போலப் பொருந்துபு கிளந்து
மதியுடம் படுதற்கு முரியனென்ப. #9;
-இறையனாரகப்பொருள், 6

என்பதிலக்கணமாதலின். பேதையரேயெனச் சிறுபான்மை ஏகாரம் பெற்றது. ஊருஞ் சொல்லாதாரைப் பெயர்கேட்கவே வேறு கருத்து டையனென்பது விளங்கும். வாய் திறவா தொழிவீ ரென்பதூஉம் பாடம்.

விளக்கவுரை

4.7 பெயர்வினாதல் பெயர் வினாதல் என்பது பதிவினாவவும் அதற்கொன்றுங் கூறாதாரை, நும்பதிகூறுதல் பழியாயின் அதனையொழிமின்; நும்பெயர் கூறுதல் பழியன்றே, இதனைக்கூறுவீராமினென்று அவரது பெயர் வினாவாநிற்றல்.
அதற்குச் செய்யுள்
பேரமைத் தோளியர்
பேர்வி னாயது.

இரத முடைய நடமாட்
டுடையவ ரெம்முடையர்
வரத முடைய வணிதில்லை
யன்னவ ரிப்புனத்தார்
விரத முடையர் விருந்தொடு
பேச்சின்மை மீட்டதன்றேற்
சரத முடையர் மணிவாய்
திறக்கிற் சலக்கென்பவே. **#714**

இதன் பொருள்: இரதம் உடைய நடம் ஆட்டு உடையவர் இனிமையையுடைய கூத்தாட்டையுடையவர்; எம் உடையர் எம்முடைய தலைவர்; வரதம் உடைய அணி தில்லை அன்னவர் இப் புனத்தார் விருந்தொடு பேச்சின்மை விரதம் உடையர் அவரது வரதமுடைய அழகிய தில்லையையொப்பாராகிய இப்புனத்துநின்ற இவர்கள் எதிர்கொள்ளத்தக்க விருந்தினரோடு பேசாமையை விரதமாகவுடையர்; அது அன்றேல் அதுவன்றாயின்; மீட்டு வாய்திறக்கின் சலக்கு என்ப மணி சரதம் உடையர் பின் வாய்திறக்கிற் சலக்கென விழுவன முத்தமணிகளை மெய்யாகவுடையர் எ - று.
இரதமென்றது நாட்டியச்சுவையையன்று, கட்கினிமையை. நடமென்றது நாட்டியத்தையன்று, கூத்தென்னும் பொதுமையை. மீட்டென்பது பிறிதுமொன்றுண் டென்பதுபட வினைமாற்றாய் நிற்பதோரிடைச்சொல். இவையாறற்கும் மெய்ப்பாடு: இனிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்: மதியுடம்படுத்தல்.

விளக்கவுரை

4.8 மொழிபெறாதுகூறல் மொழிபெறாது கூறல் என்பது பெயர்வினாவவும் வாய் திறவாமையின், இப்புனத்தார் எதிர்கொள்ளத்தக்க விருந்தின ரோடு வாய்திறவாமையை விரதமாகவுடையராதல், அதுவன்றி வாய்திறக்கின் மணிசிந்து மென்பதனைச் சரதமாக வுடையராதல், இவ் விரண்டனு ளொன்று

தப்பாதென்று கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
தேமொ ழியவர் வாய்மொழி பெறாது
மட்டவிழ் தாரோன் கட்டுரைத்தது.

வின்னிற வாணுதல் வேனிறக்
கண்மெல் லியலைமல்லல்
தன்னிற மொன்றி லிருத்திநின்
றோன்றன தம்பலம்போல்
மின்னிற நுண்ணிடைப் பேரெழில்
வெண்ணகைப் பைந்தொடியீர்
பொன்னிற வல்குலுக் காமோ
மணிநிறப் பூந்தழையே. #715

இதன் பொருள்: வில் நிற வாள் நுதல் வேல் நிற கண் மெல்லி யலை- வில்லினியல்பையுடைய வாணுதலையும் வேலினியல்பை யுடைய கண்களையுமுடைய மெல்லியலை; மல்லல் தன் நிறம் ஒன்றில் இருத்தி நின்றோன் தனது அம்பலம்போல் அழகை யுடைய தன்றிரு மேனியொன்றின்கண் இருத்திநின்றவனது அம்பலத்தை யொக்கும்; மின் நிற நுண் இடைப் பேர் எழில் வெள்நகைப் பைந்தொடியீர் மின்னினியல்பையுடைய நுண்ணிய இடையையும் பெரிய வெழிலையும் வெள்ளிய முறுவலையுமுடைய பைந்தொடியீர்; மணி நிற பூந் தழை பொன் நிற அல்குலுக்கு ஆமோ மணியினது நிறத்தையுடைய இப்பூந்தழை நும் பொன்னிற அல்குலுக்குத் தகுமோ? தகுமாயின் அணிவீராமின் எ - று.

பொன்னிறத்திற்கு மணிநிறம் பொருத்தமுடைத்தென்பது கருத்து. பொன்னிறவல்குலென்று அல்குலின்றன்மை கூறியவதனான், முன்னமே புணர்ச்சி நிகழ்ந்தமையு முண்டென்பது கூறியவாறாயிற்று. ஆமோவென்ற ஓகாரம் கொடுப்பாரதுண் மகிழ்ச்சியையும் கொள்வாரது தலைமையையும் விளக்கி நின்றது. மெய்ப்பாடும் பயனும் அவை.

விளக்கவுரை

4.9 கருத்தறிவித்தல் கருத்தறிவித்தல் என்பது நீயிர் வாய்திறவாமைக்குக் காரணமுடையீர்*;* அது கிடக்க, இத்தழை நும் மல்குற்குத் தகுமாயின் அணிவீராமினெனத் தழைகாட்டிநின்று தன்கருத்தை அறிவியா நிற்றல். அதற்குச் செய்யுள்
உரைத்த துரையாது
கருத்தறி வித்தது.

கலைக்கீ ழகலல்குற் பாரம
தாரங்கண் ணார்ந்திலங்கு
முலைக்கீழ்ச் சிறிதின்றி நிற்றன்முற்

றாதன் றிலங்கையர்கோன்
மலைக்கீழ் விழச்செற்ற சிற்றம்
பலவர்வண் பூங்கயிலைச்
சிலைக்கீழ்க் கணையன்ன கண்ணீர்
எதுநுங்கள் சிற்றிடையே. **#716**

இதன் பொருள்: கலைக் கீழ் அகல் அல்குல் பாரமது மேகலைக்குக் கீழாகிய அகன்ற வல்குலாகிய பாரமது; ஆரம் கண் ஆர்ந்து இலங்கு முலைக் கீழ்ச் சிறிது இன்றி நிற்றல் முற்றாது முத்து வடம் கண்ணிற்கு ஆர்ந்திலங்காநின்ற முலையின்கீழ் இடைசிறி தின்றித்தானே நிற்றல் முடிவுபெறாது; அன்று இலங்கையர்கோன் மலைக்கீழ் விழச் செற்ற சிற்றம்பலவர் - இவ்வரையையெடுத்த அன்று இலங்கையர்கோன் இவ்வரைக்கீழ் வீழும்வண்ணஞ் செற்ற சிற்றம் பலவரது; வண் பூ கயிலைச் சிலைக் கீழ்க்கணை அன்ன கண்ணீர் வளவிய பொலிவையுடைய கயிலையினிற்கின்ற சிலையின் கீழ் வைத்த கணைபோலும் புருவத்தின் கீழுளவாகிய கண்ணையுடையீர்; நுங்கள் சிற்றிடை எது நும்முடைய சிற்றிடை யாது? கட்புலனா கின்றதில்லை எ - று. பாரமது நிற்றலெனவியையும். பாரம் அதுவென எழுவாயும் பயனிலையுமாக்கி, முலைக்கீழ்ச் சிறிதாயினும் ஒன்றின்றி இவ்வுரு நிற்றல் முற்றாதென்றுரைப்பாருமுளர். அதுவென்றும் எதுவென்றும் சாதிபற்றி ஒருமையாற்கூறினான். மெய்ப்பாடு அது. பயன்: விசேடவகையான் மதியுடம்படுத்தல்.

மேலைப் பாட்டாறனானும் வம்பமாக்கள் வினாவும் பெற்றியே கதுமெனத் தனது குறைதோன்றாவகை வினாவினான், இப் பாட்டிரண்டினாலும் இவன்குறை நங்கண்ணதேயென்பது தோழிக்குப் புலப்பட, இத்தழைநல்ல கொள்ளீரென்றும், நும்மிடை யாதென்றும் வினாவினானென்பது.

விளக்கவுரை

4.10 இடைவினாதல்

இடைவினாதல் என்பது தழைகாட்டித் தன்கருத்தறிவித்து அது வழியாகநின்று நும்மல்குலும் முலையும் அதிபாரமாயிரா நின்றன; இவை இவ்வாறு நிற்றற்குக்காரணம் யாதோவென்று அவரிடை வினாவாநிற்றல். அதற்குச் செய்யுள்
வழிபதி பிறவினாய்
மொழிபல மொழிந்தது.

2.5.இருவருமுள்வழி அவன்வரவுணர்தல்

பல்லில னாகப் பகலைவென்

றோன்தில்லை பாடலர்போல்
எல்லிலன் நாகத்தொ டேனம்
வினாவிவன் யாவன்கொலாம்
வில்லிலன் நாகத் தழைகையில்
வேட்டைகொண் டாட்டமெய்யோர்
சொல்லில னாகற்ற வாகட
வானிச் சுனைப்புனமே. **#717**

இதன் பொருள்: பல் இலன் ஆகப் பகலை வென்றோன் தில்லை பாடலர்போல் எல் இலன் பல்லிலனாம்வண்ணம் பகலோனை வென்றவனது தில்லையைப் பாடாதாரைப் போல ஒளியையுடைய னல்லன்; வினா நாகத்தொடு ஏனம்ஆயினும் வினாவப்படுகின்றன யானையும் ஏனமுமாயிருந்தன; வில் இலன்வில்லையுடைய னல்லன்; கையில் நாகத் தழை கையின் நாக மரத்தின்றழை களாயினும்; கொண்டாட்டம் வேட்டை கொண்டாடப் படுகின்றது; வேட்டை மெய் ஓர் சொல் இலன்; கண்டவாற்றான் மெய்யா யிருப்பதொரு சொல்லையு முடையனல்லன் கற்ற வா ஆ; இவன் பொய்யுரைப்பக் கற்றவாறு என்! பொய்யுரைத்து வறிது போவானுமல்லன் இச் சுனை புனம் கடவான்; ஈண்டொரு குறையுடையான்போல இச்சுனைப் புனத்தைக் கடவான் இவன் யாவன் கொலாம்; இவன்யாவனோ? எ - று.

வினா வென்பது: ஆகுபெயர். ஆ: வியப்பின்கட்குறிப்பு. எல்லியன் ஆகத்தென்று பாடமோதி, ஆகத்தொளியில னெனவுரைப் பாருமுளர். வினாய் என்பது பாடமாயின், வாராநின்ற வென ஒருசொல்வருவித்து முடிக்க. வினாய்க் கடவானென்று கூட்டுவாரு முளர். தையல் புனையப்படுதல். மெய்ப்பாடு: மருட்கை. பயன் : உசாவி ஐயம் தீர்தல்.

விளக்கவுரை

5.1 ஐயுறுதல் ஐயுறுதல் என்பது தலைமகன் தழைகொண்டுநின்று கரந்த மொழியாற் றன்கருத்தறிவிக்க, மேனியொளியிலனாய் இப்புனத் தினின்றும் போகாது யானையோடு ஏனம் (மான்) வினாவி இவ்வாறு பொய்கூறாநின்ற இவன் யாவனோ எனத் தோழி அவனை ஐயுற்றுக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

இருவருமள்வழி அவன்வரவுணர்தல் - இதன் பொருள் *:* ஐயுறுதல், அறிவுநாடல் எனவிவையிரண்டும் இருவருமுள்வழி அவன் வரவுணர்தலாம் எ - று. அவற்றுள்

அடற்கதிர் வேலோன் றொடர்ச்சி நோக்கித்
தையற் பாங்கி ஐய முற்றது.

ஆழமன் னோவுடைத் திவ்வையர்
வார்த்தை யனங்கன்நைந்து

வீழமுன் னோக்கிய வம்பலத்
தான்வெற்பி னிப்புனத்தே
வேழமுன் னாய்க்கலை யாய்ப்பிற
வாய்ப்பின்னும் மென்றழையாய்
மாழைமென் னோக்கி யிடையாய்க்
கழிந்தது வந்துவந்தே. **#718**

இதன் பொருள்: முன் அநங்கன் நைந்து வீழ நோக்கிய அம்பலத்தான் வெற்பின் இப் புனத்து முற்காலத்து அனங்கன் அழிந்து பொடியாய்வீழ நோக்கிய அம்பலத்தானது வெற்பின் இப் புனத்தின்கண்ணே கூறுவது; முன் வேழமாய் முன் வேழமாய்; கலையாய் பின் கலையாய்; பிறவாய் பின் வேறுசிலவாய்; பின்னும் மெல் தழையாய் பின்னும் மெல்லிய தழையாய்; வந்து வந்து வந்து வந்து; மாழை மெல் நோக்கி இடையாய்க் கழிந்தது முடிவிற் பேதைமையையுடைய மெல்லிய நோக்கத்தையுடையாளது இடையாய்விட்டது; இவ்வையர் வார்த்தை ஆழம் உடைத்து அத னான் இவ்வையர்வார்த்தை இருந்தவாற்றான் ஆழமுடைத்து எ - று.

மன்னும் ஓவும்: அசைநிலை. இப்புனத்தேயென்றது இவளிருந்தபுனத்தே யென்றவாறு. மெல்லிய நோக்கத்தையுடையாள் இடைபோலப் பொய்யாய்விட்ட தென்பாருமுளர். பின்னுமென்றது முன்னை வினாவே ஐயந்தாராநிற்பப் பின்னுமொன்று கூறினா னென்பதுபட நின்றது. தன்கண்வந்து முடிதலின் வந்து வந்தென்றாள். சொற்பதம் சொல்லளவு. அறிவு நாடியது - அறிவானாடி யது. மெய்ப்பாடு: மருட்கையைச் சார்ந்த பெருமிதம். பயன்: ஐயந் தீர்தல்.

விளக்கவுரை

5.2 அறிவுநாடல் அறிவு நாடல் என்பது இவன் யாவனோவென் றையுறா நின்ற தோழி பேராராய்ச்சியளாதலின், அவன் கூறியவழியே நாடாதுவந்து தங்களிடைக்கே முடிதலின், இவ்வையர்வார்த்தை இருந்தவாற்றான் ஆழமுடைத்தாயிருந்ததென்று அவனினை வறியா நிற்றல். அதற்குச் செய்யுள்

வெற்பன் வினாய சொற்பத நோக்கி
நெறிகுழற் பாங்கி யறிவு நாடியது.

2.6.முன்னுறவுணர்தல்

நிருத்தம் பயின்றவன் சிற்றம்
பலத்துநெற் றித்தனிக்கண்
ஒருத்தன் பயிலுங் கயிலை
மலையி னுயர்குடுமித்
திருத்தம் பயிலுஞ் சுனைகுடைந்
தாடிச் சிலம்பெதிர்கூய்
வருத்தம் பயின்றுகொல் லோவல்லி
மெல்லியல் வாடியதே. **#719**

இதன் பொருள்:

சிற்றம்பலத்து நிருத்தம் பயின்றவன் சிற்றம் பலத்தின்கண் நிருத்தத்தை யிடைவிடாதே யாடியவன்; நெற்றித் தனிக்கண் ஒருத்தன் நெற்றியிலுண்டாகிய தனிக்கண்ணை யுடைய ஒப்பிலாதான்; பயிலும் கயிலை மலையின் உயர் குடுமி அவன் பயிலுங் கயிலையாகிய மலையினது உயர்ந்தவுச்சியில்; திருத்தம் பயிலும் சுனை குடைந்து ஆடி புண்ணிய நீர் இடையறாது நிற்குஞ் சுனையைக் குடைந்தாடி; சிலம்பு எதிர் கூய் சிலம்பிற் கெதிரழைத்து; வருத்தம் பயின்று கொல்லோ இவ்வாறு வருத்தத்தைச் செய்யும் விளையாட்டைப் பயின்றோ பிறிதொன்றி னானோ; வல்லி மெல்லியல் வாடியது வல்லிபோலும் மெல்லிய வியல்பினை யுடையாள் வாடியது எ - று. வருத்தம் : ஆகுபெயர். மெய்ப்பாடு: மருட்கை. பயன்: தலைமகட்குற்ற வாட்டமுணர்தல். 62

விளக்கவுரை

6.1 வாட்டம் வினாதல்

வாட்டம் வினாதல் என்பது தலைமகன் மதியுடம்படுத்து வருந்தாநிற்பக் கண்டு, எம்பெருமான் என்பொருட்டான் இவ் வாறு இடர்ப்படா நின்றானெனத் தலைமகள் தன்னுள்ளே கவன்று வருந்தாநிற்க, அதுகண்டு, சுனையாடிச் சிலம்பெதிர ழைத்தோ பிறிதொன்றினானோ நீ வாடியதென்னோ வெனத் தோழி தலை மகளது வாட்டம் வினாவாநிற்றல். அதற்குச் செய்யுள்

6.1 மின்னிடை மடந்தை தன்னியல் நோக்கி
வீங்கு மென்முலைப் பாங்கி பகர்ந்தது.

2.7.குறையுறவுணர்தல்

மடுக்கோ கடலின் விடுதிமி
லன்றி மறிதிரைமீன்

படுக்கோ பணிலம் பலகுளிக்
கோபரன் தில்லைமுன்றிற்
கொடுக்கோ வளைமற்று நும்மையர்க்
காயகுற் றேவல்செய்கோ
தொடுக்கோ பணியீ ரணியீர்
மலர்நும் சுரிகுழற்கே. **#720**

இதன் பொருள்:
குறையுற்றுநிற்றல், அவன் குறிப்பறிதல், அவள் குறிப்பறிதல், இருவர்நினைவுமொருவழியுணர் தல் எனவிவை நான்கும் குறையுறவுணர்தலாம் எ - று . அவற்றுள்-

7.1 கறையுற்ற வேலவன்
குறை யுற்றது.

இதன் பொருள்: விடு திமில் கடலின் மடுக்கோ விடப்படுந் திமிலைக் கடலின்கட் செலுத்துவேனோ; அன்றி மறி திரை மீன் படுக்கோ அன்றிக் கீழ்மேலாந் திரையையுடைய கிளர்ந்த கடலிற்புக்கு மீனைப்படுப்பேனோ; பல பணிலம் குளிக்கோ ஒரு குளிப்பின்கட் பல பணிலங்களையு மெடுப்பேனோ; பரன் தில்லை முன்றில் வளை கொடுக்கோ பரனது தில்லைமுற்றத்திற் சென்று எல்லாருங்காணச் சங்கவளைகளை விற்பேனோ; மற்று நும் ஐயர்க்கு ஆய குற்றேவல் செய்கோ அன்றி நும்மையன்மார்க்குப் பொருந்தின குற்றேவல்களைச் செய்வேனோ; அணி ஈர் மலர் நும் சுரிகுழற்குத் தொடுக்கோ - அணியப்படுந் தேனாலீரிய மலரை நுஞ்சுரிகுழற்குத் தொடுப்பேனோ; பணியீர் - நீயிர்வேண்டியது சொல்லுமின் எ - று.
மற்று: வினைமாற்று. இவன் உயர்ந்த தலைமகனாதலின் அவர் தன்னை வேறுபடவுணராமைக் கூறியவாறு. முன்னிரந்து குறையுறுதற் கிடங்காட்டிக் குறையுற வுணர்தற்கு இயைபபுபடக் குறையுறுமாற்றை ஈண்டுக் கூறினான். இது திணைமயக்கம். என்னை, 'உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே' (தொல். பொருள். அகத்திணை -13) எ-ம், 'புனவர் தட்டை புடைப்பி னயல, திறங்குகதி ரலமரு கழனியும், பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங் கெழுமே' (புறம் - 49) எ-ம் சொன்னாராகலின். மெய்ப்பாடு: இனிவரல். பயன்: குறையுறுதல். 63

விளக்கவுரை

7.1 குறையுற்றுநிற்றல் குறையுற்று நிற்றல் என்பது தலைமகளது வாட்டங்கண்டு ஐயுறாநின்ற தோழியிடைச்சென்று, யான் உங்களுக்கெல்லாத் தொழிலுக்கும் வல்லேன்*;* நீயிர் வேண்டுவதொன்று சொல்லுமின்*!* யான் அது செய்யக்குறையில்லையென இழிந்தசொல்லால் தலைமகன் தன்னினைவு தோன்ற ஐயுறக்

கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

அளியமன் னும்மொன் றுடைத்தண்ண
லெண்ணரன் தில்லையன்னாள்
கிளியைமன் னுங்கடி யச்செல்ல
நிற்பிற் கிளரளகத்
தளியமர்ந் தேறின் வறிதே
யிருப்பிற் பளிங்கடுத்த
ஒளியமர்ந் தாங்கொன்று போன்றொன்று
தோன்று மொளிமுகத்தே. **#721**

இதன் பொருள்:

அரன் தில்லை அன்னாள் மன்னும் கிளியை கடியச்செல்ல நிற்பின் அரனது தில்லையையொப்பாள் புனத்து மன்னுங்கிளியைக் கடிவதற்குச் சிறிதகல நிற்பினும்; கிளர் அளகத்து அளி அமர்ந்து ஏறின் இவளுடைய விளங்காநின்ற அளகத்தின்கண் வண்டுகள் மேவி யேறினும்; வறிதே இருப்பின் இவள் வாளா விருப்பினும்; ஒளி முகத்து பளிங்கு அடுத்த ஒளி அமர்ந்தாங்கு இவனதொளியையுடைய முகத்தின்கண்ணே பளிங்கு தன்னிறத்தை விட்டுத் தன்னையடுத்த நிறத்தை மேவினாற்போல; ஒன்று போன்று ஒன்று தோன்றும் முன் வேறொன்று போன்றிருந்து பின்னிவள் குறிப்பாகிய வேறொன்று தோன்றாநின்றது, அதனால் அளிய அண்ணல் எண் மன்னும் ஒன்று உடைத்து அளிய அண்ணலது குறிப்பு மன்னுமொன்றுடைத்து; அஃதிவள் கண்ணதே போலும் எ-று. கிளியைமன்னுமென்புழி, மன்னும்: அசைநிலையெனினு மமையும். ஒன்றுபோன்றொன்று தோன்றுமென்றது கிளியைக் கடியச் சிறிது புடைபெயரின் நெட்டிடை கழிந்தாற்போல ஆற்றானாகலானும், வண்டுமூசப் பொறாளென்று வருந்தி வண்டையோச்சுவான் போலச் சேறலானும், வாளாவிருப்பிற் கண்டின்புறுதலானும், இவள் கண்ணிகழ்ச்சி இவன்முகத்தே புலப்படாநின்றது என்றவாறு. ஏறி வறிதேயிருப்பினென்பது பாடமாயின், அளியேறி அளகத்தின்கட் சிறிதிருப்பினுமெனவுரைக்க. ஒளிர்முகமே யென்பதூஉம் பாடம். 64

விளக்கவுரை

7.2 அவன் குறிப்பறிதல் அவன் குறிப்பறிதல் என்பது குறையுறாநின்றவன் முகத்தே தலைமகளது செயல் புலப்படக்கண்டு, இவ்வண்ணல் குறிப்பு இவளிடத்ததெனத் தோழி தலைமகனது நினைவு துணிந்துணரா நிற்றல். அதற்குச் செய்யுள்

7.2 பொற்றொடித் தோளிதன் சிற்றிடைப் பாங்கி
வெறிப்பூஞ் சிலம்பன் குறிப்ப றிந்தது.

பிழைகொண் டொருவிக் கெடாதன்பு

செய்யிற் பிறவியென்னும்
முழைகொண் டொருவன்செல் லாமைநின்
றம்பலத் தாடுமுன்னோன்
உழைகொண் டொருங்கிரு நோக்கம்
பயின்றஎம் மொண்ணுதல்மாந்
தழைகொண் டொருவனென் னாமுன்ன
முள்ளந் தழைத்திடுமே. **#722**

இதன் பொருள்:பிழைகொண்டு ஒருவிக் கெடாது ஒருவன் அன்பு செய்யின் பிழைத்தலைப் பொருந்தித் தன்கட் செல்லாது நீங்கி இவ்வாறு கெடாதே ஒருவன் அன்புசெய்யுமாயின்; பிறவி என்னும் முழை கொண்டு செல்லாமை அவன் பிறவியென்னாநின்ற பாழி யையடைந்து செல்லாத வண்ணம்; அம்பலத்து நின்று ஆடும் முன்னோன் அம்பலத்தின்கணின்றாடும் எல்லாப்பொருட்கும் முன்னாயவனது; உழைகொண்டு உழைமானை மருணோக்கத் தாலொத்து; இரு நோக்கம் ஒருங்கு பயின்ற எம் ஒண்ணுதல் வெள்ளை நோக்கமும் அவ்வுழைக்கில்லாத கள்ளநோக்கமுமாகிய இருநோக்கத்தையும் ஒருங்கே செய்யக்கற்ற எம்முடைய ஒண்ணுதல்; மாந் தழைகொண்டு ஒருவன் என்னா முன்னம் மாந்தழையைக் கொண்டொருவனென்று சொல்லுவதன் முன்; உள்ளம் தழைத்திடும் உள்ளந் தழையாநின்றாள். அதனால் இவள் குறிப்பு இவன் கண்ணதேபோலும் எ - று. அடைந்தார் பிழைப்பின், தலையாயினார் பிழையையுட் கொண்டமைதலும், இடையாயினார் அவரைத் துறத்தலும், கடையாயினார் அவரைக்கெடுத்தலும் உலகத்து உண்மையின், அம்மூவகையுஞ் செய்யாதெனினுமமையும். பிறிது உரைப்பாரு முளர். ஒருவியென்னும் வினையெச்சம் கெடாதென்னு மெதிர்மறை வினை யெச்சத்திற் கெடுதலோடு முடிந்தது. 65

விளக்கவுரை

7.3 அவள் குறிப்பறிதல் அவள் குறிப்பறிதல் என்பது தலைமகனது நினைவறிந்த தோழி இவளிடத்து இவனினைவேயன்றி இவனிடத்து இவள் நினைவுமுண்டோவெனத் தலைமகளை நோக்க, அவண்முகத் தேயும் அவன் செயல் புலப்படக்கண்டு, இவ்வொண்ணுதல் குறிப்பு மொன்றுடைத்தென அவணினைவுந் துணிந்துணரா நிற்றல். அதற்குச் செய்யுள்

7.3. ஆங்கவள் குறிப்புப்
பாங்கி பகர்ந்தது.

மெய்யே யிவற்கில்லை வேட்டையின்
மேன்மன மீட்டிவளும்

பொய்யே புனத்தினை காப்ப
திறைபுலி யூரனையாள்
மையேர் குவளைக்கண் வண்டினம்
வாழுஞ்செந் தாமரைவாய்
எய்யே மெனினுங் குடைந்தின்பத்
தேனுண் டெழிறருமே. **#723**

இதன் பொருள்: இறை புலியூர் அனையாள் மை ஏர் குவளைக் கண் வண்டு இனம் இறைவனது புலியூரையொப்பாளுடைய மையழகையுடைய குவளைபோலுங் கண்ணாகிய வண்டினம்; வாழும் செந்தாமரை வாய் தான் வாழ்தற்குத் தகும் இவன் முகமாகிய செந்தாமரை மலர்க்கண்; எய்யேம் எனினும் யாமறியேமாயினும்; குடைந்து இன்பத் தேன் உண்டு குடைந்து இன்பமாகிய தேனை யுண்டு; எழில் தரும் எழில்பெறாநின்றது. அதனால் இவற்கு மெய்யே வேட்டையின் மேல் மனம் இல்லை இவற்கு மெய்யாகவே வேட்டையின் மேல் உள்ளமில்லை இவளும் புனத்தினை காப்பது பொய்யே இவளும் புனத்தினையைக் காப்பது பொய்யே எ - று.

மீட்டென்பதற்கு மீட்ட தன்றே (தி.8 கோவை பா.57) லென்புழி உரைத்ததுரைக்க. ஏர்குவளை யென்னும் மியல்பு புறனடையாற் கொள்க. வண்டின மென்றாள், நோக்கத்தின் பன்மை கருதி. எய்யே மெனினு மென்பதற்கு ஒருவரை யொருவரறியே மென்றிருப்பினு மெனினுமமையும். எழிறருதல் எழிலைப் புலப் படுத்துதல். இன்புறு தோழி - இருவர் காதலையுங் கண்டின்புறுதோழி. ஐய நீங்கித் தெளிதலான் இன்புறுமெனினுமமையும். அன்றியும் இவளுடைய நலத்திற்கேற்ற நலத்தையுடைய தலைமகனைக் கண்டின்புறுந்தோழி. என்னை, களவொழுக்கத்தில் எழினலமுடையா னொரு வனைக்கண்டு இன்புறக் கடவளோ வெனின், எழினலமே யன்று, பின் அறத்தொடு நிலைநின்று கூட்டுகை அகத்தமிழின திலக்கண மாதலால் தன்குரவர் வினவத் தானறத்தொடு நிற்குமிடத்துக் குரவர் தாமேசென்று மகட்கொடுக்குங் குடிப்பிறப்பினால் உயர்ச்சியை யுடைனாதலாலும் இன்புற்றாள். இவை மூன்றற்கும் மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: துணிந்துணர்தல். இவைமூன்றும் குறையுற வுணர்தல். என்னை,

இருவரு முள்வழி யவன்வர வுணர்தன்
முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தலென்
றம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி
- இறையனார் அகப்பொருள்,7

என்பவாகலின். ; 66

விளக்கவுரை

7.4 இருவர் நினைவு மொருவழியுணர்தல்
இருவர் நினைவு மொருவழி யுணர்தல் என்பது இருவர் நினைவுங்கண்டு இன்புறாநின்ற தோழி இவ்விருவரும் இவ்விடத்து வந்த காரியம் இவன் முகமாகிய தாமரைக்கண் இவள்கண்ணாகிய வண்டு இன்பத்தேனையுண்டு எழில்பெற வந்த இத்துணையல்லது பிறிதில்லையென அவ்விருவரது நினைவுந் துணிந்துணராநிற்றல்.
அதற்குச் செய்யுள்
7.4 அன்புறுநோக் காங்கறிந்
தின்புறுதோழி யெண்ணியது.

2.8.நாணநாட்டம்

மைவார் கருங்கண்ணி செங்கரங்
கூப்பு மறந்துமற்றப்
பொய்வா னவரிற் புகாதுதன்
பொற்கழற் கேயடியேன்
உய்வான் புகவொளிர் தில்லைநின்
றோன்சடை மேலதொத்துச்
செவ்வா னடைந்த பசுங்கதிர்
வெள்ளைச் சிறுபிறைக்கே. **#724**

இதன் பொருள்:
மறந்தும் பொய் அவ் வானவரில் புகாது - மறந்தும் பொய்ம்மையையுடைய அவ்வானவரிடத்துப் புகாதே; தன் பொன் கழற்கே அடியேன் உய்வான் புக தன்னுடைய பொன்னா னியன்ற கழலையுடைய திருவடிகளிலே அடியேன் உய்ய வேண்டிப் புக; ஒளிர் தில்லை நின்றோன் சடைமேலது ஒத்து விளங்குந் தில்லைக்கட் கட்புலனாய் நின்றவனுடைய சடைக்கண்ணதாகிய பிறையையொத்து; செவ்வான் அடைந்த பசுங்கதிர் வெள்ளைச் சிறு பிறைக்கு செக்கர்வானை யடைந்த செவ்விக் கதிரையுடைய வெள்ளையாகிய சிறிய பிறைக்கு; மை வார் கருங்கண்
ணி மையையுடைய நெடிய கரிய கண்ணினையுடையாய்; செங்கரம் கூப்பு - நினது செய்ய கைகளைக் கூப்புவாயாக எ - று. மறந்து மென்பது ஈண்டு அறியாதுமென்னும் பொருட்டாய் நின்றது. மற்று: அசைநிலை. மற்றையென்பது பாட மாயின், அல்லாத பொய்வான வரென்றுரைக்க. இனமல்ல ராயினும் இனமாக உலகத்தாராற் கூறப்படுதலின் அவ்வாறு கூறினார். 'மூவரென்றே யெம் பிரானொடு மெண்ணி' (தி.8 திருச்சதகம் பா.4) என்பதூஉம், அக்கருத்தே பற்றிவந்தது. பிறர்கூறும் பெருமை அவர்க்கின்மையிற் பொய்வானவரென்றார். எனக்குப் பொறியுணர்

வல்ல தின்மையிற் கண் கவருந் திருமேனிகாட்டி என்னை வசித்தானென்னுங் கருத்தான், உய்வான் புகத்தில்லை நின்றோ னென்றார். சடை: செக்கர்வானத்திற் குவமை. 67

விளக்கவுரை

8.1 பிறைதொழுகென்றல்

பிறைதொழு கென்றல் என்றது பிறையைக்காட்டித் தான்றொழுதுநின்று, நீயும் இதனைத் தொழுவாயாகவெனத் தோழி தலைமகளது புணர்ச்சி நினை வறியாநிற்றல். அதற்குச் செய்யுள்

8.1. பிறைதொழு கென்று பேதை மாதரை
நறுநுதற் பாங்கி நாண நாட்டியது.

அக்கின்ற வாமணி சேர்கண்டன்
அம்பல வன்மலயத்
திக்குன்ற வாணர் கொழுந்திச்
செழுந்தண் புனமுடையாள்
அக்குன்ற வாறமர்ந் தாடச்சென்
றாளங்க மவ்வவையே
ஒக்கின்ற வாரணங் கேயிணங்
காகுமுனக்கவளே. **#725**

இதன் பொருள்:

அக்கு தவா மணி சேர் கண்டன் அக்காகிய நல்ல மணிபொருந்திய மிடற்றையுடையான்; அம்பலவன் மலயத்து இக் குன்றவாணர் கொழுந்து செழும் இத்தண்புனம் உடையாள் அவனது பொதியின் மலயத்தின் கணுளராகிய இக்குன்ற வாணருடைய மகளாகிய வளவிய இத்தண்புனங் காவனுடையாள்; அக்குன்ற ஆறு அமர்ந்து ஆடச் சென்றாள் அக்குன்றத்தின்கணுண் டாகிய ஆற்றைமேவி ஆடப் போயினாள் ; அங்கம் அவ்வவையே ஒக்கின்ற ஆறு நின்னு றுப்புக்கள் அவளுறுப்புக்களாகிய அவற்றை யேயொக்கின்றபடி; அணங்கே என்னணங்கே; உனக்கு அவள் இணங்கு ஆகும் நினக்கு அவளிணங்காகும்; அதனால் அவளைக் கண்டு போவாயாக எ - று. இன்: அல்வழிச் சாரியை. மலயத்திக் குன்றமென்று இயைப் பாருமுளர். 68

விளக்கவுரை

8.2 வேறுபடுத்துக் கூறல் வேறுபடுத்துக் கூறல் என்பது பிறைதொழாது தலைசாய்த்து நாணி நிலங்கிளையாநிற்பக் கண்டு, பின்னும் இவள் வழியே யொழுகி இதனையறிவோமென உட்கொண்டு, நீ போய்ச் சுனையாடிவா வென்ன, அவளும் அதற்கிசைந்துபோய் அவனோடு

தலைப்பெய்துவர, அக்குறியறிந்து அவளை வரையணங்காகப் புனைந்து வேறுபடுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

8.2. வேய்வளைத் தோளியை வேறு பாடுகண்
டாய்வளைத் தோழி யணங்ங் கென்றது.

செந்நிற மேனிவெண் ணீறணி
வோன்தில்லை யம்பலம்போல்
அந்நிற மேனிநின் கொங்கையி
லங்கழி குங்குமமும்
மைந்நிற வார்குழல் மாலையுந்
தாதும் வளாய்மதஞ்சேர்
இந்நிற மும்பெறின் யானுங்
குடைவ னிருஞ்சுனையே. **#726**

இதன் பொருள்:

செந் நிற மேனி வெள் நீறு அணிவோன் தில்லை அம்பலம்போல் செய்ய நிறத்தையுடைய மேனிக்கண் வெள்ளிய நீற்றை அணிவோனது தில்லை யம்பலத்தையொக்கும்; அம் நிறமேனி நின் கொங்கையில் அங்கு அழி குங்குமமும் அழகிய நிறத்தையுடைத் தாகிய மேனியையுடைய நின்னுடைய கொங்கைகளில் அவ்விடத் தழிந்த குங்குமத்தையும்; மைநிற வார்குழல் மாலையும் - மையைப் போலு நிறத்தையுடைய நெடிய குழலின் மாலையையும்; தாதும் அளகத்தப்பிய தாதையும்; வளாய் மதம் சேர் இந் நிறமும் பெறின் மேனிமுழுதையுஞ் சூழ்ந்து மதத்தைச் சேர்ந்த இந் நிறத்தையும் பெறுவேனாயின்; இருஞ் சுனை யானும் குடைவன் நீ குடைந்த பெரிய சுனையை யானுங்குடைவேன் எ -று.

அம்பலம்போன்மேனியெனவியையும். அங்கழிகுங்கும மென்றது முயக்கத்தான்அழியும் அவ்விடத்தழிந்த குங்குமம் என்றவாறு. மைந்நிறவார்குழற்கண் மாலையுந் தாதும் வளாவ இதனையும் இதனையும் பெறினென எச்சந்திரித்துரைப்பினு மமையும். வளாவுதல் - புணர்ச்சிக் காலத்தில் மாலையின் முறிந்த மலரும் அளகத்தப்பிய தாதுஞ் சிதறிக் குங்குமத்தினழுந்தி வாங்குதற் கருமையாக விரவுதல். மதமென்றது காமக்களிப்பாலுண்டாகிய கதிர்ப்பை. 69

விளக்கவுரை

8.3 சுனையாடல்கூறிநகைத்தல்

சுனையாடல் கூறி நகைத்தல் என்பது வேறுபடுத்துக்கூற நாணல்கண்டு, சுனையாடினால் இவ்வாறு அழிந்தழியாத குங்குமமும் அளகத்தப்பிய தாதும் இந்நிறமுந்தருமாயின் யானுஞ் சுனையாடிக் காண்பேனெனத் தோழி தலைமகளோடு நகையாடாநிற்றல். அதற்குச் செய்யுள்

8.3. மாண நாட்டிய வார்குழற் பேதையை
நாண நாட்டி நகை செய்தது.

பருங்கண் கவர்கொலை வேழப்
படையோன் படப்படர்தீத்
தருங்கண் ணுதற்றில்லை யம்பலத்
தோன்தட மால்வரைவாய்க்
கருங்கண் சிவப்பக் கனிவாய்
விளர்ப்பக்கண் ணாரளிபின்
வருங்கண் மலைமலர் சூட்டவற்
றோமற்றவ் வான்சுனையே. **#727**

இதன் பொருள்:

பருங் கண் கவர் கொலை வேழப் படையோன் பட பரிய கண்ணையும் விரும்பப்படுங் கொலையையுமுடைய கருப்புச் சிலையாகிய படையையுடையவன் மாள; படர் தீத் தரும் கண் நுதல் தில்லை அம்பலத்தோன் தட மால் வரை வாய் செல்லுந் தீயைத்தருங் கண்ணையுடைத்தாகிய நுதலையுடைய தில்லையம் பலத்தானது பெரிய மால்வரையிடத்து; அவ் வான் சுனை நீயாடிய அப்பெரிய சுனை; கருங்கண் சிவப்ப கனிவாய் விளர்ப்ப கரியகண் சிவப்பத் தொண்டைக் கனிபோலும் வாய் விளர்ப்ப; அளி பின்வரும் கண் ஆர் கள் மலை மலர் சூட்டவற்றோ அளிகள் பின்றொடர்ந்து வருங் கண்ணிற்கு ஆருங் கள்ளையுடைய மலைமலரைச் சூட்ட வற்றோ? சொல்வாயாக எ - று. பருங்கண்ணென மெலிந்துநின்றது. தடமும் மாலும் பெருமை யாகலின் மிகப்பெரியவென்பது விளங்கும். தடம் தாழ்வரை யெனினுமமையும். வருங்கண் வரைமலரென்பது பாடமாயின், அளி தொடரு மிடத்தையுடைய வரைமலரென்க. இடமென்றது பூவினேக தேசத்தை. இன்னும் வரைமலரென்பது ஒருபூவை முழுதுஞ்சூட்டினா னாயின் தலைவி அதனையறிந்து பேணவேண்டி வாங்குதலைக் கூடும். ஆகையால் இவளிஃதறியாமற் றோழியறிவது பயனாக ஒருபூவின் முறித்ததொருசிறிய விதழைச் சூட்டினான்; ஆகையான் வரைந்தமலரென்றாளாம். மற்று: அசைநிலை. இவை நான்கும் நாணநாட்டம். மெய்ப்பாடு: நகை. பயன்: கரவுநாடி யுணர்தல். இவை முன்னுற வுணர்தலின் விகற்பம். இவைநான்கும் பெருந்திணைப்பாற்படும். என்னை அகத்தமிழ்ச் சிதைவாகலான், என்னை, 'கைக்கிளை பெருந்திணை யகப்புற மாகும்'. இவற்றுள் கைக்கிளையென்பது ஒருதலைக்காமம். பெருந் திணை யென்பது பொருந்தாக் காமம். என்னை,

ஒப்பில் கூட்டமு மூத்தோர் முயக்கமுஞ்

செப்பிய வகத்தமிழ்ச் சிதைவும் பெருந்திணை என்பவாகலின். நாணநாடலாகாமை: இவள் பெருநாணினளாத லான், தான் மறைந்து செய்த காரியத்தைப் பிறரறியின் இறந்துபடும்; ஆதலான், நாணநாட்டமாகாது. நடுங்கநாட்டமு மாகாது, இருவர்க்கும் உயிரொன்றாகலான் இறந்துபடுமாதலின். ஆதலால், அகத்தமிழிற்கு இவை வழுவாயின. இனி இதற்கு வழுவமைதி 'நன்னிலைநாணம்' என்பதனானறிக. 70

விளக்கவுரை

8.4 புணர்ச்சியுரைத்தல்

புணர்ச்சி யுரைத்தல் என்பது சுனையாடல் கூறி நகையாடா நின்ற தோழி, அதுகிடக்க நீயாடிய அப்பெரிய சுனைதான் கண் சிவப்ப வாய்விளர்ப்ப அளிதொடரும் வரைமலரைச் சூட்டவற்றோ சொல்வாயாகவெனப் புணர்ச்சி உரையாநிற்றல். அதற்குச் செய்யுள்

8.4. மணக்குறி நோக்கிப் புணர்ச்சி யுரைத்தது.

காகத் திருகண்ணிற் கொன்றே
மணிகலந் தாங்கிருவர்
ஆகத்து ளோருயிர் கண்டனம்
யாமின்றி யாவையுமாம்
ஏகத் தொருவ னிரும்பொழி
லம்பல வன்மலையில்
தோகைக்குந் தோன்றற்கு மொன்றாய்
வருமின்பத் துன்பங்களே. **#728**

இதன் பொருள்:

யாவையும் ஆம் ஏகத்து ஒருவன் எல்லாப் பொருள்களுமாய் விரியும் ஒன்றையுடைய வொருவன்; இரும் பொழில் அம்பலவன் பெரிய பொழில்களாற் சூழப்பட்ட அம்பலத்தையுடையான்; மலையில் தோகைக்கும் தோன்றற்கும் இன்பத் துன்பங்கள் ஒன்றாய் வரும் அவனது மலையில் இத் தோகைக்கும் இத்தோன்றற்கும் இன்பத் துன்பங்கள் பொதுவாய் வாராநின்றன; அதனால் - காகத்து இரு கண்ணிற்கு மணி ஒன்றே கலந்தாங்கு இருவர் ஆகத்துள் ஓருயிர் யாம் இன்று கண்டனம் - காகத்தினிரண்டு கண்ணிற்கும் மணியொன்றே கலந்தாற்போல இருவர் யாக்கையுள் ஓருயிரை யாமின்று கண்டேம் எ - று.

யாவையுமாமேகம் - பராசத்தி. அம்பலவன் மலையில் இன்று யாங்கண்டன மென்று கூட்டி, வேறோரிடத்து வேறொரு காலத்து வேறொருவர் இது கண்டறிவாரில்லையென்பது படவுரைப்பினு

மமையும். கலந்தாரிருவரென்பது பாடமாயின், 'காகத்திருகண்ணிற் கொன்றே மணி' யென்பதனை எடுத்துக்காட்டாக வுரைக்க. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: மதியுடம்படுதல். ; 71

விளக்கவுரை

8.5 மதியுடம்படுதல்

மதியுடம் படுதல் என்பது பலபடியும் நாணநாடிக் கூட்ட முண்மையுணர்ந் தோழி இம்மலையிடத்து இவ்விருவர்க்கும் இன்பத் துன்பங்கள் பொதுவாய் வாராநின்றன; அதனால் இவ்விருவர்க்கும் உயிரொன்றேயென வியந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

8.5. அயில்வேற் கண்ணியொ டாடவன்றனக் குயிரொன்றென மயிலியற் றோழி மதியுடம் பட்டது.

2.9.நடுங்கநாட்டம்

ஆவா விருவ ரறியா
அடிதில்லை யம்பலத்து
மூவா யிரவர் வணங்கநின்
றோனையுன் னாரின்முன்னித்
தீவா யுழுவை கிழித்ததந்
தோசிறி தேபிழைப்பித்
தாவா மணிவேல் பணிகொண்ட
வாறின்றொ ராண்டகையே. **#729**

இதன் பொருள்:

இருவர் அறியா அடி மூவாயிரவர் வணங்கத் தில்லை அம்பலத்து நின்றோனை உன்னாரின் அயனும் அரியு மாகிய இருவரறியாத அடியை மூவாயிரவரந்தணர் வணங்கத் தில்லையம்பலத்து எளிவந்து நின்றவனை நினையாதாரைப்போல வருந்த; முன்னித் தீ வாய் உழுவை கிழித்தது எதிர்ப்பட்டுத் தன் கொடியவாயை உழுவை அங்காந்தது, அங்காப்ப; சிறிதே பிழைப் பித்து இன்று ஒர் ஆண்டகை மணிவேல் பணி கொண்ட ஆறு அதனைச் சிறிதே தப்புவித்து இன்றோராண்டகை மணியையுடைய வேலைப் பணிகொண்டவாறென் எ - று.

அயனும் அரியுந் தில்லையம்பலத்திற்சென்று வணங்கு மாறறிந் திலரென்னுங் கருத்தினராகலின், ஆவாவென்பது அருளின்கட் குறிப்பு. இரக்கத்தின்கட்குறிப்பாய்த் தீவாயுழுவை கிழித்த தென்பதனை நோக்கி நின்றதெனினும் அமையும். வருந்தஎன ஒருசொல் வருவித்துரைக்கப்பட்டது. கொடிய வுள்ளத்தராகலின் உன்னாதாரைப் புலிக்குவமையாக வுரைப்பினு மமையும். தீவாயை யுடைய வுழுவை அவனைக் கிழித்ததெனத் தெளிவுபற்றி இறந்த காலத்தாற்

கூறப்பட்டதெனினு மமையும். அந்தோவென்பது: இரக்கத்தின்கட்குறிப்பு. இறுதிக்கண் ஆவா வென்பது: வியப்பின்கட் குறிப்பு. இதனுள் தலைமகளை நடுங்க நாடியதெவ்வாறெனின், தன்கொடிய வாயைப் புலி அங்காந்தது, உழுவையினது தீவாயை வேறொன்று கிழித்தது. உழுவையினது தீவாய் பிறிதொன்றனைக் கிழித்தது என இம்மூன்றுபொருளும் படுகையான், இது நடுங்க நாட்டமாயிற்று. என்னை, தலைமகள் இங்ஙனம் நடுங்கியாராயும் வண்ணம் தோழி நாடுகையான். தீவாயுழுவை கிழித்ததென்ற இம்மூன்று பொருளும் வினா. இங்ஙனந் தோழியுரைப்பத் தலைமகள் நாடி நடுங்காநிற்கக்கண்டு, ஓராண்டகை வேலைப் பணிகொண்டவா றென்னென நடுக்கந் தீர்த்ததாயிற்று. இது கரவுநாடுதல். அஃதாவது வெளிப்படச் சொல்லுஞ் சொல்லன்றிப் பிறிதொன்றன் மேல்வைத்துச் சொல்லுதல். இதுவும் பெருந்திணைப்பாற்படும். மெய்ப்பாடு: நகை. பயன்: நடுங்கநாடிக் கரவுநாடியுணர்தல்.

நிருத்தம்பயின்றவன் (62) என்பது தொட்டு மெய்யேயிவற் கில்லை (66) என்பதன்காறும் வர ஐந்துபாட்டினும் முன்னுறவு உணர்தலையும் ஐயுறவாக்கி, இருவருமுள்வழி யவன்வரவுணர் வினைத் துணிந்துணர்வாக்கினார். மைவார் (67) என்பது தொட்டு இதன் காறும்வர இவையாறினும் முன்னுறவுணர்தல் குறையுற வுணர்தல் இருவருமுள்வழியவன்வரவுணர்தலென்னும் மூன்றனை யுந் துணிந்துணர்வாக்கினார். ஈண்டிவ்விகற்பங் கண்டுகொள்க. 72

விளக்கவுரை

9.1 நுடங்கிடைப் பாங்கி
நடுங்க நாடியது.

2.10.மடற்றிறம்

பொருளா வெனைப்புகுந் தாண்டு
புரந்தரன் மாலயன்பால்
இருளா யிருக்கு மொளிநின்ற
சிற்றம் பலமெனலாஞ்
சுருளார் கருங்குழல் வெண்ணகைச்
செவ்வாய்த் துடியிடையீர்
அருளா தொழியி னொழியா
தழியுமென் னாருயிரே. **#730**

இதன் பொருள்:

புகுந்து என்னைப் பொருளா ஆண்டு தானேவந்து புகுந்து என்னைப் பொருளாக மதித்தாண்டு; புரந்தரன் மால் அயன்பால் இருளாய்

இருக்கும் ஒளி நின்றசிற்றம்பலம் எனல் ஆம் இந்திரன் மால் அயனென்னும் அவர்களிடத்து இருளா யிருக்கின்ற ஒளி தங்கிய சிற்றம்பலமென்று சொல்லத்தகும்; சுருள் ஆர் கருங் குழல் வெள் நகைச் செவ்வாய்த் துடி இடையீர் சுருளார்ந்த கரிய குழலினையும் வெள்ளிய நகையினையுஞ் செய்ய வாயினையு முடைய துடியிடையீர்; அருளாதொழியின் என் ஆருயிர் ஒழியாது அழியும் நீயிர் அருளாதொழியின் எனதாருயிர் தப்பாமலழியும்; அதனான் அருளத்தகும் எ - று.

தொகையின்மையிற் பாலென்பதனை எல்லாவற்றோடுங் கூட்டுக. சிற்றம்பலம் துடியிடையார்க்குவமை. மடற்றிறங் கூறுகின்றானாகலின், அதற்கியைவுபட ஈண்டுங் குறையுறுதல் கூறினான். சொல்லாற்றாது - சொல்லுதற்கும் ஆற்றாது. மெய்ப் பாடு: அழுகை, பயன்: ஆற்றாமையுணர்த்துதல். 73

விளக்கவுரை

10.1 ஆற்றாதுரைத்தல்

ஆற்றாதுரைத்தல் என்பது தலைமகண்மேன் மடற்றிறங் கூறுகின்றானாகலின் அதற்கியைவுபட அவ்விருவருழைச் சென்று நின்று, நீயிர் அருளாமையின் என்னுயிர் அழியாநின்றது*;* இதனை அறிமினெனத் தலைமகன் தனது ஆற்றாமை மிகுதி கூறாநிற்றல்.

அதற்குச் செய்யுள்

10.1. மல்லற்றிரள் வரைத்தோளவன்
சொல்லாற்றாது சொல்லியது.

காய்சின வேலன்ன மின்னியல்
கண்ணின் வலைகலந்து
வீசின போதுள்ள மீனிழந்
தார்வியன் தென்புலியூர்
ஈசன சாந்தும் எருக்கு
மணிந்தோர் கிழிபிடித்துப்
பாய்சின மாவென ஏறுவர்
சீறூர்ப் பனைமடலே. **#731**

இதன் பொருள்:

காய் சினவேல் அன்ன மின் இயல் கண்வலை காய்சினத்தையுடைய வேல்போலும் ஒளியியலுங் கண்ணகிய வலையை; கலந்து வீசினபோது உள்ளம் மீன் இழந்தார் மகளிர் கலந்து வீசினபோது அவ்வலைப்படுதலான் உள்ளமாகிய மீனையிழந்த வர்கள்; வியன் தென்புலியூர் ஈசன சாந்தும் எருக்கும் அணிந்து பெரிய தென்புலியூர்க்கணுளனாகிய ஈசனுடைய நீற்றையும் எருக்கம்பூவையும்

அணிந்து; ஓர் கிழி பிடித்து - ஒரு கிழியைக் கையிற்பிடித்து; பாய் சின மா எனப் பனை மடல் சீறூர் ஏறுவர் பாய வல்ல சினத்தையுடைய மாவெனப் பனைமடலைச் சீறூர்க்கணேறுவர், தம்முள்ளம் பெறுதற்கு வேறுபாய மில்லாதவிடத்து எ - று.

மின்னியல்வேலென்று கூட்டினு மமையும். இன்: அல்வழிச் சாரியை, கண்ணென்வலையென்பதூஉம் பாடம். மகளிரென ஒரு சொல் வருவியாது கருவி கருத்தாவாக உரைப்பினுமமையும். உள்ளமிழந்தவர் உள்ளம்பெறுமளவும் தம்வய மின்றி மடலின் வயத்தராய் நிற்றலால் கருவி கருத்தாவாகக் கொள்க. சாந்தும் எருக்கு மென இரண்டாகலின் ஈசனவெனப் பன்மையுருபு கொடுத்தார். பாய்சினமென்புழிச் சினம் உள்ளமிகுதி. உய்த்துரைத்தது குறிப் பாலுரைத்தது. 74

விளக்கவுரை

10.2 உலகின்மேல் வைத்துரைத்தல்

உலகின்மேல் வைத்துரைத்தல் என்பது ஆற்றாமைகூறி அது வழியாக நின்று, ஆடவர் தம்முள்ளமாகிய மீன் மகளிரது கண்வலைப்பட்டால் அதனைப் பெறுதற்கு வேறுபாயமில்லாத விடத்து மடலூர்ந்தும் அதனைப் பெறுவரென உலகின்மேல் வைத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

10.2. புலவேலண்ணல் புனைமடலேற்
றுலகின்மேல்வைத் துய்த்துரைத்தது.

விண்ணை மடங்க விரிநீர்
பரந்துவெற் புக்கரப்ப
மண்ணை மடங்க வருமொரு
காலத்து மன்னிநிற்கும்
அண்ணல் மடங்க லதளம்
பலவ னருளிலர்போற்
பெண்ணை மடன்மிசை யான்வரப்
பண்ணிற்றொர் பெண்கொடியே. **#732**

இதன் பொருள்:

விண் மடங்க விண் மடங்கவும்; விரி நீர் பரந்து கரப்ப விரிநீர் பரத்தலான் வெற்பொளிப்பவும்; மண் மடங்க வரும் ஒருகாலத்தும் மன்னிநிற்கும் அண்ணல் - மண் மடங்கவும் வரும் ஊழியிறுதியாகிய ஒருகாலத்தின்கண்ணும் நிலைபெற்றுநிற்கும் அண்ணல்; மடங்கல் அதள் அம்பலவன் சிங்கத்தினது தோலை யுடைய அம்பலவன்; அருள் இலர் போல் பெண்ணை மடல்மிசை யான் வரப் பண்ணிற்று ஒர் பெண் கொடி அவனதருளில்லாதாரைப் போலப் பிறரிகழப் பனைமடன்மேல் யான் வரும் வண்ணம் அறிவின்மையைச் செய்தது ஒருபெண்கொடி எ - று.

விண்ணை மண்ணை என்புழி ஐகாரம்: அசைநிலை. மடங் குதல் தத்தங்காரணங்களினொடுங்குதல். மடங்கல் புலியெனினு மமையும். மானம் - கொண்டாட்டம்; வேலை யுடையவனது மானமாகிய குணம் வேன் மேலேற்றப் பட்ட தெனினுமமையும். இவை யிரண்டற்கும் மெய்ப்பாடு: இளிவரல். பயன்: ஆற்றாமை யுணர்த்துதல். 75

விளக்கவுரை

10.3 தன்துணிபுரைத்தல்

தன்துணிபுரைத்தல் என்பது முன்னுலகின்மேல் வைத் துணர்த்தி அதுவழியாக நின்று, என்னையும் ஒருபெண் கொடி பிறரிகழ மடலேறப்பண்ணாநின்றதென முன்னிலைப்புற மொழி யாகத் தன்றுணிபு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

10.3. மானவேலவன் மடன்மாமிசை யானுமேறுவ னென்னவுரைத்தது.

கழிகின்ற வென்னையும் நின்றநின்
கார்மயில் தன்னையும்யான்
கிழியொன்ற நாடி யெழுதிக்கைக்
கொண்டென் பிறவிகெட்டின்
றழிகின்ற தாக்கிய தாளம்
பலவன் கயிலையந்தேன்
பொழிகின்ற சாரல்நுஞ் சீறூர்த்
தெருவிடைப் போதுவனே. **#733**

இதன் பொருள்:

கழிகின்ற என்னையும் கழியாநின்ற என்னையும்; நின்ற நின் கார் மயில் தன்னையும் யானத்தன்மை யனாகவுந் தன்றன்மையளாய்நின்ற நின்னுடைய கார் மயிறன்னை யும்; கிழி ஒன்ற நாடி எழுதி கிழிக்கட்பொருந்த ஆராய்ந்தெழுதி; யான் கைக்கொண்டு யான் அதனைக் கையிற் கொண்டு; என் பிறவி இன்று கெட்டு அழிகின்றது ஆக்கிய தாள் அம்பலவன் கயிலை என் பிறவியை இன்றுகெட்டழியாநின்றதாகச் செய்த தாளையுடைய. அம்பலவனது கயிலையின்; அம் தேன் பொழிகின்ற சாரல் நும் சீறூர்த் தெருவிடைப் போதுவன் அழகிய தேன்பொழியாநின்ற சாரற் கணுண்டாகிய நுமது சீரூர்த்தெருவின்கட்டிரிவேன்; பின்வருவது காண் எ - று. தனக்கு அவளயலென்னுங் கருத்தினனாய், நின்கார் மயிலென் றான். என்னையும் நின் கார்மயிறன்னையும் மடலிடத்தெழுது வேனென்றதென்னை, கார்மயிலை யெழுதுவதன்றித் தன்னையு மெழுதுமோவெனின், மடலெழுதிக் கையிற்கொண்டால் உரையாடுகையின்றி இவனும் ஓவியமாகலின், மடலின்றலையிலே

தன்னூரையுந் தன்பேரையும் அவளூரையும் அவள்பேரையும் எழுதுகையால் என்னையுமென்றான். கார்மயில் - கார்காலத்து மயில். அழிகின்றதென நிகழ்காலத்தாற் கூறினார், பிறத்தற்குக் காரணமாகிய மலங்கெட்டும் யாக்கைக்குக் காரணமாகிய மலத்துடனே வினை நின்றமையின். மெய்ப்பாடும் பயனும் அவை. 76

விளக்கவுரை

10.4 மடலேறும் வகையுரைத்தல்

மடலேறும் வகையுரைத்தல் என்பது துணிபுகூறவும் பெருநாணினளாதலிற் சொல்லாடாத தோழிக்கு வெளிப்படத் தான் நாணிழந்தமைதோன்ற நின்று, யான் நாளை நின்னூர்த்தெருவே மடலுங்கொண்டு வருவேன்; பின்வருவது காணெனத் தலைமகன் தான் மடலேறும்வகை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

10.4. அடல்வேலவ னழிவுற்று
மடலேறும் வகையுரைத்தது.

நடனாம் வணங்குந்தொல் லோனெல்லை
நான்முகன் மாலறியாக்
கடனாம் உருவத் தரன்தில்லை
மல்லற்கண் ணார்ந்தபெண்ணை
உடனாம் பெடையொடொண் சேவலும்
முட்டையுங் கட்டழித்து
மடனாம் புனைதரின் யார்கண்ண
தோமன்ன இன்னருளே. **#734**

இதன் பொருள்:

நடன் - கூத்தன்; நாம் வணங்கும் தொல்லோன் நாம் வணங்கும் பழையோன்; நான்முகன் மால் எல்லை அறியாக் கடன் ஆம் உருவத்து அரன் நான்முகனும் மாலும் முடியும் அடியுமாகிய எல்லைகளை அறியாத இயல்பாகிய வடிவையுடைய அரன்; தில்லை மல்லல் கண் ஆர்ந்த பெண்ணை அவனது தில்லைக்கணுண்டாகிய வளத்தையுடைய கண்ணிற்கார்ந்த பெண்ணைக்கண்; உடன் ஆம் பெடையொடு ஒண் சேவலும் முட்டையும் கட்டழித்து மடல் நாம் புனைதரின் உடனாகும் பெடை யோடும் ஒள்ளியசேவலையும் முட்டையையுங் காவலையழித்து மடலை நாம் பண்ணின்; மன்ன - மன்னனே; இன் அருள் யார் கண்ணது இனிய அருள் இவ்வுலகத்தில் யார்கண்ணதாம்? எ - று.

அறியாவுருவமென வியையும். அறியாதஅக்கடனுளதாமுருவ மெனினுமமையும். மடல் விலக்கித் தழீஇக் கொள்கின்றாளாதலின், நாமென உளப்படுத்துக் கூறினாள். நின்னருளென்பது பாடமாயின், யார் கண்ணருளுவை யென்றுரைக்க. அண்ணல்: முன்னிலைக் கண்

வந்தது. 77

விளக்கவுரை

10.5 அருளாலரிதெனவிலக்கல்

அருளாலரிதென விலக்கல் என்பது தலைமகன் வெளிப்பட நின்று மடலேறுவேனென்று கூறக்கேட்ட தோழி இனியிவன் மடலேறவுங்கூடுமென உட்கொண்டு, தன்னிடத்து நாணினை விட்டுவந்து, எதிர்நின்று, நீர்மடலேறினால் உம்முடைய அருள் யாரிடத்ததாமென்று அவனதருளை யெடுத்துக்கூறி விலக்காநிற்றல். அதற்குச் செய்யுள்

10.5. அடல்வேலண்ண லருளுடைமையின்
மடலேற்றுனக் கரிதென்றது.

அடிச்சந்த மால்கண் டிலாதன
காட்டிவந் தாண்டுகொண்டென்
முடிச்சந்த மாமல ராக்குமுன்
னோன்புலி யூர்புரையுங்
கடிச்சந்த யாழ்கற்ற மென்மொழிக்
கன்னி யனநடைக்குப்
படிச்சந்த மாக்கும் படமுள
வோநும் பரிசகத்தே. **#735**

இதன் பொருள்:

சந்தம் மால் கண்டிலாதன அடி காட்டி வந்து ஆண்டு கொண்டு மறையும் மாலுங் கண்டறியாதனவாகிய அடிகளை எனக்குக் காட்டித் தானே வந்தாண்டு கொண்டு; என் முடிச்சந்த மா மலர் ஆக்கும் முன்னோன் புலியூர் புரையும் அவ்வடிகளை என்முடிக்கு நிறத்தையுடைய பெரிய மலராகச் செய்யும் முன்னோனது புலியூரையொக்கும்; கடிச்சந்த யாழ் கற்ற மென்மொழி சிறந்த நிறத்தையுடைய யாழோசையின் றன்மையைக் கற்ற மென்மொழியையுடைய; கன்னி அன நடைக்கு கன்னியது அன்னத்தி னடைபோலு நடைக்கு; படிச்சந்தம் ஆக்கும் படம் உளவோ நும் பரிசகத்து படிச்சந்தமாகப் பண்ணப்படும் படங்கள் உளவோ நுமது சித்திரசாலையின்கண் எ - று.

கடிச்சந்தயாழ்கற்ற மென்மொழியென்பதற்குச் சிறந்த வோசையையுடைய யாழ்வந்தினிதாக வொலித்தலைக்கற்ற மென்மொழி யென்றுரைப்பாருமுளர். படிச்சந்தமென்பது ஒன்றன் வடிவை யுடைத்தாய் அதுவென்றே கருதப்படுமியல்பையுடையது. படிச்சந்த மென்பது: பிரதிச்சந்தமென்னும் வடமொழிச் சிதைவு. 78

விளக்கவுரை

10.6 மொழிநடை யெழுதலரிதென விலக்கல்

மொழிநடையெழுதலரிதென விலக்கல் என்பது அரு ளெடுத்து விலக்கவும் தன்வழி நில்லாமைகண்டு அவன் வழி யொழுகி விலக்குவாளாக, நுமதருள்கிடக்க மடலேறுவார் மட லேறுதல் மடலேறப்படுவாருருவெழுதிக் கொண்டன்றே; நுமக்கு அவள் மொழி நடையெழுதல் முடியாதாகலின் நீயிர் மடலேறுமா றென்னோவென விலக்காநிற்றல். அதற்குச் செய்யுள்

10.6. அவயவ மரிதின் அண்ணல் தீட்டினும்
இவையிவை தீட்ட லியலா தென்றது.

யாழு மெழுதி யெழின்முத்
தெழுதி யிருளின்மென்பூச்
சூழு மெழுதியொர் தொண்டையுந்
தீட்டியென் தொல்பிறவி
ஏழு மெழுதா வகைசிதைத்
தோன்புலி யூரிளமாம்
போழு மெழுதிற்றொர் கொம்பருண்
டேற்கொண்டு போதுகவே. **#736**

இதன் பொருள்:

யாழும் எழுதி மொழியாக மொழியோ டொக்கும் ஓசையையுடைய யாழையுமெழுதி; எழில் முத்தும் எழுதி முறுவலாக எழிலையுடைய முத்துக்களையுமெழுதி ; இருளில் மென்பூச் சூழும் எழுதி குழலாக இருளின்கண் மெல்லிய பூவானி யன்ற சூழையு மெழுதி; ஒரு தொண்டையும் தீட்டி - வாயாக ஒரு தொண்டைக் கனியையு மெழுதி; இள மாம் போழும் எழுதிற்று ஒர் கொம்பர் உண்டேல் கண்ணாக இளையதாகிய மாவடுவகிரையும் எழுதப்பட்டதோர் கொம்ப ருண்டாயின்; கொண்டு போதுக அதனைக்கொண்டு எம்மூர்க்கண் மடலேற வாரும் எ - று.

என் தொல் பிறவி ஏழும் எழுதாவகை சிதைத்தோன் புலியூர் இளமாம் போழும் என்னுடைய பழையவாகிய பிறவிகளேழையும் கூற்றுவன் தன் கணக்கிலெழுதாத வண்ணஞ் சிதைத்தவனது புலியூரிளமாம் போழுமெனக்கூட்டுக.

முத்துமென்னு மும்மை விகார வகையாற் றொக்குநின்றது. சூழென்றது சூழ்ந்த மாலையை. செய்தெனெச்சங்கள் எழுதிற்றென் னுந்தொழிற்பெயரின் எழுதுதலொடுமுடிந்தன. எழுதிற்றென்பது செயப்படுபொருளைச் செய்தது போலக் கூறிநின்றது. வினை யெச்சங்களும் அவ்வாறு நின்றவெனினு மமையும். மொழியும் இவளதாகலின், அவயவமென்றாள். இவை மூன்றற்கும் மெய்ப்பாடு:

நகை. பயன்: மடல்விலக்குதல். 79

விளக்கவுரை

10.7 அவயவமெழுத லரிதென விலக்கல்

அவயவமெழுதலரிதென விலக்கல் என்பது அவளது மொழி நடை கிடக்க, இவைதாமெழுத முடியுமோ? முடியுமாயின் யான்சொன்ன படியே தப்பாமலெழுதிக்கொண்டு வந்தேறு மென்று அவளதவயவங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

10.7. அவயவ மானவை
யிவையிவை யென்றது.

ஊர்வா யொழிவா யுயர்பெண்ணைத்
திண்மடல் நின்குறிப்புச்
சீர்வாய் சிலம்ப திருத்த
இருந்தில மீசர்தில்லைக்
கார்வாய் குழலிக்குன் னாதர
வோதிக்கற் பித்துக்கண்டால்
ஆர்வாய் தரினறி வார்பின்னைச்
செய்க அறிந்தனவே. **#737**

இதன் பொருள்:

உயர் பெண்ணைத் திண் மடல் ஊர்வாய் உயர்ந்த பெண்ணையினது திண்ணிய மடலையூர்வாய்; ஒழிவாய் அன்றியொழிவாய்; சீர் வாய் சிலம்ப அழகுவாய்த்த சிலம்பை யுடையாய்; நின் குறிப்புத் திருத்த இருந்திலம் நின்கருத்தை யாந்திருத்த விருந்தேமல்லேம்; ஈசர் தில்லைக் கார் வாய் குழலிக்கு உன் ஆதரவு ஓதி ஈசரது தில்லைக்கணுள்ளாகிய கருமைவாய்த்த குழலையுடையாட்கு உனது விருப்பத்தைச்சொல்லி; கற்பித்துக் கண்டால் இதற்கு அவளுடம்படும் வண்ணஞ் சிலவற்றைக் கற்பித்துப் பார்த்தால்; வாய்தரின் ஆர் அறிவார் இடந்தருமாயினும் யாரறிவார்; பின்னை அறிந்தன செய்க இடந்தாராளாயிற் பின் நீயறிந்தவற்றைச் செய்வாயாக எ - று.

கார்போலுங் குழலெனினு மமையும். வாய்தரினென்பதற்கு வாய்ப்பினெனினுமமையும். பின்னைச் செய்கவென்றது நீகுறித்தது செய்வாய் ஆயினும் என் குறிப்பிதுவென்றவாறு.80

விளக்கவுரை

10.8 உடம்படாதுவிலக்கல்

உடம்படாது விலக்கல் என்பது எழுதலாகாமை கூறிக் காட்டி, அதுகிடக்க, நும்மை யாம் விலக்குகின்றேமல்லேம்; யான் சென்று அவணினைவறிந்து வந்தாற் பின்னை நீயிர் வேண்டிற்றைச் செய்யும்;

அவ்வளவும் நீயிர் வருந்தாதொழியு மெனத் தானுடம்படாது விலக்காநிற்றல். அதற்குச் செய்யுள்

10.8. அடுபடை யண்ணல் அழிதுய ரொழிகென
மடநடைத் தோழி மடல்விலக் கியது.

பைந்நா ணரவன் படுகடல்
வாய்ப்படு நஞ்சமுதாம்
மைந்நாண் மணிகண்டன் மன்னும்
புலியூர் மணந்தபொன்னிம்
மொய்ந்நாண் முதுதிரை வாயான்
அழுந்தினு மென்னின்முன்னும்
இந்நா ளிதுமது வார்குழ
லாட்கென்க ணின்னருளே. **#738**

இதன் பொருள்:

பை நாண் அரவன் பையையுடைய அரவாகிய நாணையுடையான்; படு கடல்வாய் படு நஞ்சு அமுது ஆம் மை நாண் மணிகண்டன் ஒலிக்குங் கடலிடத்துப்பட்ட நஞ்சம் அமுதாகும் மை நாணு நீலமணி போலுங் கண்டத்தையுடையான்; மன்னும் புலியூர் மணந்த பொன் அவன் மன்னும் புலியூரைப் பொருந்திய பொன் போல்வாள்; நாள் மொய் இம் முதுதிரை வாய் யான் அழுந்தினும் என்னின் முன்னும் நாட்காலத்தாடும் பெருமையையுடைய இம்முதியகடற்கண் யானழுந்தினேனாயினும் தான் என்னின் முற்பட்டழுந்தும்; மது வார் குழலாட்கு இன் அருள் இந்நாள் இது தேனையுடைய நெடிய குழலாட்கு என் கணுண்டாகிய இனிய அருள் இப்பொழுதித்தன்மைத்தாயிராநின்றது எ - று. அமுதாமென்னும் பெயரெச்சம் கண்டமென்னு நிலப்பெயர் கொண்டது. மைந்நாணுங் கண்டமெனவியையும். மணிகண்ட னென்பது வடமொழி யிலக்கணத்தாற்றொக்குப் பின்றிரிந்து நின்றது. மொய் வலி; ஈண்டுப் பெருமைமேனின்றது. குற்றேவல் செய்வார்கட் பெரியோர்செய்யும் அருள் எக்காலத்து மொருதன்மைத்தாய் நிகழாதென்னுங் கருத்தான் இந்நாளிது வென்றாள். எனவே, தலை மகளது பெருமையுந் தன்முயற்சியது அருமையுங் கூறியவாறாயிற்று. அரா குரா வென்பன; குறுகி நின்றன. வருமென்பது: உவமைச்சொல். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைமகனை யாற்றுவித்தல்.81

விளக்கவுரை

10.9 உடம்பட்டு விலக்கல் உடம்பட்டு விலக்கல் என்பது உடம்படாது முன்பொதுப் பட விலக்கி முகங்கொண்டு, பின்னர்த் தன்னோடு அவளிடை வேற்றுமையின்மைகூறி, யான் நின்குறைமுடித்துத் தருவேன்*;* நீவருந்தவேண்டாவெனத் தோழி தானுடம்பட்டு விலக்கா

நிற்றல். அதற்குச் செய்யுள்
10.9. அரவரு நுண்ணிடைக் குரவரு கூந்தலென்
உள்ளக் கருத்து விள்ளா ளென்றது.

2.11.குறைநயப்புக் கூறல்

தாதேய் மலர்க்குஞ்சி யஞ்சிறை
வண்டுதண் டேன்பருகித்
தேதே யெனுந்தில்லை யோன்சே
யெனச்சின வேலொருவர்
மாதே புனத்திடை வாளா
வருவர்வந் தியாதுஞ்சொல்லார்
யாதே செயத்தக் கதுமது
வார்குழ லேந்திழையே. **#739**

இதன் பொருள்:

மாதே மாதே; தாது ஏய் மலர்க் குஞ்சி அம் சிறை வண்டு தண் தேன் பருகி தாதுபொருந்திய மலரையுடைய குஞ்சிகளின்கண் அழகிய சிறகையுடைய வண்டினங்கள் தண்டேனைப் பருகி; தேதே எனும் தில்லையோன் சேய் என தேதேயெனப்பாடுந் தில்லையையுடையானுடைய புதல்வனாகிய முருகவேளென்றே சொல்லும் வண்ணம்; சின வேல் ஒருவர் புனத்திடை வாளா வருவர் சினவேலையுடையாரொருவர் நம்புனத்தின்கண் வாளா பலகாலும் வாராநிற்பர்; வந்து யாதும் சொல்லார் வந்து நின்று ஒன்று முரையாடார்; மது வார்குழல் ஏந்திழையே மதுவார்ந்த குழலை யுடைய ஏந்திழாய்; செயத் தக்கது யாதே - அவரிடத்து நாஞ்செய்யத் தக்கது யாதென்றறிகின்றிலேன் எ-று.

குஞ்சி தில்லை வாழ்வார் குஞ்சி; மலரினது குஞ்சியென விரித்து அல்லியென்றுரைப்பி னுமமையும். சேயோடொத்தல் பண்பு வடிவுமுதலாயினவும், சினவேலேந்தி வரையிடத்து வருதலுமாம். வேட்டைமுதலாகிய பயன்கருதாது வருவரென்பாள், வாளா வருவரென்றாள். முகம்புகுகின்றாளாதலின், பின்னும் ஏந்திழையே யென்றாள். சேயென்புழி எண்ணேகாரந் தொக்குநின்றது; என்னை, மேலே 'புரிசேர் சடையோன் புதல்வன்கொல் பூங்கணை வேள் கொல்' (தி.8 கோவை பா.83) என வருதலான். யாதேயென்னு மேகாரம்: வினா. மாதே ஏந்திழையே என்புழி ஏகாரம்: விளியுருபு. அறிகுற்றவென்பது அறியவேண்டிய வென்னும் பொருட்கண் வந்த ஒரு மொழிமுடிபு. 82

விளக்கவுரை

11.1 குறிப்பறிதல்

குறிப்பறிதல் என்பது தலைமகனது குறைகூறத் துணியா நின்ற தோழி தெற்றெனக் கூறுவேனாயின் இவள் இதனை மறுக்கவுங் கூடுமென உட்கொண்டு, நம்புனத்தின்கட் சேயினது வடிவையுடையராய்ச் சினவேலேந்தி ஒருவர் பலகாலும் வாரா நின்றார்; வந்து நின்று ஒன்று சொல்லுவதுஞ் செய்கின்றிலர்; அவரிடத்து யாஞ்செய்யத்தக்க தியாதெனத் தான் அறியாதாள் போலத் தலைமகளோடு உசாவி, அவணினைவறியாநிற்றல். என்னை,

ஆங்குணர்ந் தல்லது கிழவோ டேத்துத்
தான்குறை யுறுத றோழிக் கில்லை
-இறையனாரகப்பொருள் - *8*

என்பவாகலின். அதற்குச் செய்யுள்

11.1 நறைவளர் கோதையைக் குறைநயப் பித்தற்
குள்ளறி குற்ற வொள்ளிழை யுரைத்தது.

வரிசேர் தடங்கண்ணி மம்மர்கைம்
மிக்கென்ன மாயங்கொலோ
எரிசேர் தளிரன்ன மேனியன்
ஈர்ந்தழை யன்புலியூர்ப்
புரிசேர் சடையோன் புதல்வன்கொல்
பூங்கணை வேள்கொலென்னத்
தெரியே முரையான் பிரியா
னொருவனித் தேம்புனமே. **#740**

இதன் பொருள்:

வரி சேர் தடங் கண்ணி வரிசேர்ந்த பெரிய கண்ணையுடையாய்; ஒருவன் மம்மர் கைம்மிக்கு ஒருவன் மயக்கங் கைம்மிக்கு; எரி சேர் தளிர் அன்ன மேனியன் எரியைச்சேர்ந்த தளிரையொக்கும் மேனியையுடையனுமாய்; ஈர்ந்தழையன் வாடாத தழையையுடையனுமாய்; இத் தேம்புனம் பிரியான் இத் தேம்புனத்தைப் பிரிகின்றிலன்; உரையான் ஒன்றுரைப்பதுஞ் செய்கின்றிலன்; புலியூர்ப் புரிசேர் சடையோன் புதல்வன்கொல் பூங் கணை வேள்கொல் என்னத் தெரியேம் அவன்றன்னைப் புலியூர்க் கணுளனாகிய புரிதலைச்சேர்ந்த சடையை யுடையோனுடைய புதல்வனோ பூவாகிய அம்பையுடைய காம வேளோவென்று யாந்துணிகின்றிலேம்; என்ன மாயம் கொலோ ஈதென்ன மாயமோ! எ - று.

அவ்வாறு இறப்பப் பெரியோன் இவ்வாறு எளிவந்தொழுகுதல் என்ன பொருத்தமுடைத்தென்னுங் கருத்தால், என்ன மாயங் கொலோவென்றாள். புலியூர்ப்புரிசேர் சடையோன் புதல்வன் கொலென்றதனால் நம்மையழிக்க வந்தானோவென்றும், பூங்கணை

வேள்கொலென்றதனால் நம்மைக்காக்க வந்தானோ வென்றும் கூறியவாறாயிற்று. புரிசேர்சடையோன் புதல்வனென்றதனை மடற்குறிப்பென்றுணர்க. கொல்: ஐயம். மேனியன் தழைய னென்பன: வினையெச்சங்கள். மென்மொழி மொழிந்தது - மென் மொழியான் மொழிந்தது. 83

விளக்கவுரை

11.2 மென்மொழியாற்கூறல்

மென்மொழியாற் கூறல் என்பது நினைவறிந்து முகங் கொண்டு அதுவழியாகநின்று, ஒருபெரியோன் வாடிய மேனியனும் வாடாத தழையனுமாய் நம்புனத்தை விட்டுப் போர்வதுஞ் செய்கின் றிலன்; தன்குறை இன்னதென்று வெளிப்படச் சொல்லுவதுஞ் செய்கின் றிலன்; இஃதென்ன மாயங்கொல்லோ அறிகின்றிலேனெனத் தோழி தான் அதற்கு நொந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

11.2 ஒளிருறு வேலவன் றளர்வுறு கின்றமை

இன்மொழி யவட்கு மென்மொழி மொழிந்தது.

நீகண் டனையெனின் வாழலை
நேரிழை யம்பலத்தான்
சேய்கண் டனையன்சென் றாங்கோ
ரலவன்றன் சீர்ப்பெடையின்
வாய்வண் டனையதொர் நாவற்
கனிநனி நல்கக்கண்டு
பேய்கண் டனையதொன் றாகிநின்
றானப் பெருந்தகையே. **#741**

இதன் பொருள்:

நேர் இழை நேரிழாய்; அம்பலத்தான் சேய் கண்டனையன் அம்பலத்தான் புதல்வனைக்கண்டாற் போன்று இருக்கும் ஒருவன்; ஆங்கு ஒர் அலவன் தன் சீர்ப் பெடையின் வாய் வண்டு அனையது ஒர் நாவல் கனி சென்று நனி நல்கக் கண்டு அவ்விடத்து ஓரலவன் தனதழகையுடைய பெடையின் வாயின்கண் வண்டனையதொரு நாவற்கனியைச்சென்று மிகவுங் கொடுப்ப அதனைக்கண்டு; அப் பெருந்தகை பேய் கண்டனையது ஒன்று ஆகிநின்றான் அப்பெருந்தகை பேயாற் காணப்பட்டாற் போல்வ தோர் வேறுபாட்டை யுடையனாகி நின்றான்; நீ கண்டனை எனின் வாழலை அந்நிலையை நீகண்டாயாயின் உயிர் வாழ மாட்டாய்; யான் வன்கண்மையேனாதலின், அதனைக் கண்டும் ஆற்றியுளே னாயினேன் எ - று.

பேய்கண்டனைய தென்பதற்குப் பேயைக் கண்டாற்போல் வதோர்

வேறுபாடென்றுரைப்பினு மமையும். பேய்கண்டனைய தொன்றையுடையனாயென்னாது ஒற்றுமைநயம் பற்றி ஒன்றாகி யென்றாள். நாவற்கனியை நனிநல்கக்கண்டு தன்னுணர்வொழியப் போயினான் இன்று வந்திலனென்னாது பேய்கண்டனையதொன்றாகி நின்றானென்று கூறினமையான் மென்மொழியும், சேய்கண்டனைய னென்றதனால் வன்மொழியும் விரவியதாயிற்று. மிகுத்தல் - ஆற்றா மைமிகுத்தல். இவை மூன்றற்கும் மெய்ப் பாடு: இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன் : தலைமகளை மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தல். 9; 84

விளக்கவுரை

11.3 விரவிக்கூறல்

விரவிக் கூறல் என்பது வன்மொழியாற் கூறின் மனமெலியு மென்றஞ்சி, ஓரலவன் தன்பெடைக்கு நாவற்கனியை நல்கக் கண்டு ஒருபெருந்தகை பேய்கண்டாற்போல நின்றான்; அந்நிலைமையை நீ கண்டாயாயின் உயிர்வாழ மாட்டாய்; யான் வன்கண்மையேனாதலான் ஆற்றியுளேனாய்ப் போந்தேனென மென்மொழியோடு சிறிது வன்மொழிபடக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

11.3 வன்மொழி யின்மனம் மெலிவ தஞ்சி
மென்மொழி விரவி மிகுத்து ரைத்தது.

சங்கந் தருமுத்தி யாம்பெற
வான்கழி தான்கெழுமிப்
பொங்கும் புனற்கங்கை தாங்கிப்
பொலிகலிப் பாறுலவு
துங்க மலிதலை யேந்தலி
னேந்திழை தொல்லைப்பன்மா
வங்கம் மலிகலி நீர்தில்லை
வானவன் நேர்வருமே. **#742**

இதன் பொருள்:

ஏந்திழை - ஏந்திழாய்; பல் மா வங்கம் மலி தொல்லைக் கலி நீர் தில்லை வானவன் நேர் வரும் இத்தன் மைத்தாகலிற் பலவாய்ப் பெரியவாகிய மரக்கலங்கள் மிகப் பெற்ற பழையதாகிய கடல் தில்லைவானவற்கொப்பாம் எ - று.

சங்கம் தரு முத்து யாம் பெற வான் கழி தான் கெழுமி சங்குதரு முத்துக்களை யாம்பெறப் பெரிய கழிகளைத் தான் பொருந்தி; பொங்கும் புனற் கங்கை தாங்கி பொங்கும் புனலையுடைய கங்கையைத் தாங்கி; பொலி கலிப் பாறு உலவு துங்கம் மலிதலை ஏந்தலின் பொலிந்த ஆரவாரத்தையுடைய பாறாகிய மரக்கலங்களி யங்குந் திரைகளின்

மிகுதியை யுடைத்தாகலின், எனக் கடலிற்கேற் பவும்.
சங்கம் தரும் முத்தி யாம் பெற வான் கழி தான் கெழுமி
திருவடிக்கணுண்டாகிய பற்றுத்தரும் முத்தியை யாம் பெறும் வண்ணம்
எல்லாப்பொருளையும் அகப்படுத்து நிற்கும் ஆகாயத்தையுங் கடந்து
நின்ற தான் ஒரு வடிவு கொண்டுவந்து பொருந்தி; பொங்கும் புனற்
கங்கை தாங்கி பொங்கும் புனலையுடைய கங்கையைச் சூடி; பொலி
கலிப்பாறு உலவு துங்கம் மலி தலை ஏந்தலின் மிக்க ஆரவாரத்தை
யுடைய பாறாகிய புட்கள் சூழாநின்ற உயர்வுமிக்க தலையோட்டை
யேந்துதலின், எனத் தில்லைவானவற் கேற்பவும் உரைக்க.
வான்கழி சிவலோக மெனினுமமையும். குறைநயப்
பாற்றலைமகனிலைமை கேட்ட தலைமகள் பெருநாணினளாகலின்,
மறுமொழிகொடாது பிறிதொன்று கூறியவாறு. ஒருசொற்றொடர்
இருபொருட்குச் சிலேடை யாயினவாறுபோலத் தோழிக்கும்
ஓர்ந்துணரப்படும். ஓர்ந்துணர்தலாவது இவ்வொழுக்கங் கள
வொழுக்கமாகையாலும், தலைமகள் பெருநாணினளாகையாலும்,
முன்றோழியாற் கூறப்பட்ட கூற்றுகட்கு வெளிப்படையாக மறுமொழி
கொடாது, ஓர்ந்துகூட்டினால் மறுமொழியாம்படி கடலின் மேல்
வைத்துக் கூறினாள். என்னை, முன்னர் நீ புரிசேர்சடையோன் புதல்வ
னென்றும், பூங்கணைவேளென்றும் உயர்த்துக் கூறிய வெல்லாம்
அவனுக்குரிய, அங்ஙனம் பெரியவன் தன்மாட்டுண்டான புணர்ச்சி
யான பேரின்பத்தை நாம்பெறுகை காரணமாக இங்ஙன மெளிவந்து
உன்னைவந்து சேர்ந்தான்; அஃதென்போலவெனின், பெறுதற்கரிய
சங்கு தருகிற முத்தை நாம் பெறுவான் எளிதாகக் கடல் பெரிய கழியை
வந்து பொருந்தினாற்போல, இனி உனக்கு வேண்டியது செய்
வாயாகவென மறுமொழியாயிற்று. மெய்ப்பாடு: மருட்கை. தோழி
சொன்ன குறையறியாள் போறலிற் பயன்: அறியாள்போறல். 85

விளக்கவுரை

11.4 அறியாள் போறல் அறியாள் போறல் என்பது பேய்கண்டாற்போல
நின்றா னெனத் தலைமகனிலைமைகேட்ட தலைமகள் பெருநாணின
ளாதலின் இதனையறியாதாளைப்போல, இஃதொரு கடல்வடி
விருந்தவாறு காணாயெனத் தானொன்று கூறாநிற்றல். அதற்குச்
செய்யுள்

11.4. அறியாள் போன்று
குறியாள் கூறியது.

புரங்கடந் தானடி காண்பான்
புவிவிண்டு புக்கறியா
திரங்கிடெந் தாயென் றிரப்பத்தன்

னீரடிக் கென்னிரண்டு
கரங்கடந் தானொன்று காட்டமற்
றாங்கதுங் காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை யம்பல
முன்றிலம் மாயவனே. **#743**

இதன் பொருள்:

புரம் கடந்தான் அடி காண்பான் புரங்களைக் கடந்தவனது அடிகளைக் காணவேண்டி; புவி விண்டு புக்கு அறியாது இரங்கிடு எந்தாய் என்று இரப்ப நெறி யல்லா நெறியான் நிலத்தைப் பிளந்துகொண்டு புக்குக் காணாது பின் வழிபட்டு நின்று எந்தாய் அருளவேண்டு மென்றிரப்ப; தன்ஈரடிக்கு என் இரண்டு கரங்கள் தந்தான் ஒன்று காட்ட தன்னுடைய இரண்டு திருவடிகளையுந் தொழுதற்கு என்னுடைய இரண்டு கரங்களையுந் தந்தவனாகிய அவன் சிறிதிரங்கி ஒரு திருவடியைக் காட்ட; மற்று ஆங்கதும் காட்டிடு என்று தில்லை அம்பல முன்றில் அம் மாயவன் வரம் கிடந்தான் மற்றதனையுங் காட்டிடல் வேண்டுமென்று தில்லையம்பல முற்றத்தின்கண் முன்னர் அவ்வாறு யானென்னுஞ் செருக்காற் காணலுற்ற மாயவன் வரங்கிடந்தாற்போலும் எ - று.

விண்டென்பதற்கு (தி.8 கோவை பா.24) முன்னுரைத்ததே யுரைக்க. மாயவன் முதலாயினார்க்கு அவ்வாறரியவாயினும் எம்மனோர்க்கு இவ்வாறெளிவந்தன வென்னுங் கருத்தால், தன்னடிக் கென்னிரண்டு கரங்கடந்தா னென்றார்.

ஆங்கதென்பது ஒருசொல். இன்னும் வரங்கிடக்கிறா னாகலின், முன்கண்டது ஒன்றுபோலுமென்பது கருத்து. புரங்கடந் தானடிகளைக் காணுமாறு வழிபட்டுக் காண்கையாவது அன்னத் திற்குத் தாமரையும், பன்றிக்குக் காடுமாதலால், இவரிங்ஙனந் தத்த நிலைப்பரிசேதேடுதல். இவ்வாறு தேடாது தமதகங்காரத்தினான் மாறு பட்டுப் பன்றி தாமரையும் அன்னங்காடுமாகப் படர்ந்து தேடுதலாற் கண்டிலர். இது நெறியல்லா நெறியாயினவாறு. இனி இது தோழிக்குத் தலைவி மறுமொழியாகக் கூறியவாறு: என்னை? ஒன்று காட்ட வென்றது முன்னர்ப் பாங்கற்கூட்டம் பெற்றான் அதன்பின் நின்னினாய கூட்டம் பெறுகை காரணமாக நின்னிடத்து வந்திரந்து குறையுறாநின்றான்; அஃதென்போலவெனின், மற்றாங்கதுங் காட்டிடென்று மால் வரங்கிடந்தாற்போல என்றவாறு.

வஞ்சித்தல் - மறுமொழியை வெளிப்படையாகக் கொடாது பிறிதொன்றாகக் கூறுதல். இவை யிவை - முன்னர்ப்பாட்டும் இப்பாட்டும். இதனைத் தோழி கூற்றாக வுரைப்பாருமுளர்; இவையிவை யென்னு மடுக்கானும் இனி 'உள்ளப்படுவ னவுள்ளி' எனத்

தலைமகளோடு புலந்து கூறுகின்றமையானும், இவ்விரண்டு திருப்பாட்டும் தலைமகள் கூற்றாதலே பொருத்தமுடைத்தென்ப தறிக.
86

விளக்கவுரை

11.5 வஞ்சித் துரைத்தல்

வஞ்சித்துரைத்தல் என்பது நாணினாற் குறை நேரமாட்டாது வருந்தாநின்ற தலைமகள் இவளும் பெருநாணினளாதலின் என்னைக் கொண்டே சொல்லுவித்துப்பின் முடிப்பாளாயிரா நின்றாள்; இதற்கியா னொன்றுஞ் சொல்லாதொழிந்தால் எம்பெருமான் இறந்துபடுவனெனை உட்கொண்டு, தன்னிடத்து நாணினை விட்டு, பாங்கற்கூட்டம் பெற்றுத் தோழியிற் கூட்டத்திற்குத் துவளாநின்றா னென்பது தோன்ற, பின்னும் வெளிப்படக் கூற மாட்டாது மாயவன்மேல் வைத்து வஞ்சித்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

11.5. நெஞ்சம் நெகிழ்வகை வஞ்சித் திவையிவை
செஞ்சடை யோன்புகழ் வஞ்சிக் குரைத்தது.

உள்ளப் படுவன வுள்ளி
யுரைத்தக் கவர்க்குரைத்து
மெள்ளப் படிறு துணிதுணி
யேலிது வேண்டுவல்யான்
கள்ளப் படிறர்க் கருளா
அரன்தில்லை காணலர்போற்
கொள்ளப் படாது மறப்ப
தறிவிலென் கூற்றுக்களே. **#744**

இதன் பொருள்:

உள்ளப் படுவன உள்ளி இதன் கண் ஆராயப் படுவனவற்றை ஆராய்ந்து; உரைத் தக்கவர்க்கு உரைத்து இதனை வெளிப் படவுரைத்தற்குத் தக்க நின் காதற்றோழியர்க்குரைத்து; படிறு மெள்ளத்துணி அவரோடுஞ் சூழ்ந்து நீ படிறென்று கருதிய இதனை மெள்ளத் துணிவாய்; துணியேல் அன்றித் துணியா தொழிவாய்; கள்ளப் படிறர்க்கு அருளா அரன் தில்லை காணலர் போல் நெஞ்சிற் கள்ளத்தையுடைய வஞ்சகர்க்கு அருள் செய்யாத அரனது தில்லையை ஒருகாற் காணாதாரைப்போல்; அறிவிலென் கூற்றுக்கள் கொள்ளப் படாது அறிவில்லாதேன் சொல்லிய சொற்களை உள்ளத்துக் கொள்ளத்தகாது; மறப்பது - அவற்றை மறப்பாயாக; யான் வேண்டுவல் இது யான் வேண்டுவதிதுவே எ - று.

தில்லை காணலர் தோழிகூற்றிற்குவமை. கொள்ளப்படா தென்பது வினைமுதன்மேலுஞ் செயப்படு பொருண் மேலுமன்றி வினைமேனின்ற

முற்றுச்சொல், 'அகத்தின்னா வஞ்சரை யஞ்சப் படும்' (குறள். 824) என்பதுபோல. மறப்பதென்பது: வியங்கோள். வருந்திய சொல்லின் - வருத்தத்தை வெளிப்படுக்குஞ் சொல்லான். சொல்லி யென்பதூஉம் பாடம். வகுத்துரைத்தது - வெளிப்படச் சொல்ல வேண்டுஞ் சொற் கேட்குமளவுஞ் சொல்லுஞ் சொல்.

அஃதாவது நீ சொல்லத்தகுங் காதற் றோழியர்க்கு வெளிப்படச் சொல்லென்று புலந்து கூறியது. 9; 87

விளக்கவுரை

11.6 புலந்துகூறல்

புலந்து கூறல் என்பது வெளிப்படக் கூறாது வஞ்சித்துக் கூறுதலான் என்னோடிதனை வெளிப்படக் கூறாயாயின் நின்காதற் றோழியர்க்கு வெளிப்படச்சொல்லி அவரோடு சூழ்ந்து நினக்குற்றது செய்வாய்; யான்சொன்ன அறியாமையை நின்னுள்ளத்துக் கொள்ளாது மறப்பாயாக; யான் வேண்டுவ திதுவேயெனத் தோழி தலைமகளோடு புலந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

11.6. திருந்திய சொல்லிற் செவ்வி பெறாது
வருந்திய சொல்லின் வகுத்து ரைத்தது.

மேவியந் தோலுடுக் குந்தில்லை
யான்பொடி மெய்யிற்கையில்
ஓவியந் தோன்றுங் கிழிநின்
னெழிலென் றுரையுளதால்
தூவியந் தோகையன் னாயென்ன
பாவஞ்சொல் லாடல்செய்யான்
பாவியந் தோபனை மாமட
லேறக்கொல் பாவித்ததே **#745**

இதன் பொருள்:

மெய்யில் மேவி அம் தோல் உடுக்கும் தில்லை யான்பொடி மெய்க்கட் பூசியது விரும்பி நல்ல தோலைச் சாத்துந் தில்லையானுடைய நீறு; கையில் ஓவியம் தோன்றும் கிழி கையின்க ணுண்டாகியது சித்திரம் விளங்குங் கிழி; நின் எழில் என்று உரை உளது - அக்கிழிதான் நின் வடிவென்று உரையுமுளதா யிருந்தது; தூவி அம் தோகை அன்னாய் தூவியையுடைய அழகிய தோகையை யொப்பாய்; என்ன பாவம் இதற்குக் காரணமாகிய தீவினை யாதென்றறியேன்! ; சொல் ஆடல் செய்யான் ஒன்று முரையாடான்; பாவி இருந்தவாற்றான் அக்கொடியோன்; அந்தோ பனை மா மடல் ஏறக்கொல் பாவித்தது அந்தோ! பனையினது பெரிய மடலேறுதற்குப் போலு நினைந்தது எ - று.

கிழியென்றது கிழிக்கணெழுதிய வடிவை. தன்குறையுறவு கண்டு உயிர்தாங்கலேனாக அதன்மேலும் மடலேறுதலையுந் துணியாநின்றானென்னுங் கருத்தால், பாவியென்றாள். எனவே, அவனாற்றாமைக்குத் தானாற்றாளாகின்றமை கூறினாளாம். கமழலந் துறைவனென்பதற்கு, கூம்பலங் கைத்தல (தி.8 கோவை.பா.11) மென்பதற் குரைத்தது உரைக்க. இவை மூன்றற்கும் மெய்ப்பாடு: இளிவரலைச்சார்ந்த பெருமிதம். பயன்: வலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தல். 88

விளக்கவுரை

11.7 வன்மொழியாற் கூறல்

வன்மொழியாற் கூறல் என்பது புலந்து கூறாநின்ற தோழி அக்கொடியோன் அருளுறாமையான் மெய்யிற் பொடியுங் கையிற்கிழியுமாய் மடலேறத் துணியாநின்றான்*;* அக்கிழிதான் நின்னுடைய வடிவென்று உரையுமுளதா யிருந்தது*;* இனி நீயும் நினக்குற்றது செய்வாயாக*;* யானறியேனென வன்மொழியாற் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

11.7. கடலுல கறியக் கமழலந் துறைவன்
மடலே றும்மென வன்மொழி மொழிந்தது.

பொன்னார் சடையோன் புலியூர்
புகழா ரெனப்புரிநோய்
என்னா லறிவில்லை யானொன்
றுரைக்கிலன் வந்தயலார்
சொன்னா ரெனுமித் துரிசுதுன்
னாமைத் துணைமனனே
என்னாழ் துயர்வல்லை யேற்சொல்லு
நீர்மை இனியவர்க்கே. **#746**

இதன் பொருள்:

பொன் ஆர் சடையோன் புலியூர் புகழார் என பொன்போலும் நிறைந்த சடையையுடையவனது புலியூரைப் புகழாதாரைப்போல வருந்த; புரி நோய் என்னால் அறிவு இல்லை எனக்குப் புரிந்த நோய் என்னாலறியப்படுவதில்லை; யான் ஒன்று உரைக்கிலன் ஆயினும் இதன்றிறத்து யானொன்றுரைக்க மாட்டேன்; துணை மனனே எனக்குத் துணையாகிய மனனே; வந்து அயலார் சொன்னார் எனும் இத்துரிசு துன்னாமை அயலார் சொன்னாரென்று இவள் வந்து சொல்லுகின்ற இக்குற்றம் என்கண் வாராமல்; என் ஆழ் துயர்வல்லையேல் அவராற்றாமை கூறக் கேட்டலானுண்டாகிய என தாழ்துயரை உள்ளவாறு சொல்ல வல்லையாயின்; நீர்மை இனிய வர்க்குச் சொல்லு

நீர்மையையுடைய இனியவர்க்கு நீ சொல்லு வாயாக எ-று. புரிதல் மிகுதல். அயலார் சொன்னாரென்றது 'ஓவியந் தோன்றுங்கிழி நின்னெழிலென்றுரையுளதால்' (திரு.8 கோவை பா.88) என்றதனைப் பற்றி. அயலார் சொன்னாரென்பதற்கு யானறியாதிருப்ப அவராற்றாமையை அயலார்வந்து சொன்னா ரென்னும் இக்குற்றமென்றுரைப்பினு மமையும். இப்பொருட்கு அயலாரென்றது தோழியை நோக்கி. ஆழ்துயர் ஆழ்தற்கிடமாந் துயர். இவ்வாறு அவராற்றாமைக்கு ஆற்றளாய் நிற்றலின், தோழி குறைநேர்ந்தமை யுணருமென்பது பெற்றாம்; ஆகவே இது தோழிக்கு வெளிப்பட மறுமொழி கூறியவாறாயிற்று. சொல்லுநீர்மையினியவர்க் கென்றவதனால் தன்றுயரமும் வெளிப்படக்கூறி மடலால் வருங் குற்றமுந் தன்னிடத்து வாராமல் விலக்கச் சொன்னாளாயிற்று. மெய்ப்பாடு: அச்சம். ஆற்றானெனக் கேட்டலிற் பயன்: குறைநேர்தல். 89

விளக்கவுரை

11.8 மனத்தொடுநேர்தல்

மனத்தொடு நேர்தல் என்பது ஆற்றாமையான் மடலேறத் துணியாநின்றானெனத் தோழியால் வன்மொழி கூறக்கேட்ட தலைமகள் அதற்குத் தானாற்றாளாய், தலைமகனைக் காண வேண்டித் தன் மனத்தொடு கூறி நேராநிற்றல். அதற்குச் செய்யுள்

11.8. அடல்வேலவ னாற்றானெனக்
கடலமிழ்தன்னவள் காணலுற்றது.

2.12.சேட்படை

தேமென் கிளவிதன் பங்கத்
திறையுறை தில்லையன்னீர்
பூமென் தழையுமம் போதுங்கொள்
ளீர்தமி யேன்புலம்ப
ஆமென் றருங்கொடும் பாடுகள்
செய்துநுங் கண்மலராங்
காமன் கணைகொண் டலைகொள்ள
வோமுற்றக் கற்றதுவே. **#747**

இதன் பொருள்:

தே மென் கிளவி தன் பங்கத்து இறை உறை தில்லை அன்னீர் தேன்போலும் மெல்லிய மொழியையுடை யாடனது கூற்றையுடைய இறைவனுறையுந் தில்லையை யொப்பீர்; பூ மெல் தழையும் அம் போதும் கொள்ளீர் யான் கொணர்ந்த பூவையுடைய மெல்லிய தழையையும் அழகிய பூக்களையுங் கொள்கின்றிலீர்; தமியேன் புலம்ப

அருங் கொடும்பாடுகள் ஆம் என்று செய்து உணர்விழந்த யான் றனிமைப்படச் செய்யத்தகாத பொறுத்தற்கரிய கொடுமைகளைச் செய்யத்தகு மென்று துணிந்து செய்து; நும் கண் மலர் ஆம் காமன் கணை கொண்டு அலை கொள்ளவோ முற்றக் கற்றது நுங் கண்மலராகின்ற காமன் கணை கொண்டு அருளத்தக்காரை அலைத்தலையோ முடியக் கற்கப்பட்டது, நும்மால் அருளுமாறு கற்கப்பட்ட தில்லையோ! எ-று.

பங்கத்துறையிறை யென்பதூஉம் பாடம். தமியேன் புலம்ப வென்பதற்குத் துணையிலாதேன் வருந்தவெனினுமமையும். மேற் சேட்படை கூறுகின்றமையின் அதற்கியைவுபட ஈண்டுங் குறையுறவு கூறினான்.மெய்ப்பாடு: அழுகை. பயன்: ஆற்றாமையுணர்த்துதல்.

அவ்வகை தோழிக்குக் குறைநேர்ந்த நேரத்துத் தலைமகன் கையுறை யோடுஞ் சென்று இவ்வகை சொன்னானென்பது. 90

விளக்கவுரை

12.1 தழைகொண்டுசேறல்

தழைகொண்டுசேறல் என்பது மேற்சேட்படை கூறத் துணியா நின்ற தோழியிடைச்சென்று, அவளது குறிப்பறிந்து, பின்னுங் குறையுறவு தோன்றநின்று, நும்மாலருளத்தக்காரை அலையாதே இத்தழை வாங்கிக்கொண்டு என்குறை முடித்தருளு வீரா மென்று, மறுத்தற்கிடமற, சந்தனத்தழைகொண்டு தலை மகன் சொல்லாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.1 கொய்ம்மலர்க் குழலி குறைந யந்தபின்
கையுறை யோடு காளை சென்றது.

ஆரத் தழையராப் பூண்டம்
பலத்தன லாடியன்பர்க்
காரத் தழையன் பருளிநின்
றோன்சென்ற மாமலயத்
தாரத் தழையண்ணல் தந்தா
லிவையவ ளல்குற்கண்டால்
ஆரத் தழைகொடு வந்தா
ரெனவரும் ஐயுறவே. **#748**

இதன் பொருள்:

ஆரத் தழை அராப் பூண்டு அம்பலத்து அனலோடி ஆரமாகிய தழைந்த அரவைப் பூண்டு அம்பலத்தின்கண் அனலோடாடி; அன்பர்க்கு ஆரத் தழை அன்பு அருளி நின்றோன் அன்பராயினார்க்குத் தானும் மிக்க அன்பைப் பெருகச் செய்து நின்றவன்; சென்ற மா மலயத்து ஆரத் தழை அண்ணல் தந்தால் சேர்ந்த பொதியின் மலையிடத்துளவாகிய சந்தனத் தழைகளை அண்ணல் தந்தால்; இவை அவள் அல்குற் கண்டால்

இத்தழைகளைப் பிறர் அவளல்குற்கட் காணின்; அத் தழை கொடு வந்தார் ஆர் என ஐயுறவு வரும் ஈண்டில்லாத அத்தழை கொண்டுவந்தார் யாவரென ஐயமுண்டாம்; அதனால் இவை கொள்ளேம் எ - று. ஆரத்தழையரா பூண்டகாலத்து ஆரத்தழைத்த அரவெனினு மமையும். அன்பர்க்காரத் தழையன்பருளி நின்றோ னென்பதற்கு அன்பர்க்கு அவர் நுகரும்வண்ணம் மிக்க அன்பைக் கொடுத்தோனெ னினுமமையும். அன்பான் வருங்காரியமேயன்றி அன்புதானும் ஓரின் பமாகலின் நுகர்ச்சியாயிற்று. அண்ணலென்பது ஈண்டு முன்னிலைக் கண் வந்தது. அத்தழையென்றது அம்மலயத் தழை என்றவாறு. 91

விளக்கவுரை

12.2 சந்தனத்தழை தகாதென்று மறுத்தல் சந்தனத்தழை தகாதென்று மறுத்தல் என்பது தலைமகன் சந்தனத்தழைகொண்டு செல்ல, அது வழியாக நின்று, சந்தனத் தழை இவர்க்கு வந்தவாறென்னோவென்று ஆராயப்படுதலான் இத்தழை எமக்காகாதெனத் தோழி மறுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.2. பிறைநுதற் பேதையைக் குறைநயப் பித்தபின்
வாட்படை யண்ணலைச் சேட்ப டுத்தது

முன்றகர்த் தெல்லா விமையோரை
யும்பின்னைத் தக்கன்முத்தீச்
சென்றகத் தில்லா வகைசிதைத்
தோன்றிருந் தம்பலவன்
குன்றகத் தில்லாத் தழையண்
ணறந்தாற் கொடிச்சியருக்
கின்றகத் தில்லாப் பழிவந்து
மூடுமென் றெள்குதுமே. **#749**

இதன் பொருள்:

முன் எல்லா இமையோரையும் தகர்த்து முன்வேள்விக்குச் சென்ற எல்லாத் தேவர்களையும் புடைத்து; பின்னைச் சென்று தக்கன் முத் தீ அகத்து இல்லாவகை சிதைத்தோன் பின்சென்று தக்கனுடைய மூன்று தீயையும் குண்டத்தின்கண் இல்லை யாம்வண்ணம் அழித்தவன்; திருந்து அம்பலவன் திருந்திய வம் பலத்தையுடையான்; குன்றகத்து இல்லாத் தழை அண்ணல் தந்தால் அவனுடைய இம்மலையிடத்தில்லாத தழையை அண்ணல் தந்தால்; கொடிச்சியருக்கு அகத்து இல்லாப் பழி இன்று வந்து மூடும் என்று எள்குதும் கொடிச்சியருக்கு இல்லின்கண் இல்லாதபழி இன்று வந்து மூடுமென்று கூசுதும்; அதனால் இத்தழை கொணரற்பாலீரல்லீர் எ- று.

குன்றகத்தில்லாத் தழையென்றது குறிஞ்சி நிலத்தார்க்கு உரிய வல்லாத

தழை யென்றவாறு. அண்ணலென்பது முன்னிலைக் கண்ணும், கொடிச்சியரென்பது தன்மைக்கண்ணும் வந்தன. இல்லா வென்பது பாடமாயின், இல்லையாம் வண்ணம் முன்றகர்த் தென்றுரைக்க.92

விளக்கவுரை

12.3 நிலத்தின்மைகூறி மறுத்தல்

நிலத்தின்மை கூறி மறுத்தல் என்பது சந்தனத்தழை தகாதென்றதல்லது மறுத்துக் கூறியவாறன்றென மற்றொருதழை கொண்டுசெல்ல, அதுகண்டு, இக்குன்றிலில்லாத தழையை எமக்கு நீர்தந்தால் எங்குடிக்கு இப்பொழுதே பழியாம்; ஆதலான் அத்தழை யெமக்காகாதென்று மறுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.3. கொங்கலர் தாரோய் கொணர்ந்த கொய்தழை
எங்குலத் தாருக் கேலா தென்றது.

யாழார் மொழிமங்கை பங்கத்
திறைவன் எறிதிரைநீர்
ஏழா யெழுபொழி லாயிருந்
தோன்நின்ற தில்லையன்ன
சூழார் குழலெழிற் றொண்டைச்செவ்
வாய்நவ்வி சொல்லறிந்தால்
தாழா தெதிர்வந்து கோடுஞ்
சிலம்ப தருந்தழையே. **#750**

இதன் பொருள்:

யாழ் ஆர் மொழி மங்கை பங்கத்து இறைவன் யாழோசைபோலும் மொழியையுடைய மங்கையது கூற்றையுடைய இறைவன்; எறி திரை நீர் ஏழ் ஆய் எழு பொழில் ஆய் இருந்தோன் எறியாநின்ற திரையையுடைய கடலேழுமாய் ஏழுபொழிலு மாயிருந்தவன்; நின்ற தில்லை அன்ன சூழ் ஆர் குழல் தொண்டை எழில் செவ்வாய் நவ்வி சொல் அறிந்தால் அவனின்ற தில்லையை ஒக்குஞ் சுருண்ட நிறைந்த குழலினையுந் தொண்டைக் கனிபோலும் எழிலையுடைய செவ்வாயினையுமுடைய நவ்வி போல்வாளது மாற்ற மறிந்தால்; சிலம்ப தரும் தழை தாழாது எதிர் வந்து கோடும் பின் சிலம்பனே நீ தருந்தழையைத் தாழாது நின்னெதிர்வந்து கொள்வேம்; அவள் சொல்வது அறியாது கொள்ள வஞ்சுதும் எ - று.

சூழாரென்புழிச் சூழ்தல் சூழ்ந்து முடித்தலெனினுமமையும். தில்லையன்ன நவ்வியெனவியையும். 93

விளக்கவுரை

12.4 நினைவறிவுகூறிமறுத்தல் நினைவறிவுகூறி மறுத்தல் என்பது

இத்தழை தந்நிலத்துக் குரித்தன்றென்றதல்லது மறுத்துக்கூறியவாறன்றென உட் கொண்டு, அந்நிலத்திற்குரிய தழைகொண்டு செல்ல, அதுகண்டு தானுடம்பட்டாளாய், யான் சென்று அவணினைவறிந்தால் நின்னெதிர்வந்து கொள்வேன்; அதுவல்லது கொள்ள அஞ்சுவேனென மறுத்துக் கூறா நிற்றல். அதற்குச் செய்யுள்ந
12.4. மைதழைக் கண்ணி மனமறிந் தல்லது
கொய்தழை தந்தாற் கொள்ளே மென்றது.

எழில்வா யிளவஞ்சி யும்விரும்
பும்மற் றிறைகுறையுண்
டழல்வா யவிரொளி யம்பலத்
தாடுமஞ் சோதியந்தீங்
குழல்வாய் மொழிமங்கை பங்கன்குற்
றாலத்துக் கோலப்பிண்டிப்
பொழில்வாய் தடவரை வாயல்ல
தில்லையிப் பூந்தழையே. **#751**

இதன் பொருள்:
எழில் வாய் இள வஞ்சியும் விரும்பும் நின் பாற்றழை கோடற்கு யானேயன்றி எழில் வாய்த்த இளைய வஞ்சியையொப்பாளும் விரும்பும்; மற்று இறை குறை உண்டு ஆயினுஞ் சிறிது குறையுண்டு; அழல்வாய் அவிர் ஒளி அழலிடத்துளதாகிய விளங்கு மொளியாயுள்ளான்; அம்பலத்து ஆடும் அம்சோதி அம்பலத்தின்கணாடும் அழகிய சோதி; அம் தீம் குழல் வாய் மொழி மங்கை பங்கன் அழகிய வினிய குழலோசை போலும் மொழியையுடைய மங்கையது கூற்றை யுடையான்; குற்றாலத்துக் கோலப்பிண்டிப் பொழில்வாய் அவனது குற்றாலத்தின் கணுளதாகிய அழகையுடைய அசோகப்பொழில் வாய்த்த; தடவரைவாய் அல்லது இப் பூந் தழை இல்லை பெரிய தாள் வரையிடத்தல்லது வேறோரிடத்து இப்பூந்தழையில்லை; அதனால் இத்தழை இவர்க்கு வந்தவாறென்னென்று ஆராயப்படும், ஆதலான் இவை கொள்ளேம் எ - று.
இத்தழையை யிளவஞ்சியும் விரும்பு மெனினுமமையும்.
அவிரொளியையுடைய அஞ்சோதியென்றியைப் பினுமமையும்.
பிறவிடத்து முள்ளதனை அவ்விடத்தல்லது இல்லை யென்றமையின், படைத்துமொழியாயிற்று. 94

விளக்கவுரை

12.5 படைத்து மொழியான் மறுத்தல்
படைத்து மொழியான் மறுத்தல் என்பது நினைவறிந் தல்லது ஏலேமென்று மறுத்துக்கூறியவாறன்று; நினைவறிந்தால் ஏற்பே

மென்றவாறாமென உட்கொண்டு நிற்ப, சிறிது புடை பெயர்ந்து அவணினைவறிந்தாளாகச்சென்று, இத்தழை யானே யன்றி அவளும் விரும்பும்; ஆயினும் இது குற்றாலத்துத் தழையா தலான் இத்தழை இவர்க்கு வந்தவாறு என்னோவென்று ஆராயப் படும்; ஆதலான் இத் தழை யெமக்காகாதென்று மறுத்துக்கூறா நிற்றல். அதற்குச் செய்யுள்

12.5. அருந்தழை மேன்மேற் பெருந்தகை கொணரப்
படைத்துமொழி கிளவியிற் றடுத்தவண் மொழிந்தது.

உறுங்கண்ணி வந்த கணையுர
வோன்பொடி யாயொடுங்கத்
தெறுங்கண்ணி வந்தசிற் றம்பல
வன்மலைச் சிற்றிலின்வாய்
நறுங்கண்ணி சூட்டினும் நாணுமென்
வாணுதல் நாகத்தொண்பூங்
குறுங்கண்ணி வேய்ந்திள மந்திகள்
நாணுமிக் குன்றிடத்தே. **#752**

இதன் பொருள்:

நிவந்த உறும் கள் கணை உரவோன் பொடியாய் ஒடுங்க எல்லார்கணையினும் உயர்ந்த மிகுந்த தேனையுடைய மலர்க்கணையையுடைய பெரிய வலியோன் நீறாய்க்கெட; தெறும்கண் நிவந்த சிற்றம்பலவன் தெறவல்ல கண்ணோங்கிய சிற்றம்பலவனது; மலைச் சிற்றிலின் வாய் மலைக்கணுண்டாகிய சிற்றிலிடத்து; நறுங் கண்ணி சூடினும் என் வாணுதல் நாணும் செவிலியர் சூட்டிய கண்ணிமேல் யானோர் நறுங்கண்ணியைச் சூட்டினும் அத்துணையானே என்னுடைய வாணுதல் புதிதென்று நாணாநிற்கும்; இக் குன்றிடத்து நாகத்து ஒண் பூங்குறுங் கண்ணி வேய்ந்து இள மந்திகள் நாணும் மகளிரைச் சொல்லுகின்றதென்! இக்குன்றிடத்து நாகமரத்தினது ஒள்ளிய பூக்களானியன்ற குறுங் கண்ணியைச்சூடி அச்சூடுதலான் இளமந்திகளும் நாணாநிற்கும் எ-று.

கண்ணிவந்தவென்பதற்குக் கள் மிக்க கணையெனினு மமையும். தெறுங்கண்ணிவந்தவென்றார், அக்கண் மற்றையவற்றிற்கு மேலாய்நிற்றலின். மேனோக்கி நிற்றலானெனினுமமையும். முதலொடு சினைக்கொற்றுமையுண்மையான் நிவந்த வென்னும் பெயரெச்சத்திற்குச் சிற்றம்பலவனென்பது வினைமுதற் பெயராய் நின்றது. மந்திகணாணுமென்பது பெயரெச்சமாக மலைக்கண் இக்குன்றிடத்துச் சிற்றிலின்வாயெனக் கூட்டியுரைப்பினு மமையும். இப்பொருட்குக் குன்றென்றது சிறுகுவட்டை. யானொன்று சூட்டினும் நாணும் பெருநாணினாள் நீர்கொணர்ந்த இக்கண்ணியை யாங்ஙனஞ்

சூடுமென்பது கருத்து. நாணுதலுரைத்ததென்னுஞ் சொற்கள் ஒரு சொன்னீர்மைப்பட்டு இரண்டாவதனையமைத்தன. 95

விளக்கவுரை

12.6 நாணுரைத்துமறுத்தல்

நாணுரைத்து மறுத்தல் என்பது பலபடியுந் தழைகொண்டு செல்ல மறுத்துக்கூறியவழி, இனித் தழையொழிந்து கண்ணியைக் கையுறையாகக் கொண்டுசென்றால் அவள் மறுக்கும் வகை யில்லையெனக் கழுநீர்மலரைக் கண்ணியாகப் புனைந்து கொண்டு செல்ல, அதுகண்டு, செவிலியர் சூட்டிய கண்ணியின் மேல் யானொன்று சூட்டினும் நாணாநிற்பள்; நீர்கொணர்ந்த இந்தக் கண்ணியை யாங்ஙனஞ் சூடுமெனத் தலைமகள் நாணு ரைத்து மறுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.6. வாணுதற் பேதையை
நாணுத லுரைத்தது.

நறமனை வேங்கையின் பூப்பயில்
பாறையை நாகநண்ணி
மறமனை வேங்கை யெனநனி
யஞ்சுமஞ் சார்சிலம்பா
குறமனை வேங்கைச் சுணங்கொ
டணங்கலர் கூட்டுபவோ
நிறமனை வேங்கை யதளம்
பலவன் நெடுவரையே . **#753**

இதன் பொருள்:

நற மனை வேங்கையின் பூ பயில் பாறையை நாகம் நண்ணி தேனிற்கிடமாகிய வேங்கைப் பூக்கள் பயின்ற பாறையை யானை சென்றணைந்து; மறம் மனைவேங்கை என நனி அஞ்சும் மஞ்சு ஆர் சிலம்பா அதனைத் தறுகண்மைக்கிடமாகிய புலியென்று மிகவுமஞ்சும் மஞ்சாருஞ் சிலம்பையுடையாய்; நிறம் மன்வேங்கை அதள் அம்பலவன் நெடுவரை நிறந்தங்கிய புலி யதளையுடைய அம்பலவனது நெடிய இவ்வரைக்கண்; குறம் மனை வேங்கைச் சுணங்கொடு அணங்கு அலர் கூட்டுபவோ குறவர் மனையிலுள்ளவாகிய வேங்கையினது சுணங்குபோலும் பூவோடு தெய்வத்திற்குரிய கழுநீர் முதலாகிய பூக்களைக் கூட்டுவரோ? கூட்டார் எ - று.

நறமனைவேங்கை யென்பதற்கு நறாமிக்கபூ வெனினு மமையும். குறமனை கூட்டுபவோ வென்பதற்குக் குறக்குடிகள் அவ்வாறு கூட்டுவரோ வென்றுரைப்பாருமுளர். நிறமனையென்புழி ஐகாரம்; அசைநிலை; வியப்பென் பாருமுளர். நிறம் அத்தன்மைத் தாகிய

அதளெனினுமமையும். ஒன்றனை ஒன்றாக ஓர்க்கு நாடனாதலான் அணங்கலர் சூடாத எம்மைச் சூடுவேமாக ஓர்ந்தா யென்பது இறைச்சிப்பொருள். ஒப்புமையான் அஞ்சப்படாத தனையும் அஞ்சும் நிலமாகலான் எங்குலத்திற்கேலாத அணங்கலரை யாமஞ்சுதல் சொல்லவேண்டுமோ வென்பது இறைச்சியெனினு மமையும். இப்பொருட்கு ஒருநிலத்துத் தலைமகளாகக் கொள்க. வேங்கைபூவிற்குச் சுணங்கணிந்திருத்தல் குணமாதலால் சுணங் கணியப்பட்டதனைச் சுணங்கென்றே கூறினாள். ; 96

விளக்கவுரை

12.7 இசையாமை கூறி மறுத்தல்

இசையாமை கூறி மறுத்தல் என்பது தலைமகணாணுரைத்து மறுத்த தோழி அவணாணங்கிடக்க யாங்கள் வேங்கைமலரல்லது தெய்வத்திற்குரிய வெறிமலர்சூட அஞ்சுதும்*;* ஆதலான் இக்கண்ணி எங்குலத்திற் கிசையாதென மறுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.7. வசைதீர் குலத்திற்

கிசையா தென்றது.

கற்றில கண்டன்னம் மென்னடை
கண்மலர் நோக்கருளப்
பெற்றில மென்பிணை பேச்சுப்
பெறாகிள்ளை பிள்ளையின்றொன்
றுற்றில ளுற்ற தறிந்தில
ளாகத் தொளிமிளிரும்
புற்றில வாளர வன்புலி
யூரன்ன பூங்கொடியே. **#754**

இதன் பொருள்:

கண்டு அன்னம் மெல் நடை கற்றில - புடைபெயர்ந்து விளையாடாமையின் நடைகண்டு அன்னங்கள் மெல்லிய நடையைக் கற்கப்பெற்றனவில்லை; கண் மலர் நோக்கு அருள மென்பிணை பெற்றில தம்மாற் குறிக்கப்படுங் கண்மலர் நோக்குகளை அவள் கொடுப்ப மென்பிணைகள் பெற்றனவில்லை; பேச்சுக் கிள்ளை பெறா உரையாடாமையின் தாங் கருது மொழிகளைக் கிளிகள் பெற்றனவில்லை; பிள்ளை இன்று ஒன்று உற்றிலள் இருந்தவாற்றான் எம்பிள்ளை இன்றொரு விளை யாட்டின்கணுற்றிலள்; ஆகத்து ஒளிமிளிரும் புற்றில வாள் அரவன் அதுவேயுமன்றி ஆகத்தின் கட்கிடந்தொளி விளங்கும் புற்றின் கண்ணவாகிய ஒளியையுடைய பாம்பையுடையவனது; புலியூர் அன்ன பூங்கொடி பூலியூரையொக்கும் பூங்கொடி; உற்றது அறிந்திலள் என்னுழை நீர் வந்தவாறும் யானுமக்குக்

குறைநேர்ந்த வாறும் இன்னுமறிந்திலள்; அதனாற் செவ்விபெற்றுச் சொல்லல் வேண்டும் எ - று.
கண்டென்பது கற்றலோடும், அருளவென்பது பெறுதலோடும் முடிந்தன. புற்றிலவென்பதற்கு வேள்வித்தீயிற் பிறந்து திரு மேனிக்கண் வாழ்தலாற் புற்றையுடையவல்லாத அரவென் றுரைப்பினு மமையும். ஆரத்தொளி யென்பதூஉம் பாடம். இவை யேழிற்கும் மெய்ப்பாடு: அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். முடியாதெனக் கருதுவாளாயின் இறந்துபடுமென்னும் அச்சமும் முடிக்கக் கருதலிற் பெருமிதமுமாயிற்று. பயன்: செவ்விபெறுதல். மேற்றலைமகளைக் குறைநயப்பித்து அவளது கருத்துணர்ந்து தன்னினாகிய கூட்டங் கூட்டலுறுந்தோழி தலைமகன் றெருண்டு வரைந்தெய்துதல் வேண்டி, இவை முதலாக முன்னர் விண்ணிறந்தார் (தி.8 கோவை பா.107) என்னும் பாட்டீறாக இவையெல்லாங்கூறிச் சேட்படுத்தப்பெறுமென்பது. 97

விளக்கவுரை

12.8 செவ்வியிலளென்று மறுத்தல்

செவ்வியிலளென்று மறுத்தல் என்பது அணங்கலர் தங்குலத்திற் கிசையாதென்றதல்லது மறுத்துக்கூறியவாறன்றென மாந்தழையோடு மலர் கொண்டுசெல்ல, அவை கண்டு உடம் படாளாய், அன்னம் பிணை கிள்ளை தந்தொழில் பயில இன்று செவ்வி பெற்றனவில்லை; அதுகிடக்க என்னுழை நீர்வந்தவாறும் யானுமக்குக் குறைநேர்ந்தவாறும் இன்னுமறிந்திலள்; அதனாற் செவ்வி பெற்றாற் கொணருமென மறுத்துக்கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.8. நவ்வி நோக்கி
செவ்வியில ளென்றது.

முனிதரு மன்னையும் மென்னையர்
சாலவும் மூர்க்கரின்னே
தனிதரு மிந்நிலத் தன்றைய
குன்றமுந் தாழ்சடைமேற்
பனிதரு திங்க ளணியம்
பலவர் பகைசெகுக்குங்
குனிதரு திண்சிலைக் கோடுசென்
றான்சுடர்க் கொற்றவனே. **#755**

இதன் பொருள்:

சுடர்க் கொற்றவன் சுடர்களுட்டலைவன்; தாழ்சடைமேல் பனிதரு திங்கள் அணி அம்பலவர் தாழ்ந்த சடைமேற் குளிர்ச்சியைத்தருந் திங்களைச் சூடிய அம்பலவர்; பகை செகுக்கும் குனிதரு திணிசிலைக் கோடு சென்றான் பகையைச் செகுக்கும் வளைந்த திண்ணிய

சிலையாகிய மேருவினது கோட்டையடைந்தான்; அன்னையும் முனிதரும் இனித் தாழ்ப்பின் அன்னையும் முனியும்; என்னையர் சாலவும் மூர்க்கர் என்னையன்மாரும் மிகவும் ஆராயாது ஏதம் செய்யும் தன்மையர்; இன்னே தனி தரும் இவ்விடமும் இனியியங்குவாரின்மையின் இப்பொழுதே தனிமை யைத் தரும்; ஐய ஐயனே; குன்றமும் இந்நிலத்து அன்று நினது குன்றமும் இந்நிலத்தின் கண்ணதன்று; அதனால் ஈண்டுநிற்கத் தகாது எ - று.
அம்பலவர் பகைசெகுத்தற்குத் தக்க திண்மை முதலாகிய இயல்பு அதற்கெக்காலத்து முண்மையால், செகுக்குமென நிகழ்காலத்தாற் கூறினார். இந்நிலைத்தன்றென்பது பாடமாயின், இக்குன்றமும் இவ்வாறு மகளிரும் ஆடவருந் தலைப்பெய்து சொல்லாடு நிலைமைத் தன்றெனவுரைக்க. மெய்ப்பாடும் பயனும் அவை. இவ்விடம் மிக்க காவலையுடைத்து இங்குவாரன்மினென்றாளென, இவ்விடத் தருமையை மறையாது எனக்குரைப்பாளாயது என்கட்கிடந்த பரிவினானன்றே; இத்துணையும் பரிவுடையாள் எனதாற்றாமைக் கிரங்கி முடிக்குமென ஆற்றுமென்பது. 98

விளக்கவுரை

12.9 காப்புடைத்தென்றுமறுத்தல்

காப்புடைத்தென்று மறுத்தல் என்பது செவ்வியிலளென்றது செவ்விபெற்றாற் குறையில்லையென்றாளாமென உட்கொண்டு நிற்ப, கதிரவன் மறைந்தான்*;* இவ்விடம் காவலுடைத்து*;* நும் மிடமுஞ் சேய்த்து*;* எம்மையன்மாருங் கடியர்*;* யாந்தாழ்ப்பின் அன்னையு முனியும்*;* நீரும் போய் நாளைவாருமென இசையமறுத்துக் கூறா நிற்றல்.

அதற்குச் செய்யுள்

12.9. காப்புடைத் தென்று
சேட்ப டுத்தது.

அந்தியின் வாயெழி லம்பலத்
தெம்பரன் அம்பொன்வெற்பிற்
பந்தியின் வாய்ப்பல வின்சுளை
பைந்தே னொடுங்கடுவன்
மந்தியின் வாய்க்கொடுத் தோம்புஞ்
சிலம்ப மனங்கனிய
முந்தியின் வாய்மொழி நீயே
மொழிசென்றம் மொய்குழற்கே. **#756**

இதன் பொருள்:

அந்தியின்வாய் எழில் அம்பலத்து எம்பரன் அம் பொன் வெற்பில் அந்தியின்கண் உண்டாகிய செவ்வானெ ழிலையுடைய

அம்பலத்தின்கணுளனாகிய எம்முடைய எல்லாப் பொருட்கும் அப்பாலாயவனது அழகிய பொன்னையுடைய வெற்பிடத்து; பந்தியின்வாய்ப் பைந்தேனொடும் பலவின் சுளை பந்தியாகிய நிரையின்கட் செவ்வித்தேனோடும் பலாச்சுளையை; கடுவன் மந்தியின்வாய்க் கொடுத்து ஓம்பும் சிலம்ப கடுவன் மந்தியினது வாயில் அருந்தக்கொடுத்துப் பாதுகாக்குஞ் சிலம்பை யுடையாய்; மனம் கனிய முந்தி இன் வாய்மொழி அம் மொய் குழற்கு நீயே சென்றுமொழி அவள் மனநெகிழ விரைந்து இவ்வினிய வாய்மொழிகளை அம்மொய்த்த குழலையுடையாட்கு நீயே சென்று சொல்லுவாயாக எ - று. எல்லாப்பொருளையுங் கடந்தானாயினும் எமக்கண்ணிய னென்னுங்கருத்தான், எம்பரனென்றார். வெற்பிற் சிலம்பவென வியையும். பந்தி பலாநிரையென்பாருமுளர். சிலம் பென்றது வெற்பினொருபக்கத்துளதாகிய சிறுகுவட்டை. வாய்மொழி மொழியென்னுந் துணையாய் நின்றது. மனங்கனியு மென்பதூஉம் நின்வாய்மொழி யென்பதூஉம் பாடம். மந்தி உயிர்வாழ்வதற்குக் காரணமாகியவற்றைக் கடுவன் தானேகொடுத்து மனமகிழ்வித்தாற் போல அவள் உயிர்வாழ்வதற்குக் காரணமாகிய நின் வார்த்தைகளை நீயேகூறி அவளைமனமகிழ்விப் பாயாகவென உள்ளுறையுவமங் கண்டுகொள்க. மெய்ப்பாடும் பயனும் அவை. 99

விளக்கவுரை

12.10 நீயேகூறென்றுமறுத்தல் நீயே கூறென்று மறுத்தல் என்பது இவள் இவ்விடத்து நிலைமையை மறையாது எனக்குரைப்பாளாயது என்கட்கிடந்த பரிவினானன்றே; இத்துணைப் பரிவுடையாள் எனக்கிது முடியாமை யில்லையெனத் தலைவன் உட்கொண்டுபோய்ப் பிற்றைஞான்று செல்ல, தோழி யான் குற்றேவன் மகளாகலிற் றுணிந்துசொல்ல மாட்டுகின்றிலேன்; இனி நீயே சென்று நின்குறையுள்ளது சொல்லெனத் தானுடம்படாது மறுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.10. அஞ்சுதும் பெரும பஞ்சின் மெல்லடியைக் கூறுவ நீயே கூறு கென்றது.

தெங்கம் பழங்கமு கின்குலை
சாடிக் கதலிசெற்றுக்
கொங்கம் பழனத் தொளிர்குளிர்
நாட்டினை நீயுமைகூர்
பங்கம் பலவன் பரங்குன்றிற்
குன்றன்ன மாபதைப்பச்
சிங்கந் திரிதரு சீறூர்ச்

சிறுமியெந் தேமொழியே. #757
இதன் பொருள்:
தெங்கம்பழம் கமுகின் குலை சாடி மூக்கூழ்த்து விழுகின்ற தெங்கம்பழம் கமுகினது குலையை உதிர மோதி; கதலி செற்று வாழைகளை முறித்து; கொங்கம்பழனத்து ஒளிர் குளிர்நாட்டினை நீ பூந்தாதையுடைய பழனத்துக்கிடந்து விளங்குங் குளிர்ந்த நாட்டினுள்ளாய்நீ; எம் தேமொழி எம்முடைய தேமொழி; உமை கூர் பங்கு அம்பலவன் பரங்குன்றில் உமை சிறந்த பாகத்தை உடைய அம்பலவனது பாங்குன்றிடத்து குன்று அன்ன மா பதைப்பச் சிங்கம் திரிதரும் சீறூர்ச் சிறுமி; மலைபோலும் யானைகள் நடுங்கச் சிங்கங்கள் வேட்டந்திரியுஞ் சீறூர்க்கணுள்ளாள் ஓர் சிறியாள்; அதனால் எம்மோடு நீ சொல்லாடுதல் தகாது எ - று. நாட்டினை யென்பதற்கு நாட்டையிடமாகவுடையையென இரண்டாவதன் பொருள்பட உரைப்பினுமமையும். பரங்குன்றிற் சீறூரெனவியையும். பெருங்காட்டிற் சிறுகுரம்பை யென்பது போதர, சிங்கந் திரிதரு சீறூரென்றாள். மெய்ப்பாடும் பயனும் அவை. 100

விளக்கவுரை

12.11 குலமுறை கூறிமறுத்தல் குலமுறை கூறிமறுத்தல் என்பது நீயே கூறெனச் சொல்லக் கேட்டு, உலகத்து ஒருவர்கண் ஒருவர் ஒருகுறை வேண்டிச் சென்றால் அக்குறை நீயே முடித்துக்கொள்ளென்பாரில்லை; அவ்வாறன்றி இவளிந்நாளெல்லாம் என்குறைமுடித்துத் தருவே னென்று என்னை யவமே யுழற்றி, இன்று நின்குறை நீயே முடித்துக் கொள்ளென்னாநின்றாளெனத் தலைமகன் ஆற்றாதுநிற்ப, அவனை யாற்றுவிப்பது காரணமாக, நீர் பெரியீர்; யாஞ்சிறியேம்; ஆகலான் எம்மோடு நுமக்குச் சொல்லாடுதல் தகாதெனக் குலமுறைகூறி மறுத்துரையாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.11 தொழுகுலத்தீர் சொற்காகேம்
இழிகுலத்தே மெனவுரைத்தது.

சிலையொன்று வாணுதல் பங்கன்சிற்
றம்பல வன்கயிலை
மலையொன்று மாமுகத் தெம்மையர்
எய்கணை மண்குளிக்குங்
கலையொன்று வெங்கணை யோடு
கடுகிட்ட தென்னிற்கெட்டேன்
கொலையொன்று திண்ணிய வாறையர்
கையிற் கொடுஞ்சிலையே. #758

இதன் பொருள்:
சிலை ஒன்று வாணுதல் பங்கன் சிலையை யொக்கும்

வாணுதலையுடையாளது கூற்றையுடையான்; சிற்றம் பலவன் சிற்றம்பலவன்; கயிலை மலை ஒன்று மா முகத்து எம் ஐயர் எய்கணை மண் குளிக்கும் அவனது கயிலைக்கண் மலையை யொக்கும் யானை முகத்து எம்மையன்மார் எய்யுங்கணை அவற்றையுருவி மண்ணின்கட்குளிப்பக்காண்டும்; கலை ஒன்று வெம் கணையோடு கடுகிட்டது என்னில் அவ்வாறன்றி ஒருகலை இவரெய்த வெய்ய வம்பினோடு விரைந்தோடிற்றாயின்; ஐயர் கையில் கொடுஞ் சிலைகெட்டேன் கொலை ஒன்று திண்ணிய ஆறு இவ்வையர் கையில் வளைந்த சிலை, கெட்டேன், கொலையாகிய வொன்று திண்ணிய வாறென்! எ - று.

கயிலைக்கண் மண்குளிக்குமென வியையும். கொடுஞ்சர மென்பதூஉம் பாடம். #9; 101

விளக்கவுரை

12.12 நகையாடிமறுத்தல் நகையாடி மறுத்தல் என்பது இவள் குலமுறைகிளத்தலான் மறுத்துக்கூறியவாறன்றென மனமகிழ்ந்துநிற்ப, இனியிவனாற் றுவானென உட்கொண்டு, பின்னுந்தழையெதிராது, எம்மையன் மாரேவுங்கண்டறிவேம்; இவ்வையர் கையிலேப்போலக் கொலையாற்றிண்ணியது கண்டறியேமென அவனேவாடல் சொல்லி நகையொடு மறுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.12 வாட்டழை யெதிராது சேட்படுத் தற்கு
மென்னகைத் தோழி யின்னகை செய்தது.

மைத்தழை யாநின்ற மாமிடற்
றம்பல வன்கழற்கே
மெய்த்தழை யாநின்ற வன்பினர்
போல விதிர்விதிர்த்துக்
கைத்தழை யேந்திக் கடமா
வினாய்க்கையில் வில்லின்றியே
பித்தழை யாநிற்ப ராலென்ன
பாவம் பெரியவரே. **#759**

இதன் பொருள்:

மை தழையாநின்ற மா மிடற்று அம்பலவன் கழற்கே கருமை மிகாநின்ற கரியமிடற்றையுடைய அம்பலவனது கழற்கண்ணே; தழையாநின்ற மெய் அன்பினர் போல விதிர் விதிர்த்து பெருகாநின்ற மெய்யன்பை யுடையவரைப் போல மிகநடுங்கி; கை தழை ஏந்தி கைக்கண்ணே தழையை ஏந்தி; கடமா வினாய் இதனோடு மாறுபடக் கடமாவை வினாவி; கையில் வில் இன்றியே தன்கையில் வில்லின்றியே; பெரியவர் பித்தழையா நிற்பர்- இப்பெரியவர் பித்தழையாநின்றார்; என்ன பாவம் -

இஃதென்ன தீவினையோ! எ - று.
மா கருமை. மாமிடறென்பது, பண்புத் தொகையாய் இன்னதிதுவென்னுந் துணையாய் நிற்றலானும், மைத்தழையா நின்ற வென்பது அக்கருமையது மிகுதியை உணர்த்தி நிற்றலானும், கூறியது கூறாலாகாமையறிக. அது 'தாமரைமீமிசை' எனவும், 'குழிந்தாழ்ந்த கண்ண' (நாலடியார். தூய்தன்மை - 9) எனவும் இத்தன்மை பிறவும் வருவனபோல. மெய்த்தழையாநின்ற வன்பென்பதற்கு மெய்யாற்ற ழையாநின்ற அன்பெனினுமமையும். பித்தென்றது ஈண்டுப் பித்தாற் பிறந்த அழைப்பை. அழைப்பு - பொருள் புணராவோசை. 102

விளக்கவுரை

12.13 இரக்கத்தொடு மறுத்தல்

இரக்கத்தொடு மறுத்தல் என்பது இவள் என்னுடனே நகையாடுகின்றது தழைவாங்குதற்பொருட்டென உட்கொண்டு நிற்ப, பின்னையுந் தழையேலாது, இவ்வையர் இவ்வாறு மயங்கிப் பித்தழையாநிற்றற்குக் காரணமென்னோவென்று அதற்கிரங்கி மறுத்துக்கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.13. கையுறை யெதிராது காதற் றோழி
யைய நீபெரி தயர்த்தனை யென்றது.

அக்கும் அரவும் அணிமணிக்
கூத்தன்சிற் றம்பலமே
ஒக்கு மிவள தொளிருரு
வஞ்சிமஞ் சார்சிலம்பா
கொக்குஞ் சுனையுங் குளிர்தளி
ருங்கொழும் போதுகளும்
இக்குன்றி லென்றும் மலர்ந்தறி
யாத வியல்பினவே. **#760**

இதன் பொருள்:

மஞ்சு ஆர் சிலம்பா மஞ்சார்ந்த சிலம்பை யுடையாய்; அக்கும் அரவும் அணி மணிக் கூத்தன் சிற்றம்பலம் ஒக்கும் இவளது ஒளிர் உரு அஞ்சி அக்கையும் அரவையும் அணியும் மாணிக்கம்போலுங் கூத்தனது சிற்றம்பலத்தை யொக்கும் இவளது விளங்காநின்ற வடிவையஞ்சி; கொக்கும் சுனையும் மாக்களுஞ் சுனைகளும்; குளிர் தளிரும் கொழும் போதுகளும் குளிர்ந்த தளிர்களுங் கொழுவிய போதுகளும்; இக்குன்றில் என்றும் மலர்ந்து அறியாத இயல்பின இக்குன்றில் எக்காலத்தும் விரிந்தறி யாத தன்மையையுடைய; அதனால் ஈண்டில்லாத இவற்றை யாமணி யிற் கண்டார் ஐயுறுவர் எ - று.
தளிர்மலர்ந்தறியாத வென்னுஞ் சினைவினை முதன்மேலேறி யும்,

போதுமலர்ந்தறியாத வென்னும் இடத்துநிகழ்பொருளின் வினை இடத்துமேலேறியும் நின்றன. 103

விளக்கவுரை

12.14 சிறப்பின்மை கூறிமறுத்தல்

சிறப்பின்மை கூறி மறுத்தல் என்பது என் வருத்தத்திற்குக் கவலாநின்றனள் இவளாதலின் எனக்கிது முடியாமை யில்லையென உட்கொண்டுநிற்ப, தோழி இக்குன்றிடத்து மாவுஞ் சுனையும் இவள் வடிவுக்கஞ்சி மலர்ந்தறியா, ஆதலான் ஈண்டில்லாதனவற்றை யாமணியிற் கண்டார் ஐயுறுவரென மறுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.14 மாந்தளிரும் மலர்நீலமும்
ஏந்தலிம்மலை யில்லையென்றது.

உருகு தலைச்சென்ற வுள்ளத்தும்
அம்பலத் தும்மொளியே
பெருகு தலைச்சென்று நின்றோன்
பெருந்துறைப் பிள்ளைகள்ளார்
முருகு தலைச்சென்ற கூழை
முடியா முலைபொடியா
ஒருகு தலைச்சின் மழலைக்கென்
னோவைய வோதுவதே. **#761**

இதன் பொருள்:

உருகுதலைச் சென்ற உள்ளத்தும் அன்ப ருடைய உருகுதலையடைந்த உள்ளத்தின்கண்ணும்; அம்பலத்தும் அம்பலத்தின்கண்ணும்; ஒளி பெருகுதலைச் சென்று நின்றோன் இரண்டிடத்துமொப்ப ஒளிபெருகுதலையடைந்து நின்றவனது; பெருந்துறைப் பிள்ளை பெருந்துறைக்கணுள்ளாகிய எம் பிள்ளை யுடைய; கள் ஆர் முருகு தலைச்சென்ற கூழை முடியா தேனார்ந்த நறுநாற்றம் தம்மிடத்தடைந்த குழல்கள் முடிக்கப்படா; முலை பொடியா முலைகள் தோன்றா; ஒரு குதலைச் சின் மழலைக்கு - ஒரு குதலைச் சின்மழலை மொழியாட்கு; ஐய - ஐயனே; ஓதுவது என்னோ நீ சொல்லுகின்றவிது யாதாம்! சிறிதுமியைபுடைத்தன்று எ-று.

ஏகாரம்: அசைநிலை. கள்ளார் கூழையென வியையும். குதலைமை விளங்காமை. மழலை இளஞ்சொல். சின்மழலை திறத்தென நான்காவது ஏழாவதன் பொருட்கண் வந்ததெனினு மமையும். இவை நான்கற்கும் மெய்ப் பாடும் பயனும் அவை. 104

விளக்கவுரை

12.15 இளமை கூறிமறுத்தல்
இளமை கூறி மறுத்தல் என்பது அவளது வடிவுக்கஞ்சி மலர்ந்தறியாவென்றதல்லது மறுத்துக்கூறியவாறன்று; சிறப் பின்மை கூறியவாறெென உட்கொண்டு, சிறப்புடைத் தழை கொண்டு செல்ல, அதுகண்டு, குழலும் முலையுங் குவியாத குதலைச் சொல்லிக்கு நீ சொல்லுகின்ற காரியம் சிறிதுமியை புடைத் தன்றென அவளதிளமை கூறி மறுத்துரையாநிற்றல். அதற்குச் செய்யுள்
12.15. முளையெயிற் றரிவை
விளைவில ளென்றது.

பண்டா லியலு மிலைவளர்
பாலகன் பார்கிழித்துத்
தொண்டா லியலுஞ் சுடர்க்கழ
லோன்தொல்லைத் தில்லையின்வாய்
வண்டா லியலும் வளர்பூந்
துறைவ மறைக்கினென்னைக்
கண்டா லியலுங் கடனில்லை
கொல்லோ கருதியதே. **#762**

இதன் பொருள்:
பண்டு ஆல் இயலும் இலை வளர் பாலகன் முற்காலத்து ஆலின்கணுளதாம் இலையின்கட்டுயின்ற பாலகனாகிய மாயோன்; பார் கிழித்து தொண்டால் இயலும் சுடர்க் கழலோன் நிலத்தைக் கிழித்துக் காணாமையிற் பின்றொண்டா லொழுகுஞ் சுடர்க் கழலையுடையானது; தொல்லைத் தில்லையின் வாய் வண்டு பழையதாகிய தில்லைவரைப்பி னுண்டாகிய வண்டுகள்; ஆல் இயலும் வளர் பூதுறைவ ஆலிப்போடு திரிதரும் மிக்க பூக்களையு டைய துறையை யுடையாய்; கண்டால் ஆராய்ந்தால்; என்னை மறைக்கின் கருதியது இயலும் கடன் இல்லை கொல் என்னை மறைப் பின் நீ கருதியது முடியு முறைமை யில்லை போலும் எ-று.

பண்டு தொண்டாலியலுமெனவும், தில்லை வரைப்பிற்றுறை யெனவுமியையும். தில்லைக்கட்டுறைவனெனினுமமையும். மெய்ப் பாடு: அச்சத்தைச் சார்ந்த நகை. இவள் நகுதலான் என்குறையின்ன தென உணர்ந்த ஞான்று தானே முடிக்குமென நினைந்து ஆற்று வானாவது பயன். 105

விளக்கவுரை

12.16 மறைத்தமை கூறி நகைத்துரைத்தல்
மறைத்தமை கூறி நகைத்துரைத்தல் என்பது இவளதிளமை கூறுகின்றது தழைவாங்குதற்பொருட்டன்றாகவேண்டும்; அதுவன்றி

இந்நாளெல்லாமியைய மறுத்து இப்பொழுது இவளிளையளென்று இயையாமைகூறி மறுக்கவேண்டிய தென்னை? இனி யிவ்வொழுக்கம் இவளையொழிய வொழுகக் கடவேனென உட்கொண்டுநிற்ப, நீ யென்னை மறைத்தகாரியம் இனி நினக்கு முடியாதென அவனோடு நகைத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.16. என்னைமறைத்தபின் எண்ணியதரிதென
நன்னுதல்தோழி நகைசெய்தது.

மத்தகஞ் சேர்தனி நோக்கினன்
வாக்கிறந் தூறமுதே
ஒத்தகஞ் சேர்ந்தென்னை யுய்யநின்
றோன்தில்லை யொத்திலங்கும்
முத்தகஞ் சேர்மென் னகைப்பெருந்
தோளி முகமதியின்
வித்தகஞ் சேர்மெல்லென் நோக்கமன்
றோஎன் விழுத்துணையே. **#763**

இதன் பொருள்:

மத்தகம் சேர் தனி நோக்கினன் நெற்றியைச் சேர்ந்த தனிக்கண்ணையுடையான்; வாக்கு இறந்து ஊறு அமுது ஒத்து அகம் சேர்ந்து என்னை உய்ய நின்றோன் சொல்லளவைக் கடந்து ஊறுமமுதத்தையொத்து மனத்தைச் சேர்ந்து என்னை யுய்ய நின்றவன்; தில்லை ஒத்து இலங்கு அவனது தில்லையை யொத் திலங்கும்; முத்து அகம் சேர் மெல் நகைப் பெருந்தோளி முத்துப் போலும் எயிறுகளுள்ளடங்கிய மூரன்முறுவலையுடைய பெருந் தோளியது; முகமதியின் வித்தகம் சேர் மெல் என் நோக்கம் அன்றோ என் விழுத்துணை முகமாகிய மதியின் கணுண்டாகிய சதுரப் பாட்டைச் சேர்ந்த மெல்லென்ற நோக்கமன்றோ எனது சிறந்ததுணை! அதனால் ஆற்றத்தகும் எ - று.

வாக்கிறந்தென்பதூஉம், அமுதொத்தென்பதூஉம், அகஞ் சேர்ந்தென்பதனோடியையும். உய்ய நின்றோனென்னுஞ் சொற்கள் உய்வித்தோனென்னும் பொருளவாய், ஒருசொன்னீர்மைப் பட்டு இரண்டாவதற்கு முடிபாயின. இலங்கு முகமதியென வியையும். மறுத்தாளாயினும் நங்கண் மலர்ந்த முகத்தளென்னுங் கருத்தான் இலங்குமுகமதியினென்றான். உள்ளக்குறிப்பை நுண்ணிதின் விளக்கலின், வித்தகஞ்சேர் மெல்லெனோக்கமென்றான். உள்ளக் குறிப்பென்றவாறென்னை? முன்னர்ச் 'சின்மழலைக் கென்னோ வையவோதுவ' (தி.8 கோவை பா.104) தென்று இளையளென மறுத்தவிடத்து, இந் நாளெல்லா மியைய மறுத்து இப்பொழுது

இவளிளையளென்று இயையாமை மறுத்தாள்; இவ்வொழுக்கம் இனி இவளை யொழிய வொழுகக் கடவேனென்று தலைமகன் தன்மனத்திற் குறித்தான்; அக்குறிப்பைத் தோழி அறிந்து கூறினமையின் வித்தகஞ்சேர் மெல்லெனோக்கமன்றோ எனக்குச் சிறந்ததுணை, பிறிதில்லையெனத் தனதாற்றாமை தோன்றக் கூறினான். மெய்ப்பாடு: உவகை. பயன்: ஆற்றாமை நீங்குதல். 106

விளக்கவுரை

12.17 நகை கண்டு மகிழ்தல்

நகை கண்டு மகிழ்தல் என்பது இவள் தன்னை மறைத்தால் முடியா தென்றது மறையாதொழிந்தால் முடியு மென்றாளாமெனத் தலைமகன் உட்கொண்டுநின்று, உன்னுடைய சதுரப்பாட்டைச் சேர்ந்த மெல்லென்ற நோக்கமன்றோ எனக்குச் சிறந்த துணை; அல்லது வேறு துணையுண்டோவென அவளது நகை கண்டு மகிழாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.17. இன்னகைத் தோழி மென்னகை கண்டு
வண்ணக் கதிர்வே லண்ண லுரைத்தது.

விண்ணிறந் தார்நிலம் விண்டவ
ரென்றுமிக் காரிருவர்
கண்ணிறந் தார்தில்லை யம்பலத்
தார்கழுக் குன்றினின்று
தண்ணறுந் தாதிவர் சந்தனச்
சோலைப்பந் தாடுகின்றார்
எண்ணிறந் தாரவர் யார்கண்ண
தோமன்ன நின்னருளே. **#764**

இதன் பொருள்:

விண் இறந்தார் நிலம் விண்டவர் என்று மிக்கார் இருவர் கண் இறந்தார் விண்ணைக்கடந்தவர் நிலத்தைப் பிளந்தவ ரென்று சொல்லப்படும் பெரியோரிருவருடைய கண்ணைக்கடந்தார்; தில்லை அம்பலத்தார் தில்லையம்பலத்தின் கண்ணார்; கழுக்குன்றில் நின்று தண் நறுந் தாது இவர் சந்தனச் சோலைப் பந்து ஆடுகின்றார் எண் இறந்தார் அவரது கழுக்குன்றின்கணின்று தண்ணிதாகிய நறிய தாது பரந்த சந்தனச் சோலையிடத்துப் பந்தாடுகின்றார் இறப்பப்பலர்; மன்ன- மன்னனே; நின் அருள் அவர் யார் கண்ணதோ நினதருள் அவருள் யார்கண்ணதோ? கூறுவாயாக எ - று.

விண்டவரென்பதற்கு முன்னுரைத்தது (தி.8 கோவை பா.24) உரைக்க. அன்னோர்க்கு அரியராயினும் எம் மனோர்க்கு எளிய ரென்னுங் கருத்தால் தில்லை யம்பலத்தாரென்றார். சோலைக் கணின்றென்று

கூட்டினுமமையும். எண்ணிறந்தார் பலரென்பதூஉம் பாடம்.
மெய்ப்பாடு: மருட்கையைச் சார்ந்த பெருமிதம். நும்மாற்
கருதப்படுவாளை அறியேனென்றாளாக, என்குறை இன்னாள்
கண்ணதென அறிவித்தால் இவள் முடிக்குமென நினைந்து ஆற்று
வானா மென்பது பயன். 107

விளக்கவுரை

12.18 அறியாள் போன்றுநினைவு கேட்டல்

அறியாள்போன்று நினைவுகேட்டல் என்பது தலைமகனது மகிழ்ச்சிகண்டு இவன் வாடாமற் றழைவாங்குவேனென உட்கொண்டு, என்னுடைய தோழியர் எண்ணிறந்தாருளர்; அவருள் நின்னுடைய நினைவு யார்கண்ணதோவெனத் தானறியாதாள் போன்று அவனினைவு கேளாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.18. வேந்தன் சொன்ன மாந்தளிர் மேனியை
வெறியார் கோதை யறியே னென்றது.

குவவின கொங்கை குரும்பை
குழல்கொன்றை கொவ்வைசெவ்வாய்
கவவின வாணகை வெண்முத்தங்
கண்மலர் செங்கழுநீர்
தவவினை தீர்ப்பவன் தாழ்பொழிற்
சிற்றம் பலமனையாட்
குவவின நாண்மதி போன்றொளிர்
கின்ற தொளிமுகமே. **#765**

இதன் பொருள்:

தவவினை தீர்ப்பவன் தாழ்பொழில் சிற்றம்பலம் அனையாட்கு விரதங்களான் வருந்தாமற் றவத்தொழிலை நீக்கி அன்பர்க்கு இன்புறு நெறியருளியவனது தாழ்ந்த பொழிலையுடைய சிற்றம்பலத்தை யொப்பாட்கு; குவவின கொங்கை குரும்பை குவிந்த கொங்கைகள் குரும்பையையொக்கும்; குழல் கொன்றை குழல் கொன்றைப் பழத்தை யொக்கும்; செவ்வாய் கொவ்வை செவ்வாய் கொவ்வைக் கனியையொக்கும்; கவவின வாள் நகை வெண் முத்தம் அதனகத்திடப்பட்ட வாணகை வெண்முத்தை யொக்கும்; கண் மலர் செங்கழுநீர் கண்மலர்கள் செங்கழு நீரை யொக்கும்; ஒளிமுகம் உவவின நாள் மதிபோன்று ஒளிர்கின்றது ஒளிமுகம் உவாவின் கணுளதாகிய செவ்விமதி போன்றொளிரா நின்றது எ - று.

தவ வினை தீர்ப்பவனென்பதற்கு மிகவும் வினைகளைத் தீர்ப்பவனெனினுமமையும். உவவினநாண்மதியென்றது 'கால குருகு' (குறுந்தொகை-25) என்பது போலப் பன்மை யொருமை மயக்கம்.

எப்பொழுதுந் தன்னுள்ளத்திடையறாது விளங்குதலின், ஒளிர்கின்ற தென நிகழ்காலத்தாற் கூறினான். உவவினமதி பலகலைகள்கூடி நிறைந்த தன்மையையுடைய மதி. நாண்மதி உவாவான நாளின்மதி. 108

விளக்கவுரை

12.19 அவயவங் கூறல் அவயவங் கூறல் என்பது இன்னும் அவளை யிவள் அறிந்திலள்; அறிந்தாளாயிற் றழைவாங்குவாளென உட்கொண்டு நின்று, என்னாற் கருதப்பட்டாளுக்கு அவயவம் இவையெனத் தோழிக்குத் தலைமகன் அவளுடைய அவயவங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.19. அவயவ மவளுக்
கிவையிவை யென்றது.

ஈசற் கியான்வைத்த வன்பி
னகன்றவன் வாங்கியவென்
பாசத்திற் காரென் றவன்தில்லை
யின்னொளி போன்றவன்தோள்
பூசத் திருநீ றெனவெளுத்
தாங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த்தை யிற்பெரு
நீளம் பெருங்கண்களே. **#766**

இதன் பொருள்:

ஈசற்கு யான் வைத்த அன்பின் அகன்று ஈசனிடத்து யான் வைத்த அன்புபோல அகன்று; அவன் வாங்கிய என்பாசத்தின் காரென்று அவனால் வாங்கப்பட்ட எனது பாசம் போலக் கறுத்து; அவன் தில்லையின் ஒளி போன்று அவனது தில்லையினொளியையொத்து; அவன் தோள் பூசு அத்திருநீறு என வெளுத்து அவன்றோள்களிற் சாத்தும் அத்திரு நீறுபோலவெளுத்து; அவன் பூங்கழல் யாம் பேசு அத்திரு வார்த்தையின் பெருநீளம் பெருங்கண்கள் அவனுடைய பூப்போலுந் திருவடிகளை யாம் பேசும் அத்திருவார்த்தை போல மிகவும் நெடியவாயிருக்கும் என்னாற் காணப்பட்டவளுடைய பெரிய கண்கள் எ - று.

அன்பினகன்றென்பதற்குப் பிறிதுரைப்பாருமுளர். தில்லையி னொளிபோறல் தில்லையினொளிபோலும் ஒளியையுடைத்தாதல். ஆகவே தில்லையே உவமையாம். பூசத்திருநீறு வெள்ளிதாய்த் தோன்றுமாறுபோல வெளுத்தென்றும். பேசத்திருவார்த்தை நெடிய வாயினாற்போலப் பெருநீளமாமென்றும் வினையெச்சமாக்கி, சில சொல் வருவித்துரைப்பினும் அமையும். பெருநீளமாமென ஆக்கம் வருவித்துத் தொழிற்படவுரைக்க. கண்களாற் பெரிது மிடர்ப்பட்டா

னாகலானும், தோழியைத் தனக்குக் காட்டின பேருதவியை உடையன ஆகலானும், முன்னர்க் கண்மலர் செங்கழுநீரென்றும் அமையாது, பின்னும் இவ்வாறு கூறினான். கண்ணிற்குப் பிறிதுவகையான் உவமங்கூறாது இங்ஙனம் அகல முதலாயின கூறவேண்டியது எற்றிற்கெனின், அவை கண்ணிற் கிலக்கணமுங் காட்டியவாறாம். என்னை இலக்கணமாமாறு?

கண்ணிற் கியல்பு கசடறக்கிளப்பின்
வெண்மை கருமை செம்மை யகல
நீள மொளியென நிகழ்த்துவர் புலவர்.1

ஆயின் இதனுட் செம்மை கண்டிலேமென்பார்க்குச் செம்மையுங் கூறிற்று. அவன்றோளிற் பூசத்திருநீறென்றதனால் சிவப்புஞ் சொல்லியதாயிற்று. அது செம்மையாற் றோன்றும் வரியெனவறிக. யான்பேசத் திருவார்த்தை யென்னாது யாமென்ற தென்னையெனின், திருவார்த்தை பேசுமன்பர் பலராகலான் யாமென்று பலராகக் கூறினான். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு: உவகையைச் சார்ந்த பெருமிதம். பயன்: ஐயமறுத்தல். ; 109

விளக்கவுரை

12.20 கண்ணயந்துரைத்தல்

கண்ணயந்துரைத்தல் என்பது அவயவங் கூறியவழிக் கூறி யும் அமையாது, தனக்கு அன்று தோழியைக் காட்டினமை நினை ந்து, பின்னுங் கண்ணயந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.20. கண்ணிணை பிறழ்வன
வண்ண முரைத்தது.

தோலாக் கரிவென்ற தற்குந்
துவள்விற்கு மில்லின்தொன்மைக்
கேலாப் பரிசுள வேயன்றி
யேலேம் இருஞ்சிலம்ப
மாலார்க் கரிய மலர்க்கழ
லம்பல வன்மலையிற்
கோலாப் பிரசமன் னாட்கைய
நீதந்த கொய்தழையே. **#767**

இதன் பொருள்:

இருஞ் சிலம்ப இருஞ்சிலம்பா; தோலாக் கரிவென்றதற்கும் எம்மையேதஞ்செய்யவருந் தோலாக்கரியை நீவென்றதற்கும்; துவள்விற்கும் யான் குறைமறுப்பவும் போகாது பேரன்பினையுடையையாய் நீ விடாது துவண்ட துவட்சிக்கும்; இல்லின் தொன்மைக்கு ஏலாப் பரிசு உளவே எமது குடியின் பழமைக்கேலாத இயல்பையுடையவென்று எம்மாற்

செய்யப்படாதன வுளவே ; ஐய ஐயனே; மாலார்க்கு அரிய மலர்க் கழல் அம்பலவன் மலையில் மாலார்க்குமரிய மலர்போலுங் கழலையுடைய அம்பல வனது மலையின்கண்; கோலாப் பிரசம் அன்னாட்கு நீ தந்த கொய் தழை வைக்கப்படாத தேனையொப்பாட்கு நீ தந்த கொய்தழையை; அன்றி ஏலேம் பிறிதோராற்றானேலேம் எ - று. உளவே யென்னு மேகாரம்: எதிர்மறை. அஃதென்போல வெனின் 'தூற்றாதே தூர விடல்' (நாலடியார் - 75) என்றது தூற்றுமென்று பொருள் பட்டவாறு போல வென்றறிக. அன்றியும், ஏலாப்பரிசுளவே யென்பதற்கு நாங்கள் இத்தழை வாங்குவதன் றென்றது கருத்து. எமது குடிப்பிறப்பின் பழமைபற்றி அது சுற்றத்தார் கூடி வாங்குவதொழிந்து நாங்களாக வாங்கினாற் குடிப்பிறப்புக்குப் பழிவருமென்பதனைப் பற்றியென்றவாறு. வழிபட்டுக் காணலு றாமையின், மாலாரென இழித்துக் கூறினாரெனினுமமையும், உளவேலன்றி லேயேமென்பது பாடமாயின், தழை வாங்குகின்றவழி என்பொருட்டால் நீர் நுங்குடிக் கேலாதனவற்றைச் செய்யாநின்றீ ரென்று தலைமகன் கூறியவழி, நீ செய்ததற்குக் கைம்மாறு செய்ய வேண்டுதுமாதலின் இற்பழியாங் குற்றம் இதற்குளவாயினல்லது இதனையேலே மென்று கூறினாளாக வுரைக்க. என்றது இற்பழியாங் குற்றம் இதற்குளவாகலான் ஏற்கின்றேம் நீ செய்தவுதவியைப் பற்றி அல்லதேலேமென்ற வாறெனவறிக. கோலாற்பிரச மென்பது பாடமாயின், கோலிடத் துப்பிரசம் என்றது கோற்றேன். இது சுவைமிகுதியுடைமை கூறியவாறென வுரைக்க. தோலாக்கரிவென்றது முதலாயின நிகழ்ச்சி செய்யுளின் கட் கண்டிலே மென்பார்க்கு இயற்கைப் புணர்ச்சியது நீக்கத்தின்கண் நிகழ்ந்தனவென வுரைக்க. அன்றியும் படைத்துமொழி வகுத்துரை யென்பனவற்றானுமறிக. அகறல் - அவன் கருத்திற்ககறல். மெய்ப்பாடு: அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்: குறைநேர்தல். 110

விளக்கவுரை

12.21 தழையெதிர்தல்

தழையெதிர்தல் என்பது கண்ணயந்துரைப்பக் கேட்ட தோழி இவ்வாறு ஏற்றல் எங்குடிக்கேலாவாயினும் நீ செய்தவுதவிக்கும் நின்பேரன்புக்கும் ஏலாநின்றேனெனக் கூறித் தலைமகன்மாட்டுத் தழையெதிராநிற்றல். அதற்குச் செய்யுள்

12.21. அகன்றவிடத் தாற்றாமைகண்டு
கவன்றதோழி கையுறையெதிர்ந்தது.

கழைகாண் டலுஞ்சுளி யுங்களி
யானையன் னான்கரத்தில்
தழைகாண் டலும்பொய் தழைப்பமுன்

காண்பனின் றம்பலத்தான்
உழைகாண் டலும்நினைப் பாகுமென்
நோக்கிமன் நோக்கங்கண்டால்
இழைகாண் பணைமுலை யாயறி
யேன் சொல்லும் ஈடவற்கே. **#768**
இதன் பொருள்:

கழை காண்டலும் சுளியும் களி யானை அன்னான் - குத்துகோலைக் காண்டலும் வெகுளுங் களியானையை யொப்பானுடைய; கரத்தில் தழை காண்டலும் பொய் முன் தழைப்பக் காண்பன் கையிற் றழையைக் காண்டலும் அப்பொழுது சொல்லத் தகும் பொய்யை முன்பெருகக் காண்பேன்; அம்பலத்தான் உழைகாண்டலும் நினைப்பு ஆகும் மெல் நோக்கி அம்பலத்தா னுடைய கையிலுழைமானைக் காண்டலும் நினைவுண்டாம் மெல்லிய நோக்கத்தை யுடையாய்; மன் நோக்கம் கண்டால் அம்மன்ன னுடைய புன்கணோக்கத்தைக் கண்டால்; இழை காண் பணை முலையாய் இழைவிரும்பிக் காணப்படும் பெரிய முலையை யுடையாய்; இன்று அவற்குச் சொல்லும் ஈடு அறியேன் இன்று அவற்குப் பொய்சொல்லுநெறி யறிகின்றிலேன்; இனி யாது செய்வாம்? எ - று.

குத்துகோல் வரைத்தன்றி யானை களிவரைத்தாயினாற் போலக் கழறுவார் சொல்வயத்தனன்றி வேட்கை வயத்தனா யினானென்பது போதரக் கழைகாண்டலுஞ் சுளியுங் களியானை யன்னா னென்றாள். ஈண்டுக்கழறுவாரென்றது தோழி தன்னை. அதாவது கையுறை பலவற்றையும் ஆகாவென்று தான் மறுத்ததனை நோக்கி. தலைமகளை முகங்கோடற்கு இழைகாண் பணை முலையா யெனப் பின்னும் எதிர்முகமாக்கினாள். தழையெதிர்ந்தாளாயினும் தலைமகளது குறிப்பறியாமையின், அவனைக் கண்டிலள்போலக் கண்டாலென எதிர்காலத்தாற் கூறினாள். இதனை முகம்புகவுரைத்தல் எனினும் குறிப்பறிதல் எனினுமொக்கும். 111

விளக்கவுரை

12.22 குறிப்பறிதல்

குறிப்பறிதல் என்பது தலைமகன் மாட்டுத் தழை யெதிர்ந்த தோழி இவளுக்குத் தெற்றெனக் கூறுவேனாயின் இவள் மறுக்கவுங்கூடுமென உட்கொண்டு, இந்நாள்காறுந் தழையே லாமைக்குத் தக்க பொய்சொல்லி மறுத்தேன்; இன்று அவனது நோக்கங் கண்டபின் பொய்சொல்லுநெறி அறிந்திலேன்; இனிய வனுக்குச் சொல்லுமாறென்னோவெனத் தழையேற்பித்தற்குத் தலைமகளது குறிப்பறியாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.22. தழையெதிரா தொழிவதற்கோர் சொல்லறியேனெனப் பல்வளைக்குரைத்தது.

தவளத்த நீறணி யுந்தடந்
தோளண்ணல் தன்னொருபால்
அவளத்த னாம்மக னாந்தில்லை
யானன் றுரித்ததன்ன
கவளத்த யானை கடிந்தார்
கரத்தகண் ணார்தழையுந்
துவளத் தகுவன வோசுரும்
பார்குழல் தூமொழியே. **#769**

இதன் பொருள்:

சுரும்பு ஆர் குழல் தூ மொழி - சுரும்பார்ந்த குழலையுடைய தூமொழியாய்; தவளத்த நீறு அணியும் தடந் தோள் அண்ணல் வெண்மையையுடைய நீற்றைச் சாத்தும் பெரிய தோள்களையுடைய அண்ணல்; தன் ஒரு பாலவள் அத்தன் ஆம் மகன் ஆம் தில்லையான் தனதொரு பாகத்துள்ளாகிய அவட்குத் தந்தையுமாய் மகனுமாந் தில்லையான்; அன்று உரித்தது அன்ன கவளத்த யானை அவன் அன்றுரித்த யானையை யொக்குங் கவளத்தையுடைய யானையை; கடிந்தார் கரத்த கண் ஆர் தழையும் துவளத் தகுவனவோ நம்மேல் வாராமற் கடிந்தவருடைய கைய வாகிய கண்ணிற்காருந் தழையும் வாடத் தகுவனவோ? தகா எ - று.

தவளத்தநீறு கவளத்தயானை என்பன; பன்மையொருமை மயக்கம். சிவதத்துவத்தினின்றுஞ் சத்திதத்துவந் தோன்றலின் அவளத் தனாமென்றும், சத்திதத்துவத்தினின்றுஞ் சதாசிவதத்து வந்தோன்ற லின் மகனாமென்றும் கூறினார். 'இமவான்மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன் றகப்பன்' (தி.8 திருப்பொற்சுண்ணம் பா.13) என்பதூஉம் அப்பொருண்மேல் வந்தது. கவளத்தயானை யென்பத னால் தான் விரும்புங் கவளமுண்டு வளர்ந்த யானையென்பதூஉம் கூறப்பட்டதாம். அது ஒருவராற் கட்டப்பட்டு மிடிப்பட்டதன்றாகலான், அதனை வெல்வதரிது; அப்படிப்பட்ட யானையையும் வென்றவர். அங்ஙனம் யானை கடிந்த பேருதவியார் கையனவுந் துவளத் தகுவனவோ வென்றதனால், அவருள்ளமுந் துவளாமற் குறைமுடிக்க வேண்டுமென்பது குறிப்பாற் கூறினாள். உம்மை: சிறப்பும்மை. ஏழைக்குரைத்ததென வியையும். இவை யிரண்டற்கும் மெய்ப்பாடு: அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன்: குறைநயப்பித்தல். 112

விளக்கவுரை

12.23 குறிப்பறிந்து கூறல்

குறிப்பறிந்து கூறல் என்பது குறிப்பறிந்து முகங்கொண்டு, அதுவழியாகநின்று, யானை கடிந்த பேருதவியார் கையிற்றழை யுந் துவளத்தகுமோ? அது துவளாமல் யாம் அவரது குறை முடிக்க வேண்டாவோவெனத் தோழி நயப்பக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
12.23. ஏழைக் கிருந்தழை
தோழிகொண் டுரைத்தது.

ஏறும் பழிதழை யேற்பின்மற்
றேலா விடின்மடன்மா
ஏறு மவனிட பங்கொடி
யேற்றிவந் தம்பலத்துள்
ஏறு மரன்மன்னும் ஈங்கோய்
மலைநம் மிரும்புனம் காய்ந்
தேறு மலைதொலைத் தாற்கென்னை
யாஞ்செய்வ தேந்திழையே. **#770**

இதன் பொருள்: ஏந்திழை - ஏந்திழாய்; தழை ஏற்பின் பழி ஏறும் தழையையேற்பின் தாமேயொரு நட்புச்செய்தாரென்று பிறரிடத்து நமக்குப் பழியேறும்; ஏலாவிடின் அவன் மடல் மா ஏறும் அதனையேலாதொழியின் பிறிதோருபாயமில்லையென்று அவன் மடலாகிய மாவையேறும்; இடபம் கொடி ஏற்றி வந்து அம்பலத்துள் ஏறும் தருமவடிவாகிய இடபத்தைக் கொடியின் கண்வைத்து நமது பிறவித்துன்பத்தை நீக்க ஒருப்பட்டுவந்து அம்பலத்தின்கணேறும்; அரன் மன்னும் ஈங்கோய் மலை அரன் றங்கும் ஈங்கோய் மலையின்; நம் இரும் புனம் காய்ந்து நமது பெரிய புனத்தையழித்து; ஏறும் மலை தொலைத்தாற்கு நம்மை நோக்கி வந்தேறும் மலைபோலும் யானை யைத் தோற்பித்தவற்கு; யாம் செய்வது என்னை யாஞ்செய்வ தென்னோ? அதனை யறிகின்றிலேன் எ - று.

மற்று: வினைமாற்று. மடன்மாவேறுமவனென்று தழையே லாவிடினும் பழியேறுமென்பதுபடக் கூறினமையானும், ஏறுமலை தொலைத்தாற் கென அவன் செய்த உதவி கூறினமையானும், தழையேற்பதே கருமமென்பதுபடக் கூறினாளாம். அன்றியுந் தழையேற்றால் நமக்கேறும்பழியை அறத்தொடுநிலை முதலாயின கொண்டு தீர்க்கலாமென்றும், ஏலாவிடின் அவன் மடன்மாவை யேறுதலான் வரும்பழி ஒன்றானுந் தீர்க்கமுடியா தென்றும் கூறியவாறாயிற்று.
வகுத்துரைத்தல் தழையேற்றலே கருமமென்று கூறுபடுத்துச் சொல்லுதல். #9; 113

விளக்கவுரை

12.24 வகுத்துரைத்தல்

வகுத்துரைத்தல் என்பது உதவிகூறவும் பெருநாணின ளாதலின் தழை வாங்கமாட்டாதுநிற்ப, அக்குறிப்பறிந்து, இருவகையானும் நமக்குப் பழியேறும்; அதுகிடக்க நமக்குதவி செய்தாற்கு நாமுமுதவி செய்யுமாறென்னோவெனத் தலைமகள் தழையேற்குமாறு வகுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.24. கடித்தழை கொணர்ந்த காதற் றோழி
மடக்கொடி மாதர்க்கு வகுத்து ரைத்தது.

தெவ்வரை மெய்யெரி காய்சிலை
யாண்டென்னை யாண்டுகொண்ட
செவ்வரை மேனியன் சிற்றம்
பலவன் செழுங்கயிலை
அவ்வரை மேலன்றி யில்லைகண்
டாயுள்ள வாறருளான்
இவ்வரை மேற்சிலம் பன்னெளி
திற்றந்த ஈர்ந்தழையே. **#771**

இதன் பொருள்:

அருளான் - நம்மாட் டுண்டாகிய அருளான்; இவ்வரைமேல் சிலம்பன் எளிதில் தந்த ஈர்ந்தழை இம்மலைக்கட் சிலம்பன் எளிதாக்கொணர்ந்து தந்த வாடாத இத்தழை; செழும் கயிலை அவ்வரைமேல் அன்றி இல்லை வளவிய கயிலையாகிய அம்மலை யிடத்தல்லது பிறிதோரிடத்தில்லை; இதனைக் கொள் வாயாக எ-று.

உள்ளவாறென்பது யான் கூறிய இது மெய்ம்மை யென்றவாறு. தெவ்வரை மெய் எரிகாய்சிலை ஆண்டு பகைவரை மெய்யெரித்த வரையாகிய காய்சிலையைப் பணி கொண்டு; என்னை ஆண்டு கொண்ட பின் என்னை யடிமை கொண்ட; செவ்வரை மேனியன் சிற்றம்பலவன் செழுங்கயிலை செவ்வரைபோலுந் திருமேனியையுடையனாகிய சிற்றம்பலவனது செழுங்கைலை யெனக் கூட்டுக.

மெய் எரியென்பன ஒருசொல்லாய்த் தெவ்வரையென்னும் இரண்டாவதற்கு முடிபாயின. மெய்யெரித்த காய்சிலை மெய்யெரி காய்சிலையென வினைத்தொகையாயிற்று. காய்சிலை: சாதியடை. ஐகாரத்தை அசைநிலையாக்கித் தெவ்வர் மெய்யெரித்தற்குக் காரண மாஞ்சிலையெனினு மமையும். வலியனவற்றை வயமாக்கிப் பயின்று பின் என்னையாண்டா னென்பது போதர, காய் சிலையாண் டென்னை யாண்டுகொண்ட வென்றார். என்னைத் தனக்கடிமை கொள்ளுதல் காரணமாகப் பிறிதொன்றின் மேலிட்டுக்கல்லை வளைத்தான்; என்னெஞ்சை வளைத்தல் காரணமாக அல்லது தனக்கொருபகை

யுண்டாய்ச் செய்ததன்றுபோலும் என்பது கருத்து. 'கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்டென்னை நின்கழற் கன்பனாக்கினாய்' (தி.8 திருச்சதகம் பா.94.) என்பதுமது. கயிலைத் தழையை எளிதிற்றந்தா னென்றதனான் வரைவு வேண்டியவழித் தமர் மறுப்பின் வரைந்து கொள்ளுந் தாளாண்மையனென்பது கூறினாளாம். கண்டாயென்பது: முன்னிலையசைச்சொல். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு: பெரு மிதம். பயன்: கையுறையேற்பித்தல். 114

விளக்கவுரை

12.25 தழையேற்பித்தல்

தழை யேற்பித்தல் என்பது தழையேலாதொழியினும் பழியேறுமாயிற் றழையேற்பதே காரியமென உட்கொண்டுநிற்ப, அக்குறிப்பறிந்து, இத்தழை நமக்கெளிய தொன்றன்று; இதனை யேற்றுக்கொள்வாயாகவெனத் தோழி தலைமகளைத் தழை யேற்பியாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.25. கருங்குழன் மடந்தைக் கரும்பெறற் றோழி
இருந்தழை கொள்கென விரும்பிக் கொடுத்தது.

பாசத் தளையறுத் தாண்டுகொண்
டோன்தில்லை யம்பலஞ்சூழ்
தேசத் தனசெம்மல் நீதந்
தனசென் றியான்கொடுத்தேன்
பேசிற் பெருகுஞ் சுருங்கு
மருங்குல் பெயர்ந்தரைத்துப்
பூசிற் றிலளன்றிச் செய்யா
தனவில்லை பூந்தழையே. **#772**

இதன் பொருள்:

பாசத்தளை அறுத்து பாசமாகிய தளையிற் பட்டுக்கிடப்ப அத்தளையை யறுத்து; ஆண்டு கொண்டோன் தில்லை யம்பலம் சூழ் தேசத்தன தனக்குக் குற்றேவல் செய்ய என்னை யடிமைகொண்டவனது தில்லையம்பலத்தைச் சூழ்ந்த தேசத்தின் கணுள்ளன; செம்மல்! நீ தந்தன - அச்சிறப்பே யன்றிச் செம்மால் நின்னாற் றரப்பட்டன; சென்று யான் கொடுத்தேன் அவற்றைச் சென்று யான் கொடுத்தேன்; பேசில் பெருகும் கொடுப்ப ஆண்டு நிகழ்ந்தன வற்றைச் சொல்லுவேனாயிற் பெருகும்; சுருங்கு மருங்குல் சுருங்கிய மருங்குலையுடையாள்; பூந்தழை அப்பூந் தழையை; அரைத்துப் பூசிற்றிலள் அன்றிப் பெயர்ந்து செய்யாதன இல்லை அரைத்துத் தன்மேனியெங்கும் பூசிற்றிலளல்லது பெயர்த்துச் செய்யாதனவில்லை எ - று. என்றது இவை வாடுமென்று கருதாது அரைத்துப் பூசினாற் போலத் தன்மேனிமுழுதும் படுத்தாள் என்றவாறு.

பெயர்த்தென்பது பெயர்ந்தென மெலிந்துநின்றது. பிசைந்தரைத்தென்று பாட மோதுவாருமுளர். மெய்ப்பாடு: உவகை. பயன்: தலைமகனை யாற்றுவித்தல். 115

விளக்கவுரை

12.26 தழைவிருப்புரைத்தல் தழை விருப்புரைத்தல் என்பது தலைமகளைத் தழை யேற்பித்துத் தலைமகனுழைச் சென்று, நீ தந்த தழையை யான்சென்று கொடுத்தேன்; அதுகொண்டு அவள் செய்தது சொல்லிற் பெருகுமெனத் தலைமகளது விருப்பங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

12.26. விருப்பவள் தோழி
பொருப்பற் குரைத்தது.

2.13.பகற்குறி

வானுழை வாளம்ப லத்தரன்
குன்றென்று வட்கிவெய்யோன்
தானுழை யாவிரு ளாய்ப்புற
நாப்பண்வண் தாரகைபோல்
தேனுழை நாக மலர்ந்து
திகழ்பளிங் கால்மதியோன்
கானுழை வாழ்வுபெற் றாங்கெழில்
காட்டுமொர் கார்ப்பொழிலே. **#773**

இதன் பொருள்:

ஓர் கார்ப்பொழில் ஒரு கரிய பொழில்; புறம் வெய்யோன் தான் நுழையா இருளாய் புறமெங்குங் கதிரோன் றான்சென்று நுழையாதவிருளாய்; நாப்பண் வண் தாரகை போல் தேன் நுழை நாகம் மலர்ந்து நடுவண் வளவிய வான் மீன்போலத் தேன்கள் நுழையும் நாகப்பூ மலர்ந்து; திகழ் பளிங்கான் திகழும் பளிங்கால்; மதியோன் கான் உழை வாழ்வு பெற்றாங்கு எழில் காட்டும் திங்கட்கடவுள் வானிடத்து வாழ்வையொழிந்து கானிடத்து வாழ்தலைப் பெற்றாற்போலத் தனதெழிலைப் புலப்படுத்தும் எ-று.

வான் உழை வாள் இருட்கு அப்பாலாகிய வானிடத் துண்டாகிய ஒளி; அம்பலத்து அரன் இவ்வண்ணஞ் சேயனாயினும் அணியனாய் அம்பலத்தின்கணுளனாகிய அரன்; குன்று என்று வட்கி வெய்யோன் தான் நுழையா அவனது மலையென்று கூசினாற்போல வெய்யவன் நுழையாவெனக்கூட்டுக. 'அண்ட மாரிரு ளூடு கடந்தும்ப - ருண்டு போலுமோரொண் சுடர்' (தி.5 ப.97 பா.2) என்பதூஉம் அப்பொருண்மேல் வந்தது. வட்கி யென்பதனால் முன் பற்பறியுண்டானாதல் விளங்கும்.வானுழை வாளென்பதற்குக் கற்பவிறுதிக்கண் தோன்றிய முறை யானே வான்சென்றொடுங்கும் ஒளியென்றுரைப்பாருமுளர். புறம் இருளாயெனவும், நாகமலர்ந் தெனவும், சினைவினை முதன்மேலேறி நின்றன. புறம் இருளா யென்பது இடத்து நிகழ்பொருளின் வினை இடத்தின்மேலேறி நின்றது. இது குறிப்பெச்ச மாதலான், ஆண்டு வாவென்பது கருத்து. மெய்ப்பாடு: உவகை. பயன்: குறியிட முணர்த்துதல். 116

விளக்கவுரை

13.1 குறியிடங் கூறல்

குறியிடங் கூறல் என்பது தழைவிருப்புரைத்த தோழி ஆங்கவள் விளையாடுமிடத்து ஒரு கரியபொழில் கதிரவன் நுழையாவிருளாய்

நடுவண் ஒரு பளிக்குப் பாறையையுடைத்தா யிருக்கும்; அவ்விடத்து வருவாயாகவென்று தலைமகனுக்குக் குறியிடங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

13.1. 9; வாடிடத் தண்ணல் வண்தழை யெதிர்ந்தவள்
ஆடிடத் தின்னியல் பறிய வுரைத்தது.

புயல்வள ரூசல்முன் ஆடிப்பொன்
னேபின்னைப் போய்ப்பொலியும்
அயல்வளர் குன்றில்நின் றேற்றும்
அருவி திருவுருவிற்
கயல்வளர் வாட்கண்ணி போதரு
காதரந் தீர்த்தருளுந்
தயல்வளர் மேனிய னம்பலத்
தான்வரைத் தண்புனத்தே. **#774**

இதன் பொருள்:

பொன்னே பொன்னே; காதரம் தீர்த்து அருளும் தயல் வளர் மேனியன் பிறவி காரணமாகவரு மச்சத்தை நீக்கி அருள்செய்யுந் தையல் தங்குந் திருமேனியை யுடையவனாகிய; அம்பலத்தான் வரைத் தண் புனத்து அம்பலத்தானது மலையிற் குளிர்ந்த புனத்தின்கண்; புயல் வளர் ஊசல் முன் ஆடி புயல்தங்கு மூசலை முன்னாடி; பின்னைப் போய் பின்போய்; அயல்பொலியும் வளர் குன்றில் நின்று அருவி ஏற்றும் அதற்கயலாகிய பொலியும் உயர்ந்த குன்றின்கணின்று அருவியை ஏற்போம்; திரு உருவின்கயல் வளர் வாள் கண்ணி போதரு திருப்போலும் உருவினையும் கயல்போலும் வாட்கண்ணையுமுடையாய், நீ போதுவாயாக எ-று.

உயர்ந்த வழை மரத்திற் றொடுத்தலால், புயல் வளரூசலென்றாள், வளர்கண்ணெனவியையும், ஈண்டு வளர் என்பது: உவமையுருபு. வாள்: உவமை; ஒளியெனினுமமையும். தண்புனத்துப் போதருவென இயைப்பினுமமையும். மெய்ப்பாடு: பெருமிதம்; உவகையுமாம். பயன்: குறியிடத்துப் போதருதல். 117

விளக்கவுரை

13.2 ஆடிடம் படர்தல்

ஆடிடம் படர்தல் என்பது தலைமகனுக்குக் குறியிடங் கூறின தோழி யாம் புனத்தின்கட்போய் ஊசலாடி அருவியேற்று விளையாடுவேம் போதுவாயாகவெனத் தலைமகளை ஆயத் தொடுங் கொண்டு சென்று ஆடிடம் படராநிற்றல். அதற்குச் செய்யுள்

13.2. வண்தழை யெதிர்ந்த வொண்டொடிப் பாங்கி
நீடமைத் தோளியொ டாடிடம் படர்ந்தது.

தினைவளங் காத்துச் சிலம்பெதிர்
கூஉய்ச்சிற்றின் முற்றிழைத்துச்
சுனைவளம் பாய்ந்து துணைமலர்
கொய்து தொழுதெழுவார்
வினைவளம் நீறெழ நீறணி
யம்பல வன்றன்வெற்பிற்
புனைவளர் கொம்பரன் னாயன்ன
காண்டும் புனமயிலே. **#775**

இதன் பொருள்: தொழுது எழுவார் வினை வளம் நீறு எழ தொழா நின்று துயிலெழுவாருடைய வினையினது பெருக்கம் பொடியாக; நீறு அணி அம்பலவன்றன் வெற்பிற் தன் றிருமேனிக் கண் நீற்றையணியும் அம்பலவனது வெற்பில்; புனை வளர் கொம்பர் அன்னாய் கைபுனையப்பட்ட வளர்கொம்பையொப்பாய்; தினைவளம் காத்து தினையாகிய வளத்தைக் காத்து; சிலம்பு எதிர்கூஉய் சிலம்பிற் கெதிரழைத்து; சிற்றில் முற்று இழைத்து சிற்றிலை மிகவுமிழைத்து; சுனை வளம் பாய்ந்து சுனைப்புனலிற் பாய்ந்து; துணை மலர் கொய்து ஒத்த மலர்களைக் கொய்து; அன்ன புனமயில் காண்டும் அத்தன்மையவாகிய புனமயிலைக் காண்பேம் யாம் எ-று. மலைக்கு வளமாதனோக்கித் தினைவளமென்றாள். தினையினது மிகுதியெனினுமமையும். தொழுதெழுவாரென்றது துயிலெழுங்காலத்தல்லது முன்னுணர்வின்மையான் உணர்வுள்ள காலத்து மறவாது நினைவார் என்றவாறு. நீறணிந்த கோலம் நெஞ்சம் பிணிக்குமெழிலுடைமையான் அக்கோலந் தொழுதெழுவாருள்ளத்து நீங்காது நிற்றலான் ஆண்டுள்ளவினை நீறாமென்னுங் கருத்தால், வினைவள நீறெழ நீறணியம்பலவனென்றார். புதல்வனது பிணிக்குத் தாய் மருந்துண்டாற்போலத் தொழுதெழுவார் வினைக்குத் தானீறணிந்தானென்பாருமுளர். வெற்பினென்புழி வெற்பைத் தினைகாத்தல் முதலாகிய தொழிற்கு இடமாக வுரைப்பினுமமையும். அத்தன்மையவாகிய மயிலென்றது பொருளதி காரத்திற் கூறப்பட்ட தலைமகள் தான்றமியளாய் நின்று கண்ட மயிலை. இயற்கைப்புணர்ச்சிய திறுதிக்கட் டோழி தனது வாட்டத்தை வினவியபோது யானோரிள மயிலாலுவது கண்டேன்; அதனை நீயுங் காணப் பெற்றிலை யென வாடினே னென்று உரைப்பக் கேட்டாளாதலான், அதனைப் பற்றி அம்மயிலைக் காண்டு மென்றாளாயிற்று. மெய்ப்பாடு: அது. பயன்: ஆயம்பிரிதல். 118

விளக்கவுரை

13.3 குறியிடத்துக்கொண்டு சேறல்

குறியிடத்துக்கொண்டு சேறல் என்பது ஆடிடம்படர்ந்த தோழி தலைமகனுக்குத் தான்சொன்ன குறியிடத்து இவளைக் கொண்டு சென்றுய்க்கும்பொழுது, ஆயத்தாரைத் தம்மிடத்தி னின்று நீக்க வேண்டுதலின் தினைகாத்தல் முதலாகிய விளையாட்டுக்களைத் தான் கூறவே அவ்வவ்விளையாட்டிற் குரியார் தலைமகள் அவ்வவ் விடங்களிலே வருவளென்று கருதித்தோழி சொன்ன வகையே அவ்வவ் விளையாட்டு விருப்பினான் எல்லாரும் பிரிவர்; அவ்வகை ஆயவெள்ளத்தைப் பிரிவித்து, தமியளாய் நின்ற தலைமகளையுங் கொண்டு யாமும் போய் மயிலாடல் காண்பேமென அக்குறியிடத்துச் செல்லா நிற்றல். அதற்குச் செய்யுள்

13.3. அணிவள ராடிடத் தாய வெள்ள
மணிவளர் கொங்கையை மருங்க கன்றது.

நரல்வே யினநின தோட்குடைந்
துக்கநன் முத்தஞ்சிந்திப்
பரல்வே யறையுறைக் கும்பஞ்
சடிப்பரன் தில்லையன்னாய்
வரல்வேய் தருவனிங் கேநிலுங்
கேசென்றுன் வார்குழற்கீர்ங்
குரல்வே யளிமுரல் கொங்கர்
தடமலர் கொண்டுவந்தே. **#776**

இதன் பொருள்:

உங்கே சென்று யான் உவ்விடத்தே சென்று; ஈர்ங்குரல் வேய் அளி முரல் கொங்கு ஆர் தடமலர் கொண்டு வந்து தேனானீரிய பூங்கொத்தைமூடிய அளிகள் முரலுந் தாதுநிறைந்த பெரியமலர்களைக் கொய்து கொண்டு வந்து; உன் வார் குழற்கு வேய்தருவன் நின்னுடைய நெடியகுழற்கண் வேய்வேன்; பரன் தில்லை அன்னாய் பரனது தில்லையை யொப்பாய்; நரல் வேய் இனம் நின தோட்கு உடைந்து உக்க நல்முத்தம் சிந்தி காற்றா னொன்றோடொன்று தேய்ந்து நரலும் வேய்த்திரள் உன்னுடைய தோள்கட்கஞ்சிப் பிளத்தலான் உக்க நல்ல முத்துக்கள் சிதறுதலால்; பரல் வேய் அறை பஞ்சு அடி உறைக்கும் பரல் மூடிய பாறை நினது பஞ்சடிக் கணுறைக்கும்; வரல் இங்கே நில் அதனான் என்னோடு ஆண்டு வரற்பாலையல்லை, ஈண்டு நிற்பாயாக எ-று.

யான்றருவன் நீ வேயென்றும் பிறவாற்றானு முரைப்பாரு முளர். குரலென்பது பூங்கொத்தை. தடமல ரென்பதற்குத் தடத்து மலரென்றுரைப்பாருமுளர். பரல்வேயறை யுறைக்கும் வரல்; வேய்தருவன்; இங்கேநில்லென்று தலைமகளைத் தோழி கூறி இவ்விடத்தே நில்லென்றாள். மெய்ப்பாடு: அது. பயன்: தலைமகளைக்

விளக்கவுரை

13.4 இடத்துய்த்து நீங்கல்

இடத்துய்த்து நீங்கல் என்பது குறியிடைக் கொண்டு சென்ற தோழி யான் அவ்விடத்துச்சென்று நின்குழற்குப் பூக்கொய்து வருவேன்; அவ்விடம் வேய் முத்துதிர்தலான் நினது மெல்லடிக்குத் தகாதாதலான் நீ என்னோடு வாராது இங்கேநின்று பூக்கொய்வாயாக வெனத் தலைமகளைக் குறியிடத்து நிறுத்தித் தானீங்காநிற்றல். அதற்குச் செய்யுள்

13.4. மடத்தகை மாதரை இடத்தகத் துய்த்து
நீங்க லுற்ற பாங்கி பகர்ந்தது.

படமா சுணப்பள்ளி யிக்குவ
டாக்கியப் பங்கயக்கண்
நெடுமா லெனவென்னை நீநினைந்
தோநெஞ்சத் தாமரையே
இடமா விருக்கலுற் றோதில்லை
நின்றவன் ஈர்ங்கயிலை
வடமார் முலைமட வாய்வந்து
வைகிற்றிவ் வார்பொழிற்கே. **#777**

இதன் பொருள்:

வடம் ஆர் முலை மடவாய் வடமார்ந்த முலையையுடைய மடவாய்; தில்லை நின்றவன் ஈர்ங்கயிலை வார் பொழிற்கு வந்து வைகிற்று தில்லைக்கணின்றவனது குளிர்ந்த கயிலைக்கண் நீண்ட இப்பொழிலிடத்து வந்து தங்கியது; இக்குவடு படமாசுணப் பள்ளி ஆக்கி இக்குவட்டைப் படத்தையுடைய மாசுண மாகிய பள்ளியாக்கி; என்னைப் பங்கயக் கண் அந்நெடுமால் என நீ நினைந்தோ என்னை அம்மாசுணப்பள்ளியிற் றங்கும் பங்கயம் போலுங் கண்ணையுடைய அந்நெடியமாலென்று நீ நினைந்தோ; நெஞ்சத்தாமரையே இடம் ஆ இருக்கல் உற்றோ நெடுமாலின் மார்பினன்றித் தாமரையினுமிருத்தலான் யான் நீங்கினும் என்னெஞ்சமாகிய தாமரையே நினக்கிடமாக இருக்க நினைந்தோ?, கூறுவாயாக எ-று. மாசுணப்பள்ளி மாசுணத் தானியன்ற பள்ளியெனினு மமையும். என்னெஞ்சத் தாமரைக் கணிருக்கலுற்றோ வென்றதனான், இப்பொழிற்கண் வந்து நின்றநிலை ஒருஞான்றும் என்னெஞ்சினின்று நீங்காதென உவந்து கூறினானாம். கயிலைமட வாயென்றியைப்பினு மமையும். வான்பொழிலென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு: உவகை. பயன்: தலைமகளைக் கண்டு தன் காதன் மிகுதியாற்றோன்றிய

பேருவகையை ஆற்றகில்லான் ஆற்றுதல்; தலைமகளை மகிழ்வித்தலுமாம். 120

விளக்கவுரை

13.5 உவந்துரைத்தல்

உவந்துரைத்தல் என்பது தோழி தலைமகளைக் குறியிடை நிறுத்தி நீங்காநிற்பத் தலைமகன் சென்றெதிர்ப்பட்டு, இக்குவட்டை மாசுணப்பள்ளியாகவும் என்னைத் திருமாலாகவும் நினைந்தோ நீ இப்பொழிற்கண் வந்து நின்றதெனத் தலைமகளை உவந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

13.5. களிமயிற் சாயலை யொருசிறைக் கண்ட
ஒளிமலர்த் தாரோ னுவந்து ரைத்தது.

தொத்தீன் மலர்ப்பொழில் தில்லைத்தொல்
லோனரு ளென்னமுன்னி
முத்தீன் குவளைமென் காந்தளின் **9;**
மூடித்தன் ஏரளப்பாள்
ஒத்தீர்ங் கொடியி னொதுங்குகின்
றாள்மருங் குல்நெருங்கப்
பித்தீர் பணைமுலை காளென்னுக்
கின்னும் பெருக்கின்றதே. **#778**

இதன் பொருள்:

தொத்து ஈன் மலர்ப் பொழில் தில்லைத் தொல்லோன் அருள் என்ன முன்னி - கொத்துக்களையீனும் மலர்ப் பொழில்களையுடைய தில்லையிற் றொல்லோனதருள்போல வந்தெதிர்ப்பட்டு; முத்து ஈன் குவளை மென் காந்தளின் மூடி கண்ணீர்த் துளியாகிய முத்தைவிடாநின்ற கண்ணாகிய குவளை களைக் கையாகிய மெல்லிய காந்தட்பூவான் மூடி; தன் ஏர் அளப்பாள் ஒத்து அதனோடு சார்த்தித் தன்னெழிலை யளவிடுவாள் போன்று; ஈர்ங்கொடியின் ஒதுங்குகின்றாள் மருங்குல் நெருங்க குளிர்ந்த கொடியின்கண் நாணி மறைகின்றவளது மருங்குலடர்ப்புண்ண; பித்தீர் பணைமுலைகாள் பித்தையுடையீர் பணைமுலைகாள்; இன்னும் பெருக்கின்றது என்னுக்கு நும்பெருமைமேல் இன்னு நீர்பெருக்கின்ற தெற்றிற்கு? இது நன்றன்று எ-று.

தமக்காதார மென்று கருதாது அடர்க்கின்றமை நோக்கி, பித்தீரென்றான். பெருக்கின்ற தெற்றிற்கு நீர் பித்தையுடையீரென வினைக்குறிப்பு முற்றாகவுரைப்பினுமமையும். இவ்வாறு தானாதர வுரைத்து இறுமருங் குறாங்குவானாய்ச் சென்று சாருமென்பது. ஈன்கொடி, ஈன்பணை முலையென்பனவும் பாடம். ஈன்கொடி

மலரீன்றகொடி. அரிவை யையென்பது பாடமாயின் நாணுதல் கண்ட வென்பனவற்றை ஒருசொல்லாக்கி முடிக்க. மெய்ப்பாடு: அது. பயன்: சார்தல் . 121

விளக்கவுரை

13.6 மருங்கணைதல்

மருங்கணைதல் என்பது உவந்துரைப்பக் கேட்ட தலைமகள் பெருநாணினளாதலிற் கண்புதைத்து ஒருகொடியி னொதுங்கி வருந்தாநிற்ப, சென்றுசார்தலாகாமையிற் றலைமகன் அவ்வருத்தந் தணிப்பான்போன்று, முலையொடு முனிந்து அவளிறுமருங்கு றாங்கி யணையாநிற்றல். அதற்குச் செய்யுள்

13.6. வாணுதல் அரிவை நாணுதல் கண்ட
கோதை வேலவன் ஆதர வுரைத்தது.

அளிநீ டளகத்தின் அட்டிய
தாதும் அணியணியும்
ஒளிநீள் சுரிகுழற் சூழ்ந்தவொண்
மாலையுந் தண்நறவுண்
களிநீ யெனச்செய் தவன்கடற்
றில்லையன் னாய்கலங்கல்
தெளிநீ யனையபொன் னேபன்னு
கோலந் திருநுதலே. **#779**

இதன் பொருள்:

நீ தண் நறவு உண் களி எனச் செய்தவன் கடல் தில்லை அன்னாய் நீ குளிர்ந்த நறவையுண்ணுங் களிமகனென்று பிறர் சொல்லும் வண்ணம் ஓரின்பத்தை யெனக்குச் செய்தவனது கடலை யுடைய தில்லையையொப்பாய்; அளி நீடு அளகத்தின் அட்டிய தாதும் அளிகள் விடாது தங்கு மளகத்தின்கண் இட்டதாதும்; அணி அணியும் அணிந்தவணிகளும்; ஒளி நீள் சுரிகுழல்சூழ்ந்த ஒண் மாலையும் ஒளியையுடைய நீண்ட சுரிகுழல் இடத்துச் சுற்றிய நல்லமாலையும் இவையெல்லாம்; நீ அனைய பொன்னே பன்னு கோலம் நின்னோடொருதன்மையளாகிய நின்றோழி யாராய்ந்து செய்யுங் கோலமே; திரு நுதலே திருநுதலாய்; கலங்கல் யான்பிறிதோர் கோலஞ் செய்தேனென்று கலங்க வேண்டா; தெளி தெளிவாயாக எ-று. தண்ணறவுண்களி நீயெனச் செய்தவ னென்பதற்குப் பிறிது ரைப்பாருமுளர். பொன்னேயென்னு மேகாரம்: பிரிநிலையேகாரம். அணிமணியுமென்பதூஉம் பாடம். பாங்கியறிவு பாங்கியவ் வொழுக்கத்தையறிந்த வறிவு. மெய்ப் பாடு: பெருமிதம். பயன்: பாங்கியறிந்தமை தலைமகட்குணர்த்துதல். 122

விளக்கவுரை

13.7 பாங்கியறிவுரைத்தல்

பாங்கி யறிவுரைத்தல் என்பது மருங்கணைவிறுதிக்கட் டலைமகளதையந்தீர, அவளைக்கோலஞ்செய்து, இது நின்றோழி செய்த கோலமே; நீ கலங்கா தொழிகெனத் தலைமகன் தான்றோழியொடு தலைப்பெய்தமை தோன்றக் கூறாநிற்றல் . அதற்குச் செய்யுள்

13.7. நெறிகுழற் பாங்கி
அறிவறி வித்தது.

செழுநீர் மதிக்கண்ணிச் சிற்றம்
பலவன் திருக்கழலே
கெழுநீர் மையிற்சென்று கிண்கிணி
வாய்க்கொள்ளுங் கள்ளகத்த
கழுநீர் மலரிவள் யானதன்
கண்மரு விப்பிரியாக்
கொழுநீர் நறப்பரு கும்பெரு
நீர்மை யளிகுலமே. **#780**

இதன் பொருள்:

செழுநீர் 'மதிக் கண்ணிச் சிற்றம்பலவன் திருக்கழலே வளவிய நீர்மையையுடைய மதியாகிய கண்ணியை யுடைய சிற்றம்பலவனது திருக்கழல்களையே; கெழு நீர்மையின் சென்று கிண்கிணி வாய்க்கொள்ளும் பொருந்து நீர்மையான் உண்மகிழ்ந்து முகமலர்வது போலப் போதாகிய நிலைமையை விட்டு மலராம் நிலைமையையடைந்து சிறிதே மலரத்தொடங்கும்; கள் அகத்த கழுநீர்மலர் இவள் தேனை யகத்துடைய கழுநீர் மலர் இவள்; யான் அதன்கண் மருவிப் பிரியாக் கொழுநீர் நறப்பருகும் பெரு நீர்மை அளிகுலம் யான் அக்கழுநீர் மலர்க்கண் மருவி ஒருகாலும் பிரியாத கொழுவிய நீர்மையையுடைய அந்நறவைப்பருகும் பெருந்தன்மையையுடைய தோரளிசாதி எ-று.

செழுநீர்மதிக்கண்ணி யென்பதற்கு வளவியநீரு மதியாகிய கண்ணியுமென்பாருமுளர். திருக்கழலே யென்னுமேகாரம்: பிரிநிலை யேகாரம். செழுநீர்மையையுடைய கழுநீர் மலரென்றியைப்பினு மமையும். சென்று கிண்கிணிவாய்க் கொள்ளுமென்பதனால், பேதைப் பருவங் கடந்து இன்பப்பருவத்த ளாயினாளென்பது விளங்கும். கள்ளகத்தவென்பதனால், புலப்படா துண்ணிறைந்த காதலளென்பது விளங்கும். கள்ளகத்த கழுநீர் மலரென்பது 'காலகுருகு' (குறுந் - 25) என்பதுபோல நின்றது; பெயரெச்ச மெனினுமமையும். யான் மருவிப் பிரியாத அளிகுலமெனினுமமையும். நறா: குறுகி நின்றது. பெரு நீர்மை

அளிகுலமென்றான், கழுநீர் மலரல்ல தூதாமையின். அதனால், பிறிதோரிடத்துந் தன்னுள்ளஞ் செல்லாமை விளங்கும். மெய்ப்பாடு: உவகை. பயன்: நயப் புணர்த்துதல். 123

விளக்கவுரை

13.8 உண்மகிழ்ந்துரைத்தல்

உண்மகிழ்ந்துரைத்தல் என்பது பாங்கியறிவுரைப்பக் கேட்ட தலைமகள், இனி நமக்கொரு குறையில்லையென வுட்கொண்டு முகமலராநிற்ப, அம்முகமலர்ச்சி கண்டு, அவளைக் கழுநீர்மலராகவும், தான் அதனறவைப் பருகும் வண்டாகவும் புனைந்து, தலைமகன் றன்னுண்மகிழ்ந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

13.8. தண்மலர்க் கோதையை
உண்மகிழ்ந் துரைத்தது.

கொழுந்தா ரகைமுகை கொண்டலம்
பாசடை விண்மடுவில்
எழுந்தார் மதிக்கம லம்மெழில்
தந்தென இப்பிறப்பில்
அழுந்தா வகையெனை ஆண்டவன்
சிற்றம் பலமனையாய்
செழுந்தா தவிழ்பொழி லாயத்துச்
சேர்க திருத்தகவே. **#781**

இதன் பொருள்:

இப் பிறப்பில் அழுந்தாவகை எனை ஆண்டவன் சிற்றம்பலம் அனையாய் இப்பிறவியின்கணழுந்தா வண்ண மென்னையடிமை கொண்டவனது சிற்றம்பலத்தை யொப்பாய்; கொழுந்தாரகை முகை கொண்டல் பாசடை விண் மடுவில் கொழுவிய தாரகையாகிய முகையையுங் கொண்டலாகிய பசிய விலையையு முடைய விண்ணாகிய மடுவின்கண்; எழுந்து ஆர் மதிக் கமலம் எழில் தந்தென எழுந்து நிறைந்த மதியாகிய வெண்டாமரைப் பூத்தன தெழிலைப் புலப்படுத்தினாற்போல; செழுந் தாது அவிழ்பொழில் ஆயத்துத் திருத்தகச் சேர்க வளவிய தாதவிழாநின்ற பொழிற்கண் விளையாடுகின்ற ஆயத்தின்கட் பொலிவு தக இனிச்சேர்வாயாக எ-று.

முகையோடு தாரகைக்கொத்தபண்பு வெண்மையும் வடிவும் பன்மையும். தாரகையோ டாயத்தார்க்கொத்தபண்பு பன்மையும் ஒன்றற்குச் சுற்றமாய் அதனிற்றாழ்ந்து நிற்றலும். கமலத்தோடு மதிக்கொத்த பண்பு வெண்மையும் வடிவும் பொலியும். மதியோடு தலைமகட்கொத்தபண்பு கட்கினிமையும் சுற்றத்திடை அதனின் மிக்குப் பொலிதலும். இவ்வாறொத்தபண்பு வேறுபடுதலான் உவமைக் குவமை யாகாமை

யறிந்துகொள்க. கொண்டலம் பாசடையென்புழி அம்முச்சாரியை அல்வழிக்கண் வந்தது; அம் - அழகெனினுமமை யும். புனைமடமான் கைபுனையப்பட்டமான். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: புறத்தாரறியாமைப் பிரிதல். 124

விளக்கவுரை

13.9 ஆயத்துய்த்தல்

ஆயத்துய்த்தல் என்பது மலரளிமேல்வைத்து மகிழ்வுற்றுப் பிரிய லுறாநின்ற தலைமகன், யாமித்தன்மையேமாதலின், நமக்குப் பிரிவில்லை, இனி யழகிய பொழிலிடத்து விளையாடும் ஆயம் பொலிவுபெறச் சென்று, அவரோடு சேர்ந்து விளையாடு வாயெனத் தலைமகளை யாயத்துச் செலுத்தா நிற்றல். அதற்குச் செய்யுள்

13.9. கனைகடலன்ன கார்மயிற்கணத்துப்
புனைமடமானைப் புகவிட்டது.

பொன்னனை யான்தில்லைப் பொங்கர
வம்புன் சடைமிடைந்த
மின்னனை யானருள் மேவலர்
போன்மெல் விரல்வருந்த
மென்னனை யாய்மறி யேபறி
யேல்வெறி யார்மலர்கள்
இன்னன யான்கொணர்ந் தேன்மணந்
தாழ்குழற் கேய்வனவே. **#782**

இதன் பொருள்:

ஆய் மறியே அசைந்த மான்மறிபோல்வாய்; பொன் அனையான் பொன்னையொப்பான்; தில்லைப் பொங்கு அரவம் புன்சடை மிடைந்த மின் அனையான் தில்லைக் கணுளனாகிய வெகுளாநின்ற வரவம் புல்லிய சடைக்கண் மிடைந்த மின்னையொப்பான்; அருள் மேவலர் போல் மெல் விரல் வருந்த அவனதருளைப் பொருந்தாதாரைப் போல மெல்லிய விரல்கள் வருந்த; மெல் நனை பறியேல் மென்னனைகளைப் பறியா தொழிவாயாக; மணம் தாழ் குழற்கு ஏய்வன வெறி ஆர் மலர்கள் இன்னன யான் கொணர்ந்தேன் நின்மணந்தங்கிய குழற்குப் பொருந்துவனவாகிய நறுநாற்றநிறைந்த மலர்களித்தன்மையன வற்றை யான் கொணர்ந்தேன் எ-று.

மிடைந்த வென்னும் பெயரெச்சம் மின்னனையானென்று நிலப்பெயர்கொண்டது. அரவஞ்சடைமிடைதலை மின்மேலேற்றி, இல்பொருளுவமையாக வுரைப்பாருமுளர். இல்பொருளுவமை யெனினும் அபூதவுவமையெனினு மொக்கும். இவள் மலரைப் பறியாமல் மொட்டைப் பறிப்பானே னென்பதுகடா. அதற்கு விடை: இவள்

தலைமகனைப் பிரிந்து அப்பிரி வாற்றாமையானும், தலைமகன் புணர்ச்சிநீக்கத்துக்கட் டன்னைக் கோலஞ்செய்த அக்கோலத்தைத் தோழி காணாநின்றாளென்னும் பெருநாணினானும் ஆற்றாளாய், மலரைப் பறிக்கின்றவள் மயங்கி மொட்டைப் பறித்தாளெனவறிக. மெல்லிய மொட்டுக்களைப் பறியாதொழி, இத்தன்மைய நறுமலரை நின்குழற்கணிதற்கு யான்கொணர்ந்தேனென்பதனான், இவ் வொழுக்கம் யானறியப்பட்டது காணென்றுடம்பாடு கூறிய வாறாயிற்று. என்னனையாய் கொணர்ந்தேனென்பதூஉம் பாடம். நின்றிடத்துய்த்து இடத்துய்த்து நீங்கிநின்று. பெயர்ந்து - மீண்டு சென்று.

125

விளக்கவுரை

13.10 தோழிவந்து கூடல்

தோழிவந்து கூடல் என்பது தலைமகனைப் பிரிந்த தலை மகடானும் பூக்கொய்யாநின்றாளாகப் பிரிவாற்றாமையானும் பெருநாணினானுந் தடுமாறி மொட்டுக்களைப் பறியாநிற்ப, யானின் குழற்காம் பூக்கொண்டு வந்தேன், நீ விரல்வருந்த மொட்டுக்களைப் பறிக்கவேண்டாவெனத் தோழிவந்து கூடா நிற்றல். அதற்குச் செய்யுள்

13.10. நெறியுறு குழலியை நின்றிடத் துய்த்துப்
பிறைநுதற் பாங்கி பெயர்ந்தவட் குரைத்தது.

அறுகால் நிறைமல ரைம்பால்
நிறையணிந் தேன் அணியார்
துறுகான் மலர்த்தொத்துத் தோகைதொல்
லாயமெல் லப்புகுக
சிறுகால் மருங்குல் வருந்தா
வகைமிக என்சிரத்தின்
உறுகால் பிறர்க்கரி யோன்புலி
யூரன்ன வொண்ணுதலே. **#783**

இதன் பொருள்:

என் சிரத்தின் உறுகால் பிறர்க்கு மிக அரியோன் புலியூர் அன்ன ஒண்ணுதலே என்றலைக்கணுற்றகால் பிறர்க்கு மிகவரியவனது புலியூரை யொக்குமொண்ணுதலாய்; அணி ஆர் துறு கான் மலர்த் தொத்து அழகார்ந்த நெருங்கிய நறுநாற்றத்தையுடைய மலர்க்கொத்துக்களை; அறுகால் நிறை மலர் ஐம்பால் நிறை அணிந்தேன் வண்டுகணிறைந்த மலரையுடைய நின்னைம்பாற்கண் நிறைய வணிந்தேன்; தோகை தோகையையொப்பாய்; சிறு கால் மருங்குல் வருந்தாவகை சிறியவிடத்தையுடைய மருங்குல் வருந்தாவண்ணம்; தொல் ஆயம் மெல்லப் புகுக பழையதாகிய

ஆயத்தின்கண் மெல்லப் புகுவாயாக எ-று.

அறுகானிறை மலரை யணிந்தே னென்றும், மலர்க் கொத்துக் களையுடைய தோகாயென்றும், உரைப்பாருமுளர். நிறைய வென்பது குறைந்துநின்றது. காலென்னுஞ்சினை பிறர்க்கரியோ னெனத்தன் வினைக்கேலாவெழுத்துக்கொண்டது. இவையிரண்டற்கும் மெய்ப் பாடு: பெருமிதம். பயன்: தலைமகளை யாற்றாமை நீக்குதல். 126

விளக்கவுரை

13.11 ஆடிடம் புகுதல்

ஆடிடம் புகுதல் என்பது கொய்துவந்த மலருங் குழற் கணிந்து, இனி நின்சிறுமருங்குல் வருந்தாமல் மெல்லச் செல்வாயாக வெனத் தோழி தலைமகளையுங்கொண்டு ஆடிடம் புகாநிற்றல். அதற்குச் செய்யுள்

13.11. தனிவிளை யாடிய தாழ்குழற் றோழி
பனிமதி நுதலியோ டாடிடம் படர்ந்தது.

தழங்கு மருவியெஞ் சீறூர்
பெரும இதுமதுவுங்
கிழங்கு மருந்தி இருந்தெம்மொ
டின்று கிளர்ந்துகுன்றர்
முழங்குங் குரவை இரவிற்கண்
டேகுக முத்தன்முத்தி
வழங்கும் பிரானெரி யாடிதென்
தில்லை மணிநகர்க்கே. **#784**

இதன் பொருள்:

பெரும பெரும; தழங்கும் அருவி இது எம் சீறூர் தழங்காநின்ற அருவியையுடைய விஃதெமது சீறூர்; மதுவும் கிழங்கும் அருந்தி இன்று எம்மொடு இருந்து இதன்கண் யாமருந்துந் தேனையுங் கிழங்கையு நீயுமருந்தி இன்றெம்மோடுதங்கி; குன்றர் கிளர்ந்து முழங்கும் குரவை இரவில் கண்டு மணி நகர்க்கு ஏகுக குன்றரெல்லாருமெழுந்து முழங்குமிந்நிலத்து விளையாட்டாகிய குரவையை யிரவிற்கண்டு நாளை நினது நல்ல நகர்க்கேகுவாயாக எ-று.

முத்தன் இயல்பாகவே முத்தன்; முத்தி வழங்கும் பிரான் முத்தியையேற்பார்க்கு வழங்குமுதல்வன்; எரியாடி ஊழித்தீயின் கணாடுவான் - தென்தில்லை மணிநகர் - அவனது தெற்கின் கட்டில்லையாகிய மணிநகரெனக் கூட்டுக. ஏற்பார்மாட்டொன்றுங் கருதாது கொடுத்தலின் வழங்கு மென்றார். உலகியல் கூறுவாள்போன்று ஒருகானீவந்து போந்துணை யாலிவளாற்றுந் தன்மையளல்லளென்பது பயப்பக்கூறி, வரைவு கடாயவாறு. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: குறிப்பினாற் பிரிவாற்றாமை கூறி

விளக்கவுரை

13.12 தனிகண்டுரைத்தல்

தனிகண்டுரைத்தல் என்பது தலைமகளை யாயத்துய்த்துத் தலைமகனுழைச் சென்று, இஃதெம்மூர்; இதன்கண் யாமருந்துந் தேனையுங் கிழங்கையு நீயுமருந்தி, இன்றெம்மோடுதங்கி, நாளை நின்னூருக்குப் போவாயாகென உலகியல் கூறுவாள் போன்று, வரைவுபயப்பக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள் *13.12.* வேயோத்த தோளியை ஆயத் துய்த்துக்
குனிசிலை யண்ணலைத் தனிகண்டு ரைத்தது

தள்ளி மணிசந்த முந்தித்
தறுகட் கரிமருப்புத்
தெள்ளி நறவந் திசைதிசை
பாயும் மலைச்சிலம்பா
வெள்ளி மலையன்ன மால்விடை
யோன்புலி யூர்விளங்கும்
வள்ளி மருங்குல் வருத்துவ
போன்ற வனமுலையே. **#785**

இதன் பொருள்:

மணி தள்ளி மணிகளைத் தள்ளி; சந்தம் உந்தி சந்தனமரங்களை நூக்கி; தறுகட் கரி மருப்புத் தெள்ளி தறுகண்மை யையுடைய யானையின் மருப்புக்களைக் கொழித்து; நறவம் திசைதிசை பாயும் மலைச் சிலம்பா தேன் றிசைதோறும் பரக்கும் மலையையுடைய சிலம்பனே; வெள்ளி மலை அன்ன மால் விடையோன் புலியூர் விளங்கும் தனது வெள்ளிமலையாகிய கயிலையையொக்கும் பெரியவிடையையுடையவனது புலியூர் போலவிளங்கும்; வள்ளி மருங்குல் கொடிச்சியது மருங்குலை; வனமுலைவருத்துவ போன்றன நல்ல முலைகள் வளராநின்ற படியால் வருத்துவன போன்றன; இனி வரைந்தெய்துவாயாக எ-று.

சிலம்பனென்பது அதனையுடையனென்னும் பொருணோக் காது ஈண்டுப் பெயராய் நின்றது. புலியூர் புரையு மென்பதூஉம் பாடம். யாவருமறியாவிவ்வரைக்கண்வைத்த தேன் முதிர்ந்துக்கு அருவி போன்றெல்லாருங்காணத் திசைதிசை பரந்தாற் போல, கரந்த காமம் இவள் கதிர்ப்பு வேறுபாட்டாற் புறத்தார்க்குப் புலனாய் வெளிப் படாநின்றதென உள்ளுறையுவமை யாயினவாறு கண்டு கொள்க.

மெய்ப்பாடு: அச்சம். இவ்வொழுக்கம் புறத்தாரறி யினி வளிறந்துபடும், இறந்துபட இவனுமிறந்து படுமென்னு நினைவி னளாதலால், பயன்:

வரைவுகடாதல். 128

விளக்கவுரை

13.13 பருவங்கூறி வரவு விலக்கல்

பருவங்கூறி வரவு விலக்கல் என்பது உலகியல் கூறுவாள் போன்று குறிப்பால் வரைவுகடாவி, இனியிவ்வாறொழுகாது வரைவொடு வருவாயாக வெனத் தலைமகளது பருவங்கூறி, தலைமகனைத் தோழி வரவுவிலக்காநிற்றல். அதற்குச் செய்யுள்

13.13. மாந்தளிர் மேனி யைவரைந் தெய்தா
தேந்த லிவ்வா றியங்க லென்றது.

மாடஞ்செய் பொன்னக ரும்நிக
ரில்லையிம் மாதர்க்கென்னப்
பீடஞ்செய் தாமரை யோன்பெற்ற
பிள்ளையை யுள்ளலரைக்
கீடஞ்செய் தென்பிறப் புக்கெடத்
தில்லைநின் றோன்கயிலைக்
கூடஞ்செய் சாரற் கொடிச்சியென்
றோநின்று கூறுவதே. **#786**

இதன் பொருள்:

மாடம் செய் பொன் நகரும் இம்மாதர்க்கு நிகர் இல்லை என்ன மாடமாகச் செய்யப்பட்ட பொன்னகராகிய அமராவதிக்கண்ணும் இம்மாதர்க் கொப்பில்லையென்று சொல்லும் வண்ணம்; பீடம் செய் தாமரையோன் பெற்ற பிள்ளையை பீடமாகச் செய்யப்பட்ட தாமரையையுடைய நான்முகன்பயந்த பிள்ளையை; கயிலைக் கூடம் செய் சாரற் கொடிச்சி என்றோ நின்று கூறுவது கயிலை மலைக்கட் கூடஞ்செய்யப்பட்ட சாரலிடத்து வாழுங் கொடிச்சியென்றோ நீ நின்றுசொல்லுவது? இவ்வாறு சொல்லற் பாலையல்லை எ-று. உள்ளலரைக் கீடம் செய்து தன்னை நினையாதாரைப் புழுக்களாகச் செய்து; என் பிறப்புக் கெடத் தில்லை நின்றோன் கயிலை யான்றன்னை நினைவேனாகச் செய்து என் பிறப்புக்கெடத் தில்லைக்கணின்றவனது கயிலையெனக் கூட்டுக. கூட மென்றது மன்றாகச் செய்யப்பட்ட தேவகோட்டத்தை. கூடஞ் செய் சாரலென்பதற்கு மரத்திரளாற் கூடஞ்செய்தாற் போலுஞ் சாரலெனினு மமையும். கூடஞ்செய்தாற் போலுமுழைகளையுடைய சாரலெனினு மமையும். வரைவுடம் படாது மிகுத்துக் கூறியது மெய்ப்பாடு: இளிவரல். பயன்: தலைமகனது விருப்பு உணர்த்துதல். 129

விளக்கவுரை

13.14 வரைவுடம்படாதுமிகுத்துக்கூறல்
வரைவுடம்படாது மிகுத்துக் கூறல் என்பது பருவங்கூறி வரைவுகடாய தோழிக்கு, அமராவதிக்கண்ணும் இம்மாதர்க் கொப்பில்லையென நான்முகன் பயந்தபிள்ளையை யான்வரை யுந் துணையெளியளாக நீ கூறுகின்றதென்னோவெனத் தலை மகன் வரைவுடம்படாது தலைமகளை மிகுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
13.14. வரைவு கடாய வாணுதற் றோழிக்கு
விரைமலர்த் தாரோன் மிகுத்து ரைத்தது.

வேய்தந்த வெண்முத்தஞ் சிந்துபைங்
கார்வரை மீன்பரப்பிச்
சேய்தந்த வானக மானுஞ்
சிலம்பதன் சேவடிக்கே
ஆய்தந்த அன்புதந் தாட்கொண்ட
அம்பல வன்மலையில்
தாய்தந்தை கானவ ரேனலெங்
காவலித் தாழ்வரையே. **#787**

இதன் பொருள்:
வேய் தந்த வெண் முத்தம் சிந்து பைங்கார் வரை மீன் பரப்பி வேயுண்டாக்கிய வெள்ளிய முத்துக்கள் சிந்திய சோலைகளாற் பசிய கரிய தாழ்வரை மீன்களைத் தன்கட்பரப்பி; சேய் தந்த வான் அகம் மானும் சிலம்ப சேய்மையைப் புலப்படுத்திய வானிடத்தை யொக்குஞ் சிலம்பையுடையாய்; தாய் தந்தை எமக்குத் தாயுந் தந்தையும்; தன் சேவடிக்கே ஆய் தந்த அன்பு தந்து தன்னுடைய சிவந்த திருவடிக்கே ஆராயப்பட்டவன்பைத் தந்து; ஆட்கொண்ட அம்பலவன் மலையிற் கானவர் என்னை யடிமைக் கொண்ட அம்பலவனது மலையிற் கானவரே; இத் தாழ் வரை ஏனல் எம் காவல் இத்தாழ்வரையினுண்டாகிய தினை யெமது காவலாயி ருக்கும்; அதனானீவரைவு வேண்டாமையிற் புனைந்து கூறவேண்டு வதில்லை எ-று.
வினைமுதலல்லாத கருவி முதலாயின அவ்வினைமுதல் வினைக்குச் செய்விப்பனவாமாதலில், பரப்பியெனச் செய்விப்பதாகக் கூறினார். சேவடிக்கே அன்புதந்தென வியையும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: வரைவுகடாதல் . 130

விளக்கவுரை

13.15 உண்மைகூறிவரைவுகடாதல்
உண்மைகூறி வரைவுகடாதல் என்பது வரைவுடம்படாது மிகுத்துக்கூறிய தலைமகனுக்கு, எங்களுக்குத் தாயுந் தந்தையுங்

கானவர்; யாங்கள் புனங்காப்போஞ் சிலர்; நீர் வரைவு வேண்டாமையி னெம்மைப்புனைந்துகூறல் வேண்டுவதில்லை யெனத் தோழி தங்களுண்மைகூறி வரைவுகடாவாநிற்றல். அதற்குச் செய்யுள்
13.15. கல்வரை நாடன் இல்ல துரைப்ப
ஆங்கவ ளுண்மை பாங்கி பகர்ந்தது.

மன்னுந் திருவருந் தும்வரை
யாவிடின் நீர்வரைவென்
றுன்னு மதற்குத் தளர்ந்தொளி
வாடு திரும்பரெலாம்
பன்னும் புகழ்ப்பர மன்பரஞ்
சோதிசிற் றம்பலத்தான்
பொன்னங் கழல்வழுத் தார்புல
னென்னப் புலம்புவனே. **#788**

இதன் பொருள்:

வரையா விடின் மன்னும் திருவருந்தும் வரையா தொழியிற் பெரும்பான்மையும் திருவை யொப்பாள் வருந்துவள்; நீர் வரைவு என்று உன்னுமதற்குத் தளர்ந்து ஒளி வாடுதிர் நீயிர் வரைவென்று நினைக்குமதற்கு மனந்தளர்ந்து மேனியொளி வாடா நின்றீர்; பொன்னங் கழல் வழுத்தார் புலன் என்னப் புலம்புவன் இவ்வாறு நும்முள்ளம் மாறுபட நிகழ்தலின் யான் பொன்னை யொக்குங் கழலை வாழ்த்தமாட்டாதாரறிவு போலத் தனிமையுற்று வருந்தாநின்றேன் எ-று. உம்பர் எல்லாம் பன்னும் புகழ்ப் பரமன் அறிதற்கருமையான் உம்பரெல்லாமாராயும் புகழையுடைய பரமன்; பரஞ்சோதி எல்லாப்பொருட்கும் அப்பாலாகிய வொளி; சிற்றம்பலத்தான் ஆயினும் அன்பர்க்கு இப்பாலாய்ச் சிற்றம்பலத்தின்கண் ணாயவன்; பொன்னங் கழல் அவனுடைய பொன்னங் கழலெனக் கூட்டுக. மன்னு மென்பது ஓரிடைச்சொல். நிலைபெறுந் திருவென் றுரைப்பாருமுளர். முன்னர் இவட்குத் திருவையுவமங்கூறுதல் தக்கதன்றென்று, ஈண்டுவமித்த தென்னையெனின், ஆண்டுத் தெளியாமையிற் கூறலாகாமைகூறி, மக்களுள்ளாளென்று தெளிந்த பின்னர்க்கூறலா மென்பதனாற் கூறியதெனவுணர்க. பொன்னங் கழலென்பதற்குப் பொன்னானியன்ற கழலையுடை யதென அன்மொழித்தொகைப்பட வுரைப்பினு மமையும். புலனென்ன வென்பதற்குச் சுவைமுதலாகிய தம்பொருள் பெறாது வழுத்தா தாரைம்பொறியும் புலம்புமாறுபோல வெனினு மமையும், இருவருள்ள நிகழ்ச்சியுங் கூறுவாள் போன்று, தலைமகள தாற்றாமை கூறி வரைவு கடாயவாறு. மெய்ப்பாடு: அச்சம். பயன்: வரைவுகடாதல் .

விளக்கவுரை

13.16 வருத்தங்கூறிவரைவுகடாதல்

வருத்தங்கூறி வரைவுகடாதல் என்பது உண்மையுரைத்து வரைவுகடாயதோழி, வரையாமை நினைந்து அவள் வருந்தா நின்றாள்; வரைவென்று நினைக்க நீயிர் வருந்தாநின்றீர்; இவ்வாறு நும்முள்ளம் மாறுபட நிகழ்தலின் இருவர்க்குமிடையே யான் வருந்தாநின்றேனெனத் தலைமகனுக்கு வருத்தங்கூறி வரைவு கடாவா நிற்றல். அதற்குச் செய்யுள்

13.16. கனங்குழை முகத்தவள் மனங்குழை வுணர்த்தி
நிரைவளைத் தோளி வரைவு கடாயது.

பனித்துண்டஞ் சூடும் படர்சடை
அம்பல வன்னுலகந்
தனித்துண் டவன்தொழுந் தாளோன்
கயிலைப் பயில்சிலம்பா
கனித்தொண்டை வாய்ச்சி கதிர்முலைப்
பாரிப்புக் கண்டழிவுற்
றினிக்கண் டிலம்பற்றுச் சிற்றிடைக்
கென்றஞ்சு மெம்மனையே. **#789**

இதன் பொருள்:

பனித்துண்டம் சூடும் படர்சடை அம்பலவன் பனியையுடைய துண்டமாகிய பிறையைச்சூடும் பரப்பிய சடையை யுடைய வம்பலவன்; தனித்து உலகம் உண்டவன் தொழும் தாளோன் எஞ்சுவான்றானேயாய்த் தானல்லாத உலகமுழுதையு முண்டவன் றொழுந் தாளையுடையவன்; கயிலைப் பயில் சிலம்பா அவனது கயிலைக்கட்பயிலுஞ் சிலம்பனே; தொண்டைக் கனி வாய்ச்சி கதிர்முலைப் பாரிப்புக் கண்டு தொண்டைக்கனி போலும் வாயை யுடையாளுடைய கதிர்முலைகளது ஒருப்பாட்டைக்கண்டு; அழிவு உற்று நெஞ்சழிந்து; எம் அன்னை சிற்றிடைக்கு இனிப்பற்றுக் கண்டிலம் என்று அஞ்சும் எம் மன்னை இவள் சிற்றிடைக்கு இனியொரு பற்றுக்கண்டிலமென்று அஞ்சாநின்றாள்; இனியடுப்பன வறியேன் எ-று. துண்டம்: ஒரு பொருளினது கூறு. பாரிப்பு அடியிடுத லெனினுமமையும். இளமைப்பருவம் புகுந்தமையான் மகட்கூறு வார்க்கு அன்னைமறாதே கொடுக்கும்; நீ முற்பட்டு வரைவாயாக வென்று தோழியேற்கக் கூறியவாறு. மெய்ப்பாடு: அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்: செறிப்பறிவுறுத்து வரைவுகடாதல். 132

விளக்கவுரை

13.17 தாயச்சங்கூறிவரைவுகடாதல்
தாயச்சங்கூறி வரைவுகடாதல் என்பது வருத்தங்கூறி வரைவு கடாயதோழி, எம்முடையவன்னை அவள் முலைமுதிர்வு கண்டு இவள் சிற்றிடைக்கு ஒருபற்றுக் கண்டிலேமென்று அஞ்சா நின்றாள்; இனி மகட்பேசுவார்க்கு மறாதுகொடுக்கவுங் கூடுமெ னத் தாயச்சங் கூறி வரைவுகடாவாநிற்றல். அதற்குச் செய்யுள்
13.17. மடத்தகை மாதர்க் கடுப்பன அறியா
வேற்கண் பாங்கி ஏற்க வுரைத்தது.

ஈவிளை யாட நறவிளை
வோர்ந்தெமர் மால்பியற்றும்
வேய்விளை யாடும்வெற் பாவுற்று
நோக்கியெம் மெல்லியலைப்
போய்விளை யாடலென் றாளன்னை
அம்பலத் தான்புரத்தில்
தீவிளை யாடநின் றேவிளை
யாடி திருமலைக்கே. **#790**

இதன் பொருள்:
ஈவிளையாட நற விளைவு ஓர்ந்து தேனீக்கள் பறந்து விளையாட அவற்றினது விளையாட்டாற்றேனினது விளைவையோர்ந்தறிந்து; எமர் மால்பு இயற்றும் வேய் விளை யாடும் வெற்பா எம்முடைய தமர் கண்ணேணியைச் செய்யும் வேய் விளையாடும் வெற்பை யுடையாய்; உற்று நோக்கி குறித்து நோக்கி; அன்னை எம் மெல்லியலைத் திருமலைக்குப் போய் விளையாடல் என்றாள் அன்னை எம்முடைய மெல்லியலைத் திருமலைக் கட்புறம்போய் விளையாடவேண்டாவென்று கூறினாள்; இனி இற்செறிக்கும் போலும் எ-று.
அம்பலத்தான் அம்பலத்தின் கண்ணான்; புரத்தில் தீ விளையாட நின்று ஏ விளையாடி முப்புரத்தின்கட்டீ விளையாட நின்று ஏத்தொழிலால் விளையாடுவான்; திருமலை அவனது திரு மலையெனக்கூட்டுக. எமர் மால்பியற்றும் வெற்பா வென்றதனால், தாமந்நிலத்து மக்களாதலும் அவன்றலைவனாதலுங் கூறினாளாம். போய் விளையாடுகென்றாளென்பது பாடமாயின், உற்றுநோக்கி இன்றுபோய் விளையாடுக வென்றாள்; அக்குறிப்பால் நாளையிற் செறிப்பாள் போலுமெனவுரைக்க. ஈவிளையாட்டாற்றேன் விளைவை யோர்ந்து எமர் மால்பியற்றுமாறுபோல, கதிர்ப்பு வேறுபாட்டால் இவளுள்ளத்துக் கரந்த காமமுணர்ந்து மேற்செய்வனசெய்யக் கருதா நின்றாளென உள்ளுறைகாண்க. இற்செறிவித்ததென்பது பாட மாயின், இன்னார் கூற்றென்னாது துறைகூறிற்றாகவுரைக்க. #9; ; 133

விளக்கவுரை

13.18 இற்செறிவறிவித்துவரைவுகடாதல்

இற்செறி வறிவித்து வரைவுகடாதல் என்பது தாயச்சங்கூறி வரைவுகடாய தோழி, எம்மன்னை அவளை யுற்றுநோக்கி, திருமலைக்கட்புறம்போய் விளையாடவேண்டாவெனக் கூறினாள்; இனியிற்செறிப்பாள் போலுமென, இற்செறிவறிவித்து வரைவுகடாவா நிற்றல். அதற்குச் செய்யுள்

13.18. விற்செறி நுதலியை
இற்செறி வுரைத்தது.

சுற்றுஞ் சடைக்கற்றைச் சிற்றம்
பலவற் றொழாதுதொல்சீர்
கற்று மறியல ரிற்சிலம்
பாவிடை நைவதுகண்
டெற்றுந் திரையின் னமிர்தை
யினித்தம ரிற்செறிப்பார்
மற்றுஞ் சிலபல சீறூர்
பகர்பெரு வார்த்தைகளே. **#791**

இதன் பொருள்:

சிலம்பா சிலம்பா; சுற்றும் சடைக்கற்றைச் சிற்றம்பலவற்றொழாது சுற்றப்பட்ட சடைத்திரளையுடைய சிற்றம்பலவனை முற்பிறவியிற் றொழாமையான்; கற்றும் தொல் சீர் அறியலரின் நூல்களைக் கற்றுவைத்தும் அவனது பழைய புகழை யறியாதாரைப்போல; இடை நைவது கண்டு முலைதாங்ககில்லா திடை வருந்துவதனைக்கண்டு; எற்றும் திரையின் அமிர்தை தமர் இற் செறிப்பார் எற்றுந்திரையையுடைய கடலிற்பிறந்த இனிய வமிர்தத்தையொப்பாளை இப்பொழுது தமர் இற்செறிப்பார்; மற்றும் சீறூர் பகர் பெருவார்த்தைகள் சில பல அதுவுமன்றி இச்சீறூராற் பகரப்படும் பெரியவார்த்தைகள் சிலபலவுள எ-று.

எற்றுந்திரை யென்பது சினையாகிய தன்பொருட் கேற்ற வடையடுத்து நின்றதோராகுபெயர். இச்செறிப்பா ரென்பது; ஆரீற்று முற்றுச்சொல். வினைப்பெய ரென்பாருஞ் செறிப்பரென்று பாடமோதுவாருமுளர். சிலபலவென்பது பத்தெட்டுளவென்பது போலத் துணிவின்மைக் கண்வந்தது. சீறூர்ப்பகரென்பதூஉம் பாடம். இவற்றிற்கு மெய்ப் பாடும் பயனும் அவை. இவற்றுண் மேலைப் பாட்டிற் குறிப்பினானே செறிப்பறிவுறுத்தாள். #9; 134

விளக்கவுரை

13.19 தமர்நினைவுரைத்து வரைவுகடாதல்
தமர்நினைவுரைத்து வரைவுகடாதல் என்பது இற்செறி வறிவித்து வரைவுகடாயதோழி, அவண்முலை தாங்கமாட்டா திடைவருந்து வதனைக்கண்டு எமரிற்செறிப்பாராக நினையா நின்றார்; அயலவருமகட்பேச நினையாநின்றாரெனத் தமர்நினை வுரைத்து வரைவு கடாவாநிற்றல். அதற்குச் செய்யுள்
13.19. விற்செறி நுதலியை இற்செறி விப்பரென்
றொளிவே லவற்கு வெளியே யுரைத்தது.

வழியும் அதுவன்னை யென்னின்
மகிழும்வந் தெந்தையும்நின்
மொழியின் வழிநிற்குஞ் சுற்றமுன்
னேவய மம்பலத்துக்
குழியும்ப ரேத்துமெங் கூத்தன்குற்
றாலமுற் றும்மறியக்
கெழியும்ம வேபணைத் தோள்பல
வென்னோ கிளக்கின்றதே. **#792**

இதன் பொருள்:
வழியும் அது இவளை நீ யெய்துதற்கு முறைமையும் வரைவு வேண்டுதலே; அன்னை என்னின் மகிழும் இவணலத்திற்குத் தக்கானோர் கணவனை வேண்டுவாளாகலின் நீ வரைவுவேண்டுமிடத்து அன்னை யென்னைப்போல மகிழும்; வந்து எந்தையும் நின் மொழியின் வழி நிற்கும் உலகியலான் மறுத்தகன்று நின்றானாயினுந் தகுதிநோக்கிவந்து எந்தையு நின் மொழியைக் கடவாது அதன்வழியே நிற்கும்; முன்னே சுற்றம் வயம் இவளோடு நின்னிடைநிகழ்ந்தது குறிப்பானறிந்ததாகலின் நீ வரைவு வேண்டு வதன் முன்னே சுற்றம் நினக்கு வயமாயிருக்கும்; பல கிளக்கின்றது என் பல சொல்லுகின்றதென்; குழி உம்பர் ஏத்தும் அம்பலத்து எம் கூத்தன் திரண்டு உம்பரானேத்தப்படும் அம்பலத்தின் கணுளனாகிய எம்முடைய கூத்தனது; குற்றாலம் முற்றும் அறியக் கெழி உம்மவே பணைத்தோள் குற்றாலமுழுது மறியப்பொருந்திய உம்மனவே பணைத்தோள்கள்; ஐயுறவேண்டா எ-று.

வழியுமென்னு மும்மை: எச்சவும்மை, உபாயமாதலே யன்றி என்றவாறு. எந்தையு மென்பது இறந்தது தழீஇய வெச்ச வும்மை. முன்னே வயமென வேறுபடுத்துக் கூறுதலால், சுற்றமுமென வும்மைகொடாது கூறினாள். நலமுங்குலமு முதலாயினவற்றா னேராராயினும், வடுவஞ்சிநேர்வ ரென்பது பயப்ப, குற்றாலமுற்று மறியக்கெழீஇயவென்றாள். கெழீஇய வென்பது கெழியெனக் குறைந்துநின்றது. நின்மொழி யென்று உம்மவே

என்றது
'என்னீரறியாதீர்போலவிவைகூற
னின்னீரவல்ல நெடுந்தகாய்'
-கலி. பாலை, 5
என்பதுபோல ஈண்டும் பன்மையு மொருமையு மயங்கி நின்றன.
குற்றால முற்றுமறியக் கெழியென்பதற்கு மறைந்தொழுகா
தெல்லாருமறிய வரைவொடு வருவாயாக என்றுரைப்பாருமுளர்.
இப்பொருட்குக் கெழுமுவென்பது விகாரவகையாற் கெழியென
நின்றது. மெய்ப்பாடும் பயனும் அவை. வரைவின்கட் டலைமகனை
யொற்றுமை கொளுவுதலுமாம்.
தழங்குமருவி (பா.127) என்னும் பாட்டுத்தொட் டிதன்காறும் வர
இப்பாட்டொன்பதுஞ் செறிப்பறி வுறுத்து வரைவுகடாயின வென்பது.
இவையெல்லாந் தோழியிற் கூட்டமுந் தோழியிற் கூட்டத்தின்
விகற்பமுமெனவறிக. 135

விளக்கவுரை

13.20 எதிர்கோள்கூறிவரைவுகடாதல்
எதிர்கோள்கூறி வரைவுகடாதல் என்பது தமர் நினைவு உரைத்து வரைவுகடாயதோழி, நீவரைவொடுவரின், அன்னையும் ஐயன்மாரும் அயலவரும் நின்வரவெதிர் கொள்ளாநிற்பர்; இனிப்பல நினையாது பலருமறிய வரைவொடு வருவாயாகவென எதிர்கோள் கூறி வரைவு கடாவாநிற்றல். அதற்குச் செய்யுள்
13.20. ஏந்திழைத்தோழி ஏந்தலைமுன்னிக்
கடியாமாறு நொடிகென்றது.

படையார் கருங்கண்ணி வண்ணப்
பயோதரப் பாரமும்நுண்
இடையார் மெலிவுங்கண் டண்டர்க
ளீர்முல்லை வேலியெம்மூர்
விடையார் மருப்புத் திருத்திவிட்
டார்வியன் தென்புலியூர்
உடையார் கடவி வருவது
போலு முருவினதே. **#793**

இதன் பொருள்:
படை ஆர் கருங்கண்ணி வண்ணப் பயோதரப் பாரமும் படைக்கலம் போலுங் கரிய கண்ணையுடையாளுடைய நிறத்தையுடைய முலைகளின் பாரத்தையும்; நுண் இடையார் மெலிவும் கண்டு அப்பாரத்தைத் தாங்கலுறாநின்ற நுண்ணிய விடையாரது மெலிவையுங்கண்டு; அண்டர்கள் என்னையராகிய வாயர்; ஈர் முல்லை

வேலி எம்மூர் ஈரிய முல்லையாகிய வேலியை யுடைய எம்மூரின்கண்; விடை ஆர் மருப்புத் திருத்திவிட்டார் விடையினது நிரம்பிய மருப்பைத் திருந்தச்செய்து விட்டார்கள்; வியன் தென் புலியூர் உடையார் கடவி வருவது போலும் உருவினது அவ்விடை அகன்ற தென்புலியூரை யுடையவர் செலுத்திவரும் விடைபோலுமுருவினையுடைத்து; இனியென்னிகழும்! எ-று.

இயல்வது மேற்கொள்ளாமையின் இடையாரென இழித்துக் கூறினாள். முல்லையையுடைய வேலியெனினுமமையும். அவ்வேறு கோள் நிகழ்வதன்முன் வரைந்தெய்துவாயாக வென்றவாறு. விடையார்மருப்புத் திருத்திவிட்டார் நினக்குற்றது செய்யென் பதனைக் கேட்டுத் தலைமகனுள்ளம் வாடினான்; அஃதெற்றிற் கெனின், ஏறுதழுவிக்கோடல் தங்குலத்திற்கு மரபாக லானும், தமக்குப் பொதுவர் பொதுவியரென்று பெயராகலானும், அவ்வேற்றைத் தன்னின் முற்பட்டானொருவன் றழுவவுந்தகு மென்றுள்ளம் வாடினான். அதனைத்தோழிகண்டு அவ்வேறு புலியூரு டையார் கடவிவருவது போலு முருவினதென்றாள்; என்றது அதன் வெம்மை சொன்னவாறன்று; இவ்வொழுக்கம் புலியூருடையாரதருளான் வந்ததாகலின், அவ்வேறுநினக்கே வயப்படுவதன்றி மற்றொருத்த ராலணுகுதற்கரிது; நீ கடிது விரைந்து செய்; அஞ்ச வேண்டாவென் றாளாயிற்று. இது முல்லைத்திணை. மெய்ப்பாடு: அது. பயன்: ஏறுகோளுணர்த்தி வரைவுகடாதல். 136

விளக்கவுரை

13.21 ஏறுகோள்கூறிவரைவுகடாதல்

ஏறுகோள்கூறி வரைவுகடாதல் என்பது எதிர்கோள்கூறி வரைவுகடாய தோழி, எம்முடைய வையன்மார் அவளுடைய முலையின் பெருமையும் இடையின் சிறுமையுங்கண்டு எம்மூர்க் கண் விடையின் மருப்பைத் திருத்திவிட்டார்; இனியடுப்பன வறியேனென ஏறுகோள்கூறி வரைவுகடாவாநிற்றல். ஈண்டுக் கூறுவானுதலுகின்றது முல்லைத்திணையாகலின், அந்த முல்லைத் திணைக்கு மரபாவது, ஓரிடத்தொரு பெண்பிறந்தால் அப்பெண்ணைப் பெற்றவர் தந்தொழுவில் அன்று பிறந்த சேங்கன்றுள்ளனவெல்லாந் தன்னூட்டியாக விட்டு வளர்த்து அப்பரிசினால் வளர்ந்த வேற்றைத் தழுவினானொருவனுக்கு அப்பெண்ணைக் கொடுத்தல் மரபென்க.
அதற்குச் செய்யுள்

13.21. என்னை யர்துணி
வின்ன தென்றது.

உருப்பனை அன்னகைக் குன்றொன்

றுரித்துர வூரெரித்த
நெருப்பனை யம்பலத் தாதியை
யும்பர்சென் றேத்திநிற்குந்
திருப்பனை யூரனை யாளைப்பொன்
னாளைப் புனைதல்செப்பிப்
பொருப்பனை முன்னின்றென் னோவினை
யேன்யான் புகல்வதுவே. **#794**
இதன் பொருள்:
உருப்பனை அன்ன கைக்குன்று ஒன்று உரித்து வடிவு பனையையொக்குங் கையையுடைய குன்றொன்றையுரித்து; உரவு ஊர் எரித்த நெருப்பனை வலியையுடைய வூர்களையெரித்த நெருப்பையுடையானை; அம்பலத்து ஆதியை அம்பலத்தின் கணுளனாகிய வெல்லாப்பொருட்கு முதலாயவனை; உம்பர்சென்று ஏத்திநிற்கும் திருப்பனையூர் அனையாளை உம்பர்சென்று வாழ்த்தி நிற்றற்கிடமாந் திருப்பனையூரை யொப்பாளை; நாளைப் பொன் புனைதல் செப்பி அயலார் நாளைப் பொன்புனைதலைச் சொல்லி; வினையேன் யான் முன் நின்று பொருப்பனைப் புகல்வது என்னோ தீவினையேனாகிய யான்முன்னின்று பொருப்பனைச் சொல்லுவ தெவனோ? எ-று.
உரவூரெரித்தலை நெருப்பின் மேலேற்றுக. எரித்த நெருப்பனென்ற சொற்களினாற்றலான், எரித்தது நெருப்பானென்பது போதரும். புகல்வதென்றது வரைந்தெய்து வாயாகவென்று பின் சொல்லப்படுங் காரியத்தை. இது சிறைப்புறம். பொருப்ப னென்பது முன்னிலைக்கண் வந்ததென்று தலைமகன் முன்னிலையாகக் கூறினாளெனினுமமையும். அயலுரை தலை மகட்கியாதுமியை பில்லாதவுரை; அயலாரொருப்பட்டவுரை யெனினுமமையும். மெய்ப்பாடு: அழுகையைச்சார்ந்த பெருமிதம். பயன்: வரைவு கடாதல். 137

விளக்கவுரை

13.22 அயலுரையுரைத்துவரைவுகடாதல்
அயலுரையுரைத்து வரைவு கடாதல் என்பது ஏறுகோள்கூறி வரைவு கடாயதோழி, அயலவர் நாளைப் பொன் புனையப் புகுதா நின்றார்; இதற்குத் தீவினையேன் சொல்லுவதென்னோவெனத் தான் முன்னிலைப் புறமொழியாக அயலுரையுரைத்து வரைவுகடாவா நிற்றல்.
அதற்குச் செய்யுள்
13.22. கயல்புரை கண்ணியை
அயலுரை யுரைத்தது.
மாதிடங் கொண்டம் பலத்துநின்

றோன்வட வான்கயிலைப்
போதிடங் கொண்டபொன் வேங்கை
தினைப்புனங் கொய்கவென்று
தாதிடங் கொண்டுபொன் வீசித்தன்
கள்வாய் சொரியநின்று
சோதிடங் கொண்டிதெம் மைக்கெடு
வித்தது தூமொழியே. **#795**

இதன் பொருள்: தூ மொழி தூய மொழியையுடையாய்; மாது இடம் கொண்டு அம்பலத்து நின்றோன் மாதை யிடப்பக்கத்துக் கொண்டெல்லாருங்காண அம்பலத்தின்கணின்ற பொருந்தா வொழுக்கத்தையுடையவனது; வட வான் கயிலைப் போது இடங்கொண்ட பொன் வேங்கை வடக்கின்கணுண்டாகிய பெரிய கயிலைமலைக் கணுளதாகிய பொருப்பிடங் கொண்ட பொன் போலு மலரையுடைய வேங்கை; தினைப்புனம் கொய்க என்று தாது இடங்கொண்டு தினைப்புனத்தைக் கொய்கவென்று தாதையிடத்தே கொண்டு; பொன் வீசி பொன்போலு மலரை யெல்லாங்கொடுத்து; தன் கள் வாய் சொரிய நின்று தனது தேனைப் பூத்தவிடஞ் சொரியநின்று; சோதிடம் கொண்டு இது எம்மைக் கெடுவித்தது சோதிடஞ்சொல்லுதலைப் பொருந்தி இஃதெமைக் கெடுத்தது; இனியென்செய்தும்? எ-று.

பொன்னைக் கொடுத்துப் பிறர்க்கடிமையாதலைப் பொருந்தித் தானிழிந்த சாதியாதலாற் றனக்குரியகள்ளை வாய்சொரிய நின்றெனச் சிலேடைவகையா னிழித்துக் கூறினாளாகவுமுரைக்க. சோதிடங் கொண்டிதெம்மைக் கெடக்கொண்டதென்பது பாடமாயிற்கெடக் கொண்டதென்னுஞ் சொற்கள் ஒரு சொன்னீரவாய்க் கெடுத்ததென் னும் பொருள்பட்டு, எம்மையென்னு மிரண்டாவதனை முடித்தன வாக வுரைக்க. மெய்ப்பாடு: அழுகை. பயன்: செறிப்பறிவுறுத்தல். 138

விளக்கவுரை

13.23 தினைமுதிர்வுரைத்துவரைவு கடாதல்

தினைமுதிர்வுரைத்து வரைவுகடாதல் என்பது அயலுரை யுரைத்து வரைவுகடாய தோழி, இவ்வேங்கை, தினைப்புனங் கொய்கவென்று சோதிடஞ் சொல்லுதலைப் பொருந்தி, எம்மைக் கெடுவித்தது, இனி நமக்கேனல் விளையாட்டில்லையெனச் சிறைப் புறமாகத் தலைமகளோடு கூறுவாள் போன்று, தினைமுதிர் வுரைத்து வரைவுகடாவாநிற்றல். அதற்குச் செய்யுள்

13.23. ஏனல் விளையாட் டினியில் லையென

மானற் றோழி மடந்தைக் குரைத்தது.

வடிவார் வயற்றில்லை யோன்மல
யத்துநின் றும்வருதேன்
கடிவார் களிவண்டு நின்றலர்
தூற்றப் பெருங்கணியார்
நொடிவார் நமக்கினி நோதக
யானுமக் கென்னுரைக்கேன்
தடிவார் தினையெமர் காவேம்
பெருமஇத் தண்புனமே. **#796**

இதன் பொருள்:

வடிவு ஆர் வயல் தில்லையோன் மலயத்து நின்றும் அழகார்ந்த வயல் சூழ்ந்த தில்லையை யுடையவனது பொதியிற் கணின்றுவைத்தும்; வரு தேன் கடிவார் களிவண்டு நின்று அலர் தூற்ற நறுநாற்றத்தால் வாராநின்ற தேன்களும் நாற்றத்தைத் தேரு நெடிய களிவண்டுகளும் நின்று அலர்களைக் குடைந்து தூற்ற; பெருங்கணியார் இனி நமக்கு நோதக நொடிவார் வேங்கையாகிய பெருங்கணியார் இப்பொழுது நமக்கு நோவுதகப் பருவஞ் சொல்லுவாராயிருந்தார்; யான் உமக்கு என் உரைக்கேன் யானுமக் கென்சொல்லுவேன்; எமர் தினை தடிவார் கணியார் சொல்லுதலால் எமர்தினையைத் தடிவாராயிருந்தார், அதனால், - பெரும பெரும; இத்தண்புனம் காவேம் இத்தண்புனத்தை யாமினிக்காவேம்; நீ பகல்வரவேண்டா எ-று.

வடிவார்தில்லை யென்றியைப்பினுமமையும். மலயத்து வாழ்வார் பிறர்க்கு வருத்தஞ் செய்யாராகலின், மலயத்து நின்றுமென்றும்மை கொடுத்தார். மலயத்துநின்றும் வருந்தே னென்றுரைப்பாருமுளர். இப்பொருட்கு வேங்கை மலயத்தை யணைந்ததோரிடத்து நின்றதாக வுரைக்க. கடி - புதுமையுமாம். வண்டொழுங்கினது நெடுமைபற்றி வார்களிவண் டென்றாள். இதுவுமதுவாகலான், அலர்தூற்ற வென்பதற்குத் தன்னோடு பயின் றாரைக் கண்ணோட்ட மின்றி வருத்தாநின்ற தென்று புறங்கூறவென்று முரைக்க. மெய்ப்பாடு: அது. பயன்: பகற்குறிவிலக்கல். 139

விளக்கவுரை

13.24 பகல்வரல்விலக்கிவரைவுகடாதல்

பகல்வரல் விலக்கி வரைவுகடாதல் என்பது சிறைப் புறமாகத் தினை முதிர்வுரைத்து வரைவுகடாயதோழி, எதிர்ப்பட்டு நின்று, இப்பெருங்கணியார் நமக்கு நோவுதகப் பருவஞ் சொல்லுவாராயிருந்தார்*;* எம்மையன்மார் இவர்சொற் கேட்டு இத்தினையைத் தடிவாராயிருந்தார்*;* எமக்குமினித்

திணைப்புனங்காவலில்லை; நீரினிப்பகல்வரல் வேண்டாவெனப் பகல்வரல் விலக்கி வரைவு கடாவாநிற்றல். அதற்குச் செய்யுள்
13.24. அகல்வரை நாடனை
பகல்வர லென்றது.

நினைவித்துத் தன்னையென் னெஞ்சத்
திருந்தம் பலத்துநின்று
புனைவித்த ஈசன் பொதியின்
மலைப்பொருப் பன்விருப்பில்
திணைவித்திக் காத்துச் சிறந்துநின்
றேமுக்குச் சென்றுசென்று
வினைவித்திக் காத்து விளைவுண்ட
தாகி விளைந்ததுவே. **#797**

இதன் பொருள்:

என் நெஞ்சத்து இருந்து தன்னை நினைவித்து தானே வந்திருந்து திருத்த வேண்டுதலின் என்னெஞ்சத்துப் புகுந்திருந்து தன்னை யானினையும்வண்ணஞ்செய்து; அம்பலத்து நின்று அம்பலத்தின்கட்டன்றிருமேனி காட்டிநின்று; புனைவித்த ஈசன் பொதியின்மலைப் பொருப்பன் விருப்பின் என்னாற் றன்னைப் புகழ்வித்துக்கொண்ட ஈசனது பொதியின் மலைக்கணு ளனாகிய பொருப்பன் மேல்வைத்த விருப்பினால்; திணை வித்திக் காத்துச் சிறந்து நின்றேமுக்கு திணையை வித்தி அதனைக் காத்து உள்ளம் மலிந்து நின்ற எங்களுக்கு; சென்று சென்று வினைவித்திக் காத்து விளைவு உண்டதாகி விளைந்தது அத்திணையை வித்திக் காத்த காவல் போய்த் தீவினையை வித்தி அதனைக் காத்து அதன் விளைவையுமுண்டதாகி முடிந்தது எ-று. நினைவித்துத் தன்னை யென்னெஞ்சத்திருந்தென்பதற்கு ஒரு காற்றன்னை நினைவேனாகவுஞ் செய்து அந்நினைவே பற்றுக் கோடாகத் தான் புகுந்திருந்தெனினுமமையும். பொருப்பன் விருப்பென்பதனை நீர் வேட்கை போலக் கொள்க. திணை வித்திய ஞான்று இத்திணைக்காவல் தலைக்கீடாக அவனை யெதிர்ப்படலா மென்று மகிழ்ந்து அதற்குடம்பட்டாராகலிற் றாம்வித்தினார்போலக் கூறினாள். புனத்தோடுதளர்வுற்று - புனத்தாற்றளர்வுற்று. 140

விளக்கவுரை

13.25 திணையொடுவெறுத்துவரைவுகடாதல்
திணையொடு வெறுத்து வரைவு கடாதல் என்பது பகல்வரல் விலக்கி வரைவுகடாயதோழி, இத்திணைக்காவறலைக்கீடாக நாமவனை யெதிர்ப்படலாமென்று நினைந்து திணையை வித்திக் காத்தோம்; அது போய்த் தீவினையை வித்திக்காத்து அதன் விளைவையுமுண்டதாகி

முடிந்ததெனச் சிறைப்புறமாகத் தினை யொடு வெறுத்து வரைவு கடாவாநிற்றல். அதற்குச் செய்யுள்

13.25. தண்புனத்தோடு தளர்வுற்றுப்
பண்புனைமொழிப் பாங்கிபகர்ந்தது.

கனைகடற் செய்தநஞ் சுண்டுகண் டார்க்கம்
பலத்தமிழ்தாய் வினைகெடச் செய்தவன் விண்தோய் கயிலை
மயிலனையாய் நனைகெடச் செய்தன மாயின் நமைக்கெடச்
செய்திடுவான் தினைகெடச் செய்திடு மாறுமுண் டோஇத்
திருக்கணியே. **#798**

இதன் பொருள்: கனை கடற் செய்த நஞ்சு உண்டு ஒலியா நின்ற கடலின்க ணுண்டாக்கப்பட்ட நஞ்சை யுண்டுவைத்து; அம்பலத்துக் கண்டார்க்கு அமிழ்தாய் அம்பலத்தின்கணின்று கண்டார்க்கு அமிழ்தமாய்; வினைகெடச் செய்தவன் விண் தோய்கயிலை மயில் அனையாய் நம் வினைகெடும்வண்ணஞ் செய்தவனது விண்ணைத் தோயாநின்ற கயிலையின் மயிலை யொப்பாய்; நனைகெடச் செய்தனம் ஆயின் அரும்பியஞான்றே நனையைக் கெடும் வண்ணஞ் செய்தேமாயின்; நமைக் கெடச் செய்திடுவான் இத்திருக் கணிதினை கெடச் செய்திடுமாறும் உண்டோ நம்மைக் கெடுப்பான் வேண்டி இத்திருவாகிய கணி தினைகெட முயலுமாறுமுண்டோ? யாமது செய்யப்பெற்றிலேம் எ-று. கனைகடற்செய்த வென்றதனான் நஞ்சின்பெருமை கூறினார். செய்யாதநஞ்சிற் செய்தநஞ்சு கொடிதாகலின், அதன் கொடுமை விளங்க, செய்தநஞ்சென்றார். அமிழ்தாதல் அமிழ்தின் காரியத்தைச் செய்தல். கண்டார்க் கென்றதனான், அல்லாதவமிழ்தோடு இவ்வமிழ் திற்கு வேற்றுமை கூறியவாறாம். கெடச்செய்திடுவா னென்னுஞ் சொற்கள் ஒருசொன் னீரவாய், கெடுப்பானென்னும் பொருள்பட்டு, நம்மை யென்னு மிரண்டாவதற்கு முடிபாயின. வினைகெடச் செய்தவ னென்பது முதலாயினவற்றிற்கு மிவ்வாறுரைப்பினுமமையும். திரு: சாதிப் பெயர். கணி: தொழிற் பெயர். நல்லகணி யென்றிழித்துக் கூறி னாளாக வுரைப்பாருமுளர். 141

விளக்கவுரை

13.26 வேங்கையொடுவெறுத்துவரைவுகடாதல்
வேங்கையொடுவெறுத்து வரைவுகடாதல் என்பது தினையொடுவெறுத்து வரைவு கடாயதோழி, இவ்வேங்கை யரும்பிய ஞான்றே அரும்பறக் கொய்தேமாயின் இவர் இன்று நம்மைக்கெடுப்பான் வேண்டி இத்தினைகெட முயலுமாறு முண்டோ? யாமது செய்யப் பெற்றிலேமென வேங்கையொடு வெறுத்து

வரைவுகடாவாநிற்றல். அதற்குச் செய்யுள் *13.26.* நீங்குகஇனி நெடுந்தகையென வேங்கைமேல் வைத்துவிளம்பியது.

வழுவா இயலெம் மலையர்
விதைப்பமற் றியாம்வளர்த்த
கொழுவார் தினையின் குழாங்களெல்
லாமெங் குழாம்வணங்குஞ்
செழுவார் கழற்றில்லைச் சிற்றம்
பலவரைச் சென்றுநின்று
தொழுவார் வினைநிற்கி லேநிற்ப
தாவதித் தொல்புனத்தே. **#799**

இதன் பொருள்:

வழுவா இயல் எம் மலையர் விதைப்ப விதைக்கும் பருவத்துங் கொய்யும்பருவத்தும் வழுவாது செய்யுமியல்பையுடைய எந்தமராகிய மலையர் விதைப்ப; யாம் வளர்த்த கொழுவார் தினையின் குழாங்களெல்லாம் யாம்வளர்த்த கொழுவிய நெடிய தினையின் திரட்களெல்லாம்; எம் குழாம் வணங்கும் செழுவார் கழல் தில்லைச் சிற்றம்பலவரை எமது குழாஞ்சென்று வணங்கும் வளவிய நெடிய கழலையுடைய தில்லையிற் சிற்றம்பலத்தையுடையானை; சென்று நின்று தொழுவார் வினை நிற்கிலே சென்று நின்று தொழுவாருடைய வினை அவர்கண் நிற்கிலே; இத்தொல் புனத்து நிற்பது ஆவது இப்பழைய புனத்தினிற்ப தாவது; இனிநில்லா எ-று. குழாங்களெல்லா நிற்பதாவதெனக்கூட்டுக. நிற்பதென்பது நிற்றலென்னும் பொருட்டு. நிற்பதாவவென்பது பாடமாயின், ஆவவென்பதிரங்கற் குறிப்பாக வுரைக்க. நிற்பவென்பதூஉம் பாடம். குழுவார்தினையென்பதூஉம் பாடம். ; 142

விளக்கவுரை

13.27 இரக்கமுற்றுவரைவுகடாதல்

இரக்கமுற்று வரைவு கடாதல் என்பது வேங்கையொடு வெறுத்து வரைவுகடாயதோழி, யாமவனை யெதிர்ப்படலா மென்றின்புற்று வளர்த்த தினைத்திரள் இப்புனத்தின்கணில்லா வாயிருந்தன; இனி நாமவனை யெதிர்ப்படுமாறென்னோவெனச் சிறைப்புறமாகத் தலைமகனுக்கிரக்கமுற்று வரைவுகடாவா நிற்றல். அதற்குச் செய்யுள் *13.27.* செழுமலை நாடற்குக்
கழுமலுற் றிரங்கியது.

பொருப்பர்க் கியாமொன்று மாட்டேம்
புகலப் புகலெமக்காம்
விருப்பர்க் கியாவர்க்கு மேலர்க்கு

மேல்வரு மூரெரித்த
நெருப்பர்க்கு நீடம் பலவருக்
கன்பர் குலநிலத்துக்
கருப்பற்று விட்டெனக் கொய்தற்ற
தின்றிக் கடிப்புனமே. **#800**
இதன் பொருள்:
எமக்குப் புகலாம் விருப்பர்க்கு எமக்குப் புகலிடமாதற்குக் காரணமாகிய விருப்பத்தையுடையவர்க்கு; யாவர்க்கும் மேலர்க்கு எல்லார்க்கு மேலாயவர்க்கு; மேல் வரும் ஊர் எரித்த நெருப்பர்க்கு ஆகாயத்தின்கட் செல்லுமூர்களையெரித்த நெருப்பையுடையவர்க்கு; நீடு அம்பலவருக்கு நிலைபெற்ற வம்பலத்தையுடையவர்க்கு; அன்பர் குலம் நிலத்துக்கருப்பற்று விட்டென அன்பராயினாருடைய குலங்கள் உலகத்துப் பிறவிக்கார ணத்தைப் பற்றுவிட்டகன்றாற் போல; இக்கடிப்புனம் இன்று கொய் தற்றது இக்காவலையுடைய புனம் இப்பொழுது தொடர்பறக் கொய் தற்றது. அதனால் - பொருப்பர்க்கு யாம் ஒன்றும் புகலமாட்டேம் பொருப்பர்க் கியாமொன்றுஞ் சொல்லமாட்டேம் எ-று.
யாமொரு குணமுமில்லேமாயினுந் தமது விருப்பினா லெமக்குப் புகலிடமாயினாரென்னுங் கருத்தால், புகலெமக்காம் விருப்பர்க் கென்றார். எம்மால் விரும்பப்படுவார்க் கென்பாருமுளர். வீடென வென்பதூஉம் பாடம். 143

விளக்கவுரை

13.28 கொய்தமைகூறி வரைவுகடாதல்
கொய்தமைகூறி வரைவுகடாதல் என்பது இரக்கமுற்று வரைவுகடாயதோழி எதிர்ப்பட்டு நின்று, இப்புனத்துத்தினையுள் ளது இன்றுதொடர்பறக்கொய்தற்றது*;* எமக்குமினிப்புனங்காவ லில்லை*;* யாமுமக்கறிவு சொல்லுகின்றேமல்லேம்*;* நீரேயறிவீ ரெனத்தினை கொய்தமைகூறி வரைவு கடாவாநிற்றல். அதற்குச் செய்யுள்
13.28. நீடிரும்புனத்தினி யாடேமென்று
வரைவுதோன்ற வுரைசெய்தது.

பரிவுசெய் தாண்டம் பலத்துப்
பயில்வோன் பரங்குன்றின்வாய்
அருவிசெய் தாழ்புனத் தைவனங்
கொய்யவு மிவ்வனத்தே
பிரிவுசெய் தாலரி தேகொள்க
பேயொடு மென்னும்பெற்றி
இருவிசெய் தாளி னிருந்தின்று

காட்டு மிளங்கிளியே. **#801**

இதன் பொருள்:

பரிவு செய்து ஆண்டு எம்மைப் பரிந்தாண்டு; அம்பலத்துப் பயில்வோன் பரங்குன்றின்வாய் அம்பலத்தின்கட் பயில்வானது பரங்குன்றினிடத்து; அருவி செய்தாழ் புனத்து ஐவனம் கொய்யவும் அருவிநீராற் செய்யப்பட்ட தாழ்ந்த புனத்தின்கணுண் டாகிய ஐவனத்தைக் கொய்யவும்; இவ் வனத்து இருவிசெய் தாளின் இருந்து இக் காட்டின்கண் இருவியாகச் செய்யப்பட்ட தாளிலே யிருந்து; செய்தால் பேயொடும் பிரிவு அரிது நட்புச்செய்தாற் பேயோடாயினும் பிரிவரிது; கொள்க என்னும் பெற்றி இதனையுள்ளத்துக் கொள்கவென்னுந் தன்மையை; இளங்கிளி இன்று காட்டும் இளங்கிளிகள் இப்பொழுது காட்டாநின்றன எ-று.

பேயோடாயினும் பிரிவுசெய்தா லாற்றுதலரிதென் றுரைப் பினுமமையும். இருவியென்பது கதிர்கொய்த தட்டை. தாளென்பது கதிர்கொய்யாதமுன்னுஞ் சொல்வதோர்பெயர். இப்புனத்துப் பயின்ற கிளிகள் தமக்குத் துப்பாகாக்காலத்து மிதனைவிடாதிரா நின்றன; இனி நங்காதலர் நம்மாட்டென் செய்வ ரென்னுங் கருத்தான், மறைப்புறமாயிற்று. சிறைப்பட வுரைத்த தென்பது பாடமாயின், சிறைக்கண்வந்து நிற்பவென்றுரைக்க. 144

விளக்கவுரை

13.29 பிரிவருமைகூறி வரைவுகடாதல்

பிரிவருமை கூறி வரைவு கடாதல் என்பது கொய்தமைகூறி வரைவு கடாய தோழி*,* இப்புனத்துப் பயின்ற கிளிகள் தமக்குத் துப்பாகாக் காலத்துந் தினைத்தாளை விடாதிராநின்றன*;* நாம் போனால் நங்காதல ரிவ்விடத்தே வந்துநின்று நம்மைத்தேடுவர் கொல்லோ வெனச் சிறைப்புறமாகப் பிரிவருமைகூறி வரைவு கடாவாநிற்றல். அதற்குச் செய்யுள்

13.29. மறைப்புறக் கிளவியிற்
சிறைப்புறத் துரைத்தது.

கணியார் கருத்தின்று முற்றிற்
றியாஞ்சென்றுங் கார்ப்புனமே
மணியார் பொழில்காண் மறத்திர்கண்
டீர்மன்னு மம்பலத்தோன்
அணியார் கயிலை மயில்காள்
அயில்வே லொருவர்வந்தால்
துணியா தனதுணிந் தாரென்னு
நீர்மைகள் சொல்லுமினே. **#802**

இதன் பொருள்:
கணியார் கருத்து இன்று முற்றிற்று கணியாரது நினைவு இன்று முடிந்தது; யாம் சென்றும் யாங்கள் போகா நின்றேம்; கார்ப் புனமே கரியபுனமே; மணி ஆர் பொழில்காள் மணிகளார்ந்த பொழில்காள்; மறத்திர் கண்டீர் வேங்கையொடு பயின்றீராகலின் நீரெம்மைமறப்பீர்; மன்னும் அம்பலத்தோன் அணி ஆர் கயிலை மயில்காள் நிலைபெறுமம்பலத்தையுடையவனது அழகார்ந்த கயிலையினின்றும் வந்த மயில்காள்; அயில் வேல் ஒருவர் வந்தால் அயில் வேல் துணையாகத் தனிவருமவர் ஈண்டுவந்தால்; துணியாதன துணிந்தார் என்னும் நீர்மைகள் சொல்லுமின் அன்புடையார் துணியாதனவற்றை அவர் துணிந்தாரென்னு நீர்மை களையவர்க்குச் சொல்லுமின் எ-று. நீர்மை ஈண்டு வியப்பு. நீரிவ்வாறு சொன்னால் அவராற்று வாரென்பது கருத்து. பேரருளி னோன் கயிலையினுள்ளீராகலின் நீர் கண்ணோட்ட முடையீரென்பது கருத்து. கார்ப்புனமென்பதற்குக் கார் காலத்துப் பொலியும் புனமெனினுமமையும். துணியாதனவாவன பிரிதலும் வரையுந் துணையு மாற்றியிருத்தலும். புனமே பொழில்காள் மயில் காள் என்றுகூட்டி, நீரெம்மை மறப்பீராயினும் மறவாது சொல்லு மினென்றுரைப்பாருமுளர். இவையாறற்கும் மெய்ப்பாடும் பயனும் அவை. #9; #9; 145

விளக்கவுரை

13.30 மயிலொடு கூறி வரைவுகடாதல்

மயிலொடு கூறி வரைவுகடாதல் என்பது பிரிவருமைகூறி வரைவுகடாய தோழி, பிரிவாற்றாமையோடு தலைமகளையுங் கொண்டு புனங்காவலேறிப் போகாநின்றாள், கணியார்நினைவு இன்றுமுடிந்தது; யாங்கள் போகாநின்றோம்; இப்புனத்தொருவர் வந்தால் இங்கு நின்றும் போனவர்கள் துணியாதன துணிந்து போனாரென்று அவர்க்குச் சொல்லுமினென மயிலொடுகூறி வரைவுகடாவா நிற்றல். அதற்குச் செய்யுள்

13.30. நீங்கரும் புனம்விடு நீள்பெருந் துயரம்
பாங்கி பகர்ந்து பருவர லுற்றது.

பொதுவினிற் றீர்த்தென்னை யாண்டோன்
புலியூ ரரன்பொருப்பே
இதுவெனி லென்னின் றிருக்கின்ற
வாறெம் மிரும்பொழிலே
எதுநுமக் கெய்திய தென்னுற்
றனிரறை யீண்டருவி
மதுவினிற் கைப்புவைத் தாலொத்த

வாமற்றிவ் வான்புனமே. **#803**
இதன் பொருள்:
பொதுவினில் தீர்த்து என்னை ஆண்டோன் அதுவோ விதுவோ வழி யென்றுமயங்கிப் பொதுவாக நின்ற நிலைமையை நீக்கி என்னையாண்டவன்; புலியூர் அரன் புலியூரிலரன்; பொருப்பே எனில் இது இன்று இருக்கின்றவாறு என் அவனது பொருப்பாய் யான்முன்பயின்ற விடமேயாயின் இஃதின்றிருக்கின்றவாறென்; எம் இரும் பொழிலே எம்முடைய பெரிய பொழிலே; நுமக்கு எய்தியது எது நுமக்குத்தான் இன்றுவந்த தியாது; என் உற்றனிர் நீரென்னுற்றீர்; இவ் வான் புனம் இதுவேயுமன்றி இப்பெரிய புனம்; அறை ஈண்டு அருவி மதுவினில் கைப்பு வைத்தால் ஒத்தவா ஒலியாநின்ற பெருகிய வருவியாய் விழும் மதுவின்கண் அதனின்சுவையை மாற்றிக் கைப்பாகிய சுவையை வைத்தாலொத்தவாறென்! எ-று. மற்றென்பது அசைநிலை. எல்லாரையு மாளும் பொதுவாகிய முறைமையினின்று நீக்கி என்னை யுளநெகிழ்விப்பதோரு பாயத்தானாண்டவ னென் றுரைப்பினுமமையும். இன்பஞ்செய்வதுந் துன்பஞ்செய்வது மொன்றாகமாட்டா தென்னுங் கருத்தாற் புலியூரரன் பொருப்பேயிது வெனிலென்றான். அறையீண்டருவி காள் நீரென்னுற்றீரென்றும், அறையீண்டருவிப் புனமென்றும் உரைப்பாருமுளர். 146

விளக்கவுரை

13.31 வறும்புனங்கண்டுவருந்தல்
வறும்புனங்கண்டு வருந்தல் என்பது தலைமகளும் தோழியும் புனங்காவலேறிப் போகாநிற்ப, தலைமகன் புனத்தி டைச் சென்று நின்று, இப்புனம் யாமுன்பயின்றதன்றோ*?* இஃதின் றிருக்கின்றவாறென்னோ வென்று*,* அதன் பொலிவழிவுகூறித் தலைமகளைத்தேடி வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்
13.31. மென்புனம்விடுத்து மெல்லியல்செல்ல
மின்பொலிவேலோன் மெலிவுற்றது.

ஆனந்த மாக்கட லாடுசிற்
றம்பல மன்னபொன்னின்
தேனுந்து மாமலைச் சீறூ
ரிதுசெய்ய லாவதில்லை
வானுந்து மாமதி வேண்டி
அழுமழப் போலுமன்னோ
நானுந் தளர்ந்தனன் நீயுந்
தளர்ந்தனை நன்னெஞ்சமே. **#804**

இதன் பொருள்:
ஆனந்த மாக் கடல் ஆடு சிற்றம்பலம் அன்ன ஆனந்தமாகிய நீரானிறைந்ததோர் பெரியகடல் நின்றாடுஞ் சிற்றம்பலத்தையொக்கும்; பொன்னின் தேன் உந்து மாமலைச் சீறூர் இது பொன்னினது தேன்றத்திப் பாயும் பெரிய மலைக்கணுண்டாகிய சீறூரிது; செய்யலாவது இல்லை இவ்வாறணித்தாயினு நம்மாற் செய்யலாவதொன்றில்லை, அதனால் வான் உந்தும் மாமதி வேண்டி அழும் மழப்போலும் வானின் கட்செல்லும் பெரிய மதியைக் கொள்ள வேண்டி அதனருமையறியா தழுங்குழவிபோல எய்துதற் கரியாளை விரும்பி; நல் நெஞ்சமே நல்ல நெஞ்சமே; நீயுந் தளர்ந்தனை நீயுந் தளர்ந்தாய்; நானும் தளர்ந்தனன் நீயவ்வரும் பொருள்விரும்புதலான் யானுந்தளர்ந்தேன் எ-று.
தேனையுமிழுமாமலையெனினு மமையும். மழவை நெஞ்சத்திற்கேயன்றித் தலைமகற்குவமையாக வுரைப்பினு மமையும். நெஞ்சத்தைத் தன்னோடுபடுத்தற்கு நன்னெஞ்சமெனப் புனைந்து கூறினான். இது தலைமகளை இற்செறிவிக்கின்றகாலத்து ஆற்றா னாகிய தலைமகன் றோழிகேட்பத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது. மன்னுமோவும்: அசைநிலை. பதி - தலைமகன். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு: அழுகை. பயன்: ஆற்றாமை நீங்குதல். 147

விளக்கவுரை

13.32 பதிநோக்கிவருந்தல்
பதிநோக்கி வருந்தல் என்பது வறும்புனத்திடை வருந்தா நின்ற தலைமகன், இவ்வாறணித்தாயினும் நம்மாற் செய்யலாவ தொன்றில்லையென்று அவளிருந்த பதியைநோக்கித் தன்னெஞ் சோடுசாவி வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்
13.32. மதிநுத லரிவை பதிபுக லரிதென
மதிநனி கலங்கிப் பதிமிக வாடியது.

2.14.இரவுக்குறி

மருந்துநம் மல்லற் பிறவிப்
பிணிக்கம் பலத்தமிர்தாய்
இருந்தனர் குன்றினின் றேங்கும்
அருவிசென் றேர்திகழப்
பொருந்தின மேகம் புதைந்திருள்
தூங்கும் புனையிறும்பின்
விருந்தினன் யானுங்கள் சீறூ
ரதனுக்கு வெள்வளையே. **9; #805**

இதன் பொருள்: வெள்வளை வெள்வளையை யுடையாய்; குன்றினின்று ஏங்கும் அருவி சென்று ஏர் திகழ மேகம் பொருந்தின குன்றின்கணின் றொலிக்கு மருவிகள்பாய்ந் தழகுவிளங்கும் வண்ணம் மேகம்வந்து பொருந்தின; அதனால், புதைந்து இருள் தூங்கும் புனை இறும்பின் உங்கள் சீறூரதனுக்கு யான் விருந்தினன் அம் மேகத்தின்கட் புதைந்திருள் செறியுஞ் செய்காட்டையுடைய நுமது சீறூரதற்கியான் விருந்தினன்; என்னை யேற்றுக் கொள்வாயாக எ-று.

நம் அல்லற் பிறவிப் பிணிக்கு மருந்து - நம்முடைய அல்லலைச் செய்யும் பிறவியாகிய பிணிக்கு அருந்து மருந்தாய் வைத்தும்; அம்பலத்து அமிர்தாய் இருந்தனர் குன்றின் அம்பலத் தின்கட் சுவையானமிர்தமுமாயிருந்தவரது குன்றினெனக் கூட்டுக.

மேகம் வந்து பொருந்தின வென்றதனால், தன்னூர்க்குப் போதலருமை கூறுவான்போன்று இரவுக்குறி மாட்சிமைப்படு மென்றானாம். இருடூங்கும் புனையிறும்பு என்றதனால், யாவருங் காணாராகலி னாண்டுவந்து நிற்கின்றேனென்றானாம். மாலை விருந்தினரை மாற்றுதலறனன்றென்பது தோன்ற விருந்தின னென்றான். குன்றினின்றேங்கு மருவியேர்திகழச்சென்று பொருந்தின மேகமென்க. அருவியேர்பெற மேகம்பொருந்தினவூர் நின்னூராக லான் என்னி னைப்பற்று யானுமேர்பெற நின்னைவந்து சேர்ந்தே னென்பது போதரும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: இரவுக்குறி நேர்வித்தல். 148

விளக்கவுரை

14.1 இரவுக்குறிவேண்டல்

இரவுக்குறி வேண்டல் என்பது பதிநோக்கி வருந்தாநின்ற தலைமகன், இற்றையிரவிற்கியானுங்கள் சீறூர்க்கு விருந்து*;* என்னையேற்றுக் கொள்வாயாக வெனத் தோழியை யிரவுக்குறி வேண்டாநிற்றல்.

அதற்குச் செய்யுள்

14.1. நள்ளிருட் குறியை வள்ளல் நினைந்து

வீங்கு மென்முலைப் பாங்கிக் குரைத்தது.

விசும்பினுக் கேணி நெறியன்ன
சின்னெறி மேன்மழைதூங்
கசும்பினிற் றுன்னி அளைநுழைந்
தாலொக்கும் ஐயமெய்யே
இசும்பினிற் சிந்தைக்கு மேறற்
கரிதெழி லம்பலத்துப்
பசும்பனிக் கோடு மிலைந்தான்
மலயத்தெம் வாழ்பதியே. **#806**

இதன் பொருள்:ஐய - ஐயனே; விசும்பினுக்கு ஏணி நெறி அன்ன சின்னெறிமேல் விசும்பிற் கிட்டதோ ரேணிநெறி போலுஞ் சிறுநெறிமேல்; மழை தூங்கு அசும்பினில் துன்னி அளை நுழைந்தால் ஒக்கும் மழை யிடையறாது நிற்றலான் இடையிடையுண்டாகிய அசும்பின்கட் சென்று பொருந்தி யேறுமிடத்து இட்டிமையால் அளை நுழைந்தாற் போன்றிருக்கும்; எம் வாழ்பதி இசும்பினில் சிந்தைக்கும் ஏறற்கு அரிது - அதுவேயுமன்றி, எம் வாழ்பதி வழுக்கினான் மெய்யே சிந்தைக்குமேறுதற்கரிது; அதனாலாண்டுவரத்தகாது எ-று. எழில் அம்பலத்துப் பசும் பனிக்கோடு மிலைந்தான் மலயத்து எம் வாழ்பதி எழிலையுடைய வம்பலத்தின்க ணுளனாகிய குளிர்ந்த பனியையுடைத்தாகிய பிறையைச்சூடியவனது மலயத்தின் கணுண்டாகிய வெம்வாழ்பதியெனக்கூட்டுக.

இசும்பு ஏற்றிழிவு முதலாயின குற்ற மென்பாருமுளர். அசும்பு சிறு திவலை. இசும்பினிற் சிந்தைக்கு மேறற்கரி தென்றவதனான், எமது வாழ்பதி யிவ்வொழுக்கத்தைச் சிறிதறியு மாயிற் சிந்தையாலு நினைத்தற்கரிய துயரத்தைத் தருமாதலால், தாஞ்செத்துலகாள்வாரில் லை; அதுபோல விவ்வொழுக்க மொழுகற் பாலீரல்லீரென்று மறுத்துக் கூறியவாறாயிற்று. பசுமை செவ்வியு மாம். அதனைக் கோட்டின் மேலேற்றுக. கோட்டையுடைமையாற் கோடெனப்பட்டது. மெய்ப்பாடு: இளிவரல். பயன்: இரவுக் குறிமறுத்தல். 149

விளக்கவுரை

14.2 வழியருமைகூறிமறுத்தல்

வழியருமை கூறி மறுத்தல் என்பது தலைமகனிரவுக்குறி வேண்டிநிற்ப, யாங்கள் வாழும்பதி ஏற்றிழிவுடைத்தாகலின் அவ் விடத்து நினக்குச் சிந்தைக்கு மேறற்கரிதெனத் தோழி வழியருமைகூறி மறுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

14.2 இரவர லேந்தல் கருதி யுரைப்பப்
பருவரற் பாங்கி யருமை யுரைத்தது.

மாற்றே னெனவந்த காலனை
யோல மிடஅடர்த்த
கோற்றேன் குளிர்தில்லைக் கூத்தன்
கொடுங்குன்றின் நீள்குடுமி
மேற்றேன் விரும்பு முடவனைப்
போல மெலியுநெஞ்சே
ஆற்றே னரிய அரிவைக்கு
நீவைத்த அன்பினுக்கே. **#807**
இதன் பொருள்:
மாற்றேன் என வந்த காலனை ஒருவரானு மாற்றப்படேனென்று வழிபடுவோன துயிரைவௌவ வந்த காலனை; ஓலமிட அடர்த்த கோற்றேன் அவனோலமிடும் வண்ண மடர்த்த கோற்றேன்; குளிர்தில்லைக் கூத்தன் குளிர்ந்த தில்லைக் கணுளனாகிய கூத்தன்; கொடுங்குன்றின் நீள் குடுமிமேல் தேன் விரும்பும் முடவனைப் போல அவனுடைய கொடுங்குன்றினது நீண்ட குடுமியின்மேலுண்டாகிய தேனைவிரும்பு முடவனைப் போல; மெலியும் நெஞ்சே எய்துதற் கருமையை நினையாது மெலிகின்ற நெஞ்சமே; அரிய அரிவைக்கு நீ வைத்த அன்பினுக்கு ஆற்றேன் அரியளாகிய வரிவையிடத்து நீயுண்டாக்கிய அன்பால் யானாற்றேன் எ-று.
மாற்றேனென்பது செயப்படுபொருட்கண் வந்தது. மாறே னென்பது விகாரவகையான் மாற்றேனென நின்றதெனினு மமையும். சுவைமிகுதி யுடைமையிற் கோற்றே னென்றார். நீ வன்கண்மையை யாதலின் இவ்வாறு மெலிந்து முயிர்வாழ்தி, யானத்தன்மை யேனல்லேன் இறந்துபடுவே னென்னுங் கருத்தான், மெலியுநெஞ்சே யானாற்றேனென்றான். நீங்கி விலங்காது - நீங்கியுள்ளஞ் செல்கின்ற செலவினின்றும் விலங்காது. மெய்ப்பாடு: இளிவரல். பயன்: இரவுக்குறி நயப்பித்தல். 150

விளக்கவுரை

14.3 நின்றுநெஞ்சுடைதல் நின்றுநெஞ்சுடைதல் என்பது வழியருமை கூறக்கேட்ட தலைமகன், எய்துதற்கரியாளை விரும்பி நீ மெலியாநின்றவிதற்கு யானாற்றேனெனக் கூறித் தனதிறந்துபாடு தோன்றநின்று தன்னெஞ்சுடைந்து வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்
14.3. பாங்கி விலங்கப் பருவரை நாடன்
நீங்கி விலங்காது நெஞ்சு டைந்தது.

கூளி நிரைக்கநின் றம்பலத்
தாடி குரைகழற்கீழ்த்
தூளி நிரைத்த சுடர்முடி

யோயிவள் தோள்நசையால்
ஆளி நிரைத்தட லானைகள்
தேரு மிரவில்வந்து
மீளியுரைத்தி வினையே
னுரைப்பதென் மெல்லியற்கே. **#808**

இதன் பொருள்:

கூளி நிரைக்க நின்று கூத்தின்கட் சுவையாற் பேய்களும் போகாது நிரைத்துநிற்ப நின்று; அம்பலத்து ஆடி குரை கழற்கீழ்த் தூளி நிரைத்த சுடர் முடியோய் அம்பலத்தின் கணாடுவானது ஒலிக்குங் கழலையுடைய திருவடிக்கணுண்டாகிய தூளிமொய்த்த சுடர்முடியையுடையோய்; இவள் தோள்நசையால் இவடோண்மேலுண்டாகிய விருப்பினால்; ஆளி நிரைத்து அடல் ஆனைகள் தேரும் இரவில் வந்து மீளி உரைத்தி ஆளிகள் ஊடுபோக்கற நிரைத்து வலியையுடைய யானைகளைத் தேடு மிரவின்கண்வந்து மீளுதலைச் சொல்லாநின்றாய்; மெல்லியற்கு வினையேன் உரைப்பது என் இனி மெல்லியற்குத் தீவினையேன் சொல்லுவதென்? உடன்படுவாயென்பேனோ மறுப்பாயென் பேனோ? எ-று.

இரவுக்குறியுடம்பட்டாளாகலின், தூளிநிரைத்த சுடர் முடியோ யென்றதனால், அரையிருளின்வருதலான் வருமேதத்தை அத்தூளி காக்குமென்று கூறினாளாம். குரைகழல்: அன்மொழிதொகை. மருடல் வெகுட லென்பன மருளி வெகுளி யென நின்றாற்போல, மீடலென்பது மீளியென நின்றது. வந்து மீளியென்பதற்கு, வந்து மீடலையுடைய இரவுக் குறி என்றுரைப்பாருமுளர். உடம்படவு மறுக்கவுமாட்டாதிடைநின்று வருந்துதலின் வினையேனென்றாள். ஆளி நிரைக்குமாற்றின்கண் நீ வருதற்குடம் படுதற்காகாதாயினுந் தோணசையாற் கூறுகின்ற விதனை மறுப்பின் நீ யாற்றாயென்பதனா லுடம்படாநின்றேனென்பது படக் கூறினமை யால், வகுத்துரைத்த லாயிற்று. மெய்ப்பாடு: அச்சம். பயன்: இரவுக்குறிநேர்தல். இறந்தகால வுட்கோள்: குறிப்பு நுட்பம். 151

விளக்கவுரை

14.4 இரவுக்குறிநேர்தல்

இரவுக்குறி நேர்தல் என்பது தலைமக னெஞ்சுடைந்து வருந்தாநிற்பக் கண்டு, இவனிறந்துபடவுங் கூடுமென வுட் கொண்டு, நீ யாளிக ணிரைத்துநின் றியானைகளைத்தேடு மிராவழியின் கண்வந்து மீள்வேனென்னாநின்றாய்; இதற்குத் தீவினையேன் சொல்லுவதெவனோ வென்று மறுத்த வாய் பாட்டாற் றோழி யிரவுக்குறி நேராநிற்றல். அதற்குச் செய்யுள்

14.4. தடவரை நாடன் தளர்வு தீர
மடநடைப் பாங்கி வகுத்து ரைத்தது.

வரையன் றொருகா லிருகால்
வளைய நிமிர்த்துவட்கார்
நிரையன் றழலெழ வெய்துநின்
றோன்தில்லை யன்னநின்னூர்
விரையென்ன மென்னிழ லென்ன
வெறியுறு தாதிவர்போ
துரையென்ன வோசிலம் பாநலம்
பாவி யொளிர்வனவே. **#809**

இதன் பொருள்:
சிலம்பா - சிலம்பா; நின் ஊர் நலம் பாவி ஒளிர்வன விரை என்ன நின்னூரின் நலம்பரந்து விளங்குவன வாகிய ஆண்டையார் பூசும் விரையெத்தன்மைய; மென்னிழல் என்ன அவர் விளையாடு மெல்லிய நிழலெத்தன்மைய; வெறி உறு தாது இவர்போது என்ன அவர்சூடு நறுநாற்றம் பொருந்திய தாதுபரந்த போதுகளெத்தன்மைய; உரை உரைப்பாயாக எ-று.
அன்று ஒருகால் வரை இருகால் வளைய நிமிர்த்து அன்றொருகால் வரையை யிரண்டுகாலும் வளையும்வண்ண மார்பையுந் தோளையுநிமிர்த்து; வட்கார் நிரை அழல் எழ அன்று எய்து நின்றோன் தில்லை அன்ன நின் ஊர் பகைவரது நிரையை யழலெழும் வகை யன்றெய்து நின்றவனது தில்லையையொக்கு நின்னூரெனக்கூட்டுக. மெல்லிய நிலத்தையுடைய நிழலை மென்நிழலென்றாள். நலம்பாவி யொளிர்வன என்பதனை யெல்லாவற்றோடுங் கூட்டுக. அன்று நிமிர்த்தெனவும், அன்றெய்து நின்றோனெனவுமியையும். இது குறிப்பெச்சம். வன்றழ லென்பதூஉம் பாடம். இவ்வாறு வினவத் தலைமகனொன்றனை யுட்கொள்ளுமென்று கருதிக் கூறினமையால், ஆங்கொரு சூழ லென்றார். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைமகற்குக் குறியிட முணர்த்துந் தோழி யவனாற்றன்னை வினவுவித்தல். 9; 152

விளக்கவுரை

14.5 உட்கொளவினாதல்
உட்கொள வினாதல் என்பது இரவுக்குறிநேர்ந்த தோழி, தங்கணிலத்து மக்கள் கோலத்தனாய் வருவதற்கு அவனுட் கொள்வது காரணமாக, நின்னூரிடத்தார் எம்மலர்சூடி எச்சாந் தணிந்து எம்மர நிழலின்கீழ் விளையாடுபவெனத் தலைமகனை வினாவா நிற்றல். அதற்குச் செய்யுள்
14.5. நெறிவிலக் குற்றவ னுறுதுயர் நோக்கி

யாங்கொரு சூழல் பாங்கி பகர்ந்தது.

செம்மல ராயிரந் தூய்க்கரு
மால்திருக் கண்ணணியும்
மொய்ம்மல ரீர்ங்கழ லம்பலத்
தோன்மன்னு தென்மலயத்
தெம்மலர் சூடிநின் றெச்சாந்
தணிந்தென்ன நன்னிழல்வாய்
அம்மலர் வாட்கண்நல் லாயெல்லி
வாய்நும ராடுவதே. **#810**

இதன் பொருள்: அம் மலர் வாள் கண் நல்லாய் அழகிய மலர்போலுமொளியையுடையவாகிய கண்ணையுடைய நல்லாய்; செம்மலர் ஆயிரம் தூய் கருமால் திருக்கண் அணியும் செய்ய தாமரைமலர்க ளாயிரத்தைத் தூவி முன்வழிபட்டு ஒருஞான்று அவற்றுளொன்று குறைதலாற் கரியமால் அவற்றோடொக்குந் தனது திருக்கண்ணை யிடந்தணியும்; மொய்ம் மலர் ஈர்ங் கழல் அம்பலத்தோன் மன்னுதென் மலயத்து பெரிய மலர்போலும் நெய்த்த நிறத்தையுடையவாகிய திருவடியையுடைய வம்பலத் தான்றங்குந் தென்மலயத்திடத்து; எல்லிவாய் நுமர் ஆடுவது இராப் பொழுதின்கண் நுமர் விளையாடுவது; எம்மலர் சூடி நின்று எம்மலரைச் சூடிநின்று; எச்சாந்து அணிந்து எச்சாந்தையணிந்து; என்ன நல் நிழல்வாய் என்ன நன்னிழற்கீழ்? கூறுவாயாக எ-று.

வாள்: உவமையெனினுமமையும். நுமரென்றது அவரோ டொரு நிலத்தாராகிய மக்களை. திருமாலென்பதூஉம் பாடம். நிழல் அணியன் றெனினும், பன்மைபற்றி யணியென்றார். மெய்ப்பாடு : அது. பயன்: குறியிடமுணர்த்துதல். 153

விளக்கவுரை

14.6 உட்கொண்டுவினாதல்

உட்கொண்டு வினாதல் என்பது கேட்ட வினாவையுட் கொண்டு அந்நிலத்து மக்கள் கோலத்தனாய்ச் செல்வானாக, நின்னூரிடத்து இராப்பொழுது நுமர் எம்மலரைச்சூடி எச்சாந்தை யணிந்து என்ன மரநிழலின்கீழ் விளையாடுபவெனத் தலைமகன் றோழியை வினாவாநிற்றல். அதற்குச் செய்யுள்

14.6. தன்னை வினவத் தானவள் குறிப்பறிந்
தென்னை நின்னாட் டியலணி யென்றது.

பனைவளர் கைம்மாப் படாத்தம்
பலத்தரன் பாதம்விண்ணோர்
புனைவளர் சாரற்பொதியின்

மலைப்பொலி சந்தணிந்து
சுனைவளர் காவிகள் சூடிப்பைந்
தோகை துயில்பயிலுஞ்
சினைவளர் வேங்கைகள் யாங்கணின்
றாடுஞ் செழும்பொழிலே. **#811**

இதன் பொருள்:

பனை வளர் கைம் மாப் படாத்து அம்பலத்து அரன்பாதம் பனைபோலுநெடிய கையையுடைய மாவினுரியாகிய படாத்தையுடைய வம்பலத்தரன்பாதங்களை; விண்ணோர் புனைவளர் சாரல் பொதியின் மலை விண்ணோர் பரவுதற்கிடமாகிய வளருஞ் சாரலையுடைய பொதியின்மலைக்கண்; பொலி சந்து அணிந்து பொலியுஞ் சந்தனச் சாந்தையணிந்து; சுனைவளர் காவிகள் சூடி சுனைக்கண் வளருங் காவிகளைச் சூடி; யாங்கள் நின்று ஆடும் செழும்பொழில் யாங்கணின்றாடும் வளவியபொழில்; பைந்தோகை துயில் பயிலும் சினை வளர் வேங்கைகள் பசிய மயில்கள் துயில்செய்யுங் கோடுவளரும் வேங்கைப் பொழில் எ-று.

என்றது சந்தனச் சாந்தணிந்து சுனைக்காவிசூடி வேங்கைப் பொழிற்கண் நீவந்துநின்று நின்வரவறிய மயிலெழுப்பு வாயாகவென்றவாறு.

மெய்ப்பாடு: அது. பயன்: இரவுக்குறியிட முணர்த்துதல். #9; 154

விளக்கவுரை

14.7 குறியிடங்கூறல் குறியிடங்கூறல் என்பது உட்கொண்டு வினாவிய தலைமக னுக்கு*,* யாங்கள் சந்தனச்சாந்தணிந்து*,* சுனைக்காவிகள் சூடி*,* தோகைக டுயில்செய்யும் வேங்கைப் பொழிற்கண் விளையாடு வேம்*;* அவ்விடத்து நின்வரவறிய மயிலெழுப்புவாயாகவெனத் தோழி குறியிடங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

14.7. இரவுக் குறியிவ ணென்று பாங்கி
அரவக் கழலவற் கறிய வுரைத்தது.

மலவன் குரம்பையை மாற்றியம்
மால்முதல் வானர்க்கப்பாற்
செலவன்பர்க் கோக்குஞ் சிவன்தில்லைக்
கானலிற் சீர்ப்பெடைய
ோ டலவன் பயில்வது கண்டஞர்
கூர்ந்தயில் வேலுரவோன்
செலவந்தி வாய்க்கண் டனனென்ன
தாங்கொன்மன் சேர்துயிலே **#812**

இதன் பொருள்:

மல வன் குரம்பையை மாற்றி மலங்களை யுடைய வலிய யாக்கையாகிய

குரம்பையைமாற்றி; மால் முதல் அவ்வானவர்க்கு அப்பால் செலவு அன்பர்க்கு ஓக்கும் மான் முதலாகிய அவ்வானவர்க்கப்பாற் செல்லுஞ் செலவை அன்பரா யினார்க்கென்றோக்கிவைக்கும்; சிவன் தில்லைக் கானலில் சிவனது தில்லையைச்சூழ்ந்த கானலிடத்து; சீர்ப்பெடையோடு அலவன் பயில்வது கண்டு நல்லபெடையோடலவன்பயின்று விளையாடுவ தனைக்கண்டு; அஞர் கூர்ந்து வருத்தமிக்கு; அயில் வேல் உரவோன் அயில்வேலையுடைய வுரவோன்; அந்திவாய்ச் செலக் கண்டனன் அந்திப் பொழுதின்கட்செல்ல அவனைக் கண்டேன்; மன் சேர் துயில் என்னதாங் கொல் பின் அம்மன்னனது சேர்துயி லெத்தன்மைத்தாம்! அறியேன் எ-று.

அப்பாற்செலவு மான் முதலாயினார்க்கு மேலாகிய பதங்கள். அன்பருட் போகவேட்கை யுடையார் அவற்றைப் பெற்றுப் போகந்துய்ப்பாராதலிற் செலவன் பர்க் கோக்கு மென்றார். பெடையொடும்பயிலு மலவனைக்கண்டு முயிர்தாங்கிச் சென்றா னாதலின் உரவோ னென்றாள். 155

விளக்கவுரை

14.8 இரவுக்குறியேற்பித்தல் இரவுக்குறி யேற்பித்தல் என்பது தலைமகனுக்குக் குறியிடங் கூறித் தலைமகளுழைச் சென்று, அந்திக்காலத் தோரலவன் றன்பெடையோடு பயிலக்கண்டு ஒருபெரியோன் வருத்தமிக்குச் சென்றான்; அதற்குப்பின் அவன் சேர்துயிலறிந் திலேனெனத் தோழி அவனதாற்றாமைகூறித் தலைமகளை யிரவுக்குறி யேற்பியாநிற்றல். அதற்குச் செய்யுள்

14.8. அரவக்கழலவ னாற்றானென
இரவுக்குறி யேற்பித்தது.

14.9. குரவரு குழலிக்
கிரவர வுரைத்தது.

மோட்டங் கதிர்முலைப் பங்குடைத்
தில்லைமுன் னோன்கழற்கே
கோட்டந் தருநங் குருமுடி
வெற்பன் மழைகுழுமி
நாட்டம் புதைத்தன்ன நள்ளிருள்
நாகம் நடுங்கச்சிங்கம்
வேட்டந் திரிசரி வாய்வரு
வான்சொல்லு மெல்லியலே. **#813**

இதன் பொருள்:

மெல்லியல் மெல்லியலாய்; மோட்டு அம்கதிர்முலைப் பங்கு உடைத்தில்லை முன்னோன் கழற்கே பெரிய வழகிய

கதிர்முலையையுடைய தோர் கூற்றையுடைய தில்லைக் கணுளனாகிய எல்லாப்பொருட்கு முன்னாயவனுடையதிருவடி யொன்றற்குமே; கோட்டம் தரும் குருமுடி நம் வெற்பன் வணங்குதலைச் செய்யுங் குருமுடியையுடைய நம்வெற்பன்; மழை குழுமி நாட்டம் புதைத்தன்ன நள் இருள் முகில்கள் திரளுதலான் நாட்டத்தைப் புதைத்தாற் போன்றிருக்குஞ் செறிந்த விருட்கண்; நாகம் நடுங்கச் சிங்கம் வேட்டம் திரி சரிவாய் யானைகணடுங்கச் சிங்கம் வேட்டந்திரியு மலைச்சரியிடத்து; வருவான் சொல்லும் வரவேண்டிச் சொல்லாநின்றான்; இனியென்செயத்தகும்? எ-று.

குரு - நிறம். முன்னோன் கழற்கல்லது பிறிதோரிடத்துந் தாழ்ந்து நில்லாப் பெரியோன் தாழ்ந்து வேண்டுவதனை மறுத்தலரிதென்பது போதர, முன்னோன்கழற்கே கோட்டந்தரு நங்குரு முடிவெற்ப னென்றாள். ஆற்றின்கண் வருமேத மறியினும் அவனது வேட்கை மிகுதியா லென்னாலொன்றுங் கூறுவ தரிதாயிற்றென்பது போதர, நள்ளிரு ணாகநடுங்கச் சிங்கம்வேட்டந்திரி சரிவாயென்றாள். குரவெனவும் இரவெனவும் விகாரவகையாற் குறுகிநின்றது. இவையிரண்டற்கும் மெய்ப்பாடு: அச்சத்தைச் சார்ந்த விளிவரல். பயன்: தலைமகளை யிரவுக்குறி நேர்வித்தல். #9; 156

விளக்கவுரை

14.9 இரவரவுரைத்தல் இரவரவுரைத்தல் என்பது அலவன்மேல்வைத் திரவுக்குறி யேற்பித்து முகங்கொண்டு அதுவழியாகநின்று, வேட்கைமிக வால் யானைகணடுங்கச் சிங்கந்திரியுமலைச்சரியிடத்து வரவேண்டிச் சொல்லாநின்றான்; இதற்கியாஞ் செய்வதென்னோ வெனத் தோழி தலைமகளுக்குத் தலைமகனிரவரவு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
14.9. குரவரு குழலிக்
கிரவர வுரைத்தது.

செழுங்கார் முழவதிர் சிற்றம்
பலத்துப் பெருந்திருமால்
கொழுங்கான் மலரிடக் கூத்தயர்
வோன்கழ லேத்தலர்போல்
முழங்கா ரரிமுரண் வாரண
வேட்டைசெய் மொய்யிருள்வாய்
வழங்கா அதரின் வழங்கென்று
மோவின்றெம் வள்ளலையே. **#814**

இதன் பொருள்:

செழுங்கார் முழவு அதிர் சிற்றம்பலத்து வளவிய கார்போலக் குடமுழா முழங்குஞ் சிற்றம்பலத்தின் கண்ணே; பெருந் திருமால் கான் கொழு மலர்

இட பெரிய திருமால் நறுநாற்றத்தையுடைய கொழுவிய மலரையிட்டுப் பரவ; கூத்து அயர்வோன் கழல் ஏத்தலர்போல் கூத்தை விரும்பிச் செய் வானுடைய கழல்களை யேத்தாதாரைப்போல வருந்த; முழங்கு ஆர் அரி முரண் வாரணவேட்டை செய் மொய் இருள்வாய் முழங்கா நின்ற கிட்டுதற்கரிதாகிய சீயம் முரணையுடைய வாரணவேட்டையைச் செய்யும் வல்லிருட்கண்; வழங்கா அதரின் வழங்கும் எம் வள்ளலை இன்று என்றுமோ யாவரும் வழங்காத வழியிடத்து வழங்குவாயாக வென்று எம்முடைய வள்ளலை யின்று சொல்லுதுமோ! இவ்வாறு சொல்லுதறகுமோ! எ-று.

ஏத்தலரை யானைக்குவமையாக வுரைக்க. ஏத்தலர்போல் வழங்கென்றுமோவென்று கூட்டியுரைப்பாருமுளர். முழங்காரரி யென்பதற்கு முழங்குதலார்ந்த வரியென் பாருமுளர். தனக்கவன் செய்த தலையளியுமுதவியு நினையாநின்ற வுள்ளத்தளாகலின், வள்ளலென்றாள். மைந்தனையென்பது பாடமாயின், ஆண்மைத் தன்மை தோன்ற நின்றதாகவுரைப்பாருமுளர். ஆற்றினேதமுணர்ந்து மறுத்தாள் அவருழை யாஞ்சேற லொழிந்து அவரை வரச்சொல்லக் கடவேமோ வென்றவாறு. அலங்காரம்: எதிர்காலக் கூற்றிடத்துக் காரியத்தின்கண்வந்த இரங்கல்விலக்கு, உபாயவிலக்கு. மெய்ப்பாடு: அச்சம். பயன்: இரவுக்குறி மறுத்தல். 157

விளக்கவுரை

14.10 ஏதங்கூறிமறுத்தல்

ஏதங்கூறி மறுத்தல் என்பதுதலைமகனிரவரவுகேட்ட தலைமகள் தனக்கவன் செய்த தலையளியுமுதவியு நினையா நின்ற வுள்ளத்தளாய், அரிதிரண்டு நின்றியானைவேட்டஞ் செய்யும் வல்லிருட்கண் வள்ளலை வாவென்று சொல்லத்தகு மோவென ஏதங்கூறி மறுத்துரையாநிற்றல். அதற்குச் செய்யுள்

14.10. இழுக்கம்பெரி திரவரினென
அழுக்கமெய்தி யரிவையுரைத்தது.

ஓங்கு மொருவிட முண்டம்
பலத்தும்ப ருய்யவன்று
தாங்குமொருவன் தடவரை
வாய்த்தழங் கும்மருவி
வீங்குஞ் சுனைப்புனல் வீழ்ந்தன்
றழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கு மவர்க்கறி யேன்சிறி
யேன்சொல்லும் வாசகமே. **#815**

இதன் பொருள்:

ஓங்கும் ஒரு விடம் உண்டு உலகமுழுதையுஞ் சுடும் வண்ணம் மேன்மேலும் வளராநின்றதோர் விடத்தைத் தானுண்டு; உம்பர் உய்ய அன்று தாங்கும் அம்பலத்து ஒருவன் தடவரைவாய் உம்பரெல்லா முய்ய அன்று தாங்குமம்பலத் தொருவனது பெரியவரையிடத்து; தழங்கும் அருவி வீங்கும் சுனைப்புனல் ஒலியாநின்ற வருவியாற் பெருகுகின்ற சுனைப்புனற் கண்; அன்று வீழ்ந்து அழுங்கப் பிடித்தெடுத்து வாங்குமவர்க்கு அன்றியான் விழுந்து கெடப்புகப் பற்றியெடுத்துக் கரைக்கணுய்த்த பெரியோருக்கு; சிறியேன் சொல்லும் வாசகம் அறியேன் சிறியேனாகியயான் சொல்லுவதோர் மாற்றமறியேன் எ-று. ஒருநஞ்சென்பதற்கு ஒப்பில்லாத நஞ்செனினுமமையும். தடவரைவாய் வீழ்ந்தழுங்கவென வியையும். சுனையென்றியைப் பினுமமையும். சுனைப்புனல்வாய் வீழ்ந்தழுங்க வன்று தாமே வந்தெடுத்துய்வித்தாற்போல வழங்காதவதரிற் றாம்வருதலான் எனக்கு வருமிடுக்கணையுந் தாமே நீக்கினல்லது யானறிவ தொன்றில்லை யென்னுங்கருத்தால், சுனைப்புனல் வீழ்ந்தன்றழுங்கப் பிடித்தெடுத்து வாங்குமவர்க்கென்றாள்; ஆற்றின்கணேத நினைந் திரவுக்குறி மறுத்த தலைமகள் அவன்செய்த வுதவிநினைந்து பின்னுடம்பட்டாளாதல் பொருந்தா மையறிந்து கொள்க. இக்கருத்தே பற்றி யுதவிநினைந்து குறைநயந்ததென்னாது அவனதாற்றாமை நிலைமை கேட்டுக் குறைநயந்த தென்றார். அவன் செய்த பேருதவி சொல்லுகையால் அவன்செய்த வுதவிக்குக் கைம்மாறாவது நானவனுழைச்சேறலே யென்றுடம்பாடாயிற்று. பிறவிக் குட்டத் தியான் விழுந்து கெடப்புகத் தாமேவந்து பிடித்தெடுத்து அதனி னின்றும் வாங்கிய பேருதவியார்க்குச் சிறியேனாகிய யான் சொல்வதறியே னென்று வேறுமொரு பொருடோன்றியவாறு கண்டு கொள்க. மெய்ப்பாடு: அழுகை. பயன்: இரவுக்குறிநேர்தல். 158

விளக்கவுரை

14.11 குறைநேர்தல் குறைநேர்தல் என்பது ஏதங்கூறி மறுத்த தலைமகள், அவனாற்றானாகிய நிலைமைகேட்டு, யான் புனலிடைவீழ்ந்து கெடப்புக என்னுயிர் தந்த பெரியோர்க்குச் சிறியேன் சொல்லுவ தறியேனென உடம்பட்டு நேராநிற்றல். அதற்குச் செய்யுள்

14.11. அலைவே லண்ணல் நிலைமை கேட்டுக்
கொலைவேற் கண்ணி குறைந யந்தது.

ஏனற் பசுங்கதி ரென்றூழ்க்
கழிய எழிலியுன்னிக்
கானக் குறவர்கள் கம்பலை
செய்யும்வம் பார்சிலம்பா

யானிற்றை யாமத்து நின்னருள்
மேல்நிற்க லுற்றுச்சென்றேன்
தேனக்க கொன்றையன் தில்லை
யுறார்செல்லுஞ் செல்லல்களே. **#816**

இதன் பொருள்:
ஏனற் பசுங்கதிர் என்றூழ்க்கு அழிய தினையினது, பசியகதிர் கோடையாலழிய; எழிலி உன்னி அஃதழியாமன் மழைபெறக் கருதி; கானக் குறவர்கள் கம்பலை செய்யும் வம்பு ஆர் சிலம்பா கானத்துவாழுங் குறவர்கள் தெய்வத்திற்குப் பலி கொடுத்தாரவாரிக்கும் வம்பார்ந்த சிலம்பை யுடையாய்; இற்றையாமத்து யான் நின் அருண்மேல் நிற்கல் உற்று இற்றையிரவின்கண் யான் நின்னேவன்மேனிற்கவேண்டி; தேன்நக்க கொன்றையவன் தில்லை உறார் செல்லும் செல்லல்கள் சென்றேன் தேனோடுமலர்ந்த கொன்றையையுடையானது தில்லையைப் பொருந்தாதாரடையுந் துன்பத்தையடைந்தேன்; நீ கருதியதூஉ முடிந்தது எ-று.

வம்பு காலமல்லாதகாலத்து மழை. யாமமு மென்பது பாடமாயிற் பகலேயன்றியிரவுமெனவுரைக்க. யாமமு நின்னருளே என்பதூஉம் பாடம். கானக்குறவர்கள் தமக்குணவாகிய தினைக்கதிர் கோடையாலழியத் தெய்வத்தைப் பராவி மழை பெய்விக்க முயல்கின்றாற்போல, நினக்குத் துப்பாகிய இவணலம், அலர் முதலாயினவற்றாற் றொலையும்வழி அது தொலையாமன் முயன்று பாதுகாப்பாயென உள்ளுறையாமாறுகாண்க. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைமகற்குக் குறைநயந்தமை யுணர்த்துதல். 159

விளக்கவுரை

14.12 குறைநேர்ந்தமைகூறல்

குறைநேர்ந்தமை கூறல் என்பது தலைமகளைக் குறை நயப்பித்துத் தலைமகனுழைச் சென்று, இற்றையாமத்தெல்லாம் நின்னருண்மேனிற்கவேண்டித் துன்பமுற்றேன்; நீ கருதியதூஉ முடிந்ததெனத் தோழி தலைமகனுக்கு அவள்குறை நேர்ந்தமை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

14.12. குறைந யந்தனள் நெறிகுழ லியென
எறிவே லண்ணற் கறிய வுரைத்தது.

முன்னு மொருவ ரிரும்பொழில்
மூன்றற்கு முற்றுமிற்றாற்
பின்னு மொருவர்சிற் றம்பலத்
தார்தரும் பேரருள்போல்
துன்னுமொ ரின்பமென் றோகைதந்

தோகைக்குச் சொல்லுவபோல்
மன்னு மரவத்த வாய்த்துயில்
பேரும் மயிலினமே. **#817**

இதன் பொருள்:

இரும் பொழில் மூன்றற்கு முன்னும் ஒருவர் பெரியவுலகங்கண் மூன்று முளவாவதற்கு முன்னுந் தாமொரு வருமேயாகியுள்ளார்; முற்றும் இற்றால் பின்னும் ஒருவர் அவ் வுலகமுழுது மாய்ந்தாற் பின்னுந் தாமொருவருமேயாகி யுள்ளார்; சிற்றம் பலத்தார் சிற்றம்பலத்தின் கண்ணார்; தரும் பேரருள்போல் அவர் தரும் பெரிய வருள்போல; ஒரு இன்பம் துன்னும் என்று தம் தோகைக்கு ஓகை சொல்லுவபோல் இவ்வில்லின் கண் ஓரின்பம் வந்து பொருந்து மென்று தம்முடைய தோகைகட் கோகை சொல்லுவன போல; மன்னும் அரவத்தவாய் மயில் இனம் துயில் பேரும் இடைவிடாது நிகழு மாரவாரத்தை யுடையவாய் மயிலினந் துயில் பெயராநின்றன; இஃதென்னோ! எ-று.

சிற்றம்பலத் தாரென்பதற்கு, உலகங்களுளவாய்ச் செல்லுங் காலத்துச் சிற்றம் பலத்தின் கண்ணாரென்றுரைப்பினு மமையும். தன்றோகைக் கென்பது பாடமாயிற் பன்மையொருமை மயக்கமாகக் கொள்க. ஒருகால் வெருவித்தாமே துயிலெழுந்துணையன்று; இஃதவன் செய்த குறி யென்பது போதர, மன்னுமரவத்தவாயென்றாள். மெய்ப்பாடு அது, பயன்: தலைமகன் வரவுணர்த்துதல். 160

விளக்கவுரை

14.13 வரவுணர்ந்துரைத்தல்

வரவுணர்ந்துரைத்தல் என்பது தலைமகனுக்குக் குறை நயப்புக் கூறியதோழி, யாம் விளையாடாநின்ற பொழிலிடத்து வேங்கைமே லுண்டாகிய மயிலின மின்புற்றுத் துயில்பெயரா நின்றன; இதற்குக் காரணமென்னோவென அவன் வரவறிந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

14.13. வளமயி லெடுப்ப இளமயிற் பாங்கி
செருவே லண்ணல் வரவு ரைத்தது.

கூடார் அரண்எரி கூடக்
கொடுஞ்சிலை கொண்டஅண்டன்
சேடார் மதின்மல்லற் றில்லையன்
னாய்சிறு கட்பெருவெண்
கோடார் கரிகுரு மாமணி
யூசலைக் கோப்பழித்துத்
தோடார் மதுமலர் நாகத்தை
நூக்கும்நஞ் சூழ்பொழிற்கே. **#818**

இதன் பொருள்:
கூடார் அரண் எரி கூட கூடாதாருடைய வரண்களை யெரிசென்று கூட; கொடும்சிலை கொண்ட அண்டன் சேடு ஆர் மதில் மல்லல் தில்லை அன்னாய் வளைந்த சிலையைக் கைக்கொண்ட அண்டனது பெருமையார்ந்த மதிலையும் வளத்தையு முடைய தில்லையையொப்பாய்; சிறுகண் பெரு வெண்கோடு ஆர் கரி சிறியகண்ணையுடைய பெரிய வெண்கோடு நிரம்பிய யானை; நம் சூழ்பொழிற்கு நமது சூழ்பொழிற்கண்; குரு மா மணி ஊசலைக் கோப்பு அழித்து நிறத்தையுடைய வுயர்ந்தமணிகளாற் செய்யப்பட்ட வூசலைச் சீரழித்து; தோடு ஆர் மதுமலர் நாகத்தை நூக்கும் இதழார்ந்த மதுமலர்களையுடைய அவ்வூசலைத்தொடுத்த நாகமரத்தை நூக்காநின்றது; இதற்கென் செய்வேம்? எ-று.
சூழ்பொழிற் கென்னு நான்கனுருபு ஏழாவதன் பொருட்கண் வந்தது. சூழ்பொழிலே யென்பதூஉம் பாடம். இவ்வாறு கூறவும் வாளாகிடப்பிற் றாய்துயின்றா ளென்றறிதல் பயன். அலங்காரம்: பரியாயம். மெய்ப்பாடு: அது. பயன்: இடையீடாராய்தல். 161

விளக்கவுரை

14.14 தாய்துயிலறிதல்
தாய்துயிலறிதல் என்பது தலைமகன் வரவுணர்ந்து தலைவியைக் கொண்டுசெல்லக் கருதாநின்றதோழி, யாம் விளையாடாநின்ற பொழிலிடத்து ஒரு யானை நின்று ஊசலைத் தள்ளாநின்றது*;* அதற்கியாஞ் செய்வதென்னோவெனத் தாயது துயிலறியாநிற்றல்.
அதற்குச் செய்யுள்
14.14. ஊசன்மிசைவைத் தொள்ளமளியில்
தாயதுதுயில் தானறிந்தது.

விண்ணுக்கு மேல்வியன் பாதலக்
கீழ்விரி நீருடுத்த
மண்ணுக்கு நாப்பண் நயந்துதென்
தில்லைநின் றோன்மிடற்றின்
வண்ணக் குவளை மலர்கின்
றனசின வாண்மிளிர்நின்
கண்ணொக்கு மேற்கண்டு காண்வண்டு
வாழுங் கருங்குழலே. **#819**

இதன் பொருள்:
வண்டு வாழும் கருங்குழல் வண்டுகள் வாழுங் கரிய குழலை யுடையாய்; விண்ணுக்கு மேல் எல்லாப் பொருட்கு மேலாகிய விண்ணுக்கு மேலாயவன்; வியன் பாதலக்கீழ் எல்லாப் பொருட்குங் கீழாகிய அகன்ற

பாதாலத்திற்குங் கீழாயவன்; விரி நீர் உடுத்த மண்ணுக்கு நாப்பண் நடுவாகிய கடலையுடுத்த மண்ணிற்கு நடுவாயவன்; நயந்து தென் தில்லை நின்றோன் விரும்பித் தென்றில்லைக்கணின்றோன்; மிடற்றின் வண்ணக் குவளை மலர்கின்றன அவனது மிடற்றின் வண்ணத்தை யுடைய குவளைப் பூக்கண் மலர்கின்றவை; சின வாள் மிளிர்நின் கண் ஒக்குமேல் கண்டு காண் சினவாள் மிளிருமாறுபோல மிளிருநின் கண்களையொக்கு மாயிற் காண்பாயாக எ-று.

பாதாலம்: பாதலமெனக் குறுகி நின்றது. மண்ணினுள்ளு முளனாதலின், மண்ணுக்கு நாப்பணென்றார். மண் முழுதுக்குமிடைத் தில்லையை நயந்து அதன்கணின்றோனென் றுரைப்பாருமுளர். சினவாண்மிளிர் நின்கண்ணொக்குமேலென்புழி ஒத்தபண்பு வேறு பட்டமையான் உவமைக்குவமையன்றென்க. கண்டு காணென்ப தொருசொல். ஆய்தருபவள் - புறத்துக்கொடு போமுபாயமாராய் பவள். மெய்ப்பாடு அது. பயன்: தலைமகளைக் குறியிடத் துய்த்தல் அலங்காரம்: புகழுவமை. 162

விளக்கவுரை

14.15 துயிலெடுத்துச் சேறல்

துயிலெடுத்துச் சேறல் என்பது தாய்துயிலறிந்ததோழி, குவளைப்பூக்கள் மலராநின்றன; அவை நின்கண்ணை யொக்கு மாயிற் காண்பாயாகவெனத் துயிலெடுத்துச் செல்லாநிற்றல். அதற்குச் செய்யுள்

14.15. தாய் துயிலறிந் தாய்தருபவள்
மெல்லியற்குச் சொல்லியது.

நந்தீ வரமென்னும் நாரணன்
நாண்மலர்க் கண்ணிற்கெஃகந்
தந்தீ வரன்புலி யூரனை
யாய்தடங் கண்கடந்த
இந்தீ வரமிவை காணின்
இருள்சேர் குழற்கெழில்சேர்
சந்தீ வரமுறி யும்வெறி
வீயுந் தருகுவனே. **#820**

இதன் பொருள்:

நந்தீ வரம் என்னும் நாரணன் நாள் மலர்க் கண்ணிற்கு கண்ணையிடந்திட்டு நந்தீ வரந்தரவேண்டுமென்னு நாரணனது அந்நாண்மலர்போலுங் கண்ணிற்கு; எஃகம் தந்து ஈ வரன் புலியூர் அனையாய் ஒரெஃகத்தைப் படைத்துக் கொடுத்த தலை வனது புலியூரையொப்பாய்; இவை தடங் கண் கடந்த இந்தீவரம் இவை நின்பெரியகண்கள் கடந்த நீலங்கள்; காண் இவற்றைக்காண் பாயாக;

நின் இருள் சேர் குழற்கு நினது கருமைசேர்ந்த குழற்கு; சந்து ஈ எழில் சேர் வர முறியும்வெறி வீயும் தருகுவன் சந்தனமரந்தரும் எழில்சேர்ந்த நல்ல முறிகளையும் நறுநாற்றத்தை யுடைய மலர்களையும் யான்கொணர்ந்து தருவேன்; நீ நீலப் பூக்களையுங் கண்டு ஈண்டு நிற்பாயாக எ-று.

நந்தியென்பது ஒரு திருநாமம். அனையாயுடைய தடங்கண்க ளென்றுரைப்பாரு முளர். இந்தீவரமிவை காணென்பதற்கு நின் கண்களைவென்ற இந்தீவரமாவன விவைகாணென்றுரைப்பினு மமையும். இது குறிப்பெச்சம். உய்த்திடத்து - இடத்துய்த்து. மெய்ப் பாடு - அது. பயன்: தலைமகளைக் குறியிடத்து நிறீஇ நீங்குதல். 163

விளக்கவுரை

9; 14.16 இடத்துய்த்து நீங்கல் இடத்துய்த்து நீங்கல் என்பது துயிலெடுத்துக்கொண்டு சென்று அக்குறியிடத்து நிறுத்தி, இவை நின்கண்கள் வென்ற குவளை மலர்*;* இவற்றைக்காண்பாயாக*;* யானின்குழற்குச் சந்தனத்தழை கொய்யாநின்றேனெனத் தான் சிறிதகலாநிற்றல். அதற்குச் செய்யுள்

14.16. மைத்தடங் கண்ணியை யுய்த்திடத் தொருபால்
நீங்க லுற்ற பாங்கி பகர்ந்தது.

காமரை வென்றகண் ணோன்தில்லைப்
பல்கதி ரோனடைத்த
தாமரை யில்லின் இதழ்க்கத
வந்திறந் தோதமியே
பாமரை மேகலை பற்றிச்
சிலம்பொதுக் கிப்பையவே
நாமரை யாமத் தென் னோவந்து
வைகி நயந்ததுவே. **#821**

இதன் பொருள்:

காமரை வென்ற கன்ணோன் தில்லை நிறையழிக்க வந்த காமனை வென்ற கண்ணையுடையவனது தில்லைக்கண்; பல்கதிரோன் அடைத்த தாமரை இல்லின் பல்கதிரோனாகிய வாயிலோன் அடைத்து வைத்த தாமரையாகிய நும் மில்லின்கண்; இதழ்க் கதவம் திறந்தோ இதழாகிய கதவத்தை அவ்வாயிலோன் வருவதன்முன் நீரே திறந்து கொண்டோ போந்தது? இதுகிடக்க, பாம் அரை மேகலை பற்றி பரந்தவரையின் மேகலையை யொலியாமறப்பிடித்து; சிலம்பு ஒதுக்கி சிலம்புகளை மேலேறக் கடுக்கி; தமியே பைய அரையாமத்து நாம் வந்து வைகி நயந்தது என்னோ தனியே பைய அரையாமத்தின்கண் நாம் ஈண்டுவந்து தங்கி விரும்பிய தென்னோ? இதனைக் கூறுவீராமின் எ-று.

காமரென்னும் ரகரவீறு இழிவின்கண் வந்தது. தில்லைத் தாமரையென வியையும். கதவந் திறந்தோவென்னு மோகாரத்தை அசைநிலையாக்கியுரைப்பாருமுளர். பாவுமென்னு மீற்றுமிசை உகரம் மெய்யொடுங் கெட்டுக் காலமயக்கமாய் நின்றது. எல்லா ரானுந் திருமகணயக்கப் படினல்லது திருமகடன்னானயக்கப் படுவதொன்றில்லை யென்னுங் கருத்தான், நாம் நயந்த தென்னோ வென்றார். நாமென்னு முன்னிலை யுளப்பாட் டுத் தன்மை உயர்வு தோன்ற முன்னிலைக்கண் வந்தது. தடு - தடுத்தல். அரியன்பு பரியரை போலப் பண்புத்தொகை யாய் நின்றது. தடையருமன்பென்று பாடமோதுவாருமுளர். கண்ணியை யுரைத்ததெனவியையும். மெய்ப்பாடு: உவகை. பயன்: தலைமகளைக் கண்டு தோன்றிய வுவகையைப் பரிக்கலாற்றாத தலைமகனாற்றுதல்; தலைமகளை மகிழ்வித்தலுமாம். 164

விளக்கவுரை

14.17 தளர்வகன் றுரைத்தல்

தளர்வகன் றுரைத்தல் என்பது தோழி குறியிடை நிறுத்தி நீங்காநிற்ப, தலைமகனெதிர்ப்பட்டு, நும்முடைய கமலக்கோயில் கதிரவன் வருவதன்முன் நீரே திறந்துகொண்டோ போந்தது*?* இப்பொழிலிடை வந்து நயந்ததென்னோ வெனத் தலைமகளைப் பெரும்பான்மைகூறித் தன்றளர்வு நீங்காநிற்றல். அதற்குச் செய்யுள்

14.17. வடுவகி ரனைய வரிநெடுங் கண்ணியைத்
தடுவரி யன்பொடு தளர்வகன் றுரைத்தது.

அகிலின் புகைவிம்மி ஆய்மலர்
வேய்ந்தஞ் சனமெழுதத்
தகிலுந் தனிவடம் பூட்டத்
தகாள்சங் கரன்புலியூர்
இகலு மவரிற் றளருமித்
தேம்ப லிடைஞெமியப்
புகிலு மிகஇங்ங னேயிறு
மாக்கும் புணர்முலையே. **#822**

இதன் பொருள்:

அகிலின் புகை விம்மி ஆய் மலர் வேய்ந்து குழற் கணகிற்புகை விம்ம ஆராயப்பட்ட மலர்களை வேய்ந்து; அஞ்சனம் எழுதத் தகிலும் கண்மலர்க் கஞ்சனமெழுதத் தகுவளாயினும்; தனிவடம் பூட்டத் தகாள் ஒரு தனி வடத்தைப் பூட்டத் தகுவாளல்லள்; சங்கரன் புலியூர் இகலும் அவரின் அதனைப் பூட்டுதலே யன்றிச் சங்கரனது புலியூரின் பெருமையை யுணராது அதனோடு மாறுபடுவாரைப்போல; தளரும்

இத்தேம்பல் இடை ஞெமியப் புகிலும் தளராநின்ற இத்தேய்தலை யுடைய இடை நெரிந் தொடியப்புகினும்; புணர்முலை இங்ஙனே மிக இறுமாக்கும் அதனை யுணராது இப்புணர்ந்த முலைகள் இவ்வண்ணமே மிகவும் விம்மாநின்றன; இஃதென்னாய்முடியும்! எ-று.
தேம்பலிடை: இருபெயர்ப் பண்புத்தொகை யெனினுமமை யும். ஆய்மலராய்ந்தென்பது பாடமாயின், ஆராய்ந்து சூட்டி யெனச் சூட்டுதலை ஆற்றலான் வருவித்துரைக்க. புகலுமென்பது பாடமாயிற் புகுதலுமெனவுரைக்க. பிறபாட மோதுவாருமுளர். அளவளாயென் பது மிகுதிக்கணிரட்டித்து வந்தது. அளாயென்பதனைச் செய் தென்னும் பொருட்டாக்கி அளவுதலைச் செய் தென்றுரைப்பாரு முளர். மெய்ப்பாடு: அது. பயன்: தலைமகளைச் சார்தல். 165

விளக்கவுரை

14.18 மருங்கணைதல்

மருங்கணைதல் என்பது பெரும்பான்மை கூறக்கேட்ட தலைமகள் பெருநாணினளாதலிற் றன்முன்னிற்கலாது நாணித் தலை யிறைஞ்சி வருந்தாநிற்ப, சென்று சார்தலாகாமையிற் றனதாதரவு மிகவால் அவ்வருத்தந்தணிப்பான்போன்று, முலை யொடு முனிந்து, அவளிறுமருங்குறாங்கிச் சென்றணையாநிற்றல். அதற்குச் செய்யுள்

14.18. அன்பு மிகுதியி னளவளா யவளைப்
பொன்புனை வேலோன் புகழ்ந்து ரைத்தது.

அழுந்தேன் நரகத் தியானென்
றிருப்பவந் தாண்டுகொண்ட
செழுந்தேன் திகழ்பொழிற் றில்லைப்
புறவிற் செறுவகத்த
கொழுந்தேன் மலர்வாய்க் குமுத
மிவள்யான் குரூஉச்சுடர்கொண்
டெழுந்தாங் கதுமலர்த் தும்முயர்
வானத் திளமதியே. **#823**

இதன் பொருள்:

யான் நரகத்து அழுந்தேன் என்று இருப்ப யானினி நரகத்திற் புக்கழுந்தேனென்று செம்மாந்திருக்கும்வண்ணம்; வந்து ஆண்டு கொண்ட செழுந்தேன் நிழல் பொழில் தில்லைப் புறவில் தானே வந்தாண்டுகொண்ட செழுந்தேன் போல்வானது விளங்கும் பொழிலையுடைய தில்லையைச்சூழ்ந்த இளங்காட்டில்; செறுவகத்த கொழுந்தேன் மலர் வாய்க்குமுதம் இவள் செய்யின் கண்ணவாகிய கொழுவியதேனையும் மலராநின்ற வாயையுமுடைய குமுதமலர் இவள்; யான் குரூஉச்சுடர் கொண்டு எழுந்து ஆங்கது மலர்த்தும் உயர் வானத்து

இளமதி யான் நிறத்தையுடையை நிலாவைக்கொண் டெழுந்து அக்குமுதத்தை மலர்த்தும் உயர்ந்த வானத்தின்கட்டிகழும் முதிராமதி எ-று.
நரகமென்றது ஈண்டுப்பிறவியை; வீடுபேற்றின்பத்தோடு சார்த்த நரகமுஞ் சுவர்க்கமுமொருநிகரனவாகலின், நரகமென்றார். ஆண்டுகொண்டா னென்பது பாடமாயிற் செழுந்தேனைப் பொழிலின்மேலேற்றுக. செறு - நீர்நிலையுமாம். வாய் - முகம். மலர் வாய்க்குமுத மென்றது கிண்கிணிவாய்க் கொள்ளு நிலைமையை. அதனாலிவளது பருவம் விளங்கும். குரூஉச்சுடர் கொண்டு மலர்த்து மெனக் கூட்டிக் குரூஉச் சுடரான் மலர்த்துமென் றுரைப்பினு மமையும். அதனால், தலைப் பெய்தமையானன்றிக் கண்ட துணையான வண் மகிழ்தலைக் கூறினானாம். இவ்வின்பம் வழிமுறையாற் பெருகு மென்பது போதர, இளமதி யென்றான். மெய்ப்பாடு: அது. பயன்: நயப்புணர்த்துதல். 166

விளக்கவுரை

14.19 முகங்கண்டு மகிழ்தல் முகங்கண்டு மகிழ்தல் என்பது மருங்கணைவிறுதிக் கட் டலைமகளது முகமகிழ்ச்சிகண்டு, இவளும் யானும் மலருமதியு மெனத் தலைமகன் றன்னயப் புணர்த்தி மகிழாநிற்றல். அதற்குச் செய்யுள்
14.19. முகையவிழ்குழலி முகமதிகண்டு
திகழ்வேல்அண்ணல் மகிழ்வுற்றது.

சுரும்புறு நீலங் கொய்யல்
தமிநின்று துயில்பயின்மோ
அரும்பெறற் றோழியொ டாயத்து
நாப்ப ணமரரொன்னார்
இரும்புறு மாமதில் பொன்னிஞ்சி
வெள்ளிப் புரிசையன்றோர்
துரும்புறச் செற்றகொற் றத்தெம்
பிரான்தில்லைச் சூழ்பொழிற்கே. **#824**

இதன் பொருள்:
அமரர் ஒன்னார் இரும்பு உறு மா மதில் பொன் இஞ்சி வெள்ளிப் புரிசை அமரர்க்குப் பகைவராயினாருடைய இரும்பு பொருந்திய பெரிய மதிலையுடையவூரும் பொன்னிஞ்சியை யுடையவூரும் வெள்ளிப்புரிசையை யுடையவூரும்; அன்று ஓர் துரும்பு உறச் செற்ற கொற்றத்து எம்பிரான் தில்லைச் சூழ் பொழிற்கு அன்று ஒரு துரும்பின் றன்மையையுற எரித்த வெற்றியையுடைய வெம்பிரானது தில்லைக்கட் சூழ்ந்த பொழிலிடத்து; தமி நின்று தனியே நின்று; சுரும்பு உறு நீலம்

கொய்யல் சுரும்பு பொருந்து நீலப் பூக்களைக் கொய்யாதொழி; அரும் பெறல் தோழியோடு ஆயத்து நாப்பண் துயில் பயில் அரிய பெறுதலையுடைய நின்றோழியோடு ஆயத்தினிடைத் துயிலைப் பயில்வாயாக எ-று.

மோ: அசை. சுரும்புறுநீலம் - மேலாற்சுரும்புவந்து பொருந்து நீலமலர்; எதிர்காலவினை; 'மென்னனை யாய்மறியே பறியேல்' (தி.8 கோவை பா.125) என்றது போலக் கொள்க. சூழ் பொழில் - தில்லையைச் சூழ்ந்த பொழில். பொழிற்கென்பது வேற்றுமை மயக்கம். பொழிலே யென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: புறத்தாரறியாமைப் பிரிதல். 167

விளக்கவுரை

14.20 பள்ளியிடத் துய்த்தல்

பள்ளியிடத்துய்த்தல் என்பது மலர்மதிமேல்வைத்துக் கூறி மகிழ்வுற்றுப் பிரியலுறாநின்றவன், இப்பொழிலிடை யினித் தனியே நின்று நீலப்பூக்களைக் கொய்யாது, நின்னரியதோழி யோடு ஆயத்திடைச் சென்று துயில்பயில்வாயெனத் தலைமக ளைப் பள்ளியிடத்துச் செலுத்தாநிற்றல். அதற்குச் செய்யுள்

14.20. பிரிவது கருதிய பெருவரை நாடன்
ஒள்ளிழைப் பாங்கியொடு பள்ளிகொள் கென்றது.

நற்பகற் சோமன் எரிதரு
நாட்டத்தன் தில்லையன்ன
விற்பகைத் தோங்கும் புருவத்
திவளின் மெய்யேயெளிதே
வெற்பகச் சோலையின் வேய்வளர்
தீச்சென்று விண்ணினின்ற
கற்பகச் சோலை கதுவுங்கல்
நாடஇக் கல்லதரே. **#825**

இதன் பொருள்:

வெற்பகச் சோலையின் வேய் வளர் தீ வெற்பிடத்துச் சோலையின்கணுண்டாகிய வேய்க்கட் பிறந்து வளருந்தீ; விண்ணின் நின்ற கற்பகச் சோலை சென்று கதுவும் கல் நாட விண்ணின்கணின்ற கற்பகச் சோலையைச் சென்று பற்று மலை நாடனே; இக் கல் அதர் இக்கல்லையுடைய சிறுநெறி; நல் பகல் சோமன் எரிதரு நாட்டத்தன் தில்லை அன்ன நல்ல ஞாயிறுந் திங்களுந் தீயுமுண்டாகிய மூன்று நாட்டத்தையுமுடையவனது தில்லையை யொக்கும்; வில் பகைத்து ஓங்கும் புருவத்து இவளின் வில்லைப் பகைத்து அதனின்மிகும் புருவத்தையுடைய இவள் காரணமாக; மெய்யே எளிது மெய்யாக

வெளிதாயிற்று; ஆயினும், இனிநீ வரற்பாலையல்லை எ-று. செவ்வெண்ணின்றொகை விகாரவகையாற் றொக்குநின்றது. உம்மைத்தொகை யெனினுமமையும். தில்லையன்னவிவளென வியையும். இவளின்மெய்யே யெளிதேயென்பதற்கு இவள் காரணமாக வெளிதாமோ எளிதன்றெனவெதிர்மறையாக்கி யுரைப்பினுமமையும். வேயிற்பிறந்ததீ ஆண்டடங்காது சென்று தேவருலகத்தினின்ற கற்பகச்சோலையைக் கதுவினாற்போல, நின்வரவினால் அயலாரிடத்துப்பிறந்த அலர்பெருகி நின்னூருமறியப் பரந்து நின்பெருமையைச் சிதைக்குமென உள்ளுறை வகையான் அலரறி வுறுத்தவாறு கண்டுகொள்க. இவனுக்குப் பெருமையாவது இவன் வழியிற் பிதிர்கள் கொண்டாட்டம். சிதைத்தலாவது இகலோக பரலோக மிரண்டையுஞ் சிதைத்தல். மூங்கிலிற்பிறந்ததீத் தன்னையுஞ் சுட்டுத் தன்னுடைய சுற்றத்தையுஞ் சுட்டுக் கற்பகச் சோலையைக் கதுவினாற்போல வென்க. நற்பகற் சோமன் விகார வகையான் வலிந்து நின்றது. மெய்ப்பாடு: அச்சம். பயன்: வரவுவிலக்கி வரைவு கடாதல். 168

விளக்கவுரை

14.21 வரவுவிலக்கல் வரவுவிலக்கல் என்பது தோழி தலைமகளைப் பள்ளியிடத்துச் சேர்த்திச்சென்று, இக்கல்லதர் இவள் காரணமாக நினக் கெளிதாயிற்று; ஆயினும் இனியிவ்வாறொழுகற்பாலை யல்லையென வரைவு பயப்பக் கூறித் தலைமகனை வரவு விலக்காநிற்றல். அதற்குச் செய்யுள்

14.21. தெய்வமன் னாளைத் திருந்தமளி சேர்த்தி
மைவரை நாடனை வரவுவிலக் கியது.

பைவா யரவரை அம்பலத்
தெம்பரன் பைங்கயிலைச்
செவ்வாய்க் கருங்கட் பெரும்பணைத்
தோட்சிற் றிடைக்கொடியை
மொய்வார் கமலத்து முற்றிழை
யின்றென்முன் னைத்தவத்தால்
இவ்வா றிருக்குமென் றேநிற்ப
தென்றுமென் இன்னுயிரே. **#826**

இதன் பொருள்:

பை வாய் அரவு அரை படத்தையும் பெரிய வாயையுமுடைய அரவையணிந்த வரையையுடைய; அம்பலத்து எம்பரன் பைங் கயிலை அம்பலத்தின்கணுளனாகிய எம்முடைய பரனது சோலையாற் பசிய கயிலைக்கணுள்ளாகிய; செவ்வாய்க் கருங்கண் பெரும்பணைத் தோள் சிற்றிடைக்கொடியை செய்ய வாயையுங் கரிய கண்ணையும்

பெரியபணை போலுந் தோள்களை யுஞ் சிறியவிடையையுமுடைய கொடிபோல்வாளை; மொய்வார் கமலத்து முற்றிழை பெரியதாகிய தாளானெடிய கமலத்துவாழுந் திருமகளாகிய முற்றிழை; முன்னை என் தவத்தால் முற்பிறப்பின்க ணுண்டாகிய எனது தவப்பயனால்; இன்று இவ்வாறு இருக்கும் என்றே எனக்கெய்தலாம்வண்ணம் இன்றிவ்வாறு கொடிச்சியா யிருக்குமென்று கருதியே; என் இன் உயிர் என்றும் நிற்பது என்னின்னுயிர் என்றும் நிற்பது; இத்தன்மையாளை யான்வரையுந் துணை யெளியளாக நீ கூறுகின்றதென்! எ-று.

எம்பரனென்பதற்கு முன்னுரைத்ததுரைக்க. (தி.8 கோவை பா.99) கயிலைக் கொடியெனவியையும். கொடியை யென்னு மிரண்டாவது என்று கருதியென வெஞ்சிநின்ற வினையொடு முடியும். மெய்ப்பாடு: உவகை. பயன்: வரைவுடம்படாமை. 169

விளக்கவுரை

14.22 ஆற்றாதுரைத்தல்

ஆற்றாதுரைத்தல் என்பது வரைவுகடாவி வரவுவிலக்கின தோழிக்கு வரைவுடம்படாது, பின்னுங் களவொழுக்கம் வேண்டி, யான் முன்செய்த தவப்பயனால் எனக்கெய்தலாம் வண்ணந் திருமக ளிவ்வாறு கொடிச்சியாயிருந்தாளெனக் கருதியே எனதின்னுயிர் நிற்பது; இத்தன்மையாளை யான் வரையுந் துணையெளியளாக நீ கூறுகின்ற தென்னெனத் தலைமகன் றனதாற்றாமை தோன்றக் கூறாநிற்றல்.

அதற்குச் செய்யுள்

14.22. வரைவு கடாய வாணுதற் றோழிக்
கருவரை நாடன் ஆற்றா துரைத்தது.

பைவா யரவும் மறியும்
மழுவும் பயின்மலர்க்கை
மொய்வார் சடைமுடி முன்னவன்
தில்லையின் முன்னினக்காற்
செவ்வாய் கருவயிர்ச் சேர்த்திச்
சிறியாள் பெருமலர்க்கண்
மைவார் குவளை விடும்மன்ன
நீண்முத்த மாலைகளே. **#827**

இதன் பொருள்:

மன்ன மன்னனே; இச் சிறியாள் பெரு மலர்க்கண் மை வார் குவளை நீ செல்லு நெறிக்கண் நினக்கிடை யூறுண்டா மென்னு மச்சத்தால் இச்சிறியாளுடைய பெரிய மலர்போலுங் கண்களாகிய கருமையையுடைய நெடிய குவளைகள்; நீள் முத்த மாலைகள் விடும் நீண்ட முத்தமாலைகளைப் புறப்பட விடா நிற்கும், அதனான்

நினக்கிடையூறின்மையை யிவளறிய; தில்லையின் முன்னினக் கால் நின்பதியாகிய தில்லையெல்லையிற் சென்று கிட்டினால்; செவ்வாய் கரு வயிர்ச் சேர்த்து - நின் செவ் வாயைக் கரிய கொம்பின்கட் சேர்த்தி யூதவேண்டும் எ-று.

பை வாய் அரவும் மறியும் மழுவும் பயில் - படத்தையும் பெரிய வாயையு முடைய அரவும் மான்மறியும் மழுவாளும் விடாது நிகழும் - மலர்க்கை மொய் வார் சடை முடி முன்னவன் தில்லை - மலர்போலுங் கையையும் நெருங்கிய நெடிய சடைகளானியன்ற முடியையுமுடைய எல்லாப்பொருட்கு முன்னாயவனது தில்லையெனக் கூட்டுக. குறிஞ்சிநிலத்திற்குரிய மக்கள் கோலத்தனாய் வருமாதலின், வயிர் கூறப்பட்டது. மலர்க்கணென்பது உவமை கருதாது கண்ணென்னுந் துணையாய் நின்றது. கண்ணாகிய குவளைப் பெருமலரென்று கூட்டு வாரும், மலர்தலையுடைய கண்ணென்பாரு முளர். மெய்ப்பாடு: அச்சம். பயன்: வரைவுகடாதல். #9; 170

விளக்கவுரை

14.23 இரக்கங்கூறி வரைவு கடாதல்

இரக்கங்கூறி வரைவு கடாதல் என்பது களவுவிரும்பி வரைவுடம்படாத தலைமகனுக்கு, நீ செல்லுநெறிக்கண் நினக் கிடை யூறுண்டாமென்னு மச்சத்தால் அவளழுதிரங்கா நின்றா ளென்று, நீ சென்றமையறிய நின்குறி காட்டுவாயெனத் தலைமகள திரக்கங் கூறி வரைவுகடாவாநிற்றல். அதற்குச் செய்யுள்

14.23. அதிர்கழலவன் அகன்றவழி
யெதிர்வதறியா திரங்கி யுரைத்தது.

நாகந் தொழவெழில் அம்பலம்
நண்ணி நடம்நவில்வோன்
நாக மிதுமதி யேமதி
யேநவில் வேற்கையெங்கள்
நாகம் வரவெதிர் நாங்கொள்ளும்
நள்ளிருள் வாய்நறவார்
நாகம் மலிபொழில் வாயெழில்
வாய்த்தநின் நாயகமே. **#828**

இதன் பொருள்:

நவில் வேற் கை எங்கள் நாகம் வர பயிலப்பட்ட வேலையேந்திய கையையுடைய எங்கள் யானை வர; நாம் எதிர் கொள்ளும் நள் இருள்வாய் நாங்களெதிர்கொள்ளுஞ் செறிந்த விருளிடத்து; நற ஆர் நாகம் மலி பொழில்வாய் எழில் வாய்த்த நின் நாயகம் அவ்விருளைச் சிதைத்துத் தேனார்ந்த நாகமலர் மலிந்த பொழிலிடத்துநின்று

நீசெய்கின்ற அழகுவாய்த்த நினது முதன்மை; மதியே திங்காள்; மதியே நினக்கறிவே; நாகம் தொழ எழில் அம்பலம் நண்ணி நடம் நவில்வோன் நாகம் இது பதஞ்சலியாகிய நாகந்தொழ எழிலையுடைய வம்பலத்தை நண்ணிக் கூத்தைப் பயில்வானது மலைகாணிஃது; இதனைக் கடைப் பிடிப்பாயாக எ-று.

நாகத்தான் விழுங்கப்படுநீ நாகந்தொழ வம்பலத்து நடம் பயில்வோனது மலைக்கட்புகுந்து விளங்கி வீற்றிருத்தல் நினக்கு நன்றி பயவாதென்பது கருத்து. அறிவென்பது ஈண்டறிந்து செய்யப்படும் காரியத்தை. தனிநாயகமென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு: வெகுளி. பயன்: இடையீடறிவித்தல். 171

விளக்கவுரை

14.24 நிலவு வெளிப்பட வருந்தல்

நிலவு வெளிப்பட வருந்தல் என்பது இரக்கங்கூறி வரைவு கடாயதோழி, பிற்றைஞான்று அவனிரவுக்குறியிடைவந்து நிற்ப, நிலவு வெளிப்பட்டாற் சென்றெதிர்ப்படமாட்டாமற் றாங்கள் வருந்தாநின்றமை சிறைப்புறமாக மதியொடு புலந்து கூறாநிற்றல்.

அதற்குச் செய்யுள்

14.24. தனிவே லவற்குத் தந்தளர் வறியப்
பனிமதி விளக்கம் பாங்கி பகர்ந்தது.

மின்னங் கலருஞ் சடைமுடி
யோன்வியன் தில்லையன்னாய்
என்னங் கலமர லெய்திய
தோவெழின் முத்தந்தொத்திப்
பொன்னங் கலர்புன்னைச் சேக்கையின்
வாய்ப்புலம் புற்றுமுற்றும்
அன்னம் புலரு மளவுந்
துயிலா தழுங்கினவே. **#829**

இதன் பொருள்:

மின் அங்கு அலரும் சடைமுடியோன் வியன் தில்லை அன்னாய் ஒளி யவ்விடத்துவிரியுஞ் சடையா னியன்ற முடியையுடையவனது அகன்ற தில்லையை யொப்பாய்; எழில் முத்தம் தொத்தி எழிலையுடைய அரும்பாகிய முத்தந்தொத்தி; அங்கு பொன் அலர் புன்னைச் சேக்கையின்வாய் அவ்விடத்துத் தாதாகிய பொன்மலரும் புன்னைக்கணுண்டாகிய தஞ்சேக்கை யிடத்து; அன்னம் முற்றும் புலம்புற்றுப் புலரும் அளவும் துயிலாது அழுங்கின அன்னமெல்லாம் துன்புற்றுப் புலருமளவுந் துயிலாது ஆரவாரித்தன; அங்கு எய்தியது அலமரல் என் - அவ்விடத் தெய்திய தாகிய அலமரலென்னாம்?

அறிகின்றிலேன் எ-று.
மின்னங் கலரு மென்பதற்கு மின்னவ்விடத் தலர்ந்தாற் போலுஞ் சடையெனினு மமையும். என்னங்கலமரலெய்தியதோ வென்பதற்கு என்ன வலமர லாண்டெய்திற்றோ வென்று கூட்டியுரைப்பினுமமையும். இப் பொருட்கு என்னவென்பது கடைக்குறைந்து நின்றது. முத்தந் தொத்துதலும் பொன்மலர்தலுமாகிய உறுப்பின்றொழில் முதன் மேலேறி நின்றன. சேக்கையின் வாயழுங்கினவெனவியையும். நெடும்பொழுது துயின்றில வென்பாள் புலருமளவுமென்றாள். பிற்றைஞான்று பகற்குறிவந்து நிற்பக் கூறினாளெனினுமமையும். அழுங்கல் - இரக்க மெனினு மமையும். அறைப்புனல் - அறைதலை யுடைய புனல். மெய்ப்பாடு: அழுகை. பயன்: அல்லகுறிப்பட்டமை தலைமகற் குணர்த்துதல். இனித் திணைநெய்தல்.172

விளக்கவுரை

14.25 அல்லகுறியறிவித்தல்

அல்லகுறி யறிவித்தல் என்பது குறியல்லாதகுறி யெதிர்ப் பட்டு மீண்டமை, பிற்றைஞான்று தலைமகன் சிறைப்புறம் வந்து நிற்ப, தோழி தலைமகளுக்குக் கூறுவாள்போன்று, அன்னத்தின் மேல்வைத்து அறிவியாநிற்றல். அதற்குச் செய்யுள்

14.25. வல்லி யன்னவ ளல்ல குறிப்பாடு
அறைப்புனற் றுறைவற்குச் சிறைப்புறத் துரைத்தது.

சோத்துன் னடியமென் றோரைக்
குழுமித்தொல் வானவர்சூழ்ந்
தேத்தும் படிநிற்ப வன்தில்லை
யன்னா ளிவள்துவள
ஆர்த்துன் னமிழ்துந் திருவும்
மதியும் இழந்தவம்நீ
பேர்த்து மிரைப்பொழி யாய்பழி
நோக்காய் பெருங்கடலே. **#830**

இதன் பொருள்:

பெருங்கடலே - பெருங்கடலே; ஆர்த்து உன் அமிழ்தும் திருவும் மதியும் இழந்து முற்காலத்து மிவ்வா றொலித்து உன்னமிர்தத்தையுந் திருவையுந் திங்களையுமிழந்து வைத்தும்; நீ பேர்த்தும் அவம் இவள் துவள இரைப்பு ஒழியாய் பெயர்த்து மொருபயனின்றியே இவள்வாட இரையாநின்றாய்; பழி நோக்காய் காரணமின்றிப் பிறரை வருத்துதலான் வரும்பழியையு நோக்குகின்றிலை; நினக்கிதுநன்றோ? எ-று.
சோத்து உன் அடியம் என்றோரை சோத்தம் உன்னடியமென் றொருகாற் சொன்னாரை; தொல் வானவர் குழுமிச் சூழ்ந்து ஏத்தும்படி நிற்பவன்

தில்லை அன்னாள் இவள் பழையராகிய வானவர் குழுமிப் பரிவார மாய்ச் சூழ்ந்துநின் றேத்தும் வண்ணம் நிற்கு மவனது தில்லை யன்னாளாகிய இவளெனக் கூட்டுக.

சோத்தம் இழிந்தார் செய்யு மஞ்சலி; அது சோத்தெனக் கடைக்குறைந்து நின்றது. சோத்த மடிய மென்பதூஉம், அடியமெனிற் குழுமித் தொல்லை வானவ ரென்பதூஉம், குழீஇத்தொல்லை வானவர்சூழ்ந் தேத்தும் படிவைப்பவ னென்பதூஉம் பாடம். திருவு மதியு மென்பது செல்வமு மறிவுமென வேறு மொருபொருடோன்ற நின்ற தென்பாருமுளர். இரா குறுகி நின்றது. மெய்ப்பாடும் பயனும் அவை. 173

விளக்கவுரை

14.26 கடலிடை வைத்துத் துயரறிவித்தல் கடலிடை வைத்துத் துயரறிவித்தல் என்பது தலைமகளி ரவுறுதுயரம், தலைமகன் சிறைப்புறமாக, இவள்வாட நீ யிரையாநின்றாய்; இது நினக்கு நன்றோவெனத் தோழி கடலொடு புலந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

14.26. எறிகடல் மேல்வைத் திரவரு துயரம்
அறைக ழலவற் கறிய வுரைத்தது.

மாதுற்ற மேனி வரையுற்ற
வில்லிதில் லைநகர்சூழ்
போதுற்ற பூம்பொழில் காள்கழி
காளெழிற் புள்ளினங்காள்
ஏதுற் றழிதியென் னீர்மன்னு
மீர்ந்துறை வர்க்கிவளோ
தீதுற்ற தென்னுக்கென் னீரிது
வோநன்மை செப்புமினே. **#831**

இதன் பொருள்:

மாது உற்ற மேனி வரை உற்ற வில்லி தில்லை நகர் சூழ் மாதுபொருந்திய மேனியையுடைய வரையாகிய மிக்கவில்லை யுடையவனது தில்லைநகரைச் சூழ்ந்த; போது உற்ற பூம் பொழில்காள் போதுபொருந்திய மலரினையுடைய பொழில்காள்; கழிகாள் - அப்பொழிலைச் சூழ்ந்த கழிகாள்; எழிற் புள்ளினங்காள் அக்கழிகளிற்பயிலு மெழிலையுடைய புள்ளினங்காள்; ஏது உற்று அழிதி என்னீர் என்னை நீங்கள் யாதனை யுற்றழிகின்றா யென்று ஒருகாற் கூறுகின்றிலீர்; ஈர்ந்துறைவர்க்கு இவள் தீது உற்றது என்னுக்கு என்னீர் குளிர்ந்த துறைவர்க்கு இவள் தீதுற்ற தெற்றிற்கென்று கூறுகின்றிலீர்; இதுவோ நன்மை இதுவோ நம்மாட்டு நுங்கா தன்மை; செப்புமின் சொல்லுமின் எ-று.

மாதுற்ற மேனியென்பது ஆகுபெயராய் மேனியை யுடையான்மே னின்றதெனினுமமையும். வரையுற்றவில்லியென்ப தற்கு வரைத் தன்மையைப் பொருந்திய வில்லையுடையா னெனினுமமையும். வரைத்தன்மையைப் பொருந்துதல் வரையா யிருத்தல். போது - பேரரும்பு. மன்னு மென்பதூஉம் இவளோ வென்னு மோகாரமும் அசைநிலை. மன்னுந்தீதுற்றதெனக் கூட்டிமிகுதிக்கண் வந்ததென்பாரு முளர். இதுவோ நன்மையென் பதற்குத் தில்லையைச் சூழ்ந்தவிடத் துள்ளீராகலின் உமக்குண்டாகிய சிறப்புடைமை யிதுவோ வெனினு மமையும். அழுதியென்பதூஉம் பாடம். ஏழையது கிளவியென வியையும்.174

விளக்கவுரை

14.27 காமமிக்க கழிபடர்கிளவி

காமமிக்க கழிபடர் கிளவி என்பது தலைமகனைக் காண லுற்று வருந்தாநின்ற தலைமகள், தனது வேட்கைமிகவாற் கேளாதன வற்றைக் கேட்பனவாக விளித்து, நீங்கள் என்னை ஏதுற்றழிகின்றா யென்று ஒருகால் வினவுகின்றிலீர்; இதுவோ நுங்காதன்மை யென அவற்றொடு புலந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

14.27. தாம மிக்க தாழ்குழ லேழை
காம மிக்க கழிபடர் கிளவி.

இன்னற வார்பொழிற் றில்லை
நகரிறை சீர்விழவிற்
பன்னிற மாலைத் தொகைபக
லாம்பல் விளக்கிருளின்
துன்னற வுய்க்குமில் லோருந்
துயிலில் துறைவர்மிக்க
கொன்னிற வேலொடு வந்திடின்
ஞாளி குரைதருமே. **#832**

இதன் பொருள்:

இன் நறவு ஆர் பொழில் தில்லைநகர் இறை சீர் விழவில் இனிய நறவார்ந்த பொழிலையுடைய தில்லைநகர்க் கிறைவனாகியவனது சீரையுடைய விழவின்கண்; பல் நிறமாலைத் தொகை பகலாம் மாணிக்க முதலாயினவற்றாற் பல நிறத்தை யுடையவாகிய மாலைகளின்றொகைகளான் இராப்பொழுதும் பகலாகாநிற்கும்; பல் விளக்கு இருளின் துன் அற உய்க்கும் அதுவேயுமன்றிப் பலவாகிய விளக்கு இருளின் பொருந்துதலறத் துரக்கும்; இல்லோரும் துயிலின் இவ்விடையீடேயன்றி ஒருபொழுதும் துயிலாத இல்லோரு மொருகாற்றுயில்வராயின்; துறைவர் கொன்மிக்க நிற வேலொடு

வந்திடின் துறைவர் அச்சத்தைச் செய்யு மிக்க நிறத்தையுடைய வேலோடொருகால் வருவராயின்; ஞாளி குரை தரும் அப்பொழுது நாய் குரையாநிற்கும்; அதனால், அவரை நாமெதிர்ப்படுத லரிதுபோலும் எ-று.

மாலைத்தொகையும் இராப் பகலாகாநிற்கும் பல்விளக்கும் இருளைத் துரக்குமென்றுரைப்பினுமமையும். இல்லோருந் துயிலி னென்றதனான், அதுவுமோ ரிடையீடு கூறப்பட்டதாம். மிக்கவே லென்றியைப்பினு மமையும். மெய்யுறுகாவல் பிழையாத மிக்க காவல். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு: அழுகை. இவற்றைத் தலைமகன் கேட்பின் வரைவானாம்; தோழி கேட்பின் வரைவுகடாவு வாளாம்; யாருங் கேட்பாரில்லையாயின் அயர் வுயிர்த்துத் தானே ஆற்றுதல் பயன். 175

விளக்கவுரை

14.28 காப்புச் சிறைமிக்க கையறுகிளவி

காப்புச் சிறைமிக்க கையறுகிளவி என்பது காமமிக் கெதிர்ப்பட விரும்பாநின்ற தலைமகள், இவ்விடையீடெல்லா நீந்தி ஒருவழியான் வந்தாராயினும் இஞ்ஞாளி குரைதரா நின்றமையின் யாமிவரை யெதிர்ப்படுதலரிதெனக் காப்புச்சிறை மிக்கு வருந்தா நிற்றல். அதற்குச் செய்யுள்

14.28. மெய்யுறு காவலிற்
கையறு கிளவி.

தாருறு கொன்றையன் தில்லைச்
சடைமுடி யோன்கயிலை
நீருறு கான்யா றளவில
நீந்திவந் தால்நினது
போருறு வேல்வயப் பொங்குரும்
அஞ்சுக மஞ்சிவருஞ்
சூருறு சோலையின் வாய்வரற்
பாற்றன்று தூங்கிருளே. **#833**

இதன் பொருள்:

தார் உறு கொன்றையன் தாராகிய மிக்க கொன்றையை யுடையவன்; தில்லைச் சடைமுடியோன் தில்லைக் கணுளனாகிய சடையானியன்ற முடியையுடையவன்; கயிலை நீர் உறுகான் யாறு அளவில நீந்தி வந்தால் அவனது கயிலையின் நீரான் மிக்க கான்யாறுக ளெண்ணிறந்தனவற்றை நீந்தி வந்தால்; வயப்பொங்கு உரும் நினது போர் உறு வேல் அஞ்சுக அவ்விடத்து வலியையுடைய பொங்குமிடியேறு நினது போர்மிக்க வேலையஞ்சி நின்பால் வாராதொழிக; மஞ்சு இவரும் சூர் உறு சோலையின் வாய் தூங்கு இருள்

வரற்பாற்று அன்று ஆயினும் மஞ்சுபரக்குந் தெய்வம்பொருந்துஞ் சோலையிடத்துச் செறிந்த விருட்கண் வரும்பான்மைத்தன்று; அத்தெய்வங்களை யாமஞ்சுதும் எ-று.
தாருறை கொன்றைய னென்பது பாடமாயின், தார்தங்கு கொன் றையனென முதலாகிய தன்பொருட்கேற்ற வடையடுத்து நின்றதாக வுரைக்க. இப்பாடத்திற்கு ஏனைமூன்றடியும் உறையென் றோதுப. வரற்பாற்றன்றென்பது வினைமேனின்றது. நவ்விநோக்கியது கிளவி யென வியையும். மெய்ப்பாடு: அச்சம். பயன்: வரைவு கடாதல். 176

விளக்கவுரை

14.29 ஆறுபார்த்துற்ற வச்சக் கிளவி

ஆறுபார்த்துற்ற வச்சக்கிளவி என்பது சிறைப்புறமாகத் தலைமகள் ஆற்றாமை கூறக்கேட்ட தலைமகன், குறியிடைச் சென்று நிற்ப, தோழி யெதிர்ப்பட்டு, நீ கான்யாறுபலவு நீந்திக் கைவேல் துணையாக அஞ்சாது வந்தால், யாங்களிச் சோலையிடத் துண்டாகிய தெய்வத்துக்கஞ்சுவேம்; அதனாலிவ் விருளிடை வரற்பாலையல்லை யெனத் தங்களச்சங்கூறி வரவுவிலக்காநிற்றல். அதற்குச் செய்யுள்

14.29. நாறு வார்குழ னவ்வி நோக்கி
ஆறுபார்த் துற்ற அச்சக் கிளவி.

விண்டலை யாவர்க்கும் வேந்தர்வண்
தில்லைமெல் லங்கழிசூழ்
கண்டலை யேகரி யாக்கன்னிப்
புன்னைக் கலந்தகள்வர்
கண்டிலை யேவரக் கங்குலெல்
லாம்மங்குல் வாய்விளக்கும்
மண்டல மேபணி யாய்தமி
யேற்கொரு வாசகமே. **#834**

இதன் பொருள்:

கங்குல் எல்லாம் மங்குல் வாய் விளங்கும் மண்டலமே கங்குல் முழுது மாகாயத்திடத்தை விளக்கு மண்டலமே; விண் தலை யாவர்க்கும் வேந்தர் வண் தில்லை விண்ணிடத்துள்ளா ராகிய வெல்லார்க்கும் வேந்தராயுள்ளாரது வளவிய தில்லை வரைப்பின்; மெல்லங் கழி சூழ் கண்டலே கரியா மெல்லிய கழிசூழ்ந்த கண்டலே சான்றாக; கன்னிப் புன்னைக் கலந்த கள்வர் இளையபுன்னைக்கண் என்னைக் கலந்த கள்வர்; வரக் கண்டிலையே ஒரு கால்வரக் கண்டிலையோ; தமியேற்கு ஒரு வாசகம் பணியாய் துணையில்லாதேற் கொருசொல் லருளாய் எ-று.
மெல்லங்கழி யென்பதூஉமொரு பண்புத்தொகை முடிபு. மென்மை நிலத்தின் மென்மை. கழிசூழ்புன்னையெனக் கூட்டுக.

கண்டலையென்னு மைகாரம் அசைநிலை. கரியாகக்கொண்டென வொரு சொல் வருவித்து இரண்டாவதாக வுரைப்பினுமமையும். எஞ்ஞான்று மனத்ததொன்றாகத் தாமொன்று மொழிந்தாரென்னுங் கருத்தாற் கள்வரென்றாள். கள்வர்க்கண்டிலையே யென்பது பாட மாயின் உருபுவிரிக்க. கங்குலெல்லாங் கண்டிலையேயென்று கூட்டி யுரைப்பினுமமையும். கண்டே கூறுகின்றிலை யென்னுமுணர்வின ளாகலின், எய்திடுகிளவியாயிற்று. அந்நுண்மருங்குல் கிளவியென் றியையும். மெய்ப்பாடு: அழுகை. பயன்: அயர்வுயிர்த்தல். 177

விளக்கவுரை

14.30 தன்னுட்கையா றெய்திடுகிளவி

தன்னுட்கையா றெய்திடுகிளவி என்பது தலைமகனைக் காணலுற்று வருந்தாநின்ற தலைமகள், இக்கண்டல் சான்றாகக் கொண்டு இப்புன்னையிடத்துக் கலந்த கள்வரை இவ்விடத்து வரக்கண் டிலையோ? துணையில்லாதேற்கு ஒருசொல்லருளா யென்று, தன்னுட் கையாற்றை மதியொடுகூறி வினாவாநிற்றல். அதற்குச் செய்யுள்

14.30. மின்னுப் புரையும் அந்நுண் மருங்குல்

தன்னுட் கையா றெய்திடு கிளவி.

பற்றொன்றி லார்பற்றுந் தில்லைப்
பரன்பரங் குன்றினின்ற
புற்றொன் றரவன் புதல்வ
னெனநீ புகுந்துநின்றால்
மற்றுன்று மாமல ரிட்டுன்னை
வாழ்த்திவந் தித்தலன்றி
மற்றொன்று சிந்திப்ப ரேல்வல்ல
ளோமங்கை வாழ்வகையே. **#835**

இதன் பொருள்:

பற்று ஒன்று இலார் பற்றும் துறக்கப்படுவன வற்றின்மேற் பற்றொன்றுமில்லாதவர்கள் அறிந்து பற்றும்; தில்லைப் பரன் பரங்குன்றில் நின்ற தில்லைக்கணுளனாகிய பரனது பரங் குன்றின்கணின்ற புற்று ஒன்று அரவன் புதல்வன் என அப்புற் றொன்றரவனுடைய புதல்வனாகிய முருகவேளைப்போல; நீ புகுந்து நின்றால் நீ இல்வரைப்பிற் புகுந்து நின்றால்; மல் துன்று மாமலர் இட்டு உன்னை வாழ்த்தி வந்தித்தல் அன்றி கண்டவர்கள் இந்நிலத்திற் குரியனாகிய முருகனென்றுகருதி வளத்தையுடைய நெருங்கிய பெரிய மலர்களை யிட்டு வாழ்த்தி நின்னை வணங்காதே; மற்று ஒன்று சிந்திப்பரேல் பிறிதொன்றை நினைவராயின்; மங்கை வாழ் வகை வல்லளோ மங்கை யுயிர்வாழும் வகை வல்லளோ? அதனாலிவ்வா

றொழுகற்பாலையல்லை எ-று.
பரங்குன்றினின்ற புதல்வனென வியையும். மல்லல் கடைக் குறைந்து நின்றது. மற்றொன்று சிந்தித்தல் இவள் காரணமாக வந்தா னென்று கருதுதல். முருகனென்றலே பெரும் பான்மையாகலின், உண்மையுணர்தலை மற்றொன்றென்றாள். ஏதஞ் செய்யக் கருதுத லென்பாருமுளர். மெய்ப்பாடு: அச்சம். பயன்: வரைவு கடாதல். 178

விளக்கவுரை

14.31 நிலைகண்டுரைத்தல்

நிலைகண்டுரைத்தல் என்பது தலைமகள் தன்னுட் கையாற்றை மதியொடு கூறி வருந்தாநின்றமை சிறைப்புறமாகக் கேட்ட தலைமகன், ஆற்றாமையான் இல்வரைப்பின்கட் புகுந்து நிற்ப, தோழியெதிர்ப்பட்டு, நீயிவ்வா றில்வரைப்பின்கட் புகுந்துநின்றாற் கண்டவர் நின்னைப் பெரும்பான்மை நினையாது மற்றொன்று நினைப்பராயின் அவளுயிர்வாழ வல்லளோ*?* இனியிவ்வா றொழுகற்பாலை யல்லையென வரைவு தோன்றக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

14.31. நின்னி னழிந்தனள் மின்னிடை மாதென
வரைவுதோன்ற வுரைசெய்தது.

பூங்கணை வேளைப் பொடியாய்
விழவிழித் தோன்புலியூர்
ஓங்கணை மேவிப் புரண்டு
விழுந்தெழுந் தோலமிட்டுத்
தீங்கணைந் தோரல்லுந் தேறாய்
கலங்கிச் செறிகடலே
ஆங்கணைந் தார்நின்னை யும்முள
ரோசென் றகன்றவரே. **#836**

இதன் பொருள்:

பூங் கணை வேளை பூவாகிய கணையை யுடைய வேளை; பொடியாய் விழ விழித்தோன் புலியூர் செறிகடலே பொடியாய் விழும் வண்ணம் விழித்தவனது புலியூர் வரைப்பிற் செறிந்த கடலே; ஓங்கு அணை மேவிப் புரண்டு விழுந்து எழுந்து ஓலமிட்டு நீ யோங்கி யணைந்த கரையைப் பொருந்திப் புரண்டு விழுந்தெழுந்து கூப்பிட்டு; தீங்கு அணைந்து ஓர் அல்லும் கலங்கித் தேறாய் துன்பமுற்று ஓரிரவுங்கலங்கித் தெளிகின்றிலை, அதனால், அணைந்தார் நின்னையும் சென்று அகன்றவர் ஆங்கு உளரோ அணைந்தவர் நின்னையுமகன்று சென்றார் அவ்விடத் துளரோ? உரைப்பாயாக எ-று.

பொடியாய்விழ விழித்தோனென்னுஞ் சொற்கள் ஒரு சொன்நீரவாய்ப் பொடியாக்கினானென்னும் பொருளவாய், வேளை

யென்னுமிரண்டாவதற்கு முடிபாயின. புலியூர்க் கடலே கலங்கித் தேறாயென்று கூட்டினுமமையும். செறிகட லென்புழிச் செறிவு எல்லை கடவாநிலைமை. பிரிவாற் றாதார்க்கு அணைமேவுதல் பஞ்சியணை மேவுதல். அணைந்தா ரென்பதூஉம் சென்றகன்றவ ரென்பதூஉம் அடுக்காய் உளரோவென் னும் பயனிலை கொண்டன. ஆங்கு: அசை நிலையுமாம். மெய்ப்பாடு: அழுகை. பயன்: அயர்வுயிர்த்தல். 179

விளக்கவுரை

14.32 இரவுறு துயரங் கடலொடு சேர்த்தல்

14.32. எறிவேற் கண்ணி யிரவரு துயரஞ்
செறிக டலிடைச் சேர்த்தி யுரைத்தது.

இரவுறு துயரங் கடலொடு சேர்த்தல் என்பது தலைமகனை யெதிர்ப்படமாட்டாதுவருந்தாநின்ற தலைமகள், இற்றையிர வெல்லாம் என்னைப்போல நீயுந் துன்பமுற்றுக் கலங்கித் தெளி கின்றிலை; இவ்விடத்து நின்னையுமகன்று சென்றாருளரோ வெனத் தானுறுதுயரங் கடலொடு சேர்த்திக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

அலரா யிரந்தந்து வந்தித்து
மாலா யிரங்கரத்தால்
அலரார் கழல்வழி பாடுசெய்
தாற்கள வில்லொளிகள்
அலரா விருக்கும் படைகொடுத்
தோன்தில்லை யானருள்போன்
றலராய் விளைகின்ற தம்பல்கைம்
மிக்கைய மெய்யருளே. **#837**

இதன் பொருள்:

மால் அலர் ஆயிரம் தந்து வந்தித்து மால் தாமரை மலராயிரத்தைக் கொண்டு சென்றிட்டு வணங்கி; ஆயிரம் கரத்தால் அலர் ஆர் கழல் வழிபாடு செய்தாற்கு தன்னாயிரங் கையானு மலர்போலுங் கழலை வழிபடுதலைச் செய்தவற்கு; அளவில் ஒளிகள் அலராவிருக்கும் படை கொடுத்தோன் - அளவில்லாத வொளிகள் விரியாநிற்கும் ஆழியாகிய படையைக் கொடுத்தவன்; தில்லையான் தில்லைக்கண்ணான்; அருள் போன்று அவனதருள் போல; ஐய ஐயனே; மெய் அருள் நின்னுடைய மெய்யாகிய வருள்; அம்பல் கைம்மிக்கு அலராய் விளைகின்றது அம்பல்கைம் மிக்கலராய் விளையாநின்றது; இனித்தக்கது செய்வாயாக எ-று.

அலராவிருக்கு மென்பது ஓர் நிகழ்காலச் சொல். தில்லையானருள் பெற்றார் உலகியல்பினராய் நில்லாமையின், அவ்வருளுலகத்தார்க் கலராமென்பது கருத்து.

'நாடவர் நந்தம்மை யார்ப்ப வார்ப்ப'
(தி.8 திருப்பொற்சுண்ணம் பா. 7) என்பதூஉ மக்கருத்தேபற்றி வந்தது.
அம்பல் - பரவாத களவு; என்னை?' அம்பலு மலருங் களவு'
(இறையனாரகப் பொருள் - 22) என்றாராகலின். 180

விளக்கவுரை

14.33 அலரறிவுறுத்தல் அலரறிவுறுத்தல் என்பது
தலைமகளிரவுறுதுயரங் கடலொடு சேர்த்தி வருந்தாநின்றமை
சிறைப்புறமாகக் கேட்ட தலைமகன், குறியிடைச் சென்று நிற்ப, தோழி
யெதிர்ப்பட்டு, நின்னருளாய் நின்றவிது எங்களுக் கலராகாநின்றது;
இனி நீயிவ்வாறொழுகா தொழியவேண்டுமென அலரறிவுறுத்தி
வரவுவிலக்கா நிற்றல். அதற்குச் செய்யுள்
14.33. 9; அலைவேலண்ணன் மனமகிழருள்
பலராலறியப் பட்டதென்றது.

2.15.ஒருவழித்தணத்தல்

புகழும் பழியும் பெருக்கிற்
பெருகும் பெருகிநின்று
நிகழும் நிகழா நிகழ்த்தினல்
லாலிது நீநினைப்பின்
அகழும் மதிலும் அணிதில்லை
யோனடிப் போதுசென்னித்
திகழு மவர்செல்லல் போலில்லை
யாம்பழி சின்மொழிக்கே. **#838**

இதன் பொருள்:

புகழும் பழியும் காரணவசத்தாற்பிறந்த புகழும் பழியும்; பெருக்கின் பெருகும் அக்காரணங்களை மிகச் செய்தொருவன் வளர்க்குமாயிற் றாம்வளரும்; நிகழ்த்தின் அக்காரணங்களை யிடையறாமற்செய்து நிகழ்த்துவனாயின்; பெருகிநின்று நிகழும் அவ்வாறு வளர்ந்து நின்று மாயாதுளவாய்ச் செல்லும்; அல்லால் நிகழா இவ்வாறல்லது அவைதாமாக நிகழா; அதனான், இது நீ நினைப்பின் இப்பெற்றியை நீ கருதுவை யாயின்; அகழும் மதிலும் அணி தில்லையோன் அடிப்போது அகழையு மதிலையுமணிந்த தில்லைக்கண்ணானுடைய அடியாகிய போதுகள்; சென்னித் திகழுமவர் செல்லல் போல் தஞ்சென்னிக்கண் விளங்கும் பெரியோரது பிறவித்துன்பம்போல; சில்மொழிக்குப் பழி இல்லை யாம் இச்சின்மொழிக்குப்பழி யிப்பொழுதே யில்லையாம்; நீ நினையாமையிற் பழியாகாநின்றது எ-று.

நிகழுநிகழா நிகழ்த்தி னல்லாலென்புழி நிரனிறையாகக் கூட்டப்பட்டது. அகழுமதிலு மலங்காரநீர்மையவென்பது போதர, அணிதில்லை யென்றார். அகழுமதிலுமழகுசெய்தவென எழுவா யாக்கியுரைப்பினுமமையும். வழிவேறுபடுதல் இவளையெய்து முபாயங் களவன்றி வரைவாய் வேறுபடுதல். மன்னும்: அசைநிலை. பழிவேறுபடுதல் - பழித்தன்மை திரிந்து கெடுதல். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு: அச்சம். பயன்: அலரறிவுறீஇ வரைவுகடாதல். 181

விளக்கவுரை

15.1 அகன்றணைவுகூறல்

அகன்றணைவுகூறல் என்பது அலரறிவுறுத்ததோழி, இத் தன்மையை நினைந்து நீ சிலநாளாகன்றணைவையாயின் அம்பலு மலருமடங்கி இப்பொழுதே அவளுக்குப் பழியில் லையா மெனத் தலைமகனுக்கிசைய அகன்றணைவு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

5.1. வழிவேறு படமன்னும்

பழிவேறு படுமென்றது.

ஆரம் பரந்து திரைபொரு
நீர்முகில் மீன்பரப்பிச்
சீரம் பரத்திற் றிகழ்ந்தொளி
தோன்றுந் துறைவர்சென்றார்
போரும் பரிசு புகன்றன
ரோபுலி யூர்ப்புனிதன்
சீரம்பர் சுற்றி யெற்றிச்
சிறந்தார்க்குஞ் செறிகடலே. **#839**

இதன் பொருள்:

புலியூர்ப் புனிதன் சீர் அம்பர் சுற்றி புலியூர்க்கணுளனாகிய தூயோனது புகழையுடைய அம்பரைச் சூழ்ந்து; எற்றி கரையைமோதி; சிறந்து ஆர்க்கும் செறிகடலே மிக்கொலிக்கும் வரையிகவாத கடலே; ஆரம் பரந்து திரைபொரு நீர்- முத்துப்பரந்து திரைக டம்முட்பொருங் கடனீர்; முகில் மீன் பரப்பிச் சீர் அம்பரத்தின் திகழ்ந்து முகிலையு மீனையுந் தன்கட் பரப்பிச் சீர்த்த வாகாயமேபோல விளங்கி; ஒளிதோன்றும் துறைவர் ஒளிபுலப் படுத்துந் துறையையுடையவர்; சென்றார் நம்மைவிட்டுச் சென்றவர்; போரும் பரிசு புகன்றனரோ மீண்டுவரும்பரிசு உனக்குக் கூறினரோ? உரை எ-று. பரப்பியென்னும் வினையெச்சம் சீரம்பரமென்னும் வினைத் தொகையின் முன்மொழியோடு முடிந்தது. பரப்பி விளங்குமென ஒருசொல் வருவித்து முடிப்பினுமமையும். பரப்பி யென்பதற்கு, முன் மீன்பரப்பி (தி.8 கோவை பா.130) யென்பதற்குரைத்ததுரைக்க. திகழ்ந்தென்றதனான் ஒளிமிகுதிவிளங்கும். போதருமென்பது போருமென இடைக்குறைந்து நின்றது. ஈண்டு ஏனையுவம முண்மையின், உள்ளுறையுவமமின்மையறிக. 182

விளக்கவுரை

15.2 கடலொடுவரவுகேட்டல் கடலொடுவரவு கேட்டல் என்பது ஒருவழித்தணத்தற் காற்றாது வருந்தாநின்ற தலைமகள், நம்மைவிட்டுப்போனவர் மீண்டுவரும்பரி சுனக்குரைத்தாரோவெனக் கடலொடு தலைமகன் வரவு கேளாநிற்றல். அதற்குச் செய்யுள்

15.2. மணந்தவர் ஒருவழித் தணந்ததற் கிரங்கி
மறிதிரை சேரும் எறிகடற் கியம்பியது.

பாணிகர் வண்டினம் பாடப்பைம்
பொன்றரு வெண்கிழிதஞ்
சேணிகர் காவின் வழங்கும்புன்
னைத்துறைச் சேர்ப்பர்திங்கள்

வாணிகர் வெள்வளை கொண்டகன்
றார்திறம் வாய்திறவாய்
பூணிகர் வாளர வன்புலி
யூர்சுற்றும் போர்க்கடலே. **#840**
இதன் பொருள்:
பூண் நிகர் வாள் அரவன் புலியூர் சுற்றும் போர்க்கடலே
பூணையொக்குமொளியையுடைய அரவை யணிந்தவனது
புலியூரைச்சூழ்ந்த கரைபொருதலையுடைய கடலே; பாண் நிகர் வண்டு
இனம் பாட பாணரையொக்கும் வண்டினங்கள் சென்று பாட;
பைம்பொன் தரு வெண் கிழி தாதாகிய பசும்
பொன்னைப்புலப்படுத்தாநின்ற போதாகிய வெண்கிழியை; தம் சேண்
நிகர்காவின் வழங்கும் புன்னைத் துறைச் சேர்ப்பர் தமது சேய்மைக்கண்
விளங்குங் காவினின்று அவற்றிற்குக் கொடுக்கும் புன்னைகளையுடைய
துறையையணைந்த சேர்ப்பையுடையராகிய; திங்கள் வாள் நிகர் வெள்
வளை கொண்டு அகன்றார் திறம் திங்களினொளிபோலு
மொளியையுடைய என்வெள்வளையைத் தம்மொடு
கொண்டுபோனவரது திறத்தை; வாய்திறவாய் எமக்குக் கூறுகின்றிலை?
நீ கூறாதொழிகின்றதென்! எ-று.
கிழிதமென்று கிழிக்குப்பெயராக வுரைப்பாருமுளர். வாய் திறவா
யென்பதற்குக் கூறுவாயாகவென் றுரைப்பினுமமையும். 183

விளக்கவுரை

15.3 கடலொடுபுலத்தல் கடலொடு புலத்தல் என்பது கடலொடு
வரவுகேட்ட தலைமகள், அது தனக்கு வாய்திறவாமையின் என்வளை
கொண்டு போனார் திறம் யான்கேட்க நீ கூறாதொழிகின்ற
தென்னெனப்பின்னும் அக்கடலொடு புலந்து கூறாநிற்றல். அதற்குச்
செய்யுள்
15.3. செறிவளைச் சின்மொழி
எறிகடற் கியம்பியது.

பகன்தா மரைக்கண் கெடக்கடந்
தோன்புலி யூர்ப்பழனத்
தகன்தா மரையன்ன மேவண்டு
நீல மணியணிந்து
முகன்தாழ் குழைச்செம்பொன் முத்தணி
புன்னையின் னும்முரையா
தகன்றா ரகன்றே யொழிவர்கொல்
லோநம் மகன்றுறையே. **#841**
இதன் பொருள்:

பகன் தாமரைக் கண் கெட பகன் என்னும் பெயரையுடைய ஆதித்தனது தாமரைபோலுங் கண்கெட; கடந்தோன் புலியூர்ப் பழனத்து அகன் தாமரை அன்னமே அவனை வென்றவனது புலியூரைச்சூழ்ந்த பழனத்தின் கணுண்டாகிய அகன்ற தாமரைக்கண்வாழும் அன்னமே; வண்டு நீல மணி அணிந்து வண்டாகிய நீலமணியை யணிந்து; செம்பொன் முத்து அணி - தாதாகிய செம்பொன்னையும் அரும்பாகிய முத்தையுமணிந்த; முகன் தாழ் குழைப் புன்னை முகத்துத் தாழ்ந்த குழையையுடைய புன்னை; இன்னும் உரையாது இந்நிலைமைக்கண்ணு மொன்றுசொல்லுகின்ற தில்லை; அகன்றார் நம் அகன்துறை அகன்றே யொழிவர் கொல்லோ அகன்றவர் நமதகன்றதுறையை யகன்றே விடுவாரோ? அறியேன்; நீயுரை எ-று.

முகன்றாழ் குழையென்பது இருபொருட்படநின்றது. யானித் தன்மை யேனாகவும் மணியணிந்தின்புற்று நிற்கின்ற புன்னை எனக்கொன்று சொல்லுமோ? அன்னமே, எனக்கு நீ கூறென்பது கருத்து. ஈண்டு நம்மோடு தாம்விளையாடும் விளையாட்டை மறந்தேவிடுவாரோ வென்னுங்கருத்தான், நம்மகன்றுறையை யகன்றேயொழிவர் கொல்லோ வென்றாள். #9; 184

விளக்கவுரை

15.4 அன்னமோடாய்தல் அன்னமோடாய்தல் என்பது கடலொடுபுலந்து கூறிய தலைமகள்*,* புன்னையொடுபுலந்து*,* அகன்றவர் அகன்றே யொழிவரோ*?* யானறிகின்றிலேன்*;* நீயாயினுஞ் சொல்லுவாயாக வென அன்னமோடாய்ந்து வரவுகேளாநிற்றல். அதற்குச் செய்யுள்

15.4. மின்னிடை மடந்தை
யன்னமோ டாய்ந்தது.

உள்ளு முருகி யுரோமஞ்
சிலிர்ப்ப வுடையவனாட்
கொள்ளு மவரிலொர் கூட்டந்தந்
தான்குனிக் கும்புலியூர்
விள்ளும் பரிசுசென் றார்வியன்
தேர்வழி தூரறக்கண்டாய்
புள்ளுந் திரையும் பொரச்சங்கம்
ஆர்க்கும் பொருகடலே. **#842**

இதன் பொருள்:

புள்ளும் திரையும் பொரச் சங்கம் ஆர்க்கும் பொருகடலே புள்ளுந்திரையுந் தம்முட்பொரச் சங்கொலிக்குங் கரை பொருங்கடலே; உள்ளும் உருகி உரோமம் சிலிர்ப்ப உள்ளுமுருகி மெய்ம்மயிர் சிலிர்ப்ப; உடையவன் ஆட்கொள்ளுமவரில் ஓர் கூட்டம் தந்தான் குனிக்கும்

உடையவனாகிய தானாட்கொள்ளு மடியாருள் எமக்கோர் கூட்டத்தைத் தந்தவன் நின்று கூத்தாடும்; புலியூர் விள்ளும் பரிசு சென்றார் வியன் தேர் வழி புலியூரை நீங்கும்வண்ணஞ் சென்றவரது பெரிய தேர்போன வழியை; தூரல் கண்டாய் நின்றிரைகளாற் றூராதொழியவேண்டும்; எம்முயிர்க்குப் பற்றுக்கோடினியிதுவே எ-று.

உள்ளுமென்ற வும்மையாற் புறத்துக்கண்ணீர் தழுவப்பட்டது. ஆட்கொள்ளுமவர் பெருமை தோன்ற உடையவனென அவன் பெருமை விளக்கும் பெயராண்டுக்கூறினார். விள்ளுதல் செலவான் வருங் காரியமாதலின், விள்ளும் பரிசுசென்றாரென்றாள். கண்டா யென்பது முன்னிலையசைச்சொல். குனிக்கும் புலியூர் நுகர்ச்சியை நினையாது நீங்கிய வன்கண்மையார் இனிவருவரென்னு நசையிலம்; அவர் தேர்ச்சுவடாயினும் யாங்காண நீ யதனையழியாதொழி யென்பது கருத்து. விள்ளும்பரிசு சென்றாரென்பதற்குப் புலியூரை நீங்கினாற் போல யான்றுன்புறும்வண்ண மெனினுமமையும். விள்ளுதல் வாய்திறத்தலென்று, அலர்கூறி நகும்வண்ணஞ் சென்றவ ரெனினுமமையும். பொரச்சங்கமார்க்கு மென்புழிப் பொருஞ்சங் கொலியுமென வொருபொருடோன்றியவாறு கண்டு கொள்க. கூட்டந் தந்தாரென்று பாடமோதி ஆட்கொள்ளு மவரைப்போலின்புற எமக் கோர் புணர்ச்சியைத் தந்தாரெனத் தலைமகன் மேலேறவுரைப் பாருமுளர். அலங்காரம்: அல்பொருட்டற் குறிப்பேற்றம். #9; 185

விளக்கவுரை

15.5 தேர்வழி நோக்கிக் கடலொடு கூறல் தேர்வழிநோக்கிக் கடலொடுகூறல் என்பது அன்னமொடு வரவுகேட்ட தலைமகள், அதுவும் வாய்திறவாமையின், இனியவர் வருகின்றாரல்லர்; எம்முயிர்க்குப் பற்றுக்கோடினி யிதுவே; இதனை நீ யழியாதொழிவாயென அவன்சென்ற தேர்வழி நோக்கிக் கடலொடு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

15.5. மீன்றோய் துறைவர் மீளு மளவு
மான்றேர் வழியை யழியே லென்றது.

ஆழி திருத்தும் புலியூ
ருடையான் அருளினளித்
தாழி திருத்தும் மணற்குன்றின்
நீத்தகன் றார்வருகென்
றாழி திருத்திச் சுழிக்கணக்
கோதிநை யாமலைய
வாழி திருத்தித் தரக்கிற்றி
யோவுள்ளம் வள்ளலையே **#843**

இதன் பொருள்:

ஆழி திருத்தும் புலியூர் உடையான் அருளின் அளித்து ஆழிசூழ்ந்த மண்முழுதையுந் திருத்தும் புலியூரை யுடைய வன தருள்போல இன்புறவளித்து; ஆழி திருத்தும் மணற் குன்றின் நீத்து அகன்றார் வருகென்று கடல்வந்து திருத்துமணற் குன்றின்கண் என்னை நீத்தகன்றவர் வரவேண்டுமென்று; ஆழி திருத்திச் சுழிக் கணக்கு ஓதி நையாமல் கூடலையிழைத்துச் சுழிக் கணக்கைச் சொல்லி யான்வருந்தாமல்; ஐய ஐயனே; வாழி வாழ் வாயாக; உள்ளம் திருத்தி வள்ளலைத் தரக்கிற்றியோ அவ னுள்ளத்தை நெகிழ்த்து வள்ளலையீண்டுத்தரவல்லை யாயின் யானிரக்கின்றேன் எ-று. முதற்கணாழி: ஆகுபெயர். ஆழிதிருத்தும் புலியூரென்ப தற்குப் பிறவுமுரைப்ப. திரைவந்து பெயரும் பெருமணலடைகரையைப் பின்னினையாத கொடியோர் இனிவருதல் யாண்டைய தென்னுங் கருத்தான், ஆழிதிருத்து மணற்குன்றி னீத்தகன்றாரென்றாள். ஐயவென்றது கூடற்றெய்வத்தை. நீடலந்துறை யென்பதற்குக் கமழலந்துறைக் குரைத்தது (தி.8 கோவை பா.88) உரைக்க. 186

விளக்கவுரை

15.6 கூடலிழைத்தல் கூடலிழைத்தல் என்பது தேர்வழிநோக்கிக் கடலொடு கூறா நின்ற தலைமகள், இம்மணற்குன்றின்கண் நீத்தகன்ற வள்ளலை உள்ளத்தை நெகிழ்த்து இவ்விடத்தே தர வல்லையோ வெனக் கூடற் றெய்வத்தை வாழ்த்திக் கூடலிழைத்து வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்

. *15.6.* நீடலந் துறையிற்
கூடல் இழைத்தது.

கார்த்தரங் கந்திரை தோணி
சுறாக்கடல் மீன்எறிவோர்
போர்த்தரங் கந்துறை மானுந்
துறைவர்தம் போக்குமிக்க
தீர்த்தரங் கன்தில்லைப் பல்பூம்
பொழிற்செப்பும் வஞ்சினமும்
ஆர்த்தரங் கஞ்செய்யு மாலுய்யு
மாறென்கொ லாழ்சுடரே. **#844**

இதன் பொருள்:

கார்த் தரங்கம் கரியதிரையும்; திரை தோணி திரையாநின்றதோணியும்; சுறா சுறாவும்; மீன் எறிவோர் மீனெறி வோரும்; கடல் கடலும்; போர்த் தரு அங்கம் போரைத்தரு மங்கங்களையும்; துறை அக்களத்தையும்; மானும் துறைவர் போக்கும் - ஒக்குந் துறையையுடையவரது பிரிவும்;

மிக்க தீர்த்தர் அங்கன் தில்லை பல் பூம் பொழில் செப்பும் வஞ்சினமும் சிறந்த தூயோராகிய அரியயர்களுடைய வென்பையணிந்தவனது தில்லைவரைப்பினுண்டாகிய பல்பூம் பொழிற்கண் நின்னிற் பிரியே னென்று சொல்லும் வஞ்சினமும்; ஆர்த்தர் அங்கம் செய்யும் என் மேனியை நோயுற்றார் மேனியாகச் செய்யாநின்றன; ஆழ் சுடரே வீழாநின்ற சுடரே; உய்யுமாறு என் கொல் யானுய்யு நெறியென் னோ? கூறுவாயாக எ-று.

குதிரைத்திரள் தரங்கத்திற்கும், தேர் தோணிக்கும், யானை சுறாவிற்கும், காலாள் மீனெறிவோர்க்கும், போர்க்களங் கடற்கும் உவமையாகவுரைக்க. தரங்க முதலாயின வற்றாற் போரைத் தருமங்கத்தையுடைய களத்தை யொக்குந் துறை யென மூன்றாவது விரித்துரைப்பாருமுளர். இதற்கு அங்கத்துறை யென்றது மெலிந்து நின்றது. போரைத் தருமங்க மென்பதனைத் தொகுக்கும் வழித்தொகுத்தார். துறைவர்போக்கும் தில்லைவரைப்பிற் குளுறவும் என்னா மென்னு மச்சத்தளாய், ஆர்த்தரங்கஞ் செய்யுமென்றாள். 187

விளக்கவுரை

15.7 சுடரொடுபுலம்பல் சுடரொடு புலம்பல் என்பது கூடலிழைத்து வருந்தாநின்ற தலைமகள், துறைவர்போக்கும் அவர் சூளுறவும் என்னை வருத்தா நின்றன*:* அதன்மேல் நீயுமேகாநின்றாய்*;* யானினியுய்யுமா றென்னோ வெனச் செல்லாநின்ற சுடரொடு புலம்பாநிற்றல். அதற்குச் செய்யுள்

15.7. குணகட லெழுசுடர் குடகடற் குளிப்ப
மணமலி குழலி மனம்புலம் பியது.

பகலோன் கரந்தனன் காப்பவர்
சேயர்பற் றற்றவர்க்குப்
புகலோன் புகுநர்க்குப் போக்கரி
யோனெவ ரும்புகலத்
தகலோன் பயில்தில்லைப் பைம்பொழிற்
சேக்கைகள் நோக்கினவால்
அகலோங் கிருங்கழி வாய்க்கொழு
மீனுண்ட அன்னங்களே. **#845**

இதன் பொருள்:

பகலோன் கரந்தனன் கதிரவன் மறைந்தான்; காப்பவர் சேயர் இம்மாலைக்காலத்துவருந் துன்பத்தைக் காக்குமவர் சேயராயிருந்தார்; அகல் ஓங்கு இருங் கழிவாய் கொழுமீன் உண்ட அன்னங்கள் சேக்கைகள் நோக்கின அதுவேயுமன்றி இவ்வகலோங் கிருங்கழியிடத்துக் கொழுமீனை யுண்ட வன்னங்கடாமும்

இவ்விடத்தைவிட்டுத் தஞ்சேக்கைகளை நோக்கின; இனியென் செய்வேன்! எ-று.

பற்று அற்றவர்க்குப் புகலோன் புலன்களிற் பற்றற்றவர்க்குப் புகலிடமாயுள்ளான்; புகுநர்க்குப் போக்கு அரியோன் தன்கட் புகுவார்க்குப் பின் போதரவரியவன்; எவரும் புகலத் தகலோன் எல்லாருமேத்தத் தகுதலையுடையவன்; பயில் தில்லைப் பைம் பொழிற் சேக்கைகள் அவன் பயிலுந் தில்லை வரைப்பிற் பைம் பொழில்களி னுளவாகிய சேக்கைகளெனக் கூட்டுக.

ஓங்குதல் ஓதமேறி நீருயர்தல். கொழுமீன் என்பது ஓர் சாதி. 188

விளக்கவுரை

15.8 பொழுதுகண்டுமயங்கல் பொழுதுகண்டு மயங்கல் என்பது சுடரொடு புலம்பா நின்றவள், கதிரவன் மறைந்தான்; காப்பவர் சேயர்; அதன்மேலிவ் விடத்து மீனுண்ட வன்னங்களும் போய்த் தஞ்சேக்கைகளை யடைந்தன; இனி யானாற்றுமாறென்னோவென மாலைப் பொழுது கண்டு மயங்காநிற்றல். அதற்குச் செய்யுள்

15.8. மயல்தரு மாலை வருவது கண்டு
கயல்தரு கண்ணி கவலை யுற்றது.

பொன்னும் மணியும் பவளமும்
போன்று பொலிந்திலங்கி
மின்னுஞ் சடையோன் புலியூர்
விரவா தவரினுள்நோய்
இன்னு மறிகில வாலென்னை
பாவம் இருங்கழிவாய்
மன்னும் பகலே மகிழ்ந்திரை
தேரும்வண் டானங்களே**. 9; #846**

இதன் பொருள்:

இருங் கழிவாய் பகலே மகிழ்ந்து இரை தேரும் வண்டானங்கள் என்னாற்றமைக்குப் பரிகாரமாவதி யாதுஞ் சிந்தியாது இருங்கழியிடத்துப் பகலேபுகுந்து விரும்பித் தமக்குணவு தேடும் வண்டானங்களாகிய குருகுகள்; உள் நோய் இன்னும் அறிகில என்னுண்ணோயை யிந்நிலைமைக்கண்ணு மறிகின்றன வில்லை; என்னை பாவம் இஃதென்னை பாவம்! எ-று.

பொன்னும் மணியும் பவளமும் போன்று பொலிந்து இலங்கி மின்னும் பொன்போலப் பொலிந்து மாணிக்கம்போல விட்டு விளங்கிப் பவளம்போலமின்னும்; சடையோன் புலியூர் விரவாதவரின் (உறும்) உள்நோய் சடையையுடையவனது புலியூரைக் கலவாதாரைப்போல யானுறுமுண்ணோ யெனக்கூட்டுக.

உறுமென வொருசொல் வருவித்துரைக்கப்பட்டது. முன்னறிந் தனவில்லையாயினும் இனியறியவேண்டுமென்பது கருத்து. புலியூரை விரவாதார் கண்ணோட்டமிலராகலிற் புலியூரை விரவாத வரினின்னுமறிகில வென்றியைத் துரைப்பினு மமையும். நிரனிறை யாகக் கொள்ளாது எல்லாமெல்லாவற்றின்மேலு மேறவுரைப்பினு மமையும். மன்னும்: அசைநிலை. #9; #9; 189

விளக்கவுரை

15.9 பறவையொடு வருந்தல் பறவையொடு வருந்தல் என்பது பொழுதுகண்டு மயங்கா நின்ற தலைமகள், இந்நிலைமைக்கண்ணும் என்னுண்ணோயறி யாது கண்ணோட்டமின்றித் தம் வயிறோம்பாநின்றன; இஃதென்னை பாவமென வண்டானப் பறவையொடு வருந்திக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

15.9. செறிபிணி கைம்மிகச் சிற்றிடைப் பேதை
பறவைமேல் வைத்துப் பையுளெய் தியது.

கருங்கழி காதற்பைங் கானலில்
தில்லையெங் கண்டர்விண்டார்
ஒருங்கழி காதர மூவெயில்
செற்றவொற் றைச்சிலைசூழ்ந்
தருங்கழி காதம் அகலுமென்
றூழென் றலந்துகண்ணீர்
வருங்கழி காதல் வனசங்கள்
கூப்பும் மலர்க்கைகளே. **#847**

இதன் பொருள்:

தில்லை எம் கண்டர் தில்லைக்கணுள ராகிய எம்முடைய கண்டர்; விண்டார் ஒருங்கு அழி காதர மூவெயில் செற்ற- பகைவரொருங்கேயழியு மச்சத்தையுடைய மூவெயிலைச் செற்ற; ஒற்றைச் சிலை சூழ்ந்து தனிவில்லைச் சூழ்ந்து; அருங்கழி காதம் அகலும் என்றூழ் என்று அரியவாகிய மிக்ககாதங்களைப் போகாநின்றது என்றூழ் இனி யிவளெங்ஙனமாற்றுமென்று வருந்தி; கருங்கழி காதல் பைங்கானலின் அலந்து கண்ணீர் வரும் கருங்கழியின்கண்ணுங் காதலையுடைய பைங்கானலின் கண்ணுமுள வாகித் துன்புற்றுக் கண்ணீர்வாராநின்ற; கழிகாதல் வனசங்கள் கழிகாதலையுடைய தாமரைகள்; மலர்க்கைகள் கூப்பும் விரைந்துவர வேண்டுமென்று அஞ்ஞாயிற்றை நோக்கித் தம் மலராகிய கைகளைக் கூப்பியிரவாநின்றன; இவையென்மாட் டன்புடையன போலும் எ-று. கானலின் வனசங்களெனவும், தில்லையெங்கண்டர் செற்றவெனவுங் கூட்டுக. கானலிற் கைகூப்புமென வியைப்பினு மமையும்.

கானற்பொய்கையின் வனசம் கானலின் வனசமெனப் பட்டன. அலந்து கண்ணீர்வருமென்பது இருபொருட்டாகலின், மலர்ந்து கள்ளாகிய நீர் வருமென்றுரைக்க. இப்பொருட்கு அலர்ந் தென்பதிடைக்குறைந்து நின்றதாகக் கொள்க. கதிரோன்றம்மைப் பிரிய வாற்றாது கடிது வரவேண்டுமென வனசங்கள் கைகூப்பா நின்றன வென்று அவற்றிற்கிரங்கினாளாக வுரைப்பினுமமையும். அலர்ந்த வென்பது பாடமாயின், அலர்ந்த வனசமென வியையும். 9; 190

விளக்கவுரை

15.10 பங்கயத்தோடுபரிவுற்றுரைத்தல் பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தல் என்பது பறவையொடு வருந்தாநின்றவள், இவையென்வருத்தங்கண் இவள் வருந்தாமல் விரைய வரவேண்டுமென்று ஞாயிற்றை நோக்கித் தங்கை குவியாநின்றன; ஆதலால் என்மாட் டன்புடையன போலுமெனப் பங்கயத்தோடு பரிவுற்றுக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

15.10. முருகவிழ் கான
லொடுபரி வுற்றது.

மூவல் தழீஇய அருண்முத
லோன் தில்லைச் செல்வன்முந்நீர்
நாவல் தழீஇயவிந் நானிலந்
துஞ்சும் நயந்தவின்பச்
சேவல் தழீஇச்சென்று தான்துஞ்சும்
யான்துயி லாச்செயிரெங்
காவல் தழீஇயவர்க் கோதா
தளிய களியன்னமே. **#848**

இதன் பொருள்:

மூவல் தழீஇய அருள் முதலோன் மூவலைப் பொருந்திய அருளையுடைய முதல்வன்; தில்லைச் செல்வன் தில்லைக்க ணுளனாகிய செல்வன்; முந்நீர் நாவல் தழீஇய இந்நானிலம் துஞ்சும் அவனுடைய கடலாற்சூழப்பட்ட நாவலைப் பொருந்திய இந்நானிலமுழுதுந் துஞ்சாநின்றது; யான் துயிலாச் செயிர் எம்காவல் தழீஇயவர்க்கு ஓதாது இப்பொழுதினும் யான் றுயிலாமைக்குக் காரணமாகிய வருத்தத்தை எமது காவலைப் பொருந்தினவருக் குரையாதே; அளிய களி அன்னம் அளித்தாகிய களியன்னம்; சென்று இவ்விடத்து நின்றும்போய்; நயந்த இன்பச்சேவல் தழீஇத் தான் துஞ்சும் தானயந்த வின்பத்தைச் செய்யுஞ் சேவலைத்தழுவி ஒருகவற்சியின்றித் தான்றுயிலாநின்றது; இனியிது கூறுவார் யாவர்? எ-று.

மூவலென்பது ஒரு திருப்பதி. பாலைக்கு நிலமின்மையின், நானிலம்

எனப்பட்டது. நயந்த சேவலைப்பொருந்திய களிப்பால் அன்னஞ் சென்றுரையாமை யல்லது அவரெம்மைக்காவாது விடா ரென்னுங் கருத்தான், எங்காவறழீஇயவர்க்கென்றாள். ஓதாதென்ப தனை முற்றாகவுரைப்பினு மமையும். நெய்தற்றிணை கூறுவார் சோத்துன்னடியம் (பா.173) என்பது தொட்டுப் புகழும் பழியும் (பா.181) என்னுங்காறும் வரப் பாட்டொன்பதும் இரங்கனிமித்த மாகக் கூறி, ஒருவழித்தணத்தற் றுறையிடத்து ஆரம்பரந்து (பா.182) என்பது தொட்டு இதன்காறும்வர இப்பாட்டுப் பத்தும் இரங்கலே கூறுதலான், திணை: நெய்தல்; என்னை? வாட்டம் உரிப்பொரு ளாதலின். கைகோள்: கற்பு. மெய்ப்பாடு: அழுகை. பயன்: அயர் வுயிர்த்தல். #9; #9; #9; #9; #9; #9; 191

விளக்கவுரை

15.11 அன்னமோடழிதல் அன்னமோடழிதல் என்பது பங்கயத்தை நோக்கிப் பரிவுறாநின்றவள், உலகமெல்லாந் துயிலாநின்ற விந்நிலைமைக் கண்ணும் யான்றுயிலாமைக்குக் காரணமாகிய என்வருத்தத்தைச் சென்று அவர்க்குச் சொல்லாது தான்றன் சேவலைப்பொருந்திக் கவற்சியின்றித் துயிலாநின்றதென அன்னத்தோடழிந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

15.11. இன்னகையவ ளிரவருதுயரம்
அன்னத்தோ டழிந்துரைத்தது.

நில்லா வளைநெஞ்சம் நெக்குரு
கும்நெடுங் கண்துயிலக்
கல்லா கதிர்முத்தங் காற்று
மெனக்கட் டுரைக்கதில்லைத்
தொல்லோ னருள்களில் லாரிற்சென்
றார்சென்ற செல்லல்கண்டாய்
எல்லார் மதியே யிதுநின்னை
யான்இன் றிரக்கின்றதே. **#849**

இதன் பொருள்:

எல் ஆர் மதியே ஒளியார்ந்த மதியே; தில்லைத் தொல்லோன் அருள்கள் இல்லாரின் சென்றார் சென்ற செல்லல் கண்டாய் தில்லைக்கணுளனாகிய தொல்லோனது அருளுடையா ரல்லாதாரைப்போலக் கண்ணோட்டமின்றிப் போனவர் போதலா லுண்டாகிய இன்னாமையை நீயேகண்டாய் யான் சொல்ல வேண்டுவதில்லை; வளை நில்லா வளைகணிறுத்த நிற்கின்றன வில்லை; நெஞ்சம் நெக்கு உருகும் நெஞ்சு நெகிழ்ந்துருகாநின்றது; நெடுங்கண் துயிலக்கல்லா கதிர் முத்தம் காற்றும் நெடுங்கண் கடுயிலாவாய்க் கண்ணீர்த்துளியாகிய கதிர் முத்தங்களை விடாநின்றன;

எனக் கட்டுரைக்க என்று அவர்க்குச் சொல்வாயாக; நின்னை யான் இன்று இரக்கின்றது இது நின்னை யானின்றிரக் கின்றதிது எ-று. துயிலக்கல்லாவென்பது ஒருசொல். முத்தங்காலு மென்பதூஉம் பாடம். எல்லாமதியே யென்பது பாடமாயிற் செல்லலெல்லாமென்று கூட்டியுரைக்க. மெய்ப்பாடு: அச்சம். பயன்: வரைவுகடாதல்.192

விளக்கவுரை

15.12 வரவுணர்ந்துரைத்தல் வரவுணர்ந் துரைத்தல் என்பது தலைமகளன்னத் தோடழிந்து வருந்தாநிற்ப, தலைமக னொருவழித்தணந்து வந்தமை சிறைப் புறமாகவுணர்ந்த தோழி, வளைகள் நிறுத்த நிற்கின்றன வில்லை; நெஞ்சம் நெகிழ்ந்துருகாநின்றது; கண்கள் துயிலின்றிக் கலுழாநின்றன; இவை யெல்லாம் யான் சொல்ல வேண்டுவதில்லை; நீயேகண்டாய்; இதனைச்சென்று அவர்க்குச் சொல்லுவாயென மதியொடு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

15.12. சென்றவர் வரவுணர்ந்து நின்றவள் நிலைமை
சிறப்புடைப் பாங்கி சிறைப்புறத் துரைத்தது.

வளருங் கறியறி யாமந்தி
தின்றுமம் மர்க்கிடமாய்த்
தளருந் தடவரைத் தண்சிலம்
பாதன தங்கமெங்கும்
விளரும் விழுமெழும் விம்மும்
மெலியும்வெண் மாமதிநின்
றொளிருஞ் சடைமுடி யோன்புலி
யூரன்ன வொண்ணுதலே. **#850**

இதன் பொருள்:

வளரும் கறி அறியா மந்தி தின்று வளராநின்ற மிளகு கொடியைத் தமக்கேற்றவுணவென்றறியாத இளையமந்தி தின்று; மம்மர்க்கு இடமாய்த் தளரும் தடவரைத் தண்சிலம்பா வருத்தத்திற்கிடமாய் நிலைதளரும் பெரியவரைகளை யுடைய தண்சிலம்பையுடையாய்; வெண் மா மதி நின்று ஒளிரும் சடைமுடியோன் புலியூர் அன்ன ஒள் நுதல் வெள்ளிய பெரிய மதி நின்று விளங்குஞ் சடையானியன்ற முடியையுடையவனது புலியூரையொக்குமொண்ணுதல்; தனது அங்கம் எங்கும் விளரும் தன் மேனிமுழுதும் பசக்கும்; விழும் அமளிக்கண் விழாநிற்கும்; எழும் எழாநிற்கும்; விம்மும் பொருமா நிற்கும்; மெலியும் நின்வன்கண்மையை நினைந்து மெலியாநிற்கும்; அதனாலின்ன நிலைமையளென்றென்னாற் சொல்லப்படாது எ-று. வளருமிளங்கறி கண்ணிற்கினிதாயிருத்தலின் இது நமக்குத்

துய்க்கப்படாதென்றுணராத இளமந்தி அதனைத்தின்று வருந்துமாறு போலக் கண்ணுமனமுமகிழு முருவினையாகிய நின்னை நின்பெருமையுணராதெதிர்ப்பட்டு வருந்தாநின்றாளென உள்ளுறை காண்க. மெய்ப்பாடும் பயனும் அவை.

இவ்வாறு ஒருவழித்தணந்து வந்து வரைவுமாட்சிமைப் படவும் பெறும். அன்றியும் உடன்போக்கு நிகழப்படும். 193

விளக்கவுரை

15.13 வருத்தமிகுதிகூறல் வருத்தமிகுதி கூறல் என்பது சிறைப்புறமாக மதியொடு வருத்தங்கூறிச் சென்றெதிர்ப்பட்டு வலஞ்செய்துநின்று, நீ போய், அவள் படாநின்ற வருத்தம் என்னாற்சொல்லுமளவல்லவென வரைவு தோன்றத் தலைமகளது வருத்தமிகுதி தோழி கூறாநிற்றல்.

அதற்குச் செய்யுள்

15.13. நீங்கி யணைந்தவற்குப்
பாங்கி பகர்ந்தது.

2.16.உடன்போக்கு

ஒராக மிரண்டெழி லாயொளிர்
வோன்தில்லை யொண்ணுதலங்
கராகம் பயின்றமிழ் தம்பொதிந்
தீர்ஞ்சுணங் காடகத்தின்
பராகஞ் சிதர்ந்த பயோதர
மிப்பரி சேபணைத்த
இராகங்கண் டால்வள்ள லேயில்லை
யேயெம ரெண்ணுவதே. #851

இதன் பொருள்:

ஒரு ஆகம் இரண்டு எழில் ஆய் ஒளிர்வோன் தில்லை ஒள் நுதல் ஒருமேனி பெண்ணழகு மாணழகுமாகிய விரண்டழகாய் விளங்குமவனது தில்லைக் கணுளளாகிய வொண்ணு தலுடைய; அங்கராகம் பயின்று பூசப் படுவன பயின்று; அமிழ்தம் பொதிந்து அமிர்தத்தைப் பொதிந்து; ஈர்ஞ் சுணங்கு ஆடகத்தின் பராகம்சிதர்ந்த பயோதரம் நெய்த்த சுணங்காகிய செம்பொன்னின் பொடியைச் சிதறின முலைகள்; இப்பரிசே பணைத்த இராகம் கண்டால் இப்படியே பெருத்த கதிர்ப்பைக்கண்டால்; வள்ளலே வள்ளலே; எமர் எண்ணுவது இல்லையே இவண் மாட்டெமர் நினைப்பதில்லையே? சிலவுளவாம் என்று.

இராகம் வடமொழிச்சிதைவு; ஈண்டு நிறமென்னும் பொருட்டு. இராகம் முடுகுதலென்பாருமுளர். தில்லையொண்ணுத லிராகமென வியையும். மெய்ப்பாடும் பயனும் அவை. 194

விளக்கவுரை

16.1 பருவங்கூறல் பருவங்கூறல் என்பது அலரறிவுறுத்த தோழி, இவண் முலை முதிர்வு கண்டமையான் மகட்பேசுவார்க்கு எமர் மாறாது கொடுக்கவுங் கூடும்; அதுபடாமனிற்பநீ முற்பட்டு வரைவாயாக வெனத் தலைமகனுக்குத் தலைமகளது பருவங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
16.1. உருவது கண்டவள்
அருமை யுரைத்தது.

மணியக் கணியும் அரன்நஞ்ச
மஞ்சி மறுகிவிண்ணோர்
பணியக் கருணை தரும்பரன்
தில்லையன் னாள்திறத்துத்
துணியக் கருதுவ தின்றே
துணிதுறை வாநிறைபொன்

அணியக் கருதுகின் றார்பலர்
மேன்மே லயலவரே. **#852**
இதன் பொருள்:
துறைவா துறைவா; தில்லை அன்னாள் திறத்துத் துணியக் கருதுவது இன்றே துணி தில்லையையொப் பாடிறத்து நீ துணிந்து செய்யக்கருதுவதனை இன்றே துணிந்து செய்வாயாக; அயலவர் நிறை பொன் மேன்மேல் அணியக் கருது கின்றார் பலர் அயலவர் நிறைந்த பொன்னை மேன்மேலு மணியக் கருதுகின்றார் பலர் எ-று.
மணி அக்கு அணியும் அரன் மணியாகிய அக்கையணியு மரன்; நஞ்சம் அஞ்சி மறுகி விண்ணோர் பணியக் கருணை தரும் பரன்- நஞ்சையஞ்சிக் கலங்கிச்சுழன்று தேவர் சென்று பணிய அந்நஞ்சான்வருமிடர்க்கு மருந்தாகத் தன் கருணையைக் கொடுக்கும் பரன்; தில்லை அவனது தில்லையெனக் கூட்டுக.
அக்குமணி யெனினுமமையும். அலங்காரம்: ஒற்றுமைக் கொளுவுதல். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: அது. #9; 195

விளக்கவுரை

16.2 மகட்பேச்சுரைத்தல் மகட் பேச்சுரைத்தல் என்பது பருவங்கூறிய தோழி, படைத்து மொழியான் அயலவர் பலரும் மேன்மேலும் பொன்னணியக் கருதாநின்றார்; நீ விரைய வரைவொடு வருவாயாதல் அன்றியுடன்கொண்டுபோவாயாதல் இரண்டினு ளொன்று துணிந்துசெய்யக் கருதுவாய்; அதனை யின்றே செய்வாயாகவெனத் தலைமகனுக்கு அயலவர் வந்து மகட்பேசல் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
16.2. படைத்துமொழி கிளவியிற் பணிமொழிப் பாங்கி
அடற்கதிர் வேலோற் கறிய வுரைத்தது.

பாப்பணி யோன்தில்லைப் பல்பூ
மருவுசில் லோதியைநற்
காப்பணிந் தார்பொன் னணிவா
ரினிக்கமழ் பூந்துறைவ
கோப்பணி வான்றோய் கொடிமுன்றில்
நின்றிவை ஏர்குழுமி
மாப்பணி லங்கள் முழங்கத்
தழங்கும் மணமுரசே. **#853**
இதன் பொருள்:
கமழ் பூந் துறைவ கமழ்பூந் துறைவனே; பாப்பணியோன் தில்லைப் பல் பூ மருவு சில் ஓதியை பாம்பாகிய வணியையுடையவனது தில்லைக்கணுளளாகிய பலவாகிய பூக்கள் பொருந்திய நுண்ணிய

வோதியையுடையாளை; நல் காப்பு அணிந்தார் நல்ல காப்பை யணிந்தார்கள்; இனி பொன் அணிவார் இனிப் பொன்னையணிவார்; கோப்பு அணி வான் தோய் கொடி முன்றில் நின்று கலியாணத்துக்குப் பொருந்திய கோப்புக்களை யணிந்த வானைத்தோயுங் கொடிகளையுடைய முன்றிற்கணின்று; மணமுரசு இவை ஏர் குழுமி மாப்பணிலங்கள் முழங்கத் தழங்கும் மணமுரசங்களிவை ஏரொடு குழுமிப் பெரியசங்கங்கள் முழங்கத்தா மொலியாநின்றன; இனியடுப்பது செய்வாயாக எ-று.

தில்லைப் பல்பூவென் றியைப்பினு மமையும். காப்பென்றது காவலை. அணிவாரென்றது முற்றுச்சொல். கோப்பணி முன்றிலென வியையும். மெய்ப்பாடும் பயனும் அவை. 196

விளக்கவுரை

16.3 பொன்னணிவுரைத்தல் பொன்னணி வுரைத்தல் என்பது படைத்து மொழியான் மகட்பேசல் கூறின தோழி, அறுதியாக முன்றிற்கணின்று முரசொடு பணில முழங்கக் காப்பணிந்து பொன்னணியப் புகுதா நின்றார்*;* இனி நின்கருத்தென்னோவெனத் தலைமகனுக்கு அயலவர் பொன்னணி வுரையாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.3. பலபரி சினாலும் மலர்நெடுங் கண்ணியை
நன்னுதற் பாங்கி பொன்னணிவ ரென்றது.

எலும்பா லணியிறை யம்பலத்
தோனெல்லை செல்குறுவோர்
நலம்பா வியமுற்றும் நல்கினுங்
கல்வரை நாடரம்ம
சிலம்பா வடிக்கண்ணி சிற்றிடைக்
கேவிலை செப்பலொட்டார்
கலம்பா வியமுலை யின்விலை
யென்நீ கருதுவதே. **#854**

இதன் பொருள்:

சிலம்பா சிலம்பா; எலும்பால் அணி இறை எலும்புகளானலங்கரிக்கு மிறைவன்; அம்பலத்தோன் அம்பலத்தின் கண்ணான்; எல்லை செல்குறுவோர் நலம் பாவிய முற்றும் நல்கினும் அவனதெல்லைக்கட் செல்லக் கருதுவாரது நன்மைபரந்த வுலகமுழுதையும் நீ கொடுப்பினும்; கல் வரை நாடர் எம்முடைய தமராகிய கல்வரைநாடர்; வடிக்கண்ணி சிற்றிடைக்கே விலை செப்பல் ஒட்டார் வடுவகிர்போலுங் கண்ணையுடையாளது சிறியவிடைக்கே விலையாகச் சொல்லுத லியையார்; கலம் பாவிய முலையின் விலை என் நீ கருதுவது கலம்பரந்த முலையின் விலையாகயாதனை நீ கருதுவது? ஒன்றற்கும்

அவருடம்படார் எ-று.
எலும்பாற்செய்த வணியென்று ஒருசொல் வருவித் துரைப்பாரு முளர். எல்லை சேறல் அறிவா லவனை யணுகுதல். தில்லையெல்லை யெனினுமமையும். அவர் நலம்பாவா விடமின்மையின் எஞ்சாமை முழுதுமென்பார், நலம்பாவியமுற்று மென்றார்; என்றது அவர் சீவன்முத்தராயிருத்தல். அஃதாவது சீவனுடனிருக்கும்போதே முத்தியையடைந் திருத்தல். முத்தியாவது எங்குமொக்க வியாத்தியை யடைந்திருத்தல். இஃது அகண்டபரிபூரண ரென்றபடி. அம்மகேளென்னுங் குறிப்பின்கண்வந்தது. சிற்றிடைக்கே யென்னு மேகாரம்: பிரிநிலை. இவனுயர்ந்த தலைமகனாதலால், தன்றமரைக் கல்வரைநாடரென்றும், பேதையரென்றும் கூறினாள். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைமகளதருமையுணர்த்தல். 197

விளக்கவுரை

16.4 அருவிலையுரைத்தல் அருவிலை யுரைத்தல் என்பது பொன்னணி வுரைப்பக் கேட்ட தலைமகன் யான் வரைவொடு வருதற்கு நீ முலைப்பரிசங் கூறுவாயாகவென, எல்லாவுலகமு நல்கினும் எமர் அவளுடைய சிறிய விடைக்கு விலையாகச் செப்பலொட்டார்; இனிப் பெரிய முலைக்கு நீ விலைகூறுவ தென்னோவெனத் தோழி விலை யருமை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.4. பேதைய ரறிவு பேதைமை யுடைத்தென
ஆதரத் தோழி அருவிலை யுரைத்தது.

விசும்புற்ற திங்கட் கழும்மழப்
போன்றினி விம்மிவிம்மி
அசும்புற்ற கண்ணோ டலறாய்
கிடந்தரன் தில்லையன்னாள்
குயம்புற் றரவிடை கூரெயிற்
றூறல் குழல்மொழியின்
நயம்பற்றி நின்று நடுங்கித்
தளர்கின்ற நன்னெஞ்சமே. **#855**

இதன் பொருள்:

அரன் தில்லை அன்னாள் குயம் அரனது தில்லையை யொப்பாளுடையமுலை; புற்று அரவு இடை புற்றின் கண்வாழும் பாம்புபோலுமிடை; கூர் எயிற்று ஊறல் கூரிய வெயிற்றின் கணூறியநீர்; குழல் மொழியின் நயம் பற்றி குழலோசை போலுமொழி என விவற்றின்கட்கிடந்த இன்பத்தையே கருதி; நின்று நடுங்கித் தளர்கின்ற நல் நெஞ்சமே விடாது நின்று அவளதருமை கருதாயாய் நடுங்கி வருந்தாநின்ற நல்ல நெஞ்சமே; விசும்பு உற்ற திங்கட்கு அழும்

மழப்போன்று விசும்பைப் பொருந்திய திங்களைத் தரவேண்டி யழுங் குழவியையொத்து; அசும்பு உற்ற கண்ணோடு விம்மி விம்மி இனிக் கிடந்து அலறாய் நீரறாமையைப் பொருந்திய கண்ணை யுடையையாய்ப் பொருமிப் பொருமி இனிக்கிடந்தலறு வாயாக எ-று. குழன்மொழியினென்னும் இன்: பலபெயரும் மைத்தொகை யிறுதிக்கண்வந்த சாரியை இன். மெய்ப்பாடு: அழுகை. பயன்: ஆற்றாமை நீங்குதல். 198

விளக்கவுரை

16.5 அருமைகேட்டழிதல் அருமை கேட்டழிதல் என்பது அருவிலைகேட்ட தலை மகன், நீயவளதருமை கருதாது அவளதவயங்களிலுண்டாகிய நயத்தைப் பற்றிவிடாது நடுங்காநின்றாய்; இனி மதியைப்பிடித் துத் தரவேண்டியழும் அறியாக் குழவியைப்போலக் கிடந்தரற்று வாயாக வெனத் தன்னெஞ்சோடழிந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.5. பெருமைநாட் டத்தவள்
அருமைகேட் டழிந்தது.

மைதயங் குந்திரை வாரியை
நோக்கி மடலவிழ்பூங்
கைதையங் கானலை நோக்கிக்கண்
ணீர்கொண்டெங் கண்டர்தில்லைப்
பொய்தயங் குந்நுண் மருங்குல்நல்
லாரையெல் லாம்புல்லினாள்
பைதயங் கும்மர வம்புரை
யும்மல்குற் பைந்தொடியே. **#856**

இதன் பொருள்:

பை தயங்கும் அரவம் புரையும் அல்குற் பைந்தொடி படம் விளங்கும் பாம்பையொக்கும் அல்குலையுடைய பைந்தொடி; மை தயங்கும் திரை வாரியை நோக்கி கருமை விளங்குந் திரையையுடைய கடலையுநோக்கி; மடல் அவிழ் பூங்கைதை கானலை நோக்கி மடலவிழாநின்ற பூவையுடையவாகிய தாழையை யுடைய கானலையுநோக்கி; கண்ணீர் கொண்டு கண்ணீரைக் கொண்டு; எம் கண்டர் தில்லைப் பொய் தயங்கும் நுண் மருங்குல் நல்லாரை எல்லாம் புல்லினாள் - பின் எம்முடைய கண்டரது தில்லைக்கணுளராகிய பொய்யாதல் விளங்கும் நுண்ணிய மருங்குலையுடைய தன்னாயத்தாராகிய நல்லாரையெல்லாம் புல்லிக்கொண்டாள்; அவள்கருதிய தொன்றுண்டு போலும் எ-று. கண்ணீர்கொண்டென்றது பெண்களுக் கியல்பான குண மொன்று, நெடுங்காலங் கூடமருவினாரை விட்டு நீங்குகின்ற துயரத்தாற்

றோன்றிய தொன்று, இக்காலமெல்லாம் உங்களைச் சேர்ந்து போந்த பெருநலத்தான் இப்பெருநலம் பெற்றேனென்னு முவகைக் கண்ணீரொன்று. இப்பெருநல மென்றது உடன்போக்கை. ஆதலான், நல்லாரையெல்லாம் புல்லிக்கொண்டு கண்ணீர் கொண்டாள். பொய்போலு மசையு மருங்கு லெனினுமமையும். குறித்துரைத்தது கொண்டு நீங்கென்பது பயப்பவுரைத்தது. 199

விளக்கவுரை

16.6 தளர்வறிந்துரைத்தல் தளர்வறிந்துரைத்தல் என்பது வரைவுமாட்சிமைப் படா தாயின் நீயவளையுடன்கொண்டு போவென்பது பயப்ப, கடலை யுங்கானலையு நோக்கிக் கண்ணீர் கொண்டு தன்னாயத்தாரை யெல்லாம் புல்லிக்கொண்டாள்; அவள் கருதிய தின்னதென்று தெரியாதெனத் தோழி தலைமகளது வருத்தங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.6. தண்டுறைவன் தளர்வறிந்து
கொண்டுநீங்கெனக் குறித்துரைத்தது.

மாவைவந் தாண்டமென் னோக்கிதன்
பங்கர்வண் தில்லைமல்லற்
கோவைவந் தாண்டசெவ் வாய்க்கருங்
கண்ணி குறிப்பறியேன்
பூவைதந் தாள்பொன்னம் பந்துதந்
தாளென்னைப் புல்லிக்கொண்டு
பாவைதந் தாள்பைங் கிளியளித்
தாளின்றென் பைந்தொடியே. **#857**

இதன் பொருள்:

என் பைந்தொடி என்னுடைய பைந்தொடி; இன்று என்னைப் புல்லிக்கொண்டு பூவை தந்தாள் இன்றென்னைப் புல்லிக்கொண்டு தன் பூவையை யென்கையிற் றந்தாள்; பொன் பந்து தந்தாள் பின் பொற்றகட்டாற் புனைந்த பந்தைத் தந்தாள்; பாவை தந்தாள் பின் றன் பாவையைத் தந்தாள்; பைங்கிளி அளித்தாள் பைங்கிளியையுமளித்தாள்; மாவை வந்து ஆண்ட மெல் நோக்கிதன் பங்கர் மானைச் சென்றடிமைக்கொண்ட மெல்லிய நோக்கை யுடையாளது கூற்றையுடையவரது; வண்தில்லை மல்லல் கோவை வந்து ஆண்ட செவ்வாய்க் கருங்கண்ணி குறிப்பு அறியேன் - வளவியதில்லை வரைப்பினுண்டாகிய வளத்தையுடைய கொவ்வைக் கனியைச் சென்றாண்ட செவ்வாயையுடைய இக்கருங்கண்ணியது கருத்தறிகின்றிலேன்; நின்னுடன் செல்லப்போலும் எ-று. புல்லிக்கொண்டு பாவையைத் தந்தாளென்றியைத்து, பாவை

மேலுள்ளவன்பால் அதனைத் தருவுழிப் புல்லிக்கொண்டு தந்தாளென் றுரைப்பாருமுளர். இவையிரண்டற்கு மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: உடன்போக்குணர்த்துதல். 200

விளக்கவுரை

16.7 குறிப்புரைத்தல் குறிப்புரைத்தல் என்பது வருத்தங்கூறிப் போக்குணர்த்தி அதுவழியாக நின்று, என்னைப் புல்லிக்கொண்டு தன்னுடைய பூவையையும் பந்தையும், பாவையையுங் கிளியையும் இன்றென்கைத் தந்தாள்; அது நின்னோடுடன் போதலைக் கருதிப்போலுமெனத் தோழி தலைமகனுக்குத் தலைமகளது குறிப்புரையாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.7. நறைக் குழலி
குறிப் புரைத்தது.

மெல்லியல் கொங்கை பெரியமின்
நேரிடை மெல்லடிபூக்
கல்லியல் வெம்மைக் கடங்கடுந்
தீக்கற்று வானமெல்லாஞ்
சொல்லிய சீர்ச்சுடர்த் திங்களங்
கண்ணித்தொல் லோன்புலியூர்
அல்லியங் கோதைநல் லாயெல்லை
சேய்த்தெம் அகல்நகரே. **#858**

இதன் பொருள்:

வானம் எல்லாம் கற்றுச் சொல்லிய சீர் வானுல கெங்கும் ஆண்டையராற் கற்றுச்சொல்லப்பட்ட புகழையும்; சுடர் திங்கள் கண்ணித் தொல்லோன் புலியூர் சுடரை உடைய திங்களாகிய கண்ணியையுமுடைய பழையோனது புலியூரில்; அல்லி அம் கோதை நல்லாய் அல்லியங்கோதையையுடைய நல்லாய்; மெல்லியல் கொங்கை பெரிய - மெல்லியலுடைய கொங்கைகள் பெரிய; இடை மின் நேர் அவற்றைத் தாங்கு மிடைநுடக்கத்தான் மின்னுக்கு நேராயிருந்தது; மெல் அடி பூ மெல்லியவடிகள் பூவேயாயிருந்தன; கல் இயல் வெம்மைக் கடம் கடுந் தீ - கல்லின் கணுண்டாகிய வெம்மையையுடைய காடு அவ்வடிக்குத் தகாததாய்க் கடிய தீயாயிருந்தது; எம் அகல் நகர் எல்லை சேய்த்து அதன்மேல் எம்முடைய வகன்றநகரும் எல்லைசேய்த்தாயிருந்தது; அதனான் நீ கருதியது பெரிதுமரிது எ-று.

கல்லானியன்ற கடமென வியைப்பினுமமையும். எல்லை சேய்த்தென்பன ஒரு சொன்னீர்மைப் பட்டு அகனகரென்னு மெழுவாய்க்கு முடிபாயின. வானரெல்லா மென்பதூஉம் பாடம் இதுவென்பதனை எல்லாவற்றோடுங் கூட்டுக. மெய்ப்பாடு: இளிவரல்.

பயன்: தலைமகணிலை யுணர்த்துதல்.201

விளக்கவுரை

16.8 அருமையுரைத்தல் அருமையுரைத்தல் என்பது குறிப்புரைத்துப் போக்குடம் படுத்திய தோழிக்கு, கொங்கைபொறாது நடுங்காநின்ற இடையினை யுடையாளது மெல்லியவடிக்கு யான்செல்லும் வெஞ்சுரந்தகாது*;* அதன்மேலும் எம்பதியுஞ் சேய்த்து*;* அதனால் நீ கருதுகின்ற காரியமிகவுமருமையுடைத்தெனத் தலைமகன் போக்கருமை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.8. கானின் கடுமையும் மானின் மென்மையும்
பதியின் சேட்சியும் இதுவென வுரைத்தது.

பிணையுங் கலையும்வன் பேய்த்தே
ரினைப்பெரு நீர்நசையால்
அணையும் முரம்பு நிரம்பிய
அத்தமும் ஐயமெய்யே
இணையும் அளவுமில் லாஇறை
யோனுறை தில்லைத்தண்பூம்
பணையுந் தடமுமன் றேநின்னொ
டேகினெம் பைந்தொடிக்கே. **#859**

இதன் பொருள்:

பிணையும் கலையும் - பிணையுங் கலையும்; பெரு நீர் நசையால் மிக்க நீர் வேட்கையால்; வன் பேய்த்தேரினை அணையும் முரம்பு நிரம்பிய அத்தமும் பெரிய பேய்த்தேரினைச் சென்றணுகும் முரம்பா னிரம்பிய சுரமும்; ஐய ஐயனே; நின்னொடு ஏகின் மெய்யே எம் பைந்தொடிக்கு நின்னொடு சொல்லின் மெய்யாக எம்பைந்தொடிக்கு; இணையும் அளவும் இல்லா இறையோன் உறை தில்லைப் பூந்தண் பணையும் தடமும் அன்றே ஒப்பு மெல்லையு மில்லாத இறையோனுறைகின்ற தில்லை வரைப்பிற் பூக்களையுடைய குளிர்ந்த மருதநிலமும் பொய்கையு மல்லவோ! நீயிவ்வாறு கூறுவதென்னை எ-று.

முரம்பு கல் விரவி யுயர்ந்திருக்குநிலம். ஏகினென்னும் வினையெச்சம் பணையுந்தடமு மாமென விரியுமாக்கத்தோடு முடிந்தது. அழல்தடம் தீக்காய்கலம். விகாரவகையால் தடா தடமென நின்றது. அழலானிறைந்த பொய்கையெனினுமமையும். அலங்காரம்: புகழாப்புகழ்ச்சி. 202

விளக்கவுரை

16.9 ஆதரங்கூறல் ஆதரங்கூறல் என்பது போக்கருமை கூறிய தலைமகனுக்கு, நின்னோடு போகப்பெறின் அவளுக்கு வெஞ்சுரமும்

தண்சுரமாம்; நீ யருமைகூறாது அவளைக் கொண்டுபோவெனத் தோழி தலைமகள தாதரங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
16.9. அழல்தடம் புரையும் அருஞ்சுர மதுவும்
நிழல்தட மவட்கு நின்னொடேகி னென்றது.

இங்கய லென்னீ பணிக்கின்ற
தேந்தல் இணைப்பதில்லாக்
கங்கையஞ் செஞ்சடைக் கண்ணுத
லண்ணல் கடிகொள்தில்லைப்
பங்கயப் பாசடைப் பாய்தடம்
நீயப் படர்தடத்துச்
செங்கய லன்றே கருங்கயற்
கண்ணித் திருநுதலே. **#860**

இதன் பொருள்:
இணைப்பது இல்லாக் கங்கை அம் செஞ்சடைக் கண் நுதல் அண்ணல் கடிகொள் தில்லை இணைக்கப் படுவதொரு பொருளுமில்லாத கங்கையையுடைய வழகிய செஞ்சடையையுங் கண்ணையுடைய நுதலையுமுடைய வண்ணலது காவலைப் பொருந்திய தில்லைவரப்பின்; பங்கயப் பாசடைப் பாய்தடம் நீ பங்கயத்தின் பசியவிலைகளையுடைய பரந்த பொய்கை நீ; கருங் கயல்கண் இத்திருநுதல் படர் தடத்துச் செங்கயல் அன்றே கருங்கயல்போலுங் கண்ணையுடைய இத்திருநுதல் அகன்றவப் பொய்கைக்கண்வாழுஞ் செங்கயலன்றோ, அதனால், ஏந்தல் ஏந்தால்; இங்கு நீ அயல் பணிக்கின்றது என் நின்னோடேகுமிடத்து வேறொன்றானொருதுன்பம் வருவதாக இவ்விடத்து நீயயன்மை கூறுகின்றதென்! செங்கயற்குப் பங்கயத் தடமல்லது வேறுவேண்டப் படுவதொன்றுண்டோ! எ-று.
கண்ணுதலாகிய வண்ணலெனினுமமையும். உடன்கொண்டு போகாயாயின், அலரானும் காவன்மிகுதியானு நின்னைத் தலைப்படுதலரிதாகலிற் றடந்துறந்த கயல்போல இவளிறந்துபடு மென்பது கருத்து. இவையிரண்டற்கும் மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: உடன்போக்கு வற்புறுத்தல். 9; 203

விளக்கவுரை

16.10 இறந்துபாடுரைத்தல் இறந்துபாடுரைத்தல் என்பது ஆதரங்கூறிய தோழி, *நீயுடன் கொண்டு போகாயாகில் அலரானுங் காவன்மிகுதியானும் நின்னையெதிர்ப்படுதலரிதாகலின், தடந்துறந்த கயல்போல இறந்து படுமெனத் தலைமகளதிறந்துபாடு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்*
16.10. கார்த்தடமுங் கயலும்போன்றீர்

வார்த்தடமுலையு மன்னனுமென்றது.

தாயிற் சிறந்தன்று நாண்தைய
லாருக்கந் நாண்தகைசால்
வேயிற் சிறந்தமென் றோளிதிண்
கற்பின் விழுமிதன்றீங்
கோயிற் சிறந்துசிற் றம்பலத்
தாடும்எங் கூத்தப்பிரான்
வாயிற் சிறந்த மதியிற்
சிறந்த மதிநுதலே. **#861**

இதன் பொருள்:

ஈங்கோயிற் சிறந்து சிற்றம்பலத்து ஆடும் ஈங்கோ யிடத்துப் பொலிந்து மேவிச் சிற்றம்பலத்தின்கணின்றாடும்; எம் கூத்தப்பிரான் வாயிற் சிறந்த மதியிற் சிறந்த மதி நுதல் எம்முடைய கூத்தனாகிய பிரானது வாயின்கண் எப்பொழுதும் வந்து சிறத்தற்குக் காரணமாகிய அறிவாற் சிறப்பையுடையையாகிய மதிநுதால்; தையலாருக்கு நாண் தாயின் சிறந்தன்று மகளிர்க்குப்பழி நீக்கிப் பாதுகாத்தலில் நாண் தாய்போலச் சிறந்தது; அந்நாண் அத்தன்மைத்தாகிய நாண்; தகை சால்வேயிற் சிறந்த மென்தோளி அழகமைந்த வேய்போலச்சிறந்த மெல்லிய தோள்களை யுடையாய் திண் கற்பின் விழுமிது அன்று திண்ணிய கற்புப்போலச் சீரிதன்று எ-று.

தாயினுஞ் சிறந்ததன்று நாணென்றுரைப்பினுமமையும். நாணென்பது ஒருபொருட் குரிமையாகலிற் றாயென வொருமை கூறினார். 'ஏவலிளையர் தாய்வயிறு கரிப்ப' என்பதுபோல அமையுமாறு முடைத்து. அன்றியும்,

உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று

விளக்கவுரை

16.11 கற்பு நலனுரைத்தல் கற்பு நலனுரைத்தல் என்பது தலைமகனைப் போக்குடம் படுத்திய தோழி, தலைமகளுழைச்சென்று, மகளிர்க்குப் பாதுகாக்கப் படுவனவற்றுள் நாண்போலச் சிறந்தது பிறிதில்லை; அத்தன்மைத்தாகியநாணுங் கற்புப்போலச் சீரியதன்றென உலகியல் கூறுவாள்போன்று, அவள் உடன்போக்குத் துணியக் கற்புநலங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.11. பொய்யொத்தவிடை போக்குத்துணிய
வையத் திடை வழக்கு ரைத்தது.

குறப்பாவை நின்குழல் வேங்கையம்
போதொடு கோங்கம்விராய்

நறப்பா டலம்புனை வார்நினை
வார்தம் பிரான்புலியூர்
மறப்பான் அடுப்பதோர் தீவினை
வந்திடிற் சென்று சென்று
பிறப்பான் அடுப்பினும் பின்னுந்துன்
னத்தகும் பெற்றியரே. **#862**

இதன் பொருள்:

குறப்பாவை குறப்பாவாய்; தம்பிரான் புலியூர் மறப்பான் அடுப்பது ஓர் தீவினை வந்திடின் தம்பிரானது புலியூரை மறக்கக்கூடுவதொரு தீவினைவிளைவுவருமாயின்; சென்று சென்று பிறப்பான் அடுப்பினும் பல யோனிகளினும் சென்று சென்று பிறக்கக் கூடினும்; பின்னுந் துன்னத்தகும் பெற்றியர் பின்னுஞ்சென்று சேரத் தகுந் தன்மையை யுடையவர் நின் குழல் வேங்கைப் போதொடு கோங்கம் விராய்; நின் குழலின்க ணுண்டாகிய வேங்கைப்பூவொடு கோங்கம் பூவை விரவி நறப் பாடலம் புனைவார் நினைவார்; தேனையுடைய பாதிரிமலரைப் புனைவாராக நினையாநின்றார் எ-று.

புனைவாரென்னு முற்றுச்சொல் செயவெ னெச்சமாகத் திரித்துரைக்கப்பட்டது. புனைவாரா யுடன்போதலை நினையா நின்றா ரென்றுரைப்பினுமமையும். நினைவாரென்னு மெதிர்காலத்து முற்றுச்சொல் நிகழ்காலத்துக்கண் வந்தது. கோங்கம் விராய்ப் பாடலம் புனைவார் நினைவாரென்றதனான், நீரிலாற்றிடை நின்னொடு செல்லலுற்றா ரென்பது கூறினாளாம். புலியூரை யுணர்ந்தார்க்குப் பின்னை மறத்த லரிதென்னுங் கருத்தான், மறப்பானடுப்பதோர் தீவினை வந்திடினென்றாள். புலியூரை யொருகாலுணர்ந்த துணையானே பிறவி கெடுமன்றே; அவ்வாறன்றி யதனைமறந்த வாற்றானே பிறக்கக்கூடினு மென்னுங் கருத்தால், பிறப்பானடுப்பினு மென்றாள். அலர்நாணி உடன் போகாது ஈண் டிற்செறிக்கப்பட்டு அவரை யெதிர்ப்படா திருத்தல் அன்பன்றென் னுங் கருத்தால், பிறப்பானடுப்பினும் பின்னுந் துன்னத்தகும் பெற்றிய ரென்றாள். பெற்றியரென்பதனை வினைக்குறிப்பு முற்றாகவுரைப் பினுமமையும். உன்னத்தகும் பெற்றியரென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு: அது. பயன்: தலைமகன் உடன்போக்கு நேர்ந்தமை யுணர்த்துதல். 205

விளக்கவுரை

16.12 துணிந்தமைகூறல் துணிந்தமை கூறல் என்பது உலகியல் கூறுவாள்போன்று கற்புவழி நிறுத்தி, எம்பெருமான் நின்னை நீரில்லாத வெய்ய சுரத்தே உடன்கொண்டு போவானாக நினையாநின்றான்; இதற்கு நின்கருத் தென்னோவெனத் தோழி தலைமகளுக்குத்

தலைமகனி னைவு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
16.12. பொருளவே லண்ணல் போக்குத் துணிந்தமை
செருவேற் கண்ணிக்குச் சென்று செப்பியது

நிழற்றலை தீநெறி நீரில்லை
கானகம் ஓரிகத்தும்
அழற்றலை வெம்பரற் றென்பரென்
னோதில்லை யம்பலத்தான்
கழற்றலை வைத்துக்கைப் போதுகள்
கூப்பக்கல் லாதவர்போற்
குழற்றலைச் சொல்லிசெல் லக்குறிப்
பாகும்நங் கொற்றவர்க்கே. **#863**

இதன் பொருள்:

நிழல் தலை தீ நெறி நீர் இல்லை நிழலிடந்தீந்த வழி நீருடைத்தன்று; ஓரிகத்தும் கானகம் அழல் தலை வெம்பரற்று என்பர் இருமருங்குமுண்டாகிய ஓரி கூப்பிடுங்காடு அழனுதிபோலு நுதியையுடைய வெய்ய பரலையுடைத்தென்று சொல்லுவர்; தில்லை அம்பலத்தான் கழல் தலை வைத்துக் கைப் போதுகள் கூப்பக் கல்லாதவர் போல் தில்லையம்பலத்தின் கண்ணானது கழல்களைத் தந்தலைமேல்வைத்துக் கையாகிய போதுகளைக் கூப்பப்பயிலாத வரைப்போல இத்தன்மைத்தாகிய நெறிக்கண்; குழல் தலைச்சொல்லி குழலிடத்துச் சொற்போலுஞ் சொல்லையுடையாய்; நம் கொற்ற வர்க்குச் செல்லக் குறிப்பு ஆகும் என்னோ நம் கொற்றவர்க்குச் செல்லக் குறிப்புண்டாகின்ற இஃதென்னோ! எ-று.

நீரில்லை யென்னுஞ் சொற்கள் ஒரு சொன்னீரவாய் நெறியென்னுமெழுவாய்க்குப் பயனிலையாயின. நெறிக்கணீரில்லை யெனவிரிப்பினு மமையும். நிழலிடந் தீயோ டொக்குநெறி; அந்நெறி நீருடைத்தன்று; கானகமெங்கு மோரி கூப்பிடும்; அக்கானகம் அழற்றலை வெம்பரலை யுமுடைத்து என்றுரைப்பினுமமையும். இப்பொருட்குக் கானகமோரிகத்து மென்பதற்கு நெறி நீரில்லை யென்றதற் குரைத்த துரைக்க. மெய்ப்பாடு: அழுகை. பயன்: ஆற்றாமை நீங்குதல். 206

விளக்கவுரை

16.13 துணிவொடு வினாவல் துணிவொடு வினாவல் என்பது தலைமகனினைவு கேட்ட தலைமகள் அவனினைவின்படியே துணிந்து நின்று, இந் நீரில்லாத வெய்யசுரத்தே யிப்பொழுதிவர் நம்மையுடன் கொண்டு போகைக்குக் காரணமென்னோவெனத் தோழியை வினாவா நிற்றல். அதற்குச் செய்யுள்

16.13. சிலம்பன் றுணிவொடு செல்சுரம் நினைந்து
கலம்புனை கொம்பர் கலக்க முற்றது.

காயமும் ஆவியும் நீங்கள்சிற்
றம்பல வன்கயிலைச்
சீயமும் மாவும் வெரீஇவர
லென்பல் செறிதிரைநீர்த்
தேயமும் யாவும் பெறினுங்
கொடார்நமர் இன்னசெப்பில்
தோயமும் நாடுமில் லாச்சுரம்
போக்குத் துணிவித்தவே. **#864**

இதன் பொருள்:

நீங்கள் காயமும் ஆவியும் நீங்கள் உடம்பு முயிரும்போல ஒருவரையொருவரின்றி யமையாத வன்பை யுடையீர்; சிற்றம்பலவன் கயிலைச் சீயமும் மாவும் வெரீஇ வரல் என்பல் இத்தன்மைத்தாகிய நுங்காதலை நினையாது சிற்றம் பலத்தான் கயிலையிற் சீயத்தையும் அல்லாத கொடுவிலங்கையுமஞ்சி யானவனை வரற்பாலையல்லையென்று கூறுவேன்; செறி திரை நீர்த் தேயமும் யாவும் பெறினும் நமர் கொடார் அவ்வாறு வருதலை யொழிந்து வரைவுவேண்டின், நெருங்கிய திரைகளை யுடைய கடலாற்சூழப்பட்ட இந்நிலத்தையும் பொன்முதலாகிய வெல்லா வற்றையும் பெறினும் நமர் நின்னைக்கொடார்கள், அதனால் தோயமும் நாடும் இல்லாச் சுரம் போக்குத் துணிவித்த செப்பில் இன்ன நீரு மக்கள் வாழுமிடமுமில்லாத சுரங்களைப் போதலைத் துணிவித்தன சொல்லுமிடத்து இத்தன்மையனவன்றோ? எ-று.

நீங்கள் காயமு மாவியும் போல வின்றியமையாமையின் அவற்கு வருமேத நினதென்றஞ்சி அவன் வரவு விலக்குவே னென்றாளாக வுரைப்பினுமமையும். துணிவித்ததென்பது பாடமாயின், துணிவித்ததனைச் செப்பினின்னவெனக் கூட்டியுரைக்க. அறிய - இன்ன காரணத் தானென்றறிய. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: உடன்போக்கு மாட்சிமைப் படுத்தல். 207

விளக்கவுரை

16.14 போக்கறிவித்தல் போக்கறிவித்தல் என்பது இப்பொழு தவர் போகைக்குக் காரணமென்னோவென்று கேட்ட தலைமகளுக்கு நீங்கள் உடம்பு முயிரும்போல ஒருவரையொருவரின்றியமையீராயினீர்; இத் தன்மைத்தாகிய நுங்காதலையறிந்து வைத்தும் அவற்குவரு மேதம் நினதென்றஞ்சி யானவனை வரவுவிலக்குவேன்; அவனு மவ்வாறு வருதலையொழிந்து வரைவொடுவரிற் பொன் முதலாகிய

வெல்லாவற்றையு நினக்கு முலைப்பரிசம் பெறினும் நமர் நின்னைக் கொடார்; சொல்லுமிடத்து இதுவன்றோ நீரருஞ்சுரம் போகைக்குக் காரணமென்று தோழி தலைமகனது போக்கறிவியாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.14. பொருசுடர்வேலவன் போக்குத்துணிந்தமை
அரிவைக்கவள் அறியவுரைத்தது.

மற்பாய் விடையோன் மகிழ்புலி
யூரென் னொடும்வளர்ந்த
பொற்பார் திருநாண் பொருப்பர்
விருப்புப் புகுந்துநுந்தக்
கற்பார் கடுங்கால் கலக்கிப்
பறித்தெறி யக்கழிக
இற்பாற் பிறவற்க ஏழையர்
வாழி எழுமையுமே. **#865**

இதன் பொருள்:

மல் பாய் விடையோன் மகிழ் புலியூர் வளத்தையுடைய பாயும் விடையையுடையவன் விரும்பும் புலியூரில்; என்னொடும் வளர்ந்த பொற்பு ஆர் திருநாண் என்னோடுந் தோன்றி என்னோடொக்கவளர்ந்த பொலிவார்ந்த திருவையுடைய நாண்; பொருப்பர் விருப்புப் புகுந்து நுந்த பொருப்பர்மேல் யான் வைத்த விருப்பம் இடையேபுகுந்து தள்ள நின்றநிலை குலைந்து; கற்பு ஆர் கடுங் கால் கலக்கிப் பறித்து எறிய கற்பாகிய நிறைந்த கடிய காற்றலைத்துப் பிடுங்கி என்வயிற் கிடவாமைப் புறத் தெறிய; கழிக என்னைக் கழிவதாக; ஏழையர் எழுமையும் இற்பால் பிறவற்க இனி மகளிர் எழுபிறப்பின் கண்ணுங் குடியிற்பிறவா தொழிக எ-று.

நாண் கழிகவென வியையும். வாழி: அசைநிலை. கற்பாங் கடுங்காலென்பதூஉம் பாடம். முற்சிறந்தமையின் முன்னெண்ணச் சிறந்தமையின். மல்லல் மல்லெனக் கடைக்குறைந்து நின்றது.

மெய்ப்பாடு: அது. பயன்: உடன்போக்கு வலித்தல். 208

விளக்கவுரை

16.15 நாணிழந்துவருந்தல் நாணிழந்து வருந்தல் என்பது உடன்கொண்டு போகைக் குக் காரணங்கேட்ட தலைமகள், ஒருநாளுமென்னை விட்டு நீங்காது என்னுடனே வளர்ந்த பொலிவுடைத்தாகிய நாண் கற்பினெதிர் நிற்கமாட்டாது தன்னைவிட்டு நீங்காத என்னைக் கழிவதாக; மகளிர் எழுபிறப்பின்கண்ணுங் குடியிற் பிறவாதொழி கவெனத் தானதற்குப் பிரிவாற்றாமையான் வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.15. கற்பு நாணினு முற்சிறந் தமையிற்

சேண்நெறி செல்ல வாணுதல் துணிந்தது.

கம்பஞ் சிவந்த சலந்தரன்
ஆகங் கறுத்ததில்லை
நம்பன் சிவநகர் நற்றளிர்
கற்சுர மாகுநம்பா
அம்பஞ்சி ஆவம் புகமிக
நீண்டரி சிந்துகண்ணாள்
செம்பஞ்சி யின்மிதிக் கிற்பதைக்
கும்மலர்ச் சீறடிக்கே. **#866**

இதன் பொருள்:

நம்பா நம்பா; அம்பு அஞ்சி ஆவம்புக மிக நீண்டு அரி சிந்து கண்ணாள் அம்புக ளஞ்சித் தூணியிற்புக் கொளிப்ப மிக நீண்டு செவ்வரி சிதறிய கண்களையுடையாளுடைய; செம்பஞ்சியின் மிதிக்கின் பதைக்கும் மலர்ச் சீறடிக்கு செம்பஞ்சியின் மிதிப்பினு நடுங்கும் மலர்போலுஞ் சிறியவடிக்கு; கல் சுரம் நல் தளிர் ஆகும் நீசெல்லுங் கல்லையுடைய சுரம் நல்லதளிராம்போலும் இவளது துணிவிருந்தவாற்றான் எ-று. கம்பம் சிவந்த சலந்தரன் ஆகம் கறுத்த அச்சத்தால் வரு நடுக்கத்தை வெகுண்ட சலந்தரன தாகத்தை முனிந்த; தில்லை நம்பன் சிவநகர் நல் தளிர் தில்லையினம் பனது சிவநகரின் நற்றளிரெனக் கூட்டுக. சிவநகரென்பது ஒரு திருப்பதி. செம்பஞ்சியின் மிதிக்கிற் பதைக்கும் மலர்ச்சீறடியென்பன ஒருசொன்னீர்மைப்பட்டு நின்றன; இதனை யதிகாரப் புறனடையாற் கொள்க. அரிசிந்து கண்ணாளது என்னுமாறனுருபு தொகச்சொல்லாத விடத்துத் தொக்கு நின்றதெனினு மமையும். அரிசிந்து கண்ணாள் மலர்ச்சீறடியென்று கூட்டுவாரு முளர்.தொல்வரை - பெரியவரை. மெய்ப்பாடு: அது. பயன்: உடன்போக்கு வற்புறுத்தல். 209

விளக்கவுரை

16.16 துணிவெடுத்துரைத்தல் துணிவெடுத்துரைத்தல் என்பது தலைமகளைக் கற்புவழி நிறுத்திச் சென்று, நின்னோடு போதுமிடத்து நீ செல்லுங் கற்சுரம் அவளது சிற்றடிக்கு நற்றளிராம்போலுமெனத் தோழி தலை மகனுக்கு அவடுணிவெடுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.16. செல்வ மாதர் செல்லத் துணிந்தமை
தொல்வரை நாடற்குத் தோழிசொல் லியது.

முன்னோன் மணிகண்ட மொத்தவன்
அம்பலந் தம்முடிதாழ்த்
துன்னா தவர்வினை போற்பரந்
தோங்கும் எனதுயிரே

அன்னாள் அரும்பெற லாவியன்
னாய்அரு ளாசையினாற்
பொன்னார் மணிமகிழ்ப் பூவிழ
யாம்விழை பொங்கிருளே. #867
இதன் பொருள்:
எனது உயிரே அன்னாள் அரும் பெறல் ஆவி அன்னாய் எனதுயிரை யொப்பாளது அரிய பெறுதலையுடைய ஆவியை யொப்பாய்; அருள் ஆசையினால் நினதருண்மேலுள்ள வாசையால்; பொன் ஆர் மணி மகிழ்ப் பூ விழ யாம் விழை பொங்கு இருள் பொன்போலும் நிறைந்த நல்ல மகிழின்பூவிழ அவை விழுகின்ற வோசையை நீ செய்யுங்குறியாக வோர்ந்து யாம் விரும்பும் மிக்கவிருள்; முன்னோன் மணிகண்டம் ஒத்து இக்காலத்துக் கருமையால் எல்லார்க்கு முன்னாயவன தழகிய மிடற்றையொத்து; அவன் அம்பலம் தம்முடி தாழ்த்து உன்னாதவர் வினைபோல் பரந்து ஓங்கும் அவன தம்பலத்தைத் தம்முடிகளைத் தாழ்த்து நினையாத வரது தீவினை போலக் கருமையோடு பரந்து மிகும் எ-று.
ஆவியன்னாய தருளென்றுரைப்பாருமுளர். மணிமகிழ் பூவிழவென்பது பாடமாயிற் பூவிழமென்னுஞ் சொற்கள் ஒருசொன்னீர்மைப்பட்டு மணிமகிழென்னு மெழுவாயை யமைத்தன வாக வுரைக்க. இனித்தாழாதிவ் விருட்காலத்துப் போகவேண்டு மென்றும் இரவுக்குறிக்கண் வரும் அரையிருட்கண் வந்து அக்குறி யிடத்து நில்லென்றுங் கூறினாளாம். துன்னியகுறி - நீ முன்பு வந்தி வளை யெதிர்ப்பட்ட குறியிடம். மெய்ப்பாடு: அது. பயன்: குறியிட முணர்த்துதல். 210

விளக்கவுரை

16.17 குறியிடங் கூறல் குறியிடங் கூறல் என்பது துணிவெடுத்துரைத்த தோழி, தாழாது இவ்விருட்காலத்துக் கொண்டுபோவாயாக; யானவளைக் கொண்டு வாராநின்றேன்; நீ முன்புவந்தெதிர்ப்பட்ட அக்குறியிடத்து வந்து நில்லெனத் தலைமகனுக்குக் குறியிடங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
16.17. மன்னிய இருளில் துன்னிய குறியிற்
கோங்கிவர் கொங்கையை நீங்குகொண் டென்றது.

பனிச்சந் திரனொடு பாய்புனல்
சூடும் பரன்புலியூர்
அனிச்சந் திகழுமஞ் சீறடி
யாவ அழல்பழுத்த
கனிச்செந் திரளன்ன கற்கடம்

போந்து கடக்குமென்றால்
இனிச்சந்த மேகலை யாட்கென்கொ
லாம்புகுந் தெய்துவதே. **#868**
இதன் பொருள்:
பனிச் சந்திரனொடு பாய் புனல் சூடும் குளிர்ச்சியையுடைய மதியோடு பரந்த புனலையுடைய கங்கையைச் சூடும்; பரன் புலியூர் அனிச்சம் திகழும் அம் சீறடி பரனது புலியூரில் அனிச்சப்பூப்போலு மழகிய சிறிய வடிகள்; ஆவ அன்னோ; அழல் பழுத்த கனிச் செந்திரள் அன்ன தீப்பழுத்த பழத்தினது சிவந்த திரள்போலும்; கல் கடம் போந்து கடக்கும் என்றால் கற்றிரளை யுடையகாட்டை இங்குநின்றும் போந்து கடக்குமாயின்; சந்த மேகலையாட்கு இனிப் புகுந்து எய்துவது என்கொல் நிறத்தை யுடைய மேகலையையுடையாட்கு இனி யென் காரணமாக வந்தெய்துந் துன்பம் வேறென்! எ-று.
ஆவ : இரங்கற்குறிப்பு. மெய்ப்பாடு: அழுகை. பயன்: நெஞ்சோடுசாவுதல். 211

விளக்கவுரை

16.18 அடியொடு வழிநினைந் தவனுளம்வாடல் அடியொடு வழிநினைந் தவனுளம்வாடல் என்பது தோழி குறியிடை நிறுத்திப் போகாநிற்ப, தலைமகன் அவ்விடத்தே நின்று, அனிச்சப்பூப் போலும் அழகிய வடிகள் அழற்கடம் போது மென்றால் இதற்கென்ன துன்பம் வந்தெய்துங்கொல்லோ வெனத் தலைமகளடியொடு தான் செல்லாநின்ற வழி நினைந்து, தன்னுள்ளம் வாடாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.18. நெறியுறு குழலியோடு நீங்கத் துணிந்த
உறுசுடர் வேலோ னுள்ளம் வாடியது.

வைவந்த வேலவர் சூழ்வரத்
தேர்வரும் வள்ளலுள்ளந்
தெய்வந் தருமிருள் தூங்கு
முழுதுஞ் செழுமிடற்றின்
மைவந்த கோன்தில்லை வாழ்த்தார்
மனத்தின் வழுத்துநர்போல்
மொய்வந்த வாவி தெளியுந்
துயிலுமிம் மூதெயிலே. **#869**
இதன் பொருள்:
செழு மிடற்றின் மை வந்த கோன்தில்லை வாழ்த்தார் மனத்தின் வளவிய மிடற்றின்கட் கருமை யுண்டாகிய கோனது தில்லையை வாழ்த்தாதாருடைய மனம்போல; முழுதும் இருள் தூங்கும் உலகமுழுதும்

இருள்செறியாநின்றது; வழுத்துநர் போல் அத்தில்லையை வாழ்த்துவாருடைய மனம்போல; மொய் வந்த வாவி தெளியும் பெருமையுண்டாகிய பொய்கைகள் கலக்க மற்றுத் தெளியா நின்றன; இம் மூதெயில் துயிலும் இம்முதியவூர் துயிலாநின்றது, அதனால் வைவந்த வேலவர் சூழ்வரத் தேர்வரும் வள்ளல் கூர்மையுண்டாகிய வேலையுடைய விளையர் சூழத் தேரின் கண் வரும் வள்ளலே; உள்ளம் தெய்வம் தரும் நின துள்ளத்துக் கருதியதனைத் தெய்வம் இப்பொழுதே நினக்குத் தரும்; என்றோழியையுங் கொணர்ந்தேன்; காண்பாயாக எ-று. வள்ளலென்பது ஈண்டு முன்னிலைக்கண் வந்ததெனக் கொண்டு, வள்ளலதுள்ளமென்று விரித்துரைப்பினுமமையும். சூழ்வரத் தேர்வரு மென்று பாடமோதி ஊர்காக்குமிளையர் ஊரைச் சூழ்வரும் வரவுமினி யொழியுமென்றுரைப்பாருமுளர். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைமகளைத் தலைமகனுடன்படுத்தல். 212

விளக்கவுரை

16.19 கொண்டுசென்றுய்த்தல் கொண்டுசென்றுய்த்தல் என்பது தலைமகன் குறியிடை நின்று, அடியொடு வழிநினைந்து, தன்னுள்ளம் வாடாநிற்ப, அந்நிலைமைக்கண், நின்னுள்ளத்துக் கருதியதனை இப்பொழுது நினக்குத் தெய்வந் தாராநின்றது; என்றோழியையுங் கொண்டு வந்தேன்; நீ யிவளைக் கைக்கொள்ளெனத் தோழி தலைமகளைக் கொண்டு சென்று, அவனொடு கூட்டாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.19. வண்டமர் குழலியைக்
கண்டுகொள் கென்றது.

பறந்திருந் தும்பர் பதைப்பப்
படரும் புரங்கரப்பச்
சிறந்தெரி யாடிதென் தில்லையன்
னாள்திறத் துச்சிலம்பா
அறந்திருந் துன்னரு ளும்பிறி
தாயின் அருமறையின்
திறந்திரிந் தார்கலி யும்முற்றும்
வற்றுமிச் சேணிலத்தே. **#870**

இதன் பொருள்:

சிலம்பா சிலம்பா; இருந்து உம்பர் பதைப்பப் பறந்து படரும் புரம் கரப்ப இருந்து உம்பரிடை விடாது நடுங்கப் பறந்து செல்லும் புரங்கள் கெட; சிறந்து எரிஆடி தென் தில்லை அன்னாள் திறத்து பொலிந்து எரியான் விளையாடுமவனது தெற்கின்கணுண்டாகிய தில்லையை யொப்பாளிடத்து; அறம் திருந்து உன் அருளும் பிறிது ஆயின் அறந்

திருந்துதற்குக் காரணமாகிய உனதருளும் வேறுபடுமாயின்; இச்சேண் நிலத்து இவ்வகன்ற நிலத்து; அருமறையின் திறம் திரிந்து ஆர்கலியும் முற்றும் வற்றும் - அரிய மறைகளின் முறைமை பிறழக் கடலு மெஞ்சாது வற்றும் எ-று.

அறந்திரிந்தென்பது பாடமாயின், அறந்திரிந்தரு மறையின்றி றந்திரிந்தென மாற்றியுரைக்க. அறந்திரிந்தாற்போல நின்னருளும் பிறிதாயினென வொருசொல் வருவித்துரைப்பினு மமையும். அருமறையு மென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: ஓம்படுத்தல். 213

விளக்கவுரை

16.20 ஓம்படுத்துரைத்தல் ஓம்படுத்துரைத்தல் என்பது கொண்டுசென்றுய்த்து இரு வரையும் வலஞ்செய்து நின்று, மறை நிலைதிரியினும் கடன் முழுதும் வற்றினும், இவளிடத்து நின்னரு டிரியாமற் பாதுகாப்பா யெனத் தோழி தலைமகளைத் தலைமகனுக் கோம்படுத் துரையா நிற்றல். அதற்குச் செய்யுள்

16.20. தேம்படு கோதையை
யோம்ப டுத்தது.

ஈண்டொல்லை ஆயமும் ஔவையும்
நீங்கஇவ் வூர்க்கவ்வைதீர்த்
தாண்டொல்லை கண்டிடக் கூடுக
நும்மைஎம் மைப்பிடித்தின்
றாண்டெல்லை தீர்இன்பந் தந்தவன்
சிற்றம் பலம்நிலவு
சேண்டில்லை மாநகர் வாய்ச்சென்று
சேர்க திருத்தகவே. **#871**

இதன் பொருள்:

எம்மைப் பிடித்து ஆண்டு எம்மை வலிந்து பிடித்தாண்டு; இன்று எல்லை தீர் இன்பம் தந்தவன் சிற்றம்பலம் நிலவு இன்று எல்லையைநீங்கிய வின்பத்தைத் தந்தவனது சிற்றம்பலம் நிலைபெற்ற; சேண்தில்லை மா நகர்வாய் சேய்த்தாகிய தில்லை யாகிய பெரிய நகரிடத்து; திருத்தகச்சென்று சேர்க நீர் பொலிவு தகச்சென்று சேர்வீராமின்; ஆயமும் ஔவையும் ஈண்டு நீங்க ஆயமுமன்னையும் பின்வாராது இவ்விடத்தே நீங்க; இவ்வூர்க் கௌவை ஒல்லை தீர்த்து இவ்வூரின்க ணுண்டாகிய அலரை யொருவாற்றான் விரையநீக்கி; ஆண்டு நும்மை ஒல்லை கண்டிடக் கூடுக யானாண்டுவந்து நும்மை விரையக் காணக் கூடுவதாக எ-று.

சேண்டில்லை யென்பதற்கு மதின்முதலாயின வற்றான் னுயர்ந்த தில்லையெனினுமமையும். ஒல்லைக் கண்டிடவென விகார வகையான்

வல்லெழுத்துப் பெறாது நின்றது. மெய்ப்பாடு: அழுகை. பயன்: அச்சந் தவிர்த்தல். 214

விளக்கவுரை

16.21 வழிப்படுத்துரைத்தல் வழிப்படுத்துரைத்தல் என்பது ஓம்படுத்துரைத்த தோழி, ஆயமுமன்னையும் பின்வாராமல் இவ்விடத்தே நிறுத்தி இவ்வூரிடத்தி லுள்ள அலரையு மொருவாற்றானீக்கி யானும்வந்து நுங்களைக் காண்பேனாக; நீயிருந் திருவொடுசென்று நும்பதியிடைச் சேர்வீராமி னெனை இருவரையும் வழிப்படுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.21. மதிநுதலியை வழிப்படுத்துப்
பதிவயிற்பெயரும் பாங்கிபகர்ந்தது.

பேணத் திருத்திய சீறடி
மெல்லச்செல் பேரரவம்
பூணத் திருத்திய பொங்கொளி
யோன்புலி யூர்புரையும்
மாணத் திருத்திய வான்பதி
சேரும் இருமருங்குங்
காணத் திருத்திய போலும்முன்
னாமன்னு கானங்களே. **#872**

இதன் பொருள்:

பேரரவம் பூண பெரிய வரவங்களைப் பூணும்வண்ணம்; திருத்திய பொங்கு ஒளியோன் புலியூர் புரையும் அவற்றின் றீத்தொழிலை நீக்கிய பெருகுமொளியையுடையவனது புலியூரையொக்கும்; மாணத் திருத்திய வான்பதி இருமருங்கும் சேரும்மாட்சிமைப்படக் குற்றங்கடிந்து செய்யப்பட்ட பெரியவூர்கள் நாஞ்செல்லு நெறியி னிருபக்கமு மொன்றோடொன்று சேர்ந் திருக்கும்; முன்னா மன்னு கானங்கள் காணத்திருத்திய போலும்- முன்னுளவாகிய காடுகள் நாஞ்சென்று காணும்வண்ணந் திருந்தச் செய்யப்பட்டனபோலும், அதனால், பேணத் திருத்திய சீறடி- யான் விரும்பும் வண்ணங் கைபுனையப் பட்ட சிறிய வடியை யுடையாய்; மெல்லச் செல் பையச்செல்வாயாக எ-று. பேணத்திருத்திய சீறடி யென்பது சினையாகிய தன்பொருட் கேற்ற வடையடுத்து நின்றது. அரவந் திருத்தியவெனை வியையும். வான்பதி சேருமென்பதற்குப் பதி நெறியைச் சேர்ந்திருக்கு மென்றுரைப்பினு மமையும். மெய்ப்பாடு: உவகை. பயன்: தலைமகளை அயர்வகற்றுதல். 215

விளக்கவுரை

16.22 மெல்லக்கொண்டேகல் மெல்லக்கொண்டேகல் என்பது தோழியை விட்டு உடன்கொண்டு போகாநின்ற தலைமகன் நின்னொடு சேறலான் இன்று இக்காடு திருந்தச் செய்யப்பட்டாற்போலக் குளிர்ச்சியை யுடைத்தா யிருந்தது; இனி நின் சீறடி வருந்தாமற் பையச் செல்வாயாக வெனத் தன்னாய வெள்ளத்தோடும் விளையாடு மாறு போலத் தலைமகளை மெல்லக்கொண்டு செல்லாநிற்றல். அதற்குச் செய்யுள்
*16.22.*பஞ்சிமெல்லடிப் பணைத்தோளியை
வெஞ்சுரத்திடை மெலிவகற்றியது.

கொடித்தேர் மறவர் குழாம்வெங்
கரிநிரை கூடினென்கை
வடித்தே ரிலங்கெஃகின் வாய்க்குத
வாமன்னு மம்பலத்தோன்
அடித்தே ரலரென்ன அஞ்சுவன்
நின்ஐய ரென்னின்மன்னுங்
கடித்தேர் குழன்மங்கை கண்டிடிவ்
விண்தோய் கனவரையே. **#873**

இதன் பொருள்: நின் ஐயர் என்னின் நின்னையன்மாராயின்; மன்னும் அம்பலத்தோன் அடித்தேரலர் என்ன அஞ்சுவன் நிலை பெறு மம்பலத்தின் கண்ணானுடைய அடிகளை யாராய்ந் துணரா தாரைப்போல அஞ்சுவேன், அல்லது, கொடித் தேர் கொடியை யுடைய தேரும்; மறவர் குழாம் வீரரது திரளும்; வெம் கரி நிரை வெய்யகரிநிரையும்; கூடின் அனைத்துந் திரண்டுவரினும்; என்கைவடித்து ஏர் இலங்கு எஃகின் வாய்க்கு உதவா என்கையில் வடிக்கப்பட் டழகுவிளங்காநின்ற எஃகினது வாய்க்கு இரையுதவ மாட்டா; மன்னும் கடித்தேர் குழல் மங்கை நிலைபெற்ற நறுநாற்றத் தை வண்டுகளாராய்ந்துவருங் குழலையுடைய மங்காய்; விண்தோய் இக் கனவரைக் கண்டிடு விண்ணினைத் தோயாநின்ற இப்பெரிய வரையிடத் தியான்செய்வதனைக் காண்பாயாக எ-று.
கூடினென்பதற்கு என்னைக் கிட்டினென்றுரைப்பினுமமையும். அடித்தேர்பவரென்பது பாடமாயின், என்ன வென்பதனை உவமவுரு பாக்காது இவரை யடித் தேர்பவரென்று பிறர் கருத வென்றுரைக்க. கண்டிடிரென்பதூஉம் பாடம். மன்னுங்கடி யென்பதற்கு வண்டென வொருசொல் வருவித்துரைக்க. வரிசிலையவர் வருகுவரென - வரிசிலையவர் வாராநின்றார் இவர் யாவரென. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தன்வலியுணர்த்தி யாற்றுவித்தல். இடைச்சுரத்து அவடமரெதிர்படை தொடர்ந்து நிற்ப வழிவருவார் விலக்கி வரைவித்துக்கொடுப்ப. என்னை

'இடைச்சுர மருங்கி னவடம ரெய்திக்
கடைக்கொண்டு பெயர்தலிற் கலங்கஞ ரெய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை யுளப்பட
வப்பாற்பட்ட வொருதிறத் தானும்
(தொல். அகத்திணையியல் -41)
என்றார் தொல்காப்பியனார். 216

விளக்கவுரை

16.23 அடலெடுத்துரைத்தல் அடலெடுத்துரைத்தல் என்பது மெல்லக்கொண்டு செல்லா நின்றவன், சேய்த்தாகச் சிலரை வரக்கண்டு தலைமகளஞ்சாநிற்ப, நின்னையன்மாராயின் அஞ்சுவேன்; அல்லது நால்வகைத்தானை யுந் திரண்டுவரினும் என்கையில் வடித்திலங்காநின்ற எஃகின் வாய்க் கிரை போதாது; இதனை யிவ்விடத்தே காண்பாயாக வென்று, அவள தச்சந் தீரத் தன் னடலெடுத் துரையாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.23. வரிசிலையவர் வருகுவரெனப்
புரிதருகுழலிக் கருளவனுரைத்தது.

முன்னோ னருள்முன்னும் உன்னா
வினையின் முனகர் துன்னும்
இன்னாக் கடறிதிப் போழ்தே
கடந்தின்று காண்டுஞ்சென்று
பொன்னா ரணிமணி மாளிகைத்
தென்புலி யூர்ப்புகழ்வார்
தென்னா வெனஉடை யான்நட
மாடுசிற் றம்பலமே. **#874**

இதன் பொருள்:

முன்னோன் அருள் முன்னும் முன்னா எல்லார்க்கும் முன்னாயவனதருளை முற்பிறப்பின்கண்ணு நினையாத; வினையின் முனகர் துன்னும் இன்னாக் கடறு இது இப் போழ்தே கடந்து தீவினையையுடைய நீசர் சேருந் துன்பத்தைச் செய்யும் பாலைநில மிதனை யிப்பொழுதே கடந்து; பொன் ஆர் அணி மணி மாளிகைத் தென் புலியூர் பொன்னிறைந்த வழகையுடைய மணியால் விளங்கும் மாளிகையையுடைய தென்புலியூர்க்கண்; புகழ்வார் தென்னா என உடையான் நடம் ஆடு சிற்றம்பலம் புகழ்ந் துரைப்பார் தென்னனே யென்று புகழ என்னையுடையான் நின்று கூத்தாடுஞ் சிற்றம்பலத்தை; இன்று சென்று காண்டும் இன்று சென்று காண்பேம்; இதுவன்றோ நமக்கு வருகின்ற வின்பம்! எ-று.

தென்புலியூர்ச் சிற்றம்பலமெனவியையும். உடையா ரென்பது

பாடமாயின், தென்னனேயென்று புகழவொரு சிறப்புடை யாரென்றுரைப்பினுமமையும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைமகளையயர்வகற்றுதல். அலங்காரம்: கூற்றிடத்திரு பொருட் கண் வந்த வுயர்ச்சி வேற்றுமை. 217

விளக்கவுரை

16.24 அயர்வகற்றல் அயர்வகற்றல் என்பது அடலெடுத்துரைத்து அச்சந் தீர்த்துக்கொண்டு போகாநின்றவன், இத்துன்பக்கடறு கடந்து சென்று இப்பொழுதே நாமின்பப்பதி காணப் புகாநின்றேம்; இனி நமக்கொரு குறைவில்லை யெனத் தலைமகளது வழிவருத்தந் தீரக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.24. இன்னல்வெங்கடத் தெறிவேலவன்
அன்னமன்னவள் அயர்வகற்றியது.

விடலையுற் றாரில்லை வெம்முனை
வேடர் தமியைமென்பூ
மடலையுற் றார்குழல் வாடினள்
மன்னுசிற் றம்பலவர்க்
கடலையுற் றாரின் எறிப்பொழிந்
தாங்கருக் கன்சுருக்கிக்
கடலையுற் றான்கடப் பாரில்லை
இன்றிக் கடுஞ்சுரமே. **#875**

இதன் பொருள்:

விடலை விடலாய்; உற்றார் இல்லை இனிச் செல்லு நெறிக்கண் நன்மக்களில்லை; வெம்முனை வேடர் உள்ளார் வெய்ய முனையிடத்து வேடரே; தமியை நீ தனியை; மென் பூ மடலை உற்று ஆர் குழல் வாடினள் மெல்லிய பூவினிதழைப் பொருந்தி நிறைந்த குழலையுடையாள் வழிவந்த வருத்தத்தால் வாடினாள்; மன்னு சிற்றம்பலவர்க்கு அடலை உற்றாரின் நிலைபெற்ற சிற்றம்பலத்தையுடையவர்க் காட்படுந்தன்மையைப் பொருந்தினவர்க ளல்லாரைப்போல; எறிப்பு ஒழிந்து ஆங்கு அருக்கன் சுருக்கிக் கடலை உற்றான் விளக்கமொழிந்து அவ்விடத்து அருக்கன்றன் கதிர்களைச் சுருக்கிக் கடலைச் சென்றுற்றான்; இக் கடுஞ்சுரம் இன்று கடப்பார் இல்லை இக்கடிய சுரத்தை யிப்பொழுது கடப்பாருமில்லை; அதனாலீண்டுத் தங்குவாயாக எ-று.

வேடரொடு சாராத நன்மக்கள் இவர்க்கணியராதலின், அவரை உற்றா ரென்றார். வேடரி லுற்றாரில்லையென்று நன்றி செய்யாரென்பது பயப்பவுரைப்பினு மமையும். மடலென்றது தாழம்பூ மடலையென்பாருமுளர். சிற்றம்பலவர்க்கென்னு நான்கனுருபு

பகைப்பொருட்கண் வந்தது. அருக்கன் பெருக்கி யென்றும் பெருகி யென்றும் பாடமாயின், கெடுதலை மங்கலமரபிற் கூறிற்றென்க. 218

விளக்கவுரை

16.25 நெறிவிலக்கிக்கூறல் நெறிவிலக்கிக் கூறல் என்பது அயர்வகற்றிக்கொண்டு செல்லாநின்ற தலைமகனை, இனிச்செல்லு நெறிக்கண் நன்மக்க ளில்லை; நீ தனியை; இவள் வாடினாள்; பொழுதுஞ் சென்றது; ஈண்டுத்தங்கிப் போவாயாகவென, அவ்விடத்துள்ளோர் வழிவிலக்கிக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.25. சுரத்திடைக் கண்டவர் சுடர்க்குழை மாதொடு சரத்தணி வில்லோய் தங்கு கென்றது.

அன்பணைத் தஞ்சொல்லி பின்செல்லும்
ஆடவன் நீடவன்றன்
பின்பணைத் தோளி வருமிப்
பெருஞ்சுரஞ் செல்வதன்று
பொன்பணைத் தன்ன இறையுறை
தில்லைப் பொலிமலர்மேல்
நன்பணைத் தண்ணற வுண்அளி
போன்றொளிர் நாடகமே. **#876**

இதன் பொருள்:

அன்பு அணைத்து அம் சொல்லி பின் செல்லும் ஆடவன் சிறுபுறமும் அசைநடையுங்காண்டற்கு அன்பானணைத்து அழகிய சொல்லையுடையாளது பின்னே ஆடவனொருகாற் செல்லாநின்றான்; அவன்றன்பின் பணைத்தோளி நீடுவரும் முன்செல்லநாணிப் புறக்கொடையும் வலிச்செலவுங் காண அவனது பின்னே வேய்போலுந் தோள்களையுடையாள் நெடும் பொழுது செல்லாநின்றாள்; இப்பெருஞ் சுரம் செல்வது அன்று இருந்த வாற்றான் இவரதுசெயல் இப்பெரிய சுரத்தைச் செல்கை யன்று; பொன்பணைத்தன்ன இறை உறைதில்லை பொன்னொரு வடிவு கொண்டு பெருத்தாற்போலு மிறை யுறைகின்ற தில்லை வரப்பின்; நண்பணைப் பொலி மலர்மேல் தண் நறவு உண் அளி போன்று நல்லபணையிற் பொலிந்த மலரிடத்துக் குளிர்ந்த நறவை யுண்ட வண்டுகளையொத்து; ஒளிர் நாடகம் இன்பக்களியான் மயங்கி விளங்குவதொரு நாடகம் எ-று.

பெருஞ்சுரஞ் செல்வதன்றென்பதற்குப் பெருஞ்சுரந் தொலை வதன்றெனினுமமையும். பொன்பணைத்தாற்போலுமிறை யென்பாரு முளர். கண்டார்க்கின்பஞ் செய்தலின், நாடக மென்றார். இவையிரண் டற்கும் மெய்ப்பாடு: அழுகை. பயன்: நெறிவிலக்குதல். 219

விளக்கவுரை

16.26 கண்டவர் மகிழ்தல் கண்டவர் மகிழ்தல் என்பது நெறிவிலக்குற்று வழிவருத்தந் தீர்ந்து ஒருவரையொருவர் காணலுற்று இன்புற்றுச் செல்லாநின்ற இருவரையுங்கண்டு, இவர்கள் செயலிருந்தவாற்றான் இப்பெருஞ் சுரஞ் செல்வதன்றுபோலும்; அதுகிடக்க இதுதானின் புறவுடைத்தாகிய தோர் நாடகச் சுவையுடைத்தா யிருந்ததென எதிர்வருவார் இன்புற்று மகிழ்ந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
16.26. மண்டழற் கடத்துக்
கண்டவ ருரைத்தது.

கண்கடம் மாற்பயன் கொண்டனங்
கண்டினிக் காரிகைநின்
பண்கட மென்மொழி ஆரப்
பருக வருகஇன்னே
விண்கட நாயகன் தில்லையின்
மெல்லியல் பங்கனெங்கோன்
தண்கடம் பைத்தடம் போற்கடுங்
கானகந் தண்ணெனவே. **#877**

இதன் பொருள்:

கண்டு நெறிசெல் வருத்தத்தி னெகிழ்ந்த மேனியை யாகிய நின்னைக்கண்டு; கண்கள் தம்மால் பயன் கொண்டனம் கண்களாற் கொள்ளும் பயன் கொண்டனம்; காரிகை காரிகை நீர்மையாய்; இனி நின் பண் கட மென்மொழி ஆரப் பருக இன்னே வருக இனிச் சிறிதிருந்து நினது பண்ணினது முறைமையை யுடைய மெல்லிய மொழியைச் செவிநிறையப் பருகுவான் இவ் விடத்து வருவாயாக; விண்கள் தம் நாயகன் விண்ணுலகங்க டம்முடைய தலைவன்; தில்லையில் மெல்லியல் பங்கன் தில்லைக்கணுளனாகிய மெல்லியல் கூற்றையுடையான்; எம் கோன் எம்முடைய விறைவன்; தண் கடம்பைத் தடம்போல் கடுங்கானகம் தண்ணென அவனது குளிர்ந்த கடம்பையிற் பொய்கைபோலக் கடியகானகங் குளிருமளவும் எ-று.

தண்ணென வின்னே வருகவென வியையும். கடம்பை யென்பது ஒரு திருப்பதி. கடம்பைத் தடம்போற் கடுங் கானகங் குளிரும் வண்ணம் நின்மொழியைப் பருகவென்று கூட்டினுமமையும். மெய்ப்பாடு: உவகை. பயன்: மகிழ்தல். 220

விளக்கவுரை

16.27 வழிவிளையாடல் வழிவிளையாடல் என்பது கண்டவர் மகிழக் கொண்டு செல்லாநின்றவன், நெறிசெல்வருத்தத்தி னெகிழ்ந்த மேனியை

யுடைய நின்னைக் கண்டு கண்கடம்மாற் கொள்ளும் பயன் கொண்டனம்; இனிச் சிறிதிருந்து இக்கடுங்கானகந் தண்ணெனு மளவுஞ் செவி நிறைய நின்மொழி பருக வருவாயாகவெனத் தலைமகளுடன் விளையாடாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.27. வன்றழற் கடத்து வடிவே லண்ணல்
மின்றங் கிடையொடு விளையா டியது.

மின்றங் கிடையொடு நீவியன்
தில்லைச்சிற் றம்பலவர்
குன்றங் கடந்துசென் றால்நின்று
தோன்றுங் குரூஉக்கமலந்
துன்றங் கிடங்குந் துறைதுறை
வள்ளைவெள் ளைநகையார்
சென்றங் கடைதட மும்புடை
சூழ்தரு சேண்நகரே. **#878**

இதன் பொருள்:

மின் தங்கு இடையொடு மின்போலு மிடையையுடையாளோடு; நீ வியன் தில்லைச் சிற்றம்பலவர் குன்றம் கடந்து சென்றால் நீயகன்ற தில்லையிற் சிற்றம்பலத்தையுடையவரது குன்றத்தைக்கடந்து அப்பாற் சிறிதுநெறியைச் சென்றால்; குரூஉக்கமலம் துன்று அம் கிடங்கும் நிறத்தையுடைய தாமரைப் பூ நெருங்கிய அழகிய கிடங்கும்; வள்ளை வெள்ளை நகையார் துறைதுறை சென்று அங்கு அடைதடமும் வள்ளைப் பாடலைப் பாடும் வெள்ளை முறுவலையுடைய மகளிர் துறைதொறுந் துறை தொறுந் சென்று அவ்விடத்துச்சேரும் பொய்கைகளும்; புடைசூழ்தரு சேண்நகர் பக்கத்துச்சூழ்ந்த அத்தில்லை யாகிய வுயர்ந்தநகர்; நின்று தோன்றும் இடையறாது தோன்றும்; அத்துணையுங் கடிது செல்வாயாக எ-று.

குழலியொடு கண்டவர் குழலியொடு தலைமகனைக் கண்டவர்.

மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: இடமணித்தென்றல். 221

விளக்கவுரை

16.28 நகரணிமை கூறல் நகரணிமை கூறல் என்பது இருவருந் தம்மு ளின்புற்றுச் செல்லாநின்றமை கண்டு, இனிச் சிறிது நெறிசென்று அக்குன்றத் தைக் கடந்தால் நும்பதியாகிய நகர் விளங்கித் தோன்றாநிற்கும்; அத்துணையுங்கடிது செல்வீராமினென எதிர்வருவார் அவர் நகரணிமை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.28. வண்டமர் குழலியொடு
கண்டவ ருரைத்தது.

மின்போல் கொடிநெடு வானக்

கடலுள் திரைவிரிப்பப்
பொன்போல் புரிசை வடவரை
காட்டப் பொலிபுலியூர்
மன்போற் பிறையணி மாளிகை
சூலத்த வாய்மடவாய்
நின்போல் நடையன்னந் துன்னிமுன்
தோன்றுநன் னீணகரே. **#879**

இதன் பொருள்:

நின்போல் நடை அன்னம் துன்னி நின்னடை போலு நடையையுடைய அன்னங்கடுன்னி; மன்போல்பிறை அணி மாளிகை சூலத்தவாய் மன்னனைப் போலப் பிறையையணிந்த மாளிகைகள் அவனைப்போலச் சூலத்தவுமாய்; முன் தோன்று நல் நீள் நகர் முன்றோன்றுகின்ற நல்ல பெரிய நகர்; மடவாய் மடவாய்; மின் போல் கொடி நெடு வானக் கடலுள் திரை விரிப்ப - ஒளியானும் நுடக்கத்தானும் மின்னையொக்குங் கொடிகள் பெரியவானமாகிய கடலுட் டிரையைப் பரப்ப; பொன் புரிசை வடவரை காட்டப் பொலி புலியூர் பொன்னானியன்ற புரிசை மேருவைக் காட்டப் பொலியும் புலியூர் காண்; தொழுவாயாக எ-று. போலென்பது அசைநிலை. நிறத்தாற் பொன்போலும் புரிசை யென்பாருமுளர். சூலத்தவாயென்னுஞ் சினைவினையெச்சம் முன்றோன்றுமென்னும் முதல்வினையோடு முடிந்தது. துன்னியென இடத்து நிகழ்பொருளின் வினை இடத்தின்மேலேறி நின்றது. 222

விளக்கவுரை

16.29 நகர்காட்டல் நகர்காட்டல் என்பது நகரணிமை கூறக்கேட்டு இன்புறக் கொண்டு செல்லாநின்ற தலைமகன், அன்னந்துன்னிப் பிறையணிந்து சூலத்தையுடைத்தாகிய மாளிகைமேற் கொடி நுடங்க மதில்தோன்றா நின்ற அப்பெரிய நகர்காண் நம்முடைய நகராவதெனத் தலைமகளுக்குத் தன்னுடைய நகர் காட்டாநிற்றல். அதற்குச் செய்யுள்
16.29. கொடுங்கடங் கடந்த குழைமுக மாதர்க்குத்
தடங்கி டங்குசூழ் தன்னகர் காட்டியது.

செய்குன் றுவைஇவை சீர்மலர்
வாவி விசும்பியங்கி
நைகின்ற திங்களெய்ப் பாறும்
பொழிலவை ஞாங்கரெங்கும்
பொய்குன்ற வேதிய ரோதிடம்
உந்திடம் இந்திடமும்
எய்குன்ற வார்சிலை யம்பல
வற்கிடம் ஏந்திழையே. **#880**

இதன் பொருள்:
உவை செய் குன்று உவை செய்குன்றுகள்; இவை சீர் மலர் வாவி இவை நல்லமலரையுடைய வாவிகள்; அவை விசும்பு இயங்கி நைகின்ற திங்கள் எய்ப்பு ஆறும் பொழில் அவை விசும்பின்கணியங்குதலான் வருந்துந் திங்கள் அயர் வுயிர்க்கும் பொழில்கள்; உந்திடம் ஞாங்கர் எங்கும் பொய்குன்ற வேதியர் ஓதிடம் உவ்விடம் மிசையெங்கு முலகத்திற் பொய் முதலாகிய குற்றங்கெட மறையவர் மறைசொல்லுமிடம்; ஏந்திழை ஏந்திழாய்; இந்திடமும் எய் குன்ற வார் சிலை அம்பலவற்கு இடம் இவ்விடமும் எய்தற்குக் கருவியாகிய குன்றமாகிய நீண்டவில்லை யுடைய அம்பலவற் கிருப்பிடம்; இத்தன்மைத்திவ்வூர் எ-று.

இவையென்பது தன் முன்னுள்ளவற்றை. உவை யென்பது முன்னின்றவற்றிற் சிறிது சேயவற்றை. அவையென்பது அவற்றினுஞ் சேயவற்றை. முன் சொல்லப்பட்டவையே யன்றி இதனையுங் கூறுகின்றேனென்பது கருத்தாகலின், இந்திடமுமென்னுமும்மை இறந்தது தழீஇயவெச்ச வும்மை. உந்திடம் இந்திடமெனச் சுட்டீறு திரிந்து நின்றன. பண்ணிவர் மொழி பண்போலுமொழி. இவை யிரண்டற்கும் மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: இடங் காட்டுதல். 223

விளக்கவுரை

16.30 பதிபரிசுரைத்தல் பதிபரிசுரைத்தல் என்பது நகர் காட்டிக்கொண்டு சென்று அந்நகரிடைப்புக்கு அவ்விடத்துள்ள குன்றுகள், வாவிகள், பொழில்கள், மாளிகைகள், தெய்வப்பதி இவையெல்லாந் தனித்தனி காட்டி, இதுகாண் நம்பதியாவதெனத் தலைமகளுக்குத் தலைமகன் பதிபரிசு காட்டாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.30. கண்ணிவர் வளநகர் கண்டுசென் றடைந்து
பண்ணிவர் மொழிக்குப் பதிபரி சுரைத்தது.

மயிலெனப் பேர்ந்திள வல்லியி
னொல்கிமென் மான்விழித்துக்
குயிலெனப் பேசுமெங் குட்டன்எங்
குற்றதென் னெஞ்சகத்தே
பயிலெனப் பேர்ந்தறி யாதவன்
தில்லைப்பல் பூங்குழலாய்
அயிலெனப் பேருங்கண் ணாயென்
கொலாமின் றயர்கின்றதே. **#881**

இதன் பொருள்:
மயில் எனப் பேர்ந்து மயில்போலப் புடை பெயர்ந்து; இள வல்லியின் ஒல்கி இளைய கொடிபோல நுடங்கி; மெல் மான் விழித்து மெல்லிய

மான்போல விழித்து; குயில் எனப் பேசும் எம் குட்டன் எங்குற்றது குயில்போலச் சொல்லும் எமது பிள்ளை யாண்டையது; என் நெஞ்சகத்தே பயில் என என் னெஞ்சின் கண்ணே தனக்குப் பயிற்சியென்று பலர் சொல்லும் வண்ணம்; பேர்ந்து அறியாதவன் தில்லைப் பல்பூங்குழலாய் என் னெஞ்சினின்று நீங்கியறியாதவனது தில்லையிற் பலவாகிய பூக்களையுடைய குழலையுடையாய்; அயில் எனப்பேரும் கண்ணாய் வேல் போலப் பிறழுங் கண்ணையுடையாய்; இன்று அயர்கின்றது என்கொலாம் நீ யின்று வருந்துகின்றதென்னோ? எ-று.

எங்குற்றதென்பது ஒருசொல். என்னெஞ்சகத்தே பயிலெனப் பேர்ந்தறியாதவனென் பதற்கு என்னெஞ்சின்கண்ணே நீ பயில வேண்டுமென்றொரு கால் யான் கூறப் பின்னீங்கியறியாதவனென் றுரைப்பினுமமையும். கண்ணிக்கென்பது பாடமாயின், அவள் காரணமாகப் போலும் இவள் வருந்துகின்றதென்று உய்த்துணர்ந்து அவட்கு நீ வருந்துகின்ற தென்னென வினாவிற்றாக வுரைக்க. மெய்ப்பாடு: மருட்கை. பயன்: தலைமகட்குற்றுதுணர்தல். 224

விளக்கவுரை

16.31 செவிலிதேடல் செவிலிதேடல் என்பது இருவரையும் வழிப்படுத்தி வந்து பிரிவாற்றாதுகவலாநின்ற தோழியை, எம்பிள்ளை எங்குற்றது? நீ கவலாநின்றாய்; இதற்குக்காரண மென்னோ வென்று வினாவிச் செவிலி தலைமகளைத் தேடாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.31. கவலை யுற்ற காதற் றோழியைச்
செவிலி யுற்றுத் தெரிந்து வினாயது.

ஆளரிக் கும்மரி தாய்த்தில்லை
யாவருக் கும்மெளிதாந்
தாளர்இக் குன்றில்தன் பாவைக்கு
மேவித் தழல்திகழ்வேற்
கோளரிக் குந்நிக ரன்னா
ரொருவர் குரூஉமலர்த்தார்
வாளரிக் கண்ணிகொண் டாள்வண்ட
லாயத்தெம் வாணுதலே. **#882**

இதன் பொருள்:

ஆள் அரிக்கும் அரிதாய் ஆட்செய்தல் அரிக்கு மரிதாய்; தில்லை யாவர்க்கும் எளிதாம் தாளர் இக்குன்றில் அவ்வாட் செய்தல் தில்லைக்க ணெல்லார்க்கு மெளிதாந் தாளை யுடையவரது இம்மலையிடத்து; தழல் திகழ் வேல் கோள் அரிக்கு தழல் விளங்கும் வேலையுடைய கோள்வல்ல அரிமாவிற்கு; நிகர் அன்னார் ஒருவர் குரூஉ மலர்த் தார் மறுதலை

போல்வாரொருவரது நிறத்தையுடைய மலரானியன்றதாரை; வாள் அரிக் கண்ணி எம் வாள் நுதல் வாள் போலுஞ் செவ்வரி பரந்த கண்ணையுடையளாகிய எம்முடைய வாணுதல்; வண்டல் ஆயத்துத் தன்பாவைக்கு மேவிக் கொண்டாள் வண்டலைச் செய்யு மாயத்தின் கண்ணே தன்பாவைக்கென்று அமர்ந்துகொண்டாள்; இத்துணையு மறிவேன் எ-று.

ஆளரி ஒருகால் நரசிங்கமாகிய மாலெனினுமமையும். கோளரிக்கு நிகரன்னாரென்பதற்குக் கோளரிக்கொப்பாகிய அத்தன்மையரெனினுமமையும். இக்குன்றின்கண் வண்டலாயத்து மேவிக் கொண்டாளெனவியையும். தாளரிக்குன்றினென்றதனான், இது தெய்வந்தரவந்ததென்றும், பாவைக்கென்றதனான் அறியாப் பருவமென்றும், கோளரிக்கு நிகரன்னாரென்றதனான் இவட்குத் தக்காரென்றும், மேவியென்றதனாற் பயிர்ப்பு நீங்கிற்றென்றும், தாரென்றதனான் மெய்யுற்றதனோடொக்கு மென்றுங் கூறினாளாம். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: உடன்போக்குணர்த்துதல்.225

விளக்கவுரை

16.32 அறத்தொடுநிற்றல் அறத்தொடு நிற்றல் என்பது தேடாநின்ற செவிலிக்கு, நீ போய் விளையாடச்சொல்ல யாங்கள் போய்த் தெய்வக் குன்றிடத்தே யெல்லாருமொருங்கு விளையாடாநின்றேமாக, அவ்விடத்தொரு பெரியோன் வழியே தார்சூடிப்போயினான்; அதனைக்கண்டு நின் மகள் இத்தாரையென்பாவைக்குத் தாரு மென்றாள்; அவனும் வேண்டியது மறாது கொடுப்பானாதலிற் பிறிதொன்று சிந்தியாது கொடுத்து நீங்கினான்; அன்றறியாப் பருவத்து நிகழ்ந்ததனை 'உற்றார்க் குரியர் பொற்றொடி மகளிர்- கொண்டார்க் குரியர் கொடுத்தார்' என்பதனையின் றுட்கொண் டாள் போலும்; யானித்துணையு மறிவேனென்று உடன்போக்குத் தோன்றக் கூறி, தோழி அறத்தொடு நில்லாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.32. சுடர்க்குழைப் பாங்கி படைத்துமொழி கிளவியிற் சிறப்புடைச் செவிலிக் கறத்தொடு நின்றது.

வடுத்தான் வகிர்மலர் கண்ணிக்குத்
தக்கின்று தக்கன்முத்தீக்
கெடுத்தான் கெடலில்தொல் லோன்தில்லைப்
பன்மலர் கேழ்கிளர
மடுத்தான் குடைந்தன் றழுங்க
அழுங்கித் தழீஇமகிழ்வுற்
றெடுத்தாற் கினியன வேயினி
யாவன எம்மனைக்கே. **#883**

இதன் பொருள்: வடுத்தான் வகிர் மலர் கண்ணிக்குத் தக்கின்று அறமேயாயினும் வடுத்தான் வகிரப்பட்டாற்போலும் மலர்ந்த கண்ணையுடையாட்கு இம்முதுக்குறைவு தகாது; ஆயினும், எம் அனைக்கு இனி ஆவன எம்மனைக்கு இனி நம்மாற் செய்யத் தகுவன; எடுத்தாற்கு இனியனவே எடுத்தாற்கினியனவே; வேறில்லை எ-று. தக்கன் முத்தீக் கெடுத்தான் தக்கனது முத்தீயைக் கெடுத்தவன்; கெடல் இல் தொல்லோன் ஒருஞான்றுங் கேடில்லாத பழையோன்; தில்லைப் பல் மலர் கேழ்கிளர அவனது தில்லைக்கட் பலவாகியமலர் நிறங்கிளர; மடுத்தான் குடைந்து அன்று அழுங்க மடுவைத் தான் குடைந்து அன்று கெடப்புக; அழுங்கித் தழீஇமகிழ்வுற்று எடுத்தாற்கு அதுகண்டிரங்கி யணைத்து இவ்வாறுதவி செய்யப்பெறுதலான் மகிழ்ந்தெடுத்தாற்கெனக் கூட்டுக.

தில்லைக்கணெடுத்தாற்கெனவியையும். வகிர்மலர் கண்ணி யென்புழிச் செயப்படுபொருளைச் செய்ததுபோலக் கூறினார். வகிரென்னு முவமவினை ஒற்றுமை நயத்தால் உவமிக்கப்படும் பொருண்மேலேறிநின்றது. தானென்பதனை அசைநிலையாக்கி வடுவகிர்போலுங் கண்ணென் றுரைப்பாருமுளர். நீடாயழுங்கல் நெடிதா யழுங்கல். மெய்ப்பாடு: உவகையைச் சார்ந்த அழுகை. பயன்: தலைமகளது கற்பினைப் பாராட்டி ஆற்றாமை நீங்குதல். 226

விளக்கவுரை

16.33 கற்புநிலைக்கிரங்கல் கற்புநிலைக்கிரங்கல் என்பது தோழி யறத்தொடுநிற்பக் கேட்டசெவிலி இஃதறமாயினும் இவள் பருவத்திற்குத்தகாது; இதுகிடக்க, இனியவளுக்கு நன்மையாவது அவனை வழிபடுவ தல்லது பிறிதில்லை யெனக் கற்புநிலைக் கிரங்காநிற்றல். அதற்குச் செய்யுள்

16.33. விற்புரை நுதலி கற்புநிலை கேட்டுக்
கோடா யுள்ள நீடா யழுங்கியது.

முறுவல்அக் கால்தந்து வந்தென்
முலைமுழு வித்தழுவிச்
சிறுவலக் காரங்கள் செய்தவெல்
லாம்முழு துஞ்சிதையத்
தெறுவலக் காலனைச் செற்றவன்
சிற்றம் பலஞ்சிந்தியார்
உறுவலக் கானகந் தான்படர்
வானா மொளியிழையே. **#884**

இதன் பொருள்:

ஒளி இழை ஒளியிழை; அக்கால் முறுவல் தந்து

உள்ளத்தொன்றுடையளாதலின் அக்காலத்து முறுவலை யெனக்குத் தந்து; வந்து என் முலை முழுவித் தழுவி வந்து எனது முலையை முத்தங்கொண்டு என்னைப் புல்லி; சிறுவலக்காரங்கள் செய்த எல்லாம் அவ்வாறு சிறியவிரகுகள் செய்தவெல்லாம்; முழுதும் சிதையத் தெறு வலக் காலனைச் செற்றவன் சிலம்பலம் சிந்தியார் எல்லாப்பொருளுமழிய வெகுளுதல் வல்ல அக்காலனை வெகுண்ட வனது சிற்றம்பலத்தைக் கருதாதார்; உறு வலக்கானகம் தான் படர்வான் ஆம் சேரும் வலியகாட்டைத் தான் செல்லவேண்டிப் போலும்! அக்காலத்திஃதறிந்திலேன்! எ-று.

எனக்கு வெளிப்படாமற் பிரிவார்செய்வன செய்தா ளென்னுங் கருத்தான் வலக்கார மென்றாள். குறித்துணர்வார்க்கு வெளிப்படு மென்னுங் கருத்தாற் சிறுமைப்படுத்தாள். தெறும் வெற்றியையுடைய காலனெனிமமையும். 227

விளக்கவுரை

16.34 கவன்றுரைத்தல் கவன்றுரைத்தல் என்பது கற்புநிலைக் கிரங்காநின்ற செவிலி, நெருநலைநாள் முறுவலைத்தந்து முலைமுழுவித் தழுவி நீ சிறிய விரகுகள் செய்தவெல்லாம் இன்றவ் வலியகாட்டைச் செல்ல வேண்டிப் போலும்; இதனை யப்பொழுதே யறியப்பெற்றி லேனென்று அவணிலை நினைந்து கவலாநிற்றல். அதற்குச் செய்யுள்
16.34. அவள்நிலை நினைந்து
செவிலி கவன்றது.

தாமே தமக்கொப்பு மற்றில்
லவர்தில்லைத் தண்ணனிச்சப்
பூமேல் மிதிக்கிற் பதைத்தடி
பொங்கும்நங் காய்எரியுந்
தீமேல் அயில்போற் செறிபரற்
கானிற் சிலம்படிபாய்
ஆமே நடக்க அருவினை
யேன்பெற்ற அம்மனைக்கே. **#885**

இதன் பொருள்:

தாமே தமக்கு ஒப்பு மற்று இல்லவர் தில்லை தாமே தமக்கொப்பாக வேறோரொப்பில்லாதவரது தில்லையில்; தண் அனிச்சப் பூமேல் மிதிக்கின் பதைத்து அடி பொங்கும் நங்காய் குளிர்ந்த வனிச்சப்பூவின்மேன் மிதிப்பினும் நடுங்கித் தன்னடிகள் பண்டு கொப்புட்கொள்ளும் நங்காய்; எரியும் தீமேல் அயில்போல் செறி பரல் கானில் எரியாநின்ற தீயின்மேற் பதித்த வேல்போலச் செறிந்த பரலையுடைய காட்டின்கண்; சிலம்பு அடி பாய் சிலம்பை யுடைய

அவ்வடியைப்பாவி; அருவினையேன் பெற்ற அம் மனைக்கு
அரியவினையையுடையேன் பெற்ற அன்னைக்கு; நடக்க ஆமே இன்று
நடக்க வியலுமோ! ஆண்டென் செய்கின்றாள்! எ-று.
செறிவு ஒத்தபண்பன்று. நிலத்தைச் செறிந்த பரலெனினு மமையும்.
அயில்போல் செறிபரலென்பது பாடமாயின், அயில் போலுஞ்
செறிபரலென்றுரைக்க, இவை யிரண்டற்கும் மெய்ப்பாடு: அழுகை.
பயன்: ஆற்றாமை நீங்குதல். 228

விளக்கவுரை

16.35 அடிநினைந்திரங்கல் அடிநினைந்திரங்கல் என்பது நிலைமை நினைந்து கவலாநின்ற செவிலி, அனிச்சப்பூமேன் மிதிப்பினும் ஆற்றாது பதைத்துப் பொங்காநின்ற வடிகள் இன்று செறிந்த பரலையுடைய காட்டின்கட் பாவியவாறென்னோவென அவளடி நினைந் திரங்கா நிற்றல். அதற்குச் செய்யுள்

16.35. வெஞ்சுர மும்மவள் பஞ்சிமெல் லடியுஞ்
செவிலி நினைந்து கவலை யுற்றது.

தழுவின கையிறை சோரின்
தமியமென் றேதளர்வுற்
றழுவினை செய்யுநை யாவஞ்சொற்
பேதை யறிவுவிண்ணோர்
குழுவினை உய்யநஞ் சுண்டம்
பலத்துக் குனிக்கும்பிரான்
செழுவின தாள்பணி யார்பிணி
யாலுற்றுத் தேய்வித்ததே. **#886**

இதன் பொருள்:

தழுவின கை இறை சோரின் தன்னைத் தழுவின என்கை
சிறிதுசோருமாயின்; தமியம் என்றே நையாத் தளர்வுற்று நாந்தமிய
மென்றேகருதி நைந்து உள்ளந்தளர்ந்து; அழுவினை செய்யும் அம் சொல்
பேதை அறிவு அழுந்தொழிலைச் செய்யும் அழகிய சொல்லையுடைய
பேதையதறிவு; விண்ணோர் குழுவினை உய்ய நஞ்சு உண்டு
விண்ணோரது திரள்பிழைக்கத் தானஞ்சை யுண்டு; அம்பலத்துக்
குனிக்கும் பிரான் செழுவின தாள் அம்பலத்தினின்று கூத்தாடு
மிறைவனுடைய வளவியதாள்களை; பணியார் பிணியால் உற்றுத்
தேய்வித்தது பணியாதார் பிணிபோலும் பிணியான் மிக்கு என்னைக்
குறைவித்தது எ-று.

உய்ய நஞ்சுண்டென்னுஞ் சொற்கள் ஒரு சொன்னீர்மைப் பட்டு
உய்வித்து என்னும் பொருளவாய், குழுவினை யென்னு மிரண்டா
வதற்கு முடிபாயின. அறிவைக்கருத்தாவாகவும் பிணியைக்

கருவியாகவுங் கொள்க. முன்னியது - வந்தது. மெய்ப்பாடும் பயனும் அவை. #9; #9; #9; #9; #9; 229

விளக்கவுரை

16.36 நற்றாய்க்குரைத்தல் நற்றாய்க்குரைத்தல் என்பது அடிநினைந் திரங்காநின்ற செவிலி, கற்புமுதிர்வு தோன்ற நின்று என்னை யிடைவிடா மற்றேடி யழாநின்ற பேதையறிவு இன்றென்னைத் தேய்வியா நின்றதென்று அவள் உடன்போனமை ஆற்றாது நற்றாய்க்குக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.36. முகிழ்முலை மடந்தைக்கு முன்னிய தறியத்
திகழ்மனைக் கிழத்திக்குச் செவிலி செப்பியது.

யாழியன் மென்மொழி வன்மனப்
பேதையொ ரேதிலன்பின்
தோழியை நீத்தென்னை முன்னே
துறந்துதுன் னார்கண்முன்னே
வாழியிம் மூதூர் மறுகச்சென்
றாளன்று மால்வணங்க
ஆழிதந் தானம் பலம்பணி
யாரின் அருஞ்சுரமே. **#887**

இதன் பொருள்: யாழ் இயல் மென் மொழி வல் மனப் பேதை யாழோசையினியல்பு போலும் இயல்பையுடைய மெல்லிய மொழியையும் வலியமனத்தையுமுடையபேதை; ஒரு ஏதிலன் பின் ஒரு நொதுமலன்பின்னே; தோழியை நீத்து தன்றோழியைவிட்டு; என்னை முன்னே துறந்து என்னை முற்காலத்தே நீங்கி; இம் மூதூர் மறுக இம்மூதூரிலுள்ளார் அலரெடுத்துக் கலங்க; துன்னார்கள் முன்னே சேராதார் முன்னே; மால் வணங்க அன்று ஆழி தந்தான் அம்பலம் பணியாரின் திருமால் வணங்குதலான் அன்றாழியைக் கொடுத்தவனது அம்பலத்தைப் பணியாதாரைப்போல; அரும் சுரம் சென்றாள் அரிய சுரத்தைச் சென்றாள்; இனி யெங்ஙனமாற்றுகேன் எ-று. இற்செறிக்கப்பட்ட பின்னர்ப் பராமுகத்த ளென்பதனை உடன் போன பின்ன ருணர்ந்தாளாகலின், என்னை முன்னே துறந்தென் றாள். வாழி: அசைநிலை. மெய்ப்பாடும், பயனும் அவையே. 230

விளக்கவுரை

16.37 நற்றாய்வருந்தல் நற்றாய் வருந்தல் என்பது உடன்போனமைகேட்டு உண் மகிழ்வோடு நின்று, ஓரேதிலன் பின்னே தன் தோழியை விட்டு, என்னையு முன்னே துறந்து, சேராதார் முன்னே ஊர் அலர் தூற்ற அருஞ்சுரம் போயினாள்; இனி

யானெங்ஙனமாற்றுவேனென நற்றாய் பிரிவாற்றாது வருந்தாநிற்றல்.
அதற்குச் செய்யுள்
16.37. கோடாய் கூற
நீடாய் வாடியது.

கொன்னுனை வேல்அம் பலவற்
றொழாரிற்குன் றங்கொடியோள்
என்னணஞ் சென்றன ளென்னணஞ்
சேரு மெனஅயரா
என்னனை போயினள் யாண்டைய
ளென்னைப் பருந்தடுமென்
றென்னனை போக்கன்றிக் கிள்ளையென்
னுள்ளத்தை யீர்கின்றதே. **#888**

இதன் பொருள்:
கொல் நுனை வேல் அம்பலவற் றொழாரின் கொற்றொழிலமைந்த நுனையையுடைத்தாகிய சூல வேலையுடைய அம்பலவனை வணங்காதாரைப்போல; கொடியோள் குன்றம் என்னணம் சென்றனள் என்னணம் சேரும் என கொடியாள் மலைநெறியை யெவ்வண்ணஞ்சென்றாள் ஆண்டெவ் வண்ணந் தங்குமென்றியான்கூற; அயரா தன்றாய் செலவுணர்ந்து மயங்கி; என் அனை போயினள் என்னுடைய அன்னை போயினாள்; யாண்டையள் அவளெவ்விடத்தாள்; என்னைப் பருந்து அடும் என்று இனி யென்னைப் பருந்து கொல்லு மென்று சொல்லி; என் அனை போக்கு அன்றிக் கிள்ளை என் உள்ளத்தை ஈர்கின்றது என்னுடைய வன்னை போக்கொழிய அவள் கிளியென் னெஞ்சை யீராநின்றது எ-று. என்னணஞ் சென்றனள் என்னணஞ் சேருமென்று நினைந்த யராவெனக் கிளிமேலேறவுரைப்பினு மமையும். என்னன்னை போக்கன்று ஈர்கின்ற திக்கிள்ளையென மறுத்துரைப்பினு மமையும். மெய்த்தகை - மெய்யாகிய கற்பு; புனையாவழகுமாம். மெய்ப்பாடும் பயனும் அவை.

விளக்கவுரை

16.38 கிளிமொழிக்கிரங்கல் கிளிமொழிக்கிரங்கல் என்பது பிரிவாற்றாது வருந்தா நின்றவள் அவள்போன போக்கன்றி, இக்கிள்ளை என்னெஞ்சை யீராநின்றதெனத் தன்றாய் செலவுணர்ந்து வருந்தாநின்ற கிளியினது மொழிகேட் டிரங்காநிற்றல். அதற்குச் செய்யுள்
16.38. மெய்த்தகை மாது வெஞ்சுரஞ் செல்லத்
தத்தையை நோக்கித் தாய்புலம் பியது.

பெற்றே னொடுங்கிள்ளை வாட

முதுக்குறை பெற்றிமிக்கு
நற்றேன் மொழியழற் கான்நடந்
தாள்முகம் நானணுகப்
பெற்றேன் பிறவி பெறாமற்செய்
தோன்தில்லைத் தேன்பிறங்கு
மற்றேன் மலரின் மலர்த்திரந்
தேன்சுடர் வானவனே. #889
இதன் பொருள்:
சுடர் வானவனே சுடராகிய வானவனே; பெற்றேனொடும் கிள்ளை வாட பெற்றவென்னோடுந்தன் கிளியிரு ந்து வருந்த இதனையுந்துறந்து; முதுக்குறை பெற்றிமிக்கு அறிவு முதிர்ந்த வியல்புமிக்கு; நல் தேன் மொழி நல்ல தேன்போலு மொழியை யுடையாள்; அழல் கான் நடந்தாள் முகம் அழலை யுடைய காட்டின் கணடந்தவளது முகத்தை; மல்தேன் மலரின் மலர்த்து நின்வெங்கதிர்களான் வாட்டாது வளவியவண்டை யுடைய தாமரைமலர்போல மலர்த்துவாயாக; இரந்தேன் நின்னை யானி ரந்தே னிதனை எ-று.
அணுகப் பெற்றேன் நான் ஒருவாற்றாற் றன்னையணுகப் பெற்றேனாகியயான்; பிறவி பெறாமல் செய்தோன் தில்லைத்தேன் பிறங்கு மற்றேன்மலர் பின் பிறவியைப் பெறாத வண்ணஞ் செய் தவனது தில்லையின் மதுமிகு மற்றேன் மலரெனக் கூட்டுக.
பெற்றேனொடுமென்பது எண்ணொடுவுமாம். தணிக்க வென்னு மிறுதியகரங் குறைந்துநின்றது. மெய்ப்பாடும் பயனும் அவை. 232

விளக்கவுரை

16.39 சுடரோடிரத்தல் சுடரோடிரத்தல் என்பது கிளிமொழி கேட்டிரங்கா நின்ற வள், பெற்றவென்னோடு தன்கிளியிருந்து வருந்த இதனையுந் துறந்து அறிவுமுதிர்ந்து, அழற்கடஞ் சென்றாண்முகத்தை நின் கதிர்களான் வாட்டாது தாமரைமலர்போல மலர்த்துவாயாக வெனச் சுடரோடிரந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
16.39. வெஞ்சுரந் தணிக்கெனச் செஞ்சுட ரவற்கு
வேயமர் தோளி தாயர் பராயது.

வைம்மலர் வாட்படை யூரற்குச்
செய்யுங்குற் றேவல்மற்றென்
மைம்மலர் வாட்கண்ணி வல்லள்கொல்
லாந்தில்லை யான்மலைவாய்
மொய்ம்மலர்க் காந்தளைப் பாந்தளென்
றெண்ணித்துண் ணென்றொளித்துக்
கைம்மல ராற்கண் புதைத்துப்

பதைக்குமெங் கார்மயிலே. **#890**

இதன் பொருள்:

தில்லையான் மலை வாய் தில்லையா னுடைய இம்மலையிடத்து; மொய்ம் மலர்க் காந்தளைப் பாந்தள் என்று எண்ணி மொய்ம்மலர்க் காந்தளது பூவினைப் பெரும்பாம் பென்று கருதி; துண்ணென்று ஒளித்து துண்ணென்று மறைந்து; கைம் மலரால் கண் புதைத்துப் பதைக்கும் கைம் மலர்களாற் கண்புதைத்து நடுங்கும்; எம் கார் மயில் என் மைம்மலர் வாள் கண்ணி எம்முடைய கார்மயிலாகிய என்னுடைய மையழகு பெற்ற வாள்போலுங் கண்ணையுடையாள்; வைம்மலர் வாள் படை ஊரற்கு கூர்மை யையுடைய மலரணிந்த வாளாகிய படைக்கலத்தையுடைய வூரனுக்கு; செய்யும் குற்றேவல் வல்லள்கொல் தான்செய்யத்தகுங் குற்றேவல்களைக் கற்பிக்கு முதுபெண்டிருமின்றித் தானே செய்ய வல்லளாமோ! ஆண்டென் செய்கின்றாள்! எ-று.

மற்றென்பது அசை. மொய்ம்மலர்க்காந்தள் முதலாகிய தன் பொருட்கேற்ற வடையடுத்து நின்றது. பிரிவினான் மகண்மேற் செல்லுங் கழிபெருங் காதலளாதலின், எங்கார்மயிலென்றும் என்வாட் கண்ணி யென்றும், பல்காற்றன்னோடடுத்துக் கூறினாள். தில்லையான் மலைவாய்ப் பதைக்குமெனவியையும். நோக்கென்னு மலங்காரமாய்ப் பாம்பிற் கஞ்சுமயிலென இல்குணமடுத்து வந்ததென்பாரு முளர். மெய்ப்பாடும் பயனும் அவையே. 233

விளக்கவுரை

16.40 பருவ நினைந்து கவறல் பருவ நினைந்து கவறல் என்பது சுடரோடிரந்து வருந்தா நின்றவள், கற்பிக்குமுதுபெண்டீரு மின்றித் தானவனுக்குச் செய்யத் தகுங் குற்றேவல் செய்யவல்லள்கொல்லோ வென்று அவளது பருவ நினைந்து கவலாநிற்றல். அதற்குச் செய்யுள்
16.40. முற்றா முலைக்கு
நற்றாய் கவன்றது

வேயின தோளி மெலியல்விண்
ணோர்தக்கன் வேள்வியின்வாய்ப்
பாயின சீர்த்தியன் அம்பலத்
தானைப் பழித்துமும்மைத்
தீயின தாற்றல் சிரங்கண்
ணிழந்து திசைதிசைதாம்
போயின எல்லையெல் லாம்புக்கு
நாடுவன் பொன்னினையே. **#891**

இதன் பொருள்: விண்ணோர் விண்ணவர்; தக்கன் வேள்வியின் வாய்ப் பாயின சீர்த்தியன் அம்பலத்தானைப் பழித்து தக்கனது வேள்வியின்கட்

பரந்த புகழையுடையனாகிய அம்பலத்தானை யிகழ்ந்துகூறி; மும்மைத் தீயினது ஆற்றல் சிரம் கண் இழந்து மூன்றன்றொகுதியாகிய தீயினது வலியையுந் தலையையுங் கண்ணையுமிழந்து; திசை திசை தாம் போயின எல்லை எல்லாம் புக்கு திசை திசை தோறுந் தாம்போயின வெல்லையெல்லாம் புக்கு; பொன்னினை நாடுவன் பொன்னினைத் தேடுவேன்; வேயின தோளி வேயின் றன்மைய வாகிய தோள்களையுடையாய்; மெலியல் நீ மெலியவேண்டா எ-று. தொக்கபொருட்குந் தொகுதிக்கு மொற்றுமையுண்மையின், ஆற்றன் முதலாயினவற்றை யிழத்தலை விண்ணோர் மேலேற்றினார். திகைதிகை யென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு: அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன்: நற்றாயை யாற்றுவித்தல்.

'ஏமப் பேரூர்ச் சேரியுஞ் சுரத்துந்
தாமே செல்லுந் தாயருமுளரே'
-தொல். அகத்திணை. 40

என்றாராகலிற் செவிலிதேடப் பெறும். அலங்காரம்: முயற்சி விலக்கு.
234

விளக்கவுரை

16.41 நாடத் துணிதல் நாடத்துணிதல் என்பது பருவநினைந்து கவலாநின்ற தாய்க்கு, நீ கவன்று மெலியவேண்டா, யான் அவள் புக்கவிடம் புக்குத் தேடுவேனெனக் கூறி, செவிலி அவளை நாடத் துணியாநிற்றல். அதற்குச்செய்யுள்

16.41. கோடாய் மடந்தையை
நாடத் துணிந்தது.

பணங்களஞ் சாலும் பருவர
வார்த்தவன் தில்லையன்ன
மணங்கொளஞ் சாயலும் மன்னனும்
இன்னே வரக்கரைந்தால்
உணங்கலஞ் சாதுண்ண லாமொள்
நிணப்பலி யோக்குவல்மாக்
குணங்களஞ் சாற்பொலி யுந்நல
சேட்டைக் குலக்கொடியே. **#892**

இதன் பொருள்:

மாக் குணங்கள் அஞ்சாற் பொலியும் நல சேட்டைக் குலக்கொடியே பெரியகுணங்களைந்தான் விளங்கும் நல்ல சேட்டையையுடைய சீரியகொடியே; பணங்கள் அஞ்சு ஆலும் பரு அரவு ஆர்த்தவன் தில்லை அன்ன படங்க ளைந்து ஆடாநிற்கும் பரிய வரவைச் சாத்தியவனது தில்லையைப் போலும்; மணம் கொள் அம் சாயலும் மன்னனும்

நறுநாற்றம் பொருந்திய அழகிய மென்மையை யுடையாளும் மன்னனும்; இன்னே வரக் கரைந்தால் இப்பொழுதே வரும்வண்ணம் நீயழைத்தால்; உணங்கல் அஞ்சாது உண்ணலாம் யா மோப்பாமையின் உணங்கலை யஞ்சாதிருந்து நினக்குண்ணலாம்; ஒண்நிணப் பலி ஒக்குவல் தெய்வத்திற்குக் கொடுத்த நல்ல நிணத்தையுடைய பலியையும் நினக்கே வரைந்து வைப்பேன்; அவ்வாறு கரைவாயாக எ-று.

ஒக்குவ லென்பதற்குத் தருவேனென் றுரைப்பினுமமையும். குணங்கள் ஐந்தாவன மறைந்த புணர்ச்சித்தாதலும், கலங்காமையும், பொழுதிறவா திடம்புகுதலும், நெடுகக் காண்டலும், மடியின்மையும், சேட்டை உறுப்பைப் புடைபெயர்த்தல். கொடி காக்கை. நல சேட்டை குலக்கொடியே யென்று பாடமோதி, சேட்டையாகிய தெய்வத்தின் நல்ல கொடியேயென் றுரைப்பாருமுளர். சொற்புட்ப ராயது வருவது சொல்லுதலையுடைய புள்ளை வேண்டிக் கொண்டது. 235

விளக்கவுரை

16.42 கொடிக்குறிபார்த்தல் கொடிக்குறி பார்த்தல் என்பது செவிலி நாடத்துணியாநிற்ப, அவ்விருவரையு மிப்பொழுதே வரும்வண்ணம் நீ கரைந்தால், நினக்கு உணங்கலை யஞ்சாதிருந் துண்ணலாம்; அதுவன்றித் தெய்வத்திற்கு வைத்த நிணத்தை யுடைய பலியையும் நினக்கே வரைந்து வைப்பேன்; அவ்வாறு கரைவாயாகவென நற்றாய் கொடிக்குறி பாராநிற்றல். அதற்குச் செய்யுள்

16.42. நற்றாய் நயந்து
சொற்புட் பராயது.

முன்னுங் கடுவிட முண்டதென்
தில்லைமுன் னோனருளால்
இன்னுங் கடியிக் கடிமனைக்
கேமற் றியாமயர
மன்னுங் கடிமலர்க் கூந்தலைத்
தான்பெறு மாறுமுண்டேல்
உன்னுங்கள் தீதின்றி யோதுங்கள்
நான்மறை யுத்தமரே. **#893**

இதன் பொருள்:

முன்னும் கடு விடம் உண்ட தென் தில்லை முன்னோன் அருளால் பரந்து செல்லுங் கடியவிடத்தையுண்ட தென்றில்லைக் கண்ணானாகிய எல்லார்க்கு முன்னாயவன தருளால்; இக்கடிமனைக்குக் கடி யாம் அயர இக்காவலையுடைய மனையின் கண் மணத்தை யாஞ்செய்ய; மன்னும் கடிமலர்க் கூந்தலை இன்னும் தான் பெறுமாறும் உண்டேல் நிலைபெற்ற கடிமலரையுடைய கூந்தலையுடையாளை இன்னுந் தான்

பெறுமாறு முண்டாயின்; நால்மறை உத்தமரே நான்மறையையுடைய தலைவீர்; உன்னுங்கள் நும் முள்ளத்தானாராய்மின்கள்; தீது இன்றி ஓதுங்கள் ஆராய்ந்து குற்றந்தீரச் சொல்லுமின்கள் எ-று. அருளாற் பெறுமாறுமுண்டேலென வியையும். தேவர் சென்றிரப்ப நஞ்சை நினைத்தலுங் கைம்மலர்க்கண் வந்திருந்த தாகலின், கருதப் படும் வெவ்விட மெனினுமமையும். யாங்கடியயரத் தான் கடிமலர்க் கூந்தலைப் பெறுமாறு முண்டேலென்றுரைப்பினு மமையும். இப் பொருட்குத் தானென்றது தலைமகனை. தீதின்றியுன் னுங்களெனினுமமையும். உய்த்துணர்வோரை வெளிப்படாத பொருளையேதுக்களாலுணர்வோரை. இவையிரண்டற்கும் மெய்ப் பாடு: மருட்கை. பயன்: எதிர்காலச் செய்கை யுணர்தல். 236

விளக்கவுரை

16.43 சோதிடங் கேட்டல் சோதிடங் கேட்டல் என்பது கொடிநிமித்தம் பெற்று, இக்காவன் மனையின்கண்ணே யாங்கள் மணஞ்செய்ய அவ்விரு வரையும் இன்னும் பெறுமாறுண்டாயின், ஆராய்ந்து சொல்லுமினென அறிவாளரைக் கிட்டிச் செவிலி சோதிடங் கேளாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.43. சித்தந் தளர்ந்து தேடுங் கோடாய்
உய்த்துணர் வோரை உரைமி னென்றது.

தெள்வன் புனற்சென்னி யோன்அம்
பலஞ்சிந்தி யாரினஞ்சேர்
முள்வன் பரல்முரம் பத்தின்முன்
செய்வினை யேனெடுத்த
ஒள்வன் படைக்கண்ணி சீறடி
யிங்கிவை யுங்குவையக்
கள்வன் பகட்டுர வோனடி
யென்று கருதுவனே. **#894**

இதன் பொருள்:

தெள் வன் புனல் சென்னியோன் அம்பலம் சிந்தியார் இனம் சேர் தெள்ளிய பெரியபுனலையுடைத்தாகிய சென்னியை யுடையவன தம்பலத்தைக் கருதாதாரது இனஞ்சேரும்; முள்வன் பரல் முரம்பத்தின் இங்கிவை முள்ளையும் வலியபரலையு முடைய இம்முரம்பின்கட்கிடந்த இவை; முன்செய் வினையேன் எடுத்த ஒள்வன் படைக் கண்ணி சீறடி முற்காலத்துச் செய்யப்பட்ட தீவினையையுடைய யானெடுத்து வளர்த்த ஒள்ளிய வலிய படைபோலுங் கண்ணினையுடையாளுடைய சிறிய வடிச்சுவடாம்; உங்குவை அக் கள்வன் பகட்டு உரவோன் அடி என்று கருதுவன் இனி உவற்றை அக்கள்வனாகிய பகடுபோலும் வலியை

யுடையானுடைய அடிச்சுவடென்றுய்த்துணரா நின்றேன் எ-று.
இங்கிவை உங்குவை யென்பன ஒருசொல். 237

விளக்கவுரை

16.44 சுவடுகண்டறிதல் சுவடுகண்டறிதல் என்பது சோதிடம் பெற்றுச் செல்லா நின்றவள், இம்முரம்பின்கட் கிடந்த இவை தீவினையே னெடுத்து வளர்த்த மாணிழை சீறடி: உவை அக்கள்வ னடியாமெனச் சுவடு கண்டறியாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.44. சுவடுபடு கடத்துச்
செவிலிகண் டறிந்தது.

பாலொத்த நீற்றம் பலவன்
கழல்பணி யார்பிணிவாய்க்
கோலத் தவிசின் மிதிக்கிற்
பதைத்தடி கொப்புள்கொள்ளும்
வேலொத்த வெம்பரற் கானத்தின்
இன்றொர் விடலைபின்போங்
காலொத் தனவினை யேன்பெற்ற
மாணிழை கால்மலரே. **#895**

இதன் பொருள்:

கோலத் தவிசின் மிதிக்கின் கோலத்தையுடைய தவிசின்மேன் மிதிப்பினும்; பால் ஒத்த நீற்று அம்பலவன் கழல் பணியார் பிணி வாய் பாலொத்த நீற்றையுடைய அம்பலவனது கழல் களைப் பணியாதாரது வருத்தம்போலும் வருத்தம்வாய்ப்ப; பதைத்து அடி கொப்புள் கொள்ளும் நடுங்கி அவ்வடிகள் பண்டு கொப்புளங் கொள்ளும்; வினையேன் பெற்ற மாண் இழை கால்மலர் தீவினை யேன் பெற்ற மாணிழையுடைய அத்தன்மையவாகிய காலாகிய மலர்கள்; இன்று வேல் ஒத்த வெம் பரற் கானத்தின் ஓர் விடலைபின் போம் கால் ஒத்தன இன்று வேலையொத்த வெய்யபரலையுடைய காட்டின்கண் ஒருவிடலை பின் போதற்குத் தகுங்காலை யொத்தன; இதனையெவ்வாறு ஆற்றவல்லவாயின! எ-று.
தவிசு தடுக்குமுதலாயின. கான்மலரென அவற்றை மலராகக் கூறினமையாற் காலொத்தனவென வுவமித்தாள். பிணியாயென்றும், பிணிபோலென்றும், காலொத்திராவென்றும் பாடமோதுவாருமுளர். காலென்றது அடியை. 238

விளக்கவுரை

16.45 சுவடுகண்டிரங்கல் சுவடு கண்டிரங்கல் என்பது சுவடுகண்டறிந்து அவ்விடத் தே நின்று தவிசின்மேன் மிதிப்பினும் பதைத்துக் கொப்புட் கொள்ளாநின்ற இக்கான்மலர், இன்றொரு விடலைபின்னே போதற்குத்

தகுங்காலை எவ்வாறொத்தனவென அடிச்சுவடுகண் டிரங்காநிற்றல்.
அதற்குச் செய்யுள்
16.45. கடத்திடைக் காரிகை அடித்தலங் கண்டு
மன்னருட் கோடா யின்ன லெய்தியது.

பேதைப் பருவம் பின்சென்
றதுமுன்றி லெனைப்பிரிந்தால்
ஊதைக் கலமரும் வல்லியொப்
பாள்முத்தன் தில்லையன்னாள்
ஏதிற் சுரத்தய லானொடின்
றேகினள் கண்டனையே
போதிற் பொலியுந் தொழிற்புலிப்
பற்குரற் பொற்றொடியே. **#896**

இதன் பொருள்:
போதிற் பொலியும் தொழில் புலிப்பற் குரல் பொற்றொடி
பூவின்கட்பொலியுந் தொழிலினையும் புலிப்பல்லை யுடைய
கழுத்தினையுமுடைய பொற்றொடியாய்; பேதைப் பருவம் சென்றது பின்
பேதையாகிய பருவங்கழிந்தது சுரம் போந்தபின்; முன்றில் எனைப்
பிரிந்தால் ஊதைக்கு அலமரும் வல்லி ஒப்பாள் இவ்வாறறியாப்
பருவத்தளாய் முன்றிற்க ணென்னைச் சிறிது நீங்கிற் றமியளாய்
நடுங்குதலான் ஊதையாற் சுழலும் வல்லியை யொப்பாள்; முத்தன்
தில்லை அன்னாள் முத்தனது தில்லையை யொப்பாள்; ஏதில் சுரத்து
அயலானொடு இன்று ஏகினள் அவள் வெம்மை முதலாயினவற்றாற்
றனக்கென்று மியல்பில்லாத சுரத்தின் கண் அயலானொருவனோடு
இன்றுபோயினாள்; கண்டனையே அவளை நீ கண்டாயோ?
அவளெவ்வண்ணம்போயினாள்? எ-று.
தில்லையுன்னாரென்பதூஉம் பாடம். பெற்று வினாய தென்பதூஉம்
பாடம். 239

விளக்கவுரை

16.46 வேட்டமாதரைக் கேட்டல் வேட்டமாதரைக் கேட்டல் என்பது
சுவடுகண்டிரங்கா நின்று, அதுவழியாகச் செல்லாநின்றவள், இவ்வாறு
அறியாப் பருவத்தளாய்த் தனக்கியைபில்லாத சுரத்தின்கண் அயலா
னொருவனுடன் போந்தாள்; அவளை நீ கண்டாயோவென வேட்ட
மாதரைக் கேளாநிற்றல். அதற்குச் செய்யுள்
16.46. மென்மலர் கொய்யும் வேட்ட மாதரைப்
பின்வரு செவிலி பெற்றி வினாயது.

புயலன் றலர்சடை ஏற்றவன்
தில்லைப் பொருப்பரசி

பயலன் றனைப்பணி யாதவர்
போல்மிகு பாவஞ்செய்தேற்
கயலன் தமியன்அஞ் சொற்றுணை
வெஞ்சுரம் மாதர்சென்றால்
இயலன் றெனக்கிற் றிலைமற்று
வாழி எழிற்புறவே. **#897**

இதன் பொருள்:

புயல் அன்று அலர் சடை ஏற்றவன் நீரை அன்று விரிந்த சடையின்கணேற்றவன்; தில்லைப் பொருப்பரசி பயலன் தில்லைக்கணுளனாகிய பொருப்பிற் கரசியது கூற்றையுடையான்; தனைப் பணியாதவர் போல் மிகு பாவம் செய்தேற்கு அவன் றன்னைப் பணியாதாரைப் போல மிக்க பாவத்தைச் செய்தேற்கு; அயலன் தமியன் அம் சொல் துணை மாதர் வெஞ்சுரம் சென்றால் ஏதிலனுமாய்த் தமியனுமா யவனது அழகியசொல்லே துணையாக மாதர் வெய்ய சுரத்தைச் சென்றால்; எழில் புறவே எழிலையுடைய புறவே; இயல் அன்று எனக்கிற்றில்லை இது தகுதி யன்றென்று கூறிற்றிலை; வாழி வாழ்வாயாக எ-று.

இது கூறிற்றாயின் அவள் செல்லாளென்பது கருத்து பொருப்பரையன் மகளாதலிற் பொருப்பரசியெனத் தந்தை கிழமை மகட்குக் கூறப்பட்டது. பாவஞ் செய்தேற்கியலன்றெனக்கிற்றிலை யெனக்கூட்டுக. வெஞ்சுரமாதல் கண்டாலென்பது பாடமாயின், ஆதலென்பதனை எல்லாவற்றோடுங் கூட்டுக. வெஞ்சுரம் போதல் கண்டாலென்பதூஉம் பாடம். 240

விளக்கவுரை

16.47 புறவொடு புலத்தல் புறவொடு புலத்தல் என்பது வேட்டமாதரைக் கேட்டு அது வழியாகச் செல்லாநின்றவள், ஏதிலனுமாய்த் தமியனுமாயவன் சொற்றுணையாக வெய்ய சுரத்தே மாதர் சென்றால், எழிலையுடைய புறவே, இது நினக்குத் தகுதியன்றென்று கூறிற்றிலை; நீ வாழ்வா யாகவெனப் புறவொடு புலந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.47. காட்டுப் புறவொடு
வாட்ட முரைத்தது.

பாயும் விடையோன் புலியூ
ரனையவென் பாவைமுன்னே
காயுங் கடத்திடை யாடிக்
கடப்பவுங் கண்டுநின்று
வாயுந் திறவாய் குழையெழில்

வீசவண் டோலுறுத்த
நீயும்நின் பாவையும் நின்று
நிலாவிடும் நீள்குரவே. **#898**
இதன் பொருள்:

குழை எழில் வீச குழை எழிலைச் செய்ய; வண்டு ஓலுறுத்த வண்டுகள் நின்பாவையையோலுறுத்த; நின் பாவையும் நீயும் நின்று நிலாவிடும் நீள் குரவே அப்பாவையு நீயும் நின்று நிலாவும் பெருங்குரவே; பாயும் விடையோன் புலியூர் அனைய என்பாவை பாய்ந்து செல்லும் விடையையுடையவனது புலியூரை யொக்கும் என்னுடைய பாவை; முன்னே காயும் கடத்திடை ஆடிக் கடப்பவும் கண்டு நின்று நின்முன்னே கொதிக்குங் கடத்தின் கண் அசைந்து அதனைக்கடப்பவும் விலக்காது கண்டு நின்று; வாயும் திறவாய் அத்துணையேயன்றி இன்னவாறு நிகழ்ந்ததென்று எனக்கு வாயுந் திறக்கின்றில்லை; இது நினக்குத்தகுமோ! எ-று.

நிலாவினையென்பது பாடமாயின், வழிச்சுரஞ் செல்லக் கண்டும் வாய்திறந்து ஒன்றுங்கூறாது குழையெழில்வீச வண்டோ லுறுத்த நின்று விளங்கினையென்று கூட்டியுரைக்க. குழையெழில் வீச வண்டோலுறுத்த வென்பன அணியாகிய குழைவிளங்க வென்பதூஉஞ் செவிலிய ரோலாட்ட வென்பதூஉந் தோன்ற நின்றன. இப்பாட்டைந் திற்கும் மெய்ப்பாடு: அழுகை. பயன்: ஆற்றாமை நீங்குதல். 241

விளக்கவுரை

16.48 குரவொடு வருந்தல் குரவொடு வருந்தல் என்பது புறவொடு புலந்து போகா நின்றவள், என்னுடைய பாவை நின்னுடைய முன்னே இக்கொதிக் குங் கடத்தைக் கடப்பக்கண்டுநின்றும், இன்னவாறு போனாளெ ன்று எனக்கு வாயுந் திறக்கின்றிலை; இது நினக்கு நன்றோவெனக் குரவொடுவாடி யுரையாநிற்றல். அதற்குச் செய்யுள்
16.48. தேடிச் சென்ற செவிலித் தாயர்
ஆடற் குரவொடு வாடி யுரைத்தது.

சுத்திய பொக்கணத் தென்பணி
கட்டங்கஞ் சூழ்சடைவெண்
பொத்திய கோலத்தி னீர்புலி
யூரம் பலவர்க்குற்ற
பத்தியர் போலப் பணைத்திறு
மாந்த பயோதரத்தோர்
பித்திதற் பின்வர முன்வரு
மோவொர் பெருந்தகையே. **#899**
இதன் பொருள்:

சுத்திய பொக்கணத்து சுத்தியை யுடைத்தாகிய பொக்கணத்தையும்; என்பு அணி என்பாகிய வணியையும்; கட்டங்கம் கட்டங்கமென்னும் படைக்கலத்தையும்; சூழ்சடை சூழ்ந்த சடையினையும்; பொத்திய வெண் கோலத்தினீர் மெய்ம் முழுதும் மூடிய வெண்கோலத்தையு முடையீர்; புலியூர் அம்பலவர்க்கு உற்ற பத்தியர் போல புலியூர்க்க ணுண்டாகிய அம்பலத்தையுடை யவர்கண் மிக்க பத்தியையுடையாரைப் போல; பணைத்து இறுமாந்த பயோதரத்து ஓர் பித்தி பெருத்திறுமாந்த முலைகளையுடைய ளொருபேதை; தன் பின்வர ஓர் பெருந்தகை முன் வருமோ தனக்குப் பின்வர ஒருபெருந்தகை முன்னே வருமோ? உரைமின் எ-று.

சுத்தி பிறர்க்குத் திருநீறு கொடுத்தற்கு இப்பிவடிவாகத் தலையோட்டா னமைக்கப்படுவதொன்று. என்பணி யென்புழி இயல்பும், கட்டங்கமென்புழித் திரிபும் விகாரவகையாற் கொள்க. கடங்கமென்பது மழு. இது கட்டங்கமென நின்றது. வெண்கோலம் நீறணிந்த கோலம். பத்தியர்க்குப் பணைத்தல் உள்ளத்து நிகழும் இன்புறவால் மேனிக்கண்வரு மொளியும், ஒடுங்காமையும். இறுமாத்தல் தாழாதவுள்ளத்தராய்ச் செம்மாத்தல். முலைக்குப் பணைத்தல் பெருத்தல்; இறுமாத்தல் ஏந்துதல். வெண்பத்திய கோலத்தினீரென்ற பாடத்திற்கு வெண்ணீற்றாற் பத்திபட விட்ட முண்டத்தையுடைய கோலமென்றுரைக்க.

விளக்கவுரை

16.49 விரதியரை வினாவல் விரதியரை வினாவல் என்பது குரவொடுவருந்திச் செல்லா நின்றவள், பத்தியர்போல ஒருபித்தி தன் பின்னேவர ஒரு பெருந்தகை முன்னே செல்லக் கண்டீரோவென விரதியரை வினாவாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.49. வழிவரு கின்ற மாவிர தியரை
மொழிமின்க ளென்று முன்னி மொழிந்தது.

வெதிரேய் கரத்துமென் தோலேய்
சுவல்வெள்ளை நூலிற்கொண்மூ
அதிரேய் மறையினிவ் வாறுசெல்
வீர்தில்லை அம்பலத்துக்
கதிரேய் சடையோன் கரமான்
எனவொரு மான்மயில்போல்
எதிரே வருமே சுரமே
வெறுப்பவொ ரேந்தலொடே. **#900**

இதன் பொருள்:

வெதிர் ஏய் கரத்து மூங்கிற்றண்டு பொருந்திய கையினையும்; மெல்

தோல் ஏய் சுவல் மெல்லிய கலைத் தோலியைந்த சுவலினையும்;
வெள்ளை நூலின் வெள்ளை நூலினையும்; கொண்மூ அதிர் ஏய்
மறையின் இவ்வாறு செல்வீர் கொண்மூவினது முழக்கம்போலு
மறையொலியினையுமுடைய இந்நெறிச் செல்வீர்; ஒரு மான் ஒருமான்;
தில்லை அம்பலத்துக் கதிர் ஏய் சடையோன் கரமான் என
தில்லையம்பலத்தின் கணுளனாகிய மதிசேர்ந்த சடையையுடையவனது
கரத்தின்மான் போல மருண்ட நோக்கத்தளாய்; மயில்போல் மயில்போல
வசைந்த சாயலாளாய்; சுரமே வெறுப்ப ஒரு ஏந்தலொடு எதிரே வருமே
வருத்துஞ் சுரந்தானே கண்டுதுன்புற ஓரேந்தலோடு நும்மெதிரே
வந்தாளோ? உரைமின் எ-று.
தோலேய்ந்த சுவலின்கணுண்டாகிய வெள்ளை நூலினையு
மெனினுமமையும். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு அது. பயன்:
தலைமகளைக் காண்டல். 243

விளக்கவுரை

16.50 வேதியரை வினாவல்

வேதியரை வினாவல் என்பது விரதியரை வினாவி, அதுவழியாகச் செல்லாநின்றவள், மான்போலு நோக்கினையும், மயில் போலுஞ் சாயலையுமுடைய மான் ஓரேந்தலோடு நும்மெதிரே வரக்கண்டீரோவென வேதியரை வினாவாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.50. மாதின்பின் வருஞ்செவிலி
வேதியரை விரும்பிவினாயது.

மீண்டா ரெனஉவந் தேன்கண்டு
நும்மையிம் மேதகவே
பூண்டா ரிருவர்முன் போயின
ரேபுலி யூரெனைநின்
றாண்டான் அருவரை ஆளியன்
னானைக்கண் டேனயலே
தூண்டா விளக்கனை யாயென்னை
யோஅன்னை சொல்லியதே. **#901**

இதன் பொருள்:

நும்மைக்கண்டு மீண்டார் என உவந்தேன் நும்மைக்கண்டு என்னாற்
றேடப்படுகின்றார் மீண்டாரென்றுகருதி மகிழ்ந்தேன்; இம் மேதகவே
பூண்டார் இருவர் முன் போயினரே இவ்வாறு நும்மோடொத்த
மேதகவையுடைத்தாகிய இவ்வொழுக் கத்தையே பூண்டார் இருவர்
முன்னே போயினரோ? உரைமின் எ-று.
புலியூர் எனை நின்று ஆண்டான் அருவரை ஆளி அன்னானைக்
கண்டேன் புலியூர்க்கண் ஒரு பொருளாக மதித்து என்னை

நின்றாண்டவனது கிட்டுதற்கரிய மலையில் ஆளியை யொப்பானை யான் கண்டேன்; தூண்டா விளக்கு அனையாய் தூண்ட வேண்டாத விளக்கையொப்பாய்; அயல் அன்னை சொல்லியது என்னையோ அவனதயல் அன்னைசொல்லியதி யாது? அதனையவட்குச் சொல்லுவாயாக எ-று.

அருவரைக்கட் கண்டேனெனக் கூட்டினு மமையும். ஆளியன்னா னென்றதனால், நின்மகட்கு வருவதோரிடையூ றில்லையெனக் கூறினானாம். தூண்டா விளக்கு: இல்பொருளுவமை. மணிவிளக்கெனினு மமையும். அணங்கமர் கோதையை தெய்வ நாற்றமமர்ந்த கோதையை யுடையாளை. ஆராய்ந்தது வினாயது. மெய்ப்பாடு: அழுகையைச் சார்ந்தவுவகை. பயன்: அது.244

விளக்கவுரை

16.51 புணர்த்துடன் வருவோரைப் பொருந்தி வினாவல் புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினாவல் என்பது வேதியரை வினாவி, அதுவழியாகச் செல்லாநின்றவள், நும்மைக் கண்டு, என்னாற்றேடப்படுகின்றார் மீண்டார்களென்று கருதி மகிழ்ந்தேன்; அதுகிடக்க, இவ்வாறு நும்மோடொத்த வொழுக் கத்தினராய் முன்னே யிருவரைப் போகக்கண்டீரோவெனப் புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினாவாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.51. புணர்ந்துடன்வரும்புரவல னொருபால்
அணங்கமர்கோதையை யாராய்ந்தது.

பூங்கயி லாயப் பொருப்பன்
திருப்புலி யூரதென்னத்
தீங்கை இலாச்சிறி யாள்நின்ற
திவ்விடஞ் சென்றெதிர்ந்த
வேங்கையின் வாயின் வியன்கைம்
மடுத்துக் கிடந்தலற
ஆங்கயி லாற்பணி கொண்டது
திண்டிற லாண்டகையே. **#902**

இதன் பொருள்:

பூங் கயிலாயப் பொருப்பன் திருப்புலியூரது என்ன பொலிவினையுடைய கைலாயமாகிய பொருப்பையுடைய வனது திருப்புலியூரதனைப்போல; தீங்கை இலாச் சிறியாள் நின்றது இவ்விடம் குற்றத்தையுடையவளல்லாத என் சிறியாள் நின்றது இவ்விடத்து; சென்று சென்று; எதிர்ந்த வேங்கையின் வாயின் வியன் கை மடுத்து தன்னோடெதிர்ந்த புலியின்வாயின்கட் பெரிய கையைமடுத்து; கிடந்து அலற விழுந்து கிடந் தலறும் வண்ணம்; திண் திறல் ஆண்டகை

அயிலால் பணிகொண்டது ஆங்கு திண்ணிய திறலையுடைய ஆண்டகை வேலாற் பணிகொண்டது அவ்விடத்து; அதனால், அவர் போயின நெறியிதுவே எ-று.

தீங்கையிலாவென்புழி இன்மை உடைமைக்கு மறுதலை யாகிய வின்மை. மகளடிச்சுவடுகிடந்தவழிச் சென்று நின்றனளாதலின், அதனை இவ்விடமென்றும், வேங்கைபட்ட விடத்தை யவ்விட மென்றுங் கூறினாள். வேங்கை தன் காதலியையணுகாமல் அதுவரும் வழிச் சென்றேற்றானாதலிற் சென்றென்றாள். சென்று பணி கொண்ட தென வியையும். மெய்ப்பாடு அது. பயன்: ஆற்றாமை நீங்குதல். 245

விளக்கவுரை

16.52 வியந்துரைத்தல் வியந்துரைத்தல் என்பது புணர்ந்துடன் வருவோரை வினாவி, அதுவழியாகப் போகாநின்றவள், தன்மகணின்ற நிலையையும், அவன்கையின் வேலினால் வேங்கைபட்டுக் கிடந்த கிடையையுங்கண்டு, வியந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.52. வேங்கைபட்டதும் பூங்கொடிநிலையும்
நாடாவருங் கோடாய்கூறியது.

மின்றொத் திடுகழல் நூபுரம்
வெள்ளைசெம் பட்டுமின்ன
ஒன்றொத் திடவுடை யாளொடொன்
றாம்புலி யூரனென்றே
நன்றொத் தெழிலைத் தொழவுற்
றனமென்ன தோர்நன்மைதான்
குன்றத் திடைக்கண் டனமன்னை
நீசொன்ன கொள்கையரே. **#903**

இதன் பொருள்:

அன்னை அன்னாய்; நீ சொன்ன கொள்கையர் குன்றத்திடைக் கண்டனம் நீ கூறிய கோட்பாட்டை யுடையாரைக் குன்றத்திடைக் கண்டேம்; மின் தொத்து இடுகழல் நூபுரம் அவ்விருவரு மியைந்து சேறலின், மின்றிரளுண்டாகாநின்ற அவனது கழலும் அவளது சிலம்பும்; வெள்ளை செம்பட்டு அவனது வெண்பட்டும் அவளது செம்பட்டும்; மின்ன விளங்க; ஒன்று ஒத்திட- ஒருவடிவை யொத்தலான்; உடையாளொடு ஒன்றாம் புலியூரன் என்று எல்லாவற்றையு முடையளாகிய தன்காதலியோ டொருவடிவாய் விளையாடும் புலியூரனென்றேகருதி; ஒத்து நன்று எழிலைத் தொழ உற்றனம் யாங்களெல்லாமொத்துப் பெரிது மவ்வழகைத் தொழ நினைந்தேம்; என்னது ஓர் நன்மைதான் அந்நன்மை யெத்தன்மையதோர் நன்மைதான்! அது சொல்லலாவ தொன்றன்று எ-று.

என்னதோர் நன்மையென்றதனான், அஃதறமாதலுங் கூறப்பட்டதாம். தானென்பது அசைநிலை. கொள்கையரை யென்னு முருபு விகாரவகையாற் றொக்கது. என்ன நன்மையதா மென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு: உவகை. பயன்: செவிலியை யெதிர்வருவார் ஆற்றுவித்தல்.
9; 9; 246

விளக்கவுரை

16.53 இயைபெடுத்துரைத்தல் இயைபெடுத்துரைத்தல் என்பது வேங்கைபட்டது கண்டு வியந்து, அதுவழியாகச் செல்லாநின்றவள், எதிர்வருவாரை வினாவ, அவர் நீ கூறாநின்றவரைக் குன்றத்திடைக்கண்டோம்; அவ்விருவருந் தம்முளியைந்து செல்லாநின்றமைகண்டு, எல்லாவற்றையு முடைய ளாகிய தன் காதலியோடு ஒருவடிவாய் விளையாடும் புலியூர னென்றே கருதி, யாங்களெல்லாமொத்து, மிகவும் அவ்வெழிலைத் தொழ நினைந்தோம்; அந்நன்மை சொல்லலாவ தொன்றன்றென எதிர்வருவார் அவரியைபெடுத் துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
16.53. சேயிழை யோடு செம்மல் போதர
ஆயிழை பங்கனென் றயிர்த்தே மென்றது.

மீள்வது செல்வதன் றன்னையிவ்
வெங்கடத் தக்கடமாக்
கீள்வது செய்த கிழவோ
னொடுங்கிளர் கெண்டையன்ன
நீள்வது செய்தகண் ணாளிந்
நெடுஞ்சுரம் நீந்தியெம்மை
ஆள்வது செய்தவன் தில்லையி
னெல்லை யணுகுவரே. **#904**

இதன் பொருள்:

கிளர் கெண்டை அன்ன நீள்வது செய்த கண்ணாள் புடை பெயராநின்ற கெண்டைபோலும் நீடலைச் செய்த கண்ணையுடையாள்; இவ்வெங்கடத்து வெய்ய விச்சுரத்தின் கண்; அக்கடமாக்கீள்வது செய்த கிழவோனொடும் அத்தன்மைத் தாகிய கடமாவைப் பிளத்தலைச் செய்த கிழவோனோடும்; இந்நெடுஞ்சுரம் நீந்தி இந்நெடியசுரத்தை நீந்தி அவ்விருவரும் ஓரிடுக்கணின்றிப் போய்; எம்மை ஆள்வது செய்தவன் தில்லையின் எல்லை அணுகுவர் எம்மை யாளுதலைச் செய்தவனது தில்லையினெல்லையைச் சென்றணைவர், அதனால், அன்னை அன்னாய்; மீள்வது செயற் பாலது மீள்வதே; செல்வது அன்று சேறலன்று எ-று.

சுரங் கடத்தல் இருவர்க்கு மொக்குமெனினும், நீள்வது செய்த

கண்ணாணீந்தியெனத் தலைமகண்மேற் கூறினார், வெஞ்சுரத்திற்கவள், பஞ்சின் மெல்லடி தகாவாகலின். அணுகுவரென்புழித்தலைமகள் தொழிலுமுண்மையின், நீந்தியென்னுமெச்சம், வினைமுதல் வினை கொண்டதாம்; திரித்துரைப்பாருமுளர். கிழவோனொடு மென்றதனால், அவன் பற்றுக்கோடாக நீந்தினாளென்பது விளக்கினார். இனி ஒடுவை எண்ணொடுவாக்கி யுரைப்பினுமமையும். உம்மை: அசைநிலை. 247

விளக்கவுரை

16.54 மீளவுரைத்தல் மீளவுரைத்தல் என்பது இயைபெடுத்துரைத்தவர், அவ் விருவரும் ஓரிடுக்கணின்றிப்போய்த் தில்லையினெல்லையைச் சென்றணைவர்; இனி நீ செல்வதன்று, மீள்வதே காரியமெனத் தேடிச் செல்லாநின்ற செவிலியை, மீளக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.54. கடுங்கடங் கடந்தமை கைத்தாய்க் குரைத்து
நடுங்கன்மின் மீண்டும் நடமி னென்றது.

சுரும்பிவர் சந்துந் தொடுகடல்
முத்தும்வெண் சங்குமெங்கும்
விரும்பினர் பாற்சென்று மெய்க்கணி
யாம்வியன் கங்கையென்னும்
பெரும்புனல் சூடும் பிரான்சிவன்
சிற்றம் பலமனைய
கரும்பன மென்மொழி யாருமந்
நீர்மையர் காணுநர்க்கே. **#905**

இதன் பொருள்:

சுரும்பு இவர் சந்தும் நறுநாற்றத்தாற் சுரும்பு சென்று பரக்குஞ் சந்தனமும்; தொடு கடல் முத்தும் தோட்கப் பட்ட கடலின் முத்தும்; வெண் சங்கும் வெண்சங்கும்; எங்கும் விரும்பினர்பால் சென்று மெய்க்கு அணியாம் எத்தேயத்துந் தாம்பிறந்த விடங்கட்கு யாதும் பயன்படாது தம்மை விரும்பி யணிவாரிடத்தே சென்று அவர்மெய்க்கு அணியாகா நிற்கும்; வியன்கங்கை என்னும் பெரும்புனல் சூடும் பிரான் அகன்ற கங்கை யென்னாநின்ற பெரும் புனலைச் சூடும் பிரான்; சிவன் சிவன்; சிற்றம்பலம் அனைய கரும்பு அன மென்மொழியாரும் அவனது சிற்றம்பலத்தை யொக்குங் கரும்பு போலும் மெல்லிய மொழியினை யுடைய மகளிரும்; காணுநர்க்கு அந் நீர்மையர் ஆராய்வார்க் கத்தன்மையர்; நீ கவலவேண்டா எ-று.

சங்கு மணியாயும் வளையாயும் அணியாம். எங்குமணியா மெனவியையும். சிற்றம் பலத்து மன்னுங் கரும்பன மென்மொழி யாரென்பது பாடமாயின், சிற்றம்பலத்தையுடைய தில்லையினுளதாங் கரும்புபோலு மென் மொழியை யுடையாரென்றுரைக்க. 248

விளக்கவுரை

16.55 உலகியல்புரைத்தல் உலகியல்புரைத்தல் என்பது மீளக்கூறவும் மீளாது கவலா நின்ற செவிலிக்கு, சந்தனமு முத்துஞ் சங்கும் தாம் பிறந்தவிடங்கட்கு யாதும் பயன்படாது, தம்மைவிரும்பி யணிவாரிடத்தே சென்று பயன்படாநிற்கும்; அதுபோல மகளிருந் தாம் பிறந்த விடத்துப் பயன்படார்; நீ கவலவேண்டாவென, உலகியல்பு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.55. செவிலியது கவலைதீர
மன்னியஉலகியன் முன்னியுரைத்தது.

ஆண்டி லெடுத்தவ ராமிவர்
தாமவ ரல்குவர்போய்த்
தீண்டி லெடுத்தவர் தீவினை
தீர்ப்பவன் தில்லையின்வாய்த்
தூண்டி லெடுத்தவ ரால்தெங்கொ
டெற்றப் பழம்விழுந்து
பாண்டி லெடுத்தபஃ றாமரை
கீழும் பழனங்களே. **#906**

இதன் பொருள்:
இவர் தாம் ஆண்டு இல் எடுத்தவர் ஆம் இவர் தாம் அவ்விடத்து இல்லின்கணெடுத்து வளர்த்தவர் போலும்; தீண்டில் யாவராயினுந் தம்மையணுகில்; எடுத்து அவர் தீவினை தீர்ப்பவன் தில்லையின்வாய் அவர் நரகத்தழுந்தாமலெடுத்து அவ ரது தீவினையைத் தீர்ப்பவனது தில்லையின்கண்; தூண்டில் எடுத்த வரால் தெங்கொடு எற்ற தூண்டிலைவிழுங்கிய வரால் தெங்கொடு மோத; பழம் விழுந்து அதன் பழம் விழுந்து; பாண்டில் எடுத்தபல் தாமரை கீழும் பழனங்கள் கிண்ணம்போலும் பூக்களையுயர்த்திய பலவாகிய தாமரையைக் கிழிக்கும் பழனங்களை; அவர் போய் அல்குவர் அவர்சென்று சேர்வர்; இனியோரிடரில்லை எ-று.

தில்லையின்வாய்ப் பழனங்களௌனவியையும். ஆண்டி லெடுத்தவராமிவர் தாமென்று தம்முட்கூறிப் பின் செவிலிக்குக் கூறினாராக வுரைக்க. இவ்வாறு பகராது, செவிலிகேட்ப முழுவதூஉந் தம்முட் கூறினாராக வுரைப்பினுமமையும். தூண்டிலானெடுக்கப்பட்ட வராலெனினுமமையும். இவை மூன்றற்கும் மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: செவிலிக்கியல்பு கூறி அவளை மீள்வித்தல். நில்லாவளை (பா.192) தொட்டு இதுகாறும்வரப் பாலைத் திணை கூறியவா றறிக. 249

விளக்கவுரை

16.56 அழுங்குதாய்க் குரைத்தல் அழுங்குதாய்க் குரைத்தல் என்பது உலகியல்பு கூறவும் மீளாது நின்று, தானெடுத்து வளர்த்தமை சொல்லிக் கவலாநின்ற செவிலியை, முன்னிலைப்புறமொழியாக, இவர் தாம் இல்லின்க ணெடுத்து வளர்த்தவர் போலும்; அவர்போய்த் தம்மை யிருவரையுங் கூட்டுவித்த தெய்வப்பதியாகிய தில்லையிடத்துப் பழனங்களைச் சென்றணைவரெனத் தம்முட் கூறுவார்போன்று கூறி, மீட்டுக்கொண்டு போகாநிற்றல். அதற்குச் செய்யுள்

16.56. செழும்பணை யணைந்தமை

அழுங்குதாய்க் குரைத்தது.

2.17.வரைவுமுடுக்கம்

எழுங்குலை வாழையின் இன்கனி
தின்றிள மந்தியந்தண்
செழுங்குலை வாழை நிழலில்
துயில்சிலம் பாமுனைமேல்
உழுங்கொலை வேல்திருச் சிற்றம்
பலவரை உன்னலர்போல்
அழுங்குலை வேலன்ன கண்ணிக்கென்
னோநின் னருள்வகையே. **#907**

இதன் பொருள்:
எழும் குலை வாழையின் இன் கனி தின்று எழாநின்ற குலைகளை யுடைய வாழைத்திரளின்கணுண்டாகிய இனிய கனிகளைத் தின்று; இள மந்தி இளைய மந்தி; செழுங்குலை வாழை அம் தண் நிழலில் துயில் சிலம்பா வளவிய குலையையுடைய அவ்வாழைத்திரளினது நல்ல குளிர்ந்த நிழற்கண் வெருவுதலின்றித் துஞ்சுஞ் சிலம்பை யுடையாய்; முனைமேல் உழும் கொலை வேல் திருச்சிற்றம்பலவரை உன்னலர் போல் போரிடத் துழுங் கொலை வேலையுடைய திருச்சிற்றம்பலவரை நினையாதாரைப் போல; அழுங்கு உலை வேல் அன்ன கண்ணிக்கு வருந்தாநின்ற உலைத் தொழிலமைந்த வேல்போலுங் கண்ணை யுடையாட்கு; நின் அருள் வகை என்னோ நினதருட்கூறியாதோ? இவளதாற்றாமைக்கு மருந்தன்று எ - று.
நின்னருள்வகை யென்னோவென்பதற்கு இவ்வாறு வருந்துமிவடிறத்து இனி நீ செய்யக்கருதிய வகை யாதோவெனினு மமையும். அழுங்கொலைவேலென்பது பாடமாயின், அழாநின்ற கொலை வேல்போலுங் கண்ணையுடையாட்கென் றுரைக்க. எழுங் குலை இளங்குலை. செழுங்குலை முதிர்ந்த குலை. எழுங் குலையு முதிர்ந்த குலையு முடைமையான் இடையறாது பழுக்கும் வாழைத் திரளின்கணுண்டாகிய கனியை நுகர்ந்து, மந்தி வேறொன்றான் வெருவாது அவ்வாழை நிழலின்கீழின்புற்றுத் துயிலுமாறுபோல, ஆராவின்ப மிடையிட்டு நுகராது நீ வரைந்து கோடலான் இடையறாத பேரின்பந்துய்த்து, அன்னைசொல்லா லுண்ணடுங்காது நின் றாணிழற் கீழ் இவளின்புற்று வாழ்தல் வேண்டுமென உள்ளுறை காண்க. மெய்ப்பாடு: அச்சம். பயன்: வரைவுகடாதல். #9; #9; 250

விளக்கவுரை

17.1 வருத்தமிகுதிகூறி வரைவுகடாதல் வருத்தமிகுதிகூறி வரைவுகடாதல் என்பது அலரறிவுறுத்த தோழி, அலரானுங்

காவன்மிகுதியானு நின்னை யெதிர்ப்பட மாட்டாதழுது வருந்தாநின்றவளிடத்து நின்னருளிருக்கின்றவா றென்னோவெனத் தலைமகளது வருத்தமிகுதிகூறித் தலை மகனை வரைவு கடாவாநிற்றல். அதற்குச் செய்யுள்

17.1. இரவுக் குறியிடத் தேந்திழைப் பாங்கி
வரைவு வேண்டுதல் வரவு ரைத்தது.

பரம்பயன் தன்னடி யேனுக்குப்
பார்விசும் பூடுருவி
வரம்பயன் மாலறி யாத்தில்லை
வானவன் வானகஞ்சேர்
அரம்பையர் தம்மிட மோஅன்றி
வேழத்தி னென்புநட்ட
குரம்பையர் தம்மிட மோஇடந்
தோன்றுமிக் குன்றிடத்தே. **#908**

இதன் பொருள்:

இக் குன்றிடத்தே தோன்றும் இடம் இக்குன்றிடத்துத் தோன்றுமிடம்; தில்லை வானவன் வானகம் சேர் அரம்பையர் தம் இடமோ தில்லையின் வானவனது வானகத்தைச் சேர்ந்த தெய்வமகளிர் தமதிடமோ; அன்றி வேழத்தின் என்பு நட்ட குரம்பையர் தம் இடமோ அன்றி யானையினென்பை வேலியாக நட்ட குரம்பைகளையுடைய குறத்தியர் இடமோ? நீ கூறுவாயாக எ-று.

பரம் எல்லாப்பொருட்கும் அப்பாலாயவன்; தன் அடியேனுக்குப் பயன் ஆயினுந் தன்னடியேற்குப் பெறும்பயனா யுள்ளான்; பார் விசும்பு ஊடுருவி வரம்பு அயன் மால் அறியாத் தில்லை வானவன் பாரையும் விசும்பையு மூடுருவிநிற்றலாற் றன்னெல்லையை அயனு மாலு மறியாத தில்லையின் வானவனெனக் கூட்டுக.

என்றது அவளை யெட்டவுஞ் சுட்டவும் படாத தெய்வமென் றிருத்தலான், அவள் வாழு மிடத்தை அரம்பையரிடமென்றே கருதுவல், அன்றாயி னுரையென வரைவுடம்படாது கூறியவாறு. மெய்ப்பாடு: மருட்சி. பயன்: இரவுக்குறியிடமுணர்த்துதல்.251

விளக்கவுரை

17.2 பெரும்பான்மைகூறி மறுத்தல் பெரும்பான்மைகூறி மறுத்தல் என்பது வரைவுகடாவிய தோழிக்கு, யானவளைத் தெய்வமானுடமென்றறிந்து வரைந்து கோடற்கு இக்குன்றிடத்துத் தோன்றாநின்ற விடம் தெய்வமகளிர திடமோ, அன்றிக் குறத்தியரிடமோ, கூறுவாயாகவெனத் தலைமகன் றலைமகளைப் பெரும்பான்மை கூறி மறுத்துரையா நிற்றல். அதற்குச் செய்யுள்

17.2. குலம்புரி கொம்பர்க்குச்
சிலம்பன் செப்பியது.

சிறார்கவண் வாய்த்த மணியிற்
சிதைபெருந் தேனிழுமென்
றிறால்கழி வுற்றெஞ் சிறுகுடில்
உந்து மிடமிதெந்தை
உறாவரை யுற்றார் குறவர்பெற்
றாளுங் கொடிச்சிஉம்பர்
பெறாவரு ளம்பல வன்மலைக்
காத்தும் பெரும்புனமே. **#909**

இதன் பொருள்:

சிறார் கவண் வாய்த்த மணியின் சிதை பெருந்தேன் சிறார்கையிற் கவண் தப்பாமல் அதுவிட்ட மணியாற் சிதைந்த பெருந்தேன்; இழு மென்று இழுமென்னு மோசையை யுடைத்தாய்; இறால் கழிவுற்று எம் சிறுகுடில் உந்தும் இடம் இது இறாலினின்றுங் கழிதலையுற்று எமது சிறு குடிலைத் தள்ளுமிவ்விடம்; எந்தை உறாவரை எந்தையது முற்றூட்டு; உற்றார் குறவர் எமக்குற்றார் குறவர்; பெற்றாளும் கொடிச்சி எம்மைப்பெற்றாளுங் கொடிச்சியே; உம்பர் பெறா அருள் அம்பலவன் மலைப்பெரும் புனம் காத்தும் யாமும் தன்னன்பரல்லது உம்பர்பெறாத வருளையுடைய அம்பலவனது மலைக்கட் பெரும்புனத்தைக்காத்தும்; அதனால் நீயிர் வரைவுவேண்டாமையி னெம்மைப் புனைந்துரைக்க வேண்டுவ தில்லை எ - று.

'கோவையுந் தொகையு மாவயின் வரையார்' என்பதனான், இது தொடர்நிலைச் செய்யுளாதலிற் குரம்பையர் தம்மிடமோவென்று வினாவப்பட்ட விடம் எஞ்சிறுகுடிலுந்துமிட மெனவும் ஒருபுனத்தைச் சுட்டி இதெந்தையுறாவரை யெனவுங் கூறினாளாக வுரைப்பினு மமையும். சிறாரெறிந்த மணியாற் பெருந்தேன் சிதைந்து அவ் விறாலைவிட்டுக் கழிந்து, சிறுகுடிலிற் பரந்தாற் போல, அயலார் கூறும் அலரான் நுமது மறைந்தவொழுக்கம் நும் வயினடங்காது பலருமறிய வெளிப்படாநின்றதென உள்ளுறை காண்க. மெய்ப்பாடு: மருட்சி. பயன்: குறியிடமுணர்த்துதல். 252

விளக்கவுரை

17.3 உள்ளது கூறிவரைவு கடாதல் உள்ளதுகூறி வரைவுகடாதல் என்பது பெரும்பான்மை கூறி மறுத்த தலைமகனுக்கு, இவ்விடம் எந்தையது முற்றூட்டு*;* எமக்குற்றார் குறவரே*;* எம்மைப்பெற்றாளுங் கொடிச்சியே*;* யாங்களும் புனங்காப்போஞ்சிலர்*;* நீ வரைவு வேண்டாமையின் எம்மைப் புனைந்துரைக்கவேண்டுவதில்லையெனப்

பின்னும் வரைவு தோன்றத் தோழி தங்களுண்மை கூறாநிற்றல்.
அதற்குச் செய்யுள்
17.3. இன்மை யுரைத்த மன்ன னுக்கு
மாழை நோக்கி தோழி யுரைத்தது.

கடந்தொறும் வாரண வல்சியின்
நாடிப்பல் சீயங்கங்குல்
இடந்தொறும் பார்க்கும் இயவொரு
நீயெழில் வேலின்வந்தால்
படந்தொறுந் தீஅர வன்னம்
பலம்பணி யாரினெம்மைத்
தொடர்ந்தொறுந் துன்பென் பதேஅன்ப
நின்னருள் தோன்றுவதே. **#910**

இதன் பொருள்:

பல் சீயம் வாரண வல்சியின் நாடி பலவாகிய சீயம் வாரணமாகிய வல்சி காரணமாகத்தேடி; கங்குல் கடம் தொறும் இடம் பார்க்கும் இயவு கங்குற் பொழுதின்கட் காடுக டோறுங் காட்டினிடங்கடோறுஞ் சென்று பார்க்கு நெறியின்கண்; ஒரு நீ எழில் வேலின் வந்தால் தனியையாகிய நீ எழிலையுடைய வேல் துணையாக வந்தால்; அன்ப அன்பனே; நின் அருள் எம்மைத் தொடர்ந்து ஒறும் துன்பு என்பதே தோன்றுவது எம்மிடத்துண்டாகிய நின்னருள் எம்மைவிடாதே தொடர்ந்தொறுக்குந் துன்பமென்னு முணர்வே எமக்குத் தோன்றுவது எ - று.
படம் தொறும் தீ அரவன் அம்பலம் பணியாரின் எம்மை ஒறும் படந்தொறுமுண்டாகிய தீயையுடைய அரவை யணிந்தவன தம்பலத்தைப் பணியாதாரைப் போல வருந்த எம்மை யொறுக்கு மெனக்கூட்டுக.
என்றது, எமக்கு நீ செய்யுந் தலையளியை யாங்கள் துன்பமாகவே யுணராநின்றோம் என்றவாறு. நாடுதல் மனத்தா லாராய்தல். பார்த்தல் கண்ணா னோக்குதல். வேலினென்னு மைந்தாவது ஏதுவின்கண் வந்தது. ஒறுக்குமென்பது ஒறுமென விடைக் குறைந்து நின்றது. எம்மை நீ விடாது தொடருந்தொறு மெனினுமமையும். இதற்குத் தொடரு மென்பது இடைக்குறைந்து நின்றது. நின்னரு ளென்னு மெழுவாய் துன்பமென்னும் பயனிலை கொண்டது. மெய்ப்பாடு: அச்சம். பயன்: இரவுக்குறிய தேதங்காட்டி வரைவு கடாதல். 253

விளக்கவுரை

17.4 ஏதங்கூறியிரவரவுவிலக்கல் ஏதங்கூறியிரவரவுவிலக்கல் என்பது உண்மையுரைத்து வரைவுகடாய தோழி, நீ வரைவொடு வாராயாயிற் சிங்கந் திர ண்டு தனக்கியானையாகிய வுணவுகளைத்தேடு

மிருளின்கண், நினது கைவேல் துணையாக நீவந்தருளாநின்ற விஃதே எங்களுக்குத் துன்பமாகத் தோன்றாநின்றது; இனியிவ்விருளிடை வாரா தொழிவாயென ஏதங்கூறித் தலைமகனை யிரவரவு விலக்கா நிற்றல்.
அதற்குச் செய்யுள்
17.4. இரவரு துயரம் ஏந்தலுக் கெண்ணிப்
பருவர லெய்திப் பாங்கி பகர்ந்தது.

களிறுற்ற செல்லல் களைவயிற்
பெண்மரங் கைஞ்ஞெமிர்த்துப்
பிளிறுற்ற வானப் பெருவரை
நாட பெடைநடையோ
டொளிறுற்ற மேனியன் சிற்றம்
பலம்நெஞ் சுறாதவர்போல்
வெளிறுற்ற வான்பழி யாம்பகன்
நீசெய்யும் மெய்யருளே. **#911**

இதன் பொருள்:
களிறு உற்ற செல்லல் பெண் களைவயின் அசும்பின்கட்பட்டுக் களிறுற்ற வருத்தத்தைப் பிடி தீர்க்கின்ற விடத்து; மரம் கைஞ் ஞெமிர்த்துப் பிளிறு உற்ற வானப் பெருவரை நாட மரத்தைக் கையான் முறித்துப் பிளிறுதலை யுற்ற வானத்தைத்தோயும் பெரியவரையையுடைய நாடனே; பெடை நடையோடு ஒளிறு உற்ற மேனியன் சிற்றம்பலம் நெஞ்சு உறாதவர் போல் அன்னப்பெடை யினது நடைபோலு நடையையுடையாளொடுகூடி விளங்குதலை யுற்ற மேனியையுடையவனது சிற்றம்பலத்தை நெஞ்சா லுறாதாரைப் போல யாமிடர்ப்பட; வெளிறு உற்ற வான் பழியாம் வெளிப் படுதலையுற்ற பெரிய பழியாகாநின்றது; நீ பகல் செய்யும் மெய் அருள் நீ பகல்வந்து எமக்குச் செய்யும் மெய்யாகியவருள் எ - று.
மெய்யருளென்றது மெய்யாக வருளுகின்றாயேனு மென்ற வாறு. வழியல்லாவழிச் சேறலான் அசும்பிற் பட்ட களிற்றினை வாங்குதற்குப் பிடி முயல்கின்றாற்போல, இவளை யெய்துதற் குபாயமல்லாத விவ்வொழுக்கத்தினை விரும்பு நின்னை இதனி னின்று மாற்றுதற்கு யான் முயலாநின்றேனென உள்ளுறை காண்க. மெய்ப்பாடு: அது. பயன்: பகற்குறிவிலக்கி வரைவு கடாதல். 254

விளக்கவுரை

17.5 பழிவரவுரைத்துப்பகல்வரவுவிலக்கல் பழிவரவுரைத்துப் பகல்வரவு விலக்கல் என்பது இவ்விருளிடை வாராதொழிகென்றது பகல்வரச் சொன்னவாறா மென வுட்கொண்டு, பகற்குறிச் சென்று நிற்ப, தோழி யெதிர்ப்பட் டுப் பகல் வந்து எமக்குச் செய்யாநின்ற மெய்யாகியவருள்

புறத்தாரறிந்து வெளிப்பட்டுப் பழியாகப் புகுதாநின்றது; இனிப் பகல்வர வொழிவாயாகவெனப் பழிவருதல் கூறிப் பகல் வரவு விலக்காநிற்றல். அதற்குச் செய்யுள்

17.5. ஆங்ஙனம் ஒழுகும் அடல்வே லண்ணலைப் பாங்கி ஐய பகல்வர லென்றது.

கழிகட் டலைமலை வோன்புலி
யூர்கரு தாதவர்போல்
குழிகட் களிறு வெரீஇஅரி
யாளி குழீஇவழங்காக்
கழிகட் டிரவின் வரல்கழல்
கைதொழு தேயிரந்தேன்
பொழிகட் புயலின் மயிலின்
துவளு மிவள்பொருட்டே. **#912**

இதன் பொருள்:

பொழிகட் புயலின் மயிலின் துவளும் இவள் பொருட்டு பொழியாநின்ற கண்ணிற் புனலையுடையதோர் மயில்போலத் துவளாநின்ற விவள் காரணமாக; அரியாளி வெரீஇ அரியையும் யாளியையும் வெருவி; குழி கண் களிறு குழிந்த கண்ணை யுடையவாகிய யானைகள்; குழீஇ ஓரிடத்தே திரண்டு நின்று; வழங்கா அவ்விடத்து நின்றும் புடைபெயராத; கழி கட்டிரவின் வரல் சிறந்த வச்சத்தைச் செய்யு மிரவின்கண் வாரா தொழிவாயாக; கழல் கை தொழுது இரந்தேன் நின்கழல்களைக் கையாற்றொழுது நின்னையிரந்தே னிதனை எ - று. கழி கண் தலை மலைவோன் புலியூர் கருதாதவர் போல் வெரீஇ கழிந்த கண்ணையுடைய தலைமாலையைச் சூடுவோனது புலியூரைக் கருதாதாரைப்போல வெருவியெனக்கூட்டுக.

குழிவழங்காவென்று பாடமோதி, அரியையும் யாளியையுங் குழியையும் வெருவி வழங்காவென்றுரைப்பாருமுளர். கழி அச்சத் தைச்செய்யு மியல்பாற் சிறத்தல். கழிகட்டி ரவினென்பதற்குக் கழி சிறப்பின்கண் வந்து அரையிரவின்கணென்பது பட நின்றதெனினு மமையும். பொழிகட் புயலின் மயிலிற் றுவளு மென்றதனால், இவ் வாறிவளாற்றாளெனினும் நீ வரற்பாலையல்லையென்று கூறி வரைவு கடாவினாளாம். வழியிடை வரு மேதங் குறித்து இவ்வாறாகின்ற விவள்பொருட்டென் றுரைப்பினுமமையும். கருதார் மனம்போல் என்பது பாடமாயின், மனம்போலுங் கழிகட்டிரவெனவியையும். மெய்ப்பாடு: அது. பயன்: இரவுக்குறிவிலக்கி வரைவு கடாதல். 255

விளக்கவுரை

17.6 தொழுதிரந்துகூறல் தொழுதிரந்து கூறல் என்பது பகல்வரவு

விலக்கின தோழி, இவனிரவுவரவுங் கூடுமென வுட்கொண்டு, நின்னை யெதிர்ப்பட வேண்டி அழுது வருந்தாநின்ற இவள் காரணமாக, அரிக்கும் யாளிக்கும் வெருவி யானைகள் திரண்டு புடைபெயராத மிக்க விருளின்கண் வாராதொழிவாயாக வென்று, நின் கழல்களைக் கையாற்றொழுது, நின்னை யிரந்தேனென வரைவு தோன்றத் தலைமகனைத் தொழுதிரந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

17.6. இரவரவின் ஏதமஞ்சிச்
சுரிதருகுழற் றோழிசொல்லியது.

விண்ணுஞ் செலவறி யாவெறி
யார்கழல் வீழ்சடைத்தீ
வண்ணன் சிவன்தில்லை மல்லெழிற்
கானல் அரையிரவின்
அண்ணல் மணிநெடுந் தேர்வந்த
துண்டா மெனச்சிறிது
கண்ணுஞ் சிவந்தன்னை யென்னையும்
நோக்கினள் கார்மயிலே. **9; #913**

இதன் பொருள்:

கார் மயிலே கார்காலத்து மயிலை யொப்பாய்; தில்லை மல் எழில் கானல் தில்லையில் வளவிய வெழிலையுடைய கானலிடத்து; அரை இரவின் மணி அண்ணல் நெடுந் தேர் வந்தது உண்டாம் என அரையிரவின்கண் மணிகளை யுடைய தலையாய தொரு நெடுந்தேர் வந்ததுண்டாகக்கூடுமென வுட்கொண்டு; அன்னை சிறிது கண்ணும் சிவந்து அன்னை சிறிதே கண்ணுஞ்சிவந்து; என்னையும் நோக்கினள் என்னையும் பார்த்தனள்; இருந்த வாற்றான் இவ்வொழுக்கத்தினை யறிந்தாள் போலும்! எ - று.

விண்ணும் செலவு அறியா விண்ணுளாரானும் எல்லாப் பொருளையுங் கடந்தப்பாற்சென்ற செலவையறியப்படாத; வெறி ஆர் கழல் வீழ் சடைத் தீ வண்ணன் நறு நாற்றமார்ந்த கழலினையுந் தாழ்ந்த சடையினையுமுடைய தீவண்ணன்; சிவன் சிவன்; தில்லை- அவனது தில்லையெனக் கூட்டுக.

எல்லாப் பொருளையுங்கடந்து நின்றனவாயினும், அன்பர்க் கணியவாய் அவரிட்ட நறுமலரான் வெறிகமழுமென்பது போதர வெறியார் கழ லென்றார். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: படைத்து மொழியால் வரைவுகடாதல். 256

விளக்கவுரை

17.7 தாயறிவுகூறல் தாயறிவு கூறல் என்பது தொழுதிரந்து கூறவும், வேட்கை மிகவாற் பின்னுங் குறியிடைச்சென்று நிற்ப, அக்குறிப்பறிந்து,

நங்கானலிடத்து அரையிரவின்கண் ஒரு தேர்வந்த துண்டாகக் கூடுமெனவுட்கொண்டு, அன்னை சிறிதே கண்ணுஞ்சிவந்து என்னையும் பார்த்தாள்; இருந்தவாற்றான் இவ்வொழுக்கத்தை யறிந்தாள்போலுமெனத் தோழி தலைமகளுக்குக் கூறுவாள் போன்று சிறைப்புறமாகத் தலைமகனுக்கு வரைவுதோன்றத் தாயறிவு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

17.7. சிறைப்பு றத்துச் செம்மல் கேட்ப
வெறிக்குழற் பாங்கி மெல்லியற் குரைத்தது.

வான்றோய் பொழிலெழின் மாங்கனி
மந்தியின் வாய்க்கடுவன்
தேன்றோய்த் தருத்தி மகிழ்வகண்
டாள்திரு நீள்முடிமேல்
மீன்றோய் புனற்பெண்ணை வைத்துடை
யாளையும் மேனிவைத்தான்
வான்றோய் மதில்தில்லை மாநகர்
போலும் வரிவளையே. **9; #914**

இதன் பொருள்:

நீள் திருமுடிமேல் மீன் தோய் புனல் பெண்ணை வைத்து நீண்ட திருமுடிக்கண் மீனைப்பொருந்திய புனலாகிய பெண்ணை வைத்து; உடையாளையும் மேனி வைத்தான் வான் தோய் மதில் தில்லை மாநகர் போலும் வரிவளை எல்லாவற்றையு முடையவளையுந் திருமேனிக்கண் வைத்தவனது வானைத்தோயு மதிலையுடைய தில்லையாகிய பெரியநகரை யொக்கும் வரிவளை; வான் தோய் பொழில் எழில் மாங்கனி வானைத் தோயும் பொழிலின் கணுண்டாகிய நல்லமாங்கனியை; கடுவன் தேன் தோய்த்து மந்தியின் வாய் அருத்தி மகிழ்வ கண்டாள் கடுவன் தேனின் கட்டோய்த்து மந்தியின்வாய்க் கொடுத்து நுகர்வித்துத் தம்மு ளின்புறுமவற்றைக் கண்டாள் எ - று. என்றதனால், துணைபுறங் காக்குங் கடுவனைக்கண்டு, விலங்குகளுமிவ்வாறு செய்யாநின்றன; இது நங்காதலர்க்கு நம் மாட்டரிதாயிற்றென நீ வரையாமையை நினைந்தாற்றாளாயினா ளென்றாளாம். அருத்தி என்பதற்கு நெடுஞ் சுரநீந்தி (தி.8 கோவை பா. 247) என்றதற் குரைத்ததுரைக்க. கான்றோய் பொழிலென்பதூஉம் பாடம். வரிவளையை வரைவு - வரிவளையை வரைதல். மெய்ப்பாடு: அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்: வரைவுகடாதல். 257

விளக்கவுரை

17.8 மந்திமேல்வைத்து வரைவுகடாதல் மந்திமேல்வைத்து வரைவுகடாதல் என்பது சிறைப்புறமா கத் தாயறிவுகூறிச்

சென்றெதிர்ப்பட்டு, ஒரு கடுவன் றன்மந்திக்கு மாங்கனியைத் தேனின்கட்டோய்த்துக் கொடுத்து நுகர்வித்துத் தம்முளின்புறுவதுகண்டு, இது நங்காதலர்க்கு நம்மாட்டரிதாயிற் றென நீ வரையாமையை நினைந்தாற்றாளாயினாளென மந்தி மேல் வைத்துத் தலைமகளது வருத்தங்கூறி வரைவு கடாவா நிற்றல். அதற்குச் செய்யுள்
17.8. வரிவளையை வரைவுகடாவி
அரிவைதோழி உரைபகர்ந்தது.

நறைக்கண் மலிகொன்றை யோன்நின்று
நாடக மாடுதில்லைச்
சிறைக்கண் மலிபுனற் சீர்நகர்
காக்குஞ்செவ் வேலிளைஞர்
பறைக்கண் படும்படுந் தோறும்
படாமுலைப் பைந்தொடியாள்
கறைக்கண் மலிகதிர் வேற்கண்
படாது கலங்கினவே. **#915**

இதன் பொருள்:
நறை கள் மலி கொன்றையோன் நறு நாற்றத்தையுடைய தேன்மலிந்த கொன்றையையுடையவன்; நின்று நாடகம் ஆடு தில்லைச் சிறைக்கண் நின்று கூத்தாடுந் தில்லையாகிய சிறையிடத்து; மலி புனல் சீர் நகர் காக்கும் அது பொறாமன் மிகும்புனலையுடைய சீரியநகரை இராப்பொழுதின்கட் காக்கும்; செவ்வேல் இளைஞர் பறைக்கண் படும் படும் தோறும் செவ்வேலை யுடைய இறைஞரது பறைக்கண் படுந்தோறும் படுந்தோறும்; படா முலைப் பைந்தொடியாள் படக்கடவவல்லாத முலையையுடைய பைந்தொடியாளுடைய; கறை கண் மலி கதிர் வேற் கண் கறை தன்கண் மிக்க கதிர்வேல் போலுங்கண்கள்; படாது கலங்கின ஒரு காலும் படாவாய் வருந்தின எ-று.
நாடகமென்றது ஈண்டுக் கூத்தென்னுந் துணையாய் நின்றது. கலங்கினவென்பதற்குத் துயிலாமையான் நிறம்பெயர்ந்தன வென்றும் அழுதுகலங்கினவென்று முரைப்பாருமுளர். காவன்மிகுதியும் அவளதாற்றாமையுங்கூறி வரைவுகடாயவாறு. இஃதின்னார் கூற்றென்னாது துறை கூறிய கருத்து. மெய்ப்பாடு: அழுகை. பயன்: வரைவுகடாதல். 258

விளக்கவுரை

17.9 காவன்மேல்வைத்துக் கண்டுயிலாமைகூறல் காவன்மேல்வைத்துக் கண்டுயிலாமை கூறல் என்பது மந்திமேல்வைத்து வரைவுகடாவப்பட்ட தலைமகன், இது நங்காதலி யிடத்து நமக்கரிதாயிற்றெனத்

தானுமாற்றானாய், இரவுக்குறிச் சென்று நிற்ப, அந்நிலைமைக்கண் இவ்விடத்துள் ளார், இவள் காவற்பறை கேட்குந் தோறுங் கண்டுயிலாமைக்குக் காரணமென்னோவெனத் தம்முட் கூறாநிற்றல். இதுவுஞ் சிறைப் புறமாக வரைவுகடாதலைப் பயக்கும். அதற்குச் செய்யுள்

17.9. நகர் காவலின்
மிகுகழி காதல்.

கலரா யினர்நினை யாத்தில்லை
அம்பலத் தான்கழற்கன்
பிலரா யினர்வினை போலிருள்
தூங்கி முழங்கிமின்னிப்
புலரா இரவும் பொழியா
மழையும்புண் ணில்நுழைவேல்
மலரா வரும்மருந் தும்மில்லை
யோநும் வரையிடத்தே. **#916**

இதன் பொருள்:

கலர் ஆயினர் நினையாத் தில்லை அம்பலத்தான் கழற்கு தீமக்களாயுள்ளார் கருதாத தில்லையம்பலத்தா னுடைய திருவடிகட்கு; அன்பு இலர் ஆயினர் வினைபோல் இருள் தூங்கிப் புலரா இரவும் அன்புடையரல்லாதாரது தீவினை போல இருள் செறிந்து புலராதவிரவும்; மின்னி முழங்கிப் பொழியா மழையும் மின்னி முழங்கிப் பொழிவது போன்று பொழியாத மழையும்; புண்ணில் நுழை வேல் மலரா வரும் எமக்குப் புண்ணின்க ணுழையும்வேல் மலராம்வண்ணங் கொடியவாய் வாராநின்றன; மருந்தும் இல்லையோ நும் வரையிடத்து இதற்கொரு மருந்து மில்லையோ நும்வரையிடத்து! எ - று. மருந்தென்றமையான் வரையிடத்தென்றாள். ஒரு நிலத்துத் தலைமகனாதலின், நும்வரையாகிய இவ்விடத்திதற்கோர் மருந் தில்லையோவென ஓருலக வழக்காகவுரைப்பினுமமையும். வருத்துதலேயன்றித் தணித்தலு முண்டோவென்பதுபட நின்றமையின், மருந்து மென்னுமும்மை: எச்சவும்மை. இரவின்கண் வந்தொழுகா நிற்பவும், இரவுறு துயரந் தீர்க்கு மருந்தில்லையோ வென்று கூறினமையான், வரைவல்லது இவ்வாறொழுகுதல் அதற்கு மருந்தன்றென்று கூறினாளாம். மெய்ப்பாடு: அழுகை. பயன்: இரவுக்குறி விலக்குதல். 259

விளக்கவுரை

17.10 பகலுடம்பட்டாள் போன்று இரவரவுவிலக்கல் பகலுடம்பட்டாள் போன்று இரவரவு விலக்கல் என்பது சிறைப்புறமாகக்

கண்டுயிலாமைகேட்ட தலைமகன், ஆதரவு மிகவாலெதிர்ப்படலுற்றுநிற்பத் தோழி யெதிர்ப்பட்டு, நீவந் தொழுகா நின்ற இப் புலராவிரவும் பொழியாமழையும் புண்ணின்க ணுழையும் வேல்மலராம்படியெங்களை வருத்தா நின்றன; இதற்கொரு மருந்தில்லையோ நும்வரையிடத்தெனப் பகலுடம்பட்டாள் போன்றிர வரவு விலக்காநிற்றல். அதற்குச் செய்யுள்

17.10. விரைதரு தாரோய்
இரவர லென்றது.

இறவரை உம்பர்க் கடவுட்
பராய்நின் றெழிலியுன்னிக்
குறவரை ஆர்க்குங் குளிர்வரை
நாட கொழும்பவள
நிறவரை மேனியன் சிற்றம்
பலம்நெஞ் சுறாதவர்போல்
உறவரை மேகலை யாட்கல
ராம்பக லுன்னருளே. **#917**

இதன் பொருள்:

இற தொடர்ந்து பெய்யாதிறுதலான்; எழிலி உன்னி எழிலிபெய்தலை நினைந்து; வரை உம்பர்க் கடவுள் பராய்- மலைமேலுறையுந் தெய்வங்களைப் பராவி; குறவர் நின்று ஆர்க்கும் குளிர் வரை நாட குறவர் நின்றார்ப்பரவஞ்செய்யுங் குளிர்ந்த வரைமே லுண்டாகிய நாட்டை யுடையாய்; கொழும் பவள நிறவரை மேனியன் சிற்றம்பலம் நெஞ்சு உறாதவர் போல் உற கொழுவிய பவளமாகிய நிறத்தையுடைய வரை போலுந் திருமேனியை யுடையவனது சிற்றம்பலத்தை நினையாதவரைப்போல வருந்த; அரை மேகலையாட்குப் பகல் உன் அருள் அலராம் அரைக்கணிந்த மேகலையையுடையாட்குப் பகலுண்டாமுனதருள் மிக்க வலராகா நின்றது; அதனானீவாரல் எ - று. குறவரையென்புழி, ஐகாரம்; அசைநிலை. அசைநிலை யென்னாது குறமலையென் றுரைப்பாரு முளர். வரையையுடைய நாடெனினு மமையும். குறவர் பரவும் பருவத்துத் தெய்வத்தைப் பரவாது, பின் மழை மறுத்தலா னிடர்ப்பட்டு அதனை முயல்கின்றாற் போல, நீயும் வரையுங்காலத்து வரையாது, இவளை யெய்துதற்கரி தாகியவிடத்துத் துன்புற்று வரைய முயல்வையென உள்ளுறை காண்க.

'உள்ளுறை தெய்வ மொழிந்ததை நிலனெனக்
கொள்ளு மென்ப குறியறிந் தோரே'

(தொல். அகத்திணையியல் - 50) என்பவாகலிற் றெய்வத்தை நீக்கி யுவமைகொள்க. மெய்ப்பாடு: அது. பயன்: பகற்குறி விலக்குதல்.260

விளக்கவுரை

17.11 இரவுடம்பட்டாள்போன்றுபகல்வரவு விலக்கல் இரவுடம் பட்டாள்போன்று பகல்வரவு விலக்கல் என்பது இவள் மருந்தில்லையோவென்றது, யான் இரவுக்குறிச்செல்லின் மழைக்காலிருளானெதிர்ப்படலருமையான் வேட்கை யுற்றுப் பகற்குறி யுடம்பட்டாளென வுட்கொண்டு, பகற்குறிச் செல்லா நிற்ப, தோழி யெதிர்ப்பட்டு, பகல்வந்தருளாநின்றது அவளுக்கு வருத்தமுறும் படியாக மிக்க வலராகாநின்றது; அதனாற் பகற்குறி வரற்பாலை யல்லையென, இரவுக்குறி யுடம்பட்டாள் போன்று பகற்குறி விலக்காநிற்றல். அதற்குச் செய்யுள்

17.11. இகலடு வேலோய்
பகல்வர லென்றது.

சுழியா வருபெரு நீர்சென்னி
வைத்தென்னைத் தன்தொழும்பில்
கழியா அருள்வைத்த சிற்றம்
பலவன் கரந்தருமான்
விழியா வரும்புரி மென்குழ
லாள்திறத் தையமெய்யே
பழியாம் பகல்வரின் நீயிர
வேதும் பயனில்லையே. **#918**

இதன் பொருள்:

ஐய ஐயனே; நீ பகல் வரின் புரி மென்குழலாள் திறத்து மெய்யே பழியாம் நீ பகல்வரிற் சுருண்ட மெல்லிய குழலையுடையாடிறத்து மெய்யாகவே அலருண்டாம்; இரவு ஏதும் பயன் இல்லை இராவரின் எதிர்ப்படுத லருமையாற் சிறிதும் பயனில்லை; அதனான் நீயிருபொழுதும் வாரல் எ - று.

சுழியா வரு பெரு நீர் சென்னி வைத்து சுழியாநின்று வரும் பெரியநீரைச் சென்னியின்கண் வைத்து; தன் தொழும்பின் என்னைக் கழியா அருள் வைத்த தனக்குத் தொண்டுபடுதற்கண் என்னை நீங்காத தன்னருளான்வைத்த; சிற்றம்பலவன் கரம்தரும் மான் விழியா வரும் புரி மென்குழலாள் சிற்றம்பலவனது கரத்தின்கண் வைக்கப் பட்ட மான்போல விழித்துவரும் புரிமென்குழலாளெனக் கூட்டுக.

பரந்துவரும் பெரும்புனலை வேகந்தணித்துத் தன் சென்னியின்கண் வைத்தாற் போல நில்லாது பரக்கு நெஞ்சை யுடையேனைத் தன்னருட்க ணடக்கினானென்பது கருத்து. தன்றொழும்பினின்றும் யானீங்காமைக்குக் காரணமாகிய அருட்க ணென்னை வைத்தவனெனினு மமையும். மெய்ப்பாடு: அது. பயன்: இரவுக் குறியும்

பகற்குறியும் விலக்கி வரைவுகடாதல். 261

விளக்கவுரை

17.12 இரவும்பகலும் வரவுவிலக்கல் இரவும்பகலும் வரவுவிலக்கல் என்பது இரவுடம்பட்டாள் போன்று பகல்வரவு விலக்கின தோழி, நீ பகல்வரின் அலர்மிகுதி யானெங்களுக்கு மிக்கபழி வந்தெய்தும்; இராவரின் எவ்வாற் றானு நின்னை யெதிர்ப்படுதலருமையாற் சிறிதும் பயனில்லை; அதனால் நீ யிருபொழுதும் வரற்பாலையல்லையென இரவும் பகலும் வரவு விலக்காநிற்றல். அதற்குச் செய்யுள்

17.12. இரவும் பகலும்
வரவொழி கென்றது.

மையார் கதலி வனத்து
வருக்கைப் பழம்விழுதேன்
எய்யா தயின்றிள மந்திகள்
சோரும் இருஞ்சிலம்பா
மெய்யா அரியதெ னம்பலத்
தான்மதி யூர்கொள்வெற்பின்
மொய்யார் வளரிள வேங்கைபொன்
மாலையின் முன்னினவே. **#919**

இதன் பொருள்:

மை ஆர் கதலி வனத்து வருக்கைப் பழம் விழுதேன் இருளார்ந்த வாழைக்காட்டின்கண் வருக்கைப்பலாவின் பழம்விழுதலா னுண்டாகியதேனை; இள மந்திகள் எய்யாது அயின்று சோரும் இருஞ் சிலம்பா இளையமந்திகளறியாதே யுண்டு பின் களியாற் சோரும் பெரிய சிலம்பையுடையாய்; மதி ஊர்கொள் மதி நிரம்பாநின்றது; அம்பலத்தான் வெற்பின் அம்பலத்தானுடைய இவ்வெற்பின்கண்; மொய் ஆர் வளர் இளவேங்கை பொன் மாலையின் முன்னின செறிவார்ந்த வளராநின்ற விளைய வேங்கைகள் பூத்துப் பொன்மாலைபோலத் தோன்றின; மெய்யா அரியது என் இனி மெய்யாக வுனக்கரிய தியாது! எ - று. கதலிவனத்துண்டாகிய தேனென்றதனாற் கதலிக்கனியொடு கூடுதல் பெற்றாம். ஊர்கோடல் குறைவின்றி மண்டலமாக வொளிபரத்தல். அல்லதூஉம் பரிவேடித்தலெனினுமமையும். நின்மலைக்கண் விலங்குகளு மித்தன்மைத்தாகிய தேனைக் குறியாதுண்டு இன்புறாநின்றனவாகலிற் குறித்தவற்றினினக்கரிய தியாது இதுவன்றோ பருவமுமென வரைவு பயப்பக் கூறியவாறாயிற்று. மந்திகடேருமென்பது பாடமாயின், தேனை யறியாதுண்டு அதன் சுவை மிகுதியாற் பின்னதனைத் தேர்ந்துணரு மென்றுரைக்க. வேட்ட பொருள் உள்ளத்து முற்பட்டுத் தோன்றுதலின், வரைவை

முந்தியபொருளென்றாள். வரைதருகிளவி வரையுங் கிளவி. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: வரைவுகடாதல். 262

விளக்கவுரை

17.13 காலங்கூறி வரைவுகடாதல் காலங்கூறி வரைவுகடாதல் என்பது இருபொழுதும் வரவு விலக்கின தோழி, மதி நிரம்பாநின்றது; வேங்கை பூவாநின்றன; இனி நினக்கு வரைவொடு வருதற்குக் காலமிதுவெனக் காலங்கூறி வரைவு கடாவாநிற்றல். அதற்குச் செய்யுள்

17.13. முந்திய பொருளைச் சிந்தையில் வைத்து
வரைதரு கிளவியில் தெரிய வுரைத்தது.

தேமாம் பொழிற்றில்லைச் சிற்றம்
பலத்துவிண் ணோர்வணங்க
நாமா தரிக்க நடம்பயில்
வோனைநண் ணாதவரின்
வாமாண் கலைசெல்ல நின்றார்
கிடந்தநம் அல்லல்கண்டால்
தாமா அறிகில ராயினென்
னாஞ்சொல்லுந் தன்மைகளே. **#920**

இதன் பொருள்:

தேமாம் பொழில் தில்லைச் சிற்றம்பலத்து தேமாம் பொழிலையுடைய தில்லைச் சிற்றம்பலத்தின்கண்; விண்ணோர் வணங்க நாம் ஆதரிக்க நடம் பயில்வோனை நண்ணாதவரின் விண்ணோர்வணங்கவும் நாம் விரும்பவுங் கூத்தைச் செய்வானைச் சேராதாரைப்போல வருந்த; வாம் மாண்கலை செல்ல நின்றார் கிடந்த நம் அல்லல் கண்டால் அழகு மாட்சிமைப்பட்ட மேகலை கழலும் வண்ணங் கண்டு தலையளி செய்யாது நின்றவர் பெருகிக் கிடந்த நம்மல்லலைக்கண்டால்; தாமா அறிகிலர் ஆயின் நம்மாற் றலையளிக்கப்படுவார் இவ்வாறு வருந்துதறகாதென்று தாமாகவறிகின்றிலராயின்; நாம் சொல்லும் தன்மைகள் என் நாஞ்சொல்லுமியல்புகளென்! எ - று.

வாமம் வாமென விடைக் குறைந்து நின்றது. அலரான்வரு நாணினையுங், காணாமையான் வருமாற்றாமையையும் பற்றிக் கிடந்த நம்மல்லலென்றாள். ஒத்ததொவ்வா தென்பதனை ஒத்து மொவ்வாம லெனத் திரிக்க. அஃதாவது இராவருதலுடம்பட்டாள் போன்று பகல்வார லென்றலும், பகல்வருத லுடம்பட்டாள் போன்று இராவார லென்றலும், பின் இருபொழுதைய மறுத்தலும். 263

விளக்கவுரை

17.14 கூறுவிக்குற்றல் கூறுவிக்குற்றல் என்பது காலங் கூறி வரைவு

கடாவவும் வரைவுடம்படாமையின் அவடன்னைக் கொண்டே கூறுவிப் பாளாக, அலரான் வருநாணினையுங் காணாமையான் வருமாற் றாமையையும் பற்றிக் கிடந்த நம்மல்லலை நம்மாற் றலையளிக் கப்படுவார் இவ்வாறு வருந்துத றகாதெனத் தாமாகவறி கின்றிலராயின் நாஞ்சொல்லுந் தன்மைகளென்னோவெனப் புலந்து, நீயாகிலுஞ்சென்று கூறென்பது குறிப்பாற்றோன்றத் தலைமகன் வரைவுடம்படாமையைத் தோழி தலைமகட்குக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

17.14. ஒத்த தொவ்வா துரைத்த தோழி
கொத்தவிழ் கோதையாற் கூறுவிக் குற்றது.

வல்சியி னெண்கு வளர்புற்
றகழமல் கும்மிருள்வாய்ச்
செல்வரி தன்றுமன் சிற்றம்
பலவரைச் சேரலர்போற்
கொல்கரி சீயங் குறுகா
வகைபிடி தானிடைச்செல்
கல்லத ரென்வந்த வாறென்
பவர்ப்பெறிற் கார்மயிலே. **#921**

இதன் பொருள்:

கார் மயிலே கார்காலத்து மயிலை யொப்பாய்; சிற்றம்பலவரைச் சேரலர் போல் சிற்றம்பலவரைச் சேராதாரைப் போல வருந்த; சீயம் கொல் கரி குறுகாவகை பிடி தான் இடைச் செல் கல்லதர் சீயங் கொல்கரியைச் சென்றணையாத வண்ணம் பிடி தானிரண்டற்கு மிடையே சென்று புகுங் கல்லதரின்கண்; வந்தவாறு என் என்பவர்ப் பெறின் நீர் வந்தவா றெங்ஙனேயென்று சொல்லுவாரைப் பெற்றேமாயின்; வல்சியின் எண்கு வளர்புற்று அகழ மல்கும் இருள்வாய் குரும்பியாகிய வுணவுகாரணமாகக் கரடி உயர்ந்த புற்றை யகழாநிற்ப மிகாநின்ற விருளின்கண்; செல்வு அரிதன்று மன் அவரிருந்த வழிச்சேறலரிதன்று; சென்றேமாயினும் அவ்வாறு சொல்லுவாரில்லை எ - று. செல்வரிதென்பது செல்வுழிக்க ணென்பதுபோல மெய்யீற்றுடம் படுமெய். செல்லவென்பது கடைக்குறைந்து நின்றதெனினுமமையும். மன்: ஒழியிசைக்கண் வந்தது. கல்லதர் கற்கண்ணதர். கல்லதரி னென்பது பாடமாயின், வந்தவாறென்னென ஒருசொல் வருவித் துரைக்க. பணிமொழி மொழிந்தென்பதனை மொழியவெனத் திரித்து, சிறைப்புறக்கிளவி யாயிற்றெனவொருசொல் வருவித்துரைக்க. சிறைப் புறக் கிளவி யாயிற்றெனவே, சிறைப்புற மாதல் குறித்தாளல்ல ளென்பது பெற்றாம். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு: அழுகையைச் சார்ந்த விளிவரல். பயன்: அது. 9; 264

விளக்கவுரை

17.15 செலவுநினைந்துரைத்தல் செலவுநினைந் துரைத்தல் என்பது வரைவுடம்படாமையிற் றோழி தலைமகனோடு புலந்து கூறக்கேட்டு, அக்குறிப்பறிந்து, இக்கல்லதரின்க ணீர்வந்தவா றென்னோவென்று வினவுவாரைப் பெற்றேமாயின் இத்தன்மையையுடைத்தாகிய மிக்க விருளின்கண் யாமவருழைச்சேறலரிதன்று; சென்றேமாயினும் அவ்வாறு சொல்வா ரில்லையெனத் தலைமகள் செலவுநினைந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

17.15. பாங்கி நெருங்கப் பணிமொழி மொழிந்து
தேங்கமழ் சிலம்பற்குச் சிறைப்புறக் கிளவி.

வாரிக் களிற்றின் மருப்புகு
முத்தம் வரைமகளிர்
வேரிக் களிக்கும் விழுமலை
நாட விரிதிரையின்
நாரிக் களிக்கமர் நன்மாச்
சடைமுடி நம்பர்தில்லை
ஏரிக் களிக்கரு மஞ்ஞையிந்
நீர்மையென் னெய்துவதே. **#922**

இதன் பொருள்:

களிற்றின் மருப்பு உகு முத்தம் களிற்றின் மருப்புக்களினின்று முக்க முத்துக்களை; வரை மகளிர் வேரிக்கு வாரி அளிக்கும் விழுமலை நாட வரையின்வாழுமகளிர் வேரிக்கு விலையாக முகந்துகொடுக்குஞ் சிறந்த மலைக்கணுண்டாகிய நாட்டையுடையாய்; விரி திரையின் நாரிக்கு அளிக்க அமர் விரியுந் திரையையுடைய யாறாகிய பெண்ணிற்குக் கொடுத்தற்குப் பொருந்திய; நல் மாச் சடைமுடி நம்பர் தில்லை ஏர் இக்களிக் கரு மஞ்ஞை நல்ல பெரிய சடைமுடியையுடைய நம்பரது தில்லை யினுள்ளாகிய ஏரை யுடைய இக்களிக் கரு மஞ்ஞையை யொப்பாள்; இந்நீர்மை எய்துவதுஎன் தன்றன்மையை யிழந்து இத்தன்மையை யெய்துவதென்? நீயுரை எ - று.

மலையையுடைய நாடெனினுமமையும். விரிதிரையி னென்பது அல்வழிச்சாரியை. விரிதிரையையுடைய நாரியெனினு மமையும். நாரிக்களித்தம ரென்பது பாடமாயின், நாரிக்களித்தலான் அவளமருஞ்சடை யென்றுரைக்க. களிக்கரு மஞ்ஞை களியை யுடைய கரிய மஞ்ஞை. அணைதற்கரிய களிற்றின் மருப்பினின்று முக்க முத்தத்தின தருமையைக் கருதாது தமக்கின்பஞ் செய்யும் வேரிக்குக் கொடுத்தாற் போல, என்னையரது காவலை நீவி நின்வயத்தளாகிய விவளதருமை கருதாது நினக்கின்பஞ் செய்யுங் களவொழுக்கங்

காரணமாக இகழ்ந்து மதித்தாயென உள்ளுறை காண்க. மெய்ப்பாடும் பயனும் அவை. ; 265

விளக்கவுரை

17.16 பொலிவழிவுரைத்துவரைவுகடாதல் பொலிவழிவுரைத்து வரைவுகடாதல் என்பது தலைமகள் தன்னை யெதிர்ப்படலுற்று வருந்தாநின்றமை சிறைப்புறமாகக் கேட்ட தலைமகன் குறியிடைவந்து நிற்ப, தோழி யெதிர்ப்பட்டு, என்னையரது காவலை நீவி நின்வயத்தளாய் நின்று பொலிவழிந்து வருந்தா நின்றவளை நீ வரைந்துகொள்ளாது இவ்வாறிகழ்ந்து மதித்தற்குக் காரணமென்னோவெனத் தலைமகளது பொலிவழிவு கூறி வரைவு கடாவாநிற்றல். அதற்குச் செய்யுள்

17.16. வரைவு விரும்பு மன்னுயிர்ப் பாங்கி
விரைதரு குழலி மெலிவு ரைத்தது.

2.18.வரைபொருட்பிரிதல்

குறைவிற்குங் கல்விக்குஞ் செல்விற்கும்
நின்குலத் திற்கும்வந்தோர்
நிறைவிற்கும் மேதகு நீதிக்கும்
ஏற்பின்அல் லால்நினையின்
இறைவிற் குலாவரை யேந்திவண்
தில்லையன் ஏழ்பொழிலும்
உறைவிற் குலாநுத லாள்விலை
யோமெய்ம்மை யோதுநர்க்கே. **#923**

இதன் பொருள்:

குறைவிற்கும் வரைவுவேண்டி நீயெம் மாட்டுக் குறை யுடையையாய் நிற்குமதனானும்; கல்விக்கும் கல்வி மிகுதியானும்; செல்விற்கும் செல்வானும்; நின் குலத்திற்கும் தங்குலத்திற்கேற்ற நின்குலத்தானும்; வந்தோர் நிறைவிற்கும் நீ விடுக்க வந்த சான்றோரது நிறைவானும்; மேதகு நீதிக்கும் மேவுதற்குத் தகு நீதியானும்; ஏற்பின் அல்லால் நின்வரவை யெமரேற்றுக்கொளி னல்லது விலை கூறுவராயின்; நினையின் மெய்ம்மை ஓதுநர்க்கு ஆராயுமிடத்து மெய்ம்மை சொல்லு வார்க்கு; உறை வில் குலா நுதலாள் ஏழ்பொழிலும் விலையோ விற்போல வளைந்த நுதலை யுடையாட்கு ஏழுலகும் விலையாமோ! விலைக் குறையாம் எ-று.

இறை எல்லாப் பொருட்கு மிறைவன்; வில் குலா வரை ஏந்தி வில்லாகிய வளைதலையுடைய வரையை யேந்துவான்; வண் தில்லையன் வளவிய தில்லைக்கண்ணான்; ஏழ்பொழிலும் அவனுடைய ஏழ்பொழிலுமெனக்

கூட்டுக.

செல்வு இருமுதுகுரவராற் கொண்டாடப்படுதல். நிறைவு அறிவோடுகூடிய வொழுக்கம். நீதி உள்ளப்பொருத்த முள்வழி மறாது கொடுத்தல். உறைவிலென்பதற்கு உறையையுடைய வில்லெனினுமமையும். 266

விளக்கவுரை

18.1 முலைவிலை கூறல் முலைவிலை கூறல் என்பது வரைவு முடுக்கப்பட்ட தலைமகன், யான் வரைவொடு வருதற்கு நீ சென்று அவளையன் மாரை முலைவிலை கேட்பாயாகவென, எல்லாவற்றானு நின்வரவை எமரேற்றுக்கொளினல்லது விலை கூறுவராயின் அவளுக்கேழுலகும் விலைபோதாதெனத் தோழி முலைவிலை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.1. 9; கொலைவேற் கண்ணிக்கு விலையிலை யென்றது.

வடுத்தன நீள்வகிர்க் கண்ணிவெண்
ணித்தில வாள்நகைக்குத்
தொடுத்தன நீவிடுத் தெய்தத்
துணியென்னைத் தன்தொழும்பிற்
படுத்தநன் நீள்கழ லீசர்சிற்
றம்பலந் தாம்பணியார்க்
கடுத்தன தாம்வரிற் பொல்லா
திரவின்நின் னாரருளே. **#924**

இதன் பொருள்:

என்னைத் தன் தொழும்பிற் படுத்த நல்நீள் கழல் ஈசர் சிற்றம்பலம் என்னைத் தன்னடிமைக்கட்படுவித்த நல்ல நீண்ட கழலையுடைய வீசரது சிற்றம்பலத்தை; தாம் பணியார்க்கு அடுத்தன தாம் வரின் தாம் பணியாதார்க்குத் தக்கனவாகிய தீதுகள் உனக்கு வரக்கூடு மாயின்; இரவின் நின் ஆர் அருள் பொல்லாது இரவின் கணுண்டாகிய நின்னாரருள் எமக்குப் பொல்லாது; அதனான், வடுத்தன நீள் வகிர்க் கண்ணி வெண் நித்தில வாள் நகைக்கு வடுவனவாகிய நீண்ட வகிர்போலுங் கண்ணையுடை யாளது தூய முத்துப் போலு மொளியை யுடைய முறுவலுக்கு; தொடுத்தன நீ விடுத்து எய்தத் துணி எமராற் றொடுக்கப்பட்டன வாகிய பொருள்களை நீ வரவிட்டு வரைந்தெய்தத் துணிவாயாக எ - று.

நீள்வகிர்க் கண்ணியாகிய வெண்ணித்தில வாணகைக் கென்றுரைப்பினு மமையும். தொடுத்தன பலவாக வகுக்கப்பட்டன. படுத்தன நீள்கழலென்பதூஉம் பாடம். சிற்றம்பலந்தாம் பணியார்க் கடுத்தன தாம்

வருகையாவது கெர்ப்பம் வருகை. அடுத்தன தாம் வரினென்பதற்கு நீ வரினெமக்கடுத்தனதா முளவா மென்று பொருளுரைப்பாருமுளர். அடுத்தனதான் வரினென்பது பாட மாயின், தானென்பது அசைநிலை. இவை இரண்டிற்கும் மெய்ப் பாடு: பெருமிதம். பயன்: அது. 267

விளக்கவுரை

18.2 வருமதுகூறி வரைவுடம்படுத்தல் வருமது கூறி வரைவுடம்படுத்தல் என்பது முலைவிலை கூறிய தோழி, நீ வரைவொடு வாராது இரவருள் செய்யாநின்ற விதுகெர்ப்பத்துக் கேதுவானால் நம்மெல்லார்க்கும் பொல்லா தாம்; அது படாமல் எமராற் றொடுக்கப்பட்ட அருங்கலங்களை விரைய வரவிட்டு அவளை வரைந்தெய்துவாயாகவென மேல் வருமிடுக்கண் கூறித் தலைமகனை வரைவுடம்படுத்தாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.2. தொடுத்தன விடுத்துத் தோகைதோளெய் திடுக்கண்பெரி திரவரினென்றது.

குன்றங் கிடையுங் கடந்துமர்
கூறும் நிதிகொணர்ந்து
மின்றங் கிடைநும் மையும்வந்து
மேவுவன் அம்பலஞ்சேர்
மன்றங் கிடைமரு தேகம்பம்
வாஞ்சியம் அன்னபொன்னைச்
சென்றங் கிடைகொண்டு வாடா
வகைசெப்பு தேமொழியே. **#925**

இதன் பொருள்:

மின் தங்கு இடை மின்போலுமிடையை யுடையாய்; குன்றங் கிடையும் கடந்து இனிக் குன்றக்கிடப்புக்களை யுடைய சுரத்தையுங் கடந்துபோய்; உமர் கூறும் நிதி கொணர்ந்து நுமர்சொல்லு நிதியத்தைத் தேடிக்கொணர்ந்து; நும்மையும் வந்து மேவுவன் நும்மையும் வந்து மேவுவேன்; தேமொழியே தேமொழியினையுடையாய்; சென்று நீ சென்று; அம்பலம் சேர் மன் தங்கு அம்பலத்தைச் சேர்ந்த மன்னன்றங்கும்; இடைமருது ஏகம்பம் வாஞ்சியம் அன்ன பொன்னை இடைமருது ஏகம்பம் வாஞ்சிய மாகிய இவற்றை யொக்கும் பொன்னை; இடை கொண்டு வாடா வகை இடைகொண்டு வாடாத வண்ணம்; அங்குச் செப்பு அவ் விடத்துச் சொல்ல வேண்டுவன சொல்லுவாயாக எ - று.

குன்றக்கிடையென்பது மெலிந்து நின்றதெனினுமமையும். நும்வயி னென்பதூஉம் பாடம். எண்ணப்பட்டவற்றோடு படாது அம்பலஞ் சேர் மன்னனெனக் கறியவதனால், அம்பலமே யவர்க்கிட மாதல் கூறினார்.

இடைகொண் டென்புழி இடை காலம். மெய்ப்பாடு: அச்சத்தைச்சார்ந்த பெருமிதம். பயன்: வரைபொருட் பிரியுந் தலைமகன் ஆற்றுவித்தல். 268

விளக்கவுரை

18.3 வரைபொருட்பிரிவை யுரையெனக் கூறல் வரைபொருட்பிரிவை யுரையெனக் கூறல் என்பது மேல்வருமது கூறி வரைவுடம்படுத்தின தோழிக்கு, யான் போய் நுமர் கூறு நிதியமுந் தேடிக்கொண்டு நும்மையும் வந்து மேவுவேன்*;* நீ சென்று அவள் வாடாத வண்ணம் யான் பிரிந்தமை கூறி ஆற்றுவித்துக்கொண்டிருப்பாயாகவெனத் தலைமகன் றான் வரைபொருட்குப் பிரிகின்றமை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.3. ஆங்க வள்வயின் நீங்க லுற்றவன்
இன்னுயிர்த் தோழிக்கு முன்னி மொழிந்தது.

கேழே வரையுமில் லோன்புலி
யூர்ப்பயில் கிள்ளையன்ன
யாழேர் மொழியா ளிரவரி
னும்பகற் சேறியென்று
வாழே னெனவிருக் கும்வரிக்
கண்ணியை நீ வருட்டித்
தாழே னெனவிடைக் கட்சொல்லி
யேகு தனிவள்ளலே. **#926**

இதன் பொருள்:

தனி வள்ளலே ஒப்பில்லாத வள்ளலே; கேழ் ஏவரையும் இல்லோன் புலியூர்ப் பயில் கிள்ளை அன்ன யாழ் ஏர் மொழியாள் தனக்குவமையாக யாவரையுமுடையனல்லாதவனது புலியூர்க்கட்பயிலுங் கிளியையொக்கும் யாழோசைபோலு மொழியையுடையாள்; இரவரினும் பகல் சேறி என்று இரவினீவரினும் பகற்பிரிந்து செல்வையென்று அதனையே யுட்கொண்டு; வாழேன் என இருக்கும் வரிக் கண்ணியை நின்னோடுகூடிய வப்பொழுதும் யானுயிர்வாழேனென்று நினைந் திருக்கும் வரிக்கண்ணினை யுடையாளை; வருட்டி இடைக்கண் தாழேன் என நீ சொல்லி ஏகு வசமாக்கிப் பெற்றதோர் செவ்வியில் தாழேனென்னும் உரை முன்னாக நின்பிரிவை நீயே சொல்லி யேகுவாயாக எ - று.

கிளி மென்மையும் மென்மொழியுடைமையும்பற்றி, மென் மொழியையுடையாட் குவமையாய் வந்தது. யாழோசை செவிக் கினிதாதல் பற்றி மொழிக்குவமையாய் வந்தது. புலியூர்ப் பயிலுமொழியாளெனவியையும். வாழேனென விருக்கு மென்ப தனை முற்றாக்கி மொழியாளிவ்வாறு செய்யும். அவ்வரிக் கண்ணியை யென ஒரு சுட்டு வருவித்துரைப்பினுமமையும். வருடி வருட்டியென மிக்கு

நின்றது. வாழேனெனவிருக்கு மென்றதனான், இத்தன்மைத்தாகிய விவளது பிரிவாற்றாமைமையை மறவாதொழிய வேண்டு மென்றாளாம். இடைக்கணென்றது இவ்வொழுக்கத்தால் நினக்கு வருமேத நினைந்து ஆற்றாளாஞ் செவ்விபெற்றென்றவாறு. வடிக்கண்ணியை யென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு: அச்சம். பயன்: தலைமகள தாற்றாமை யுணர்த்துதல்.269

விளக்கவுரை

18.4 நீயே கூறென்றல் நீயே கூறென்றல் என்பது பிரிவறிவிப்பக் கூறின தலைமகனுக்கு, நீ யிரவுவரினும் பகற்பிரிந்து செல்வையென வுட்கொண்டு நின்னொடு கூடிய வப்பொழுதும் யானுயிர்வாழே னென்று நினைந்திருப்பாளுக்குத் தாழேனென்னு முரைமுன்னாக நின்பிரிவை நீயே சொல்லிப் போவாயாகவென அவன் விரையவருவது காரணமாகத் தோழி தலைமகளது பிரிவாற்றாமை கூறாநிற்றல்.
அதற்குச் செய்யுள்
18.4. காய்கதிர்வேலோய் கனங்குழையவட்கு
நீயேயுரை நின்செலவென்றது.

வருட்டின் திகைக்கும் வசிக்கின்
துளங்கும் மனமகிழ்ந்து
தெருட்டின் தெளியலள் செப்பும்
வகையில்லை சீரருக்கன்
குருட்டிற் புகச்செற்ற கோன்புலி
யூர்குறு கார்மனம்போன்
றிருட்டிற் புரிகுழ லாட்கெங்ங
னேசொல்லி யேகுவனே. **#927**

இதன் பொருள்:
வருட்டின் திகைக்கும் நுதலுந் தோளு முதலாயினவற்றைத் தைவந்து ஒன்று சொல்லக் குறிப்பேனாயின் இஃதென் கருதிச் செய்கின்றானென்று மயங்காநிற்கும்; வசிக்கின் துளங்கும் இன்சொல்லின் வசித்து ஒன்று சொல்லலுறுவேனாயின் அக்குறிப் பறிந்து உண்ணடுங்காநிற்கும்; தெருட்டின் மன மகிழ்ந்து தெளியலள் இனி வெளிப்படப் பிரிவுணர்த்திப் பொருண்முடித்துக் கடிதின் வருவலென்று சூளுற்றுத் தெளிவிப்பேனாயின் மன மகிழ்ந்து அதனைத் தேறாள்; செப்பும் வகை இல்லை இவ்வாறொழிய அறிவிக்கும் வகை வேறில்லை; அதனான், புரி குழலாட்கு எங்ஙன் சொல்லி ஏகுவன் சுருண்ட குழலை யுடையாட்குப் பிரிவை எவ் வண்ணஞ் சொல்லிப் போவேன்! ஒருவாற்றானுமரிது எ - று.
சீர் அருக்கன் குருட்டின் புகச் செற்ற கோன் புலியூர்

பெருமையையுடைய அருக்கன் குருடாகிய இழிபிறப்பிற் புகும் வண்ணம் அவனை வெகுண்ட தலைவனது புலியூரை; குறுகார் மனம் போன்று இருட்டின் புரிகுழல் அணுகாதார் மனம் போன்று இருட்டுதலையுடைய புரிகுழலெனக் கூட்டுக.

வருடினென்பது வருட்டினென நின்றது. ஏகுவதே யென்பதூ உம் பாடம்.

மெய்ப்பாடு: அழுகை. பயன்: வரைவு மாட்சிமைப் படுத்துதற்குப் பிரிதல்.

270

விளக்கவுரை

18.5 சொல்லாதேகல் சொல்லாதேகல் என்பது நீயேகூறென்ற தோழிக்கு, யானெவ்வாறு கூறினும் அவள் பிரிவுடம்படாளாதலின் ஒருகாலும் வரைந்துகொள்கையில்லை*;* யான் விரைய வரு வேன்*;* அவ்வளவும் நீயாற்றுவித்துக் கொண்டிருப்பாயாகவெனக் கூறித் தலைமகன் றலைமகளுக்குச் சொல்லாது பிரியாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.5. நிரைவளை வாட
உரையா தகன்றது.

நல்லாய் நமக்குற்ற தென்னென்
றுரைக்கேன் நமர்தொடுத்த
வெல்லா நிதியு முடன்விடுப்
பான்இமை யோரிறைஞ்சும்
மல்லார் கழலழல் வண்ணர்வண்
தில்லை தொழார்களல்லாற்
செல்லா அழற்கட மின்றுசென்
றார்நம் சிறந்தவரே. **#928**

இதன் பொருள்:

நம் சிறந்தவர் நமக்குச் சிறந்த அவர்; நமர் தொடுத்த எல்லா நிதியும் உடன் விடுப்பான் நமராற் றொடுக்கப்பட்ட வெல்லா நிதியத்தையும் ஒருங்கே வரவிடுவான் வேண்டி; இமை யோர் இறைஞ்சும் மல் ஆர் கழல் அழல் வண்ணர் வண் தில்லை இமையோர் சென்று வணங்கும் வளமார்ந்த கழலையுடைய அழல் வண்ணரது வளவிய தில்லையை; தொழார்கள் அல்லால் செல்லா அழல் கடம் இன்று சென்றார் தொழாதாரல்லது நம்போல்வார் செல்லாத அழலையுடைய சுரத்தை இன்று சென்றார்; அதனான், நல்லாய் நல்லாய்; நமக்கு உற்றது என்னென்று உரைக்கேன் நமக்கு வந்ததனை யாதென்று சொல்லுவேன்! எ-று.

என்னென் றுரைக்கேனென்றதனான், தொடுத்தது விடுப்பச் சென்றாராகலின் இன்பமென்பேனோ? அழற்கடஞ் சென்றமையாற் றுன்பமென் பேனோவெனப் பொதுப்படக் கூறுவாள் போன்று, வரைவு

காரணமாகப் பிரிந்தாராகலின் இது நமக்கின்பமே யென்றாற்று வித்தாளாம். தொழார்களல்லார் செல்லா வென்று பாட மோதுவாரு முளர். மெய்ப்பாடு: அழுகை. பயன்: வரைவு நீட்டியாமை யுணர்த்துதல்.

271

விளக்கவுரை

18.6 பிரிந்தமை கூறல் பிரிந்தமை கூறல் என்பது தலைமகன், முன்னின்று பிரிவுணர்த்த மாட்டாமையிற் சொல்லாது பிரியாநிற்ப, தோழி சென்று, நமராற் றொடுக்கப்பட்ட வெல்லா நிதியத்தையும் ஒருங்கு வரவிட்டு நின்னை வரைந்துகொள்வானாக அழற்கட நெறியே பொருள் தேடப் போனான்; அப்போக்கு, அழற்கடஞ் சென்றமையான் நமக்குத் துன்பமென்பேனோ? வரைவு காரணமாகப் பிரிந்தானாதலின் நமக்கின்பமென்பேனோவெனப் பொதுப் படக் கூறி, வரைவு காரணமாகப் பிரிந்தானாதலின், இது நமக்கின்பமே யெனத் தலைமகள் வருந்தாமல் அவன் பிரிந்தமை கூறா நிற்றல். அதற்குச் செய்யுள்

18.6. தேங்கமழ் குழலிக்குப்
பாங்கி பகர்ந்தது.

அருந்தும் விடமணி யாம்மணி
கண்டன்மற் றண்டர்க்கெல்லாம்
மருந்து மமிர்தமு மாகுமுன்
னோன்தில்லை வாழ்த்தும்வள்ளல்
திருந்துங் கடன்நெறி செல்லுமிவ்
வாறு சிதைக்குமென்றால்
வருந்தும் மடநெஞ்ச மேயென்ன
யாமினி வாழ்வகையே. **#929**

இதன் பொருள்:

அருந்தும் விடம் அணியாம் மணிகண்டன் உண்ணப்பட்ட நஞ்சநின்று அலங்காரமாய நீலமணிபோலுங் கண்டத்தை யுடையவன்; அண்டர்க்கு எல்லாம் மருந்தும் அமிர்தமும் ஆகும் முன்னோன் தேவர்க்கெல்லா முறுதிபயக்கு மருந்தும் இன்சுவையையுடைய வமிர்தமு மாகாநிற்கும் முன்னோன்; தில்லை வாழ்த்தும்வள்ளல் அவனது தில்லையை வாழ்த்தும் நம்வள்ளல்; திருந்தும் கடன் நெறி செல்லும் இவ்வாறு சிதைக்கும் என்றால் நமக்கேதம் பயக்கு மொழுக்க மொழிந்து குற்றந்தீர்ந் திருக்கு முறைமையாகிய இந்நெறியைச் செல்கின்ற இந்நீதி நம்மைக் கெடுக்குமென்று நீகருதின்; வருந்தும் மட நெஞ்சமே வருந்துகின்ற வறிவில்லாத நெஞ்சமே; யாம் இனி வாழ் வகை என்ன யாமின்புற்று வாழுமுபாயம் வேறியாது! எ - று.

அருந்துமென்பது காலமயக்கம்; அருந்துதற்றொழின் முடிவதன் முன்

நஞ்சங்கண்டத்து நிறுத்தப்பட் டணியாயிற்றாகலின், நிகழ்காலத்தாற் கூறப்பட்டதெனினு மமையும். மற்று: அசைநிலை. திருந்துங் கடனெறியென்பது தித்திக்குந் தேனென்பதுபோல இத்தன்மைத்தென்னு நிகழ்காலம்பட நின்றது. திருந்துங் கடனெறியைச் செல்லுமென்றும், களவாகிய வவ்வாற்றைச் சிதைக்கு மென்றும் முற்றாக அறுத்துரைப்பாருமுளர். 272

விளக்கவுரை

18.7 நெஞ்சொடு கூறல் நெஞ்சொடு கூறல் என்பது பிரிந்தமை கூறக் கேட்டு வருந்தா நின்ற நெஞ்சிற்கு, நமக்கேதம் பயக்கு மொழுக்க மொழிந்து குற்றந் தீர்ந்த முறைமையாகிய வொழுக்கத்துப் பிரிந்தவிது நம்மைக் கெடுக்குமென்று நீ கருதின், இது வொழிய நமக்கின்புற்று வாழு முபாயம் வேறுளதோ வெனத் தலைமகள் நெஞ்சினது வருத்தந் தீரக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.7. கல்வரை நாடன் சொல்லா தகல
மின்னொளி மருங்குல் தன்னொளி தளர்ந்தது.

ஏர்ப்பின்னை தோள்முன் மணந்தவன்
ஏத்த எழில்திகழுஞ்
சீர்ப்பொன்னை வென்ற செறிகழ
லோன்தில்லைச் சூழ்பொழில்வாய்க்
கார்ப்புன்னை பொன்னவிழ் முத்த
மணலிற் கலந்தகன்றார்
தேர்ப்பின்னைச் சென்றவென் நெஞ்சென்
கொலாமின்று செய்கின்றதே. **#930**

இதன் பொருள்:

ஏர்ப் பின்னை தோள் முன் மணந்தவன் ஏத்த அழகையுடைய பின்னையென்கின்ற தேவியுடைய தோள்களை முற்காலத்துக் கலந்த மாயோன் நின்றுபரவ; எழில் திகழும் சீர்ப் பொன்னை வென்ற செறி கழலோன் தில்லைச் சூழ்பொழில் வாய் எழில்விளங்குஞ் செம்பொன்னை வென்ற திருவடிகளையுடைய வனது தில்லைக்கட் சூழ்ந்த பொழிலிடத்து; கார்ப் புன்னை பொன் அவிழ் முத்த மணலில் கரியபுன்னை பொன் போல மலராநின்ற முத்துப்போலு மணலையுடைய தோரிடத்து; கலந்து அகன்றார் கூடி நீங்கினவரது; தேர்ப்பின்னைச் சென்றஎன் நெஞ்சு இன்று செய்கின்றது என்கொலாம் தேர்ப்பின் சென்றான் என்னெஞ்சம் இவ்விடத்தின்று செய்கின்றதென்னோ! அறிகின்றிலேன்! எ - று.

ஏத்தவெழிறிகழுமெனவியையும். என்னோடு நில்லாது அவர் தேர்ப்பின்போன நெஞ்சம் இன்றென்னை வருத்துகின்ற

விஃதென்னென்று நெஞ்சொடு நொந்து கூறினாளாக வுரைப்பினு மமையும். செறிகழலும் முத்தமணலும்: அன்மொழித்தொகை. தேய்கின்ற தேயென்பது பாடமாயின், அன்றவரை விடாது சென்ற நெஞ்சம், செல்லாது ஈண்டிருக்கு மென்னைப்போல், இன்று தேய்கின்ற தென்னென்று கூறினாளாகவுரைக்க. இவை யிரண்டற்கும் மெய்ப் பாடு: அழுகை. பயன்: ஆற்றாமை நீங்குதல். 273

விளக்கவுரை

18.8 நெஞ்சொடுவருந்தல் நெஞ்சொடுவருந்தல் என்பது பிரிந்தமை கூறக்கேட்ட தலைமகள், அன்றவரை விடாது என்னைவிட்டு அவரது தேர்ப்பின் சென்றநெஞ்சம் இன்றுமவ்வாறு செய்யாது என்னை வருத்தா நின்றதெனத் தன்னெஞ்சொடு வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்
18.8. வெற்பன் நீங்கப்
பொற்பு வாடியது.

கானமர் குன்றர் செவியுற
வாங்கு கணைதுணையா
மானமர் நோக்கியர் நோக்கென
மான்நல் தொடைமடக்கும்
வானமர் வெற்பர்வண் தில்லையின்
மன்னை வணங்கலர்போல்
தேனமர் சொல்லிசெல் லார்செல்லல்
செல்லல் திருநுதலே. **#931**

இதன் பொருள்:

தேன் அமர் சொல்லி தேனைப்பொருந்துஞ் சொல்லையுடையாய்; கான் அமர் குன்றர் செவி உற வாங்குகணை கானின்க ணமருங் குன்றவர் செவியுறுவண்ணம் வலித்த கணையை; துணையாம் மான் அமர் நோக்கியர் நோக்கென மான் நல்தொடை மடக்கும் தாமெய்யக் குறித்தவற்றினோக்குந் தந்துணைவியராகிய மானைப்பொருந்திய நோக்கத்தையுடையவரது நோக்கோடொக்கு மென்று கருதி அம்மானைக் குறித்த நல்ல தொடையை மடக்கும்; வான் அமர் வெற்பர் செல்லார் முகி றங்கும் வெற்பர் செல்கின்றாரல்லர்; வண் தில்லையின் மன்னை வணங்கலர் போல் வளவிய தில்லையின் மன்னனை வணங்காதாரைப் போல; திருநுதல் திருநுதால்; செல்லல் செல்லல் இன்னாமையையடையாதொழிவாய் எ - று.

தொடைமடக்குமென்னுஞ் சொற்கள் இயைந்து ஒரு சொல்லாய்க் குன்றவ ரென்னு மெழுவாய்க்குங் கணையையென்னு மிரண்டாவதற்கும் முடிபாயின. துணையாமென்பது 'ஏவலிளையர் தாய்' என்பதுபோல மயக்கமாய் நின்றது. மானமர் நோக்கியர் நோக்கென்பதனை உறழ்வா

லுவமைப்பாற்படுக்க. கொலைத் தொழிலாளருந் தந்துணைவியரோ டொப்பனவற்றிற்கு மிடர் செய்யாத வெற்பராதலின், நீ யிவ்வாறு வருந்த நீட்டியாரென்பது கருத்து. 274

விளக்கவுரை

18.9 வருத்தங்கண்டுரைத்தல் வருத்தங்கண்டுரைத்தல் என்பது தலைமகள் தன்னெஞ் சொடுவருந்தாநிற்பக் கண்ட தோழி, இத் தன்மைத்தாகிய வெற்பராகலிற் றாழாது விரைய வரைவொடுவருவர்; ஆதலால் நீ யின்னாமையையடையாதொழிவாயாக வென்று அவள் வருத்தந் தீரக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.9. அழலுறு கோதையின் விழுமுறு பேதையை
நீங்கல ரென்னப் பாங்கி பகர்ந்தது.

மதுமலர்ச் சோலையும் வாய்மையும்
அன்பும் மருவிவெங்கான்
கதுமெனப் போக்கும் நிதியின்
அருக்குமுன் னிக்கலுழ்ந்தால்
நொதுமலர் நோக்கமொர் மூன்றுடை
யோன்தில்லை நோக்கலர்போல்
இதுமலர்ப் பாவைக்கென் னோவந்த
வாறென்ப ரேந்திழையே. **#932**

இதன் பொருள்:

மது மலர்ச்சோலையும் அவரைப் புதுவது கண்ணுற்ற மதுமலரையுடைய சோலையையும்; வாய்மையும் அன்று நின்னிற்பிரியேன் பிரியினாற்றேனென்று கூறிய வஞ்சினத்தினது மெய்ம்மையையும்; அன்பும் வழிமுறைபெருகிய வன்பையும்; மருவி வெங்கான் கதுமெனப் போக்கும் நம்மோடு மருவி வைத்துப் பின் கதுமென வெங்கானிற்போகிய போக்கையும்; நிதியின் அருக்கும்- போய்த்தேடு நிதியினது செய்தற்கருமையையும்; முன்னிக் கலுழ்ந்தால் நினைந்து நீ கலுழ்ந்தால்; ஏந்திழை ஏந்திழாய்; நொதுமலர் ஏதிலர்; மலர்ப்பாவைக்கு இது வந்தவாறு என்னோ என்பர் மலர்ப்பாவையன்னாட்கு இவ்வேறுபாடு வந்தவாறென்னோ வென்றையுவறுவர்; அதனானீயாற்றுவாயாக எ - று.

நோக்கம் ஓர் மூன்று உடையோன் தில்லை நோக்கலர் போல் வந்தவாறு என்னோ கண்களொருமூன்றையுடையவனது தில்லையைக் கருதாதார்போல வந்தாவாறென்னோவெனக் கூட்டுக.

அன்பு வழிமுறையாற் சுருங்காது கடிது சுருங்கிற்றென்னுங் கருத்தாற் கதுமெனப் போக்கு மென்றாள். அருக்குமென்றதனால் நீட்டித்தல் கருதினாளாம். வழி யொழுகி யாற்றுவிக்கவேண்டு மளவாகலின்,

ஆற்றாமைக்கு காரணமாகியவற்றை மிகுத்துக் கூறினாளாம்.
இவையிரண்டற்கும் மெய்ப்பாடு: இளிவரலைச் சார்ந்த பெருமிதம்.
பயன்: தலைமகளை யாற்றுவித்தல். 275

விளக்கவுரை

18.10 வழியொழுகிவற்புறுத்தல் வழியொழுகி வற்புறுத்தல் என்பது தலைமகளது வருத்தங் கண்ட தோழி, அவளை வழியொழுகியாற்றுவிக்கவேண்டு மளவாகலின், ஆற்றாமைக்குக் காரணமாகியவற்றைக் கூறித் தானும் அவளோடு வருத்தமுற்று, அதுகிடக்க, இம்மலர்ப்பாவை யை யன்னாட்கு இவ்வேறுபாடு வந்தாவாறென்னோவென்று அயலவர் ஐயுறாநிற்ப ராதலான் நீ யாற்றவேண்டு மென்று அவள்வழி யொழுகி வற்புறுத்தாநிற்றல்.
அதற்குச் செய்யுள்

18.10. சூழிருங் கூந்தலைத்
தோழி தெருட்டியது.

வந்தாய் பவரையில் லாமயில்
முட்டை இளையமந்தி
பந்தா டிரும்பொழிற் பல்வரை
நாடன்பண் போஇனிதே
கொந்தார் நறுங்கொன்றைக் கூத்தன்தென்
தில்லை தொழார்குழுப்போற்
சிந்தா குலமுற்றுப் பற்றின்றி
நையுந் திருவினர்க்கே. **#933**

இதன் பொருள்:

கொந்தார் நறுங் கொன்றைக் கூத்தன் தென் தில்லை தொழார் குழுப்போல் கொத்தார்ந்த நறிய கொன்றையை யணிந்த கூத்தனது தெற்கின்கணுண்டாகிய தில்லையை வணங்காதாரது திரள்போல; சிந்தாகுலம் உற்றுப் பற்று இன்றி நையும் திருவினர்க்கு மனக்கலக்கத்தையுற்றுத் தமக்கோர் பற்றுக்கோடின்றி வருந்துந் திருவினையுடையவர்க்கு; வந்து ஆய்பவரை இல்லா மயில் முட்டை சென்றாராய்வாரை யுடைத்தல்லாத மயிலின் முட்டையை; இளைய மந்தி பந்தாடு இரும் பொழில் பல்வரை நாடன் பண்போ இளைய மந்தி பந்தாடிவிளையாடும் பெரிய பொழிலையுடைய பலவாகிய வரைகளை யுடைய நாட்டை யுடையவன தியல்போ; இனிது இனிது எ - று. நையுந்திருவினர்க்கென்றது நையுந்துணையா யிறந்துபடா திருந்து அவனளிபெற்ற ஞான்று இன்புறவெய்தும் நல்வினை யாட்டியர்க் கென்றவாறு. எனவே, யானது பெறுமாறில்லை யென்றாளாம். உற்றதாராய்ந் தோம்புவாரில்லாத மயிலினது முட்டையால் ஈன்ற

வருத்தமறியாத விளமந்தி, மயிலின் வருத்தமும் முட்டையின் மென்மையும் பாராது பந்தாடுகின்றாற்போலக் காதலரான் வினவப்படாத என் காமத்தை நீ யிஃதுற்றறியாமையான் எனது வருத்தமும் காமத்தினது மென்மையும் பாராது, இவ்வா றுரைக்கின்றாயென உள்ளுறை வகையாற் றோழியை நெருங்கி வன்புறை யெதிரழிந்தவாறு கண்டுகொள்க. அல்லதூஉம், வந்தாய்பவர் தோழியாகவும், இளமந்தி தலைமகனாகவும், பந்தாடுதல் தலைமகளது வருத்தம் பாராது தான் வேண்டியவா றொழுகு மவனதொழுக்கமாகவும் உரைப்பினு மமையும். திருவி னெற்கே யென்பது பாடமாயின், இவ்வாறு வன்கண்மை யேனாய் வாழுந் திருவையுடையேற்கென வுரைக்க. இதற்குத் திரு: ஆகுபெயர். மெய்ப்பாடு: அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன்: அது. 276

விளக்கவுரை

18.11 வன்புறையெதிரழிந்திரங்கல் வன்புறையெதிரழிந்திரங்கல் என்பது, வழியொழுகி வற்புறுத்தின தோழியோடு, தலைமகன் வரைவு நீடுதலாற் றமக்கோர் பற்றுக்கோடின்றி வருந்துந் திருவினையுடையார்க்கு அவன் வரைவு மிகவுமினிது; யானாற்றேனெனத் தலைமகள் வன்புறை யெதிரழிந் திரங்காநிற்றல்.
அதற்கு செய்யுள்

18.11. வன்கறை வேலோன் வரைவு நீட
வன்புறை யழிந்தவள் மனமழுங் கியது.

மொய்யென் பதேஇழை கொண்டவ
னென்னைத்தன் மொய்கழற்காட்
செய்யென் பதேசெய் தவன்தில்லைச்
சூழ்கடற் சேர்ப்பர்சொல்லும்
பொய்யென்ப தேகருத் தாயிற்
புரிகுழற் பொற்றொடியாய்
மெய்யென்ப தேதுமற் றில்லைகொ
லாமிவ் வியலிடத்தே. **#934**

இதன் பொருள்:

மொய் என்பதே இழை கொண்டவன் வலிமையை யுடைய என்புதனையே தனக்கணியாகக் கொண்டவன்; என்னைத் தன் மொய் கழற்கு ஆள் செய் என்பதே செய்தவன் என்னைத் தன்னுடைய வலிய திருவடிக் காட்செய்யென்று வெளிப் பட்டுநின்று சொல்லுதலையே செய்தவன்; தில்லைச் சூழ்கடல் சேர்ப்பர் சொல்லும் அவனது தில்லைவரைப்பினுண்டாகிய சூழ்ந்த கடலை யுடைத்தாகிய சேர்ப்பையுடையவரது சொல்லும்; பொய் என்பதே கருத்து ஆயின்

பொய்யென்பதே நினக்குக் கருத்தாயின்; புரிகுழல் பொற்றொடியாய் சுருண்டகுழலை யுடைய பொற்றொடியாய்; இவ் வியல் இடத்து மெய் என்பது ஏதும் இல்லை கொலாம் இவ்வுலகத்து மெய்யென்பது சிறிது மில்லைபோலும்! எ-று.

அரிமுதலாயினாரென்பாகலின், மொய்யென்பென்றார். இழிந்தன கைக்கொள்வானாகலின், என்பை யணியாகவும் என்னை யடிமையாகவுங் கொண்டானென்பது கருத்து. மெய்ப்பாடும் பயனும் அவை. 277

விளக்கவுரை

18.12 வாய்மை கூறி வருத்தந் தணித்தல் வாய்மை கூறி வருத்தந் தணித்தல் என்பது வரைவு நீடு தலான் வன்புறை யெதிரழிந்து வருந்தாநின்ற தலைமகளுக்கு, அவர் சொன்ன வார்த்தை நினக்குப் பொய் யென்பதே கருத்தாயின் இவ் வுலகத்து மெய்யென்பது சிறிதுமில்லையெனத் தோழி தலைமகனது வாய்மை கூறி, அவள் வருத்தந் தணியாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.12. வேற்றடங் கண்ணியை
ஆற்று வித்தது.

மன்செய்த முன்னாள் மொழிவழியே
அன்ன வாய்மைகண்டும்
என்செய்த நெஞ்சும் நிறையும்நில்
லாவென தின்னுயிரும்
பொன்செய்த மேனியன் றில்லை
யுறாரிற் பொறையரிதாம்
முன்செய்த தீங்குகொல் காலத்து
நீர்மைகொல் மொய்குழலே. **#935**

இதன் பொருள்: மொய் குழலே மொய்த்த குழலை யுடையாய்; முன் நாள் மன் செய்த மொழி வழியே அன்ன வாய்மை கண்டும் முற்காலத்து மன்னன் நமக்குதவிய மொழியின்படியே அத்தன்மைத் தாகிய மெய்ம்மையைக் கண்டுவைத்தும்; நெஞ்சும் நிறையும் நில்லா- என்னெஞ்சமுநிறையு மென்வரையவாய் நிற்கின்றில; என் செய்த இவையென்செய்தன; எனது இன் உயிரும் அதுவேயுமன்றி எனதினிய வுயிரும்; பொன் செய்த மேனியன் தில்லை உறாரின் பொறை அரிதாம் பொன்னையொத்த மேனியை யுடையவனது தில்லையை யுறாதாரைப்போல வருத்தம் பொறுத்த லரிதாகா நின்றது; முன் செய்த தீங்கு கொல் இவை யிவ்வாறாதற்குக் காரணம் யான் முன்செய்த தீவினையோ; காலத்து நீர்மை கொல் அன்றிப் பிரியுங் காலமல்லாத விக்காலத்தி னியல்போ? அறிகின்றிலன் எ-று.

மொழிவழியே கண்டுமெனவியையும். நெஞ்சநில்லாமை யாவது நம்மாட்டு அவரதன்பு எத்தன்மைத்தோவென் றையப்படுதல். நிறை நில்லாமையாவது பொறுத்தலருமையான் அந்நோய் புறத் தார்க்குப் புலனாதல். நில்லாதென்பது பாடமாயிற் றனித்தனி கூட்டுக. பொன்செய்த வென்புழிச் செய்தவென்பது உவமச் சொல். உயிர் துன்ப முழத்தற்குக் காரணமாதலின், அதனையுந் துன்பமாக நினைந்து இன்னுயிரும் பொறையரிதாமென்றாள். மெய்ப்பாடு: மருட்கை. பயன்: ஆற்றுவித்தல். 278

விளக்கவுரை

18.13 தேறாது புலம்பல் தேறாதுபுலம்பல் என்பது தலைமகனது வாய்மைகூறி வருத்தந் தணியாநின்ற தோழிக்கு, யானவர் கூறிய மொழியின்படியே மெய்ம்மையைக்கண்டு வைத்தும், என்னெஞ்சமு நிறையும் என்வயமாய் நிற்கின்றன வில்லை; அதுவேயு மன்றி, என்னுயிரும் பொறுத்தற்கரிதாகாநின்றது. இவை யிவ்வாறாதற்குக் காரணம் யாதென்றறிகின்றிலேனெனத் தான் றேறாமைகூறிப் புலம்பாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.13. தீதறு கண்ணி தேற்றத் தேறாது
போதுறு குழலி புலம் பியது.

கருந்தினை யோம்பக் கடவுட்
பராவி நமர்கலிப்பச்
சொரிந்தன கொண்மூச் சுரந்ததன்
பேரரு ளால்தொழும்பிற்
பரிந்தெனை யாண்டசிற் றம்பலத்
தான்பரங் குன்றிற்றுன்றி
விரிந்தன காந்தள் வெருவரல்
காரென வெள்வளையே. **#936**

இதன் பொருள்:

வெள் வளை வெள்வளையையுடையாய்; கருந்தினை ஓம்பக் கடவுட் பராவி நமர் கலிப்ப கரியதினையை யோம்பவேண்டிக் கடவுளைப்பராவி நமராரவாரிப்ப; கொண்மூச் சொரிந்தன அக்கடவுளாணையாற் கொண்மூக்கள் காலமன்றியு நீரைச் சொரிந்தன; காரென அதனைக்காரென்று கருதி; பரங் குன்றின் காந்தள் துன்றி விரிந்தன இப்பரங்குன்றின்கட் காந்த ணெருங்கி யலர்ந்தன; அதனான் நீ காரென் றஞ்சவேண்டா எ - று.

சுரந்ததன் பேரருளான் பொறுத்தற்கரிதாகச் சுரந்த தனது பெரிய வருளான்; தொழும்பில் பரிந்து எனை ஆண்ட சிற்றம்பலத்தான் பரங்குன்றின் அடிமைக்குத் தகாதவென்னைத் தன்னடிமைக்கண்ணே

கூட்டி நடுவுநிலைமையின்றிப் பரிந்தாண்ட சிற்றம்பலத் தானது பரங்குன்றினெனக் கூட்டுக.
கடவுண்மழை கடவுளாற் றரப்பட்ட மழை. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: ஆற்றுவித்தல். 279

விளக்கவுரை

18.14 காலமறைத்துரைத்தல் காலமறைத்துரைத்தல் என்பது தேறாமைகூறிப் புலம்பா நின்ற தலைமகள், காந்தள் கருவுறக்கண்டு, இஃதவர் வரவுகுறித்த காலமென்று கலங்காநிற்ப, நம்முடைய வையன்மார் தினைக்கதிர் காரணமாகக் கடவுளைப்பராவ, அக்கடவுளதாணையாற் கால மன்றியுங் கார் நீரைச்சொரிய, அதனையறியாது, காலமென்று இக்காந்தண் மலர்ந்தன; நீயதனைக் காலமென்று கலங்கவேண்டா வெனத் தோழி, அவளை யாற்றுவித்தற்குக் கால மறைத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
18.14. காந்தள் கருவுறக் கடவுண் மழைக்கென்
றேந்திழைப் பாங்கி இனிதியம் பியது.

வென்றவர் முப்புரஞ் சிற்றம்
பலத்துள்நின் றாடும்வெள்ளிக்
குன்றவர் குன்றா அருள்தரக்
கூடினர் நம்மகன்று
சென்றவர் தூதுகொல் லோஇருந்
தேமையுஞ் செல்லல்செப்பா
நின்றவர் தூதுகொல் லோவந்து
தோன்றும் நிரைவளையே. **#937**

இதன் பொருள்:

நிரை வளை நிரைவளையையுடையாய்; வந்து தோன்றும் ஒரு தூதுவந்து தோன்றாநின்றது; குன்றா அருள் தரக் கூடினர் நம் அகன்று சென்றவர் தூது கொல்லோ இது குன்றாத அருள்கொணர்ந்துதர வந்துகூடிப் பின் னம்மைப் பிரிந்துசென்றவர் தூதோ; இருந்தேமையும் செல்லல் செப்பா நின்றவர் தூது கொல்லோ அன்றி அவர் பிரியவிருந்தோமிடத்தும் இன்னாமையைச் சொல்லா நின்ற வேதிலார்தூதோ? அறியேன் எ-று. முப்புரம் வென்றவர் முப்புரத்தை வென்றவர்; சிற்றம்பலத்துள் நின்று ஆடும் வெள்ளிக் குன்றவர் சிற்றம்பலத்தின்கணின்றாடும் வெள்ளிக்குன்றை யுடையவர்; குன்றா அருள் அவரது குன்றாத வருளெனக் கூட்டுக.

கூடினரென்பது பெயர்படநின்றதெனினு மமையும். இருந் தேமையென்னு மிரண்டாவது ஏழாவதன் பொருட்கண் வந்தது. இரண்டாவதாயேநின்று இன்னாமையைச் சொல்லாநின்றவரென்னுந்

தொழிற்பெயரோடு முடிந்ததென்பாரு முளர். ஆங்கொரு தூது ஏதிலார் தூது. மெய்ப்பாடு: அச்சத்தைச் சார்ந்த மருட்கை. பயன்: ஐயந்தீர்தல். 280

விளக்கவுரை

18.15 தூதுவரவுரைத்தல் தூதுவர வுரைத்தல் என்பது காலமறைத்த தோழி, ஒரு தூது வந்து தோன்றாநின்றது; அஃதின்னார் தூதென்று தெரியாதெனத் தானின்புறவோடு நின்று அவள் மனமகிழும்படி தலைமகளுக்குத் தூதுவரவுரையாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.15. ஆங்கொரு தூதுவரப்
பாங்கிகண் டுரைத்தது.

வருவன செல்வன தூதுகள்
ஏதில வான்புலியூர்
ஒருவன தன்பரின் இன்பக்
கலவிகள் உள்ளுருகத்
தருவன செய்தென தாவிகொண்
டேகியென் நெஞ்சிற்றம்மை
இருவின காதல ரேதுசெய்
வானின் றிருக்கின்றதே. **#938**

இதன் பொருள்:

ஏதில தூதுகள் வருவன செல்வன ஏதிலவாகிய தூதுகள் வருவன போவனவா யிராநின்றன; வான் புலியூர் ஒருவனது அன்பரின் வாலிய புலியூர்க்கணுளனாகிய ஒப்பில்லா தானது அன்பையுடையவரைப்போல; உள் உருகத் தருவன இன்பக் கலவிகள் செய்து யானின்புற வுள்ளுருகும் வண்ணந் தரப்படுவன வாகிய இன்பக்கலவிகளைமுன்செய்து; எனது ஆவி கொண்டு ஏகி பின்னெனதாவியைத் தாங்கொண்டுபோய்; என் நெஞ்சில் தம்மை இருவின காதலர் என்னெஞ்சத்தின் கட்டம்மையிருத்தின காதலர்; இன்று இருக்கின்றது ஏது செய்வேன் இன்றுவாளாவிருக்கின்றது ஏதுசெய்யக்கருதி? எ-று.

ஒருவனதன்பு ஒருவன்கணன்பு. உள்ளுருகத் தருவன வென்பதற்கு உள்ளுருகும் வண்ணஞ் சிலவற்றைத் தருவனவாகிய கலவியென்றுரைப்பினு மமையும். தன்மெய்யன்பர் போல யானுமின்புற வுள்ளுருகுங் கலவிகளை முன்செய்து பின்னென தாவி போயினாற்போலத் தாம் பிரிந்துபோய் ஒருஞான்றுங் கட்புலனாகாது யானினைந்து வருந்தச் செய்த காதலர் இன்று ஏது செய்ய விருக்கின்றாரென வேறுமொரு பொருடோன்றிய வாறு கண்டு கொள்க. அயல் - அயன்மை. மெய்ப்பாடும் பயனும் அவை. 281

விளக்கவுரை

18.16 தூதுகண்டழுங்கல் தூதுகண்டழுங்கல் என்பது தூதுவரவுரைப்பக் கேட்ட தலைமகள் மனமகிழ்வோடு நின்று, இஃதயலார் தூதாகலான் இவை வருவன செல்வன வாகாநின்றன; காதலர்தூது இன்று வாராதிருக்கின்றது என்செய்யக்கருதி யென்றறிகின்றிலே னென்று ஏதிலார் தூதுகண் டழுங்காநிற்றல். அதற்குச் செய்யுள்

18.16. அயலுற்ற தூதுவரக்
கயலுற்றகண்ணி மயலுற்றது.

வேயின மென்தோள் மெலிந்தொளி
வாடி விழிபிறிதாய்ப்
பாயின மேகலை பண்டையள்
அல்லள் பவளச்செவ்வி
ஆயின ஈசன் அமரர்க்
கமரன்சிற் றம்பலத்தான்
சேயின தாட்சியிற் பட்டன
ளாம்இத் திருந்திழையே. **#939**

இதன் பொருள்:

வேய் இன மென்றோள் மெலிந்து வேய்க் கினமாகிய மென்றோண்மெலிந்து; ஒளி வாடி கதிர்ப்புவாடி; விழி பிறிதாய் விழி தன்னியல்பிழந்து வேறாய் பாயின மேகலை பண்டைய ளல்லள்; பரந்த மேகலையையுடையாள் பண்டைத் தன்மையளல்லாளாயினாள், அதனால், இத் திருந்திழை இத்திருந் திழை; சேயினது ஆட்சியின் பட்டனளாம் சேயினதாட்சி யாகிய விடத்துப் பட்டாள் போலும் எ - று. பவளச் செவ்வி ஆயின ஈசன் திருமேனி பவளத்தினது செவ்வியாகிய வீசன்; அமரர்க்கு அமரன் தேவர்க்குத் தேவன்; சிற்றம்பலத்தான் சிற்றம்பலத்தின் கண்ணான்; சேய் அவனுடைய சேயெனக்கூட்டுக. ஒளிவாடி யென்பதூஉம், விழிபிறிதாயென்பதூஉம் சினை வினைப்பாற்படும். பாயினமேகலை யென்னுஞ் சொற்கள் ஒரு சொன்னீர்மைப்படுதலின், ஆகுபெயரெனப்படும். செவ்வி கருகுதலும் வெளுக்குதலுமில்லாத நிறம். ஆட்சி அவன தாணை யான் மக்களுக் கணையலாகாத விடம். 282

விளக்கவுரை

18.17 மெலிவுகண்டு செவிலிகூறல் மெலிவுகண்டு செவிலிகூறல் என்பது ஏதிலார் தூதுகண் டழுங்காநின்ற தலைமகளைச் செவிலி யெதிர்ப்பட்டு, அடியிற் கொண்டு முடிகாறுநோக்கி, இவள் பண்டைத் தன்மையளல்லள்; இவ்வாறு மெலிதற்குச் சேயினதாட்சியிற் பட்டனள்

போலுமென்றறிகின்றிலே னென்று அவளது மெலிவுகண்டு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.17. வண்டமர் புரிகுழ லொண்டொடி மெலிய வாடா நின்ற கோடாய் கூறியது.

சுணங்குற்ற கொங்கைகள் சூதுற்
றிலசொல் தெளிவுற்றில
குணங்குற்றங் கொள்ளும் பருவமு
றாள்குறு காவசுரர்
நிணங்குற்ற வேற்சிவன் சிற்றம்
பலநெஞ் சுறாதவர்போல்
அணங்குற்ற நோயறி வுற்றுரை
யாடுமின் அன்னையரே. **#940**

இதன் பொருள்:

சுணங்கு உற்ற கொங்கைகள் சூது உற்றில சுணங்கைப் பொருந்திய கொங்கைகள் சூதின்றன்மையையுற்றன வில்லை; சொல் தெளிவு உற்றில சொற்கள் குதலைமை நீங்கி விளங்குதலையுற்றனவில்லை; குணம் குற்றம் கொள்ளும் பருவம் உறாள் நன்மையுந் தீமையு மறியும் பெதும்பைப் பருவத்தை யிப்பொழுதைக்குறாள்; இவளிளமை இதுவாயிருந்தது அன்னையரே; அன்னைமீர் அணங்கு உற்ற நோய் அறிவுற்று உரையாடுமின்; இவ்வணங்குற்ற நோயைத் தெளியவறிந்து சொல்லுவீராமின் எ - று.

குறுகா அசுரர் நிணம் குற்ற வேல் சிவன் சிற்றம்பலம் நெஞ்சு உறாதவர் போல் அணங்குற்ற சென்று சேராத வசுரருடைய நிணத்தைக் குற்ற சூலவேலையுடைய சிவனது சிற்றம்பலத்தை நெஞ்சாலுறாதாரைப் போல அணங்குற்றவெனக் கூட்டுக.

இளமைகூறிய வதனாற் பிறிதொன்று சிந்திக்கப்பட்டா ளென்பது கூறினாளாம். இவை யிரண்டற்கும் மெய்ப்பாடு: மருட்கை. பயன்: தலைமகட்குற்ற துணர்த்தல். 283

விளக்கவுரை

18.18 கட்டுவைப்பித்தல் கட்டுவைப்பித்தல் என்பது மெலிவுகண்ட செவிலி, அவளது பருவங்கூறி, இவ்வணங்குற்ற நோயைத் தெரியவறிந்து சொல்லுமி னெனக் கட்டுவித்திக் குரைத்துக் கட்டுவைப்பியா நிற்றல் அதற்குச் செய்யுள்

18.18. மால்கொண்ட கட்டுக் கால் கொண்டது.

மாட்டியன் றேயெம் வயிற்பெரு
நாணினி மாக்குடிமா

சூட்டியன் றேநிற்ப தோடிய
வாறிவ ளுள்ளமெல்லாங்
காட்டியன் றேநின்ற தில்லைத்தொல்
லோனைக்கல் லாதவர்போல்
வாட்டியன் றேர்குழ லார்மொழி
யாதன வாய்திறந்தே. **#941**

இதன் பொருள்:

இவள் உள்ளம் ஓடியவாறு எல்லாம் காட்டி இவளுள்ளமோடியவாறு முழுதையும் புலப்படுத்தி; அன்றே நின்ற தில்லைத் தொல்லோனைக் கல்லாதவர் போல் வாட்டி அன்று தொட்டு நின்ற தில்லைக்க ணுளனாகிய பழையோனைக் குருமுகத்தா லறியாதாரைப்போல வருந்த நம்மை வாட்டி; ஏர் குழலார் அன்று மொழியாதன வாய் திறந்து அலர்தூற்றி அவ்வேர்குழலாராகிய வயலார் அன்று மொழியாத பழியையும் வெளிப்படச்சொல்லி; இனி எம் வயின் பெரு நாண் மாட்டி அன்றே இப்பொழு தெம்மிடத் துண்டாகிய பெரு நாணினை மாள்வித்தல்லவே; மாக் குடிமாசு ஊட்டி அன்றே நிற்பது எம்பெருங்குடியைக் குற்றப்படுத்தியல்லவே இக்கட்டுவித்தி நிற்பது! இனியென்செய்தும்! எ - று.

மூள்வித்தற்கண் மூட்டியென நின்றவாறுபோல மாள்வித்தற் கண் மாட்டியென நின்றது. தள்ளியென்னும் பொருள்பட நின்றதென்பாருமுளர். நிற்ப தென்றதனை முன்னையதனோடுங் கூட்டுக. இவளென்றது கட்டுவித்தியை யென்று, இவணிற்ப தெனக் கூட்டித் தலைமகள் கூற்றாக வுரைப்பினுமமையும். தில்லைக்கணின்ற நாள் இந்நாளென்றுணரலாகாமையின், அன்றே நின்றவென்றார். தெய்வம் - கட்டுக்குரிய தெய்வம். மெய்ப் பாடு: இளிவரல். பயன்: அறத்தொடு நிற்றற் கொருப்படுத்தல். 284

விளக்கவுரை

18.19 கலக்கமுற்றுநிற்றல் கலக்கமுற்று நிற்றல் என்பது செவிலி கட்டுவைப்பியா நிற்ப, இவளுள்ள மோடியவாறு முழுதையும் புலப்படுத்தி, நம்மை வருத்தி, அயலார் அன்று மொழியாத பழியையும் வெளிப்படச் சொல்லி, எம்மிடத்துண்டாகிய நாணினையுந்தள்ளி, எங்குடியி னையுங் குற்றப்படுத்தியல்லவே இக்கட்டுவித்தி நிற்கப் புகுகின்ற தெனத் தோழி கலக்கமுற்று நில்லாநிற்றல். அதற்குச் செய்யுள் *18.19*. தெய்வத்தில் தெரியுமென
எவ்வத்தின் மெலிவுற்றது.

குயிலிதன் றேயென்ன லாஞ்சொல்லி
கூறன்சிற் றம்பலத்தான்

இயலிதன் றேயென்ன லாகா
இறைவிறற் சேய்கடவும்
மயிலிதன் றேகொடி வாரணங்
காண்கவன் சூர்தடிந்த
அயிலிதன் றேயிதன் றேநெல்லிற்
றோன்று மவன்வடிவே. **#942**

இதன் பொருள்:

இது குயில் அன்றே என்னலாம் சொல்லி கூறன் இது குயிலோசையாமென்று சொல்லலாகுஞ் சொல்லை யுடையாளது கூற்றையுடையான்; சிற்றம்பலத்தான் சிற்றம்பலத்தின் கண்ணான்; இயல் இது அன்றே என்னல் ஆகா இறை அவனது தன்மை யிதுவாமென்று கூறமுடியாத விறைவன்; விறல் சேய் கடவும் மயில் இது அன்றே அவனுடைய விறலையுடைய சேயூரு மயிலிது வல்லவே; கொடி வாரணம் காண்க அதுவேயுமன்றி, அவன் கொடிக்கணுளதாகிய கோழியையும் எல்லீருங் காண்க; வன் சூர் தடிந்த அயில் இது அன்றே அதுவேயுமன்றி, வலியனாகிய சூரைக்குறைத்த அயில்தானிது வல்லவே? இவையெல்லாஞ் சொல்லுகின்றதென்; நெல்லில் தோன்றும் அவன் வடிவு இப்பரப்பிய நெல்லிக்கண்வந்து தோன்றுகின்றது அவனதுருவமாம்; இது அன்றே இதுவல்லவே? காண்மின் எ - று. முருகனெனவே, முருகணங்கினாளென்று கூறினாளாம். சூர் மாமரமாய் நின்றமையாற் றடிந்தவென்றாள். மெய்ப்பாடு: பெருமிதம். பயன் தன் கரும முற்றுதல். கட்டுவித்தியை வினவ, அவளறியாதாள் போல இக்கருமமுடித்தற் பொருட்டிவ்வகை சொன்னாள். என்னை? வரைபொருட்குத் தலைமகன் போக, அவன் வரவு நீட்டித்தலான், இவளதாற்றாமையானுண்டாகிய நோயை முருகனால் வந்த தென்றிவள் கூறலாமோ? இஃதங்ஙனமாயிற் குறியென்பதனைத்தும் பொய்யேயாமென்பது கடா. அதற்கு விடை: குறியும் பொய்யன்று: இவளும் பொய் கூறினாளல்லள்: அஃதெங்ஙனமெனின்:- குறிபார்க்கச் சென்றிருக்கும்போழுதே தெய்வ முன்னிலையாகக் கொண்டிருத்தலான், அத்தெய்வத்தின் வெளிப் பாட்டானே தலைமகனுடன் புணர்ச்சியுண்மையை யறிந்தாள்.

இவளிங்ஙன மறிந்தாளென்பதனை நாமறிந்த வாறியாதினா லெனின், இக்கள வொழுக்கந் தெய்வமிடைநிற்பப் பான்மை வழியோடி நடக்கு மொழுக்கமாதலானும், சிற்றம்பலத்தானியல்பு தெரிந்திராதே யென்றிவள் சொல்லுதலானும் அறிந்தாம், இப்படி வருமொழுக்கம் அகத்தமிழொழுக்கமென்பதனை முதுபெண்டீரு மறிந்துபோதுகையானும், இவளுரைக்கின்றுழி முதுபெண்டீரை

முகநோக்கியே சிற்றம்பலத்தானியல்பு தெரியாதென வுரைத்தாள், அவரு மக்கருத்தே பற்றியும் அதனையுணர்ந்தார், இக்கருத்தினாலு நாமறியப்பட்டது, இனியயலாரையுஞ் சுற்றத்தாரையும் நீக்கவேண்டுகையாலும், இக்களவொழுக்க முடியுமிடத்து வேலனைக் கூவுகையும், வெறித்தொழில் கொள்கையும், அவ்வெறித்தொழிலை யறத்தொடு நின்று விலக்குகை யும், அகத்தமிழிலக்கண மாகையின், முருகணங் கென்றே கூறப்பட் டது. கூறியவாறாவது: குறிக்கிலக்கணம் நென் மூன்று மிரண்டு மொன்றும் படுகை. அஃதாவது அடியுங் கொடியு முவகையும். இதனில், அடியாவது மயில், கொடியாவது கோழி, உவகையாவது வேல். ஆதலான் முருகணங்கெனவே கூறப் பட்டதெனவறிக. 285

விளக்கவுரை

18.20 கட்டுவித்திகூறல் கட்டுவித்தி கூறல் என்பது தோழி கலக்கமுற்று நில்லா நிற்ப, இருவரையு நன்மையாகக் கூட்டுவித்த தெய்வம் புறத்தார்க் கிவ் வொழுக்கம் புலப்படாமல் தானிட்ட நெல்லின்கண் முருகணங்கு காட்ட, இதனை யெல்லீருங் காண்மின்; இவளுக்கு முருகணங் கொழியப் பிறிதொன்று மில்லையெனக் கட்டுவித்தி நெற்குறி காட்டிக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.20. கட்டு வித்தி

விட்டு ரைத்தது.

வேலன் புகுந்து வெறியா
டுகவெண் மறியறுக்க
காலன் புகுந்தவி யக்கழல்
வைத்தெழில் தில்லைநின்ற
மேலன் புகுந்தென்கண் நின்றா
னிருந்தவெண் காடனைய
பாலன் புகுந்திப் பரிசினின்
நிற்பித்த பண்பினுக்கே. **#943**

இதன் பொருள்:

காலன் புகுந்து அவிய கழல் வைத்து எழில் தில்லைநின்ற மேலன் தன்னையடைந்த அந்தணனை ஏதஞ் செய்யக்குறித்து அவ்விடத்துப் புகுந்த காலன் வலிகெட ஒரு கழலை வைத்து எழிலை யுடைய தில்லைக்க ணின்ற எல்லாப் பொருட்கு மேலாயுள்ளான்; புகுந்து என்கண் நின்றான் புகுந் தணியனா யென்னிடத்து நின்றவன்; இருந்த வெண்காடு அனைய பாலன் புகுந்து- அவனிருந்த வெண்காட்டை யொக்கும் இப்பிள்ளை இக்குடியிற் பிறந்து; இப் பரிசினின் நிற்பித்த பண்பினுக்கு வெறியாடு வித்தலாகிய இம்முறைமைக்கணெம்மை

நிற்பித்த பண்பால்; வேலன் புகுந்து வெறி ஆடுக வேலனீண்டுப் புகுந்து வெறியாடுவானாக; வெண்மறி அறுக்க பலியாக வெள்ளிய மறியையு மறுக்க எ - று.
வெறியாடுதலேயன்றி இதுவுந் தகாதென்னுங் கருத்தால், மறியறுக்க வெனப் பிரித்துக் கூறினாளாம். கழல் வைத்தென்றாள், எளிதாகச் செய்தலான். பாலனென்னும் பான்மயக்கம் அதிகாரப் புறனடையாற் கொள்க. பரிசினி னிற்பித்தவென்புழி ஐந்தாவது ஏழாவதன் பொருட் கண் வந்து, சிறுபான்மை இன்சாரியை பெற்று நின்றது. ஏழாவதற்கு இன்னென்பதோருருபு புறனடையாற் கொள்ளினுமமையும். மெய்ப் பாடு: இளி வரல். பயன்: தலைமகளது வேறுபாடு நீக்குதல். 286

விளக்கவுரை

18.21 வேலனையழைத்தல் வேலனை யழைத்தல் என்பது கட்டுவித்தி முருகணங்கென்று கூறக்கேட்டு, இப்பால னிக்குடியின்கட்பிறந்து நம்மையிவ்வாறு நிற்பித்த பண்பினுக்கு வேலன் புகுந்து வெறியு மாடுக*;* அதன்மேன் மறியு மறுக்கவெனத் தாயர் வேலனை யழையா நிற்றல். அதற்குச் செய்யுள்

18.21. வெறியாடிய வேலனைக்கூஉய்
நெறியார்குழலி தாயர்நின்றது.

அயர்ந்தும் வெறிமறி ஆவி
செகுத்தும் விளர்ப்பயலார்
பெயர்ந்தும் ஒழியா விடினென்னை
பேசுவ பேர்ந்திருவர்
உயர்ந்தும் பணிந்தும் உணரான
தம்பலம் உன்னலரின்
துயர்ந்தும் பிறிதி னொழியினென்
ஆதுந் துறைவனுக்கே. **#944**

இதன் பொருள்:

வெறி அயர்ந்தும் மறி ஆவி செகுத்தும் பெயர்ந்தும் விளர்ப்பு ஒழியாவிடின் வெறியை விரும்பியாடியும் மறியின தாவியைக்கெடுத்தும் பின்னு நிறவேறுபா டொழியா தாயின்; அயலார் பேசுவ என்னை அயலார் கூறுவனவென்னாம்; பிறிதின் ஒழியின் வெறியாட்டாகிய பிறிதினால் இவ்விளர்ப் பொழியுமாயின்; துயர்ந்தும் துறைவனுக்கு என் ஆதும் துயர முற்றும் அத்துறைவனுக்கு நாமென்னாதும்! இருவாற்றானு முயிர்வாழ்த லரிது எ-று.
இருவர் பேர்ந்து உயர்ந்தும் பணிந்தும் உணரானது அம்பலம் உன்னலரின் துயர்ந்தும் யான்றலைவன் யான்றலைவனென்று தம்முண் மாறுபட்ட பிரமனு மாலுமாகிய விருவர் அந்நிலைமை யினின்றும்

பெயர்ந்து தழற் பிழம்பாகிய தன்வடிவை யறியலுற்று ஆகாயத்தின் மேற் சென்றுயர்ந்தும் நிலத்தின்கீழ்ப்புக்குத் தாழ்ந்தும் அறியப்படாதவன தம்பலத்தை நினையாதாரைப்போலத் துயரமுற்று மெனக்கூட்டுக. மறியறுத்தற்கு முன்னுரைத்ததுரைக்க. பெயர்ந்து மென மெலிந்து நின்றது. உணரானென்றது செயப்படுபொருட்கண் வந்தது. தன்னைப்பிரிதல், துன்பமாய் இன்றியமையாத யாம் இத்தன்மைய மாகவும், அளிக்கின்றிலனெனவுட்கொண்டு, அவனை நாம் முன்னம் நெருங்கமுயங்கு மன்பாமாறெல்லாம் இன்றென்னா மென்னுங் கருத்தால், என்னாது மென்றாள். பிறிதுமொழியினென்பது பாட மாயின், வெறியினாற்றணி யாதாதலின் இந்நோய் பிறிதென்று பிறர் மொழியினென்றுரைக்க. மெய்ப்பாடு: அச்சத்தைச் சார்ந்த மருட்கை. பயன்: தலைமகள் தன்னெஞ்சொடு சொல்லி யாற்றுதல்.287

விளக்கவுரை

18.22 இன்னலெய்தல் இன்னலெய்தல் என்பது வெறியாடுதற்குத் தாயர் வேலனை யழைப்பக் கேட்ட தலைமகள், இருவாற்றானும் நமக்குயிர்வாழு நெறியில்லையெனத் தன்னுள்ளே கூறி, இன்ன லெய்தாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.22. ஆடிய வெறியிற் கூடுவ தறியாது
நன்னறுங் கோதை இன்ன லெய்தியது.

சென்றார் திருத்திய செல்லல்நின்
றார்கள் சிதைப்பரென்றால்
நன்றா வழகிதன் றேயிறை
தில்லை தொழாரின்நைந்தும்
ஒன்றா மிவட்கு மொழிதல்கில்
லேன்மொழி யாதுமுய்யேன்
குன்றார் துறைவர்க் குறுவேன்
உரைப்பனிக் கூர்மறையே. **#945**

இதன் பொருள்:

இறை தில்லை தொழாரின் நைந்தும் - இறைவனது தில்லையைத் தொழாதாரைப்போல வருந்தியும்; ஒன்றாம் இவட்கும் மொழிதல்கில்லேன் நாணினா லென்னோ டொன்றாயிருக்கும் என்றோழியாகிய விவட்கு மொழிய மாட்டுகிலேன்; மொழியாதும் உய்யேன் மொழியாதொழிந்தாலும் வேறோராற்றா னுயிர்வாழேன், ஆயினும், குன்று ஆர் துறைவர்க்கு உறுவேன் இனி மணற்குன்றுகளார்ந்த துறையையுடையவர்க்குச் சிறந்தயான்; இக்கூர் மறை உரைப்பன் இம்மிக்க மறையை யிவட்குரைப்பேன்; சென்றார் திருத்திய செல்லல் சிதைப்பர் நின்றார் கள் என்றால்

புணர்ந்துபோயினார் மிகவுமுண்டாக்கிய இந் நோயைத்தீர்ப்பர் முருகனாகப் பிறராக இதற்கியாது மியைபிலாதார் சிலராயின்; நன்றா அழகிது அன்றே இது பெரிது மழகிது எ-று.
நன்றாவழகிதன்றேயென்பது குறிப்புநிலை. குன்றார் துறைவர்க் குறுவேனென்றவதனால், நாண்டுறந்தும் மறையுரைத் தற்குக் காரணங் கூறினாளாம். இந்நோயை யேதிலார் சிதைப்ப விடேன், மறையுரைத்தாயினும் வெறிவிலக்குவேனென்னுங் கருத்தால், நன்றா வழகிதன்றே யென்றாள். மயறருமென - வருத்த நமக்குண்டாமென. மெய்ப்பாடு: இளிவரலைச்சார்ந்த நகை. பயன்: வெறிவிலக்குதற் கொருப்படுதல். 288

விளக்கவுரை

18.23 வெறிவிலக்குவிக்க நினைதல் வெறிவிலக்குவிக்க நினைதல் என்பது இருவாற்றானு நமக்குயிர்வாழு நெறியில்லை யாதலாற் றுறைவற்குற்ற நோயைப் பிறர் சிதைக்கப்படின், நாண்டுறந்தும் வெறிவிலக்குவிப்ப னெனத் தலைமகள் தோழியைக்கொண்டு வெறிவிலக்குவிக்க நினையாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.23. அயறருவெறியின் மயறருமென
விலக்கலுற்ற குலக்கொடிநினைந்தது.

யாயுந் தெறுக அயலவ
ரேசுக ஊர்நகுக
நீயும் முனிக நிகழ்ந்தது
கூறுவ லென்னுடைய
வாயும் மனமும் பிரியா
இறைதில்லை வாழ்த்துநர்போல்
தூயன் நினக்குக் கடுஞ்சூள்
தருவன் சுடர்க்குழையே. **#946**

இதன் பொருள்:

சுடர்க் குழை சுடர்க்குழையையுடையாய்; என்னுடைய வாயும் மனமும் பிரியா இறை தில்லை வாழ்த்துநர் போல் தூயன் எனதுவாயையு மனத்தையும் பிரியாத விறைவனது தில்லையை வாழ்த்துவாரைப்போலத் தூயேன்; நினக்குக் கடுஞ் சூள் தருவன் நீதேறாயாயின் நினக்குக்கடிய குளுறவையுந் தருவேன்; அயலவர் ஏசுக அயலாரேசுக; ஊர் நகுக ஊர் நகுவதாக; யாயுந் தெறுக அவற்றின்மேலே யாயும் வெகுள்வாளாக; நீயும்முனிக அதுவேயுமன்றி நீயுமென்னை முனிவாயாக; நிகழ்ந்தது கூறுவல் புகுந்ததனை யான் கூறுவேன்; கேட்பாயாக எ-று.

தூயேனென்றது தீங்குகரந்த வுள்ளத்தேனல்லேனென்றவாறு.

தூயனெனக் கென்பது பாடமாயின், எனக்கியான்றூயே னென்றுரைக்க. அறத்தொடுநின்ற - அறத்தொடுகூடிநின்ற. வெரீஇ யுரைத்ததென வியையும். அலங்காரம்: பரியாயம்; பொருண்முரணு மாம். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: அறத்தொடு நிற்றல். 289

விளக்கவுரை

18.24 அறத்தொடுநிற்றலையுரைத்தல் அறத்தொடு நிற்றலையுரைத்தல் என்பது நாண்டுறந்தும் மறையுரைத்தும் வெறிவிலக்குவிக்க நினையாநின்ற தலைமகள், மேலறத்தொடு நிற்பாளாக, அயலாரேசுக; ஊர்நகுக; அதுவேயு மன்றி, யாயும்வெகுள்வளாக, அதன்மேல் நீயுமென்னை முனிவாயாக; நீ தேறாயாகிற் சூளுற்றுத்தருவேன்; யான் சொல்லு கின்ற விதனைக் கேட்பாயாக எனத் தோழிக்குக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.24. வெறித்தலை வெரீஇ வெருவரு தோழிக்
கறத்தொடு நின்ற ஆயிழை யுரைத்தது.

வண்டலுற் றேமெங்கண் வந்தொரு
தோன்றல் வரிவளையீர்
உண்டலுற் றேமென்று நின்றதொர்
போழ்துடை யான்புலியூர்க்
கொண்டலுற் றேறுங் கடல்வர
எம்முயிர் கொண்டுதந்து
கண்டலுற் றேர்நின்ற சேரிச்சென்
றானொர் கழலவனே. **#947**

இதன் பொருள்:

வண்டல் உற்றேம் எங்கண் விளையாட்டைப் பொருந்தினேமாகிய வெம்மிடத்து; ஒரு தோன்றல் ஒருதோன்றல்; வரி வளையீர் உண்டல் உற்றேம் என்று வந்து நின்றது ஓர் போழ்து வரிவளையை யுடையீர் நும்வண்டல் மனைக்கு விருந்தாய் நாமுண்ணத் கருதினோமென்று சொல்லிவந்து நின்றதோர் பொழுதின்கண்; உடையான் புலியூர்க் கொண்டல் உற்று ஏறும் கடல் வர உடையானது புலியூர்வரைப்பிற் கீழ்காற்று மிகுதலாற் கரை மேலேவந்தேறுங் கடல் எம்மேல்வர; எம் உயிர் கொண்டு தந்து அதன்கணழுந்தாமல் எம்முயிரைக் கைக்கொண்டு எமக்குத்தந்து; ஒர் கழலவன் கண்டல் உற்று ஏர் நின்ற சேரிச் சென்றான் அவ்வொரு கழலவன் கண்டலாகிய மரமிக்கு அழகுநின்ற அச்சேரியின்கட் சென்றான்; இனித் தக்கது செய்வாயாக எ - று. வண்டலுற்றேமங்கணென்பது பாடமாயின், அங்க ணென்பதனை ஏழாம் வேற்றுமைப் பொருள்பட நின்றதோ ரிடைச்சொல்லாக வுரைக்க. புலியூர்க் கடலென வியையும். தேரிற் சென்றானென்பது பாடமாயின்,

நம்மைக் காண்டல் விரும்பித் தேர்மேலேறிச் சென்றானென்றுரைக்க. தேரினென்பது கருவிப் பொருட்கண் வந்த வைந்தாமுருபெனினு மமையும். இதற்குக் காண்ட லுற்றென்பது குறுகி நின்றது. தோன்றல் கழலவன் என்றதனால், அவனது பெருமையும், எம்முயிர் கொண்டு தந்தென்றதனால் மெய்யுறவுங் கூறினாளாம். மெய்ப்பாடும் பயனும் அவை. 290

விளக்கவுரை

18.25 அறத்தொடு நிற்றல் அறத்தொடு நிற்றல் என்பது அறத்தொடு நிற்பாளாக முன்றோற்றுவாய் செய்து, எம்பெருமாற்குப் பழி வருங்கொல் லோவென்னுமையத்தோடு நின்று, யாமுன்பொருநாள் கடற்கரை யிடத்தே வண்டல்செய்து விளையாடாநின்றே மாக அந்நேரத் தொருதோன்றல், நும் வண்டல் மனைக்கு யாம் விருந்தென்று வந்து நின்றபொழுது, நீ பூக்கொய்யச் சிறிது புடைபெயர்ந்தாய்; அந்நிலைமைக்கட் கீழ்காற்று மிகுதலாற் கரைமேலேறுங்கடல் மேல்வந்துற்றது; உற, யான் றோழியோ தோழியோ வென்று நின்னை விளித்தேன்; அதுகண்டிரங்கி, அவனருளொடுவந்து தன் கையைத் தந்தான்; யானு மயக்கத்தாலே யதனை நின்கையென்று தொட்டேன்; அவனும் பிறிதொன்றுஞ் சிந்தியாது, என்னுயிர் கொண்டுதந்து, என்னைக் கரைக்கணுய்த்துப் போயினான்; அன்று என்னாணினால் நினக்கதனைச் சொல்லமாட்டிற்றிலேன்; இன்றிவ்வாறாயினபின் இது கூறினேன்; இனி நினக்கடுப்பது செய்வாயாகவெனத் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நில்லா நிற்றல். அதற்குச் செய்யுள்

18.25. செய்த வெறியி னெய்துவ தறியாது
நிறத்தொடித் தோழிக் கறத்தொடு நின்றது.

குடிக்கலர் கூறினுங் கூறா
வியன்தில்லைக் கூத்தனதாள்
முடிக்கல ராக்குமொய் பூந்துறை
வற்கு முரிபுருவ
வடிக்கலர் வேற்கண்ணி வந்தன
சென்றுநம் யாயறியும்
படிக்கல ராமிவை யென்நாம்
மறைக்கும் பரிசுகளே. **#948**

இதன் பொருள்:

முரி புருவ வடிக்கு அலர் வேல் கண்ணி முரிந்த புருவத்தை யுடைய வடுவகிரிற் பரந்த வேல்போலுங் கண்ணை யுடையாய்; கூறா வியன் தில்லைக் கூத்தன தாள் கூறலாகாத அகன்ற தில்லையிற் கூத்தனுடைய தாள்களை; முடிக்கு அலர் ஆக்கும் மொய் பூந் துறைவற்கு வந்தன

தன்முடிக்குப் பூவாக்கும் மொய்த்த பூவையுடைய துறையை யுடையவனுக்கு வந்த பழிகளை; சென்று நம் யாய் அறியும் அவைபோய்ப் பரத்தலான் நம்முடைய யாயுமறியும்; படிக்கு அலர் ஆம் அதுவேயு மன்றி, உலகத்திற் கெல்லா மலராம்; அதனான், குடிக்கு அலர் கூறினும் நங்குடிக் கலர் கூறினேமாயினும்; இவை நாம் மறைக்கும் பரிசுகள் என் இவற்றை நாம் மறைத்துச் சொல்லும் பரிசுகளென்னோ! எ - று.

கூறாத்தாளெனவியையும். வடுவகிரோடு பிறபண்பாலொக்கு மாயினும், பெருமையானொவ்வாதென்னுங் கருத்தான், வடிக்கலர் கண்ணென்றாள். வடிக்கென்னு நான்காவது ஐந்தாவதன் பொருட் கண் வந்தது. வடித்தலான் விளங்கும் வேலெனினுமமையும். அறத்தொடு நிற்குமிடத்து எம்பெருமாற்குப் பழிபடக் கூறுமோ வென்றையுறுந் தலைமகட்கு, நங்குடிக்கலர் கூறினுந் துறைவற்குப் பழிபடக் கூறே னென்பதுபடக் கூறித்தோழியறத்தொடு நிற்றலை யுடம்படுவித்த வாறு. கூறாவென்பதற்குக் கூத்தனதாள் தனக்குக் கூறாகவென்றும், யாயறியும்படிக்கலராமென்பதற்கு யாயுமறியும் படியாகச் சென்றலரா மென்று முரைப்பாருமுளர்.மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலை மகளை யாற்றுவித்தல்.291

விளக்கவுரை

18.26 ஐயந்தீரக்கூறல் ஐயந்தீரக்கூறல் என்பது எம்பெருமாற்குப் பழிவருங் கொல்லோவென் றையுற்று அறத்தொடு நின்ற தலைமகளது குறிப்பறிந்த தோழி, அவளையந்தீர, நங்குடிக்குப் பழிவரினும், அவற்குப் பழிவாராமல் மறைத்துக்கூறுமா றென்னோவெனத் தான் றலைமகளைப் பாதுகாத்தல் தோன்றக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.26. விலங்குதல் விரும்பு மேதகு தோழி
அலங்கற் குழலிக் கறிய வுரைத்தது.

விதியுடை யாருண்க வேரி
விலக்கலம் அம்பலத்துப்
பதியுடை யான்பரங் குன்றினிற்
பாய்புனல் யாமொழுகக்
கதியுடை யான்கதிர்த் தோள்நிற்க
வேறு கருதுநின்னின்
மதியுடை யார்தெய்வ மேயில்லை
கொல்இனி வையகத்தே. **#949**

இதன் பொருள்:

விதியுடையார் உண்க வேரி இவ்வெறியாட்டு விழவின் வேரியுண்ண விதியுடையவர்கள் வேரியுண்ணவமையும்; விலக்கலம்

யாமதனைவிலக்கேம், அதுகிடக்க, அம்பலத்துப் பதி உடையான் பரங்குன்றினின் பாய் புனல் யாம் ஒழுக அம்பலமாகிய விருப்பிடத்தையுடையானது பரங்குன்றி னிடத்துப் பரந்த புனலோடே யாமொழுக; கதி உடையான் கதிர்த் தோள் நிற்க எடுத்தற்பொருட்டு ஆண்டுவரவையுடையவனாயவனுடைய ஒளியையுடைய தோள் கணிற்க; வேறு கருது நின்னின் மதி உடையார் இந்நோய் தீர்த்தற்கு வேறோருபாயத்தைக் கருது நின்னைப் போல் அறிவுடையார்; தெய்வமே தெய்வமே; வையகத்து இனி இல்லை கொல் இவ் வுலக்துஇப்போழ் தில்லை போலும் எ - று.

இவ்வாறு கூறவே, நீ கூறியதென்னென்று கேட்ப அறத்தொடு நிற்பாளாவது பயன். அம்பலத்தென அத்துச்சாரியை அல்வழிக்கண் வந்தது. ஓரிடத்தா னொதுக்கப்படாமையிற் பதியுடையவனென்று சொல்லப்படாதவன் அம்பலத்தின்கண் வந்து பதியுடையனாயினா னென்பதுபட வுரைப்பினுமமையும். பாங்குன்றினினென்பதற்குப் 'பாலன் புகுந்திப் பரிசினி னிற்பித்த' (தி.8 கோவை பா.286) என்றதற் குரைத்ததுரைக்க. ஒழுக வென்னும் வினையெச்சம் கதியையுடையா னென்னு மாக்கத்தையுட்கொண்ட வினைக்குறிப்புப் பெயரோடு முடியும். கதி ஆண்டுச்சென்ற செலவு. கதிர்த் தோணிற்கவென்பதற்கு எடுத்தற் பொருட்டு அவன்றோள் வந்து நிற்க வென்று பொருளுரைத்து, அவ்வெச்சத்திற்கு முடிபாக்கினுமமையும். மதியுடையாரில்லைகொல் லென்பது குறிப்பு நிலை, அறத்தொடு நின்ற திறத்தினில் அறத்தோடு நின்ற தன்மைத்தாக. பிறிது புனலிடையவன் வந்துதவினவுதவி. மெய்ப்பாடு: பெருமிதத்தைச் சார்ந்த நகை. பயன்: குறிப்பினால் வெறிவிலக்குதல். 292

விளக்கவுரை

18.27 வெறிவிலக்கல் வெறிவிலக்கல் என்பது தலைமகளை ஐயந்தீர்த்து வெறிக் களத்தே சென்று, வேலனை நோக்கி, புனலிடைவீழ்ந்து கெடப் புக வந்தெடுத்துய்த்த கதிர்த்தோணிற்க, இந்நோய் தீர்த்தற்குப் பிறிதோருபாயத்தைக் கருது நின்னைப்போல, இவ்வுலகத்தின் கண் அறிவுடையாரில்லையென, மேலறத்தொடு நிற்பாளாகத் தோழி வெறி விலக்காநிற்றல். அதற்குச் செய்யுள்

18.27. அறத்தொடு நின்ற திறத்தினிற் பாங்கி
வெறிவி லக்கிப் பிறிது ரைத்தது.

மனக்களி யாய்இன் றியான்மகிழ்
தூங்கத்தன் வார்கழல்கள்
எனக்களி யாநிற்கும் அம்பலத்
தோன்இருந் தண்கயிலைச்

சினக்களி யானை கடிந்தா
ரொருவர்செவ் வாய்ப்பசிய
புனக்கிளி யாங்கடி யும்வரைச்
சாரற் பொருப்பிடத்தே. **#950**
இதன் பொருள்:
மனக் களியாய் இன்று யான் மகிழ் தூங்க உள்ளக்களிப்புண்டாய் இன்றியான் மகிழ்தூங்கும் வண்ணம்; தன் வார்கழல்கள் எனக்கு அளியாநிற்கும் அம்பலத்தோன் இருந் தண்கயிலை எனக்குத் தன்னுடைய நீண்டகழலையுடைய திருவடிகளை யளியாநிற்கும் அம்பலத்தானது பெரிதாகிய குளிர்ந்த கயிலைக்கண்; புனச் செவ் வாய்ப் பசிய கிளி யாம் கடியும் வரைச் சாரல் பொருப்பிடத்து எம்புனத்தின்கண்வருஞ் செவ்வாயை யுடைய பசியகிளிகளை யாங்கடியும் வரையடியினுண்டாகிய பொருப் பிடத்தின்கண்வந்து; ஒருவர் ஒருவர்; சினக்களி யானை கடிந்தார் எம்மேல்வருஞ் சினத்தையுடைய களியானையை மாற்றி னார்; இனியடுப்பது செய்வாயாக எ - று.
கயிலையென்றது கயிலையையணைந்த விடத்தை. கடியும் பொருப்பென வியையும். வரை உயர்ந்தவரை. பொருப்பு பக்க மலை. கிளிகடியும் பருவமென்ற தனாற் கற்பினோடு மாறு கொள்ளாமை முதலாயின கூறினாளாம். மெய்ப்பாடு: அது. பயன்: வெளிப்படையாலறத்தொடு நிற்றல். 293

விளக்கவுரை

18.28 செவிலிக்குத் தோழி யறத்தொடுநிற்றல் செவிலிக்குத் தோழி யறத்தொடு நிற்றல் என்பது வெறிவிலக்கி நிற்ப, நீ வெறிவிலக்குதற்குக் காரணமென் னோவென்று கேட்ட செவிலிக்கு, நீ போய்ப் புனங்காக்கச் சொல்ல, யாங்கள் போய்த்தினைக்கிளி கடியாநின்றோம்; அவ்விடத்தொரு யானைவந்து நின்மகளை யேதஞ்செய்யப் புக்கது; அதுகண்டு அருளுடையானொருவன் ஓடி வந்தணைத்துப் பிறிதொன்றும் சிந்தியாமல் யானையைக் கடிந்து அவளதுயிர்கொடுத்துப் போயினான்; அறியாப்பருவத்து நிகழ்ந்ததனை இன்றறியும் பருவ மாதலான். 'உற்றார்க்கு குரியர் பொற்றொடி மகளிர்' என்பதனை யுட்கொண்டு, இவ்வாறுண் மெலியாநின்றாள்; இனியடுப்பது செய்வாயாகவெனத் தோழி அறத்தொடு நில்லாநிற்றல்.
அதற்குச் செய்யுள்
18.28. சிறப்புடைச் செவிலிக்
கறத்தொடு நின்றது.
இளையா ளிவளையென் சொல்லிப்

பரவுது மீரெயிறு
முளையா அளவின் முதுக்குறைந்
தாள்முடி சாய்த்திமையோர்
வளையா வழுத்தா வருதிருச்
சிற்றம் பலத்துமன்னன்
திளையா வருமரு விக்கயி
லைப்பயில் செல்வியையே. **#951**
இதன் பொருள்:
இமையோர் முடி சாய்த்து இமையோர் தம்முடியைச் சாய்த்து; வளையா வழுத்தாவரு திருச்சிற்றம்பலத்து மன்னன் வணங்கியும் வாழ்த்தியும் வருந் திருச்சிற்றம்பலத்தின்கண் உளனாகிய மன்னனது; திளையாவரும் அருவிக்கயிலைப் பயில் செல்வியை திளைத்துவரு மருவியையுடைய கயிலைக்கட் பயிலுந் திருவாட்டியை; இளையாள் இவளை இளையாளாகிய விவளை; என் சொல்லிப் பரவுதும் என்சொல்லிப் புகழ்வோம்; ஈர் எயிறு முளையா அளவின் முதுக்குறைந்தாள் முன்னெழு மிரண்டெயிறு முளையாத விளமைக்கண் அறிவுமுதிர்ந்தாள் எ - று.
திளைத்தல் ஈண்டிடைவிடாது அவ்விடத்தோடு பயிறல்.
கற்பினின்வழாமை நிற்பித் தெடுத்தோள் கற்பினின் வழுவாமலறிவு கொளுத்தி வளர்த்தவள். மெய்ப்பாடு: உவகை. பயன்: நற்றாய்க்கறத்தொடு நிற்றல். 294

விளக்கவுரை

18.29 நற்றாய்க்குச் செவிலி யறத்தொடு நிற்றல் நற்றாய்க்குச் செவிலி யறத்தொடு நிற்றல் என்பது தோழி யறத்தொடு நிற்பக்கேட்ட செவிலி, இளையளாகிய இல்வாழ்க் கைச் செல்வத்தையுடைய விவளை என்சொல்லிப் புகழுவோம்*?* முன்னெழுமிரண்டெயிறு முளையாத விளமைப்பருவத்தே அறிவு முதிர்ந்தாளெனத் தலைமகளது கற்புமிகுதி தோன்ற நற்றாய்க் கறத்தொடு நில்லாநிற்றல். அதற்குச் செய்யுள்
18.29. கற்பினின் வழாமை நிற்பித் தெடுத்தோள்
குலக்கொடி தாயர்க் கறத்தொடு நின்றது.

கள்ளினம் ஆர்த்துண்ணும் வண்கொன்றை
யோன்தில்லைக் கார்க்கடல்வாய்ப்
புள்ளின மார்ப்பப் பொருதிரை
யார்ப்பப் புலவர்கடம்
வள்ளின மார்ப்ப மதுகர
மார்ப்ப வலம்புரியின்
வெள்ளின மார்ப்ப வரும்பெருந்
தேரின்று மெல்லியலே. **#952**

இதன் பொருள்:
மெல்லியல் மெல்லியால்; கள் இனம் ஆர்த்து உண்ணும் வண் கொன்றையோன் தில்லைக் கார்க் கடல் வாய் கள்ளை வண்டினங்களார்த்துண்ணும் வளவிய கொன்றைப் பூவையுடையவனது தில்லையை யணைந்த கரியகட லிடத்து; புள் இனம் ஆர்ப்ப ஆண்டுப் படியும் புள்ளினங்களார்ப்ப; பொருதிரை ஆர்ப்ப கரையைப்பொருந் திரைகளார்ப்ப; புலவர்கள் தம் வள் இனம் ஆர்ப்ப அவ்வாரவாரத்தோடு மங்கலங்கூறும் புலவர்க டமது வள்ளிய வினமார்ப்ப; மதுகரம் ஆர்ப்ப நறுவிரையால் வண்டுக ளார்ப்ப; வலம்புரியின் வெள் இனம் ஆர்ப்ப வலம்புரியினது வெள்ளிய வினமார்ப்ப; இன்று பெருந்தேர் வரும் இன்று நங்காதலர் பெருந்தேர் வாராநின்றது எ - று.
கரந்தவொழுக்கத்து மணியொலியவித்து வந்ததேர், வரைந் தெய்த இவ்வரவத்தோடு வருமென மகிழ்ந்து கூறியவாறு. கள் என்பது வண்டினுளொரு சாதியென்பாரு முளர். புள்ளினத்தையும் பொருதிரையையும் அவன் வரவிற்கு உவந்தார்ப்பனபோலக் கூறினாள். இதனை மிகைமொழிப்பாற் படுத்திக் கொள்க. முன்னர்த் தலைமகன் பிரிந்தகாலத்துத் தலைமகளதாற்றாமையைத் தாமாற்றுவிக்க மாட்டாது பொறுத்துக் கண்டிருந்த புள்ளினமுங் கடலும் அவனது தேர்வரவுகண்டு, இனிப்பிரிவும் பிரிவாற்றாமையு மில்லையென்று மகிழ்வுற்றார்த்தனவென்றறிக. அணிதினின் வரும் - அணித்தாகவரும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைமகளை யாற்றுவித்தல்; வரைவுமலிந்தமை யுணர்த்தலுமாம்.295

விளக்கவுரை

18.30 தேர்வரவுகூறல் தேர்வரவு கூறல் என்பது நற்றாய்க்குச் செவிலி யறத்தொடு நில்லாநிற்ப, அந்நிலைமைக்கட் டலைமகனது தேரொலி கேட்ட தோழி, உவகையோடு சென்று, தலைமகளுக்கு அதன் வரவெடுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.30. மணிநெடுந் தேரோன் அணிதினின் வருமென
யாழியன் மொழிக்குத் தோழி சொல்லியது

பூரண பொற்குடம் வைக்க
மணிமுத்தம் பொன்பொதிந்த
தோரணம் நீடுக தூரியம்
ஆர்க்கதொன் மாலயற்குங்
காரணன் ஏரணி கண்ணுத
லோன்கடல் தில்லையன்ன
வாரண வும்முலை மன்றலென்
றேங்கும் மணமுரசே. **#953**

இதன் பொருள்:
தொல் மால் அயற்குங் காரணன் பழையராகிய அரியயனுக்குங் காரணனாயுள்ளான்; ஏர் அணி கண் நுதலோன் அழகுண்டாகிய கண்ணையுடைய நுதலையுடையான்; கடல் தில்லை அன்ன அவனது கடலையடைந்த தில்லையை யொக்கும்; வார் அணவும் முலை மன்றல் என்று மணமுரசு ஏங்கும் வாராற்கட்டப்படு மளவைச் சென்றணவும் முலையையுடையாளது மணமென்று மணமுர சேங்காநின்றது. அதனால், பூரண பொற் குடம் வைக்க வாயில்கடோறும் நீரானிறைக்கப்பட்ட பொற்குடத்தை வைக்க; மணி முத்தம் பொன் பொதிந்த தோரணம் நீடுக மணியு முத்தும் பொன்னின்கணழுத்திய தோரணம் எங்குமோங்குவதாக; தூரியம் ஆர்க்க தூரியங்கணின் றார்ப்பனவாக எ-று.

வாரணவுமுலை யென்பதற்கு வாரைப்பொருந்து முலை யெனினுமமையும். மெய்ப் பாடு: உவகை. பயன்: நகரி யலங்கரித்தல்.296

விளக்கவுரை

18.31 மணமுரசுகேட்டு மகிழ்ந்துரைத்தல் மணமுரசுகேட்டு மகிழ்ந்துரைத்தல் என்பது தோழி தலைமகளுக்குத் தேர்வரவு கூறாநின்ற அந்நிலைமைக்கண் மணமுரசு கேட்டு மனையிலுள்ளார், இஃதிவளை நோக்கி யொலியாநின்றது மணமுரசென வுட்கொண்டு யாம் பூரண பொற்குடந் தோரண முதலாயினவற்றான் மனையை யலங்கரிப் போமென மகிழ்வொடு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.31. நிலங்காவலர் நீண்மணத்தின்
நலங்கண்டவர் நயந்துரைத்தது.

அடற்களி யாவர்க்கு மன்பர்க்
களிப்பவன் துன்பவின்பம்
படக்களி யாவண் டறைபொழிற்
றில்லைப் பரமன்வெற்பிற்
கடக்களி யானை கடிந்தவர்க்
கோவன்றி நின்றவர்க்கோ
விடக்களி யாம்நம் விழுநக
ரார்க்கும் வியன்முரசே. **#954**

இதன் பொருள்:
விடக் களி ஆம் நம் விழு நகர் ஆர்க்கும் வியன் முரசு மிகவுங் களிப்புண்டாய நமது சிறந்த வில்லின்கண் முழங்காநின்ற இப்பெரியமுரசம்; வெற்பின் கடக் களியானை கடிந்தவர்க்கோ வெற்பின்கண் மதத்தையுடைய களியானையை நம்மேல் வராமல் மாற்றினவர்க்கோ; அன்றி நின்றவர்க்கோ அன்றியாது

மியைபில்லாதவர்க்கோ? அறிகின்றிலேன் எ - று.
துன்ப இன்பம் பட அடல் களி யாவர்க்கும் அன்பர்க்கு அளிப்பவன் பிறவியான் வருந் துன்பமுமின்பமுங் கெட இயல்பாகிய பேரின்பத்தை யாவராயினு மன்பராயினார்க்கு வரையாது கொடுப்போன்; களியா வண்டு அறை பொழில் தில்லைப் பரமன் களித்து வண்டுக ளொலிக்கும் பொழிலையுடைய தில்லைக்கணுளனாகிய பரமன்; வெற்பின் அவனது வெற்பினெனக் கூட்டுக.
அடற்களி அடுதல் செய்யாத பேரின்பம். அடக்களி யென்பது பாடமாயின், பேரின்பம் யானென்னு முணர்வினைக் கெடுப்ப வென்றுரைக்க. மெய்ப்பாடு: அச்சத்தைச்சார்ந்த மருட்கை. பயன்: ஐயந்தீர்தல். 297

விளக்கவுரை

18.32 ஐயுற்றுக்கலங்கல் ஐயுற்றுக் கலங்கல் என்பது மணமுரசு கேட்டவள் மகிழ் வொடு நின்று மனையை யலங்கரியா நிற்ப, மிகவுங் களிப்பை யுடைத்தாய நமது சிறந்த நகரின்கண் முழங்காநின்ற இப்பெரிய முரசம், யான் எவற்கோ அறிகின்றிலேனெனத் தலைமகள் கலக்க முற்றுக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்-
18.32. நல்லவர்முரசுமற் றல்லவர்முரசெனத்
தெரிவரிதென அரிவைகலங்கியது.

என்கடைக் கண்ணினும் யான்பிற
வேத்தா வகையிரங்கித்
தன்கடைக் கண்வைத்த தண்தில்லைச்
சங்கரன் தாழ்கயிலைக்
கொன்கடைக் கண்தரும் யானை
கடிந்தார் கொணர்ந்திறுத்தார்
முன்கடைக் கண்ணிது காண்வந்து
தோன்றும் முழுநிதியே. **#955**

இதன் பொருள்:
கடை என் கண்ணினும் கடையாகிய வென்னிடத்தும்; யான் பிற ஏத்தா வகை இரங்கித் தன் கடைக்கண் வைத்த யான் பிறதெய்வங்களை யேத்தாதவண்ண மிரங்கித் தனது கடைக்கண்ணைவைத்த; தண் தில்லைச் சங்கரன் தாழ்கயிலை குளிர்ந்த தில்லைக்கணுளனாகிய சங்கரன் மேவுங்கயிலை யிடத்து; கொன்கடைக்கண் தரும் யானை கடிந்தார் தமக்கொரு பயன் கருதாது நமக்கிறுதியைப்பயக்கும் யானையை யன்றுகடிந்தவர்; கொணர்ந்து இறுத்தார் கொணர்ந்து விட்டார் விட; கடைக்கண் முன்வந்து தோன்றும் முழுநிதி நங்கடைமுன் வந்து தோன்றும் குறைவில்லாத நிதி; இது காண் இதனைக்காண்பாயாக

எ - று.

என்கடைக்கண்ணினு மென்பதற்கு மொழிமாற்றாது எனது கடையாகிய நிலைமைக்கண்ணுமென் றுரைப்பினுமமையும். கண்ணகன்ஞாலமென்புழிப்போலக் கண்ணென்பது ஈண்டுப் பெயராகலின் ஏழனுருபு விரித்துரைக்க. கடைக்கண்ணினு மென்னும் வேற்றுமைச்சொல்லும், ஏத்தாவகையென்னும் வினையெச்சமுங் கடைக்கண் வைத்த வென்னும் வினைகொண்டன. கடைக்க ணென்பதனை முடிவாக்கி, என் முடிவுகாலத்தும் பிறவேத்தா வகையென்றுரைப்பாருமுளர். கொன்கடைக் கண்டரும்யானை யென்பதற்கு, அச்சத்தைக் கடைக்கண்டரும் யானையென்றுரைப்பாரு முளர். வண்புகழ் அறத்தொடுநின்று கற்புக்காத்தலான் வந்த புகழ். மெய்ப்பாடு: உவகை. பயன்: ஐயந்தீர்தல். 298

விளக்கவுரை

18.33 நிதிவரவு கூறாநிற்றல் நிதிவரவு கூறாநிற்றல் என்பது முரசொலிகேட்டு ஐயுற்றுக் கலங்காநின்ற தலைமகளுக்கு, நமர் வேண்டினபடியே அருங்கலங் கொடுத்து நின்னை வரைந்துகொள்வாராக, யானைகடிந்தார் நமது கடைமுன் கொணர்ந்திறுத்தார் குறைவில்லாத நிதி; இதனை நீ காண்பாயாகவெனத் தோழி மகிழ்தருமனத்தொடு நின்று நிதி வரவு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

18.33. மகிழ்தரு மனத்தொடு வண்புகழ்த் தோழி
திகழ்நிதி மடந்தைக்குத் தெரிய வுரைத்தது.

2.19.மணஞ்சிறப்புரைத்தல்

பிரசந் திகழும் வரைபுரை
யானையின் பீடழித்தார்
முரசந் திகழு முருகியம்
நீங்கும் எவர்க்குமுன்னாம்
அரசம் பலத்துநின் றாடும்
பிரானருள் பெற்றவரிற்
புரைசந்த மேகலை யாய்துயர்
தீரப் புகுந்துநின்றே. **#956**

இதன் பொருள்:

சந்த புரை மேகலையாய் நிறத்தையுடைய வுயர்ந்த மேகலையையுடையாய்; எவர்க்கும் முன்னாம் அரசு அரியயன் முதலாகிய யாவர்க்கும் முன்னாயிருக்குமரசு; அம்பலத்து நின்று ஆடும் பிரான் இவ்வாறு பெரியனாயினும் எளியனாய் அம்பலத்தின்கண்

எல்லாருங்காண நின்றாடுமுதல்வன்; அருள் பெற்றவரின் துயர் தீர அவனதருளுடையவரைப்போல நாந்துயர்தீர; புகுந்து நின்று நம்மில்லின்கட் புகுந்துநின்று; பிரசம் திகழும் வரை புரை யானையின் பீடு அழித்தார் முரசம் திகழும் பெருந்தேன் றிகழு மலை போலும் யானையினது வலியை நங்காரணமாக வழித்தவரது முரசு முழங்கி விளங்காநின்றது; முருகியம் நீங்கும் அதுவேயுமன்றி, வெறி காரணமாக ஒலிக்கும் முருகியமும் நீங்காநின்றது; இனியென்ன குறையுடையோம் ? எ-று.

புகுந்துநின்று திகழுமெனக் கூட்டுக. வரையுயர்யானை யென்பதூஉம் பாடம். முருகுங் கமழுமென்று பாடமோதி, கலியாணத்திற் குறுப்பாம் நறுவிரை நாறாநின்றனவென் றுரைப்பாரு முளர். மெய்ப்பாடு: அது. பயன்: தலைமகளை மகிழ்வித்தல். 299

விளக்கவுரை

19.1 மணமுரசு கூறல் மணமுரசு கூறல் என்பது வரைபொருட் பிரிந்துவந்த பின்னர் அருங்கலம் விடுத்தற்கு முன்றிற்கணின்று தலைமகனது முரசு முழங்காநிற்பக் கண்டு மகிழ்வுறாநின்ற தோழி, நாந்துயர் தீர நம்மில்லின்கட் புகுந்து நின்று யானைகடிந்தார் முரசு முழங்காநின்றது; இனி யென்ன குறையுடையோ மென வரைவு தோன்ற நின்று, தலைமகளுக்கு மணமுரசு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

19.1. வரைவுதோன்ற மகிழ்வுறுதோழி
நிரைவளைக்கு நின்றுரைத்தது.

இருந்துதி யென்வயிற் கொண்டவன்
யான்எப் பொழுதுமுன்னும்
மருந்து திசைமுகன் மாற்கரி
யோன்தில்லை வாழ்த்தினர்போல்
இருந்து திவண்டன வாலெரி
முன்வலஞ் செய்திடப்பால்
அருந்துதி காணு மளவுஞ்
சிலம்பன் அருந்தழையே **#957**

இதன் பொருள்:

சிலம்பன் அரும் தழை சிலம்பன்றந்த பெறுதற்கரிய தழைகள்; முன் எரி வலம் செய்து இப்பொழுது முன்றீயை வலங்கொண்டு; இடப்பால் அருந்துதி காணும் அளவும் பின் வசிட்டனிடப்பக்கத்துத் தோன்றும் அருந்ததியைக் காணும் அளவும்; தில்லை வாழ்த்தினர் போல் இருந்து திவண்டன தில்லையை வாழ்த்தினரைப்போல வாடாதிருந்து விளங்கின எ - று.

இருந்துதி என் வயின் கொண்டவன் அன்பர் துதிப்ப அவர் வயிற்

றான்கொள்ளும் பெருந்துதியை என்வயினுண்டாக்கிக் கொண்டவன்; யான் எப்பொழுதும் உன்னும் மருந்து யானெப் பொழுது முன்னும் வண்ணஞ் சுவையுடைத்தாயதோர் மருந்து; திசைமுகன் மாற்கு அரியோன் இவ்வாறெனக்கெளியனாயினுந் திசை முகற்கும் மாற்கு மரியான்; தில்லை அவனது தில்லையெனக் கூட்டுக.
என்றது தழைகளை வாடாமல் வைத்து, அத்தழையே பற்றுக்கோடாக ஆற்றியிருந்தாளெனத் தலைமகளை மகிழ்ந்து கூறியவாறு. திவண்டன வென்பதற்கு வாடாதிருந்து இவளைத் தீண்டியின்புறுத்தினவென்றுரைப்பினுமமையும். தழை வாடா திருந்தனவென்றது முன்னர்த் தான் அவன்றந்த தழையையேற்ற முகூர்த்தத்தைக் கொண்டாடியவாறு. மெய்ப்பாடு: உவகை. பயன்: மகிழ்தல். வேயினமென்றோள் (பா.282) என்னுமதுதொட்டு இதுகாறும் வர இப்பாட்டுப் பத்தொன்பதும் அறத்தொடு நிலையினையும், அதன் பின்னர் வரைதலையும் நுதலினவென்பது. அகத்திணையின் மிகத் திகழும் இன்பக் கலவி இன்பக் களவு முற்றிற்று. எண்பத்தொராம் பாட்டு முதல் இப்பாட்டீறாகத் தோழி யாலாய கூட்டம்.300

விளக்கவுரை

19.2 மகிழ்ந்துரைத்தல் மகிழ்ந்துரைத்தல் என்பது மணமுரசொலி கேட்ட தோழி, சிலம்பன்றந்த பெறுதற்கரிய தழைகளை வாடாமல்வைத்து, அத்தழையே பற்றுக்கோடாக ஆற்றியிருந்தாளெனத் தலை மகளைத் தன்னுள்ளே மகிழ்ந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

19.2 மன்னிய கடியிற் பொன்னறுங் கோதையை
நன்னுதற் றோழி தன்னின் மகிழ்ந்தது.

சீரியல் ஆவியும் யாக்கையும்
என்னச் சிறந்தமையாற்
காரியல் வாட்கண்ணி எண்ணக
லார்கம லங்கலந்த
வேரியுஞ் சந்தும் வியல்தந்
தெனக்கற்பின் நிற்பரன்னே
காரியல் கண்டர்வண் தில்லை
வணங்குமெங் காவலரே. **#958**

இதன் பொருள்:

அன்னே அன்னாய்; கார் இயல் கண்டர் வண்தில்லை வணங்கும் எம் காவலர் கார்போலுங் கண்டத்தை யுடையவரது வளவிய தில்லையைவணங்கு மெம்முடைய காவலர்; சீர் இயல் ஆவியும் யாக்கையும் என்னச் சிறந்தமையால் சீர்மையியலு முயிருமுடம்பும்போல ஒருவரையொருவர் இன்றியமையாமையால்; கார் இயல் வாள் கண்ணி

எண் அகலார் கரியவியல்பை யுடைய வாள் போலுங் கண்ணையுடையாளது கருத்தைக்கடவார்; கமலம் கலந்த வேரியும் சந்தும் வியல் தந்தென தாமரைப் பூவைச் சேர்ந்த தேனுஞ் சந்தனமரமும் இடத்துநிகழ் பொருளுமிடமுமாய் இயைந்து தம்பெருமையைப் புலப்படுத்தினாற் போல இயைந்து; கற்பின் நிற்பர் இவளது வழிபாட்டின் கண்ணே நிற்பர் எ - று.

எண்ணகலா ரென்றதனாற் காதலியாதலும், கற்பினிற்ப ரென்றதனால் வாழ்க்கைத்துணையாதலுங் கூறப்பட்டன. ஆவியும் வேரியும் தலைமகட் குவமையாகவும், யாக்கையுஞ் சந்தும் தலைமகற்குவமையாகவுமுரைக்க. பிரித்துவமையாக்காது, இவரது கூட்டத்திற்கு அவற்றது கூட்டமுவமையாக வுரைப்பினுமமையும், காரியல் கண்டர்வண்டில்லை வணங்கு மென்றதனான், இவரதில்வாழ்க்கை இன்றுபோல என்றும் நிகழு மென்பது கூறினாளாம். இன்னேயென்பது பாடமாயின், இப்பொழுதே யென்றுரைக்க. மெய்ப்பாடு: உவகை. பயன்: மகிழ்வித்தல். 301

விளக்கவுரை

19.3 வழிபாடு கூறல் வழிபாடுகூறல் என்பது மணஞ்செய்த பின்னர் மணமனை காணவந்த செவிலிக்கு, காவலர் உடம்புமுயிரும்போல ஒருவரை யொருவர் இன்றியமையாமையால் இவள் கருத்தைக் கடவார்; கமலங் கலந்த தேனுஞ் சந்தனமரமும் போல வியைந்து இவள் கற்புவழி நிற்றலையுடையராய் இவள் வழியே நின்றொழுகா நின்றாரெனத் தோழி தலைமகன் றலைமகள் வழி யொழுகா நின்றமை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

19.3. மணமனை காண வந்தசெவி லிக்குத்
துணைமலர்க் குழலி தோழி சொல்லியது.

தொண்டின மேவுஞ் சுடர்க்கழ
லோன்தில்லைத் தொல்நகரிற்
கண்டின மேவுமில் நீயவள்
நின்கொழு நன்செழுமென்
தண்டின மேவுதிண் தோளவன்
யானவள் தற்பணிவோள்
வண்டின மேவுங் குழலா
ளயல்மன்னும் இவ்வயலே. **#959**

இதன் பொருள்:

தொண்டினம் மேவும் சுடர்க் கழலோன் தில்லைத் தொல் நகரில் - தொண்டர தினத்தைப் பொருந்துஞ் சுடர்க்கழலை யுடையவனது தில்லையாகிய பழையநகரிடத்தில்; கண்ட இல் மேவு நம் இல்

யான்கண்ட அவளதில்லம் மேவப்படு நமதில்லத் தோடொக்கும்; அவள் நீ அவள் நின்னோடொக்கும்; தண்டு இனம் மேவும் செழு மெல் திண் தோளவன் நின் கொழுநன் தண்டாகிய வினத்தையொக்கும் வளவியவாய் மெல்லியவாகிய திண்ணிய தோள்களையுடையான் நின்கொழுநனோ டொக்கும்; அவள் தற் பணிவோள் யான் அவடன்னைப்பணிந்து குற்றேவல் செய்வாள் என்னோடொக்கும்; வண்டினம் மேவும் குழலாள் அயல் இவ்வயல் - வண்டினம் பொருந்துங் குழலையுடையாளதயல் இவ்வயலோ டொக்கும்; வேறுசொல்லலாவதில்லை எ-று.

கண்டவென்பது கடைக்குறைந்து நின்றது. பெண்டீர்க்கு ஊறினி தாதனோக்கித் தோளிற்கு மென்மைகூறினாள். தண்டின மென்புழி இனமென்றது சாதியை. மன்னும்: அசைநிலை; பெரும் பான்மையுமென்பதுபட நின்றதெனினுமமையும். கண்டென்பதனைத் தன்மைவினை யென்று, அவளில்வாழ்க்கையோர் கண்டேனென முன் பொதுவகையாற் கூறிப் பின் சிறப்புவகையாற் கூறிற்றாக வுரைப்பாருமுளர். மெய்ப்பாடும், பயனும் அவை. 302

விளக்கவுரை

19.4 வாழ்க்கைநலங் கூறல் வாழ்க்கை நலங்கூறல் என்பது மணமனைகண்ட செவிலி, மகிழ்வோடு சென்று, நின்மகளுடைய இல்வாழ்க்கை நலத்திற்கு உவமைகூறில், நின்னுடைய இல்வாழ்க்கை நலமல்லது வேறுவமை யில்லையென நற்றாய்க்குத் தலைமகளது வாழ்க்கைநலங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

19.4. மணமனைச் சென்று மகிழ்தரு செவிலி
அணிமனைக் கிழத்திக் கதன்சிறப் புரைத்தது.

பொட்டணி யான்நுதல் போயிறும்
பொய்போ லிடையெனப்பூண்
இட்டணி யான்தவி சின்மல
ரன்றி மிதிப்பக்கொடான்
மட்டணி வார்குழல் வையான்
மலர்வண் டுறுதலஞ்சிக்
கட்டணி வார்சடையோன்தில்லை
போலிதன் காதலனே. **#960**

இதன் பொருள்:

கட்டு அணி வார் சடையோன் தில்லை போலி தன் காதலன் மகுடமாகக் கட்டப்பட்ட அழகிய நீண்ட சடையை யுடையவனது தில்லையையொப்பாடன்னுடைய காதலன்; பொய் போல் இடை போய் இறும் எனப் பூண் இட்டு அணியான் பொய்போலுமிடை

போயிறுமென்று கருதிப் பூணைப் பூட்டி யணியான்; தவிசின் மலர் அன்றி மிதிப்பக் கொடான் மெல்லடி நோதலஞ்சித் தவிசின் மிதிப்புழியும் மலரினன்றி மிதிப்பவிடான்; வண்டு உறுதல் அஞ்சி மட்டு அணிவார் குழல் மலர் வையான் வண்டுற்று மொய்த்தலஞ்சித் தேனையுடைய வழகிய வார்குழலிடத்து மலர்களை வையான்; இவை சொல்லுகின்றதென்; நுதல் பொட்டு அணியான் பொறையாமென்று நுதலின்கட் பொட்டையுமிடான் எ-று.

கட்டணி வார்சடையென்பதற்கு மிக்க அழகையுடைய சடையெ னினுமமையும். தவிசின் மிசையென்று பாடமோது வாருமுளர். 303

விளக்கவுரை

19.5 காதல் கட்டுரைத்தல் காதல் கட்டுரைத்தல் என்பது அவளில்வாழ்க்கை நலங் கிடக்க, அவன் அவண்மேல்வைத்த காதலான் இவையேயன்றிப் பொறையாமென்று கருதி நுதலின்கண் இன்றியமையாத காப்பாகிய பொட்டையு மணியான்*;* இஃதவன் காதலெனத் தலைமகனது காதன்மிகுதி கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

19.5. சோதி வேலவன்

காதல்கட் டுரைத்தது.

தெய்வம் பணிகழ லோன்தில்லைச்
சிற்றம் பலம்அனையாள்
தெய்வம் பணிந்தறி யாள்என்று
நின்று திறைவழங்காத்
தெவ்வம் பணியச்சென் றாலுமன்
வந்தன்றிச் சேர்ந்தறியான்
பௌவம் பணிமணி யன்னார்
பரிசின்ன பான்மைகளே. **#961**

இதன் பொருள்:

தெய்வம் பணி கழலோன் தில்லைச் சிற்றம்பலம் அனையாள் பிறரான் வழிபடப்படுந் தெய்வங்கள் வணங்குந் திருவடிகளையுடையவனது தில்லையிற் சிற்றம்பலத்தை யொப்பாள்; என்றும் தெய்வம் பணிந்து அறியாள் எஞ்ஞான்றும் வேறொரு தெய்வத்தைப் பணிந்தறியாள்; நின்று திறை வழங்காத் தெவ்வம் பணியச் சென்றாலும் முன்னின்று திறைகொடாத பகைவர் வந்து பணியும்வண்ணம் வினைவயிற் சென்றாலும்; மன் வந்து அன்றிச் சேர்ந்து அறியான் அம்மன்னவன் அவளதில்லத்து வந்தல்லது ஆண்டுத்தங்கியறியான்; பௌவம் பணிமணி அன்னார் பரிசு இன்ன பான்மைகள் பௌவந்தந்த மணிபோலப் பெருங் குலத்துப்பிறந்த தூயோரதியல்பு இன்ன முறைமைகளை யுடைய எ-று.

தெவ்வு: தெவ்வமென விரிக்கும்வழி விரித்து நின்றது. தெவ்வம்பணியச் சென்றாலு மென்பதற்குத் தெவ்வர் அம்பையணிய வென்றும், பௌவம் பணி மணி யென்பதற்குக் கடலிடத்தும் பாம்பிடத்து முளவாகிய முத்தும் மாணிக்கமுமென்று முரைப்பாரு முளர். விற்பொலி நுதலி விற்போலு நுதலி. 304

விளக்கவுரை

19.6 கற்பறிவித்தல் கற்பறிவித்தல் என்பது தலைமகனது காதன்மிகுதி கூறின செவிலி, அதுகிடக்க, அவளவனையொழிய வேறொரு தெய்வத்தைத் தெய்வமாகக் கருதாளாதலான், அவன் றன்னைவணங்காத பகைவரைச் சென்று கிட்டித் திறைகொள்ளச் சென்றாலுந் திறை கொண்டுவந்து அவளதில்லத்தல்லது ஆண்டுத் தங்கியறியான்; இஃதவரதியல்பெனக் கூறி நற்றாய்க்குத் தலைமகளது கற்பறிவியா நிற்றல். அதற்குச் செய்யுள்

19.6. விற்பொலி நுதலி
கற்பறி வித்தது.

சிற்பந் திகழ்தரு திண்மதில்
தில்லைச்சிற் றம்பலத்துப்
பொற்பந்தி யன்ன சடையவன்
பூவணம் அன்னபொன்னின்
கற்பந்தி வாய்வட மீனுங்
கடக்கும் படிகடந்தும்
இற்பந்தி வாயன்றி வைகல்செல்
லாதவ னீர்ங்களிறே. **#962**

இதன் பொருள்:

சிற்பம் திகழ்தரு திண் மதில் தில்லை நுண்டொழில் விளங்குந் திண்ணிய மதிலையுடைய தில்லையின்; சிற்றம்பலத்துப் பொற் பந்தி அன்ன சடையவன் பூவணம் அன்ன பொன்னின் கற்பு சிற்றம்பலத்தின்கணுளனாகிய பொற்றகட்டு நிரைபோலுஞ் சடையையுடையவனது பூவணத்தையொக்கும் பொன்னினது கற்பு; அந்தி வாய் வடமீனும் கடக்கும் அந்திக் காலத்துளதாகிய வடமீனையும் வெல்லும்; அதனான், அவன் ஈர்ங்களிறு எடுத்துக்கொண்டவினையை யிடையூறின்றி யினிதின் முடித்து அவனூரும் மதத்தானீரியகளிறு; படி கடந்தும் இல் பந்தி வாய் அன்றி வைகல் செல்லாது நிலத்தைக்கடந்தும் இல்லின்கட்டன் பந்தியிடத்தல்லது தங்காது எ -று.

பொற்பந்தியன்ன சடையென்பதற்கு அழகிய அந்திவானம் போலுஞ் சடையென்பாருமுளர். அந்திக்காலத் துக் கற்புடைமகளிராற் றொழப்படுதலின், அந்திவாய் வடமீனென் றாள். கற்புப்பயந்த

வற்புதமாவது படிகடந்துங் கடிது வரும்வண்ணம் எடுத்துக் கொண்ட வினையை யிடையூறின்றி யினிது முடித்தல். 305

விளக்கவுரை

19.7 கற்புப் பயப்புரைத்தல் கற்புப் பயப்புரைத்தல் என்பது கற்பறிவித்த செவிலி, அவள் அவனையொழிய வணங்காமையின் அவனூருங்களிறும் வினைவயிற்சென்றால் அவ்வினை முடித்துக் கொடுத்து வந்து தன் பந்தியிடத்தல்லது ஆண்டுத்தங்காதாதலான், அவளது கற்பு, அந்திக் காலத்து வடமீனையும் வெல்லுமென அவளது கற்புப் பயந்தமை நற்றாய்க்குக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

19.7. கற்புப் பயந்த
அற்புத முரைத்தது.

மன்னவன் தெம்முனை மேற்செல்லு
மாயினும் மாலரியே
றன்னவன் தேர்புறத் தல்கல்செல்
லாது வரகுணனாந்
தென்னவ னேத்துசிற் றம்பலத்
தான்மற்றைத் தேவர்க்கெல்லாம்
முன்னவன் மூவலன் னாளுமற்
றோர்தெய்வ முன்னலளே. **#963**

இதன் பொருள்:

மன்னவன் தெம் முனை மேல் செல்லும் ஆயினும்மன்னவனது பகைமுனை மேலேவப்பட்டுப் போமாயினும்; மால் அரி ஏறு அன்னவன் தேர் புறத்து அல்கல் செல்லாது பெரிய வரியேற்றை யொப்பா னூருந்தேர் தன்னிலை யினல்லது புறத்துத் தங்காது; வரகுணன் ஆம் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான் வரகுணனாகிய தென்னவனாலேத்தப்படுஞ் சிற்றம்பலத்தின் கண்ணான்; மற்றைத் தேவர்க்கு எல்லாம் முன்னவன் தானல்லாத வரியயன்முதலாகிய தேவர்க்கெல்லாம் முன்னே யுள்ளான்; மூவல் அன்னாளும் மற்று ஓர் தெய்வம் முன்னலள் அவளது மூவலை யொப்பாளும் வேறொரு தெய்வத்தைத் தெய்வமாகக் கருதாள் எ - று.

மற்றெத் தேவர்கட்கு மென்பதூஉம் பாடம். 306

விளக்கவுரை

19.8 மருவுதலுரைத்தல் மருவுதலுரைத்தல் என்பது கற்புப் பயப்புரைத்த செவிலி, வேந்தற்குற்றுழிப் பிரியினும் அவனூருந்தேரும் வினைமுடித்துத் தன்னிலையி னல்லது புறத்துத் தங்காது; அவளும் அவனை யொழிய மற்றோர் தெய்வமும் மனத்தானு நினைந்தறியாள்;

இஃதிவர் காதலென அவ்விருவர்காதலு மருவுதல் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
19.8. இருவர் காதலும்
மருவுத லுரைத்தது,

ஆனந்த வெள்ளத் தழுந்துமொர்
ஆருயிர் ஈருருக்கொண்
டானந்த வெள்ளத் திடைத்திளைத்
தாலொக்கும் அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழ
லோனருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம்வற் றாதுமுற்
றாதிவ் வணிநலமே. **#964**

இதன் பொருள்:
ஆனந்த வெள்ளத்து அழுந்தும் ஓர் ஆர் உயிர் இருவரது காதலுங்களிப்பும் இன்பவெள்ளத்திடையழுந்தப் புகுகின்ற தோருயிர்; ஈர் உருக்கொண்டு ஆனந்த வெள்ளத்திடைத் திளைத்தால் ஒக்கும் ஒருடம்பாற்றுய்த்தலாராமையின் இரண் டுடம்பைக் கொண்டு அவ்வின்ப வெள்ளத்திடைக் கிடந்து திளைத்ததனோ டொக்கும்; அதுவேயு மன்றி, அம்பலம் சேர் ஆனந்த வெள்ளத்து அறை கழலோன் அருள் பெற்றவரின் அம்பலத்தைச் சேர்ந்த வின்பவெள்ளத்தைச் செய்யு மொலிக்குங் கழலையுடைத்தாகிய திருவடியையுடைய வனதருளைப் பெற்றவரின்பம் போல; ஆனந்த வெள்ளம் வற்றாது இவ்வின்ப வெள்ளமும் ஒருகாலத்துங் குறைவு படாது; இவ்வணிநலம் முற்றாது இவ்வணிநலமு முதிராது எ-று.
இவை யைந்திற்கும் மெய்ப்பாடு: உவகை. பயன்: மகிழ்தல். 307

விளக்கவுரை

19.9 கலவியின்பங் கூறல் கலவியின்பங் கூறல் என்பது இருவர்காதலு மருவுதல் கூறின செவிலி, இவ்விருவருடைய காதலுங் களிப்பும், இன்பவெள்ளத்திடை யழுந்தப் புகுகின்றதோ ருயிர் ஓருடம்பாற் றுய்த்தலாராமையான் இரண்டுடம்பைக் கொண்டு, அவ்வின்ப வெள்ளத்திடைக் கிடந்து, திளைத்ததனோடொக்கும், அதுவன்றி அவ்வின்ப வெள்ளம் ஒருகாலத்தும் வற்றுவதும் முற்றுவதுஞ் செய்யாதென நற்றாய்க்கு அவரது கலவி யின்பங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
19.9. நன்னுதல் மடந்தை தன்னலங் கண்டு
மகிழ்தூங் குளத்தோ டிகுளை கூறியது.

2.20.ஓதற்பிரிவு

சீரள வில்லாத் திகழ்தரு
கல்விச்செம் பொன்வரையின்
ஆரள வில்லா அளவுசென்
றாரம் பலத்துள்நின்ற
ஓரள வில்லா ஒருவன்
இருங்கழ லுன்னினர்போல்
ஏரள வில்லா அளவின
ராகுவ ரேந்திழையே. **#965**

இதன் பொருள்:

ஏந்திழை ஏந்திழையாய்; சீர் அளவு இல்லாத் திகழ்தரு கல்விச் செம்பொன் வரையின் ஆரளவு இல்லா அளவு சென்றார் நன்மைக்கெல்லையில்லாத விளங்குங் கல்வி யாகிய மேருக் குன்றத்தினது மிக்கவளவில்லாத வெல்லையை யடைந்தவர்கள்; அம்பலத்துள் நின்ற ஓரளவு இல்லா ஒருவன் இரும் கழல் உன்னினர் போல் அம்பலத்தின்கணின்ற ஓரளவையுமில்லாத ஒப்பில்லாதானுடைய பெரிய திருவடிகளையறிந்து நினைந்தவரைப் போல; ஏர் அளவு இல்லா அளவினர் ஆகுவர் - நன்மைக் கெல்லை யில்லாத தன்மையராவர் எ - று. செம்பொன் வரை யென்றான், தூய்மையும் பெருமையுங் கலங்காமையுமுடைமையால். கற்றதின் மேலுங் கற்க நினைக்கின்றா னாதலான், ஆரளவில்லா வளவு சென்றா ரென்றான். ஆரளவு காதமும் புகையு முதலாயின அளவு. ஓரளவென்பது காட்சியும் அனுமானமு முதலாயினவளவு. இது குறிப்பெச்சம். செல்வத்தவர் இல்வாழ்க்கைச் செல்வத்தவர். அறிவறிவித்தது அறியப்படுவதனை யறிவித்தது. பாங்கியறிவறி வித்ததென்பது பாடமாயின், தலைமகனது குறிப்பைக் கண்டு தோழி தலைமகட்குக் குறிப்பினாற் கூறினாளாகவுரைக்க. மெய்ப்பாடு: பெருமிதம். பயன் பிரிவுணர்த்தல்.308

விளக்கவுரை

20.1 கல்விநலங்கூறல் கல்விநலங் கூறல் என்பது வரைந்துகொண்ட பின்னர் ஓதற்குப் பிரிய லுறாநின்ற தலைமகன், தலைமகளுக்குப் பிரிவு ணர்த்துவானாக மிகவுங் கூற்றாற் கற்றோர் நன்மைக்கெல்லை யில்லாத தன்மைய ராவரெனத் தோழிக்குக் கல்விநலங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

20.1. கல்விக் ககல்வர் செல்வத் தவரெனச்
செறிகுழற் பாங்கிக் கறிவறி வித்தது.

வீதலுற் றார்தலை மாலையன்

தில்லைமிக் கோன்கழற்கே
காதலுற் றார்நன்மை கல்விசெல்
வீதரு மென்பதுகொண்
டோதலுற் றாருற் றுணர்தலுற்
றார்செல்லல் மல்லழற்கான்
போதலுற் றார்நின் புணர்முலை
யுற்ற புரவலரே. **#966**
இதன் பொருள்:
செல்வீ செல்வீ; வீதல் உற்றார் தலை மாலையன்
கெடுதலையடைந்தவர் தலையானியன்ற மாலையை யுடையான்;
தில்லைமிக்கோன் தில்லைக் கணுளனாகிய பெரியோன்; கழற்கே காதல்
உற்றார் நன்மை கல்வி தரும் என்பது கொண்டு அவனுடைய
திருவடிக்கே யன்புற்றாரது நன்மையைக் கல்வி தருமென்பதனைக்
கருதி; ஓதல் உற்றார் உற்று ஓதுதலான் மிக்காரைக் கிடைத்து; உணர்தல்
உற்றார் எல்லா நூல்களையு முணர்தலுற்று; நின்புணர் முலை உற்ற
புரவலர் நின்புணர் முலையைச் சேர்ந்த புரவலர்; செல்லல் மல் அழல்
கான் போதல் உற்றார்- இன்னாமையைச் செய்யும் மிக்க வழலையுடைய
கானகத்தைப் போகநினைந்தார் எ- று.
ஓத்தான் உயர்ந்தாரைக் கிடைத்து அவரோடுசாவித் தமது
கல்விமிகுதியை யறியலுற்றா ரென்றுரைப்பாருமுளர். உணர்தலுற்றா
ரென்பதனை முற்றாகவுரைப் பினுமமையும். நின்புணர் முலையுற்ற
வென்றதனான், முலையிடத்துத் துயிலை நினைந்து நீட்டியாது
வருவரென்றும், புரவலரென்றதனான். நின்னலந் தொலையாமற்
காப்பரென்றுங் கூறிப் பிரிவுடம்படுத்தாளாம். செல்வத்தவரென்றது
ஈண்டுத் தலைமகனை. மெய்ப்பாடு: அழுகையைச் சார்ந்த பெருமிதம்.
பயன்: பிரிவுணர்த்துதல். 309

விளக்கவுரை

20.2 பிரிவு நினைவுரைத்தல் பிரிவுநினைவுரைத்தல் என்பது கல்விநலங்
கேட்ட தோழிஅவன் பிரிதற் குறிப்பறிந்து, மிகவுங் கற்றோர் நன்மைக்
கெதிரில்லாத தன்மையராவரென்பதனை யுட்கொண்டு,
நின்புணர்முலையுற்றபுரவலர், அழற்கானத்தே போய்க் கல்வியான்
மிக்காரைக் கிட்டி அவரோடு உசாவித் தங்கல்வி மிகுதி புலப்படுத்தப்
பிரியா நின்றாரெனத் தலைமகன் ஓதுதற்குப் பிரிவு நினைந்தமை
தலைமகளுக்குக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
20.2. கல்விக் ககல்வர் செல்வத் தவரெனப்
பூங்குழல் மடந்தைக்குப் பாங்கி பகர்ந்தது.
கற்பா மதிற்றில்லைச் சிற்றம்

பலமது காதல்செய்த
விற்பா விலங்கலெங் கோனை
விரும்பலர் போலஅன்பர்
சொற்பா விரும்பின ரென்னமெல்
லோதி செவிப்புறத்துக்
கொற்பா இலங்கிலை வேல்குளித்
தாங்குக் குறுகியதே. **#967**
இதன் பொருள்:
கல் பா மதில் தில்லைச் சிற்றம்பலமது காதல் செய்த கல்லாற் செய்யப்பட்ட பரந்த மதிலையுடைய தில்லைக்கட் சிற்றம்பலமதனைக் காதலித்த; வில் பா விலங்கல் எங்கோனை விரும்பலர் போல வில்லாகச் செய்யப்பட்ட பரந்த மலையையுடைய எம்முடையகோனை விரும்பாதாரைப் போல; அன்பர் சொல் பா விரும்பினர் என்ன நம்மன்பர் சொல்லானியன்ற பாவாகிய நூல்களைக் கற்க விரும்பினாரென்று சொல்ல; மெல்லோதி செவிப் புறத்து அச்சொல் மெல்லோதியையுடையாளது செவிக்கண்; கொல் பா இலங்கு இலை வேல் குளித்தாங்குக் குறுகியது கொற்றொழில் பரந்த விளங்குமிலையையுடைய வேல் சென்று மூழ்கினாற்போலச் சென்றெய்திற்று; இனிப் பிரிவை யெங்ஙனமாற்றுமோ! எ - று. பொருப்புவில்லி மேல் விருப்புடையார் கல்விக் கடனீந்தி வருந்தாமையின் விரும்பலர்போலச் சொற்பாவிரும்பின ரென்றாள். இனி வருந்தவென்பதோர் சொல்லைவிரித்து விரும்பலர் போல வருந்த அச்சொற்குறுகியதென் றுரைப்பினுமமையும். பூங்கொடி கலக்கம் பாங்கி தன்னுள்ளே சொல்லியது; தலைமகற்குக் கூறியதென் றுரைப்பாருமுளர்.
மெய்ப்பாடு: அழுகை. பயன்: செலவழுங்கு வித்தல். 310

விளக்கவுரை

20.3 கலக்கங்கண்டுரைத்தல் கலக்கங்கண்டுரைத்தல் என்பது பிரிவுநினை வுரைப்பக் கேட்ட தலைமகளது கலக்கங்கண்ட தோழி, அன்பர் சொற்பா விரும்பினரென்ன, அச்சொல் இவள் செவிக்கட் காய்ந்தவேல் போலச் சென்றெய்திற்று; இனி மற்றுள்ள பிரிவை எங்ஙனமாற்று வளெனத் தன்னுள்ளே கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
20.3. ஓதற் ககல்வர் மேதக் கவரெனப்
பூங்கொடி கலக்கம் பாங்கிகண் டுரைத்தது.

பிரியா மையுமுயி ரொன்றா
வதும்பிரி யிற்பெரிதுந்
தரியா மையுமொருங் கேநின்று
சாற்றினர் தையல்மெய்யிற்

பிரியாமை செய்துநின் றோன்தில்லைப்
பேரிய லூரரன்ன
புரியா மையுமிது வேயினி
யென்னாம் புகல்வதுவே. **#968**
இதன் பொருள்:
தையல் மெய்யின் பிரியாமை செய்து நின்றோன் தில்லைப் பேரியல் ஊரர் தையலாடனது திருமேனியி னின்றும் பிரியாமையைச் செய்து நின்றவனது தில்லையிற் பெருந்தன்மையை யுடைய வூரர்; பிரியாமையும் நம்மிற்பிரியாமையையும்; உயிர் ஒன்றாவதும் இருவருக்கு முயிரொன்றாதலையும்; பிரியின் பெரிதும் தரியாமையும் பிரியிற்பெரிதுமாற்றாமையையும்; ஒருங்கே நின்று சாற்றினர் ஒருங்கே அக்காலத்து நம் முன்னின்று கூறினார்; அன்ன புரியாமையும் இதுவே இப்பொழுது அவற்றுட் பிரியாமை பொய்யாகக் கண்டமையின் உயிர் வேறுபடக்கருதுதலும் பிரிவாற்றுதலுமாகிய அன்னவற்றைச் செய்யாமையும் இப் பிரியாமையோடொக்கும்; இனி நாம் புகல்வது என் இனிநாஞ் சொல்வதென்! எ - று.
தையன்மெய்யிற் பிரியாத பேரன்பினோனது தில்லைக்கட் பயின்றும் அன்புபேணாது பிரிதல் எங்ஙனம் வல்லராயினாரென்னுங் கருத்தால், பிரியாமைசெய்து நின்றோன் றில்லைப் பேரியலூர ரென்றாள். பிரிவுகாணப்பட்டமையின், அன்னவென்றது ஒழிந்த விரண்டையுமேயாம். அன்னபுரியாமையு மிதுவேயென்பதற்குப் பிரிவுமுதலாகிய நமக்கின்னாதவற்றைத் தாம் செய்யாமையுமிதுவே யாயிருந்ததெனி னு மமையும். இன்னல் பிரியாமையுமிதுவேயென்று பாடமோதுவாரு முளர். மெய்ப்பாடும், பயனும் அவை. 311

விளக்கவுரை

20.4 வாய்மொழி கூறித் தலைமகள் வருந்தல் வாய்மொழி கூறித் தலைமகள் வருந்தல் என்பது கலக்கங் கண்டுரைத்த தோழிக்கு, முன்னிலைப்புறமொழியாக நின்னிற் பிரியேன் பிரிவுமாற்றேனென்று சொன்னவர் தாமே பிரிவராயின், இதற்கு நாஞ்சொல்லுவதென்னோவெனத் தலைமகனது வாய் மொழி கூறித் தலைமகள் வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்
20.4. தீதறுகல்விக்குச் செல்வன்செல்லுமெனப்
போதுறுகுழலி புலம்பியது.

2.21.காவற்பிரிவு

மூப்பான் இளையவன் முன்னவன்
பின்னவன் முப்புரங்கள்

வீப்பான் வியன்தில்லை யானரு
ளால்விரி நீருலகங்
காப்பான் பிரியக் கருதுகின்
றார்நமர் கார்க்கயற்கட்
பூப்பால் நலமொளி ரும்புரி
தாழ்குழற் பூங்கொடியே. **#969**

இதன் பொருள்:

கார்க் கயற் கண் பூப்பால் நலம் ஒளிரும் புரி தாழ்குழல் பூங்கொடி கரியகயல்போலுங் கண்ணினையும் பூவின்கண் நறுநாற்றமுடைமை யாகிய நன்மைவிளங்குஞ் சுருண்ட தாழ்ந்த குழலையுமுடைய பூங்கொடியை யொப்பாய்; மூப்பான் எல்லார் யாக்கைக்கும் முன்னே தனதிச்சையாற் கொள்ளப்பட்ட திருமேனியையுடைய னாதலின் எல்லார்க்குந் தான் மூப்பான்; இளையவன் பின்றோன்றிய யாக்கையை யுடையாரெல்லாரும் மூப்பவும் தான் நிலைபெற்ற விளமையை யுடையனாதலின் எல்லார்க்கும் மிளையான்; முன்னவன் உலகத்திற்கு முன் னுள்ளோன்; பின்னவன் அதற்குப் பின்னுமுள்ளோன்; முப்புரங்கள் வீப்பான் மூன்று புரங்களையுங் கெடுப்பான்; வியன் தில்லையான்- அகன்ற தில்லைக்கண்ணான்; அருளால் நமர் விரி நீர் உலகம் காப்பான் பிரியக் கருதுகின்றார் அவனதேவலால் நமர் விரிந்த நீராற் சூழப்பட்ட வுலகத்தைக் காக்கவேண்டிப் பிரியக்கருதா நின்றார் எ-று. தில்லையா னேவலாவது எல்லா வுயிர்களையு மரசன் காக்க வென்னுந் தருமநூல் விதி. காத்தலாவது தன் வினைசெய் வாரானுங்கள்வரானும் பகைவரானும் உயிர்கட்கு வருமச்சத்தை நீக்குதல். தில்லையானருளா லென்பதற்கு அவனதருளா னுலகத்தைக் காக்குந் தன்மையை யெய்தினானாதலின் அக்காவற்குப் பிரிகின்றா னென்றுரைப்பினு மமையும். மெய்ப்பாடு: அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன்: காவற்குப் பிரியும் பிரிவுணர்த்துதல். ; 312

விளக்கவுரை

21.1 பிரிவறிவித்தல்

பிரிவறிவித்தல் என்பது தருமநூல் விதியால் நமர் உலகத்தைப் பாதுகாப்பான் பிரியக் கருதாநின்றாரெனத் தலைமகன் காவலுக்குப் பிரியக் கருதாநின்றமை தோழி தலைமகளுக் கறிவியா நிற்றல். அதற்குச் செய்யுள்

21.1. இருநிலங் காவற் கேகுவர் நமரெனப்
பொருசுடர் வேலோன் போக்கறி வித்தது.

சிறுகட் பெருங்கைத்திண் கோட்டுக்
குழைசெவிச் செம்முகமாத்

தெறுகட் டழியமுன் னுய்யச்செய்
தோர்கருப் புச்சிலையோன்
உறுகட் டழலுடை யோனுறை
யம்பலம் உன்னலரின்
துறுகட் புரிகுழ லாயிது
வோவின்று சூழ்கின்றதே. #970

இதன் பொருள்: கள் துறு புரி குழலாய் பூவிற்றேனை யுடைய நெருங்கிய சுருண்ட குழலையுடையாய்; சிறுகண் சிறிய கண்ணினையும்; பெருங்கை பெரிய கையினையும்; திண் கோடு திண்ணியகோட்டினையும்; குழை செவி குழைந்த செவியினையும்; செம்முக மாத் தெறு கட்டு அழிய முன் உய்யச் செய்தோர் சிவந்த முகத்தினையு முடைய யானையினது வருத்தும் வளைப்புக்கெடக் குரவராற் பாதுகாக்கப்படு முற்காலத்து நம்மை யுய்வித்தவர்; கருப்புச் சிலையோன் உறு கண் தழல் உடையோன் உறை அம்பலம் உன்ன லரின் கருப்பு வில்லையுடையவனைச் சென்றுற்ற கண்ணிற்றீயை யுடையவனுறையும் அம்பலத்தை யுன்னாதாரைப் போல; இன்று சூழ்கின்றது இதுவோ கண்ணோட்ட மின்றித் தம்மல்ல தில்லாத இக்காலத்து நினைக்கின்றதிதுவோ! இது தகுமோ! எ-று.

கருப்புச்சிலையோ னென்பதனை எழுவாயாக்கி யுரைப்பினு மமையும். தெறுகட்டழீஇ முன்னமுய்யச் செய்தோரென்பது பாட மாயின், தெறுகின்றவிடத்துத் தழுவி முன்னம்மையுய்வித்தவரென்று ரைக்க.

மெய்ப்பாடு: அழுகை. பயன்: செலவழுங்கு வித்தல். 313

விளக்கவுரை

21.2 பிரிவுகேட்டிரங்கல் பிரிவுகேட்டிரங்கல் என்பது பிரிவறிவித்த தோழிக்கு, முற்காலத்துக் குரவர்களாற் பாதுகாக்கப்படு நம்மை வந்து யானை தெறப்புக, அதனைவிலக்கி நம்முயிர் தந்தவர், இன்று தம்மல்ல தில்லாத இக்காலத்துத் தாம் நினைந்திருக்கின்ற திதுவோ*?* இது தமக்குத் தகுமோவெனத் தலைமகனது பிரிவுகேட்டுத் தலைமக ளிரங்காநிற்றல். அதற்குச் செய்யுள்

21.2. மன்னவன் பிரிவு நன்னுத லறிந்து
பழங்கண் எய்தி அழுங்கல் சென்றது.

2.22.பகைதணிவினைப்பிரிவு

மிகைதணித் தற்கரி தாமிரு
வேந்தர்வெம் போர்மிடைந்த
பகைதணித் தற்குப் படர்தலுற்
றார்நமர் பல்பிறவித்

தொகைதணித் தற்கென்னை யாண்டுகொண்
டோன்தில்லைச் சூழ்பொழில்வாய்
முகைதணித் தற்கரி தாம்புரி
தாழ்தரு மொய்குழலே. **#971**

இதன் பொருள்:

பல் பிறவித் தொகை தணித்தற்கு என்னை ஆண்டு கொண்டோன் தில்லை பேரருளினராதலின் தாமளிக்கு மிடத்துப் பல பிறவித்தொகையான் வருங் கழிபெருந் துன்ப முடையாரையே வேண்டுதலின் என்னையடிமைக் கொண்டவனது தில்லைக்கண்; சூழ்பொழில் வாய் முகை தணித்தற்கு அரிதாம் புரி தாழ் தரு மொய் குழல் சூழ்ந்த பொழிலிடத்துளவாகிய போதுகளாற் றனது நறுநாற்ற மாற்றுதற் கரிதாஞ் சுருண்ட தாழ்ந்த நெருங்கிய குழலை யுடையாய்; மிகை தணித்தற்கு அரிதாம் ஒருவருள்ள மிகுதியை ஒருவர்தணித்தற் கரிதாகாநின்ற; இருவேந்தர் வெம்போர் மிடைந்த பகை தணித்தற்கு நமர் படர்தல் உற்றார் இருவேந்தரது வெய்யபோர் நெருங்கிய பகையை மாற்றுதற்கு நமர் போக நினைந்தார் எ - று.

எளிதினிற் சந்து செய்வித்துக் கடிதின் மீள்வரென்பது பயப்ப, மிகைதணித்தற்கரிதா மிருவேந்த ரென்றதனால் ஒத்த வலியின ராதலும், வெம்போர்மிடைந்த வென்றதனால் ஒத்த தொலைவின ராதலுங் கூறினாளாம். மிகை தணித்தற்கரிதாம் பகையென வியையும்.

மெய்ப்பாடு: அழுகையைச்சார்ந்த பெருமிதம். பயன்: பகை தணிவினையிடைப் பிரிவுணர்த்துதல். 314

விளக்கவுரை

22.1 பிரிவுகூறல் பிரிவுகூறல் என்பது ஒருவரதுள்ளமிகுதியை ஒருவர் தணித்தற்கரிதாகிய இருவேந்தர் தம்முட்பகைத்து உடன்மடியப் புகுதா நின்றாரெனக் கேட்டு, அவ்விருவரையு மடக்கவல்ல திறலுடைய ராதலின், அவரைப் பகைதணித்து அவர் தம்மிலொன்றுபட வேண்டி நின்னைப்பிரியக் கருதாநின்றாரெனத் தலைமகன் பகைதணிக்கப் பிரியலுறாநின்றமை தோழி தலைமகளுக்குக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

22.1. துன்னுபகை தணிப்ப மன்னவன் பிரிவு
நன்னறுங் கோதைக்கு முன்னி மொழிந்தது.

நெருப்புறு வெண்ணெயும் நீருறும்
உப்பு மெனஇங்ஙனே
பொருப்புறு தோகை புலம்புறல்
பொய்யன்பர் போக்குமிக்க
விருப்புறு வோரைவிண் ணோரின்

மிகுத்துநண் ணார்கழியத்
திருப்புறு சூலத்தி னோன்தில்லை
போலுந் திருநுதலே. **#972**
இதன் பொருள்:
மிக்க விருப்புறுவோரை விண்ணோரின் மிகுத்து தன்கண் மிக்க விருப்புறுமவரை விண்ணோரினு மிகச் செய்து; நண்ணார் கழியத் திருப்புறு சூலத்தினோன் தில்லை போலும் திருநுதல் பகைவர் மாய விதிர்க்கப்படுஞ் சூலவேலையுடையவனது தில்லையை யொக்குந் திருநுதால்!; பொருப்பு உறு தோகை பொருப்பைச்சேர்ந்த மயில்போல்வாய்; நெருப்பு உறு வெண்ணெயும் நீர் உறும் உப்பும் என தீயையுற்ற வெண்ணெயும் நீரையுற்றவுப்பும் போல; இங்ஙனே புலம்புறல் இவ்வாறுருகித் தனிமையுறாதொழி; அன்பர் போக்குப் பொய் அன்பர்போக்குப் பொய் எ - று.
மிகுத்தென்னும் வினையெச்சம் திருப்புறுசூல மென்புழித் திருப்பென்பதனோடு முடிந்தது. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைமகளை யாற்றுவித்தல். 315

விளக்கவுரை

22.2 வருத்தந்தணித்தல் வருத்தந்தணித்தல் என்பது தலைமகனது பிரிவுகேட்டு உள்ளுடைந்து தனிமையுற்று வருந்தாநின்ற தலைமகளை, நின்னை விட்டு அவர் பிரியார்; நீ நெருப்பையுற்ற வெண்ணெயும் நீரையுற்ற உப்பும்போல இவ்வாறுருகித் தனிமையுற்று வருந்தாதொழியெனத் தோழி அவளது வருத்தந் தணியாநிற்றல்.
அதற்குச் செய்யுள்
22.2. மணிப்பூண் மன்னவன் தணப்ப தில்லை
அஞ்சல் பொய்யென வஞ்சியைத் தணித்தது.

2.23.வேந்தற்குற்றுழிப்பிரிவு

போது குலாய புனைமுடி
வேந்தர்தம் போர்முனைமேல்
மாது குலாயமென் னோக்கிசென்
றார்நமர் வண்புலியூர்க்
காது குலாய குழையெழி
லோனைக் கருதலர்போல்
ஏதுகொ லாய்விளை கின்றதின்
றொன்னா ரிடுமதிலே. **#973**

இதன் பொருள்:

மாது குலாய மெல் நோக்கி மடவழகு பெற்ற மெல்லிய நோக்கத்தையுடையாய்; போது குலாய புனைமுடி வேந்தர் தம் போர் முனைமேல் பூவழகுபெற்ற பேணிச் செய்யப்பட்ட முடியையுடைய வேந்தர்தமது போரையுடைய பாசறைமேல்; நமர் சென்றார் நமர் சென்றார்; வண் புலியூர்க் காது குலாய குழை எழிலோனைக் கருதலர் போல் வளவிய புலியூரிற் காதழகு பெற்ற குழையாலுண்டாகிய எழிலையுடையவனைக் கருதாதாரைப்போல; ஒன்னார் இடும் மதில் இன்று ஏதாய் விளைகின்றது ஒன்னாரா லிடப்பட்ட மதில் இன்றியாதாய் முடியுமோ! எ - று.

வினைமுடித்துக் கடிதுமீள்வரென்பதுபயப்ப, ஒன்னாரிடுமதி லின்றேயழியுமென்று கூறினாளாம். கொல்லென்பது அசைநிலை. சென்றாரெனத் துணிவு பற்றி இறந்தகாலத்தாற் கூறினாள். திறல் வேந்த ரென்றது, சாதிபற்றியன்று; தலைமை பற்றி. மெய்ப்பாடு: அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன்: வேந்தற்குற்றுழிப் பிரிவுணர்த்துதல். 316

விளக்கவுரை

23.1 பிரிந்தமைகூறல் பிரிந்தமைகூறல் என்பது தம்மைவந்தடைந்த வேந்தனுக் குத் தாமுதவிசெய்வாராக வெய்ய போரையுடைய பாசறைமேல் நமர் சென்றார்*;* இனி யவ்வேந்தன் பகைவரா லிடப்பட்ட மதில் இன்றென்னாய் முடியுமோவெனத் தலைமகன் வேந்தற்குற்றுழிப் பிரிந்தமை தோழி தலைமகளுக்குக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

23.1. விறல்வேந்தர் வெம்முனைக்கண்
திறல்வேந்தர் செல்வரென்றது.

பொன்னி வளைத்த புனல்சூழ்
நிலவிப் பொலிபுலியூர்
வன்னி வளைத்த வளர்சடை
யோனை வணங்கலர்போல்

துன்னி வளைத்தநந் தோன்றற்குப்
பாசறைத் தோன்றுங்கொலோ
மின்னி வளைத்து விரிநீர்
கவரும் வியன்முகிலே. **#974**
இதன் பொருள்:
பொன்னி வளைத்த புனல் சூழ் நிலவிப் பொலி புலியூர் பொன்னி சுற்றுதலானுண்டாகிய புனலாற் சூழப்பட்ட நிலைபெற்றுப் பொலிகின்ற புலியூரில்; வன்னி வளைத்த வளர் சடையோனை வணங்கலர் போல் வன்னித்தளிராற் சூழப்பட்ட நெடிய சடையையுடையவனை வணங்காதாரைப்போல; துன்னி வளைத்த நம் தோன்றற்கு இடர்ப்படப் பகைவரைக்கிட்டிச் சூழ்போகிய நம்முடைய தோன்றற்கு; மின்னி வளைத்து விரிநீர் கவரும் வியன் முகில் மின்னி யுலகத்தை வந்துவளைத்துப் பரந்த கடலைப்பருகும் பெரியமுகில்; பாசறைத் தோன்றும் கொல் பாசறைக்கண்ணே சென்று தோன்றுமோ! எ - று. வளைத்தலை விரிநீர்மேலேற்றினுமமையும். தோன்றுமாயின் அவர் ஆற்றாராவரென யானாற்றேனாகின்றேனென்பது கருத்து. பொன்னிவளைத்த புனலென்பதற்குப் பொன்னியாற்றகையப்பட்ட புனலென்றும், வன்னிவளைத்த சடையென்பதற்குத் தீயை வளைத்தாற் போலுஞ் சடையென்று முரைப்பாருமுளர். மெய்ப்பாடு: அழுகை. பயன்: ஆற்றுவித்தல். 317

விளக்கவுரை

23.2 பிரிவாற்றாமைகார்மிசைவைத்தல்
பிரிவாற்றாமைகார்மிசைவைத்தல் என்பது பிரிவுகேட்ட தலைமகள், தனது வருத்தங்கண்டு காதலர் வினைவயிற்பிரிய நீ வருந்தினால் வினைமுடியுமாறென்னோ வென்ற தோழிக்கு, யானவர் பிரிந்ததற்கு வருந்துகின்றேனல்லேன்; இக்கார்முகில் சென்று அப்பாசறைக்கண்ணே தோன்றுமாயின், நம்மை நினைந்தாற்றாராய், அவ்வினை முடிக்கமாட்டாரென்று அதற்கு வருந்துகின்றே னெனக் கார்மிசைவைத்துத் தனது வருத்தங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
23.2. 9; வேந்தற் குற்றுழி விறலோன் பிரிய
ஏந்திழை பாங்கிக் கெடுத்து ரைத்தது.

கோலித் திகழ்சிற கொன்றி
னொடுக்கிப் பெடைக்குருகு
பாலித் திரும்பனி பார்ப்பொடு
சேவல் பயிலிரவின்
மாலித் தனையறி யாமறை
யோனுறை யம்பலமே

போலித் திருநுத லாட்கென்ன
தாங்கொலென் போதரவே. **#975**

இதன் பொருள்:

பார்ப்பொடு பெடைக் குருகு திகழ் சிறகு ஒன்றின் கோலி ஒடுக்கிப் பாலித்து பார்ப்புக்களோடு பெடைக்குருகை விளங்காநின்ற சிறகொன்றினாற் கோலியொடுக்கிப் பாதுகாத்து; இரும் பனி சேவல் பயில் இரவின் கொண்டற்றுவலையால் வரும் மிக்ககுளிரைச் சேவல் தானுழக்கு மிரவின்கண்; மால் இத்தனை அறியா மறையோன் உறை அம்பலமே போலித் திருநுதலாட்கு மாலாற் சிறிது மறியாத அந்தணனுறையும் அம்பலத்தைப்போல் வாளாகிய திருநுதலாட்கு; என் போதரவு என்னதாம் கொல் எனது போதரவு எத்தன்மையதாகுமோ! எ - று.

இரவினென்னதாமென வியையும். நாம் இக்காலத்து நங்காதலிக்குப் பனிமருந்தாயிற்றிலேமென்னும் உள்ளத்தனாகலின், பெடை யொடுக்கிய சிறகைத் திகழ்சிறகெனப் புனைந்து கூறினான். போலித்திருநுதலாட்கென்பதற்கு அம்பலம்போலும் இத்திருநுதலாட் கென்றுரைப்பினு மமையும். இத்திருநுதலாளென்றான் தன்னெஞ்சத்த ளாகலின். மெய்ப்பாடு: அச்சம். பயன்: மீடற்கொருப்படுதல். 318

விளக்கவுரை

23.3 வானோக்கிவருந்தல் வானோக்கிவருந்தல் என்பது உற்றுழிப்பிரிந்த தலைமகன், பார்ப்புக்களோடு பெடைக்குருகைச் சேவல் தன் சிறகானொடுக் கிப் பனியான்வரும் மிக்க குளிரைப் பாதுகாக்கின்ற இரவின்கண் எனது போதரவு அவளுக்கென்னாங் கொல்லோவெனத் தலை மகளது வடிவை நினைந்து வானை நோக்கி வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்

23.3. மானோக்கி வடிவுநினைந்தோன்
வானோக்கி வருந்தியது.

கருப்பினம் மேவும் பொழிற்றில்லை
மன்னன்கண் ணாரருளால்
விருப்பினம் மேவச்சென் றார்க்குஞ்சென்
றல்குங்கொல் வீழ்பனிவாய்
நெருப்பினம் மேய்நெடு மாலெழில்
தோன்றச்சென் றாங்குநின்ற
பொருப்பின மேறித் தமியரைப்
பார்க்கும் புயலினமே. **#976**

இதன் பொருள்:

வீழ் பனிவாய் நெருப்பினம் மேய் விழா நின்ற பனியிடத்து எல்லாரும்

நெருப்புத்திரளை மேவாநிற்ப; நெடுமால் எழில் தோன்றச் சென்று நெடிய மாயவனதெழில் கண்டார்க்குப் புலப்படச்சென்று; ஆங்கு நின்ற பொருப்பினம் ஏறி அவ்விடத்து நின்ற மலைத்திரளையேறி; தமியரைப் பார்க்கும் புயலினம் துணை யில்லாதாரைத் தேடும் புயலினங்கள்; கருப்பினம் மேவும் பொழில் தில்லை மன்னன்கண் ஆர் அருளால் கருப்புத்திரள் பொருந்தும் பொழிலையுடைய தில்லையின் மன்னவன்கணுண்டாகிய மிக்கவரு ளான்; விருப்பு இனம் மேவச் சென்றார்க்கும் சென்று அல்கும் கொல் விருப்பையுடைய தம்மினந் தம்மா லுதவிபெற்றுப் பொருந்தும் வண்ணஞ் சென்றார்க்குஞ் சென்றுதங்குமோ! எ - று.

அல்குதலான் வருந் துயருறுதனோக்கிச் சென்றார்க்குமென நான்காவதனாற் கூறினாள். நெருப்பினமே யென்பதனைப் புயன் மேலேற்றி இடிநெருப்பென்றும், சென்றென்பதனை மலைமேலேற்றி உயர்ந் தென்று உரைப்பினுமமையும். மெய்ப்பாடு: அழுகை. பயன்: தோழியை யாற்று வித்தல். 319

விளக்கவுரை

23.4 கூதிர்கண்டு கவறல் கூதிர்கண்டு கவறல் என்பது விழாநின்ற பனியிடத்து எல்லாரும் நெருப்புத்திரளை மேவாநிற்ப, மலைத்திரளையேறித் துணையில்லாதாரைத் தேடும் புயலினம் நமக்கேயன்றித் தம்மை யடைந்தார்க் குதவிசெய்யச் சென்றார்க்குஞ் சென்று பொருந் துமோ*?* பொருந்துமாயின், நம்மை நினைந்து ஆற்றாராய், அவ்வினை முடிக்கமாட்டாரெனத் தலைமகள் கூதிர்கண்டு கவலாநிற்றல். அதற்குச் செய்யுள்

23.4. இருங்கூதிர் எதிர்வுகண்டு
கருங்குழலி கவலையுற்றது.

சுற்றின வீழ்பனி தூங்கத்
துவண்டு துயர்கவென்று
பெற்றவ ளேயெனைப் பெற்றாள்
பெடைசிற கானொடுக்கிப்
புற்றில வாளர வன்தில்லைப்
புள்ளுந்தம் பிள்ளைதழீஇ
மற்றினஞ் சூழ்ந்து துயிலப்
பெறுமிம் மயங்கிருளே. **#977**

இதன் பொருள்:

புற்றில வாள் அரவன் தில்லைப் புள்ளும் புற்றையுடையவல்லாத ஒளியையுடைய பாம்பையணிந்தவனது தில்லையின் மக்களேயன்றிப் புள்ளும்; பெடை சிறகான் ஒடுக்கி பெடையைச் சிறகானொடுக்கி;

தம்பிள்ளை தழீஇ தம் பிள்ளைகளையுந் தழுவி; இனம் சூழ்ந்து துயிலப் பெறும் இம் மயங்கு இருள் இனஞ்சூழ்ந்து துயிலப் பெறும் இச் செறிந்த விருட்கண்ணே; சுற்றின மேனி யெங்குஞ்சுற்றி; வீழ் பனி தூங்க வீழாநின்ற பனி இடையறாதுநிற்ப; துவண்டு துயர்க என்று அதற்கோர் மருந்தின்றித் துயர்வாயாகவென்று; எனைப் பெற்றவளே பெற்றாள் என்னை யீன்றவளே ஈன்றாள்; இனி யான் யாரைநோவது! எ - று. சுற்றின தூங்கவென வியையும். மயங்கிருட்கட்டுயர்வாயாக வெனக் கூட்டுக. சுற்றினவென்பது பெயரெச்சமுமாம். மற்று: அசை நிலை. புற்றிலவாள ரவ னென்பதற்கு முன்னுரைத்த (தி.8 கோவை பா.97) துரைக்க. மெய்ப்பாடு: அது. பயன்: ஆற்றாமை நீங்குதல். 320

விளக்கவுரை

23.5 முன்பனிக்கு நொந்துரைத்தல் முன்பனிக்கு நொந்துரைத்தல் என்பது மக்களேயன்றிப் புள்ளுந் தம்பெடையைச் சிறகானொடுக்கிப் பிள்ளைகளையுந் தழுவி இனஞ்சூழ வெருவாது துயிலப்பெறுகின்ற இம்மயங் கிருட்கண், இடையறாது விழாநின்ற பனியிடைக்கிடந்து வாடித் துயர்வாயாக வென்று என்னைப்பெற்றவளை நோவதல்லது யான் யாரை நோவேனென முன்பனிக்காற்றாது தாயொடு நொந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

23.5.ஆன்றபனிக் காற்றாதழிந்
தீன்றவளை ஏழைநொந்தது.

புரமன் றயரப் பொருப்புவில்
லேந்திப்புத் தேளிர்நாப்பண்
சிரமன் றயனைச்செற் றோன்தில்லைச்
சிற்றம் பலமனையாள்
பரமன் றிரும்பனி பாரித்த
வாபரந் தெங்கும்வையஞ்
சரமன்றி வான்தரு மேலொக்கும்
மிக்க தமியருக்கே. **#978**

இதன் பொருள்:

இரும் பனி வையம் எங்கும் பரந்து பாரித்தவா பெரியபனி வையமெங்கும் பரந்து துவலைகளைப் பரப்பியவாறு; தில்லைச் சிற்றம்பலம் அனையாள் பரம் அன்று தில்லையிற் சிற்றம்பலத்தை யொப்பாளதளவன்று; மிக்க தமியருக்கு மிக்க தனிமையையுடையார்க்கு இப்பனி; அன்றி உயிர்கவர வெகுண்டு; வான் சரம் தருமேல் வான் சரத்தைத் தருமாயின்; ஒக்கும் அதனோடொக்கும் எ - று. புரம் அயர அன்று பொருப்புவில் ஏந்தி புரம்வருந்த அன்று பொருப்பாகிய வில்லை யேந்தி; புத்தேளிர் நாப்பண் தேவர்நடுவே;

அயனை அன்று சிரம் செற்றோன் தில்லைச் சிற்றம்பலம் அவர்க்குத் தலைவனாகிய அயனையன்று சிரமரிந்த வனது தில்லைச் சிற்றம்பல மெனக் கூட்டுக.

பரந்தெங்குந் தருமேலென்றியைப்பினுமமையும். (அன்று வானென்பது பாட மாயின் வையத்தை யன்றி அவ்வானமுமென உரைக்க) இக்காலத்து அவளாற்றாமை சொல்லவேண்டுமோ எனக்கு மாற்றுதலரி தென்பது போதரத் தமியருக்கெனப் பொதுமையாற் கூறினான். இதனைத் தோழி கூற்றாகவுரைப்பாருமுளர். மெய்ப்பாடு: அது. பயன்: தலைமகளை யாற்றுவித்தல். 321

விளக்கவுரை

23.6 பின்பனிநினைந்திரங்கல் பின்பனி நினைந்திரங்கல் என்பது இப்பெரியபனி வையமெங்கும் பரந்து துவலைகளைப் பரப்பியவாறு அவள் பொறுக்குமளவன்று; அவளைச் சொல்லுகின்றதென்! எனக்கு மாற்றுதலரிதென்பது போதர, மிக்க தனிமையையுடையார்க்கு இப்பனி, வான் சரத்தைத் தருமாயின், அதனோடொக்குமெனத் தலைமகன் தலைமகளது துயரநினைந் திரங்காநிற்றல். அதற்குச் செய்யுள்

23.6. இரும் பனியின் எதிர்வு கண்டு
சுரும்பிவர் குழலி துயரம் நினைந்தது.

வாழும் படியொன்றுங் கண்டிலம்
வாழியிம் மாம்பொழில்தேன்
சூழும் முகச்சுற்றும் பற்றின
வால்தொண்டை யங்கனிவாய்
யாழின் மொழிமங்கை பங்கன்சிற்
றம்பலம் ஆதரியாக்
கூழின் மலிமனம் போன்றிரு
ளாநின்ற கோகிலமே. **#979**

இதன் பொருள்:

அம் தொண்டைக் கனிவாய் அழகிய தொண்டைக்கனி போலும் வாயினையும்; யாழின் மொழி மங்கை பங்கன் சிற்றம்பலம் ஆதரியா யாழோசைபோலு மினிய மொழியினையுமுடைய மங்கையது கூற்றையுடையானது சிற்றம் பலத்தை விரும்பாத; கூழின் மலி மனம் போன்று உணவாற் செருக்கு மனம் போல; இருளா நின்ற கோகிலம் ஒரு காலைக் கொருகால் நிறம் பெற்றிருளாநின்ற குயில்கள்; இம்மாம் பொழில் தேன் சூழும்முகச் சுற்றும் பற்றின இம் மாம் பொழிற்கட் குடைதலாற் றேன் சுற்று முகமெங்கும் வந்துபற்றின; வாழும் படி ஒன்றும் கண்டிலம் இனி யுயிர்வாழுமா றொன்றுங் கண்டிலேம் எ - று. வாழியென்றது வாழ்வாயாகவென்னும் பொருட்டாய் எதிர் முகமாக்கி

நின்றது. தேன் சூழுமுகைச்சுற்றும் பற்றினவென்பது பாடமாயின்,
மலருமளவுங் காலம் பார்த்துத் தேன்கள் சூழுமுகை யென்க. மெய்ப்பாடு
அது. பயன்: ஆற்றாமை நீங்குதல்.

கிழவி நிலையே வினையிடத் துரையார்
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்

(தொல் - பொருள். கற்பியல் - 45) என்பதனான், இக்கிளவியைந்தும்
காலங்காட்ட வேண்டி இத்துறையுட் கூறினாரென்பது கருத்தாகக்
கொள்க. 322

விளக்கவுரை

23.7 இளவேனில் கண்டின்ன லெய்தல் இளவேனில்கண்டின்னலெய்தல்
என்பது மேன்மேலும் நிறம் பெற்றிருளாநின்ற இக்குயில்கள்,
மாம்பொழிலைச் சுற்றும் வந்து பற்றின; இனி யுயிர்வாழுமா றொன்றுங்
கண்டிலே னெனத் தலைமகள் இளவேனில்கண் டின்னலெய்தாநிற்றல்.
அதற்குச் செய்யுள்

23.7. இன்னிள வேனில் முன்னுவது கண்டு
மென்னகைப் பேதை இன்ன லெய்தியது.

பூண்பதென் றே கொண்ட பாம்பன்
புலியூ ரரன்மிடற்றின்
மாண்பதென் றேயெண வானின்
மலரும் மணந்தவர்தேர்
காண்பதன் றேயின்று நாளையிங்
கேவரக் கார்மலர்த்தேன்
பாண்பதன் தேர்குழ லாயெழில்
வாய்த்த பனிமுகிலே. **#980**

இதன் பொருள்:

கார் மலர்த் தேன் பாண் பதன் தேர் குழலாய் கார்காலத்து மலரை
யூதுந்தேன் பாட்டினது செவ்வியை யாராயுங் குழலையுடையாய்;
பூண்பது என்றே கொண்ட பாம்பன் பூணப்படு மணியென்றே
கொள்ளப்பட்ட பாம்பினை யுடையான்; புலியூர் அரன் புலியூரரன்;
மிடற்றின் மாண்பது என்றே எண அவனது மிடற்றி னழகதாமென்று
கருதும்வண்ணம்; எழில் வாய்த்த பனிமுகில் வானின் மலரும்
எழில்வாய்த்தலையுடையவாகிய பனிமுகில்கள் வானிடத்துப்
பரவாநிற்கின்றன; அதனான், மணந்தவர் தேர் இன்று நாளை இங்கே
வரக் காண்பது அன்றே நம்மைக்கலந்தவரது தேர் இன்றாக நாளையாக
இங்கே வாராநிற்பக் காணப்படுவதல்லவே? இனி
யாற்றாயாகற்பாலையல்லை எ - று.

தேரிங்கே வருவதனைக் காணுமதல்லவே இனியுள்ளதென

மொழிமாற்றியுரைப்பினுமமையும். கான்மலரென்பதூஉம், எழில்வாய வென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு: அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன்: தலைமகளை வற்புறுத்தல். 323

விளக்கவுரை

23.8 பருவங்காட்டி வற்புறுத்தல் பருவங்காட்டி வற்புறுத்தல் என்பது தலைமகன் தான் வருதற்குக் குறித்துப்போகிய கார்ப்பருவத்தினது வரவுகண்டு கலங்காநின்ற தலைமகளுக்கு, இக்கார்வந்து வானிடத்துப் பரந்தமையான், நம்மைக் கலந்தவரது தேர் இன்றாக நாளையாக இங்கே வாராநிற்பக் காணப்படுவதே இனியுள்ளதெனத் தோழி அப்பருவந் தன்னையே காட்டி, அவளை வற்புறுத்தாநிற்றல். அதற்குச் செய்யுள்
23.8. கார்வருமெனக் கலங்குமாதரைக்
தேர்வருமெனத் தெளிவித்தது.

தெளிதரல் காரெனச் சீரனஞ்
சிற்றம் பலத்தடியேன்
களிதரக் கார்மிடற் றோன்நட
மாடக்கண் ணார்முழவந்
துளிதரற் காரென ஆர்த்தன
ஆர்ப்பத்தொக் குன்குழல்போன்
றளிதரக் காந்தளும் பாந்தளைப்
பாரித் தலர்ந்தனவே. **#981**

இதன் பொருள்:

அடியேன் களி தர அடியேன் களிப்பை யுண்டாக்க; சிற்றம்பலத்துக் கார் மிடற்றோன் நடம் ஆட சிற்றம்பலத்தின்கண்ணே கரிய மிடற்றையுடையவன் கூத்தாடா நிற்ப; கண் ஆர் முழவம் துளி தரல் கார் என ஆர்த்தன முகமமைந்த முழவங்கள் துளியைத்தருதலையுடைய முகில்போல முழங்கின; ஆர்ப்ப காந்தளும் தொக்கு உன் குழல் போன்று முழங்க அவற்றை முழவமென் றுணராது காந்தளுந் திரண்டு உன்குழலையொத்து; அளி தரப் பாந்தளைப் பாரித்து அலர்ந்தன நறுநாற்ற மளிகளைக் கொணர்தரப் பாம்புபோலுந் துடுப்புக்களைப் பரப்பி அலர்ந்தன; அதனால், சீர் அனம் சீரையுடைய அன்னமே; கார் எனத் தெளிதரல்- இதனைக் காரென்று தெளியற்பாலையல்லை எ - று. களித்தரவென்பது களிதரவென்று நின்றதெனினுமமையும். பாரித்தென்பது உவமச்சொல்லெனினு மமையும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைமகளை வற்புறுத்தல். 324

விளக்கவுரை

23.9 பருவமன்றென்று கூறல் பருவமன்றென்று கூறல் என்பது காரும்

வந்தது; காந்தளும் மலராநின்றன; காதலர் வாராதிருந்த தென்னோ வென்று கலங்காநின்ற தலைமகளுக்கு, சிற்றம்பலத்தின்கண்ணே குடமுழா முழங்க அதனையறியாது காரென்றுகொண்டு இக்காந் தண்மலர்ந்தன; நீ யிதனைப் பருவமென்று கலங்காதொழியெனத் தலைமகன் வரவு நீட்டித்தலால் தோழி அவள் கலக்கந்தீரப் பருவத்தைப் பருவ மன்றென்று கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

23.9. காரெனக் கலங்கும் ஏரெழிற் கண்ணிக்கு
இன்றுணை தோழி யன்றென்று மறுத்தது.

தேன்றிக் கிலங்கு கழலழல்
வண்ணன்சிற் றம்பலத்தெங்
கோன்றிக் கிலங்குதிண் டோட்கொண்டற்
கண்டன் குழையெழில்நாண்
போன்றிக் கடிமலர்க் காந்தளும்
போந்தவன் கையனல்போல்
தோன்றிக் கடிமல ரும்பொய்ம்மை
யோமெய்யிற் றோன்றுவதே. **#982**

இதன் பொருள்:

தேன் தேனையொப்பான்; திக்கு இலங்கு கழல் அழல் வண்ணன் திசைகளிலே விளங்காநின்ற வீரக்கழலை யுடைய அழல்வண்ணன்; சிற்றம்பலத்து எம் கோன் சிற்றம்பலத்தின் கணுளனாகிய வெங்கோன்; திக்கு இலங்கு திண் தோள் கொண்டல் கண்டன் திசைகளிலே விளங்காநின்ற திண்ணிய தோள்களையுங் கொண்டல்போலுங் கண்டத்தையுமுடையான்; குழை எழில் நாண் போன்று அவனுடைய குழையும் எழிலையுடைய நாணுமாகிய பாம்பையொத்து; இக் கடி மலர்க் காந்தளும் போந்து இக்கடிமலர்க் காந்தளினது துடுப்புக்களும் புறப்பட்டு; அவன் கை அனல் போல் அவனதுகையிற் றீயைப் போல; தோன்றிக் கடி மலரும் மெய்யின் தோன்றுவது பொய்ம்மையோ தோன்றியினது புதுமலரும் மெய்யாகத் தோன்றுகின்ற விது பொய்யோ! எ - று.

கடியென்பது நாற்றம். கடிமலர் முதலாகிய தன்பொருட் கேற்றவடை. மெய்யிற்றோன்றுவ தென்பதற்கு மெய்போலத் தோன்றுவதெனினு மமையும். காந்தளு மின்றென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு: அழுகை. பயன்: ஆற்றாமைநீங்குதல். 325

விளக்கவுரை

23.10 மறுத்துக் கூறல் மறுத்துக்கூறல் என்பது பருவமன்றென்ற தோழிக்கு, காந்தளேயன்றி இதுவும் பொய்யோவெனத் தோன்றியினது மலரைக் காட்டி, இது பருவமேயென்று அவளோடு தலைமகள் மறுத்துக்

கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
23.10. பருவமன் றென்று பாங்கி பகர
மருவமர் கோதை மறுத்து ரைத்தது.

திருமா லறியாச் செறிகழல்
தில்லைச்சிற் றம்பலத்தெங்
கருமால் விடையுடை யோன்கண்டம்
போற்கொண்ட லெண்டிசையும்
வருமா லுடன்மன் பொருந்தல்
திருந்த மணந்தவர்தேர்
பொருமா லயிற்கண்நல் லாயின்று
தோன்றுநம் பொன்னகர்க்கே. **#983**

இதன் பொருள்:
திருமால் அறியா திருமாலறியப்படாத; செறிகழல் தில்லைச் சிற்றம்பலத்து எம் கரு மால் விடை உடையோன் கண்டம் போல் செறிந்த வீரக்கழலையுடைய திருவடியையுடைய தில்லையிற் சிற்றம்பலத்தின்கணுளனாகிய எம்முடைய கரிய மாலாகிய விடையையுடையவனது கண்டம்போல விருண்டு; கொண்டல் எண் திசையும் வரும் கொண்டல்கள் எட்டுத் திசைக்கண்ணும் வாரா நின்றன; அதனால், பொரும் மால் அயில் கண் நல்லாய் தம்மிற்பொரும் பெரியவேல்போலுங் கண்ணையுடைய நல்லாய்; மணந்தவர் தேர் நம்மைக் கலந்தவரது தேர்; உடல் மன் பொருந்தல் திருந்த உடன்றமன்னர் தம்முட் பொருந்துதல் திருந்துதலால்; நம் பொன் நகர்க்கு இன்று தோன்றும் நம் பொன்னையுடைய வில்லின்கண் இன்று வந்து தோன்றும் எ - று.
உடன்மன்பொருந்தறிருந்த மணந்தவரென்பதற்கு மன்னர் பொருந் தும்வண்ணம் அவரைச் சென்று கூடினவரென்றுரைப் பாருமுளர்.
மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைமகளை யாற்றுவித்தல். 326
23.12 வினைமுற்றிநினைதல்

விளக்கவுரை

*23.11*தேர்வரவு கூறல் தேர்வரவு கூறல் என்பது மறுத்துக்கூறின தலைமகளுக்கு, கொண்டல்கள் எட்டுத்திசைக்கண்ணும் வாராநின்றமையின், இது பருவமே; இனியுடன்றமன்னர் தம்முட் பொருந்துதலான் நம் மைக் கலந்தவர் தேர் நம்மில்லின்க ணின்று வந்து தோன்றுமென்று அவள் கலக்கந்தீரத் தோழி தலைமகனது தேர்வரவு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
23.11. பூங்கொடி மருளப்
பாங்கி தெருட்டியது.

புயலோங் கலர்சடை ஏற்றவன்
சிற்றம் பலம்புகழும்
மயலோங் கிருங்களி யானை
வரகுணன் வெற்பின்வைத்த
கயலோங் கிருஞ்சிலை கொண்டுமன்
கோபமுங் காட்டிவருஞ்
செயலோங் கெயிலெரி செய்தபின்
இன்றோர் திருமுகமே. **#984**
இதன் பொருள்:
செயல் ஓங்கு எயில் எரி செய்த பின் செய்தலையுடைய உயர்ந்த மதிலை எரியாக்கியபின்; இன்று ஓர் திருமுகம் இன்று திருவையுடைய தொருமுகம்; கயல் கயல் போலுங் கண்ணையும்; ஓங்கு இருஞ்சிலை கொண்டு மிகப் பெரிய விற்போலும் புருவத்தையுமுடைத்தாய்; மன் கோபமும் காட்டி வரும்- தங்கிய விந்திரகோபம் போலும் வாயையுங் காட்டி வாராநின்றது; இனிக் கடிதுபோதும் எ று.
புயல் ஓங்கு அலர் சடை ஏற்றவன் சிற்றம்பலம் புகழும் நீரை உயர்ந்த விரிசடையின்கணேற்றவனது சிற்றம்பலத்தையே பரவும்; மயல் ஓங்கு இருங் களி யானை வரகுணன் வெற்பின் வைத்த கயல் மயக்கத்தையுடைய உயர்ந்த பெரிய களியானையையுடைய வரகுணன் இமயத்தின்கண் வைத்த கயலெனக் கூட்டுக.
இன்று ஓராணையோலை அரையன்பொறியாகிய கயலையும் வில்லையுமுடைத்தாய் மன்னன் முனிவையுங்காட்டி வாராநின்ற தெனச் சிலேடை வகையான் ஒருபொருடோன்றிய வாறறிக. மெய்ப்பாடு: அச்சம். பயன்: தேர்ப்பாகன் கேட்டுக் கடிதூர்தல். 327

விளக்கவுரை

23.12 வினைமுற்றிநினைதல் வினைமுற்றிநினைதல் என்பது வேந்தற்குற்றுழிப் பிரிந்த தலைமகன், வினைமுற்றியபின்னர், கயலையும் வில்லையுங் கொண்டு மன்கோபமுங்காட்டி ஒரு திருமுகம் வாராநின்றது; இனிக் கடிதுபோதுமெனத் தேர்ப்பாகன் கேட்பத் தலைமகளது முகநினைந்து கூறா நிற்றல். அதற்குச் செய்யுள்
23.12. பாசறை முற்றிப் படைப்போர் வேந்தன்
மாசறு பூண்முலை மதிமுகம் நினைந்தது.

சிறப்பிற் றிகழ்சிவன் சிற்றம்
பலஞ்சென்று சேர்ந்தவர்தம்
பிறப்பிற் றுனைந்து பெருகுக
தேர்பிறங் கும்மொளியார்
நிறப்பொற் புரிசை மறுகினின்

துன்னி மடநடைப்புள்
இறப்பிற் றுயின்றுமுற் றத்திரை
தேரும் எழில்நகர்க்கே. **#985**
இதன் பொருள்:
பிறங்கும் ஒளி ஆர் நிறப் பொன் புரிசை மறுகினின் மிக்க வொளியார்ந்த நிறத்தையுடைய செம்பொன்னா னியன்ற உயர்ந்த மதிலையுடைய வூரிற்றெருவின்கண்; துன்னி சேர்ந்து விளையாடி; மட நடைப் புள் மென்னடையையுடைய மாடப்புறாக்கள்; இறப்பின் துயின்று முற்றத்து இரை தேரும் இறப்பின்கட் டுயின்று முற்றத்தின்க ணிரைதேர்ந்துண்ணும்; எழில் நகர்க்கு அவளிருந்த வெழிலையுடைய இல்லத்திற்கு; சிறப்பின் திகழ் சிவன் சிற்றம்பலம் சென்று சேர்ந்தவர் தம் பிறப்பின் சிறப்புக்களாற் பொலியுஞ் சிவனது சிற்றம்பலத்தைச் சென்றடைந்தவர்கடம் பிறவிபோல; துனைந்து பெருகுக தேர் விரைந்து முடுகுவதாக இத்தேர் எ - று.
புறாக்கள் துணையோடு துயின்று முன்றிலின்கண் விளையாடு வனகண்டு ஆற்றகில்லாளென்பது போதர, இறப்பிற்றுயின்று முற்றத்திரைதேரு மென்றான். சிற்றம்பலஞ் சென்று சேர்ந்தவர் பிறவியிறுதிக்கட் பேரின்ப மெய்துமாறுபோல யானுஞ் சுரஞ் செலலிறுதிக்கட் பெருந்தோண் முயங்குவலென்னுங் கருத்தாற் பிறப்பிற் றுனைந்து பெருகுக தேரென்றான். துன்னுமென்பதூஉம் பாடம்.
மெய்ப்பாடு: உவகை. பயன்: கேட்ட பாகன் விரைந்து தேர் பண்ணுவானாதல். 328

விளக்கவுரை

23.13 நிலைமைநினைந்து கூறல் நிலைமைநினைந்து கூறல் என்பது வினை முற்றியபின்னர் அவள் முகங்கண்டு வாராநின்றவன், புறாக்கள் தந்துணையோடு துயின்று முன்றிற்கண் விளையாடுவகண்டு இது நமக்கரிதாயிற் றென்று என்னிலைமை நினைந் தாற்றகில்லாளாவள்; நீ விரையத் தேரைச் செலுத்துவாயாகவெனத் தலைமகளது நிலைமை நினைந்து தேர்ப்பாகனுக்குக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
23.13. பொற்றொடி நிலைமை மற்றவன் நினைந்து
திருந்துதேர்ப் பாகற்கு வருந்துபு புகன்றது.

அருந்தே ரழிந்தனம் ஆலமென்
றோல மிடுமிமையோர்
மருந்தே ரணியம் பலத்தோன்
மலர்த்தாள் வணங்கலர்போல்
திருந்தே ரழிந்து பழங்கண்
தருஞ்செல்வி சீர்நகர்க்கென்

வருந்தே ரிதன்முன் வழங்கேல்
முழங்கேல் வளமுகிலே. **#986**

இதன் பொருள்:

ஆலம் அருந்து நஞ்சையருந்த வேண்டும்; ஏர் அழிந்தனம் என்று ஓலம் இடும் இமையோர் மருந்து இதனானழ கழிந்தோமென்று முறையிடுந்தேவர்க்கு அந்நஞ்சால் வரும் இடர்க்கு மருந்தாயவன்; ஏர் அணி அம்பலத்தோன் அழகையுடைய அம்பலத்தின்கண்ணான்; மலர்த்தாள் வணங்கலர் போல் அவனது மலர்போலுந்தாளை வணங்காதாரைப்போல; திருந்து ஏர் அழிந்து பழங்கண் தரும் திருந்திய வழகெல்லாமழிந்து துன்பத்தை யுண்டாக்கும்; செல்வி சீர் நகர்க்கு இல்வாழ்க்கைச் செல்வத்தை யுடையவளது அழகையுடைய வூரின்கண்; வளமுகிலே வளமுகிலே; வரும் என் தேர் இதன்முன் வழங்கேல் வாராநின்ற வெனது தேரிதனின் முற்பட்டுச் சென்றியங்கா தொழிய வேண்டும்; முழங்கேல் இயங்கினும் அத்தமியள் கேட்ப முழங்காதொழிய வேண்டும் எ-று.

ஏரணியென்பதற்கு மிக்கவழகென்றும், பழங்கண்டருமென் பதற்கு துன்பத்தையெனக்குத் தருமென்று முரைப்பினுமமையும். வழங்கே லென்பதற்குப் பெய்யவேண்டொவன்றுரைப்பாருமுளர். நகர் இல்லெனினுமமையும். முனைவன் இறைவன். மெய்ப்பாடு: அது. பயன்: கேட்டபாகன் றேர்விரைந்து கடாவுதல். 329

விளக்கவுரை

23.14 முகிலோடுகூறல் முகிலொடு கூறல் என்பது காரோட்டங்கண்ட பாகன் அதனோடு விரையத் தேரோட்டாநிற்பான், பிரிதலால் திருந்திய வழகெல்லாம் அழிந்து துன்புறாநின்றவளது சீரிய நகரின்கண், வாராநின்ற வெனது தேரின்முற்பட்டுச் சென்றியங்காதொழிய வேண்டும்; இயங்கினும், அத்தமியாள்கேட்ப முழங்காதொழிய வேண்டுமெனத் தலைமகன், முந்துற்றுச் செல்லாநின்ற முகிலொடு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

23.14. முனைவற் குற்றுழி வினைமுற்றி வருவோன்
கழும லெய்திச் செழுமுகிற் குரைத்தது.

பணிவார் குழையெழி லோன்தில்லைச்
சிற்றம் பலமனைய
மணிவார் குழல்மட மாதே
பொலிகநம் மன்னர்முன்னாப்
பணிவார் திறையும் பகைத்தவர்
சின்னமுங் கொண்டுவண்தேர்
அணிவார் முரசினொ டாலிக்கும்

மாவோ டணுகினரே. **#987**

இதன் பொருள்:

பணி வார் குழை எழிலோன் தில்லைச் சிற்றம்பலம் அனைய பணியாகி நீண்ட குழையானுண்டாகிய அழகையுடையவனது தில்லைச்சிற்றம்பலத்தையொக்கும்; மணிவார் குழல் மட மாதே நீலமணிபோலு நீண்ட குழலையுடைய மடப்பத்தை யுடைய மாதே; பொலிக பொலிக; நம்மன்னர் நம்முடைய மன்னர்; பணிவார் திறையும் வந்து வணங்குவாராக வுடம்பட்டவர் கொடுத்த திறையையும்; பகைத்தவர் சின்னமும் பணியாது மாறு பட்டவரடையாளங்களையும்; வண் தேர் முன்னாக்கொண்டு தமது வண்டேர்க்கு முன்னாகக் கொண்டு; அணிவார் முரசினொடு அணியப்பட்ட வாரையுடைய வீரமுரசினோடும்; ஆலிக்கும் மாவோடு ஆலியாநிற்கு மாவினோடும்; அணுகினர் வந்தணுகினார் எ - று.

வண்டேரொடென்பதனைத் தொகுக்கும்வழித் தொகுத்துக் கூறினாரெனினு மமையும். இப்பொருட்கு முன்னாக வந்து பணிவாரென்றுரைக்க. மெய்ப்பாடு: உவகை. பயன்: தலைமகளை மகிழ்வித்தல். 330

விளக்கவுரை

23.15 வரவெடுத்துரைத்தல் வரவெடுத்துரைத்தல் என்பது தலைமகன் முகிலொடு வாரா நிற்பக்கண்ட தோழி*,* வணங்குவாராக வுடம்பட்டவர் கொடுத்த திறையையும் வணங்காது மாறுபட்டவரடையாளங் களையும் தமது தேருக்கு முன்னாகக்கொண்டு*,* வீரமுரசார்ப்ப*,* ஆலியாநின்ற மாவினோடும் வந்தணுகினார்*;* இனி நமக்கொரு குறையில்லை யெனத் தலைமகளுக்கு அவன்வரவெடுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள் .

23.15. வினை முற்றிய வேந்தன் வரவு
புனையிழைத் தோழி பொற்றொடிக் குரைத்தது.

கருங்குவ ளைக்கடி மாமலர்
முத்தங் கலந்திலங்க
நெருங்கு வளைக்கிள்ளை நீங்கிற்
றிலள்நின்று நான்முகனோ
டொருங்கு வளைக்கரத் தானுண
ராதவன் தில்லையொப்பாய்
மருங்கு வளைத்துமன் பாசறை
நீடிய வைகலுமே. **#988**

இதன் பொருள்:

நான்முகனோடு ஒருங்கு வளைக் கரத்தான் உணராதவன் தில்லை ஒப்பாய் நான்முகனோடுங்கூடச் சங்கை யேந்திய கையையுடையவனு

மறியாதவனது தில்லையை யொப்பாய்; மருங்கு வளைத்து மன் பாசறை நீடிய வைகலும் முனை மருங்கு சூழ்ந்து மன்னனது பாசறைக்கண் யான்றாழ்த்த வைகற்கண்ணும்; கருங்குவளைக் கடிமா மலர் முத்தம் கலந்து இலங்க நின்று கண்ணாகிய கருங்குவளையது புதியபெரியமலர் கண்ணீ ராகிய முத்தத்தைக்கலந்து விளங்க நின்று; நெருங்கு வளைக்கிள்ளை நீங்கிற் றிலள் நெருங்கின வளையையுடைய இக்கிளியை யொப்பாள் ஒரு காலமு மென்னைவிட்டு நீங்கிற்றிலள்; அதனாற் பிரிவில்லை எ-று.

வைகலுமென்பதற்கு வைகறோறு மென்றுரைப்பாருமுளர்.

மெய்ப்பாடும்: பயனும் அவை. 331

விளக்கவுரை

23.16 மறவாமை கூறல் மறவாமைகூறல் என்பது வினைமுற்றிவந்து தலைமக ளோடு பள்ளியிடத்தானாகிய தலைமகன், நீயிர் வினையிடத் தெம்மை மறந்தீரேயென்ற தோழிக்கு, யான் பாசறைக்கட் டாழ்த்தவிடத்தும், கண் முத்திலங்க நின்று, இவள் என்னுடைய நெஞ்சைவிட்டு நீங்கிற்றிலள்; ஆதலால், யான் மறக்குமாறென் னோவெனத் தானவளைமறவாமை கூறாநிற்றல், அதற்குச் செய்யுள்

23.16. பாசறை முற்றிப் பைந்தொடியோ டிருந்து
மாசறு தோழிக்கு வள்ள லுரைத்தது.

2.24.பொருள் வயிற்பிரிவு

முனிவரும் மன்னரும் முன்னுவ
பொன்னான் முடியுமெனப்
பனிவருங் கண்பர மன்திருச்
சிற்றம் பலமனையாய்
துனிவரு நீர்மையி தென்னென்று
தூநீர் தெளித்தளிப்ப
நனிவரு நாளிது வோவென்று
வந்திக்கும் நன்னுதலே. **#989**

இதன் பொருள்:

முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னான் முடியும் என துறந்தாரு மரசரும் கருதுவனவாகிய மறுமையு மிம்மையும் பொருளான் முற்றுப்பெறுமென்று பொது வகையாற் கூற; கண் பனி வரும் அக்குறிப்பறிந்து கண்கள் பனிவாரா நின்றன, இவ்வாறு, பனிவருங்கண்ணோடு அறிவழிந்து வருந்திய விடத்து; பரமன் திருச்சிற்றம்பலம் அனையாய் பரமனது திருச் சிற்றம்பலத்தை யொப்பாய்; துனி வரும் நீர்மை இது என் என்று தூ நீர் தெளித்து அளிப்ப

நீ துன்பம் வருந்தன்மை இஃதென்ன காரணத்தான் வந்தது யான்பிரியேனென்று தூய நீரைத் தெளித்துத் தலையளிசெய்ய அறிவு பெற்று அறிவழிந்த காலத்தைப் பிரிந்த காலமாகவே கருதி; நனி வரும் நாள் இதுவோ என்று நன்னுதல் வந்திக்கும் நீர் நனிதாழ்த்து வருநாளிதுவோவென்று நன்னுதலாள் வணங்கி நின்றாள்; இனி நீயுணர்த்துமாற்றானுணர்த்து எ-று.

பரமன் றிருச்சிற்றம்பலமனையா ளென்று பாடமோதுவாரு முளர். நீயெனவுந் தாழ்த்தெனவு மொருசொல் வருவித்துரைக்கப் பட்டது. நனிவந்திக்குமெனினுமமையும். துறந்தார் கருதுவதாகிய மறுமையின்பமும், அரசர் கருதுவதாகிய விம்மையின்பமு மென்று, நிரனிறையாகக் கொண்டு, அவரிருவருங் கருதுவனவாகிய இப் பொருளிரண்டையும் பொருண்முடிக்குமென்று பொது வகையாற் கூறினானெனக் கொள்க மெய்ப்பாடு: இளிவரலைச்சார்ந்த பெருமிதம். பயன்: பிரிவுணர்த்துதல். 332

விளக்கவுரை

24.1 வாட்டங்கூறல் வாட்டங்கூறல் என்பது பொருள்வயிற் பிரியலுறாநின்ற தலைமகன், இருமையும் பொருளானே முற்றுப்பெறுமென்று யான் பொதுவகையாற்கூற, அக்குறிப்பறிந்து கண்பனிவர, இத்தன்மையளாய் வாடினாள்; இனி யென்னாற் பிரிவுரைத்த லரிது; நீ யுணர்த்து மாற்றானுணர்த்தெனத் தோழிக்குத் தலை மகளது வாட்டங் கூறா நிற்றல். அதற்குச் செய்யுள்

24.1. பிரிவு கேட்ட வரிவை வாட்டம்
நீங்க லுற்றவன் பாங்கிக் குரைத்தது.

வறியா ரிருமை யறியா
ரெனமன்னும் மாநிதிக்கு
நெறியா ரருஞ்சுரஞ் செல்லலுற்
றார்நமர் நீண்டிருவர்
அறியா வளவுநின் றோன் தில்லைச்
சிற்றம் பலமனைய
செறிவார் கருங்குழல் வெண்ணகைச்
செவ்வாய்த் திருநுதலே. **#990**

இதன் பொருள்:

இருவர் அறியா அளவு நீண்டு நின்றோன் தில்லைச் சிற்றம்பலம் அனைய மாலும் பிரமனுமாகிய விருவர் அடியும் முடியும் அறியாத எல்லையின்கண் நீண்டு நின்றவனது திருச்சிற்றம்பலத்தையொக்கும்; செறி வார் கருங் குழல் வெண்ணகைச் செவ்வாய்த் திருநுதல் செறிந்த நீண்டகரியகுழலினையும் வெள்ளிய நகையினையுஞ்

செய்யவாயினையுமுடைய திரு நுதால்; வறியார் பொருளில்லாதார்;
இருமை அறியார் என இம்மையு மறுமையு மாகிய
இருமையின்கண்வரும் இன்பமு மறியா ரென்று கருதி; மன்னும் மா
நிதிக்கு தொலையாது நிலைபெறும் பெரிய வரும் பொருடேடுதற்கு;
நெறிஆர் அரும் சுரம் நமர் செல்லல் உற்றார் வழியறிதற்கரிய
அருஞ்சுரத்தை நமர் போகலுற்றார் எ-று.
செறியா ரென்பதூஉம் பாடம். சிறுகானெறி பலவாகிய வருஞ்சுர
மெனினுமமையும். மெய்ப்பாடு: அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன்:
பிரிவுடம்படுத்தல். 333

விளக்கவுரை

24.2 பிரிவுநினைவுரைத்தல் பிரிவுநினைவுரைத்தல் என்பது வாட்டங் கேட்ட தோழி, பொருளில்லாதார் இருமையின் கண்வரு மின்பமும் அறியாரெனவுட் கொண்டு, அருஞ்சுரம்போய், நமர் பொருடேட நினையாநின்றா ரெனத் தலைமகளுக்குத் தலைமகனது பிரிவுநினை வுரையா நிற்றல். அதற்குச் செய்யுள்

24.2. பொருள்வயிற் பிரியும் பொருவே லவனெனச்
சுருளுறு குழலிக்குத் தோழி சொல்லியது.

சிறுவா ளுகிருற் றுறாமுன்னஞ்
சின்னப் படுங்குவளைக்
கெறிவாள் கழித்தனள் தோழி
எழுதிற் கரப்பதற்கே
அறிவாள் ஒழிகுவ தஞ்சனம்
அம்பல வர்ப்பணியார்
குறிவாழ் நெறிசெல்வ ரன்பரென்
றம்ம கொடியவளே. **#991**

இதன் பொருள்:
தோழி கொடியவள் தோழியாகிய கொடியவள்; அஞ்சனம் எழுதிற்
கரப்பதற்கே ஒழிகுவது அறிவாள் அஞ்சன மெழுதின் எழுதுகின்ற கால
மத்துணையுங் காதலர் தோன்றாமையான் அவ்வஞ்சனத்தை
யொழிவதறிவாள்; அம்பலவர்ப் பணியார் குறி வாழ் நெறி அன்பர்
செல்வர் என்று அம்பலவரை வணங்காதார் அவ்வணங்காமைக்குக்
குறியாக வாழுந் தீயநெறியை அன்பர் செல்வரென்று; வாள்சிறு உகிர்
உற்று உறாமுன்னம் சின்னப்படும் குவளைக்கு ஒளியையுடைய
சிறியவுகிர் சிறிதுறாமுன்னம் பொடிபடுங் குவளைப் பூவிற்கு; எறிவாள்
கழித்தனள் எறிதற்குக் கருவியாகிய வாளையுறைகழித்தாள்;
யான்கூறுவதுண்டோ! எ-று.
கொடியவரே யென்பது பாடமாயிற் கொடியராகிய வன்பரெனக்

கூட்டுக. அம்ம: அசைநிலை. மெய்ப்பாடு: அழுகை. பயன்: செல வழுங்குவித்தல். 334

விளக்கவுரை

24.3 ஆற்றாது புலம்பல் ஆற்றாது புலம்பல் என்பது பிரிவுநினைவுரைப்பக்கேட்ட தலைமகள், இத்தோழியாகிய கொடியவள், இத்தன்மையை யறிந்திருந்தும், அன்பர் பிரிவரெனக் குவளைப்பூ வெறிதற்கு வாளுறைகழித்தாற்போலக் கூறினாள்; இதற்கியான் கூறுவதுண்டோ வென ஆற்றாது புலம்பாநிற்றல். அதற்குச் செய்யுள்

24.3. பொருள்தரப் பிரியும் அருள்தரு பவனெனப்
பாங்கி பகரப் பூங்கொடி புலம்பியது.

வானக்கடிமதில் தில்லையெங்
கூத்தனை ஏத்தலர் போற்
கானக் கடஞ்செல்வர் காதல
ரென்னக் கதிர்முலைகள்
மானக் கனகந் தருமலர்க்
கண்கள்முத் தம்வளர்க்குந்
தேனக்க தார்மன்ன னென்னோ
இனிச்சென்று தேர்பொருளே. **#992**

இதன் பொருள்:

வானக் கடி மதில் தில்லை எம் கூத்தனை ஏத்தலர் போல் முகில்களையுடைத்தாகிய காவலையுடைய மதிலாற் சூழப்பட்ட தில்லையில் எங்கூத்தனை வாழ்த்தாதார் போல; காதலர் கானக் கடம் செல்வர் என்ன காதலர் கானகத்தையுடைய சுரத்தைச் செல்வரென்று சொல்ல; கதிர் முலைகள் மானக் கனகம் தரும் ஒளியையுடைய முலைகள் கொண்டாடப்படும் பொன்னைத்தாரா நின்றன; மலர்க் கண்கள் முத்தம் வளர்க்கும் மலர் போன்ற கண்கள் முத்தத்தைப் பெருக உண்டாக்கா நின்றன; அதனான், தேன் நக்க தார் மன்னன் தேனோடு மலர்ந்த தாரையுடைய மன்னன்; இனிச் சென்று தேர் பொருள் என் இனிச் சேட்சென்று தேடும் பொருள் யாது! எ-று.

மானமென்றது அளவை. அளவையென்றது பிரமாணம். மாற்றாணிப்பொன்னென்றுரைப்பினு மமையும், மன்னனென்பது ஈண்டு முன்னிலைக்கண் வந்தது; இயல்புவிளி யென்பாருமுளர். மெய்ப்பாடு: இளிவரலைச்சார்ந்த பெருமிதம், பயன்: அது. 335

விளக்கவுரை

24.4 ஆற்றாமைகூறல் ஆற்றாமைகூறல் என்பது தலைமகளது

வருத்தங்கண்ட தோழி, காதலர் கானகத்தையுடைய சுரத்தைப் போய்ப் பொரு டேட நினையாநின்றாரென்றுயான் சொல்லுமளவில், அவளது முலையுங் கண்ணும் பொன்னும் முத்துந் தாராநின்றன: இனி நீ சேட்சென்று தேடும் பொருள் யாதோவெனத் தோழி தலைமக னுக்கு அவளது பிரிவாற்றாமை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
24.4. ஏழை யழுங்கத்
தோழி சொல்லியது.

சுருடரு செஞ்சடை வெண்சுட
ரம்பல வன்மலயத்
திருடரு பூம்பொழில் இன்னுயிர்
போலக் கலந்திசைத்த
அருடரு மின்சொற்க ளத்தனை
யும்மறந் தத்தஞ்சென்றோ
பொருடரக் கிற்கின் றதுவினை
யேற்குப் புரவலரே. **#993**

இதன் பொருள்:
சுருள் தரு செஞ்சடைவெண் சுடர் அம்பலவன் மலயத்து சுருண்ட செஞ்சடைக்கணணிந்த வெண்சுடரை யுடைத் தாகிய மதியையுடைய வம்பலவனது பொதியின் மலைக்கண்; இருள் தரு பூம் பொழில் இருண்ட பூவையுடைய பொழிலிடத்து; இன் உயிர் போலக் கலந்து இன்னுயிர்போல இனியராய் ஒன்றுபட்டு வந்து கூடி; இசைத்த அருள் தரும் இன் சொற்கள் அத்தனையும் மறந்து நமக்குச் சொன்ன அருளைப் புலப்படுத்தும் இனிய சொற்கள் எல்லா வற்றையும் மறந்து; அத்தம் சென்றோ தாம் அருஞ்சுரஞ் சென்றோ; புரவலர் காவலர்; வினையேற்குப் பொருள் தரக்கிற் கின்றது தீவினை யேற்குப் பொருளைத்தரத் தொடங்குகின்றது! இது தகுமோ! எ-று. இருளைத்தருமென் றுரைப்பினு மமையும். உடம் போடுயிர் கலக்குமாறு போலக் கலந்தெனினு மமையும். திணை பெயர்த்திடுதல் பிரிவுள்ளிப் பாலைநிலத்தனாகியானை மருதநிலத்த னாக்குதல். மெய்ப்பாடு: அழுகை. பயன்: செலவழுங்குவித்தல். 336

விளக்கவுரை

24.5 திணைபெயர்த்துரைத்தல் திணை பெயர்த்துரைத்தல் என்பது யான் அவர்க்கு நின தாற்றாமை கூறினேன், இனியவர் நினைவறியேனென்ற தோழிக்கு, தாம் எனக்கருளைப் புலப்படுத்திய சொற்களத் தனையு மறந்தோ காவலர் தீவினையேற்குப் பொருளைத்தரத் தொடங்குகின்ற தெனப் பிரிவுள்ளிப் பாலைநிலத்தனாகிய தலை மகனை மருதநிலத்தனாக்கித் தலைமகள் புலந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

.
24.5. துணைவன் பிரியத் துயருறு மனத்தொடு
திணைபெயர்த் திட்டுத் தேமொழி மொழிந்தது.

மூவர்நின் றேத்த முதலவன்
ஆடமுப் பத்து மும்மைத்
தேவர்சென் றேத்துஞ் சிவன் தில்லை
யம்பலஞ் சீர்வழுத்தாப்
பாவர்சென் றல்கும் நரக
மனைய புனையழற்கான்
போவர்நங் காதல ரென்நாம்
உரைப்பது பூங்கொடியே. **#994**

இதன் பொருள்:

மூவர் நின்று ஏத்த நான்முகனும் மாலும் இந்திரனுமாகிய மூவர்நின்றுபரவ; முதலவன் ஆட எல்லாப் பொருட்குங் காரணமாகியவ னாடாநிற்ப; முப்பத்து மும்மைத் தேவர் சென்று ஏத்தும் சிவன் தில்லையம்பலம் சீர் வழுத்தா முப்பத்து மும்மையாகிய எண்ணையுடைய தேவர்கள் சென்று வழுத்துஞ் சிவனது தில்லை யம்பலத்தை நன்மைபுகழாத; பாவர் சென்று அல்கும் நரகம் அனைய தீவினையார் சென்று தங்கு நரகத்தையொக்கும்; புனை அழல் கான் போவார் நம் காதலர் செய்தாற்போலு மழலையுடைய காட்டைப் போவர் போன்றிருந்தார் நங்காதலர்; பூங்கொடி பூங்கொடி போல்வாய்; நாம் உரைப்பது என் இனி நாஞ் சொல்லுவதுண்டோ! எ-று. முப்பத்துமும்மை முப்பத்து மூவரது தொகுதியெனினு மமையும். சீர்வழுத்தா வென்பன ஒருசொன் னீர்மைப்பட்டு அம்பலத்தையென்னு மிரண்டாவதற்கு முடிபாயின. பொருத்தம் உள்ளத்து நிகழ்ச்சி. சொல்லாது பொருள்வயிற் பிரிவோன் கருத் தறிந்து தோழி சொல்லியது. மெய்ப்பாடும், பயனும் அவை. 337

விளக்கவுரை

24.6 பொருத்த மறிந்துரைத்தல் பொருத்தமறிந்துரைத்தல் என்பது திணைபெயர்த்துக் கூறின தலைமகளுக்கு, யாமெல்லாஞ் சொன்னேமாயினுங் காதலர்க்கு நினைவு பொருண்மேலேயாயிருந்தது: இனி யாஞ் சொல்லுவ தென்னோவெனத் தோழி தலைமகனது பொருத்த மறிந்து, தானதற்கு நொந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

24.6. பொருள்வயிற் பிரிவோன் பொருத்த நினைந்து
சுருளுறு குழலிக்குத் தோழி சொல்லியது.

தென்மாத் திசைவசை தீர்தரத்
தில்லைச்சிற் றம்பலத்துள்

என்மாத் தலைக்கழல் வைத்தெரி
யாடும் இறைதிகழும்
பொன்மாப் புரிசைப் பொழில்திருப்
பூவணம் அன்னபொன்னே வன்மாக் களிற்றொடு சென்றனர்
இன்றுநம் மன்னவரே. **#995**
இதன் பொருள்:
தென் மாத் திசை வசை தீர்தர தெற்காகிய பெரிய திசை குற்றநீங்க; என்மாத் தலைக் கழல் வைத்து எனது கருந்தலைக்கட் கழல்களை வைத்து; தில்லைச் சிற்றம்பலத்து தில்லைச் சிற்றம்பலத்தின்கண்; எரி ஆடும் இறை திகழும் பொன் மாப் புரிசைப் பொழில் திருப் பூவணம் அன்ன பொன்னே எரியோடாடு மிறைவனது விளங்கும் பொன்னானியன்ற பெரியமதிலாற் சூழப்பட்ட பொழிலையுடைய திருப் பூவணத்தை யொக்கும் பொன்னே; நம் மன்னவர் வன் மாக்களிற்றொடு இன்று சென்றனர் நம்மன்னர் வலிய பெரிய களிறுகளோடும் வினைகுறித்து இன்று சென்றார் எ-று.
நால்வகைத்தானையோடுஞ் சென்றா ரெனினு மமையும். மதிற்கால்சாய்த்தற்குக் களிறு சிறந்தமையின் அதனையே கூறினார். வினைவயிற்பிரிவுழிக் களிற்றுத்தானை சிறந்தமையின், ஒடு: உயர் பின்வழி வந்ததாம்; வேறுவினை யொடுவாய்க் களிற்றையுடை யராய்ச் சென்றாரென்பதுபட நின்றதெனினு மமையும். ஊர்ந்தகளி றென்று ஒடு கருவிப் பொருட்கண் வந்ததெனினு மமையும். செல்வ ரென்னாது சென்றாரென்றமையான், சொல்லாது பிரிந்தானாம். மா வென்பது விலங்கென்று நாய்த்தலை யென்றுரைப்பாரு முளர். வாடுதற்கு - வாடுதலான். மெய்ப்பாடு: அழுகை. பயன்: பிரிவுணர்த் துதல்.338

விளக்கவுரை

24.7 பிரிந்தமைகூறல் பிரிந்தமை கூறல் என்பது பொதுவகையானுணர்த்தினே மாயின், இனித்தீயது பிற காண்கின்றோமெனத் தலைமகனுணர்த்தாது பிரியாநிற்ப, நின்முன்னின்று பிரிவுணர்த்தினால் நீ மேனியொளி வாடுவையென வுட்கொண்டு, பொருண்முடித்துக் கடிதின் மீள்வாராக நால்வகைத்தானையோடு நம்மன்னர் வினைவயிற்சென்றாரெனத் தோழி, தலைமகளுக்குத் தலைமகன் பிரிந்தமை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

24.7. எதிர்நின்று பிரியிற் கதிர்நீ வாடுதற்
குணர்த்தா தகன்றான் மணித்தேரோ னென்றது.

ஆழியொன் றீரடி யும்மிலன்
பாகன்முக் கட்டில்லையோன்

ஊழியொன் றாதன நான்குமைம்
பூதமும் ஆறொடுங்கும்
ஏழியன் றாழ்கட லும்மெண்
டிசையுந் திரிந்திளைத்து
வாழியன் றோஅருக் கன்பெருந்
தேர்வந்து வைகுவதே. **#996**

இதன் பொருள்:

ஆழி ஒன்று காலுள்ள தொன்று; பாகன் ஈரடியும் இலன் பாகன் இரண்டடியுமுடையனல்லன், இவ்வுறுப்புக் குறையோடு; ஐம் பூதமும் ஆறு ஒடுங்கும் முக்கண் தில்லையோன் ஊழி ஒன்றாதன நான்கும் ஐந்துபூதமுந் தோன்றியவாறொடுங்கும் மூன்றுகண்ணையுடைய தில்லையானுடைய ஊழியுமொவ்வாத பெருமையையுடைய நான்கியாமத்தின்கண்ணும்; ஏழ் இயன்ற ஆழ் கடலும் எண் திசையும் திரிந்து இளைத்து அன்றோ ஏழாயியன்ற ஆழ்ந்த கடல்களையும் எட்டுத்திசைகளையுந் திரிந்திளைத்தன்றோ; அருக்கன் பெருந்தேர் வந்து வைகுவது அருக்கனது பெருந்தேர் ஈண்டுவந்து தங்குவது; அதனான் அதன் வரவு யாண்டையது! இவளாற்றுதல் யாண்டையது! எ-று. ஈரடியுமென்பதனை எழுவாயாக்கினு மமையும். நான்குந் திரிந்தெனவியையும். இயன்றவென்பது கடைக்குறைந்து நின்றது. வாழி அசைநிலை. ஒன்றாதன வென்பதனை நான்கு மென்னு மெழுவாய்க்குப் பயனிலையாக்கி யுரைப்பினுமமையும். ஐம்பூதமும் ஆறுகளொடுங்கும் ஏழ்கடலுமென்றெண்ணிக் கடலோ டருக்கற்கியை புண்மையான், ஐம்பூதத்திற் பிரித்துக் கூறினாரென்பாருமுளர். இரவும்பகலு மொப்பவருமாயினும் இரவுறுதுயரத்திற் காற்றாமை யான், இராப்பொழுது பலகால் வருவதுபோலப் பயிறருமிரவென் றாள். மெய்ப்பாடு: அழுகை. பயன்: செலவழுங்குவித்தல். 339

விளக்கவுரை

24.8 இரவுறுதுயரத்திற்கிரங்கியுரைத்தல்

இரவுறுதுயரத்திற்கிரங்கியுரைத்தல் என்பது பிரிவு கேட்ட தலைமகள தாற்றாமுகங் கண்ட தோழி*,* இவ்வுறுப்புக்குறையோ டெங்குந் திரிந்திளைத்து*,* அருக்கனது தேர் வருதல் யாண்டை யது*?* இவளாற்றுதல் யாண்டையதென*,* அவளிரவுறு துயரத்திற் குத் தானிரக்கமுற்றுக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

24.8. அயில்தரு கண்ணியைப் பயில்தரு மிரவினுள்
தாங்குவ தரிதெனப் பாங்கி பகர்ந்தது.

பிரியாரென இகழ்ந்தேன் முன்னம்
யான்பின்னை எற்பிரியின்

தரியா ளென இகழ்ந் தார்மன்னர்
தாந்தக்கன் வேள்விமிக்க
எரியா ரெழிலழிக் கும்மெழி
லம்பலத் தோனெவர்க்கும்
அரியா னருளிலர் போலன்ன
என்னை யழிவித்தவே. #997
இதன் பொருள்:
முன்னம் பிரியார் என யான் இகழ்ந்தேன் முற்காலத்து அவருலகின் மேல்வைத்துக் கூறியவழி நீட்டித்துப் பிரிவராயினும் இப்பொழுது பிரியாரென யானிகழ்ந்திருந்தேன்; எற்பிரியின் தரியாள் என மன்னர் தாம் பின்னை இகழ்ந்தார் என்னைத் தாம் பிரிகின்றாராக வுணரின் இவளுயிர் தாங்காளென மன்னர் தாம் பின்னுணர்த்துதலை யிகழ்ந்தார்; அன்ன அத்தமைய வாகிய இரண்டிகழ்ச்சியும்; தக்கன் வேள்வி எரி ஆர் மிக்க எழில் அழிக்கும் எழில் அம்பலத்தோன் தக்கனது வேள்வியின் முத்தீ நிறைந்த மிக்கவழகையழித்த எழிலையுடைய அம்பலத்தான்; எவர்க்கும் அரியான் யாவர்க்குமரியவன்; அருள் இலர் போல் என்னை அழிவித்த அவனதருளில்லாதாரைப் போல வருந்த என்னை யழிவித்தன எ-று.
உண்மையாற் காரணமாவனவும், உணரப்பட்டாற் காரண மாவனவும் எனக் காரணமிருதிறத்தன. அவற்றுட் பிரிவு தரியாமைக்கு உணரப்பட்டாற் காரணமாமாகலின் பிரியினென்புழிப் பிரிகின்றாராக வுணரினென்பது ஆற்றலாற் பெற்றாம், புலிவரினஞ்சு மென்புழிப் போல. எரியாரெழிலழிக்குமென்பதற்கு எரியின தெழிலழிக்கு மென்பார், ஆரைக்கிளவிகொடுத் திழித்துக் கூறினாரெனினு மமையும். அழிக்குமென்பது காலமயக்கம். கற்பந்தோறும் அவ்வாறு செய்தலின் நிகழ்காலத்தாற் கூறினாரெனினுமமையும். உணர்த்தாது பிரியினும் ஒருவாற்றானுணர்ந்து பின்னுமாற்றா ளாவளாலெனின், தீயதுபிற காணப்படுமென்பதாகலானும், முன்னின் றுணர்த்தல் வல்லனல்லாமையானும் அவ்வாறு பிரியுமென்க. மெய்ப்பாடு: அது. பயன்: ஆற்றாமை நீங்குதல். 340

விளக்கவுரை

24.9 இகழ்ச்சிநினைந்தழிதல் இகழ்ச்சி நினைந்தழிதல் என்பது தோழி இரக்கமுற்றுக் கூறாநிற்ப, முற்காலத்து அவருலகின் மேல்வைத் துணர்த்தியவழி நீட்டித்துப் பிரிவாராயினும், இப்பொழுதைக்கிவர் பிரியாரென யான் அவர் பிரிவிகழ்ந்திருந்தேன்; முன்னின்று பிரிவுணர்த்தின் இவளுயிர் தரியாளென்று அவருணர்த்துதலை யிகழ்ந்து போனார்; அத்தன்மைய வாகிய இரண்டிகழ்ச்சியும், என்னை

யித்தன்மைத்தாக வழிவியா நின்றனவெனத் தலைமகள் இகழ்ச்சிநினைந் தழியா நிற்றல். அதற்குச் செய்யுள்

24.9. உணர்த்தாது பிரிந்தாரென
மணித்தாழ்குழலி வாடியது.

சேணுந் திகழ்மதிற் சிற்றம்
பலவன்தெண் ணீர்க்கடல்நஞ்
சூணுந் திருத்து மொருவன்
திருத்தும் உலகினெல்லாங்
காணுந் திசைதொறுங் கார்க்கய
லுஞ்செங் கனியொடுபைம்
பூணும் புணர்முலை யுங்கொண்டு
தோன்றுமொர் பூங்கொடியே. **#998**

இதன் பொருள்:

சேணும் திகழ் மதில் சிற்றம்பலவன் சேய்மைக் கண்ணும் விளங்கும் மதிலையுடைய சிற்றம்பலத்தை யுடையான்; தெள் நீர்க் கடல் நஞ்சு ஊணும் திருத்தும் ஒருவன் தெளிந்த நீரையுடைய கடலினஞ்சை உணவாகவுஞ் செய்யு மொப்பிலாதான்; திருத்தும் உலகின் எல்லாம் அவனாற் செய்யப்படு முலகினெங்கும்; காணும் திசை தொறும் பார்க்குந் திசைதோறும்; கார்க் கயலும் கண்ணாகிய கரியகயல்களையும்; செங்கனியொடு வாயாகிய செய்யகனி யோடும்; பைம் பூணும் பசும்பொன்னா னியன்ற பூணையும்; புணர் முலையும் கொண்டு தம்முட் புணர்ந்த முலைகளையுமுடைத்தாய்; ஓர் பூங்கொடி தோன்றும் ஒருபூங்கொடி தோன்றா நின்றது எ-று.

நஞ்சுண்டலையுங் குற்றநீக்குமெனவுரைப்பினுமமையும். ஊணுந் திருத்துமென்பது அதுசெய்யுந் தன்மையனென்னும் பொருட் டாகலின், நிகழ்காலத்தாற் கூறினார். 341

விளக்கவுரை

24.10 உருவுவெளிப்பட்டுநிற்றல் உருவுவெளிப்பட்டு நிற்றல் என்பது தலைமகள் இகழ்ச்சி நினைந்தழியாநிற்ப, தானுணர்த்தாது பிரிந்தமையுட் கொண்ட பொருள் வலித்த நெஞ்சொடு செல்லாநின்ற தலைமகன், காணுந்திசைதோறுங் கயலையும் வில்லையுஞ் சிவந்த கனியையு முலையையுங் கொண்டு ஒரு பூங்கொடி தோன்றாநின்றதெனத் தலைமகளதுருவை நினைந்து மேற்போகமாட்டாது மீளலுற்றுச் சுரத்திடை நில்லாநிற்றல். அதற்குச் செய்யுள்

24.10. பொருள்வயிற் பிரிந்த ஒளியுறு வேலவன்
ஓங்கழற் கடத்துப் பூங்கொடியை நினைந்தது.

பொன்னணி யீட்டிய ஓட்டரும்
நெஞ்சமிப் பொங்குவெங்கா
னின்னணி நிற்குமி தென்னென்ப
தேஇமை யோரிறைஞ்சும்
மன்னணி தில்லை வளநக
ரன்ன அன் னந்நடையாள்
மின்னணி நுண்ணிடைக் கோபொருட்
கோநீ விரைகின்றதே. **#999**

இதன் பொருள்:

பொன் அணி ஈட்டிய ஓட்டரும் நெஞ்சம் பொற்றிரளை யீட்டுவா னோட்டந்தருநெஞ்சமே; நீ விரைகின்றது இப்பொழுது நீ விரைகின்றது; இமையோர் இறைஞ்சும் மன் அணி தில்லை வளநகர் அன்ன இமையோர் சென்று வணங்கும் மன்னனது அழகிய தில்லையாகிய வளநகரையொக்கும்; அன்ன நடையாள் மின் அணி நுண் இடைக்கோ அன்னத்தினடை போலு நடையை யுடையாளது மின் போலும் நுண்ணிய விடைக்கோ; பொருட்கோ எடுத்துக்கொண்ட பொருட்கோ, இரண்டற்குமல்லவோ; இப் பொங்கு வெங்கானின் நணி நிற்குமிது என் என்பது இவ்வழல் பொங்கு வெங்கானத்தைச் சேர்ந்து போவதும் மீள்வதுஞ் செய்யாது நிற்கின்ற விஃதியாதென்று சொல்லப்படுவது? எ - று.

நண்ணியென்பது நணியென விடைக்குறைந்து நின்றது. அணியென்று பிரித்து வெங்கானின்கணணித்தாக நிற்பதென்றுரைப் பினுமமையும். இமையோரிறைஞ்சுந் தில்லைவளநகரெனவியை யும். 342

விளக்கவுரை

24.11 நெஞ்சொடு நோதல் நெஞ்சொடு நோதல் என்பது மீள நினைந்த தலைமகன், பின்னும் பொருண்மேற் செல்லாநின்ற வுள்ளத்தனாய் நின்று மீளமாட்டாது, இவ்விரண்டனுள் இப்பொழுது நீ யேதுக்குப்போக முயல்கின்றாயெனத் தன்னெஞ்சொடு நொந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

24.11. வல்லழற் கடத்து மெல்லியலை நினைந்து
வெஞ்சுடர் வேலோன் நெஞ்சொடு நொந்தது.

நாய்வயி னுள்ள குணமுமில்
லேனைநற் றொண்டுகொண்ட
தீவயின் மேனியன் சிற்றம்
பலமன்ன சின்மொழியைப்
பேய்வயி னும்மரி தாகும்
பிரிவெளி தாக்குவித்துச்

சேய்வயிற் போந்தநெஞ் சேயஞ்சத்
தக்க துன் சிக்கனவே. **#1000**
இதன் பொருள்:
நாய் வயின் உள்ள குணமும் இல்லேனை நல் தொண்டு கொண்ட
நாயினிடத்துள்ள நன்மையுமில்லாத வென்னை நல்ல
தொண்டாகக்கொண்ட; தீவயின் மேனியன் சிற்றம்பலம் அன்ன சில்
மொழியை தீயிடத்து நிறம்போலு நிறத்தை யுடையவனது
சிற்றம்பலத்தையொக்குஞ் சிலவாகிய மொழியை யுடையாளிடத்து;
பேய் வயினும் அரிதாகும் பிரிவு எளிதாக்குவித்து; பேயினிடத்துஞ்
செய்தலரிதாம்பிரிவை எளிதாக்குவித்து சேய் வயின் போந்த நெஞ்சே -
சேய்த்தாகிய இவ்விடத்துப் போந்த நெஞ்சமே; உன் சிக்கனவு
அஞ்சத்தக்கது உனது திண்ணனவு அஞ்சத்தக்கது எ -று.
நற்றொண்டென்புழி நன்மை: சாதியடை. சின்மொழியை யென்னு
மிரண்டாவது ஏழாவதன்பொருட்கண் வந்தது. 343

விளக்கவுரை

24.12 நெஞ்சொடு புலத்தல் நெஞ்சொடு புலத்தல் என்பது நெஞ்சொடு நொந்து கூறாநின்றவன், பேயிடத்துஞ்செய்தலரிதாம்பிரிவை இவளிடத்தே யெளிதாக்குவித்துச் சேய்த்தாகிய இவ்விடத்துப் போந்த நினது சிக்கனவு அஞ்சத்தக்கதெனப் பின்னும் அந்நெஞ்சொடு புலந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

24.12. அழற்கடத் தழுக்கமிக்கு
நிழற்கதிர்வேலோன் நீடுவாடியது.

தீமே வியநிருத் தன்திருச்
சிற்றம் பலம்அனைய
பூமே வியபொன்னை விட்டுப்பொன்
தேடியிப் பொங்குவெங்கான்
நாமே நடக்க வொழிந்தனம்
யாம்நெஞ்சம் வஞ்சியன்ன
வாமே கலையைவிட் டோபொருள்
தேர்ந்தெம்மை வாழ்விப்பதே. **#1001**
இதன் பொருள்:
நெஞ்சம் நெஞ்சமே; தீ மேவிய நிருத்தன் திருச்சிற்றம்பலம் அனைய
தீயைப்பொருந்திய நிருத்தத்தை யுடையவனது திருச் சிற்றம்பலத்தை
யொக்கும்; பூ மேவிய பொன்னை விட்டுப் பொன் தேடி
பூவின்கண்மேவிய பொன்னை விட்டு வேறு பொன்னைத் தேடாநின்று;
இப் பொங்கு வெங்கான் நாமே நடக்க இவ்வழல்பொங்கும்
வெங்கானின் நாமே நடப்பீராமின்; யாம் ஒழிந்தனம் யாமொழிந்தேம்;

பொருள் தேர்ந்து எம்மை வாழ்விப்பது பொருடேடி யெம்மை வாழச் செய்வது; வஞ்சி அன்ன வாம் மேகலையை விட்டோ வஞ்சியையொக்கு மழகிய மேகலையையுடையாளை விட்டோ? யாமிதற்குடம்படேம் எ -று. இதுவும் பெருந்திணைப்பாற்படும். மீளநினைந்த துணை யல்லது மீண்டிலனென்பார் மீணெறியை யுள்ளத்தாற் சென்ற தென்றுரைப்ப. இப்பாட்டு நான்கிற்கும் மெய்ப்பாடு: அச்சம். பயன்: செலவழுங்குவித்தல். 344

விளக்கவுரை

24.13 நெஞ்சொடுமறுத்தல் நெஞ்சொடு மறுத்தல் என்பது நெஞ்சொடு புலந்து கூறிப் பின்னும் பொருண்மேற் செல்லாநின்ற வுள்ளத்தோடு தலைமகளை நினைந்து, இத்தன்மைத்தாகிய பொன்னைவிட்டு வேறு பொன்றேடியோ எம்மை வாழச்செய்வது*?* இதற்கியா முடம்படேம்*;* நாமே நடக்கவெனச் செலவுடம்படாது பொருள் வலித்த நெஞ்சொடு மறுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

24.13. நீணெறி சென்ற நாறிணர்த் தாரோன்
சேணெறி யஞ்சி மீணெறி சென்றது.

தெண்ணீ ரணிசிவன் சிற்றம்
பலஞ்சிந்தி யாதவரிற்
பண்ணீர் மொழியிவ ளைப்பையுள்
எய்தப் பனித்தடங்க
ணுண்ணீர் உகவொளி வாடிட
நீடுசென் றார்சென்றநாள்
எண்ணீர் மையின்நில னுங்குழி
யும்விர லிட்டறவே. **#1002**

இதன் பொருள்:

தெள் நீர் அணி சிவன் சிற்றம்பலம் சிந்தியாதவரின் தெண்ணீரைச் சூடிய சிவனது சிற்றம்பலத்தைச் சிந்தியாதவரைப்போல வருந்த; பண் நீர் மொழி இவளைப் பையுள் எய்த பண்ணீர்மையையுடைய மொழியையுடையவிவளை நோய் பொருந்த; பனித் தடங் கண்ணுள் நீர் உக குளிர்ச்சியையுடைய பெரியகண்ணகத்து நீர்வார; ஒளி வாடிட மேனியொளிவாட; நீடு சென்றார் சென்ற நாள் காலநீடப் பிரிந்தவர் பிரிந்தநாளை; எண் நீர்மையின் இட்டு விரல் அற நிலனும் குழியும் எண்ணுந்தன்மையாற் பலகாலிடுதலின் விரல்தேய நிலனுங்குழியும்! இனியெங்ஙன மாற்றும்! எ - று.

ஒளிவாடினளென்பது பாடமாயின், விரலிட்டென்பதனைத் தோழிமேலேற்றுக. மெய்ப்பாடு: அழுகை. பயன்: தலைமகளை யாற்றுவித்தல். 345

விளக்கவுரை

24.14 நாளெண்ணிவருந்தல் நாளெண்ணி வருந்தல் என்பது தலைமகனது வரவுநீட்ட நினைந்து வருந்தாநின்ற தலைமகளது வருத்தங்கண்ட தோழி, இவளை நோய்பொருந்தச் சென்றவர் சென்றநாளை எண்ணுந் தன்மையாற் பலகாலிடுதலின் நிலனுங்குழிந்து விரலுந்தேய்ந்த தென, அவன் சென்றநாளெண்ணி வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்

24.14. சென்றவர் திறத்து நின்றுநனி வாடுஞ்
சூழிருங் கூந்தற்குத் தோழிநனி வாடியது.

சுற்றம் பலமின்மை காட்டித்தன்
தொல்கழல் தந்ததொல்லோன்
சிற்றம் பலமனை யாள்பர
மன்றுதிண் கோட்டின்வண்ணப்
புற்றங் குதர்ந்துநன் னாகொடும்
பொன்னார் மணிபுலம்பக்
கொற்றம் மருவுகொல் லேறுசெல்
லாநின்ற கூர்ஞ்செக்கரே. **#1003**

இதன் பொருள்

திண் கோட்டின் வண்ணப் புற்று உதர்ந்து திண்ணிய கோட்டான் நிறத்தையுடைய புற்றையிடந்து; பொன் ஆர் மணி புலம்ப இரும்பார்ந்த மணியொலிப்ப; கொற்றம் மருவு கொல் ஏறு வெற்றியைப் பொருந்தின கொலல்வல்ல ஆனேறு; நல் நாகொடும் செல்லாநின்ற நல்ல நாகோடும் ஊர்வயிற் செல்லா நின்ற; கூர்ஞ் செக்கர் சிறக்குஞ் செக்கர்வானையுடைய மாலை; சுற்றம் பலம் இன்மை காட்டி சுற்றத்தாற் பயனின்மையையறிவித்து; தன் தொல் கழல் தந்த தொல்லோன் சிற்றம்பலம் அனையாள் பரம் அன்று பிறவிமருந்தாதற்குப் பழையவாய் வருகின்ற தன்கழல்களை யெனக்குத் தந்த பழையோனது சிற்றம்பலத்தை யொப்பாளதளவன்று; இனியென்னாகுவள்! எ -று. சுற்றம் பயனையுடைத்தன்மையெனினு மமையும். மண்ணப் புற்றென்பதூஉம் பாடம். நேடியபொன்னி னென்பது பாடமாயின், நேடுதல் - தேடுதல். மெய்ப்பாடு: அச்சம். பயன்: தேர்ப்பாகன் மீள்வதற்கொருப் படுதல். 346

விளக்கவுரை

24.15 ஏறுவரவுகண்டிரங்கியுரைத்தல் ஏறுவரவுகண்டிரங்கியுரைத்தல் என்பது பொருண்முற்றி மீளலுறாநின்ற தலைமகன், மாலைக்காலத்து நாகொடுவாரா நின்ற ஏறுவரவுகண்டு, இச்சிறந்த செக்கர்மாலை அவள்

பொறுக்குமளவன் றென இரங்கிக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள் -
24.15. நீடியபொன்னின் நெஞ்சம்நெகிழ்ந்து
வாடியவன் வரவுற்றது.

கண்ணுழை யாதுவிண் மேகங்
கலந்து கணமயில்தொக்
கெண்ணுழை யாத்தழை கோலிநின்
றாலு மினமலர்வாய்
மண்ணுழை யாவும் அறிதில்லை
மன்னன தின்னருள்போற்
பண்ணுழை யாமொழி யாளென்ன
ளாங்கொல்மன் பாவியற்கே. **#1004**

இதன் பொருள்:
விண் மேகம் கலந்து கண் நுழையாது விண்ணிடத்து முகில்கள் ஒன்றோடொன்று விரவுதலாற் கண் சென்று நுழையமாட்டாது; இன மலர் வாய் இனமலரையுடைய விட மெங்கும்; கண மயில் தொக்கு எண் நுழையாத்தழை கோலி நின்று ஆலும் மயிலினங்கள் திரண்டு எண் சென்றுபுகாத பீலியை விரித்து நின்றாடாநிற்கும்; மண் உழையாவும் அறி தில்லை மன்னனது இன் அருள் போல் மண்ணிடத்தெல்லாவுயிர்களுமறியுந் தில்லையின் மன்னனது இனியவருள் போலும்; பண் நுழையா மொழியாள் பாவி யற்கு என்னள் ஆம் கொல் பண்ணணையாத தேமொழியையுடை யாள் தீவினையேற்கு எத்தன்மையளாமோ! அறிகின்றிலேன்! எ-று.
எண்ணென்பது உணவாகிய வெண்ணென்பாருமுளர்.
பண்ணுழையாமொழி யென்பதற்குப் பண்ணப்பட்ட வுழையாகிய நரம்புபோலும் மொழியாளெனினுமமையும். மன்: அசைநிலை. மன்னிய பருவ முன்னிய செலவின் இன்னலெய்தி - நிலைபெற்ற பருவத்து முற்பட்ட செலவினான் வருத்தமெய்தி. மெய்ப்பாடும், பயனும் அவை.347

விளக்கவுரை

24.16 பருவங்கண்டிரங்கல் பருவங்கண்டிரங்கல் என்பது ஏறுவரவுகண் டிரக்கமுற்று வாராநின்ற தலைமகன், இம்முகில்கள் ஒன்றோடொன்று தம்மில் விரவுதலாற் பொழில்கடோறும் மயில்கள் திரண்டாடாநின்ற இக் கார்காலத்து, அவளென்னை நினைந்தாற்றாளாங் கொல்லோ வென அப்பருவங்கண் டிரங்காநிற்றல். அதற்குச் செய்யுள்
24.16. மன்னிய பருவ முன்னிய செலவின்
இன்ன லெய்தி மன்னனே கியது.

அற்படு காட்டில்நின் றாடிசிற்

றம்பலத் தான்மிடற்றின்
முற்படு நீள்முகி லென்னின்முன்
னேல்முது வோர்குழுமி
விற்படு வாணுத லாள்செல்லல்
தீர்ப்பான் விரைமலர்தூய்
நெற்படு வான்பலி செய்தய
ராநிற்கும் நீள்நகர்க்கே. **#1005**

இதன் பொருள்:

அல் படு காட்டில் நின்று ஆடி மாலைக் காலத்து இருளுண்டாகா நின்ற புறங்காட்டின்கண் நின்றாடுவான்; சிற்றம் பலத்தான் சிற்றம்பலத்தின்கண்ணான்; மிடற்றின் முற்படு நீள் முகில் அவனது மிடறுபோல விருண்டு முற்படாநின்ற நீண்ட முகிலே; முதுவோர் குழுமி இவ்விடத்தெல்லாம் முற்பட்டாயாயினும், முது பெண்டீர் திரண்டு; வில்படு வாள் நுதலாள் செல்லல் தீர்ப்பான் விற்றாழுமொளிநுதலாளது இன்னாமையை நீக்கவேண்டி; விரை மலர் தூய் நறுநாற்றத்தையுடை மலர்களைத்தூவி; நெல் படு வான் பலி செய்து அயரா நிற்கும் நீள் நகர்க்கு நெல் விரவிய தூய பலியைக் கொடுத்து இல்லுறைகடவுட்குப் பூசனைசெய்யாநிற்கும் பெரிய வில்லத்திற்கு; என்னின் முன்னேல் என்னின் முற்படாதொழி எ-று.

வான்பலிசெய் தயராநிற்கு மென்பதற்குப் பலிகொடுத்து விரிச்சி யயராநிற்குமெனினுமமையும். ஆடுசிற்றம்பலவனென்ப தூஉம் பாடம். துனைக்கார் விரைவையுடைய கார். துணைக்கா ரென்பது பாடமாயின், இனத்தையுடைய முகிலென்றுரைக்க. மெய்ப்பாடு: அது. பயன்: பாகன் றேரை விரையக் கடாவுதல். 348

விளக்கவுரை

24.17 முகிலொடு கூறல் முகிலொடு கூறல் என்பது பருவங்கண்டிரங்கி விரைவோடு வாராநின்ற தலைமகன், இவ்விடத்தெல்லாம் முற்பட்டா யாயினும் முதுபெண்டீர் திரண்டு அவளின்னாமையை நீக்கற்கு இல்லுறை கடவுட்குப் பூசனைசெய்யாநிற்கும் நீணகரத்திற்கு என்னின் முற்படாதொழிவாயாகவென, முந்துற்றுச் செல்லாநின்ற முகிலொடு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

24.17. எனைப்பல துயரமோ டேகா நின்றவன்
துனைக்கா ரதற்குத் துணிந்துசொல் லியது.

பாவியை வெல்லும் பரிசில்லை
யேமுகில் பாவையஞ்சீர்
ஆவியை வெல்லக் கறுக்கின்ற
போழ்தத்தி னம்பலத்துக்

காவியை வெல்லும் மிடற்றோ
னருளிற் கதுமெனப்போய்
மேவிய மாநிதி யோடன்பர்
தேர்வந்து மேவினதே. **#1006**

இதன் பொருள்:

முகில் பாவை அம் சீர் ஆவியை வெல்லக் கறுக்கின்ற போழ்தத்தின் முகில் பாவையதழகிய சீர்மையையுடைய வுயிரைச் செகுப்பான் கறாநின்ற பொழுதின்கண்; அம்பலத்துக் காவியை வெல்லும் மிடற்றோன் அருளின் அம்பலத்தின்கணுள னாகிய நீலப்பூவைவெல்லு மிடற்றையுடையவனதருள் போல; போய் மேவிய மாநிதி யோடு போய்த்தேடிய பெரு நிதியோடு; அன்பர் தேர் கதுமென வந்து மேவினது அன்பர் தேர் கதுமென வந்து பொருந்திற்று, அதனால்,பாவியை வெல்லும் பரிசு இல்லையே வரக்கடவதனை வெல்லுமாறில்லையே போலும் எ - று.

இனி ஒருவாற்றானும் இவளுயிர்வாழ்த லரிதென்றிருந்தனம் இதுபாவியாதலின் இற்றைப்பொழுதிகவாது தேர்வந்ததென்னுங் கருத்தாற் பாவியைவெல்லும் பரிசில்லையே யென்றாள். தமியரை அற்றம் பார்த்து வெல்லக்கருதிச் சிலர் வெகுள்கின்ற காலத்து அத்தமியார்க்குத் துணையாயதொருதேர்வந்து காத்ததென வேறுமொரு பொருள் விளங்கினவாறறிக. அருளின் மேவினதென வியையும். அருளான்வந்து மேவிற்றெனினுமமையும். மெய்ப் பாடு: பெருமிதம். பயன்: ஆற்றுவித்தல். 349

விளக்கவுரை

24.18 தேர்வரவு கூறல் தேர்வரவு கூறல் என்பது பொருள்வயிற் பிரிந்த தலைமகன் முகிலொடுவந்து புகாநிற்ப, இம்முகில் இவளதாவியை வெகுளா நின்ற காலத்து ஒரு தேர்வந்து காத்தமையான் இனிவரக் கடவதனை வெல்லுமாறில்லையெனத் தோழி தலைமகளுக்குத் தேர்வரவு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள் *24.18.* வேந்தன் பொருளொடு விரும்பி வருமென
ஏந்திழைப் பாங்கி இனிதியம் பியது.

யாழின் மொழிமங்கை பங்கன்சிற்
றம்பலத் தானமைத்த
ஊழின் வலியதொன் றென்னை
ஒளிமே கலையுகளும்
வீழும் வரிவளை மெல்லியல்
ஆவிசெல் லாதமுன்னே
சூழுந் தொகுநிதி யோடன்பர்

தேர்வந்து தோன்றியதே. #1007
இதன் பொருள்:
ஒளி மேகலை உகளும் ஒளியையுடைய மேகலை தன்னிலையினின்றும் போகாநின்றது; வரி வளை வீழும் வரியை யுடைய வளைகள் கழன்று வீழாநின்றன; மெல்லியல் ஆவி செல்லாத முன்னே இந்நிலைமைக்கண் மெல்லிய லுயிர் செல்வதற்கு முன்னே; சூழும் தொகு நிதியோடு அன்பர் தேர் வந்து தோன்றியது சூழ்ந்துவருந் திரண்டநிதியோடு அன்பரது தேர் வந்து தோன்றிற்று, அதனான், யாழின் மொழி மங்கை பங்கன் யாழோசைபோலு மினிய மொழியையுடய மங்கையது கூற்றை யுடையான்; சிற்றம்பலத்தான் சிற்றம்பலத்தின்கண்ணான்; அமைத்த ஊழின் வலியது ஒன்று என்னை அவனாலமைக்கப்பட்ட ஊழின் வலியதொன்றியாது! எ-று.
மெய்ப்பாடு: உவகை. பயன்: மெய்ம்மகிழ்தல். 350

விளக்கவுரை

24.19 இளையரெதிர் கோடல் இளையரெதிர்கோடல் என்பது தோழி தலைமகட்குத் தேர் வரவு கூறாநிற்ப, இந்நிலைமைக்கண், இவளாவிசெல்வதற்கு முன்னே, சூழுந்தொகுநிதியோடு அன்பர் தேர்வந்து தோன்றிற்று; இனி யூழின்வலியது வேறொன்றுமில்லையெனப் பொருண் முடித்து வாராநின்ற தலைமகனைச் சென்று இளையர் எதிர் கொள்ளாநிற்றல். அதற்குச் செய்யுள்
24.19. செறிக மூலவன் திருநகர் புகுதர
எறிவேல் இளைஞர் எதிர் கொண்டது.

மயின்மன்னு சாயலிம் மானைப்
பிரிந்து பொருள்வளர்ப்பான்
வெயின்மன்னு வெஞ்சுரஞ் சென்றதெல்
லாம்விடை யோன்புலியூர்க்
குயின்மன்னு சொல்லிமென் கொங்கையென்
அங்கத் திடைக்குளிப்பத்
துயின்மன்னு பூவணை மேலணை
யாமுன் துவளுற்றதே. #1008

இதன் பொருள்:
மயில் மன்னு சாயல் இம்மானைப் பிரிந்து மயில்போலு மென்மையையுடைய இம்மானைப் பிரிந்து; பொருள் வளர்ப்பான் வெயில் மன்னு வெஞ்சுரம் சென்றது எல்லாம் பொருளை யீட்டுவான் வெயினிலைபெற்ற வெய்யசுரத்தைச் சென்ற துன்ப மெல்லாம்; விடையோன் புலியூர் குயில் மன்னு சொல்லி மென் கொங்கை

விடையையுடையவனது புலியூரிடத்துளவாகிய குயிலோசைபோலுஞ் சொல்லையுடையாளுடைய மெல்லிய கொங்கைகள்; என் அங்கத் திடைக் குளிப்ப என்னுறுப்புக்களிடை மூழ்கும் வகை; துயில் மன்னு பூ அணைமேல் அணையாமுன் துவளுற்றது துயினிலைபெறும் பூவணையிடத் தணைவதன்முன்னம் மாய்ந்தது எ-று. இம்மானென்றது, பிரிதற்கரிய வித்தன்மைய ளென்றவாறு. எல்லாமென்பது முழுதுமென்னும் பொருள்பட நிற்பதோருரிச் சொல். பன்மையொருமை மயக்கமென்பாருமுளர். மெய்ப்பாடும், பயனும் அவை. பயன்: மகிழ்வித்தலுமாம்.

விளக்கவுரை

24.20 உண்மகிழ்ந்துரைத்தல் உண்மகிழ்ந்துரைத்தல் என்பது பொருண்முடித்து இளைஞ ரெதிர்கொள்ளவந்து புகுந்து தலைமகன், தலைலமகளுடன் பள்ளி யிடத்தனாயிருந்து, இம்மானைப்பிரிந்து பொருள்தேட யான் வெய்ய சுரஞ்சென்ற துன்பமெல்லாம் இவள் கொங்கைகள் என்னுறுப்புக் களிடை மூழ்க இப்பூவணைமே லணையாமுன்னம் துவள்வுற்றதெனத்தன்னுள்ளே மகிழ்ந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

24.20. பெருநிதி யோடு திருமனை புகுந்தவன்
வளமனைக் கிழத்தியோ டுளமகிழ்ந் துரைத்தது.

2.25.பரத்தையிற் பிரிவு

உடுத்தணி வாளர வன்தில்லை
யூரன் வரவொருங்கே
எடுத்தணி கையே றினவளை
யார்ப்ப இளமயிலேர்
கடுத்தணி காமர் கரும்புரு
வச்சிலை கண்மலரம்
படுத்தணி வாளிளை யோர்சுற்றும்
பற்றினர் மாதிரமே. **#1009**

இதன் பொருள்:

உடுத்து அணி வாள் அரவன் தில்லை ஊரன் வரகச்சாகவும் உடுத்து அணியாகவுமணிந்த வாளரவை யுடையவனது தில்லைக்கணுளனாகிய வூரன் இவ்வீதிக்கண்வர; எடுத்து அணி கை ஏறு இன வளை ஆர்ப்ப தெரிந்தணியப்பட்ட கைக்கணுளவாகிய இனவளைகளொலிப்ப; இள மயில் ஏர் கடுத்து இளமயிலதெழிலை யொத்து; அணி காமர் கரும்புருவச் சிலை கண் மலர் அம்பு அடுத்து மிக்கவழகையுடைய கரியபுருவமாகிய வில்லோடு கண் மலராகிய வம்பைச்சேர்த்தி; அணிவாள் இளையோர் ஒருங்கே சுற்றும் மாதிரம் பற்றினர் அணிகளுண்டாகிய வொளியையுடைய மகளிர் ஒருங்கே சுற்றுந்திசைகளைப்பற்றினர்; இஃதிவன் காதலிமாட்டென்னாம்! எ-று.

அணி காமர் என்பன ஒருபொருட்கிளவியாய், மிகுதிதோன்ற நின்றன. ஒன்றாகவெழுந்து அணியினுங் கையினுமுளவாகிய சங்கொலிப்ப இளமைக்கணுண்டாகிய வுள்ளவெழுச்சிமிக்கு வில்லோடம்பையடுத்துப் பற்றி அரைக்கணியப் பட்ட வுடைவாளையுடைய இளையோர் திசைமுழுதுஞ் சூழ்ந்து பற்றினரெனப் பிறிதுமோர் பொருடோன்றி நின்றவாறு கண்டுகொள்க. கருப்புருவச் சிலை என்பது பாடமாயின் புருவமாகிய காமனது உட்கை உடைய கருப்புச்சிலையோடு கண்ணாகிய கள்ளையுடைய மலரம்பை யடுத்தென்றுரைக்க. சுற்றும்பற்றிய மாதிரமென்பது பாடமாயின், சுற்றும்பற்றி மேவாநிற்ப, அவ்விடத்து நகைக்குறிப் பாலெடுக்கப்பட்டு இவர் கைகள் வளையொலிப்பத் தலைமேலேறின வெனக் கூட்டி யுரைக்க. இதற்குச் சுற்றும் பற்றிப் போர்செய்யாநிற்பப் படைக்கல மெடுத்துச் சங்கொலிப்ப அணியுங்கையு மொருங் கெழுந்தனவெனப் பிறிது மொரு பொருளாகக் கொள்க. இதற்குப் பிறவுரைப்பாருமுளர். உரத்தகு வேல் உரத்தாற்றக்கவேல். மெய்ப்பாடு: மருட்கை. வியப்பாகலின், பயன்: பிரிவுணர்த்துதல். 352

விளக்கவுரை

25.1 கண்டவர்கூறல் கண்டவர் கூறல் என்பது தலைமகன் பரத்தையர் சேரிக்கட் செல்லாநிற்ப, அப்பரத்தையர் அவனை ஒருங்கெதிர்கொண்டு சுற்றும்பற்றிப் போர்செய்யா நின்றமையின், இஃதிவன் காதலிமாட் டென்னாமென அவ்விடத்துக் கண்டவர் தம்முட் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.1. உரத்தகு வேலோன் பரத்தையிற் பிரியத்
திண்டேர் வீதியிற் கண்டோ ருரைத்தது.

சுரும்புறு கொன்றையன் தொல்புலி
யூர்ச்சுருங் கும்மருங்குற்
பெரும்பொறை யாட்டியை யென்இன்று
பேசுவ பேரொலிநீர்க்
கரும்புறை யூரன் கலந்தகன்
றானென்று கண்மணியும்
அரும்பொறை யாகுமென் னாவியுந்
தேய்வுற் றழிகின்றதே. **#1010**

இதன் பொருள்:

பேரொலி நீர்க் கரும்பு உறை ஊரன் கலந்து அகன்றான் என்று பெரிய வொலிக்கு நீரையுடைய கரும்புதங்கு மூரை யுடையவன் கலந்துவைத்து நீங்கினானென்று கருதுதலான்; கண்மணியும் அரும் பொறை ஆகும் என்கண்மணியும் பயனின்மை யாற் றாங்குதற்கரிய பாரமாகாநின்றன; என்ஆவியும் தேய்வுற்று அழிகின்றது எனதுயிருந் தேய்ந்தழியா நின்றது; பெரும் பொறை யாட்டியை என் இன்று பேசுவ யானிவ்வாறாகவுங் கலங்காது நின்ற பெரும்பொறையையுடையவளை யான் இன்று பேசுவனவென்! எ-று.

சுரும்பு உறு கொன்றையன் தொல் புலியூர்ச் சுருங்கும் மருங்குல் பெரும் பொறையாட்டியை சுரும்புகள் வாழுங் கொன்றைப் பூவினை யுடையானது பழையதாகிய புலியூரிற் சுருங்கின மருங்குலையுடைய பெரும்பொறையாட்டியையெனக் கூட்டுக.

என் கண்மணியுந் தேய்வுற்றழியாநின்றது ஆவியுமரும் பொறையாகாநின்ற தென்று கூட்டுவாருமுளர். உள்ளவிழ் பொறை நெஞ்சுடைந்து புறத்து வெளிப்படாத பொறை. மெய்ப்பாடு: அழுகையைச்சார்ந்த வுவகை. பயன்: தலை மகளைவியத்தல். 353

விளக்கவுரை

25.2 பொறையுவந்துரைத்தல் பொறையுவந்துரைத்தல் என்பது தலைமகனைப் பரத்தை யரெதிர்கொண்டமை கேட்ட தலைமகள்

நெஞ்சுடைந்து புறத்து வெளிப்படாமற் பொறுத்தமை கண்ட தோழி, யானிவ்வாறாகவும் கலங்காது நின்ற பெரும்பொறையாட்டியை யான் இன்று பேசுவன என்னென்று அவளையுவந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.2. கள்ளவிழ் கோதையைக் காதற் றோழி
உள்ளவிழ் பொறைகண் டுவந்து ரைத்தது.

அப்புற்ற சென்னியன் தில்லை
யுறாரி னவர்உறுநோய்
ஒப்புற் றெழில்நல மூரன்
கவரஉள் ளும்புறம்பும்
வெப்புற்று வெய்துயிர்ப் புற்றுத்தம்
மெல்லணை யேதுணையாச்
செப்புற்ற கொங்கையர் யாவர்கொ
லாருயிர் தேய்பவரே. **#1011**

இதன் பொருள்:

அப்பு உற்ற சென்னியன் தில்லை உறாரின் நீரடைந்த சென்னியையுடையவனது தில்லையை மனமொழி மெய்க ளாலணுகாதாரைப்போல; எழில் நலம் ஊரன் கவர கண்ணோட்ட மின்றி எழிலையுடைய நலத்தை ஊரன் கவர்ந்து கொள்ள; அவர் உறுநோய் ஒப்புற்று உள்ளும் புறம்பும் வெப்புற்று அத் தில்லையை யுறாதாருறுநோயையொத்து அகத்தும் புறத்தும் வெப் பத்தையுற்று; வெய்துயிர்ப்புற்று வெய்தாகவுயிர்த் தலையுற்று; தம் மெல் அணையே துணையா வேறு துணையின்மையிற்றமது மெல் லணையே தமக்குத் துணையாக; செப்பு உற்ற கொங்கையர் ஆருயிர் தேய்பவர் யாவர் கொல் செப்புப்போலுங் கொங்கையை யுடைய மகளிர் ஆருயிர் தேய்வார் பிறர் யாரோ யானல்லது? எ-று.

இத்தன்மையராய் என் போல இனி யாருயிர்தேய்வார் யாரோவெனப் பரத்தையர்க்கிரங்குவாள்போன்று, தலைமகனது கொடுமை கூறினாளாகவுரைக்க. தில்லை யுறாதவருறு நோயென்பது பாட மாயின், எழினலமூரன்கவரத் தில்லையையுறாத அத்தீவினை யாருறு நோயையொத்தென்றுரைக்க. ஊரனோடிருந்து வாடியது - ஊரன் குறைகளை நினைந்து அதனோடிருந்து வாடியது. மெய்ப்பாடு: அழுகை, பயன்: ஆற்றாமை நீங்குதல். 354

விளக்கவுரை

25.3 பொதுப்படக்கூறி வாடியழுங்கல் பொதுப்படக் கூறி வாடியழுங்கல் என்பது பொறையு வந்துரைத்த தோழிக்கு, முன்னிலைப்புறமொழியாக, தமதுநலங் கவரக்கொடுத்து வேறுதுணை யின்மையிற் றம

தணையையே தமக்குத் துணையாகக்கொண்டு கிடந்து என்னைப்போல வுயிர்தேய்வார் இனியாவரோவெனப் பொதுப்படப் பரத்தை யர்க் கிரங்குவாள் போன்று, தலைமகனது கொடுமைநினைந்து வாடாநிற்றல். அதற்குச் செய்யுள்
25.3. பொற்றிக ழரவன் மற்றிகழ் தில்லைப்
பிரிந்த வூரனோ டிருந்துவா டியது.

தேவா சுரரிறைஞ் சுங்கழ
லோன்தில்லை சேரலர்போல்
ஆவா கனவும் இழந்தேன்
நனவென் றமளியின்மேற்
பூவார் அகலம்வந் தூரன்
தரப்புலம் பாய்நலம்பாய்
பாவாய் தழுவிற் றிலேன்விழித்
தேனரும் பாவியனே. **#1012**

இதன் பொருள்:

நலம் பாய் பாவாய் நலம் பரந்த பாவாய்; அமளியின் மேல் பூ ஆர் அகலம் வந்து ஊரன் தர அமளியின் கண்மாலையையுடைய மார்பை ஊரன்வந்துதர; புலம்பாய் அவனோடு மேவாமையிற் பின்னுந்தனிமையாய்; நனவு என்று தழுவிற்றிலேன் நனவென்று மயங்கித் தவறுநினைந்து புல்லிற்றி லேன்; அரும் பாவியேன் விழித்தேன் அத்துணையேயன்றிப் பொறுத்தற்கரிய தீவினையையுடையேன் விழிப்பதுஞ் செய்தேன், அதனால், தேவாசுரர் இறைஞ்சும் கழலோன் தில்லை சேரலர் போல் தேவருமசுரரு மிறைஞ்சுங் கழலையுடையவனது தில்லையைச் சேராதாரைப்போல; ஆவா கனவும் இழந்தேன் ஐயோ! கனவான் வரு மின்பத்தையு மிழந்தேன் எ-று.

தில்லைசேரலர்போ லென்புழி ஒத்தபண்பு துன்பமுறுதலும் இன்பமிழத்தலுமாம். 355

விளக்கவுரை

25.4 கனவிழந்துரைத்தல் கனவிழந்துரைத்தல் என்பது தலைமகனது கொடுமை நினைந்து கிடந்து வாடாநின்ற தலைமகள், கனவிடைவந்து அவன் மார்புதரத்தானதனை நனவென்று மயங்கிப் புலந்து அவனோடு புணராதிழந்தமையைத் தோழிக்குச் சொல்லாநிற்றல். அதற்குச் செய்யுள்
25.4. சினவிற் றடக்கைத் தீம்புன லூரனைக்
கனவிற் கண்ட காரிகை யுரைத்தது.

செய்ம்முக நீல மலர்தில்லைச்
சிற்றம் பலத்தரற்குக்

கைம்முகங் கூம்பக் கழல்பணி
யாரிற் கலந்தவர்க்குப்
பொய்ம்முகங் காட்டிக் கரத்தல்
பொருத்தமன் றென்றிலையே
நெய்ம்முக மாந்தி இருள்முகங்
கீழும் நெடுஞ்சுடரே. **#1013**

இதன் பொருள்:
நெய்ம்முகம் மாந்தி இருள் முகம் கீழும் நெடுஞ்சுடரே நெய்ம்முகத்தைப் பருகி இருண்முகத்தைக் கிழிக்கும் நெடியசுடரே; கலந்தவர்க்குப் பொய்ம் முகம் காட்டிக் கரத்தல் பொருத்தம் அன்று என்றிலை எம்மைக்கலந்தவர்க்குப் பொய்யை யுடைய முகத்தைக்காட்டித் தெளிந்தாரை வஞ்சித்தல் தகுதி யன்றென்று கூறிற்றிலையே? வேறு கூறுவார் யாவர்? எ-று.
செய்ம்முகம் நீலம் மலர் தில்லைச் சிற்றம்பலத்து அரற்கு செய்ம் முகத்துளவாகிய நீலப்பூ மலராநின்ற தில்லையிற் சிற்றம்பலத்தின் கணுளனாகிய அரனுக்கு; கைம்முகம் கூம்பக் கழல் பணியாரின் கரத் தல் கைம்முகங் குவியக் கழலைப்பணியாதாரைப் போலக் கண்ணோ ட்ட மும் மெய்ம்மை யுமின்றிக் கரத்தலெனக் கூட்டுக.
செய்ம்முகம் செய்ம்முன். கைம்முகம் கைத்தலம். கரத்தல் மறைத்தலெனினுமமையும். நெய்ம்முகம் சுடரையணைந்த விடம். நெய்ம்முகமாந்தி யிருண்முகங்கீழு நெடுஞ்சுடரே என்றது உணவாகிய நெய்யை மாந்தி மேனியொளியை யுடையையாய்ப் பகைசெகுக்கும் பெருமையை யுடையையாதலின் அக்களிப்பினாற் கண்டது கூறிற்றிலை என்றவாறு. இவை யிரண்டற்கும் மெய்ப்பாடும், பயனும் அவை. 356

விளக்கவுரை

25.5 விளக்கொடுவெறுத்தல் விளக்கொடு வெறுத்தல் என்பது கனவிழந்தமை கூறி வருந்தாநின்ற தலைமகள், நீயாயினுங் கலந்தவர்க்குப் பொய்ம் முகங் காட்டிக் கரத்தல் பொருத்தமன்றென்றிலையேயென விளக்கொடு வெறுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
25.5. பஞ்சணைத் துயின்ற பஞ்சின் மெல்லடி
அன்பனோ டழுங்கிச் செஞ்சுடர்க் குரைத்தது.

பூங்குவ ளைப்பொலி மாலையும்
ஊரன்பொற் றோளிணையும்
ஆங்கு வளைத்துவைத் தாரேனுங்
கொள்கநள் ளார்அரணந்

தீங்கு வளைத்தவில் லோன்தில்லைச்
சிற்றம் பலத்தயல்வாய்
ஓங்கு வளைக்கரத் தார்க்கடுத்
தோமன் உறாவரையே. #1014
இதன் பொருள்:
பூங் குவளைப் பொலி மாலையும் பொலிவையுடைய குவளைப் பூவானியன்ற பெரியமாலையையும்; ஊரன் பொன் தோள் இணையும் ஊரனுடைய பொன்போலுந் தோளிணையையும்; ஆங்கு வளைத்து வைத்து ஆரேனும் கொள்க தம்மில்லத்து வளைத்துவைத்து வேண்டியார் கொள்வாராக; நள்ளார் அரணம் தீங்கு வளைத்த வில்லோன் தில்லை பகைவரதரணந் தீங்கெய்த வளைக்கப்பட்ட வில்லையுடையவனது தில்லையின்; சிற்றம்பலத்து அயல்வாய் ஓங்கு வளைக் கரத்தார்க்கு சிற்றம்பலத்துக் கயலாகியவிடத்துவாழும் உயர்ந்த வளையையுடைய கையை யுடையார்க்கு; மன் உறாவரை அடுத்தோம் மன்னனை உறாவரை யாகக் கொடுத்தோம் எ-று.
உறாவரை முற்றூட்டு. தீங்குவளைத்த வில்லோ னென்பதற்குத் தீங்கெய்தவென ஒருசொல் வருவியாது அரணத்தைத் தீங்கு வளைத்தற்குக் காரணமாகிய வில்லென்றுரைப்பினுமமையும். ஓங்கு வளைக்கரத்தாரென்புழி ஓங்குதலை வளைக்கரத்தார் மேலேற்றுக. விலையானுயர்ந்தவளை யெனினுமமையும். அடுத்தோ மென்றத னால், தனதுரிமை கூறினாளாம். மன்: அசைநிலையாக்கி, மாலை யையுந் தோளையு மடுத்தோ மெனினுமமையும். மெய்ப்பாடும் பயனும் அவையே. 357

விளக்கவுரை

25.6 வாரம்பகர்ந்துவாயின்மறுத்துரைத்தல் வாரம் பகர்ந்து வாயின் மறுத்துரைத்தல் என்பது விளக் கொடு வெறுத்து வருந்தாநின்ற தலைமகள், தலைமகன் பரத்தை யிற் பிரிந்துவந்து வாயிற்கணிற்ப, வண்டோரனையர் ஆடவர், பூவோரனையர் மகளிராதலான், நாமும் அவன்றலையளிபெற்ற பொழுது ஏற்றுக்கொள்வதன்றோ நமக்குக் காரியம்; நாம் அவனோடு புலக்கற்பாலேமல்லேமென்று வாயினேர்வித்தார் க்கு, ஊரனுடைய மாலையுந் தோளும் அவ்விடத்து வளைத்து வைத்து வேண்டினார் கொள்ள வமையும்; யான் மன்னனைப் பரத்தையர்க்கு உறாவரை யாகக் கொடுத்தேனென மறுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
25.6. வார்புன லூரன் ஏர்திகழ் தோள்வயிற்
கார்புரை குழலி வாரம் பகர்ந்தது.
தவஞ்செய் திலாதவெந் தீவினை

யேம்புன்மைத் தன்மைக்கெள்ளா
தெவஞ்செய்து நின்றினி யின்றுனை
நோவதென் அத்தன்முத்தன்
சிவன்செய்த சீரரு ளார்தில்லை
யூரநின் சேயிழையார்
நவஞ்செய்த புல்லங்கள் மாட்டேந்
தொடல்விடு நற்கலையே. **#1015**

இதன் பொருள்:

அத்தன் உலகத்துள்ளாரெல்லார்க்குந் தந்தை; முத்தன் இயல்பாகவே பாசங்களி னீங்கியவன்; சிவன் எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன்மையைச் செய்தலாற் சிவன்; செய்த சீர் அருள் ஆர் தில்லை ஊர அவனாற்செய்யப்பட்ட சீரிய வருணிறைந்த தில்லையிலூரனே; தவம் செய்திலாத வெம் தீவினையேம் முற்காலத்துத் தவத்தைச்செய்யாத வெய்ய தீவினையையுடையயாம்; புன்மைத் தன்மைக்கு எள்ளாது நின்னாலாதரிக்கப்படாத எமது புன்மைத் தன்மைகாரணமாக எம்மையே யிகழாது; எவம் செய்து நின்று இன்று இனி உனை நோவது என் நினக்குத் துன்பத்தைச் செய்யாநின்று இப்பொழுது இனி நின்னை நோதலென்னாம்! அது கிடக்க; நின் சேயிழையார் நவம் செய்த புல்லங்கள் மாட்டேம் நின்னுடைய சேயிழையார் நினக்குப் புதிதாகச் செய்த புல்லுதல்களை யாமாட்டோம், அதனால், நற்கலை தொடல் எமது நல்ல மேகலையைத் தொடாதொழி; விடு விடு வாயாக எ-று. எவ்வம் எவமென நின்றது. காதலில்லை யாயினுங் கண்ணோட்ட முடைமையான் இகழ்ந்து வாளாவிருப்பமாட்டா மையின், எம்புலவியான் நினக்குத் துன்பமாந்துணையே யுள்ள தென்னுங் கருத்தான், எவஞ்செய்து நின்றென்றாள். இனி யென்பது நீயிவ்வாறாயினபின் னென்னும் பொருட்டாய் நின்றது. சிவன்செய்த சீரருளார் தில்லையூர வென்றதனான், நின்னாற் காயப்பட்டாரானுங் காதலிக்கப்படாநின்றா யெனவும், தவஞ்செய்திலாதவெந்தீவினையே மென்றதனான், எம்மாற் காதலிக்கப்பட்டாரானுங் காயப்படா நின்றேமெனவுங் கூறியவாறாம். புல்லென்பது புல்லமென விரிந்த நின்றது. புல்லமென்பதனைப் புன்மையென்று நின்சேயிழையார் புதிதாகச் செய்த குறிகளைப் பொறுக்கமாட்டே மென்றுரைப்பினு மமையும். எவன்செய்து நின்றெனப் பாடமோதி, தவஞ் செய்திலா வெந் தீவினையேம் இன்றுன்னை நோவது என்செய்து நின்றென்றும் என்னத்தனென்று முரைப்பாருமுளர். எள்கா தென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு: வெகுளி. பயன்: புணர்தல். 358

விளக்கவுரை

25.7 பள்ளியிடத்தூடல் பள்ளியிடத்தூடல் என்பது வாயின்மறுத்த தலைமகள், ஆற்றாமையே வாயிலாகப் புக்குப் பள்ளியிடத்தானாகிய தலைமகனோடு, நின்னை யிடைவிடாது நுகர்தற்கு முற்காலத்துத் தவத்தைச் செய்யாத தீவினையேமை நோவாது, இன்றிவ் வாறாகிய நின்னை நோவதென்னோ*?* அதுகிடக்க*,* நின்காதலி மாா் புறமே கற்று நினக்குப் புதிதாகச் செய்த அப்புல்லுதலை யாஞ்செய்ய மாட்டேம்*;* அதனாலெம்மைத் தொடாதே*;* எங்கலையை விடுவாயாக வெனக் கலவி கருதிப் புலவாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.7. பீடிவர் கற்பிற் றோடிவர் கோதை
ஆடவன் றன்னோ டூடி யுரைத்தது.

தணியுறப் பொங்குமிக் கொங்கைகள்
தாங்கித் தளர்மருங்குல்
பிணியுறப் பேதைசென் றின்றெய்து
மால்அர வும்பிறையும்
அணியுறக் கொண்டவன் தில்லைத்தொல்
லாயநல் லார்கண்முன்னே
பணியுறத் தோன்றும் நுடங்கிடை
யார்கள் பயின்மனைக்கே. **#1016**

இதன் பொருள்:

அரவும் பிறையும் அணியுறக் கொண்டவன் தில்லை பிறைக்குப் பகையாகிய அரவையும் பிறையையும் அழகுறத் தனக்கணியாகக் கொண்டவனது தில்லையின்; தொல் ஆயம் நல்லார்கள் முன்னே பழைய இவளாயத்தி னுள்ளாராகிய நல்லார் கண் முன்னே; பணி உறத் தோன்றும் நுடங்கு இடையார்கள் பயில் மனைக்கு அரவுபோலத் தோன்று நுடங்குமிடையை யுடையார்கள் நெருங்கும் பரத்தையர் மனைக்கண்; தணி உறப் பொங்கும் இக்கொங்கைகள் தாங்கி தணிதலுறும் வண்ணம் வளராநின்ற இக் கொங்கைகளைத் தாங்கி; தளர் மருங்குல் பிணியுறப் பேதை இன்று சென்று எய்தும் ஆல் தளராநின்ற மருங்குலையுடைய இவள் வருந்த இப்பேதை இன்றுசென்றெய்தும்; ஆயிற் பெரிதும் இஃதிளி வரவுடைத்து எ-று.

இதற்குப் பிறிதுரைப்பாருமுளர். பாற்செலு மொழியார் ... புகன்றது கேட்டார்க்குப் பாலின் கணுணர்வு செல்லு மொழியை யுடைய மகளிர் மேற்சென்று தூதுவிட விரும்பல் பொல்லாதென இல்லோர் கூறியது. பால்போலு மொழியெனினு மமையும். ஈண்டுச் செல்லுமென்பது உவமைச்சொல். பேதையென்பது செவ்வணி யணிந்து செல்கின்ற மாதரை. மெய்ப்பாடு: நகை, எள்ளற் பொருட்டாகலின். பயன்: தலைமகனைச் செலவழுங்குவித்தல். சிறைப்புறத்தானாக, இல்லோர்

சொல்லியது. 359

விளக்கவுரை

25.8 செவ்வணிவிடுக்கவில்லோர் கூறல் செவ்வணிவிடுக்கவில்லோர் கூறல் என்பது இக் கொங்கைகள் தாங்கித் தளராநின்ற மருங்குலையுடைய இவள் வருந்த, இவ்வாயத்தார் முன்னே,அப்பரத்தையர் மனைக்கண் இப்பேதை இக்குறியறிவிக்கச் செல்லாநின்ற விது நமக்கு மிகவு மிளிவரவுடைத் தெனச் செவ்வணிவிடுக்க விரையாநின்ற வில்லோர் தம்முட் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.8. பாற்செலு மொழியார் மேற்செல விரும்பல்
பொல்லா தென்ன இல்லோர் புகன்றது.

இரவணை யும்மதி யேர்நுத
லார்நுதிக் கோலஞ்செய்து
குரவணை யுங்குழல் இங்கிவ
ளால்இக் குறியறிவித்
தரவணை யுஞ்சடை யோன்தில்லை
யூரனை யாங்கொருத்தி
தரவணை யும்பரி சாயின
வாறுநந் தன்மைகளே. **#1017**

இதன் பொருள்:

இரவு அணையும் மதி ஏர் நுதலார்நுதி இரவைச் சேரும் பிறைபோலு நுதலை யுடையாரது முன்; கோலம் செய்து செவ்வணியாகிய கோலத்தைச் செய்து; குரவு அணையும் குழல் இங்கிவளால் இக் குறி அறிவித்து குரவம்பூச் சேருங் குழலையுடைய இவளால் இக்குறியையறிவித்து; அரவு அணையும் சடையோன் தில்லை ஊரனை பாம்புசேருஞ் சடையையுடையவனது தில்லையி லூரனை; ஆங்கு ஒருத்தி தர பின் அவ்விடத்து ஒருத்தி நமக்குத் தர; அணையும் பரிசு ஆயினவாறு நம் தன்மைகள் நாமவனை யெய்தும்படி யாயினவாறென் நம்முடைய பெண்டன்மைகள்! எ-று.

நுதலார்நுதியறிவித்தென வியையும். குறி - பூப்புநிகழ்தற் குறி. மெய்ப்பாடு: அழுகை. பயன்: ஆற்றாமை நீங்குதல். 360

விளக்கவுரை

25.9 அயலறிவுரைத்தவளழுக்கமெய்தல்
அயலறிவுரைத்தவளழுக்கமெய்தல் என்பது இல்லோர் செவ்வணிவிடுக்க நினையாநிற்ப, அயலார்முன்னே இவளால் இக்குறியறிந்த விடத்து ஒருத்தி நமக்குத்தர நாமவனை யெய்தும் படியாயிற்று நம்முடைய

பெண்டன்மையென அயலறிவுரைத்துத் தலைமகள் அழுக்கமுற்றுக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
25.9. உலகிய லறியச் செலவிட லுற்ற
விழுத்தகை மாதர்க் கழுக்கஞ் சென்றது.

சிவந்தபொன் மேனி மணிதிருச்
சிற்றம் பலமுடையான்
சிவந்தஅம் தாளணி யூரற்
குலகிய லாறுரைப்பான்
சிவந்தபைம் போதுமஞ் செம்மலர்ப்
பட்டுங்கட் டார்முலைமேற்
சிவந்தஅம் சாந்தமுந் தோன்றின
வந்து திருமனைக்கே. **#1018**

இதன் பொருள்:
சிவந்த பொன் மேனி மணி செம்பொன் போலு மேனியையுடையமணி; திருச்சிற்றம்பலம் உடையான் திருச்சிற்றம் பலத்தை யுடையான்; சிவந்த அம் தாள் அணி ஊரற்கு அவனது சிவந்தவழகிய தாள்களை முடிக்கணியாக்கும் ஊரற்கு; உலகியலாறு உரைப்பான் உலகியனெறியை யறிவிப்பான் வேண்டி; திரு மனைக்கு நமது திருவையுடைய மனைக்கண்; சிவந்த பைம்போதும் சிவந்த செவ்விப் பூவும்; அம் செம் மலர்ப் பட்டும் அழகிய செய்ய பூத்தொழிற் பட்டும்; கட்டு ஆர் முலைமேல் அம் சிவந்த சாந்தும் கட்டுதலார்ந்த முலைமேலுண்டாகிய வழகிய செய்ய சாந்தமும்; வந்து தோன்றின வந்துதோன்றின; இனித் தருமக்குறை வாராமல் ஊரற்கும் ஏகல்வேண்டும் எ-று.

உலகியலாறு பூப்பு. உரைத்தாற்போலச் செவ்வணியா லறிவித்தலின் உரைப்பா னென்றார். தாளிணை யூரற்கென்பதூஉம் பாடம்.
மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: பூப்புணர்த்துதல். 361

விளக்கவுரை

25.10 செவ்வணிகண்டவாயிலவர் கூறல்
செவ்வணிகண்டவாயிலவர்கூறல் என்பது தலைமக ளிடத்து நின்றுஞ் செவ்வணிசெல்லக்கண்டு, நம்மூரற்கு உலகியலாறுரைப்பான் வேண்டி, செம்மலருஞ் செம்பட்டும் செஞ்சாந்தும் நமது திருவை யுடைய மனையின்கண் வந்து தோன்றினவெனப் பரத்தை வாயிலவர் தம்முண் மதித்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
25.10. மணிக்குழை பூப்பியல் உணர்த்த வந்த
ஆயிழையைக் கண்ட வாயிலவர் உரைத்தது.

குராப்பயில் கூழை யிவளின்மிக்

கம்பலத் தான்குழையாம்
அராப்பயில் நுண்ணிடை யாரடங்
காரெவ ரேயினிப்பண்
டிராப்பகல் நின்றுணங் கீர்ங்கடை
யித்துணைப் போழ்திற்சென்று
கராப்பயில் பூம்புன லூரன்
புகுமிக் கடிமனைக்கே. **#1019**

இதன் பொருள்:

பண்டு இராப்பகல் நின்று உணங்கு ஈர்ங்கடை முற்காலத்து இரவும்பகலுந் தான் வாயில்பெறாது நின்று வாடும் இக்குளிர்ச்சியையுடைய கடையை; இத்துணைப் போழ்தின் சென்று நீட்டியாது இத்துணைக்காலத்திற் கழிந்து; கராப்பயில் பூம் புனல் ஊரன் இக்கடி மனைக்குப் புகும் கராம்பயில்கின்ற பூம்புனலை யுடைய வூரையுடையான் இக்காவலையுடைய மனைக்கட்புகா நின்றான், அதனான், குராப்பயில் கூழை இவளின் மிக்கு குராப்பூப் பயின்ற குழலையுடைய இவளினும் மேம்பட்டு; அம்பலத்தான் குழையாம் அராப் பயில் நுண் இடையார் அடங்கார் எவர் அம்பலத்தான் குழையாகிய அரவுபோலும் நுண்ணிய விடையினை யுடையார் புலந்தடங்காதார் இனி யாவர்! மனைக்கடன் பூண்டலான் எல்லாருமடங்குவர் எ-று. கராம்பயிலென்பது கராப்பயிலென வலிந்து நின்றது. மெய்ப்பாடு: உவகை. பயன்: மெய்ம்மகிழ்தல். 362

விளக்கவுரை

*25.11*மனைபுகல்கண்டவாயிலவர்கூறல்

மனைபுகல்கண்டவாயிலவர்கூறல் என்பது செவ்வணி கண்ட தலைமகன் பரத்தையிடத்தினின்றும் வந்து தடையின்றி மனைவயிற்புகுதாநிற்ப, பண்டிரவும்பகலும் வாயில்பெறாது நின்றுணங்கும் இக்காவலையுடைய கடையை இத்துணைக் காலத்திற் கழிந்து வாயிலின்றிப் புகுதாநின்றான், மனைக்கடன் பூண்டலான் இனிப் புலந்து அடங்காதார் ஒருவருமில்லை யெனத் தலைமகள் வாயிலவர் தம்முட்கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.11. கடனறிந் தூரன் கடிமனை புகுதர
வாய்ந்த வாயிலவ ராய்ந்து ரைத்தது.

வந்தான் வயலணி யூர
னெனச்சின வாள்மலர்க்கண்
செந்தா மரைச்செல்வி சென்றசிற்
றம்பல வன்னருளான்
முந்தா யினவியன் நோக்கெதிர்

நோக்க முகமடுவிற்
பைந்தாட் குவளைகள் பூத்திருள்
சூழ்ந்து பயின்றனவே. **#1020**
இதன் பொருள்:
வந்தான் வயல் அணி ஊரன் என வந்தான் வயலணிந்த வூரனென்று சொல்லுமளவில்; சின வாள் மலர்க்கண் செந்தாமரைச் செவ்வி சென்ற சினவாள் போலுமலர்க்கண்கள் சிவந்த தாமரைப்பூவினது செவ்வியையடைந்தன; சிற்றம்பலவன் அருளான் முந்தாயின வியன் நோக்கு எதிர்நோக்க சிற்றம்பலவன தருளான் முன்னுண்டாகிய பெரிய அப்புலவி நோக்கெதிர் காதல னோக்க; முக மடுவின் பைந்தாள் குவளைகள் பூத்து இருள் சூழ்ந்து பயின்றன கதுமெனப் பின் முகமாகிய மடுவிற் பைந்தாளையுடைய குவளைப்பூக்கள் மலர்ந்திருண்டு நெருங்கின; என்னவில்லறக் கிழத்தியோ! எ-று.
இயனோக்கென்றுபிரித்து முன்னுண்டாகிய துனித்த லியல்பை யுடைய நோக்கென் றுரைப்பினு மமையும். கண்களது பிறழ்ச்சிப் பன்மையாற் குவளைப்பூக்கள் பல கூடினாற் போன்றிருந்தன வென்பது போதர, பயின்றனவென்றார். காதலனோடு பழகின வெனினுமமையும். தலைமகற்குப் புலவிக் காலத்து வருந்துன்ப மிகுதியும் புலவிநீக்கத்துவரு மின்பமிகுதியும் நோக்கி, சிற்றம்பலவ னருளாலெனக் காரணத்தை மிகுத்துக் கூறினார். மெய்ப்பாடும், பயனும் அவை. 363

விளக்கவுரை

25.12 முகமலர்ச்சிகூறல் முகமலர்ச்சிகூறல் என்பது பரத்தையிற்பிரிந்த தலைமகன் செவ்வணிகண்டு வந்தானென்று சொல்லுமளவில், தலைமகள் கண்கள் சிவந்தன; அப்புலவி நோக்கத்தெதிர் காதலனோக்க, அச்சிவப்பாறி முகமலர்ந்தமையை அவ்விடத்துக்கண்டவர் தம்முட் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
25.12. பூம்புன லூரன் புகமுகம் மலர்ந்த
தேம்புனை கோதை திறம்பிற ருரைத்தது.

வில்லிகைப் போதின் விரும்பா
அரும்பா வியர்களன்பிற்
செல்லிகைப் போதின் எரியுடை
யோன்தில்லை அம்பலஞ்சூழ்
மல்லிகைப் போதின்வெண் சங்கம்வண்
டூதவிண் தோய்பிறையோ
டெல்லிகைப் போதியல் வேல்வய
லூரற் கெதிர்கொண்டதே. **#1021**
இதன் பொருள்:

வில்லி கைப் போதின் விரும்பா அரும்பாவிய வர்கள் அன்பிற் செல்லி காமன் கையி லம்பாகிய பூக்களில் ஆதரமில்லாத அரிய குறிப்பை யுடையவர்கள் தனக்குச் செய்த அன்பின்கண் வேட்டுச்செல்வோன்; கைப் போதின் எரி உடையோன் கையாகிய பூவின்கணுளதாகிய எரியையுடையான்; தில்லைம்பலம் சூழ் மல்லிகைப் போதின் வெண் சங்கம் வண்டு ஊத அவனது தில்லையம்பலத்தைச் சூழ்ந்த மல்லிகையின் போதாகிய வெண்சங்கை வண்டுகளூத; விண் தோய் பிறையோடுஎல்லி விண்ணையடைந்த பிறையோடு இராப்பொழுது; கைப் போது இயல் வேல் வயல் ஊரற்கு எதிர் கொண்டது கையாகிய பூவின்கணியலும் வேலையுடைய வயலூரற்கு மாறு கொண்டது எ-று. என்றது வண்டூதுமல்லிகைப்போதானும் அந்திப்பிறை யானுங் கங்குற் பொழுதானும் ஆற்றானாய்ப் புகுதராநின்றான்; இனி நீ புலக்கற்பாலையல்லையென வாயினேர்வித்தவாறு. வில்லிகைப் போதாற் புலன்களை விரும்பாத அரும்பாவியரெனினுமமையும். கைப்போதின்கண்ணே யெரியையுடையானெனினுமமையும். இகழ்தல் தலைமகனாற்றா மை நீங்காதிருத்தல். எல்லி ஊரற்கு வாயிலாக வேற்றுக்கொண்டது புலவாதுண்ணெகிழ்ந்தாளென்றி வளை நாமிகழ்கின்றதென் இது வன்றோ பொழுதென உழையர் தம்முட்புறங் கூறினாராகவுரைப் பினுமமையும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலை மகளைச் சிவப்பாற்றுவித்தல். 364

விளக்கவுரை

25.13 காலநிகழ்வுரைத்தல் காலநிகழ்வுரைத்தல் என்பது பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனது ஆற்றாமையைத் தலைமகள் நீக்காதிருப்ப, வண்டூது மல்லிகைப்போதானும் அந்திப் பிறையானுங் கங்குற் பொழுதானும் ஆற்றானாய்ப் புகுதராநின்றான்; இனி நீ புலக்கற் பாலையல்லையென உழையர் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
25.13. இகழ்வ தெவன்கொல் நிகழ்வதிவ் வாறெனச்
செழுமலர் கோதை உழையர் உரைத்தது.

புலவித் திரைபொரச் சீறடிப்
பூங்கலஞ் சென்னியுய்ப்பக்
கலவிக் கடலுட் கலிங்கஞ்சென்
றெய்திக் கதிர்கொண்முத்தம்
நிலவி நிறைமது ஆர்ந்தம்
பலத்துநின் றோனருள்போன்
றுலவிய லாத்தனஞ் சென்றெய்த
லாயின வூரனுக்கே. **#1022**

இதன் பொருள்:

புலவித் திரை பொர புலவியாகிய திரைவந்து மாறுபட; சீறடிப் பூங்கலம் சென்னி உய்ப்ப காதலி சிற்றடியாகிய பொலிவினையுடைய வணியைத் தன்சென்னியி லுய்த்தலான் அப்புலவிநீங்க; கலவிக் கடலுள் கலிங்கம் சென்று எய்தி கலவியாகிய கடலுள் துகிலைச் சென்று பற்றி; கதிர்கொள் முத்தம் நிலவி நிறை மது ஆர்ந்து எயிறாகிய வொளிபொருந்தின முத்தின்கட் பொருந்தி நிறைந்த நீராகிய மதுவைப்பருகி; அம்பலத்து நின்றோன் அருள் போன்று உலவு இயலாத் தனம் அம்பலத்து நின்றவனதருளை யொத்து ஒருஞான்றுந் தளர்தலில்லாத முலைகள்; ஊரனுக்குச் சென்று எய்தல் ஆயின ஊரற்குச் சென்று பெறலாயின எ-று. புலவுநாறித் திரைகள் வந்துமோதச் சிறியவடியையுடைய பொலிவையுடைய மரக்கலத்தைக் கடலின் சென்னியிலே செலுத்தக் கடலுட்கலந்து கலிங்கமாகிய தேயத்தைச்சென்றெய்தி ஒளி பொருந்திய முத்துக்கள் தன்கண்வந்து நிலைபெற அவ்விடத்துள்ள மதுக்களை நுகர்ந்து அம்பலத்து நின்றவனதருளையொத்து ஒரு ஞான்றுங் கேடில்லாதபொருள் சென்றெய்தலாயினவென வேறு மொருபொருள் விளங்கியவாறறிக. சீரியலுலகிற் றிகழ்தரக்கூடி சீர்மையியன்ற வுலகினுள்ள வின்பமெல்லாவற்றினும் விளங்கக்கூடி. சீரியலுலகு தேவருலகுமாம். இதுவுந் துறைகூறிய கருத்து. மகிழ்வுற்ற தென இன்னார் கூற்றென்னாது துறைகூறினார். மெய்ப்பாடு: உவகை. பயன்: மெய்ம்மகிழ்தல். 365

விளக்கவுரை

25.14 எய்தலெடுத்துரைத்தல் எய்தலெடுத்துரைத்தல் என்பது பரத்தையிற்பிரிந்துவந்த தலைமகன் பூப்பு நிகழ்ந்த கிழத்தியைப் புலவிதீர்த்து இன்புறப் பண்ணி எய்தலுற்று மகிழ்ந்தமையை அவ்விடத்துள்ளார் எடுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.14. சீரிய லுலகிற் றிகழ்தரக் கூடி
வார்புன லூரன் மகிழ் வுற்றது.

செவ்வாய் துடிப்பக் கருங்கண்
பிறழச்சிற் றம்பலத்தெம்
மொய்வார் சடையோன் அருளின்
முயங்கி மயங்குகின்றாள்
வெவ்வா யுயிர்ப்பொடு விம்மிக்
கலுழ்ந்து புலந்துநைந்தாள்
இவ்வா றருள்பிறர்க் காகு
மெனநினைந் தின்னகையே. **#1023**

இதன் பொருள்:

இன் நகை இன்னகையையுடையாள்; செவ்வாய் துடிப்ப செய்ய வாய்

துடிப்ப; கருங்கண் பிறழ கரிய கண்கள் பிறழ; சிற்றம்பலத்து எம் மொய் வார் சடையோன் அருளின் முயங்கி மயங்குகின்றாள் சிற்றம்பலத்தின்கணுளனாகிய எம் முடைய நெருங்கிய நீண்ட சடையையுடையவன தருள்பெற்றவர் போல முயங்கி இன்பக்களியின் மயங்குகின்றவள்; இவ்வாறு அருள் பிறர்க்கு ஆகும் என நினைந்து இவ்வாறு நமக்கருளுமருள் ஒருஞான்று பிறர்க்குமாமென ஒன்றனையுட்கொண்டு; வெவ்வாய் உயிர்ப்போடு விம்மிக் கலுழ்ந்து வெய்ய விடத்தையுடைய நெட்டுயிர்ப்போடு பொருமியழுது; புலந்து நைந்தாள் புலந்து வருந்தினாள் எ-று.

அருளின் முயங்குகின்றாளென்புழி அருள் பெற்றவர் உவமையாதல் ஆற்றலான்வந்தது. அருளான் முயங்கி யென்பாரு முளர். வெவ்வாயுயிர்ப்பென்பது 'கலுழ்கட் சின்னீர்' என்பதுபோல நின்றது. தவறுபற்றிப் புலப்பளென்று நீ கூறுதி; இதுவன்றோ இவள் புலக்கின்றவாறெனத் தோழிக்குத் தலைமகன் கூறியது.மன்னிய வுலகிற்றுன்னிய வன்பொடு - நிலைபெற்ற வுலகத்தின் வைத்துச் செறிந்த வன்போடு. இதுவுந் துறைகூறிய கருத்து. மெய்ப்பாடு: உவகையைச்சார்ந்த வெகுளி; பெருமிதமு மாம். பயன்: அது. 366

விளக்கவுரை

25.15 கலவிகருதிப்புலத்தல் கலவிகருதிப்புலத்தல் என்பது புலவிதீர்த்து இன்புறப் புணரப்பட்டு மயங்காநின்ற தலைமகள், தனக்கவன்செய்த தலையளியை நினைந்து, இவ்வாறருளுமருள் ஒருஞான்று பிறர்க்குமா மெனவுட்கொண்டு பொருமியழுது, பின்னு மவனோடு கலவிகருதிப் புலவாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.15. மன்னிய வுலகில் துன்னிய அன்பொடு
கலவி கருதிப் புலவி யெய்தியது.

மலரைப் பொறாவடி மானுந்
தமியள்மன் னன்ஒருவன்
பலரைப் பொறாதென் றிழிந்துநின்
றாள்பள்ளி காமனெய்த
அலரைப் பொறாதன் றழல்விழித்
தோனம் பலம்வணங்காக்
கலரைப் பொறாச்சிறி யாளென்னை
கொல்லோ கருதியதே. **#1024**

இதன் பொருள்:

மன்னன் ஒருவன் மன்னன் ஒருவன்; மலரைப் பொறாஅடி மானும் தமியள் மென்மையான் மலரையும் பொறாத வடியையுடைய மானுந்தமியளே; ஆயினும், பள்ளி பலரைப் பொறாது என்று இழிந்து

நின்றாள் இப்பள்ளி பலரைத்தாங்கா தென்றுகூறிப் பள்ளியினின்று மிழிந்துநின்றாள்; காமன் எய்த அலரைப் பொறாது அன்று அழல் விழித்தோன் அம்பலம்வணங்கா காமனெய்த அலரம்பை வெகுண்டு அன்றழலாகிய கண்ணை விழித்தவனதம்பலத்தை வணங்காத; கலரைப் பொறாச் சிறியாள் கருதியது என்னை கொல் தீய மக்களைப் பொறாத சிறியவள் இந்நிலைமைக்கட் கருதியதென்னோ! எ-று. இழிந்துநின்றாளென்பது விரையவிழிந்தாளென்பதுபட நின்றது. கலரைப்பொறாச்சிறியாளென்றது தீமக்களென்று சொல்லும் வார்த்தையையும் பொறாதவள் தீமக்கள்செய்யும் காரியத்தைச் செய்தாளென்றவாறு. குறிப்பினிற்குறிப்பென்றது இவ்வாறருள் பிறர்க்காமென நினைந்து இன்னகைபுலந்தாளென்று தலைமகன் கூறிய கூற்றையே தவறாக நினைந்து நம்மை யொழிந்து பிறருமுண் டாகக் கூறினானாகலான் இந்த வமளி பலரைப் பொறா தெனப் புலந்தாள், குறிப்பாலே தலைமகனது குறிப்பையறிந்து. இவ்வகை தலைமகள் புலம்ப வாயில்க டம்முட் சொல்லியது. இதுவுமது. மெய்ப்பாடு: மருட்சி. பயன்: ஐயந் தீர்தல். பள்ளியிடத்தாளாகிய தலைமகள் நுண்ணிதாகியதோர் காரணம் பற்றி இவ்வகையுரைத்து ஊடக்கண்டதோழி தன்னெஞ்சோடு சாவினாளென்பது. தலைமகன் றன்னெஞ்சோ டுசாவினானெனின், அது பொருந்தாது. 367

விளக்கவுரை

25.16 குறிப்பறிந்து புலந்தமை கூறல் குறிப்பறிந்து புலந்தமை கூறல் என்பது புலவி தீர்ந்து கலுழ்ந்து புணர்ந்து தானுமவனுமேயாய்ப் பள்ளியிடத்தாளாகிய தலைமகள், பின்னுமொருகுறிப்பு வேறுபாடுகண்டு புலந்து, இப்பள்ளிபலரைப் பொறா தென்றிழிய, இப்பொழுது இவ ளிவ்வா றிழிதற்குக் கருதிய குறிப்பென்னை கொல்லோவென உழையர் தம்முட் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
25.16. குறிப்பினிற் குறிப்பு நெறிப்பட நோக்கி
மலர்நெடுங் கண்ணி புலவி யுற்றது.

வில்லைப் பொலிநுதல் வேற்பொலி
கண்ணி மெலிவறிந்து
வல்லைப் பொலிவொடு வந்தமை
யால்நின்று வான்வழுத்துந்
தில்லைப் பொலிசிவன் சிற்றம்
பலஞ்சிந்தை செய்பவரின்
மல்லைப் பொலிவய லூரன்மெய்
யேதக்க வாய்மையனே. **#1025**

இதன் பொருள்:

வில்லைப் பொலி நுதல் வேல் பொலி கண்ணி மெலிவு அறிந்து விற்போலுநுதலையும் வேல்போலுங் கண்களை யுமுடையாளது வாட்டமறிந்து; வல்லைப் பொலிவொடு வந்தமையான் விரைய இவளது பொலிவோடு வந்தமையால்; வான் நின்று வழுத்தும்; வானத்துள்ளார் நின்றுவழுத்தும் தில்லைப் பொலி சிவன் சிற்றம்பலம் சிந்தை செய்பவரின் தில்லைக்கட் பொலியும் சிவனது சிற்றம்பலத்தைக் கருதுவாரைப்போல; மல்லைப் பொலி வயல் ஊரன் வளத்தாற் பொலியும் வயலையுடைய வூரை யுடையவன்; மெய்யே தக்க வாய்மையன் மெய்யாக நல்ல மெய்ம்மையன் எ-று. வில்லையென்னுமைகாரம் இசைநிறையாய் வந்தது. காதலன் வர இவள் இடையின்றிப் பொலிந்தமையாற் பொலிவொடென ஒடுக்கொடுத்துக் கூறினார். பொலி சிற்றம்பலமென வியையும். மல்லல்: கடைக்குறைந்து ஐகாரம் விரிந்துநின்றது. மல்லற் பொலி யென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு: உவகை. பயன்: மகிழ்தல். 368

விளக்கவுரை

25.17 வாயிலவர் வாழ்த்தல் வாயிலவர் வாழ்த்தல் என்பது செவ்வணிவிடுக்கப் பூப்பி யற் செவ்விகெடாமல் மெலிவறிந்து இவளது பொலிவோடு வந்தமையான் இவன் மெய்யே தக்கவாய்மையனெனத் தலை மகனை வாயிலவர் வாழ்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.17. தலைமகனது தகவுடைமை
நிலைதகுவாயில் நின்றோருரைத்தது.

சூன்முதிர் துள்ளு நடைப்பெடைக்
கிற்றுணைச் சேவல்செய்வான்
தேன்முதிர் வேழத்தின் மென்பூக்
குதர்செம்ம லூரன்திண்டோள்
மான்முதிர் நோக்கின்நல் லார்மகிழத்
தில்லை யானருளே
போன்முதிர் பொய்கையிற் பாய்ந்தது
வாய்ந்த புதுப்புனலே. **#1026**

இதன் பொருள்:

சூன் முதிர் துள்ளு நடைப் பெடைக்கு சூன்முதிர்ந்த துள்ளுநடையை யுடைத்தாகிய பெடைக்கு; இல் செய்வான் துணைச் சேவல் ஈனுமில்லைச் செய்யவேண்டித் துணையாகியசேவல்; தேன் முதிர்வேழத்தின் மென்பூக் குதர் தேன் போலுஞ் சாறுமுதிர்ந்த கரும்பினது மெல்லிய பூவைக்கோதும்; செம்மல் ஊரன் திண் தோள் தலைமையை யுடையவூரனது திண்ணிய தோள்களை; மான் முதிர் நோக்கின் நல்லார் மகிழ மானினது நோக்கம்போலு நோக்கினையுடைய

நல்லார்கூடி இன்புற; தில்லையான் அருளே போல் முதிர் பொய்கையில் வாய்ந்த புதுப் புனல் பாய்ந்தது தில்லையான தருளை யொத்து நீர் முதிர்ந்த பொய்கையுள் நல்ல புதுப்புனல் பாய்ந்தது; இனிப் புனலாட்டினாற் றன்காதலியைச் சிவப்பிக்கும்போலும் எ-று. சூன்முதிர்தலாற் குறுகவடியிடுதலிற் றுள்ளு நடையென்றார். தில்லையானருள் பெற்றவர் போல நல்லார் மகிழவென்றுரைப்பாரு முளர். சேவலன்னந் தன் சூன்முதிர்ந்தபெடைக்கு ஈனில் லிழைத்துப் பாதுகாக்கின்றாற் போல இவனுந் தன்காதலிக்கு வேண்டுவன செய்து மனைவயிற்றங்கி யின்புறுகின்றானென உள்ளுறை காண்க. துன்னு நடையென்று பாடமோதி, சூன் முதிர்தலாற் பயில அடியிடுநடை யென்றுரைப்பாரு முளர். வெண்பூவென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: பிரிவுணர்த்துதல். 369

விளக்கவுரை

25.18 புனல் வரவுரைத்தல் புனல் வரவுரைத்தல் என்பது தலைமகளுடன் மனை வயிற்றங்கி யின்புறா நின்றவனது தோள்களைப் பரத்தையர்பொருந்தி மகிழப் புதுப்புனல் வந்து பரந்தது; இனிப் புனலாட்டினால் இவன்காதலி புலக்கும்போலுமென, வையத்தார் தம்முட் புனல்வரவு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.18. புனலா டுகவெனப் புனைந்து கொண்டு
மனைபுகுந் தவனை வைய முரைத்தது.

சேயே யெனமன்னு தீம்புன
லூரன்திண் டோளிணைகள்
தோயீர் புணர்தவந் தொன்மைசெய்
தீர்சுடர் கின்றகொலந்
தீயே யெனமன்னு சிற்றம்
பலவர்தில் லைந்நகர்வாய்
வீயே யெனஅடி யீர்நெடுந்
தேர்வந்து மேவினதே. **#1027**

இதன் பொருள்:

சுடர்கின்ற கொலம் தீயே என மன்னு சுடரா நின்றவடிவு தீயேயென்றுசொல்ல நிலைபெற்ற; சிற்றம்பலவர் தில்லைநகர்வாய் வீயே என அடியீர் சிற்றம்பலவரது தில்லைநகரிடத் துள்ளீராகிய பூவையொக்கு மடியையுடையீர்; நெடுந் தேர் வந்து மேவினது நெடியதேர் ஈண்டுவந்து மேவிற்று; புணர் தவம் தொன்மை செய்தீர் இவனைப் புணர்தற்குத் தக்கதவத்தை முற்காலத்துச் செய்தீர்கள்; சேயே என மன்னு தீம் புனல் ஊரன்திண் தோள் இணைகள் தோயீர் வடிவு முருகவேளேயென்று சொல்ல நிலைபெறா நின்ற இனிய

புனலையுடைத்தாகிய வூரையுடையவனது திண்ணிய தோளிணைகளையினியணைமின் எ-று.
ஒன்றற் கொன்றிணையாயிருத்தலின் இணையெனத் தனித்தனி கூறப்பட்டன. இதுவும் ஊடனிமித்தம். கோலமெனற்பாலது கொலமெனக் குறுகி நின்றது. கயன்மணிக்கண்ணியென்பது பாடமாயின், பரத்தையர் சேரிக்கட்டலைமகனது தேர்செல்லத் தலைமகணொந் துரைத்ததாம். இப்பொருட்கு நெடுந்தேர் நுமது சேரிக்கண்வந்து தங்கிற்றென் றுரைக்க. மெய்ப்பாடு: உவகை. பயன்: தலைமகன்வரவு சேரிப் பரத்தையர்க்குப் பாங்காயினார் அவர்க் குணர்த்துதல். 370

விளக்கவுரை

25.19 தேர்வரவுகண்டு மகிழ்ந்து கூறல் தேர்வரவுகண்டு மகிழ்ந்து கூறல் என்பது புனல் வரவு கேட்ட தலைமகன் புனலாட்டு விழவிற்குப் பரத்தையர் சேரிக்கட் செல்லாநிற்ப, இவனைப் புணர்தற்குத் தக்க தவத்தினை முற்காலத்தே செய்தீர்கள்; தேர்வந்து தோன்றிற்று; இனிச்சென்று இவனது தோளிணையைத் தோய்மினெனத் தேர்வரவு கண்டு பரத்தையர் தம்முண் மகிழ்ந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
25.19. பயின்மணித் தேர்செலப் பரத்தையர் சேரிக்
கயன்மணிக் கண்ணியர் கட்டு ரைத்தது.

அரமங் கையரென வந்து
விழாப்புகும் அவ்வவர்வான்
அரமங் கையரென வந்தணு
கும்மவ ளன்றுகிராற்
சிரமங் கயனைச்செற் றோன்தில்லைச்
சிற்றம் பலம்வழுத்தாப்
புரமங் கையரின்நை யாதைய
காத்துநம் பொற்பரையே. **#1028**

இதன் பொருள்:

அரமங்கையர் என வந்து விழாப் புகும் அவ்வவர் அரமங்கையரைப்போல வந்து புனலாட்டு விழவின்கட் புகாநின்ற அவரவரே; வான் அரமங்கையர் என அவள் வந்து அணுகும் நாமெல்லாம் இத்தன்மையேமாக, வானிடத் தரமங்கைய ரென்று கருதும்வண்ணம் அவள் வந்தணுகாநின்றாள், அணுகித் தன்னிடத் திவரைத்திரிப்ப; அன்று அங்கு உகிரான் அயனைச் சிரஞ்செற்றோன் தில்லை அன்று அவ்விடத்து உகிரால் அயனைச் சிரந் தடிந்தவனது தில்லையின் சிற்றம்பலம் வழுத்தாப் புர மங்கையரின் நையாது; சிற்றம்பலத்தை வழுத்தாத புரங்களின் மங்கையரைப் போலப்

பின்வருந்தாது நம் பொற்பரை ஐய காத்தும் நம் பொற்பரை வியப்ப முன்னுடைத்தாகக் காப்பேம் எ-று.
அரமங்கையர் தேவப் பெண்களுக்குப் பொதுப்பெயர்.
வானரமங்கையரென்றது அவரின்மேலாகிய உருப்பசி திலோத்தமை முதலாயினாரை. வானரமங்கையை ரென்றது சாதியை நோக்கி நின்றது.
ஐயபொற்பரையெனக் கூட்டினுமமையும். அவளென்றதும் சேயிழையென்றதும் பரத்தையரிற் றலைவியாகிய இற்பரத்தையை.
பரத்தைவாயி லெனவிரு கூற்றுங்
கிழவோட் சுட்டாக் கிளப்புப்பய னிலவே
(தொல் - பொருள் - செய்யுள் - 190) என்பதனால் இதுகிழவோட் சுட்டாக் கிளப்பாயினும், இப்பரத்தையரது மாறுபாடு தலைமகளூடு தற்கு நிமித்தமாகலிற் பயனுடைத்தாம். மெய்ப்பாடு: அச்சம், பயன்: தலைமகனைத் தங்கட்டாழ் வித்தல். 371

விளக்கவுரை

25.20 புனல் விளையாட்டிற்றம்முளுரைத்தல் புனல்விளையாட்டிற் றம்முளுரைத்தல் என்பது தலைமகனு டன் புனலாடாநின்ற பரத்தையர் சேடிமார் அரமங்கையரைப் போலப்புனலாடாநின்ற அவ்வவரேயென்று விளித்து, நாமெல்லாமித்தன்மையேமாக வானரமங்கையரென்று சொல் லும்வண்ணம் மற்றொருத்திவந்து இவனைத் திரித்துக் கொள்ளக்கொடுத்துப் பின் வருந்தாது முன்னுறக்காப் போமெனத் தம்முட் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
25.20. தீம்புனல் வாயிற் சேயிழை வருமெனக்
காம்பன தோளியர் கலந்து கட்டுரைத்தது.

கனலூர் கணைதுணை யூர்கெடச்
செற்றசிற் றம்பலத்தெம்
அனலூர் சடையோ னருள்பெற்
றவரின் அமரப்புல்லும்
மினலூர் நகையவர் தம்பா
லருள்விலக் காவிடின்யான்
புனலூ ரனைப்பிரி யும்புன
லூர்கணப் பூங்கொடியே. **#1029**

இதன் பொருள்:
கனல் ஊர் கணை துணை ஊர் கெடச் செற்ற கனல் பரந்தகணையான் ஒத்தவூர்கெட வெகுண்ட; சிற்றம்பலத்து எம் அனல் ஊர் சடையோன் அருள் பெற்றவரின் சிற்றம்பலத்தின்க ணுளனாகிய எம்முடைய அனலை யொக்குஞ் சடையை யுடையவனதருளைப் பெற்றவர்போலச் செம்மாந்து; அமரப் புல்லும் மினல் ஊர் நகையவர் தம்பால் அருள்

விலக்கா விடின் அவனைச் செறியப்புல்லாநின்ற ஒளிபரந்த நகையையுடைய வர் தம்மிடத்து அவனருள்செல்லாமை விலக்கேனாயின்; யான் புனல் ஊரனை பிரியும் புனல் ஊர்கண் அப்பூங்கொடி யான் புனலூரனைப் பிரிந்திருக்கும் புனல் பரக்குங் கண்ணையுடைய அவன்மனைக் கிழத்தியாகிய அப்பூங்கொடி யாகின்றேன் எ-று.

கணைதுணை யெனச் செய்யுளின்ப நோக்கி மிகாதுநின்றது. கணையென்பதனை யெழுவாயாக்கி யுரைப்பாருமுளர்.

'பரத்தையிற்பிரிவே நிலத்திரி வின்றே'

(இறையனாகப் பொருள் - 42) என்பதனால், இவரதில்லந் தம்மில் வேறுபாடில்லாமையறிக. மெய்ப்பாடு: வெகுளி. பயன்: தனது பீடுணர்த்தல். 372

விளக்கவுரை

25.21 தன்னை வியந்துரைத்தல் தன்னை வியந்துரைத்தல் என்பது சேடிமார் பின் வருந்தாது முன்னுறக் காப்பேமென்று தம்முட் கூறுவதனைக் கேட்டு, இவனை அமரப் புல்லும் பரத்தையர்மாட்டு இவனருள் செல்லாமல் விலக்கேனாயின் என்மாட்டிவனைத் தந்தழாநின்ற இவன் மனைக்கிழத்தியாகின்றேனெனப் பரத்தைத்தலைவி தன்னைவியந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.21. அரத்தத் துவர்வாய்ப் பரத்தைத் தலைவி
முனிவு தோன்ற நனிபு கன்றது.

இறுமாப் பொழியுமன் றேதங்கை
தோன்றினென் னெங்கையங்கைச்
சிறுமான் தரித்தசிற் றம்பலத்
தான்தில்லை யூரன்திண்டோள்
பெறுமாத் தொடுந்தன்ன பேரணுக்
குப்பெற்ற பெற்றியினோ
டிறுமாப் பொழிய இறுமாப்
பொழிந்த இணைமுலையே. **#1030**

இதன் பொருள்:

அங் கைச் சிறுமான் தரித்த சிற்றம்பலத்தான் தில்லை ஊரன் திண்தோள் அங்கைக்கண்ணே சிறிய மானைத்தரித்த சிற்றம்பலத்தானது தில்லைக்கணுளனாகிய ஊரனுடைய திண்ணிய தோள்களை; பெறு மாத்தொடும் பெறுதலானுண்டாகிய பெருமை யோடும்; தன்ன பேர் அணுக்குப் பெற்ற பெற்றியினோடு தன்ன வாகிய அவனோ டுண்டாகிய பெரிய அணுக்கைப்பெற்ற தன்மைக ளோடும்; இறுமாப்பு ஒழிய தான் செம்மாத்தலையொழிய; இணை முலை இறுமாப்பு ஒழிந்த

இணைமுலைகள் ஏந்துதலை யொழியப் புகாநின்றன. தங்கை தோன்றின் இனித் தனக்கொரு தங்கை தோன்றின்; என் எங்கை இறுமாப்பு ஒழியும் அன்றே என்னுடைய வெங்கையும் செம்மாத்தலை யொழியுமன்றே; அதனான் வருவ தறியாது தன்னைப் புகழ்கின்றாள் எ-று.

எங்கையென்றது என்றங்கை யென்றவாறாயினும், என் னெங்கையென இயைபு மிகுதிகூறி நகையாடினாள். மாத்து தலை மகற்குரியளாய் நிற்றலான் உண்டாகிய வரிசை. பெற்றி அணுக் காற்றன்னை மதித்தல். தன்னபெற்றியென வியையும். பெற்றி யினோடு மென்னு மும்மை தொக்கு நின்றது. ஒழிந்தவென்னு மிறந்த காலம் விரைவுபற்றி வந்தது. மெய்ப்பாடு: வெகுளியைச்சார்ந்த வழுகை. பயன்: பரத்தையது சிறுமையுணர்த்துதல். அவ்வகை பரத்தைகூறிய வஞ்சினம் தன்பாங்காயினாராற்கேட்ட தலைமகள் பரத்தைக்குப் பாங்காயினார் கேட்ப இவ்வகைசொன்னாளென் பது.373

விளக்கவுரை

25.22 நகைத்துரைத்தல் நகைத்துரைத்தல் என்பது பரத்தைத்தலைவி தன்னை வியந்து கூறினாளென்று கேட்ட தலைமகள், எங்கைச்சியார் தமக்கும் ஒரு தங்கைச்சியார் தோன்றினபொழுதே தம்மிறு மாப்பொழியத் தம்முடைய இணைமுலைகளின திறுமாப்பும் ஒழியப் புகாநின்றது; இதனை யறியாது தம்மைத்தாம் வியக்கின்ற தென்னோவெனப் பரத்தையை நோக்கி நகைத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.22. வேந்தன் பிரிய ஏந்திழை மடந்தை
பரத்தையை நோக்கி விரித்து ரைத்தது.

வேயாது செப்பின் அடைத்துத்
தமிவைகும் வீயினன்ன
தீயாடி சிற்றம்பலமனை
யாள்தில்லை யூரனுக்கின்
றேயாப் பழியென நாணியென்
கண்ணிங்ங னேமறைத்தாள்
யாயா மியல்பிவள் கற்புநற்
பால வியல்புகளே. **#1031**

இதன் பொருள்:

வேயாது செப்பின் அடைத்துத் தமி வைகும் வீயின் அன்ன சூடாது செப்பின்க ணிட்டடைப்பத் தனியே வைகும் பூவைப்போலும்; தீயாடி சிற்றம்பலம் அனையாள் தீயின் கண்ணாடுவானது சிற்றம்பலத்தை யொப்பாள்; தில்லை ஊரனுக்கு இன்று ஏயாப்பழி என நாணி

தில்லையூரனுக்கு இன்று தகாதபழியா மெனக்கருதி நாணி; என்கண்
இங்ஙனே மறைத்தாள் தனதாற் றாமையை என்னிடத்தும்
இவ்வண்ணமே மறைத்தாள், அதனால், இவள் கற்பு யாய் ஆம் இயல்பு
இவளது கற்பு நமக்குத் தாயாமியல் பையுடைத்து; இயல்புகள் நல் பால
இவளுடைய நாணமுதலாகிய வியல்புகள் நல்லகூற்றன எ-று.
தமிவைகும்வீ அக்காலத்தினிகழ்ந்த வேறுபாட்டிற்குவமை. அம்பலம்
இயற்கை நலத்திற்குவமை. பாணனுரைத்ததென்பதூஉம் பாடம்.
மெய்ப்பாடு: அழுகை. பயன்: தலைமகளது பெருமை யுணர்த்துதல். 374

விளக்கவுரை

25.23 நாணுதல் கண்டு மிகுத்துரைத்தல் நாணுதல் கண்டு
மிகுத்துரைத்தல் என்பது தலைமகனைப் பரத்தையர்வசம்
புனலாடவிட்டுச் சூடுவாரின்றிச் செப்பின்க ணிட்டடைத்துத் தமியே
வைகும் பூப்போல்வாள் இஃதவனுக்குத் தகாத பழியாமெனக் கருதி
நாணி அதனை மறைத்திருந்தமை கண்ட தோழி, இவளது கற்பும்
நலனும் நல்ல பகுதியையுடை யனவாயிருந்தனவென அவள் நலத்தை
மிகுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.23. மன்னவன் பிரிய நன்மனைக் கிழத்தியை
நாணுதல் கண்ட வாணுத லுரைத்தது.

விறலியும் பாணனும் வேந்தற்குத்
தில்லை யிறையமைத்த
திறலியல் யாழ்கொண்டு வந்துநின்
றார்சென் றிராத்திசைபோம்
பறலியல் வாவல் பகலுறை
மாமரம் போலுமன்னோ
அறலியல் கூழைநல் லாய்தமி
யோமை யறிந்திலரே. **#1032**

இதன் பொருள்:

விறலியும் பாணனும் விறலியும் பாணனும்; தில்லை இறை அமைத்த
திறல் இயல் யாழ் தில்லை யிறையா லமைக்கப்பட்ட வெற்றி யியலும்
யாழை; வேந்தற்குக் கொண்டு வந்து நின்றார் நம் வேந்தற்குத்
துயிலெழுமங்கலம் பாடக் கொண்டுவந்து நின்றார்கள்; அறல் இயல்
கூழை நல்லாய் அறல் போலுங் கூழையை யுடைய நல்லாய்;
இராச்சென்று திசைபோம் பறல் இயல் வாவல் இராப்பொழுதின்கட்
சென்று திசையைக் கடக்கும் பறத்தலாகிய வியல்பினையுடைய வாவல்;
பகல் உறை மா மரம் போலும் தமியோமை அறிந்திலர் இரைதேருங்
காலமன்மையாற் பகற் பொழுதின்கணுறையும் பெரியமரம்போலும்
இராப்பொழுதிற் றுணையில்லாதோமை இவரறிந்திலர் போலும் எ-று.

வெற்றி வீணைகளுட்டலையாதல். 'எம்மிறை நல்வீணை வாசிக்குமே' (நாவுக்கரசர் தேவாரம். தனித்திருவிருத்தம். பொது 7) என்பவாகலின் இறையமைத்த யாழென்றார். சென்று பகலுறை மாமரமென் றியைப்பினு மமையும். பறத்தல் பறலென இடைக் குறைந்து நின்றது. போல�

திக்கின் இலங்குதிண் டோளிறை
தில்லைச்சிற் றம்பலத்துக்
கொக்கின் இறக தணிந்துநின்
றாடிதென் கூடலன்ன
அக்கின் நகையிவள் நைய
அயல்வயின் நல்குதலால்
தக்கின் றிருந்திலன் நின்றசெவ்
வேலெந் தனிவள்ளலே. **#1033**

இதன் பொருள்:

திக்கின் இலங்கு திண் தோள் இறை திக்கின்கண் விளங்காநின்ற திண்ணிய தோள்களையுடைய விறைவன்; தில்லைச் சிற்றம்பலத்துக் கொக்கின் இறகது அணிந்து நின்றாடி தில்லையிற் சிற்றம்பலத்தின்கட் கொக்கி னிறகதனை யணிந்து நின்றாடுவான்; தென் கூடல் அன்ன அவனது தெற்கின்க ணுண்டாகிய கூடலை யொக்கும்; அக்கு இன் நகை இவள் நைய அயல்வயின் நல்குதலால் அக்குமணிபோலும் இனியநகையை யுடைய இவள் வருந்த அயலாரிடத்து நல்குதலால்; நின்றசெவ்வேல் எம் தனி வள்ளல் எல்லாரானுமறியப்பட்டு நின்ற செவ்வேலை யுடைய எம்முடைய வொப்பில்லாத வள்ளல்; இன்று தக்கிருந் திலன் இன்றுதக்கிருந் திலன் எ-று.

அயல்வயி னென்பதற்குப் பொருணசை யுள்ளத்தராகலிற் காமத்திற் கயலென்றுரைப்பினுமமையும். தலைமகனது தகவின்மை யென்பதூஉம் பாடம். #9; 376

விளக்கவுரை

25.25 தோழியியற் பழித்தல் தோழி யியற்பழித்தல் என்பது பாணன் வரவுரைத்த தோழி, இவள் வருந்த அயலாரிடத்து நல்குதலால் எம்முடைய வள்ளல் இன்று தக்கிருந்திலனெனத் தலைமகனை யியற்பழித்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.25. தலைமகனைத் தகவிலனெனச்
சிலைநுதற்பாங்கி தீங்குசெப்பியது.

அன்புடை நெஞ்சத் திவள்பே
துறஅம் பலத்தடியார்
என்பிடை வந்தமிழ் தூறநின்

றாடி யிருஞ்சுழியல்
தன்பெடை நையத் தகவழிந்
தன்னஞ் சலஞ்சலத்தின்
வன்பெடை மேல்துயி லும்வய
லூரன் வரம்பிலனே. **#1034**

இதன் பொருள்:

அடியார் என்பிடை அமிழ்து வந்து ஊற அடியவ ரென்புகளிடையே அமிழ்தம் வந்தூற; அம்பலத்து நின்றாடி இருஞ் சுழியல் அம்பலத்தின்கண்ணே நின்றாடுவானதுபெரிய சுழியலின் கண்; தன்பெடை நையத் தகவு அழிந்து தன் பெடை வருந்தத் தகுதிகெட்டு; அன்னம் சலஞ்சலத்தின் வன்பெடைமேல் துயிலும் அன்னஞ் சலஞ்சலத்தினது வலியபெடைமேற் கிடந் துறங்கும்; வயல் ஊரன் வயலாற் சூழப்பட்ட ஊரையுடையவன்; அன்புடை நெஞ்சத்து இவள் பேதுற தன் மாட்டன்பையுடைய நெஞ்சத்தை யுடைய இவள் மயங்காநிற்ப இதற்குப் பரியாமையின்; வரம்பு இலன் தகவிலன் எ-று. அன்புடை நெஞ்சத்திவளென்றதனால், பரத்தையர தன் பின்மை கூறப்பட்டதாம். இருஞ்சுழியலூரெனவியையும். சுழிய லென்பது ஒரு திருப்பதி. வன்பெடை யென்றதனாற் பரத்தையரது வன்கண்மை விளங்கும். ஒருசொல் வருவியாது பேதுறுதலான் வரம்பிலனென்றுரைப்பாருமுளர். உள்ளுறையுவமம் வெளிப்பட நின்றது. இவையிரண்டற்கும் மெய்ப்பாடு: அழுகையைச் சார்ந்த நகை. பயன்: தலைமகனை யியற்பழித்துத் தலைமகளை யாற்று வித்தல்.377

விளக்கவுரை

25.26 உழையரியற்பழித்தல் உழையரியற்பழித்தல் என்பது தோழி தலைமகனை யியற்பழித்துக் கூறாநிற்பக் கேட்டு, தன்மாட்டன்புடை நெஞ்சத் தையுடைய விவள்பேதுற இதற்குப் பரியாமையின் வயலூரன் வரம்பிலனென உழையர் அவனை யியற்பழித்துக்கூறா நிற்றல்.

அதற்குச் செய்யுள்

25.26. அரத்தவேல் அண்ணல் பரத்தையிற் பிரியக்
குழைமுகத் தவளுக் குழைய ருரைத்தது.

அஞ்சார் புரஞ்செற்ற சிற்றம்
பலவர்அந் தண்கயிலை
மஞ்சார் புனத்தன்று மாந்தழை
யேந்திவந் தாரவரென்
நெஞ்சார் விலக்கினும் நீங்கார்
நனவு கனவுமுண்டேற்
பஞ்சா ரமளிப் பிரிதலுண்

டோவெம் பயோதரமே. **#1035**

இதன் பொருள்:

அஞ்சார் புரம் செற்ற சிற்றம்பலவர் அம்தண் கயிலை இறைவனென்று உட்காதாருடைய புரங்களைக் கெடுத்த சிற்றம்பலவரது அழகிய குளிர்ந்த கயிலைக்கண்; மஞ்சு ஆர் புனத்து மஞ்சார்ந்த புனத்திண்கண்; அன்று மாந்தழை ஏந்தி வந்தார் அவர் நனவு என் நெஞ்சார் அன்று மாந்தழையை யேந்திவந்தாராகிய அவர் இன்று நனவின் என்னெஞ்சத்தின்கண்ணார்; விலக்கினும் நீங்கார் யான் றடுப்பினும் அவ்விடத்தினின்று நீங்கார்; கனவும் உண்டேல் துயலு முண்டாயின்; பஞ்சு ஆர் அமளி எம் பயோதரம் பிரிதல் உண்டோ பஞ்சார்ந்த வமளிக்கண் எம்பயோதரத்தைப் பிரித லுண்டோ! நீர் கொடுமைகூறுகின்றதென்! எ-று.

அஞ்சார் தறுகண்ணரெனினுமமையும். தழையேந்திவந்தா ரென்பதனை முற்றென்று, இளிவந்தன செய்து நம்மைப் பாதுகாத்தார் இன்றிவ்வா றொழுகுவரென் றுரைப்பினு மமையும். கனவு முண்டேலென்பதற்குத் துயில்பெற்றுக் கனாக்காணினென்றுரைப் பினுமமையும். எனது நெஞ்சாரென்பதூஉம், ஊரனைப் பரிசுபழித்த வென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைமகனை யியற்படமொழிந்தாற்றுதல். 378

விளக்கவுரை

25.27 இயற்பட மொழிதல் இயற்பட மொழிதல் என்பது தலைமகனை யியற்பழித்த வர்க்கு, அன்று நம் பொருட்டாக நம்புனத்தின் கண்ணே மாந்தழை யேந்தி வந்தார் இன்று என்னெஞ்சத்தின்கண்ணார்; அது கிடக்க, மறந் துறங்கினேனாயின் அமளியிடத்துவந்து என்பயோதரத்தைப் பிரியாதார்; இத்தன்மையாரை நீங்கள் கொடுமை கூறுகின்ற தென்னோ வெனத் தலைமகள் அவனை யியற்பட மொழியாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.27. வரிசிலை யூரன் பரிசு பழித்த
உழையர் கேட்ப எழில்நகை யுரைத்தது.

தெள்ளம் புனற்கங்கை தங்குஞ்
சடையன்சிற் றம்பலத்தான்
கள்ளம் புகுநெஞ்சர் காணா
இறையுறை காழியன்னாள்
உள்ளம் புகுமொரு காற்பிரி
யாதுள்ளி யுள்ளுதொறும்
பள்ளம் புகும்புனல் போன்றகத்
தேவரும் பான்மையளே. **#1036**

இதன் பொருள்:
தெள்ளம் புனல் கங்கை தங்கும் சடையன் தெள்ளிய நல்லபுனலையுடைய கங்கை தங்குஞ் சடையை யுடையவன்; சிற்றம்பலத்தான் சிற்றம்பலத்தின்கண்ணான்; கள்ளம் புகு நெஞ்சர் காணா இறை பொய் நுழையு நெஞ்சத்தையுடையவர் ஒரு ஞான்றுங் காணாத விறைவன்; உறை காழி அன்னாள் அவனுறைகின்ற காழியையொப்பாள்; உள்ளி ஒருகால் பிரியாது உள்ளம் புகும் யான்றன்னை நினையாது வேறொன்றன் மேலுள்ளத்தைச் செலுத்தும்வழியும் தானென்னை நினைந்து ஒருகாலும் பிரியாது என்னுள்ளம் புகாநின்றாள்; உள்ளுதொறும் அவ்வாறன்றி யான்றன்னை நினையுந்தோறும்; பள்ளம் புகும் புனல் போன்று அகத்தே வரும் பான்மையள் உயர்ந்த விடத்தினின்றும் பள்ளத்திற்புகும் புனலை யொத்துத் தடுப்பரியளாய் என் மனத்தின் கண்வரு முறைமையளாகா நின்றாள்; அதனாற் பிரிந்தீண்டிருத்தல் அரிதுபோலும் எ-று. தெள்ளம்புனல் மெல்லம்புலம்பு போல்வதோர் பண்புத் தொகை. மெய்ப்பாடு: மருட்கை. பயன்: பரத்தையீனீங்கித் தலை மகளிடத்தனாதல். 379

விளக்கவுரை

25.28 நினைந்துவியந்துரைத்தல் நினைந்து வியந்துரைத்தல் என்பது புனலாடப் பிரிந்து பரத்தையிடத் தொழுகாநின்ற தலைமகன், யான் றன்னை நினையாது வேறொன்றன்மேல் உள்ளத்தைச் செலுத்தும்வழியும் தானென்னை நினைந்து என்னுள்ளம் புகாநின்றாள்; அவ்வாறன்றி யான்றன்னை நினையுந்தோறும் பள்ளத்துப் புகும்புனல்போல நிறுத்த நில்லாது என் மனத்தா ளாகாநின்றாள்; ஆதலாற் பிரிந்து ஈண்டிருத்தல் மிகவு மரிதெனத் தலைமகளை நினைந்து வியந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.28. மெல்லியற் பரத்தையை விரும்பி மேவினோன்
அல்லியங் கோதையை அகனமர்ந் துரைத்தது.

தேன்வண் டுறைதரு கொன்றையன்
சிற்றம் பலம்வழுத்தும்
வான்வண் டுறைதரு வாய்மையன்
மன்னு குதலையின்வா
யான்வண் டுறைதரு மாலமு
தன்னவன் வந்தணையான்
நான்வண் டுறைதரு கொங்கையெவ்
வாறுகொ னண்ணுவதே. **#1037**

இதன் பொருள்:

தேன் வண்டு உறைதரு கொன்றையன் சிற்றம்பலம் வழுத்தும் தேனும் வண்டு முறையும் கொன்றைப் பூவையணிந்தவனது சிற்றம்பலத்தை வழுத்தும்; வான் வள்துறை தரு வாய்மையன் வானிடத்துளவாகிய வளவிய விடங்களை எனக்குத் தரு மெய்ம்மையையுடையான்; மன்னு குதலை இன்வாயான் நிலைபெற்ற குதலையை யுடைய இனிய வாயையுடையான்; வள் துறை தரு மால் அமுது அன்னவன் வளவிய கடல் தந்த பெருமையை யுடைய அமிர்தத்தை யொப்பான்; வந்து அணையான் அவன் என்னை வந்தணைகின்றிலன்; வண்டு உறைதரு கொங்கை நான் நண்ணுவது எவ்வாறு கொல் நறுநாற்றத்தால் வண்டுகளுறையுங் கொங்கையையுடையாளை யான்பொருந்துவது இனியெவ்வாறோ! எ-று.

தேனை நுகரும் வண்டெனினுமமையும். வழுத்துவார்பெறும் வானென்பது வழுத்தும் வானென இடத்து நிகழ்பொருளின்றொழில் இடத்துமேலேறிற்று. இப்பொழுது குதலையையுடைத்தாகிய வாயான் மேல்வளவிய நூற்றுறைகளைச் சொல்லி எனக்கின்பத்தைச் செய்யும் அமிழ்தன்னவ னென்றுரைப்பினுமமையும். வாயிலின் வாயிலால். மெய்ப்பாடு: அழுகை. பயன்: வாயில்கோடல். நெஞ்சோடு சொல்லியது. 380

விளக்கவுரை

25.29 வாயில்பெறாது மகன்றிற நினைதல் வாயில் பெறாது மகன்றிற நினைதல் என்பது பரத்தையிற் பிரிந்து நினைவோடுவந்த தலைமகன் வாயிற்கணின்று, இத் தன்மையான் என்னைவந் தணைகின்றிலன்*;* யான் இனி வண்டுறையுங் கொங்கையை எவ்வாறு நண்ணுவதென்று வாயில்பெறாது மகன்றிற நினையாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.29. பொற்றொடி மாதர் நற்கடை குறுகி
நீடிய வாயிலின் வாடினன் மொழிந்தது.

கயல்வந்த கண்ணியர் கண்ணினை
யால்மிகு காதரத்தால்
மயல்வந்த வாட்டம் அகற்றா
விரதமென் மாமதியின்
அயல்வந்த ஆடர வாடவைத்
தோனம் பலம்நிலவு
புயல்வந்த மாமதிற் றில்லைநன்
னாட்டுப் பொலிபவரே. **#1038**

இதன் பொருள்:

வந்த ஆடரவு மா மதியின் அயல் ஆட வைத்தோன் அம்பலம் நிலவு ஏதங்குறித்துவந்த ஆடரவைப் பெருமையையுடைய பிறையின்பக்கத்து

அதனை வருந்தாமற் செய்து ஆடவைத்தவனது அம்பலம் நிலைபெற்ற; புயல் வந்த மா மதில் தில்லை நல் நாட்டுப் பொலிபவர் புயல்தங்கிய பெரிய மதிலை யுடைய தில்லையைச் சூழ்ந்த நல்லநாட்டிற் பொலியும் மகளிர்; கயல் வந்த கண்ணியர் கண் இணையால் கயல் போலுங் கண்ணை யுடையவர் கண்ணிணையால்; மிகு காதரத்தான் மயல் வந்த வாட்டம் ஒருகாலைக் கொருகால் மிகாநின்ற அச்சத்தால் வந்த மயக்கத்தாலுண்டாகிய வாட்டத்தை; அகற்றா விரதம் என் நீக்காத இவ்விரதம் யாதாம் எ-று.

தில்லை நன்னாட்டுப் பொலிபவர் அகற்றாதவென வியையும். பொலிபவர்க்கு என்னு நான்கனுருபு விகாரவகையாற் றொக்கதெனி னுமமையும். இது முன்னிலைப்புறமொழி. இதனுள் கயல் வந்த கண்ணியரென்றது தலைமகளை. தில்லை நன்னாட்டுப் பொலிபவ ரென்றது தோழியை.

இனி மதிக்குவமை தலைமகளும் அரவிற்குவமை தலைமகனும் ஈசனுக்குவமை தோழியுமென்றாக்கி, அவ்வகைத் தாகிய பாம்பையும் மதியையும் தம்மிற்பகையறுத்து ஓரிடத்தே விளக்கவைத்தாற்போல என்னுடன் அவட்குண்டாகிய வெறுப்பைத் தீர்த்து விளங்கவைத்தல் உனக்குங் கடனென்றா னாயிற்றென உள்ளுறை காண்க. மதியையர வேதங் குறித்து வந்தாற்போலத் தலைமகளைத் தலைமக னேதங்குறித்து வருதலாவது தலைமகளுக்கு ஊடல் புலவி துனியென்னும் வெறுப்புத் தோன்றுதற்குத் தக்க காரணங்களைத் தலைமகன் உண்டாக்கிக் கொண்டு வருதல். அரவைக் கண்டு மதிக்கச்சந்தோன்றி னாற்போலத் தலைமகனைக் கண்டு தலைமகளுக்கு ஊடல் புலவி துனியென்னும் வெறுப்புத்தோன்றிற்று; ஆதலால் அத்தலைமகனை யும் தலைமகளையும் மதிக்குமரவுக்குமொப்பச் சிலேடித்த சிலேடைக்கு மறுதலையாகாது, 'தேவ ரனையர் கயவர்' என்றாற் போல வாமென்க. (குறள் - 1073) கயல்வந்த கண்ணியர் கண்ணி ணையால் வந்த அச்சத்தால் வந்த மயக்கத்தால் வந்த வாட்டம் இவனுக்கு வருதற்குக் காரணம் தலைவி பராமுகஞ் செய்யும்படி தான் வருந்தல். இதனைத் தீர்த்தல் தில்லை நன்னாட்டுப் பொலியுமகளிர்க்குக் கடனென்றா னென்க. அது 'பிணிக்கு மருந்து பிறம னணியிழை - தன்னோய்க்குத் தானே மருந்து' (குறள் - 1102) என்றும், 'துறைமேய்வலம்புரி தோய்ந்துமணலுழுத தோற்ற மாய்வான் - பொறை மலிபூம் புன்னைப் பூவுதிர் நுண்டாது போர்க்குங்கான - னிறைமதிவாண் முகத்து நீள்கயற்கண் செய்த - வுறைமலி யுய்யாநோ யூர்சுணங்கு மென்முலையே தீர்க்கும் போலும்' (சிலப்பதிகாரம் - கானல்வரி - 8) என்றும், சொல்லியவாறுபோலக் கண்ணாலுண்டாகிய நோய்க்குக்

கண்ணே மருந்தாமென்று சொல்லியவாறாமெனக் கொள்க. மெய்ப்பாடும், பயனும் அவை. தோழியை வாயில்கோடற் கிவ்வகை சொன்னானென்பது. 381

விளக்கவுரை

25.30 வாயிற்கண் நின்று தோழிக்குரைத்தல் வாயிற்கண்நின்று தோழிக்குரைத்தல் என்பது வாயில் பெறாது மகன்றிற நினையாநின்ற தலைமகன், நல்லநாட்டுப் பொலியும் மகளிர் தங்கண்ணிணையான் வந்த அச்சத்தால் வந்த மயக்கத்தால் உண்டாகிய வாட்டத்தை நீக்காத இவ்விரதம் யாதாமென வாயில் வேண்டித் தோழிக்குக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.30. பெருந்தகை வாயில் பெறாது நின்று
அருந்தகைப் பாங்கிக் கறிய வுரைத்தது.

கூற்றாயினசின ஆளியெண்
ணீர்கண்கள் கோளிழித்தாற்
போற்றான் செறியிருட் பொக்கமெண்
ணீர்கன் றகன்றபுனிற்
றீற்றா வெனநீர் வருவது
பண்டின்றெம் மீசர்தில்லைத்
தேற்றார் கொடிநெடு வீதியிற்
போதிர்அத் தேர்மிசையே. **#1039**

இதன் பொருள்:

கூற்றாயின சின ஆளி எண்ணீர் கூற்றம் போலக் கொடியவாகிய சினத்தையுடைய யாளிகளை ஊறுசெய்வன வாகக் கருதாது; கண்கள் கோள் இழித்தால் போல் தான் செறி இருள் பொக்கம் எண்ணீர் கண்களைக் கோளிழித்தாற் போலச் செறிந்த விருளின் மிகுதியைத்தான் இடையூறாகநினையாது; கன்று அகன்ற புனிற்று ஈற்றா எனப் பண்டு நீர் வருவது கன்றை யகன்ற ஈன்றணிமை யையுடைய ஈற்றாவையொத்துப் பண்டு நீர் எம்மாட்டு வருவது; இன்று எம் ஈசர் தில்லைத் தேற்றார் கொடி நெடுவீதியில் இன்று எம்முடைய வீசரது தில்லையிலே எம் பொருந்தாதாரது கொடியையுடைய நெடிய வீதியில்; அத் தேர்மிசைப் போதிர் எம்மாட்டூர்ந்துவந்த தேர் மேலேறிப் போகாநின்றீர்; இதுவன்றோ எம்மாட்டு நும்மருளாயினவாறு எ-று. ஆளியெண்ணீர் பொக்க மெண்ணீர் என்பனவற்றை முற்றாக வுரைப்பினுமமையும். கண்களுக்குக் கோளென்றது பார்வை. இதனை இழித்தலென்பது கண்மணியைவாங்குதல். தானென்பது அதுவன்றி இதுவொன் றென்பதுபட நின்றதோரிடைச் சொல்; அசைநிலை யெனினுமமையும். ஈற்றாவென்றது கடுஞ்சூல் நாகன்றிப் பலகாலீன்ற

ஆவை. மெய்ப்பாடு: வெகுளி. பயன்: வாயின் மறுத்தல். 382

விளக்கவுரை

25.31 வாயில் வேண்டத் தோழி கூறல் வாயில்வேண்டத் தோழி கூறல் என்பது வாயில் வேண்டிய தலைமகனுக்கு, பண்டு நீர் வரும் வழியிடை வருமேதமும் இருளுமெண்ணாது கன்றையகன்ற ஈற்றாவையொத்து எம்மாட்டு வருதிர்; இன்று எம்பொருந்தாதார் தெருவே அன்று எம்மாட்டூர்ந்து வந்த தேர்மேலேறிப் போகாநின்றீர்; இதுவன்றோ எம்மாட்டு நுமதருளெனத் தோழி அவன்செய்தி கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.31. வைவேல் அண்ணல் வாயில் வேண்டப்
பையர வல்குற் பாங்கி பகர்ந்தது.

வியந்தலை நீர்வையம் மெய்யே
யிறைஞ்சவிண் டோய்குடைக்கீழ்
வயந்தலை கூர்ந்தொன்றும் வாய்திற
வார்வந்த வாளரக்கன்
புயந்தலை தீரப் புலியூர்
அரனிருக் கும்பொருப்பிற்
கயந்தலை யானை கடிந்த
விருந்தினர் கார்மயிலே. **#1040**

இதன் பொருள்:

கார்மயிலே கார்காலத்து மயிலை யொப்பாய்; வந்த வாள் அரக்கன் புயம் தலை தீர வரையை யெடுக்க வந்த வாளினையுடைய அரக்கன் கையுந் தலையும் உடலினீங்க; புலியூர் அரன் இருக்கும் பொருப்பின் புலியூரரன் வாளாவிருக்குங் கயிலைப் பொருப்பின்கண்; கயம் தலை யானை கடிந்த விருந்தினர் மெல்லிய தலையையுடைய யானையை நம்மேல்வாராமல் அன்று மாற்றிய நம் விருந்தினர்; விண் தோய் குடைக் கீழ் தமது விண்ணைத் தோயாநின்ற குடைக்கீழ்; அலை நீர் வையம் வியந்து மெய்யே இறைஞ்ச கடலாற் சூழப்பட்ட வுலகத்துள்ளா ரெல்லாரும் வியந்து சென்று அகனமர்ந்திறைஞ்ச; வயம் தலை கூர்ந்து ஒன்றும் வாய் திறவார் தாந்தமது பெருமைநினையாது நங்கடைவந்து நின்று வேட்கைப்பெருக்கந்தம்மிடத்துச் சிறப்ப ஒன்றுஞ் சொல்லுகின்றிலர்; இனி மறுத்தலரிது எ-று.

விண்டோய்குடைக்கீழிறைஞ்சவென வியையும். வயா: வய மெனநின்றது. இருந்த துணையல்லது ஒருமுயற்சி தோன்றாமையின், இருக்குமென்றார். சிற்றிலிழைத்து விளையாடும்வழி விருந்தாய்ச் சென்று நின்றானாகலின், விருந்தினரென்றாள். இற் செறிக்கப்பட்ட விடத்து ஊண்காலத்து விருந்தாய்ச் சென்றானாகலின் விருந்தின

ரென்றாளெனினுமமையும், 'புகா அக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப்-
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்' (தொல் - பொருள் - களவு-17)
என்பது இலக்கணமாதலின். கார்ப்புனத்தே யென்பதூஉம் பாடம்.
மெய்ப் பாடு: இளிவரல். பயன்: தலைமகளைச் சிவப் பாற்றுவித்தல். 383

விளக்கவுரை

25.32 தோழிவாயில் வேண்டல் தோழிவாயில் வேண்டல் என்பது
தலைமகளுக்கு அவன் செய்தது கூறிச் சென்று, அன்று
நம்புனத்தின்கண்ணேவந்து யானை கடிந்தவிருந்தினர் தாந்தம்
பெருமையை நினையாது இன்று நம் வாயிற்கண்வந்து, வேட்கைப்
பெருக்கந் தம்மிடத்துச் சிறப்பநின்று ஒன்றும் வாய்திறக்கின்றிலர்;
இதற்கியாஞ் செய்யுமாறென்னோ வெனத் தலைமகளைத் தோழி
வாயில் வேண்டாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.32. வாயில் பெறாது மன்னவ னிற்ப
ஆயிழை யவட்குத் தோழி சொல்லியது.

தேவியங் கண்திகழ் மேனியன்
சிற்றம் பலத்தெழுதும்
ஓவியங் கண்டன்ன வொண்ணு
தலாள் தனக் கோகையுய்ப்பான்
மேவியங் கண்டனை யோவந்
தனனென வெய்துயிர்த்துக்
காவியங் கண்கழு நீர்ச்செவ்வி
வெளவுதல் கற்றனவே. **#1041**

இதன் பொருள்:

தேவி அங்கண் திகழ் மேனியன் சிற்றம்பலத்து எழுதும் தேவியவ்விடத்து
விளங்குமேனியை யுடையவனது சிற்றம்பலத்தின்கண் எழுதப்பட்ட;
ஓவியம் கண்டன்ன ஒண்ணுதலாள் தனக்கு ஓகை உய்ப்பான்
ஓவியத்தைக் கண்டாற் போலும் ஒண்ணுதலையுடையாள் தனக்கு
ஓகைகொண்டு செல்ல வேண்டி; வந்தனன் மேவு இயம் கண்டனையோ
என வெய்துயிர்த்து காதலன் வந்தான் வந்து பொருந்துகின்ற
இயவொலி கேட்டனையோ வென்று கண்டார் வந்துசொல்லக்கேட்டு
வெய்தாகவுயிர்த்து; காவியங்கண் கழுநீர்ச் செவ்வி வெளவுதல் கற்றன
குவளைப் பூப்போலுங் கண்கள் கழுநீர் மலர்ச் செவ்வியை வெளவுதல்
வல்லவாயின. இனியென்னி கழும்! எ-று.

அங்கட்டிகழ் மேனி யென்பது மெலிந்து நின்றது. தேவியுடைய
வழகியகண்மலர்கள் சென்றுவிளங்கு மேனியை யுடையவனெனினு
மமையும். மேவியங்கண்டனையோ வந்தன னெனவென்பதற்கு, அழகிய
கண்டன் வந்தானென்று மேவியுரைப்ப வெனினு மமையும்.

ஐயோவென்றது உவகைக்கண் வந்தது. வெய்துயிர்த்தற்கு வினை முதல் உயிர்த்தற்குக் கருவியாகிய பொறியெனினு மமையும். மெய்ப் பாடு: அழுகை. பயன்: தலைமகள் வாயினேராமை யுணர்த்துதல். 384

விளக்கவுரை

25.33 மனையவர் மகிழ்தல் மனையவர் மகிழ்தல் என்பது தோழி வாயில்வேண்டத் தலைமகள் துனித்த நோக்கங்கண்டு, ஓகைகொண்டு செல்ல வேண்டிக் காதலன் வந்தானென்று சொல்லுமளவில் இவளுடைய காவியங் கண்கள் கழுநீர்ச் செவ்வியைவௌவுதல் கற்றனவென மனையவர் தம்முண் மகிழ்ந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.33. கன்னிமா னோக்கி கனன்று நோக்க
மன்னிய மனையவர் மகிழ்ந்து ரைத்தது.

உடைமணிகட்டிச் சிறுதே
ருருட்டி யுலாத்தருமிந்
நடைமணி யைத்தந்த பின்னர்முன்
நான்முகன் மாலறியா
விடைமணி கண்டர்வண் தில்லைமென்
தோகையன் னார்கண்முன்னங்
கடைமணி வாள்நகை யாயின்று
கண்டனர் காதலரே. **#1042**

இதன் பொருள்:

மணி வாள் நகையாய் முத்துப்போலு மொளியையுடைய நகையையுடையாய்; உடை மணி கட்டிச் சிறுதேர் உருட்டி உலாத்தரும் உடைமணியை யரையிற்கட்டிச் சிறுதேரை யுருட்டி உலாவும்; இந்நடை மணியைத் தந்த பின்னர் இவ்வியங்கு தலையுடைய இந்தமணியை நமக்குத்தந்த பின்; முன் நான்முகன் மால் அறியா முற்காலத்து நான்முகனுமாலுந் தேடியுமறியாத; விடை மணிகண்டர் வண் தில்லை மென்தோகை அன்னார்கள் முன் விடையையுடைய மணிகண்டரது வளவியதில்லையின் மெல்லிய மயிலையொப்பார்கண் முன்னே; நம் கடை காதலர் இன்று கண்டனர் நங்கடையைக் காதலர் இன்று கண்டார்; இதுவன்றோ நம்மாட்டு அவரருள் எ-று. கட்டியென்பது ஈண்டுத் தாங்கியென்னும் பொருட்டாய் நின்றது. நடைமணியென்றது புதல்வனை. விடமணி கண்ட ரென்பதூ உம் பாடம். மெய்ப்பாடு: வெகுளி. பயன்: வாயின் மறுத்தல். 385

விளக்கவுரை

25.34 வாயின் மறுத்துரைத்தல் வாயின் மறுத்துரைத்தல் என்பது

மனையவர் துனிகண்டு மகிழாநிற்ப, இவனை நமக்குத் தந்தபின்னர் நம்முடைய வாயத்தார் முன்னே நங்காதலர் இன்று நங் கடையைக்கண்டார்; இதுவன்றோ நம்மாட்டு அவரருளெனத் தோழிக்குத் தலைமகள் வாயின் மறுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.34. மடவரற் றோழி வாயில் வேண்ட
அடல்வே லவனா ரருளு ரைத்தது.

மைகொண்ட கண்டர் வயல்கொண்ட
தில்லைமல் கூரர்நின்வாய்
மெய்கொண்ட அன்பின ரென்பதென்
விள்ளா அருள்பெரியர்
வைகொண்ட வூசிகொல் சேரியின்
விற்றெம்இல் வண்ணவண்ணப்
பொய்கொண்டு நிற்கலுற் றோபுலை
ஆத்தின்னி போந்ததுவே. **#1043**

இதன் பொருள்:

மை கொண்ட கண்டர் வயல் கொண்ட தில்லை மல்கு ஊரர் கருமையைப் பொருந்திய கண்டத்தை யுடையவரது வயலைப்பொருந்திய தில்லைக்கண்ணுளராகிய வளமல்கிய யூரையுடையவர்; நின்வாய் மெய் கொண்ட அன்பினர் என்பதென் நின்கண் மெய்ம்மையைப் பொருந்திய வன்மை யுடையரென்று நீசொல்லவேண்டுமோ; விள்ளா அருள் பெரியர் அவர் எம்மிடத்து நீங்காத வருள் பெரியரன்றோ? அதுகிடக்க; வை கொண்ட ஊசி சொல் சேரியின் விற்று கூர்மையைப் பொருந்திய ஊசியைக் கொற்சேரியின்கண் விற்று; எம் இல் வண்ண வண்ணப் பொய் கொண்டு நிற்கல் உற்றோ எம்மில்லத்து நின்னுடைய நல்லநல்ல பொய்ம்மையைப் பொருந்தி நிற்கலுற்றோ; புலை யாத்தின்னி புலையனாகிய ஆத்தின்னி; போந்தது ஈண்டு நீ போந்தது! இதுசாலநன்று! எ-று.

மெய்கொண்ட வன்பினரென்று சொல்லுகின்றதென்? நின் வாயிலவர் விள்ளாவருள்பெரியரன்றோ வென்றுரைப்பினுமமையும். ஊசிகொற் சேரியின்விற்றென உவமவினை உவமிக்கப்படும் பொருண்மேலேறி நின்றது. அடுக்கு பன்மைக்கண் வந்தது. ஆத் தின்னியென்பதனை முன்னிலைக்கண் வந்ததாக வுரைப்பினு மமையும். விற்குநின்னென்பதூஉம் பாடம். மெய்ப்பாடும், பயனும் அவை. 386

விளக்கவுரை

25.35 பாணனொடுவெகுளுதல் பாணனொடு வெகுளுதல் என்பது தோழிக்கு வாயின்மறுத்த தலைமகள், நின்னிடத்து அவர்நீங்காத

வருள்பெரியரென்று நீ சொல்லவேண்டுமோ? அதுகிடக்க, கொற்சேரியி லூசிவிற்றுப் புலையா எம்மில்லத்து நின்னுடைய நல்லநல்ல பொய்யைப் பொருந்தி நிற்கலுற்றோ நீ போந்ததென வாயில்வேண்டிய பாணனொடு வெகுண்டு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.35. மன்னியாழ்ப் பாணன் வாயில் வேண்ட
மின்னிடை மடந்தை வெகுண்டு ரைத்தது.

கொல்லாண் டிலங்கு மழுப்படை
யோன்குளிர் தில்லையன்னாய்
வில்லாண் டிலங்கு புருவம்
நெரியச் செவ் வாய்துடிப்பக்
கல்லாண் டெடேல்கருங் கண்சிவப்
பாற்று கறுப்பதன்று
பல்லாண் டடியேன் அடிவலங்
கொள்வன் பணிமொழியே. **#1044**

இதன் பொருள்:

கொல் ஆண்டு இலங்கு மழுப் படையோன் குளிர்தில்லை அன்னாய் கொற்றொழில் அவ்விடத்து விளங்கும் மழு வாகிய படையையுடையவனது குளிர்ந்த தில்லையையொப்பாய்; வில் ஆண்டு இலங்கு புருவம் நெரியச் செவ்வாய் துடிப்ப வில்லையடிமைக் கொண்டு விளங்காநின்ற புருவநெரியச் செவ்வாய்துடிப்ப; கல் ஆண்டு எடேல் எறிதற்குக் கல்லை அவ்விடத்தெடுக்கவேண்டா; கருங்கண் சிவப்பு ஆற்று கரிய கண்களைச் சிவப்பாற்றுவாயாக; கறுப்பது அன்று வெகுளப் படுவதன்று; பல்லாண்டு நினக்குப் பல்லாண்டுகள் உளவாக வேண்டும்; பணிமொழி பணிமொழியையுடையாய்; அடியேன் அடி வலங்கொள்வன் யான்வேண்டிய தேயத்துக்குப் போக அடியேன் நின்னடியை வலங்கொள்ளாநின்றேன் எ - று.

கருங்கண்ணினது சிவப்பெனினுமமையும். பல்லாண் டென்றது தலைமகனுடனுண்டாகிய வெறுப்புத் தீர்ந்து கூடியிரு மென்று சொல்லியது நுமக்குத் தவறாயிற்றாயின் பல்லாண்டும் இப்படியிருப்பீ ரென்றான். இப்படியிருப்பீரென்றது பல்லாண்டு மிப்படித் தனித் திருப்பீரென்று வளமாகத் தன்பாணவார்த்தை சொல்லிய வாறென்றறிக. புருவநெறிக்கவென்பதூஉம் வெவ்வா யென்பதூஉ ம் பாடம். புரி - நரம்பு. மெய்ப்பாடு: அச்சம். பயன்: சிவப்பாற்று வித்தல். 387

விளக்கவுரை

25.36 பாணன்புலந்துரைத்தல் பாணன்புலந்துரைத்தல் என்பது தலைமகள் வெகுண் டுரையா நிற்ப, நின்புருவநெரிய வாய்துடிப்ப என்னை யெறிதற்குக் கல்லெடுக்க வேண்டா*;* நினது கரியகண்களின்

சிவப்பாற்றுவாயாக; நீ வெகுளப்படுவதன்று; நினக்குப் பல்லாண்டு செல்வதாக; யான் வேண்டியவிடத்துப் போக நின்னடியை வலங்கொள்ளாநின்றேனென வாயில்பெறாமையிற் பாணன் புலந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.36. கருமலர்க் கண்ணி கனன்று கட்டுரைப்பப்
புரியாழ்ப் பாணன் புறப் பட்டது.

மத்தக் கரியுரி யோன்தில்லை
யூரன் வரவெனலுந்
தத்தைக் கிளவி முகத்தா
மரைத்தழல் வேல்மிளிர்ந்து
முத்தம் பயக்குங் கழுநீர்
விருந்தொடென் னாதமுன்னங்
கித்தக் கருங்குவ ளைச்செவ்வி
யோடிக் கெழுமினவே. **#1045**

இதன் பொருள்:

மத்தக் கரி உரியோன் தில்லை ஊரன் வரவு எனலும் களிப்பையுடைத்தாகிய யானையின்றோலையுடைய வனது தில்லையூரனது வரவென்று சொல்லத் தொடங்குதலும்; தத்தைக் கிளவி முகத் தாமரைத் தழல் வேல் மிளிர்ந்து கிளியின் மொழி போலும் மொழியையுடையாளது முகமாகிய தாமரைக் கண்ணே தழலையுடையவேல் போலப் பிறழ்ந்து; முத்தம் பயக்கும் கழுநீர் நீர்த்துளியாகிய முத்தத்தையுண்டாக்காநின்ற கண்ணாகிய செங்கழுநீர் மலர்; விருந்தொடு என்னாத முன்னம் விருந்தோ டென்று சொல்லு வதற்கு முன்; கித்தக் கருங்குவளைச் செவ்வி ஓடிக் கெழுமின விரையப் பண்டைநிறமாகிய கரிய குவளைச் செவ்வி பரந்து மேவின! என்னமனையறக்கிழத்தியோ! எ-று.

மத்தம் மதமென்பாரு முளர். ஊரன்வரவென வினையெச்ச மாகப் பிரிப்பினுமமையும். கித்தமென் பதனைச் செய்யப்பட்ட தென்னும் பொருளதோர் வடமொழித் திரிபென்பாரு முளர். விருந்து வாயிலாகப் புக்கவழி இல்லோர் சொல்லியது. மெய்ப்பாடு: உவகை. பயன்: மெய்ம்மகிழ்தல். 388

விளக்கவுரை

25.37 விருந்தொடுசெல்லத்து*1*ணிந்தமை கூறல் விருந்தொடு செல்லத் துணிந்தமை கூறல் என்பது வாயில் பெறாதுபாணன் புலந்து நீங்காநிற்ப, யாவர்க்கும் வாயினேராது வெகுண்டுரைத்தலாற் றழல்வேல்போல மிளிர்ந்து முத்தம் பயக்கு மிவளுடையகண்கள் விருந்தொடு வந்தானென்று சொல்லுமளவிற் பண்டைநிறமாகிய

கருங்குவளையது செவ்வி பரந்த; என்ன மனையறக் கிழத்தியோவென இல்லோர்தம்முட் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்
25.37. பல்வளை பரிசுகண்டு
இல்லோர் இயம்பியது.

கவலங்கொள் பேய்த்தொகை பாய்தரக்
காட்டிடை யாட்டுவந்த
தவலங் கிலாச்சிவன் தில்லையன்
னாய்தழு விம்முழுவிச்
சுவலங் கிருந்தநந் தோன்றல்
துணையெனத் தோன்றுதலால்
அவலங் களைந்து பணிசெயற்
பாலை யரசனுக்கே. **#1046**

இதன் பொருள்:
கவலம் கொள் பேய்த் தொகை பாய்தர - கவற்சி கொள்ளுதற்கேதுவாகிய பேய்த்திரள் கரணங்களைப் பாயாநிற்ப - காட்டிடை ஆட்டு உவந்த - புறங்காட்டின்கண் ஆடுதலை விரும்பிய - தவல் அங்கு இலாச் சிவன் தில்லை அன்னாய் - கேடங்கில்லாத சிவனது தில்லையையொப்பாய் - தழுவி முழுவி சுவல் அங்கு இருந்த - தழுவி முத்தங்கொண்டு சுவலிடத்தேறியிருந்த - நம் தோன்றல் துணை எனத் தோன்றுதலால் - நம்முடைய தோன்றலைத் தமக்குத் துணையெனக்கருதி வந்து தோன்றுதலான் - அவலம் களைந்து அரசனுக்குப் பணி செயற்பாலை - நினதுள்ளத்துக் கவற்சியைநீக்கி இனியரசற்குக் குற்றேவல் செயற்பாலை எ - று. தழுவிமுழுவித்தோன்றுதலாலென வியையும். சுவற்கணங் கிருந்தவெனினு மமையும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைமகளைச் சிவப்பாற்றுவித்தல். ; ; ; ; 389

விளக்கவுரை

25.38 ஊடல் தணிவித்தல் ஊடல் தணிவித்தல் என்பது விருந்தேற்றுக்கொண்ட தலைமகளுழைச் சென்று, நம்முடைய தோன்றலைத் தனக்குத் துணையாகக் கொண்டுவந்து தோன்றுதலான் நினதுளத்துக் கவற்சியை யொழிந்து இனி நம்மரசற்குக் குற்றவேல் செய்வாயாகவெனத் தோழி அவளை யூடறணிவியாநிற்றல். அதற்குச் செய்யுள்
25.38. தோன்றலைத் துணையொடு தோழி கண்டு
வான்றகை மடந்தையை வருத்தந் தணித்தது.

சேறான் திகழ்வயற் சிற்றம்
பலவர்தில் லைநகர்வாய்

வேறான் திகழ்கண் இளையார்
வெகுள்வர்மெய்ப் பாலன்செய்த
பாறான் திகழும் பரிசினம்
மேவும் படிறுவவேங்
காறான் தொடல்தொட ரேல்விடு
தீண்டலெங் கைத்தலமே. **#1047**
இதன் பொருள்:
சேல் திகழ் வயல் சேல்விளங்கும் வயலை யுடைய; சிற்றம்பலவர் தில்லை நகர்வாய் வேல் திகழ் கண் இளையார் சிற்றம்பலவரது தில்லைநகரிடத்துளராகிய வேல் போலுங் கண்ணையுடைய நின்காதலிமாராகிய விளையவர்; வெகுள்வர் நீ செய்கின்ற விதனை யறியின் நின்னை வெகுள்வர். அதுவேயுமன்றி, மெய் பாலன் செய்த பால் திகழும் பரிசினம் மேனி சிறுவனாலுண்டாக்கப்பட்ட பால்புலப்படுந் தன்மையையுடையே மாதலின் நினக்குத் தகேம்; மேவும் படிறு உவவேம் இதன் மேலே யாமும் நீயும் மேவுநாணின்மையோடு கூடிய கள்ளத்தை விரும்பேம்; கால் தொடல் அதனால் எங்காலைத் தொடா தொழி; தொடரேல் எம்மைத் தொடரவேண்டா; எம் கைத்தலம் தீண்டல் எங்கைத் தலத்தைத் தீண்டற்பாலையல்லை; விடு விடுவாயாக எ-று.
திகழ்வயற்றில்லையெனவியையும். பால் திகழுமென்னும் இடத்து நிகழ் பொருளின்வினை மெய்யாகிய விடத்துமேலேறி நின்றது. நான்கிடத்தும் தானென்பது அசைநிலை. பரிசினமேனு மென்பதூஉம் பாடம்.
மெய்ப்பாடு: வெகுளி. பயன்: ஊடனீங்குதல். 390

விளக்கவுரை

25.39 அணைந்தவழியூடல் அணைந்தவழியூடல் என்பது தோழியாலூடல் தணிவிக்கப் பட்டுப் பள்ளியிடத்தாளாகிய தலைமகள், நீ செய்கின்ற விதனை யறியின் நின் காதலிமார் நின்னைவெகுள்வர்; அதுகிடக்க, யாம் மேனி முழுதுஞ் சிறுவனாலுண்டாக்கப்பட்ட பால்புலப்படுந் தன்மையை யுடையேம்; அதன்மேல் யாமும் நீ செய்கின்றவிக் கள்ளத்தை விரும்பேம்; அதனால் எங்காலைத் தொடாதொழி; எங்கையை விடுவாயாக எனத் தலைமகன் றன்னையணைந்தவழி ஊடாநிற்றல். அதற்குச் செய்யுள்
25.39. தெளிபுன லூரன் சென்றணைந் தவழி
ஒளிமதி நுதலி யூடி யுரைத்தது.

செந்தார் நறுங்கொன்றைச் சிற்றம்
பலவர்தில் லைநகரோர்
பந்தார் விரலியைப் பாய்புன

லாட்டிமன் பாவியெற்கு
வந்தார் பரிசுமன் றாய்நிற்கு
மாறென் வளமனையிற்
கொந்தார் தடந்தோள் விடங்கால்
அயிற்படைக் கொற்றவரே. **#1048**

இதன் பொருள்:

கொந்து ஆர் தடந்தோள் விடம் கால் அயில் படைக்கொற்றவர் கொத்துமாலைநிறைந்த பெரிய தோளினையும் நஞ்சைக் காலுங் கூரிய படையினையுமுடைய கொற்றவர்; பாவி யெற்கு என் வள மனையின் நிற்குமாறு தீவினையேற்கு எனது வளமனையில்வந்து நிற்கின்றபடி; ஓர் பந்து ஆர் விரலியைப் பாய் புனல் ஆட்டி பந்துபயின்ற விரலாளொருத்தியைப் பாய்ந்த புனலையாட்டுவித்து; வந்தார் பரிசும் அன்றாய் - வெளிப்படத் தவறு செய்து வந்தார் சிலர் நிற்கும் பரிசுமன்றாய் மனத்தவறு செய்யாதார் வந்து நிற்குமாறு வந்து நின்றாராயின், அது பொறுத்த லரிது எ - று.

செந் தார் நறுங் கொன்றைச் சிற்றம்பலவர் தில்லை நகர் பாய்புனலாட்டி செய்ய தாராகிய நறிய கொன்றைப் பூவினை யுடைய சிற்றம்பலவரது தில்லையாகிய நகர்வரைப்பிற் பாயும் புனலையாட்டி யெனக்கூட்டுக. தில்லைநகரோர் பந்தார் விரலியென வியைப்பினுமமையும். மன்: ஒழியிசைக்கண்வந்தது; அசைநிலையெனினுமமையும். ஒருத்தியைப் புனலாட்டி வந்தார் பரிசுமன்றாய்க் கொற்றவர் மனைக்கண் வந்து நிற்குமாறென்னென்று கூட்டியுரைப்பினுமமையும் கொத்துமாலை பலவாயொன்றாகியமாலை. ஆங்கதனுக்கு அப்படிற்று நிலையால். விட்டுரைத்தது வெளிப்படவுரைத்தது. மெய்ப்பாடும் பயனும் அவை. 391

விளக்கவுரை

25.40 புனலாட்டுவித்தமை கூறிப்புலத்தல் புனலாட்டுவித்தமை கூறிப் புலத்தல் என்பது அணைந்த வழியூடாநின்ற தலைமகள் ஊடறீராநின்ற தலைமகனோடு, இவர் செய்த பிழையெல்லாம் பொறுக்கலாம்; பலருமறிய வொருத்தியைப் புனலாட்டுவித்து அது செய்யாதார்போல என்மனையின்கணிவர் வந்து நிற்கின்றவிது எனக்குப் பொறுத்தலரிதெனத் தணிக்கத் தணியாது பரத்தையைப் புனலாட்டுவித்தமை கூறிப் புலவாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.40. ஆங்கதனுக் கழுக்கமெய்தி
வீங்குமென்முலை விட்டுரைத்தது.

மின்றுன் னியசெஞ் சடைவெண்
மதியன் விதியுடையோர்
சென்றுன் னியகழற் சிற்றம்

பலவன்தென் னம்பொதியில்
நன்றுஞ் சிறியவ ரில்லெம
தில்லம்நல் லூரமன்னோ
இன்றுன் திருவரு ளித்துணை
சாலுமன் னெங்களுக்கே. **#1049**

இதன் பொருள்:

மின் துன்னிய செஞ்சடை வெண் மதியன் மின்னையொத்த செஞ்சடைக்கண்வைத்த வெண்பிறையை யுடையான்; விதியுடையோர் சென்று உன்னிய கழல் சிற்றம் பலவன் நற்பாலையுடையோர் சிற்றின்பத்திற்குக் காரணமான புலன்களை விட்டுச் சென்று நினைந்த கழலையுடைய சிற்றம் பலவன்; தென்னம் பொதியில் எமது இல்லம் நன்றும் சிறியவர் இல் அவனது தெற்கின்கணுண்டாகிய பொதியிலிடத்து எமது குடி பெரிதுஞ் சிறியவரதுகுடி; அதனான், நல் ஊர நல்ல ஊரையுடையாய்; இன்று உன் திருவருள் எங்களுக்கு இத்துணை சாலும் முற்காலத்து நின்றலையளி வேண்டுது மாயினும் இப்பொழுது உனது திருவருள் எங்கட்கு நீ வந்தவித்துணையுமமையும்; நீ தலையளி செய்ய வேண்டுவ துண்டோ? எ-று.

மன்னும் ஓவும்: அசை நிலை. சாலுமன்னென்புழி மன்னும் அசைநிலைபோலும். மெய்ப்பாடு: வெகுளி. பயன்: புலத்தல்; புலவி நீங்கியதூஉமாம். 392

விளக்கவுரை

25.41 கலவிகருதிப் புலத்தல் கலவிகருதிப் புலத்தல் என்பது புனலாட்டுவித்தமைகூறிப் புலவாநின்ற தலைமகள், ஊடறீர்க்க நுதலுந்தோளு முதலாயின வற்றைத் தைவந்து வருடித் தலையளி செய்யாநின்ற தலைமகனோடு, எம்முடைய சிறிய வில்லின்கண்வந்து அன்று நீயிர்செய்த தலையளி எங்கட்கு அன்று வேண்டுதுமாயினும் இன்று உமது திருவருள் எங்கட்கு நீயிர்வந்த இத்துணையு மமையும்; வேறு நீயிர் தலையளி செய்ய வேண்டுவதில்லை யெனக் கலவிகருதிப் புலவாநிற்றல். அதற்குச் செய்யுள்

*25.41.*கலைவள ரல்குல் தலைமகன் றன்னொடு
கலவி கருதிப் புலவி புகன்றது

செழுமிய மாளிகைச் சிற்றம்
பலவர்சென் றன்பர்சிந்தைக்
கழுமிய கூத்தர் கடிபொழி
லேழினும் வாழியரோ
விழுமிய நாட்டு விழுமிய
நல்லூர் விழுக்குடியீர்

விழுமிய அல்லகொல் லோஇன்ன
வாறு விரும்புவதே. **#1050**
இதன் பொருள்:
செழுமிய மாளிகைச் சிற்றம்பலவர் வளவிய மாளிகைகளாற் சூழப்பட்ட சிற்றம்பலத்தையுடையார்; அன்பர் சிந்தைச் சென்று கழுமிய கூத்தர் அன்பர் சிந்தைக்கட் சென்று பொருந்திய கூத்தர்; கடி பொழில் ஏழினும் அவரது காவலையுடைய வுலகமேழினுள்ளும்; விழுமிய நாட்டு விழுமிய நல்லூர் விழுக் குடியீர் சிறந்தநாட்டின்கட் சிறந்தநல்லவூரிற் சிறந்தகுடியிலுள்ளீர்; இன்னவாறு விரும்புவது விழுமிய அல்ல கொல்லோ எம்போல் வாரிடத்து இத்தன்மையவாகிய நெறியை விரும்புதல் உமக்குச் சிறந்தனவல்லபோலும் எ-று.
வாழியும் அரோவும் : அசைநிலை. விரும்புவ தென்புழி, இன்னவாறு விரும்புவ போல்வன வென்பது கருத்தாகலின், ஒருமைப் பன்மைமயக்கம் அமையுமாறு முடைத்து. இன்னவா றென்பதற்கு இன்ன வண்ணம் விரும்புத லெனினுமமையும். விரும்புத லென்ப தூஉம் பாடம். ஆடல் - நுடக்கம். மெய்ப்பாடும் பயனும்.393

விளக்கவுரை

25.42 மிகுத்துரைத்தூடல் மிகுத்துரைத்தூடல் என்பது கலவிகருதிப் புலவாநின்ற தலைமகள், புணர்தலுறாநின்ற தலைமகனுடன் நீர் விழுமிய நாட்டு விழுமியநல்லூர் விழுமியகுடியிலுள்ளீர்; எம்போல் வாரிடத்து இவ்வாறு புணர்தல் விரும்புதல் நுமக்கு விழுமிய வல்லவென மிகுத்துரைத்தூடா நிற்றல். அதற்குச் செய்யுள்
25.42. நாடும் ஊரும் இல்லுஞ் சுட்டி
ஆடற் பூங்கொடி யூடி யுரைத்தது.

திருந்தேன் உயநின்ற சிற்றம்
பலவர்தென் னம்பொதியில்
இருந்தேன் உயவந் திணைமலர்க்
கண்ணின்இன் நோக்கருளிப்
பெருந்தே னெனநெஞ் சுகப்பிடித்
தாண்டநம் பெண்ணமிழ்தம்
வருந்தே லதுவன் றிதுவோ
வருவதொர் வஞ்சனையே. **#1051**
இதன் பொருள்:
திருந்தேன் உய நின்ற சிற்றம்பலவர் தென்னம் பொதியில் ஒருவாற்றானுந் திருந்தாத யான் பிறவித் துன்பத்திற் பிழைக்கவந்து நின்ற சிற்றம்பலவரது தெற்கின்கணுள தாகிய பொதியிலிடத்து; இருந்தேன் உய வந்து ஒரு முயற்சியுமின்றி யிருந்த யானுய்யும்வண்ணம்

வந்து; இணைமலர்க் கண்ணின் இன் நோக்கு அருளி தன்னுடைய இணைந்த மலர்போலுங் கண்களினது உள்ளக் கருத்தை வெளிப்படுத்தும் நாணோடுகூடிய நோக்கமாகிய இனிய கடைக்கணோக்கத்தை முன்னெனக்குத் தந்து; பெருந்தேன் என நெஞ்சு உகப் பிடித்து ஆண்ட பெருந்தேன் போலவினிதாய் என்னெஞ்சமுருக என்னைப் பிடித்துத் தன்வயமாக்கிய; நம் பெண் அமிழ்தம் அது அன்று நமது பெண்வடிவையுடைய அமிழ்தமாகிய அது இதுவன்று; இதுவோ வருவது ஒர் வஞ்சனை இதுவோ வருவதொருமாயம்; வருந்தேல் அதனான் நீ வருந்தாதொழி எ-று.

ஓகாரம்: ஒழியிசைக்கண் வந்தது. தன்னைநோக்கி யொரு முயற்சியுமில்லாத யான் பிறவித்துன்பத்திற் பிழைக்கத் தானே வந்து தன்னிணைமலர்க்கண்ணின தினிய கடைக்கணோக்கத்தைத் தந்து பெருந்தேன் போன்றினிதாய், என் வன்மனநெகிழ என்னை வலிந்து பிடித்தடிமைக்கொண்ட பெண்ணமிழ்தமென வேறுமொரு பொருள் விளங்கியவாறு கண்டுகொள்க. மெய்ப்பாடு: அழுகை. பயன்: தலைமகளைச் சிவப்பாற்றுவித்தல். 394

விளக்கவுரை

25.43 ஊடல் நீடவாடியுரைத்தல் ஊடல்நீட வாடியுரைத்தல் என்பது தணிக்கத் தணியாது மிகுத்துரைத்துத் தலைமகள் மேன்மேலு மூடாநிற்ப, அன்று அம்மலையிடத்துத் தன்னையெய்துதற்கோ ருபாய மின்றி வருந்தா நிற்ப யானுய்யும் வண்ணந் தன்னிணை மலர்க்கண் ணினது இனிய நோக்கத்தைத் தந்தருளி என்னைத்தன்வயமாக் கிய நம்பெண்ணமுதம் அதுவன்று*;* இது நம்மைவருத்துவதோர் மாயமாமெனத் தன்னெஞ்சிற்குச் சொல்லி ஊடனீடத் தலைமகன் வாடாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.43. வாடா வூடல்
நீடா வாடியது.

இயன்மன்னும் அன்புதந் தார்க்கென்
நிலையிமை யோரிறைஞ்சுஞ்
செயன்மன்னுஞ் சீர்க்கழற் சிற்றம்
பலவர்தென் னம்பொதியிற்
புயன்மன்னு குன்றிற் பொருவேல்
துணையாப்பொம் மென்இருள்வாய்
அயன்மன்னும் யானை துரந்தரி
தேரும் அதரகத்தே. **#1052**

இதன் பொருள்:

இமையோர் இறைஞ்சும் செயல் மன்னும் சீர்க் கழல் சிற்றம்பலவர்

தென்னம் பொதியில் இமையோரிறைஞ்சும் நுண் செயல்தங்கிய நல்ல வீரக்கழலணிந்த திருவடியையுடைய சிற்றம்பலவரது தெற்கின்கணுளதாகிய பொதியிலிடத்து; புயல் மன்னு குன்றில் பொம்மென் இருள்வாய் புயறங்கிய இக்குன்றிற்செறிந்த விருளின்கண்ணே; அயல் மன்னும் யானை துரந்து பக்கத்துத்தங்கும் யானைகளையோட்டி; அரி தேரும் அதரகத்து அரிமா அவைபுக்க விடந்தேடும் வழியகத்து; பொருவேல் துணையா தமது பொரு வேலே துணையாக வந்து; இயல் மன்னும் அன்பு தந்தார்க்கு இயல்பாகிய நிலை பெற்றவன்பை நமக்குத் தந்தவர்க்கு; நிலை என் யானிவ்வாறுடம்படாது நிற்குநிலை என்னாம்! இது தகாது எ - று.

பெயரெச்சத்திற்கும் பெயர்க்கும் ஒருசொன்னீர்மைப் பாடுண்மையின், இயன்மன்னுமன்பெனத் தொக்கவாறறிக. இயல்பைப் பொருந்தியவன்பெனினு மமையும். அதரகத்து வந்தென வொருசொல் வருவித்துரைக்கப்பட்டது. புயன்மன்னு குன்றிலன்பு தந்தார்க்கெனக் கூட்டுக.

தகுதியின் தகுதியான். மிகுபதம் ஆற்றாமை மிக்க வளவு. தகுதியி லூரனெனப் பாடமாயின், தகுதியில்லாத மிகுபத மென்க. மெய்ப்பாடு: அச்சம். பயன்: சிவப்பாற்றுதல். 395

விளக்கவுரை

25.44 துனியொழிந்துரைத்தல் துனியொழிந்துரைத்தல் என்பது ஊடனீடலால் தலைமகன தாற்றாவாயில் கண்ட தலைமகள், அன்று நங்குன்றிடத்து மிக்க விருளின்கண்ணே அரிதிரண்டுயானை வேட்டஞ்செய்யும் அதரகத்துத் தமது வேலே துணையாகவந்து இயல்பைப் பொருந்தியவன்பை நமக்குத் தந்தவர்க்கு இன்று நாமுடம்படாது நிற்குமிந்நிலைமை என்னாமெனத் துனியொழிந்து அவனோடு புணர்ச்சிக் குடம்படா நிற்றல். அதற்குச் செய்யுள்

25.44. தகுதியி னூரன் மிகுபத நோக்கிப்
பனிமலர்க் கோதை துனியொ ழிந்தது.

கதிர்த்த நகைமன்னுஞ் சிற்றவ்வை
மார்களைக் கண்பிழைப்பித்
தெதிர்த்தெங்கு நின்றெப் பரிசளித்
தானிமை யோரிறைஞ்சும்
மதுத்தங் கியகொன்றை வார்சடை
யீசர்வண் தில்லைநல்லார்
பொதுத்தம்ப லங்கொணர்ந் தோபுதல்வா
எம்மைப் பூசிப்பதே. **#1053**

இதன் பொருள்:

மதுத் தங்கிய கொன்றை வார் சடை ஈசர் இமையோர் இறைஞ்சும் வள் தில்லை நல்லார் பொதுத் தம்பலம் கொணர்ந்தோ தேன்றங்கிய கொன்றைப்பூவையுடைய நீண்ட சடையையுடைய வீசரது இமையோரால் வணங்கப்படும் வளவிய தில்லையிலுளராகிய நல்லா ரெல்லார்க்கும் பொதுவாகிய தம்பலத்தைக் கொண்டுவந்தோ; புதல்வா புதல்வா; எம்மைப் பூசிப்பது நீ யெம்மைக்கொண்டாடுவது? அதுநிற்க, கதிர்த்த நகை மன்னும் சிற்றவ்வைமார்களைக் கண் பிழைப்பித்து இது நினக்குத் தருகின்றவிடத்து நின்றந்தை ஒளிவிட்ட முறுவல்பொருந்திய நின் சிறிய வன்னைமாரைக் கண்ணைத்தப்புவித்து; எதிர்த்து எங்கு நின்று எப்பரிசு அளித்தான் அவர் காணாதவண்ணம் ஒருவாற்றானின்னை யெதிர்ப்பட்டு எவ்விடத்து நின்று எவ்வண்ணமிதனை நினக்குத் தந்தான்? நீயிது சொல்ல வேண்டும் எ - று.

மெய்ப்பாடு: இளிவரலைச் சார்ந்த நகை. பயன்: ஊடனீங்கு தல். 396

விளக்கவுரை

25.45 புதல்வன்மேல்வைத்துப் புலவிதீர்தல் புதல்வன்மேல்வைத்துப் புலவிதீர்தல் என்பது துனியொ ழித்துக்கூடிப் பிரிந்தவழிப் பின்னும் பரத்தைமாட்டுப் பிரிந்தா னென்று கேட்டுப் புலந்து வாயின்மறுக்க, வாயிற்கணின்று விளையாடாநின்ற புதல்வனை யெடுத்தணைத்துத் தம்பலமிட்டு முத்தங்கொடுத்து அதுவாயிலாகக் கொண்டு தலைமகன் செல்லா நிற்ப, அப்புதல்வனை வாங்கி யணைத்துக் கொண்டு, அவன் வாயிற்றம்பலந் தன்மெய்யிற் படுதலான் எல்லார்க்கும் பொதுவாகிய தம்பலத்தைக் கொண்டுவந்தோ நீ யெம்மைக் கொண்டாடுவது? அதுகிடக்க, இதனை நினக்குத் தந்தவாறு சொல்லுவாயாகவெனப் புதல்வன்மேல் வைத்துத் தலைமகள் புலவி தீராநிற்றல். அதற்குச் செய்யுள்

25.45. புதல்வனது திறம்புகன்று
மதராிக்கண்ணி வாட்டந்தவிர்ந்தது.

சிலைமலி வாணுத லெங்கைய
தாக மெனச்செழும்பூண்
மலைமலி மார்பி னுதைப்பத்தந்
தான்றலை மன்னர்தில்லை
உலைமலி வேற்படை யூரனிற்
கள்வரில் என்னவுன்னிக்
கலைமலி காரிகை கண்முத்த
மாலை கலுழ்ந்தனவே. **#1054**

இதன் பொருள்:

மலை மலி செழும் பூண்மார்பின் உதைப்ப யான் வெகுண்டு மலைபோலும் வளவிய பூணையுடைய தன் மார்பகத்து மிதிப்ப; சிலை மலி வாணுதல் எங்கையது ஆகம் எனத் தலை தந்தான் அவ்வாகத்தைச் சிலைபோலும் வாணுதலையுடைய எங்கையதென்றே கருதித் தன்சென்னியைத் தந்தனன்; அதனான், மன்னர் தில்லை உலை மலி வேற்படை ஊரனின் கள்வர் இல் என்ன உன்னி மன்னனது தில்லையில் உலையிடத்துண்டாகிய தொழிலான் மிக்க வேலாகிய படையையுடைய வூரனைப்போலக் கள்வரில்லை யென்று கருதி; கலை மலி காரிகை கண் முத்த மாலைகலுழ்ந்தன மகளிர்க்குத்தக்க யாழ்முதலாகிய கலைகளான் மிக்க காரிகை நீர்மையையுடையாளுடைய கண்கள் கண்ணீர்த் துளித் தாரையாகிய முத்தமாலையைப் பொருந்தின; அதனான், இவள் புலத்தற்குக் காரணம் வேண்டுவ தில்லைபோலும் எ-று.

இதுவுந் துறைகூறிய கருத்து. மெய்ப்பாடு: இளிவரலைச் சார்ந்த நகை. பயன்: தலைமகளைச் சிவப்பாற்றுவித்தல். பிள்ளை வாயிலாகப் புக்க தலைமகனை யேற்றுக்கொண்டு பள்ளியிடத்தாளாக மேற்சொன்ன வகையே உண்ணின்றெழுந்த பொறாமை காரணம் பெற்றுத் தோன்றியது; தோன்றத் தலைமகன் ஆற்றானாயின் அவ்வாற் றாமைகண்டு சிவப்பாற்றுவித்தல். தலைமகளிடத்தும் தலை மகனிடத்தும் இவ்வகை நிகழ்ந்தது கண்டு தோழியிது சொன்னா ளென்பது. தலைமகன்றான் சொன்னா னெனினுமமையும். என்னை? 'மனைவி யுயர்வுங் கிழவோன் பணிவு - நினையுங் காலைப் புலவியு ளுரிய' (தொல். பொருளியல். 31) என்றார் தொல்காப்பியனார். தலைமகளவ்வகை செய்யவும் பெறுமென்பது. 397

விளக்கவுரை

25.46 கலவியிடத்தூடல் கலவியிடத்தூடல் என்பது புதல்வனை வாயிலாகப்புக்குப் புலவிதீர்த்துப் புணர்தலுறாநின்ற தலைமகனைத் தலைமகள் ஒரு காரணத்தால் வெகுண்டு, அவன் மார்பகத்துதைப்ப, அவ் வெகுடல் தீர வேண்டி அவனவள்காலைத் தன்றலை மேலேற்றுக் கொள்ள, அது குறையாக அவள் புலந்தழாநின்றமையை அவ்விடத்து உழையர் தம்முட் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.46. சீறடிக் குடைந்த நாறிணர்த் தாரவன்
தன்மை கண்டு பின்னுந் தளர்ந்தது.

ஆறூர் சடைமுடி அம்பலத்
தண்டரண் டம்பெறினும்
மாறூர் மழவிடை யாய்கண்
டிலம்வண் கதிர்வெதுப்பு
நீறூர் கொடுநெறி சென்றிச்

செறிமென் முலைநெருங்கச்
சீறூர் மரையத ளிற்றங்கு
கங்குற் சிறிதுயிலே. #1055
இதன் பொருள்:
ஊர் மழ விடையாய் தவழாநின்ற இளைய வேற்றையுடையாய்; ஆறு ஊர் சடைமுடி அம்பலத்து அண்டர் அண்டம் பெறினும் ஆறுபரந்த சடைமுடியையுடைய அம்பலத்தின் கணுளராகிய அண்டரதண்டமுழுதையும் யாம் பெறினும்; வண்கதிர் வெதுப்பு நீறு ஊர் கொடு நெறி சென்று ஞாயிற்றினுடைய வளவிய கதிர்கள் வெதுப்பிய நீறுபரந்த கொடியநெறியைச் சென்று; இச் செறி மென்முலை நெருங்க இச்செறிந்த மெல்லிய முலைகள் எம்முடைய மார்பினிடை வந்தடர; சீறூர் மரை அதளின் தங்கு கங்குல் சிறுதுயில் மாறு கண்டிலம் நெறியாற்சிறிய வூரின்கண் மரையதட் பள்ளி யிற்றங்கிய இரவிற் சிறிய துயிற்குமாறு கண்டிலம்; அதனை நீ யுள்ளியுமறிதியோ? எ -று. அண்டரதண்டமுழுதும் பெறுதலால் வருமின்பமும் அத்துயி லான்வந்த வின்பத்திற்கு மாறில்லையென்ற வாறு. இளவேறு - புதல்வன். தமக்குத்தக்க பள்ளியுமிடமு மின்மையிற் சிறுதுயிலென்றான். துயிலும்பொழுதிற்றுயிலாப் பொழுது பெரிதாகலின் அவ்வாறு கூறினானெனினுமமையும். துயிற்கென்னு நான்கனுருபு விகாரவகை யாற்றொக்கு நின்றது. முன்னிகழ்ந்தது கூறுவானாய் உண்ணின்ற சிவப்பாற்று வித்தது. ஞெமுங்க வென்பதூஉம், மரவத ளென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு: உவகை. பயன்: தலைமகளை மகிழ்வித்தல்.398

விளக்கவுரை

25.47 முன்னிகழ்வுரைத்தூடறீர்த்தல் முன்னிகழ்வுரைத்தூடறீர்த்தல் என்பது கலவியிடத்தூடா நின்ற தலைமகளுக்கு, யாங்கொடிய நெறியைச் சென்று சிறியவூரின்கண் மரையதட்பள்ளியின் இச்செறிந்த மெல்லிய முலைகள் என்மார்பிடை வந்தடர்க்கத் தங்கிய சிறிய துயிற்கு மாறுகண்டிலம்*;* அதனை நீ யுள்ளியுமறிதியோவென முன்னிகழ்வுரைத்துத் தலைமகன் அவளை யூடறீராநிற்றல். அதற்குச் செய்யுள்

25.47. 9; முன்னி கழ்ந்தது நன்னுதற் குரைத்து
மன்னு புனலூ ரன்மகிழ் வுற்றது.

ஐயுற வாய்நம் அகன்கடைக்
கண்டுவண் டேருருட்டும்
மையுறு வாட்கண் மழவைத்
தழுவமற் றுன்மகனே
மெய்யுற வாம்இதுன் னில்லே

வருகெனவெள்கிச்சென்றாள்
கையுறு மான்மறி யோன்புலி
யூரன்ன காரிகையே. **#1056**
இதன் பொருள்:
நம் அகன் கடைக் கண்டு ஐயுறவாய் நமதகன்ற கடைக்கட் கண்டு நின்மகனென்றையுற்று; வள் தேர் உருட்டும் மை உறு வாள் கண் மழவைத் தழுவ வளவிய சிறு தேரையுருட்டும் மையுற்ற வாட்கண்ணையுடைய புதல்வனைத் தான்வந்துதழுவ, அதனைக் கண்டு; உன் மகனே அவன் உன் மகனே; மெய் உறவாம் உறவு மெய்யாகிய வுறவே; இது உன் இல்லே இதுவும் நினதில்லமே; வருகென ஈண்டு வருவாயாக வென் றியான்கூற; கை உறு மான் மறியோன் புலியூர் அன்ன காரிகை கையைப் பொருந்திய மான்மறியையுடையவனது புலியூரைப் போலுங் காரிகை; வெள்கிச் சென்றாள் நாணிப்பெயர்ந்தாள்; அதனான், யானவளை யறியா தேனாக நீ நினைத்து மாயங் கூறவேண்டுவதில்லை எ-று.
ஐயுறவாகவெனத் திரித்துக்கொள்க. அரத்தகு நெடுவே லென்பது பாடமாயின், அரத்தொழிலாற்றக்க நெடுவேலெனவுரைக்க. மெய்ப்பாடு: நகை. பயன்: சிவப்பாற்றுதல். ஆற்றாமையே வாயி லாகப் புக்க தலைமகன் தலைமகளைச் சிவப்பாற்றுவிப்பான் நின்னின் வேறுசிலரெனக் கில்லையால் நீ வெகுளற்க வென்றாற் குத் தலைமகளிவ்வகை சொன்னாளென்பது. 399

விளக்கவுரை

25.48 பரத்தையைக் கண்டமைகூறிப் புலத்தல் பரத்தையைக்கண்டமை கூறிப்புலத்தல் என்பது முன்னிகழ் வுரைத் தூடறீர்த்து இன்புறப்புணரப்பட்ட தலைமகள் பிறர்க்கும் நீ இவ்வாறின்பஞ் செய்தியென்றுகூற, நின்னையொழிய யான் வேறொருத்தியையு மறியேனென்ற தலைமகனுக்கு, நின்பரத்தை போகாநின்றவள் நம்வாயிற்கணின்று தேருருட்டி விளையாடா நின்ற புதல்வனைக் கண்டு நின்மகனென்றையுற்றுத் தழுவ, நீயையுற வேண்டா; அவன் உன்மகன்; உறவு மெய்யாகிய வுறவே; ஈதும் உனதில்லமே; ஈண்டுவருவாயாகவென் றியான்கூற, அது கேட்டுத் தானாணிப் போயினாள்; யானவளை யறியேனாக நீ மாயம் கூற வேண்டுவதில்லை யெனத் தான் பரத்தையைக் கண்டமை கூறிப் பின்னு மவனொடு புலவாநிற்றல். அதற்குச் செய்யுள்
25.48. பரத்தையைக் கண்ட பவளவாய் மாதர்
அரத்த நெடுவேல் அண்ணற் குரைத்தது.
காரணி கற்பகங் கற்றவர்

நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி
தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர்
தஞ்சங்க நிதிவிதிசேர்
ஊருணி உற்றவர்க் கூரன்மற்
றியாவர்க்கும் ஊதியமே. **#1057**

இதன் பொருள்:

ஊரன் கார் ஊரன் வேண்டாமைக் கொடுத்தலிற் காரோடொக்கும்; அணி கற்பகம் வேண்டக் கொடுத்தலின் அழகிய கற்பகத்தோடொக்கும்; கற்றவர் நல்துணை நுண்ணிய கல்வியனா கலிற் கற்றவர்க்கு நல்லவுசாத் துணை; பாணர் ஒக்கல் இசையுணர் வானுங் கெழுதகைமையானும் பாணர்க்கு அவர் சுற்றத்தோடொக்கும்; சீர் அணி சிந்தாமணி நினைத்ததுகொடுத்தலிற் சீரையுடைய நல்ல சிந்தாமணியோடொக்கும்; அணி தில்லைச் சிவனடிக்குத் தார் அணி கொன்றையன் அழகிய தில்லைக்கட் சிவனது திருவடிக்குத் தாராகி அவனாலணியப்படுங் கொன்றைப் பூவின்றன்மையையுடையன்; தக்கோர்தம் சங்கநிதி சான்றோர் தமக்குத் தொலையாத நிதியாயி ருத்தலிற் சங்கநிதியோடொக்கும்; விதி நாட்டார்க்கும் பகைவர்க்குந் தப்பாது பயன்கொடுத்தலின் விதியொடொக்கும்; உற்றவர்க்குச் சேர் ஊருணி சுற்றத்தார்க்கு அவர்வேண்டிய செய்ய விருத்தலின் அணித்தாகிய வூருணியோ டொக்கும்; யாவர்க்கும் ஊதியம் அதனான் வரைவின்றி எல்லார்க்கும் இவன் பெறும் பயன் எ-று. தாரணிகொன்றையனென்பது குரங்கனென்பதுபோல உவமைப்பொருட்பட நின்றதெனினுமமையும். விதிசேரூருணி யென்பதற்கு முறைமையாற் சேரப்படுமூருணி யெனினுமமையும். தக்கார்க்குஞ் சுற்றத்தார்க்குங் கொடுத்தல் வண்மையன்மையின் அவரை வேறுபிரித்துக் கூறினாள். ஊடறீர்ந்து கூடியவழித் தலை மகட்கு உண்ணின்றசிவப்பு ஒருகாரணத்தாற் சிறிது புலப்பட, ஊரன் யாவர்க்கு மூதியமாகலின் அன்பானன்றி அருளாற் பரத்தையர்க்குந் தலையளிசெய்யுமன்றே; அதனான் நீ புலக்கற் பாலையல்லையென்று குறிப்பினாற் றோழி சிவப்பாற்று வித்தது. மெய்ப்பாடு: உவகை. பயன்: மெய்ம்மகிழ்தல்.

இவ்வகை கூத்தர் மகிழ்ந்து இன்னபோல்வன தலைமகன் குணங்களைப் பாராட்டினாரென்பது. என்னை? 'தொல்லவை யுரைத்தலு நுகர்ச்சி யேற்றலும் - பல்லாற் றானு மூடலிற் றணித்தலு - முறுதி காட்டலு மறியுமெய்ந் நிறுத்தலு - மேதுவிலுணர்த் தலுந் துணியக் காட்டலு -

மணிநிலை யுரைத்தலுங் கூத்தர் மேன' (தொல். பொருள் கற்பு - 27)
என்றார் தொல்காப்பியனார். இப்பாட்டு ஐவகைத் திணைக்கும்
உரித்தாகலிற் பொதுவகைத்தெனப் பெறுமென்பது.400

விளக்கவுரை

25.49 ஊதியமெடுத்துரைத் தூடறீர்த்தல்

ஊதியமெடுத்துரைத்தூடறீர்த்தல் என்பது பரத்தையைக் கண்டமைகூறிப் புலந்து வேறுபட்ட தலைமகளுக்கு, இத் தன்மையனாய் யாவர்க்கு மூதியமாகலின், அன்பானன்றியருளாற் பரத்தையர்க்குந் தலையளிசெய்ய வேண்டுமன்றே; புறப்பெண்டீரைப் போல யாமவனோடு புலக்கற்பாலேமல்லேம்; அவன் வரும்பொழுது எதிர்தொழுதும் போம்பொழுது புறந்தொழுதும், புதல்வனைப் பயந்திருக்கையன்றோ நமக்குக் கடனாவதெனத் தோழி தலைமகன தூதிய மெடுத்துரைத்து அவளையூடறீர்த்து, அவனோடு பொருந்தப் பண்ணாநிற்றல். அதற்குச் செய்யுள்

25.49. இரும்பரிசில் ஏற்றவர்க்கருளி
விரும்பினர்மகிழ மேவுதலுரைத்தது.

பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டும்நான் போற்றி அம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி இப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீடவேண்டும்நான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே. **#1058**

இறைவனே! நான் உன்னைப் பாடுதல் வேண்டும். பாடிப்பாடி நைந்து உருகி நெக்கு நெக்கு ஆடவேண்டும். நான் அம்பலத்தாடும் நின் மலர்க்கழல் அடையும்படி செய்தல் வேண்டும். நீ இந்த உடம்பை ஒழித்து வீடு தந்தருளல் வேண்டும். உனக்கு வணக்கம் செய்கிறேன்.

விளக்கவுரை

ஆனந்தாதீதம்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

'நான் நின்னையே பாட வேண்டும்' எனக் கூட்டுக. பிறவும் அங்ஙனம் கூட்டற்பாலன. போது - மலர். புழுக்கூடு - புழுக்களுக்கு உறைவிடமான இடம்; உடம்பு. 'புழுக்கூட்டினை நீக்கு' என்றது, 'உன்பால் சேர்த்துக்கொள்' என்னும் பொருளதாதலின், 'எனை' என்ற இரண்டாவதற்கு முடிபாயிற்று. வீடவேண்டும் - நீங்க வேண்டும். பொய்

- உலகப் பற்று. மெய்யர் மெய்யன் - மெய்யன்பர்களுக்கு மெய்ப்பொருளாய் உள்ளவன். இத் திருப்பாட்டில் தம் விருப்பங்கள் பலவற்றையும் பன்முறை வணக்கங்கூறி விண்ணப்பித்துக் கொண்டார். முதல் திருப்பாட்டின் முதற் சொல்லாகிய, 'மெய்' என்பதனாலே இவ்விறுதித் திருப்பாட்டு முடிந் திருத்தல் அறியத்தக்கது.

எட்டாம் திருமுறை - திருவாசகம் திருக்கோவையார் முற்றும்

பன்னிருதிருமுறை

ஒன்பது அருளாளர்கள்

ஒன்பதாம் திருமுறை - திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

தொகுப்பு: சங்கர்

சித்திரை 2017 வெளியீடு

பன்னிருதிருமுறை

ஒன்பதாம் திருமுறை - திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

ஒன்பது அருளாளர்கள் அருளியது

திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்திநம்பி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் அருளிய 301 பாடல்கள் கொண்டது



பன்னிருதிருமுறை

ஒன்பது அருளாளர்கள்

ஒன்பதாம் திருமுறை - திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

தொகுப்பு: சங்கர்

சித்திரை 2017 வெளியீடு

திருமாளிகைத் தேவர் - கோயில் - ஒளிவளர் விளக்கே

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. #1 ★★★★★

இயற்கையான ஒளி நாளும் வளருகின்ற விளக்கு ஆனவனே! என்றும் அழிதல் இல்லாத ஒப்பற்ற பொருளே! உயிரினது அறிவைக் கடந்த ஒப்பற்ற ஞான வடிவினனே! தூய்மை மிக்க பளிங்கின் குவியலாகிய அழகிய மலையே! அடியவர் உள்ளத்தில் இனிமைதரும் தேனே! பொதுவான எல்லையைக் கடந்து இறைவனிடம் ஈடுபட்டு இருக்கும் உள்ளத்தில் பேரின்பம் நல்கும் கனியாக உள்ளவனே! பொன்னம்பலத்தைத் தன் கூத்தினை நிகழ்த்தும் அரங்கமாகக் கொண்டு அடியவருடைய காட்சிக்குப் புலனாகும் அருள் நடனத்தை விரும்பி நிகழ்த்தும் உன்னை, உன் தொண்டனாகிய நான் புகழுமாறு நீ திருஉள்ளம்பற்றிச் செயற்படுவாயாக.

விளக்கவுரை

இதனுள், `விளக்கு` முதலியனவாகக் கூறப்பட்டவை உவமையாகுபெயர்கள். ஒளிவளர் விளக்கு என்றதில், வளர்தல், முடிவின்றி விளங்குதல். எனவே, `நெய், திரி, அகல் என்பவற்றைக் கொண்டு ஏற்றப்பட்ட செயற்கை விளக்காகாது இயற்கையில் விளங்கும் விளக்கு` என்றதாயிற்று. இதனையே, `நந்தா விளக்கு` எனவும், `தூண்டா விளக்கு` எனவும் கூறுவர். மாணிக்கமும், வயிரமும் போன்ற மணிவிளக்குக்கள் இங்ஙனம் அமைவனவாம். எனினும், `அவற்றினும் மேம்பட்ட விளக்கு` என்பதையே, `உலப்பிலா ஒன்றே` என்பதனாலும், `அவ்வாறாதல் அறிவே உருவாய் நிற்றலாலாம்` என்பதை, உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே என்பதனாலும் குறித்தருளினார்.

உணர்வு இரண்டனுள் முன்னையது உயிரினது அறிவு. சூழ் - எல்லை. இறைவன் உயிர்கள் அனைத்தையும் தனது வியாபகத்துள் அடக்கி நிற்பவன் ஆதலின், அவனை `அவற்றது அறிவின் எல்லையைக் கடந்தவன்` என்றார். `கடவுள்` என்னும் சொற்கும் இதுவே பொருளாதல் அறிக. தெளிவளர் - தூய்மை மிக்க. `பளிங்கின் திரளாகிய அழகிய

குன்றே` என உரைக்க. மணி - அழகு. சிவபெருமான் பளிங்குமலைபோல விளங்குதல், திருநீற்று ஒளியினாலாம். அளி - அன்பு. ஆனந்தக் கனி - இன்பமாகிய சாற்றை யுடைய பழம். `இன்பம்` என்பது, தலைமை பற்றி, வரம்பில் இன்பமாகிய பேரின்பத்தையே குறித்தது. முன்னர், `சித்தத்துள் தித்திக்கும் தேன்` என்றது துரியநிலைக்கண் நிகழும் அனுபவத்தை யும், பின்னர், அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனி என்றது, அதீத நிலைக்கண் நிகழும் அனுபவத்தையும் குறித்தனவாம். வெளிவளர் கூத்து - காட்சிப் புலனாய், முடிவின்றி நிகழும் நடனம். `வெளியாகி` என ஆக்கம் வருவிக்க. தெய்வக் கூத்து - அருள் நடனம். அஃதாவது உயிர் கட்கு `பெத்தம்`, `முத்தி` என்னும் இருநிலைகளிலும் ஏற்ற பெற்றியால் அருள்புரியும் நடனம். அவ்விருவகை நடனங்களின் இயல்பையும், தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்

சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா

ஊன்று மலர்ப்பதத்தே உற்ற திரோ தம்முத்தி

நான்ற மலர்ப்பதத்தே நாடு.

(உண்மை விளக்கம் - 36)

எனவும்,

மாயை தனைஉதறி, வல்வினையைச் சுட்டு,மலம்

சாய அமுக்கிஅருள் தானெடுத்து - நேயத்தால்

ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான்அழுத்தல்

தான்எந்தை யார்பரதந் தான்.

(உண்மை விளக்கம் - 37)

எனவும் போந்த வெண்பாக்களால் முறையே உணர்க.

விளம்புதல் - துதித்தல். விளம்புமா விளம்பு என்பதற்கு, `யான்

விளம்புதற்பொருட்டு, நீ விளம்புவாயாக` எனவும், இதனுள் இனி வரும் திருப்பாட்டுக்களிலும், `பணியுமா பணியே, கருதுமா கருதே` முதலியவற்றிற்கும் இவ்வாறேயாகவும் உரைக்க. இவற்றால், இறைவனது காணும் உபகாரத்தின் இன்றியமையாமை விளக்கப் படுகின்றது. `காட்டும் உபகாரம், காணும் உபகாரம்` என்பவை பற்றி இங்குச் சிறிது கூறற்பாற்று.

அறிவிக்க அன்றி அறியா உளங்கள் *(சிவஞானபோதம் சூ. 8, அதி. 2)* என்றபடி, உயிர்களின் அறிவு, அறிவிக்கும் பொருளின்றி ஒன்றை அறியும் தன்மையைப் பெறாது. ஆகவே, உயிரினது அறிவு, பிறிதோர் ஒளியின்றித் தானே உருவத்தைக் காணமாட்டாத கண்ணின் ஒளிபோன்றதாம். அதனால், கதிரவன் ஒளி கண்ணொளியிற் கலந்து உருவத்தைக் காணச்செய்யும் முறைபோல, இறைவன் உயிரறிவிற் கலந்து பொருள்களை அறியச் செய்வான். இவ்வாறு செய்வதே, `காட்டும் உபகாரம்` எனப்படும்.

இனிக் கதிரவன் ஒளி கலந்தமையால் விளக்கம் பெற்ற பின்னும் கண்ணொளிதானே சென்று உருவத்தைக் காணமாட்டாது அதனோடு ஆன்மாவினது அறிவும் உடன்சென்று அறிந்தால்தான், கண் உருவத்தைக் காணும் அதுபோல, இறைவனது கலப்பால் விளக்கம் பெற்ற பின்பும் உயிரினது அறிவு, தானே சென்று ஒன்றை அறியமாட்டாது அதனோடு இறைவனும் உடன்சென்று அறிந்தால் தான் உயிர், பொருளை அறியும். ஆகவே, உயிர்கள் அங்ஙனம் அறிதற் பொருட்டு அவற்றோடு தானும் உடன்நின்று அறிதலே, `காணும் உபகாரம்` எனப்படும். இவற்றின் இயல்பெல்லாம் சிவஞானபோதம் முதலிய சித்தாந்த நூல்களாலும், உரைகளாலும் இனிது உணரற்பாலன.

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறஎறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ஒளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மால்அறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே. **#2**

என்னுடைய துயரங்களைப் போக்கி என்னை அடியவனாக ஏற்றுக்கொண்டு, என் உள்ளத்தில் உள்ள அறியாமையைச் செய்யும் ஆணவமலத்தை அடியோடு போக்குதலால் வெளிப்பட்டு விளங்கும்

தூய்மையான அழகிய விளக்குப் போன்ற ஆன்ம அறிவினுள் ஒளிமயமாகக் காட்சி வழங்கும் மேம்பட்ட சோதியே! பகைவர்களை அழிக்கும் காளையை வாகனமாக உடையவனே! பொன்னம்பலத்தில் கூத்து நிகழ்த்துபவனே! பிரமனும் திருமாலும் உன் உண்மை உருவத்தை அறியமுடியாதபடி எங்கும் பரவும் ஒளியைப் பரவச்செய்து எல்லா இடங்களிலும் வியாபித்து நிற்கும் உன்னை உன் அடியவனாகிய நான் வணங்கும்படியாக நீ திருவுள்ளம் கொண்டு செயற்படுவாயாக.

விளக்கவுரை

இருட்பிழம்பு என்றது, அறியாமையைச் செய்யும் ஆணவ மலத்தை. சுடர்மணி விளக்கு என்றது, அம்மலத்தின் நீங்கி விளங்கும் ஆன்ம அறிவினை. தூயநற் சோதி எனப்பட்டதும் அதுவே. `ஒளியாய்` என ஆக்கம் வருவிக்க. சோதியுட் சோதி என்றது, வாளா பெயராய் நின்றது. எனவே, `சுடர்மணி விளக்கினுள் ஒளி விளங்கும்` என்றது, இப்பெயர்ப் பொருளை விரித்தவாறாம். பரஞ்சுடர்ச் - சோதியுட் சோதி யாய்நின்ற சோதியே *(தி.5. ப.97. பா.3)* என்றும், சோதியாய் எழும் சோதியுட் சோதிய *(தி.12. தடுத் - 192)* என்றும் வருவனவற்றால், இறைவன், `சோதியுட் சோதி` எனப்படுதல் அறிக. `எறிந்து விளங்கும் சோதி` என முடிக்க. அடல் - வலிமை. பாகன் - நடத்துபவன்.

அறியாமை - அறியாதபடி. `அறியாமை நின்றாயை` என இயையும்.

தற்பரம் பொருளே சசிகண்ட சிகண்டா
சாமகண் டா அண்ட வாணா
நற்பெரும் பொருளாய் உரைகலந் துன்னை
என்னுடை நாவினால் நவில்வான்
அற்பன்என் உள்ளத் தளவிலா உன்னைத்
தந்தபொன் னம்பலத் தரசே
கற்பமாய் உலகாய் அல்லைஆ னாயைத்
தொண்டனேன் கருதுமா கருதே. **#3**

`தத்` என்ற சொல்லால் குறிக்கப்படும் மேம்பட்ட பொருளே! சந்திரனைச் சூடிய முடியினை உடையவனே! சாமவேதம் பாடும் குரல்வளையை உடையவனே! சிதாகாசத்தில் வாழ்கின்ற வனே! அங்கு மேம்பட்ட பரம்பொருளாய் இருப்பவனே! எனக்குத் தெரிந்த சொற்களைக்கொண்டு உன்னை என் நாவினால் புகழும்படி என் சிறிய உள்ளத்தில் எல்லை காணமுடியாத உன்னைத் தங்கச் செய் துள்ள பொன்னம்பலத்துக் கூத்தாடும் அரசே! ஊழிக் காலங்களாக வும், அந்தக் கால எல்லைக்குள் தோன்றி மறையும் பொருள்களாக வும், அவற்றின் வேறுபட்டவனாகவும் உள்ள உன்னைத் தொண்ட னாகிய நான்

தியானிக்குமாறு என்திறத்து நீ செயற் படுவாயாக!

விளக்கவுரை

தத் பரம்பொருள் - வேதத்துள், `தத்` என்னும் சொல்லால் குறிக்கப்படும் பரம்பொருள். `தன் பரம்` எனப் பிரித்து, தனக்கு மேலான - உணர்கின்ற பொருட்கு (உயிர்கட்கு) மேலாய பொருள் என உரைத்தலும் உண்டு. சசிகண்டன் - நிலாத் துண்டத்தை யணிந்தவன். இப்பெயர் விளியேற்றது - சீகண்டன் என்பது முதல்குறுகி, விளியேற்றது. சிகண்டம், முடி என்பாரும் உளர். சாமகண்டன் - கருமையான கழுத்தை உடையவன் `சாமவேதம் முழங்கும் குரலை உடையவன்` என்றலும் உண்டு. அண்டம் என்றது, சிதாகாசத்தை. நற்பெரும்பொருள் என்றதில், பொருள், சொற்பொருள். உரைகலந்து - எனது சொல்லிற்சேர்த்து. அற்பன் - சிறியன். கற்பம் - ஊழிக்காலம். உலகு - அக்கால எல்லைக்குள் தோன்றி நின்று ஒடுங்கும் பொருள்கள்.

பெருமையிற் சிறுமை பெண்ணொடா ணாய்என்
பிறப்பிறப் பறுத்தபே ரொளியே
கருமையின் வெளியே கயற்கணாள் இமவான்
மகள்உமை யவள்களை கண்ணே
அருமையின் மறைநான் கோலமிட் டரற்றும்
அப்பனே அம்பலத் தமுதே
ஒருமையிற் பலபுக் குருவினின் றாயைத்
தொண்டனேன் உரைக்குமா றுரையே. #4

பெருமையாய் உள்ள நிலையிலேயே சிறுமையாக வும், பெண்ணாய் இருக்கும் நிலையிலேயே ஆணாகவும் இவ்வாறு உலகியலுக்கு வேறுபட்டவனாய் இருந்து என்னுடைய பிறப்பு இறப்புக்களைப் போக்கிய பெரிய ஞானவடிவினனே! கருமையாய் இருக்கும் நிலையிலேயே வெண்மையாய் இருப்பவனே! கயல்மீன் போன்ற கண்களையுடையவளாய், இமயமலைத் தலைவனான இம வானுடைய மகளான உமாதேவிக்குப் பற்றுக்கோடாக உள்ளவனே! மேம்பட்டனவாகிய நான்கு வேதங்களும் உன்னை உள்ளவாறு அறியமுடியாமல் பேரொலி செய்து புகழும் தலைவனே! அம்பலத்தில் காட்சி வழங்கும் அமுதே!நீ ஒருவனாகவே இருந்து எல்லாப் பொருள் களிலும் அந்தர்யாமியாய் ஊடுருவி நிற்கும் உன்னை அடியவனாகிய யான் பலவாறு என்சொற்களால் புகழுமாறு நீ என்னுள் இருந்து செயற்படுவாயாக.

விளக்கவுரை

பெருமையின் - பெருமையாய் உள்ளநிலையிற்றானே. கருமையின்

ஒருமையின் என்பவற்றிற்கும் இவ்வாறு உரைக்க. ஆய் என்றதனை, `சிறுமை` என்றதற்கும் கூட்டுக. வெளி - வெண்மை. களைகண்ணே என்பதில் ணகர ஒற்று விரித்தல். களை கண் - பற்றுக்கோடு `கொழுநன்` என்பதும் இப்பொருட்டு. மறை என்றது பெயராகலின், சாரியை உள்வழித் தன்னுருபு கெட்டது. *(*தொல். எழுத்து *157)* எனவே, `அருமையையுடைய மறை` என்பது பொருளாயிற்று.

கோலமே மேலை வானவர் கோவே
குணங்குறி இறந்ததோர் குணமே
காலமே கங்கை நாயகா எங்கள்
காலகாலா காம நாசா
ஆலமே அமுதுண் டம்பலம் செம்பொற்
கோயில்கொண் டாடவல் லானே
ஞாலமே தமியேன் நற்றவத் தாயைத்
தொண்டனேன் நணுகுமா நணுகே. **#5**

அடியவர்களுக்காக அவர்கள் விரும்பிய வடிவம் கொள்பவனே! மேம்பட்ட தேவர்களின் தலைவனே! பண்புகளும் வடிவங்களும் இல்லாமையையே பண்பாக உடையவனே! காலத்தை உன் வயத்தில் அடக்கி இருப்பவனே! கங்கையின் தலைவனே! எங்களுக்குத் தலைவனாக அமைந்தவனாய்க் காலனுக்குக் காலனாக இருப்பவனே! மன்மதனை அழித்தவனே! விடத்தையே அமுதம் போல உண்டு, கூத்தாடும் இடத்தைப் பொன்மயமான கோயிலாகக் கொண்டு கூத்தாடுதலில் வல்லவனே! உலகமே வடிவானவனே! தன்னுணர்வு இல்லாத அடியேன் பெரிய தவத்தை உடைய உனக்குத் தொண்டனாகி உன்னை அணுகுமாறு நீ திருவுள்ளம் பற்றிச் செயற்படுவாயாக.

விளக்கவுரை

கோலம் - உருவம். குணம் குறி இறந்ததோர் என்பது, தாப்பிசையாய் இதனோடும் இயையும். குணம் குறிகள், ஆண்மை பெண்மைகளை அறிய நிற்பனவவாம். உருவமும், குணமும் உடைய வனை அவையேயாகவும், காலத்தின்கண் ஒற்றித்து நிற்பவனை, `காலம்` எனவும் கூறியவை, பான்மை வழக்கு. கோலமே முதலிய மூன்றாலும் உலகின் வேறுபட்ட தன்மையைக் கூறியவாற்றால், அத்தன்மையானே யாவர்க்கும் முதல்வனாதலைக் குறிக்க, மேலை வானவர் கோவே என்றார். இது, காலமே என்றதன் பின்னர்க் கூட்டியுரைக்கற்பாலது. `அமுதாக` எனவும், `கோயிலாக` எனவும் ஆக்கச்சொற்கள் வருவிக்க. ஞாலமே - உலகத்தில் அதுவாய்க்கலந்து நிற்பவனே. `தமியேன் தவம்` என இயையும். நற்றவம், சரியை, கிரியா யோகங்கள். தவத்தாயை - தவத்தின் பயனாய்க் கிடைத்த உன்னை. நணுகுதல் - சார்தல்.

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடைஎம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடிஎம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசைய. **#6**

திருநீற்றை அணிந்த செந்நிறமான பவளமலை போல்பவனே! நிலைபெற்ற நெற்றிக்கண்ணை உடைய, நெருப்பின் நிறத்தினனே! பல்வேறுவகைப்பட்டனவாய் வரிசையாக அமைந்த இவ்வுலக இன்பங்களே வடிவானவனே! முத்தி இன்பம் தரும் வெள்ளம் போல்பவனே! மேருமலையை வில்லாக வளைத்த வீரனே! கங்கையை அணிந்த சடையை உடைய, எங்களுடைய வியக்கத்தக்க கூத்து நிகழ்த்துபவனே! அழகிய பொன்னம் பலத்து அரசே! காளையின் வடிவம் எழுதப்பட்ட கொடியை உயர்த்திய, எம்மை அடக்கி ஆள்பவனே! உன்னை, அடியவனாகிய நான் கூடுமாறு நீ திருவுள்ளம் பற்றிச் செயற்படுவாயாக.

விளக்கவுரை

நீறு அணி பவளக்குன்றம், நெற்றிக்கண் உடையதோர் நெருப்பு என்ற இரண்டும் இல்பொருள் உவமைகள். நின்ற - நிலை பெற்ற. `நின்ற நெருப்பு` என இயையும். நெருப்பு என்றது, அஞ் ஞானத்தால் அணுகலாகாமைபற்றி, வேறு அணி புவனபோகம் - வேறு பட்ட நிரையாகிய உலகங்களில் உள்ள நுகர்ச்சிகள். யோகம் என்றது, `முத்தி` என்னும் பொருட்டாய் அந்நிலையில் விளையும் இன்பத்தைக் குறித்தது; எனவே, இவ்விரண்டாலும், இறைவன் பந்தமும், வீடுமாய் நிற்றலைக் குறித்தவாறாதல் அறிக. அற்புதம் - வியப்பு; புதுமை. `அம் பொன்னால் செய்த` என மூன்றாவது விரிக்க; தூயசெம் பொன்னினால் - எழுதி மேய்ந்த சிற்றம்பலம் என்று அப்பரும் அருளிச்செய்தார். இசைதல் - கூடுதல்.

தனதன்நற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமரர்சே கரனே
நுனகழ லிணையென் நெஞ்சினுள் இனிதாத்

தொண்டனேன் நுகருமா நுகரே. #7

குபேரனுடைய நண்பனே! எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்பவனே! சூலத்தைக் கையில் ஏந்தியவனே! என்றும் நிலை பெற்றிருப்பவனே! மங்களமான வடிவினனே! பொன் மயமான பெரிய தூண் போல்பவனே! கற்பக மரத்தின் கொழுந்தினை ஒப்பவனே! மூன்று கண்களை உடைய கரும்பு போன்ற இனியனே! பாவம் இல்லாதவனே! முருகனுக்கும் விநாயகனுக்கும் தந்தையே! பொன்னம்பலத்தில் தேவர்கள் தலைவனாக உள்ளவனே! உன் திருவடிகளை என் உள்ளத்தில் இனிமையாக அடியேன் அநுபவிக்குமாறு நீ திருவுள்ளம் பற்றிச் செயற்படுவாயாக.

விளக்கவுரை

தனதன் - குபேரன். தாணு - நிலைபெற்றிருப்பவன். கனகநற் றூணே என்றதை, மாசொன்றில்லாப் - பொற்றூண்காண் *(தி. 6. ப.8. பா.1)* என்றதனோடு வைத்துக் காண்க. கொழுந்து - தளிர்; இஃது அழகு மிக்கதாய் இன்பம் தருவது. கண்கள் - கணுக்களைக் குறித்த சிலேடை. அனகன் - பாவம் இல்லாதவன்; என்றது. `வினைத் தொடக்கு இல்லாதவன்` என்றதாம். குமரன் - முருகன். `குமர விநாயகர்` என்னும் உயர்திணை உம்மைத் தொகை ஒரு சொல் லாய்ப்பின், சனகன் என்பதனோடு, நான்காவதன் தொகைபடத் தொக்கது. சனகன் - தந்தை. அமரர் சேகரன் - தேவர் கூட்டத்திற்கு மகுடம்போல விளங்குபவன். இஃது ஒருசொல் தன்மைப்பட்டு, `அம்பலத்து` என்றதனோடு தொகைச் சொல்லாயிற்று. `அமரசேகரன்` எனவும் பாடம் ஓதுப. `நின்` என்பது, திருமுறைகளில், `நுன்` என வருதலை அறிந்துகொள்க. நுகருமா நுகரே என்றது நுன என்றதற்குரிய மோனை நோக்கியாகலின், `உன கழலிணை` என்பது பாடம் ஆகாமை அறிக. இணை என்றமையின். இனிதா என ஒருமையாகக் கூறினார். நுகர்தல் - அநுபவித்தல்.

திறம்பிய பிறவிச் சிலதெய்வ நெறிக்கே
திகைக்கின்றேன் றனைத்திகை யாமே
நிறம்பொன்னும் மின்னும் நிறைந்தசே வடிக்கீழ்
நிகழ்வித்த நிகரிலா மணியே
அறம்பல திறங்கண் டருந்தவர்க் கரசாய்
ஆலின்கீழ் இருந்தஅம் பலவா
புறஞ்சமண் புத்தர் பொய்கள்கண் டாயைத்
தொண்டனேன் புணருமா புணரே #8

மாறி வருகின்ற பிறவிகளில் அகப்படும் சில தெய்வங்களைப் பரம்பொருளாகக் கருதி அவற்றை அடைவதற்குரிய வழிகளிலே உள்ளம் மயங்கும் அடியேனை, மயங்காதவாறு நல்ல நிறத்தை உடைய பொன் போலவும் மின்னல் போலவும் ஒளி நிறைந்த உன் திருவடிகளின் கீழே

ஈடுபடச்செய்த ஒப்பில்லாத மணி போல்பவனே! அறத்தின் பல கூறுபாடுகளையும் ஆராய்ந்த சனகர் முதலிய மேம்பட்ட தவத்தோர்கள் தலைவனாய் ஆலமரத்தின்கீழ்க் குருமூர்த்தியாய் அமர்ந்த பொன்னம்பலவனே! வைதிக சமயத்துக்குப் புறம்பான சமணர், புத்தர் என்பவர்களுடைய மயக்க நெறிகளையும் உண்டாக்கிய உன்னை அடியனேன் அடையுமாறு நீ திருவுள்ளம் பற்றிச் செயற்படுவாயாக.

விளக்கவுரை

திறம்பிய - மாறி வருகின்ற. சில என்றது, இழிபு கருதி. `நெறிக்கண்ணே` என்பது `நெறிக்கே` என வந்தது உருபு மயக்கம். `நெறிக்கே நின்று` என்றுஒருசொல் வருவிக்க.

பிறவியுடைய தெய்வங்களைப் பிறவி இல்லாத கடவுளாகக் கருதுதல் மயக்க உணர்வாதலின், திகைக்கின்றேன் என்றார். நிறைந்த என்றதற்கு நிறைந்தாற்போன்ற என உரைக்க. நிகழ்வித்த - வாழச் செய்த. திறம்- வகை. `திறமாக, புறமாக` என ஆக்கம் வருவிக்க. கண்டு - வகுத்து. `அருந்தவர், நால்வர்` என்க. என்னை*?*

நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடி

(தி.8. திருச்சாழல் - 16) என்பது முதலாக அருளிச் செய்யப்படுதலின். அருந்தவர்க்கு அரசு, ஆசான் மூர்த்தி. புறம் - வேதாகமங்கட்குப் புறமாம்படி. சமண் என்றது, குழூஉப் பெயர். பொய்கள் - மயக்க நெறிகள். கண்டாயை - உளவாக்கிய உன்னை. சமண புத்த மதங்களையும் சிவபெருமானே உண்டாக்கினான் என்பதை,
துணைநன்மலர் தூய்த்தொழுந் தொண்டர்கள் சொல்லீர்
பணைமென்முலைப் பார்ப்பதி யோடுட னாகி இணையில்இரும் பூளை இடங்கொண்ட ஈசன் அணைவில்சமண் சாக்கியம் ஆக்கிய வாறே. *(தி. 2 ப.36 பா.9)*

என ஞானசம்பந்தர் அருளிச்செய்தமையான் அறிக. `தெய்வக் கொள்கையற்ற சமயங்களையும் உன்னை அடைதற்குப் படிவழியாக அமைத்த நீ, சில தெய்வக்கொள்கையுடைய பிற நெறியில் நின்ற என்னை உன்னை அடையுமாறு செய்தல் கூடாதோ` என்பது கருத்து. இத்திருப்பாட்டு, `இவ்வாசிரியர் முதற்கண் மாயோன் நெறியில் நின்று, பின்னர்ச் சிவநெறியை எய்தினார்` எனக் கூறுவாரது கூற்றிற்குத் துணைசெய்யும்.

தக்கன்நற் றலையும் எச்சன்வன் றலையும்
தாமரை நான்முகன் தலையும்
ஒக்கவிண் டுருள ஒண்டிருப் புருவம்
நெறித்தரு ளியஉருத் திரனே
அக்கணி புலித்தோ லாடைமேல் ஆட
ஆடப்பொன் னம்பலத் தாடும்
சொக்கனே எவர்க்கும் தொடர்வரி யாயைத்
தொண்டனேன் தொடருமா தொடரே. **#9**

தக்கனுடைய மேம்பட்ட மனிதத் தலையும், வேள்வித்தலைவனுடைய வலிய தலையும், தாமரை மலரில் உள்ள நான்கு முகத்தவனாகிய பிரமனுடைய ஐந்தாம் தலையும், ஒரு சேரத் துண்டமாகி உருளுமாறு ஒளி பொருந்திய அழகிய புருவத்தை நெறித்து வெகுண்ட, அழித்தற்றொழில் உடையவனே! சங்குமணிகள் மேலே அணியப்பெற்ற புலித்தோலை ஆடையாக அணிந்து, அம்மணிகளும் தோலாடையும் பலபடியாக அசையுமாறு பொன்னம்பலத்தில் ஆடும் அழகனே! எத்தகைய தவ வலிமை உடையவரும் தம் முயற்சியால் அணுகமுடியாதபடி உள்ள உன்னை உன் அடியவனாகிய நான் தொடர்ந்து வருமாறு நீ திருவுள்ளம் பற்றிச் செயற்படுவாயாக.

விளக்கவுரை

இத்திருப்பாட்டின் முதல் இரண்டடிகளுட் போந்த பொருளை,
தக்கனையும் எச்சனையும் தலையறுத்துத் தேவர்கணம் தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ

(தி.8 திருச்சாழல் - 5)

எனவும்,

நாமகள் நாசி சிரம்பிர மன்பட *(தி.8 திருவுந்தியார் - 13)*

எனவும் திருவாசகத்துள்ளும் போந்தமை காண்க. `எச்ச வன்தலை` எனவும் பாடம் ஓதுப. புருவம் நெறித்தருளிய என்றது, `வெகுண்ட` என்றவாறு. `புலித்தோல் ஆடைமேல் அக்குஅணி ஆடஆட ஆடும் சொக்கன்` என்க. அக்கு அணி - எலும்பு மாலை. சொக்கன் - அழகன். தொடர்தல் - இடை விடாது பற்றுதல்.

மடங்கலாய்க் கனகன் மார்புகீண் டானுக்
கருள்புரி வள்ளலே மருளார்
இடங்கொள்முப் புரம்வெந் தவியவை திகத்தேர்

ஏறிய ஏறுசே வகனே
அடங்கவல் லரக்கன் அரட்டிரு வரைக்கீழ்
அடர்த்தபொன் னம்பலத் தரசே
விடங்கொள்கண் டத்தெம் விடங்கனே உன்னைத்
தொண்டனேன் விரும்புமா விரும்பே.? #10

நரசிம்ம மூர்த்தியாய் இரணியகசிபுவினுடைய மார்பை நகத்தால் பிளந்த திருமாலுக்கு அருள் செய்த வள்ளன்மையை உடையவனே! மயக்கமாகிய அஞ்ஞானத்தை உடைய அசுரர்கள்தம் இருப்பிடமாகக் கொண்ட மூன்று மதில்களும் வெந்து சாம்பலாகுமாறு வேதங்களாகிய குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் இவர்ந்த, காளையை வாகனமாக உடைய வீரனே! வலிமை பொருந்திய அரக்கனாகிய இராவணனுடைய செருக்கு அழியுமாறு மேம்பட்ட கயிலைமலைக்கீழ் அவனை வருத்திய பொன்னம்பலத்து அரசனே! விடம் தங்கிய நீலகண்டத்தையுடைய எங்கள் அழகனே! உன்னைத் தொண்டனாகிய அடியேன் விரும்புமாறு நீ திருவுள்ளம் பற்றிச் செயற்படுவாயாக.

விளக்கவுரை

மடங்கல் - சிங்கம்; நரசிங்கம். கனகன் - `இரணிய கசிபு` என்னும் அசுரன். இவ்வடி, சரப வரலாற்றைக் குறித்தல் கூடும். மருளார் - மருட்சியையுடையவரது. திரிபுரத்தசுரர் துர்போதனையால் மயங்கிச் சிவநெறியைக் கைவிட்டவராதல் அறிக. வைதிகத் தேர் - வேதத்தைக் குதிரையாகக் கொண்ட தேர். ஏறு சேவகன் - மிக்க வீரத்தை யுடையவன். அரக்கன் - இராவணன். அரட்டு - செருக்கு. இரு வரை - பெரிய மலை. `அருட்டிரு வரைக்கீழ்` எனவும் பாடம் ஓதுவர். விடங்கன் - அழகன்.

மறைகளும் அமரர் கூட்டமும் மாட்டா
தயன்திரு மாலொடு மயங்கி
முறைமுறை முறையிட் டோர்வரி யாயை
மூர்க்கனேன் மொழிந்தபுன் மொழிகள்
அறைகழல் அரன்சீர் அறிவிலா வெறுமைச்
சிறுமையிற் பொறுக்கும்அம் பலத்துள்
நிறைதரு கருணா நிலயமே உன்னைத்
தொண்டனேன் நினையுமா நினையே.? #11

வேதங்களும், தேவர்கள் குழாமும், பிரமனும், திருமாலோடு உள்ளம் மயங்கித் தம் முயற்சியால் உன்னை அறிய இயலாமல் தாம் உன்னை வழிபடும் முறையாலே பலவாறு வேண்டி யும் உன்னை உள்ளவாறு அறியமாட்டதவராய் இருப்பவும், அறிவற்ற வனாகிய அடியேன் சொல்லிய இந்த அற்பமான சொற்களை, வீரக்கழல்கள் ஒலிக்கும்

திருவடிகளை உடைய உன் சிறப்புக்களைச் சிறிதும் அறியாது இகழ்ந்து உரைக்கின்ற கொடிய சொற்களைப் பொறுக்கும் உனக்கு, பொறுத்துக்கொள்ளுதல் இயல்பாக உள்ளது. அத்தகைய, அம்பலத்துள் நிறைந்து காணப்படும் கருணைக்கு இருப்பிடமானவனே! உன்னை உன் தொண்டனாகிய அடியேன் விருப்புற்று நினைக்குமாறு நீ திருவுள்ளம் பற்றிச் செயற்படுவாயாக.

விளக்கவுரை

ஓர்வரியாய் எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, மாட்டாது என்றார். முறை முறை என்ற அடுக்கு, பன்மை பற்றி வந்தது. முறையிட்டும் என்னும் உயர்வு சிறப்பும்மை தொகுத்தலா யிற்று. `ஓர்ப்பரியாயை` என்பதும் பாடம். அரன் என முன்னிலையிற் படர்க்கை வந்தது. அரன்சீர் அறிவிலா வெறுமைச் சிறுமையிற் பொறுக்கும் என்றது, `உனது பெருமையைச் சிறிதும் அறியாது இகழும் அறிவிலிகளது இகழுரையைப் பொறுத்துக் கொள்ளுதல் போலப் பொறுத்துக் கொள்கின்ற` என்றபடி. வெறுமை- அறிவின்மை. சிறுமை - இகழ்ச்சி. இவ்விரண்டும் ஆகுபெயர்களாய் அவற்றை உடைய மக்கள்மேலும், சொற்கள்மேலும் நின்றன. `சிறிதும் அறியாது இகழ்ந்துரைக்கின்ற வன் சொற்களைப் பொறுப்பவனுக்குச் சிறிது அறிந்து புகழ்கின்ற புன் சொல்லைப் பொறுத்தல் இயல்பே என்றற்கு அவ்வன்சொற் பொறுத்தலை உவமையாக்கினார். `பொறுக்கும் கருணாநிலயமே` என இயையும். நிலயம் - இருப்பிடம். இறுதித் திருப்பாட்டுக்களில் தம்மைப்பற்றிக் குறிக்கின்ற இவ்வாசிரியர், அவற்றைத் திருக்கடைக்காப்பாக அருளாது, தமது பாடலை இறைவன் ஏற்றருள வேண்டிக் கூறுகின்றார்.

திருமாளிகைத் தேவர் - கோயில் - உயர்கொடி யாடை

உயர்கொடி யாடை மிடைபட லத்தின்
ஓமதூ மப்பட லத்தின்
பியர்நெடு மாடத் தகிற்புகைப் படலம்
பெருகிய பெரும்பற்றப் புலியூர்
சியரொளி மணிகள் நிரந்துசேர் கனகம்
நிறைந்தசிற் றம்பலக் கூத்தா
மயரறும் அமரர் மகுடந்தோய் மலர்ச்சே
வடிகள் என் மனத்துவைத் தருளே.
#12

உயர்ந்த துணிகளாலாகிய கொடிகளின் தொகுதி களின்மேல், வேள்வியில் எழுந்த புகைப் படலமும், அதன் மீது பெரிய மாடவீடுகளிலிருந்து வெளிவரும் அகிற்புகைப்படலமும் மிகுதியாகக் காணப்படும் பெரும்பற்றப் புலியூரில், மேம்பட்ட ஒளியை உடைய மணிகள் வரிசையாகப் பதிக்கப்பெற்ற தங்கம் நிறைந்திருக்கும் சிற்றம் பலத்தில் கூத்து நிகழ்த்தும் பெருமானே! அஞ்ஞானமாகிய மயக்கம் நீங்கிய தேவர்களின் முடிகள் தங்கப் பெறும் தாமரைப் பூப்போன்ற உன் சிவந்த திருவடிகளை அடியேனுடைய உள்ளத்தில் நீ வைத்தருளு வாயாக.

விளக்கவுரை

`நெடுமாடத்து` என்பதனை முதலிற் கூட்டுக, மிடை - நெருங்கிய. படலம் - கூட்டம். தூமம் - புகை. பியர், `பியல்` என்பதன் போலி, `பிடர்` என்பது பொருள், இதனைக் கொடிப்படலத்திற்கும் கூட்டுக, ``பியர்`` என்பதை, `பெயர்` எனவும் பாடம் ஓதுவர், ஓங்கி யுள்ள மேல்மாடங்களில் உயர்த்தப்பட்டுள்ள கொடிச் சீலைகளின் கூட்டத்தின்மேல் ஓமத்தின் புகையும், அவ்வோமப் புகைப்படலத்தின் மேல் அகிற்புகைப் படலமும் நிறைந்திருக்கின்ற பெரும்பற்றப் புலியூர்` என்றவாறு. சியர் ஒளி - விளக்கத்தை யுடைய ஒளி, மயர் - மயக்கம், `மயர்வு` என்பதும் பாடம். சேவடிகளையே கூறினாராயினும், திரு வுருவம் முழுவதையும் கூறுதல் கருத்தென்க.

கருவளர் மேகத் தகடுதோய் மகுடக்
கனகமா ளிகைகலந் தெங்கும்
பெருவள முத்தீ நான்மறைத் தொழிலால்
எழில்மிகு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் தெய்வப் பதிவிதி நிதியந்
திரண்டசிற் றம்பலக் கூத்தா

உருவளர் இன்பச் சிலம்பொலி அலம்பும்
உன்அடிக் கீழதென் உயிரே. #13

நீரை மிகுதியாக முகந்த மேகத்தின் வயிற் றிடத்தைத் தொடும் சிகரத்தை உடைய பொன் மயமான பேரில்லங் களில் எங்கும் பரவி மிக்கவளத்தை நல்கும் நான்மறை விதிப்படி நிகழ்த்தப் பெறும் முத்தீக்களை ஓம்பும் தொழிலால் பொலிவு மிகுந் துள்ள பெரும்பற்றப் புலியூர் ஆகிய செல்வம் மிகுந்த தெய்வம் உகந் தருளியிருக்கும் திருத்தலத்தில் முறைப்படி செய்யும் தெய்வ வழி பாடாகிய செல்வம் நிறைந்து காணப்படும் சிற்றம்பலத்தில் கூத்து நிகழ்த்துபவனே! அழகு மிகுந்த சிலம்பின் இனிய ஒலியை வெளிப் படுத்தும் உன் திருவடிகளின் கீழ் அடியேனுடைய ஆன்மா உள்ளது.

விளக்கவுரை

கருவளர் - சூல் மிகுந்த. அகடு - வயிற்றின்கண், `மகுடம்` என்றது, சிகரத்தை, கலந்து - கலக்கப்பட்டு. பெரும் பற்றப் புலியூராகிய `தெய்வப்பதி` எனவும், `தெய்வப் பதிச் சிற்றம்பலம்` எனவும் இயையும். திரு - அழகு, விதி நிதியம் - முறைப்படி செய்யும் வழி பாடாகிய செல்வம். உரு - அழகு, `உருவளர் சிலம்பு` என்க. அன்றி, `உருவளர் அடி` எனலுமாம், நான்மறைத் தொழில்சால்` எனவும், தெய்வப்பதி வதி` எனவும் பாடம் ஓதுப.

வரம்பிரி வாளை மிளிர்மடுக் கமலம்
கரும்பொடு மாந்திடு மேதி
பிரம்பிரி செந்நெற் கழனிச்செங் கழுநீர்ப்
பழனஞ்சூழ் பெரும்பற்றப் புலியூர்ச்
சிரம்புரை முடிவா னவர்அடி முறையால்
இறைஞ்சுசிற் றம்பலக் கூத்தா
நிரந்தரம் முனிவர் நினைதிருக் கணைக்கால்
நினைந்துநின் றொழிந்ததென் நெஞ்சே.
#14

கரைக்குமேலே அஞ்சிப்பாய்கின்ற வாளைகள் கீழ் மேலாகப் பிறழ்கின்ற மடுக்களில் வளர்ந்த தாமரைகளை வயல்களில் விளையும் கரும்போடு வயிறார உண்ட எருமைகளை உடைய, பிரம்பிரி என்ற செந்நெற் பயிர்கள் வளரும் வயல்களில் செங்கழுநீர் களையாகக் காணப்படும் மருத நிலத்தால் சூழப்பட்ட பெரும்பற்றப் புலியூரிலே தலையின் கண் உயர்ந்த முடியினை அணிந்த தேவர்கள் தங்களுக்கு உரிய முறைப்படி வந்து திருவடிகளை வணங்குகின்ற, சிற்றம்பலத்தில் கூத்து நிகழ்த்துபவனே! எப்பொழுதும் முனிவர்கள் விருப்புற்றுத் தியானம் செய்யும் உன் அழகிய கணைக்கால்களை விருப்புற்று நினைத்து என்

உள்ளம் அவற்றிலேயே தங்கிவிட்டது.

விளக்கவுரை

வரம்பு இரி - கரைக்குமேல் பாய்கின்ற, மிளிர் - பிறழ் கின்ற. கரும்பு, பின்னர்க் கூறப்படுகின்ற செந்நெல் வயலில் உள்ளது. மாந்திடும் - உண்கின்ற. மேதி - எருமை, பிரம்பு இரி - பிரப்பம்புதரில் செல்கின்ற. `செந்நெற் கழனியையுடைய பழனம்` என்க. பழனம் - மருத நிலம். `சிரம் புரைமுடி - தலையின்கண் உயர்ந்த முடியை அணிந்த, முறையால் - தமக்கேற்ற வரிசையில். `மாந்து மேதிகள் சேர்` `பரம்பிரி` `கழனிசெங்கழுநீர்`, `சிரம்புணர்முடி` என்பனவும் பாடங்கள். பிரம்பிரி- செந்நெல் விசேடம் என்பதும் ஆம்.

தேர்மலி விழவிற் குழலொலி, தெருவில்
கூத்தொலி, ஏத்தொலி, ஓத்தின்
பேரொலி பரந்து கடலொலி மலியப்
பொலிதரு பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்நில விலயத் திருநடத் தியல்பிற்
றிகழ்ந்தசிற் றம்பலக் கூத்தா
வார்மலி முலையாள் வருடிய திரள்மா
மணிக்குறங் கடைந்ததென் மதியே. **#15**

தேர்கள் மிகுதியாக உலவும் விழாக்காலங்களில் வேய்ங்குழல் ஒலியும், தெருவில் கூத்துக்கள் நிகழ்த்துதலால் ஏற்பட்ட ஒலியும், அடியார்கள் இறைவனைப் புகழ்கின்ற ஒலியும், வேதங்களை ஓதுதலால் வெளிப்படும் பெரிய ஒலியும் பரவிக்கடல் ஒலியைப் போலப் பொலிவு பெறுகின்ற பெரும்பற்றப் புலியூரில், சிறப்புடைய தாளத்திற்கு ஏற்ப மேம்பட்ட கூத்தின் இயற்கையிலே சிறந்து விளங்கிய, சிற்றம்பலத்தில் கூத்து நிகழ்த்துபவனே! கச்சணிந்த முலை யினை உடைய உமாதேவி மெதுவாக அழுத்திப் பிடிக்கும் திரட்சியை உடைய மேம்பட்ட அழகினை உடைய துடைகளில் அடியேனுடைய உள்ளம் பொருந்தியுள்ளது.

விளக்கவுரை

`தெருவில்` என்பதனை முதலிற் கொள்க. ஓத்து - வேதம். `கடல் ஒலி போல` என உவம உருபு விரிக்க, `பெரும்பற்றப் புலியூரின்கண் திகழும்` என்க. `சீர்` என்பது தாள அறுதி. இலயம் - தாளம். `இயல்பின்`` என்றதில் இன், சாரியை. `இயல்பினோடு` என மூன்றாவது விரிக்க. மா - சிறந்த. மணிக் குறங்கு - அழகிய துடை.

நிறைதழை வாழை நிழற்கொடி நெடுந்தெங்
கிளங்கமு குளங்கொள்நீள் பலமாப்
பிறைதவழ் பொழில்சூழ் கிடங்கிடைப் பதண

முதுமதிற் பெரும்பற்றப் புலியூர்ச்
சிறைகொள்நீர்த் தரளத் திரள்கொள்நித் திலத்த
செம்பொற்சிற் றம்பலக் கூத்தா
பொறையணி நிதம்பப் புலியதள் ஆடைக்
கச்சுநூல் புகுந்ததென் புகலே.

#16

தழைத்து நிறைந்த வாழைகள், நிழல் ஒழுங்கினை வழங்குகின்ற உயரிய தென்னைகள், இளைய பாக்கு மரங்கள், மனத்தைக் கவரவல்ல இனிய, பழங்களை உடைய நீண்ட பலா மரங்கள், மாமரங்கள் ஆகியவற்றை உடைய வானளாவிய சோலை களால் சூழப்பட்ட கிடங்கினைத் தன்னைச் சூழுப்பெற்ற கொண்டுள்ள மேடைகளை உடைய பழைய மதில்களால் சூழப்பட்ட பெரும்பற்றப் புலியூரிலே அணையால் தடுக்கப்பட்ட நீர்த்தொகுதியிலே, தரளம், நித்திலம் என்ற முத்துவகைகள் தோன்ற, செம்பொன் மயமான சிற்றம் பலத்திலே கூத்து நிகழ்த்துபவனே! இருப்பு உறுப்பிலே புலித்தோல் ஆடை நெகிழாதபடி அதற்குக் காப்பாக அணிந்துள்ள கச்சு நூலிலே அடியேனுடைய விருப்பம் பொருந்திவிட்டது.

விளக்கவுரை

`நிறைந்த, தழைத்த வாழை` என்க. `வாழை தெங்கு, கமுகு, பலா, மா என்பவற்றின் மேல் பிறை தவழ் பொழில்` என்றவாறு, இவற்றோடு இயைபில்லாத துகிற்கொடியை இடை வைத்தார்; பிறை தவழப் பெறுதலாகிய ஒப்புமை பற்றி. எனவே, அதனை முதலிற் கூட்டி, `நிழற்கொடியோடு` என வேறுவைத்துரைக்க, `பலா என்பது ஈறு குறுகி நின்றது; செய்யுளாதலின் உகரம் பெறாது வந்தது. கிடங் கினை (ச்சூழ) உடைய இடை மதில்` என்க. பதணம்- மதில் உறுப்பு, `தரளம், நித்திலம்` என்பன முத்தின் வகைகள். `அவற்றை உடைய செம்பொன்னால் இயன்ற சிற்றம்பலம்` என்றவாறு, இத்திருப் பாட்டினின்றும் சிலர், `கூத்த` என்றே பாடம் ஓதுவர். நிதம்பம் - அரை. பொறை அணி - உடைக்குக் காப்பாக அணியப்பட்ட கச்சு நூல்` என்க. `பொறையாக` என ஆக்கம் வருவிக்க. புகல் - விருப்பம்.

அதுமதி இதுஎன் றலந்தலை நூல்கற்
றழைப்பொழிந் தருமறை யறிந்து
பிதுமதி வழிநின் றொழிவிலா வேள்விப்
பெரியவர் பெரும்பற்றப் புலியூர்ச்
செதுமதிச் சமணும் தேரரும் சேராச்
செல்வச்சிற் றம்பலக் கூத்தா
மதுமதி வெள்ளத் திருவயிற் றுந்தி

வளைப்புண்டென் உளம்மகிழ்ந் ததுவே. #17

`அதுதான் ஞானம், இதுதான் ஞானம்` என ஒரு வழிப்படாது வருந்தி மனத்தை அலையச்செய்கின்ற பலநூல்களையும் கற்றுப் பலவாறு பிறரைக் கூப்பிட்டுத் தம் கொள்கைகளைப் பேசும் செயலை விடுத்து, அரிய வேதங்களைப் பொருள் தெரிந்து ஓதி எல்லா உயிர்களுக்கும் தந்தையாகிய நீ வகுத்த சிவஞானத்தின் வழியே ஒழுகி வேள்வி செய்தலை நீக்காத சான்றோர் வாழும் பெரும் பற்றப் புலியூரிலே, தீயபுத்தியை உடைய சமணரும் பௌத்தரும் வந்து சேராத செல்வத்தை உடைய சிற்றம்பலக் கூத்தனே! எல்லோரும் மதிக்கும் தேன்வெள்ளத்தைப் போன்று இனிய உன் அழகிய வயிற் றின் கொப்பூழின் அழகினால் வளைக்கப்பட்டு என் மனம் மகிழ்ச்சி யுறுகின்றது.

விளக்கவுரை

மதி - ஞானம். இது, தாப்பிசையாய் நின்றது. `அது ஞானம்; இது ஞானம் என்று பரந்து திரிதற்கு ஏதுவாகிய சமய நூல்கள்` என்க. ``கற்று`` என்றது, `அழைப்பு` என்பதனோடே முடியும். அழைப்பு - கூப்பீடு; பிதற்றொலி. பிது - `பித்ரு` என்பதன் சிதைவு, `எவ்வுயிர்க்கும் அப்பனாகிய உனது ஞானத்தின் *(சிவஞானத்தின்)* வழி நின்று என்றபடி` செது - தீமை. ``செதுமொழி சீத்த செவி`` *(கலி-68)* என வந்தமை காண்க. `சேராச் சிற்றம்பலம்` என இயையும், `மது வெள்ளம் போலும் திருவயிறு` என்க. வயிற்றை இவ்வாறு உவமித்தார், கொப்பூழ், `அவ்வெள்ளத்தில் தோன்றும் சுழிபோல்வது` என்பது விளங்குதற்கு. `நீர் வெள்ளம்` என்னாது, `தேன் வெள்ளம்` என்றது, இனிமை புலப்படுத்தற்கு. `மதி வெள்ளம்`. வினைத் தொகை. வளைப்புண்டு - கவரப்பட்டு. உள் - உள்ளம்.

பொருவரைப் புயத்தின் மீமிசைப் புலித்தோல்
பொடியணி பூணநூல் அகலம்
பெருவரை புரைதிண் தோளுடன் காணப்
பெற்றவர் பெரும்பற்றப் புலியூர்த்
திருமரு வுதரத் தார்திசை யடைப்ப
நடஞ்செய்சிற் றம்பலக் கூத்தா!
உருமரு வுதரத் தனிவடந் தொடர்ந்து
கிடந்ததென் உணர்வுணர்ந் துணர்ந்தே.

#18

மலையைப் போன்ற புயங்களின் மீது புலித் தோலினையும், திருநீற்றை அணிந்த பூணூல் தவழும் மார்பினையும், பெரிய மலைகள் போன்ற உறுதியான தோள்களுடன் காணும் பேறு பெற்றவராகிய பெரும்பற்றப்

புலியூரில் வாழும் செல்வம் பொருந்திய தகுதியை உடைய தில்லை மூவாயிரவர் நாற்றிசையும் சுற்றிலும் நெருங்கிநின்று காணக் கூத்து நிகழ்த்துகின்ற சிற்றம்பலக் கூத்தனே! அழகு பொருந்திய உன் வயிறுவரை தொங்கும் உருத்திராக்க மாலையில் என் அறிவு அதன் அழகை உணர்ந்து தொடர்ந்து தங்கிவிட்டது.

விளக்கவுரை

`பொரு புயம், வரைப் புயம்` எனத் தனித்தனி இயைக்க. புயமாவது வீரவளை யணியும் இடமாகலின், புயத்தின் மீமிசையாவது சுவல் அல்லது பிடர். புலித்தோல், உடையாதலேயன்றி உத்தரியமும் ஆம் என்க. அகலம் - மார்பு. ``உடன்`` என்றது, எண்ணொடுவின் பொருட்டு. `புலித்தோலும், அகலமும், தோளும் காணப்பெற்றவர் வாழும் பெரும்பற்றப் புலியூர்` என்க. இவற்றைக் காணும் தமது அவாவை, ``காணப்பெற்றார்`` எனப் பிறர்மேல் வைத்து விளக்கினார்.
எனவே, இதனுள் இறுதிக்கண் தாழ்வடத்தையே கூறினா ரெனினும், இவை, அனைத்தையும் தொகுத்துக் கூறுதல் கருத்தாகக் கொள்க.
இவை, வருகின்ற திருப்பாட்டிற்கும் ஒக்கும். பிறர் என்றது, சிறப்பாகத் தில்லைவாழ் அந்தணர்களை, `திருமருவு தரத்தார்` என்பது, திருமருவுதரத்தார்` என வகையுளியாயிற்று. திரு - அருள். தரத்தார் - மேன்மையுடையவர். ``திசை அடைப்ப`` என்றது, `சுற்றிலும் நெருங்கி நின்று காண` என்றவாறு, ``திசைமிடைப்ப`` என்றதும் பாடம், உரு - அழகு. உதரம் - வயிறு. தனிவடம் - ஒப்பற்ற தாழ்வடம்.

கணிஎரி விசிறுகரம் துடி விடவாய்க்
கங்கணம் செங்கைமற் றபயம்
பிணிகெட இவைகண் டுன்பெரு நடத்திற்
பிரிவிலார் பெரும்பற்றப் புலியூர்த்
திணிமணி நீல கண்டத்தென் னமுதே
சீர்கொள்சிற் றம்பலக் கூத்தா
அணிமணி முறுவற் பவளவாய்ச் செய்ய
சோதியுள் அடங்கிற்றென் அறிவே. **#19**

சிறப்பாக எண்ணத்தக்க நெருப்பு, சுழலுகின்ற கை, உடுக்கை, விடத்தை வாயிலே உடைய பாம்பாகிய கங்கணம், அபயம் அளிக்கின்ற சிவந்த கை என்ற இவற்றைப் பிறவிப்பிணி கெடத் தரிசித்து, உன்னுடைய பெரிய கூத்தினைக் காண்டலை நீக்காதவர் வாழும் பெரும்பற்றப் புலியூரில் நீலமணியின் செறிந்த நிறம் பொருந்திய கழுத்தினை உடைய, என் தெளிந்த அமுதம் போல் பவனே! சிறப்புப் பொருந்திய சிற்றம்பலத்தில் கூத்து நிகழ்த்துபவனே! அழகிய முத்துப் போன்ற பற்களை உடைய, உன் பவளம் போன்ற சிவந்த வாயின் ஒளியினுள்

அடியேனுடைய அறிவு அடங்கி விட்டது.

விளக்கவுரை

`பிணிகெட`` என்பதை முதலிற் கொள்க. அன்றி, இதனை நின்றாங்கு நிறுத்தி, ``இவை`` என்பதனை, ``அபயம் என்பதன்பின் கூட்டினும் ஆம். கணி - எண்ணத்தக்க. விசிறு கரம் - வீசிய கை. துடி - உடுக்கை. விடவாய், `விடத்தை யுடைய வாயை உடையது` எனப் பாம்பிற்குக் காரணப்பெயர். திணி - செறிந்த. ``மணி`` என்றது, இங்கு அதன் நிறத்தை; எனவே, இங்கு, `மணி நீலம்` என்றே இயைக்க, `திணி நீலம், மணி நீலம்` எனத் தனித்தனி சென்று இயையும். `தெள்ளமுதே` எனப் பாடம் ஓதுதல் சிறக்கும்.

திருநெடு மால்இந் திரன்அயன் வானோர்
திருக்கடைக் காவலில் நெருக்கிப்
பெருமுடி மோதி உகுமணி முன்றிற்
பிறங்கிய பெரும்பற்றப் புலியூர்ச்
செருநெடு மேரு வில்லின்முப் புரந்தீ
விரித்தசிற் றம்பலக் கூத்தா
கருவடி குழைக்கா தமலச்செங் கமல
மலர்முகம் கலந்ததென் கருத்தே.

#20

திருமகளோடுகூடிய நீண்டவனாகிய திருமால், இந்திரன்,பிரமன் ஏனைய தேவர்கள் யாவரும் உன்னைத் தரிசிக்க வரும் போது உள் வாயில் காவலில் உள்ள தடையால் நெருக்கப் படவே, அவர்களுடைய பெரிய கிரீடங்கள் ஒன்றோடொன்று மோது வதால் பெயர்ந்து கீழே விழும் இரத்தினங்கள் வாயிலின் முன்னிடத் தில் ஒளிவீசும் பெரும்பற்றப் புலியூரின் சிற்றம்பலத்தில், போரிலே பெரிய மேருமலையாகிய வில்லாலே திரிபுரத்தையும் தீக்கு இரை யாக்கிய கூத்தனே! பெரிய நீண்ட குழைகளை அணிந்த காதுகளை உடைய களங்க மற்ற செந்தாமரை மலர் போன்ற உன் திருமுகம் அடி யேனுடைய எண்ணத்தில் கலந்துவிட்டது.

விளக்கவுரை

கடை - வாயில். காவல் - தடை; தடுக்கப்படும் இடம். மோதி - மோதுதலால். `முன்றிலின்கண் பிறங்கிய` என்க, பெரும் பற்றப் புலியூர்க் கூத்தா` என இயைக்க.
இது, வருகின்ற திருப்பாட்டிற்கும் ஒக்கும், `செருவில், மேரு வில்` எனத் தனித்தனி இயையும். `மேருவாகிய வில்லினால் முப்புரத் தின்கண் தீயை விரித்த` என்க.

விரித்த - பரவச்செய்த. கருவடி குழை - பெரிய நீண்ட குழை. `குழைக் காதினையுடைய, அமலமாகிய முகம்` என்க. அமலம் - தூய்மை; ஒளி.

ஏர்கொள்கற் பகமொத் திருசிலைப் புருவம்,
பெருந்தடங் கண்கள் மூன் றுடையுன்
பேர்கள்ஆ யிரம்நூ றாயிரம் பிதற்றும்
பெற்றியோர் பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்கொள்கொக் கிறகும் கொன்றையும் துன்று
சென்னிச்சிற் றம்பலக் கூத்தா
நீர்கொள் செஞ் சடைவாழ் புதுமதி மத்தம்
நிகழ்ந்தஎன் சிந்தையுள் நிறைந்தே.

#21

அழகு பொருந்திய கற்பகத்தை ஒத்தவனாய் அழகிய, வில் போன்ற புருவங்களும் பெரிய நீண்ட கண்கள் மூன்றும் உடைய உன்னுடைய ஆயிரம் நூறாயிரமாகிய பெயர்களை அடைவு கேடாகச் சொல்லும் இயல்பினை உடைய சான்றோர்கள் வாழும் பெரும்பற்றப் புலியூரில் சிறப்புப் பொருந்திய கொக்கிறகம் பூவும் கொன்றை மலரும் பொருந்திய தலையினை உடையையாய்ச் சிற்றம்பலத்தில் கூத்து நிகழ்த்துபவனே! கங்கை பொருந்திய உன் சிவந்த சடையில் தங்கி யிருக்கும் பிறைச் சந்திரனும் ஊமத்தம் பூவும் என் உள்ளத்தில் நிறைந்து உலவுகின்றன.

விளக்கவுரை

ஏர் - அழகு, ``கற்பகம் ஒத்து`` என்றது எண்ணின் கண் வந்த எச்சமாகலின், `கற்பகம் ஒத்தவனும், இருபுருவமும், மூன்று கண்களும் உடையவனும் ஆகிய உனது` என உரைக்க.
சிலைப் புருவம் - வில்போலும் புருவம், `ஆயிரம்` நூறாயிரம் என்றது, அளவின்மை குறித்தவாறு. ``பிதற்றும்`` என்றது, `அன்பு மீதூர்ந்து சொல்லும்` என்றபடி, ``பெரும்பித்தர் கூடிப் பிதற்றும் அடி`` *(தி. 6. ப.6. பா. 4)* ``பித்தில னேனும் பிதற்றில னேனும் பிறப்பறுப் பாய் எம் பெருமானே`` *(தி.8 திருவாசகம் - எண்ணப்பதிகம்-4)* என்றாற் போல வருவன பலவுங் காண்க.
``நீர்கொள் சடை`` என்றது, உடம் பொடு புணர்த்தலாகலின், நீரும் தனித்தெண்ணப்படும். ``சடை`` என்ற தனையும் செவ்வெண்ணாக்கி, `அதன்கண்வாழ் புதுமதி` என உரைக்க. மத்தம் - ஊமத்த மலர். நிகழ்ந்த - உலவலாயின.

காமனக் காலன் தக்கன்மிக் கெச்சன்
படக்கடைக் கணித்தவன் அல்லாப்
பேய்மனம் பிறிந்த தவப்பெருந் தொண்டர்
தொண்டனேன் பெரும்பற்றப் புலியூர்ச்

சேமநற் றில்லை வட்டங்கொண் டாண்ட
செல்வச்சிற் றம்பலக் கூத்தா
பூமல ரடிக்கீழ்ப் புராணபூ தங்கள்
பொறுப்பர்என் புன்சொலின் பொருளே.

#22

மன்மதன், இயமன், தக்கன், வேள்வித்தலைவன் இவர்கள் அழியுமாறு கடைக்கண் பார்வையாலே செயற் படுத்திய நின்னை அல்லாத பிற தெய்வங்களைத் தொழும் பேய் போன்ற மனம் பெற்றிலாத மேம்பட்ட தொண்டர்களின் தொண்டன் அடியேன். பெரும்பற்றப் புலியூராகிய பாதுகாவலைச் செய்யும் மேம்பட்ட தில்லைப் பகுதியை உனக்கு உகந்தருளியிருக்கும் எல்லையாகக் கொண்டு ஆளுகின்ற செல்வம் மிக்க சிற்றம்பலத்தில் கூத்து நிகழ்த்து பவனே! உன்னுடைய தாமரை மலர் போன்ற திருவடியின் கீழ் உள்ள பழைய சிவகணத்தார்கள் அடியேனுடைய அற்பமான சொற்களின் பொருளைப் பொறுமையோடு ஏற்பார்கள்.

விளக்கவுரை

`மிகை செய்த` என்னும் பொருட்டாகிய `மிக்க` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தல் பெற்றது. ``கடைக்கணித்தவன்`` என்றது, இடவழுவமைதி, `கடைக்கணித்தவன் தொண்டர்`` என இயையும். அல்லா - நன்றல்லாத, பிறிந்த - நீங்கிய; என்றது, `நன்மனம் பெற்ற` என்றவாறு. இதற்குப் பிறவாறும் உரைப்ப. `சிவப்பெருந் தொண்டர்` எனவும் பாடம் ஓதுப, ``தொண்டனேன்`` என்பதன்பின், ``ஆகலின்`` என்னும் சொல்லெச்சம் வருவித்து, அதனை` `பொறுப்பர்` என்பதனோடு முடிக்க. புலியூராகிய தில்லை` என்க. சேமம் - காவல். வட்டம் - எல்லை, கொண்டு - நினதாகக் கொண்டு. ஆண்ட - அதனை ஆளுதல் செய்த, `பூவடி, மலரடி` எனத் தனித்தனி இயைக்க. பூ - பொலிவு. புராணம் - பழமை. பூதங்கள் என்பது சிவகணங்கள் என்னும் பொருட்டாய் உயர்திணையாய் நின்றது.

திருமாளிகைத் தேவர் - கோயில் - உறவாகிய யோகம்

உறவா கியயோ கமும்போ கமுமாய்
உயிராளீ என்னும்என் பொன்ஒருநாள்
சிறவா தவர்புரஞ் செற்ற கொற்றச்
சிலைகொண்டு பன்றிப்பின் சென்றுநின்ற
மறவா என் னும் மணி நீரருவி
மகேந்திர மாமலை மேல்உறையும்
குறவா என் னும் குணக் குன்றே என்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே.

#23

திருமகள் போன்ற பேரழகுடைய என்மகள், விளங்கும் தில்லையிலே சிற்றம்பலத்தில் அற்புதக் கூத்தாடும் எம்பெருமானைக் குறித்து, ``உயிர்கள் சென்று சேரத்தக்க வீடுபேறாகவும் அவ்வீடுபேற்று இன்பமாகவும் இருந்து உயிர்களை ஆட்கொள்பவனே! பண்டொரு காலத்து உயிர்ப்பண்பினால் சிறப்புப் பெறாதவராகிய அசுரர்களின் மதில்களை அழித்த வெற்றி பொருந்திய வில்லைக் கையில் ஏந்தி, பன்றி ஒன்றன் பின்னே அதனைத் துரத்திச் சென்று நின்ற வீரனே! பளிங்குமணி போன்ற தெளிந்த நீரை உடைய அருவிகள் வீழும் பெரிய மகேந்திர மலைமீது விரும்பித் தங்கியிருக்கும் குறிஞ்சி நிலத் தலைவனே! குணமாகிய பொருள்கள் செறிந்து காணப்படும் மலை போல்பவனே!`` என்று பலவாறு அவனுடைய பண்புச் செயல்களைக் குறிப்பிட்டு அவனை அழைத்து வாய்விட்டுப் புலம்புகிறாள்.

விளக்கவுரை

உறவு - அடையப்படும் பொருள், ``யோகம்`` என்றது, முத்தியைக் குறித்தது. உயிர் ஆளீ - உயிர்களை ஆள்பவனே. என்னும் - என்று பிதற்றுவாள், ``பொன்`` என்றது, காதற்சொல். `ஒருநாள் சென்று` என இயையும். சிறவாதவர் - இழிந்தோர்; சிவநெறியைக் கடைப்பிடியாது கைவிட்டவர். `தேவராலும் அழிக்க இயலாத வலிய திரிபுரத்தை அழிக்க வில்லேந்திய பெருமான், சிறிய பன்றிப்பின் வில் லேந்திச் சென்றான்` என, அவனது எளிவந்த தன்மையை வியந்து உருகியவாறு. சிவபிரான் அருச்சுனன் பொருட்டு வேடனாய்ப் பன்றிப் பின் சென்ற வரலாறு வெளிப்படை. மகேந்திர மாமலை, திரு வாசகத்துட் கூறப்பட்டது. `பேரரசாகிய மலை` எனக் காரணப் பெய ராக்கி, `கயிலாய மலை` என இங்கு உரைத்தலும் ஆம். ``மகேந்திரம்`` என்றதை, `மயேந்திரம்` என்றே ஓதுவாரும் உளர். குறவன் - மலை வாணன். குலாத்தில்லை - விளக்கத்தையுடைய தில்லை. தி.8 திருவாசகத்துட் குலாப்பத்தைக்

காண்க.

காடாடு பல்கணம் சூழக் கேழற்
கடும்பின் நெடும்பகல் கான்நடந்த
வேடா மகேந்திர வெற்பா என்னும்
வினையேன் மடந்தைவிம் மாவெருவும்
சேடா என் னும் செல்வர்மூவாயிரர்
செழுஞ்சோதிஅந்தணர் செங்கைதொழும்
கோடா என் னும் குணக் குன்றே என்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. #24

தீவினையேன் பெற்றமகள் அழுகையை அடக்கிக் கொண்டு தேம்பி அஞ்சுதலோடு, ``சுடுகாட்டிலே கூத்தாடும் பல் பூதங் களும் உருமாறிச் சூழ்ந்து வர விரைந்து ஓடும் பன்றியின் பின் நீண்ட பகற் பொழுதில் காட்டில் பின் தொடர்ந்த வேடனே! மகேந்திர மலைத் தலைவனே! எல்லா உலகங்களும் அழிந்த பின்னும் தான் ஒருவனே எஞ்சிநிற்கும் பெருமையனே! உன் திருவடிகளை ஏத்தும் செல்வத்தால் சிறந்த ஞானப்பிரகாசம் உடைய மூவாயிர அந்தணர்கள் சிவந்த கைகளால் தொழும் கூத்தனே! குணக்குன்றே!`` என்று விளங்குகின்ற தில்லை அம்பலக் கூத்தனைப் பலவாறாக விளிக்கின்றாள்.

விளக்கவுரை

காடுஆடு பல்கணம் - காட்டில் உடன் ஆடுகின்ற பல பூதக் கூட்டங்கள். கேழற் கடும் பின் - பன்றியினது கடிதாகிய பின்னிடத்தில். கேழல் கடிதாக ஓடுதலின், அதன் பின்னிடமும் கடிதாயிற்று. `கடுவிருள் நெடும்பகல்` என்பதும் பாடம். கான் - காடு. விம்முதலும், வெருவுதலும் பித்தினால் வருவன. சேடன் - பெருமை யுடையவன். `செல்வராகிய செழுஞ்சோதி அந்தணர்கள்` என்க. சோதி, இங்கு, வேள்வித் தீ. அதனை நன்கு ஓம்புதலின், ``செழுஞ் சோதி`` என்றார் அந்தணர்களை, ``செல்வர்`` என்றவர், `அவர்க்குச் செல்வமாயது இது` என்றற்கு. `செழுஞ்சோதி` என்றார். `செங்கையால்` என உருபு விரிக்க. கோடு. `கோடுதல்` என, முதனிலைத் தொழிற் பெயர்; `குனிப்பு; நடனம்` என்பது பொருள்.

கானே வருமுரண் ஏனம் எய்த
களி ஆர் புளினநற் காளாய் என்னும்
வானே தடவு நெடுங் குடுமி
மகேந்திர மாமலைமேல் இருந்த
தேனே என்னும் தெய்வ வாய்மொழியார்
திருவாளர் மூவா யிரவர் தெய்வக்
கோனே என் னும் குணக் குன்றே என்னும்

குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. #25

என்மகள் குலாத்தில்லை அம்பலக் கூத்தனை உருவெளித்தோற்றத்தில் கண்டு அவனை நோக்கி `காட்டில் உலவிய வலிய பன்றி மீது அம்பைச் செலுத்திய செருக்குமிகுந்த வேடர் குலத்துச் சிறந்த காளைப்பருவத்தனே! வானத்தை அளவிய நீண்ட சிகரத்தை உடைய பெரிய மகேந்திரமலைமீது இருந்த தேன் போன்ற இனியனே! தெய்வத்தன்மை பொருந்திய வேதத்தை ஓதும் செல்வத்தை உடைய தில்லை மூவாயிரவரின் தெய்வத்தலைவனே! குணக்குன்றே!` என்று பலவாறு அழைக்கிறாள்.

விளக்கவுரை

``கானே, வானே`` என்ற பிரிநிலை ஏகாரங்கள் சிறப் புணர்த்திநின்றன. முரண் ஏனம் - வலிய பன்றி. களி ஆர் - களிப்புப் பொருந்திய. அருச்சுனனோடு ஆடல் தொடங்க நின்றமை குறித்துக் காளாய் என்று கூறினார். புளினக்காளை - வேடர்குல இளைஞன். ``வாய்மொழி`` என்றது, வேதத்தை. திரு - திருவருள்.

வெறியேறு பன்றிப்பின் சென்றொருநாள்
விசயற் கருள்செய்த வேந்தே என்னும்
மறியேறு சாரல் மகேந்திரமா
மலைமேல் இருந்த மருந்தே என்னும்
நெறியே என்னும் நெறிநின்றவர்கள்
நினைக்கின்ற நீதிவே தாந்தநிலைக்
குறியே என் னும் குணக் குன்றே என்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. #26

என் மகள் குலாத்தில்லை அம்பலக் கூத்தனை உருவெளித்தோற்றத்தில் கண்டு அவனை நோக்கி`செருக்கு மிகுந்த பன்றியின் பின்னே, முன் ஒரு நாள் சென்று அருச்சுனனுக்கு அருள் செய்த வேந்தனே! மான்கள் உலாவும் சரிவுகளை உடைய பெரிய மகேந்திர மலைமேல் வீற்றிருந்த அமுதமே! அடியார்கள் தன்னை அடையத் தானே வழியாகவும் இருக்கின்றவனே! உன்னை அடைவதற்கு உன்னையே ஆறாகக் கருதி வாழ்கின்ற அடியார்கள் பேறாக நினைக்கின்ற நீதியோடு கூடிய உபநிடதங்களில் கூறப்பட்ட நிலை யான இலக்காக இருப்பவனே! நற்குணமலையே!` என்று பலவாறாகக் கூப்பிடுகின்றாள்.

விளக்கவுரை

வெறி - செருக்கு. மறி ஏறு - மான்கன்றுகள் பொருந் திய. நெறி - வீடுபெறும் வகை, சாதனம். பின்னர் வரும் ``குறி`` என்பது, இதனால் எய்தும் பயன். ``நினைக்கின்ற. `நீதி` என்னும் இரண்டும், ஒரு சொல்

தன்மைப்பட்ட ``வேதாந்த நிலைக் குறி`` என்ப தனை விசேடித்தன. நீதி - எய்தும் உரிமை. வேதாந்த நிலைக்குறி - வேதத்தின் முடிநிலையாகிய குறிக்கோள்.

செழுந் தென்றல் அன்றில் இத் திங்கள் கங்குல்
திரைவீரை தீங்குழல் சேவின்மணி
எழுந்தின்றென் மேற்பகை யாடவாடும்
எனைநீ நலிவதென் என்னே என்னும்
அழுந்தா மகேந்திரத் தந்தரப்புட்
கரசுக் கரசே அமரர்தனிக்
கொழுந்தே என்னும் குணக் குன்றே என்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. **#27**

என் மகள் குலாத்தில்லை அம்பலக் கூத்தனை உருவெளித்தோற்றத்தில் கண்டு அவனை நோக்கி, `செழிப்பான தென்றல் காற்று, அன்றிலின் தழுதழுத்த ஒலி, ஒளிவீசும் இந்த மதியம், இருள், அலைகளை உடைய கடல், இனிய இசையை இசைக்கும் வேய்ங்குழலின் ஓசை, காளையின் கழுத்தில் கட்டப்பட்ட மணியின் ஒலி இவைகள் தம்முழு ஆற்றலோடும் புறப்பட்டு என்மீது பகை கொண்டு துன்புறுத்தவும் அதனால் வாடிக் கொண்டிருக்கும் அடி யேனை நீயும் வருத்துவது ஏன்? அழிவில்லாத மகேந்திர மலையில் தங்கி வானத்தில் உலவும் பறவைகளுக்கு அரசனான கருடனுக்கு அருள் செய்த தலைவனே! தேவர்களின் ஒப்பற்ற கொழுந்து போன்ற இனியவனே! குணக்குன்றே!` என்று பலவாறாக அழைத்து அரற்று கின்றாள்.

விளக்கவுரை

அன்றில், துணை பிரியாப் பறவை. திங்களைக் காட்டி, ``இத்திங்கள்`` என்றாள். திரை வீரை - அலைகளையுடைய கடல். சே - எருது. தென்றல் முதலியவை காம நோய் கொண்டாரை வருத்துவன, பகையாடுதல் - பகைகொண்டு நிற்றல். அழுந்தா மகேந்திரம் - அழியாத மகேந்திர மலை. ``மகேந்திரத்து`` என்றதனை, பின் வரும் தொடர் ஒரு பெயர்த் தன்மைப்பட்டு நின்று முடிக்கும், ``புட்கரசு` என்றது, கலுழனை; அதற்கு அரசன் திருமால். ``கொழுந்து`` என்றது `தலையாயவன்` என்னும் பொருட்டு.

வண்டார் குழல்உமை நங்கை முன்னே
மகேந்திரச் சாரல் வராகத் தின்பின்
கண்டார் கவலவில் லாடி வேடர்
கடிநா யுடன்கை வளைந்தாய் என்னும்
பண்டாய மலரயன் தக்கன் எச்சன்
பகலோன் தலை பல்ப சுங்கண்

கொண்டாய் என் னும் குணக் குன்றே என்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. **#28**

என் மகள் குலாத்தில்லை அம்பலக்கூத்தனை உருவெளித்தோற்றத்தில் கண்டு `வண்டுகள் பொருந்திய கூந்தலை உடைய உமாதேவியாரின் முன்பு, மகேந்திரமலைச்சரிவில் பன்றியின் பின்னே, பார்க்கிறவர்கள் கவலைப்படும்படி வில்லை ஏந்தி வேடர் களும், விரைந்து செல்லும் வேட்டைநாய்களும் உடன்வரப் பன்றி இருந்த பக்கத்தை வளைத்துக் கொண்டு அம்பு எய்தவனே! முற்பட்ட வனாகிய பிரமன், தக்கன், அவன் இயற்றிய வேள்வித் தலைவன் இவர் களுடைய தலைகளையும், ஆதித்தியர் பன்னிருவரில் பூஷன் என்பவன் பற்களையும், பகன் என்பவன் கண்களையும் நீக்கினவனே! குணக்குன்றே!` என்று விளித்துப்புலம்புகிறாள்.

விளக்கவுரை

தேவியும் வேடிச்சி கோலங்கொண்டு உடன் சென்றமை யின். `அவள் முன்னே` என்றார்.

``மகேந்திரம்`` என்பது இங்கு கயிலாய மலையைக் குறித்துநிற்றல் நோக்கத்தக்கது, மேலவற்றோடு ஒப்ப வருதற்பொருட்டு, இங்கு, கயிலையை மகேந்திரம் எனப் பொது வகையாற் கூறிப் போந்தார் எனினுமாம்.

``கண்டார்`` என்றது அன்பரை; என்னை, இறைவனது எளிவந்த செயலை நோக்கிக் கவலுதற்குரியார் அவரே யாகலின், ``கதுவாய்த் தலையிற் பலிநீ கொள்ளக் கண்டால் அடியார்கவலாரே?`` *(தி.7 ப.41 பா.1)* என்பது முதலிய திருமொழிகளைக் காண்க. கவல - வருந்த. வில்லாடுதல் - விற்றொழில் புரிதல், வேடர் நாய் - வேட்டைக்கு உரியது. கடி நாய் - விரைவுடைய நாய். கை வளைந்தாய் - பல பக்கங்களிலும் சுற்றினாய். `வில்லாடிக் கைவளைந் தாய்` என்று இயைத்து. `விற் றொழில் செய்தலால் கைகள் செயற்படப் பெற்றவனே` என்று உரைப்பினும் ஆம். ஆய - தக்கன் வேள்விக்குச் சென்ற. தக்கன் வேள்வியில் பல் உகுக்கப்பட்டவன். `பூடா` என்னும் பகலவனும், கண் பறிக்கப் பட்டவன், `பகன்` என்னும் பகலவனும் ஆதலின், `பகலோன்` என்பதைத் தனித்தனி கூட்டுக. இத்திருப் பாட்டின் மூன்றாம் அடியுள், `பகலோன் அனல் பகற் பற்பசுங்கண்` என்பது பாடம் ஆகாமை அறிந்து கொள்க.

கடுப்பாய்ப் பறைகறங் கக்கடுவெஞ்
சிலையும் கணையும் கவணும் கைக்கொண்
டுடுப்பாய தோல் செருப் புச்சுரிகை
வராகம்முன் ஓடு விளிஉளைப்ப

நடப்பாய் மகேந்திர நாத நாதாந்தத்
தரையாஎன் பார்க்குநா தாந்தபதம்
கொடுப்பாய் என் னும் குணக் குன்றே என்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே.

#29

என்மகள் குலாத்தில்லை அம்பலக் கூத்தனை உருவெளித்தோற்றதில் கண்டு `விரைந்து பறைகள் ஒலிக்க, விரைந்து அம்பைச் செலுத்தும் கொடிய வில், அம்பு, கவண் என்னும் கல்லைச் செலுத்தும் கருவி இவற்றைக் கைகளில் ஏந்தி, புலித்தோலை உடுத்துச் செருப்பினை அணிந்து சிறுகத்தியையும் கொண்டு, பன்றி முன்னே ஓடுமாறு சீழ்க்கை ஒலியை எழுப்பி விரைந்து நடப்பவனே! மகேந்திர மலைத் தலைவனே! நாததத்துவத்தின் முடிவாய் இருக்கின்ற தலைவனே! என்று வழிபட்டு வேண்டும் அடியவர்களுக்கு நாததத்துவத்தையும் கடந்த சிவலோகப் பதவியை வழங்குபவனே! குணக்குன்றே!` என்று விளித்துப் புலம்புகிறாள்.

விளக்கவுரை

கடுப்பாய் - மிகுதியாய். `கடுப்பாய்க் கறங்க` என இயையும். பறை, வேட்டைப் பறை. கறங்க - ஒலிக்க. உடுப்பு - உடை. சுரிகை - உடைவாள், `தோல் செருப்புச் சுரிகைகளுடன் நடப்பாய்` என்க. நாதாந்தத்து அரையா - `நாதம்` என்னும் தத்துவத்திற்கு அப் பால் உள்ள தலைவனே! முன்னைத் திருமுறைகளில், `நாதம்` என்னும் சொல் காணப்படினும், `நாதாந்தம்` என்னும் தொடர் காணப்பட்டிலது. பதம் - பாதம்.

சேவேந்து வெல்கொடி யானே என்னும்
சிவனே என்சேமத் துணையே என்னும் மாவேந்து சாரல்
மகேந்திரத்தின்
வளர்நாய கா இங்கே வாராய் என்னும்
பூவேந்தி மூவா யிரவர் தொழப்
புகழேந்து மன்று பொலிய நின்ற
கோவே என் னும் குணக் குன்றே என்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே.

#30

என் மகள் குலாத்தில்லை அம்பலக்கூத்தனை உரு வெளித்தோற்றத்தில் கண்டு `காளை வடிவம் வரையப் பெற்ற, பகை வரை வெல்லும் கொடியை உயர்த்தியவனே! மங்களமான வடி வினனே! என் உயிர்க்குப் பாதுகாவலைத்தரும் துணைவனே! பல விலங்குகளையும் தன்னிடத்துக் கொண்ட மலைச் சரிவினையுடைய மகேந்திர மலையில் தங்கும்

தலைவனே! பூக்களை அர்ப்பணிப் பதற்காக ஏந்திவந்து மூவாயிரவர் அந்தணர் வணங்குமாறு புகழ்மிக்க கனகசபையில் பொலியுமாறு நிற்கும் தலைவனே! குணக்குன்றே! என்னிடம் வருவாயாக` என்று அழைத்து வேண்டுகிறாள்.

விளக்கவுரை

சே ஏந்து - எருதைக் கொண்ட. சேமத் துணை - பாதுகாவலான துணை. மா ஏந்து - விலங்குகளை யுடைய.

தரவார் புனம்சுனைத் தாழ் அருவி,
தடங்கல் லுறையும் மடங்கலமர்
மரவார் பொழில் எழில் வேங்கை எங்கும்
மழைசூழ் மகேந்திர மாமலைமேற்
சுரவாஎன் னும் சுடர்நீள் முடிமால்
அயன்இந் திரன்முதல் தேவர்க்கெல்லாம்
குரவா என் னும் குணக் குன்றே என்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே.

#31

என் மகள் குலாத்தில்லை அம்பலக்கூத்தனை உருவெளித்தோற்றத்தில் கண்டு `மேம்பட்ட நீண்ட தினைப்புனங்கள், மலைச்சுனைகளிலிருந்து கீழ் நோக்கி இறங்கி ஓடும் அருவிகள். பெரிய கற்பாறைகள், அவற்றின் குகைகளில் உறையும் சிங்கங்கள், குங்கும மரங்கள் வேங்கை மரங்கள் நிறைந்த சோலைகள், எங்கும் சூழ்ந்த மேகங்கள் இவற்றை உடைய பெரிய மகேந்திரமலைமேல் எழுந் தருளியிருக்கும் தேவனே! ஒளிவீசும் நீண்ட கிரீடங்களை அணிந்த திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்களுக்கெல்லாம் குருவாக விளங்குபவனே! குணக்குன்றே!` என்று அழைத்துப் புலம்புகிறாள்.

விளக்கவுரை

தர வார் புனம் - மேலான நீண்ட புனம், சுனைத் தாழ் அருவி - சுனையினின்றும் வீழ்கின்ற அருவி. ``கல்`` என்றது முழையை. மடங்கல் - சிங்கம். மடங்கல் `அமர் பொழில்` என்க. இருள் மிகுந்திருத்தலின், முழையில் தங்கும், சிங்கம் இங்குத் தங்கு வதாயிற்று,
மரவு ஆர் பொழில் - குங்கும மரம் நிறைந்த சோலை. வேங்கை - வேங்கைமரம் இதனை வேறு கூறினார், மலை நிலத்திற்குச் சிறந்த மரமாதல் பற்றி. மழை - மேகம் `ஏங்கும்` என்பதும் பாடம். `புனம், அருவி` பொழில், வேங்கை முதலிய எங்கும் மேகங்கள் தவழ் கின்ற மகேந்திர மாமலை` என்க. `சுரவன்` என விரித்தல் பெற்று விளி யேற்று, `சுரவா` என நின்றது, சுரன் - தேவன் ``குரவன்`` என்றது, `தந்தை, தாய்,

அரசன், ஆசிரியன்` என்னும் அனைத்துப் பொருளை யும் குறிக்கும்.

திருநீ றிடாஉருத் தீண்டேன் என்னும்
திருநீறு மெய்திரு முண்டந் தீட்டிப்
பெருநீல கண்டன் திறங்கொண்டிவள்
பிதற்றிப் பெருந்தெரு வேதிரியும்
வருநீ ரருவி மகேந்திரப்பொன்
மலையில் மலைமக ளுக்கருளும்
குருநீ என் னும் குணக் குன்றே என்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே.

#32

என் மகள் குலாத்தில்லை அம்பலக் கூத்தனுடைய நினைப்பிலே, திருநீற்றை நீரில் குழைத்து நெற்றியில் அணிந்து, `திருநீறு அணியாத உருவத்தைத் தீண்டேன்` என்று சொல்லிப் பெருமை பொருந்திய நீலகண்டனாகிய சிவபெருமானுடைய பண்பு செயல் இவை பற்றிய செய்திகளை அடைவு கேடாகச் சொல்லிக் கொண்டு பெரிய தெருவிலே திரிகிறாள். `பருவமழையால் பெருகு கின்ற நீர் இழியும் அருவிகளை உடைய மகேந்திரமாகிய அழகிய மலையில் ஆகமப்பொருளை உமாதேவியாருக்கு உபதேசிக்கும் குருவே! குணக்குன்றே!` என்று சிவபெருமானுடைய உருவெளித் தோற்றத்தைக் கண்டு அழைக்கிறாள்.

விளக்கவுரை

`திருநீறு இடா உருத் தீண்டேன்` என்றல், தில்லைக் கூத்தப் பெருமானுக்கு ஆகாதது, தனக்கும் ஆகாமை பற்றியாம், `மெய் யிலும் திருமுண்டத்திலும் தீட்டி` என்க. முண்டம் - நெற்றி, பூசுதல் வாளா பூசுதலும், தீட்டுதல் குழைத்து இடுதலும் ஆகும். `மெய்த்திரு முண்டத் திட்டு` எனவும் பாடம் ஓதுப. திறம் - புகழ். பிதற்றுதல் - பித்துக் கொண்டு பேசுதல். இங்கும் மகேந்திரமலை, `பொன்மலை` எனப்பட்டது. ``அருளும்` என்றது, ஆகமங்களை அருளிச் செய்தமையை. எனவே, இவளும் அதுநோக்கியே காதல் மிக்காளா யினமை பெறப்பட்டது.

உற்றாய் என் னும் உன்னை யன்றி மற்றொன்
றுணரேன் என் னும் உணர் வுள்கலக்கப்
பெற்றாய ஐந்தெழுத் தும்பிதற்றிப்
பிணிதீர் வெண் ணீறிடப் பெற்றேன் என்னும்
சுற்றாய சோதி மகேந்திரம் சூழ
மனத்திருள் வாங்கிச்சூ ழாத நெஞ்சில்
குற்றாய் என் னும் குணக் குன்றே என்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே.

#33

என்மகள் குலாத்தில்லை அம்பலக் கூத்தனை உருவெளித் தோற்றத்தில் கண்டு` என்னோடு பொருந்தியவனே! உன்னைத் தவிர வேறொரு தெய்வத்தையும் நான் நினைக்க மாட்டேன். சுற்றிலும் ஒளிவீசும் மகேந்திர மலையைத் தியானித்து, மனத்திலுள்ள அறியாமையாகிய இருளைப் போக்கி உன்னைத் தியானம் செய்யாதவர் நெஞ்சில் பொருந்தாதவனே! குணக்குன்றே!` என்று அவனை அழைத்து, `என் அறிவினுள் கலக்கப்பெற்ற திருவைந் தெழுத்தையும் பிதற்றிக் கொண்டு, அறியாமையாகிய பிணி நீங்குமாறு வெண்ணீற்றை அணிந்துள்ளேன்` என்று பிதற்றுகிறாள்.

விளக்கவுரை

உற்றாய் - யாவரையும் உறவாகப் பொருந்தியவனே. `உணர்வுள் கலக்கப்பெற்றுப் பொருந்திய ஐந்தெழுத்தும்` என்க. ``உணர்வுள்`` என்பது முதலாக, ``பெற்றேன்`` என்பது ஈறாக உள்ளவை, தலைவியின் கூற்றைச் செவிலி அங்ஙனமே கொண்டு கூறியன. `உணர்வுகள்` என்பது பாடம் அன்று. சுற்று ஆயசோதி - சுற்றி லும் வீசுகின்ற ஒளியையுடைய. ``மகேந்திரம்`` என்றது, இகரம் அலகுபெறாது நிற்க ஆரியம் போல நின்றது. `சூழ` என்னும் செய வெனெச்சம், தொழிற்பெயர்ப் பொருட்டாய் நின்றது. `சூழச் சூழாத` என இயையும். இதனுள் முன்னர் நின்ற சூழ்தல், சார்தல். பின்னர் நின்ற சூழ்தல், நினைத்தல். இருள் வாங்கி - அறியாமையைப் போக்கி. ``குத்தாய்`` என்பது, எதுகை நோக்கி, `குற்றாய்` எனத் திரிந்தது. குத்தாய் - ஊன்றாதவனே; பொருந்தாதவனே.

வேறாக உள்ளத் துவகைவிளைத்
தவனிச் சிவலோக வேத வென்றி
மாறாத மூவா யிரவவரையும்
எனையும் மகிழ்ந்தாள வல்லாய் என்னும்
ஆறார் சிகர மகேந்திரத்துன்
அடியார் பிழைபொறுப்பாய் அமுதோர்
கூறாய் என் னும் குணக் குன்றே என்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே.

#34

என் மகள் குலாத்தில்லைக் கூத்தனை உருவெளித் தோற்றத்தில் கண்டு` மற்றவர்களினும் வேறுபட்ட வகையில் சிறப்பாக என் உள்ளத்திலே மகிழ்ச்சியை உண்டாக்கி, பூலோக சிவலோகமாகிய தில்லையில் வேதம் ஓதுதலால் எய்தும் சிறப்பு மாறாத மூவாயிரவர் அந்தணரோடு அடியேனையும் மகிழ்ச்சியாக ஆட்கொள்ள வல்ல வனே! ஆறுகள் தோன்றும் உச்சியை உடைய மகேந்திர மலையில் இருந்து, உன்

அடியவர்களின் பிழைகளைப் பொறுத்து அருளுகின்ற வனே! பெண்ணமுதாகிய பார்வதியை உன் திருமேனியின் ஒரு பாக மாக உடையவனே! குணக்குன்றே!` என்று அழைத்துப் புலம்புகிறாள்.

விளக்கவுரை

``வேறாக உள்ளத்து உவகை விளைத்து`` என்பதை` ``ஆளவல்லாய்`` என்பதன் முன்னர்க் கூட்டுக. வேறாக - தனியாக; என்றது `அந்தரங்க உரிமையாக` என்றபடி. தன்னையும் மூவாயிரவ ரொடு படுத்து இவள் இவ்வாறு கூறியது, தனது காதல் மிகுதியாலாம். எனவே, இதனான் இவ்வாசிரியரது பேரன்பு விளங்குவதாம். அவனிச் சிவலோகம் - தில்லை, `அவனிச் சிவலோக மூவாயிரவர்` என, இயையும். `தில்லை அவனிச் சிவலோகம்` எனவே, அதன் கண் வாழும் மூவாயிரவர் அவனிச் சிவர் என்பது விளங்கும். இதனை ``நீலத் தார்கரி யமிடற்றார்நல்ல நெற்றிமேல் உற்ற கண்ணினார்பற்று - சூலத்தார்சுட லைப்பொடி நீறணி வார்சடையார் - சீலத் தார்தொழு தேத்துசிற் றம்பலம்`` *(தி.3. ப.1. பா.3)* என அருளிச் செய்தமை யானும், அவ்வருளிச் செயலின் வரலாற்றாலும் *(தி.12 ஞானசம் - 168 - 174)* நன்குணர்ந்து கொள்க. வேதவெற்றி - வேதத்தை ஓதுதலா னும், அதன்வழி வேட்டலானும் பெற்ற வெற்றி. `இவ்வெற்றி என்றும் மாறாது நிற்கும் மூவாயிரவர்` என்க. ஆறு ஆர் சிகரம் - பல யாறுகள் பொருந்திய கொடுமுடி. பொருந்துதல் - தோன்றுதல். இனி, `வான யாற்றை அளாவிய சிகரம்` என்றலுமாம். ``உன் அடியார் பிழை பொறுப்பாய்`` என்றது தம் பாடலைப் பொறுக்கவேண்டுமென்னும் குறிப்பினது. இஃது ஒரு பெயர்த் தன்மைப்பட்டு, ``மகேந்திரத்து`` என்றதனை முடித்தது. அமுது - பெண்ணமுதாய மலைமகள். `மாதோர் கூறாய்` என்பது பாடம் அன்று.

திருமாளிகைத் தேவர் - கோயில் - இணங்கிலா ஈசன்

இணங்கிலா ஈசன் நேசத்
திருந்தசித் தத்தி னேற்கு
மணங்கொள்சீர்த் தில்லை வாணன்
மணவடி யார்கள் வண்மைக்
குணங்களைக் கூறா வீறில்
கோறைவாய்ப் பீறற் பிண்டப்
பிணங்களைக் காணா கண் வாய்
பேசாதப் பேய்க ளோடே. #35

தனக்கு ஒப்பார் இலாத சிவபெருமானிடத்தில் அன்போடு நிலைத்திருக்கும் மனத்தை உடைய அடியேனைப் பொறுத்த வகையில், பல திருவிழாக்களைக் கொண்ட சிறப்பினை உடைய தில்லையில் உகந்தருளியிருக்கும் எம்பெருமானுடைய கூட்டத்தைப் பெற்ற அடியார்களுடைய வள்ளன்மைக் குணங்களைப் புகழ்ந்து கூறாத, பெருமை இல்லாத கொடிய வாயை உடைய, ஒன்பான் ஓட்டைகளை உடைய உடம்பைச் சுமக்கும், செத்தாரில் வைத்து எண்ணப் படுபவர்களை அடியேனுடைய கண்கள் காணமாட்டா. உலகத்தார் உண்டு என்பதனை இல்லை என்னும் அப்பேய்களோடு அடியேனுடைய வாய் உரை யாடாது.

விளக்கவுரை

இணங்கு - ஒப்பு. `சித்தத்தினேற்குக் கண் காணா; வாய் பேசாது` என இயையும். எனவே, இஃது ஏனைத் திருப்பாட்டுக் களினும் சென்று இயைவதாதல் அறிக. மணங்கொள் - பல விழாக் களைக் கொண்ட `தில்லைவாணனது மணத்தை (கூட்டத்தை)ப் பெற்ற அடியார்` என்க. வண்மை - வளப்பம்; சிறப்பு. வீறுஇல் - பெருமை இல்லாத; `கோரம்` என்பதில், மகரம் கெட்டு ரகரம் றகரமாயும், அகரம் ஐகாரமாயும் திரிந்து நின்றன. கோரம் - கொடுமை. பீறல் பிண்ட - ஓட்டை உடம்பையுடைய. உயிர் வாழ்தலால் பயன் இன்மையின், பிணங்கள்`` என இகழ்கின்றவர், அக்காரணத்தானே உடம்பின் இயல்பை விதந்தோதினார். பிதற்றுதலுடைமை பற்றி, `பேய்கள்` என்றார்.

எட்டுரு விரவி என்னை
ஆண்டவன் ஈண்டு சோதி
விட்டிலங் கலங்கல் தில்லை
வேந்தனைச் சேர்ந்தி லாத
துட்டரைத் தூர்த்த வார்த்தைத்
தொழும்பரைப் பிழம்பு பேசும்

பிட்டரைக் காணா கண் வாய்
பேசாதப் பேய்க ளோடே. #36

அட்ட மூர்த்தியாய் என்னை ஆட்கொண்டவனாய், வளரும் ஒளி பிரகாசிக்கின்ற மாலையை அணிந்த தில்லையம்பதித் தலைவனாகிய எம் பெருமானை, அடியவராக வந்து அடையாத தீயவர்களையும், வஞ்சகச் சொல்பேசும், பிற தெய்வங்களின் அடியவர்களையும், இனிது விளங்காதபடி முணுமுணுத்துப் பேசும் சிறியோர்களையும் என்கண்கள் காண மாட்டா. என்வாய் அப்பேய்களோடு பேசாது.

விளக்கவுரை

ஈண்டு சோதி - மிக்க ஒளி; இஃது ``இலங்கு` என்பத னோடு முடியும். அலங்கல் - மாலை; என்றது பொன்னரி மாலையை; இதனையுடையது தில்லை. தூர்த்த வார்த்தை - வஞ்சகச் சொல். தொழும்பர் - பிறர்க்கு அடிமையாய் நிற்பவர். பிழம்பு - இனிது விளங்காத சொல்; முணுமுணுத்தல். பிட்டர் - நொய்யர்; சிறியோர். இச் சொல் `பிட்டம்` என்பதினின்று பிறந்தது. ``பிட்டர் சொல்லுக் கொள்ள வேண்டா பேணித் தொழுமின்கள்`` *(தி.1. ப.69. பா.10)* என்று அருளிச் செய்தமை காண்க.

அருட்டிரட் செம்பொற் சோதி
யம்பலத் தாடு கின்ற
இருட்டிரட் கண்டத் தெம்மான்
இன்பருக் கன்பு செய்யா
அரட்டரை அரட்டுப் பேசும்
அழுக்கரைக் கழுக்க ளாய
பிரட்டரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. #37

அருளின் திரளாய், செம்பொன்னின் ஒளியை உடைய சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடும் நீலகண்டனாகிய எம்பெருமானுடைய அடியவர்கள்மாட்டு அன்பு செலுத்தாத துடுக்கு உடையவர்களையும், துடுக்கான வார்த்தைகளைப் பேசும் மனமாசு உடையவர்களையும், கழுகுகள் போன்று பிறர் பொருளைப் பறித் துண்ணும் நெறிதவறியவர்களையும் என் கண்கள் காணமாட்டா. என் வாய் அப்பேய்களோடு உரையாடாது.

விளக்கவுரை

`அருளினது திரளாகிய அம்பலம்` எனவும், `இருளினது திரள்போலும் கண்டம்` எனவும் உரைக்க. எம்மான் இன்பம் - சிவானந்தம். அரட்டர் - துடுக்குடையவர். அரட்டு - துடுக்கு. அழுக்கர் - மாசுடையவர். பிரட்டர்

(பிரஷ்டர்) - நெறிதவறியவர்.

துணுக்கென அயனும் மாலும்
தொடர்வருஞ் சுடராய் இப்பால்
அணுக்கருக் கணிய செம்பொன்
அம்பலத் தாடிக் கல்லாச்
சிணுக்கரைச் செத்தற் கொத்தைச்
சிதம்பரைச் சீத்தை ஊத்தைப்
பிணுக்கரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. **#38**

பிரமனும் திருமாலும் திடுக்கிடும்படி தொடர்ந்து வந்து அறிவதற்கு அரிய ஒளிவடிவினனாய், இவ்வுலகில் தன்னை அணுகியிருக்கும் அடியவர்களுக்குத் தானும் அணியனாய்ச் செம் பொன்மயமான அம்பலத்தில் ஆடுகின்ற எம்பெருமானுக்கு அன்பர் அல்லாத அழுகை உடையவரையும், பிறரைத் துன்புறுத்தும் குருட்டுத் தன்மையை உடைய அறிவிலிகளையும், கீழ்மக்களாகிய வாய் அழுக்கை உடைய மாறுபடப் பேசுபவர்களையும் என்கண்கள் காணா. அப்பேயரோடு என் வாய் உரையாடாது.

விளக்கவுரை

``துணுக்கென`` என்பதை `துணுக்கென்று` எனத் திரிக்க. துணுக்கெனல் - அஞ்சுதல். அணுக்கர் - அணுகியிருப்பவர்: அடியவர். அணிய - அண்மைக்கண் உள்ள. ``செம்பொன் அம்பலத்தாடி` என்றது ஒரு பெயர்த் தன்மைத்தாய். ``அணிய`` என்றதற்கு முடிபாயிற்று. சிணுக்கர் - அழுகையுடையவர். சிவபெருமானை இகழ்ந்து முணு முணுத்தலை, `அழுகை` என்றார். செத்தல் - செதுக்குதல்; `பிறரைத் துன்புறுத்துதல்` என்க. கொத்தை - குருட்டுத்தன்மை. சிதம்பர் - வெள்ளைகள்; அறிவிலிகள். சீத்தை - கீழ்மை. ஊத்தை - வாய் அழுக்கு; இஃது, இழிந்த சொல் உடைமை பற்றிக் கூறப்பட்டது. `பிணக்கர்` என்பது எதுகை நோக்கி ``பிணுக்கர்`` என்றாயிற்று.

திசைக்குமிக் குலவு கீர்த்தித்
தில்லைக்கூத் துகந்து தீய
நசிக்கவெண் ணீற தாடும்
நமர்களை நணுகா நாய்கள்
அசிக்கஆ ரியங்கள் ஓதும்
ஆதரைப் பேத வாதப்
பிசுக்கரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. **#39**

எண்திசைகளையும் கடந்து பரவும் புகழை உடைய தில்லையம்பதியின்

ஆனந்தக் கூத்தை விரும்பித் தீமைகள் அழியுமாறு வெண்ணீற்றை அணியும் நம் அடியவர்களை அணுகாத நாய்களாய், கண்டவர் எள்ளி நகையாடுமாறு பொருள் தெரியாமல் வடமொழிச் செய்திகளை ஓதும் அறிவிலிகளையும், உயர்ந்தவரோடு மாறுபட்டுப் பேசும் பேச்சினை உடைய வலிமையற்றவர்களையும் என்கண்கள் காணா. என்வாய் அப்பேய்களோடு உரையாடாது.

விளக்கவுரை

திசைக்கு மிக்கு - திசையினும் பெரிதாகி. உகந்து - விரும்பிக் கண்டு. தீய நசிக்க - தீவினைகள் கெட்டொழியுமாறு. ``வெண்ணீறது`` என்றதில் அது, பகுதிப் பொருள் விகுதி. ஆடும் - மூழ்குகின்ற. `ஆடி` எனவும் பாடம் ஓதுவர். நமர்கள் - நம்மவர்: சிவனடியார்கள். `நாய்களாகிய, என்க. அசிக்க - பிறர் நகைக்கும்படி. நகைத்தல், ஆரிய மொழியின் ஒலிகள் பற்றியாம். `அவரது ஆரிய ஓத்துப் பொருளற்றது` என்றபடி. ஆதர் - அறிவிலிகள். பேத வாதம் - உயர்ந்தவரோடு மாறுபட்டுப் பேசும் பேச்சு. பிசுக்கர் - வலிமை யற்றவர்: உயிர்க்கு உறுதியாவதே வலிமை என்க. வலிமை கெட்டு மெலிதலை, `பிசுத்தல், பிசுபிசுத்தல்` என்ப. இதனுட் குறிக்கப்பட்டவர் கள் மீமாஞ்சகர், சாங்கியர், பாஞ்சராத்திரிகள் முதலியோர்.

ஆடர வாட ஆடும்
அம்பலத் தமுதே என்னும்
சேடர்சே வடிகள் சூடாத்
திருவிலா உருவி னாரைச்
சாடரைச் சாட்கை மோடச்
சழக்கரைப் பிழைக்கப் பிட்கப்
பேடரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. **#40**

`படம் எடுத்து ஆடும் பாம்புகளாகிய உன் அணி கலன்கள் ஆட அம்பலத்திலே கூத்து நிகழ்த்தும் அமுதமே` என்று சிவ பெருமானைப் போற்றும் பெருமையை உடைய அடியவர்களுடைய திருவடிகளைத் தம் தலையில் சூடி வழிபடாத, நல்லூழ் இல்லாத உயி ரற்ற உடம்புபோல இருப்பவர்களையும், பத்தியில் நிலைத்து நில்லாத வரையும், சாணாகப்பிடித்த கை அளவை உடைய முரடர்களாகிய பொய்யரையும், தம் வயிறு வளர்ப்பதற்காகப் பிறிதோர் உயிரைச் சிதைக்கும் ஆண்மையற்றவர்களையும் என் கண்கள் காணா. அத்தகைய பேய் போன்றவரோடு என்வாய் உரையாடாது.

விளக்கவுரை

ஆடு அரவு - படம் எடுத்து ஆடுந்தன்மை யுடைய பாம்பு. ஆட - அது, தன் மேனியில் இருந்து அசைய. என்னும் - என்று துதிக்கின்ற. சேடர் - பெருமையுடையவர். திரு - நல்லூழ். உருவினார் - உயிரற்ற உடம்புகளாய் உள்ளவர். சாடர் - சகடர்; நிலையில்லாதவர். சாண் கை - சாணாகப் பிடித்த கையளவை யுடைய. `சாண் மகன்` என்பது, சிறுமை குறிப்பதோர் இகழுரை. மோடு - முருட்டுத் தன்மை; இஃது, அகரம் பெற்று வந்தது. சழக்கர் - பொய்யர். பிழைத்தல் - வயிறு வளர்த்தல். `பிழக்க` என்பது பாடம் அன்று. பிட்டல் - ஒன்றைச் சிதைத்தல். இதன்பின், `வல்ல` என ஒருசொல் வருவிக்க. பேடர் - ஆண்மை இல்லாதவர்: மேலான பயனை எய்துதலே ஆண்மை என்க.

உருக்கிஎன் உள்ளத் துள்ளே
ஊறலந் தேறல் மாறாத்
திருக்குறிப் பருளுந் தில்லைச்
செல்வன்பால் செல்லுஞ் செல்வில்
அருக்கரை அள்ளல் வாய
கள்ளரை அவியாப் பாவப்
பெருக்கரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. #41

அடியேனுடைய உள்ளத்தை உருக்கி அதன் உள்ளே ஊறுகின்ற ஆனந்தமாகிய தேனின் பெருக்கு மாறாதபடி, நடனத்தால் தன் உள்ளகக் குறிப்பினை அடியவர்களுக்கு அருளுகின்ற தில்லைப் பெருமான் பக்கல் செல்லும் மனப்பக்குவம் இல்லாத சுருக்கம் உடையவர்களையும், நரகத்தில் அழுந்துதற்குரிய வஞ்சகர் களையும், கெடாத தீவினைகளை நாளும் மிகுதியாகச் செய்து கொள் பவர்களையும், என் கண்கள் காணா. என் வாய் அப்பேயர்களோடு உரையாடாது.

விளக்கவுரை

`என் உள்ளத்தை உருக்கி அதனுள்ளே ஊறுதல் உடைய தேறல் நீங்காமைக்கு ஏதுவாகிய திருக்குறிப்பு, என்க. தேறல் - தேன்; என்றது பேரின்பத்தை. திருக்குறிப்பு, நடனத்தில் உள்ளது. `செல்வம் இல்` என்பது, `செல்வில்` எனக் குறைந்து நின்றது. அருக்கர் - சுருக்கம் உடையவர்; பெருக்கம் இல்லாதவர். அள்ளல்வாய - நரகத்தின் கண் உள்ள. கள்ளர் - வஞ்சகர். அவியா - கெடாத.

செக்கர்ஒத் திரவி நூறா
யிரத்திரள் ஒப்பாந் தில்லைச்
சொக்கர்அம் பலவர் என்னும்
சுருதியைக் கருத மாட்டா
எக்கரைக் குண்டாம் மிண்ட

எத்தரைப் புத்த ராதிப்
பொக்கரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. **#42**

செவ்வானம் போன்று, சூரியர் நூறாயிரவர் ஒரு சேரத் திரண்டதற்கு ஒப்பான நிறத்தையும் ஒளியையும் உடைய தில்லையுள் எழுந்தருளியுள்ள அழகராகிய அம்பலக் கூத்தாடுபவரே பரம் பொருளாவார் என்ற வேதக் கருத்தை நினைத்துப்பார்க்காத செருக்கு மிக்கவரையும், கீழ் இனத்தவராகிய வலிமை மிக்க வஞ்சரை யும், புத்தர் முதலிய பொய்யரையும், என் கண்கள் காணமாட்டா. அந்தப் பேயர்களோடு என்வாய் உரையாடாது.

விளக்கவுரை

செக்கர் - செவ்வானம். உவமை இரண்டற்கும் பொருள், அம்பலவர். சொக்கர் - அழகர். `சொக்கராகிய அம்பலவர்` என்க. சுருதி - வேதப்பொருள்; ஆகுபெயர், எக்கர் - செருக்கு மிக்கவர். ``எக்கராம் அமண் கையர்`` *(தி.3 ப.39 பா.11)* என வந்தமை காண்க.
குண்டு - கீழ் இனம். `குண்டர்` என்பதும் பாடம். மிண்டர் - வன்கண்ணர். எத்தர் - வஞ்சிப்பவர். பொக்கர் - பொய்யர்.

எச்சனைத் தலையைக் கொண்டு
செண்டடித் திடபம் ஏறி
அச்சங்கொண் டமரர் ஓட
நின்றஅம் பலவற் கல்லாக்
கச்சரைக் கல்லாப் பொல்லாக்
கயவரைப் பசுநூல் கற்கும்
பிச்சரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. **#43**

காளைவாகனத்தில் ஏறிவந்து எச்சனுடைய தலையைப் பூச்செண்டினை உருட்டுவது போல எளிதில் துண்டாக்கி, அஞ்சித் தேவர்கள் ஓடுமாறு வேள்விக் கூடத்தில் நின்ற சிவ பெருமானை வழிபடாத வெறுக்கத் தக்கவரையும், அப்பெருமானைப் பற்றிய நூல்களைக் கல்லாத கீழ்மக்களையும், சிறுதெய்வங்களைப் பரம் பொருளாகக் கூறும் நூல்களைக் கற்கும் மயக்க உணர்வினரையும் என் கண்கள் காணமாட்டா. அப்பேயரோடு என்வாய் உரையாடாது.

விளக்கவுரை

செண்டடித்து - பூச்செண்டு அடித்தல் போல அடித்து; இஃது எளிதில் செய்தமையை உணர்த்திற்று. ``இடபம் ஏறி`` என்ற தனை முதற்கண் வைத்து உரைக்க. ``ஏறி`` என்ற எச்சம் எண்ணின்கண் வந்தது.

``அம்பலவன்`` என்றது ஆகு பெயராய் அவனைப் பொரு ளாக உடைய நூலைக் குறித்தது.
கல்லா - கற்காத. `கைத்தவர்` என்பது, `கச்சவர்` என்று ஆகி, `கச்சர்` என இடைக் குறைந்து நின்றது; வெறுக்கப்பட்டவர் என்பது பொருள். ``பசு`` என்றது, சிறு தெய்வங்களை. நூல் - அவற்றைப் பொருளாக உடைய நூல். ``கற்கும்`` என்றது, `விரும்பிக் கற்கும்` என்ற வாறு. பிச்சர் - பித்தர்.

விண்ணவர் மகுட கோடி
மிடைந்தொளி மணிகள் வீசும்
அண்ணல்அம் பலவன் கொற்ற
வாசலுக் காசை யில்லாத்
தெண்ணரைத் தெருளா உள்ளத்
திருளரைத் திட்டை முட்டைப்
பெண்ணரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. **#44**

சிவபெருமானை வழிபடவரும் தேவர்கள் பலராதலின் அவருடைய பல கிரீடங்களும் ஒருசேரக் காணப்பட, அவற்றில் பதிக்கப்பட்ட மணிகள் ஒளிவீசும் தலைமையை உடைய சிற்றம்பலவனாகிய வெற்றியை உடைய மன்னவன் பக்கல் பக்தி இல்லாத முரட்டுத் தன்மை உடைய அறிவிலிகளையும், தெளிவற்ற மனத்தினை உடைய அஞ்ஞானிகளையும், வம்புப் பேச்சுக்களைப் பேசும், ஆண் தன்மையற்ற மகளிர் போல்வாரையும் என் கண்கள் காணா. அப்பேயரோடு என்வாய் உரையாடாது.

விளக்கவுரை

`வீசும் வாசல்` என இயையும். வாசல், `வாயில்` என்பதன் மரூஉ. தெண்ணர், `திண்ணர்` என்பதன் மரூஉ` `மூர்க்கர்` எனப் பொருள் தந்தது. ``தெண்ணர் கற்பழிக் கத்திரு உள்ளமே`` *(தி.3 ப.47 பா.3)* என வந்தமை காண்க. `உள்ளத்து இருளர்` என்க. `திட்டை,முட்டை` என்பன; பகுப்பற்ற பிண்டத்தை உணர்த்தி நின்றன. `பெண்ணர்`, என்பதற்கு, ``பேடர்`` என்றதற்கு உரைத்தது உரைக்க.

சிறப்புடை அடியார் தில்லைச்
செம்பொன்அம் பலவற் காளாம்
உறைப்புடை அடியார் கீழ்க்கீழ்
உறைப்பர்சே வடிநீ றாடார்
இறப்பொடு பிறப்பி னுக்கே
இனியராய் மீண்டும் மீண்டும்
பிறப்பரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. **#45**

மேம்பாட்டை உடைய அடியவர்கள் வாழும் தில்லையிலே உள்ள செம்பொன்மயமான அம்பலத்தில் நடனமாடும் பெருமானுக்கு அடியவராக இருக்கும் உறுதிப்பாட்டை உடைய அடியவர்களுக்கு அடியவராக இருக்கும் உறுதிப் பாட்டினையும், அவர்களுடைய திருவடித்துகள்களை அணியும், சிறப்பினையும் இழந்து, இறத்தல் பிறத்தல் என்ற தொழில்களுக்கே இனிய இலக்காகி மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்கக் கூடிய கீழ் மக்களை என் கண்கள் காணா. அப்பேயரோடு என்வாய் உரையாடாது.

விளக்கவுரை

சிறப்பு - யாவரினும் உயர்ந்து நிற்கும் மேன்மை. உறைப்பு - உறுதி. `சிறப்புடை அடியாராகிய உறைப்புடை அடியார்` எனவும் உறைப்புடை அடியார்க்குக் கீழ்க்கீழாய் உறைப்பவரது சேவடி` எனவும் உரைக்க. கீழ்க்கீழாய் உறைப்பவராவரது, அடியார்க்கு அடியராயும், அவர்க்கு அடியராயும் நிற்றலில் உறுதியுடையராதல். ``நீறு`` என்றது, புழுதியை, பிறப்பர் - பிறப்பவர்.

சேந்தனார் - திருவீழிமிழலை

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிர்இல்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா ஊர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே. **#46**

எல்லா உலகங்களுக்கும் ஒரே தலைவனாய், தேவர் களுக்கு அரசனாய், அடியேனுடைய உயிரைத் தளிர்க்கச் செய்யும் அமுதமாய், ஒப்பில்லாத இன்பம் நல்கும் தலைவனாய், கார்மேக நிறத்தினனாகிய திருமாலுக்குச் சக்கராயுதத்தை வழங்கி, அவனைப் பொன்மயமான பல்லக்குப் போல வாகனமாகக்கொண்டு செலுத்திய, மேகம் போலக் கைம்மாறு கருதாமல் உயிர்களுக்கு உதவும் தலை வனாய், மேம்பட்ட திருவீழிமிழலையிலே தேவருலகிலிருந்து இறங்கி வந்து நிலவுலகில் நிலையாகத் தங்கியுள்ள மேம்பட்ட கோயிலில் முத்தியை வழங்கும் தலைவனாய் உள்ள சிவபெருமானை அன்றி மற்றொரு பரம்பொருள் உள்ளது என்பதனை நான் அறிகின்றேன் அல்லேன்.

விளக்கவுரை

எதிர் இல் போகம் - இணையில்லாத இன்பம்; சிவபோகம்; அதனைத் தரும் நாயகன் *(தலைவன்)* என்க. புயல் வண்ணன் - மேகம்போலும் நிறம் உடையவன்; திருமால். ``சிவிகை`` என்றதை, `ஊர்தி` என்னும் அளவாகக் கொள்க. ``ஊர்ந்த மேகம்`` என்றது, `உண்ட சோறு` என்பதுபோல நின்றது. `ஒரு கற்பத்தில் திருமால் சிவபெருமானை மேகவடிவங் கொண்டு தாங்கினமையால், அக்கற்பம், `மேகவாகன கற்பம்` எனப் பெயர் பெற்றது` என்னும் புராண வரலாற்றை அறிந்துகொள்க. மிகு - உயர்ந்த. திருவீழி மிழலைக் கோயிலின் விமானம் திருமாலால் விண்ணுலகினின்றும் கொணரப்பட்டமை பற்றி, `விண்ணிழி விமானம்` எனப்படும் என்பது இத்தல வரலாறு. இது தேவாரத் திருப்பதிகங்களிலும் குறிக்கப்படுதல் காணலாம். `யோகம்` என்பது, முத்தியைக் குறித்தது. `மற்றொன்றும் உணர்கிலேன்` என இயையும். ``உண்டென உணர்கிலேன்`` என்றது, `பொருளாக நினைந்திலேன்` என்றதாம்.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை

மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே. **#47**

கற்றவர்களால் அக்கல்வியின் பயனாக அடைந்து அநுபவிக்கப்படும் தெய்வீக மரத்தில் பழுத்தகனி போன்றவனாய், எல்லை இல்லாத பெருங் கருணைக் கடலாய், மற்றவர்கள்தம் முயற்சி யில் அறியமுடியாத செந்நிற மாணிக்கமணியால் ஆகிய மலைபோன்றவனாய், தன்னை வழிபடும் அடியவருடைய உள்ளத்தில் மாணிக்கச் சுடர் போன்ற ஞான ஒளி வீசுபவனாய், பகைவர்களுடைய முப்புரங்களையும் அழித்த, எங்களுக்கு நன்மையைத் தருபவனாய், அடியார்களுக்கு அருளுவதற்காகவே திருவீழிமிழலையில் வீற்றிருந்த வெற்றியனாகிய சிவபெருமானைப் பலகாலும் தரிசித்ததனால் என் உள்ளம் குளிர என் கண்களும் குளிர்ச்சி பெற்றன.

விளக்கவுரை

இறைவன், மெய்ந்நூல்களைக் கற்றவர்களால் அக்கல்வியின் பயனாக அடைந்து அனுபவிக்கப்படுபவனாதலின், ``கற்றவர் விழுங்கும் கனி`` என்றார். ``கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி`` *(தி. 6 ப.32 பா.1)* என்ற அப்பர் திருமொழியைக் காண்க. கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் - நற்றாள் தொழாஅ ரெனின்`` *(குறள்-2)* எனத் திருவள்ளுவரும் கல்விக்குப் பயன் இறைவன் திருவடியை அடைதலே என்று வரையறுத்தருளினார். விழுங்குதல், உண்டல் தொழில் நான்கனுள், `உண்டல்` எனப்படுவது. வாளா, `கனி` என்னாது, கற்பகக்கனி என்றார். அருமையுணர்த் துதற்கு. கனி முதலியவை உவமையாகுபெயர்கள். கரையிலாக் கடல் என இயையும். மற்றவர் கற்றவரல்லாதார். மதிப்பவர் - தலைவனாக அறிந்து போற்றுபவர். மணி - இரத்தினம்; இஃது இயற்கையொளி உடையது. ``மாணிக்க மலை`` என்றது செந்திரு மேனியின் அழகுபற்றி. செற்றவர் - பகைத்தவர். செற்ற - அழித்த. ``உள்ளம் குளிரக் கண் குளிர்ந்தன`` என்றது, `ஞாயிறுபட வந்தான்` என்பது போல உடனிகழ்ச்சியாய் நின்றது.

மண்டலத் தொளியை விலக்கியான் நுகர்ந்த
மருந்தை என் மாறிலா மணியைப்
பண்டலர் அயன்மாற் கரிதுமாய் அடியார்க்
கெளியதோர் பவளமால் வரையை
விண்டலர் மலர்வாய் வேரிவார் பொழில்சூழ்

திருவீழி மிழலையூர் ஆளும்
கொண்டலங் கண்டத் தெம்குரு மணியைக்
குறுகவல் வினைகுறு காவே. **#48**

வட்டமான ஞாயிற்றின் ஒளியை வழிபடுதலை விடுத்து அதன் உட்பொருளாய் என்னால் வழிபடப்பட்ட சிவப்பொரு ளாகிய அமுதமாய், என் ஒப்பற்ற மாணிக்கமாய், முற்காலத்தில் தம் முயற்சியால் அறிய முற்பட்ட தாமரையில் வீற்றிருக்கும் பிரமனுக்கும் திருமாலுக்கும் அறிதற்கு அரியனாய், அடியவர்களுக்கு எளியனாய் இருக்கும் பெரியபவளமலை போல்வானாய், முறுக்கு அவிழ்ந்து மலரும் பூக்களிலிருந்து வெளிப்படும் தேன் பரந்து பெருக்கெடுக்கும் சோலைகளால் சூழப்பட்ட திருவீழிமிழலை என்ற திருத்தலத்தை ஆளும் கார்மேகம் போன்ற கரியகழுத்தை உடைய எம் மேம்பட்ட குருமணியை அணுகினால் கொடிய வினைகளின் தாக்குதல்கள் நம்மை அணுகமாட்டா.

விளக்கவுரை

மண்டலம் - ஞாயிற்றின் வட்டம், அதன் ஒளியை விலக்கி நுகர்தலாவது, ஞாயிற்றின் ஒளியிலே மயங்கி அதனையே வணங்கியொழியாது, அதன் நடுவில் எழுந்தருளியிருக்கும் சிவ மூர்த்தியை வணங்கி மகிழ்தல். மருந்து - அமுதம். மாறு - கேடு. அலர் அயன் - மலரின்கண் உள்ள பிரமன். `அயன்மாற்கு அரியதும், அடியார்க்கு எளியதும் ஆயதோர் பவளமால்வரை` என்றது இல்பொருளுவமை. ``அரிது மாய்`` என்ற உம்மை, எச்சம். மலர்வாய் - மலரின்கண் பொருந்திய. வேரி - தேன். வார் - ஒழுகுகின்ற. குரு மணி - ஆசிரியருள் தலைவன்.

தன்னடி நிழற்கீழ் என்னையும் தகைத்த
சசிகுலா மவுலியைத் தானே
என்னிடைக் கமலம் மூன்றினுள் தோன்றி
எழுஞ்செழுஞ் சுடரினை அருள்சேர்
மின்னெடுங் கடலுள் வெள்ளத்தை வீழி
மிழலையுள் விளங்குவெண் பளிங்கின்
பொன்னடிக் கடிமை புக்கினிப் போக
விடுவனோ பூண்டுகொண் டேனே. **#49**

தன் திருவடிநிழலின் கீழ் அடியேனையும் தடுத்து ஆட்கொண்ட பிறைவிளங்குகின்ற முடியை உடையவனாய், தானே உகந்து என்னிடத்தில் அநாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய மேல் மூன்று ஆதாரங்களாகிய மூன்று தாமரைகளிலும் உதித்து எழும் சிறந்த சுடராய், அருளாகிய ஒளிபொருந்திய கடலின் நீர்ப்பெருக்காய், திருவீழிமிழலையுள் விளங்குகின்ற வெண்மையான பளிங்குபோன்ற

சிவபெருமானுடைய பொன்போன்ற அரிய திருவடிக்கண் தொண்டு செய்தலை மேற்கொண்ட அடியேன் அத்திருவடிகள் அடியேன் உள்ளத்தை விடுத்து நீங்கவிடுவேனோ?

விளக்கவுரை

தகைத்த - தடுத்து நிறுத்திய. சசி - சந்திரன். குலா - விளங்குகின்ற. மவுலி - முடியையுடையவன்; ஆகுபெயர். கமலம் மூன்று - ஆதாரங்கள் ஆறனுள் மேல் உள்ள மூன்று. கீழ் உள்ள மூன்றில் பிற கடவுளர் இருத்தலின், இவற்றையே கூறினார். `அருள்சேர் நெடுங்கடல்` என இயையும்.சேர் - திரண்ட. மின் - ஒளி. கடல், ஆகு பெயராகாது இயற்பெயராயே நின்று, பள்ளத்தையே உணர்த்திற்று. ``வெள்ளம்`` என வாளா கூறினாராயினும் இன்பம்சேர் (திரண்ட) வெள்ளம் என உரைக்க. வெள்ளம் - நீர்ப்பெருக்கு. அருளின் வழியே ஆனந்தந் தோன்றுதலின், அருளைக் கடலாகவும், ஆனந்தத்தை அதன்கண் நிறைந்த நீர்ப்பெருக்காகவும் உருவகித்தார். சிவபிரானை, ``பளிங்கு`` என்றது திருநீற்றொளி பற்றி. புக்கு - புகுந்தபின். `அவ்வடியை இனிப் போகவிடுவனோ. இறுகப் பற்றிக்கொண் டேனாதலின்` என்க.

இத்தெய்வ நெறிநன் றென்றிருள் மாயப்
பிறப்பறா இந்திர சாலப்
பொய்த்தெய்வ நெறிநான் புகாவகை புரிந்த
புராணசிந் தாமணி வைத்த
மெய்த்தெய்வ நெறிநான் மறையவர் வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
அத்தெய்வ நெறியிற் சிவமலா தவமும்
அறிவரோ அறிவுடை யோரே. **#50**

`இந்தத் தெய்வத்தை வழிபடும் வழி நல்வழி` என்று உட்கொண்டு அஞ்ஞானமும் வஞ்சனையும் கூடிய பிறவிப் பிணி யிலிருந்து தாமே தம்மைக் காத்து கொள்ள இயலாத இந்திர சாலம் போன்று விரைவில் அழியும், நிலைபேறில்லாத தெய்வங்களைப் பரம் பொருளாகக் கருதி வழிபடும் வழியிலே அடியேன் ஈடுபடாத வகையில் அருள்புரிந்த, வேண்டியவர்க்கு வேண்டியன நல்கும் சிந்தாமணியாய், ஆதிபுராதனனாய் உள்ள சிவபெருமான் அமைத்து வைத்த உண்மையான தெய்வநெறியில் வாழும் நான்கு வேதங்களிலும் வல்ல அந்தணர்களின் திருவீழிமிழலையில், தேவருலகிலிருந்து இவ்வுலகிற்கு வந்த செழுமையான கோயிலில் உகந்தருளியிருக்கும் சிவ பெருமானை விடுத்து, அறிவுடையார்கள் பயனில்லாத பிறபொருள்களைப் பொருளாக நினைப்பாரோ?

விளக்கவுரை

இருள் - அறியாமை. மாயம் - நிலையாமை `இவற்றை யுடைய பிறப்பு` என்க. அறா - அறுத்து உய்விக்க மாட்டாத. இம் மாட்ட மை உடையவாயினும், மாட்டுவபோலச் சொற்சாலம் செய்தல் பற்றி, ``இந்திர சால நெறி`` என்றார். ``பொய்`` என்றது போலியை. `பொய்த் தெய்வங்களைக்கொண்ட நெறி` என்க.

புரிந்த - இடை விடாது நின்று அருள்செய்த. புராண சிந்தா மணி - பழைய (எல்லாப் பொருட்கும் முன்னே உள்ள) சிந்தாமணி; என்றது, சிவ பெருமானை. வைத்த - அமைத்த. `மெய்த் தெய்வ நெறியையுடைய நான்மறையோர்` என்க. கோயிற்கண் உள்ளதும், அத்தெய்வ நெறிக்கண் விளங்குவதும் ஆகிய சிவம்` என்க.

அவம் - பயனில்லாத பிறபொருள்கள். அறிவரோ - பொரு ளாக நினைப்பரோ? நினையார்.

அக்கனா அனைய செல்வமே சிந்தித்
தைவரோ டழுந்தியான் அவமே
புக்கிடா வண்ணம் காத்தெனை ஆண்ட
புனிதனை வனிதைபா கனைஎண்
திக்கெலாங் குலவும் புகழ்த்திரு வீழி
மிழலையான் திருவடி நிழற்கீழ்ப்
புக்குநிற் பவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந் தடிமைபூண் டேனே. **#51**

உண்மையில்லாத பொய்த்தோற்றமாகிய கனவைப் போன்று நிலைபேறில்லாத உலகியல் செல்வங்களைப் பெறும் வழிகளையே ஆராய்ந்து, ஐம்புல இன்பத்தில் ஈடுபட்டு அடியேன் வாழ்க்கை வீணாகாதபடி காப்பாற்றி அடியேனை ஆட்கொண்ட தூயோனாய்ப் பார்வதிபாகனாய் எட்டுத்திக்குக்களிலும் தன்புகழ் பரவிய திருவீழிமிழலை எம்பெருமானுடைய திருவடி நிழலின் கீழ்ப்பொருந்தியிருப்பவர்களுடைய பொலிவுடைய திருவடித் தாமரைகள் தோய்ந்த அடிப்பொடியினை அணிந்து அவ்வடியவர் களுக்குத் தொண்டு செய்வதனை மேற்கொண்டேன்.

விளக்கவுரை

பண்டறி சுட்டாய அகரச் சுட்டு, ``செல்வம்`` என்பத னோடு இயையும். கனா, நிலையாமை பற்றிவந்த உவமை. ``சிந்தித்து`` என்றது, `விரும்பி` என்றவாறு. ஐவர் - ஐம்புலன்கள். அழுந்தி - மிகப் பொருந்தி. அவமே - வீண் செயலிலே. பொடி - துகள். `அவர்க்கு அடிமை பூண்டேன்` என்க. `இனி எனக்கு என்ன குறை` என்பது குறிப்பெச்சம்.

கங்கைநீர் அரிசிற் கரைஇரு மருங்கும்
கமழ்பொழில் தழுவிய கழனித்
திங்கள்நேர் தீண்ட நீண்டமா ளிகைசூழ்
மாடநீ டுயர்திரு வீழித்
தங்குசீர்ச் செல்வத் தெய்வத்தான் தோன்றி
நம்பியைத் தன்பெருஞ் சோதி
மங்கைஓர் பங்கத் தென்னரு மருந்தை
வருந்திநான் மறப்பனோ இனியே. #52

இருபக்கங்களிலும் பூக்கள் மணம் கமழும் சோலை களைக் கொண்டதாய்க் கங்கை போன்ற தூயநீரைஉடைய அரிசில் ஆற்றங் கரையில் வயல்வளம் உடையதாய்ச் சந்திரனைத் தொடும் படியான மிகஉயர்ந்த மேல்மாடிகள் நிறைந்த பேரில்லங்களை மிகுதி யாக உடைய மேம்பட்ட திருவீழிமிழலையில் உகந்தருளியிருக்கும், சிறந்த செல்வமாகத் தானாகவே தோன்றிய குண பூரணனாய், தன் பேரொளியே வடிவெடுத்தாற் போன்ற பார்வதி பாகனாய் உள்ள என் கிட்டுதற்கரிய அமுதத்தை, இனிமேல் மறந்து வருந்துவேனோ?

விளக்கவுரை

`கங்கையது நீர்போலும் நீரையுடைய அரிசில்` என்க. ``கங்கை நீர்`` உவமையாகு பெயர். அரிசில், ஓர் ஆறு. அரிசிலின் கரைக்கண் உள்ளதும், இருமருங்கும் பொழிலால் சூழப்பட்டதும், கழனிகளை யுடையதும், நீண்ட மாளிகை சூழ்ந்ததும், மாடங்கள் நீடியதுமான உயர்திருவீழி` என்க. `மாளிகை, மாடம்` என்பன இல்லத்தின் வகைகள். `தங்கு, சீர், செல்வம், தெய்வம், தான்தோன்றி` ஆகிய அனைத்தும், ``நம்பி`` என்பதையே விசேடித்தன. சோதி - ஒளி. `தனது ஒளியாகிய மங்கை` என்க. ``வருந்தி மறப்பனோ`` என்றதை, `மறந்து வருந்துவனோ` எனப் பின்முன்னாக்கி யுரைக்க. `வருந்த` எனப் பாடம் ஓதுதலும் ஆம்.

ஆயிரங் கமலம் ஞாயிறா யிரமுக்
கண்முக கரசர ணத்தோன்,
பாயிருங் கங்கை பனிநிலாக் கரந்த
படர்சடை மின்னுபொன் முடியோன்,
வேயிருந் தோளி உமைமண வாளன்
விரும்பிய மிழலைசூழ் பொழிலைப்
போயிருந் தேயும் போற்றுவார் கழல்கள்
போற்றுவார் புரந்தரா திகளே. #53

ஆயிரம் கதிரவர்கள் ஒன்று கூடினாற்போல முக் கண்களின் ஒளியை உடையவனாய், ஆயிரம் தாமரைபோன்று முகமும் கைகளும்

பாதங்களும் அழகாக உடையவனாய், பரவின பெரிய கங்கையும் குளிர்ந்த பிறையும் மறையவைத்த பரவிய சடை ஒளிவிடும் அழகிய திருமுடியை உடையவனாய், மூங்கில் போன்ற பெரிய தோள்களை உடைய பார்வதியின் கணவனாகிய சிவபெரு மான் உகந்தருளியிருக்கும் திருவீழிமிழலை என்ற திருத்தலத்தைச் சூழ்ந்த சோலைகளிடையே தங்கி, அங்கு இருந்தவாறே, கோயிலை அடையாது சிவபெருமானைப் போற்றித் துதிக்கின்ற அடியவர் களுடைய திருவடிகளை இந்திரன் முதலியோர் போற்றி வழிபடுவர்.

விளக்கவுரை

கண் முதலியவற்றை எதிர்நிரனிறையாக்கி, கண் ஒன்றற்கும் ஞாயிற்றை உவமையாகவும், ஏனையவற்றிற்குக் கமலத்தை உவமையாகவும் கொள்க. கண்களை, ``ஆயிர ஞாயிறு`` என்றது ஒளிமிகுதி பற்றி. கரம் - கை. சரணம் - பாதம். பாய் இருங் கங்கை - பாய்ந்தோடுகின்ற பெரிய கங்கை. பனி - குளிர்ச்சி. கரந்த - மறைத்த. படர் - விரிந்த. `சடையாகிய பொன்முடியோன்` என்க. ``போய்`` என்றது, `அடைந்து` என்றபடி. `திருவீழிமிழலைக் கோயிலை அடைந்து போற்றாவிடினும், அதனைச் சூழ்ந்துள்ள பொழிலை அடைந்தேனும் போற்றுவாரது கழல்களைப் போற்றுவார் புரந்தராதியர் ஆவர்` என்றார். புரந்தரன் - இந்திரன்.

எண்ணில்பல் கோடி சேவடி முடிகள்
எண்ணில்பல் கோடிதிண் டோள்கள்
எண்ணில்பல் கோடி திருவுரு நாமம்
ஏர்கொள்முக் கண்முகம் இயல்பும்
எண்ணில்பல் கோடி எல்லைக்கப் பாலாய்
நின்றைஞ்ஞூற் றந்தணர் ஏத்தும்
எண்ணில்பல் கோடி குணத்தர்ஏர் வீழி
இவர்நம்மை ஆளுடை யாரே. **#54**

எண்ணிக்கையைக் கடந்த பலகோடிக் கணக்கான சிவந்த பாதங்களையும், பலமுடிகளையும், பல வலிய தோள்களை யும், பலகோடிக்கணக்கான திருவுருவங்களையும், திருநாமங்களை யும், அழகிய முக்கண்கள் பொருந்திய முகங்களையும் செயல்களையும் கொண்டு அளவின் எல்லைக்கு அப்பாற்பட்டவராய் நின்று, அந்தணர் ஐந்நூற்றுவர் துதித்து வழிபடுகின்ற எண்ணற்ற பலகோடி நற்பண்புகளை உடையவர் அழகிய திருவீழிமிழலையை உகந்தருளியிருக்கும் பெருமானார். இவர் நம்மை அடியவராகக் கொள்ளும் இன்னருள் உடையவர்.

விளக்கவுரை

``எண்ணில் பல் கோடி`` என்றது, `அளவிறந்த` என்ற வாறு. சேவடி முதலியவற்றை, `அளவிறந்தன` என்றல் எங்கும் நிறைந்து நிற்கும் நிலையைக் குறிப்பதாம்
ஆயிரந் தாமரை போலும் ஆயிரஞ் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலும் ஆயிரந் தோள்உடை யானும்
ஆயிரம் ஞாயிறு போலும் ஆயிரம் நீள்முடி யானும்
ஆயிரம் பேர்உகந் தானும் ஆரூர் ஆமர்ந்தஅம் மானே. *(தி.4 ப.4 பா.8)*
என்று அருளியது காண்க. முகம் உள்ள இடம் எல்லாம் முக்கண் உள்ளமையின், ``எண்ணில் பல்கோடி முக்கண்`` என்பதும் கூறினார். ``இயல்பு`` என்றது, செயலை. எண்ணில் பல்கோடி குணம், ஒருவ ராலும் அளவிட்டறிய ஒண்ணாத தன்மைகள். சடமும், சித்துமாகிய பொருள்கள்தாம் பலவாகலின், அவற்றின் எல்லைகளும் பலவாதல் பற்றி, அவையனைத்தையும் கடந்து நிற்றலை, ``எண்ணில் பல்கோடி எல்லைக்கப்பாலாய் நின்று`` என்றார். தில்லையில் மூவாயிரவர் போலத் திருவீழிமிழலையில் உள்ள அந்தணர் ஐஞ்ஞூற்றுவர் என்க. ``இவர்`` என்றது, `இத்தகு மேலோர்` என்னும் பொருட்டு. ஆள் உடையார் - ஆளாக உடையவர். `ஆதலின் எமக்கென்ன குறை` என்பது குறிப்பெச்சம்.

தக்கன் வெங்கதிரோன் சலந்தரன் பிரமன்
சந்திரன் இந்திரன் எச்சன்
மிக்கநெஞ் சரக்கன் புரம் கரி கருடன்
மறலி வேள் இவர்மிகை செகுத்தோன்
திக்கெலாம் நிறைந்த புகழ்த்திரு வீழி
மிழலையான் திருவடி நிழற்கீழ்ப்
புக்கிருந் தவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந் தடிமைபூண் டேனே. **#55**

தக்கன், வெப்பமான கதிர்களைஉடைய சூரியன், சலந்தரன் என்ற அசுரன், பிரமன், சந்திரன், இந்திரன், தக்கன் செய்த வேள்வித் தலைவன், வலிய நெஞ்சினை உடைய இராவணன், திரிபுரம், தாருகவன முனிவர்கள் விடுத்தயானை, கருடன், இயமன், மன்மதன் ஆகிய இவர்களுடைய எல்லை கடந்த செருக்கை அழித்த வனாய், எண்திசைகளிலும் நிறைந்த புகழையுடைய திருவீழிமிழலைப் பெருமானுடைய அடியவர்களுடைய பொலிவை உடைய திருவடித் தாமரைகள் படிந்த பொடியைத் தலையில்சூடி அவர்களுக்கு அடியவனானேன்.

விளக்கவுரை

அரக்கன் - இராவணன். மறலி - கூற்றுவன். கரி - யானை; கயாசுரன்.

வேள் - மன்மதன். திணைவிராய் எண்ணியவழி மிகுதி பற்றி, `இவர்` என உயர்திணை முடிபு பெற்றது. அன்றி, அனைத்துப் பெயர்களையும் உயர்திணை என்றே கொள்ளினும் அமையும். மிகை - செருக்கு. இந்திரனைத் தோள் நெரித்ததும், கருடனை இடப தேவரால் அலைப்பித்ததும், பிறவும் ஆகிய வரலாறு களைப் புராணங்களிற் கண்டுகொள்க. இதன் ஈற்றடியில் உள்ள தொடர் ஆறாம் திருப்பாட்டின் ஈற்றடியிலும் வந்திருத்தல் காண்க.

உளங்கொள மதுரக் கதிர்விரித் துயிர்மேல்
அருள்சொரி தரும்உமா பதியை
வளங்கிளர் நதியும் மதியமும் சூடி
மழவிடை மேல்வரு வானை
விளங்கொளி வீழி மிழலைவேந் தேஎன்
றாந்தனைச் சேந்தன்தா தையையான்
களங்கொள அழைத்தால் பிழைக்குமோ அடியேன்
கைக்கொண்ட கனகக்கற் பகமே. **#56**

மனத்தில் பொருந்துமாறு இனிய ஞானஒளியைப் பரப்பி, உயிரினங்கள் மாட்டுத் தன் கருணையைப் பொழிகின்ற பார்வதியின் கணவனாய், வளம் பொருந்திய கங்கையையும் பிறையையும் சூடியவனாய், இளைய காளைமீது இவர்ந்து வரு பவனாய் உள்ள ஒளி விளங்கும் திருவீழிமிழலையில் உள்ள, அரசே என்று என்னால் இயன்றவரையில் முருகன் தந்தையாகிய அப்பெருமானை அடியேன் குரல்வளை ஒலி வெளிப்படுமாறு அழைத்தால், அடியேன் பற்றுக்கோடாகக் கொண்ட பொன்நிறம் பொருந்திய கற்பகமரம் போன்ற அப்பெருமான் அடியேன் பக்கல் வரத் தவறுவானோ?

விளக்கவுரை

உளம் கொள - உயிர்களின் உள்ளம் நிறையும்படி. மதுரம் - இனிமை; இங்குத் தண்மைமேல் நின்றது. `தண்கதிர்` என்ற தனால், திங்களாய் நிற்றல் பெறப்பட்டது. ``கதிர்`` என்றது, பின்வரும் அருளையேயாம். ஆம்தனை - இயலும் அளவு. சேந்தன் - முருகன்; இவ்வாசிரியர் பெயரும் அதுவாதல் கருதத் தக்கது. களம் கொள - என்முன் வந்து தோன்றுமாறு. பிழைக்குமோ - தவறுமோ; வாரா தொழிவானோ! கைக்கொண்ட - பற்றிநின்ற. கனக கற்பகம் - பொன் வண்ணமான கற்பகத்தருப்போல்பவன். ``சேந்தன் தாதையை`` என்றதை ``விடைமேல் வருவானை`` என்பதன் பின்னும், ``யான்`` என்றதை, ``என்று`` என்பதன் பின்னும் கூட்டுக.

பாடலங் காரப் பரிசில்கா சருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி

நீடலங் காரத் தெம்பெரு மக்கள்
நெஞ்சினுள் நிறைந்துநின் றானை
வேடலங் காரக் கோலத்தின் னமுதைத்
திருவீழி மிழலையூர் ஆளும்
கேடிலங் கீர்த்திக் கனககற் பகத்தைக்
கெழுமுதற் கெவ்விடத் தேனே. **#57**

பாடப்படுகின்ற அணிகள் நிறைந்த பாடல் களுக்குப் பரிசிலாகப் பொற்காசுகளை வழங்கி மேம்பட்ட செந்தமிழ்ப் பாமாலைகளாகிய மலர்களைச் சூடி, எம்பெருமக்களாகிய தேவார முதலிகள் உள்ளத்திலே நீடித்து நிற்கும் அலங்காரத்துடன் நிறைந்து நின்றவனாய், அருச்சுனனுக்கு அருளுவதற்காக அழகிய வேட்டுவக் கோலம் பூண்ட அமுதமாய், திருவீழிமிழலை என்ற திருத்தலத்தை ஆளும், என்றும் அழிதலில்லாத புகழைஉடைய பொன்நிறக் கற்பகம் போல்பவனாகிய எம்பெருமானை அடைவதற்கு அடியேன் எந்த விதத்தகுதியையும் உடையேன் அல்லேன். எம்பெருமான் அடியே னுடைய தகுதியை நோக்காது தன்னுடைய காரணம் பற்றாக் கருணை யாலேயே அடியேனுக்கு அருள் செய்துள்ளான்.

விளக்கவுரை

பாடு அலங்காரப் பரிசில் - பாடுகின்ற அணிநிறைந்த பாட்டிற்குப் பரிசாக. அலங்காரம், ஆகுபெயர். காசு - பொற்காசு. பழுத்த - அன்பு நிறைந்த, ``எம்பெருமக்கள்`` என்றதை முதற்கண் கூட்டி, `அவர்தம் பழுத்த செந்தமிழாகிய மலரைச் சூடிக்கொண்டு, நீடு அலங்காரத்துடன் அவர்தம் நெஞ்சினில் நிறைந்துநின்றானை` என உரைக்க. ``எம்பெருமக்கள்`` என்றது, ஞானசம்பந்தர், நாவுக்கரசர் என்னும் இவரையே என்பது வெளிப்படை.

``இருந்து நீர்தமி ழோடிசை கேட்கும்
இச்சையாற் காசு நித்தல் நல்கினீர்
அருந்தண் வீழிகொண் டீர்அடி யேற்கும் அருளுதிரே``
(தி. 7. ப.88. பா.8)

எனச் சுந்தரரும் இத்தலத்தில் அருளிச் செய்தமை காண்க. வேடு அலங்காரக் கோலம் - வேட்டுவச் சாதியாகப் புனைந்துகொண்ட வேடம். இஃது அருச்சுனன் பொருட்டு என்பது மேலே சொல்லப்பட்டது. கேடு இல் அம்கீர்த்தி - கெடுதல் இல்லாத அழகிய புகழ். கெழுமுதல் - கூடுதல். ``எவ்விடத்தேன்`` என்றதனால், இவ்விறுதித் திருப்பாடலில் பணிவு கூறினார் என்க.

சேந்தனார் - திருவாவடுதுறை

பொய்யாத வேதியர் சாந்தைமெய்ப்
புகழாள ராயிரம் பூசுரர்
மெய்யே திருப்பணி செய்சீர்
மிகுகா விரிக்கரை மேய
ஐயா திருவா வடுதுறை
யமுதேயென் றுன்னை யழைத்தக்கால்
மையார் தடங்கண் மடந்தைக்கொன்
றருளா தொழிவது மாதிமையே. **#58**

என்றும் தான் கூறுவது பொய்த்தல் இல்லாத வேதத்தை ஒதுபவராய்ச் சாத்தனூரில் வாழும் உண்மையான புகழாளராய், எண்ணிக்கையில் ஆயிரவராய் உள்ள நிலத்தேவராம் அந்தணர்கள் உள்ளம் ஒன்றித் திருத்தொண்டு செய்கின்ற, சிறப்பு மிகுகின்ற காவிரிக் கரையில் விரும்பி வீற்றிருக்கும் தலைவனே! திருவாவடுதுறையில் உகந்தருளியிருக்கும் அமுதமே! என்று என் மகள் உன்னை அழைத் தால் மைதீட்டிய பெரிய கண்களைஉடைய என்மகளுக்கு நீ ஒரு வார்த்தையும் மறுமாற்றமாகக் கூறாமல் இருப்பது உனக்குத் தகுதியோ? பெருமையோ? - என்று தாய் பெருமானிடம் முறையிட்டவாறு.

விளக்கவுரை

காவிரியாற்றில் பல புண்ணியத் துறைகள் உள்ளன; அவற்றுள் ஒருதுறையே ஆவடுதுறை. இஃது உமையம்மை பசுவாய் இருக்கவேண்டி வந்த நிலையை நீக்கினமை பற்றி வந்த காரணப் பெயர் என்பது புராணக் கொள்கை. இத்துறையைச் சார்ந்துள்ள ஊர். `சாந்தை` என்பது. எனவே, `ஆவடுதுறை` என்பது, இறைவன் திருக்கோயில் உள்ள இடமும், `சாந்தை` என்பது, சாத்தனூராகிய அதனைச் சார்ந்துள்ள ஊர்ப் பகுதியுமாதல் பெறப்படும். `துறை` எனப் பெயர் பெற்ற இடங்களில் அப்பெயர்கள் பெரும்பாலும் `அருட்டுறை` என்பது போலத் திருக்கோயிலுக்கே உரிய பெயராய்ப் பின், அஃது உள்ள ஊர்க்கும் ஆயினமை பெறப்படும். `தில்லையில் உள்ள அந்தணர் மூவாயிரவர்` என்பதுபோல, `திருவாவடுதுறையில் உள்ள அந்தணர் ஆயிரவர்` என்பது மரபாதல் இத்திருப்பாடலால் பெறப் படுகின்றது. ஒன்று - ஒருசொல். மாதிமை - பெருமை. ``மாதிமையே`` என்ற ஏகாரவினா, எதிர்மறை குறித்து வந்தது.

மாதி மணங்கம ழும்பொழில்
மணிமாட மாளிகை வீதிசூழ்
சோதி மதிலணி சாந்தைமெய்ச்

சுருதி விதிவழி யோர்தொழும்
ஆதி யமரர் புராணனாம்
அணிஆ வடுதுறை நம்பிநின்ற
நீதி யறிகிலள் பொன்னெடுந்
திண்டோள் புணர நினைக்குமே. **#59**

என் மகள் நறுமணம் கமழும் சோலைகளும், அழகிய மேல்மாடிகளை உடைய மாளிகைகளை உடைய வீதிகளும் சூழ்ந்துள்ள, ஒளிவீசும் மதில்களால் அழகு செய்யப்பட்டுள்ள சாத்தனூரில் உள்ள உண்மையான வேதநெறியில் வாழும் சான்றோர் கள் வணங்குகின்ற, ஏனைய தேவர்களுக்கு முற்பட்ட பழைமை யனாகிய, அழகிய ஆவடுதுறை என்ற கோயிலில் உகந்தருளி யிருக்கும் குணபூரணனாகிய எம்பெருமான் பெருமையை உள்ளவாறு அறியும் ஆற்றல் இலளாய் அவனுடைய பொன்நிறமுடைய நீண்ட வலிய தோள்களைத் தழுவநினைக்கின்றாள் - என்று தன்மகள் நலம் வினவிய அயலக மகளிருக்குத் தாய் கூறியவாறு.

விளக்கவுரை

மாதி - மாது உடையவள்; தலைவி. மாது - அழகு. ``மாதி`` என்றது ``அறிகிலள்`` என்பதனோடு இயையும். மெய்ச் சுருதி- உண்மை நூலாகிய வேதம். அதன் விதிவழியோர், அந்தணர். புராணன் - பழையோன்; என்றது, `முற்பட்டவன்` எனப் பொருள் தந்து, அமரர்களையும் தோற்றுவித்தோனாதல் குறித்தது. ``நீதி`` என்றது பெருமையை; அதனை அறியாதவளாய் அவன் திண்தோள் களைப் புல்ல நினைத்தாள்; இது கூடுவதோ` என்றபடி. இக்கூற்றால், இவ்வாசிரியருக்கு இறைவன் திருவருட்கண் உள்ள வேட்கை மிகுதி புலனாகும். ``அறிகிலள்`` என்றது முற்றெச்சம்.

நினைக்கும் நிரந்தர னேயென்னும்
நிலாக்கோலச் செஞ்சடைக் கங்கைநீர்
நனைக்கும் நலங்கிளர் கொன்றைமேல்
நயம்பேசும் நன்னுதல் நங்கைமீர்
மனக்கின்ப வெள்ள மலைமகள்
மணவாள நம்பிவண் சாந்தையூர்
தனக்கின்பன் ஆவடு தண்டுறைத்
தருணேந்து சேகரன் என்னுமே. **#60**

நல்லநெற்றியை உடைய பெண்களே! என்மகள் எம்பெருமானை விருப்புற்று நினைப்பவளாய் `எக்காலத்தும் நிலை பெற்றிருப்பவனே` என்று அவனைப்பற்றிப் பேசுவாள். பிறைச் சந்திரனுடைய அழகினைக் கொண்ட சிவந்த சடையில் மறைந் திருக்கும் கங்கைநீர் ஈரமாக்குகின்ற

பெருமானுடைய கொன்றைப்பூங் கண்ணியின்மீது விருப்பம் கொண்டு பேசுவாள். மனத்திற்கு இன்ப வெள்ளத்தை அருளுபவனாய், பார்வதியை மணந்த குணபூரணனாய், வளமான சாத்தனூரில் விருப்புடையவனாய் அவ்வூரிலுள்ள ஆவடு துறை என்ற கோயிலில் உகந்தருளியிருக்கும் பிறைசூடி என்று எம் பெருமானைப் பற்றிப் பேசுவாள் - என்று செவிலி தன் மகள் நிலையை வினவிய அயலக மகளிருக்கு உரைத்தவாறு.

விளக்கவுரை

``நினைக்கும்`` என்றது முற்று. நிரந்தரன் - நிலை பெற்றிருப்பவன். நிலாக் கோலம் - நிலாவினால் உண்டாகிய அழகு. நயம் - விருப்பம். பேசும் - வெளிப்படையாக எடுத்துச் சொல்வாள். ``நங்கைமீர்`` என்றது முதலியன, தலைவி கூற்றைச் செவிலி அங்ஙனமே கொண்டு கூறியது. ``நங்கைமீர்`` என்றதனைச் செவிலி கூற்றெனினும் இழுக்காது. ``மனக்கு`` என்றதில் அத்துச்சாரியை தொகுத்தல். மனக்கு இன்ப வெள்ளம் - என் மனத்துக்கு இன்ப வெள்ளமாய் இருப்பவன். ``நம்பி, இன்பன், தருணேந்து சேகரன்`` என்றவை, ஒரு பொருள்மேற் பல பெயர். ``சாந்தையூர்`` என்றதில், ``ஊர்`` என்றது, அதன்கண் வாழ்வாரை. தருண இந்து சேகரன் - இளமையான சந்திரனை அணிந்த முடியை உடையவன்.

தருணேந்து சேகர னேயெனுந்
தடம்பொன்னித் தென்கரைச் சாந்தையூர்ப்
பொருணோர்ந்த சிந்தை யவர்தொழப்
புகழ்செல்வ மல்குபொற் கோயிலுள்
அருணோர்ந் தமர்திரு வாவடு
துறையாண்ட ஆண்டகை யம்மானே
தெருணோர்ந்த சித்தம் வலியவா
திலக நுதலி திறத்திலே. **#61**

பெரும்பரப்புடைய காவிரியின் தென்கரையில் அமைந்த சாத்தனூரில் மெய்ப்பொருளிலேயே ஈடுபட்டமனத்தை யுடைய அடியவர்கள் வழிபட, புகழும் செல்வமும் நிறைந்த ஆவடு துறைக் கோயிலுள் அருளை வழங்கிக் கொண்டு வீற்றிருக்கும், ஆளும் தகுதியைஉடைய தலைவனே! என்மகள் `பிறையைத் தலையில் சூடியவனே` என்று உன்னைப் பலகாலும் அழைக்கிறாள். திலகம் அணிந்த நெற்றியைஉடைய என்மகள் திறத்தில் மாத்திரம் தெளிந்த அறிவினைஉடைய உன்மனம் இரக்கம் கொள்ளாமல் கல்போல இருப் பதன் காரணம்யாது? - என்று தாய் பெருமானிடம் முறையிட்டவாறு.

விளக்கவுரை

பொருள் - மெய்ப்பொருள். நேர்ந்த - தெளிந்த. அருள் நேர்ந்து - அருளைத் தர இசைந்து. தெருள் நேர்ந்த சித்தம் - இவளது துன்பத்தைத் தெளிய உணர்ந்த மனம். `மனம்` என்பதை, `உனது மனம்` என உரைக்க. வலியவா - கடிதாய் இருந்தவாறு. இதனை இறுதி யில் வைத்து, `வருந்தத் தக்கது` என்னும் சொல்லெச்சம் வருவித்து முடிக்க. இதனுள், ``தருணேந்து சேகரனே`` என்பது ஒன்றும் தலைவி கூற்று. ஏனைய, செவிலி கூற்று.

திலக நுதல்உமை நங்கைக்கும்
திருவா வடுதுறை நம்பிக்கும்
குலக அடியவர்க் கென்னையாட்
கொடுத்தாண்டு கொண்ட குணக்கடல்
அலதொன் றறிகின்றி லேமெனும்
அணியும்வெண் ணீறஞ் செழுத்தலால்
வலதொன் றிலள்இதற் கென்செய்கேன்
வயல்அந்தண் சாந்தையர் வேந்தனே. **#62**

வயல்வளம் பொருந்திய அழகிய குளிர்ந்த சாத்தனூர்க்கு அரசே! என்மகள் `நெற்றியில் திலகம் அணிந்த உமா தேவிக்கும் திருவாவடுதுறைக் கோயிலில் உகந்தருளியிருக்கும் குண பூரணனான எம்பெருமானுக்கும் அடிமைசெய்யும் கூட்டமான அடியவர்களுக்கு அடியேனை ஆட்படுத்து. என்னைத்தனக்கு அடிமையாகக் கொண்ட குணக்கடலாகிய எம்பெருமானை அல்லது யான்வேறு ஒருதெய்வத்தை அறியேன் என்று பலகாலும் கூறுகிறாள். வெண்ணீறு அணிதலும் திரு ஐந்தெழுத்தை ஓதுதலும் அல்லாமல் அவள் வேற்றுச் செயல் எதனையும் செய்கின்றாள் அல்லள். அவளுடைய இந்தநிலைமாறி அவள் பழைய நிலைக்கு வருதலுக்கு யான் செயற்பாலது யாது? - என்று செவிலி இறைவனிடம் முறையிட்டவாறு.

விளக்கவுரை

`குலம்` என்பது, ககரம் பெற்று, ``குலகம்`` என வந்தது; `கூட்டம்` என்பது பொருள். அம்மையை வேறு கூறியது, `அவளோடு உடனாய் நின்று காட்சி வழங்கும் அவன்` என்பது உணர்த்துதற்கு. கொடுத்து - கொடுத்தமையால். ``வெண்ணீறு`` என்றதற்கு, `அதனைப் பூசுதலும்` எனவும், ``அஞ்செழுத்து`` என்றதற்கு, `அதனைச் சொல்லு தலும்` எனவும் உரைக்க. ``வேந்தன்`` என்றது, சிவபிரானை.

வேந்தன் வளைத்தது மேருவில்
அரவுநாண் வெங்கணை செங்கண்மால்

போந்த மதிலணி முப்புரம்
பொடியாட வேதப்புர வித்தேர்ச்
சாந்தை முதல்அயன் சாரதி
கதிஅருள் என்னுமித் தையலை
ஆந்தண் திருவா வடுதுறை
யான்செய்கை யார்அறி கிற்பரே. **#63**

`சிவபெருமானே! வானத்தில் உலாவிக்` கொண் டிருந்த மதில்களால் சூழப்பட்ட மூன்று கோட்டைகளும் சாம்பலாகு மாறு மேருமலையை வில்லாக வளைத்து, வாசுகியை வில் நாணாகக் கொண்டு, சிவந்தகண்களை உடைய திருமாலை அம்பாகக் கொண்டு, வேதங்களாகிய குதிரைகள் பூட்டப்பட்ட, பிரமனைத் தேர்ப்பாகனாக உடைய தேரினைச் செலுத்திய சாத்தனூர்த் தலைவனே! உன் அருளே அடியேனுக்குக்கதி` என்று என் மகள் பலகாலும் கூறுகிறாள். அவள் திறத்துத் தண்ணீரினால் குளிர்ந்த திருவாவடுதுறை என்னும் கோயிலில் உகந்தருளியிருக்கும் சிவபெருமான் செய்யநினைத்திருக் கின்ற செயலை யாவர் அறியவல்லார்? - என்று மகள் நலம் வினவிய அயலக மங்கையருக்குத் தாய் கூறியவாறு.

விளக்கவுரை

`நாண் அரவு` எனவும், அருள் கதி` எனவும் மாறிக் கூட்டுக. போந்த மதில் அணி - வானில் திரிந்த மதில்களைக் கொண்ட. `வேதப் புரவித் தேர்ச் சாந்தை முதல் வேந்தன்` என முன்னே கூட்டி, `முப்புரம் பொடியாட` என்பதனை அதன்பின் வைத்து உரைக்க. அருள்கதி என்றதற்கு, `அவனது அருளே எனக்குப் புகல்` எனப் பொருள் கூறுக. ``தையலை``என்றது, ``செய்கை`` என்னும் தொழிற் பெயரோடு முடியும். ஆம் - நீர். `அதனால் உண்டாகிய தண்மையை உடைய திருவாவடுதுறை` என்க. செய்கை - வருந்தச் செய்தலை. `யார் அறிகிற்பர்` என்றது, `அறிந்து நீக்க வல்லார் யார்` என்றதாம்.

கிற்போம் எனத்தக்கன் வேள்விபுக்
கெடுத்தோடிக் கெட்டஅத் தேவர்கள்
சொற்போலும் மெய்ப்பயன் பாவிகாள்
என்சொல்லிச் சொல்லும்இத் தூமொழி
கற்போல் மனங்கனி வித்தஎம்
கருணால யாவந்தி டாய்என்றாற்
பெற்போ பெருந்திரு வாவடு
துறையாளி பேசா தொழிவதே. **#64**

`பாவிகளே` நாங்கள் வேள்வியை முழுமையாக நிறைவேற்றி வைப்போம் என்று சொல்லி வேள்வியை நடத்தப்புகுந்து வீரபத்திரர்

வந்த அளவில் வேள்விச்சாலையிலிருந்து எழுந்து ஓடி அழிந்த அந்தத் தேவர்களின் சொற்கள் பயன்படாமல் போனதுபோல, நீங்கள் இந்த உடலால் எம்பெருமான் திருத்தொண்டினைவிடுத்து வேற்று உலகியல் செயல்களில் ஈடுபடும் செய்தி பயன்தாராது வீணாகும்` என்று இந்தத் தூய்மையான சொற்களைஉடைய என்மகள் பலகாலும் கூறுகிறாள். `எங்கள் கல் போன்றமனத்தைப் பழம்போல மென்மையுடையதாக்கிய கருணைக்கு இருப்பிடமான எம் பெருமானே! அடியேனுக்கு அருளவருவாயாக` என்று என் மகள் அழைத்தால், `மேம்பட்ட திருவாவடுதுறையை ஆள்பவனே! அவள் அழைத்தலுக்கு நீ ஒன்றும் பேசாமல் இருப்பது உனக்கு ஏற்ற தன்மையோ?` - என்று தாய் இறைவனிடம் வேண்டியவாறு.

விளக்கவுரை

கிற்போம் - (வேள்வியை யாம் முடிக்க) வல்லோம். எடுத்து - அதனைத் தொடங்கி. ஓடிக்கெட்ட - (பின்பு அது மாட்டாமல்) தோற்று ஓடி அழிந்த. சொல் - அத்தேவர்களது புகழ். பயன் தருவது, ``பயன்`` எனப்பட்டது. முன்னர்ப் போந்த சொற்குறிப்பால், `அவர் புகழ்கள் பயன் தருவனவாகா` என்பது பெறப் பட்டது. ``பாவிகாள்`` என்றது, அவர் புகழ்களைப் பயன் தருவனவாகக் கருதிச் சொல்லு வோரை. ``எனச் சொல்லிச் சொல்லும்`` என்றது, `என்று பலகாற் சொல் கின்ற` என்னும் பொருட்டாய் நின்றது. `இத் தூமொழியாளது கற் போலும் மனத்தை` என்க. என்றால் - என்று அவள் அழைத்தால். ``பெற்போ`` என்றதை இறுதியிற் கூட்டுக. பெற்பு - பெற்றி; தன்மை. பெற்போ - உனக்கு ஏற்ற தன்மையோ.

ஒழிவொன்றி லாஉண்மை வண்ணமும்
உலப்பிலள் ஊறின்ப வெள்ளமும்
மொழிவொன்றி லாப்பொன்னித் தீர்த்தமும்
முனிகோடி கோடியா மூர்த்தியும்
அழிவொன்றி லாச்செல்வச் சாந்தையூர்
அணிஆ வடுதுறை ஆடினாள்
இழிவொன்றி லாவகை யெய்திநின்
றிறுமாக்கும் என்னிள மானனே. **#65**

அழிதல் சிறிதும் இல்லாத செல்வன் கழல்ஏத்தும் செல்வத்தை உடைய சாத்தனூரில் உள்ள அழகிய ஆவடுதுறைக் கோயிலில் இன்பவெள்ளத்தில் மூழ்கிய, எனக்கு அன்னைபோன்று இனிய என் இளமான் போன்ற மகள் நீங்குதல் சிறிதும் இல்லாது ஆவடு துறைப் பெருமானுடைய உண்மை இயல்புகளைவிடாது சொல்லிக் கொண்டிருப்பாளாய்,ஊறிக்கொண்டிருக்கும் பேரின்ப வெள்ளத்தை யும்,

வற்றுதல் சிறிதும் இல்லாத காவிரித் தீர்த்தத்தையும் கோடிக்கணக் கான முனிவர்களையும், கணக்கற்ற இறைவனுடைய திருவுரு வங்களையும் குறைபாடு இல்லாத வகையில் அடைந்துநின்று அன் பால் எங்கள் சொற்களுக்குச் சிறிதும் செவிசாய்க்காத வகையில் பெரு மிதம் கொண்டுள்ளாள் - என்று தாய் தன்மகள் நிலைபற்றி அயலக மகளிரிடம் கூறியவாறு.

விளக்கவுரை

ஒழிவு ஒன்று இல்லா - நீங்குதல் சிறிதும் இல்லாத. உண்மை வண்ணம் - (ஆவடுதுறைப்பெருமானது) உண்மை இயல்புகள். உலப்பிலள் - விடாது சொல்வாளாகிய இவள்; இஃது ``ஆடினாள்`` என்பதனோடு இயையும். இன்பவெள்ளம் - இன்பப் பெருக்கு. மொழிவு ஒன்று இலாப் பொன்னி - சொல்லப்படுதல் சிறிதும் இல்லாத மிக்க பெருமையையுடைய காவிரி. ``முனி`` என்றது, அஃறிணை வாய்பாடாய்ப் பன்மை குறித்து நின்றது. `முனிகளது மூர்த்தி` என்க. மூர்த்தி - வடிவம். `முனிகள் கோடி கோடி` என்னாது. அவர்களது `வடிவு கோடி கோடி` என்றார், அவர்கள் இருந்து தவம் புரியும் காட்சியது சிறப்புணர்த்தற்கு. `திருவாவடுதுறை நவகோடி சித்தபுரம்` எனக் கூறப்படுதல். இங்கு நினைக்கத்தக்கது. `வெள்ளமும், தீர்த்தமும், மூர்த்தியும் அழிவில்லாத சாந்தையூர்` என்க. சாந்தையூர் அணி ஆவடுதுறை - சாந்தையூரால் அழகுபடுத்தப்படும் திருவாவடு துறை. இங்கு, `துறை` என்றது, துறைக்கண் உள்ள நீரை. `ஆடினாள்; அதனால், இழிவொன்றிலாவகை (மேன்மையானநிலை) எய்தி இறுமாக்கின்றாள்` என உரைக்க. ஈற்றில். `அன்னையே` என்பது, `அனே` எனக் குறைந்து நின்றது, மகளை, `அன்னை` எனக் கூறும் மரபு வழுவமைதி, அகப்பாட்டுக்களில் பயின்று வரும். `இளமானளே` எனப் பாடம் ஓதுதல் சிறக்கும்.

மானேர் கலைவளை யுங்கவர்ந்
துளங்கொள்ளை கொள்ள வழக்குண்டே
தேனே அமுதேஎன் சித்தமே
சிவலோக நாயகச் செல்வமே
ஆனேஅ லம்பு புனற்பொன்னி
அணிஆ வடுதுறை அன்பர்தம்
கோனேநின் மெய்யடி யார்மனக்
கருத்தை முடித்திடுங் குன்றமே. **#66**

தேன்போன்ற இனியவனே! அமுதம்போலப் புத்துயிர் அளிப்பவனே! என் உள்ளமே உறையுளாகக் கொண்டவனே! சிவலோகத் தலைவனாகிய என் செல்வமே! பசுக்கள் ஒலித்துக் கொண்டு மூழ்கும்

நீரை உடைய காவிரியாற்றங் கரையிலமைந்த அழகிய ஆவடுதுறையில் உகந்து குடியிருக்கும் அடியார் தலைவனே! உன்னுடைய உண்மை அடியவர்களுடைய உள்ளங்களின் விருப் பங்களை நிறைவேற்றிவைக்கும் அருட்குன்றே! இத்தகைய இனிய பண்புகளையும் செயல்களையும் உடைய நீ மான்போன்ற என்மகளுடைய அழகிய உடையையும் கவர்ந்து அவள் உள்ளத்தையும் உன்வசப் படுத்துவதற்கு என்னநீதி உள்ளது? - என்று செவிலி இறைவனிடம் முறையிட்டவாறு.

விளக்கவுரை

மான் - மான்போன்றவளாகிய என்மகளது. ஏர் கலை - அழகிய உடை. வழக்கு உண்டே - நீதி உண்டோ. ஆனே அலம்பு - ஆக்களே, ஒலிக்கின்ற; ஆவடுதுறை என்க. ``ஆனே`` என்றதனை இறைவனுக்கு ஏற்றி உரைப்பாரும், `அவ்விடத்தே` என உரைப்பாரும் உளர். `ஆவடு துறைக் குன்றமே` என இயைக்க. இப்பாட்டு முழுதும் செவிலி கூற்று.

குன்றேந்தி கோகன கத்தயன்
அறியா நெறிஎன்னைக் கூட்டினாய்
என்றேங்கி ஏங்கிஅ ழைக்கின்றாள்
இளவல்லி எல்லைக டந்தனள்
அன்றேஅ லம்பு புனற்பொன்னி
அணிஆ வடுதுறை யாடினாள்
நன்றே யிவள்நம் பரமல்லள்
நவலோக நாயகன் பாலளே. **#67**

கோவர்த்தன மலையைக் குடையாகப்பிடித்த திருமாலும், தாமரையில் தங்கும்பிரமனும் உணர முடியாத உன் திருவருள் நெறியிலே என்னையும் சேர்த்து விட்டாயே என்று மனம் பலவாறு வருந்திப் பெருமானை அழைக்கிறாள். இளங்கொடி போல்வாளாகிய என் மகள் என் கட்டுப்பாட்டைக் கடந்துவிட்டாள். ஒலிக்கும் நீரை உடைய காவிரிக்கரையில் அமைந்த அழகிய ஆவடு துறையை அடைந்து விட்டாள். இவள் நம் கட்டுப்பாட்டுக்கு அடங்கிய வள் அல்லள். புதிய உலகங்களுக்கும் தலைவனாகிய எம் பெரு மானைச் சார்ந்தவள் ஆயினாள். இவள் செயல் நமக்கு நன்றாக இருக் கிறதா? - என்று தாய் தன்னைச் சேர்ந்தவரிடம் கூறியவாறு.

விளக்கவுரை

குன்றேந்தி - கோவர்த்தன மலையைக் குடையாக ஏந்தியவன்; திருமால். கோகனகத்து அயன் - தாமரை மலரில் இருக்கும் பிரமன். இவ்விருவரும் அறியா நெறி, சிவஞானநெறி. எல்லை - உலக முறைமை. `பொன்னியை

ஆவடுதுறைக்கண் ஆடினாள்` என்க. `ஆடினாள்; அன்றே இவள் நம்பரம் அல்லள்: நன்றே நவலோக நாயகன் பாலளே` எனக் கூட்டுக. பரம் - சார்பு. நவம் - புதுமை; இங்கு வியப்பைக் குறித்தது.

பாலும் அமுதமும் தேனுமாய்
ஆனந்தந் தந்துள்ளே பாலிப்பான்
போலும்என் ஆருயிர்ப் போகமாம்
புரகால காம புராந்தகன்
சேலுங் கயலுந் திளைக்கும்நீர்த்
திருவா வடுதுறை வேந்தனோ
டாலு மதற்கே முதலுமாம்
அறிந்தோம் அரிவைபொய் யாததே. **#68**

`பாலும் அமுதும் தேனுமாக எனக்கு ஆனந்தம் தந்து என் மனத்தினுள்ளே நின்று இன்பம் கொடுத்தருளி என் அருமையான உயிரிடத்து இன்பத்தை விளைவிப்பவனாய்த் திரிபுரம், இயமனுடைய உடல், மன்மதனுடைய உடல் இவற்றை அழித்த வனாய், சேல்மீனும் கயல்மீனும் விளையாடும் காவிரிநீரை உடைய திருவாவடுதுறை மன்னனாகிய எம் பெருமானோடு விளையாடு வதற்கே என் மகள் முற்படுகிறாள். இதுவே உண்மையான செய்தி. இந்தப்பெண் தான் வகுத்துக்கொண்ட இந்த வழியிலிருந்து விலக மாட்டாள் என்பதனை அறிந்தோம்` என்று தாய் தமரிடம் கூறியவாறு.

விளக்கவுரை

``தேனுமாய்`` என்ற ஆக்கம், உவமை குறித்து நின்றது. ``உள்ளே`` என்றதன்பின், `நின்று` என ஒரு சொல் வருவிக்க. `என் ஆருயிர்க்குப் போகமாம் புரன்` என்க. போகம் - சிவபோகம்; அதனையுடைய புரம், சிவலோகம். காலன், காமன், புரம் இவர்கட்கு அந்தகன் என்க. அந்தகன் - முடிவைச் செய்பவன். ஆலும் அதற்கே முதலும் - விளையாடுகின்ற அதற்கே முந்துவாள். போலும், ஆம் அசை நிலைகள். பொய்யாதது - மெய்யாகக் கூறிய சொல். ``பொய் யாதது`` என்ற சொல். முதல் திருப்பாட்டிற் சென்று மண்டலித்தல் காண்க.

சேந்தனார் - திருவிடைக்கழி

மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தன்என் சேந்தன்
என்னும்என் மெல்லியல் இவளே. **#69**

`சேல் மீன்கள் உலாவுகின்ற வயல்களை உடைய திருவிடைக் கழியில் திருக்குராமரத்தின் நிழலின்கீழ் நின்ற திருக்கோலத்தில் காட்சி வழங்கும் வேல் தங்கிய நீண்ட கையினை உடைய அரசனாகியவனும், பார்வதியின் புதல்வனும், வானத்தில் தங்கும் தேவர்கள் இனம் முழுதும் ஆள்பவனும், வள்ளியின் கணவனும், செந்நிறத்தவனும் ஆகிய குமரவேள் மயக்கம் தங்கும் மனத்தை எனக்கு நல்கி என்கைகளில் யான் அணிந்திருந்த சங்கு வளையல்களைத் தான் கவர்ந்து விட்டான்` என்று பெண்மையே இயல்பாக உடைய என்மகள் பேசுகிறாள் - என்று தலைவியின் தாய் அவள் நலம் பற்றி வினவிய அயலக மகளிரிடம் கூறியவாறு.

விளக்கவுரை

மால் உலாம் மனம் - மயக்கம் நிகழ்கின்ற மனம். ``தந்து`` என்றது, `என் மனத்தை அத்தன்மையதாக்கி` என்றவாறு. சங்கம் - சங்க வளையல், தேவர் அனைவரையும் சேனைகளாக்கித் தான் அவற்றுக்குப் பதியாய் நிற்றலின், `தேவர் குலமுழுது ஆளும் குமரவேள்` என்றாள். குரா, ஒரு மரம். ``என் சேந்தன்`` என்றாள், காதல் பற்றி.

இவளைவார் இளமென் கொங்கைபீர் பொங்க
எழில்கவர்ந் தான் இளங்காளை
கவளமா கரிமேற் கவரிசூழ் குடைக்கீழ்க்
கனகக்குன் றெனவருங் கள்வன்
திவளமா ளிகைசூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
குவளைமா மலர்க்கண் நங்கையாள் நயக்குங்
குழகன்நல் லழகன்நம் கோவே. **#70**

இளையகாளை போல்வானும், சோற்றுத்திரளை உண்ணும் பெரியயானைமீது மேலே குடைகவிப்ப இருபுறமும் கவரிவீசப் பொற்குன்றம் போன்று வருவானாய்த் தன்னைக் காண்பார்

உள்ளத்தைக்கவரும் கள்வனும், நல்ல விளக்கம் பொருந்திய மாளிகைகளால் சூழப்பட்ட திரு இடைக்கழி என்ற திருத்தலத்தில் அழகிய குராமரத்தின் நிழலின் கீழ் எழுந்தருளியிருப்பவனும், குவளைமலர் போன்ற கண்களைஉடைய நங்கையாகிய தெய்வயானையாருக்கும் வள்ளிநாச்சியாருக்கும் கணவனும் இளையோனும், பேரழகனும் ஆகிய நம் தலைவனாம் முருகன் இந்த என் பெண்ணுடைய கச்சினை அணிந்த இளையமெல்லிய கொங்கை பசலைநிறம் மிகுமாறு செய்து அவளுடைய அழகினைக்கவர்ந்து விட்டான்.

விளக்கவுரை

வார் - கச்சினையுடைய. பீர் - பசலை. ``இவளை எழில் கவர்ந்தான்`` என்றது, `பசுவைப் பால்கறந்தான்` என்பது போல நின்றது. கவளம், யானை உண்ணும் உணவு. எழிலைக் கவர்ந்தமை பற்றி, `கள்வன்` என்றாள்; எனினும், இஃது இகழ்ந்ததன்று; புகழ்ந்து கூறிய காதற் சொல்லேயாம். திவள் அம் மாளிகை - ஒளி வீசுகின்ற அழகிய மாளிகை. ``நங்கையாள்`` என்றது தலைவியை. நயக்கும் - விரும்புகின்ற. குழகன் - இளைஞன். ``நங்கை யானைக்கும்`` எனப் பாடம் ஓதி, அதற்கு, `தெய்வயானை` என உரைப்பாரும் உளர்.

கோவினைப் பவளக் குழமணக் கோலக்
குழாங்கள்சூழ் கோழிவெல் கொடியோன்
காவனற்சேனை யென்னக்காப் பவன்என்
பொன்னைமே கலைகவர் வானே
தேவினற் றலைவன் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தூவிநற் பீலி மாமயி லூருஞ்
சுப்பிர மண்ணியன் றானே. **#71**

தேவர்களுக்கு மேம்பட்ட தலைவனாய்த் திரு விடைக்கழி என்ற திருத்தலத்தில் அழகிய குராமர நிழலின்கீழ் நின்ற திருக்கோலத்தில் காட்சிவழங்குபவனாய், தோகைகளைஉடைய பெரிய ஆண்மயிலை வாகனமாக உடைய சுப்பிரமணியப்பெருமான், எல்லோருக்கும் தலைவனாய், பவளநிறத்தனாய், இளையவனாய், திருமணக்கோலம் கொண்டவனாய், அடியார் கூட்டங்கள் சூழ்பவனாய், பகைவர்களைவெல்லும் கோழிக்கொடியை உடையவனாய், காவலைச் செய்யும் பெரிய சேனையைப்போல எல்லோரையும் காப்பவன் என்று சொல்லப்படுபவனாய் இருந்தும் என் திருமகள் போன்ற மகளின் மேகலையைக் கவர்ந்து அவளைக் காவாது விடுத்த காரணம் அறிகிலேன்.

விளக்கவுரை

கோ வினை - தலைமைச் செயல்களையுடைய, பவளக் குழ - பவளம்போலும் நிறத்தையுடைய குழவியாகிய இவை இரண்டும், ``கோழி வெல்கொடியோன்`` என்பதனோடே முடியும். மணக் கோலக் குழாங்கள், தேவருலக மகளிர் குழாங்கள், இவர்கள் முருகனால் மாலை சூட்டப்படுதலை விரும்பி அவனைச் சூழ்ந்து நிற்பர் என்க. ``ஒரு கை வான் அரமகளிர்க்கு வதுவை சூட்ட`` என்ற திருமுருகாற்றுப்படை(அடி *116 - 117)*யைக் காண்க. காவன் - கற்பகச் சோலையையுடைய இந்திரன். `அவனைச் சூழ்ந்தவரையும் சேனை யாகக் கொண்டு காப்பவன்` என்க. இனி, `அமரரை` என ஒரு சொல் வருவித்து, `காவல் நற்சேனையென்னக் காப்பவன்` என உரைப்பினும் ஆம். இனி, வேறு உரைப்பாரும் உளர். `கவர்வானே` என்றது, `கவர்தல் பொருந் துவதோ` என்றவாறு. `அமரர்களை வருந்தாமற் காப்பவன், என் மகளை வருந்தச் செய்தல் பொருந்துமோ` என்றதாம். ``தே`` என்பது அஃறிணைச் சொல்லாய்ப் பன்மை குறித்து நின்றது. தே - தெய்வம். தூவி - சிறகு. பீலி - தோகை. `சுப்பிர மண்ணியன்` என்றதில் ணகர மெய் விரித்தல்.

தானமர் பொருது தானவர் சேனை
மடியச்சூர் மார்பினைத் தடிந்தோன்
மானமர் தடக்கை வள்ளல்தன் பிள்ளை
மறைநிறை சட்டறம் வளரத்
தேனமர் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
கோனமர் கூத்தன் குலஇளங் களிறென்
கொடிக்கிடர் பயப்பதுங் குணமே. **#72**

அசுரர்கள் படை சூரபதுமனோடு சேர்ந்து போர் செய்து மடியத் தான் போரிட்டுச் சூரபதுமனுடைய மார்பினைப் பிளந்தவனாய், மான் தங்கியிருக்கும் பெரிய கையினை உடைய வள்ளலாகிய சிவபெருமானுடைய மகனாய், வேதங்களில் மிகுதியாகச் சொல்லப் படுகின்ற ஓதல், ஓதுவித்தல் வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறு அறங்களும் வளருமாறு, வண்டுகள் தங்கியிருக்கும் சோலைகளால் சூழப்பட்ட திருவிடைக்கழியில் திருக்குரா நிழலின் கீழ் நின்ற, தலைமை வாய்ந்த கூத்தப்பிரானுடைய குலத்தில் எல்லோராலும் விரும்பப்படும் இளைய யானை போல்வானாகிய முருகப் பெருமான் என்னுடைய பூங்கொடி போன்ற மகளுக்குத் துயர் விளைக்கும் செயல் அவன் நற்பண்புக்கு ஏற்றதாகுமா?

விளக்கவுரை

தானவர் - அசுரர். `வானவர் சேனை மடிய` எனப் பாடம் ஓதி, அதற்கியைய உரைத்தல் பொருந்தாமை அறிக. மறை நிறை - வேதத்தின்கண் நிறைந்துள்ள. செம்மையுணர்த்தும் `சட்ட` என் னும் இடைச்சொல்லில் அகரம் தொகுத்தலாயிற்று, ``சட்டோ நினைக்க மனத்தமுதமாம் சங்கரனை`` *(தி.8 - கோத்தும்பி. 7.)* என்றதிற் போல சட்ட அறம் - செம்மையான அறம். `அறம் வளர நின்ற இளங் களிறு` என இயையும். ``கோன்`` என்றதும், கூத்தனையே குறித்தது. அமர் கூத்தன் - விரும்பப்படும் கூத்தினையுடையவன். குலம் - மேன்மை. கணபதி மூத்தகளிறாதல் பற்றி முருகனை, `இளங் களிறு` என்றாள். ``மானமர் தடக்கை வள்ளல் தன் பிள்ளை`` என முன்னர் கூறிப் பின்னரும், ``கூத்தன் குல இளங்களிறு என்றது. `உயிர்களின் இடரைப் போக்குதற்குக் கூத்தினை விரும்பி ஆடும் அவன்மகன், என் மகளுக்கு இடர் பயப்பது குண மாகுமோ` என்னும் கருத்தைத் தோற்றுவித்தற் பொருட்டாம்.

குணமணிக் குருளைக் கொவ்வைவாய் மடந்தை
படுமிடர் குறிக்கொளா தழகோ
மணமணி மறையோர் வானவர் வையம்
உய்யமற் றடியனேன் வாழத்
திணமணி மாடத் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
கணமணி பொருநீர்க் கங்கைதன் சிறுவன்
கணபதி பின்னிளங் கிளையே. **#73**

பெருமைபொருந்திய கூட்டத்தவரான அந்தணர் களும் தேவர்களும் நில உலக உயிர்களும் தீங்கினின்றும் பிழைக்கு மாறும், அடியேனாகிய யானும் வாழுமாறும், உறுதியான அழகிய மாடிவீடுகளை உடைய திருவிடைக்கழியில் திருக்குரா நிழலின் கீழ்நின்ற, இரத்தினங்களின் தொகுதிகளை அடித்துக்கொண்டு வரும் நீர்ப்பெருக்கை உடைய கங்கா தேவியின் மகனும், கணபதியின் தம்பியும் ஆகிய முருகப்பெருமான், நற்குணங்கள் தன்னைச் சேர்ந்து அழகு பெறுதற்குக் காரணமான சிறுமியாய்க் கொவ்வைக்கனிபோன்ற சிவந்தவாயினை உடைய என் மகள், தன் அருள் முழுமையாகக் கிட்டாமையால் உறும் துயரத்தைத் தன்மனத்தில் ஏற்று அதற்குப் பரிகாரம் தேடாமல் இருப்பது, அவனுக்கு அழகிய செயல் ஆகுமா?

விளக்கவுரை

குண மணிக் குருளை - நற்பண்பினையுடைய சிறந்த வீரமுடைய சிறுவன்; முருகன். ``குருளை`` என்றது சிங்கக் குட்டியை. இஃது உவம ஆகுபெயராய், அதுபோலும் சிறுவனைக் குறித்தது. `குறிக்கொளாதது

என்பது குறைந்து நின்றது. மணம் அணி மறையோர் - மங்கல விழாக்களை அழகு படுத்துகின்ற அந்தணர். மறையோரை வையத்தாரினின்று வேறு பிரித்தது, சிறப்புப் பற்றி. `வாழ நின்ற` என இயையும். `திண்ணம்` என்பது இடைக்குறைந்து, ``திணம்`` என வந்தது, `திண்மையாகிய மாடம்` என்க. கண மணி - கூட்டமாகிய இரத்தினங்களையுடைய பின். இளங்கிளை - தம்பி.

கிளையிளஞ் சேய்அக் கிரிதனைக் கீண்ட
ஆண்டகை கேடில்வேற் செல்வன்
வளையிளம் பிறைச்செஞ் சடைஅரன் மதலை
கார்நிற மால்திரு மருகன்
திளையிளம் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
முளைஇளங் களிறென் மொய்குழற் சிறுமிக்
கருளுங்கொல் முருகவேள் பரிந்தே. **#74**

தன் அடியவருக்குச் சுற்றமாக உதவும் இளைய குமரனாய், கிரவுஞ்சமலையைப் பிளந்த ஆண்மைத் தன்மை உடையவனும், என்றும் அழிதல் இல்லாத வேலினை ஏந்திய செல்வனும், வளைந்த இளம் பிறையைச் சூடி சிவந்த சடையை உடைய சிவபெருமான் மகனும், கார்மேகம் போன்ற நிறத்தை உடைய திருமாலுடைய சகோதரிமகனும், எல்லோரும் மகிழ்ச்சியால் திளைக்கின்ற இளமரச் சோலைகளால் சூழப்பட்ட திருவிடைக்கழியில் திருக்குரா மரத்தின் கீழ்நின்ற மிக இளைய ஆண்யானை போல் பவனும் ஆகிய முருகவேள் இரக்கங்கொண்டு, என்செறிந்த கூந்தலை உடைய சிறுபெண்ணுக்கு அருள் செய்வானோ? மாட்டானோ?

விளக்கவுரை

`இளங்கிளை` என்பதே, `கிளைஇளையன்` என மாறி நின்றது. `இளைய பிள்ளை` என்றவாறு. சேய் - முருகன். `இளங் கிளையாகிய முருகன்` என்க. கிரி, கிரவுஞ்ச மலை. திளை - பலரும் இன்பம் துய்க்கின்ற. முளை இளங்களிறு - மிகவும் இளைய களிறு. ``முருகவேள்`` என்றதை, ``களிறு`` என்றதன் பின்னும், ``பரிந்து`` என்றதை, ``சிறுமிக்கு`` என்றதன் பின்னும் கூட்டுக. பரிந்து - அன்பு கொண்டு.

பரிந்தசெஞ் சுடரோ பரிதியோ மின்னோ
பவளத்தின் குழவியோ பசும்பொன்
சொரிந்தசிந் துரமோ தூமணித் திரளோ
சுந்தரத் தரசிது என்னத்
தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற

வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை அஞ்சொல்
மையல்கொண் டையுறும் வகையே. #75

வேதநெறியை அறிந்த,வேதம் கூறியநெறியில் வாழும் மக்கள் வாழும் திருவிடைக்கழியில் திருக்குரா நிழற்கீழ் நின்ற, கட்டமைந்த கொடிய வில்லைக் கையில் ஏந்திய இளையனாய் உள்ள முருகப்பெருமான் திறத்து அழகிய சொற்களைப் பேசும் என்மகள் காம மயக்கம்கொண்டு அவன் திருஉருவினை `எல்லோரும் விரும்பும் சிவந்தசுடரோ? சூரியனோ? மின்னலோ? தூய இரத்தினத்தின் குவி யலோ? அழகுக்கு உயர்நிலையாகிய அரசோ? என்று பலவாறாக ஐயுறுகிறாள்.

விளக்கவுரை

பரிந்த - வீசுகின்ற. சுடர் - விளக்கு. குழவி - கொழுந்து. சிந்துரம் - செந்நிறப் பொடி. மணி - மாணிக்கம். சுந்தரத்து அரசு - அழகின் தலைமை. முருகன் விற்படையும் உடையனாதலைக் கருதி, ``சிலைக்கை மைந்தன்`` என்றாள். அம் சொல் - அழகிய சொல்; இஃது, அதனையுடையாள்மேல் நின்றது. `ஐயுறும்` என்றது முற்று. `வகை யானே` என உருபு விரிக்க. `அம் சொலாள், மையல் கொண்டு, மைந்தனை, சுந்தரத்து அரசாகிய இது, சுடரோ, பரிதியோ ..... என்ன வகைவகையாக ஐயுறும்` என்க.

வகைமிகும் அசுரர் மாளவந் துழிஞை
வானமர் விளைத்ததா ளாளன்
புகைமிகும் அனலிற் புரம்பொடி படுத்த
பொன்மலை வில்லிதன் புதல்வன்
திகைமிகு கீர்த்தித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தொகைமிகு நாமத் தவன்திரு வடிக்கென்
துடியிடை மடல்தொடங் கினளே. #76

பலவகையினராக எண்ணிக்கையில் மிகுந்த அசுரர் கள் அழியும்படியாகத் தானே சென்று அவர்களுடைய மதில்களை வளைத்துக் கொண்டு பெரிய போரினைச் செய்த முயற்சி உடைய வனும், புகைமிக்க தீயால் திரிபுரம் அழியுமாறு செய்த, மேருமலையை வில்லாக ஏந்திய சிவபெருமானுடைய புதல்வனும், நாற்புறமும் பரவிய புகழை உடைய திருவிடைக்கழியில் திருக்குரா நிழலின் கீழ் நின்ற எண்ணிக்கையால் மிகுந்த பல திருப்பெயர்களை உடையவனும் ஆகிய முருகப் பெருமானுடைய திருவடிகளை அடைய வேறு வழி கிட்டாமையால், என்மகள் பெண்கள் மடலேறக்கூடாது என்ற பொது விதியை நெகிழ்த்து மடலேற ஆயத்தம் செய்துவிட்டாள்.

விளக்கவுரை

உழிஞை அமர், முற்றுகை இட்டுச் செய்யும் போர். தாளாளன் - வீரன். திகை - திசை. தொகை - எண்: அவை, நூறு, ஆயிரம், நூறாயிரம், கோடி முதலியவாம். நாமம் - பெயர். திருவடிக்கு-திருவடியை அடைதற்பொருட்டு; என்றது `தன்னைப் பணிகொள்ள ஏற்றுக் கொள்ளுதற்பொருட்டு` என்றவாறு. துடி இடை - உடுக்கை போலும் இடையை உடையாள். `கடலன்ன காமம் உழப்பினும் பெண்டிர் மடல் ஏறுதல் இல்லை` *(குறள்-1137.)* ஆயினும், அவளது பெருந்துயரைப் புலப்படுத்த, `மடல் ஏறத் தொடங்கினள்` என்றாள். `மயல் தொடங்கினள்` என்பதும் பாடம்.

தொடங்கினள் மடல் என் றணிமுடித் தொங்கற்
புறஇத ழாகிலும் அருளான்
இடங்கொளக் குறத்தி திறத்திலும் இறைவன்
மறத்தொழில் வார்த்தையும் உடையன்
திடங்கொள்வை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
மடங்கலை மலரும் பன்னிரு நயனத்
தறுமுகத் தமுதினை மருண்டே. **#77**

வேதநெறியில் உறுதியாக இருக்கும் நன்மக்கள் வாழும் திருவிடைக்கழியில் திருக்குரா நிழற்கீழ் நின்ற சிங்கம் போல்பவனாய், அடியார்திறத்து அருள்புரிய விழிக்கும் பன்னிரு கண்களையும் ஆறுமுகங்களையும் உடைய அமுதம் போல்வானாய் உள்ள பெருமானைக் கண்டு காமத்தால் மயங்கி, அவனை அடைய வேறு வழி இல்லாத நிலையில் என்மகள் மடல் எடுக்கத் தொடங்கி விட்டாளாக அதனைக் கண்டு தன்முடியில் அணிந்துள்ள மாலையின் வெளி இதழ்களைக் கூட அவள் ஆறுதல் பெறுமாறு அப்பெருமான் வழங்குகிறான் அல்லன். தன் அருகிலேயே இடம் பெற்றுள்ள அக் குறமகளாகிய வள்ளியம்மையார் கொள்ளக் கூடிய வெகுளியை விட மிகுதியாக அப்பெருமான் இவள் திறத்துத் தன் வெகுளியைப் புலப்படுத்தும் செயல்களும் சொற்களும் உடையவனாக இருக்கிறான்.

விளக்கவுரை

தொங்கல் - மாலை. புறஇதழ் சிறப்பில்லாததாகலின், `அதனையேனும் கொடுத்திலன்` என்றாள். இடங்கொள் அக்குறத்தி திறத்திலும் - தன்பால் இடங்கொண்டு இருக்கும் வள்ளியது தன்மையைக் காட்டிலும், மறத்தொழில் வார்த்தையும் உடையன் - பகைத்தொழிலையுடைய சொற்களையும் இவள் *(தலைவி)* கூற்றில் உடையனாகின்றான். தன்

கணவனை மற்றொருத்தி காதலித்தலை அறியின் அவளிடத்தில் வள்ளியம்மைக்குப் பகையுண்டாதல் இயல் பாதலின், `அவளினும் பகைவார்த்தையை உடையன்` என்றாள். `மாலை கொடாமையேயன்றி` என்னும் பொருள் தருதலின், ``வார்த்தையும்`` என்ற உம்மை இறந்தது தழுவிய எச்சம். மடங்கல் - சிங்கம். ``அமுதத்தினை`` என்றதன் பின்னர், `கண்டு` என ஒருசொல் வருவிக்க.

மருண்டுறை கோயில் மல்குநன் குன்றப்
பொழில்வளர் மகிழ்திருப் பிடவூர்
வெருண்டமான் விழியார்க் கருள்செயா விடுமே
விடலையே எவர்க்குமெய் யன்பர்
தெருண்டவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
குருண்டபூங் குஞ்சிப் பிறைச்சடை முடிமுக்
கண்ணுடைக் கோமளக் கொழுந்தே. **#78**

முருகப்பெருமானுக்கு உண்மையான அன்பர் களாகிய, வேதநெறியைத் தெளிவாக உணர்ந்து பின்பற்றும் சான்றோர் கள் வாழும் திருவிடைக்கழியில் திருக்குரா நிழற்கீழ் நின்ற, பூக்களைச் சூடிய சுருண்ட மயிரினையும் பிறையைச் சூடிய சடைமுடியையும் முக்கண்களையும் உடைய சிவபெருமானுடைய மென்மையான கொழுந்துபோன்ற மகனாகிய முருகன் விரும்பி உறைகின்ற திருக் கோயிலையும், வளம்நிறைந்த சிறந்த குன்றுகளிடத்தே வளர்கின்ற சோலைகளையும் உடையதாய், எல்லோரும் மகிழும்படியான திருப்பிடவூரில் உள்ள, மருண்ட மானின் விழிபோன்று மருண்ட விழிகளைஉடைய இப்பெண்களுக்கு அருள்செய்யாமல் அவர் களைப் புறக்கணித்துவிடுவானோ?

விளக்கவுரை

``எவர்க்கும் மெய்யன்பர்`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. `மருள` என்பது, ``மருண்டு`` எனத் திரிந்தது. மல்கு - வளங்கள் நிறைந்த. `கோயிலையும், குன்றத்தையும் உடைய, சோலைகள் வளர்கின்ற திருப்பிடவூர்` என்க. இஃது ஒரு வைப்புத் தலம். திருக்கயிலையில் அரங்கேறிய சேரமான் பெருமானது ஞான வுலாவை மாசாத்தனார் வெளிப்படுத்திய ஊர். ஒருதலப்பதிகத்தில் மற்றொரு தலத்தை நினைவுகூரும் முறைபற்றி இத்தலத்தை இங்கு எடுத்தோதினார். `திருப்பிடவூரில் அருள்செயாவிடுமே` என்க. அருள் செயாவிடுமே - அருள்செய்யா தொழிவானோ. விடலை - காளை. இதனை, ``கொழுந்து`` என்பதன் பின்னர்க் கூட்டுக. குருண்ட - சுருண்ட. கோமளக் கொழுந்து - அழகின் குருத்து; என்றது முருகனை. இதனுள்,

முருகனுக்கு, பிறைச்சடை முடியும், முக்கண்ணும் கூறப் பட்டமை நோக்கற்பாலது. இனி, கோமளம் என்றதனை சிவபிரானுக்கு ஆக்கியுரைப்பினும் ஆம்.

கொழுந்திரள் வாயார் தாய்மொழி யாகத்
தூமொழி அமரர்கோ மகனைச்
செழுந்திரட் சோதிச் செப்புறைச் சேந்தன்
வாய்ந்தசொல் லிவைசுவா மியையே
செழுந்தடம் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
எழுங்கதி ரொளியை ஏத்துவார் கேட்பார்
இடர்கெடும் மாலுலா மனமே. **#79**

அறியாமையாகிய மயக்கம் நிலவப்பெற்ற மனமே! தூய்மையான சொற்களையே பேசும் தேவர்களின் தலை வனும் செழுமையாகத் திரண்ட சோதி வடிவினனும் ஆகிய சுவாமி எனப்படும் முருகனைப்பற்றிச் செப்புறை என்ற ஊரினைச் சார்ந்த சேந்தன் ஆகிய அடியேன் வளமையாகத் திரண்ட வாயினை உடைய தலைவியின் தாய்மார் கூறும் சொற்களாகச் சொல்லிய இச்சொற்களால் செழுந்தடம் பொழில் சூழ் திருவிடைக்கழியில் திருக்குரா நிழற்கீழ் நின்ற உதிக்கின்ற ஞாயிறு போன்ற ஒளியை உடைய முருகப் பெருமானைப் புகழ்பவர்கள், அங்ஙனம் புகழக் கேட்பவர்கள் ஆகியவர்களுடைய எல்லாத்துன்பங்களும் கெட்டுஓடும்.

விளக்கவுரை

கொழுந் திரள் வாய் ஆர் தாய் - செழுமையாய்த் திரண்ட வாயினையுடைய செவிலி. வழிபடுவோர்க்கு வரங் கொடுத்தல் பற்றி அமரரை, ``தூமொழி அமரர்`` என்றார், `செப்புறைச் சொல்` என இயைத்து, `செப்பென்னும் உறை போல்வதாகிய சொல்` என உரைக்க. முருகனாகிய அருமணியைத் தன்னுட் கொண்டிருத்தல் பற்றி இங்ஙனம் கூறினார். `செப்புரை` எனவும், `செப்புதல்` எனவும் பாடம் ஓதுப. செப்புறை ஊருமாம். வாய்ந்த - பொருந்திய: இதனை, ``கோமகனை`` என்றதனோடு கூட்டுக. `இவை` என்றதில் `இவற்றால்` என உருபு விரிக்க. சுவாமி - முருகன் ``சுவாமியையே`` என்ற ஏகாரம் அசைநிலை `கேட்பார்க்கு` என்னும் நான்காவது, தொகுத்தலாயிற்று. `மனம் இடர்கெடும்` என, இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது. ``மாலுலா மனம்`` என்பது, முதல் திருப்பாட்டிற் சென்று மண்டலித்தல் அறிக.

கருவூர்த் தேவர் - கோயில்

கணம்விரி குடுமிச் செம்மணிக் கவைநாக்
கறையணற் கட்செவிப் பகுவாய்
பணம்விரி துத்திப் பொறிகொள்வெள் ளெயிற்றுப்
பாம்பணி பரமர்தங் கோயில்
மணம்விரி தருதே மாம்பொழில் மொழுப்பின்
மழைதவழ் வளரிளங் கமுகந்
திணர்நிரை அரும்பும் பெரும் பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. #80

கூட்டமாக விரிந்த தலைகளையும் அத்தலைகளின் கண் சிவந்த இரத்தினங்களையும் பிளவுபட்ட நாக்குக்களையும் விடக்கறை பொருந்திய வாயினையும், கண்ணொடு பொருந்தி நிற்கும் காதினையும், பிளந்த வாய்களையும் படத்தின்கண் பொருந்திய புள்ளிகளையும், வெள்ளிய பற்களையும் உடைய பாம்புகளை அணி கலன்களாக அணிந்த மேம்பட்ட சிவபெருமானுடைய கோயில், நறுமணம் கமழும் ஒட்டுமாமரச் சோலைகளையும், தம் உச்சியில் மேகங்கள் தவழுமாறு உயர்ந்த பாக்கு மரங்களின் உச்சியில் வரிசை யாகத் தோன்றும் பூங்கொத்துக்களையும் உடைய பெரும்பற்றப் புலியூர் என்ற திருப்பதிக்கண் அமைந்த திருச்சிற்றம்பலமாகும்.

விளக்கவுரை

கணம் - கூட்டம். `கூட்டமாக` என ஆக்கம் வருவிக்க. `குடுமியில் உள்ள செம்மணிகளையுடைய` என்க. பல தலைகளை யுடைமை பற்றி, ``கணம்விரி குடுமி``என்றார், கவை நா - பிளவு பட்ட நாக்கு. கறை - நஞ்சு. தாடியைக் குறிப்பதாகிய, `அணல்` என்பது இங்கு, ஆகுபெயராய், வாயைக் குறித்தது. `அனல்` எனவும் பாடம் ஓதுவர், கண் செவி - கண்ணொடு பொருந்தி நிற்கும் காது. பகுவாய் - பிளந்த வாய். பணம் விரி துத்திப் பொறி - படத்தின்கண் பரந்த, `துத்தி` என்னும் பெயரை உடைய புள்ளிகள். மொழுப்பு - உச்சி. மழை - மேகம். `துணர்` என்பது, ``திணர்`` எனத் திரிந்து நின்றது. அரும்பு - தோன்றுகின்ற. `தவழ் பெரும்பற்றப் புலியூர், அரும்பு பெரும்பற்றப் புலியூர்` எனத் தனித் தனி முடிக்க. `புலியூர்த் திருச்சிற்றம்பலம்` என இயையும். திருவளர் - அழகுமிகுகின்ற.

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்றால்
அஞ்சலென் றருள் செய்வான் கோயில்

கைவரும் பழனம் குழைத்தசெஞ் சாலிக்
கடைசியர் களைதரு நீலம்
செய்வரம் பரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. **#81**

இந்தக் கடத்தற்கு அரிய பிறவியாகிய கடலில் கரை காண்பதற்காக நீந்தும் அடியவனாகிய எனக்கு என்னுடன் தோன்றிய ஐம்பொறிகளும் பகையாக உள்ளன. அந்நிலையில் எனக்குத் துணை யாவர் என்று வருந்தினனால், `யானே துணையாவேன். ஆதலின் அஞ்சாதே` என்று அருள் செய்கின்ற சிவபெருமானுடைய கோயில், பக்கங்களில் பொருந்தியுள்ள வயல்களில் தளிர்த்த செந்நெற் பயிர்களிடையே களையாக வளர்ந்ததனால், உழத்தியர்கள் களை யாகப் பிடுங்கிய நீலமலர்க்கொடிகளே வயலின் வரப்புக்களில் காணப் படும் பெரும்பற்றப் புலியூரில் உள்ள இறைவனுடைய அருட்செல்வம் வளர்கின்ற திருச்சிற்றம்பலமே யாகும்.

விளக்கவுரை

`இப் பௌவநீர்` என இயைத்து, `நீந்துதற்கரிய பிறவி யாகிய கடல்நீரை நீந்துகின்ற ஏழையேனுக்கு` என உரைக்க. ஐவர் ஐம்பொறிகள். `உடன்பிறந்தோர் அனைவருமே பகையாய் விட்டமை யின் எனக்கு யார் துணை` என்றவாறு. கைவரும் பழனம் - பக்கங் களில் பொருந்தியுள்ள வயல்களில். குழைத்த - தளிர்த்த. செஞ்சாலி - செந்நெற் பயிர். `நீலப் பூக்களின் கொடிகளே களைகளாய் உள்ளன` என்றபடி - செய் வரம்பு அரும்பு - வயல்களின் வரப்புக்களில் காணப்படுகின்ற.

தாயினே ரிரங்குந் தலைவவோ என்றும்
தமியனேன் துணைவவோ என்றும்
நாயினேன் இருந்து புலம்பினால் இரங்கி
நலம்புரி பரமர்தங் கோயில்
வாயினே ரரும்பு மணிமுருக் கலர
வளரிளஞ் சோலைமாந் தளிர்செந்
தீயினே ரரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. **#82**

தாயைப்போல உயிர்களிடம் இரக்கம் கொள்ளும் தலைவனே எனவும், தன்னுணர்வு இல்லாத அடியேனுடைய தலை வனே எனவும், நாய் போன்ற இழிந்தவனாகிய அடியேன் இருந்து அழைத்து வருந்தினால் இரக்கங்கொண்டு அடியேற்கு நன்மையைச் செய்யும் சிவபெருமானுடைய கோயில், பெண்களுடைய வாய்க்கு ஒப்பாகச் செந்நிறத்தோடு அரும்பும் அழகிய முருக்கமலர் மலர, இள மரங்கள் வளர்கின்ற சோலையில் மாந்தளிர்கள் சிவந்த தீயைப் போலத்

தோன்றுகின்ற பெரும்பற்றப்புலியூரில் உள்ள அருட்செல்வம் வளர்கின்ற சிற்றம்பலமேயாகும்.

விளக்கவுரை

``தாயின்`` என்றதில் இன், சாரியை. இனி இதனை உருபாக்கி, `நேர் நின்று இரங்கும்` என உரைத்தலும் ஆம். ``தலைவ, துணைவ`` என்ற விளிகட்குப் பின்னர் நின்ற ஓகாரங்கள் முறையீடு குறித்து நின்றன. வாயின்ஏர் அரும்பு - மகளிரது வாய்போல எழுச்சி விளங்குகின்ற. மணி முருக்கு - அழகிய முருக்க மலர். நேர் தீயின் அரும்பு - அதன் எதிராக நெருப்புப் போலத் தோன்றுகின்ற.

துந்துபி குழல்யாழ் மொந்தைவான் இயம்பத்
தொடர்ந்திரு டியர்கணம் துதிப்ப
நந்திகை முழவம் முகிலென முழங்க
நடம்புரி பரமர்தங் கோயில்
அந்தியின் மறைநான் காரணம் பொதிந்த
அரும்பெறல் மறைப்பொருள் மறையோர்
சிந்தையில் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. **#83**

துந்துபி, வேய்ங்குழல், யாழ், மொந்தை என்ற தோற்கருவி இவற்றின் ஒலி வானளவும் சென்று ஒலிக்க, முனிவர் குழாம் தொடர்ந்து துதிக்க, நந்திதேவர் தம் கைகளால் முழக்கும் முழவம் மேகத்தைப் போல முழங்கக் கூத்து நிகழ்த்தும் சிவ பெருமானுடைய கோயில், அந்திக் காலத்தில் சொல்லப்படுகின்ற மந்திரங்களை உடைய நான்கு வேதங்களினும் உள் அமைந்த இரகசியப் பொருள்கள் வேதியருடைய உள்ளத்தில் புலனாகின்ற பெரும்பற்றப்புலியூரிலுள்ள திருவளர் திருச்சிற்றம்பலமே ஆகும்.

விளக்கவுரை

துந்துபி முதலியன வாத்தியங்கள். அவை அவற்றது ஒலியைக் குறித்தன. வான் இயம்ப - வானளவும் சென்று ஒலிக்க. முழவம் - மத்தளம். அந்தியின் மறை - அந்திக் காலத்திற் சொல்லப் படுகின்ற மந்திரங்களையுடைய (நான்கு வேதங்கள் என்க). மறைப் பொருள் - இரகசியப் பொருள்கள். `மறைப் பொருள் அரும்பும்` என இயையும்.

கண்பனி யரும்பக் கைகள் மொட்டித்தென்
களைகணே ஓலமென் றோலிட்
டென்பெலா முருகும் அன்பர்தங் கூட்டத்
தென்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதேன் பாடிநின் றாடப்

பனிமலர்ச் சோலைசூழ் மொழுப்பிற்
செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. **#84**

கண்கள் கண்ணீர் துளிக்க, கைகள் குவித்து, `எனக்குப் பற்றுக் கோடு ஆனவனே! ஓலம்` என்று கதறி எலும்புக ளெல்லாம் அன்பினால் உருகும் அடியார்களுடைய கூட்டத்தில் அடி யேனையும் இணைத்துக் கொள்ளும் சிவபெருமானுடைய கோயில், தேன் உண்டு என்பதனைத் தெளிந்த வண்டுகள் பலபல பண்களைப் பாடிக் கொண்டு ஆடக் குளிர்ந்த மலர்களைப் பரப்பிய மேலிடத்தில் அரும்பும் சண்பகம் நிறைந்த சோலைகளை உடைய பெரும்பற்றப் புலியூரில் உள்ள திருவளர் திருச்சிற்றம்பலமே யாகும்.

விளக்கவுரை

மொட்டித்து - குவித்து. களைகணே - பற்றுக் கோடான வனே. தெளிதேன் - தேன் உண்மையைத் தெளிந்த வண்டுகள். ஆட - பறந்து திரிய. `சோலையது சூழ் மொழுப்பில்` என்க. சூழ் மொழுப்பு - பரவிய மேலிடம்.

நெஞ்சிட ரகல அகம்புகுந் தொடுங்கு
நிலைமையோ டிருள்கிழித் தெழுந்த
வெஞ்சுடர் சுடர்வ போன்றொளி துளும்பும்
விரிசடை யடிகள்தங் கோயில்
அஞ்சுடர்ப் புரிசை ஆழிசூழ் வட்டத்
தகம்படி மணிநிரை பரந்த
செஞ்சுடர் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. **#85**

அடியேங்களுடைய உள்ளங்களில் உள்ள துயரங் கள் தீர, எங்கள் உள்ளங்களில் புகுந்து தங்கியிருக்கும் நிலையோடு இருளைக் கிழித்துக்கொண்டு வெளிப்பட்ட சூரியன் ஒளி வீசுவது போன்று ஒளியை வெளிப்படுத்தும் விரிந்த சடையை உடைய சிவ பெருமானுடைய கோயில், அழகிய ஒளியை உடைய மதிலும் அகழி யும் சூழ்ந்த உள்ளிடத்தில் மணிகளின் வரிசைகளிலிருந்து பரவிய சிவந்த ஒளி விரியும் பெரும் பற்றப்புலியூரிலுள்ள திருவளர் திருச் சிற்றம்பலமே ஆகும்.

விளக்கவுரை

அகம், அந்நெஞ்சின் அகம். `நிலைமையோடு கூடி` என ஒருசொல் வருவிக்க. முதற்றொட்டு, ``எழுந்த` என்பதுகாறும் உள்ளவை, வெஞ்சுடருக்கு அடையாய், இல்பொருள் உவமையாக் கின. வெஞ்சுடர்

- பகலவனது வெப்பமான கதிர்கள். சுடர்வ போன்று - வீசுவன போன்று. துளும்பும் - விரிகின்ற. புரிசை -மதில். ``புரிசையும், அகழியும் சூழ்ந்த வட்டத்து அகம்படி` என்க. அகம்படி - உள்ளிடத் தில். மணி நிரை பரந்த செஞ்சுடர் - மாணிக்கங்கள் பரந்து கிடத்தலால் உண்டாகின்ற செம்மையான ஒளி. அரும்பும் - தோன்றுகின்ற.

பூத்திரள் உருவம் செங்கதிர் விரியாப்
புந்தியில் வந்தமால் விடையோன்
தூத்திரட் பளிங்கிற் றோன்றிய தோற்றந்
தோன்றநின் றவன்வளர் கோயில்
நாத்திரள் மறையோர்ந் தோமகுண் டத்து
நறுநெயால் மறையவர் வளர்த்த
தீத்திரள் அரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. **#86**

செம்பூக் குவியல்களின் உருவம்போலச் சிவந்த ஒளியை வெளிப்படுத்திக் கொண்டு, அடியேனுடைய மனத்தில் வந்து எழுந்தருளிய, திருமாலாகிய காளையை உடையவனாய், தூய பளிங்கின் குவியலினின்றும் தோன்றிய காட்சி காணப்படுமாறு போல வெண்ணீற்றொளியோடு நிலை பெற்றிருப்பவன் கோயில், நாவினால் கூட்டமாக ஓதப்படுகின்ற வேதமந்திரங்களை உணர்ந்து ஓமகுண்டங் களிலே நறிய நெய்யை ஆகுதியாக அளித்து வேதியர்கள் வளர்த்த தீயின் குவியல் ஒளிவீசுகின்ற பெரும்பற்றப்புலியூரில் உள்ள திருவளர் சிற்றம்பலமே ஆகும்.

விளக்கவுரை

`தீத்திரளின் உருவம்போல` என, உவம உருபு விரிக்க. புந்தியில் - எமது மனத்தில். ``மால்விடையோன்`` என்றது ஒரு பெயராய், ``வந்த`` என்றதற்கு முடிபாயிற்று. தூத்திரட் பளிங்கில் தோன்றிய தோற்றம் - தூய பளிங்கின் திரளினின்றும் தோன்றிய காட்சி. தோன்ற - காணப்படுமாறு. நா - நாவினால். `சிவபெருமானது திருமேனி பளிங்குபோல்வது, திருநீற்றினால்` என்பது முன்னும் கூறப் பட்டது. `நா ஓர்ந்து` என, ஓர்தல், இங்கு, `ஓதி` என்னும் பொருட்டாய் நின்றது.

சீர்த்ததிண் புவனம் முழுவதும் ஏனைத்
திசைகளோ டண்டங்க ளனைத்தும்
போர்த்ததம் பெருமை சிறுமைபுக் கொடுங்கும்
புணர்ப்புடை அடிகள்தங் கோயில்
ஆர்த்துவந் தமரித் தமரரும் பிறரும்
அலைகடல் இடுதிரைப் புனிதத்
தீர்த்தநீர் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்

திருவளர் திருச்சிற்றம் பலமே. #87

சிறப்புப் பெற்ற வலிய நில உலகம் முழுவதும் ஏனைய திசைகளும் மற்ற அண்டங்கள் அனைத்தும் பெற்றுள்ள அவற்றின் பெருமைகள் யாவும் தனது ஆற்றலுள்ளே மிகச் சிறியன வாய் ஒடுங்கத்தக்க ஆற்றலை உடைய சிவபெருமானுடைய கோயில், இறைவன் பெருமைகளை ஒலித்துக் கொண்டே ஒருவருக்குமுன் ஒருவராய் முற்பட்டு வந்து தேவர்களும் மற்றவர்களும் நீர் அலைக் கின்ற கடலைப் போல அலைவீசுகின்ற, அபிடேகம் செய்யும் தூய்மை யான நீர் நிறைந்து காணப்படும் பெரும்பற்றப் புலியூரிலுள்ள திருவளர் திருச்சிற்றம்பலமேயாகும்.

விளக்கவுரை

சீர்த்த - சிறப்புப் பெற்ற. திண்புவனம், மண்ணுலகம். ``திசை`` என்றது. பூமியைச் சூழ்ந்து நிற்கின்ற இந்திரன் முதலியோரது உலகங்களை. போர்த்த - பெற்றுள்ள. தம் பெருமை - அவற்றது பெருமைகள் பலவும். `சிறுமையாய்ப் புக்கு ஒடுங்கும் புணர்ப்பு`என்க. `புணர்ப்பு` என்றது, ஆற்றலை. `எல்லா உலகங்களின் பெருமைகளும் தனது ஆற்றலுள்ளே மிகச் சிறியனவாய் ஒடுங்கத் தக்க பெரியோன்` என்றவாறு. அமரித்து - போரிட்டு; `நான் முன்னே, நான் முன்னே என்று ஒருவருக்கு முன்னே ஒருவராய் முற்பட்டு வந்து` என்பதாம். `கடல்போல இடுகின்ற தீர்த்த நீர்` என்க. திரை - அலைவீசுகின்ற, `அமரரும், பிறரும் தூய நீரால் திருச்சிற்றம்பலத்தில் இறைவனை வழிபடுகின்றனர்` என்றபடி. ``பிறர் என்றதும், வானுலகத்தவரை.

பின்னுசெஞ் சடையும் பிறைதவழ் மொழுப்பும்
பெரியதங் கருணையுங் காட்டி
அன்னைதேன் கலந்தின் னமுதுகந் தளித்தாங்
கருள்புரி பரமர்தங் கோயில்
புன்னைதேன் சொரியும் பொழிலகங் குடைந்து
பொறிவரி வண்டினம் பாடும்
தென்னதேன் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. #88

ஒன்றோடொன்று கூடிய சிவந்த சடையும், பிறைச் சந்திரன் தவழ்கின்ற முடியும், பெரிய தம்முடைய கருணையும் ஆகிய இவற்றைக் காட்டி, தாய் தன் குழந்தைக்குத் தேனைக் கலந்து இனிய உணவை விரும்பி அளித்தாற் போல அருள் புரியும் சிவபெரு மானுடைய கோயில், புன்னை மலர்கள் தேனைச் சொரிகின்ற சோலை களினுள்ளே பூக்களைக் கிளறிப் புள்ளிகளையும் கோடுகளையும் உடைய வண்டுகளின் கூட்டங்கள் பாடும் `தென்ன` என்ற இசையாகிய தேன்

பரவிய பெரும்பற்றப்புலியூரில் உள்ள திருவளர் திருச்சிற்றம் பலமாகும்.

விளக்கவுரை

மொழுப்பு - முடி, `அன்னை அளித்தாங்கு` என இயையும், பொழில் அகம் குடைந்து - சோலைகளின் உள்ளே மலர்களில் மகரந்தத்தைக் கிண்டி.
தென்ன தேன் - `தென்ன` என்கின்ற இசையாகிய தேன். `தென்ன புலியூர்` என்று இயைத்து, `அழகினை யுடைய புலியூர்` என்றும் உரைப்ப.

உம்பர்நா டிம்பர் விளங்கியாங் கெங்கும்
ஒளிவளர் திருமணிச் சுடர்கான்
றெம்பிரான் நடஞ்செய் சூழலங் கெல்லாம்
இருட்பிழம் பறஎறி கோயில்
வம்புலாங் கோயில் கோபுரம் கூடம்
வளர்நிலை மாடமா ளிகைகள்
செம்பொனால் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. **#89**

தேவர் உலகமே இவ்வுலகில் காணப்பட்டமை போன்று ஒளியை வெளிப்படுத்துகையினாலே எம்பெருமான் திருக்கூத்து நிகழ்த்தும் இடங்களிலெல்லாம் இருட்டின் வடிவம் நீங்குமாறு அதனை விரட்டும் கோயில், புதுமை வாய்ந்த தலைமை பொருந்திய இல்லங்கள், கோபுரங்கள், கூடங்கள், உயர்ந்த பல நிலைகளை உடைய மாடமாளிகைகள் யாவும் சிவந்த பொன்னால் இயன்று தோன்றுகின்ற பெரும்பற்றப்புலியூரிலுள்ள திருவளர் திருச்சிற்றம்பலமேயாகும்.

விளக்கவுரை

உம்பர் நாடு - தேவர் உலகம். இம்பர் விளங்கியாங்கு - இவ்வுலகத்தில் வந்து விளங்கினாற்போல. எங்கும் ஒளி வளர் - எவ்விடத்திலும் ஒளி பரத்தற்கு ஏதுவான. திருமணிச் சுடர் - அழகிய இரத்தினங்களின் ஒளி. கான்று - உமிழ்ந்து. சூழல் - இடம். `சூழல் எறி` என இயையும். `சூழலாய்` என ஆக்கம் வருவிக்க.
அங்கெல்லாம் - தன் இடமெல்லாம். வம்பு உலாம் கோயில் - புதுமை பொருந்திய தலைமை வாய்ந்த இல்லங்களும், வளர் நிலை - உயர்ந்த பல நிலைகளையுடைய. செம்பொனால் அரும்பு - சிவந்த பொன்னால் இயன்று தோன்றுகின்ற.

இருந்திரைத் தரளப் பரவைசூ ழகலத்
தெண்ணிலங் கண்ணில்புன் மாக்கள்
திருந்துயிர்ப் பருவத் தறிவுறு கருவூர்த்

துறைவளர் தீந்தமிழ் மாலை
பொருந்தருங் கருணைப் பரமர்தங் கோயில்
பொழிலகங் குடைந்துவண் டுறங்கச்
செருந்திநின் றரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. #90

பெரிய அலைகளால் மோதப்படும் முத்துக்களை உடைய கடல் சூழ்ந்த அகன்ற பூமியில் உள்ள எண்ணற்ற, அழகிய கண்ணாகிய அறிவு இல்லாத இழிநிலையிலுள்ள மக்கள், திருந்துகின்ற உயிரின் பரிபாக நிலையில் ஞானம் பெறுதற்கு ஏதுவான கருவூர்த் தேவருடைய புறப்பொருள் துறையாகிய கடவுள் வாழ்த்தாகிய இனிய தமிழ் மாலையை உளங்கொண்டு ஏற்றருளும் மேம்பட்ட கருணையை உடைய சிவபெருமானுடைய கோயில், சோலைகளிலே மலர்களைக் குடைந்து வண்டுகள் உறங்கவும் செருந்தி நிலையாக அரும்புகளைத் தோற்றுவிக்கின்ற பெரும்பற்றப்புலியூர் என்ற தலத்திலுள்ள திருவளர் திருச்சிற்றம்பலமேயாகும்.

விளக்கவுரை

பரவை சூழ் அகலம் - கடல் சூழ்ந்த அகன்ற பூமி. அம் கண் - `அழகிய கண்` எனப்படும் அறிவு. `எண்ணில், புன்மாக்கள்` எனவும், `புன்மாக்கள் அறிவுறு தமிழ்மாலை` எனவும் இயைக்க. திருந்து உயிர்ப் பருவத்து அறிவு உறு - திருந்துகின்ற உயிரின் பரிபாக நிலையில் ஞானம் பெறுதற்கு ஏதுவான (தமிழ் மாலை என்க). கருவூர்த் தேவரை. ``கருவூர்`` என்றது உபசாரம். துறை - புறப்பொருள் துறை; கடவுள் வாழ்த்துப் பகுதி. `தமிழ் மாலையைப் பொருந்துகின்ற அரிய கருணையை யுடைய பரமர்` என்க. பொருந்துதல் - உளங் கொண்டு ஏற்றல். செருந்தி, ஒருவகை மரம்.

கருவூர்த் தேவர் - திருக்களந்தை ஆதித்தேச்சரம்

கலைகடம் பொருளும் அறிவுமாய் என்னைக்
கற்பினிற் பெற்றெடுத் தெனக்கே
முலைகடந் தருளுந் தாயினும் நல்ல
முக்கணான் உறைவிடம் போலும்
மலைகுடைந் தனைய நெடுநிலை மாட
மருங்கெலாம் மறையவர் முறையோத்
தலைகடல் முழங்கும் அந்தண்நீர்க் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. **#91**

கலைகளுடைய பொருள்களும், அக்கலைகளை இயல்பாகவே அறிந்த அறிவுமாய், கற்புக்கடம் பூண்ட நெறியானே என்னைப் பெற்று எனக்கே முலைப்பால் தந்து உதவுகின்ற தாயை விடத் தயையுடையவனாகிய முக்கண்களை உடைய சிவபெருமான் உகந்தருளியிருக்கும் இடம், மலைகளைக் குடைந்து அமைத்தாற் போன்ற பலமாடிகளை உடைய மாட வீடுகளிலெல்லாம் வேதியர்கள் முறையாக ஓதும் வேதத்து ஒலி நீரை அலைக்கும் கடல் ஒலிபோல ஒலிக்கும் அழகிய குளிர்ந்த நீர் வளம் உடைய களத்தூரிலுள்ள அழகு விளங்கும் திருக்கோயிலாகிய ஆதித்தேச்சரமே.

விளக்கவுரை

``அறிவு`` என்றது. அக் கலைகளின் பொருள்களை அறிந்த அறிவை, ``அறிவுமாய்`` என்ற எச்சம், ``நல்ல`` என்னும் பெய ரெச்சக் குறிப்போடு முடியும். `என்னைப் பெற்று, எனக்கே முலைகள் தந்தருளும் தாய்` என்க. கற்பினில் பெற்றி - கற்புக் கடம் பூண்ட நெறி யானே பெற்று. எடுத்து - கையில் ஏந்தி. ``எனக்கே`` என்ற ஏகாரம் தேற்றம். ``நல்ல`` என்றதில் நன்மை. அருள், போலும், அசை நிலை. மருங்கு, ஏழனுருபு, முறை ஓத்து - ஒலி ஒழுங்கினையுடைய வேதம், `கடல்போல முழங்கும்` என உவம உருபு விரிக்க. களத்தூர்`` என்பது, `களந்தை` என மரூஉ வாக்கப்பட்டது. `ஆதித்தேச்சரம்` என்பது அங்குள்ள திருக்கோயிலின் பெயர்.

சந்தன களபம் துதைந்தநன் மேனித்
தவளவெண் பொடிமுழு தாடும்
செந்தழ லுருவிற் பொலிந்துநோக் குடைய
திருநுத லவர்க்கிடம் போலும்
இந்தன விலங்கல் எறிபுனந் தீப்பட்
டெரிவதொத் தெழுநிலை மாடம்
அந்தணர் அழலோம் பலைபுனற் களந்தை

அணிதிகழ் ஆதித்தேச் சரமே. #92

சந்தனச் சாந்து செறிந்த அழகிய திருவுடம்பிலே மிக வெள்ளியதாகிய திருநீற்றை முழுதுமாகப் பூசிக் கொண்டு கூத்து நிகழ்த்தும் சிவந்த தழல் போன்ற உருவத்தோடு விளங்கும் நெற்றிக் கண்ணுடைய சிவபெருமானுக்கு உறைவிடம், விறகுகளுக்குப் பயன் படும் மரங்கள் வளரும் மலையில் வெட்டப் பட்ட காடு தீப்பிடித்து எரி வதனைப் போல, ஏழுநிலைகளை உடைய மாடவீடுகளில் அந்தணர் கள் அக்கினியை வளர்ப்பதும், அலையும் நீர் வளம் உடையதும் ஆகிய களத்தூரிலுள்ள அழகு விளங்கும் திருக்கோயிலாகிய ஆதித் தேச்சரம் ஆகும்.

விளக்கவுரை

களபம் - குழம்பு. துதைந்த - செறிந்த, `மேனி முழு தினும் வெண்பொடி ஆடும் உரு` என்க. தவள வெண் பொடி, ஒரு பொருட் பன்மொழி; `மிகவும் வெள்ளியதாகிய பொடி` என்க. தழல் உரு - நெருப்புப்போலும் வடிவம். நெருப்பு, வண்ணம் பற்றி வந்த உவமை. உருவிற் பொலிந்து - வடிவத்தோடு விளங்கி. இந்தன விலங்கல் - விறகு மலை. `விலங்கலாய்` என ஆக்கம் வருவித்து, அதனை, ``எறி`` என்பதனோடு முடிக்க. எறி புனம் - வெட்டப்பட்ட காடு. `ஒத்து` என்றதனை `ஒப்ப` எனத் திரிக்க. ஒப்ப - ஒத்து விளங்கு மாறு. மாடத்துக்கண் என உருபு விரிக்க.

கரியரே இடந்தான் செய்யரே யொருபால்
கழுத்தில்ஓர் தனிவடம் சேர்த்தி
முரிவரே முனிவர் தம்மொடால் நிழற்கீழ்
முறைதெரிந் தோருடம் பினராம்
இருவரே முக்கண் நாற்பெருந் தடந்தோள்
இறைவரே மறைகளுந் தேட
அரியரே ஆகில் அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. #93

இடப் பகுதி கருநிறத்தவர். மற்றபகுதி செந்நிறத்தவர். கழுத்தில் ஒப்பற்ற எலும்புமாலையைச்சூடிக் கூத்து நிகழ்த்துபவர். சனகர் முதலிய முனிவர்களோடு கல்லால மரநிழலிலிருந்து நூலை ஆராய்பவர். ஒரே உடம்பில் ஆணும் பெண்ணுமாகிய இருவராய் இருக்கின்றவர். மூன்று கண்களையும் நான்கு தோள்களையும் உடைய இறைவர். வேதங்களும் தேடி அவரை உள்ளவாறு அறிய இயலாதவர். இவை எல்லாம் உண்மையாதல் போல அவர் உறைவிடம் களத்தூரிலுள்ள அணிதிகழ் ஆதித்தேச்சரம் என்பதும் உண்மையாகும்.

விளக்கவுரை

``ஒரு பால்`` என்றதனை. `மற்றொரு பால்``எனக் கொண்டு, `இடம்

கரியரே; மற்றொருபால் செய்யரே` என உரைக்க. `வடம்` என்றதனை, எலும்பின் வடமாகக் கொள்க. இதனால் சிவ பிரான் கழுத்திலும் இவ்வடம் உண்மை பெறப்படும். முரிவர் - வளைவார்; ஆடுவார் - `விளங்குவார்` எனவும் உரைப்பர். முறை தெரிந்து - நூலை ஆராய்ந்து; இவ்வெச்சம்` ``ஆம்`` என்பதனோடு முடியும். முன்பு, ``கரியர், செய்யர்`` என்றது, நிறங்கள் மாத்திரையின் வியந்தது. இங்கு, ``ஓருடம்பினராம் இருவர்`` என்றது. ஆண்மையும், பெண்மையுமாய் நிற்றலை வியந்தது. ``ஆகில்`` என்றது, `இவையெல் லாம் உண்மையாயின்` எனப் பொருள் தந்து, `இவையெல்லாம் உண்மையாதல்போல, அவருக்கு இடமாவது ஆதித்தேச்சரமாதலும் உண்மையாம்` என உவமப் பொருள் தோற்றிநின்றது, ``நீரின்றமையா துலகெனின்`` *(குறள்-20.)* என்பதிற்போல. ஈற்றில் நின்றதொழிய, ஏனைய ஏகாரங்கள், தேற்றம்.

பழையராந் தொண்டர்க் கெளியரே மிண்டர்க்
கரியரே பாவியேன் செய்யும்
பிழையெலாம் பொறுத்தென் பிணிபொறுத் தருளாப்
பிச்சரே நச்சரா மிளிருங்
குழையராய் வந்தென் குடிமுழு தாளுங்
குழகரே ஒழுகுநீர்க் கங்கை
அழகரே ஆகில் அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. **#94**

நெடுங்காலமாகத் தொண்டுசெய்துவரும் அடியவர் களுக்கு எளிமையாக அருள் செய்பவர். வன்கண்மை உடையவர்கள் அறிய அரியர். தீவினையை உடைய அடியேன் செய்யும் பிழைகளை எல்லாம் பொறுத்து அவற்றால் அடியேனுக்குத் தீவினை உண்டாகாத வாறு தடுத்தல் செய்யாத பித்தர், விடமுடைய பாம்பினை ஒளிவீசும் காதணியாக அணிந்து வந்து எம் பரம்பரையை முழுமையாக ஆளும் இளையவர். கங்கைநீர் சடைக்கண் தங்கும் அழகர். இவையெல்லாம் உண்மையாதல் போல அவர் உறைவிடம் களத்தூர் ஆதித்தேச்சரம் என்பதும் உண்மையாம்.

விளக்கவுரை

பழையராந் தொண்டர் - நெடுங்காலமாகத் தொண்டு செய்துவருபவர். மிண்டர் - வன்கண்மை யுடையவர். ``பிணி`` என்றது வினையை, `எனது குற்றமான செயலைப் பொருட் படுத்தாது நீக்கு தலும், அவ்வாற்றால் எனக்கு வினை உண்டாகாமல் தடுத்தலும் செய் யாதவர்` என்றபடி. இதனால், இவ்வாசிரியர் தமது வினையால் தமக்கு உண்டாகிய துன்பத்தை உணர்ந்திருந்தமை பெறப்பட்டது, குழகர் - இளையவர். கங்கை அழகர் - கங்கையை அணிந்த அழகர்.

பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமே திருவுடம் பதனில்
தவளமே களபம் தவளமே புரிநூல்
தவளமே முறுவல்ஆ டரவந்
துவளுமே கலையும் துகிலுமே யொருபால்
துடியிடை இடமருங் கொருத்தி
அவளுமே ஆகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. #95

சிவபெருமானுடைய சடையும் திருவாயும் திரு வுடம்பும் பவளம் போலச் செய்யன. உடம்பில் பூசிய திருநீறும் அணிந்த புரிநூலும் பற்களும்வெண்ணிறத்தன. பாம்புகள் அவர் உடம் பில் நெளிகின்றன. ஒரு புறம் புலித்தோல் ஆடை; மறுபக்கம் நல்ல ஆடை. இடப்பகுதியாகத் துடிபோன்றஇடையை உடைய ஒப்பற்ற வளாகியபார்வதியும் இருப்பாள். இவையாவும் உண்மையாவது போல அவர் உறைவிடம் களத்தூர் ஆதித்தேச்சரம் ஆதலும் உண்மையாம் .

விளக்கவுரை

`முடியும். வாயும். மேனியும் செந்நிற முடையன; திரு மேனிமேற் பூச்சும், முப்புரிநூலும், புன்னகையும் வெண்ணிற முடை யன` என்றவாறு. தவளம் - வெண்மை. களபம் - பூசும் சாந்து; சிவ பெருமான் பூசிக்கொள்ளும் சாந்து திருநீறே. துவளும் - நெளியும். ``கலை`` எனப் பொதுப்படக் கூறியது `தோலாடை` என்றற்கு.
துகில் - நல்லாடை. ``ஒருபால்`` என்றாராயினும். `ஓரொரு பால்` என்பது கருத்தென்க. ஒருத்தி - ஒப்பற்றவள். இடமருங்கில் துடி போலும் இடையை உடைய ஒப்பற்றவளாகிய அவளும் இருப்பாள்` என உரைக்க.

நீலமே கண்டம் பவளமே திருவாய்
நித்திலம் நிரைத்திலங் கினவே
போலுமே முறுவல் நிறையஆ னந்தம்
பொழியுமே திருமுகம் ஒருவர்
கோலமே அச்சோ அழகிதே யென்று
குழைவரே கண்டவர் உண்ட
தாலமே ஆகில் அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. #96

`கழுத்து நீலநிறத்ததாய் உள்ளது. திருவாய் பவளம் போலச் செய்யது. பற்கள் முத்துப் போல வரிசையாக விளங்குகின்றன. முகம் மிகுதியாக மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறது. அத்தகைய ஒப் பற்ற சிவபெருமானுடைய அழகு, `ஐயோ! பேரழகாய் உள்ளதே` என்று கூறித்

தரிசித்த அடியார்கள் மனம்உருகுவார்கள். அவர் உட் கொண்டது விடமே. இவையாவும் உண்மையாக இருத்தல் போலவே அவர் உறைவிடம் களத்தூர் ஆதித்தேச்சரம் என்பதும் உண்மையாம்.

விளக்கவுரை

நீலம் - நீலரத்தினம். நித்திலம் - முத்து. நிரைத்து - வரிசைப்பட வைக்கப்பட்டு.

முறுவல் - நகைப்பு, ``திருமுகம்`` என்றதன்பின், ``இவ்வாறாகலின்` என்னும் சொல்லெச்சம் வருவிக்க, ``கோலமே. அழகிதே`` என்ற ஏகாரங்களில் முன்னது அசைநிலை; பின்னது தேற்றம். அச்சோ, வியப்பிடைச் சொல். குழைவர் - மனம் உருகு வார்கள்.

திக்கடா நினைந்து நெஞ்சிடிந் துருகுந்
திறத்தவர் புறத்திருந் தலச
மைக்கடா அனைய என்னையாள் விரும்பி
மற்றொரு பிறவியிற் பிறந்து
பொய்க்கடா வண்ணங் காத்தெனக் கருளே
புரியவும் வல்லரே எல்லே
அக்கடா வாகில் அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. **#97**

பல திசைகளையும் அடுத்து இறைவனை எங்கும் தேடி அலைந்து மனம் நொறுங்கி உருகும் அடியவர்கள் உன்னால் ஆட்கொள்ளப் படாமல் இருந்து உடலும் மனமும் மெலிய, கரிய எருமைக் கடாவைப்போல உணர்வற்று இருக்கும் அடியேனை அடிமையாகக் கொள்ள விழைந்து, வேறொரு பிறவியில் பிறந்து பொய்யான உலகியல் பொருள்களில் பொருந்தாதபடி காத்து அடி யேனுக்கு அருள்புரியவும் வல்லவர். இறைவர் கருணைதான் என்னே! அடியேனுக்கு மனஅமைதி உண்டாயிற்று என்றால் அதனை அருளிய வர் உறைவிடம் களத்தூரில் உள்ள அணிதிகழ் ஆதித்தேச்சரமே யாகும்.

விளக்கவுரை

திக்கு அடா நினைந்து - பல திசைகளிலும் அடுத்து நினைந்து; என்றது, (இறைவனை) `எங்கும் தேடி அலைந்து` என்றபடி. இடிந்து - துயருற்று. புறத்து இருந்து - ஆட் கொள்ளப் படாமல் இருந்து, அலச - மெலிய, மைக்கடா - கரிய நிறம் பொருந்திய கடா; எருமைக் கடா; இஃது உணர்வின்மை பற்றி வந்த உவமை. ஆள் - அடிமை. ``ஆளாக`` என ஆக்கம் வருவிக்க. பொய் - நிலையாமை, ``பொய்க்கு` என்ற நான்கனுருபை, இரண்டனுருபாகத் திரிக்க. அடாவண்ணம் - பொருந்தாதபடி. ``புரியவும்`` என்ற உம்மை, சிறப்பு. கல்லில் நார்

உரித்தது போன்ற செயலாதல் பற்றி, `வல்லரே` என்றார். ``எல்லே`` என்பது `என்னே` என்பது போன்ற தோர் இடைச்சொல்; இஃது இங்கு இறைவரது கருணையை வியந்த வியப்பின்கண் வந்தது. `அக்கடா` என்பது அமைதிக் குறிப்புத் தருவ தோர் இடைச்சொல்லாய் வழங்கும், கவலையின்றி இருப்பவனை, `அக்கடா என்று இருந்தான்` என்பர். ``அக்கடாவாகில்`` என்றதற்கு, `எனக்கு அமைதி உண்டாயிற்றாயின்` எனவும், ``அவர்`` என்றதற்கு அதற்கு ஏதுவாய அவர்` எனவும் உரைக்க.

மெய்யரே மெய்யர்க் கிடுதிரு வான
விளக்கரே எழுதுகோல் வளையாள்
மையரே வையம் பலிதிரிந் துறையும்
மயானரே உளங்கலந் திருந்தும்
பொய்யரே பொய்யர்க் கடுத்தவான் பளிங்கின்
பொருள்வழி இருள்கிழித் தெழுந்த
ஐயரே யாகில் அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. **#98**

உண்மையடியவர்களுக்கு மெய்ப்பொருளாக இருந்து ஏற்றப்பட்ட விளக்குப் போல அறியாமையை நீக்கி அறி வொளியைத் தருபவர். எழுதப்பட்டன போன்ற வரிகளை உடைய திரண்ட அழகான வளையல்களை அணிந்த உமாதேவியாரை ஒரு பாகமாக உடையவர். ஆதலின் அவ் விடப்பாகம் அவளுடைய கரிய நிறத்தை உடையவர். உலகம் முழுவதும் பிச்சைக்காகத் திரிந்து சுடுகாட்டில் உறைபவர். எல்லார் உள்ளத்தும் அந்தர்யாமியாகக் கலந்து இருந்தபோதிலும் பொய்யர்களுக்குத் தோன்றாதவர். வந்து அடைந்த பளிங்கு போன்ற சீவன் முக்தர்களின் சொல்லாலும் செயலாலும் பக்குவமுடையவர்களுக்கு மெய்யுணர்வை உண்டாக்கும் தலைவர். இவையாவும் உண்மையாதல் போல அவர் உறைவிடம் களத்தூர் ஆதித்தேச்சரம் என்பதும் உண்மையாகும்.

விளக்கவுரை

மெய்யர்க்கு - மெய்ந்நெறியில் நிற்பவர்கட்கு, `இடு விளக்கர்`என இயையும்; `ஏற்றப்பட்ட விளக்குப் போல்பவர்` என்பது பொருள்; அஃதாவது, `இருளை (அறியாமையை) நீக்கி, ஒளியை (அறிவை) த் தருபவர்` என்பதாம். திருவான - அழகான. எழுது கோல் வளையாள் - எழுதப்பட்டது போலும் வரிகளையுடைய திரண்ட வளைகளை யணிந்த உமாதேவி. மையர் - அவளது கரிய நிறத்தை ஒரு பால் உடையவர். ``கோல் வளையை ஆண்மையர் (ஆளுந் தன்மையை உடையவர்) என்றும், `மையலர் என்றது இடைக்குறைந்து நின்றது` என்றும் உரைப்ப. `பொய்யர்க்குப் பொய்யரே` எனக் கூட்டுக; `எல்லார்

உளத்திலும் இருந்தும், பொய்யருக்குத் தோன்றாதவர்` என்றபடி. `பளிங்கின் பொருள்` என்ற இன் அல்வழிக்கண் வந்த சாரியை ``பளிங்குபோலும் பொருள்`` என்ற வாறு. பளிங்கு போலும் பொருள் - மாசுதீர்ந்த உயிர்கள் (முத்தான்மாக்கள்) அவற்றின் வழி இருள் கிழித்தெழுதலாவது, சீவன் முத்தர்களது சொல்லாலும், செயலாலும் பக்குவர்களுக்கு மெய் யுணர்வை உண்டாக்குதல். ஐயர் - தலைவர்.

குமுதமே திருவாய் குவளையே களமும்
குழையதே யிருசெவி ஒருபால்
விமலமே கலையும் உடையரே சடைமேல்
மிளிருமே பொறிவரி நாகம்
கமலமே வதனம் கமலமே நயனம்
கனகமே திருவடி நிலை நீர்
அமலமே யாகில் அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. **#99**

குமுத மலர் போன்ற செய்யவாயினர். கருங் குவளைபோலக் கரிய கழுத்தினர். இருகாதுகளில் வலக்காதில் குழையை அணிந்தவர். இடப்பகுதியில் களங்கமற்ற மேகலையை உடையவர். சடையின் மேல் புள்ளிகளையும் கோடுகளையும் உடைய பாம்பு நெளிகின்றது. அவருடைய முகமும் கண்ணும் தாமரை போன்று உள்ளன. அவருடைய பாதுகை பொன்மயமானது. அவருடைய நீர்மை களங்கமற்றது. அவர் உறைவிடம் களத்தூர் ஆதித்தேச்சர மாகும்.

விளக்கவுரை

குமுதம், இங்குச் செவ்வாம்பல் மலரைக் குறித்தது. குவளை - நீலோற்பல மலர். களம் - கழுத்து, `குழையது` என்பதில் அது, பகுதிப் பொருள் விகுதி. வேண்டும் சொற்கள் வருவித்து, `இருசெவிக்கண்ணும்` என ஈற்றில் தொக்கு நின்ற உருபும், உம்மையும் விரித்து, `ஒரு குழையே இருசெவிக் கண்ணும் உள்ளது` எனப் பொருள் உரைத்து, `இரு செவிகளுள் ஒன்றிலே குழையுள்ளது` என்பது அதனாற் போந்த பொருளாக உரைக்க. குழை உள்ளது வலச் செவியில்; இடச் செவியில் தோடு உளது. விமலம் - தூய்மை. பொறி - புள்ளி. வரி - கீற்று. திருவடிநிலை - பாதுகை; பின்னரும் பாதுகை கூறுவர். நீர் - நீர்மை.

நீரணங் கசும்பு கழனிசூழ் களந்தை
நிறைபுகழ் ஆதித்தேச் சரத்து
நாரணன் பரவுந் திருவடி நிலைமேல்
நலமலி கலைபயில் கருவூர்
ஆரணம் மொழிந்த பவளவாய் சுரந்த
அமுதம்ஊ றியதமிழ் மாலை

ஏரணங் கிருநான் கிரண்டிவை வல்லோர்
இருள்கிழித் தெழுந்த சிந்தையரே. #100

நீரினது அழகிய ஊறுதலையுடைய ஆதித்தேச்சரம் என்ற கோயிலே, பற்றிய, திருமால் பரவும் பாதுகைகளை உடைய சிவபெருமான் மீது பல சிறப்புக்களும் பொருந்திய கலைகளில் பயின்ற கருவூர்த்தேவர் வேதங்களை ஓதிய தம் பவளம் போன்ற வாயிலிருந்து வெளிப்படுத்திய அமுதம் போன்ற சுவையை உடைய தமிழ் மாலையாகிய அழகு பொருந்திய இப்பத்துப் பாடல்களையும் வல்லவர் அறியாமையைக் கிழித்து அப்புறப்படுத்திய உள்ளத்தின ராவர்.

விளக்கவுரை

நீர் அணங்கு அசும்பு - நீரினது அழகிய ஊறுதலை யுடைய. ``ஆதித்தேச்சரத்துத் திருவடி நிலை`` என இயையும் `திரு வடிக்கும் ஆகாது திருவடிநிலைக்கே ஆகும்` என்பார், ``திருவடி நிலைமேல் மொழிந்த` என்றார். ஆரணம் மொழிந்தவாய் - வேதம் ஓதியவாய்; இவர் தம்மை வேதம் ஓதியவராகப் பின்னரும் குறிக்கின்றார். அமுதம் ஊறிய - அமுதம் சுரந்தது போல இனிமை வாய்ந்த. `தமிழ் மாலைக்கண் உள்ள இரு நான்கு இரண்டு` என்க . ஏர் அணங்கு - எழுச்சி பொருந்திய அழகினை யுடைய. இருநான்கு இரண்டு - பத்து; பத்துப் பாடல்கள். இருள் - அறியாமை. சிந்தையர் - உள்ளத்தை யுடையவராவர்.

கருவூர்த் தேவர் - திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம்

தளிரொளி மணிப்பூம் பதம்சிலம் பலம்பச்
சடைவிரித் தலையெறி கங்கைத்
தெளிரொளி மணிநீர்த் திவலைமுத் தரும்பித்
திருமுகம் மலர்ந்துசொட் டட்டக்
கிளரொளி மணிவண் டறைபொழிற் பழனங்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வளரொளி மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தன்என் மனங்கலந் தானே. **#101**

தளிர்போன்ற ஒளியைஉடைய அழகிய மலர் போலும் திருவடியில் சிலம்பு ஒலிக்கவும் விரித்த சடையிலே அலை கள் மோதும் கங்கையின் தெளிவான ஒளியை உடைய அழகிய நீர்த் துளிகள் முத்துப்போலத் தோன்றுமாறு அழகிய முகத்தில் பொருந்திச் சொட்டுச் சொட்டாக விழவும், மேம்பட்ட ஒளியை வீசும் நீலமணி போன்ற வண்டுகள் ஒலிக்கும் சோலைகளிலும் வயல்களிலும் ஆர வாரம் மிகவும் கீழ்க்கோட்டுரில் ஒளி மிகுகின்ற மணிஅம்பலத்தின் கண் நின்று கூத்து நிகழ்த்தும் வலிமையை உடைய பெருமான் என் மனத்தில் கலந்து ஒன்றுபட்டு விட்டான். இஃது என்ன வியப்போ!

விளக்கவுரை

தளிர் ஒளி - தளிர்போன்ற ஒளியையுடைய. மணிப்பூம் பதம் - அழகிய மலர்போலும் திருவடியில். அலம்ப - ஒலிக்க. தெளிர் ஒளி மணி நீர்த்திவலை - தெளிவான ஒளியையுடைய அழகிய நீர்த் துளிகள். முத்து அரும்பி - முத்துப்போலத் தோன்ற. அரும்ப என்பது, ``அரும்பி`` எனத் திரிந்தது. சொட்டு அட்ட - துளிகளைச் சிந்த. துளி, வியர்வைத் துளி. `சொட்டட்ட ஆடும்` என இயையும். பழனம் - வயல். `பொழிலும் பழனமும் கம்பலை செய்யும் கீழ்க்கோட்டூர்` என்க. கெழுவு - பொருந்திய. கம்பலை - ஆரவாரம். `கம்பலம்` என்பது பாடம் அன்று. பொழிலிலும், பழனத்திலும் உள்ளவை செய்கின்ற ஆர வாரத்தை அவையே செய்வனவாகக் கூறினார். மணி அம்பலம் - மாணிக்கச் சபை. மைந்தன் - வலிமை (தளராமை) உடையவன். ஈற்றில், `இஃதென்ன வியப்பு` என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க.

துண்டவெண் பிறையும் படர்சடை மொழுப்பும்
சுழியமும் சூலமும் நீல
கண்டமும் குழையும் பவளவாய் இதழும்
கண்ணுதல் திலகமும் காட்டிக்
கெண்டையும் கயலும் உகளும்நீர்ப் பழனங்

கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வண்டறை மணியம் பலத்துள் நின்றாடும்

மைந்தன்என் மனங்கலந் தானே. **#102**

ஒரு கலையாகிய வெள்ளைப் பிறையையும், படர்ந்த சடைமுடியையும், உச்சிக்கொண்டையையும், சூலத்தையும், நீலகண்டத்தையும், காதணியையும், பவளம் போன்ற வாயின் உதடுகளையும், நெற்றிக் கண்ணின்மேல் இடப்பட்ட திலகத்தையும் யான் காணச் செய்து,கெண்டையும் கயலும் தாவிக்குதிக்கின்ற நீர் வளம் பொருந்திய வயல்களின் மள்ளர்களால் ஒலிக்கப்படும் ஆரவார முடைய கீழ்க்கோட்டூரில் வண்டுகள் ஒலிக்கும் மணியம்பலத்துள் நின்று ஆடும் வலிமையை உடைய பெருமான் என் உள்ளத்தில் கலந்து ஒன்றுபட்டுவிட்டான்.

விளக்கவுரை

மொழுப்பு - முடி. `சூழியம்` என்பது குறுகி, ``சுழியம்`` என வந்தது. சூழியம் - உச்சிக் கொண்டை. இஃது, இங்குச் சடை முடியைச் சுற்றியுள்ள பாம்பைக் குறித்தது. `பவளஇதழ்` என இயையும். `கண்ணையுடைய நெற்றியிலே உள்ள திலகம்` என்க. `காட்டிக் கலந்தான்` என முடியும். `கெண்டை, கயல்` - மீன் வகைகள். உகளும் - துள்ளுகின்ற.

திருநுதல் விழியும் பவளவாய் இதழும்
திலகமும் உடையவன் சடைமேற்
புரிதரு மலரின் தாதுநின் றூதப்
போய்வருந் தும்பிகாள் இங்கே
கிரிதவழ் முகிலின் கீழ்த்தவழ் மாடங்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வருதிறல் மணியம் பலவனைக் கண்டென்
மனத்தையும் கொண்டுபோ துமினே. **#103**

அழகிய நெற்றியில் உள்ள கண்ணும் பவளம் போன்ற வாயின் உதடுகளும் திலகமும் உடைய சிவபெருமானுடைய சடைமீது உள்ள விருப்பம் தரும் மலர்களின் மகரந்தத்தை அவற்றில் படிந்து நுகர்தற்குப் பல காலும் சென்றுமீள்கின்ற தும்பி என்றஉயர் குல வண்டுகளே! மலைகளின் மீது தவழ்கின்ற மேகங்களின் கீழ் விளங்கு கின்ற உயர்ந்த பேரில்லங்களில் ஆரவாரம் மிகுகின்ற கீழ்க்கோட்டூரில் காணப்படுகின்ற ஆற்றலை உடைய மணியம்பலத்தில் ஆடுபவ னாகிய சிவபெருமானைத் தரிசித்து அடியேனுடைய மனத்தை அவ னிடமிருந்து மீட்டுவாருங்கள்.

விளக்கவுரை

நுதல் விழி - நெற்றியில் உள்ள கண். `உடையவனது சடை` என்க. புரி - புரிவு; விருப்பம்; முதனிலைத் தொழிற்பெயர். தாது நின்று ஊத - மகரந்தத்தில் பொருந்தி ஊதுதற்பொருட்டு. போய் வரும் - பலகாலும் சென்று மீள்கின்ற. ``இங்கே`` என்றதனை, ``கொண்டு`` என்பதன் பின்னர்க் கூட்டுக. இவ்வாறன்றி, நின்றாங்கு நிறுத்தி, `வருங்கால்` என ஒருசொல் வருவித்துரைப்பினுமாம். ``கீழ்த் தவழ்`` என்றதில் தவழ்தல் - விளங்குதல். ``கிரி தவழ் முகிலின்கீழ்`` என்றது, `மலை களின் சிகரத்தில் தவழும் இயல்புடைய மேகங்களின் கீழ் விளங்கு கின்ற மாடங்கள்` எனக் கூறுமுகத்தான், மாடங்கள் மலை போல உயர்ந்திருத்தலைக் கூறியவாறு. மாடங்களில் எழுகின்ற ஆர வாரங்களை அவைகளே செய்வனவாகக் குறித்தார். `வருகின்ற அம்பலவன்` என இயைத்து, `காணப்படுகின்ற அம்பலவன்` என உரைக்க. ``கொண்டு`` என்றது, `இரந்து பெற்று` என்றபடி.

தெள்ளுநீ றவன்நீ றென்னுடல் விரும்பும்
செவிஅவன் அறிவுநூல் கேட்கும்
மெள்ளவே அவன்பேர் விளம்பும்வாய் கண்கள்
விமானமே நோக்கிவெவ் வுயிர்க்கும்
கிள்ளைபூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வள்ளலே மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தனே என்னும்என் மனனே. **#104**

தெளிவாகிய திருநீற்றை அணிந்த சிவபெருமான் அணியும் நீற்றினையே என் உடல் விரும்புகிறது. என் செவிகள் அவனை அறியும் அறிவைத்தரும் நூல்களையே கேட்கின்றன. என் வாய் அவனுடைய திருநாமத்தை மெதுவாக ஒலிக்கிறது. என்கண்கள் அவனுடைய விமானத்தை நோக்கியதால் என்னை வெப்பமாக மூச்சு விடச்செய்கின்றன. கிளிகள் பூஞ்சோலையிலே இனிமையாகப் பேசி மாம்பொழிலைநோக்கி ஆரவாரம் செய்யும் கீழ்க் கோட்டூரில் உறையும் வள்ளலே! மணியம்பலத்தில் நின்று கூத்துநிகழ்த்தும் வலிமையுடையவனே! என்று என்மனம் அவனை அழைக்கும்.

விளக்கவுரை

தெள்ளு - தெளிவாகிய; வெண்மையான. `நீற்றவன்` என வருதலேயன்றி, `நீறவன்` என வருதலும் இலக்கணமேயாம், இரண்டாவதன் தொகையோடொப்பதாதலின். ``கானக நாடனை நீயோ பெரும`` *(புறம் - 5.)* ``நாடன் என்கோ ஊரன் என்கோ`` *(புறம்-49.)*

என்றாற்போல்வன பலவற்றுள்ளும் `நாடனை நாடன்` முதலாக வருவன பலவுங் காண்க. `நீறவன்` என்பது, `சிவன்` என்னும் அளவாய் நின்றது. ``என்`` என்பது, ``செவி`` முதலிய பலவற்றோடும் சென்று இயையும். அவன் அறிவு நூல் - அவனை அறியும் அறிவைத் தரும் நூல். மெள்ள விளம்புதல் - செபித்தல். விமானம் - மூலத்தான மாளிகை. வெவ்வுயிர்க்கும் - வெப்பமாக மூச்செறியும். சோர் வுறுதலை இனிது விளக்க, மூக்கின் தொழிலாகிய உயிர்த்தலைக் கண்களுக்கு ஏற்றிக் கூறினார். `பொழிற்கண்` என்பது, ``பொழிற்கு`` என உருபு மயக்கமாய் வந்தது. என்னும் - என்று நினைக்கும்.

தோழி யாம்செய்த தொழில்என் எம்பெருமான்
துணைமலர்ச் சேவடி காண்பான்
ஊழிதோ றூழி உணர்ந்துளங் கசிந்து
நெக்குநைந் துளங்கரைந் துருக்கும்
கேழலும் புள்ளு மாகிநின் றிருவர்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வாழிய மணியம் பலவனைக் காண்பான்
மயங்கவும் மாலொழி யோமே. **#105**

தோழி! இணையாகிய மலர்களைப் போன்ற, எம் பெருமானுடைய திருவடிகளைக் காண்பதற்காகப் பல ஊழிக் காலங்க ளாக நினைத்து மனம் இளகி நெகிழ்ந்து நைந்து உள்ளம் கரைந்து உரு கும். பன்றியும் அன்னப்பறவையுமாகி நின்று திருமாலும் பிரமனும் எம்பெருமானை ஆரவாரத்தோடு துதித்தலைச்செய்யும் கீழ்க்கோட் டூரில், நாம் மணியம்பலத்திலுள்ள அப்பெருமானைக் காண, மயக்கம் கொண்டு அக்கலக்கம் தெளியாது இருக்கின்றோம். அவன்பால் காதல் மயக்கம் உறுவதனைத் தவிர நாம் செய்த பணிதான் யாது?

விளக்கவுரை

`தோழி. மணியம்பலவனைக் காண்பான் இருவர் கேழலும் புள்ளுமாகி நின்று மயங்கவும், யாம் மால் ஒழியோம்; எம் உள்ளம் ஊழிதோறூழி அவனை உணர்ந்தமையால் அஃது இப் பிறப்பில் கசிந்து நெக்கு நைந்து கரைந்து உருகாநின்றது; ஆயினும். யாம் அவனது துணைமலர்ச் சேவடி காண்பான் செய்த தொழில் என்` எனக் கூட்டி உரைக்க. ``தொழில்`` என்றது, பணியை. ``என்`` என்றது, யாதும் இன்மையைக் குறித்து நின்றது. மனம் உருகினும் பணியின்றி அவனைக் காண்டல் கூடாமையின், `எம் பெருமான் துணைமலர்ச் சேவடி காண்பான் யாம் செய்த தொழில் என்` என்றாள். `உணர்தலால்` என்பது, ``உணர்ந்து`` என திரிந்து நின்றது. சிவபிரானைப் பல பிறப்புக்களில் நினைந்ததன் பயனே ஒரு பிறப்பில் அவன்பால் விளையும் அன்பாகும் ஆதலின்,

`உளம் ஊழிதோறூழி உணர்ந்து கசிந்து உருகும்` என்றாள். பின்னர் வந்த ``உள்ளம்``, சுட்டுப் பெயரளவாய் நின்றது. இங்குக் கம்பலை செய்வது கீழ்க்கோட்டூரே என்க. ``வாழிய`` என்றது அசைநிலை.

என்செய்கோம் தோழி தோழிநீ துணையா
இரவுபோம் பகல்வரு மாகில்
அஞ்சலோ என்னான் ஆழியும் திரையும்
அலமரு மாறுகண் டயர்வன்
கிஞ்சுக மணிவாய் அரிவையர் தெருவிற்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மஞ்சணி மணியம் பலவவோ என்று
மயங்குவன் மாலையம் பொழுதே. **#106**

தோழீ! நாம் யாது செய்வோம்? உன்னையே துணையாகக் கொள்வதால் இரவுப் பொழுது கழிந்து போகிறது. பகற் பொழுது வருமாயின் எம்பெருமான் வந்து அஞ்சாதே என்று கூறுகின் றான் அல்லன். கடலும் அதன் அலைகளும் சுழலுமாற்றைக் கண்டு சோர்வு அடைகின்றேன். முள் முருங்கைப் பூவினைப் போன்ற அழகிய சிவந்த வாயினை உடைய மகளிர், தெருவில் ஆரவாரம் செய்யும் `கீழ்க்கோட்டூரில், மேக மண்டலம் வரை உயர்ந்த மணியம்பலப் பெருமானே` என்று கூவி, யான், மாலைப் பொழுது கண்டால் மயக்கம் உறுவேன்.

விளக்கவுரை

``தோழி`` இரண்டனுள் முன்னது விளி: பின்னது, `தோழியாகிய நீ` என இருபெயரொட்டின்கண் வந்தது. `தோழி, இரவு நீ துணையாய் நிற்கப் போம்; அதனால், மாலையம் பொழுதில் ஆழி யும், திரையும் அலமருமாறு கண்டு அயர்வன்; மணியம்பலவவோ என்று மயங்குவன்; இதற்கு என் செய்கோம்` எனக் கூட்டி யுரைக்க.

முன்னர்த் தனது நிலையைக் கூறிப் பின், இருவரையும் சுட்டி, `என் செய்கோம்` என்றாளாதலின், பால்வழுவின்மை அறிக. `இன்று இரவு தனிமையிற் கழிந்ததாயினும், நாளைக்காலை வந்து `அஞ்சேல்` என்று அளிப்பான்` என்று ஒவ்வோர் இரவிலும் கருதுகின்றவள், ஒரு நாளும் அவன் அங்ஙனம் வரக்காணாமையால், ``பகல் வருமாகில் அஞ்சலோ என்னான்`` என்றாள். அஞ்சலோ என்னான் என்றது, `அஞ்சல் என்று சொல்வதோ செய்யான்` எனப் பொருள்தந்து நின்றது. அன்றி, ஓகாரம் அசையெனினும் ஆம். `அஞ்சலோம்பு` என்பதே பாடம் போலும்! ஆழி - கடல். திரை - அலை. அலமருதல் - அலைதல். அலமருவது திரையன்றி ஆழியன்றாயினும், அஃது அதனைத் தாங்கி உடன் நிற்றல்பற்றி அதனையும் அலமருவதாகக் கூறினாள். தனக்குத் துயர் செய்பவை தாமும் துயர்ப்படுவதைக் கண்டு மகிழ்கின்றா ளாதலின், `அலமருமாறு

கண்டு` என்றாள், இதனால், கண் துயிலாமை விளங்கிற்று. அவை துயர்ப்படினும் தன் துயர் நீங்காமை பற்றி, `அயர்வன்` என்றாள். கிஞ்சுகம் - முள்முருக்கம் பூ. மஞ்சு அணி அம்பலம் - மேகங்களை மேலே கொண்ட மேற்கட்டியை யுடைய அம்பலம். ஓகாரம், முறையீடு குறித்தது.

தழைதவழ் மொழுப்பும் தவளநீற் றொளியும்
சங்கமும் சகடையின் முழக்கும்
குழைதவழ் செவியும் குளிர்சடைத் தெண்டும்
குண்டையும் குழாங்கொடு தோன்றும்
கிழைதவழ் கனகம் பொழியுநீர்ப் பழனங்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மழைதவழ் மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தர்தம் வாழ்வுபோன் றதுவே. **#107**

வில்வம் வன்னி முதலிய தழைகள் பொருந்திய முடியும், வெள்ளிய திருநீற்றின் ஒளியும், சங்கு வளைகள், உடுக்கை இவற்றின் ஒலியும், காதணியை அணிந்த செவியும், குளிர்ந்த சடையின் திரட்சியும், எருதும், திரள்திரளாகத் தோன்றுகின்ற ஒளி வீசும் பொற்பொடிகளைத் தோற்றுவிக்கின்ற நீர் வளம் மிக்க வயல் களிலே ஆரவாரம் மிக்கிருக்கும் கீழ்க்கோட்டூரில் உள்ள, மேகங்கள் தன் மீது தவழுமாறு உயர்ந்த உயரத்தை உடைய மணிஅம்பலத்தில் நின்று ஆடும் வலிமைமிக்க சிவபெருமானுடைய செல்வங்களாகக் காணப்படுகின்றன.

விளக்கவுரை

தழை - வில்வம், வன்னி முதலியவற்றின் இலை. மொழுப்பு - முடி. சங்கம் - சங்க வளையல்; இஃது அம்மைபாகத்தில் உள்ளது. ``சகடை`` என்றது, உடுக்கையை. தெண்டு - திரட்சி. குண்டை - எருது. `தழைதவழ் மொழுப்பு முதலாகக் குண்டையீறாக உள்ளனவே அவரது வாழ்வு போன்றன` என்க. `குழாங்கொடு தோன் றும் கனகம்` என்க. `மிக்க பொன்` என்றவாறு.

கிழை - ஒளி. `கனகத்தைச் சொரியும் நீரையுடைய பழனங்கள் கம்பலை செய்கின்ற கீழ்க் கோட்டூர்` என்க. மழை - மேகம். ``போன்றன`` என்றதில் `போறல்` ஆக்கப் பொருட்டாய் நின்றது. `அவரை என்மனம் காதலிக்கின்றது வியப்பாகின்றது` என்பது குறிப்பெச்சம்.

தன்னக மழலைச் சிலம்பொடு சதங்கை
தமருகம் திருவடி திருநீ
றின்னகை மழலை கங்கைகொங் கிதழி
இளம்பிறை குழைவளர் இளமான்
கின்னரம் முழவம் மழலையாழ் வீணை

கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மன்னவன் மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தன்என் மனத்துள்வைத் தனனே. **#108**

தன்னகத்துள்ள இனிய ஒலியை எழுப்பும் சிலம்பு, சதங்கை, உடுக்கை, பாதுகை, திருநீறு, இனிய சிரிப்பினையும் மழலை மொழிகளையும் உடைய கங்கை, தேன்பொருந்திய கொன்றைமலர், இளம்பிறை, தளிர்களைத்தின்று வளரும் இளையமான், கின்னரம் என்ற நரம்புக்கருவி, மத்தளம், மழலை போன்ற இனிய ஒலிஎழுப்பும் யாழ், வீணை இவற்றால் ஆரவாரம் மிகுகின்ற கீழ்க்கோட்டூர் மன்னவ னாய் மணிஅம்பலத்துள் நின்று ஆடுகின்ற பெருமான் என் மனத்துள் புகுந்து விட்டான்.

விளக்கவுரை

`தன்னகத்துள்ள சிலம்பு முதலாக மான் ஈறாயின வற்றை என் மனத்து வைத்தான்` என்க. அகம், ஏழன் உருபு. மழலைச் சிலம்பு- மெல்லிய ஓசையையுடைய சிலம்பு. இன்னகையும் இறைவனுடையதே; இதனைக் கங்கைக்கு ஆக்குவாரும் உளர். மழலைக் கங்கை-இனிய ஓசையையுடைய கங்கை. கொங்கு இதழி - தேனையுடைய கொன்றை மாலை. `கோங்கிதழி` என்பது பாடம் அன்று. வளர் இளமான் - வளர்தற்குரிய இளைய மான்; `மான் கன்று` என்றபடி. கின்னரம், ஓர் நரம்புக் கருவி. முழவம் - மத்தளம்.

யாதுநீ நினைவ தெவரையா முடைய
தெவர்களும் யாவையும் தானாய்ப்
பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந்தென்
பனிமலர்க் கண்ணுள்நின் றகலான்
கேதகை நிழலைக் குருகென மருவிக்
கெண்டைகள் வெருவுகீழ்க் கோட்டூர்
மாதவன் மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தன்என் மனம்புகுந் தானே. **#109**

தாழைப்பூவின் நிழலை மீன்கொத்திப்பறவை என்று தவறாக மனத்துக் கொண்டு கெண்டைமீன்கள் அஞ்சுகின்ற கீழ்க் கோட்டூரிலே மேம்பட்ட தவத்தை உடையவனாய் மணியம்பலத்துள் நின்று ஆடும் வலியவன், எல்லா உயர்திணைப் பொருள்களும் எல்லா அஃறிணைப் பொருள்களும் தானேயாகிப் பாதுகையுடனும் இனிய ஓசையை எழுப்பும் சிலம்பினொடும் புகுந்து என்னுடைய குளிர்ந்த மலர்போன்ற கண்களில் நின்று நீங்கானாய் என் மனத்துள் புகுந்து விட்டான். அவனையன்றிவேறு எவரை யாம் உறவாக உடையோம்? வேற்று வரைவு பற்றி நீ யாது கருதுகின்றனை?

விளக்கவுரை

`யாது நீ நினைவது எவரை யாம் உடையது` என்பதை இறுதியிற் கூட்டியுரைக்க. ``நீ`` என்றது, தோழியை, `நினைவது, உடை யது` என்பன தொழிற்பெயரும் பண்புப் பெயருமாய் நின்றன. உடை யது- தலைவனாகப் பெற்றுடையது. நொதுமலர் வரைவு பற்றித் தோழி கூறக்கேட்ட தலைவி, இவ்வாறு கூறினாள் என்க. உயர்திணையைக் குறிக்க. ``எவர்களை`` என்றும், அஃறிணையைக் குறிக்க, ``யாவையும்`` என்றும் கூறினாள். `அகலான்` என்றது முற்றெச்சமாய், `புகுந்தான்` என்பதனோடு முடியும். கேதகை - தாழை; அதன் பூவைக் குறித்தது ஆகு பெயர். குருகு - கொக்கு; `குருகென` என்பதனை` ``வெருவு`` என்பதன் முன்னர்க் கூட்டுக. மாதவன் - பெரிய தவக்கோலத்தை யுடையவன்.

அந்திபோல் உருவும் அந்தியிற் பிறைசேர்
அழகிய சடையும் வெண்ணீறும்
சிந்தையால் நினையிற் சிந்தையுங் காணேன்
செய்வதென் தெளிபுனல் அலங்கற்
கெந்தியா உகளுங் கெண்டைபுண் டரீகங்
கிழிக்குந்தண் பணைசெய்கீழ்க் கோட்டூர்
வந்தநாள் மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தனே அறியும்என் மனமே. **#110**

மாலைவானம் போன்ற செந்நிற வடிவமும், மாலையில் தோன்றும் பிறை சேர்ந்த அழகிய சடையும், வெண்ணீறும் மனத்தால் நினைப்போம் என்றால் மனமும் என்வசத்தில் இல்லை. யான் யாது செய்வேன்? தெளிந்த நீரில் அசைவின்கண், தாமரை மலரைக் கிழிக்கும் கெண்டை மீன்கள் தாமரையின் தொடர்பால் மணம் வீசிக் கொண்டு தாவித்திரியும் குளிர்ந்த மருதநிலத்து வயல்களை உடைய கீழ்க்கோட்டூரில் அடியேன் அவனைத் தரிசிக்க வந்த நாளில் வேறு பட்ட என் மனநிலையை வலியவனாகிய அப்பெருமானே அறிவான்.

விளக்கவுரை

அந்தியில் பிறை - மாலைக் காலத்தில் தோன்றுகின்ற சந்திரன். சிந்தை என்னை விட்டு அவனிடத்தே அடங்குதலால், சிந்தை காணப்படாதாயிற்று. `ஏனைய கருவிகளையேயன்றி, எனப்பொருள் தருதலின், ``சிந்தையும்`` என்னும் உம்மை, இறந்தது தழுவிய எச்சம். அலங்கல் - அசைவின்கண். கெந்தியா (கந்தியா) - மணம் வீசி. புண்டரிகம் - தாமரை மலர். ``கெந்தியா உகளும் கெண்டை புண்டரிகம் கிழிக்கும்`` என்றாராயினும், `புண்டரிகம் கிழிக்கும் கெண்டை கெந்தியா உகளும்` என்பது கருத்தென்க. கெந்தித்தல். புண்டரிகத்தைக் கிழித்த

லால் உண்டாயிற்று. வந்தநாள் - சென்று நான் அவனைக் கண்ட நாளில் வேறுபட்ட என் மனநிலையை அவன் ஒருவனே அறிவான் என்க.

கித்திநின் றாடும் அரிவையர் தெருவிற்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மத்தனை மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தனை ஆரணம் பிதற்றும்
பித்தனேன் மொழிந்த மணிநெடு மாலை
பெரியவர்க் ககலிரு விசும்பின்
முத்தியா மென்றே உலகர்ஏத் துவரேல்
முகமலர்ந் தெதிர்கொளுந் திருவே. **#111**

கித்தி என்னும் விளையாட்டை நிகழ்த்துகின்ற பெண்கள் தெருவில் ஆரவாரம் செய்யும் கீழ்க்கோட்டூரில் ஊமத்த மலரைச் சூடியவனாய், மணியம்பலத்துள் நின்று ஆடும் வலிய வனாகிய சிவபெருமானைப் பற்றி, வேதங்களை ஓதும் இறைப் பித்துடைய அடியேன் பாடிய மணிகள் போன்ற நெடிய பாமாலை பெரியோர்களுக்கு அகன்ற பெரிய சிவலோகத்தில் முத்தியை வழங்கும் என்று உலகத்தவர் இதனை உயர்த்திக் கூறுவாராயின் திரு மகள் அவர்களை முகம் மலர்ந்து எதிர்கொள்வாள்.

விளக்கவுரை

கித்தி - விளையாட்டு. \`அரிவையர் கம்பலை செய்\` என இயையும். மத்தன் - உன்மத்தன்; \`ஊமத்தை மலரைச் சூடியவன்\` எனலுமாம். பெரியவர்க்கு - பக்குவம் மிக்கோர்க்கு. \`\`அகல் இரு விசும்பு\`\` என்றது சிவலோகத்தை. \`விசும்பின் கண்ணதாகிய முத்தி\` என்க. முத்தி தருவதனை, \`\`முத்தி\`\` என்றார். \`திருவும்\` என்னும் இறந்தது தழுவிய எச்ச உம்மை தொகுத்தலாயிற்று. திரு - திருமகள். அவள், துறக்கம் முதலிய செல்வத்தைத் தருபவள் எனவே, \`இம்மை மறுமைப் பயன்களையும் பெறுவர்\` என்றதாம்.

கருவூர்த் தேவர் - திருமுகத்தலை

புவனநா யகனே அகவுயிர்க் கமுதே
பூரணா ஆரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ பன்னகா பரணா
அவனிஞா யிறுபோன் றருள்புரிந் தடியேன்
அகத்திலும் முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலும் அமர்ந்தாய்
தனியனேன் தனிமைநீங் குதற்கே. **#112**

எல்லா உலகங்களுக்கும் தலைவனே! உன்னை அடைந்த முத்தான்மாக்களுக்கு அமுதம் போன்ற இனியனே! எல்லாப் பண்பு நலன்களாலும் நிறைந்தவனே! வேதத்தை ஓதிக்கொண்டிருக்கும் பவளம் போன்ற சிவந்த வாயினை உடைய மாணிக்கமே! உன்தொண்டுகளைச் செய்யும் அடியவர்பால் இரக்கம் காட்டிஅருளும் உயிர்களுக்குத் தலைவனே! பாம்புகளை அணிகளாக உடையவனே! இவ்வுலகிலே சூரியனைப் போன்று ஞானஒளி பரப்பி அருள்புரிந்து, தன்னுணர்வில்லாத அடியேனுடைய துணைஇல்லாத நிலை நீங்குதற்கு அடியேன் உள்ளத்திலும் திருமுகத்தலை என்ற திருப்பதியில் உள்ள வெண்மையான ஒளியை உடைய மணிகள் பதிக்கப்பட்ட அழகிய கோயிலிலும் விரும்பி உறைகின்றவனே! உன் திருவருள்வாழ்க.

விளக்கவுரை

புவனம் - உலகம்; இவ்வஃறிணை இயற்பெயர் பன்மைப் பொருட்டாய், `எல்லா உலகங்கட்கும்`. எனப்பொருள் தந்தது. இவ்வாறு வருவதனை, `சாதியொருமை` என்ப. அகம் - இடம்; அக உயிர் - உன்னை அடைந்த உயிர்கள்; முத்தான்மாக்கள். `அவனிக்கு` என உருபுவிரித்து, உலகிற்கு இருளை நீக்கி ஒளியைத் தரும் ஞாயிறுபோன்று மருளை நீக்கி அருளை வழங்கி, என உரைக்க. பசுபதி - உயிர்கட்குத் தலைவன். பன்னக ஆபரணன் - பாம்பாகிய அணிகளை யுடையவன்; தனியனேன் - துணை இல்லாதேன். தனிமை நீங்குதற்கு - அந்நிலை நீங்குமாறு; என்றது, `யான் துணை பெற்று உய்யும்படி` என்றவாறு.

புழுங்குதீ வினையேன் வினைகெடப் புகுந்து
புணர்பொரு ளுணர்வுநூல் வகையால்
வழங்குதேன் பொழியும் பவளவாய் முக்கண்
வளரொளி மணிநெடுங் குன்றே
முழங்குதீம் புனல்பாய்ந் திளவரால் உகளும்
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்

விழுங்குதீங் கனியாய் இனியஆ னந்த
வெள்ளமாய் உள்ளமா யினையே. #113

தீவினையால் மனம் வருந்தும் அடியேனுடைய தீவினைகள் நீங்குமாறு எதிர்வந்து அடையத்தக்க மெய்ப்பொருளை உணரும் உணர்வைத் தருகின்ற நூல் முறைவாயிலாக நீ வழங்குகின்ற திருவருளாகிய தேனைப்பொழிகின்ற பவளம் போன்ற வாயினையும், முக்கண்களையும் உடைய ஒளிவளருகின்ற நெடிய மாணிக்கமலை போன்றவனே! ஒலிக்கின்ற இனிய நீரில் பாய்ந்து இளைய, வரால் மீன்கள் தாவித் திரியும் திருமுகத்தலை என்ற திருத்தலத்தினும் அடியேனுடைய உள்ளத்தினும் அமர்ந்து அடியேன் நுகரும் இனிய கனியாகவும் இனிய ஆனந்த வெள்ளமாகவும் அதன்கண் பொருந்தினாய். இதற்கு அடியேன் செய்யத்தக்க கைம்மாறு யாது?

விளக்கவுரை

புழுங்குதல் - வேதல். \\\\\\\\\\\\\\\\"புழுங்கு\\\\\\\\\\\\\\\\" என்றது, \\\\\\\\\\\\\\\\"வினை யேன்\\\\\\\\\\\\\\\\" என்பதன் இறுதி நிலையோடு முடியும். \\\\\\\\\\\\\\\\"புழுங்குதீவினையேன்\\\\\\\\\\\\\\\\" என்றது, `தீவினையால் புழுங்குவேன்\\\\\\\\\\\\\\\\' என்றவாறாம். புகுந்து - எதிர் வந்து. புணர் பொருள் உணர்வு நூல் வகையால் - அடையத்தக்க மெய்ப்பொருளை உணரும் உணர்வைத் தருகின்ற நூன்முறை வாயிலாக. வழங்கு தேன் - உன் அடியார்க்கு நீ வழங்குகின்ற திருவருளாகிய தேனை. \\\\\\\\\\\\\\\\"பொழியும்\\\\\\\\\\\\\\\\" என்றது இறந்தகாலத்தில் நிகழ்காலம். இதனால். இவர்க்கு இறைவன் ஆசிரியனாய் வந்து அருள் புரிந்தமை பெறப்படும். *(ஒளிக் குன்று)* என இயையும். மணிக் குன்று - மாணிக்க மலை. `உள்ளமும்\\\\\\\\\\\\\\\\' என உம்மை விரித்து, `முகத்தலை அமர்ந்து, எனது உள்ளத்தும் ஆயினை \\\\\\\\\\\\\\\\' என உரைக்க. ஆயினை - பொருந்தினாய். `இதற்கு யான் செய்யும் கைம்மாறு என்\\\\\\\\\\\\\\\\' எனக் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க.

கன்னகா உள்ளக் கள்வனேன் நின்கண்
கசிவிலேன் கண்ணின்நீர் சொரியேன்
முன்னகா வொழியேன் ஆயினும் செழுநீர்
முகத்தலை யகத்தமர்ந் துறையும்
பன்னகா பரணா பவளவாய் மணியே
பாவியேன் ஆவியுள் புகுந்த
தென்னகா ரணம்நீ ஏழைநா யடியேற்
கெளிமையோ பெருமையா வதுவே. #114

கருங்கல் பார்த்துச் சிரிக்குமாறு அழுத்தமான உள்ளத்தை

உடையவனாய், என்னுடையது அல்லாத உள்ளத்தை என்னுடையது என்று கருதும் கள்ளத்தை உடைய அடியேன் உன் திறத்து மனம் நெகிழமாட்டேன். கண்களிலிருந்து உள்ளம் உருகிய கண்ணீரைச் சொரியேன். உன் முன் மகிழ்ந்து நின்று பாடுதல் அழுதல் முதலியவற்றைச் செய்யேன். அவ்வாறாயினும், மேம்பட்ட நீர்வளம் உடைய திருமுகத்தலை என்றஊரில் உகந்தருளியிருக்கும், பாம்பை அணிகலனாக அணிந்தவனே! பவளம் போன்ற சிவந்த வாயினை உடைய மாணிக்கமே! நீ தீவினைகளைச் செய்த அடியேனுடைய உயிரின் உணர்வின் உள்ளிடத்தில் வந்துசேர்ந்தது யாது காரணம் பற்றி? அறிவற்றவனாய் நாய்போல் இழிந்த அடியேன் திறத்து எளிமை யாக உதவுவதே உனக்குப் பெருமை தருவதாகும்.

விளக்கவுரை

`கல் உள்ளம்` என இயையும். நகுதல் - மகிழ்தல்; அஃது இங்கு அன்பு செய்தலைக் குறித்தது. இது பொதுவாக உள்ளத்தின் இயற்கையைக் கூறியது. `நெகா உள்ளம்` எனவும் பாடம் ஓதுப. ``கசிவு`` என்றது அன்பினை. ``நின்கட்கசிவிலேன்`` என்றது. சிறப்பாக இறைவனிடத்து அன்பு செய்யாமையைக் கூறியது ``ஒழி`` என்றது, துணிவுப் பொருண்மை யுணர்த்த. ``நகாவொழியேன்`` என்றது ஒரு சொல்தன்மைப்பட்டு நின்று, `நகமாட்டேன்` எனப் பொருள் தந்தது. நகமாட்டாமையாவது, மகிழ்ந்து நின்று பாடுதல், ஆடுதல் முதலியவற்றைச் செய்யாமை. ``ஆவி`` என்றது, உயிரின் உணர்வை. உள் - உள்ளிடத்தில். ஏழை - அறிவில்லாதவன். நாயடியேன் - நாய்போலும் அடியேன். ஒகார ஏகாரங்களை மாற்றி, `அடியேற்கு எளிமையே உனக்குப் பெருமையாவதோ` என உரைக்க. ஏகாரம் தேற்றம்; ஓகாரம் சிறப்பு.

கேடிலா மெய்ந்நூல் கெழுமியுஞ் செழுநீர்க்
கிடையனா ருடையஎன் னெஞ்சிற்
பாடிலா மணியே மணியுமிழ்ந் தொளிரும்
பரமனே பன்னகா பரணா
மேடெலாஞ் செந்நெற் பசுங்கதிர் விளைந்து
மிகத்திகழ் முகத்தலை மூதூர்
நீடினா யெனினும் உள்புகுந் தடியேன்
நெஞ்செலாம் நிறைந்துநின் றாயே. **#115**

குற்றமற்ற மெய்ப்பொருளை விளக்கிக்கூறும் நூல்களோடு பழகியும், செழுமையான நீரில் வளர்கின்ற நெட்டி நீரை உள்ளே ஏற்காதவாறுபோல அந்நூற்பொருளை மனத்துக் கொள் ளாதவருடைய நெஞ்சைப்போன்ற என்நெஞ்சினை விடுத்து நீங்குதல் இல்லாத

மாணிக்கமே! தலையிலுள்ள மணியை வெளிப்படுத்தி ஒளி வீசும் பாம்பினை அணிகலனாக உடைய மேம்பட்ட இறைவனே! மேட்டுநிலங்களிலும் நீர் ஏறிப்பாயும் நீர்வளம் உடைமையால் மேடுகளிலும் செந்நெல் ஆகிய பயிர்கள் செழிப்பாக விளைதலால் மிகவும் பொலிவுற்றிருக்கும் திருமுகத்தலை என்னும் பழைய ஊரில் பலகாலமாகத் தங்குகின்றாய் என்றாலும் உள்ளே நுழைந்து அடியேனுடைய நெஞ்சம் முழுதும் நிறைந்து நிற்கின்றாயே! இது வியப்பாகும்.

விளக்கவுரை

நூல் கெழுமியும் - நூல்களோடு பழகியும். நீர்க்கிடை அன்னார் உடைய என் நெஞ்சு - நீரிற்கிடக்கும் சடைப்பூண்டு போல் பவரது உள்ளங்கள் போலும் எனது உள்ளம். கிடை - சடைப் பூண்டு; இதனை, `தக்கை` என்றும், `நெட்டி` என்றும் வழங்குவர். இது நீரிலே நீங்காது கிடந்தும் நீரை உள்ளே ஏற்பதில்லை. அதனால், இது நூலொடு பழகியும் அதன் பொருளை ஏலாது நிற்பவரது உள்ளங்கட்கு உவமை யாயிற்று. ``உடைய`` என்றது, குறிப்பு வினைப் பெயர். ``நெஞ்சு`` எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, ``உடைய`` என்றார். கிடைய நெஞ்சு, உவமத்தொகை. பாடுஇலா - அழிதல் இல்லாத. ``ஒளிரும்`` என்ற பெய ரெச்சம், ``பரமன்`` என்னும் இடப்பெயர் கொண்டது. ``பன்னகா பரணன்`` எனப் பின்னர்க் கூறுகின்றமை `மணிகளை உமிழ்வன அவையே` என்பது விளக்கிற்று. ``உமிழ்ந்து`` என்றதனை, `உமிழ` எனத் திரிக்க. இவ்வாறன்றி, ``பரமனே`` என்பதனை, `மணி உமிழ்ந்து`` என்ற தற்கு முன்னே கூட்டுதலும் ஆம். மேடெலாம் செந்நெல் விளைதல், மிக்க நீரினாலாம். ``உள் புகுந்து`` என்றதற்கு, `என் உயிரின் உள்ளிடத் திற் புகுந்து` என உரைக்க. ``இது வியப்பு`` என்பது, குறிப்பெச்சம்.

அக்கனா அனைய செல்வமே சிந்தித்
தைவரோ டென்னொடும் விளைந்த
இக்கலாம் முழுதும் ஒழியவந் துள்புக்
கென்னையாள் ஆண்ட நாயகனே
முக்கணா யகனே முழுதுல கிறைஞ்ச
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
பக்கலா னந்தம் இடையறா வண்ணம்
பண்ணினாய் பவளவாய் மொழிந்தே. **#116**

விரைவில் மறையும் கனவுபோன்ற செல்வத்தைத் திரட்டுதலையே பலகாலும் நினைத்து ஐம்பொறிகளோடு சீவான் மாவாகிய அடியேனுக்கு ஏற்பட்ட இந்தப் பூசல்முழுதும் நீங்குமாறு வந்து என் உள்ளத்திலிருந்து என்னை ஆட்கொண்ட தலைவனே! மூன்று

கண்களை உடைய மேம்பட்டவனே! உலகம் முழுதும் உன்னை வழிபடும்படி திருமுகத்தலை என்ற திருத்தலத்தில் உறைந்து அடியேன் உள்ளத்தும் உறைந்து, உன் பவளம்போன்ற வாயினால் மெய்ப் பொருளை உபதேசித்து அடியேனிடத்தும் ஆனந்தம் தொடர்ந்து நிகழு மாறு செய்தாய். இஃது ஒரு வியப்பே.

விளக்கவுரை

இதன் முதலடி, சேந்தனாரது திருவீழிமிழலைத் திருவிசைப்பாவிலும் வந்தமை காண்க. `ஐவரோடும்` என்ற எண்ணும்மை விரிக்க. `என்னிடை விளைந்த` எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். கலாம் - பூசல்; இதனை இக்காலத்தார். `கலகம்` என்பர். ஆள் ஆண்ட - ஆளாக ஆண்ட. பக்கல், ஏழன் உருபு, `வாயால் மொழிந்து` என உருபு விரிக்க. மொழிந்து - மெய்ப் பொருளைக் கூறி; உப தேசித்து. இறைவன் ஆசிரியனாய் வந்து அருள்செய்த குறிப்பு இத னுள்ளும் காணப்படுதல் காண்க.

புனல்பட உருகி மண்டழல் வெதும்பிப்
பூம்புனல் பொதிந்துயிர் அளிக்கும்
வினைபடு நிறைபோல் நிறைந்தவே தகத்தென்
மனம்நெக மகிழ்ந்தபே ரொளியே
முனைபடு மதில்மூன் றெரித்த நாயகனே
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
வினைபடும் உடல்நீ புகுந்துநின் றமையால்
விழுமிய விமானமா யினதே. **#117**

பச்சைமண்ணாய் இருந்த காலத்தில் தன்மீது தண்ணீர்பட்டாலும் கரைந்து பின் மிக்குத்தோன்றும் தீயில் சுட்டபின் சுட்ட சால் ஆகிச் சிறந்த தண்ணீரைத் தன்னுள் அடக்கி உயிர்களைப் பாதுகாக்கும் குயவனுடைய குயத்தொழிலால் வனையப்பட்ட சுட்ட சால்போல மேம்பட்ட இரசவாத வித்தையால் அடியேன் உள்ளம் உன் திறத்து உருகுமாறு மகிழ்வுடன் செய்த பெரிய ஒளிவடிவினனே! போர் முனையில் அகப்பட்ட மும்மதில்களையும் தீக்கு இரையாக்கிய தலைவனே! திருமுகத்தலை என்ற திருத்தலத்தில் உறைந்து அடி யேனுடைய வினை உண்டாவதற்கு ஏதுவாகிய உடம்பிலுள்ள மனத் தில் புகுந்து நீ நிலையாக அதன்கண் உறைகின்ற காரணத்தால் அடி யேனுடைய மனம் மேம்பட்ட திருக்கோயில் கருவறைமாளிகை ஆயிற்று. இதுவியத்தற்குரியது.

விளக்கவுரை

மண்டு அழல் வெதும்பி - மிக்க தீயால் வெந்தபின்பு. வினைபடு - தொழில் பொருந்திய. ``நிறை`` என்னும் முதனிலைத் தொழிற்பெயர்

ஆகுபெயராய். நிறைதற் கருவியை உணர்த்திற்று. நிறைதற்கருவி, நீர் நிறைந்து நிற்றற்கு ஏதுவாகிய சால். `மண்டு அழல்வெதும்பிய பின்னர்ப் பூம்புனல் பொழிந்து நிற்பது` என்றத னால், புனல் பட உருகுதல், அங்ஙனம் வெதும்புதற்கு முன்னராயிற்று. ``அழலில் வெதும்புதற்கு முன்னே புனல் சிறிதுபடினும் குழைந்து போவதாகிய நீர்ச் சால், அழலில் வெதும்பிய பின்னர்ப் புனலை நிறையக் கொண்டும் நிலைத்து நின்று உயிர்களைக் காப்பாற்றுவது போல, நீ என் மனத்தில் வேதகத்தைப் போல வருதற்குமுன்பு இவ் வுலகத்தைச் சிறிது பற்றினும் என் மனம் அதனுள் அகப்பட்டு மீள மாட்டாது மயங்கி உன்னை நினைத்தற்கு உதவவில்லை. நீ வந்தபின் அதனை நிரம்பப் பற்றினும் அதனுள் அகப்படாது நின்று உன்னை நான் எப்பொழுதும் நினைத்தற்குத் துணையாய் நிற்கின்றது` என்னும் பொருள் உவமையாற் குறிக்கப்பட்டது. `*179*ஆம் பாடலைக் காண்க. *(தி.9* திருவிடைமருதூர்*-7)* `போல` என, தொகுக்கப்பட்ட அகரத்தை விரித்து. `போல ஆகும்படி` என உரைக்க. `போல மகிழ்ந்த` என இயையும். நிறைந்த - நிரம்பிய. வேதகம் - இரச குளிகை. இது செம்பு முதலிய உலோகங்களைப் பொன்னாக்கும். பல வகை மருந்துகளால் செவ்வனே ஆக்கப்பட்ட குளிகையே பிற உலோகங்களைப் பொன்னாக மாற்றுமன்றி, அவ்வாறு ஆக்கப்படாது குறையுடைய குளிகை மாற்றாமையின், ``நிறைந்த வேதகம்`` என்றார். வேதகத்து - வேதகம்போல *(*மகிழ்ந்த என்க*)*. மனத்தைத் திருத்தியதற்கு வினைமுதலாயினமை தோன்ற. இறைவனை முன்பு அழலோடு ஒப்பித்தவர் பின்பு வியப்புத் தோன்ற வேதகத்தோடு ஒப்பித்தார். நெகுதல், இறைவனிடத்து அன்பு காரணமாகவும், உயிர்களிடத்து அருள்காரணமாகவுமாம். ``மகிழ்ந்த`` என்றது, `எழுந்தருளி மகிழ்ந்த` என முன்னிகழ்ச்சியையும் குறித்துநின்றது. வினை படும் உடல் - வினை உண்டாதற்கு ஏதுவாய உடம்பு. ``உடல்`` என்றது, அதனகத் துள்ள மனத்தை. ``எந்தையே ஈசா உடல்இடங் கொண்டாய் யான் இதற்கிலனொர்கைம் மாறே`` *(தி.8.* கோயில்*-10)* ``நிலாவாத புலா லுடம்பே புகுந்துநின்ற கற்பகமே யான் உன்னை விடுவேனல்லேன்`` *(தி.6 ப.95 பா.4)* என்றாற் போல வந்தன காண்க. விழுமிய - சிறந்த. விமானம் - திருக்கோயிற் கருவறை மாளிகை.

விரியும்நீ ராலக் கருமையின் சாந்தின்
வெண்மையும் செந்நிறத் தொளியும்
கரியும்நீ றாடுங் கனலும்ஒத் தொளிருங்
கழுத்தில்ஓர் தனிவடங் கட்டி
முரியுமா றெல்லாம் முரிந்தழ கியையாய்
முகத்தலை யகத்தமர்ந் தாயைப்

பிரியுமா றுளதே பேய்களோம் செய்த
பிழைபொறுத் தாண்டபே ரொளியே. #118
கடலிலே தோன்றிய விடத்தை நுகர்ந்த கருமை யோடு, சந்தனம் போலப்பூசிய திருநீற்றினுடைய வெண்மையும், திருமேனியின் செந்நிற ஒளியும் கரியும் நீறுபூத்த நெருப்பும் போல ஒளிவீசும் அத்தன்மையை உடையையாய்க் கழுத்தில் எலும்பு மாலையை ஒப்பற்ற மாலையாகப்பூண்டு வளைந்து கூத்தாட வேண்டிய கூத்துக்களை எல்லாம் நிகழ்த்தி அழகினை உடையை யாய்த் திருமுகத்தலை என்ற திருத்தலத்தில் உகந்திருந்தாய், பேய்களைப் போன்ற அடியேங்கள் செய்த பிழைகளைப் பொறுத்துக் கொண்டு அடியோங்களை ஆட்கொண்ட பெரிய ஞானஒளி வடிவின னாகிய உன்னை இனிப்பிரிந்து வாழ்தல் அடியோங்களுக்கு இயலுமோ?

விளக்கவுரை

விரியும் நீர் - கடல். `அதன்கண் பிறந்த ஆலம்` என்க. ஆலக் கருமை - விடத்தால் உண்டாகிய கருநிறம். சாந்து - சந்தனமாகப் பூசிய திருநீறு. ``வெண்மையும்`` எனவேறு எண்ணினா ராயினும், உவமைக்கு ஏற்ப, `வெண்மையொடு கூடிய செந்நிறத் தொளியும்` என ஒன்றாக உரைத்தல் கருத்து என்க. ``ஒளிரும்`` என்ற பெயரெச்சம், ``கழுத்து`` என்னும் இடப்பெயர் கொண்டது. ``கழுத்தில் ஓர் தனிவடம் கட்டி`` என்றதனையும், முரிதலையும் திருக்களந்தை ஆதித்தேச்சரப் பதிகத்துள்ளும் காண்க. பேய்களோம் - பேய் போன்றவர்களாகிய யாங்கள். தம்போல்வாரையும் உளப்படுத்து இவ்வாறு அருளிச்செய்தார்.

என்னைஉன் பாத பங்கயம் பணிவித்
தென்பெலாம் உருகநீ எளிவந்
துன்னைஎன் பால்வைத் தெங்கும்எஞ் ஞான்றும்
ஒழிவற நிறைந்தஒண் சுடரே
முன்னைஎன் பாசம் முழுவதும் அகல
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
கன்னலும் பாலும் தேனும்ஆ ரமுதும்
கனியுமாய் இனியைஆ யினையே. #119
அடியேனை உன் திருவடித்தாமரைகளைப் பணியச்செய்து என் எலும்பெல்லாம் அன்பால் உருகுமாறு நீ எளியையாய் உன்னை அடியேனிடத்தில் வைத்து எல்லா இடத்தும் எல்லாக் காலத்தும் நீக்கமற நிறைந்த சிறந்த ஒளியை உடைய சுடர்வடிவினனே! அடியேனுடைய முற்பட்ட வினைகள் எல்லாம் நீங்கத் திருமுகத்தலையிலே உகந்தருளியிருந்து என்திறத்தில் கரும்பும், பாலும் தேனும் அரிய அமுதமும் பழமும் போல இனிய னாய் உள்ளாயே. இதற்கு அடியேன்

செயற்பால கைம்மாறு யாது?

விளக்கவுரை

``எங்கும் எஞ்ஞான்றும் ஒழிவற நிறைந்த ஒண்சுடரே`` என்றது, `அந்நிலை எனக்குப் புலனாம்படி நின்ற ஞானவடிவினனே` என்றபடி. எனவே, இது, தம் அநுபூதிநிலையை எடுத்தோதியதாயிற்று. ``பாசம்`` என்றது, வினையைக் குறித்தது. `அகலப் பணி வித்து` என முன்னே கூட்டுக. ``கனியும் ஆய்`` என்றதில் `ஆய்` என்பதற்கு` `போன்று` என உரைக்க. `இதற்கு யான் செய்யும் கைம்மாறு என்` என்பது குறிப்பெச்சம்.

அம்பரா அனலா அனிலமே புவிநீ
அம்புவே இந்துவே இரவி
உம்பரால் ஒன்றும் அறிவொணா அணுவாய்
ஒழிவற நிறைந்தஒண் சுடரே
மொய்ம்பராய் நலஞ்சொல் மூதறி வாளர்
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
எம்பிரா னாகி ஆண்டநீ மீண்டே
எந்தையும் தாயும்ஆ யினையே. **#120**

வானமாகவும் தீயாகவும் காற்றாகவும் நிலமாகவும் நீராகவும் சந்திரனாகவும் சூரியனாகவும் இருக்கின்றவனே! தேவர்களாலும் அறிய முடியாத நுண்ணிய பொருளாய் எல்லாவற் றுள்ளும் நீக்கமற நிறைந்த மேம்பட்ட ஒளிஉருவனே! மனஉறுதியை உடையவராய் மற்றவருக்கும் உறுதிப்பொருளையே உரைக்கின்ற மேம்பட்ட அறிவாளிகள் நிறைந்த திருமுகத்தலையில் உறைந்து எனக்கே என் தலைவனாகி என்னை ஆட்கொண்ட நீ மற்றும் எனக்கு நிலையான தந்தையும் தாயும் ஆயினாய். உன் அருள்தான் என்னே!

விளக்கவுரை

அம்பரன் - ஆகாயமாய் இருப்பவன். அனலன் - நெருப்பாய் இருப்பவன். அனிலம் முதலியன இங்ஙனம் அன்பெற்று வாராமையின், அவை ஆகுபெயர்களாம்.

அனிலம் - காற்று. ஏனையபோல; புவியே` என்பதே பாடமாதல் வேண்டும். புவி - நிலம். அம்பு - நீர். இந்து - சந்திரன். `இரவீ` என்பதே பாடம்போலும். இறைவனது அட்ட மூர்த்தங்களுள் இயமானன் ஒழித்து ஒழிந்த உருவங்களை எடுத்தோதி விளித்தார். ``அணுவாய்`` என்றது, `நுண்ணிய பொருளாய்` என்றவாறு.

மொய்ம்பு - வலிமை; இங்கு, மன உறுதியை யுணர்த்திற்று. நலம் சொல் - உறுதியை உரைக்கின்ற. ``மூதறிவாளர் முகத்தலை`` என்றதில்

தொக்குநின்ற ஆறாவது, `யானையது காடு` என்பதுபோல, வாழ்ச்சிக் கிழமைக்கண் வந்தது. ``எம்பிரான்`` என்றது, `இறைவன்` என்னும் அளவாய் நின்றது. ``மீண்டும்`` என்றது, `மற்றும்` என்னும் பொருள் படவந்தது.

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்
முகத்தலை யகத்தமர்ந் தினிய
பாலுமாய் அமுதாம் பன்னகா பரணன்
பனிமலர்த் திருவடி யிணைமேல்
ஆலைஅம் பாகின் அனையசொற் கருவூர்
அமுதுறழ் தீந்தமிழ் மாலை
சீலமாப் பாடும் அடியவர் எல்லாம்
சிவபதம் குறுகிநின் றாரே. **#121**

எல்லாப் பொருள்களுக்கும் ஆதியாய் அந்தமாய், தனக்கு முடிவு என்பதே இல்லாத முதற்பொருளாய்த் திருமுகத்தலை என்ற தலத்தில் அமர்ந்து, இனிய பாலும் அமுதமும் போன்ற இனிய னாய், பாம்பை அணிகலன்களாக உடையவனுடைய குளிர்ந்த தாமரைப் பூப்போன்ற திருவடிகள் இரண்டனையும் பற்றிக் கரும் பாலையில் காய்ச்சப்படும் பாகுபோன்ற சொற்களால் கருவூர்த்தேவர் பாடிய அமுதத்தை ஒத்த இனிய தமிழ்மாலையைக் கடமையாகக் கொண்டு பாடும் அடியவர் யாவரும் சிவலோக பதவியை மறு பிறப்பில் அணுகிநிற்பர்.

விளக்கவுரை

மூலம் - முதல். இறைவன் மூலமும், முடிவுமாதல் உலகிற்கு. அவற்றைத் தனக்கு இலனாதலின், ``முடிவிலாமுதலாய்`` என்றார். இங்கு. ``முதல்` என்றது, `பொருள்` என்னும் பொருட்டு. ஆலையம் பாகு - கரும்பு ஆலையிடத்து உள்ள பாகு. அம், சாரியை. `சொல்லையுடைய கருவூர்` என்க. `கருவூரது மாலை` என இயையும். சீலமா - ஒழுக்கமாக (கடமையாக)க் கொண்டு. `நிற்பார்` என்பது, துணிவு பற்றி, ``நின்றார்`` என இறந்த காலமாகச் சொல்லப் பட்டது.

கருவூர்த் தேவர் - திரைலோக்கிய சுந்தரம்

நீரோங்கி வளர்கமலம்
நீர்பொருந்தாத் தன்மையன்றே
ஆரோங்கிமுகம் மலர்ந்தாங்
கருவினையேன் திறம்மறந்தின்
றூரோங்கும் பழிபாரா
துன்பாலே விழுந்தொழிந்தேன்
சீரோங்கும் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. #122

நிரம்ப மகிழ்ச்சி மிகுந்து முகமலர்ச்சி கொண்டு, மிக்க தீவினையை உடைய அடியேன் என் பெண்தன்மைக்கு உரிய நாண்முதலிய பண்புகளைப் போற்றும் செயலைமறந்து, ஊரார் தூற்றும் அலரையும் பொருட்படுத்தாது, சிறப்புக்கள் ஓங்கும் கோடை என்ற தலத்தில் உள்ள திரைலோக்கிய சுந்தரம் என்ற திருக்கோயிலில் உறையும் பெருமானே! உன்பால் முழுமையாக ஈடுபட்டுவிட்டேன். அவ்வாறாகியும் உனது தலையளியை அடியேன் பெறாதிருத்தல் நீரால் ஓங்கி வளர்தற்குரிய தாமரைக்கொடி அந்நீரைப் பெறாது வாடி உலர்ந்து அழிந்துபோவதனைப் போல்வதாம்.

விளக்கவுரை

முதலடியை ஈற்றிலும், ஈற்றடியை முதலிலும்கொண்டு உரைக்க. `ஆர ஓங்கி` என்பது தொகுத்தல் பெற்று `ஆரோங்கி` என நின்றது. ஆர - நிரம்ப. ஓங்கி - மகிழ்ச்சி மிகுந்து. `முகம் மலர்ந்து விழுந்தொழிந்தேன்` என இயையும். `என் திறம் மறந்து` என வேறு எடுத்துக்கொண்டு உரைக்க. திறம் - பெண் தன்மைகள்; அவை நாண் முதலியன; இஃது உண்மைப் பொருளில் உலகியலை உணர்த்தும். பழி - அலர். ``விழுந்தொழிந்தேன்`` என்பது ஒருசொல் தன்மைத்து. சீர் - அழகு. `கோடை` என்பது ஊரின் பெயரும், `திரைலோக்கிய சுந்தரம்` என்பது திருக்கோயிலின் பெயருமாம். `அருவினையேன் என்திறம் மறந்து, ஊர் ஓங்கும் பழியையும் பாராது, ஓங்கி, முகம் மலர்ந்து உன் பாலே விழுந்தொழிந்தேன்; அவ்வாறாகியும், உனது தலையளியை நான் பெறாதிருத்தல், நீர் ஓங்கி வளர் கமலம் நீரைப் பொருந்தாத தன்மையன்றே` என்க.

நீர் ஓங்கி வளர் கமலம் - நீரால் ஓங்கி வளர்தற்குரிய தாமரை. நீர் பொருந்தாத் தன்மை - அந்நீரைப் பெறாத தன்மை. அஃதாவது, வாடி, உலர்ந்து அழிந்துபோதல். முதல் அடிக்கு, `நீரில் உள்ள தாமரை யில் நீர் ஒட்டாதிருக்கின்ற தன்மை` என உரைப்பாரும் உளர். இத் திருப்பாட்டு,

தலைவி கூற்று.

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த
அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. **#123**

உருகாத மனத்தினை உடைய அடியேனை மனம் உருகச்செய்வதற்காக, கோடை நகரத்துத் திரைலோக்கிய சுந்தரம் என்ற திருக்கோயிலில் உள்ள தலைவனே! நீ எம் தெருவழியே திருவுலாப் போந்த அன்றுமுதல் இன்றுவரையில் கைகள் நிறைவுறுமாறு தொழுது, அருவிபோலக் கண்ணீரை முழுமையாகப் பெருக்கினாலும் அடியேனுக்கு அருள்செய்ய மாட்டாயா?

விளக்கவுரை

நையாத மனத்தினனை - வருந்தாது மகிழ்வுடன் இருந்த மனத்தையுடைய என்னை. நைவிப்பான் - வருத்துதற் பொருட்டு. இவ்வாறு கூறினாளாயினும், `ஒருவர் குறிப்பும் இன்றித் தன்னியல்பில் உண்டாயிற்று` என்பதே கருத்தாம். ``நையாத, நைவிப்பான்``என்றவற்றில், `நைதல்` என்பது, காதற்பொருளில் இவ்வாறு, `வருந்துதல்` குறித்ததாயினும், உண்மைப் பொருளில், `உருகுதல்` என்னும் பொருளையே குறிக்கும். `அருள் செய்யாயோ` என மாற்றிக்கொள்க. இத் திருப்பாடலும் தலைவி கூற்று.

அம்பளிங்கு பகலோன்பால்
அடைபற்றாய் இவள்மனத்தின்
முன்பளிந்த காதலும்நின்
முகந்தோன்ற விளங்கிற்றால்
வம்பளிந்த கனியேஎன்
மருந்தேநல் வளர்முக்கட்
செம்பளிங்கே பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. **#124**

புதுமையாகப் பழுத்த பழம் போல்பவனே! என் அமுதமே! மேம்பட்ட ஒளிவளர்கின்ற முக்கண்களை உடைய செந் நிறத்த பளிங்கு போல்பவனே! பளிங்குக் கல்லினது இயற்கை ஒளியும் அடுத்ததனைக் காட்டும் தன்மையும் கதிரவன் தோன்றிய பொழுது அவன்முன்னே விளங்குவபோல இவள் மனத்தில் முன்பு பழுத்திருந்த காதலும் உன்

முகத்தைக் கண்ட அளவில் அதன்முன்பே வெளிப் பட்டது. ஆதலின் இவளுக்கு நீ அருளவேண்டும் - என்பது செவிலி கூற்று.

விளக்கவுரை

இது முதலாக வரும் திருப்பாடல்கள் செவிலி கூற்றாம். அம் பளிங்கு பகலோன்பால் அடை பற்றாய் - அழகிய பளிங்குக்கல் கதிரவனிடம் அடைந்த நிலையைப்போல; அஃதாவது, `பளிங்குக் கல்லினது இயற்கை யொளியும், அடுத்தது காட்டுந்தன்மையும் கதிரவன் தோன்றியபொழுது அவன் முன்பே விளங்குதல்போல` என்றதாம். இவள் மனத்தில் முன்பு அளிந்த காதலும் நின் முகந்தோன்ற விளங்கிற்று - இவள் உள்ளத்தில் இயற்கையாகவே முன்பு மிகுந் திருந்த விருப்பம் (உன்னையே மிக விரும்பும் இவளது இயற்கை) உன்னுடைய முகம் தோன்றிய காலத்தில் அதன் முன்பே வெளிப்பட்டது. இறைவனை அடைதலே உயிர்கட்கு இயற்கை யாதலும், அவ்வியற்கை ஆணவத்தின் செயலால் திரிக்கப்படுதலாலே அவை உலகை நோக்கிச் செல்லும் செயற்கையை உடையவாதலும், ஆணவத்தின் சத்தி மெலிந் தொழிந்தபொழுது உயிர்களின் இயற்கைத் தன்மை வெளிப்படுதலும் ஆகிய உண்மைகள் இங்குக் குறிக்கப்பட்டன என்க. வம்பு அளிந்த - புதிதாய்ப் பழுத்த; ஆணவ நீக்கத்தில் விளங்குதலால் இறையின்பம் புதிதாய்த் தோன்றல்பற்றி இவ்வாறு கூறப்பட்டது. மருந்தாதல், `பிறவிப் பிணிக்கு` என்க. `நல்பளிங்கு` என இயையும். வளர் - ஒளி மிக்க. மூன்று கண்களையும் செம்மையையும் உடைய பளிங்கு, சிவபெருமானுக்கு இல்பொருள் உவமையாய்வந்தது. பின் இரண்டு அடிகளை முதலில் வைத்து, இறுதியில் `இவட்கு அருள வேண்டும்` என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க.

மைஞ்ஞின்ற குழலாள்தன்
மனம்தரவும் வளைதாரா
திஞ்ஞின்ற கோவணவன்
இவன்செய்த தியார்செய்தார்
மெய்ஞ்ஞின்ற தமர்க்கெல்லாம்
மெய்ஞ்ஞிற்கும் பண்பினுறு
செய்ஞ்ஞன்றி யிலன்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. **#125**

கருமை நிலைபெற்ற கூந்தலை உடைய தலைவி தன் உயிர் போன்ற மனத்தினைக் கோடைத் திரைலோக்கிய சுந்தர னுக்கு வழங்கவும், அவள் காணநிற்கின்ற கோவணமாக உடுத்த உடையை உடைய அப்பெருமான் அவளிடமிருந்து கவர்ந்த வளையல்களைக் கூடத் திரும்பத் தருகின்றான் அல்லன். இவன் செய்த செயல் போன்ற செயலை

இதற்குமுன் செய்தார் யாவர் உளர்? அதனால் இவன் மெய்ம்மை பொருந்திய அன்பர் ஆயினார்க்குத் தானும் மெய்ம்மையான அருளில் பொருந்தவேண்டிய நன்றியறியும் பண்பு இல்லாதவன் ஆகின்றான் என்று செவிலி இறைவனுடைய பண்பினைப் பழித்துக் கூறியவாறு.

விளக்கவுரை

இத் திருப்பாட்டில், நகாரங்கட்கெல்லாம், ஞகாரங்கள் போலியாய் வந்தன. இவ்வாறு வருதலை, ``செஞ்ஞின்ற நீலம்`` *(தி.4 ப.80 பா.5)* என்னும் அப்பர் திருமொழியிற் காண்க. மை நின்ற - கருமை நிறம் பொருந்திய; இனி `மேகம் நின்றது போன்ற` என்றும் ஆம். `திரைலோக்கிய சுந்தரன், தனக்குத் தன் உயிர்போன்ற மனத்தைக் கொடுத்தவட்கு, அவளது வளையையும் திரும்பத் தருகின்றிலன்; இதுபோலும் நன்றியில்லாத செயலை இதற்குமுன் யார் செய்தார்; ஒருவரும் செய்திலர். அதனால், இவன் மெய்ம்மை பொருந்திய அன்பராயினார்க்குத் தானும் மெய்ம்மையான அருளில் பொருந்த வேண்டிய நன்றியறியும் பண்பு இல்லாதவன் ஆகின்றான்` எனப் பழித்தவாறு. காதல் மிகுதியாற் கூறினமையின், இப் பழிப்பு அமைவதாயிற்று. இந் நின்ற - இங்கு நிற்கின்ற. கோவணவன் - கோவணமாக உடுத்த உடையை யுடையவன்.

நீவாரா தொழிந்தாலும்
நின்பாலே விழுந்தேழை
கோவாத மணிமுத்தும்
குவளைமலர் சொரிந்தனவால்
ஆவாஎன் றருள்புரியாய்
அமரர்கணம் தொழுதேத்தும்
தேவாதென் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. **#126**

தேவர் கூட்டங்கள் தொழுது போற்றும் தேவனே! அழகிய சோலைகளை உடைய கோடைத் திரைலோக்கிய சுந்தரனே! நீ இவள் விரும்பியபடி வாராவிட்டாலும் எளியளாகிய இவள் உன் பக்கலிலே விருப்பம்கொண்டதனால் இவளுடைய குவளைமலர் போன்ற கண்கள் நூலில் கோக்கப்படாத முத்துமணி போன்ற கண்ணீரைச் சொரிகின்றன. இவள் திறத்து ஐயோ! என்று இரக்கம் கொண்டு அருள்புரிவாயாக.

விளக்கவுரை

நீ வாராதொழிந்தாலும் - நீ இவள்பால் வாராவிடினும். `ஏழை நின்பாலே விழுந்து` என மாற்றி. ``விழுந்து`` என்றதனைத் திரித்து, `எளியளாகிய இவள் நின்னிடத்தே வந்துவிழ` என உரைக்க. `குவளை மலரும்

கோவாத மணிமுத்துச் சொரிந்தன` என உம்மையை மாற்றி உரைக்க. குவளைமலர் - கண்; உருவகம். `கோவாத மணி யாகிய முத்து` என்றது, கண்ணீரைக் குறித்தல் வெளிப்படை. ஆவா, இரக்கக் குறிப்பு. தென் - அழகு.

முழுவதும்நீ யாயினும்இம்
மொய்குழலாள் மெய்ம்முழுதும்
பழுதெனவே நினைந்தோராள்
பயில்வதும்நின் னொருநாமம்
அழுவதும்நின் திறம்நினைந்தே
அதுவன்றோ பெறும்பேறு
செழுமதில்சூழ் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. #127

சிறந்த மதில்களைச் சூழ்ந்த சோலைகளை உடைய கோடைத் திரைலோக்கிய சுந்தரனே! எல்லாப்பொருள்களும் நீயே யாயினும், நீ அங்ஙனம் எங்குமாய இன்பத்தை இவ்வுடம்பு கொண்டு இவள் பெறாமையால், இச்செறிந்த கூந்தலை உடைய என்மகள் தன் உடல் உறுப்புக்கள் பலவும் குற்றம் உடையன என்று கருதி அவற்றிற் காக உண்ணுதல் நீராடுதல் ஒப்பனை செய்தல் முதலியவற்றை மதிக்கின்றலள். அவள் பலகாலும் கூறிக்கொண்டிருப்பதும் உன் திரு நாமமே. அவள் கண்ணீர் வடிப்பதும் உன் செயல்களை நினைத்தே யாகும். இவ்வுடம்பு கொண்டுபெறும் பேறு அதுவன்றோ? - என்று தாய் தன்மகள் மனப்பக்குவம் கண்டு மகிழ்ந்து கூறியது.

விளக்கவுரை

மெய் முழுதும் - தனது உடல் உறுப்புக்கள் பலவும். பழுது - குற்றம் உடையன. ஓராள் - அவற்றை மதிக்கின்றிலள்; எனவே, `உண்ணாமை, நீராடாமை, ஒப்பனை செய்யாமை முதலிய வற்றால் அவைகளை வருத்துகின்றாள்` என்பதாம். `எல்லாப் பொருளும் நீயேயாயினும், நீ அங்ஙனம் எங்குமாய இன்பத்தை இவ் வுடம்புகொண்டு இவள் பெறாமையால், இதனை வெறுக்கின்றாள்` என்பது பொருள். இதனால், சீவன் முத்திநிலையில் நிற்பார்க்கும் பரமுத்தி நிலைக்கண் உளதாகும் வேட்கை மிகுதி குறிக்கப்பட்டமை காண்க. ``அதுவன்றோ பெறும் பேறு` என்றது, ``இவள் பெற்றது அவ் வளவே`` என்னும் பொருட்டாய் அவலம் குறித்ததாயினும், உண்மைப் பொருளில், `இவ்வுடம்புகொண்டு பெறும்பேறு அதுவே யன்றோ` என்பது குறித்துநிற்கும்.

தன்சோதி எழுமேனித்
தபனியப்பூச் சாய்க்காட்டாய்
உன்சோதி எழில்காண்பான்

ஓலிடவும் உருக்காட்டாய்
துஞ்சாக்கண் ணிவளுடைய
துயர்தீரும் ஆறுரையாய்
செஞ்சாலி வயற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. **#128**

செந்நெற்பயிர்கள் வளரும் வயல்களை உடைய கோடைத்திரைலோக்கிய சுந்தரனே! தன்அழகு மேன்மேலும் வளருகின்ற உடம்பில் தோன்றிய பொற்பூப்போன்ற பசலை நிறமே தன்வருத்தத்திற்குச் சான்றாக நிற்க, உன் ஒளிமயமான அழகினைக் காண்பதற்கு இவள் வருந்தி அழைப்பவும் நீ உன் ஒளிவடிவத்தை இவளுக்குக் காட்டுகின்றாய் அல்லை. உறங்காத கண்களை உடைய இப்பெண்ணின் மனத்துயரம் நீங்குமாறு நீ அருள் செய்வாயாக - செவிலிகூற்று.

விளக்கவுரை

`தன்மேனி` என இயையும். ``தன்`` என்றது, தலைவியை. சோதி, இங்கு அழகு. மேனி - உடம்பு. உடம்பின் கண் தோன்றிய. தபனியப் பூச்சாய் காட்டாய் - பொற்பூப்போலும் நிறமே (பசலையே) தனது வருத்தத்திற்குச் சான்றாய் நிற்க. ``ஆய்`` என்ற தனை, `ஆக` எனத் திரிக்க. `காட்டா` என்றே பாடம் ஓதுதலும் ஆம். இவ்வடிக்கும், ``உருக்காட்டாய்`` எனப் பின்வருகின்ற அதன் பொருளே பொருளாக இறைவற்கு ஏற்றி உரைப்பாரும் உளர். `பூஞ்சாய்க் காட்டாய்` என ஓதுவார் பாடம் பாடம் அன்று. `சோதி யாகிய எழில்` என்க. என்றது, அதனையுடைய, உருவத்தைக் குறித்தது. ``இவளுடைய`` என்பது. ``கண்`` என்றதனோடும் இயை யும். செஞ்சாலி - செந்நெற் பயிர்.

அரும்பேதைக் கருள்புரியா
தொழிந்தாய்நின் அவிர்சடைமேல்
நிரம்பாத பிறைதூவும்
நெருப்பொடுநின் கையிலியாழ்
நரம்பாலும் உயிரீர்ந்தாய்
நளிர்புரிசைக் குளிர்வனம்பா
திரம்போது சொரிகோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. **#129**

அகழிநீரால் குளிர்ச்சி பொருந்திய மதில்களை அடுத்த குளிர்ந்த சோலைகளில் பாதிரிமரங்கள் பூக்களைச் சொரியும் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே! இப்பெறுதற்கரிய பெண்ணுக்கு நீ அருள் புரியாது விட்டுவிட்டாய். உன்னுடைய விளங்குகின்ற சடையின்மேல் உள்ள பிறை சொரிகின்ற நெருப்பினாலும், உன் கையில் உள்ளயாழ்

நரம்பின் ஒலியாலும் இப்பெண்ணினுடைய உயிரை உடம்பிலிருந்து பிரித்துக் கொண்டிருக்கிறாய். இஃது உனக்கு அழகோ - செவிலிகூற்று.

விளக்கவுரை

``நளிர் புரி\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\*u2970?*`` என்பது முதலாகத் தொடங்கி, ``அரும் பேதைக்கு அருள்புரியாதொழிந்தாய்`` என்றதனை இறுதிக்கண் வைத்து, `இஃது உனக்கு அழகோ` என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க.
``பேதை`` என்பது, `பெண்` என்னும் அளவாய் நின்றது. `இவ்வரும் பேதை` எனச் சுட்டு வருவித்துரைக்க. அருமை, பெறுதற் கருமை.
``நரம்பு`` என்றது, அதனினின்று எழும் இசையை. சிவபெரு மான் வீணை வாசித்தலை, ``வேயுறு தோளி பங்கன், விடமுண்ட கண்டன், மிகநல்ல வீணை தடவி`` *(தி.2 ப.85 பா.1)* என்பதனானும் அறிக.
உயிரை ஈர்தலாவது உடம்பினின்றும் பிரித்தல். ``உயிர் ஈரும்வாளது`` *(குறள்-334)* என்புழியும், ஈர்தல் இப்பொருட்டாதல் அறிந்துகொள்க.
நளிர் - குளிர்ச்சி; இஃது அகழி நீரால் ஆவது. வனம், நந்தவனம். புரிசை வனம் - புரிசையாற் சூழப்பட்ட வனம் . `பாதிரியம் போது` என்பது, தொகுத்தல் பெற்று, `பாதிரம் போது` என நின்றது.

ஆறாத பேரன்பி
னவர்உள்ளம் குடிகொண்டு
வேறாகப் பலர்சூழ
வீற்றிருத்தி அதுகொண்டு
வீறாடி இவள்உன்னைப்
பொதுநீப்பான் விரைந்தின்னம்
தேறாள்தென் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. **#130**

அழகிய சோலைகளை உடைய கோடைத்திரை லோக்கிய சுந்தரனே! தணியாதபெருங்காதலை உடைய மெய்யடியார் களின் உள்ளத்தை இருப்பிடமாகக் கொண்டு, பேரன்பர் அல்லது உன் மாட்டுச் சிறிதன்புடையவர் பலரும் உன்னைச் சூழுமாறு நீ கவலை யின்றி இருக்கிறாய். அச்செய்தியை மனத்துள்கொண்டு அவர்களனை வரினும் பெருமை பெற்றவளாய் உன்னைத் தன் ஒருத்திக்கே உரிய வனாகச் செய்து கொள்வதற்கு விரைதலைப் பொருந்தி இன்னும் அம் மயக்கம் தெளியப் பெற்றிலாள். இவள் காதல் மிகுதிக்கு ஏற்ப அருள் செய்வாயாக - செவிலிகூற்று.

விளக்கவுரை

ஆறாத - தணியாத. அன்பு காதலாய் முறுகிய ஞான்று கனல்போல்

உள்ளத்தைக் கவற்றுதலின், ``ஆறாத அன்பு`` என்றாள். ``அன்பினவர்`` என்றதில், இன்னும், அகரமும் ஆகிய இருசாரியைகள் வந்தன. வேறாக - பேரன்பர் அல்லாத பிறராக. இவர் சிறிதன்பு உடையவர். வீறாடி - அவர் அனைவரினும் பெருமை பெற்றவளாய். உன்னைப் பொது நீப்பான் - உன்னைத் தன் ஒருத்திக்கே உரியனாகச் செய்து கொள்ளுதற்கு. விரைந்து - விரைதலைக் கொண்டு. இன்னும் தேறாள் - இன்னும் அம்மயக்கம் தெளியப்பெற்றிலள். `இறைவனை ஒருத்தி தனக்கே உரியனாகச் செய்துகொள்ளுதல் இயலாத தொன்றாதலின், அவ்வெண்ணத்தை மயக்கம்` என்றாள். `காதல் மிகுதியால் இன்னதோர் எண்ணம் இவட்குத் தோன்றிற்று` என்பதாம்.

சரிந்ததுகில் தளர்ந்தஇடை
அவிழ்ந்தகுழல் இளந்தெரிவை
இருந்தபரி சொருநாள்கண்
டிரங்காய்எம் பெருமானே
முரிந்தநடை மடந்தையர்தம்
முழங்கொலியும் வழங்கொலியும்
திருந்துவிழ வணிகோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. **#131**

எம் பெருமானே! அசைந்த நடையினை உடைய பெண்கள் ஒலிக்கும் ஒலியும், மத்தளம் முதலிய இசைக்கருவிகள் தரு கின்ற ஓசையும் திருத்தமாய் உள்ள விழாக்கள் அழகு செய்கின்ற கோடைத்திரைலோக்கிய சுந்தரனே! இவ்விளம் பெண் தன் ஆடை நெகிழ்ந்து, இடைதளர்ந்து, குழல் அவிழ்ந்து இருக்கும் தன்மையை ஒருநாளாவது உன் திருக்கண்களால் கண்டு இவள்திறத்து இரக்கம் காட்டுவாயாக - செவிலி கூற்று.

விளக்கவுரை

`துகிலையும், இடையையும், குழலையும் உடைய தெரிவை` என்க. இவ்வாறு ஓதினாரேனும், `தெரிவை துகில் தளர்ந்து, இடை தளர்ந்து, குழல் அவிழ்ந்து இருந்த பரிசு கண்டு இரங்காய்` என்றலே கருத்தாதல் உணர்க. முரிந்த நடை - அசைந்த நடை. வழங்கு ஒலி - மத்தளம் முதலிய வாச்சியங்கள் தருகின்ற ஓசை. திருந்து விழவு - திருத்தமாய் உள்ள விழாக்கள். அணி - அழகு செய்கின்ற.

ஆரணத்தேன் பருகிஅருந்
தமிழ்மாலை கமழவரும்
காரணத்தின் நிலைபெற்ற
கருவூரன் தமிழ்மாலை
பூரணத்தார் ஈரைந்தும்

போற்றிசைப்பார் காந்தாரம்
சீரணைத்த பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. #132

சிறப்புப் பொருந்திய சோலைகளை உடைய கோடைத்திரைலோக்கிய சுந்தரனே! வேதமாகியதேனை உட்கொண்டு, அரியதமிழாகிய மாலைகள் நறுமணம் வீசுமாறு நான் இவ்வாறு, இருக்கின்ற நிலைபெற்ற காரணத்தால், கருவூர்த் தேவனாகிய அடியேன் பாடிய நிலை பெற்ற இத்தமிழ் மாலையிலுள்ள பாடல்கள் பத்தினையும் மனப்பாடம் செய்து காந்தாரப்பண்ணில் பாடுகின்றவர்கள் நிறைவுடையவர்கள் ஆவார்கள்.

விளக்கவுரை

தேனைப் பருகி, மாலை சூடிவரும் செல்வரது இயல்பு பற்றித் தமது திருவருட் செல்வப் பேற்றை இவ்வாறு விளக்கினார். `யான் இவ்வாறிருக்கின்ற காரணத்தால், எனது இத் தமிழ்மாலையும் நிலைபெற்ற தமிழ்மாலையாயிற்று` என்பதாம். இனி, இவ்வாசிரியர் காயகற்பம் பெற்றுப் பன்னாள் வாழ்ந்தார் எனச் சொல்லப்படுதலால், அதனையே குறித்து, ``நிலைபெற்ற கருவூரன்`` என்றார் என, இதனை, அவருக்கே அடையாக்கி உரைத்ததும் ஆம். இப்பொருட்கு, முதலடி யிற் சொல்லப்பட்ட காரணம், இவர் நிலைபெற்றமைக்கு உரிய காரண மேயாம். `தமிழ்மாலை பகரவரும்` என்பதும் பாடம். `இத் தமிழ் மாலையின் பாடல்பத்தினையும் காந்தாரப் பண்ணினால் பாடி இறை வனைப் போற்றுவோர் பூரணத்தாராவர்` என்க. `பூரணத்தால்` என்பது பாடம் அன்று. சீர் அணைத்த - அழகைத் தன்னிடத்தே கொண்ட.

கருவூர்த் தேவர் - கங்கைகொண்ட சோளேச்சரம்

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னைஆள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை யென்றும்நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. **#133**

முன்னொரு காலத்தில் திருமால் கூட அறிய முடியாத ஒருவனாய் சத்தி, சிவம் ஆகிய இருபொருள்களாய் இருக்கின் றவனே! முக்கண்ணனே! நான்கு பெரிய நீண்ட தோள்களை உடைய கரும்பே! தேனே! அமுதமே! கங்கைகொண்ட சோளேச்சரம் என்ற திருக்கோயிலில் உகந்தருளியிருப்பவனே! அன்ன வடிவு எடுத்துப் பிரமன் வானத்தில் பறந்து உன் உச்சியைத் தேடுமாறு அவ்வளவு பெரியவனாகிய நீ சிறியனாகிய அடியேனை அடிமை கொள்ள விரும்பி அடியேனுடைய உள்ளத்தில் புகுந்த எளிவந்த தன்மையை அடியேன் ஒருநாளும் மறக்கமாட்டேன்.

விளக்கவுரை

தேட - தேடுமாறு. அங்ஙனே - அவ்விடத்தே; என்றது, `மாலும் அயனும் பொருதவிடத்தே` என்றதாம். ``பெரிய`` என்றது, `பெரியோனாய் நின்ற` என ஆக்கவினைக் குறிப்புப் பெயர். ஆள்விரும்பி - ஆளாக விரும்பி. ``மறக்கேன்`` என்றதில் எதிர்காலங் காட்டும் ககர வொற்று வந்ததன்று; குகரச் சாரியை வந்தது. எனவே, `மறவேன்` என்பது பொருளாயிற்று. இவ்வாறு வருதல் பிற்கால வழக்கு. இருவன் - இரு பொருளாய் இருப்பவன். இரு பொருள் - சத்தி, சிவம்; பெண்மை, ஆண்மை. கன்னல் - கரும்பு.

உண்ணெகிழ்ந் துடலம் நெக்குமுக் கண்ணா
ஓலம்என் றோலமிட் டொருநாள்
மண்ணின்நின் றலறேன் வழிமொழி மாலை
மழலையஞ் சிலம்படி முடிமேற்
பண்ணிநின் றுருகேன் பணிசெயேன் எனினும்
பாவியேன் ஆவியுள் புகுந்தென்
கண்ணின்நின் றகலான் என்கொலோ கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. **#134**

மனம் நெகிழ்ந்து உடல் உருகி `முக்கண்ணனே! அடி யேன் உன்

அபயம்` என்று உரத்துக் கூறிக்கொண்டு ஒருநாள் கூடத் தரையில் நின்றவாறு உன்னை அழைக்கமாட்டேன். வணக்கத்தைக் குறிப்பிடுகின்ற தமிழ்ப்பாடற்கோவையை, இனிய ஓசையை உண்டாக்குகின்ற சிலம்பினை அணிந்த உன் திருவடிகளை அடியேன் முடிமீது சூடிக்கொண்டு நின்று பாடி உருகமாட்டேன். உனக்கு ஒரு திறத்தாலும் திருத்தொண்டு செய்யாதேன் எனினும், நல்வினை செய்யாத பாவியாகிய அடியேன் உயிரினுள் புகுந்து, கங்கைகொண்ட சோளேச்சரத்தானே! நீ அடியேன் கண்களின் நின்று நீங்கா திருத்தலுக்குக் காரணம் உன் கருணையே அன்றிப் பிறிதில்லை.

விளக்கவுரை

நெக்கு - குழைந்து. `ஒருநாளும்` என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. வழி மொழி மாலை - வணக்கம் கூறுகின்ற தமிழ்ப் பாடற்கோவை. `மாலை பண்ணி நின்று` என இயையும். மழலையஞ் சிலம்பு - இனிய ஓசையை உண்டாக்குகின்ற சிலம்பு. `முடிமேலாக` என ஆக்கம் வருவிக்க. `ஆவி, உயிருணர்வு` என்பது மேலும் விளக்கப்பட்டது. என்னோ - காரணம் யாதோ; `கருணையே காரணம்; பிறிதில்லை` என்பது கருத்து. கொல், அசைநிலை.

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம்அள் ளூறும்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. **#135**

அன்போடு இறைவனாகிய தன்னை திருவைந் தெழுத்தின் சொற்களாகிய நிலையில் வைத்து உள்ளம் உருகுகின்ற உன் அடியார்களுக்கு எட்டுத் திசைகளிலும் உள்ள மலைகள் போன்ற பொன் குவியலும், அழகிய பொன்மயமான பேரில்லங்களும், பவளம் போன்ற சிவந்த வாயினையுடைய மகளிரின் பருத்த தனங்களும், கற்பகச் சோலையும் ஆகிய எல்லா நுகர் பொருள் இன்பங்களும் தானே வழங்கும் கங்கைகொண்ட சோளேச்சரத் தானைத் தவிர மேம்பட்ட தெய்வம் வேறு உளதோ?

விளக்கவுரை

``அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே`` என்பதனை இறுதிக்கண் வைத்து உரைக்க. ``அஞ்செழுத்தின்`` என்ற இன், தவிர் வழி வந்த

சாரியை. சொல்பதம் - சொல்லாகிய நிலை. அள் ஊறும் - மிக உருகுகின்ற; என்றதனை, `உருகி நினைக்கின்ற` என்க. `எண் திசைக் கண்ணும் ஆம்` என இயைக்க. ``கனகம்`` என்பது, ``பற்பதக் குவை`` என்பதில் தொக்கு நின்ற `போலும்` என்பதனோடு முடியும். `பர்வதம்` என்னும் ஆரியச் சொல் ``பற்பதம்`` என வந்தது. இதற்குப் பிறவாறு உரைப்பாரும் உளர். ``பொழிலும்`` என்பதன்பின் `ஆகிய` என்பது எஞ்சி நின்றது. `ஆம்` என்றது, `ஆவான்` என்ற முற்று. `ஆவான்` என்றது, `அவை அனைத்தினாலும் வரும் இன்பத்தைத் தான் ஒருவனே தருவான்` என்றதாம். `அதனால், அற்புதத் தெய்வம் இதனின் மற்று உண்டோ` என்க. இதனின் - இதுபோல். ``உண்டே`` என்ற வினா, இல்லாமையை விளக்கி நின்றது. கங்கைகொண்ட சோளேச்சரத் தானைத் தெய்வங்களோடு பொருவிக் கூறலின், ``இத னின்`` என்றார். இதற்குப் பிறவாறு உரைத்தல் பொருந்தாமை அறிக.

ஐயபொட் டிட்ட அழகுவா ணுதலும்,
அழகிய விழியும் வெண் ணீறும்
சைவம்விட் டிட்ட சடைகளும் சடைமேல்
தரங்கமுஞ் சதங்கையுஞ் சிலம்பும்
மொய்கொள்எண் திக்கும் கண்டநின் தொண்டர்
முகம்மலர்ந் திருகண்நீர் அரும்பக்
கைகள்மொட் டிக்கும் என்கொலோ கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. **#136**

கங்கைகொண்ட சோளேச்சரத்தானே! அழகிய பொட்டு இடப்பட்ட வனப்புடைய ஒளி பொருந்திய நெற்றியும், அழகிய கண்களும், திருநீறும், சிவவேடத்திற்குச் சிறப்பான அடை யாளமாகிய சடைகளும், சடையின்மேல் கங்கை அலைகளும், சதங்கையும், சிலம்பும் ஆகிய இவற்றைச் சூழ்தலைக்கொண்ட எட்டுத் திக்குகளிலும் உருவெளியாகக் கண்ட உன் அடியார்கள் முகம்மலர இரு கண்களிலும் கண்ணீர் அரும்பக் கைகள் குவிய இருப்பதன் காரணம் யாதோ? முன்னைத் தவத்தின் பயனாகக்கிட்டிய அன்பே காரணம்.

விளக்கவுரை

ஐய பொட்டு - அழகிய திலகம். `அளக வாள்நுதல்` என்பது பாடம் அன்று. சைவம் - சிவ வேடம். சிவபெருமானுக்கு உரிய சிறப்பு அடையாளங்களுள் சடை சிறந்ததொன்றாதலின், ``சைவம் விட்டிட்ட சடைகள்` என்றார். நடனம் செய்பவர் காலில் சதங்கை அணிதல் இயல்பு என்க. மொய் கொள் - சூழ்தலைக் கொண்ட. ``எண் திக்கின் கண்ணும்`` என உருபு விரிக்க. `மலர்ந்து` `மொட்டிக்கும்` எனச் சினை வினை முதல்மேல் நின்றன. இவ்வா றன்றி, ``தொண்டர்`` என்றதில் ஆறாவது

விரித்து, ``மலர்ந்து`` என்பது, `மலர` என்பதன் திரிபு என்றலும் ஆம். என்னோ - காரணம் யாதோ. `முன்னைத் தவத்தின் பயனாகக் கிடைத்த அன்பே காரணம்` என்ப தாம். கொல், அசைநிலை.

சுருதிவா னவனாம் திருநெடு மாலாம்
சுந்தர விசும்பின் இந்திரனாம்
பருதிவா னவனாம் படர்சடை முக்கட்
பகவனாம் அகஉயிர்க் கமுதாம்
எருதுவா கனனாம் எயில்கள்மூன் றெரித்த
ஏறுசே வகனுமாம் பின்னும்
கருதுவார் கருதும் உருவமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. **#137**

கங்கைகொண்ட சோளேச்சரத்தானே வேதங்களை ஓதும் பிரமனாகவும் மேம்பட்ட நீண்டவடிவு எடுத்த திருமாலாகவும், அழகிய தேவர்கள் தலைவனாகிய இந்திரனாகவும், சூரிய தேவனாக வும், பரவிய சடைமுடியையும் மூன்று கண்களையும் உடைய சிவ பெருமானாகவும், உயிரகத்து அதனைத் தளிர்ப்பிக்கும் அமுதமாக வும், காளை வாகனனாகவும், மும்மதில்களையும் அழித்த, மேம்பட்ட வீரனாகவும், இவற்றைத் தவிர வேண்டுவார் வேண்டும் உருவத்தில் தோற்றம் வழங்குபவனாகவும் உள்ளான்.

விளக்கவுரை

``கங்கைகொண்ட சோளேச்சரத்தானே`` என்பதை முதலிற்கொள்க. ஏகாரம், தேற்றம். அவன் ஒருவனே பல உருவுமாவன் என்க. சுருதி வானவன் - வேதத்தை ஓதுகின்ற தேவன்; பிரமன். `விசும்பு` என்றது சுவர்க்கலோகத்தை; ``அகல்விசும்பு ளார்கோமான் - இந்திரனே`` *(குறள் - 25)* என்றது காண்க. பரிதி வானவன் - சூரிய தேவன். படர் சடை முக்கண் பகவன், உருத்திரன் என்றது சீகண்டரை. அக உயிர் - தன்னை அடைந்த உயிர்; அவைகட்கு அமுதம்போல அழியா இன்பந்தருவன் என்க. இதனை இறுதியிற் கூட்டி உரைக்க. எருது வாகனன் - இடபாரூட மூர்த்தி. எயில்கள் மூன்று எரித்த சேவகன், திரிபுராந்தக மூர்த்தி. இவையும் சீகண்டர் கொண்ட வடிவங்கள். `அவரவரும் அன்பினாற்கொண்ட மூர்த்திகள் பலரும் தானாய் இருந்து அவரவர் கருதிய பயனைத் தருபவன் பரமசிவன் ஒருவனே` என்றவாறு. தனது உண்மை நிலையை உணரும் ஞானியரை, ``அகவுயிர்`` என்றும், அவர்க்குப் பரமுத்தி யளித்தலை, ``அமுதாம்`` என்றும் குறித்தனர் என்க. ``ஆருருவ உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்`` *(தி.6 ப.18 பா.11)* என்று திருநாவுக்கரசர் அருளிச் செய்தமை காண்க. ஏறுசேவகன் - மிக்க வீரத்தையுடையவன்.

அண்டம்ஓர் அணுவாம் பெருமைகொண் டணுஓர்
அண்டமாம் சிறுமைகொண் டடியேன்
உண்டவூண் உனக்காம் வகையென துள்ளம்
உள்கலந் தெழுபரஞ் சோதி
கொண்டநாண் பாம்பாப் பெருவரை வில்லிற்
குறுகலர் புரங்கள்மூன் றெரித்த
கண்டனே நீல கண்டனே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. **#138**

அண்டங்கள் எல்லாம் தன்னோடு ஒப்பிடுங்கால் ஓர் அணு அளவின என்று கூறுமாறு மிகப்பெரிய வடிவினனாகவும், தன்னோடு ஒப்பிடுங்கால் ஓர் அணுவே ஓர் அண்டத்தை ஒத்த பேருருவினது என்று சொல்லுமாறு சிறுமையிற் சிறிய வடிவினனாக வும் உள்ள தன்மையைக் கொண்டு, அடியேன் நுகரும் பிராரத்தவினை உன்னைச் சேர்ந்ததாக ஆகுமாறு அடியேனுடைய உள்ளத்தினுள் கலந்து விளங்கும் மேம்பட்ட ஒளி வடிவினனே! வாசுகி என்ற பாம் பினையே நாணாகக் கொண்டு பெரிய மேருமலை ஆகிய வில்லாலே பகைவர்களின் மும்மதில்களையும் எரித்த வீரனே! நீல கண்டனே! கங்கைகொண்ட சோளேச்சரத்தானே!

விளக்கவுரை

``கொண்டு`` என வந்தவை இரண்டும் வினைச் செவ்வெண். இம் முதலடியின் பொருளை, ``அண்டங்க ளெல்லாம் அணுவாக அணுக்க ளெல்லாம் - அண்டங்க ளாகப் பெரிதாய்ச் சிறிதா யினானும்`` எனப் பின் வந்தோர் கூறியவாறு அறிக. *(பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம் - கடவுள் வாழ்த்து)* உண்ட ஊண்நுகர்ந்த - பிராரத்த வினை. `அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி இறை பணி நிற்` *(சிவஞான போதம் - சூ. 10)* பார்க்கு வரும் பிராரத்த வினை அவருக்கு ஆகாதவாறு, `இவனுக்குச் செய்தது எனக்குச் செய்தது என்று உடனாய் நின்று ஏற்றுக் கொள்ளுதல்` *(சிவஞான சித்தி- சூ. 10-1)* பற்றி, ``அடியேன் உண்ட ஊண் உனக்காம் வகை எனது உள்ளம் உள்கலந்து`` என்றார். இறைபணியில் நிற்பவர் தமக்கு வருவன பலவற்றையும் `சிவார்ப்பணம்` எனக்கொள்ளுதல், பிராரத்தம் தாக்காமைப் பொருட்டேயாம்.

உண்ணும் உணவையும் சிவனுக்குச் செய்யும் ஆகுதியாக நினைத்துச் செய்தலும் மரபாதலின், இத் தொடர், அதனையும் குறித்தல் பொருந்துவதாகும். ``பரஞ்சோதி`` என்றதன் பின்னர், `நீயே` என்னும் பயனிலை வருவிக்க. இதனால், சிவ பெருமானது முழுமுதற்றன்மை கூறியவாறாம். `பாம்பாம்` எனப் பாடம் ஓதுதலால் ஒரு சிறப்பின்மை அறிக. கண்டன் - வீரன்.

மோதலைப் பட்ட கடல்வயி றுதித்த
முழுமணித் திரளமு தாங்கே
தாய்தலைப் பட்டங் குருகிஒன் றாய
தன்மையில் என்னைமுன் ஈன்ற
நீதலைப் பட்டால் யானும்அவ் வகையே
நிசிசரர் இருவரோ டொருவர்
காதலிற் பட்ட கருணையாய் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. **#139**

திரிபுரத்தை அழித்த காலத்திலே அசுரருள் மூவரை அன்பினால் சேர்ந்த கருணையை உடையவனே! கங்கைகொண்ட சோளேச்சரத்தானே! ஒன்றொடொன்று மோதுகிற அலைகளோடு கூடிய கடல் வயிற்றிலிருந்து தோன்றிய குற்றமற்ற முத்துத் திரள்களைப் போன்ற அமுதம் அங்கேயே கடலிலே சேர்ந்த அப்பொழுதே உருகிக் கடலோடு ஒன்றாகும் தன்மைபோல என்னை முன் படைத்த நீ அடியேனுக்குக் காணக்கிட்டினால் அடியேனும் உருகி உன்னோடு ஒன் றாகிவிடுவேன்.

விளக்கவுரை

அலைப்பட்ட - அலையோடு கூடிய. `உதித்த அமுது` என இயையும். முழுமணி - குற்றமற்ற முத்து. `மணித்திரள் போலும் அமுது` என்க. இது, நிறம்பற்றி வந்த உவமை. ஆங்கே - அவ்விடத்தே. ``தாய்`` என்றது, அக்கடலை. `தலைப்பட்ட வழி` என் பது, `தலைப்பட்டு` எனத் திரிந்து நின்றது. தலைப்படுதல் - சேர்தல். அங்கு - அப்பொழுது. தன்மையில் - தன்மைபோல. இறைவனே உயிர்கட்கு அம்மையும் அப்பனும் ஆதலின், `என்னை முன் ஈன்ற நீ` என்றார். ``முன் ஈன்ற`` என்றது, பான்மைச் சொல். `வகையினேன்` என்பதனை, ``வகை`` என்றார். `ஆவேன்` என்னும் ஆக்கம் தொக்கு நின்றது. `உருகி ஒன்றாய் விடுவேன்` என்றார். இஃது இறைவனை மீளவும் எதிர்வர வேண்டிய வாறு. வாதவூரடிகளும் இவ்வாறு வேண் டினமை வெளிப்படை. நிசிசரர் - அசுரர். இருவரோடு ஒருவர் - மூவர். இவர் திரிபுரம் அழித்த காலத்துத் தமது சிவபத்தியால் அழியாது நின்று சிவபிரானை அடைந்தவர். அவர்களது பத்தி காரணமாகச் சிவபிரான் அவர்களைத் தப்புவித்தமை பற்றி, ``அவர்தம் காதலிற்பட்ட கருணை யாய்`` என்றார். பட்ட - அகப் பட்ட. ``பத்தி வலையிற் படுவோன் காண்க`` *(தி.8 திருவாசகம் - திருவண் - 42)* என்று அருளியது காண்க.

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்
டத்திலங் கொருகூ றுன்கண்வைத் தவருக்
கமருல களிக்கும்நின் பெருமை

பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யுங்
கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. #140

கிளிபோன்ற மகளிர் மீது வைத்த அன்பினை நூறாயிரம் கூறுகளாகச் செய்து அவற்றுள் ஒரு கூறு அளவினதாகிய அன்பை உன்பால் வைத்த அடியார்களுக்கு உன் பெருந்தன்மையால் சிவலோகத்தையே வழங்கும். உன்னை ஒரு சமயம் பித்தன் என்று கூறுவாராயினும் அடியார்கள் செய்த தவறுகளைப் பொறுத்து அவர்களுக்கு அருள் செய்யும் அபயகரத்தை அடியேனுடைய தலை மீது வைத்த கங்கை கொண்ட சோளேச்சரத்தானே! என்று சிவ பெருமான் இவ்வாசிரியருக்கு ஆசிரியனாய் வந்து அருளிய வாற்றைக் குறிப்பிட்டவாறு.

விளக்கவுரை

தத்தை - கிளி. அங்கனையார் - மாதர். `தத்தை போலும் அங்கனையார்` என்க. தயா - இரக்கம்; என்றது அன்பை. `அதில்` என்பது, ``அத்தில்`` என விரித்தல் பெற்றது. `அங்ஙனம் கூறிடப்பட்ட அன்பில்` என்பது பொருள். அங்கு, அசைநிலை. ஒருகூறு - ஒருகூறாய அன்பினை. `பெருமையை` என, இரண்டாவது விரிக்க. பிழைத்தவை - அவர்கள் பிழைபடச் செய்த செயல்களை; இது `பித்தன்` எனக் கூறி யதைக் குறியாது பிறவற்றையே குறித்தல், ``பிழைத்தவை`` என்ற பன்மை யானும் பெறப்படும். ``செய்யும்`` என்ற பெயரெச்சம் ``கைத்தலம்`` என்ற கருவிப்பெயர் கொண்டது. இக்கைத்தலம், அபயகரம். ``கைத் தலம் அடியேன் சென்னிமேல் வைத்த`` என்ற இதனானும் இறைவன் இவ்வாசிரியர்க்கு ஆசிரியனாய் வந்து அருளினமை அறியப்படும்.

பண்ணிய தழல்காய் பாலளாம் நீர்போற்
பாவமுன் பறைந்துபா லனைய
புண்ணியம் பின்சென் றறிவினுக் கறியப்
புகுந்ததோர் யோகினிற் பொலிந்து
நுண்ணியை யெனினும் நம்பநின் பெருமை
நுன்னிடை யொடுங்கநீ வந்தென்
கண்ணினுண் மணியிற் கலந்தனை கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. #141

கங்கைகொண்ட சோளேச்சரத்தானே! மூட்டிய நெருப்பினால் வெப்பமுறுத்தப்படும் காய்ந்த பாலோடு கலந்த நீர் ஆவியாகிப் போய்விடுவதுபோலப் பாவங்கள் விரைவில் நீங்கப் புண்ணியம் பின்சென்று அறிவினால் அறியும் வகையாக அடி யேனுன்னோடிருத்தலாகிய ஒரு யோக மார்க்கத்தில் விளங்கி நீ

நுண்ணியையாய் உள்ளாய் எனினும் உன் பெருமை உன்னிடத்தில் மறைந்து நிற்க அடியேனால் விரும்பப்படும் நீ வந்து கண்ணினுள் மணி கலந்து நிற்பதுபோல அடியேனோடு ஒன்று கலந்து நின்றனை. இதற்கு அடியேன் செயற்பால கைம்மாறு யாது?

விளக்கவுரை

பண்ணிய - மூட்டிய. தழல் காய் - நெருப்புச் சுடுகின்ற (நெருப்பாற் சுடப்படுகின்ற). ``காய் பால்`` என்பது செயப்படு பொருட் கண் வந்த வினைத்தொகை. அளாம் - முன்பு கலக்கப்பட்ட. ``பறைந்து`` எனப் பின்னர் வருகின்றமையின் வாளா, ``நீர்போல்`` என் றார். `நீர் பறைவது போலப் பறைந்து` என்பது பொருளாயிற்று. `நெருப்பு மூட்டிக் காய்ச்சப்பட்ட பாலில், முன்பு கலந்திருந்த நீர் ஆவி யாய் விரைவில் நீங்கிவிடப் பின்பு நிலைத்து நின்று பயன் செய்யும் பால்போலும் புண்ணியம்` என்பது, இங்குக் கூறப்பட்ட பொருள். பொருட்கண், பாவம் பறைதல் ஒன்றே கூறினாராயினும், `நீ எனக்குச் செய்த திருவருளால் தூய்மையாக்கப்பட்ட எனது உயிரின்கண் முன்பு கலந்து நின்ற பாவம் பறைய` என்பது உவமையாற் கொள்ளுதல் கருத் தென்க. முன் - விரைவில். பறைந்து - நீங்கி. இதனை, `பறைய` எனத் திரிக்க. ``சென்று`` என்றது, `நிகழ்ந்து` என்னும் பொருளது. `சென்று புகுந்தது` என இயையும். `அறிவினுக்கு அறிய` என்றதில் நான்காவது, கருவிப் பொருட்கண் வந்தது. `கண்ணிற்குக் காணலாம்` என்பது போல. அறிதற்குச் செயப்படு பொருளாகிய `உன்னை` என்பது வருவித்துக்கொள்க. ``புகுந்தது`` என்னும் வினையாலணையும் பெயர் வினைமுதல் உணர்த்தாது. `புகுந்ததனால் விளைந்தது` எனச் செயப்படு பொருளை உணர்த்திற்று. `புகுந்ததாகிய ஓர் யோகு` என்க. யோகு - யோகம்; சிவயோகம். ``நுண்ணியை`` என்பதில் நுண் ணியையாய் என்னும் ஆக்கம் விரிக்க. `அப் பெருமை` எனச் சுட்டி உரைக்க. ஒடுங்க - மறைந்து நிற்க; என்றது, `என் திறத்தில் அதனைக் கொள்ளாது விடுத்து` என்றவாறு. `இதற்கு யான் செய்யும் கைம்மாறு என்` என்னும் குறிப்பெச்சம், இறுதியில் வருவித்து முடிக்க.

அங்கைகொண் டமரர் மலர்மழை பொழிய
அடிச்சிலம் பலம்பவந் தொருநாள்
உங்கைகொண் டடியேன் சென்னிவைத் தென்னை
உய்யக்கொண் டருளினை மருங்கிற்
கொங்கைகொண் டனுங்குங் கொடியிடை காணிற்
கொடியள்என் றவிர்சடைமுடிமேற்
கங்கைகொண் டிருந்த கடவுளே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. **#142**

இடப்பாகமாக உள்ள, கொங்கைகளின் பாரத்தைத் தாங்கி மெலிகின்ற கொடி போன்ற இடையினை உடைய பார்வதி கண்டால் வெகுளுவாள் என்று விளங்குகின்ற சடை முடியின் கண் கங்கையை வைத்துக் கொண்டிருக்கும் இறைவனே! கங்கை கொண்ட சோளேச்சரத்தானே! தம் கைகளில் வைத்துக் கொண்டு தேவர்கள் பூமாரி பொழிய, உன் திருவடிகளில் சூடிய சிலம்பு ஒலிக்க வந்து ஒருநாள் உன் திருக்கரத்தை அடியேன் தலையில் வைத்து ஆட்கொண்டு அருளினாய். நின் கருணைதான் என்னே!

விளக்கவுரை

``அங்கை கொண்டு`` என்றதில், ``கொண்டு`` மூன்றா வதன் சொல்லுருபு. அலம்ப - ஒலிக்க. ``உம் கை`` என்றதில் ``உம்`` ஒருமைப் பன்மை மயக்கம். `உன் கை` எனப்பாடம் ஓதினும் இழுக் காது. ``உம் கை கொண்டு`` என்றதில், `கொண்டு` என்றது, `எடுத்து` என்றவாறு. `மருங்கிற் கொடியிடை` என இயையும். `பக்கத்தில் இருக்கும் உமாதேவி` என்பது பொருளாம். ``கொங்கை கொண்டு``, ``கங்கை கொண்டு`` என்றவற்றில் ``கொண்டு`` என்றவை, `தாங்கி` என்னும் பொருளன. அனுங்கும் - மெலிகின்ற (இடை என்க). ``கொடி யள்`` என்றதில், `ஆவள்` என்னும் ஆக்கம் விரிக்க. `கொடியளாவள்` என்றது, `வெகுள்வாள்` என்றவாறு. உமாதேவி காணின் வெகுள்வாள் என்று கருதியே சிவபிரான் கங்கையைச் சடையில் மறைத்து வைத்துள்ளான் என்றது, தற்குறிப் பேற்ற அணி.

மங்கையோ டிருந்தே யோகுசெய் வானை
வளர்இளந் திங்களை முடிமேற்
கங்கையோ டணியுங் கடவுளைக் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானை
அங்கையோ டேந்திப் பலிதிரி கருவூர்
அறைந்தசொல் மாலையால் ஆழிச்
செங்கையோ டுலகில் அரசுவீற் றிருந்து
திளைப்பதும் சிவனருட் கடலே. **#143**

பார்வதியோடு கூடி இருந்தே யோகம் செய்ப வனாய், ஒற்றைப் பிறைச்சந்திரனை முடியின் மீது கங்கையோடு அணிந்து கொண்டுள்ள தெய்வமாய் உள்ள கங்கைகொண்ட சோளேச் சரத்தானைப்பற்றி அழகிய கையில் பிச்சை எடுக்கும் ஓட்டினை ஏந்தி உணவுக்காகத் திரியும் கருவூர்த்தேவர் பாடியுள்ள சொல்மாலை யாகிய இப்பதிகத்தைப் பாடி வழிபடுபவர்கள் ஆணைச் சக்கரம் ஏந்திய கையோடு இவ்வுலகில் அரசர்களைப் போலச் சிறப்பாக வாழ்ந்து மறுமையில் சிவபெருமானுடைய திருவருளாகிய கடலில் மூழ்கித் திளைப்பார்கள்.

விளக்கவுரை

யோகு - யோகம். ``மங்கையோடு இருந்தே யோகம் செய்வான்`` என்றது, ``ஒன்றிலும் தோய்விலனாய், ஒன்றொடொன் றொவ்வா வேடம் ஒருவனே தரித்துக்கொண்டு நிற்பான்`` *(சிவஞான சித்தி- சூ. 1.51)* என்றதாம். ``நேரிழையைக் கலந்திருந்தே புலன்கள் ஐந்தும் வென்றானை`` என்ற அப்பர் திருமொழியைக் காண்க. *(தி.6 ப.50 பா.3)* இவ்வாசிரியர், தம்மை, அங்கை ஓடு ஏந்திப் பலி திரிபவராகக் கூறினமையின், நிறைந்த துறவர் என்பது விளங்கும். ஆழி - ஆணைச் சக்கரம். `திளைப்பதும் சிவன் அருட்கடல்` என்றாராயினும், `சிவனது அருட்கடலிலும் திளைப்பர்` என்றல் கருத் தென்க. `அரசு வீற்றிருத்தல் இப்பிறப்பிலும், சிவனது அருட்கடலில் திளைத்தல் இப்பிறப்பு நீங்கிய பின்னரும்` என்பது ஆற்றலாற் கொள்ளக்கிடந்தது.

கருவூர்த் தேவர் - திருப்பூவணம்

திருவருள் புரிந்தாள் ஆண்டுகொண் டிங்ஙன்
சிறியனுக் கினியது காட்டிப்
பெரிதருள் புரிந்தா னந்தமே தரும்நின்
பெருமையிற் பெரியதொன் றுளதே
மருதர சிருங்கோங் ககில்மரம் சாடி
வரைவளங் கவர்ந்திழி வையைப்
பொருதிரை மருங்கோங் காவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே. **#144**

மருது, அரசு, பெரிய கோங்கு, அகில் என்னும் மரங்களை முரித்துக்கொண்டு மலையில் தோன்றும் பொருள்களை அடித்துக்கொண்டு மலையிலிருந்து இறங்கி ஓடிவருகின்ற வையை நதியின் ஒன்றோடொன்று மோதும் அலைகள் தம் பக்கத்தில் ஓங்கக்கொண்ட, கடைவீதிகளையுடைய திருப்பூவணம் என்ற தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளிய பெருமானே! திருவருள் புரிந்து அடியேனை அடிமையாக இவ்வுலகில் ஆட்கொண்டு இன்பம் தரும் பொருள் இது என்று அறிவித்து மிகுதியாக அருள்புரிந்து ஆனந்தத்தை வழங்குகின்ற உன் பெருமையைவிட மேம்பட்ட பொருள் ஒன்று உளதோ?

விளக்கவுரை

இதனுள் இறுதி ஒன்றொழித்து ஏனைய பாடல்களில் மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி உரைக்க. `ஆளாக ஆண்டு கொண்டு` என்க. இங்ஙன் - இவ்வுலகில். இனியது காட்டி - இன்பந் தரும் பொருள் இது என்று அறிவித்து. பெரிது அருள் புரிந்தமை யாவது, ஆனந்தத்தைத்தர நினைந்தமை. ``வறியார்க்கொன்று ஈவதே ஈகை`` *(குறள் - 221)* ஆதலின், அதனைச் செய்வோரது பெருமையையே உலகத்தார் உரையாலும், பாட்டாலும் சிறந் தெடுத்துப் போற்றுதல்போல. *(குறள் - 232)* மெய்ந்நெறி வகையில் மிகச் சிறியேனாகிய எனக்கு அருள்புரிந்த உனது பெருமையினும் சிறந்த பெருமை வேறொன்று இல்லை என்பார். ``நின் பெருமையிற் பெரியதொன்றுளதே`` என்றார். `மருது, அரசு, கோங்கு, அகில் என்னும் மரங்களைச் சாடி` என்க.
இரு - பெரிய. சாடி - முரித்து. வரைவளம் - மலைபடு பொருள்கள்: அவை கத்தூரி, குங்குமம் முதலியன. ``திரைமருங்கு`` என்றது, `கரைக்கண்` என்றவாறு. `திரைகளைத் தன்மருங்கில் ஓங்கக் கொண்ட வீதி` என்பாரும் உளர். ஆவண வீதி - கடைத்தெரு. பூவணம் கோயில் கொண்டாயே - திருப்பூவணத்தைக் கோயிலாகக் கொண்டவனே.

பாம்பணைத் துயின்றோன் அயன்முதல் தேவர்
பன்னெடுங் காலம்நிற் காண்பான்
ஏம்பலித் திருக்க என்னுளம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
தேம்புனற் பொய்கை வாளைவாய் மடுப்பத்
தெளிதரு தேறல்பாய்ந் தொழுகும்
பூம்பணைச்சோலை ஆவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே. **#145**

தேனோடு கூடிய தண்ணீரை உடைய, மானிடர் ஆக்காத நீர்நிலையில் உள்ள வாளைமீன்கள் தம் வாயில் கொள்ளும் வண்ணம் தெளிந்த தேன் பாய்ந்து ஒழுகும் பூக்களையுடைய வயல்கள், சோலைகள் இவற்றை அடுத்த, கடைத்தெருக்களையுடைய திருப்பூவணத்தில் கோயில் கொண்டவனே! பாம்புப்படுக்கையில் துயின்ற திருமால், பிரமன் முதலிய தேவர்கள் மிகநெடுங்காலமாக உன்னைக் கண்களால் காண முயன்று வருந்தியிருக்கவும் அடியே னுடைய உள்ளத்தில் பரம்பொருளாகிய நீ வந்து சேர்ந்த எளிவந்த தன்மையை எக்காலத்தும் அடியேன் மறக்கமாட்டேன்.

விளக்கவுரை

``முத றேவர்`` என்பதல்லது, `முதற் றேவர்` என்பது பாடமாகாது. ஏம்பலித்து - வருந்தி. தேம் புனற் பொய்கை - தேனோடு கூடிய நீரையுடைய பொய்கையின் நீரை. பொய்கை, ஆகுபெயர். தேறல் - தேன். ``ஒழுகும்`` என்றது, `பணை` `சோலை` என்னும் இரண்டனையும் சிறப்பித்தது. பணை - வயல். `பணைவீதி, சோலைவீதி` எனத் தனித்தனி முடிக்க.

கரைகடல் ஒலியின் தமருகத் தரையிற்
கையினிற் கட்டிய கயிற்றால்
இருதலை ஒருநா இயங்கவந் தொருநாள்
இருந்திடாய் எங்கள்கண் முகப்பே
விரிதிகழ் விழவின் பின்செல்வோர் பாடல்
வேட்கையின் வீழ்ந்தபோ தவிழ்ந்த
புரிசடை துகுக்கும் ஆவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே. **#146**

விரிவாக நிகழ்த்தப்படுகின்ற திருவிழாவிலே தன் பின்னே வருகின்ற அடியார்களுடைய பாடல்களைக் கேட்கும் விருப்பத்தால் எம் பெருமான் தன் திருமுடியை அசைக்கவே தன் முடியிலிருந்து விழுந்த பூக்கள் மிகுதியாக அமைந்து தூர்க்கின்ற கடைத்தெருக்களையுடைய திருப்பூவணத்தில் கோயில் கொண்டு இருக்கும் பொருளே! ஒலிக்கின்ற

கடல் ஒலிபோல உடுக்கையின் அரைக்கும் உன் கைக்குமாகக் கட்டப்பட்டுள்ள கயிற்றினால் அதன் இருபக்கமும் ஒருநாவே சென்று தாக்கி ஒலியை எழுப்ப வந்து ஒருநாள் எங்கள் கண்களின் முன்னே காட்சி வழங்குவாயாக.

விளக்கவுரை

கரை - ஒலிக்கின்ற. கடல் ஒலியின் - கடல் ஒலி போன்ற ஒலியினையுடைய. `தமருகத்து அரையின்` என்பது முதல், `இயங்க` என்பதுகாறும் உள்ள பகுதியால் இறைவன் தனது தமருகத்தினின்றும் ஒலியை எழுப்பும் முறை விளக்கப்பட்டது. தமருகம் - உடுக்கை. `அதன் அரைக்கும் உனது கைக்குமாகக் கட்டப்பட்டுள்ள கயிற்றினால் அதன் இருபக்கத்தும் ஒருநாவே சென்று தாக்கி ஒலியை எழுப்ப, அந்நிலையோடே எங்கள் கண்களின் முன்னே ஒருநாள் வந்து இருந்தருள்` என்றவாறு. விரி - விரிவு; முதனிலைத் தொழிற் பெயர். ``விழவு`` என்றது, அதிற்கூடும் மக்கட் கூட்டத்தினை. பாடல் பாடுவோர் மக்கட் கூட்டத்தின் நெருக்கத்திடையே செல்லாது பின்பு செல்லுதலின், ``விழவின் பின்செல்வோர் பாடல்` என்றார், விழவிற் பின் செல்வோர் பாடல் எனப் பாடம் ஓதி, விழாவில் `நின்பின் செல் வோரது பாடல்` என்று உரைத்தலும் ஆம். பாடல் வேட்கையின் - பாடல்மேல் எழுந்த வேட்கையினால். `வீழ்ந்த புரிசடை, போது அவிழ்ந்த புரிசடை` என்க. `நின்புரிசடை` என உரைக்க. வீழ்ந்த - அவிழ்ந்த. அடியாரது பாடலை இறைவன் இனிதாகக் கேட்டுத் தலையை அசைத்தலால், கட்டியுள்ள அவனது சடை அவிழ்ந்து வீழ்ந்தது. துகுக்கும் - தூர்க்கின்ற; நிரம்பச் சொரிகின்ற. ``போது அவிழ்ந்த புரிசடை`` என்றதனால், சொரியப்படுவன அப்போதுகளே ஆயின. போது - பேரரும்பு; அவை, கொன்றை, ஆத்தி முதலியவற் றின் அரும்புகளாம். அவிழ்ந்த - மலர்ந்த. `விழாக்காலங்களில் இறை வனது சடைக்கண் உள்ள மலர்களே வீழ்ந்து நிரம்பும் பெருமையை உடையன, திருப்பூவணத்தின் கடைவீதிகள்` என்றவாறு.

கண்ணியல் மணியின் சூழல்புக் கங்கே
கலந்துபுக் கொடுங்கினேற் கங்ஙன்
நுண்ணியை யெனினும் நம்ப நின் பெருமை
நுண்ணிமை யிறந்தமை அறிவன்
மண்ணியல் மரபின் தங்கிருள் மொழுப்பின்
வண்டினம் பாடநின் றாடும்
புண்ணிய மகளிர் ஆவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே. **#147**

ஒளி இல்லாத இடத்தில் இருள் நிறைந்திருக்கும் என்ற மண்ணுலக

முறைப்படி இருள் தங்கியிருக்கும் சோலையின் உயர்ந்த பகுதியில் வண்டினங்கள் பாட, அவற்றின் பாடலுக்கு ஏற்ப ஆடும் செல்வ மகளிரை உடைய, கடைத்தெருக்கள் அமைந்த திருப் பூவணத் திருத்தலத்தில் கோயில் கொண்டருளிய பெருமானே! கண் மணி இருக்கும் இடத்தில் நீ புகுதலால் அங்குத்தானே உன்னைக்கூடி உன்னுள் ஒடுங்கிய அடியேனுக்கு அவ்வாறு நீ சிறியையாய் இருந்தாய் எனினும் எம்மால் விரும்பப்படும் பெருமானே! உன் பெருமை சிறுமையைக் கடந்தது என்பதனை அடியேன் அறிவேன்.

விளக்கவுரை

கண் இயல் மணியின் சூழல், கண்மணி இருக்கும் இடம். `அவ்விடத்தில் நீ புகுதலால் அங்குத்தானே உன்னைக் கலந்து, உன்னுள் ஒடுங்கின எனக்கு` என்க. இஃது இறைவனைக் கண்ணாற் கண்டமையால் அவனுடன் கலந்தமை கூறியவாறு. இக்கருத்துப் பற்றியே, கண்மணியே தாம் இறைவனோடு கலந்த இடமாகக் கூறினார். ``சூழல் புக்கு`` என்றதில், ``புகுதலால்`` என்பது, `புக்கு` எனத்திரிந்து நின்றது. ``நுண்ணியை`` என்பது, `சிறியை` எனப் பொருள் தந்தது. ``அங்ஙன் நுண்ணியை`` என்றது, `என் கண்மணி யளவாய் நிற்கும் சிறுமை யுடையை` என்றதாம். நுண்ணிமை - நுட்பம்; அஃது இங்கு, வியாபகத்தைக் குறித்தது. இறந்தமை - கடந்தமை. `வியாபகப்பொருள் பலவற்றையும் கடந்து வியாபகமாய் நிற்பது நின் பெருமை` என்றதாம். மண் இயல் மரபின் - `ஒளி இல்லாத இடத்தில் இருள் நிறைந்திருப்பது` என்ற மண்ணுலக முறைப்படி. இந்நிலை தேவருலகில் இன்மையால், ``மண்ணியல் மரபின்`` என்றார். மொழுப்பு - உயர்ந்து தோன்றுதல். அஃது அதனையுடைய சோலையைக் குறித்தது. புண்ணிய மகளிர் - செல்வ மகளிர். ``தேவ மகளிர்`` என்றும் உரைப்ப. `மகளிரையுடைய வீதி` என்க.

கடுவினைப் பாசக் கடல்கடந் தைவர்
கள்ளரை மெள்ளவே துரந்துன்
அடியிணை இரண்டும் அடையுமா றடைந்தேன்
அருள்செய்வாய் அருள்செயா தொழிவாய்
நெடுநிலை மாடத் திரவிருள் கிழிக்க
நிலைவிளக் கலகில்சா லேகப்
புடைகிடந் திலங்கும் ஆவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே. **#148**

உயரமான அடுக்குக்களை உடைய மாட வீடுகளில் இரா நேரத்தில் இருளைப்போக்குவதற்கு அணையாது உள்ள விளக்குக்கள் சாளரங்களுக்கு வெளியே ஒளியை வீசுகின்ற,

கடைத்தெருக்களையுடைய திருப்பூவணம் என்ற திருத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற பெருமானே! கொடிய வினையாகிய பாசக்கடலைக் கடந்து ஐம்பொறிகளாகிய திருடர்களை மெதுவாக விரட்டி உன் திருவடிகள் இரண்டனையும் நூல்களில் சொல்லப்பட்ட நெறிக்கண் நிற்கும் முறையானே அடைந்துவிட்டேன். அடியேனுக்கு அருள் செய்வதோ, அருள் செய்யாது விடுப்பதோ உன் திருவுள்ளம்.

விளக்கவுரை

வினையைக் கடலாக உருவகிக்கின்றவர், அதுதான் பாசங்களுள் ஒன்றாதலை விளக்குதற்கு, ``வினைப் பாசக் கடல்`` என்றார். ஐவர் கள்ளர் - ஐம்பொறிகள். ``மெள்ள`` என்றது, `இனிமையாகவே` என்றவாறு. அவர் சென்றவழியே சென்று நீக்கினமை பற்றி இவ்வாறு கூறினார். இனி, `சிறிது சிறிதாக நீக்கி` என்றும் ஆம். துரந்து - ஓட்டி. அடையுமாறு அடைதலாவது, நூலிற் சொல்லப்பட்ட நெறிக்கண் நிற்கும் முறையானே அடைதல். இதனை, `விதி மார்க்கம்` என்பர். `இனி நீ எனக்கு அருள் செய்; அல்லது அருள் செய்யாதொழி; அஃது உனது உள்ளத்தின்வழியது; யான் செயற் பாலதனைச் செய்துவிட்டேன்; இந்நிலையினின்றும் வேறுபடேன்` என்பதாம். `நெடுநிலை மாடத்து நிலைவிளக்குச் சாலேகப்புடை இலங்கும் வீதி` என்க. இரவு - இரவின்கண். கிழிக்க - போக்குதற் பொருட்டு. நிலை விளக்கு - அணையாது உள்ள விளக்கு. சாலேகப் புடை - சாளரங்கட்கு வெளியே. இலங்கும் - ஒளியை வீசுகின்ற.

செம்மனக் கிழவோர் அன்பு தாஎன்றுன்
சேவடி பார்த்திருந் தலச
எம்மனம் குடிகொண் டிருப்பதற் கியான்ஆர்
என்னுடை அடிமைதான் யாதே
அம்மனங் குளிர்நாட் பலிக்கெழுந் தருள
அரிவையர் அவிழ்குழற் சுரும்பு
பொம்மென முரலும் ஆவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே. **#149**

அடியவர்களுடைய மனம் மகிழ்வதற்கு அமைந்த நாள்களில் ஒருநாள் சிவபெருமான் ஆகிய நீ பிச்சைக்கு எழுந்தருள, உன்னைக் காதலித்த மையலால் மகளிருடைய அவிழ்ந்த கூந்தலில் வண்டுகள் பொம் என்ற ஒலியோடு இசைக்கும், கடைத்தெருக்களை யுடைய திருப்பூவண நகரில் கோயில் கொண்டருளும் பெருமானே! செம்மையான மனத்தை உடைய அடியவர்கள் உன்னுடைய திரு வருளை வேண்டி உன் திருவடிகளைப் பார்த்துக் கொண்டிருந்து வருந்தவும், அடியேனுடைய மனத்தில் நீ இருப்பிடம் கொண்டு இருப்பதற்கு அடியேன் யாது தகுதி உடையேன்?

அடியேனுடைய அடிமைதான் எத்தன்மையது? உன் செயலுக்கு உன் அளவற்ற கருணையே காரணம் என்பதாம்.

விளக்கவுரை

கிழவோர் - உரியவர்; அடியார். `கிழவோர் அல \\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\*u2970?*` என இயையும். ``அன்பு`` என்றது இறைவனது அருளை. பார்த்திருந்து - தோன்றுதலை எதிர்நோக்கியிருந்து. அலச - வருந்த. `அவர்களிடம் செல்லாமல் என்பால் வந்து என் மனத்தில் நீ குடிகொண்ட இந் நிலைக்கு நான் என்ன தகுதியுடையேன்! எனது தொண்டுதான் என்ன தகுதியுடையது` என்றபடி. அம் மனம் - அழகிய மனம்; அடியவர் மனம். குளிர்நாள் - மகிழ்வதற்கு அமைந்த நாளில். சிவபெருமானது விழாக்களில் அவன் பலிக்கு (பிச்சைக்கு) எழுந்தருளும் விழாவும் ஒன்றாதல் அறிக. அரிவையரது குழல் அவிழ்தல். இறைவனைக் காதலித்தமையாலாம். குழல் சுரும்பு - கூந்தலில் உள்ள வண்டுகள் ``பொம்மென`` என்றது ஒலிக்குறிப்பு.

சொன்னவில் முறைநான் காரணம் உணராச்
சூழல்புக் கொளித்தநீ யின்று
கன்னவில் மனத்தென் கண்வலைப் படும்இக்
கருணையிற் பெரியதொன் றுளதே
மின்னவில் கனக மாளிகை வாய்தல்
விளங்கிளம் பிறைதவழ் மாடம்
பொன்னவில் புரிசை ஆவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே. **#150**

ஒளி மிகுந்த பொன்மயமான மாளிகைகளின் கோபுரம், விளங்குகின்ற இளைய பிறைச் சந்திரன் தவழும்படியான உயர்ந்த மாடி வீடுகள், பொன் மிகுந்த மதில், கடைத்தெருக்கள் இவற்றை உடைய திருப்பூவணத் திருத்தலத்தில் கோயில் கொண் டருளிய பெருமானே! சொற்களை ஒலிக்கும் முறைப்படி சொல்கின்ற காரணத்தை அடியேன் எட்டலாகாத இடத்தில் புகுந்து மறைந்த நீ இன்று கல்லையொத்த உருகாத மனத்தை யுடைய அடியேனுடைய கண்களாகிய வலையில் உன்னை அகப்படுத்திக் கொண்ட கருணையைக் காட்டிலும் மேம்பட்ட செயல் வேறு உளதோ?

விளக்கவுரை

`சொல் முறை நவில்` என மாற்றி, `சொற்களை, ஒலிக் கும் முறைப்படி சொல்கின்ற` என உரைக்க. உணராச்சூழல் - எட்ட லாகாத இடம். ``கல் நவில்`` என்றதில் நவில் உவமஉருபு. கண்ணில் அகப்பட்டமை பற்றி,

அதனை வலையாக உருவகித்தார். பெரியது - பெரியதொரு கருணை. உளதே - உண்டோ. ஆரணத்துள் அகப் படாமை அவை சொல்வடிவாதலாலும், கண்வலைப்பட்டமை அதனைச் செலுத்துகின்ற உணர்வின் தூய்மையாலும் என்க. மின் நவில் - ஒளி மிகுந்த. வாய்தல் - வாயில் மாடம், கோபுரம். பொன் நவில் - பொன் மிகுந்த. புரிசை - மதில். `வாய்தல்` மாடம், புரிசை இவைகளையுடைய வீதி என்க.

* * * * * * ** * * * * * #151

* * * * * * ** * * * * *

விளக்கவுரை

* * * * * * ** * * * * *

* * * * * * ** * * * * * #152

* * * * * * ** * * * * *

விளக்கவுரை

* * * * * * ** * * * * *

பூவணம் கோயில் கொண்டெனை ஆண்ட
புனிதனை வனிதை பாகனை வெண்
கோவணங் கொண்டு வெண்டலை ஏந்தும்
குழகனை அழகெலாம் நிறைந்த
தீவணன் றன்னைச் செழுமறை தெரியுந்
திகழ்கரு வூரனேன் உரைத்த
பாவணத் தமிழ்கள் பத்தும்வல் லார்கள்
பரமன துருவமா குவரே. #153

திருப்பூவணத் திருத்தலத்தில் கோயில்கொண்டு அடியேனைத் தன் அடியவனாகக்கொண்ட புனிதனாய், பார்வதி பாகனாய், வெள்ளிய கோவண ஆடையை உடுத்து வெள்ளிய மண்டையோட்டினை ஏந்தும் இளையனாய், எல்லா அழகுகளும் முழுமையாக நிறைந்த தீ நிறத்தவனாகிய சிவபெருமானுடைய செய்திகளாகச் சிறந்த வேதங்களை ஆராயும் விளக்கமுடைய கருவூர்த் தேவனாகிய அடியேன் சொல்லிய பாக்களின் தன்மை பொருந்திய தமிழ்ப் பாடல்கள் பத்தினையும் பொருளோடு ஓதி நினைவிற்கொண்டு பாட வல்லவர்கள் சிவபெருமானுடைய சாரூப்பியத்தை அடை வார்கள்.

விளக்கவுரை

``வெண்டலை`` என்றது, பிரம கபாலத்தை. இது சிவபிரானுக்குப் பிச்சைப் பாத்திரமாவது. குழகன் - இளையோன். தாருகாவன முனிவர் பன்னியர்பால் பிச்சைக்குச் சென்றபொழுது சிவபிரான் இளைஞனாய்ச் சென்றமை அறிக. ``தெரியும்`` என்பது, ``கருவூரன்`` என்றதன்

இறுதிநிலையோடு முடியும். `பாவாகிய வண்ணத் தமிழ்கள்` என்க. வண்ணம் - அழகு. ``பத்தும்`` என்ற தனால், இதன்கண் இருதிருப்பாடல்கள் கிடையாவாயின என்க.

கருவூர்த் தேவர் - திருச்சாட்டியக்குடி

பெரியவா கருணை இளநிலா வெறிக்கும்
பிறைதவழ் சடைமொழுப் பவிழ்ந்து
சரியுமா சுழியம் குழைமிளிர்ந் திருபால்
தாழ்ந்தவா காதுகள் கண்டம்
கரியவா தாமும் செய்யவாய் முறுவல்
காட்டுமா சாட்டியக் குடியார்
இருகைகூம் பினகண் டலர்ந்தவா முகம்ஏழ்
இருக்கையில் இருந்தஈ சனுக்கே. **#154**

சாட்டியக்குடியின்கண் ஏழுநிலைகள் அமைந்த விமானத்தை உடைய கருவறையில் உறையும், நம்மை அடக்கியாளும் பெருமானுக்குக் கருணை மேம்பட்டது. இளையநிலா ஒளிவீசும் பிறைச்சந்திரன் தங்கி இயங்கும் சடைமுடி அவிழ்ந்து தொங்குதல் தன்மை, காதுகளில் இருபாலும் வளைந்த அழகிய குண்டலங்கள் ஒளிவீசிக்கொண்டு தொங்குகின்றவாறு, கரியகழுத்து, அவர் வெளிப் படுத்தும் சிவந்த வாயின் வெள்ளிய பற்கள், அடியார்களுடைய குவிந்த இருகைகளையும் கண்டு மலர்கின்ற முகம் ஆகிய இவை அழகியன.

விளக்கவுரை

``பெரியவா`` முதலியன, `பெரியவாறு` முதலியவை கடைக்குறைந்து வந்தன. அவையெல்லாம் செவ்வெண்ணாய் நின்றமையின், இறுதியில், `இவை அழகிய` என்னும் சொல்லெச்சம் வருவித்து முடிக்க. `கருணை பெரியவா` என மாற்றுக. கருணை ஒன்றேயாயினும் அதனால் விளையும் பயன்கள் பலவாதல்பற்றி, ``பெரிய`` எனப் பன்மையாகக் கூறப்பட்டது. இள நிலா - சிற்றொளி. மொழுப்பு - முடி. சுழி அம் குழை - வளைந்த அழகிய குண்டலம். தாழ்ந்தவா - தொங்கினவாறு. `காதுகளில்` என ஏழாவது இறுதிக்கண் தொக்கது. எனவே, அதனை, ``சுழி`` என்றதற்கு முன்னே கூட்டுக. ``தாமும்`` என்ற உம்மை, `தமது உறுப்புக்கள் இயற்கையில் இவ்வாறு விளங்குதலேயன்றி` என, இறந்தது தழுவிய எச்சம். ``முறுவல்`` என்றது, `வெள்ளிய முறுவல்` என்றவாறு. சாட்டியக்குடியார் - திருச் சாட்டியக்குடியில் உள்ள அந்தணர்கள். `முகம் அலர்ந்தவா` என மாற்றிக்கொள்க. `தாமும் முறுவல் காட்டுமா` என்றதை இதன்பின்னர்க் கூட்டுக. அந்தணர்கள் கைகுவித்துத் தொழுதலைக் கண்டு இறைவற்கு உவகையால் முகம் மலர்ந்தது என்க. ஏழ் இருக்கை - ஏழு நிலைகள் அமைந்த விமானத்தையுடைய மாளிகை. இது திருச்சாட்டியக்குடிக் கோயிலின் அமைப்பு. `ஏழ் இருக்கையில் இருந்த ஈசனுக்குப் பெரியவா` என்று

முன்னே சென்று இயையும்; இஃது, ஏனைய திருப் பாடல்கட்கும் ஒக்கும்.

பாந்தள்பூ ணாரம் பரிகலங் கபாலம்
பட்டவர்த் தனம்எரு தன்பர்
வார்ந்தகண் ணருவி மஞ்சன சாலை
மலைமகள் மகிழ்பெருந் தேவி
சாந்தமும் திருநீ றருமறை கீதம்
சடைமுடி சாட்டியக் குடியார்
ஏந்தெழில் இதயங் கோயில் மா ளிகைஏழ்
இருக்கையுள் இருந்தஈ சனுக்கே. **#155**

சாட்டியக்குடி அடியாருடைய அன்பின் மிக்க எழுச்சியை உடைய இதயமே ஈசன் கோயில். அக்கோயிற்கண் அமைந்த எழுநிலை விமானத்தை உடைய கருவறையில் இருக்கும் அப்பெருமானுக்குப் பாம்புகளே அணியும் மாலைகள். உண்ணும் பாத்திரம் மண்டையோடு. அவர் செலுத்தும் எருதே பெருமையை உடைய யானை வாகனம். அடியார்களின் இடையறாது ஒழுகும் கண்ணீரை உடைய கண்களே அவர் குளிக்கும் இடம். பார்வதியே அவர் மகிழ்கின்ற பெரிய தேவி. திருநீறே அவர் அணியும் சந்தனம். அவர்பாடும் பாடல் சிறந்த வேதங்களே. சடையே அவர் கிரீடம்.

விளக்கவுரை

பாந்தள் - பாம்பு. பூண் ஆரம் - அணிகின்ற இரத்தின வடம். ``பரிகலம் கபாலம்; பட்டவர்த்தனம் எருது; சாந்தம் திருநீறு`` என்றாற்போல, ஏனையவற்றையும், `பூண் ஆரம் பாந்தள்; மஞ்சன சாலை கண்; பெருந்தேவி மலைமகள்; கீதம் அருமறை; முடி சடை; கோயில் மாளிகை இதயம்` என மாற்றிக் கொள்க. `இவை யெல்லாம் உலகிற் காணப்படாத அதிசயங்கள்` என்றபடி. பரிகலம் - உண்கலம். கபாலம் - பிரமனது தலைஓடு. பட்டவர்த்தனம் - அரச விருது; பெருமையுடைத்தாகிய யானையையே பட்டவர்த்தனமாகக் கொள்ளுதல் உலக இயல்பு. வார்ந்த - இடையறாதொழுகிய. ``வார்ந்த கண்ணருவி`` என்றாராயினும், `வார்ந்த அருவிக் கண்` என்பதே கருத்து, இடத்தைச் சுட்டலே கருத்தாகலின். மஞ்சன சாலை - குளிக்கும் இடம். பெருந்தேவி - அரசமாதேவி. சாந்தம் - உடற்பூச்சு. கீதம் - தான் பாடும் பாட்டு. `சாட்டியக் குடியாரது இதயம்` என்க. ஏந்து எழில் இதயம் - மிக்க எழுச்சியையுடைய நெஞ்சு. ``எழுச்சி`` என்றது அன்பினை. நெஞ்சிற்கு அழகு தருவது அன்பேயாகலின், அதனை மாளிகைக்கு அமைந்த அழகாக விசேடித்தார். கோயில் மாளிகை - கோயிற்கண் உள்ள கருவறை.

தொழுதுபின் செல்வ தயன்முதற் கூட்டம்

தொடர்வன மறைகள்நான் கெனினும்
கழுதுறு கரிகா டுறைவிடம் போர்வை
கவந்திகை கரியுரி திரிந்தூண்
தழலுமிழ் அரவம் கோவணம் பளிங்கு
சபவடம் சாட்டியக் குடியார்
இழுதுநெய் சொரிந்தோம் பழல்ஒளி விளக்கேழ்
இருக்கையில் இருந்தஈ சனுக்கே. **#156**

எழுநிலை விமானத்தை உடைய கருவறையில் இருக்கும் சாட்டியக்குடி ஈசனுக்கு அவனைத் தொழுதுகொண்டு பின் செல்வது பிரமன் முதலிய தேவர்களின் கூட்டம். அவனைத் தொடர்ந்து செல்வன நால்வேதங்கள். இத்தகைய சிறப்புக்கள் இருந் தாலும் அவன் உறைவிடம் பேய்கள் பொருந்திய சுடுகாடு. அவனுடைய போர்வை யானைத்தோல். அவன் உணவு, திரிந்து எடுக் கும் பிச்சை. அவன் கோவணம் விடத்தைக் கக்குகின்ற பாம்பு. அவன் ஜபம் செய்யக்கொண்ட மாலை பளிங்கு. உறையும் நெய்யைச் சொரிந்து பாதுகாக்கப்படும் ஒளி பொருந்திய விளக்கு அக்கினியே.

விளக்கவுரை

`நான்கும்` என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று. கழுது - பேய். கரி காடு - கரிகின்ற காடு; சுடுகாடு. கவந்திகை - உணவு. `போர்வை கரிஉரி, கவந்திகை திரிந்தூண்` என நிரல் நிறையாகக் கொள்க. திரிந்து ஊண் - அலைந்து ஏற்கும் உண்டி. தழல் உமிழ் - கண் ணால் நெருப்பைச் சிந்துகின்ற; என்றது `சீற்றத்தையுடைய` என்றபடி. பளிங்கு - படிகமணி. `சாட்டியக்குடியார் ஓம்பு அழல்` விளக்கு என்க. இழுது நெய் - வெண்ணெயை அப்பொழுது உருக்கிக்கொண்ட நெய். `பணி கேட்டுச் சூழ்பவர் அயன் முதலிய தேவர்களும், அறிய மாட்டாது ஆய்ந்து தொடரும் நூல்கள் வேதங்களும் ஆகிய பெருமை கள் காணப்படினும், அவன் உறைவிடம் சுடுகாடு முதலியவையாய் உள்ளன; இஃது அறிதற்கரிதாய் இருந்தது` என்றவாறு. இங்கும், `உறைவிடம் கரிகாடு; கோவணம் அரவம்; சபவடம் பளிங்கு; விளக்கு அழல்` என மாற்றுக. ``பளிங்கு`` என்றது, மாணிக்கம் முதலிய பிற இரத்தினங்களல்லாமையை உட்கொண்டது.

பதிகம்நான் மறைதும் புருவும்நா ரதரும்
பரிவொடு பாடுகாந் தர்ப்பர்
கதியெலாம் அரங்கம் பிணையல்மூ வுலகில்
கடியிருள் திருநடம் புரியும்
சதியிலார் கலியில் ஒலிசெயும் கையில்
தமருகம் சாட்டியக் குடியார்

இதயமாம் கமலம் கமலவர்த் தனைஏழ்
இருக்கையில் இருந்தஈ சனுக்கே. #157

சாட்டியக்குடியில் எழுநிலை விமானத்தின் கீழ்க் கருவறையில் இருக்கும் பெருமானுக்குத் தாம் பாடும் பாடல் தொகுதி வேதங்களே. விருப்போடு பாடும் கந்தருவர்கள் தும்புருவும் நாரத ரும், அவர்கள் சேரும் இடம் ஆவன எல்லாம் அரங்கம். மாலைபோல அமைந்த மூவுலகங்களிலும் அஞ்ஞானமாகிய இருளைப் போக்கத் திருநடம் புரிய அடிபெயர்த்தலின் கையில் உள்ள உடுக்கை கடலைப் போல ஒலிசெய்யும். உள்ளத்தில் உள்ள அன்பையே தாம் விரும்பும் பொருளாகக் கொள்ளுதலின் அடியவர் இதயமே அவருக்குப் பதுமநிதி.

விளக்கவுரை

பதிகம் - (தாம் பாடிய) பாடற் றொகுதி. காந்தர்ப்பர் - கந்தருவர்; இசை பாடுவோர். கதியெலாம் அரங்கம் - அவர் சேரும் இடமாவன எல்லாம் அம்பலம். பிணையல் மூவுலகு - மாலைபோல் அமைந்த மூன்றுலகங்கள். `மூவுலகிலும்` என உம்மை விரித்து, `மூவுலகிலும் ஒலிசெயும்` என முடிக்க. சதியில் - அடிபெயர்த்தலில். ஆர்கலியில் - கடலைப்போல. `ஆர்கதியில்` என்பது பாடம் ஆகாமை யறிக. கமல வர்த்தனை - பதுமநிதி. உள்ளத்தில் உள்ள அன்பையே தாம் விரும்பும் பொருளாகக் கொள்ளுதலின், சாட்டியக்குடியாரது இதயங்களை இவ்வாறு கூறினார். `வர்த்தனை ஆசனம்` எனவும் உரைப்பர்.

திருமகன் முருகன் தேவியேல் உமையாள்
திருமகள் மருமகன் தாயாம்
மருமகன் மதனன் மாமனேல் இமவான்
மலையுடை யரையர்தம் பாவை
தருமனை வளனாம் சிவபுரன் தோழன்
தனபதி சாட்டியக் குடியார்
இருமுகம் கழல்மூன் றேழுகைத் தலம்ஏழ்
இருக்கையில் இருந்தஈ சனுக்கே. #158

எழுநிலை விமானத்தின் கீழ்க் கருவறையில் உறையும் சாட்டியக்குடி ஈசனுக்குத் திருமகன் முருகன். தேவி உமையாள். மருமகன் காமன். மருமகனுடைய தாய் திருமகள். மாமன் இமவான். மலையரசனாகிய இமவானுடைய மகள் இன்பத்தைத் தருகின்ற மனைவி. செல்வம் சிவபுரம். நண்பன் குபேரன். சாட்டியக் குடியாருக்கு முகங்கள் இரண்டு. திருவடிகள் மூன்று. கைத்தலங்கள் ஏழே.

விளக்கவுரை

``மருமகன் தாய்`` என்றது, `தங்கை` என்றபடி. உமாதேவியை, `திருமால்

தங்கை` என்பதுபோலத் திருமகளை, `சிவபெருமான் தங்கை` என்றலும் வழக்கு. ``அரையர்`` என்றது உயர்வுப் பன்மை. தரு மனை - இன்பத்தைத் தருகின்ற மனைவி. `தருமலி` என்பது பாடம் அன்று. `வளன், புரன்` என்பன `வளம், புரம்` என்பவற்றது போலி. வளன் சிவபுரன் - செல்வமாவது சிவபுரம். ``சாட்டியக்குடியார்`` என்றதனை, `கைத்தலம்` என்பதன் பின்னர்க் கூட்டுக. ``இரு முகம்`` என்றது, `முகம் இரண்டு` என்னும் பொருட்டு. ``முகம் இரண்டு; கழல் *(பாதம்)* மூன்று; கைத்தலம் ஏழு`` என்றது, மாதொரு கூறாகிய *(அர்த்தநாரீசுர)* வடிவத்தை ஒரு நயம்படக் கூறியவாறு. இறைவன் இறைவியர் முகங்கள் இரண்டும் ஒன்றாய் இயைந்தனவாயினும் அவை ஆண்முகமும், பெண் முகமுமாய் வேறுபட்டு விளங்குதலின், ``இருமுகம்`` என்றார். இறைவனது இடத்திருவடியும், இறைவியது வலத்திருவடியும் ஒன்றாய் விடுதலால் கழல்கள் மூன்றாயின. இறைவனுடைய இடக்கை இரண்டில் ஒன்றும், இறைவியுடைய வலக்கை இரண்டில் ஒன்றும் ஒன்றாய்விடுதலால் கைத்தலங்கள் ஏழாயின.

``தோலுந் துகிலும் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலம்`` - *(தி.8 திருக்கோத்தும்பி 18)*

``உருவிரண்டும் ஒன்றொடொன் றொவ்வா அடி`` *(தி.6 ப.6 பா.6)*
என்றாற்போல முன்னையாசிரியர் வியந்தருளிச் செய்ததனை, இவ்வாசிரியர் இவ்வாறாக வியந்தருளிச் செய்தார் என்க.

அனலமே புனலே அனிலமே புவனி
அம்பரா அம்பரத் தளிக்கும்
கனகமே வெள்ளிக் குன்றமே என்றன்
களைகணே களைகண்மற் றில்லாத்
தனியனேன் உள்ளம் கோயில்கொண் டருளும்
சைவனே சாட்டியக் குடியார்க்
கினியதீங் கனியாய் ஒழிவற நிறைந்தேழ்
இருக்கையில் இருந்தவா றியம்பே. **#159**

சாட்டியக்குடியில் உள்ள மக்களுக்கு மிக இனிய பழமாய் நீக்கமற நிறைந்து எழுநிலை விமானத்தின்கீழ்க் கருவறையில் உள்ள பெருமானே! பஞ்சபூத வடிவானவனே! விண்ணில் கொடுக்கப் படுகின்ற பொன்னுலகமே! வெள்ளி மலையே! அடியேன் பற்றுக் கோடே! உன்னைத்தவிர வேறு பற்றுக்கோடில்லாத அடியேனுடைய உள்ளத்தையே இருப்பிடமாகக்கொண்டு அருளும் மங்கலமான வடிவினனே! அத்தகைய நீ சாட்டியக்குடியில் வந்து உறையும்

காரணத்தைக் கூறுவாயாக.

விளக்கவுரை

`அனல்` என்பது ஈற்றில் அம்முப் பெற்று நின்றது. அனிலம் - காற்று. ஏனையவற்றோடொப்ப, ``புவனி`` என்பதிலும் விளியுருபாகிய ஏகாரம் விரிக்க. புவனி - பூமி. அம்பரா - ஆகாயமாய் உள்ளவனே; இங்கு இவ்வாறு உயர்திணையாக விளித்தமையால், `அனலம்` முதலியவற்றையும் ஆகுபெயராகக் கொள்க. அம்பரத்து அளிக்கும் கனகமே - (நல்வினை செய்தோர்க்கு) விண்ணில் கொடுக்கப்படுகின்ற பொன்னுலகமே. வெள்ளிக் குன்றமே - சிவனடியார்கட்கு அளிக்கப்படுகின்ற கயிலை மலையே. களைகண் - துணை. சைவன் - சிவம் (மங்கலம்) உடையவன். `சைவன்` என்றது சிவபெருமானைக் குறிக்குமிடத்து. `சிவம்` என்னும் சொல் பண்பினை உணர்த்தி நிற்கும். அவன் அடியார்களைக் குறிக்குமிடத்து அச்சொல் அப்பண்பினையுடைய முதற் பொருளைக் குறித்துநிற்கும்.

செம்பொனே பவளக் குன்றமே நின்ற
திசைமுகன் மால்முதற் கூட்டத்
தன்பரா னவர்கள் பருகும்ஆ ரமுதே
அத்தனே பித்தனே னுடைய
சம்புவே அணுவே தாணுவே சிவனே
சங்கரா சாட்டியக் குடியார்க்
கின்பனே எங்கும் ஒழிவற நிறைந்தேழ்
இருக்கையில் இருந்தவா றியம்பே. **#160**

செம்பொன்னே! பவளமலையே! பிரமன், திருமால் முதலியோர் கூட்டத்தில் உள்ள அன்பர்கள் உண்ணும் அரிய அமுதமே! தலைவனே! பித்தனாகிய அடியேனை ஆட்கொண்ட இன்பத்தைத் தோற்றுவிப்பவனே! அணுவே! அசைவு இல்லாதவனே! இன்பத்தைச் செய்பவனே! நன்மையைச் செய்பவனே! சாட்டியக் குடியில் உள்ளவர்களுக்கு இனியனே! அத்தகைய நீ எல்லா இடங் களிலும் நீக்கமற நிறைந்தும் சாட்டியக்குடி எழுநிலை விமானத்தின் கீழ்க் கருவறையில் உறையும் காரணத்தைக் கூறுவாயாக.

விளக்கவுரை

`பித்தனேனை` என்னும் இரண்டனுருபு தொகுத்தலா யிற்று. சம்பு - இன்பத்தைத் தோற்றுவிப்பவன். தாணு - அசை வில்லாதவன். சங்கரன் - இன்பத்தைச் செய்பவன்.

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள்வீற் றிருந்த

அங்கணா போற்றி அமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கணான் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கணா யகனே போற்றிஏ ழிருக்கை
யிறைவனே போற்றியே போற்றி **#161**
திருமாலே! நான்முகனே! சிவபுரத்தில் வீற்று இருக்கும் அழகிய கண்களையுடைய சிவனே! தேவர்கள் கூட்டத்தி னனே! இந்திரனே! தங்களுக்கே உரியதான வேதம் முதலிய நூல்கள் யாவற்றையும் கற்ற சான்றோர்கள் வாழும் சாட்டியக்குடியில் இருந்து அருள்செய்கின்ற எங்கள் தலைவனே! எழுநிலை விமானத்தின் கீழ் இருக்கும் இறைவனே! உனக்கு வணக்கங்கள் பல.

விளக்கவுரை

செங்கணா - திருமாலே. போற்றி - வணக்கம். திசை முகா - பிரமதேவனே. சிவபுர நகருள் வீற்றிருந்த அங்கணா - சிவனே. அமரனே - தேவகூட்டத்தினனே. அமரர்கள் தலைவனே - இந்திரனே. சிவபெருமான் ஒருவனே இவர் யாவருமாய் நின்று அருள் செய்தல் பற்றி இவ்வாறு கூறினார். ``தங்கள் நான்மறை நூல்`` என்றதனால், திருச்சாட்டியக்குடியில் உள்ளோர் அந்தணர் என்பது பெறப்படும்.

சித்தனே அருளாய் செங்கணா அருளாய்
சிவபுர நகருள்வீற் றிருந்த
அத்தனே அருளாய் அமரனே அருளாய்
அமரர்கள் அதிபனே அருளாய்
தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச் சூழல்
சாட்டியக் குடியுள்ஏ ழிருக்கை
முத்தனே அருளாய் முதல்வனே அருளாய்
முன்னவா துயர்கெடுத் தெனக்கே. **#162**
எல்லாம் வல்லவனே! நெருப்புக் கண்களை உடையவனே! சிவபுர நகரில் வீற்றிருந்த தலைவனே! தெய்வ வடிவினனே! தேவர்கள் தலைவனே! நீர் மோதுகின்ற குளங்களையும் சோலையையும் உடைய சூழலை உடைய சாட்டியக்குடியில் எழு நிலை விமானத்தின் கீழ்க் கருவறையில் உறையும் முத்தி அருள வல்லவனே! முதல்வனே! எல்லோருக்கும் முற்பட்டவனே! அடியே னுடைய துயரங்களைப்போக்கி அருளுவாயாக என்று முறை யிட்டவாறு.

விளக்கவுரை

சித்தன் - எல்லாம் வல்லவன். செங்கணன் - நெருப்புக்

கண்ணையுடையவன். அமரன் - தெய்வ வடிவினன். அமரர்கள் அதிபன் - தேவர்கள் தலைவன். படுகர் - குளம். தண்டலை - சோலை. `படுகரையும், தண்டலையையும் உடைய சூழலையுடைய சாட்டியக்குடி `என்க. ``முன்னவா`` என்றதனை முதலிலும், ``துயர் கெடுத்து எனக்கு`` என்றதனை, `சித்தனே` என்றதன் பின்னும் கூட்டுக. இங்ஙனம் கூட்டவே, இஃது ஏனைப் பெயர்களின் பின்னும் வந்து இயைதல் அறிக. `துயர்கெடுத்து எனக்கு அருளாய்` எனப் பலமுறை யும் கூறியது, முறையீடு தோன்ற.

தாட்டரும் பழனப் பைம்பொழிற் படுகர்த்
தண்டலைச் சாட்டியக் குடியார்
ஈட்டிய பொருளாய் இருக்குமே ழிருக்கை
இருந்தவன் திருவடி மலர்மேற்
காட்டிய பொருட்கலை பயில்கரு வூரன்
கழறுசொன் மாலைஈ ரைந்தும்
மாட்டிய சிந்தை மைந்தருக் கன்றே
வளரொளி விளங்குவா னுலகே. **#163**

முயற்சியை உளதாக்கும் வயல்களையும், பசிய சோலைகளையும், குளங்களையும், தோட்டங்களையும் உடைய சாட்டியக்குடியிலுள்ளார் ஈட்டிய செல்வமாய் எழுநிலை விமானத்தின் கீழ் இருக்கும் பெருமானுடைய திருவடி மலர்கள் தொடர்பாக மெய்ப்பொருளைக் காட்டும் கலைகளைப் பயின்ற கருவூர்த்தேவர் பாடிய சொல்மாலையாகிய இப்பத்துப்பாடல்களையும் பொருந்திய மனத்தை உடைய சான்றோருக்கு வளர்கின்ற ஒளி விளங்கும் சிவ லோகம் உளதாவதாம்.

விளக்கவுரை

தாள் தரும் பழனம் - முயற்சியை (உழவை) உளதாக்கும் வயல்கள். இதில் டகர ஒற்று விரித்தல். `பழனத்தையும், பொழிலையும், படுகரையும், தண்டலையையும் உடைய சாட்டியக் குடி` என்க. ``காட்டிய பொருளையுடைய கலை`` என்றது, `பொருளைக் காட்டிய கலை` என்றபடி. பொருள் - மெய்ப்பொருள். ``ஈரைந்தும் மாட்டிய`` என்றது, இரண்டாவதன் தொகை. மாட்டிய - பொருத்திய. ``வானுலகு`` என்றதன்பின், `உளதாவது` என்பது சொல் லெச்சமாய் நின்றது.

கருவூர்த் தேவர் - தஞ்சை இராசராசேச்சரம்

உலகெலாம் தொழவந் தெழுக திர்ப்பரிதி
ஒன்றுநூ றாயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ
அங்ஙனே யழகிதோ அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் டிங்கள்
இலைகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. #164

கோட்டை, பலவாக அழகு பொருந்திய பொருட் கூட்டத்தால் எடுப்பிக்கப்பட்ட நெடுநிலையாகிய எழுநிலை மாடங் கள் ஆகியவை, வெள்ளிய சந்திரன் பெரிய மலைப்பகுதியிலே தவழ்வதுபோல வெள்ளித்தகடுகள் மதிலிலுள்ள மேடைகளில் பதிக்கப்பட்டுக் காட்சி வழங்கும் மதில்களால் சூழப்பட்ட தஞ்சை யிலுள்ள இராசராசேச்சரம் என்ற திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானுக்கு, உலகங்களெல்லாம் தொழுமாறு வந்து தோன்றுகின்ற நூறாயிரகோடி பரிதிகளின் ஒளியினை உடைய சூரியன் உளதாயின் அதன் அளவாகிய ஒளியினை உடைய திருவுடம்பு வியக்கத்தக்கவகையில் பேரழகினதாக உள்ளது.

விளக்கவுரை

`எழு பரிதி` என இயையும். பரிதி - சூரியன். `நூறாயிர கோடி பரிதிகளின் ஒளியினை உடைய பரிதி ஒன்று உளதாயின், அதனது அளவாய் ஒளியினை உடைய திருவுடம்பு` என்க. ``திரு வுடம்பு`` என்றதன்பின்னர், `உண்டு` என்பது எஞ்சிநின்றது. ``அழகிது`` என்றதற்கு, `அஃது` என்னும் எழுவாய் வருவிக்க. ஓகாரம், சிறப்பு. அரணம் - கோட்டை. `பல மாடம்` என்க. குலாம் படை செய் - அழகுபொருந்திய பொருட் கூட்டத்தால் செய்யப்பட்ட. ``பருவரை`` என்பதில், `போல` என்பது விரித்து, `பெரிய மலையிடத்துத் தவழ்தல் போல` என உரைக்க. `வெண்டிங்களாகிய இலை` என்க. இலை - தகடு. வெள்ளித் தகட்டைக் குறித்தவாறு. பதணம் - மதிலுள் மேடை. இஞ்சி - மதில். `அரணத்தை, இஞ்சிசூழ் தஞ்சை` என்க. `இவர்க்கு அலகெலாம் பொதிந்த திருவுடம்பு உண்டு` என முன்னே சென்று முடியும். தஞ்சை, `தஞ்சாவூர்` என்பதன் மரூஉ.

நெற்றியிற் கண்ணென் கண்ணினின் றகலா
நெஞ்சினில் அஞ்சிலம் பலைக்கும்
பொற்றிரு வடிஎன் குடிமுழு தாளப்

புகுந்தன போந்தன வில்லை
மற்றெனக் குறவென் மறிதிரை வடவாற்
றிடுபுனல் மதகில்வாழ் முதலை
எற்றுநீர்க் கிடங்கின் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. **#165**

உயர்ந்து மடங்குகின்ற அலைகளை உடைய வடவாற்றில் ஓடும் நீரை, அதன்கண் அமைந்த தலைமதகில் வாழும் முதலைகள் வாரி எறிகின்ற நீரால் நிரம்பிய அகழிகளால் சூழப்பட்ட மதில்களை உடைய தஞ்சை இராசராசேச்சரத்து எம்பெருமானுடைய நெற்றிக்கண் என் கண்களினின்று அகலமாட்டாது. என் நெஞ்சினில் அழகிய சிலம்பு ஒலித்துக்கொண்டிருக்கிறது. அழகிய திருவடிகள் அடியேனுடைய குடி முழுதையும் ஆள்வதற்கு அடியேனிடம் புகுந்தன. அடியேனை விடுத்துப் புறத்துச் செல்லவில்லை. இங்ஙன மாதலின் அடியேனுக்கு வேறு யாது உறவு வேண்டும்?

விளக்கவுரை

`அகலாது` என்பது, ஈறு குறைந்தது. `நெஞ்சில் புகுந்தன` என இயையும். பொன் - அழகு. திரு - மேன்மை. போந்தன இல்லை - புறத்துச் செல்லவில்லை. `இங்ஙனமாகலின் எனக்கு மற்று உறவு என்` என்க. `வடவாறு` என்பது தஞ்சாவூரின் வடக்குப்புறத்தில் ஓடும் ஓர் ஆறு. இடு - அதன் கண் அமைக்கப்பட்ட. புனல் மதகு - நீரையுடைய வாய்க்கால் தலைமதகு. `நீர்சூழ்` என இயையும். கிடங்கில் - அகழிபோல. ``இவர்க்கு`` என்பது, முன் உள்ள `அகலா, புகுந்தன, போந்தன வில்லை` என்பவற்றோடு முடியும். நான்கனுருபு, `இவற்கு இஃது இயல்பு` என்றல்போலப் பண்புத் தற்கிழமைக்கண் வந்தது.

சடைகெழு மகுடம் தண்ணிலா விரிய
வெண்ணிலா விரிதரு தரளக்
குடைநிழல் விடைமேற் கொண்டுலாப் போதும்
குறிப்பெனோ கோங்கிண ரனைய
குடைகெழு நிருபர் முடியொடு முடிதேய்ந்
துக்கசெஞ் சுடர்ப்படு குவையோங்
கிடைகெழு மாடத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. **#166**

கோங்கம் பூங்கொத்துக்களை ஒத்த வெண் குடைகள் பொருந்திய அரசர்களுடைய கிரீடங்கள் நெருக்கம் காரண மாக ஒன்றோடொன்று உராய்வதனால் தெறித்து விழுந்த செம்மையான ஒளியோடு கிடக்கும் இரத்தினக் குவியல்கள் மிக இருக்கும் வீதிகளில் பொருந்திய மாடங்களை மதில்கள் சூழும் தஞ்சை இராசராசேச்சரத்து எம்பெருமான்,

சடையிலே பொருந்திய கிரீடம் தெளிந்த நிலாப் போன்ற ஒளியைப் பரப்ப, வெள்ளிய ஒளியைப் பரப்பும் விரிக்கப்பட்ட முத்துக்குடை நிழலிலே காளை மீது இவர்ந்து திருவுலா வரும் கருத்துத்தான் யாதோ? என்று எம்பெருமான் வீதி உலாக் காட்சியில் அவனைக்கண்டு காதல் கொண்ட இளமகள் ஒருத்தியின் கூற்று அமைந்தவாறு.

விளக்கவுரை

`மகுடத்தின்கண்` என உருபு விரிக்க. `வெண்ணிலா விரிதரு குடை` என்க. தரளத்தால் வெண்ணிலா விரிவதாயிற்று. தரளம் - முத்து. குறிப்பு - கருத்து. ``குறிப்பென்னோ`` என்றது, `மாதர் உள்ளங்களைக் கவர்வதுபோலும்` என்னும் குறிப்புடையது. கோங்கு இணர் - கோங்கம்பூக்கொத்து; இது குடைக்கு வடிவுவமை. துணியால் ஆக்கப்பட்ட குடைக்கு இவ்வுவமை பொருந்துவதாகும்.
தேய்ந்து - தேய்தலால். உக்க - உதிர்ந்த. `உக்க குவை` என இயையும். ``செஞ்சுடர்ப்படு குவை`` என்றதனால், `மாணிக்கக் குவை` என்பது தோன்றிற்று.
படு - உண்டாகின்ற. குவை ஓங்கு இடைகெழு மாடம் - குவியல்கள் மிக்கிருக்கின்ற இடத்திற் பொருந்திய மாடம். இடம், வீதி. `இடைகழி மாடம்` என்பதும் பாடம். `மாடத் தஞ்ை \

விளக்கவுரை

வாழி, அசைநிலை. அம்பு ஓதத்து - நீரின் அலைகளில். நீர், வடவாற்றில் உள்ளது. பாய - பரவிய; இதன் இறுதியகரம் தொகுத்தலாயிற்று. விடயம் - பொருள்கள். அடுத்த சூழல் - சார்ந்துள்ள சுற்றிடம். `பளிங்கின் மண்டலம்` என இயையும். பாசலராதிச் சுடர்விடு மண்டலம் - பச்சிலையோடு கூடிய மலர் முதலியவற்றின் உருவத்தைப் பொருந்திய வட்டம். `வடவாற்றில் உள்ள நீரின் அலைகள் உயர்ந்தெழும் போது வெள்ளிய அவ் வலைகளில் அருகில் உள்ள சோலையின் தழைகள், பூக்கள் முதலியன தோன்றுதல், தஞ்சை நகரத்தைச் சுற்றிலும் பச்சிலையும், பூவும் ஓவியமாகத் தீட்டப்பட்ட பளிங்குச் சுவர் அமைக்கப்பட்டதுபோலத் தோன்றுகின்றது` என்பதாம். `விளக்கலின்` என்பது பாடமாயின், `அந்நகரம் விளக்கி நிற்றலின்` என உரைக்க. காழ் - வயிரம். `மாளிகைக்கண்` என ஏழாவது விரிக்க. அங்குலி கெழும - விரல் பொருந்த. சிலம்பும் - ஒலிக்கும். `இவர்க்கே யாழொலி சிலம்பும்` என முடிக்க. இதனால், `தஞ்சை நகர மகளிர் இரவும் பகலும் இராசராசேச்சரமுடையாரை யாழிசையால் துதிப்பர்` என்பது கூறப்பட்டது.

எவருமா மறைகள் எவையும்வா னவர்கள்
ஈட்டமும் தாட்டிருக் கமலத்
தவருமா லவனும் அறிவரும் பெருமை
அடல்அழல் உமிழ்தழல் பிழம்பர்
உவரிமா கடலின் ஒலிசெய்மா மறுகில்
உறுகளிற் றரசின தீட்டம்
இவருமால் வரைசெய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. **#168**

உவர்ப்பை உடைய பெரிய கடல் போலப் பேரொலி கேட்கப்படும் பெருந்தெருக்களில் உலவும் பெரிய அரச உவாக்களின் கூட்டம் ஏறும்படியான மலையைப் போல அமைந்த மதில்களால் சூழப்பட்ட தஞ்சை இராசராசேச்சரத்தில் உறையும் பெருமானார் மக்கள் யாவரும், சிறந்த வேதங்களாகிய எவையும், தேவர்கள் கூட்டமும், தாமரையில் வாழும் பிரமனும், திருமாலும் அறியமுடியாத பெருமையை உடையவராய்ப் பிறரை வருத்தும் வெப்பமுடைய தழல் வடிவினராய் உள்ளார்.

விளக்கவுரை

``எவரும்`` என்றதற்கு, `மக்கள் யாவரும்` என உரைக்க. தாள் திருக் கமலம் - தண்டினயுடைய அழகிய தாமரை மலர். அதன்கண் இருப்பவர்,

பிரமதேவர். பிரமனைப் பன்மையாற் கூறியது முடிதேடி வந்தபொழுது. `அறிந்து வந்தேன்` எனப் பொய் கூறிய இழிவை உட்கொண்டு. அறிவரு - அளவறியப்படாத. அளவறியப் படாமையை வெளிப்படுத்தினோர் அயனும், மாலுமாயினும் அறிய மாட்டாமை அனைவர்க்கும் பொதுவாதல் பற்றி, அவ்விருவரோடு, ஏனைய பலரையும் உளப்படுத்துக் கூறினார். பெருமை, அடி பாதலத்தைக் கடந்தும், முடி அண்டங்கள் எல்லாவற்றையும் கடந்தும் நின்றமை. `பெருமையையுடைய தழல்` என்க. அடல் - அடுதல்; வருத்துதல். வருத்துதலையுடைய அழல் என்க . அழல் - வெப்பம். பிழம்பர், `பிழம்பு` என்பதன் போலி. பிழம்பு - வடிவம். உவரி - உவர்ப்புடையதாகிய. ``அரசு`` என்றது பன்மை குறித்து நின்றது. `மா மறுகில் உறு களிற்றினது ஈட்டம் மாகடலின் ஒலிசெய்` என மாற்றி அதனையும், `இஞ்சி சூழ்` என்பதனையும், `தஞ்ை \\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\*u2970?*` என்பதனோடு தனித்தனி முடிக்க. இவரும் - உயர்ந்த. ``மால் வரை செய்`` என்றதில் உள்ள செய், உவம உருபு. `இவர்க்குப் பிழம்பர் தழல்` என முடிக்க.

அருளுமா றருளி ஆளுமா றாள
அடிகள்தம் அழகிய விழியும்
குருளும்வார் காதும் காட்டியான் பெற்ற
குயிலினை மயல்செய்வ தழகோ
தரளவான் குன்றில் தண்ணிலா ஒளியும்
தருகுவால் பெருகுவான் தெருவில்
இருளெலாங் கிழியும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. **#169**

முத்தினாலாகிய பெரியமலைபோலக் குளிர்ந்த நிலவொளி வீசும் மாடங்களின் திரட்சி மிக்கிருக்கின்ற பெரிய தெருக்களால் இருட்டு எல்லாம் நீக்கப்படுகின்ற, மதில்களால் சூழப்பட்ட தஞ்சை இராசராசேச்சரத்து உறையும் எம்பெருமான் அருள வேண்டிய முறைப்படி அருள்செய்து ஆட்கொள்ள வேண்டிய முறைப்படி அடிமைகொள்ளுவதற்குத் தம் அழகிய விழிகளையும், சுருண்ட சடைமுடியையும், நீண்ட காதுகளையும், மற்றவர் காணுமாறு காட்சி வழங்கி, யான் பெற்ற குயில் போன்ற இனிய குரலை உடைய என்மகளைக் காம மயக்கம் அடையுமாறு செய்துள்ள செயல் அவர் அருள் உள்ளத்துக்கு அழகு தருவது ஆகுமா?

விளக்கவுரை

அடிகள் - *(யாவர்க்கும்)* தலைவர். `அடிகளாகிய தம்` என உரைக்க. குருள் - சுருள்; சடைமுடி. `அழகோ` ஓகாரம் சிறப்பு; எதிர்மறையாயின்,

`ஆளா அடிகள்` என்பது பாடமாதல் வேண்டும். தரள வான்குன்றில் - முத்தினாலாகிய பெரிய மலைபோல. ``ஒளியும்`` என்ற உம்மை சிறப்பு. குவால் - (மாடங்களின்) திரட்சி. `மாடங்களின்` என்பது ஆற்றலாற் கொள்ளக்கிடந்தது. இருளெலாம் - இருள் முழுதும். `கிழியும் தஞ்ை\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\u2970?` என இயைக்க.

தனிப்பெருந் தாமே முழுதுறப் பிறப்பின்
தளிர்இறப் பிலையுதிர் வென்றால்
நினைப்பருந் தம்பாற் சேறலின் றேனும்
நெஞ்சிடிந் துருகுவ தென்னோ
சுனைப்பெருங் கலங்கற் பொய்கையங் கழுநீர்ச்
சூழல்மா ளிகைசுடர் வீசும்
எனைப்பெரு மணஞ்செய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. **#170**

சுனையைப் போல ஆழமான, மூழ்கும் மகளிருடைய சந்தனச்சேற்றால் கலங்குதலை உடைய பொய்கைகளில் உள்ள கழுநீர்ப்பூக்கள் தம்மைச் சுற்றிலும் உள்ள ஒளிவீசும் மாளிகைகளில் எத்துணைப் பெரிய நறுமணத்தையும் பரப்பும் படியான, மதில்களால் சூழப்பட்ட தஞ்சையில் உள்ள இராசராசேச் சரத்துப் பெருமானார், தனிப் பெருந்தலைவராய் எல்லாவிடத்தும் வியாபித்து இருக்கவும், பிறப்பாகிய தளிர் இறப்பாகிய இலை உதிர் நிலையை எய்திற்றாயின் அதுபோது நினைத்தற்கும் அரிய இவர்பால் செல்லுதல் இயலாமை அறிந்தும் மனம் கலங்கி இப்பெருமான் திறத் தில் மனம் உருகுவது யாது கருதியோ? தொடக்கம் தொட்டே இறை வனை நினைந்து உருகும் உள்ளத்தோடு செயற்படவேண்டும் என்பது.

விளக்கவுரை

``தாம்`` என்றது இறைவரை. முழுதுற - எவ்விடத்தும் இருக்க. `உறவும்` என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. பிறப்பின் தளிர் இறப்பு இலை உதிர்வு என்றால் - உடம்பாகிய தளிர் இறப்பாகிய இலை உதிர்நிலையை அணுகிற்றாயின். நினைப்பருந் தம்பால் சேறல் இன் றேனும் - அதுபோழ்து நினைத்தற்கும் அரிய இவர்பால் செல்லுதல் இயலாமை அறிந்தும்.

நெஞ்சு இடிந்து இவர்க்கு உருகுவது என்னோ - மனங் கலங்கி இவர் திறத்தில் சிலர் உருகுவது யாது கருதியோ. `நன்றாக வாழ்ந்த காலத்தில் இவரை (இறைவரை) அடையாது இறக்குங் காலத்தில் சிலர் இவரை நினைந்து உருகுவது என்னோ` என்பது இதன் முன்னிரண்டிகளில் சொல்லப்பட்ட பொருள். ``முழுதுற`` என்றது, முன்னர் எளிதாயிருந்த செயல், பின்னர் இயலாததாய நிலையைக் குறித்தற்கு. ``பிறப்பின்``

என்றதில் இன், அல்வழிக்கண் வந்த சாரியை. `சுனைப்பொய்கை` என்று இயைத்து, `சுனைபோல ஆழ்ந்த பொய்கை` என உரைக்க.
கலங்கல் - கலங்கல் நீர். கலங்குதல் மூழ்கும் மகளிரது சந்தனச் சேற்றாலாம். சூழல் - சூழ்ந்துள்ள. `சுடர் வீசும் மாளிகை` என மொழி மாற்றி, `மாளிகைக்கண்` என உருபு விரிக்க. எனைப் பெருமணம் செய் - எத்துணைப் பெரிய மணத்தையும் உண்டாக்குகின்ற (தஞ்சை என்க).
`பொய்கைகளில் உள்ள கழுநீர்ப் பூக்கள், சுற்றிலும் உள்ள மாளிகைகளில் தம் மணத்தை உண்டாக்குகின்ற தஞ்சை◌
u2970?` என்பது பின்னிரண்டடிகளில் அமைந்துள்ள பொருள்.

பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சுவீற் றிருந்த
எளிமையை யென்றுநான் மறக்கேன்
மின்னெடும் புருவத் திளமயி லனையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. **#171**

நீண்ட புருவத்தினை உடையராய், மின்னலைப் போன்று உடல் ஒளி வீசுகின்ற, இளமயில் போன்ற தம் இனிய பெண் மையை உடைய மகளிர் மலைபோல நிலைபெற்ற நாடக சாலைக்கண் இனிய கூத்தினைப் பழகும், மதில்களால் சூழப்பட்ட தஞ்சையில் உள்ள இராசராசேச்சரத்து எம்பெருமான் பற்பல ஆண்டுகள் திருத் தொண்டு செய்து பழைய அடியவர்கள் எம்பெருமான் திருவருளை வேண்டி வருந்தியிருக்கவும், அடியேனுடைய உள்ளத்தை எம்பெரு மான் தன்னுடைய பெரிய கோயிலாகக்கொண்டு அதன்கண் வீற்றிருக் கும் அவன் எளிவந்த தன்மைபற்றி அடியேன் யாது கூற வல்லேன்?

விளக்கவுரை

`பழையோர் பலர் பன்னெடுங்காலம் பணிசெய்து ஏம்பலித்திருக்க` எனக்கூட்டுக. ஏம்பலித்திருக்க - வருந்தியிருக்க. `கோயிலாக` என, ஆக்கம் வருவிக்க. ``நெஞ்சு`` என்றதனை, ``என்`` என்றதனோடு கூட்டுக. மறக்கேன் - மறவேன்; இவ்வாறு முன்னும் வந்தது. ``நெடும்புருவத்து`` என்பதனை முன்னே கூட்டி, `மின்னும் இளமயிலும் அனையார்` என உரைக்க. விலங்கல் - மலை. செய், உவம உருபு. `நாடக சாலைக்கண்` என உருபு விரிக்க.

மங்குல்சூழ் போதின் ஒழிவற நிறைந்து
வஞ்சகர் நெஞ்சகத் தொளிப்பார்;

அங்கழற் சுடராம் அவர்க்கிள வேனல்
அலர்கதி ரனையர் வா ழியரோ
பொங்கெழில் திருநீ றழிபொசி வனப்பிற்
புனல்துளும் பவிர்சடை மொழுப்பர்
எங்களுக் கினியர் இஞ்சிசூழ் தஞ்சை
இராசாரா சேச்சரத் திவர்க்கே. **#172**

மதில்களால் சூழப்பட்ட தஞ்சையில் இராசராசேச் சரத்தில் கோயில்கொண்டு அருளும் எம்பெருமான், மேகத்தால் மறைக்கப்பட்ட சூரியனைப்போல, தாம் எங்கும் நிறைந்திருந்தும், வஞ்சனை உடையவர்கள் உள்ளத்தில் மறைந்தே இருப்பார். எரிகின்ற விளக்குப்போல ஒளி உடையராய் இருக்கின்ற அன்பர்களுக்கு வேனிற்காலத்து ஒளிக்கதிர்களை விரித்து விளங்குகின்ற சூரியனைப் போலப் பேரொளி வீசி நிற்பார். மேம்பட்ட அழகிய உடம்பில் பூசப் பட்ட திருநீறு அழியும்படியாகக் கசியும் அழகினை உடைய கங்கை நீர் ததும்புகின்ற சடைமுடியை உடைய இவரை வணங்கி வாழ்த்துதற் பொருட்டு அடியேன் வாழ்வேனாக - இது தலைமகள் கூற்று.

விளக்கவுரை

மங்குல் சூழ் போதின் - மேகத்தால் மறைக்கப்பட்ட ஞாயிற்றைப்போல. `பாலின் நெய்போல` என்ற உவமைபோல, இஃது இறைவன் எங்கும் இருந்தும் விளங்காது நிற்றற்குக் கூறப்பட்ட உவமை. ``ஒழிவற நிறைந்து`` என்பதை முதலிற் கூட்டுக. அங்கு - அவ்விடத்தில்; நெஞ்சில். அழல் சுடராம் அவர்க்கு - எரிகின்ற விளக்குப்போல ஒளியுடையராய் இருக்கின்ற அன்பர்க்கு. வேனல் அலர் கதிர் அனையர் - வேனிற் காலத்து விரிந்து விளங்குகின்ற ஞாயிறு போலப் பேரொளி வீசிநிற்பவர். திருநீறு அழிபொசி வனப் பின் - திருநீறு அழிந்து குழைகின்ற அழகோடு. புனல் துளும்பு சடை மொழுப்பர் - நீர் ததும்புகின்ற சடைமுடியை உடையவர். `சடை யிலுள்ள நீர் தளும்புதலால் திருமேனியிற் பூசியுள்ள நீறு அழிந்து குழை கின்ற அழகையுடையவர்` என்பதனை இவ்வாறு கூறினார். ``வாழியர்`` என்றதனை வியங்கோளாகவும், ஓகாரத்தைச் சிறப்பாக வும் வைத்து ``வாழியரோ`` என்றதனை இறுதியிற் கூட்டி, `ஒளிப் பவரும், அனையவரும், இனியவரும் ஆகிய இவர்பொருட்டு (இவரை வணங்குதற் பொருட்டு) யான் வாழ்வேனாக` எனக் காத லுடையாள் கூற்றாக உரைக்க. இவ்வாறன்றி, `வாழி, அரோ என்பன அசைநிலைகள் எனக்கொள்ளின், இராசராசேச்சரத்து இவரே` என்பது பாடமாதல் வேண்டும்.

தனியர்எத் தனைஓ ராயிர வருமாந்

தன்மையர் என்வயத் தினராங்
கனியர்அத் தருதீங் கரும்பர்வெண் புரிநூற்
கட்டியர் அட்டஆ ரமிர்தர்
புனிதர்பொற் கழலர் புரிசடா மகுடர்
புண்ணியர் பொய்யிலா மெய்யர்க்
கினியரெத் தனையும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. **#173**

இஞ்சிசூழ் தஞ்சை இராசராசேச்சரத்து எம் பெருமான் தாம் ஒருவராகவும் இருப்பார். எத்தனையோ ஆயிரப் பொருள்களாக நிற்கும் தன்மையையும் உடையார். அடியேனுக்கு உரியவராகிய அப்பெருமான், பழமும், இனிமையைத் தருகின்ற அத்தன்மையை உடைய கரும்பும் போன்றவர். வெள்ளிய பூணூலை அணிந்தவர். மிகக் காய்ச்சிய பால்போல இனியர். தூயர். அழகிய வீரக் கழலை அணிந்தவர். முறுக்கிய சடையை மகுடம்போல அணிந்தவர். புண்ணிய வடிவினர். பொய் என்பது இல்லாத மெய்யன்பர்களுக்கு மிக இனியர். இவரை வணங்கி வாழ்த்துதற் பொருட்டு அடியேன் வாழ்வேனாக - இதுவும் தலைமகள் கூற்று.

விளக்கவுரை

தனியர் - ஒருவர். எத்தனை ஓராயிரமாம் தன்மையர் - எத்துணையோ ஆயிரப் பொருளாயும் நிற்கும் தன்மையை உடையவர், `ஏகன் அனேகன் இறைவன்` எனத் திருவாசகத்துள்ளும் *(தி.8 சிவபுராணம் - 5)* கூறப்பட்டது. என் வயத்தினராம் கனியர் - எனக்கு உரியவர் ஆகிய கனிபோல்பவர். ``அத் தரு தீங்கரும்பர்`` என்றதனை, `தீதரு அக்கரும்பர்` என மாற்றி, `இனிமையைத் தருகின்ற அத் தன்மையை யுடைய கரும்புபோல்பவர்` என உரைக்க. கட்டியர் - அணிந்தவர். அட்ட ஆரமிர்தர் - மிகக் காய்ச்சிய அரிய பால் போன்ற வர். மிகக் காய்ச்சிய பால் மிக்க சுவையுடைத்தாதல் அறிக. `பொய் இலா மெய்யர்க்கு எத்தனையும் இனியர்` என்க. ``இவர்க்கே`` என்றதன்பின் முன்னைத் திருப்பாட்டிற் சொல்லிய ``வாழியரோ`` என்றதனை இங்கும் வருவித்து முடிக்க. அவ்வாறு வருவியா தொழி யின், முன்னர்க் கூறியவாறே இங்கும், `இவரே` என்பதே பாடமாதல் வேண்டும்.

சரளமந் தார சண்பக வகுள
சந்தன நந்தன வனத்தின்
இருள்விரி மொழுப்பின் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவரை
அருமருந் தருந்தி அல்லல்தீர் கருவூர்
அறைந்தசொன் மாலைஈ ரைந்தின்

பொருள்மருந் துடையோர் சிவபத மென்னும்
பொன்னெடுங் குன்றுடை யோரே. **#174**

தேவதாரு, மந்தாரம், சண்பகம், மகிழ், சந்தனம் என்ற மரங்கள் அடர்ந்த நந்தனவனத்தின் இருள் அடர்ந்த உச்சியை உடைய மதில்களால் சூழப்பட்ட இராசராசேச்சரத்து எம்பெருமானை, அரிய காயகற்பத்தை அருந்தி இறத்தலைப் பலகாலம் நீக்கி வைத்த கருவூர்த்தேவர் பாடிய சொல்மாலையாகிய இப்பத்துப்பாடல்களின் சொற்பொருளாகிய அமுதத்தை நுகர்ந்த அடியார்கள் சிவபதம் என்னும் பொன்மயமான நெடிய மலையைத் தம் உடைமையாகப் பெறுவர்.

விளக்கவுரை

சரளம் - தேவதாரு. வகுளம் - மகிழ். நந்தனவனத்தின் இருள்விரி மொழுப்பின் இஞ்சி - நந்தனவனத்தின் இருள் அடர்ந்த உச்சியை உடைய மதில். அருமருந்து- காயகற்பம். இவ்வாசிரியர் காயகற்பம் அருந்தி நெடுநாள் வாழ்ந்தார் என்ப. அல்லல் - இறப்புத் துன்பம். பொருள் மருந்து - சொற்பொருளாகிய அமிர்தம்.

கருவூர்த் தேவர் - திருவிடைமருதூர்

வெய்யசெஞ் சோதி மண்டலம் பொலிய
வீங்கிருள் நடுநல்யா மத்தோர்
பையசெம் பாந்தள் பருமணி யுமிழ்ந்து
பாவியேன் காதல்செய் காதில்
ஐயசெம் பொன்தோட் டவிர்சடை மொழுப்பின்
அழிவழ கியதிரு நீற்று
மையசெங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. **#175**

படமெடுக்கும் சிவந்த பாம்பு ஒன்று செம்மணியை உமிழ்தலால் அடியேன் பெரிதும் விரும்பும் எம்பெருமானுருடைய காதில் அழகிய செம்பொன்மயமான தோடுபோல அவர் அணிந்த பாம்பாகிய குழை விளங்க, விளங்கும் சடைமுடியிலிருந்து கசியும் கங்கைநீரினால் அழிந்த அழகிய திருநீற்றினை உடையவராய், ஞாயிற்று மண்டலம் விளங்க அதனிடையே மிக்க இருளை உடைய நள்ளிரவும் உள்ளதுபோலத் தோன்றுகின்ற கரிய நிறத்தைக்கொண்ட சிவந்த கழுத்தினை உடையவராய் உள்ள, அண்டங்களில் உள்ள தேவர்களுக்கு எல்லாம் தலைவராகிய சிவபெருமான் தங்கியிருக்கும் இடம் திருஇடைமருதூர் என்ற திருத்தலமாகும்.

விளக்கவுரை

முதலடியை இறுதியடியின் முன் கூட்டுக. `ஓர் பாந்தள்` என இயையும். பைய - படத்தையுடைய. பாந்தள் - பாம்பு. உமிழ்ந்து - உமிழ்தலால்; இது, ``காதல் செய்`` என்பதனோடு முடியும். `சிவபெருமானது திருச்செவியில் செம்பொன் தோடேயன்றிப் பாம்பும் குழைபோல உள்ளது` என்க. ஐய - அழகிய. மொழுப்பு - முடி. `மொழுப்பினால் அழிகின்ற அழகிய திருநீறு` என்க. திருநீறு அழிதற்குக் காரணம் முன்னே *(தி.9 பா.170)* கூறப்பட்டது. வெய்ய செஞ்சோதி மண்டலம் - ஞாயிற்று மண்டலம். `ஞாயிற்று மண்டலம் விளங்க அதனிடையே மிக்க இருளையுடைய நள்ளிரவும் உள்ளது போலத் தோன்றுகின்ற கரிய நிறத்தை ஒருபுடை கொண்ட சிவந்த கழுத்து` என்க.
மைய - கருநிறத்தை யுடைய. `செம்பொற் றோட்டையும், அழகிய திருநீற்றையும், செங்கண்டத்தையும் உடைய கோன்` என்க.

இந்திர லோக முழுவதும் பணிகேட்
டிணையடி தொழுதெழத் தாம்போய்
ஐந்தலை நாக மேகலை யரையா
அகந்தொறும் பலிதிரி யடிகள்

தந்திரி வீணை கீதமுன் பாடச்
சாதிகின் னரங்கலந் தொலிப்ப
மந்திர கீதம் தீங்குழல் எங்கும்
மருவிடந் திருவிடை மருதே. #176

தேவர் உலகம் முழுவதும் தாம் இட்ட ஏவலைச் செவிமடுத்துத் தம் திருவடிகள் இரண்டனையும் தொழுது செயற்படப் புறப்படவும் தாம் ஐந்தலை நாகத்தைத் தம் புலித்தோல் ஆடைமீது மேகலையாக அணிந்து வீடுதோறும் பிச்சை ஏற்கத் திரியும் பெருமானார், நரம்புகளை உடைய வீணைகள் முதற்கண் பாடல் ஒலியை எழுப்ப, அவற்றோடு கலந்து உயர்ந்த யாழ் ஒலி வெளிப்பட, இனிய வேய்ங்குழலில் வாசிக்கப்படும் மந்திரப்பாடல்கள் எங்கும் பொருந்திய இடமாகிய திருஇடைமருது என்ற திருத்தலத்தில் உறைகிறார்.

விளக்கவுரை

`தம்மை விண்ணுலகம் முழுவதும் வணங்கிநிற்கத் தாம்போய் அகந்தோறும் பிச்சைக்கு உழல்கின்றார்` என்ப தாம். ``அடிகள்`` என்ற உயர்வுச் சொல்லும் இங்கு நகைப் பொருட்டாயே நின்றது.
தந்திரி - வீணை - நரம்புகளையுடைய வீணை. சாதி - உயர்ந்த. கின்னரம் - யாழ்; என்றது அதன் இசையை. வீணை முற் பட்டுப் பாட, யாழிசை அதனோடு ஒன்றி ஒலிக்கின்றது என்பதாம். `கீதமும் பாட` என்பது பாடம் அன்று. ``வீணை பாட`` எனக் கருவி வினைமுதல் போலக் கூறப்பட்டது.

பனிபடு மதியம் பயில்கொழுந் தன்ன
பல்லவம் வல்லியென் றிங்ஙன்
வினைபடு கனகம் போலயா வையுமாய்
வீங்குல கொழிவற நிறைந்து
துனிபடு கலவி மலைமக ளுடனாய்த்
தூங்கிருள் நடுநல்யா மத்தென்
மனனிடை யணுகி நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. #177

குளிர்ச்சி பொருந்திய சந்திரனின் பிறை போன்ற குருத்து, அதனைப்போன்ற தளிர், கொடி ஆகிய இவைபோன்ற பொருள்கள் வடிவாகச் செய்யப்படுகின்ற பொன்போல எல்லாப் பொருள்களுமாய், பரந்த உலகம் முழுதும் நீக்கமற நிறைந்து, புலவி யோடு கூடிய கலவியை நிகழ்த்தும் பார்வதியுடன் கூடியவராய், எல்லோரும் உறங்குகின்ற இருள் செறிந்த நடுஇரவில் வந்து என் மனத்தை அணுகி, யாவரும் அடியேனும் அறியாதவாறு என் உள்ளத்தினுள் கலந்த நுண்மையை உடைய எம்பெருமானார் உறையுமிடம்

திருஇடைமருதூராகும்.

விளக்கவுரை

பனி படு மதி - குளிர்ச்சி பொருந்திய சந்திரன்; என்றது பிறையை. கொழுந்து - குருத்து. அன்ன பல்லவம் - அவற்றோடொத்த தளிர். வல்லி - கொடி. என்று இங்ஙன் வினைபடு கனகம்போல யாவை யுமாய் - ஆகிய இன்னோரன்ன பொருள் வடிவமாகச் செய்யப் படுகின்ற பொன்போல எல்லாப் பொருள்களுமாய்; என்றது, `பொன் ஒன்றே பல பொருள்களாய் நிற்றல்போலத் தான் ஒருவனே எல்லாப் பொருளுமாய் நிற்கின்றான்` என்றவாறு. இது பரிணாமம் கூறியதன்று; கலப்புப் பற்றியே கூறியது. தூங்கு இருள் - மிக்க இருள். ``நடுநல் யாமத்து`` எனக் களவிற் கலக்கப்பட்ட தலைவியது கூற்றுப்போலக் கூறினார். `யாவரும் அறியாதவாறும், யானும் அறியாதவாறும் என் மனத்திடை அணுகினான்` என்பது உண்மைப் பொருள்.

அணியுமிழ் சோதி மணியினுள் கலந்தாங்
கடியனே னுள்கலந் தடியேன்
பணிமகிழ்ந் தருளும் அரிவைபா கத்தன்
படர்சடை விடமிடற் றடிகள்
துணியுமி ழாடை அரையில்ஓர் ஆடை
சுடர்உமிழ் தரஅத னருகே
மணியுமிழ் நாக மணியுமிழ்ந் திமைப்ப
மருவிடந் திருவிடை மருதே. **#178**

அழகை வெளிப்படுத்துகின்ற ஒளி இரத்தினத்தின் உள்ளே கலந்து நீக்கமற நிறைந்தாற்போல அடியேனுடைய உள்ளத்தில் கலந்து அடியேனுடைய தொண்டினை விரும்பி நிற்கும் பார்வதி பாகராகிய, பரந்த சடையையும், விடக்கறை பொருந்திய கழுத்தையும் உடைய பெருமானார், குறைதலை வெளிப்படுத்தி நிற்கின்ற மேல் ஆடை, இடுப்பில் ஓர் ஆடை, அதன்மேல் நாகரத்தினத்தை வெளிப்படுத்தும் பாம்பு அழகை வெளிப்படுத்திக் கச்சாக விளங்க, இவற்றை உடுத்து விரும்பித் தங்கியிருக்கும் இடம் திருஇடைமருதூர் ஆகும்.

விளக்கவுரை

அணி உமிழ் சோதி மணியின் உள் கலந்தாங்கு - அழகை வெளிப்படுத்துகின்ற ஒளி இரத்தினத்தின் உள்ளே கலந்தாற் போல. இவ்வுவமை, `இறைவன் அடியாரது உள்ளத்தில் கலந்தான் என்பதெல்லாம், மணியினுள் ஒளி கலந்தது போல்வதுதான்; அஃதாவது இயற்கையாயுள்ள கலப்பேயன்றிச் செயற்கையாய் வரும் கலப்பன்று` என்பதை விளக்கி நின்றது. `அடிகள் மருவிடம்` என இயையும். `படர்ந்த

சடையையும், விடத்தையுடைய மிடற்றையும் உடைய அடிகள்` என்க. `அரையில் ஓர் ஆடை துணி உமிழ் ஆடை யோடு சுடர் உமிழ்தர` என்க. துணி உமிழ் - குறைதலை வெளிப்படுத்தி நிற்கின்ற. `ஆடை` என்பது `ஆடுதல் உடையது` என்னும் பொருட் டாய் உத்தரீயத்திற்கே பெயராயினும், பொதுமையில் அரையில் உடுக்கப்படுவதாகிய உடையையும் குறித்தல் பற்றி உத்தரீயத்தை, ``துணியுமிழ் ஆடை`` என்றார். உத்தரீயம் உடையிற் குறைதல் பற்றி, `துண்டு` எனவும் வழங்கப்படுதல் அறிக. நாகம், கச்சாக அமைந்தது. `அணி உமிழ்ந்து` எனப் பிரிக்க.

பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவற்
படிவழி சென்றுசென் றேறிச்
சிந்தையுந் தானுங் கலந்ததோர் கலவி
தெரியினுந் தெரிவுறா வண்ணம்
எந்தையுந் தாயும் யானுமென் றிங்ஙன்
எண்ணில்பல் லூழிக ளுடனாய்
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. **#179**

உலகியல் கட்டுக்களையும், அவற்றிலிருந்து விடுதலை பெறுதலையும் ஆராய்கின்ற பொருள் பற்றிக் கூறுகின்ற தத்துவ சாத்திரங்களாகிய படிவழியில் பலகாலும் ஈடுபட்டுச் சென்றபின் சிவநெறி எய்தி என் சிந்தையும் தானும் கலந்த கலவி யானது ஆராய்ந்தாலும் விளங்காதபடி என் தந்தையேயாகியும், என் தாயேயாகியும், யானே ஆகியும், இவ்வாறு பல ஊழிக்காலங்கள் உடனாகி, வேறாய் நின்று பின்னர் வந்து ஒன்றாய்க் கலவாது பண்டே சித்துப் பொருளாகிய உயிரினும் நுண்ணியனாய் ஒன்றாய் இருந்து பின்னர் விளங்கித்தோன்றும் இடம் திருஇடைமருதூராகும்.

விளக்கவுரை

பந்தம் - கட்டு; பிரிவு - வீடு. தெரி - இவ்விரண்டன் தன்மையையும் ஆராய்கின்ற. `தெரிபனுவல், பொருட்பனுவல்` எனத் தனித்தனி முடிக்க. பொருட் பனுவல் - பொருட் பெற்றிகளைக் கூறு கின்ற நூல்கள்; `தத்துவ சாத்திரங்கள்` என்றபடி. `பனுவலாகிய படி வழியில்` என்க. ``சென்று சென்று`` என்ற அடுக்குப் பன்மை பற்றி வந்தது. அதனால், பொருட் பெற்றிகளை வேறுவேறாய்க் கூறுகின்ற சமய நூல்கள் பலவற்றையும் முறையானே, `இதுவே மெய்ந்நூல்; இதுவே மெய்ந்நூல்` எனத் தெளிந்து அவ்வாற்றானே அறிவு சிறிது சிறிதாக முதிரப்பெற்று என்பது பொருளாயிற்று. `தொன்னூற் பரசமயந் தோறும் அது அதுவே - நன்னூல் எனத் தெரிந்து நாட்டுவித்து` என்றார் குமரகுருபர அடிகளும்.

(கந்தர்கலி அடி 18) சமயங்கள் பலவும் `சிவ நெறியாகிய மேல் நிலத்திற்குப் படிகள்` என்பதைச் சிவஞானசித்தி, ``புறச்சமயநெறிநின்றும்`` *(சிவஞான சித்தி அதி.2 பா.11)* என்னும் திருவிருத்தத்தால் இனிதுணர்த்துதல் காண்க. சிவஞானபோத மாபாடியத்திலும், `சமயங்கள் பலவும் சைவத்திற்குப் படிகள்` என்பதற்கு இப்பகுதியே *(சூ.8 அதி.1)* மேற் கோளாகக் காட்டப்பட் டது. சென்று ஏறி - சென்றபின் சிவநெறியை எய்தி. `என் சிந்தையும் தானும் கலந்ததோர் கலவி` என்று எடுத்துக் கொண்டு உரைக்க. தெரியினும் தெரிவுறா வண்ணம் - ஆராய்ந்தாலும் விளங்காதபடி. `தெரிவுறா வண்ணம் உடனாய் உள்கலந்தோன்` என்க. எந்தையும் யாயும் யானும் என்று இங்ஙன் - என் தந்தையேயாகியும், என் தாயேயாகியும், யானேயாகியும் இவ்வாறு; இஃது, `உடனாய்க் கலந்தோன்` என்பதனோடு முடியும். `யாய்` என்பதற்குப் பொருள், `என் தாய்` என்பதே யாதலை, `யாயும் ஞாயும் யாரா கியரோ` *(குறுந்தொகை - 40)* என்பதனான் அறிக. `தாய்` என்பது பாடம் அன்று. இறைவன் உயிர்க்குயிராய்க் கலந்து நிற்றலை இனிது விளக்குவார், ``எந்தையும் யாயும் யானும்என் றிங்ஙன்`` என்றார். ``வந்து அணுகாது கலந்தோன்`` என்றது, `வேறாய் நின்று, பின்னர் வந்து ஒன்றாய்க் கலவாது, பண்டே ஒன்றாயிருந்து, பின்னர் விளங்கித் தோன்றினான்` என்றதாம். ஆகவே, முன்னர், ``கலந்ததோர் கலவி தெரியினும் தெரிவுறாவண்ணம்` என்றதும் இதுபற்றியேயாயிற்று. சித்துப் பொருளாகிய உயிரினும் நுண்ணியனாதல் பற்றி, ``நுணுகி`` என்றார்.

எரிதரு கரிகாட் டிடுபிண நிணமுண்
டேப்பமிட் டிலங்கெயிற் றழல்வாய்த்
துருகழல் நெடும்பேய்க் கணமெழுந் தாடுந்
தூங்கிருள் நடுநல்யா மத்தே
அருள்புரி முறுவல் முகிழ்நிலா எறிப்ப
அந்திபோன் றொளிர்திரு மேனி
வரியர வாட ஆடும்எம் பெருமான்
மருவிடந் திருவிடை மருதே. **#180**

பிணங்கள் எரியும் சுடுகாட்டில், புதைப்பதற்காக இடப்பட்ட பிணங்களின் கொழுப்பினை உண்டு ஏப்பம் விட்டு விளங்குகின்ற பற்களையும், நெருப்பினைக் கக்கும் வாயினையும், பிணத்தைத் தேடி ஓடுகின்ற கால்களையும் உடைய நெடிய பேய்க் கூட்டங்கள் குதித்து ஆடும் இருள் செறிந்த பெரிய நடுஇரவில், அருளை வெளிப்படுத்தும் புன்முறுவல் நிலவினை வெளிப்படுத்த, அந்திவானம் போலச் செவ்வொளி விளங்கும் திருமேனியில் கோடு களை உடைய பாம்புகள்

அசையக் கூத்து நிகழ்த்தும் எம்பெருமான் விரும்பி உறைகின்ற இடம் திருஇடைமருதூர் ஆகும்.

விளக்கவுரை

எரி தரு - நெருப்பைத் தருகின்ற; என்றது, `நெருப்பை யுடைய` என்றபடி. கரிகாடு - சுடுகாடு. இடுபிண நிணம் - ஒரு பக்கத் தில் இடப்பட்ட பிணத்தினது நிணத்தை. துரு கழல் - பிணத்தைத் தேடி ஓடுகின்ற கால். `யாமத்தே ஆடும்` என இயையும்.
அருள்புரி முறுவல் - அருள் வழங்குதலைக் குறிக்கின்ற நகைப்பு. புன்னகையாதலின், ``முகிழ்நிலா`` என்றார். முகிழ்த்தல் - அரும்புதல். `புன்முறுவலாகிய இளநிலாவோடு தோன்றுதலின், செம் மேனி அந்திபோன்றொளிரும்` என்க. `திருமேனிக்கண்` என உருபு விரிக்க. வரி - கீற்று.

எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பின்
இன்துளி படநனைந் துருகி
அழலையாழ் புருவம் புனலொடுங் கிடந்தாங்
காதனேன் மாதரார் கலவித்
தொழிலை ஆழ்நெஞ்சம் இடர்படா வண்ணம்
தூங்கிருள் நடுநல்யா மத்தோர்
மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. **#181**

அழகின்கண் ஆழ்த்துகின்ற செயற்பாட்டை உடைய பசியமட்கலம் வானத்தின் மழைத்துளி தன்மீதுபட்ட அளவில் நனைந்து கரையவும், நெருப்பிலிட்டுச் சுட்டபின்பு அம்மட்கலம் தண்ணீரிலேயே கிடந்தாலும் கேடின்றி இருப்பதுபோல அறிவில்லா தேனாகிய அடியேனுடைய உள்ளம் மகளிருடைய கலவியாகிய செயலில் ஆழ்ந்து இடர்ப்படாதவண்ணம் இருள் செறிந்த பெரிய நடு இரவில் ஒப்பற்ற இனிய யாழ் ஒலி ஒலிக்க வந்து என் உள்ளத்துப் புகுந்த பெருமான் உறைவிடம் இடைமருதே.

விளக்கவுரை

``எழிலை, அழலை, தொழிலை`` என்னும் இரண்ட னுருபுகளை ஏழனுருபாகத் திரிக்க. எழிலை ஆழ் செய்கைப் பசுங்கலன் - அழகின்கண் ஆழ்த்துகின்ற (அழகு மிகுமாறு செய்கின்ற) செயற்பாட்டையுடைய பச்சை மட்கலம். உருகி - கரைவதாய். அழலை ஆழ்பு - நெருப்பில் மூழ்கிய பின்பு. உருவம் - தனது வடிவம். புனலொடும் கிடந்தாங்கு - நீரிலே மூழ்கினாலும் அதனுடன் கேடின்றி இருந்தாற்போல. ஆதனேன் - அறிவிலேனாகிய எனது. `ஆதனேன் நெஞ்சம்` என இயையும்.

இடர்ப்படா வண்ணம் - மயக்கத்திற் படாதபடி. ``இடர்`` என்றது, ஆகுபெயராய், அதற்கு ஏதுவாகிய மயக்கத்தைக் குறித்தது. `இடர்ப்படாவண்ணம் புகுந்தோன்` என இயையும். இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட பின்பு மாதராரது கலவியில் மிக ஆழ்ந்தபோதும் உள்ளம் அதனால், திரிவுபடாமை யாகிய அஃதொன்றையே கூறினாராயினும், மேற்போந்த உவமை யால் முன்பு அவரை எதிர்ப்பட்ட ஞான்றே உள்ளம் திரிந்து வேறுபட்டமையைக் கூறுதலும் கருத்தென்க. இஃது இறைவன் திருவருளைப் பெறாதவரது நிலைமைக்கும், பெற்றவரது நிலைமைக் கும் உள்ள பெரியதொரு வேற்றுமையை இனிது விளக்கியவாறு. வருகின்ற இருதிருப்பாட்டுக்களில் கூறப்படும் உவமைகளும் இக் கருத்துப்பற்றியனவே என்க. திருவருள் பெற்றார்க்கும் அப்பிறப்பில் நுகர முகந்துகொண்ட பிராரத்தவினை நிற்றலின், அது காரணமாக மாதரார் கலவியில் ஆழ்தல் உண்டாயினும் அவர் அதனால் மயங்கி அதனையே மேலும் மேலும் அவாவி அதற்கு ஆவனவற்றின்கண் விருப்புடையராய் அவற்றை ஆக்கவும், அதற்கு ஆகாதனவற்றின் கண் வெறுப்புடையராய் அவற்றை அழிக்கவும் முயலாது இறைவனது திருப்பணியிலே முனைந்து நிற்பராகலான், அவர்க்கு மயக்கம் இன்மை அறிக. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு, நம்பியாரூரரது வரலாறேயாகும். அவர், ``பிழைப்ப னாகிலும் திருவடிப் பிழையேன்`` *(தி. 7 ப.54 பா.1)* என்றது இந்நிலையையேயாம். `கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை - மொண்டுண்டயர்கினும் வேல்மறவேன்` என்றார் அருணகிரிநாதரும். *(அலங்காரம் - 37)* இன்னும் மேற்காட்டிய உவமையானே இறைவன் திருவருள் கை கூடப்பெறாதவர் கடிய நோன்பு முதலியவற்றால் உடலை வருத்தி னாராயினும், அவர்க்கும் மயக்கம் நீங்குதல் இல்லை என்பதும் பெறப்படும். சைவ சமய ஆசிரியன்மார் சமண புத்த மதங்களின் ஒழுக்கங்களை இகழ்ந்தமை இதுபற்றியே என்பது உணர்க.

நாடுகளிற் புக்குழன்றும் காடுகளிற் சரித்தும்
நாகமுழை புக்கிருந்துந் தாகமுதல் தவிர்ந்தும்
நீடுபல காலங்கள் நித்தராய் இருந்தும்
நின்மலஞா னத்தையில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பில்;
ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே இடைக்கே
எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும்இறை ஞானம்
கூடும்அவர் கூடரிய வீடும் கூடிக்
குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே யிருப்பர். *(சிவஞான சித்தி. சூ. 10.5)*

என்னும் சாத்திர முறையைக் காண்க. திருவருள் வாய்க்கப் பெறாது

உலக மயக்கிடை ஆழ்ந்து கிடப்போர், தமது நிலையைத் திருவருள் பெற்றாரது நிலையாகப் பிறர்பாற் கூறின், அது, குற்றத்தின்மேலும் உய்தியில் குற்றமாய் முடியும் என்க. மழலை யாழ் சிலம்ப - இனிய யாழிசை ஒலிக்க. அகம் - உள்ளம்; `இல்லம்` என்பது நயம்.

வையவாம் பெற்றம் பெற்றம்ஏ றுடையார்
மாதவர் காதல்வைத் தென்னை
வெய்யவாஞ் செந்தீப் பட்டஇட் டிகைபோல்
விழுமியோன் முன்புபின் பென்கோ
நொய்யவா றென்ன வந்துள்வீற் றிருந்த
நூறுநூ றாயிர கோடி
மையவாங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. **#182**

வைக்கோலை விரும்புகின்ற காளையை வாகன மாகப் பெற்று அதன்மீது இவர்கின்ற அழகினை உடைய பெருமானார் அடியேனை அழகு மிக்கோராகிய அடியாருடைய அன்பிலே நிற்கச்செய்து, செந்தீயிடை இடப்பட்ட செங்கல் வெந்தபின் உரம் பெற்று நிற்றல்போல, பாசத்தால் கட்டுண்டு எளியனாய் நின்ற யானும், ஞானத்தால் திண்ணியனாகும்படி செய்து, அடியேனுடைய உள்ளத்தில் எளிமையாக வந்து வீற்றிருக்கின்றார். கருநிறம் பொருந்திய கழுத்தினராய், பலகோடிக்கணக்கான அண்டங்களில் வாழும் தேவர்களுக்குத் தலைவரான அப்பெருமானார் தங்கி யிருக்கும் இடம் திருஇடைமருதே. அப்பெருமானார் வந்து என் உள்ளத்து வீற்றிருந்தமை முன்பு என்பேனோ, பின்பு என்பேனோ? அவர் வந்து உள் வீற்றிருந்தது ஒரு காலத்தன்று என்றுமேயாம்.

விளக்கவுரை

``முன்பு பின்பு என்கோ`` என்பதனை முதலில் வைத்து, `முன்பென்பேனா பின்பென்பேனா` எனப் பொருள் கூறி, அதனை, ``வந்து உள்வீற்றிருந்ததனை`` உட்கொண்டு கூறியவாறாக உரைக்க. `வந்து உள்வீற்றிருந்தது ஒருகாலத்தன்று; என்றுமே யாம்` என்றவாறு. இதன்பின், `விழுமியோன் வை அவாம் பெற்றம் பெற்று என்னை, வெய்யவாம் செந்தீப்பட்ட இட்டிகைபோல் அம் ஏறுடையார் மாதவர் காதல் வைத்து` எனக் கொண்டு கூட்டியுரைக்க. விழுமியோன் - யாவரினும் மேலானவன்; இதுவும் இறைவனையே குறித்தது. வை அவாம் பெற்றம் பெற்று - வைக்கோலை விரும்புகின்ற எருதினை ஊர்தியாகக்கொண்டு. இட்டிகை - செங்கல். `மண்ணால் ஆக்கப் படுகின்ற இது, செந்தீயில் வெந்தபின் உரம் பெற்று நிற்றல்போல, பாசத்தால் கட்டுண்டு எளியனாய் நின்ற யானும் ஞானத்தால்

திண்ணியனாகும்படி` என்றவாறாம். `போல ஆகும்படி` என்னும் பொருட்டாகிய, `போல` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. அம் ஏறுடையார் மாதவர் காதல் வைத்து - அழகு மிக்கோராகிய அடியாரது அன்பிலே நிற்கச் செய்து. அழகு - அருட்பொலிவு; அடியவர்க்கு ஏவல் செய்து நிற்பின், அஞ்ஞானம் நுழைதற்கு வாயில் இல்லாமை அறிக. நொய்ய ஆறென்ன - எளிய பொருள்போல. ``ஆறு`` என்றது, அதனாற் கிடைக்கும் பொருளை யுணர்த்தி நின்றது. `வீற்றிருந்த கோன்` என இயையும். மை - மேகம். இங்கு, `அவாம்` என்பது உவம உருபாய் நின்றது. `விழைய` என்பதோர் உவம உருபும் உளதாதல் அறிக. கருமை மிகுதி உணர்த்தற்கு, `நூறுநூறாயிர கோடி மேகம் போலும்` என்றார்.

கலங்கலம் பொய்கைப் புனல்தெளி விடத்துக்
கலந்தமண் ணிடைக்கிடந் தாங்கு
நலங்கலந் தடியேன் சிந்தையுட் புகுந்த
நம்பனே வம்பனே னுடைய
புலங்கலந் தவனே என்றுநின் றுருகிப்
புலம்புவார் அவம்புகார் அருவி
மலங்கலங் கண்ணிற் கண்மணி யனையான்
மருவிடந் திருவிடை மருதே. **#183**

கலங்குதலை உடைய பொய்கையின் நீர் தேற்றாங் கொட்டையால் தெளிவிக்கப்பட்ட இடத்து நீரோடு கலந்த மண் அடியில்பட நீர் தெளிவாக இருப்பதுபோல, அடியேன் சிந்தையுள் புகுந்து கலக்கத்தை நீக்கி நன்மையை அருளும், என்னால் விரும்பப் படும் பெருமானே! புதியவனாகிய அடியேனுடைய அறிவில் கலந்தவனே! என்று நிலையாக உருகிப் புலம்புவாரும், வீண் செயல் களில் செல்லாதவர்களும் ஆகிய அடியார்களுடைய, அருவிபோல் கண்ணீர் பெருகுதலை உடைய கண்களின் கண்மணியை ஒத்த அப் பெருமான் உறையும் இடம் திருஇடைமருதூரே.

விளக்கவுரை

`சேற்றால் கலங்கல் பெற்ற நீர் தேற்றாங்கொட்டை சேர்ந்ததனால் தெளிவுபெற்ற பின்னர் அச்சேற்றோடே இருப்பினும் கலங்கல் இன்றித் தெளிந்தே நிற்றல்போல` என்பது முதல் அடியின் பொருள். தெளிவிடத்து - தெளியும்பொழுது. கலங்கல் நீர் தெளிவு பெறுதல் தேற்றாங்கொட்டையால் என்பது நன்கறியப்பட்டதாகலின், அதனைக் கூறாராயினார். நலம் - திருவருள். ``கலந்து`` என்றதனை, `கலக்க` எனத் திரிக்க. `கலந்து, அதனால் உலகியலாற் கலங்கா திருக்குமாறு` எனத் தன் காரியம் தோற்றி நின்றது. புலம், ஐம்புலன்; இஃது அவற்றான் வரும் இன்பத்தைக் குறித்து நின்றது. திருவருள் கைவரப் பெற்றோர்க்கு

`பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய்` விளை தலின் (*தி.8 திருவுந்தியார் - 33*) ``புலங் கலந்தவனே`` என்றார். ``வம்ப னேனுடைய புலங்கலந்தவனே`` என்றது, உருகிப் புலம்புவாரது கூற்றை, கொண்டு கூறியது. எனவே, ``வம்பனேன்`` என்றது பன்மை யொருமை மயக்கமாம். புலம்புவார் - அழுகின்றவர். அவம் புகார் - வீண் செயலிற் செல்லாதவர். `புலம்புவாரும், அவம் புகாரும் ஆகிய அவரது கண்ணில்` என்க. அருவி மலங்கல் கண் - அருவி போல நீர் மல்குதலையுடைய கண். அம், சாரியை. கண்மணிபோறலாவது, இன்றியமையாப் பொருளாகி நிற்றல்.

ஒருங்கிரு கண்ணின் எண்ணில்புன் மாக்கள்
உறங்கிருள் நடுநல்யா மத்தோர்
கருங்கண்நின் றிமைக்குஞ் செழுஞ்சுடர் விளக்கங்
கலந்தெனக் கலந்துணர் கருவூர்
தருங்கரும் பனைய தீந்தமிழ் மாலை
தடம்பொழில் மருதயாழ் உதிப்ப
வருங்கருங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. **#184**

எண்ணற்ற மெய்யுணர்வு இல்லாத மக்கள் இருகண்களும் ஒருசேர மூடி உறங்கும் இருள் செறிந்த பெரிய நடுஇரவிலே, விழித்துக்கொண்டிருக்கும் ஒருவனுடைய கண்களில் மாத்திரம் சிவந்த சுடரின் வெளிச்சம் கலந்தாற்போல, இறைவனுடைய திருவருளில் கலந்து மெய்ம்மையை உணர்ந்த கருவூர்த்தேவர் வழங்கும் கரும்பு போன்ற இனிய தமிழ்மாலையைப் பெரிய சோலை களில் மருத யாழ் ஒலியோடு பாட, அதனைக் கேட்கவரும் நீலகண்ட னாகிய, பல அண்டங்களிலும் உள்ள தேவர்கள் எல்லோருக்கும் தலைவனான சிவபெருமான், உகந்தருளியுள்ள இடம் திருஇடை மருதூரே ஆகும்.

விளக்கவுரை

ஒருங்கு - ஒற்றுமைப்படுத்துகின்ற. இருகண்ணும் ஒற்றுமைப்படுதலாவது, ஒன்றனையே நோக்குதல். இதனை எடுத் தோதியது, உறங்குங்காலும் அவை ஒருங்கே உறங்கும் என்றற்கு. `இருங்கண்ணின்` எனப் பாடம் ஓதுதல் சிறவாது. கண்ணின் - கண்ணினையுடைய. ``புன்மாக்கள்`` என்றது, மெய்யுணர்வில்லாத மக்களையும் உளப்படுத்து. கருமை இன அடையாதலின், `ஓர் கருங்கண்` என்றதனை, `ஒருகண்` என்றே கொள்க. `ஒருகண்` என்பதில் `ஒன்று` என்றது, `முதல்வகையான் ஒன்று` என்றவாறு. அஃதாவது, `எண்ணில் புன்மாக்களுடைய இருகண்களும் உறங்குகின்ற நடுநல் யாமத்தில், தமது ஒருகண் மாத்திரம் செழுஞ்சுடர் விளக்கங் கலந்து

பொருள்களைக் கண்டாற்போல` என்றதாம். நின்று இமைக்கும் செழுஞ்சுடர் - நிலைபெற்று ஒளிரும் செழுமையான விளக்கு. விளக்கம் - ஒளி. கலந்து உணர் - இறைவனது திருவருளிற் கலந்து மெய்ம்மையை உணர்ந்த. கருவூர் - கருவூர்த் தேவரது. இறைவன் நடுநல் யாமத்து வந்ததாக இவர் பலவிடத்துக் கூறலின், இவர்க்கு அவன் அருள்புரிந்த நேரம் இடையாமமாதல் கூடும். இனி, அஞ் ஞானத்தின் மிகுதியை இவ்வாறு உருவகமாகக் கூறினார் எனினுமாம். மருதம் - மருதநிலம். அதன்கண் உள்ள யாழில் பாடப்படுவது செவ்வழிப்பண் எனினும், பஞ்சமும் பாடப்படுவ தன்றாகாது என்க. மருதூராகலின் ஆங்கு உள்ளது மருதயாழேயாம். `மருதயாழொடு` என ஒடுவுருபு விரிக்க. ``உதிப்ப வரும்`` என்றது, `உதித்தலால் அதனைக்கேட்டு வருகின்ற` என்பதாம். அஃதாவது, இத்திருப்பதிகத்தை யாவர் மருதயாழோடு பாடினும் இடைமருதுறை இறைவன் அவர்பால் வருவான் என்றவாறு. இதனால், இத்திருப் பாட்டுத் திருக்கடைக்காப்பாயிற்று. முன்னரும் *(தி.9 பா.179)* ``மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன்`` என்றமையால், இறைவன் இவர்பால் இசைவிருப்பினன்போல வந்து அருள்செய்தான் எனக் கொள்ளல் தகும்.

பூந்துருத்தி நம்பி காடநம்பி - திருவாரூர் பஞ்சமம்

கைக்குவான் முத்தின் சரிவளை பெய்து
கழுத்தில்ஓர் தனிவடங் கட்டி
முக்கண்நா யகராய்ப் பவனிபோந் திங்ஙன்
முரிவதோர் முரிவுமை யளவும்
தக்கசீர்க் கங்கை யளவும்அன் றென்னோ
தம்மொருப் பாடுல கதன்மேல்
மிக்கசீர் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடங்குலா வினரே. **#185**

கைகளில் வெள்ளிய முத்துக்களால் ஆகிய தோள் வளைகளை அணிந்து, கழுத்தில் ஒப்பற்ற தனிமாலையைச்சூடி, மூன்று கண்களை உடைய தலைவராய், இவ்வுலகிலே மிக்க சிறப்பையுடைய திருவாரூரில் முதல்வராய், வீதிகளில் திருவுலாப்போகும் அழகராய் அசபாநடனம் என்று போற்றப்படும் கூத்தினைச் சிறப்பாகப் புரிந்து வருகிறார். திருவீதி உலாமேற்கொண்டு, இங்ஙனம் உடம்பை வளைத்து எம்பெருமான் ஆடும் ஆட்டத்தின் விளக்கம் உமாதேவி அளவிலும், கங்காதேவி அளவிலும் அடங்காது மேம்பட்டுள்ளது. எம்பெருமானுடைய கொள்கைதான் யாதோ?

விளக்கவுரை

வால்முத்தின் - வெண்மையான முத்துக்களையுடைய. சரி - தோள்வளை. வளை - கைவளை. முரிவது ஓர் முரிவு - விளங்கு வதாகிய ஒரு விளக்கம். `உமாதேவியின் அளவிலும், கங்காதேவியின் அளவிலும் அடங்குவதன்று; மேற்பட்டது` என்றவாறு. உம்மைகள், எண்ணோடு சிறப்பு. ``என்னோ தம் ஒருப்பாடு`` என்றதை, `தம் ஒருப் பாடு என்னோ` என மாற்றி இறுதியிற் கூட்டி உரைக்க. ஒருப்பாடு - கொள்கை. `வான் பழித்து இம்மண் புகுந்து மனிதரை ஆட்கொள்ளு தல்போலும்` என்பதாம். இவர் முசுகுந்தச் சக்கரவர்த்தியால் இந்திரலோகத்திலிருந்து கொணர்ந்து திருவாரூரில் எழுந்தருளு விக்கப்பட்டவராதல் அறிக. ஆதி - முதல்வன்; இது பன்மையொருமை மயக்கம். வீதி விடங்கர் - தெருவில் உலா வரும் அழகர். இது தியாகராசருக்குப் பெயர். திருவாரூரில் புற்றிடம் கொண்டார் திருமூலட் டானத்தேயிருக்க, இவர் வீதியில் எழுந்தருளிவந்து காட்சி வழங்கு பவராதலின், இப்பெயர் உடையரராயினார். இவர் வீதியில் எழுந் தருளுங்கால் நடனம் புரிந்து வருதலும், அந்த நடனம், ``அசபா நடனம்``` என்று போற்றப்படுதலும், அந்நடனத்தை இவர் முதற்கண் திருமாலின் இதயத்தில் இருந்து புரிந்தவராதலும் அறிந்து கொள்க.

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடங்குலா வினரே. #186

தேவர்களே! சிவபெருமானிடத்துப் பத்தியோடு தியானிப்பவர்கள் அவனுடைய அருளைப்பருக, அவர்கள் பருகுந் தோறும் அமுதம்போல அவர்களிடத்தில் அவ்வருள் இனிமை வழங்கும். இவருடைய அழகிய உருவம் ஒளிவீசிக் கொண்டிருப் பதைக் காணுங்கள். எம்பெருமானார் அருட்சத்தியாகியும், மங்கல மாகிய சிவமாகியும், உலகுகளை எல்லாம் படைத்த ஒப்பற்ற முழு முதற்பொருளாகியும், உலகங்கள் தோன்றுவதற்கு வித்தாகியும் விளங்கித் திருவாரூர் முதல்வராய் வீதிகளில் உலாவரும் அழகராய் அசபா நடனம் என்னும் கூத்து நிகழ்த்துகிறார்.

விளக்கவுரை

``தேவர்காள்`` என்பதனை முதலிற்கொண்டு, அதன் பின்னர்ப் பின்னிரண்டடிகளைக் கூட்டியுரைக்க. `உணர்வோர் பருகுதோறு` என இயையும். `வாய்மடுத்துப் பருகுதல்` என்பது பான்மை வழக்கு. ``அவர்க்கே`` என்ற பிரிநிலை ஏகாரம், பிறர்க்குத் தித்தியாமை குறித்து நின்றது. தித்தியா - தித்தித்து. இருந்தவா - இருந்தவாற்றை. தேவர்களை நோக்கிக் கூறினார், `யாம் திவ்விய தேகமும் (ஒளியுடம்பு) உடையோம்; அதனால் தேவராய் நிற்கின் றோம் எனச் செருக்குகின்ற உங்கள் உருவத்தின் ஒளி இவரது திருவுரு வத்தின் ஒளிக்கு எட்டுணையேனும் போதாமையைக் கண்டு அடங்கு மின்கள்` என்றற்கு. இனி வருவன அத்திருவுருவத்தின் பெருமைகள். சத்தியாய் - அம்மையாய். சிவமாய் - அப்பனாய். தனிமுழு முதலாய் - அவ்வாறு நிற்றலானே உலகிற்கு ஓர் ஒப்பற்ற தலைவனாய். அதற்கு ஓர் வித்துமாய் - தம்மால் படைக்கப்பட்ட அவ்வுலகத்தின் தோற்றத் திற்கும், ஒடுக்கத்திற்கும் நிலைக்களமாய்.

பூந்துருத்தி நம்பி காடநம்பி - கோயில்

முத்து வயிரமணி மாணிக்க
மாலைகண்மேற்
றொத்து மிளிர்வனபோற் றூண்டு
விளக்கேய்ப்ப
எத்திசையும் வானவர்கள் ஏத்தும்
எழில்தில்லை
அத்தனுக்கும் அம்பலமே யாடரங்க
மாயிற்றே. **#187**

முத்து, வயிரம், மாணிக்கம் என்ற மணிகளால் செய்யப்பட்ட மாலையின்மேல் பூங்கொத்துக்கள் ஒளிவீசுவது போன்றும், தூண்டப்பட்ட விளக்கின் ஒளி போன்றும், எல்லாத் திசைகளிலும் உள்ள தேவர்கள் போற்றிப்புகழும் தில்லைத் திருத்தலத் திலுள்ள, ஒளிவீசும் பொன்னம்பலம் எம்பெருமானுக்கும் திருக்கூத்து நிகழ்த்தும் அரங்கமாக ஆயிற்று.

விளக்கவுரை

``எத்திசையும்`` என்பதை முதலிற் கொள்க. வயிரமணி, இருபெயரொட்டு.
தொத்து - பூங்கொத்து. இது தூண்டு விளக்குக்களுக்கு உவமை. ஏய்ப்ப - பொருந்த வைக்க; ஏற்றி வைக்க. `ஏய்ப்ப ஏத்தும்` என இயையும்.
``அத்தனுக்கும்`` என்ற உம்மை சிறப்பு.
`அவ்வம்பலமே` சுட்டு வருவிக்க. ``அம்பலமே`` என்ற ஏகாரம், `பிறிதிடம் இல்லை` என்னும் பொருட்டாய், அம்பலத்தது சிறப்புணர்த்தி நின்றது.

கடியார் கணம்புல்லர் கண்ணப்பர்
என்றுன்
அடியார் அமர்உலகம் ஆளநீ
ஆளாதே
முடியாமுத் தீவேள்வி மூவா
யிரவரொடும்
குடிவாழ்க்கை கொண்டுநீ குலாவிக்கூத்
தாடினையே. **#188**

சிறப்புமிக்க கணம்புல்ல நாயனார், கண்ணப்ப நாயனார் என்ற பெயருடைய உன் அடியவர்கள் சிவலோகமாகிய வீடுபேற்றுலகத்தை ஆளவும், நீ அதன்கண்ஆட்சி செய்வதனை விடுத்து, என்றும் அழிதல் இல்லாத முத்தீக்களால் வேள்விகளை நிகழ்த்தும் தில்லை மூவாயிரவர்

அந்தணரோடு உடன் உறையும் வாழ்க்கையை மேற்கொண்டு மகிழ்ந்து ஆனந்தக் கூத்து ஆடுகின்றாய்.

விளக்கவுரை

கடி ஆர் - விளக்கம் (புகழ்) பொருந்திய. `உன்றன்` என்னாது, `உன்` என்றே ஓதுதல் பாடம் ஆகாது என்க. `அமரர் உலகம்` என்பது குறைந்து நின்றது. `அமருலகம்` என்பதனை முதலிற் கூட்டுக. ``அடியார் ஆள நீ ஆளாது`` என்றது, `அதன்கண் விருப்பம் இன்மையால் விடுத்தாய்` என்னும் குறிப்பினது. இன்னும், அடியார் பலரையும் அமருலகம் ஏற்றுதல் தில்லையிலிருந்தேயாம் என்பதும் கருத்து. பின்னர் நாவுக்கரசர் முதலிய மூவர் முதலிகளுக்கு அருள்புரிந்தமையை எடுத்தோதுவதும் இக்கருத்துப் பற்றியே என்க. முடியா - என்றும் வளர்கின்ற. ``குடிவாழ்க்கை கொண்டு`` என்றது, ``அவருள் ஒருவனாய்` என்றபடி. குலாவி - மகிழ்ந்து.

அல்லியம் பூம்பழனத் தாமூர்நா
வுக்கரசைச்
செல்லநெறி வகுத்த சேவகனே
தென்றில்லைக்
கொல்லை விடையேறி கூத்தா
டரங்காகச்
செல்வ நிறைந்தசிற் றம்பலமே
சேர்ந்தனையே. **#189**

அக இதழ்களோடு கூடிய அழகிய பூக்கள் பொருந்திய வயல்களை உடைய திருவாமூரில் அவதரித்த திருநாவுக்கரசு சுவாமிகள் வீடுபேற்றை அடையும் வழியைக் காட்டிய வீரனே! அழகிய தில்லைநகரில் முல்லை நிலத்தில் மேயும் காளையை ஒத்த காளையை இவர்ந்தவனே! நீ கூத்தாடுதலை நிகழ்த்தும் அரங்கமாகச் செல்வம் மிகுந்த சிற்றம்பலத்தை அடைந்துள்ளாயே.

விளக்கவுரை

அல்லி - அகஇதழ். பழனம் - வயல். ஆமூர் - திருவாமூர். இது திருநாவுக்கரசர் திருவவதாரம் செய்த தலம். ``நாவுக்கரை \

டெமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் றன்னையும்ஆட்
கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும்அணி
தில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை
யாயிற்றே. **#190**

எம்மைப் பிணித்திருக்கும் கொடிய வினையாகிய நோயினை அறவே அழித்து, எம்மை அடியவராகக் கொண்ட சீகாழி மன்னனாகிய திருஞானசம்பந்த நாயனாரையும் அடிமையாகக் கொண்டருளிய பெருமானுக்கு, அம்பு போன்ற கண்களை உடைய உமாதேவியும் தாமுமாக அழகிய தில்லைத் திருத்தலத்திலுள்ள பொன்னம்பலமே எழுந்தருளியிருப்பதற்குரிய இடமாக ஆகிவிட்டது.

விளக்கவுரை

`எம் வினைநோய்` என இயையும். `பந்த வினை, வல்வினை` எனத் தனித்தனி இயைக்க. பந்தம் - கட்டு. திருப்பதிகங் களை வினைதீர்தற்கு வழியாகத் திருக்கடைக்காப்பு அருளிச்செய்து சென்றமையின், `எம் பந்த வல்வினைநோய் தீர்த்திட்டு எமை ஆளும் சம்பந்தன்` என்றார். அம்பு உந்து - அம்புபோலப் பாய்கின்ற. ``தானும்`` எனப் படர்க்கையாகக் கூறினார். ``தான்`` என்றது, கூத்தப் பெருமானை. `கண்ணாளும் தானும் சேர்ந்து இருக்கை தில்லை அம்பலமே ஆயிற்று` என மாறிக் கூட்டுக. `செம்பொன்னால்` என உருபு விரிக்க. இருக்கை - இருக்கும் இடம்.

களையா உடலோடு சேரமான்
ஆரூரன்
விளையா மதம்மாறா வெள்ளானை
மேல்கொள்ள
முளையா மதிசூடி மூவா
யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின்
ஆடரங்கே. **#191**

தம் உயிர் இவ்வுடம்பைவிடுத்து நீங்காமல் இந்த உடலோடும் சேரமான் பெருமாள் நாயனாரோடும் ஆரூரன் ஆகிய சுந்தரமூர்த்தி நாயனார் மதத்தைப் பெருக்கெடுத்து ஓடச் செய்தல் நீங்காத வெள்ளை யானையைக் கயிலை மலையை அடைவதற்கு இவர்ந்து செல்லவும், இளம்பிறையைச் சூடிய பெருமானே! நீ தில்லை மூவாயிரவரோடும் கலந்து விளையாடுகின்ற திருச்சிற்றம்பலமே உனக்குக் கூத்தாட்டு நிகழ்த்தும் அரங்கமாக உள்ளது. சேரமான் குதிரையில் கயிலை

சென்றார் என்க. மதிமுடி - எனவும் பாடம் ஓதுப.

விளக்கவுரை

`சேரமானொடு` என உடனிகழ்ச்சிப் பொருளில் வரும் ஒடுவுருபு விரிக்க. `மதம் விளையா` என மாற்றுக. விளையா - விளைந்து; பெருகி. மாறா - நீங்காத. மேற்கொள்ள - ஏறிச்செல்லும் படி. முளையாம் - இளைதாகிய. அளையா - கலந்து. `மேற்கொள்ள விளையாடும்` என இயையும். `மேல் கொள்ள விளையாடும் அம்பலம் நின் ஆடரங்கே` என்றாராயினும், `மேல்கொள்ள விளையாடி ஆடு அரங்கு அம்பலமே` என்பது கருத்தென்க.

அகலோக மெல்லாம் அடியவர்கள்
தற்சூழப்
புகலோகம் உண்டென்று புகுமிடம்நீ
தேடாதே
புவலோக நெறிபடைத்த புண்ணியங்கள்
நண்ணியசீர்ச்
சிவலோக மாவதுவும் தில்லைச்சிற்
றம்பலமே. **#192**

நீ புகுவதற்கு வேறு உலகம் உண்டு என்று நீ கருதாதபடி, மேல் உலகங்களை அடைவதற்கு உரிய நெறியானே எய்திய புண்ணியங்களால், இந்நிலவுலகம் முழுதிலுமுள்ள அடியவர் கள் உன்னைச் சூழ்ந்து நிற்க, அதனால் பொருந்திய சிறப்பினையுடைய சிவலோகமாகவே தில்லைத் திருப்பதியின் சிற்றம்பலம் அமைந்துவிட்டது.

விளக்கவுரை

``நீ`` என்பதொழிய, `புகலோகம்` என்பது முதல், `புண்ணியங்கள்` என்பது காறும் உள்ள அனைத்தையும் முதலிற் கூட்டுக. புக - புகுவதற்கு. லோகம் உண்டு என்று - வேறு உலகம் உண்டு என்று நினைத்து. `புவலோகம்` என்றது, `மேலுலகம்` என்னும் அளவாய் நின்றது. புவலோக நெறி படைத்த - மேலுலகத்தை அடைவிக்கும் நெறியானே எய்திய. `புண்ணியங்களால்` என உருபு விரித்து, அதனை, ``சூழ`` என்பதனோடு முடிக்க. புண்ணியங்களை எய்தினோர் அடியவர்கள். அகலோகம் - இவ்வுலகம். இத்திருப் பாட்டில் உயிரெதுகை வந்தது.

களகமணி மாடம் சூளிகைசூழ்
மாளிகைமேல்
அளகமதி நுதலார் ஆயிழையார்

போற்றிசைப்ப
ஒளிகொண்ட மாமணிகள் ஓங்கிருளை
ஆங்ககற்றும்
தெளிகொண்ட தில்லைச்சிற் றம்பலமே
சேர்ந்தனையே. #193

வெண்சாந்து பூசப்பட்ட அழகிய மேல்மாடமும், மேல்மாடத்தின் முகப்பும் சூழ்ந்துள்ள பேரில்லங்களின் மேல் நிலத் தில், கூந்தல் வந்து படிந்திருக்கும் பிறை போன்ற நெற்றியை உடைய வராகிய, ஆராய்ந்தெடுக்கப்பட்ட அணிகலன்களை அணிந்த மகளிர் உன்னைப் போற்றிப் பாட, நல்ல பிரகாசமுடைய இரத்தினங்கள் அவ்விடத்தில் கவியும் இருளைப்போக்கும் தெளிந்த ஒளியை உடைய, தில்லைப் பதிக்கண் உள்ள திருச்சிற்றம்பலத்தையே நீ வந்து சேர்ந்துள்ளாய்.

விளக்கவுரை

களக மணி - நீல மணி. மாடம் - மேல்நிலம். சூளிகை - மேல்மாடத்தின் முகப்பு `மாடத்தைச் சூளிகை சூழ்ந்த மாளிகை` என்க. அளக நுதல் - கூந்தலை உடைய நெற்றி. ``மதி`` என்றது, பிறையை. `மதிநுதலாராகிய ஆயிழையார்` என்க. போற்றிசைப்ப (உன்னைத்) துதிக்க. தெளி - விளக்கம்.

பாடகமும் நூபுரமும் பல்சிலம்பும்
பேர்ந்தொலிப்பச்
சூடகக்கை நல்லார் தொழுதேத்தத்
தொல்லுலகில்
நாடகத்தின் கூத்தை நவிற்றுமவர்
நாடோறும்
ஆடகத்தான் மேய்ந்தமைந்த அம்பலம்நின்
ஆடரங்கே. #194

பாடகம், பாத கிண்கிணி, சிலம்பு என்று தம் கால் களில் அணிந்த அணிகலன்கள் அசைந்து ஒலிக்க நாள்தோறும் கதை தழுவிவரும் கூத்தினை நிகழ்த்துபவராய் வளையல்களை அணிந்த கைகளை உடைய அம்மகளிர் உன்னை வழிபட்டுப் புகழ, இப்பழைய உலகில் பொன்னால் மேற்கூரை வேயப்பட்டு அமைந்துள்ள பொன்னம்பலம் உனக்கு நடன சபையாக அமைந்துள்ளது.

விளக்கவுரை

`பாடகமும் நூபுரமும் பல் சிலம்பும் பேர்ந்தொலிப்ப, நாள்தோறும் நாடகத்தின் கூத்தை நவிற்றும் அவராகிய சூடகக்கை நல்லார் தொழுது ஏத்தத் தொல்லுலகில் ஆடு நின் அரங்கு ஆடகத்தால் அமைந்த

அம்பலம்` எனக்கொண்டு கூட்டி உரைக்க. `பாடகம், நூபுரம், சிலம்பு` என்பன, மகளிரது காலில் அணியும் அணிவகைகள். பேர்ந்து - அசைந்து. சூடகம் - கைவளை. நாடகம் - கதை தழுவிய கூத்து. `அது போலும் கூத்து` என்க. அஃதாவது, கதைப் பொருளைக் கைகாட்டி ஆடும் கூத்து. இன் கூத்து - இனிய கூத்து. நவிற்றுதல் - செய்தல். மேய்ந்து - வேயப்பட்டு.

உருவத் தெரியுருவாய் ஊழிதோ
றெத்தனையும்
பரவிக் கிடந்தயனும் மாலும்
பணிந்தேத்த
இரவிக்கு நேராகி ஏய்ந்திலங்கு
மாளிகைசூழ்ந்
தரவிக்கும் அம்பலமே ஆடரங்க
மாயிற்றே. **#195**

பல ஊழிக்காலங்கள் உன் புகழைப்போற்றி வழிபட்டுப் பிரமனும், திருமாலும் உன்னை வணங்கிப் புகழ, சூரியனை ஒப்ப ஒளிமிக்கு விளங்குகின்ற மாளிகைகளால் சூழப்பட்டு, ஒலியை உண்டாக்குகின்ற சிற்றம்பலமே அழகிய தீப்பிழம்பு போன்ற வடிவுடன் நீ கூத்து நிகழ்த்தும் அரங்கமாக அமைந்துவிட்டது.

விளக்கவுரை

உருவத்து - அழகையுடைய. `எரியுருவாய் ஆடு அரங்கம்` எனவும், `ஏத்த ஆடு அரங்கம்` எனவும் இயையும். `அரங்கம் மாளிகை சூழ்ந்து அரவிக்கும் அம்பலமே ஆயிற்று` என்க. இரவி - சூரியன். அரவிக்கும் - ஒலியை உண்டாக்குகின்ற.

சேடர் உறைதில்லைச் சிற்றம்
பலத்தான்றன்
ஆடல் அதிசயத்தை ஆங்கறிந்து
பூந்துருத்திக்
காடன் தமிழ்மாலை பத்துங்
கருத்தறிந்து
பாடும் இவைவல்லார் பற்றுநிலை
பற்றுவரே. **#196**

சான்றோர்கள் வசிக்கின்ற தில்லைத் திருத்தலத் திலுள்ள சிற்றம்பலத்தை உடையவனாகிய கூத்தப்பிரானுடைய ஆனந்தக்கூத்தின் சிறப்பினை அறிந்து பூந்துருத்திக்காட நம்பி இயற் றிய தமிழ்மாலையில் உள்ள பாடல் இவை பத்தினையும் அவற்றின் கருத்தை அறிந்து பாடும் தொழிலில் வல்லவர்கள் அடையத்தக்க இடமாகிய வீடுபேற்றினை

அடைவர்.

விளக்கவுரை

சேடர் - தொண்டர். `பூந்துருத்திக் காடன் சிற்றம்பலத் தான்றன் ஆடல் அதிசயத்தை அறிந்து கருத்து அறிந்து பாடும் தமிழ் மாலையாகி இவை பத்தும் வல்லார், பற்றும் நிலை பற்றுவர்` எனக் கொண்டு கூட்டுக. கருத்து - பாடக் கொள்ளும் பொருள். பற்றும் நிலை - அடையத்தக்க நிலை; வீடு. பற்றுவர் - அடைவர்.

கண்டராதித்தர் - கோயில்

மின்னார் உருவம் மேல்வி ளங்க
வெண்கொடி மாளிகைசூழப்
பொன்னார் குன்றம் ஒன்று வந்து
நின்றது போலும்என்னாத்
தென்னா என்று வண்டு பாடும்
தென்றில்லை யம்பலத்துள்
என்னா ரமுதை எங்கள் கோவை
என்றுகொல் எய்துவதே. **#197**

மின்னலைப் போல ஒளிவீசும் மகளிருடைய வடிவங்கள் மாடங்களின் மேல்நிலையில் விளங்கவும், வெண்கொடி கள் அம்மாளிகைகளைச் சுற்றிலும் பறக்கவும் அமைந்த அழகான தில்லை என்ற திருத்தலத்தில், பொன்னாலாகிய மலை ஒன்று வந்து அவ்வூரில் தங்கிவிட்டது போலும் என்று கருதுமாறு, தென்னா என்று இசைஒலியை எழுப்பி வண்டுகள் பாடும் அவ்வூரின் பொன்னம்பலத் தில் எழுந்தருளியிருக்கும், என் கிட்டுதற்கரிய அமுதமாகிய எங்கள் தலைவனை அடியேன் என்று கிட்டப்பெறுவேன்?

விளக்கவுரை

மின்னார் - பெண்கள். மேல் - மாடங்களின் மேல் நிலையில். `விளங்க` என்பது, ``சூழ`` என்பதனோடு முடிய, ``சூழ`` என்பது, ``நின்றது`` என்பதனோடு முடியும். பொன்னார் குன்றம், பொன்னம்பலத்திற்கு உவமை. ``என்னா`` என்பதற்கு, `மருளும்` என்று ஒருசொல் வருவித்து முடித்து, அதனை,`மருளும் அம்பலம்` என இயைத்து முடிக்க. ``தென்னா`` என்பது ஒலிக்குறிப்பு.

ஓவா முத்தீ அஞ்சு வேள்வி
ஆறங்க நான்மறையோர்
ஆவே படுப்பார் அந்த ணாளர்
ஆகுதி வேட்டுயர்வார்
மூவா யிரவர் தங்க ளோடு
முன்னரங் கேறிநின்ற
கோவே உன்றன் கூத்துக் காணக்
கூடுவ தென்றுகொலோ. **#198**

என்றும் அணையாத முத்தீக்களையும், ஐவகை வேள்விகளையும், ஆறு அங்கங்களையும், நான்கு வேதங்களையும் முறையே வளர்த்து, நிகழ்த்தி, கற்று, ஓதும் அந்தணாளராய், பசுக் களின் நெய், பால், தயிர் இவற்றை ஆகுதிகளாகச் சொரிந்து வேள்வி களை நிகழ்த்தி மேம்பட்ட மூவாயிரவர்

வேதியரோடு, முன் ஒரு காலத்துப் பதஞ்சலி முனிவர் உன் கூத்தினைக்காண நாட்டிய அரங் காகிய திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளிய பெருமானே! உன் திருக் கூத்தினைக் காணும் வாய்ப்பு அடியேனுக்கு என்று கிட்டுமோ?

விளக்கவுரை

ஓவா - ஒழியாத. முத் தீ, `ஆகவனீயம், காருகபத்தியம், தக்கிணாக்கினி` என்பன. அஞ்சு வேள்வி `பிரமயாகம், தேவயாகம், பிதிர்யாகம், மானுடயாகம், பூதயாகம்` என்பன. ஆறங்கம் `சிட்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம்` என்பன. இவை வேதத்தின் பொருளையும், ஒழுக்கத்தையும் அறிதற்குக் கருவியாகும். ஆவேபடுப்பார் - பசுக்களின் நெய், பால், தயிர்களை மிகுதியாகச் சொரிவர். அரங்கு - அம்பலம்.

முத்தீ யாளர் நான்ம றையர்
மூவா யிரவர்நின்னோ
டொத்தே வாழுந் தன்மை யாளர்
ஓதிய நான்மறையைத்
தெத்தே யென்று வண்டு பாடுந்
தென்றில்லை யம்பலத்துள்
அத்தாவுன்றன் ஆடல் காண
அணைவதும் என்றுகொலோ **#199**

முத்தீ ஓம்பி நான்மறை ஓதும் மூவாயிரவராய் உன் திருவுள்ளக் குறிப்பிற்கு ஏற்ப வாழும் தன்மை உடையவர்கள் ஓதிய நான்கு வேதங்களையும் தெத்தே என்று இசை எழுப்பி வண்டுகள் பாடும் அழகிய தில்லையின் சிற்றம்பலத்தில் உள்ள தலைவனே! உன்னுடைய ஞான ஆனந்தத் திருக்கூத்தினைத் தரிசிக்க அடியேன் உன்னிடம் வந்து சேருவது எந்த நாளோ!

விளக்கவுரை

`இரணிய வன்மன்` என்னும் அரசன், வியாக்கிரபாத முனிவருடைய கட்டளையின்படியே, `கங்கை, யமுனை` என்னும் இருநதிகளின் இடையேயிருந்த முனிவர் மூவாயிரவரைத் தில்லைக்கு அழைத்து வந்து எண்ணிக்காட்டிய பொழுது, ஒருவர் குறைய அவன் திகைத்து வருந்துதலும், தில்லைக் கூத்தப் பெருமான், `இவர்கள் எம்மையொப்பார்கள்; நாமும் அவர்களை யொப்போம்; நாம் அவர் களில் ஒருவரானோம்; வருந்தற்க` என்று அருளிச்செய்தார் என்பது தில்லை மூவாயிரவரைப் பற்றிய வரலாறு ஆதலின், அவரை, `நின் னோடு ஒத்தே வாழும் தன்மையாளர்` என்றார். இவ்வரலாற்றைக்

கோயிற் புராணத்தால் அறிக. `தில்லைவாழந்தணர் ஓதுகின்ற நான்கு வேதங்களை வண்டுகள் பாடும்` என்றவாறு.

மானைப் புரையும் மடமென் னோக்கி
மாமலை யாளோடும்
ஆனஞ் சாடுஞ் சென்னி மேல்ஓர்
அம்புலி சூடும்அரன்
றேனைப் பாலைத் தில்லை மல்கு
செம்பொனின் அம்பலத்துக்
கோனை ஞானக் கொழுந்து தன்னைக்
கூடுவ தென்றுகொலோ. **#200**

மானின் பார்வையை ஒத்த பார்வையை உடைய ளாய் மடம் என்ற பண்பினை உடைய பார்வதியோடு, பஞ்சகவ்விய அபிடேகம் செய்யப்படும் தலையின் மீது ஒரு பிறையைச் சூடும் சிவபெருமானாய்த் தேன் போலவும், பால் போலவும் இனியனாய்த் தில்லைத் திருத்தலத்தில் விளங்குகின்ற செம்பொன்மயமான அம்பலத் தில் உள்ள தலைவனாய், ஞானக்கொழுந்தாய் உள்ள எம்பெருமானை அடியேன் கூடும் நாள் எந்நாளோ?

விளக்கவுரை

ஆன் அஞ்சு - பஞ்ச கௌவியம். ``ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்` என்ற அப்பர் திருமொழியைக் காண்க. `ஆனைஞ்சு` எனவும் பாடம் ஓதுவர். அம்புலி - சந்திரன்.

களிவான் உலகிற் கங்கை நங்கை
காதலனே அருளென்
றொளிமால் முன்னே வரங்கி டக்க
உன்னடி யார்க்கருளும்
தெளிவா ரமுதே தில்லை மல்கு
செம்பொனின் அம்பலத்துள்
ஒளிவான் சுடரே உன்னை நாயேன்
உறுவதும் என்றுகொலோ. **#201**

`களித்து வாழ்தற்குரிய வானுலகிற்கு உரிய கங்கை என்ற பெண்ணின் கணவனே! எனக்கு அருள் செய்வாயாக!` என்று அழகை உடைய திருமால் உன் முன்னே வரம் வேண்டிப் படுத்துக் கிடக்கவும் அவனுக்கு அருளாது உன் அடியவர்களுக்கே அருள் செய்யும் தெளிவு பொருந்திய அமுதமே! தில்லைத் திருப்பதியில் விளங்குகின்ற செம்பொன்மயமான அம்பலத்துள் ஒளிவீசும் மேம் பட்ட ஒளியே! உன்னை நாய்போன்ற கடையேனாகிய நான் என்று வந்து அடைவேன்?

விளக்கவுரை

களி வான் உலகு - களித்து வாழ்தற்குரிய வானுலகம். `அங்குள்ள கங்கை` என்க. `பகீரதன் பொருட்டு வானுலகத்திலிருந்து வந்த கங்கையைச் சிவபெருமான் சடையில் தாங்கினார்` என்பது வரலாறு. ஒளிமால் - அழகை யுடைய திருமால். முன்னே - உனது திருமுன்பில். வரம் கிடக்க - வரம்வேண்டிப் பாடு கிடக்க. `அவனுக்கு அருளாமல் அடியார்க்கு அருளுகின்றாய்` என்றபடி. தில்லைக் கூத்தப்பெருமான் திருமுன்பில் திருமால் கிடந்த கோலத்தில் இருத்தல் காண்க. ``வரங்கிடந் தான்தில்லை யம்பல முன்றிலம் மாயவனே`` என்றார் திருக்கோவையாரினும் *(தி.8 கோவை பா.86)*. தெளிவுஆர் - தெளிவு பொருந்திய. உறுவது - அடைவது.

பாரோர் முழுதும் வந்தி றைஞ்சப்
பதஞ்சலிக் காட்டுகந்தான்
வாரார் முலையாள் மங்கை பங்கன்
மாமறை யோர்வணங்கச்
சீரால் மல்கு தில்லைச் செம்பொன்
அம்பலத் தாடுகின்ற
காரார் மிடற்றெம் கண்ட னாரைக்
காண்பதும் என்றுகொலோ. **#202**

உலகிலுள்ள மக்களெல்லாம் தன்னை வந்து வணங்கவும், பதஞ்சலி முனிவருக்காகத் திருக்கூத்து ஆடுதலை விரும்பி மேற்கொண்டவனாய், கச்சணிந்த முலையை உடைய பார்வதி பாகனாய், மேம்பட்ட வேதியர் வணங்கச் சிறப்பால் மேம் பட்ட தில்லையம்பதியின் செம்பொன் அரங்கில் திருக்கூத்து நிகழ்த்து கின்ற நீலகண்டனாகிய எம் தலைவனை எந்நாள் காண்பேனோ?

விளக்கவுரை

``முழுதும்`` என்பது, `எல்லாரும்` எனப்பொருள் தந்துநின்றது. பதஞ்சலிக்கு - பதஞ்சலி முனிவர் பொருட்டாக. ஆட்டு உகந்தான் - ஆடுதலை விரும்பினான். `இறைவனது திருநடனத்தைத் தில்லைக்கண்ணே காண முதற்கண் தவம் செய்திருந்தவர் வியாக்கிர பாத முனிவர்` என்பதும், பின்பு பதஞ்சலி முனிவர் அவருடன் வந்து சேர்ந்தபின்பே இருவருக்குமாக இறைவன் தில்லையில் திருநடனம் காட்டினான் என்பதும் கோயிற்புராண வரலாறு. ``பதஞ்சலிக் கருளிய பரமநாடக` என்று அருளிச்செய்தார் திருவாசகத்தும் *(தி.8 கீர்த்தி-138)* கண்டன் - தலைவன். `கண்டு அன்னாரை` எனப் பிரித்து உரைத்தலுமாம்; இஃது ஒருமைப் பன்மை மயக்கம்.

இலையார் கதிர்வேல் இலங்கை வேந்தன்
இருபது தோளும்இற
மலைதான்எடுத்த மற்றவற்கு
வாளொடு நாள்கொடுத்தான்
சிலையால் புரமூன் றெய்த வில்லி
செம்பொனின் அம்பலத்துக்
கலையார் மறிபொற் கையி னானைக்
காண்பதும் என்றுகொலோ. **#203**

இலைவடிவமாக அமைந்த ஒளி பொருந்திய வேலை ஏந்திய இலங்கை மன்னனுடைய இருபது தோள்களும் நொறுங்குமாறு செய்து, கயிலைமலையை எடுத்த அவனுக்குச் சந்திரகாசம் என்னும் வாளோடு முக்கோடி வாழ்நாளும் கொடுத் தவனாய், வில்லினால் முப்புரங்களையும் எய்த வில்லாளனாய், செம்பொன்மயமான சிற்றம்பலத்தில் மான்கன்றை ஏந்திய கையனாய் உள்ள பெருமானை அடியேன் எந்நாள் காண்பேன்?

விளக்கவுரை

``மலைதான் எடுத்த`` என்பதை முதலிற் கூட்டுக. இற - முரிய. `இறச் செய்து` என ஒருசொல் வருவிக்க. மறக்கருணையின்பின் அறக்கருணை செய்தமையைக்குறித்தலின், மற்று, வினைமாற்றின் கண் வந்தது. நாள் - நீண்ட வாழ்நாள். சிவபெருமான் இராவணனுக்கு வாளொடு நாள்கொடுத்தமையை,

``எறியு மாகடல் இலங்கையர் கோனைத்
துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்
குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக்
கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே``

என்னும் சுந்தரர் திருமொழியானும் *(தி.7 ப.55 பா.9)* அறிக. கலையார் மறிபொற் கையினான் என்பது, ஒருபெயர்த் தன்மைத்தாய் நின்று `அம்பலத்து` என்பதற்கு முடிபாயிற்று. கலை - ஆண்மான்; மறி - கன்று *(குட்டி)* `கலை மறி ஆர் கையினான்` என மாற்றிப் பொருள் கொள்க. பொன் - அழகு.

வெங்கோல் வேந்தன் தென்னன் நாடும்
ஈழமுங் கொண்டதிறற்
செங்கோற் சோழன் கோழி வேந்தன்
செம்பியன் பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடி ஆடும்

அணிதில்லை யம்பலத்துள்
எங்கோன் ஈசன் எம்மி றையை
என்றுகொல் எய்துவதே. #204

கொடுங்கோலினை உடைய அரசனான பாண்டிய னுடைய நாட்டினையும், இலங்கையையும் கைப்பற்றிய ஆற்றலை உடைய செங்கோலை உடைய சோழ மரபினனாய், உறையூரைக் கோநகராகக்கொண்டு சிபி மரபினனாய் ஆண்ட பராந்தகச்சோழன் பொன்வேய்ந்த, அழகிய திரண்ட வளையல்களை உடைய மகளிர் பாடியும், ஆடியும் நற்பணி செய்யும் அழகிய தில்லை அம்பலத்துள் எம்தலைவனாய், எம்மை அடக்கி ஆள்பவனாய் உள்ள எம் இறைவனை என்று அடையப்போகிறேனோ?

விளக்கவுரை

தென்னன் - பாண்டியன். `இவரால் குறிக்கப்படும் சோழன் காலத்தில் இருந்த பாண்டியன் கொடுங்கோலனாய் இருந்தான்` என்பதை, `வெங்கோல் வேந்தன்` என்றதனால் அறிகின்றோம். ஈழம் - ஈழநாடு; இலங்கை. கோழி - உறையூர். செம்பியன் - சோழன். அணிந்த - வேய்ந்த. `அணிந்த அம்பலம்` என இயையும். `தூயசெம் பொன்னினால் - எழுதி மேய்ந்த சிற்றம்பலம்` என அப்பர் அருளிச்செய்தமையால் *(தி.5 ப.2 பா.8)* அவர் காலத்திற்கு முன்பே தில்லைச் சிற்றம்பலம் பொன் வேயப்பட்டுப் பொன்னம்பலமாய் விளங்கினமை நன்கறியப்படும். இவ்வாறு இதனைப் பொன்வேய்ந்தவன் `இரணியவன்மச் சக்கரவர்த்தி` எனவும், `இவன் சூரியன் மகனாகிய மனுவின் மகன்` எனவும் கோயிற் புராணம் கூறும். `சோழ மன்னர் மனுவின் வழியினரே` என்பது மரபு. இம்மரபு பற்றியே பிற்காலங்களிலும் சோழர் குலத்தில் தோன்றிய மன்னர் சிலர் சிற்றம்பலத்தையும், பேரம்பலத்தையும் பொன்வேயும் திருப்பணியை மேற்கொண்டனர். இங்கு இவ்வாசிரியரால் குறிக்கப்பட்ட சோழமன்னன் `முதற் பராந்தகன்` எனக் கருதுவர் ஆராய்ச்சியாளர். இரணியவன்மன் கௌட தேசத்து அரசன் மகனாயினும் உடற் குற்றத்தால் அரசனாகத் தகுதியற்றவனாய் யாத்திரை செய்து வந்த பொழுது தில்லைப் பெருமானது திருவருளால் அவ்விடத்திலே உடற் குற்றம் நீங்கப் பெற்ற காரணத்தால் வியாக்கிரபாத முனிவர், `இவனே இந்நாட்டிற்கு அரசனாவான்; கௌட தேசத்தை அவன் தம்பியர் ஆள்க` என்று சொல்லித் தில்லைப் பதியிலே தில்லை மூவாயிரவரும் பிறரும் சூழ அவனுக்கு முடிசூட்டி, புலியூர் அரசனாகிய இவனுக்குப் புலிக்கொடியே உரியது என்று கொடுத்தார் என்பதும் அப்புராண வரலாறு. இதனால் பிற்காலச்சோழர்கள் தில்லையில் தில்லை வாழந்தணர் முடிசூட்டப்பெறும் வழக்கத்தையும் உடையராய்

இருந்தனர். இவ்வாசிரியரும் அம்மன்னருள் ஒருவராதல் இங்கு நினைக்கத்தக்கது.

நெடியா னோடு நான்மு கன்னும்
வானவரும் நெருங்கி
முடியால் முடிகள் மோதி உக்க
முழுமணி யின்திரளை
அடியார் அலகி னால் திரட்டும்
அணிதில்லை யம்பலத்துக்
கடியார் கொன்றை மாலை யானைக்
காண்பதும் என்றுகொலோ. **#205**

ஓங்கி உலகளந்த திருமாலோடு பிரமனும், தேவர்களும் சந்நிதியில் நெருங்கி நிற்றலான், அவர்கள் முடிகள் ஒன்றோடொன்று மோதுதலான், சிதறிய பெரிய மணிகளின் குவியலை அடியவர்கள் திருவலகைக்கொண்டு திரட்டி வைக்கும் அழகிய தில்லை அம்பலத்துள்ள நறுமணம் கமழும் கொன்றைப் பூமாலையானாகிய சிவபெருமானை அடியேன் எந்நாள் காண்பேனோ?

விளக்கவுரை

நெடியான் - திருமால். முடியால் - ஒருவர் மகுடத்தோடு. முடிகள் மோதி - மற்றவர் மகுடங்கள் தாக்குதலால். உக்க - சிந்திய. முழுமணி - குற்றமற்ற இரத்தினம். கடி - நறுமணம். இத்திருப்பாடற் பொருளோடு,

வந்திறை யடியில் தாழும் வானவர் மகுட கோடிப்
பந்தியின் மணிகள் சிந்த வேத்திரப் படையால் தாக்கி
அந்தியும் பகலும் தொண்டர் அலகிடும் குப்பை யாக்கும்
நந்தியெம் பெருமான் பாத நகைமலர் முடிமேல் வைப்பாம்.

என்னும் திருவிளையாடற் புராணச் செய்யுளை *(18)* ஒப்புநோக்கிக் காண்க.

சீரால்மல்கு தில்லைச் செம்பொன்
அம்பலத் தாடிதன்னைக்
காரார் சோலைக் கோழி வேந்தன்
தஞ்சையர் கோன்கலந்த
ஆராஇன்சொற் கண்டரா தித்தன்
அருந்தமிழ் மாலைவல்லார்
பேரா உலகில் பெருமை யோடும்
பேரின்பம் எய்துவரே. **#206**

சிறப்பான் மேம்பட்ட தில்லைநகரில் உள்ள செம் பொன் அம்பலத்தில் கூத்து நிகழ்த்தும் சிவபெருமானைப்பற்றி மேகங்கள் பொருந்திய சோலைகளை உடைய உறையூர் மன்னனும், தஞ்சைமாநகரில் உள்ள

அரசனும் ஆகிய கண்டராதித்தன் திருவரு ளோடு கலந்து தெவிட்டாத இனிய சொற்களால் பாடிய அரிய தமிழ்ப் பாமாலையைப் பொருளுணர்ந்து கற்றுப் பாட வல்லவர்கள், ஒருமுறை சென்றால் மீண்டும் அவ்விடத்தினின்றும் திரும்பி நில உலகிற்குப் பிறப்பெடுக்க வாராத வீட்டுலகில் பெருமையோடு பேரானந்தத்தை அடைவார்கள்.

விளக்கவுரை

சீரால் மல்கு - புகழால் உலகெங்கும் நிறைந்த, ``தஞ்சையர் கோன்`` என்றதனால், இவர் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டிருந்தமை பெறப்படும். ``கோழிவேந்தன்`` என்றது மரபு குறித்ததாய், `சோழ மன்னன்` என்னும் அளவாய் நின்றது. `கோழி வேந்தன், தஞ்சையர் கோன் கண்டராதித்தன் அம்பலத்தாடி தன்னைக் கலந்த அருந்தமிழ் மாலை` என்க. ஆரா இன்சொல் - தெவிட்டாத இனிமையை யுடைய சொல்லையுடைய. பேரா உலகு - சென்றடைந் தோர் நீங்காது நிலைபெறும் உலகம்; வீட்டுலகம்.

வேணாட்டடிகள் - கோயில்

துச்சான செய்திடினும் பொறுப்பரன்றே
ஆள் உகப்பார்
கைச்சாலும் சிறுகதலி இலைவேம்புங்
கறிகொள்வார்
எச்சார்வும் இல்லாமை நீ அறிந்தும்
எனதுபணி
நச்சாய்காண் திருத்தில்லை நடம்பயிலும்
நம்பானே. **#207**

தில்லையில் திருக்கூத்து நிகழ்த்தும் எம் பெருமானே! அடிமைகளை விரும்புபவர்கள், அவ்வடிமைகள் இழிவான செயல்களைச் செய்தாலும் அவற்றைப் பொறுத்துக் கொள்வர். கசப்புச் சுவையை உடையவாயிருப்பினும் வாழைக்கச்சல் களையும், வேப்பங்கொழுந்தினையும் கறி சமைத்தற்குப் பயன்படுத்து வார்கள். அடியேனுக்கு உன்னைத் தவிர வேறு எந்தப்பற்றுக்கோடும் இல்லை என்பதனை நீ அறிந்தும் என்னுடைய தொண்டினை விரும்பா திருப்பதன் காரணம் புலப்படவில்லை.

விளக்கவுரை

துச்சான - இழிவான செயல்களை. ஆள் உகப்பார் - தமக்கு அடிமையாய் உள்ளவரை விரும்புகின்ற தலைவர். `கைத்தா லும்` என்பது, `கைச்சாலும்` எனப் போலியாயிற்று. கைத்தல் - கசத்தல். கதலி - வாழை; இஃது ஆகுபெயராய் அதன் காயைக் குறித்தது. ``இலை வேம்பு`` என்றதனை, `வேம்பு இலை` என மாற்றுக. `வாழை யின் பிஞ்சுக் காயும், வேப்பிலையும் கசப்பனவாயினும் அவற்றையும் கறியாகக் கொள்வர் மக்கள்` என்னும் இவ்வுவமையை முன்னர் வைத்து உரைக்க. எச்சார்வும் - யாதொரு துணையும். `எனக்கு இல்லாமை` என உரைக்க. நச்சாய் - நீ விரும்பவில்லை. `இது பொருந் துவதோ` என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க. காண், முன்னிலை யசை.

தம்பானை சாய்ப்பற்றார் என்னும்
முதுசொல்லும்
எம்போல்வார்க் கில்லாமை என்னளவே
அறிந்தொழிந்தேன்
வம்பானார் பணிஉகத்தி வழிஅடியேன்
தொழில்இறையும்
நம்பாய்காண் திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே. **#208**

திருத்தில்லையில் நடம்பயிலும் நம்பானே! ஒருவரும் தம்முடைய

பானையைச் சாய்த்து நீரைப் பிடிக்க மாட்டார்கள் என்னும் பழமொழியும் அடியேனைப் போன்றவர் களுக்குப் பொருந்தாதிருத்தலை என்னைப்பொறுத்த வரையில் தெரிந்து கொண்டுவிட்டேன். புதியராக வந்த அடியவர்களின் தொண் டினை விரும்பும் நீ வழிவழியாக வந்த அடியேனுடைய தொண் டினைச் சிறிதும் விரும்பாதிருக்கிறாயே.

விளக்கவுரை

`சாய` என்பதன் இறுதி அகரம் தொகுத்தலாயிற்று. தம் பானை சாயப் பற்றார் - ஒருவரும் தங்கள் பானையைக் கீழே விழுமாறு பிடிக்கமாட்டார்கள்; அஃதாவது `கருத்தின்றிப் புறக்கணிப்பாகக் கையாளார்` என்பதாம்.
முதுசொல் - பழமொழி. `இறைவன் தம்மைப் புறக்கணித்து விட்டான்` என்னும் கருத்தினால் `அம்முதுசொல் எம் போல்வார்க்கு இல்லாமை என்னளவிலே அறிந்தொழிந்தேன்` என்றார். ``சொல்லும்`` என்னும் உம்மை, சிறப்பு. ``அறிந்தொழிந் தேன்`` என்பது ஒருசொல் நீர்மைத்து. வம்பு ஆனார் பணி உகத்தி - புதியராய் வந்து அடியராயி னாரது தொண்டினையும் விரும்புகின்ற நீ `பணியும்` என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. வழி அடியேன் தொழில் இறையும் நம்பாய் - வழியடியேனாகிய எனது தொண்டினைச் சிறிதும் விரும்பவில்லை.

பொசியாதோ கீழ்க்கொம்பு நிறைகுளம்என்
றதுபோலத்
திசைநோக்கிப் பேழ்கணித்துச் சிவபெருமான்
ஓஎனினும்
இசையானால் என்திறத்தும் எனையுடையாள்
உரையாடாள்
நசையானேன் றிருத்தில்லை நடம்பயிலும்
நம்பானே. **#209**

திருத்தில்லையில் நடம்பயிலும் நம்பான், நீர் நிறைந்த குளத்தின் அருகிலே பள்ளத்தில் உள்ள சிறுமரத்துக்கு அக்குளத்தின் நீர் கசிந்து பாயாதோ என்று சொல்லப்படும் பழ மொழிக்கு இணங்க அவன் வரும் திசைகளைப் பார்த்து மனம் வருந்திச் `சிவபெருமானே! அடியேனுக்கு அருள் செய்ய வாரா திருத்தல் முறையோ!` என்று முறையிட்டாலும், அந்த எம்பெருமான் என்பக்கம் வர உள்ளம் கொள்வானல்லன். அடியேனை அடிமையாக உடைய உமாதேவியும் எம்பெருமானை அடியேன் கண்முன் வருமாறு பரிந்துரை கூறுகின்றாள் அல்லள். அவனைக்காண ஆசைப்படும் அடியேன் யாது செய்வேன்?

விளக்கவுரை

`நிறைகுளம் கீழ்க்கொம்பு பொசியாதோ` என மாற்றி, `கொம்பிற்கு` என உருபு விரிக்க. `ஏரி நிரம்பினால் அடைகரை பொசியும்` என்பது பழமொழி. பொசிதல் - கசிந்து ஊறுதல். `ஏரி நிறைந்தபொழுது மதகின் பாய்ச்சலால் வளரும் பயிர்களே யன்றி, அடை கரையில் முளைத்துள்ள செடிகளும் ஊற்றுப் பெற்று வளரும்` என்பது இப்பழமொழியின் பொருள். `போல` என்றதன்பின், ``என் திறத்தும், நசையானேன்`` என்பவற்றை முறையே கூட்டுக. ``என் திறத்தும் நசையானேன்`` என்றது, என்னளவிலும் நினைந்து சிவ பெருமான் அருள் வழங்குவான் என்று கருதி, அவனிடத்து விருப்ப முடையவனாயினேன். இதன்பின், `ஆயினும்` என்பது வருவிக்க. திசைநோக்கி - அவன் வரும் திசையைப் பார்த்து. பேழ்கணித்து - மனம் வருந்தி; `ஆகாயத்தை நோக்கி` என்றவாறு. சிவபெருமான் ஓ எனினும் - சிவபெருமானே முறையோ என்று முறையிட்டாலும். இசையான் - (என்னை ஆளாக உடையானாகிய அவன்) வர இணங்கவில்லை. `எனை உடையாளும்` என உம்மை விரித்து, `என்னை ஆளாக உடையாளாகிய உமையம்மையும் எனக்கு முன்வந் தருளுமாறு அவனுக்குச் சொல்லவில்லை` என உரைக்க. `இனி யான் என்செய்வேன்` என்பது குறிப்பெச்சம். ``நம்பானே`` என்றதில் ஏகாரம் ஈற்றசை.

ஆயாத சமயங்கள் அவரவர்கண்
முன்பென்னை
நோயோடு பிணிநலிய இருக்கின்ற
அதனாலே
பேயாஇத் தொழும்பனைத்தம் பிரான்இகழும்
என்பித்தாய்
நாயேனைத் திருத்தில்லை நடம்பயிலும்
நம்பானே. **#210**

திருத்தில்லையில் நடம்பயிலும் நம்பானே! ஆராய்ச்சியில்லாத புறச்சமயங்களைப் பின்பற்றும் மக்களுக்கு முன்னே அடியேனை மனக்கவலையும் உடற்பிணியும் வருத்துமாறு அடியேன் இருக்கின்ற காரணத்தால், `இந்த அடியவனைப் பேய் என்று கருதி இவனுடைய ஆண்டானும் இகழ்ந்து புறக்கணித்து விட்டான்` என்று நாய் போன்ற அடியேனை அவர்கள் எள்ளி உரைக்குமாறு செய்துவிட்டாய்.

விளக்கவுரை

`என்னை நோயோடு பிணி நலிய, (நான் ஏதும் செயலின்றி) இருக்கின்ற அதனாலே, நாயேனை ஆயாத சமயங்கள் அவரவர் முன்பு என்பித்தாய்`

என, கூட்டியுரைக்க. ஆயாத சமயங்கள் - உண்மையை ஓர்ந்துணரமாட்டாது மயங்கி உரைக்கின்ற சமயங்கள். ``ஆயாதன சமயம்பல`` எனத் திருஞானசம்பந்தர் அருளிச் செய்தமை காண்க. *(தி.1 ப.11 பா.5)* `சமயங்களை யுடைய அவரவர்` என்க. நோய் - மனக்கவலை. பிணி - உடற்பிணி. நலிய - வருத்த. `பேயாக` என்பது ஈறு குறைந்தது. `பேய்போல அலையும்படி` என்பது பொருள். தொழும்பன் - அடியவன். தம்பிரான் - தமக்குத் தலைவன். ``தாம்`` என்றது, இவர்போலும் அடியவர் பிறரையும் உளப்படுத்தது. `தம் பிரான் இகழும்` என்றல், `இல்லாதவனை உளனாகக் கருதியும், தன்னைக் காக்கமாட்டாதவனை மாட்டுவான் எனக் கருதியும் அல்லல் உறுகின்றான்` என்னும் இருவகைக் கருத்தையும் தோற்றுவிப்பது. `என்போலிகள் உம்மை இனித் தெளியார் அடியார் படுவது இதுவே யாகில்` என்று அருளினார் திருநாவுக்கரசு நாயனாரும் *(தி.4 ப.1 பா.9)*. ``என்பித்தாய்`` என்பது, `என்று பொது மக்களால் இகழ் வித்தாய்` எனப் பொருள்தந்து, `நாயேனை` என்னும் இரண்டாவதற்கும், ``முன்பு`` என்பதற்கும் முடிபாயிற்று. `ஏத மேபல பேச நீஎனை ஏதிலார்முனம் என்செய்தாய்` என்றார் திருவாசகத்தும். *(தி.8 திருக்கழுக். 6)*

நின்றுநினைந் திருந்துகிடந் தெழுந்துதொழும்
தொழும்பனேன்
ஒன்றிஒரு கால்நினையா திருந்தாலும்
இருக்கவொட்டாய்
கன்றுபிரி கற்றாப்போல் கதறுவித்தி
வரவுநில்லாய்
நன்றிதுவோ திருத்தில்லை நடம்பயிலும்
நம்பானே. **#211**

திருத்தில்லையில் நடம்பயிலும் நம்பானே! நின்ற இடத்தும் அமர்ந்த இடத்தும் கிடந்த இடத்தும் நினைந்து, எழுந்த விடத்துத் தொழுகின்ற அடியவனாகிய நான், மனம் பொருந்தி ஒரு நேரத்தில் உன்னை விருப்புற்று நினைக்காமல் இருந்தாலும் நீ அவ்வாறு இருக்கவிடாமல் கன்றைப் பிரிந்த தாய்ப்பசுவைப் போலக் கதறச் செய்கின்றாயே ஒழிய நீ என் எதிரில் வந்து நிற்கின்றாய் அல்லை. இவ்வாறு நீ செய்யும் இச்செயல் உனக்கு ஏற்புடைய நல்ல செயல் ஆகுமா?

விளக்கவுரை

``நின்று ....... தொழும்பனேன்`` என்றதற்கு, `நின்ற விடத்தும், இருந்தவிடத்தும், கிடந்தவிடத்தும் நினைந்து, எழுந்த விடத்துத் தொழுகின்ற தொழும்பனேன்` என உரைக்க. நிற்றல் முதலிய மூன்றும் செயலற்றிருக்கும் நிலையாதலின், அக்காலங்களில் நினைத லும்,

எழுதல் கிளர்ந்தெழுந்து செயற்படும் நிலையாகலின், அக்காலத் தில் தொழுதலும் கூடுவவாயின. `இரு நிலையிலும் உன்னை மறவா திருக்கின்ற யான், ஒரோவொருகால் எக்காரணத்தாலேனும் மறந்திருப் பினும் இருக்கவொட்டாய்` என்க.
இதன்பின், `ஆயினும்` என்பது வருவிக்க. ஒன்றி - உன்னைப் பொருந்தி; என்றது, பிறவற்றை மறந்து என்றவாறு. இது, `நினையாது` என்பதில், `நினைதல்` வினையோடு முடிந்தது. ``வரவு`` என்றதில், ஒடு உருபு விரித்து, `வரவொடு நில்லாயாய்; ஆப்போல் கதறுவித்தி` என மாற்றி உரைக்க. கன்று பிரி - கன்றினால் பிரியப்பட்ட. ``கற்றா`` என்றது, வாளா பெயராய் நின்றது.

படுமதமும் இடவயிறும் உடையகளி
றுடையபிரான்
அடிஅறிய உணர்த்துவதும் அகத்தியனுக்
கோத்தன்றே
இடுவதுபுல் ஓர்எருதுக் கொன்றினுக்கு
வையிடுதல்
நடுவிதுவோ திருத்தில்லை நடம்பயிலும்
நம்பானே. **#212**

திருத்தில்லையில் நடம்பயிலும் நம்பானே! ஒழுகு கின்ற மத நீரையும் பானை போன்ற வயிற்றினையும் உடைய யானை முகனாகிய விநாயகனை மகனாக உடைய தலைவனே! உன் திரு வருளை உணர்தற்பொருட்டு அகத்திய முனிவருக்கு ஆகமத்தை உபதேசித்தாய். அகத்தியருக்கு மேம்பட்ட நிலையை அருளி, அடியே னுக்கு உலகியலை அருளிய இச்செயல் இரண்டு எருதுகள் உள்ள இடத்திலே ஓர் எருதுக்குப் புல்லை வழங்கி மற்றொன்றினுக்கு வைக் கோலை வழங்குவதனை ஒக்கும் செயலாகும். இஃது உனக்கு எல்லோ ரிடமும் நடுவு நிலையோடு நடந்துகொள்ளும் பண்பு ஆகுமா?

விளக்கவுரை

படுமதம் - மிக்க மதம். இடவயிறு - இடம் பெரிதாய வயிறு. இவற்றை யுடைய களிறு, மூத்த பிள்ளையார். `அயிராவணம்` என்பாரும் உளர். ``பிரான்`` என்றது, `பிரானாகிய நீ` என, முன்னிலைக்கண் படர்க்கை வந்த வழுவமைதி. அடி அறிய - உனது திருவருளை உணர்தற்பொருட்டு. `அடிஅறிய ஓத்து உணர்த்துவது அகத்தியனுக்கு அன்றே` எனவும், `இது நடுவோ` எனவும் மாற்றுக. ஓத்து - ஆகமப் பொருள். சிவபெருமான் அகத்திய முனிவருக்கு ஆகமத்தை உபதேசித்தார் என்பதும் வரலாறு. `அகத்தியனுக்கு அந் நிலையை அருளி, அடியேனுக்கு உலகியலை அருளினாய்; இது,

இரண்டெருதுகளை உடைய ஒருவன். ஒன்றற்குப் புல் இட்டு, மற்றொன்றற்கு வைக்கோல் இடுதல் போல்வது` என்பதாம்.

மண்ணோடு விண்ணளவும் மனிதரொடு
வானவர்க்கும்
கண்ணாவாய் கண்ணாகா தொழிதலும்நான்
மிகக்கலங்கி
அண்ணாவோ என்றண்ணாந் தலமந்து
விளித்தாலும்
நண்ணாயால் திருத்தில்லை நடம்பயிலும்
நம்பானே. **#213**

திருத்தில்லையில் நடம்பயிலும் நம்பானே! மண்ணுலகிலிருந்து விண்ணுலகம் வரையிலும் மனிதர்களோடு தேவர்கள் வரையிலும் எல்லோருக்கும் நீ பற்றுக்கோடு ஆவாய். அவ்வாறாகவும் அடியேனுக்கு மாத்திரம் பற்றுக்கோடு ஆகாமல் அடியேனைப் புறக்கணித்தலால் அடியேன் மிகவும் கலங்கி, `பெருமை பொருந்திய தலைவனே` என்று மேல்நோக்கி மனம் சுழன்று அழைத் தாலும் நீ அடியேனை நெருங்கி நிற்கின்றாய் அல்லை; இதன் காரணம் தான் யாதோ?

விளக்கவுரை

ஒடுக்கள், எண்ணிடைச்சொல். `மண்ணின்கண் அளவும் (பொருந்திய) மனிதர்க்கும், விண்ணின்கண் அளவும் வான வர்க்கும்` என நிரல்நிரை வந்தது. கண் - களைகண், பற்றுக்கோடு. `எனக்கு அவ்வாறு ஆகாதொழிந்தமையால்` என்க. `அண்ணல்` என்பது ணகர ஈறாய்த் திரிந்து விளியேற்பது பிற்கால வழக்கு. அண்ணல் - பெருமை யுடையவன்; தலைவன். அண்ணாந்து - ஆகாயத்தை நோக்கி நின்று. அலமந்து - வருந்தி.

வாடாவாய் நாப்பிதற்றி உனைநினைந்து
நெஞ்சுருகி
வீடாம்செய் குற்றேவல் எற்றேமற்
றிதுபொய்யிற்
கூடாமே கைவந்து குறுகுமா
றியானுன்னை
நாடாயால் திருத்தில்லை நடம்பயிலும்
நம்பானே. **#214**

திருத்தில்லையில் நடம்பயிலும் நம்பானே! வாட்ட முற்று, வாயின்கண் உள்ள நாவினால் அடைவுகேடாகப் பல கூறி, உன்னை விருப்புற்று நினைத்து, மனம் உருகும் இதனைத் தவிர, வீடு பேறு அடைதலுக்கு ஏதுவாகிய சிறுபணிவிடை வேறுயாது உளது? இக்குற்றேவல்

பொய்யின்கண் பொருந்திப் பழுதாகாவாறு யான் உன்பக்கம் வந்து உன்னைக் கூடுமாறு நீ திருவுள்ளம் பற்றுவாயாக.

விளக்கவுரை

``வாடா`` என்பது, `செய்யா` என்னும் வினையெச்சம். `வாடி, பிதற்றி, நினைந்து, உருகிச் செய் குற்றேவல்` என்க. வாய் நா - வாயின்கண் உள் நாவால் `செய் வீடாம் குற்றேவல்` என மாறுக. வீட்டிற்கு ஏதுவாவதனை, ``வீடாம்`` என்றார். குற்றேவல் - சிறு பணி விடை. எற்று - என்ன பயனை உடையது. `உன்னை அடைவதையே பயனாக உடையது` என்பது குறிப்பு. இதனால், இவர் உலகப் பயன் கருதி இறைவனுக்குத் தொண்டு செய்யாமை பெறப்பட்டது. இது பொய்யிற் கூடாமே - இக் குற்றேவல் பொய்யின்கண் பொருந்தாத வாறு; `பழுதாகாதபடி` என்றவாறு. `கூடாமே நாடாய்` என இயையும். ``கைவந்து`` என்றதில், கை இடைச்சொல். `யான் வந்து உன்னைக் குறுகுமாறு நாடாய்` என மாற்றிக் கூட்டுக. நாடாய் - நினைந்தருள்.

வாளாமால் அயன்வீழ்ந்து காண்பரிய
மாண்பிதனைத்
தோளாரக் கையாரத் துணையாரத்
தொழுதாலும்
ஆளோநீ உடையதுவும் அடியேன்உன்
தாள்சேரும்
நாளேதோ திருத்தில்லை நடம்பயிலும்
நம்பானே. **#215**

திருத்தில்லையில் நடம்பயிலும் நம்பானே! வழிபடுதலைச் செய்யாது திருமாலும் பிரமனும் விரும்பிக் காண் பதற்கு அரிய உன் திருமேனியைக் கைகளை உச்சிமேல் குவித்துச் சேர்த்துத் திருவடித்துணைக்கண் நிறைவு பெறும்படி தொழுதாலும் நீ அடியேனை அடிமையாக உடைய செயலும் உடையையோ? அடி யேன் உன் திருவடிகளைச் சேரும் நாள் என்று வருமோ?

விளக்கவுரை

``வாளா`` என்றது, `வழிபடுதலைச் செய்யாது` என்னும் பொருட்டு. ``புக்க ணைந்து புரிந்தல ரிட்டிலர்` என்பது முதலாக இலிங்கபுராணத் திருக்குறுந்தொகையுள் *(தி.5 ப.95)* திருநாவுக்கரசர் அருளிச் செய்தல் அறிக. மாலுக்குரிய, ``வீழ்ந்து`` என்பதன்பின், அயனுக்குரிய, `பறந்து` என்பது வருவிக்க. ``மாண்பு`` என்றது அதனையுடைய திருமேனியை உணர்த்திற்று. கூத்தப் பெருமான் திருமேனியும் மாலயன் பொருட்டுத் தோன்றிய வடிவின் வேறன்றாகலின் `மால் அயன் காண்பரிய

மாண்பினதாகிய இதனை` என்றார். தோளாரத் தொழுதல், கைகளை உச்சிமேற் சேர்த்தித் தொழுதலாம். துணை - திருவடித்துணை. `தோளாரவும், கையாரவும் துணையை ஆரத்தொழுதாலும்` என்க. ஆள் - அடிமை. ``நீ`` என்றதன்பின், `என்னை` என்பது வருவித்து, `நீ என்னை உடையதுவும் ஆளோ` என மாற்றி உரைக்க. `உடையதுவும் ஆளோ` என்றது, ஆளாக உடையையோ என்றவாறு. `உடையை அல்லையாயின், அடியேன் உன் தாள்சேரும் நாளும் ஒன்று உண்டாகுமோ` என்க. எனவே, ``ஆளோ`` என்ற ஓகாரம் ஐயப்பொருளிலும், `ஏதோ` என்னும் ஓகாரம் இரக்கப் பொருளிலும் வந்தனவாம். இனிப் பின்னின்ற ஓகாரத்தை அசைநிலை யாகவும் ஆக்கி, `உடையாயின், அடியேன் உன் தாள் சேரும் நாள் ஏது *(யாது)*` என வினாப்பொருட்டாகவும் உரைக்க.

பாவார்ந்த தமிழ்மாலை பத்தரடித்
தொண்டன்எடுத்
தோவாதே அழைக்கின்றான் என்றருளின்
நன்றுமிகத்
தேவே தென் திருத்தில்லைக் கூத்தாடீ
நாயடியேன்
சாவாயும் நினைக்காண்டல் இனியுனக்குத்
தடுப்பரிதே. **#216**

என் தேவனே! அழகிய புனிதத் தலமாகிய தில்லையில் திருக்கூத்து நிகழ்த்துபவனே! அடியார்களுடைய திருவடித் தொண்டன் பாட்டு வடிவமாக அமைந்த தமிழ்மாலையை எடுத்துக் கூறி விடாமல் அழைத்துக் கொண்டிருக்கிறான் என்பதனைத் திருவுளம்பற்றி இப்பொழுதே அருள்செய்தால் மிக நல்லது. நாய் போன்ற இழிந்த அடியவனாகிய நான் சாகின்ற நேரத்திலாவது உன்னைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிட்டுவதனை இனி உன்னாலும் தடுத்தல் இயலாது.

விளக்கவுரை

மூன்றாவது அடிமுதலாகத் தொடங்கி, ``தடுப்பரிது`` என்பதன்பின், `ஆதலின்` என்னும் சொல்லெச்சம் வருவித்து உரைக்க. பா ஆர்ந்த - பாட்டாய்ப் பொருந்திய. `பா ஆர்ந்த மாலை` எனவும், `மாலை எடுத்து அழைக்கின்றான்` எனவும் இயையும். அருளின் - இப்பொழுதே அருள்செய்தால்; என்றது `காட்சி கொடுத்தருளினால்` என்பதாம். `மிக நன்று` என்க. `நாயடியேன் நினைக் காண்டலைச் சாவாயும் தடுப்பு உனக்கு இனி அரிது` என மாற்றிக் கூட்டுக. ``இனி`` என்றது, `யான் ஓவாதே அழைப்பதான பின்பு` என்றபடி. `இறைவன் தன்னைப் பன்னாள் அழைப்பவர்க்கு என்றாயினும் எதிர்ப்படுதல் கடன்` *(தி. 4*

ப.*112* பா.*9)* ஆதலாலும், இறக்கும்பொழுதும் எதிர்ப் படாதொழியின் கூற்றுவன் வந்து எதிர்ப்படுவானாகலின், அவன் வாராதவாறு அப்பொழுது ஒருதலையாக எதிர்ப்படுதல் வேண்டு மாகலானும் இவ்வாறு கூறினார். இதனால், இறைவனது காட்சியைக் காண இவருக்கிருந்த வேட்கை மிகுதி புலனாகும்.

திருவாலியமுதனார் - கோயில்

மையல் மாதொரு கூறன் மால்விடை
யேறி மான்மறி யேந்தி யதடங்
கையன் கார்புரை யுங்கறைக்
கண்டன் கனன் மழுவான்
ஐயன் ஆரழல் ஆடு வான்அணி
நீர்வயல் தில்லை யம்பலத்தான்
செய்யபாதம் வந்தென் சிந்தை
யுள் ளிடங் கொண் டனவே. **#217**

அழகிய நீர்வளம்உடைய வயல்கள் சூழ்ந்த தில்லைத்திருப்பதியின் பொன்னம்பலத்தில் உள்ளவனாய், தன் மாட்டுக் காமமயக்கம் கொண்ட பார்வதி பாகனாய், திருமாலாகிய காளையை இவர்பவனாய், மான்குட்டியை ஏந்திய நீண்ட கையனாய், கார்மேகத்தை ஒத்த விடக்கறை பொருந்திய கழுத்தினனாய், கனலை யும் மழுவையும் ஏந்துகின்றவனாய், நிறைந்த தீயிடைக் கூத்தாடு பவனாய் உள்ள தலைவனுடைய சிவந்தபாதங்கள் என் மனத்தின்கண் வந்துபொருந்தி அதனைத் தம் இருப்பிடமாகக் கொண்டுள்ளன.

விளக்கவுரை

மையல் மாது - காதலை உடைய பெண்டு; உமை. `காதலுக்கு இடமாய பெண்டு` என்றும் ஆம். கார் புரையும் - மேகம் போலும். கறை - கறுப்பு. இதனுள், ``கறை, சிந்தை`` என்பவை கூன்.

சலம்பொற் றாமரை தாழ்ந்தெ ழுந்ததட
முந்தடம்புனல் வாய்மலர் தழீஇ
அலம்பி வண்டறையும் அணி
யார்தில்லை யம்பலவன்
புலம்பி வானவர் தான வர்புகழ்ந்
தேத்த ஆடுபொற் கூத்தனார்கழற்
சிலம்பு கிங்கிணிஎன் சிந்தை
யுள்ளிடங் கொண்டனவே. **#218**

நீரின்கண் பொலிவை உடைய தாமரைக் கொடிகள் ஆழமாக வேர்ஊன்றி வளர்ந்த குளங்களை உடையதாய், அந்த மிக்க நீரின்கண் உள்ள பூக்களைச் சேர்ந்து அவற்றைக் கிண்டி வண்டுகள் ஒலிக்கப்பெறுவதாய், அழகுநிறைந்த தில்லைப்பதியிலுள்ள பொன்னம்பலத்தில் உள்ளவனாய், முறையிட்டுத் தேவரும் அசுரரும் தன்னைப் புகழ்ந்து துதிக்கக் கூத்து நிகழ்த்தும் பொன்போலச் சிறந்த கூத்தப்பிரானுடைய திருவடிகளில் ஒலிக்கின்ற கிண்கிணிகள் அடியே

னுடைய சிந்தையுள் தம் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டன.

விளக்கவுரை

சலம் - நீரின்கண். பொன் - அழகு. தாழ்ந்து எழுந்த - ஆழ வேரூன்றி வளர்ந்த. தடம் - குளத்தின்கண். `தடமும்` என்பது பாடம் அன்று. தடம் புனல்வாய் - மிக்க நீரின்கண் உள்ள. `அத்தடம் புனல்வாய்` எனச்சுட்டு வருவிக்க. அலம்பி - கிண்டி. புலம்பி - முறை யிட்டு. தானவர் - அசுரர். பொற் கூத்து - பொன்போலச் சிறந்த நடனம், சிலம்பு - ஒலிக்கின்ற. இதனுள்ளும், ``அணி, சிந்தை`` என்பன கூன்.

குருண்ட வார்குழற் கோதை மார்குயில்
போல்மி ழற்றிய கோல மாளிகை
திரண்ட தில்லைதன்னுள் திரு
மல்குசிற் றம்பலவன்
மருண்டு மாமலை யான்மகள்தொழ
ஆடுங் கூத்தன் மணிபு ரைதரு
திரண்ட வான்குறங்கென் சிந்தை
யுள்ளிடங் கொண்டனவே. #219

சுருண்ட நீண்ட கூந்தலை உடைய மகளிர் குயில் போல இனிமையாக மழலைபேசும் அழகிய பேரில்லங்கள் மிகுதியாக உள்ள தில்லைத்திருப்பதியில் செல்வம் நிறைந்த சிற்றம்பலத்தில் உள்ளவனாய், திகைத்து நின்று இமவான் மகள் தொழுமாறு ஆடும் கூத்தப்பிரானுடைய செம்மணியை ஒத்த திரண்ட சிறந்த துடைகள் அடியேன் சிந்தையுள் தம் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டன.

விளக்கவுரை

குருண்ட - சுருண்ட. ``மிழற்றிய`` என்னும் இறந்த காலம், `அத்தன்மையைப் பெற்ற` என்னும் பொருட்டு. திரண்ட - நெருங்கிய. திருமல்கு - அழகு நிறைந்த; இது சிற்றம்பலத்தைச் சிறப் பித்தது. மருண்டு - வியந்து. மணி - மாணிக்கம். வான் குறங்கு - சிறந்த துடை.

போழ்ந்தி யானை தன்னைப் பொருப்பன்
மகள்உமை யச்சங் கண்டவன்
தாழ்ந்த தண்புனல்சூழ் தட
மல்குசிற் றம்பலவன்
சூழ்ந்த பாய்புலித் தோல்மிசைத் தொடுத்து
வீக்கும் பொன்னூல் தன்னினொடு
தாழ்ந்த கச்சதன்றே தமி
யேனைத் தளர்வித்ததே. #220

யானையின் தோலை உரித்துத் தன்னுடைய அச் செயலினால்

உமாதேவிக்கு ஏற்பட்ட அச்சத்தைப் பின்னர்க் கண்ட வனாய், ஆழ்ந்த குளிர்ந்த நீரால் நிறைந்த குளங்கள் மிகுந்த தில்லைச் சிற்றம்பலத்திலுள்ள பெருமான் அணிந்த அழகிய பூணநூலோடு, பரவிய புலித்தோல் மீது வளைத்துக்கட்டிய இடைக்குப் பொருத்த மான கச்சு தன்னுணர்வு இல்லாத அடியேன் உள்ளத்தைத் தளரச் செய்தது.

விளக்கவுரை

போழ்ந்து - உரித்து, `உமையது அச்சத்தைப் பின்னர்க் கண்டவன்` என்க. இனி, ``கண்டவன்`` என்றதற்கு, `உண்டாக் கினவன்` எனப் பொருள்கொண்டு, `உமைக்கு என நான்காவது விரித்தலும் ஆம். தாழ்ந்த புனல் - ஆழ்ந்த நீர். தொடுத்து வீக்கும் - வளைத்துக் கட்டிய. பொன் நூல் - அழகிய பூணநூல். ``பொன்னூல் தன்னினொடு`` என்பதைச் ``சிற்றம்பலவன்`` என்றதன் பின்னர்க் கூட்டுக. தாழ்ந்த கச்சு - பொருந்திய கச்சு. இப்பாடலில் சீர்கள் சிறிது வேறுபட்டு வந்தன.

பந்த பாச மெலாம்அ றப்பசு
பாச நீக்கிய பன்மு னிவரோ
டந்தணர் வணங்கும் அணி
யார்தில்லை யம்பலவன்
செந்த ழல்புரை மேனியுந் திகழுந்
திருவயிறும் வயிற்றினுள்
உந்தி வான்சுழிஎன் உள்ளத்
துள்ளிடங் கொண்டனவே. **#221**

செயற்கையாகிய மாயை, கன்மம் என்பனவற்றை யும், இயற்கையாகிய ஆணவமலத்தையும் போக்கிய பல முனிவர் களோடு அந்தணர்கள் வணங்கும் அழகுநிறைந்த தில்லைத்திருநகரில் அமைந்த பொன்னம்பலத்திலுள்ள பெருமானுடைய சிவந்த நெருப்பை ஒத்த திருமேனியும், விளங்கும் திருவயிறும் அத்திரு வயிற்றிலுள்ள கொப்பூழின் அழகிய சுழியும் அடியேனுடைய உள்ளத்துள் தம் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டன.

விளக்கவுரை

``பந்த பாசம்`` என்றது, செயற்கையாகிய மாயை கன்மங்களையும், ``பசு பாசம்`` என்றது இயற்கையாகிய ஆணவத்தை யும் குறித்தன. அற - அறுமாறு. ``பசு பாசம்`` என்னும் ஆறாவதன் தொகை வடநூல் முடிபு. ``சுழி`` என்பதில் எண்ணும்மை தொகுக்கப் பட்டது. இதனுள், ``அணி. உள்ளத்து`` என்பன கூன்.

குதிரை மாவொடு தேர்ப லகுவிந்
தீண்டுதில்லையுட் கொம்ப னாரொடு

மதுர வாய்மொழி யார்மகிழ்ந்
தேத்துசிற் றம்பலவன்
அதிர வார்கழல் வீசி நின்றழ
காநடம் பயில் கூத்தன் மேல்திகழ்
உதர பந்தனம்என் னுள்ளத்
துள்ளிடங் கொண்டனவே. **#222**

குதிரைகள் யானைகள் என்ற இவற்றோடு தேர்கள் பல சேர்ந்து நெருங்குகின்ற தில்லையம் பதியிலே பூங்கொம்புபோன்ற ஆடல் மகளிரோடு இனிய இசைப் பாட்டைப் பாடுகின்றவர்கள் மகிழ்ந்து போற்றும் சிற்றம்பலத்தில் உள்ளவனாய், நீண்ட கழல் ஒலிக்கக் கால்களை வீசி அழகாகக் கூத்து நிகழ்த்துகின்ற கூத்தப்பிரான் திருமேனியின்மேல் விளங்கும் வயிற்றின் மேல் கட்டப்படும் ஆபரணத்தின் பல சுற்றுக்கள் என் உள்ளத்தினுள் தமக்கு இருப் பிடத்தை அமைத்துக் கொண்டன.

விளக்கவுரை

மா - யானை. ஈண்டு - நெருங்குகின்ற. கொம்பு அன்னார் - பூங்கொம்புபோலும் ஆடல் மகளிர். மதுர வாய்மொழியார் - இனிய இசைப்பாட்டைப் பாடுகின்றவர். அதிர - ஒலிக்க. `வார்கழல் அதிர` என மாற்றி, வீசுதலுக்கு, `கால்` என்னும் செயப்படுபொருள் வருவிக்க. ``கூத்தன்`` என்றது அவனது திருமேனியைக் குறித்த ஆகுபெயர். கச்சு, மேற்கூறப் பட்டமையின், உதரபந்தனம் அதனின் வேறென்க. உதர பந்தனம் - வயிற்றின்மேல் உள்ள கட்டு. கச்சு, அரையில் கட்டப் படுவது. ``கொண்டன`` என்ற பன்மையால் இது பல சுற்றுக்களை உடையதாதலும் பெறப்படும். இதனுள், ``அழ, உள்ளத்து`` என்பன கூன்.

படங்கொள் பாம்பணை யானொ டுபிர
மன்ப ரம்பர மாவரு ளென்று
தடங்கை யால்தொழ வுந்தழல்
ஆடுசிற் றம்பலவன்
தடங்கை நான்கும் அத் தோள்க ளுந்தட
மார்பினிற் பூண்கள் மேற்றிசை
விடங்கொள் கண்டமன்றே வினை
யேனை மெலிவித்தவே. **#223**

படம் எடுக்கின்ற திரு அனந்தாழ்வானைப் பாயலாகக் கொண்ட திருமாலொடு பிரமன், `மேலோருக்கும் மேலாயவனே! எங்களுக்கு அருள்புரிவாயாக` என்று நீண்ட கைகளால் தொழக் கையில் அனல்ஏந்தி ஆடும் சிற்றம்பலப் பெருமானுடைய நீண்டகைகள் நான்கும் நான்கு

திருத்தோள்களும், பரந்த மார்பில் அணிந்த அணிகலன்களும், அவற்றின் மேலதாய்ப் பொருந்திய விடமுண்ட கண்டமும் ஆகிய இவைகள் இவற்றைத் தரிசிக்கும் நல் வினையை உடைய அடியேனை உள்ளத்தை உருக்கி மெலிவித்தன.

விளக்கவுரை

பரம் பரமா - மேலானவற்றுக்கும் மேலானவனே; உனக்குமேல் ஒன்று இல்லாதவனே. ``தொழவும் ஆடுசிற்றம்பலவன்`` என்றது, `ஆடுவார் தொழுவாராயும், காண்பார் தொழப்படுவாராயும் இருத்தல் இயல்பாக. காண்பார் தொழுவாராக, ஆடுவான் தொழப் படுபவனாய் இருக்கின்றான்` என்றவாறு. எனவே. ``தொழவும்`` என்ற உம்மை உயர்வு சிறப்பாயிற்று. ``பூண்கள், கண்டம்`` என்பவற்றிலும் எண்ணும்மை விரிக்க. பூண்கள் - அணிகலங்கள். மேற்று இசை - மேலதாய்ப் பொருந்திய. `மேல் தை\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\*u2970?*` எனப் பிரித்து, `மேலிடத்துள்ள` என்றலுமாம். `மெலிவித்ததே` என்பது பாடம் அன்று. இதனுள், ``வினை`` என்ற ஒன்றுமே கூன்.

செய்ய கோடுடன் கமல மலர்சூழ்தரு
தில்லை மாமறை யோர்கள் தாந்தொழ
வையம் உய்ய நின்று மகிழ்ந்
தாடுசிற் றம்பலவன்
செய்ய வாயின் முறுவலும் திகழுந்திருக்
காதும் காதினின் மாத்தி ரைகளோ
டைய தோடுமன்றே அடி
யேனை ஆட் கொண்டனவே. **#224**

சிறந்த சங்குகளோடு தாமரை மலர்கள் ஊரைச்சுற்றிக் காணப்படும் தில்லைத்திருப்பதியில் மேம்பட்ட வேதியர்கள் தொழவும், உலகம் தீமைநீங்கி நன்மைபெறவும் நிலையாக மகிழ்ந்து கூத்து நிகழ்த்தும் சிற்றம்பலப் பெருமானுடைய சிவந்த வாயிலுள்ள பற்களும், விளங்கும் அழகிய காதுகளும், காதுகளில் அணிந்த குழைகளும் தோடும் தம் பேரழகால் அடியேனை அடிமையாகக் கொண்டன.

விளக்கவுரை

செய்ய கோடுடன் - நல்ல சங்குகளுடன். மாத்திரைகள் - சிறந்த சுருள்கள்; என்றது, குழையை. ஐய - அழகிய. இதனுள், `மகிழ்ந்து, அடி` என்பன கூன்.

செற்று வன்புரந் தீயெழச்சிலை
கோலி ஆரழல் ஊட்டினான் அவன்
எற்றி மாமணிகள் எறி

நீர்த்தில்லை யம்பலவன்
மற்றை நாட்ட மிரண்டொ டுமல
ருந்திரு முகமும் முகத்தினுள்
நெற்றி நாட்டமன்றே நெஞ்சு
ளேதிளைக் கின்றனவே. **#225**

சினங்கொண்டு கொடியோருடைய மும்மதில்களும் தீ எழுமாறு வில்லை வளைத்து அவற்றை அரிய நெருப்புக்கு உணவாக்கினவனாய், சிறந்தமணிகளை மோதிக் கரைசேர்க்கும் நீர்வளம் மிக்க தில்லை அம்பலத்தில் உள்ள பெருமானுடைய மற்ற இருகண்களோடு விளங்கும் திருமுகமும், முகத்தில் நெற்றி யிலுள்ள கண்ணும் அல்லவோ அடியேனுடைய நெஞ்சினுள்ளே பதிந்துள்ளன.

விளக்கவுரை

செற்று - சினந்து. சிலை - வில். கோலி - வளைத்து. ``அவன்`` என்பது பகுதிப்பொருள் விகுதி. நாட்டம் - கண். ``நெற்றி நாட்டம்`` என்பதில் எண்ணும்மை தொகுக்கப்பட்டது. திளைக் கின்றன - உலாவுகின்றன.

தொறுக்கள் வான்கம லம்ம லருழக்
கக்க ரும்புநற் சாறு பாய்தர
மறுக்க மாய்க்கயல்கள் மடை
பாய்தில்லை யம்பலவன்
முறுக்கு வார்சிகை தன்னொடு முகிழ்த்த
அவ்வ கத்துமொட் டோடு மத்தமும்
பிறைக்கொள் சென்னியன்றே பிரியா
தென்னுள் நின்றனவே. **#226**

பசுக்கூட்டங்கள் வயல்களில் களையாக முளைத்த தாமரைக் கொடிகளின் பூக்களை மேயவும் அவற்றின் கால்களில் மிதிபட்டுக் கருப்பஞ்சாறு வயல்களில் பாயவும், தாக்குண்ட கயல் மீன்கள் வருந்தி நீர்மடையை நோக்கிப் பாயும் தில்லையம்பதியிலுள்ள அம்பலப்பெருமானுடைய முறுக்கிய நீண்ட சடையும், அச்சடையில் சிறிது மலர்ந்த மொட்டோடு கூடிய ஊமத்தம் பூக்களும் பிறைச் சந்திரனும் உடைய திருமுடிகள் என்றும் நீங்காது அடியேனுடைய உள்ளத்தில் நிலை பெற்றுள்ளன. சிவபெருமான் ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல் மைந்துடை ஒருவன் ஆவான்.

விளக்கவுரை

தொறுக்கள் - பசுக்கூட்டங்கள். கமல மலர், வயலில் உள்ளவை. உழக்க - மேய. பாய்தர - மேல்நின்று விழ. மறுக்கம் - வருத்தம். `பசுக்களின் கால்களால் மிதிபட்டும். கருப்பஞ்சாற்றின் வீழ்ச்சியால் தாக்குண்டும்

கயல் மீன்கள் வருந்துவவாயின` என்பதாம். `மடைக்கண் பாய்` என உருபு விரித்துரைக்க. வார் சிகை - நீண்ட சடை. ``முகிழ்த்த`` என்றதன்பின்னர் நின்ற வகரமெய் விரித்தல். வாசிகை எனவும். `அகத்தி` எனவும் ஓதுவன பாடம் அல்ல. ``பிறைக் கொள்`` என்றதில் உம்மை தொகுத்து, ககர ஒற்று விரிக்கப்பட்டது. இதனுள், `மடை, பிரி` என்பன கூன்.

தூவி நீரொடு பூவ வைதொழு
தேத்து கையின ராகி மிக்கதோர்
ஆவி யுள்நிறுத்தி யமர்ந்
தூறிய அன்பினராய்த்
தேவர்தாந் தொழ ஆடிய தில்லைக்
கூத்த னைத்திரு வாலி சொல்லிவை
மேவ வல்லவர்கள் விடை
யான் அடி மேவுவரே. **#227**

நீரினால் திருமுழுக்காட்டி மலர்களைத் தூவித் தொழுது கும்பிடும் கைகளை உடையவர்களாய் மேம்பட்ட பிராண வாயுவை உள்ளே அடக்கி விரும்பச் சுரந்த அன்புடையவர்களாய்த் தேவர்கள் தாம் வணங்குமாறு திருக்கூத்து நிகழ்த்திய தில்லைக் கூத்தப்பிரானைத் திருஆலி அமுதன் சொல்லிய சொற்களை விரும்பிப் பாட வல்லவர்கள் காளை வாகன இறைவனாகிய சிவபெரு மானுடைய திருவடிகளை மறுமையில் அடைவார்கள்.

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளி தருதிரு நீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்றுபொற் குழற்றிருச் சடையுந்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுட்
டிருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம்
தழல்மெழு கொக்கின்றதே. **#228**

பவளத்தால் ஆகிய பெரிய மலையைப்பனிபரவி மூடினாற்போல வெண்ணொளி வீசும் திருநீற்றினைப்பூசி, பெரிய குவளைமலர்களாலாகிய முடிமாலையும் கொன்றைப் பூவும் பொருந்திய பொன்னிறமுடைய சுருண்ட அழகிய சடையை உடைய வனாய், ஒளிவீசும் மாளிகைகள் சூழ்ந்த தில்லைநகரிலே திருக்கூத்து நிகழ்த்துகின்ற வெண்ணிறம் பொருந்திய சிவபெருமானை நினைக்குந் தோறும் அடியேனுடைய உள்ளம் நெருப்பின் அருகிலிருக்கும் மெழுகுபோல உருகுகின்றது.

விளக்கவுரை

படர்தல் - மூடுதல். `வரையில்` எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். பவளமலை சிவபெருமானுக்கும், அதனைமூடிய பனி அப் பெருமான் பூசியுள்ள திருநீற்றுக்கும் உவமை. கண்ணி - முடியில் அணி யும் மாலை. ``கொன்றை`` என்றதும் அதனாலாகிய கண்ணியையே. துன்று - பொருந்திய. பொன் - பொன்போலும். குழல் - சுருண்ட. திவள - விளங்க. `திருநீறும், சடையும் திவள நடம்புரிகின்ற` என்க. தவள வண்ணன் - வெண்மை நிறத்தை உடையவன்.

ஒக்க ஓட்டந்த அந்தியும் மதியமும்
அலைகடல் ஒலியோடு
நெக்கு வீழ்தரு நெஞ்சினைப் பாய்தலும்
நிறையழிந் திருப்பேனைச்
செக்கர் மாளிகை சூழ்தரு தில்லையுள்
திருநடம் வகையாலே
பக்கம் ஓட்டந்த மன்மதன் மலர்க்கணை
படுந்தொறும் அலந்தேனே. **#229**

செந்நிற ஒளியைஉடைய மாளிகைகள் சூழ்ந்த தில்லை நகரில் எம்பெருமான் திருக்கூத்தைத் தரிசித்த காரணத்தால், ஒருசேர ஓடிவந்த மாலைநேரமும், சந்திரனும் தண்ணீர் அலைகின்ற கடலின் ஒலியோடு சேர்ந்து உருகி ஓடுகின்ற அடியேனுடைய நெஞ் சினைத் தாக்கிய அளவில் அடக்கம் என்ற பண்பு அழிய இருக்கும் அடியேன் பக்கல் ஓடிவந்த மன்மதனுடைய பூக்களாகிய அம்புகள் அடியேன் மேல் படுந்தொறும் அடியேன் வருந்தினேன்.

விளக்கவுரை

ஒக்க ஓட்டந்த - ஒருசேர ஓடிவந்த. அந்தி - மாலைக் காலம். `மாலைக் காலமும், சந்திரனும் ஒருசேர ஓடிவந்தன` என்றாள். பின்பு, `அவை இரண்டும் கடல் ஒலியோடு சேர்ந்து நெஞ்சைப் பிளந் தன` என்றாள். நெக்கு வீழ்தரு நெஞ்சு - முன்பே உடைந்து அழிந்த மனம். ``பாய்தல்`` என்றது, `போழ்தல்` என்னும் பொருட்டாய் நின்றது. நிறை - நெஞ்சினைத் தன்வழி நிறுத்துந்தன்மை. ``இருப் பேனை`` என்றதை, `இருப்பேன்மேல்` எனத் திரித்து, அதனை, ``படுந் தொறும்`` என்பதனோடு முடிக்க. இவ்வாறு திரியாமலே, ``பக்கம் ஓட்டந்த`` என்பதனை, `அணுகிய` என்னும் பொருட்டாக்கி, அத னோடு முடித்தலும் ஆம். மூன்றாம் அடியை முதலடியின் பின்னர்க் கூட்டி உரைக்க. பக்கம் ஓட்டந்த - அருகில் ஓட்டந்த - அருகில் ஓடி வந்த. அலந்தேன் - வருந்தினேன்.

அலந்து போயினேன் அம்பலக் கூத்தனே
அணிதில்லை நகராளீ
சிலந்தி யைஅர சாள்கஎன் றருள்செய்த
தேவதே வீசனே
உலர்ந்த மார்க்கண்டிக் காகிஅக் காலனை
உயிர்செக உதைகொண்ட
மலர்ந்த பாதங்கள் வனமுலை மேல்ஒற்ற
வந்தருள் செய்யாயே. #230

சபையில் நடனமாடும் பெருமானே! அழகிய தில்லைநகரை ஆள்பவனே! திருத்தொண்டுசெய்த சிலந்தியை அதன்மறுபிறப்பில் அரச குடும்பத்தில் தோன்றி நாட்டை ஆளுமாறு அருள்செய்த, பெருந்தேவர்களையும் அடக்கி ஆள்பவனே! பொலிவு இழந்த மார்க்கண்டேயன் பொருட்டு அவன் உயிரைப்பறிக்க வந்த அந்தக் காலனை உயிர்நீங்குமாறு உதைத்த உன் திருவடிகள், வருந்திக் கிடக்கும் அடியேனுடைய வருத்தம் நீங்குமாறு அடியேனுடைய அழகிய முலைகளின் மீது அழுந்தப் படியுமாறு அருள்செய்வாயாக.

விளக்கவுரை

சிவபெருமான், சிலந்தியை அரசாளச் செய்தமையைக் கோச்செங்கட்சோழ நாயனார் புராணத்துக் காண்க. `தேவ தேவாகிய ஈசனே` என்க. தேவ தே - தேவர்க்குத் தேவன். ``தேவ தேவீசனே`` என்ற இருசீர்களும் வேறுபட வந்தன. ``உலந்த`` என்பதற்கு, `வாழ்நாள் உலந்த` என உரைக்க. உலத்தல் - முடிதல். ``மார்க்கண்டி`` என்பது, `மிருகண்டு முனிவர் மகன்` என்னும் பொருளது. ஆகி - துணையாகி. ``அக் காலனை`` என்னும் சுட்டு, `அந்நாளில் வந்த காலனை, எனப் பொருள் தந்தது. செக - அழிக்கக்கருதி. உதை கொண்ட - உதைத்தற் றொழிலை மேற்கொண்ட. `உதைகொண்ட பாதங்கள், மலர்ந்த பாதங்கள்` எனத் தனித்தனி முடியும். `பாதங்களால் வந்து` என மூன்றாவது விரித்து முடிக்க. வனம் - அழகு. ஒற்ற - பொருந்த; தழுவுதற்பொருட்டு. `என் வனமுலைமேல் ஒற்ற` என்று எடுத்துக்கொண்டு. ``ஈசனே`` என்றதன்பின் கூட்டி உரைக்க.

அருள்செய் தாடுநல் லம்பலக் கூத்தனே
அணிதில்லை நகராளீ
மருள்செய் தென்றனை வனமுலை பொன்பயப்
பிப்பது வழக்காமோ?
திரளும் நீண்மணிக் கங்கையைத் திருச்சடை
சேர்த்திஅச் செய்யாளுக்
குருவம் பாகமும் ஈந்துநல் அந்தியை

ஒண்ணுதல் வைத்தோனே. #231

அடியவர்கள் திறத்து அருள் செய்து மேம்பட்ட பொன்னம்பலத்தில் கூத்துநிகழ்த்தும் கூத்தப்பிரானே! அழகிய தில்லை நகரை ஆள்பவனே! அடியேனுக்குக் காமமயக்கத்தை உண்டாக்கி அடியேனுடைய அழகிய முலைகளைப் பசலைநிறம் பாயச் செய்வது நீதியான செயலாகுமா? நீர் திரண்டு ஓடிவரும், நீண்ட மணிகளை அடித்துவரும் கங்கையைத் திருச்சடையில் வைத்துக்கொண்டு அச் செயலைப் பொறுத்துக்கொண்ட பெருங்கற்பினளாகிய பார்வதிக்கு உன்உடம்பில் ஒருபாகத்தை வழங்கி, பெரிய அழகிய தீயினை நெற்றியில் வைத்த பெருமானே! நின் செயலை நினைத்துப் பார்.

விளக்கவுரை

அருள் செய்து - உயிர்கள்மேல் அருள்பண்ணி; இரண்டாமடியை இறுதிக்கண் கூட்டியுரைக்க. மருள் - மயக்கம்; மையல். `என்றனை மருள்செய்து` என மாற்றுக. பொன் பயப்பிப்பது - பொன்போலப் பசக்கச் செய்வது. வழக்காமோ - முறையாகுமோ. நீள் மணி - மிக்க இரத்தினம். செய்யாள் - சிறந்தவள்; உமையம்மை. உருவம் பாகமும் தந்து - உருவத்தைப் பங்காகவும் கொடுத்து. `தீயை` என்பது, `தியை` எனக் குறுகி நின்றது. `தீயை நெற்றிக் கண்ணில் வைத் தோன்`. என்றது, `காமனை எரித்தோன்` என்னும் குறிப்பினது. `கங்கையையும், உமையையும் கலந்தாற்போல என்னைக் கலத் தலாவது செய்தல் வேண்டும்; அல்லது என்னை வருத்துகின்ற காமனையாவது எரித்தல் வேண்டும்; இவற்றுள் ஒன்றேனும் செய்யாது என்னைப் பசப்பிப்பது முறையோ` என்பாள், `கங்கையைச் சடைச் சேர்த்திச் செய்யாளுக்குப் பாகமும் தந்து தீயை நுதல் வைத்தோனே` என்றாள்.

வைத்த பாதங்கள் மாலவன் காண்கிலன்
மலரவன் முடிதேடி
எய்த்து வந்திழிந் தின்னமுந் துதிக்கின்றார்
எழில்மறை யவற்றாலே
செய்த்த லைக்கம லம்மலர்ந் தோங்கிய
தில்லையம் பலத்தானைப்
பத்தியாற் சென்று கண்டிட என்மனம்
பதைபதைப் பொழியாதே. #232

சிவபெருமான் ஏழுலகங்களுக்கும் கீழே ஊடுருவு மாறு வைத்த திருவடிகளைத் திருமால் காணஇயலாதவனாயினான். பிரமன் மேல் ஏழுஉலகங்களையும் கடந்து ஊடுருவிய திருமுடியைக் காணஇயலாமல் மனம் இளைக்க, இருவரும் நிலஉலகிற்குவந்து அழகிய வேத வாக்கியங்களால் இப்பொழுதும் உன்னைப் புகழ்ந்து

கொண்டிருக்கிறார்கள். வயல்களிலே தாமரைகள் களைகளாக வளர்ந்து ஓங்கும் தில்லையிலே அம்பலத்தில் கூத்து நிகழ்த்தும் உன்னைப் பத்தி செலுத்தி அடைந்து காண்பதற்கு, திருமால் பிரமன் என்பவர்களோடு ஒப்பிடின் மிகத்தாழ்ந்த அடியேனுடைய உள்ளம் விரைதலை நீங்காது உள்ளது. இஃது என்ன வியப்போ!

விளக்கவுரை

வைத்த - ஒளித்து வைத்த. ``துதிக்கின்றார்`` என்ற தன்பின் `அவ்வாறாக` என்பது வருவிக்க. `துதிக்கின்றான்` என்பது பாடம் அன்று. செய்த்தலை - வயலிடத்து. பத்தி - ஆசை. `பத்தியால் ஒழியாது` என இயையும். பதைபதைத்தல் - மிக விரைதல். `பதை பதைத்தலை ஒழியாது` என்க. `இது கூடுவதோ` என்பது குறிப்பெச்சம்.

தேய்ந்து மெய்வெளுத் தகம்வளைந் தரவினை
அஞ்சித்தான் இருந்தேயும்
காய்ந்து வந்துவந் தென்றனை வலிசெய்து
கதிர்நிலா எரிதூவும்
ஆய்ந்த நான்மறை அந்தணர் தில்லையுள்
அம்பலத் தரன் ஆடல்
வாய்ந்த மாமலர்ப் பாதங்கள் காண்பதோர்
மனத்தினை யுடையேற்கே. **#233**

நான்கு வேதங்களையும் ஆராய்ந்த சிறந்த அந்தணர்கள் வாழும் தில்லைநகரில் உள்ள பொன்மன்றத்தில் எம் பெருமானுடைய கூத்துநிகழ்த்தும் மேம்பட்ட மலர்களைப் போன்ற திருவடிகளைக் காணும் எண்ணமுடைய அடியேன் மீது, உடல் தேய்ந்து அச்சத்தால் வெளுத்து உட்புறம் வளைந்து, பாம்பினை அஞ்சித் தான் உன்சடையிலே இருக்கும் நிலையிலும், அடியேனை வெகுண்டு பலகாலும் என்னை அணுகி என்னைத்துன்புறுத்தி ஒளிக் கதிர்களை உடைய நிலா அடியேன்மீது நெருப்பைத் தூவுகிறது.

விளக்கவுரை

``மெய்`` என்றது தாப்பிசையாய், `தேய்ந்து` என்பத னோடும் இயையும். அகம் வளைந்து - உள்வளைந்து. இது சிலேடை யாய், `மனம் மடிந்து` எனப் பொருள் தந்தது; சிவபெருமானது முடியில் உள்ள நிலவின் இயல்புகளை, அங்குள்ள அரவிற்கு அஞ்சிய அச்சத்தால் விளைந்தனவாகக் கூறியது தற்குறிப்பேற்றம். காய்ந்து - சினந்து. வலிசெய்து - வலிதில் தொடர்ந்து. கதிர் நிலா - ஒளியை யுடைய சந்திரன். ``கதிர்நிலா`` என்றது, `தனது கதிரால் எரிதூவும்` என்றற்கு. `அரன் பாதங்கள்` என இயையும். உடையேற்கு என்றதை,

`உடையேன்மேல்` எனத்திரிக்க. `கதிர் நிலாத் தான் அரவினை அஞ்சி மெய் தேய்ந்து வெளுத்து அகம் வளைந்து இருந்தேயும் காய்ந்து வலிசெய்து உடையேன் மேல் எரிதூவும் `என மாறிக் கூட்டுக.

உடையும் பாய்புலித் தோலும்நல் லரவமும்
உண்பதும் பலிதேர்ந்து
விடைய தூர்வதும் மேவிடங் கொடுவரை
ஆகிலும் என்னெஞ்சம்
மடைகொள் வாளைகள் குதிகொளும் வயற்றில்லை
யம்பலத் தனலாடும்
உடைய கோவினை யன்றிமற் றாரையும்
உள்ளுவ தறியேனே. **#234**

நீர் மடைகளிலே வந்துசேர்ந்த வாளை மீன்கள் குதித்து அடையும் வயல்களை உடைய தில்லைநகரின் பொன்னம் பலத்தில் தீயைக் கையில்ஏந்திக் கூத்துநிகழ்த்தும், அடியேனை அடிமையாக உடைய எம்பெருமான் உடையாகக்கொள்ளுவன பாய் கின்ற புலியின் தோலும் பெரிய பாம்புமே ஆகும். உண்பதும் பிச்சை எடுத்துக் கொள்ளும் உணவே. ஏறிச் செலுத்துவதும் காளையே. தங்கும் இடமும் கொடிய கயிலாயமலையே. இவ்வளவு குறைபாடுகள் அப்பெருமானிடத்தில் இருந்தாலும் அவனையன்றி வேறு எந்தத் தெய்வத்தையும் பரம்பொருளாக அடியேன் நினைத்து அறியேன்.

விளக்கவுரை

``உடையும், உண்பதும்`` என்ற உம்மைகள் எச்சப் பொருள. நஞ்சின்றியிருத்தலைக் குறிக்க, ``நல்அரவம்`` என்றார். அரவம் (பாம்பு) கச்சாக நின்று உடையைக் காத்தலின் அதனையும், `உடை` என்று சார்த்திக் கூறினார். பலி - பிச்சை. ``விடையது`` என்றதில் அது, பகுதிப் பொருள் விகுதி. மேவு இடம் - இருக்கும் இடம். ``இடம்`` என்றதிலும், எச்ச உம்மை விரிக்க. வரை - மலை; கயிலை காடு அடர்ந்து. புலியும், அரிமாவும் போல்வன வாழ்தலின், `கொடிது` எனப்பட்டது. மடை கொள்வாளை - மடையை வாழும் இடமாகக் கொண்ட வாளை மீன்கள். ``மடை`` என்றது, அதனால் தடுக்கப்படும் நீரை. `அனலோடு ஆடும்` என மூன்றாவது விரித் துரைக்க. உடைய கோ - எல்லாரையும், எல்லாவற்றையும் ஆளாகவும், உடைமையாகவும் உடைய தலைவன். `யாரையும்` என்பது, `ஆரையும்` என மருவிற்று. `தில்லையம்பலத்தாடும் கோவிற்கு உடையும் தோலும், அரவமுமே. உண்பதும் பலி தேர்ந்தே; ஊர்வதும் விடையே; மேவிடமும் கொடுவரையே. ஆகிலும் என் நெஞ்சம் அவனையன்றி மற்று ஆரையும் உள்ளுவதை நான் காண வில்லை` என்க. விரிக்கப்படும் ஏகாரங்கள் பிரிநிலை.

அறிவும் மிக்கநன் னாணமும் நிறைமையும்
ஆசையும் இங்குள்ள
உறவும் பெற்றநற் றாயொடு தந்தையும்
உடன்பிறந் தவரோடும்
பிரிய விட்டுனை யடைந்தனன் ஏன்றுகொள்
பெரும்பற்றப் புலியூரின்
மறைகள் நான்குங்கொண் டந்தணர் ஏத்தநன்
மாநட மகிழ்வானே. #235

பெரும்பற்றப்புலியூரில் நான்கு வேதங்களின் வாக்கியங்களையும் கொண்டு அந்தணர்கள் புகழ மேம்பட்ட சிறந்த கூத்தினை மகிழ்ந்து ஆடும் பெருமானே! அறிவும், மிக மேம்பட்ட நாணமும் அடக்கமும், உலகப்பொருளிடத்துள்ள ஆசையும், இவ் வுலகில் உள்ள உறவினர்களும் பெற்றதாயும், தந்தையும், உடன் பிறந்தவர்களும் என்னைப்பிரியுமாறு அப்பண்புகளையும் அவர்களை யும் விடுத்து உன்னைப் பற்றுக்கோடாக அடைந்துள்ள அடியேனை ஏற்றுக் கொள்வாயாக.

விளக்கவுரை

அறிவும் - உன்னால் ஏற்கப்படும் தகுதியின்மையை அறியும் அறிவும். நாணமும் - காதல் கரையிறந்தவழியும் கன்னியர் தாமே ஆடவர் இருக்குமிடத்திற் செல்லக் கூசும் வெட்கமும். நிறைமை யும் - மனத்தை அஃது ஓடும்வழி ஓடாது நிறுத்தும் தன்மையும். ஆசையும் - இருமுது குரவர் ஏவல்வழி நிற்பின் இதனைப் பெறலாம், அதனைப் பெறலாம் என்னும் அவாவும், உறவும் - செவிலியும், தோழியும் முதலாய கிளைஞரும். ``உடன் பிறந்தவரோடும்`` என்ற உம்மை சிறப்பு. `அறிவு முதலாகத் தந்தை ஈறாகச் சொல்லப்பட்ட அஃறிணையும். உயர் திணையுமாகிய யாவும், யாவரும் உடன்பிறந்த வரோடும் தம்மிடத்தே பிரிந்து நிற்குமாறு அவர்களை விட்டு உன்னை அடைந்தேன்` என்க. உடன்பிறந்தவர் பின்றொடர்ந்து வந்தும் மீட்டுச் செல்லற்கு உரியராதலின், அவரைத் தனியே பிரித்து ஒடுவும், உம்மை யும் கொடுத்துக் கூறினாள். இது, பெருந்திணையுள், `மிக்க காமத்து மிடல்` என்னும் பகுதியுள் `கணவன் உள்வழி இரவுத் தலைச்சேறல்` என்னும் துறை. உண்மைப் பொருளில் இஃது உலகியலை முற்றத் துறந்து இறைவனையே புகலாக அடைந்தமையைக் குறிக்கும்.

வான நாடுடை மைந்தனே யோஎன்பன்
வந்தருளாய் என்பன்
பானெய் ஐந்துடன் ஆடிய படர்சடைப்
பால்வண்ண னேஎன்பன்

தேன மர்பொழில் சூழ்தரு தில்லையுள்
திருநடம் புரிகின்ற
ஏன மாமணிப் பூண் அணி மார்பனே
எனக்கருள் புரியாயே. #236

வண்டுகள் விரும்பித்தங்கியிருக்கின்ற சோலை களால் சூழப்பட்ட தில்லைநகரில் திருநடம் புரிகின்றவனாய்ப் பன்றிக் கொம்பாகிய அழகிய அணிகலனை அணிந்த மார்பை உடைய பெருமானே! மேல்உலகாகிய சிவலோகம் உடையவனே! வந்து அருள் செய்வாயாக என்று முறையிடுகின்றேன். பால், நெய் முதலிய பஞ்சகவ்வியத்தை அபிடேகம் செய்து கொண்ட பரந்த சடையினை உடைய பால் போன்ற வெள்ளிய நிறத்தினனே! ஓ என்று முறையிடு கின்றேன். அடியேனுக்கு அருள்புரிவாயாக.

விளக்கவுரை

வான நாடு - சிவலோகம். மைந்தன் - பேராற்ற லுடையவன். `வானநாடுடையவனாயினும் என் பொருட்டு இங்கு வந்து அருள்` என்றவாறு. `பால், நெய் முதலிய ஐந்தையும் ஒருங்கு ஆடிய` என்க. ஏன மா - பன்றியாகிய விலங்கு; இருபெயரொட்டு. அதனது மருப்பே இறைவன் மார்பில் அணியாய் நிற்றலின், `ஏனமாப் பூண்` என்றார். மணி - அழகு. இது தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்.

புரியும் பொன்மதில் சூழ்தரு தில்லையுள்
பூசுரர் பலர்போற்ற
எரிய தாடும்எம் ஈசனைக் காதலித்
தினைபவள் மொழியாக
வரைசெய் மாமதில் மயிலையர் மன்னவன்
மறைவல திருவாலி
பரவல் பத்திவை வல்லவர் பரமன
தடியிணை பணிவாரே. #237

எல்லோராலும் விரும்பப்படும் அழகிய மதில்களால் சூழப்பட்ட தில்லைநகரிலே, நிலத்தேவர் எனப்படும் அந்தணர்கள் பலரும் துதிக்குமாறு, எரியைக் கையில் சுமந்து கூத்து நிகழ்த்தும் எம்பெருமானை ஆசைப்பட்டு அவன் அருள் முழுமை யாகக் கிட்டாமையால் வருந்தும் தலைவிகூறும் மொழிகளாக, மலையைப் போன்ற பெரிய மதில்களைஉடைய திருமயிலாடுதுறை என்ற ஊருக்குத்தலைவனான வேதங்களில் வல்ல திரு ஆலிஅமுதன் முன்நின்று போற்றிய இப்பத்துப்பாடல்களையும் கற்றுவல்லவர் சிவபெருமானுடைய திருவடிகளின் கீழ்ச் சிவலோகத்தில் அவனைப் பணிந்து கொண்டு வாழ்வார்கள்.

விளக்கவுரை

புரியும் - நன்கு செய்யப்பட்ட. இங்கும், `எரியோடு ஆடும் ஈசன்` என்க. இனைபவள் - வருந்துபவள். `இளையவள், இனையவன்` என்பன பாடம் அல்ல. வரைசெய் - மலை போலும். மயிலை - மயிலாடுதுறை; மாயூரம். இஃதே இவரது அவதாரத்தலம் என்பது இதனால் அறியப்படும். `ஆலி` என்பது ஆலிநாட்டின் தலைநகராதலாலும், அந்நகரில் உள்ள `அமுதன்` என்னும் திருமால் பெயரே இவருக்குப் பிள்ளைப் பருவத்தில் இடப்பட்டமையாலும், ஆலிநாடு மாயூரத்திற்கு அணிய இடமேயோதலாலும். `மயிலை` என்பதனைப் பிற ஊர்களாக உரைத்தல் கூடாமை அறிக. ``மறைவல திருவாலி`` என்றதனால், இவர் அந்தணர் குலத்தினராதல் அறியப்படும். பரவல் பத்து இவை - துதித்தலைச் செய்த பத்துப் பாடல்களாகிய இவைகளை. வல்லவர் - அன்புடன் பாட வல்லவர்கள். வாளா ``பணிவார்`` என்றாராயினும், `சிவலோகத்திற் சென்று பணிவார்` என்பதே கருத்து என்க.

அல்லாய்ப் பகலாய் அருவாய் உருவாய்
ஆரா அமுதமாய்க்
கல்லால் நிழலாய் கயிலை மலையாய்
காண அருள் என்று
பல்லா யிரம்பேர் பதஞ்ச லிகள்
பரவ வெளிப்பட்டுச்
செல்வாய் மதிலின் றில்லைக் கருளித்
தேவன் ஆடுமே. **#238**

இரவாகவும், பகலாகவும், உருவம் அற்ற பொருளாகவும், உருவம் உடைய பொருளாகவும், மனநிறைவைத் தாராத அமுதமாகவும், கல்லாலமரத்தின் நிழலில் உள்ளவனாகவும், அமையும் கயிலைமலைத் தலைவனே! `உன் திருவுருவைக் காணும் பேற்றை எங்களுக்கு அருளுவாயாக` என்று பதஞ்சலி முனிவர் போன்ற பல்லாயிரவர் சான்றோர்கள் முன் நின்று வேண்ட, அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி வெளிப்பட்டு மேகமண்டலம் வரை உயர்ந்த மதில்களை உடைய தில்லைக்கண் உள்ள அடியார்களுக்கு அருள் செய்து எம்பெருமான் கூத்துநிகழ்த்துகிறான்.

விளக்கவுரை

முதலடியில் உள்ள, `ஆய்` என்பன பலவும் வினையெச்சங்கள். `இரவு முதலிய பல பொருள்களாகி` என்பது அவற்றின் பொருள். இவ்வெச்சங்கள் பலவும் அடுக்கிநின்று, ``நிழலாய்`` என்ற விளியேற்ற குறிப்புவினைப் பெயரைக் கொண்டு முடிந்தன. அல் - இரவு. ``அரு,

உரு`` என்றவை, அவற்றையுடைய பொருளைக் குறித்தன. ``அமுதம்`` என்றதும், தேவர் அமுதத்தையே குறித்தது. கல்லால் நிழலாய் - கல்லால மரநிழலில் எழுந்தருளி யிருப்பவனே. ``கயிலை மலையாய்`` என்றதும் விளிப்பெயரே. காண-(உனது நடனத்தை) யாங்கள் காணுமாறு. ``பதஞ்சலிகள்`` என்றது, `பதஞ்சலி முனிவர்போன்ற முனிவர்கள்` என்றவாறு. பரவ - துதிக்க. பதஞ்சலியார் முதலிய முனிவர் பலரது துதிகளுக்கு இரங்கியே இறைவன் தில்லையில் வெளிப்பட்டு நின்று தனது நடனத்தைக் காட்டியருளினான்` என்பது தில்லைக் கூத்தப் பெருமானைப் பற்றிய வரலாறு. செல் வாய் - மேகங்கள் பொருந்திய. சாரியையின்றி` மதிற் றில்லை` என ஓதப்படுவது பாடம் அன்று.

அன்ன நடையார் அமுத மொழியார்
அவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தமிழும் இசையும் கலந்த
சிற்றம் பலந்தன்னுட்
பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள் காண
விகிர்தன் ஆடுமே. **#239**

அன்னப்பறவை போன்ற நடையினையும் அமுதம் போன்ற இனிய சொற்களையும் உடைய இளமகளிர் வாழும் தில்லைப் பதியில், பாண்டியன் வளர்த்த தமிழும் இசையும் கலந்து முழங்கும் சிற்றம்பலத்தில், பொன்னும் மணிகளும் பரந்து பொருந்திய இடத்திலே புலித்தோலைத் தோளில் அணிந்து, மின்னலைப் போன்ற இடையை உடைய உமாதேவிகாண மற்றவரினும் வேறுபட்ட வனாகிய சிவபெருமான் கூத்து நிகழ்த்துகிறான்.

விளக்கவுரை

அன்ன நடையார் அமுத மொழியார் அவர்கள் - அன்னம் போலும் நடையை உடையவரும், அமுதம்போலும் மொழியை உடையவரும் ஆகிய அவர்கள்; மகளிர். மகளிர் அழகும், பிற நலங்களும் உடையராய் இருத்தல் இல்லத்திற்கேயன்றி, ஊர்க்கும், நாட்டிற்கும் சிறப்பைத் தருவது என்க. தென்னன் - பாண்டியன். இவ்வொருமைப் பெயர் பாண்டியரது குடியின்மேல் நின்று அவர் அனைவரையும் குறிப்பதாயிற்று. தமிழ் நாட்டு மூவேந்தருள் சங்கம் நிறுவித் தமிழை வளர்த்தவர் பாண்டியராதலின், தமிழை அவர்க் குரியதாகக் கூறினார். ``உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்தீந் தமிழ்`` *(கலவை 20)* என்றார். இனி, `நற்றமிழ்` என வருத லல்லது, `நன்றமிழ்` என வருதல் வழக்கின்கண் இன்மையின், `தென் நன் தமிழ்` எனல் ஆகாமை அறிக.

``இசை`` எனப் பின்னர் வருகின்றமையும், ``தமிழ்`` என்றது, இசைத் தமிழையாயிற்று. இயற்றமிழையும் இசைத் தமிழையும் கூறவே இனம் பற்றி நாடகத் தமிழும் கொள்ளப் படுவதாம். ஆகவே, `முத்தமிழும் கலந்த சிற்றம் பலம்` என்றதாயிற்று. கலந்த - பொருந்திய. நிரந்த தலம் - பரந்து பொருந்திய நிலம். பியற்கு- தோளில் `தலத்து, இட்டு, காண விகிர்தன் ஆடும்` என்க.

இளமென் முலையார் எழில்மைந் தரொடும்
ஏரார் அமளிமேல்
திளையும் மாடத் திருவார் தில்லைச்
சிற்றம் பலந்தன்னுள்
வளர்பொன் மலையுள் வயிர மலைபோல்
வலக்கை கவித்துநின்
றளவில் பெருமை அமரர் போற்ற
அழகன் ஆடுமே. **#240**

மென்மையான நகில்களை உடைய இளைய மகளிர் அழகிய ஆடவரோடு அழகுநிறைந்த படுக்கையில் இன்பத்தில் மூழ்கும் மேல்மாடிகளைஉடைய செல்வம் நிறைந்த தில்லைநகரத்துச் சிற்றம்பலத்திலே உயர்ந்த பொன்மலையினுள்ளே அமைந்த வயிர மலை போல வலக்கையை வளைத்துக்கொண்டு நின்று, எல்லையற்ற பெருமையை உடைய தேவர்களும் வழிபடுமாறு எம்பெருமான் கூத்து நிகழ்த்துகிறான்.

விளக்கவுரை

`திளைக்கும்` என்பது, `திளையும்` எனச் சாரியை தொகுக்கப்பட்டு நின்றது. திளைத்தல் - இன்பத்தில் மூழ்கல். பொன்மலை சிற்றம்பலத்தின் வடிவிற்கும், வயிர மலை இறைவனுக் கும் உவமை. திருநீற்றுப் பூச்சினால் இறைவன் திருமேனி வயிரமலை போல் காணப்படுவதாயிற்று. `கவித்தல்` என்றது, அபயமாகக் காட்டு தலை.

சந்தும் அகிலும் தழைப்பீ லிகளும்
சாதி பலவுங்கொண்
டுந்தி யிழியும் நிவவின் கரைமேல்
உயர்ந்த மதில்தில்லைச்
சிந்திப் பரிய தெய்வப் பதியுள்
சிற்றம் பலந்தன்னுள்
நந்தி முழவம் கொட்ட நட்டம்
நாதன் ஆடுமே. **#241**

சந்தனமரம், அகில்மரம், சாதிக்காய்மரம், தழை போன்ற மயில்தோகை என்ற பலவற்றையும் அகப்படக்கொண்டு தள்ளி ஓடுகின்ற நிவா என்ற

ஆற்றின் கரையில் அமைந்த உயர்ந்த மதில்களைஉடைய தில்லை என்ற பெயருடைய, நினைக்கவும் அரிய தெய்வத் திருத்தலத்துச் சிற்றம்பலத்தில் திருநந்திதேவர் முழவு ஒலிக்கச் சிவபெருமான் திருக்கூத்து நிகழ்த்துகிறான்.

விளக்கவுரை

தழைப் பீலி - தழைபோன்ற மயில் தோகை. சாதி - ஒருவகை மரம்; இதன் காய் சிறந்ததொன்றாகக் கொள்ளப்படுதல் அறிக. கொண்டு - அகப்படக் கொண்டு. உந்தி இழியும் - தள்ளி ஒடு கின்ற. நிவா, ஓர் ஆறு. `கரைமேல் விளங்கும் தில்லை` என உரைக்க. `தில்லையாகிய தெய்வப்பதி` என்றவாறு. ``சிந்திப்பரிய`` என்றது, `சிந்தனையுள் அடங்காத பெருமையை உடைய` என்றபடி.

ஓமப் புகையும் அகிலின் புகையும்
உயர்ந்து முகில்தோயத்
தீமெய்த் தொழிலார் மறையோர் மல்கு
சிற்றம் பலந்தன்னுள்
வாமத் தெழிலார் எடுத்த பாதம்
மழலைச் சிலம்பார்க்கத்
தீமெய்ச் சடைமேல் திங்கள் சூடித்
தேவன் ஆடுமே. **#242**

வேள்விப்புகையும், அகிலின்புகையும் மேல் நோக்கிச் சென்று மேகத்தோடு பொருந்துமாறு தீஓம்பும் தொழிலை உடைய அந்தணர்கள் மிக்கிருக்கும் சிற்றம்பலத்தில், தூக்கிய அழகிய இடத்திருவடியில் இனிய ஓசையை உடைய சிலம்பு ஒலிக்கத் தீயைப் போன்ற சிவந்த நிறத்தை உடைய சடையின் மேல் பிறையைச்சூடி எம்பெருமான் கூத்துநிகழ்த்துகிறான்.

விளக்கவுரை

``தீ மெய்த் தொழில்`` என்றதை. `மெய்த் தீத்தொழில்` என மாற்றி, `மெய்த் தொழில், தீத்தொழில்` எனத் தனித் தனி முடிக்க. மெய்ம்மை - என்றும் ஒழியாமை. தீத் தொழில் - தீயை ஓம்பும் தொழில்; வேள்வி வேட்டல். வாமம் - இடப்பக்கம். `எடுத்த எழில் ஆர் வாமபாதம்` என மாற்றிக்கொள்க. இறைவன், வலத் திருவடியை ஊன்றியும், இடத் திருவடியைத் தூக்கியும் நடனம் செய்தல் அறிக. `பாதத்தின் கண்` என உருபு விரிக்க. மழலை - இனிய ஓசையை உடைய. தீ மெய் - நெருப்புப்போலும் நிறத்தையுடைய.

குரவம் கோங்கம் குளிர்புன்னை கைதை
குவிந்த கரைகள் மேல்

திரைவந் துலவும் தில்லை மல்கு
சிற்றம் பலந்தன்னுள்
வரைபோல் மலிந்த மணிமண் டபத்து
மறையோர் மகிழ்ந்தேத்த
அரவம் ஆட அனல்கை யேந்தி
அழகன் ஆடுமே. **#243**

குரவம், கோங்கம், குளிர்ந்த புன்னை என்ற மரங்களும், தாழைப் புதரும் திரண்டுள்ள கடற்கரைப் பகுதிகளின் மேல் அலைகள்வந்து உலவும் தில்லைநகரில் விளங்கும் சிற்றம்பல மாகிய, மலையைப் போன்ற நிறைந்த இரத்தினங்களால் அமைக்கப் பட்ட மண்டபத்தில் அந்தணர்கள் மகிழ்ந்து துதிக்கவும் பாம்பு ஆடவும், தீயைக் கையிலேந்தி அழகனாகிய கூத்தப்பிரான் திருக்கூத்து நிகழ்த்துகிறான்.

விளக்கவுரை

கைதை - தாழை. குவிந்த - திரண்டுள்ள. கரை, கடற்கரை. அதன் இடப்பகுதிகள் பற்றி, `கரைகள்` எனப்பலவாகக் கூறினார். திரை - அலை. `தில்லைச் சிற்றம்பலம்` என இயையும். சிற்றம்பலம், இங்குக் கோயிலைக் குறித்தது. மல்கு - அழகு நிறைந்த. வரை - மலை. மலிந்த மணி - நிறைந்த இரத்தினங்களால் ஆகிய. `மண்டபத்து ஆடும்` என இயையும்.

சித்தர் தேவர் இயக்கர் முனிவர்
தேனார் பொழில்தில்லை
அத்தா அருளாய் அணிஅம் பலவா
என்றென் றவர் ஏத்த
முத்தும் மணியும் நிரந்த தலத்துள்
முளைவெண் மதிசூடிக்
கொத்தார் சடைகள் தாழநட்டம்
குழகன் ஆடுமே. **#244**

`வண்டுகள் நிறைந்த சோலைகளை உடைய தில்லைநகர்த் தலைவனே! அழகிய சிற்றம்பலத்தில் உள்ளவனே! அருளுவாயாக.` என்று சித்தர்களும் தேவர்களும் இயக்கர்களும் முனிவர்களும் போற்றி வேண்ட, முத்தும் மணியும் வரிசையாக அமைந்த அந்த அம்பலத்தில் பிறைச்சந்திரனைச் சூடி, கொத்துக் கொத் தாக அமைந்த சடைகள் தொங்குமாறு அழகனாகிய சிவபெருமான் திருக்கூத்து நிகழ்த்துகிறான்.

விளக்கவுரை

``அவர்`` என்பதனை, ``முனிவர்`` என்றதன்பின்னும், ``அணி அம்பலவா`` என்பதை, ``அத்தா`` என்றதன் பின்னும் கூட்டுக. ``நிரந்த

தலம்`` என்பது முன்னும் வந்தது *(தி.9 பா.237)*. `முளை மதி` என இயைத்து, `புதுவதாய்த் தோன்றும் சந்திரன்` என உரைக்க. கொத்து ஆர் - கொத்தாகப் பொருந்திய. கொத்து, பூங்கொத்துமாம். குழகன் - அழகன்.

அதிர்த்த அரக்கன் நெரிய விரலால்
அடர்த்தாய் அருளென்று
துதித்து மறையோர் வணங்குந் தில்லைச்
சிற்றம் பலந்தன்னுள்
உதித்த போழ்தில் இரவிக் கதிர்போல்
ஒளிர்மா மணியெங்கும்
பதித்த தலத்துப் பவள மேனிப்
பரமன் ஆடுமே. **#245**

`ஆரவாரம் செய்த அரக்கனாகிய இராவணன் உடல் நொறுங்குமாறு அவனைக் கால்விரலால் துன்புறுத்தியவனே! எங்களுக்கு அருளுவாயாக` என்று போற்றி வேதியர்கள் வழிபடும் தில்லையம்பதியிலுள்ள சிற்றம்பலமாகிய உதயநிலைச் சூரியனின் கிரணங்கள் போல ஒளி வீசுகின்ற மேம்பட்ட மணிகள் எல்லா இடத் தும் பதிக்கப்பட்ட அரங்கத்தில் பவளம் போன்ற சிவந்த திருமேனியை யுடைய மேலோன் ஆகிய சிவபெருமான் கூத்து நிகழ்த்துகிறான்.

விளக்கவுரை

அதிர்த்த - ஆரவாரம் செய்த; (உமையை) `அஞ்சப் பண்ணிய` என்றுமாம். அரக்கன் - இராவணன். அடர்த்தாய் - துன்புறுத்தினவனே. `உதித்த போழ்தில் விளங்கும் இரவி` என ஒரு சொல் வருவிக்க. `மணி, மாணிக்கம்` என்பது வெளிப்படை. தலம் - நிலம்.

மாலோ டயனும் அமரர் பதியும்
வந்து வணங்கிநின்
றால கண்டா அரனே யருளாய்
என்றென் றவரேத்தச்
சேலா டும்வயல் தில்லை மல்கு
சிற்றம் பலந்தன்னுள்
பாலா டும்முடிச் சடைகள் தாழப்
பரமன் ஆடுமே. **#246**

திருமாலோடு பிரமனும் தேவர்தலைவனாகிய இந்திரனும் வந்து வணங்கிநின்று `விடக்கறை தங்கிய நீலகண்டனே! தீயோரை அழிப்பவனே! அருளுவாயாக` என்று போற்றிப் புகழுமாறு சேல்மீன்கள் உலாவும் வயல்களை உடைய தில்லைநகரின் மேம்பட்ட சிற்றம்பலத்தில் சுற்றிலும் சுழன்று ஆடுகின்ற முடியிலுள்ள சடைகள்

நீண்டு விளங்கப் பரமன் ஆடுகின்றான்.

விளக்கவுரை

அமரர் பதி - தேவர்கள் தலைவன்; இந்திரன். ஆலம் - நஞ்சு. `ஆலா கண்டா` எனப் பாடம் ஓதி, `ஆலால` என்பது குறைந்து நின்றதாக உரைப்பினும் இழுக்கில்லை. ``அவர்`` என மீட்டும் கூறியது, அவரது பெருமை குறித்து. ``மல்கு சிற்றம்பலம்`` என்பது முன்னும் வந்தது (*தி.9 பா.231*). பால் ஆடும் - சுற்றிலும் சுழன்றாடுகின்ற. `பாலாடும் சடை` என இயையும். `பாலாடும் முடி` என்று இயைத்து, `பாலில் மூழ்குகின்ற சென்னி` எனவும் உரைப்பர். தாழ - நீண்டு விளங்க.

நெடிய சமணும் மறைசாக் கியரும்
நிரம்பாப் பல்கோடிச்
செடியுந் தவத்தோர் அடையாத் தில்லைச்
சிற்றம் பலந்தன்னுள்
அடிக ளவரை ஆரூர் நம்பி
யவர்கள் இசை பாடக்
கொடியும் விடையும் உடையகோலக்
குழகன் ஆடுமே. **#247**

உடலை மறைக்காத நீண்ட உடம்பை உடைய சமணரும், உடம்பை ஆடைகளான் மறைத்துக் கொள்ளும் பௌத்தரும், உணர்வு நிரம்பப் பெறாத பலகோடிகளான பாவங் களால் செலுத்தப்படுகின்ற வீண்செயல் உடையவர்களாய் எய்தப் பெறாத தில்லைநகரில் உள்ள சிற்றம்பலத்தில் இருக்கும் பெருமானைத் திருவாரூர் நம்பியாகிய சுந்தரமூர்த்திநாயனார் இசைப்பாடல்களால் போற்றிவழிபட, விடைக்கொடியும் விடைவாகனமும் உடைய அத்தகைய அழகன் சிற்றம்பலத்துள் கூத்துநிகழ்த்துகிறான்.

விளக்கவுரை

உடையின்மையால் மரம்போல் நிற்றலின், ``நெடிய`` என்றார்; இஃது இடக்கரடக்கு. பின்னர், `சாக்கியர்` என்றலின், ``சமண்`` என்றதனையும் `சமணர்` என்பது ஈறு தொகுக்கப்பட்டதாக உரைக்க. மறை - உடலை மூடுகின்ற. `சமணரும், சாக்கியரும் ஆகிய அவத்தோர்` என்க. நிரம்பா - உணர்வு நிரம்பப் பெறாத. செடி உந்து - பாவத்தால் செலுத்தப்படுகின்ற. அவத்தோர் - வீண் செயல் உடைய வர். அடிகள் - தலைவர். ``அவரை`` என்றது, `தம்மை` என்றபடி. `அடிகளாகிய தம்மை` என்க. ஆரூர் நம்பி, சுந்தரர். இக்காலத்தில் பெருவழக்காய் உள்ள `அவர்கள்` என்னும் உயர்வுச் சொல், இங்கு அருகி வந்துள்ளது. ஆரூரர் பாடியதனை இங்கு எடுத்துக்கூறியது. `அவரது பாடலைக் கேட்டிருந்தமையால்

தாழ்த்தோம்` என்று இறைவன் சேரமான் பெருமாள் நாயனாருக்கு அருளிச்செய்ததனை உட்கொண்டதாம். இது முன்பு நிகழ்ந்ததைக் குறித்து `அத்தன்மையன்` என்றவாறாம். ``கொடியும் விடையும்`` என்றது, `விடைக் கொடியும், விடை ஊர்தியும்` என்றதாம். ``கோலக் குழகன்`` என்றது ஒரு பொருட் பன்மொழி.

வானோர் பணிய மண்ணோர் ஏத்த
மன்னி நடமாடும்
தேனார் பொழில்சூழ் தில்லை மல்கு
சிற்றம் பலத்தானைத்
தூநான் மறையான் அமுத வாலி
சொன்ன தமிழ்மாலைப்
பானேர் பாடல் பத்தும் பாடப்
பாவம் நாசமே. **#248**

தேவர்கள் வணங்கவும் மனிதர்கள் துதிக்கவும், பொருந்திக் கூத்துநிகழ்த்தும், வண்டுகள் நிறைந்த சோலைகளால் சூழப்பட்ட தில்லையில் விளங்கும் சிற்றம்பலப் பெருமானைப் பற்றித் தூய்மையான நான்கு வேதங்களையும் ஓதுபவனான திரு ஆலி அமுதன் பாடிய தமிழ்மாலையாகிய பால் போன்ற இனிய பாடல்கள் பத்தினையும் பாடுதலால் தீவினைகள் அழிந்து ஒழியும்.

விளக்கவுரை

மன்னி - என்றும் நின்று. பால் நேர் - பால்போலும் இனிமையுடைய. `நாசம் ஆம்` என்னும் ஆக்கச்சொல் தொக்கது. ``தூ நான் மறையான்`` என்றதனால், இவர் மறையவர் குலத்தினராதல் விளங்கும். இது, முன்னைப் பதிகத்திலும் கூறப்பட்டது.

கோல மலர்நெடுங்கட் கொவ்வை
வாய்க்கொடி யேரிடையீர்
பாலினை யின்னமுதைப் பர
மாய பரஞ்சுடரைச்
சேலுக ளும்வயல்சூழ் தில்லை
மாநகர்ச் சிற்றம்பலத்
தேலுடை எம்மிறையை
என்றுகொல் காண்பதுவே. **#249**

அழகிய பூப்போன்ற பெரிய கண்களையும், கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயினையும் கொடிபோன்ற மெல்லிய இடையினையும் உடைய தோழிமீர்! பால்போன்று இனிய னாய், இனிய அமுதம் போன்று புத்துயிர் அளிப்பவனாய், எல்லா ரினும் மேம்பட்டவனாகிய மேம்பட்ட ஒளிவடிவினனாய், சேல் மீன்கள் துள்ளுகின்ற வயல்களால்

சூழப்பட்ட தில்லையாகிய பெரிய நகரிலே சிற்றம்பலத்தில் எழுந்தருளியிருக்க இசைந்த எம் தலைவ னாகிய சிவபெருமானை அடியேன் எக்காலத்துப் புறக்கண்களால் காணப்போகிறேனோ?

விளக்கவுரை

கோலம் - அழகு. `கோலக் கண்` என இயையும். `கொடி ஏர் இடையீர்` என்றதில், ஏர் உவம உருபு. ``இடையீர்`` என்றது பாங்கியரை. பரம் ஆய - எப்பொருட்கும் முன்னதாகிய. பரஞ் சுடர் - மேலான ஒளி. சேல் உகளும் - கயல்மீன்கள் துள்ளுகின்ற. ஏல் - ஏற்றல்; முதனிலைத் தொழிற்பெயர். ஏற்றல் - எழுந்தருளியிருக்க இசைதல். `ஏலஉடை` என்பது பாடம் அன்று. ``இறை`` என்றது, சொல்லால் அஃறிணையாதலின், ``பரம், சுடர்`` என்றவற்றோடு இயைந்து நின்றது. கொல், ஐயத்துக்கண் வந்தது.

காண்பதி யானென்றுகொல் கதிர்
மாமணி யைக்கனலை
ஆண்பெண் அருவுருவென் றறி
தற்கரி தாயவனைச்
சேண்பணை மாளிகைசூழ் தில்லை
மாநகர்ச் சிற்றம்பலம்
மாண்புடை மாநடஞ்செய் மறை
யோன்மலர்ப் பாதங்களே. **#250**

ஒளிவீசும் மேம்பட்ட மணி போல்பவனாய்க் கனல் போன்ற செம்மேனியனாய், ஆண் என்றோ பெண் என்றோ வடிவு அற்றவன் என்றோ அறிவதற்கு இயலாதவனாக உள்ளவனாய், வானத்தை அளாவிய பெரும்பரப்புடைய மாளிகைகளால் சூழப்பட்ட தில்லை என்ற பேரூரின் சிற்றம்பலத்திலே மாட்சிமை பொருந்திய மேம்பட்ட திருக்கூத்தினை நிகழ்த்தும், வேதம் ஓதும் சிவபெரு மானுடைய தாமரைமலர் போன்ற திருவடிகளை அடியேன் புறக்கண் களால் காணும் நாள் எந்நாளோ?

விளக்கவுரை

``மணி, கனல்`` என்றவை உவமை ஆகுபெயர்கள். ``ஆண், பெண், அரு, உரு` என்ற நான்கும், ``என்று`` என்பதனோடு தனித்தனி இயைந்தன. அரிது - அரிய பொருள். ``சேண் பணை மாளிகை`` என்றதை, `சேணிற் பணைத்த மாளிகை` எனப் பிரிக்க. `வானத்தை` அளாவிப் பரந்த மாளிகை என்பது பொருள். `சிற்றம்பலத்துக்கண்` என உருபு விரிக்க. `நடம்செய் பாதங்கள்` என இயையும். ``பாதங்கள்`` என்புழியும் தொகுக்கப்பட்ட இரண்டனுருபை விரித்து, `யான் காண்பது

என்றுகொல்` என்பதனைக் கொண்டுகூட்டி, `இறைவனை யும், அவன் பாதங்களையும் யான் காண்பது என்றோ` என உரைக்க. பாதங்களை வேறாக எடுத்துக் கூறியது, அவற்றது சிறப்புப்பற்றி. ``நின்னிற் சிறந்த நின்தாள் இணை`` *(பரிபாடல் - 4)* எனச் சான்றோரும் கூறுவர்.

கள்ளவிழ் தாமரைமேற் கண்
டயனோடு மால்பணிய
ஒள்ளெரி யின்னடுவே உரு
வாய்ப்பரந் தோங்கியசீர்த்
தெள்ளிய தண்பொழில்சூழ் தில்லை
மாநகர்ச் சிற்றம்பலத்
துள்ளெரி யாடுகின்ற ஒரு
வனையு ணர்வரிதே. **#251**

உலகத்தைப் படைத்தவனாகிய, தேன் வெளிப் படும் தாமரைமலர்மேல் இருக்கும் பிரமனும், திருமாலும் வணங்குமாறு அவ்விருவருக்கும் நடுவே ஒளிவீசும் தீப்பிழம்பின் உருவத்தனாய்ப் பரவி உயர்ந்த சிறப்பை உடையவனாய், மேலோர் தமக்குப் புகலிடமாகத் தெளிந்த, குளிர்ந்த சோலைகளால் சூழப்பட்ட தில்லை யாகிய பெரிய நகரத்தில் உள்ள சிற்றம்பலத்துள் தீயினைக் கையில் ஏந்தி ஆடுகின்ற ஒப்பற்ற சிவபெருமானை உள்ளவாறு அறிதல் இயலாத செயலாகும்.

விளக்கவுரை

கள் அவிழ் - தேனோடு மலர்கின்ற. `தாமரைமேல் அயன்` என இயையும். `கண்ட` என்பதன் ஈறு தொகுத்தலாயிற்று. கண்ட - உலகத்தைப் படைத்த. ``முழுவதுங் கண்டவனை`` *(தி.8 திருச் சதகம் - 7)* என்ற திருவாசகத்தைக் காண்க. பணிய - செருக்கொழிந்து வணங்குமாறு. `நடுவே எரியின் உருவாய` என மாற்றுக. நடுவே - அவ்விருவருக்கும் நடுவிலே. `ஓங்கிய ஒருவன்` எனவும், `சீர்த் தில்லை, தெள்ளிய தில்லை` எனவும் இயையும். தெள்ளிய - மேலோர், தமக்குப் புகலிடமாகத் தெளிந்த. `உணர்தல் எனக்கு அரிதாகியே விடுமோ` என்பது பொருள். உணர்தல், இங்குத்தலைப்பட்டுணர்தல். `ஒருவன்னை` என ஒற்று விரித்து ஓதுவதே பாடம் போலும்!

அரிவையோர் கூறுகந்தான் அழ
கன்எழில் மால்கரியின்
உரிவைநல் லுத்தரியம் உகந்
தான்உம்ப ரார்தம்பிரான்
புரிபவர்க் கின்னருள்செய் புலி
யூர்த்திருச் சிற்றம்பலத்
தெரிமகிழ்ந் தாடுகின்றஎம்

பிரான்என் இறையவனே. #252
பார்வதியைத் தன் உடம்பின் ஒருபகுதியாகக் கொண்டு மேம்பட்டவனாய், அழகனாய், அழகிய மத மயக்கம் பொருந்திய யானையின் தோலைச் சிறந்த மேலாடையாகக் கொண்டு மேம்பட்டவனாய், தேவர்களுக்குத் தலைவனாய், தன்னை விரும்பு பவர்களுக்கு இனிய கருணைசெய்யும், புலியூரில் உள்ள திருச்சிற்றம் பலத்திலே எரியைக் கையிலேந்தி மகிழ்ச்சியோடு ஆடுகின்ற எங்கள் பெருமானே என் தெய்வம் ஆவான்.

விளக்கவுரை

மால் கரி - பெரிய யானை. உத்தரியம் - மேலாடை. புரிபவர் - விரும்புபவர். `இன்னருள்செய் எம்பிரான்` என இயையும். இறைவன் - தலைவன். ``இறையவனே`` என்னும் ஏகாரத்தைப் பிரித்து, ``எம்பிரான்`` என்றதனோடு கூட்டுக.

இறைவனை என்கதியை என்னு
ளேயுயிர்ப் பாகிநின்ற
மறைவனை மண்ணும்விண்ணும் மலி
வான்சுட ராய்மலிந்த
சிறையணி வண்டறையுந் தில்லை
மாநகர்ச் சிற்றம்பலம்
நிறையணி யாம்இறையை நினைத்
தேன்இனிப் போக்குவனே. #253

தலைவனாய், எனக்குப் பற்றுக்கோடாய், எனக் குள்ளே மூச்சுக்காற்றாய் மறைந்து நிற்பவனாய், நிலவுலகமும் வானுல கமும் மகிழ்தற்கு ஏதுவான மேம்பட்ட ஒளியாய், நிறைந்த சிறகு களைக் கொண்டுள்ள அழகிய வண்டுகள் ஒலிக்கும் தில்லைமா நகரிலே சிற்றம்பலத்துக்கு மிக்க அணியாக இருக்கும் தெய்வமாகிய சிவபெருமானை விருப்புற்று நினைத்த யான் அவனை இனி, என் உள்ளத்தினின்றும் போக்கி விடுவேனோ?

விளக்கவுரை

கதி - புகலிடம். ``என்னுள்ளே உயிர்ப்பாய் ..... நிற்கும்`` என்ற அப்பர் திருமொழி இங்கு நோக்கத்தக்கது. *(தி.5 ப.21 பா.1)* மறை - மறைந்து நிற்கும் பொருள். `துறைவன்` என்பதுபோல, ``இறைவன், மறைவன்`` என்றவற்றில் வகரம் பெயர் இடைநிலை. `இறையனை, மறையனை` எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். மலி - மகிழ்தற்கு ஏதுவான. `சுடராய் அணியாம் இறை` எனவும், `மலிந்த வண்டு` எனவும் இயையும். மலிந்த - நிறைந்த. சிறைஅணி - சிறகைக் கொண்டுள்ள. `சிற்றம்பலத்துக்கு` எனத்

தொகுக்கப்பட்ட உருபை விரிக்க. நிறை அணி - மிக்க அழகு. போக்குவனே - என் உள்ளத்தினின்றும் போக்கி விடுவேனோ; `மறப்பேனோ` என்றபடி.

நினைத்தேன் இனிப்போக்குவனோ நிம
லத்திரளை நினைப்பார்
மனத்தினு ளேயிருந்த மணி
யைமணி மாணிக்கத்தைக்
கனைத்திழி யுங்கழனிக் கன
கங்கதிர் ஒண்பவளம்
சினத்தொடு வந்தெறியுந் தில்லை
மாநகர்க் கூத்தனையே. **#254**

தூய்மையின் மிகுதியனாய், தன்னை விருப்புற்று நினைப்பவர் உள்ளத்திலே தங்கியிருக்கும் அழகிய மாணிக்கம் போல் வானாய், ஒலித்துக்கொண்டு வயல்களிலே வந்து பாயும் மிக்க நீர், ஒளி வீசுகின்ற பவளத்தைக் கோபம் கொள்பவரைப்போலக் கரையில் ஒதுக்கித்தள்ளும் தில்லை மாநகரில் உள்ள கூத்தப்பிரானை விருப் புற்று நினைத்த அடியேன் இனி என் உள்ளத்தினின்றும் போக விடுவேனோ?

விளக்கவுரை

`நிமலத்திரளை` என்பது முதலாகத் தொடங்கிப் பூட்டு வில்லாக முடிக்க. நிமலத் திரள் - தூய்மையின் மிகுதி. ``மனத்தினுளே இருந்த மணி`` என்றது அற்புத உருவகம். பின்னர் வந்த மணி, அழகு. ``மணியை`` எனவும், ``மாணிக்கத்தை`` எனவும் வேறு வேறாகக் கூறினாராயினும், `மாணிக்க மணியை` என்பதே கருத்தென்க. கனைத்து - ஒலித்து. கன கம் - மிக்கநீர். ``கழனி`` என்பதன்றி, `கனநீர்` என்பதே பாடம் போலும்! கனம் - மேகம். ``சினத்தொடு வந்து`` என்றது, தற்குறிப்பேற்றம்.

கூத்தனை வானவர்தங் கொழுந்
தைக்கொழுந் தாய்எழுந்த
மூத்தனை மூவுருவின் முத
லைமுத லாகிநின்ற
ஆத்தனைத் தான்படுக்கும் அந்
தணர்தில்லை யம்பலத்துள்
ஏத்தநின் றாடுகின்ற எம்
பிரான்அடி சேர்வன்கொலோ. **#255**

கூத்தாடுபவனாய், தேவர் கூட்டத்துக்குத் தலை வனாய், எல்லாப் பொருள்களுக்கும் அடிப்படையாய்த் தோன்றிய மூத்தவனாய், படைத்தல் காத்தல் அழித்தல் என்ற மூன்று செயல் களுக்கும் மூன்று வடிவங்களை எடுத்த முதல்வனாய், எல்லாச் செயல் களுக்கும்

காரணமாய் இருப்பவனாய், பசுவின் பால், தயிர், நெய் முதலியவற்றை ஆகுதி செய்யும் அந்தணர்கள் வாழும் தில்லை அம்பலத்துள் பலரும் துதிக்குமாறு நிலையாகக் கூத்து நிகழ்த்துகின்ற எம் தலைவனுடைய திருவடிகளை அடியேன் சேர்வேன் கொல்லோ!

விளக்கவுரை

வானவர்தம் கொழுந்து - தேவ கூட்டத்திற்குத் தலை யாயவன். பின்னர், ``கொழுந்தாய்`` என்றது, `எல்லாப் பொருட்கும் கொழுந்தாய்`` என்றவாறு. எழுந்த - தோன்றிய; என்றது, படைப்புக் காலத்தில் முதற்கண் உருவும், பெயரும், தொழிலும் கொண்டு நின்றமையை, ``முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி`` என்றார் நாவுக்கரசர். *(தி.6 ப.19 பா.1)* `மூத்தவனை` என்பதில் அகரம் தொகுத்தலாயிற்று. மூத்தவன் - முன்னோன். நிலையை, `உரு` என்றார். முந்நிலையாவன, `படைக்கும் நிலை, காக்கும் நிலை, அழிக்கும் நிலை` என்பன. பின்னர், `முதலாகி நின்ற` என்றது, `எல்லாச் செயல் கட்கும் முதலாகி நின்ற` என்றவாறு. `நின்ற எம்பிரான்` என இயையும். ``ஆத்தனைப் படுக்கும் அந்தணர்`` என்றதற்கு, முன், `ஆவே படுப்பார் அந்தணாளர்` என்றதற்கு *(தி.9 பா.196)* உரைத்தவாறே உரைக்க. தான், அசைநிலை. ``தில்லை யம்பலத்துள்`` என்றதனை, ``நின்ற`` என்றதன்பின்னர்க்கூட்டுக. கொல், ஐய இடைச்சொல். ஓகாரம், இரக்கப்பொருட்டு.

சேர்வன்கொ லோஅன்னைமீர் திக
ழும்மலர்ப் பாதங்களை
ஆர்வங் கொளத்தழுவி அணி
நீறென் முலைக்கணியச்
சீர்வங்கம் வந்தணவுந் தில்லை
மாநகர்ச் சிற்றம்பலத்
தேர்வங்கை மான்மறியன் எம்
பிரான்போல் நேசனையே. **#256**

என் அன்னையர்களே! சிறந்த மரக்கலங்கள் வந்து அணுகும் தில்லைமாநகரில் உள்ள சிற்றம்பலத்தில் உள்ளவனாய், கையில் எழுச்சியை உடைய மான்குட்டியை ஏந்தியவனாய், எம் தலைவனாய், எம்மால் விரும்பப்படும் பெருமானுடைய விளங்கும் தாமரைமலர் போன்ற திருவடிகளை விருப்பத்தோடு தழுவி, அவன் அணிந்திருக்கும் திருநீறு என் நகில்களில் படியுமாறு அவனைத் தழுவும் வாய்ப்பினைப் பெறுவேனோ?

விளக்கவுரை

`அன்னைமீர், என் நேசனை, அவன் அணி நீற்றை என் முலைக்கு

அணியுமாறு, அவன் மலர்ப் பாதங்களைத் தழுவிச் சேர்வன்கொலோ` எனக்கொண்டு கூட்டுக. ``அன்னைமீர்`` என்றது, கைத் தாயரை. அணி - அழகு. பிறராயின் சந்தன களபங்களைப் பூசிச் சேர்வர். இவன் திருநீற்றையே பூசிச் சேர்வான். ஆதலின், ``அணிநீறு அணிய`` என்றாள். வங்கம் - மரக்கலம். ஏர்வு - எழுச்சி. போல், அசை நிலை. `புவனேசன்` என்பது `போனேசன்` என மருவிற்று என்பாரும், பிற உரைப்பாரும் உளர்.

நேசமு டையவர்கள் நெஞ்சு
ளேயிடங் கொண்டிருந்த
காய்சின மால்விடையூர் கண்
ணுதலைக் காமருசீர்த்
தேச மிகுபுகழோர் தில்லை
மாநகர்ச் சிற்றம்பலத்
தீசனை எவ்வுயிர்க்கும் எம்
இறைவன்என் றேத்துவனே. **#257**

தன்னிடம் விருப்பமுடைய அடியவர்களின் உள்ளத்துள்ளே தன் இருப்பிடத்தை அமைத்துக்கொண்டு தங்கு பவனாய், பகைவர்களைத் துன்புறுத்தும் வெகுளியை உடைய பெரிய காளையை வாகனமாக இவர்கின்ற, நெற்றிக் கண்ணுடையவனாய், விரும்பத்தக்க சிறப்பினை உடைய உலகத்தில் மிகுகின்ற புகழை உடையவர்கள் வாழும் தில்லைமாநகரில் சிற்றம்பலத்தில் வீற்றிருக் கும், மற்றவரை அடக்கியாளும் பெருமானை எல்லா உயிர்களுக்கும் தெய்வமாயவன் என்று புகழ்ந்து கூறும்நான் அவன் அருள்பெறுவது என்றோ?

விளக்கவுரை

காய் சினம், இன அடை. மால் விடை - பெரிய இடபம் `திருமாலாகிய இடபம்` எனலும் ஆம். காமரு - விரும்பத்தக்க. சீர் - அழகு. `சீர்த் தில்லை` என இயையும். தேசம் மிகு புகழ் - நில முழுதும் பரவிய புகழ். ``புகழோர்`` என்றது, தில்லைவாழ் அந்தணரை. `எவ் வுயிர்க்கும் இறைவன் என்று ஏத்துவன்` என்றது, `அவனது பெருமை யறிந்து காதலித்தேன்` என்றவாறு. `இனி அவனைத் தலைப்படுதல் என்றோ` என்பது குறிப்பெச்சம். இறைவன் - தலைவன்.

இறைவனை ஏத்துகின்ற இளை
யாள்மொழி யின்தமிழால்
மறைவல நாவலர்கள் மகிழ்ந்
தேத்துசிற் றம்பலத்தை
அறைசெந்நெல் வான்கரும்பின் அணி
ஆலைகள் சூழ்மயிலை

மறைவல வாலிசொல்லை மகிழ்ந்
தேத்துக வான்எளிதே. **#258**

சிவபெருமானைத் துதிக்கின்ற இளம்பருவத் தலைவியின் கூற்றாக
இனிய தமிழால், நான்மறைகளின் பொரு ளுணர்ந்து ஒலி பிறழாது
அவற்றை ஓதுதலில் வல்லவர்கள் மகிழ்ந்து துதிக்கின்ற சிற்றம்பலம்
தொடர்பாக வரப்பால் வரையறுக்கப்பட்ட வயல்கள்
செந்நெற்பயிர்களோடும் மேம்பட்ட கரும்புகளின் வரிசையான
ஆலைகளோடும் சூழ்ந்திருக்கும் திருமயிலாடு துறையைச் சேர்ந்த,
வேதங்களில் வல்ல திருஆலிஅமுதன் பாடிய பாடல்களை
விருப்பத்தோடு பாராயணம் செய்க. சிவலோகம் உங்களுக்கு
மறுமையில் எளிதாகக் கிட்டும்.

விளக்கவுரை

``ஏத்துகின்ற`` என்றது, `காதலித்துத் துதிக்கின்ற` என்னும் பொருட்டு. `இளையாள் மொழியாகிய (கூற்றாகிய) இனிய தமிழால்` என உரைக்க. ``மறைவல`` என்றது பொருளுணர்தல் வன்மையையும், ``நாவலர்கள்`` என்றது, ஒலி பிறழாது ஓதுதல் வன்மையையும் குறித்து நின்றன. அறை - வரம்பால் வரையறுக்கப் பட்ட வயல்கள். `வயல்கள் செந்நெற்பயிர்களோடும், கரும்பின் ஆலைகளோடும் சூழும் மயிலை` என்க. அணி - வரிசை. மயிலை - மயிலாடு துறை. (மாயூரம்).

புருடோத்தம நம்பி - கோயில்

வாரணி நறுமலர் வண்டு கெண்டு
பஞ்சமம் செண்பக மாலை மாலை
வாரணி வனமுலை மெலியும் வண்ணம்
வந்துவந் திவைநம்மை மயக்கு மாலோ
சீரணி மணிதிகழ் மாட மோங்கு
தில்லையம் பலத்தெங்கள் செல்வன் வாரான்
ஆரெனை அருள்புரிந் தஞ்சல் என்பார்
ஆவியின் பரமன்றென்றன் ஆதரவே. **#259**

தேன் ஒழுகுகின்ற நறுமலர்களைக் கிளறுகின்ற வண்டுகள் பாடுகின்ற பஞ்சமப் பண், சண்பகப் பூமாலை, மாலைக் காலம் என்ற இவை கச்சணிந்த அழகிய முலைகள் மெலியுமாறு தொடர்ந்து வந்து நம்மை மயக்குகின்றன. அம்மயக்கத்தைப் போக்க அழகினைக் கொண்ட மணிகள் விளங்குகின்ற மாடங்கள் உயர்ந்த தில்லையம்பலத்திலுள்ள எங்கள் செல்வனாகிய சிவபெருமான் நமக்குக் காட்சி நல்கவில்லை. என்திறத்து அருள் செய்து என்னை அஞ்சாதே என்று சொல்லக்கூடியவர் யாவர் உளர்? என் விருப்பம் என் உயிரால் தாங்கப்படும் அளவினதாக இல்லை.

விளக்கவுரை

வார் - தேன் ஒழுகுகின்ற. அணி - அழகிய. \`நறுமலரை வண்டு கெண்டி *(கிளறிப்)* பாடுகின்ற பஞ்சமப் பண்\` என்க. \`\`மாலை\`\` இரண்டனுள் பின்னது மாலைக் காலம், \`பஞ்சமமும், செண்பக மாலையும், மாலைக் காலமும் ஆகிய இவை நம் வனமுலைகள் மெலியுமாறு வந்து வந்து நம்மை மயக்கும்\` என்க. ஆல், ஓ அசை நிலைகள். சீர் அணி - அழகைக்கொண்ட. \`\`ஆர் எனை அருள்புரிந்து அஞ்சல் என்பார்\`\` என்றதை இறுதியிற் கூட்டுக. \`\`எனை\`\` என்றது, \`\`அஞ்சல் என்பார்\`\` என்பதனோடு முடியும். என் ஆதரவு ஆவியின் பரம் அன்று. எனது காதல் என் உயிரின் அளவினதன்று; மிக்கது. \`\`சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள் - உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே\`\` *(குறுந்தொகை-18)* என்னும் பகுதியை நோக்குக. ஆதரவு - விருப்பம்; காதல். \`அஃது என்னால் தாங்கும் அளவினதாய் இல்லை\` என்றபடி.

ஆவியின் பரம்என்றன் ஆதரவும்
அருவினை யேனைவிட் டம்ம அம்ம
பாவிவன் மனம்இது பைய வேபோய்ப்
பனிமதிச் சடையரன் பால தாலோ
நீவியும் நெகிழ்ச்சியும் நிறையழிவும்

நெஞ்சமும் தஞ்சமி லாமை யாலே
ஆவியின் வருத்தமி தார்அறிவார்
அம்பலத் தருநடம்ஆடு வானே. #260

என் விருப்பம் என் உயிரின் தாங்கும் எல்லையைக் கடந்து மிக்குள்ளது. தீ வினையினேன் ஆகிய அடியேனை விடுத்துப் பாவியாகிய வலிய மனம் யான் அறியாதவாறு மெதுவாகச் சென்று குளிர்ந்த பிறையைச் சடைக்கண் அணிந்த சிவபெருமான்பால் சேர்ந்து விட்டது. நெஞ்சம் எனக்குப் பற்றுக்கோடாக இல்லாமையாலே மேகலையின் நெகிழ்ச்சியும் நிறை அழிவும் ஏற்பட, அவற்றால் என் உயிர்படும் வருத்தத்தை யாவர் அறிவார்?. அம்பலத்தில் அரிய கூத்தாடும் பெருமானே அறிவான்.

விளக்கவுரை

இரக்கத்தின்கண் வந்த `அம்ம` என்பது அடுக்கி நின்றது. பாவி மனம் - கொடுஞ் செயலை உடையதாகிய மனம். `இதுவும்` என்ற எச்ச உம்மை விரிக்க. ஆல், ஓ அசை நிலைகள். நீவி - நீக்கம்; தனிமை; மேகலை என்று கொண்டு, `நீவியின் நெகிழ்ச்சியும்` என்பது பாடம் என்பாரும் உளர். நெகிழ்ச்சி - தளர்ச்சி; மெலிவு. ``நெஞ்சமும் தஞ்சம் இலாமையாலே`` என்றதனை ``அரன் பாலதாலோ`` என்றதன் பின்னர்க் கூட்டுக. `நீவி முதலியனவாகிய இவ் ஆவியின் வருத்தம்` எனச் சுட்டு வருவித்து உரைக்க. `நடமாடுவானே அறியும்` என ஒருசொல் வருவித்து முடிக்க. அல்லாக்கால் ``அரன்`` என்றதனோடு இயையுமாறில்லை. ``போய்`` என்பது முன்னிலைக்கண் செல்லாதாக லின், `சடைய நின்பால தாலோ` எனப் பாடம் ஓதலும் ஆகாது. இத்திருப்பாட்டிலும், வருந்திருப்பாட்டிலும், `அருள்நடம்` எனப் பாடம் ஓதுவாரும் உளர்.

அம்பலத் தருநட மாடவேயும்
யாதுகொல் விளைவதென் றஞ்சி நெஞ்சம்
உம்பர்கள் வன்பழி யாளர் முன்னே
ஊட்டினர் நஞ்சைஎன் றேயும் உய்யேன்
வன்பல படையுடைப் பூதஞ் சூழ
வானவர் கணங்களை மாற்றி யாங்கே
என்பெரும் பயலைமை தீரும் வண்ணம்
எழுந்தரு ளாய்எங்கள் வீதி யூடே. #261

நீ பொன்னம்பலத்திலே அரிய கூத்தினை ஆடிக் கொண்டிருந்தாலும், கொடிய பழிச்செயல்களைச் செய்யும் தேவர்கள் முன்னொரு காலத்தில் உன்னை நஞ்சினை உண்பித்தார்களே. அதனால் உனக்கு என்றாவது என்ன தீங்கு நேரக்கூடுமோ என்று அஞ்சி நெஞ்சில் நிம்மதியில்லாமல் இருக்கின்றேன். தேவர்கள் கூட்டங்களை நீக்கி

வலிமையுடையனவாய்ப் பலவாய் உள்ள படை யாம் தன்மையை உடைய பூதங்கள் உன்னைச்சூழ எங்கள் வீதி வழியாக என்னுடைய மிக்க பசலை நோய்தீரும் வண்ணம் எழுந்தருளுவாயாக.

விளக்கவுரை

``ஆடவேயும்`` என்றாரேனும், `ஆடுகின்றாய்` என்றும், ஊட்டினர் என்றும் கேட்டு `யாது விளைவதுகொல் என்று நெஞ்சம் அஞ்சி உய்யேனாயினேன்` என உரைத்தல் கருத்து என்க. ஏகாரங்கள் இசைநிறை. `வன்பழியாளராகிய உம்பர்` என்க. `உனக்கு ஊட்டினர்` எனச் சொல்லெச்சம் வருவிக்க. ``உய்யேன்`` என்றது `இறந்துபடும் நிலையில் உள்ளேன்` என்றபடி. வன்பழியாளராகிய கொடுமை மிகுதிபற்றி `வானவர் கணங் களை மாற்றுதல்` ஒன்றையே எடுத்துக் கூறினாளாயினும், `ஆடுதலை விட்டு எழுந்தருளாய்` என்றலும் கருத்தாம். என்னை? `ஒழியாது ஆடு தலால் இறைவற்குத் திருமேனி நோம் என்பது கருதியும் வருந்தினாளா தலின்`. பயலைமை - பசலைத் தன்மை. `எழுந்தருளின் இதுவும் தீரும்` என்றவாறு.

எழுந்தருளாய் எங்கள் வீதி யூடே
ஏதமில் முனிவரோ டெழுந்த ஞானக்
கொழுந்தது வாகிய கூத்த னேநின்
குழையணி காதினின் மாத்தி ரையும்
செழுந்தட மலர்புரை கண்கள் மூன்றும்
செங்கனி வாயும்என் சிந்தை வௌவ
அழுந்தும்என் ஆருயிர்க் கென்செய் கேனோ
அரும்புனல் அலமரும் சடையினானே. **#262**

குற்றமற்ற பதஞ்சலி, வியாக்கிரபாதர் முதலிய முனிவர்களோடு வெளிப்பட்ட ஞானக்கொழுந்தாகிய கூத்தப் பிரானே! உன் குழையை அணிந்த காதுகளில் உள்ள காதணிகளும் செழித்த பெரிய மலர்களை ஒத்த முக்கண்களும், சிவந்த கனி போன்ற வாயும் என் உள்ளத்தைக் கவருவதனால் துன்பத்தில் ஆழ்ந்த என் உயிர் நிலைத்திருப்பதற்கு யான் யாது செய்வேன்? அரிய கங்கை நீர் சுழலும் சடையினானே! நீ எங்கள் வீதி வழியே அடியேன் காணுமாறு எழுந்தருளுவாயாக. எழுந்தருளினால் அடியேன் உயிர்நிற்கும்.

விளக்கவுரை

``எழுந்தருளாய் எங்கள் வீதியூடே` என்பதனை இறுதியிற் கூட்டுக. ஏதம் - குற்றம். முனிவர், பதஞ்சலி, வியாக்கிர பாதர் முதலியோர். `தில்லைவாழந்தணர்` எனலும் ஆம். `கொழுந்தது` என்பதில் அது, பகுதிப்பொருள் விகுதி. கொழுந்து, முடிநிலை. `மாத்திரை` என்பதும் ஓர்

காதணியே. வெளவ - வெளவினமையால். அழுந்தும் - துன்பத்தில் ஆழ்கின்ற. உயிர்க்கு - உயிர் நிற்றற்கு. அலமரும் - அலைகின்ற. `நீ எங்கள் வீதியூடே எழுந்தருளினால் என் உயிர் நிற்கும்` என்றவாறு.

அரும்புனல் அலமரும் சடையினானை
அமரர்கள் அடிபணிந் தரற்ற அந்நாள்
பெரும்புரம் எரிசெய்த சிலையின் வார்த்தை
பேசவும் நையும்என் பேதை நெஞ்சம்
கருந்தட மலர்புரை கண்ட வண்டார்
காரிகை யார்முன்பென் பெண்மை தோற்றேன்
திருந்திய மலரடி நசையி னாலே
தில்லையம் பலத்தெங்கள் தேவ தேவே. **#263**

கரிய பெரிய மலரை ஒத்த கழுத்தை உடையவனே! தில்லை அம்பலத்தில் எழுந்தருளியிருக்கும், தெய்வங்களுக்குள் மேம்பட்ட எங்கள் தேவனே! கங்கை சுழலும் சடையை உடைய உன்னைத் தேவர்கள் அடிகளில் விழுந்து வணங்கிப் பலவாறு தங்கள் முறையீடுகளை விண்ணப்பிக்க, அக்காலத்துப் பெரிய திரிபுரங்களைத் தீக்கிரையாக்கிய உன் வில்லாண்மையின் புகழை எடுத்துக்கூறும் அள வில், அடியேனுடைய அறியாமையை உடைய உள்ளம் உருகுகிறது. வளப்பமான மாலையை அணிந்த மகளிர் முன்னே என் பெண்மையை, உன் அழகான மலர்போன்ற திருவடிகளை அணைய வேண்டும் என்ற விருப்பத்தினாலே தோற்று நிற்கிறேன்.

விளக்கவுரை

``சடையினானை`` என்றது, `சடையை உடைய வனாகிய நின்னை` என, முன்னிலைக்கண் படர்க்கை வந்த வழு வமைதி. சிலை - வில். வார்த்தை - *(வீரச்)* செய்தி. ``பேசவும்`` என்ற உம்மை, `பேசுதல் ஒன்றையே பிறர் செய்யவும்` எனப் பொருள் தந்து நின்றது. நையும் - *(அதனைக் கேட்ட அளவிலே)* நெகிழ்ந்துருகும். கருந் தடமலர் - கரிய நீர்ப் பூ; நீலோற்பலம். கண்ட - கண்டத்தை உடையவனே. வண் தார் - வளப்பமான மாலையை அணிந்த. `தார்` என்பது இங்குப் பொதுமையில் நின்றது. காரிகையார் - பெண்கள். `அவர்கள் முன்பு` என்றது, `அவர்கள் நகைக்கும்படி` என்றதாம். பெண்மை - பெண் தன்மை; நாணம். நசை - விருப்பம். `நசையினாலே தோற்றேன்` என முன்னர்க் கூட்டுக.

தில்லையம் பலத்தெங்கள் தேவ தேவைத்
தேறிய அந்தணர் சிந்தை செய்யும்
எல்லைய தாகிய எழில்கொள் சோதி
என்னுயிர் காவல்கொண் டிருந்த எந்தாய்
பல்லையார் பசுந்தலை யோடிடறிப்

பாதமென் மலரடி நோவ நீபோய்
அல்லினில் அருநட மாடில் எங்கள்
ஆருயிர் காவல்இங் கரிது தானே. **#264**

தில்லை அம்பலத்தில் எங்கள் தேவதேவனாய், மனந்தெளிந்த அந்தணர் தியானிக்கும் இடமாகிய சிற்றம்பலத்தில் உள்ள அழகுமிக்க ஒளி வடிவினனாய், அடியேனுடைய உயிரைப் பாதுகாத்துக் கொண்டிருந்த என் தந்தையே! பல்லோடு கூடிய பிரம கபாலமாகிய மண்டையோட்டைக் கையில் ஏந்தி இருட்டில் கால்கள் இடற, உன் திருவடிகளாகிய மெல்லிய மலர்கள் அடியிடுதலால் நோவ, நீ சென்று இருளில் அரிய கூத்தாடினால், உன் செயல்பற்றிக் கவலைப்படும் அடியேங்களுடைய அரிய உயிரை நீங்காமல் பாது காப்பது அரிய செயலாகும். ஆதலின் இருளில் நடம்புரிதலை நீக்கு வாயாக.

விளக்கவுரை

``தேவதேவை`` என்றதும், முன் திருப்பாட்டில், `சடையினானை` என்றதுபோன்ற வழுவமைதி. தேறிய அந்தணர் - தெளிந்த அந்தணர்கள்; என்றது, `ஞானத்திற் சிறந்த அந்தணர்` என்றவாறு. எல்லை - இடம்; என்றது சிற்றம்பலத்தை. ``எல்லையது`` என்றதில் உள்ள அது, பகுதிப்பொருள் விகுதி. `எல்லையதன்கண்` என ஏழனுருபு விரிக்க. ஆகிய - பொருந்திய. காவல் கொண்டு - காத்து. பல்லைப் பொருந்திய பசுந்தலை, இடுகாட்டுள் நரி முதலிய வற்றால் இழுக்கப்பட்டுக் கிடப்பன பல்தோன்றக் கிடத்தலை, ``பல்லை ஆர்`` என்றார். `பாதம் அவற்றோடு இடறுதலால் அம்மலரடி நோவ` என்க. அல்லினில் - இருளில். ஆடில் - ஆடினால். ஆருயிர் காவல் - ஆருயிரை யாங்கள் காத்தல். அரிது - இயலாது. `ஆதலின், இனி அதனை ஒழிக` என்பது குறிப்பெச்சம்.

ஆருயிர் காவல்இங் கருமை யாலே
அந்தணர் மதலைநின் னடிபணியக்
கூர்நுனை வேற்படைக் கூற்றஞ்சாயக்
குரைகழல் பணிகொள மலைந்ததென்றால்
ஆரினி அமரர்கள் குறைவி லாதார்
அவரவர் படுதுயர் களைய நின்ற
சீருயி ரே எங்கள் தில்லை வாணா
சேயிழை யார்க்கினி வாழ்வரிதே. **#265**

இவ்வுலகில் தன்னுடைய அரிய உயிரைப் பாதுகாத்துக் கொள்ள இயலாமையாலே அந்தணர் மகனாகிய மார்க்கண்டேயன் உன் திருவடிக்கண் வணங்க, கூரிய முனையினை உடைய வேலாகிய படைக்கலனை ஏந்திய கூற்றுவன் அழியுமாறு உன் கழல் ஒலிக்கும்

திருவடி ஒன்றினைச் செயற்படுத்த நீ போரிட்டனை என்றால் தேவர்களில், குறைவில்லாதவர்கள் யாவர்? அவரவர் நுகரும் துயரங்களைப் போக்குதற்கு ஒருப்பட்டு நிற்கின்ற சிறந்த உயிர்போல்பவனே! எங்கள் தில்லையம்பதியில் வாழ்கின்றவனே! நீ காவாதொழியின் சேயிழையார் ஆகிய மகளிருக்கு இனி உயிர் வாழ்தல் அரிது.

விளக்கவுரை

இங்கு ஆருயிர் காவல் அருமையால் - இவ்வுலகில் தனது அரிய உயிரைக் காத்துக்கொள்ளுதல் இயலாமையால். அந்தணர் மதலை, மார்க்கண்டேயர். `சாய மலைந்தது` என இயையும். குரை கழல் - ஒலிக்கின்ற கழல் அணிந்த பாதம். பணிகொள - செயல் கொள்ளும்படி. மலைந்தது, தொழிற் பெயர். `மலைந்தது குரைகழல் பணிகொள என்றால்` என மாற்றுக. `கூற்றுவனைச் சாய்த்தது திருவடி ஒன்றினாலே என்றால்` என, இறைவனது பெருமையை வியந்தவாறு. ``குறைவு`` என்றது, `அடங்குதல்` என்னும் பொருட்டாய், `குறைவு இலாதார்` என்றது, `உனக்கு அடங்குதல் இல்லாதவர்` எனப் பொருள் தந்தது. சீர் உயிரே - சிறந்த உயிர்போல்பவனே. `ஏனைத் தேவர் ஒருவருக்கும் இல்லாத உனது இப்பெருமையை உணருந்தோறும் சேயிழையார்க்கு இனி வாழ்வு அரிது` என இயைபு படுத்தி உரைக்க.

சேயிழை யார்க்கினி வாழ்வரிது
திருச்சிற்றம் பலத்தெங்கள் செல்வ னேநீ
தாயினும் மிகநல்லை யென்ற டைந்தேன்
தனிமையை நினைகிலை சங்க ராஉன்
பாயிரும் புலியத ளின்னு டையும்
பையமே லெடுத்தபொற் பாத முங்கண்
டேயிவள் இழந்தது சங்கம் ஆவா
எங்களை ஆளுடை ஈசனேயோ. **#266**

திருச்சிற்றம்பலத்து எங்கள் செல்வனே! எங்களை அடிமைகொள்ளும் ஈசனே! நீ தாயை விட மிக நல்லவனாய் உள்ளாய் என்று உன்னைச் சரண்யனாக அடைந்தேன். எல்லோருக்கும் நன்மையைச் செய்கின்றவனே! நீ இப்பெண்ணுடைய தனிமைத் துயரை நினைத்துக்கூடப் பார்க்காதவனாக உள்ளாய். உன்னுடைய பரவிய புலித்தோல் ஆடையையும் மெதுவாக மேலே தூக்கிய அழகிய திருவடியையும் கண்டே இப்பெண் தன் சங்கு வளையல்களை இழந்தாள். நீ அருளாவிடின் இனி மகளிருக்கு உயிர்வாழ்தல் அரிதாகும்.

விளக்கவுரை

`தாயினும் மிக நல்லையாகிய நீ இவளது தனிமைத் துயரை நினைகின்றாய் இல்லை` என்றபடி. ``பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து` *(தி.8 பிடித்த-9)* என்னும் திருவாசகத்தை நோக்குக. `சங்கரா` என்றதும், நீ சுகத்தைச் செய்பவன் அல்லையோ என்னும் குறிப்புடையது. `உன் உடை` என இயையும். `பாய் புலி, இரும் புலி` என்க. இரு - பெரிய. அதள் - தோல். ``அதளின்`` என்பதில் இன், அல்வழிக்கண் வந்த சாரியை. ``அதளின்னுடை`` என்றதில் னகர ஒற்று விரித்தல். `இவள் சங்கம் இழந்தது, உனது உடையையும், பாதத்தையும் கண்டே` என்க. ஆவா, இரக்கக் குறிப்பு, ஓகாரமும் அன்னது. இத்திருப்பாட்டு ஒன்றும் செவிலி கூற்று. ஏனைய தலைவி கூற்று.

எங்களை ஆளுடை ஈசனேயோ
இளமுலை முகம்நெக முயங்கி நின்பொற்
பங்கயம் புரைமுக நோக்கி நோக்கிப்
பனிமதி நிலவதென் மேற்படரச்
செங்கயல் புரைகண்ணி மார்கள் முன்னே
திருச்சிற்றம் பலமுட னேபு குந்து
அங்குன பணிபல செய்து நாளும்
அருள்பெறின் அகலிடத் திருக்க லாமே. **#267**

எங்களை அடிமையாகக் கொண்ட ஈசனே! இள முலையின் முகடு நசுங்குமாறு உன்னைத்தழுவி உன்னுடைய அழகிய பங்கயம் போன்ற முகத்தை நோக்கி நீ அணிந்திருக்கும் குளிர்ந்த பிறையின் நிலவொளி என்மேல் பரவ, சிவந்த கயல் மீன்களை ஒத்த கண்களை உடைய இளைய பெண்கள் காணுமாறு, அவர்கள் கண் எதிரே திருச்சிற்றம்பலத்தில் உன்னோடு புகுந்து, அங்கு உனக்குக் குற்றேவல்கள் பல நாள்தோறும் செய்து உன் அருளைப் பெறும் வாய்ப்பு உண்டாயின் இவ்வுலகில் பலகாலம் இருக்கலாம். உன் அருள் கிட்டாவிடின் அஃது இயலாது.

விளக்கவுரை

நெக - குழைய. முயங்கி - தழுவி. பொற் பங்கயம், இல் பொருள் உவமை. நிலவு - மதியினது ஒளி. அது, பகுதிப்பொருள் விகுதி. ``செங்கயல் புரை கண்ணிமார்கள் முன்னே`` என்றது, `ஏனைய மகளிரினும் முற்பட்டு` என்றவாறு. `முன்னே புகுந்து` என இயையும். உடனே - விரைவாக. `நாளும் செய்து` என முன்னே சென்று இயை யும். அகலிடம், பூமி. இருக்கலாம் - உயிர்வாழ்தல் கூடும். `ஈசனேயோ, முன்னே` உடனே புகுந்து, முயங்கி, நோக்கி நோக்கி நாளும் பணி பல செய்து அருள்பெறின் இருக்கலாம்; அல்லது கூடாது` எனத் தனது ஆற்றாமை மிகுதி கூறினாள். இதனால் இவ்வாசிரியரது பேரன்பு அறியப்படும்.

``நிலவு என்மேல் படரப் பணி பல செய்து`` என்றதனால், `அணுக்கத் தொண்டுகள் பல செய்து` என்றதாயிற்று.

அருள்பெறின் அகலிடத் திருக்க லாமென்
றமரர்கள் தலைவனும் அயனும் மாலும்
இருவரும் அறிவுடை யாரின் மிக்கார்
ஏத்துகின் றார்இன்னம் எங்கள் கூத்தை
மருள்படு மழலைமென் மொழியு மையாள்
கணவனை வல்வினை யாட்டி யேன்நான்
அருள்பெற அலமரும் நெஞ்சம் ஆவா
ஆசையை அளவறுத் தார்இங் காரே. **#268**

சிவபெருமானுடைய அருள் கிட்டினால் பரந்த தத்தம் உலகில் பலகாலம் இருக்கலாம் என்று இந்திரனும், பிரமனும் திருமாலும் ஆகிய அறிவுடையவரின் மேம்பட்டார் இருவரும், இன்றும் எங்கள் கூத்தப்பிரானைத் துதிக்கிறார்கள். இறைவனுக்கு மையல் ஏற்படுவதற்குக் காரணமான மழலை போன்ற மென்மையான சொற்களை உடைய பார்வதியின் கணவனாகிய சிவபெருமானை அடைவதற்குத் தீவினையை உடைய அடியேனுடைய நெஞ்சம் சுழல்கிறது. ஒவ்வொருவருக்கும் ஆசை இவ்வளவுதான் இருத்தல் வேண்டும் என்று ஆசையை அளவுபடுத்தி ஆசைகொள்பவர் இவ் வுலகில் யாவர் உளர்?

விளக்கவுரை

``மிக்கார்`` என்றது, `மிக்காராய்` என முற்றெச்சம். ஏத்துதலால், அறிவுடையாரின் மிக்காராயினர். ``மிக்கார்`` என்ற தனைப் பெயராக்கி, அமரர்தம் தலைவன் முதலியோருக்கு ஆக்கி உரைப்பாரும் உளர். `கூத்து` என்றது, `கூத்தனை` என ஆகுபெயராய் நின்றது. மருள்படு - இறைவற்கு மையல் உண்டாதற்கு ஏதுவான. வினையாட்டியேன் - வினையை உடையளாகியேன். `நான் அருள் பெறுதலைக்கருதி என் நெஞ்சம் அலமரும்` என்க. ``ஆசையை அளவறுத்தார் இங்குஆர்`` என்றது வேற்றுப்பொருள் வைப்பு. `எங்கள் கூத்தனை, உமையாள் கணவனை அமரர்கள் தலைவன் முதலாயினோர் (அவன் அருள் பெறமாட்டாது) ஏத்துகின்றாராக, வல் வினையாட்டியேனாகிய நான் பெற நெஞ்சம் அலமரும்; ஆதலின், ஆசையை அளவறுத்தார் இங்கு ஆர்` எனக் கூட்டி முடிக்க. ஆவா, வியப்புக் குறிப்பு.

ஆசையை அளவறுத் தார்இங் காரே
அம்பலத் தருநடம் ஆடு வானை
வாசநன் மலரணி குழல்மடவார்
வைகலும் கலந்தெழு மாலைப் பூசல்

மாசிலா மறைபல ஓது நாவன்
வண்புரு டோத்தமன் கண்டு ரைத்த
வாசக மலர்கள்கொண் டேத்த வல்லார்
மலைமகள் கணவனை யணைவர் தாமே. **#269**

உலகிலே ஆசையை அளவுபடுத்தி ஆசை வைப் பார் யாவர் உளர்? பொன்னம்பலத்தில் அரிய கூத்து நிகழ்த்தும் சிவ பெருமானை நறுமணம் கமழும் மலர்களை அணிந்த கூந்தலை உடைய மகளிர் நாள்தோறும் மனத்தால் கூடியதனால் அவனுடைய மாலையைப் பெறுவதற்காக ஏற்பட்ட பூசலைப்பற்றிக் குற்றமற்ற வேத வாக்கியங்கள் பலவற்றை ஓதும் நாவினனாகிய வண்மையை உடைய புருடோத்தமன் படைத்துக்கூறிய பாடல்களாகிய மலர்களைக் கொண்டு, பார்வதி கணவனாகிய சிவபெருமானைத் துதிக்க வல்லவர் கள் அவனை மறுமையில் சென்று அடைவார்கள்.

விளக்கவுரை

``ஆசையை அளவறுத்தார் இங்கு ஆரே`` என்பதன் பின், `ஆதலின்` என்னும் சொல்லெச்சம் வருவித்துரைக்க. `ஆசையை அளவறுத்தல் இயலாதாகலின் மடவார் பலரும் கலந்தெழுவாராயினர்` என்றவாறு. `நடம் ஆடுவானைக் கலந்து எழும்` என இயையும். கலந்து-மனத்தாற் கூடி. இனி, ``கலந்து`` என்றதனை, `கலக்க` எனத் திரித்தலும் ஆம். வைகலும் - நாள்தோறும். மாலைப் பூசல் - மாலையைப் பெற. `நான் நான்` என்று செய்யும் பூசல். `பூசலை உரைத்த வாசகம்` என்க. `கண்டு` என்றது, `படைத்து` என்றவாறு. வாசக மலர்கள் - சொற்களாகிய பூக்கள்.

வானவர்கள் வேண்ட
வளர்நஞ்சை உண்டார்தாம்
ஊனமிலா என்கை
ஒளிவளைகள் கொள்வாரோ
தேனல்வரி வண்டறையுந்
தில்லைச்சிற் றம்பலவர்
நானமரோ என்னாதே
நாடகமே யாடுவரே. **#270**

தேவர்கள் வேண்டியதனால் பெருகி வந்த விடத்தை உண்ட பெருமானார் அவர்களைக் காப்பாற்றினார். ஆனால் அடியவள் ஆதற்கு எந்தக் குறைபாடும் இல்லாத அடியேனுடைய கைகளில் இருந்த ஒளிவீசும் வளைகளைக் கைப்பற்றி எனக்கு இறந்து பாட்டை நல்கலாமா? தேனிலே பெரிய கோடுகளை உடைய வண்டு கள் ஒலிக்கும் தில்லைப்பதியிலுள்ள சிற்றம்பலத்தில் கூத்தாடும் பெருமான்,

நான் அவரை நம்முடைய உறவினர் என்று சொல்ல முடியாதபடி என்துன்பத்தைப் போக்காது நாடகத்தை நடிக்கின்றார்.

விளக்கவுரை

`தேவர்கள் இறந்தொழியாதவாறு நஞ்சினை உண்டு அன்று அவர்களைக் காத்த பேரருளாளர், இன்று என் வளைகளைக் கவர்ந்து எனக்கு இறந்துபாடு உறுவிக்கின்றாரோ! இது வியப்பா கின்றது` என்பது, முதல் இரண்டடிகளின் பொருள். ஓகாரம், இழிவு சிறப்பு. `தேன் வண்டு` என இயையும். நமர் - நம் உறவினர். என்னாது - என்று சொல்லாதபடி; என்றது, `என் துன்பத்தைத் தவிர்க்காதுநின்று` என்றதாம். ``நாடகம்`` என்றது சிலேடை; இறைவனது அருட் கூத்தோடு, போலி வேடங்கொண்டு நடித்தலையும் குறித்தலின். தனக்கு அருளாமை பற்றி, அனைத்துயிர்க்கும் அருள்புரியும் கூத்தினை, `நாடகம்` என்றாள் என்க.

ஆடிவரும் காரரவும்
ஐம்மதியும் பைங்கொன்றை
சூடிவரு மாகண்டேன்
தோள்வளைகள் தோற்றாலும்
தேடிஇமை யோர்பரவும்
தில்லைச்சிற் றம்பலவர்
ஆடிவரும் போதருகே
நிற்கவுமே ஒட்டாரே. **#271**

ஆடிக்கொண்டுவரும் கரிய பாம்பினையும் அழகிய பிறையையும் பசியகொன்றைப்பூமாலையையும் எம்பெருமான் சூடிவருதலைக்கண்ட நான் அவரிடத்து மையலால் உடல்மெலிய என் தோள்வளைகள் நெகிழ அவற்றை இழந்தாலும், தேவர்கள் தேடிக் கொண்டுவந்து முன்நின்று துதிக்கும் அச்சிற்றம்பலத்துப் பெருமானார் தாம் கூத்தாடிக் கொண்டு வரும் பொழுது அவர் அருகே நின்று அவர் கூத்தினை அடியேன் காணும் வாய்ப்புப்பெறாதபடி விரட்டுகிறார்.

விளக்கவுரை

காரரவு - கரும் பாம்பு. ஐம்மதி - அழகிய சந்திரன். ``கண்டேன்`` என்றதைப் பெயராக்கி, அதனை, ``தோற்றாலும்`` என்ப தனோடு முடிக்க. ஆடிவருதல், வீதியின்கண் என்க. `நான் வளை களைத் தோற்கும் அளவிற்குக் காதல் கரைகடந்து நிற்கவும், இவர் என்னை அருகணையவும் ஒட்டாது ஓட்டுகின்றார்; இவர் தம்மைக் காதலித்தார்க்கு அருளுந்திறம் இதுதான் போலும்` என்றபடி.

ஒட்டா வகைஅவுணர்

முப்புரங்கள் ஒர்அம்பால்
பட்டாங் கழல்விழுங்க
எய்துகந்த பண்பினார்
சிட்டார் மறைஒவாத்
தில்லைச்சிற் றம்பலவர்
கொட்டா நடமாடக்
கோல்வளைகள் கொள்வாரே. #272

பொருந்தாத பகைமை பாராட்டிய அசுரர்களின் மும்மதில்களையும் தீப்பட்டு அவற்றை விழுங்குமாறு அம்பு எய்து மகிழ்ந்த பண்பாளராம், உயர்வு பொருந்திய வேதஒலி நீங்காத தில்லைச் சிற்றம்பலத்து எம்பெருமானார் மத்தளம் முதலியவை முழங்கப் பொருத்தமாகக் கூத்து ஆடுதலால் அதன்கண் ஈடுபட்ட அடி யேனுடைய திரண்ட வளையல்களைக் கைப்பற்றுவார் ஆயினார்.

விளக்கவுரை

ஒட்டா வகை அவுணர் - பொருந்தாத வகைமையை (பகைமைக் குணத்தை) உடைய அசுரர். `ஓர் அம்பால் எய்து` என இயையும். `அழல் பட்டு விழுங்க` என மாற்றுக. ஆங்கு, அசைநிலை. உகந்த - தேவர்களை விரும்புகின்ற. `சிட்டம்` என்பதன் ஈற்றில் அம் முக்குறைந்து நின்றது. சிட்டம் - உயர்வு: கொட்டு ஆம் நடம் - மத்தளம் முதலியவற்றின் முழக்கம் பொருந்திய நடனம். ஆட - ஆடுதலால். `ஆடி` எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். `கொடியோரை அழித்து நல்லோரை விரும்பிக்காக்கும் பண்புடையார், என் கோல் வளை களைக் கொள்வார்; இது தக்கதோ` என்றபடி.

ஆரே இவைபடுவார்
ஐயம் கொளவந்து
போரேடி என்று
புருவம் இடுகின்றார்
தேரார் விழவோவாத்
தில்லைச்சிற் றம்பலவர்
தீராநோய் செய்வாரை
ஒக்கின்றார் காணீரே. #273

நற்குணங்கள் உடையார் எவர்தாம் இக்குணங்கள் தோன்ற நிற்பவர் ஆவர்? பிச்சை பெறவந்து ஏடீ! என்று என்னை அழைத்துப் புருவத்தால் போரிடுகின்றார். அஃதாவது புருவங்களை நெரித்துக் காதல் குறிப்பை உணர்த்துகின்றார். தேர்கள் நிறைந்ததாய்த் திருவிழாக்கள் இடையறாது நிகழ்த்தப்படும் தில்லைநகரிலுள்ள சிற்றம்பலத்து எம்பெருமானார் நோய் மாத்திரமே செய்து அந்நோய் தீரும் பரிகாரத்தைச்

செய்யாமையின் நீங்காத நோயைச் செய்யு மவரை ஒத்துள்ளார். அவரை நீங்களும் வந்து காணுங்கள்.

விளக்கவுரை

ஆரே - நற்பண்புடையார் எவர்தாம். இவை படுவார் - இக்குணங்கள் தோன்ற நிற்பார். செய்யுளாதலின் சுட்டுப் பெயர் முன்வந்தது. எனவே, ``இவை`` என்றது, பிச்சையேற்பார்போல வந்து பெண்டிரை மயங்கச்செய்வனவாய பின்வருங் குணங்களையாயிற்று. ஐயம் - பிச்சை. ``போர்`` என்றதை. ``புருவம்`` என்பதன் பின்னர்க் கூட்டுக. ஏடி - பெண்பால் விளிப்பெயர். `புருவத்தால்` என உருபு விரிக்க. புருவத்தால் போரிடுதலாவது. புருவத்தை நெறித்துக் காதற் குறிப்புணர்த்துதல். இதனை, ``போர்`` என்றாள்; நோய் மாத்திரமே செய்துபோதலின். தீராநோய் செய்வார் - கெடுத்தொழியும் இயல்பினர். ஒக்கின்றார் - அவரோடு ஒரு தன்மையராய்க் காணப் படுகின்றார். ``ஒக்கின்றார்`` என்றதனால் `இவரது இயல்பு அதுவன்று` என்பது பெறப்பட்டது.

காணீரே என்னுடைய
கைவளைகள் கொண்டார்தாம்
சேணார் மணிமாடத்
தில்லைச்சிற் றம்பலவர்
பூணார் வனமுலைமேற்
பூவம்பாற் காமவேள்
ஆணாடு கின்றவா
கண்டும் அருளாரே. **#274**

என்னுடைய கைவளையல்களைக் கவர்ந்து கொண்ட பெருமானார் ஆகிய, வானளாவிய அழகிய மாடங்களை உடைய தில்லைநகரின் சிற்றம்பலத்தில் நடனமாடுபவர், அணிகலன் களை அணிந்த அழகிய முலைகளின்மேல் பூக்களாகிய அம்புகளை எய்து மன்மதன் தன் ஆண்மையைக் காட்டி நிற்றலைக் கண்டும் எனக்கு அருள் செய்கிறார் அல்லர். அவருடைய இந்த அருளற்ற செயலை என் தோழிகளாகிய நீங்களும் காணுங்கள்.

விளக்கவுரை

காணீர் - காணுங்கள். ஏகாரம், அசைநிலை. சேண் ஆர் - வானத்தைப் பொருந்திய. பூண் ஆர் - ஆபரணம் நிறைந்த. வனம் - அழகு. ஆண் ஆடுதல் - தமது ஆண்மையை (வீரத்தை)க் காட்டிநிற்றல்.
சிற்றம்பலவர் என்னுடைய கைவளைகள் கொண்டார்; (ஆயினும்) காமவேள் ஆண் ஆடுகின்றவா கண்டும் தாம் அருளார் `இது காணீரே` எனக்கூட்டுக.

ஏயிவரே வானவர்க்கும்
வானவரே என்பாரால்
தாயிவரே எல்லார்க்கும்
தந்தையுமாம் என்பாரால்
தேய்மதியஞ் சூடிய
தில்லைச்சிற் றம்பலவர்
வாயின கேட்டறிவார்
வையகத்தா ராவாரே. **#275**

பிறையைச்சூடிய தில்லைச்சிற்றம்பலவர் ஆகிய பெருமானாரே தேவர்களுக்கும் மேம்பட்டவர் என்கின்றனர். இவரே எல்லோருக்கும் தாயும் தந்தையும் ஆவார் என்கின்றனர். இவர் வாயிலிருந்து வரும் சொற்களைக் கேட்டு அவற்றை மெய்ம்மொழி யாக மனங்கொள்பவர் இவ்வுலகத்தில் பலகாலம் இருப்பதனை விடுத்து இறந்துபாடுற்று விரைவில் வானகத்தார் ஆவர்.

விளக்கவுரை

`ஏ` என்றது, இகழ்ச்சி குறித்தது. ``தேய்மதியஞ்சூடிய`` என்பதும் அன்னது. ``இவர்`` என்றது சிற்றம்பலவர் சொல்லைத் தலைவி தன் கூற்றிற் கூறியது. வானவர்க்கும் வானவர் - தேவர்க்கும் தேவர். ஏகாரம், தேற்றம். ``தில்லைச் சிற்றம்பலவர்`` எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, ``என்பர்`` என்றாள். வாயின - வாயி னின்றும் வரும் சொற்கள். `சொல் என்னாது வாயின என்றாள். `மெய் யல்லது கூறாதவாய்` என அதனது சிறப்புக் கூறுவாள் போன்று பொய் கூறும் வாயாதலை உணர்த்தற்கு. `ஒருத்திக்கு நலம்செய்யாத இவர் அனைத்துயிர்க்கும் நலம் செய்வாராகத் தம்மைக் கூறிக்கொள்ளுதல் எங்ஙனம் பொருந்தும்` என்பது கருத்து. ``ஆவாரே`` என்றதில் உள்ள ஏகாரம், எதிர்மறைப்பொருட்டாய் நின்றது. `வையகத்தார் ஆகார்` என்றது, `வானகத்தார் ஆவர்` என்னும் பொருட்டாய், `இவர் வாய் மொழியைத் தெளிந்தோர்க்கு உளதாவது இறந்துபாடேயாம்` என்னும் குறிப்பினைத் தந்து நின்றது.

ஆவா இவர்தம் திருவடி
கொண் டந்தகன்றன்
மூவா உடல்அவியக்
கொன்றுகந்த முக்கண்ணர்
தேவாம் மறைபயிலும்
தில்லைச்சிற் றம்பலவர்
கோவாய் இனவளைகள்
கொள்வாரோ என்னையே. **#276**

தெய்வத்தன்மை பொருந்திய வேதஒலி பலகாலும் கேட்கப்படுகின்ற தில்லைச்சிற்றம்பலத்துக் கூத்தனார் ஆகிய இவர், ஐயோ! என்று கேட்டார் இரக்கப்படுமாறு தம்திருவடிகளால் காலனுடைய மூப்படையாத உடல் அழியுமாறு அவனைக்கொன்று மகிழ்ந்த முக்கண்களைஉடைய மூர்த்தியாவர். அடியவன் ஒருவனைக் காத்த அப்பெருமானார் எனக்குத் தலைவராய் வந்து யான்அணிந்த இனமான வளையல்களை என்னிடமிருந்து கைப்பற்றி அவர் அடிய வளாகிய என்னைத் துன்புறுத்துவாரோ?

விளக்கவுரை

ஆவா, இரக்கக் குறிப்பு. ``இவர்`` என்றது எழுவாய். அந்தகன் - கூற்றுவன். மூவா உடல் - அழியாத உடல்; அமர தேகம். அவிய - அழியும்படி. உகந்த - தம் அடியவனை விரும்பிக் காத்த ``முக்கண்ணர்`` என்றது, `இறைவர்` என்றபடி. இதன்பின், `அவ்வாறாக` என்பது வருவிக்க. தே ஆம் - தெய்வத் தன்மை பொருந்திய. `சிற்றம்பலவராகிய இவர்` என முன்னே கூட்டுக. செய்யு ளாதலின் சுட்டுப்பெயர் முன் வந்தது. ``கோவாய்`` என்றதன்பின் `வந்து` என ஒருசொல் வருவிக்க. `கோவா வளை` என்பது பாடம் அன்று. ``கொள்வாரோ`` என்ற ஓகாரம் சிறப்பு. `இது தக்கதன்று` என்பது குறிப்பெச்சம். `என்னை வளைகள் கொள்வார்` என முன்னே கூட்டுக. `வளைகள் கொள்ளுதல்` என்பது `மெலிவித்தல்` எனப் பொருள்தந்து, ``என்னை`` என்னும் இரண்டாவதற்கு முடிபாயிற்று.

என்னை வலிவார்ஆர்
என்ற இலங்கையர்கோன்
மன்னு முடிகள்
நெரித்த மணவாளர்
செந்நெல் விளைகழனித்
தில்லைச்சிற் றம்பலவர்
முன்னந்தான் கண்டறிவார்
ஒவ்வார்இம் முத்தரே. **#277**

என்னைத் தம்வலிமையால் அடக்கவல்லவர் யாவர் என்று கயிலையைப் பெயர்க்க முற்பட்ட இராவணனுடைய நிலை பெற்ற முடிகளை நசுக்கிப் பார்வதியின் அச்சத்தைப் போக்கிய மணவாளர் செந்நெல் விளையும் வயல்களால் சூழப்பட்ட தில்லைச் சிற்றம்பலவர் ஆவர். இயல்பாகவே பாசங்கள் இல்லாத இப்பெருமான் முன்பு தம்மை விரும்பியவர்களுடைய அச்சத்தைப் போக்குபவராக இருந்தமைபோல இக்காலத்தில் இருப்பவராகத் தோன்றவில்லை.

விளக்கவுரை

வலிவார் - வலிசெய்வார்; நலிகின்றவர். ``வந்து மூழ்கியும் தாரான் வலிசெய்கின்றான்`` *(தி.12 பெ.பு.திருநீலகண்ட - 32.)* என்றது காண்க. மணவாளர் - அழகர். ``மணவாளர்`` என்றாள், உமையது அச்சத்தைத் தவிர்த்தமை கருதி. அதனால், இவளது காதல் மீக்கூர்தல் பெறப்படும். `மணவாளர் இச்சிற்றம்பலவர்`` எனச் சுட்டும், `ஆயினும்` என்னும் சொல்லெச்சமும் வருவிக்க. தான், அசைநிலை. கண்டறிவார் - சிலரால் கண்டறியப்பட்டவர்; என்றது, `சிலர் தலைப்பட்டுணர்ந்து, ``அற்றவர்க்கு அற்ற சிவன்`` *(தி. 3 ப.120 பா.2.)* என்றாற்போலக் கூறப்பட்டவர்` என்றபடி. அவ்வியல்பு தன்னளவில் இவர்மாட்டுக் காணப்படாமையின், ``முன்னம் கண்டறிவார் ஒவ்வார்`` என்றாள். ``அறிவார்`` என்றது காலமயக்கு.

முத்தர் முதுபகலே
வந்தென்றன் இல்புகுந்து
பத்தர் பலியிடுக
என்றெங்கும் பார்க்கின்றார்
சித்தர் கணம்பயிலும்
தில்லைச்சிற் றம்பலவர்
கைத்தலங்கள் வீசிநின்
றாடுங்கால் நோக்காரே. **#278**

இயல்பாகவே பாசங்கள் இல்லாத எம்பெருமான் நண்பகல் நேரத்தில் வந்து அடியேனுடைய வீட்டில் புகுந்து `அன்பராய் உள்ளார் பிச்சை வழங்கட்டும்` என்று வாயால் யாதும் பேசாமல் என் உருவம் முழுதும் பார்த்தவர், அத்தகைய, சான்றோர்கள் குழாம் நெருங்கிய சிற்றம்பலப் பெருமான் தம் கைகளை வீசி ஆடுங்கால் பண்டுபார்த்து அடையாளம் கண்ட அடியேனை நோக்குகின்றார் அல்லர்.

விளக்கவுரை

முத்தர் - இயல்பாகவே பாசங்கள் இல்லாதவர். முதுபகல் - முற்றிய பகல்; நண்பகல். பத்தர் பலி இடுக - அன்பராய் உள்ளார் பிச்சை இடுவார்களாக. எங்கும் - எனது உருவம் முழுதும். `இல்லில் வந்து என்னை முழுதும் நோக்குதல் பற்றி இவர் நமக்கு அருளுவார் என்று கருதி யான் இவர் தம் மன்றிற்குச் சென்றால், என்னைச் சிறிதும் கடைக்கணிக்கின்றிலர்` என்பாள், ``இல்புகுந்து பார்க்கின்றார்; ஆடுங்கால் நோக்கார்`` என்றாள். `இஃது இவர் வஞ்சகச் செயல்போலும்` என்றவாறு. இறைவனது திருவருளைப்பெற விரைவார் இறைவனை இங்ஙனம் கூறுதல் இயல்பு என்க.

நோக்காத தன்மையால்
நோக்கிலோம் யாம்என்று
மாற்காழி ஈந்து
மலரோனை நிந்தித்துச்
சேக்கா தலித்தேறுந்
தில்லைச்சிற் றம்பலவர்
ஊர்க்கேவந் தென்வளைகள்
கொள்வாரோ ஒண்ணுதலீர். **#279**

ஒளி பொருந்திய நெற்றியை உடைய என் தோழிமீர்! காளைவாகனத்தை விரும்பி இவரும் தில்லைச்சிற்றம் பலவர் தம்மை முழுமுதற்கடவுளாக மதித்த திருமாலுக்குச் சக்கராயுதம் வழங்கி, அவ்வாறு மதிக்காத தன்மையால் நாம் உனக்கு அருள் செய்யக்கருதேம் என்று பிரமனைப் பழித்து அவன் நடுத்தலையைக் கைந்நகத்தால் கிள்ளி எடுத்தவராவார். அப்பெருமான் என் ஊர்க்கண் வந்து தன்னையே பரம் பொருளாக வழிபடும் என்னுடைய வளை களைக் கவர்ந்து என்னை வருத்துவாரோ?

விளக்கவுரை

``மாற்கு ஆழி ஈந்து`` என்பதை, ``நிந்தித்து`` என்பதன் பின்னர்க் கூட்டுக. நோக்காத தன்மையால் - நீ எம்மை முதற்கடவுள் என்று மதித்தலைச் செய்யாத காரணத்தால். யாம் நோக்கிலோம் என்று-நாம் உன்னை நம் அடியவருள் ஒருவனாகக் கருதி இரங்கி லோம் என்று சொல்லி. மலரோன் - பிரமன். அவனை நிந்தித்தமை. அவனது நடுத்தலையை உகிரால் அறுத்தமை. `திருமாலுக்கு ஆழி *(சக்கரம்)* ஈந்ததும், அறக் கடவுளை ஊர்தியாகக் கொண்டதும் அவர் களது வழிபாட்டினால்` என்பது பிரமனுக்குக் கூறிய குறிப்புப்பற்றி வருவித்துகொள்ளப்படும். ஊர்க்கே வந்து - ஊரினுள் தாமே வந்து. `வழிபடுபவர்க்கு அளியும், வழிபாடாதோர்க்குத் தெறலும் செய்கின்ற இவர் வழிபாடுடைய என்மாட்டுத் தெறலைச் செய்கின்றது என்னோ` என்பதாம்.

ஒண்ணுதலி காரணமா
உம்பர் தொழுதேத்தும்
கண்ணுதலான் றன்னைப்
புருடோத் தமன்சொன்ன
பண்ணுதலைப் பத்தும்
பயின்றாடிப் பாடினார்
எண்ணுதலைப் பட்டங்
கினிதா இருப்பாரே. **#280**

தேவர்கள் தொழுது புகழும் நெற்றிக்கண்ண னாகிய சிவபெருமானைப் பற்றித் தலைவி கூற்றாகப் புருடோத்தமன் பாடிய, யாழை எழுவிப்பாடுதற்கு உற்ற தலையாய இப்பத்துப் பாடல்களையும் நன்கு உணர்ந்து ஆடிக் கொண்டு பாடுபவர், இவ் வுலகில் எல்லோராலும் மதிக்கப்படுதலைப் பொருந்தி மறுமையில் சிவலோகத்தில் மகிழ்வாக இருப்பார்கள்.

விளக்கவுரை

ஒண்ணுதலி, இதனுள்கூற்று நிகழ்த்திய தலைவி. `காரணமாச் சொன்ன` என இயையும். `பண்ணு பத்து` என இயைத்து வினைத்தொகையாக்குக. பண்ணுதல் - யாழைப் பண்ணுக்கு ஏற்ப அமைத்தல். `அங்ஙனம் அமைத்துப் பாடுதற் குரிய பத்துப் பாடல்கள்` என்றவாறு. தலைப் பத்து - தலையாய பத்துப் பாடல்கள். பயின்று - கற்று. எண்ணுதலைப் பட்டு - யாவராலும் மதிக்கப் படுதலைப் பொருந்தி. அங்கு - சிவலோகத்தில்.

சேதிராயர் - கோயில்

சேலு லாம்வயல் தில்லையு ளீர்உமைச்
சால நாள் அயற் சார்வதி னால்இவள்
வேலை யார்விட முண்டுகந் தீரென்று
மால தாகுமென் வாணுதலே. **#281**

சேல்மீன்கள் உலாவும் வயல்களை உடைய தில்லையம்பதியில் உள்ள பெருமானே! என்னுடைய ஒளி பொருந்திய நெற்றியை உடைய மகளாகிய இத்தலைவி பல நாள்கள் உம் அருகிலேயே பொருந்தியிருப்பதனால், `கடலில் தோன்றிய விடத்தை உண்டு தேவர்களைக் காத்த மகிழ்ச்சியை உடையீர் நீர்` என்று உம் திறத்துக் காம மயக்கம் கொண்டுள்ளாள்.

விளக்கவுரை

அயல் சார்வது - பக்கத்தில் அணுகி நிற்றல். இது நாள் தோறுமாம். வேலை ஆர் - கடலில் நிறைந்து தோன்றிய. உகந்தீர் - அதனையே அமுதமாகக் கொண்டீர். என்று - என்று இடையறாது கூறி. மால் ஆகும் - பித்துடையவள் ஆகின்றாள். `அவளுக்கு அருளல் வேண்டும்` என்பது குறிப்பெச்சம். அது, பகுதிப்பொருள் விகுதி. வாள் நுதல் - ஒளியையுடைய நெற்றி; இஃது ஆகுபெயராய், `ஒளி பொருந்திய நெற்றியை உடைய என்மகள்` எனப் பொருள்தந்தது. ``அயற் சார்வதினால் மாலதாகும்`` என்றதனால், இறைவரது வசீகரம் விளங்கும். ``விடம் உண்டு உகந்நீர்`` என்றதனால், `அதனினும் நான் கொடியளோ` என்பது குறித்தாள்.

வாணுதற் கொடி மாலது வாய்மிக
நாண மற்றனள் நான்அறி யேன்இனிச்
சேணுதற் பொலி தில்லையு ளீர்உமைக்
காணில் எய்ப்பிலள் காரிகையே. **#282**

என் அழகியமகளாகிய ஒளி பொருந்திய நெற்றியை உடைய இக்கொடி போல்வாள் மிகவும் காம மயக்கம் கொண்டு நாணமற்றவளாய் உள்ளாள். இவளைப்பழைய நிலையில் கொண்டுவரும் வழியை நான் அறியேன். மாளிகைகளின் மேற்பகுதி ஆகாயம் வரையில் உயர்ந்த மாளிகைகளை உடைய தில்லையம் பதியில் உள்ள பெருமானே! உம்மைக் கண்டால் இவள் மெலிவு இல்லாதவள் ஆவாள். ஆதலின் இவளுக்கு நீர் காட்சியையாவது வழங்குதல் வேண்டும்.

விளக்கவுரை

கொடி - கொடிபோன்றவள். மிக அற்றனள் - முழுதும் நீங்கினாள். ``இனி`` என்றதன்பின் `விளைவது` என்பது வருவிக்க. `இனித்

தெருவில் வந்து உம்மைத் தூற்றுவாள்` என்பது குறிப்பு. நுதல் - மாளிகைகளின் நெற்றி. `நுதல் சேணிற்பொலி தில்லை` என்க. சேண் - ஆகாயம். எய்ப்பு - மெலிவு. இலள் - இல்லாதவள் ஆவள். `ஆதலின், உமது காட்சியையேனும் அவளுக்கு வழங்குதல் வேண்டும்` என்பது குறிப்பெச்சம்.

காரி கைக்கரு ளீர்கரு மால்கரி
ஈரு ரித்தெழு போர்வையி னீர்மிகு
சீரியல் தில்லை யாய்சிவ னேஎன்று
வேரி நற்குழ லாள்இவள் விம்முமே. **#283**

கரிய பெரிய யானையின் தோலைக் கிழித்து உரித்து அதனை மேற்போர்வையாக அணிந்தவரே! `மேம்பட்ட சிறப்பினை உடைய தில்லை நகரில் உள்ளவனே! சிவபெருமானே!` என்று தேன் பொருந்திய நல்ல கூந்தலைஉடைய இவள் நாக்குழறிப்பேசுகிறாள். இப்பெண்ணுக்கு நீர் அருள் செய்வீராக.

விளக்கவுரை

``காரிகைக்கு அருளீர்`` என்றதை இறுதிக்கண் கூட்டி, ``காரிகைக்கு`` என்றது, `இவட்கு` எனச் சுட்டளவாய் நின்றதாகலின், ``இவள்`` என்றதற்கு, `காரிகை` என உரைக்க. `கருங்கரி, மால் கரி` எனத் தனித்தனி இயைக்க. மால் - பெரிய. ``ஈர் உரித்து`` என்றது, ``ஈர்ந்து உரித்து`` எனப் பொருள் தந்தது, ``வரிப்புனை பந்து`` *(முருகு - 68)* என்றாற் போல. சீர் இயல் - தன் புகழ் எங்கும் பரவிய. வேரி - தேன். `குழலாளாகிய இவள்` என்க. ``சீரியல் தில்லையாய்`` என்றது தலைவி கூற்றாய் வேறு முடிதலின், பால் வழுவாகாமை உணர்க.

விம்மி விம்மியே வெய்துயிர்த் தாளெனா
உம்மை யேநினைந் தேத்தும் ஒன்றாகிலள்
செம்ம லோர்பயில் தில்லையு ளீர்எங்கள்
அம்மல் ஓதி அயர்வுறுமே. **#284**

பெரிதும் தேம்பிப் பெருமூச்சுவிட்டு அடியேனை ஆண்டுகொள்வாயாக என்று உம்மையே விருப்புற்று நினைத்துப் புகழ்கிறாள். இவள் ஒருதிறத்தும் ஆற்றுவிக்க இயலாதவளாக உள்ளாள். சான்றோர்கள் வாழும் தில்லை நகரில் உள்ள பெருமானே! எங்களுடைய அழகிய கரிய மயிர்முடியை உடைய பெண் பெரிதும் மயங்குகிறாள்.

விளக்கவுரை

வெய்து உயிர்த்து - மூச்சு வெப்பமாக விட்டு. ஆள் - என்னை ஆண்டுகொள். ஏத்தும் - துதிப்பாள். ஒன்று ஆகிலள் - ஒரு திறத்தும் ஆகாள்; `ஆற்றுகின்றிலள்` என்றபடி. இதனை முற்றெச்ச மாக்கி,

``அயர்வுறும்`` என்பதனோடு முடிக்க. செம்மலோர் - தலைமை உடையோர்; அந்தணர். பயில் - வாழ்கின்ற. அம் அல் ஓதி - அழகிய இருள்போலும் கூந்தலை உடைய மகள். இதனை முதற்கண் கூட்டுக. அயர்வுறும் - சோர்வாள்.

அயர்வுற் றஞ்சலி கூப்பி அந்தோஎனை
உயஉன் கொன்றையந் தார்அரு ளாய்எனும்
செயலுற் றார்மதில் தில்லையு ளீர்இவண்
மயலுற் றாள்என்றன் மாதிவளே. **#285**

என் மகளாகிய இப்பெண் சோர்ந்து கைகளைக் கூப்பி `ஐயோ! என்னை வாழச்செய்ய உன் கொன்றைப் பூமாலையை அருளுவாயாக` என்று உம்மை வேண்டுகிறாள். வேலைப்பாடுகள் அமைத்து நிறைந்த மதில்களைஉடைய தில்லைநகரில் உள்ள பெருமானீரே! நீர் இப்பெண்ணுக்கு அருள் செய்யுங்கள்!

விளக்கவுரை

பின்னிரண்டடிகளை முதலில் வைத்து, ``உற்றாள்`` என்றதை முற்றெச்சமாகக் கொண்டு உரைக்க. உய - உய்ய. இதன்பின், `கொள்ள` என ஒரு சொல் வருவிக்க. செயல் உற்று ஆர் - வேலைப் பாடு அமைந்து நிறைந்த. இவண் - இப்பொழுது. மயல் - பித்து. `இவட்கு அருள்` என்னும் குறிப்பெச்சம் இறுதியில் வருவித்து முடிக்க.

மாதொர் கூறன்வண் டார்கொன்றை மார்பனென்
றோதில் உய்வன் ஒண் பைங்கிளி யேஎனும்
சேதித் தீர்சிரம் நான்முக னைத்தில்லை
வாதித் தீர்என்ம டக்கொடியையே. **#286**

`ஒளிபொருந்திய பச்சைக்கிளியே! பார்வதிபாகன், வளமான கொன்றைப்பூவினை அணிந்த மார்பினன் என்று நீ கூறினால் நான் பிழைப்பேன்` என்று என் இளைய கொடிபோல்வாள் ஆகிய மகள் கூறுகிறாள். பிரமனுடைய தலையைப் போக்கினவரே! தில்லைக் கண்நின்று இவளை வருந்தப் பண்ணினீர்; இது தகுமோ?

விளக்கவுரை

`ஒண் பைங்கிளியே, மாதொர் கூறன், கொன்றை மார்பன் என்றாற்போலத் தில்லையானைப் பற்றிய பேச்சினை நீ பேசினால் நான் உய்வேன்; (இல்லாவிடில் உய்யமாட்டேன்) என்று கிளியிடம் சென்று வேண்டுவாள்` என்க. வண்டு ஆர் - வண்டுகள் ஆர்க்கின்ற (ஒலிக்கின்ற); `நிறைந்த` என்றலுமாம். `நான் முகனைச் சிரம் சேதித்தீர்` என மாற்றுக. சேதித்தீர் - அறுத்தவரே. `சிரம் சேதித்தீர்` என்றது, `ஒறுத்தீர்` என்னும் பொருட்டாய், `நான்முகனை` என்னும்

இரண்டாவதற்கு முடிபாயிற்று. `தில்லைக்கண் நின்றுவாதித்தீர்` என்க. வாதித்தீர் - வருந்தப் பண்ணினீர். `இது தகுமோ` என்பது குறிப்பெச்சம். இத்திருப்பாட்டின் ஈற்றடி இறுதிச்சீர் வேறுபட்டு வந்தது.

கொடியைக் கோமளச் சாதியைச் கொம்பிளம்
பிடியை என்செய்திட் டீர்பகைத் தார்புரம்
இடியச் செஞ்சிலை கால்வளைத் தீர்என்று
முடியும் நீர்செய்த மூச்சறவே. **#287**

`பகைவருடைய மும்மதில்களும் அழியுமாறு செந் நிறமுடைய மேருமலையை இருகால்களும் அணுகவருமாறு வளைத் தவரே!` என்று பூங்கொடி, அழகிய சண்பகப்பூ, பூங்கொம்பு, இளைய பெண்யானை இவற்றைப் போன்ற என்மகள் வருந்தி நிற்கின்றாள். நீர் செய்துள்ள இந்த இறந்து படும்நிலை இவளுக்கு எந்நாள் நீங்கும்? நீர் என்னகாரியம் செய்துவிட்டீர்?

விளக்கவுரை

``பகைத்தார் புரம்......கால்வளைத்தீர்`` என்பதை முதலிற்கொள்க. கொடி - பூங்கொடிபோன்றவள். கோமளச்சாதி - அழகிய செண்பகப் பூப்போன்றவள். கொம்பு - பூங்கொம்பு போன்ற வள். `கொம்பினை` என இங்கும் இரண்டாவது விரிக்க. இளம் பிடி - இளமையான பெண்யானை போன்றவள். இவையெல்லாம் தலைவியையே குறித்து வந்த பல பெயர்கள்.

இடிய - அழியும்படி. செஞ்சிலை - நிமிர்ந்து நின்ற வில்லை. கால் வளைத்தீர் - இரண்டு காலும் அணுக வருமாறு வளைத்தவரே. `பகைத்தார் புரம் இடியச் செய்தது பொருந்தும்; காதலித்தாளை இடியச் செய்தல் பொருந்துமோ` என்பது குறிப்பு. `நீர் செய்த மூச்சறவு என்று முடியும்` என மாற்றுக. மூச்சறவு - இறந்துபாடு; இஃது அதற்கு ஏதுவாய வருத்தத்தைக் குறித்து நின்றது. என்று முடியும் - எந்நாள் நீங்கும். `நீங்குதல் இன்றி. இறந்து பாட்டினைச் செய்தேவிடும் போலும்` என்பது குறிப்பெச்சம்.

அறவ னேஅன்று பன்றிப் பின்ஏகிய
மறவ னேஎனை வாதைசெய் யேல்எனும்
சிறைவண் டார்பொழில் தில்லையு ளீர்எனும்
பிறைகு லாம்நுதற் பெய்வளையே. **#288**

``அறவடிவினனே! முன்னொருகால் பன்றியின் பின்னே அதனைவேட்டையாடச் சென்றவேடனே! என்னைத் துன்புறுத்தாதே`` என்கிறாள். பிறைபோன்ற நெற்றியை உடைய வளாய் வளையல்களை அணிந்த என் மகள் `சிறகுகளை உடைய வண்டுகள் பொருந்திய சோலைகளைஉடைய தில்லைநகரில் இருப்பவரே!` என்று உம்மை

அழைக்கிறாள்.

விளக்கவுரை

அறவன் - அற வடிவினன். மறவன் - வேடன். ``அறவன், மறவன்`` என்பன, `தன்னை அடைந்தாரை இடுக்கண் நீக்கிக் காப்பவன்` என்னும் குறிப்புணர்த்தி நின்றன. வாதை - துன்பம். பிறை குலாம் நுதல் - பிறை விளங்குவது போலும் நெற்றியையுடைய. பெய் வளை - இடப்பட்ட வளையினை உடையவள். `இவள் எப் பொழுதும் உம்மையே நினைந்து முறையிடுகின்றாள்; இவளது வருத்தத்தைப் போக்கீர்` என்பது கருத்து.

அன்ற ருக்கனைப் பல்லிறுத் தானையைக்
கொன்று காலனைக் கோள் இழைத் தீர்எனும்
தென்ற லார்பொழில் தில்லையு ளீர்இவள்
ஒன்று மாகிலள் உம்பொருட்டே. **#289**

தென்றல் காற்று வீசும் சோலைகளைஉடைய தில்லைநகரில் உள்ளவரே! என்மகள் `ஒருகாலத்தில் சூரியனுடைய பற்களைத்தகர்த்து, யானையைக் கொன்று, இயமனைக் கொலை செய்தவர் நீங்கள்` என்று கூறிக்கொண்டே இருக்கிறாள். என்மகள் உம்மை அடைய வேண்டி ஒன்றும் ஆகாமல் நாளும் அழிந்து கொண்டிருக்கிறாள்.

விளக்கவுரை

அருக்கன் - சூரியன். சூரியனைப் பல் இறுத்தது தக்கன் வேள்வியில். ``இறுத்து, கொன்று`` என்ற எச்சங்கள் எண்ணின்கண் வந்தன. கோள் - உயிரைக் கொள்ளுதல்; கொலை. இழைத்தீர் - செய் தவரே. எனும் - என்று சொல்லுவாள். `இவள் உம்பொருட்டு ஒன்றும் ஆகிலள்` என்க. உம் பொருட்டு - உம்மை அடையவேண்டி, ஒன்றும் ஆகிலள் - ஒருபொருளும் ஆகாது அழிந்தொழிகின்றாள். `இவளைக் கடைக்கணித்தல் வேண்டும்` என்பது குறிப்பெச்சம். இதனுள் முன்னைத் திருப்பாட்டில் `அன்று பன்றிப்பின் ஏகிய` என்னும் பொருளைத் தொடர்ந்து, `அன்று அருக்கனைப் பல் இறுத்து, என்று வந்த பொருள் அளவே அந்தாதிபோலும்!

ஏயு மாறெழிற் சேதிபர் கோன்தில்லை
நாய னாரை நயந்துரை செய்தன
தூய வாறுரைப் பார்துறக் கத்திடை
ஆய இன்பம் எய்தி யிருப்பரே. **#290**

பொருந்தும் வகையில் தில்லை நாயனாராகிய சிவபெருமானைப் பற்றி அழகிய சேதி நாட்டு மன்னன் விரும்பி உரைத்த இப்பாடல்களை, எழுத்துப்பிழை, சொற்பிழை தோன்றாத வாறு தூய்மையாகப் பாடுபவர்கள் சிவலோகத்தில் உள்ள இன்பத்தை மறுமையில் பொருந்தி

என்றும் மகிழ்வாக இருப்பர்.

விளக்கவுரை

ஏயுமாறு - பொருந்தும் வகையில் `சேதிபர்கோன் தில்லை நாயனாரை `ஏயுமாறு உரைசெய்தன` எனக் கூட்டுக. சேதிபர் - சேதிநாட்டவர். சேதியர்` எனப் பாடங்கொள்ளுதல் சிறக்கும். கோன் - அரசன். ``சேதிபர் கோன்`` என்றதனால், `சேதிராயர்` என்னும் பெயர்க் காரணம் விளங்கும். நயந்து - விரும்பி. உரைசெய்தன - பாடிய பாடல்கள். தூயவாறு - எழுத்துப்பிழை முதலியன இல்லாதவாறு. ``துறக்கம்`` என்றது இங்கு, `உடலைத் துரத்து சென்று அடையப்படுவது` எனக் காரணப் பெயராய்ச் சிவலோகத்தைக் குறித்தது. ஆய இன்பம் - அடையத் தக்கதாய இன்பம்; சிவானந்தம். ஏனை இன்பங்கள் அன்னதாகாமை அறிக. இத்திருப்பாடலின் ஈற்றடி ஈற்றயற்சீர் வேறுபட்டு வந்தது.

சேந்தனார் - கோயில்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோன்அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே. **#291**

தில்லைத்திருநகரம் என்றும் நிலைபெறுக; நம் அடியார்கள் பல்லாண்டு வாழ்க; அடிமை செய்ய ஒருப்படாதவர்கள் இல்லாதொழிய, பொன்மயமான மண்டபத்திலே நுழைந்து உலக மெல்லாம் நிலைபெறுமாறு நின்று, அன்னம் போன்ற நடையினை உடைய இளையள் ஆகிய உமாதேவியின் தலைவன், அடியவர் களாகிய நமக்கு அருள் பாலித்து மேல்வரும் பிறவியை நாம் அறுத்துக் கொள்ளும்படி அடியேமுக்குத் தன் திருக்கூத்தாகிய அருளைப் பொழிந்து திருவடி ஞானத்தை அருளியுள்ளான். அந்தப்பித்தனை நாம் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோமாக.

விளக்கவுரை

இத் திருப்பாட்டின் முதல் அடியின் இருதொடர்கள் எடுத்துக்கொண்ட பொருட்கு மங்கல வாழ்த்தாய் நின்றன. மன்னுக - என்றும் நின்றுநிலவுக. ``நம் பத்தர்கள்`` என்றது, `நமக்கு உறவாய பத்தர்கள்` என உயர்திணை முறைக்கிழமைப்பொருட்டு. பத்தர்கள் - அடியார்கள். வஞ்சகர் - அடிமை செய்ய ஒருப்படாதவர்கள். ``போய் அகல`` என்றது ஒருபொருட் பன்மொழியாய், `இல்லாதொழிய` எனப் பொருள்தந்தது. `அகலப் புகுந்து` என இயையும். எனவே, வஞ்சகர்க்குத் திருமன்றத்தைச் சேர்தல் வாயாமை பெறப்பட்டது. `பொன்னின் மண்டபம், செய்மண்டபம்` எனத் தனித் தனி இயைக்க. பொன்னின் மண்டபம் - பொன்னால் இயன்ற மண்டபம்; என்றது கூத்தப் பெருமானது திருச்சபையை. இன், சாரியை. செய் மண்டபம் - சிறப்பாகச் செய்யப்பட்ட மண்டபம். புவனி - புவனம்; உலகம். விளங்க - நிலைபெறுமாறு. `விளங்க நின்று` என ஒருசொல் வருவிக்க. அடியோமுக்கு - அடியேங்கட்கு; என்றது, அடியவர் அனைவரையும் உளப்படுத்து. `அடியோமுக்கு அருள்புரிந்து` என்றது, `திருக்கூத்தி யற்றி` என்றவாறு. பின்னைப் பிறவி - மேல்வரும் பிறவி. அறுக்க - நாங்கள் அறுத்துக் கொள்ளும்படி. நெறி - அதற்குரிய வழி; என்றது.

திருவடி ஞானத்தை, ``தந்த பித்தற்கு`` எனச் சுருங்க ஓதினாராயினும், தந்தான்; அப்பித்தற்கு` என இருதொடராக உரைத்தல் கருத்தென்க. பல்லாண்டு - பல்லாண்டு வாழ்க என வாழ்த்தும் வாழ்த்தினை. `உமைகோன், மண்டபத்துள்ளே புகுந்து விளங்க நின்று அருள்புரிந்து நெறிதந்தான்; அவனைப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துவோமாக` என்பது இதன் திரண்ட பொருள். இதன் ஈற்றடி ஒருசீர் மிக்கு வந்தது.

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங்கடந்த பொருள்அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே. **#292**

எம் பெருமான் திறத்து உருகாத மனமுடையவர்கள் எங்களை விடுத்து நீங்குங்கள். உண்மை அடியவர்கள் விரைந்து வாருங்கள். நம்மை அடக்கியாளும் இறைவன்பால் அவனுடைய திருவருளைக் கொண்டும் நம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அவனுக்கு வழங்கியும் எல்லாக்குடிகளில் உள்ளவர்களும் அடிமை செய்யுங்கள். கூட்டமாகத் திருவம்பலத்துக்குச் சென்று, `உலகங் களைக் கடந்தபொருள், எல்லையற்ற ஆனந்தப் பெருக்காகிய பொருள், பண்டும் இன்றும் என்றும் உள்ள காலம் கடந்தபொருள்` ஆகிய நம் பெருமான் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோமாக.

விளக்கவுரை

மிண்டு மனம் - திணிந்த மனம்; உருகாத மனம். `மனத்தவராயினார், அடியார்களாயினார்` என இரண்டிடத்தும் ஆக்கச் சொல் வருவிக்க. ``போமின்கள்`` என்றது, அவர் இசையார் என்பது பற்றி. ``ஈசற்கு`` எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, ``கொண்டும் கொடுத்தும்`` என்றார். ஈசன் பால் கொள்ளுதல் அவனது திருவருளையும், அவனுக்குக் கொடுத்தல் நமது உடல் பொருள், ஆவி அனைத்தையும் ஆம். ``குடி குடி`` என்றது. `குடிதோறும்` என்னும் பொருட்டாய். `எல்லாக் குடியிலும்` எனப் பொருள் தந்தது. மெய்யடி யாராய் உள்ளார் செய்யத்தக்கது இதுவே என்றபடி.
குழாம் புகுந்து - கூட்டமாகத் திருவம்பலத்திற் சென்று. `புகுந்து கூறுதும்` என முடிக்க. என்று - என்று புகழ்ந்து சொல்லி. `அவற்குப் பல்லாண்டு கூறுதும்` எனச் சுட்டுப்பெயர் வருவிக்க. ``ஆட்செய்மின்`` என முன்னிலையாக வேறுபடுத்துக் கூறியது. `எம்மொடு குழாம் புகுந்து

பல்லாண்டு கூறுதல் நுமக்குங் கடப்பாடாதலின்` எனக் காரணங்கூறி வலியுறுத்தற் பொருட்டு. இதன் முதலடியும், ஈற்றடியும் ஒரோவொருசீர் மிக்கு வந்தன.

நிட்டையி லாஉடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்சீ ராட்டுந்
திறங்களு மேசிந்தித்
தட்டமூர்த் திக்கென் அகம்நெக ஊறும்
அமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. **#293**

இறைவனிடத்து அசையாது ஈடுபட்டு நிற்றல் இல்லாத அடியேனுடைய உடலை நிட்டைக்குத் துணைசெய்வதாக மாற்றி அடியேனை ஆட்கொண்ட நிகரில்லாச் செயல்களையும், மேம் பட்டவன் ஆகிய சிவபெருமான் தன் அடியவர்களைப் பெருமைப் படுத்தும் செயல்களையுமே மனத்துக்கொண்டு அட்டமூர்த்தியாய், என் மனம் நெகிழுமாறு ஊறும் அமுதமாய் ,ஆலமரத்தின் நிழலில் அமர்ந்த குருமூர்த்தியாய், அடியேனைத்தன் அடிமையாக ஆட் கொண்ட நம்பெருமான் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோமாக.

விளக்கவுரை

நிட்டை - உறைத்து நிற்றல்; அசையாது நிற்றல். இஃது இறைவனிடத்து நிற்றலேயாம். நிற்பது உயிரேயாயினும், அதற்குத் துணையாவது உடலாகலின், அதனை உடன் மேல் ஏற்றி, துணைசெய்யாத உடலை, ``நிட்டை இலா உடல்`` என்றார். ``நீத்து`` என்றது, `மாற்றி` என்றபடி. அஃதாவது, `நிட்டைக்குத் துணை செய்வதாக ஆக்கி` என்றதாம். ``என்னை ஆண்ட`` எனத் தமக்கு அருள்செய்ததையே கூறினார், `தம்கீழ்மை காரணமாகத் தமக்கு அருள்புரிந்ததே பெரும் புகழாவது` என்பது பற்றி.

`சிட்டனாகிய சிவன்` என உரைத்து, `தன்னடியாரை` எனச் சொல்லெச்சம் வருவிக்க. ``திறங்களுமே`` என்ற ஏகாரம் உலகியலைச் சிந்தித்தலை விலக்கிற்று. ``அட்டமூர்த்திக்கு`` முதலிய நான்கும், `அவனுக்கு` என்னும் சுட்டுப்பெயரளவாய் நின்றன. அகம் நெக - மனம் உருகும்படி. ஊறும் - சுரக்கின்ற. பட்டன் - ஆசிரியன்.

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யும்சில தேவர்
சிறுநெறி சேராமே

வில்லாண்டகன கத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. **#294**

மெய்ம்மொழிகளால் நிறைந்த வேதப்பொருள் களை ஆராய்ந்து துணிந்த தூயமனத்தைஉடைய அடியீர்களே! சில ஆண்டுகளில் மறைந்து அழியும் சிலதேவர்களைப் பரம்பொருளாகக் கருதும் சிறிய வழியில் ஈடுபடாமல், பொன்மலையாகிய மேரு மலையை வில்லாகப் பணிகொண்டஅழகனாய், காளையை வாகன மாக உடையவனாய், பல ஆண்டுகள் என்ற காலத்தைக் கடந்தவனாய் உள்ள சிவபெருமான் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோமாக.

விளக்கவுரை

``சொல்`` என்றது, தலைமை பற்றி மெய்ம்மொழிமேல் நின்றது. ``ஆண்ட`` என்றது, `நிறைந்த` என்னும் பொருளது. சோதித்த - ஆராய்ந்து துணிந்த. `தூ மனம்` என்றலேயன்றி, `தூய் மனம்` என்றலும் வழக்கே. `தொண்டராய் உள்ளீர்` என ஆக்கச்சொல் வருவிக்க. தேவர் நெறி - தேவரைப்பற்றி நிற்கும் நெறி. அந்நெறி களின் முதல்வர் யாவரும் சில்லாண்டிற் சிதைந்தொழிபவராகலின், அவரால் தரப்படும் பயனும் அன்னதேயாம். அதனால் அவை சேரத்தகாத சிறுநெறிகளாயின. இவ்வுண்மை, சுருதியை நன்காராய்ந் தார்க்கல்லது புலனாகாதென்பது பற்றியே முன்னர், ``சுருதிப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்`` என்றார். வில் ஆண்ட மேரு விடங்கன் - வில்லாகப் பணிகொண்ட மேருமலையை உடைய அழகன். `மேருவை வில்லாக ஆண்ட அழகன்` எனற்பாலதனை இவ்வாறு ஓதினார் என்க. விடைப்பாகன் - இடபத்தை ஊர்பவன். ``பல்லாண்டு என்னும் பதம் கடந்தான்`` என்றது, `காலத்தைக் கடந்த வன்` என்றவாறு. பதம் - நிலை; என்றது பொருளை. `காலத்தைக் கடந்து நிற்பவனைக் காலத்தின் வழிப்பட்டு வாழ்க என வாழ்த்துதல் பேதைமைப்பாலது` என்பதையும், `அன்னதாயினும் நமது ஆர்வத் தின் வழிப்பட்ட நாம் அங்ஙனம் வாழ்த்துவோம்` என்பதையும் இங்கு இவர் உணர்த்தி நிற்றல் அறிக. இத்திருப்பாட்டின் முதலடியும், மூன்றாம் அடியும் ஐஞ்சீராகி வந்தன.

புரந்தரன் மால் அயன் பூசலிட் டோலமிட்
டின்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்பஎன் உயிர்ஆண்ட கோவினுக்
கென்செய வல்லம்என்றும்
கரந்துங் கரவாத கற்பக னாகிக்
கரையில் கருணைக்கடல்

பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே. **#295**

இந்திரன், திருமால், பிரமன் முதலியோர் செருக்குத் தோன்ற முதன்மை பாராட்டி ஆரவாரம் செய்து, பின் இன்று வரை எம்பெருமானைச் சரண் என்று அடைய இயலாதவராய், பல காலும் கெஞ்சிக்கெஞ்சி அழைக்கவும், அடியேமுடைய உயிரை ஆட் கொண்ட தலைவனுக்கு என்ன கைம்மாறு அடியேம் செய்யும் ஆற்றலுடையேம்? எக்காலத்தும் கண்ணுக்குப் புலனாகாமல் இருந்தும் வேண்டியவற்றை வேண்டியவாறு நல்கும் கற்பக மரம் போல் பவனாய், எல்லையற்ற கருணைக் கடலாய் எல்லா இடங்களிலும் விரிந்தும் இடையீடின்றி நிறைந்தும் எல்லைகடந்து நிற்கும் அடிகள் ஆகிய நம்பெருமான் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோம்.

விளக்கவுரை

புரந்தரன் - இந்திரன். பூசலிட்டு - போர் செய்து. ஒலமிட்டு - ஆராவாரம் செய்து. ``இன்னம்`` என்பது, `இது காறும்` எனப் பொருள் தரும் `இன்னும்` என்பதன் மரூஉ. இதனை, ``இரந்திரந்து`` என்பதற்குமுன் கூட்டுக. `முதற்கண் செருக்குற்று அறியமாட்டாராய்ப் பின்னர் வழிபட்டு நிற்பாராயினர்` என்றவாறு. `அவரை ஆளாது, என் உயிரை ஆண்டான்` என்று அருளினார். தாமும், தம் உயிரும் வேறல்லர் ஆயினும், `உயிரை` என வேறுபோலக் கூறினார், ஆண்டது உடல்நலமாகாது உயிர்நலமாய் நின்ற சிறப் புணர்த்தற்பொருட்டு. ``என் உயிர்`` எனத் தமது உயிரையே எடுத்துக் கூறியதற்கு, மேல், ``என்னை ஆண்ட`` *(தி.9 பா.291)* என்றதற்கு உரைத்த வாறு உரைக்க. என் - என்ன கைம்மாறு. என்றும் - என்று சொல்லியும். உம்மை, எதிரது தழுவிய எச்சம். கரந்தும் - கண்ணிற்குப் புலனாகாது நின்றும். கரவாத கற்பகனாகி - வேண்டியவற்றை வேண்டியாங்கு மறையாது வழங்கும் கற்பகத்தருப்போல்பவனாகி. ``ஆகி`` என்றது, ``வரம்பிலர்`` என்பதில் ``இல்லா`` என்பதனோடு முடியும். `கருணைக் கடலாய்` என ஆக்கம் விரித்து, `ஆக்கம், உவமை குறித்து நிற்ப, கருணைக் கடல் என்பது இல்பொருளுவமையாய் நின்றது` என உரைக்க. கருணைக் கடல் - கருணையை உடைய கடல். பரந்தும் - விரிந்தும். நிரந்தும் - இடையீடின்றி நிறைந்தும். இவையும், ``இல்லா`` என்பதனோடு முடியும். `அழகு` எனப் பொருள் தரும் ``பாங்கு`` என்பது இங்கு, `மேலான தன்மை` எனப் பொருள் தந்து நின்றது.

சேவிக்க வந்தயன் இந்திரன் செங்கண்மால்
எங்குந் திசைதிசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்குழா

மாய்நின்று கூத்தாடும்
ஆவிக் கமுதைஎன் ஆர்வத் தனத்தினை
அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. **#296**

வழிபடவந்த பிரமன், இந்திரன், சிவந்த கண்களை உடைய திருமால் எங்கும் பல திசைகளாகிய இடங்களில் அழைத்து, வழிபாட்டுப் பொருள்களைக் கைக்கொண்டு நெருங்கிக் கூட்டம் கூட்டமாய் நிற்க, திருக்கூத்தினை நிகழ்த்தும், என் உயிருக்கு அமுதம் போல்பவனாய், என் அவாவிற்கு உரிய செல்வமாய், எங்கள் தலைவனாய், பிறப்புவகையால் ஒரு நிகரான தேவர்கள் நினையும் நினைவுக்கு அகப்படாமல் அவர்கள் நினைவையும் கடந்து நிற்கும் நம்பெருமான் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோமாக.

விளக்கவுரை

சேவிக்க - வணங்குதற்கு. ``வந்து`` என்றதை. ``மால்`` என்பதன் பின்னர்க் கூட்டுக. `திசைதிசையன எங்கும்` என மாற்றுக. ``திசை தைி \\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\\*u2970?*`` என்னும் அடுக்குப் பன்மை குறித்து நின்றது. ``திசையன`` என்றதற்கு, திசைகளாகிய இடங்களில்` என உரைக்க. கூவி - அழைத்து. ``கவர்ந்து`` என்றதற்கு, `வழிபாட்டுப் பொருள் களைக் கைக்கொண்டு` என உரைக்க. ``ஆடும் அமுது`` என்றதில் உள்ள ``அமுது`` என்பது, `அரசன் ஆ கொடுக்கும் பார்ப்பான்` என்பதில் `பார்ப்பான்` என்பதுபோலக் கோடற்பொருட் பெயராய் நின்றது. உடல்நலம் ஒன்றே பயக்கும் தேவரமுதினும் வேறாதலை விளக்க ``ஆவிக்கு அமுது`` என்றார். இதுவும், இல்பொருள் உவமை. அமுது - அமிர்தம் போல்பவன். என் ஆர்வத் தனம் - எனது அவாவிற் குரிய பொருள் (செல்வம்). ஒப்பு அமரர் - பிறப்புவகையால் ஒரு நிகராய தேவர். அஃதாவது `வானவர்` என்றபடி. பாவிக்கும் பாவகம் - நினையும் நினைவு. அவர் தம் நினைவிற்கு அகப்படாமையின், ``அப்புறத் தான்`` என்றார்.

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே. **#297**

சிவநெறி ஒழுக்கமும் அவன் திருவருளும் அடியேனிடத்து நிலைபெற்று விளங்கும்படி, அச்சிவலோக நாயக னான பெருமானுடைய திருவடிகளின் கீழ் மற்ற யாவரும் பெறாததான `யாவரையும் யாவற்றையும் உடையவன் சிவபெருமானே` என்று அறியும் அறிவினைப் பெற்றேன். அவ்வறிவால் அடியேன் பெற்ற பேற்றினை வேறுயாவர் பெறக்கூடும்? இவ்வுலகில் நாட்டில் உள்ளா ரும் ஊரில் உள்ளாரும் எடுத்துக் கூறும்படி, அவன்புகழைப் பிதற்றி உமாதேவியின் கணவனாகிய எம்பெருமானுக்கு நாம் அடிமையாகிய திறத்தை இந்நிலவுலகத்தாரும் தேவர் உலகத்தாரும் அறியும் வகையில் அப்பெருமான் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோமாக.

விளக்கவுரை

சீர் - செம்மை; சிவநெறி ஒழுக்கம். திரு - திருவருள். பொலிய - என்னிடத்து நிலைபெற்று விளங்கும்படி. `சேவடிக் கீழ் நின்று` என ஒருசொல் வருவிக்க. நிற்றல் - பணிசெய்தல். ``பெறாத`` என்றது, `பெறுதற்கரிய` என்றவாறு. பெறுதற்கரிய அறிவாவது, `யாவரையும், யாவற்றையும் உடையவன் சிவபெருமானே` என அறியும் அறிவு. `அவ்வறிவாற்பெற்றது` எனக் காரணம் வருவித்து, ``பெற்றது`` என்றதற்கு, `பெற்றபயன்` என உரைக்க. அங்ஙனம் உரையாவிடில், ``ஆரும் பெறாத அறிவு`` என்றதன் பொருளே பொரு ளாய்ச் சிறப்பின்றாம். பயன், சிவானந்தம். ஆர் - அவ்வறிவைப் பெறாத எவர். `அத்தகைய பயனை நீவிரும் பெற்றீராதலின், நாம் அனைவரும் கூடிப் பல்லாண்டு கூறுவோம்` என இயைபுபடுத் துரைக்க.

ஊர் - வாழும் ஊர். கழற - எடுத்துச் சொல்லும்படி; இதற்கும் செயப்படுபொருள் இனி வருகின்ற ``ஆள்`` என்பதே. அதனால், ``உமை மணவாளனுக்கு ஆள்`` என்பதை, ``உலகில்`` என்றதன் பின்னே வைத்து உரைக்க. உழறி - அவன் புகழைப் பிதற்றி. `பிதற்றி` என்றார், முற்ற அறியாது அறிந்தவாறே கூறலின். இதனை, ``நாம்`` என்பதன் பின்னர்க் கூட்டுக. ஆள் - நாம் ஆளான தன்மையை. ``கழற`` எனவும், ``அறியும் பரிசு`` எனவும் வேறு வேறு முடிபு கொள்ளுதலால், ``பாரும்`` என்றது, கூறியது கூறல் ஆகாமை அறிக. பரிசு - தன்மை. `பரிசினால்` என மூன்றாவது விரிக்க.

சேலும் கயலும் திளைக்குங்கண் ணார்இளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் கும்மென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே

பாலும் அமுதமும் ஒத்துநின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. #298

`சேல் மீனையும் கயல் மீனையும் உவமை கூறும் படியான கண்களைஉடைய இளமகளிரின் கொங்கைகளில் பூசப்படும் குங்குமத்தைப் போல எம்பெருமான் திருமார்பில் திருநீறு விளங்கு கிறது` என்று அடியவர்கள் புகழ்ந்து கூற, திருமாலும் பிரமனும் அறிய முடியாத வழியைக்காட்டி அடியேனுடைய உள்ளத்தினுள் பாலும் அமுதும் ஒத்து இனிமையானவனாகியும், புத்துயிர் அளிப்பவனாகி யும், நிலை பெற்றிருக்கும் எம்பெருமான் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்து வோமாக.

விளக்கவுரை

சேல், கயல் என்பன மீன்வகை. `சேலும் கயலும் போல` என உவம உருபு விரிக்க. திளைக்கும் - பிறழ்கின்ற. ``குங்குமம்`` என்றது, குங்குமங் கூடிய சாந்தினை. `குங்குமம் போலும் பொடி மார்பின்கண் இலங்கும்` என்க.

அணி - அழகு. சொற்கிடக்கை முறை இவ்வாறாயினும், `மார்பிற்பொடி, கொங்கையிற் குங்குமம்போல இலங்கும்` என்றல் கருத்தென்க. இதனால் இறைவன் மார்பில் உள்ள திருநீறு, மங்கையர் கொங்கையில் உள்ள குங்குமம் காமுகரை வசீகரித்தல் போலப் புண்ணியரை வசீகரித்தல் கூறப்பட்டது. புண்ணியர் - சிவபுண்ணியத் தின் பயனாகிய சிவஞானத்தைப் பெற்றவர். நெறி - சிவஞானம், வந்து - அழகிய கோலத்துடன் வந்து. இதனை, ``போற்றிசைப்ப`` என்றதன் பின்னர்க் கூட்டுக.

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. #299

பாலை உண்பதற்கு வியாக்கிர பாதமுனிவர் புதல் வனாகிய உபமன்யு என்ற சிறுவன் விரும்பிப் பால்பெறாது அழுது, வருந்த அவனுக்குப் பாற்கடலையே அழைத்து வழங்கிய பெரு மானாய், ஒருகாலத்தில் திருமாலுக்குச் சக்கராயுதத்தை அருள் செய்தவனாய், நிலைபெற்ற தில்லைத்திருப்பதியிலே வேதம் ஓதும் அந்தணர்கள் வாழ்தற்கு முதலாய் நிற்கின்ற சிற்றம்பலத்தையே இடமாக்கொண்டு, அருளைவழங்கி

நாட்டியத்தை நிகழ்த்தும் எம் பெருமான் பல்லான்டு வாழ்க என்று வாழ்த்துவோமாக.

விளக்கவுரை

பாலுக்கு - பாலை உண்பதற்கு. ``பாலகன்`` என்றது, உபமன்னிய முனிவரை. வேண்டி - விரும்பி. வியாக்கிரபாத முனிவர் மகனாராகிய உபமன்னிய முனிவர் பிள்ளைமைப் பருவத்தில் பால் பெறாது அழுது வருந்த, அவரை வியாக்கிரபாத முனிவர் கூத்தப் பெருமான் திருமுன்பிற் கிடத்துதலும், கூத்தப்பெருமான் அவருக்குப் பாற்கடலை அழைத்து அளித்த வரலாற்றைக் கோயிற்புராணத்துட் காண்க. சிவபெருமான் திருமால் செய்த வழிபாட்டிற்கு இரங்கிச் சக்கரம் அளித்த வரலாறு வெளிப்படை. ஆலிக்கும் - வேதத்தை ஓது கின்ற. ஆலித்தல் - ஒலித்தல்; ``அஞ்செவி நிறைய ஆலின`` *(முல்லைப் பாட்டு - 89.)* என்றது காண்க. வாழ்கின்ற - வாழ்தற்கு முதலாய் நிற்கின்ற. ``சிற்றம்பலமே`` என்ற ஏகாரம் பிரிநிலை. பாலித்து - அருளை வழங்கி. இது, `பாலியாநின்று` என நிகழ்காலம் பற்றிநின்றது.

தாதையைத் தாள்அற வீசிய சண்டிக்கவ்
வண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும்
போனக மும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. **#300**

தம் தந்தையின் கால்கள் நீங்கும்படி மழு வாயுதத்தை வீசிய சண்டேசுர நாயனாருக்கு அந்தவானுலகத் தோடு நிலஉலகத்தவரும் ஒருசேர வணங்குமாறு அழகிய இருப்பிடமும் தனக்கு நிவேதித்த உணவும் வழங்கி, ஒளி பொருந்திய அழகிய முடியில் அணிந்த தன் மாலையும் சண்டன் என்ற சிறப்புப் பெயரும், அடியவர்களுக்குத் தலைமையும், தாம் செய்த பாதகச் செயலுக்குப் பரிசாக வழங்கிய எம்பெருமான் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்து வோமாக.

விளக்கவுரை

`தாதையை வீசிய` என இயையும். சண்டி - சண்டேசுர நாயனார். இவர், தந்தைதன் காலை வெட்டிப் பேறுபெற்ற வரலாறு *(தி.12)* பெரியபுராணத்துட் பரக்கக் காணப்படுவது. அண்டம் - வானுலகம். என்றது, அதன்கண் உள்ளாரை. ``அவ்வண்டம்`` என்ற பண்டறி சுட்டு, வானுலகத்தின் பெருமையுணர நின்றது. `இவ்வண்டம்` என்பது பாடம்

அன்று. ஒடு, எண்ணொடு. உம்மை, சிறப்பு. `அண்டத்தொடும் பூதலத்தோரும் உடன் வணங்க` என மாறிக்கூட்டுக. ``உடனே என்ற ஏகாரம் அசைநிலை.
பொன் - அழகு. போனகம் - தான் உண்டு எஞ்சிய உணவு. சோதி மணி முடி - ஒளியை உடைய அழகிய சடைமுடி. தாமம் - கொன்றை மாலை. நாமம் - `சண்டன்` என்னும் சிறப்புப் பெயர். இஃது அப் பதவி பற்றி வருவது. எனவே, ``நாமம்`` என்றது, `அப்பதவியை` என்றதாயிற்று. நாயகம் - தலைமை. ``தொண்டர்க்கு நாயகமும்`` என்றது. அப்பதவியது இயல்பு விளக்கிய வாறு. `சிவபிரானை வழிபடும் அடியவர்க்கு அவர்தம் வழிபாட்டின் பயனை வழங்கும் பதவியே சண்டேசுர பதவி என்பதும், `அப்பதவியையே அப் பெருமான் விசாரசருமருக்கு அளித்தான்` என்பதும் அறிக. `பரிசாக வைத்தான்` என ஆக்கம் வருவிக்க. ``பாதகத்துக்குப் பரிசு வைத்தான்`` என்றது, `இன்னதொரு பொருந்தாச் செயலைச் செய்தான்` எனப் பழிப்பதுபோல நின்று, `திருத்தொண்டில் உறைத்து நின்றாற்கு அவ்வுறைப்பினை அறிந்து அதற்குத் தக்க சிறப்பினை அளித்தான்` என்னும் புகழ் புலப்படுத்தி நின்றது. ``பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்`` என்ற திருவாசகத்தோடு (தி.*8* திருத்தோணோக்கம் - *7*) இதனை ஒப்புநோக்குக.

குழல் ஒலி யாழ்ஒலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி ஆளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடிஎம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. **#301**

வேய்ங்குழல்இசை, யாழின்இசை, கூத்தாடுதலின் ஓசை, துதித்தலின் ஓசை என்பன கூட்டமாகப்பெருகித் திருவிழா நாளில் நிகழ்த்தப்படும் ஓசையோடுகூடி வானத்தளவும் சென்று பெருகி மிகுகின்ற திருவாரூரில் இளைய காளையை வாகனமாக உடைய சிவபெருமானுக்குப் பரம்பரை பரம்பரையாக அடிமையாய் அத்தகைய குடும்பங்களுக்குள்ளேயே திருமணம் செய்துகொள்கின்ற அடியவர் குடும்பங்களில் பிறந்த பழ அடியாரோடும் கூடி எம் பெருமான் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோமாக.

விளக்கவுரை

ஏத்து ஒலி - துதித்தலின் ஓசை. `குழாமாகப் பெருகி` என ஆக்கம் விரிக்க. பெருகி - பெருகுதலால். விழவு ஒலி - இறைவனது சிறப்பு நாளிற்கு

உரிய ஓசைகள். விம்மி மிகு - நிறைந்து மிகுகின்ற. இது திருவாரூரின் சிறப்பேயாம். `திருவாரூரிற் பிறந்த பழ அடியார்` என்க.
சைவ அந்தணர்க்கன்றிப் பிறர்க்குத் தில்லை இடமாகாதிருந்தது போலத் திருவாரூர் சைவர்கட்கன்றி இடமாகாதிருந்தது. அதனால், அங்குப் பிறந்தோர் யாவரும் சிவபெருமானுக்கு வழிவழித் தொண்டராய பழவடியாராதலின், அவரோடு கூடிப் பல்லாண்டு கூறுதலைச் சிறப்புடையதாக அருளிச்செய்தார். இவ்வாற்றால் தில்லை வாழந்தணர் போலத் திருவாரூர்ப் பிறந்தாரும் இயல்பாற் சிறந்த வராதல் பற்றியே ஆளுடைய நம்பிகள், ``தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்`` என்றாற்போல, ``திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்`` என்று அருளிச்செய்தார். மழவிடையாற்கு வழிவழி ஆளாய் மணம்செய் குடி - மரபு இரண்டும் சைவநெறி வழிவந்த கேண்மையராய் *(தி.12 பெ.பு.ஞானசம்-17)* உள்ளவரே தம்முள் மணம் செய்துகொள்ளும் குடிகள். `அவற்றிற் பிறந்த பழவடியார்` என்க.

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே. **#302**

அழகினை உடைய ஆதிரைத்திருநாளில் தேவர் கூட்டத்தில் யாவர்யாவர் தரிசிக்கவந்தனர் எனின், திருமால், நான் முகன், அக்கினி, சூரியன், இந்திரன் முதலியோர் வந்தனர். தேர்ஓடும் வீதியில் தேவர் கூட்டங்கள் நாற்றிசையும் நிறைய, நிலவுலகெங்கும் நிறைந்த சிவபெருமானுடைய பழமையான புகழைப்பாடியும் ,அதற்கு ஏற்ப ஆடியும், அந்த ஆதிரைநாளை உடைய அப்பெருமான் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோமாக.

விளக்கவுரை

`யார் யார்` என்பது, ``ஆர் ஆர்`` என மருவிநின்றது. திருவாதிரை நாள் தில்லைப் பெருமானுக்குத் தனிப்பெருந் திருநாளாத லின், அதனையே எடுத்துக்கூறினார். இத் திருப்பதிகம் அந்நாளில் இவரது அன்பினை வெளிப்படுத்துதற் பொருட்டு, ஓடாது நின்ற தேரினை இத்திருப்பதிகம் பாடி ஓடச் செய்தார் என்பது மரபு. தில்லைத் தேர்த் திருவிழா இஞ்ஞான்று திருவாதிரைக்கு முன்னாளில் செய்யப் படுகின்றது. அணி - அழகு. `ஆதிரை நாளில் அமரர் குழாத்தில் ஆரார் வந்தார்` என்க.

``வந்தார்`` என்றதன்பின், `எனின்` என்னும் சொல் லெச்சம் வருவிக்க. இனி அவ்வாறு வருவியாது, கூற்றும், மாற்றமுமாக நின்றாங்கு நிற்ப உரைப்பினும் ஆம். ``இந்திரனும்`` என்றதன்பின் `வந்தார்` என்னும் பயனிலை எஞ்சி நின்றது. `அரசன் வந்தான்` என்றவழி, அமைச்சர் முதலாயினார் வந்தமை தானே பெறப் படுதல் போல, `நாராயணன் முதலியோர் வந்தார்` எனவே, ஏனைத் தேவர் பலரும் வந்தமை சொல்லாமே அமைந்தது. பெரியோனது தனிப் பெருவிழாவாகலின், அமரர் அனைவரும் எஞ்சாது வருவாராயினர். ``தேரார்வீதியில்`` என்பதன்முன், `இவ்வாறு` என்னும் இயைபு படுத்தும் சொல் வருவிக்க. ``தேரார் வீதி`` என்றதனால், ஆதிரை நாளில் வீதியில் தேரோடிய குறிப்பு அறியப்படும். ``நிறைந்து`` என்ற தனை, `நிறைய` எனத் திரிக்க. நிறைய - நிறைந்து நிற்க. பார் ஆர் - நிலவுலகெங்கும் நிறைந்த. தொல் புகழ் - பழமையான புகழ்; இது சிவபிரானுடையது. ஆடியும் - அப்பாடலுக்கு ஏற்ப ஆடுதலைச் செய் தும். ``ஆதிரைநாள்`` என்றமையின், `அந்நாளை யுடையானுக்குப் பல்லாண்டு கூறுதும்` என்க.

எந்தைஎந் தாய்சுற்றம் முற்றும் எமக்கமு
தாம்மெம் பிரான்என் றென்று
சிந்தை செய்யும் சிவன் சீரடியார்
அடிநாய் செப்புரை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்
தாண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவ னேஎன்று
பல்லாண்டு கூறுதுமே. **#303**

எம்தந்தை, எம்தாய், எம்சுற்றம் முதலிய எல்லாப் பொருள்களும் எமக்கு அமுதம் போன்று இனிக்கும் சிவபெருமானே என்று தியானம் செய்யும், சிவபெருமானுடைய சிறப்புடைய அடியவர்களின் திருவடிகளை வழிபடும் நாய்போல இழிந்தவனாகிய சேந்தன், `அழிவில்லாத ஆனந்தத்தை வழங்கும் சிறந்த தேன் போலவந்து அடிமையாகக் கொண்டு அரிய உயிரின்மேல் நிற்கும் கட்டு நீங்குமாறு அருள் செய்தபெருமானே` என்று வாழ்த்தும் அப்பெருமான் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோமாக.

விளக்கவுரை

`எம் தந்தை, எம் தாய், (எம்) சுற்றம், (மற்றும்) எல்லாப் பொருளும் எமக்குச் சிவபிரானே என்றென்று சிந்தை செய்யும் சீரடியார்` என உரைக்க. அமுதாம் எம்பிரான் - அமுதம்போல இனிக் கின்ற எங்கள் பெருமான்; `சிவபிரான்` என்றபடி. முதலடியின் இறுதிச் சீரின் ஈற்றசை

நேர்பு. நேர்பசை நிரைபசை கொள்ளாதார் இச் சீரினை, `நாலசைச் சீர்` என்ப. `என்றுமே` என ஓதி, எழுசீராகவும் ஆக்குப. இத் திருப்பாட்டின் இரண்டாவதும், மூன்றாவதும் ஆகிய அடிகளில் உள்ள பாடங்கள் உண்மைப் பாடங்களாகத் தோன்றவில்லை. பாடபேதங் களும் பலவாகப் சொல்லப்படுகின்றன. எனவே, இரண்டாம் அடியில், ``நாய்`` என்றதன்பின் `சேந்தன்` என்னும் சொல் அமைய ஓதுதல் பாடமாகக் கொண்டு, மூன்றாமடியில், `அந்தமில் ஆனந்தச் செந்தேன் எனப்புகுந்து` எனக் காட்டப்படும் பாடத்தை உண்மைப் பாடமாகக் கொள்ளுதல் பொருந்துவதாம். ஆயினும், இது பொழுது ஓதப்பட்டுவரும் பாடமே இங்குக் கொள்ளப்படுகின்றது. சீரடியார் அடி நாய் - சிறப்புடைய அடியவரது அடிக்கீழ் நிற்கும் நாய் போன்றவன் என்றது தம்மைப் பிறர் போலக் கூறியதாம். `செப்புரை யால் கூறுதும்` என மூன்றாவது விரித்து முடிக்க. ஆனந்தச் சேந்தன் - ஆனந்தத்தைப் பெற்ற சேந்தன். இஃது, ஆளப்பட்ட பின்னர் அடைந்த நிலைமையைக் கூறியது. ஆருயிர்மேற் பந்தம் - அரிய உயிரின்மேல் நிற்கும் கட்டு. பிரிய - நீங்குமாறு. பரிந்தவன் - அருள் செய்தவன்.
ஒன்பதாம் திருமுறை
மூலமும் உரையும் - நிறைவுற்றது.

ஒன்பதாம் திருமுறை - திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முற்றும்

பன்னிருதிருமுறை

திருமூலர்

பத்தாம் திருமுறை - திருமந்திரம்

தொகுப்பு: சங்கர்

சித்திரை 2017 வெளியீடு

பன்னிருதிருமுறை

பத்தாம் திருமுறை - திருமந்திரம்

திருமூலர் அருளியது

திருமந்திரம் என்பது திருமூலரால் எழுதப்பட்ட ஒரு தமிழ் சைவசமயப் படைப்பு ஆகும். இதன் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு. இது ஒன்பது தந்திரங்களைக் (இயல்கள்) கொண்டது. மூவாயிரம் பாடல்கள் உடையது. சராசரியாக ஒவ்வொரு பாடலும் நான்கு வரிகளாகவும், ஒவ்வொரு வரியும் நான்கு சொற்களைக் கொண்டதாகவும், மொத்தம் 192000 சொற்களைக் கொண்டது. திருமந்திரம் எடுத்துக் கொண்ட பொருளை எளிய சொற்களால் அனைவருக்கும் புரியும்படி திருக்குறளைப்போல் சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறுகிறது.

வேதம்,ஆகமம் ஆகிய இரண்டிற்கும் திருமந்திரம் விளக்கம் தருகிறது. இது சைவ ஆகமம் என்றும் போற்றப்படுகிறது. திருமந்திரம் சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் பத்தாவது திருமுறையாக பெரியோர்களால் வைக்கப்பட்டுள்ளது. தோத்திரத்திற்குத் திருவாசகம் சாத்திரத்திற்குத் திருமந்திரம் எனச் சான்றோர் கூறுவர். மேலும் சிவமே அன்பு, அன்பே சிவம் எனக் கூறும் திருமந்திரமே சைவ சித்தாந்தத்தின் முதல் நூலாகக் கருதப்படுகிறது.



பன்னிருதிருமுறை

திருமூலர்

பத்தாம் திருமுறை - திருமந்திரம்

தொகுப்பு: சங்கர்

சித்திரை 2017 வெளியீடு

விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே. **#1**

ஐந்து கைகளையும், யானை முகத்தையும், சந்திரனது இளமை நிலையாகிய பிறைபோலும் தந்தத்தையும் உடையவரும், சிவபிரானுக்குப் புதல்வரும், ஞானத்தின் முடி நிலையாய் உள்ளவரும் ஆகிய விநாயகப் பெருமானை உள்ளத்தில் வைத்து, அவரது திருவடிகளைத் துதிக்கின்றேன்.

விளக்கவுரை

'இந்து' என்பது வடசொல்லாதலின் இன்பெறாது என்று, 'இந்து விளம்பிறை' எனப்பாடம் ஓதுவாரும் உளர். 'நந்தி' என்பது சிவபெருமானுக்கே பெயராதல் அறிக. திருமூலர் தமது நூலை 'ஒன்றவன்முன்' எனத் தொடங்கினார் என்பது சேக்கிழார் திருமொழி யாதலின், இது, பிற்காலத்தில் இந்நூலை ஓதுவோர் தாம்முதற்கண் ஓதுதற்குச் செய்து கொண்டது என்க. திருமுறைகளுள் ஒன்றிலும் முதற்கண் விநாயகர் காப்பு இல்லாமையும், சாத்திரங்களிலும் உந்தி, களிறு முதலிய சிலவற்றில் இல்லாமையும் நோக்கத்தக்கன. 'ஒன்றவன்றான் எனஎடுத்து முன்னிய அப்பொருள்மாலைத் தமிழ் மூவாயிரம் சாத்தி' என்பதே சேக்கிழார் திருமொழியாகலின், இந் நூலின் தொடக்கப்பாடல் 'ஒன்றவன்றானே' என்னும் பாடலே என்பது இனிது விளங்கும்.

பாயிரம்

கடவுள் வாழ்த்து

ஒன்றவன் றானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தான்இருந் தான்உணர்ந் தெட்டே. **#2**

ஒருபொருளாய் உள்ளவன் முதற்கடவுளே; வேறில்லை. அவனது அருள், 'அறக்கருணை, மறக்கருணை' என இரண்டாய் இருக்கும். அவ் அருள்காரணமாக அவன், 'இலயம், போகம், அதிகாரம்' என்னும் மூன்று நிலைகளில் நிற்பான். நின்று, 'அறம், பொருள், இன்பம், வீடு' என்னும் உறுதிப் பொருள் நான் கனையும் தானே உணர்ந்து உலகிற்கு உணர்த்தினான். செவிமுதலிய ஐம்பொறிகளின் வழி நுகரப்படும் ஓசை முதலிய ஐம்புலன்களின் மேல் எழுகின்ற ஐந்து அவாவினையும் வென்றான். 'மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை' என்னும் ஆறு அத்துவாக்களாக விரிந்தான். 'பிரம லோகம், விட்டு ணுலோகம், உருத்திர லோகம், மகேசுர லோகம், சதாசிவ லோகம், சத்தி லோகம், சிவ லோகம்' என்னும் ஏழுலகங்களுக்கும் மேற்சென்று தானேயாய் இருந்தான். அவனை, நெஞ்சே, நீ அறிந்து அடை.

விளக்கவுரை

முதற்கடவுளை, 'அவன்' எனப் பண்டறிசுட்டாற் கூறுதல் வழக்கு. 'அவன்தானே' என்றதில் தான் அசைநிலை; ஏகாரம் பிரிநிலை.

'பிரமம் ஒன்றே இரண்டாவதில்லை'1 எனவும், 'மெய்ப் பொருள் ஒன்றே'2 எனவும், வேதமும் கூறுதல் காண்க. 'தனக் குவமை இல்லாதான்' என்றதும் இப்பொருட்டு. அறக்கருணை அருட் சத்தியும், மறக்கருணை திரோதான சத்தியுமாம். இலயம் முதலிய வற்றின் இயல்பையும் ஆறத்துவாக்களின் இயல்பையும் சிவாகமங் களிலும், மெய்கண்ட நூல்களிலும் கண்டுகொள்க.

'அழிந்த சிந்தை அந்தணாளர்க் கறம்பொருளின்பம் வீடு - மொழிந்த வாயான்'3 எனவும், 'விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள்'4 எனவும், போந்த அருட்டிரு மொழிகளால், அறம் முதலிய நான்கு உறுதிப் பொருள்களையே முனிவர் நால்வர்க்கு நான்கு வேதங்களால் உணர்த்தியருளினான்' என்பது இனிது விளங்கிக் கிடத்தலின், 'நான்கு உணர்ந்தான்' என்பதற்கு இதுவே பொருளாதல் அறிக. 'உணர்ந்தான்'

என்னுமிடத்து, 'தானே' என்பது இசையெச்சம். அவ்வினைச் சொல் உணர்ந்து உணர்த்துதலாகிய தன் காரியம் தோன்ற நின்றது.

'வென்றனன்' என்றது, 'அவற்றொடு பொருந்திநின்றே அவற்றால் திரிபின்றி நின்றான்' என்றவாறு. 'வினையின்நீங்கி' 5 என்றும், 'பற்றற்றான்'6 என்றும் ஓதியவற்றிற்கும் இவ்வாறே உரைக்கப்படுதல் காண்க. இவற்றானே, 'பொறிவாயில் ஐந்த வித்தான்'7 என்றதும் இப்பொருட்டாயிற்று. 'நேரிழையைக் கலந்திருந்தே புலன்கள் ஐந்தும் - வென்றானை'8 'மங்கை யோடிருந்தே யோகுசெய்வானை'9 என்பனவும் இக்கருத்தே பற்றி வந்தன. மனைவியோடிருந்த முனிவரைத் திருவள்ளுவர், 'ஐந்த வித்தான்' 10 என்றதும் இங்கு நினைக்கத்தக்கது.

நிவிர்த்தி முதலிய ஐந்து கலைகட்கு உட்பட்ட புவனங்களை அவற்றிற்கு முதல்வராகிய கடவுளரது உலகங்களாகவும், இறுதிக் கண்ணதாகிய சாந்தியதீத கலையில் இலய புவனங்களை வேறிரண் டாகவும் வைத்து 'ஏழுலகம்' என்றலே ஆகம முறை. 'பூலோகம், புவ லோகம், சுவலோகம், மகலோகம், தவலோகம், சத்தியலோகம்' என வேதமுறையிற் கூறப்படும் ஏழுலகங்களில் ஏழாவதாகிய உலகம் புவனபதி உலகமாகவும், ஏனைய ஆறும் கீழ்க்கீழ் நோக்க ஒன்றின் ஒன்று தாழ்ந்தோர்க்குரிய உலகமாகவும் மேல் ஆகம முறையிற் கூறிய ஒவ்வோர் உலகத்திலும் உட்கூறுகளாய் அவ்வவ்வுலகங்கட்கு ஏற்ற பெற்றியில் அமைந்துள்ளவை என்பது சிவாகம நூல் துணிவு. கீழ்க்கீழ் உள்ள உலகங்களில் மேன்மேல் உள்ள புவனபதிகட்குரிய இடங்களும் உள; மேன்மேல் உள்ள உலகங்களில் கீழ்க்கீழ் உள்ள புவன பதிகட் குரிய இடங்கள் இல்லை என உணர்க. 'சென்றனன்' என்றது முற்றெச்சம்.

'தான் இருந்தான்' என்பதில் பிரிநிலை ஏகாரமும், ஆக்கச் சொல்லும் தொகுத்தல் பெற்றன. தானேயாய் இருத்தலாவது சத்தி யோடு கூடிச் செயற்படுத்தலைத் தவிர்ந்திருத்தல். இதுவும், முதற்கண் 'ஒன்றவன்றானே' என்றதும் இறைவனது, 'சொரூபம்' எனப்படும் உண்மை நிலை. ஏனைய, 'தடத்தம்' எனப்படும் பொது நிலை. ஒன்று முதலாகத் தொடங்கி ஆறு ஈறாகக் கூறியது, 'ஒருவனே பலவாய் விரிந்து நிற்கின்றான்' என்பது உணர்த்துதற்கு. 'ஏழும்பர்ச் சென்றனன்' என்றது, 'அவ்வாறு விரிந்து நிற்பினும் அவன் மன வாக்கிற்கு எட்டாதவனே' என்றற் பொருட்டு.

'எட்டு' என்றது, சொல் ஒப்புமையால் எண்ணலங்காரத்தை நிரப்பிற்று,

'நால்வாய் ஐங்கரத்தன்'1 என்பதிற்போல. எட்டுதல் - முயன்று பற்றுதல். அம் முயற்சிகள் பலவும் நூலுட் கூறப்படும். 'உணர்ந்து எட்டு' என்றது, 'மேற்கூறியவாற்றால் அவன் ஒருவனே உணரப்படுதற்கும், அடையப் படுதற்கும் உரியவன்' என்பது அறிவித்தவாறு.

'வாழ்த்து, வணக்கம், பொருளியல்புரைத்தல்' என்னும் மூவகை வாழ்த்துள் இது பொருளியல்புரைத்தல். இதனானே இந்நூல் நுதலிய பொருள் தொகுப்புக் குறிப்பாற் கூறப்பட்டது. அஃது ஆமாறு, 'முதற்கடவுள் உளன்; அவன் ஒருவனேயன்றிப் பலர் இல்லை. ஆயினும் அவன் தன்னின் வேறாகாத சத்தியால் 'அருளல், மறைத்தல்' என்னும் இரண்டனையும் செய்தற் பொருட்டு, 'இலயம், போகம், அதிகாரம்' என்னும் மூவகை நிலைகளில் நின்று, 'அறம், பொருள், இன்பம், வீடு, என்பவற்றை அடையும் நெறிகளை உலகிற்கு உணர்த்தித் தான் ஒன்றிலும் தோய்விலனாய் நின்றே எப்பொருளுமாக விரிந்து, அங்ஙனம் விரிந்தவிடத்தும், மன வாக்குக்களைக் கடந்த தனது நிலைமையில் மாறுபடாதே நிற்கின்றான். ஆதலின், அவனை அறிந்து அடைதலே உயிர்கள் செயற்பாலன' எனக் கண்டு கொள்க. நூல்நுதல் பொருள் இங்ஙனம் குறிப்பால் தோன்றவருதல் நூன்முகத்து வரும் கடவுள் வாழ்த்திற்கு இயல்பு என்க.

இப்பாட்டு இந்நூல் நுதலிய பொருள் இது என்கின்றது.

நுதலிய பொருள்

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனாம்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே. **#3**

மலமாசகன்ற தூய உயிரிடத்து நிலைபெற்று விளங்கும் தூயவனும், உலகம் முழுவதற்கும் நலந் தருபவளாகிய அம்மைக்குக் கணவனும், தென்திசைக்குத் தலைவனாம் கூற்றுவனை உதைத்தவனும் ஆகிய சிவபெருமானது பெருமையை யான் துதிமுறையால் கூறுவேன்!

விளக்கவுரை

போற்று, முதனிலைத் தொழிற்பெயர். போற்றுதல் - துதித்தல். 'போற்றி' என்பதன் ஈற்று இகரம் தொகுத்தல் பெற்றது எனக் கொண்டு, 'வணக்கம்' எனப்பொருள் கொள்ளலும் பொருந்தும். 'போற்றிசைத்து' என்றதனை, 'கூறுகின்றேன்' என்பதற்கு முன்னே வைத்து உரைக்க. 'தூய உயிர்' என்றதற்கு, 'இன்னுயிர்' என்றார். தயிரில் நெய்போல

இறைவன் இனிது விளங்கி நிற்றல் சுத்தான்ம சைதன்னியத்திலே யாதல் அறிக. 'நாற்றிசைக்கும்' என்றது, 'உலகம் முழுவதற்கும்' என்றவாறாம். நன்மை, அருள். உலகத்தோடு இறைவ னுக்கு உளதாய தொடர்பு அவனது சத்தி வழியே ஆதலின், 'நாற்றி சைக்கு நாதன்' என்னாது, 'நாற்றிசைக்கும் நல்ல மாதுக்கு நாதன்' என்றார் 'அளி யன்றித் தெறலும் அருளே' என்றற்கு 'நல்ல' என்றும், 'அவ்விரண் டனையும் செய்வது சத்தியே' என்றற்கு, 'மாது' என்றும், 'சத்தி, முதலன்று; முதலது பண்பே' என்றற்கு, 'நாதன்' என்றும் கூறினார். 'மாது' உயர்திணை ஆதலின், சாரியை வேண்டாதாயிற்று. மேல் திசை - மேற்சுட்டிய நான்கு திசைகள். 'ஒரு வேந்தன்' என்றது, 'திசைக்காவலர் எண்மருள் ஒருவன் என அவனது சிறப்பின்மை கூறியவாறு. கூற்றுதைத்தமையைக் கூறியது, மேல், 'அவன்' எனப் பொதுப்படக் குறித்த முதற்கடவுளை, 'சிவபெருமான்' எனச் சிறப்பு வகையால் விளக்குதற் பொருட்டு, சிறப்பாதற்கு 'மாதுக்கு நாதன்' என்றதினும் இது வலி யுடைத்து என்க. முதற் கடவுளை முதற் கண்ணே சிறப்புப் பெயராற் கூறாது இலக்கணத்தாற் பொதுப்படக் கூறியது, 'முதற்கடவுளாவான் இத்தன்மையனே, என்பது உணர்த்து முகத்தால், தாம் கூறும் சிவபெருமானையன்றி ஏனையோர் கூறும் கடவுளரை முதற்கடவுள் என்றல் ஒவ்வாமையை நிறுவுதற் பொருட்டாம். 'புனிதன்' முதலியன ஆகுபெயராய் அவனது பெருமைமேல் நின்றன. எனவே, 'இந்நூல் சிவபெருமானது பெருமையை உணர்த் தற்கு எழுந்தது' என்பது பெறப்பட்டது. 'சிவபெருமானது பெருமையே யன்றி உயிர்களின் இயல்பு, அவைகளைப் பற்றியுள்ள பாசங்களின் இயல்பு என்பனவும் இதனுட் கூறப்படுகின்றன அல்லவோ, எனின், அவை அவனது அடிமையும், உடைமையுமே ஆதலின்' அவற்றது இயல்புகளும் அவனது பெருமையாய் அடங்கும் என்க.

'போற்றிசைத்துக் கூறுகின்றேன்' என்றதனால். வரையறை வகையால் கூறாமை பெறப்பட்டது. வரையறை வகையாற்கூறின், அளவு படாமையின் குன்றக் கூறலாய் முடியும்' என்பது கருத்து. 'யானறி அளவையின் ஏத்தி ஆனாது - நின்னளந்தறிதல் மன்னுயிர்க் கருமையின் நின்னடி உள்ளி வந்தனென்'*1* எனப் பிறிதோரிடத்தும் கூறப்பட்டமை காண்க. இதனானே இந்நூல் தோத்திர வகையாகிய திருமுறைகளுள் ஒன்றாயிற்று.

'கூறுகின்றேன்' என வாளா கூறின், 'வரையறை வகையாற் கூறுகின்றார்' என்பதே படும் ஆதலின், அது படாமைப் பொருட்டு,

'போற்றிசைத்து' என்றதனையும் உடன் கூறினார். ஆகவே, நுதலிய பொருளோடு அதனைக் கூறும் முறைமையும் இதனுள் பெறப்பட்டது. 'கூறுகின்றேன்' எனத் துணிவுபற்றி எதிர்காலம் நிகழ்காலமாகச் சொல்லப்பட்டது.

இதுவும், அடுத்த பாட்டும் நூற்சிறப்புக் கூறுகின்றன

நூற் சிறப்பு

ஒக்கநின் றானை உலப்பிலி தேவர்கள்
நக்கன்என் றேத்திடும் நம்பனை நாள்தொறும்
பக்கம்நின் றார்அறி யாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றுகின் றேனே. **#4**

எண்ணில்லாத தேவர்களில் ஒருவனாய் அவர் களோடொப்ப நிற்பவனும், அவ்வாறு நிற்பினும் அவர் அனை வராலும் என்றும் வணங்கப்படுபவனும், தன்னை அடைந்தவர் களாலும் தன் தன்மை முழுதும் அறியப்படாத மேலானவனும், ஆகிய சிவபெருமானது பெருமையை யான் அவனுள் அடங்கிநின்று உணர்ந்து துதிக்கின்றேன்.

விளக்கவுரை

'உலப்பிலி தேவர்கள்' என்றது தாப்பிசையாய், முன்னும் சென்று தொகைநிலை வகையான் இயைந்தது. இலி என்பது இன்மையென்னும் பொருட்டாய் அதனையுடைய பொருண்மேல் இந் நூலுட் பயின்றுவரும். திகம்பரன் என்னும் பொருட்டாகிய 'நக்கன்' என்பது வியாபகனாதலைக் குறித்து, ஏனையோரால் ஏத்தப்படுதற் குரிய இயைபு உணர்த்தி நின்றது. நம்பன் - விரும்புதற்குரியவன். 'பழை யோன்' என்றும் ஆம். 'நாள்தொறும் ஏத்திடும்' என முன்னே கூட்டுக.

'பக்கம் நின்றார்' என்றது சீவன் முத்தரையும், பரமுத்தரையும். 'பக்கம் நின்றாரும்' என்னும், சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. நாதன், பரமன் என்பனவும் மேலனபோல ஆகுபெயர்கள். இறைவனது பெருமை முத்தராலும் முற்றும் அறியப்படாது என்பதனை,

---

கடல்அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும்

கடல்அளக்க வாராதாற் போலப் -படியில்

அருத்திசெய்த அன்பரைவந் தாண்டதுவும் எல்லாம்

கருத்திற்குச் சேயனாய்க் காண். -திருக்களிற்றுப்படியார். *90*

என்பதனான் அறிக.

புக்கு நின்று என்றது அதீத நிலையையும், உன்னி என்றது துரியநிலையையும் குறித்தவாறு. உன்னுதலன்றிப் புகாதே நிற்கும் துரிய நிலையிலே நிற்பின் சிவானந்தத்தை உணர்தல் கூடாமையால், 'புக்குநின்று' என்றும், புக்கு உன்னுதலொழித்த அதீத நிலையிலே நிற்பின் மனவாக்கினால் போற்றுதல் கூடாமையால், 'உன்னி' என்றும் கூறினார். இந்நிலைகளின் இயல்புகளை நூலுள் அறிக. இதனால் தமது அநுபவ நிலையை உணர்த்தியவாறாயிற்று.

அகலிடத் தார்மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத் தென்மெய்யைப் போதவிட் டானைப்
பகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி
இகலிடத் தேஇருள் நீங்கிநின் றேனே. **#5**

மண்ணுலகத்தவராகிய மக்கட்கும், விண்ணுலகத் தவராகிய தேவர்கட்கும் முதலாய் நிற்பவனும், வந்த இடத்திலே எனது உடம்பை விழச்செய்தவனும் ஆகிய சிவபெருமானை நான் பகலும், இரவும் வணங்கியும், துதித்தும் மயக்கத்தைச் செய்யும் இவ்வுலகத் திற்றானே மயக்கமின்றி இருக்கின்றேன்.

விளக்கவுரை

சிறப்புப்பற்றி, 'அகலிடத்தார்' என மக்களையே கூறி னாராயினும், இனம்பற்றிப் பிற உயிர்களும் கொள்ளப்படும். நிலை பேறு உடைமைபற்றிக் காரணத்தை, 'மெய்' என்றார். காரணம் இங்கு வினைமுதல். அகலிடத்தார் என்றதனோடு இயைய 'அண்டத்தார்' என நின்றதன் இறுதிநிலை தொகுத்தலாயிற்று. அனைத்துயிர்க்கும் முதல்வனாதலை வலியுறுத்தற்பொருட்டு இரு தொடராக வகுத்தருளிச் செய்தார். 'விட்டான்' என்பது 'விடு வித்தான்' என்னும் பொருளது. 'போத இட்டார்' எனப் பிரித்து, 'மிக இருத்தினான்' என்றலும் ஆம். நாயனாரது உடம்பை நீக்கி அவரை மூலன் உடம்பில் இருக்குமாறு இறைவன் செய்த வரலாறு பெரிய புராணத்துள் விரித்துரைக்கப் பட்டது. 'எம்மெய்யை, என்றனை' என்பனவும் பாடங்கள். ஐம்புலன் கள் உயிர்செல்லும் வழிக்கு மாறாய் நின்று மறித்தலின், அவற்றின் வடிவாகிய உலகத்தை 'இக லிடம்' என்றும், அஃது அன்னதாயினும், மேற்கூறியவாறு நான் இறை நிறைவில் நீங்காது நிற்குமாற்றால் மயக்க மின்றி இருக்கின்றேன் என்பார், 'இருள் நீங்கி நின்றேன்' என்றும் கூறினார். இவை இரண்டு பாட்டாலும், 'இந்நூல் அருள்வழி நின்று

செய்யப்படுவதன்றி, ஆன்ம போதத்தின் வழிநின்று செய்யப்படுவ தன்று எனவும், அன்ன தாயினும். பதி போதமும் ஒரோவழி உள தாங்கொல்லோ' என ஐயுறல் வேண்டா எனவும் கூறி, நூலது சிறப்பு உணர்த்தப்பட்டது.

இவற்றின் பின்னவாகப் பதிப்புக்களில் காணப்படும் 'சிவனோ டொக்கும் தெய்வம்' என்பது முதலிய பாட்டுக்களும், வேதச்சிறப்பு, ஆகமச்சிறப்பு, திரிமூர்த்திகளின் சேட்டகனிட்ட முறை என்னும் அதிகாரப் பாட்டுக்களும் எடுத்துக்கொண்ட பொருளையே கூறலின், அவை நூற்பாட்டுக்களன்றிப் பாயிரப் பாட்டுக்களல்லவாதல் இனிது விளங்கும். அதனால், ஏடுசேர்த்தோர் அவற்றை முறைபிறழக் கோத்தார் எனவே கொள்க.

இந்நூல் பொருள் வரலாற்றுமுறையாற் கேட்டுச் சொல்லப் பட்டதன்றித் தாமே தம் மனவழிப்பட்டுச் சொல்லியதன்று என்றற்கு இது முதல் ஏழு பாட்டுக்களால் தமது அருட்குடி வரவு கூறுகின்றார். குரு பாரம்பரியம் - ஆசிரியத் தலைமுறை.

பெற்றமும் மானும் மழுவும் பிரிவற்ற
தற்பரன் கற்பனை யாகும் சராசரத்
தற்றமும் நல்கி அடியேன் சிரத்தினில்
நற்பத மும்அளித் தான்எங்கள் நந்தியே. **#6**

எங்கள் நந்தி பெருமான், ஆனேறு, மான், மழு என்ப வற்றை விடாது கொண்டுள்ள சீகண்ட பரமேசுரனது உபதேசப் பொரு ளாகிய பொருட் பெற்றியாம் மறைபொருளையும் எனக்கு விளக்கி, தமது ஞானத்தைத் தரும் திருவடிகளையும் அடியேனது தலைமேல் சூட்டியருளினார்.

விளக்கவுரை

சீகண்ட வுருத்திரர் என்பது விளங்குதற் பொருட்டே வாளா, 'தற்பரன்' என்னாது, பெற்றம் முதலிய அடையாளங்களைக் கூறினார். கற்பனை - உபதேசம். சராசரம் என்பது, 'சித்து, அசித்து' என்னும் பொருட்டாய், அனைத்துப் பொருள்களையும் குறித்தது. அற்றம் - மறை பொருள்; இரகசியம். நன்மை - ஞானம். இதனால், சீகண்ட பரமேச்சுரன்பால் நந்திபெருமானும், நந்திபெருமான்பால் இவ்வாசிரியரும் ஞானம் பெற்றமை கூறப்பட்டன. இப்பாட்டும் பதிப்புக்களில் இடம் மாறி உள்ளது.

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்றிவர் என்னோ டெண்மரு மாமே. **#7**

நந்திபெருமானது அருளைப்பெற்ற ஆசிரியன்மார் யாவர் என்று

ஆராயுமிடத்து, அவரோடு ஒத்த நால்வரும், சிவயோக முனிவரும், தில்லை அம்பலத்தை வணங்கிய பதஞ்சலி, வியாக்கிர பாதரும் என்ற இவர் என்னொடு கூட எண்மருமாவர் என்பதாம்.

விளக்கவுரை

ஆசிரியரை, நாயனார் 'நாதர்' என்கின்றார். 'நமச் சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க' என்ற திருவாசகம் இங்கு நினைக்கத் தக்கது. நந்தி பெருமானோடு ஒத்தமை, சீகண்ட பரமேசுரன் பால் அறம் முதலிய நான்கையும் கேட்டமையாலாம். 'அந்நான்கையும் உணர்த்துவன வேதங்கள்' என்பது முதல் திருப்பாட்டின் உரையுட் காட்டப்பட்டது. அறமுதலியவற்றோடு ஒருங்கோதிய வீட்டுநெறி பொதுவகையானன்றிச் சிறப்பு வகையான் அன்மையின், அதனைச் சிறப்பு வகையான் இனிதுணர்ந்து அடைய அப்பெருமான் அவர் களை, நந்தி பெருமான்பால் கேட்க என விடுத்தவண்ணம் அவர்களும் நந்தி பெருமான்பால் ஆகமவழியாக வீட்டு நெறியைச் சிறப்பு வகையாற் கேட்டுணர்ந்தார். ஆகவே, அவர்கள் நந்தி பெருமானோடு ஒருங்கொத்த மாணவராய், முதிய மாணாக்கரிடம் இளைய மாணாக்கர் கேட்கும் முறையிற் கேட்டனர் என்றற்கு, 'நந்திகள் நால்வர்' என்றார். அவர்களை 'சனகர், சனந்தனர், சனாதனர், சனற் குமாரர்' என்ப. சிவயோகமுனி என்பவரைப் பற்றிப் பிற நூல்களில் ஓரிடத்தும், ஒன்றும் கூறப்படவில்லை. அதனால் அவரைப்பற்றி யாதும் அறிதற்கில்லை. சிலர் இவரை 'அகத்தியர்' என்றும், 'துருவாசர்' என்றும் கூறுவர். அவ்வாறாயின், நாயனார் அப்பெயரால் கூறுதலல்லது பிறவாறு கூறார் என்க. எனவே, சிவயோக முனி என்பது பெயரேயன்றித் தன்மை கூறுவதன்று என்க.

பதஞ்சலியாரும், வியாக்கிரரும் தமிழ்நாட்டோடு தொடர் புடையவர் என்பதற்கு, 'மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரர்' என்றார். எனவே, மன்று தொழுத என்னும் அடைமொழியைப் பதஞ்சலிக்கு மட்டுமே உரியதாக வைத்து அஃது யோகநூல் பதஞ்சலி யாரினை வேறு படுத்தற்குக் கூறப்பட்டது என்றல் பொருந்தாதாம். ஆகமத்துள் யோக பாதமும் உளதாதலின், அதனையே இப் பதஞ்சலியார் செய்யப் பின் வந்தோர் அதனை நன்குணராது வேறு கூறினமையின் அது, 'பாதஞ் சலம்' என வேறு மதமாயிற்று எனக் கொள்ளுதலில் தவறில்லை. பொருட்பெற்றியை இனிதுணர்த்துவது ஞானபாதமேயாதலின், யோக பாதத்துட் கூறப்பட்ட தத்துவங்கள் சிறிது சுருங்கியிருத்தல் கூடும். மன்று தொழுது நின்றமையால் நூல்செய்தல் கூடாதென்பது இல்லை யன்றோ! நாயனாரும் மன்று தொழுதவராதல் பின்னர்க் காணப்படும். இங்குக் கூறப்பட்ட எண்மரும் ஒருகாலத்தே நந்தி பெரு மானிடம்

ஞானம்பெற்றனர் என எண்ணுதல் கூடாது. நந்திகள் நால் வரும் முதற்கண் பெற்றனர் என்றும், சிவயோக மாமுனி அதற்குப்பின் ஒருகாலத்திற் பெற்றனர் என்றும், அவருக்குப்பின் பதஞ்சலி வியாக் கிரர் இரு வரும் ஒருகாலத்திற் பெற்றனர் என்றும் இறுதியாக இவ்வாசிரியர் பெற்றனர் என்றும் கொள்ளற்பாலன. 'மன்று தொழுத' என இறந்த காலத்தால் கூறினமையின், முன்னே மன்று தொழுது பின்னர் அதன் பயனாக நந்தி பெருமானை அடைந்து ஞானம் பெற்று மீண்டனர் என்பது பெறப்படும். வியாக்கிரர் மூத்தோராகவும், வழி பாட்டில் பெரும்பற்றுடையராகவும் சொல்லப்படுதலால், தில்லை, 'பெரும்பற்றப்புலியூர்' என அவர்பெயராலே வழங்கப்பட்டது. பதஞ் சலியாரும் அத்தலத்திலே தங்கி யோகநூல் செய்தார் என்க. வியாக் கிரர் நூல் செய்திலர். வியாக்கிரர் வசிட்ட முனிவர்தம் தங்கையை மணந்து பெற்ற உபமன்னிய முனிவர் இமயத் தாழ்வரையிலே பிறந்து சிறிது வளர்ந்து, பின்னர்ச் சில்லாண் டுகள் தில்லையில் தந்தையார்பால் வளர்ந்து பின்னர்த் தவத்திற்கு உரியராய காலத்து மீளவும் அத்தாழ் வரைக்கண்ணே சென்று தங்கினார் என்க. உபமன்னியரை யாதவன் - துவரைக் கிறையாகிய மாதவன் முடிமேல் அடி வைத்தான் என்று சேக்கிழார் அருளிச் செய்தமையால் இம் முனிவர் பாரத காலத்தவர் என்பது பெறப்படும். இருக்கு என வழங்கப்பட்ட ஆரிய மந்திரப் பாடல்களை, இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என வியாச முனிவர் முறைப்படுத்து நான்காக வகுத்து பிராமணம், உபநிடதம் என்ப வற்றையும் அவற்றுக்கு உரிமை செய்து அனைத்திற்கும் வேதம் எனப் பெயரிட்டதும் பாரத காலத்திலேயாம். அதன் பின்னரும் உப நிடதங்கள் தோன்றின என்க.

நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றேன்
நந்தி அருளாலே மூலனை நாடினேன்
நந்தி அருளாவ தென்செயும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நான்இருந் தேனே. **#8**

நந்தி பெருமானது அருளால் நான், ஆசிரியன் எனப் பெயர்பெற்றேன். பின்பு மூலன் உடலைப் பற்றுக்கோடாகக் கொண்டேன். அவரது அருள் இவ்வுலகில், நேரே எதனைச் செய்யும்? ஒன்றையும் செய்யாது. அதனால், அவரது அருள் வழியை உலகிற்கு உணர்த்த நான் இங்கிருக்கின்றேன்.

விளக்கவுரை

பெற்றோம், நாடினோம் என்பன பாடமாயின் அவற்றை ஒருமைப் பன்மை மயக்கமாகக் கொள்க,

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்

இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோ
டிந்த எழுவரும் என்வழி யாமே. #9

எனது நூலாகிய இத்திருமந்திரத்தைப் பெற்று வழி வழியாக உணர்த்த இருப்பவர், மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், தறிபோன்ற உருவத்துடன் யோகத்தில் இருக்கும் காலாக்கினி, கஞ்சமலையன் என்னும் எழுவருமாவர். இவரே என்வழியினர்.

விளக்கவுரை

மந்திரம் எனப்பின்னர்க் கூறப்படும் பெயரை இங்கு எதிரது போற்றிக் கூறினார். இந்திரன் முதலியோர் கடவுளரல்லர், அப்பெயர்பெற்ற மாணாக்கர் என்க. இவர்களை ஓரோரிடத்தில் நாயனார் பின்னர்க் குறித்தல் காண்க. இவர் என்வழியாம் என வேறு தொடராக்குக. இங்ஙனமாகவே, இவர் எழுவரும் திருமூலர்தம் நேர் மாணாக்கராய்ப் பின்பு அவரது மரபினை வேறுவேறிடத்தில் இருந்து வளர்த்தனர் என்பது பெறப்படும். அண்மையில் வாழ்ந்த தாயுமான அடிகள் தம் ஆசிரியராகிய மௌன குருவை, மூலன் மரபில்வரு மௌன குருவே என விளித்தமை காணப்படுகின்றது.

நால்வரும் நாலு திசைக்கொன்றும் நாதர்கள்
நால்வரும் நானா விதப்பொருள் கைக்கொண்டு
நால்வரும் நான்பெற்ற தெல்லாம் பெறுகென
நால்வரும் தேவராய் நாதரா னார்களே. #10

நந்தி பெருமானுக்கு மாணாக்கராகிய எண்மருள், நந்திகள் எனப்பட்ட நால்வரும் எல்லா உலகங்கட்கும் பொருந்திய ஆசிரியர்களாய், அறம் முதலாக நால்வகைப்பட்டுப் பற்பல வகையாக விரிந்த உறுதிப்பொருள் அனைத்தையும் உணர்ந்து, நான் பெற்ற பேற்றினை உலகம் பெறுவதாக என்னும் பேரருள் உடையராய், அதனால் சிவகணத்துள்ளே ஆசிரியராயினர்.

விளக்கவுரை

அதனால், அவர் இந்நிலவுலகத்திற்கு வந்திலர் என்ற வாறு. அந்நால்வருள் சனற்குமாரர்க்குச் சத்தியஞான தரிசினிகளும், அவர்க்குப் பரஞ்சோதி மாமுனிகளும் மாணாக்கராக, பரஞ்சோதி மாமுனிகள் வான்வழிச் செலவின் இடையே தமிழ்நாட்டில் திரு வெண்ணெய்நல்லூரில் கருவிலே திருவுடையவராய் (சாமுசித் தராய்)த் தோன்றி, சுவேதவனப்பெருமாள் என்னும் பிள்ளைத் திருப் பெயர் உடையாராய் இருந்தவர்க்குச் சிவஞானத்தை உபதேசித்து, மெய் கண்டார் எனத் தீக்கைத் திருப்பெயரும் இட்டுச் செல்ல, அவரது மரபு

இன்றும் தமிழ் நாட்டில் நின்று நிலவுதல் அனைவராலும் அறியப் பட்டது. நான் என்றது, பன்மை ஒருமை மயக்கம். மெய்கண்டாரது தோற்றம் நாயனார்க்குப் பன்னூறாண்டுகட்குப் பிற்பட்டது என்பதைப் பலர் அறிவர்.

மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்பும்
செழுஞ்சுடர் மூன்றொளி யாகிய தேவன்
கழிந்த பெருமையைக் காட்டகி லானே. **#11**

பிறப்பு இறப்புகள் இல்லாத பெருமையை உடைய முக்கட் கடவுள் தனது எல்லையில்லாத பெருமையைப் பிறர்க்குக் காட்டமாட்டானாயினும், அதனை அவன் ஆசான்மூர்த்தி வாயிலாகக் காட்டியது மேற்குறித்த நால்வரோடு, சிவயோகமாமுனி முதலிய மூவர்க்குமேயாம்.

விளக்கவுரை

அவர்களோடு அப்பேறு எனக்கும் கிடைத்தது என்பது குறிப்பெச்சம். பணிவினால் இதனை எடுத்தோதாது குறிப்பாற் பெறவைத்தார். நாங்கள் பெற்ற பேறு பிறர் பெறுதற்கரியது என அதன் அருமை கூறியவாறு. இரண்டாம் அடிமுதலாகத் தொடங்கிப் பொருள் கூறுக. மூன்று, நான்கு என்னும் முறைமையால் உளதாகும் செய்யுளின்பம் நோக்கி மூவரை முன் வைத்தார். இறப்பும், பிறப்பும் ஒழிந்த பெருமையை உடைய தேவன் என்க. ஒழிந்த அதனையே பெருமை எனக் கூறலால், பெயரெச்சம் வினைப்பெயர் கொண்டதாம். மூன்றன் என்னும் சாரியை தொகுத்தலாயிற்று. முச்சுடர்களின் ஒளியும் சிவபெருமானது முக்கண்ணின் ஒளியாதல்பற்றி, செழுஞ்சுடர் மூன்றன் ஒளியாகிய தேவன் என்றார்.

எழுந்துநீர் பெய்யினும் எட்டுத் திசையும்
செழுந்தண் நியமங்கள் செய்மின் என் றண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே
அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே. **#12**

தன்னைவிட்டு இமையளவும் பிரிய விரும்பாத நந்திகள் நால்வர்க்கும் சிவபெருமான் எதிர்ப்படத்தோன்றி, உலகம் அழிகின்ற ஊழிக் காலத்திலும் நீங்கள் நம்மை வழிபட்டிருப்பீராக என்று அருள்புரிந்தான்.

விளக்கவுரை

அதனால் அவர்கள் என்றும் அவனோடு இருப்பர் என்றவாறு. எழுந்து நீர் பெய்வன ஏழுமேகங்களும். அவைவிடாது பெய்யினும் என்றது, ஊழிக் காலத்தும் என்றவாறு. எட்டுத் திசையும் பெய்யினும் என

முன்னே கூட்டுக. மூன்றாம் அடி சிவபெருமான் காட்சி வழங்கினமையைக் குறித்தது. ஆசான் மூர்த்தி வாயிலாக அருள்செய்தபின்னர் நேர்நின்று அருள்புரிந்தார் என்பதாம்.
நந்திகள் நால்வரும் நிலவுலகத் தொடர்பிலராயினார் எனக் கூறி, 'இந்த எழுவரும் என்வழியாமே' எனத் தமது மரபினை எடுத்துக் கூறிப்போந்தமையால், ஏனை மூவரும் இவ்வாறே தம் தம் மாணாக்கர் சிலரால் நந்திமரபினை நிலைபெறுத்தினர் என்பது கொள்ளக் கிடக்கின்றது. எனினும், இன்று சனற்குமாரர் மரபாகிய மெய்கண்ட மரபு ஒன்றுமே நிலைபெற்றுளது என்க.
மேல் ஆசிரியமரபுவகை பலவற்றையும் கூறிய நாயனார் இனி அவற்றுள் ஒன்றன் முதல்வராகிய தாம் தமது நெறிப்பொருளை உலகிற்கு உணர்த்தற்பொருட்டுச் செய்யும் இந்நூலாசிரியர் வரலாறு விளங்குதற் பொருட்டுத் தம் வரலாற்றைக் கூறுகின்றார்.

நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புத்தியி னுள்ளே புகப்பெய்து போற்றிசெய்
நந்தி மதிபுனை அரனடி நாள்தொறுஞ்
சிந்தைசெய் தாகமம் செப்பலுற் றேனே. **#13**

என் ஆசிரியராகிய நந்தி பெருமானது இரு திருவடிகளையும் என் சென்னியிலும், சிந்தையிலும் கொண்டு, வாயினாலும் துதித்து, அவ்வாற்றானே சிவபெருமானது திருவருட் பெருமையை இடைவிடாது சிந்தித்து உணர்ந்து, அங்ஙனம் உணர்ந்த வாற்றால், சிவாகமப் பொருளைக் கூறத்தொடங்கினேன்.

விளக்கவுரை

முதலிரண்டு அடிகளும் ஆசிரிய வணக்கங்கூறும் கருத்துடையன. 'மந்திரம்' என்பது 'மனத்தில் நிலைத்து நிற்பது' எனவும் பொருள்தருமாதலின், பின்னிரண்டடிகளால் நூற்பெயர்க் காரணமும் புலப்படுத்தவாறாயிற்று, இதனானே நாயனார் சிவாக மங்களை மொழிபெயர்த்துச் செய்யாது, அவற்றது தெளிந்த பொருளையே திரட்டி இந்நூலால் அருளிச் செய்கின்றார் என்பது பெறப்பட்டது. படவே, 'ஆகமம்' என்றது அவற்றின் தெளிந்த பொருளையாயிற்று. சிவாகம நெறியே 'சைவம்' எனப்படும் சிவநெறி யாதலின், நாயனார் தமிழ்நாடு செய்த தவப்பயனானே இங்கு எழுந் தருளியிருந்து, அந்நெறியின் முறைமையை இந்நூலால் அறியச் செய்தார் என்க.

செப்பும் சிவாகமம் என்னுமப் பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில்ஒரு கோடி யுகமிருந் தேனே. **#14**

உயர்த்துச் சொல்லப்படுகின்ற 'சிவாகமம் என்னும் பெயரையுடைய நூலைப் பெற்றபின்பும், அவற்றின் பொருளை உள்ளவாறு உணர்த்துகின்ற நந்திபெருமானது ஆணை வழி, அழிவில்லாத தில்லையம்பலத்தை அடைந்து அங்குச் சிவபெருமான் செய்யும் ஒப்பற்ற நடனத்தைக் கண்டு மீண்டபின், உடம்போடிருக்க உடன்படாத நிலையிலே பலகாலம் உடம்போடு இருந்தேன்.

விளக்கவுரை

இருந்தது கயிலைத் தாழ்வரையிலாம். இவ் வரலாற்றைத் தமக்கு இயைபில்லாமைபற்றிச் சேக்கிழார் கூறிற்றிலர் என்க. மண்ணுலகத்தார் மன்றின்கட்சென்று திருக்கூத்துக் காண்டல் இன்றியமையாதது என்னும் மரபு நிலைபெறுதற்கு நந்திதேவர் நாயனாரை அது செய்யுமாறு பணித்தருளினார் எனக் கொள்க. அநுபவ ஞானம் கைவரப்பெற்றோர் உடம்பொடு நிற்க விரும் பாமையை வாதவூரடிகளது நிலைபற்றி உணர்க. ஞானம் கைவந்தபின் நாயனாரது நிலை இதுவாயினும், அதற்கு முன்னர் அவர் நெடுங்காலம் இருக்க விரும்பிச் செய்த பெருந்தவம் தனது பயனைத் தந்து நின்றமை யின், அவர் அவ்வாறே இருத்தல் வேண்டுவதாயிற்று என்பதை அவர் அடுத்தபாட்டிற் கூறுதல் காண்க. இவ்வாற்றானே இவரைச் சேக்கிழார், 'அணிமாதி சித்திபெற்றவர்' எனக் குறித்தல் காண்க. ஒப்பு - உடன்பாடு. இவ்வாறு உடன்பாடின்றி இருந்தமையால், ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் யுகம்போலத் தமக்குத் தோன்றின என்பது தோன்ற, 'எழுகோடியுகம் இருந்தேன்' என்றார். பலவற்றைக் குறித்தற்கு, 'கோடி' எனக்கூறலும், பலவற்றைக் குறிக்கு மிடத்து ஏழென்னும் எண்ணோடு தொடர்புபடுத்தலும் வழக்கு. எனவே இன்னோரன்ன வாக நாயனார் கூறுவனவற்றிற்கு, 'பன்னெடு நாள் இருந்தார்' என்னும் பொதுப்பொருளே கொள்ளலாவது அறிக. இது பற்றியே நாயனாரது வாழ்நாளைச் சேக்கிழார் அவரது நூலின் பாடற்கணக்கொடு தொடர்பு படுத்தி, 'மூவாயிரம் ஆண்டு' என வரையறுத்து, 'பாடலும் மூவா யிரம், நாயனார் வாழ்ந்த ஆண்டும் மூவாயிரம்' என்னும் நயம்பற்றி, 'ஓராண்டுக்கு ஒன்றாக ஒன்றவன்றான் என எடுத்து இந் நூலை அருளிச் செய்தார்' எனக்குறித்தருளினார். நாயனார் தாம் வாழ்ந்த காலத்தை 'மூவாயிரம் ஆண்டு' என ஓரிடத்தும் குறியாமையை நோக்குக.

இருந்தஅக் காரணம் கேள்இந் திரனே
பொருந்திய செல்வப் புவனா பதியாம்
அருந்தவச் செல்வியைச் சேவித் தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியி னாலே. **#15**

இந்திரனே, உடன்பாடின்றியும் நான் அவ்வாறு நெடுநாள்

உடம்போடிருந்த காரணத்தைக் கூறுகின்றேன்; கேள். எல்லா உலகங்கட்கும் தலைவியாம் அருந்தவமாகிய செல்வியை அடியேன் அன்பினால் விரும்பி உடன் நின்று பணிந்துவந்தேன்.

விளக்கவுரை

'அதனால் அவள் என்னை அவ்வாறு இருக்கச் செய் தாள்' என்றவாறு. அருந்தவச் செல்வி, உருவகம். ஒன்னார்த் தெறலும், உவந்தாரை ஆக்கலும் செய்ய வல்லது தவமாகலின், அதனை உலகத்தின் தலைவியாகக் கூறினார். கல்வி செல்வங்களைக் 'கலை மகள், திருமகள்' என்றல்போலத் தவத்தை, 'புவனாபதி' என்றார். 'புவனா' என்பது உலகமாகிய பெண்பாலை உணர்த்தி நின்றது. 'பதி' என்பது, 'அவனைப் பதமாக உடையவள்' என்னும் ஈகார ஈற்று ஆரியச்சொல். 'இந்திரனே' என்றது, அப்பெயருடைய மாணாக்கரை முன்னிலைப் படுத்ததாம்.

சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்
மிதாசனி யாதிருந் தேன்நின்ற காலம்
இதாசனி யாதிருந் தேன்மனம் நீங்கி
உதாசனி யாதுட னேஉணர்ந் தோமால். **#16**

இறப்புத் தோன்றாதவனாய் இருந்து வாழ்ந்த அக் காலம் முழுதும் உலகத்தில் விருப்பம் தோன்றாது மனஒடுக்கம் உடையவனாயே இருந்தேன். அவ்வாறிருக்கும் பொழுது, சிவபெரு மானது ஐந்தொழில்நிலை, பொருட்பெற்றி, தமிழ்மொழி, வேதம் என்னும் இவைகளைப் புறக்கணியாது விருப்பத்துடன் கற்று உணர்ந்தேன்.

விளக்கவுரை

கீழுள்ள மகேசுரர் முதலியவர்க்கும் தலைவர் சதா சிவரேயாதலின், அவரே ஐந்தொழிற்கும் தலைவராதல் வெளிப்படை. அதனால், ஐந்தொழில் நிலையை, 'சதாசிவம்' என்ற ஒன்றினாலே குறித்தார். இனி அதனை 'உபலக்கணம்' என்றலும் ஆம். 'முத்தமிழ்' என்ற இதனால், கயிலைத் தாழ்வரையிடத்தும் அக்காலத்தில் தமிழ் போற்றிக் கற்கப்பட்டது என்பது தெளிவாகும். அதனாலன்றோ பிற் காலத்திற் சேரமான் பெருமாள் நாயனார் தமது 'திருக்கயிலாய உலா' என்னும் ஞானத் தமிழ்ப்பாடலைத் திருக்கயிலையில் யாவரும் கேட்க அரங்கேற்றினார்! இதனால், நாயனார் தாம் பலகலை வல்லுநராயி னமையைக் குறித்தவாறு காண்க. இவற்றையெல்லாம் இவர் நந்தி பெருமானது அருள்பெற்ற பின்னர் அதனையே துணையாகப் பற்றி நன்குணர்ந்தார் என அறிக. எனவே, இறைவன் திருவருள் உலகர் உய்தற்பொருட்டு இவரை இந்நிலையினராக்கியது என்பதும் உணரற் பாற்று. 'மிருதம், இதம்' என்பன செய்யுள் நோக்கி; 'மிதா, இதா' என

நின்றன. சனித்தல் - தோன்றுதல். உதா சனித்தல் - புறக்கணித்தல். இரண்டாம் அடியில் 'நிதாசனி' என்பதும் பாடம்.

மாலாங்க னேஇங் கியான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே. #17

மாலாங்கனே, திருக்கயிலையை விட்டு இத்தமிழ்நாட்டிற்கு நான் வந்தகாரணம் கேள். சிவபெருமான் முதற்கண் உமை அம்மைக்கு முதல் நூலாகச் சொல்லிய சிவாகமத்தின் ொபாருளைச் சொல்லுதற்காகவே வந்தேன்.

விளக்கவுரை

'மாலாங்கன்' என்பவர் நாயனார்தம் மாணாக்கருள் ஒருவர் என்பது மேலே சொல்லப்பட்டது. 'மொழிந்த வேதம்' என இயையும். பல தேவர்களையும் பொதுப்பட வைத்துக்கூறிய வேதமும், தான் ஒருவனையே முதல்வனாக வைத்துக் கூறிய வேதமும் எனச் சிவ பெருமான் கூறிய வேதங்கள் இரண்டு எனவும், அவற்றுள் முன்னதை முனிவர் நால்வர்க்கும், பின்னதை உமையம்மைக்கும் கூறினான் எனவும் கூறப்படுவனவற்றுள், பின்னதாகிய வேதம் என்பார், திருக் கூத்தின் சீலாங்கவேதம் என்றார். அது சிவாகமம் என்பது வெளிப் படை. ஆகமமும், முதல்நூல் என்னும் பொருளில் வேதம் எனப்படுதல் அறிந்து கொள்க. சீலம் - இயல்பு. அங்கம் - வகை. நாயனார் வந்தது அகத்தியரைக் காணுதற்பொருட்டேயாயினும், திருவருட் செயல் இவ்வாறு இருந்தது என்பது இப் பாட்டின் கருத்து என்க.

நேரிழை யாவாள் நிரதி சயானந்தப்
பேருடை யாள்என் பிறப்பறுத் தாண்டவள்
சீருடை யாள்சிவன் ஆவடு தண்டுறை
சீருடை யாள்பதம் சேர்ந்திருந் தேனே. #18

'உமையம்மை' என்று சொல்லப்படுபவள் வரம்பில் இன்பமாகின்ற பெருமையை உடையவள். அவள் எனது பிறப்பை அறுத்து வீடு தந்து என்னை ஆட்கொண்டவள்; மிக்க புகழை உடையவள்; சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருவாவடுதுறை யாகிய இச் சிறந்த திருத்தலத்தைத் தனதாக உடையவள். அவள் திருவடி நிழலில் இதுபொழுது இருக்கின்றேன்.

விளக்கவுரை

'தேவியாவாள் சிவனது சத்தியே' என்பது பற்றி இவ்வாறு அருளிச்செய்தார், 'பேரின்பமான பிரமக்கிழத்தி' என்றார்

திருவுந்தியாரிலும் *(பா.34)*. இதனால், தாம் திருவாவடுதுறையில் நிரதி சயானந்தம் உற்று இருந்த நிலையைக் கூறினார் என்க சீர் - செல்வம். *'சீராக'* என ஆக்கம் வருவிக்க. ஆவடுதுறை அம்மை ஆவாய் நின்று பூசித்த தலமாதல் அறிக,

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவன் ஆவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே. **#19**

சீருடையாள் பதம் சேர்ந்தமையால் அவளை ஒருபாகத்தில் உடைய சிவனையும் சேர்ந்திருக்கின்றேன். இத் திருவா வடுதுறை அவளுடையது மட்டுமன்று; அவனுடையதுந்தான். இங்குச் சிவஞானத் திருவின்கீழ் அவனது திருப்பெயர் பலவற்றையும் ஓதித் துதித்துக்கொண்டிருக்கின்றேன்.

விளக்கவுரை

போதம் - ஞானம். போதத்தை உடையது போதி. 'புத்தருக்குப்பின் அரசமரத்திற்கு இப்பெயர் உண்டாயிற்று எனினும், இதன் கீழ்ப் புத்தர்பெற்றது சூனியஞானம்; நான் பெற்றது சிவஞானம்' என்பார், 'அரச மரம்' என்னாது 'சிவபோதி' என்றார்.

இருந்தேன்இக் காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன்என் நந்தி இணையடிக் கீழே. **#20**

இங்கும் இவ்வுடம்பிலே பல்லாண்டுகள் இருந்தேன். அங்ஙனம் இருந்த காலம் முழுவதும் சிவஞானப் பேரொளியில்தான் இருந்தேன். அது தேவராலும் வணங்கப்படும் எங்கள் நந்தி பெருமானது திருவடி நிழலேயன்றி வேறில்லை.

விளக்கவுரை

ஆசிரியர் சிவமேயாதல்பற்றி, நந்தி இணையடி சிவனடியேயாதல் அறிக. 'இரவு, பகல்' என்பன அறியாமையும், அறிவுமாம். இவை கருவி கரணங்களின் நீக்கத்தாலும், தொடக் கினாலும் வருவன. இவை அற்றஇடம், என்றும் ஒரு பெற்றியாய் விளங்கும் பேரறிவாம். அதனால் அங்குத் துன்பம் என்பதின்றி, இன்பமே உளது என்க.

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவம் செய்திலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே. **#21**

முற்பிறப்பில் நன்கு முயல்கின்ற தவத்தைச் செய்யாதவர், பின்னை நற்பிறவியைப் பெறுதல் எவ்வாறு கூடும்! கூடாது. ஆகவே நான்செய்த தவம் காரணமாக இறைவன் என்னைத் தன்னைத் தமிழ்மொழியால் நன்றாகப் பாடும் வண்ணம் செவ்விய முறையால் படைத்தான்.

விளக்கவுரை

'ஆதலால் இதனைச் செய்கின்றேன்' என்பது குறிப் பெச்சம். மூலன் உடம்பில் புகுதற்குமுன்னே இருந்தநிலையை முற் பிறப்பாகவும், அதற்குப்பின் இருந்த நிலையைப் பிற்பிறப்பாகவும் வைத்து, இதில் நாயனார் அருளிச் செய்தார். ஆகவே, 'படைத்தனன்' என்றது, மூலன் உடம்பில் இருக்கச் செய்ததையேயாயிற்று. தவம் இன்றியாதொன்றும் ஆகாது என்பதே முதல் இரண்டு அடிகளால் உணர்த்தப் பட்டது. 'தமிழ்செய்தல்' என்னும் இரண்டாவதன் தொகை ஒருசொல் நீர்மைத்தாய்ப் பாடுதல் எனப் பொருள்தந்து, 'தன்னை' என்றதற்கு முடிபாயிற்று. 'தமிழ்ச்செய்யுமாறே' என்பதும் பாடம். இரண்டாம் அடியை முதலில் வைத்துரைக்க.

ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தன்னுள்
ஞானப்பா லாட்டி நாதனை அர்ச்சித்து
நானும் இருந்தேன்நற் போதியின் கீழே. **#22**

பொழிப்புரை எழுதவில்லை

விளக்கவுரை

இப் பாடல்கள் மேற்கூறியவற்றை மிகப் பின்வந்து கூறுதலாலும், இவர் மாணாக்கரல்லாத ஒருவரை நோக்கிக் கூறுதலாலும், 'நாயனார் தரைவழியாகவே பல தலங்களைத் தரிசித்துத் திருவாவடுதுறையை அடைந்தார்' என்ற சேக்கிழார் திருமொழிக்கு மாறாக. வான் வழி வந்ததாகக் கூறுதலாலும் 'இவைநாயனார் அருளிச் செய்தன அல்ல' என்க.

செல்கின்ற வாறறி சிவமுனி சித்தசன்
வெல்கின்ற ஞானத்து மிக்கோர் முனிவராய்ப்
பல்கின்ற தேவர் அசுரர் நரர்தம்பால்
ஒல்கின்ற வான்வழி யூடுவந் தேனே. **#23**

பொழிப்புரை எழுதவில்லை

விளக்கவுரை

இப் பாடல்கள் மேற்கூறியவற்றை மிகப் பின்வந்து கூறுதலாலும், இவர் மாணாக்கரல்லாத ஒருவரை நோக்கிக் கூறுதலாலும், 'நாயனார் தரைவழியாகவே பல தலங்களைத் தரிசித்துத் திருவாவடுதுறையை

அடைந்தார்' என்ற சேக்கிழார் திருமொழிக்கு மாறாக. வான் வழி வந்ததாகக் கூறுதலாலும் 'இவைநாயனார் அருளிச் செய்தன அல்ல' என்க.

சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தம மாகவே ஓதிய வேதத்தின்
ஒத்த உடலையும் உள்நின்ற உற்பத்தி
அத்தன் எனக்கிங் கருளால் அளித்ததே. **#24**

மக்களுடைய உள்ளத்தில் சிறந்து நிற்கின்ற நூல்கள் பலவற்றிலும் தலையானதாகச் சொல்லப்படுகின்ற வேதத்தைச் சொல்லுதற்கு ஏற்ற உடம்பையும், உள்ளக்கருத்தையும் எனக்கு இங்கு இறைவன் அளித்தது, தனது அருள் காரணமாகவாம்.

விளக்கவுரை

'தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு நியமித்து அதற் கேற்ற உடம்பைக் கொடுத்துக் கருத்துக்களையும் தோற்றுவித்தான்' என்றபடி. 'உற்பத்தியும்' என்ற உம்மை தொகுத்தல் பெற்றது.

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறும் மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே. **#25**

பரவெளியைப் பற்றிநிற்கின்ற வேதப் பொருளை உள்ளவாறு உணர்ந்து சொன்னால் அதுவே, 'உடம்பைப் பற்றி நிற்கின்ற உயிருணர்வில் நிலைத்துநிற்கும் மந்திரம்' எனப்படும். அம்மந்திரத்தை இடையறாது உணர உணரப்பேரின்பம் கிடைப்பதாம். அவ்வாற்றால் நான்பெற்ற இன்பத்தை, இவ்வுலகமும் பெறுவதாக.

விளக்கவுரை

உயிர்களின் உணர்வில் தோன்றும் கருத்துக்களே சுத்தமாயையின் காரியமாகிய நாதத்தைப்பற்றி நிற்பனவாக, இறைவன் உலகிற்கு உணர்த்தும் பொருள்கள் அவனது அருள் வெளியைப் பற்றுக்கோடாகக் கொண்டுநிற்றல் பற்றி 'வான் பற்றி நின்ற மறைப்பொருள்' என்றார். இதனால், மந்திரங்களின் இயல்பும், அவற்றின் பயனும் இவை எனக் கூறுவார்போன்று, தாம் செய்யும் நூல் மந்திரமாதலையும், அதன் பயனையும் கூறினார் என்க.

பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை
உறைப்பொடுங் கூடிநின் றோதலு மாமே. **#26**

தேவர் பலரும், பிறப்பில்லாத முதல்வனும், 'நந்தி' என்னும் பெயருடையவனும் ஆகிய சிவபெருமானைத் தூய்மையுடன் சென்று கைதொழுது இம் 'மந்திரமாலை' நூலை மறவாது மனத்துட் கொள்வர். ஆகவே, நீவிரும் இதனை உறுதியாக நின்று ஓதுதல் வேண்டும்.

விளக்கவுரை

'உண்மைச் சிவநூல் எங்கு உளதாயினும் அதனைத் தேவர் மகிழ்ச்சியோடும் கைக்கொண்டு போற்றுவர்' என்னும் துணிவு பற்றி; 'வானவர் மறப்பிலர் நெஞ்சினுள் மந்திரமாலை' என்றார். இக்கருத்தே பற்றிச் சேக்கிழாரும், 'ஞானசம்பந்தர் நமச்சிவாயத் திருப்பதிகத்தை வானமும் நிலனுங்கேட்க அருளிச்செய்தார்' என்றும், 'நாவுக்கரசரது திருப்பெயரை உலகேழினும் மன்னுக என்று இறைவன் அருளிச்செய்தான்' என்றும் கூறினார். 'மந்திர மாலை' என்றது நூற் பெயர் குறித்தவாறு. எனவே, இவை இரண்டுபாட்டாலும் நூற் பெயரும், நூலது பெருமையும் கூறப்பட்டனவாம்.

அங்கி மிகாமைவைத் தான்உடல் வைத்தான்
எங்கும் மிகாமைவைத் தான்உல கேழையும்
தங்கி மிகாமைவைத் தான்தமிழ்ச் சாத்திரம்
பொங்கி மிகாமைவைத் தான்பொருள் தானுமே. **#27**

உடம்பைப் படைத்த இறைவன், அதனுள் வேண்டும் அளவிற்கே நெருப்பை அமைத்துள்ளான். நிலவுலகைப் படைத்த அவன் அளவின்றி எங்கும் பரந்து கிடப்பப்படையாது, ஏழென்னும் அளவிற்படவே படைத்தான். அவ்வாறே தமிழ் நூல் களையும் கற்பாரின்றி வீணேகிடக்கவையாது, அளவாக வைத்தான். பொருளையும் அவற்றால் மிகைபடாது இன்றியமையாத அளவிலே புலப்பட வைத்தான்.

விளக்கவுரை

'ஆகவே, தமிழாலாய இந்நூலும் மூவாயிரம் பாடலுள் இன்றியமையாப் பொருள்களைக் கூறுவதாய் அமையும்' என்பதாம். 'இலட்சம் கிரந்தம், கோடி கிரந்தம் என்றாற்போல் வனவற்றை நோக்க, இம்மூவாயிரம் பாடல் எம்மட்டாய் எல்லா ஆகமங்களுமாகும் என்று இகழற்க' என்றவாறு. இதனானே, 'சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராய்ச் சுருங்கிய நில வுலகத்தின் கண் வாழும் சகலராய மக்கட்கு ஏற்புடையன தமிழ் நூல்களே' என்பதும் குறித்தவாறு காண்க. 'உலகேழ்' என்றது நாவலந்தீவு முதலிய ஏழு தீவுகளை. நாயனார் இந்நூல்செய்த காலத்தில், 'தொல்காப்பியம், திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, திருவாசகம், திருக்கோவையார்' என்னும் இவையே தமிழ்மொழியில் சிறந்த நூல்களாய் விளங்கிப் பயனைக் குறை வின்றித் தந்தமையின்;

'தங்கி மிகாமை வைத்தான் தமிழ்ச்சாத்திரம் - பொங்கி மிகாமை வைத்தான் பொருள் தானுமே' என்றார். காரைக்காலம்மையார் பாட்டு முதலாக இன்று பதினொன்றாந் திருமுறையில் உள்ளனவற்றுள் சில, நாயனார் காலத்து இருந்தனவா என்பது ஆராய்ந்துணரத் தக்கது. மாணிக்கவாசகர் தாம் கூறும் தலங்களுள் திருவிடைமருதூரைக் குறித்துத் திருவா வடுதுறையைக் குறியாமையால், இந்நாயனாராலே அத்தலம் 'நவகோடி சித்தபுரம்' என்பது முதலிய பல சிறப்புக்களைப் பெற்றது, அவர் காலத்திற்குப் பின்னரே என்பது துணியப்படும். நாயனாரது காலத்தில் திருவாவடுதுறை பொதுவான ஒரு சிவதலமாய் இருந்தது எனவும், எக்காரணத்தாலோ இறைவன் திருவருள் இவரை அத்தலத்தில் இருத்தியது எனவும் கொள்க. 'கோகழி' என்பதைத் 'திருவாவடு துறை' எனச் சிலர் கருதுதல் பொருந்துவதாய் இல்லை. இப்பாட்டின் பின்பதிப்புக்களில் காணப்படும் 'அடிமுடி காண்பார்' என்னும் பாட்டுச் சிவபரத்துவத்தில் இருத்தற்குரியது.

ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை
மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை
ஆயத்தை அச்சிவன் றன்னை அகோசர
வீயத்தை முற்றும் விளக்கியிட் டேனே. **#28**

இம்மூவாயிரம் பாட்டுக்களிலே, 'அறியப்படும் பொருள், அறிவு, அறிபவன், அசுத்தமாயா காரியம், சுத்தமாயா காரியம், அனைத்திற்கும் மேலான பரம்பொருளாகிய சிவன் என்று சொல்லப்படுகின்ற வாக்கு மனங்கட்கு எட்டாத முதல்கள் ஆகிய அனைத்தின் இயல்பையும் முற்றக் கூறுவேன்.

விளக்கவுரை

சுத்த தத்துவம் காலம் கடந்தன ஆதல்பற்றி, 'நித்தப்பொருள்' என்று சொல்லப்படுதலால், காலத்திற்கு உட்பட்ட ஏனைத் தத்துவங்களை, 'மாயம்' என்றார். மாயம் - மாய்தலுடையது. 'பரை' என்றது பரநாதத்தை. ஆயம் - கூட்டம்; தொகுதி. 'பரை முதலாகிய தொகுதி' எனச் சுத்ததத்துவங்களைக் குறித்தவாறு. மாயையைக் கூறவே, ஏனைய கன்ம ஆணவ மலங்களும் பெறப் படும். 'அறிபவன்' எனப்பட்டது பசுவாகிய ஆன்மாவே என்பது வெளிப்படை. 'ஞாதுருவத்தை' என்பதில் அத்து, வேண்டாவழிச் சாரியை. பதியாகிய இறைவன் அறியப்படும் பொருளாய் நிற்றல் தடத்தநிலையிலாதலின், 'ஞேயம்' என்றது தடத்த சிவனையாம். ஞானம், அவனது சத்தி. 'சொரூப சிவன்' என்பது உணர்த்துதற்கு, 'அச்சிவன்' எனச் சேயனாகச் சுட்டிக் கூறினார். அகோசரம் - அகப் படாமை. பசு பாசங்களின் உண்மை இயல்புகளும் வாக்கு மனங்கட்கு அகப்படுவன அல்லவாதல் பற்றி அனைத்தையும்

'அகோசரம்' என்றார். 'பீசம்' என்னும் ஆரியச்சொல். 'வீசம்' என்று ஆகிப் பின் எதுகை நோக்கி, 'வீயம்' எனத் திரிந்தது. பீசம் - வித்து. 'சிறிய அளவில் செய்யப்படினும், 'இந்நூலுள் ஆகமப்பொருளாகிய முப்பொருள் இயல்பு முழுவதும் எஞ்சாமற் கூறப்படும்' என்றவாறு. துணிவு தோன்ற, 'விளக்கியிட்டேன்' என இறந்த காலத்தாற் கூறினார்.

விளக்கிப் பரமாகும் மெய்ஞ்ஞானச் சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி
துளக்கறும் ஆனந்தக் கூத்தன்சொற் போந்து
வளப்பிற் கயிலை வழியில்வந் தேனே. **#29**

இவை அனைத்தையும் விளக்கிச் சிவபெரு மானது உபதேச முறையில் நின்று, 'திருக்கயிலாய பரம்பரையில் வந்த ஆசிரியன்' என்னும் பேற்றைப் பெற்றவனாவேன்.

விளக்கவுரை

பரமாகும் சோதி, பெருமையன், ஆனந்த நந்தி என்பனவும் சிவபெருமானையே குறித்தன. 'வளப்பம்' என்பது, 'வளப்பு' என நின்றது

நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவ னாயினேன்
நந்தி அருளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நான்இருந் தேனே. **#30**

சிவபெருமானது திருவருளால் மூலனது உடலைப் பற்றிநின்றபின், அவனது திருவருளாலே ஆகமத்தைப் பாடும் நிலையை அடைந்தேன். அந்நிலையில் அவன் அருளால் நிட்டையும் பெற்றுச் சீவன் முத்திநிலையில் பல்லாண்டுகள் இருக்கின்றேன்.

விளக்கவுரை

'மூலனை நாடி' என்றது வழிமொழிதல். 'ஆகமத்தை அருளிச்செய்தவர் சதாசிவ நாயனார்' என்றல் பற்றித் தம்மை அவ்வாறு கூறினார். 'சீவன் முத்தி நிலையிலிருந்தே இதனைச் செய்கின்றேனாதலின், இது, சிவன் மொழியேயன்றி என்மொழி யன்று' என்பதாம். உலகம் உய்தல் காரணமாக அருளாளர் இங்ஙனம் பட்டாங்குக் கூறுவனவற்றை நம்மனோர் சொற்போலத் தற்புகழ்ச்சி என்றல் கூடாமை அறிக. இது பற்றி யன்றே 'நிறைமொழி மாந்தரா யினார் சில சொற்களை ஆணையாற் கிளப்பர்' *(தொல் - செய்யுள் - சூ. 178)* என்றதூஉம் என்க. 'பல்லாண்டுகள்' என்பது ஆற்றலான் வந்தது.

இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி
அருக்கிய மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனும் சோமனும் ஆரழல் வீச

உருக்கி யுரோமம் ஒளிவிடுந் தானே. **#31**

பல்லாண்டுகள் ஓர் உடம்பிலே இருத்தல் கூடுமோ? உடம்பு தளர்ச்சியுற்று அழிந்தொழியாதோ எனில் மறை விடமாகிய மூலாதாரத்துள், எழாது கிடக்கின்ற அரிய நெருப்பை, 'சூரியகலை. சந்திரகலை' என்னும் இரு காற்றும் அடங்கி நின்று மூட்டி வளர்க்கும் படி இருந்தால், உடம்பு நெடுங்காலம் தளர்வின்றி இருக்கும்; உரோமமும் வெளிறாது கறுத்து அழகுற்று விளங்கும்.

விளக்கவுரை

'அவ்வாற்றால் நான் பல்லாண்டுகளாக இருக் கின்றேன்' என்பதாம். இரண்டாம் அடி முதலாகத்தொடங்கி, 'இருக்கும் ஆரழலை அருக்கனும் சோமனும் வீச இருக்கில் எண்ணிலி கோடி இருக்கும்' எனக்கூட்டி, 'இருக்கும்' என்பதற்கு 'உடம்பு' என்பது வருவிக்க. உருக்குதல் - மனத்தைக் கவர்தல்.

பிதற்றுகின் றேன்என்றும் பேர்நந்தி தன்னை
இயற்றுவன் நெஞ்சத் திரவும் பகலும்
உயற்றுவன் ஓங்கொளி வண்ணன்எம் மானை
இயற்றிகழ் சோதி இறைவனும் ஆமே. **#32**

இவ்வாறிருக்கின்ற நிலையில் நான் இரவும் பகலும் சிவபிரானது பெயரையே பிதற்றுவேன். நெஞ்சில் நினைப்பேன்; காயத்தால் அவனை வழிபடுவேன். அதனால், விளக்க விளங்குகின்ற என் அறிவும், இயல்பாய் விளங்குகின்ற சிவனது அறிவேயாய்த் திகழும்.

விளக்கவுரை

விடாது சொல்லுதலை, 'பிதற்றுதல்' என்றார். 'நந்தி பேர் தன்னை' என மாற்றுக. நெஞ்சத்து இயற்றுதல், நினைத்தல். 'உஞற்றுவன்' என்பது, 'உயற்றுவன்' என நின்றது. 'முயற்றுவன்' எனவும் பாடம் ஓதுவர். 'இயல்பாகத் திகழ்கின்ற சோதி' என்க. இறைவன், ஆகுபெயர். 'ஆம்' என்றதற்கு எழுவாய் வருவிக்கப் பட்டது.

பதினெட்டுத் திருமந்திரங்களால் தம் வரலாறும், நூல் வரலாறும் கூறிய நாயனார், நான்கு திருமந்திரங்களால் அவையடக்கம் கூறுகின்றார். நாயனார் அவையடக்கம் கூறியது, இறைவனது பெருமையை மாணாக்கர் உணர்தற்பொருட்டு என்க.

ஆர்அறி வார்எங்கள் அண்ணல் பெருமையை
ஆர்அறி வார்அவ் வகலமும் நீளமும்
பேர்அறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேர்அறி யாமை விளம்புகின் றேனே. **#33**

எங்கள் சிவபெருமானது திருவருளின் பெருமையை முற்ற உணர்வோர்

யாவர்! அவனது பரப்பைத்தான் யாவர் உணர வல்லார்! சொல்லுக்கு அகப்படாத பேரறிவுப் பொருள் தன்னோடு ஒப்பது பிறிதொன்றில்லதாய் உளது. அதனது மெய்ந்நிலையை அறியாமலே நான் பலரும் அறியக்கூறத் தொடங்கினேன்.

விளக்கவுரை

'ஒன்று' எனச் சிவபெருமானையே வேறு போலக் கூறினார். மெய்ம்மையை, 'வேர்' என்றார். 'அறியாமல்' என்றது, 'முற்ற உணராது சிறிதுணர்ந்த அளவிலே' என்றவாறு. 'அறிந்த அளவில் செய்கின்றேன்' என்றபடி. விளம்புதல் - பலரறியக் கூறுதல்.

பாடவல் லார்நெறி பாடஅறிகி லேன்
ஆடவல் லார்நெறி ஆடஅறிகி லேன்
நாடவல் லார்நெறி நாடஅறிகி லேன்
தேடவல் லார்நெறி தேடகில் லேனே. **#34**

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுள் ஒன்றையும் நெறிப்பட அறிகிலேன். அளவை நூல் முறையால் ஆராயவும் வல்லனல்லேன். பேரன்பினால் இறைவனையே தேடி அலையும் நிலைமையும் இல்லேன்.

விளக்கவுரை

'நான் சிவபெருமானது பெருமையைக் கூறுதல் எவ்வாறு' என்பது குறிப்பெச்சம். எனவே, 'எனது சொல் அறிவுடை யோர்க்கு நகை விளைக்கும்' என்பதாம். பாடுதல், இயல்வகையாலும். இசைவகையாலும் என்க.

மன்னிய வாய்மொழி யாலும் மதித்தவர்
இன்னிசை உள்ளே எழுகின்ற ஈசனைப்
பின்னை உலகம் படைத்த பிரமனும்
உன்னும் அவனை உணரலும் ஆமே. **#35**

தன்னை அறிகின்றவரது உள்ளத்தில் வீணையுள் இனிய இசைபோல மெல்ல எழுகின்றவனும், உலகத்தைப் படைத்த பிரமனாலும் தியானிக்கப் படுகின்றவனும் ஆகிய இறைவனது பெரு மையை, நிலைபெற்ற மெய்ந்நூல் வழியாகவும் சிறிது உணர்தல் கூடும்.

விளக்கவுரை

'அவ்வாற்றால் ஆகமத்தின்வழிச் சிறிது கூறு கின்றேன்' என்பது குறிப்பெச்சம். எனவே, 'அம்முதனூற் பொருளை யுடையது என்பதுபற்றி அறிவுடையோர் இந்நூலை இகழார்' என்பது கருத்து. 'மதித்தவர் உள்ளே இன்னிசைபோல எழுகின்ற ஈசனை' எனக் கூட்டுக. 'இன்னிசை வீணையில் இசைந் தோன் காண்க' (*தி.8* திருவாசகம் . திருவண்டப்பகுதி *- 35)* என்றமை நினைக்கத்தக்கது. பின்னைப் படைத்தல் - மீளப்

படைத்தல்.

தத்துவ ஞானம் உரைத்தது தாழ்வரை
முத்திக் கிருந்த முனிவருந் தேவரும்
ஒத்துடன் வேறாய் இருந்து துதிசெயும்
பத்திமை யால்இப் பயன்அறி யாரே. **#36**

மன்னிய வாய்மொழியாகிய சிவாகமங்கள், வீடு பேற்றை அடைவதற்கு விரும்பியிருந்த முனிவரும், தேவரும் கருத் தொருமை கொண்டு உலகப் பயன் விரும்பும் மக்களை விடுத்துத் தனி இடத்திலிருந்து வேண்டிக்கொண்ட அன்பு காரணமாக இறைவன் உண்மை ஞானத்தைக் கயிலைத் தாழ்வரைக்கண் இருந்து உணர்த்தி யருளிய நூல்களாம். பக்குவம் இல்லாதோர் இவ்வுண்மையை அறிய மாட்டார்.

விளக்கவுரை

'அதனால், அவற்றை வேதத்திற்குப் புறம்பான நூல் என்று இகழ்வர். அவர் என்னையும் இகழ்வராதலின், அது பொருளன்று' என்பது குறிப்பெச்சம். மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி, 'பத்திமையால் தத்துவஞானம் தாழ்வரை உரைத்தது' எனக்கூட்டி உரைக்க. 'உரைத்தது' என்னும் பயனிலைக்கு எழுவாய் முன்னைப் பாட்டினின்றும் வந்தது. 'பத்திமையால் உரைத்தது' எனவே, அறியார் அஃதில்லாதோர் என்பது விளங்கிற்று. இதனால், 'வேதம் உலகர்பொருட்டும், சிவாகமம் சத்திநிபாதர் பொருட்டும் சிவபெருமானால் செய்யப்பட்டன' என்பது சொல்லப்பட்டது.

இதனை,

'வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்;
வேறுமுள நூல்இவற்றின் விரிந்த நூல்கள்;
ஆதிநூல் அனாதிஅம லன்தருநூல் இரண்டும்;
ஆரணநூல் பொது; சைவம் அருஞ்சிறப்பு நூலாம்;
நீதியினால் உலகர்க்கும் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது'

எனச் சிவஞானசித்தி விளக்குதல் காண்க.

பாயிரத்திறுதியில் நூற்பாட்டின் தொகையும், நூற்பயனும் கூறுகின்றார்.

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணலும் ஆமே. **#37**

மூலன் பாடிய மூவாயிரம் பாடலையுடைய இத்தமிழ் நூல் நந்திபெருமானது அருள் உணர்த்திய பொருளை உடையதே. அதனால், நாள்தோறும் இதனைப் பொருளுணர்ந்து ஓதுவோர் முதற் கடவுளாகிய

சிவபெருமானை அடைவர்.

விளக்கவுரை

'மூலன்' என்றது தம்மைப் பிறர்போலக் கூறியவாறு. ஞானசம்பந்தரும், நம்பியாரூரரும் தம் பதிகத்திறுதியில் இவ்வாறு கூறுதல் காண்க. இங்ஙனம் நாயனார் 'மூவாயிரம் தமிழ்' என்றமை யானும், மேல் 'மந்திர மாலை' என்றமையானும் சேக்கிழார், 'நற்றிரு மந்திரமாலை' எனவும், 'தமிழ் மூவாயிரம் சாத்தி' எனவும் கூறினார் என்க.

வைத்த பரிசே வகைவகை நன்னூலின்
முத்தி முடிவிது மூவா யிரத்திலே
புத்திசெய் பூர்வத்து மூவா யிரம்பொது
வைத்த சிறப்புத் தரும்இவை தானே. **#38**

பொழிப்புரை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டுக்கள் பின்வந்தோர் செய்தவை. இவை முறையே 'முத்தி சாதனமாகிய இந்நூற்கு முதற்கண் உள்ள இப் பாட்டுக்கள் பாயிரம்' என்பதும், 'திருமூலரது முதல் மடத்தினின்றும் அவர் மாணாக்கர் எழுவரது கிளைமடங்கள் தோன்றின; அவை அனைத்திற்கும் நூல் இத்திருமந்திரம்; இஃது ஒன்பது தந்திரங்களையும் உடையது' என்பதும், 'திருமூலர் மாணாக்கர் எழுவருள், 'காலாக்கினி' என்பவரது மரபு, அகோரர், திருமாளிகைத் தேவர், நாதாந்தர், பர மானந்தர் போக தேவர், மூலர் என்னும் முறையில் தொடர்ந்து விளங் கிற்று' என்பதும் கூறுவன. இறுதிக்கண் சொல்லப்பட்ட 'மூலர்' என் பவர்தம் மாணாக்கரே இப்பாட்டுக்களைச் செய்தார் போலும்! அல்லது முதல் இரண்டை முன்னவருள் சிலர் செய்திருத்தலும் கூடுவதே.

வந்த மடம்ஏழு மன்னும்சன் மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரைத்
தந்திரம் ஒன்பது சார்வுமூ வாயிரம்
சுந்தர ஆகமச் சொல்மொழிந் தானே. **#39**

பொழிப்புரை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டுக்கள் பின்வந்தோர் செய்தவை. இவை முறையே 'முத்தி சாதனமாகிய இந்நூற்கு முதற்கண் உள்ள இப் பாட்டுக்கள் பாயிரம்' என்பதும், 'திருமூலரது முதல் மடத்தினின்றும் அவர் மாணாக்கர் எழுவரது கிளைமடங்கள் தோன்றின; அவை அனைத்திற்கும் நூல் இத்திருமந்திரம்; இஃது ஒன்பது தந்திரங்களையும் உடையது' என்பதும், 'திருமூலர் மாணாக்கர் எழுவருள், 'காலாக்கினி' என்பவரது மரபு,

அகோரர், திருமாளிகைத் தேவர், நாதாந்தர், பர மானந்தர் போக தேவர், மூலர் என்னும் முறையில் தொடர்ந்து விளங் கிற்று' என்பதும் கூறுவன. இறுதிக்கண் சொல்லப்பட்ட 'மூலர்' என் பவர்தம் மாணாக்கரே இப்பாட்டுக்களைச் செய்தார் போலும்! அல்லது முதல் இரண்டை முன்னவருள் சிலர் செய்திருத்தலும் கூடுவதே.

கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர்நா தாந்தர்
புலங்கொள் பரமானந் தர்போக தேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே. **#40**

பொழிப்புரை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டுக்கள் பின்வந்தோர் செய்தவை. இவை முறையே 'முத்தி சாதனமாகிய இந்நூற்கு முதற்கண் உள்ள இப் பாட்டுக்கள் பாயிரம்' என்பதும், 'திருமூலரது முதல் மடத்தினின்றும் அவர் மாணாக்கர் எழுவரது கிளைமடங்கள் தோன்றின; அவை அனைத்திற்கும் நூல் இத்திருமந்திரம்; இஃது ஒன்பது தந்திரங்களையும் உடையது' என்பதும், 'திருமூலர் மாணாக்கர் எழுவருள், 'காலாக்கினி' என்பவரது மரபு, அகோரர், திருமாளிகைத் தேவர், நாதாந்தர், பர மானந்தர் போக தேவர், மூலர் என்னும் முறையில் தொடர்ந்து விளங் கிற்று' என்பதும் கூறுவன. இறுதிக்கண் சொல்லப்பட்ட 'மூலர்' என் பவர்தம் மாணாக்கரே இப்பாட்டுக்களைச் செய்தார் போலும்! அல்லது முதல் இரண்டை முன்னவருள் சிலர் செய்திருத்தலும் கூடுவதே.

முதல் தந்திரம்

3.1.சிவபரத்துவம்

சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கும் யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே.
#41

தேவருள்ளும் ஒருவரும் சிவனோடு நிகர்ப்பவர் இல்லை; மக்களுள்ளும் அவனொடு ஒப்பவராவார் இல்லை; ஆதலின், இயல்பிலே உலகைக் கடந்து நின்று உணர்வுக் கதிரவனாய் (ஞான சூரியனாய்) விளங்கும் முதற்கடவுள் அச்சிவ பெருமானே.

விளக்கவுரை

'இங்கு' என்றது 'இம் மண்ணுலகில்' என்றபடி. 'சித்தியாலும், முத்தியாலும் சிலர் சிவனோடு ஒத்திருப்பர்' என மயங்கிக் கூறுவாரை மறுத்தற்கு, 'அவனொடொப்பார் இங்கும் யாவரும் இல்லை' என்றார். 'ஆதலின்' என்பது சொல்லெச்சம். 'அன்று கடந்து' என மாற்றுக. 'அன்று' என்றது 'அநாதி' என்னும் பொருளது. 'அன்றே' என்னும் தேற்றேகாரம் தொகுத்தல் பெற்றது. பொன் - பகலவன். 'பொன்னொளியாய்' என உருவகப் பொருண்மைத்தாய ஆக்கம் விரிக்க. தவன் - தவத்தின் பயனாய் உள்ளவன்; பரமுத்திப் பேறாய் உள்ளவன்; 'முதற்கடவுள்' என்றவாறு. தா மரையான் - தாவுகின்ற மானை ஏந்தியவன். 'சடைமுடித் தா மரையான்' என்றது, 'சிவபெருமான்' என்னும் பெயரளவாய் நின்றது.

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே. **#42**

சிவபெருமானைத் தவிர இறவாதவர் பிறர் இல்லை; அவனை உணராது செய்யும் செயல் சிறந்த தவமாதல் இல்லை; அவனது அருளின்றி மும்மூர்த்திகளால் யாதொரு செயலும் நடவாது. அவனது அருளின்றி முத்திக்கு வழி இல்லை.

விளக்கவுரை

'சிவனொடொக்குந் தெய்வம் தேடினும் இல்லை' என மேற்கூறியதனையே அநுவதித்தார்; அதனால், பின்வருவன வற்றை வலியுறுத்தற்பொருட்டு. அருந்தவம், வீடடைவிக்கும் தவம். 'ஊர் புகுதல்' என்றது ஒட்டணியாய் நின்று, முத்திபெறுதலைக் குறித்தது. இறவாமை

முதலிய நான்கும் முதற்கடவுளது இயல்புகள் என்பதைப் பெயர்த்துரை *(அநுவாத)* வாய்பாட்டாற் கூறி, 'அவ்வியல் புகளை உடையவன் சிவபெருமான் ஒருவனே' என்பது உணர்த்திய வாறு. நஞ்சுண்ட வரலாறு கூறும் புராணத்தால் சிவபெருமான் இறவாதவன் என்பது தெளிவாதலாலும், 'சிவன் முத்திக் கடவுள்' என்பதே வழக்காதலாலும் 'அவனை ஒழிய அமரரும் இல்லை; அருந்தவம் இல்லை' என்றார். அவை அங்ஙனமாகவே, ஏனைய இரண்டும் இனிது பெறப்பட்டன. 'நீல மணிமிடற் றொருவன்போல மன்னுக', *(புறம் - 91)* 'சாவா மூவாச் சிங்கமே' *(தி. 6. ப.99 பா.2)* என்றாற் போலும் மெய்ம்மொழிகளைக் காண்க.

முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னையொப் பாயொன்றும் இல்லாத் தலைமகன்
தன்னையப் பாஎனில் அப்பனு மாய்உளன்
பொன்னையொப் பாகின்ற போதகத் தானே. **#43**

பொன்போலும் மேனியையுடைய, யானைத் தோற் போர்வையாளனாகிய சிவபெருமானே! ஊழிகளுள் ஒன்றில் ஒருவர் மற்றிருவரையும், பிறிதொன்றில் மற்றொருவர் ஏனை இருவரையும் படைக்குமாற்றால் தம்முள், 'முன்னோர், பின்னோர்' என்னும் வேறுபாடில்லாத மும்மூர்த்திகளுக்கும் என்றும் முன்னோன்; அத்தன்மை பிறருக்கு இன்மையால், தன்னை ஒப்பாகின்ற பொருள் பிறிதொன்றும் இல்லாத பெருந்தலைவன்; தன்னை, 'அப்பா' என்று அழைப்பவர்க்கு அப்பனுமாய் இருக்கின்றான்; (உம்மையால்) 'அம்மே' என்று அழைப்பவர்க்கு அம்மையாயும் இருக்கின்றான்.

விளக்கவுரை

'முன்' என்றது பல ஊழிக்காலங்களை. 'முன்னோன்' என்றது, அவர்களை என்றும் தானே படைத்தல் பற்றி. 'படைப்போற் படைக்கும் பழையோன்', 'முன்னோன் காண்க' *(தி.8* திருவாசகம் - திருவண்டப்பகுதி *13,29)* என்றமை காண்க. 'அயனைமுன் படைத்திடும் ஒரு கற்பத்து; அரியை முன் படைத்திடும் ஒரு கற்பத்து' *(*சிவஞானபாடியம் - சூ. *1* அதி. *2)* என்றது அறிக. 'தன்னை யொப்பாய் ... ... தலைமகன்' என்றது, ஒருவனாதல் குறித்தபடி. 'ஏகோ ஹிருத்ர:' *(சுவேதாசுவதரம்)* 'தன்னேரில்லோன் தானே காண்க' *(தி.8* திருவாசகம் - திருவண்டப்பகுதி *30)* என்றதும் காணத்தக்கது. இவ்வாறாகவே இது, 'ஒன்றவன்றானே' என்றதனை விளக்கியவாறாம். 'அப்பனும், அம்மையும்' என்றது, 'உலகிற்கு முதல்வன்' என்றதாம். இதுவும், முதற் கடவுள் இயல்பும், அவற்றைச் சிவபெருமான் உடையனாதலுங் கூறியது.

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்

ஆயினும் ஈசன் அருளறி வார்இல்லை
சேயனு மல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே. **#44**

நீண்ட சடையை உடையவனாகிய சிவபெருமான், தேறுங்கால் நெருப்பினும் வெம்மை உடையன்; அருளுங்கால் நீரினும் தண்மையுடையவன்; ஆயினும், அத்தகைய அவனது ஆற்றலின் தன்மையை அறியும் உலகர் இல்லை. உலகர்க்கு இவ்வாறு அறியப்படாத சேய்மைக்கண் உளனாகிய அவன், மெய்யன்பர்க்கு அவ்வாறின்றி நன்கறியப்படும் அணிமைக்கண் உள்ளவனாய்த் தாயினும் மிக்க தயவுடையனாவான்.

விளக்கவுரை

அறியாமையாவது, உலகில் நிகழும் மறமும், அறமும் அவன் ஆணைவழியால் நிகழ்வன என்பதை அறியாமல், பிறவாற்றான் நிகழ்வனவாக எண்ணுதல். தெறலும் கருணை யேயாதல் பற்றி, *'அருள்'* எனப் பொதுப்படக் கூறினார். தாயது தன்மை; குழவிக்குத் தனது பாலைக் கைம்மாறு கருதாது அளித்தல் ஆதலின் அஃது, உயிர்கட்குத் தனது பேரின்பத்தைக் கைம்மாறு கருதாது வழங்கும் கடவுட்டன்மைக்கு உவமையாயிற்று. தாய்க்குக் குழவி பசித்த காலத்தில் பால்கொடுத்தல் இயலாமையும், இயலினும் நிரம்பக் கொடுக்க இயலாமையும், அவை காரணமாகக் குழவி மாட்டு அவட்கு வெறுப்பும் ஒரோவழித் தோன்றுதலும் உண்டாகலின், அன்ன குறைபாடில்லாத கடவுளை, *'தாயினும் நல்லன்'* என்றார். *'பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' (தி.8* திருவாசகம் - பிடித்த பத்து *9)* என்றதும் காண்க. இதனால், *'ஒறுத்தல், அளித்தல்களால் உலகத்தை உடனாய்நின்று நடத்துதலும், அவ்வாறு நடத்தினும் உலகர்க்கு வெளிப்படாது, உணர்வினர்க்கே வெளிப்படுதலும், வெளிப்படக் கண்ட உணர்வினர்க்குத் தனது பேரின்பத்தைக் கைம்மாறு கருதாது இடையறவின்றி வழங்குதலும்'* ஆகிய கடவுட்டன்மைகள் கூறப்பட்டன. *'சேயினும் நல்லன்'* என்பது பாடம் அன்று. *'நற்றாழ்சடையோனே'* என்பது பாடமாதல் வேண்டும்.

பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னாற் பிறங்க இருந்தவன் பேர்நந்தி
என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படு வாரில்லை தானே. **#45**

என்னால் வணங்கப்படுகின்ற எங்கள் சிவபெரு மான், தனது பொற்சடை பொன்னால் செய்யப்பட்டனவே என்னும்படி பின்னலோடு விளங்குமாறு இருப்பவன். 'நந்தி' என்னும் பெயர் உடையான். அவனால் வணங்கப்படுபவர் ஒருவரும் இல்லை.

விளக்கவுரை

'தானே எல்லாராலும் வணங்கப்படுபவன்' என்பதாம். 'பொற்சடை' என்பதில், 'பொன்' என்றது, வாளா பெயராய் நின்றது. பின் - பின்னுதல்; முதனிலைத் தொழிற்பெயர். ஆல், ஒடுவின் பொருளில் வந்தது. 'பின்னால்' என்பதனை இடப்பொருட் டாக்கி, அது பிறரைத் தலைதாழ்த்து வணங்காமையைக் குறிக்கும் குறிப்புமொழியாக உரைப்பாரும் உளர். 'பின்தாழ் சடையானை'(தி.*1* ப.*74* பா.*4*) என்றாற்போல வரும் எவ்விடத்தும் அங்ஙனமே உரைத்தல் அவர் கருத்து. சடை தவக்கோலத்தை உணர்த்துதலால், பற்றின்மையைக் குறிக்கும் குறிப்பாகும். பொன்மை கவர்ச்சியையும், பின்னல் பழமையையும் குறிக்கும். நந்தி - இன்பம் உடையவன். 'அதனைத் தனக்கே உரிய பெயராக உடையவன்' என்றவாறு. 'சிவன்' என்பது இப்பொருளும் தரும். இன்பம், இயல்பாய் இருத்தற்குக் காரணம் மெய்ம்மையும், அறிவும் இயல்பாக இருத்தலே என்பது தோன்ற, முதற்கடவுளை, 'சச்சிதானந்தன்' என உபநிடதங்கள் கூறுதல் அறிக. எனவே, அவையும் இதனாற் குறிக்கப்பட்டனவாம். இதனால், பற்றின்மையும், கவர்ச்சியும், காலத்திற்கு உட்படாமையும், மெய்யறிவின்பங்களை இயல்பாக உடைமையும், தனக்கு மேலாவார் இன்றித் தானே எல்லார்க்கும் மேலானவனாதலும் ஆகிய கடவுட்டன்மைகள் கூறப்பட்டன.

அயலும் புடையும்எம் ஆதியை நோக்கில்
இயலும் பெருந்தெய்வம் யாதுமொன் றில்லை
முயலும் முயலின் முடிவும்மற் றாங்கே
பெயலும் மழைமுகிற் பேர்நந்தி தானே. **#46**

எங்கள் சிவபெருமானது பெருமையை நோக்குமிடத்து அவனோடொத்த பெருங்கடவுள் சேய்மையிலும் இல்லை; அண்மையிலும் இல்லை என்பது புலப்படும். உழவும், உழவின் பயனும், அவற்றிற்கு முதலாயுள்ள மழையும், அம் மழையைத் தருகின்ற மேகமும் ஆகிய எல்லாம், 'நந்தி' என்னும் பெயருடைய அவனேயன்றிப் பிறர் இல்லை.

விளக்கவுரை

முயல் - முயற்சி; 'முயற்சி' எனினும், 'உழவு' எனினும் பொருந்தும். 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்'(குறள். *1031*) என்பதனால், உலகத்திற்கு முதலாதலை இவ்வாறு கூறினார். இதனானே மெய்ந்நெறியிலும் சாதனமும், அதனைத் தருகின்ற திருவருளும், அதற்கு முதலும் ஆதலும் பெறப்படுவதாம். இதனால், பந்தம், வீடு இரண்டற்கும் முதல்வனாதல் கூறப்பட்டது.

கண்ணுத லான்ஒரு காதலின் நிற்கவும்
எண்ணிலி தேவர் இறந்தார் எனப்பலர்
மண்ணுறு வார்களும் வானுறு வார்களும்
அண்ணல் இவன்என் றறியகி லார்களே. #47

சிவபெருமான் என்றும் ஒரு பெற்றியனாய் அழிவின்றி இருக்கவும், அளவற்ற தேவர்கள் அழிந்தனர் என்று புராணங்கள் முழங்கவும், மண்ணிலும், விண்ணிலும் உள்ள பலர் அப்பெருமானை, 'இவனே முதல்வன்' எனத் துணியமாட்டாத வராகின்றனர்.

விளக்கவுரை

'இஃது இரங்கத்தக்கது' என்பது குறிப்பெச்சம். 'காதல்' என்றது அருளை. ஒருபெற்றியாய அருளை, 'ஓர் அருள்' என்றார். நிற்றல் - அழிவின்றி நிலைத்திருத்தல். இதனால், அழிவில னாதல் கூறப்பட்டது. ஆகவே, 'அவனை ஒழிய அமரரும் இல்லை' என்பது விளக்கப்பட்டதாம்.

மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
எண்ணளந் தின்னம் நினைக்கிலார் ஈசனை
விண்ணளந் தான்தன்னை மேல்அளந் தாரில்லை
கண்ணளந் தெங்குங் கடந்துநின் றானே. #48

திருமால், பிரமன் முதலிய தேவர்களும் இன்னும் சிவபிரானது பெருமையை ஓர்ந்து தெளியவில்லை. ஆகவே, அண்டத்தின் அப்புறத்தும் உள்ள அவனது பரப்பை அளந்து கண்டவர் யார்? ஒருவரும் இல்லை. அவன் எவ்விடத்தையும் உள்அடக்கி அவை அனைத்தையும் கடந்து நிற்கின்றான்.

விளக்கவுரை

எண் - எண்ணம்; சிந்தனை. 'எண்ணால் அளந்து' என்க. கண் - இடம். 'எங்கும்' என்றது, 'எவ்விடத்தையும்' என்றவாறு. இதனால், அவனது பெருநிலை (வியாபகம்) கூறப்பட்டது.

அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்
படிகண் டிலர்மீண்டும் பார்மிசைக் கூடி
அடிகண் டிலேனென் றச்சுதன் சொல்ல
முடிகண்டே னென்றயன் பொய்மொழிந் தானே. #49

'சிவபெருமானது பெருநிலை (வியாபகம்) ஒருவராலும் அளத்தற்கரிது' என்பதற்கு, அயன், மால் இருவரும் அப்பெருமானது அடிமுடி தேடிக் காணமாட்டாது அல்லற்பட்ட வரலாறே போதிய சான்றாகும்.

விளக்கவுரை

'காண்பாராய இருவர்' எனவும், 'கண்டிலராய்க் கூடி' எனவும் இயைத்துரைக்க. இருவருள் ஒவ்வொருவரும் அடி, முடி இரண்டையுங்

காணுங் கருத்தினராய் முதற்கண்ணே தோல்வியுற் றமையின், 'அடி முடி காண்பார் அயன் மால் இருவர்' எனப் பொதுப் படவே கூறினார். படி - தாம் கருதிய நிலை. நிலவுலகினின்றே புறப்பட் டமையின், 'மீண்டும் பார்மிசைக் கூடி' என்றார். சிவபெருமானைப் பொதுநீக்கி உணர்தற்கு இவ்வரலாறு பெரிதும் சிறந்ததாய்ப் பயின்று வருவதாகலின், பின்னர்க் கூறப்படும் புராண வரலாறுகளுட் கூறுத லன்றி இவ்விடம் குறித்தருளினார். இவ்வாறன்றி, 'இத் திருமந்திரமும் பின்னர் வரும் இவ் வரலாற்று மந்திரங்களுள் ஒன்றாகற் பாலதே' என்பாரும் உளர்.

கடந்துநின் றான்கம லம்மல ராதி
கடந்துநின் றான்கடல் வண்ணன்அம் மாயன்
கடந்துநின் றான்அவர்க் கப்புறம் ஈசன்
கடந்துநின் றான்எங்கும் கண்டுநின் றானே. **#50**

பிரமனும், திருமாலும் ஓரோர் எல்லையளவில் பெருநிலை (வியாபகம்) உடையவராயினும், அனைவரினும் மேம்பட்ட பெருநிலையுடையவன் சிவபெருமான். அவன் அத்தகையனாய்ப் புறத்து நிற்பினும், எப்பொருளிலும் நிறைந்து அவற்றை அறிந்து நிற்கின்றான்.

விளக்கவுரை

ஆதி - முதல்வன். இறுதியில், 'கடந்து நின்றான்' என்றதன்பின், 'ஆயினும்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. இதனால் மேலதனை வலியுறுத்தி, எங்கும் நிறைந்து நிற்றலும் கூறப்பட்டது.

ஆதியு மாய்அர னாய்உட லுள்நின்ற
வேதியு மாய்விரிந் தார்ந்திருந் தான்அருட்
சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையுள்
நீதியு மாய்நித்த மாகிநின் றானே. **#51**

அருளாகிய ஒளி உருவினனாயும், என்றும் குறைதல் இல்லாத அவ்வருள் காரணமாக அனைத்துயிர்க்கும் நடுவுநிலைமையனாயும், அழிவில்லாதவனாயும் உள்ள சிவ பெருமான், தானே உலகிற்கு முதலாகியும், முடிவாகியும், பல்வகை உடம்பிலும் காணப்படுகின்ற இன்ப துன்பங்களாகியும் பரந்து நிறைந்திருக்கின்றான்.

விளக்கவுரை

ஆதி - பிரமன். அரன் - உருத்திரன். வேதி - மாற்றம். 'உடலுள் நின்ற' என்றதனால், அஃது இன்பதுன்ப நுகர்ச்சியைக் குறித்தது. எனவே, இது நிலைத்தொழிலை உணர்த்திற்று. முதல் இரண்டடிகளால் முத்தொழிற்கும் முதல்வனாதல் கூறப்பட்டது. இறுதி இரண்டடிகளால் அத்தொழில் புரிதற்குக் காரணம் உடம்பொடு புணர்த்தலால் கூறப்பட்டது. முன்னைத் திருமந்திரத்தில் பேரறிவு கூறப்பட்டாற்போல,

இத் திருமந்திரத்தில் பேராற்றல் கூறப்பட்டவாறு காண்க. 'எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் அறிதலின், உயிர்கள் நன்மையடைதற்பொருட்டு நடுவு நிலையாளனாய் என்றும் நின்று ஆக்கல் அழித்தல் முதலியவற்றைச் செய்கின்றான்' என்றபடி. 'விரிந்து ஆர்ந்திருந்தான்' என்றது, 'அவனது பெருநிலையால் விளையும் பயன் இது' என்றற்கு.

கோது குலாவிய கொன்றைக் குழற்சடை
மாது குலாவிய வாள்நுதல் பாகனை
யாது குலாவி அமரருந் தேவரும்
கோது குலாவிக் குணம்பயில் வாரே **#52**

திருத்தி விளங்கிய, கொன்றை மாலையணிந்த குழல்போலும் சடையை உடைய, அழகு விளங்கும் மங்கையைப் பாதியில் உடைய சிவபெருமானை மும்மூர்த்திகளும், தேவர்களும் எதனை விரும்பிக் குற்றத்தையே குணமாகக் கொண்டாடி வணங்கு கின்றார்கள்?

விளக்கவுரை

'தாம்தாம் வேண்டுவன யாவற்றையும் விரும்பியே அவ்வாறு வணங்குகின்றார்கள்' என்பது குறிப்பெச்சம். 'கோது' இரண்டனுள் முன்னது, 'கொழுது' என்பதன் மரூஉ. கொழுதுதல் - திருத்துதல். பின்னது - குற்றம். மகளிர் கூந்தலும் சிலபொழுது குழல் போலத் திருத்திவிடப்படுதல் பற்றியே, 'குழல்' எனப்படுகின்றது. அமரர் என்றது ஏனையோரை நோக்க நெடுநாள் வாழ்வுடையராதல் பற்றி மும்மூர்த்திகளைக் குறித்தது. 'கோது குணமாகக் குலாவிப் பயில்வார்' என மாற்றிக் கொள்க. குற்றமாவன, எலும்பும் சாம்பலும் அணிதல், சுடுகாட்டில் ஆடுதல், இரந்துண்டல் முதலியன.

கானார் புலித்தோல் உடை, தலைஊண், காடுபதி
ஆனால் அவனுக்கிங் காட்படுவார் ஆரேடி?
ஆனாலுங் கேளாய் அயனும் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ.
-தி.*8* திருவாசகம். திருச்சாழல். *12*

என்றமை காண்க. ஒன்றும் இல்லாதவன்போலவும், பித்தன் போலவும் காணப்படினும் வேண்டுவார் வேண்டுவன பலவற்றையும் அருளுதல் இதனால் தொகுத்துக் கூறப்பட்டது. 'மாது குலாவிய வாள்நுதல் பாகன்' என்றதும் அதனைத் தெளிவிக்கும் குறிப்பு.

காயம் இரண்டுங் கலந்து கொதிக்கினும்
மாயங் கத்தூரி யதுமிகும் அவ்வழி
தேசங் கலந்தொரு தேவனென் றெண்ணினும்
ஈசன் உறவுக் கெதிரில்லை தானே. **#53**

'காயம், கத்தூரி' என்னும் இரண்டையும் கலந்து கொதிக்க வைத்தாலும் அவ்விடத்து வியப்புண்டாகுமாறு கத்தூரியின் மணம் காயத்தின் மணத்தை அடக்கி மேற்பட்டு விளங்கும்; அதுபோல, உலகத்தார் சிவபெருமானை ஏனைத் தேவர் பலரோடு ஒப்ப வைத்து எண்ணினாலும், சிவபெருமானது திருவருளுக்கு ஏனைத் தேவரது அருள் ஈடாகாது; சிவனருளே மேம்பட்டு விளங்கும்.

விளக்கவுரை

'கத்தூரி' எனப் பின்னர் வருதலின், அது முன்னரும் கூட்டி எண்ணப்படும். மாயம் - மருட்கை. 'மாயமாக' என ஆக்கம் வருவிக்க. 'அவ்வழி' என்றதனை, 'கொதிக்கும்' என்றதன் பின்னர்க்கூட்டுக. 'தேசம்' என்றது மக்களை. கலத்தல் - ஒப்ப வைத்தல். 'ஏனைத் தேவர் பிற சில பயன்களைத் தரவல்லராயினும், உண்மை ஞானத்தையும், வீடு பேற்றையும் தரவல்லராகாமையின், அவரது அருளால் பெறும்பயன் யாது' என்பதும், 'பிற பயன்களிலும் சிவபெருமானால் தரப்படுவனவேமிக்கு விளங்கும்' என்பதும் கருத்து. சிவபெருமான் இம்மை, மறுமைப் பயன்களையும் நிகரின்றித் தருதலும், முடிந்த பயனாய வீடு பேற்றைத் தருதலும் இதனால் வகுத்துக் கூறப்பட்டன. பின்னிரண்டடிகளில் யகரத்திற்குச் சகரம் எதுகையாயிற்று. உயிரெதுகையுமாம்.

அதிபதி செய்து அளகையர் வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவம் நோக்கி
அதுபதி யாதரித் தாக்கம தாக்கின்
இதுபதி கொள்ளென்றான் எம்பெரு மானே. **#54**

அளகை நகரில் உள்ள இயக்கர்க்குத் தலைவனாகிய குபேரனை அவன் செய்த மிக்க தவத்தைக் கண்டு அவனை அந்நகருக்குத் தலைவனாகச் செய்து, அந்த அளகை நகரத்தைச் சுட்டி, 'இதுதான் உனது நகர்; இதனை நீ நன்கு புரந்து, செல்வத்தைப் பெருக்குவதாயின் ஏற்றுக்கொள்' என்று எங்கள் சிவபிரானே வழங்கினான்.

விளக்கவுரை

'அதனால் பெருஞ்செல்வம் உடையவன்' எனப் புகழப்படுகின்ற குபேரனுக்கு அந்நிலையை வழங்கினவனும், 'எங்கள் சிவபெருமானே' என்றவாறு. 'அளகை வேந்தனை' 'கொள் என்ற' என்பன பாடமல்ல. 'அந்நிதிபதி' என்னும் சுட்டு வருவிக்க. 'அது பதியை, இதுபதி; இதனை ஆதரித்து ஆக்கமதாக்கின் கொள் என்றான்' என முடிக்க. இதுகாறும் சிவபிரான் தேவர்க்குந் தேவனாதலைக் கூறி, 'சிவனோடொக்குந் தெய்வம் தேடினும் இல்லை' என்பதனை விரித்துரைத்தவாறு.

இதுபதி ஏலங் கமழ்பொழில் ஏழும்
முதுபதி செய்தவன் மூதறி வாளன்
விதுபதி செய்தவன் மெய்த்தவம் நோக்கி
அதுபதி யாக அமருகின் றானே. #55

சந்திரனைத் தரித்துள்ளவனாகிய சிவபெருமான், இவ்வுலகத்தில் ஏலம் முதலியவற்றின் மணங் கமழ்கின்ற சோலையின் பெயராகிய 'பொழில்' என்பதனையே தமக்கும் பெயராகக் கொண்ட ஏழு தீவுகளையும், இவ்வுலகிற்கு மேலே ஒன்றைவிட ஒன்று நூறு கோடி யோசனை விரிவுடையனவாகிய பல உலகங்களையும் தோற்று வித்தவன்; அவ் வளவையும் ஆக்கிக் காத்து அழிக்குமாற்றை அறிந்த பேரறிவுடையவன். அவன் தன்னை நோக்கிச் செய்யும் மெய்த்தவத்தைக் கண்டு அத்தவத்தையே தனக்கு இடமாக விரும்பி வீற்றிருக்கின்றான்.

விளக்கவுரை

'ஆதலின், அவன் அருளைப் பெறுதற்கு அத்தவமே செயற்பாலது' என அதற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது. 'இப்பதி' என்பதனை 'இது பதி' என்றார். 'பதி' நான்கில் முன்னவை இரண்டும் உலகம். இறுதியில் உள்ளது உறைவிடம். விது - சந்திரன். பதி செய் தவன் - பதித்தலைச் (சூடுதலை) செய்தவன். 'ஏலங் கமழ்' என்றது சொல்லளவாய் நின்ற பொழிலுக்கு அடை. எல்லாவற்றையும் நினைத்த அளவாலே செய்தலின், செயலைக் கூறாது அறிவையே கூறி னார். 'சிவபெருமானை நோக்கிச் செய்யும் தவமே மெய்த்தவம்' என்ப தனை விளக்கவே, 'தவம்' என்றொழியாது; 'மெய்த்தவம்' என்றார். 'சிவபுண்ணியம்' அல்லது 'பதிபுண்ணியம்' எனப்படுவதும் இதுவே என்க. எனவே, இதனால், 'அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை' என்பதனை விளக்கியவாறாயிற்று. 'சிவனை நோக்கிச் செய்யும் தவமே மெய்த் தவமாதற்குக் காரணம் உண்மைக் கடவுள் அவனாதலே' என்பதனை விளக்கவே, பொழில் ஏழும் முதுபதியும் செய்தவனா தலை எடுத்தோதினார். முதுமை, இங்குப் பெருமைமேல் நின்றது.

முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அறனெறி நாடில்
இடியும் முழக்கமும் ஈசர் உருவம்
கடிமலர்க் குன்றம் அலையது தானே. #56

உயிர்கட்கு இறப்பையும், பிறப்பையும் பண்டே அமைத்து வைத்த தலைவன் நிலைபெற்று நிற்கின்ற தவநெறியைக் கூறும் நூல்கள் யாவை என ஆராயின், அவை இடிபோலவும், முரசு முதலிய பறைகள் போலவும் அனைவரும் அறிய முழங்கும்; அவனது திருவுருவம் மலைபோலவும், கடல் போலவும் நன்கு விளங்கித் தோன்றும்.

விளக்கவுரை

'ஆதலின், அந்நூல்களின்வழி நின்று தவம் செய்து அவனது திருவுருவை விளங்கக் கண்டு பயன் பெறுக' என்பது குறிப் பெச்சம். 'அறனெறி' என்றது காரியவாகு பெயராய் அதனை உணர்த்தும் நூலைக் குறித்தது. அறம், இங்குச் சிவதன்மமாதலின் அதற்கு, 'தவம்' எனப் பொருள் உரைக்கப்பட்டது. சிவதன்மத்தைக் கூறும் நூல்கள் சிவாகமங்கள். அவை இறைவன் திருவருள் வடிவா மாகலின், அவற்றை அவனுக்கு உறைவிடமாக அருளினார். அதனால் அந்நூல்கள் அவனது திருவருளை அங்கை நெல்லிக் கனியென இனிது விளக்குதல் பெறப்பட்டது. 'அவற்றின்வழி நிற்பின் அப்பெருமான் அநுபவப் பொருளாதல் தப்பாது' என்றற்கு, 'அவனது உருவம் மலையும், கடலும்போல விளங்குவது' என்றார். 'முழக்கம்' என்றது, முழங்கும் பறைகளைக் குறித்த காரியவாகு பெயர். இதன்பின், 'போலும்' என்பது எஞ்சி நின்றது. கடி - மணம். மலைகள் மணம் நிறைந்த மலர் மரங்களை உடையவாதல் அறிக. அலை, ஆகுபெயர். 'அரனெறி' என்பதும் பாடம்.

மனத்தில் எழுகின்ற மாயநன் னாடன்
நினைத்த தறிவ னெனில்தாம் நினைக்கிலர்
எனக்கிறை அன்பிலன் என்பர் இறைவன்
பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே. **#57**

கண்ணிற்குப் புலப்படாது கருத்தினுள்ளே நிற்கின்ற கள்வனாகிய சிவன், யாவர் எதனை எண்ணினும் அதனை அறிவான் என்று உண்மை நூல்கள் கூறவும், உலகர் அவனை நினைத்து அவன் அருளைப் பெறுகின்றார்களில்லை. நினையாமலே ஒவ்வொருவரும் 'சிவன் எங்களுக்கு அருள் பண்ணவில்லை' என்று நொந்து கொள்கின்றார்கள். உண்மையில் சிவன், பிறவற்றை நினையாது தன்னை நினைப்பவர் பக்கமே விரும்பி நிற்கின்றான்.

விளக்கவுரை

'ஆதலின் அவன் அருளைப் பெறுதற்கு அவனை நினைத்து நிற்றலே செய்யத்தக்கது' என்றவாறு. மாய நாடன் - வஞ் சனையை இடமாகக் கொண்டு நிற்பவர். 'வஞ்சம்' என்றது புலனாகாமையை. 'பிறர்க்குத் தீங்கு சூழும் வஞ்சனை அன்று' என்பது தோன்ற, 'நல்' என்னும் அடை கொடுத்தார். 'எனக்கு' என்றது பன்மை ஒருமை மயக்கம். 'எனக்கு அன்பிலன்' என இயையும். பிழைத்தல், பிறவற்றினின்று நீங்குதல். ஈற்றடி மூன்றாம் எழுத்தெதுகை.

வல்லவன் வன்னிக் கிறையிடை வாரணம்
நில்லென நிற்பித்த நீதியுள் ஈசனை

இல்லென வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் றானே. **#58**

உலகீர், எல்லாம் வல்லவனாய், கடல் நீரை, 'தீக்கடவுளாகிய வடவையிடத்து அடங்கிநிற்க' என மிகுந்து வாராமல் நிற்கச்செய்த அருளாணை உடையவனாகிய சிவபெருமானை, நுண்ணுணர்வின்றி, 'இல்லை' எனக் கூறிப்பிணங்குதல் வேண்டா; அவன் அயன், மால் முதலிய கடவுளர்க்கு முதல்வனாய் நின்று, எப்பொழுதும் உயிர்கட்கு நலம் புரிந்துவருகின்றான்.

விளக்கவுரை

'உலகம் ஒருவனது ஆணை வழிநடப்பதும், அவ் வொருவன் எல்லாம் வல்லவன் என்பதும் கடல் கரையின்றியே அடங்கி நிற்கும் இவ்வொன்றானே அறியப்படும்' என்பது முன்னிரண்டு அடிகளின் கருத்து. 'வல்லவன், முதல்' என்பவற்றில் ஆக்கச்சொல் விரிக்க.

போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனி தன்னடி
தேற்றுமின் என்றுஞ் சிவனடிக் கேசெல்ல
மாற்றிய தென்று மயலுற்ற சிந்தையை
மாற்றிநின் றார்வழி மன்னிநின் றானே. **#59**

'நமது மனமே நம்மை நன்னெறியினின்று மாற்றி விட்டது' என்பதை உணர்ந்து, மயக்கம் பொருந்திய அம்மனத்தை மாற்றித் தெளிந்தவரது வழியிற்றான் சிவபெருமான் மறைவின்றி விளங்கி நிற்கின்றான். அதனால், உலகீர், அவனது திருவடி நிழலில் செல்வதற்குப் பன்முறை வணக்கம் கூறியும், பலவாற்றால் புகழ்ந்து பாடியும் அவனது திருவடிகளை என்றும் தெளிந்து நின்மின்கள்.

விளக்கவுரை

'சிவனடிக்கே செல்வம்' என்பது பாடமாயின், 'இவ்வாறு செய்தால் சிவனடியை அடைவோம்' என உரைக்க.

காணநில் லாயடி யேற்குற வாருளர்
நாணநில் லேன்உன்னை நான்தழு விக்கொளக்
கோணநில் லாத குணத்தடி யார்மனத்
தாணிய னாகி அமர்ந்துநின் றானே. **#60**

'இறைவனே! நீ முன்முன் தோன்றினால் உன்னைத் தழுவிக்கொள்ளுதற்கு நான் சிறிதும் நாணமாட்டேன்; எனக்கு உன்னையன்றி உறவாவார் யாருளர்! யான் காணும்படி வெளி நின்றருள்' என்று மாறுபாடின்றி இரக்கின்ற பண்புடைய அடியவர் உள்ளத்திலே சிவன் அறையப்பட்ட ஆணிபோல்பவனாய் வீற்றிருக்கின்றான்.

விளக்கவுரை

'அதனால் அவ்வாற்றால் அவனை மனத்தில் எழுந் தருளப் பண்ணிக்கொண்மின்கள்' என்பதாம். இரண்டாம் அடியை முதற்கண் மொழிமாற்றி வைத்து, 'உளர்' என்றதன்பின், 'என்று' என்பது வருவித்து உரைக்க. இது காறும் நினைதல் கூறியவாறு; இதன் பின் வாழ்த்துதலைக் கூறுதலே முறையாயினும், அஃது இந்நூற்குச் சிறந்ததாதல் பற்றி இறுதிக்கண் கூறுவாராய், வணங்குதலை முன்னர் கூறுகின்றார்.

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே. **#61**

சிவபெருமான் பிறப்பில்லாதவன்; சடை முடி உடையவன்; மிக்க அருளுடையவன்; ஒருகாலத்தும் அழிவில்லாத வன்; யாவர்க்கும் வேறுபாடின்றி நன்மையையே செய்து, அவரை என்றும் விட்டு நீங்காதவன். அதனால் அவனை வணங்குங்கள். வணங்கினால் என்றும் மறவாத தன்மையாகிய மெய்யுணர்வு தோன்றுவதாகும்.

விளக்கவுரை

'சிவபெருமான்' என்பது அதிகாரத்தால் வந்தது. 'தன்னை' என்றது, 'அவனை' என்றவாறு. இவ்வாறு 'பிறப்பிலி' முதலியவற்றைப் பயனிலையாக்காது, பெயராக வைத்துரைத்தல் சிறவாமை அறிக. பிறப்பிலி முதலிய பலவும் அவன் ஒருவனே வணக்கத்திற்கு உரியவனாதலைக் குறிப்பால் உணர்த்தி நின்றன. சடைமுடி யோகியாதலைக் குறித்தலின், அதுவும் வணக்கத்திற்கு உரிய வனாதலைக் குறித்தல் அறிக. மாயா விருத்தம் - மாயைக்கு மாறானது. மாயை - அஞ்ஞானம்; 'அதற்கு மாறு' எனவே, 'ஞானம்' என்பது போந்தது. இறைவனை மறக்கும் மறதி அஞ்ஞானத்தால் உளதாவதாம். அது நீங்கவே, மறவாமையாகிய மெய்ஞ்ஞானம் உளதாம் என்க.

தொடர்ந்துநின் றானைத் தொழுமின் தொழுதால்
படர்ந்துநின் றான்பரி பாரக முற்றும்
கடந்துநின் றான்கம லம்மலர் மேலே
புணர்ந்திருந் தானடிப் புண்ணிய மாமே. **#62**

யாவர்க்கும் இன்பம் அருளி, அவரை விடாது தொடர்ந்து நிற்கின்ற சிவனை வணங்குங்கள்; வணங்கினால் அவனது திருவடி ஞானம் உங்கட்குக் கிடைக்கும்.

விளக்கவுரை

பரி பாரகம் - எல்லாவற்றையும் தாங்குகின்ற நிலமாகிய இடம். 'பாரகம் முற்றும்' என்பது தாப்பிசையாய் முன்னும், பின்னும் சென்று இயையும். 'கமலமலர்' என்றது அன்பரது உள்ளங்களை. 'புணர்ந்து' என்றது உயிரெதுகை. 'உடந்திருந்தான்' என்பது பாடம் ஆகாமை அறிக. 'படர்ந்து நிற்றல், நடந்து நிற்றல், புணர்ந்திருத்தல்' என்னும் மூன்றும் முறையே இறைவன் உலகத்தோடு ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நிற்கும் முறைமையை உணர்த்தியவாறு. 'அம் முறைமையே சிவநெறி அத்துவிதம்' என்பதும், 'அதனை உணர்தலே சிவஞானம்' என்பதும் அறிக. சிவனடிப் புண்ணியம் - சிவதன்மம்; சிவதன்மத்தால் விளைகின்ற சிவஞானத்தை, 'சிவதன்மம்' என்றார்.

சந்தி எனத்தக்க தாமரை வாள்முகத்
தந்தமில் ஈசன் அருள்நமக் கேயென்று
நந்தியை நாளும் வணங்கப் படும்அவர்
புந்தியி னுள்ளே புகுந்துநின் றானே. **#63**

'அந்தி வானம் என்று சொல்லத் தக்க நிறத்தை யுடைய தாமரை (செந்தாமரை) மலர்போலும் ஒளி பொருந்திய முகத்தை உடைய, அழிவில்லாத சிவபெருமானது திருவருள் நமக்கே உரியதாகும்' என்ற உறுதியுடன் அவனை நாள்தோறும் வணங்க உடன்படும் அவரது உள்ளத்துள்ளே அவன் குடிபுகுந்து நிற்கின்றான்.

விளக்கவுரை

'அதனால் நீவிரும் வணங்குமின்' என்பது கருத்து. படுதல் - உடன்படுதல்.

இணங்கிநின் றான்எங்கு மாகிநின் றானும்
பிணங்கிநின் றான்பின்முன் னாகிநின் றானும்
உணங்கிநின் றான்அம ராபதி நாதன்
வணங்கிநின் றார்க்கே வழித்துணை யாமே. **#64**

மாயோனும் சிவபெருமானை வழிபட உடன்பட்டு நின்றதல்லது வழிபட்டுக் காணவில்லை. படைப்புக் கடவுளாகிய பிரமன் வழிபடுதற்கு உடன்படவேயில்லை. அவர்கட்குப் பின் இந்திரன் காண இயலாதவனாய் வாட்டமுற்று நின்றான். ஆகவே, சிவபெருமான் தன்னை வணங்கி நிற்பவர்க்கே செல்கதித் துணையாய் நிற்கின்றான்.

விளக்கவுரை

இங்கு வழிபடுதல், பயன் கருதாத மெய்யன்பினால் வழிபடுதலாதலின், 'திருமாலும் அது செய்யவில்லை' என்றும், பயன் கருதி வழிபட்டுச் சக்கரம் பெற்றமையால் 'இணங்கி நின்றான்' என்றும் கூறினார். பிரமனும், இந்திரனும் அவ்வாறு வழிபட்டுப் பேறு பெற்ற வரலாறு

ஒன்றும் சிறப்பாகச் சொல்லப்படாமையால், அவர் களை, பிணங்கியும், வணங்கியும் நிற்பவராகக் கூறினார். 'எங்குமாகி நின்றான்' என்றது, 'விட்டுணு' என்னும் சொற்பொருளை எடுத்தோதியவாறு. 'பின்' என்பதை இரண்டாம் அடியின் இறுதியிற் கூட்டி உரைக்க. மேல் பொது வணக்கம் கூறி, இதனால், உண்மை வணக்கம் கூறியவாறு. இதுகாறும் வணங்குதல் கூறப்பட்டது. இனி, வாழ்த்துதல் கூறப்படும்.

வானப் பெருங்கொண்டல் மாலயன் வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்தஎங்
கோனைப் புகழுமின் கூடலு மாமே. **#65**

மேகம் போலும் நிறத்தையுடைய திருமால், பிரமன், மற்றைய தேவர் ஆகியோர்க்கும் இழிவான பிறவித் துன்பத்தை நீக்குகின்ற ஒப்பற்றவனும், யானையை உரித்த எங்கள் தலைவனும் ஆகிய சிவபெருமானைத் துதியுங்கள்; அதனால் அவனை அடைதலாகிய அப் பெரும்பேறும் கிடைக்கும்.

விளக்கவுரை

வானம் - விண். 'கூடலும்' என்ற உம்மை சிறப்பு.

வானின் றழைக்கும் மழைபோல் இறைவனும்
தானின் றழைக்குங்கொல் என்று தயங்குவார்
ஆனின் றழைக்கு மதுபோல்என் நந்தியை
நானின் றழைப்பது ஞானங் கருதியே. **#66**

'வானத்தில் நின்று முழங்குகின்ற மேகம்போல இறைவன் மேலுலகத்தில் நின்று தன் அடியவரை 'வருக' என்று அழைப்பான் என்று ஆன்றோர் கூறுதல் உண்மையாய் இருக்குமோ' என்று சிலர் ஐயுறுவர். 'எங்கள் சிவபெருமான் தன்னைப் பிரிந்த கன்றைத் தாய்ப்பசு கதறி அழைப்பது போலத் தன் அடியவரைத் தன்பால் கூவி அழைப்பவனே; (இதில் ஐயமில்லை. அவனைப் பலர் துதித்து அவற்றிற்கு ஈடாகப் பல பயன்களைப் பெற்றனர். ஆயினும்,) நான் அவனைத் துதிப்பது ஞானத்தைப் பெறுதற்பொருட்டே.

விளக்கவுரை

'நான் நின்று அழைப்பது ஞானம் கருதியே' என்றதனால், 'பலர் பயன் கருதித் துதித்து அவற்றைப் பெற்றனர்' என்பது பெறப்பட்டது. 'அவர் அங்ஙனம் பெற்றமை அனுபவ மாகலின், சிலர்போல நீங்கள் ஐயுற வேண்டுவதில்லை' என்றபடி. 'ஞானம் கருதித் துதித்தலே சிறந்தது' என்பதும் குறிக்கப்பட்டது என்க.

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்

தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மைஎல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரம்முரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.
என்ற திருவாசகத்தையும் காண்க. *(தி.8 திருச்சதகம். 20)* 'போல்' என்பது வினைத்தொகையாய், 'நந்தி' என்பதனோடு இயைந்தது.

மண்ணகத் தான்ஒக்கும் வானகத்தான் ஒக்கும்
விண்ணகத் தான்ஒக்கும் வேதகத் தான்ஒக்கும்
பண்ணகத் தின்னிசை பாடலுற் றானுக்கே
கண்ணகத் தேநின்று காதலித் தேனே. **#67**

மக்கள்முன் தோன்றி அருள்புரிதலால் மண்ணுலகத்தில் உள்ளவனைப் போலவும், தேவர்களுள் ஒருவனாய் நிற்றலால் வானுலகத்தில் உள்ளவனைப் போலவும், முத்தர்களுக்கு வீட்டுலகத்தில் நின்று அருள்புரிதலால் வீட்டுலகத்தில் உள்ளவன் போலவும், யாவரையும் தன்மயமாகச் செய்தலால் இரத குளிகை போல்பவன் போலவும் தோன்றுபவனாய், பண்களில் பொருந்திய இசையிடத்துள்ள விருப்பத்தால் தானே வீணையை இசைக்கின்ற சிவபிரான் பொருட்டு அவனது அருள் நோக்கில் நின்றே அவனிடத்து நான் அன்புசெய்கின்றேன்.

விளக்கவுரை

'ஒக்கும்' நான்கும் பெயரெச்ச அடுக்கு. அவை, 'பாடலுற்றான்' என்பதனோடு முடிந்தன. 'யாவர்க்கும் அவரவர் தகுதிக்கேற்ப நின்று அருள்புரிபவனாகிய சிவபெருமான் விரும்புவது இசை என்பதை உணர்ந்து, அவன் அருளாலே அவனைப் பாடித் துதிக்கின்றேன்' என்பது இத் திருமந்திரத்தின் திரண்ட கருத்து. துதிக்கும்பொழுதும் நான் என்ற முனைப்புடன் துதியாது, 'இப் பேறும் அவனது அருளால் கிடைத்தது' என அவனது அருள்வழி நின்று துதித்தல் வேண்டும் என்றற்கு, 'கண்ணகத்தே நின்று' என்றார். 'அவன் கண்ணகத்தே நின்று' என்க. 'அவனரு ளாலே அவன்தாள் வணங்கி' என்றதும் காண்க. *(தி.8 திருவாசகம். சிவபுராணம் அடி 18).*

தேவர் பிரான்நம் பிரான் திசை பத்தையும்
மேவு பிரான்விரி நீருல கேழையும்
தாவு பிரான்தன்மை தானறி வாரில்லை
பாவு பிரான்அருள் பாடலு மாமே. **#68**

சிவபெருமான் தேவர் பலர்க்கும் தலைவன்; நமக்கும் தலைவன்; உலகமுழுதும் நிறைந்து நிற்கும் நிறைவினன்; அவ்வாறு நிற்பினும் அவற்றை அகப்படுத்து அப்பால் நிற்கும் பெரியோன்; ஆதலின் அவனது தன்மையை முற்றும் அறிந்து துதிப்பவர் ஒருவரும் இல்லை. ஆயினும்

எங்கும் நிறைந்த அவனது அருட்டன்மைகளை உயிர்கள் தாம் தாம் அறிந்தவாற்றால் பாடித் துதித்தலும் அமைவுடையதே.

விளக்கவுரை

'தேவர் பிரான்' முதலியவற்றைப் பல தொடராகக் கூறியது, அவற்றின் சிறப்புணர்த்தற்கு. காட்சிக்கு எய்துதல் பற்றி 'விரிநீர் உலகு ஏழையும்' என நிலவுலகத்தையே கூறினாராயினும், மேல், 'திசை பத்தும்' கூறினமையால் பிற உலகங்களும் கொள்ளப் படும். 'முற்ற அறிய வாராமை பற்றி அவன் முனிதல் இல்லை; அறிந்த அளவு பாடின் உவப்பான்' என்பது கருத்து. 'யானறி அளவையின் ஏத்தி ஆனாது - நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின் - நின்னடி உள்ளி வந்தனென்' (திருமுருகாற்றுப் படை. *277 - 279)* என்றதும் காண்க. மேவுதல் - விரும்புதல்; அது, பற்றிநிற்றலைக் குறித்தது.

பதிபல வாயது பண்டிவ் வுலகம்
விதிபல செய்தொன்றும் மெய்ம்மை உணரார்
துதிபல தோத்திரஞ் சொல்லவல் லாரும்
மதியிலர் நெஞ்சினுள் வாடுகின் றாரே. **#69**

பண்டுதொட்டு இவ்வுலகத்தில் 'கடவுள்' என்ற ஒன்று, பலவாகக் கொள்ளப்படுகின்றது. அவற்றின்கண் பலரும் பல விதிமுறை வழிபாடுகளைச் செய்தும் மெய்ம்மையைச் சிறிதும் உணர்கின்றார்களில்லை. அக்கடவுளரைத் துதிக்கின்ற பல தோத்திரப் பாடல்களைத் தாங்களே ஆக்க வல்லவர்களும் மெய்யறிவில்லாதவர் களாய் மனத்தில் துன்புறுகின்றார்கள்.

விளக்கவுரை

'அதனால் சிவனது முதன்மையாகிய மெய்ம் மையைத் தெளிவித்தல் அரிதேயாம்' என்பது குறிப்பெச்சம். பதி - கடவுள்.

சாந்து கமழுங் கவரியின் கந்தம்போல்
வேந்தன் அமரர்க் கருளிய மெய்ந்நெறி
ஆர்ந்த சுடரன்ன ஆயிர நாமமும்
போந்தும் இருந்தும் புகழுகின் றேனே. **#70**

சந்தனத்தில் நின்று கமழ்கின்ற கத்தூரி மானின் மதமணம்போலச் சிவபெருமான், முத்தியுலகத்தில் உள்ள சிலர்க்கு அறிவுறுத்திய நெறியே மெய்ந்நெறி. அந்நெறி நின்றே பகலவனது பல கதிர்கள் போன்ற அவனது பல திருப்பெயர்களை, நான் நடக்கும் பொழுதும், இருக்கும்பொழுதும் துதித்துக் கிடக்கின்றேன்.

விளக்கவுரை

'நீவிரும் அவ்வாறு செய்தலே தக்கது' என்பது குறிப்பெச்சம். 'மான்மத

மணம் சந்தன மணத்தினும் வேறாய் மிக்குத் தோன்றுமாறுபோலச் சிவபிரான் அறிவுறுத்திய நெறி ஏனை நெறி யினும் மிக்குத் தோன்றுதல் அறிவுடையார்க்குப் புலனாகும்' என்பது, 'சாந்து கமழும் கவரியின் கந்தம்போல்' என்ற உவமையால் குறிக்கப் பட்டது. 'மாயங்கத் தூரியது மிகும் அவ்வழி' என மேலேயும் கூறினார். *(தி.10 திருமந்திரம் - 51)* கவரி, ஆகுபெயர்.

'முத்தியுலகத்தில் மெய்ந்நெறி அறிவுறுக்கப்பட்டோர் பிரணவர் முதலியோர்' என்பது பின்னர்க் காணப்படும் 'மெய்ந் நெறி யானே' என உருபு விரிக்க. 'ஆர்ந்தசுடர்' பன்மையும், ஒளியும் பற்றி வந்த உவமை. 'பேர்ந்தும்' என்பதும் பாடமாகலாம்.

ஆற்றுகி லாவழி யாகும் இறைவனைப்
போற்றுமின் போற்றிப் புகழ்மின் புகழ்ந்திடில்
மேற்றிசைக் குங்கிழக் குத்திசை எட்டொடும்
ஆற்றுவன் அப்படி ஆட்டலும் ஆமே. **#71**

பிறிதொரு நெறியும் ஒப்பாக மாட்டாதபடி உயர்ந்து நிற்பதாய சிவநெறியாற் பெறப்படுபவனாகிய சிவபெருமானுக்கு வணக்கம் கூறுங்கள்; கூறிப் பலவாற்றால் புகழுங்கள்; புகழ்ந்தால், மேலுலகத்தையும் கீழுலகமாகிய நிலவுலகம் முழுதையும் உமக்கு அவன் வழங்குவான்; அவ்வுலகங்களை நீங்கள் உங்கள் விருப்பப்படி ஆளலாம்.

விளக்கவுரை

'ஆற்றுகிலா' என்றதில் ஆற்றுதல், 'வையகமும் - வானகமும் ஆற்றல் அரிது' (குறள். *101)* என்பதிற் போல 'ஒத்தல்' என்றும், 'ஆற்றுவன்' என்றதில், ஆற்றுதல் 'அற்றார்க் கொன்றாற் றாதான் செல்வம்' (குறள். *1007)* என்பதிற்போல, 'கொடுத்தல்' என்றும் பொருள் தந்து நின்றன. 'வழக்கும், எதிர்வழக்கும் கூறு வோரது கூற்றினுள் மெய்ம்மை இது என்பது நடுவுநிற்பார்க்கு இனிது விளங்கி நிற்றல்போலப் பல நெறிகளும் பிறர்கோள் மறுத்துத் தம் கோள் நிறுவுமாயினும், உண்மை காண் பார்க்குச் சிவநெறியது உயர்வு 'சாந்து கமழும் கவரியின் கந்தம் போல்' *(தி.10 பா.69)* இனிது விளங்கியே நிற்கும் என்பார், சிவநெறியை 'ஆற்று கிலா வழி' என்று அருளினார்.

ஆதல், உளவாதல். அஃது இங்குப் பெறப் படுதலைக் குறித்தது. 'மேற்கு, கிழக்கு' என்பவை, 'மேல், கீழ்' என்னும் பொருளவாய் நின்றன. திசைக்கண் உள்ளவற்றை, 'திசை' என்றார். மூவுலகமும் இங்கு, 'மேல், கீழ்' என இரண்டாக அடக்கப் பட்டன. அப் படி - அவ்வுலகம். 'தம் விருப்பப்படி நடத்தலாம்' என்பது தோன்ற, 'ஆளலுமாம்' என்னாது, 'ஆட்டலுமாம்' என்றார்.

இனி, 'ஆளலுமாம்' என்பதே பாடம் என்றலும் ஆம். 'சிவபிரானைப்

போற்றுவோர் எவ்வுலகத்தை ஆளநினைப்பினும் ஆள்பவராவர்' என்பது திருமுறைகளுள் பலவிடத்தும் இனிது எடுத்துச் சொல்லப்படுவது. 'ஏனைக் கடவுளர்பால் அடையும் பயனையும் சிவபிரான்பால் அடையலாம்' என்பது கூறி, அவனை வாழ்த்துதலை வலியுறுத்தியவாறு.

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே. **#72**

எவ்வுயிர்க்கும் தந்தையும், 'நந்தி' என்னும் பெயருடையவனும், தெவிட்டாத அமுதமாய் இனிப்பவனும், வள்ளல் பிறர் ஒருவரும் ஒப்பாகமாட்டாத பெருவள்ளலும், ஊழிகள் பல வற்றிலும் உலகிற்குத் தலைவனாய் நிற்பவனும் ஆகிய சிவபெரு மானை யாதொரு முறைமையிலானும் துதியுங்கள்; துதித்தால், அம்முறைக்குத் தக அவனது அருளைப் பெறலாம்.

விளக்கவுரை

'பொது நீக்கி ஒப்புயர்வற்ற தலைவனாக உணருந்தன்மை இல்லாது பொதுப்பட ஏத்தினும் அது பின்னர் உண்மையுணர்வைப் பயக்கும்' என்பதும், பயன்கருதித் துதிப்பினும் அது பின்னர்ப் பயன் கருதாது துதிக்கும் மெய்யன்பினைப் பயக்கும் என்பதும் கருத்து.

'அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ'
(தி.5 ப.23 பா.9)

என்று அருளிச்செய்தார் ஆளுடைய அரசரும்.

நானும்நின் றேத்துவன் நாடொறும் நந்தியைத்
தானும்நின் றான்தழல் தானொக்கு மேனியன்
வானில் நின் றார்மதி போல்உடல் உள்ளுவந்
தூனில்நின் றாங்கே உயிர்க்கின்ற வாறே. **#73**

சிவபெருமானை நானும் நாள்தோறும் மேற் கொண்டு நின்று துதிக்கின்றேன்; அவனும் நாள்தோறும் வானத்தில் பொருந்தி வளராநின்ற வளர்பிறைச் சந்திரன் போல எனது உடலில் மகிழ்ந்து மேன்மேல் விளங்கி நிற்கின்றான். தூயனாகிய அவன் எனது புலால் உடம்பில் நின்று உயிர்ப்பாய் வெளிப்படுகின்றவாறு வியப்பு.

விளக்கவுரை

உம்மைகள் எச்சம். 'தழல்தான்' என்பதில்தான், அசைநிலை. 'தழலொக்கு மேனியனாகிய தானும் மதிபோல் உடலுள் உவந்து நின்றான்' எனக்

கூட்டுக. உவத்தல் - நிறைதல். 'ஊனில் நின்று' என்பதனால், அவன் அதனோடு இயைபில்லாத தூயனாதல் பெறப்பட்டது. 'நிலாவாத புலாலுடம்பே புகுந்துநின்ற கற்பகமே' *(தி.6 ப.95 பா.4)* எனவும், 'எந்தையே ஈசா உடலிடங்கொண்டாய் யானிதற் கிலனொர்கைம் மாறே' *(தி.8 கோயில் திருப்பதிகம் 10)* எனவும் போந்த அருட்டிருமொழிகளைக் காண்க. உயிர்ப்பாய் வெளிப்படுதலாவது, உயிர்க்குந்தோறும் புறத்தும், அகத்தும் இன்பமாய்த் தோன்றுதல்.
'என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே' *(தி.5 ப.21 பா.1)*
என்றருளியதும் காண்க. இதனை அசபா மந்திரத்தின் அநுபவம் என்ப. ஏத்தினால் ஈசன் அருளைப் பெறுதலை அனுபவத்தின் வைத்து உணர்த்தியவாறு.

பிதற்றொழி யேன்பெரி யான்அரி யானைப்
பிதற்றொழி யேன்பிற வாஉரு வானைப்
பிதற்றொழி யேன்எங்கள் பேர்நந்தி தன்னைப்
பிதற்றொழி யேன்பெரு மைத்தவன் நானே. **#74**

யாவரினும் பெரியவனும், யாவர்க்கும் அரியவனும், நால்வகைத் தோற்றத்துள் ஒன்றாகாது தன் இச்சையாற் கொள்ளப் படுவனவாய அருட்டிருமேனிகளை உடையவனும் ஆகிய எங்கள் சிவபெருமானைப் பிதற்றுதல் ஒருகாலும் ஒழியேன்; அதனால், நானே பெருமையை உடைய தவத்தை உடையவன்.

விளக்கவுரை

பிதற்றுதல் போலுதலின், 'பிதற்று' என்றார்; இது முதனிலைத் தொழிற்பெயர். 'பிதற்றொழியேன்' என்பதனைச் சொற்பொருட்பின் வருநிலையாகப் பலகாற் கூறியது, வலியுறுத்தற் பொருட்டு. வேறு வேறு தொடராதலின், இஃது ஒருசொல்லடுக்கன்மை உணர்க. 'பெரியானை' என்னும்
இரண்டனுருபு தொகுத்தலாயிற்று. 'இத்தன்மையனை இடையறாது துதித்தல் தவமிலார்க்குக் கூடாது' என்றற்கு, 'பெருமைத் தவன் நானே' என்றார். 'தவமும் தவமுடையார்க்கே ஆகும்' *(குறள் 262)* என்றார் திருவள்ளுவ நாயனாரும்.
யானே தவமுடையேன்; என்நெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன் - யானேஅக்
கைம்மா உரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக் காளாயி னேன். -அம்மை திருவந்தாதி. *7*
என்றது காண்க.

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்

தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெரு மான்என் றிறைஞ்சியும்
ஆத்தஞ்செய் தீசன் அருள்பெற லாமே. **#75**

தன்னை வாழ்த்த வல்லவரது மனத்தின் கண் ஒளியாயும், தூய்மையாயும், இன்பமாயும் விளங்குகின்ற சிவபெரு மானைத் துதித்தும், 'எம் தலைவன்' என்று வணங்கியும் உறவு கொண்டால், அவனது திருவருளைப் பெறலாம்.

விளக்கவுரை

'அங்கே' என்பது 'தீர்த்தன்' என்பதனோடும் இயையும். 'திளைக்கின்ற' என்பது, 'தேவன்' என்ற செயப்படு பொருட்பெயர் கொண்டது.

குறைந்தடைந் தீசன் குரைகழல் நாடும்
நிறைந்தடை செம்பொனின் நேரொளி ஒக்கும்
மறைஞ்சடஞ் செய்யாது வாழ்த்தவல் லார்க்குப்
புறஞ்சடஞ் செய்யான் புகுந்துநின் றானே. **#76**

கரவு கொண்டு வன்மை செய்யாது தன்னை வாழ்த்த வல்லவர்க்குச் சிவபெருமான் அவர்களது உள்ளத்தைப் புறக் கணியாது புகுந்து நிற்பான்; அதனால் அவனது மாற்று நிறைந்து அடையப்பட்ட செம்பொன்னிடத்துப் பொருந்திய ஒளியை ஒத்த, ஒலிக் கின்ற கழல் அணிந்த திருவடியைக் குறைவேண்டி அடைந்து பற்றுங்கள்.

விளக்கவுரை

'குரைகழலை நாடும்; அது செம்பொன்னின் ஒளியொக்கும்' என்னும் தொடர்கட்குக் கருத்துநோக்கி இவ்வாறு உரைக்கப்பட்டது. 'நாடும்' என்பது உம்மீற்றுப் பன்மை ஏவல். மறைஞ்சு, 'மறைந்து' என்பதன் போலி. 'மறைந்தடம்' எனவும் ஓதுவர். உள்ளத்தைச் சடம் என்றது, உடம்பையும் குறித்தற்கு.

சினஞ்செய்த நஞ்சுண்ட தேவர் பிரானைப்
புனஞ்செய்த நெஞ்சிடை போற்றவல் லார்க்குக்
கனஞ்செய்த வார்குழல் பாகனும் அங்கே
இனஞ்செய்த மான்போல் இணங்கிநின் றானே. **#77**

சீறி எழுந்த நஞ்சினை உண்டு தேவரைக் காத்த சிவபெருமானை, காடு வெட்டித் திருத்திய புனம்போன்ற உள்ளத்தில் வைத்துத் துதிக்க வல்லவர்கட்கு, உமையை ஒரு பாகத்தில் உடைய அவன் அவ்வுள்ளத்திலேயே மான் இனத் தோடு ஒப்பச் செய்யப்பட்ட பார்வை விலங்கு போல்பவனாய் அச்சந் தோன்றாது அன்பு தோன்றத்தக்க வடிவத்துடன் பொருந்தி நிற்பான்.

விளக்கவுரை

'நெஞ்சிடை வைத்து' என ஒருசொல் வருவிக்க. பார்வை விலங்கினை குருவடிவிற்கேயன்றி, உள்ளத்தில் நினைக்கப் படும் வடிவிற்கும் கூறினார் என்க. 'கனஞ் செய்த' என்றதில் 'செய்த' உவம உருபு. கனம் - மேகம். 'வாள் நுதல்' என்பது பாடம் அன்று.

போயரன் தன்னைப் புகழ்வார் பெறுவது
நாயக னான்முடி செய்தது வேநல்கும்
மாயகஞ் சூழ்ந்து வரவல்ல ராகிலும்
வேயன தோளிக்கு வேந்தொன்றுந் தானே. **#78**

சிவபெருமானை அடைந்து துதிப்பவர்கள் பெறத் தக்க பயன், அவன் 'நான்' என்னும் பசுபோதத்தை ஒழித்துத் தரும் சிவபோதமேயாம். அதனை அவன் தானே விரும்பிக் கொடுப்பான். அதுவன்றி, நிலையில்லாத அப்பசு போதத்தால் சில வற்றை விரும்பி அடையினும் அவற்றையும் அவன் உடன்பட்டுக் கொடுப்பான்.

விளக்கவுரை

'நான்' என்றது, 'நான்' என்னும் முனைப்பிற்குக் காரணமான பசுபோதத்தைக் குறித்த காரியவாகுபெயர். முடி - முடிவு; முதனிலைத் தொழிற்பெயர். 'செய்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. இஃது எதிர்காலத்து இறந்த காலம். 'அது' என்றது, 'அந்தப்பயன்' எனச் சிவபோதத்தை உணர்த்திற்று. ஆணவ சத்தி மெலிதல், அனாதிதொட்டே நோக்கிவரும் இறைவனது திரு வருள் நோக்கத்தாலாதலின், 'நாயகன் முடிசெய்த அது' என்றார். 'பெறுவது' எனக் கூறிப் பின்னரும், 'நல்கும்' என்றார்; 'தானே விரும்பிக் கொடுப்பான்' என்பது உணர்த்துதற்கு. 'அகம்' என்றது, 'நான்' என்னும் பொருளதாகிய வடசொல், 'அகத்தால்' என உருபு விரித்து, சூழ்தற்குச் செயப்படு பொருளாகிய, 'சிலவற்றை' என்பது வருவிக்க. 'வல்லர்' என்றது வஞ்சப் புகழ்ச்சி. ஒன்றுதல் - உடன்படுதல்; அது, கொடுத்தலாகிய தன் காரியம் தோன்றநின்றது. சிவபெருமானை வாழ்த்துவார், போகம், மோட்சம் இரண்டும் பெறுவர் என்பது உணர்த்தியவாறு.

அரனடி சொல்லி அரற்றி அழுது
பரனடி நாடியே பாவிப்ப நாளும்
உரனடி செய்தங் கொதுங்கவல் லார்க்கு
நிரனடி செய்து நிறைந்துநின் றானே. **#79**

சிவபெருமானது திருவடியையே துதித்து, அலறி, அழுது, அவற்றையே விரும்பி நாள்தோறும் நினைக்க வல்லவர்க்கு, அவன் தனது திருவடியை உறுதுணையாகக் கொடுத்து, பின் அதிலே அடங்கிநிற்க வல்லார்க்கு அதனை இனிது விளங்கத் தந்து, அவரது அறிவில் நிறைந்து நிற்கின்றான்.

விளக்கவுரை

'நாளும் பாவிப்ப' எனவும், 'அடி உரன் செய்து' எனவும், ' அடி நிரன்' செய்து எனவும் மாற்றுக. உரன் - வலிமை; அது துணைவலிமேல் நின்றது. 'நிறன்' என்பது எதுகை நோக்கித் திரிந்தது. நிறன் - விளக்கம்.

போற்றிஎன் பார்அம ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்அசு ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்மனி தர்புனி தன்அடி
போற்றிஎன் அன்புள் பொலியவைத் தேனே. **#80**

தேவர், அசுரர், மக்கள் ஆகிய அனைவரும் சிவ பெருமானது திருவடிக்கு வணக்கம் கூறித் துதிப்பர். அதனால் நானும் அவ்வாறே செய்து அதனை என் அன்பினுள் நின்று ஒளிரச் செய்தேன்.

விளக்கவுரை

'அதனால் நீவிரும் அதுவே செய்ம்மின்' என்பது குறிப் பெச்சம். இயக்கர், கந்திருவர் முதலியோரைத் தேவருள்ளும், நரகரை அசுரருள்ளும் அடக்கினார். நரகரும் தேவராதற்குச் சிவனது திரு வடியைத் துதிப்பர் என உணர்க. வேறு வேறு தொடராகக் கூறியது, போற்றுதலின் சிறப்பை விளக்குதற்கு. சிவன் அப்பெயரால் கூறப் படுதல், 'நிறைமலம் அனாதியின் நீங்கி நிற்றல்'. (காஞ்சிப் புராணம். திருநெறிக்காரைக்காட்டுப் படலம். 23) பற்றியும் ஆதலின், 'புனிதன்' என்றார்.

விதிவழி அல்லதிவ் வேலை உலகம்
விதிவழி இன்பம் விருத்தமும் இல்லை
துதிவழி நித்தலுஞ் சோதிப் பிரானும்
பதிவழி காட்டும் பகலவ னாமே. **#81**

கடல் சூழ்ந்த இவ்வுலகம் வினைவழியல்லது நடத்தல் இல்லை. இங்கு இன்பச்சூழலும் வினைவழித் தோன்றுத லல்லது வேறோராற்றான் இல்லை. ஆயினும் ஒளிமயமாகிய சிவபெருமான் தன்னை நாள்தோறும் துதிப்பவர்க்கு அத்துதி வழியாக முத்திக்கு வழிகாட்டும் பகலவனாய் நிற்பான்.

விளக்கவுரை

'ஆதலின் வினைவழியினின்று விடுதிபெற வேண்டு வோர் சிவபெருமானைத் துதிக்க' என்பது குறிப்பெச்சம். திருவள்ளுவ நாயனாரும், வினை நீங்குதற்கு வாயில் இறைவனது பொருள்சேர் புகழை விரும்பிச் சொல்லுதலே எனக் கூறுமாறு அறிக.

இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (குறள். *5)*

'இன்பம்' என்றதன்பின்,'உளதாதல்' என்பது வருவித்து, உம்மையைப் பிரித்து அதனொடு கூட்டுக. 'இல்லை' என்பது 'அல்லது' என்றதனோடும் இயை யும்.
இதன்பின், 'ஆயினும்' என்பது எஞ்சி நின்றது. வினை உள தாவது அஞ்ஞானத்தால் ஆதலின் அது மெய்ஞ்ஞான வடிவினனாகிய சிவபெருமானால் நீங்கும் என்பார், 'சோதிப் பிரான்' எனவும், 'பகலவன் ஆம்' எனவும் கூறினார். 'சோதிப் பிரானும்' என்ற உம்மை, அசைநிலை.

அந்திவண் ணாஅர னேசிவ னேஎன்று
சிந்தைசெய் வண்ணந் திருந்தடி யார்தொழ
முந்திவண் ணாமுதல் வாபர னேஎன்று
வந்திவ்வண் ணம்எம் மனம்புகுந் தானே. **#82**

'அந்தி வானம்போலும் நிறம் உடையவனே, அரனே, சிவனே' என்று சிவபெருமானது திருப்பெயர்கள் பலவற்றைச் சொல்லி, தியானத்திற்கு உரிய அவனது வடிவத்தைச் செம்மை பெற்ற அடியார்கள் வணங்கும்பொழுது நானும், 'எவ்வுருவிற்கும் முதலாய திருவுருவத்தை உடையவனே, தலைவனே, மேலானவனே' என்று துதித்து வணங்கினேன்; அப்பொழுதே ஞானமயனாகிய அவன் இவ்வாறு என் உள்ளத்திற் புகுந்துவிட்டான்.

விளக்கவுரை

அரன் - பாசத்தை அரிப்பவன். சிவன் - மங்கலமான வன். வடிவத்தை 'வண்ணம்' என்றார். 'தொழ' என்றது, 'ஞாயிறு பட வந்தான்' என்பதிற்போல நிகழ்கால வினை. 'அடியார் தொழ நானும் தொழுதேன்' என்றது, 'அவர் செய்ததை நானும் செய்தேன்; அச் செயலின் திறம் முற்றும் அறிந்து செய்தேனில்லை' என்றபடி.
'ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாய்உனை நானுந் தொழுவனே' -தி.*5* ப.*91* பா.*3*
என்ற அப்பர் திருமொழியும் காண்க. 'என்று' என்றது, தன்மை ஒருமை இறந்த காலமுற்று. இங்கு 'என்றேன்' என வருதல் யாப்பிற்கு ஒவ்வாமை அறிக. 'இவ்வண்ணம்' எனச் சுட்டியது தம் அநுபவங்களை.
இத்துணையும் வாழ்த்துதலே கூறினார். வணங்குதல், திருவடிவின் முன்னன்றிச் சிறவாது. நினைதற்கு நெஞ்சு ஒடுங்குதல் அரிது. அதனால் எப்பொழுதும் யாவர்க்கும் எளிதிற் கூடுதல் பற்றி வாழ்த்துதலையே பெரிதும் வலியுறுத்தினார். தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகள் பரக்க எழுந்தமைக்கும் இதுவே காரணம் என்க. திருவள்ளுவரும் மேற்குறித்த குறளில் இறைவனது பொருள்சேர் புகழையே எப்பொழுதும் இடைவிடாது சொல்லுதல் வேண்டுமென விதித்தல் நினைக்க. இனி மூவகை வழிபாட்டினையும் இறுதிக்கண்

தொகுத்துணர்த்துவார்.

மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்
நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்
பனையுள் இருந்த பருந்தது போல
நினையாத வர்க்கில்லை நீள்இன்பந் தானே. **#83**

சிவபெருமானை ஒரோவொரு பொழுதாயினும் நினைப்பின், இல்லறத்தில் நிற்பவரும் பெரிய தவத்தவரேயாவர். துறவராயினார் சிவத்தியானத்திலே நிற்பாராயின், ஞானத்தில் நிற்பவராவர். இல்லறத்தவராயினும் துறவறத் தவராயினும், பனை மரத்தின் மேலே வாழ்ந்தும் அப்பனையின் பயனை அறிந்து நுகர மாட்டாத பருந்துபோலச் சிவனது திருவருளில் நின்றும் அதனை யறிந்து அழுந்தமாட்டாதவர்க்குப் பேரின்பம் உண்டாதல் இல்லை.

விளக்கவுரை

பின்னர் 'நினையாதவர்' என வருதலால், முன்னர் 'நினைப்பவர்' என்பதும், முன்னர் 'மனையுள் இருந்தவர்' என்றதனால். பின்னர், 'துறந்திருந்தவர்' என்பதும் பெறப்பட்டன. 'ஞானம் ஈசன்பால் அன்பே' *(தி.12* பெ. பு. ஞானசம்பந்தர். *843)* ஆதலின், ஞானத்தை, 'நேசம்' என்றார். 'நின் இன்பம்' என்பது பாடம் அன்று. இதனால் நினைத்தலின் சிறப்புக் கூறப்பட்டது.

அடியார் பரவும் அமரர் பிரானை
முடியால் வணங்கி முதல்வனை முன்னிப்
படியார் அருளும் பரம்பரன் எந்தை
விடியா விளக்கென்று மேவிநின் றேனே. **#84**

மெய்யுணர்ந்தோரால் துதிக்கப்படு கின்றவனும், தேவர்கட்குத் தலைவனும், எப்பொருட்கும் முதல்வனும், இவ்வுலகத் திற்றானே நிரம்ப அருளைப் புரிபவனும், மேலானவற்றிற்கெல்லாம் மேலானவனும், எமக்குத் தந்தையாய் நிற்பவனும் ஆகிய சிவபெரு மானை நான் அணையா விளக்காகக் கொண்டு தலையால் வணங்கி, மனத்தால் நினைந்து அன்பு செய்து நிற்கின்றேன்.

விளக்கவுரை

மெய்யுணர்ந்தோரே சிவனுக்கு ஆட்படுவாராதலின், அடியாராவர் அவரேயாதல் அறிக. 'படி ஆர' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'முடியால்' என்றதற்கேற்ப, 'மனத்தால்' என்பது வருவிக்கப்பட்டது. 'வணங்கி, முன்னி' என்று ஒழிந்தாராயினும், முன்னர் 'பரவும்' என்ற குறிப்பால், வாயால் வாழ்த்தலும் பெறப்பட்டது. 'அமரர் பிரான்' முதலாக வந்த சிறப்பினால் வணங்கப் படுதல் முதலியவற்றிற்கு

அவனே உரியவன் எனக் குறித்தவாறு.

பரைபசு பாசத்து நாதனை உள்ளி
உரைபசு பாசத் தொருங்கவல் லார்க்குத்
திரைபசு பாவச் செழுங்கடல் நீந்திக்
கரைபசு பாசங் கடந்தெய்த லாமே. **#85**

தன்னின் வேறாகாத பரையாகிய சத்திக்கும், தன்னின் வேறாகிய பசு பாசங்கட்கும் தலைவனாகிய சிவபெருமானை நினைந்து, உயிர்க்குரிய உடலிடத்தே சொல்லும் அந்நெறிப்பட்டு நிற்க வல்லவர்கட்கு, கட்டுற்ற உயிர்கட்கு உரித்தாகிய அலைமோதும் பிறவிப் பெருங்கடலை நீந்தி, மும்மலங்களும் கழன்று, பரமுத்தி யாகிய கரையை அடைதல் கூடும்.

விளக்கவுரை

'உரை பசு பாசம்' என்பதில், 'பாசம்' என்றது உடம்பை. 'உள்ளி உரை பாசத்து ஒருங்க' என்றது, 'மனம் மொழி மெய் ஆகிய மூன்றும் அவனிடத்தே ஒரு நெறிப்பட' என்றவாறு. 'திரை' என்பது, 'கடல்' என்பதனோடு வினைத்தொகையாகத் தொக்கது. பாவம் - உளதாந்தன்மை; என்றது பிறப்பை. செழுமை, அளவிடப்படாத அகல ஆழங்கள். 'நீந்திக் கடந்து கரை எய்தல் ஆம்' எனக்கூட்டுக. ஆதல் - கூடுதல்.

சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான்என்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்
றாடுவன் ஆடி அமரர்பி ரான்என்று
நாடுவன் நானின் றறிவது தானே. **#86**

சிவபெருமானையே என் தலைவன் என்று நினைந்து அவனது திருவடியாகிய மலர்களை நான் தலையில் சூடிக்கொள்வேன்; நெஞ்சில் இருத்திக்கொள்வேன்; பாடித் துதிப்பேன்; பலவாகிய மலர்களைத் தூவிப் பணிந்துநின்று கூத்தாடு வேன்; தேவர்க்குத் தேவன் என்று கொள்வேன்; திருவருள் பெற்ற இந்நிலையில் நான் அறிவது இவ்வளவே.

விளக்கவுரை

'நான் இன்று அறிவது இவ்வளவே' என்றது, 'இதற்குமேல் உண்மை வேறில்லை' என்றதாம். 'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த - மக்கட் பேறல்ல பிற' (குறள் - 61)
'யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை - எனைத்தொன்றும் - வாய்மையின் நல்ல பிற'(குறள் - 300) என்றவற்றிற்கும் கருத்து இவ்வாறாதல் அறிக.
நாற்பத்தாறு திருமந்திரங்களால் சிவபெருமானது முதன் மையை

முதற்கண் கூறிய நாயனார், 'சிவன் ஒருவனே கடவுளாயின் 'அயன், அரி, அரன்' என மும் மூர்த்திகளாக யாண்டும் கூறப்படு வோரது நிலை என்னை?' என்னும் ஐயத்தை நீக்குதற்கு அம்மூவரது மேல் கீழ் நிலையைப் பத்துத் திருமந்திரங்களால் விளக்குகின்றார்.

அளவில் இளமையும் அந்தமும் ஈறும்
அளவியல் காலமும் நாலும் உணரில்
தளர்விலன் சங்கரன் தன்னடி யார்சொல்
அளவில் பெருமை அரிஅயற் காமே. **#87**

என்றும் ஒழியாது செய்கின்ற படைப்பும், காப்பும், அழிப்பும், அருளும் என்ற நான்கனையும் ஆராயுமிடத்தும் அவை அனைத்தையும் சோர்வின்றிச் செய்பவன் சிவபெருமான் ஒருவனே. ஆயினும், மெய்யுணர்ந்தோராகிய அவன்றன் அடியார்கள் சொல் கின்ற அளவில்லாத அவன் பெருமைகள் 'மால், அயன்' என்னும் இருவர்க்கும் ஏற்ற பெற்றி பொருந்துவனவாம்.

விளக்கவுரை

எனவே,'புண்ணிய மிகுதியால் அத்தொழில்களுள் சிலவற்றை இயன்ற அளவு பெற்று நடாத்துதல் பற்றி அவரும் ஒருபுடைத் தலைவராய் நிற்பர்' என்றவாறு. தோற்றத்தை 'இளமை' என்றார்.
'அந்தம்' என்றது உயிர்களின் அலைவிற்கு முடிவாதலை; எனவே, அஃது அருளலாயிற்று; இறுதியில் நிற்கற்பாலதாய அதனைச் செய்யுள் நோக்கி இடை வைத்தார்.
ஈறு - ஒடுக்கம். அளவியல் காலம், 'தோற்றத்திற்குப் பின்னதாயும், ஈற்றிற்கு முன்னதாயும் இடைநிற்றலின் வரையறைப்பட்டு நிகழ்கின்ற காலம்; அஃது அதனை உடைத்தாகிய நிலைத்தொழிலின்மேல் நின்றது. மறைத்தலின் வகையே படைப்பு முதலிய மூன்றுமாகலின், அதனை வேறுவைத்து எண்ணாது,'நாலும் உணரில்' என்றார். இத்தொழில் அனைத்தும் என்றும் நிகழ்வன வாகலின், அவற்றிற்கு, 'அளவில்' என்ற அடை கொடுத்தார்.

ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை யானும்
சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்றெனார்
பேதித் துலகம் பிணங்குகின் றார்களே. **#88**

யாவர்க்கும் முதல்வனாகிய சிவனும், அழகிய மணிவண்ணனாகிய மாயோனும், முதற்றொழிலாகிய படைப்பினைச் செய்யும் பிரமனும் என்கின்ற வடிவங்களை ஆராயின், அம்மூன்று வடிவங்களும் தொழில் இயைபில் ஒன்றே என்று அறியாமல்,'வேறு வேறு' என்று சொல்லி உலகத்தார் இகலி நிற்கின்றார்கள்; இஃதோர் அறியாமை இருந்தவாறு!

விளக்கவுரை

தொழில் இயைபு பின்னர் விளக்கப்படும். இயைபு பட்ட தொழில்கள் பலவற்றைப் பலர் இயற்றுங்கால் தம்முள் இணங்கி இயற்றுதலன்றிப் பிணங்கி இயற்றாமையும், ஒரோவழிப் பிணங்கி இயற்றியவழி ஒன்றும் நடவாதொழிதலும் காட்சியால் அறியப் படுவனவாகலின், அவைபற்றி இடையறாது நிகழும் படைப்பு முதலியவற்றை இயற்றுவோர் அவற்றைத் தம்முள் இணங்கியே இயற்றுகின்றமை துணியப்படும் என்பார், 'மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனார் பேதித்துப் பிணங்குகின்றார்களே' என்றார். எனவே, 'மால், அயன் இருவரும் பொருளால் சிவபெருமானின் வேறாயினும், தொழிலால் அவனோடு ஒருவரே என்றதாயிற்று.

ஈசன் இருக்கும் இருவினைக் கப்புறம்
பீசம் உலகிற் பெருந்தெய்வ மானது
ஈசன் அதுஇது என்பார் நினைப்பிலார்
தூசு பிடித்தவர் தூரறிந் தார்களே. **#89**

வினையின் நீங்கி நிற்பவன் சிவபெருமான் ஒருவனே. அதற்கு உலகில் திருக்கோயில்களில், காணாத அரு வினுக்கும் காண்கின்ற உருவினுக்கும் (தி.8 பெரியபுராணம். சாக்கிய.8) முதலாயுள்ள அவனது இலிங்கத் திருமேனி நடுவிடத்தில் விளங்க, ஏனைத் தேவர் பலரும் அதனைச் சூழ்ந்து போற்றி நிற்றலும், அத்தேவர் நடுவிடத்தில் விளங்கும் கோட்டங்களில் அஃது அவ்வாறு நில்லாமையுமே சான்றாகும். காட்சியானே உணரப்படுகின்ற இதனையும் நோக்காது, முதற்கடவுள் 'அது' என்றும் 'இது' என்றும் பிற தெய்வங்களைச் சுட்டிச் சொல்லித் தம்முட் சிலர் கலாய்ப்பாராயின், அவர் பகுத்துணர்வில்லாதவரே யாவர். தூர்ப்புக்களையே பொருளென்று கண்டவர்கள் அத்தூர்ப்பைத் தான் அறிவார்கள்; அவற்றை அகற்றி உள்ளே உள்ள பொருளை அவர்கள் எவ்வாறு கண்டறிவார்கள்!

விளக்கவுரை

'ஈசன் இருக்கும் இருவினைக்கு அப்புறம் என்றதற்குக் கருத்து நோக்கி இவ்வாறு உரைக்கப்பட்டது. 'ஈசனே, தூரே' என்னும் பிரிநிலை ஏகாரங்கள் தொகுத்தலாயின. முதலதனால், 'ஏனைத் தேவர் பலரும் வினையாற் கட்டுண்டு நிற்பவரே' என்பது பெறப்பட்டது. 'இருக்கும்' என்பது முற்று. 'உலகில்' என்றதனால், காட்சிப் பொருளாய 'கோயில்' என்பது விளங்கிற்று. பெருமை, இங்கு முதன்மையைக் குறித்தது. 'ஆனது' என்றது, 'ஆகிநின்றது' என்றவாறு. இதன் முதல் அடி மேற்கோளாயும், இரண்டாம் அடி ஏதுவாயும் நின்றன. நினைப்பு -

ஆய்வு. 'தூசு' என்றது பின்வரும் தூரினை. தூர் - பள்ளங்களைத் தூர்த்து நிற்கும் பொருள்கள். கூரிய நோக்குடையவரே, தூரினை அறிந்து அகற்றி உள்ளே கிடக்கும் பொருளைக் காண்பர். அதுபோல அறிவுடையவரே கலாய்ப்புக்களை அகற்றி உண்மையை உணர்வர் என்றவாறு.

சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்த
அவைமுதல் ஆறிரண் டொன்றொடொன் றாகும்
அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதற் சங்கரன் தன்பெயர் தானே. **#90**

'சிவன், சதாசிவன், மகேசுரன்' என மூன்றாகவும், 'சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன்' என ஐந்தாகவும், தொகுத்தும் வகுத்தும் சொல்லப்படுகின்றனர். நிலைகளே, 'சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுரன், மால், அயன்' என ஒன்பதாக விரித்துச் சொல்லப்படும். அந்நிலைகள் எல்லாம், முதல்களாகிய விந்து நாதங்களினின்றே தோன்றுதலால், யாவும் அத்தொகுதித் தலைவனாகிய சிவபெருமான் ஒருவனது நிலை வேறுபாடுகளேயன்றி, ஒவ்வொன்றும் ஒவ்வொரு கடவுளன்று.

விளக்கவுரை

'இதனை யறியாது மேற்கூறியவாறு தம்முள் முரணிக் கூறிக் கலாய்க்கின்றவரைத் தெருட்டுதல் இயலாது' என்பது குறிப்பெச்சம். முதற்கடவுள் ஒருவனே, பிறிதொன்றையும் நினையாது வாளா இருக்கும் பொழுது 'பரசிவன்' அல்லது 'பரமசிவன்' எனப் படுவான். பரமசிவனே, 'சொரூபசிவன், சுத்தசிவன்' என்றெல்லாம் சொல்லப்படுவான். அப்பொழுது அவனது, சத்தி 'பராசத்தி' எனப்படும். பின் அப்பரமசிவன் உலகைத் தொழிற்படுத்த நினைக்கும் பொழுது 'சிவன்' அல்லது 'தடத்த சிவன்' எனப்பட, அவனது சத்தி பராசத்தியில் பல கூற்றில் ஒருகூறாய் 'ஆதிசக்தி' எனப்படும், 'திரோதான சத்தி' எனப்படுவதும் இதுவே. சிவனுக்கு உலகை உய்வித்தற்கு உள்ள விருப்பமே 'இச்சாசக்தி' என்றும், அச்செயலுக்கு ஆனவற்றை அறியும் அறிவே 'ஞான சத்தி' என்றும், அறிந்தவாறு செய்யும் செயலாற்றலே 'கிரியா சத்தி' என்றும் சொல்லப்படும், இவற்றுள் இச்சை, என்றும் ஒருபெற்றியாய் உள்ளதே. ஏனைய ஞானம் கிரியை இரண்டுமே பலவாறு அவ்வப்பொழுது செயற்படும். சிவன் (தடத்த சிவன்) சுத்த மாயை முதற்கண் தனது ஞானசத்தி மாத்திரத்தால் பொதுவாக நோக்கிப் பின்பு கிரியா சத்தியைப் பொதுவாக அதன்கண் செலுத்துவான். கிரியையின் செயற்பாடே செய்கையாகையால் இந்நிலை சத்திக்கே உரியது. அதனால், இந்நிலை 'சத்தி' என்றே சொல்லப்படும். இது முன் சொன்ன ஆதிசத்தியன்று.

முன்பு, ஆதி சத்தியும், தானும் வேறின்றி ஒருவனேயாய் நின்ற சிவன், இச்சத்தி தோன்றிய பின்பு 'சிவன், சத்தி' என இரண்டாய் நிற்பன். அச்சிவன் பின்பு சுத்தமாயையை ஞான சத்தியால் சிறப்பாக நோக்கி 'நாதம்' என நின்று, பின்பு கிரியா சத்தியைச் சிறப்பாகச் செலுத்துவன். அந்நிலை யில் அவனது சத்தி 'விந்து' எனப்படும். எனவே, இந்த அளவிலே, இறைவனது நிலை, 'சிவன் சத்தி, நாதம், விந்து' என நான்காதல் அறியலாம், இந்நான்கிலும் ஞானமே மிகுந்திருப்பதால் இவை அருவம் (சூக்குமம்). சிவனை, 'பர நாதம்' என்றும், சத்தியை, 'பர விந்து' என்றும் ' நாதத்தை, 'அபர நாதம்' என்றும், விந்துவை 'அபர விந்து' என்றும் சொல்வது உண்டு. பரம் - மேல். அபரம் - கீழ். 'நாதனை' என்பதற்கு 'நாதம் என்கின்ற நிலையில் நிற்பவன்' என்பதே பொருள். நாதம் - ஒலி. சுத்த மாயையில் நாத தத்துவமே எழுத்தொலி என்பது உணர்க.
மேற்கூறியவாறு ஞான சத்தியே மிக்கு விளங்கிய நிலைக்குப் பின் ஞான சத்தியையும், கிரியா சத்தியையும் இறைவன் சமமாகச் செலுத்தி மாயையைச் செயற்படுத்த முயல்வன். இந்நிலையில் அவன் 'சதாசிவன்' எனப்படுவன். இந்நிலை அருவுருவம் (சூக்குமத்திற்கும், தூலத்திற்கும் இடைப்பட்டது). பின்பு ஞான சத்தியைக் குறைவாகவும் கிரியா சத்தியை மிகுதியாகவும் செலுத்திச் சுத்தமாயையில் ஐந்தொழில் செய்வான், அப்பொழுது அவன் 'மகேசுரன்' எனப் பெயர் பெறுவான். பின்பு ஞானசத்தியை மிகுதியாகவும், கிரியா சத்தியைக் குறைவாகவும் செலுத்தி உரியோர் சிலரை ஏவி அசுத்த மாயை, பிரகிருதி மாயைகளில் ஐந்தொழில் செய்யச் செய்வான், இந்நிலையில் அவன் 'வித்தி யேசுரன்' எனப்படுவான். வித்தியேசுரன் கீழ் நிற்போருள் உயர் நிலையை அடைந்தோரும், 'வித்தியேசுரர்' எனப் பெயர்பெறுவர். அவர், 'அனந்தர், சூட்சுமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தர், சீகண்டர், சிகண்டி' என எண்மராவர். இவருள் முதல்வராகிய 'அனந்தர்' என்பவரே அசுத்த மாயையில் ஐந்தொழில் செய்தும், சீகண்டருத்திரரை ஏவி அவர் வாயிலாகப் பிரகிருதி மாயையில் ஐந்தொழிலைச் செய்வித்தும் நிற்பார். ஐந்தொழில்களுள், 'படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்றும் மாயையின் மேலும், 'மறைத்தல், அருளல் 'என்னும் இரண்டும் ஆன்மாக்கள் மேலும் நிகழ்வன, இவற்றை இறைவன் பிறரைக் கொண்டு செய்விக்குங்கால், படைப்பு முதலிய மூன்றனையும் தான் அவரேயாய் மறைந்து நின்றும், ஏனை இரண்டனையும் அவர் தானேயாக விளங்கி நின்றும் செய்வன். எனவே, படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களைச் செய்யும் 'அயன், அரி. அரன்' என்னும் மூவரே மகேசுரனுக்கு வேறாக வைத்து எண்ணப்படுவர். அனந்த தேவரது

தொழிலோடு எவ்வாற்றானும் நம்மனோர்க்கு நேரே தொடர்பு இன்மையால் அவரையும் அவர்கீழ் நிற்பாரையும் வேறு வைத்து எண்ணுவதில்லை. சீகண்டரது மறைத்தல், அருளல் தொழில் சிவனுடையனவே என்பது மேலே குறித்தவாற்றால் விளங்கும். எனவே, 'மகேசுரன், உருத்திரன், மால், அயன்' எனச் சதாசிவனுக்குக் கீழ் நான்கு நிலைகளே சொல்லப்படுகின்றன. இவை நான்கும் உருவம் (தூலம்). அனைத்தும் கூட, 'சிவன், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன் எனச் சிவனது நிலைகள் ஒன்பது என்பது விரியாக அமைந்துள்ளன. இவை 'நவந்தரு பேதம்' எனப்படும். முதல் நான்கும் இலய நிலைகள்; இடை ஒன்று போக நிலை; இறுதி நான்கு அதிகாரநிலை. இவைகளை மூன்றாகத் தொகுத்துக் கூறுமிடத்து. 'சிவன்' என்னும் இலய நிலையுள் ஏனைய மூன்றும் 'மகேசுரன்' என்னும் அதிகார நிலையுள் ஏனைய மூன்றும் அடங்கும். ஐந்தாக வகுத்துக் கூறுமிடத்து, 'சிவன்' என்பதில் நாதமும், 'சத்தி' என்பதில் விந்துவும் அடங்க, 'உருத்திரன்' மால், அயன் என்னும் மூன்றும் 'வித்தை' என ஒன்றாகச் சொல்லப்படும். இவற்றையே, 'சிவன் முதல் மூவர்' என்றும், 'ஐவர்' என்றும், 'ஆறு இரண்டு ஒன்று-ஒன்பது' என்றும் கூறினார். ஒன்பது நிலைகளுள் 'சத்தி, விந்து என்பன சத்தியின் நிலைகளே' என்பதை மேலே குறித்தோம். எனவே, இறைவன்' 'சிவன், நாதம், சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன், என்னும் நிலைகளுள் நிற்கும்பொழுது இறைவி, முறையே, சத்தி, விந்து, மனோன்மனி, உமை, திரு, வாணி' என நிற்பாள். எனவே, மறைந்து நிற்றல் வகையாயினும், விளங்கி நிற்றல் வகையாயினும் ஒன்பது நிலைகளும் எவ்வாற்றானும் சிவபெருமானுடையனவே. ஆதலின்,'மால், அயன்' என்போரை அப்பெருமானின் வேறாக எண்ணி உயர்த்தியோ, தாழ்த்தியோ கூறிப் பிணங்க வேண்டுவது இல்லை என்பதாம்.

சிறந்த அவை முதல் ஒன்பது - சிறப்புடைய அவை முதலாய் நிற்கின்ற ஒன்பது, 'முதலுகின்ற ஒன்பது' என வினைத்தொகை. இரண்டாவதாய் நின்ற 'அவை' என்றது, 'ஓங்க' என்பதனோடு இயையும், இதனை அடுத்து நின்ற முதல், கருவி; தத்துவம். தத்துவத் திற்கு ஏதுவாகும் இறைவன் நிலைகளை 'தத்துவம்' என்றார். சவை - சபை. தொகுதி. 'பெயர்' எனச் சொல்மேல்வைத்துக் கூறினாரேனும், அதனால் உணர்த்தப்படும் நிலைகளைக் கூறுதலே கருத்து என்க. இறைவனது நிலைகளை இவ்வாறு தொகுத்தும், வகுத்தும் விரித்தும் கூறப்படுதலை எடுத்தோதி, இவையெல்லாம் ஒருவனது பல நிலைகளே யன்றி பொருளால் வேறல்ல என்பார். 'ஒன்று ஆகும்' என்றார்.

பயன்அறிந் தவ்வழி எண்ணும் அளவில்

அயனொடு மால்நமக் கன்னியம் இல்லை
நயனங்கள் மூன்றுடை நந்தி தமராம்
வயனம் பெறுவீர்அவ் வானவ ராலே. #91
மேற்கூறிய நிலைகளால் உயிர்கட்கு விளையும் பயன்களை அறிந்து அவற்றை முறைப்படுத்தி எண்ணுங் கால் சீகண்ட வுருத்திரர்க்குக்கீழ் நிற்கும் 'அயன், மால்' என்பவர் தாமும் நமக்கு அயலாவாரல்லர்; அதனால் நீவிர் அக்கடவுளராலும் சிவனுக்கு அடியவராகும் வகையைப் பெற முயல்வீராக.

விளக்கவுரை

'எண்ணும்' என்றதற்கு, 'அவற்றை' என்னும் செயப்படு பொருள் வருவிக்க, இங்கு, 'அயன், மால்' என்றது சீகண்ட உருத்திரர்க்குக் கீழ் நிற்பவரையே என்பது. ஏற்புழிக் கோடலால் விளங்கும், 'அன்னியம் இல்லை' என அமைதிகூற வேண்டுதல் அவரைப்பற்றியே யாகலின், அன்னியராவாரை, 'அன்னியம்' என்றார். அதன்பின், ஆதலால் என்னும் சொல்லெச்சம் வருவிக்க. 'மாலும்' எனவும், 'அவ்வானவராலும்' எனவும் போந்த இழிவு சிறப்பும் தொகுத்தலாயின, 'அன்னியம் இல்லை' என்றது சிவ பிரானுக்கு வேறானவராய்த் தோன்றுதல் இல்லை என்றவாறு. அவரால் சிவனடியாராதலைப் பெறுதலாவது, 'இவரும் சிவ பெருமானது தொழிற்குரியராம் நிலைமையைப் பெற்றுச் சீகண்ட உருத்திரர் வாயிலாக அப்பெருமானது திருவருளைப் பெற்று நிற்பவர்' என உணர்ந்து அவனது அடியவராகக் கருதி வழிபட்டுச் சிவ புண்ணியத்தைப் பெறுதல். 'ஆம்' என்றது எச்சம்; முற்றாதற்கு ஏலாமை அறிக. 'வயனம்' என்பது எதுகை நோக்கித் திரிந்தது. 'வயணம்' என்பதே பாடம் எனலுமாம், வயணம் - வகை.
நவந்தரு பேதங்களில் இறைவன் தன் அடியவரை அவர்க்கு விருப்பம் உள்வழி ஏற்புடையவற்றில் நிறுத்துதலும் உண்டு. ஆகவே, அவை 'சம்பு பட்சம், அணு பட்சம்' என இருவேறு வகையாய் நிற்கும். இறைவன் தானே கொள்ளும் நிலைகள் சம்பு பட்சம்; தன் அடியவரை அந்நிலைகளில் நிறுத்தித் தானே செய்விப்பனவும், பிறர் வாயிலாகச் செய்விப்பனவும் அணுபட்சம், இவ்விருவகை நிலைகளும் சுத்த மாயையிலே உள்ளன. ஏனை இருமாயைகளிலும் அணுபட்சம் மட்டுமே உள்ளன. அவற்றுள்ளும் தூலமாய் உள்ள உருவநிலை நான்குமே உள்ளன. அந்நான்கனுள் மகேசுர நிலையில் நிற்பவர் முறையே அனந்த தேவரும், சீகண்டருமேயாவர். ஆன்ம வருக்கத் தினராகிய இவர் எல்லாரிடத்தும் பதியாகிய சிவபெருமான் தான் அவரேயாய்க் கலந்துநின்று அவரவர் தொழிலை இயற்றுவிப்பான், இவ்வாற்றால் அணுபட்சத்தினராகிய அயன், மால் என்பவரும் ஓராற்றால் சிவ

நிலையினரேயாகலின், 'அயனொடு மால் நமக்கு அன்னியம் இல்லை' என்றார். இவ்வாறே.

'ஒருவிண்முதல் பூதலம் - ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்ப மும்மூர்த்திக ளாயினை' *-தி,1 ப.28*

'நாரணன்காண் நான்முகன்காண் நால்வே தன்காண்'
-தி,6 ப.8 பா.3

'மாதிவர் பாகன் மறை பயின்ற
வாசகன் மாமலர் மேய சோதி' *-தி.8 திருவார்த்தை 1*

'ஆதி - அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்'
-ஞானவுலா 5

என அருட்டிருமொழிகள் 'அயன், மால்' என்பவரையும் சிவபெருமானோடு ஒன்றாக வைத்து உயர்த்துக் கூறுமாறு அறிக.

அருட்டிருமொழிகளில் மேற்காட்டியவாறு அயனையும், மாலையும், சிவபெருமானோடு ஒன்றாக வைத்து உயர்த்துக் கூறுவனவேயன்றி,

'முந்நீர்த் துயின்றோன் நான்முக னறியாப்
பண்பொடு நின்றனை' *-தி.1 ப.28*

'பிரமனும் மாலும் மேலை முடியோடு பாதம்
அறியாமை நின்ற பெரியோன்' *-தி.4 ப.14 பா.2*

'பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க'
-தி.8 திருவாசகம். திருவண்டப் பகுதி 32

என வேறாக வைத்து இழித்துக் கூறுவனவும் உள்ளனவன்றோ எனின், ஆம், அவையெல்லாம், 'படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்' என இறைவன் செய்யும் தொழில் ஐந்து என்பதும், அவை ஐந்தும் ஒருவனது தொழிலே என்பதும் உணராது படைத்தல் முதலிய மூன்றே தொழில்கள் உள்ளன எனவும், அவற்றுள் அழித்தல் தொழில் கொடியதாகலின் அதனைச் செய்வோன் இறைவனாகான் என விடுத்து ஏனைய இரண்டும் செய்யத் தக்கனவாயினும் அவற்றுள் ஒவ்வொன்றே உயர்ந்தது எனவும் கொண்டு அதுவதற்கு உரிய ஒவ்வொருவனையே இறைவன் எனப் புகழ்ந்து, ஏனை இருவரையும் இகழ்ந்தொதுக்குவாரை நோக்கி, 'முதல்வனாவான் ஓரோர் தொழிற்கே முதல்வராய் அவர் எல்லாரினும் மேம்பட்ட ஒருவன்' எனத்தெளிவித்தற் பொருட்டு வருவனவாகலின், 'அவை, முன்னர்க் காட்டியவற்றோடு முரணுவன அல்ல' என்க.

எனவே, அயனையும், மாலையும் சிவபெருமானோடு ஒன்றாக வைத்துக் கூறும் திருமொழிகள் சிவபெருமான் தானே செய் வோனாய் சம்பு பட்சங்களில் வெளிப்பட்டு நிற்கும் நிலை, செய்விப் போனாய் அணுபட்சங்களில் மறைந்து நிற்கும் நிலை என்னும் இவற்றை

நோக்கின எனவும், அவ்விருவரையும் வேறாக வைத்துக் கூறுந்திருமொழிகள் அவர் அணுபட்சத்தினராகின்ற நிலையை நோக்கின எனவும் பகுத்துணரற்பாலன என்பதாயிற்று.
இதுபற்றி யன்றே இந் நாயனாரும், 'பயனறிந் தவ்வழி எண்ணும் அளவில் ... ... நமக்கு அன்னியமில்லை' என்றார்! 'அவ்வழி எண்ணும் அளவில் அன்னியம் இல்லை' எனவே, 'சிவபெருமானது நிலைவேறுபாடுகளாகிய சம்புபட்சங்களை எண்ணாது அணுபட்சங்களாகிய அவரவரையே எண்ணிய வழி அன்னியம் உண்டு' என்து போந்தது.
'நமக்கு அன்னியம் இல்லை' என்றது, 'சம்புபட்சங்களை எண்ண வல்ல சிவநெறியாளராகிய நமக்கு அன்னியம் இல்லை' என்றவாறு. எனவே, 'அது மாட்டாது அணுபட்சத்தையே எண்ணும் ஐரணியகருப்பர், பாஞ்சராத்திரிகள் முதலியோர்க்கு எவ்வாற்றானும் உளதாவது அன்னியமே என்பதும் போந்தது. இதனானே, 'இது மாட்டாத பௌராணிகர், அனைவரையும் ஒப்பவைத்து அனேகேச்சுர வாதம் பேசுவர்' என்பதும் பெறப்படும்.
இன்னும், 'பயனறிந்து அவ்வழி எண்ணும் அளவில்' என்ற தனால், உயிர்களின் நன்மையின் பொருட்டு இறைவன் கொள்ளும் தடத்த நிலைகள் மேற்கூறியவாற்றான் முன்னும் பின்னுமாய் நிற்றல் நோக்கிச் சம்புபட்சமாகிய அவற்றில் மேல், கீழ் கூறப்படுதல் பற்றி அணுபட்சத்திலும் மேல், கீழ் கூறப்படுகின்றனவன்றி, அணுப் பட்சத்தில் உண்மையில் மேல் கீழ் இன்றி யாவரும் ஒரு தன்மையினரே என்பதும் உணர்த்தப்பட்டதாம். இதனை,

அயனை முன்படைத் திடுமொரு கற்பத்
தரியை முன்படைத் திடுமொரு கற்பத்
துயரு ருத்திரன் றனைமுனம் படைப்பன்
ஒருகற் பத்தின்மற் றொருகற்பந் தன்னின்
முயலு மூவரை ஒருங்குடன் படைப்பன்
முற்பி றந்தவர் மற்றிரு வரையும்
செயலி னாற் படைக் கவும் அருள் புரிவன்
சிவபிரான் எனில் ஏற்றமிங் கெவனோ.

எனச் 'சிவதத்துவ விவேக' நூல் விளக்கிற்று.
'இச் சிவதத்துவ விவேகச் செய்யுளில் 'சிவபிரான்' என்றதற்கு ஈடாக 'மாயோன்' அல்லது 'நான்முகன்' என்பதைப் பெய்து, இவை அனைத்தையும் மால் அல்லது அயனுக்கு ஆக்கிக் கூறின் வரும் குற்றம் யாது' எனின், 'சிவம் சாந்தம் சதுர்த்தம்' என்று சிவபெருமானைக் குணமூர்த்திகளாகிய மூவரின் மேம்பட்ட நான்காமவனாய நிர்க்குண

மூர்த்தியாகக் கூறியது போல, அவரை ஓரிடத்தும் கூறாமையானும், மாயோனையும், நான்முகனையும் முதல்வராகக் கூறுவோர் அவரை முறையே 'சத்துவ மூர்த்தி, இராசத மூர்த்தி' என்பதல்லது, நிர்க்குண மூர்த்திகளாகக் கூறாமையானும் அங்ஙனம் கூறுதல் கூடாது என்க. உருத்திரனைச் சிவபிரானின் மேம்பட்டவனாகக் கூறிப் பிணங்குவார் இன்மையின், அவன் அன்னியன் ஆகாமையைக் கூறிற்றிலர்.

ஓலக்கஞ் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனி பணிந்தடி யேன்தொழ
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் ஒப்புநீ
ஞாலத்து நம்மடி நல்கிடென் றானே. **#92**

எண்ணில்லாத தேவர்கள் திருவோலக்கத்தில் சூழ்ந்து பணிகின்ற சிவபிரானது திருமேனியை அடியேனும் பணிந்து கும்பிட, அவன், 'நீ திருமாலையும், படைப்புக் கடவுளாகிய பிரமனையும் நிகர்த்தவன்; ஆதலின், நிலவுலகத்திற்கு நமது திருவருட் பெருமையை உணர்த்து' என ஆணை தந்தருளினான்.

விளக்கவுரை

'ஆகவே, மக்களுலகத்துள்ளாரைச் சிவபெருமான் மாலும் அயனுமாகச் செய்தல் உண்டு' என்றவாறு. 'உலப்பிலி தேவர்கள்' என்றதை முதலிற் கூட்டுக. சிவபெருமானது திருமேனி, பால் போலுதல் திருநீற்றுப் பூச்சினாலாம். இனிபால், இனிமை பற்றிவந்த உவமை என்றலுமாம், அருளை, 'அடி' என்றல் மரபு என்பது, 'இறைவனார் கமல பாதம் இன்றியான் இயம்பும்' என்ற சிவஞான சித்தியானும் (சுபக்கம் - பாயிரம் - *4)* உணர்க. திருமாலும், பிரமனும் வேதம் முதலியவற்றால் பலர்க்குச் சிவபிரானது திருவருட் பெருமையைப் பலர்க்கு உணர்த்துவோராதல் அறியத்தக்கது. 'ஞாலக்கு' என்பதே பாடம் போலும். நாயனார்க்கு சிவபெருமான் இவ்வாறு ஆணை தந்தது நந்திதேவர் வாயிலாக என்க. இனித் திருவாவடுதுறையில் சிவபோதியின் கீழ் இருந்து கண்ட யோகக் காட்சியில் என்றலும் பொருந்துவதேயாம், இவ் ஆணையின் வழி நல்கப்பட்டதே இத் திருமந்திர மாலை என்க.

வானவர் என்றும் மனிதர்இவர் என்றுந்
தேனமர் கொன்றைச் சிவனருள் அல்லது
தானமர்ந் தோருந் தனித்தெய்வம் மற்றில்லை
ஊனமர்ந் தோரை உணர்வது தானே. **#93**

உடம்போடு கூடி நிற்பவருள் சிலரை'இவர் தேவர்' என்றும், சிலரை, (இவர் மக்கள்) என்றும் உணர நிற்கும் நிலைமைகள் எல்லாம் சிவபெருமானது செயலால் அமைவனவன்றித் தானாகவே அவ்வாறு நிற்கும் தனித் தெய்வம் இல்லை.

விளக்கவுரை

'அதனால், ஏனைத் தேவரும், தலைமக்களும் மாலயன் போலச் சிவபெருமானது கலப்பினை நோக்கும்வழி அவனாதலும், இவர்தந் தன்மையை நோக்கும்வழி இவரோயாதலும் பெறப்படும், என, வானுலகத்தில் இந்திரன் முதலாகவும், மண் ணுலகத்தில் அரசர் முதலாகவும் உள்ள தலைவரது நிலைமையை விளக்கியவாறு. இவ்வாற்றானே. 'திருமாலுக் கடிமைசெய், தெய்வம் இகழேல், சக்கர நெறிநில் (ஆத்திச்சூடி) என்றற்றொடக்கத்து அறநூற் கட்டளைகள் எழுந்தன என்க. 'ஓரும்' என்றது செயப்பாட்டு வினையாய் நின்றது. தனிமை, இங்குச் சுதந்திரத்தைக் குறித்தது. மற்று, அசைநிலை,

சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற
ஆதிக்கண் ஆவ தறிகிலர் ஆதர்கள்
நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன்என்று
பேதித் தவரைப் பிதற்றுகின் றாரே. **#94**

சிவதன்ம நூலுள், 'உருத்திரன், மால் அயன்' என்னும் மூவரும், மெய்யுணர்ந்தோர் ஆய்ந்துணர்ந்த பேரொளி யாகிய அநாதிப் பொருள் ஒன்றே மூன்றாயும், ஐவந்தாயும் நின்ற முதனிலைகளில் அமைவனவாதலை அந்நூலை அறியாதார் அறிய மாட்டார். அதனால், அவர் உலகியல் நூலே பற்றி அவரை வேறு வேறு கடவுளாக்கி அவருள் ஒருவராகப் புகழ்ந்தும், ஏனையிருவரையும் இகழ்ந்தும் திரிகின்றனர்.

விளக்கவுரை

'அவர் உரை பொருளாதல் இன்று' என்பது குறிப்பெச்சம். 'ஆதி' என்றதனால், 'அநாதி' என்பதும், நீதி நூல் என்றதனால் 'சிவதன்ம நூல்' என்பதும் கொள்ளப்பட்டன. நீதி - உலகியல்; இஃது ஆகுபெயராய் நின்றது. 'நீதிக்கண் நின்று' என ஒருசொல் வருவிக்க. ஈசன் முதலிய மூவரும் நின்று' என ஒரு சொல் வருவிக்க ஈசன் முதலிய மூவரும் பின்னர்க் கூறப்படுதலின் முன்னர்க் கூறாயினார். 'அவரைப் பேதித்துப் பிதற்றுகின்றார்' என மாறிக் கூட்டுக.

'உலகியல் நூல், பல்வேறு சமயத்தாருக்கும் பொது வாய அறங்களைக் கூறும் நூல், அஃது 'முதற்கடவுளாவது இதுவே' என ஒருதலையாக ஒருதெய்வத்தை வரையறுத்துணர்த்தாமையின், அதனையே பற்றி நிற்பார்க்கு மலைவுண்டாதல் இயல்பு' என்பதும், 'அம்மலைவு, மெய்ந்நெறி நூலை உணர்வார்க்கு இல்லை' என்பதும் உணர்த்தியவாறு அறிக.

பரத்திலே ஒன்றாய்உள் ளாய்ப்புற மாக
வரத்தினுள் மாயவ னாய்அய னாகித்

தரத்தினுள் தான்பல தன்மைய னாகிக்
கரத்தினுள் நின்று கழிவுசெய் தானே. **#95**

சிவபெருமான் ஒன்றோடும் ஒட்டாது தனித்து நிற்கும் மேல் நிலையில் ஒருவனேயாய், அந்நிலையினின்று வரு தலாகிய பொதுநிலையில் எல்லாப் பொருட்கும் உள்ளும், புறம்பும் நிறைந்து நிற்பவனாய் மால், அயன் முதலிய ஒன்பது நிலைகளை உடையவனாகியும், உயிர்களின் தகுதி வேறுபாட்டிற்கேற் மற்றும் பல் வேறு நிலைகளையுடையனாகியும் இவ்வாறெல்லாம் தனது திருவருள் ஒன்றிலே நின்று உயிர்கட்குப் பாசத்தைப் போக்கி யருளுகின்றான்.

விளக்கவுரை

எனவே, 'இவற்றிற்கெல்லாம் காரணம் பல்வேறு நிலைப்பட்ட உயிர்கள் மாட்டுக் கொண்ட அருளேயன்றிப் பிறி தில்லை' என, 'ஒருவன் ஒருநிலையில் நில்லாது பல நிலையை மேற் கொள்ள வேண்டுவது என்னை' என்னும் ஐயத்தை நீக்கியவாறு 'மாயவன், அயன்', 'தரம்' என்பன உபலக்கணம். வரத்து, 'வரவு' என்னும் தொழிற் பெயர். சொரூபம் நிலையும், தடத்தம் வரவும் ஆதல் உணர்ந்து கொள்க. கரம் போல்வதனை, 'கரம்' என்றார். இறைவனது சத்தியை அவனுக்குக் கை போல்வதாதலை.

'நங்கையினால் நாம் அனைத்தும் செய்தாற்போல் நாடனைத்தும்
நங்கையினால் செய்தளிக்கும் நாயகனாம்'

என்னும் திருக்களிற்றுப்படியார். *78* இதனாலறிக. இதனானே, 'என்னை இப்பவத்திற் சேராவகை எடுத்து' *(சிவஞானசித்தி. பாயிரம். 2)* என்பதில் எடுத்து என்றது, 'அருளாகிய கையால் எடுத்து' எனப் பொருள் தந்தது.

தானொரு கூறு சதாசிவன் எம்இறை
வானொரு கூறு மருவியும் அங்குளான்
கோனொரு கூறுடல் உள்நின் றுயிர்க்கின்ற
தானொரு கூறு சலமய னாமே. **#96**

எம் கடவுளாகிய சிவபெருமான் தானே ஒரு கூற்றில் சதாசிவ மூர்த்தியாய் 'சாந்தியதீதை' என்னும் ஒரு கலையுள் நின்று அதனையே தன்னிடமாகக் கொண்டும் இருக்கின்றான். மற்றொரு கூற்றில் உயிர்க்குயிராய் நின்று உணர்த்துவதாகிய இலயசிவனாயும் நிற்கின்றான். பிறிதொரு கூற்றில் பாசங்களின் வழிநின்று நடத்தும் மறைப்பாற்றலாயும் உள்ளான். வேறொரு கூற்றில் பாசத்தை நீக்கித் தன்னைத் தரும் அருளாற்றலாயும் இருப்பன்.

விளக்கவுரை

'அதனால் அவனது நிலைவேறுபாடுகளை அறிதல் உயிர்கட்கு அரிது'

என்பது கருத்து. 'இந்நிலையெல்லாம் தன் இச்சையாற் கொள்வனவே' என்றற்கு முதற்கண், 'தான்' என்றார். சாந்தியதீத கலையும் ஆகாயம் எனப்படுமாறு அறிக. உண்மையை 'அங்கு' என்பதனுடன் கூட்டுக. 'கோன்' என்றது. 'எசமானன்' என்னும் பொருளது. பாசத்தின் வழி நின்று நடத்துதலை, 'உடலுள் நின்று உயிர்த்தல்' என்றார். இறுதிக் கண் நின்ற 'ஒரு கூறு' என்றது முன்னும் சென்று இயையும், 'ஆம்' என்பதனை, 'தான்' என்றதற்கும் கூட்டுக. தண்ணியனாதல் பற்றி அருள்வோனாதலை, 'சலமயன் ஆம்' என்றார்.

<u>3.2.வேதச் சிறப்பு</u>

வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்
ஓதத் தகும்அறம் எல்லாம் உளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே. **#97**

'அறவேட்கை உடையேம்' எனத் தம்மைப் பற்றிச் சொல்லிக்கொள்வார் சிலர், 'வேதத்திற் சொல்லப்படாத அறமும் உண்டு' எனக் கூறுவராயினும், அஃது உண்மையன்று; வேதத்திற் சொல்லப்படாத அறம் யாதொன்றும் இல்லை. மக்கள் ஓதி உணர வேண்டுவனவாய எல்லா அறங்களும் வேதத்திலே உள்ளன. அதனால், அறிவுடையோர் பலரும் வேதத்தை மறுத்துச் செய்யும் சொற்போரை விடுத்து எல்லாச் சொல்வளமும், பொருள்வளமும் உடைய வேதத்தை ஓதியே வீடடையும் நெறியைப் பெற்றார்கள்.

விளக்கவுரை

'கொல்லாமையே சிறந்த அறம்; அது வேதத்துள் இல்லை' எனக் கூறும் புத்த சமண மதத்தவரது கூற்றை உட்கொண்டு கூறியது இத்திருமந்திரமாதலின், இதற்கு இவ்வாறு உரைக்கப்பட்டது. வேதத்துள் ஊன் வேள்வி கூறப்பட்டதாயினும், வேதம் பல்வேறு திறத்தார்க்கும் அவரவர்க்கு ஏற்புடைய அறங்களைக் கூறுவதாகலின், அதனுட் கூறப்பட்ட அறங்கள் அவ்வத்திறத்தார்க்கே உரியனவன்றி, எல்லா அறங்களும் எல்லார்க்கும் உரியன அல்ல; அவ்வாற்றால், ஊன் வேள்விகளும் அவற்றிற்கு உரியாரை நோக்கியே கூறப்பட்டன என்பதும், ஊன் வேள்வியன்றித் தூய வழிபாடுகளும், தூய நோன்பு களும் அவற்றிற்கு உரியாரை நோக்கி வேதத்திற் கூறப் பட்டுள்ளன என்பதுமே வேதத்தை உடன்பட்டோர் துணிபாகலின் 'வேதத்தை விட்ட அறமில்லை' என்பது முதலியவற்றால் வேதத்தின் சிறப்பை வலியுறுத்தினார் நாயனார். திருவள்ளுவ நாயனாரும்,
அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்

உயிர்செகுத் துண்ணாமை நன்று. -குறள் *259*
என 'ஊன்வேள்விகள் உயர்ந்தோர்க்கு உரியன அல்ல என்பது மாத்திரையே கூறியதல்லது, 'ஒருவர்க்கும் ஆகாது' என முற்றக் கடிந்து கூறினாரல்லர். ஊன் வேள்விகளை அறிவுடையோர் விலக்கா மைக்குக் காரணம், அவற்றாலும் சிலர்க்குக் கடவுள் உணர்ச்சி உள தாதல் பற்றியேயாம். புத்த சமண மதங்கள் கடவுட் கொள்கை இல்லாத மதங்களாதலின் அவை அவற்றை மறுக்கு முகத்தான் கடவுள் வழி பாட்டினையே மறுப்பனவாயின. அன்றியும், ஊன் வேள்வியை விலக்குதலைத் தம் மதத்தினைப் பரப்புதற்குத் தக்கதொரு கருவி யாகவுங் கொண்டு தம் ஆரவார உரைகளைப் பெருக்கின என்பது, 'கொல்லாமை மறைந்துறையும் அமண்சமயம்' (தி.*12* திருநாவுக் கரசர் புராணம். *37)* என்ற சேக்கிழாரது திருமொழிக் குறிப்பால் நன் குணரலாம்.
'வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை' -தி.*3* ப.*108* பா.*7*
என்னும் திருமொழியும் இக்கருத்தே பற்றி எழுந்தது.
'கடவுள் வழிபாடு உயிர்க்கொலையோடு கூடாது நிற்றலே சிறப்பு; கூடினும் அமைக' என்பது வேத மதங்களின் கருத்து. 'கடவுள் வழிபாடு செய்யப்படாது ஒழியினும் ஒழிக; உயிர்க் கொலை கூடாது' என்பது புற மதங்களின் கொள்கை. 'இப்புறமதக் கொள்கையால் ஒழிவது கடவுள் வழி பாடேயன்றி உயிர்க்கொலையன்று' என்பதை ஊன்றியுணரவல்லார்க்கு, அம்மதங்களால் விளையும் தீங்கு புலனாவ தாகும். அது நோக்கியே அறிவுடையோர் அனைவரும் வேதத்தை உடம்பட்டு ஒழுகினர் என்க.
அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். -குறள் *543*
ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவான் எனின். -குறள் *560*
என்பவற்றால் திருவள்ளுவ நாயனாரும் வேதத்தை உடம்பட்டமை புலனாகும். 'வேதத்தில் அறம் எல்லாம் உள' என்றதனால், 'வேதம் அறத்தைக் கூறும் பொது நூல்' என்பது பெறப்பட்டது.

வேதம் உரைத்தானும் வேதிய னாகிலன்
வேதம் உரைத்தானும் வேதா விளங்கிட
வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்கா
வேதம் உரைத்தானும் மெய்ப்பொருள் காட்டவே. **#98**

வேதத்தை எப்பொழுதும் ஓதுபவனாகிய பிரமனும் வேதத்தைச் செய்தவனாயினானில்லை. ஏனெனில், வேதத்தைச் செய்தவன்

அதனைச் செய்தது, அப்பிரமன் அதனை ஓதி அறிவு விளங்கப் பெறுதற் பொருட்டும், மற்றும் கன்மத்தில் விருப்பம் உடைய வர்க்கு வேள்விகளை உளவாக்குதற்பொருட்டும், மெய் யுணர்வு பெற விரும்புவோர்க்கு மெய்ப்பொருளை உணர்த்தற் பொருட்டுமாம்.

விளக்கவுரை

'பிரமன் வேதத்தால் அறிவு விளங்கப்பெறுதல், அவன் அதனை இடையறாது ஓதுதலால் அறியப்படும்' என்றற்கு, அவனை 'வேதம் உரைத்தான்' என்னும் பெயராற்கூறினார். உம்மை நான்கனுள் முதலது, சிறப்பு; ஏனையவை எச்சம். 'வேதத்தை ஓதி அறிவு விளங்கப் பெறுபவன், அவ்வேதத்தைச் செய்தவனாதல் எவ்வாறு' என்றற்கு, 'வேதம் உரைத்தானும் வேதா விளங்கிட' என்றார். இக்கருத்தால் இது கூறப் புகுந்தவர், வேதத்தால் உளவாகும் ஏனைய பயன்களையும் உடன் கூறினார் என்க. இப்பயன்களது சிறப்பை வலிறுத்தற்கு எச்ச உம்மை புணர்த்து வேறு வேறு தொடராற் கூறினார். அவ்வும்மைகட்கு முன் 'உரைத்தது' என்பன சொல் லெச்சமாய் எஞ்சிநின்றன. இதனால் 'வேத்தைச் செய்தவன் பிரமன் எனக் கூறும் ஐரணிய கருப்பமத'த்தவர் முதலாயினவர் கூற்றும் பொருந்தா' என்பதும், 'வேதத்தின் பயன் இவை' என்பதும் கூறப்பட்டன. இதனானே வேதம் ஒருவராலும் செய்யப்பட்டதன்று என்னும் மீமாஞ்சகரது கொள்கையும் பொருந் தாமை பெறப்பட்டது.

இருக்குரு வாம்எழில் வேதத்தி னுள்ளே
உருக்குணர் வாயுணர் வேதத்துள் ஓங்கி
வெருக்குரு வாகிய வேதியர் சொல்லுங்
கருக்குரு வாய்நின்ற கண்ணனு மாமே. **#99**

பூனையை ஒத்த புறத்தோற்றம் உடைய வேதியர்கள் சொல்கின்ற, பிறப்பை உடைய ஆசிரியனாகிய மாயோன் றானும், மந்திரவடிவாகிய எழுச்சியான ஓசையை உடைய கன்ம காண்டத்துள் உள்ளத்தை உருக்குகின்ற அன்புருவாயும், ஞான காண்டத்துள் கேள்வி, ஆய்வு முதலியவற்றால் துணியப்படும் மெய்ப் பொருளாயும் உயர்ந்து நிற்பவனாவனோ? ஆகான்.

விளக்கவுரை

'அதனால், அவனும் வேதத்தைச் செய்தவன் ஆகான்' என்றபடி. வேதத்தின் பாகங்களையும் 'வேதம்' என்றல் வழக்கு. உருக்கு உணர்வு, அன்பு உணர்வேதம், உணரப்படும் வேதம். 'ஓங்கி' என்றது பெயர். 'வேதம் முதல் நூலாதலின், அதனைச் செய்தவன் யாவர்க்கும் முன்னோனாய தன்னிகரில்லாத் தனிப்பெருந்தலைவனேயாதல்

வேண்டும். அதனால், அவன் தனது தன்மையை உணர்ந்து தன்னைச் சாரமாட்டாத பிறர்க்கு அன்பினானும், ஆராய்ச்சியானும் தன்னை அடையுமாற்றையே அந்நூலுட் கூறியிருத்தல் வேண்டும். ஆகவே, அவன் அதன் கன்ம காண்டத்துள் அன்பிற்கும், ஞானகாண்டத்துள் அறிவிற்கும் பற்றாய் நிற்றல் வேண்டும். அத்தன்மை பிறப்பினுட்பட்டு நிற்கும் மாயோனுக்கும் கூடாது' என்பார், 'கருக் குரு வாய் நின்ற கண்ணனும் ஆமே' என்றார். 'கரு' என்றது பிறப்பை. 'கருக்குரு' என்றதை, 'கருவை உடை குரு' என விரிக்க. 'கருவில் வீழ்பவன் குருவாகமாட்டான்' என்பது குறிப்பு. 'கண்ணன்' மாயோன்' என்பன ஒருபொருட்சொற்கள். 'கண்ணனும்' என்ற உம்மை இழிவு சிறப்பு. 'ஆமே' என்ற வினா, 'ஆகான்' என எதிர்மறைக்கண் வந்தது. 'கண்ணனும் உருக்குணர்வாய் ஓங்கி ஆமே' எனக் கூட்டுக. வரையறை இன்மையின், 'வெருக்குரு' என, வேற்றுமைப் புணர்ச்சியுள் நிலைமொழியில் சிறுபான்மை ககரம் இரட்டிற்று. 'வெருக்குக்கண்' *(நாலடியார் 210)* எனப் பிறவிடத்தும் வந்தது. 'பிரமத்தை உணர்ந் திருத்தலால் பிராமணர் எனவும், பிரமஞானம் மிக்கிருத்தலால் விப்பிரர் எனவும் சொல்லப்படுகின்றோம்' என்று சொல்லிக்கொண்டு, பிரமமாகிய சிவபெருமானைச் சிறிதும் உணர்ந்து அன்பு செய்யாமலே, மாயோன் முதலியோரையே புகழ்வதோடு சிவபெருமானை இகழ்வதும் செய்துகொண்டே, நூலும் சிகையும் முதலாய தோற்றத்தால் மட்டும் சிலர் பிராமணராய் நிற்றலின், அவரது தோற்றத்திற்குத், தவத்தோடு சிறிதும் இயைபின்றி அதற்கு மாறாய் நின்று கொண்டே தோற்றத்தால் பெரிதும் தவமுடயைது போலத் தோன்றுகின்ற பூனையினது தோற்றத்தை உவமை கூறினார். பிராமணருட் சிலர் இவ்வாறு நிற்றற்குக் காரணம், ததீசி, கௌதமர் முதலிய முனிவர் சிலரது சாபம் என்பதைக் காந்தம், கூர்மம் முதலிய புராணங்களுட் காண்க. இதனால், 'வேதத்தை மாயோன் இயல்பாய் நின்றே செய்தான்' எனப் பாஞ்சராத்திரிகளும், 'வியாதனாய் அவதரித்துச் செய்தான்' எனப் பௌராணிகரும் கூறுங் கூற்றுக்கள் பொருந்தா என்பது உணர்த்தினார். 'வேதத்தைச் செய்தவன் பிரமனு மல்லன்; மாயனுமல்லன், என்பதைப் பொருந்துமாற்றின் வைத்து உணர்த்தி, 'அது செய்தவன் சிவபெருமானே' என்பதைப் பாரிசேடத்தாற் பெறுவித்தார் என்க. வியாசமுனிவன் வேதத்தை வகைப்படுத்திய தல்லது செய்திலாமை அறிக.

திருநெறி யாவது சித்தசித் தன்றிப்
பெருநெறி யாய பிரானை நினைந்து
குருநெறி யாஞ்சிவ மாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே. **#100**

'வீட்டு நெறியாவது, ஞானாசிரியன்வழி உளதாவதாய், சித்தும், அசித்தமாய் இருதிறப்பட்டு நிற்கும் உலகத்தை நினையாமல், அவை அனைத்தையும் கடந்து நிற்கும் சிவபெருமான் ஒருவனையே நினைந்து அவனாந் தன்மையைப் பெறுகின்ற ஒரு நெறியே' என வேத முடிவு ஒருதலையாக அறுதியிட்டுக் கூறும்.

விளக்கவுரை

'அதனால், வேதத்தைச் செய்தவன் சிவபெருமானே' என்பது குறிப்பெச்சம். 'திரு' என்பது வீடாதலை 'போகமும் திருவும் புணர்ப்பானை' *(தி.7 ப.59 பா.1)* என்பதனுட் காண்க. வியாபக நிலையை, 'பெரு நெறி' என்றார். 'சிவமாம் நெறி' எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, 'பிரான்' என்று போயினார். 'குருவே சிவம்' *(தி.10 ஆறாம் தந்திரம்)* எனப் பின்னர்க் கூறுவாராகலின், 'குருநெறிஆம்' என்றது, 'அவனருளால் அல்லது கிடைக்கப்பெறாத' என்றவாறு. 'ஒருநெறி' என்றதன்பின், 'என்று' என்பது எஞ்சிநின்றது. 'பிரானையே, ஒருநெறியே' என்னும் பிரிநிலை ஏகாரங்கள் தொகுத்தலாயின. 'திருநெறியாவது சிவமாம் நெறி கூடும் ஒருநெறியே' என வேதாந்தம் கூறுதல், 'பிற எல்லாவற்றையும் விடுத்துச் சிவன் ஒருவனே தியானிக்கப்படத் தக்கவன்; அதர்வ சிகை முற்றிற்று' 'ஸிவ ஏகா தியேயக சிவங்கர ஸர்வ மன்யத் பரித் யஜ்யேதி ,மாப் தார்த்த வஸிஹா' என்று வேதாந்தம் (அதர்வசிகோப நிடத முடிவு) இறுதியிற் கூறி முடிதலால் அறியப்படும்.
இதனால் மேல் பாரிசேடத்தாற் பெறப்பட்டதனைப் பொருந்து மாற்றின் வைத்துணர்த்தி வலியுறுத்தல் செய்யப்பட்டது. இதனானே, சிவமாம் நெறியாகிய திருநெறியது இயல்பும் தொகுத்துணர்த்தப் பட்டவாறு அறிக.
திருஞானசம்பந்தரது, 'அருநெறிய மறை' *(தி.1 ப.1 பா.11)* என்னும் திருப்பாடல் இத்திருமந்திரத்தை அடியொற்றிச்செல்வதாய் இருத்தலும், அவர் தமது பாடலை, 'திருநெறிய தமிழ்' என்று குறித்திருத்தலும் இங்கு நினைவுகூரத் தக்கன.

ஆறங்க மாய்வரு மம்மறை ஓதியைக்
கூறங்க மாகக் குணம்பயில் வாரில்லை
வேறங்க மாக விளைவுசெய் தப்புறம்
பேறங்க மாகப் பெருக்குகின் றாரே. **#101**

ஆறு அங்கங்களை உடையதாய், மேற்றொட்டு எழுதாக் கிளவியாய் வருகின்ற அவ்வேதத்தைச் செய்த சிவபெரு மானை அதன் முடிவில் விளங்குபவனாக உணர்ந்து அவனது அருட் குணங்களைப் போற்றுபவர் உலகருள் ஒருவரும் இல்லை; அவர் பலரும் வேறு

எவ்வெவற்றையோ தங்கள் கடனாக நினைந்து, அவற் றால் சில பேறுகளை உளவாக்கிக் கொண்டு அவற்றால் கிடைக்கின்ற பயன் மேலும் மேலும் வரும் பிறப்பேயாக அவற்றைப் பெருக்கி உழல்கின்றார்கள்.

விளக்கவுரை

'இஃது அவர் வினையிருந்தவாறு' என்பது குறிப் பெச்சம். 'சிவஞானத்தாலன்றிப் பிறவி அறமாட்டாது' என்பது கருத்து. ஆறங்கம்'- 'சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோவிசிதி' என்பன. அவற்றுள் 'சிட்சை வேதத்தை ஒலிக்கும் முறையை நன்குணர்த்துவது; வியாகரணம், வேதத்தில் உள்ள தொடர் மொழிகளின் இயல்பைப் புலப்படுத்துவது; நிருத்தம், வேதத்தின் தனி மொழிகளின் இயல்பைக் கூறுவது; சோதிடம், வைதிக கருமங்கட் குரிய காலத்தின் இயல்பைத் தெரிவிப்பது. கற்பம், வைதிக கருமங் களை அனுட்டிக்கும் முறையைக் கூறுவது சந்தோவிசிதி வேதத்தின் சந்தங்களை எழுத்தெண்ணிக்கை கூறி உணர்த்துவது. இவையின்றி வேதத்தாற் பயன்கொள்ளுதல் கூடாமையின், இவை வேதத்திற்கு அங்கமாயின. அங்கம் உடையதனை 'அங்கம்' என்றார்' 'ஆறங் கமாய்' என்றும், 'வரும்' என்றும் கூறியது, 'இவ்வாற்றால் வேதத்தை வருந்திக் கற்றும் சிலர் அதனால் பயன் பெறாத வராகின்றனர்' என்பது உணர்த்துதற்கு.

கூறு அங்கம் - சிறப்பாகச் சொல்லப்படும் உறுப்பு; தலை; 'வேறு அங்கம்' என்றதில், 'அங்கம்' என்பது, 'இன்றியமையாதது' என்னும் பொருட்டு.

பாட்டும் ஒலியும் பரகுங் கணிகையர்
ஆட்டும் அறாத அவனியின் மாட்டாதார்
வேட்டு விருப்பார் விரதமில் லாதவர்
ஈட்டும் இடஞ்சென் றிகலுற் றாரே. **#102**

இயலும், இசையும், நாடகமும் ஆகிய கலை களின் பயனை அறியாவிடினும் அவற்றை இடையறாது நிகழ்த்தி நிற்கின்ற இவ்வுலகில், வேதத்தை இடையறாது ஓதுகின்ற வேதியரும் அத் தன்மைரேயாய்ப் பொருள் பெறவிரும்பி, பொருளாசை நிறைந்த நெறி முறை இல்லாத அக்கலைவல்லுநர் பொருள் ஈட்டும் இடத்திற் சென்று அவரோடு மாறுகொண்டு நிற்கின்றனர்.

விளக்கவுரை

'பாட்டு' என்றது, இயற் பாட்டினையும், 'ஒலி' என்றது பண்ணமைந்த இசைப் பாடல்களையுமாம். நெறிப்பட்ட வாழ்க்கையை 'விரதம்'

என்றார் 'இயற் பாட்டு முதலிய கலைகள் யாவும் நற்பண்பினை வளர்த்தற்கு உரியனவாகவும், அவற்றில் வல்லுநராகியும் அவை வளரப் பெறாதார் பொருளீட்டுதல் ஒன்றே அவற்றாற்பெறும் பயனாகக்கொள்வர். என்பார். 'விருப்பு ஆர் விரதம் இல்லாதவர்' என்றும், 'அவர் பொருளீட்டும் இடம் அரசர் முதலிய செல்வம் மிக்கோர்களாதலின், அவ்விடத்தில் இவ்வேதியரும் சென்று, அவர்க்கு முன்னே எமக்குத் தம்மின் என அவரின் முந்துகின்றதல்லது, தாம்வேதம் ஓதியதற்குப் பயன் பிறிதில்லை' என்பார், 'அவர் ஈட்டு மிடஞ்சென்று இகலலுற்றாரே' என்றும் கூறினார். வேதியர் அவரின் முந்துதல், 'தக்கார்க்குக் கொடுத்தலாகிய இது முன்செய்யத் தக்கது' என அறிவுறுத்தி நிற்றல். 'வேதியர், பிறரெல்லாம் இலௌகிகர், யாம் வைதிகர் என்று சொல்லால் தம்மை உயர்த்திக் கொள்வதல்லது, செயலால் இலௌகிகரோடு ஒக்கின்றார்' என்பதும் கூறியவாறு. 'சிவபிரானை உணராதார்க்கு உலகப் பற்று நீங்காது' என்பதாம். இம்மூன்று திருமந்திரங்களாலும், 'வேதத்தின் பயன் சிவநெறியே நெறி என்று உணர்ந்து அந்நெறிநிற்றலே' என்பது உடம்பாட்டானும் எதிர்மறையானும் வலியுறுத்தப்பட்டது. 'வேதப் பயனாம் சைவம்' *(தி.12* சண்டேச்சுரர் *9)* என்று அருளிய சேக்கிழார் திருமொழி இங்கு நினைக்கத்தக்கது. இப்பயன் எய்தாதாரை நோக்கியே,

'அசிக்க ஆரியங்கள் ஓதும்
ஆதரைப் பேத வாதப்
பிசுக்கரைக் காணாக் கண்; வாய்
பேசாத பேய்க ளோடே' *(தி.9 திருவிசைப்பா. 4, 5)*

என்றாற்போலும் திருமொழிகள் எழுந்தன.

'வேதத்தைச் செய்தவன் இவன்' என்பது பற்றியும், அதனால், முடித்துக் கூறப்படும் நெறி இன்னது' என்பது பற்றியும் நாயனார் இவ்வாறெல்லாம் வலியுறுத்து அருளிச் செய்தமையால், 'வேதம் அவரவர் தகுதிக்கேற்பப் பலவாற்றாற் பொருள் கொள்ள நிற்பது' என்பது பெறப்பட்டது, எனவே, நாயனார் பின்னர்க் கூறுமாறுபோல, உண்மையை முதற்கண்ணே முற்ற உணர்த்தினால் உணர்தல் அரிதாதல் பற்றி அதனை முதற்கண் ஒருவாற்றான் உணர்த்தும் பொது நூலே வேதம்' என்பதாயிற்று.

3.3.ஆகமச் சிறப்பு

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே. **#103**

சிவபெருமான் அருளிச்செய்த ஆகமங்கள் இருபத்தெட்டு உள்ளன. அவை, அறுபத்தாறுபேர் அப் பெருமானை வணங்கி அவனது மேன்முகமாகிய ஈசான முகத்தில் அரிய கருத்துக் களைக் கேட்டுணர்ந்தனவாம்.

விளக்கவுரை

அவ்வாகமங்கள், 'காமிகம், யோகசம், சிந்தியம், காரணம்,அசிதம், தீத்தம், சூக்குமம், சகத்திரம், அஞ்சுமான், சுப்பிர பேதம், விசயம், நிசுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற் கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம்' என்பன.
சிவபெருமானுக்கு நாற்றிசை நோக்கி நான்கு முகங்களும், உச்சியில் வான்நோக்கி ஒருமுகமுமாக உள்ள ஐந்து முகங்களையும் கீழிருந்து முறையே, 'சத்தியோசாதம் (மேற்கு), வாமதேவம் (வடக்கு), அகோரம் (தெற்கு), தற்புருடம் (கிழக்கு) ஈசானம் (உச்சி)' என எண்ண, ஐந்தாவதாக வருவது ஈசான முகம். 'சிவபெருமான் மேற்சொல்லிய இருக்கு முதலிய வேதங்கள் நான்கனையும் கீழுள்ள தற்புருடம் முதலிய நான்கு முகங்களானும், ஆகமங்களை மேலே உள்ள ஈசான முகத்தாலும் அருளிச்செய்தான்' என்பவாகலின், ஆகமங்களை, 'அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டது' என்றார்.
அஞ்சாம் முகம் - ஐந்து என்னும் எண்ணின்கண் நிற்கும் முகம். இனி, 'சத்தியோசாதம் முதல் கீழே உள்ள நான்கு முகங்களாலும் முகத்திற்கு ஐவைந்தாகக் காமிகம் முதல் முகவிம்பம் ஈறாக உள்ள இருபது ஆகமங்களையும், மேலே உள்ள ஈசானமாகிய ஒருமுகத்தால் எஞ்சிய எட்டு ஆகமங்களும் அருளிச்செய்தான்' எனக் கூறுதலும் உண்டு. ஆதலின், அப்பொருளும் தோன்றுமாறு 'அஞ்சாம் முகத்தில்' என்றார். இப்பொருட்கு, 'அஞ்சாம் முகம்' என்றதை, 'அஞ்சாகி நிற் கின்ற முகம்' என்றவாறாக உரைக்க. பின்னர்க் கூறிய முறைமைக்கு, 'மேல்முகமாகிய ஈசானம் ஒன்றே சத்தியோசாதம் முதலிய ஐந்தனை யும் உடையதாய் இருக்கும்; அவற்றின்கண்ணே காமிகம் முதலிய ஆகமங்கள் ஐவைந்தாகவும், எட்டாகவும் தோன்றின' என, இரண்டு கருத்தும் தம்முள் முரணாதவாறு விளக்கம் தருபவர் உளர்.

இனிச் சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம் என்னும் முகங்களால் முறையே, 'கௌசிகர், காசிபர், பாரத்து வாசர், கௌதமர், அகத்தியர்' என்னும் முனிவர்கட்கு மேற்சொல்லிய ஆகமங்கள் உணர்த்தப்பட்டன என்பது, 'நிலவுலகில் மகேந்திர மலையில்' என்ற, தி.8 திருவாசகக் கீர்த்தித் திருவகவலால் (அடி. 19. 20) அறியப் படுவதாம்.

இனி, ஆகமங்களைக் கேட்ட அறுபத்தறுவருள், 'எல்லாரும் எல்லா ஆகமங்களும் கேட்டனர்' என்பதில்லை; 'காமிகம் முதல் சுப்பிரபேதம் ஈறாக உள்ள பத்தினையும் ஒன்றை ஒருவராகப் பதின்மர் சிவபெருமானிடங் கேட்க, அவருள் ஒருவரிடத்து ஒருவராக ஓரா கமத்தை மற்றும் இருவர் கேட்டனர்' என்பதே வரலாறு. ஆகவே, காமிகம் முதலிய பத்தினையும் கேட்டவர் முப்பதின்மராகின்றனர். அவருள் காமிக முதலிய பத்தினையும் சிவபெருமானிடம் நேரே கேட்ட பதின்மராவார், 'பிரணவர், சுதாக்கியர், சுதீத்தர், காரணர், சுசிவர், ஈசர், சூக்குமர், காலர், அம்பு, தேசேசர்' என்போர்.

இனி இப்பதின்மருள் ஒருவரிடத்தினின்று இவ்விருவராக வழிவழிக் கேட்ட இருபதின்மராவார், 'திரிகலர், அரர் - பசுமர், விபு - கோபதி, அம்பிகை - சர்வருத்திரர், மிரசேசர் - சிவர், அச்சுதர் - திரிமூர்த்தி, உதாசனர் - வைச்சிரவணர், பிரபஞ்சனர் - பீமர், தருமர் - உக்கிரர், ஆதித்தியர் - விக்னேசர், சசி' என்போர்.

இம்முப்பதின்மரும், 'சிவர்' எனப்படுதலால், இவர்களால் கேட்கப்பட்ட காமிகம் முதலிய பத்து ஆகமங்களும் 'சிவபேதம்' எனப்படுகின்றன.

இனி, எஞ்சிய விசயம் முதல் வாதுளம் ஈறாக உள்ள பதினெட்டு ஆகமங்களுள் ஒவ்வொன்றை ஒவ்வொருவர் சிவபெரு மானிடம் நேரே கேட்க, அவரிடம் அவற்றை மற்றும் ஒவ்வொரு வராகக் கேட்டனர். ஆகவே எஞ்சிய பதினெட்டு ஆகமங்களைக் கேட்டோர் முப்பத்தறுவர் ஆகின்றனர். அவர் பெயர் முறையே வருமாறு:

அநாதிருத்திரர் (அநாதிருத்திரரை, 'மகாருத்திரர்' என்றும் சொல்வது உண்டு.) பரமேச்சுரர் - தசாரணர், பார்வதி - நிதனேசர், பதுமபூ - வியோமர், உதாசனர் - தேசர், பிரசாபதி - பிர மேசர், நந்திகேசர் - சிவர், மகாதேவர் - சர்வான்மர், வீரபத்திரர் - அநந் தர், பிருகற்பதி - பிரசாந்தர், ததீசி - சூலி, கவசர் - ஆலயேசர், இலளிதர் - பிந்து, சண்டேசர் - சிவநிட்டர், அசம்பாதர் - சோமதேவர், நிருசிங்கர் - சீதேவி, உசனர் - தேவவிடி, சம்வர்த்தர் - சிவர், மகா காளர், இவரெல்லாம் 'உருத்திரர்' எனப்படுதலின், இப்பதினெட்டு ஆகமங்களும், 'உருத்திரபேதம்' எனப்படுகின்றன.

இவர்களுள் ஒருவர் பெயரையே பிறரும் உடையவராய் இருத்தல்

பற்றியும், ஆகமங் கேட்டவரல்லாத பிறரது பெயரும் இவர்களுட் சிலர்க்குக் காணப்படுதல் பற்றியும் நாம் மலைவெய்துதல் கூடாது. இவரெல்லாரும் சுத்தாமாயா புவனங்களுள் சதாசிவ புவனத்தில் சதாசிவ மூர்த்திபால் ஆகமங்களைநேராகவும், வழிமுறை யாலும் கேட்டவர் என்க.

ஐந்து முகம் உடைய மூர்த்தி சதாசிவ மூர்த்தியே. அதனால், 'அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டது' என்றது, இவரிடம் கேட்டதையே என்பதாதல் அறிக. இவரது நிலை மேலே விளக்கப்பட்டது.*(தி.10 பா.89 - 90)* 'அஞ்சாம் முகத்தில் அரும் பொருள் கேட்டது' என்பதற்கு ஈடாக, 'எஞ்சலில் விஞ்ஞகர் இருபத் தெண்மரும்' என்று ஓதுவது, தாமே தமக்கு வேண்டியவாறு கட்டிக் கொண்ட பாடம்.

'அரும்பொருள்' என்றது, மெய்யுணர்வினை. எனவே, 'ஆகமங்கள் மெய்ந்நெறியை உணர்த்தும் சிறப்புநூல்' என்பது கூறியவாறாயிற்று. 'பாகத்தன் ஆகமம்' என்பது, செய்யுட் கிழமைக்கண் வந்த ஆறாவதன் தொகை.

அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடிநூ றாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்
எண்ணிநின் றப்பொருள் ஏத்துவன் நானே. **#104**

சிவபெருமான் உயிர்கள்மேல் வைத்த அருள் காரணமாக அருளிச்செய்த ஆகமங்களை எண்ணாற்கூறின், 'இருபத் தெட்டு' என்னும் அளவில் நில்லாமல், அளவின்றியுள்ளன. அவைகளால் மேற்கூறிய அறுபத்தறுவரும், பிறரும் சிவபெரு மானது மேன்மையைத் தத்தமக்கியைந்தவாற்றால் விளங்க உரைத்தார்கள். அவ்வாறு உரைக்கப்பட்ட அளவிலே நானும் கேட்டுச் சிந்தித்துத் துதிக்கத் தொடங்கினேன்.

விளக்கவுரை

'கோடி நூறாயிரம்' என்றது அளவின்மை கூறிய வாறு. அற்றாயினும் முற்கூறிய இயைபு தோன்றுதற் பொருட்டு, 'இருபத்தெண்கோடி நூறாயிரம்' என்றார். விண்ணவர் என்றது மக்களினும் மேம்பட்ட பலரையும், 'அவர் இவர்' என்பது பின்னர் விளக்கப்படும். 'வேதம் நான்கு' எனவும், 'ஆகமம் இருபத் தெட்டு' எனவும் வரையறை கூறப்படினும், அவ்வப்பொழுது இறைவன் அவரவருக்கு உணர்த்துமாற்றால் உண்மையில் அவை அளவில் லனவே என்பது உணர்த்துதற்கு இவ்வாறு கூறினார். 'வேதங்கள் அநந்தம்' என்ற வாக்கியமும் உண்டு. இது பற்றியே, 'ஒருமுகம் எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித் - திங்கள் போலத் திசைவிளக் கும்மே' என்னும்

திருமுருகாற்றுப் படைப் பகுதிக்கு நச்சினார்கினியர் உரைகூறுமாறும் அறிக.

இனி 'இஃது ஆகமங்களின் கிரந்தங்கள் எண்ணில வாதலையும், உபாகமங்கள் இருநூற்றேழாதலையும் கூறியது' என்றலுமாம். சேக்கிழாரும் 'எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்' என்றமை அறியத் தக்கது. (தி.12 திருக்குறிப்புத் தொண்டர். 51) இதனால், 'ஆகமங்கள், அறுபத் தறுவரேயன்றிப் பின்னும் பலரால் கேட்கப்பட்டு வந்து நிலவுலகில் விளங்கின' என்பது கூறப்பட்டது.

ஆகமங்களின் கிரந்த அளவு மரபாகச் சொல்லப்பட்டுவரும் முறை வருமாறு:

1. காமிகத்திற்குக் கிரந்தம் பரார்த்தம்.
2. யோகஜத்திற்கு கிரந்தம் ஒரு லட்சம்.
3. சிந்தியத்திற்கு கிரந்தம் ஒரு லட்சம்.
4. காரணத்திற்கு கிரந்தம் ஒரு கோடி.
5. அஜிதத்திற்கு கிரந்தம் நியுதம்.
6. தீப்தத்திற்கு கிரந்தம் நியுதம்.
7. சூட்சுமத்திற்கு கிரந்தம் பத்மம்
8. சகஸ்ரத்திற்கு கிரந்தம் சங்கம்
9. அம்சுமானுக்கு கிரந்தம் ஐந்து லட்சம்
10. சுப்பிரபேதத்திற்கு கிரந்தம் மூன்று கோடி
11. விஜயத்திற்கு கிரந்தம் மூன்று கோடி
12. நிஸ்வாசத்திற்கு கிரந்தம் ஒரு கோடி
13. சுவாயம்புவத்திற்கு கிரந்தம் ஒன்றரைக் கோடி
14. ஆக்னேயத்திற்கு கிரந்தம் முப்பதினாயிரம்
15. வீரத்திற்கு கிரந்தம் நியுதம்
16. ரௌரவத்திற்கு கிரந்தம் எட்டு அற்புதம்
17. மகுடத்திற்கு கிரந்தம் ஒரு லட்சம்
18. விமலத்திற்கு கிரந்தம் மூன்று லட்சம்
19. சந்திர ஞானத்திற்கு கிரந்தம் மூன்று கோடி
20. முக விம்பத்திற்கு கிரந்தம் ஒரு லட்சம்
21. புரோத்கீதத்திற்கு கிரந்தம் மூன்று லட்சம்
22. லளிதத்திற்கு கிரந்தம் எண்ணாயிரம்
23. சித்தத்திற்கு கிரந்தம் ஒன்றரைக் கோடி
24. சந்தானத்திற்கு கிரந்தம் ஆறாயிரம்
25. சர்வோக்தத்திற்கு கிரந்தம் இரண்டு லட்சம்
26. பாரமேசுரத்திற்கு கிரந்தம் பன்னிரண்டு லட்சம்
27. கிரணத்திற்கு கிரந்தம் ஐந்து கோடி

28. வாதுளத்திற்கு கிரந்தம் ஒரு லட்சம்
இருபத்தெட்டு மூலாகமங்கட்கு உபாகமங்களின் அளவு மரபாகச் சொல்லப்பட்டு வரும் முறை வருமாறு:
1. காமிகத்திற்கு உபாகமம் 3:- வக்தாரம், பைர வோத்தரம், நாரசிம்மம் (மிருகேந்திரம்).
2. யோகஜத்திற்கு உபாகமம் 5:- தாரம், வீணாசிகோத்ரம், ஆத்மயோகம், ஸந்தம், ஸந்ததி.
3. சிந்தியத்திற்கு உபாகமம் 6:- ஸுசிந்தியம், ஸுபகம், வாமம், பாபநாசம், பரோத்பவம், அம்ருதம்.
4. காரணத்திற்கு உபாகமம் 7:- காரணம், வித்வேஷம், பாவனம், மாரணம், தௌர்கம், மாஹேந்திரம், பீனஸம்ஹிதை.
5. அஜிதத்திற்கு உபாகமம் 4:- பிரபூதம், பரோத்பூதம், பார்வதீஸம்ஹிதை, பத்மஸம்ஹிதை.
6. தீப்தத்திற்கு உபாகமம் 9:- அமேயம், சப்தம், ஆச்சாத்தியம், அஸங்கியம், அமிருதோஜஸம், ஆனந்தம், மாதவோத்பூதம், அற்புதம், அக்ஷயம்.
7. சூட்சுமத்திற்கு உபாகமம் 1:- சூட்சுமம்.
8. சகஸ்ரத்திற்கு உபாகமம் 10:- அதீதம், மங்கலம், சுத்தம், அப்ரமேயம், ஜாதிபாக்கு, பிரபுத்தம், விபுதம், அஸ்தம், அலங்காரம், ஸுபோதம்.
9. அம்சுமானுக்கு உபாகமம் 12:- வித்தியா புராணம், தந்திரம், வாஸவம், நீலலோகிதம், பிரகரணம், பூததந்திரம், ஆத்மாலங்காரம், காசியபம், கௌதமம், ஐந்திரம், பிராமம், வாசிட்டம், ஈசானோத்தரம்.
10. சுப்பிரபேதத்திற்கு உபாகமம் 1:- சுப்பிரபேதம்.
11. விசயத்திற்கு உபாகமம் 8:- உற்பவம், சௌமியம், அகோரம், மிருத்யுநாசனம், கௌபேரம், மகாகோரம், விமலம், விசயம்.
12. நிசுவாசத்திற்கு உபாகமம் 8:- நிசுவாசம், நிசுவாசோத்தரம், நிசுவாச சுகோதயம், நிசுவாச நயனம், நிசுவாச காரிகை, நிசுவாச கோரம், நிசுவாசகுய்யம், மந்திர நிசுவாசம்.
13. சுவாயம்புவத்திற்கு உபாகமம் 3:- பிரஜாபதி மதம், பதுமம், நளினோற்பவம்.
14. ஆக்னேயத்திற்கு உபாகமம் 1:- ஆக்கினேயம்.
15. வீரத்திற்கு உபாகமம் 13:- பிரஸ்தரம், புல்லம், அமலம், பிரபோதகம், அமோகம், மோகசமயம், சகடம்,

சகடாதிகம், பத்திரம்,
விலேகனம், வீரம், அலம், போதகம்.
16. இரௌரவத்திற்கு உபாகமம் 6:- காலாக்கியம்,
காலதகனம், இரௌரவம், இரௌரவோத்தரம்,மகாகாலமதம், ஐந்திரம்.
17. மகுடத்திற்கு உபாகமம் 2:- மகுடம், மகுடோத்தரம்.
18. விமலத்திற்கு உபாகமம் 16:- அனந்தம்,
போகம், ஆக்கிராந்தம், இருடபிங்கம், இருடோதரம், இருடோற்பூதம்,
இரௌத்திரம், சூதந்தம், தாரணம்
ஆரேவதம், அதிக்கிராந்தம், அட்டகாசம், பத்திரவிதம், அர்ச்சிதம்,
அலங்கிருதம், விமலம்.
19. சந்திர ஞானத்திற்கு உபாகமம் 14:- ஸ்திரம், ஸ்தாணு,
மகாந்தம், வாருணம், நந்திகேசுரம், ஏகபாதபுராணம், சாங்கரம்,
நீலருத்திரகம், சிவபத்திரம், கற்பபேதம்,
சீமுகம், சிவசாசனம், சிவசேகரம், தேவீமதம்.
20. முக விம்பத்திற்கு உபாகமம் 15:- சதுமுகம்,
சமத்தோபம், பிரதிபிம்பம், அயோகஜம், ஆன்மாலங்காரம், வாயவியம்,
பட்டசேகரம்,
தௌடிகம், துடிநீரகம், குட்டிமம், துலாயோகம்,
காலாத்தியயம், மகாசௌரம், நைருதம், மகாவித்தை.
21. புரோத்கீதத்திற்கு உபாகமம் 16:- வாராகம், கவசம்,
பாசபந்தம், பிங்கலாமதம், அங்குசம், தண்டதரம், தனுதரம், சிவஞானம்,
விஞ்ஞானம், சீகாலஞானம்,
ஆயுர்வேதம், தனுர்வேதம், சர்பதம், ஷ்டரவிபேதனம்,
கீதகம், பரதம், ஆதோத்தியம்.
22. இலளிதத்திற்கு உபாகமம் 3:- இலளிதம்,
இலளிதோத்தரம், கௌமாரம்.
23. சித்தத்திற்கு உபாகமம் 4:- சாரோத்தரம்,
ஔசனசம், சாலாபேதம், சசிமண்டலம்.
24. சந்தானத்திற்கு உபாகமம் 7:- இலிங்காதியட்சம்,
சுராத்தியட்சம், அமரேசுரம், சங்கரம், அசங்கியம், அனிலம், துவந்தம். 25.
சர்வோக்தத்திற்கு உபாகமம் 5:- சிவ
தருமோத்தரம், வாயுப்புரோத்தம்,
திவ்வியப்புரோத்தம்,ஈசானம், சருவோற்கீதம்.
26. பாரமேசுரத்திற்கு உபாகமம் 7:- மாதங்கம்,
யட்சணிபதுமம், பாரமேசுரம், புட்கரம், (பௌட்கரம்) சுப்பிரயோகம்,
அமிசம், சாமானியம்.
27. கிரணத்திற்கு உபாகமம் 9:- காருடம்,

நைருதம், நீலம், இரூட்சம், பானுகம், தேனுகம், காலாக்கியம், பிரபுத்தம், புத்தம்.
28. வாதுளத்திற்கு உபாகமம் *12:-* வாதுளம்,
வாதுளோத்தரம், காலஞானம், பிரரோகிதம், சருவம், தருமாத்மகம்,
நித்தியம், சிரேட்டம், சுத்தம்,
மகானனம், விசுவம், விசுவான்மகம்.
ஆக உபாகமங்கள் இருநூற்றேழு - *207*
காமிகம் முதலிய இருபத்தெட்டு மூலாகமங்கள் சிவபெருமானுக்குப் பாதம் முதலிய உறுப்புகளாகவும், ஆடை, ஆபாரணம் முதலிய பிற பொருள்களாகவும் அமைந்த முறைமை ஆகமங்களுட் சொல்லப்படும்.
எண்ணற்ற கிரந்தங்களாயும், உபாகமங்களாயும் விரிந்த ஆகமங்களைப் பின்வந்த ஆசிரியர்கள் பலவாறு சுருக்கிச் சொன்னார்கள்.
அச்சுருக்கங்களிற் சிலவே இப்பொழுது கிடைக்கும் ஆகமங்கள்.

அண்ணல் அருளால் அருளுந்திவ் யாகமம்
விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரி
தெண்ணில் எழுபது கோடிநூ றாயிரம்
எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆகுமே. **#105**

சிவபெருமான் தனது திருவருள் காரணமாக அருளிச்செய்த மேலான ஆகமங்கள் வானத்தில் உள்ள தேவர் களாலும் அறிதற்கரிய பொருள்களை உடையன. அதனால், அவை அளவிறந்து கிடப்பினும், உயிர்கட்குப் பயன்படுதல் அரிது.

விளக்கவுரை

'அஃது அறிந்து சிவபெருமான் அவற்றைத் தானே நேராகவும், பிறர் வாயிலாகவும் பலர்க்கு விளக்கியருளினான்' என்பது குறிப்பெச்சம்.
'நீர்மேல் எழுத்து' பயன்கொள்ளுதல் அரிதாதற்கு உவமை. 'அங்ஙனம் விளக்கம் பெற்றோர் இவர்' என்பதனை வருகின்ற திருமந்திரங்களால் கூறுவார்.

பரனாய்ப் பராபரங் காட்டி உலகில்
தரனாய்ச் சிவதன்மந் தானேசொல் காலத்
தரனாய் அமரர்கள் அற்சிக்கும் நந்தி
உரனாகி ஆகமம் ஓங்கிநின் றானே. **#106**

சிவலோகத்தில் மேலான சதாசிவ மூர்த்தியாய் இருந்து ஆகமங்களைப் பிரணவர் முதலியோர்க்கு உணர்த்தியருளிய சிவபெருமான், நிலவுலகிற்கு ஏற்ப அவற்றை உணர்த்தியருளும் பொழுது சீகண்ட பரமசிவனாய் இருந்து உணர்த்த, தேவர்களால் வணங்கப்படுகின்ற நந்தி பெருமான் மெய்யுணர்வுடையராய் அவை இனிது விளங்கப்பெற்றார்.

விளக்கவுரை

இஃது ஆகமங்கள் நிலவுலகிற்கு வந்த வரலாற்றைத் தொகுத்துக் கூறியது. பராபரம் - உயர்ந்ததும் தாழ்ந்தனவும் ஆகிய பொருள்; அவை பதியும், பசு பாசங்களுமாம். எனவே, 'முப் பொருளின் இயல்பு' என்றவாறாம். தரனாய் - ஏற்ற பெற்றியில் நிற் பவனாய். இங்ஙனங் கூறவே, 'சிவபெருமான் ஆகமங்களை முதற் கண் அனந்ததேவர் வாயிலாகச் சீகண்ட உருத்திரர்க்கு உணர்த்தி, பின்பு அவர் வாயிலாகத் தேவர், முனிவர், கணங்கட்கு உணர்த் தினான்' என்பது கொள்க.'வேதங்களை அனந்ததேவர் வாயிலாகப் பிரமதேவர்க்கு உணர்த்தினான்' என்ப. அரன் - உருத்திரன்; அஃது ஏற்புழிக் கோடலால், சீகண்ட உருத்திரரைக் குறித்தது. பரமசிவன் சீகண்ட உருத்திரராய் நிற்றல், அவரே தானாக அவருள் நிற்றல். சிவ தன்மம் - சிவபுண்ணியம். 'அவை சரியையும், கிரியையும்' என்பது, 'நல்லசிவ தன்மத்தால் நல்லசிவயோகத்தால் நல்லசிவ ஞானத்தால்' (திருக்களிற்றுப்படியார். 15) என்பவற்றால் அறிக. சிவதன்மங் கூறவே, இனம் பற்றிச் சிவயோகமும் கொள்ளப்படும். 'பராபரம், சிவதன்மம்' என்றவை, ஏனையிடங்களிலும் சென்று இயையும். எனவே, சிவாகமங்கள் 'சரியை, கிரியை, யோகம், ஞானம்' என்னும் நாற்பாதங்களாய் உள்ளன என்பது உணர்த்தப்பட்டதாம்.

சிவாகமங்களில்,

சிவபெருமானது இலிங்கத் திருமேனி, உமா மகேசுர மூர்த்தம் முதலிய உருவத் திருமேனி, நந்திதேவர் முதலிய பரிவார மூர்த்தங்கள் முதலியவற்றின் அமைப்புமுறைகளையும், திருக் கோயில் அமைப்பு, புட்ப விதி, பிராயச்சித்த விதி, பவித்திர விதி, செப மாலை யோகபட்டம் முதலியவற்றின் அமைப்பு, அந்தியேட்டி விதி, சிரார்த்த விதி முதலியவற்றையும் கூறும் பகுதிகள் சரியாபாதம் எனவும்,

மந்திரங்களின் உச்சாரணமுறை, குண்டமண்டல வேதிகை முதலியவற்றின் அமைப்புக்கள், சந்தியாவந்தனம், பூசை, செபம், ஓமம் முதலியவற்றின் விதிகள், சமய விசேட நிருவாண தீட்சைகள் ஆசாரியாபிடேகம் என்பவற்றின் விதிகள், ஆன்மார்த்தமும், பரார்த்தமும் ஆக அமைந்த நித்திய நைமித்திய பூசை முறைகள் விழா முறைகள் போல்வனவற்றைக் கூறும் பகுதிகள் கிரியா பாதம் எனவும்,

இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டு நிலைகளின் முறைமையும், மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களின் இயல்பும், ஞானபாதத்திற் சொல்லப்படும் பொருள்களைப் பாவனையாற்காணும் முறைகளும் போல்வனவற்றைக் கூறும் பகுதிகள் யோக பாதம் எனவும்,

'பதி, பசு, பாசம்' என்னும் முப்பொருள்களின் இயல்பு, உலகத்தின் தோற்ற ஒடுக்கங்கள், அண்டகோடிகளின் இயல்புகள், நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பின் எண்பத்து நான்கு நூறாயிர யோனிபேதத்தின் இயல்புகள், வினைவகை வினைப்பயன் வகைகள், ஞானத்தின் படிநிலைகள், அவற்றின் பயன்கள் முதலிய வற்றைக் கூறும்பகுதிகள் ஞானபாதம் எனவும்
உணர்க.
சிவாகமங்களைச் சிவபெருமான் சொல்லியருளினமையைத் திருஞானசம்பந்தரும்,
'திறங்கொண்ட அடியார்மேல் தீவினைநோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்மம் உரைத்தபிரான்'
-தி.2 ப.43 பா.6
எனக் குறிப்பிட்டருளினமை காண்க. இதனுள், 'அறங்கொண்டு' என்றது, 'சார்ந்தாரைக் காத்தல் வேண்டுவதாகிய கடன் பற்றி' எனப் பொருள் தரும். உரன் - உரம் உடையவன். உரம் - மெய்யுணர்வு, 'உரனென்னுந் தோட்டியான்' *(குறள். 24)* என்பதிற்போல, ஓங்கி - ஓங்கப்பெற்று. ஓங்குதல் - விளங்குதல்.

சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற
நவஆ கமம்எங்கள் நந்திபெற் றானே. **#107**

தடத்த நிலைகளுள் மேலானதாகிய சிவம் நாத தத்துவத்தில் நின்று, தன்னிடத்தினின்று வெளிப்பட்டு விந்து தத்து வத்தில் நிற்கும் சத்திக்கு உணர்த்த, அச்சத்தி தன்னினின்றும் தோன்றிய சதாசிவர்க்கு உணர்த்த, அவர் தம்மிடத்தினின்றுந் தோன்றிய சம்புபட்ச மகேசுரரோடு ஒத்த அணுபட்ச மகேசுரராகிய மந்திர மகேசுரர்க்கு உணர்த்த, அவர் உருத்திரதேவர்க்கும், அவர் தவத் திருமாலுக்கும், அவர் பிரமேசருக்கும் உணர்த்த இவ்வாறு சுத்தமாயையில் உள்ள தலைவர்கள் ஒருவரிடமிருந்து ஒருவராகப் பெற்றுப் பயனடைந்த ஆகமங்களில் சிறப்பாக ஒன்பதை எங்கள் ஆசிரியராகிய நந்தி பெருமான் மேற்குறித்தவாறு சீகண்ட பரமசிவன்பால் பெற்றார்.

விளக்கவுரை

'உவமா' என்பது, 'ஒப்பு' என்னும் பொருளதாகிய ஆரியச்சொல். 'உருத்திரன், திருமால், பிரமன்' என்போர் சுத்த மாயையில் உள்ளோர் என்பது அறி வித்தற்கு, 'உருத்திர தேவர்' என்றும், 'தவமால்' என்றும், 'பிர மேசர்' என்றுங் கூறினார். மால் - பெருமையுடையோன். தவமால் - மிக்க பெருமையுடையோன். முதற்கண் கூறியவாறு அஞ்சாம் முகத்தில்

அரும்பொருள் கேட்ட அறுபத்தறுவரும் சதாசிவ புவனத்தில் வாழும் அணுசதாசிவராகலின், இது அவ்வாகமங்கள் கீழ்க்கீழ்ப் புவனங்களில் வந்த முறைமை கூறியவாறு. மந்திர மகேசுரர் ஈசுர தத்துவத்திலும் உருத்திரர் முதலிய மூவரும் சுத்த வித்தியாதத்துவத்திலும் வாழ்வார் என்று அறிக. உருத்திரதேவர்க்கு மந்திர மகேசுரரால் உணர்த்தப்பட்டது எனவே, 'சுத்த வித்தையில் அவரோடு ஒப்ப நிற்கும் அனந்த தேவர்க்கும் அவர்வழியாகவே உணர்த்தப்பட்டது' என்பதும், அங்ஙனமாயினும் அனந்ததேவர் சதாசிவரிடமிருந்தே ஆகமங்களைப் பெற்றார் எனச் சில ஆகமங்களில் கூறப்படுதல் முகமனுரை என்பதும் பெறப்படும்.
நந்தி பெருமான் ஆகமங்களில் ஒன்பதைச் சிறப்பாகப் பெற்றமையாவது, ஆசிரிய வழிமுறையால் (குருபரம்பரையால்) சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினோராகிய மக்கட்கு விண்ணோர் தமக்கும் விளங்கரிய எல்லா ஆகமங்களின் பொருளையும் எளிமை யாகத் தொகுத்துணர்த்தற் பொருட்டாம். எனவே, அவ்வொன்பது ஆகமங்களுள் ஏனை எல்லா ஆகமப் பொருளும் அடங்கி நிற்றல் பெற்றாம். 'ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழு' (தி.10 ஐந்தாம் தந்திரம்) என்னும் திருமந்திரத்தால் இக்கருத்து வலியுறுத்தப் படுகின்றது. 'அவ்வாகமங்கள் இவை' என்பதனை அடுத்துவரும் திருமந்திரத்தால் உணர்த்துவார். 'அவற்றை நந்தி பெருமானிடம் கேட்டு உலகிற்கு உணர்த்தினோர் இந் நாயனாரை உள்ளிட்ட எண்மர்' என்பதையும், 'இவர் வழியாக மற்றும் பலர் அவற்றை உலகிற் பரப்பினர்' என்பதையும் முன்னே கூறினார் (தி.10 எட்டாம் தந்திரம்) இன்னும் சனற்குமார முனிவர் கேட்டுச் சத்திய ஞான தரிசனிகள் நில வுலகில் வழியாகப் பரஞ்சோதிமாமுனிவர்க்கும், அவர்வழியாக திரு வெண்ணெய்நல்லூரில் 'சுவேதவனப் பெருமாள்' என்னும் பிள்ளைத் திருநாமத்துடன் எழுந்தருளியிருந்த மெய்கண்ட தேவர்க்கும் உணர்த்தற்ப்பட்டு, அவர் வழியாகப் பலவிடத்தும் ஆகமப்பொருள் விளங்கிவருதல் அம் மரபினராகிய உமாபதிதேவ நாயனார் அருளிச் செய்த சிவப்பிரகாச நூலாலும், பிறவற்றாலும் நன்கறியப்பட்டது.
'சிவபெருமான் ஆகமங்களைப் பிரதி சங்கிதை முறையால் (ஒவ்வொருவர்க்கு ஒவ்வொன்றாக வகுத்துக் கூறும் முறையால்) பிரணவர் முதலிய இருபத்தெண்மர்க்கும் நேரே உணர்த்தி, மகௌக முறையால் (எல்லாவற்றையும் ஒருவர்க்கு ஒருங்கு தொகுத்துக் கூறும் முறையால்,) அனந்த தேவர் வாயிலாகச் சீகண்டருக்கு உணர்த்த, அவர் நந்திபெருமானுக்கும் அவ்வாறே அனைத்தையும் உணர்த்தி னார்' என ஆகமங்களில் கூறப்படுதலால், 'நவ ஆகமம் எங்கள் நந்திபெற்றானே' என இங்கு நாயனார் அருளிச்செய்ததற்கு, குருபரம்பரையால்

நிலவுலகிற்குத் தருமாறு உணர்த்தப்பட்டவை ஒன்பது' என்பதே கருத்தாதல் அறிக.
ஆகமங்களைச் சிவபெருமானிடம் நேரே கேட்டவர் மந்திர மகேசுரர் ஆதலின் அது 'அதிபர சம்பந்தம்' என்றும், மந்திர மகேசுரரிடம் அனந்ததேவர் கேட்டது 'பர சம்பந்தம்' என்றும், அனந்த தேவரிடம் சீகண்டர் கேட்டது 'மகா சம்பந்தம்' என்றும், சீகண்டரிடம் நந்திபெருமான் கேட்டதும், திருமால் முதலிய தேவர்கள் கேட்டதும் 'அந்தராள சம்பந்தம்' என்றும், நந்தி பெருமானிடத்தும், திருமாலி டத்தும், மற்றைய தேவர்களிடத்தும் முனிவர்களும் சித்தர்களும் கேட்டது 'திவ்வியசம்பந்தம்' என்றும், தேவர்களிடமும், முனிவர்களிடமும் மக்கள் கேட்டது 'திவ்வியாதிவ்விய சம்பந்தம்' என்றும், மக்களிடம் மக்கள் கேட்டது 'அதிவ்விய சம்பந்தம்' என்றும் சொல்லப் படுகின்றன.
'வேதம், சிவாகமம்' என்னும் இரண்டும் 'ஆப்த வாக்கியம்' எனப்படுகின்றன. 'ஆப்தன்' என்பதற்கு, 'உள்ளது கூறுவோன்' என்பது பொருள். பொதுமக்கட்கு நன்மக்கள் ஆப்தர். நன்மக்கட்கு முனிவர்களும், தேவர்களும் ஆப்தர். முனிவர்கட்கு நந்தி பெரு மானும், தேவர் கட்குப் பிரமதேவரும் ஆப்தர். நந்திதேவர், பிரம தேவரினின்று மேன் மேல் உள்ளவர் கீழ்க்கீழ் உள்ளவருக்கு ஆப்தர். எல்லார்க்கும் ஆப் தராய்த் தமக்கோர் ஆப்தர் இல்லாத அதிபரமாப்தர் சதாசிவ நாயனார். அவர்க்குமேல் உள்ள சத்தியும், சிவமும் இலய நிலை (ஒடுக்கநிலை) ஆதலின், அங்கு வேத சிவாகமங்கள் விளங்கித் தோன்றுதல் இல்லை.

பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே. **#108**

மேற்கூறியவாறு நந்திபெருமான் சீகண்டரிடம் சிறப்பாகப்பெற்ற ஒன்பது ஆகமங்கள், '1. காரணம், 2. காமிகம், 3. வீரம், 4. சிந்தியம், 5. வாதுளம், 6 ... ... 7. ... ... 8 சுப்பிரபேதம், 9. மகுடம்' என்பன.

விளக்கவுரை

இத்திருமந்திரத்தின் மூன்றாம் அடி, 'நாயனார் திருமொழியன்று' என்பது தெளிவாய்த் தெரிகின்றது. எவ்வாறெனில், 'யாமளமாகும் காலோத்தரம்' என்பது பெரும்பான்மையும் ஒன்றாகவே கொள்ளத்தக்கதாய் உள்ளது. அவ்வாறு கொண்டால், ஒன்பது கூறவந்தவர் ஒன்றனை மறந்தார் ஆவர். 'யாமளம், ஆகும் காலோத்தரம்' என இரண்டாகக் கொள்ளினும், யாமளம் சைவாகம மன்று; வாம தந்திரம். அது சைவத்திற்குப் புறம்பானது. 'காலோத்தரம்' என்ற பெயரில் பல உள. ஒன்றேனும் மூலாகமம் அன்று. அதனால், வாம மதத்தினர் ஒருவர் தமது

தந்திரத்தையும் திவ்வியாகமங்களில் ஒன்றாக்கிக்கொள்ள இத்திருமந்திரத்தைத் திரித்துவிட்டார் போலும்! அவ்விடத்தில் நாயனார் கூறிய இரு ஆகமங்கள் இவை என்பது அறியப்படாது போயினமை வருத்தத்திற்குரியது. 'நந்திபெருமான் சிறப்பாகப்பெற்ற ஆகமங்கள் ஒன்பது' என்பதற்கேற்ப அவர்பால் அவற்றைப்பெற்ற இந்நாயனார் இந்நூலையும் ஒன்பது தந்திரங்களாக அருளிச்செய்திருத்தல் அறியத் தக்கது. எனினும், ஒவ்வோர் ஆகமத்தையே ஒவ்வொரு தந்திரமாகச் செய்தார் என்பதற்கில்லை. ஏனெனில், அவ்வாறு செய்திருப்பின், அவற்றின் தொடக்கத்தில் 'இன்ன ஆகமத்தைச் செப்புகின்றேன்' எனச் சொல்லித் தொடங்கி யிருப்பார். அவ்வாறன்றி முதற்கண் 'சிந்தைசெய்து ஆகமம் செப்ப லுற்றேனே' எனப் பொதுப்படக்கூறி அமைந் தமையானே அது பெறப்படுவதாம்.

ஆகமங்கள் பலவும் தனித்தனி வேறு வேறு பொருளைக் கூறுவன அல்ல; எல்லா ஆகமங்களும் எல்லாப் பொருளையும் கூறு வனவே எனினும், சிலவற்றைத் தொகுத்தும், சிலவற்றை விரித்தும் கூறுமாற்றால் வேறு வேறு ஆகமங்களாயின. ஆகவே, நந்திபெருமான் சிறப்பாகப்பெற்ற ஆகமங்களை உணரின், அனைத்து ஆகமங்களை யும் உணர்ந்ததாம். அவற்றின் பொருளையே கூறினமையால், இந் நூலை உணரினும் அனைத்து ஆகமங்களும் உணர்ந்தவாறாதல் அறிக.

அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்
அண்ணல் அறைந்த அறிவறி யாவிடில்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே. **#109**

சிவபெருமான் தனது திருவருள் காரணமாக அருளிச்செய்த ஆகமங்கள் அளவின்றி இருப்பினும், அவற்றில் சொல்லப்பட்ட பொருளை மக்கள் அறியமாட்டாராயின், அவை அனைத்தும் அவர்கட்குப் பயனில்லாதனவேயாய் விடும்.

விளக்கவுரை

என்றது, வருகின்ற திருமந்திரங்கட்குத் தோற்றுவாயாக லின், 'அதனால் அவற்றின் பொருளை அறிதற் பொருட்டுப் பல மொழிகளை அவன் படைத்தனன்' என்பது குறிப்பெச்சமாக உரைக்க.

மாரியும் கோடையும் வார்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரிய மும்தமி ழும்உட னேசொலிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே. **#110**

பெருகற்காலத்தும், சிறுகற்காலத்தும் நிறைந்த மெய்யுணர்விருக்கவும் அதனை நோக்காது புலனுணர்வே மிகப் பெற்று மக்கள் மெலிவுறுகின்ற

காலத்து அம்மெலிவு நீங்குமாறு சிவ பெருமான் 'ஆரியம், தமிழ்' என்னும் இருமொழிகளை உமா தேவியார்க்கு ஒருங்கு சொல்லி உலகம் உய்யத் திருவருள் செய்தான்.

விளக்கவுரை

'அவற்றையே பின்னர் பாணினி முனிவர்க்கும், அகத்திய முனிவர்க்கும் செப்பஞ் செய்யுமாறு உணர்த்தி, உலகில் பரவச்செய்தான்' என்க.
'வடமொழிக்கு இந்திரனால் செய்யப்பட்ட ஐந்திர வியாகரணமே முதல் நூல்' என்றல் பழங்கதையேயாக, உண்மையில் உள்ளது பாணினீயமே. அதனால்,
'வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாந் தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்'
-காஞ்சிப்புராணம்
என்றலே சிவநெறி மரபு என்க.
பலதலைப்பட்ட உணர்வுடையராய்ப் பரந்துசென்று ஆராயும் உலகர் பொருட்டு ஆரியமொழியும், அவ்வாறன்றி ஒருதலைப்பட அமைந்த உணர்வுடையராய் ஒழுக்கத்தில் நின்று பயன்பெற விரும்பும் நல்லோர் பொருட்டுத் தமிழ்மொழியுமாக இருமொழியை இறைவன் சொல்லியருளினான் என்பது,
'தங்கி மிகாமை வைத்தான் தமிழ்ச் சாத்திரம்' -தி.*10*. பா.*26*
என நாயனார் மேலே அருளிச்செய்தவாற்றால் பெறப்படும். இவ்வாறு இவ்விருமொழியையும் ஒப்பக்கொண்டதன்றி ஒன்றை உயர்ந்ததாகவும், மற்றொன்றைத் தாழ்ந்ததாகவும் ஆன்றோர் கொண்டிலர் என்பது இதனால் பெறப்பட்டது. இங்ஙனமாகவும் சிலர் இவற்றுள் ஒன்றைப் பற்றி மற்றொன்றனை இகழ்வர். அவர், இது முதல் மூன்று திருமந்திரங்களை, 'நாயனார் வாக்கல்ல' என விலக்கிச் செல்வர். அவர், 'தமிழ்ச்சொலும் வடசொலும் தாள்நிழற் சேர' (தி.*1* ப.*77* பா.*4*) 'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்' (தி.*6* ப.*23* பா.*5*) என்றாற் போல்வன வற்றையும் அவ்வாறு விலக்கிப்போவர் போலும்!
மொழிகளது நிலை, 'நுண்மை, பொதுமை, இடைமை, பருமை' என நான்கு வகைப்படும். அவை முறையே, 'சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி' என வடமொழியிற் சொல்லப்படும். அவற்றுள், 'மத்திமை, வைகரி' எனப்படுகின்ற இடைமொழி பரு மொழிகள் தாம் ஆரியம், தமிழ் முதலிய பாகுபாடுகளைப் பெற்று நிற்கும். அவற்றிற்கு முந்திய நிலைகள் பாகுபாடின்றியே விளங்கும். அவற்றுள் பிரணவர் முதலியோரும் அனந்த தேவரும் ஆகமங்களைப் பெற்றது 'சூக்குமை' எனப்படும் நுண்மொழியினாலாம். சீகண்டர் பெற்றது 'பைசந்தி' என்னும்

பொதுமை மொழியால். சீகண்டரிட மிருந்து நந்தி முதலிய கணங்கள், தேவர், முனிவர், சித்தர் பெற்றது இடைமொழியாகிய மத்திமையினால். அவர்களிடமிருந்து மக்கள் பெற்றது 'வைகரி' எனப்படும் பருமொழியினால். 'சிலர்க்கு இயல் பாகவே மெய்யுணர்வு உண்டாயிற்று' என்றல் இறைவன் உள்நின்று நுண்மொழி இடைமொழிகளால் விளக்கியதே என்க. அதனால், கணங்கள் முதலியோர் பொருட்டே பாகுபட்ட மொழிகளை இறைவன் சொல்லினன்' எனக் கொள்க. இவற்றுள், இடைமொழிக்கு (மத்தி மைக்கு) முற்பட்டவற்றையே, 'சொற்பிரிவிலாத மறை' (தி.3 ப.78 பா.2) என்று திரு ஞானசம்பந்தர் அருளிச் செய்தார். அதற்கு இவ்வாறு பொருள் கொள் ளாது 'சொற்கள் நீங்காது நிற்கின்ற மறை' என உரைப்பின் பொருள் படாமை அறிக. 'எழுதா மறை' எனப்படுவதும் இச்சொற்பிரிவிலாத மறையே. அதனையே ஆரிய வேதத்திற்கு மரபாகக் கொண்டனர் அந்தணர். 'எழுதா மறை' என்பதற்கு, 'எழுத வாராத மறை' என்பதே பொருளன்றி, 'எழுதாமல் இருப்பதையே மரபாகக் கொண்ட மறை' என்பது பொருளாகாது.

'ஆற்றல் அழியும் என்று அந்தணர்கள் நான்மறையைப்
போற்றிஉரைத் தேட்டின் புறத்தெழுதார்' -திருவள்ளுவமாலை. 15

என்ற செய்யுளும், 'எழுதப்படுவதனை எழுதாதிருக்கின்றனர் அந்தணர்' என்றே கூறிற்று. எனவே, 'எல்லையிலா மறைமுதல் மெய்யுடன் எடுத்த எழுது மறை' (தி.12 பெ.பு.ஞானசம். 75) என்பதில், 'எழுது மறை' என்றது, 'சொற்பிரிவிலாத மறையைத் 'தமிழ்' என 'ஒரு மொழியாய்ப் பிரிந்து தோன்றி எழுதப்படுமாறு வைத்த மறை' என்றவாறாயிற்று.

இதனால், மேலுலகத்தில் பிரணவர் முதலியோர்க்குச் சொல்லிய ஆகமங்கள் கீழுலகத்தார்க்கு விளங்குதற்பொருட்டு இறைவன் பருமொழிகளைப் படைத்தமை கூறப்பட்டது. 'ஆகமங்கள் விளங்குதற்பொருட்டே மொழிகளைப் படைத்தான்' என்றமையால், அம்மொழிகளில் அவ்வாகமங்களை அவன் கூறினமையும் பெறப்படும்.

'மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்'
-தி.8 திருவாசகம். கீர்த்தி. 9. 10

'கேவேட ராகிக் கெளிறது படுத்து
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்
துற்றஐம் முகங்க ளாற்பணித் தருளியும்'
-தி.8 திருவாசகம் கீர்த்தி. 16. 20.

வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளித்

துள்ளு வார்புனல் வேணியார் அருள்செயத் தொழுதே
தெள்ளும் வாய்மையின் ஆகமத் திறனெலாந் தெரிய
உள்ள வாறுகேட் டருளினாள் உலகைஆ ளுடையாள்.
-தி.*12* பெ. பு. திருக்குறிப்பு. *50.*
என்றாற்போல வருவன பலவும் சிவபெருமான் தனது ஆகமங்களைப் பருமொழியால் விளக்கிய வரலாற்றைக் குறிப்பனவேயாம். இறைவன் படைத்த பருமொழியை இந்நாயனார், 'ஆரியம், தமிழ்' என இரண்டாகக் கூறினமையின், ஆகமங்கள் அவ் இருமொழியிலும் கூறப்பட்டன என்றல் பொருந்துவதே என்க. இதனானே, பிறநெறிகள்யாவும், 'ஆரியம் ஒன்றே கடவுள்மொழி; தமிழ் முதலிய பிறமொழிகள் யாவும் தேசியம் - அஃதாவது அவ்வந் நிலப்பகுதியில் வாழும் மக்கட்கு அமைந்த மொழி' என்னுமாயினும், சிவநெறி, ஆரியம் தமிழ் இரண்டையுமே கடவுள்மொழி என ஒப்பக்கொள்வது என்பது பெறப்பட்டது. இந்நாயனார்க்குப் பல நூற்றாண்டுகட்குப் பின் பிறர் சிலரும் இவ்வாறு கொண்டனர்.

அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறுஞ்
சிமிழ்த்தலைப் பட்டுயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனும்இவ் விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலு மாமே. **#111**

சிவபெருமான் உயிர்களைப் பாசத்தளை யினின்றும் விடுவிக்கின்ற முறையையும், பின் அவற்றை அன்பு வாயி லாகத் தன்னிடத்தே நிலைபெறுவிக்கின்ற முறையையும், அங்ஙனம் நிலைபெறுவித்தற்கண் உயிர் தனது பண்டைப் பயிற்சி வயத்தால் பாசத்திலே பொருந்தி அலைவுறுகின்ற முறையையும், 'தமிழ்மொழி, வடமொழி' என்னும் இருமொழியுமே ஒருபடித்தாக உணர்த்தும்; அதனால், அவற்றுள் யாதொன்றையாயினும் முறைப்படி உணர வல்லார்க்குத் தத்துவ ஞானத்தையே யன்றிச் சிவஞானத்தைப் பெறுதலுங் கூடுவதாம்.

விளக்கவுரை

'உயிர்' எனப் பின்னர் வருதலின், வாளா, 'அவிழ்க் கின்றவாறு' என்றார். 'அது' என்றது, 'அவ்வினத்தை' என்றவாறு. 'சிமிட்டலை' எனவும் பாடம் ஓதுப. 'உணரலும்' என்ற உம்மை, உணர் தற்கு அருமை குறித்து நின்ற சிறப்பும்மை. 'ஆரியம், தமிழ் இரண்டனையும் உணர்தல் சிறப்புடைத்தாயினும் அஃது எல்லார்க்கும் கூடாமையின், ஒன்றை உணரினும் பயனைப்பெறுதல் தப்புதல் இல்லை' என்றவாறு. ஈற்றடி ஆசிடை வந்த மூன்றாம் எழுத்து எதுகை.

பண்டித ராவார் பதினெட்டுப் பாடையும்
கண்டவர் கூறுங் கருத்தறி வார்என்க

பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடைருளி
அண்ட முதலான் அறஞ்சொன்ன வாறே. **#112**
கற்றவர் போற்றுகின்ற பதினெண்மொழிகளும் சிவபிரான் தனது அறத்தைப் பொதுவாகவும், சிறப்பாகவும் உணர்த்தற்கு அமைத்த வாயிலே. அதனால், 'கற்றவர்' எனப்படுவார், பல மொழிகளையும் உணர்ந்து, அவற்றில் சொல்லியுள்ள முடிந்த பொருளை உணர்ந்தவரே என அறிக.

விளக்கவுரை

'அவனன்றி ஓரணுவும் அசையாது' ஆதலின், உலகில் மொழிகள் பலவாய்த்தோன்றி வளர்தலும் சிவபெருமானது திருவுளத்தின்படியே எனவும், 'அங்ஙனம் அவன் திருவுளம் செய்தது, தான், பிரணவர் முதலியோர், அனந்ததேவர், சீகண்டர், உமையம்மை முதலியோர்க்குச் சொல்லிய ஆகமப் பொருள்கள் நிலவுலகில் அவரவர்க்கு ஏற்ற பெற்றியான் விளங்குதற்பொருட்டே' எனவும் கூறுவார், 'பதினெட்டுப் பாடையும் அண்ட முதலான் அறம் சொன்ன ஆறே' என்றார். 'சொன்ன ஆறே' என்பதில் 'சொன்ன' என்றதை *'அன்போடியைந்த வழக்கு'* (குறள். 73) என்பதில் 'இயைந்த' என்றதுபோலக் கொள்க.
ஆறு - வழி; வாயில். 'பதினெட்டுப் பாடை' என்றது 'மொழிகள் பதினெட்டு' என்னும் வழக்குப் பற்றி. எனவே, 'பன்மொழியும்' என்பதே அதற்குக் கருத்தாகும். ஆரியம், தமிழ் இரண்டும் முன்னர்க் கூறப்பட்டமையின், 'பன்மொழிகள்' என்றதில் அவை இரண்டும் ஒழிந்தனவே கொள்ளப்படும். 'கண்டவர்' என்றது, 'அறிந்தவர்' என்றபடி. 'அவ்வம்மொழிகளில் வல்லோர் அவை வாயிலாக உயர்ந்த பொருள்களை மக்கட்கு உணர்த்துவாராதலின், அப்பொருள்களும் தமிழ்ச்சொல் வடசொற்களில் அமைந்த பொருளின் பகுதியவே; பிற அல்ல' என்பார், 'பண்டிதராவார் பதினெட்டுப் பாடையும் கண்டவர் கூறும் கருத்தறிவார்' என்றார். 'கருத்தறிவார்' என்றதனால், 'அச்சொற்களை அறிதல் வேண்டும் என்பதில்லை' என்றவாறாயிற்று. அங்ஙனமாகவே, 'அவற்றில் உள்ள பொருள்கள்' தமிழ்ச்சொல் வடசொற்களில் உள்ள பொருள்களின் பகுதியே என்பதும் உணர்த்தப்பட்டதாம். அதனானே, 'தமிழும், ஆரியமுமே தொன்மை மொழிகள்' என்பதும், 'பிறமொழிகள் இவற்றின் வழித்தோன்றின' என்பதும் போந்தன.
இதனால் வழிமொழிகளாகிய பிறமொழிகளும் பயனுடைய வாதலை அறிந்து அவற்றை இகழாமை வேண்டும் என்பது கூறப்பட்டது.

3.4.உபதேசம்

விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுருக்கியொ ரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே. **#113**

மேல், 'அண்ட முதலான்' எனக் குறிக்கப்பட்ட, அனைத்துலகிற்கும் முதல்வனாகிய சிவபெருமான், முன்னாளில், மேல்நிலையினின்றும் இறங்கி, என் வினைக்கேற்ற வகைகளாகத் தனது உண்மை நிலையை மாற்றிக்கொண்டு, கீழ்நிலையில் நின்ற தனது சத்தியை எனக்குப் பெருங்காவலாக அமைத்து நடாத்தித் தனது ஒப்பற்ற தனிப் பேரின்பத்தைத் தரும் அருள் நோக்கத்தை இன்று எனக்கு அளித்து, என் உள்ளத்தில் நீங்காது நின்று, அதனை அன்பி னால் கசிந்து கசிந்து உருகப்பண்ணி, எனது மலம் முழுவதையும் பற்றற நீக்கினான்.

விளக்கவுரை

'இழிந்து, கொண்டு நின்றதாள்' என்க. 'விண்' என்றது மேல்நிலையை. அது, 'பரநிலை' எனப்படுதலின், அந்நிலைக் கண் நிற்கும் அவனது சத்தி 'பராசத்தி' எனப் பெயர்பெற்று நிற்கும். அந் நிலையினின்றும் இறங்குதலாவது, உலகை நோக்குதல். அது முன்னை நிலையிற் கீழ்ப்பட்டதாகலின், 'தண் நின்ற' என்றார். தண்மை - தாழ்வு, 'தண்பதத்தாற் றானே கெடும்' *(குறள். 548)* என்பதிற்போல 'மெய்யை வினைக்கீடாய்க் கொண்டு' என்க. மெய் - உண்மை நிலை. அஃது அறக்கருணையாய் நின்று விளக்குதலைச் செய்தல். அதனை மாற்றிக் கொள்ளுதலாவது, மறக் கருணையாய் நின்று மறைத்தலைச் செய்தல். சத்தியை, 'தாள் - திருவடி' என்றல் மரபு.

உலகை நோக்காது இயற்கையில் நிற்கும் பராசத்தி தனது ஒரு சிறு கூற்றில் 'ஆதி சத்தி' என நின்று உலகைத் தொழிற்படுத்தும். அந் நிலையில் அஃது உயிர்கட்குச் சிவத்தைக் காட்டாது உலகத்தையே காட்டி நிற்குமாதலின், 'திரோதாயி அல்லது திரோதான சத்தி' என்று சொல்லப் படும். 'மறைக்கும் ஆற்றல்' என்பது இதன் பொருள். இறைவனது சத்தி இவ்வாறு செய்தல், உயிர்களை அனாதியே பற்றியுள்ள ஆணவ மலத்தின் சத்தியை மெலிவித்தற் பொருட்டாம். அது மெலிவுறுதலே 'மல பரிபாகம்' எனப்படும். மல பரிபாகம் வந்தவுடன் அத்திரோதான சத்தி தானே அருட்சத்தியாய் மாறிப் பதிந்து, உயிரின் அறிவில் ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கும். இவ் வுணர்ச்சி, உயிருக்கு ஓர் அதிர்ச்சியாய்த் தோன்றும். அதுபற்றி அருட்சத்தி பதிதலை, 'சத்தி நிபாதம்' என்பர். நிபாதம் - வீழ்ச்சி.

மலபரிபாகத்திற்கு முந்தின நிலை பாசத்தில் கட்டுண்டு கிடக்கும் நிலையாகலின் அது, 'பெத்தம், பெந்தம், பந்தம், கட்டு' என் றெல்லாம்

சொல்லப்படும். மல பரிபாகத்திற்குப் பிந்தின நிலை பாசத் தினின்றும் விடுபட்ட நிலையாகலின் அது, 'முத்தி, மோட்சம், வீடு' என்றெல்லாம் சொல்லப்படும். பெத்த நிலையையே 'முன்' என்றும், முத்தி நிலையையே 'இன்று' என்றும் அருளிச்செய்தார். பெத்தநிலை திரோதான சத்திவழிப்பட்டே நிற்றலின் அதனை, 'தலைக்காவல்' என்றார். 'முன்' என்றதனை முதலில் வைத்து, 'வைத்து' என்றதன் பின், 'நடாத்தி' என்பது வருவித்து, 'இன்று, காட்டி உருக்கி அறுத் தான்' என முடிக்க. அதிகாரம் வேறாயவழியும் முன்னைத் திருமந்திரத் தோடு தொடர்பு தோன்ற எழுவாயை அதனினின்றும் தோன்ற வைத்தார். களிம்பு உவமையாகுபெயர். இதனால், 'ஆணவ மலம் செம்பிற் களிம்புபோல அனாதியே உயிரில் கலந்துள்ளது' என்பதும், அங்ஙனம் கலந்த கலப்பால், 'உயிர் அனாதிபெத்த சித்துரு' என்பதும், 'அதனை அறுத்தான்' என்றதனால், 'சிவன் இயல்பாகவே மலம் இல்லாத அனாதிமுத்த சித்துரு' என்பதும், அவனது அருள் செம்பைக் களிம்பு நீக்கிப் பொன்னாக்குகின்ற இரசகுளிகை போல்வது என்பதும் பெறப்பட்டன. ஆனந்தக் கண் - ஆனந்தத்தைப் பயக்கும் கண்; அஃது அருட்கண். அதனை உணரச் செய்தலே வழங்கு தலாகலின், 'காட்டி' என்றார். 'முன், வைத்து நடாத்தி, இன்று, காட்டி, உருக்கி அறுத்தான்' என்றதனால், இது நாயனாரது அநுபவமேயாதல் பெறப்பட்டது.

'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்'

என்றார் திருவாசகத்தும் *(தி.8 சிவபுராணம். 31. 32)*. 'ஆய்' என்றது, 'ஆக' என்பதன் திரிபு.

இதனால், 'உலகை நோக்காது நிற்கும் நிலையே இறைவற்கு உண்மை நிலை' என்பதும், உலகை நோக்கி நின்று செயல் புரியும் நிலை பொதுநிலை என்பதும், 'பொதுநிலையில் நிற்பனவெல்லாம் மறைப்பு நிலையே' என்பதும், 'அந்நிலை பலவற்றையும் அவனது சத்தி திரோதான சத்தியாய் நின்றே செய்யும்' என்பதும், 'அச்செயல் களெல்லாம் செம்பில் உள்ள களிம்பைத் தேய்ப்பது போல உயிர் களைப் பற்றியுள்ள ஆணவ மலத்தைத் தேய்க்கும் செயல்களேயாகும்' என்பதும், 'அம்மலம் தேய்வுற்றபொழுது அத்திரோதான சத்திதானே அருட்சத்தியாய் மாறி உயிரைப் பொதுநிலையினின்று நீக்கி, உண்மை நிலையை அடையச்செய்யும்' என்பதும், 'இவையே இறைவன் என்றும் உயிர்கள்பொருட்டு இடையறாது செய்துவரும் செயல்' என்பதும் கூறப்பட்டன. படவே, 'இறை, உயிர், தளை' என்னும் முப் பொருள்களின் இயல்பு பற்றிய ஆகமப்பொருள் பலவும் இவ்வொரு திருமந்திரத்தானே தொகுத்துக் கூறப்பட்டவாறு அறிந்துகொள்க.

களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே. **#114**

என் மலத்தைப் பற்றற நீக்கியவனாகிய எங்கள் சிவபெருமான் நந்தி தேவரே. அவர் மேற்கூறியவாறு அருட்கண்ணை எனக்குத் திறப்பித்து ஆணவ மலமாகிய களிம்பை அறுத்து, அக் களிம்பு அணுக ஒண்ணாத சிவமாகிய மாற்றொளி மிக்க பொன்னை உணர்வித்து, பளிங்கினிடத்துப் பவளத்தைப் பதித்தாற் போல்வதொரு செயலைச் செய்தார். அவர் பதிப்பொருளேயன்றி வேறல்லர்.

விளக்கவுரை

பளிங்கு ஆன்மாவிற்கும், பவளம் சிவத்திற்கும் உள்ளுறை உவமமாய் நின்றன. எனவே, 'பளிங்கிற் பவளம் பதித் தான்' என்றது, 'ஆன்மாவாகிய என்னிடத்துச் சிவத்தை விளங்குவித் தான்' என்றதாயிற்று. பளிங்கு நீலமணியோடு சேர்ந்தவழி நீல மாயும், செம்மணியோடு சேர்ந்தவழிச் செம்மையாயும் சார்ந்ததன் வண்ண மாம் தன்மையுடையதாகலின், அவ்வுவமையால், 'ஆன்மாவும் பாசத்தொடு சேர்ந்தவழிப் பாசமாயும் சிவத்தொடு சேர்ந்தவழிச் சிவமாயும் சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடையது' என்பதும், 'அத் தன்மைத்தாய ஆன்மா அனாதியே பாசத்தோடு சேர்ந்து நின்று பாச மாய்ப் பசுத்தன்மை எய்தி, அப்பாசம் நீங்கியவழிச் சிவத்தொடு சேர்ந்து பசுத்துவம் நீங்கிச் சிவமாம் தன்மையைப் பெற்று நிற்கும்' என்பதும், 'நந்தி பதித்தான்' என்றதனால், 'ஆன்மாவிற்குப் பாசத்தைப் பற்றறச் செய்து சிவமாந் தன்மையை எய்துவிப்பவன் ஆசான் மூர்த்தியே' என்பதும் உணர்த்தப்பட்டனவாம். இதனானே, 'எம் போலியர்க்கு (சகல வருக்கத்தினருக்குச்) சிவபெருமான் ஆசான் மூர்த்தி வாயிலாகவே ஞானத்தை உணர்த்துவன்' என்பதும் கூறிய வாறு காண்க.
சிவம் செம்பொருளாகலின் பவளம் அதற்கு உவமை யாயிற்று.

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியணு கிற்பசு பாசம்நில் லாவே. **#115**

(பதி ஒன்றேயன்றோ என்றும் உள்ளது? ஏனைய பசு, பாசம் இரண்டும் எவ்வாறு தோன்றின? என்று ஐயுறும் மாணாக்கரைக் குறித்து,) 'பதி, பசு, பாசம்' என்று சொல்லப்படுகின்ற மூன்று பொருள்களில் பதி தோற்றம் இன்றி என்றும் உள்ள பொருளாதல் போலவே, ஏனைப் பசுவும், பாசமும் தோற்றம் இன்றி என்றும் உள்ள பொருள்களாம். (இவ்வுண்மை

அறியாதார் பலவாறு கூறி மலைவர் என்பது கருத்து) பாசங்கள் பசுவைப் பற்றுமேயன்றிப் பதியினிடத்து அணுகமாட்டா. பசு, பதியினிடத்து அணுகும்; அவ்வாறு அணுகும் பொழுது அதனைப் பற்றியுள்ள பாசங்கள் அதனைப் பற்றிநில்லாது விட்டு நீங்கும். (என்று அருளிச்செய்தார்)

விளக்கவுரை

'அணுகின்' என்றதனால், 'அணுகுந் தன்மை உடையது' என்பதும், 'அதனை உடையதாயினும், பாசப் பிணிப்பால் அணுகமாட்டாதாயிற்று' என்பதும், 'அப்பிணிப்பு, கால எல்லையில் நெகிழுமாகலான் அங்ஙனம் நெகிழ்ந்தபொழுது பசு, பதியை அணுகும்' என்பதும் பெறப்பட்டன. பதி - கடவுள். பசு - உயிர். பாசம் - அவ்வுயிர்களைப் பிணித்துள்ள பொருள்கள். இவை மூன்றும் முறையே, 'இறை, உயிர், தளை' எனத் தமிழிற் சொல்லப்படும்.

இத் திருமந்திரம் ஒர் ஐயம் அறுத்தது.

வேயின் எழுங்கனல் போலேஇம் மெய்யெனுங்
கோயி லிருந்து குடிகொண்ட கோன்நந்தி
தாயினும் மும்மலம் மாற்றித் தயாஎன்னும்
தோயம தாய்எழுஞ் சூரிய னாமே. **#116**

கால வழிப்பட்டு, 'குழவி, இளமை, முதுமை' என்னும் மாற்றங்களை உடையதாய் நிலையற்றதான இவ்வுடம்பு என்கின்ற கோயிலிலே நீங்காது குடிகொண்டு மறைந்திருக்கின்ற தலை வனாகிய சிவன், மூங்கிலில் மறைந்து நின்ற தீ, தான் வெளிப்படுங் காலத்து வெளிப்பட்டு விளங்குதல்போல, ஆன்மாவின் பக்குவ காலத்தில் மும்மல இருளை நீக்கி எழுகின்ற சூரியனாய் வெளிப்பட்டு விளங்குவான். அப்பொழுது அவன் தாயன்பினும் மிக்க பேரருளாகிய வெள்ளமாயும் நின்று பேரின்பத்தைத் தருவான்.

விளக்கவுரை

'எழும்' என்றதை இரட்டுற மொழிந்து, முற்றாயும், எச்சமாயும் கொண்டு முறையே முன்னும், பின்னும் இயைக்க. இதனால், 'ஆனந்தக் கண்காட்டிக் களிம்பறுத்தலையும், பளிங்கிற் பவளம் பதித்தலையும் சிவன் முன்னே செய்யாமைக்குக் காரணம் பக்குவம் இன்மை' என்பது கூறப்பட்டது. 'வேயின் எழுங்கனல் போலே' என்றமையால், 'பளிங்கிற் பவளம் பதித்தான்' என்ற உவமை பற்றிச் சிவம் புதிதாக வந்து ஆன்மாவின்கண் புகுவது போலும் என மயங்குதல் கூடாது; முன்பு விளங்காது யாண்டும் உடனாய் நின்ற அதுவே பின்பு விளங்கும் என்பதை உவமை காட்டி விளக்கிற்று இத்திருமந்திரம். உயிர்

உடலின்கண் அதுவே தானாய் நிற்றல்பற்றியும், இதயத்தானத்திலும், புருவ நடுவிலும் வைத்துத் தியானித்தலை உடன்பட்டுக் கொள்ளுதல் பற்றியும், உயிரின்கண் நிற்கின்ற சிவனை, உடம்பினுள் நிற்பவனாகக் கூறினார்.

'நிலாவாத புலாலுடம்பே புகுந்துநின்ற கற்பகமே'(தி.6 ப.95 பா.4) என அப்பரும்,

'எந்தையே ஈசா உடல்இடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே'
-தி.8 திருவாசகம். கோயில்திரு. 10

என்று மாணிக்கவாசகரும் அருளிச்செய்தமையும் காண்க. 'இம்மெய்' என்றது, 'நிலையற்றதான உடம்பு' எனப் பொருள் தந்தது.

சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவ்வே
சூரிய காந்தமும் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே. **#117**

'பதியினைப்போல் அனாதியே' என மேல் விளக்கப்பட்ட பசுக்களும், பாசங்களும் முறையே சூரியகாந்தக் கற் களும், அவற்றை மூடியுள்ள பஞ்சும் போல்வனவாம். அவற்றுள், சூரிய காந்தக் கற்கள் தனியே நிற்கும் பொழுது தம்மை மூடியுள்ள பஞ்சு களைச் சுடமாட்டா. அது போலப் பசுக்கள் தனியே நின்று தம்மைப் பிணித்துள்ள பாசங்களை நீக்கமாட்டா. ஆயினும், அச்சூரிய காந்தக் கற்கள் சூரியன் வந்தபொழுது அதன் கிரணத்தைப் பெற்றுத் தம்மை மூடியுள்ள பஞ்சுகளைச் சுட்டெரிக்குமாறுபோல, சிவன் ஞானாசிரிய னாய் வந்த பொழுது பசுக்கள் அக்குருவின் அருளைப் பெற்றுத் தம்மைப் பிணித்துள்ள பாசங்களை அகன்றொழியச் செய்யும்.

விளக்கவுரை

'அவ்' என்பது வகர ஈற்றுச் சுட்டுப் பெயர். 'அவை' என்பது இதன் பொருள். இது, மேல், 'பசு, பாசம்' என்பவற்றைச் சுட்டி, அவற்றை நிரல்நிறை வகையால் சூரிய காந்தத்திற்கும், சூழ் பஞ்சிற்கும் உவமிக்கப்படும் பொருளாக்கி நின்றது. 'போலவே' என்பது பாடம் ஆகாமை அறிக. சூரியன் சந்நிதியில் சுடுதற்கு உப மேயம் கூறிய அதனால், தனியே நின்று சுடாமைக்கு உபமேயம் கொள்ளப்பட்டது. ஆரியன் - ஆசிரியன். 'சுட்டிடா' எனவும், 'சுடும்' எனவும் பொது உணர்வே பற்றிக் கூறினாராயினும், உண்மை உணர்வு பற்றி, 'சுடுந்தன்மையைப் பெறா' எனவும், 'பெறும்' எனவும் கூறுதலே கருத் தாதலின், உவமைக்கேற்ப, 'அகற்றும் மலங்களே' என்னாது 'அற்ற மலங்களே' என்றார். இதனால், 'ஆன்ம அறிவு தன்னியல்பில் நின்று

பாசத்தை நீக்குவதன்று; சிவனது அறிவைப் பெற்று அவ்வறிவாய் நின்றே நீக்கும்' என்பது உணர்த்தப்பட்டதாம். 'வேயின் எழுங்கனல் போலே' என மேற்கூறியவாற்றால், 'விறகில் உள்ள தீ வெளிப்படுதற்கு அதனைக் கடைவோன் நிமித்தமாம் அளவே யல்லது, அதனிடத்து தீயைப் புகுத்துவோனாகாமைபோல, மாணாக் கனது அறிவின்கண் உள்ள சிவஞானம் வெளிப்பட்டுத் தோன்றுதற்கு ஞானாசிரியன் நிமித்தமாதலல்லது, அதனை அவனறிவின்கண் புகுத்துவானல்லன்' என்றற்கு, 'சூரியன் சந்நிதியில்' என உவமைக் கண்ணும், 'ஆரியன் தோற்ற' எனப் பொருட் கண்ணும் கூறினார்.

'சூரியகாந் தக்கல்லி னிடத்தே செய்ய
சுடர்தோன்றி யிடச்சோதி தோன்று மாபோல்
ஆரியனாம் ஆசான்வந் தருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்'
-சிவஞானசித்தி. சூ. *8. 28*

என இதனை அருணந்தி சிவாசாரியர் இனிது விளக்கினமை காண்க. 'அற்ற' என்றது முற்று. 'சுட்டிடா' என்ற பன்மையால் உயிர்கள் பலவாதல் குறிக்கப்பட்டது.

இதனால் சிவஞானம் உண்டாதல் ஞானாசிரியனது வருகை இன்றி யமையாமை சிறந்ததோர் உவமத்தால் விளக்கப்பட்டது.

மலங்களைந் தாமென மாற்றி அருளித்
தலங்களைந் தான்நற் சதாசிவ மான
புலங்களைந் தான்அப் பொதுவினுள் நந்தி
நலங்களைந் தான்உள் நயந்தான் அறிந்தே. **#118**

யாவரும் புகழும் அம்பலத்துள் ஆடுவோனாகிய சிவபெருமான், எனது பக்குவத்தை அறிந்து எனக்கு ஐந்து மலங்களையும் போக்கித் தன்னைத் தந்து, சுத்த தத்துவங்கள் ஐந்தினாலும் தான் ஐந்தொழில்புரிவோனாய் நிற்கும் கருத்தை என்னளவில் தவிர்த்தான். தவிர்த்து, நன்மையைத் தரும் திருவைந் தெழுத்தால் என் உள்ளத்தில் நீங்காது விரும்பி நின்றான்.

விளக்கவுரை

'மலங்கள் ஐந்தாம், தலங்கள் ஐந்தான், புலம் களைந் தான், நலங்கள் ஐந்தான்' எனப் பிரித்துப் பொருள் கொள்க. 'ஐந்த னானும்' என்பவற்றில் சாரியையும், உம்மையும் தொகுத்தல் பெற்றன. 'மலங்கள் ஐந்தாம் என' என்றதற்கு, 'மேல், அற்ற எனப்பட்ட மலங்கள் ஐந்து என்று சொல்லும்படி' என உரைத்து, 'ஐந்து மலங்களும் அற் றொழியுமாறு' என்பது அதனாற் போந்த பொருளாக உரைக்க. 'அருளி' என்றது, 'தந்து' என்னும் பொருளது. அதற்கும், 'அறிந்து' என்பதற்கும் செயப்படுபொருள் வருவித்து உரைக்கப்பட்டன. சுத்த தத்துவங்கள் சுத்த மாயையின்

விருத்தியே (விரிவே) ஆகலின், அவற்றைத் 'தலங்கள்' என்றார். 'சதாசிவம் ஆன' என்றது, 'சதா சிவன் முதலாக நின்ற' என்றவாறு. 'அறிவு' என்னும் பொருளதாகிய 'புலம்' என்பது இங்குக் கருத்தின்மேல் நின்றது. திரோதான சத்தி யோடு இயைந்து நின்று ஐந்தொழில் செய்வது பெத்தான்மாக்கள் பொருட்டேயாதலின், முத்தராகிய தம்மளவில் இறைவன் அக் கருத்தைத் தவிர்த்தான் என்றார். நலம் தருவனவற்றை, 'நலம்' என்றார். நலம் - வீடுபேறு. 'அதனைத் தரும் ஐந்து' எனவே, முத்தி பஞ் சாக்கரம் என்பது போந்தது. இஃது அற்ற மலங்களின் வாதனை வந்து மீண்டும் தாக்காதவாறு செய்யுமாகலின், உள்ளத்தில் சிவன் நீங்காது நிற்கும் நிலை அதனால் நிகழ்வதாகக் குறித்தார். 'மலங்கள் ஐந்து, தலங்கள் ஐந்து, நலங்கள் ஐந்து' என்பன இவை என்பதனைப் பின்னர் விளக்குவார். 'அப் பொது' என்றதில் அகரம் பண்டறி சுட்டு.
இதனால் சிவன் குருவாய் வந்து செய்த அருட்செயல்கள் ஒருவாறு வகுத்துக் கூறப்பட்டன.

அறிவைம் புலனுட னேநான் றதாகி
நெறியறி யாதுற்ற நீராழம் போல
அறிவறி வுள்ளே அழிந்தது போலக்
குறியறி விப்பான் குருபரனாமே. **#119**

(பாசத்தில் அகப்பட்ட உயிரினது அறிவு தானே அதனின்றும் விடுபடமாட்டாதோ எனின், மாட்டாது. ஏன் எனின்,) ஆணவமாகிய இயற்கைப் பாசத்தின் வழிவந்து பற்றியுள்ள மாயையின் காரியமாகிய பொறி, புலன் முதலிய செயற்கைப் பாசத்தில் உயிரினது அறிவு கட்டுண்டு, நீரின் ஆழத்தில் அமிழ்ந்து கரை ஏற அறியாத நிலைமைபோல, அவற்றினின்றும் விடுபடும் நெறியை அறியாது இடர்ப்படும். ஆகவே, அதற்கு அந்நெறியை அறிவிப்போன் நீராழத்தினின்றும் எடுத்துக் கரையேற்ற வல்லவன் போல்பவனாய், ஆசிரியர்க்குள் மேலானவனாகிய ஞானாசிரியனே.

விளக்கவுரை

நான்றது - கட்டுப்பட்டது. 'உற்ற நீராழம் போல' என்றாராயினும், 'நீராழத்தில் உற்றதுபோல' என்றல் கருத்தென்க. 'உற்ற நீராழம்போல நெறியறியாது' எனமாற்றுக. 'அறியாது' என்றது முற்று. இஃது எதிர்மறைத் தொழில் உவமம். 'நெறியாவது இது' என்பது அறிவித்தற்கு, 'அறிவு அறிவுள்ளே அழிந்ததுபோல' என்றார். 'உயிரினது அறிவு சிவத்தினது அறிவினுள்ளே பொருந்தித் தான் என்ப தொரு முதல் இல்லாது அழிந்தொழிந்தது போலும்படி' என்பது அதன் பொருள். இதுவே, 'சிவமாந்தன்மை' எனப்படுவது. இந் நிலையைப் பன்னாள்

பாவனையால் உணர்ந்து நிற்பின், பின்பு உண்மையிலேயே அஃது உண்டாவதாகும். இதனையே உப நிடதங்கள் 'சோகம் பாவனை' என்றும், சிவாகமங்கள் 'சிவோகம் பாவனை' என்றும் கூறும். சோகம் - அவன் நான் (ஆனேன்). சிவோகம் - சிவன் நான் (ஆனேன்). 'சோகம் எனப் பாவிக்கத் தோன்றுவன் வேறின்றிப் - பண்டைமறை களும்அதுநான் ஆனேன் என்று பாவிக்கச் சொல் லுவதிப் பாவகத்தைக் காணே' என்று சிவஞானசித்தி (சூ. *9.7*) நூல் இதனை எடுத்தோதுதல் காண்க. 'அகம்பிரம்மாஸ்மி, தத்துவமசி' முதலிய வேதாந்த மகாவாக்கிய உபதேசங்கள் சோகம் பாவனையையும், 'சிவத்துவமசி' என்னும் சித்தாந்த மகாவாக்கிய உபதேசமும், பஞ்சாக்கர உபதேசமும் சிவோகம் பாவனையையும் அடைவிப்பனவாம். இவை யெல்லாம் ஞானாசிரியனாலன்றி அடையலாகாமை அறிக.

இதனால், ஞானாசிரியனாலன்றி ஞானத்தை உணர்தல் கூடாமை, உவமையால் உணர்த்தப்பட்டது.

ஞானம் இவனொழிய நண்ணியிடும் நற்கல்அனல்
பானு ஒழியப் படின்.

என்றார் திருவருட்பயன் (பா.*50*).

ஆமேவு பால்நீர் பிரிக்கின்ற அன்னம்போல்
தாமே தனிமன்றில் தன்னந் தனிநித்தம்
தீமேவு பல்கர ணங்களுள் உற்றன
தாமேழ் பிறப்பெரி சார்ந்தவித் தாமே. **#120**

தீமை பொருந்திய பல கருவிகளுடன் ஒட்டிக் கிடக்கின்ற வினைகளைக் குருபரனது அருள் ஆவின்பாலில் கலந்து நின்ற நீரை அன்னப் பறவை பிரிப்பது போலப் பிரித்து அழித்தலால், பிறப்பிற்கு ஏதுவாகிய அவ்வினைகள் முழுதும் எரி சேர்ந்த வித்துப்போலக் கெட்டொழியும்.

விளக்கவுரை

'ஆமேவு பால்நீர்' என்றதனை, 'ஆவின் பால்மேவு நீர்' எனப் பொருட்கேற்ப மாற்றிக்கொள்க. 'தாம் மேவு, தீமை' என் பன, கடைக்குறைந்து நின்றன. தாம் மேவு நித்தம் - சத்திநிபாதர் சென்று காண்கின்ற நடனம். நித்தம் - நிருத்தம். குருவடிவமும் சிவ பெருமான் கொள்கின்ற சகளத்திருமேனிகளுள் ஒன்றாதல் பற்றி அதற்கு ஈடாக ஆடும் கோலத்தைக் குறித்தார். சத்திநிபாதர்க்கு அக் கோலமும் அப்பயனைத்தருதல் நோக்கி. ஆடும் கோலமும் சத்தி நிபாதர்க்குப் பாசத்தை அறுத்துப் பேரின்பத்தைத் தருதலை,

மாயை தனைஉதறி, வல்வினையைச் சுட்டு, மலம்
சாய அமுக்கி, அருள் தான்எடுத்து - நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான்அழுத்தல்

தானெந்தை யார்பரதந் தான். -உண்மை விளக்கம். *36*
என்பதனால் அறியலாம்.
'உற்றன' என்றது வினையாலணையும் பெயராய் வினை களைக் குறித்து நின்றது. அதன்பின் 'பிரிக்கும்; அதனால்' என்னும் சொல்லெச்சங்கள் வருவித்து, 'அன்னம்போல் நித்தம் கரணங்களுள் உற்றன பிரிக்கும், அதனால், பிறப்பு எரிசேர்ந்த வித்தாம்' என முடிக்க. 'பிரிக்கும்' என்பது சொல்லெச்சமாய் நின்றது. தாம் ஏழ் பிறப்பு - தாமாகிய எழு பிறப்பு. இங்கு, 'தாம்' என்றது 'உற்றன' என முன்னர்க் கூறிய வினைகளை. 'அவையே பிறவிக்கு வித்து' என்பார், 'தாம் ஏழ் பிறப்பு' என்றார். பிறப்பிற்குக் காரணத்தை, 'பிறப்பு' என்றது பான்மை வழக்கு.
'நுகர்வினை, கிடைவினை, வருவினை' என வினை மூன்றாகி நிற்கும். நுகர்வினை, இப்பிறப்பில் இன்பமாகவும், துன்பமாகவும் அனுப விக்கப்படுவன. இவற்றை, 'பிராரத்தம்' என்பர். கிடைவினை, இனி வரக்கடவனவாகிய எண்ணற்ற பிறவிகட்கு ஏதுவாய்த் திரண்டு கிடப் பவை; இவற்றை, 'சஞ்சிதம்' என்பர். வருவினை, நுகர்வினையை அநுபவிக்கும்பொழுதே செய்யப்பட்டு வருவன. இவற்றை, 'ஆகா மியம்' என்பர். இவற்றுள் கிடைவினையே எண்ணற்ற பிறவிகட்கு ஏதுவாய் நிற்றலால், குருவருள் அதனையே எரி சேர்ந்த வித்துப்போல அழிக்கும். அதனால் பிறவி அறும்; பிறவியற்ற நிலையே வீடு. எனவே, குருவருளால், பாசநீக்கமும், வீடுபேறும் உளவாதல் அறிக.
இதனால், குருபரன் அருள்செய்யுமாறும், அவ்வருளால் எய்தும் பயன்களும் கூறப்பட்டன. குருவருளால் கிடைவினை எரிசேர்ந்த வித்தாய்விடுதலை, 'எல்லைஇல் பிறவி நல்கும் இருவினை எரிசேர் வித்தின் ஒல்லையின் அகலும்' எனச் சிவப்பிரகாச (பா.*89*) நூலும் கூறுதல் காண்க.

வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிகச்
சுத்தத் துரியம் பிறந்து துடக்கற
ஒத்துப் புலனுயிர் ஒன்றாய் உடம்பொடு
செத்திட் டிருப்பர் சிவயோகி யார்களே. **#121**

குருவருளால் சிவயோகம் கைவரப் பெற் றவர்கள், பிறவிக்கு வித்தாகிய கிடைவினையை (சஞ்சித கருமத்தை) முற் கூறியபடி அழித்து, குரு அருளிச்செய்த உபதேச மொழியிலே உறைத்து நின்று, சுத்த துரிய நிலை மிகவும் தோன்றப் பெற்று, ஐம் புலன்களை நுகர்கின்ற உணர்வு அவற்றால் கட்டுண்ணாமலே அவற் றோடு பொருந்தி நிற்கச் சிவத்தோடு ஒன்றாய் உடம்பு உள்ளபொழுதே செத்தார்போல உலகத்தை நோக்காது புருவ நடுவிலே நிற்பார்கள்.

விளக்கவுரை

வியாக்கிரம் - முடிவிடம்; ஆறாவது ஆதாரம். உணர்வை, *'உயிர்'* என்றார். *'சிவத்தோடு'* என்பது ஆற்றலால் வந்தது. மேற்குறித்த சிவோகம் பாவனையின் முதிர்ச்சியே *'சிவ யோகம்'* எனப்படுவது. இது ஞானத்தில் யோகம். இது கைவரப்பெற்ற நிலையே சுத்த துரியம். இயமம் முதலிய எட்டுறுப்புக்களை உடைய யோகம் தவயோகம் என்க. சிவயோகத்தில் நிற்பவர்கள் காண்ப வற்றையெல்லாம் சிவமாகக் காண்பதன்றிப் பிறவாகக் கண்டு விருப்பு வெறுப்புக்கள் கொள்ளுதலும், இன்பும், துன்பும் உறுதலும் ஆகிய வேறுபாடுகளுள் யாதொன்றும் இல்லாதிருத்தலை, *'செத்திட் டிருப்பர்'* என்றார். இதனால், குருவருளைப் பெற்றாரது நிலைமை கூறப்பட்டது.

சிவயோக மாவது சித்தசித் தென்று
தவயோகத் துள்புக்குத் தன்னொளி தானாய்
அவயோகஞ் சாரா தவன்பதி போக
நவயோகம் நந்தி நமக்களித் தானே. **#122**

மேற்குறிக்கப்பட்ட சிவயோகமாவது, 'சித்தாகிய (அறிவுடைப் பொருளாகிய) ஆன்மாவும், தானே அறியும் தன்மை இன்மையால் தானே அறிந்தும், அறிவித்தும் நிற்கின்ற சிவத்தை நோக்க அசித்தாம் (அறிவில்லாத பொருளேயாம்) என்றுணர்ந்து, ஏகமாந் தன்மையுள் மிகச்சென்று, சிவனது அருளொளியே தானாகப் பெற்று, பிற பொருள்களைச் சார்தலாகிய பயனில்லாத சேர்க்கையிற் செல்லாதபடி, மிகுகின்ற அன்பினால் விளைகின்ற சிவபோகத் தினைத் தருகின்ற புதியதோர் யோகம். அதனையே எங்களுக்கு நந்திதேவர் அளித்தருளினார்.

விளக்கவுரை

சிவனை நோக்க உயிர் அசித்தாதலை, *'அவனுக்கு இவனும் அசித்தாமே'*(சிவஞானசித்தி. சூ. *11- 11 1)* என்பதனான் அறிக. *'தவப்புக்கு'* என இயையும். தவ, உரிச்சொல். *'யோகம்'* நான்கில் முன்னது ஒழிய ஏனை மூன்றும் *'ஒன்றாதல்'* என்னும் காரணக் குறியேயாய் நின்றது. உலகப் பொருள்களைச் சார்தலை, *'அவயோகம்'* என்றார், அது முன்னே பல காலும் பல துன்பங்கட்கு இடையே நுகர்ந்து நுகர்ந்து அலுத்து விட்ட சிற்றின்பத்தையே மீளத் தருதலின். *'சிவயோக மேயோகம்; அல்லாத யோகம் - அவயோகம் என்றே அறி'* என்றது திருக்களிற்றுப்படி *(பா.74)* யும். அச்சிற்றின்பம் போல் துன்பத்தொடு விரவுதலும், வரையறைப்பட்டுக் கழிதலும் இன்றி எல்லையில்லாது புதிதுபுதிதாய்த் தோன்றி என்றும் இன்புறுத்துகின்ற சிவபோகம் முன்பு

ஒருகாலும் கண்டறியாத தாகலின், அப்பயனை விளைவிக்கின்ற சிவயோகத்தை, 'நவயோகம்' என்றார். 'சாராத அன்பு' என்றதற்குச், 'சாராமைக்கு ஏதுவாகிய அன்பு' என உரைக்க. அதிபோகம் - ஒப்புயர்வற்ற பேரின்ப நிலை. இதனால், 'மேற்குறித்த சிவயோகமாவது இது' என்பதும், 'அஃது இன்ன பயனைத் தரும்' என்பதும் கூறப்பட்டன. சிவயோகம் துரிய நிலை யாதலின், அதனால் விளையும் சிவபோகம் துரியாதீத நிலை என்க.

அளித்தான் உலகெங்குந் தானான உண்மை
அளித்தான் அமரர் அறியா உலகம்
அளித்தான் திருமன்றுள் ஆடுந் திருத்தாள்
அளித்தான்பே ரின்பத் தருள்வெளி தானே. **#123**

மேற்கூறிய நவயோகத்தை எங்கட்கு அளித் தருளிய நந்தி தேவராகிய சிவபெருமான், அப்பொழுதே உலக முழுதும் தான் ஒழிவற நிறைந்து நிற்கும் மெய்ம்மையையும், மாயோன் முதலிய புத்தேளிராலும் அறியப்படாத தனது சிவலோக நிலை யையும், திருமன்றுள் பேரின்ப நடனம் செய்தருளும் தனது எடுத்த திருவடியாகிய பற்றுக்கோட்டினையும், அப்பற்றுக் கோட்டினால் கிடைக்கின்ற அருளாகிய பேரின்ப வெளியையும் அளித்தருளினான்.

விளக்கவுரை

என்றது, 'அச்சிவயோகத்தானே பராயோக அநுபவம், பதமுத்தி அநுபவம், சீவன்முத்தி அநுபவம், பரமுத்தி அநுபவம் ஆகிய அனைத்து அநுபவமும் உளவாயின' என்றவாறு. பராயோக அநுபவமாவது, அறிவு இச்சை செயல்கள் புறத்துப் பரவுங் கால் காண் பன பலவும் சிவமேயாய்த் தோன்றுதல். பத முத்தி அநுபவமாவது, அவ்விடத்து உளவாகும் சிற்றின்ப நுகர்ச்சிகளும் சிவபோமாகவே விளைவது. சீவன் முத்தி அநுபவமாவது, சிந்தனைக்கு எட்டாத சிவனைச் சிந்தனைக்கு எட்டுபவனாகக் கண்டு வழிபட்டு இன்புறும் அநுபவம். பரமுத்தி அநுபவமாவது, அறிவு இச்சை செயல் கட்குப் பிறிதொன்றும் புலனாகாது சிவமே புலனாக, அதன்கண் அழுந்தித் தன்னை இழந்து நிற்பது. இவையெல்லாம் இவ்வுடம்பு உள்ள பொழுதே பெறப்படுவனவே என்க. இவற்றைப் பெற்றோரே, 'அணைந்தோர்' எனப்படுவர். அணைந்தோர் - சிவனது திருவடி நிழலை அணைந்தவர். இவர், 'சீவன் முத்தர்' என வடமொழியிற் சொல்லப்படுவார்.

'பெற்றசிற் றின்பமே பேரின்பமாய் அங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற' -திருவுந்தியார் - *332*

எனவும்,

'உடம்புடைய யோகிகள்தாம் உற்றசிற் றின்பம்

அடங்கத்தம் பேரின்பத் தாக்கில்' -திருக்களிற்றுப்படியார். *76*
எனவும்,
'காணுங் கரணங்க ளெல்லாம்பே ரின்பமெனக்
காணும் அடியார்' -தி.*8* திருவாசகம். பண்டாய. *6*
எனவும் வருவனவற்றால் இவையெல்லாம் இவ்வுடம்புள்ளபொழுது தானே பெறத்தக்கனவாதல் அறிக.

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்.

என்ற திருக்குறள் *-359* இச்சிவயோக, சிவபோக நிலைகளையே கூறுவது என்பதை,

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் என்றமையால்
சார்புணர்தல்தானே தியானமுமாம்; - சார்பு
கெடஒழுகின் நல்ல சமாதியுமாம்; கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று.

என்று கூறும் திருக்களிற்றுப்படி நூல். இதனால், மேல் தொகுத்துக் கூறப்பட்ட பயனை வகுத்துக் கூறியவாறாதல் அறிக.

வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே. **#124**

குருவருள் பெற்ற பின்னர் உயிரினது வியாபகம் சிவனது வியாபகத்துள் அடங்கி நிற்கும் முறைமையையும், உயிர் அவனிடத்துச் செய்யும் அன்பாகிய நெகிழ்ச்சி அவனது பேரருளாகிய நெகிழ்ச்சியினுள் அடங்கிநிற்கும் முறைமையையும், உயிரினது அறி வாகிய சிற்றொளி, சிவனது அறிவாகிய பேரொளியில் அடங்கி நிற்கும் முறைமையையும் அநுபவமாக உணர்கின்றவரே சிவனைப் பெற்றவராவர்.

விளக்கவுரை

'அடயோகம் முதலியவற்றால் அணிமாதி ஆற் றல்கள் சித்திக்கப் பெற்றோர் 'சித்தர்' எனப்படினும், அவர் சிவஞானம் பெற்று பிறவியை அறுத்துக்கொள்ளாமையின் அவசித்தரே' என்றற்கு, குருவருளால் சிவஞானம் பெற்றுச் சிவப்பேறு சித்திக்கப் பெற்றோரை, 'சிவசித்தர்' என்றார். நாயனாரும் அத்தகைய சிவசித்தரேயாதல் அறிந்துகொள்க. இதனால், சிவபோக அநுபவத்தில் ஆன்மா வானது தன்னை இழந்து சிவமாய் நிற்கும் அநுபவம் கூறப்பட்டது.

சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்
சத்தமுஞ் சத்த முடிவுந்தம் முள்கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர

முத்தர்தம் முத்தி முதல்முப்பத் தாறே. **#125**

சிவனைப் பெற்றவர் எனப்படுவோர், சிவ லோகத்தை இவ்வுலகிலே கண்டவரும், வாக்குகளையும், அவற் றிற்கு முதலாகிய குடிலையையும் தம்முள் அடங்கக் கண்டு நீங்கின வர்களும், அழிவில்லாதவர்களும், மலமாசு அகன்றவரும், மனக் கவலை மாற்றினவரும், எல்லையில் இன்பத்தில் நிற்பவரும் ஆகியவரே. அவர்கள் விடுதலை எய்தியது கருவிகள் முப்பத் தாறினின்றுமாம்.

விளக்கவுரை

கருவிகள் முப்பத்தாறாவன சிவ தத்துவம் ஐந்தும், வித்தியா தத்துவம் ஏழும், ஆன்ம தத்துவம் இருபத்து நான்குமாம்.

அவற்றுள் சிவ தத்துவம் ஐந்தாவன, 'சிவம், சத்தி, சாதாக் கியம், ஈசுரம், சுத்த வித்தை' என்பன. வித்தியா தத்துவம் ஏழாவன, 'காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை' என்பன. ஆன்ம தத்துவம் இருபத்து நான்காவன, 'சித்தம், புத்தி, அகங்காரம், மனம்' என்னும் அந்தக் கரணங்கள் நான்கும், 'செவி, தோல், கண், நாக்கு, மூக்கு' என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும், 'வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம்' என்னும் கன்மேந்திரியங்கள் ஐந்தும், 'சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம்' என்னும் தன்மாத்திரைகள் ஐந்தும், 'ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி' என்னும் மாபூதங்கள் ஐந்துமாம். இவை இங்கு இவ்வாறு தோற்ற முறை பற்றிக் கூறப்பட்டன. இவற்றை எல்லாம் நாயனார் பின்னர் விளக்குவார்.

கருவிகள் முப்பத்தாறனுள்ளும் ஆன்மா கட்டுண்டு தன்னியல்பை அறியாது அவையே தானாக மயங்கி நிற்கும். அந்நிலை முழுவதும் கழிதலே முத்தி அல்லது விடுதலையாகலின், 'தம் முத்தி முப்பத்தாறே' என்றார். முப்பத்தாறே என்றதன்பின் நீக்கப் பொருளில் வந்த ஐந்தாம் உருபும், முற்றும்மையும் தொகுத்தலாயின. மேற்காட்டிய முப்பத்தாறனுள் சிவ தத்துவம் ஐந்தும் சுத்த மாயையின் காரியம் எனவும், வித்தியா தத்துவம் ஏழும் அசுத்த மாயையின் காரியம் எனவும், ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் பிரகிருதி மாயையின் காரியம் எனவும் உணர்க. இதனால் தத்துவங்களே மாயாமலமாதல் அறியப்படும்.

தத்துவங்கள் முப்பத்தாறின் கூறாகிய தாத்துவிகங்கள் அறுபதனுள் நால்வகை வாக்குகள் உயிர்க்குப் பரம பந்தம் (பெருங் கட்டு) ஆதலின், அவற்றினின்றும் நீங்குதலை முன்னர்க் கூறினார்.

இதனால், குருவருளால் பெறும், 'பாசநீக்கம், (சிவப்பேறு)' என்னும் பயன்கள் இரண்டனுள் பாச நீக்கத்தினது இயல்பு வகுத் துரைக்கப்பட்டது.

சிவனைப் பெற்றவர் நித்தர், நிமலர், நிராமயர், நீள் பரமுத்தர் ஆதலை, 'நமனை அஞ்சோம், நரகத்தில் இடர்ப்படோம், நடலை இல்லோம், ஏமாப்போம், பிணியறியோம், பணிவோ மல்லோம், இன்பமே எந்நாளும், - துன்பமில்லை' *(தி.6 ப.98 பா.1)* என்பன முதலிய அருட்டிரு மொழிகளான் அறிக.

முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியா
ஒப்பிலா ஆனந்தத் துள்ளொளி புக்குச்
செப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்
தப்பரி சாக அமர்ந்திருந் தாரே. **#126**

சிவசித்தர்கள் முப்பத்தாறு தத்துவங்களும் முத்தி நிலைக்கு ஏணிப் படிகளாக நிற்க அவற்றில் ஒவ்வொன்றாக ஏறிக் கடந்து, இணையற்ற இன்பவடிவாம் உள்ளொளியாகிய அருளே உருவாய் நின்று, அவ்வருட்கு முதலாகிய சிவத்தையும் கண்டு, பின் அசைவின்றி அச் சிவமேயாய் இன்புற்றிருக்கின்றார்கள்.

விளக்கவுரை

எனவே, 'தத்துவங்களை ஒவ்வொன்றாகச் சுட்டியறிந்து அவற்றினின்றும் நீங்குதல் வேண்டும்' என்பதும், 'தத்துவக் கூட்டமே தனக்கு நிலைக்களமாக நின்ற ஆன்மாவிற்கு அவற்றினின்றும் நீங்கிய பின்னர்ச் சிவனது அருளே நிலைக்களமாம்' என்பதும், 'அந் நிலைக்களத்து நீங்காது நிற்பின் அவ் வருட்கு முதலாகிய சிவம் வெளிப்படும்' என்பதும், 'அது வெளிப்பட்டவழி அதனிடத்து அசைவற நிற்கவே அதனால் பெருகி விளைகின்ற இன்பத்தில் மதுவுண்ட வண்டுபோல் ஆன்மா அழுந்தித் தன்னையும் மறந்து நிற்கும்' என்பதும் கூறியவாறாயிற்று. ஆகவே, இதனால், பாசத்தின் நீங்குமாறும், பின்னர்ச் சிவத்தைப் பெறுமாறும், பெற்றவழி இன்புற்றிருக்குமாறும் கூறப்பட்டனவாம். இதனுள் 'சிவம் கண்டு' என்றது சிவதரிசனம் செய்தலையும், 'தான் தெளிந்து' என்றது அதில் அதீதப்படுதலையும் கூறியனவாம்.

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

என்னும் திருக்குற*(பா.341)*ளும் தத்துவங்களை ஒவ்வொன்றாகச் சுட்டியறிந்து நீங்குதலின் மேல் நோக்குடைத்தாதல் அறிந்துகொள்க. சேக்கிழாரும், கண்ணப்பர் திருக்காளத்தி மலையின் உச்சியில் இருக்கும் இறை வனைக்காண வேண்டி அம்மலையின் படிகளைக் கடந்தமைக்கு,

'பேணுதத் துவங்கள் என்னும் பெருகுசோ பானம்ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போல'
-தி.12 கண்ணப்பர் புராணம் - 103

என இத் தத்துவ முத்தரது செயலையே உவமையாகக் கூறுமாற்றால் இதனை இனிது விளக்கினமை காண்க.

இருந்தார் சிவமாகி எங்குந் தாமாகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத் தியல்பைக் குறித்தங்
கிருந்தார் இழவுவந் தெய்திய சோம்பே. **#127**

சிவத்தைக் கண்டு அசைவற நின்று அப்பரிசாக அமர்ந்துநின்ற சிவசித்தர்கள் தம்மை அணுவாகச் செய்த மலம் நீங்கப் பெற்றமையால், அங்கு இங்கு என்னாது எங்குமாய், இறைநிறைவில் அழுந்தி நிற்பர். அந்நிலையில் அச்சிவன் உயிர்கள் பொருட்டுச் செய்கின்ற செயல்களையும், அச் செயல்கட்கு வாயிலாக அவன் தோற்றுவித்து நிறுத்தியுள்ள காலத்தின் தொழிற்பாட்டினையும் அறியும் ஆற்றலுடையவராய்த் தம்மை இழந்து நிற்றல் வந்தமையால் விளைந்த செயலறுதியிலே இருப்பர்.

விளக்கவுரை

'நோக்கி, குறித்து' என்றவற்றிற்கு இவ்வா றுரையாவிடில், 'இருந்தார் இழவுவந் தெய்திய சோம்பே' என்பதற்கு ஒவ்வாமை அறிக. தம்மை இழந்து செயலற்றவரது நிலை தாமத குண மிகுதியால் விளையும் சோம்பலில் நிற்பவர் நிலையோடு ஒத்தல்பற்றி 'இருந்தார் ... எய்திய சோம்பே' என்றார். இது, பழிப்பதுபோலப் புகழ்ந்தது. பின் வருவதும் அது. சோம்பு, முதனிலைத் தொழிற்பெயர்; இதன்கண் ஏழாவது இறுதிக்கண் தொக்கது. இதனால், 'சிவத்தைப் பெற்றவர் எல்லா அறிவாற்றலும் உடையராயினும், சிவத்தை அறிந்து அழுந்துதலல்லது பிறிதொன்றும் செய்யார்' என்பது கூறப்பட்டது.

'எல்லாம் அறியும் அறிவுறினும் ஈங்கிவர்ஒன்
றல்லா தறியார் அற'

எனத் திருவருட் பயனிலும் ஓதியவாறு அறிக.

சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பதும் சுத்த வெளியிலே
சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடம்
சோம்பர்கண் டார்அச் சுருதிக்கண் தூக்கமே. **#128**

செயலறுதியில் நிற்கும் சிவசித்தர்கள் இருப்பதும் கிடப்பதும் மாசொடு படாததாய பரவெளியிலேயாம். ஆகவே, அவர்தம் உணர்வு நிற்கும் இடம், வேதம் எட்டமாட்டாது நின்றுவிட்ட இடமாம். அதனால், அவர்களும் அவ்வேதத்தை நோக்குதற்கண் மறதியே பெற்றார்.

விளக்கவுரை

உலகத்தார் அறியும் பொருள்களில் 'வெளி' எனப்படும் வானமே எல்லை இல்லாததாக அறியப்படுவது. அதனால், உண்மையில் எல்லை இல்லாத சிவ பரம்பொருளை, 'வெளி' என்று உருவகித்து நூல்கள் கூறும். அவ்வாறாயினும், 'உலக வெளியின் வேறாய் மேம்பட்டது' என்பது உணர்த்துதற் பொருட்டு, வாளா, 'வெளி' என்னாது, 'பரவெளி' என்று கூறும். இன்னும் அப் பரம் பொருள், ஞானமே வடிவாய் நிற்றலின், 'சிதாகாசம், சிற்பர வியோமம்' என்றெல்லாம் சொல்லப்படும். சிவ பரம்பொருளை, 'சிவம், சத்தி' என வேற்றுமை கருதாதவிடத்து சிவமே பரவெளியாம். அவ்வாறு வேற்றுமை கருதுமிடத்து, சத்தி பரவெளியாக, சிவம் அதனைத் திருமேனியாகவாயினும், இடமாகவாயினும் பெற்று நிற்கும் பொருளாகச் சொல்லப்படும்.

'ஆகாய வண்ணம் உடையாய் போற்றி' *(தி.6 ப.57 பா.3)* என்றாற் போல்வன வேற்றுமை கருதிக் கூறிய திருமொழிகளாம். இங்கு வேற்றுமை கருதாது கூறியது என்க.

'இருப்பது' என்றது தம்மை இழவாது நின்ற துரிய நிலை யையும், 'கிடப்பது' என்றது, தம்மை இழந்து நின்ற அதீத நிலை யையுமாம். இவ்விடம், நாதமாகிய சொல்லைக் கடந்து நின்ற தாகலின், 'சுருதி முடிந்திடம்' என்றார். 'முடிந்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத் தலாயிற்று. 'முடிந்த' என்றது, 'இளைத்து நின்ற' என்னும் பொருளது.

'... ... ... நால்வேதத் தப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய்; இதுஉன் தன்மை' -தி.*9* ப.*5* பா.*4*

எனத் திருமுறையுள்ளும்,

'சொல்லும் இடமன்று; சொல்லப் புகும்இடம்
எல்லை சிவனுக்கென் றுந்தீபற
என்றால்நாம் என்செய்கோம் உந்தீபற'
-திருவுந்தியார் *29*

எனச் சாத்திரத்துள்ளும் கூறப்பட்டமை காண்க.

இத்தகையோர்க்குச் சொல்வடிவாய வேதம் முதலிய நூல்களான் ஆகக்கடவது இன்மையின், 'சுருதிக்கண் தூக்கமே கண்டார்' என்றார். தூக்கம் - மறதி; என்றது விரும்பாமையை.

'கற்றாரை யான்வேண்டேன்; கற்பனவும் இனி அமையும்'
(தி.8 திருவாசகம், திருப்புலம்பல் *-3)* என்றதூஉம் இந்நிலையில் நின்றமையாலாம். இதனால், அதீத நிலையினது இயல்பு கூறப்பட்டது.

தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ போகமும் தம்உள்ளே

தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே. **#129**
சிவசித்தர் வேதம் முதலாகிய கலைகளை உணர் தலையும் மறந்து நின்றமையால், சிவலோகம் முதலிய பல உலகங் களையும், சிவமுதற் பொருளோடே தாம் என்றும் ஒன்றாய் நிற்கும் பெற்றியையும், அதனானே சிவானந்தம் தமக்கு வேறாய் வந்து விளை யாமல், தம் உள்ளே இருந்து ஊற்றெடுத்தலையும் தம் அறிவினுள்ளே விளங்கக்கண்டு வியந்தார்கள். ஆதலின், அவரது பெருமை சொலற் கரிதாம்.

விளக்கவுரை

'தூங்குதல்' என்றது, தம் முனைப்பால் சிவமல்லாத பிற பொருளாகிய தம்மையும், தம்மைச் சார்ந்துள்ள உடம்பு, உலகம் என்ப வற்றையும் அறிதலை ஒழிந்து நிற்றலையாம். இதனையே 'அறி துயில்' எனவும், 'யோக நித்திரை' எனவும், 'தூங்காமல் தூங்குதல்' எனவும் கூறுவர். தம்மையும், தம்மைச் சார்ந்த பாசங்களையும் மறந்திருத்தலால் தூங்குதலும், சிவத்தை உணர்ந்து நிற்றலால் விழித்திருத்தலும் ஆகின்ற இரு நிலைமையும் ஒருங்கு நிகழ்தலை இவ்வாறு உணர்த்துவர் என்க.

இதனால், அதீதத்தில் நின்றாரது பெருமை கூறப்பட்டது.

எவ்வாறு காண்பான் அறிவு தனக்கெல்லை
அவ்வா றருள்செய்வன் ஆதி யரன்தானும்
ஒவ்வாத மன்றுள் உமைகாண ஆடிடுஞ்
செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கம். **#130**

அனாதியாய் நிற்கின்ற சிவன் ஆதியாய் நின்று ஆன்மாக்களது அறிவின் எல்லையை எவ் வெவ்வளவினவாகக் காண்கின்றானோ அவ் வவ்வளவிற்கேற்பவே அவைகட்குத் தானும் தனது திருவருளைத் தருவன், அவன், நிகரில்லாத அருள்வெளியில். தனது சத்தி துணையாய் நிற்கப் பல்வேறான பொதுச் செயல்களைப் புரிகின்ற, நடுவுநிலையாகிய வானத்தில் உள்ள ஞான சூரியனும், மாணிக்க மணியும் ஆகலின்.

விளக்கவுரை

ஆன்மாக்களினது அறிவு, மேல், 'களிம்பு' *(தி.10 பா.112)* எனக் குறிக்கப்பட்ட ஆணவ மல சத்தியினது வன்மை மென்மைகட்கு ஏற்பச் சிறிதாயும், பெரிதாயும் நிற்கும். அதனால் அவ்வறிவு கொண்டு அவற்றால் விரும்பப்படுகின்ற பொருள்களும் இழிந்தனவும், உயர்ந் தனவுமாய் இருக்கும். வேண்டுவனவற்றை யன்றி வேண்டாதனவற்றைத் தரின் பயன்படாது ஒழியுமாதலின், வேண்டுவார் வேண்டுவனவற்றையே அவன் தருகின்றான் என்க.

'வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்' -*தி.6 ப.23 பா.1*
என்று அருளிச் செய்ததும் இதனையேயாம். பின் இரண் டடிகளில் வெளிப்படைப் பொருள் இனிது விளங்கிக் கிடத்தலின், உள்ளுறைப் பொருளே உரைக்கப்பட்டது. 'பொதுச்செயல்' என்றது, 'தன்பொருட்டன்றி ஆன்மாக்கள் பொருட்டுச் செய்யும் செயல்' என்றபடி. 'அச்செயல்களை வேண்டு வார் வேண்டுமாறே செய்தலின், அஃது அவனுக்குக் கோட்டம் ஆகாது' என்றற்கு நடுவு நிலைமையைக் குறித்தார். அதனால், 'பெத்தான் மாக்களுக்கு உலகியலையும், முத்தான்மாக்களுக்கு வீட்டினையும் தருகின்றான்' என்பது போந்தது. படைப்புப் பல படியாய்க் காணப் படுதற்கும் இதுவே காரணம் என்பது உணர்க. 'செவ்வானில் செய்ய செழுஞ்சுடர்' எனவந்த செம்மை இரண்டனுள் முன்னது நடுவு நிலைமையையும், பின்னது திரிபின்மையையும் குறிக்கும் குறிப்பு மொழியாய் நின்றன. திரிபின்மை மெய்யறிவின் இயல்பாகலின், அதுவே அதற்குப் பொருளாய் உள்ளது. செழுஞ்சுடர் சூரியன், மாணிக்கம், ஒப்புயர்வற்ற தன்மையைக் குறிக்க வந்த உவமை. இறுதிக்கண் 'ஆகலான்' என்பது எஞ்சி நின்றது. இதனால், 'சொல்லொணாப் பெருமையை உடைய அதீத வாழ்வினைச் சிவன் பலர்க்கும் அளியாது, ஒரு சிலர்க்கே அளித்தல் என்னை' என்னும் ஐயம் அறுக்கப்பட்டது. இதனுள் உள்ளுறை உவமமாய் நின்ற பின்னிரண்டடிகளால் திருக்கோயிலுள் இருக்கும் திருமேனியது சிறப்பிற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது என்க.

மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றினில் ஆடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே **#131**

மாணிக்க மணிக்குள்தானே மரகத ஒளி வீசி னாற்போலவும், மாணிக்க மாளிகைக்குள்ளே மரகதநிலை காணப் பட்டாற்போலவும், மாற்றுயர்ந்த பொன்னாலாகிய அம்பலத்துள் நின்று அவன் ஆடுகின்ற திருக்கூத்தினை விரும்பி வணங்கினோர் பெற்ற பேற்றினை இவ்வளவினது என்று சொல்லுதல் கூடுமோ!

விளக்கவுரை

மேல், 'அரன்' எனவும், 'உமை' எனவும் குறிக்கப் பட்ட அப்பன், அம்மை இவரது நிறம் முறையே செம்மையும், பசுமையும் ஆகலானும், அம்மையது வடிவம் அப்பனது வடிவிற் பொருந்தி நிற்றலானும் 'மாணிக்கத்துள்ளே ... ... மாடமாய்' என்றார். ஆணிப் பொன் பிற பொன், எல்லாவற்றின் மாற்றினையும் அளத்தற்கு உரையாணியாய் நிற்கும் பொன். 'மன்றினில் நின்று' என ஒரு சொல் வருவிக்க. 'என்ன'

என்ற வினா, 'எத்துணையாவன' என்னும் பொருட்டாய், அளவின்மை குறித்து நின்றது.

பெற்றார் உலகிற் பிரியாப் பெருநெறி
பெற்றார் உலகிற் பிறவாப் பெரும்பயன்
பெற்றார்அம் மன்றிற் பிரியாப் பெரும்பேறு
பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே. **#132**

மேற்கூறிய ஆணிப்பொன் மன்றினில் ஆடுந் திருக்கூத்தினை அம்மன்றினின்றும் நீங்காது பேணித் தொழுகின்ற பேற்றினைப் பெற்றவர், இவ்வுடம்பு நீங்கியபின் சிவனோடு ஒன்றாகின்ற பெருநிலையையும், அதனால் விளையும் பிறவாமை யாகிய பெரும்பயனையும், அப்பயன் வடிவான திருக்கோயில் வழிபாட்டினை ஒழியாது செய்யும் பெரிய பேற்றினையும், அப்பேற்றினால் உலகத்தாரொடு பேசாது நிற்கும் பெருமையையும் பெற்றவராவர்.

விளக்கவுரை

'ஆதலின் அவர்க்கு மீளப் பிறவிக்கு வித்தாகிய வினை உண்டாதல் இல்லை' என்பதாம். 'பேசுதல்' என்பது, 'அளவ ளாவுதல் - தொடர்புறுதல்' என்றவாறு. 'அஃது இல்லை' எனவே, உலகத்தில் நின்றே அதனின் நீங்கிநிற்றல் பெறப்பட்டது.

பெருமை சிறுமை அறிந்தெம் பிரான்போல்
அருமை எளிமை அறிந்தறி வாரார்
ஒருமையுள் ஆமைபோல் உள்ளைந் தடக்கி
இருமையுங் கெட்டிருந் தார்புரை அற்றே. **#133**

பிறரது பெருமை சிறுமைகளை அறிந்து அவற்றிற்கு ஏற்ப அரியனாயும், எளியனாயும் நிற்கின்ற முறைமையை எங்கள் சிவபெருமான் அறிவதுபோல அறிவார் பிறர் யார்? ஒருவரும் இல்லை. அதனால், மேற்குறித்த அவன் அன்பர் இவ்வொரு பிறப்பிலே, ஆமை தனது ஐந்துறுப்புக்களையும் தனக்குக் காவலாய் உள்ள ஓட்டிற்குள் அடக்குதல்போல, புலன் அவா ஐந்தனையும் தமக்கு அரணாய் உள்ள அவனது திருவருளினுள் அடக்கி, இம்மை யின்பம், மறுமையின்பம் இரண்டையும் உவர்த்துக் குற்றம் அற்று இருக்கின்றனர்.

விளக்கவுரை

'பெருமை, சிறுமை' என்பவை உலகியல் பற்றிக் கூறியவை. உலகியலில் பெரியராய்த் தன்னை நினையாதவர்க்கு இறைவன் அரியனாயும், உலகியலில் சிறியராயினும் தன்னை நினைவார்க்கு எளியனாயும் நிற்றலை,
'கனவிலும் தேவர்க் கரியாய் போற்றி

நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி'
-தி.8 போற்றித் திருவகவல். *143. 44*
என்னும் திருவாசகத்தான் அறிக. 'அவனது இத்தன்மையை அறிந்து, அன்பர்கள் முனைப்பின்றி அவன்பால் அடங்கி நிற்பர்' என்றற்கு இவற்றை எடுத்தோதினார். 'கண்டறிவார், உண்டறிவார்' என்பன போல 'அறிந்தறிவார்' என்பது ஒருசொல்லாய் நின்றது.
ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. -குறள் *126*
எனத் திருவள்ளுவர் புலனடக்கத்திற்கு இவ்வுவமையைக் கூறினார்.
புலனடக்கித் தம்முதற்கண் புக்குறுவர் போதார்
தலன்நடக்கும் ஆமை தக.
எனத் திருவருட்பயனிலும் (பா.*94*) கூறப்பட்டமை காண்க.
'கேட்டிருந்தார்' என்பது பாடம் அன்று.
இம் மூன்று திருமந்திரத்தானும், 'அதீத நிலையில் நிற் போர்க்கு அறிவு இச்சை செயல்கள் உலகிடைச் செல்லுமாயின், அவை திருக்கோயில் வழிபாடு முதலிய அன்பு நெறியிற் செல்லுதலல்லது பிறிதாற்றிற் செல்லா' என்பது கூறப்பட்டது. இந்நிலை ஞானசம்பந்தர் முதலிய நால்வரது செயல்களால் இனிது விளங்கும்.

புரைஅற்ற பாலினுள் நெய்கலந் தாற்போல்
திரைஅற்ற சிந்தைநல் ஆரியன் செப்பும்
உரையற் றுணர்வோர் உடம்பிங் கொழிந்தாற்
கரையற்ற சோதி கலந்தசத் தாமே. **#134**

குற்றம் அற்ற பாலில் உள்ள நெய் அப் பாலினுள் வேற்றுமையின்றிக் கலந்து நிற்றல்போல, ஞானாசிரியன் அறிவுறுத்த சொல்லை அலைவற்ற உள்ளத்தில் வேற்றுமை அற்றுக் கலந்து நிற்குமாறு உணர்ந்து அப் பொருளில் அழுந்திநிற்பவர், தம் உடம்பு இங்கு வீழ்ந்த பின்னர் அவரது ஆன்மாத் தன் இயற்கை வியாபகத்தைப் பெற்று, என்றும் வேற்றுமையின்றிக் கலந்து நிற்கின்ற மெய்ப்பொருளேயாய் விடும்.

விளக்கவுரை

'குற்றம்' என்றது வேற்றுப் பொருளாகிய பிரையை. பாலில் பிரை சேருமாயின், அஃது அதனைத் திரித்து அதன்கண் உள்ள நெய்யை வேறாகச் செய்யுமாதலின் அதனைப் 'புரை' என்றார். உரை அறுதலாவது, சொல்லாய் வேறு நில்லாது பொருளாய் உணர்வோடு ஒன்றுதல்; என்றது அநுபூதி நிலையை. எனவே, 'ஆசிரியனது அருண்மொழியை, கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னும் அளவிற் கொண்டொழியாது, நிட்டை நிலையில் அநுபவமாகக் கைவரப்

பெற்றவர், உடம்பு நீங்கியபின் சிவனோடு இரண்டறக் கலத்தலாகிய சாயுச்ச பரமுத்தியை எய்துவர்' என்றவாறாம். 'கரையற்ற சோதியாய்' என்றார், பின்வரும் பொருட்குத் தோற்றுவாயாதற்கு. ஆக்கச்சொல் தொகுத்தல். சத்து - மெய்ப்பொருள்; சிவம். இக்கலப்பு முன்பே உள்ளதன்றிப் புதுவதன்றாகலின், 'அஃது இயற்கையாய் விடும்' என்றற்கு, 'கலந்த சத்தாமே' என்றார். 'அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே' *(சிவஞானபோதம் சூ.8)* என்றார் மெய்கண்டதேவரும்.

இதனால், இவ்வுலகில் அதீதத்தைப் பெற்றோர் பின்னர் எய்தும் பயன் கூறப்பட்டது.

'காயம்ஒழிந் தால்சுத்த னாகி ... ...
... ...
மாயமெலாம் நீங்கிஅரன் மலரடிக்கீழ் இருப்பன்
மாறாத சிவானுபவம் மருவிக் கொண்டே' 2

எனச் சிவஞான சித்தியினும் *(சூ. 11.1)* இவ்வாறே கூறப்பட்டது.

சத்த முதல்ஐந்துந் தன்வழித் தான்சாரில்
சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ
சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரும்
அத்தம் இதுகுறித் தாண்டுகொள் அப்பிலே. **#135**

சடமாகிய சத்தம் முதலிய தன்மாத்திரைகள் முதலாக உள்ள கருவிகள் யாவும், சடமாகிய தத்தம் காரணத்துள்ளே சென்று சேர்ந்துவிடுமாயின் அதன்பின் சித்தாகிய ஆன்மாவிற்குச் சித்தாகிய சிவத்தையன்றிச் சாருமிடம் வேறுண்டோ? இல்லை. அதனால் அந்நிலையில் அப் பயனைத் தரக் கருதியே குருவாய் வந்து ஆண்டுகொண்ட திருவருளாகிய வெள்ளத்தின் செயலால், தூய பரவெளியில் விளங்கும் சிவமென்னும் ஞாயிறாகிய பேரொளியிடத்து ஆன்மா என்னும் விண்மீனாகிய சிற்றொளி சென்று சேர்ந்து ஒன்றாய்விடும்.

விளக்கவுரை

பின்னர் 'சித்திற்குச் சித்து இடம்' என்பது வருதலால், முன்னர், 'சடத்திற்குச் சடம் இடம்' என்பது பெறப்பட்டது. 'ஒரு பொருள் தன்னினப் பொருளொடு சேர்தலன்றி, வேற்றினப் பொருளொடு சேராதாயினும், சித்தாகிய ஆன்மா, சடமாகிய தத்துவங் களோடு சேர்ந்திருந்தமை, மதுவுண்டவனுக்கு அம்மயக்கத்தால் உள தாகும் தலைதடுமாற்றம் போல, ஆணவ மலமாகிய குற்றச் சார்பினால் உளதாயது' என்பதும், 'அக்குற்றம் நீங்கவே, ஆன்மா அம் மயக்கம் நீங்கப் பெற்றுச் சிவத்தை அடையும்' என்பதும் உணர்த்துதற் பொருட்டுச் சடத்திற்குச் சடமும், சித்திற்குச் சித்துமே இடமாதலைக்

குறித்தார். இன்னும், 'சுடரில் சுடர்சேரும்' என்றதும் அதுபற்றி. இதனால், உயிருக்கு உலகை நோக்கிச் செல்லுதல் செயற்கையும், சிவத்தை நோக்கிச் செல்லுதல் இயற்கையும் ஆதல் பெறப்பட்டது. இச் செயற்கை இயற்கைகளை,

சிறைசெய்ய நின்ற செழும்புனலின் உள்ளம்
சிறைசெய் புலன்உணர்வின் தீர்ந்து - சிறைவிட்
டலைகடலிற் சென்றடங்கும் ஆறுபோல் மீளா
துலைவில்அரன் பாதத்தை உற்று.

என (சிவஞானபோதம் சூ.8) விளக்கினார் மெய்கண்ட தேவர்.

தூநிழல் ஆர் தற்காருஞ் சொல்லார் தொகும்இதுபோல்
தானதுவாய் நிற்கும் தரம். -திருவருட்பயன் 61

என்னும் திருவருட்பயனும் ஆன்மாவிற்குச் சிவத்தைச் சார்தலே இயற்கை என்பதை விளக்கிற்று.

'இருபொருள் ஒன்றாதல் எவ்வாறு' என்பார்க்கு விளக்கமாக, 'சுடரில் சுடர் சேரும்' என்றார். சுடரில் சுடர் சேர்தல், நீரில் நீர் சேர்தல் போல, ஒருபொருள்தானே பிற பொருளது இடையீட்டால் இரண்டாய் நின்று, அவ்விடையீடு நீங்கியபின் முன்போல ஒன்றாதலாகிய ஐக்கியம் அல்லாமை உணர்க. சுடரில் சுடர் சேர்ந்தவழியும் சேர்ந்தது பொருளால் வேறேயாய் நிற்குமாற்றை,

'வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது
வெய்யோனை ஆகாத மீன்போல' -சிவஞானபோதம் சூ.8

என விளக்கினார் மெய்கண்டதேவர். இவ்வுண்மை அறியாதார், 'உடம்பு நீங்கியவழி ஆன்மா சிவத்தொடு சேர்ந்து ஒன்றாதல், குடம் உடைந்தவழி, அக்குடத்தினுள் நின்ற ஆகாயம், புறத்து நின்ற ஆகாயத்தோடு சேர்ந்து ஒன்றாதல் போலும்' எனத் தமக்குத் தோன்றியவாறே உரைப்பர். தத்துவங்களுள் ஒடுக்க முறையில் முன் நிற்பன மாபூதங்களே யாயினும், தன்மாத்திரைகளையே முதலாகக் கூறினார். அவை அவற்றிற்கு முதலாய் அவை ஒடுங்கும் இடமாதல் பற்றியும், நிலம் நீர் முதலிய பூதங்கள் ஒன்றின் ஒன்று ஒடுங்கும் என்றல் சிவாகம நெறியாகாமை பற்றியும் என்க. உருவகமாய் வந்த அப்பு, ஆகு பெயராய் நின்றது. அருளையுடையோன் செயலை அருளின் செயலாகவே கூறினார். 'அப்பில்' என்பதில் இல், ஏதுப் பொருட் டாகிய ஐந்தாம் உருபு.

இதனால், 'மேற்கூறியவாறு கரையற்ற சோதி கலந்த சத்தாமாறு இது' எனச் சிவசாயுச்ச பரமுத்தியில் ஆன்மா நிற்கும் நிலை கூறப்பட்டது.

அப்பினிற் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர்பெற் றுருச்செய்த அவ்வுரு

அப்பினிற் கூடிய தொன்றாகு மாறுபோற்
செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே. #136

கடல்நீரில் ஒன்றாய் நிற்கும் உவர்ப்புப் பின் ஞாயிற்றின் வெப்பத்தால் அந்நீரின் வேறாய் உருவெய்தி 'உப்பு' எனப் பெயர்பெற்ற அப்பொருள், அந்நீரில் சேர்ந்தவழி அவ்வுரு வொழிந்து வேறுகாணப்படாது அந்நீரோடு ஒன்றாகும் முறைமை போல, உயிர் சிவத்தோடு என்றும் ஒன்றாயே இருத்தற் குரியதாயினும், ஆணவ மலத்தின் தடையால், அநாதியே வேறாய்ப் பசுத்தன்மை எய்திச் சீவன் எனப் பெயர்பெற்று மாயை கன்மங்களையும் உடைய தாய் உழன்று, அத்தடை நீங்கப்பெற்ற பின்னர்ச் சிவத்தோடு சேர்ந்து வேறாய் நில்லாது ஒன்றாய்விடும்.

விளக்கவுரை

செய்யுட்கு ஏற்ப, 'உப்பெனப் பேர்பெற்று உருச்செய்த' என்றாராயினும், 'உருச்செய்து உப்பெனப் பேர் பெற்ற' என ஓதுதல் கருத்தென்க.
'அவ்வுரு' என்றதில் 'உரு' என்றது பொருளை. 'கூடியது' என்பதில் 'ஆயின்' என்பது வருவித்து, 'கூடியதாயின்' என உரைக்க. 'செப்பினில்' என்பதில், இன், எதுகைநோக்கித் தவிர்வழி வந்த சாரியையாய் நின்றது. 'செப்பிடில்' எனப் பாடம் ஓதுதலும் ஆம்.
இஃது, 'ஆன்மாச் சிவத்தோடு ஒன்றாதலே இயற்கை; வேறு நிற்றலே செயற்கை' என்பதனைத் தக்கதோர் உவமங்காட்டி வலியுறுத்தவாறு.
உப்பு, நீரின் குணமாகாது வேறு பொருளேயாதல் அறிந்துகொள்க.

அடங்குபே ரண்டத் தணுஅண்டஞ் சென்றங்
கிடங்கொண்ட தில்லை இதுவன்றி வேறுண்டோ
கடந்தொறும் நின்ற உயிர்கரை காணில்
திடம்பெற நின்றான் திருவடி தானே. #137

எல்லாப்பொருளும் அடங்கி நிற்கும் இடமாகிய 'அண்டம்' என்னும் பேருருண்டையுள் அணு என்னும் சிறியதோர் உருண்டை அடங்கி நிற்பதல்லது, அதற்குப் புறம்பாய் வேறோ ரிடத்தில் நிற்றல் இல்லை. அதுபோலப் பலவகை உடம்புகளை எடுத்து அவற்றின் அளவாய் நிற்கின்ற சிற்றுயிர்களுக்குப் பிறவிக் கடலி னின்றும் நீங்கி அலமராது நிலைத்து நிற்கும் கரையை அடைவதாயின் அக்கரை, என்றும் அலமரல் இல்லாது ஒருபெற்றியே நிற்பவனாகிய சிவபெருமானது திருவடியே. இதுவன்றி வேறு கரை உண்டோ?

விளக்கவுரை

அண்டம் - உருண்டை; 'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்'(*தி.8 திருவண்டப்பகுதி.1*) என்றார் மணிவாசகரும். 'இடங்கொண்ட தன்றி வேறில்லை' எனச் சில சொல் வருவித்து உரைக்க. 'இதுவன்றி

உண்டோ' என்பதனை இறுதிக்கண் வைத்து உரைக்க. கடம் - குடம். அஃது உவமையாகு பெயராய், உடம்பைக் குறித்தது.
இதனால், சிவம் பெரிய பொருளாதலும், உயிர் அதனிற் சிறிய பொருளாதலும் உணர்த்தி, மேற்கூறியவாறு சீவன் சிவத்துள் அடங்குமாறு கூறப்பட்டது. 'திடம்பெற நின்றானே' என்று ஒழியாது 'அவன் திருவடிதானே' என்றதும், சிவனது பெருமைக்கண் சீவன் சிறியதோர் அளவில் அடங்கும் என்றற்காம். இதனானே, உயிர்கட்குப் பயன் தருபவன் இறைவன் என்னாது, அவனது அடியே என நூல்கள் கூறுவதன் உண்மையும் விளங்கும். இன்னும் சித்தாந்த முத்தி, 'அடிசேர் முத்தி அல்லது அருள்சேர் முத்தி' எனப்படுமாறும் இதனானே விளக்கப்பட்டதாம்.

திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ்சிந் திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே. **#138**

உண்மை நூல்களைத் தெரிந்தெடுத்து அவற்றில் சொல்லப்பட்ட பொருள்களைச் சிந்தித்து அறுதியிட்டுச் சொல்லு மிடத்து, மெய்ப்பொருளைத் தம் உள்ளத்தில் ஒருதலையாக உணர்ந்து பற்ற வேண்டுவோர்க்குச் சிவபெருமானது திருவடி ஒன்றே பரம் பொருளும், வீட்டுலகமும், துறக்க உலகங்களுமாகும். ஆதலின், அதனைத்தவிர உயிர்கட்குப் பற்றுக்கோடு வேறில்லை.

விளக்கவுரை

என்றது, 'மிகப்பெரியோனாகிய சிவபெருமானது பேராற்றலுள் ஒரு சிறு கூறுதானே எண்ணில்லாத உயிர்கட்கும் எல்லா மாய் நின்று பயன்தரும்' என்றவாறு. இதனானே, சத்தியைத் திருவடி யாகக்கொண்டு, 'அத்திருவடி தானே எல்லாம் செய்ய வல்லது' என வும், 'உயிர்கட்கு வீடுபேறாய் நிற்பது அத்திருவடி நிழலே' எனவும் கூறுதல் மரபாயிற்று என்பதும் உணர்ந்து கொள்ளப்படும். சத்தியே திரு வடி எனவே, 'ஞானசத்தி, கிரியாசத்தி' என்பனவே இரண்டு திருவடி களாதல் உணரப்படும். இச்சை இவ்விரண்டினும் விரவிநிற்பதாம்.
கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். -குறள் *2*
என்பது முதலாகத் திருவள்ளுவ நாயனாரும் திருவடியையே பலவிடத்தும் கூறினார். திருநாவுக்கரசர், 'திருவடித் திருவிருத்தங்கள், திருவடித்திருத்தாண்டகங்கள்' என்பவற்றால் திருவடிகளின் பெருமையைப் பலபட விரித்தருளிச் செய்தார். மாணிக்கவாசகர் தி.*8* திருவெம்பாவையின் இறுதித் திருப்பாட்டில் திருவடியே எல்லாமாய்

நின்று ஐந்தொழில் செய்வனவாக அருளிச்செய்தார். இன்னும் திருமுறைகளில் யாண்டும் திருவடிப் பெருமையே பேசப்படுதல் வெளிப்படை. இவ்வாற்றால், 'யாவரும், யாவர்க்கும் சிவபெரு மானது திருவடியே பற்றாதல் உணர்ந்து அதனைப் பற்றி வாழ்தல் வேண்டும்' என்பது பெறப்பட்டது.

இதனால் திருவடியது சிறப்புக் கூறும் முகத்தால் சிவனது சிறப்பு வகுத்துணர்த்தப்பட்டது. இதனானே சிவநெறிக்குப் பொருளாவது யாண்டும் சிவனது திருவடியே என்பதும் முடித்துக் கூறப் பட்டதாம்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே. **#139**

'பெத்தநிலை நீங்கும் பருவத்துச் சிவன் குருவாய் வந்து தனது திருவடி ஞானத்தை வழங்குவான்' எனவும், 'அத் திருவடி ஞானத்தைப் பெற்றபின் நிகழ்வன இவை' எனவும் முறைப்படக்கூறி முடித்தபின், அப்பேறு அனைத்தையும் வழங்கிய குருமூர்த்தியை மறத்தல் பெரிதும் உய்தியில்லதோர் குற்றமாம் ஆதலின், அக்குற்றத் திற்கு ஆளாகாது என்றும் அக்குருமூர்த்தியை மறவாது, 'சிவம்' எனவே கண்டு வழிபடல் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார்.

ஞான குருவினது திருவுருவைச் சிவனது அருட்டிரு மேனியாகக் காணுதல், அவரது திருப்பெயரைச் சிவனது திருப்பெய ராகிய திருவைந்தெழுத்தோடு ஒப்பதாகக் கொண்டு எப்பொழுதும் சொல்லுதல், அவர் இடும் கட்டளை மொழிகளைச் சிவனது அருளா ணையாகப் போற்றிக் கேட்டல், அவரது திருவுருவை உள்ளத்துள் உள்குதல் என்னும் இவைகளே உண்மை ஞானத்தைத் தருவனவாகும்.

விளக்கவுரை

ஐய உணர்வும், திரிபுணர்வும் ஞானம் ஆகாமையின், மெய்யுணர்வை, 'தெளிவு' என்றார். தெளிவு தருவனவற்றைத் தெளி வாகப் பாற்படுத்து ஓதினார். ஞானாசிரியரைச் சிவமாக உணராது நம்மனோருள் ஒருவனாக எண்ணுதல் ஆணவ மலச் சார்பினால் நிகழ்வதாகலின், அச்சார்புடையார்க்கு உண்மை ஞானம் விளங்க மாட்டாது என்பதனை ஈற்றில் நின்ற தேற்றேகாரத்தால் பெற வைத்தார். அதனால் மலம் நீங்கப் பெற்றார்க்கு இவை இயல்பால் நிகழும் என்பது பெற்றாம்.

'உலகிற்கு ஆசிரியரும், அடைந்தவர்க்கு ஆசிரியரும், இருமை ஆசிரியரும்' என ஆசிரியர் முத்திறப்படுவர். அறம் முதலிய உறுதிப் பொருள் நான்கனுள் ஒன்றையாயினும், பலவற்றையாயினும் பற்றி முதலும், வழியும் ஆன நூல்களையாயினும், உரைகளையாயினும்

செய்தோர் உலகிற்கு ஆசிரியர். இவர் திருவள்ளுவரும், ஞான சம்பந்தர் முதலிய சமயாசாரியர் நால்வரும் போல்பவர். இனி உறுதிப் பொருள்களை வரலாற்று முறையாற் கேட்டுணர்ந்து தம்மை அடைந்தவர்கட்கு அவற்றைக் கேட்பித்தல் சிந்திப்பித்தல்களைச் செய்விப்போர் அடைந்தவர்க்கு ஆசிரியர். இவர்களை, 'தாதாரகுரு' என்பர். இவர் சந்தான குரவர் நால்வருள் மறைஞானசம்பந்தர் போல்பவர். மேற்கூறிய இருதன்மையும் உடையோர் இருமை ஆசிரியர். இவர் மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர் போல்பவர். இம்மூவருள்ளும் சில குடியினர்க்குமட்டும் ஆசிரியராய்க் குலகுருவாய் நிற்பாரும் உளர்.

இவருள் உலகாசிரியர் தவிர ஏனையோருள் எழுத்தும், சொல்லும் அவற்றின் வடிவளவில் கற்பிப்பவர் 'கணக்காயர்' எனப் படுவார். 'உபாத்தியாயர், ஓதுவிப்பவர்' என்றெல்லாம் கூறுதல் இவரையே. பலவகைச் செய்யுட்களையும், நூல்களையும் பொருள் உணர்வு பெறக் கற்பிப்பவர் 'கற்பிக்கும் ஆசிரியர்' எனப்படுவார். 'வித்தியா குரு' என்றல் இவரையே. மணவினை, பிற்கடன் (உத்தர கிரியை, அந்தியேட்டி) முதலியவற்றை முன்னின்று செய்விப்பார், 'பார்ப் பார்' எனவும், 'ஐயர்' எனவும் சொல்லப்படுவர். இவருள்ளும் சிலகுடி யினர்க்கு மட்டும் உறுதி உணர்த்திக் குல குருமாராய் நிற்ப வரும் உளர் என்க. 'புரோகிதர்' என்றல் இவரையேயாம். இவர், தெய்வங்கட்குச் சீற்றந்தணிவிக்கும் கடன் முறைகளையும் செய்வர் என அறிக.

சமய விசேட தீக்கைகளால் சிவவழிபாட்டினைப் பிறர்க்கு அளிப்பவர்களும், திருக்கோயில்களில் சிவனது திருமேனிகளை உலக நலத்தின் பொருட்டு வழிபடுகின்றவர்களும் 'வழிபாட்டாசிரியர்' எனப்படுவர். 'கிரியாகுரு' எனப்படுவார். இவரே. இனிச் சமய விசேட தீக்கைகளைப் பெற்றுச் சிவதன்மதத்திலும், சிவயோகத்திலும் பயின்ற தன் பயனாக மலபரிபாகம் வரப்பெற்றவர்க்கு அப் பரிபக்குவத்தை அறிந்து நோக்கம், பரிசம் முதலியவற்றால் பாசத்தை அறுத்தலாகிய நிருவாண தீக்கையின்வழிச் சிவனது திருவடி ஞானத்தை உணர்த் துவோர் 'அருளாசிரியர்' எனப்படுவார். 'ஞானகுரு' என்றும், 'ஞானா சிரியர்' என்றும் சொல்லப்படுவார் இவரே. இங்குக் கூறப்பட்டு வந்த ஆசிரியன்மார்கள் அம்முறையானே ஒருவரில் ஒருவர் உயர்ந்தோர். அனைவரிலும் உயர்ந்தோர் அருளாசிரியாராகிய ஞானகுருவே. சிவன் ஆசானாய் நிற்றல் இந்த ஞானகுருவிடத்தேயாம். அதனால், 'குருவேசிவன்' (தி.10 6ஆம் தந்திரம்) என்றற்கு முழுதுரிமை உடையவர் ஞானாசிரியரே.

'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' -நறுந்தொகை

'தெய்வத்தைப் போல மதிக்கிற்பான்'
-தொல். பாயிரம் உரை நச்சினார்க்கினயம்
என்றாற் போல ஏனை ஆசிரியன்மாரையும் இறைவனாகக் கூறுதல் முகமனுரையேயாம். அதனால், இத்திருமந்திரத்துள் 'குரு' என்றது அனைவரிலும் மேலாய ஞானகுருவையே என்பது இனிது விளங்குதல் காண்க. இவரது சிறப்பினை இவ்வாறே,

ஞானயோ கக்கிரியா சரியை நான்கும்
நாதன்றன் பணி; ஞானி நாலினுக்கும் உரியன்;
ஊனமிலா யோகமுதல் மூன்றினுக்கும் உரியன்
யோகி; கிரி யாவான்தான் ஒண்கிரியை யாதி
யானஇரண் டினுக்குரியன்; சரியையினில் நின்றோன்
அச்சரியைக் கேஉரியன். ஆதலினால், யார்க்கும்
ஈனமிலா ஞானகுரு வேகுருவும். இவனே
ஈசனிவன் றானென்றும் இறைஞ்சி ஏத்தே.

எனச் சிவஞான சித்தி (சூ. 12,5) வகுத்துணர்த்தல் காண்க.

தானே புலன்ஐந்துந் தன்வச மாயிடும்
தானே புலன்ஐந்துந் தன்வசம் போயிடும்
தானே புலன்ஐந்துந் தன்னில் மடைமாறும்
தானே தனித்தெம் பிரான்தனைச் சந்தித்தே. **#140**

ஒருவன், 'நான்' என்னும் முனைப்பு இன்றி ஞானாசாரியரை அடுத்து நிற்பானாயின், அவனது ஐம்புல ஆசை தன் னியல்பில் உலகப் பொருள்கள் மேல் செல்லாது அவன்வழிப்பட்டுச் சிவனிடத்திற் செல்வதாய்ப் பள்ள மடையில் வீழ்ந்து பயனின்றிக் கழிந்துகொண்டிருந்த நீர் அம்மடை அடைக்கப்பட்ட வழித் தேங்கி நின்று மேட்டுமேடையிற் போய்ப் பாய்ந்து பயன்தருதல் போலத்தன் அறிவினிடத்தே மாறுவதாகும்.

விளக்கவுரை

'ஆதலின் ஞானத்தைப் பெற்றவனும், பயிற்சி வயத் தால் மீள அஞ்ஞான வயப்படாதிருத்தற்கு ஞானாசாரியரை விட்டு அகலாது நின்று வழிபடுதல் வேண்டும்' என்பது குறிப்பெச்சம். 'புலன்' அவற்றின்மேல் செல்கின்ற ஆசை. அஃது ஒன்றேயாதல் பற்றி, 'தானே' என ஒருமையாற் கூறினார். 'தன் வசம்' இரண்டனுள் முன்னது, மாணவன்வசமும், பின்னது ஆசையின் வசமுமாம். தன் வசம் போயிடும் - சுதந்திரம் நீங்கப்பெறும். 'தன்னில்' என்றதும், மாணவன் அறிவையே தன்முனைப்பு இழந்து செல்லுதலைத் 'தனித்து' என்றார். 'தனித்துத் தானேயாய்' என மாற்றி ஆக்கம் வருவித்து உணர்க. எம் பிரானை - எங்கள் சிவபெருமானை. ஞானத்தை உணர்த்துபவன் அவனேயாகலின்,

குருவை இவ்வாறு கூறினார். சந்தித்து - தலைப்பட்டு என்றது 'பிரியா நின்று' என்றவாறு. 'சந்தித்தலால்' என்பது 'சந்தித்து' எனத் திரிந்து நின்றது. 'சந்தித்தலால் ஆயிடும், போயிடும், மாறும்' என மேலே கூட்டுக.

சந்திப் பதுநந்தி தன்திருத் தாளிணை
சிந்திப் பதுநந்தி செய்ய திருமேனி
வந்திப் பதுநந்தி நாமம்என் வாய்மையால்
புந்திக்குள் நிற்பது நந்திபொற் போதமே. **#141**

நான் எப்பொழுதும் உடலால் பணிவது எனக்கு ஞானாசிரியராகிய நந்தி பெருமானது இரண்டு திருவடிகளையே. மனத்தால் நினைப்பது அவரது அருட்டிருவுருவத்தையே. வாயாற் சொல்வது அவரது திருப்பெயரையே. என் அறிவினுள் நிலைத்து நிற்பது அவரது பொன்மொழியே.

விளக்கவுரை

'ஆதலின் பிறரும் தம் ஆசிரியரிடத்து நிற்க' என்பது குறிப்பெச்சம். செம்மை - திரிபின்மை; அதனை உடையது அருள் என்க. 'தாளிணை, மேனி, நாமம்' என்பவற்றில் இரண்டாவது இறுதிக்கண் தொக்கது. திருவை நாமத்திற்கும் கூட்டுக. 'வந்தித்தல்' என்பது இங்கு வழுத்துதலாகிய வழிபாட்டின்மேல் நின்றது.

போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியைப்
போதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினார்
நாதன் நடத்தால் நயனங் களிகூர
வேதந் துதித்திடப் போயடைந்தார் விண்ணே. **#142**

உண்மை ஞானத்தை வழங்குகின்ற அருளுரு வினரான எங்கள் நந்தி பெருமானைத் தங்கள் நெஞ்சில் மறவாது நினைந்து ஞானம் முதிரப் பெற்றவர்களே இவ்வுலகில் சிவபெரு மானது ஆனந்த நடனத்தால் கண்ணும் களிகூர வாழ்ந்து, இவ்வுடம்பு நீங்கியபின் வேதமும் போற்றுமாறு சென்று பரவெளியை அடைந் தார்கள்; ஏனையோர் மீளவும் பிறவிக்கு ஆளாயினர்.

விளக்கவுரை

'புண்ணியராயினார்' என்புழித் தொகுக்கப்பட்ட பிரிநிலை ஏகாரத்தால் ஏனையோரது நிலை குறிக்கப்பட்டது. இதனால், 'இப்பயனைப் பெறவேண்டின், பிறரும் அருளுருவான தம் ஆசிரியரை நினைக' என்பது குறிப்பெச்சமாய் நிற்றல் அறிக.

3.5.யாக்கை நிலையாமை

மண்ணொன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்
திண்ணென் றிருந்தது தீவினை சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணானாற்போல்
எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாறே. **#143**

இரண்டு பாண்டங்கள் ஒருவகை மண்ணாலே செய்யப்பட்டனவாயினும், அவற்றுள் ஒன்று தீயிலிட்டுச் சுடப்பட, மற்றொன்று அவ்வாறு சுடப்படாதிருப்பின் அவற்றின்மேல் வானத்தி னின்றும் மழை விழும்போது, சுடப்பட்டது கேடின்றி நிற்க, சுடப் படாதது கெட்டு முன்போல மண்ணாகிவிடும். மக்கள் குறிக்கோள் இல்லாது வாழ்ந்து, பின் இறக்கின்றதும் இதுபோல்வதே.

விளக்கவுரை

'குறிக்கோள்' என்றது மக்கட் பிறப்பின் பயனாகிய மெய்யுணர்வை. அதனை, எடுத்த பிறப்பிலே அடையக் கருதுவார் அதன்பொருட்டு யோகம் முதலியவற்றால் உடம்பை நெடுங்காலம் நிலைப்பெறச் செய்வாராகலின், அத்தகையோரது உடம்பைத் தீயினாற் சுடப்பட்ட பாண்டத்தோடும், அக்கருத்தில்லாதாரது உடம்பைத் தீயினாற் சுடப்படாத பாண்டத்தோடும் உவமித்தார். இதனானே, பின்னர்க் கூறப்படும் காய சித்தி உபாயத்திற்கும் தோற்றுவாய் செய்யப்பட்டதாம்.

'எழிலை ஆழ் செய்கைப் பசுங்கலன் விசும்பின்
இன்துளி படநனைந் துருகி
அழலைஆழ் புருவம் புனலொடும் கிடந்தாங்கு' *-தி.9. ப.17 பா.7*

என இவ்வுவமையைப் பிற்றை ஆசிரியர், திருவருள் கைவரப் பெற்றார் பெறாதாரது உணர்வுகட்குக் கூறினார். இனி இங்கும் அவ்வாறே கொண்டு, 'மண்' என்றது உடம்பையும், 'பாத்திரம்' என்பது அதனை ஏற்று ஒட்டி நிற்கின்ற உயிரது உணர்வையும் குறிப் பனவாக வைத்து உரைத்தலும் ஒன்று. இவ்வுரைக்கு மீண்டும் மண் ணாதல் மீளப் பிறவியில் வீழ்தலும், இறத்தல் பயனின்றி ஒழிதலு மாகும். ஆகவே, 'அவ்வாறாகாது, மட்பாண்டத்தை மழைவரும் முன்னே சுட்டுக்கொள்ளுதல் போல, மக்கட் பிறப்பில் அமைந்த உணர்வை அப்பிறப்பிற்கு இறுதிக் காலம் வருதற்கு முன்னே அரு ளுணர்வுடையதாக்கிக் கொள்க. என்பது இதனாற் கூறப்பட்ட பொருளாகும். இரண்டுரைக்கும் விண்ணின்று விழும் வீர் உடம்பை வீழ்த்துகின்ற இறுதிக் காலமேயாம்.

இதனால்,மக்கட் பிறப்பின் பயனை அடையமுயலுதலைப் பின்னர்ச் செய்வோம் என நினையாது, விரைந்து செய்தல் வேண்டும் என்பது

கூறப்பட்டது.
'அன்றறிவாம் என்னா தறம்செய்க' -குறள். *36*
எனவும்,
நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப்படும். -குறள். *335*
எனவும் திருவள்ளுவ நாயனாரும் கூறினார்.

பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செல்லார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே. **#144**

பல பண்டங்களை நிரப்பிவைத்துள்ள இல்லம் போல்வதாகிய உடம்பு, உழைத்துத் தளர்ந்து வீழ்ந்தொழியுமாயின், அவ்வுழைப்பால் பயன் கொண்ட மனைவியரும், மக்களும் அவ்வுடம் பினுள் நின்ற உயிராகிய இல்லத் தலைவரைப் பின் தொடர்ந்து செல்லும் வலியிலராவர். இனிச் சுற்றமும் பொருளும் முதலாயினதாம் அவருடன் செல்லுமோ எனின், அவர் மேற்கொண்டு செய்த தவமும், அதன் பயனாக உண்டாகிய ஞானமும் அல்லது பிறிதொன்றும் அவரோடு உடன் செல்லாது.

விளக்கவுரை

'அதனால், பெண்டிர், மக்கள் முதலியோர்க்கு உழைத்தலை விடுத்து, அவ்விரண்டையுமே பெற முயல்க' என்பதாம். 'பெண்டிர் மக்களேயன்றிப் பிறவும் செல்லா' என்றற்கு, 'நடவாதே' எனப் பின்னருங் கூறினார்.

கொல்லத் தான்நம னார்தமர் வந்தக்கால்
இல்லத் தார்செயல் ஆவதென் ஏழைகாள்!
நல்லத் தான் நமை ஆளுடை யான்கழல்
சொல்லத் தான்வல்லி ரேல்துயர் தீருமே. -தி.*5* ப.*43* பா.*1*
என்றார் அப்பரும்.

ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே. **#145**

உடம்பு விழுந்தபின் இல்லத்தளவில் செயற்படு வோராகிய பெண்டிரும், மக்களுமேயன்றி, ஒருங்கு திரண்டு பல வற்றைச் செய்து முடிப்போராகிய ஊரவரேனும் பிரிந்தோருடன் செல்ல வல்லரோ எனின், அல்லர்; அவரும் அப்பெண்டிர் மக்களுடன் ஒருங்கு கூடி முன்னர்ப் பேரொலி உண்டாக அழுது, பின் அது காறும் அவர்க்குக் கூறி அழுத இயற்பெயர் சிறப்புப் பெயர்களை ஒழித்து, 'பிணம்' என்னும்

பெயரையே சொல்லி எடுத்துக் கொண்டு போய், 'சூரை' என்னும் ஒருவகை முட்செடிகள் நிரம்பியுள்ள காட்டில் வைத்து எரித்து விட்டுத் தீட்டுப் போதற்கு நீரினுள் மூழ்கித் தூய்மை பெற்றா ராய்ப் பின்பு அவரைப் பற்றிய நினைவும் இல்லாதவரே ஆவர்.

விளக்கவுரை

'ஆதலால், ஊரவரையும் உறுதி என்று நினையாது, மேற்குறித்தவற்றைப் பெற முயல்க' என்பதாம். ஊர், ஆகுபெயர்.
ஊர், 'பிணம்' என்று பேரிட்டு எடுத்தலை,
தொட்டுத் தடவித் துடிப்பொன்றுங் காணாதே
பெட்டப் பிணமென்று பேரிட்டுக் - கட்டி
எடுங்களத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை. -திருவெண்பா. *8*
என ஐயடிகளும் கூறினார்.
இன்னும் அவர்.
இல்லும் பொருளும் இருந்த மனையளவே;
சொல்லும் அயலார் துடிப்பளவே - நல்ல
கிளைகுளத்து நீரளவே; கிற்றியேல் நெஞ்சே
வளைகுளத்துள் ஈசனையே வாழ்த்து. -திருவெண்பா. *14*
என அருளிச் செய்தமை அறிக. இல் - மனைவி. துடிப்பு - அடக்கம் செய்ய விரைதல்.

காலும் இரண்டு முகட்டலக் கொன்றுள
பாலுள் பருங்கழி முப்பத்தி ரண்டுள
மேலுள கூரை பிரியும் பிரிந்தால்முன்
போலுயிர் மீளப் புகஅறி யாதே. **#146**

உடம்பாகிய இல்லத்திற்குத் தாங்கும் தூண்களும் (நடக்கின்ற கால்கள்) இரண்டு உள்ளன. மேட்டு உத்தரமும் (முது கெலும்பு) ஒன்று உண்டு. அவ்வுத்தரத்தின் இருபக்கங்களிலும் சார்த்தப் படுகின்ற பருத்த கழிகளும் (விலா எலும்புகளும் - பக்கத்திற்குப் பதினாறாக) முப்பத்திரண்டு உள்ளன. மேலே வேயப்பட்ட கூரை களும் (பலவகையான தோல்கள்) உள்ளன. இருப்பினும். உயிர் இந்த இல்லத்தில் நிலைத்திருப்பதில்லை; என்றாயினும் ஒரு நாள் புறப் பட்டுப் போய்விடும். போய்விட்டால் மீள வந்து முன்போல இதனுட் புகுதல் இல்லை.

விளக்கவுரை

'கால் இரண்டும் முகட்டு அலக்கு ஒன்றும் உள' எனவும், 'மேற்கூரையும் உள' எனவும், 'உயிர் பிரியும்; பிரிந்தால் முன்போல் மீளப் புக அறியாது'

எனவும் கொள்க. 'நில்லாது பிரிதலும், பிரிந்தால் மீளப் புகாமையும் உடைமை யாலும், வேறாகச் சென்று புகப்படுவது இத்தன்மைத்தாய மக்களுடம் பேயாய் இருக்கும் என்றல் கூடாமையாலும் அங்ஙனம் பிரியுங்காலம் வருதற்கு முன்பே மேற்குறித்தவற்றைத் தேடிக்கொள்க' என்பதாம்.

என்பினாற் கழிநிரைத் திறைச்சிமண் சுவரெறிந்
திதுநம் இல்லம்
புன்புலால் நாறுதோல் போர்த்துப்பொல் லாமையான்
முகடு கொண்டு
முன்பெலாம் ஒன்பது வாய்தல்ஆர் குரம்பையின்
மூழ்கி டாதே
அன்பன்ஆ ரூர்தொழு துய்யலாம் மையல்கொண்
டஞ்சல் நெஞ்சே.

என*(தி.2 ப.79 பா.8)*ச் சம்பந்தரும்,

கால்கொடுத் திருகை யேற்றிக் கழிநிரைத் திறைச்சி மேய்ந்து
தோல்படுத் துதிர நீரால் சுவரெடுத் திரண்டுவாசல்
ஏல்வுடைத் தா அமைத்தங் கேழுசா லேகம் பண்ணி
மால்கொடுத் தாவி வைத்தார் மாமறைக் காட னாரே.

(தி.4 ப.83 பா.4) எனவும்,

'இருகாற் குரம்பை இதுநான் உடைய திது பிரிந்தால்
தருவாய் எனக்குன் திருவடிக் கீழொர் தலைமறைவே'

(தி.4 ப.113 பா.2) எனவும், அப்பரும் உடம்பை இல்லமாக உருவகித்தல் காண்க.

சீக்கை விளைந்தது செய்வினை மூட்டிற்ற
ஆக்கை பிரிந்த தலகு பழுத்தது
மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய்க்
காக்கைக்கு வுண்பலி காட்டிய வாறே. **#147**

'சீக்கை என்னும் வாயொலி உண்டாயிற்று; செயற் படுகின்ற உறுப்புக்கள் மடிந்து கிடையாகி விட்டன. உடம்பு உயிர்த் தொடர்பை நீங்கிவிட்டது. எலும்புகள் வீங்கிவிட்டன' என்று பல அறிகுறிகளைச் சொல்லி, மூக்கில் கைவைத்துப் பார்த்து ஐயம் நீங்கி, மூடி எடுத்துக்கொண்டு போய் ஊரார் காக்கைக்குப் பலி ஊட்டிய அளவில் முடிவதாகும் உடம்பின் நிலைமை.

விளக்கவுரை

மேற்காட்டிய ஐயடிகள் வெண்பாவில் 'தொட்டுத் தடவித் துடிப்பொன்றுங் காணாமல்' என வந்ததனை நோக்குக. 'காக்கைக்குப் பலியிடுதல் ஒரு சடங்கு' என்பர். 'காக்கைக்கே இரை யாகிக்

கழிவரே'*(தி.5 ப.90 பா.5)* என்னும் அப்பர் திருமொழியால் உடல் மண்ணில் இடப்பட்டுப் பின் காக்கைக்கு இரையாதலும் கொள்ளப்படும். 'முது காட்டில் காக்கை உகக்கும் பிணம்' *(மூதுரை)* என்ற ஔவையார் திருமொழியும் காணத்தக்கது. இனி, 'இன்னோரன்னவை முறைப்படி அடக்கம் செய்யப்படாத உடம்பின் நிலைமையைக் குறித்தன' என்று ஒழிதலுமாம்.

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்ததிங் கென்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே. **#148**

உணவு சமைத்தற்கு வேண்டுவனவற்றை ஈட்டிக் கொணர்ந்து வைத்த தலைவர், சமைத்தாயின பின்பு அவ்வுணவை உண்டார்; பின் தம் இல்லக்கிழத்தியாரொடு தனிமையில் இருந்து சில வற்றை உசாவுதல் செய்தார்; அச்செயலுக்கிடையே, 'உடம்பில் இடப் பக்கம் சிறிது நோகின்றது' என்று சொல்லி, அது நீங்குதற் பொருட்டு ஓய்வு கொள்ளுதற்குப் படுத்தார்; படுத்தவர் படுத்துவிட்டவரே யாயினார்; மீள எழுந்திருக்கவில்லை.

விளக்கவுரை

'இவ்வாறாகின்றது சிலரது வாழ்க்கை' என்றவாறு. 'நிலையாமை வரும் காலத்தை அறிந்தார் இல்லை*;* அதனால்*,* செய்யவேண்டுவதை விரைந்து செய்தலே அறிவுடைமை' என்பதாம்.

மன்றத்தே நம்பிதன் மாடம் எடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகைபெற் றேறினான்
மன்றத்தே நம்பிமுக் கோடி வழங்கினான்
சென்றத்தா வென்னத் திரிந்திலன் தானே. **#149**

நம்பி(சிறந்த ஆடவன்) ஒருவன் தன் முயற்சி யாலே பெரும் பொருள் ஈட்டிப் பலரும் வியக்கப் பல மேல் நிலைகளோடு கூடிய மாளிகையைக் கட்டினான். அவன் அதனைக் கட்டியதும் வெற்ற வெளியான இடத்திலேதான். பின் அவ்விடத் திற்றானே நான்குபேர் சுமக்கின்ற ஒரு பல்லக்கைப்பெற்று அதில் ஏறினான். அங்கு அப்பொழுது அவன் தன் மனைவிக்கும், மகனுக்கும், ஊர்த் தோட்டிக்கும் ஒவ்வொரு புத்தாடையை வழங்கினான். ஆயினும், பலர் நின்று, 'தலை வனே' என்று கூப்பிட்டுக் கதறவும், திரும்பாமலே போய்விட்டான்.

விளக்கவுரை

'எத்துணைப் பெருஞ் செல்வத்தாராயினும் 'இறந்தார்' என்னும் இகழ்ச்சியைப் பெறாதொழிந்தவர் இல்லை. என்றவாறு.

மலைமிசைத் தோன்றும் மதியம் போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர் - நிலமிசைத்
துஞ்சினார் என்றெடுத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினார் இவ்வுலகத் தில். -நாலடியார் *21*

என்று அறநூல் கூறுதலும் காண்க. 'சிவிகை' என்றது. புகழ்வது போலப் பழித்தல். 'முக்கோடி' என்றது சிலேடை.

வாசந்தி பேசி மணம்புணர் தம்பதி
நேசந் தெவிட்டி நினைப்பொழி வார்பின்னை
ஆசந்தி மேல்வைத் தமைய அழுதிட்டுப்
பாசந்தீச் சுட்டுப் பலியட்டி னார்களே. **#150**

குருக்கத்திக் கொடியின் கீழ்க் களவிற்கலந்து, பின் கற்பு நெறியில் மணம் செய்துகொள்கின்ற தலைவனும், தலைவியும் தலைநாளில் இருந்த காதல், நாள்செல்லச் செல்லத் தெவிட்டுவதாய் விடப் பின்பு ஒருவரை ஒருவர் நினைப்பதையும் விட்டுவிடுவர். இறுதியில் பாடைமேல் வைத்துக் குறைவில்லாமல் அழுது, தங்கள் அன்போடு, அவரையும் நெருப்பினால் எரித்துப் போக்கிவிட்டுத் தெய்வமாக வைத்துப் படையல் இடுவார்கள்.

விளக்கவுரை

'இறவாதிருந்தால் தான் பெறுவது என்னை?' என்றற்கு முன்னிரண்டு அடிகளைக் கூறினார். வாசந்தி - குருக்கத்தி, இது களவிற்குரிய இடமாக இலக்கியங்களில் குறிக்கப்படும். 'முதற் கண் மிக்க காதலுடையராய் இருந்தார்' என்பது உணர்த்தற்கு இக்களவு முறையை எடுத்தோதினார். 'மணம் புணர்ந்தப் பதி' என்பது பாடம் அன்று. ஆசந்தி- பாடை. 'பாசம்' என்றது, 'பாசம் பரஞ் சோதிக்கு' (தி.*8* திருவெம்பாவை *-2)*
என்பதிற்போல், 'அன்பு' எனப் பொருள் தந்து. 'அன்பு', 'நார்' எனப் படுதலும் உணர்க. 'பாசமும்' என்னும் எச்ச உம்மை தொகுத்தலாயிற்று. அன்பை அறவே விட்டொழிதலை. அச் சுடுதலோடு ஒன்றாக ஒதினார்.

கைவிட்டு நாடிக் கருத்தழிந் தச்சற
நெய்யட்டிச் சோறுண்ணும் ஐவரும் போயினார்
மையிட்ட கண்ணாளும் மாடும் இருக்கவே
மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே. **#151**

உடல் நிலையை நாடியால் ஆய்ந்துணர்வோர் அவ்வாறு ஆய்ந்து கைவிட்டுவிட, அதன்பின் அறிவு அழிந்து, உட லாகிய தேர்க்கு அச்சாய் இருந்த உயிர் நீங்கிவிட, சோற்றை நெய்கலந்து சுவைபட உண்டு வாழ்பவனவாகிய ஐம்பூதக் கூறுகளும் அழிவன வாயின, அப்பொழுது, முன்பு, உடம்பால் தழுவப்பட்டிருந்த மனை வியும், செல்வமும் முன்போலவே இருக்கவும், அவ்வுடம்பு அவர்களை விட்டு

வேறிடத்திற்குப் போக விடைபெறுவதுதான் கண்டது.

விளக்கவுரை

'கண்டது' என்பது சொல்லெச்சம். 'கை விட்டு' என்பதை 'கைவிட' எனத் திரிக்க. உடம்பைத் தாங்கி நடத்துதலின், உயிரை 'அச்சு' என்றார். இஃது ஏகதேச உருவகம்.

'நல்லச்சிற் றம்பலமே நண்ணாமுன் நன்னெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர்' -திருவெண்பா. *1*

என்று அருளினார் ஐயடிகளும், 'நெய்யட்டி உண்டும், மையிட்ட கண்ணாளோடு இன்புற்றும், செல்வத்தால் சிறப்பெய்தியும் நிற்பனவெல்லாம் உடம்பு உள்ள துணையுமே; ஆனால், அவ்வுடம்பு நிலைத்தல் இல்லையே' என்றபடி

பந்தல் பிரிந்தது பண்டாரங் கட்டற்ற
ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தன
துன்புறு காலந் துரிசுற மேன்மேல்
அன்புடை யார்கள் அழுதகன் றார்களே. **#152**

தீய ஊழ் விரைய வந்தமையால், தங்க நிழல் தரும் பந்தல்போல்வதாகிய உடம்பு நிலைகெட்டு விட்டது. அதனால் அதற்குள் கருவூலம் போல இருந்த உயிர், காவலற்றுக் கொள்ளை போகும் நிலையை (யமதூதுவர் கொண்டு செல்லும் நிலையை) அடைந்து விட்டது. பந்தலில் ஒன்பது வாயில்கள் அமைக்கப் படிருந் தன; அவை அனைத்தும் அடைபட்டு விட்டன. அன்புடைய சுற்றத் தார் என் செயவல்லார்! தொடர்ந்து அழுததோடு போய்விட்டனர்.

விளக்கவுரை

இத்திருமந்திரம் பிசிச்செய்யுள். இவ்வாறு வருவன இந்நூலிற் பல உள. பின்வந்த 'சித்தர்' என்போர் இம்முறையைப் பெரிதும் கைக்கொண்டனர். துரிசு, விரைவுப் பொருட்டாகிய, 'துரிதம்' என்பதன் சிதைவு. நிலையாக நிற்கும் இடம் அன்மையால், உடம்பை, 'வழியிலே தங்கும் பந்தல்' என்றார். திருவள்ளுவரும், 'துச்சில்' (திருக்குறள். *340)* என்றார். 'மனைவி முதலாயினார் உண்மையில் அன்புடையர்களாயினும், அவர்களால் நிலையாமை விலக்க ஒண்ணாது' என்றபடி. 'அதனால், இறைவனைத் துணையாகப் பற்றுதலே நன்று' என்பதாம்.

நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகையொன் றேறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே. **#153**

ஒருவன் நமது நாட்டிற்கே தலைவன் தான்; 'அவன் நம் ஊரவன்' என்பதில் நமக்குப் பெருமைதான்; ஆயினும், நடை முறையில் நிகழ்வது, அவனும் காட்டுக்குப் போதற்குரிய ஒரு பல்லக்கின் மேல் ஏறி, நாட்டில் உள்ளோர் பலர் பின்னே நடந்து செல்ல, முன்னே பறைகள் பல கொட்டச் செல்லுகின்ற முறைமைதான்; வேறில்லை.

விளக்கவுரை

'காட்டுச் சிவிகை' என்பது அடைவேறுபடுத்துப் பொருள்புலப்படுத்தல். இதனை, 'வெளிப்படை' (வெளிப்படுத்தல்) என்பர். இங்ஙனங் கூறியது இகழ்ச்சிக் குறிப்பு. 'நிகழ்வது' என்பது சொல்லெச்சம். 'நாட்டுக்கு நம்பி' என்றது, சுட்டளவாய் நின்றது. 'நம்பியும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. 'அரசராயினும் நிலையாமையைக் கடக்கமாட்டார்' என்றதாம்.

முப்பதும் முப்பதும் முப்பத் தறுவரும்
செப்ப மதிலுடைக் கோட்டையுள் வாழ்பவர்
செப்ப மதிலுடைக் கோட்டை சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தார்களே. **#154**

வினையாகிய மதிலால் சூழப்பட்ட உடம்பாகிய உட்கோட்டையில் வாழ்வன் தொண்ணூற்றாறு தத்துவதாத்து விகங்கள். அவை அனைத்தும் அம்மதில் சிதைந்தால் ஒருசேர வைிரய நீங்கும்.

விளக்கவுரை

செப்ப மதில் - செம்மையான மதில். மதில் இன்றிக் கோட்டை இன்மையால், மதில் சிதைதலை, 'கோட்டை சிதைதல்' என்றார். 'தத்துவதாத்துவிகங்களின் காரியமே உடம்பு' என்பதும், காரியம் தோற்றமும், முடிவுமாகிய எல்லைகளை உடையன ஆதலின், உடம்பாகிய காரியம் வினையின் எல்லையையே எல்லையாக உடையது என்பதும், 'அதனால், அவ்வினை நீங்கவே, உடம்பு நீங்கும்; அதனால் நாடும், ஊரும் துணையாகா' என்பதும் கூறியவாறு.

மதுவூர் குழலியும் மாடும் மனையும்
இதுவூர் ஒழிய இதணம தேற்றிப்
பொதுவூர் புறஞ்சுடு காடது நோக்கி
மதுவூர வாங்கியே வைத்தகன் றார்களே. **#155**

எவன் ஒருவனையும் ஊரார் அவன் மனைவியும், செல்வமும், மாளிகையும் ஊரிலே நின்றுவிட, ஒரு நடைப்பரண்மேல் ஏற்றி, ஊர்க்குப் பொதுவாய்ப் புறத்தே உள்ள சுடுகாட்டை நோக்கிச் சுமந்து சென்று, உள்ளத்தில் அன்பு மேம்பட்டு எழ எடுத்து வைத்துவிட்டுப் போவதையே பார்க்கின்றோம்.

விளக்கவுரை

'அதற்குமேல் அவர்களால் என்ன செய்ய இயலும்! ஆகவே, நாட்டுக்கு நாயகனாகியும், ஊருக்குத்தலைமகனாகியும் இருக்க முயல்வதனால் பயன் என்னை' என்பதாம். மது, தேன் போன்ற அன்பு.

வைச்சகல் வுற்றது கண்டு மனிதர்கள்
அச்சக லாதென நாடும் அரும்பொருள்
பிச்சது வாய்ப்பின் தொடர்வுறும் மற்றவர்
எய்ச்சக லாநின் றிளைக்கின்ற வாறே. **#156**

இறந்தவனது உடம்பை ஊரார் கொண்டுபோய்ப் புறங்காட்டில் வைத்து நீங்கியதைக் காணும் பொழுது, என்றும் அச்சுப் போல உடன் இருந்து உதவும் என்று அறிவுடையோர் அறிந்து விரும் புகின்ற அந்த அரிய பொருளாகிய இறைவன் ஒருவனே பேரருள் காரணமாக அவரைப் பின் தொடர்ந்து செல்வான். பிறர் யாவரும் ஒன்றும் செய்யமாட்டாது இளைத்து வருந்துகின்றவர்கள் தாம்.

விளக்கவுரை

'ஆதலின் அவனையே நாடுக' என்பது குறிப் பெச்சம். 'பிச்சு, எய்ச்சு' என்பன, 'பித்து, எய்த்து' என்பவற்றின் சிதைவு.

ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்
வேர்த்தலை போக்கி விறகிட் டெரிமூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதியி லோரே. **#157**

கல்லென்று ஆரவாரித்து எழுகின்ற சுற்றத் தாரும், மனைவியரும், மக்களும் ஆகிய எல்லாரும் ஊர் எல்லையைக் கடந்து அப்பால் வரமாட்டாது அவ்வெல்லைக்குள்ளே நின்றொழி வார்கள். அதன்பின் பிறர், மரங்களை, வேரும் முனையும் போகத் தறித்துக் கொணர்ந்த விறகின் மேல் வைத்து நெருப்பை நன்றாக மூட்டி எரியப் பார்த்துவிட்டு, நீரிலே சென்று தலை முழுகுவார்கள்.

விளக்கவுரை

'காலத்தாலும், இடத்தாலும் கட்டுண்டு கிடக்கும் அவர்களைப் பற்றுவதால் பயனில்லை' என்பதாம். 'கால்' என்றது எல்லை. அயன்மையை 'நீதியின்மை' என்றார்.

வளத்திடை முற்றத்தோர் மாநிலம் முற்றுங்
குளத்தின்மண் கொண்டு குயவன் வனைந்தான்
குடமுடைந் தால்அவை ஓடென்று வைப்பர்
உடலுடைந் தால்இறைப் போதும் வையாரே. **#158**

உலகமெங்கும் குயவர்கள் குளத்திலிருந்து மண்கொணர்ந்து தங்கள்

அகத்தினுள்ளே முற்றத்தின்கண் பல குடங்களைப் பண்ணுகின்றார்கள். அக்குடங்கள் ஆளப்பட்டு உடைந்து விடுமானால், வறுக்கும் ஓடாகப் பயன்படும் என்று அகத்திலே சேமித்து வைப்பார்கள். ஆனால் பண்ணப்படும் முறையால் அக் குடத்தோடு ஒப்பனவாகிய உடம்புகள் சிதைந்தால், நொடிநேரமும் மக்கள் வீட்டில் வைத்திருக்க ஒருப்படார்.

விளக்கவுரை

ஒருப்படாமைக்குக் காரணம், சிதைந்த, உடம்பு பெரிதும் தீ நாற்றம் வீசி, மக்களுக்கு இன்னல் விளைத்துத் தானும் அழுகியொழிவதாய் இருத்தலே. 'அதனால், பின்னர் அத்துணை நெருப்புக்கு முதலாகும் உடலை முன்னரே வெறுத்து உயிர்க்கு உறுதி தேடக் கருதுதலே அறிவுடைமையாம்' என்றவாறு. 'ஓர் குயவன்' இனம் பற்றிய ஒருமை, உயிர் நீங்கியபின், உடல் பலராலும் வெறுக்கப்படும் பொருளாம் என்பதனை,

'கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே' *-தி.5 ப.90 பா.4*

என்று அப்பரும் அருளிச்செய்தார், 'வைப்பர்' என்றும், 'வையார்' என்றும் உறழ்ந்து காட்டிய அதனால், பண்ணப்படும் முறையில் இரண்டும் ஒத்தல் பெறப்பட்டது. படவே, 'உடல்களும் உலகெங்கும் தந்தையது உடம்பினின்றும் ஒரு கூற்றை எடுத்துத் தாயின் வயிற்றில் வைத்து உருப்பெருமாறு படைப்புக் கடவுளால் ஆக்கப்படும்' என்பது கொள்க. இத் திருமந்திரம் வேற்றுமையணி. பின்னிரண்டடிகள் உயிரெதுகை.

ஐந்து தலைப்பறி ஆறு கடையுள
சந்தவை முப்பது சார்வு பதினெட்டுப்
பந்தலும் ஒன்பது பந்தி பதினைந்து
வெந்து கிடந்தது மேலறி யோமே. **#159**

தலைக்கூடைபோல உலகங்களைத் தாங்கி நடத்தும் சிவதத்துவங்கள் ஐந்து; அக்கூடையில் உள்ள பொருள்போல வித்தியா தத்துவம் ஏழும் பிரகிருதி ஒன்றும் ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்தும் ஆகிய பதினெட்டு: ஒரு வீட்டினுள் அமைந்த பல கட்டுக்கள் போல உடலில் ஆறு ஆதாரங்கள்; அக்கட்டுக்களில் அமைந்த அகன்ற முற்றம்போல வாயுக்கள் பத்தும்; நாடிகள் பத்தும், 'காமம் குரோதம் முதலிய குற்றங்கள் ஆறும், நால்வகை வாக்கும் ஆகிய முப்பது; அம்முற்றத்தை மூடிய பந்தல் போல யோனி பேதத்தால் ஒன்பதாகிய மக்கள் உடம்பு, அப்பந்தலில் அமர்ந்து உண்ணும் பந்திபோலச் சத்தாதி ஐந்தும், வசனாதி ஐந்தும், குணம் மூன்றும், இன்ப துன்பங்களாகிய பயன் இரண்டும் ஆகிய பதினைந்து உளவாகி இயங்கின. ஆயினும், உடம்பு வெந்து கிடப்பதையே பார்க்கின்றோம். மற்றவை என்னாயின

என்பதை அறியோம்.

விளக்கவுரை

பறி - கூடை. கடை - வாயில்; கட்டு. 'ஆறு சடை' என்பது பாடம் அன்று. சந்து - வெளி. வாயுக்கள் முதலியவற்றின் இயக்கமே உயிரின் உணர்வு நிகழ்ச்சிக்கு ஏதுவாகலின் அவற்றை நன்கு உலாவும் முற்றம் என்றார். சார்வு - சார்ந்த பொருள். 'சார்வு பதினெட்டு' என்பதனை 'தலைப் பறி' என்றதன்பின்னர்க் கூட்டுக. உண்ணப்படும் (நுகரப்படும்) பொருள்களாகிய சத்தம் முதலியவற்றை உண்பன போலக் கூறினார். இதனால், உடலின் ஆக்கப்பாடும், செயற்பாடும் கூறி, அவை அனைத்தும் நிலையாமை உடையவாதல் உணர்த்தியவாறு.

அத்திப் பழமும் அறைக்கீரை நல்வித்துங்
கொத்தி உலைப்பெய்து கூழட்டு வைத்தனர்
அத்திப் பழத்தை அறைக்கீரை வித்துண்ணக்
கத்தி எடுத்தவர் காடுபுக் காரே. **#160**

அட்டில் தொழில் செய்வார் வறிய குடும்பத் தலைவன் ஒருவனுக்கு அத்திப் பழத்தையும், அறைக் கீரை விதையையுமே திருத்தி உலையில் இட்டு உணவும், கறியுமாக ஆக்கிவைத்தார்கள். அந்த உணவை அக்கறியோடு உண்பதற்கு, வேண்டப்படாத கூரிய கத்தியை எடுத்து அவாவுடன் புகுந்த அத்தலைவன், அதற்குள்ளே சுடுகாட்டை அடைந்தான்.

விளக்கவுரை

'இவ்வாறு விரைய வருகின்றது நிலையாமை' என்பதாம். அத்தி, எலும்பு ஆகலின், அதனிற் பழுத்த பழம் போல்வது பருவுடம்பு (தூல தேகம்). அறைக்கீரை, அறுக்க அறுக்கத் தளிர்த்து வளர்வதாகலின், அதனோடொப்பது, ஒரு பருவுடம்பு நீங்க, வேறு பருவுடம்பைத் தொடர்ந்து தரும் நுண்ணுடம்பு (சூக்கும தேகம்). இதனை, 'காலம் உற்று - நீக்கிட மரம் பின் வேர் ஓர் நீள்மரம் நிகழ்த்துமாபோல்' (சிவஞானசித்தி. சூ. 2. 48) என்றார் அருள் நந்தி சிவாசாரியரும். 'கூழ்' என்னும் பொதுச் சொல்லால் உணவும், கறியும் கொள்ளப்பட்டன. அவ்விருவகை உடம்புகளாலும் உண்டாகும் பயனை அவையேயாகச் சார்த்திக் கூறினார். பருவுடம்பே புறப்பொருளை நுகர்வதாகலின் அதனை உணவாகவும், அதற்குத் துணைசெய்து நிற்பதே நுண்ணுடம் பாகலின் அதனைக் கறியாகவும் உருவகித்தார். கொத்தி உலைப் பெய்து அடுதல் உயிரின் பக்குவத்திற்கேற்ப அமைத்தல். 'உண்ணக் கத்தி எடுத்தவர்' என்றது மாம்பழம், பலாப்பழம் முதலியவை ஆயின் அவற்றை உண்ணக் கத்தி வேணடும்; அத்திப் பழம்; அது தானும் வேவித்த பழம்; அதை

உண்ணக் கத்தி எதற்கு என்னும் குறிப்பினது. 'கத்தி எடுத்தவர்' என்றது, 'இறைவன் திருவருளை நாடியவர்' என்ற தாம். இறைவன் திருவருளைப் பிறவிக் கடலைக் கடத்தற் பொருட்டு நாடுதலே முறை, அதனை விடுத்து, உலகப் பயனைப் பெறுதற்கு நாடுதல் ஏன் என்பது பின்னிரண்டடிகளின் உள்ளுறைப் பொருள்.

'பொற்கொழுக் கொண்டு வரகுக் குழுவதென்
அக்கொழு நீஅறிந் துந்தீபற
அறிந்தறி யாவண்ணம் உந்தீபற' -மெய். திருவுந்தியார் *38*

எனவும்,

'முத்தி முதலுக்கே மோகக் கொடிபடர்ந்
தத்தி பழுத்தென் றுந்தீபற
அப்பழம் உண்ணாதே உந்தீபற' -மெய். திருவுந்தியார் *41*

எனவும் வரும் திருவுந்தியாரையும்

முத்தி முதலுக்கே மோகக் கொடிபடர்ந்
தத்தி பழுத்த தருளென்னும் - கத்தியினால்
மோகக் கொடியறுக்க முத்திப் பழம்பழுக்கும்
ஏகக் கொடிஎழுங்காண் இன்று. -மெய். திருக்களிற்றுப்படியார் *38*

என வரும் திருக்களிற்றுப்படியாரையும் காண்க.

இறைவனை உலகப்பயன் கருதி வழிபடுதல் 'காமிய வழி பாடு' என்றும், பயன் கருதாது வழிபடுதல் 'நிட்காமிய வழிபாடு' என்றும் சொல்லப்படும். அவற்றுள் காமிய வழிபாடு செய்யத் தொடங்கினோர் அது முற்றுப் பெறுதற்குள்ளே வந்து நிலையாமை பற்ற, கருதிய பயனையும் இழந்து மீளப் பிறவிக் கடலுள் மூழ்கலால் அந்நிலையாமையை உணர்ந்து காமிய வழிபாட்டை விடுதல் வேண்டும் என்றபடி 'காமியம் செய்து காலங்கழியாதே' *(தி.5 ப.22 பா.8)* என்று அருளிச் செய்தார் அப்பரும். காமிய வழிபாட்டு முயற்சியின் தன்மையை,

பரப்பமைந்து கேண்மின்இது பாற்கலன்மேற் பூனை
கரப்பருந்த நாடுங் கடன். -திருவருட்பயன், *39*

என விளக்குவர் உமாபதி சிவனார். 'வித்துண்ண'என்றதன் இடை யில் அடுக்கிவந்த இரண்டனுருபு தொகுத்தலாயிற்று.

மேலும் முகடில்லை கீழும் வடிம்பில்லை
காலும் இரண்டு முகட்டலக் கொன்றுண்டு
ஓலையான் மேய்ந்தவ ரூடு வரியாமை
வேலையான் மேய்ந்ததோர் வெள்ளித் தளியே. **#161**

ஓலையால் வேய்ந்த வீட்டை, உடையவர் தாமே செய்யாமல், கூலியாளைக் கொண்டு செய்வித்தமையால் அவனால் செப்பமின்றி வேயப்பட்ட பொத்தற் குடில்போலும் உடம்பிற்கு மேலேயும்

கவிப்பில்லை; கீழேயும் அடிநிலை இல்லை. ஒப்பிற்கு வைக்கப்பட்ட இரண்டு கால்களும், ஒரு நடு விட்டமுமே உண்டு.

விளக்கவுரை

'அஃது எவ்வாறு நீடித்து நிற்கும்? விரைவில் வீழ்ந் தொழிந்தது' என்பது குறிப்பெச்சம். பின்னிரண்டடிகளை முன்னர் வைத்து உரைக்க. பின்னர், 'வேலையான்' என்றலால் முன்னர் 'மேய்ந்தவர்' என்றது உடையவரையாயிற்று. 'மேய்ந்தவர்' என்றது, 'வேய முயன்றவர்' என்றபடி, ஊடு - அத் தொழிலினுள்; இதன் பின், 'புக்கு' என்பது எஞ்சி நின்றது. 'வரியாமையால்' என்னும் உருபு தொகுத்தலாயிற்று. வரிதல் - கட்டுதல். வேலையான் - கூலிக்கு வேலை செய்பவன். காலத்தைக் குறிக்கும் 'வேலை' என்பது, அதனை முதலாகக் கொண்டு நிகழும் தொழிலைக் குறித்தலின், கருவியாகு பெயர். 'கூலி கொடுத்து என்வேலை கொள்வாருண்டோ' (திருவிளையாடல் பு. . மண்சுமந்தது . 18) என்பது முதலிய இடங்களிலும் இவ்வாறு வருதல் காணப்படும். 'வேலையாள் மேய்ந்த' என்று பாடம் ஓதுதலும் ஆம். 'வெள்ளி' என்றதில் ளகர வொற்று, விரித்தல். பொத்தலை 'வெளி' என்றார். தளி - இல்லம். 'வேலையாள் நன்கு வேயாமையால் எடுத்தபொழுதே பொத்தற் கூரையாய்க் கிடந்தது; மற்றும் பல குறைபாடுகளும் உள' என்றதாம். தலையிலும் பிரமந்திரம் (பெருந்துளை) முதலிய புழைகள் இருத்தலின், 'மேலும் முகடில்லை' என்றார். கீழே அடிகள் நிலத்தினுள் ஊன்றாமை வெளிப்படை. 'காலும்' என்ற இழிவு சிறப்பும்மையால், 'அது பெயருக்குக் 'கால்' அன்றி, உண்மைக் கால் அன்று' என்பது போந்தது. இல்லத்திற்குக் 'கால்கள்' எனப்படுவன, நிலத்தினுள் ஊன்றி நிலைத்து நிற்பன வல்லது சகடக் கால் போல உழலுவன ஆகா. 'முகட்டு அலக்கு' என்றது முதுகெலும்பை. அதுவும் நேர் நிற்றல் அல்லது; மேலே குறுக்கிட்டு நின்றிலது. இதனால் அவை ஒப்பிற்கு வைக்கப்பட்டனவல்லது, உண்மையில் வைக்கப் படவில்லை என்றார். 'உடையவர்' என்றது சிவபெருமானையும், 'வேலையாள்' என்றது பிரமனையும், 'உடை யவர் இவ்வில்லத்தை ஓலையால் வேய நினைத்தார்' என்றது 'நிலையாக எடாமல், சிறிது காலத்திற்கு நிற்கவே எடுத்தார்' என்பது குறித்தவாறு. முன்பு 'பந்தல்' என்றதும் இக்குறிப்புத் தோன்றவேயாம். 'சிறிது காலத்திற்கு நிற்க எடுத்ததையும் தாமே செய்யாமல், பிறன் ஒருவனைக் கொண்டு செய்வித்தமையால். குறையுற்றுக் கிடந்தது' என்றவாறு.

இதனால், யாக்கையது இயல்பை உணர வல்லார்க்கு அதனது நிலையாமை எளிதின் விளங்கும் என்பது கூறப்பட்டது.

கூடங் கிடந்தது கோலங்கள் இங்கில்லை

ஆடும் இலயமும் அற்ற தறுதலும்
பாடுகின் றார்சிலர் பண்ணில் அழுதிட்டுத்
தேடிய தீயினில் தீயவைத் தார்களே. #162

கூடம் ஒன்று, முன்பு பல ஒப்பனைகளையும், கூத்துக்களையும் உடையதாய் இருந்தது. இப்பொழுதோ அக்கூடம் மட்டும் உள்ளது; அதில் இருந்த ஒப்பனைகளும், கூத்துக்களும் இல்லாது ஒழிந்தன; ஒழிந்தவுடன் மக்கள் திருப்பாடல்களைப் பண்ணோடு பாடுகின்றவர்களாயும், அழுகின்றவர்களாயும் நின்று, இறுதியில் அக்கூடத்தை, தேடிக்கொணர்ந்த விறகில் மூட்டப்பட்ட நெருப்பில் வேகவைத்துவிட்டார்கள்.

விளக்கவுரை

இதன் உள்ளுறைப் பொருள் வெளிப்படை. காரணத்திற் குரிய தேடப்பட்ட தன்மையைக் காரியத்தின்மேல் ஏற்றிக் கூறினார். இனி, 'தீ' என்றது காரிய ஆகுபெயராய், விறகினை உணர்த்திற்று எனினும் ஆம். 'பண்ணில்பாடுகின்றாராயும், அழுதிட்டும்' என்க.

இதனால், 'யாக்கையது நிலையாமை, ஒரு கண்மாயம் போல வந்து நிற்பது' என்பது கூறப்பட்டது.

முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்
இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்
பட்டது பார்மணம் பன்னிரண் டாண்டினிற்
கெட்ட தெழுபதிற் கேடறி யீரே. #163

அறிவில்லாத மக்களே, தாய் வயிற்றில் முட்டை யாய்த் தோற்றம் எடுத்த உடம்பு, முந்நூறு நாள் காலக் கணக்கில் அங்கே தங்கி வளர்ந்து பின்பு வெளிப்போந்தது. பின் பன்னிரண்டு ஆண்டுக் காலக்கணக்கில் அதற்கு மணவினை என்னும் பேச்சும் உலகத்தில் நிகழ்ந்தது; பின் எழுபது ஆண்டுக் காலக் கணக்கில் செயல் இழந்து கிடந்தது. இவ்வாறு அது ஒவ்வோர் இமையும் அழிவு நெறியிற் சென்று கொண்டிருத்தலை அறிந்திலீர். அதனால் உமக்குத் துணையாக நீவிர் தேடி வைத்துக் கொண்டது யாதும் இல்லை.

விளக்கவுரை

சேமித்தலை 'இட்டது' என்றார். மணவினையைப் பெண்டிர்க்குப் பன்னிரண்டாண்டு அகவையினும், ஆடவர்க்குப் பதினாறாண்டு அகவையினும் நிகழ்த்துதல் பெரும் பான்மை வழக்க மாதலின், எல்லாம் அடங்க, 'பன்னிரண்டாண்டினில் மணம் பட்டது' என்றார்.

எனவே, 'மணம்' என்றதனை இரட்டுற மொழிந்து பெண்டிர்க்கு 'மண வினை' என்றும், ஆடவர்க்கு 'மணம் என்ற பேச்சு' என்றும் பொருள்

உரைத்துக் கொள்க.
சுற்றத்தார் ஆடவர்க்குப் பன்னிரண்டாண்டிற்றானே. 'இவற்கு இன்னாளை வாழ்க்கைத் துணைவி ஆக்கல் வேண்டும்' என வரையறை செய்ய முயலுதல் இயல்பு என்க.
இதனால், உடம்பு, 'காலம்' என்னும் வாளின்வாய்ப்பட்டு இடையறாது அறுக்கப்பட்டு வருகின்றது என்பது கூறப்பட்டது.
நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின். -குறள். *334*
என்றார் திருவள்ளுவ நாயனாரும்.
வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்;
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்;
வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.
என்ற நாலடியார்ச் செய்யுளும் நோக்கத்தக்கது.

இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டால்
முடிஞ்ச தறியார் முழங்குவர் மூடர்
விடிஞ்சிரு ளாவ தறியா உலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே. **#164**

அகல் இருப்பினும், இருளை ஓட்டிப் பொருள் களை விளக்குகின்ற சுடரை அணைத்து விட்டால், அவ்வகலுக்கு உள்ள வாழ்நாள் முடிந்ததாம். (அது போல்வதே உடம்பின் வாழ்நாளும், அஃதாவது, உயிர் உள்ள அளவே வாழ்வும், அது நீங்கிய பொழுதே கேடும் உடம்பிற்கு உளவாகும்.) இதனை அறியாமல் உடம்பையே பொருளாகக் கருதி அறிவில்லாதவர் ஆரவாரிப்பர். பொழுது விடிந்தும் இருளில் கிடத்தலோடு ஒப்ப வழியறியாது தடுமாறும் குருடரைப் போல, மேற்சொல்லிய உடம்பின் இயல்பு கண்கூடாக விளங்கிநிற்கவும் உலகம் அதனை அறியாது உடம்பைப்பற்றிய பற்றில் அழுந்திக் கிடந்து, அதற்கு மேற்குறித்த நிலை வரும்பொழுது துயருறுதல் இரங்கத்தக்கது.

விளக்கவுரை

'விளக்கெரி' வினைத்தொகை. அணைத்தலை, 'கொள்ளுதல்' என்றார். 'கொண்டான்' என்பது பாடம் அன்று. 'முடிஞ்சது, விடிஞ்சு, படிஞ்சு' என்பவற்றில் நகர தகரங்கட்கு ஞகர சகரங்கள் போலியாய்வந்தன. முடிதலுக்கு வினைமுதல் வருவிக்கப் பட்டது. 'விடிஞ்சிருளாவது போல' என உவம உருபு விரிக்க. 'குருடர்க்கு' என்பது ஆற்றலால் கொள்ளக் கிடந்தது. 'உடம்பின் நிலையாமையை அறிதற்குக் காட்சியே அமைவதாகலின், நூல் வேண்டுவதில்லை' என்பதனை நாவுக்கரசர், 'நடலை வாழ்வுகொண் டென்செய்தீர் நாணிலீர்,

சுடலை சேர்வது சொற்பிர மாணமே' *(தி.5 ப.90 பா.4)*
என்று அருளிச் செய்தார்.
இதனால், 'யாக்கை நிலையாமை காட்சியானே விளங்குவது' என்பது கூறப்பட்டது.

மடல்விரி கொன்றையன் மாயன் படைத்த
உடலும் உயிரும் உருவம் தொழாமல்
இடர்படர்ந் தேழாம் நரகிற் கிடப்பர்
குடர்பட வெந்தமர் கூப்பிடு மாறே. **#165**

விடிந்தும் இருளாவது போலப் பெரிதும் அறி யாமையில் கிடப்பவர், சிவபெருமான் படைத்த உடம்பும், உயிரும் கூடிவாழுங் காலத்தில் அவன் படைத்த குறிப்பின்படி அவனது திரு மேனியை வழிபடாமல், வேறு பலவற்றையே செய்திருந்து, அவை பிரியுங்காலத்து, அச்சத்தால் குடர் குழம்பும்படி யமதூதர் வந்து இரைந்து அழைத்துப் பிடித்துச் செல்லும் வழியிலே மிக்க துயரத்துடன் சென்று, ஏழாகச் சொல்லப்படும் நரகங்களில் அழுந்துவர்.

விளக்கவுரை

மாயன் - கள்வன். தோன்றாது மறைந்து நிற்றலின் இவ்வாறு கூறினார். படைத்தலை உயிர்க்கு ஏற்றுங்கால், புணர்த்தலாக உரைக்க. 'இடரொடு' என உருபு விரிக்க. 'நரகம் ஏழு' என்பதற்கு, முதல் நரகம் ஒன்றே ஏழு நரகங்களை உடையதாயிருக்கும் என்னும் கருத்தினாலாம் என்பதே ஆகம நெறியாகலின், 'ஏழ் நரகம்' என்னாது, 'ஏழாம் நரகு' என்றார். மேற்கூறியவாற்றால் நோக்க நரகம் எட்டாகும். அவை, 'இரௌரவம், துவாந்தம், சீதம், வெப்பம், சந்தாபம், பதுமம், மகாபதுமம், காலசூத்திரம்' என்பன. இவற்றுள் இரௌரவமே முதல் நரகம்; ஏனைய ஏழும் கிளை நரகங்கள். இன்னும், 'இவை நரகம்' என்று வைத்து, மற்றும் 'மகா நரகம், இராச நரகம், இராச ராச நரகம் என்று மூவெட்டு நரகங்கள் உள்ளன என அவற்றின் பெயர் முதலியவற்றைச் சிவாகமங்கள் விரித்துக்கூறும். எல்லாவற்றிலும் முதலிற் சொல்லப்படுவன ஒழித்து ஏனைய கிளை நரகங்களாம். 'நரகம் ஏழ்புக நாடின ராயினும்' *(தி.3 ப.49 பா.7)* என்ற ஞானசம்பந்தர் திருமொழியில் எழுந்த 'நரகம் ஏழ்' என்பதற்கும் சிவாகமங்களின் வழி இவ்வாறே பொருள் உரைக்கப்படும். 'மக்கள் உடம்பை உயிர்கட்குச் சிவபெருமான் படைத்துக் கொடுத்தது, தன்னை வணங்குதற் பொருட்டே' என்பதை,
'மானிடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத்தைந்தும் ஆடும் அரன்பணிக்காக அன்றோ'
*(சிவஞான சித்தி. சூ. 2.92)*என்பதனானும் அறிக. 'கொடுத்தவனது குறிப்பிற்கு மாறாகக் கொடுக்கப்பட்ட பொருளைப் பயன்படுத்துதல்

உய்தியில் குற்றமாம்' என்றபடி. இதனால், 'யாக்கை நிலையாமையை உணர்ந்தோர் அஃது உள்ளபொழுதே அதனாலாகும் பயனைப் பெற முயலுதல் வேண்டும்; இல்லாவிடில் இடர் விளையும்' என்பது கூறப்பட்டது,

குடையுங் குதிரையுங் கொற்றவா ளுங்கொண்
டிடையுமக் காலம் இருந்து நடுவே
புடையு மனிதரார் போகும்அப் போதே
அடையும் இடம்வலம் ஆருயி ராமே. **#166**

வாழ்நாளின் இடையாய காலத்தில் அமைச்சர் முதலிய மாந்தர் புடைசூழ, நடுவே வெண்கொற்றக் குடையும். பட்டத்துக் குதிரையும், வெற்றி வாளும் கொண்டு வீற்றிருந்து, அவர்களை விட்டுப் போகும் கடைமுறைக் காலத்தில் உயிர் சென்று அடையும் இடமே அதற்கு வலிமையைத் தருவது.

விளக்கவுரை

எனவே, 'இம்மை வாழ்வைப் பெரிதாக நினையாது மறுமை நோக்கி முயல்க' என்பது கூறப்பட்டதாம். 'இடையும்' என்றது 'இடையதாகின்ற' என்றவாறு, இனி, உம்மையை அசை நிலை யாக்கினும் ஆம், 'புடையும்' என்பதில் உள்ள உம்மை, 'அயலும்' என இறந்தது தழுவிற்று. 'ஆர' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தல், 'இடையும் அக்காலம்' புடையும் மனிதர் ஆர, நடுவே குடையும், குதிரையும், வாளும் கொண்டு இருந்து போகும் அப்போது ஆருயிர் அடையும் இடமே வலம் ஆம்' எனக் கூட்டுக. 'மனிதனார்' என்பது பாடம் அன்று, 'அப்போதே' என்ற ஏகாரம் பிரித்துக் கூட்டப் பட்டது. வலம் - வலிமை.

காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்றுளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டுப் போனஇக் கூட்டையே. **#167**

தோற்பை போன்றதாகிய இவ்வுடம்புள் இருந்து பல தொழில்களையும் செய்து இதனை உண்பிக்கின்ற கூத்தனாகிய உயிர் புறப்பட்டுப் போனபின் வெறுங்கூடு போல்வதாகிய இவ்வுடம் பினைப் பிறர் வாளாதே புறத்தில் எறிந்தமையால் காக்கைகள் கொத்தித் தின்னலும், கண்ணிற் கண்டவர் அருவருத்து இகழ்ந்து பேசு தலும் நிகழ்ந்தால் அதனால் இழக்கப்படுவது தான் யாது! சுற்றத்தார் ஈமக் கடனை நன்கு முடித்துப் பால் தெளித்து அடக்கம் பண்ணப் பலரும் புகழ்ந்து போற்றினாலும் அதனால் பெறப்படு வதுதான் யாது!

விளக்கவுரை

'பெருமை சிறுமைகளும், பேறிழவுகளும் எஞ் ஞான்றும் உயிர்க்கே யன்றி உடம்பிற்கு இல்லை' என்றவாறு, இவ் வுண்மை உணர்த்தற் பொருட்டே இவ்வாறு கூறினமையால், பின்னர்,

அந்தமில் ஞானிதன் னாகம்வெந் தீயினில்
வெந்திடின் நாடெலாம் வெம்பும்வெந் தீயினில்
நொந்தது நாய்நரி நுங்குறி னுண்செரு
வந்துநாய் நரிக்குண வாம்வை யகமே. -தி.*10* ஏழாம் தந்திரம்

என்பதனோடு இது முரணாமை அறிக. அதனானே, உலகியலில் நின்றாரது உடம்பை நல்லடக்கம் செய்தலும் அவரது மறுமை நலன் நோக்கி என்பதும் பெறப்படுவதாம், உடம்பு உயிராகாமை உணர்த் துவார் அதனைக் கூத்தன் புனைந்து கொள்ளும் கோலத்தோடு உவமித் தற்கு, உயிரை, 'கூத்தன்' என்றார். அதனானே, உடம்பும், அது வாயிலாகச் செய்யப்படும் செயல்களும் உயிர்க்கு என்றும் உள்ளன வாகாது, சிறிது காலம் வந்து நின்று நீங்குவனவாதலும் பெறப்பட்டது. 'புறப்பட்டுப் போன' என்றதன் பின், 'பின்' என்பது வருவிக்க. அவ்வாறு வருவியாதவழி, 'இக்கூட்டை' என்றது, உயிர் நீங்கிக் கிடந்த ஓர் உடம்மைச் சுட்டிக் கூறிற்றாக உரைக்க. 'இச்சட்டையை' என்�*%A*

3.6.செல்வம் நிலையாமை

அருளும் அரசனும் ஆனையுந் தேரும்
பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னந்
தெருளும் உயிரொடுஞ் செல்வனைச் சேரின்
மருளும் பினைஅறன் மாதவ மன்றே. **#168**

குடிகளிடத்து இரக்கங்கொள்ளும் நல்ல அரச னாயினும், யானை தேர் முதலிய படைகளையும் செல்வத்தையும் பகையரசர் கொள்ள அவை அவர்பாற் செல்வதற்கு முன்னே வாழ்நாள் உள்ளபொழுதே சிவபெருமானை அடைவானாயின் துன்பம் இல னாவன். இல்லையேல், அவற்றை அவர் கொண்ட பின்னர் துன்பக் கடலில் வீழ்ந்து கரைகாணமாட்டாது அலமருவன், அவன் செய்த அறம் தன் வாழ்நாள் முழுதும் அரசனேயாய் வாழ்தற்கு ஏற்ற பேரறம் என்பது ஒரு தலையன்றாகலின்.

விளக்கவுரை

'அருளும்' என்றது, பெயரெச்சம். 'அரசனும்' என்ற உம்மை உயர்வு சிறப்பு. 'ஆனையும், தேரும்' என்றது உபலக்கணம். 'பிறர்' என்றது பகைவரை. 'தெருளும், மருளும்' என்னும் செய்யுமென் முற்றுக்கள் ஆண்பாலில் வந்தன. தெருளலும், மருளலும் அலமரல் இன்மையையும், அதனை உடைமையையும் குறித்து நின்றன. 'சேரின் தெருளும்' எனவும்,

'பினை மருளும்' எனவும் மாற்றிப் பொருள் கொள்க. 'பின்னை' என்றது வினைமாற்றின்கண் வந்த 'மற்று' என்னும் பொருட்டாய் நின்றது. 'ஆதலின்' என்பது சொல்லெச்சம். 'அவன் மாதவமன்றே' என்பது பாடம் ஆகாமை அறிக. இதனுள், 'சிற்றம் பலமேய செல்வன் கழல் ஏத்தும் செல்வமே நிலையுடைய செல்வம்; *(தி.1 ப.80 பா.5)* பிற செல்வங்கள் அன்ன வல்ல' என்றற்கு நாயனார் சிவபெருமானை இங்கு, 'செல்வன்' எனக் குறித்தமை அறியத்தக்கது.

யானை எருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும் - ஏனை
வினையுலப்ப வேறாகி வீழ்வர்தாம் கொண்ட
மனையாளை மாற்றார் கொள.

என்றார் நாலடி நானூற்றினும்.

இயக்குறு திங்கள் இருட்பிழம் பொக்கும்
துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா
மயக்கற நாடுமின் வானவர் கோனைப்
பெயற்கொண்டல் போலப் பெருஞ்செல்வ மாமே. **#169**

வானத்தில் இயங்குதலைப் பொருந்திய நிலவு நிலைத்து நில்லாமல் இருட்பிழம்பு போல்வதாகிவிடுகின்ற துன்ப நிலையையே உடையது செல்வம் என்பதைச் சொல்ல வேண்டு வதில்லை. (நேற்று அரசனாய் இருந்தவன் இன்று அடியனாயினமை கண்கூடாகப் பலராலும் அறியப்பட்டதே.) ஆதலின், செல்வச் செருக்கில் ஆழ்தலை விடுத்து, துறக்கச் செல்வத்தினரான தேவர் கட்கும் அச்செல்வத்தை அவர்பால் வைத்தலும், வாங்குதலும் உடைய தலைவனாகிய சிவபெருமானை நினையுங்கள்; அவன் தன்னை நினைப்பவர்க்குக் கார்காலத்து மேகம் போலப் பெருஞ் செல்வத்தை ஒழியாமல் தருபவனாகின்றான்.

விளக்கவுரை

இயக்கு - இயங்குதல்; முதனிலை திரிந்த தொழிற் பெயர். பொதுப்பட, 'இயக்கு' என்றமையால், முற்பக்கமாகிய நற்காலம் காரணமாகத் திங்கள் வளர்ச்சியுறுதலும், பிற்பக்கமாகிய தீக் காலம் காரணமாக அது தேய்வுற்று இருட்பிழம்பு போலாவதும் ஆகிய இருதன்மையும் கொள்ளப்படும். படவே, பொருட்கண்ணும், செல்வம் நல்லூழ் காரணமாக வளர்தலும், தீயூழ் காரணமாகக் குறைந்து மறைதலும் ஆகிய இருதன்மைகளும் விளங்குவனவாம்.

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்;
போக்கும் அதுவிளிந் தற்று. -குறள். *232*

எனத் திருவள்ளுவர், செல்வத்தின் ஆக்கக் கேடுகட்கு உண்மைக் காரணமான காலத்தை, அதன்வழி நிகழும் பொதுக் காரணத்தின்வழி

உய்த்துணரக் கூறினமை உணர்க. மேல், 'செல்வன்' எனக் குறிப்பாற் கூறியதனை இதனுட் கிளந்து கூறியவாறு காண்க. செல்வத்தைத் தருபவனை, 'செல்வம்' என்றார்.
இவ்விரண்டு திருமந்திரங்களாலும், 'செல்வம் நில்லாது நீங்கும் இயல்பினது' என்பது கூறப்பட்டது.

தன்னது சாயை தனக்குத வாதுகண்
டென்னது மாடென் றிருப்பர்கள் ஏழைகள்
உன்னுயிர் போம்உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காணொளி கண்டுகொ ளீரே. **#170**

தமது நிழல் தம் வெயில் வெப்பத்தைத் தணித்துக் கொள்ளுதற்கு உதவாமையைக் கண்டுவைத்தும், அறிவிலார், தமது செல்வம் தம் துன்பத்தைப் போக்கிக்கொள்ளுதற்கு உதவும் என்று இறுமாந்திருக்கின்றனர். கருதி உணரப்படுகின்ற உயிர் காணப்படும் உடம்போடே ஒன்றாய்ப்பிறந்தது. ஆயினும், அதுவே உடம்பில் என்றும் நின்று அதனைக் காவாது இடையே விட்டொழிகின்றது. (அங்ஙனமாக வேறாய் இடையே வந்த செல்வமோ நம்மோடு நிலைத்து நின்று நலம் செய்யும்!)
பொருள்களைக் காணும் ஆற்றல் உங்கள்கண்ணில் உள்ளது. அதனைக்கொண்டு நீங்கள் இவற்றை நேரே கண்டுகொள்ளுங்கள்.

விளக்கவுரை

'தன்னது, என்னது' என்றவற்றில் னகர ஒற்று விரித்தல். 'தனது, தனக்கு' என்றவை, பன்மையொருமை மயக் கங்கள். மாடு - செல்வம். 'எனது மாடு' என்றதன்பின், 'எமக்கு உதவும்' என்பது எஞ்சிநின்றது. உன் உயிர், வினைத்தொகை. உயிரை, 'உன் உயிர்' என்றதனால், 'உடல், காணப்படுவது' என்பது பெறப் பட்டது. இவ்வாறு அவ்விரண்டன் தன்மைகளையும் எடுத்தோதியது 'இயைபில், லன ஒரு நிமித்தத்தால் தம்முள் இயைந்தன; அந்நிமித்தம் நீங்கியவழி அவ்வியைபும் நீங்கும்' என்பது உணர்த்தற்கு. நிமித்த மாயது வினை. 'உடலோடு' என உருபு விரிக்கப்பட்டது. 'போம்' என்றதனைப் 'பிறந்தது' என்பதன் பின்னர்க் கூட்டுக. 'ஒக்கப் பிறந்தது போம்' என்றது, 'அவ்வாறு பிறவாதது போதல் சொல்ல வேண்டா' என்றற்கு. 'கண்ணது காணொளி' என மிகுத்துக் கூறியது, 'பிறர் அறிவிக்க வேண்டாது நீங்களே எளிதின் அறிதல் கூடும்' என்றற்கு. தனது நிழல் தனக்கு உதவாமையை எடுத்துக் காட்டியது, தமக்கு உரியது தமக்குப் பயன்படாதொழிதலைத் தெளிவித்தற்காம்.
'வெய்யிற் கொதுங்க உதவா உடம்பின் வெறுநிழல்போல்
கையிற்பொருளும் உதவாது காணுங் கடைவழிக்கே'
-கந்தரலங்காரம்

என்ற அருணகிரி நாதர் திருமொழியும் காண்க.
இதனால், 'செல்வம் நில்லாது; நின்றபொழுதும் உதவுதல் இல்லை' என்பது கூறப்பட்டது.

ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமும்
கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்
ஓட்டித் துரந்திட் டதுவலி யார்கொளக்
காட்டிக் கொடுத்தது கைவிட்ட வாறே. **#171**

ஈக்கள் தேனைச் சேர்த்தற்குப் பூக்களின் மணங் களை அறிந்து அதன் வழியே பூக்களை அணுகித் தேனைச் சேர்த்துக் கொணர்ந்து ஒரு மரக்கிளையில் வைக்குமேயன்றி, அத்தேனைத் தாமும் உண்ணா; பிறர்க்கும் கொடா. ஆயினும், வலிமையுடைய வேடர் அவ் ஈக்களை அப்புறப்படுத்தி மீள வரவொட்டாது துரத்தி விட்டுத் தேனைக் கொள்ள, அவையாதும் செய்யமாட்டாது அத் தேனை அவர்கட்கு உரியதாக்கித் தாம் கைவிட்டுச் செல்வது போன்றதே, தாமும் உண்ணாது, பிறர்க்கும் கொடாது செல்வத்தை ஈட்டிச் சேமித்து வைப்போரது தன்மையும்.

விளக்கவுரை

அஃதாவது, வலியுடையார் புகுந்து தம்மைத் துன்புறுத்தி விலக்கிவிட்டுக் கைக்கொள்ளத் தாம் யாதும் செய்ய மாட்டாது விலகியொழிவர் என்பதாம்.

ஈர்ங்கை விதிரார் கயவர், கொடிறுடைக்கும்
கூன்கைய ரல்லா தவர்க்கு. -குறள். *1077*

என்னும் திருக்குறளால், கீழ்மக்களது செல்வம் அவர்க்கும், சுற்றத்தார் முதலியோர்க்கும் பயன்படாது; வலிமையால் துன்பம் செய்வார்க்கே பயன்படும் என்பது விளங்கும்.

உடாஅதும் உண்ணாதும் தம்முடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார் - கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர்; வான்றோய் மலைநாட,
உய்த்தீட்டுந் தேனீக் கரி. -நாலடியார் *10*

என்ற நாலடி வெண்பாக் காணத்தக்கது. 'ஈட்டிய', வினையெச்சம்.
இதனால், 'செல்வம் கொடுத்தும், துய்த்தும் இன்புறாது இறுகப் பிடித்தவிடத்தும் நில்லாதொழியும்' என்பது கூறப்பட்டது.

தேற்றத் தெளிமின் தெளிந்தீர் கலங்கன்மின்
ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே
மாற்றிக் களைவீர் மறுத்துங்கள் செல்வத்தைக்
கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே. **#172**

அறிவுடையீர், செல்வத்தைத் துணைக்கொண்டு கூற்றுவனை வெல்லுதல் கூடுமோ! கூடாது என்பதனை நன்கு தெளியுங்கள். கலக்கம்

அடையாதீர்கள். உங்களிடத்தில் உள்ள செல்வம் உங்கள் உள்ளத்தையும் உடலையும், ஆற்றுவெள்ளம் தன்னுள் அகப்பட்டவரது உள்ளத்தைக் கலக்கி, உடலைப் புரட்டி ஈர்த்தல்போலச் செய்யாதவாறு அதனைத் தடுத்து நிறுத்தி நீக்குங்கள்.

விளக்கவுரை

'தெற்ற' என்பது நீட்டலாயிற்று. தெற்றத் தெளிதல், நன்கு தெளிதல். 'கலக்கி மலக்கல்' என்பதொரு வழக்கு என்பது, 'கலக்கி மலக்கிட்டுக்கவர்ந்துதின்ன' *(தி.4 ப.1 பா.8)* என்பதனால் அறிக. பெரிதும் கடிந்துரைத்தல் தோன்றச் 'செல்வத்தை' என்றாராயினும், 'செல்வப் பற்றினை' என்றலே, கருத்து என்க. 'ஆமே' என்ற ஏகாரம் எதிர்மறை உணர்த்திற்று. அதனை ஈற்றசையாக்கிக், 'களைந்தால் குதித்தல் கூடும்' என உரைப்பாரும் உளர். இதனால், 'செல்வம் பயன் தருவதாயினும், பெரும்பயன் தருதல் இல்லை' என்பது கூறப்பட்டது.

மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லுங் கலம்போல்
அவிழ்கின்ற ஆக்கைக்கோர் வீடு பேறாகச்
சிமிழொன்று வைத்தமை தேர்ந்தறி யாரே. **#173**

மகிழ்ச்சிக்கு ஏதுவாகிய பல நுகர்ச்சிப் பொருள்களும், கைப்பொருளும் எந்த நேரத்திலும் கவிழத்தக்கதாய் நீரின்மேல் மிதந்து செல்லுகின்ற மரக்கலம் திடீரென ஒருகால் கவிழ்ந் தொழிதலைப்போல விழுந்தொழிகின்ற உடம்பிற்கு ஒரு பேரின்பப் பேறுபோலக் காட்டி, உண்மையில் பெரியதொரு பிணிப்பாக வினை யால் கூட்டுவிக்கப்பட்டிருத்தலை உலகர் அறிந்திலர்.

விளக்கவுரை

'அதனால் அவற்றையே வீடுபேறாகக் கருதி அதன் கண் மயங்கி நின்று அழிகின்றனர்' என்றபடி. மாடு - காசு. செல்வம் - ஏனைய வளங்கள். 'கவிழ்கின்ற கலம்' என இயையும். சிமிழ் - கட்டு. செல்வம் கட்டாதல், ஈட்டல் காத்தல்கள் காரணமாகச் செய்யப்படும் முயற்சிகளாலும், பற்றினாலும் உயிர்க்கு உறுதி நாடுதற்குக் காலம் பெறாதவாறு செய்தல். இம் மந்திரத்துள் மூன்றாம் எழுத்து எதுகை வந்தது. இதனால், செல்வம் தான் நிற்கும் சிறிதுகாலத்திலும் பந்தமாயே நிற்றல் கூறப்பட்டது.

வாழும் மனைவியும் மக்கள் உடன்பிறந்
தாரு மளவே தெமக்கென்பர் ஒண்பொருள்
மேவு மதனை விரிவுசெய் வார்கட்குக்
கூவுந் துணையொன்று கூடலு மாமே. **#174**

ஒத்து வாழ்கின்ற, 'மனைவி, மக்கள், உடன் பிறந்தார்' என்போரும் தம் தலைவரால் தங்கட்குக் கிடைக்கும் பொருள் எவ்வளவிற்று என்றே நோக்கி நிற்பர். அவரால் விரும்பப் படுகின்ற அப்பொருளை மிக ஈட்டுதல் ஒன்றையே செய்து வாழ்நாள் போக்கு வார்க்கு இறுதிக்கண், 'அந்தோ! எம்மைக் காக்க எம்முடன் வருக' என்று அழைத்துச் செல்லும் துணை ஒன்றைப் பெறுதலும் கூடுமோ!

விளக்கவுரை

'மனைவி முதலாயினார் உடன்வரும் துணையாக மாட்டாமை அறிந்து, அவர் பொருட்டாகப் பொருள் ஈட்ட முயலு தலை விடுத்துச் சிவபெருமானை வழிபட்டு வாழின், அவன் துணை யாவான் ஆதலின் அவனையே வழிபடுக' என்பது கருத்து. 'வாழ்வும்' என்பது பாடம் ஆகாமை அறிந்துகொள்க. செல்வத்தை 'ஒண் பொருள்' என்றது, மனைவி முதலானோர் கருத்துப்பற்றி, 'எமக்கு ஒண்பொருள் அளவு ஏது என்பர்' என மாற்றி உரைக்க. 'கூடலும் ஆமே' என்றதற்கு, மேல், 'குதிக்கலும் ஆமே' என்றதற்கு உரைத்த வாறே உரைக்க. ஈண்டும் ஏகாரத்தை ஈற்றசையாக்கி, 'ஒண்பொருள்'; என்றதனைச் சிவபெருமானாகக் கொண்டு, 'ஒண்பொருளாகிய அதனைச் செய்வார்கட்கு' எனக் கூட்டி உரைப்பாரும் உளர். இதனுள் உயிரெதுகை வந்தது.
இதனால், 'உயிர்ச்சார்பாகிய சுற்றத்தாரையும், அவர் தந்நலத்தராதல் நோக்கிப் பொருட் சார்பாகிய செல்வத்தோடு ஒப்ப வைத்துத் துறக்க' என்பது கூறப்பட்டது.

வேட்கை மிகுத்தது மெய்கொள்வார் இங்கிலை
பூட்டுந் தறியொன்று போம்வழி ஒன்பது
நாட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே. **#175**

உயிராகிய பசுவைக் கட்டி வைத்துள்ள தறி ஒன்றே. அது கட்டவிழ்த்துக் கொள்ளுமாயின், ஓடிப்போவதற்கு ஒன்பது வழிகள் உள்ளன. அப்பொழுது செல்வத்தைத் தேடி அதனால் புறந்தரப் பட்ட தாயரும், பிற சுற்றத்தாரும் உடலைச் சூழ்ந்து நின்று, சென்ற உயிரைத் தெய்வமாக வணங்கிப் பின் தம்மைப் புறந்தந்தவர் பால் ஆசை மிக்குளதே ஆயினும், அவர் உடம்பைச் சுடுகாட்டிற்குக் கொண்டு செல்வோரிடம் காட்டிக் கொடுத்துக் கைவிட்ட நிலை உளதாவதன்றி, அவ்வுடம்பைத் தன்னிடமே வைத்துக் கொள்கின்றவர் இவ்வுலகில் ஒருவரும் இல்லை.

விளக்கவுரை

'வேட்கை மிகுத்தது' என்பதை மூன்றாம் அடியின் இறுதியிலும்,'

மெய்கொள்வார் இங்கிலை' என்பதை இறுதிக் கண்ணும் கூட்டி உரைக்க. 'மிகுத்தது' என்பதன் பின் 'ஆயினும்' என்பதும், 'கைவிட்டவாறே' என்பதன்பின் 'உளதாம்' என்பதும் எஞ்சிநின்றன. 'தறி' என்றது உடம்பையும், 'வழி ஒன்பது' என்றது அதில் உள்ள ஒன்பது பெரும்புழைகளையுமாம். பூட்டுதலுக்குச் செயப் படு பொருள் வருவிக்கப்பட்டது.

இதனால், 'தந்நலம் கருதாத சுற்றத்தாராயினும் துணையாக மாட்டுவரல்லர்' என்பதுணர்த்தி, மேலது வலி யுறுத்தப்பட்டது.

உடம்பொ டுயிரிடை விட்டோடும் போது
அடும்பரி சொன்றில்லை அண்ணலை எண்ணும்
விடும்பரி சாய்நின்ற மெய்நமன் தூதர்
சுடும்பரி சத்தையுஞ் சூழகி லாரே. **#176**

உடம்பொடு கூடிநின்ற உயிர், அவற்றிடையே நின்ற தொடர்பை விடுத்து நீங்கும்பொழுது, அதனோடு உடன் செல்லும் பொருள் ஒன்றேனும் இல்லை. அவ்வுயிரை விட்டுத் தனித்து நிற்கும் உடம்பு பின் சுட்டெரிக்கப்படும் பொருளாய்விடும், யம தூதர் அதனையும் உடன்கொண்டுபோக நினைத்தல் இல்லையாதலால். ஆகவே, எல்லாவற்றையும் விடுத்துச் சிவபெருமானை நினையுங்கள்.

விளக்கவுரை

'அடுக்கும்' என்பது இடைக் குறைந்து நின்றது. 'பரிசு' மூன்றும் ஆகுபெயராய் அவற்றை உடைய பொருள்களைக் குறித்தன. 'அதனையும்' என்பது, 'அத்தையும்' என மருவிற்று. அதன்பின், 'கொள்ள' என்பது எஞ்சிநின்றது. 'அத்தையும் நமன் தூதர் சூழகிலாரே' எனக் கூட்டுக.

இதனால், செல்வமும், சுற்றமும் துணையாகாமையைத் தொகுத்துக் கூறி, 'சிவபெருமானை அடைக' என முடித்துக் கூறப்பட்டது.

3.7.இளமை நிலையாமை

கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே. #177

நாள்தோறும், கிழக்கில் அழகிதாய்த் தோன்றிப் பின் வானில் செல்லுகின்ற பேரொளியும் வெப்பமும் உடையதாய ஞாயிறு, பின்பு மேற்கில் வெப்பமும், ஒளியும் குறைந்து சாய்தலைக் கண்ணொளியில்லாத மக்கள் ஒளியில்லாத அக்கண்ணால் கண்டும் காணாதவராகின்றனர். அதுபோல, அகன்ற உலகில் அறிவில்லாதிருக்கும் மக்கள், குழவியாய்ப் பிறந்த பசுக்கன்று அப்பொழுது துள்ளி ஆடிப் பின்பு சில நாளில் வளர்ந்து எருதாகி நன்கு உழுது, பின்னும் சில நாள்களுக்குப் பிறகு கிழமாய் எழமாட்டாது விழுதலைக் கண்ணாற் கண்டும், பிறந்த உடம்புகள் யாவும் இவ்வாறே இளமை நீங்கி முதுமையுற்று விழும் என்பதை அறியாதவராகின்றனர்.

விளக்கவுரை

இஃது எடுத்துக்காட்டுவமை. பிறந்த கன்று வளர்ந்து காளையாய்ப் பின் கிழமாதற்கு ஞாயிற்றின் தோற்றம் செலவு சாய்வு என்னும் இவை ஒருவாற்றான் உவமையாதல் அறிக. தமது இளமை நீங்குதல் அப்பொழுது காட்சிக்கு எய்தாதாயினும், காட்சிக்கு எய்துவதாயகன்றின் இளமை நீக்கமாகிய உவமை யளவையின் வைத்தாயினும் உணர்தலே அறிவுடைமையாம் எனவும், அவ்வாறு உணர்வார் உளராயினும், உணர்ந்த தற்கேற்ப ஒழுகாமையின், அவரும் உணராதவரே எனவும் கூறுவார் இவ்வாறு கூறினார். இனி, இங்ஙனம் எடுத்துக்காட்டுவமையாக்காது, ஞாயிற்றையும், கன்றோடு உடன்வைத்து இரண்டு உவமை அளவை கூறிற்றாக உரைப்பாரும் உளர். 'எருதாய்' எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, 'கன்று' என்று போயினார். வருவித்துரைத்தன பலவும் இசையெச்சங்கள். இதனால், இளமை நிலையாமை காட்சியானே உணரப்படுதலின், அதனையறிந்து தக்கது செய்தல் வேண்டும் என்பது கூறப்பட்டது.

ஆண்டு பலவுங் கழிந்தன அப்பனைப்
பூண்டுகொண் டாரும் புகுந்தறி வார்இல்லை
நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினுந்
தூண்டு விளக்கின் சுடரறி யாரே. #178

மக்கள் பிறந்தபின் சில ஆண்டன்றிப் பல ஆண்டுகள் கழியினும், சிவபெருமானை அறிதலைக் கடனாகக் கொண்டு முயன்று

அறிகின்றவர் யாரும் இல்லை. அவ்வாற்றால் இதுகாறும் நீடுசென்ற
காலங்கள் இனியும் நீடுசெல்லுமாயினும், அவர் அவனை
அறியமுயல்வாரல்லர்.

விளக்கவுரை

'ஆகவே, அவர் இளமை நிலையாமையை அறிவா ரல்லர்' என்பதாம். 'கழிந்தன' என்றதன்பின், 'எனினும்' என்பது வருவிக்க.
பூண்டுகொள்ளுதல், கடனாக மேற்கொள்ளுதல். 'நீண்டன' என்றது வினைப்பெயர். காலம் ஒன்றாயினும், நாள், திங்கள், யாண்டு முதலிய பாகுபாட்டால் பலதிறப்படுதலின், 'காலங்கள்' எனப் பன்மையாற் கூறினார். 'கொடுக்கினும்' என்ற உம்மை, எதிர்மறை. 'பேரொளி உடையவன்' என்பார், சிவபெரு மானை, 'தூண்டடப்பட்ட விளக்கின் ஒளி' என்றார். 'தூண்டு சுடரனைய சோதி கண்டாய்' *(தி.6. ப.23. பா.1)* என அப்பரும் அருளிச் செய்தல் காண்க.
இதனால், உலகரது அறியாமை கூறுதல்போல, ஆண்டு தோறும் இளமை கழிந்து செல்லுதல் கூறப்பட்டது.

தேய்ந்தற் றொழிந்த இளமை கடைமுறை
ஆய்ந்தற்ற பின்னை அரிய கருமங்கள்
பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை
ஓர்ந்துற்றுக் கொள்ளும் உயிருள்ள போதே. **#179**

சிறிது சிறிதாகத் தேய்ந்து முடிகின்ற இளமைப் பருவம், கடைசியில் மிக
நுணுகி முடிந்துவிட்டபின்பு செயல்கள் யாவும் செய்தற்கரியனவாய்
ஒழியும். (யாதொன்றும் செய்ய இயலாது என் பதாம்.) ஆதலால், நன்கு
இயங்கத்தக்க இளமை உள்ளபொழுதே சிவ பெருமானது பெருமையை
ஆய்ந்துணர்ந்து உள்ளத்திற் கொள்ளுங்கள்.

விளக்கவுரை

துணிவு பற்றி, 'ஒழிந்த' என இறந்த காலத்தாற் கூறினார். அற்ற கங்கை - அடங்கிய கங்கையை உடைய. முதுமைக் காலத்தில் உயிர் செயலற்றுப்போதலின், அது செயலாற்றுதற்குரிய இளமைப் பருவத்தையே, 'உயிருள்ள போது' என்றார். இதனால், முதுமைக் காலம் யாதொரு பயனையும் தாராத தாகலின், இளமை நிலையாமையை மறக்கலாகாமை கூறப்பட்டது.

விரும்புவர் முன்னென்னை மெல்லியல் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போல்
அரும்பொத்த மென்முலை ஆயிழை யார்க்குக்
கரும்பொத்துக் காஞ்சிரங் காயும்ஒத் தேனே. **#180**

முன்னெல்லாம் என்னை இளமங்கையர் கரும்பைப் பிழிந்து பயனாகக்

கொண்ட அதன் சாறுபோலப் பெரிதும் விரும்புவர். இப்பொழுதோ அவர்கட்குக் கரும்புபோல் நின்ற யானே காஞ்சிரங்காய்போல (எட்டிக்காய்போல) நிற்கின்ற நிலையையும் காண்கின்றேன்.

விளக்கவுரை

இது, முதுமை எய்தி, அதனால் நாணமும், துயருங் கொண்டு வருந்துவான் ஒருவனது கூற்றாகச் சொல்லப் பட்டது. இதன் பயன், 'இளையராயினார் பலரும் இளமைக்காலத்தே உயிர்க் குறுதியைத் தேடிக்கொள்ளாராயின், பின்னர் இவ்வாறு வருந்துதல் அன்றிப் பிறிதொன்றும் காணார்' என்பது உணர்த்துதல். திருநாவுக்கரசர்,

'தளையவிழ் கோதை நல்லார் தங்களோ டின்பமெய்த
இளையது மல்லேன் எந்தாய், என்செய்வான்தோன்றினேனே '
-தி.4 ப.78 பா.9

என்று அருளிச்செய்ததும் மேற்காட்டியவாறு, இளமையிலே பயன் பெறாது முதுமையில் துன்புறுதல்கருதி இரங்கியதேயன்றிப் பிறி தில்லை என்பது வெளிப்படை. அங்ஙனமாகவும், 'அவரும் மகளிரின் பத்தை இழந்தமையை எண்ணிக் கழிவிரக்கங்கொண்டார்' எனத் தமக்கு வேண்டியவாறே உரைத்து, எரிவாய் நிரயத்தைத் தேடிக்கொள் வாரும் உளர். 'முன்விரும்புவர்' என்றது இயற்கைக்கண் வந்த கால வழுவமைதி. 'முன்' என்றதனால், 'இது பொழுது' என்பது போந்தது. முடிவில் உளதாதல் பற்றிப் பயனை, 'கடை' என்றார். 'கடையாக' என ஆக்கம் வருவிக்க. 'நீர்போல் விரும்புவர்' என மேலே கூட்டி முடிக்க. மூன்றாம் அடி, 'அவர்க்கு' என்னும் அளவாய் நின்றது. 'கரும் பொத்து' என்றது வழிமொழிதல் (அனுவாதம்). அதனால், 'அந் நிலையை உடையனாய் இருந்தயானே, இந்நிலையை எய்தினேன்' என்பது பெறப்பட்டது. இதனால், இன்பச் செருக்கும் இளமையோடே ஒழிதல் கூறப்பட்டது.

காலி னோடு கைகளும் தளர்ந்து காம நோய்தனால்
ஏல வார்கு ழலினா ரிகழ்ந்து ரைப்ப தன்முனம்
மாலி னோடு நான்முகன் மதித்த வர்கள் காண்கிலா
நீல மேவு கண்டனார் நிகழ்ந்த காழி சேர்மினே.*-தி.2 ப.97 பா.9*

எனத் திருஞானசம்பந்தரும், இன்பச் செருக்கு இவ்வாறொழியும் என்று அருளிச்செய்தார். இன்னும் அவர்,

நிலைவெ றுத்தநெஞ்ச மோடு நேசமில் புதல்வர்கள்
முலைவெ றுத்த பேர்தொடங்கி யேமுனிவ தன்முனம்
தலைப றித்த கையர் தேரர் தாம்தரிப் பரியவன்
சிலைபிடித் தெயிலெய்தான் திருந்து காழி சேர்மினே.
-தி.2 ப.97 பா.8

என முதுமைக் காலத்தில் புதல்வர், பெயரர் என்பவராலும் வெறுக்கப்

படுதலை அருளுதல் காண்க.

பாலன் இளையன் விருத்தன் எனநின்ற
காலங் கழிவன கண்டும் அறிகிலார்
ஞாலங் கடந்தண்டம் ஊடறுத் தானடி
மேலுங் கிடந்து விரும்புவன் நானே. **#181**

ஒன்றாய் நின்ற வாழ்க்கைக் காலம், 'குழவி, இளமை, முதுமை' என்னும் பருவ வேறுபாட்டால் முத்திறப்பட்டு ஒவ் வொன்றாய் பலவும் கடந்தொழிதலைக் காட்சியிற் கண்டு வைத்தும், உலகர் அவற்றை நினைகின்றிலர். (எனக்கோ அக்காலக் கழிவினால் பேரச்சம் உண்டாகின்றது.) அதனால், நான் இந்நில வுலகையே அன்றி இதற்குமேல் உள்ள அண்டங்கள் பலவற்றையும் ஊடறுத்துக் கடந்து அப்பால் நிற்கின்ற சிவபெருமானது திருவடி என்னைத் தன்கீழ் வைத்திருந்தும், பிறிதொன்றை விரும்பாமல் அதனையே விரும்புவேன்.

விளக்கவுரை

'பாலன்' முதலிய மூன்றும், அப்பருவத்தையே குறித்து நின்றமை அறிக. தம் செய்தியைக் கூறியது நிலையாமையால் தமக்கு உளதாய அச்சத்தினை உணர்த்து முகத்தான் அறிகிலாதவரது அச்ச மின்மை குறித்தற் பொருட்டாதலின், அது வருவித்துரைக்கப் பட்டது.

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவலம் இலர். -குறள். *1072*

எனத் திருவள்ளுவரும் அறிவிலாதாரது யாதும் அறியாநிலையை எடுத்து உள்ளுறையாக இகழ்ந்தோதினார். 'அடி, மேல்கிடந்தும்' என உம்மை மாற்றி உரைக்கப்பட்டது. 'பிறிதொன்றைச் சிறிது விரும்பினும் அது பிறப்பிற்கு ஏதுவாம்' என்பது கருத்து. அதனை, ஆலாலசுந்தரரது வரலாறு நன்கு உணர்த்துதல் காண்க. இதனால், 'இளமை நிலையாமை நோக்கிக் கவலாமை அறிவிலாதாரது இயல்பு' என்பது கூறப்பட்டது.

காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்
மாலை படுவதும் வாழ்நாள் கழிவதும்
சாலும்அவ் வீசன் சலவிய னாகிலும்
ஏல நினைப்பவர்க் கின்பஞ்செய் தானே. **#182**

நாள்தோறும் காலையில் துயில்விட்டு எழுந்த மக்கள், மீண்டும் நாள்தோறும் மாலையில் துயிலுதலும், இவ்வாறே அவர் தம் வாழ்நாள் ஒவ்வொன்றாகக் கழிந்து முடிதலும் போதும். (இனியும் இவை நிகழ வேண்டுவது என்னோ!) சிவபெருமான் இவ்வாறு அவர்களை இவ்விரண்டனுட் படுத்துத் துன்புறுத்துகின்ற முனிவினனாயினும், தன்னை மிக நினைத்த பலர்க்கு இன்பத்தைத் தந்துள்ளான்.

விளக்கவுரை

'நித்தலும்' இரண்டனுள் முன்னதனை முதலிற் கூட்டுக. 'சாலும்' என்றது, 'அதனால் பயனில்லை' என்றவாறு. 'இச் சலவியன்' எனச் சுட்டு வருவித்துரைக்க. சலம் - சினம்; அது மறைத்தற் சத்தியாம். 'முற்சினமருவுதிரோதாயி' என்றார் சிவப்பிரகாசத்தினும் *(48)*. மிக நினைத்தலாவது, இளமைதொட்டே நெடுங்காலமாக நினைத்தல்.

'பவன் எனும் நாமம் பிடித்துத் திரிந்து
பன்னாள் அழைத்தால்
இவன் என்னைப் பன்னாள் அழைப்பொழியான் என்று
எதிர்ப்படுமே' -தி.*4* ப.*112* பா.*9*

என அப்பரும்,

அரங்கமாய்ப் பேய்க்காட்டில் ஆடுவான் வாளா
இரங்குமோ எவ்வுயிர்க்கும் ஏழாய் - இரங்குமேல்
என்னாக வையான்தான் எவ்வுலகம் ஈந்தளியான்
பன்னாள் இரந்தாற் பணிந்து. -தி.*11*அற்புதத் திருவந்தாதி *78*

எனக் காரைக்கால் அம்மையாரும் சிவபெருமானைப் பன்னாள் வழிபடுதலை வலியுறுத்து ஓதுதல் காண்க. இதனால், 'இளமை நீங்குதற்கு முற்றொட்டே சிவபெருமானை நினைக' என்பது கூறப்பட்டது.

பருவூசி ஐந்துமோர் பையினுள் வாழும்
பருவூசி ஐந்தும் பறக்கும் விருகம்
பருவூசி ஐந்தும் பனித்தலைப் பட்டால்
பருவூசிப் பையும் பறக்கின்ற வாறே. **#183**

நூலால் தைக்கும் நுண்ணூசிபோலாது, சணற்புரியால் தைக்கின்ற பருவூசிகள் ஐந்தும் ஒரு சணற்பைக்குள் இருக்கின்றன. அவை பருவூசியாயினும் பறக்கும் தன்மை வாய்ந்த யானைகளாம். அத்தன்மையவான அவை மெலிவடையுமாயின், அவை தங்கியுள்ள பையும் பறக்கின்ற தன்மையை உடையதாகிவிடும்.

விளக்கவுரை

பொருள்களை அறியும் அறிவுடைப்பொருள் உயிரே யாகலின் அதனை, 'நுண்ணூசி' என்று வைத்து, அதற்கு வாயி லாய் நிற்றலின் தாமே அறிவுடையனபோலத் தோன்றுகின்ற ஐம்பொறி களைப் 'பருவூசி' என்றார். 'பை' என்றது உடம்பை. அறியு மாற்றால், 'ஊசி' எனத்தக்க ஐம்பொறிகள் தாமே அடங்காது புலன்கள் மேற் செல்லுமாற்றால் 'யானை' எனப்படுமாகலானும், 'அவ்வாற்றால் அவை யானை எனப்படினும், புலன்களைச் சென்று பற்றும் விரைவு பற்றிப்

பறவையாகவும் கூறுதற்கு உரிய' என்பார், 'பறக்கும் விருகம்' என்றார். விருகம் - 'மிருகம்' என்பதன் சிதைவு. 'பல்விருகமாகி' *(தி.8 சிவபுராணம்)* எனத் திருவாசகத்தினும் வந்தது. 'மிருகம்' என்றது ஏற்புழிக் கோடலால் யானையாயிற்று. 'ஆக மதத்தன ஐந்து களிறுள' *(தி.10 -5 ஆம் தந்திரம்).* என்பது போல ஐம்பொறிகளை யானையாக உருவகித்தல் பெரும்பான்மை யாதல் அறிக. பனித் தல் - நடுங்கல்; தளர்ச்சி. பொறிகள் புலன்களைக் கவரும் ஆற்றலை இழப்பின் உடல் இறந்ததோடு ஒக்குமாதலின் 'பரு வூசி ஐந்தும் பனித் தலைப் பொருந்தினால் பையும் பறந்தது போல்வதே' என்றார். எனவே, 'அவைமெலிதலாகிய முதுமை வருதற்கு முன்னே ஈசனை நினைக' என்பதாம்.
இதனால் 'இளமையது நீக்கம் உடல் நீக்கத்தோடு ஒக்கும்' என அதனது இன்னாதநிலை கூறப்பட்டது.

கண்ணனுங் காய்கதி ரோனும் உலகினை
உண்ணின் றளக்கின்ற தொன்றும் அறிகிலார்
விண்ணுறுவா ரையும் வினையுறு வாரையும்
எண்ணுறும் முப்பதில் ஈர்ந்தொழிந் தாரே. **#184**

திருமாலும், பகலவனும் உலகத்தை அதன் உள்ளி ருந்தே அளக்கின்றதை உலகர் சிறிதும் நினைக்கின்றிலர். நினைப் பாராயின், அவ்விருவரும் வீடுபேற்றிற்கு உரியவரையும், பிறப்பிற்கு உரியவரையும் முறையே முப்பதுயாண்டு அகவையிலும், அறுபது யாண்டு அகவையிலும் இவ்வுலகத்தினின்றும் பிரிக்கின்றவராவார்.

விளக்கவுரை

'திருமால் உலகத்தை அதன் உள்ளிருந்து ஈரடியாலே அளந்தான் என்பதனை என்றோ ஒரு காலத்து நிகழ்தொழிந்த நிகழ்ச் சியாக எண்ணுதல் கூடாது; என்றும் நிகழ்வதாகவே எண்ணல் வேண்டும்; ஏனெனில், அக்கதையின் உட்பொருள், அவன் காத்தற் கடவுளாதலின், உயிர்கள் பிறக்கும் இடங்களிலெல்லாம் சென்று காத்தற்பொருட்டு அவ்விடங்களைத் தன்னுள் ஓர்ந்துணர்கின்றான் என்பதே ஆதலின்' என்பது நாயனார் கருத்து. அதனால், உலகத்தைத் திருமால் இடவகையாலும், பகலவன் கால வகையாலும் அளக்கின்ற வராதல் அறிக. இப்பொருள் உணரமாட்டாதார் 'கண்ணனும்' என்னும் பாடத்தை, 'கண்ணதும்' என ஓதுப.
'எண்ணுறும் முப்பது' என்றதற்கு, 'முதல் முப்பது. இரண்டா வது முப்பது' மூன்றாவது முப்பது என்று இவ்வாறு எண்ணப் படும் முப்பது' என உரைக்க. இவற்றுள் முதல் முப்பதாண்டிற்குள்ளே கல்வி அறிவு ஒழுக்கங்களால் நிரம்பி, நிலையாமை உணர்வுபெற்று நின்றாரை; 'இனி இவர் உலகருள் ஒருவராகவைத்து எண்ணற் பால ரல்லர்' எனவும்,

அங்ஙனம் அவ்வுணர்வு பெறாதாரை அறுபதாண்டு வரையும் கண்காணித்து நின்று, அத்துணை ஆண்டுகள் கழிந்த பின்ன ரும் நிலையாமை உணர்வு வரப்பெறாதவரை, 'இனி இவர் இவ்வுலகத் தில் வாழ்ந்தும் வாழ்நாள் முடிந்தவரேயாவர்' எனவும் காத்தற் கடவுள் துணிந்தொழிதலின், அவ்விருதிறத்தாரும் அவ்வவ் ஆண்டளவில் அக்கடவுளால் உலகத்தினின்றும் பிரிக்கப்படுவோராதல் அறிக. காய்கதிரோன் காத்தற் கடவுளது துணிவிற்குக் கருவியாய் நிற்றல் பற்றி, அவனையும் அக்கடவுளோடு ஒப்பவைத்து எண்ணினார்.
பதினாறாண்டில் மணவினை முடிக்கப்பெற்று முப்பதாண்டின் காறும் உலகியலில் ஈடுபட்டிருப்பினும், கட்டிளமைக் காலம் முப்ப தாண்டோடு முடிவுறுதலின், அதற்குள்ளே நிலையாமை உணர்வு பெறாதொழியின் அதன் பின்னர் அதனைப் பெறுதல் ஐயமேயா தலின், 'இவர் வீடு பெறுதற்கு உரியார்' எனக் காத்தற்கடவுள் துணிதற்கு அவ் யாண்டே எல்லையாயிற்று.
இனி, முப்பதாண்டிற்கு மேலாய் அறுபதாண்டின்காறும் செல்லும் காலம், 'இவர் இத்தன்மையாராவர்' என்னுந் துணிவினைப் பயவாது ஐயத்தையே தந்து நின்று, அதன்பின் நிலையாமை உணர்வு வருதல் பெரும்பான்மையும் இல்லையாதலின், 'இனி இவர்க்கு நிலையாமை உணர்வு வாராது' என்று துணிதற்கு அவ்யாண்டே எல்லையாயிற்று. அறுபதாண்டின் காறும் பற்று விடப்பெறாதவர் பின் விடப்பெறுதல் பெரும் பான்மை இல்லை என்பதே ஆன்றோரது துணிபு. திருநாவுக்கரசு நாயனார்போல அறுபது யாண்டின் பின்னரும் மெய்யுணர்வு பெறுதல் இறைவன் திருவருள் தானே முன்நிற்க நிகழும் அருஞ்செயல் என்க. அது பற்றியன்றே, அந்நாயனார் இறைவன் தம்மை ஆட்கொண்ட நிலையைப் பெரிதும் சிறப்பித்துப் புகழ்கின்றார். இக்காலத்து உள நூலாரும், 'அறுபதுயாண்டின் பின்னர் ஒருவர்க்கு மனமாற்றம் உண்டாகாது' என்பர்.
முப்பதாம் ஆண்டளவில் மூன்றற் றொருபொருளைத்
தப்பாமல் தன்னுட் பெறானாயின் - செப்பும்
கலையளவே யாகுமாம் காரிகையார் தங்கள்
முலையளவே யாகுமாம் மூப்பு. -நல்வழி என ஔவையாரும், 'மூவாசை நீங்கி மெய்ப்பொருளைப் பெறுதல் முப்பதாண்டிற்குள் உண்டாகவில்லையெனின், பின்னர் உண்டாதல் அரிது' என்றது காண்க.
இங்கு, 'முப்பது' என்றது கதிரளவை (சௌரமான) யாண் டேயாம். மதியளவை (சாந்திரமான) யாண்டு கதிரளவை யாண்டிற்குச் சிறிது ஏறக்குறைய நாற்பது நாள்கள் குறைவுடையது. இனிப்பிற கோள்

அளவைகள் மிகக் குறைந்தும், கூடியும் நிற்கும். அதனால் கதிர ளவையின் பத்துத் திங்களைப் பல்கோள்களின் பொதுயாண்டாக வைத்து, அவற்றின் பேராட்சி, உள்ளாட்சிகளை (திசா புத்திகளை)க் கணக்கிடுவர். அவ்வாற்றால் பலகோள் யாண்டின் ஒரு வட்டம், 'நூற் றிருபதுயாண்டு' எனப்படுகின்றது. எனினும், அது கதிரளவையின் நூற்றியாண்டேயாம். ஆகவே, மக்களின் நிறைவாழ்நாள் 'நூற்றியாண்டுக் காலம்' என்றல் இழுக்காதல் இல்லை. இஃது அறியாது இக்காலத்தார் கோள்களின், பேராட்சி உள்ளாட்சியாண்டுகளைக் கதிரளவையாண்டின் வைத்துக் கணக்கிட்டு, நடைமுறைக்குப் பொருந்தாவகை செய்கின்றனர். அது நிற்க.

சிலர், 'இங்குக் கூறிய முப்பதிற்றுயாண்டு பல்கோள் யாண்டே; அதனால் அவை கதிரளவையில் இருபத்தைந்துயாண்டே யாகலின், ஒருவனது வாழ்நாள் எல்லையாகிய நூற்றியாண்டினை நாற் கூறிட்டு ஒவ்வொரு கூற்றினும் முறையே மாணி (பிரமசாரி), இல்வாழ் வான் (கிருகத்தன்), நோன்பி (வானப்பிரத்தர்) துறவி (சந்நியாசி) என்னும் நிலைகளை உடையனாதல் வேண்டும். இந்நிலை களில் நான் காம் நிலையிலே பற்றறுதி உளதாகும். இவ்வாறன்றி முதல் நிலைக் கண்ணே பற்றறுதி உடையனாய் நிலைமாணி (நைட்டிக பிரமசாரி) யாகி வீடுபேறு ஒன்றையே விரும்பி நிற்பவனே தலையாய மகனாகலின், அவனது நிலைபற்றியே முப்பது யாண்டு மெய்யுணர்வு பெறுதற்கு எல்லை எனப்பட்டது 'எனவும், 'அவ்வாறின்றி மேற்கூறிய வாற்றால் இல்வாழ்க்கை முதலிய நிலைகளை மேற்கொண்டு செல்வார்க்கு யாக்கை நிலைநிற்றலும், பற்றறுதலும் ஒருதலையன் மையின், அவற்றை வீடுபேற்றிற்குரிய காலமாக ஆன்றோர் கொண்டிலர்' எனவும் கூறுவர். அவையெல்லாம் ஒக்குமாயினும், முதல் நிலைக்கண்ணே பற்றற்று நிலைமாணிகளாய் நிற்போர் உலகத்து அரியராகலானும், இல்வாழ்க்கைக்குப் பின்னர் நோன்பியாய் இருத்தல் வேண்டும் என்பதும், முப்பதுயாண்டு இல்வாழ்க்கையில் நிற்றல்வேண்டும் என்பதும் பொதுவாகக் கொள்ளப்படுவனவன்றிக் கட்டளையல்ல ஆகலின், பற்றறுதி உண்டாய வழி அறுபதிற்றி யாண்டிலாயினும், அதற்கு முன்னராயினும் முற்றத் துறத்தல் குற்றமன்று ஆகலானும். அறுபதிற்று யாண்டின் பின்னரே நோன்பின ராதல் வழக்கின்கட் காணப்படுதலாலும், 'முப்பதுயாண்டு' என் பதனைக் கதிரளவை யாண்டாகக் கொள்ளுதலே பொருந்துவது என்க.

அஃது அவ்வாறாக, சிலர் நூற்றியாண்டின் மேலும் வாழக் காண்கின்றோம் ஆதலின், 'மக்கள் வாழ்நாள் எல்லை நூற்றியாண்டு' என்றல் எவ்வாறு பொருந்தும் எனின், அவையெல்லாம் கையிலும்,

காலிலும் சிலர் ஆறுவிரல், ஏழுவிரல் பெற்றுப் பிறத்தல்போல அரிதிற் காணப்படுவனவாகலின், பொதுமுறைமை ஆகா என்க. இவ் வாற்றால் இத்திருமந்திரம் முப்பதிற்றுயாண்டளவையாகிய இளமையின் சிறப்பை உணர்த்தி, அதற்குள்ளே சிவனது திருவடி உணர்வைப் பெறல்வேண்டும் என வலியுறுத்து முகத்தால், இளமை நிலையாமையைக் கூறியவாறு அறிக.

ஒன்றிய ஈரெண் கலையும் உடனுற
நின்றது கண்டும் நினைக்கிலர் நீசர்கள்
கன்றிய காலன் கருங்குழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே. **#185**

பதினாறு கலைகளும் ஒருசேர வந்து நிரம்பப் பெற்ற நிறைமதி, பின்பு சிறிது சிறிதாகத் தேய்ந்து மறைவதைப் பார்த்திருந் தும், 'இளமை நிலையாது' என்பதைக் கீழ்மக்கள் நினைக்கின்றார்கள் இல்லை. (அதன் பயனாக அவர்கள் இளமையுள்ள பொழுதே உயிர்க்கு உறுதி தேடிக் கொள்ளாமையால்) அவர்களது தீவினை பற்றிச் சினங் கொள்கின்ற கூற்றுவன் அவர்களை நரகக் குழியில் தள்ளிய பின்பு அதில் சென்று வீழ்ந்து துன்புறுதலைத் தவிர, அத் துன்பத்தினின்றும் நீங்கும் வழியை அவர் அறியமாட்டுவாரல்லர்.

விளக்கவுரை

'ஈரெண்கலை' என்றதனால், *'அதனை ஒருங்கு பெற்று நின்றது திங்கள்'* என்பது விளங்கிற்று, *'நின்றது'* என்றது அதன் நிலைமையைக் குறித்த ஆகுபெயர். *'கருங்குழி'* என்றது *'இருட்குழி'* என்றவாறு. *'கருக்குழி'* எனப் பாடம் ஓதுதல் இவ் இடத்திற்கு ஏலாமை அறிக.

இதனால், இளமை சிறிது சிறிதாகக் கழியும் முறைமை உவமையில் வைத்துக் காட்டப்பட்டது.

'தேய்தல் உண்மையும், பெருகல் உண்மையும்,
மாய்தல் உண்மையும், பிறத்தல் உண்மையும்
அறியா தோரையும் அறியக் காட்டித்
திங்கட் புத்தேள் திரிதருள் உலகத்து'

என்னும் புறநானூற்று *(27)* அடிகள் இதனோடு ஒருவாற்றான்வைத்து ஒப்புநோக்கத் தக்கன.

எய்திய நாளில் இளமை கழியாமை
எய்திய நாளில் இசையினால் ஏத்துமின்
எய்திய நாளில் எறிவ தறியாமல்
எய்திய நாளில் இருந்துகண் டேனே. **#186**

மக்களுக்கென்று பொருந்திய நூற்றியாண்டின் எல்லைக்கு இடையே கூற்றுவன் வந்து அதனை அறுத்துச் செல்லுதலைப் பலர் அறியாது

வாழ்ந்து, அக்கூற்றுவன் வந்தபொழுது துயருற்றமையை நான் எனது வாழ்நாளில் பன்முறை கண்டிருக் கின்றேன்; ஆதலால், வாழ்தல் பொருந்திய நாளில் இளமை நீங்கும் முன்பே அது பொருந்தி நிற்கின்ற நாட்களில் சிவபெருமானைப் பண்ணினால் பாடித் துதியுங்கள்.

விளக்கவுரை

'பலரும் முதுமைவந்த பிறகுதான் இறப்பர்' என்ற கட்டளை இன்மையால், இளமையிலே சிவனைப் பெறுதல் வேண்டும்' என்றபடி. 'அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க'
என்று திருக்குறளிலும் *(36),*
மற்றறிவாம் நல்வினை யாம் இளையம் என்னாது
கைத்துண்டாம் போழதே கரவா தறம்செய்மின்
முற்றியிருந்த கனியொழியத் தீவளியால்
நற்காய் உதிர்தலும் உண்டு.
என்று நாலடி நானூற்றிலும் *(பா.19)* கூறப்பட்டமை காண்க.
இதனால், இளமை நிலையாமையை உணர்ந்து இளமைக் கண்ணே சிவனைப்பெற முயலல் வேண்டும் என்பது முடித்துக் கூறப்பட்டது.

3.8.உயிர் நிலையாமை

தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்
இழைக்கின்ற தெல்லாம் இறக்கின்ற கண்டும்
பிழைப்பின்றி எம்பெரு மானடி ஏத்தார்
அழைக்கின்ற போதறி யாரவர் தாமே. **#187**

தண்ணிய பூங்கொம்பில் தளிர், தழை, பூ முதலாக அதனால் தோற்றுவிக்கப்படுகின்ற பலவும் அங்ஙனம் தோற்றுவிக்கப் பட்டவாறே நில்லாது உருமாறி அழிகின்றதைக் கண்டும் அறிவில்லா தவர், ஆசிரியர் உண்மையைச் செவியறிவுறுத்துச் சிவபெருமானது திருவடியை அடைய அழைக்கின்ற பொழுதே அவரது சொற்கடவாது அதனையடைதற்கு முயலாது, 'பின்பு முயல்வோம்' என்று புறக்கணித் திருப்பர்.

விளக்கவுரை

'அவ்வாறிருப்பின், அவ்வுணர்வு முறுகி எழாது மெலிந்து, முன்போல உலகியலில் ஆழ்ந்து கெடும்' என உணர்வினது நிலையாமை கூறியவாறு காண்க. ஒன்றே செய்க; நன்றே செய்க; நன்றும் இன்றே செய்க' என, 'நல்லன செய்தல் வேண்டும் என்ற உணர்வு உண்டாய வழி அப்பொழுதே செய்தல் வேண்டும்' எனக் கூறுதலும், உணர்வு நிலையாமையை நோக்கியேயாம். இன்னும், 'புராண வைராக்கியம், மசான வைராக்கியம்' முதலியவற்றாலும் உணர்வு நிலையாமையைக் கூறுப. 'மலர்தலும் கூம்பலும் இல்ல தறிவு' *(குறள் - 425)* என்றாற்

போல்வனவற்றாலும் திருவள்ளுவர் உணர்வு நிலையாமையை உணர்த்தினார்.
'நின்னைஎப் போதும் நினையலொட் டாய்; நீ நினையப்புகின்,
பின்னை அப் போதே மறப்பித்துப் பேர்த்தொன்று நாடுவித்தி'
-தி.4 ப.112 பா.4.
என்றதனாலும் இவ்வுணர்வு நிலையாமை நன்கறியப்படும். உயிர் உளதாகவும் உணர்வு இவ்வாறு நிலையாது போதலின், அதற்குக் கொம்பு கேடின்றி நிற்கவும் அதன்கண் உளவாகின்ற தளிர் முதலியன உருமாறிக் கெடுதல் உவம அளவையாயிற்று. தளிர் முதலியன தோன்றுதல் இயல்பாயினும், அதற்குக் கொம்பு முதலாத லின் அதனால் ஆக்கப்படுவனவாகக் கூறினார். இழைத்தலுக்குக் காலத்தை முதலாக வைத்து உரைப்பினும் அமையும். பிழைப்பு - பிழைத்தல்; பிழை செய்தல். அஃதாவது அழைத்தவாறே உடன்பட்டுச் செல்லாதொழிதல்.
நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில். -குறள். 833
என்பவற்றில் இது, 'பேணாமை' என்னும் குற்றமாம்.
'அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி அருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே'
-தி.8 போற்றித் திருவகவல் -75-77
என மாணிக்கவாசகரும் அருளிச்செய்தார். எம்பெருமானடியை ஏத்த அழைப்பவர் ஞானாசிரியரேயாதல் அறிக. வேறு தொடராக்காது. 'அறியாரவர்தாம், அழைக்கின்றபோது பிழைப்பின்றி எம்பெரு மானடி ஏத்தார்' எனக் கூட்டி உரைக்க.
இதனால், உணர்வு நிலையாமை உவம அளவையின்வைத்து உணர்த்தப்பட்டது.

ஐவர்க் கொருசெய் விளைந்து கிடந்தது
ஐவரும் அச்செய்யைக் காத்து வருவர்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்யைக் காவல்விட் டாரே. **#188**

உடையான் ஒருவனால் ஐவர் உழவர்க்கு ஒரு நிலம் விளைவு செய்ய விடப்பட்டது. அவ் ஐவரும் அதனை நன்றாகவே பேணி வந்தமையால், அந்நிலமும் நன்றாகவே விளைவைக் கொடுத் தது. ஆயினும், உடையான் அந்நிலத்தை மாற்றக் கருதி அவர்களை விலகுமாறு ஓலை விடுத்தமையால், அவ் ஐவரும் அந்நிலத்தைக் கைவிட்டனர்.

விளக்கவுரை

'அந்நிலையில் அந்நிலம் விளைவைத் தருதல் எவ்வாறு' என்பது

குறிப்பெச்சம். ஐவர், ஐம்பொறிகள், செய், உயிர், விளைதல், உணர்வு நிகழப்பெறுதல். நாயகன், சிவன். ஓலை, ஆணை; நியதி தத்துவத்தின் செயல். 'காவல் விட்டார்' என்ற அளவே கூறினமையின், 'பொறிகள் ஆற்றல் அடங்கின' என்ற அளவே கொள்க. உயிர் உளதாகவும் பொறிகள் அடங்கின் உணர்வு ஒழிதல் காட்சியானே உணரப்படுதலின், ஒரு பொறியன்றி ஐம்பொறியின் வயப்பட்டு நிற்கும் உணர்வு ஒரு நிலையதாதல் எவ்வாறு' என்பது கருத்து. ஓர் உணர்வு ஐம்பொறியின் வயப்பட்டுப் பலவாறாகச் சிதறுண்டலால் வரும் துன்பத்தினை மாணிக்கவாசகர்,

'ஆனைவெம் போரில் குறுந்தூறெனப் புலனால் ஆலைப் புண்டேன்'

எனவும்,

'எறும்பிடை நாங்கூ ழெனப்புல னால் அரிப்புண்டலந்த
வெறுந்தமியேன்' தி.8 நீத்தல் விண்ணப்பம் - *21,25.*

எனவும் விளங்க ஓதினார். இன்னும்,

'அஞ்சினால் இயற்றப் பட்ட ஆக்கைபெற் றதனுள் வாழும்
அஞ்சினால் அடர்க்கப் பட்டிங் குழிதரும் ஆதனேன்'
-தி.4 ப.26 பா.5

என அப்பரும்,

'ஐவர் கொண்டிங் காட்ட ஆடி ஆழ்குழிப்பட்டழுந்து வேனுக்கு
உய்யு மாறொன் றருளிச் செய்யீர் ஓண காந்தன் தளியுளீரே'
-தி.7 ப.5 பா.1

என ஆரூரரும் அருளிச்செய்தலும் காண்க.

பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு
அறிவென்ற பேர்நன் றற. -திருவருட்பயன் - *15.*

என்றதும் உயிர் உணர்வு தன்வயமுடைத்தாய் நிலை நில்லாமை பற்றியேயாம்.

'ஒருபுலன் நுகரும் போதங் கொன்றிலை; ஒன்றன் பாலும்
வருபயன் மாறி மாறி வந்திடும்; எல்லாம் மாறும்
ஒருபொழுது'

என்னும் சிவஞான சித்தி (சூ. *2.94)*ச் செய்யுள் இவ்வுணர்வு நிலையாமையை இனிது விளக்குதல் காண்க.

இதனால், உணர்வு நிலையாமை, இறுதிக்கால நிகழ்ச்சியாகிய காட்சியின் வைத்து உணர்த்தப்பட்டது.

மத்தளி ஒன்றுளே தாளம் இரண்டுள
அத்துள்ளே வாழும் அமைச்சும்அஞ் சுள்ளன
அத்துள்ளே வாழும் அரசனும் அங்குளன்
மத்தளி மண்ணாய் மயங்கிய வாறே. **#189**

பெரிய அரண்மனை ஒன்றிலே மேல் கீழ்த் தளங்கள் இரண்டு உள்ளன. அந்த அரண்மனைக்குள்ளே வாழ்கின்ற அமைச்சர் ஐவரும், அரசன் ஒருவனும் உளர். அவர்கள் அதன் உள்ளே இருக்கும் பொழுதே அந்த அரண்மனை கால்சாய்ந்து மண்மேல் விழுந்துவிட, அவர்கள் கலக்கம் எய்தியவாறு வியப்பாகின்றது.

விளக்கவுரை

'மத்தளம் ஒன்றோடு கூடிய தாளம் இரண்டு உள்ளன என்பதொரு நயம்தோன்றுதற் பொருட்டு, 'மகத் தளி, தளம்' என்ப வற்றை, இடைக் குறைத்தும், முதல் நீட்டியும் கூறினார். மத்தளத்தை 'மத்தளி' என்றலும் பொருந்துவதே; இகரம் பகுதிப்பொருள் விகுதி. மத்தளம் ஒன்றாய் நின்றே ஓசைதர, தாளம் இரண்டாய் நின்றே ஓசை தருவது என்பதும் குறித்தவாறு. இவ்வாறு சொல்லளவால் பிறிது பொருள் தோற்றுதலையும் ஒட்டணியின்பாற் படுத்துவர். மகத்தளி - பெரியகோயில்; அரண்மனை; உடம்பு மேல்கீழ்த்தளம் புருவ நடுவும், மூலாதாரமும். அமைச்சர் ஐவர், ஐம்பொறிகள். 'அரசரும்' என்பது பாடம் அன்று. அரசன், உயிர். அது மூலாதாரத்துச் சென்று ஒடுங்கும் நிலையில் எல்லாக் கருவிகளும் செயலற்றுப் போக, உயிர்ப்பும் இல் லையாய், உடல் மண்மேல் சாய்ந்து கிடக்கும். இந்நிலையை 'மூர்ச்சை' என்பர். 'கேவல துரியா தீதம்' என்பதும் இதுவே. இஃது இறப்பு அன் றாகலின், 'அரசனும் அமைச்சரும் உள்ளிருக்கும் பொழுதே அரண் மனை சாய்ந்தது வியப்பு' என்றார். சாக்கிரம் முதலாக இவ் வதீதங்காறும் உள்ள அவத்தைகள் ஐந்தும் வினைவழி உயிர்க்கு உளவாவனவாம். 'மண் ஆய்' என்பதில் 'மண்ணின்கண் ஆகி' என உருபு விரித்து, 'ஆய்' என்றதை, 'ஆக' எனத் திரிக்க. ஆதல், இங்கு, பொருந்துதல். மயங்குதலுக்கு வினைமுதல் அமைச்சரும் அரசனும். 'வியப்பு' என்பது சொல்லெச்சம். இதனால், உணர்வு நிலையாமை, அதீதநிலை நிகழ்ச்சியாகிய காட்சியின் வைத்து உணர்த்தப்பட்டது. மேற்காட்டிய, 'ஒருபுலன் நுகரும்போது' என்ற சிவஞானசித்தி *(பா.187. உரை)*ச் செய்யுளில், 'எல்லாம் மாறும் ஒருபொழுது' என்றதில், 'ஒருபொழுது' எனப்பட்டது இவ்வதீத நிலையேயாதல் அறிக.

வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத் துள்ளே விளையாடு நந்தியை
வேங்கடம் என்றே விரகறி யாதவர்
தாங்கவல் லாருயிர் தாமறி யாரே. **#190**

இங்ஙனம் பல்லாற்றாலும், உடம்பு உள்ள பொழுதும் உணர்வு நிலையாமையை உணர்ந்து, பின், உணர்வுக்குக் கருவியாயுள்ள உடம்பும் அடியோடு நிலையாது போதலை நினைந்து உள் இருந்து

நடத்தும் இறைவனை ஞானத்தால் உணரமாட்டாதவர் தம் உயிரைத் தாங்கி நிற்கின்ற அரிய உயிரையும் அறியாதவரே யாவர்.

விளக்கவுரை

வேம் கட நாதன் - வேகின்ற காட்டில் (சுடுகாட்டில்) ஆடும் கடவுள். இனி, 'வேங்கடமலைமேல் உள்ள நாதன்' என வேறொரு பொருளும் தோன்றக் கூறினமை காண்க. 'வேங்கடத்து மேயானை மேவா உயிரெல்லாம் - வேங்கடத்து நோயால் வியந்து' (*தி.11.* கபிலர் அந்தாதி *15)* என வருதலின், வேங்கடம் சிவதலமாதல் பெறப்படும். வேம் கடத்துள்ளே - வெந்தொழிவதாகிய நம் உடம்பினுள்ளே. இறைவன் நமது புலாலுடம்பினுள்ளும் உளனாதல் மேலே *(தி.10* பா*.115 - 116)* காட்டப்பட்டது. வேம் கடம் என்று - வெந்தொழியும் உடம்பு என்று அறிந்து. விரகு - உபாயம்; உபாயத்தால், என உருபு விரிக்க. 'தாங்க வல்லதாகிய ஆருயிர்' என்க. 'உயிரை அதற்கு உயிராய் நின்று யாண்டும் காத்தலின்' இறைவனை, 'தாங்க வல்ல ஆருயிர்' என்றார். 'தன் கடன் அடியேனையும் தாங்குதல்' *(*தி. *5.* ப*.19.* பா*.9)* எனவும், 'எடுத்துச் சுமப்பான்' *(*திருவருட்பயன் *55)* என்றும் வருவனவும், இறைவன் உயிரைத் தாங்குவோனாதலை விளக்க எழுந்தனவாம். தாங்கவல்ல ஆருயிரை அறியாமையாவது, 'அவ்வுயிரே, தாங்கப்படுகின்ற உயிர்க்கு உணர்வைத் தருவது' என அறியாமை. 'அறிந்தால், தமது உணர்வு நிலையாமை உடையது என்பது விளங்கும்' என்பது கருத்து. 'சிவன் உயிர்க்குயிராய் நின்று உணர்த்தாவிடில், உயிருக்கு உணர்வு நிகழாது' என்பதனை,

அக்கரங்கட் கெல்லாம் அகரஉயிர் நின்றாற்போல்
மிக்க உயிர்க்குயிராய் மேவினோம் - எக்கண்ணும்
நில்லா விடத்துயிர்க்கு நில்லா தறிவென்று
நல்லாகமம் ஓதும் நாடு.
-உண்மை விளக்கம் *30*

என்பதனான் அறிக.

'நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்' -தி*.6* ப*.62* பா*.2*

என அருளிச்செய்ததும் இதனை.

இதனால், உணர்வு உளதாகுமாறு கூறு முகத்தான், அதனது நிலையாமை கூறப்பட்டது.

சென்றுணர் வான்திசை பத்துந் திவாகரன்
அன்றுணர் வால்அளக் கின்ற தறிகிலர்
நின்றுண ரார்இந் நிலத்தின் மனிதர்கள்
பொன்றுணர் வாரிற் புணர்க்கின்ற மாயமே. **#191**

பகலவன் பத்துத் திசைகளையும், ஓடி உழன்று தனது ஒளியினால் காண்கின்றான். ஆனால், சிவபெருமான், அப் பகலவன் உண்டாதற்கு முன்னிருந்தே அனைத்தையும் தனது முற்றுணர்வால் கண்டு நிற்கின்றான். அதனையும், அவன் அனைத்துலகத்தும் உள்ள நிலையாத உணர்வை உடைய உயிர்களிடத்துக் கூட்டுவிக்கின்ற மாயப்பொருள்களின் தன்மையையும் இந்நிலவுலகத்தில் உள்ள மக்கள் ஆராய்ந்துணர்கின்றார்களில்லை.

விளக்கவுரை

ஒளி காரணமாகப் பகலவனை இறைவனோடு உவ மித்தல் வழக்காதல் நோக்கி இறைவன் அவனினும் மிக்கவனாதலை விளக்கினார். இங்ஙனம் அவனது முற்றுணர்வின் பெருமையை எடுத்துக்கூறியது, அவ்வறிவாற்றலால் அவன் அனைத்துயிர்களையும் தன் இச்சைவழி நடாத்துகின்றான் எனக் கூறுதலை நிறுவுதற் பொருட்டாம். 'அன்று' என்பதன்பின் 'முதல்' என வருவிக்க. அளக் கின்றதற்கு வினைமுதலாகிய 'நந்தி' என்பது மேலைத் திருமந்திரத் தினின்றும் வந்து இயைந்தது. 'அறிகின்றிலர், உணரார்' என இரு தொடராக வைத்து அருளியது, 'அவ்விரண்டும் தனித்தனி ஆய்ந் துணரத் தக்க சிறப்புடையன' எனறற்கு. 'இந்நிலத்தின்' எனச் சுட்டிக் கூறினமையால், ஏனையிடத்தில் அனைத்துலகமும் கொள்ளப் பட்டன. மூன்றாம் அடியை இறுதியின் வைத்து உரைக்க. பொன்றுதல், இங்கு, நிலையாமை. 'உணர்வார்' என்பது, 'உணர்வு' என்பதன் அடியாகப்பிறந்த பெயர். அனைத்துயிர்களையும் உயர்திணையாக வைத்துக் கூறினார் என்க. மாயம் - அழிவு. சிவன் பெத்தத்தில் கருவிகள் வாயிலாக நிலையாத உணர்வையே உயிர்கட்கு உண்டாக் குகின்றான் என்பதை உணர்வார்க்கு உணர்வினது நிலையாமையும் விளங்கும் என்பது கருத்து.

இதனால், உணர்வு நிலையாமைக்குக் காரணங் கூறுமுகத்தால், அந்நிலையாமை வலியுறுத்தப்பட்டது.

மாறு திருத்தி வரம்பிட்ட பட்டிகை
பீறும் அதனைப் பெரிதுணர்ந் தாரிலை
கூறும் கருமயிர் வெண்மயி ராவதும்
ஈறும் பிறப்புமொ ராண்டெனும் நீரே. **#192**

பாவும், உண்டையுமாக மாறிக் கூடும் இழைகளை நன்கு செப்பம் செய்து ஆக்கி விலைவரம்பு செய்கின்ற பட்டாடைகள் என்றும் அவ்வாறே இருப்பதில்லை: என்றாயினும் நைந்து கிழிவதை அனைவரும் காண்கின்றனர். அதுவன்றியும் குறிக்கப்படுகின்ற ஒரு நாளை ஓர்யாண்டின் முடிவாகவும், மற்றொரு நாளை அடுத்த ஆண்டின்

தொடக்கமாகவும் கொண்டு ஒவ்வொரு வர்க்கும் கழிகின்ற ஆண்டுக் கணக்கே அவர்க்கு 'விரைவில்' நரை வரும்' என்பதை அறிவிக்கும். அவையெல்லாம் இருந்தும் மக்கள், 'தம் அறிவும் ஆற்றலும் இன்றுள்ளவாறே என்றும் இருக்கும்' என்று மகிழ்ந்திருக் கின்றனர். இன்னதோர் அறியாமை இருந்தவாறு இரங்கத் தக்கது!

விளக்கவுரை

மாறு, முதனிலைத் தொழிற்பெயர். அஃது ஆகு பெயராய், அதனை உடையவற்றைக் குறித்தது. \"கூறும்' என்பதனை மூன்றாம் அடியின் இறுதியிற் கூட்டி, அவ்வடி முழுவதையும் இறுதியின் வைத்து உரைக்க. 'ஈற்றினாலும்' பிறப்பினாலும்' என்னும் உம்மைகள் தொகுத்தலாயின. 'ஓர்யாண்டின் இறுதிநாளை அடுத்த மற்றோர் யாண்டின் முதல்நாள் தொடங்கிவிடுகின்றது' என அவற்றின் இடையறாமையை உணர்த்தற்கு ஈற்றினை முன்னர்க்கூறினார். 'அதனைப் பெரிதறிவாரில்லை' என்னும் அத்தொடரினைப் பின்னும், \"கூறும்' என்பதனுடன் கூட்டுக. இளமைக் காலத்துள்ள உணர் வாற்றல் முதுமைக் காலத்துத் தளர்ச்சியுறும் என்றவாறு.

இதனால், உணர்வு நிலையாமை மூப்பினது இழிவுணர்த்து முகத்தால் கூறப்பட்டது.

துடுப்பிடைம் பானைக்கும் ஒன்றே அரிசி
அடுப்பிடு மூன்றிற்கும் அஞ்செரி கொள்ளி
அடுத்தெரி யாமற் கொடுமின் அரிசி
விடுத்தன நாள்களும் மேற்சென் றனவே. **#193**

ஓர் அகப்பையே இடப்பட்ட ஐந்து பானைகள் அடுக்காய் உள்ளன. அவை அனைத்திலும் இட்டு அடப்படுகின்ற அரிசி ஒன்றே உள்ளது. அப்பானைகளை ஏற்றிவைக்கின்ற அடுப்புகள் மூன்று உள. அம்மூன்று அடுப்பிலும் மாட்டி எரிக்கின்ற விறகுகள் ஐந்து உள்ளன. இதனால் அவ்வரிசி நன்முறையில் அடப்படுமோ! படாது. அதனால், அவைகளில் வைத்து அவ்வரிசியை அட நினையாமல், நல்ல அட்டில் தொழிலாளனிடம் கொடுங்கள்; கொடுத்தால் நன்கு அட்டு உண்ணலாம். முன்சொன்ன வகையில் அரிசியை அடலாம் என்று நினைத்துக் கழித்த நாள்களும் பலவாய் முன்னே போய்விட்டன. இனியேனும் அவனிடம் அவ்வரிசியை விரையக் கொடுங்கள்.

விளக்கவுரை

'உயிர் உணர்வு சிவனைச் சார்ந்தால் நிலை பெற்று இன்பந் தருமேயல்லது, மாயாகாரியங்களைச் சார்ந்தால் நிலை பெறாது துன்பத்தையே தரும்' என்பது உணர்த்துதற்கு இவ்வாறு கூறினார்.

துடுப்பு, உயிர்; அரிசி, அதன் உணர்வு; ஐந்து பானை, ஐந்து உடம்பு; மூன்று அடுப்பு, 'இறப்பு, நிகழ்வு, எதிர்வு' என்னும் மூன்று காலங்கள்; ஐந்து விறகு, ஐம்பொறிகள். இவை இங்ஙனம் உருவகிக்கப் பட்டமைக்குரிய இயைபுகளை ஓர்ந்துணர்ந்துகொள்க. இங்குச் சொல்லப்பட்ட பானை முதலியவற்றால் அடுதல் தொழில் நிகழ லாகாமை அறிக. 'எரியாமல்' என்பது, பிறவினை வினையெச்சம். 'விடுத்தனவாகிய நாள்களும்' என்க. 'துடுப்பிடு பானைக்கும்' என்பது பாடம் அன்று. நல்ல அட்டில் தொழிலாளன், சிவன். ஐந்துடம் பாவன, 'சோற்றுடம்பு, காற்றுடம்பு, உளத்துடம்பு, உணர்வுடம்பு, களிப் புடம்பு' என்பன. இவை முறையே, 'அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம்' எனப்படும். இவற்றின் இயல்பு அப்பால் விளங்கும்.

இதனால், மாயா காரியங்களின் வேறுபாட்டால் உணர்வு நிலையாமை உடைத்தாதல் கூறப்பட்டது.

இன்புறு வண்டிங் கினமலர் மேற்போய்
உண்பது வாச மதுபோல் உயிர்நிலை
இன்புற நாடி யிளைக்கிலு மூன்றொளி
கண்புறம் நின்ற கருத்துள்நில் லானே. **#194**

தேனை விரும்புகின்ற வண்டு அதனை உண்பது மலரிடத்தே சென்று அதன்கண் வீழ்ந்தேயாம். உயிரினுடைய நிலைமையும் அத்தன்மையதே. அஃதாவது, இன்பத்தை விரும்புகின்ற உயிர் அதனைப் பெறுவது சிவனை அடைந்து அவனிடத்து அடங்கி நிற்கும் பொழுதேயாம். வண்டு தேனை உண்ண விரும்பிப் பிற இடங்களில் ஓடியிளைப்பினும் அது கிடையாததுபோல, உயிரும் இன்பம் பெற விரும்பிப் புறக்கண்வழி ஓடி இளைப்பினும் அங்ஙனம் ஓடுகின்ற உயிரில், அன்பின்ஊன்ற உள்ளெழும் சோதியாகிய (தி.12 பெ. பு. திருஞான - 835) சிவன் விளங்கமாட்டான். 'எனவே, இன்பம் கிட்டாது' என்பதாம்.

விளக்கவுரை

இங்ஙனமாகவே அகக்கண்ணில் நின்ற உயிர் உணர் விற்கு விளங்குவானாயிற்று. இனமலர் - கூட்டமாய மலர். இஃது ஒரு மைக்குப் பன்மை உவமை. வாசம் - வசித்தல்; 'வாசத்தால்' என்னும் உருபு தொகுத்தலாயிற்று. \"போல்' என்னும் முதனிலை முற்றுப் பொருளது. பொருட்கண். 'இன்புற நாடி நினைக்கிலும் - கண்புறம் நின்ற கருத்துள் நில்லானே' எனப் பின்னுங்கூறி விரித்தமையால், உவமைக்கண்ணும் அவ்வாறு விரித்துரைக்கப்பட்டது. நினைக்கினும் என்பது பாடம் அன்று. 'கட்புறம்' என்பது, எதுகை நோக்கி மெலிந்து நின்றது. இது, 'புறக்கண்' என்பதன் நிலைமாற்றம்.

இதனால், உணர்வு நிலையாமை, அதன் மறுதலை முகத்தால் கூறப்பட்டது. கண், ஞானமுமாம்.

ஆம்விதி நாடின் அறஞ்செய்மின் அந்நிலம்
போம்விதி நாடின் புனிதனைப் போற்றுமின்
ஆம்விதி வேண்டும தென்சொலின் மானிடர்
ஆம்விதி பெற்ற அருமைவல் லார்க்கே. **#195**

மக்களாய்ப் பிறக்கின்ற ஊழைப் பெற்ற அருமை அறியவல்லார்க்கு மேலும் உயர்வடைகின்ற நெறி இன்றியமை யாதது. அஃது என்ன என்பதைச் சொல்லுமிடத்து, இவ்வுலகில் மீளவும் பிறந்து உயர்ந்து நிற்கின்ற நெறியை விரும்புவீராயின், பசுபுண்ணியத்தைச் செய்யுங்கள். அவ்வாறின்றிச் சிவலோகத்திற் சென்று சிவானந்தத்தை அடைகின்ற நெறியை விரும்புவீராயின், சிவபெருமானை வழிபடுத லாகிய சிவபுண்ணியத்தைச் செய்யுங்கள்.

விளக்கவுரை

'மானிடர் ஆம் விதி பெற்ற அருமை வல்லார்க்கு ஆம் விதி வேண்டும்; அது என் சொலின்' என எடுத்துக்கொண்டு உரைக்க. ஈரிடத்தும் 'நாடி' எனவும் பாடம் ஓதுப. 'நாம் விதி வேண்டும்' என ஓதுதல் பாடம் ஆகாது, பின்னர் 'அந்நிலம்' என்றதனால், முன்னர் 'இந்நிலம்' என்பது பெறப்பட்டது. 'வல்லார்க்கு வேண்டும்' என்றது வேறு முடிபாகலின், \"செய்மின், போற்றுமின்' என்பன இடவழு ஆகாமை அறிக.

அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்
வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்விய னாகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்விகொ டுமின் தலைப்பட்ட போதே. **#196**

வாய்ப்பு நேரும்பொழுது அது கிடைத்துவிட்ட தென்று புறங்கூறிப் பாவத்தைத் தேடிக்கொள்ளாதீர்கள். தீக்குணம் உடையாராய்ப் பிறர் பொருளைக் கள்ளாதீர்கள். நற்பண்பு உடையாராய் உயர்ந்து, உண்ணும்போது சிறிதாயினும் பிறருக்குக் கொடுத்து உண்ணுங்கள்.

விளக்கவுரை

'இந்நெறியில் நின்றால் நிலையாமை நீங்கி இன்பம் பெறலாம்' என்பது குறிப்பெச்சம். அவ்வியம் - பெறாமை. அது, \"பேசி' என்றதனால், அதனால் வரும் புறங்கூற்றைக் குறித்தது. \"வெவ்வியர், செவ்வியர்' என்பன இடவழுவமைதி. 'வெவ்வியன், செவ்வியன்' என்பன பாடமாயின், பன்மை ஒருமை மயக்கமாகவும் கொள்க. தவ்வி - சிறிது. \"யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி' எனப் பின்னரும் அருளுவார். 'செவ்வி தலைப்பட்ட போது' என ஒரு சொல் வருவித்து

முதலிற் கூட்டுக. 'தவ்விக் கொடுண்மின்' என்பது பாடமன்று. இவ்விரண்டு திருமந்திரங்களாலும், 'உணர்வு நிலை யாமையை உணர்ந்து நிலைபெறுதற்குரிய நெறியில் நிற்றல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

3.9.கொல்லாமை

பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்
நற்றார் நடுக்கற்ற தீபமுஞ் சித்தமும்
உற்றாரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே. **#197**

மெய்யுணர்வு நிலைபெறுதற்குத் துணையாய குருவழிபாட்டிற்கும் பல மலர்களால் தொடுக்கப்பட்டமாலை முதலியவை இன்றியமையாதனவே. ஆயினும், சிறப்புடைய மாலை பிற உயிர்களைக் கொல்லாமைகள் பலவும் இயைந்த பண்பே. இன்னும் சிறப்புடைய அசையா விளக்கு ஒருதலைப் பட்ட மனமும், இலிங்கம் இருதயத்தில் பொருந்தி நிற்கும் உயிராகிய ஒளியின் முனையுமாம்.

விளக்கவுரை

'குருபூசைக்கும்' என்ற உம்மை, 'சிவ பூசைக் கேயன்றி' என, இறந்தது தழுவிற்று. 'பன்மலர்' என்பதன்பின், 'வேண்டும், ஆயினும்' என்பவற்றை வருவித்து, 'ஒண்மலர் நல் தார் கொல்லாமை' எனவும், 'தீபம் சித்தமும் அமர்ந்திடம் ஆவி உச்சியும்' எனக்கூட்டுக. 'சித்தம் ' என்றதை அடுத்து நின்ற குறிப்பால, 'உற்று ஆர்தல் இருதயத்தில்' என்பது தோன்றிற்று. 'தீபமும்' என்ற உம்மை பிரித்துக் கூட்டப்பட்டது. 'ஓர்' என்றது 'ஒருவகை' என்னும் பொருட்டு, 'தார்' என்றதனால் 'கொல்லாமை' என்றது, 'கொல் லாமைகள்' எனப்பன்மையாய் நின்றமை பெறப்பட்டது. உயிர்ப் பன்மையால் கொல்லாமைகளும பலவாயின. ஒருசார் உயிர்களைக் கொல்லாதார் மற்றொருசார் உயிர்களைக் கொல்வாராதலின், 'எல்லா உயிர்களிடத்தும் கொள்கின்ற கொல்லாமை நோன்பே வேண்டும்' என்பார், 'கொலலாமை மலர்' என்னாது, 'கொல்லாமை மலர்த் தார்' என்றார். ஞான நெறியார் செய்கின்ற அகப்பூசைக்குக் கொள்ளப்படும் எட்டு மலர்களுள்ளும் கொல்லாமையே தலையாயதாகச் சொல்லப் படும். அவ்வெட்டு மலர்களாவன. 'கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறுமை, இரக்கம், அறிவு, மெய், தவம், அன்பு' எனபன. இவ்வாறு சிவஞான மாபாடியத்து *(9 அதி.3)*க் கூறப்பட்டது. 'அமர்ந்த' என்னும் பெயரெச்சத்து கரம் தொகுத்தலாயிற்று. இறைவன் எழுந்தருளியிருந்து அன்பரது வழிபாட்டினை ஏற்றுக்கொள்ளும் இடம் இலிங்கமாதல் உணர்க.

இருதயமாகிய ஆசனத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தி ஆன்மாவும், மூர்த்திமான் சிவனுமாதல் பற்றித் திருநாவுக்கரசர், 'காயமே கோயிலாக' *(தி.4 ப.76 பா.4)* என்னும் திருப்பாடலுள், 'மனம் மணி இலிங்கமாக' என ஓதியருளினமை காண்க. 'மனம்' எனப்படுவது ஆன்மாவே என்பது உணர்த்தற்கு, நினைகருவியாகிய மனத்தை, 'கடிமனம்' என முன்னே அடைகொடுத்துப் பிரித்தருளினார். உபநிடதங்களுள் தகரவித்தை கூறுமிடத்து, 'இருதயமாகிய தாமரை மலரின் மேல் விளங்குகின்ற சுடரின் முனையில் பரமான்மா நிற்கின்றது' எனக் கூறப்படுவதில், 'சுடர் என்றது, சீவான்மாவை' என்பது பின்னர், 'பரமான்மா' என வருதலான் அறியப்படும் (மகாநாராயணோப நிடதம்). 'எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே' என உண்மை விளக்க *(32)* நூலும் ஆன்மாவை' இலிங்கம்' என்றது காண்க. ஆன்மா வேயன்றித் திருவைந்தெழுத்தும் சிவபெருமானுக்கு இலிங்கமாம். தனது சத்தியும் இலிங்கமாம். இவ்வாறு பல தலைப்படக் கூறுதல் என்னை என ஐயுறும் மாணாக்கர்க்கு, 'சிவபெருமானுக்குத் திருவைந் தெழுத்துத் தூல சரீரமும், ஆன்மா சூக்கும சரீரமும், சத்தி அதிசூக்கும சரீரமும் ஆதலின், அதுபற்றி ஐயமில்லை' என்பதை மாபாடியம் உடையார் தமது சிவஞான சித்தி *(சூ. 9. 9)* உரையுள் இனிது விளக்கினார். 'கொல்லாமை என்னும் அறம் ஞான பூசையிலும் முதல் மலராகக் கொள்ளப்படும் சிறப்புடைத்து' என்பது கூறுவார், அப்பூசையின் உறுப்புக்கள் பிறவும் உடன் கூறினார் என்க. இதனால், கொல்லாமையது சிறப்பு உணர்த்தப்பட்டவாறறிக.

கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற் றாற்கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே. **#198**
இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

: 'கொல்லிடு, சொல்லிடு' என்பவற்றில் இடு, துணைவினை, 'நில்லிடும்' என்றதில் இடு, இசைநிறை, வல்லடிக் காரர், வலிய தண்டலாளர்; யம தூதர். வலிக் கயிறு - வலிமையுடைய கயிறு; யம பாசம். இஃது அவர் நினைத்த அளவில் நினைக்கப் பட்டோரை இறுகிக் கட்டும் கடவுள் தன்மை பெற்றது. 'நில்லென்று' என்றது, தம் தலைவன் முன் கொண்டுபோய் நிறுத்திக் கூறுவது.
இதனால், கொலைப் பாவத்தினது கொடுமை கூறும் முகத்தால் கொல்லாமை வலியுறுத்தப்பட்டது.

3.10.புலால் மறுத்தல்

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றியத் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே. **#199**
இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

பொல்லாங்கு, கொலையால் வருவதாயும், கொலை செய்யத் தூண்டுவதாயும் இருத்தல். இது பற்றி அதனை உண்பாரை, 'புலையர்' என்றார். புலையர் - கீழ்மக்கள்.

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போற் போற்றாக் கடை' -குறள் *315*

என்றவாறு, அருளில்லார், 'அறிவுடையார்' எனப்படாமை யானும்,

தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிதூன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். -குறள் *252*

என்பதனால் புலால் உண்பவர் அருளுடையாராதல் கூடாமை யானும் அவர் 'உயர்ந்தோர்' எனப்படாது 'இழிந்தோர்' எனவே படுவர் என்பது உணர்க. செல்லாக - சிதல்போல; சிதல் அரித்துத் தின்னும் இயல்புடையது. மறித்து - மீள ஒட்டாது மடக்கி.

உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு. -குறள் *255*

எனத் திருவள்ளுவரும், 'புலால் உண்பவர் நிரயம் புகுந்து மீளார்' என்றார். இரண்டிடத்தும், 'மீளாமை' என்பதற்கு, 'நெடுங்காலம் கிடத்தல்' என்பதே கருத்து என்க.

3.11.பிறன்மனை நயவாமை

ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே. **#200**

அறமுதலிய நான்கற்கும் உறுதுணையாய் அமைந்த மனைவி தன் இல்லத்தில் இருக்க அவளை விடுத்துப் பிறன் தனது இல்லத்துள் வைத்துப் பாதுகாக்கின்ற மனைவியைக் கூடுதற்கு விரும்பு கின்ற, எருதுபோலும் மாந்தரது தன்மை, தனது தோட்டத்தில் காய்த்துக் கனிந்துள்ள பலாப் பழத்தை உண்ண விரும்பாமல், அயலான் புழைக்கடையில் உள்ள ஈச்சம்பழத்தை உண்பதற்குக் களவினை மேற்கொண்டு துன்புறுந்தன்மை போல்வதாம்.

விளக்கவுரை

ஆத்தம் - துணையாக நம்புதற்கு உரிய தகுதி. இஃது, 'ஆப்தம்' என்னும் வடசொல்லின் திரிபு. இனி இதனை, 'யாத்த' என் பதன் மரூஉவாகக் கொண்டு, 'கட்டிய மனைவி' என்று உரைப்பாரும் உளர். பிறன்மனை நயத்தல், காமத்தோடு, 'களவு' என்னும் குற்றமு மாம் என்றற்கு, 'காத்த மனையாள்' என்றார். இவற்றால் மக்கட்குரிய நெறிமுறை இலராதல் பற்றிப் பிறன்மனை நயக்கும் பேதையரை 'எருது போல்பவர்' என இழித்துக் கூறினார். காய்ச்ச, 'காய்த்த' என்பதன் போலி 'இயற்கையாய்ப் பழுத்த பழம்' என்றற்கு, 'கனிந்த' என்னாது 'காய்த்த' என்றார். இயற்கையானன்றி இடையே பறித்துச் செயற்கையாற் பழுக்க வைக்கும் பழம் சுவையுடைத்தாகாமை அறிக. 'உண்ணமாட்டாமை, மடமையான் ஆயது' என்க. 'பேதைமை யாவது, ஏதம் கொண்டு ஊதியம் போக விடலே' *(குறள் 831)* யாதல் உணர்க.
தனது தோட்டத்தில் உள்ள பலாப்பழம் அச்சமும், இளி வரவும் இன்றி நாவாரவும், வயிறாரவும் உண்ணப்படுமாகலின் அதனை, அத்தன்மையளாய தனது மனையாட்கும், பிறனது புழைக் கடையில் உள்ள ஈச்சம் பழம் முள்ளுடைதாய அம்மரத்தியல்பானும், பிறனுடையதாகலானும் அச்சமும், இளிவரவும் தருவதாய் உண்ணப் போதாத சிற்றுணவாம் ஆதலின், அதனை, அத்தன்மையளாய பிறன் மனையாட்கும் உவமை கூறினார். அதனானே, பிறன்மனை நயப்பார் அறத்தையேயன்றித் தாம் கருதிய இன்பமும் பெறாமை பெறப்பட்டது. இக்கருத்தே பற்றித் திருவள்ளுவரும்,
அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில். -குறள் *142*
என்றார். இன்னும் அவர்,
பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண். -குறள் *146*
என்றலும் காண்க.
இதனால், பிறன்மனை நயத்தல் மடவோரது செயலாதல் கூறப்பட்டது.

திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை
அருத்தமென் றெண்ணி அறையிற் புதைத்துப்
பொருத்தமி லாத புளிமாங் கொம்பேறிக்
கருத்தறி யாதவர் காலற்ற வாறே. **#201**

தமக்கு உறுதியை அறியாதவர் ஆத்தமனையாள் அகத்தில் இருக்கவே, பிறன் காத்த மனையாளைக் காமுறுதல், காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல் ஈச்சம் பழத்திற்கு இடருற்ற வாறன்றியும், தாம் செழிப்புறப் பேணி வளர்த்த தேமாமரத்தில் பழுத்த பழத்தைக் குறையுடையதென்று வீட்டில் புதைத்துவிட்டு, அயலான் வளர்த்த புளிமாமரத்தின்

நுனிக்கிளையில் ஏறிக் கீழே விழுந்து கால் ஒடிந்ததையும் ஒக்கும்.

விளக்கவுரை

தேமாமரத்தைத் திருத்தி வளர்த்தமை, மனைவி உள்ளத்தில் ஒத்த அன்பும், மனைமாட்சியும் வளர அவளோடு அள வளாவி வாழ்ந்தமையைக் குறித்தது. அறத்தொடும், புகழொடும் இயைந்த இன்பத்தையும், உண்டி முதலிய உபசரிப்பையும் தந்து எஞ் ஞான்றும் விரும்பப்படுதல் பற்றித் தன் மனைவியைத் தேமாங் கனியா கவும், அவற்றிற்கெல்லாம் மறுதலையாதல் பற்றி அயலான் மனைவியைப் புளிமாமரமாகவும் கூறினார். அருத்தம் - பாதி; குறை. மாம்பழத்தை அறையில் புதைத்தல் பிறர் கொள்ளாமைப் பொருட்டு. பொருத்தம் இன்மை - இயைபின்மை; அயல். காலறுதல் கூறின மையால், கொம்பு, நுனிக் கொம்பாயிற்று. காலறுதல், அவளைக் கொண்டவனால் அவ்வழி வந்த கால் வெட்டப்படுதல். நாலடியுள், 'காணிற் குடிப்பழியாம்; கையுறிற் கால்குறையும்' *(நாலடியார், 84)* என்றது காண்க. 'நுனிக் கொம்பர் ஏறினார்'*(குறள் 476)* வீழ்ந்து காலொடிதலும் இயல்பு. நுனிக் கொம்பர் செல்லலாகாத இடத்துச் சேறலைக் குறித்தது. 'காலற்ற வாறு' என்றதில், இறந்தது தழுவிய எச்ச உம்மை தொகுத்தலாயிற்று. இதனால், வேறும் ஓர் உவமையால் மேலது வலியுறுத்தப் பட்டது.

பொருள்கொண்ட கண்டனும் போதத்தை யாளும்
இருள்கொண்ட மின்வெளி கொண்டுநின் றோரும்
மருள்கொண்ட மாதர் மயலுறு வார்கள்
மருள்கொண்ட சிந்தையை மாற்றகில் லாரே. **#202**

செல்வச் செருக்கில் ஆழும் கீழ்மகனும், அறிவை மறைக்கின்ற அறியாமையாகிய இருளில் புல்லறிவாகிய மின்னல் ஒளியைப் பெற்று நிற்பவரும் ஒழுக்கம் இல்லாத பெண்டிரது மயக்கத்தில் வீழ்தலல்லது, அம்மயக்கத்தை உடைய மனத்தைத் தேற்றி நன்னெறிப்படுத்த மாட்டுவாரல்லர்.

விளக்கவுரை

'கண்டகன்' என்பது இடைக் குறைந்து நின்றது. செல்வச் செருக்கினாலும், புல்லறிவினாலும் தூர்த்தராய்த் திரிவோ ராயினும், அவர்தம் உள்ளமும், இம்மையில் 'மழையைப் பெய் யெனப் பெய்விக்கும்' *(குறள் 55)* ஆற்றலையும், மறுமையில் புத்தேளிர் வாழும் உலகத்துப் பெருஞ் சிறப்பினையும் தருவது *(குறள் 58)* கற்பு என்று அதனது சிறப்பினைத் தெளிந்து அதன் கண்ணே நிற்கும் பெருந்தகைப் பெண்டிர்மாட்டுப்புகாது, அத்தெளிவின்மையால் அங்ஙனம் நிற்க மாட்டாது இழுக்கிச் செல்கின்ற பெண்டிர்மாட்டே புகுவராகலின்,

'மருள்கொண்ட மாதர் மயல் உறு வார்கள்' என்றார். இதனானே, அவ் இழுக்குடை மாதரும் கேடெய் துதலை உடம்பொடு புணர்த்துக் கூறினாராயிற்று. திருவள்ளுவரும்,

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். -குறள் *56*

என்பதில் 'தகைசான்ற சொற்காத்து' என்பதனால், அதனைக் 'காவாதவள் பெண்ணல்லள்' என்பதும்,

சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. -குறள் *57*

என்பதனால், 'சிறைக்காவல் நிறைக்காவலுக்குத் துணையாவதே யாகலின், அந்நிறைக்காவல் இல்வழிச் சிறைக்காவலாற் பயனின்றாம்' என்பதும்,

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை. -குறள் *59*

என்பதனால், 'கற்பென்னும் திண்மையால்' (குறள் *54*) கொண்டார்க்குப் பெருமையைத் தந்து, அவர்க்குத் தம் பகைவர்முன்னே ஏறுபோல இறுமாந்து நடக்கும் பீடு நடையை உண்டாக்கும் பெண்டிரே யன்றி, தம்மைக் கொண்டார்க்குத் தம் பகைவர்முன்னே தலை கவிழ்ந்து நிற்கும் இளிவரவினை உண்டாக்கும் பெண்டிரும் உளர் என்பது குறிப்பாகவும், வெளிப்படையாகவும் கூறினமை காண்க. மேல், 'காத்த மனையாள்' (தி.*10* பா.*199*) என்பதனால் சிறைக்காவல் குறிக்கப்பட்டது. இவ்விழுக்குடையாளை, 'இல்லிருந்து எல்லை கடப்பாள்' எனப் பிறருங் கூறி, அவளை, 'வல்லே அருக்குங் கோள்' (திரிகடுகம்) என்பதனால், 'உலகிற்கு ஆகாதவள்' என்றார்.

<u>3.12.மகளிர் இழிவு</u>

இலைநல வாயினும் எட்டி பழுத்தால்
குலைநல வாங்கனி கொண்டுண லாகா
முலைநலங் கொண்டு முறுவல்செய் வார்மேல்
விலகுறு நெஞ்சினை வெய்துகொள் ளீரே. **#203**

இலை, தளிர் முதலியவற்றால் கண்ணைக் கவர்கின்ற எட்டிமரம், பின் பழம் பழுத்து அதனால் மேலும் கருத்தைக் கவரு மாயினும், குலைமாத்திரத்தால் நல்லனவாய்த் தோன்றுகின்ற அதன் கனிகளைப் பறித்துண்டல் மக்கட்குத் தீங்குபயப்பதாம். அதுபோல உறுப்பழகுகளால் கண்ணைக் கவர்கின்ற பொது மகளிர், பின் பொய்ந் நகை காட்டி அதனால் மேலும் கருத்தைக் கவர்வாராயினும், நகைப்புமாத்திரத்தால் அன்புடையராய்த் தோன்று கின்ற அவரது

இன்பத்தினை நுகர்தல், அறம் பொருள்களை விரும்பி நிற்கும் நன்மக்கட்குக் கேடுபயப்பதாகும். ஆதலின், அவ்வாறு நன் னெறியை விட்டு விலகிச் செல்கின்ற மனத்தைத் தீங்கு தேடுவதாக அறிந்து அடக்குவீராக.

விளக்கவுரை

எடுத்துக்காட்டுவமைக்கு ஏற்ற பொருள்கள் இசையெச்சமாய் நின்றமையின், அவை விரித்துரைக்கப்பட்டன. 'வெய்தாக' என ஆக்கம் வருவித்து உரைக்க. இதனால் வரைவின் மகளிரை அவரது வடிவழகு பற்றியும், பொய்ச்செயல் பற்றியும் விரும்புவார், பின் தீங்குறுவர் என்பது கூறப்பட்டது.

மனைபுகு வார்கள் மனைவியை நாடில்
சுனைபுகு நீர்போற் சுழித்துடன் வாங்கும்
கனவது போலக் கசிந்தெழும் இன்பம்
நனவது போலவும் நாடவொண் ணாதே. **#204**

இல்லறநெறியில் நிற்கக் கருதுவார்க்குத் தம் மனைவியது இன்பத்தை நினைக்கும்பொழுது சுனையில் உள்ள நீர், மூழ்குவார்க்குத் தண்ணிதாய்த் தன்னினின்று மீளாதவாறு தன்னுள் ஆழ்த்திக்கொள்வதுபோல இருவர்க்கும் அரும்பெறல் இன்பமாய் அவரைப் பிரியாவகைச் செய்யும். அந்நெறியில் நிற்கக் கருதாத பிறர்க்குப் பொது மகளிர் இன்பம் கனவில் பெறும் இன்பம்போல அவர் தம் உள்ளத்தில் மட்டும் சிறிது அரும்பிப் பின் மறைந்தொழியும். அதனால், பொது மகளிரது இன்பத்தை உண்மை என்று நினைத்தலும் கூடாது.

விளக்கவுரை

மனை, மனைவி ஆகுபெயர்கள். முன்னர், 'மனை புகுவார்கள்' என்றும், 'மனைவியை நாடில்' என்றும் கூறினமை யால், பின்னர், 'பிறர்' என்பதும் பொதுமகளிரை நாடில் என்பதும் பெறப்பட்டன. உண்மையை, 'நனவு' என்றார் உண்மையாகாமை யின், 'போல' என்றார். உம்மை, மாற்றி உரைக்கப்பட்டது. அற நெறி யில் நிற்கும் ஆடவர் தம் மனைவியரைப் பிரிய மாட்டாமையை அகத் திணையுள், செலவழுங்கல், இடைச்சுரத் தழுங்கல் முதலிய துறை களில் வைத்து இனிது விளங்கப்பாடுவர் நல்லிசைப் புலவர்.
இதனால், பொது மகளிரது உள்ளத்து அன்பின்மை கூறப் பட்டது.

இயலுறும் வாழ்க்கை இளம்பிடி மாதர்
புயனுறப் புல்லிப் புணர்ந்தவர் எய்தும்
மயலுறும் வானவர் சார்விது என்பார்

அயலுறப் பேசி அகன்றொழிந் தாரே. **#205**
ஒருவனிடத்து நில்லாது பலரிடத்துச் செல்லு தலையே வாழ்க்கையாக உடைய பொது மகளிரது தோளை மிகத் தழுவிக் கலந்த ஆடவர், தாம்கொண்ட மயக்கத்தால், 'நாம் அடையத் தக்க சுவர்க்க இன்பம் இதுவன்றி வேறில்லை' என்று கூறுவர். ஆயினும், அவர்தாமே அம்மகளிரைத் தமக்குச் சிறிதும் தொடர்பில் லாதவராகப் பேசி விலகி ஒழிவதைப் பார்க்கின்றோம்.

விளக்கவுரை

'இவ்விரண்டனுள் முன்னது பொருள் இருந்த காலத்து நிலைமை; பின்னது பொருள் அற்ற காலத்தில் உண்டாம் நிலைமை' என்பது கருத்து. இளம்பிடி, நடைக்கு உவமை, அன்னதொரு நடையாலும் ஆடவரை மயல்கொள்ளச்செய்தல் குறித்தவாறு. 'மயலால்' என உருபு விரிக்க. அயல் - அயன்மை. அஃது உறுமாறு பேசி அகன்றமையைக் கோவலன் வரலாற்றாலும் உணர்க. அயலுறப் பேசுதல், அவர் பொருளுடையார் பக்கம் போதலைக் காணும் பொழுதாம். ஆகவே, 'பொருட் பெண்டிராகிய அவரது பொய்ம் முகத்தால் மயங்கலாகாது' *(குறள் - 913)* என்பதாம்.
இதனால், பொதுமகளிரது நிறைஇன்மை கூறி, மயக்கத்தால் அவ்விழிபினை மறந்து அவரை விழைதல் கூடாது என்பது கூறப் பட்டது.

வையகத் தேமட வாரொடுங் கூடியென்
மெய்யகத் தோருளம் வைத்த விதியது
கையகத் தேகரும் பாலையின் சாறுகொள்
மெய்யகத் தேபெறு வேம்பது வாமே. **#206**

நிலவுலகத்தில் வாழும்பொழுது மகளிரோடும் கூடிப்பெறுவது யாதும் இல்லை. ஆயினும், உடம்பொடு கூடி நிற்பாரது உள்ளத்தில் ஊழ் கூட்டிய ஒரு மயக்கமே அக்கூட்டத்தின்கண் உளதாய விருப்பம். இன்னும் அவ்விருப்பம், கையிலே கிடைத்த கருப்பஞ்சாறு போன்ற சிவானந்தத்தை உடைய மக்களுடம்பில் ஒருபக்கம் வைக்கப் பட்ட வேம்பு போல்வதுமாகும்.

விளக்கவுரை

'கூடி என்' என்றது, அவ்வின்பம் கணத்தில் அழியும் சிற்றின்பமாதலேயன்றிப் பின்னரும் பல இடர்விளைத்தல் பற்றியாம். விதியின் பயனாகிய காரியத்தை, 'விதி' எனக் காரணமாக்கிக் கூறினார். 'சாறுகொள்' என்றது ஒட்டணி. 'வைத்த விதி' எனவும், 'வேம்பதுவாம்' எனவும் கூறியவாற்றால், அவ் வின்பத்தை அறம் பொருள்கட்குத்

துணையாக அமைந்த மனைவியிடத்து நுகர்தலோடு ஒழியாது, அறத்தோடும், பொருளோடும் சிறிதும் இயைபில்லாத பொதுமகளிடத்தும் நுகர விரும்புதல் பெரும் பேதைமைத்து என்றவாறாம்.
இதனால், 'பொதுமகளிரது இன்பம் வேண்டத்தகாத தொன்று' என்பது கூறப்பட்டது. இத்திருமந்திரம், காமவின்பத்தினை முற்ற விலக்கும் நோக்குடைத்தாதலும் அறிக.

கோழை ஒழுக்கங் குளமூடு பாசியில்
ஆழ நடுவார் அளப்புறு வார்களைத்
தாழத் துடக்கித் தடுக்ககில் லாவிடில்
பூழை நுழைந்தவர் போகின்ற வாறே. **#207**

வீரம் இல்லாத ஒழுக்கத்தால் பொது மகளிர் மயக்கத்தில் ஆழநினைத்து அதன்பொருட்டுத் தம் பொருளை அளக் கின்ற பேதையரை அறிவுடையோர் இடித்து வரை நிறுத்தி விலக்குதல் வேண்டும். அவ்வாறு செய்யாவிடில், அவரது நிலைமை படுகுழியில் வீழ்ந்தவர் மீளமாட்டாது அழுந்தியொழிதல் போல்வதேயாம்.

விளக்கவுரை

எனவே, 'படுகுழியில் வீழ்வாரை விலக்காதொழிந்த பாவம் அறிவுடையோர்க்கு உண்டாகும்' என்பது கருத்தாயிற்று. கோழை - உரன் (திட்பம்) இன்மை. அஃதாவது மனத்தை அடக்கும் வலி இன்மை. 'ஒழுக்கத்தால்' என உருபு விரிக்க. 'குளம் மூடு பாசியில்' என்றாராயினும், 'பாசி மூடு குளத்தில்' என்றலே கருத்து என்க. இஃது உருவகம், 'நாடுவார்' என்பது குறுகிநின்றது. நாடுவார், முற்றெச்சம். குளம், இயல்பால் விரும்பி ஆடத்தக்கதெனினும், பாசியால் மூடப்பட்டவாற்றால் இகழ்ந்தொதுக்கப்படுதல் போல, மகளிர் இயல்பால் விரும்பிக் கூடத்தக்கவர் எனினும், வரைவில் ஒழுக்கத்தால் இகழ்ந்தொதுக்கப்படுவர் என்றற்குப் பொதுமகளிரை, பாசி மூடிய குளமாக உருவகித்தார். இக்குளத்தில் மூழ்கினார் மாசு தீராமையேயன்றி மாசு மிகப்பெறுதலும் உடையாராவர் எனினும், ஒருகால் மீண்டு வருதல் உண்டு; பொதுமகளிர்தம் இன்பத்தில் ஆழ்ந்தவர் பழி பாவங்களை எய்தன்மேலும், மீள அறம் பொருள்கட்கு உரியராகாது வெறுவியராவர் என்றற்கு, 'பூழை நுழைந்தவர் போகின்றவாறே' என வேறும் ஓர் உவமை கூறினார். இவற்றையும் கோவலன் வரலாறு முதலியவற்றான் அறிந்துகொள்க.
இதனால், பொதுமகளிரது கூட்டம் உய்தியில் குற்றமாய் முடியும் என்பது கூறப்பட்டது.

கொலையே களவுகள் காமம் பொய்கூறல்

மலைவான பாதக மாம்அவை நீக்கத்
தலையாம் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்
கிலையாம் இவைஞானா னந்தத் திருத்தலே. #208

'பிற உயிரைக் கொல்லுதல், பிறர் பொருளைக் களவு செய்தல், கள்ளுண்டல், நெறிநீங்கிய காமத்து அழுந்தல், பொய் கூறல்' என்னும் இவை ஐந்தும், 'பேரறக் கடை - மாபாதகம்' என வேறு வைத்து எண்ணப்படும். ஆகவே, அவைகளை அறவே நீக்காதவழி மேற்கதி உண்டாகாது. சிவனடியை அடைந்து அவனது இன்பத்தைப் பெற்றவர்க்கு இவை உண்டாக வழியில்லை. அவனது அருள் இன்பத்தில் ஆழ்ந்திருத்தல் ஒன்றே அவர்க்கு உளதாம்.

விளக்கவுரை

மலைவு, அறத்திற்கு நேர்மாறாதல், எனவே, 'பெருந் தீவினை' என்றவாறாம். இவற்றை, 'பஞ்ச மாபாதகம்' என்பர். 'அவை நீக்கி' என்பது பாடம் அன்று. தலையாயதனை, 'தலை' என்றார். ஆம் - உண்டாகும். 'அவை நீக்கத் தலை ஆம்' என்றதற்குக் கருத்து நோக்கி இவ்வாறு உரைக்கப்பட்டது. 'இலையாம்' என்றதில் ஆம், அசைநிலை. இறுதிக்கண், 'உளதாம்' என்பது சொல்லெச்சம். 'இன்பம் சார்ந்தோர்க்கு' என்றது, கொலை முதலியன தோன்றாமைக்கு ஏது உணர்த்தற்பொருட்டும், 'ஞானானந்தத்திருத்தல்' என்றது, அவையே யன்றிப் பிற தீங்கு நலங்களுள் யாதொன்றும் இல்லை என்பது உணர்த்தற்குமாம். எனவே, 'சிவனடியைச் சாராதவழி இவற்றை முற்றக்கடிதல் இயலாமையின், அவற்றை அடைதலே தக்கது' என்பதும், 'அவற்றை அடைந்தவழித் தீமை நீங்குதலேயன்றி, நன்மை பெருகுதலும் உளவாம்' எனவும் கூறியவாறாயிற்று.

இதனால், 'பெரிதும் குறிக்கொண்டு கடியத்தக்க பெருங் குற்றங்கள் இவை' என மேற்போந்தவைகளைத் தொகுத்துக் கூறி, அவற்றை முற்றக் கடிதற்கு வழியும் கூறப்பட்டது. களவையும், பொய் கூறலையும் வழிமொழிதல் வகையாற் கூறினார் எனவும் கள் உண்டலை எதிரது போற்றிக் கூறினார் எனவும் கொள்க. பின்னர் வரும் வாய்மை பொய் கூறாமையாகாது வேறாதல் அறிக. இதனானே, இத்திருமந்திரம் இவ்விடத்ததாதலும், 'புலால் மறுத்தலின்' கண்ணது ஆகாமையும் அறிந்துகொள்க.

3.13.நல்குரவு

புடைவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப்பட் டார்களும் அன்பில ரானார்
கொடையில்லை கோளில்லை கொண்டாட்ட மில்லை

நடையில்லை நாட்டில் இயங்குகின் றார்கட்கே. **#209**
ஒருவர்க்கு அவர் உடுத்திருக்கும் ஆடை கிழிந்த ஆடையாய் இருந்ததென்றால், அவரது வாழ்க்கையும் கிழிந்தொழிந் ததேயாம். ஏனெனில், தம்மால் தமக்குத் துணையெனத் தெளியப்பட்ட வரும் தம்மாட்டு அன்பிலாராகின்றனர். நாட்டில் நடைப் பிணமான அவர்க்கு எவரோடும் கொடுத்தல் கொள்ளல்கள் இல்லை; அதனால் அவர் இல்லத்தில் யாதொரு விழாவும் இல்லை; பிற உலக நடையும் இல்லை; ஆகையால்.

விளக்கவுரை

'கிழிந்ததேல்' என்னு வினையெச்சம் *'கிழிந்தது'* என முற்றாய்த் திரிந்தது. *'புடவை கிழிந்தது'* என்பது, 'வறுமை வந்தது' என்பதனை உணர்த்திய குறிப்புச்சொல். அடைதல், இங்கு அதன் காரணமாகிய தெளிதலை உணர்த்திற்று. தெளியப்பட்டார், பெண்டி ரும், பிள்ளைகளும், பிற சுற்றத்தாருமாவர்.

அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். -குறள் 1047

என்றார் திருவள்ளுவரும். *'இல்லானை இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்'* என ஔவையாரும் நல்வழியில் கூறுதல் காண்க. வறுமை எய்தினார்க்குப் பிறர்பால் பொருள்கொடுக்கும் நிலை இல்லை என்றல் கூறவேண்டாமையின், இங்கு, *'கொடை, கொள்ளல்'* என்றவை, உறவு பற்றி நிகழும் மகட்கொடை, மகட்கோடலேயாம். அவை இன்மையால் கொண்டாட்டமும் இல்லையாயிற்று. பிற உலக நடையாவன, கண்டவழி இன்முகம் காட்டலும், முகமன் கூறலும் போல்வன. *'இயங்குகின்றார்கட்கு'* என்றது, *'பிறிது செயலில்லை'* என்றவாறு. *'நாட்டில் இயங்குகின்றார்கட்கு'* என்பதனை, மூன்றாம் அடியின் முதற்கண் வைத்து உரைக்க.
இதனால், நல்குரவினது கொடுமை கூறும் முகத்தால், அதனால் உள்ளந் திரியாமை நிற்றலின் அருமை குறிக்கப்பட்டது.

பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலருதென்
றக்குழி தூர்க்கும் அரும்பண்டந் தேடுவீர்
எக்குழி தூர்த்தும் இறைவனை ஏத்துமின்
அக்குழி தூரும் அழுக்கற்ற போதே. **#210**

'பொழுது விடிந்து விட்டதே; காலை உணவுக்கு என் செய்வது' என்று நிலையில்லாத வயிற்றை நிரப்புதற்கு வருந்தி, அதற்குரிய அரிய பொருள்களைத் தேடி அலைகின்றவர்களே! நீவிர் உங்கள் வயிற்றை நிரப்பினாலும், உங்கள் சுற்றத்தார் வயிற்றை நிரப்பினாலும், வேறு யார் வயிற்றை நிரப்பினாலும், குற்றமில்லை. அவைகளை நிரப்பும்

முயற்சியால் சிவனை மறவாதீர்கள்; மறவாது நின்று துதியுங்கள். அப்பொழுதுதான் வினை நீங்கும்; வினை நீங்கினால் வறுமை நீங்கும்.

விளக்கவுரை

வயிற்றினது இழிபு உணர்த்த வேண்டி அதனை, 'பொய்க்குழி' என்னும் பெயரால் கூறினார். கூறவே, பின் வருவன வற்றையும் அதனோடு இயைய, 'குழி' என்றார். எனவே, அதற் கேற்ப, 'தூர்த்தல்' என்றார். 'தூர்த்து' என்னும் செய்தெனெச்சம்,

'செய்தெ னெச்சத் திறந்த காலம்
எய்திட னுடைத்தே வாராக் காலம்' -தொல். சொல். வினை

என்பதனால், இங்கு எதிர்காலத்தில் வந்தது. அழுக்கு, வினை மாசு. 'புகலூர்ப் பாடுமின் புலவீர்காள் - இம்மையே தரும் சோறும் கூறையும்' (*தி.7 ப.3 பா.41)* என அருளிச் செய்ததனாலும் சிவபெருமானை ஏத்துவார்க்கு வறுமை நீங்குதல் அறியப்படும்.

இதனால், 'சிவபெருமானை ஏத்தாமையே வறுமைக்குக் காரணம்' என்பது கூறும் முகத்தால், அவ்வறுமை வந்த காலத்து அது காரணமாக அவனை மறத்தல் கூடாமை கூறப்பட்டது.

கற்குழி தூரக் கனகமுந் தேடுவர்
அக்குழி தூர்க்கையா வர்க்கும் அரியதே
அக்குழி தூர்க்கும் அறிவை அறிந்தபின்
அக்குழி தூரும் அழுக்கற்ற வாறே. **#211**

மக்கள் அன்னமே (சோறே) யன்றிச் சொன்னமும் (பொன்னும்) தேடுதல், இயல்பாகவே தூர்ந்து போவதாகிய மட்குழிபோலாது, தூர்க்கினும் தூராத கற்குழி போன்ற வயிற்றை நிரப்புதற்கேயாம். ஆயினும், அப்பொன்னை நிரம்பக் குவித்து வைத்தவர்க்கும் வயிற்றை நிரப்புதல் இயலாததே எனினும், அதனை நிரப்புதற்கு வழி ஒன்று உண்டு; அவ்வழியை அறிந்தால் உள்ளம் தூய்மைப்பட்டு வயிறும் நிரம்பும்.

விளக்கவுரை

ஒருவேளை நிரம்பியபின் அஃது அற்றொழிய, மறுவேளை வெறுவிதாய்விடுதல் பற்றி, 'அக்குழி தூர்க்கை யாவர்க்கும் அரியது' என்றார். அங்ஙனம் தூராத குழியைத் தூர்க்கும் வழி பிறப்பை நீக்கிக் கொள்ளுதலேயாகலானும், பிறப்பு நீங்குதல் வினை நீங்கியவழியேயாகலானும், 'அது நீங்கும் வழியை அறிந்தால் வினை நீங்க அக்குழி தூரும்' என்றார். 'அழுக்கற்றவாற்றானே அக்குழி தூரும்' என உருபு விரித்து மாறிக் கூட்டுக. 'அவ்வழியாவது இறைவனை ஏத்துதலே' என்பது குறிப்பாதல், மேலைத் திருமந்திரம் பற்றி அறியப்படும்.

இதனால், 'வயிற்றை நிரப்பும் துன்பம் செல்வம் உடையவர்க் கும் நீங்காமையை அறிந்து வறுமையால் உள்ளம் வருந்தாது நிறைவெய்தியிருத்தல் வேண்டும்' என்பது கருத்து.

'தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி; உடுப்பது இரண்டே' -புறநானூறு *189*

என்பதும் இக்கருத்தே பற்றி வந்தது.

தொடர்ந்தெழு சுற்றம் வினையினுந் தீய
கடந்ததோர் ஆவி கழிவதன் முன்னே
உடந்தொரு காலத் துணர்விளக் கேற்றித்
தொடர்ந்துநின் றவ்வழி தூர்க்கலு மாமே. **#212**

புதிய வினைகள் பலவற்றைச் செய்யத் தூண்டுதலால், 'ஒருவரைப் பற்றி மற்றொருவர், அவரைப் பற்றி வேறொருவர்' என்று இவ்வாறு தொடர்ந்துவரும் சுற்றத்தார் பழ வினையினும் பார்க்கக் கொடியோரே. அதனால், அவரைப் புறந் தருதலில் தனது நாள் பல வற்றைக் கடந்துவிட்ட ஓர் உயிர், அந்நாளை முற்றக் கடந்தொழிவ தற்கு முன்னே என்றாயினும் ஒருநாளில் அச்சுற்றத்தை வெறுத்து மெய்யுணர்வாகிய விளக்கை ஏற்றினால், அவ்விளக்கொளியைப் பற்றிச் சென்று, பின்னும் அவர்களோடு கூடி வாழும் நாள் வரும் வழியை அடைத்தலும் கூடுவதாம்.

விளக்கவுரை

'உடன்று' என்பது, எதுகை நோக்கி, 'உடந்து' எனத் திரிந்தது. உணர், முதனிலைத் தொழிற்பெயர்.

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல். -குறள் *38*

என்பவாகலின், 'அவ்வழி தூர்த்தல்' என்பதற்கு இதுவே பொருளாதல் அறிக.

'அதளெறிந் தன்ன நெடுவெண் களரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல
ஓடி உய்தலும் கூடும்மன்;
ஒக்கல் வாழ்க்கை தட்குமாகாலே' -புறநானூறு *193*

எனச் சான்றோரொருவர் சுற்றத் தளைக்கட் பட்டு வருந்தினமை இங்கு அறியத்தக்கது. 'ஒருவர் உயிர்' என்னாது 'ஓர் உயிர்' என்றது, இழிவு பற்றி.

இதனால், 'சுற்றம் ஓம்புதலைப் பற்றுக்கொண்டு செய்யாது

அறம்நோக்கிச் செய்யின் வறுமைத் துன்பம் உண்டாகாது' என, அத்துன்பம் நீங்குதற்கு வழி கூறப்பட்டது.

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். -குறள் *341*

எனப் பின்னர்க் கூறலின், முன்னர்,

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. -குறள் *341*

என்ற திருவள்ளுவனார்க்கும் இதுவே கருத்தாதல் அறிக.

அறுத்தன ஆறினும் ஆனின மேவி
இறுத்தனர் ஐவரும் எண்ணிலி துன்பம்
ஒறுத்தன வல்வினை ஒன்றல்ல வாழ்வை
வெறுத்தனன் ஈசனை வேண்டிநின் றேனே. **#213**

ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர்காறும் செல்ல வரையறுக்கப்பட்ட எழுவகைப் பிறவிகளிலும் உள்ள உயிர்களாகிய பசுக்கூட்டத்தில் ஐம்புல வேடர் புகுந்து தங்கினர். அவர்களால் அப்பசுக்களை அளவற்ற துன்பங்கள் வருத்தின. இவற்றிற்குக் காரணமான வினைகளோ ஒன்றல்ல; பல. (இவற்றை யெல்லாம் நோக்கி) நான் யாதோருடம்போடும் கூடி வாழ விரும்பாமல், சிவபெருமான் ஒருவனையே விரும்பி நிற்கின்றேன்.

விளக்கவுரை

'ஆனினம் ஆறினும்' என மாற்றுக. 'ஆறினும், ஐவரும்' *(*குறள் *43)*என்றவை தொகைக் குறிப்பு. நல்லன, தீயனவற்றைப் பகுத்துணரும் அறிவும் ஐவரால் அடர்க்கப்படுதலின் அனைத் துயிரையும் வேடரால் கவரப்படுகின்ற பசுக்கூட்டமாகக் கூறினார். 'ஆனினம்' என்னாது, 'மானினம்' என ஓதுதலும் ஆம். 'அறுத்தல்' 'வேண்டி நின்றானே' என்பன பாடம் அல்ல. 'ஈசனையே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. அதனால், தேவர் வாழ்க்கையும் முற்கூறிய பசுவினங்களின் வாழ்க்கையோடு ஒத்ததாதல் குறிக்கப் பட்டதாம்.

3.14.அக்கினி காரியம்

வசையில் விழுப்பொருள் வானும் நிலனும்
திசையுந் திசைபெறு தேவர் குழாமும்
விசையம் பெருகிய வேதம் முதலாம்
அசைவிலா அந்தணர் ஆகுதி வேட்கிலே. **#214**

சோர்வில்லாத அந்தணர் அவியைச் சொரிந்து வேள்வி செய்தவழியே, மழையும், நிலமும், பல நாடுகளும், திசை காவலர் முதலிய தேவர்களும் குற்றம் அற்ற சிறப்பினைத் தரும் பொருளாவார்; அனைத்தும் வெற்றி மிகுதற்கு ஏதுவாகிய வேதமும் முதனூலாய் நிலைபெறும்; அது செய்யாதவழி அத்தன்மைகள் யாவும் இலவாம்.

விளக்கவுரை

ஈற்றடியை முதலில் வைத்து உரைக்க. 'விழுப் பொருள்' என்பது, வான் முதலிய நான்கு எழுவாய்கட்கும் உரிய பயனிலை. வெற்றியாவது தத்தமக்குரிய பெருமையைத் தப்பாது பெறுதல். அதனைப் பெறுதற்குரிய வழியைக் கூறுவது வேதம். அது நிலைபெறுதலாவது, மறக்கப்பட்டொழியாது, ஓதப்பட்டு நிற்றல். 'ஒழுக்கம் ஒழிந்தபின், அதனைக் கூறும் நூலால் பயனின்றிப் போம்' என்பது கருத்து.

இதனானே,

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப் பொழுக்கம் குன்றக் கெடும். -குறள் *134*

எனக் கூறினார் திருவள்ளுவர்.

மழை விழுப் பொருளாதலாவது, காலத்தில் பொய்யாது பொழிதல். நிலம் விழுப்பொருளாதலாவது, விளைவு குன்றாது மிகுதல். நாடுகள் விழுப்பொருளாதலாவது, அவ்வந்நாட்டுப் பண்டங் கள் குன்றாது பெருகல். தேவர் விழுப்பொருளாதலாவது, உவகை மேலீட்டால் மேலனவற்றை யெல்லாம் பயன்தரச் செய்தல். 'அந்தணர் வேத விதியை ஆறங்கங்களாலும் உணர்ந்து, உணர்ந்தவாறே வேள்வியைத் தப்பாது செய்தலாலே நாடு, பசியும் பிணியும் நீங்கி, வசி யும், வளனும் சுரப்பதாகின்றது' என்பதனைத் திருஞானசம்பந்தரும்,

'கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லை' *(தி.1 ப.80 பா.1)*

என்பதனால் குறித்தருளினார். உலக நலம் கருதி இதனைச் செய்தலானே இவர் 'அந்தணர்' என்னும் காரணப்பெயர் எய்தினர். எனினும், 'புலால் மறுத்தும், கொல்லாதும், அனைத்துயிர்மேலும் அருளுடையார்க்கே அது முற்றப் பொருந்தும்' என்றதற்கு, 'அந்தணர் என்போர் அறவோர்' *(குறள் - 30)* என்றார் திருவள்ளுவர். சோர்வின்மை,

நெறிமுறைகளில் உறைத்து நிற்றல்.
இதனால், முத்தீ வேள்வியது இன்றியமையாமை கூறப் பட்டது.

ஆகுதி வேட்கும் அருமறை அந்தணர்
போகதி நாடிப் புறங்கொடுத் துண்ணுவர்
தாம்விதி வேண்டித் தலைப்படு மெய்ந்நெறி
தாமறி வாலே தலைப்பட்ட வாறே. **#215**

முத்தீ வேள்வி செய்கின்ற, அரிய வேதத்தை ஓது கின்ற அந்தணர், மறுமை நலம் வேண்டி, பிறர்க்கும், பிறவுயிர்க்கும் இட்டுண்பர். இனி, அவர் அவ்வேத விதியானே அடைய விரும்பும் வீட்டு நெறி, அவரவர் அறிவின் எல்லைக்கேற்ப அடைதலாகவே முடியும்.

விளக்கவுரை

'முத்தீ வேள்வி செய்கின்ற' என்றதனால், தேவ யாகம் பிதிர் யாகங்களும், 'வேதத்தை ஓதுகின்ற' என்றதனால் பிரம யாகமும், 'பிறர்க்கும் பிற உயிருக்கும் கொடுத்து உண்பர்' என்றதனால், மானுட யாகம், பூத யாகங்களும் ஆகிய ஐவகை வேள்விகளும் குறிக்கப்பட்டன. எனவே, 'சிறப்புப்பற்றி, அக்கினி காரியமே, 'வேள்வி' எனப்படுமாயினும், இவையும் வேள்வியேயாக, வேள்வி ஐவகைத்து' என்பதும், 'ஐவகை வேள்வியையும் எஞ்சாமற் செய்பவரே சிறப்புடை அந்தணர்' என்பதும் கூறியவாறாயிற்று,

இனைத்துணைத் தென்பதொன் றில்லை, விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். -குறள் *87*

எனவும்,

பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பார், விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். -குறள் *88*

எனவும் விருந்தோம்பலைத் திருவள்ளுவரும் 'வேள்வி' எனக் குறித்தார். 'போங்கதி' என்பது தொகுத்தலாயிற்று. 'போகதி' வினைத் தொகை என்றலுமாம். 'புறம்' என்றது 'அயல்' என்னும் பொருட் டாய், பிற மக்களையும், உயிரையுங் குறித்து நின்றது. 'அறங் கறக்கும்' என்றல்போல, 'புறங் கொடுக்கும்' என்றது நான்காவதன் தொகை. 'அந்தணர்க்கு வீட்டு நெறி அவரவர் அறிவிற்கேற்ப அமையும்' எனவே, 'கன்மமே வீடு பயக்கும்' என்று உணர்வார்க்கு, அக்கன்மத்தின் பயனாகிய துறக்கமே வீடாகும். 'பிரமம் ஒன்றே மெய்; பிறவெல்லாம் பொய் என்று உணர்வதாய பிரம ஞானமே வீடு பயக்கும்' என உணர்வார்க்கு, அவர் பிறவெனக் கழிப்பன பிரகிருதி யளவேயாதலால், பிரகிருதிக்கு மேலேயுள்ள புருட தத்துவமே அவர்க்கு வீடாகும். தத்துவங்களும், அவற்றிற்கு வேறாய் உள்ள சீவான்மாவும், பரமான்மாவைப் போல வேறு முதல்களே; ஆயினும், தத்துவங்கள்

சடமாயும், சீவான்மா தூல சித்தாயும் நிற்றலின், சூக்கும சித்தாகிய பரமான்மாவிற்கு அவை முறையே உடைமையும், அடிமையுமாய்ச் சுதந்திரமின்றி நிற்பனவாம் என்பதை உணர்ந்து யான், எனது என்னும் செருக்கு நீங்கிப் பரமான்மாவினது நிறைவில் அடங்கிநிற்றலே உண்மைப் பேறு என உணரும் பதி ஞானமே வீடு பயக்கும் என உணர்பவர்க்குப் பரமான்மாவே வீடாகும் என்பது பெறப்பட்டது.
இங்ஙனம் கூறிவந்த பலவற்றுள் ஒன்றையும் வேதம் ஒரு தலைப்பட உணர்த்தாது, எவ்வாறும் உணர நிற்றலின், வேதம் ஒன்றையே ஓதி வீடுபெற எண்ணுவார் மெய்ந்நெறியைப் பலபட உணர்ந்து தம்முள் இகலி நிற்பர் ஆகலின், 'தாமறிவாலே தலைப் பட்டவாறே' என்றார்.
வேதத்துட் கூறப்பட்ட பல திறப்பொருளையும் இஃது இன்ன அளவினது எனவும் 'எல்லாவற்றினும் மேலாக முடிந்து நிற்கும் பொருள் இது' எனவும் வரையறுத்து ஒருதலைப்பட உணர்த்துவன சிவாகமங்களே யாதலின், அவற்றை உணரும் சைவர் பிறரோடு இகலுதலின்றி மெய்ந்நெறியை உண்மையாகத் தலைப்படுவர் என்க.
வேதத்தை உடம்பட்டோர் அனைவர்க்கும் 'இம்மை, மறுமை, வீடு' என்பவற்றுள், 'வீடே சிறந்த பேறு' என்பது ஒப்ப முடிந்ததாக லின், 'அதனை இத்தன்மைத்து என உணரும் உணர்விற்கு ஏற்பவே, அவரது வேள்வி முறைகளும் அமையும்' என்றற்கு இது கூறினார். கூறவே, 'ஐவகை வேள்விகளும் அவற்றைச் செய்வாரது கருத்திற்கேற்ப 'இம்மை, மறுமை, வீடு' என்பவற்றைத் தரும் என்பது பெறப்பட்டது.
'அக்கினி காரியமேயன்றிப் பிறவும் வேள்விகளே' எனக் கூறியவாற்றால், 'சைவாகமங்கள், 'சிவபெருமானை அகத்தாலும், புறத்தாலும், அறிவாலும் வழிபடும் வேள்வியே சிறப்புடை வேள்வி' எனவும், அக்கினி காரிய வேள்வியுள்ளும் சிவபெருமானைப் பொது நீக்கித் தனிப்பெரு முதல்வனாக வைத்துச் செய்யும் வேள்வியே செய்யத்தக்கது' எனவும் கூறும்.
இன்னும், 'தாமறி வாலே தலைப்பட்ட வாறே' என்றதனால், வேதத்தின் பொதுமை காரணமாக முத்தீ வேள்வியும் அவ்வாறு அமையும் என்பது கொள்க. அஃதாவது, பரிமேதம், பசுமேதம் முதலாகச் சொல்வனவற்றை உயிர்ப்பலி வேள்வியாகச் செய்தல் வேண்டும் எனக் கொண்டு ஊனை அவிசாக இட்டுச்செய்தலும், அவற்றிற்கெல்லாம் வேறு பொருள்கொண்டு பசுவிடத்துண்டாகும் நெய், பால் முதலியவற்றையும், நெற்பொரி, அரிசிமா, தேங்காய், வாழைப்பழம் முதலியவற்றையும் அவிசாகச் சொரிந்து செய்தலும் போல்வன. வேதத்துள் 'அஜத்தைக் கொண்டு வேட்க' என்பதற்குப் பிறரெல்லாரும் 'அஜம்' என்பதற்கு 'யாடு' என்பது பொருள் என்று கூறினர் எனவும், அகத்திய முனிவர்,

'மூன்றியாண்டு கழிந்த நெல்' எனப் பொருள் கூறினர் எனவும் பாரதத்துட் கூறப்பட்டன. இங்ஙனம் வேறுபடுவாரது நிலையைத் திருஞானசம்பந்தர்,

'ஊனொ டுண்டல் நன்றென ஊனொ டுண்டல் தீதென
ஆனதொண்டர் அன்பினால் பேசநின்ற தன்மையான்'
-தி.3 ப.53 பா.9

எனக் குறித்தருளினார்.

அறவினை யாதெனிற் கொல்லாமை; கோறல்
பிறவினை யெல்லாம் தரும். -குறள் 321-

என்றவாறு, கொலைப் பாவம் ஏனை எல்லாவற்றினும் பெரிதாகலின், அதனோடு தொடர்புடைய யாதொன்றும் அறமாவதில்லை எனினும், செய்வாரது கருத்துவகையால் அதுவும் அறம் என வைக்கப்பட்ட தாயினும், அன்னதொரு வேள்வி கடைப்பட்ட வேள்வி எனக் கழித்து, உயிர்க்கொலை இல்லாத தூயவேள்வியே, வேள்வி என உயர்ந்தோர் கொள்வர் என்பது பற்றியே,

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. -குறள் 259

எனப் பொதுப்படக் கூறுமிடத்து ஊனாகிய அவியையே பெரும் பான்மையும் குறிப்பாற் கீழ்ப்படுத்துக் கூறி,

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை. -குறள் 328

எனச் சிறப்பாகக் கூறுமிடத்து ஊன் வேள்வியை வெளிப்படை யாகவே மறுத்துக் கூறினார் திருவள்ளுவர். சைவ வேள்விகள் பலவும் சைவாகமத்துள்ளும், வழக்கத்துள்ளும் பசு விடத்துண்டாகும் நெய், பால் முதலியவற்றையும், தாவரங்களினின்று பெறப்படும் நெல் முதலியவற்றான் ஆய பொருள்களையுமே அவிசாக இட்டுச் செய்யப் படும் தூய வேள்விகளாகவே காணப்படுதல் அறிக.

இதனால்,

'பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்பும்
சிறப்பர் வாழ்தில்லை' -தி.1 ப.80 பா.2

என்றதனுள், 'பசு' என்றது; 'பசுவிடத்து உண்டாகும் நெய் பால்கள்' எனப் பொருள்படுதலன்றிப் பிறிது பொருள்படாமை அறிந்து கொள்க. 'பிறிது பொருள்படும்' என்பார் உளராயின், அவர் சிவாகமங் களையே யன்றித் தில்லைக்கணுள்ள வழக்கத்தினையும் அறியாதவரே யாவர்.

'அவன்உகந் திட்டஇறைச்சி எனக்குநன்
மாதவர் இட்ட நெய்பால் அவியே' -தி.11 நக். திருமறம்

எனப் பதினொன்றாம் திருமுறையிலும், 'மாதவர், நெய்பால் அவியே

இட்டுச் சைவ வேள்வியே வேட்பர்' என்பது சொல்லப்பட்டது.
இவ்வாற்றானே, சிவபாத இருதயர் செய்யக் கருதியதாகச் சேக்கிழார்,
'ஆதி மாமறை விதியினால் ஆறுசூழ் வேணி
நாத னாரைமுன் னாகவே புரியும்நல் வேள்வி'
-தி.12 திருஞான. பு. 429
எனக் குறித்த நல்வேள்வியும், ஞானசம்பந்தர்தாமே,
'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்'
-தி.12 திருஞான. பு. 821
எனக்குறித்த வேள்வி. 'உலகம் இன்புறச் சங்கரர்க்கு முன்வந்த அற்சனை வழிபாடுகளுள் ஒன்று' என அவர் (சேக்கிழார்) விளக்கிய சந்த வேள்வியும் எல்லாம் சிவநெறி வேள்வியாகிய தூய வேள்வி களே என்பது விளங்கும். இவற்றானே, தம் உணவினும் சைவராய் உள்ளவரே ஊன் வேள்வியை மறுத்தற்குரியரன்றி, உணவில் சைவராய் இல்லாதோர் ஊன் வேள்வியை மறுத்தற்கு உரியரல்லர் என்பதும் உணர்ந்து கொள்ளப்படும்.
புத்தர் புலால் உண்டலை விலக்காது, கொல்லுதலை மட்டுமே விலக்குவர்; சமணர் இரண்டனையும் விலக்குவர். அவ்வாற்றால் அவ் விருவரும் ஊன்வேள்வியை இகழ்தல் அவர்தம் மதத்திற்கு ஏற்புடைய தாயினும், வேள்வி செய்வார்க்கு வரும் பயனை உணராமையானும், ஊன் இடப்படாத தூய வேள்வியை அவர் கைக் கொள்ளாமையானும் அவர் செயல் சிவநெறியாளரால் இகழப் படுவதாயிற்று என்க.
இத்திருமந்திரத்துள் ஈரடி எதுகை வந்தது.
இதனால், வேள்விகளின் வகைகள் பலவும் வகுத்துக் கூறி, 'அவற்றுட் சிறந்தது சைவ வேள்வியே' என்பது கூறப்பட்டது.

அணைதுணை அந்தணர் அங்கியுள் அங்கி
அணைதுணை வைத்ததின் உட்பொரு ளான
இணைதுணை யாமத் தியங்கும் பொழுது
துணையணை யாயதோர் தூய்நெறி யாமே. **#216**

உயிர்கட்குப் பொருந்திய துணை அந்தணர் வளர்க் கின்ற தீயினுள் தீயாய் இருக்கும் இறைவனே. ஆகவே, தீ வேட்டு அதன் உள்ளீடான இறைவனாகிய அருந்துணையுடன் உலகியலில் ஒழுகும் பொழுதே உயிர் தான் செல்கதிக்குத் துணையாய மெய்ப் பொருளை அடைந்து நிற்றலாகிய நன்னெறியைத் தலைப்படுதல் உண்டாவதாகும்.

விளக்கவுரை

'அணைதுணை' இரண்டில் பின்னது ஆகு பெயராய், அணைதுணை உள்ள இடத்தைக் குறித்தது. 'இணை துணையோடு' என உருபு விரிக்க. யாமம் - இரவு; உலகியல் பிறவித் துன்பத்ததாக லின், அதனை 'இரவு'

என்றார். 'துணைஅணை' என்றதில் அணை, முதனிலைத் தொழிற்பெயர்.
'வைதிக வேள்வி வேட்பார்தீயையே தெய்வமாகக்கொண்டு வேட்பர். அது பிறவியை நீக்கும் தூநெறியாகாது; சிவநெறி வேள்வி வேட்பார், தீயைத் தெய்வமாகக் கருதாதது, அத்தீக்கு உள்ளீடாய் நிற்கும் சிவபெருமானையே முதல்வனாகக்கொண்டு வழிபடுவர்; அதுவே பிறப்பை நீக்கும் தூநெறியாகும்' என இதனால் சிவநெறி வேள்வியின் சிறப்புக் கூறப்பட்டது. சிவநெறி வேள்வியில் அக்கினியைச் சிவாக்கினியாகப் பிறப்பித்து வளர்க்கும் முறையைச் சிவாகமங்களில் கண்டுணர்க.

போதிரண் டோதிப் புரிந்தருள் செய்திட்டு
மாதிரண் டாகி மகிழ்ந்துட னேநிற்கும்
தாதிரண் டாகிய தண்ணம் பறவைகள்
வேதிரண் டாகி வெறிக்கின்ற வாறே. **#217**

இருவகை மலர்களின் வண்டுகள் போல்வன வாகிய உயிர்கள், தாம் தாம் விரும்பும் வழியில் வேட்கை மிக்குச் செல் கின்றவாற்றால், அவற்றது நெஞ்சத் தாமரையில் வாழ்கின்ற சத்தியும் இருவேறு வகைப்பட்டு, உரிய காலத்தில் இருவேறு நூல்களைக் கற்கச் செய்து அவைகட்குக் கருணை புரிந்து, எஞ்ஞான்றும் அவைகளோடு உடனாய் நிற்பாள்.

விளக்கவுரை

பின்னிரண்டடிகளை முதலில் வைத்து உரைக்க. போது - பொழுது. 'இரண்டு ஓதி' என்றதில் இரண்டு, வேத சிவாகமங்கள். 'ஓதி' என்பதில் பிறவினை விகுதி தொகுத்தலாயிற்று. மாது - சத்தி. அவள் இரண்டாதலாவது, திரோதான சத்தியும், அருட் சத்தியுமாய் அவ்வவ்வுயிருக்கேற்ப நிற்றல். திரோதானமும் ஒரு வகைக் கருணையே ஆதலின், 'அருள் செய்திட்டு' என்றார். 'தாதிரண் டாகிய' என்பதில், ஆதல், மேற் சொல்லுதல். 'இரண்டின் கண் ஆகிய' என உருபு விரிக்க. தாது இரண்டு - இருவகை மகரந்தம்; அவை, குவளை, ஆம்பல் முதலிய சிறு மலரின்கண் உள்ளனவும், தாமரையாகிய பெரு மலரின்கண் உள்ளனவுமாம். 'தண்ணம் பறவை' என்பதில் தண்மை, சிறுமை மேல் நின்றது. அம், சாரியை. வண்டினை 'பறவை' என்றல் இலக்கிய மரபு. 'பாம்பின் வாய்த் தேரை வாய்ச் சிறுபறவை ' *(தி.2 ப.76 பா.6)* என்றார் திருஞானசம்பந்தரும். வேது - வேற்றுமை. இனத்தால் ஒன்றாயினும் விரும்பப்படும் தாது வேற்றுமையால் இரண்டாய் நிற்கின்ற வண்டு போல, உயிர்கள் அனைத்தும் இனத்தால் ஒன்றாயினும், விரும்பப்படும் பயனால் இரண்டு ஆதலாவது, உலகின்பமும், வீட்டின்பமும்

ஆகியவற்றை விரும்பு தலால் 'உலகர்' எனவும், 'சத்தி நிபாதர்' எனவும் இருதிற னாய் நிற்றல். எனவே, சிவசத்தி உலகர்க்குத் திரோதாயியாய் நின்று வேதத்தை ஓது வித்து, அதன் பயனாக வைதிக வேள்வியை வேட்பித்து உலகின் பத்தை அடைவிப்பவளாயும், சத்தி நிபாதர்க்கு அருட்சத்தியாய் நின்று சிவாகமங்களை ஓதுவித்து, அதன் பயனாகச் சிவநெறி வேள்வியை வேட்பித்துச் சிவானந்தத்தை அடைவிப்பவளாயும் நிற்பாள் எனக் கூறுமாற்றால் வேள்விகளது வகை கூறியவாறு.
வெறித்தல் - மதர்த்தல். 'வெறிக்கின்றவாற்றால்' என்னும் உருபு தொகுத்தலாயிற்று.
இதனால், 'உலகவேள்வி, சிவவேள்வி' என்னும் வேள்வி களது வகையும், பயனும் உணர்த்தப்பட்டன.

நெய்நின் றெரியும் நெடுஞ்சுட ரேசென்று
மைநின் றெரியும் வகையறி வார்கட்கு
மைநின் றவிழ்தரு மந்திர மும்என்றும்
செய்நின்ற செல்வமும் தீயது வாமே. **#218**

நெய் பொருந்துதலால் எரிகின்ற பெரிய வேள்வித் தீயின் வழியே சென்று, அஞ்ஞானம் வெந்தொழியும் நெறியை அறி கின்ற அந்தணர்கட்கு, அஞ்ஞானம் நீங்கும் வாயிலாகிய மந்திரமும், முயன்று பெற நிற்கின்ற முத்திப் பெருஞ் செல்வமும் வேள்வியே யாகும்.

விளக்கவுரை

மை - இருள்; புற இருளைப் போக்குகின்ற தீயினை ஓம்புமாற்றானே, அக இருளையும் போக்கிக்கொள்ளுதல் கூடும் என்பது பற்றி 'நெய்நின்றெரியும் ... வகை அறிவார்கட்கு' என்றார். அவ் வகையாவது, சிவபெருமானை முதல்வனாக உணர்ந்து பயன் கருதாது அன்பு மாத்திரத்தால் வேட்டல், அங்ஙனம் வேட்டோர் சிறப்புலி நாயனார், சோமாசிமாற நாயனார் முதலியோராதல் அறிக. 'அவிழ்தரும்' என்னும் பெயரெச்சம் 'மந்திரம்' என்னும் கருவிப் பெயர் கொண்டது. செய்தல் - தேடுதல். 'செய் நின்ற' என்பது 'செய்ய நின்ற' என்னும் பொருட்டு.
இதனால், 'அந்தணர் வேள்வி அவர்க்கு முத்தி சாதனமும்' ஆம் என்பது கூறப்பட்டது.

பாழி அகலுள் எரியும் திரிபோலிட்
டூழி அகலும் உறுவினை நோய்பல
வாழிசெய் தங்கி உதிக்க அவைவிழும்
வீழிசெய் தங்கி வினைசுடு மாமே. **#219**

ஆழ்ந்த அகலில் நின்று எரிகின்ற திரிபோலச் சேர்க்கப்பட்டுப் பல்லூழி காலம் தொடர்ந்து நின்று வருத்துகின்ற மிக்க பாவப்பயனாகிய துன்பங்களோ பல. அவை அனைத்தும் ஓமாக்கினி அணையாது நின்று

ஓங்க ஒழிவனவாம். அன்றியும், அவ்வக்கினியே வினைக்கட்டு முழுவதையும் அழித்தலையும் செய்யும்.

விளக்கவுரை

பாழி - பள்ளம். 'வாழி, வீழி' என்பன, 'வாழ்தல், வீழ்தல்' எனத் தொழிற்பெயராய் நின்றன. 'வினைநோய்' என்றது, 'வினையால் வரும் நோய்' என வேற்றுமைத் தொகை. நோய் - துன்பம். 'துன்பத்தைத் தரும் வினை' எனவே, 'பாவம்' என்பது போந்தது. பின்னர் நின்ற வினை, பொதுப்பட நிற்றலின், இரு வினையையுங் குறித்தது. 'பாவத்தை ஒழிக்குமாற்றால் நரகத்தின் நீக்கிச் சுவர்க்கத்தில் சேர்ப்பதும்' இருவினைகளையும் நீக்குமாற்றால் ஞானத்தைத் தோற்றுவித்து வீடு அடைவிப்பதும் வேள்வியாம்' என்றபடி. இவற்றுள் முன்னது வைதிக வேள்வி என்பதும், பின்னது சிவநெறி வேள்வி என்பதும் உணர்ந்துகொள்க.

இதனால், இருவகை வேள்விகளின் பயனும் ஒருங்கு கூறப்பட்டன.

பெருஞ்செல்வங் கேடென்று முன்னே படைத்த
தருஞ்செல்வம் தந்த தலைவனை நாடும்
வருஞ்செல்வத் தின்பம் வரவிருந் தெண்ணி
அருஞ்செல்வத் தாகுதி வேட்கநின் றீரே. **#220**

மறுமைக்கண் வருகின்ற சுவர்க்கச் செல்வத்தால் உளதாகின்ற இன்பம் வருமாற்றை மிக நினைந்து நும் அருஞ் செல்வ மாகிய வேள்வியை வேட்க விரும்புகின்ற அந்தணர்களே, பெரிய 'செல்வம், வறுமை' என்னும் இரண்டன் காரணங்களையும் முதற் காலந்தொட்டே விளக்கி நிற்பதாகிய, அனைத்து நலங்களையும் தரும் வேதம் என்னும் அறிவுச் செல்வத்தை நுமக்குத் தந்த முதல்வனாகிய சிவபெருமானை நினையுங்கள்; பயன் எய்துவீர்.

விளக்கவுரை

'என்று' என்னும் எண்ணிடைச் சொல்லின்பின், 'இரண்டும்' என்னும் தொகை தொகுத்தலாயிற்று. படைத்தல் - சொல்லால் வெளிப்படுத்தல். 'நின்றாரே' என்பது பாடமாயின், ஏகா ரத்தை ஈற்றசையாக்காது, விளியுருபாக்குக. மீமாஞ்சகர் வேதத்தைச் செய்த முதல்வனை அறியாது 'வேதம் அனாதி' என மயங்குதலாலும், பிறர் சிவபெருமானையே தலைவனாக உணராமை யாலும் அவர்க்கு வேள்வி முத்தி சாதனமாதல் கூடாமையால், அவர்க்கு அஃது அன்னதாதற் பொருட்டு அவரை நோக்கி இது கூறினார்.

இதனால், வேள்விகளுள் சிவநெறி வேள்வியது இன்றியமை யாமை கூறப்பட்டது.

ஒண்சுட ரானை உலப்பிலி நாதனை
ஒண்சுட ராகி என்னுள்ளத் திருக்கின்ற
கண்சுட ரோன்உல கேழுங் கடந்தஅத்
தண்சுடர் ஓமத் தலைவனு மாமே. **#221**

எல்லா ஒளிகட்கும் மேலான ஒளியாய் இருப் பவனும், இறப்பில்லாத முதல்வனும் ஆகிய அவனை நினைத்தால், ஒளி பெற்றுத் திகழ்கின்ற எனது உள்ளத்தில் வீற்றிருக்கின்ற, முச்சுடர் களையே மூன்றுகண்களாக உடைய அப்பெருமானே உலகங் கடந்த தண்ணிய ஒளிப்பொருளாகிய முதற்பொருளும், வேள்விக்குத் தலைவனும் ஆவன்.

விளக்கவுரை

இங்குக் கூறியவாறே திருநாவுக்கரசரும்,
அண்டம் ஆரிரு ளூடு கடந்தும்பர்
உண்டு போலும்ஓர் ஒண்சுடர்; அச்சுடர்
கண்டிங் காரறி வார்! அறி வாரெலாம்
வெண்டிங்கட் கண்ணி வேதியன் என்பரே. -தி.*5* ப.*97* பா.*2*

என ஓதியருளுதல் காண்க. சிவபெருமான் வேள்வித் தலைவன் ஆதலை விளக்குதற் பொருட்டு அவனது முதன்மையை எடுத்துக் கூறினார். 'நினைத்தால்' என்னும் சொல்லெச்சம் முன்னை மந்திரத் தினின்றும் வந்தது.

இதனால், வேள்வியைச் சிவநெறி வேள்வியாக வேட்டற்கு வழி கூறப்பட்டது.

ஓமத்துள் அங்கியின் உள்ளுளன் எம்இறை
ஈமத்துள் அங்கி இரதங்கொள் வானுளன்
வேமத்துள் அங்கி விளைவு வினைக்கடல்
கோமத் துளங்கிக் குரைகடல் தானே. **#222**

வேள்வித் தீக்கு உள்ளீடாய் நிற்பவன் எங்கள் சிவபெருமானே; அஃது, அவன் சுடுகாட்டில் தீயில் நின்று ஆடி, சிறந்த உயிரைத் தாங்கி நிற்றலானே அறியப்படும். இவ்வுண்மையை உணராது, உணர்த்துவாரையும் வெகுள்வாரது வெகுளியின்கண் உளதாகின்ற தீயால் விளையும் வினைக்கடல், மந்தரமாகிய பெரிய மத்தால் கலங்கி ஒலித்த கடல் போல்வதாம்.

விளக்கவுரை

'ஆகவே, அவ்வினைக்கடல் கடத்தற்கரியது' என்ற படி. 'ஈமத்துள் அங்கி உளன்' என இயையும். இரதம் - சாரம்; என்றது உடலினின்றும் நீங்கிய உயிரை. கொள்ளுதல் - தாங்கிக் கொள்ளுதல். 'அதனுள்' என்பது, 'அத்துள்' என மருவிற்று. கோ மத்து - பெரிய மத்து. 'மத்து' என்பது

கடைக்குறைந்து நின்றது. 'மத்தால்' என உருபு விரிக்கப்பட்டது. "வினைக்கடல் குரைகடல் தானே' என்றது, "மாதர் வதன மதியம் - உதய மதியமே ஒக்கும்' (தண்டியலங்காரம்) என்பதிற் போல உருவக உவமை. இதனால், 'சிவபெருமானை வணங்கா தொழியினும் இகழ்தல் கூடாது; இகழின் உய்தியில் குற்றமாம்' என, வேள்வி செய் வார்க்கு இன்றியமையாததோர் அறம் கூறப்பட்டது. இதற்குத் தக்கன் வரலாறு சிறந்த சான்றாதல் அறிக.

அங்கி நிறுத்தும் அருந்தவர் ஆரணந்
தங்கி இருக்கும் தகையருள்செய்தவர்
எங்கும் நிறுத்தி இளைப்பப் பெரும்பதி
பொங்கி நிறுத்தும் புகழது வாமே. **#223**

வேள்வியை ஒழியாது வேட்கும் அந்தணர், வேத வழக்கு இவ்வுலகில் அழிந்தொழியாதவாறு காப்பவராவார். அவ்வேள்வியை எங்கும் நிகழச் செய்யுமாற்றால் அவர்க்கு மெய் வருத்தம் பெரிதாயினும், இவ்வுலகில் எங்கும் மிக்கு விளங்குமாறு அவர் நிலைநாட்டும் புகழ் அச்செயலேயாம்.

விளக்கவுரை

'முத்தீ வழியாக அன்றிப் பிறவாற்றால் சிவ பெருமானை அடைதல் கூடுமாயினும், முத்தீ வேள்வி வேட்கப்படா விடின், வேதவழக்கு மறைந்தொழியும்; அது மறைந்தொழியின், கடவுட் கொள்கையும், சிவபத்தியும் போல்வன பலவும் அவ்வாற்றானே மறைந்தொழியும்; ஆகவே அவ்வாறெலாம் நிகழாமைப் பொருட்டு முத்தீ வேட்டல் பேணற்பாற்று' என்பதாம். எனவே, 'சங்க இலக்கியம், திருக்குறள் முதலிய தமிழ் நூல்களிலும், சிவாகமம், திருமுறை முதலிய சைவ நூல்களிலும் முத்தீ வேள்வி சிறப்பிக்கப் படுதலும் இது பற்றி' என்பது இனிது விளங்குவதாம்.

இதனால், அக்கினி காரியம் மரபு நிலையாதல் கூறப்பட்டது.

3.15.அந்தணர் ஒழுக்கம்

அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமஞ்செய்
தந்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே. **#224**

ஒத்த பிறப்பினராய மக்களுள், 'அந்தணர்' என வேறு நிற்பவர்கள், 'ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்' என்னும் அறுதொழில்களைக் கடமையாகக் கொண்டவர்கள். அதனால் முத்தீ வேள்வியை அணையாது காத்து 'காலை, நண்பகல், மாலை' என்னும் மூன்று வழிபாட்டுப் பொழுதுகளிலும் (சந்தியா காலங்களிலும்) கடவுள்

வழிபாடாகிய கடமையைத் தவறாது செய்து, அழகிய தவமாகிய அறச் செயலில் நின்று, வறியார்க்கும் விருந்தினர்க் கும் உணவு தந்து, வேதத்தையும் முறையாக ஓதி, உலகியலில் நல்லன வும், தீயனவுமாகிய நிகழ்ச்சிகளில் கடவுள் கடன்கள் பலவற்றையும் குறைவறச் செய்து முடிப்பவர்களே அப்பெயருக்கு (அந்தணர் என்பதற்கு) உரியவராவர்.

விளக்கவுரை

தழல் ஓம்பல் முதலியவற்றைப் பின்னரும் எடுத்துக் கூறியவதனால், 'அவற்றை வழுவின்றி ஆர்வத்தொடு செய்தல் வேண்டும்' என்பது பெறப்பட்டது. 'தழல் ஓம்பி' என்றதனால், வேட்டலையும், 'சந்தியும் ஓதி' என்றதனால் ஓதலையும் வலியுறுத் தமை வெளிப்படை. ஆகவே, நற்கருமம் என்றது பிறர்க்கு உதவுத லாகிய 'ஓதுவித்தல், வேட்பித்தல், ஈதல் ஏற்றல்' என்னும் நான்கனை யும் வலியுறுத்துவதாயிற்று. ஈதல் ஒழிந்த பிறவும் பொருளாசையின்றிச் செய்யின் அவர்க்கு அறமாதல் பற்றி அவற்றை, 'அம் தவம்' என்றார். ஏற்றலாவது, குற்றக் கழுவாயாகவும் குறித்த பயனைத்தரும் அறமாக வும் கருதி உயர்ந்தோர்க்குக் கொடுக்கும் கொடையாகப் பிறர் தருவனவற்றை, அவர் நலங் கருதி ஏற்றல். அங்ஙனம் ஏற்ற பொருளை அவ்வந்தணர், தென்புலத்தார் தெய்வம் முதலிய அறவழியிலே செலவிடுதலன்றி, இவறுதல் செய்து ஈட்டிவையார் என்க. முப்போதும் நியமம் செய்தல் வேட்டலின் பகுதியாகவும், சடங்கறுத்தல் ஈதலின் பகுதியாகவும் வைத்து வற்புறுத்தப்பட்டன என்க. 'சடங்கறுப்போர் களே' என்ற ஏகாரம் பிரிநிலை. இங்ஙனம் பிரித்துக் கூறிய அதனால், 'இவ்வொழுக்கம் இல்லா தவர் பிறப்பால் அந்தணராயினும், அந்தணர் எனப்படார்' என்பது பெறப்பட்டது. படவே, அந்தணர், அரசர் முதலிய வருணவகை ஒழுக்கம் பற்றி உயர்ந்தோரால் வகுக்கப்பட்டன வல்லது, 'உடம்பிலே தானே அமைந்தது' என்னும் மிருதிநூற் கொள்கை அடாது என்ற தாயிற்று. இங்கு, 'பிறப்பு' எனப்படுவது, தம் குடியின் முன்னோர், தம் ஒழுக்கத்தால் பெற்ற வருணவகை.

'பிறப்பே குடிமை ஆண்மை' -தொல். பொருள் - *269*
'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' -குறள் - *972*
'பார்ப்பான் - பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்' -குறள் - *134*
என்பவற்றிலும், 'பிறப்பு' எனப்படுவது இதுவே என்க. 'சாதிகள் நெறியின் தப்பா' *(தி.12 திருநாட்டுச் சிறப்பு 34)* என்பதில் சேக்கிழார் 'சாதி' என்றதும் ஒழுக்கம் பற்றியதே என்பது, திருஞானசம்பந்தர் திருநீலகண்டப் பாணரையும், தில்லைவாழந்தணர் திருநாளைப் போவாரையும் 'ஐயரே' என உயர்த்து அழைத்தாராக அவர் கூறிய குறிப்பால் விளங்குவதாகும். இன்னும் ஞானசம்பந்தர் நாவுக்கரசரை

'அப்பர்' என்றே குறித்துப் போந்தமையும் நோக்கற்பாற்று. இதனால் அந்தணர்க்குரிய ஒழுக்கங்கள் பலவும் தொகுத்துக் கூறப்பட்டன.

வேதாந்தங் கேட்க விருப்பொடு முப்பதப்
போதாந்த மான பிரணவத் துள்புக்கு
நாதாந்த வேதாந்த போதாந்த நாதனை
ஈதாந்தம் என்னார்கண் டின்புறு வோர்களே. **#225**

வேதத்தின் முடிந்த பொருளை உணர்தற்கண் விருப்பம் உடையவராய், மூன்று கூறுகளை உடையதாய் நூல்களின் முடிவாகிய பிரணவ மந்திரத்தின் பொருள் நிலையில் நின்று, நாத முடிவான பொருட் பிரபஞ்சத்திற்கும், வேத முடிவான சொற்பிரபஞ்சத்திற்கும், உயிர்களது அறிவின் எல்லைக்கும் அப்பால் நிற்கும் முதல்வனாகிய சிவபெருமானை உணர்ந்து, இன்பத்தின் எல்லை காணாராய் அதில் திளைத்திருப்பவரே அந்தணர் எனப்படுவோர்.

விளக்கவுரை

பிரணவம், ஓங்காரம். இதன் முக்கூறுகளாவன அகரம், உகரம், மகரம், அவற்றின் பொருள் நிலை பகுப்பும் (வியட்டியும்) தொகுப்பும் (சமட்டியும்) என இருவகைத்து. அகரம் தோற்றத்தையும், உகரம் நிலைபேற்றையும், மகரம் ஒடுக்கத்தையும் குறித்தல் பகுப்புப் பொருளாம். அவை அப்பொருளைக் குறித்தல் அவற்றின் பிறப்பியல் பால் அமைந்தது என்க. முத்தொழிலையும் உடைய மண்முதல் நாதம் ஈறாகச் சொல்வடிவாயும், பொருள் வடிவாயும் நிற்கும் உலகம் முழுவதையும் ஒருங்கு சுட்டி நிற்றல் அதன் தொகுப்புப்பொருளாம். அப்பொருள் நிலையில் நிற்றலாவது, 'முத்தொழிலை உடைய பொருள் செயற்கையாவதலல்லது இயற்கையாகாமையானும், செயற்கைப்பொருள் யாவும் அறிவிலவாதலல்லது அறிவுடையன வாகாமையானும் அவை, தாமே அங்ஙனம் தோன்றல், நிற்றல், ஒடுங்கல் என்பவற்றை எய்துதுல் கூடாமையின், அவற்றை அங்ஙனம் தோற்றி நிறுத்தி ஒடுக்கும் பேரறிவும் பேராற்றலும் உடைய முதல்வன் ஒருவன் உளன்' என்பதை ஆசிரியர் அருளுரையும், நூற்கொள்கையும் சார்பாக நின்று ஓர்ந்து தெளிதல். அதன்பின் நாதனைக் காணுதலாவது, அங்ஙனம் உணரப்பட்ட அம்முதல்வனது அருட்குணங்கள் பல வற்றையும் அறிந்து அன்புசெய்து அவனிடத்தே அழுந்திநிற்றல். அங்ஙனம் அழுந்தி நிற்கும் நிலையை மாற்றுதற்கு வேறு பொருள் இன்மையின், அந்நிலையில் விளையும் அவனது இன்பத்திற்கும் எல்லை இல்லையாம். ஆகவே, அந்தணர் எனப்படுவோர் இப் பேற்றினைப் பெற்று நிற்போரேயாவர் என்க.

'பிரமத்தை அறிந்தவனே பிராமணன்' என மிருதி நூலாரும் சொற்பொருள் கூறுவர். ஆயினும் அவர், 'பிரமத்தை அறியும் தன்மை பிராமணன் என்னும் பிறப்பிலே அமைவது; ஆதலின், அத்தன்மை இல்லாத பிற வருணத்தார்க்கு அவ்வறிவு கூடாது' என்பர். அவர் கூற்று வேதத்திற்கு ஒவ்வாததேயாம்.
'ஈதாந்தம்' என்பதில், 'அந்தம்' என்பது முதல்நீண்டு நின்றது. 'அந்தம் ஈது என்னார்' என மாற்றி, 'முடிவு இதுவென்று உணர்தல் இன்றி' என உரைக்க. இவ்வாறு உரைக்கவே, 'எல்லையற்ற இன்ப நுகர்ச்சியைப் பெற்று' என்பது அதனாற் போந்த பொருளாகும். என்னார், முற்றெச்சம். 'எனாது' என்பது பாடம் அன்று. 'கண்டு' என்பதனை, 'நாதனை' என்றதன்பின்னர்க் கூட்டி உரைக்க.

காயத் திரியே கருதுசா வித்திரி
ஆய்தற் குவப்பர் மந்திரமாங் குன்னி
நேயத்தே ரேறி நினைவுற்று நேயத்தாய்
மாயத்துள் தோயா மறையோர்கள் தாமே. **#226**

அன்பாகிய ஊர்தியின்மேல் சென்று முதற் பொருளை அடைந்து அதுவேயாய் அழுந்திநின்று உலகத்தில் பற்றற்று நிற்பவரே, அந்தணர்க்கும் உண்மை காயத்திரி, சாவித்திரி முதலாகச் சொல்லப்படுகின்ற ஞான சத்திகளின் வேறுபாட்டியல் புகளை எல்லாம் அவற்றிற்குரிய மந்திரங்களை நெஞ்சிற் பதித்து ஓர்தற்கு விரும்புவர்.

விளக்கவுரை

எனவே, 'பிறரெல்லாம் அவ்விருப்பமின்றி, வாளா அம்மந்திரங்களைச் சிறிதுபொழுது ஓதுதலோடு ஒழிவர்' என்றது ஆயிற்று. ஆகவே, 'இந்நிலையுடையோரே சிறப்புடை அந்தணர்' என்பது பெறப்பட்டது. அநுபவத்திற்கு அறிவன்றி அன்பே நேர் வாயிலாகலின், 'நேயத் தேர் ஏறி' என்றார். 'நேயத்தாய்' என்றதில், நேயம், 'ஞேயம்' என்னும் வடசொல்லின் திரிபு. ஞேயம் - அறியப் படும் பொருள்.

பெருநெறி யான பிரணவம் ஓர்ந்து
குருநெறி யாலுரை கூடிநால் வேதத்
திருநெறி யான திருக்கை யிருத்திச்
சொருபம தானோர் துகளில்பார்ப் பாரே. **#227**

பலநெறிகளையும் அடக்கிநிற்கும் பெருநெறியை உணர்த்தும் பிரணவ மந்திரத்தின் பொருளைச் சிந்தித்து, அருள் ஆசிரியர்தம் அருளுரையால், முடிந்த பொருளை உணர்ந்து, நான் காகிய வேதத்திற் சொல்லப்பட்ட முத்திநெறியாகிய திருவருட்குத் தம்மைக் கொடுத்து, அத்திருவருட்கு முதலாகிய சிவத்தின் உண்மை நிலையைத் தலைப்பட்டவரே குற்றம் அற்ற அந்தணராவர்.

விளக்கவுரை

மந்திரங்கள் அனைத்திற்கும் முதலாவது ஓங்கார மாதலின், அதனை அனைத்து நெறிகட்கும் இடம் என்றார். 'உரை' என்றது விடாத ஆகுபெயராய், அதனால் உணர்த்தப்படும் முடிந்த பொருளைக் குறித்தது. 'வேதத்திற்குப் புறம்பான நெறிகளின் முத்தி உண்மை முத்தியாகாது போலியாய்ப்போம்' என்றற்குத் 'திருநெறி' என வாளா கூறியொழியாது, 'வேதத் திருநெறி' என விதந் தோதினார். பின் வந்த திரு, செல்வம்; அது 'சென்றடையாத' *(தி.1 ப.98 பா.1) (தி.6 ப.87 பா.1)* இறைவன் செல்வமாகிய திருவருளையே குறித்தது. திருவருளின் வசமாய் நிற்றலை, 'அதன் கையில் இருத்தி' என்றார்.

சத்திய முந்தவம் தான்அவன் ஆதலும்
எய்த்தகும் இந்தியம் ஈட்டியே வாட்டலும்
ஒத்த உயிர்உடன் உண்மை யுணர்வுற்றுப்
பெத்தம் அறுத்தலு மாகும் பிரமமே. **#228**

'பிரமஞானம்' என்பது, பக்குவம் எய்திய உயிர்கள், பொய்கூறாமையும், புலால் உண்ணாமை, கொல்லாமை, இன்னா செய்யாமை ஆகிய நோன்புகளும், தம் வழி நிறுத்தத் தக்க தாகிய மனத்தை அவ்வாறே பொறிவழிப் போகாது தடுத்து நிறுத்தலும், யோக சமாதியும் என்னும் இவை கைவரப்பெற்றுப் பின்னர் மெய் உணர்வெய்திப் பாசத்தை முற்ற அறுத்தலாகும்.

விளக்கவுரை

'பிரமஞானம் எய்தினோரே பிராமணர் என்னும் சொல் பொருளுடையதாக வேண்டின், இவ்வொழுக்கம் கைவரப் பெறல் வேண்டும்' என்றற்கு, பிரமஞானமாவது இது என்பதை வகுத்துக் கூறினார். இவற்றுள் 'உணர்வுற்று' என்பது ஒன்றுமே பிரமஞானமாக, ஏனையவை அவற்றிற்குப் படிகளாயினும், பரம்பரையால் பிரமஞானத்தைப் பயத்தல் பற்றி, அவற்றையும் 'பிரமஞானம்' என்றார். பிரமத்தை உணரும் உணர்வை ஒற்றுமை பற்றி, 'பிரமம்' என்றார். 'பிரமம், ஒத்த உயிர்கள்' என்பவற்றை இம்முறையானே முதற்கண் கூட்டி உரைக்க. தான் அவனாதலாகிய சமாதிநிலை உணர்வுறுதற்கு முன்னிற்கற்பாலதாயினும், செய்யுள் நோக்கிப் பிறழ வைத்தார். 'தவம்' என்புழியும் எண்ணும்மை விரிக்க.

இவை நான்கு திருமந்திரங்களானும் அந்தணர் ஒழுக்கமும், அவற்றது சிறப்பும் உடன்பாட்டு முகத்தால் வகுத்துக் கூறப்பட்டன.

வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை ஒழிந்திலர்

வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே. **#229**

வேதத்தின் முடிந்த பொருள் ஆசையற்ற நிலையே யாம். அதனால், அப்பொருளை உணர்ந்தவர் ஆசையற்று நின்றார்கள். ஆயினும் சிலர் அப்பொருளை உணர விரும்பி உணர்த்து வாரை அடைந்து உணர்ந்தும், தம் ஆசையை விட்டாரில்லை.

விளக்கவுரை

'அங்ஙனம் ஆசையறாது நின்று ஓதல் முதலிய அறு தொழில்களைப் பொருளாசை முதலியவற்றாற் செய்வோர் அந்தண ராகார்' என்பதாம். பின்னிரண்டடிகளை முதலில் வைத்து உரைக்க. 'ஒழிந்த' என்பதன் இறுதி நிலை தொகுத்தலாயிற்று. நிலையை, 'இடம்' என்றார்.

நூலுஞ் சிகையும் நுவலிற் பிரமமோ
நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
நூலுடை அந்தணர் காணும் நுவலிலே. **#230**

முப்புரிநூலை விடாது அணிகின்ற அந்தணர்களே, ஆராய்ந்து சொல்லின், நீவிர் கொண்டுள்ள முப்புரி நூலும், குடுமியுமே பிரமமாகிவிடுமோ! நூல் பஞ்சும், சிகை மயிருமேயாம். உண்மையைச் சொல்லுமிடத்து, நூலாவது வேதத்தின் ஞானகாண்டச் செய்யுட்களே. நுண்ணிய சிகையாவது, அச் செய்யுட்களின் பொருள் தெளிவே; இதனை அறிந்துகொள்ளுங்கள்.

விளக்கவுரை

இங்ஙனமாகவே, 'முப்புரி நூலாகிய பஞ்சு நூல், அறிவு நூலாகிய வேதாந்தத்தைக் குறிக்கும் அடையாளமும், சிகை, அதன் முடிந்த பொருளைக் குறிக்கும் அடையாளமுமேயாய் அந்தணக் கோலத்திற்கு உரியவாயின. அப்பொருளைப் பெறாதவர் அவற்றைக் குறிக்கும் அடையாளமாகிய வேடமாத்திரங்கொள்வதால் அந்தண ராகி விடமாட்டார்' என்றதாயிற்று.

இங்கும் பிரமஞானத்தையே ஒற்றுமை பற்றிப் பிரமமாகக் கூறினார். இங்குக் கூறிய பிரமஞானம் இல்லாதோர் வேட மாத்திரத்தால் பிராமணராகார் என்றவாறு. திருநாவுக்கரசரும்,

கோலும் புல்லும் ஒருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரமுற் றென்பயன்
நீல மாமயி லாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்கட்கே.

-தி.5 ப.39. பா.8

என்பதனால், 'முப்புரிநூல் முதலிய வேடம் புனைந்தும் அபர ஞான பரஞானங்களில்லாதார் அந்தணராதல் இல்லை' எனவும், 'அந்த ஞானங்களை உடையவர், முப்புரிநூல் முதலிய வேடங்கள் இன்றியும் அந்தணராவர்' எனவும் அருளிச்செய்தார். எனினும், நூலும், சிகையும் போல்பவை கலியூழிக் காலத்தில் பிறப்படை யாளமேயாயின. கார்ப் பாசம் - பஞ்சு. கேசம் - தலைமயிர். சிறப்புடைய இவை இரண்டன் உண்மையைக் கூறவே, கோவண உடை முதலிய பிற அடையாளங் களின் உண்மையும் உணர்ந்து கொள்ளப்படும் என்க. இங்குக் கூறப் பட்ட பொருள் இன்றிப் பிறப்பு ஒன்றே காரணமாக வேடமாத்திரம் புனையும் பிராமணர் பிராமணராகாது, பிராமணப் போலிகள் ஆவர் என்பதனை இந்நாயனார், 'பேர்கொண்ட பார்ப்பான்' *(தி.10 2*ஆம் தந்திரம்*)* எனப் பின்னர்க் கூறுவார்.

சத்தியம் இன்றித் தனிஞானந் தானின்றி
ஒத்த விடயம்விட் டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரன்உண்மை யுமின்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாம்அன்றே. **#231**

மேல் (தி.10 பா.225) சத்தியமும் தவமும் முதலாகக் கூறப்பட்ட ஒழுக்கமும், சிவபத்தியும், சிவஞானமும் இன்றி, வயிறு வளர்த்தலில் விருப்பம் மிக்க அறிவிலிகள் ஒருபோதும் பிராமணராதல் இல்லை.

விளக்கவுரை

என்றது, உடல் ஓம்புதல் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டமை காரணமாக, 'பிராமணர் முதலிய வருண வேறுபாடு ஒழுக்கத்தாலன்றிப் பிறப்பிலே அமைந்தன' எனப் பிதற்றுவாரை வன்மையாக மறுத்தவாறு. விடயம் - ஐம்புலன். ஓர்தல், மெய்ப் பொருளை; அது, கற்றும் கேட்டும் ஓர்ந்துணரப்படுவதாம். 'உணர்வு' என்று அந்த அபர ஞானத்தை. பரன் உண்மை - முதற்பொருளின் சொரூபம். இவ்விடத்து, 'உணர்தல்' என்பது சொல்லெச்சமாய் நின்றது. பித்து, பேராசை. அதன்கண் பின்னும் உறைத்து நிற்றலின், 'ஏறும்' என்றும், கிடைத்தற்கரிய பிறவியைப் பிழைபடும் நெறியிற் போக்கலால் 'மூடர்' என்றும் கூறினார்.
இவை மூன்று திருமந்திரங்களாலும் அந்தணர் ஒழுக்கத்தது சிறப்பு எதிர்மறை முகத்தால் கூறப்பட்டது.

திருநெறி யாகிய சித்தசித் தின்றிக்
குருநெறி யாலே குருபதஞ் சேர்ந்து
கரும நியமாதி கைவிட்டுக் காணுந்
துரிய சமாதியாந் தூய்மறை யோர்க்கே. **#232**

'சத்தியமும் தவம்' (தி.10 பா.227) என்னும் திருமந்திரத்துட் கூறப்பட்ட முறைமையில் நிற்கும் உண்மை அந்தணர்கட்கே சித்தாகிய தம்மையும்,

அசித்தாகிய பாசங்களையும் பொருளென உணரும் தன்மை நீங்கி, 'வேதத் திருநெறி' (தி.10 பா.226) என மேற்கூறிய உபதேச பரம்பரை முறையிலே ஞானகுருவைத் தலைப்பட்டு, நாட்கடன் நோன்பு முதலியவை 'உறங்கினோன்கை வெறும்பாக்கென்னத் தானே தவிர' (சங்கற்ப நிராகரணம் - 4. 234) ஞேயம் ஒன்றையே கண்டிருக்கின்ற துரியாதீத நிலை கை கூடுவதாகும்.

விளக்கவுரை

'சித்த சித்தின்றி' என்பதை முதலிற் கூட்டி, *'தூய்மறையோர்க்கே ஆம்'* என மாற்றி உரைக்க. *'இன்றி'* என்பது *'நீங்கி'* என்றவாறு. காண்பதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப் பட்டது. சமாதி, *'அதீதம்'* என்னும் பொருளது.

மறையோ ரவரே மறையவ ரானால்
மறையோர்தம் வேதாந்த வாய்மையில் தூய்மை
குறையோர்தல் மற்றுள்ள கோலா கலமென்
றறிவார் மறைதெரிந் தந்தண ராமே. **#233**

அந்தணர் என்று சொல்லப்படுவோர் அந்தணரேயாதல் உண்மையாயின், 'அந்தணர்க்குரிய வேத முடிவின் மெய்ப்பொருளால் அடையும் தூய்மையாவது, உயிர்களின் குறை பாட்டினை உணர்தலே' என்றும், 'நூலும் சிகையும் முதலிய பிற வெல்லாம் வெளிப்பகட்டாகிய ஆரவாரங்களே' என்றும் அறிவார். அவ்வாறு அறிந்தவரே வேதம் உணர்ந்த அந்தணராவர்.

விளக்கவுரை

'தெரிந்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. *'அவரே அந்தணராம்'* என வேறு தொடராக்கி உரைக்க.

அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர் சேருஞ் செழும்புவி
நந்துதல் இல்லை நரபதி நன்றாகும்
அந்தியுஞ் சந்தியும் ஆகுதி பண்ணுமே. **#234**

உயிர்களிடத்து அழகிய அருளை மேற்கொண்ட வரும் வேதாந்த மெய்ப்பொருளையே சிந்தை செய்பவரும் ஆகிய அந்தணர் வாழ்கின்ற நல்ல நாடு எவ்வாற்றானும் கேடுறுதல் இல்லை. அதனை ஆள்கின்ற அரசனும் நலம்பெற்று வாழ்வான். அந்தியிலும், ஏனைச் சந்தியா காலங்களிலும் வேள்விகள் குறைவின்றி நடைபெறும்.

விளக்கவுரை

'அந்தணர்' என்னும் சொற்பொருள் *'அம் தணர்'* எனவும், *'அந்த அணர்'* எனவும் பிரித்து இருவகையாகக் கூறப் படுதலை முறையே பரிமேலழகர்

உரையிலும் *(திருக்குறள் 30)* நச்சினார்க் கினியர் உரையிலும் காண்க *(திருமுருகாற்றுப்படை - 96. மதுரைக் காஞ்சி - 474, கலி கடவுள் வாழ்த்து).* இவ்விருபொருளும் இங்குக் கூறப்பட்டவாறு அறிக. *'நரபதி'* என்பது வடசொல்லாதலின்; அஃறிணை முடிபு ஏற்றது. அந்தியும் சந்தியேயாயினும் சந்தியாதற்குச் சிறப்புப் பற்றி வேறெடுத்து ஓதினார். *'பண்ணும்'* என்பது *'பண்ணப்படும்'* என்னும் பொருட் டாய் நின்றது; *'எண்ணும் அஞ்செழுத்தே' (சிவஞானபோதம் சூ. 9)* என்பதிற்போல. *'நாடாயினும், காடாயினும், அவலாயினும், மிசையாயினும் எவ்வழி மக்கள் நல்லரோ அவ்வழியே நிலனும் நல்லதாம்' (புறம் - 187)* ஆகலின், நல்ல அந்தணர் வாழும் நாடு நலமிகப் படைத்தலை அறிந்து கொள்க. திருவள்ளுவரும் இக்கருத்தே பற்றி, *'தள்ளாவிளையுள் முதலிய வற்றோடு, தக்காரை உடையதே நல்ல நாடு' (குறள் -731)* என்றார்.

வேதாந்த ஞானம் விளங்க விதியிலோர்
நாதாந்த போதம் நணுகிய பேர்க்கது
போதாந்த மாம்பரன் பாற்புகப் புக்கதால்
நாதாந்த முத்தியுஞ் சித்தியும் நண்ணுமே. **#235**

நாதமுடிவான தத்துவங்களின் ஞானத்தைப் பெற்றவர்க்கே அஃது ஆன்ம போதத்தைக் கடந்த இறைவனை அடையும் நெறியாக அமைவது, ஆதலின் அதுவே வேதாந்த ஞானமாம். அதனால் அந்த ஞானத்தை உணரும் ஊழ் இல்லாமையால் பிரகிருதிகாறும் உள்ள தத்துவங்களையே உணர்வார்க்கு மேற்கூறிய இறைவனை அடையும் பரமுத்தியாதல், அதற்குக் கீழாய்ச் சுத்த தத்துவ புவனங்களை அடையும் பதமுத்தியாதல் கிடைக்குமோ! கிடையா.

விளக்கவுரை

முதலடியை மூன்றாம் அடியின் பின்னர்க் கூட்டி, தொகுக்கப்பட்ட உருவை *'விதியிலோர்க்கு'* என விரித்துக் கொள்க. புக்கது - கிடைத்த ஞானம். *'நண்ணுமே'* என்பதில் ஏகாரம் எதிர்மறைக்கண் வந்தது. பிரகிருதிக்குமேல் உள்ள வித்தியா தத்துவ சிவதத்துவங்களை உணர்தல் சிவாகமங்களை உணர்ந்தார்க்கன்றிக் கூடாமையால், சிவாகமங்களைக் கொள்ளாது, வேதத்தை மட்டுமே கொள்ளும் அந்தணர், அந்தணத் தன்மை நிரம்பப் பெற்றவர் ஆகார் என்றற்கு இவ்வாறு கூறினார். வேதமும், சிவாகமும் முறையே நூலும், உரையும்போல நின்று பொருள்களைக் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் உணர்த்தி நிற்றலின், நூலுள் தொக்கு நிற்கும் பொருள்களை விரித் துரைக்கும் உரையின்றி நூலது பொருளை முற்ற உணர்தல் கூடாமை போல, சிவாகமங்கள் இன்றி வேதத்தின் பொருளை விளங்க உணர்தல் கூடாது. அதனால், சிவாகமங்களை இகழ்ந்து வேதத்தமைட்டுமே ஓதுவோர்

வேதத்தின் பொருளை முற்ற உணரமாட்டாது ஒருபுடையே உணர்வர். வேதத்தின் பொருளை முற்ற உணராத பொழுது, வேதத் திருநெறியின் முடிந்த பயனைப் பெறுதல் இயலாது என்க.
வேதம், சிவாகமம் இரண்டையும் ஒப்ப உணரும் அந்தணருள், வழிபாட்டுச் செயல்கள் பலவற்றையும் வேதமந்திரங்களால் செய்வோர், 'வைதிக அந்தணர்' எனவும், ஆகமமந்திரங்களால் செய்வோர், 'சைவ அந்தணர்' எனவும் சொல்லப்படுவர். 'வைதிக அந்தணர்' எனினும், 'மகாசைவர்' எனினும் ஒக்கும். 'சைவ அந்தணர்' எனினும், 'ஆதி சைவர்' எனினும் ஒக்கும். 'சைவ அந்தணர், 'சிவவேதியர், சிவ மறையோர்' என்றாற்போலச் சிறப்பித்துக் கூறிய வழியே 'அந்தணர்' முதலிய சொற்கள் ஆதிசைவரைக் குறிக்கும். வாளா கூறியவழி அவை வைதிக அந்தணரையே குறிக்கும். எனவே, நாயனார் இங்குக் கூறுவனவெல்லாம் வைதிக அந்தணரையே குறிப்பனவாதல் அறிந்து கொள்ளப்படும். படவே, இவர் சிவாகமங்களையும் இகழாது வேதத்தோடு ஒப்ப மேற்கொள்ளுதல் வேண்டும் என நாயனார் கூறலின், 'சிவாகமவழித் தீக்கை பெற்று - மகாசைவராய் விளங்கும் மறையவர்களே அந்தணர் எனப்படுதற்கு உரியர்' என்பது நாயனாரது திருவுள்ளமாயிற்று. ஆகவே, மகா சைவரல்லாத வைதிகப் பிராமணரைப் புரோகிதராகவும், பரிசாரகராகவும் கொள்ளுதல் சைவர்க்கும், பரார்த்த பூசை முதலியவற்றிற்கும் குற்றமாதல் விளங்கும்.
இதனானே, நாயனார் தமிழையும், வடமொழியையும் ஒரு நிகராகவே கூறினமையின், 'வேத சிவாகமங்களோடு ஒத்து நிகழும் தமிழ் நூல்களையும் அந்தணராவார் இகழாது போற்றுதல் வேண்டும்' என்பதும், இங்ஙனம் வேதம், சிவாகமம், திருநெறித் தமிழ்நூல் என்ப வற்றை ஒப்ப ஓதி உணர்வோருள் வழிபாட்டுச் செயல்களைத் தமிழ் மந்திரத்தால் செய்வோர் 'திருவந்தணர்' என்றும், 'திருவாசிரியர்' என்றும் கொள்ளத்தகுவர் என்பதும் நாயனார்க்கு ஏற்புடையதாதல் விளங்கும். 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த - மறைமொழி தானே மந்திரம் என்ப' (தொல். செய்யுளியல்) என்ற தமிழ்ச் செய்யுள் இலக்கணத்தால், தமிழ் மொழியில் மந்திரம் உளதாதல் தெற்றெனப் புலப்படும்.
இத்தன்மை உடைய மகாசைவருள் தில்லைவாழந்தணர் தில்லைக் கூத்தப் பெருமானுக்குத் தொண்டு பூண்டு அவனைக் காலந் தோறும் தவறாது வழிபடும் நியமம் உடையராதல்பற்றித் திருத் தொண்டருள் அவரே முதன்மை வாய்ந்தவர் என்னும் திருக்குறிப்பால் திருவாரூர்த் தியாகேசப் பெருமான், 'தம்மைத் திருத்தொண்டருக்கு அடியராக்கும் நாள் எந்நாளோ' என இறைஞ்சி நின்ற நம்பி யாரூரர்க்கு, 'தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என அடியெடுத்துக்

கொடுத்துத் திருத்தொண்டத் தொகையில் முதற்கண் தில்லைவாழந்தணரை இடம்பெறச் செய்தருளினான் என்க. இவ்வுண்மை திருத்தொண்டத் தொகை தோன்றுதற்கு முன்பே குறிப்பாற் புலப்படுமாறு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தில்லை வாழந்தணரைச் சிவாகம நெறியாகிய, 'தீக்கை' என்னும் சிறப்புப் (மெய்ந்நெறிச் செய்கை) பெற்றமை பற்றி, 'சிறப்பர்' (தி.1 ப.80 பா.2) என்றும், இச்சிறப்பால் இவர் சிவோகம் பாவனையைத் தலைப்பட்டுச் சிவனுரு எய்தி நின்றமையை,

'நீலத்தார் கரியமிடற் றார், நல்ல
நெற்றி மேலுற்ற கண்ணினார், பற்று
சூலத்தார், சுடலைப்பொடி நீறணி வார்சடையார்'
-தி.3 ப.1 பா.3

என்றும் அருளிச்செய்தார். இச்சிறப்புப் பற்றி இவர் 'தீக்கிதர்' எனப் பெயர் பெற்று நிற்றல் அறியற்பாற்று. இதனானே 'தீக்கிதர்' என்னும் பெயருடைய பிற அந்தணரும் மகாசைவராதல் விளங்கும்.

தில்லைவாழந்தணர் சிவாகமங்களையும் வேதத்தோடு ஒப்ப மேற்கொண்டு ஒழுகுதலைச் சேக்கிழார்,

'வருமுறை எரிமூன்றோம்பி ... ..
... ...
அருமறை நான்கி னோடா றங்கமும் பயின்றுவல்லார்'
'அறுதொழில் ஆட்சியாலே அருங்கலி நீக்கியுள்ளார்'
'ஞானமே முதலா நான்கும் நவையறத் தெரிந்துமிக்கார்'
-தி.12 தில்லைவாழந்தணர் பு. 5,6,7

என விளக்கினார்.

'இவர்கள் கூத்தப் பெருமானை வேதமந்திரங்களாலே வழிபடுவர்' என்பதனையும் அவர்,

'மங்கலத் தொழில்கள் செய்து மறைகளால் துதித்து ....
....
அங்கணர் கோயி லுள்ளா அகம்படித் தொண்டு செய்வார்'

எனக் குறித்தருளினார்.

தில்லைவாழந்தணரைச் சேக்கிழார், 'அகிலமெல்லாம்புகழ் திருமறையோர்' எனச் சிறப்பித்தார். அதனானே அவரால் 'திரு மறையோர்' எனக் குறிக்கப்பட்ட அப்பூதியடிகள் முதலாயினாரும் மகாசைவராதல் அறியப்படும். ஞானசம்பந்தரது தந்தைவழி, தாய்வழி இரண்டும் மகாசைவ மரபே என்பதனைச் சேக்கிழார்,

'மரபிரண்டும் சைவநெறி வழிவந்த கேண்மையராய்' -தி.12

எனக் குறித்தருளினார். இவ்வாற்றானே, 'குங்குலியக் கலயர், முருகர்,

சண்டேசர், சோமாசிமாறர், நமிநந்தியடிகள், நீலநக்கர்' என்னும் நாயன்மார்களும் மகாசைவரேயாதல் பெறப்பட்டது. சேக்கிழார் தில்லைவாழந்தணர் முதலியோரைக் குறித்தவாறே உமாபதிதேவரும் பெரியபுராணத்துட் போந்த வைதிக அந்தணர் அனைவரையும் 'திருமறையோர்' (சேக்கிழார் நாயனார் புராணம் - 36) எனக் குறிப்பிடுதல் காண்க.

சண்டேசுர நாயனாரது பதியாகிய திருச்சேய்ஞலூரைச் சேக்கிழார், 'திருமறையோர் மூதூர்' என்றமையால், அதன்கண் வாழ்ந்த அந்தணரும் மகாசைவரே என்பது பெறுதும். எச்சதத்தன் சிவாபராதம் செய்து ஒறுக்கப்பட்டோனாதல் பற்றி அவனது சைவச் சிறப்பையும், அவனொடு வாழ்ந்த பிற அந்தணரது சைவச் சிறப்பையும் சேக்கிழார் விரித்திலர் எனினும், 'வேதப் பயனாம் சைவமும்போல் மண்ணின் பயனாம் அப்பதி' என்பதனால் அங்குத் திகழ்ந்த சைவச் சிறப்பைக் குறித்தருளினார். இத்தகு சைவச்சிறப்பு அங்கு இல்லையேல், அவர் கூறியவாறு அவ்வூர் தில்லை வாழந்தணர்கள் சோழமன்னர்கட்கு முடிசூட்டும் தலங்கள் ஐந்தனுள் ஒன்றாயிருத்தல் கூடுமோ!

சைவ அந்தணர்க்கு நூல், சிகை என்பவற்றோடு காதில் சுந்தர வேடம் சிறப்படையாளமாம்.

சிவாகமத்தை இகழ்ந்தொதுக்குமாற்றால் அந்தணருட் சிலர் வேதத்தின் பொருளை முன்னொடு பின் முரணாதவாறு ஒருபடித்தாக உணரமாட்டாது, 'பூர்வ பாகமாகிய கன்மகாண்டமே வலியுடைத்து' என அதனையே சிறப்பாக மேற்கொண்டு, 'ஞானகாண்டம் புனைந் துரை' எனப் பொதுவகையால் தழுவி, 'தெய்வம் இல்லை' எனக்கூறி நாத்திகராய் ஒழிவாரும், (மீமாஞ்சகர்) 'உத்தர பாகமாகிய ஞானகாண்டமே வலியுடைத்து' என அதனையே சிறப்பாக மேற்கொண்டு, 'கன்ம காண்டம் மந்த பரிபாகிகட்கே உரியது; அதனால் அதனுள் வலியது இப்பகுதி, மெலியது இப்பகுதி என ஆராய்தல் பயனில் உழப்பாம்' என்று பொதுவகையால் தழுவிக் கிரியா மார்க்கத்தில் அனேகசுர வாதிகளாயும், ஞான மார்க்கத்தில் 'சீவான்மாவே பரமான்மா' என்னும் அகம்பிரமக்காரர்களாயும் நிற்பாரும் (மாயாவாதிகள்) 'கன்ம காண்டம், ஞானகாண்டம்' என்னும் இரண்டையும் ஒப்பக்கொள்ளினும், உலகத்தின் 'தோற்றம், நிலை, இறுதி' என்னும் முத்தொழிலையும் செய்பவனே முதல்வன் என உணரமாட்டாது, 'அவற்றுள் நிலையாகிய சாத்துவிகத் தொழிலைச் செய்பவனே முதல்வன்; ஏனை இராசதத் தொழிலாகிய தோற்றத்தைச் செய்பவனும், தாமதத் தொழிலாகிய இறுதியைச் செய்பவனும் முதல்வர் ஆகார்' என்று இகழ்ந்து, 'அவருள்ளும் தாமதத்தொழிலைச் செய்பவன்,

தோற்றத்தைச் செய்பவனிலும், கீழ்ப்பட்டவன்' எனக்கூறிச் சிவநிந்தகராவாரும் (பாஞ்சராத்திரிகள்) ஆவர். இவரை எல்லாம் சைவாகமங்கள் புறச்சமயிகள் என்றே ஒதுக்கும். இவருள் சிவநிந்தை செய்தொழுகுவாரை 'அகத்தியர், கௌதமர்' முதலிய முனிவர்களது சாப வயப்பட்ட துர்ப் பிராமணர்கள் என்று காந்தம், கூர்மம் முதலிய உயரிய புராணங்கள் இகழ்ந்தொதுக் குதலை அறிந்துகொள்க. இன்னோரன்ன, குழறு படிகள் பலவும் சிவாகமங்களைப் பொருட்படுத்தி உணராமையான் உளவாவன என அறிக.
இதனால், 'வேத சிவாகமஞானமும் வைதிக சைவ ஒழுக்க மும் உடைய அந்தணரே அந்தணத் தன்மை நிரம்பியவர்' என்பது வலியுறுத்தப்பட்டது.

தானே விடும்பற் றிரண்டுந் தரித்திட
நானே விடப்படு மேதொன்றை நாடாது
* * * * * * **#236**

இந்த திருமந்திரங்களில் ஏனையடிகள் கிடைத்தில. அதனால் இவற்றை ஒரு திருமந்திரத்தின் நான்கடிகளாகப் பலரும் மயங்கிக்கொண்டனர். இவை முற்றக் கிடையாமையால், பொருள் காண்டல் அரிது.

விளக்கவுரை

* * * * * *

பூமேவு நான்முகன் புண்ணிய போகனாய்
ஓமேவும் ஓரா குதிஅவி உண்ணவே
* * * * * * **#237**

இந்த திருமந்திரங்களில் ஏனையடிகள் கிடைத்தில. அதனால் இவற்றை ஒரு திருமந்திரத்தின் நான்கடிகளாகப் பலரும் மயங்கிக்கொண்டனர். இவை முற்றக் கிடையாமையால், பொருள் காண்டல் அரிது.

விளக்கவுரை

* * * * * *

3.16.அரசாட்சி முறை

கல்லா அரசனுங் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்
நல்லாரைக் காலன் நணுகிநில் லானே. **#238**

நீதி நூலைக் கல்லாத அரசனும், கூற்றுவனும் யாவரிடத்தும் கொலையே புரிதலால் தம்முள் ஒருபடியாக ஒப்பர். ஆயினும், கல்லா அரசனினும் கூற்றுவனே மிக நல்லவன். என்னை? கல்லா அரசன் தனது அறியாமை காரணமாக ஒரு குற்றமும் செய்யாதார்க்கும் ஆராயாமல் கொலைத்

தண்டம் விதிப்பான்; கூற்றுவன் அறமுடையவர்பால் தண்டம் செய்தற்கு அடையான்.

விளக்கவுரை

'அதனால் அரசர்க்கு நீதிநூற் கல்வி இன்றியமை யாதது' என்பது குறிப்பெச்சம். கற்றற்குச் செயப்படுபொருள் வருவிக்கப் பட்டது. 'ஆயினும், என்னை' என்பன சொல்லெச்சம். 'அறம்' என் றது நீதியை. 'ஓரான்' என்பது முற்றெச்சம். நணுக நில்லான் என்புழி, 'தண்டம் செய்தற்கு' என்பது இசையெச்சம். 'நலியகில்லானே' எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். கல்லா அரசன் அறம் ஓராது கொல்லென் றலை, 'பெண்கொலை செய்த நன்னன்' *(குறுந்தொகை - 292)* முதலியோரிடத்துக் காண்க.
இதனால், 'நீதிநூலை ஓதி உணர்தல் அரசர்க்கு முதற்கண் வேண்டப்படுவது' என்பது கூறப்பட்டது.

நாடோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாடோறும் நாடி அரன்நெறி நாடானேல்
நாடோறும் நாடு கெடும் மூட நண்ணுமால்
நாடோறுஞ் செல்வம் நரபதி குன்றுமே. **#239**

நீதிநூலைக் கற்ற அரசன், அந்நூலின் நோக்கு முதற்கண் வைதிக நெறி மேலும், பின்னர்ச் சிவநெறி மேலும் ஆதலை யறிந்து, நாள்தோறும் தனது நாட்டில் அவை பற்றி நிகழ்வனவற்றை, நாள்தோறும் அயராது ஒற்று முதலியவற்றான் ஆராய்ந்து, அவை செவ்வே நடைபெறச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யானாயின், அவனது நாடும், செல்வமும் நாள்தோறும் பையப் பையக் குறைந்து, இறுதியில் முழுதுங் கெட்டுவிடும். அவற்றிற்குக் காரணம், யாண்டும் பாவச் செய்கையே மலிதலாம்.

விளக்கவுரை

'நாட்டில்' என்புழி 'நிகழும்' என்பது வருவிக்க. 'அவன் நெறி' என்பது பாடம் அன்று. வைதிக நெறி பொதுமையான கடவுள் நெறியாதலின், அதனை, 'தவநெறி' என்றார். வைதிக நெறி சைவநெறிகளே நீதி நூலின் நோக்காதலை, மேற்கூறிய உண்மை அந்தணர் அந்நூலை ஓதுவிக்கும்வழி, அவர் அரசனுக்கு உணர்த்து வாராதலின், அரசன் அவ்வழியில் வழுவாது நிற்றல் வேண்டும் என்பதாம். 'நரபதி கெடும், குன்றும்' என உடைமையது தொழில்கள், உடையான்மேல் ஏற்றப்பட்டன. 'மூடம்' என்றது அதன் காரியந் தோன்ற நின்றது. இத்தவநெறி சிவநெறிகளைப் புரத்தலில் வழுவாது நிற்பித்தற்பொருட்டே, 'அரசன் பெரியாரைத் துணைக் கொள்ளல்

வேண்டும்' (*திருக்குறள், 45ஆம் அதிகாரம்*) என்றார் திருவள்ளுவர். ஞானசம்பந்தர் 'வேந்தனும் ஓங்குக' (*தி.3 ப.54 பா.1*) என அரசனை வாழ்த்தியதும் இது பற்றியே என்பதனைச் சேக்கிழார்,

'ஆளும் மன்னனை வாழ்த்திய தற்சனை
மூளும் மற்றிவை காக்கும் முறைமையால்'
-தி.12 திருஞான.பு. 4-822

என விளக்கினார். இவ்வரச ஒழுக்கத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திருத்தொண்டர் புராணத்துட் போந்த நாயன்மார் சிலரது அரசாட்சியைக் கண்டுகொள்க.

இதனால், அரசன், தன்கீழ் வாழும் மக்கட்கு, நிலை பேறில்லாத உடல் நலத்தை மட்டும் காப்பவனாகாது, நிலையுடைய உயிர் நலத்தையும் காப்பவனாதல் வேண்டும் என்பது கூறப்பட்டது.

வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்
வேட நெறிநிற்போர் வேடம்மெய் வேடமே
வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்
வேட நெறிசெய்தால் வீடது வாகுமே. **#240**

யாதோர் உயர்ந்த தொழிற்கும் அதற்குரிய கோலம் இன்றியமையாதாயினும், அத்தொழிற்கண் செவ்வே நில்லாதார் அதற்குரிய கோலத்தை மட்டும் புனைதலால் யாது பயன் விளையும்! செயலில் நிற்பாரது கோலமே அதனைக் குறிக்கும் உண்மைக் கோலமாய்ப் பயன்தரும். அதனால், ஒருவகை வேடத்தை மட்டும் புனைந்து, அதற்குரிய செயலில் நில்லாதவரை, வெற்றியுடைய அரசன், அச்செயலில் நிற்பித்தற்கு ஆவன செய்வானாயின், அதுவே அவனுக்கு உய்யும் நெறியும் ஆய்விடும்.

விளக்கவுரை

பலவகைக் கடவுள் நெறிக் கோலத்தை உடை யாரையும் அவற்றிற்குரிய செயலில் நிற்பித்தல் அரசனுக்குக் கடமையாதலை உணர்த்துவார் இங்ஙனம் பொதுப்படக் கூறினார். 'வேடமே மெய்வேடம்' என, ஏகாரத்தை மாற்றி உரைக்க. ஒழுக்கம் இல்லாதார் வேடம் மாத்திரம் புனையின், உண்மையில் நிற்பாரையும் உலகம், 'போலிகள்' என மயங்குமாகலானும், அங்ஙனம் மயங்கின் நாட்டில் தவநெறியும், சிவநெறியும் வளராது தேய்ந்தொழியும் ஆகலானும் அன்ன போலிகள் தோன்றாதவாறு செய்தல் அரசற்குப் பேரறமாம் என்பார், 'அதுவே வீடாகும்' எனவும், இது செய்ய அரசற்குக் கூடும் ஆதலின் அதனை விட்டொழிதல் கூடாது என்பார், வேந்தனை, 'விறல் வேந்தன்' எனவும் கூறினார். 'உண்மை வேடத்தாலன்றிப் பொய் வேடத்தாற் பயன் இன்று' என்பதை,

வானுயர் தோற்றம் எவன்செய்யும், தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின். -குறள், *272*
எனவும், பொய்வேடத்தால் பயன் விளையாமையேயன்றித் தீமையும் பெருகுதலை,
தவம்மறைந் தல்லவை செய்தல், புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று. -குறள், *273*
வலியில் நிலைமையான் வல்லுருவம், பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று -குறள், *274*
எனவும், வேடம் புனையாராயினும், உண்மையில் நிற்பார் உயர்ந் தோரே ஆவர் என்பதனை,
மழித்தலும் நீட்டலும் வேண்டா, உலகம்
பழித்த தொழித்து விடின். -குறள், *280*
எனவும் திருவள்ளுவரும் வகுத்துக் கூறியருளினார்.
இதனால், கடவுள் நெறியில் போலிகள் தோன்றாதவாறு குறிக் கொண்டு காத்தல் அரசற்குக் கடமை என்பது பொதுவாகக் கூறப் பட்டது.
எவரேனுந் தாமாக; இலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி,
உவராதே அவரவரைக் கண்ட போதே

உகந்தடிமைத் திறம்நினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழும் அடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. -தி.*6* ப.*51* பா.*3*
என்றாற்போலும், திருமொழிகள் உலகியலைக் கடந்து அருள் நெறியில் நிற்கும் அன்புநெறி *(*பக்திமார்க்கம்*)* பற்றியனவும், இங்குக் கூறிய பலவும் உலகியலைக் கடவாத நூல்நெறி *(*விதிமார்க்கம்*)* பற்றியனவுமாம் ஆதலின் இவை தம்முள் முரணாகாமை அறிக.

மூடங் கெடாதோர் சிகைநூல் முதற்கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
பீடொன் றிலனாகும் ஆதலாற் பேர்த்துணர்ந்
தாடம் பரநூற் சிகையறுத் தால்நன்றே. **#241**

'பிரமத்தை உணர்ந்தவனே பிராமணன்' என்று வாய்ப்பறை சாற்றிவிட்டு, அப்பொழுதே அம்முயற்சி சிறிதும் இன்றி மூடத்தில் அழுந்திக்கிடப்போர் குலப்பெருமை கூறிக்கொள்ளுதற் பொருட்டுப் பிராமணர்க்குரிய சிகையையும், பூணூலையும் முதன் மையாக மேற்கொள்வாராயின், அத்தன்மையோர் உள்ள நாடும், நன்னெறி

நிகழாமையால் வளம் குன்றும்; அந் நாட்டிற்குத் தலை வனாகிய அரசனும் பெருவாழ்வுடையனாயினும், தன் கடமையைச் செய்யாமையால், பெருமை சிறிதும் இலனாவன். ஆதலால், அத்தன்மையாளரது உண்மை நிலையை அரசன் பல்லாற்றானும் ஆராய்ந்தறிந்து, வெளியாரை மருட்டும் அவரது பொய்வேடத்தைக் களைந்தெறியச் செய்தால், பலர்க்கும் நன்மை உண்டாகும்.

விளக்கவுரை

வேடமாத்திரத்தானே தம்மைப் பிராமணர் என மதித்துக்கொள்வோர் தம் மூடத்தை நீக்கிக்கொள்ள முயலாராகலான் அவர்க்கும், அவரது வேடத்தால் அவரை உயர்ந்தோர் எனக் கருதி அவர்க்குப் பிறர் செய்யும் தானங்கள், அவரது தீயொழுக்கத்தால் உலகிற் பல தீச்செயல்கள் நிகழ்தற்கே காரணமாதலின் உலகிற்கும் உளவாகின்ற தீமைகள் அனைத்தும் அப்பொய் வேடத்தைக் களையவே நீங்க, மெய் வேடத்தாரால் நன்மை விளையும் என்பது பற்றி, 'அறுத்தால் நன்றே' என்றார்.

இதனால், 'அரசன் கடவுள் நெறியுள் வைதிக நெறியைக் காத்தல் வேண்டும்' என்பது சிறப்பாகக் கூறப்பட்டது.

ஞானமி லாதார் சடைசிகை நூல்நண்ணி
ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே. **#242**

சிவஞானம் இல்லாத வெறுவியர் சிவஞானம் பெற்றுச் சிவனே ஆயினார் போலச் சிவனுக்குரிய சடை, சிகை, பூணூல் என்பவற்றைப் புனைந்துகொண்டு சிவஞானிகள் போல நடிப்பார் களாயின், அவரை அரசன் சிவஞானிகள் வாயிலாகவே பரிசோதனை செய்து உண்மைச் சிவஞானிகளாகச் செய்தல் நாட்டிற்கு நன்மை பயப்பதாகும்.

விளக்கவுரை

எனவே, 'அது செய்யாவழி நாட்டிற்குத் தீமை உண்டாகும்' என்றதாயிற்று. ஞானம் உண்மையை அறிதல் அரசற்குக் கூடாமையின், 'ஞானிகளாலே சோதிக்க' எனவும், 'சிவசின்னத்தைக் களைக' எனக் கூறுதலும் குற்றமாதலின், 'அவர்க்குச் சிவஞானத்தை உண்டாக்குக' எனவும் கூறினார். 'சடை' என்னும் கோலத்தைக் கூறவே, ஞானம், சிவ ஞானமாயிற்று.

இதனால், 'அரசன் கடவுள் நெறியில் சிவநெறியைப் பழுது படாமல் காத்தல் வேண்டும்' என்பது சிறப்பாகக் கூறப்பட்டது.

ஆவையும் பாவையும் மற்றற வோரையுந்

தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையும்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே. **#243**

ஆக்களையும், பெண்டிரையும், துறவறத்தாரை யும், தேவர்களாலும் வணங்கப்படும் சிவனடியாரையும் பிறர் நலியாமல் காத்தற்குரியன் அரசன். அவன் அதனைச் செய்யாதொழி வனாயின் மறுமையில் மீளா நரகம் புகுவன்.

விளக்கவுரை

'பாவையயரையும்' என்பது குறைந்து நின்றது. 'காப்பவன் காவலன்' என மாறிக் கூட்டுக. வைதிக வேள்வி சைவ வேள்விகட்கு அவியையும், சிவவழிபாட்டிற்குப் பால் முதலிய ஐந்தையும் தருவன ஆக்களும் (பசுக்களும்) 'அறவோர்க்களித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க்கெதிர்தல், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடல்' (சிலப்பதிகாரம் - கொலைக்களக் காதை) முதலியவற்றையும், சிவவழிபாடு செய்யும் ஆடவர்க்கு அதற்கு வேண்டுவனவற்றை அமைத்து உடன் இருந்து உதவுதலையும் செய்வோர் பெண்டிரும், அறமுதற் பொருள்களை உலகர்க்கு உணர்த்துவார் துறவறத்தவரும், சிவஞான சிவபத்திகளைப் பரிபக்கு வர்க்குத் தருவார் சிவனடியாரும் ஆகலானும், இவரை நலியும் இயல்பு உடையார் முறையே புலையரும், தூர்த்தரும், நாத்திகரும், புறச்சமயி களும் ஆகலானும் அவரால் இவர்க்கு நலிவு வாராமைக் காத்தல் அரசற்குக் கடன் என்பதும், 'அக்கடனை அவன் ஆற்றாதொழியின், ஆற்றுவார் பிறர் இன்மையின் உளவாகும் தீங்குகட்கு அவனே காரணன் ஆதலின், அவன் நிரயத் துன்பத்தை நெடுங்காலம் எய்துவன்' என்பதும் கூறியவாறு. மறுமைக்கு - மறுமைக்கண்.

இதனால், 'உலகியல், மெய்ந்நெறி' என்னும் இருவகை நன்னெறிகட்கும் ஊறுண்டாகாதவாறு காத்தல் அரசற்குக் கடன் என்பதும், அக்கடமையைச் செய்யாவழி அவற்கு உளதாகும் குற்ற மும் கூறப்பட்டன.

திறந்தரு முத்தியுஞ் செல்வமும் வேண்டின்
மறந்தும் அறநெறி யேஆற்றல் வேண்டும்
சிறந்தநீர் ஞாலஞ் செய்தொழில் யாவும்
அறைந்திடில் வேந்தனுக் காறிலொன் றாமே. **#244**

பல சமய நூலாரும் தாம் தாம் அறிந்தவாறு கூறும் யாதொரு முத்தியைப் பெறவேண்டினும், இம்மை மறுமைச் செல்வங் களை எய்த வேண்டினும் அரசன் மறந்தும் தனது அறநெறியினின்றும் வழுவுதல் கூடாது. அதனால், அவன், தன்கீழ் வாழும் குடிகளிடத்து விரும்பற்பாலது

அவர்தம் தொழில் வருவாயுள் ஆறில் ஒன்றேயாம்.

விளக்கவுரை

ஆகவே, 'அதனின்மேற்பட விரும்புதல் அரசற்குக் குற்றமாம்' என்றபடி. இல்லறத்தார் 'தென்புலத்தார் முதலிய ஐந்திடத்து அறமும்' *(குறள், 43)* செய்ய வேண்டுதலின், ஆறில் ஒன்றிற்கு மேற்பட விரும்புதல் அரசற்குக் குற்றமாயிற்று.

அரசரது ஒழுக்கம் கூறும்வழி அவர்க்குப் பொருள் வருவாயும் கூறவேண்டுதலின், அதனை அறத்தாற்றின் வழுவாது பெறல் வேண்டும் என்பது இதனால் கூறப்பட்டது. 'உறுபொருளும், உல்கு பொருளும், தன்ஒன்னார்த் தெறுபொருளும்' *(குறள், 756)* பெறுதற்கண் அறத்தின் வழுவுதல் உண்டாகாமையின், அவை இங்குக் கூற வேண்டாவாயின.

வேந்தன் உலகை மிகநன்று காப்பது
வாய்ந்த மனிதர்கள் அவ்வழி யாநிற்பர்
பேர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தான்கொள்ளின்
பாய்ந்த புலியன்ன பாவகத் தானே. **#245**

அரசன் உலகத்தை மேற்கூறியவாற்றாலெல்லாம் காப்பது பலர்க்கும் நன்மையை மிகத் தருவதாகும். எவ்வாறெனில், அத்தகைய ஆட்சியில் பொருந்திய மக்கள் மேற்கூறிய நெறிகளிலே வழுவாது நிற்பராகலின். அரசன் அங்ஙனம் காத்தலினின்றும் பிறழ்ந்து தனது நாட்டைப் பகை மன்னர் வந்து கைப்பற்றுமாறு தான் தனது குடிமக்களைத் தமக்கும், அறத்திற்கும் உரியவராகக் கருதாது, தனது நலம் ஒன்றற்கே உரியதாகக் கருதிவிடுவானாயின், அவன் தனது பசியின்பொருட்டுப் பிற விலங்குகளைப் பாய்ந்து கொல்லும் புலியோடொத்த தன்மையனே ஆவன்.

விளக்கவுரை

'அறநெறி பிறழ்ந்த அரசற்குக் கெடுவது மறுமை யேயன்றி இம்மையுமாம்' என்பார், 'இவ்வுலகைப் பிறர் கொள்ள' என்றார். கொடுங்கோல் அரசனோடு குடிகளும், பிறரும் மேவுதல் *(குறள் - 740 உரை)* இன்மையால், அவன் தற்காத்தலையும் செய்து கொள்ளமாட்டாது பகைவர்க்கு எளியனாவான் என்க. 'தாம்' என்பது பாடம் அன்று. 'தான்கொள்ளின்' என்புழியும் 'கொள்ள' என்பதே பாடமாயின் பொருள் இதுவேயாம் என்க. பாவகம் - தன்மை. இதனால், 'தன் கடமையினின்றும் வழுவுதல் அரசற்குப் பெருங்கேடு பயக்கும்' என்பது கூறப்பட்டது.

கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப்
பால்கொண்டு சோமன் முகம்பற்றி உண்ணாதோர்

மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை
மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே. **#246**

'கால் கட்டி மேல் ஏற்றிப் பால் கொண்டு சோம பானம் செய்க' என்பது யோகியரிடை வழங்குவதொரு குறிப்புச் சொல். அதன் பொருள் 'காற்றை (பிராண வாயுவை) இடைகலை பிங்கலை வழிச் செல்லாதவாறு தடுத்து, சுழுமுனைவழிமேல் ஏறச் செய்து, அதனால் வளர்கின்ற மூலக்கனலால் நெற்றியில் உள்ள சந்திரமண்டலத்தினின்றும் வழிகின்ற அமுதத்தை உண்டு சமாதியில் அழுந்திப் பரவசம் எய்தியிருக்க' என்பதேயல்லது, 'ஒருவனை இருகால்களையும் கட்டிக்கொண்டு பனை மரத்தின்மேல் ஏறச்செய்து, அவன் அதன் பாளையினின்றும் இறக்கிக் கொணர்கின்ற கள்ளை உண்டு அறிவிழந்திருக்க' என்பது பொருளன்று. அதனால், அவ்வுட் பொருளை உணரும் அறிவிலாதோர் தமக்குத் தோன்றிய வெளிப் பொருளே பொருளாக மயங்கித் தாமும் கள்ளுண்டு களித்துப் பிறரை யும் அவ்வாறு களிக்கச் செய்வர். அப் பேதை மாக்களை ஒறுத்தலை அரசன் தனது முதற்கடனாகக் கொண்டு ஒறுத்தல் வேண்டும்.

விளக்கவுரை

வேள்விக்கண் கொள்ளப்படும் சோமபானத்தைப் புகழ்ந்து கூறலும் இன்னதொரு மயக்க உரையே என்பது தோன்றுதற் பொருட்டுத் திங்களை அப்பெயராற் கூறாது, *'சோமன்'* என்னும் பெயராற் கூறினார். அதனால் அன்னதொரு வேள்வியை உயிர் நலம் கருதாது உடல் நலத்தின்பொருட்டு அப்பானம் செய்தல் வேண்டி வேட் பார்க்கும் அரசன் அறிவு புகட்டல் வேண்டும் என்பது பெறப்பட்டது. இத்திருமந்திரத்துள், *'கால், மேலேற்றல், பால், சோமன்'* என்னும் சொற்கள் இவ்விரு பொருள் பயந்து நிற்றல் அறிக. *'முகத்தின்கண் சோமனைப் பற்றிப் பால்கொண்டு உண்ணாதார்'* எனக் கூட்டுக. செய், *'செய்கை'* என்னும் பொருட்டாய முதனிலைத் தொழிற் பெயர்.

'காயத்தின் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே
மாயக்கள் ளுண்டாரென் றுந்தீபற;
வறட்டுப் பசுக்களென் றுந்தீபற' -திருவுந்தியார் 43

என்றார் திருவுந்தியாரிலும்.

இதனால், அரசன், *'கடவுள் நெறியில் பேதை மாக்களது கட்டுரைகள் நிகழ்ந்து குழறுபடை செய்யாதவாறு காத்தல் வேண்டும்'* என்பது கூறப்பட்டது.

தத்தஞ் சமயத் தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண் டமுஞ்செயும் அம்மையில் இம்மைக்கே

மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே. #247

சமயிகள் பலரும் தம் தம் சமய அடை யாளங்களை மட்டும் உடையராய் அச்சமய ஒழுக்கத்தில் நில்லா தொழிவாராயின், அனைத்துச் சமயங்கட்கும் தலைவனாகிய சிவபெருமான் தான் தனது ஆகமத்திற் சொல்லியுள்ள தண்டங்கள் அனைத்தையும் மறுமையில் அவர்க்குச் செய்தல் திண்ணம் ஆயினும், இம்மையில் அவர்க்குரிய தண்டத்தைச் செய்தல் அரசனுக்குக் கடமையாகும்.

விளக்கவுரை

'மறுமைத் தண்டம், அதன்பின் வரும் பிறப்பில் அப்பாவம் தொடராது கழிதற்பொருட்டாதலானும், அதனைச் செய்தல் பிறர்க்கு இயலாதாகலானும் அதனைச் சிவபிரான் தானே செய் வானாய், இம்மையிற் செய்யும் தண்டம் அப்பாவம் மறுமையில் தொடராது கழிதற்பொருட்டாதலின், அதனை அவன் அரசனுக்குக் கடமையாக்கினான். ஆகவே, அரசன் அக்கடமையினின்றும் வழுவுதல் கூடாது' என்பதாம். சமயங்கள் பலவும் உயிர்களின் அறிவு வளர்ச்சிப்படிகளேயாதலின், 'அவற்றை மேற்கொண்டுள்ளோம்' என்பவர் அவ்வொழுக்க நெறி நில்லாராயின் பொய்ம்மையாளராய்ப் பிறரை வஞ்சித்துக் கேடெய்துவராகலின், அவ்வாறு ஆகாமைப் பொருட்டு அவரை ஒறுத்தல் அரசற்குக் கடமையாயிற்று. இதனால், 'அவரவர் மேற்கொண்ட சமயங்கள் பலவற்றையும் பழுதுபடாமற் காத்தல் அரசற்குக் கடன்' என்பது கூறப்பட்டது.

3.17.வானச் சிறப்பு

அமுதூறு மாமழை நீரத னாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றும்
கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
அமுதூறும் காஞ்சிரை ஆங்கது வாமே. #248

வற்றாத அமுத ஊற்றுப்போலச் சுரந்து பொழிகின்ற பெரிய மழைநீராலே பயன் சுரக்கின்ற பல மரங்கள் இயற்கையாக நிலத்தில் தோன்றி வளர்வனவாம். இனி உழவரால் பயிரிடப்படுகின்ற கமுகு, இனிய நீரைத் தருகின்ற தென்னை, கரும்பு, வாழை முதலியனவும் அம்மழையினாலே மக்கட்கு நிரம்பிய உணவைத் தருவனவாம். இனி எட்டி போன்ற நச்சு மரங்களும் அம்மழையினால் உளவாவனவேயாம்.

விளக்கவுரை

முதற்கண், 'அமுதூறும்' என்பதன் இடையில் 'போல' என்னும் உவம உருபு விரிக்க. 'நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்' *(தி.10 ஆறாம் தந்திரம்)* எனப் பின்னர்க் கூறுமாறுபோலவே, இயற்கை

விளைவுகளைக் கூறியதேயன்றி, உழவரால் உளவாகும் செயற்கை விளைவுகளையும் கூறினார், சிறப்புடைய மக்களுலகம் அவற்றால் வாழ்தல் கருதி. 'ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும் - வாரி வளங்குன்றிக் கால்' *(குறள் - 14 1)* என்றார் திருவள்ளுவரும். இதனானே உழ வாகிய முதற்றொழிலும், ஓரிடத்து விளையும் பொருளைப் பிற விடத்துக்கொண்டு கொடுக்கும் வாணிகம் முதலிய துணைத்தொழிலும் ஆகியவற்றால் பல்வேறு திறத்து மக்களது வாழ்விற்கும் மழை முதலாதல் போந்தது. போதரவே, மேல் கூறாதொழிந்த வணிகர், வேளாளர் என்பாரொடு ஏனைமக்களது ஒழுக்கங்களும் ஓராற்றால் கூறப்பட்டனவாயின. இங்கும் அமுதூறும் மரங்களுடன், நஞ்சூறும் மரங்களும் மழையினால் உளவாதல் கூறினார், 'பார்சை' எனக் கூறிய இந்நிலவுலகம் நல்வினை தீவினை இரண்டற்கும் இடமாகிய இருவினை உலகமாவதல்லது, சுவர்க்கமும், நரகமும் போல ஒரு வினை உலகமன்று என்பது அறிவித்தற்கு. எனவே, 'கன்ம பூமியாகிய இந்நிலவுலகம் நடத்தற்கு மழையே முதல்' என்பது கூறப்பட்டதாம். புல், பூடு முதலிய பலவும் இங்கு, 'மரம்' என அடக்கப்பட்டன. 'மரப் பெயர்க் கிளவிக்கு அம்மே சாரியை' *(தொல்-எழுத்து, 415)* என்றாற்போல. 'காஞ்சிரை யும்' என்ற உம்மை தொகுத்தலாயிற்று.

வரையிடை நின்றிழி வான்நீர் அருவி
உரையில்லை உள்ளத் தகத்துநின் றூறும்
நுரையில்லை மாசில்லை நுண்ணிய தெண்ணீர்
கரையில்லை எந்தை கழுமணி யாறே. **#249**

எம்தந்தையாகிய சிவபெருமான் பொழிகின்ற திருவருளாகிய வெள்ளம் அன்பரது நெஞ்சகத்தினின்றும் ஊறுகின்ற சூக்குமமாகிய தெளிநீராம் ஆதலின், அதற்கு உலகில் மழையால் மலையினின்றும் பாய்கின்ற வெள்ளிய அருவி நீர்க்கு உள்ளதுபோல இடமும், காலமும் சுட்டும் சொல்லில்லை; நுரை இல்லை; மேலே மூடுகின்ற பாசியில்லை; கரையில்லை.

விளக்கவுரை

'நுரையில்லை மாசில்லை' என்பதனை இறுதியடியின் முதலிற் கூட்டுக. 'நுரை இல்லை' என்றது, 'பயன்படா தொழியும் கூறில்லை' எனவும், 'மாசில்லை' என்றது, 'பாசத் தொடர்பு இல்லை' எனவும் கூறியவாறாம். எனவே, 'அமுத ஊற்று' என மேல் சிறப்பிக்கப்பெற்ற நீர்மழையினும் இறைவனது கருணைமழை மிகச் சிறந்தது என்பது கூறும் முகத்தால், 'இறைவனது கருணையானே மழை உளதாகும்' என்பது உணர்த்தப்பட்டதாம். 'முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே - என்னப் பொழியாய் மழை' என மாணிக்கவாசகர், மழையை இறைவன்

கருணையோடு உவமித்ததும் இதுபற்றி. இக்கருத்தே பற்றித் திருவள்ளுவரும் வான்சிறப்பைக் கடவுள் வாழ்த்தினை அடுத்து வைத்தார். இதனானே மக்களது ஒழுக்க மும், ஒழுக்கம் இன்மையும் மழைக்கும், மழை இன்மைக்கும் நேரே காரணமாகாது, இறைவனது திருவுள்ளத்திற்கு உவகையும் வெகுளி யும் உளவாக்கும் முகத்தால் காரணமாம் என்பது பெறப்பட்டது. சிறந்த ஒளியாதல் பற்றித் திருவருளை, *'கழுமணி'* என்றார்.
இதனால், மழை இறைவனது திருவருள் வடிவாதல் கூறப் பட்டது.

<u>**3.18.**தானச் சிறப்பு</u>

ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே. **#250**

அறம் செய்தலில் விருப்பம் உடையவர்களே, அறம் வேண்டுமாயின், இரப்பாரை 'அவர் நல்லர் இவர் தீயர்' என அவரது தகுதி வேறுபாடுகளை ஆராயாது யாவர்க்கும் இடுங்கள். உண்ணும் காலத்தில் விரையச் சென்று உண்ணாது, விருந்தினர் வருகையை எதிர் நோக்கியிருந்து பின்பு உண்ணுங்கள்.
காக்கைகள் தமக்குக் கிடைத்த உணவை உண்ணும்பொழுது, தம் இனத்தையும் அழைத்துக்கொண்டு உண்ணுதலைக் காணுங்கள்; கண்டீராயின், முன்னோர் தேடிவைத்தனவும், நீவிரே முன்னே தேடிவைத்தனவும் ஆகிய பொருளைப் பொன்காக்கும் பூதம்போல வறிதே காத்திராது சுற்றத்தார் பலர்க்கும் உதவுங்கள்.

விளக்கவுரை

'ஆர்க்கும் இடுமின், பார்த்திருந்துண்மின், பழம் பொருள் போற்றன்மின்' என்பவற்றால் முறையே *'தாழ்ந்தோர், உயர்ந் தோர், ஒத்தோர்'* என்னும் முத்திறத்தார்க்கும் உதவுதல் கூறப்பட்டமை காண்க.
தாழ்ந்தோர்க்கு உதவுதலே ஈகை அல்லது தருமம். அஃது *'அற்றார் அழிபசி தீர்த்தலே' (குறள், 226)* ஆகலின், அதற்கு ஏற்பாரது தகுதியை ஆராயவேண்டுவதில்லை என்றார்.
'பார்த்திருந்து உண்மின்' என்றதனால், *'தக்கார் வரின், மகிழ்ந்து வரவேற்று அவரோடு உண்டலும் வாராதவழி வாராமைக்கு வருந்தித் தாமே உண்டலும் செய்க'* என்றதாயிற்று. இதுவே *'விருந்தோம்பல்'* என்றும், *'தானம்'* என்றும் சொல்லப்படும். இவர்க்குப் பொருளும் கொடுக்கப்படும் ஆதலின், தகுதி வேண்டப்படுவதாயிற்று.
திருவள்ளுவரும் *'தக்க விருந்தினரையே ஓம்புக'* எனக் கூறுதல் அறிக.

(குறள், அதி. 9)

'பழம்பொருள் போற்றன் மின்' என்பதை இறுதியில் வைத்து உரைக்க. சுற்றம், அடுக்கிய சுற்றமாய் வருதலின், *(குறள், 525)* பழம் பொருளைப் போற்றாது வழங்குதலை அதற்கே கூறினார். எனினும் பொதுப்படவே ஓதினமையால், பிறவற்றிற்கும் கொள்ளப்படும். காக்கை கரைந்துண்ணுதலைத் திருவள்ளுவர் சுற்றந்தழாலுக்கே உவமையாகக் கூறுதலும், *(குறள், 527)*
காக்கை தனது இனம் ஒன்றையே கரைந்து உண்ணுதலும் அறிக. 'காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே' என்றாராயினும், 'உண்ணுங் காலம் காக்கை கரைதல் அறிமின்' என்றலே கருத்து என்க. இதனால், 'தேடிய பொருளைப் பிறர்க்குப் பயன்படச் செய்தல் வேண்டும்' என்பதும், அங்ஙனம் செய்யுமாறும் கூறப் பட்டன.

3.19.அறஞ்செய்வான் திறம்

தாமறி வாரண்ணல் தாள்பணி வாரவர்
தாமறி வாரறந் தாங்கிநின் றாரவர்
தாமறி வார்சில தத்துவ ராவர்கள்
தாமறி வார்க்குத் தமன்பர னாமே. **#251**

'சிவபெருமானது திருவடியை வணங்குதல், பிறர்க்கும் பிற உயிர்க்கும் உதவுதலை மேற்கொண்டு செய்தல், தத்துவ உணர்வு பெறுதல்' என்னும் இவற்றுள் ஒன்றையோ, பலவற்றையோ உடையவரே அறிவுடையோராவர். அவர்க்கே சிவபெருமான் உறுதுணையாவான்.

விளக்கவுரை

'தாள்பணிவார்' முதலிய மூன்றனையும் எழு வாயாக்கியும், 'தாமறிவார்' மூன்றனையும் அவற்றிற்குத் தனித்தனிப் பயனிலையாக்கியும் முடிக்க. இவற்றால் இவை மூன்றும் அறத்தின் வகையாதல் இறுதியடியில் பெறப்பட்டது. தொகுக்கப்பட்ட பிரிநிலை ஏகாரத்தை விரித்து, 'தாமறிவார்க்கே பரன் தமனாம்' எனக் கூட்டி உரைக்க. 'தமர்' எனப் பன்மையாக ஓதுதல் பாடம் அன்று. 'அறம் செய்வோரே அறிவுடையோர்' என்பது உணர்த்துவார், ஏனைய வற்றையும் உடன் கூறினார். 'விருந்தோம்பல் ஓம்பா மடமை மடவார்கண் உண்டு'*(குறள், 89)* எனத் திருவள்ளுவரும் அறம் செய்யாமையை, 'மடமை' எனவும், அதனை உடையாரை, 'மடவோர்' எனவும் கூறுதல் காண்க. இதனால், 'அறத்தை விரும்பிச் செய்தல் அறிவுடையோர்க்கே கூடுவது' என்பதும், அறத்தின் வகையும் கூறப்பட்டன.

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை

யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே. **#252**

உண்ணப்புகும்பொழுது இறைவனுக்கு ஒரு பச்சிலை சூட்டி வணங்குதலும், பசுவிற்குச் சிறிது உணவு கொடுத் தலும், வறியார்க்குச் சிறிது சோறிடுதலும், அவ்வாறிடும் பொழுது இன்சொல் சொல்லுதலும் எல்லார்க்கும் இயல்வனவே.

விளக்கவுரை

'அதனால், யாம் பொருள் இலம் என்று அறஞ் செய்யாமைக்குக் காரணங் கூறியொழிதல் பொருந்துவதன்று' என்பது குறிப்பெச்சம். ஆம் - கூடும். *'பச்சிலை'* முதலிய நான்கன் பின்னும் முறையே, *'சூட்டல், கொடுத்தல், இடுதல், சொல்லல்'* என்பன சொல் லெச்சமாய் நின்றன.
இதனால், மக்கள் யாவரும் *'அறத்தினைத் தத்தமக்கு ஒல்லும் வகையான் ஓவாதே செல்லும்வாயெல்லாம் செயல் வேண்டும்' (குறள் - 33)* என்பது கூறப்பட்டது.

அற்றுநின் றாருண்ணும் ஊணே அறனென்னுங்
கற்றன போதங் கமழ்பவர் மானிடர்
உற்றுநின் றாங்கொரு கூவற் குளத்தினிற்
பற்றிவந் துண்ணும் பயன்அறி யாரே. **#253**

'பொருள் இல்லாத வறியவர், பொருள் உடை யவர் கொடுக்க உண்ணும் அதுவே பொருள் உடையவர்க்கு அறமாகி நிலை பெறும்' என்பதை நூல்களால் அறிந்த அறிவு செயலில் மணக்கப் பெறுபவரே மக்களாக மதிக்கப் பெறுவர். ஆயினும் அவ்வறிவைப் பெற்றும், சிலர், நீர்வேட்கையுடையார் பலரும், (பெரிய நீர் நிலையாகிய கடலை நோக்கிச் செல்லாது) ஊருணியாகிய சிறிய கிணறு குளங்களைத் தேடிச் சென்று உண்ணும் செயலின் தன்மையை அறிதல் இல்லை.

விளக்கவுரை

'அறிந்தாராயின், செல்வத்துப்பயன் ஈதலே' (புறம், 189) என்று உணர்ந்து வறியார்க்கு ஈவர் என்பது கருத்து. *'வறியார்க்கொன் றீவதே ஈகை; மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீரதுடைத்து' (குறள் - 221)* ஆதலின், *'அற்று நின்றார் உண்ணும் ஊணே அறன்'* என்றார். *'கூவல் குளத்தினில்'* என்பது, *'கூவலிலாதல் குளத்திலாதல்'* என்னும் பொருளது. *'கடல்நீர் பெரிதாயினும் நீர்வேட்கையுடையார் அதனிடத்துச் செல்லாமை போலப் பெருஞ்செல்வராயினும் ஈயாதார் மாட்டு இரவலர் செல்லார்; அதனால், அப்பெருஞ்செல்வர் அச்செல்வத்தால் சிறிதும் பயன் பெறார் என்பதும், கூவலும், குளமும் சிறியவேயாயினும் நீர்வேட்கை யுடையார்*

அவற்றிடத்தே சென்று நீருண்டல்போலச் சிறிது செல்வம் உடையாராயினும் ஈபவரிடத்தே இரவலர் சென்று தாம் வேண்டிய பெறுவர்; அதனால் அச்சிறு செல்வரே புகழும், அறமும் ஆகிய செல்வத்துப் பயனைப் பெறுவர் என உணர்ந்து ஈகையுடையராதல் வேண்டும்' என்பது பின்னிரண்டடிகளாலும் உணர்த்தப்பட்டது.

'தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணா ராகுப நீர்வேட் டோரே;
ஆவும் மாவும் சென்றுணக் கலங்கிச்
சேறொடு பட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர் மருங்கின் அதர்பல வாகும்'

என்னும் புறப்பாட்டினைக் காண்க (புறம், 204).

இதனால், 'அறிவுடை மக்களாயின், செல்வத்தின் பயன் அறம் செய்தலேயாம்' என்பது கூறப்பட்டது.

அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்
தழுக்கிய நாளில் தருமமுஞ் செய்யீர்
விழித்திருந் தென்செய்வீர்? வெம்மை பரந்து
இழுக்கவன் றென்செய்வீர்? ஏழைநெஞ் சீரே. **#254**

அறியாமை வழிப்பட்ட மனத்தை உடையவரே! நீவிர், 'செல்வத்துப் பயன் ஈதலே' என அறியும் அறிவை மறைத்து நிற்கின்ற அறியாமையை நல்லோர் இணக்கம் முதலியவற்றால் போக்கி அறிவை நிறைத்துக்கொள்ள மாட்டீர்; அதனால், செல்வக் காலத்தில் தருக்கிநின்று அறத்தைச் செய்கிலீர்; நும் செல்வத்தைக் குறிக்கொண்டு காத்து என்ன பயன் அடையப்போகின்றீர்? இறுதிக் காலத்தில் கூற்றுவன் வந்து கோபம் மிகுந்து கண்ணில் தீப்பொறி பரக்க நும்மைக் கட்டி இழுக்கும்பொழுது என்ன செய்ய வல்லீர்?

விளக்கவுரை

'தருக்கிய' என்பது எதுகை நோக்கித் திரிந்தது. 'திரியாது ஓதுதலே பாடம்' எனினுமாம். 'கூற்றுவன்' என்பது வருகின்ற திருமந்திரத்தினின்றும் கொள்ள வைத்தார்.

தன்னை அறியாது தாம்நலர் என்னாதிங்
கின்மை யறியா திளையரென் றோராது
வன்மையில் வந்திடும் கூற்றம் வருமுன்னம்
தன்மமும் நல்ல தவஞ்செய்யும் நீரே. **#255**

கூற்றுவன், தன்னைப் பிறர் காணாதபடியும், தன்னால் பற்றப்படுவர் நற்பண்பினை உடையர் என்றோ, தம்மை யன்றித் தம் சுற்றத்தார்க்குக் களைகணாவாரை இலர் என்றோ முதியர் என்றோ, இளையர் என்றோ எண்ணாமலும், பிறரால் தடுத்தற்கரிய ஆற்றலோடு வருவன். அவ்வாறு

வருமுன்னே நீவிர் அறத்தையும், தவத்தையும் செய்து கொள்ளுங்கள்.

விளக்கவுரை

'முதியர் என்று ஓராது' என்பது இசையெச்சம். தன்மம் செய்தல் கூறுவார், தவம் செய்தலையும் உடன் கூறினார், அதுவும் அறத்தின் வகையாதல் பற்றி. 'தவமும்' என்னும் உம்மை தொகுத்தல்.
இவை இரண்டு திருமந்திரங்களானும், 'யாக்கை முதலியவை நிலைத்துள்ளபொழுதே அறத்தைச் செய்துகொள்க' என்பது கூறப் பட்டது.

துறந்தான் வழிமுதற் சுற்றமும் இல்லை
இறந்தான் வழிமுதல் இன்பமும் இல்லை
மறந்தான் வழிமுதல் வந்திலன் ஈசன்
அறந்தான் அறியும் அளவறி வாரே. **#256**

மெய்ம்மையை ஆராய்ந்தறியும் அறிவுடையீரே! முற்றத் துறந்தவனுக்குச் சுற்றத் தொடர்பு இல்லை. அதனால் அவன் இறைவனை மறவான். மறவானாகவே அவனுக்குக் கெடுவது யாதும் இல்லை. அங்ஙனம் முற்றத் துறக்கமாட்டாதவன் சுற்றத்தொடு கூடி வாழும்பொழுது அறஞ் செய்யாதே இறந்தொழிவனாயின், அதன் பின்னர் அவனுக்கு அறமேயன்றி அவன் விரும்பிய இன்பமும் இல்லையாம். அவன் தான் வாழுங்காலத்து இறைவனை மறவா திருத்தல் கூடாமையின் இறைவனும் அவனுக்குத் துணைவாரான்; அதனால் அவன் இருமையும் இழப்பன். ஆகவே, நீவிர், 'இல்லறம், துறவறம்' என்னும் இருவகை அறங்களின் தன்மையை அறிந்து அவற்றுள் இயன்றதொன்றில் நில்லுங்கள்.

விளக்கவுரை

வருவித்து உரைத்தன பலவும் இசையெச்சங்கள். 'வந்திலன்' எனத் துணிவு பற்றி இறந்தகாலமாயிற்று. வழிமுதல் - பிற் காலம். 'அறியும்' என்றது 'அறிந்து நில்லுங்கள்' என்றபடி. அளவு - உண்மை. இதனால், மக்கள் அறிவுடையராயின், இருவகை அறங் களுள் யாதானும் தமக்கு இயன்றதொன்றனைச் செய்தல் வேண்டு மன்றிச் செய்யாதொழிதல் கூடாது என்பது வலியுறுத்தப்பட்டது. 'அறத்தினூஉங் காக்கமும் இல்லை; அதனை - மறத்தலினூஉங் கில்லை கேடு' *(குறள், 32)* என்றார் திருவள்ளுவரும்.

தான்தவஞ் செய்வதாம் செய்தவத் தவ்வழி
மான்தெய்வ மாக மதிக்கும் மனிதர்கள்
ஊன்தெய்வ மாக உயிர்க்கின்ற பல்லுயிர்
நான்தெய்வம் என்று நமன்வரு வானே. **#257**

மக்கட்பிறப்பைப் பெற்றுடையீர், அறிவுடை மகனால் செய்யத்தக்கது
தவம் ஒன்றே. தவநெறி சிவபிரானையே பரம் பொருளாக உணர்ந்து
ஒழுகுதலாய் இருக்கும். பலர் இந்நெறி நில்லாது உடம்பையே
தெய்வம்போலப் பேணி மூச்சு விடுகின்ற பிணங்களாய் நிற்கின்ற
உலகாயத நெறியில் உள்ளனர். அவர்க்கு இறுதியில் யமன், 'தெய்வம்
இல்லை என்ற உங்கட்குக் காட்சியளிக்கின்ற தெய்வம் நான்தான்'
என்று சொல்லுவான்போலக் கண்முன் வந்து நிற்பான்.

விளக்கவுரை

'தான் செய்வது தவமாம்' என மாறுக. 'தவமே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. தவத்து அவ்வழி - தவத்திற்குரிய அவ்வழி. மான் - பெரியோன். சிவபெருமானை வட மொழி 'மகாதேவன்' என்றும், தமிழ்மொழி 'பெரியோன்' என்றும் கூறுதலை அறிந்துகொள்க. மதிக்கும் - மதிக்கும் இயல்புடையதாகும். 'சிவத்தைப் பேணின் தவத்திற் கழகு' (கொன்றை வேந்தன்) என ஔவையாரும் கூறினார். 'மனிதர்கள்' என்பது விளி. 'மனிதர்காள்' என்பதே பாடம் எனலு மாம். 'உயிர்க்கின்ற' என்பது முற்று. இழிவு தோன்ற அஃறிணை யாகக் கூறினார். இதனால், இருவகை அறங்களுள் துறவறமே உயர்ந்தது என்பது கூறப்பட்டது. 'கூற்றங் குதித்தலும் அதனாலே கை கூடுவ தாகும்' *(குறள் - 269)* என்பதும் குறிப்பால் புலப்படுத்தப்பட்டது. 'தவம் செய்வார் தங்கருமம் செய்வார்மற்றல்லார் அவம்செய்வார் ஆசையுட் பட்டு' *(குறள் - 266)* என்றார் திருவள்ளுவரும்.

திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி
இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு
கிளைக்குந் தனக்கும்அக் கேடில் புகழோன்
விளைக்குந் தவம்அறம் மேற்றுணை யாமே. **#258**

அறம் செய்தற்கு 'இல்நிலை, துறவு நிலை' என இரண்டு வழிகள் உண்டு.
அவற்றுள் அழிதல் இல்லாது நின்று நிலவும் புகழை உடைய துறவோன்,
தனக்கும், தன் சுற்றத்திற்கும் பயன் விளையு மாறு செய்யும் தவம், உயிர்
கரை காணமாட்டாது அழுந்திக் கிடக்கின்ற வினையாகிய கடலை
நீந்துதற்கு அமைந்த தோணியாய், பிறந்தும், இறந்தும் உழலும்
இளைப்பினை நீக்கும். இல்லறத்தில் நின்று செய்யும் விருந்தோம்பல்
முதலிய அறம் மறுமைக்குத் துணையாய் வரும்.

விளக்கவுரை

'திளைக்கும் ... ... இளைக்கும்' என்பதனை 'அறம்' என்பதற்கு முன்னே கூட்டுக. 'தோணியாய்' என ஆக்கம் விரிக்க. 'ஒருவன் செய்யும் நல்வினை தீவினைகள் அவன் கிளைஞர்க்கும் ஆகும்' என்பது வேத

சிவாகமங்களின் துணிவு.
தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும். -குறள், *115*
கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். -குறள், *166*
என்றாற்போலும் திருக்குறள்களையும் காண்க. இதனால், இருவகை அறத்தின் இயல்புகளும் தெரித்துக் கூறப் பட்டன.

பற்றது வாய்நின்ற பற்றினைப் பார்மிசை
அற்றம் உரையான் அறநெறிக் கல்லது
உற்றுங்க ளால்ஒன்றும் ஈந்தது வேதுணை
மற்றண்ணல் வைத்த வழிகொள்ளு மாறே. **#259**

சிவபெருமான் எவ்வுயிர்க்கும் உண்மைப் பற்றாய் உள்ள அறத்தை அஃது அரிய மறைபொருள் (இரகசியம்) என்று, அறநெறியில் நிற்பார்க்கன்றி ஏனையோர்க்கு உணர்த்துதல் இல்லை. அதனை அவன் அருள்வழி நான் பெற்றவாற்றால் உங்கட்குக் கூறுவதாயின், ஒன்றேயாயினும், உங்களால் மனம் பொருந்திப் பிறர்க்கு ஈந்தது உண்டாயின், அதுவே உங்கட்குத் துணையாவது. இன்னும் அப்பெருமான் வகுத்த நன்னெறியை மேற்கொள்ளும் முறைமையும் அதுவேயாம்.

விளக்கவுரை

'பற்று' இரண்டனுள் பின்னது சுட்டுப் பெயரளவாய் நின்றது. 'அற்றம்' என்புழி, 'என்று' என்பதும், 'ஒன்றும்' என்புழி, 'ஆயின்' என்பதும், எஞ்சி நின்றன. அறநெறி வேட்கையரை 'அறநெறி' என்றார். 'அறநெறிக்கல்லது உரையான்' என முன்னே கூட்டி முடிக்க. 'அண்ணல்' எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, 'உரையான்' என்றார். 'ஒன்றாயினும், உங்களால் உற்று ஈந்ததுவே துணை' என மாறிக் கூட்டுக. 'மற்றும்' என்னும் எச்ச உம்மை தொகுத்தலாயிற்று. 'கொள்ளுமாறு' என்பதன்பின் எச்ச உம்மையும் 'அது' என்னும் பயனிலையும் எஞ்சி நின்றன. இதனால், 'அறம் ஒன்றே உயிர் உய்யும் நெறி' என்பது வரையறுத்துக் கூறப்பட்டது.

3.20.அறஞ்செயான் திறம்

எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன்ன
ஒட்டிய நல்லறஞ் செய்யா தவர்செல்வம்
வட்டிகொண் டீட்டியே மண்ணின் முகந்திடும்
பட்டிப் பதகர் பயன்அறி யாரே. **#260**

எட்டிமரத்தில் பழுத்த பெரிய பழங்கள் ஒருவர்க்கும் பயன்படாது வீழ்ந்து

அழிந்தாலொப்பனவாகிய, பொருந்திய நல்லறஞ் செய்யாத உலோபிகளது பொருள், வட்டி மிகப் பெறுதலாலே குவிந்து, மண்ணில் குழிபறித்துப் புதைக்கப் பட்டொழிவதேயாகும், பட்டிகளாகிய தீவினையாளர் அறத்தின் பயனை அறியார் ஆகலான்.

விளக்கவுரை

'பழுத்த' என்றது, முதல்மேல் நின்ற சினைவினை. 'வீழ்ந்தன' என்பதே பாடம் எனினும், பொருள் இதுவே என்க.
'மண் ணின் இடும்' என இயையும். முகத்தல், மண்ணைப் பறித்தல்.
'இடும்' என்பது செயப்பாட்டு வினையாய் நின்றமுற்று.
பட்டி - பட்டிமை; அஃதாவது வேண்டியவாறே ஒழுகுந்தன்மை. பொருள் முட்டுவந்துழி அது நீங்குதற்பொருட்டுத் கடன் கொள்பவர்பால் அம் முட்டுப்பாடே காரணமாக அவர் பொருளை 'வட்டி' என்னும் பெயரால் தாம் வேண்டும் அளவு பறிப்பார், தம் பொருளைப் பிறர்க்கு ஈயாதவரினும் கொடியராதல்பற்றி அவரை, 'பட்டிப் பதகர்' என்றார்.
'பாதகர்' என்பது குறுகி நின்றது. கடன் கொடுப்பார் வட்டி பெறுதல் இயல்பாய் இருக்க அதனை மிகைபடக் கூறலாக எடுத்தோதிய அதனால், 'வட்டி' என்று அளவிற்கு மேற்பட்டதனைக் குறித்தது.
'ஆகலான்' என்பது சொல்லெச்சம்.
இதனால், அறஞ் செய்யாதவரது பொருள் போமாறு கூறப்பட்டது.

ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின
கழிந்தன கற்பனை நாளுங் குறுகிப்
பிழிந்தன போலத்தம் பேரிடர் ஆக்கை
அழிந்தன கண்டும் அறம்அறி யாரே. **#261**

உலகில் பல்லுயிர்கட்கும் அவை வாழுங் காலம் நிலைபெறாது ஒழிதலையும், உலகம் நிலைபெறும் காலமாகிய ஊழிகளும் நில்லாது பல நீங்குதலையும், தாம் எண்ணிய எண்ணங் களும் கைகூடாது கனவுபோலக் கழிதலையும், பசி பிணி பகை முதலியவற்றால் பெருந்துன்பத்தை எய்துகின்ற தங்கள் உடம்பும் இறுதி நாள் நெருங்க, சாறுபிழியப்பட்ட கரும்பின் கோதுபோலாகி வலியழி தலையும் கண்டுவைத்தும் மக்களிற் பலர் அறத்தை நினைக்கின்றிலர்.

விளக்கவுரை

'இஃது அறியாமையின் வலி' என்பது குறிப்பெச்சம். 'ஒழிந்தன' முதலிய அத்தொழில்மேல் நின்ற வினைப்பெயர். முற்றாக வைத்து, 'அவற்றை' என்பது வருவித்து, அச்சுட்டு அத் தொழிலைக் குறித்ததாகவும் உரைப்பர்.
ஊழி பல நீங்குதல் உரை யளவையால் அறியப்பட்டது. ஏனைய

காட்சியால் அறியப்பட்டன. வேண்டுமிடங்களில் எச்ச உம்மை விரிக்க. இதனால், அறஞ் செய்யாதவரது அறியாமை மிகுதி கூறப்பட்டது.

அறம்அறி யார்அண்ணல் பாதம் நினையுந்
திறம்அறி யார்சிவ லோக நகர்க்குப்
புறம்அறி யார்பலர் பொய்ம்மொழி கேட்டு
மறம்அறி வார்பகை மன்னிநின் றாரே. **#262**

அறத்தை நினையாதவர் சிவபெருமானது திரு வடியை நினைக்கும் முறையையும் அறியாதவரேயாவர். அதனால் அவர் சிவலோகத்தின் அருகிலும் நெருங்குதல் இயலாது. (நரகமே புகுவர் என்பதாம்) தம்மோடொத்த அறிவிலிகள் பலர் கூறும் மயக்க உரைகளைக் கேட்டு, அவற்றின்வழி நின்று பாவங்களைச் செய்பவர் கட்கு அப்பாவமும் பொருளைக் கொடுத்தல் மீட்டல்களால் பலரிடத்து உண்டாகும் பகைகளுமே எஞ்சுவனவாம்.

விளக்கவுரை

அறம் என்பது, சிவபெருமான் தனது திருவுளத்தின் விருப்பத்தைக் கூறியதேயாகலான், அதனைச் செய்யாதே நிகழ்த்தும் பிற செயல்கள் அவனது வழிபாடாம் எனக் கருதுதல் அறியாமை யாதல்பற்றி, 'அறம் அறியார், அண்ணல் பாதம் நினையும் திறம் அறியார்' என்றார். மறம் செய்வார் யாவராயினும் அவரைச் சிவபிரானது மறக்கருணை நரகிற் செலுத்தும் என்பதனை,

'இரப்பவர்க் கீய வைத்தார்; ஈபவர்க் கருளும் வைத்தார்;
கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநர கங்கள் வைத்தார்;
.... ஐயன் ஐயாறனாரே' -*தி.4 ப.38 பா.10*

எனத் திருநாவுக்கரசரும் வலியுறுத்தோதினார். திருமூலரும், திரு நாவுக்கரசரும் முதலிய சிவநெறிப் பேரருளாசிரியர்கள் அறத்தினை இத்துணை வலியுறுத்தி அருளிச்செய்திருக்கவும், 'புறநெறியின்கண் உள்ளது போலச் சிவநெறியில் அறம் அத்துணை வலியுறுத்தப் படவில்லை' என்பார் உளராயின், அவரதுநிலை இரங்கத்தக்கதாம் மறம் *(பாவம்)* மன்னுதல் உடம்பொடு புணர்த்துக் கூறப்பட்டது.

இதனால், 'அறநெறி சிவநெறிக்கு இன்றியமையா உறுப்பு' என்பது கூறப்பட்டது.

இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்புந்
தருமஞ்செய் யாதவர் தம்பால வாகும்
உருமிடி நாக முரோணி கழலை
தருமஞ்செய் வார்பக்கல் சாரகி லாவே. **#263**

பலவகை நோய்களும், இடைஇறப்பும் (அவ மிருத்தும்) போல்வனவாகிய இம்மைத் துன்பங்கள் பலவும் அறம்

செய்யாதவரிடத்தே செல்வன; அறஞ்செய்வார் இருக்கும் திசையை யும் அவை நோக்கா.

விளக்கவுரை

இரண்டாம் அடியை ஈற்றடியின் முன்னே வைத்து உரைக்க. உரும் இடி - பேரிடி. நாகம் - பாம்பு. உரோணி - ரோகிணி; நோயுடையாள்; அஃது ஆகுபெயராய் அவளால் வரும் நோயைக் குறித்தது. இனி, 'உரோணியால் வரும்கழலை' என்றலுமாம். கழலை - கட்டி. பக்கல் - திசை. இருமல் முதலியன இன்னவாதல் சிவ பெருமானது சீற்றத்தாலும், அருளாலுமாம்.

இதனால், அறம் செய்யாதவர்க்கும், செய்பவர்க்கும் இம்மை யில் உளவாகும் நலந் தீங்குகள் கூறப்பட்டன.

பரவப் படுவான் பரமனை ஏத்தீர்
இரவலர்க் கீதலை யாயினும் ஈயீர்
கரகத்தால் நீரட்டிக் காவை வளர்க்கீர்
நரகத்தில் நிற்றிரோ நாள்எஞ்சி னீரே. **#264**

வாழ்நாள் வாளா குறையப்பெற்ற மக்களே, நீவிர் யாவராலும் போற்றப்படுகின்ற சிவபெருமானைத் துதிக்கவும் இல்லை; இரப்பார்க்கு ஈதலும் இல்லை; குடத்தால் நீர்முகந்து ஊற்றிச் சோலைகளை வளர்க்கவும் இல்லை; ஆகவே, இறந்தபின் நரகத்தில் நீங்காதிருக்கப் போகின்றீர்களோ?

விளக்கவுரை

இவற்றுள் ஒன்றே செய்யினும் அறமாம் என்னும் கருத்தால் இவ்வாறு கூறினார். 'ஈதலும் ஈயார்' என்பது, 'உண்ணலும் உண்ணேன்' (கலி - பாலை 22) என்பதுபோல நின்றது. 'தானே மரங்களை வைத்தா யினும், முன்பு உள்ள மரங்கட்கு நீருற்றியாயினும் வளர்த்தலே அறம்' என்றற்கு, 'கரகத்தால் நீரட்டி' என்றார்.

இக்காலத்தார் இவற்றைச் செய்யாதொழியினும் வளர்ந்துள்ள மரங்களை வெட்டா மலேனும் இருப்பார்களா என்பது தெரியவில்லை. 'நரகத்தில் நிற்றிரோ' என்றது 'கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநர கங்கள் வைத்தார்' என்னும் (தி.4) அப்பர் திருமொழியை நன்கு வலியுறுத்துவதாகும். 'ஏத்தார்' என்பனபோலப் படர்க்கையாக ஓதுவன பாடம் அல்ல.

இதனால், அறம் செய்யாதார் நரகினை எய்துதல் கூறப் பட்டது.

வழிநடப் பாரின்றி வானோர் உலகங்
கழிநடப் பார்கடந் தார்கரும் பாரும்
மழிநடக் கும்வினை மாசற வோட்டி

ஒழிநடக் கும்வினை ஓங்கி நின்றாரே. #265

உலகில் நல்வழியில் நடத்தல் இன்றி மேலுலகம் கிடையாதொழியும் தீய வழியிலே நடக்கின்றவரே பலர். அவரொழிய, ஞானம் நிகழும் செயல்கள், மிகப் பெற்ற சிலரே, கேடு நிகழ்தற்கு ஏதுவான பாவத்தை நீக்கி நரகத்தையும் கடந்தவராவர்.

விளக்கவுரை

இத்திருமந்திரத்துள் பாடங்கள் பல்வேறு வகை யாய்க் காணப்படுகின்றன. அவை, 'கடந்தார் - நடந்தார், கரும் பாரும் - கருப்பாரும், மழி - வழி, மாசற ஓட்டிட்டு ஒழி நடப்பார் வினை ஓங்கி நின்றாரே - மாசற ஓட்டிட வழிநடக்கும் மளவீழ்ந்தொழிந்தாரே' என்பன. கழி' என்பது, 'கழிய' எனப் பொருள் தந்தது. கரும்பார் - இருளுலகம். மழி - மழித்தல்; முதனிலைத் தொழிற்பெயர். 'ஒளி' என்பது, எதுகை நோக்கி 'ஒழி' எனத் திரிந்து நின்றது. ஒளி - ஞானம்.

இதனால், ஞான நெறியில் நிற்பார்க்கு அறம் தானே உளதாதல் கூறப்பட்டது.

கெடுவது மாவதுங் கேடில் புகழோன்
நடு அல்ல செய்தின்பம் நாடவும் ஒட்டான்
இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்
படுவது செய்யிற் பசுவது வாமே. #266

உயிர்கள் நலம்பெறுதலும், தீங்குறுதலும் இறைவன் செய்யும் நடுவு நிலைமையே (நீதியே) அதனால், அவை அறம் அல்லாதவற்றைச் செய்து அவற்றானே இன்பம் அடைய விரும் புதலை அவன் ஒருபோதும் உடன்படான்.

ஆகையால், மாந்தரீர், இன்பம் கெடுதற்கு ஏதுவாகிய பாவத்தைச் செய்தல் விலங்கின் செயலேயாகி விடும்; அதனை அறிந்து நீவிர் உயர்ந்தோர்க்குக் கொடுத்தலையும், தாழ்ந்தோர்க்கு ஈதலையும் செய்ய நினையுங்கள்.

விளக்கவுரை

கெடுவதும் ஆவதும் என்னும் எழுவாய்கள் 'நடு' என்னும் பெயர்ப் பயனிலை கொண்டன.

'நடு' என்னும் இடப்பெயர் முன்னர் அதன்கண் நிற்றலைக் குறித்துப் பின்நின்று செய்தலைக் குறித்தது. 'செய்து' என்றது, 'நாட' என்பதனோடு முடிந்தது. 'நாடவும்' என்னும் உம்மை இழிவு சிறப்பு. 'அது பசுவாம்' என மாற்றுக.

பசு, ஆகுபெயர்.

இதனால், அறம் செய்பவரையே இறைவன் விரும்புதல் கூறப்பட்டது.

இன்பம் இடரென் றிரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையி னாலே முடிந்தது
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம்அறி யாரே. **#267**

இறைவன் உயிர்கட்கு, 'இன்பம், துன்பம்' என்ற இரண்டை வகுத்து வைத்தது, அவை முற்பிறப்பில் செய்தவினை அறமும், மறமும் என இரண்டாய் இருத்தல் பற்றியேயாம். அதனால் முற்பிறப்பில் அறம் செய்தவர்கள் இப்பிறப்பில் இன்பம் நுகர்தலைக் கண்டுவைத்தும் இரப்பவர்க்கு ஈதலைச் செய்யாத அறிவிலிகள், உள்ளத்தில் அன்பு என்னும் பண்பு இல்லாதவரே யாவர். அவர் அறம் என்பதையும் அறியார்.

விளக்கவுரை

இதனால், இப்பிறப்பில் விளையும் நலந் தீங்குகட்குக் காரணம் அற மறங்கள் என்பதும், அறத்திற்குக் காரணம் அன்பு என்பதும் கூறப்பட்டன.

செல்வங் கருதிச் சிலர்பலர் வாழ்வெனும்
புல்லறி வாளரைப் போற்றிப் புலராமல்
இல்லங் கருதிஇறைவனை ஏத்துமின்
வில்லி இலக்கெய்த விற்குறி யாமே. **#268**

அறிவுடையீர், சிலவிடத்துச் சிலராகவும் சில விடத்துப் பலராகவும் வாழ்வாரது பெருவாழ்வாகிய செல்வத்தைக் கண்டு, அதனானே அவர் ஈவர் என்று கருதி அற்பராயிருப்பாரைப் புகழ்ந்து, பயன் கிடையாமையால் பின் மெலிவடைதலைச் செய்யாமல், நுமக்குப் புக்கிலாம் வீடு கருதி இறைவனைத் துதியுங்கள். அதுவே வில் வல்லோன் எய்த அம்புக் குறிபோலத் தப்பாது பயன் தருவதாகும்.

விளக்கவுரை

'செல்வங் கருதி' என்பதனை, *'வாழ்வெனும்'* என்பதற்குப் பின்னர்க் கூட்டியுரைக்க. *'செல்வத்துப் பயன் ஈதலே'* என்பதை அறியாது, ஈட்டலும், நுகர்தலுமே எனக் கருதுவாரை, *'புல்லறிவாளர்'* என்றார். *'சிலரும் பலரும் ஆகியோரது வாழ்வு'* என்க. *'உயிர்க்கு உடம்பு துச்சில்'* எனவும், *'வீடுபேறே புக்கில்'* எனவும் திருவள்ளுவர் *(குறள், 340)* கூறுமாறு காண்க. இலக்கு - இலக்காய பொருள். *'விற்குறி'* என்பதில், வில் ஆகுபெயர்.

இரத்தலும் ஈதலே போலும், கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு. -குறள், *1054*

என்பராகலின், கரப்பார் மாட்டுச் சென்று இரத்தலே வறியார்க்கு இரப்பு

என்னும் இழிதொழிலாதல் பெறப்பட்டது.
இதனானே,
இரப்பன் இரப்பாரை யெல்லாம், இரப்பிற்
கரப்பார் இரவன்மி னென்று. -குறள், 1067
எனவும் கூறுப.
அதனால், 'கரப்பார்பால் சென்று இரவாமையே வறியார்க்கு ஓர் அறம்' என்பார் 'புல்லறிவாளரைப் போற்றிப் புலராமல்' என்றும், 'பொருளிலார்க்கு ஈதலாகிய அறம் கூடா தாயினும், இறைவனை ஏத்துதலைவிட வேண்டாவன்றோ' என்பார், 'இறைவனை ஏத்துமின்' என்றும் கூறினார்.
இதனால், வறியார்க்கு ஆகும் அறம் கூறப்பட்டது. 'தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்' (தி.7 ப.34 பா.1) என்னும் சுந்தரர் திருப் பதிகம் இத்திருமந்திரத்தொடு வைத்து நோக்கற்பாற்று.

கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர்
துணிந்தவர் ஈசன் துறக்கம தாள்வர்
மலிந்தவர் மாளுந் துணையுமொன் றின்றி
மெலிந்த சினத்தினுள் வீழ்ந்தொழிந் தாரே. **#269**

பொருள் உடையவரேயாயினும், இலரே யாயினும் அன்பால் இளகுகின்ற மனம் உடையவரே சிவபெருமானது திருவடிகளை அடையும் நெறியைப் பெறுவர். அங்ஙனம் அந் நெறியைப் பெற்று அவனது திருவடிகளே எல்லா உயிர்கட்கும் பற்றுக் கோடு என ஒருதலையாக உணர்பவரே அவன் உலகத்தை அடைந்து வாழ்வர். அவன் திருவடியல்லாத பிற பொருள்களில் ஆசை நிறைந் தவர், தாம் இறக்குங்காறும் தமக்கு உய்யப்போவதொரு நெறியும் இன்றி, அறிவின்மை காரணமாக, தம்பால் வந்து இரப்பவரிடத்தும், 'இரப்பவர்க்கு இல்லை என்னாது ஈக' என்று அறிவுறுப்பாரிடத்தும் கொள்கின்ற சினமாகிய தீயில் விழுந்து அழிவர்.

விளக்கவுரை

காண்டல் - பொதுவகையான் உணர்தல். துணை - அளவு. உம்மை முற்றும்மை. ஒன்று - ஒருநெறி. மெலிந்த சினம் - அறிவு குறைந்தமையால் விளைந்த சினம். 'வீழ்ந்தார்' என்பது குறிப்பு உருவகம்.
இதனால் அறத்திற்கு முதலாவது அன்பு என்பதும், அவ்வன்பு தானே இறைவனை அடைதற்கும் வழி' என்பதும் கூறப்பட்டன. இதனானே வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாயும் செய்யப் பட்டது.
இவ்வதிகாரத்தின் இறுதி நான்கு திருமந்திரங்கள் சில பதிப்பு களில் முறைமாறிக் கிடக்கின்றன.

3.21.அன்புடைமை

அன்புசிவம் இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. **#270**
இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

'இரண்டு' என்றதற்கு முன், 'இரண்டும்' என்னும், செவ்வெண் தொகை தொகுத்தலாயிற்று. 'அன்பும் சிவமும்' என்பதும் பாடம். இரண்டு - இருவேறு பொருள்கள். 'சிவம்' என்றது இங்கு, விடாத ஆகுபெயராய் அவனது பேரின்பத்தின்மேல் நின்றது. அறிவு - பொருட்பெற்றியை ஓர்ந்துணரும் அறிவு. 'ஆரும்' இரண்டனுள் முன்னது உயர்ந்தோரையும், பின்னது தாழ்ந்தோரையும் குறித்துநின்ற அறிதலின் அருமையையும், அமர்தலின் எளிமை யையும் குறித்து நின்றன. 'அறிந்தபின் ஆரும் அமர்ந்திருந்தார்' என மாற்றுக. 'அறிந்தபின்' என்றது, 'அறியின்' என்றவாறு. அமர்ந் திருத்தல் - அலமரல் இன்றி நிலைபெற்றிருத்தல். துணிவினால் எதிர் காலம் இறந்தகாலம் ஆயிற்று. உயிர்களிடத்துக் கொள்ளும் அன்பு பின் இறைவனிடத்து அன்பு செய்யும் தன்மையையும், இறைவனிடத்துச் செய்யும் அன்பு அவனிடத்தே அழுந்தி இன்புற்றிருக்கும் நிலையை யும் தரும் என்றற்கு, பொதுப்பட, 'அன்பு' என்று அருளிச் செய்தார். இவ்விருவகை அன்பும் நிரம்பிய காலத்து அவை தம் பயனை இடை யீடின்றி விரையத்தருதலால், அவற்றையே இறைவனாக வலியுறுத்து ஓதினார். மாணிக்கவாசகரும் 'அன்பினில் விளைந்த ஆரமுதே' *(தி.8 பிடித்த பத்து, 3)* என அன்பையும், சிவனையும் ஓரிடத்து வேற்றுமைப்பட ஓதினாராயினும், 'இன்பமே என்னுடை அன்பே' *(தி.8 கோயில் பதிகம், 1)* எனப் பிறிதோரிடத்தில் ஒன்றாகவே ஓதினமை காண்க. 'இன்பில் இனி தென்றல் இன்றுண்டேல் இன்றுண் டாம் - அன்பு நிலையே அது' 3 என்றார் திருவருட்பயனிலும் *(பா.80)*. இதனால் அன்பினது சிறப்புக் கூறப்பட்டது.

பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே. **#271**

ஏனை அன்பினும் சிவபெருமானிடத்துச் செய்கின்ற அன்பின் பெருமையை நான் அறிந்தவாற்றால், என் உள்ளத்தில் சிறந்திருப்பது அந்த அன்பே.

விளக்கவுரை

கடந்து - வென்று. 'துன்னிக்கிடந்த' என்பதில் 'தலையில்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. தான் அசைநிலை. ஏகாரம் பிரிநிலை. அதனை, 'பொடியாடிக்கு' என்றதனோடு இயைக்க. தோலாடையால் அவனது பற்றற்றதன்மையையும், பிறைச் சூட்டால் அவனது அருளையும், பொடியாடுதலால் அவனது முதன்மையையும் உடம்பொடு புணர்த்தலாகக் கூறி, 'அவனே அன்பு செய்யப்படுதற்கு உரியவன்' என்பது உணர்த்தியவாறு.

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை எய்தவொண் ணாதே. **#272**

மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றல், வேனிலில் ஐந்தீ நாப்பண் நிற்றல் முதலிய துணைச்செயல்களைச் செய்து உடம்பை ஒறுத்தாராயினும், முதற்செயலாகிய அன்பு செய்தல் இல்லாதார் என் தலைவனாகிய சிவபெருமானை அடைதல் இயலாது.

விளக்கவுரை

'பொன்மணி' என்னும் உம்மைத்தொகை உவமை யாகுபெயராயிற்று. 'என்போல்' எனப் பாடம் ஓதி அதனை 'எய்த' என்பதனோடு இயைப்பாரும், முன்னே மூன்றாம் அடியோடு இயைப் பாரும் உளர். அவர் உரையிலெல்லாம், 'மணி' என்பது ஒன்றே சிவபெருமானை வரைந்து சுட்டாமை அறிக.

இதனால், அன்பொடு கூடாத தவம் பயன்படாது என்பது கூறப்பட்டது. படவே, கடவுட் கொள்கை இல்லாத சமயிகள் கூறும் தவம் தவமாகாமையும் பெறப்படும்.

ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணையடி
பாரம் உடையவர் காண்பார் பவந்தன்னைக்
கோர நெறிகொடு கொங்குபுக் காரே. **#273**

சிவபெருமானிடத்துப் பேரன்பு உள்ளவரே அவனை முற்றப் பெறுவர். சிறிது அன்பு உடையவர் அவனது அருளைப் பெறுவர். அன்பே இல்லாது குடும்ப பாரத்தை உடைய வராய் இருப்பவர் பிறவிக் கடலையே காண்பவராய், கொடுமை நிறைந்த வழியிற்சென்று, கொங்குநாட்டை அடைந்தவர்போல் ஆவர்.

விளக்கவுரை

கொங்குநாட்டை இடர்மிகுந்த நாடு என்பர். 'கொங்கே புகினும்

கூறைகொண் டாறலைப் பார்இலை' *(தி.7 ப.92 பா.3)* என்ற நம்பியாரூரர் வாக்கைக் காண்க.

இதனால் அன்புடையார் பெறும் பயனும், அன்பிலாதார் எய்தும் துன்பமும் கூறப்பட்டன.

என்னன் புருக்கி இறைவனை ஏத்துமின்
முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்
பின்னன் புருக்கிப் பெருந்தகை நந்தியும்
தன்னன் பெனக்கே தலைநின்ற வாறே. **#274**

உலகீர், நீவிரும் எனது அன்பு போன்ற அன்பைப் பெருக்கிச் சிவபெருமானைத் துதியுங்கள். நீவிர் முன்னே அதனைச் செய்யுங்கள்; அவன் பின்னே உங்கட்கு அவ்வன்பு பெருகுமாறு வெளிப்பட்டுத் தனது அருள் எனக்குக் கைவந்தது போல உங்கட்கும் கைவரச் செய்வான்.

விளக்கவுரை

'என் அன்புபோல உருக்கி' என்க. 'தன் அன்பு' என்புழி 'அன்பு' என்றது அருளை. 'தலை நின்றவாறு' என்பதன்பின், 'செய்வன்' என்பது சொல்லெச்சமாய் நின்றது.

தானொரு காலம் சயம்புவென் றேத்தினும்
வானொரு காலம் வழித்துணை யாய்நிற்கும்
தேனொரு பால்திகழ் கொன்றை அணிசிவன்
யானொரு வண்ணம்என் அன்பில்நின் றானே. **#275**

வாய்ப்புடைய வழியில் தேன் ஒழுகுகின்ற கொன்றை மாலையை அணிந்த சிவபெருமான் யான் என்றும் ஒரு பெற்றியனாகும்படி எனது அன்பில் நிலை பெற்றுள்ளான். அவன் பிறர் தன்னை ஒருமுறை ஒருபெயரால் துதிப்பினும் அத்துதி பழுதுபடாத வாறு என்றேனும் ஒருநாள் வான்வழித் துணையாய் நின்றருளுவான்.

விளக்கவுரை

சயம்பு - சுயம்பு; தானே தோன்றியவன். வான் வழி - உயர்நெறி. சிவலோக நெறியுமாம். சடையிற் புனைதலால் தேன் ஏற்கும் வழியால் ஒழுகுதல் வேண்டிற்று. 'தேன், உமாதேவி' என்பாரும் உளர். 'ஒருவண்ணம் ஆக' என ஆக்கம் வருவிக்க. 'தானொருவண்ணம்' என்னும் பாடமே பதிப்புக்களில் காணப் படுகின்றது.

இவ்விரண்டு திருமந்திரங்களானும் சிவனிடத்துச் செய்யும் அன்பின் சிறப்பு வகுத்துக் கூறப்பட்டது.

முன்படைத் தின்பம் படைத்த முதலிடை
அன்படைத் தெம்பெரு மானை அறிகிலார்
வன்படைத் திந்த அகலிடம் வாழ்வினில்

அன்படைத் தான்தன் அகலிடத் தானே. **#276**
தனது உலகத்திலேயே விளங்கி நிற்பவனாகிய சிவபெருமான், துன்பத்தையே மிக உடையதாகிய இவ்வுலக வாழ்க்கையில், அத்துன்பத்தினின்றும் நீங்கி இன்பம் அடைதற் பொருட்டு 'அன்பு' என்னும் பண்பினையும் படைத்து வைத்துள்ளான். அவ்வாறு அன்பை முன்னதாகவும், இன்பத்தை அதன் பின்னதாகவும் வைத்துள்ள அம்முதல்வனது அருளை அறிந்து, அவனிடத்தில் உலகர் அன்புசெய்கின்றாரில்லை.

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி உரைக்க. *'அம்முதலிடை'* எனச் சுட்டு வருவிக்க. *'எம்பெருமானை'* என்பது சுட்டுப் பெயரளவாய் நின்றது. வன்பு - துன்பம், *'வன்பு அடைத்த'* *(தி.7 ப.92 பா. 3)* என்பதில் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. அடைத்தல் - நிறைதல்; நிறைத்தல் உலகத்தைத் திருஞானசம்பந்தரும், *'துயரிலங்கும் உலகம்'* என்றார். *(தி.1 ப.1 பா.8)*

கருத்துறு செம்பொன்செய் காய்கதிர்ச் சோதி
இருத்தியும் வைத்தும் இறைவஎன் றேத்தியும்
அருத்தியுள் ஈசனை ஆரருள் வேண்டில்
விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே. **#277**

கருத்தில் ஒளிரும் பொன்னொளியாகிய சிவ பெருமானை உளத்திற்கொண்டும், புறத்தில் வைத்து வணங்கியும், 'இறைவனே' என்று துதித்தும், அன்பினால் அவனை அவனது அரிய அருளைத் தருமாறு வேண்டினால், தேவர் தலைவனாகிய அவன் அங்ஙனம் வேண்டுவார்க்கு அவர் விரும்பியவற்றைக் கொடுப்பான்.

விளக்கவுரை

'கருத்துறு சோதி' என இயையும். அருத்தி - அன்பு. *'அருத்தியுள் நின்று'* என ஒரு சொல் வருவிக்க. விருத்தி - வாழ்வு. *'விண்ணவர் கோன்'* என்றது, விண்ணவர் பலரும் தாம் வேண்டிய வாழ்வை அவன்பால் பெற்று நின்றமையைக் குறித்த குறிப்பு என்க.
இவை இரண்டு திருமந்திரங்களாலும் சிவபெருமானிடத்து அன்பு செய்யுமாறு கூறப்பட்டது.

நித்தலுந் துஞ்சும் பிறப்பையுஞ் செய்தவன்
வைத்த பரிசறிந் தேயும் மனிதர்கள்
இச்சையு ளேவைப்பர் எந்தை பிரான்என்று
நச்சியே அண்ணலை நாடகி லாரே. **#278**

எவ்வுயிர்க்கும் உறக்கமும், விழிப்பும் நாள் தோறும் நிகழுமாறு

செய்தவன் அங்ஙனம் செய்த குறிப்பை அறியாதார் நிற்க, அறிந்தவர்தாமும் உலக ஆசையையே உள்ளத்தில் கொள்கின்றனர். அத்தலைவனை விரும்பி, அவனையே தமக்குப் பெருமானாக நினைக்கின்றிலர்.

விளக்கவுரை

'அவர்தம் அறிவு என்னோ' என்பது குறிப்பெச்சம். துஞ்சு, முதனிலைத் தொழிற்பெயர். 'உறக்கமும் விழிப்பும் நாள் தோறும் நிகழ வைத்தது, இறப்பும், பிறப்பும் மாறி மாறி விரையவரும் என்பதனை உணர்தற்பொருட்டு' என்பது கருத்து. அதுபற்றியே 'உறக்கம், விழிப்பு' என்பவற்றை அவையேயாகக் கூறினார். திருவள்ளுவரும்,

உறங்கு வதுபோலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. -குறள், *339*

என அறிவுறுத்தல் காண்க. இங்ஙனம் கூறியவாற்றால், 'சிவபெரு மானிடத்து அன்பு செய்யாதார் அடைவது பிறப்பும், இறப்புமாகிய துன்பமே' என்பது கருத்தாதல் அறிக.

இதனால், சிவபெருமானிடத்து அன்பு செய்யாதார்க்கு வரும் குற்றம் கூறப்பட்டது.

அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பின்உள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள் ளாகி அமரும் அரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே. **#279**

உலகத்தோற்றத்திற்கு முன்னும், உள்ளவனாயும் ஞானிகட்கும் முதற் குருவாயும் உள்ள இறைவன் உயிர்களின் அகத்தே அன்புருவாயும், புறத்தே பல குறிகளாயும் இருக்கின்றான். முடிவாக அவன் அன்பினுள்ளே விளங்கிப் பிறவாற்றால் அறியப் படாதவன் ஆவன். ஆதலால், அன்பில் நிற்பவர்க்கே அவன் உறு துணையாவான்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதலில் கொள்க. 'புறத்தான்' என்பதில் ஆன், உருபு மயக்கமாக வந்த மூன்றன் உருபு. 'புறத்தான்' எனவே, 'அகத்தான்' என்பது கொள்ளப்பட்டது. 'உடல்' என்றது, 'மூர்த்தி' என்றவாறு. இதனால், 'சிவபெருமானை அடைதற்கு எவ்வாற்றானும் அன்பே வாயில்' என்பது முடித்துக் கூறப்பட்டது.

<u>3.22.அன்பு செய்வாரை அறிவன் சிவன்</u>

இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்தருள் செய்திடும் உத்தம நாதன்
கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு

மகிழ்ந்தன்பு செய்யும் மருளது வாமே. #280

மக்கள் அன்பைப் போற்றாது இகழ்ந்து நடத் தலையும், இகழாது போற்றிப் பெற்று ஒழுகுதலையும் சிவபெருமான் நன்கறிவன் ஆதலின், முதற்படியாகிய அன்பை முதலிற் பெற்றுப் பின்பு அதன் முடிநிலையாகிய அருளை மிகச் செய்ய வல்லவர்க்கே அவன் விரும்பி அருள்புரிவன்; அதற்குக் காரணம், அன்பை உவந்து அதன்மேல் அவன் கொண்டுள்ள பித்தேயாம்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை மூன்றாம் அடியின் பின்னர்க் கூட்டி உரைக்க. 'இகழ்தலும், பெறுதலும் அன்பை' என்பது பின்வரும் குறிப்பால் விளங்கிற்று. கொழுந்து - இளையநிலை. 'அருள் என்னும் அன்பீன் குழவி' என்ற திருக்குறளிலும், 'அன்பின் முதிர்ந்த நிலையே அருள்' என்பது கூறப்பட்டது. 'அன்பு காரணம்பற்றிப் பிறப்பது' எனவும், 'அருள், காரணம் பற்றாது பிறப்பது' எனவும் உணர்க. 'வல் லார்க்கே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. 'அன்பு செய்யும்' என்பதை, 'அன்பின்மேற் செய்யும்' என ஏழாவதாக விரிக்க. பெருவிருப்பை, 'பித்து' என்றார். 'அது' என்பது ஆகுபெயராய், 'அதன் காரணம்' எனப் பொருள் தந்தது. 'அது மகிழ்ந்தன்பு ... ... ஆம்' எனக் கூட்டுக.

இதனால் இறைவன் அன்பு செய்வார்க்கே அருள் செய்தலும், செய்யாதார்க்கு அருள் செய்யாமையுமாகிய இரண்டும் தொகுத்துக் கூறப்பட்டன.

இன்பம் பிறவிக் கியல்வது செய்தவன்
துன்பப் பிறவித் தொழில்பல என்னினும்
அன்பிற் கலவிசெய் தாதிப் பிரான்வைத்த
முன்பிப் பிறவி முடிவது தானே. #281

முத்திக்கு ஏதுவாகிய பிறவி வருதற்பொருட்டு அதற்கு ஏதுவாகிய துன்பப் பிறவியை அமைத்து வைத்துள்ள சிவ பெருமான், அத்துன்பப் பிறவிக்கு உரியனவாகச் செய்யும் தொழில் கள் பலவாயினும், எவரிடத்தும் அன்பு நோக்கியே கலப்பவனாகிய அவன், முன்பே இப்பிறவி முடிதற்கு வைத்த வழி அவ்வன்பு ஒன்றே.

விளக்கவுரை

'பிறவிக்குச் செய்தவன்' என இயையும். 'செய்த' என்பதன். ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'ஆதிப் பிரான் முன்பு வைத்த இப்பிறவி முடிவு அதுதானே' எனக் கூட்டுக. துன்பப் பிறவித் தொழில் பலவாவன 'அறமும், மறமும்' என வகையால் இரண்டாய், விரியால்

எண்ணிறந்தனவாய் உள்ள வினைகளை அறிந்து அவற்றை ஏற்ற காலத்தில் ஏற்குமாற்றால் கூட்டுதல். எனவே, 'பிறப்பிற்குக் காரணங்கள் பலவாயினும், வீட்டிற்குக் காரணம் அன்பு ஒன்றே' என்றதாயிற்று. இதனால், 'சிவபெருமான் அன்புடையாரிடத்தே கலந்து நின்று பிறவித் துன்பத்தை நீக்குவன்' என்பது கூறப்பட்டது.

அன்புறு சிந்தையின் மேலெழும் அவ்வொளி
இன்புறு கண்ணியொ டேற்க இசைந்தனன்
துன்புறு கண்ணிஐந் தாடுந் தொடக்கற்று
நண்புறு சிந்தையை நாடுமின் நீரே. **#282**

அன்பு பொருந்திய உள்ளத்தில் பல்வகை நிலைகளிலும் மேற்பட்டு விளங்குகின்ற சிவபெருமான், இன்பம் பொருந்திய அறக்கருணைக் கண்ணுடையவளாகிய சத்தியோடே அவ்வுள்ளங்களை ஏற்றுக் கொள்ளுதற்கு இசைந்து நிற்கின்றான். ஆதலால், துன்பம் பொருந்திய மறக்கருணைக் கண்ணுடையவளாகிய திரோதான சத்தி ஐம்புலன்களின் வழி நின்று ஆடுகின்ற ஆட்டமாகிய கட்டினின்றும் விடுபட்டு, அன்பு பொருந்திய மனத்தைப் பெறும் வழியை நீங்கள் நாடுங்கள்.

விளக்கவுரை

'ஒளி' என்றது உருவகம். அஞ்ஞான இருளைப் போக்குதல் பற்றி இவ்வாறு உருவகித்தார். அவ்வொளி ஒன்றே யாயினும், நிலை வேறுபாட்டால் பலவாகக் கூறப்பட்டது. அந் நிலைகளை,

நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழிய - வல்லதனால்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனும் காணா அரன். -திருக்களிற்றுப்படியார் - *15*

என்பதனானும், பிறவாற்றானும் அறிக. அருட்சத்தியே சிவத்தை அடைவித்தலின், திரோதானசத்தி, தானே தொழில் செய்வதாகக் கூறினார். அருட்சத்தி அன்பின் வழியே சிவத்தை அடைவிக்கும் என்பதை 'அன்புறு சிந்தையின் மேலெழும் அவ்வொளி' என உடம்பொடு புணர்த்து ஓதினார். அதனானே, 'வீடுபெற வேண்டில்; உள்ளம் அன்புடையது ஆமாற்றை நாடுங்கள்' என்றார். 'நண்பு' என்றது, அன்பை. 'நண்புறு சிந்தையை' என்றாராயினும், 'சிந்தை நண்புறுமாற்றை' என்பது கருத்து என்க. 'நீர்' என்றது சிவனைப் பெற விரும்புவாரை 'ஐந்தோடு' என உருபு விரிக்க.

இதனால், பெத்தர்களுக்கு விளங்காது நிற்கின்ற சிவபெரு மான், முத்தர்கட்கு 'அன்பினில் விளையும் ஆரமுதாய்' *(தி.8 பிடித்த பத்து, 3)* விளங்கி நின்றருளுதல் கூறப்பட்டது.

புணர்ச்சியுள் ஆயிழை மேல்அன்பு போல

உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்கவல் லாருக்
குணர்ச்சியில் லாது குலாவி உலாவி
அணைத்தலும் இன்பமதுஇது வாமே. **#283**

பெண்டிரோடு கூடும் கூட்டத்தில் ஆடவர் அப் பெண்டிர்மேல் வைக்கின்ற அன்பிலே அறிவழிந்து நிற்றல்போல, சிவபெருமானிடத்துச் செய்கின்ற அன்பிலே தம் அறிவழிந்து அந்நிலையில் நிற்க வல்லார்க்கு அதனால் விளைகின்ற பேரின்பம் அவரைப் பின்னும் அந்நிலையினின்றும் பெயராத வகையிற் பெருகிவிளங்கி, விழுங்கி இவ்வன்பே தானாகி நிற்கும்.

விளக்கவுரை

'ஆயிழை' என்றது இனங்குறித்து நின்றது. பொருளிற் கூறப்பட்ட ஒடுங்குதலை உவமைக்குங் கூட்டுக. ஆயிழை மேல் அன்பை ஒடுங்குதல் மாத்திரைக்கே உவமைபோலக் கூறினா ராயினும், ஏனையவற்றிற்கும் ஆதலை அறிந்து கொள்க. இல்லாது - இல் லாதபடி. பெருகுதலை, 'உலாவுதல்' என்றார். குலாவுதல் - விளங் குதல். 'இன்பமது' என்றதில் அது, பகுதிப்பொருள் விகுதி. இஃது அதீதமாகிய முடிந்த அனுபவ நிலையைக் கூறியது. இவ்வாறே இந்நிலையை,

'சொற்பால் அமுதிவள் யான்சுவை என்னத்
துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று
நான் இவளாம் பகுதிப்
பொற்பார் அறிவார்' *(தி.8 திருக்கோவையார், 8)*
'உணர்ந்தார்க் குணர்வரி யோன்தில்லைச் சிற்றம்
பலத்தொருத்தன்' *(தி.8 திருக்கோவையார், 9)*

எனவும், மாணிக்கவாசகரும் குறித்தருளுதல் காண்க. 'இவ்வதீத நிலையும் அன்பானன்றி ஆகாது' என்றபடி. மெய்கண்ட தேவரும் இதனை, 'அயரா அன்பின் அரன்கழல் செலுமே' (சிவஞானபோதம் - சூ. *11)* என ஓதியருளினார். 'அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே' *(தி.10 பா.268)* என்றது இதனையே என்க.

இதனால், 'அன்புடையார்க்கே சிவபெருமான் தன்னை முழுவதும் கொடுப்பன்' என்பது கூறப்பட்டது.

உற்றுநின் றாரொடும் அத்தகு சோதியைச்
சித்தர்கள் என்றுந் தெரிந்தறி வார்இல்லை
பத்திமை யாலே பணிந்தடி யார்தொழ
முத்தி கொடுத்தவர் முன்புநின் றானே. **#284**

அடியவர்கள் தங்களுக்கு உளதாகிய அன்பினாலே சிவபெருமானை நிலத்தில் வீழ்ந்து பணிந்தும், கை கூப்பிக் கும்பிட்டும் பல்லாற்றானும்

வழிபட அப்பெருமான் அவர்க்கு முத்தியைக் கொடுத்து, அவரது செயல் யாதொன்றிற்கும் தானே முன்னிற்பான். இவ்வாறு தன்னையே சார்ந்து நிற்கும் அவரோடே தானும் அவரையே சார்ந்து நிற்கின்ற சிவபெருமானது தன்மையைச் சித்தர்கள் ஆராய்ந்தறிகின்றார்களில்லை.

விளக்கவுரை

'அறிந்தாராயின், அவர் அவன்பால் அன்பையே வேண்டுதலல்லது, அணிமாதி சித்துக்களை வேண்டார்' என்பது குறிப்பெச்சம். மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி உரைக்க. பயன் வேண்டுவாருட் சிறந்தவர் சித்தராகலின், அவரையே எடுத்து ஓதினார். ஓதவே, பிறரும் அத்தன்மையராதல், தானே பெறப்பட்டது. அடியவரது செயல்யாதாயினும் அதற்குச் சிவன்தானே முன்னிற்றலை,

'சிவனும்இவன் செய்தியெல்லாம் என்செய்தி என்றும்
செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்
பவமகல உடனாகி நின்று கொள்வன்;
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே'
-சிவஞானசித்தி - சூ. *10.1*

என்பதனான் அறிக. சிவபெருமான் தன்னையே சார்ந்து நின்றாரையே தானும் சார்ந்து நிற்றலை, 'அற்றவர்க்கு அற்ற சிவன்' *(தி.3 ப.120 பா.2)* என்று அருளியவாற்றான் அறிக.

'சித்தர்கள் என்றும் தெரிந்தறிவார் இல்லை' என்றதனால், பத்திமையாலே தொழாதார்க்குச் சிவபெருமான் முத்தி கொடுத்தலும், முன்னிற்றலும் செய்யாது, பிறப்பைக் கொடுத்து அவர் வினைக்கு அவரையே முதல்வராகச் செய்தல் பெறப்பட்டது.

இதனால், இருதிறத்தாரையும் சிவன் அறிந்து அவரவர்க்கு ஏற்றன செய்தல் கூறப்பட்டது.

கண்டேன் கமழ்தரு கொன்றையி னான்அடி
கண்டேன் கரியுரி யான்றன் கழலிணை
கண்டேன் கமல மலர்உறை வானடி
கண்டேன் கழலதென் அன்பினுள் யானே. **#285**

கொன்றை மாலையாகிய திருவடையாள மாலை யால் பிரணவம் முதலிய மந்திரப்பொருள் தானேயாகியும், யானையை உரித்தமையால் ஆணவமலத்தைப் போக்குபவன் தானேயாகியும் நிற்றலால், அன்பால் நினைவாரது நெஞ்சத் தாமரையின்கண் விளங்கு பவனும் தானேயாகிய சிவபெருமானது திருவடிகளை நானே கண்டேன்; ஏனெனில், அவை எனது அன்பிடத்தே உள்ளனவாதலால்.

விளக்கவுரை

கொன்றை மாலையும், கரியுரியும் சில குறிப்படை யாளங்களாய் உள்ளன. அவற்றையும், மலர் உறைதலையும் வைத்த வைப்புமுறை அறிந்துகொள்க.
கழலது என்ற ஒருமை, இனம்பற்றி வந்தது. 'அன்பினுள்' என்றதன்பின், 'ஆதலால்' என்பது சொல்லெச் சமாய் நின்றது.
இதனால், 'மந்திரங்களின் உண்மையறிந்து ஓதி வழிபாடு செய்து அதனால் மலம் நீங்கப்பெற்று, அதன்பயனாக அன்பு நிகழப் பெற்றாரிடத்தே சிவன் உறைவன்' என்பது குறிப்பாற் கூறப்பட்டது.

நம்பனை நானா விதப்பொரு ளாகுமென்
றும்பரில் வானவர் ஓதுந் தலைவனை
இன்பனை இன்பத் திடைநின் றிரதிக்கும்
அன்பனை யாரும் அறியகி லாரே. **#286**

அனைத்துயிர்களாலும் விரும்பத்தக்கவனும், மேலிடத்துத் தேவர் பலராலும் 'எல்லாமாய் நிற்கும் கடவுள்' என்று சொல்லிப் போற்றப்படுபவனும், இன்ப அநுபவப் பொருளாய் உள்ளவனும், அப்பொருளில் நின்று எழுகின்ற இன்பமானவனும், அன்பிலே விளங்குபவனும் ஆகிய சிவபெருமானை அன்புடையவ ரல்லது பிறர் அறியமாட்டார்.

விளக்கவுரை

'நம்பனை' என்பது முதலியவற்றால், 'அன்பு செய்யப்படுபவன் சிவபெருமானே யாதலைத் தெரித்துணர்த்தி, அவ் வாறாகவும் அதனைப் பலர் செய்கின்றிலர்' என்று இரங்கியவாறு.
'இன்பம்' இரண்டும் ஆகுபெயர்கள். 'இரதிக்கும்' என்றது 'ரதிக்கும்' என்னும் ஆரியச்சொல்லின் திரிபு. 'அன்பன்' என்றதனால், அறியமாட்டாதவர் அன்பில்லாதவர் என்பது போந்தது.
இதனால், அன்பில்லாதவர்க்குச் சிவன் அறியப்படானாதல் வகுத்துக் கூறப்பட்டது.

முன்பு பிறப்பும் இறப்பும் அறியாதார்
அன்பில் இறைவனை யாம்அறி வோம்என்பர்
இன்பப் பிறப்பும் இறப்பும் இலார்நந்தி
யன்பில் அவனை அறியகி லாரே. **#287**

இனி எதிர்ப்படுதற்குரிய பிறப்பு இறப்புக்கள் இல்லாதவரே, 'சிவபெருமானிடத்து அன்பு செய்து அவனை அடைவோம்' என்னும் துணிவினராவர். (அவர் இப்பொழுது எடுத்துள்ள பிறப்பும், அது நீங்குதலாகிய இறப்பும் அவருக்கு இன்பத்திற்கு ஏதுவாவனவேயாம்.) அத்தகைய பிறப்பு இறப்புக்களை இல்லாமையால் மேலும் பிறந்து இறந்து உழலும் வினையுடையோர் அவனிடத்து அன்பு செய்து

அவனை அறியும் கருத்திலராவர்.

விளக்கவுரை

முன்பு, இடமுன் 'அறியாதார்' என்றது, 'இல்லாதவர்' என்றபடி. 'நந்தி அன்பு' என்றது 'நந்தி மேல் செலுத்தும் அன்பு' என்றதாம்.
இதனால், அன்பினால் சிவனை அடைதல் பக்குவர்க்கே கூடுவதும், ஏனையோர்க்கு அது கூடாமையும் கூறப்பட்டன.

ஈசன் அறியும் இராப்பக லுந்தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவுசெய் வார்களைத்
தேசுற் றறிந்து செயலற் றிருந்திட
ஈசன்வந் தெம்மிடை ஈட்டிநின் றானே. **#288**

இரவும், பகலும் இடைவிடாது தன்னையே தம் அன்பிற்கு உரியவனாகக் கொண்டு, அன்பு செய்கின்ற அன்பர்களைச் சிவபெருமான் நன்கறிவன். ஆதலால், ஞானத்தைப் பெற்று அன்பினால் வசமிழந்து நின்றமையால், அவன் எங்களிடையே வந்து எங்களைத் தன்னோடு அணைத்துக் கொண்டான்.

விளக்கவுரை

'இருந்திடில்' என்பது பாடம் அன்று. 'எம்' என்றது, தம்மோடு ஒத்தாரை. ஈட்டுதல், 'ஈண்டுதல்' என்னும் தன்வினைச் சொல் திரிந்த பிறவினைச்சொல்; ஈண்டுதல் - சேர்தல்; ஈட்டுதல் - சேர்த்தல்.
இதனால், அன்பும், அதன் பயனும் கைவரப்பெற்ற தம் அநுபவம் கூறப்பட்டது.

விட்டுப் பிடிப்பதென் மேதகு சோதியைத்
தொட்டுத் தொடர்வன் தொலையாப் பெருமையை
எட்டும்என் னாருயி ராய்நின்ற ஈசனை
மட்டுக் கலப்பது மஞ்சன மாமே. **#289**

மேலான ஒளி (பரஞ்சோதி) ஆகிய சிவபெரு மானை இடைவிட்டு நினைவதால் பயன் என்னை? தன்னை அடைய முயல்கின்ற எனக்கு என் ஆருயிர்போல்பவனாகிய சிவபெரு மானைத் தேன் போல் இனியவனாக அறிந்து அவனை இடைவிடாது நினைந்து நிற்றலே அவனுக்குச் சிறந்த திருமஞ்சனமாம். ஆதலால், அவனது முடிவில்லாத பெருமையை நான் பற்றிய பின்னர் விடுதல் என்பது இன்றித் தொடர்ந்து பற்றிக் கொண்டுள்ளேன்.

விளக்கவுரை

'அதனால் அவன் என்னைக் கைவிடாமை திண்ணம்' என்பது குறிப்பெச்சம். 'ஆருயிரால்' என்பதில் ஆக்கம் உவமை குறித்து நின்றது. 'மட்டுப்போல' என உவம உருபு விரித்து, 'அறிந்து' என்பது வருவிக்க.

அன்பே பெருமானுக்கு மஞ்சனமாதலை,
'நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய ஆட்டி' *(தி.4)*
என்பதனால் அறிக. அன்பு சிவபெருமானுக்குப் பிறவுமாதலை,
'அறவாணர்க்கன்பென்னும் அமுதமைத்தற் சனைசெய்வார்'
-*தி.12* பெ.பு.வாயிலார், *8*
என்பதனால் அறிக.

3.23.கல்வி

குறிப்பறிந் தேன்உடலோடுயிர் கூடிச்
செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை
மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்
கறிப்பறி யாமிகுங் கல்விகற் றேனே. **#290**

மாசில்லாத, உயர்ந்த கல்வியை யான் கற்றேன்; அதனால் உயிர் உடலோடு கூடிநின்றேனாய், அறியத்தக்க பொருளை அறிந்தேன்; அதன் பயனாக இறைவனை உள்ளத்திலே இருத்தத் தெரிந்தேன். அதனால், அவனும் மீண்டுபோகாதவனாய் என் உள்ளத்திலே வந்து புகுந்து நின்றான்.

விளக்கவுரை

'ஆகவே, நீவிரும் இப்பயன் வேண்டின் மாசில்லாத உயர்ந்த கல்வியைக் கற்றுக்கொள்ளுங்கள்' என்பது குறிப்பெச்சம். ஈற்றடியை முதலிற் கொள்க. 'உடலுயிரது' என்பது பாடம் அன்று. 'கூடி' என்றது, 'கூடியதன் பயனைப் பெற்று' என்றவாறு. 'கூடிக் குறிப்பறிந்தேன்' எனவும், 'தேவர் பிரானைச் செறிப்பறிந்தேன்' எனவும் முன்னே கூட்டுக. மறிப்பு - மீட்சி. கறிப்பு - உணவினின்று உமிழப்படுவது; மாசு. 'கற்பவையே கற்றல் வேண்டும்' *(குறள், 391)* என்றற்கு, 'கறிப்பறியா மிகுங்கல்வி' என்றார். இதனால், 'சிறப்புடைக் கல்வியே கல்வி' என்பதும், அதனால் பெறும் பயனும் கூறப்பட்டன.

கற்றறி வாளர் கருதிய காலத்துக்
கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறி வாளர் கருதி உரைசெய்யுங்
கற்றறி காட்டக் கயலுள வாக்குமே. **#291**

கல்வியைக் கற்ற அறிவினையுடையோர் அவ் வறிவால் கருதியுணருங் காலத்து, கல்வியைக் கற்ற அறிவினை உடையோர் பலரது உள்ளத்திலும் சிறப்பாக ஒரு கண் இருத்தல் புலனாகும். இனி அக்கற்ற அறிவினையுடையோர் ஆராய்ந்து சொல்லு கின்ற கல்வியறிவுரை, பாலை நிலத்திலே கயல்மீனைப் பிறழச் செய்தாற் போலும் நன்மையைப் பயக்கும்.

விளக்கவுரை

'பாம்பறியும் பாம்பினகால்' (பழமொழி நானூறு) என்றபடி, கற்றாரது நிலைமையைக் கற்றவரே உணர்வரல்லது மற்றவர் உணர மாட்டார் ஆதலின், *'கற்றறிவாளர் கருதிய காலத்து ... ... கண்ணுண்டு'* என்றார். *'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' (மூதுரை)* என ஔவையாரும் கூறினார். *'ஓர் கண்'* என்றது, பலர்க்கும் முகத்தின்கண் உள்ள ஊனக் கண்ணல்லாத வேறொருவகைக்கண் என்றவாறு. அது ஞானக்கண். ஞானக்கண்ணே சிறப்புடைத்தாதலை,

கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். -குறள், *393*

எனத் திருவள்ளுவரும் குறித்தருளினார். நான்கிடத்தும், *'கற்ற'* என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயின. கற்ற அறிவு - கற்றதனால் உண்டாகிய அறிவு; *'கற்றறி'* என்பதில் அறி, அறிவு; முதனிலைத் தொழிற்பெயர். காடு, இங்குப் பாலை நிலம், *'அக்கயல்'* என்பதில், சுட்டுப்பண்டறி சுட்டாய், *'நீரினுள் வசிக்கும் அத்தன்மை உடைய'* என அதன் இயல்பை விதந்தவாறாய், நீர் நிறைந்து நிற்றலைச் சுட்டுங் குறிப்பாயிற்று. *'காட்டில்'* என ஓதுதலும் ஆம். *'பாலையை மருதம் ஆக்கினாற்போல, அறியாமையாற் பாழ்பட்டுக் கிடக்கும் உள்ளத்தை அறிவுடையதாய் நலனுறச் செய்யும்'* என்பதாம். *'கற்ற அறிவு கயலை உளவாக்கும்'* என்க. எனவே, *'அவர் சொல் கேட்கத்தக்கது'* என்பதும் குறிக்கப்பட்டதாம். இதனால், கல்வியின் சிறப்பும், அது, தன்னை உடையார்க்கே யன்றிப் பிறர்க்கும் பயன் தருதலும் கூறப்பட்டன.

நிற்கின்ற போதே நிலையுடை யான்கழல்
கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள்
சொற்குன்றல் இன்றித் தொழுமின் தொழுதபின்
மற்றொன் றிலாத மணிவிளக் காமே. **#292**

இளமை உள்ள பொழுதே என்றும் ஒரு பெற்றி யனாய் நிற்கின்ற சிவபெருமானது திருவடிச்சிறப்பைத் தெளிவிக் கின்ற நூல்களைக் கற்கின்ற செயல்களைத் தப்பாது செய்யுங்கள்; அவ்வாறு கற்றலானே பாவங்கள் பற்றறக்கழியும்; பின்பு அக்கல்விகள் வெறுங்கல்வியாய் ஒழியாதவாறு அத்திருவடிகளை வணங்குங்கள்; வணங்கினால் அவை, தன்னை ஆக்குதற்கும், தூண்டுதற்கும் பிறிதொன்றனை வேண்டாது இயல்பாகவே என்றும் ஒளிவீசி நிற்கும் மணிவிளக்குப் போல நின்று உங்கட்கு உதவுவனவாம்.

விளக்கவுரை

கற்றற்கு வேண்டுவது இளமைக் காலமே யாதலின், அஃது இங்கு

ஆற்றலாற் கொள்ளக் கிடந்தது. இளமை முதலிய நிலை யாமையுடையார்க்கு நிலைபேறாவது இறைவன் திருவடியே என்றற்கு, 'நிலையுடையான் கழல்' என்றும், 'அதனை விளக்கும் கல்வியே கல்வி' என்றற்கு, 'கழல் கற்கின்ற செய்மின்' என்றும், 'அக்கல்வியால் வினைமாசு, நீங்கும்' என்பதுபற்றி 'கழிந்தறும் பாவங்கள்' என்றும்,

கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக. குறள்,*391*

என்றவாறு, கற்றவண்ணம் நில்லாதபொழுது கற்றலாற் பயனில்லை யாகலானும்,

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். -குறள்,*2*

என்பவாகலின், கல்வியின் உண்மைப் பயன் இறைவன் திருவடியைத் தொழுதலேயாகலானும், 'சொற்குன்றல் இன்றித் தொழுமின்' என்றும், திருவடிக் கல்வியால் வினை நீங்கப்பெற்றார் அத்திருவடியைத் தொழுவாராயின் அதனைப் பெற்று - இன்புறுவ ராகலின், 'தொழுதபின் மணி விளக்காம்' என்றும் கூறினார். 'திருவடிக் கல்வியே கல்வி' என்பதனை,

'சிவமுயன் றடையும் தெய்வக் கலைபல திருந்த ஓதி'
-தி.*12* பெ. பு. மனுநீதி, *18*

எனவும்,

'உள்ளம்நிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப்பயின்றவற்றால்
தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் செறிவு'
-தி.*12* பெ. பு. சிறுத்தொண்டர், *4*

எனவும் சேக்கிழார் குறிப்பிடுதல் காண்க. 'கற்றதனாலாய பயன் என்கொல்' என மேற்காட்டிய திருக்குறளைக் கூறிய திருவள்ளு வனார்க்கும் இதுவே கருத்தாதல் உணர்க. வினைமாசினை அறுக்கும் திருவடிக்கல்வியை,

'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
(ஆகிய)
உவமையிலாக் கலைஞானம்' -தி.*12* பெ. பு. திருஞான. *70*

எனவும், இறைவன் திருவடியைப் பலவாற்றானும் தொழுது அடைத லாகிய அனுபவத்தை, அதே பாட்டில்,

'பவம் அதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
(ஆகிய)
உணர்வரிய மெய்ஞ்ஞானம்' தி.*12* ஞான. *70*

எனவும் சேக்கிழார் விரித்தமை காண்க.

சொல் - சொல்வடிவாகிய கல்வி. இதனை, 'வாசக ஞானம்' என்றல்

அறிக. குன்றல் - பயனின்றிக் கெடுதல்.
இதனால், 'உண்மைக் கல்வியாவது இது' என்பது, அதன் பயன்களும் தெரித்துக் கூறப்பட்டன.

கல்வி யுடையார் கழிந்தோடிப் போகின்றார்
பல்லி யுடையார் பரம்பரிந் துண்கின்றார்
எல்லியுங் காலையும் ஏத்தும் இறைவனை
வல்லியுள் வாதித்த காயமு மாமே. **#293**

கல்வியைக் கற்றவர்களிலும் சிலர் (அதன் பயனாகிய இறைவழிபாட்டினைக் கொள்ளாமையால்) வாளா இறந்தொழி கின்றனர். இனிக் கற்றதன் பயனாகிய இறைவழிபாடு உடையவர் இறையின்பத்தை இப்பொழுதே அன்பினால் நுகர்கின்றனர். ஆகையால், கல்வியைக் கற்கின்ற நீவிர் இரவும் பகலும் இறைவனைத் துதியுங்கள். அவ்வாறு துதித்தால் அவனது சத்தி உள்நின்று தாங்குவ தாகிய அருள் உடம்பும் உங்கட்குக் கிடைக்கும்.

விளக்கவுரை

'கல்வியுடையாரும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. பல்லி - பலிதம்; பயன். 'பாம்பரிந் துண்கின்றார்' என்பது பாடம் அன்று என்பதற்கு, யாப்புச் சிதைதலே சான்று.
இதனால், கல்வியின்வழி நிற்குமாறு கூறப்பட்டது.

துணையது வாய்வருந் தூயநற் சோதி
துணையது வாய்வருந் தூயநற் சொல்லாம்
துணையது வாய்வருந் தூயநற் கந்தம்
துணையது வாய்வருந் தூயநற் கல்வியே. **#294**

உயிர்கட்குச் செல்கதிக்குத் துணையாய் வருகின்ற இறைவன், என்றும் உறுதுணையாகப் பற்றுமாறு நல்லாசிரியரால் அறிவுறுத்தப்படுகின்ற தூய நல்ல உறுதிச் சொல்லே (உபதேச மொழியே)யாய் நிற்பன். அச்சொல்லும் மலரோடு ஒட்டியே வருகின்ற மணம்போலத் தூயநல்ல கல்வியோடு ஒட்டியே வருவதாம்.

விளக்கவுரை

'ஆதலின் அதனைக் கற்க' என்பது குறிப்பெச்சம். 'கந்தம்போல்' என உவம உருபு விரிக்க. ஒடுவின் பொருளில் வந்த ஏழாவது இறுதிக்கண் தொக்கது.
இதனால், உண்மைக் கல்வி ஆசிரியர் உறுதி மொழியைத் தெளிவிக்கும் முகத்தால் இறைவனை அடைவித்தல் கூறப்பட்டது

நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்
பாலொன்று பற்றினாற் பண்பின் பயன்கெடும்

கோலொன்று பற்றினாற் கூடா பறவைகள்
மாலொன்று பற்றி மயங்குகின் றார்களே. **#295**

வருந்தியாயினும் நூல் ஏணியைப்பற்றி ஏறுவோர் மதிலின் உச்சியை அடைந்து கோட்டையைப் பிடிப்பர். அது செய்ய மாட்டாதார் பக்கத்தில் உள்ள சில வழிகளைப்பற்றி ஏறின் இடையே நின்று பயன்பெறார். அதுபோல நுண்ணிதாயினும் மெய்ந்நூல்களுள் ஒன்றைப் பற்றி ஒழுகுவோர் ஆன்ம லாபமாகிய முடிந்த பயனைப் பெற்று இன்புறுவர். அது மாட்டாது அயலாகிய மயக்க நூல்களுள் ஒன்றைப் பற்றி ஒழுகுவோர் பிற சில சிறுபயன்களைப் பெறுதலோடு ஒழிவர்; ஆன்ம லாபத்தைப் பெறார். இன்னும் ஓர் உணவுப் பொருளைக் காப்பவர் கையில் கோல் ஒன்றை உடையாராய் இருப் பின் அப்பொருளைக் கவர எண்ணும் பறவைகள் அணுக மாட்டா. அதுபோல மெய்யறிவு உடை யாராய் இருப்பாரது மனத்தை ஐம்புலன் கள் அலைக்க அணுகா. இவற்றையெல்லாம் அறியாது மக்கள் அறியாமையுள் நின்று மயங்கு கின்றார்களே, இஃது இரங்கத்தக்கது!

விளக்கவுரை

இத்திருமந்திரம் ஒட்டணி. 'மயங்குகின்றார்களே' என்ற தேற்றேகாரம், இரக்கங் குறித்து நின்றது.
இதனால் மயக்க நூற்கல்வியது குற்றம் கூறப்பட்டது.

ஆய்ந்துகொள் வார்க்கரன் அங்கே வெளிப்படும்
தோய்ந்த நெருப்பது தூய்மணி சிந்திடும்
ஏய்ந்த இளமதி எட்டவல் லார்கட்கு
வாய்ந்த மனமல்கு நூல்ஏணி யாமே **#296**

பகலவனது கதிர்கள் எங்கும் பரவி நிற்பினும் தூயதாகிய சூரியகாந்தக் கல்லே அதனால் நெருப்பை உமிழ்வதாகும். அதுபோல, இறைவன் திருவருள் எங்கும் நிறைந்திருப்பினும் கற்றவரே அத்திருவருளால் இறைவனைக் காண்பவராவார். ஆகவே, இளம்பிறையை அணிந்த சிவபெருமானை அடையும் ஆற்றலுடை யார்க்குப் பொருந்திய மனம் நிறைந்த மெய்ந்நூல்களே ஏணிபோல உதுவுவனவாம்.

விளக்கவுரை

எடுத்துக்காட்டுவமையாய் நின்ற இரண்டாம் அடியை முதலில் கொள்க. 'வெளிப்படும்' என்றாராயினும், உவமைக்கேற்ப 'வெளிப்படக் காண்பர்' என்றல் கருத்து என்க. தோய்ந்த நெருப்பு - சூரிய கிரணத்தில் தோய்ந்ததனால் உண்டாகிய நெருப்பு. 'இளமதி' என்பது, 'கனங்குழை' *(குறள், 1081)* என்றாற்போல அதனை யுடையான் மேல் நின்றது.
இதனால், மெய்நூற் கல்வியது இன்றியமையாமை கூறப்பட்டது.

வழித்துணை யாய்மருந் தாயிருந் தார்முன்
கழித்துணை யாம்கற் றிலாதவர் சிந்தை
ஒழித்துணை யாம்உம் பராய்உல கேழும்
வழித்துணை யாம்பெருந் தன்மைவல் லானே. **#297**

வானுலகமும், பிற உலகங்களுமாய் நின்று எல்லா உயிர்கட்கும் எவ்விடத்தும் துணையாய் நிற்கும் பேராற்றலும், பேரருளும் உடையவனாகிய இறைவன், கல்வியால் யாவர்க்கும் நன் னெறித் துணையாயும், அமுதமாயும் நிற்கின்றவர்கட்கே விளங்கித் தோன்றிப் பெருந்துணையாய் நிற்பன். கல்வி இல்லாதவர்க்கு அவர் உள்ளம் தன்னை நீங்குதற்கே துணையாவன். (அறியாமையை மிகுவிப்பன் என்பதாம்)

விளக்கவுரை

வழித்துணையாதலும், *'யாண்டு பலவாயினும் நரையிலவாக்கி'* அமுதமாதலும் கற்றார்க்கன்றிக் கூடாமையின், *'கல்வியால்'* என்பது ஆற்றலால் விளங்கிற்று. இதனாலும் கல்வியது சிறப்புக் குறிக்கப்பட்டது. *'கழிதுணை, ஒழிதுணை'* என்பன எதுகை நோக்கி விரித்தல் பெற்றன. கழி, உரிச்சொல். *'கற்றல் கேட்டல் உடையார் பெரியார்' (தி.1 ப.1 பா.2) 'கல்லா நெஞ்சின் நில்லான் ஈசன்' (தி.3 ப.40 பா.3)* என்பன திருஞானசம்பந்தர் வாக்காதல் அறிக.

இதனால், *'திருவருள் பெறுதல் கல்வியானே ஆவது'* என்பது கூறப்பட்டது. கண்ணப்பர் முதலாயினார் கல்வி இன்றியும் திருவருள் பெற்றாரால் எனின், அவரெல்லாம் முற்பிறப்பிற் கற்று இப்பிறப்பில் அதன் பயனை எய்தினார் என்பதனை,

'கலிமலிந்த சீர்நம்பி கண்ணப்பன்' -தி.7 ப.39 பா.2

என்பது முதலிய அருட்டிருமொழிகளான் அறிந்துகொள்க. இது பற்றியன்றே திருவள்ளுவர்,

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து. -குறள், *298*

எனவும்,

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. -குறள், *297*

எனவும் ஓதுவாராயினர் என்க.

பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்
முற்றது எல்லாம் முதல்வன் அருள்பெறில்
கிற்ற விரகிற் கிளரொளி வானவர்
கற்றவர் பேரின்பம் உற்றுநின் றாரே. **#298**

யாதொரு செயலாயினும் அது முற்றுப் பெறுகின்ற

அந்நிலைமையெல்லாம் முதற்கடவுளது திருவருள் பெற்றவழியே ஆவதாம். 'எல்லாவற்றையும் முடிக்க வல்ல வன்மையை உடை யோம்' எனத் தம்மை மதித்துக்கொள்கின்ற தேவரேயாயினும், அவனது இயல்பை உணர்த்தும் நூல்களைக் கற்றவரே அவனது பேரின்பத்தை அடைந்தனர்; ஏனையோர் அடைந்திலர். அதனால், நீவிர் நல்லதொரு துணையைப் பற்றவேண்டின், சிவபெருமானையே அறிந்து பற்றுதல் வேண்டும்.

விளக்கவுரை

'ஆதலின் அவனை அறிவிக்கும் கல்வியை ஒழியாது கற்றுக்கொண்மின்' என்பது குறிப்பெச்சம். முதலடியை இறுதியிற் கூட்டி உரைக்க. முற்று அது, வினைத்தொகை. 'ஆவதாம்' என்பதும், 'ஆயினும்' என்பதும், சொல்லெச்சம். 'கற்றவரே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று.

இதனால், எத்தகையோர்க்கும் மெய்ப்பொருட் கல்வி இன்றி வீடு எய்தலாகாமை கூறப்பட்டது. முனிவரும், தேவரும், கணங்களும் போல்வாரும் சிவபெருமானிடம் வேதாகமங் களைக் கேட்டுணர்ந்தன ராகக் கூறும் புராண வரலாறுகளை நினைவு கூர்க.

கடலுடை யான்மலை யான்ஐந்து பூதத்
துடலுடை யான்பல ஊழிதொ றூழி
அடல்விடை யேறும் அமரர்கள் நாதன்
இடமுடை யார்நெஞ்சத் தில்லிருந் தானே. **#299**

சிவபெருமான் ஊழிகள் பலவற்றிலும் கடல், மலை, ஐம்பூதங்களின் உரு முதலியவற்றிற் கலந்திருப்பினும், கல்வியாற் கனிந்துள்ளாரது நெஞ்சத்தையே தான் வாழும் இல்லமாகக் கொண்டுள்ளான்.

விளக்கவுரை

மூன்றாம் அடியை முதலில் கொண்டு, அதன்பின், பல 'ஊழிதொறூழி' என்றதனைக் கூட்டி உரைக்க. உருவத்தை 'உடல்' என்றார். 'பூதம்' என்றே ஒழியின், கட்புலனாகாகது, அருவமாயுள்ள தத்துவ மாத்திரையே குறிக்குமாகலின், கட்புலனாம் உருவை உணர்த்த வேண்டி இது கூறினார். இடம், 'இடனில் பருவம்' என்புழிப் போல ஏற்புடைத்தாய நிலை. 'அது கல்வியானாயது' என்பது அதிகாரத்தால் விளங்கிற்று.

இதனால், சிவபெருமான் எங்கும் நிறைந்து நிற்பவனாயினும் கற்றாரது நெஞ்சத்திலே இனிது விளங்குதல் கூறுமாற்றால், 'அவனைக் கண்டு பெறுதற்கு அவனது அருள்நூற் கல்வி இன்றியமையாதது' என்பது அறுதியிட்டுக் கூறப்பட்டது.

<u>3.24.கேள்வி கேட்டமைதல்</u>

அறங்கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்
மறங்கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும்
புறங்கேட்டும் பொன்னுரை மேனியெம் ஈசன்
திறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே. **#300**

முத்தி என்பது 'அறம், பொருள், இன்பம்' என்னும் உலகியற் பொருள்களையும், வேதத்தின் கன்ம காண்டம், உபாசனா காண்டம், ஞானகாண்டம் என்னும் மெய்ந்நெறிப் பொருள்களையும் வல்லார்வாய்க் கேட்டார் பெற்ற பயனேயாம்.

விளக்கவுரை

'அதனால் அவைகளை இகழாது கேட்க' என்பது குறிப்பெச்சம். மறம் - வீரம். அஃது அரசர்க்குரிய பண்பாய் நின்று 'பொருள்' என்னும் உறுதிப் பொருளை உணர்த்திற்று. புறம் - பிறிது; அஃது இன்பம். அந்தணர் இடைவிடாது பற்றி ஓதுதல் கன்ம காண்டத்தையேயாதலின், அதனை, 'அந்தணர் வாய்மொழி' என்றார். வானவர் மந்திரம் - கடவுளரை வழிபடும் மந்திரங்கள். பொன்னுரை ஈசன் - பொன்னை உரைத்தாற்போலும் மேனியை உடைய சிவபெருமான். 'பதி, பசு, பாசம்' என்னும் முப்பொருள்களின் இயல்புகளுள் தலைமைபற்றிப் பதி இயல்பு ஒன்றையே கூறினா ராகலின், ஏனையவும் அதன் கண் அடங்கும். கன்ம காண்டம் முதலிய மூன்றன் பொருளும் சிவாகமங்களுள் 'தந்திர கலை, மந்திரகலை, உபதேசகலை' *(சிவஞானசித்தி, அளவை, 4)* எனப்படுமாகலானும், வேதத்திற்கும் சிவாகமத் திற்கும் பேதம் இன்மையானும் *(தி.10 எட்டாம் தந்திரம்)* அவ்வாகமப் பொருளும் ஈண்டுக் கூறியவாறேயாதல் அறிக. செய்யுள் பற்றி உலகியற் பொருளையும், மெய்ந்நெறிப் பொருளையும் முறைப்படுத்தோதாது, விரவ ஓதினார். 'பெற்றது' என்பது ஈறுதொகுத்தல்.
இதனால், கேட்கப்படும் பொருள் பலவும் வகுத்துக் கூறப் பட்டன.

தேவர் பிரான்றனைத் திவ்விய மூர்த்தியை
யாவர் ஒருவர் அறிவார் அறிந்தபின்
ஓதுமின் கேண்மின் உணர்மின் உணர்ந்தபின்
ஓதி உணர்ந்தவர் ஓங்கிநின் றாரே. **#301**

'சிவபிரானை உள்ளவாறு உணர்ந்தோர் யாவர்' என்பதனை முன்னே அறிந்து, பின்னர் அவர்பால் கற்றலையும், கேட்டலையும் செய்யுங்கள். கற்றும் கேட்டும் அறிந்த பின், சிந்தித்துத் தெளியுங்கள். ஏனெனில், கற்றுக் கேட்ட பின்னர்ச் சிந்தித்துத் தெளிந்தவரே சிவனைப் பெற்று உயர்ந்து நின்றனர்.

விளக்கவுரை

'என்பதை' என்பதும், 'அவர்பால்' என்பதும் சொல்லெச்சங்கள். இதனால், யாதொரு பொருளாயினும் அதனை வல்லா ரிடத்தே கற்றலும், கேட்டலும் செயற்பாலதல்லது பிறரிடத்து ஆகாது என்பதும், கல்வி கேள்விகட்குப் பின்னர்ச் செயற்பாலன இவை என்பதும் கூறப்பட்டன, திருவள்ளுவரும் 'ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்லே கேட்கற்பாற்று' (குறள், 415) என்றார். 'கற்றபின் நிற்க அதற்குத் தக' (குறள், 391) என்றது கல்வியின் பகுதியானாற் போலக் கேள்வியோடு இயைபுடையனவும் இங்குக் கேள்வியின் பகுதியாயின. இதனுள் இரண்டடி எதுகை வந்தது.

மயன்பணி கேட்பது மாநந்தி வேண்டின்
அயன்பணி கேட்ப தரன்பணி யாலே
சிவன்பணி கேட்பவர் தேவரு மாவர்
பயன்பணி கேட்பது பற்றது வாமே. **#302**

திருமால், பிரமன் முதலிய தேவரை வழிபடும் முறைகளும் கேட்கத்தக்கனவாதல், சிவபெருமானது ஆணைவழியே யாம். அதனால், முதல்வனாகிய அப்பெருமானை வழிபடும் முறையைக் கேட்டு, அவனை வழிபடுதலே சிறந்தது. ஆகவே, மக்கட் பிறப்பின் பயனும், உயிர்க்கு உறுதுணையாவதும் சிவபெருமானை வழிபடும் முறையைக் கேட்டலேயாம்.

விளக்கவுரை

'மாயன்' என்பது முதல் குறுகி நின்றது. 'அத்தேவர்' எனவும், 'அப்பணி கேட்பது' எனவும் சுட்டு வருவிக்க. 'பற்றும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. திருமால் முதலிய தேவர், தாம் செய்த புண்ணியத்தின் பயனாகச் சிவபெருமானால் தத்தமக்குப் பொருந்திய எல்லையளவும் தலைவராக அருள் புரியப் பட்டமையின், அவரை வழிபடுதலும் சிவபெருமான் ஆணையே ஆயிற்று. ஆயினும், மேன்மேல் உள்ளாரை வழிபடுபவர் கீழ்க்கீழ் உள்ளாரை வழிபடு வோர் எய்தும் பயனோடு அதனின் மேம்பட்ட பயனையும் பெறுவாராகலின், எல்லார்க்கும் மேலோனாகிய சிவபெருமானை வழிபடுதலே சிறந்ததாதல் தெளிவு. 'காண்பவன் சிவனே யானால் அவனடிக் கன்பு செய்கை மாண்பறம்' (சிவஞானசித்தி. சூ. 2.27) என்றது காண்க. இப்பயனை அவர் வழங்கமாட்டாமையைச் சுட்டும் முகத்தால், சிவனது வழிபாட்டின் சிறப்பு உணர்த்தப்பட்டது. இதனுள் இன எதுகை வந்தது. இதனால், மெய்ந்நெறிக் கேள்வியின் இயல்பு வகுத்துக் கூறப்பட்டது.

பெருமான் இவனென்று பேசி யிருக்குந்
திருமா னுடர்பின்னைத் தேவரு மாவர்
வருமா தவர்க்கு மகிழ்ந்தருள் செய்யும்

அருமா தவத்தெங்கள் ஆதிப் பிரானே. **#303**

உலகியலை விட்டு மெய்ந்நெறி நோக்கி வருகின்ற தவத்தோர்க்கு அதனை அருளுபவன் அரிய தவக் கோலத்தையே தனது கோலமாக உடைய எங்கள் சிவபெருமானே. அதனால், 'இவனே யாவர்க்கும் தலைவன்' என்று உணர்ந்து அவனது புகழைத் தம்மிடையே பேசிக் களிக்கும் திருவுடை மக்களே பின்னர் எப் பயனையும் எளிதிற் பெறுவர்.

விளக்கவுரை

'அதனால் அவன் புகழையே கேட்க' என்பது குறிப் பெச்சம்.
'செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான்திறம் எப்போதும்
செவிகாள் கேண்மின்களோ' -தி.*4* ப.*9* பா.*3*
என்று அருளிச் செய்தார் திருநாவுக்கரசரும். பேசுதல், கருத்துக்களைக் கொண்டும், கொடுத்தும் அளவளாவுதல். 'உன் திருவார்த்தை - விரிப்பார் கேட்பார் மெச்சுவார்' (தி.*8* கோயில் மூத்த திருப்பதிகம் - *9*) என்ற திருவாசகத்தைக் காண்க. திரு - நற்பேறு. 'பேசி இருக்கும் திருமானுடர்' என உடம்பொடு புணர்த்து ஓதியதனால், 'அவ்வாறு பேசி இருத்தலே திருவாம்' என்பது பெறப்பட்டது. 'மாதவர்' என்றதனால், 'அவர் மெய்ந்நெறி விருப் பினர்' என்பதும், 'அருமாதவன்' என்றதனால், 'அவர்க்கு அருள் புரிய வல்லான் அவனே' என்பதும் பெறப்பட்டன. இதனால், மெய்ந்நெறியுள் சிவநெறிக் கேள்வியது சிறப்புத் தனித்தெடுத்துக் கூறப்பட்டது.

ஈசன் அருளும் இறப்பும் பிறப்பையும்
பேசி யிருந்து பிதற்றி மகிழ்வெய்தின்
நேசமு மாகும் நிகழொளி யாய்நின்று
வாச மலர்க்கந்தம் மன்னிநின் றானே. **#304**

சிவபெருமானது திருவருளின் பெருமையையும், இறப்புப் பிறப்புக்களது சிறுமையையும் ஒருவரோடு ஒருவர் உசாவி அறிந்து, அவனது திருவருளையே காதலித்துப் பிதற்றி மகிழ்ந்தால், அப்பெருமான்மேல் அன்பு, முறுகி வளரும். வளர்ந்தால், அப் பெருமான் அவ்வன்பில் விளங்குகின்ற பேரொளியாய் எதிர்ப்பட்டு நின்று, பின்னர் மலரில் நின்று கமழும் மணம்போல உள்ளே நிலைபெற்று, இன்பம் தருவான்.

விளக்கவுரை

'அருளையும்' என்னும் இரண்டனுருபு தொகுத்தல். இறப்புப் பிறப்பு, உம்மைத் தொகை. அருள் முதலிய மூன்றும் ஆகுபெயரால் அவற்றின் தன்மையை உணர்த்தின. 'எய்தி ஆகு' எனப் பாடம் ஓதி, 'ஆகு'

என்பதனை ஏவல்வினையாக்கி உரைப் பாரும் உளர். 'வாசமலர்' என்பது, பிறிதின் இயைபு நீக்கிய விசேடணம். 'கந்தம் போல' என உவம உருபு விரிக்க.
'சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது' -தி.10 5ஆம் தந்திரம்
எனவும்,
'உற்ற ஆக்கையின் உறுபொருள், நறுமலர்
எழுதரு நாற்றம்போல்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள்'
-தி.8 அதிசயப் பத்து, 9
எனவும் ஓதுதல் காண்க.
இதனால், சிவநெறிக் கேள்வி பயன்தரும் முறைமை கூறப் பட்டது.

விழுப்பமும் கேள்வியும் மெய்ந்நின்ற ஞானத்
தொழுக்கமும் சிந்தை உணர்கின்ற போது
வழுக்கி விழாவிடில் வானவர் கோனும்
இழுக்கின்றி எண்ணிலி காலம தாமே. **#305**

'உண்மையான கல்வியும், கேள்வியும், ஞானச் செய்தியும் யாவை' என்று ஒருவனது உள்ளம் ஓர்கின்ற காலத்து, அது பிழைபட்டுப் பொய்ம்மையில் விழாதிருப்பின், சிவபெருமான் அவனுக்குத் தடையின்றிக் காலம் கடந்த பொருளாய் வெளிப்பட்டு நிற்பன்.

விளக்கவுரை

'கல்வி விழுச்செல்வம்' (குறள், 400) ஆதலின், அதனை, 'விழுப்பம்' என்றார். மெய்நின்ற - மெய் நிலைபெற்ற; இது 'விழுப்பம், கல்வி' என்றவற்றோடும் இயைந்தது. வழுக்கி விழுத லாவது, பொய்யை மெய்யெனத் துணிதல். காலம் எல்லாப் பொரு ளினும் நுண்ணிதாய் அவற்றை நடத்துவதாயினும் வரையறை உடைத்தாகலின், அதனைக் கடந்த நிலையை, 'எண்ணிலி காலம்' என்றார். மேற்கூறிய சிறப்புப்பற்றிக் காலத்தையே கூறினாராயினும், அதனொ டொத்த 'முதற்பொருளாகிய' (தொல். பொருள்) இடமும் கொள்ளப்படும். படவே, 'மெய்ம்மையான கல்வி கேள்வி ஞானச் செய்திகளை உடையார் காலத்தானும், இடத்தானும் வரையறுக்கப் படாத இறை நிறைவை எய்துவர்' என்றதாயிற்று. கேள்வியே கூறப்புகுந்தாரா யினும் அத்தன்மையவாதல் பற்றி ஏனையவற்றையும் உடன் கூறினார். 'வழுக்கி விடாவிடில்' என்பது பாடம்.
இதனால், மயக்க நூலைக் கற்றலும், மயக்க உரைகளைக் கேட்டலும், அவற்றின்வழி அறிந்த நெறியின் நிற்றலும் ஆகாமை கூறப்பட்டது.

சிறியார் மணற்சோற்றில் தேக்கிடு மாபோல்
செறிவால் அனுபோகஞ் சித்திக்கும் என்னில்

குறியாத தொன்றைக் குறியாதார் தம்மை
அறியா திருந்தார் அவராவர் அன்றே. **#306**

சிறுமகார் தம் விளையாட்டு விருப்பம் காரணமாகத் தாம் சோறாகக் கருதிக்கொண்ட மணலாலே வயிறு நிரம்பினார் போலத் தேக்கெறிந்து கொள்ளுதல்போல, உலகப் பற்றுக் காரணமாகச் சுற்றத் தொடக்குண்டு வாழும் வாழ்க்கையாலே இன்பம் கிடைத்துவிடும் என்பவர் உளராயின் அவர், தம்மையும், தலை வனையும் அறியாத மடவோரேயாவர்.

விளக்கவுரை

'அதனால் அங்ஙனம் கொள்ளற்க' என்பது குறிப் பெச்சம். செறிவு - கூடியிருத்தல். இதற்கு, 'செறியப் படுவார் இவர்' என்பது வருவிக்கப்பட்டது. 'அநுபோகம்' என்பது சிறப்பினால் இன்ப நுகர்ச்சியையே குறித்தது. 'அவர் குறியாதாரும், இருந்தாரும் ஆவர்' என்க. குறியாதது ஒன்று - சுட்டிறந்த முதற்பொருள். சிறப்புப் பற்றி இதனை முன்னர்க் கூறினார். 'தம்மை யுணர்ந்து, அதனானே தலைவனையும் உணர்பவரே ஞானத் தலைவர்' என மெய்கண்ட தேவரும் கூறினார் (சிவஞானபோதம் அவையடக்கம்).
இதனால், உலகாயதம் பேதைமைத்தாதல் கூறுமாற்றால், 'ஆகா' என விலக்கிய கல்வி கேள்வி ஒழுக்கங்களுள் பெரிதும் கூடாதன இவை என்பது கூறப்பட்டது.
'நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே
படைகள் போல்வரும் பஞ்சமா பூதங்கள்' -தி.5 ப.31 பா.6
என அப்பரும் அருளிச் செய்தல் காண்க.

உறுதுணை யாவ துயிரும் உடம்பும்
உறுதுணை யாவ துலகுறு கேள்வி
செறிதுணை யாவ சிவனடிச் சிந்தை
பெறுதுணை கேட்கிற் பிறப்பில்லை தானே. **#307**

உயிரும் உடம்பும் ஒன்றற்கு ஒன்று உறுதுணை யாவன. அவை அவ்வாறு நிற்றற்கு உறுதுணையாய் நிற்பதே உலகியல் பற்றிய கேள்வி; (என்றது, யாண்டும் உயிர் உடம்பொடு நிற்றலாகிய பிறப்பு நிலையை நீக்க மாட்டாது; அதன்கண் சில நன்மையைத் தருவதே என்றபடி) இனி உயிரோடு ஒட்டி நிற்கும் துணையாவன சிவபெருமானது திருவடிச் சிந்தனையைத் தூண்டும் சிவநெறிக் கேள்விகளே; பெறுதற்குரிய துணையாகிய அக்கேள்விகளைக் கேட்டபின், பிறப்பு இறப்புக்கள் இல்லாத வீடு கூடுவதாம்.

விளக்கவுரை

'ஆவது' என்ற ஒருமையால், 'உயிர் உடம்பிற்குத் துணையாவது, உடம்பு

உயிர்க்குத் துணையாவது' எனத் தனித்தனி உரைத்தல் கருத்தாயிற்று. இத்தொடரின்பின், 'அதற்கு' என்பது எஞ்சி நின்றது. சிந்தை, ஆகுபெயர். இதனால், 'சிவநெறிக் கேள்வியே விழுமியது' என்பது கூறப்பட்டது.

புகழநின் றார்க்கும் புராணன்எம் ஈசன்
இகழநின் றார்க்கும் இடும்பைக் கிடமா
மகிழநின் றாதியை ஓதி உணராக்
கழியநின் றார்க்கொரு கற்பசு வாமே. #308

எங்கள் சிவபெருமான், ஒருப்பட்டு நிற்கும் அன்பர்க்கும், ஒருப்படாது முரணி, இகழ முற்பட்டு நிற்கும் வன்பர்க்கும் மூதாதையே. எனினும், தம்மொடு மேவாத மைந்த ரிடத்து அன்பு செய்யாத தந்தையர்போல, தன்னை இகழ்ந்து, தனது பெருமையை மகிழ்ச்சியுண்டாகக் கற்றும் கேட்டும் உணராது நீங்கி நிற்பார்க்குத் துன்பத்திற்கு ஏதுவாக, பால் கறவாத கற்பசுப்போல அருள்செய்யாது நிற்பன்.

விளக்கவுரை

'புகழ நின்றார்க்கும், இகழ நின்றார்க்கும் புராணன் எம் ஈசன்' எனவும், 'கழிய நின்றார்க்கு இடும்பைக் கிடமாக் கற்பசுவாம்' எனவும் கூட்டுக. இனி, 'இடும்பைக் கிடமாக் கழிய நின்றார்க்கு' என இயைத்தலுமாம். 'கற்பசுவாம்' என்றதில் ஆக்கம், உவமை குறித்து நின்றது. 'கேட்டு' என்பது அதிகாரத்தால் வந்தது. 'உணராது' என்பது ஈறு குறைந்து நின்றது. ஒன்று - சிறுமை; பயன்படாமை. 'கழிய நின்றார்க்குக் கற்பசுவாம்' எனவே, கழியாது பற்றிநின்றார்க்குப் பாற்பசுவாதல் பெறப்பட்டது. இதன்கண் மூன்றாம் எழுத்து எதுகை வந்தது. இதனால், சிவநெறிக் கேள்வியுடையோர் பேரின்பம் எய்த லும், அஃது இல்லாதார் அதனை எய்தாமையும் கூறப்பட்டன.

வைத்துணர்ந் தான்மனத் தோடும்வாய் பேசி
ஒத்துணர்ந் தான்உரு ஒன்றொடொன் றொவ்வா
தச்சுழன் றாணி கலங்கினும் ஆதியை
நச்சுணர்ந் தாற்கே நணுகலு மாமே. #309

சிவபெருமானை மனம் ஒருங்கி உணர்ந்தவனே அப்பெருமானை மனத்தால் நினைத்தும், வாயால் வாழ்த்தியும் அவன் திருக்குறிப்போடு ஒத்து உணர்ந்தவன் ஆவான். அவனுக்கு உடற் கூறுகள் தம்மில் ஒவ்வாது நிற்ப, உடலாகிய தேரைத் தாங்குகின்ற உயிராகிய அச்சு உழன்று, அவ்வச்சிடத்து அத்தேரின் ஆழியை நிலைபெறுத்தும் ஊழாகிய கடையாணியும் கழன்றாலும் அவன் சிவபெருமானைத் தப்பாது அடைவான்.

விளக்கவுரை

'ஆதியை, மனம்' என்பன முதலிலும் சென்று இயையும்.
'வைத்துணர்ந்தான் .. ... ஒத்துணர்ந்தான்' என்றதனால், வாளா நினைத்தலும், வாழ்த்தலும் செய்வார் அதனை உண்மையாற் செய்தவர் ஆகாமை பெறப்பட்டது. 'கல்வி கேள்விகளானன்றி அறியாமை நீங்காமையின், அவை இல்லாது செய்வது அறிவின் வழிப்பட்டதாகாது, ஏரல் எழுத்துப் போல்வதொரு விழுக்காடாம்' என்பது கருத்து. இஃதே பற்றி,

கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார். -குறள் *404*

எனவும்,

'தெருளாதான் மெய்ப்பொருல் கண்டற்றால்' -குறள் *249*

எனவும் கூறினார் திருவள்ளுவர். இங்ஙனம் கூறவே, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாயும் ஆயிற்று.

ஞானத்தால் தொழுவார் சிலஞானிகள்;
ஞானத்தால் தொழுவேன்உனை நானலேன்;
ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு,
ஞானத்தாய்உனை நானும் தொழுவனே. -*தி.5 ப.91பா.3*

என்றருளியதும் இப்பொருட்டு.

சிவபெருமானது திருக்குறிப்பு, உயிர்கள் தன்னை அறிவால் அடைதல் வேண்டும் என்பதேயாதலின், வைத்துணர்ந்தான் ஒத்துணர்ந்தானாவன். இவ்வொருமைச் சொற்கள் இனத்தின் மேல் நின்றன. இதனை 'ஒருபால் வழக்கு' *(*தொல். பொருள், *218)* என்பர் தொல்காப்பியர். உரு - உடம்பு; என்றது அதன் கூறுகளை. அவை வாத பித்த ஐ முதலியவை. 'ஒவ்வாது' என்றதின்பின் 'ஆக' என்பது வருவிக்க. 'உழன்று' என்னும் எச்சம் எண்ணின்கண் வந்தது. 'நச்சி' என்பதன் இகரம் தொகுத்தலாயிற்று. ஏகாரம் இரண்டனுள் முன்னது தேற்றம்; பின்னது ஈற்றசை. 'உணர்ந்தார்க்கு' என்பது பாடம் அன்று. அறிவால் தன்னை அடைந்தாற்கு,

'புலன் ஐந்தும், பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டு ஐ மேல் உந்தி, உயிர் அலமரும் நிலை' வந்ததாயினும், அவரைச் சிவபெருமான், 'அஞ்சேல்' என்று அருள்செய்வான் *(தி.1 ப.130 பா.1)* ஆகலின், 'நச்சி உணர்ந்தாற்கே நணுகலும் ஆம்' என்றார்.

இதனால், சிவபெருமானைக் கல்வி கேள்விகளின் வழி அடைதலே சிறந்தது என்பது வலியுறுத்தப்பட்டது.

3.25.கல்லாமை

கல்லா தவருங் கருத்தறி காட்சியை

வல்லா ரெனில் அருட் கண்ணான் மதித்துளோர்
கல்லாதார் உண்மைபற் றாநிற்பர் கற்றோருங்
கல்லா தவர் இன்பங் காணகி லாரே. **#310**
'கல்வி இல்லாதோரும் அறிவினுள்ளே காணும் மெய்ப்பொருட் காட்சியை வல்லவராவர்' என்று கூறுவதாயின் 'கற்று வல்லோரும் கல்லாதார் ஒழுகும் உண்மை நெறியைப் பற்றுதலும், கல்லாதார் பெறும் பேரின்பத்தைப் பெறுதலும் மாட்டாதாராவர்' எனவும் கூறுதல் வேண்டும். 'கற்றவரே வல்லவராவர்' என்னும் நியதியின்மையின், அவர் மாட்டாராதலுங் கூடுமாகலின்.

விளக்கவுரை

'கற்றல் கேட்டல் உடையார் பெரியார்
கழல் கையால் தொழுதேத்தப்
பெற்றம் ஊர்ந்த பிரமாபுர மேவிய
பெம்மான்' -*தி.1ப.1பா.2*
'கல்லா நெஞ்சின் - நில்லான் ஈசன்' *(தி.3 ப.40 பா.3)* 'கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி' *(தி.6 ப.32 பா.1)* கல்லாதார் காட்சிக் கரியாய் போற்றி' 'கற்றார் இடும்பை களைவாய் போற்றி' *(தி.6 ப.5 பா.1)* 'கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை' *(தி.9 ப.5 பா.2)* 'உள்என்னும் மாத்திரைய ரல்லால், பயவாக் களரனையர் கல்லாதவர்' *(குறள், 406)* என்றாற்போல வரும் மெய்யுரைகள் பலவற்றிற்கும் மாறாமாகலின், அங்ஙனங் கூறுதல், 'கையிலான் காட்டக் கண்ணிலான் கண்டான்' என்பதுபோல நகை விளைப்பதொன்றாய்ப் பொருந்தாது' என்பது குறிப்பெச்சம்.
இத்திருமந்திரம், 'புலால் மறுத்தல் இன்றியும் அருளாடல் கூடும்' என முரணிக் கூறுவாரை, 'பொருளாட்சி போற்றாதார்க் கில்லை; அருளாட்சி - ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு' *(குறள், 252)* என ஓர் உவம அளவையான் மறுத்து, 'புலால் மறுத்தல் இன்றி அருளாடல் உண்டாகாது' என புலால் மறுத்தலை வலியுறுத்திய திருக்குறள் போல, 'கல்வி இன்றியும் மெய்ப்பொருளை உணர்தல் கூடும்' என முரணிக் கூறுவாரை உரையளவைகள் பலவற்றான் மறுத்து, 'கல்வி இன்றி மெய்ப்பொருட் காட்சி உளதாகாது' எனக் கல்வியை வலியுறுத்தியது.
கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. -*குறள், 356*
எனத் திருவள்ளுவரும் மெய்ப்பொருட் காட்சிக்குக் கல்வி கேள்விகள் இன்றியமையாதச் சிறப்பினவாகக் கூறுதல் காண்க. 'கண்ணப்பர் முதலாயினார் முற்பிறப்பிற் கற்ற கல்வி உடையார்' என்பது மேலே காட்டப்பட்டது. *(தி.10 பா.296 உரை)* 'கல்வியாவது இது' என்பதனை

நாயனார் 'கல்வி' அதிகாரத்துட் கூறினமையை நினைவு கூர்க. கருத்து - அறிவு. இதன்கண் 'உள்' என்னும் பொருள் பட வந்த ஏழாவது விரிக்க. 'கருத்தறி காட்சி' எனவே மெய்ப்பொருட் காட்சி யாயிற்று. 'அருள்' என்றது, ஞானம் என்னும் பொருட்டு; இது கலை ஞானம். மதித்துளோர் - பொருள்களின் இயல்பை ஆய்ந்துணர்ந்தவர், 'மதித்துளோர் நிற்பவராவர்' எனவும், 'கற்றோரும் காணகிலாராவர்' எனவும் இயைத்துரைக்க. 'கற்றோரும்' என மறித்தும் கூறினார், வலியுறுத்தற்பொருட்டு. 'மதித்துளோரும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. 'கல்லாதார் உண்மை' 'கல்லாதார் இன்பம்' என்பன காரகப் பொருண்மைக்கண் வந்த ஆறாவதன் தொகை. 'பற்றாது' என்பதன் ஈறு குறைந்தது.

இதனால், கல்லாமை எவ்வாற்றானும் கடியப்படும் குற்றமாவ தன்றி, ஒருவாற்றானும் கொள்ளப்படும் குணமாகாமை கூறப்பட்டது.

வல்லார்கள் என்றும் வழியொன்றி வாழ்கின்றார்
அல்லா தவர்கள் அறிவு பலஎன்பார்
எல்லா இடத்தும் உளன்எங்கள் தம்இறை
கல்லா தவர்கள் கலப்பறி யாரே. **#311**

கல்வி கேள்விகளில் வல்லவர்கள் மெய்ந்நெறியை ஒன்றாகத் துணிந்து அதன்கண் பொருந்தி உயர்வர். அவ்வன்மை இல்லாதவர்கள் மெய்ந்நெறியைப் பலவாகக்கண்டு தடுமாற்றம் எய்தி ஒன்றினும் நில்லாது தாழ்வார். அதனால் எங்கள் சிவபெருமான் எங்கும் நிறைந்து நிற்பினும்; கல்லாதவர் அவனை அடையும் நெறியை உணரமாட்டார்கள்.

விளக்கவுரை

'வழி, அறிவு' என வேறு வேறு நின்ற இருசொற் களையும் ஏனையிடத்தும் கூட்டி, ஈரிடத்தும் 'அறிவு வழி' என உரைக்க. 'பல என்பார், வாழ்கின்றார்' என்பவற்றால், ஒன்றெனலும், தாழ்தலும் பெறப்பட்டன. 'இறை' என்பதன் பின் 'ஆயினும்' என்பது எஞ்சி நின்றது. ஐய உணர்வு உள்வழியும் மெய்ப்பொருட் காட்சி நிகழாதாகலின், 'அவர் கலப்பறியார்' உள்வழி என்றார். 'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கே வானம் நணித்து'*(குறள், 453)* என்றார் திருவள்ளுவ நாயனாரும்.
இதனால், கல்வி, கேள்வி இல்லாதார்க்கு ஐயம் நீங்கு மாறின்மை கூறப்பட்டது.

நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்காள்
எல்லா வுயிர்க்கும் இறைவனே யாயினும்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணாதே. **#312**

நிலைபெறாத இயல்பினை உடைய பொருள் களையே நிலைபெற்ற பொருள்களாக நெஞ்சில் நினைத்து, அதனானே, நிலைபெறாத உடம்பையும் நிலைபெற்றதாக நினைக் கின்ற புல்லறிவாளரே, எங்கள் சிவபெருமான் எல்லா உயிர்கட்கும் முதல்வன் என்பது உண்மையேயாயினும், உம்மைப் போலக் கல்லாத புல்லறிவாளர் நெஞ்சில் அவனைக் காண இயலாது.

விளக்கவுரை

'கற்றவர் நெஞ்சில் மட்டுமே காண இயலும்' என்ப தாம். நிலை - இயல்பு; அஃது அதனை உடைய பொருளைக் குறித்தது. 'நெஞ்சத்து' என்றதன்பின், 'நினைத்தலால்' என்பது எஞ்சி நின்றது.

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. -குறள், *331*

என்ப ஆகலான், நில்லாக் குரம்பை நிலையென்றுணர்தல் புல்லறி வாண்மை யாதலும், 'கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை' *(தி.8* கண்டபத்து, *4)* என்றமையால், கல்லாதார்க்கு உள்ளது அப் புல்லறிவே என்பதும் பெறப்பட்டன. மேலைத் திருமந்திரத் துள்,'எங்கள்தம் இறை' என்றது இதனுள்ளும் வந்து இயைந்தது. 'ஒண்ணாதே' என்னும் ஏகாரம் தேற்றம்.

இதனால், கல்வி கேள்வியில்லாதார்க்கு உளதாவது புல்லறிவே *(*திரிபுணர்வே*)* என்பது கூறப்பட்டது.

கில்லேன் வினைதுய ரார்க்கும் அயலானேன்
கல்லேன் அரனெறி கல்லாத் தகைமையின்
வல்லேன் வழங்கும் பொருளே மனத்தின்உட்
கல்லேன் கழியநின் றாடவல் லேனே. **#313**

நான் சிவன்நெறியைக் கல்லாதிருக்கும் தன்மையர் முன் கல்வி இல்லாதவனாய்த் தோன்றுகின்றேன். அதனால், அவர் போல வினையைச் செய்ய வல்லேனல்லேன்; உலகியலில் நின்று துன் புறுவார்க்கும் அயலாகினேன். கிடைத்த பொருளைப் பலர்க்கும் வழங்க வல்லனாயினேன்; அதனால், எதற்கும் மனத்தில் அச்சங் கொள்ளமாட்டேன்; இவற்றால் பற்றுக்கள் பலவும் நீங்கி நின்று களிநடம் புரிய வல்லேனாயினேன்.

விளக்கவுரை

நாயனார் எவ்விடத்தும் தம்மை இழித்துக் கூறாது, தாம் பெற்ற பேற்றின் சிறப்பையே கூறுதலின், இம்மந்திரத்திற்கு அவர் தம்மை இழித்துக் கூறினாராக வைத்து உரைத்தல் பொருந்தாது என்க. இரண்டாம் அடியை முதலில் கொண்டு உரைக்க. தகைமை - தன்மை; தன்மை

உடையாரை, 'தன்மை' என அஃறிணையாகக் கூறினார்; இழிபு பற்றி. 'அறியாத் தன்மையர்முன் கல்லேனாகின்றேன்' என் றதனால், 'அறிந்த தன்மையர் முன் கற்றேனாய் விளங்குகின்றேன்' என்பது போந்தது. இதனால், கற்றாரைக் கல்லாதார் 'அறிவிலர்' என்று இகழ்தல் பெறப்பட்டது. அதனை,

உருவமும், உணர்வும், செய்தி ஒத்திரா; கன்மம் என்னின்
மருவுகை விரல்கள் தம்மின் வளர்வுடன் குறைவுண்டாகி
வருவதிங் கென்ன கன்மம் செய்துமுன்? மதியி லாதாய்,
பெருகுபூ தங்கள் தம்மின் மிகுகுறைப் பெற்றி யாமே.
-சிவஞானசித்தி பரபக்கம். உலகாயதன் மதம் - *9*.

என்பார் போல்பவரிடத்துக் காண்க.

சிறியார் உணர்ச்சியுள் இல்லை, பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னும் நோக்கு. -குறள் *976*

என்றார் திருவள்ளுவரும். 'வினை கில்லேன், தகைமையின் கல்லேன், பொருளே வல்லேன்' என முன்னே கூட்டி முடிக்க. 'தகைமையின்' என்பதில் சாரியை நிற்க, 'முன்' என்னும் பொருட்டாய கண்ணுருபு தொக்கது. 'வழங்கும் பொருளே வல்லேன்' என்றாராயினும், 'பொருள் வழங்கவே வல்லேன்' என்றல் கருத்து என்க. 'உட்கலேன்' என்பது விரித்தல் பெற்றது.

இதனால், கல்லாதார் வினை செய்தல், துயர்ப்படல், இவறன்மை, சாக்காடு முதலியவற்றிற்கு அஞ்சுதல் என்னும் குற்றங் களை உடையராதல், எதிர்மறை முகத்தாற் கூறப்பட்டன.

நில்லாது சீவன்நிலையன் றெனவெண்ணி
வல்லார் அறத்தும் தவத்துளும் ஆயினார்
கல்லா மனித்தர் கயவர் உலகினில்
பொல்லா வினைத்துயர் போகஞ்செய் வாரே. **#314**

கற்று வல்லார், இப்பிறப்பின் நிலையாமையை அறிந்து, 'இல்லறம், துறவறம்' என்னும் இருவகை அறத்துள் தமக்கு இயைந்த தொன்றில் நிற்பர். இனிக் கல்லா மனிதர், கீழ்மக்கள் ஆதலின் தீவினையால் விளைகின்ற துன்பத்தை அனுபவித்துக்கொண்டிருப்பர்.

விளக்கவுரை

சீவன் - உடம்பொடு நிற்கும் உயிர்; என்றது அதன் நிலையை. 'அறம்' என்றது துறந்தார் முதலியோர்க்குத் துணை செய்தலை 'ஆதலின்' என்பது சொல்லெச்சமாய் நின்றது. போகம் செய்தல் - அனுபவித்தல். இதனால் கல்லாதார், தம் உயிர்க்கு உறுதி தேடிக்கொள்ளாமை கூறப்பட்டது.

விண்ணினின் உள்ளே விளைந்த விளங்கனி

கண்ணினின் உள்ளே கலந்தங் கிருந்தது
மண்ணினின் உள்ளே மதித்து மதித்துநின்
றெண்ணி எழுதி இளைத்துவிட் டாரே. **#315**

நன்கு கனிந்து இனிதாகிய விளாம்பழம், வானளாவ உயர்ந்த கிளையிலே உள்ளது. அதனைக் கண் உடையவர் கண்டு தக்க வாற்றாற் பெற்று உண்டு களிக்கின்றனர். கண் இல்லாதவர் அதனைச் சொல்லளவால் அறிந்து நிலத்திலே கிடப்பதாக நினைத்து, உதிர்ந்து கிடக்கின்ற கருக்காய், வெதும்பிக் காய்ந்த பிஞ்சு முதலியவைகளைக் கையால் தடவி எடுத்து, 'இத்துணைய' என்று எண்ணித் தொகையை மனத்துட் பதித்து, உண்டு பார்க்கும்பொழுது இனித்தல் இன்றிக் கைத்தும், புளித்தும் நிற்றலைக் கண்டு துன்புற்றொழிகின்றனர்.

விளக்கவுரை

'இந்நிலை கண் இல்லாமையான் ஆயதன்றோ' என்பது குறிப்பெச்சம்.
'முப்பத்தாறு தத்துவங்களையும், ஆன்ம போதத்தையும் கடந்து அப்பால் உள்ளது எல்லையில்லாத சிவானந்தமாகிய பேரின்பம்; அதனைக் கல்வி உடையவர் அறிந்து தவ ஞானங்களால் அடைந்து திளைக்கின்றனர்; கல்வி இல்லாதவர், பேரின்பம் ஐம்புலப் பொருள்களில் உள்ளதாக நினைத்து அவற்றைத் தத்தமக்கு இயலுந் திறத்தால் பல தொழில்வழி முயன்று ஈட்டித் தொகைபண்ணி, அத்தொகையை மறவாமைப் பொருட்டு ஏட்டிலும் எழுதிக் காத்து, அவற்றை நுகருமிடத்துப் பேரின்பம் பயவாது பெருந்துன்பத்தையும், சிறிது இன்பத்தையும் பயந்து நிற்றலை அறிந்து தளர்ச்சி எய்துகின் றார்கள்; இந்நிலை கல்லாமையான் ஆயதன்றோ! என்பது இதனாற் பெறுவிக்கப்பட்ட பொருள். இம் மந்திரம் பிசிச் செய்யுள்.
ஐம்புலப் பொருள்களைத் தேடி இளைத்தலால் பயனில்லை; இறைவன் திருவடியை அடைதலே பயன் தருவது என்பதைத் திருநாவுக்கரசர்,
மாடு தேடி மயக்கினில் வீழ்ந்துநீர்
ஓடி எய்த்தும் பயனிலை; ஊமர்காள்,
சேடர் வாழ்சேறைச் செந்நெறி மேவிய
ஆட லான்அடி யேஅடைந் துய்ம் மினே.
-*தி. 5 ப.77 பா.4* எனக் கல்லாதாரை நோக்கி இரங்கி அருளிச்செய்தமை காண்க.
'விண்ணினின்' முதலிய மூன்றிலும் ஓர் இன், விரித்தல் பெற்றது. கண்ணினுள்ளே கலந்திருத்தல், கண்ணால் நன்கு காணப் படுதல். *'மண்ணினுள்ளே'* என்பதன்பின், *'உளதாக'* என்பது வருவிக்க. அடுக்கு, பலர் மதித்தலைக் குறித்தது. *'எழுதி'* என்பது, உவமைக்கண், *'இம்மை உன்தாள் என்றன் நெஞ்சத்து எழுதிவை' (தி.4 ப.96 பா.6)*

என்பதிற்போலப் பதித்தலைக் குறித்தது. விளம்பழம், பழமாக உண்ணப்படுதலேயன்றித் தனியாகவும், கூட்டாகவும் அட்டுண்ணப் படுதல் முதலிய பயன் மிகுதி பற்றி அதனையே கூறினார்.
இதனால், கல்லாதார் பேரின்பம் பெறாமை கூறப்பட்டது.

கணக்கறிந் தார்க்கன்றிக் காணவொண் ணாது
கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடா காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்கும்
கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே. **#316**

நூல்களைக் கற்றறிந்தவரே அந்நூலறிவால் மெய்ப் பொருளின் இயல்பை உணர்ந்து, பரவெளியில் கலந்து நிற்கும் முறையையும் உணர்கின்றனர். ஆதலின், நூல்களைக் கற்றறியா தவர்க்கு அவை கூடாவாம்.

விளக்கவுரை

பின் இரண்டு அடிகளை முதலிற் கூட்டி, 'கல்வி கற்றறிந்தாரே' என்பதனை முதலிற் கொண்டு உரைக்க. கணக்கு - நூல். அதனை, கீழ்க்கணக்கு, மேற்கணக்கு, கணக்காயர் முதலிய வழக்குக்களான் அறிக. 'உண்மை, அண்டம்' என்பன 'உண்மையைக் காண ஒண்ணாது, அண்டம் காட்சி கைகூடா' என முன்னரும் சென்று இயைந்தன. உண்மை - மெய்ப்பொருள். அஃது அதன் இயல்பைக் குறித்தது. அண்டம் - பரவெளி. 'கைகூடா' என்ற பன்மை, பெறுவாரது பன்மை பற்றிவந்தது.
இதனால், கல்லாதார் மெய்ந்நெறியை அறிதலும், அதன் பயனைப் பெறுதலும் இல்லாமை கூறப்பட்டது.

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன் அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே. **#317**

கல்வி இல்லாதவர் மூடரே ஆதலால், அவர் யாதோர் உறுதியினையும் அறியார். அதனால் அவரைக் காணுதலும், அவர் சொல்லைக் கேட்டலும் தகுதியாவன அல்ல. அவர்க்கும், அவர் போலும் கல்லாத மூடரே தக்கவராய்த் தோன்றுதலன்றிக் கற்ற அறிவினர் தக்கவராய்த் தோன்றார்.

விளக்கவுரை

ஈற்றடியை முதலிற்கொண்டு உரைக்க. அதன் இறுதி யில் 'ஆதலால்' என்பது எஞ்சி நின்றது. 'காணவும்' என்ற உம்மை இழிவு சிறப்பு. இழிவு, காட்சியளவில் பெறுவதும் தீமையேயாதல்.

இதனால், கல்லாதாரால் உலகிற்குத் தீங்கு உண்டாதல் கூறப்பட்டது.

கற்றுஞ் சிவஞானம் இல்லாக் கலதிகள்
சுற்றமும் வீடார் துரிசறார் மூடர்கள்
மற்றும் பலதிசை காணார் மதியிலோர்
கற்றன்பில் நிற்போர் கணக்கறிந் தார்களே. **#318**

சிவநூல்களைக் கற்றும், அவற்றை மனம் பற்றி ஒழுகாதவர், அடுத்தாரைக் கெடுக்கும் முகடிகளாவர். அவர் தாமேயும் புறப்பற்றும், அகப்பற்றும் விட அறியார்; அவ்விருவகைப் பற்றும் விட்ட அறிவர் பலர் பலவிடங்களில் இருத்தலைக் கண்டும் அவற்றை விட அறியார். அதனால் அவர் கற்றும் கல்லாத மூடரேயாவர். ஆதலின், கற்றவண்ணம் ஒழுகுபவரே கற்றறிவுடையோராவர்.

விளக்கவுரை

'ஞானம், அன்பு' என்பன அவற்றின்வழி நிகழும் ஒழுக்கத்தின்மேல் நின்றன. கல்லாது ஒழுக்கம் இல்லாதார், தம் தீயொழுக்கத்தை, 'நல்லது' என மருட்ட வகையறியார்; கற்று ஒழுக்கம் இல்லாதார் அவ்வகையை நன்கறிவராகலின் அவரை, 'மூடர்' என்று மட்டும் கூறியொழியாது, 'கலதிகள்' என்றும் இகழ்ந்தார். 'மேலைத் திருமந்திரத்துள் கூறப்பட்ட கல்லாதாரால் உலகிற்கு உளவாகும் தீங்கினும், இக் கற்றாரால் உலகிற்கு உளவாகும் தீங்கு பெரிது' என்பது கருத்து. 'விடார்' என்பது நீண்டு நின்றது. 'வீடார்' என்றே கொண்டு, உடைமையது தொழில். உடையார்மேல் ஏற்றப்பட்டது எனலுமாம். துரிசு - மனமாசு. திசை, ஆகுபெயர். 'மூடர்கள், மதியிலோர்' என இருகாற் கூறியது, தாமே உணர்தலும், பிறரைக் கண்டு உணர்தலும் ஆகிய இரண்டும் இலர் என்றற்கு.

ஓதி உணர்ந்தும் பிறர்க்குத் தானடங்காப்
பேதையிற் பேதையார் இல். -குறள் *834*

என்றார் திருவள்ளுவரும். 'நிற்போரே கணக்கறிந்தார்கள்' என ஏகாரத்தைப் பிரித்துக்கூட்டி உரைக்க.

இதனால், நூலைக் கற்றும் ஒழுக்கத்தைக் கல்லாதவர் கல்லாதவரே; கற்றவராகார் என்பது கூறப்பட்டது.

ஆதிப் பிரான்அம ரர்க்கும் பரஞ்சுடர்
சோதி அடியார் தொடரும் பெருந்தெய்வம்
ஓதி உணரவல் லோம்என்பர் உள்நின்ற
சோதி நடத்துந் தொடர்வறி யாரே. **#319**

உயிர்க்கு உயிராய் அவற்றது அறிவினுள் நிற்கும் பேரறிவாகிய முதற்பொருள், பெத்தம், முத்தி இருநிலையினும் அவ்வாறு நின்று நடத்தும் அருள் தொடர்பினை அநுபவத்தால் அறிய மாட்டாதார், 'யாம்

முதல்வனது இயல்பு அனைத்தையும் கல்வி கேள்விகளானே முற்ற உணரவல்லோம்' என்று கூறுவர்.

விளக்கவுரை

'அது நிரம்பாது' என்பது குறிப்பெச்சம். 'உள்நின்ற சோதி' என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. 'ஆதிப்பிரான்' முதலிய நான்கும் முதல்வனது இயல்பை வகுத்தோதியவாறு. ஆதிப்பிரான் முதற்கடவுள்; வேறு பலரைத் தொழிற் கடவுளாக நிறுத்தி உலகை நடத்துபவன். அமரர்க்கும் பரஞ்சுடர் - தேவர்க்கும் நெறிகாட்டும் மேலான விளக்கு. சோதி - எல்லையில் பேரொளி. அடியார் தொடரும் பெருந்தெய்வம் - தன்னை அடைந்தவர் விடாது தொடர்தற்குக் காரணமான இன்பப் பெருக்கினை உடையவன். இதன்பின், 'அவனை' என்பது எஞ்சி நின்றது.
இதனால், கல்வியின் நிறைவாகிய அனுபவம் இல்லாதாரும் ஓராற்றாற் கல்லாதவரேயாதல் கூறப்பட்டது.

3.26.<u>நடுவு நிலைமை</u>

நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே. **#320**

நடுவுநிலைமையிற் பிறழாதவர் ஒருபோதும் நரகம் புகார். தேவராய்த் துறக்கம் புகுதலும் செய்வர்; அதுவேயன்றி ஞானமும் பெற்று வீடெய்துவர். அதனால், நானும் அவர் வழியிலே நிற்கின்றேன்.

விளக்கவுரை

ஞானம் பெறுதல் இறுதியிற் கூறற்பாலதாயினும், சிறப்புப்பற்றி முன்னர்க் கூறினார். அதனை எதிர்மறை முகத்தாற் கூறியது, 'துறவறத்திற்கு முதலாகிய அருளுடைமைக்கு நடுவு நிலைமை இன்றியமையாச் சிறப்பிற்று' என்பது உணர்த்தற்கு. அது,
தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். -குறள் *251*
தன்னுயிர்க் கின்னாமை தானறிவான், என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல். -குறள் *318*
என்றாற்போல்வனவற்றால் அறியப்படும். உம்மைகள் எச்ச உம்மைகள்.

நடுவுநின் றான்நல்ல கார்முகில் வண்ணன்
நடுவுநின் றான்நல்ல நான்மறை யோதி
நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவார்
நடுவுநின் றார்நல்ல நம்பனு மாமே.

நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவர்
நடுவுநின் றார்சிலர் தேவரு மாவர்
நடுவுநின் றார்சிலர் நம்பனு மாவர்
நடுவுநின் றாரொடு நானும்நின் றேனே. **#321**
நடுவுநிலைமை பிறழாதவர் மால் அயனாம் நிலைகளைப்
பெறுதலேயன்றிச் சிவஞானிகளாய்ச் சிவமாந் தன்மையையும் பெறுவர்.

விளக்கவுரை

'ஓதி' என்பது பெயர். 'கார் வண்ணன், மறை யோதி' என்னும் ஈரிடத்தும் 'ஆவன்' என்பது எஞ்சி நின்று. அவற்றோடு இயைய, 'நடுவு நின்றான்' என ஒருமையாற் கூறினாராயினும், ஏனையபோலப் பன்மையாற் கூறுதலே கருத்து என்க. இனி 'கார் வண்ணன், மறையோதி' என்பவற்றை எழுவாயாக்கி, அவற்றை 'நின்றான்' என்பவற்றோடு முடிப்பாரும் உளர். 'நடுவுநின்றார்' என்று ஒழியாது, 'சிலர்' என்றது, 'நடுவுநிற்றல் அரிது' என்பது உணர்த்துதற்கு. 'சிவமாதல் ஞானம் இன்றி அமையாது' என்றற்கு அதனை இடையே விதந்தோதினார். இவ்விரண்டு திருமந்திரங்களானும் நடுவுநிற்றலின் பயனே கூறப்பட்டது.
பதிப்புக்களில் இதன்பின் காணப்படும் பாடல் இடைச் செருகல்.

தோன்றிய எல்லாந் துடைப்பன் அவன்அன்றி
ஏன்றுநின் றாரென்றும் ஈசன் இணையடி
மூன்றுநின் றார்முதல் வன்திரு நாமத்தை
நான்றுநின் றார்நடு வாகிநின் றாரே. **#322**
தோன்றிய பொருள்கள் அனைத்தையும் ஒடுக்கு பவன் சிவபெருமானே. அதனால் 'அயன், அரி, அரன்' என்னும் பிறர் மூவரும் என்றும் அவனது ஆணையை ஏற்று நிற்பவரே. ஆதலின், அம் மூவர்க்கும் முதல்வனாகிய சிவபெருமானது திருப்பெயராகிய திருவைந்தெழுத்து மந்திரத்தையே, 'மற்றுப் பற்றின்றிப்' (தி.7 ப.48 பா.1) பற்றி நிற்பவரே உண்மையாக நடுவு நிற்பவராவர்.

விளக்கவுரை

சிவபெருமானே முதற்கடவுள் என்பது உரை யளவையான் அன்றிப் பொருந்துமாற்றானும் துணியப்படும் என்றற்கு, 'தோன்றிய எல்லாம் துடைப்பன் அவன்' என்றார். 'எல்லா வற்றையும் ஒடுக்கியபின், எஞ்சிநிற்பவன் அவற்றை ஒடுக்கியவனே ஆதலாலும், அவனை ஒடுக்குவார் பிறர் இன்மையாலும், 'ஒடுக்கக் காலத்தில் வேறு சிலரும்

ஒடுங்காது நிற்பர்' எனின், அதனை, 'முற்ற ழிப்புக் காலம்' (சருவ சங்கார காலம்) என்றல் கூடாமையானும் ஒடுங்கிய உலகத்தை மீளத் தோற்றுவிப்பவன் ஒடுக்குபவனேயாதல் தெற்றென விளங்கும்; விளங்கவே, ஒடுக்கத்தைச் செய்பவனே உலகத்தைத் தோற்றி நிறுத்தி ஒடுக்கும் முதற்கடவுள் என்றற்கு ஓர் ஐயமில்லையாம்' என்பது கருத்து.

'வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாய் இலர்' -தி.3 ப.54 பா.3

என்ற திருப்பாசுரத்திற்கும் இதுவே கருத்து என்றார் சேக்கிழார். (தி.12 பெ. பு. திருஞான - 828; 829) எனவே, 'ஈமம்இடு சுடுகாட்டகத்தே - ஆகம் குளிர்ந்தன லாடும் எங்கள் அப்பன்' (அம்மை மூத்த திருப்பதிகம் 1, 3) என்றாற்போலும் திருமொழிகளில் சிவபெரு மானைச் சுடுகாட்டில் ஆடுவானாகக் கூறுதலின் உண்மையும், முற்றழிப்புக் காலத்தில் அவன் ஒருவனே நின்று, ஒடுங்கிய உலகத்தை மீளத் தோற்றுவிக்கு மாற்றை எண்ணுதலே யாதல் விளங்கும். இவ்வுண்மை உணரமாட்டாதார், 'கோயில் சுடுகாடு' (தி.8 திருச்சாழல், 3) என்பதற்கு, 'திருக்கோயில்கள் பலவும் பெரியாரை அடக்கம் செய்த சமாதிகள்' என்பதே பொருள் எனக் குழறிவழிவாரும், 'உருத்திரன் கோயில் மசானபூமி யாதலின், அதனுட் புகலாகாது' எனக் கூறி எரிவாய் நிரயத்திற்கு ஆளாவாரும் ஆவர் என்க. இங்ஙனம் பலவாற்றானும் உண்மை விளங்கி நிற்றல் பற்றியே, மெய்கண்டதேவர்,

'அந்தம் ஆதி என்மனார் புலவர்'
-சிவஞானபோதம், சூ - 1.

என்றும்,

'சங்காரமே முதல்' -சிவஞானபோதம் அதிகரணம் - 3.

என்றும் அறுதியிட்டுரைத்தார்.

செய்யுளாதலின், 'அவன்' எனச் சுட்டுப் பெயர் முன் வந்தது. 'அன்றி' என்பது, 'மற்று' என்னும் பொருட்டு. மூன்று நின்றார் - மூன்று என்னும் எண்பெற நின்றார். இதனை முன்னருங் கூட்டுக. 'தோன்றிய எல்லாம் துடைப்பன் ஈசன்; அன்றி மூன்று நின்றார், என்றும் அவன் இணையடி ஏன்று நின்றார்; அதனால், அம்மூன்று நின்றார்க்கும் முதல்வன் திருநாமத்தை நான்று நின்றாரே நடுவாகி நின்றார்' என இயைத்துரைக்க.

'பலரது வழக்குகளைக் காய்தல், உவத்தல் இன்றி நடுவு நின்று ஆராய்ந்து உண்மை கண்டு கூறுவார், இச்சமய வழக்கினையும் அவ்வாறு ஆராய்ந்து கண்டு கூறாதொழியின், அவர்க்கு நடுவு நிலைமை நிரம்பாது' என்பதாம்.

இதனால், உண்மை நடுவு நிலைமை இது என்பது கூறப் பட்டது.

3.27.கள்ளுண்ணாமை

கழுநீர்ப் பசுப்பெறிற் கயந்தொறும் தேரா
கழுநீர் விடாய்த்துத்தங் காயஞ் சுருக்கும்
முழுநீர்க் கள்ளுண்போர் முறைமை அகன்றோர்
செழுநீர்ச் சிவன்றன் சிவானந்தத் தேறலே. **#323**

பசுக்கள், அரிசி கழுவிய நீரைப் பெற்று உண்டு பழகி விட்டால், பின்பு குளத்தில் உள்ள தூயநீரை நாடிச் செல்லா; அக் கழு நீர்க்கே விடாய்த்துக்கொண்டு உடல் மெலியும். அத்தன்மைய வாய பசுக்கள் தம் இயல்பின் நீங்கினவாம். அதுபோல, கள்ளினைச் சுவையும், வலிமையும் நிறைந்த பருகுபொருளாக (பானமாக) நினைத்துக் கள்ளுண்பவர் மக்கள் இயல்பின் நீங்கினோராவர். மற்று, வளமையுடைய பருகு பொருள், சிவபெருமானது திருவடி இன்பமாகிய தேனே.

விளக்கவுரை

'ஆதலின், அதுவே மக்கள் பருகற்பாலது' என்பது குறிப்பெச்சம். 'ஞானிகள் கள்ளுண்டு களிப்பர்' என்னும் வழக்கிற்குப் பொருள் இதுவேயன்றிப் பிறிதன்று என்பது மேலே விளக்கப் பட்டது. கழுநீர், வினைத்தொகை. முழுமை - நிறைவு. 'முழுநீர், செழுநீர்' என்பவற்றில் நீர், நீர்த்தன்மையுடைய பொருளைக் குறித்தது. முதல் அடியின் உண்மைப் பாடம் வேறாதல் வேண்டும். 'கழுநீர் பெறிற்பின் கயந்தேரா தேரா' என்பதாதல் கூடும்.
இதனால், கள்ளுண்போர் மாக்களாதல் கூறப்பட்டது. மாக்களே, உண்ணப்படும் பொருளால் பின் விளைவதை அறியாது, கேடு பயக்கும் பொருளையும் உண்ணும் என்க.

சித்தம் உருக்கிச் சிவமாஞ் சமாதியில்
ஒத்த சிவானந்தத் தோவாத தேறலைச்
சுத்தமது வுண்ணச் சுவானந்தம் விட்டிடா
நித்தல் இருத்தல் கிடத்தல்கீழ்க் காலே. **#324**

சித்த விருத்தியைக் கெடுத்துச் சிவமாய் நிற்கின்ற, அதீத நிலையில் விளைகின்ற சிவானந்தமாகிய தேனே தூய மதுவாம். அதனை உண்டால், இயற்கை இன்பம் நீங்காது நிற்கும். அஃதல்லாத பிற மதுக்களை நாள்தோறும் உண்டு மகிழ்தலும், செயலற்றுக் கிடத்தலும் பிறபொருட் கலப்பாலாகிய செயற்கை விளைவேயாம்.

விளக்கவுரை

'சிவானந்தத்து' என்பதில் அத்து, அல்வழிக்கண் வந்த சாரியை. 'செயற்கை விளைவு மயக்கமே யன்றி, உண்மை யன்று' என்பது கருத்து. 'கீழ்க்காலன' என்பவற்றை, 'கீழ்க்கால்' என்றார். கீழ்க்காலன -

கீழிடத்தன; இழிந்தன. எனவே, அவற்றை உண்டல் நன்மக்கட்கு ஆகா என்றதாயிற்று. செயற்கையை, 'இழிந்தன' எனவே, 'இயற்கை உயர்ந்தது' என்பது பெறப்பட்டது.

இதனால், கள்ளுண்டல் நன்மக்கட்கு ஆகாமை கூறப்பட்டது.

காமமும் கள்ளுங் கலதிகட் கேயாகும்
மாமல முஞ்சம யத்துள் மயலுறும்
போமதி யாகும் புனிதன் இணையடி
ஓமய ஆனந்தத் தேறல் உணர்வுண்டே. **#325**

காமக் களிப்பும், கள்ளுக் களிப்பும் கீழ் மக்கட்கே உரியனவாம். அதனால், அவற்றைச் சிறப்பித்துச் சொல்கின்ற, அறியா மையும் மயக்க உணர்வும் பொருந்திய சமயத்தில் நிற்பவர்க்கு அறிவு அழிவதேயாகும். தூயோனாகிய சிவபெருமானது திருவடியி னின்றும் உண்டாகின்ற, மாசற்ற, நிறைந்த இன்பத் தேனில், அறிவு நிலைபெற்று நிற்கும்.

விளக்கவுரை

என்றது, 'காமம், கள் என்பவற்றிலும் சுத்த அதீத நிலையிலும் அறிவு நிகழாமை ஒன்றே யாயினும், காமத்திலும், கள்ளிலும் உண்டாகும் இன்பம் அறிவு அழிதலால் யாதும் அறியாது கிடக்கும் துன்பநிலையையே இன்பநிலையென மயங்கும் மயக்கமே. அதீத நிலையில் உண்டாகும் இன்பம் ஞேயப் பொருளையொழிந்த பிறவற்றை அறியாது அதனையே அறிந்து நிற்றலாகிய உண்மை இன்பமாம்' என்றவாறு.

மா மலம் - ஆணவம். 'மயலும்' என உம்மை விரித்து, 'மயலும் உறும் சமயத்துள் மதி போவதாகும்' என மாற்றிக் கொள்க. 'இணையடி ஆனந்தத் தேறல்' என இயையும். ஓ - ஓவுதல்; நீங்குதல். மயம் - நிறைவு. 'தேறலின்கண்' என உருபு விரிக்க. கள்ளினை விலக்குவார், ஒப்புமை பற்றிக் காமத்தையும் விலக்கினார்.

வாமத்தோர் தாமும் மதுவுண்டு மாள்பவர்
காமத்தோர் காமக்கள் ளுண்டே கலங்குவர்
ஓமத்தோர் உள்ளொளிக் குள்ளே உணர்வர்கள்
நாமத்தோர் அன்றே நணுகுவர் தாமே. **#326**

'சத்தியை வழிபடுகின்றோம்' என்று சொல்லிக் கொள்ளும் அவைதிகராகிய வாம மதத்தினரும், அக் கொள்கை இல்லாதே கள்ளுண்ணும் மடவோர் போலக் கள்ளுண்டு அறிவு அழிபவரேயன்றிச் சிறப்பு ஒன்றும் இலர். இனிக் காமத்தை மட்டும் விரும்புபவர் அறிவு அழியப்பெறாராயினும், மயக்கம் உடையவரே. (ஆகவே, கள், காமம் இரண்டையும் போற்றிக் கூறும் சமயங்களால் உய்தி கூடாது) அவ்விரண்டையும் வெறுத்தொதுக்கும் வைதிக சமயிகளே வழிமுறைக்

காலத்தில் அறிவினுள் அறிவாய் நிற்கின்ற முதற்பொருளினுள் ஒடுங்கி அதன் இன்பத்தை நுகர்வர். சிவநாமத்தை உய்யும் வழியாகப் பற்றும் சித்தாந்த சைவர் அவ்வின்பத்தை இடையீடின்றி அப்பொழுதே பெறுவர்.

விளக்கவுரை

தந்திர மார்க்கத்தார் காமம் முதலிய தீயொழுக்கங் களைப் போற்றிக் கொள்ளுதலை,

வாழவே வல்லை,வாமி; வலக்கைதா; என் உயிர்க்குத்
தோழன்நீ; உன்னை ஒப்பார் சொல்லிடின் இல்லை கண்டாய்;
கோழைமா னுடர்தீ தென்னும் கொலைகள வாதி கொண்டே
சூழும்வார் குழலார் மொய்ப்பச் சுடரெனத் தோன்றினாயே.
-சிவஞானசித்தி - பரபக்கம் - உலகாயதன் மதம் - *15*

என்னும் உலகாயதன் கூற்றாலும், அவர் ஒழுகுமாற்றாலும் அறிக. வாமம் முதலிய மதங்கள் தங்கள் நூல்களையும் 'ஆகமம்' என்று சொல்லிக்கொள்வதால், ஆகமங்கள், 'சுரௌதம், அசுரௌதம்' என இருவகைப்படும் எனப் பிரித்து, 'வேதநெறியோடு முரணாத ஆகமங்கள் சுரௌதம்' என்றும், அதற்கு முரணான ஆகமங்கள் 'அசுரௌதம்' என்றும் சொல்லப்பட்டு, அசுரௌதமாகிய ஆக மங்களே 'தந்திரம்' எனவும், அவற்றை உடைய சமயங்கள் 'தந்திர மார்க்கங்கள்' எனவும் விலக்கப்பட்டன. சிலவிடத்து, 'தந்திரம்' என்றும், சிலவிடத்து 'ஆகமம்' என்றும் கூறி அவற்றை இகழும் பகுதிகள் அசுரௌதமாகிய தந்திரங்களை இகழ்வனவேயாம். இவ் வேற்றுமை அறியாதார், சுரௌதமாகிய 'திவ்வியாகமங்கள்' எனப்படும் சைவாகமங்களும் அத்தகையன போலும் என மயங்கிக் கூறியொழிவர். தந்திர மார்க்கங்களும் சைவாகமத்தை ஒருவாற்றால் தழுவுதல் பற்றி ஒரோவிடத்து, 'சைவம்' எனக் கூறப்படுதலால், வேத சிவாகமங்களையன்றிப் பிறவற்றை முதல் நூலாகக் கொள்ளாத சிவநெறியை, 'வைதிக சைவம்' என அடைகொடுத்து வழங்குதலும் உண்டு. எனவே உண்மை வைதிகத்திற்கும், சைவத்திற்கும் கள் ளுண்டலோடு சிறிதும் இயைபில்லாமை அறிக. இதனால், 'சத்திக்கு உவப்பைத் தருவன கள்ளும் ஊனும்' என்று அவற்றை அவட்குப் படைத்துத் தாமும் உண்டு மகிழ்தல் வைதிகரும், சைவரும் ஆய உயர்ந்தோரல்லாத தாழ்ந்தோர்க்கேயாதல் உணர்க.

வாமத்தோர் - வாம மதத்தவர். இவர்கள் சத்தியே உலக முதல்வி என்று அவளை வணங்குவோர். இதனால், இவர்மதம், 'சாத்தேயம்' எனப்படும். 'அறிவழிதலின் இறந்தாரொடு ஒப்பர்' என்றற்கு, 'மாள்பவர்' என்றார். 'நஞ்சுண்பார் கள்ளுண்பவர்' *(குறள், 926)* என்பது திருவள்ளுவர் வாக்கு.

'ஓமத்தோர்' என்றது, 'வைதிகர்' என்றவாறு. பின்னர், 'அன்றே' என்றமையால், முன்னர், 'வழிமுறைக் காலத்தில்' என்பது பெறப்பட்டது. உணர்தல் நணுதல்கட்குச் செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது.

உள்ளுண்மை ஓரார் உணரார் பசுபாசம்
வள்ளன்மை நாதன் அருளினின் வாழ்வுறார்
தெள்ளுண்மை ஞானச் சிவயோகஞ் சேர்வுறார்
கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே. **#327**

கள்ளினை உண்டு களிக்கும் அவைதிகராகிய வாம மார்க்கத்தவர் வேதாகமங்களின் கருத்துக்களை உணரமாட்டா மையின், 'சுரௌதம்' எனப்படும் திவ்வியாகமங்களாகிய சிவாகமங் களில் சொல்லப்பட்ட 'பதி, பசு, பாசம்' என்னும் மூன்று பொருள்கள் உண்மையை உணர்தலும், அவ்வுணர்வால் அவற்றுள் மேலான வனாகிய பதியின் அருளைப் பெற விழைதலும், அவ்விழைவால் சரியை கிரியா யோகங்களாகிய இறப்பில் தவத்தில் நின்று அதன் பயனாகத் தெளிந்த உண்மை ஞானமாகிய சிவஞானத்தைப் பெறு தலும், அச்சிவஞானத் தெளிவினால் சிவனோடு ஏகமாகிய இறைபணி நின்று இன்புறுதலும் இலராவர்.

விளக்கவுரை

ஈற்றடியை முதலிற் கொண்டு, 'ஆதலின்' என்பது வருவித்து உரைக்க. சைவாகம ஞானபாதப் பொருள் அடைவைக் கூறி, அப் படிமுறையானே சைவ சமயிகள் பெரும்பயன் பெறு தலையும், தாந்திரிகர்க்கு (தந்திரமார்க்கத்தவர்க்கு) அது கூடாமையும் விளக்கு முகத்தால் அவர் விரும்பும் கள்ளுண்டலை விலக்கினார் என்க. உள்ளாயவற்றை 'உள்' என்றார்.

மயக்குஞ் சமய மலமன்னும் மூடர்
மயக்கும் மதுவுண்ணும் மாமூடர் தேறார்
மயக்குறு மாமாயை மாயையின் வீடும்
மயக்கில் தெளியின் மயக்குறும் அன்றே. **#328**

மயக்கத்தைத் தருகின்ற மயக்க நோய், மயக்கம் இல்லாதாரையும் மயங்கச் செய்யும் மருந்தால் நீங்கும் எனக் கூறுவார் கூற்றைத் தெளிந்து அம்மருந்தை உண்ணின் உண்டாவது பெரு மயக்கமேயன்றி வேறுண்டோ! இல்லை. அதுபோல, 'உலகப் பற்றாகிய மயக்கம், அறிவை மயக்குவதாகிய கள்ளினால் நீங்கும் எனக் கூறி மயக்குகின்ற அறியாமையையுடைய சமயத்தில் உறைத்து நிற்கும் அறிவிலிகள், அவ்வறியாமையால் அறிவை அழிக்கும் கள்ளை உண்டு மேலும் பேரறியாமையில் அழுந்துவர்; அவரைத் தெளிவித்தல் இயலாது.

விளக்கவுரை

பின்னிரண்டு அடிகளை முதலிற் கொண்டு உரைக்க. 'மலச் சமயம்' என்பது பின்முன்னாக நின்றது, 'தேறார்' என்பது வேறு முடிபு. 'மாமாயை' என்பதும், 'மாயை' என்பதும் மாயைபோல மயக்கும் நோயையும், மருந்தையும் குறித்தன. இன், ஏதுப்பொருளில் வந்த ஐந்தாம் உருபு. 'வீடும்' என்பதன் பின், 'என்னும்' என்பது வருவிக்க. மயக்கு - மயக்க உரை. தெளியின் - தெளிவு கொண்டால். அன்றே, தேற்றம். 'மாயை மாயையால் நீங்கும்' என்றல், 'நோய் நோயால் நீங்கும்' என்றல்போலும் என்பது கருத்து.

களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. -குறள், *929*

என்றவாறு, கள்ளுண்பார்க்கே உண்மை தெளிவித்தல் கூடாதபொழுது 'அது சமய ஒழுக்கம்' என்பாரைத் தெளிவித்தல் எவ்வாறு கூடும் என்பார், 'தேறார்' என்று அறுதியிட்டுக் கூறினார்.

இவை நான்கு திருமந்திரங்களானும், 'கள்ளுண்டல் சமய ஒழுக்கமே' என்பாரது கூற்று அடாது என்பது கூறப்பட்டது.

மயங்குந் தியங்குங்கள் வாய்மை அழிக்கும்
இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி
முயங்கும் நடங்கொண்ட ஞானத்து முந்தார்
இயங்கும் இடையறா ஆனந்தம் எய்துமே. **#329**

தடுமாற்றத்திற்கும், அறியாமைக்கும் ஏதுவாகிய கள், வாய்மை முதலிய நல்லொழுக்கங்களைக் கெடுக்கும். அதனால் அதை உண்பவர் நாணம் இன்றித் தெருவில் திரிகின்ற பொதுமகளிர் இன்பத்தையே பெற்று, தாம் தம் இல்லாளொடு முயங்கிப் பெறும் இன்பத்தைத் தரும் அறிவைத் தலைப்படமாட்டார். அவர்க்கு என்றும் நீங்காத, இடையீடில்லாத இன்பம் உண்டாகுமோ!

விளக்கவுரை

வாய்மை, உபலக்கணம்.

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று. -குறள், *913*

என்பதனால், 'பொருள் காரணமாகப் பொய்யாக முயங்கும் பொது மகளிரது இன்பம், பொருள் இல்வழி இழக்கப்படுதலே யன்றி உள்ள பொழுதும் உண்மையாவதன்று' என்றற்கு, 'இடையறா ஆனந்தம் எய்துமே' என்றார். 'வெண்ணெயைப் பெற்றும் நெய்க்கு அழுவான் போல, கற்புடை இல்லாளைப் பெற்றும் அவளால் இன்பத்தைப் பெறாது பொருட்பெண்டிரை நாடித் திரியும் பேதை மகன், கிடைத் தற்கரிய சிவானந்தத்தைப் பெயர்தானும் கேட்டறிவனோ' என்பதும், 'இடையறா ஆனந்தம்' என்ற சொல்லாற்றலால் பெறுதும். ஏகாரம்,

எதிர்மறைப் பொருள் தந்தது.
இதனால், கள்ளுண்டல் கழிகாமத்தையும், பொய் களவு முதலிய பலகுற்றங்களையும் தருதல் கூறப்பட்டது.
இதன்பின் உள்ள பாட்டுப் பின்னர் வருவது.

சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்
சத்தி அழிந்தது தம்மை மறத்தலால்
சத்தி சிவஞானம் தன்னில் தலைப்பட்டுச்
சத்திய ஞானஆ னந்தத்திற் சார்தலே. **#330**

சத்தியின் அருளைப் பெறவேண்டிச் சத்தி மதத்தார் (வாம மதத்தவர்கள்) கள்ளுண்பார்கள். அதன் பயனாக அவர்கள் பெறுவது இயல்பாகத் தமக்கு அமைந்த சத்தியையும் (வலிமை யையும்) இழத்தலேயாம். (ஆகவே, அவர்தம் கொள்கை அறியாமை வழிப்பட்டது என்பது தெளிவு. அஃது எவ்வாறு எனில், கள்ளுண்ட பின் அவர் நினைவிழந்து வீழ்ந்து செயலற்றுக் கிடத்தலால்) உண்மையில் 'சத்தி' என்பது சிவபெருமானது அறிவு வடிவாகிய ஆற்றலே; அச் சத்தியால் பெறும் பயன், அதன்வழி நின்று, நிலைபேறும், தெளிவும் உடைய சிவானந்தத்தைப் பெறுதலே.

விளக்கவுரை

'சத்தி' நான்கில் முதலது ஆகுபெயர். 'அச் சமயத்தார்' எனச் சுட்டு வருவிக்க. தன்னில் - அந்த ஞானத்தில். 'சார்தலே பயன்' என ஒருசொல் வருவிக்க.
இதனால், 'சாத்தேயம்' எனப்படும் மதம் போலியாதல் கூறும் முகத்தால், அவர்தம் ஒழுக்கமாகிய கள்ளுண்டல் கடியப்படுவதாதல் கூறப்பட்டது.

சத்தன் அருள்தரிற் சத்தி அருளுண்டாம்
சத்தி அருள்தரிற் சத்தன் அருளுண்டாம்
சத்தி சிவமாம் இரண்டுந்தன் னுள்வைக்கச்
சத்தியம் எண்சித்தித் தன்மையு மாமே. **#331**

சத்திமானும், (சத்தியை உடையவனும்) சத்தியும் தன்மையால் இரண்டாதலல்லது, பொருளால் இரண்டாதல் யாண்டும் இல்லை. (இதனைத் தெரிவிக்கவே, 'சிவன்' என்னாது சத்தன் என்றார்) ஆகவே, சிவமும், சத்தியும் தம்முள் வேறல்லர் என்பது வெளிப்படை. அதனால், முதற்பொருளை அடைய வேண்டுவார், 'சத்தி, சிவம்' ஆகிய இரண்டனையும் ஒப்பக்கொள்ளல் வேண்டு மன்றி, அவற்றுள் ஒன்றனையே புகழ்ந்து கொள்ளுதலும், ஏனையதை இகழ்ந்து நீக்கலும் கூடாவாம். மேற்கூறியவாறு அவ்விரண்டனையும் ஒப்பக்கொண்ட வழியே எப்பயனும் கிடைத்தல் உறுதி.

விளக்கவுரை

இரண்டிடத்தும் 'தரின்' என்பவற்றில் பிரிநிலை ஏகாரங்கள் தொகுத்தலாயின. 'சிவன், சத்தி என்னும் இருவருள் ஒருவர் அருள் இன்றி ஏனையோரது அருள் உண்டாக மாட்டாது' என்பது முதல் இரண்டடிகளில் கூறப்பட்டது. 'சத்தி சிவம்' செவ் வெண். 'தன்' என்றது, வழிபடுவோனை. சத்தியம் - உண்மை; இது தனிமுடிபு; இதற்கு, 'இது' என்னும் தோன்றா எழுவாய் வருவித்து, இறுதியில் வைத்து உரைக்க. 'எண்சித்தித் தன்மையும்' என்ற உம்மையால், 'பிறவும்' என உரைக்க. எண்சித்தி, அணிமா முதலியன.
இதனால், வாமமதம் போலியாதல் தெளிவிக்கப்பட்டது.

தத்துவம் நீக்கி மருள்நீக்கித் தானாக்கிப்
பொய்த்தவம் நீக்கிமெய்ப் போகத்துட் போக்கியே
மெய்த்த சுகமுண்டு விட்டுப் பரானந்தச்
சித்திய தாக்குஞ் சிவானந்தத் தேறலே. **#332**

மேல் பலவிடத்தும் சொல்லிவந்த சிவானந்த மாகிய தேன், உயிர், நிலமுதல் நாதம் ஈறாகிய தத்துவங்களே தானாய்த் தன்னை அறியாது நிற்கும் நிலையே முதற்கண் நீக்கி, அதன்பின்னர், தன்னைச் சடமாகிய தத்துவங்களின் வேறாகக் கண்ட உயிர் 'யான் சித்தாகிய பிரமமே' என மயங்கும் மயக்கத்தையும் போக்கிச் சிவமாகச் செய்து, காமியத்தவங்களைக் கைவிடப்பண்ணி, இன்பத்தைத் துய்ப் பதாகிய அவ்வுயிர் இன்பத்தைக் கொடுப்பதாகிய சிவத்தின்பால் சென்று அடங்கி இன்புற வைத்து உடம்பு உள்ள துணையும் நிற்பதாகிய இவ்வுலகத்தின் இன்ப துன்ப நுகர்ச்சியை உடல் ஊழாக நுகர்ந்து கழித்து, உடம்பு நீங்கிய பின்னர்ப் பேரா இன்பப் பெருவாழ்வாகிய பரமுத்தியைத் தலைப்படச் செய்யும்.

விளக்கவுரை

'ஆதலின், ஏனைநெறிகளை விடுத்து அத்தேனைத் தரும் நெறியாகிய சிவநெறியைப் பற்றிப் பயனடைதல் சமயிகள் பலரும் செய்யத்தக்கது' என்பது குறிப்பெச்சம். வாம மதத்தின் இழிபுணர்த்துவார், ஏனை மதங்களின் சிறப்பின்மையும் உடன் கூறினார். போகம் தருவதனை, 'போகம்' என்றார். மெய்த்த - மெய்யின் கண்ணதான.
இதனால், சிவநெறியது சிறப்புக் கூறும் முகத்தால் பிறநெறிகளது தாழ்வு கூறிக் கள்ளுண்ணும் வாமம் முதலிய மதங்கள் கடியப்பட்டன.

யோகிகள் கால்கட்டி ஒண்மதி ஆனந்தப்
போத அமுதைப் பொசித்தவர் எண்சித்தி
மோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமுற்
றாகும் மதத்தால் அறிவழிந் தாரே. **#333**

உண்மை யோகிகள் ஆவார், பிராண வாயுவைத் தடுத்து அதனால் எழும்

மூலக் கனலால் புருவ நடுவில் உள்ள சந்திர மண்டலத்தில் ஊறும், அறிவை வளர்க்கின்ற, இனிய அமுதத்தை உண்பவரே. (அவ்வமுதம் சிவானந்தத் தேறலில் இச்சையுண்டாக்கும்) அந்நிலையைப் பெறாத சிலர் அணிமா முதலிய சித்திகளில் இச்சையுடையராய்க் கள்ளை உண்டு மயக்கம் உற்று, அம்மயக்கத்தால் எழும் உன்மத்தம் உடையராய் அறிவழிகின்றனர்.

விளக்கவுரை

எனவே, 'வாம மதத்தவரேயன்றி, யோகம் முற்றப் பெறாது இடைநிற்கும் சிலரும் வாம மதத்தவரோடு ஒத்து ஒழுகினும், அவர் ஒழுக்கம் கொள்ளத்தக்கது அன்று' என்றதாயிற்று.
இதனால், 'கள்ளுண்பார் சிலர் சித்தியுடையராயும் இருத் தலைக் காண்கின்றோம் ஆகையால், அவர் ஒழுக்கம் இகழற்பாலது அன்று' என்பாரை நோக்கி, அவரது நிலையும் உயர்வுடையது ஆகாமை காட்டி, 'எவ்வாற்றானும் கள்ளுண்டல் ஒழுக்கம் ஆகாது' என்பது வலியுறுத்தப்பட்டது.
பதிப்புக்களில் இதன்பின் உள்ள பாட்டுப் பின்னர் வருவது.

முதல் தந்திரம் மூலமும் உரையும் முற்றிற்று.

இரண்டாம் தந்திரம்

*4.1.*அகத்தியம்

நடுவுநில் லாதிவ் வுலகஞ் சரிந்து
கெடுகின்ற தெம்பெரு மானென்ன ஈசன்
நடுவுள அங்கி அகத்திய நீபோய்
முடுகிய வையத்து முன்னிரென் றானே. *#334*

ஒருபொழுது நிலம் சமனாய் நின்று உயிர்களைத் தாங்காது, ஒருபாற் சாய்ந்து கீழ்மேலாகப் புரண்டு அழியும் நிலை உண்டாக, அதனை அறிந்த தேவர்கள் அச்சுற்றுச் சிவபெருமானிடம் விண்ணப்பித்து முறையிடுதலும், அப்பெருமான் அகத்திய முனிவரை அழைத்து, 'இருதய வெளியுள் பரஞ்சுடரை எப்பொழுதும் இருத்தி நிற்றலால் அகத்தியன் (அகத் தீயன் - உள்ளொளியைப் பெற்றவன்) எனப்பெயர் பெற்ற முனிவனே, உலகத்தை நிலைநிறுத்த வல்லவன் நீ ஒருவனுமே ஆவை; ஆதலால், விரையக் கெடும் நிலை எய்திய நிலத்தில், மேல் எழுந்த இடத்தில் நீ சென்று அமர்ந்து சமன் செய்' என்று அருளிச் செய்தான்; அதனால், இவ்வுலகம் நிலை பெற்றது.

விளக்கவுரை

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்
தாங்காது மன்னோ பொறை. -குறள், *990*

என்றவாறு உலகம் சான்றாண்மை குன்றி, அழிவெய்தும் நிலை உண்டாகின்றபொழுது, தனது திருவருள் காரணமாகத் தக்காரை நிலவுலகில் விடுத்து அதனைச் செந்நெறி நிற்கச் செய்பவன் சிவபெருமானே என்பது இவ்வரலாற்றால் அறியத்தக்க உண்மை என்பது நாயனாரது திருவுள்ளக்கிடை என்பது இதன்கண் இருபொருள் படவைத்த சொற்குறிப்புக்களால் அறியப்படும்.

எனவே, ஒருபொழுது இவ்வுலகம் நடுவு நிலைமை பிறழ்ந்து, மகவெனப் பல்லுயிர் அனைத்தையும் ஒக்கப் பார்க்கும் நிலை யின்றித் (தி.*11* திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, *7)* தமக்கும், தம்மைச் சார்ந்தவர்க்கும் உளவாகும் நன்மை ஒன்றே பற்றிப் பிறர்க்குக் கேடு சூழும் தன்மை உடையதாய்த் தீநெறிக் கண் சென்றதாக, அதனைப் பொறாது வேண்டிய நல்லோர் சிலரது தவம் முன்னிலையாகச் சிவபெருமான், உயர்ந்த சிவஞானத்தால் அந் நடுவுநிலை உடைய பெரியார் ஒருவரை விடுத்துச் செந்நெறி நிறுத் தினான் என திருமந்திரம் பிறிதொரு பொருளையே சிறப்பாகத் தோற்றுவித்தல் அறிந்து கொள்க. இதனானே, 'உலகில் செந்நெறி பிறழுங்காலத்து அதனை

நிலைநிறுத்துதற்குக் கடவுளே வந்து பிறக் கின்றான் என்றல் சிவ நெறிக்கு ஒவ்வாது; கடவுள் தனது திருவருள் வழி நிற்கும் பெரியோரை விடுத்தே செந்நெறி நிறுத்துகின்றான் என்பதே சிவநெறிக்கு ஒப்பது' என்பதும் கூறியவாறாயிற்று.

'எம்பெருமான்' என்றது விளி. என்ன - என்று சொல்லி முறையிட. இதற்கு, 'தேவர்' என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க. 'நடுவுள அங்கி அகத்திய' என்றதற்கு, 'இருதயத்தின்கண் உள்ள ஒளியை உடைய அகத்திய' எனவும், 'நடுவு நிலைமை உடைய, ஞானத்தை உடைய அகத்திய' எனவும் இரு பொருள் கொள்க. இரண்டாவது பொருட்கு, 'நடுவுள' என்பது, 'அகத்திய' என்பத னோடு இயையும். உடலின் நடுவிடத்து இருக்கும் இருதயத்தை 'நடு' என்றது ஆகுபெயர். முன் - மேல்நிலம்; முதன்மை இடம்.

சிவபெருமான், மலைமகளை மலையரையனிடம் சென்று மணம் புரிந்த ஞான்று தேவர், முனிவர், கணங்கள் முதலிய பலரும் ஒருங்கு கூடினமையால் நிலம் தென்பால் எழுந்து, வடபால் வீழ்ந்து புரள்வதாகலும், தேவரது வேண்டுகோளுக்கு இரங்கிய சிவபெருமான் அகத்திய முனிவரைத் தென்பால் பொதிய மலையிற் சென்று இருக்கச் செய்து, நிலம் முன்போலச் சமனாகும்படி நிறுத்திய வரலாற்றின் விரிவைக் கந்த புராணத்துட் கண்டு கொள்க. 'தேவர் முதலிய பலர்க்கு முனிவரொருவர் நிகர்ப்ப இருந்தார்' என்பதனால், சிவனடியாரது பெருமை தோற்றுவித்தவாறாயிற்று. இவ்வரலாற்றுள் நிலம் நிலை குலைந்தமைக்குரிய காரணத்தை நாயனார் எடுத்தோதாது, வரலாறு பற்றியே உணர வைத்தார் என்க.

புராண வரலாறுகள் பலவும், உண்மை நிகழ்ச்சியை மருட்கைச் சுவைபடப் பெரிதும் புனைந்துரைப்பனவும், உண்மைக் கருத்துக்களை உருவகமாக்கி உரைப்பனவும் என இருதிறப்படும். காலப் பழமையால் அவ் இருவேறு திறத்துள் 'இஃது இத்திறத்தது' எனப் பகுத்துணர்த்தல் அரிது. ஆயினும் அவ் வரலாறுகளைப் புராணங்கள் பலவிடத்தும், பலகாலத்தும் வலியுறுத்திவருதல், அவற்றின் உண்மை மக்கள் உள்ளத்தில் மறவாது நிற்றற் பொருட்டே என்பது நாயனாரது திருவுள்ளம் என்பதனை இத் தந்திரம் பற்றி உணர்ந்துகொள்க. இத் தந்திரத்துள் குறிக்கப்படும் வரலாறுகளும், இவை போல்வனவுமான தொன்மையான வரலாறுகள் சிவபெரு மானையன்றிப் பிற கடவுளருக்கும் அவர்தம் அடியவர்க்கும் சொல்லப் படாமை கருதற்பாலது என்பது நாயனாரது கருத்து என்க.

இதனால் அகத்திய முனிவர் பொதிகை சென்ற வரலாற்றால் அவரது பெருமை கூறப்பட்டமை வெளிப்படை.

அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்
அங்கி உதயஞ்செய் மேல்பா லவனொடு
மங்கி உதய வடபால் தவமுனி
எங்கும் வளங்கொள் இலங்கொளி தானே. *#335*

'புறத்தும் அகத்தும் சுடர் விட்டுளன் எங்கள் சோதி' *(தி.3 ப.54 பா.5)* என்றபடி, புறத்தும், அகத்தும் தீயை உண்டாக்கி வளர்க்கின்ற, மேற்றிசைக்கண் ஞானாக்கினியாய் விளங்கிய அகத்திய முனிவர் தென்றிசையிலும், தவம் உடையவரே காணத்தக்காராக அரிதில் விளங்குகின்ற தவக் கோலத்தை உடைய முனிவனாகிய சிவபெருமான் வடதிசையிலும் வீற்றிருந்து உலகமுழுவதையும் விளக்குகின்ற ஒளியாய்த் திகழ்கின்றார்கள்.

விளக்கவுரை

'அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியனாகிய, மேல்பால் அங்கி உதயம் செய் (தென்பால்) அவனொடு' எனக் கூட்டுக. 'உதயத்தை வளர்க்கும்' என இரண்டாவதும், 'அங்கிபோல உதயம் செய்' என உவம உருபும் விரிக்க. மேல்பால் என்றது, சையமலைப் பக்கத்தை. அகத்தியர் முதற்கண் இங்குத் தங்கியிருந்தமையைக் கந்த புராணம் அகத்தியப் படலத்தால் அறிக. மேற்குத் திசை, 'குட சை' எனப்படுதலால், அகத்தியர் 'குடமுனி' எனப்பட்டார். 'குடமுனி' என்பதைப் புராணங்கள் 'கும்பமுனி' எனப் புனைந்துரைத்தன. 'மங்கிய' என்பது ஈறு குறைந்தது. மங்கிய உதயம் - அரிதில் காணப்படுதல். 'மங்கி உதயம் செய்' என்பது பாடம் அன்று.

'வடபால்' என்றதனால், 'தென்பால்' என்பது பெறப் பட்டது. 'வடக்கில் கயிலாய மலையில் சிவபெருமானும், தெற்கில் பொதிய மலையில் அகத்திய முனிவரும் வீற்றிருத்தலாலே இவ்வுலகம் வளப்பமும், ஞானமும் பெற்றுத் திகழ்கின்றது' என்பதாம். இது மேற்கூறிய வரலாற்றைப் பிறிதொரு வகையால் தொடர்புபடுத்து விளக்கியவாறு. இதனால், அகத்திய முனிவரது பெருமை கூறும் முகத்தால் சிவபெருமானது மெய்யடியார், உண்மையாகவே சிவனோடு ஒப்பவராதல் கூறப்பட்டது.

4.2.பதிவலியில் வீரட்டம் எட்டு

கருத்துறை அந்தகன் றன்போல் அசுரன்
வரத்தின் உலகத் துயிர்களை எல்லாம்
வருத்தஞ்செய் தானென்று வானவர் வேண்டக்
குருத்துயர் சூலங்கைக் கொண்டுகொன் றானே. *#336*

அக இருளாகிய ஆணவமலத்தை ஒத்து, 'அந்தகன்' எனப் பெயர் பெற்ற

அசுரன் ஒருவன் தான் பெற்ற வரத்தினால் உலகத்து உயிர்களை எல்லாம் துன்புறுத்த, அது பற்றி வருந்தி முறையிட்ட தேவர்கள் பொருட்டுச் சிவபெருமான் சூலத்தின் நுனியில் அவனை ஏற்றித் துன்புறுத்தி அழித்தார்.

விளக்கவுரை

இவ்வீரச் செயலைக் குறிப்பது 'திருக்கோவலூர் வீரட்டம்' என்னும் தலமாம்.

ஆணவமலம் அறிவை அழித்தல் பற்றி அதற்கு, 'மிருத்தியு' என்ற ஒரு பெயர் உண்டு. 'அந்தகன்' என்பதற்கு 'இறுதியைச் செய்பவன்' என்பது பொருள். அதனால் இவ்விரு பெயர்களும் ஒரு பொருளவாதல் பற்றி, 'கருத்துறை அந்தகன்றன்போல் அசுரன்' என்றார். கூற்றுவனுக்கு 'அந்தகன்' என்ற பெயர் கூறப்படுதலும் இப் பொருள் பற்றியேயாம். அதனால், 'மிருத்தியுவைக் கடத்தல்' என்பதற்கு, 'ஆணவ மலத்தின் நீங்குதல்' என்பதே உண்மைப் பொருள் என்பர். உபநிடதங்கள் 'இருளைக் கடந்து மேற் போகின் றான்' என்றலும் ஆணவ மலத்தின் நீங்கி இறைவனை அடை தலையே யாம். எனவே, சிவபெருமான் அந்தகாசுரனை மூவிலை வேலால் அழித்த வரலாறு, 'அவன் ஆணவ மலத்தை இச்சா ஞானக் கிரியை வடி வாய்த் தொழிற்படும் தனது சத்தியைக் கொண்டு அழிப்பவனாவன் என்னும் உண்மையை விளக்கும்' என்பதும், 'அப்பயன் கருதி அவனை வழிபடுதலே சிறந்தது' என்பதும் நாயனாரது திருவுள்ளக் கிடையாதல் அறிக. குருத்து - நுனி. 'குருத்தினால்' என உருபு விரிக்க. 'உயர் சூலம் கைக்கொண்டு குருத் தினாற் கொன்றான்' எனக் கூட்டுக. இச் செயல் வைரவக் கடவுளைக் கொண்டு செய்வித்ததேயாயினும், 'அரசன் ஆலயம் எடுத்தான்' என்பது போல, ஏவுதற் கருத்தாவாய் நின்று செய்வித்தமை பற்றிச் சிவபெருமான் தானே செய்ததாக வைத்து அருளிச் செய்தார். 'அந்தகனை அயிற் சூலத் தழுத்திக் கொண்டார்' *(தி.6 ப.96 பா.5)* என்பது திருநாவுக்கரசர் திருமொழி.

'இரணியன், (இரணிய கசிபு) இரணியாட்சன்' என்னும் இரு வருள் இளையவனாகிய இரணியாட்சன் மகன் அந்தகாசுரன். இவன் சிவபெருமானை வழிபட்டுப் பெற்ற வரத்தினால் வலிமை மிக்க வனாய்த் திருமால் முதலிய தேவரையெல்லாம் துன்புறுத்த, அவர்கள் அவனுக்கு ஆற்றாது மகளிர் உருவங்கொண்டு ஓடிக் கயிலையில் அம்பிகையின் தோழியர் கூட்டத்துள் மறைந்திருந்தனர். அதை அறிந்த அந்தகாசுரன் அங்கும் சென்று போர் செய்ய நினைத்த பொழுது, தேவர்கள் முறையீட்டிற்கு இரங்கிச் சிவபெருமான் வைரவக் கடவுளை ஏவ, அவர் தமது சூலத்தலையில் அவனை ஏற்றிப் பலநாள் துன்புறச்

செய்து பின் முத்தி பெற அருளிய வரலாற்றின் விரிவைக் காஞ்சிப் புராணம் அந்தகேசுரப் படலத்தில் காண்க. 'சிவதீக்கை பெற்றோர் குற்றம் செய்யின், அவர் கூற்றுவனால் தண்டிக்கப்படார்; இவ்வாறு வைரவக் கடவுள் சூலத்தில் ஏற்றித் தண்டிக்கப்படுவர்' என்பது சிவாகம நூற் கருத்து என்பது இங்கு உணர்ந்து கொள்க.

இதனால், சிவபெருமான் அந்தகாசுரனை அழித்த வரலாறும், அதன் உண்மையும் கூறப்பட்டன.

கொலையிற் பிழைத்த பிரசா பதியைத்
தலையைத் தடிந்திட்டுத் தான்அங்கி யிட்டு
நிலையுல குக்கிவன் வேண்டுமென் றெண்ணித்
தலையை யரிந்திட்டுச் சந்திசெய் தானே. *#337*

தக்கன் சிவபெருமானை இகழ்ந்து செய்த வேள்வியை அப்பெருமானது அருளாணையின்வழி வீரபத்திரக் கடவுள் சென்று அழித்தபொழுது, தக்கனது இகழ்ச்சியை மறாது உடன் பட்டிருந்த தேவர் பலரையும் பலவாறு ஒறுத்தலோடு ஒழித்து, அவ் இகழ்ச்சியைச் செய்தவனாகிய தக்கனது தலையை வெட்டித் தீக்கு இரையாக்கி, 'சிவனை இகழ்ந்தவர் பெறும் இழிநிலைக்கு இவன் தக்க சான்றாகற்பாலனாகலின், அதன் பொருட்டு இவன் உலகிற்கு இன்றியமையாத ஒருவன்' எனக் கருதி அவனை அழித்தொழியாது ஆட்டுத் தலையைப் பொருத்தி உயிரோடு இருக்கச் செய்தார்.

விளக்கவுரை

இவ்வீரச்செயலைக் குறிப்பது திருப்பறியலூர் வீரட்டம்.
கொலையில் - வேள்வியை அழித்தபொழுது. பிழைத்த - பிழை செய்த. பிரசாபதி - பிரமன்; இப்பெயர் அவன் மகனாகிய தக்கனுக்கும் வழங்கும். அதனால், அவனை, 'தட்சப் பிரசாபதி' என்பர். பிரசாபதி, இங்கு, தட்சப் பிரசாபதியே. 'தான்' என்றது வீரபத்திரக் கடவுளை. நிலை - இழிநிலை; இதில் நான்கனுருபு தொகுத்தல். 'தலையை அரிந்திட்டு' என்பதில், 'ஆட்டுத் தலையை' என்பது ஆற்றலாற் கொள்ளக்கிடந்தது. சந்தி செய்தல் - பொருத்துதல். இவ்வரலாறு கந்தபுராணத்துள் விரித்துக் கூறப்படுதல் காண்க. இவ்வரலாறும் சிவபெருமான் ஏவுதற் கருத்தாவாய் நின்று செய்ததேயாதல் உணர்க.

இதனால் தக்கன் வேள்வியை அழித்த வரலாறும், சிவ நிந்தை உய்தியில் குற்றமாதலாகிய உண்மையும் கூறப்பட்டன.

எங்கும் பரந்தும் இருநிலந் தாங்கியும்
தங்கும் படித்தவன் தாளுணர் தேவர்கள்
பொங்கும் சினத்துள் அயன்தலை முன்னற
அங்கச் சுதனை உதிரங்கொண் டானே. *#338*

ஆகாயத்தினும் மேலாய்ப் பரந்து எல்லாப் பொருட் கும் இடங்கொடுத்தும், பூமியினும் கீழாய் நின்று அனைத்தையும் தாங்கியும் நிற்கும் தன்மைத்தாகிய சிவபெருமானது திருவடியின் பெருமையை மறவாது உணர்ந்து அடங்கி ஒழுகற் பாலராய தேவர்கள், தம் அதிகாரச் செருக்கால் ஓரோவழி அதனை மறந்து மாறுபடுகின்ற காலத்து அவர்தம் செருக்கைச் சிவபெருமான் அழித்து அவரைத் தெருட்டுதற்கு அறிகுறியாகப் பிரமன் செருக்குற்ற பொழுது அவன் தலையை, வைரவக் கடவுளை விடுத்து அரிந்து, அத்தலை ஓட்டில் தேவர் பலரது உதிரத்தையும் பிச்சையாக ஏற்பித்து, முடிவில் திரு மாலது உதிரத்தையும் கொள்வித்துச் செருக்கொழித் தருளினான்.

விளக்கவுரை

இவ்வீரச் செயலைக் குறிப்பது திருக்கண்டியூர் வீரட்டம்.
ஒருமுறை பிரமனும் மாலும் மகாமேரு மலையின் சிகரம் ஒன்றில் சேர்ந்திருந்தபொழுது தேவர், முனிவர் முதலிய பலரும் அங்கு வந்து அவரை வணங்கி, 'நீவிர் எங்களைப் படைத்துக்காக்கும் தலைவராதலின், அனைத்துலகிற்கும் முதல்வனாய், உயிர்க்குயிராய் நிற்கும் முதற்கடவுள் யாவன் என்னும் ஐயத்தினையும் நீக்கி உண்மையை உணர்த்தல் வேண்டும்' என வேண்டினர். அதுபொழுது பிரமனும், மாயோனும் தம் அதிகாரச் செருக்கால் மயங்கித் தாங்களே முதற்கடவுளாகத் தனித்தனிக் கூறி வாதிட்டனர். வேதங்களும், மந்திரங்களும் உருவாய் வெளிப்பட்டு, 'நும்மில் ஒருவரும் முதல்வரல்லீர்; சிவபெருமானே அனைத்துயிர்க்கும் முதல்வன்' எனக் கூறவும் தெளிவு பெறாது வாதிட்டனர். அதனால், சிவபெருமான் அவர்கள் முன்பு ஒரு பேரொளியாய்த் தோன்றி, அதினின்றும் உமையொருபாகனாய் வெளிப்பட, திருமால் தெளிந்து அச்சுற்று, 'எம் தந்தையே, பிழைபொறுத்தருள்க' என வணங்கினார். ஆயினும், பிரமன் செருக்கு நீங்காதவனாய், அன்று ஐந்து தலைகளோடு இருந்த அவன், தனது உச்சித் தலை வாயினால், 'என் மகனே, வருக' என்று அழைத்து இகழ்ந்தான். அதனால், சிவபெருமான் வைரவக் கடவுளை உண்டாக்கி 'நம்மை இகழ்ந்து பேசிய இப் பிரமனது நடுத்தலையைக் கிள்ளிக்கொண்டு, இப்பிரமனே யன்றிச் செருக்கால் மயங்கி நம்மை இகழ்ந்து நிற்போர் யாவராயினும் அவர்தம் உதிரத்தைப் பிச்சையாகப் பிரம கபாலத்தில் ஏற்று, அவரது செருக்கை நீக்கித் தெளிவுபெறச் செய்க' என்று அருளிச் செய்து மறைந்தார். திருமாலும் தம் உலகை அடைந்தார். வைரவக் கடவுள் அவ்வாறே தமது நகத்தால் பிரமனது உச்சித் தலையைக் கிள்ளி எடுத்த உடன் அவனது உதிரம் உலகை அழிக்கும் வெள்ளம்போல் பெருக, அவன் நினைவிழந்து வீழ்ந்தான்.

பின்பு வைரவக் கடவுள், தமது நெற்றிக் கண்ணால் உதிர வெள்ளத்தை வற்றச் செய்து, பிரமனையும் உயிர்ப்பிக்க, அவன் நல்லறிவு பெற்று வணங்கிப் பிழைபொறுக்க வேண்டினான். அப்பால் வைரவக் கடவுள் அவனை மன்னித்து, அவனை என்றும் நான்முகனாகவே இருக்கச் செய்து, தாம் ஏந்திய பிரம கபாலத்துடன் தேவர், முனிவர் முதலான வர்களில் செருக்குக் கொண்டவர்பால் சென்று, 'எனது கபாலம் நிறைய உங்கள் உதிரத்தைத் தாருங்கள்' என்று கேட்க, அவர்கள் அனைவரும் அச்சத்தால், ஏற்ற பெற்றியில் தம் தம் உடம்பினின்றும் இரத்தத்தைப் பிரம கபாலத்தில் சொரிந்து சோர்வுறலாயினர். பின்பு வைரவக் கடவுள் அவர்களுக்கும் உயிர்ப்பிச்சை தந்து தெளிவை உண்டாக்கி, வைகுந்தம் சென்று, அங்குத் தம்மைத் தடுத்த சேனா முதலியாகிய விடுவச் சேனனைச் சூலத்தின்மேல் கோத்தெடுத்துக் கொண்டு செல்லத் திருமால் இதனை அறிந்து எதிர்வந்து வணங்கி, 'எந்தையே நீ வேண்டுவது யாது' என, வைரவக் கடவுள், 'உன் கபாலத்தின் வழி யாக எனது பிரம கபாலம் நிறைய உதிரம் தரல் வேண்டும்' என்றார். திருமால் தாமே தமது நகத்தால் தம் நெற்றியி னின்றும் ஒரு நரம்பைப் பிடுங்கிப் பிரம கபாலத்தில் விட, அது வழியாக உதிரம் பல்லாண்டு காறும் ஒழுகிற்று. திருமால் நினைவிழந்து வீழ்ந்தார். ஆயினும், வைர வரது கைக் கபாலம் பாதியாயினும் நிறைந்ததில்லை. அதனைக் கண்ட 'சீதேவி, பூதேவி' என்னும் இருவரும் நடுக்கங் கொள்ள, வைரவக் கடவுள் அவர்கள்மீது இரக்கம் வைத்துத் திருமாலை உயிர்ப்பித்துத் தந்து, விடுவச் சேனனையும் சூலத்தினின்றும் இறக்கிவிட்டுச் சிவபெரு மான் முன்பே தமக்காகப் படைத்துக் கொடுத்த கணங்களுடன் தமது புவனத்தில் தங்கி, அண்டங்கள் பல வற்றைக் காத்து வருவாராயினார். இவ்வாறு கந்த புராணத்துள்ளும், காஞ்சிப் புராணத்துள்ளும் இவ்வரலாறு விரித்துப் பேசப்படுதல் காண்க.

'அவன் தாள் உணர் தேவர்கள் பொங்கும் சினத்துள் அயன் தலை முன் அற (பின்) அச்சுதனை உதிரங் கொண்டான்' என்றதனால், 'செல்வம், அதிகாரம்' முதலியவற்றால் எழும் செருக்குக் காரணமாக முதல்வனாகிய கடவுளை மறந்து 'யான்' என்றும், 'எனது' என்றும் செருக்கித் திரிவாரை அம்முதல்வனது திருவருள் ஒறுத்து அடக்கும் என்னும் உண்மையை வலியுறுத்தவே இவ்வரலாற்றைப் புராணங்கள் வலியுறுத்துகின்றன என்பது உணர்த்துதல் நாயனாரது திருவுள்ளக் கிடையாதல் பெறப்படும். தக்கன் வரலாறு, என்றும் செருக்குடை யராய் இருப்பவரை ஒறுத்தலையும், இஃது, ஓரோவழிச் செருக்குறு வாரை ஒறுத்தலையும் குறிக்கும். இவையே இவற்றிடை உள்ள வேற்றுமை.

பரத்தல், 'இடங்கொடுத்தல்' என்னும் பொருட்டு. இதனால்,

ஆகாயத்தையும் அடக்கி நிற்றல் பெறப்பட்டது. நிலத்தையும் தாங்குதல் கூறினமையால், அதற்கும் நிலைக்களமாதல் பெறப்பட்டது. 'தங்கும் படித்தாகிய தாள்' என்க. அவன் பண்டறி சுட்டு. 'உணர் தேவர்கள்' என்னும் முக்கால வினைத்தொகை, அஃது அவர்க்குரிய பண்பாதல் விளக்கி நின்றது. பொங்கும் சினம் - மிகக் கொண்ட சினம். 'தேவர்கள் கொண்ட சினம்' என்க. சினம் - பகை. இஃது இங்கு மயக்கத்தால் கொள்ளும் மாறுபாட்டினைக் குறித்தது. 'சினத்துள்' என்பது வினைசெய்யிடத்தில் வந்த ஏழாம் வேற்றுமை. எனவே, 'சினங்கொண்ட பொழுது' என்பது பொருளாயிற்று. முன் - முதலில். 'முன் அயன் தலை அற' என்றதனால், 'பின் அச்சுதனை உதிரங் கொண்டான்' என்பது போந்தது. இதுவும் சிவபெருமான் ஏவுதற் கருத்தாவாய் நின்று செய்ததேயாதல் அறிக.

இதனால், பிரமனது தலையை அரிந்த வரலாறும், அதன் உண்மையும் கூறப்பட்டன.

எங்கும் கலந்தும்என் உள்ளத் தெழுகின்ற
அங்க முதல்வன் அருமறை யோதிபாற்
பொங்குஞ் சலந்தரன் போர்செய்ய நீர்மையின்
அங்கு விரற்குறித் தாழிசெய் தானே. ***#339***

எல்லா இடங்களிலும் நிறைந்து நிற்பினும், என் உள்ளத்தில் விளங்கி நிற்கின்றவனும், ஆறங்கம் அருமறைகளை அருளிச்செய்த முதல்வனும் ஆகிய சிவபெருமானிடம், மிக்க சினத்தை உடைய 'சலந்தரன்' என்னும் அசுரன் போர் செய்யச் சென்றபொழுது, அப்பெருமான் அவனது வரத்தின் தன்மையை அறிந்து அதற்கு ஏற்பத் தமது காற்பெருவிரலால் நிலத்தில் ஒரு சக்கரத்தைக் கீறி அதனை அவனாலே எடுப்பித்து அதன்வழி அவன் தன்னாலே தான் அழியச் செய்தான்.

விளக்கவுரை

இவ்வீரச் செயலைக் குறிக்கும் தலம் திருவிற்குடி வீரட்டம்.

ஒருமுறை சிவபெருமான், தமது கயிலைக்கு வந்த இந்திரன் முன், ஒரு திருவிளையாடலால் வேற்றுருக் கொண்டபொழுது, உண்மையறியாத இந்திரன், அப்பெருமானை இகழ்ந்து நோக்க, அதனால் அவர் உருத்திர வடிவுடன் நின்று கொண்ட சினத்தைக் கண்டு இந்திரன் அஞ்சி வணங்கினான். அதனால், சிவபெருமான் தாம் கொண்ட சினத் தீயை மேற்றிசைக் கடலில் எறிய, அஃது ஓர் அசுரக் குழந்தையாயிற்று. அதனைக் கடல் அரசனாகிய 'வருணன்' வளர்த்தான். சலத்தால் *(நீரால்)* தாங்கப்பெற்ற காரணத்தால் 'சலந்தரன்' எனப் பெயர் பெற்ற அவ்வசுரன் மிக்க வன்மை உடைய வனாய்த் தேவரைத் துன்புறுத்தத் திருமால் முதலிய தேவர் பலரும் அவனுக்கு அஞ்சி ஓடிக் கயிலையில்

வசித்தனர். அதனை அறிந்த சலந்தராசுரன் சிவபெருமானோடு போர் செய்யக் கருதிக் கயிலை நோக்கிச் சென்றான். இதனை அறிந்த தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட அப்பெருமான், அவன் தன்னாலே தான் அழிய வேண்டியவனாதலை உணர்ந்து, ஓர் அந்தண வடிவில் அவன்முன் சென்று, 'சலந்தரனே, உனது ஆற்றலை அளந்து காணவே யாம் வந்தோம்; உன்னால் இயலுமாயின், இச்சக்கரத்தை எடுத்துச் சுமக்க' என்று சொல்லித் தமது காற்பெருவிரலால் நிலத்தில் ஒரு சக்கரத்தைக் கீறினார். சலந்தரன் செருக்குக் கொண்டு அதனை அரிதில் பெயர்த்து மிக முயன்று உயர எடுத்துத் தன் தலைமேல் வைத்துக்கொள்ள, அச்சக்கரம் சிறந்த படைக்கலமாய் அவன் உடலை இருகூறு செய்து, சிவபெருமானிடம் மீண்டது; தேவர் துன்பம் நீங்கி இன்புற்றனர். இவ்வாறு இவ்வரலாறு கந்தபுராணத்துட் கூறப்பட்டது. இது சிவபெருமான், தான் நேரே செய்த வீரச்செயலாதல் அறிக.
'அறம், மறம் அனைத்திற்கும் நிலைக்களமாய் உள்ளவன் இறைவன். அவன் உரிய காலத்தில் மறத்தினை வெளிப்படுத்தி, ஏற்கும் முறையால் அதனை அழித்து அறத்தினை வளர்த்தருளுவான் என்பது இதனால் அறியத் தக்க உண்மை' என்பது நாயனார் திருவுள்ளமாதல், 'எங்கும் கலந்தும் என் உள்ளத்தெழுகின்ற அங்க முதல்வன் அருமறை ஓதி' என்ற குறிப்பால் அறியப்படும்.
இதனால், 'சலந்தரன்' என்னும் அசுரனை அழித்த வரலாறும், அதன் உண்மையும் கூறப்பட்டன.

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே. ***#340***

சிவபெருமான் திரிபுரம் எரித்த வரலாற்றைப் புராணங்கள் கூறக் கேட்கின்றுழி, அறிவிலாதார் அவ் வரலாற்றை மட்டுமே கேட்டு, அவ்வளவில் சிவபெருமானைப் புகழ்ந்தொழி கின்றனர். ஆயினும், அவ்வரலாற்றால் அறியத் தக்க உண்மையை அறிகின்றவர் எத்துணையர்! மிகச் சிலரே. அதனால், 'இரும்பு, வெள்ளி, பொன்' என்பவற்றால் ஆகிய மூன்று கோட்டைகளும் முறையே 'ஆணவம், மாயை, கன்மம்' என்னும் மும்மலக் கட்டினைக் குறிப்பனவாக, 'சிவபெருமான் அக்கோட்டைகளை எரித்துச் சாம்பலாக் கினான்' என்பது, 'அம்மும்மலங்களின் வலியை அழித்துக் கட்டறுத் தருளுவன்' என்னும் உண்மையையே சிறப்பாக உணர்த்தி நிற்கும்.

விளக்கவுரை

இவ்வீரச் செயலைக் குறிக்கும் தலம் திருவதிகை வீரட்டம். ஏனைய

பலவற்றினும் இது சிறப்புடையதாய்ப் பண்டைத் தமிழ் நூல்களிலும் பயின்று வருவதாகலின், இதன் உண்மையை நாயனார் கிளந்தோதினார் என்க.
'தாரகாக்கன், கமலாக்கன், வித்தியுன்மாலி' என்னும் மூவர் அசுரர் சிவபத்தியிற் சிறந்தவராய் மயன் வகுத்த 'பொன், வெள்ளி, இரும்பு' இவற்றால் ஆகிய மூன்று கோட்டைகளும் நினைத்த இடத்தில் பறந்து சென்று இறங்கும் சித்தியை அடைந்து, அதனால் உலகிற்கு இடர் விளைத்தனர். அதனைத் தேவர்கள் சிவபெருமானிடம் சென்று வணங்கி விண்ணப்பித்து, அவ்வசுரர்களை அழித்தருளுமாறு வேண்டினர். சிவபெருமான் 'நம்பால் பத்தி பண்ணுவோரை அழித்தல் ஆகாது' என்று அருளிச் செய்யத் திருமால் புத்தனாக உருக்கொண்டு பிடக நூலைச் செய்து, நாரத முனிவரைத் துணைக்கொண்டு முப்புரத் தவர்பால் சென்று சிவநெறியை இகழ்ந்து, புத்த மதத்தையே சிறந்ததாகக் காட்டி மருட்டினார். அதனால் அம்மாயோன் மயக்கில் அகப்பட்ட முப்புரத் தசுரர் சிவநெறியைக் கைவிட்டுச் சிவனை இகழ்ந்து புத்தராயினர். அதன்பின் திருமால் முதலியோர் சிவபிரானிடம் சென்று வணங்கி, முப்புரத்தவர் சிவநிந்தகராயினமையை விண்ணப்பித்து, அவர்களை அழித்தருள வேண்டினர். சிவபெருமான் அதற்கு இசைவுதரப் பூமியைத் தேர்த்தட்டாக அமைத்துத் தேவர் பலரும் தேரின் பல உறுப்புக்களாயினர். வேதங்கள் நான்கும் குதிரைகளாக, அவற்றை ஓதும் பிரமன் தேரை ஓட்டும் சாரதியாயினன். திருமால் அம்பாக, வாயுதேவன் அம்பின் சிறகுகளும், அக்கினி தேவன் அம்பின் அலகும் ஆயினர். சிவபெருமான் வாசுகியை நாணாகக் கொண்டு மகாமேரு மலையை வில்லாக வளைத்துத் திருமால் முதலியோரால் அமைந்த அம்பைப் பூட்டித் திரிபுரங்களை நோக்கியபொழுது, அவரிடத்து உண்டாகிய கோபச் சிரிப்பால் முப்புரங்களும் வெந்து நீறாயின. இவ்வாறு திருவிற்கோலப் புராணம், காஞ்சிப் புராணங்களில் இவ் வரலாறு விரித்துக் கூறப்பட்டது.
இதனுள் தேவர் பலரும் சிவபெருமானுக்குக் கருவியா யினமை, 'அப்பெருமானே கருத்தா' என்பதை விளக்கும். பூட்டிய அம்பினை எய்யாமலே திரிபுரத்தைச் சிரித்து அழித்தமை, அவன் யாதொரு செயலையும் கருவியாலன்றி நினைவு மாத்திரத்தானே செய்பவனாதலை விளக்கும். மலையை வில்லாக வளைத்தமை அவன் எல்லாம் வல்லனாதலைக் குறிக்கும். இவ்வாறு இத்திரிபுரம் எரித்த வரலாறு பல அரிய உண்மைகளை விளக்குவதாம். அவற்றுள் சிறந்த தொன்றினை எடுத்தோதியதனானே ஏனையவற்றையும் தழுவிக் கொள்ள வைத்தார். இதனால், திரிபுரம் எரிந்த வரலாறும், அதன் உண்மையும் கூறப்பட்டன.

முத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியுள்
அத்தி யுரிஅர னாவ தறிகிலர்
சத்தி கருதிய தாம்பல தேவரும்
அத்தீயி னுள்ளெழுந் தன்று கொலையே. *#341*

முனிவர் சிலர் செய்த வேள்வியுள் எழுந்த யானை உருவினனாகிய கயாசுரனால் தம் ஆற்றலையே பெரிதாகக் கருதி யிருந்த தேவர் பலரும் அன்று அங்குச் சென்று கொலையுண் டாரேயாகச் சிவபெருமான் ஒருவனே அவனை அழித்து அவனது தோலைப் போர்வையாகக் கொண்டான் என்பதைக் கேட்டும் அப்பெருமானது பெருமையைச் சிலர் அறியாது, ஏனைத் தேவருள் அவனையும் ஒருவனாக வைத்து எண்ணுகின்றனர்.

விளக்கவுரை

'அஃது அவர் வினையிருந்தவாறு' என்பது குறிப் பெச்சம். சிவபெருமான் செய்த இவ்வீரச் செயலைக் குறிக்கும் தலம் திருவழுவூர் வீரட்டம். சிவபெருமான் யானையை உரித்த வரலாறு கந்த புராணத்துட் சொல்லப்பட்டது. அதில் அவன் பிறப்பு வரலாறு சொல்லப்பட வில்லை. ஆயினும், நாரத முனிவர் செய்த வேள்வியுள் ஆட்டுக் கிடாய் ஒன்று தோன்றித்தேவர் முதலிய பலரையும் துன்புறுத்தினமை கந்த புராணத்தால் அறியக் கிடப்பதுபோல, முனிவர் சிலர் செய்த வேள்வியுள் கயாசுரனாகிய யானை தோன்றித் தேவர்களைத் துன்புறுத் தினமை இத்திருமந்திரத்தால் அறியக் கிடக்கின்றது. சிவபெருமான் யானையை உரித்த பொழுது அவர் கொண்டிருந்த உருத்திரத் திருமேனியின் ஒளியையும், வீரச் செயலையும் காணமாட்டாது உமாதேவியை உள்ளிட்ட பலரும் நடுக்கங் கொள்ளச் சிவபெருமான் யானையை உரித்து அத்தோலைப் போர்வையாக அணிந்து அவர் களது அச்சத்தைப் போக்கினமை கந்த புராணத்துட் கூறப்பட்டது.

ஐம்பொறிகளை யானையாகக் கூறுதல் மரபாகலின், ஏனைத் தேவர் பலரும் மதங்கொண்ட யானைபோலும் அவ்வைம்பொறிச் சூழலில் அகப்பட்டுச் சுழலும் பசுக்களேயாக, அவற்றை வென்று நிற்கும் பதி சிவபெருமான் ஒருவனே என்பது இவ்வரலாற்றால் அறியத்தக்கது என்பதை நாயனார் உய்த்துணர வைத்திருத்தலை நுண்ணுணர்வால் நோக்கி உணர்க. இதுவும் சிவபெருமான் நேரே செய்த வீரச்செயலாம். இதனைக் காசியில் நிகழ்ந்ததாகவே கந்தபுராணம் கூறிற்று.

கொளுவுதற்கும், முழங்குதற்கும் 'முனிவர்' என்னும் எழு வாய் வருவித்து, 'கொளுவி முழங்கு' என இயைக்க. முழங்குதல் - மந்திரத்தை உரத்து உச்சரித்தல். வேள்வியுள் அத்தி - வேள்வியுள் எழுந்த யானை. 'உரி' என்னும் முதனிலைத் தொழிற்பெயர் ஆகு பெயராய், 'உரித்தவன்' எனப்

பொருள் தந்தது. தாம், அசைநிலை. 'பல தேவர்தாமும்' என்பது மாறிநின்றது. உம்மை, முற்றும்மை. 'தீயின்' என்றதும், 'தீச் சாலையின்' என ஆகுபெயராயிற்று. 'அத்தி யினுள்' என்பதே பாடமாயின், 'தீ' என்பது குறுக்கல் பெற்றது என்க. எழுந்து - சென்று தங்கி. 'கொலையே' என்றதன்பின் 'உண்டார்' என்பது சொல்லெச்சமாய் நின்றது. இதனால், சிவபெருமான் யானையை உரித்த வரலாறும், அதன் உண்மையும் கூறப்பட்டன.

மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங் கியோகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே. *#342*

சிவபெருமான் நிலவுலகில் உள்ள திருக்கடவூரில் காலால் காலனை உதைத்துத் தள்ளி, ஒர் யோகி போல் இருத்தல் வியப்பைத் தருவது.

விளக்கவுரை

இது காலசங்கார மூர்த்தியைத் திருக்கடவூரில் உள்ள ஓர் யோகிபோல வைத்துச் சிலேடையால் உவமித்தது. இதனை,
யோகிக்கு ஏற்ப உரைக்குங்கால்,
'மூலாதாரமாகிய இடத்தில் வைத்துக் கீழ்நோக்கித் துயில் கின்ற நாகராசனை அதன்மேல் உள்ள சுழுமுனைக்கு மேலதாகிய புருவ நடுவாகிய இலாடத் தானத்தை நோக்கி நிற்குமாறு எழுப்பி, அதன்பொருட்டு வாயுக்களுள் முதலாவதாகிய பிராண வாயுவைச் சுழுமுனை நாடியின் அடியில் அசைவற நிறுத்தி, அத்தகைய வாயுப் பயிற்சியாலே, தனக்கு அளந்த வாழ்நாள் எல்லைக்கண் கூற்றுவன் வந்து தன்னை அணுகாதவாறு தடுத்துத் திருக்கடவூரில் நலத்துடன் நீடு வாழ்கின்றமை 'வியப்பு' எனவும்,
காலசங்கார மூர்த்திக்கு ஏற்ப உரைக்குங்கால்,
'முப்பத்தாறு தத்தவங்களுள் கீழ் நிற்பதாகிய நிலத்தின்கண் அமைந்த கோயிலிலே வழிபாட்டில் முனைந்து நின்ற மார்க்கண்டேய முனிவரை நாதமாகிய மேல்தத்துவ புவனத்தில் மேலான அபர முத்தராய்ச் சென்று வாழுமாறு கடைக்கணித்து, அவர் வழிபட்ட இலிங்கத் திருமேனியில் வெளிப்பட்டு அவர்மேல் வந்த காலனைக் காலால் உதைத்துத் தள்ளி, அருளோடு நீடு நிற்றல் வியப்பு' எனவும் உரைத்துக் கொள்க.
நாகராசன், குண்டலினி. இதனைப் பெண்பாலாகக் கூறுதல் மரபாயினும், 'நாகராசன்' என்னும் வழக்குண்மை பற்றி ஆண்பாலாக ஓதினார். இரண்டாவது பொருட்கு, துவாரம் - வாயில்; கருவி. முதல் உரையுள் 'நோக்கி' என்பது, அதன் காரியம் தோன்ற நிற்கும். 'சிவபெருமான்' என்னும் எழுவாய் அதிகாரத்தால் வந்தியைந்தது. 'அங்

கியோகமாய்' என்பதில், யகரம் வருவழி இகரங் குறுகிற்று(தொல். எழுத்து, *411)* 'யோகியாய்' எனற்பாலதனை, 'யோகமாய்' என்றார். ஆக்கம் உவமை குறித்து நின்றது. இறுதியில் 'வியப்பு' என்பது சொல்லெச்சம். இங்ஙனம் சிலேடித்ததனானே, அட யோகம் செய்வார், வாழ்நாள் சிறிது நீட்டிக்கப் பெறுதலையும், சிவயோகம் செய்வார், ஞானம் பெற்று வீடு அடைதலையும் குறிப்பால் உணர்த்திச் சிவனது திருவருட் பெருமையை விளக்கினார் என்க. எனவே, சிவபெருமான் காலனைக் காலால் உதைத்த வரலாறு ' யோக மதத்தவர், சிவநெறியாளர்' என்னும் இருதிறத்தார்க்கும் ஏற்ற பெற்றியால் மேற்குறித்த இரண்டு உண்மை களையும் விளக்கி நிற்றல் பெறப்பட்டது. மிருகண்டு முனிவர் புத்திரப்பேறு இன்மையால் தம் இல்லா ளோடும் சிவபெருமானை நோக்கித் தவம் செய்யச் சிவபெருமான் வெளிப்பட்டு 'உங்கட்கு அறிவிலியாய் நூறாண்டு வாழும் மகன் வேண்டுமோ, அறிவுடையவனாய்ப் பதினாறாண்டு வாழும் மகன் வேண்டுமோ' என வினாவ, தவம் புரிந்த இருவரும், 'அறிவுடைய மகனே வேண்டும்' என்றனர். அதன்படி கொடுத்து மறைந்த சிவபெரு மானது வரத்தின்படி அவர்கட்கு மார்க்கண்டேய முனிவர் பிறந்து, கல்வி அறிவு ஒழுக்கங்களில் சிறந்து விளங்கும் பொழுது பதினாறா வது ஆண்டு வந்து அடைய, பெற்றோர் இருவரும் மகனைக் காணுந் தோறும் வருந்திக் கண்ணீர் விடுத்தனர். மார்க்கண்டேயர் அவர்களது வருத்தத்திற்குக் காரணத்தை அவர்பால் கேட்டறிந்து அவர்களிடம் விடைபெற்றுச் சென்று சிவபெருமானை இலிங்க வடிவில் பூசை செய் திருந்தார். அவருக்கு அளந்த நாள் முடிவில் கூற்றுவன் வந்து அவரை அழைக்க, அவர் சிவபெருமானையே தஞ்சமாக அடைந்து நின்றார். கூற்றுவன் அம்முனிவர் பற்றி யிருந்த இலிங்கத்தோடு அவரைப் பாசத் தாற் பிணித்து இழுத்தபொழுது, சிவபெருமான் அவ் இலிங்கத்தி னின்றும் வெளிப்பட்டுத் தமது இடக் காலால் கூற்றுவனை உதைத்துத் தள்ளி, மார்க்கண்டேயரை என்றும் பதினாறாண்டாக இருக்க அருள் புரிந்து மறைந்தார். இவ்வாறு இவ் வரலாறு கந்த புராணத்துள் விரித்துக் கூறப்பட்டது. இவ்வீரச் செயலைக் குறிக்கும் தலம் திருக்கடவூர் வீரட்டம் என்பதை நாயனாரே அருளிச் செய்துள்ளார். இது காசியில் கங்கா நதியின் மணி கண்ணிகைத் துறையில் நிகழ்ந்ததாகவே கந்த புராணத்தில் சொல்லப் பட்டது. இதுவும் சிவபெருமான் நேரே செய்த வீரச்செயல்.

இதனால் சிவபெருமான் காலனை உதைத்த வரலாறும், அதன் உண்மையும் கூறப்பட்டன.

இருந்த மனத்தை இசைய இருத்திப்

பொருந்திய லிங்க வழியது போக்கித்
திருந்திய காமன் செயலழித் தங்கண்
அருந்தவ யோகங் கொறுக்கை அமர்ந்ததே. *#343*
சிவபெருமான் திருக்குறுக்கை வீரட்டத்தில் எழுந் தருளியுள்ள நிலை, தன்வழி நின்ற மனத்தை நம் வழிப் பொருந்துமாறு நிறுத்திப்பின் மகளிரோடு மெய்யுறுதலை அறவே விடுத்து, எத்தகை யோர்க்கும் காமத்தை விளைத்தலில் வல்ல காமவேளது குறும்பை அழித்து, அந்நிலைக்கண் நாம் அசையா திருக்கத்தக்க அரிய தவயோக நிலையேயாம்.

விளக்கவுரை

'இந்நிலை பல சமயத்தார்க்கும் பொது' என்பது பற்றி, 'அருந்தவ யோகம்' எனப் பொதுப்படக் கூறிப் போந்தார். லிங்கம் - குறி. வழி - ஒழுக்கம். சிவபெருமான் காமனை எரித்த வரலாற்றால் அறியக் கிடக்கும் உண்மை வெளிப்படை என்பது பற்றி, இவ்வாறு இனிது விளங்க ஓதியொழிந்தார். 'அங்கண்' என்றதன்பின் 'நிற்கும்' என ஒருசொல் வருவிக்க. 'குறுக்கை' என்பது, 'கொறுக்கை' என மருவிற்று. 'குறுக்கை என்பதே பாடம்' எனலுமாம். 'சிவபெருமான் கொறுக்கை அமர்ந்தது, இருத்தி, போக்கி, அழித்து நிற்கும் யோகமே' என வினை முடிவு செய்க.
உமாதேவி, 'தக்கன் மகள்' என்னும் நிலையை மாற்றிக் கொள்ள விரும்பிச் சிவபெருமானது அருளிப்பாட்டின்படி மலை யரையனுக்கு மகளாய்த் தோன்றி வளர்ந்து இமயமலையில் தவம் செய்துகொண்டிருக்க, சிவபெருமான் சனகாதி நால்வர் முனிவர்கட்கு உண்மை ஞானம் உணர்த்த வேண்டித் திருக்கயிலையில் தென்முகக் கடவுளாய் யோக நிலையில் இருந்த பொழுது, திருமாலின் சொற்படி, பிரமன் முதலிய தேவர்கள் தமக்குத் துயர் விளைத்த சூரபதுமனாதி அசுரரை அழித்தற்குச் சிவபெருமான் உமாதேவியாரைக் கூடி முருகப் பெருமானைத் தருதற் பொருட்டு அவருக்குக் காமத்தை விளைக் குமாறு காமவேளை ஏவினர். அவன் சென்று சிவபெருமான்மீது தனது மலர் அம்புகளை விடுத்தபொழுது, சிவபெருமான் தமது நெற்றிக் கண்ணைச் சிறிதே திறக்க, அதினின்றும் புறப்பட்டுப் படர்ந்த தீயால் காமவேள் சாம்பராயினன். இவ்வரலாற்றைக் கந்த புராணம் விரித்துக் கூறும்.
இவ்வீரச் செயலைக் குறிக்கும் தலம் திருக்குறுக்கை வீரட்டம் என்பதையும் நாயனார் தாமே எடுத்தோதினார். இதுவும் சிவபெருமான் நேரே செய்த வீரச்செயல்.
இதனால், சிவபெருமான் காமனை எரித்த வரலாறும், அதன் உண்மையும் கூறப்பட்டன.
சிவபெருமானது அட்ட வீரட்டங்களையும் அவை குறிக்கும் வீரச்

செயல்களோடு கூறும் பழைய தனிப்பாட்டு ஒன்று வருமாறு:
பூமன் சிரம்கண்டி, அந்தகன் கோவல், புரம் அதிகை,
மாமன் பறியல், சலந்தரன் விற்குடி, மாவழுவூர்,
காமன் கொறுக்கை, யமன்கட வூர்இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களும் சூடிதன் சேவகமே.
-தனிப்பாட்டு
(பூமன் - பிரமன். மாமன் - தக்கன். தேம் மன்னு - தேன் மிகுந்த. சேவகம் - வீரம்)

இவற்றுள் வழுவூர் ஒன்றும் வைப்புத்தலம்; ஏனைய தேவாரப் பாடல் பெற்ற தலங்கள்.

இவ்வாறு நாயனார் 'வீரட்டம்' எனச் சிறப்புப் பெற்றத் தலங்களைக் குறித்தருளினமையால், பிறவகையில் சிவபெருமானது அறக்கருணைச் செயல் மறக்கருணைச் செயல்களைக் குறிக்கும் தலங்களும், அவை பற்றிய வரலாறுகளும் சிவநெறி நிற்பார்க்கு இன்றியமை யாதனவாதல் அறியப்படும். இவ்வாற்றானே சமய குரவர் நால்வரும் தமது திருப்பாடல்களாலும், சென்று வணங்கிய திருநெறி ஒழுக்கத்தாலும், அதியற்புத விளைவுகளாலும் திருக்கோயில்களின் இன்றியமையாமையை இனிது விளக்கினமை கருத்திற் கொள்ளற் பாலது.

***4.3.*இலிங்க புராணம்**

அடிசேர்வன் என்ன எம் ஆதியை நோக்கி
முடிசேர் மலைமக னார்மக ளாகித்
திடமார் தவஞ்செய்து தேவர் அறியப்
படியார அற்சித்துப் பத்திசெய் தாளே. ***#344***

உமையம்மையும் மலையரையன்பால் மகளாய் வளர்ந்தபொழுது 'சிவபெருமானது திருவடிக்குத் தொண்டு புரிவேன்' (அவனுக்கு மனைவியாவேன்) என்று கருதி அதன்பொருட்டு அப்பெருமானை நோக்கித் தவம் செய்து அப்பயனைப் பெற்றாள். பின் தேவரும் அறியும்படி இந்நிலவுலகில் அவனை அன்புடன் வழிபடுதலும் செய்தாள்.

விளக்கவுரை

'அதனால் சிவபெருமான் யாவராலும் வழிபடத் தக்கவன் என்பது விளங்கும்' என்பது குறிப்பெச்சம். இரண்டாம் அடியை முதலிற்கொண்டு உரைக்க. 'அரசன்' என்றற்கு 'முடிசேர் மலைமகனார்' என்றார். 'உமையம்மை' என்னும் எழுவாய் ஆற்றலால் கொள்ளக் கிடந்தது. இதனால், உமையம்மையே சிவனை வழிபட்டமை கூறப் பட்டது.

இத்தகைய தலங்கள் காஞ்சி முதலியனவாகச் சிறப்புற்று விளங்குதல் அறிக.

திரிகின்ற முப்புரஞ் செற்ற பிரானை
அரியனென் றெண்ணி அயர்வுற வேண்டா
புரிவுடை யாளர்க்குப் பொய்யலன் ஈசன்
பரிவொடு நின்று பரிசறி வானே. *#345*

'முப்புரத்தை எரித்த முதல்வனாகிய சிவபெருமான் உமையம்மை போன்றார்க்கன்றி நம்மனோர்க்குக் கிடைத்தற்கரியன்' என்று தளர்ச்சி எய்த வேண்டா. அன்புடையார் யாவராயினும் அவர்க்கு அவன் எளியனே. அன்புடையார் பால் அருளுடையவ னாய் நின்று அவரவர்க்குத் தக்க வகையில் அவன் அருள் செய்வான்.

விளக்கவுரை

புரிவு - விருப்பம்; அன்பு, பொய், இங்கு அருமை. பரிவு - தன்மை; தகுதி. 'அவரவர்க்குத் தக அருள்புரிவான்' என்றதனால்,'பயன் கருதியும் அவனை வழிபடலாம்' என்பது உணர்த்தப்பட்டதாம்.
'அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ' -தி.5 ப.23 பா.9
என அப்பரும் அருளிச் செய்தார்.
இதனால், 'யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை' (தி.10 பா.251) என மேற்குறித்த வழிபாடு அவரவர்க்கு இயலுந் திறத்தால் சிவனுக்குச் செய்தல் தக்கது என்பது கூறப்பட்டது.

ஆழி வலங்கொண் டயன்மால் இருவரும்
ஊழி வலஞ்செய்ய ஒண்சுட ராதியும்
ஆழி கொடுத்தனன் அச்சுதற் கவ்வழி
வாழி பிரமற்கும் வாள்கொடுத் தானே. *#346*

மிக்க வலிமை பொருந்தித் தம்மில் போர்செய்த பிரமன், திருமால் என்னும் இருவரும் தம்முன் தீப்பிழம்பாய்த் தோன்றிய சிவபெருமானைப் பின்பு இலிங்கத் திருமேனியில் நெடுங் காலம் வழிபட, அவர்கட்குச் சிவபெருமான் திருமாலுக்குச் சக்கரப் படையையும், பிரமனுக்குத் தண்டாயுதத்தையும் வழங்கி, முறையே, காத்தல் படைத்தல்களைச் செய்யுமாறு அருள்புரிந்தான்.

விளக்கவுரை

எனவே, குற்றம் செய்தலை இயல்பாக உடைய உயிர்கள் தாம் செய்த குற்றத்திற்குச் சிறந்த கழுவாய் (பிராயசித்தம்) ஆகச் செய்யத்தக்கதும் சிவ வழிபாடே என்றதாயிற்று. ஆழி இரண்டில் முதற்கண் உள்ளது 'ஆழம்' எனப் பொருள்தந்து, மிகுதியை உணர்த் திற்று. வலம் இரண்டில்

முன்னது வலிமை. அஃது அதனால் ஆகிய போரைக் குறித்ததது. 'கொண்ட' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. வாள் - படைக்கலம். 'வாள் பெற்றான்' என்றே கொள்ளுதலும் பொருந்தும். ஒருகற்பத்தில் பிரமனும், மாலும் தாம் தாமே உலகிற்கு முதல்வர் எனத் தருக்கிப் போர்புரிய, அவர்க்கு இடையே சிவ பெருமான் அடிமுடி அறியப்படாத அனற் பிழம்பாய்த் தோன்றியருள, அவ்விருவரும் 'இதன் அடி முடிகளை அறிபவரே முதல்வர்' என வரையறுத்துக்கொண்டு அவற்றைக் காண முயன்றனர். திருமால் வராக வடிவங்கொண்டு நிலத்தைப் பிளந்து பல்லாயிரம் யாண்டு கீழ்சென்று அடியைக் காண முயன்று முடியாதவராய், 'இது சிவ பெருமானது திருவிளையாடல்' என்று அறிந்து தருக்கொழிந்தார். பிரமன் அன்னப் பறவை உருவங்கொண்டு பல்லாயிரம் யாண்டு மேலே பறந்து சென்றும் முடியைக் காண இயலாதவனாய், திருமால் அடியைக் கண்டிருப்பார் என்னும் கருத்தினால் அவர்முன் வந்து 'யான் முடியைக் கண்டேன்' என்று பொய் கூறினான். அவன் பொய்ம் மொழிக்குச் சான்றாகச் சிவபெருமானது முடியினின்றும் வீழ்ந்த தாழை மலர் நின்றது. பிரமன் பொய் கூறுதலைப் பொறாத சிவபெருமான் அக்கினித் தம்பத்தைப் பிளந்துகொண்டு உக்கிரவடிவத்துடன் காட்சி யளித்துப் பிரமதேவனுக்கு இவ்வுலகில் எங்கும் கோயில் உண்டா காதவாறு சபித்தும், தாழை மலரைத் தமக்கு ஆகாது என்று விலக்கியும் ஒறுத்தருளினார். பின்பு பிரமதேவன் அஞ்சி வணங்க, அவனுக்கு அந்தணர் இல்லமே கோயிலாகவும், அவரைப் பிறர் வழிபடும் வழி பாடே அவனுக்குச் செய்யும் வழிபாடாகவும் அருள் செய்தார். பின்பு, மால் அயன் இருவரும் வேண்டச் சிவ பெருமான் தம் வழிபாட்டிற் குரிய இலிங்கவடிவாயினார். அவ் வடிவில் இருவரும் சிவபெரு மானைப் பூசித்துப் பயன் பெற்றனர். இதுவே இலிங்கத் தோற்றத் திற்குப் புராணம் கூறும் வரலாறு. இவ் வரலாற்றை விரித்துக் கூறும் புராணமே இலிங்க புராணம். இதனைக் கந்த புராணம் ஓரளவில் கூறும். 'இலிங்க புராணம்' என்பது 'சைவ புராணம்' என்பதன் மறுபெயர்.

பிரமன் அரிஎன் றிருவருந்தம் பேதைமையால்
பரமமியாம் பரமமியாம் என்றவர்கள் பதைப்பொடுங்க அரனா
ரழலுருவாய் அங்கே அளவிறந்து பரமாகி நின்றவா தோணோக்கம்
ஆடாமோ.

- *தி.8 தோணோக்கம் , 12*

என மாணிக்கவாசகர் இவ்வரலாற்றை எடுத்தோதியருளினார்.

'திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடி' - தி.8 தெள்ளேனம், 1

என்று பிறவிடங் களிலும் குறித்தருளுவார். தேவாரத் திருமுறைகளுள்

இவ்வரலாறு பயின்று வருதல் வெளிப்படை. திருநாவுக்கரசர் 'இலிங்க புராணத் திருக்குறுந்தொகை' என ஒரு திருப்பதிகமே அருளிச்செய்தார். இதனால், சிவபெருமானே முதல்வனாதலை விளக்கும் இலிங்க வரலாறு கூறப்பட்டது. இதனானே அப்பெருமான், உயிர்கள் தன்னை வழிபடுதற்குக் கொண்ட வடிவங்களுள் இலிங்கத் திரு மேனியே சிறப்புடையதாதலும் பெறப்பட்டது.

தாங்கி இருபது தோளுந் தடவரை
ஓங்க எடுத்தவன் ஒப்பில் பெருவலி
ஆங்கு நெரித்தம ராவென் றழைத்தபின்
நீங்கா அருள்செய்தான் நின்மலன் தானே. *#347*

சிவபெருமான் தனது கயிலைப் பெருமலையைத் தூக்கி எறியக் கருதி இருபது தோள்களாலும் மேல் எழுமாறு தாங்கி எடுத்த இராவணனது நிகரில்லாத பேராற்றலைத் தனது கால் விரலால் விரைய ஊன்றி அவன், இறைவனே என்று அழைத்து அலறி முறை யிட்ட பின் அவனை விடுத்து, அழிவில்லாத வரத்தையும் கொடுத் தருளினான்.

விளக்கவுரை

இவ்வரலாறு இராமாயணம் உத்தர காண்டத்துள் சொல்லப்பட்டது. இதனால், சிவபெருமான் இராவணனுக்கு மறக்கருணையும், அறக்கருணையும் செய்தமை கூறப்பட்டது. வழிபட்டவர்க்கே அறக்கருணை செய்வான் என்க.

உறுவ தறிதண்டி ஒண்மணல் கூட்டி
அறுவகை ஆன்ஐந்தும் ஆட்டத்தன் தாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழு வால்வெட்டி மாலைபெற் றானே. *#348*

'செய்யத் தக்க செயல் இது' என்பதை முற்பிறப்பிற் செய்த தவமுதிர்ச்சியால் தெளிந்த தண்டீசநாயனார் மணலால் இலிங்கம் அமைத்து, வினை கெடும்வகையில் பசுவின் பாலையே எல்லாத் திருமஞ்சனப் பொருளுமாகக் கருதி ஆட்டி வழிபட, அவரைப் பெற்ற தந்தை தன்மகன் வேள்விக்குரிய பாலை வீணாக்கு வதாக நினைத்து வெகுண்டு ஒறுக்க வேண்டித் தண்டுகொண்டு அடித்து, அது பயன்படாமையால், இலிங்கத் திருமேனியைக் காலால் அழிக்க, நாயனார் சினந்து, தாம் ஆனிரை மேய்க்கும் கோலை எடுத்தபொழுது அதுவே மழுவாய் மறுவடிவங்கொள்ள, அதனாலே அவன் காலை வெட்டி, அதற்குப் பரிசிலாகச் சிவபெருமான் சண்டேசுர பதவியில் இருத்தித் தன் முடிமேல் இருந்து எடுத்துச் சூட்டிய கொன்றை மாலையைப் பெற்றார்.

விளக்கவுரை

எனவே, 'சிவ வழிபாட்டின் மிக்க வழிபாடும் இல்லை; அதனை இகழ்தலின் மிக்க பாவமும் இல்லை' என்பதும், அங்ஙன மாகவே, 'அவ்வழிபாட்டினை இகழ்வார் எவராயினும் அவரைப் பாவிகளாகக் கருதி ஒறுத்தல் பேரறமாம்' என்பதும் குறித்தவா றாயிற்று. தமிழ் நாட்டில் வரலாற்று முறையால் உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் வழங்கி வந்த இவ்வரலாற்றினை நாயனார் இத் திருமந்திரமாக ஆக்கியருளினார். இச்சிறப்புக் கருதித் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தமது திருப்பாசுரத் திருப்பதிகத்துள்,

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு, நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலை அறவெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிவார் சொலக் கேட்டு மன்றே.

-தி.3 ப.54 பா.7

என்று அருளிச் செய்தார்.

தழைத்ததோர் ஆத்தி யின்கீழ்த் தாபரம் மணலால் கூப்பி
அழைத்தங்கே ஆவின் பாலைக் கறந்துகொண் டாட்டக்கண்டு
பிழைத்ததன் தாதை தாளைப் பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோர் அமுதம் ஈந்தார் குறுக்கை வீரட்டனாரே.

-தி.4 ப.49 பா.3

என அப்பரும் இதனை வகுத்தோதியருளினார்.

இவையெல்லாம் பற்றித் தொகையாகவும், வகையாகவும் அவ்வக்காலத்தில் வெளிப்பட்ட திருத்தொண்டர் வரலாற்றினை விரிவாகச் செய்தருளிய சேக்கிழார் நாயனார் தமது திருத்தொண்டர் புராணத்துள் இவ்வரலாற்றை விரித்தருளியவாறு இது.

'சோழநாட்டில் திருச்சேய்ஞலூரில் வைதிக அந்தணர் குலத்தில் 'எச்ச தத்தன்' என்னும் தந்தைக்கும், 'பவித்திரை' என்னும் தாய்க்கும், 'விசார சருமர்' என்னும் அரும்பெறற் புதல்வர் ஒருவர் தோன்றினார். அவர் முன்னைத் தவமுதிர்ச்சியால் கல்வியைச் சிறக்கக் கற்று, உபநயனம் பெற்று, வேதம் முதலிய கலைகளினும் வல்லவராய், 'சிவபெருமானே முழுமுதற் கடவுள்' என்று உணர்ந்து, அவனது திரு வடிக்கண் அன்பு மீதூர்ந்து நின்றார். அவர் ஒருநாள் பிற மாணாக் கருடன் வேதம் ஓதிச் செல்லுகையில் வழியில், அவ்வூர்ப் பசு மேய்க்கும் ஆயன், தன்னை முட்டிய பசு ஒன்றினைக் கோலால் நன்கு புடைத்ததைக் கண்டு வருத்தமும் சினமும் கொண்டு, 'பசுக்களின் பெருமையை அறியாத நீ இனி இவற்றை மேய்த்தல் வேண்டா; இன்று முதல் யானே இவற்றை மேய்க்கின்றேன்' என்று அன்று முதல் அவ் ஆனிரைகளை அவரே

மேய்த்து வருவாராயினார்.
அவர் அப்பசுக் களிடத்துக் கொண்ட உண்மை அன்பால் அப்பசுக்களும் அவரிடம் பேரன்பு கொண்டன. நல்ல மேய்ப்பினால் அவை தம்மை உடை யவர்க்கு முன்னையினும் மிகுதியாகப் பால் தந்தன. அதனால், 'இம் மாணியின் மேய்ப்பே நல்ல மேய்ப்பு' என ஊர் அந்தணர் பலரும் மகிழ்ந்தனர்.
பசுக்கள் பலவும் விசார சருமரைக் காணும் பொழுது தம் கன்றினைக் கண்டாற்போல அன்பு பெருகி நின்றமையால், அவற்றின் மடியில் பால் தானாகவே விம்மிப் பெருகுவதாயிற்று. சிவ வழிபாடு ஒன்றற்கே உரிய பசுக்களின் பால் வீணாவதைக் கண்ட விசார சருமர், அதனைச் சிவபெருமானுக்கு ஆக்கக் கருதித் தாம் பசுமேய்க்கும் மண்ணியாற்றங்கரையில் மணல் இலிங்கம் அமைத்து அப்பாலைக் குடங்களில் ஏற்று ஆட்டி வழிபட்டார்.
இவ்வாறு நாள் பல செல்ல, இதனை அறிந்த ஒருவன், 'பசுமேய்க்கின்ற சிறுவன் பாலைக் கறந்து மண்ணியாற்று மணலில் ஊற்றுகின்றான்' என்று அந்தணர்களிடம் சென்று கோள் உரைத்தான். அந்தணர்கள், தமக்குப் பால் குறைவறக் கிடைப்பினும், விசார சருமரது வழிபாட்டின் சிறப்பை அறியாத வர்களாய் அவர் தந்தையாகிய எச்ச தத்தனிடம் கூறினர். எச்ச தத்தன், 'நாளைமுதல் இச்செயல் நிகழாதவாறு செய்கின்றேன்' என்று உறுதி கூறி, விசார சருமர் பசு மேய்க்கச் சென்றபின், அவர் அறியாதவாறு அவர் பின்னே சென்று மண்ணியாற்றங்கரையில் ஒரு குராமரத்தின் மேல் ஏறி மறைந்திருந்து, தன் மகனாரது செயல் பலவற்றையும் நோக்கி யிருந்தான்.
அவர் முன்புபோல மணலால் கோயிலும், இலிங்கமும் செய்து, பாலைக் கொணர்ந்து வைத்துப் பூ முதலியவைகளையும் சேர்த்துக் கொணர்ந்து வழிபாட்டில் அமர்ந்து அன்புடன் வழிபடுவா ராய்ப் பாலை எடுத்துக் குடம் குடமாக ஆட்டும்பொழுது எச்சதத்தன் சீற்றம் மிகுந்து இறங்கிச்சென்று மகனாரைவைது, கோல் ஒன்றினால் முதுகில் புடைத்தும் நின்றான்.
ஆயினும் அவற்றை விசார சருமர் பூசை நினைவால் அறிந்திலர். அதனால் எச்ச தத்தன் கோபம் மூண்டு சென்று, அவர் வழிபடும் மணல் இலிங்கத்தைக் (இலிங்கத்தை இடறினமையை வாயால் சொல்லுதலும் கூடாது என்று சேக்கிழார் பாற்குடத்தை இடறியதாகக் கூறினார்) காலால் சிதைத்தான். அதனால் மிக வெகுண்ட விசார சருமர், தம் பக்கத்திருந்த பசுமேய்க் கும் கோலை எடுக்க, திருவருளால் அது மழுவாயுதமாக மாறிற்று. அதனாலே அவர் எச்சத்தத்தனது இரண்டு கால்களையும் துணிந்து வீழுமாறு வெட்டினார். எச்சதத்தன் அலறித்

துடித்து மண்ணில் விழுந்தான்.
விசார சருமர், 'இனிச் சிவபூசைக்கு வரும் இடையூற்றை நீக்குவதற்குக் கருவியாக இம் மழுப்படை திருவருளால் கிடைத்தது' என்று மகிழ்ந்து மீளவும் சிவபூசைக்கு ஆவனவற்றைச் செய்ய முயன்றார்.
அப்பொழுது சிவபெருமான் தேவர், முனிவர், கணங்கள் புடைசூழத் தோன்றிக் காட்சியளித்து, 'நம் பொருட்டு நின் தாதையைத் தடிந்த நினக்கு இனி நாமே தந்தை; நீ நம் மகன்' என்று திருவாய் மலர்ந்து, தம் கையால் அவரைத் தழுவி எடுத்து மார்போடு அணைத்து, உச்சிமோந்து சீராட்ட, விசார சருமர் முன்னை மாயா உடம்பு நீங்க, அருளுடம்பு பெற்றுச் சிவகுமாரர் ஆயினார்.
பின்பு சிவபெருமான், 'நம்மை வழிபடுவோர் நமக்கு ஆக்கிப் பெறும் நின்மாலியப் பொருள்கள் உனக்கு மட்டுமே உரியனவாக' என அருளிச்செய்து, சிவனடியார் பலர்க்கும் தலைமையாய் அவர்கட்கு அவர் தம் திருத்தொண்டின் பயனை வழங்கும் சண்ட பதவியை அவருக்கு அளித்து, அதற்கு அடையாளமாகத் தமது திருமுடியில் உள்ள கொன்றை மாலையை எடுத்துச் சூட்டியருளினார்.
நாயனாரால் தண்டிக்கப் பெற்றமையால், எச்சதத்தனும், அவனைச் சார்ந்தோரும் சிவாபராதத்தால் 'எரிவாய் நிரயம் புகாது நீங்கிச் சிவலோகத்தை எய்தினர்'.
'சண்டேசுரர்' என்பது இவரது பதவியாற் பெற்ற பெயர். கையில் தண்டு கொண்டு ஆனிரை மேய்த்து, அத்தண்டே மழுவாகப் பெற்றுப் பிழைசெய்தவனை ஒறுத்தமை பற்றி, 'தண்டீசர்' எனவும் அழைக்கப்படுகின்றார். சிவகுமாரர் ஆயினமைபற்றி இவர், 'பிள்ளையார் - சேய்ஞலூர்ப் பிள்ளையார்' எனப்படுகின்றார்.
திருத்தொண்டத் தொகை அடியவருள் ஒருவராயினமைபற்றி நாயன்மார்களுள் இவரும் அவருள் ஒருவராய் நின்று திருக்கூட்டத்து வழிபடப்படுதலே யன்றிச் சிவபெருமான் இவருக்கு அளித்த தனிச்சிறப்புக் காரணமாகச் சண்டேசுர நிலையில் நின்று தனி வழிபாடும் பெறு கின்றார்.
அதனால் இவரை நாயன்மார்களுள் ஒருவராகமட்டும் வைத்து வழிபட்டுச் சண்டேசுரராக வழிபடாது ஒழிபவர் சிவபெருமானது அருளாணையைக் கடந்தவராவர். அவர்கட்குச் சிவவழிபாட்டின் பயன் கிட்டுதல் அரிது.
இவ்வரலாற்றால் சிவவழிபாடு வீடுபேற்றைத் தரும் என்பது அறியப்படும். மற்றும், 'சிவவழிபாட்டிற்கு இடையூறு விளைப்பாரை ஒறுத்தல் பெருஞ் சிவபுண்ணியமாம் என்பது இதனால் விளங்குவது' எனச் சேக்கிழார் திருப்பாசுரத் திருக்குறிப்பருளலில் குறித்தல் காண்க.

(தி.12 திருஞான - 839)
'சிவனடியாரால் ஒறுக்கப்பெற்றவர் தம் குற்றம் முழுதும் நீங்கித் தூயராவர்' என்பது, நாயனாரால் தண்டிக்கப்பெற்ற எச்சதத்தன் குற்றம் நீங்கிச் சிவலோகம் புகுந்தமையால் அறியப்படும். 'சிவ வழிபாடு நன்கு நடைபெறுதல் காரணமாகச் செய்யப்படும் செயல்கள் யாவும் சிறந்த சிவபுண்ணியங்களே' என்பதை மாணிக்கவாசகர்,

தீதில்லை மாணி சிவகருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப ஈசன் சிவனருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்.
-தி.8 தோணோக்கம் ,7

என நன்கு எடுத்து அருளிச்செய்தார்.

ஏத நன்னிலம் ஈரறு வேலி
ஏயர்கோன் உற்ற இரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக்
கோல வெண்மணற் சிவன்றன்மேற் சென்ற
தாதை தாளற எறிந்தசண் டிக்குன்
சடைமி சைமலர் அருள்செயக் கண்டு
பூத வாளிநின் பொன்னடி அடைந்தேன்
பூம்பொ ழில்திருப் புன்கூ ருளானே. *-தி.7 ப.55 பா.3*

என்று நம்பியாரூரர் இனிது விளங்க எடுத்தருளிச்செய்தமை காண்க. இதனால், சிவபெருமான் சண்டேசுர நாயனாருக்கு வியத்தகும் அறக்கருணை செய்தமை கூறப்பட்டது.

ஓடிவந் தெல்லாம் ஒருங்கிய தேவர்கள்
வாடி முகமும் வருத்தத்துத் தாஞ்சென்று
நாடி இறைவா நமஎன்று கும்பிட
ஈடில் புகழோன் எழுகவென் றானே. ***#349***

தேவர் பலரும் பற்பல காலங்களில் பற்பல துன்பங்களை அடைந்து சிவபெருமானிடம் முறையிட்டு அத்துன்பம் நீங்குதல் வேண்டி அப்பெருமானை அவன் திருப்பெயர்கள் பலவற்றையும் சொல்லி மலர்தூவிப் போற்றிசெய்து வழிபட, சிவபெருமான் அவர்களை அத்துன்பங்களினின்றும் நீங்கச் செய்தான்.

விளக்கவுரை

எனவே, 'இங்கும், மேலேயும் கூறியவாறு தேவர், மூவர், முனிவர், அசுரர், இராக்கதர் முதலிய யாவரும் சிவபெரு மானை வழிபட்டே தாம் கருதிய பயனை அடைந்தனர்' என்பது முடித்துக் கூறியவாறாயிற்று.

*4.4.*தக்கன் வேள்வி

தந்தைபி ரான்வெகுண் டான்தக்கன் வேள்வியை
வெந்தழல் ஊடே புறப்பட விண்ணவர்
முந்திய பூசை முடியார் முறைகெட்டுச்
சிந்தினர் அண்ணல் சினஞ்செய்த போதே. *#350*

தக்கனது வேள்விக் குண்டத்தில் தீ நன்கு வளர்க்கப் பட்டபொழுது அங்குக் கூடியிருந்த தேவர், யாவர்க்கும் தந்தையும், தலைவனுமாகிய சிவபிரானை இகழ்ந்த அத்தக்கனுக்கு, முதல் ஆகுதியைச் சிவபெருமானுக்குச் செய்யுமாறு அறிவு புகட்டி அவ்வாறு செய்வித்து அவ்வேள்வியை முடிக்க மாட்டாதவராய், அவனுக்கு அஞ்சி முறை திறம்பித் திருமாலுக்கு முதல் ஆகுதியைச் செய்ய இசைந்திருந்தமையால், பின் அப்பெருமான் சினந்து வீரபத்திரரை விடுத்தபொழுது அவரால் அனைவரும் அழிந்தனர்.

விளக்கவுரை

இது முதலாகக் கூறுவன பலவற்றையும் கந்த புராணத்துட் பரக்கக் காண்க. 'வெந்தழல் ஊடே புறப்பட' என்பதை முதலிற் கொள்க. 'குண்டத்தின்' என்பது வருவிக்க. 'பிரானை' என்னும் இரண்டனுருபு தொகுத்தலாயிற்று. வெகுண்டானாகிய தக்கன் என்க. 'முந்திய பூசையால்' என உருபு விரிக்க. 'முடியார்' என்றது முற்றெச்சம். 'கெடுதலால்' என்பது, 'கெட்டு' எனத் திரிந்து நின்றது.
இதனால், அச்சம் காரணமாகச் சிவநிந்தையைத் தடுக்க மாட்டாது உடன்பட்டிருந்த தேவரைச் சிவபெருமான் ஒறுத்து முறைப் படுத்தினமை கூறப்பட்டது.

சந்தி செயக்கண் டெழுகின் றரிதானும்
எந்தை யிவனல்லம் யாமே உலகினிற்
பந்தஞ்செய் பாதத்து வீழ்ந்து தவஞ்செய்ய
அந்தமி லானும் அருள்புரிந் தானே. *#351*

வீரபத்திரர் தன்மேற்கொண்ட சினந்தணிந்து நின்றதை அறிந்து அச்சம் நீங்கி எழுந்த மாயோன் 'எம் தந்தையே; நாங்கள் இத்தக்கன் போலச் சிவநிந்தை செய்பவர் அல்லேம்; (ஆதலின், எங்களைத் துன்புறுத்தாதீர்)' என்று சொல்லி மண்ணில் பதிந்த அவரது பாதங்களில் வீழ்ந்து துதிக்க, சிவனேயாயுள்ள அவரும் அவன்மேல் இரக்கங்கொண்டு ஒறுத்தலை ஒழிந்தார்.

விளக்கவுரை

வீரபத்திரர் மாயோனை வெகுளாது சினம் தணிந்தது, அவர் அவனை ஒறுக்கச் சென்றபொழுது சிவபெருமான், வான் மொழியாக, 'சினம்

தவிர்தி' என்று கூறினமையாலாம். 'எழுகின்ற' என்பதன் ஈறு தொகுத்தலாயிற்று. தான், அசைநிலை. உம்மை, சிறப்பு. 'யாமே' என்ற ஏகாரம் அசைநிலை. இதன்பின், 'என்று' என்பது எஞ்சி நின்றது. பந்தம் - சம்பந்தம். 'உலகினில் பந்தம்செய் பாதம்' என்றது, அவ்வாறாதலின் அருமை குறித்தவாறு. 'பாசம்' என்பது பாடம் அன்று. 'தவம்' என்பது துதியை.

இதனால், சிவபெருமான் மாயோனது பிழையைப் பொறுத்து அவனுக்கு அருள்செய்தமை கூறப்பட்டது.

அப்பரி சேஅய னார்பதி வேள்வியுள்
அப்பரி சேஅங்கி அதிசய மாகிலும்
அப்பரி சேஅது நீர்மையை யுள்கலந்
தப்பரி சேசிவன் ஆலிக்கின் றானே. *#352*

மாயோன் வீரபத்திரரிடம் கூறியவாறே சிவ நிந்தை செய்பவனாகிய தக்கனது தலைமையான வேள்வியில் அக்கினி தேவன் ஏனையோர் வேள்வியிற் போலவே கிளர்ந்தெழுந்து தன் கடமையைச் செய்யமுற்பட்டது வியப்பு என்றாலும், தக்கனோ டேயன்றி ஏனைத் தேவரோடும் மாறுபடுதற்கு அஞ்சிய அவனது நிலைமையைத் திருவுளத்தடைத்து அவனுக்கு அளித்திருந்த ஆற்றலை மாற்றாது சிவபெருமான் வாளா இருந்தான்.

விளக்கவுரை

'அயன்' என்பது தக்கனுக்கும் பெயராய் வழங்கும். பதி - தலைமை. 'அந்நீர்மை' எனற்பாலதனை, 'அது நீர்மை' என்றார். 'அப்பரிசாய அந்நீர்மை' என்க; ஆலித்தல் - மகிழ்தல்; இசைந்திருந்தல். இதனால், சிவபெருமான் அக்கினிதேவனை மன்னித் தருளினமை கூறப்பட்டது. அக்கினி தேவன் கையை வெட்டினமை திருவாசகத்துத் திருவுந்தியாரில் கூறப்பட்டது. 'அது பெருந் தண்டம்' அன்று என்னும் கருத்தால் அவனது சுடும் சத்தியை மாற்றாதிருந்தமை கூறினார் என்க.

அப்பரி சேஅயன் மால்முதல் தேவர்கள்
அப்பரி சேயவ ராகிய காரணம்
அப்பரி சங்கி யுளநாளும் உள்ளிட்
டப்பரி சாகி அலர்ந்திருந் தானே. *#353*

மாயோன் வீரபத்திரரிடம் கூறியவாறே அயன், மால் முதலிய தேவர் பலரும் சிவனை நிந்தியாதொழியினும், நிந்தித்த தக்கனைத் திருத்தமாட்டதவராயினர். அன்னராயினும், தக்கனது வேள்வியில் அவர் ஒருங்கு கூடியிருந்து அவனுக்கு ஊக்கம் மிகச் செய் தமைக்குக் காரணம், தானும் அவர்போலவே அச்சங் கொண்டவனா கிய அக்கினி தேவன், ஏனை இடங் காலங்களிற் போலவே தன் கடமை யுட்பட்டுத் தன்

செயலைச் செய்யக் கிளர்ந்து நின்றமையேயாம்.

விளக்கவுரை

'காரணமாவது' என்று தொடங்கினமையால், 'அலர்ந் திருந்தான்; அதுவே' என உரைக்க. உள நாள் - பிற இடங்களில் உள்ள காலம். 'நாளும்' என்பது பாடமாயின், 'உள்ள பல நாள்களிலும் போல' என உரைக்க.

இதனால், தக்கன் வேள்வியில், குற்றத்திற்கு ஆளானவருள் அக்கினி தேவன் முதல்வனாயினமை கூறி, அவ்வாறாகவும் மன்னித் தருளினமை குறிக்கப்பட்டது. அக்கினிதேவன் தன் காரியத்தைச் செய்யாதொழியின், வேள்வி நடத்தற்கே வழி இல்லையாதல் அறிக.

'தேவர் பலர்க்கும் இடும் அவியைத் தான் சுமக்கலாற்றாத அக்கினிதேவன் ஒருமுறை நீருள் ஒளிந்துகொள்ளத் தேவர் பலரும் வருந்தித் தேடியபொழுது மீன்கள் சில அவன் நீருள் ஒளிந்திருத்தலை அறிவிக்க, அறிந்து அவனைப் பிடித்துச் சென்றனர்' என்பதொரு வரலாறு காஞ்சிப் புராணச் சகோதர தீர்த்தப் படலத்துள் கூறப்படுதலை நோக்குக.

அலர்ந்திருந் தானென் றமரர் துதிப்பக்
குலந்தருங் கீழங்கி கோளுற நோக்கிச்
சிவந்த பரமிது சென்று கதுவ
உவந்த பெருவழி யோடிவந் தானே. ***#354***

அக்கினிதேவன் கிளர்ந்தெழுந்தமைக்குத் தக்கன் முன்னிலையில் தேவர் பலரும் அவனைப் புகழத் தேவ கூட்டத்துள் கடைப்பட்டவனாகிய அக்கினிதேவன் முதற் குற்றவாளி யாயினமையை அறிந்து சிவபெருமான் கொண்ட சினமாகிய மேலான தீ அவ்வேள்விச் சாலையிற் சென்று பற்ற, அக்கினிதேவன் தனக்குப் பொருந்தியதொரு பெரிய கள்ள வழியினால் வேள்விச் சாலையை விட்டு வெளியே ஓடி வந்து விட்டான்.

விளக்கவுரை

வைதிகருள் கருமகாண்டிகள், தேவர் பலர்க்கும் அவரது அவியைச் சுமந்து சென்று கொடுத்தல்பற்றி அக்கினி தேவனை, 'தேவர் பலர்க்கும் கீழ்ப்பட்டவன்' - விண்டு பரமன். அக்கினி அவமன்: அவ்விருவர்க்கும் இடையே எல்லாத் தேவரும் *(சிவஞானபோத மாபாடியம் சூ.1 அதி.2)* என்பர். அவர் கொள்கையே தக்கன் வேள்விக்குப் பொருந்தியது ஆதலின், 'குலந்தரும் கீழ் அங்கி' என்றார். 'குலத்தால் தரப்பட்ட கீழ்மையை உடைய அங்கி' என்க. கோள் - குற்றம். சிவந்த - கோபித்த. சிவத்தற்கு வினைமுதல் வருவிக்கப்பட்டது. சிவந்த இது - சினந்ததனால்

வந்த இத் தீ. 'அது' எனின், அக்கினி தேவனைச் சுட்டுமாகலின், 'இது' என்றார். 'கீழ் அங்கி' என்றதற்கு ஏற்ப, 'பரம் இது' என்றார். கீழான தீ மேலான தீயின்முன் நிற்கலாற்றுமோ என்பது நயம். சிவபெருமானது சினத் தீயாவது, வீரபத்திரரே என்பது வெளிப்படை. 'தீ' என்றதற்கு ஏற்ப, 'கதுவ' என்றார்.
இதனால், தக்கன் வேள்வியுள் ஓட்டமெடுத்தவருள் முதல்வன் அக்கினிதேவன் என்பது கூறப்பட்டது.

அரிபிர மன்தக்கன் அற்க னுடனே
வருமதி வாலையும் வன்னிநல் இந்திரன்
சிரம்முகம் நாசி சிறந்தகை தோள்தாம்
அரனருள் இன்றி அழிந்தநல் லோரே. ***#355***

சிவபெருமானது கருணையைப் பெறாமையால், தலை, முகம், கை, தோள் என்பவற்றை இழந்த குற்றவாளிகள் முறையே, 'மால், அயன், தக்கன்' என்பவரும், சூரிய சந்திரர் கலை மகளும், அக்கினிதேவனும், அழகிய இந்திரனும் ஆவர்.

விளக்கவுரை

'தலை' என்றதைத் திருமாலுக்கு 'தலைமை' என்ற வாறாகக் கொள்க. எண்ணொடுவின் பொருட்டாகிய 'உடனே' என்ற தனால், 'சூரிய சந்திரர்' என ஒரு தொகையாக்குக. வாலை - வெண் ணிறம் உடையவள். இதனைத் தக்கன் மனைவிதன் பெயர் என்பாரது உரைக்குச் சான்றில்லை. தக்கன் மனைவி பெயர், 'வேதவல்லி' என்றே கந்தபுராணத்துட் கூறப்பட்டது. இதனுள்ளன்றித் திருவாசகத்தும்,
'நாமகள் நாசி சிரம்பிர மன்படச்
சோமன் முகனெரித் துந்தீபற;
தொல்லை வினைகெட உந்தீபற'
-தி.8 திருவுந்தியார், 13.
என நாமகள் நாசி அறுபட்டமை கூறப்பட்டது. 'முகம்' என்பது 'வாய்' எனவும் பொருள்தருமாகலின், அதனை இரட்டுற மொழிந்து, 'அருக்கன் (சூரியன்) பல்லிழந்தான்' என்க.
'சூரிய னார்தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவா றுந்தீபற;
மயங்கிற்று வேள்வியென் றுந்தீபற'
-தி.8 திருவுந்தியார், 15
என்றருளினமை காண்க.
இந்திரன் போகியாதலைக் குறிக்க, 'நல் இந்திரன்' என்றார். 'நல்லோர்' என்றது இகழ்ச்சி பற்றி.
இதனால், தக்கன் வேள்வியில் தேவர் பலரும் பலவாற்றால்

ஒறுக்கப்பட்டமை கூறப்பட்டது.

செவிமந் திரஞ்சொல்லுஞ் செய்தவத் தேவர்
அவிமந் திரத்தின் அடுக்களை கோலிச்
சவிமந் திரஞ்செய்து தாமுற நோக்குங்
குவிமந் திரங்கொல் கொடியது வாமே. *#356*

தம் ஆசிரியர் தம் செவியிலே சொல்லக் கேட்ட மந்திரத்தை அவ்வாறே பொருளறியாது ஒப்புவிக்கின்ற அதனையே தவமாகக் கொண்ட நிலத்தேவர் (பூ சுரர்) ஆகிய அந்தணர்கள் அந்நிலை பிறழ்ந்து தக்கன் ஆணைவழியே யாகசாலை அமைத்து, அதில் நெருப்புக் குண்டம் விளைத்து, சிவபெருமானைப் புகழ்ந்து கூறும் மந்திரங்களைப் பிறரைப் புகழ்ந்து கூறும் மந்திரங்களாக மாற்றும் முகத்தால் அப்பெருமானை இகழ்ந்து, தாங்கள் நலம் பெற நினைத்து மிகச் சொல்லிய மந்திரங்கள், அவரையே கொல்கின்ற மரண மந்திரங்களாய் விட்டன.

விளக்கவுரை

அவி மந்திரம் - அவிசை வழங்கும் இல்லம். யாக சாலை. அடுக்களை - அட்டில்; என்றது தீக் குண்டத்தை. சவித்தல் - சபித்தல்; இகழ்தல். மூன்றாம் அடியிலும், செவி மந்திரம் என ஓதுதல் பாடம் அன்று. குவி மந்திரம் - குவித்த மந்திரங்கள். 'கொடியது' என்றது பன்மை மயக்கம். 'ஆம்' என்றது, 'அவை அன்னவாதல் இயல்பு' என்றவாறு.
இதனால், சிவபெருமானை இகழ்ந்தவர்க்கு மந்திரங்கள் கேடு விளைத்தமை கூறப்பட்டது.

நல்லார் நவகண்டம் ஒன்பதும் இன்புறப்
பல்லார் அமரர் பரிந்தருள் செய்கென
வில்லார் வரையை விளங்கெரி கோத்தனன்
பொல்லா அசுரர்கள் பொன்றும் படிக்கே. *#357*

நல்லோர்கள், நவகண்டமாகிய ஒன்பது கூறுபட்ட இடங்களிலும் துன்பம் நீங்கி இன்புற்று வாழ்தற் பொருட்டுத் தேவர் பலரும், 'எமக்கு விரைந்து அருள்செய்க' என வேண்ட, மலையை வில்லாகக் கொண்ட சிவபெருமானே, தீய அசுரர்கள் அழியும்படி ஒளிவிடுகின்ற நெருப்பாகிய அம்பைத் தொடுத்தான்.

விளக்கவுரை

அவ்வாறாக, அத்தேவர் தக்கன் வேள்வியில் அவியை உண்ண அப்பெருமானை விலக்கித் தாம் மட்டுமே சேர்ந்திருந்தது என்னை' என்பது குறிப்பெச்சம். மாணிக்கவாசகரும் இவ்வாறே,
'சாவமுன் னாள்தக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சம் அஞ்சி
ஆவஎந் தாய்என் றவிதா இடும்நம் மவர் அவரே'

- தி.8 திருச்சதகம், 4

எனத் தேவரது இரங்கத்தக்க நிலையை எடுத்தோதியருளினார். 'நல்லோர் இன்புற' என இயையும். 'நவகுண்டம்' என்பது பாடம் அன்று. 'ஒன்பதும்' என்றது, 'முழுதும்' என்றவாறு. 'ஒன்பதன் கண்ணும்' என உருபு விரிக்க. நாவலம்பொழில் ஒன்பது கண்டமாதல் பற்றி, உலகத்தை 'நவகண்டம்' எனக் குறித்தல் வழக்கு. ஐ - தலைவன். 'ஐயே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தல். 'பொன்றும்படிக்கு விளங்கு எரி கோத்தனன் வில்லார் வரை ஐ' எனக் கூட்டுக. மூன்றாம் அடியின் பாடம் பலபட ஓதப்படுகின்றன.

இதனால், தேவர்கள் தக்கன் வேள்வியில் சென்றமை நன்றி கோறலாதல் கூறப்பட்டது.

நெளிந்தார் கலங்கினும் நீகலங் காதே
அளிந்தாங் கடைவதெம் ஆதிப் பிரானை
விளிந்தா னதுதக்கன் வேள்வியை வீயச்
சுளிந்தாங் கருள்செய்த தூய்மொழி யாளே. ***#358***

சிவபெருமானை இகழ்ந்தமையால் அப்பொழுதே செத்தவனாகிய தக்கனது வேள்வியை அழியுமாறு வைதும், பின்னர் அழிந்த அனைவரையும் மீள எழுமாறு வாழ்த்தியும் அருளிச் செய்த வாய்மையை உடைய எங்கள் உமாதேவியே, யாவர் தங்கள் மனத் திட்பத்தை இழந்து நிலைகலங்கிப் பிறரைச் சார்ந்தபோதிலும், நீ நிலை கலங்காமலே நின்று அன்போடு அணைவது எங்கள் சிவபெரு மானையே யன்றோ!

விளக்கவுரை

படர்க்கையில் வைத்து வியக்கற்பாலளாய உமா தேவியை முன்னிலைப்படுத்து வியந்தார், அச்சுவை மிக்கு விளங்குதற் பொருட்டு, பின் இரண்டடிகளை முதலில் வைத்து உரைக்க. நெளிதல் - நெகிழ்தல். 'தெளிந்தார்' என்பது பாடம் அன்று. 'ஆர் நெளிந்து கலங்கினும்' என மாற்றுக. அளிந்து - அன்பு மிக்கு. 'ஆதிப் பிரானையே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. 'விளிந்தான்' என்றது துணிவு பற்றி எதிர்காலத்தை இறந்த கால மாகக் கூறியது. சுளிந்து - வெகுண்டு. 'சுளிந்துகூறி' என ஒரு சொல் வரு விக்க. தக்கன் தனது வேள்வியைத் தொடங்கிய பொழுது, உமை அம்மை தன்னை அவன் அழையாதிருக்கவும் சென்று அவனுக்கு அறிவுரை கூறியும் கேளாமையால், அவனது வேள்வி அழியும்படி சபித்து மீண்டமையும், பின்னர் வீரபத்திரரால் யாவரும் அழிந்து கிடந் தமையைச் சிவபெருமானுடன் அங்கு அவள் எழுந்தருளியபொழுது கண்டு இரக்கம் உற்று அவர்களை உயிர்ப்பித்தருளுமாறு சிவபெரு மானை வேண்டினமையும் கந்தபுராணத்தால் அறிகின்றோம். அம்மையை

வியக்கும் முகத்தால் தேவரது இழிபுணர்த்தியவாறு. இதனால், உமாதேவி தனது செயலால் ஏனையோர்க்கு உண்மை யுணர்த்தினமை கூறப்பட்டது.

*4.5.*பிரளயம்

கருவரை மூடிக் கலந்தெழும் வெள்ளத்
திருவருங் கோவென் றிகல இறைவன்
ஒருவனும் நீருற ஓங்கொளி யாகி
அருவரை யாய்நின் றருள்புரிந் தானே. ***#359***

கரிய மலைகள் பலவற்றையும் உள்ளடக்கிக் கொண்டு மேல் எழுந்து பரந்த பிரளய வெள்ளத்திடையே மால், அயன் இருவரும் தாமே தலைவர் எனத் தனித்தனிக் கூறிப் போர்புரியச் சிவபெருமான் ஒருவனும் அந்நீர் வறப்பச் செய்து அவர்க்கிடையே ஓங்கிய ஒளியாகிய, அணுகுதற்கு அரிய நெருப்பு மலையாய் நின்று, பின்னர் அவர்கட்கு அருள் செய்தான்.

விளக்கவுரை

இவ்வரலாறு மேலே *(தி.10 பா. 345)* காட்டப்பட்டது. கோ - தலைவன். இது பன்மை ஒருமை மயக்கமாயிற்று. 'ஆகிய' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.
இதனால், பிரளய காலத்தில் அயன் மால் இருவரும் இகலினமை இனிது விளங்கக் கூறப்பட்டது.

அலைகடல் ஊடறுத் தண்டத்து வானோர்
தலைவன் எனும்பெயர் தான்தலை மேற்கொண்
டுலகார் அழற்கண் டுள்விழா தோடி
அலைவாயில் வீழாமல் அஞ்சலென் றானே. ***#360***

சிவபெருமான் பிரளய வெள்ளத்தில் மேற்கூறிய வாறு அனற்பிழம்பாய்த் தோன்றியபொழுது அலைகின்ற கடலை ஊடறுத்துக் கீழ்ப்போகியும், வானத்தை ஊடறுத்து மேற்போகியும் அடி தலை தெரியாவகை நின்று, 'தேவர்க்கும் முதல்வன்' என்னும் சிறப் பினைத் தான் உடையவனாய் இருத்தலின், உலகம் தான் கொண்ட தழல் வடிவைக் கண்டு வெருண்டு அதனுள் வீழ்ந்து ஒடுங்காதவாறும், அதனினின்றும் சேய்மையில் ஓடிப் பிரளய வெள்ளத்தில் வீழ்ந்து அழியாதவாறும் அவற்றிற்கு, 'அஞ்சல்' என்று அபயந்தந்து காத்தருளினான்.

விளக்கவுரை

எனவே, 'தெறலும், அளியும் அவ்வவர்க்கு ஏற்ற வாற்றாற் செய்யும் அவனது தலைமைப் பாடு இனிது விளங்கும்' என்றவாறு.
'கொள்ளுதலால்' என்பது 'கொண்டு' எனத் திரிந்து நின்றது. தான்

தலைவன் எனப்படுதலால் அவனுக்கு உளதாவது ஒரு பயன் இல்லை. அனைத்தையும் உய்விக்கும் சுமையே உளதாவது என்றற்கு, 'தலைவன் எனும் பெயர், தான் தலை மேற்கொண்டு' என்றார். இதற்குக் காரணம் கைம்மாறு கருதாத கருணையே என்பதாம். 'எடுத்துச் சுமப்பான்' என்றார் திருவருட்பயனில் *(பா.65).*
இதனால், சிவபெருமான் தெறலும் அளியும் அக்காலத்துச் செய்து நின்றமை கூறப்பட்டது.

தண்கடல் விட்ட தமரருந் தேவரும்
எண்கடல் சூழெம் பிரானென் றிறைஞ்சினர்
விண்கடல் செய்தவர் மேலெழுந் தப்புறங்
கண்கடல் செய்யுங் கருத்தறி யாரே. ***#361***

தண்ணிய கடல் பொங்கி வந்து மலைகளை மூடிய நிலையின் நீங்கி அடங்கிற்று; எனவே, பிரளய வெள்ளம் வற்றிற்று. அதுபொழுது தேவர்கள், 'ஏழ்கடலோடு பெரும்புறக் கடலும் தன்னைச் சூழ்ந்து நிற்கத் தான் ஓங்கிய அழலாய் நின்றவன் எங்கள் சிவபெருமானே' என அவனைப் பலவாற்றால் துதித்து வணங்கினர். அதன்பின்பு அவர்கள் விண்ணுலகத்தைக் கடல்போலப் பரக்க அமைத்துக்கொண்டு, அங்குச் சென்று குடிபுகுந்தனர். அதன்பின்பு அவர்கள் தங்கள் சுவர்க்க இன்பத்தில் திளைக்கின்றனரேயன்றிச் சிவபெருமானை நினைந்து காதலாகிக் கசிந்து, கண்ணீரால் கடலை உண்டாக்கும் எண்ணமே இலராயினர்.

விளக்கவுரை

'இறைஞ்சுவர்' என்பது பாடம் அன்று.
இதனால், ஊழிதோறும் உயிர்கள் சிவபெருமானது முதன்மையை மறந்து வினையிற் சுழலுதல் கூறப்பட்டது.

சமைக்கவல் லானைச் சயம்புவென் றேத்தி
அமைக்கவல் லாரிவ் வுலகத்து ளாரே
திகைத்ததெண் ணீரிற் கடலொலி ஓசை
மிகைக்கொள அங்கி மிகாமைவைத் தானே. ***#362***

சிவபெருமான் ஒளிப் பிழம்பாய்த் தோன்றிப் பிரம விட்டுணுக்களது மயக்கத்தை நீக்கித் தெளிவித்தபின், யாவரும் திசை தெரியாது திகைக்கும்படி எழுந்த பிரளய வெள்ளம் குறையச் செய்து, பின்பு கடல் ஒலிக்கின்ற ஓசை மிக, அதனைக் கேட்டு அக்கடல் அடங்கி என்றும் அளவுட்பட்டு நிற்குமாறு அதன் நடுவில் வடவைத் தீயை வைத்தான். இவ்வாறு ஒன்றோடு ஒன்று ஒத்தும், ஒவ்வாதும் நிற்கும் ஆற்றல்களை ஏற்குமாற்றாற் கூட்டி உலகம் நெறிப்பட்டு நடக்குமாறு ஆக்கிக் காத்து நடத்த வல்லவனும், அவ்வாறு தன்னை ஆக்குவார் ஒருவர் இன்றித்

தானே என்றும் ஒருபெற்றியனாய் நிற்பவனும் ஆகிய அப்பெருமானை அத்தன்மையன் என்று அறிந்து துதித்து உளத்துள் இருத்த வல்லவர் இவ்வுலகத்து உளரோ! இல்லை.

விளக்கவுரை

பின் இரண்டு அடிகளை முதலிற்கொண்டு உரைக்க. சயம்பு 'சுயம்பு' என்பதன் திரிபு. சுயம்பு - தானே தோன்றியவன். 'உலகத்து உளாரே' என்னாது, 'உலகத்துள் ஆரே' என்றலுமாம். அது மிகாமை அங்கி வைத்தான் என்க. இக்கருத்து முன்னேயும் *(தி.10 பா.57)* கூறப்பட்டது. இதனுள் ஈரடி எதுகை வந்தது.
இதனால், சிவபெருமான் ஊழி முதல்வனாதல் கூறப்பட்டது.

பண்பழி செய்வழி பாடுசென் றப்புறங்
கண்பழி யாத கமலத் திருக்கின்ற
நண்பழி யாளனை நாடிச்சென் றச்சிரம்
விண்பழி யாத விருத்திகொண் டானே. ***#363***

சிவபெருமான் ஒளிவடிவாய்த் தோன்றித் தனது தலைமையைப் பலவாற்றானும் விளக்கியருளியபொழுது, வேதங்கள் அவனை நல்ல இசைகளால் துதித்தன. அப்பால் அப்பெருமான் தாழ் வின்றிச் சிறந்து நிற்கின்ற இடமாகிய தாமரைப் பொகுட்டில் வீற்றிருக் கின்ற பிரமன் முன்னே செல்ல, அவன், 'மகனே' என விளித்து இகழ்ந்ததனால் உண்டாகிய குற்றத்தை உடையவனாயினமை பற்றி அவன் மேற் சென்று கிள்ளிக்கொண்ட அவனது ஐந்து தலைகளில் தன்னை இகழ்ந்த நடுத்தலையில் ஏனைத் தேவரும் அவனைப் போலத் தன்னைப் பழித்துக் குற்றத்திற்கு ஆளாகாதவாறு அவரிடத்தெல்லாம் உஞ்ச விருத்தியை *(பிச்சை ஏற்றலை)* மேற்கொண்டான்.

விளக்கவுரை

'பண் பழி' என்றதற்கு, 'பண்ணாற் பழிச்சுதல்' என உரைக்க. 'இப் பழிச்சுதலாகிய வழிபாட்டினைச் செய்தவை வேதங்கள்' என்பது ஆற்றலால் கொள்ளப்பட்டது. இவ்வாறன்றி, 'பண்' என்றதனை ஆகுபெயராக்கி, 'வேதம்' என்று உரைப்பினும் ஆம். முதற்கண் 'சென்ற' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தல். கண் - இடம். சென்ற - கழிந்த. பழியாத - இகழப்படாத; என்றது, 'புகழத் தக்க' என்றவாறு. இத்தகைய சிறந்த இடத்தில் இருப்பவன் அதற்கேற்ற அறிவுபெற்றிருக்கவில்லை என்பது குறிப்பு. நண்பழி, வினைத் தொகை. ஆளன் - அதனை உடையவன். 'சென்று' என்றது, சென்று கொய்த தன் காரியம் தோன்ற நின்றது. 'சிரத்தின்கண்' என உருபு விரிக்க. பழியாத விருத்தி - இகழாமைக்குக் காரணமான தொழில்.

இதனால், மேல், *'அயன்தலை முன் அற' (தி.10 பா.337)* என ஓதப்பட்ட வரலாறும் இப்பொழுதே நிகழ்ந்தது என்பது கூறப்பட்டது.

4.6.சக்கரப் பேறு

மால்போ தகனென்னும் வண்மைக்கிங் காங்காரங்
கால்போதங் கையினோ டந்தரச் சக்கரம்
மேல்போக வெள்ளி மலைஅம ரர்பதி
பார்போக மேழும் படைத்துடை யானே. ***#364***

'திருமால் அறத்தை அறிவுறுத்தும் ஆசிரியன்' என்னும் சிறப்பு நிலைபெறுதற் பொருட்டு, இவ்வுலகில் கீழோர் தம் அகங்காரத்தை வெளிப்படச் செய்யும்பொழுது, அவனது கையோடே சக்கரப் படையும் அகங்கரித்தவர் மேற்சென்று அழித்து நிலை நிறுத்தும்படி, திருக்கயிலையில் வீற்றிருக்கின்ற தேவர் தலைவனாகிய சிவபெருமான் ஏழுலகத்து இன்பத்தையும் படைத்துள்ளான்.

விளக்கவுரை

'சக்கரம் மேல்போக ஏழும் படைத்துள்ளான்' என்றாரேனும், 'ஏழு பார் போகமும் படைத்து அவற்றை நிலை நிறுத்தச் சக்கரம் மேற்போக அளித்துள்ளான்' என்றல் கருத்து என்க. போதகன் - போதிப்பவன். இதற்கு 'அறம்' என்னும் செயப் படுபொருள் வருவித்துக்கொள்க. திருமால் அறத்தைப் போதித்தல் சில நூல்களாலும், கொடியோரை அழிக்கும் செயலாலுமாம். கால் போது - வெளிப்படுத்தும்பொழுது: என்றது, 'செருக்கினால் அறத்தை அழிவுசெய்து ஒழுகும்பொழுது' என்றதாம். 'அங்கையினோடு' என்றது, 'வறுங்கையால் போர் செய்யாது வலியதொரு கருவி கொண்டு போர் செய்தற்கு' என்றபடி. அம் - அழகு. தரம் - மேன்மை. 'மேல் சலந்தராசுரனை அழித்தற் பொருட்டுச் சிவபெருமான் உண்டாக்கியதாகக் கூறிய சக்கரத்தைத் திருமால் பெற விரும்பிச் சிவபெருமானை நாள்தோறும் ஆயிரம் தாமரை மலர்களால் அருச் சித்து வழிபட்டு வர, ஒருநாள் அவற்றுள் ஒரு மலரைச் சிவபெருமான் மறைத்தருளத் திருமால், அம்மலருக்கு ஈடாகத் தமது கண்ணைப் பறித்து அப்பெருமான் திருவடியில் சாத்தினார். அதனால் மகிழ்ச்சி யுற்ற சிவபெருமான் அவருக்கு அக்கண்ணை அளித்து, அவர் விரும்பிய அச் சக்கரப் படையையும் அளித்தருளினார்' என்பதும் கந்த புராணத்துள் அங்குத் தானே கூறப்பட்டது. கண்ணைத் தாமரை மலராகச் சாத்தினமையால், திருமாலுக்குச் சிவபெருமான், 'பது மாட்சன்' (தாமரைக் கண்ணன்) என்னும் பெயரையும் அளித்தார் என்பது, காஞ்சிப் புராணத் திருமாற்பேற்றுப் படலத்துட் கூறப்பட்டது.

இவ்வரலாறு,

சலமுடைய சலந்தரன்ற னுடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ,

நலமுடைய நாரணன்தன் நயனம்இடந் தரனடிக்கீழ்
அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ.
-*தி.8 திருச்சாழல், 18*
எனவும்,
பங்கயம் ஆயிரம் பூவினில்ஓர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேல் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரம்மாற் கருளியவா
றெங்கும் பரவிநாம் தோணோக்கம் ஆடாமோ.
-*தி.8 திருத்தோணோக்கம், 10*
எனவும் திருவாசகத்து எடுத்தோதப்பட்டது.
இதனால், திருமால் தமது காத்தல் தொழிலை இனிது நடத்தற் பொருட்டு அவருக்குச் சிவபெருமான் சக்கரம் அளித்தருளினமை கூறப்பட்டது.
இவ்வரலாற்றைக் குறிக்கும் தலங்கள் திருவீழி மிழலையும், திருமாற்பேறுமாம். இதனை ஞானசம்பந்தர், நாவுக்கரசர் தேவாரங்களால் அறிக.

சக்கரம் பெற்றுநல் தாமோ தரன்தானும்
சக்கரந் தன்னைத் தரிக்கவொண் ணாமையால்
மிக்கரன் தன்னை விருப்புடன் அற்சிக்கத்
தக்கநற் சத்தியைத் தான்கூறு செய்ததே. ***#365***

சக்கரத்தைப்பெற்ற திருமால் பின்பு அதனைத் தாங்கும் ஆற்றல் இல்லாமையால் மீளவும் சிவபெருமானை அன்புடன் வழிபட, அவர்க்கு அதனைத் தருதற்பொருட்டு அப்பெருமான் தனது சத்தியைத் கூறிட்டமை வியக்கத்தக்கது.

விளக்கவுரை

இவ்வரலாறு இந்நூலாலே அறிகின்றோம். 'மிக்க' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'செய்தது' என்றதன்பின், 'வியப்பு' என்பது எஞ்சிநின்றது.
இதனால், சிவபெருமான் திருமாலுக்குச் சக்கரத்தை அளித்ததேயன்றி, அதனைத் தாங்கும் ஆற்றலையும் அளித்தமை கூறப்பட்டது.

கூறது வாகக் குறித்தநற் சக்கரம்
கூறது செய்து கொடுத்தனன் மாலுக்குக்
கூறது செய்து கொடுத்தனன் சத்திக்குக்
கூறது செய்து தரித்தனன் கோலமே. ***#366***

சிவபெருமான், சலந்தராசுரன் உடலைப் பிளக்கக் கருதி உண்டாக்கிய சக்கரத்தைத் திருமாலுக்கு உரியதாகக் கொடுத் தான்; அதன்மேலும், அச் சக்கரத்தைத் தாங்குதற்பொருட்டுத் தனது சத்தியைக் கூறிட்டு அவனுக்குக் கொடுத்தான். அச் சத்திக்குத் தனது திருமேனியையே

கூறிட்டுக் கொடுத்தான்.

விளக்கவுரை

'அவனது கருணைப்பெருக்கு அளவிடற்கரிது' என்பது குறிப்பெச்சம். 'சிவபெருமான்' என்பதுதோன்றா எழுவாயாய் நின்றது. 'சத்தி' என்பது மூன்றாம் அடி முதலிலும் சென்று இயைந்தது.

இதனால், இயைபு பற்றி சிவபெருமானது வள்ளன்மையின் பெருமை கூறப்பட்டது.

தக்கன்றன் வேள்வி தகர்த்தநல் வீரர்பால்
தக்கன்றன் வேள்வியில் தாமோ தரன்தானுஞ்
சக்கரந் தன்னைச் சசிமுடி மேல்விட
வக்கி உமிழ்ந்தது வாயுக் கிரத்திலே. ***#367***

தக்கன் வேள்வியை அழித்த சிவகுமாரராகிய வீரபத்திரர்மேல் திருமால் போருக்குச் சென்று சந்திரனை அணிந்த அவரது தலையை அறுக்க என்று, முன்பு தான் சிவபெருமானிடம் பெற்ற சக்கரத்தை ஏவ, அஃது அவர் தமது வாயாற் செய்த உங்காரத்தாலே நாணி வலியிழந்தது.

விளக்கவுரை

இவ்வரலாற்றையும் கந்தபுராணத்துட் காண்க. 'வட்கி' என்பது திரிந்து நின்றது. உமிழ்தலுக்கு, 'வலிமை' என்னும் செயப்படு பொருள் வருவிக்க. வாய் உக்கிரம், உங்காரம்.

இதனால், சிவபெருமானது ஆற்றற் சிறப்பு அவ்வாற்றானே கூறப்பட்டது.

<u>*4.7.*எலும்பும் கபாலமும்</u>

எலும்புங் கபாலமும் ஏந்தி எழுந்த
வலம்பன் மணிமுடி வானவ ராதி
எலும்புங் கபாலமும் ஏந்தில னாகில்
எலும்புங் கபாலமும் இற்றுமண் ணாமே. ***#368***

இறந்தாரது எலும்புகள் பலவற்றையும், தலைகள் பலவற்றையும் தாங்கி நிற்பவனாகிய சிவபெருமான், அவ்வாறு காட்சியளிக்கின்ற வெற்றிப்பாடு, அவன் தேவர் பலர்க்கும் முதல்வ னாதலை விளக்கும். அதுவன்றியும், அவன் அவற்றைத் தாங்கா தொழிவனாயின், அவை உலகில் நிலைபெறாது அழிந்தொழியும்.

விளக்கவுரை

'ஏந்தி' என்பது பெயர். வினையெச்சமாகக் கொண்டு எழுவாய் வருவித்தலுமாம். வலம் - வெற்றிப்பாடு. 'பல் வானவர்' என இயையும். 'வலம்' என்ற எழுவாய், 'ஆதி' என்றதன்பின் எஞ்சி நின்ற 'என்னும்'

என்பதனோடு முடிந்தது.
'சிவபெருமான், இறந்த தேவரது எலும்புகள் பலவற்றையும், பிரமரது தலைகளையும் மாலையாகக் கோத்து அணிந்தும், ஒருகாலத்தில் சேர இறக்கும் பிரம விட்டுணுக்களது கங்காளத்தினை (எலும்புக் கூட்டினைத்) தோள்மேல் சுமந்தும் நிற்கின்றான்' என்பது, 'அவர் யாவரும் வினைவயத்தால் பல்காலும் பிறந்து இறக்கின்ற பசுக் கூட்டத்தினரேயாகத் தான் ஒருவனே பிறப்பு இறப்பு இன்றி என்றும் ஒரு பெற்றியனாய் நின்று அனைத்துயிர்கட்கும் பந்தம் வீடுதரும் பதியாகின்றான் என்பதை விளக்கும்' என்பது கூறியவாறு. மாணிக்க வாசகரும்,

நங்காய்இ தென்னதவம், நரம்போ டெலும்பணிந்து
கங்காளந் தோள்மேலே காதலித்தான் காணேடீ!
கங்காளம் ஆமாகேள்; காலாந் தரத்திருவர்
தங்காலம் செய்யத் தரித்தனன்காண் சாழலோ
-தி.8 திருச்சாழல், 11

என்று அருளிச்செய்தார்.
'அரிபிரமேந்திராதி தேவர் பலரும் நிலையாமையுட்பட்ட பசுக்களேயாகச் சிவபெருமான் ஒருவனே என்றும் ஒருபெற்றியனாய பதி' என்பதனைத் திருநாவுக்கரசர்,

நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்;
ஆறு கோடிநா ராயணர் அங்ஙனே;
ஏறு கங்கை மணல் எண்ணில் இந்திரர்;
ஈறி லாதவன் ஈசன் ஒருவனே. -தி.5 ப.100 பா.3

என விளக்கியருளினார்.
'எலும்பையும், தலையையும் அணிந்த கோலம் மேற்குறித்த உண்மையேயன்றி, அவன் காரியப் பிரபஞ்சத்தைத் தாங்கி நிற்றலையும் உணர்த்தும்' என்பது பின்னிரண்டடிகளிற் கூறப்பட்டது. இதனானே, 'சாம்பலை அணிதல், காரணப் பிரபஞ்சத்தைத் தாங்கி நிற்றலை உணர்த்தும்' என்பதும் கொள்ளப்படும்.
சிவபெருமான் கங்காளத்தை ஏந்தி நிற்றலைக் குறிக்கும் தலங்களே 'காயாரோகணம்' எனப்படுகின்றன. காயாரோகணம், 'காரோணம்' என மருவி வழங்கும்.
இதனால், 'சிவபெருமான் எலும்பு முதலியவற்றை அணிந்த கோலத்தினன்' என்பதன் உண்மை விளக்கப்பட்டது.

4.8.அடிமுடி தேடல்

பிரமனும் மாலும் பிரானேநான் என்னப்

பிரமன்மால் தங்கள்தம் பேதைமை யாலே
பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க
அரனடி தேடி அரற்றிநின் றாரே. ***#369***

பிரமனும், திருமாலும் 'நானே கடவுள், நானே கடவுள்' என்று சொல்லிப் போர் புரிய, அவர்களது பேதைமையை நீக்குதற் பொருட்டுச் சிவபெருமான் அனற் பிழம்பாய் ஒளிவீசி நிற்க, அவ்விருவரும் அவனது திருவடியைத் தேடிக் காணாமல் புலம்பினர்.

விளக்கவுரை

இவ்வரலாறு மேலே காட்டப்பட்டது. *(தி.10 பா.345)* 'நானே பிரான்' என மாற்றித் தனித்தனிக் கூட்டி உரைக்க. பின்னும், 'பிரமன் மால்' என்றது சுட்டுப் பெயரளவாய் நின்றது. தங்கள் தம் பேதைமை - தம் தம் பேதைமை. 'பேதைமையாலே நிற்க' என்றது, 'கள்வனால் திரண்டனர் மக்கள்' என்பதுபோல நின்றது. 'அரனடி தேடி' என, அடியை மட்டுமே குறித்தது, அவ்வரலாற்றைத் தொகுத்துக் கூறியபடி. 'அரற்றுகின்றாரே' என்பதே பாடமாக ஓது கின்றனர்.

இதனால், சிவபெருமான் பேதைமையாளர்க்கு அறிய ஒண்ணாதவன் என்பது கூறப்பட்டது.

அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்
படிகண் டிலர்மீண்டும் பார்மிசைக் கூடி
அடிகண் டிலேன்என் றச்சுதன் சொல்ல
முடிகண்டேன் என்றயன் பொய்மொழிந் தானே. ***#370***

மாலும் பிரமனும் முறையே சிவசோதியின் அடியையும், முடியையும் காண முயன்று அவற்றின் உருவத்தைக் காணமாட்டாதவராய் மீண்டும் முன்பு இருந்த இடத்தில் வந்து கூடிய பின்பு, திருமால், 'நான் அடியைக் காணவில்லை' என்று உண்மையைச் சொல்ல, பிரமன், 'நான் முடியைக் கண்டேன்' என்று பொய் சொன்னான்.

விளக்கவுரை

'அதனால் அவன் இவ்வுலகில் தனக்குக் கோயில் இலனாயினான்' என்பது குறிப்பெச்சம். 'அடி, முடி' என்றவற்றை 'அயன் மால்' என்பவற்றொடு எதிர்நிரனிறையாக இயைத்தல் வேண்டும் என்பது பின்னிரண்டடிகளில் விளங்கும். இத்திருமந்திரம் பாயிரத்ததாகாது, ஈண்டையதே என்பதுமேலே குறிக்கப்பட்டது.

இதனால், மால், அயன் என்னும் இருவரது தகுதி வேறு பாடுகள் கூறப்பட்டன.

ஆனே முலகுற நின்றஎம் அண்ணலுந்
தானே முலகில் தழற்பிழம் பாய்நிற்கும்

வானே மூலகுறும் மாமணி கண்டனை
யானே அறிந்தேன் அவன்ஆண்மை யாலே. *#371*

விரிந்த பரந்த அனைத்துலகிலும் நுண்ணியனாய் நிறைந்து நிற்கின்ற சிவபெருமான், பிரம விட்டுணுக்களது போர் காரணமாக அவ்விடங்களிலெல்லாம் பெரிய அனற் பிழம்பாய் நின்ற ருளினான். நின்றும் அவனை அவ்விடங்களில் ஓரிடத்தும் ஒருவரும் கண்டிலர். ஆயினும், நான் அவனை எல்லா இடத்திலும் காண் கின்றேன்; அது நான் அவனுக்கு ஆட்செய்கின்ற முறைமையாலாம்.

விளக்கவுரை

'ஆம், தாம்' என ஓதுவன பாடம் அல்ல. ஆன் - அவ் விடம். இவ்வாறு சேய்மையாகச் சுட்டியது உலகத்தின் பரப்பு உணர்த் துதற்கு. 'யானே அறிந்தேன்' என்றமையால், பிறர் அறிந்திலர் என்பது இனிது விளங்கிற்று. அடிமுடி காணாமையேயன்றி, 'அது சிவ சோதி' என்பதனையும் அறியாது திகைத்தமையின், 'பிறர் அறிந்திலர்' என்றும், எவ்விடத்தும் எப்பொருளையும் நாயனார் சிவமாகக் காணுதலால், 'யானே அறிந்தேன்' என்றும், 'சிவனை அறிதல் அவனுக்குத் தொண்டு புரிந்து நிற்பதனாலேயன்றிப் பிற ஆற்றல்களால் அன்று' என்பதற்கு, 'அவன் ஆண்மையாலே' என்றும் கூறினார். இக்கருத்தையே திருநாவுக்கரசு நாயனார் தமது இலிங்கபுராணத் திருக்குறுந்தொகையிலும் *(தி.5.100)* பலபட வகுத்தோதினார்.
சேக்கிழாரும் இவ்வரலாற்று உண்மையை,

தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாய கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்தும் துதித்துய்ந்த படிவிரித்தார்.
-தி.*12* பெ.பு. திருஞான., *78*

என விளக்கினார்.

தேடிக் கண்டு கொண்டேன்; - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன். -தி.*4*.ப.*9*.பா.*12*

என்று அருளிச்செய்ததும் இக்கருத்தினைப் புலப்படுத்துவதாம். 'அவன்' என்பதில் தொக்குநின்ற ஆறாவது, நான்காவதன் பொருளது. ஆள்மை - ஆளாம்தன்மை.
இதனால், மாலும், அயனும் அடிமுடி காணமாட்டா ராயதற்குக் காரணம் கூறப்பட்டது.

ஊனாய் உயிராய் உணர்வங்கி யாய்முன்னஞ்

சேணாய்வா னோங்குந் திருவுரு வேஅண்டத்
தாணுவும் ஞாயிறுந் தண்மதி யுங்கடந்
தாண்முழு தண்டமு மாகிநின் றானே. *#372*
இயல்பாகவே பல உடம்புகளாயும், அவ்வுடம்பில் உள்ள உயிர்களாயும், அவ்வுயிர்களினுள் அறிவொளியாயும் எல்லை யற்ற தனது பேராற்றலால் நிறைந்து நின்ற வடிவமே, பிரம விட்டுணுக்களின்முன் அண்டத்தைத் தாங்குகின்ற தூண்போல்வதாய் நீண்டு, சூரியசந்திர மண்டலங்களைக் கடந்து, தன்னால் ஆளப் படுகின்ற அண்டம் முழுதும் ஊடுருவ நின்றான் அம் மணிகண்டன்.

விளக்கவுரை

'அதனால், அவனது வியாபகத்துள் ஒரு பகுதியிலே அடங்கிக் கிடப்பவராகிய பிரம விட்டுணுக்கள் அவனை அளவிடுதல் எங்ஙனம் கூடும்' என்பது குறிப்பெச்சம். முன்னம் - முன்பே. 'தாணுவும்' என்புழி, 'ஆய்' என்பது விரிக்க.

'பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே'
-தி.*8* திருவெம்பாவை, *10*

'பாதம் இரண்டும் வினவிற் பாதாளம் ஏழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை'
-தி.*8* குயிற்பத்து, *1*

என்றாற்போலும் திருமொழிகளும் சிவபெருமானது அளவிடப்படாத பெருநிலையை விளக்க எழுந்தனவாம். 'ஆகி' என்றதனை, 'ஆக' எனத் திரிக்க. இது முதலாக இவ்வதிகாரத்தில் உள்ள திருமந்திரங்கள், 'சாருவோபாதாளம்' என வேறோர் அதிகாரமாகச் சில பிரதிகளில் உள்ளன என்பர். 'திருவுரு' என்பதில் உரு, நிலை. முன்னை மந்திரத்தில் உள்ள 'மணிகண்டன்' என்பதைச் சுட்டுவதாகிய 'அவன்' என்பது தோன்றா எழுவாய்.

இதனால், சிவபெருமானது பெருமை கூறும் முகத்தால், பிரம விட்டுணுக்களது சிறுமை கூறப்பட்டது.

நின்றான் நிலமுழு தண்டத்துள் நீளியன்
அன்றே அவன்வடி வஞ்சின ராய்ந்தது
சென்றார் இருவர் திருமுடி மேற்செல
நன்றாங் கழலடி நாடவொண் ணாதே. *#373*
சிவபெருமான், மண்ணும், விண்ணும் ஆகிய உலகம் முழுதும் நின்றும் வளர்ந்தும் நிற்பவன் அல்லனோ! அதனால், அவனது திருவுருவத்தைக் கண்டு பிரம விட்டுணுக்கள் இருவரும் அஞ்சுதலும், அறியாமையால் அதனை அளந்தறியச் சென்றவழி எய்த்து வருந்துதலும் இயல்பே.

விளக்கவுரை

'அவன்' என்றதனைத் தாப்பிசையாக முதலிலும் கூட்டி எழுவாயாக்குக. நீளியன் - நீண்டிருப்பவன்; 'திருமுடி மேல் செல, கழலடி நாட ஒண்ணாது' என்றது, திருமுடியை அறிந்தார் ஒரு வருமிலராயினும், 'திருவடியை அறிந்தார் பலர்; அதுவும் இவர்கட்கு அகப்படாதாயிற்று' என்றபடி. 'கழலடியும்' என்ற உம்மை தொகுத் தலாயிற்று. ஈற்றில் உள்ள ஏகாரமும் தேற்றப் பொருட்டு. திருமுடி முடிவையும், திருவடி தொடக்கத்தையும் குறிப்பனவாதலின், திருவடி சிலராலேனும் காணப்பட்டதாகும். 'அவன் வடிவை அஞ்சினராய் அது ஆய்ந்து சென்றார் இருவர் நாட ஒண்ணாதே' என முடிக்க.

இதனால், பிரம விட்டுணுக்களது இயல்பாய சிறுமை, செருக்குக் காரணமாகப் பின்னும் மிகுதிப்பட்டமை கூறப்பட்டது.

சேவடி ஏத்துஞ் செறிவுடை வானவர்
மூவடி தாவென் றவனும் முனிவரும்
பாவடி யாலே பதஞ்செய் பிரமனும்
தாவடி யிட்டுத் தலைப்பெய்யு மாறே. **#374**

சிவபெருமானிடம் எஞ்ஞான்றும் குறையிரத்தற்குக் கூடுபவர்களாகிய தேவர்களுட் சிலராகிய, மாவலியை நேரே பொருது வெல்லமாட்டாது வஞ்சனையால் மூவடி மண் இரந்து வென்ற மாயோனும், தானே அறிந்து படைக்கமாட்டாது வேதப் பாக்களை உருச்செய்து அறிந்து உலகங்களைப் படைக்கின்ற பிரமனும், அவருட் சிலரை நோக்கித் தவம்செய்து சிலவற்றைப் பெறும் முனிவர்களும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை எதிரிட்டுக் காண வல்லராவரோ!

விளக்கவுரை

'முனிவர்' என்றது, கருமகாண்டிகளை. அவர் தேவரைத் தெளியாராயினும், அவரை நோக்கிச் செய்யும் கருமங்கள் பயன் தரும் என்னும் தெளிவுடையர். இறுதிக்கண் கூறற்பாலராய அவரைச் செய்யுள்நோக்கி இடையே கூறினார். தா அடி, படைவீரர் போர்க்கு அணிவகுத்து நடக்கும் நடை. அஃது இங்குச் செருக்கினால் எதிரிட்டுக் காண முயலுதலைக் குறித்தது. தலைப்பெய்தல் - சந்தித்தல்; காணுதல். இறுதிக்கண், 'கூடுமோ' என்பது சொல்லெச்சம். 'வான வரும்' என்னும் உம்மை தொகுத்தல்.

இதனால், அயன், மால் என்பவரோடு இனம்பற்றிப் பிறரது சிறுமைகளும் தோன்றக் கூறப்பட்டன.

தானக் கமலத் திருந்த சதுமுகன்
மானக் கருங் கடல் வாழித் தலைவனும்

ஊனத்தின் உள்ளே உயிர்போல் உணர்கின்ற
தானப் பெரும்பொரு ளண்மைய தாமே. *#375*

தாமரை மலரை இடமாகக் கொண்டு இருக்கின்ற பிரமனும், பெரிய கடலில் நீங்காது, கிடக்கின்ற திருமாலும் எஞ்ஞான்றும் தங்கள் உடம்பினுள்ளே உள்ள உயிர் போலக் கருதி உள்கத்தக்க பெரும் பொருளாகிய சிவபெருமான், அவர்தம் புறக்கண்ணிற்கு அகப்படுவானோ!

விளக்கவுரை

'கமலத் தானம்' என மாற்றிக்கொள்க. 'சதுமுகனும்' என்னும் உம்மை தொகுத்தல். மானம் - பெருமை. கருமை, இன அடை. 'உணர்கின்றதான' என்பதன் பின் பகரமெய் விரித்தல். 'அண்மையதாமே' என்புழி, 'அவர்க்கு' என்பது அவாய் நிலையான் வந்தது. ஏகாரம், எதிர்மறை உணர்த்திற்று. 'தானக் கருங் கடல், ஊழித் தலைவன், தன்மையதாம்' என்பன பாடம் அல்ல.

இதனால், மாலும் பிரமனும் ஆயினும் சிவபெருமானை உள்குவோரன்றி, அவனால் உள்கப்படுவோர் ஆகாமை கூறி, அவர் அடிமுடி அறியமாட்டாமை வலியுறுத்தப்பட்டது.

ஆலிங் கனஞ்செய் தெழுந்த பரஞ்சுடர்
மேலிங்ஙன் வைத்ததோர் மெய்ந்நெறி முன்னங்கண்
டோலிங் கனஞ்செய் துலகம் வலம்வருங்
கோலிங் கமைஞ்சருள் கூடலு மாமே. *#376*

அண்டங்கள் பலவற்றையும் பொருந்தி நின்ற சிவசோதி, அதன்பின் இவ்வாறு பிரம விட்டுணுக்களால் அடிமுடி அறியப்படாத நிலைமையைக் காட்டி நிலைபெறச் செய்த மேலான சிவநெறியை முன்னர் அறிந்து, உலகம் முழுதும் ஒருங்கே வழி படுகின்ற இலிங்க வடிவை வணங்கித் தம் குறையை எடுத்துக்கூறி முறையிட்டு, மக்கள் இவ்வுலகப் பயனையேயன்றி அவன் அருளைப் பெறுதலாகிய ஞானத்தையும் அடையலாம்.

விளக்கவுரை

மூன்றாம் அடியிலும் முதலில் வந்தசொல் வருதலும், மோனை சிதைதலும் பொருந்தாமையால், அவ்விடத்து 'ஆலிங்கனம் செய்து' என ஓதுதல் பாடம் ஆகாமை அறிக. ஓலம், 'ஓல்' என வருதல் செய்யுட்கண் ஏற்றதேயாம். ஓலம் செய்தல் - முறையிடுதல். கோல் - தறி; இலிங்கம். 'அமைந்து' 'அமைஞ்சு' எனப் போலியாயிற்று. அமைதல் - மனம்பற்றி வணங்குதல். 'அமைஞ்சு ஓல் இங்ஙனம் செய்து அருள்கூடலும் ஆம்' எனக் கூட்டுக.

இதனால், அடிமுடி தேடிய நிகழ்ச்சியால் விளைந்த பயன் கூறப்பட்டது.

வாள்கொடுத் தானை வழிபட்ட தேவர்கள்
ஆள்கொடுத் தெம்போல் அரனை அறிகிலர்
கோள்கொடுத் தின்பங் கொடுத்துக்கோ ளாகத்தன்
தாள்கொடுத் தானடி சாரகி லாரே.
#377

சிவபெருமான் திருமால் முதலிய தேவர்க்கும், இராவணன் முதலிய அரக்கர்க்கும் படைக்கலங்களை அளித் தருளிய செய்தியை அறிந்து அவ்வாறே தாமும் பலவற்றைப் பெற விரும்பி அவனை வழிபடுகின்ற தேவர்கள், எம்மைப் போல அவனுக்குத் தம்மை ஆளாகக் கொடுத்து அன்பினால் அவனை நினைப்பதில்லை. அதனால், தன் அடியார்களுக்கு முதலில் ஞானத்தைக் கொடுத்து, பின் பேரின்பத்தைத் தந்து, என்றும் புகலிட மாகத் தனது திருவடியை வழங்குகின்ற அவனது திருவடியை அத் தேவர்கள் காண்பதில்லை.

விளக்கவுரை

கோள் - கொள்ளப்படும் பொருள். மூன்றாம் அடியிலும் 'ஆள்கொடுத்து' என ஓதுதல் பாடம் அன்று.

இதனால், மேல், 'கோலிங்கு அமைஞ்சருள் கூடலுமாமே' என்றவாறும், 'வானிடத்தவரும் மண்மேல் வந்தரன்றனை அற்சிப்பர்' (சிவஞானசித்தி சூ. - 2.92) என்றவாறும் இவ்வுலகில் தேவர் பலர் வந்து சிவபெருமானை வழிபட்டமை அறியப்படுகின்ற தாயினும், அவர் தம் வழிபாடு பயன் கருதாத அன்பு வழிபாடாகாமையால், சிவபெருமான் அவர்கட்கு அரியனே ஆகின்றான் என, மால் அயன் என்பவரோடு, இனம்பற்றி ஏனைத் தேவரும் சிவபெருமானை வழிபட்டும் அவனை அறியாரா யினமைக்குக் காரணம் கூறப்பட்டது.

ஊழி வலஞ்செய்தங் கோரும் ஒருவற்கு
வாழி சதுமுகன் வந்து வெளிப்படும்
வீழித் தலைநீர் விதித்தது காவெனும்
ஊழிக் கதிரோன் ஒளியைவென் றானே. *#378*

பிரளய வெள்ளத்தில் ஆலிலைமேல் மிதந்து எங்கும் திரிந்து, 'இனி என்ன செய்வது' என்று ஆராய்கின்ற திரு மாலுக்கு மகனாக நான்முகன் தோன்றுவான். அதன்பின், ஊழிக் காலத்தில் எரிகின்ற சூரியனது ஒளியையும் வென்ற திருமேனி யனாகிய சிவபெருமான், 'அழிந்த இவ்வுலகத்தை நீவிர் மீளப் படைத்துக் காமின்' என்று பணித்தருளுவான். அவ்வாற்றால் பின்பு படைப்பு முதலிய தொழில்கள் நிகழும்.

விளக்கவுரை

இதனால், வருகின்ற அதிகாரங்கட்குத் தோற்றுவாயும் செய்யப்பட்டது. 'காமின்' என்பதன் இறுதிநிலை தொகுத்தலாயிற்று. வாழி, அசைநிலை. 'தாவென்' என்பது பாடம் அன்று. 'விதித்துக் காமின் எனும்' என்றது, 'சதுமுகன் விதித்தலையும், மாயோன் காத்தலையும் செய்க' என்பான் என்றவாறு.

இதனால், அடிமுடி தேடிய நிகழ்ச்சியின் பின்விளைவு கூறப் பட்டது.

4.9. சருவ சிருட்டி

ஆதியோ டந்தம் இலாத பராபரம்
போதம தாகப் புணரும் பராபரை
சோதி யதனிற் பரந்தோன்றத் தோன்றுமாம்
தீதில் பரைஅதன் பால்திகழ் நாதமே. #379

இம் மந்திரத்தின் பொருளைக் கீழ்வரும் குறிப்புக்கள் பற்றி உரைத்துக் கொள்க.

விளக்கவுரை

முதற்பொருளாகிய கடவுட்பொருள், பொருளால் ஒன்றேயாயினும், 'சிவம், சத்தி' எனத் தன்மையால் இரண்டாய் இருக்கும். அஃது யாதொரு செயலையும் மேற்கொள்ளாது இயல்பாய் இருக்கும் நிலையில் 'ஒன்றைத் தொடங்குவது' என்பதும், 'முடிப்பது' என்பதும் இல்லையாகையால், அந்நிலை ஆதி அந்தம் இல்லாததாம். அந்நிலையில் நிற்கும் கடவுட்பொருளை, 'பராபர சிவம்' என்னும் பெயரால் குறிப்பர்.

'பராத்பரம்' என்பது மருவி, 'பராபரம்' என வழங்கும். பராத்பரம் - மேலானவற்றுக்கும் மேலானது; (தனக்குமேல் ஒன்று இல்லாதது) சிவம் பராபரமாய் நிற்கும்பொழுது அதன் சத்தி 'பராபரை' எனப்படும். பராபரமாய் நிற்பதே சிவத்தின் சொரூபநிலை; அஃதாவது அதன் இயற்கைத் தன்மை. பராபரையாய் நிற்பதே சத்தியின் சொரூப நிலை; இயற்கைத் தன்மை. 'பராபரை' என்னும் இயற்கை நிலையில் சத்தி, அறிவேயாய் (ஞானமேயாய்) நிற்கும். ஆகவே, 'ஞானமே சத்தியின் சொரூபம்' என்பது விளங்கும். இதனையே சிவஞானசித்தி, (சூ. 1.62) 'சத்தியின் வடிவே தென்னில் தடையிலா ஞானமாகும்' என்றது. இதுவே இங்கு, 'போதம தாகிப் புணரும்' எனப்பட்டது. போதம் - அறிவு; ஞானம். இவ்வாறு இயற்கை நிலையில் உள்ள பராபர சிவம் 'உயிர்களை உய்விக்க வேண்டும்' என்னும் விருப்பத்தால் உலகத்தை உண்டாக்க நினைக்கும். அந்நிலை உலகத் தோற்றத்திற்குத் தொடக்க நிலையாதலால், அந்நிலையில் நிற்கும் சிவம் 'ஆதி சிவன்' என்றும்,

அதன் சத்தி 'ஆதி சத்தி' என்றும் சொல்லப்படும். ஆதி சிவனே 'பரசிவன்' என்னும் பெயர்க்கும், ஆதி சத்தியே 'பராசத்தி' என்னும் பெயர்க்கும் உரியவராதல் இந்நூலில் பெறப்படுவது. சிவஞானசித்தி முதலிய சாத்திரங்கள் இங்குக் கூறிய பராபர சிவனையே, 'பரசிவன்' என்றும், பராபரை என்னும் சத்தியையே 'பராசத்தி' என்றும் கூறி, ஆதி சிவனையும், ஆதி சத்தியையும் அப் பெயராலேயே கூறும். இந்நிலையில் சிவம் சத்திகள் இவ்வாறு, 'ஆதி சிவன், ஆதி சத்தி' எனப்படுதலால், பராபர சிவனும், பராபர சத்தியும் முறையே அநாதி சிவன், அநாதி சத்தியாதல் விளங்கும். இவ்வாறாகவே 'சோதியதனில் பரம் தோன்றத் தீதில் பரை தோன்றும்' என்றார். 'சோதி' என்றது பராபர சிவத்தை. வாளா, 'தோன்றும்' என்றாராயினும், 'பராபர சத்தியினின்றும் தோன்றும்' என்பது ஆற்றலால் இனிது விளங்கிற்று. எனவே, இத்தோற்ற முறை பின்வருமாறு அமைதல் அறியப்படும்.

பராபரசிவம் (அநாதிசிவன்) பராபரசத்தி (அநாதிசத்தி)

ß ß பரசிவம் (ஆதிசிவன்) பராசத்தி (ஆதிசத்தி)

ஆதி சத்தியே, 'திரோதான சத்தி, திரோதாயி' என்றெல்லாம் சொல்லப்படும். அளவிலா ஆற்றலுடைய கடவுட் பொருள் உலகத்தை ஆக்குதற்கு அதன் ஆற்றலுள் ஒருசிறுகூறே போதும் ஆதலின், 'பராபர சிவத்தில் ஆயிரத்தில் ஒருகூறே பரசிவன்' (ஆதிசிவன்) என்றும் 'பராபர சத்தியில் ஆயிரத்தில் ஒருகூறே பராசத்தி' (ஆதிசத்தி) என்றும் ஆகமங்கள் அளவிட்டுரைக்கும். 'பரசிவம், பராசத்தி' (ஆதிசிவன், ஆதிசத்தி) என்னும் வேறுபாடுகள் முதல்வன் தன்னில்தான் கொண்டுள்ள வேறுபாடுகளேயன்றி மற்றொரு பொருளினால் கொள்ளும் வேறுபாடுகள் அல்ல.

பராபரசிவன் ஆதி சிவனாய் நின்று உலகைச் செயற் படுத்துமிடத்துத் தனது ஆற்றலாகிய ஆதி சத்தியாலே எல்லா வற்றையும் செய்தலின், அச்சத்தி செயற்படுமாற்றிற்கு ஏற்பவே தான் அதனோடு கூடியிருப்பான்.

இயற்கை நிலையில் ஞானமாத்திரமாய் இருக்கும் சத்தி, பின் உலகைத் தொழிற்படுத்த விரும்பும் நிலையில் அவ்விருப்பமாகிய இச்சையும், அத்தொழில் முறையை அறியும் ஞானமும், அறிந்தவாறே செய்யும் கிரியையும் என மூன்றாகி நிற்கும். ஆகவே 'இச்சா சத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி' என ஆதி சத்தி ஒன்றே மூன்றாகும். இம்மூன்று சத்திகளுள் இச்சா சத்தி, ஏறுதல், குறைதல், ஒடுங்கல் என்பன இன்றி, எப்பொழுதும் ஒரு நிலையிலே நிற்கும். ஏனைய ஞானம் கிரியை இரண்டும் 'ஏறுதல், குறைதல், ஒடுங்கல்' என்னும் வேறுபாடுகளை உடையனவாகும். அவ்விடத்து ஆதி சிவன் தனது ஆதிசத்தியின் வழி முதற்கண்

எழுத்தோசையைத் தோற்றுவிக்க விரும்பி அதனைத் தோற்றுவிக்குமாற்றை ஞான சத்தியால் பொதுவாக அறிவான். அதனால், அவனே அந்நிலையில், 'நாதம்' எனப் பெயர் பெறுவான். இறைவனை, 'நாதன்' எனக் கூறுதல் இதுபற்றியே என்பர். இவ்வாறு 'நாதம்' என்னும் நிலையில் நின்ற சிவன் எழுத்தோசையின் பொது நிலையாகிய நாதத்தைத் தோற்றுவித்தற்பொருட்டு அதன் தோற்றத்திற்கு நிலைக்களமாகிய நாத தத்துவத்தைச் சுத்தமாயை யினின்றும் தோற்றுவித்து, அதன்கண் நிற்பான். நாதனாகிய சிவன் ஆதி சத்தியின் வழித் தோன்றுதலின், 'அதன்பால் திகழ் நாதம் தோன்றும்' என்றார். 'தோன்றும்' என்பது சொல்லெச்சம். இதனால் இத்தோற்றம் பின்வருமாறு அமைதல் அறியலாம்.

பராபரசிவன் (அநாதிசிவன்) பராபரசத்தி (அநாதிசத்தி)

ß ß ஆதிசிவன் ஆதிசத்தி சுத்த மாயை

ß ß நாதம் நாத தத்துவம்.

'பராபரம் பராபரையைப் புணரும்' எனவும் 'பராபரை பராபரத்தைப் புணரும்' எனவும் இருவகையாகவும் இயைத்துக் கொள்ளவைத்தார். அவை இருவேறு பொருள்கள் அல்ல என்பது விளங்குதற்கு.

இதனால், படைப்புத் தொடக்கம் கூறப்பட்டது.

நாதத்தில் விந்துவும் நாதவிந் துக்களில்
தீதற் றகம்வந்த சிவன்சத்தி என்னவே
பேதித்து ஞானங் கிரியை பிறத்தலால்
வாதித்த இச்சையில் வந்தெழும் விந்துவே. ***#380***

இதன் பொருளையும் கீழ்வரும் குறிப்புரை பற்றி உரைத்துக்கொள்க.

விளக்கவுரை

மேற்கூறிய 'நாதன்' என்னும் சிவன், பொதுவாய் நாத மாத்திரமாய்த் தோன்றிய எழுத்தோசையைச் சிறப்பாகத் தோற்றுவிக்க விரும்பிக் கிரியா சத்தியால் பொதுவாக முயல்வான். அவ்வாறு அவன் பால் எழும் முயற்சியே 'விந்து' என்னும் சத்தியாவாள். அவள், மேற் குறித்த நாத தத்துவத்திலிருந்து 'விந்து' என்னும் தத்துவத்தைத் தோற்று வித்து, அதன்கண் நிற்பாள். அதனால் 'நாதத்தில் விந்துவும்' என்றார்.

பின்னர் 'நாத விந்துக்களின்' என்றதில் இன் சாரியை யின்பின் 'கீழ்' எனப் பொருள் தரும் கண்ணுருபு விரிக்கப்படும்.

'ஞானம், கிரியை' என்றது சிவன் சத்திகளுக்கு நிரல் நிறை. 'சிவன் சத்தி என்ன' என்றது, 'சிவன் என்றும், சத்தி என்றும் இருவர் தோன்றுவர்' என்றவாறு. 'பேதித்து ஞானம் கிரியை பிறத்தலால்' என்றது, 'ஆதி சத்தி தானே, ஞானம், கிரியை என்னும் வேறு பாட்டோடு தோன்றுதலால்' என்றவாறு. எனவே, 'முதல்வன் ஞான சத்தியால் சிறப்பாக அறியும்

நிலையிலே சிவன் என நிற்பான்' என்பதும், 'அவன் கிரியாசத்தியால் சிறப்பாக முயலும் நிலையே சத்தி என்னும் நிலை' என்பதும் விளங்கும். 'சிவன்' எனப் பெயர் பெற்று நின்ற சிவன் மேற்கூறிய விந்து தத்துவத்திலிருந்து 'சிவம்' என்னும் தத்துவத்தைத் தோற்றுவித்து அதனை இடமாகக் கொண்டு நிற்பான். 'சத்தி' எனப் பெயர்பெற்று நின்ற சத்தி, 'சிவம்' என்னும் தத்துவத்திலிருந்து 'சத்தி' என்னும் தத்துவத்தைத் தோற்றுவித்து அதனை இடமாகக் கொண்டு நிற்பாள். இவ்வாற்றால் இத்தோற்றம் பின்வருமாறு அமையும்.

ஆதிசத்தி சுத்தமாயை

ß ß (1) நாதன் நாதம்

ß ß (2) விந்து விந்து

ß ß (3) சிவன் சிவம்

ß ß (4) சத்தி சத்தி

இவற்றுள் சிவன் சத்திகட்கு உள்ள பெயர்களே, அவர்களால் தோற்று விக்கப்பட்டுத் தமக்கு இடமாகக் கொள்ளப்படுகின்ற தத்துவங்கட்கும் பெயராதல் விளங்கும்.

இங்கு இந்நாயனார் கூறிய இம்முறை சில ஆகமங்களுட் கூறியவாறாகும். வேறு சில ஆகமங்கள் இங்கு, 'நாதம், விந்து' என்றவற்றை, 'சிவம், சத்தி' என்றும், இங்கு, 'சிவன், சத்தி' என்ற வற்றை, 'நாதம் விந்து' என்றும் மாற்றிக் கூறும். அம்முறை பற்றியே சிவஞானசித்தி *(சூ. 2-74),*

'சிவம் சத்தி நாதம் விந்து ... ...

ஒன்றின் ஒன்றாய்ப் பவந்தரும்'

என்று கூறிற்று. எவ்வாறாயினும், 'இந்நான்கும் முதல்வனது அருவத்திருமேனிகள்' என்பதில் மாறுபாடில்லை. இனி முன் இரண்டு நிலைகளை முறையே 'பரநாதம், பரவிந்து' என்றும், பின் இரண்டு நிலைகளை 'அபரநாதம், அபரவிந்து' என்றும் கூறுதல் எல்லா ஆகமங் களுக்கும் ஒப்ப முடிந்தது.

'வாதித்த இச்சையில் வந்தெழும் விந்துவே' என்றது 'சிவம் சத்திகள் தம்மில் தாம் வேறுபட்ட விருப்பம் காரணமாகச் சுத்த மாயை வேறு வேறு நிலைகளாக விருத்திப்பட்டு நிற்கும்' என்றவாறு. இச்சையில் - இச்சையின்படி.

'விந்து' *(பிந்து)* என்பது 'சுத்தமாயை, அதன் ஒருவகை நிலை, அதனை இடமாகக் கொள்ளும் சத்தி' என்னும் மூன்றற்கும் பெயராகும். அவற்றுள் ஒன்றைக் கொள்ளவேண்டிய இடத்தில் மற்றொன்றைக் கொள்ளலாகாது. இவ்வாறே, 'நாதம்' என்பதும், சிவனது நிலைகளில் ஒன்றற்கும், அவன் இடமாகக் கொள்ளுகின்ற தத்துவத்திற்கும் பெயராய்

நிற்கும். நாயனார் சொற்சுருக்கம் கருதி ஏற்ற பெற்றியால் பொருள் கொள்ள ஓதினார். எனவே, முன் மந்திரத்தில் 'அதன் பால் திகழ் நாதமே' என்றதற்கு நேர்பொருளாக, 'ஆதி சத்தியினிடமாக நாதம் என்னும் சிவன் தோன்றுவன்' எனவும், ஒற்றுமைப் பொருளாக, 'அச்சிவனால் நாத தத்துவம் தோன்றும்' எனவும் கொள்ளப்படும். அவ்வாறே இம் மந்திரத்தில் 'நாதத்தில் விந்துவும்' என்றதற்கு, நேர் பொருளாக, 'நாதம் என்னும் சிவனிடத்து விந்து என்னும் சத்தி தோன்றுவாள்' எனவும், ஒற்றுமைப் பொருளாக, 'அவளால் நாத தத்துவத்திலிருந்து விந்து என்னும் தத்துவம் தோன்றும்' எனவும், 'நாத விந்துக்களில் சிவன், சத்தி தோன்றும்' என்றதற்கு நேர்பொருளாக, 'நாத விந்துக்களின் கீழ் விந்து' என்னும் சத்தியினின்றும் சிவன் என்னும் சிவன் தோன்றுவான்; அவனிட மிருந்து சத்தி என்னும் சத்தி தோன்றுவாள்' எனவும், ஒற்றுமைப் பொருளாக, 'விந்து என்னும் தத்துவத்திலிருந்து சிவம் என்னும் தத்துவமும், சிவம் என்னும் தத்துவத்திலிருந்து சத்தி என்னும் தத்துவ மும் தோன்றும்' எனவும் கொள்ளப்படும் என்க.
'மாயை' என்பது, குடத்திற்கு மண்போல, உலகமாகிய காரியப் பொருட்கு முதற்காரணமாவது, அது பல்வேறு வகைப்பட்ட சட (அறிவில்லாத) ஆற்றல்களின் தொகுதி (சத்திகளின் சமூகம்). அதனைச் சிவபெருமான் தனது இச்சைப்படி ஞானக் கிரியா சத்திகளால் தொழிற்படுத்துவான். அந்த மாயைதான் ஆணவ மலத்தின் தர தம நிலைகளோடு கலந்து தூய்மை இழந்தும் கலவாது தூய்மையாயும் இரு பகுதிப்பட்டு நிற்கும். தூய பகுதியே, 'சுத்த மாயை' என்றும், தூய்மை இழந்த பகுதியே 'அசுத்த மாயை' என்றும் சொல்லப்படும். 'மாயை' என்றால் 'மயக்குவது' எனக் கருதப் படுவதால், சுத்த மாயையை ஆகமங்கள் 'மாயை' என்று குறிப்பதே இல்லை. 'விந்து, குடிலை, குண்டலினி' என்றாற்போலவே குறிப் பிடும். மாயை எனக் கூறவேண்டின், 'மகாமாயை' என்றும், 'ஊர்த்துவ மாயை' என்றும் குறிப்பிடும். மகத்து - பெரிது. ஊர்த்துவம் - மேல் உள்ளது; வியாபகம் - எனவே, 'மாயை' என வாளா கூறுமிடத் தெல்லாம், 'அசுத்த மாயை' என்றே கொள்ளுதல் வேண்டும். சுத்த மாயையை ஆகமங்கள் 'விந்து' எனக் கூறுதல்போல, அசுத்த மாயையை 'மோகினி' என்று கூறும். மோகினி - மயக்கற் கருவி. எனவே, 'அசுத்த மாயையே மயக்கத்தைத் தரும்' என்பதும், 'சுத்த மாயை மயக்கத்தைத் தராது' என்பதும் அறிந்துகொள்ளப்படும். மயக்கமாவது, ஐம்புல இன்பங்களையே பெரியனவாகக் கருதி, அவற்றால் விளையும் துன்பங்களை அறியாதிருத்தல்.
இறைவன் உலகைத் தோற்றுவித்து நடத்தக் கருதும்பொழுது 'அருவம்,

அருவுருவம், உருவம்' என்னும் மூவகைத் திரு மேனிகளைக் கொண்டு விளங்குவன். அங்ஙனம் விளங்குமிடத்துச் சுத்தமாயையினின்று தோற்றுவிக்கப்படுகின்ற தத்துவங்களையே தான் இடமாகக் கொண்டிருப்பன். அதனால் அத்தத்துவங்கள் அசுத்த மாயா தத்துவங்களைப் பெற்று நிற்கும் உயிர்களுக்கு உடம்பாய் வந்து பொருந்துதல் இல்லை.

முதற்காரணப்பொருள் காரியப்படும் முறைகள் பல. அவற்றுள் சிவாகமங்களிற் கொள்ளப்படுவன, 'விருத்தி, பரிணாமம்' என்னும் இரண்டுமேயாம். அவற்றுள் விருத்தியாவது சுருங்கிக் கிடப்பது விரிவடைந்து நிற்றல். இதற்கு, 'படம்குடிலானாற்போல' என உவமை கூறுவர். அஃதாவது கட்டிச்சுருட்டி ஒடுக்கி வைக்கப் பட்டிருந்த துணி, பின், விரித்து அமைக்கும்பொழுது பெரிய கூடாரமாகக் காட்சியளிப்பது போல்வதாம். பரிணாமமாவது ஒரு பொருள் மற்றொரு பொருளாய் உருமாறி நிற்பது. மண் குடமாவதும், பால் தயிராவதும் போல்வன இதற்கு உதாரணமாகும். பரிணாமமும், 'முழுவதும் பரிணமித்தல், ஒரு கூற்றிற் பரிணமித்தல்' என இருவகைப் படும். பால் தயிராவது முழுவதும் பரிணமித்தல். வெண்ணெயில் புழுத் தோன்றுதல் ஒருகூற்றிற் பரிணமித்தல். இவ்விரண்டனுள்ளும் சிவாகமங்களில் கொள்ளப்படும் பரிணாமம் ஒரு கூற்றிற் பரிண மித்தலே. 'விருத்தி, பரிணாமம்' இரண்டனுள், சுத்தமாயை காரியப் படுவதெல்லாம் விருத்தி முறையிலாம். அசுத்தமாயை காரியப் படுவதெல்லாம் பரிணாம முறையிலாம். 'பரிணாமம் ஒரு கூற்றிற் பரிணமித்தலே' என்பதை மறக்கலாகாது.

முதல்வன் உலகத்தைக் கருதாது பராபர சத்தியோடு கூடிப் பராபரனாய்த் தன்னியல்பில் நிற்கும் நிலையே இயற்கை நிலை. அதுவே 'சொரூபம்' எனப்படும். பிறவெல்லாம் உலகத்தைக் கருதி அதற்கேற்ப வேறுபட்டு நிற்கும் நிலையாதலின், அவையெல்லாம் செயற்கை நிலையே. இவை 'தடத்தம்' எனப்படும். தடத்தம் - சார்பு பற்றியது. 'சொரூபம், உண்மை; தன்னிலை' என்பன ஒருபொருட் சொற்கள். முதல்வனை, சொரூப நிலையில் வைத்துக் கூறும் பொழுது, 'சொரூப சிவன்' என்றும், தடத்த நிலையில் வைத்துக் கூறும்பொழுது 'தடத்த சிவன்' என்றும் கூறுவர். சொரூப சிவனுக்கு உருவம், பெயர், தொழில், ஒன்றும் இல்லை; தடத்த சிவனுக்கு அளவற்ற உருவம், பெயர் தொழில்கள் உள்ளன என்க. உருவம், பெயர், தொழில் ஒன்றும் இல்லாதவன், அவைகளை மேற்கொள்வது உயிர்களை உய்விக்கவேண்டும் என்னும் கருணையினாலேயாம். அதனால், அவ்வுருவம், பெயர், தொழில் யாவும் அருள்மயமானவையே;

நம்மனோரது உருவம் முதலியன போல மாயாமயம் ஆனவை அல்ல; அருள் அவனது சத்தியே யாதலால், எல்லாம் வல்ல அச்சத்தியால் தனது இச்சைப் படியான உருவம் முதலியவற்றை அவன் தானே கொள்வன்; அதனால், அவைகளை அவனுக்குப் படைத்துத்தர வேறொருவர் வேண்டுவ தில்லை.
இதனால், படைப்புத் தொடர்ச்சி சிறிது வகுத்துக் கூறப் பட்டது.

இல்லது சத்தி இடந்தனில் உண்டாகிக்
கல்லொளி போலக் கலந்துள் ளிருந்திடும்
வல்லது ஆக வழிசெய்த அப்பொருள்
சொல்லது சொல்லிடில் தூராதி தூரமே. ***#381***

சிவத்தை விட்டுத் தனியாய் இல்லாத சத்தி, உலகம் செயற்படுதற்பொருட்டு இவ்வாறு அச்சிவத்தினிடமாகத் தோன்றி வேறு நிற்பது போலச் சொல்லப்பட்டாலும், சத்தி எஞ்ஞான்றும், மணியில் ஒளிபோலச் சிவத்தோடு ஒன்றி நிற்றலன்றித் தனித்து நிற்றல் இல்லை சிவமும் சத்தியைவிட்டுத் தனித்து நிற்றல் இல்லை. எனவே, 'சிவபேதம், சத்திபேதம்' எனப் பிரித்து வழங்குதல், அறிவு, செயல் (ஞானம், கிரியை) என்னும் வேறுபாடுபற்றிக் கொள்ளப்படும் உருவு, பெயர், தொழில் என்பன பற்றியேயாம் என்பதாயிற்று. இவ்வாறு தன்னின் வேறாகாத சத்தியை அதுதானே எல்லாம் செய்யவல்லதாக வேறு நிறுத்தி உலகம் செயற்படுதற்கு வழியை உண்டாக்கிய அந்தப் பெரும்பொருளை *(முதல்வனை) 'இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன்' (தி. 6 ப.97 பா.10)* என்று சொல்லாற் சொல்லி விளக்கப்புகின், அஃது ஒருவாற்றானும் இயலாது. ஏனெனில், சொற்கும், அப்பொருட்கும் இடையேயுள்ள வெளி மிக மிக நீண்டது.

இதனால், உலகிற்கு முதலாய் நிற்கும் சிவம் சத்திகள் இரு பொருளாகாமையும், மேல் சிவமும், சத்தியும் வேறுவேறுபோலக் கூறியது தடத்தநிலை பற்றி என்பது விளங்குதற் பொருட்டுச் சொரூப நிலையினது பெருமையும் கூறி, அவை மேற்கூறியவாற்றால் இருபொருள்போலும் என எழும் ஐயம் அகற்றப்பட்டது.

இதனால், உலகிற்கு முதலாய் நிற்கும் சிவம் சத்திகள் இரு பொருளாகாமையும், மேல் சிவமும், சத்தியும் வேறுவேறுபோலக் கூறியது தடத்தநிலை பற்றி என்பது விளங்குதற் பொருட்டுச் சொரூப நிலையினது பெருமையும் கூறி, அவை மேற்கூறியவாற்றால் இருபொருள்போலும் என எழும் ஐயம் அகற்றப்பட்டது.

விளக்கவுரை

****

தூரத்திற் சோதி தொடர்ந்தொரு சத்தியாய்

ஆர்வத்து நாதம் அணைந்தொரு விந்துவாய்ப்
பாரச் சதாசிவம் பார்முதல் ஐந்துக்கும்
சார்வத்துச் சத்திஓர் சார்த்துமா னாமே. *#382*

சொல்லுக்கு எட்டாது நின்ற முதல்வனோடு நின்ற பராபரை அவனைத் தொடர்ந்து நின்றே 'ஆதி' என்னும் பெயருடைய சத்தியாய்ப் பின்பு, நாதமாய் நின்ற அச்சிவனை அன்போடு கூடி, 'விந்து' எனத் தோன்றி, பின் அச்சிவன்தானே சதாசிவன் முதலிய ஐவராய் நின்று நில முதலிய ஐந்து தத்துவங்கட்கும் தலைவனான பொழுது அவனது அந்நிலைகள் ஐந்தினும் உடன் கொள்ளப்படும் துணைவியாய் நிற்பாள்.

விளக்கவுரை

இங்கு 'நாதம், விந்து' என்றது, அபர நாத விந்துக்களை. எனவே, பரநாத விந்துக்களை விதந்திலர் என்க. அபர விந்துவினின்றும் சதாசிவர் தோன்றுவர். அவரிடமிருந்து 'மகேசுரர், உருத்திரர், மால், அயன்' என்பவர் முறையே ஒருவரில் ஒருவராகத் தோன்றுவர். 'அயன், மால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன்' என்னும் ஐவரும் முறையே, 'நிலம், நீர், தீ, காற்று, வானம்' என்னும் பூதங்கட்குத் தலைவராவர். சதாசிவன் முதலிய ஐவர்க்கும் உரிய சத்திகள் முறையே மனோன்மனி, மகேசுவரி, உமை, திருமகள், கலைமகள் என்பவராவர். இச்சத்திகளெல்லாம் அபர விந்து முதலிய சத்தி பேதங்களினின்றே ஒருவரில் ஒருவராகத் தோன்றுவர். இங்குக் கூறப்பட்ட உருத்திரன், மால், அயன் என்னும் மூவரும் சிவனின் வேறானவர் அல்லர்; சிவன் தானே கொள்ளும் நிலைகளாம். இவ்வாறு சிவன் தானே பல்வேறு நிலைகளில் பல்வேறு வடிவும், பெயரும், தொழிலும் கொண்டு நிற்றல் 'சம்பு பட்சம்' எனப்படும். புண்ணிய மிகுதியால் இந்நிலைகளை ஆன்மவருக்கத்துட் பட்டவருக்கும் முதல் வன் வழங்குதல் உண்டு. அவை 'அணுபட்சம்' எனப்படும். அணுபட்ச சம்புபட்சங்களைக் கூறுமிடத்து, 'மகேசுரனுக்குக் கீழ் சம்புபட்சம் இல்லை; உருத்திரனுக்கு மேல் அணுபட்சம் இல்லை என்பவரும், சம்புபட்சம் எல்லா நிலைகளிலும் உண்டு என்பவரும், 'எல்லா நிலைகளிலும் இருபட்சங்களும் உண்டு' என்பவருமாகப் பலதிறத்தர் ஆசிரியர். அவருள் எல்லா நிலைகளிலும் இருபட்சங்களும் உண்டு என்பவரது கொள்கையே இந்நாயனாரது கருத்தாகத் தெரிகின்றது.

சார் வத்து - சார்பாய பொருள்; தலைமைப் பொருள். இதன் பின் 'ஆக' என்பது எஞ்சிநின்றது. சார்த்துமான் - துணையாக உடன்வைத்து எண்ணப்படுகின்ற பெண்; துணைவி.

சதாசிவமூர்த்தி ஞானம், கிரியை இரண்டும் சமமாய் நிற்கும் நிலையினர். இவர் தோற்றுவித்து இடமாகக் கொள்ளும் தத்துவம் சாதாக்கியம். இது

மேற்கூறிய அபரவிந்துவிலிருந்து தோன்றுவதாம். ஞானம் குறைந்து, கிரியை மிகுந்திருப்பதே மகேசுர நிலை. மகேசுரன் சாதாக்கியத்திலிருந்து ஈசுர தத்துவத்தைத் தோற்றுவித்து அதனைத் தனக்கு இடமாகக் கொள்வான். கிரியை குறைந்து ஞானம் மிகுந்த நிலையில் சிவன் வித்தியேசுரன் என நின்று, ஈசுர தத்துவத்திலிருந்து 'சுத்த வித்தை' என்ற தத்துவத்தைத் தோற்றுவித்து அதன்கண்ணே 'உருத்திரன், மால், அயன்' என மூன்று நிலைகளில் நிற்பன். அதனால், வித்தியேசுரனை வேறு வைத்து எண்ணுதல் இல்லை.

இதுகாறும் கூறிவந்தவாற்றால், பரநாதம், அபரநாதம், சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன்' எனச் சிவபேதம் ஏழும், 'பரவிந்து, அபரவிந்து, மனோன்மனி, மகேசுவரி, உமை, திருமகள், கலைமகள்' எனச் சத்திபேதம் ஏழும் ஆதல் விளங்கும். எனினும், பரநாதத்திலிருந்து அபரநாதம் தோன்றாமல், இடையே பரவிந்து தோன்ற, அதினின்றே அபரநாதம் தோன்றுதலானும், அவ்வாறே அபரநாதத்திலிருந்து சதாசிவன் தோன்றாமல், இடையே அபரவிந்து தோன்ற, அதினின்றே சதாசிவன் தோன்றுதலானும், பர அபர விந்துக்களாகிய சத்தி பேதங்களையும் சிவபேதமாகக் கூட்டி எண்ணி, 'சிவபேதம் நவந்தருபேதம்' என்கின்றன ஆகமங்கள். அதனையே சிவஞானசித்தி *(சூ. 2.74)* நூல்,

சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், திகழும் ஈசன்,
உவந்தருள் உருத்திரன்றான், மால், அயன் ஒன்றின் ஒன்றாய்ப்
பவந்தரும்; உருவம்நால்; இங்கருவம்நால்; உபயம் ஒன்றாய்
நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் என்பர்.

எனக் கூறிற்று. இதனுள், 'பரநாதம், பரவிந்து, அபரநாதம், அபரவிந்து, என மேலே உள்ள நான்கும் அருவத் திருமேனிகள்' என்பதும், 'மகேசுரன், உருத்திரன், மால், அயன் எனக் கீழே உள்ள நான்கும் உருவத் திருமேனிகள்' என்பதும், 'இடையே உள்ள சதாசிவமூர்த்தம் ஒன்றும் அருவுருவத்திருமேனி' என்பதும் கூறப்பட்டவாறு அறிக. அருவுருவத் திருமேனி என்பதே மேல் கூறப்பட்ட இலிங்க வடிவம். எனவே, சதாசிவ மூர்த்தமாவது இலிங்க வடிவமே என உணர்க. இதனால், சுத்த மாயையில் நிகழும் படைப்புக் கூறி முடிக்கப் பட்டது.

மானின்கண் வானாகி வாயு வளர்ந்திடும்
கானின்கண் நீருங் கலந்து கடினமாய்த்
தேனின்கண் ஐந்துஞ் செறிந்தைந்து பூதமாய்ப்
பூவின்கண் நின்று பொருந்தும் புவனமே. ***#383***

'மகத்து' எனப்படும் தத்துவத்தினின்றே ஐம் பூதங்கள் தோன்றுவனவாம். அவை தோன்றுமிடத்து, அவற்றின் சாரம் எனத் தக்கனவாய், 'சூக்கும

பூதம்' எனப் பெயர்பெற்று நிற்கும் தன்மாத்திரைகளினின்றே தோன்றும். அவை தோன்றுதல், 'வானம், காற்று, தீ, நீர் நிலம்' என்னும் முறையிலாம். தன்மாத்திரை ஒவ்வொன்றிலும் இருந்தே மேற்கூறிய வானம் முதலிய ஒவ்வொரு பூதமும் தோன்றும். பூதங்கட்கு அவ்வவற்றிற்குரிய தன் மாத்திரை களே காரணமல்லது, ஒரு பூதத்திற்கு மற்றொரு பூதம் காரணம் அல்ல. அதனால் ஒரு பூதத்திலிருந்து மற்றொரு பூதம் தோன்றுவதில்லை. ஒரு தன்மாத்திரையிலிருந்து ஒரு பூதம் தோன்றியபின், மற்றொரு தன்மாத்திரையிலிருந்து மற்றொரு பூதந்தோன்றும். இவ்வாறே ஐந்து தன் மாத்திரைகளினின்றும் ஐந்து மாபூதங்களும் மேற்கூறிய அம்முறையிலே தோன்றுவனவாம். அவற்றுள் இறுதியில் உள்ள நிலம் என்னும் பூதத்துட்பட்டனவே நாம் காணும் இவ்வுலகம்.

விளக்கவுரை

எனவே, 'வானத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து தீயும், தீயிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் தோன்றும்' எனக் கூறுதல் தூலாருந்ததி நியாயமாகப் பொதுப் படக்கூறுதலே; உண்மையாற் கூறுமிடங்களில் தன்மாத்திரையினின்று பூதங்கள் தோன்றும் என்றே கூறப்படும் என்பதாயிற்று.

'மகத்து' என்னும் வடசொல், தமிழில், 'மான்' எனப்படும். நம்மனோர் உலகிற்கு இதுவே முதற்காரணமாதலால் இது, 'மகத்து' எனப்படுகின்றது. 'பிரகிருதி' எனவும், 'மூலப் பிரகிருதி' எனவும் கூறப்படுவது இதுவே. சிவாகமங்கள் இதனை, 'பிருகிருதி மாயை' எனவும் கூறும். பிற சமயங்கள், 'இது பிறவற்றிற்குக் காரணமாவ தல்லது காரியம் ஆகாது' எனவும், 'அதனால் இதுவே உலகிற்குப் பரம முதற்காரணம்' எனவும் கூறும். ஆயினும் சிவாகமங்கள், 'இது அசுத் தமாயை யினின்றும் தோன்றுகின்ற, கலை என்னும் தத்துவத்தினின்றும் தோன்றும் காரியமே' எனக் கூறும்.

'சுத்த உலகம், மிச்சிர (கலப்பு) உலகம், அசுத்த உலகம்' என உலகம் மூவகைத்து என்பதும், 'அதனால், அதற்கு முதற்காரணமும் மூன்றாதல் வேண்டும்' என்பதும், அம்மூன்றாவன, 'சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை' என்பன என்பதும், 'அவற்றுள் சுத்த மாயையும், அசுத்த மாயையுமே எஞ்ஞான்றும் காரணமாயே நிற்பன; பிரகிருதி மாயை தன் காரியங்களை நோக்கக் காரணமாய் நிற்பினும், அசுத்தமாயையின் காரியமேயாம்' என்பதும் சிவாக மங்களின் துணிவு. சுத்த மாயை, 'விந்து' எனப்படுதலால், அதன் காரியங்கள் யாவும், 'வைந்தவம்' என்றும், அசுத்த மாயையே 'மாயை' எனப்படுதலால் அதன் காரியங்கள் யாவும் 'மாயேயம்' எனவும், பிருகிருதியின் காரியங்கள் யாவும் 'பிராகிருதம்'

எனவும் கூறப்படும். பிராகிருதத்தையும், மாயேயமாக அடக்கிக் கூறுதல் உண்டு.
'மானின்கண் பூதங்கள் ஐந்தும் தோன்றும்' என்று தொகுத்துக்கூறி ஒழியாது, வகுத்துக் கூறினார், அவற்றின் தோற்ற முறை உணர்த்தற்கு. 'கனலின்கண்' என்பது திரிந்து நின்றது. 'கான் - காடு. அஃது ஆகுபெயராய்த் தீயை உணர்த்திற்று' எனவும் உரைப்பர். 'நீரும்' என்றதற்கு, 'நீர் வெளிப்பட்டபின்' என்பது பொருள். 'கலந்து' என்றது 'அவற்றொடு கூடி, 'பூதங்கள் நான்கு' என்று ஆகிய பின்' என்றபடி. 'கடினம்' என்றது ஆகுபெயரால், அக்குணத்தை யுடைய 'நிலம்'என்னும் பூதத்தை உணர்த்திற்று. 'கடினமாய்' என்பதில், 'ஆய்' என்பதனை 'ஆக' எனத் திரிக்க. ஆதல், தோன்றுதல்.
தேன் வடித்தெடுத்த தேறல் ஆதலின், அதுபோலப் பூதங்களின் நுண்ணிலையாய அவற்றின் காரண நிலையை, 'தேன்' என்றார். இக்காரண நிலையே தன்மாத்திரையாதல் அறிக. இவற்றைத் தேன் என்றதனானே, காரணத்தன்மை காரியத்தினும் உளதாகும் முறைமை பற்றிச் சத்தம் முதலிய தன் மாத்திரைகளது தன்மை அவற்றின் காரியங்களாகிய வானம் முதலிய பூதங்களினும் காணப்படும் என்பது குறிப்பாற் கூறப்பட்டதாம். 'தேனின்கண் செறிந்து பூதமாய்' என்று ஒழியாது, 'ஐந்தும் செறிந்து ஐந்து பூதமாய்' என இருமுறை தொகை கொடுத்து ஓதினார், 'ஒரு தன்மாத்திரையிலே ஐந்து பூதமும் தோன்றுதலும் ஒரு தன்மாத்திரையிலே ஒரு பூதந்தோன்ற, அதன்பின், ஒரு பூதத்திலிருந்து மற்றொரு பூதம் தோன்றுதலும் இன்றி, வேறு வேறாய ஐந்து தன்மாத்திரைகளிலிருந்து, ஒரு தன்மாத்திரையில் ஒரு பூதமாக ஐந்து தன்மாத்திரையில் ஐந்து பூதமும் தோன்றும்' என்றற்கு ஐந்தும் தேனின்கண் செறிந்து ஐந்துமாம் என்றது, 'ஐந்து பூதங்களும் முன்பு தனித்தனிக் காரணநிலையில் நின்று, பின் காரியமாகத் தோன்றும்' என்றவாறு. இவ்வாறு உரையாக்கால், இத்திருமந்திரத்துள் மூன்றாம் அடி வெற்றெனத் தொடுத்தலாய் முடியும் என்க. 'பூதமாய்' என்பதில் 'ஆனபின்' என்பது, 'ஆய்' எனத் திரிந்து நின்றது. 'இப்புவனம்' எனச் சுட்டு வருவித்துக்கொள்க. இப்புவனம், பிருதிவி தத்துவ புவனம். எனவே, 'இவ்வாறே ஏனைத் தத்துவங்களினும் புவனங்கள் உள' என்பது குறித்துவாறு காண்க. இவ்வாற்றால் இங்குக் கூறிய தத்துவத்தோற்றம் பின் வருமாறாதல் காண்க.
மான் *(பிரகிருதி)*
தன்மாத்திரை
சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம்
(ஓசை) (ஊறு) (ஒளி) (சுவை) (நாற்றம்)

வானம் காற்று தீ நீர் நிலம்
(ஆகாயம்) (வாயு) (தேயு) (அப்பு) (பிருதிவி)
'சுவை ஒளி ஊறோசை நாற்றம்என் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு' -குறள், 27
'நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலக மாதலின்'
(தொல். பொருள்) என்றற்றொடக்கத்தனவாக இவ்வுலகம் பற்றிப் பெரும்பான்மையாக யாண்டும் யாவரும் அறியக் கூறப்படுவன தன்மாத்திரைகளும், ஐம்பெரும் பூதங்களும் ஆகிய தத்துவங் களேயாதலின், 'சிறப்புடைப் பொருளைத் தான்இனிது கிளத்தல்' என்னும் முறையால் அவற்றின் தோற்றத்தையே சிறந்தெடுத்துக் கூறினார்.

எனவே, மானின்கண் தோன்றுவனவாக (பிரகிருதியின் காரியங்களாக) வேறும் சில தத்துவங்கள் உள என்க. அவை அந்தக் கரணங்களும், ஞானேந்திரிய கன்மேந்திரியங்களுமாம். ஆகவே, மானின் காரியங்கள் அனைத்தையும் பின் வருமாறு கண்டு கொள்க.

மான் (பிரகிருதி)
குணம்

புத்தி
அகங்காரம்
(தைசதம் வைகாரிகம் பூதாதி)
மனம் - செவி, தோல், வாக்கு, பாதம், பாணி,
கண், நாக்கு, மூக்கு. பாயு, உபத்தம்
(ஞானேந்திரியம்) கன்மேந்திரியம்
தன்மாத்திரை
சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம்
ஆகாயம் வாயு தேயு அப்பு பிருதிவி

குணதத்துவமே 'சித்தம்' என்னும் அந்தக்கரணமாம். ஆகவே, 'சித்தம், புத்தி, அகங்காரம், மனம்' என்னும் அந்தக்கரணம் - 4, ஞானேந்திரியம் - 5, கன்மேந்திரியம் - 5, தன்மாத்திரை - 5, பூதங்கள் - 5, ஆக 24 மானின் காரியங்கள் என உணர்க.

இதனால், பிரகிருதி மாயையில் உளவாகும் படைப்புக் கூறப் பட்டது. இடைநின்ற அசுத்த மாயைப் படைப்பினை நாயனார் இங்கு விதந்திலர். எனினும், அசுத்த மாயா காரியங்களை இங்கு ஒருங்கு இயையக் காட்டுதும்:-

அசுத்த மாயை

1. மாயை
2. காலம், *3.* நியதி, *4.* கலை,
5. வித்தை பிரகிருதி
6. அராகம்
7. புருடன்

காலம், 'இறப்பு, நிகழ்வு, எதிர்வு' என மூன்றாகி, முறையே ஒரு கன்மத்திற்கு எல்லையையும், மற்றொரு கன்மத்திற்குப் பயனையும், வேறொரு கன்மத்திற்குப் புதுமையையும் உண்டாக்கும். நியதி, அவரவர் செய்த கன்மத்தை அவரவரே நுகருமாறு நியமிக்கும். கலை, வித்தை, அராகம் என்பன முறையே ஆன்மாவின் 'கிரியை, ஞானம், இசை' என்னும் சத்திகளை விளங்கச்செய்யும். காலம் முதலிய ஐந்தும் வந்து பொருந்திய பொழுதுதான், ஆணவமல மறைப்பால் சடம்போலக் கிடந்த ஆன்மா கன்ம நெறியில் நின்று ஒன்றை அறியவும், விரும்பவும், செய்யவும் உரியதாய், 'புருடன்' எனப் பெயர்பெற்று நிற்கும். அதனால், 'புருடன்' என்பது ஒரு தனித் தத்துவம் அன்று. ஆன்மா காலம் முதலிய ஐந்தோடும் கூடி வினை நெறியில் செல்லும் நிலையே புருட தத்துவமாம். 'மாயை' என்பது, காலம் முதலிய ஐந்தும் தோன்றுதற்கு ஏதுவாக அசுத்த மாயையில் பக்குவப்பட்ட ஒரு பகுதியேயாம். எனவே, இது மற்றவைபோலக் காரியமாகாது. காரணமேயாயினும், பக்குவப்பட்டமை பற்றி மற்றைய தத்துவங்களோடு ஒன்றாக வைத்து எண்ணப்படுகின்றது. எனவே, 'காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை' என அசுத்த மாயையில் தோன்றும் தத்துவங்கள் ஏழாதல் அறியப்படும். சுத்த மாயையில் தோன்றும் தத்துவம் ஐந்து. அசுத்த மாயையில் தோன்றும் தத்துவம் ஏழு, பிரகிருதி மாயையில் தோன்றும் தத்துவம் இருபத்து நான்கு ஆகத் தத்துவம் முப்பத்தாறு ஆதல் காண்க. ஐந்து, ஏழு, இருபத்து நான்கு என நின்ற இவை முறையே 'சிவதத்துவம், வித்தியா தத்துவம், ஆன்ம தத்துவம்' எனப் பெயர்பெறும். இவைகளில் இங்கு எடுத்தோதியவைபோக, ஏனையவற்றை நாயனார் பின்னர் ஆங்காங்கு இடம் வந்துழி வந்துழிக் குறித்தருளுவார்.

புவனம் படைப்பார் ஒருவன் ஒருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்
புவனம் படைப்பானும் பூமிசை யானாய்ப்
புவனம் படைப்பான்அப் புண்ணியத் தானே. ***#384***

உலகத்தைப் படைப்பவர் ஒருவனும், *(*சிவனும்*)* ஒருத்தியும் *(*சத்தியும்*)*. அவர்கட்குப் புதல்வர் ஐவர். *(*சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், மால், அயன். எனவே, அவரைக்கொண்டு, அருளல் முதலியவற்றைச் செய்விப்பவன் என்றதாம்*)* ஐவருள் படைப்புத் தொழிலுக்குத்தான்

செய்த புண்ணியத்தால் உரிமை பெற்ற வன் தாமரை மலரில் என்றும் இருந்து அத்தொழிலைச் செய்வான்.

விளக்கவுரை

எனவே, 'சிவபெருமான் தானே நேர்நின்றும், தக்கார் பிறரைக்கொண்டும் உலகத்தை நடத்துவான்' என்பதாம். தானே நின்று நடத்துதல் சுத்த மாயையில். ஏனை இருமாயைகளிலும் பிறரைக் கொண்டு நடத்துவன் என்க. தோற்றுவிக்கப் படுபவரை, 'புத்திரர்' என்றார். 'படைப்பானும்' என்னும் உம்மை எதிரது தழுவிய எச்சம். ஆகவே, ஏனைநால்வரும் தத்தமக்கு ஏற்ற வகையில் நின்று காத்தல் முதலியவற்றைச் செய்வர் என்பது பெறப்பட்டது.

இதனால், சிவபெருமான் படைத்தல் முதலியவற்றைச் செய்யு மாறு கூறப்பட்டது.

புண்ணியன் நந்தி பொருந்தி உலகெங்கும்
தண்ணிய மானை வளர்த்திடும் சத்தியுங்
கண்ணியல் பாகக் கலவி முழுதுமாய்
மண்ணியல் பாக மலர்ந்தெழும் பூவிலே. ***#385***

புண்ணியனாகிய சிவபெருமான் உலகெங்கும் நிறைந்து, எளிய உயிர்களை வளர்ப்பான். அவ்வாறே சத்தியும் சிவனது சங்கற்பரூபமாய் அவனோடு பூவில் மணம் போலப் பொருந்தி எங்கும் நின்று, அவன் கருதும் செயல்களை யெல்லாம் செய்வாள்.

விளக்கவுரை

'இயமானனை' என்பது குறைந்து நின்றது. இயமானன் - ஆன்மா. 'கலவி' என்றது, கலத்தலோடு கலந்து நின்று செய்யும் செயலையும் குறித்தது. 'உலகெங்கும் பொருந்தி' என்றதனால் சிவபெருமான் ஐந்தொழில் செய்யுங்கால் உலகுயிர் களோடு அத்துவிதமாய் (கலப்பினால் ஒன்றாய்ப் பொருள் தன்மையால் வேறாய், உயிர்க்குயிராதல் தன்மையால் உடனாய்) நின்றுசெய்வன் என்பதும், 'இயமானனை வளர்த்திடும்' என்றதனால், அவன் அவ்வாறு நின்று ஐந்தொழிலைச் செய்வது உயிர்கட்கு மலபாகம் வருவித்து அவைகளை வீடடையச் செய்தற் பொருட்டே என்பதும், 'சத்தியும் கலவி முழுதுமாய்' எனவே, அவன்தான் செய்யும் தொழில்கள் பலவற்றையும் தனது சத்தியால் செய்வன் என்பதும், 'பூவில் மணம்போல' என்றதனால், சத்தி அவனின் வேறாகாது, மரமும் காழ்ப்பும்போலக் குணகுணி பாவத்தால் இருதிறப்பட்டுத் தாதான்மியமாய் நிற்கும் என்பதும் பெறப்பட்டன. தண்மை, இங்கு எளிமை. 'தண்பதத்தால் தானே கெடும்' (குறள், 548) என்பதிற்போல. 'சத்தியும் கலவி முழுதுமாய்' எனவே, சிவமும்

அத்தன்மையதாதல் பெறப்பட்டது. கண்ணுதல் - கருதுதல். கண் இயல்பாய் - கருதுதல் வடிவாய். எனவே, 'சிவபெருமான் தான் செய்தனவற்றை நினைவு மாத்திரத்தால் செய்வதல்லது, சில கருவி களைக் கொண்டு செய்பவனல்லன்' என்பது போந்தது. அக் கருதுதல் தானே அவனது சத்தி வடிவம் என்க. 'மண்' என்னும் பூதத்தின் சிறப்புப் பண்பு நாற்றமாதல்பற்றி நாற்றத்தை, 'மண்ணியல்பு' என்றார். 'பூவில் மண் இயல்பாக மலர்ந்தெழும்' என மாற்றி உரைக்க. 'மலர்ந்து எழுதல்' பல்வேறு வகைப்பட்ட நினைவுகளாய் விரிந்து, நினைந்தவாறே ஆக்குதல். இத்தகைய சத்தியானே அவன் எங்கும் நிறைந்தவன் ஆகின்றான் என்பதும் குறிப்பால் உணர்த்தியவாறு.

இதனால், ஐந்தொழில் செய்யுமிடத்துச் சிவபெருமான் உயிர்களோடு நிற்கும் முறைமையும், அம்முறைமைக்குத் துணை யாகின்ற அவனது சத்தியின் நிலைமையும், அச்சத்திக்கும், அவனுக் கும் இடையே உள்ள தொடர்பு வகையும் கூறப்பட்டன.

நீரகத் தின்பம் பிறக்கும் நெருப்பிடை
காய்கதிர்ச் சோதி பிறக்கும்அக் காற்றிடை
ஓர்வுடை நல்லுயிர் பாதம் ஒலிசத்தி
நீரிடை மண்ணின் நிலைப்பிறப் பாமே. ***#386***

சத்தி நீரின்கண் 'சுவை' என்னும் பண்பாயும், நெருப்பின்கண் எரிகின்ற 'ஒளி' என்னும் பண்பாயும், காற்றின்கண் 'ஊறு' என்னும் பண்பாயும், வானின்கண் 'ஒலி' என்னும் பண்பாயும் விளங்குவாள். நீரால் சூழப்பட்ட 'மண்' என்னும் பூதத்தில்தான் பல்வேறு நிலைகளையுடைய உயிர்கள் தோன்றி வளரும்.

விளக்கவுரை

எனவே, 'எஞ்சிய நாற்றம் அதன்கண் உள்ளது' என்றாராயிற்று. சுவையை, 'இன்பம்' என்றார். உயிர்ப் பண்பாகிய உணர்தல் தன்மையில் முதலாவது ஊற்று உணர்வேயாகலின், அதனையே 'உயிர்' என்றார். ஊற்று உணர்வு முதல் என்பதனை 'ஓரறிவுயிர்' என்பவை பற்றி அறிக.

'ஓர்வுடை நல்லுயிர்' எனச் சிறப்பித்தலும் அதுபற்றி. பாதம் - அடி; முதல். அது முதலாவதாகிய பூதத்தை உணர்த்திற்று. 'சத்தி' என்னும் எழுவாய் இறுதிக்கண் நின்றது. உலகத்தோற்றம் முதலியவற்றை நம்மனோர் காணும் இவ்வுலகியல்பில் வைத்தே உணர்த்துகின்றாராதலின், 'நீரிடைமண்' எனவும், 'மண்ணின் நிலைப்பிறப்பாம்' எனவும் கூறினார். மேல், 'பூவின் கண் நின்று பொருந்தும் புவனமே' *(தி.10 பா.382)* என்றாற்போல. 'இன்பம், சோதி, உயிர், ஒலி' என்றவற்றில் 'ஆய்' என்பது விரிக்க. மேல், 'சிவசத்தியே உலகைப் பலவாறு ஆக்கி நடத்தும்'

என்றதற்கு ஏற்ப இங்கு, 'சத்தியே இவ்வாறு வெளிப்பட்டு நிற்கும்' என ஒற்றுமைபற்றிக் கூறினார்.
இதனால், மேல் தோற்றம் கூறப்பட்ட பூதங்களின் பயப்பாடு கூறப்பட்டது. இடைநின்ற இரண்டு திருமந்திரங்கள் இயைபுடைய வற்றை இடையே விதந்தனவாம்.

உண்டுல கேழும் உமிழ்ந்தான் உடனாகி
அண்டத் தமரர் தலைவனாம் ஆதியும்
கண்டச் சதுமுகக் காரணன் தன்னொடும்
பண்டிவ் வுலகம் படைக்கும் பொருளே. *#387*

உலகம் முழுதுடையான் சிவபெருமானே யாயினும், 'அயன், அரி, அரன்' என்னும் மூவர்தாமும் உலகிற்குக் காரணக் கடவுளராய் நின்று ஓரோவொரு தொழிலைச் செய்தல், தத்தம் புண்ணிய மிகுதிக்கு ஏற்ப அப்பெருமானால் தரப்பெற்று நடத்துதல் பற்றியேயாம்.

விளக்கவுரை

'அதற்குக் காரணம் அறியற்பாற்று' என்பது குறிப் பெச்சம். பிரகிருதி புவனங்கட்குப் பதியாதல் பற்றித் திருமாலையே உலகினை ஒடுக்கியும், வெளிப்படுத்தியும் நிற்பவனாக வைத்து, 'உலகத்தை உண்டு உமிழ்ந்தவன்' எனக் கூறுதல் வெளிப்படை. 'உடனாகி, ஒடு' என்பன எண்ணின்கண் நின்றன. சிவபெரு மானுக்குரிய 'ஆதி' என்னும் பெயரை அவனது உருவைப் பெற்ற உருத்திரனுக்கு ஆக்கிக் கூறினார். அதனால் அவனே தேவர் பலர்க்கும் மேலானவன் என்பது விளக்குதற்கு, 'அண்டத்தமரர் தலைவனாம்' என்றார். கண்டம் - சிறுமை. இறுதியிற் கூறுதல் பற்றி, 'முன்னை இருவரினும் மேம்பட்டவன்' என்பது படாமைப் பொருட்டு, 'கண்டச் சதுமுகன்' என்றார்.
இதனால், உலக முதல்வனாகிய காரணனைப் பற்றி ஓர் உண்மை உணர்த்தற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

ஓங்கு பெருங்கடல் உள்ளுறு வானொடும்
பாங்கார் கயிலைப் பராபரன் தானும்
வீங்குங் கமல மலர்மிசை மேலயன்
ஆங்குயிர் வைக்கும் அதுவுணர்ந் தானே. *#388*

சிவபெருமான் தனது தொழில்களுள் ஒவ் வொன்றைத் திருமாலும், பிரமனும் ஏற்றுச் செய்யுமாறு திருவுளம் பற்றினான்.

விளக்கவுரை

'அதனால், அவரும் உலக காரணர் எனப்படுகின்றனர்' என்பது குறிப்பெச்சம். மாலும், அயனும் சிவபெருமானது ஆணையை ஏற்ற அதிகார மூர்த்திகளாதலின் அது பற்றி, 'உலக முதல்வன் சிவ

பெருமானே' என்றற்கு இழுக்கில்லை என்பது கருத்து. இரண்டாம் அடியை முதலில் வைத்து உரைக்க. 'தானும்' என்பதில் தான், அசை நிலை. உம்மை, 'அவர் தவம் செய்யத் தானும் அதற்கு இசைந்தான்' என இறந்தது தழுவிற்று. வீங்கு - மணம் மிக்க. 'உயிர் வைத்தல்' என்றது, படைத்தல், காத்தல் இரண்டனையும் இரட்டுற மொழிதலால் குறித்ததாம். உணர்ந்தான் - எண்ணினான்; திருவுளம் பற்றினான். உருத்திரனை வேறாக எண்ணுவோர் சிவபெருமானை முதல்வன் என்பாரோடு மாறுபடாமை பற்றி இங்கு மால், அயன் இருவரைப் பற்றி மட்டுமே கூறினார் என்க. எனவே, உருத்திரனும் அத்தகையோனாதல் பெறப்பட்டது. 'அயன், மால், உருத்திரன்' என்னும் மூவரும் முறையே 'படைப்பவன், காப்பவன், அழிப்பவன்' என்பது வெளிப்படை. இதனால், புராணங்களில் சிறந்தெடுத்துப் பேசப்படுகின்ற காரணர் மூவர் பற்றிய உண்மை தெளிவிக்கப்பட்டது.

காரணன் அன்பிற் கலந்தெங்கும் நின்றவன்
நாரணன் என்றும் நடுவுட லாய்நிற்கும்
பாரணல் அன்பிற் பதஞ்செய்யும் நான்முகன்
ஆரண மாய்உல காயமர்ந் தானே. *#389*

சிவபெருமான் ஒருவனே தனது பேரருளால் எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் அறிந்தும், செய்தும் நிற்பவன். திருமால், 'தூல சரீரம், சூக்கும சரீரம், குண சரீரம், கஞ்சுக சரீரம், காரண சரீரம்' என்னும் ஐவகை உடம்புள் முதல் உடம்பாகிய தூலசரீரம் முதல் நடுவுடம்பாகிய குண சரீரங்காறும் நிறைந்து நின்று செயலாற்றுவன். பிரமன், முதல் உடம்பாகிய தூல சரீரத்துள்ளும் பிருதிவி தத்துவத்தளவிலே நிறைந்து சென்று செயலாற்றுவன். பிரமனை, 'வேத முதல்வன், உலகத் தந்தை' என்றெல்லாம் சொல்வது இந்த அளவில்தான்.

விளக்கவுரை

இங்கு, 'முதல் உடம்பு' என்றது, ஒடுக்கமுறை பற்றி என்க. மேற்கூறிய தத்துவம் முப்பத்தாறனுள், 'ஞானேந்திரியம், கன்மேந்திரியம், மாபூதம் என்னும் பதினைந்தும் தூல சரீரமாம்' எனவும், 'தன் மாத்திரை ஐந்தும், மனம் அகங்காரம் புத்தி என்னும் அந்தக்கரணங்களும் ஆகிய எட்டும் சூக்கும சரீரமாம் ' எனவும், 'சித்தம், குணம், பிரகிருதி என்று பலவகையாய் நிற்கும் ஒன்றே குண சரீரமாம்' எனவும் ' வித்தியா தத்துவங்கள் ஏழனுள் மாயை தவிர ஏனைய ஆறுமே கஞ்சுக சரீரமாம்', 'மாயை காரண சரீரமாம்' அறிந்து கொள்க. இவற்றுள் நிலமுதல் பிரகிருதி அளவுமே திருமால் வியாபகன் ஆதலின், 'நாரணன் என்றும் நடுவுடலாய் நிற்கும்' என்றும், நான்முகன் பிருதிவி அளவிலே வியாபகனாதலின், 'நான் முகன் பார் அண்ணல்' என்றும் கூறினார்.

சிவபெருமானை விடுத்து இவ்விருவருள் ஒருவனை முதல்வன் எனச் சிலர் மயங்குதலன்றி, உருத்திரனைச் சிவபெருமானின் வேறாக எண்ணி மயங்குவார் இலராதல் பற்றி இவ்விருவரது வியாபக எல்லைகளை மட்டுமே உணர்த்தி அருளினார். சீகண்ட உருத்திரன் மாயாதத்துவங்காறும் வியாபகன் எனவும், மகேசுரன் ஈசுர தத்துவங்காறும் வியாபகன் எனவும், சதாசிவன் நாத தத்துவங்காறும் வியாபகன் எனவும் உணர்ந்துகொள்க.
'அன்பு' இரண்டில் முன்னது அருள்; பின்னது ஆசை. 'அன்பிற் செய்யும்' என இயையும். பதம் - உலகம். செய்தல் - படைத்தல்.
இதனால், சிவபெருமானது முதன்மைக்கண் நிகழும் ஐயத்தினை முற்ற நீக்குதற் பொருட்டு, அதிகார மூர்த்திகளது அதிகார எல்லைகள் கூறப்பட்டன.

பயன்எளி தாம்பரு மாமணி செய்ய
நயன்எளி தாகிய நம்பஒன் றுண்டு
வயன்ஒளி யாயிருந் தங்கே படைக்கும்
வயனெளி தாம்வய ணந்தெளிந் தேனே. ***#390***

பிரம தேவன் அறிவுடையவனாய் இருந்து, படைத் தல் தொழிலை வெற்றிபெறச் செய்கின்ற காரணத்தை நான் நன்கு அறிந்தேன். அஃது என்றும் நிலையாயுள்ள இன்பம் எளிதாகக் கிடைத்தற் பொருட்டுத் தன்னை விரும்பினால், அப்பயனை அவ் வாறே எளிதில் தருகின்ற பருத்த இரத்தினம் ஒன்று அவனிடம் உள்ளது என்பதே.

விளக்கவுரை

பின்னிரண்டடிகளை முதலில் வைத்து, அதன் பின், 'நம்பப் பயன் எளிதாம் மணி ஒன்றுண்டு' என்பதைக் கூட்டி உரைக்க. பருமாமணி, சிவபெருமான். செம்மை - மாறுபாடின்மை. நயன் - இன்பம். 'ஆகிய' என்பது 'செய்யிய' என்னும் வினையெச்சம். நம்புதல் - விரும்புதல். 'நம்பன்' என்பது பாடம் ஆகாமை வெளிப் படை. 'உண்டு' என்னும் குற்றியலுகரத்தின்முன் உயிர் உடம்படு மெய் பெற்றது. அங்கே - அவ்வாறே; அறிந்தவாறே. வயன் - வெற்றி. வயணம் - காரணம். படைத்தலைச் செய்பவனையே முதல்வனாக உலகம் மயங்குதல் இயல்பு என்பது பற்றிச் சிவபெருமான் பிரமனுக்கு உள்ளொளியாய் நிற்றலையே விதந்தார்.
இதனால், படைத்தல் முதலியவற்றைச் சிவபெருமான் பிறரால் செய்விக்கும் முறைமை கூறப்பட்டது.

போக்கும் வரவும் புனிதன் அருள்புரிந்
தாக்கமுஞ் சிந்தைய வாகின்ற காலத்து
மேக்கு மிகநின்ற எட்டுத் திசையொடுந்

தாக்குங் கலக்குந் தயாபரன் தானே. *#391*

சிவபெருமான் உயிர்கள்மாட்டு அருள் கூர்தலால், உலகம் ஒடுங்கல், தோன்றல், நிற்றல் என்னும் செயல்கள் அவனது திருவுள்ளத்தில் எழுந்தபொழுது, எல்லையின்றிப் பரந்து நிற்கின்ற மாயையைத் தனது சிற்சத்தி வழியாகப் பொருந்தி அதனைக் காரியப்படுத்துபவன் அவனே.

விளக்கவுரை

எனவே, 'அவனது அதிகார சத்தி பதிவால் அயன், அரி, அரன் என்போர் தமது படைத்தல் காத்தல் அழித்தல் தொழில்களைச் செய்கின்றனரல்லது, தாங்களே தங்கள் விருப்பப்படி செய்கின்றா ரல்லர்' என்பதாம். ஆக்கம் - வளர்ச்சி. இதனை, 'வரவும்' என்றதன் பின்னர்க் கூட்டுக. 'புரிதலால்' என்றது 'புரிந்து' எனத் திரிந்து நின்றது. மேக்கு - உயரம். மாயையை 'மேக்கு மிகநின்ற எட்டுத்சை' என ஆகாயமாக உருவகம் செய்தார். தாக்குதல் - தோய்தல். கலக்குதல் - காரியப்படுத்துதல். இங்கு, 'சத்தி வழியாக' என்பது ஆற்றலால் வந்தியைந்தது.

இதனால்,மேல், 'ஒளியாய்' எனக் குறிக்கப்பட்ட ஒளியாவது, அதிகார சத்தி என்பது கூறப்பட்டது.

நின்றுயி ராக்கும் நிமலன்என் னாருயிர்
ஒன்றுயி ராக்கும் அளவை உடலுற
முன்றுய ராக்கும் உடற்குந் துணையதா
நன்றுயிர்ப் பானே நடுவுநின் றானே. *#392*

சிவன் முதல்வனாய் நின்று, உடலோடு கூடிய உயிர்களைப் படைக்கும்பொழுது, முதலில் அவைகட்கு வினைகளை வரையறுத்துக் கூட்டுவான். பின் அவற்றை அவை நுகர்தற்கு உடலுக்கும் துணையாய் நின்று அதனை இயக்குவான். ஏனெனில், அவன் அவரவர் செய்திக்குத் தக்க பயனை அவரவர்க்குத் தப்பாமல் ஊட்டுவித்து நிற்கும் நடுவுநிலைமையனாதலின்.

விளக்கவுரை

'உயிர்களைப் படைத்தல் என்பது, அவைகளை உடலொடு பொருந்தச் செய்தலாம்' என்பது விளக்குதற்கு. 'ஒன்றுயிர்' என்றார். அளவை - கால வரையறை. 'துயர்' என்றது அதற்கு ஏதுவான வினைகளை. 'உயிர்ப்பிப்பான்' என்னாது 'உயிர்ப் பான்' என்றார். அவையே தானாய் நிற்கும் ஒற்றுமை தோன்றற்கு. வினைகளைக் கூட்டுவிப்பவன் முதல்வனாயின், நல்வினை ஒன்றையே கூட்டுவியாது, தீ வினையையும் கூட்டுவித்தல் என்னை என்னும் வினாவை விடுத்தற்கு 'நடுவு நின்றான்' என்றார். எனவே, படைப்பு ஒருபடித்தாகாது பலபடித்தாய்த்

தோன்றுதற்கும், உலகில் நன்மையோடு தீமையும் உளதாதற்கும் காரணங்கூறியதாயிற்று.
இதனால், சிவபெருமான் உலகத்தைத் தொழிற்படுத்தும்வழி நெறியின்றித் தொழிற்படுத்தாது, உயிர்களின் வினைக்கேற்பவே தொழிற்படுத்துவன் என்பது கூறப்பட்டது.

ஆகின்ற தன்மைஇல் அக்கணி கொன்றையன்
வேகின்ற செம்பொனின் மேலணி மேனியன்
போகின்ற சீவன் புகுந்துட லாய்உளன்
ஆகின்ற தன்மைசெய் ஆண்டகை யானே. *#393*

பிறக்கும் தன்மை இல்லாத சிவபெருமான், உயிர் ஓர் உடலை எடுக்கின்ற காலத்து அதற்கு அதனைக் கொடுக்கின்ற தலைவனும், பின்பு அவ்வுயிர் அவ்வுடலை விட்டு நீங்குகின்ற காலத்தில் பின்னர்ச் சென்று புகும் மற்றோர் உடலையும் அதற்குக் கொடுத்து, அங்கும் அதற்குத் துணையாய் நிற்பவனுமாவன்.

விளக்கவுரை

எனவே, 'உயிர்களுக்கு வினைக்கீடாகத் தரப்படும் பிறப்பு ஒன்றன்று; பல' என்றவாறு. அக்கு - எலும்பு. செம்பொனின் மேலணி மேனியன் - செவ்விய பொன்னின்மேலே உள்ள அழகு (நிறம்) போலும் மேனியன். 'புகுந்த' என்பதன் ஈறு தொகுத்தல்.
இதனால், சிவபெருமான் எண்ணற்ற உயிர்களுள் ஒவ்வொன்றற்கும் எண்ணற்ற உடலைக் கொடுத்துக் கூட்டியும், நிறுத்தியும், பிரித்தும் நடத்தும் முறைமை கூறப்பட்டது.

ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்
இருவர் விளையாட்டும் எல்லாம் விளைக்கும்
பருவங்கள் தோறும் பயன்பல வான
திருவொன்றிற் செய்கை செகமுற்று மாமே. *#394*

ஒருவனும் ஒருத்தியுமான இருவர் (சிவனும், சத்தியும்) விளையாடலை மேற்கொண்டுள்ளார்கள். அவ் விளை யாடல் அவர்கட்குப் பொழுது போக்காகாது, எண்ணிலா உயிர்கட்கு எண்ணிலாப் பயனை விளைப்பது. அப்பயனும் உயிர்களின் பக்குவ நிலைதோறும் அதற்கேற்ப வேறு வேறாய் விளைவனவாம். உயிர்கள் வீடுபெறின், அவ்வொருவன் ஒருத்தியரது உலகத்தின் தொழிற்பாடு முற்றுப்பெறும்.

விளக்கவுரை

'சிவம், சத்திகட்கு உலகை மேற்கூறியவாறு பலபடச் செயற்படுத்தல் பெருஞ்செயலாய்த் துன்பம் விளைப்பதன்று; நினைத்த அளவிலே எளிதில் நிகழ்வனவாம்' என்றற்கு 'விளையாடல் உற்றார்' என்றும்,

'விளையாட்டு' என்பதேபற்றி, 'வீண்தொழில்' என்றாதல், 'தம் நலம் கருதியது' என்றாதல் கருதலாகாது என்றற்கு, 'எல்லாம் விளைக்கும்' என்றும், 'எல்லாம்' எனப் பொதுப்படக் கூறினும், எல்லாப் பயனும், எல்லார்க்கும், எப்பொழுதும் ஆவனவல்ல என்றற்கு, 'பருவங்கள் தோறும் ஆன' என்றும், 'படைப்பின் குறிக்கோள் உயிர்களை வீடடைவித்தலே' என்றற்கு, 'திரு ஒன்றின் செகம் செய்கை முற்றும்' என்றும் கூறினார்.

'காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி' *(தி.8* திருவெம்பாவை, *12)* என்றாற் போல, இறைவன் உலகை நடாத்துதலை 'விளையாட்டு' என்றல் வழக் காதலும், 'ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் - உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்' *(தி.8* திருவெம்பாவை, *11)* என்றாற் போல, அவனது செயல் உயிர்களை உய்வித்தற் பொருட்டு நிகழ்வ தாதலும் அறிந்துகொள்க. 'போகமும் திருவும் புணர்ப்பானை' *(தி.7ப.59 பா.1)* என்பதனால் 'திருவாவது வீடுபேறு' என்பது இனிது பெறப்படும். திரு - நன்மை. வீடுபேறே முடிந்த நன்மையாதல் அறிக. உயிர்கள் வீடு பெற்ற பின்பும் அவ்வின்பத்தை நுகர்தல் முதல்வனது அருட் செயலின்றி அமையாது என்பதனை, 'இன்பம் கொடுத்தல் இறை' (உண்மை விளக்கம் , *50)* எனவும்,

மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தானெடுத்து - நேயமுடன்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானமூத்தல்
தானெந்தை யார்பரதந் தான். -உண்மை விளக்கம், *36*

எனவும் கூறுமாற்றால் அறிந்து கொள்க. இக்கருத்துப்பற்றியே, 'முதல்வன் செயல் முற்றுப்பெறும்' என்னாது, 'செகத்தின் செய்கை முற்றுப்பெறும்' என்றார் என்க. இக்கருத்துணராதார், 'உயிர்கள் வீடு பெற்ற பின்னை முதல்வற்குச் செயல் இல்லை போலும்' என மயங்குப. இதனால், படைப்பு முதலியவைபற்றி அறியற்பாலன சில கூறப்பட்டன.

புகுந்தறி வான்புவ னாபதி அண்ணல்
புகுந்தறி வான்புரி சக்கரத் தண்ணல்
புகுந்தறி வான்மலர் மேலுறை புத்தேள்
புகுந்தறி யும்முடிக் காகிநின் றாரே. **#395**

'உருத்திரன், மால், அயன்' என்னும் மூவரும் தம் தம் எல்லை யளவும் உயிர்க்குயிராய் நிறைந்து நின்று அங்குள்ள நிலைகளையெல்லாம் நன்குணர்வர். ஆயினும், அவரெல்லாம் எங்கும் அவ்வாறு நின்று உணரும் சிவபெருமானாகிய தலைவனுக்கு உரிய அடியரேயாவர்.

விளக்கவுரை

'ஆகவே, அவனை அடைதலே வீடுபெறுதலாம்; ஏனையோரை அடைதல் யாவும் பந்தமே' என்பது குறிப்பெச்சம். எனவே, சிவபெருமான் தனது படைத்தல் முதலிய தொழில்களின் பயனாக உயிர்கட்கு முடிவில் தன்னையே வழங்கியருள்வான் என்பது போந்தது. புவனாபதி - உலக காரணியாகிய உமைக்குத் தலைவன். முடி - தலைமை. அது தலைமையை உடையான் மேல் நின்றது. இதனால், முடிந்த வீடுபேறு (பரமுத்தி) ஆவது இது என்பது கூறப்பட்டது.

ஆணவச் சத்தியுள் ஆம்அதில் ஐவருங்
காணியர் காரண ஈசர் கடைமுறை
பேணிய ஐந்தொழி லால்விந்து விற்பிறந்
தாணவம் நீங்கா தவரென லாகுமே. ***#396***

ஆணவ மலத் தொடக்கினுள் அகப்பட்டு நிற்கின்ற அந்நிலையில், அசுத்த மாயை பிரகிருதி மாயைகளில் நிற்கின்ற அயன், மால், உருத்திரன், சீகண்டர், அனந்தர் என்னும் ஐவரும் பிறரால் கண்காணிக்கப்படும் காரியக் கடவுளரே. இனிக் காரணக் கடவுளராவார், மேற்சொல்லிய அந்நிலைக்குப் பின்னர்த் தாம் முன்னர் மேற்கொண்டிருந்த அத்தொழில்களாலே பக்குவம் முதிரப்பெற்று ஆணவம் நீங்கி அதன் வாதனை மாத்திரம் உடையராய்ச் சுத்த மாயையில் உடம்பு முதலியவற்றைப் பெற்று நிற்பவர்களே.

விளக்கவுரை

அவர், 'அணுபட்ச அயன், மால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன்' என்னும் ஐவர் என்க. அதில் - அந்நிலையில். காணியர் - காணப்பட்டவர். 'காரியர்' என்றேயும் ஓதுப. 'கடைமுறை' என்றது, 'பின்' என்றவாறு. பின்னர், 'விந்துவிற் பிறந்து' என்ப தனால், முன்னர், மோகினி மான்களின் நிற்றலைக் கூறுதல் கருத்தாதல் அறிக. 'ஐந்தொழில்' என்றதற்கு, காரியர் ஐவருள் சீகண்டரை மறைப் பவராகவும், அனந்தரை அருள்பவராகவும் கொள்க. 'செலுத்துவோர் காரணர்' எனவும், 'செலுத்தப்படுவோர் காரியர்' எனவும் உணர்க. 'பிறந்து நீங்காதவர்' என்றாராயினும், 'நீங்காது பிறந்தவர்' என்றலே கருத்து என்க. நீங்காமை, பற்றறக் கழியாமை. 'காரியர் பக்குவம் முதிரப் பெற்றபின் ஞானத்தை அடைந்து வீடு பெறுவர்' என்பதும், 'காரணர் ஞானம் முதிரப் பெற்று வாதனை நீங்கியபின் வீடு பெறுவர்' என்பதும் உய்த்துணர வைத்தமை காண்க. அனந்தர் சுத்தமாயையில் உள்ளவராயினும், தூல வாசனை உடையராய் அசுத்த மாயையைத் தொழிற்படுத்துதல் பற்றி ஆணவத் தொடக்குடையவராக ஓதினார். இதனால், மேல், 'பந்த நிலையினர்' எனக் குறிக்கப்பட்டவரது பந்த

நிலைகள் வகுத்துக் கூறப்பட்டன.

உற்றமுப் பாலொன்று மாயாள் உதயமாம்
மற்றைய மூன்றும்மா மாயோ தயம்விந்து
பெற்றவந் நாதம் பரையிற் பிறத்தலால்
துற்ற பரசிவன் தொல்விளை யாட்டிதே. ***#397***

நிலமுதல் மாயை ஈறாக உள்ள முப்பத்தொரு தத்து வங்களும் அசுத்த மாயையின் காரியங்கள். அதற்கு மேல் உள்ள 'சுத்த வித்தை, ஈசுரம், சாதாக்கியம்' என்னும் மூன்றும் 'மகாமாயை' எனப்படும் சுத்த மாயையின் காரியங்கள். சாதாக்கியத்திற்குமேல் உள்ளது விந்து. அவ்விந்துவைப் பெற்ற அந் 'நாதம்' என்னும் தத்துவம், பரவிந்துவிற் பிறத்தலால், யாவும், எல்லாத் தத்துவங் களையும் தனது உடைமையாக உடைய பராசத்தியோடு கூடிய பரம சிவனது பழைய திருவிளையாடலேயாம்.

விளக்கவுரை

இங்குக் கூறிய தத்துவங்கள் இவை என்பதை மேலே காண்க. *(தி.10 பா. 124)*

இதனால், அனைத்தையும் தனது விபூதியாக (சிறந்த உடைமையாக) உடையவன் பரமசிவன் என்பது வகுத்துக் கூறப் பட்டது.

ஆகாய மாதி சதாசிவ ராதியென்
போகாத சத்தியுட் போந்துடன் போந்தனர்
மாகாய ஈசன் அரன்மால் பிரமனாம்
ஆகாயம் பூமிமுன் காண அளித்தலே. ***#398***

'வானம், காற்று, தீ, நீர், நிலம்' என்னும் பூதங்கள் ஐந்தற்கும் முறையே, 'சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன்' என்னும் ஐவரும் தலைவராவர் என்று உணர். இவர் அனைவரும், யாதொரு பொருளையும் விட்டு நீங்காது நிறைந்து நிற்கும் சிவசத்தி பதிய ஒருங்குதோன்றியவரே. இவருள் மகேசுரன் முதலிய நால்வரும் உருவம் உடையவர். (சதாசிவன் அருவுருவினன்) இவர் ஐவர் தொழிலும், மேற்கூறிய ஆகாயம் முதல் பூமி ஈறான பூதங்களைக் காரியப்படுத்தலாம்.

விளக்கவுரை

'ஆகாயமாதிக்குச் சதாசிவன் ஆதியோர் தலைவர்' எனத் தொகுத்தலாயும், சொல்லெச்சமாயும் நின்ற சொற்களை விரித்துரைத்துக்கொள்க. என் - என்று உணர். 'உட்போத' என்பது, 'உட்போந்து' எனத் திரிந்து நின்றது. மா காயம் - தூலவடிவம்; உருவம். 'அளித்தல்' என்றது 'ஆளுதல்' என்னும் பொருட்டாய் நின்றது.

'அளித்தலே தொழில்' எனச் சொல்லெச்சம் வருவித்து முடிக்க.
இதனால், மேல், தத்துவங்களை, 'பரமசிவனது விபூதி' என்று கூறியபின், அத்தத்துவத் தலைவர்களும் அவனது விபூதியேயாதல் கூறப்பட்டது.

அளியார் முக்கோண வயிந்தவந் தன்னில்
அளியார் திரிபுரை யாம் அவள் தானே
அளியார் சதாசிவ மாகி அமைவாள்
அளியார் கருமங்கள் ஐந்தும்செய் வாளே. *#399*

சுத்தமாயையின் காரியமாகிய பரவிந்து, அபர நாதம், அபரவிந்து என்னும் மூன்று நிலைக்களமாகத் தோன்றும் சாதாக்கிய தத்துவத்தினைத் தோற்றுவிக்கும். அருள் காரணமாக, 'திரிபுரை' என்னும் சத்தி தோன்றுவாள். அவளே அத்தத்துவத்தின் தலைவனாகிய சதாசிவனோடு ஒற்றுமைப்பட்டு நின்று, அருளல் முதலிய ஐந்தொழிலையும் செய்வாள்.

விளக்கவுரை

இவளே மனோன்மனி என்பதனை அடுத்து வரும் திரு மந்திரத்துள் அறிக. இவளது சிறப்பை நாயனார் நாலாந் தந்திரத்துள் விரித்தோதுவார். அளி - அருள்.
இதனால், மேற்கூறிய தத்துவங்களும், தத்துவத் தலைவர் களும் பரமசிவனது விபூதியாதற்குக் காரணம் தோன்றுதற் பொருட்டு, அவனது சத்தியே எல்லாம் செய்யும் முறைமை கூறப்பட்டது.

வாரணி கொங்கை மனோன்மனி மங்கலை
காரணி காரிய மாகக் கலந்தவள்
வாரணி ஆரணி வானவர் மோகினி
பூரணி போதாதி போதமு மாமே. *#400*

அத்திரிபுரையே 'மனோன்மனி' எனப்படுவாள். அவள் நித்திய சுமங்கலை. எல்லாவற்றிற்கும் காரணி. அதுவேயன்றிக் காரியப்பட்ட பொருள்களிலும் கலந்து நிற்பாள். 'உமை, வாணி, திருமகள், மகேசுவரி' என்றும் பாகுபட்டு நிற்பாள். உயிர்கட்குச் சுட்டறிவையும், சுட்டிறந்த வியாபக அறிவையும் தருவாள்.

விளக்கவுரை

'வாரணி - யானைத் தோலைப் போர்த்தவள்' என உருத்திரனது சத்தியைக் குறித்தது. ஆரணி - வேதம் ஓதுபவள். வானவர் மோகினி - தேவர்களை மாயையால் மயக்குபவள். பூரணி - நிறைந்த தலைமை உடையவள். செய்யுள் நோக்கி இவர்களை முறை பிறழ வைத்தார்.

நின்றது தானாய் நிறைந்த மகேசுரன்
சென்றங் கியங்கும் அரன்திரு மாலவன்

மன்றது செய்யும் மலர்மிசை மேலயன்
என்றிவ ராக இசைந்திருந் தானே. *#401*
மகேசுவரி முதலாகப் பாகுபட்ட அச்சத்தியே தானாய் நிறைந்த மகேசுரனே, உருத்திரன், திருமால், அயன் என்பவரிடத்தும் சென்று உலாவி அவர்களேயாயிருந்து அவர்களது தொழில்களை இயற்றுவிப்பன்.

விளக்கவுரை

என்றது, மகேசுரன் முதலாகக் கீழுள்ள நிலைகளே அதிகார நிலை எனக் கூறியவாறு. சதாசிவ நிலை, 'போக நிலை' எனவும், அதற்குமேல் உள்ள நிலைகள் இலய நிலை எனவும் உணர்க. இறைவன் உலகத்தைத் தொழிற்படுத்தும் பொழுது இவ்வாறு, 'இலயம், போகம், அதிகாரம்' என மூன்று நிலைகளில்நின்று தொழிற்படுத்துவன் என்பது முதல் திருமந்திரத்தே குறிக்கப்பட்டது. இதனை இங்குக் கூறியது, மேற் கூறியவாற்றால், 'சத்தியே எல்லாம் செய்யச் சிவன் வாளாவிருப்பான் போலும்' எனவும், 'அதனால் அவ்விருவரும் வேறு வேறு நிற்பவரே போலும்' எனவும் ஐயம் நிகழாது, 'சத்தியும் சிவனும் யாண்டும் உடனாகியே நிற்பர்' என்பதும், 'அதனால் சத்தி செய்வனவெல்லாம் சிவன் செய்வனவே' என்பதும் உணர்த்தற் பொருட்டாம்.
இதனால், மேலது பற்றி எழுவதோர் ஐயம் அறுக்கப்பட்டது.

ஒருவனு மேஉல கேழும் படைத்தான்
ஒருவனு மேஉல கேழும் அளித்தான்
ஒருவனு மேஉல கேழும் துடைத்தான்
ஒருவனு மேஉல கோடுயிர் தானே. *#402*
முன்னை மந்திரத்திற் கூறியவாற்றால், எல்லா உலகங்களையும் படைத்துக் காத்து அழிப்பவனும், அறிவில் பொருள், அறிவுடைப் பொருள் ஆகிய அனைத்திலும் நீக்கம் அற நிறைந்து இருப்பவனும் ஆகிய முதற்கடவுள் ஒருவனே என்பது தெற்றென விளங்கும்.

விளக்கவுரை

'அவ் வொருவன் சிவபெருமானே' என்பது கருத்து.
இதனால், சிவபெருமானது முழுமுதற் றன்மை வலியுறுத்திக் கூறப்பட்டது.

செந்தா மரைவண்ணன் தீவண்ணன் எம்இறை
மைந்தார் முகில்வண்ணன் மாயஞ்செய் பாசத்தும்
கொந்தார் குழலியர்க் கூடிய கூட்டத்தும்
ஐந்தார் பிறவி அறுத்துநின் றானே. *#403*
எங்கள் இறைவனாகிய சிவபெருமானே செந்தாமரை மலரில் உள்ள

அழகிய பிரம தேவனும், மேகம்போலும் நிறத்தையுடைய திருமாலும், நெருப்புப் போலும் நிறத்தை யுடைய உருத்திரனுமாவான். ஆதலின், அவனே மாயை என்னும் முதற் காரணத்தினாலும், மகளிரை ஆடவர் கூடும் கூட்டமாகிய துணைக் காரணத்தினாலும் ஐந்து கூறாய்ப் பொருந்தும் உடம்புகளைத் தோற்று வித்து நிற்கின்றான்.

விளக்கவுரை

முதலில் உள்ள வண்ணம் - அழகு; பொன்னிறம். இறுதியிற் கூறத்தக்க தீவண்ணனைச் செய்யுள் நோக்கி இடை வைத்தார். 'எம் இறை' என்றதனை முதலில் வைத்துப் பிரிநிலை ஏகாரம் விரிக்க. 'செந்தாமரை வண்ணன்' முதலிய மூன்றும் 'எம் இறையே' என்னும் எழுவாய்க்குப் பயனிலைகளாய் நின்றன. 'முகில் வண்ணன்' என்பதன் பின், 'அவனே' என்பது தோன்றா எழுவாயாய் நின்றது. 'ஆடவர்' என்பது சொல்லெச்சம்.

உடம்பின் ஐந்து கூறுகளாவன, ஐங்கோசங்கள். அவை, 'அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம்' என்பன. இவற்றின், விளக்கம் பின்னர்க் காணப்படும். இவற்றுள் அன்னமய கோசம் பிரம தேவனது ஆளுகைக்கும், பிராணமய கோசம் மாயோனது ஆளு கைக்கும், மனோமய கோசம் சீகண்ட உருத்திரரது ஆளுகைக்கும் ஏனை இரு கோசங்களும் அனந்த தேவரது ஆளுகைக்கும் உட்பட்டு இயங்குவனவாம். இவற்றுள், முதல் மூன்றும் பிரகிருதி மாயையின் காரியங்களும், ஏனை இரண்டும் அசுத்த மாயையின் காரியங்களு மாகும்.

இதனால், படைப்பு வேறுபாடு ஒருவாறு தொகுத்துக் கூறப்பட்டது. இவ்வாறாகவே, 'படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் சிவபெருமான் சுத்தமாயையில் தான் நேரே செய்வன்' என்பதும், 'அசுத்த மாயையில் அனந்த தேவரை வாயிலாகக் கொண்டு (அதிட்டித்து நின்று) செய்வன்' என்பதும், 'பிரகிருதி மாயையில் அனந்ததேவர் வழியாகச் சீகண்ட உருத்திரனை வாயிலாகக் கொண்டு செய்வன்' என்பது போதரல் காண்க.

இதனால், சிவபெருமான் மும்மாயையிலும் படைத்தல் முதலியவற்றைச் செய்யுமாறு கூறப்பட்டது.

தேடுந் திசைஎட்டுஞ் சீவன் உடல்உயிர்
கூடும் பிறவி குணஞ்செய்த மாநந்தி
ஊடும் அவர்தம துள்ளத்துள் ளேநின்று
நாடும் வழக்கமும் நான் அறிந் தேனே. ***#404***

பல்கோடி அண்டங்களிலும் தனக்காவதொரு புக்கிலை (நிலையான

வீட்டைத்) தேடி அலைகின்ற சீவான்மாவின் பொருட்டு, உடலும், உயிரும் கன்மத்தால் தொடர்பு கொள்கின்ற பல பிறவிகளை அவ்வவ்வுயிர்க்கு ஏற்றவாறு மேற்கூறிய வாற்றால் மாயையினின்றும் தோற்றுவிக்கின்ற பரமான்மாவாகிய சிவபெரு மான், தான் தனது திவ்வியாகமங்களுள் கூறியுள்ள அப்படைப்பு முறைகளைத் தெளியமாட்டாது அவற்றொடு மாறுபடுகின்றவரது உள்ளத்துள்ளே நின்று, அவரது அறிவோடே ஒத்துக் கூறிய பல சமயக் கொள்கைகளையும் யான் அறிவேன்.

விளக்கவுரை

அக்கொள்கைகளாவன, 'பூதங்கள் நான்கே; அவை தம்முட் கூடுதல் பிரிதல்களால் உலகம் தோன்றும்; அழியும். அதனால், அச்செயல்கட்கு முதல்வன் ஒருவன் வேண்டுவதில்லை' என்பதும், (இவ்வாறு கூறுவோர் உலகாயத மதத்தினர்) 'வித்தின் கேட்டில் அங்குரம் (முளை) போல எல்லாப்பொருளும் ஒன்றன் கேட்டில் மற்றொன்றன் தோற்றமாக ஒரு கணத்தில் தோன்றி, மறுகணத்தில் அழிந்து செல்லும். இத்தொடர்ச்சி பொருட்பெற்றியானே நிகழும்; இதற்கொரு முதல்வன் வேண்டுவது இல்லை' என்பதும், (இவ்வாறு கூறுவோர் புத்த மதத்தினர்) 'உளதாதல், இலதாதல் என்னும் இரண்டு தன்மையும் ஒருங்கே உடைமையால் இத்தன்மைத்தென வரையறுத்துச் சொல்லொணாத இவ்வுலகம் உளதாதல் தன்மையால் தோன்றி, இலதாதல் தன்மையால் அழிதல் இயல்பாதலின், இதற்கொரு முதல்வன் வேண்டுவது இல்லை' என்பதும், (இவ்வாறு கூறுவோர் சமணமதத்தினர்) 'பிரகிருதிக்குமேல் மாயை இல்லை; அதனால், அதன் காரியமாகிய இருபத்து நான்கிற்கு மேல் தத்துவம் இல்லை' என்பதும், (இவ்வாறு கூறுவோர் ஏகான்மவாதிகள், யோகர், சாங்கியர் முதலிய பலருமாவார். இவருள் ஏகான்மவாதிகள் மாயை 'அநிர்வசனம்' - இன்னதெனச் சொல்லொணாதது, எனக்கூறி, அதனுள் சக சீவ பரங்கள் விவர்த்தனமாய் - மயக்கக் காட்சியாய் - தோன்றும்' எனவும், ஏனையோர், 'மாயையை உள்பொருள்' எனவும், 'அதனால், அதன் காரியங்களும் உள்பொருளே' எனவும் கூறுவர். சாங்கியருள் ஒரு சாரார், 'மாயை தானே தனது காரியத்தைத் தோற்றுவிக்கும்; இறைவன் வேண்டா' என்பர்.) இன்னோரன்ன பலவுமாம். மேல் 'பருவங்கள்தோறும் பயன் பலவாகும்' (தி.10 பா.393) என்று அருளிச் செய்தபடி, சிவபெருமான் அவ்வவ்வுயிர்களின் பரிபாகத்திற்கேற்ப அவற்றின் வழி நின்று துணைபுரிவனாதலின், அதனை, 'அவர்தமதுள்ளத்துள் நாடும் வழக்கம்' என்றார். வழக்கம் - மரபு; கொள்கை.

'திசை எட்டும் தேடும் சீவன்' என மாற்றி, 'சீவனுக்கு' என நான்காவது

விரிக்க. குணம் - பிரகிருதி.
இதனால், 'பிறநெறிகளுட் கூறப்படும் முறைமைகள் பலவும் பூர்வபக்கம்' என்பது கூறும் முகத்தால், 'சிவநெறியுட் கூறப் படும் முறைமையே சித்தாந்தம்' என மேலன பலவும் வலியுறுத்தப் பட்டன.

ஓராய மேஉல கேழும் படைப்பதும்
ஓராய மேஉல கேழும் அளிப்பதும்
ஓராய மேஉல கேழும் துடைப்பதும்
ஓராய மேஉல கோடுயிர் தானே. ***#405***

'படைத்தல், காத்தல், அழித்தல்' என்னும் தொழில்களை இயற்றுவோரும், அறிவுடைப் பொருள், அறிவில் பொருள் என்பவற்றில் தங்கிநின்று அவற்றை இயற்றுவோரும் பல்கோடி தேவர்களாகச் சொல்லப்படினும், அவர் யாவரும் சிவபெருமான் ஒருவனது ஆணையைத் தாங்கி அவன் குறிப்பின்வழி நின்று இயங்கும் ஒரு குழாத்தினரே யாவர்.

விளக்கவுரை

'வேத சிவாகமங்களில் பூதம் முதலிய தத்துவங் கட்கும், பல்வேறு பிறவிகளில் நிற்கும் உயிர்கட்கும், அவற்றது உடம்பில் அமைந்த பல்வேறு உறுப்புக்களுக்கும், அவ்வுடம்புகட்கு நிலைக்களமாய் 'அண்டம்' எனவும், 'புவனம்' எனவும் பெயர் பெற்று நிற்கும் இடங்கட்கும் தலைமை தாங்கி அவ்வவற்றை ஏற்ற பெற்றி யான் இயக்கும் கடவுளர் எண்ணிறந்தோர் எனக் கூறி, அவர்க்கு உரிய உருவம், பெயர், தொழில் முதலியனவும், இடம் பொருள் ஏவல்களும், அவரை வழிபடும் முறைகளும் பலபட எடுத்துச் சொல்லப்பட்டாலும், அவர் பலரும் தாம் தாம் தம் இச்சைவழி நின்று செயல்புரிவோரல்லர்; சிவபெருமானது அடியவர் குழாங்களே எனத் தெளிவித்தவாறு, 'அமைப்பால் வேறுபட்ட பல கூட்டமாயினும், ஒருவனது பணி யாளராம் முறைமையால் ஒரு கூட்டமே' என்றற்கு, 'ஓர் ஆயமே' என்றார். ஆயம் - கூட்டம்.
இதனால், அனேகேசுர வாதம் பற்றி எழும் ஐயம் பொது வகையான் அகற்றி, மேலே வலியுறுத்தப்பட்டது. மேல் 'ஒருவனுமே' *(தி.10 பா.401)* என்ற மந்திரம் ஒருவனே பலராய் நின்று காரியம் செய்தல் கூறியது. இது பலரும் ஒருவனது ஏவலரே எனக் கூறியது. இவை தம்முள் வேற்றுமை.

நாதன் ஒருவனும் நல்ல இருவரும்
கோது குலத்தொடுங் கூட்டிக் குழைத்தனர்
ஏது பணியென் றிசையும் இருவருக்
காதி இவனே அருளுகின் றானே. ***#406***

தலைவனாகிய சிவபெருமான் ஒருவனும், அவனது அருட்கு

உரியராயினமையின் நல்லோராகிய 'மால், அயன்' என்னும் இருவரும் ஆக மூவரும் தீயது, நல்லதுமாகிய முக்குணங் களைக் கூட்டிக் குழைத்து உலகை ஆக்குகின்றனர். எனினும், 'அடியேங்கட்கு இடும் பணி யாது' என்று விண்ணப்பித்து அவற்றைச் செய்ய இசைந்து நிற்கும் நல்ல இருவருக்கு நாதனாகிய சிவபெரு மானே அவர் செய்யத் தக்க பணியை அருளிச் செய்கின்றான்.

விளக்கவுரை

கோது - குற்றம்; தீமை. குலம் - நன்மை. இராசதமும், தாமதமும், 'கோது' எனப்பட்டன. சாத்துவிகம், 'குலம்' எனப் பட்டது. 'ஏனைத் தேவர் பலரும் தலைவராகாதொழியினும், புராணங்களிலும், பிறவிடத்தும் தலைவராகச் சிறந்தெடுத்துப் பேசப்படுகின்ற மூவர் தலைவராகாமை இல்லை போலும்' எனப் பௌராணிக மதம்பற்றி மீளவும் எழும் மலைவை நீக்கியவாறு.

'முக்குணத்தால் உலகை ஆக்குகின்றனர்' என்ற குறிப்பால் 'குணாதீதனாகிய சிவன் முதல்வனாதலன்றிக் குணவயப்பட்ட ஏனையோர் முதல்வராமாறு இல்லை' என வழி வகை கூறித் தெளிவித் தவாறாயிற்று. உருத்திரனைச் சிவபெருமானின் மேம்பட்ட வனாக மயங்கிக் கூறுவார் இன்மையின், அழித்தல் தொழிலைப் பேறாக உடைய உருத்திரனைப் பற்றி விளக்கம் கூறிற்றிலர்.

இதனால், தலைமைபற்றி, 'பௌராணிகம், ஐரணியகருப்பம், பாஞ்சராத்திரம்' என்னும் மதம் பற்றி எழும் ஐயத்தைச் சிறப்பு வகையான் அகற்றி மேலது வலியுறுத்தப்பட்டது.

அப்பரி செண்பத்து நான்குநூ றாயிரம்
மெய்ப்பரி செய்தி விரிந்துயி ராய்நிற்கும்
பொய்ப்பரி செய்திப் புகலும் மனிதர்கட்
கிப்பரி சேஇருள் மூடிநின் றானே. *#407*

'எண்பத்துநான்கு நூறாயிரம்' எனச் சொல்லப் படும் வேறுபாடுகளை உடைய பிறவிகள் பலவும் மேற்கூறிய முறையிலே உடம்புகளாய் உருவெடுத்து வளர்ந்து, அவைதாமே உயிர் போல இயங்கிநிற்கும். அதனை அறியாது பொய்ச்சமயங் களைப் பொருந்தி நின்று உலகத் தோற்றத்தை மேற்காட்டியவாறு பலபடத் தம்முள் முரணிக் கூறுவோர்க்குச் சிவபெருமான் அவரது அறிவை இன்று உள்ளவாறே அறியாமையால் மூடிவைப்பவனா கின்றான்.

விளக்கவுரை

'உரைசேரும் எண்பத்து நான்குநூறாயிரமாம் யோனி பேதம்' *(தி.1 ப.132 பா.3)* என்றற்றொடக்கத்தனவாகப் பலவிடத்தும் பிறப்பு வகை

வேறுபாடுகள் எண்பத்துநான்கு நூறாயிரம் என்பது கூறப்படுதல் காண்க. இவை அனைத்தும், 'அண்டசம், சுவேதசம், உற்பீசம், சராயுசம்' என்னும் நால்வகைத் தோற்றமும், 'தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்' என்னும் எழுவகைப் பிறப்புமாய் அமைவனவாம். அண்டசம் - முட்டையில் பிறப்பன. சுவேதசம் - வியர்வையில் (அழுக்கில்) பிறப்பன. உற்பீசம் - வித்து, வேர், கிழங்கு முதலியவைகளைப் பிளந்து கொண்டு மேல்நோக்கி முளைப்பன. சராயுசம் - கருப்பப் பைக்குள் உரு நிரம்பிப் பிறப்பன. எண்பத்து நான்கு நூறாயிரமும் எழுவகைத் தோற்றத்துட் பொருந்துமாறு:-

தோற்றிடும் அண்டசங்கள் சுவேதசங்கள் பாரில்
துதைந்துவரும் உற்பீசம் சராயுசங்கள் நான்கில்
ஊற்றமிகு தாபரங்கள் பத்தொன்ப தாகும்;
ஊர்வபதி னைந்;தமரர் பதினொன்றோ;டுலவா
மாற்றருநீர் உறைவன,நற் பறவைகள்நாற் காலி
மன்னியிடும் பப்பத்து;மானுடர்ஒன் பதுமாம்;
ஏற்றியொரு தொகையதனில் இயம்புவர்கள் யோனி
எண்பத்து நான்குநூ றாயிரமென் றெடுத்தே.

-சிவப்பிரகாசம் - 47

என்பதனால் விளங்கும். இதனை,

ஊர்வ பதினொன்றாம் ஒன்பது மானுடம்
நீர்பறவை நாற்கால்ஓர் பப்பத்துச் - சீரிய
பந்தமாந் தேவர் பதினால் அயன்படைத்த
அந்தமில்சீர்த் தாவரம்நா லைந்து.

-திருக்குறள், 62. பரிமேலழகர் உரை மேற்கோள்

எனச் சிறிது வேறுபடவும் கூறுவர். எவ்வாறாயினும், 'எண்பத்து நான்கு நூறாயிரம்' என்பதில் மாறுபாடில்லை.

'இத்துணை வேறுபட்ட பிறவிகளில் ஏனையவற்றிற் செல்லாது மானுடப் பிறப்பினுள் வருதல் பெரிதும் அரிது' என்பதை,

அண்டசம் சுவேத சங்கள் உற்பிச்சம் சராயு சத்தோ
டெண்டரு நாலெண் பத்து நான்குநூ றாயிரத்தால்
உண்டுபல் யோனி; எல்லாம் ஒழித்துமா னுடத்துதித்தல்
கண்டிடில் கடலைக் கையால் நீந்தினன் காரியங்காண்.

எனச் சிவஞான சித்தி (சூ. 2.89) நூல் கூறிற்று.

'மூடி' என்பது பெயர். 'மூடியாய்' என ஆக்கச்சொல் விரிக்க. இனி, வினையெச்சமாகக்கொண்டு, 'இருளால் மறைத்து நின்றான்' என உரைத்தலுமாம்.

இதனால், படைப்பு எண்பத்து நான்கு நூறாயிர வேறு பாடுகளை

உடைத்தாதல் கூறப்பட்டது.

ஆதித்தன் சந்திரன் அங்கிஎண் பாலர்கள்
போதித்த வானொளி பொங்கிய நீர்புவி
வாதித்த சத்தாதி வாக்கு மனாதிகள்
ஓதுற்ற மாயையின் விந்துவின் உற்றதே. *#408*

அசுத்த மாயையில் உளவாகின்ற தத்துவ தாத்து விகங்களோடு ஒத்த தத்துவ தாத்துவிகங்களும், பிறப்பு வகைகளும் சுத்த மாயையின்கண்ணும் உளவாவனவாம்.

விளக்கவுரை

பிறப்பு வகைகள் பலவற்றையும் உபலக்கணத்தாற் கொள்ளுதற்கு, 'எண் பாலர்கள்' என்றார். எண் பாலர் - திசைக் காவலர். போதித்த - சிறப்பித்துச் சொல்லப்பட்ட. ஒளி - தேசசு; நெருப்பு. 'ஒலி' என்பது பாடம் அன்று. வாதித்த - வாதத்தோடு கூடிய. வாதம் - காற்று. 'கூடிய' என்றது, 'சொல்லப்பட்ட ஐம்பூதங்களோடும் கூடிய' என்றவாறு. 'சத்தாதி' என்றதை, 'தன்மாத்திரை, விடயம்' என இரட்டுறமொழிந்து கொள்க. 'ஆதி' என்றதனை, 'வாக்கு' என்றதனோடும் கூட்டுக. வாக்காதி, 'வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம்' என்னும் கன்மேந்திரியங்கள்; இவற்றைக் கூறவே 'செவி, தோல், கண், மூக்கு, நாக்கு' என்னும் ஞானேந்திரியங்களும், சத்தாதி ஞானேந்திரிய விடயங்களைக் கூறவே, 'வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்' என்னும் கன்மேந்திரிய விடயங்களும் கொள்ளப்படும். மனாதி, 'மனம், அகங்காரம், புத்தி, சித்தம்' என்னும் அந்தக்கரணங்கள். 'ஆதித்தன், சந்திரன்' என்றது, உபலக்கணத்தால் தாத்துவிகங்களைக் கொள்ள வைத்ததாம்.
'தத்துவங்கள் முப்பத்தாறு' எனவும், 'அவற்றுள், சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை என்னும் ஐந்தும் சுத்த மாயையில் உள்ளவை; ஏனைய அசுத்த மாயையில் உள்ளவை' எனவும் மேற்கூறியவாற்றால், 'சுத்த மாயையில் உள்ள தத்துவங்கள் மேற்கூறிய ஐந்துமே; பிற இல்லை' என்பது பட்டமையின் அதனை விலக்கி, 'மேற்கூறிய ஐந்தும் சுத்த மாயையின் சிறப்புத் தத்துவங்கள்; அவை அசுத்த மாயையில் இல்லை; ஏனைய முப்பத்தொரு தத்துவங்களும் சுத்தமாயை, அசுத்த மாயை இரண்டற்கும் பொதுத் தத்துவங்கள்; அதனால் அவை அவ் இருமாயையிலும் உள்ளன. சுத்த மாயையில் அவை மலகன்மங்களோடு கலவாமல் சுத்தமாய் உள்ளன; அசுத்த மாயையில் அவை அவற்றொடு கலந்து அசுத்தமாய் உள்ளன; அவ்வளவே வேறுபாடு' எனத் தெரித்துக் கூறியவாறு. 'இதுவே சிவாகமங்களின் துணிபு' என்பது.
'காலம் முதல் நிலம் ஈறாகிய தத்துவங்கள் எல்லாம் அசுத்த

மாயையிற்போலச் சுத்த மாயையினும் உள; அவை இவை போலன்றிச் சுத்தமாய் உள்ளன என்னும் பௌட்கர வசனத்தான் அசுத்த தத்துவ புவனங்களின் உள்ளன அனைத்தும் சுத்த தத்துவ புவனங்களினும் சுத்தமாய் உளவாம் என்பது போதருதலானும்'
எனச் சிவஞானபோத மாபாடியத்தும் *(சூ.2 அதி.2)* இனிது எடுத்து விளக்கப் பட்டமை காண்க. அசுத்த மாயா உலகத்தவராகிய அயன், மால், உருத்திரன் முதலியோர்போலச் சுத்த மாயையிலும் அப்பெயர் முதலியன உடையோர் உளர் என்றலும் இதுபற்றி என்க. இனி, பூலோக புவர்லோக சுவர்க்கலோகம் முதலிய உலகங்களில் கீழ் உலகத்துள்ளனபோல மேல் உலகத்தும் உள்ளன பொருள்கள் என்றலும் இவ்வாற்றானே அமைதல் அறிந்துகொள்க.
இனி, 'சுத்த மாயை மேலே உள்ளது; அசுத்த மாயை கீழே உள்ளது' எனக் கூறுதல், சூக்கும தூல முறைமையால் வியாபக வியாப் பியமாதல் பற்றியல்லது, ஒருமரத்தில் அதன் அரையும், கிளையும் போல இட வேறுபாடு பற்றியன்றாதலால், சுத்த மாயையில் உள்ளன பலவும் அசுத்த மாயையில் தோய்வின்றி வியாபகமாய் நிற்கும் என்பதும் நுண்ணுணர்வால் உணர்ந்துகொள்க. அங்ஙனம் அல்லாக் கால் மந்திரங்களும், அவற்றிற்கு உரியராய கடவுளரும் அசுத்த மாயா புவனத்தில் உள்ளார்க்குப் பயன் தருமாறு இல்லை என்க.
'மாயையிற் போல' என ஒருசொல் வருவிக்க. 'உற்றது' என்பது தொழிற்பெயராய் நின்றது. 'உற்றவே' என ஓதுதலும் ஆம்.
இதனால், படைப்புப் பற்றியதொரு புறனடை கூறப்பட்டது.

4.10. திதி

புகுந்துநின் றான்வெளி யாய்இரு ளாகிப்
புகுந்துநின் றான்புகழ் வாய்இகழ் வாகிப்
புகுந்துநின் றான்உட லாய்உயி ராகிப்
புகுந்துநின் றான்புந்தி மன்னிநின் றானே. *#409*

என்றும் உள்ளவனாய், எனது உள்ளத்தில் புகுந்து நீங்காது நிற்கின்ற சிவபெருமான், 'ஒளி, இருள் - புகழ், இகழ் - உடல், உயிர்' முதலிய மறுதலைப் பொருள்களிலும் அவை அவையாய்த் தொடர்ந்து நீங்காது நிற்கின்றான்.

விளக்கவுரை

'அதனாலே அவை நிலைத்து நிற்கின்றன' என்பது குறிப்பெச்சம். ஈற்றடியை முதலிற்கொண்டு உரைக்க. இதில் 'நின்றான்' இரண்டில் முன்னது வினைப்பெயர்; பின்னது முற்றெச்சம். ஒவ்வோர் அடியிலும் எச்சங்களை முதலிலே கூட்டி முடிக்க. 'வெளி' எனினும் 'ஒளி' எனினும் ஒக்கும். இங்கு, 'ஒளி' என்றது, ஆன்ம அறிவை விளக்கும் மாயா காரியங்களை. 'இருள்' ஆணவமாதல் வெளிப் படை. அதனுள்ளும் இறைவன் நிற்றல், அதன் சத்தியை இடையறாது தொழிற்படச் செய்து மெலிவித்தற்காம். புகழ்வு - புகழ்தல். இகழ்வு - இகழ்தல். இத்தொழிற் பெயர்கள் ஆகுபெயராய்ச் செயப்படு பொருளாய அவ்வச்சொன்மேல் நின்றன. இவற்றால் அவன் அச்சொற் கட்குப் பொருளாம் உயர்பொருள் இழிபொருள்களின் நிற்றல் குறிக்கப்பட்டது. 'உடல்' என்றது சடப்பொருள்கட்கு உபலக்கணம்.

தானே திசையொடு தேவரு மாய்நிற்கும்
தானே உடலுயிர் தத்துவ மாய்நிற்கும்
தானே கடல்மலை யாதியு மாய்நிற்கும்
தானே உலகில் தலைவனு மாமே. *#410*

சிவபெருமான் தான் ஒருவனே பல பொருள் களினும் நிறைந்து நின்று அவற்றை நிலைப்பித்தலுடன், அவற்றைத் தன் இச்சைவழி நடத்துபவனுமாகின்றான்.

விளக்கவுரை

'அதனால் அவை இயங்கிவருகின்றன' என்பது குறிப் பெச்சம். முதல் மூன்றடிகளும் அனுவாதம்.
இவை இரண்டு திருமந்திரங்களாலும், 'காத்தலாவது, அழியாது நிற்பித்தலும், நடத்துதலுமாம்' என்பது கூறப்பட்டது.

உடலாய் உயிராய் உலகம தாகிக்
கடலாய்க் கார்முகில் நீர்பொழி வானாய்

இடையாய் உலப்பிலி எங்குந்தா னாகி
அடையாப் பெருவெளி அண்ணல்நின் றானே. *#411*

சிவபெருமான் இவ்வாறு எல்லாப்பொருளிலும் நிறைந்து நிற்றல், அவன் பிறபொருள்களால் அடைக்கப்படாத பெருவெளியாய் நிற்றலினாலாம்.

விளக்கவுரை

'உலகம்' என்றது, விதந்தோதாதன பிறவற்றை. வான் - மேகம். இடை - வெளி; ஆகாயம். உலப்பிலி எங்கும் - அள வில்லாத இடம் எங்கணும். 'அடையாப் பெருவெளி அண்ணல்' என்றது உடம்பொடு புணர்த்தல். அன்றி, 'அண்ணல் ஆதலின்' எனச் சொல்லெச்சம்
வருவித்துரைத்தலுமாம். அங்ஙனம் வருவிப்பின், இத்தொடர் முதலில் வைத்து உரைக்கப்படும்.

இதனால், 'ஒருவன் பிற எல்லாப் பொருளிலும் நிற்றல் எவ்வாறு கூடும்' என்னும் ஐயத்தினை, இங்கும் நீக்குதற்கு அங்ஙனம் நிற்குமாறு கூறப்பட்டது.

பதிப்புக்களில் சிருட்டி அதிகாரத்தில் வந்த 'தேடுந்திசை எட்டும்' என்னும் மந்திரம் இங்கு மீளவும் காணப்படுகின்றது.

தானொரு காலந் தனிச்சுட ராய்நிற்கும்
தானொரு கால்சண்ட மாருத மாய்நிற்கும்
தானொரு காலந் தளிமழை யாய்நிற்கும்
தானொரு காலந்தண் மாயனு மாமே. *#412*

சிவபெருமான் உயிர்களது அறிவு நிலைக்கு ஏற்பக் கதிர்க்கடவுள், வளிக்கடவுள், மழைக்கடவுள், (இந்திரன்) முதலிய பல்வேறு கடவுளராய்த் தோன்றுவான். ஆதலின், அவன் திருமாலாய்த் தோன்றுதலில் வியப்பில்லை.

விளக்கவுரை

ஒருகால் - ஒருகாலத்தில்; என்றது, 'உயிர்களின் பக்குவ நிலையில்' என்றவாறு. சுடர் முதலியன அவற்றை இயக்கும் கடவு ளரைக் குறித்தன. தண்மை, சத்துவகுணத்தைச் சுட்டியது. 'பிறர் சத்துவ குணத்தை யுடையவனாகக் கூறும் மாயோன்' என்றவாறு. மாயோன் தொழிலால் மட்டுமே சத்துவன்; குணத்தால் தாமதனே. சிவபெருமான் பல்வேறு கடவுளராய்த் தோன்றலாவது, அவர் அவர் அறிவிற்கு ஏற்ப அவரையே முதற்கடவுளாக மயங்குமாறு அவர்பால் தனது ஆணையை வைத்துத் தத்தமக்கு இயலும் அளவு உலகத்தை நடத்தச் செய்தல். 'அவ்வாற்றால் காக்கும் ஆணையைத் திருமாலிடத்து வைத்து நடத்துகின்றானாதலின், அத்திருமாலையே காத்தற் கடவுளாக உண்மை நூல்கள் ஓரோர் இடங்களிற் கூறுதலும், அங்ஙனம் கூறுதலின்

உண்மையை உணரமாட்டாதார் அவனையே காத்தற் கடவுளாகவும், முதற்கடவுளாகவும் மயங்குதலும் இயல்பாகலின், அதுபற்றி ஐய மில்லை' என்பதாம். சண்டம் - வேகம். மாருதம் - காற்று. தளி - துளி. இதனால், 'காப்பவன் மாயனன்றோ' எனப் பௌராணிக மதம் பற்றி எழும் ஐயத்தினை நீக்கி, 'காப்பவனும் சிவனே' என்பது இங்கும் வலியுறுத்தப்பட்டது.

அன்பும் அறிவும் அடக்கமு மாய்நிற்கும்
இன்பமும் இன்பக் கலவியு மாய்நிற்கும்
முன்புறு காலமும் ஊழியு மாய்நிற்கும்
அன்புற ஐந்தில் அமர்ந்துநின் றானே. *#413*

திருவருளால் ஐம்பூதங்களிலும் நிற்கும் சிவ பெருமானே, குணங்கள் மூன்றாயும், காலங்கள் மூன்றாயும் நிற்பான்.

விளக்கவுரை

'அதனால் சத்துவ குணத் தொழிலாகிய காத்தலைச் செய்பவனும் அவனே' என்பதாம். அன்பு முதலாக இன்பம் ஈறாகக் கூறியவை சத்துவ குணத்தை விரித்தவாறும், இன்பக் கலவி தாமத குணத்தைக் குறித்தவாறுமாம். முன்புறு காலம் - உலகத்தது தோற்றக் காலம். ஊழி அதன் இறுதிக் காலம். இவை முறையே இறப்பும், எதிர்வும் குறித்தன. இராசத குணமும், நிகழ்காலமும் உபலக்கணத்தாற் கொள்ளநின்றன. சிவபெருமான் எட்டுருவினன் (அட்ட மூர்த்தி) ஆதலும், அவற்றுள் ஐம்பூதங்கள் முக்குண வடிவினவாதலும் பலரும் அறிந்தன வாதலின், அவனை, 'தாமத குணம் ஒன்றே உடையன்' எனவும், 'அதனால், அழித்தலையே செய்வன்' எனவும் கூறுதல் அறியாதார் கூற்றேயாம் என்றபடி. இனி அவன் குணாதீதன் ஆதலும் நூல்களால் நன்குணர்த்தப்படுவது என்றற்குக் காலங்கள் மூன்றாதலையும் உடன் கூறினார்.

இதனால், 'சிவபெருமான் காத்தற்கு உரியனல்லன்' எனப் பிணங்கிக் கூறும் பாஞ்சராத்திர மதத்தை மறுத்து, மேலது வலியுறுத்தப் பட்டது.

உற்று வனைவான் அவனே உலகினைப்
பெற்று வனைவான் அவனே பிறவியைச்
சுற்றிய சாலும் குடமுஞ் சிறுதூதை
மற்றும் அவனே வனையவல் லானே. *#414*

முதற்கண் உலகுயிர்களை அவற்றிற்கு அம்மை அப்பனாய் நின்று படைப்பவனும் சிவபெருமானே. பின்பு அவற்றைத் தன் மக்களாகக் கொண்டு புரப்பவனும் அவனே. இவை 'தேவர், மக்கள்' என்னும் சிறப்புடைப் பிறப்பினர்க்கு மட்டுமன்று; 'விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்' என்னும் சின்னஞ்சிறிய பிறவிகட்குமாம்.

விளக்கவுரை

'வனைதல்' மூன்றனுள் முன்னது 'ஆக்குதல்' எனவும், இடையது 'திருத்தல்' எனவும், ஈற்றது 'இரண்டனையும் செய்தல்' எனவும் பொருள் தந்தன. 'உலகு, பிறவி' என்பன சொல் வேறுபட்டுப் பொருட்பின்வருநிலை அணியாய் நின்றன. சால் முதலிய நான்கும் பெரியனவும், சிறியனவுமாய உடம்புகளை உணர்த்தி நின்றன. மற்றும் - ஏனைய கலங்களும். தூதையை, 'மொந்தை' என்பர். 'தூதையும்' என்னும் உம்மை தொகுத்தல். 'வனையவல்லான்' என்றதனால், இது குறிப்புருவகம்.

இதனால், சிவபெருமானது ஆற்றலின் பெருமையை மீளவும் நினைப்பித்து, மேலது வலியுறுத்தப்பட்டது.

உள்ளுயிர்ப் பாயுட லாகிநின் றான்நந்தி
வெள்ளுயி ராகும் வெளியாய் விளங்கொளி
உள்ளுயிர்க் கும்உணர் வேயுட லுட்பரம்
தள்ளுயி ராம்வண்ணந் தாங்கிநின் றானே. ***#415***

'தூய உயிர்' எனப்படும் பரமான்மாவாகிய பெருவெளியாய், தூய்மையின்றி மாசுண்டு கிடக்கும் சீவான்மாவாகிய உயிரினுள் அறிவு தோன்றுதற்கு ஏதுவாய் நிற்பதாய இயற்கை அறிவே உயிரின் உடலையும் இடமாகக்கொண்டு நிற்கும் 'பரம்பொருள்' எனப்படுவது. அதனை இழந்துநிற்கும் உயிர் அதுவாம் வண்ணம், அதன் உடலாயும், அவ்வுடல் வாழ்வுறுதற்கு அதனுள் நிற்கும் உயிர்ப் பாயும் உள்ள சிவபெருமானே அதனைக் காத்து நிற்கின்றான்.

விளக்கவுரை

இரண்டாம் அடி முதலாகத் தொடங்கி, 'தாங்கி நின்றான்' என்பதை உள்ளவாறே நிறுத்தி முடிக்க. 'விளங்கொளி' என்பதன்பின் 'ஆய்' என்பது விரிக்க. 'நிலங்கொளி' என்பது பாட மன்று. 'தள் உயிர்' என்பதில் 'தள்ளுதல்', தவறவிடுதல். இதன்பின் 'அது' எனப் பரம்பொருளைச் சுட்டும் சுட்டுப்பெயர் எஞ்சி நின்றது. 'பரம்பொருளை அறியாது நிற்கும் உயிர் அதனை அறியும் வண்ணம் பக்குவம் முதிர்தற் பொருட்டே அதனை உடலில் நிறுத்திப் புரக்கின்றான்' என்றவாறு. 'உயிர்ப்பாய்' என்றதனால் உடலை நிற்பித்தலையும், 'உடலாய்' என்றதனால் உயிரை அஃது எடுத்த பிறப்பில் நிறுத்துதலையும் குறித்தவாறு. இறைவன் உடலினுள் உயிர்ப்பாதலை,

'என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே' *-தி.5 ப.21 பா.1*

என்பதனான் அறிக.

இதனால், காத்தல் தொழிலின் பயன் கூறப்பட்டது.

தாங்கருந் தன்மையும் தானவை பல்லுயிர்
வாங்கிய காலத்தும் மாற்றோர் பிறிதில்லை
ஓங்கி எழுமைக்கும் யோகாந்தம் அவ்வழி
தாங்கிநின் றானும்அத் தாரணி தானே. *#416*

சிவபெருமான் பல உயிர்களையும் அவற்றது உடலில் நிறுத்திக் காக்கின்ற காலத்தில் அக் காத்தல் தொழிலை அரிதாகுமாறு செய்பவரும், அவைகளை அவற்றது உடம்பினின்றும் பிரிக்கின்ற காலத்தில் அப்பிரித்தல் தொழிலை அரிதாகுமாறு செய்பவருமாக அவனுக்கு எதிராவார் பிறர் இல்லை. இனி விடாது வந்த எழுவகைப் பிறப்பிற்கும் முடிவாவது ஞானமே. அந்நெறியில் அவ்வுயிர்களைப் பிறழாது நிற்பிப்பவனும் அச் சிவபெருமானே.

விளக்கவுரை

தன்மையைச் செய்வாரை, 'தன்மை' என்றது ஒற்றுமை வழக்கு. பின் முன் உள்ள சொற்குறிப்புக்களால், 'தாங்கிய காலத்து' என்பது முன்னரும், 'வாங்கருந் தன்மையும்' என்பது பின்னரும் வருவித்துக் கொள்ளக் கிடந்தன. அதனால், 'தாங்கிய காலத்துத் தாங்கருந் தன்மை செய்வாரும், வாங்கிய காலத்து வாங் கருந்தன்மை செய்வாருமாக மாற்றோர் பிறரில்லை' என்பது முன் னிரண்டடிகளின் பொருளாயிற்று. மாற்றோர் - எதிராவார். 'அந்தம்' என்றது, 'எழுமைக்கும்' என்றதனோடும் இயையும். 'ஓங்கிய' என்னும் அகரம் தொகுத்தலாயிற்று. யோகத்தின் அந்தத்தில் தோன்று வதனை 'யோகாந்தம்' என்றார். 'ஞானம்' என்னாது 'யோகாந்தம்' என்றதனானே, 'சரியை முதலிய தவங்களில் நிறுத்திக் காப்பவனும் அவனே' என்பது போந்தது. தார் - (கொன்றை) மாலையை. அணி - அணிந்தவன். 'மற்றோர் பிறிதில்லை' என்பது பாடம் அன்று. இதனால், வருகின்ற அதிகாரங்கட்குத் தோற்றுவாய் செய்யப் பட்டது.

அணுகினுஞ் சேயவன் அங்கியிற் கூடி
நணுகினும் ஞானக் கொழுந்தொன்றும் நல்கும்
பணிகினும் பார்மிசைப் பல்லுயி ராகித்
தணிகினும் மன்னுடல் அண்ணல்செய் வானே. *#417*

அண்ணலாகிய சிவபெருமான், உயிர்களோடு உடனாய் நிற்பினும், அவற்றால் அறிதற்கரியனே. யோக முறையால் பிராண வாயுவை அடக்கி மூலாதாரத்தினின்றும் எழுப்பப்படும் அங்கியின்வழி மேல்நிலமாகிய புருவ நடுவை அடைந்து தியான சமாதிகளால் அவனை உணரினும், உண்மையில் ஞான முதிர்ச்சி ஒன்றுமே அவனைப் பெறுவிக்கும். அதனால், சரியை முதலிய மூன்றால் அவனை வழிபடும் தவநெறியில் நிற்பினும், அதனில் செல்லாது உலகரோடு கூடி

அவநெறியில் தாழினும் அவன் பிறவியை அறுத்தல் இன்றி அதனைக் கூட்டவே செய்வான்.

விளக்கவுரை

'ஒன்றுமே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தல். 'அவனை நல்கும்' எனச் செயப்படுபொருள் வருவித்துக்கொள்க. தணிதல் - தாழ்தல்; கீழ் நிலையை எய்தல். மன் உடல் - நீங்காது வரும் பிறப்பு. செய்வான் - உண்டாக்குவான். 'மண்ணுடல்' என்பது பாடமன்று.
இதனால், அருளல் தொழிலது சிறப்பை உணர்த்துமுகத்தான், அதற்குச் சிறப்பு வகையால் தோற்றுவாய் செய்யப்பட்டது.

4.11.சங்காரம்

அங்கிசெய் தீசன் அகலிடஞ் சுட்டதவ்
வங்கிசெய் தீசன் அலைகடற் சுட்டதவ்
வங்கிசெய் தீசன் அசுரரைச் சுட்டதவ்
வங்கிஅவ் வீசற்குக் கைஅம்பு தானே. ***#418***

சிவபெருமான் உலகம் முழுவதையும் அழித்ததும், கடல்நீரை மிக்கு வாராதவாறு அடங்கியிருக்கச் செய்ததும், முப்புரத் தவர் முதலிய அசுரர்களை அழித்ததும் நெருப்பை உண்டாக்கியே யாம். அதனால், நெருப்பே அவன் கையம்பாய் விளங்குகின்றது.

விளக்கவுரை

கடவுட் கொள்கை இல்லாதவருள் சிலர் (உலகாய தரும், மீமாஞ்சகரும்) 'உலகம் தோன்றலும்,அழிதலும் இல்லாது என்றும் உள்ளதேயாகும்' என்பர். கடவுட் கொள்கை உடையவ ருள்ளும் சிலர் (பாஞ்சராத்திரிகள் முதலியோர்) 'உலகத்தைக் கடவுள் அழிக்கமாட்டான்' என்பர். 'அவரெல்லாரும் 'நெருப்பு' என்ற ஒரு பொருள் இருப்பதை உற்று நோக்குவாராயின், தமது மயக்கம் நீங்குவர்' என்றற்கு நெருப்பு இறைவனுக்கு அழித்தற் கருவியாய்ப் பயன்படுமாற்றைக் கூறினார். 'அழிப்பு இளைப்பாற்றல்' (சிவஞானசித்தி. சூ. 1.37) என்று இதனை முதற்கண் எடுத்துக் கூறியதும் இதுபற்றி என்க. உலகம் அழி பொருளாதலை உணர்வார் எவரும் அது தோற்றம் உடைத்து என்பதையும் உணர்வர் என்க. பூதங்கள் ஐந்தனுள் ஆகாயம் ஒழிந்த, காட்சிப் பொருளாய் நிற்கும் ஏனை நான்கும் படைத்தல் முதலிய மூன்றனையும் செய்யுமாயினும் நிலத்திற்கு உரிமைத் தொழில் படைத்தலும், நீருக்கு உரிமைத் தொழில் காத்தலும், நெருப்பிற்கு உரிமைத் தொழில் அழித்தலும் ஆதல் பற்றி அதனையே இறைவனுக்கு அழித்தற் கருவியாக அருளிச்செய்தார். 'நிலம், நீர், தீ' என்ற மூன்றற்கும், 'பிரமன், மால், உருத்திரன்' என்பவரை உரிமைக் கடவுளராகக் கூறலின்,

சிவாகமங்கட்கும் கருத்து இதுவாதல் அறிந்து கொள்ளப்படும். இதனால், 'இறைவன் உலகத்தைப் படைத்தல் காத்தல் களுடன் அழித்தலும் செய்வன்' என்பது கூறப்பட்டது.

இலயங்கள் மூன்றினுள் ஒன்றுகற் பாந்தம்
நிலையன் றழிந்தமை நின்றுணர்ந்தேனால்
உலைதந்த மெல்லரி போலும் உலகம்
மலைதந்த மாநிலந் தான்வெந் ததுவே. *#419*

மூவகைச் சங்காரங்களுள் 'கற்ப சங்காரம்' என்பதும் ஒன்று. அதில் எல்லாப் பொருளும் சங்கரிக்கப் பட்டொழிந் தமையை ஏனைய இரண்டு சங்காரங்களில் நிற்குமாற்றால் நான் கருதியுணர்ந்துகொண்டேன். கால வயப்பட்டுநிற்கும் உலகம் உலை யில் இடப்பட்ட அரிசிபோல்வதாம். ஆகவே, என்றும் அழியாதன போல மலைவைத் தந்து நிற்கும் இப்பெரு நிலம் முடிவில் அழிந் தொழிந்தது.

விளக்கவுரை

'மூவகைச் சங்காரம் இவை' என்பது, வருகின்ற திரு மந்திரங்களுள் கூறப்படும். 'நனவு நிலையில் நிற்பவன் அந்நிலையில் ஒருபெற்றியே நிற்கமாட்டாது காலவயத்தால் கனவு முதலியவற்றிற் சென்று அறிவு கெடுதலையும், பிறந்த உயிர் அந்நிலையிலே நிற்க மாட்டாது காலவயத்தால் அவ்வுடலைவிட்டு இறந்தொழி தலையும் உற்றுநோக்கினால், உலகம் முழுதும் இவ்வாறே காலவயப் பட்டு அழிந்து பின்பு தோன்றியதாகும் என்பது விளங்கும்' என்பார், 'கற்பாந்தம் நிலையன்றழிந்தமை நின்றுணர்ந்தேன்' என்றார். நிலை - நிலைத்தொழிலை உடைய பொருள்கள்; ஆகுபெயர். இது, 'நீவிரும் அவ்வாறு உணர்மின்' என்றவாறு. இவ்வாறே திருவள்ளுவரும்,
உறங்கு வதுபோலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. -குறள், *339*
என்று உடலின் அழிவுதோற்றங்களை அறிவின் அழிவின் தோற்றங் களில் வைத்துத் தெளிவித்தார். முன்பு இருவகை அழிப்பின் வைத்து உலக அழிவை வலியுறுத்தினாராகலின், 'உலை தந்த மெல்லரி போலும் உலகம்' என அதன் நிலையாமையைப் பின்னர் வலியுறுத்தி, 'மாநிலம் தான் வெந்ததுவே' என நிலவுலக அழிவை முடிவில் நிறுவினார். அரி - அரிசி. மலை - மலைவு; மயக்கம்; முதனிலைத் தொழிற்பெயர். பிரம கற்பம், விட்டுணு கற்பம் முதலாகக் கற்பங்கள் தாம் பல. அவற்றுள்ளும் அவரவர் உறங்கும் காலம் அவரவர்க்கு நித்திய கற்பமாகவும், இறக்குங் காலம் மகாகற்பமாகவும் சொல்லப் படும். கற்பம் - ஊழி. காணப்பட்ட உலகத்தை 'வெந்தது' என்றது, முன்னை ஊழியிறுதி நோக்கியாம். எனவே, 'பின் தோன்றியது' என்பதும் பெறப்படும். ஆகவே, 'வெந்தது'

என்பது இறந்தகால வினைப்பெயர்.
இதனால், உலக சங்காரம் இல்லை என மயங்குவார்க்கு, 'அது உண்டு என்பத

பதஞ்செய்யும் பாரும் பனிவரை எட்டும்
உதஞ்செய்யும் ஏழ்கடல் ஓதம் முதலாங்
குதஞ்செய்யும் அங்கி கொளுவி ஆகாச
விதஞ்செய்யும் நெஞ்சின் வியப்பில்லை தானே. ***#420***

பல உயிர்கட்கு இடம் அளிக்கின்ற அகன்ற நிலமும், குளிர்ந்த எட்டு உயர்மலைகளும், நீரை மிகத் தருகின்ற எழுகடல் நீர்ப்பரப்பும் முதலாக அனைத்துப் பொருள்களையும் சிவபெருமான் தனது நினைவு மாத்திரத்தால் காய்தலைச் செய்யும் நெருப்பை வைத்து அழித்து உருவில்லனவாகச் செய்துவிடுவான். இதில் வியப்பில்லை.

விளக்கவுரை

'உதகம், குரோதம்' என்பன இடைக் குறைந்து நின்றன. ஐம்பூதங்களுள் ஆகாசம் அருவப் பொருளாதலின், உருவழிந்த நிலையை அதன் வகையாக ஓதினார். விதம் - வகை. 'விதமாக' என ஆக்கம் வருவிக்க. 'நெஞ்சின் செய்யும்' என மாறுக. கிடந்தவாறே வைத்து, 'நெஞ்சின் என, வேண்டா கூறி, வியப்பின்மையை வலியுறுத்தினார்' என்றலுமாம். இதனால், நிலமேயன்றிப் பிறவும் அழிதல் கூறுமாற்றால், மகாசங்காரம் உண்மை கூறப்பட்டது.

கொண்டல் வரைநின் றிழிந்த குலக்கொடி
அண்டத்துள் ஊறி யிருந்தெண் டிரையாகி
ஒன்றின் பதஞ்செய்ய ஓம்என்ற அப்புறக்
குண்டத்தின் மேல்அங்கி கோலிக்கொண் டானே. ***#421***

மேகங்கள் மலைக்கண் தங்குதலால் நிலத்தில் இறங்கிய நீராகிய குலமகள் உலகத்தில் தங்கியும், கடலாகியும் நின்று இனிய உணவுகளை உண்டாக்கிக் கொண்டிருக்கும் பொழுதே இறைவன் 'நாதம்' என்னும் அவ்விடத்ததாகிய குண்டத்தில் விளங்கும் மேலான நெருப்பை வளர்த்துவிட்டான். அஃதாவது, 'அழித்தல் தொழிலை மேற்கொண்டான்' என்பதாம்.

விளக்கவுரை

'வானின்று உலகம் வழங்கி' வருதல்பற்றி காத்தற் சத்தியை, 'மழை' என்றே கூறினார். நீரைப் பெண்ணாகக் கூறுதல் மரபாதல் அறிக. 'நிற்ப' என்பது, 'நின்று' எனத் திரிந்தது. மேகம், மலைமேல் தங்கியே மழை பொழிதல் வெளிப்படை. 'அண்டம்' என்பது, 'உலகம்' என்னும் அளவாய் நின்றது. திரை, ஆகுபெயர். பதம் - உணவு. செய்தல் - உண்டாக்குதல்.

'செய்ய' என்பது நிகழ்காலத்தின்கண் வந்தது. புறம் - இடம். 'உலக நெருப்பன்று; தனது அழித்தற் சத்தியே' என்றற்கு, 'ஓம் என்ற ..... அங்கி' என்றார்.
இதனால், 'நிலைத் தொழில் அதன் கால எல்லையில் முற்றுப் பெறும்' என்பது கூறி, ஒடுக்கம் நிகழ்தல் வலியுறுத்தப்பட்டது.

நித்தசங் காரம் உறக்கத்து நீள்மூடம்
வைத்தசங் காரமுஞ் சாக்கிரா தீதமாம்
சுத்தசங் காரந் தொழிலற்ற கேவலம்
உய்த்தசங் காரம் பரன்அருள் உண்மையே. *#422*

மூவகைச் சங்காரத்துள் நித்திய சங்காரமாவது அன்றாடம் கீழாலவத்தையில் அறிவிழந்திருத்தல். பிறவி எடுத்த எல்லா உயிர்கட்கும் பொதுவாக வைக்கப்பட்ட ஆயுட் சங்காரமாவது விழித்தல் இல்லாத உறக்கமாகிய இறப்பாகும். சருவ சங்காரமாவது ஆன்மா செயலற்று ஆணவத்திலே அழுந்திச் சடம்போலக் கிடத்தல். அதனால், உயிரை நீங்கா இன்பத்தில் செலுத்துதலாகிய திருவருட் சங்காரமாகிய அருளலே இறைவனது உண்மை நிலையைப் பெறுதலாகும்.

விளக்கவுரை

மீளச் சாக்கிரம் எய்தாத நிலையை, 'சாக்கிராதீதம்' என்றார். எனவே, இது விழியா உறக்கமாயிற்று. 'சுத்தம்' என்றது, ஒன்றும் இன்மையைக் குறித்தது.

நித்தசங் காரம் இரண்டுடல் நீவுதல்
வைத்தசங் காரமும் மாயாசங் காரமாம்
சுத்தசங் காரம் மனாதீதந் தோய்வுறல்
உய்த்தசங் காரஞ் சிவன்அருள் உண்மையே. *#423*

இன்னும் வேறொருவகையாற் கூறுமிடத்து, 'நித்திய சங்காரம், தூலம், சூக்குமம்' என்னும் இரண்டு உடம்புகள் உள்ளபொழுதும் அவற்றோடு ஒட்டாது நீங்கி நிற்றல்' எனவும், 'ஆயுட் சங்காரம் தூல உடம்பு அழிந்தொழிதல்' எனவும், 'சருவ சங்காரம் சூக்கும உடல் நீங்குதல்' எனவும் கூறுதற்குரியன. எனவே, திருவருட் சங்காரமாகிய அருளலே சிவப்பேறாகும்.

விளக்கவுரை

இரண்டுடலும் உள்ளபொழுதே ஒட்டாதிருத்தல் உறக்கத்திலாம். 'சூக்கும சரீரம் முத்தி பெறுங்காறும் நீங்காது நிற்கும்' எனக் கூறுதல், ஆயுட் சங்காரத்தை நோக்கியாம். 'மாயா சங்காரம்' என்றதில், 'மாயை' என்றது பிரகிருதியை. சகல வருக்கத்தினருக்குப் பிரகிருதியளவு சங்கரித்தலே சருவ சங்காரமாதல் பற்றி 'சுத்த சங்காரம் மனாதீதம்

தோய்வுறல்' என்றார். 'மனம்' என்றது பிற அந்தக் கரணங்கட்கும் உபலக்கணம். நீவுதல் - துடைத்தல்.

நித்தசங் காரங் கருவிடர் நீக்கினால்
ஒத்தசங் காரம் உடலுயிர் நீவுதல்
சுத்தசங் காரம் அதீதத்துள் தோய்வுறல்
உய்த்தசங் காரம் பரனருள் உண்மையே. *#424*

இனி, நித்திய சங்காரம் தூல உடம்பொடு நிற்கும் பொழுதே அதனொடு கூடாதிருக்கச் செய்வதென்றால், ஆயுட் சங்காரம் அதனை அடியோடு விடச் செய்வதாகும். சருவ சங்காரம் சூக்கும உடம்பையும் விடப்பண்ணுவது. ஆகவே, திருவருட் சங்கார மாகிய அருளலே சிவனை அடைதல் என்பது கடைப்பிடித்து உணரத்தக்கது.

விளக்கவுரை

'கரு' என்றது, கருவாய்த் தோன்றி வளரும் தூல உடலை அதன் இடர் நீங்குதல் - அதனால் வரும் அனுபவம் இன்மை. 'நீக்கினால்' என்னும் எச்சம் தெளிவின் கண் வந்து, பின் வருவதும் அத்தன்மையது என்பதனைத் தெரிதற்கு ஏதுவாய் நின்றது. 'நீரின்றமையா துலகெனின்' *(குறள் - 20)* என்றாற்போல.

நித்தசங் காரமும் நீடிளைப் பாற்றலின்
வைத்தசங் காரமும் மன்னும் அனாதியில்
சுத்தசங் காரமுந் தோயாப் பரன்அருள்
உய்த்தசங் காரமுன் நாலாம் உதிக்கிலே. *#425*

நித்திய சங்காரம், அன்று உழைத்த உழைப்பினால் உண்டாகிய இளைப்பினை ஆற்றக் காண்டலால், ஆயுட் சங்காரமும் அப்பிறப்பில் உண்டான இளைப்பை ஆற்றுதற்பொருட்டு என்றும் உளதாய்நிற்கும். 'சருவ சங்காரத்தில் எல்லாக் கருவிகளும் முற்ற அழிந் தொழிவதால், அதுவே சிவப்பேறு போலும்' எனின், அன்று; திருவருட் சங்காரம் உண்டாய வழியே 'பிறத்தல், வாழ்தல், இறத்தல்' என்னும் மூன்றும் அற்ற நான்காம் நிலையாகி 'வீடுபேறு' எனப்படும் சிவப்பேறாம்.

விளக்கவுரை

தோயா அருள் - அருள் தோயாதது. 'உய்த்த சங்காரம் முன் உதிக்கில் நால் ஆம்' எனக் கூட்டுக. நான்கு, 'நால்' என நின்றது. இவை நான்கு திருமந்திரங்களாலும், 'இலயங்கள் (சங்காரங்கள்) மூன்று *(தி.10 பா. 417)* இவை' என்பதும் அவற்றின் இயல்புகளும் பலவாற்றால் விளங்கக் கூறி, சங்காரத்தையே வீடுபேறு என மலைவார்க்கு அங்ஙனம் மலையாமைப்பொருட்டு அதனையும் ஒரு சங்காரமாக வைத்து அதன் இயல்பு உணர்த்தப்பட்டது.தத்துவம் முப்பத்தாறனுள் மா பூதம் - 5,

ஞானேந்திரியம் - *5*, கன்மேந்திரியம் - *5* ஆகப் பதினைந்தும் தூல சரீரம். 'அன்னமய கோசம்' என்பதும் இதுவே. தன்மாத்திரை - *5*, சித்தம் ஒழிந்த அந்தக் கரணம் - *3* ஆக எட்டும் சூக்கும சரீரம். 'பிராணமய கோசம்' என்பதும் இதுவே. எட்டுத் தத்துவம் கூடியதாதல் பற்றி இதனை 'புரியட்டச் சரீரம்' எனவும் கூறுவர். இந்த *23* - க்கு மேல் *24* ஆவதாகிய குண தத்துவமே குண சரீரம். 'மனோமய கோசம்' என்பதும் இதுவே. 'குண தத்துவமே சித்தம்' என்பது மேலே *((தி.10 382*ஆம் பாடலின் குறிப்புரை*)* சொல்லப்பட்டது. குண தத்துவத்திற்குமேல் உள்ள 'புருடன்' என்பது ஒரு தனித் தத்துவம் அன்று. காலம், நியதி, கலை, வித்தை, அராகம் - ஐந்தும் கூடியது கஞ்சுக சரீரம். விஞ்ஞானமய கோசம் என்பதும் இதுவே. 'மாயை' என்னும் தத்துவமே காரண சரீரம். 'ஆனந்தமய கோசம்' என்பதும் இதுவே. சிவ தத்துவங்கள் 'நம்மனோர்க்கு உடம்பாய் வந்து பொருந்துதல் இல்லை' என்பது மேலே கூறப்பட்டது. *(தி.10* பா. *379)*

பாழே முதலா எழும்பயிர் அப்பயிர்
பாழாய் அடங்கினும் பண்டைப்பாழ் பாழாகா
வாழாச்சங் காரத்தின் மாலயன் செய்தியாம்
பாழாம் பயிராய் அடங்கும்அப் பாழிலே. ***#426***

மாயை வித்தாக, அதனினின்றும் முளைக்கின்ற பயிராய் உலகம் தோன்றும். பின்பு அப்பயிராகிய உலகம் வித்தாகிய அம்மாயையினிடத்தே ஒடுங்குவதாம். அவ்வாறு ஒடுங்கினும், என்றும் உளதாகிய மாயை ஒன்றிலும் ஒடுங்குதல் இல்லை. உலகம் மாயையின் ஒடுங்குதலாகிய சருவ சங்காரமின்றிப் பிரகிருதிகாறும் அழிவதாகிய அந்தச் சங்காரகாலத்திற்கு உட்பட்டே மால் அயன் செய்திகளாகிய காத்தல் படைத்தல்கள் நிகழும். ஆகவே, தத்தம் கால எல்லையில் மடிந்து போகின்ற பயிர்போல, உலகம் முழுவதும் ஒடுங்குவது மாயையிலல்லது பிரகிருதியில் அன்று.

விளக்கவுரை

'பாழ்' என்பது முதற் காரணம் தனது காரியத்தைத் தோற்றுவியாத நிலை. இது பற்றியே பிரகிருதியையும் 'பாழ்' என்ப (பரிபாடல் ... ... 'பாழெனக் காலெனப் பாகெனத் தொண்டென') . இவ்வாறன்றி முதல்வனைப் 'பாழ்' என்றல் பொருந்தாமை அறிக. உலகம் மாயையின் ஒடுங்காது பிரகிருதியின் ஒடுங்கிய பொழுது பரசரீரம் உளதாயினும் போகம் நிகழாதாகலின், அதனை, 'வாழாச் சங்காரம்' என்றார். இச்சங்காரம் குணிருத்திரனால் செய்யப் படுவதாதல் அறிக. (சிவஞான மாபாடியம் - முதற் சூத்திரக் கருத்துரை விளக்கம்*)* குண சரீரம், கஞ்சுக சரீரம், காரண சரீரம் இம் மூன்றன் தொகுதியே பர சரீரம் அல்லது அதி சூக்கும சரீரம்.

'பயிராய்' என்பதில் ஆக்கம் உவமை குறித்து நின்றது.
இதனால், 'அசுத்தமும், சுத்தமும் ஆய மாயைகளில் அவ்வவ் வுலகம் ஒடுங்குவதே சருவ சங்காரம்' என்பதும், அவற்றிற்குக் கீழ்நடைபெறுவன எல்லாம் அவாந்தர (இடைநிகழ்) சங்காரம் என்பதும் கூறப்பட்டன.

தீயவைத் தார்மின்கள் சேரும் வினைதனை
மாயவைத் தான்வைத்த வன்பதி ஒன்றுண்டு
காயம்வைத் தான்கலந் தெங்கும் நினைப்பதோர்
ஆயம்வைத் தாய்உணர் வாரவைத் தானே. *#427*

நிலையில்லாததாகிய உலகத்தை உண்டாக்கி நிறுத்திய சிவன், அதனையே உயிர்களுக்கு என்றும் வாழிடமாக வையாது அழிய வைத்து, அழிவின்றி வைத்த வாழிடம் ஒன்று உள்ளது. அதனை அறிந்து அடைதற் பொருட்டே உடம்பையும், பல உட்கருவிகளையும், நூல்களையும் தந்தருளினான். அவற்றைக் கொண்டு, தற்போதத்தால் ஈண்டும் வினைகளை ஈண்டாதபடி அழித்து, அந்த வாழிடத்தை அடைந்து இன்பத்தை நுகர்மின்கள்.

விளக்கவுரை

இரண்டாம் அடி முதலாகத் தொடங்கி, 'சேரும் வினைகளைத் தீய வைத்து ஆர்மின்கள்' என மாற்றி முடிக்க. வன்மை - அழிவின்றி நிலைபெறுதல். பரமுத்தி நிலையை இவ்வாறு உருவகம் செய்தார் என்க. திருவள்ளுவர் 'புக்கில்' என்றது காண்க. 'ஒன்று உண்டு' என்ற குறிப்பால், பின் வருவன அதனை அடைதற் பொருட்டுக் கொடுக்கப்பட்டனவாதல் போந்தது. காயம், இடத்தால் வரையறை உடைய தூல சரீரம். 'எங்கும் கலந்து நினைப்பது' என்றதனால், 'அஃது அவ்வரையறையைக் கடந்த சூக்கும சரீரம் பர சரீரங்களைச் சுட்டிற்று' என்பதும், 'ஆயம்' என்றதனால், 'அவைதாம் தன்மாத்திரை அந்தக் கரணங்களும் வித்தியா தத்துவங்களும் ஆகியவற்றது தொகுதிகள்' என்பதும் போந்தன. ஆய் உணர்வு ஆர - ஆராய்ச்சி அறிவு நிரம்புதற்கு; என்றதனால் அதன்பொருட்டு வைக்கப்பட்டவை நூல்கள் என்பது இனிது விளங்கிற்று. இதனானே, அந்நூல் நுதலிய பொருளை ஒருசொல்லானும், நூற்பொருளைப் பல சொல்லானும் அறிவுறுத்தும் அருளாசிரியர்களை வைத்தமையும் பெறப்படும். 'நினைப்பது' எனக் கருவி வினைமுதல் போலக் கூறப்பட்டது. இவ்வொருமை ஆயத்தின் மேல் நிற்றல் அறிக.
இதனால், 'மேற்பல இடத்தும், 'உய்த்த சங்காரம்' எனப்பட்ட திருவருட் சங்காரத்தையே பயனாக உடையன பிற சங்காரங்கள்' என அதன் சிறப்பு உணர்த்தப்பட்டது. இங்ஙனம் அருளலையும் சங்கார மாக

வைத்துக் காட்டியது, இறைவன் செய்யும் தொழில் ஐந்து என்னாது மூன்று எனக் கூறும் வழியும் மறைத்தல் காத்தலுள்ளும், அருளல் அழித்தலுள்ளும் அடங்கி நிற்கும் என்பது உணர்த்துதற்கு என்க.

*4.12.*திரோபவம்

உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே. *#428*

சிவன், ஆன்ம அறிவேயாயும், அவ்வறிவுக்கு அறிவாயும், அதனில் சிறிதும் பிரிவின்றியும் அதனோடு யாண்டும் உடனாயே நிற்பினும் அவ்வறிவு மல மறைப்பால் அவனது இருப்பை அறியமாட்டது.

விளக்கவுரை

'அம்மறைப்பு நீங்குதற் பொருட்டே திரோபவம் (மறைத்தல்) செய்யப்படுகின்றது' என்பது குறிப்பெச்சம். 'மலமறைப் பால்' என்பது ஆற்றலால் வந்து இயைந்தது. 'உள்ளம்' என்றது ஆன்ம அறிவை. 'ஓரடி' என்றது இடச்சிறுமை குறித்தது. இதனானே, காலச் சிறுமையும் கொள்ளப்பட்டது. உண்மை அளவாகப் பொதுப்பட உணரப்படுவதனை 'உரு' என்றார். மறைத்தலைச் செய்வதாகிய மலத்தின் வழி நின்று அதனைச் செய்வித்தலால், அம்மலத்தின் ஆற்றல் தேய்ந்தொழியும் என்க. மாயை கன்மங்களால் பிறவியில் ஆழ்த்துதலே, 'மறைத்தல்' எனச் சிறப்பாகக் குறிக்கப்படும். இதுவும் ஆணவத்தைத் தேய்த்தற் பொருட்டேயாம். மறைத்தலைச் செய் வதையே, 'இறைவன் பந்தத்தையும் தருபவன்' என்பர்.

இதனால் திரோபவத்திற்குக் காரணம் கூறப்பட்டது.

இத்திருமந்திரத்துள் நாயனார் ஆன்ம அறிவை 'உள்ளம்' என்னும் சொல்லாற் குறித்தருளினார். இவ்வாறே மெய்கண்ட தேவரும் குறித்தார். இவைகளால், திருவள்ளுவர், 'ஓர்த்துள்ளம் உள்ள துணரின்' என்றதில் 'உள்ளம்' என்றதும் ஆன்மாவையே யாதல் விளங்கும்.

இன்பப் பிறவி படைத்த இறைவனுந்
துன்பஞ்செய் பாசத் துயருள் அடைத்தனன்
என்பிற் கொழுவி இசைந்துறு தோல்தசை
முன்பிற் கொளுவி முடிகுவ தாமே. *#429*

பின்னர் இன்பத்தைப் பெறுதற்குக் கருவியாம் பிறப்பை உயிர்கட்குக் கொடுத்த சிவன், அப்பிறப்பினுள் நிற்கும் பொழுது துன்பமயமான வினையால் விளையும் துயருள் அழுந்தவே வைத்துள்ளான். பிறவியால் வரும் மாசுடம்புகள் முன்னே சில காலம் துன்பத்தைத் தந்து, பின்பு

ஒழிவனவாகும்.

விளக்கவுரை

இன்பப் பிறவி - இன்பத்திற்கு ஏதுவாம் பிறவி; இஃதுஇயைபின்மை நீக்கிய விசேடணம். உடம்பு துன்பமாகாது துன்பம் வெளிப்படுதற்கு வாயிலேயாக வினையே துன்பம் தருவது ஆகலின், 'துன்பஞ்செய் பாசம்' என்றது வினையையேயாம். வினை இன்பமும் செய்வதாயினும், முன்னும் பின்னும் துன்பத்தோடே தொடர்புற்று நிற்றலின், துன்பம் செய்வதாகவே கூறினார். என்பு முதலியவற்றாலான உடம்பையே பெரும்பான்மையும், 'உடம்பு' என வழங்குப ஆகலான். அவற்றையே எடுத்தோதினார். 'கொழுவி இசைந்துறு தோல் சை' என்றது, அவ்வாறியன்ற உடம்பின்மேல் நின்றது. முன்பு - ஆணவமலம் நீங்குதற்கு முன்பு, 'முன்பில் கொளுவி' என்பதில் கொளுவுதற்கு, 'துன்பம்' என்னும் செயப்படு பொருள் வருவிக்க.

இதனால், திரோபவமும், அறுத்தும், சுட்டும் சிலநோயைத் தீர்க்கின்ற மருத்துவன் செய்கைபோல அருளே (மறக்கருணை) யாதல் கூறப்பட்டது.

இறையவன் மாதவன் இன்பம் படைத்த
மறையவன் மூவரும் வந்துடன் கூடி
இறையவன் செய்த இரும்பொறி யாக்கை
மறையவன் வைத்த பரிசறி யாரே. ***#430***

'உருத்திரன், மால், அயன்' என்னும் காரணக் கடவுளர்தாமும், மேல் உள்ள சீகண்ட உருத்திரரால் தமக்குத் தரப்பட்ட சிறந்த இயந்திரமாகிய உடம்புகள் கிடைக்கப் பெற்றுப் பொருந்தி நின்று உள்ளத்துள் ஒளிந்து நிற்கும் கள்வனாகிய சிவன் தம்மாட்டு வைத்த மறைப்பினை அறிய மாட்டார்கள்.

விளக்கவுரை

'இன்பம்' என்றது ஆகுபெயராய் மேற்குறித்த பிறவியை உணர்த்திற்று. 'மூவரும்' என்ற உம்மை சிறப்பு; முற்றன்று. 'யாக்கை வந்து உடன் கூடி' என முன்னே கூட்டுக. 'இறையவன்' என்பது உருத்திரன் மேலதாய், முன்னர்க் குணி ருத்திரனையும், பின்னர்ச் சீகண்டவுருத்திரரையும் குறித்தது. 'மறையவன்' இரண்டில் பின்னது, 'கள்வன்' என்னும் பொருட்டு. 'மறைப்பறியாரே' என ஓதுதல் சிறக்கும்.

இதனால், மும்மூர்த்திகளும் திரோபவத்துட் பட்டவராதல் கூறப்பட்டது.

காண்கின்ற கண்ணொளி காதல்செய் தீசனை
ஆண்பெண் அலியுரு வாய்நின்ற ஆதியை
ஊண்படு நாவுடை நெஞ்சம் உணர்ந்திட்டுச்

சேண்படு பொய்கை செயலணை யாரே. *#431*

சிவபெருமானைப் பொருள்களைக் காண்கின்ற கண்ணினது ஒளியைக் காதலிப்பதுபோலக் காதலித்து, சுவையற்ற நாவினை உடைய மனத்தால் நினைந்து, நெடுங்காலமாக வருகின்ற பிறப்பு இறப்புக்களை விட்டொழிதற்கு ஏதுவான தவத்தில் தலைப்படுகின்றிலர் உலகர்.

விளக்கவுரை

'அது சிவபெருமானது மறைத்தல் தொழிலால், நிகழ்வதே' என்பது குறிப்பெச்சம். 'சுவையை வெறுத்த உணர்வுடை நெஞ்சம்' என்பதனை 'ஊண்படு நாவுடை நெஞ்சம்' என்று ஓதினார். முன்பு உண்ட அறுசுவையைப் பின்னும் நாடி நிற்பது மனமாகலின், அதனை எடுத்துக் கூறினார். 'நெஞ்சம் உணர்ந்து' எனச் சினைவினை முதல்மேல் நின்றது. 'பொய் + கை' எனப் பிரித்து நிலையாமை உவர்த்துவிடுகின்ற எனப் பொருள் கூறுக. கை செயல் - கைத்து விடுதற்கு ஏதுவான செயல். 'கண்ணொளியைப்போல' என விரிக்க.

இதனால், மறைத்தல் தொழிலால் இறைவன் உயிர்கள் தன்னை அறியாவாறு மறைத்தல் கூறப்பட்டது.

தெருளும் உலகிற்குந் தேவர்க்கும் இன்பம்
அருளும் வகைசெய்யும் ஆதிப் பிரானும்
சுருளுஞ் சுடருறு தூவெண் சுடரும்
இருளும் அறநின் றிருட்டறை யாமே. *#432*

ஆதிப் பிரானகிய சிவபெருமான், பரிபாகம் பெற்ற உயிர்கட்கும், பரிபாகத்தால் ஞானத்தை எய்தினோர்க்கும் தனது திருவருள் நன்கு புலப்படும் வகையில் விளக்கத்தைத் தருவான். ஏனையோர்க்குப் பகலவனும், நிலாவும் பகலிலும், இரவிலும் இருள் நீங்க எரிப்பினும் இருள் பொதிந்து நிற்கும் அறைபோல நின்று மறைத்தலையே செய்வன்.

விளக்கவுரை

'ஓளியுடையோர்' என்னும் பொருட்டாகிய 'தேவர்' என்னும் பெயர், இங்கு இடுகுறியாகாது காரணமாய் நின்று, 'ஞானிகள்' எனப் பொருள் தந்தது. இறைவன், பரிபாகிகட்கு அறிவா யும் ஞானிகட்கு இன்பமாயும் விளங்குவன். இவை இரண்டுமே, 'அருளல்' எனப்படும் என்க. முன்னர், 'தெருளும் உலகிற்கும் தேவர்க்கும்' என்றதனால், பின்னர், 'ஏனையோர்க்கு' என்பது போந்தது. 'செய்யும்' என்றது முற்று. சுருளும் சுடர் - எதிர்ப்பட்ட பொருள்கள் வெதும்பி மடிதற்கு ஏதுவாகிய ஒளி; ஞாயிறு. 'நின்றும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தல். 'நிற்ப' என்பது 'நின்று' எனத் திரிந்துநின்றது. 'இருட்டறை', இறந்த கால வினைத்தொகை. இருளுதலை, 'இருட்டுதல்' எனவும் வழங்குப.

'ஆம்'என்றது, 'போல்வான்' என உவமமாய் நின்றது.
இதனால், மறைத்தல் பரிபாகம் இல்லாதார்மேலதாயே நிகழ்தல் கூறப்பட்டது.

அரைக்கின் றருள்தரும் அங்கங்கள் ஓசை
உரைக்கின்ற ஆசையும் ஒன்றொடொன் றொவ்வாப்
பரக்கும் உருவமும் பாரகந் தானாய்க்
கரக்கின் றவைசெய்த காண்டகை யானே. *#433*

தான் ஒருவனே, நிலமுதல் நாதம் ஈறாய கருவிகள், நால்வகை வாக்குக்கள், நான்காகவும் எட்டாகவும் பத்தாகவும் மற்றும் பலவாகவும் சொல்லப்படுகின்ற திசைகள், ஒன்றோடு ஒன்று ஒவ்வாது பல்வேறு வகையினவாய் நிற்கின்ற உடம்புகளும் பிறவுமாகிய உருவங்கள், நிலவுலகம் முதலிய உலகங்கள் இவை அனைத்துமாய் நின்று, மெய்யுணர்வைத் தடுக்கின்ற அப்பொருள்களை ஆக்கிய, எல்லா உயிர்களாலும் அறிந்து அடையத்தக்க இறைவனே அத் தடையை நிகழ்விக்கின்ற மறக்கருணையைச் செய்கின்றான்.

விளக்கவுரை

'அரைக்கின்ற, கரக்கின்ற' என்பவற்றின் ஈற்று அகரங்கள் தொகுத்தலாயின. அரைக்கின்ற அருள் - துன்புறுத்துகின்ற கருணை; மறக்கருணை; என்றது திரோபவத்தை. 'அரிக்கின்றருள்' எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். 'தரும்' என்றது முற்று. தனித்து நில்லாது தொக்குநின்று காரியத்தைத் தோற்றுவித்தலின், நிலம் முதலிய கருவிகளை, 'அங்கங்கள்' என்றார். அங்கங்கள் முதலாக வேண்டும் இடங்களில் தொகுக்கப்பட்ட எண்ணும்மைகளை விரித்துக் கொள்க. 'தான்' என்பதனை முதலில் வைத்து உரைக்க.
இதனால், சிவபெருமான் உலகத்தை ஆக்கி, அதனுட்கரந்து நின்று திரோபவிக்குமாறு கூறப்பட்டது. 'அருள்' என்றதனால், மறைத்தலும் அருளேயாதல் குறித்தார்.

ஒளித்துவைத் தேனுள் ளூறவுணர்ந் தீசனை
வெளிப்பட்டு நின்றருள் செய்திடு மீண்டே
களிப்பொடுங் காதன்மை என்னும் பெருமை
வெளிப்பட்டிறைஞ்சின்நும் வேட்சியுமாமே. *#434*

மறைத்தலைச் செய்கின்ற அவனை அவன் என்னேடு உடனாய் நிற்கின்ற அருட்டொடர்பை உணர்ந்து பிறர் அறி யாதவாறு என் உள்ளத்திலே மறைத்து வைத்தேன். அதனால், இனி அவன் எனக்கு வெளிப்படையாகத் தோன்றி அருள்புரிதல் திண்ணம். நீவிரும் என்னைப்போலவே அவனது அருட்டொடர்பை உணர்ந்து, அவ்வுணர்வினால் எழுகின்ற இன்பத்தோடு கூடிய 'பேரன்பு' என்னும்

சிறப்புத் தன்மை வெளிப்பட, அவனை அகத்தும், புறத்தும் வழிபடுவீர்களாயின், 'அவன் எமக்கு எப்பொழுது வெளிநிற்பான்' என்று ஏக்கமுற்றிருக்கின்ற உங்கள் வேட்கை நிரம்புவதாகும்.

விளக்கவுரை

மெய்யுணர்வினால் உணர்பவர் உள்ளத்தில் இறைவன் இனிது வெளிப்பட்டுநிற்கவும், பிறர் அவனை 'யாண்டுளன்' எனத் தேடி எய்க்கின்றாராதலின், மெய்யுணர் வுடையார், இறைவனைத் தங்கள் உள்ளத்தில் ஒளித்து வைத்திருப் பதாகவும், வெளியே புறப்பட ஒட்டாது தளையிட்டு வைத்ததாகவும் கூறுதலைப் பின்வரும் திரு மொழிகளாலும் உணரலாம்.

ஆர்வல்லார் காண அரனவனை! அன்பென்னும்
போர்வை யதனாலே போர்த்தமைத்துச் - சீர்வல்ல
தாயத்தால் நாமும் தலைநெஞ்சி னுள்ளடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து. -தி.11 அம்மைத் திருவந்தாதி, 96

முன்னை ஞான முதல்தனி வித்தினைப்
பின்னை ஞானப் பிறங்கு சடையனை
என்னை ஞானத் திருளறுத் தாண்டவன்
றன்னை ஞானத் தளையிட்டு வைப்பனே. -தி.5 ப.91 பா.2

'அவ் வீசனை' எனச் சுட்டு வருவித்து உரைக்க, வேட்சி - வேட்கை. உம்மை இறந்தது தழுவிற்று.

இதனால், மறைத்தலைச் செய்பவனாகிய இறைவனை அருளலைச் செய்பவனாகப் பெறும் முறை கூறப்பட்டது.

(இம் மந்திரத்தின்பின் பதிப்புக்களில் காணப்படுகின்ற 'நின்றது தானாய்' என்னும் மந்திரம், மேல் 400 ஆவது திருமந்திரமாக வந்தது.)

ஒருங்கிய பாசத்துள் உத்தம சித்தன்
இருங்கரை மேலிருந் தின்புற நாடி
வருங்கரை ஓரா வகையினிற் கங்கை
அருங்கரை பேணில் அழுக்கது வாமே. **#435**

கடலில் அகப்பட்டவன் அதன் கரையை அடைந்து இன்புறவேண்டி நீந்தும்பொழுது அக்கரை அருகில் வருவதை அறியாதிருத்தல் போலவும், கங்கைக்கரையில் நிற்பவன் அதனுள் மூழ்காமல் கரையிலே நிற்றல்போலவும் மேலான சித்தாகிய ஆன்மா, கீழான மலத்துள் நின்று மாசும் துன்பமும் உடையதாகின்றது.

விளக்கவுரை

இரண்டாம் அடி முதலாகத் தொடங்கி, 'உத்தம சித்தன் பாசத்துள் அழுக்கதுவாம்' எனக் கூட்டி முடிக்க. சித்தாகிய உயிரை, 'சித்தன்' என

ஆண்பாலாக ஓதியது வடமொழி முறை. 'வருங் கரை' என்றது, கடற் கரையை என்பது ஆற்றலால் விளங்கிற்று. பேண், முதனிலைத் தொழிற்பெயர். இல் இரண்டும் ஒப்புப் பொருளில் வந்த உருபுகள். 'அழுக்கு' என்றது, துன்பம், மாசு இரண்டிற்கும் ஒப்பக் கூறியது. துன்பம் நீங்காமைக்கும், மாசு நீங்காமைக்குமாக வேறு வேறான இரண்டு உவமைகள் கூறினார். 'நாடி' என்றது பெயர்.

இதனால், பரிபாகம் இல்லாத உயிர் மறைத்தலுட் படுமாறு கூறப்பட்டது.

இதனால், மலபரிபாகம் இல்லாத உயிர்கள் மறைத்தல் தொழிலுட்படுதல் கூறப்பட்டது.

மண்ணொன்று தான்பல நற்கல மாயிடும்
உண்ணின்ற யோனிகட் கெல்லாம் ஒருவனே
கண்ணொன்று தான்பல காணுந் தனைக்காணா
அண்ணலும் இவ்வண்ண மாகிநின்றானே. ***#436***

மண் ஒன்றே கலங்கள் (பாத்திரங்கள்) பலவற்றிலும் பொருந்தி நிற்கின்றது. அதுபோலச் சிவபெருமான் ஒருவனே உயிர் கள் அனைத்தினுள்ளும் நிற்பான். ஆயினும், கண் பிற பொருளைக் காணுமாயினும், தன்னையும், தன்னொடு பொருந்தியுள்ள உயிரையும் காணாததுபோல, உயிர்கள் பிறவற்றை அறியுமாயினும், தம்மையும், தம்மோடு உடனாய் நிற்கின்ற சிவனையும் அறிதல் இல்லை.

விளக்கவுரை

முதற்காரண நிமித்த காரணமாய வேறுபாடு உண்டா யினும், ஒன்று பலவற்றுள் நிற்றல் மாத்திரைக்கு மண்ணை உவமை கூறினார். பொருளால் உவமத்துள் கண் உயிரைக் காணாமையும், உவமத்தால் பொருட்கண் தம்மைக் காணாமையும் கொள்ள வைத்தார். 'இவ்வண்ணம்' என்றது;' உயிர் கண்ணினது காட்சிக்கு அகப்படாது நிற்றல் போல' என்றவாறு. உயிர் காணாமையை இறைவன் மேல் வைத்து ஓதினார், இங்குக் கூறுகின்றது அவன் தொழிலாதல்பற்றி. இத்திருமந்திரப் பொருளே பற்றி மெய்கண்டதேவர்,

காட்டிய கண்ணே தனைக்காணா; கண்ணுக்குக்
காட்டிய உள்ளத்தைக் கண்காணா - காட்டிய
உள்ளம் தனைக்காணா; உள்ளத்தின் கண்ணாய
கள்வன்றான் உள்ளத்தின் கண். .

- சிவஞானபோதம் - சூ *9*, அதி *1*.

என ஓதினமை காண்க.

இதனால், மறைத்தல் தொழில் நிகழுமாற்றிற்கு உவமை கூறப் பட்டது.

4.13. அநுக்கிரகம்

எட்டுத் திசையும் எறிகின்ற காற்றொடு
வட்டத் திரையனல் மாநிலம் ஆகாயம்
ஒட்டி உயிர்நிலை என்னும்இக் காயப்பை
கட்டி அவிழ்ப்பன் கண்ணுதல் காணுமே. *#437*

'காற்று, நீர், நெருப்பு, நிலம், வானம்' என்னும் ஐம்பெரும் பூதங்களும் ஒருங்கியைத்துப் பின்னிய 'உயிருக்கு இடம்' எனச் சொல்லப்படுகின்ற இந்த உடம்பாகிய பைக்குள் உயிர்களை முன்பு அடைத்துக் கட்டிவைத்துப் பின்பு அவிழ்த்து வெளிவிடுகின் றான் சிவபெருமான்.

விளக்கவுரை

'வட்டத் திரை', கடல்; பின்மொழி ஆகுபெயர். இது நீரைக் குறித்தது. 'ஒட்டி' என்பதன்பின் 'ஆக்கிய' என ஒருசொல் வருவிக்க. 'கட்டியவன் கட்டியவாறே விட்டொழிதல் இல்லை; அவிழ்க்கின்றான்' என அருளலாகிய அறக்கருணையது சிறப்பை உணர்த்தினார்.
இதனால், பந்தமாகிய மறைத்தலையேயன்றி, வீடாகிய அருளலைச் செய்பவனும் சிவபெருமானே என்பது கூறப்பட்டது.

'கட்டிய நீயே அவிழ்க்கின் அல்ல
தெட்டனை யாயினும் யான் அவிழ்க் கறியேன்'
-திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது - *9*
என்று அருளியதும் இதனை.

உச்சியில் ஓங்கி ஒளிதிகழ் நாதத்தை
நச்சியே இன்பங்கொள் வார்க்கு நமன்இல்லை
விச்சும் விரிசுடர் மூன்றும் உலகுக்குத்
தச்சு மவனே சமைக்கவல் லானே. *#438*

தம் தலைக்குப் பன்னிரண்டங்குலத்திற்கு மேலாய் ஓங்கி, அறிவு வடிவாய் ஒலிக்கின்ற சிவபெருமானது திருவடிச் சிலம்பொலியையே விரும்பிக் கேட்டு அதனால், இன்பம் அடை பவர்கட்கு இறப்பு இல்லை. உலகமாகிய தேர்க்கு உறுப்புக்களாகிய நிலம் முதலிய பூதங்களும், முச்சுடர்களும் ஆகிய பொருள்களையும் படைத்து, அவற்றால் அத்தேரினைப் பண்ணி இயங்க விடுகின்ற தச்சராகிய வினைஞர்களைப் படைப்பவனும் அவனேயாகலின்.

விளக்கவுரை

'பிறப்பு இறப்புக்களைத் தந்து நிற்பவனாகிய தலைவனை அடைதலையன்றி, அவ்வல்லல் தீர்வதற்கு வழி வேறில்லை' என்றவாறு. இறப்பாவது, இப்பிறப்பிற்கு ஏதுவாக முகந்துகொண்ட வினை முடிவெய்த, மறு பிறப்பிற்கு ஏதுவாம் வினை வந்து நிற்றலின் இவ்வுடல்

நீங்குதலாம். இந்த நீக்கத்தையே யமன் செய்வன். இறைவனது திருவருள் பெற்றார்க்கு அவர் பல பிறப்புக்களிலும் ஈட்டக் குவிந்து கிடக்கும் சஞ்சித வினை அவனது அருள்நோக்கத்தானே சுட்டெரிக்கப்படுதலின், அவர்க்கு மறுபிறப்பிற்கு ஏதுவாய் வரும் வினை இல்லையாம். ஆகவே, அவர்க்கு இவ்வுடம்பு நீங்கியபின் கிடைப்பது முத்தியேயாகும். இந்நீக்கத்தினை இவர்க்கு 'நீலருத்திரர் செய்வார்' எனச் சிவாகமங்களும், 'சிவகணத்தினர் செய்வர்' எனப் புராணங்களும் கூறும். ஆகவே, 'இவர்கட்கு நமன் இல்லை' என்றார். எனவே, 'சாவா நிலை' எனப்படுவது இதுவே என்பது இனிது விளங்கும். இஃது அறியாதார், 'உடல் நீக்கம் யாவும் சாவே' என மயங்கி, 'இறைவன் திருவருள் பெற்றாரும் சாவாதிருந்திலர்' என்று இகழ்தலும், 'உடல் நீங்காது நிலைக்கப்பெறுதலே திருவருள் நிலை' எனக்கொண்டு அதனைப்பெறப் பெரிதும் விழைதலும், உழத்தலும் செய்வர். அவையெல்லாம் அருளாசிரியரது அருள்மொழிகளின் பொருளை உள்ளவாறு உணரும் ஆற்றல் இல்லாமையால் விளைவனவே என உணர்க.
அருளாசிரியராயினார் ஒருவரும் உடலை நிலைக்கப்பண்ண எண்ணாமை அறிக. திருவருள் பெறாதார் எடுத்த உடலினின்று நீங்குதல், ஒருவர் குடியிருந்த வீட்டிற்கு உடையவர் அவரை அதினின்றும் போக்கப்போவது போல்வதும், திருவருள் பெற்றார் எடுத்த உடலின் நீங்குதல் பிறர் வீட்டில் குடியிருந்தவர் தமக்கென வீடு அமைந்தமையால் குடியிருந்த வீட்டை விடுத்துப்போதல் போல்வது மாம். ஆகவே, இருதிறத்தாரும் தாம் இருந்த வீட்டை விடுத்துச் செல்லுதல் காணப்படுமாயினும் அச்செலவு இரண்டினிடை உள்ள வேறுபாடு பெரிதாதல்போல, சாகின்றவரும், வீடுபெறுகின்றவரும் எடுத்த உடலின் நீங்குவாராயினும், அவ்விருவரது நீக்கத்திடை உள்ள வேறுபாடு பெரிது என்க.
வித்து, 'விச்சு' என மருவிற்று, 'விச்சதின்றியே விளைவு செய்குவாய்' *(தி.8 திருச்சதகம், 96)* 'விச்சின் றிநாறுசெய்வானும்' *(தி.4 ப.4 பா.2)* என்பவற்றிற் போல. 'உலகப் பகுதிகள் எட்டு' என்னும் வகைபற்றி ஓதுகின்றாராதலானும், மேலைத் திருமந்திரத் தொடர்பானும், உலகிற்கு வித்துப் பூதங்களாகவே உரைக்கப்பட்டது. தச்சனை, 'தச்சு' என்றது, 'அரசு, அமைச்சு' என்பனபோல ஒற்றுமை வழக்கு. இது குறிப்புருவகமாக லின், 'வித்து, உலகு' என்பவற்றிற்கு உரிய உருவகங்களும் விரித்து உரைக்கப்பட்டன.
இதனால், பிற தொழில்களைப் பிறர்பால் வைத்துச் செய் யினும், அருளல் தொழிலை அவனன்றிச் செய்வார் இல்லை என்பது கூறப்பட்டது.

'பட்டிப் பசுவைக் கால்சேரக் கட்டியவனே அதற்கு அப் பட்டித்தன்மை நீங்கியபின்னர் அவிழ்த்தல்போல, இறைவனும் ஆணவம் உடைய உயிர்களைக் கன்மம் மாயைகளுட் படுத்து, ஆணவம் நீங்கியபின்னர் அவற்றினின்றும் விடுப்பன்' என்றற்கு, 'கட்டி அவிழ்ப்பன்' என்று முதற்கண் அருளிச்செய்தவர், அவிழ்க் கின்ற அவ்வருளின் சிறப்புத் தோன்றுதற் பொருட்டு அவன் கட்டுங் காலத்துக் கட்டியவாற்றை எல்லாம் விரிக்கின்றார். இதுமேல் போந்த விச்சும் விரிசுடர் மூன்றும் உலகுக்குத் தச்சும் அவனே சமைத்தலின் விரிவாதல் உணர்க.

குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்
குசவனைப் போல்எங்கள் கோன்நந்தி வேண்டில்
அசைவில் உலகம் அதுஇது வாமே. *#439*

மட்கலத்தை வனைகின்ற குயவன் மண்ணைக் கொண்டு ஒருவகைக் கலத்தையே வனையாது, குடம் சால் கரகம் முதலாகப் பல்வேறு வகைப்பட வனைவன். அதுபோலவே, எங்கள் சிவபெருமானது இச்சையால் தளர்வில்லாத உலகம் பல்வேறு வகைப்படத் தோன்றும்.

விளக்கவுரை

'அது இது ஆம்' என்றது, 'பல்வேறு வகையினவாம்' என்றவாறு. 'அங்ஙனம் பல்வேறாகத் தோற்றுவிக்க விரும்புதல், உயிர்களது கன்மத்துக்கு ஏற்பவாம்' என்பது, குயவன் பல்வேறாக வனைதல், கொள்வார் விருப்பம் நோக்கியதாலாகிய உவமத்தால் பெற்றாம். உவமைக்கேற்ப, 'வேண்டி உலகத்தை அது இதுவாக வனைவான்' என்று இறைவன் மேல் வைத்து ஓதாது. 'உலகம் அது இது ஆம்' என உலகின்மேல் வைத்து ஓதினார், குயவன் கருவியால் செய்தல்போலச் செய்யாது இறைவன் நினைவு மாத்திரையானே செய்ய அவனது முன்பில் உலகம் தொழிற்படும் என்றற்கு.

இதனால், கட்டிய வகை ஒன்றன்றிப் பல என்பது பொது வகையால் கூறப்பட்டது. இதனானே, அவிழ்க்கும் காலத்து அவை அனைத்தையும் முற்ற நீக்குதல் பெறப்பட்டது.

விடையுடை யான்விகிர் தன்மிகு பூதப்
படையுடை யான்பரி சேஉல காக்கும்
கொடையுடை யான்குணம் எண்குண மாகும்
சடையுடை யான்சிந்தை சார்ந்துநின் றானே. *#440*

நன்மையே (மங்கலமே) வடிவாய் உள்ள சிவ பெருமான் உலகியிலின் வேறுபட்டவன்; அஃது அவன் இடபத்தையே ஊர்தியாகவும், பூதங்களையே உறுதிச் சுற்றமாகவும் கொண்டிருத்த லால் விளங்கும். அதனால், உயிர்களின் வினைகட்குத் தக்க பரிசாக உலகத்தைப்

படைத்துக் கொடுக்கும் கொடையாளனும், கொடுத்து அவ்வுயிர்களின் அறிவிற்கறிவாய் நின்று வினைப் பயனைத் துய்ப்பித்து அவை செவ்வி முதிர்ந்த காலத்தில் வீடுபெறச் செய்கின்றவனும் அவனே.

விளக்கவுரை

'குணமே குணமாகும் சடையுடையான்' என்பதனை முதற்கண் வைத்து, 'விகிர்தன்' என்றதனை அதன் பின்னர்க்கூட்டி, அதன்பின்னும், 'படையுடையான்' என்பதன் பின்னும் 'ஆதலின்' என்னும் சொல்லெச்சங்கள் வருவிக்க. 'குணம்' இரண்டனுள் முன்னது 'நன்மை' என்னும் பொருட்டு. 'குணம் நாடிக் குற்றமும் நாடி' *(குறள், 504)* 'குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டி' *(தி.8 திருவம்மானை, 20)* 'குன்றே யனைய குற்றங்கள் குணமாம் என்றே நீகொண்டால் - என்றான் கெட்டது' *(தி.8 குழைத்த பத்து, 3)* 'குற்றம் செய்யினும் குணம்எனக் கருதும் கொள்கை கண்டு' *(தி.7 ப.55 பா.4)* என்பவற்றிற் போல. 'குணம் எண்குணமாம்' எனவும் பாடம் ஓதுப.

இதனால், சிவபெருமானே கட்டவும், அவிழ்க்கவும் வல்லனாதல் தெளிவிக்கப்பட்டது.

'கடகரியும் பரிமாவும் தேரும்உகந் தேறாதே
இடபம்உகந்து ஏறியவாறு எனக்கறிய இயம்பேடீ'
-*தி.8 திருச்சாழல், 15*

என்றருளியவாற்றால், இடப ஊர்தி உலகியலுக்கு ஒவ்வாமை பெறப் படும்.

உகந்துநின் றேபடைத் தான்உல கேழும்
உகந்துநின் றேபடைத் தான்பல ஊழி
உகந்துநின் றேபடைத் தான்ஐந்து பூதம்
உகந்துநின் றேஉயிர் ஊன்படைத் தானே. ***#441***

சிவபெருமான் 'சுத்தம், மிச்சிரம், அசுத்தம்' என்பனவாக உலகங்களை முத்திறத்துப் பல்வேறு வகைப்படப் படைத்ததும், 'நல்லூழி, தீயூழி, பொதுவூழி' என்பனவாகக் காலங்களை முத்திறத்துப் பல்வேறு வகைப்படப் படைத்ததும், 'நிலம், நீர், தீ, வளி, வான்' எனப் பூதங்களை ஐந்தாகப் படைத்ததும், உடம்பு களை, தேவஉடம்பு, மக்கள்உடம்பு முதலாக ஏழு வகையாகப் பலவேறு வகைப்படப் படைத்ததும் எல்லாம் உயிர்கள் உய்ய வேண்டும் என்று விரும்பியேதான்.

விளக்கவுரை

எனவே, சிவன் குயவன் போலத் தன் நலம் கருதிப் பல படப் படையாது, உயிர்களின் நலம் கருதியே அவ்வாறு படைக் கின்றான் என்றதாம். இதனால், படைப்பினை இறைவன் பலபடப் படைத்தற்கண்

நிகழ்வதோர் ஐயம் அறுக்கப்பட்டது.

படைத்துடை யான்பண் டுலகங்கள் ஏழும்
படைத்துடை யான்பல தேவரை முன்னே
படைத்துடை யான்பல சீவரை முன்னே
படைத்துடை யான்பர மாகிநின் றானே. *#442*

சிவபெருமான் மேற்கூறியவாறு பலவற்றையும் படைத்து, அவற்றுள் சித்துப்பொருளை அடிமைகளாகவும், சடப் பொருளை உடைமைகளாகவும் கொண்டு, தான் தலைவனாய் நின்று, அவையனைத்தையும் ஆள்கின்றான்.

விளக்கவுரை

'ஆகவே, அடிமைகளாகிய உயிர்கட்கு, வேண்டுங் காலத்து வேண்டுவனவற்றைத் தருதல் அவனுக்குக் கடன்' என்பது குறிப்பெச்சம். 'பல சீவர்' என்றது, தேவர் ஒழிந்த பிற உயிர்களை. தேவர், 'அமரர்' (இறவாதவர்) எனப்படுதல்பற்றி அவர் பிறவாத வரோ என ஐயம் நிகழுமாதலின், அது நிகழாமைப் பொருட்டு அவரை வேறு கூறினார். இதனால் உயிர்கட்குப் பந்தமும், வீடும் தருதல் அவனுக்குக் கடனாதல் கூறப்பட்டது.

ஆதி படைத்தனன் ஐம்பெரும் பூதம்
ஆதி படைத்தனன் ஆசில்பல் ஊழி
ஆதி படைத்தனன் எண்ணிலி தேவரை
ஆதி படைத்தவை தாங்கிநின் றானே. *#443*

மேற்கூறிய பலவற்றையும் படைத்த சிவபெருமான், படைத்ததனோடு ஒழியாது, அவற்றைக் காத்தும் நிற்கின்றான்.

விளக்கவுரை

'அதனால், அருளலும் அவனது கடன்' என்பது குறிப்பெச்சம். முதல் மூன்று அடிகள் அனுவாதம்.
இதனால், ஏதுக் காட்டி மேலது வலியுறுத்தப்பட்டது.

உண்ணின்ற சோதி உறநின்ற ஓருடல்
விண்ணின் றமரர் விரும்பும் விழுப்பொருள்
மண்ணின்ற வானோர் புகழ்திரு மேனியன்
கண்ணின்ற மாமணி மாபோதமாமே. *#444*

ஆன்ம அறிவினுள் நிற்கின்ற அறிவாயும், ஆன்ம அறிவின்வழி உடலை இயக்குதலின் உடலாயும், தேவர்களும் விரும்பி அடையும் இன்பப் பொருளாயும், 'மண்ணுலகத்தேவர்' (பூசுரர்) என்று சொல்லப்படுகின்ற அந்தணர்கள் வேதம் முதலிய வற்றால் புகழ்கின்ற அருட்கோலத்தை உடையவனாயும் உள்ள சிவபெருமானே, கண்ணில் உள்ள கருமணி,

உடல் செல்லுதற்குரிய நன்னெறியைக் காட்டுதல்போல, உயிர் செல்லுதற்குரிய ஞான நெறியைக் காட்டுகின்ற பேராசிரியனாய் வருவன்.

விளக்கவுரை

'அவ்வாறு வந்து ஞானத்தை அருளுதலே அநுக்கிரகம் எனப்படுவது' என்பது குறிப்பெச்சம். 'போதகன்' என்பது குறைந்து நின்றது. இனி, 'ஆம்' என்பதனைச் சொல்லெச்சமாகக் குறைத்து 'மாபோதகனே' என்றும் பாடம் ஓதுப.

இதனால், அநுக்கிரகமாவது, இது என்பது கூறப்பட்டது.

ஆரும் அறியாத அண்டத் திருவுருப்
பார்முத லாகப் பயிலுங் கடத்திலே
நீரினிற் பால்போல நிற்கின்ற நேர்மையைச்
சோராமற் காணுஞ் சுகம்அறிந் தேனே. ***#445***

ஒருவராலும் அறியப்படாத சிதாகாசத் திருமேனி யனாகிய சிவபெருமான், மண் முதலிய பூதக் கூட்டுறவாலாகிய மானுட உடம்பிலே நிற்கின்ற உயிரின்கண், நீரிற் கலந்த பால்போல வேறற நின்று, செவ்விபெற்ற உயிர்கட்கு அருள் புரிகின்ற செம்மையை அறியாமையால் மறந்தொழியாது, அறிவால் அறிந்துநின்று, அதனால் விளைகின்ற இன்பத்தையும் நான் பெற்றேன்.

விளக்கவுரை

'ஆரும் அறியா அகண்டத் திருவுரு' எனப்பாடம் ஓதுதலும் ஆம். கடம், சிறப்புருவகம். இதனால், 'நீர்' என்றது உயிராதல் பெறப்பட்டது. இவ்வுயிர், மலம் நீங்கிய சுத்தான்ம சைதன்னியம் என்க. 'இதனையே இறைவன் தானாக ஆவேசித்து நின்று பக்குவிகளுக்கு ஞானத்தை உணர்த்துவன்' என்பது,

'இனி இவ்வான்மாக்கட்குத் தமது முதல்தானே குருவுமாய் உணர்த்தும் என்றது, அவன் அந்நியமின்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றலான்' *(சிவஞானபோத வார்த்திகம் - சூ. 8).*

என்றதனானும், அதன் உரையானும் உணர்க. நேர்மை - செம்மை. திரோபவம் அவனுக்கு இயற்கையன்றாக அநுக்கிரகமே இயற்கையாதல்பற்றி 'நேர்மை' என்றார். இனி 'நேர்மை - நுட்பம்' எனினுமாம். இவ்வாறு சிவனே குருவாய் நிற்றலை அறிதலும், அறிந்தபின்னும் பயிற்சி வயத்தால் மறத்தலை ஒழிதலும் அரியவாதல் பற்றி 'சோராமல் காணும்' என்றார். காணும் சுகம் - காண்பதனால் விளையும் இன்பம். அது அநுபவத்தாலன்றிக் காட்டப்படாமையின், 'அறிந்தேன்' என்றார். இத்திருமந்திரப் பொருளையே மெய்கண்ட

நூல்கள் பரக்க எடுத்து விரித்தல் அறிக.
இதனால், அநுக்கிரகத்தின்கண் படுவனவெல்லாம் தொகுத்துக் கூறப்பட்டன.

4.14.கர்ப்பக் கிரியை

ஆக்குகின் றான்முன் பிரிந்த இருபத்தஞ்
சாக்குகின் றானவன் ஆதிஎம் ஆருயிர்
ஆக்குகின் றான்கர்ப்பக் கோளகை யுள்ளிருந்
தாக்குகின் றான்அவன் ஆவ தறிந்தே. ***#446***

ஓர் உயிரைக் கருப்பையுள் தோற்றுவிக்கின்ற சிவ பெருமான் அதன் முன்னைத் தூல உடம்போடு ஒழிந்த ஐந்து ஞானேந் திரியம், ஐந்து கன்மேந்திரியம், ஐந்து பூதம், சத்தாதி ஐந்து விடயம், வச னாதி ஐந்து விடயம் என்னும் இருபத்தைந்தையும் மீள அதன் சூக்கும உடம்பினின்றும் தோற்றுவிப்பான். அங்ஙனம் தோற்றுவித்தல், அக் கருப்பையுள் அத்தோற்றத்திற்குத் தடையாகவரும் ஊறுபாடு களையறிந்து அவற்றை நீக்குதற்பொருட்டு அவ்விடத் திருந்தேயாம்.

விளக்கவுரை

முதற்கண் 'ஆக்குகின்றான்' என்பது பெயர். ஏனைய, சொற்பொருட்பின்வருநிலையாய் நின்றன. 'ஆதியும் எம் ஆருயிருமாகிய அவன்' என மாற்றியுரைக்க. கோளகை - வட்டம்; இங்குக் கருப்பை.
இதனால், சிவபெருமான், கருவைத் தோற்றுவித்தல் கூறப்பட்டது.

அறிகின்ற மூலத்தின் மேல்அங்கி அப்புச்
செறிகின்ற தானத்துச் செந்தாள் கொளுவிப்
பொறைநின்ற இன்னுயிர் போந்துற நாடிப்
பறிகின்ற பத்தெனும் பாரஞ்செய் தானே. ***#447***

ஆறு ஆதாரங்களினும் முதலாவதாக அறியப் படுகின்ற மூலதாராத்திற்குமேல் உதராக்கினியும், உணவாக உண்ணப் படும் நீரும் நிறைந்திருக்கின்ற சுவாதிட்டானத் தானத்தில், 'பூதசார சரீரம், யாதனா சரீரம்' என்பவற்றிற்கேனும், அவை இரண்டுமின்றித் தனக்கேனும் (சிவனுக்கேனும்) சுமையாய் நின்ற உயிர் வந்து பொருந்துமாற்றை எண்ணி, முதற்கண் செந்நீராகிய நிலைக்களத்தை நிற்பித்து, அந்நிலையை அக்கரு வெளிப்போதுதற்குப் 'பத்துத் திங்கள்' என்னும் சுமைக் காலத்தையும் சிவபிரான் ஆக்குகின்றான்.

விளக்கவுரை

செந்நீர் - தாயின் கருப் பையுள் நின்று கருவைத் தாங்கி வளர்ப்பது.
நிலைக்களத்தை, 'தாள்' என்றார். நிலவுலக உடலாகிய பூத உடம்பை விட்ட உயிர் நுண்ணுடம்போடு சென்று, நல்வினை, பயன்தருமாயின்,

அவ்வுடம்பு பூதசார சரீரத்தைத் தோற்றுவிக்கப் புத்தேள் (தேவ) உடம்பு பெற்றுத் துறக்கத்தை (சுவர்க்கத்தை) அடை யும். தீவினை, பயன் தருமாயின் நுண்ணுடம்பு யாதனா சரீரத்தைத் தோற்றுவிக்க அதனைப் பெற்று நிரயத்தை (நரகத்தை) அடையும். இரண்டும் இல்லையாயின், நுண்ணுடம்போடே கல்லுப்போல் அதற்குரிய புவனங்களுள் யாதானும் ஒன்றிற் செயலற்றுக் கிடக்கும். அம்மூன்று நிலைகளுமே முறையே பூதசார சரீரம், யாதனா சரீரம், இறைவன் திருவருள் என்பவற்றிற்குச் சுமையாகச் சொல்லப்பட்டன. உயிர் நுண்ணுடம்பைப் பற்றி நின்று கருவில் வந்து பொருந்தித் தூல உடம்போடு பிணிப்புண்டு, அதுவே தானாய் ஒற்றுமைப்பட்டு, அதற்கேற்ற உணர்வுகள் அனைத்தும் பொருந் துதற்குப் பத்துத் திங்கள் கால எல்லை வேண்டுவதாதலையறிந்து இறைவன் அத்துணைக் காலமும் அக்கருவைத் தாய்க்குச் சுமையாமாறு வைத்துக் காக்கின்றான் என்றபடி. இதனானே ஊழ் வேறுபடுமாயின், சில திங்களுக்குள்ளே அவ்வுயிர் 'அந்நிலையினின்றும் நீங்கிப் பிறிது நிலையை அடையச் செய்வான்' என்பதும் பெறப் பட்டது. 'அங்கி அப்புச் செறிகின்ற தானத்து' என்றதனால், 'அவ் விரண்டாலும் அக்கரு அழிவுறாது காக்கின்றான்' என்பதும் கூறியவாறாயிற்று. 'ஞானத்து' என்பது பாடம் அன்று. இதனால், அப்பெருமான் கருவை வளர்த்தல் கூறப்பட்டது.

இன்புறு காலத் திருவர்முன்பூறிய
துன்புறு பாசத் துயர்மனை வானுளன்
பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்புறு காலத் தமைத்தொழிந் தானே. **#448**

முதற்கண் தந்தை தாயர் இன்பம் நுகர்கின்ற காலத்து அவர்தம் உடம்பினின்றும் வெளிப்படும் வெண்டுளி செந்துளிகளால் அமைந்த இல்லமாவது உடம்பு துன்பத்தைத் தருகின்ற வினையின்வழி அதனை நுகரும் அவ்வில்லமாகிய உடம்பின்கண் அதன் தலைவ னாகிய உயிர்க்கிழவன் பலவகைப் பண்புகள் பெற்று வாழும் காலத்தையும், அக் காலத்து அவனுக்கு உளவாகின்ற வாழ்க்கை முறைகளையும் கருவைத் தோற்றுவித்து வளர்க்கத் திருவுளம்பற்றிய அப்பொழுதே அதன்கண் அமையுமாறு சிவபெருமான் அமைத்து விடுகின்றான்.

விளக்கவுரை

'முன்பு இருவர் இன்புறு காலத்து ஊறிய மனை' என்க. காரணப் பொருளின் தன்மையைக் காரியப்பொருள்மேல் ஏற்றி, 'ஊறிய மனை' என்றார். 'நூலாக்கலிங்கம்' (பதிற்றுப்பத்து 2ஆம் பத்து 2) என்பதிற்போல. வான் - பெருமை; தலைமை. உளம் - ஆன்மா; அதனை, 'உளன்' என ஆண்பாலாக ஓதினார். அன்றி, இறுதிப்போலியாகக்

கொள்ளினும் ஆம். அருளை, 'அன்பு' என்றார்.
இதனால், கருவில் உள்ள உயிர் பிறந்தபின் வாழ்தற்குரிய முறைகளைச் சிவபெருமான் முன்பே வகுத்தமைத்தல் கூறப்பட்டது.
'பேறிழ வின்ப மோடு பிணிமூப்புச் சாக்காடென்னும்
ஆறும்முன் கருவுட் பட்டது'
எனச் சிவஞானசித்தி (சூ. 2.9)கூறுதல் காண்க.

கருவை ஒழிந்தவர் கண்டநால் மூவேழ்
புருடன் உடலில் பொருந்தும்மற் றோரார்
திருவின் கருக்குழி தேடிப் புகுந்த
துருவம் இரண்டாக ஓடி விழுந்ததே. **#449**

மெய்யுணர்வால் பிறப்பின் நீங்கிய அறிவர் கண்ட, நில முதல் புருடன் ஈறாக உள்ள இருபத்தைந்து கருவிகளும் (தத்துவங்களும்) தந்தை உடலிலே பொருந்தியிருந்து, பின் தாயது கருப்பைக்குள்ளே, ஆண், பெண் இரண்டில் யாதேனும் ஓர் உருவமாமாறு புகும். இதனை மெய்யுணர்வில்லார் அறியார்.

விளக்கவுரை

மற்று, அசைநிலை. 'ஓரார்' என்றதனை ஈற்றில் வைத்து உரைக்க. 'புகுந்த அது' என்பதில் அகரம் தொகுத்தல்; புகுதலை அனுவாத முகத்தாற் கூறினார் என்க.
இதனால், சிவபெருமான், தாயது கருப்பைக்குள் மட்டுமன்றி, அதிற் புகுமுன்பே தந்தையது உடம்பில் அதனை வைத்துக் காத்தல் கூறப்பட்டது.

விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி
ஒழிந்த முதல்ஐந்தும் ஈரைந்தொ டேறிப்
பொழிந்த புனல்பூதம் போற்றுங் கரணம்
ஒழிந்த நுதல்உச்சி உள்ளே ஒளித்ததே. **#450**

தந்தையது உடலில் பொருந்தியிருந்த இருபத்தைந்து கருவிகளும் தாயின் கருவில் புகுதற்கு அவ்விருவரது கூட்டம் நிகழும். அப்பொழுது ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, பூதம் ஐந்து ஆகிய பதினைந்து கருவிகளால் பருவுடம்பு வளருமாறு தந்தை உடம்பினின்றும் வெண்பால் (சுக்கிலம்) பொழியும். அதன்பின் பருவுடம்பு வளர ஏனைத் தன்மாத்திரைகளும், அந்தக்கரணங்களும் அவ்வுடம்பினுள் புருவ நடுவிலும், தலையிலும் பொருந்தி நிற்கும்.

விளக்கவுரை

'தன்மாத்திரைகளும், அந்தக்கரணங்களும்' என்றது, 'நுண்ணுடம்பு' என்றவாறு. அதனை இவ்வாறு கருவியாக வகுத் தோதியது, மேல், (

தி.10 பா.448) 'நால் மூவேழ்' என்றதனோடு இயைதற் பொருட்டு.
'பொழிந்தது' என்பது ஈறு குறைந்தது.
பூதத்தின் காரணத்தைப் 'பூதம்' என்றார். 'ஒழிந்த' இரண்டும், 'நுண்ணுடம்பிற்கு வேறாய்' எனப் பொருள் தந்தன.
இதனால், தந்தை உடலில் தொகுத்து வைத்துக் காத்த இருபத்தைந்து கருவிகளைப் பின் தாயுடலில் வகுத்து வைத்துச் செயற்படுத்துதல் கூறப்பட்டது.

பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவும்
தாவி உலகில் தரிப்பித்த வாறுபோல்
மேவிய சீவனில் மெல்லநீள் வாயுவுங்
கூவி அழும்தான் குறிக்கொண்ட போதே. ***#451***

பூவின் மணத்தைக் காற்றே உலகிடை எங்கும் பரவச்செய்தல்போல, நுண்ணுடம்பின் செயல்களைத் தச வாயுக்களே பருவுடம்பில் கூவி அழுதல் முதலிய தொழில்களாக நிகழச் செய்யும், அவ்வாறு செய்விக்கச் சிவபெருமான் நினைந்தபொழுது.

விளக்கவுரை

தசவாயுக்கள், 'பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன்' என்பன. சீவன் - உடம்போடு கூடிய உயிர். அஃது இங்கு உடம்பையே குறித்தது. 'பிராணன் முதலிய வாயுக்கள் இல்லையேல் நுதலிலும், உச்சியிலும் நிற்கும் அந்தக்கரணங்களின் ஆற்றல் பயன்படாது' என்பதாம். கூவி அழுதல் - அழைத்து அழுதல். 'அவிழும்' என்பது பாடம் அன்று. பிறந்த குழவிக்கு முதற்செயல், வாய்விட்டு அழுதல். ஆதலின், அதனையே எடுத்தோதி ஏனைய வற்றை உடன்கொள்ள வைத்தார். நுண்ணுடம்பின் செயலாற்றலே தூல உடம்பில் செயலாக வெளிப்படும். அதற்குத் துணைசெய்வன தச வாயுக்கள் என்க.
இதனால், குழவி பிறந்தபின் அதனைச் சிவபெருமான் தச வாயுக்களின் வழிச் செயற்படுத்தல் கூறப்பட்டது.

போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்
மூழ்கின்ற முத்தனும் ஒன்பது வாய்தலும்
நாகமும் எட்டுடன் நாலு புரவியும்
பாகன் விடானெனிற் பன்றியு மாமே. ***#452***

குண்டலியும், 'பன்னிரண்டு அங்குலம்' என்னும் அளவு சொல்லப்படுகின்ற பிராணவாயுவும் ஆகிய இவற்றைத் தலைவனாகிய சிவன் தூண்டாதுவிடுவானாயின், 'தூலம், சூக்குமம், பரம்' என்னும் சரீரங்களும் அவற்றிற் பொருந்தியுள்ள தத்துவ தாத்துவிகங்களும் சிறிதும் பயன்படாதொழியும்.

விளக்கவுரை

போகின்ற எட்டு, உயிரோடு ஒட்டிச் செல்கின்ற சூக்கும சரீரத் தத்துவங்கள். புகுகின்ற பத்து எட்டு, கருவில் வந்தபின் வருகின்ற மேற்சொன்ன *(தி.10 பா. 449)* பதினைந்துடன் 'இடைகலை, பிங்கலை, சுழுமுனை' என்னும் முதல் நாடிகள். மூழ்கின்ற - ஆன்மா அழுந்துகின்ற. 'முத்தனுவும்' என்பது குறைந்து நின்றது. முன்பு, 'எட்டும், பதினெட்டும்' எனவும், பின்பு, 'ஒன்பது வாய்தலும்' எனவும் கூறினாராயினும், 'அனைத்துக் கருவிகளும் மூவுடம்பாய் அடங்கு கின்றன' என்றற்கு, 'முத்தனுவும்' என்றார். குண்டலினி மூலாதாரம் முதலாகப் பிரமரந்திரம் ஈறாகத் தலைகீழாக நிற்கும் பாம்பு வடிவாய் இருத்தலின் அதனை, 'நாகம்' என்றார். 'புரவி' என்றது, இடைகலை பிங்கலை வழிச் செல்லும் பிராண வாயுவை. அஃது ஆகுபெயராய், அதற்கு இடமாகின்ற அந்நாடிகளைக் குறித்தது. விடுதல் - தூண்டுதல். 'பன்றி' என்ற இழிவு வகையால் பயன்படாமை குறித்தவாறு.
இதனால், சிவபெருமான் உயிர்ப்பு வழியாகப் பருவுடம்பை நிலைப்பித்தல் கூறப்பட்டது.

ஏற எதிர்க்கில் இறையவன் றானாகும்
மாற எதிர்க்கில் அரியவன் றானாகும்
நேரொக்க வைக்கின் நிகர்போதத் தானாகும்
பேரொத்த மைந்தனும் பேரரசாளுமே. ***#453***

தந்தையும் தாயும் கூடுங்காலத்துக் காமம் மிக்கிருப்பின், பிறக்கும் மகன் தாமத குணம் மிக்கிருப்பான். காமம் குறைந்திருப்பின், மகன் சத்துவகுணம் மிக்கிருப்பான். காமம் மிகுதலும் குறைதலும் இன்றி அளவிற்பட்டதாக இருப்பின், மகன் இராசதகுணம் மிக்கிருப்பான். இம்முத்திறத்து மைந்தருள் சத்துவ குணம் மிக்கவன் அரசனாதற்கும் உரியவனாவான்.

விளக்கவுரை

எதிர்த்தல் - கூடுதல். இறையவன் - உருத்திரன். 'அரியவன்' என்பதில் அவன், பகுதிப்பொருள் விகுதி. 'மைந்தன் அரசும் ஆளும்' என உம்மையை மாற்றி உரைக்க. உருத்திரன், மால், அயன் என்னும் குணமூர்த்திகள் மூவரும் தொழிலால் முறையே தாமதம், சாத்துவிகம், இராசதம் என்னும் குணத்தினராதலின், அக்குணம் மிக்க மைந்தரை அவர்களாகவே கூறினார். அதனானே, 'அம்மைந்தர்க்கு அத்தேவர், இயக்கத் தேவராய் (அதிதேவராய்) நிற்பர்' என்பதும் கொள்ளப்படும். இருவரிடத்தும் காமம் ஒருவகையாய் நில்லாது மாறி நிற்பின், இங்குக் கூறிய பயன் தந்தையின்பால் வைத்துக் கொள்ளப்படும். என்னை

வித்தின்கண் உள்ளதே விளைவின் கண்ணுமாம் ஆதலின், 'மகனறிவு தந்தை யறிவு' *(நாலடியார், 367)* எனப் பிறவிடத்தும் கூறப்படுதல் காண்க.

தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

என்னும் திருக்குறளும் *(குறள், 114)* இப்பொருள்மேல் நோக்குடையதேயாம். இதனால், 'தோன்றும் கருவினது வினைக்கு ஏற்பச் சிவன் தந்தை தாயரது கூட்டத்தில் அவர்கட்கு இந்நிலையே விளைப்பன்' என்றவாறு. 'பேர் ஒத்தமைந்தன்' என்பதில், 'பேர்' என்றது, முன்னர்க் கூறிய மூன்றனுள் 'அரி' என்பது, அரசனை மால் எனக் கூறும் வழக்குப்பற்றிக் கொள்ளப்படும். ஏறுதல் முதலியவற்றிற்குத் தந்தை உடற்பொருளாகிய வெண்டுளியையே வினை முதலாக உரைப்பர்; அது பொருளாயின் எடுத்தோதலே வேண்டும் என்க.

இதனால், 'பண்புறுகாலமும்' என மேற்கூறப்பட்ட *(தி.10 பா. 445)* பண்புகளைச் சிவபெருமான் கருவில் அமைக்குமாறு கூறப்பட்டது.

ஏயங் கலந்த இருவர்தஞ் சாயற்றுப்
பாயுங் கருவும் உருவா மெனப்பல
காயங் கலந்தது காணப் பதிந்தபின்
மாயங் கலந்த மனோலய மானதே. ***#454***

காமம் பொருந்திய ஒருவனும் ஒருத்தியுமே பற்றுக் கோடாக நின்று அவரின் நீங்கிப் பாய்கின்ற கருமுதற் பொருள்கள், பின்பு கருப்பதிந்து உருவாதற் பொருட்டுப் பதிவிற்கு முன்பே அப்பொருள்களில் அவர் உடம்புகளிலே பல கூட்டுப்பொருள்கள் வந்துசேர, கருப் பதிந்தபின் அக்கருவிற்குக் குணங்கள் மேற்கூறிய முறையில் அமையும்.

விளக்கவுரை

'அதனால், மேற்கூறியவாறு நிகழும் கூட்டத்தினால் பிறக்கும் மைந்தர் மேற்கூறிய வகையினராய் இருப்பர்' என்பது குறிப்பெச்சம். ஏயம் - இழிவு; காமம். 'தஞ்சம்' என்பது 'தஞ்சு' எனக் கடைக்குறைந்து நின்றது. 'நிறம்' என்னும் பொருட்டாகிய 'சாயம்' என்னும் திசைச்சொல் நாயனார் காலத்து இன்மையின் 'சாயத்து' என்பது பாடம் ஆகாது. கரு, ஆகுபெயர். உருவாம் என - உருவாய்த் தோன்றும் என்னும் காரணத்தால். காயம் - கூட்டுப் பொருள். கலந்து, 'கலக்க' என்பதன் திரிபு. 'அது' என்றது, 'கரு' என்றதன் இயற் பெயர்ப்பொருளை. காண - உருத்தோன்றுமாறு. மாயம் - நிலை இல்லாது மாறிவருகின்ற. மனம் - அந்தக்கரணம். அவை ஒடுங்குதல் குணதத்துவத்திலாகலின், 'மனோலயம்' என்றது ஆகுபெயரால், முக்குணத்தை உணர்த்திற்று. ஆனது - பொருந்திற்று. இதனால், மேலதற்குக் காரணம் கூறப்பட்டது. இதனானே கருவில்

நின்ற உயிர்க்குச் சிவபெருமான் 'மனோமய கோசம்' எனப்படும் குண சரீரத்தைக் கூட்டுமாறும் பெறப்பட்டது. குண சரீரம், பர சரீரம் முத்திறத்தினுள் ஒன்று. பரசரீரத்தின் முத்திறம், 'காரண சரீரம், கஞ்சுக சரீரம், குண சரீரம்' என்பன. இவைமுறையே 'ஆனந்தமய கோசம், விஞ்ஞானமய கோசம், மனோமய கோசம்' எனவும் பெயர்பெறும். இதனால், கருவினுள் நின்ற உயிர்க்குச் சிவபெருமான் சூக்கும தேகத்தையும் வாக்குகளையும் தருதல் கூறப்பட்டது.

கற்பத்துக் கேவலம் மாயாள் கிளைகூட்ட
நிற்குந் துரியமும்பே தித்து நினைவெழ
வற்புறு காமியம் எட்டாதல் மாயேயம்
சொற்புறு தூய்மறை வாக்கினாஞ் சொல்லே. ***#455***

கருப்பையுள் முதற்கண் அதீத நிலையில் உள்ள குழவிக்குப் பின் 'மாயை' (அசுத்த மாயை) என்பவள் தனது சுற்றமாகிய வித்தியா தத்துவங்களைச் சேர்ப்பிக்கத் துரிய நிலையைப் பெறும். பின்பு அத் துரிய நிலையும் நீக்கிச் சுழுத்தி சொப்பன சாக்கிரங்களாகிய நிலைகள் கூடுமாறு வலிமை மிக்க வினைப் பயன்களாகிய 'தன்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதன்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அநைசுவரியம்' என்னும் பாவங்கள் எட்டும் மாயேயமாய்ப் பொருந்தும். அதனால், குழவி தனது வினை நுகர்ச்சிக்குரிய தன்மைகள் யாவும் நிரம்பப் பெறும்.

விளக்கவுரை

'மாயாள்' எனவும், 'கிளை' எனவும் உருவகமாக்கிக் கூறியது, குழவியது அறிவைச் செவிலிபோல வளர்த்தல் தோன்றுதற்கு. 'துரியமும்' என்பதும் பாடம். 'கான்மிகம்' என்பது 'காமிகம்' என நின்றது. தன்மம் முதலிய புத்தி குண பாவங்களைக் கூறியது குழவி நிரம்பிய வளர்ச்சி உடையதாதலைக் குறித்தவாறு. 'பொருந்தும்' என்பது சொல்லெச்சமாய் நின்று 'எழ' என்ற எச்சத்திற்கு முடிபாயிற்று. 'மாயேயம் எட்டாதல் பொருந்தும்' என மாற்றி உரைக்க. 'மறை வாக்குப்போலச் சொல் உளதாம்' என்க. அஃதாவது 'தெளிவான உணர்வுநிலை உளதாம்' என்றபடி. இதனால், சிவபெருமான் குழவிக்கு உணர்வு நிரம்பச் செய்யுமாறு கூறப்பட்டது.

என்பால் மிடைந்து நரம்பு வரிக்கட்டிச்
செம்பால் இறைச்சி திருந்த மனைசெய்து
இன்பால் உயிர்நிலை செய்த இறையோங்கும்
நன்பால் ஒருவனை நாடுகின் றேனே. ***#456***

எலும்புகளைக் கழிகளாகவும், நரம்புகளைக் கயிறுகளாகவும், குருதியாகிய நீராற் பிசைந்த இறைச்சியாகிய மண்ணைச் சுவர்களாகவும் பொருந்த அமைத்து, உயிர் இன்புற்று வாழ்தற்

பொருட்டு இல்லம் ஒன்றை ஆக்கி, அளித்த, நீதி மிக்கவனாம் நல்லவனாகிய ஒருவனை *(சிவபெருமானை)* நான் நினைக்கின்றேன்.

விளக்கவுரை

'அவ் இல்லத்தில் வாழும் நீவிரும் அவனை நினைத்தல் வேண்டும்; நினையீராயின், நன்றிகொன்றீராவீர்' என்பது கருத்து. மிடைந்து - கழிகள் நெருங்க வைத்து. 'என்பால்' என்றற்கேற்ப, 'நரம்பால், செம்பாலால்' என உருபு விரிக்க. வரி - வரிய; இறுக. செம்பால் - இரத்தம். இறைச்சி திருந்த - ஊன் பதப்பட. 'இன்பால்' என்பது 'நிலை' என்னும் தொழிற்பெயர் கொண்டது. நிலை - நிற்றல்; இஃது ஆகுபெயராய், நிற்கும் இடத்தைக் குறித்தது. இறை - இறைமை; நடுவு நிலைமை. 'இறைபுரிந்து' *(குறள், 541)* என்றார் திருவள்ளுவரும். நன்பால் ஒருவன் - நன்மைப் பகுதிக்கண் நிற்கின்ற ஒப்பற்றவன். இது தூலதேகத்தின் ஆக்கப்பாட்டினை விரித்தவாறு. இவ்வாறே,

'என்பினால் கழிநிரைத் திறைச்சிமண் சுவரெறிந்
திதுநம் மில்லம்
புன்புலால் நாறுதோல் போர்த்துப்பொல் லாமையான்
முகடு கொண்டு
முன்பெலாம் ஒன்பது வாய்தலார் குரம்பையின்
மூழ்கி டாதே' -தி.*2* ப.*79* பா.*8*

என ஞானசம்பந்தரும்,

'என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட் டென்னையோ
ருருவ மாக்கி' -தி.*4* ப.*5* பா.*2*

என நாவுக்கரசரும் அருளுமாறு அறிக.

இதனால், கருவுள் நின்ற உயிருக்குச் சிவபெருமான் தூல சரீரத்தைக் கூட்டுதல் பெறப்பட்டது.

பதஞ்செய்யும் பால்வண்ணன் மேனி பகலோன்
இதஞ்செய்யும் ஒத்துடல் எங்கும் புகுந்து
குதஞ்செய்யும் அங்கியின் கோபந் தணிப்பான்
விதஞ்செய்யு மாறே விதித்தொழிந் தானே. ***#457***

கருவிற்குத் தூலதேகம் அமைந்த பின்னர் தாயது சந்திரகலையாகிய மூச்சுக் காற்றுச் சூரிய கலையொடு மாறு கொள்ளாமல் இயங்கிக் குழவியது தூலதேகம் முழுதும் பரவிக் குளிர்ச்சியைத் தந்து வளரப்பண்ணும். அவளது சூரிய கலையாகிய மூச்சுக் காற்றும் அவ்வாறே சென்று குழவியின் உடலில் வெப்பத்தை உண்டாக்கி அதனை அழியாதிருக்கச் செய்யும். இவ்வாறு அவ்விரு வகைக் காற்றினையும் சிவபெருமான் தாயது மூலத்தின்கண் உள்ள வெப்பம் மிக்கெழாது அளவில் நிற்குமாறு அமைக்கின்றான்.

விளக்கவுரை

'ஒத்து எங்கும் புகுந்து' என்பதை முன்னும் கூட்டி, 'பால்வண்ணன் ஒத்து மேனி எங்கும் புகுந்து பதம் செய்யும்' எனவும், 'பகலோன் ஒத்து உடல் எங்கும் புகுந்து இதம் செய்யும்' எனவும் உரைக்க. பால்வண்ணன் - சந்திரன். கருவில் நிற்கும் குழவிக்குத் தாயது மூச்சே மூச்சாவதன்றி வேறில்லையாகலின், பொதுப்பட வாளா ஓதினார். தேகத்தை அழியாமல் இருக்கச் செய்வது வெப்பமே யாகலின், அதனை, 'இதம்' என்றார். பதம் குளிர்ச்சியாதல் வெளிப்படை.

இதனால், சிவபெருமான், கருவினுள் குழவியது தூல தேகத்தை வளர்த்தல் கூறப்பட்டது.

ஒழிபல செய்யும்வினையுற்ற நாளே
வழிபல நீராட்டி வைத்தழு வாங்கிப்
பழிபல செய்கின்ற பாசக் கருவைச்
சுழிபல வாங்கிச் சுடாமல்வைத் தானே. *#458*

கருவினுள் வீழ்ந்த உயிர் அவ்விடத்தே இறக்கும் ஊழ் உளதாயின், பதிந்த கருவைச் சிவபெருமான் பலநிலைகளில் பல்லாற்றான் அழிந்தொழியச் செய்வான். அவ்வாறின்றிப் பிறந்து வாழும் ஊழ் உளதாயின், இடையூறுகள் பலவற்றால் தாக்கப்படுகின்ற வினைக்கட்டுடைய அக்கருவைச் சிவபெருமான் அது பிறப்பதற்கு முன்னுள்ள இடைக்காலத்தில் சுழிகளில் அகப்படாது ஆற்றில் நீராட்டுதல் போலவும் எரிகின்ற வைக்கோற் குவையிலிருந்து வாங்கிச் சுடாது வைத்தல் போலவும் தாயது வயிற்றில் உள்ள நீராலும், நெருப்பாலும் அழியாது காப்பான்.

விளக்கவுரை

ஒழி - ஒழிதல்; அழிதல். முதனிலைத் தொழிற்பெயர். 'செய்யும்' என்பது முற்று. 'வினையுற்ற நாள்' என்பது தாப்பிசையால் முன்னரும் சென்றியையும். மூன்றாம் அடியை முதல் அடியின் பின்னர்க் கூட்டுக. உயிர் மண்ணில் வாராது கருப்பையுள் நிற்கும் காலத்தை 'வழி' என்றார். 'சுழிபல வாங்கி நீராட்டி, வைத்தழு வாங்கிச் சுடாமல் வைத்தான்' எனக் கூட்டுக. வை - வைக் கோல். வைக்கோற் குவையைத் 'தழு' என்றல் வழக்கு.

இதனால், கருவைச் சிவபெருமான் வினைக்கேற்றவாறு அங்கே அழித்தல், காத்தல் இரண்டனையும் செய்தல் கூறப்பட்டது.

குழவி கருவினுள் அழியாது தப்புதலை மாணிக்க வாசகர் போற்றித் திருவகவலுள் பலபட விரித்தருளிச் செய்தார்.

'கருவினுள் அழிவ தாயும் கழிந்திடா தழிவதாயும்

பரிணமித் தழிவதாயும் பாலனாய் அழிவதாயும்'
எனச் *சிவஞான சித்தி (சூ. 2.93)* யும் கூறிற்று.

சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்
அக்கிர மத்தேதோன் றும்மவ்வி யோனியும்
புக்கிடும் எண்விரல் புறப்பட்டு நால்விரல்
அக்கரம் எட்டும்எண் சாணது வாகுமே. ***#459***

தந்தையது வெண்டுளி தோன்றும் நரம்பு வழியாகப் போந்த வெண்டுளியும், அவ்வாறே தாயது செந்துளி தோன்றும் நரம்பு வழியாகப் போந்த செந்துளியும் கலந்து, பன்னிரண்டு அங்குலமாகிய தாயது மூச்சுக்காற்றில் நான்கு அங்குலம் புறத்தே போந்தொழிய, எட்டங்குலமே உட்புகுதலால், அக் கரு தனது கையால் எண்சாண் அளவினதாய் வளரும்.

விளக்கவுரை

யோனி, ஆகுபெயர். மூச்சுக் காற்று நான்கு அங்குலம் ஒழிய, எட்டு அங்குலம் உட்புகும் என்பது நன்கறியப்பட்டதாகலின், அக்காற்றினை எடுத்தோதாராயினார். புறப்பட்டு 'புறப்பட' என்பதன் திரிபு. 'அக் கரம்' என்றது, 'அக்குழவியின் கரம்' என்றவாறு. எட்டும் - நீட்டியளக்கின்ற. இதனால், உடம்பு எண்சாண் ஆகுமாறு கூறப்பட்டது.

போகத்துள் ஆங்கே புகுந்த புனிதனும்
கோசத்துள் ஆகங் கொணர்ந்த கொடைத்தொழில்
ஏகத்துள் ஆங்கே இரண்டெட்டும் மூன்றைந்தும்
மோகத்துள் ஆங்கொரு முட்டைசெய் தானே. ***#460***

ஒருவன், ஒருத்தி ஆகிய இருவரது இன்பநுகர்ச்சிக் காலத்தில் கருவைத் தோற்றுவிக்கப் புகுந்த சிவபெருமான், அவ்வொருத்தியது கருப் பையினுள் ஓர் உடம்பைக் கொணர்ந்து வைத்த கொடைத் தொழிலாலே வெள்ளிய துளிகள் பலவற்றுள் ஒரு துளியின்கண்ணே முப்பத்தொரு கருவிகள் ஆகிய மாயா காரியங்கள் சேர, அவற்றால் முதற்கண் ஒரு பிண்டத்தை அமைக்கின்றான்.

விளக்கவுரை

மோகம் - மோகினி. ஆன்ம தத்துவத்திற்கும் இது வழிமுறையாற் காரணமாதல் பற்றி இதனையே கூறினார். 'இரண்டெட்டும், மூவைந்துமாகிய மோகத்துள்' என்க. மோகம், கருவியாகுபெயர். 'கோசம்' என்பது உயிரெதுகை.
இதனால், பரசரீரத்துள் குண சரீரமே யன்றிக் கஞ்சுக சரீர காரண சரீரங்களும் கூட்டப்படுதல் கூறப்பட்டது.

பிண்டத்தி னுள்ளுறு பேதைப் புலன்ஐந்தும்

பிண்டத்தி னூடே பிறந்து மரித்தன
அண்டத்தி னுள்ளுறு சீவனும் அவ்வகை
அண்டத்து நாதத் தமர்ந்திடுந் தானே. *#461*
உடம்பிலே பொருந்தியுள்ள மயக்கத்தை உடைய ஐம்பொறிகளும் அவ்வுடம்பையே என்றும் பற்றுக்கோடாகக் கொள்கின்றன. அதுபோலவே முட்டை வடிவாகத் தோன்றும் கருவைப் பற்றியுள்ள உயிரும் அக்கருவையே பற்றுக்கோடாகக் கொண்டு தாயின் கருப்பைக்குள் இருக்கும்.

விளக்கவுரை

இது, கைகால் முதலிய உறுப்புக்கள் இல்லாத பிண்டமாகிய கருவில் உயிர் செயலற்றிருத்தல் எவ்வாறு என்பார்க்கு, 'செயலின்றி, அறிதல் மாத்திரையாய் நிற்கும்' என ஐயம் அகற்றியவாறு. 'பிண்டம்' என்றது உடம்பை. 'மரித்தது' என்பது பாடம் ஆகாமை அறிக. விந்துவை அடக்கிக் கொள்ளுதலால் கருப்பை 'நாதம்' எனப்பட்டது. 'பிறவற்றை நோக்க அறிவாய் நிற்கின்ற ஐம்பொறிகள், அவ்வறிவுத் தன்மை யில்லாத உடம்பிலே நிற்றல் போல, சடம் போல்வதாகிய பிண்டத்தில் சித்தாகிய உயிர் நிற்கும்' என்பதாம்.
இதனால், மேலது பற்றி எழுவதோர் ஐயம் அறுக்கப்பட்டது.

இலைப்பொறி யேற்றி யெனதுடல் ஈசன்
அலைப்பொறி யிற்கரு ஐந்துடல் நாட்டி
நிலைப்பொறி முப்பதும் நீர்மை கொளுவி
உலைப்பொறி ஒன்பதில் ஒன்றுசெய் தானே. *#462*
எனது உடலில் நிற்கின்ற சிவபெருமான் ஒவ்வோர் உயிர்க்கும் கருவில் அதன் விதியாகிய எழுத்தோலையைத் தலையிலே வைத்து, தானே இயங்குதல் உடைய யந்திரம் போன்ற ஐந்து உடல்களை நிலைபெறச் செய்தளித்து, அவ் ஐந்துடல்களில் வேறு பட்ட, நிலையான முப்பது கருவிகளை அமைத்து, ஒன்பது வாய்களை உடைய ஒரு துருத்தியைச் செய்து தருகின்றான்.

விளக்கவுரை

ஓலையை 'இலை' என்றது, 'பத்திரம்' என்னும் வடநூல் முறை. அதன்கண் பொறிக்கப்படுவது எழுத்து. 'அலைப் பொறி' என்பதில் அகரத்தைத் துகரமாக மயங்கினமையின், பாடம், 'துலைப் பொறி' எனப் பிழைபட்டது.
ஐந்து உடல், மேலே சொல்லப்பட்டன. *(பாடல் - 402, 424)* நிலைத்தல், தம் காரியம் அழியினும் தாம் அழியாது நிற்றல். முப்பது கருவிகள், ஆன்ம தத்துவம் வித்தியா தத்துவங்களில் புருடன் ஒழிந்தவை. புருடன்

தனித் தத்துவம் அன்றாதலின் அதனை நீக்கி ஓதினார். 'நீர்மையாக' என ஆக்கம் வருவித்து 'அவற்றின் தன்மை தோன்ற' என உரைக்க.
உலைப் பொறி - துருத்தி. 'ஒன்பதில் உலைப்பொறி ஒன்று செய்தான்' என மாறிக் கூட்டுக. ஒன்பது, எண் ஆகுபெயர். 'ஒன்பதில்' என்பதில் இல், ஐந்தாம் உருபு. 'கரு' என்றதை 'ஈசன்' என்றதன் பின்னர்க் கூட்டி, இரண்டையும் முதற்கண் வைத்து உரைக்க. ஒன்பது வாயையுடைய துருத்தி, இல் பொருள் உவமை. இஃது உவமையாகு பெயராய், உடம்பைக் குறித்தது. 'ஒன்பது வாய்கள்' இவை என்பதை அடுத்துக் காண்க.
இதனால், துருத்திபோல் அமைந்த தூல உடம்போடே ஏனை நான்குடம்புகளும் ஒட்டிக்கிடக்கச் செய்தல் கூறப்பட்டது.

இன்புற் றிருவர் இசைவித்து வைத்தமண்
துன்பக் கலசம் வனைவான் ஒருவனே
ஒன்பது நீர்ச்சால் கலசம் பதினெட்டு
வெந்தது சூளை விளைந்தது தானே. ***#463***

ஒருவனும், ஒருத்தியும் ஆகிய இருவர் இன்பம் நுகர்தற்கண் பொருந்த வைக்கும் மண்ணால் துன்பத்திற்கு ஏதுவான கலங்கள் பலவற்றையும் செய்பவன் ஒருவனே. அப் பல கலங்கள் ஆவன, நீர்ச்சால்கள் ஒன்பதும், அவற்றில் நீரை முகந்து ஆள்கின்ற கலயங்கள் பதினெட்டுமாம். இவ்வாறு குயவனது சூளை கலங்களை உருவாக்கிற்று. அதனாலே கலங்கள் உளவாயின.

விளக்கவுரை

மண், கருப் பிண்டம். 'கலசம்' என்றது, 'கலம்' எனப் பொதுப்பட நின்றது. உடம்பு ஒன்றேயாயினும், அதன் உட்கூறுகளைப் பகுத்துணர்த்துதற்குப் பலவாகக் கூறினார். அணைவான், உயிர், ஒன்பது, ஒன்பான் துளை (நவத்துவாரம்). அவை, கண் இரண்டு, காது இரண்டு, மூக்கு இரண்டு, வாய் ஒன்று, எருவாய் ஒன்று, கருவாய் ஒன்று. இவை நீர்வடிவாய்க் கழியும் கழிவுப் பொருள்கள் வெளிப் படும் பெருவாயில்களாதல் பற்றி 'நீர்ச் சால்' என்றார். பதினெட்டா வன, நானூற்று ஐம்பதாம் திருமந்திரத்தில் குறிக்கப்பட்ட கருவிகள். அவை அருவப் பொருளாய் நின்று இவ்வாயில்கள் பயன்படச் செய்தலின், 'கலயம்' என்றார். சூளை இறைவன் செயல். விளைந்தது, கிடைத்தது; இவ்வொருமை தொகுதி மேல் நின்றது. 'தான், ஏ' அசைநிலைகள்.
இதனால், உயிர்களின் பொருட்டு உடம்பை அமைக்குமா றெல்லாம் கூறப்பட்டன.

அறியீ ருடம்பினில் ஆகிய ஆறும்
பிறியீரதனில் பெருகுங் குணங்கள்

செறியீர் அவற்றினுட் சித்திகள் இட்ட
தறிவீர் ஈரைந்தினு ளானது பிண்டமே. *#464*

உலகீர், வாழ்க்கையில் வரும் நிகழ்ச்சிகளாகிய ஆறும் கருவிலே அமைக்கப்பட்டன என்பதை அறியமாட்டீர். அதனால், அவற்றில் அழுந்துதலின்றி நீங்கமாட்டீர். அவ்வுடம் பிற்றானே நல்லன பல பெருகுமாற்றையும், சிவபெருமான் அந்நல்லனவற்றால் பல பயன்கள் விளைய வைத்திருத்தலையும் உணர்ந்து அடையமாட்டீர்; ஆயினும், நீவிர் அனைவீரும் பிண்ட மாகிய உங்கள் உடம்புகள் தாயர்தம் வயிற்றில் பத்துமாதம் தங்கி வளர்ந்து வந்ததை அறிவீர்கள்.

விளக்கவுரை

'அதனால் பயன் என்னை' என்பது குறிப்பெச்சம். வாழ்வில் நிகழும் ஆறு மேலே சொல்லப்பட்டன. *(தி.10 பா.440)* 'அதனில்' என்பதில் சுட்டு, ஆக்கத்தைக் குறித்தது. குணங்கள் தன்மைகள். அவை அறவுணர்வும், இறையுணர்வும் பற்றி எழும் விருப்பமும், செயல்களும். சித்திகள் - அவற்றின் பயன்கள். 'இட்டது, ஆனது' என்பன தொழிற் பெயர்கள். 'ஏனையவற்றை அறியாவிடினும், பிண்டம் பத்து மாதம் தங்கிப் பிறந்ததை அறிவீர்' என இகழ்ந்தவாறு. இவ்விகழ்ச்சி, முற்கூறிய அறியாமைபற்றியதாதல் அறிய.

இதனால், சிவபெருமான், 'வேம்பினோடு தீங்கரும்பும் விரவி ஊட்டுதல்போல' *(தி.7 ப.46 பா.2)* உயிர்கட்கு வினைப் போகத்தை நுகர் வித்தலோடு, மெய்யுணர்வைப் பெறுவித்தற்பொருட்டும் உடம்பைக் கருவினில் தோற்றுவித்துக் காத்துத் தருகின்றான் என அதன் பயன் கூறப்பட்டது.

உடல்வைத்த வாறும் உயிர்வைத்த வாறும்
மடைவைத்த ஒன்பது வாய்தலும் வைத்துத்
திடம்வைத்த தாமரைச் சென்னியுள் அங்கிக்
கடைவைத்த ஈசனைக் கைகலந் தேனே. *#465*

சிவபெருமான், உடலை அமைத்து, அதில் உயிரைக் கூட்டிய குறிப்பை உணர்ந்து, அவ்வுடல் நிலை பெறுதற் பொருட்டு அதில் நீர்மடைபோல் உள்ள ஒன்பான் துளைகளையும் அமைத்து, உறுதிப்பாடுள்ள நெஞ்சத் தாமரையின் மேல் தனது உருவத்தைத் தீயின் முனைபோல வைத்துள்ள அவனையே கூடி நான் இன்புறுகின்றேன்.

விளக்கவுரை

'நீவிரும் அவ்வாறு அவற்றை உணர்ந்து அவனைக் கூடுதலே உடல் எடுத்ததன் பயன்' என்பது கருத்து. 'உயிர் வைத்தவாறும்' என்பதன்பின், 'உணர்ந்து' என ஒருசொல் வருவிக்க. 'மடைவைத்த' என்பதில் வைத்த,

உவம உருபு. திடம், உண்மை அன்பு. 'இருதய கமலத்தின் மேல் இறைவன் தீக்கொழுந்து வடிவாய் உள்ளான்' என, உபநிடதங்களில் தகர வித்தை கூறும் வழிகூறப் பட்டது. யோகியர் அதனையே நினைத்தலின், 'தாமரைச் சென்னியுள் அங்கிக் கடைவைத்த ஈசன்' என்றார். 'சென்னி' என்றது மேல் இடத்தை. உடம்பொடு நிற்குங்கால் தியானத்தாலும், பாவனையாலும் இறைவனைக் கூடும் இடம் இருதயமும், புருவ நடுவுமேயாக, அவற்றை யொழித்து 'சென்னித் தாமரை' என மொழிமாற்றி, உடம்பை விட்டுப் போகுங்கால் பற்றும் இடமாகிய பிரம ரந்திரத்தைக் கொள்ள வேண்டாமை அறிக. 'கைகலந்தேன்' என்பதில் கை, இடைச்சொல்.
இதனால், உடம்பினை அளித்த தலைவனது குறிப்பை உணர்ந்து, அதன்கண்ணே அவனைக் கூடும் முறையறிந்து கூடுதல் வேண்டும் என்பது கூறப்பட்டது.

கேட்டுநின் றேன்எங்குங் கேடில் பெருஞ்சுடர்
மூட்டுகின் றான்முதல் யோனி மயனவன்
கூட்டுகின் றான்குழம் பின்கரு வைஉரு
நீட்டிநின் றாகத்து நேர்பட்ட வாறே. ***#466***

நான்கு வேத சிவாகமங்கள் அனைத்திலும் கேட்டு நின்றது, 'என்றும் அழிவில்லாத பேரொளியாகிய சிவபெருமானே உலகனைத்திற்கும் முதற்காரண வடிவாய் நின்று அவற்றைக் கோக்கின்றான்' என்பது. எனவே, தாயது வயிற்றில் நெகிழ்ந்து பட்ட கருவை உறுதிப்படுத்தி உருவாக அமைப்பவன் அவனே. ஆதலின், தந்தை தாயாரது உடற்கூட்டம் அவனது செய்கைக்கு ஒரு கருவியாய் அமையும் அளவேயாம்.

விளக்கவுரை

மூட்டுதல், தேர் உறுப்புக்களை ஒருங்கிணைத்துத் தேராக்குதல்போல, உலகுறுப்புக்கள் பலவற்றைத் தொகுத்து உலக மாக்குதல். 'யோனி' என்பதற்கு 'வாயில் அல்லது காரணம்' என்பதே பொருள். உலகிற்கு முதற்காரணம் மாயையாயினும், வித்திற்கு நிலம் போல இறைவன் அதற்கு நிலைக்களமாதல் பற்றி அவனையே, 'முதற் காரண வடிவினன்' என்று நூல்கள் சில இடங்களிற் கூறும். அவ் வாற்றால், 'முதல் யோனி மயன் அவன்' என்றார். 'அவன் மூட்டு கின்றான்' என முன்னே கூட்டுக. 'கேட்டு நின்றேன்' என்பதன்பின், 'அது' என்னும் எழுவாயும், 'மூட்டுகின்றான்' என்பதன்பின், 'என்பது' என்னும் பயனிலையும் அவாய் நிலையாய் நின்றன. மூட்டு தற்கு, 'உலகம்' என்னும் செயப்படுபொருள் வருவிக்க. 'கருவை உருவாக நீட்டி நின்று கூட்டுகின்றான்' என்க. 'ஆகத்து உளவாதல்' என ஒருசொல் வருவிக்க.

நேர்படுதல் - நினையாததொன்றாய் இடை வருதல். இவ்வாறு கூறியது, அதன் தலைமையின்மை உணர்த்தற்கு.
இதனால், கருவை உருப்படுத்துகின்றவன் சிவபெருமான் என்பதே உண்மை நூல் துணிபாதல் கூறப்பட்டது.

பூவுடன் மொட்டுப் பொருந்த அலர்ந்தபின்
காவுடைத் தீபங் கலந்து பிறந்திடும்
நீரிடை நின்ற குமிழி நிழலதாய்ப்
பாருடல் எங்கும் பரந்தெட்டும் பற்றுமே. ***#467***

தாய் தந்தையரது கூட்ட உறுப்புக்கள் தம்மிற் கூடிய காலத்து முன்பு தந்தையுடலில் நின்ற கரு, தாயது கருப்பையுட் சென்று கலந்து முட்டை *(பிண்டம்)* ஆகும். அம்முட்டையினுள் நீர்க்குமிழியில் நிழல்போல நுண்ணுடம்புக் கருவிகள் எட்டும் பருவுடல் எங்கும் பரந்து அதனைத் தாங்கி நிற்கும்.

விளக்கவுரை

'இவ்வாறு தாங்கிநிற்றல், அவன் திருவுளக் குறிப்பால் அல்லது ஆகாது' என்பது கருத்து. காவுடை - சுமையாதல் உடைய. 'தீபம்' என்றது, கருவை என்பதை *478* ஆம் திருமந்திரம் பற்றி அறிக. இவை இரண்டானும், 'கரு, பருவுடம்பு' என்பது கூறினார்.
நுண்ணுடம்புண்மையை உணராதார், 'இப்பருவுடம்பே உடம்பு' என மயங்குவராதலின், அவர், 'கருவுற்பத்தியில் இறைவன் திருவருள் என்பது இல்லை' என்றலும் மயக்க உரையேயாம் என்றற்குப் பருவுடம்பிற்குப் பற்றுக்கோடு நுண்ணுடம்பாதலை ஓதினார். குமிழி யில் நிழல், நுண்ணிதாய் உள்நிற்றற்குக் கூறிய உவமை. பாருடல் - பருவுடல். இத்திருமந்திரம் ஈரடி எதுகை பெற்றது.
இதனால், மேலதற்கு ஏதுக்கூறி வலியுறுத்தப்பட்டது.

எட்டினுள் ஐந்தாகும் இந்திரி யங்களும்
கட்டிய மூன்று கரணமு மாய்விடும்
ஒட்டிய பாச உணர்வென்னுங் காயப்பைக்
கட்டி அவிழ்த்திடுங் கண்ணுதல் காணுமே. ***#468***

நுண்ணுடம்புக் கருவிகள் எட்டனுள் தன் மாத் திரைகள் ஐந்தனையும் புலன்களாகக் கொள்கின்ற ஞானேந் திரியங்கள் ஐந்தும், அப்புலன்களைத் தம்பால் பற்றிக் கொள்கின்ற, எஞ்சிய 'மனம், அகங்காரம், புத்தி' என்கின்ற அந்தக்கரணங்கள் மூன்றும் கூடிய உடம்பென்னும் பையினுள் உயிர் என்கின்ற சரக்கைச் சிவ பெருமான் முன்னர்க் கட்டிவைத்துப் பின்னர் அவிழ்த்து விடுவான்.

விளக்கவுரை

நுண்ணுடம்பு இல்லையேல், பருவுடம்பு பயனிலதாம் என்பது கூறியவாறு. ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் தன்மாத்திரைகள் ஐந்தும் வான் முதலிய மாபூதங்கள் ஐந்தனையும் முறையே தோற்றுவித்துப் பின் அவற்றின் குணமாய்ச் செவி முதலிய ஞானேந்திரியங்கட்குப் புலனாய் வந்து பொருந்துதலால், 'நிருவிகற்ப ஞானம்' எனப்படும் பொதுவுணர்வும், பின் அவற்றை மனம் முதலிய அந்தக் கரணங்கள் பற்றிக்கொள்ளுதலால் 'சவிகற்ப ஞானம்' எனப்படும் சிறப்புணர்வும், தோன்றுதலின், 'நுண்ணுடம்பு இல்வழி, யாதோர் உணர்வும் நிகழாது' என்பதனை,

'ஓசைநற் பரிச ரூப இரதகந் தங்கள் என்று
பேசுமாத் திரைகள் ஐந்தும் பிறக்கும்பூ தாதிகத்தின்;
நேசஇந் திரியங் கட்கு நிகழறி விதனாற் காண்டும்'

எனவும்,

'சாற்றிய பஞ்ச தன்மாத் திரைகளிற் சத்த முன்னாத்
தோற்றும்வான் வளிதீ நீர்மண் தொடக்கியே ஒன்றுக்கொன்றங்
கேற்றமாம் ஓசை யாதி இருங்குணம் இயைந்து நிற்கும்'
-சிவஞானசித்தி சூ. *2.64.65*

எனவும்,

அந்தக் கரணம் அடைவே உரைக்கக் கேள்
அந்தமனம் புத்தியுடன் ஆங்காரம் - புந்தியிவை
பற்றிஅது நிச்சயித்துப் பல்கால் எழுந்திருந்தங்
குற்றதுசிந் திக்கும் உணர். -உண்மைவிளக்கம் - *17*

எனவும் கூறுமாற்றான் அறிக. மாயா காரியங்களாகிய இக்கருவிகளின் வழி வரும் உணர்வெல்லாம் புறவிடயமேயாகலின், அவையெல்லாம் பாசஞானமே என்க. ஒட்டிய பாசம் - அவையே தானாகப் பொருந்திய மாயாகாரியங்கள். 'உணர்வென்னும் காயம்' எனக் காரணத்தைக் காரியமாக ஒற்றுமை வழக்காற் கூறினார். கட்டி அவிழ்த்தற்கு 'உயிர்' என்னும் செயப்படுபொருள் வருவித்துக்கொள்க. இது முதற் பதின்மூன்று திருமந்திரங்கள் அந்தாதியாய் வரும்.

இதனால், பருவுடற்கு நுண்ணுடம்பு இன்றியமையாததாதல் கூறுமுகத்தால் மேலது வலியுறுத்தப்பட்டது.

கண்ணுதல் நாமங் கலந்துடம் பாயிடப்
பண்ணுதல் செய்து பசுபாசம் நீக்கிட
எண்ணிய வேதம் இசைந்த பரப்பினை
மண்முத லாகவகுத்துவைத் தானே. ***#469***

உயிர்கள் தூலமும், சூக்குமமும் ஆய உடம்புகளையே உடம்பாகப் பற்றிநில்லாது, சிவபெருமானது திருப்பெயராகிய திருவைந்தெழுத்தே

தம்முள் ஒன்றித் தமக்கு உடம்பாகுமாறு அதனை மொழிதல் (வாசகம்), முணுமுணுத்தல் (உபாஞ்சு), கருதல் (மானதம்), உணர்தல் (சுத்தமானதம்) என்னும் முறைகளில் கணித்து (செபித்து)ப் பாசங்களினின்றும் நீங்குமாறு வேதம் முதலாகப் பொருந்திய பரந்த நூல்களை மண்ணுலகம் முதலிய எல்லா உலகங்களிலும் வகுத்து வைத்துள்ளான்.

விளக்கவுரை

நூல்கள் என்றது சொற்பிரபஞ்சத்தை. அவை நிவிர்த்தி முதலிய கலைகளில் வைகரி முதலிய வாக்குக்களாய் நிற்றலை அறிந்துகொள்க. வாக்குகள் சுத்த மாயையின் காரியங்களாம். அதனால், அவை மயக்கத்தை நீக்கித் தெளிவுதரும் என்க. 'பாச ஞானத்தால் மயங்கும்படி பொருட் பிரபஞ்சத்தால் உயிர்களைக் கட்டி வைத்த சிவபெருமான், பின்னர் அதினின்றும் நீங்கிப் பசுஞானமும், பதிஞானமும் முறையானே எய்தி வீடுபெறுதற்குச் சொற்பிரபஞ்சத்தை யும் அமைத்துள்ளான்' என்றவாறு. 'வேதமொடு' என்ற எண்ணிடைச் சொல் தொகுத்தல். இதனால், மேல் 'கட்டி அவிழ்த்திடும்' என்றவழி, 'அவிழ்த் தற்கு வாயிலாவன எவை என்னும் அவாய்நிலை நிரப்பப்பட்டது'. சிவபெருமான் கருவினுள் வாக்குகளைக் கூட்டுதல் மேலே (தி.*10* பா.*454*) கூறப்பட்டது.

அருளல்ல தில்லை அரன்அவன் அன்றி
அருளில்லை யாதலின் அவ்வோர் உயிரைத்
தருகின்ற போதிரு கைத்தாயர் தம்பால்
வருகின்ற நண்பு வகுத்திடுந் தானே. ***#470***

அருளின்றிச் சிவன் இல்லை. சிவனின்றி அருள் இல்லை. ஆகவே, என்றும் அருளோடே நிற்கின்ற அவன், கருவில் வீழ்கின்ற அந்த ஒர் உயிரை வளர்க்கத் தருகின்றபொழுது திரோதான சத்தி, அதனை வளர்க்கின்ற செவிலித் தாய் என்னும் இரு தாயாரிடத்து அன்பை உண்டாக்கித் தருவான்.

விளக்கவுரை

அருளும், சிவனும் ஒன்றாதலைக் காட்டியது உயிரை வளர்த்தற்குக் காரணமும், வளர்க்கின்ற தாயும் அவனே ஆகின்றான் என்பதும் தோன்றுதற்கு. 'அருட்சத்தியே உயிருக்கு நற்றாய்' என்னும் கருத்தால், திரோதான சத்தியையும் செவிலியாகக் கூறினார்.
இதனால், கருவைப் பிறப்பித்த பின்னர் வளர்ப்பவனும் சிவபெருமானேயாதல் கூறப்பட்டது.

வகுத்த பிறவியை மாதுநல் லாளும்

தொகுத்திருள் நீக்கிய சோதி யவனும்
பகுத்துணர் வாகிய பல்லுயிர் எல்லாம்
வகுத்துள்ளும் நின்றதோர் மாண்பது வாமே. *#471*

பாசஞானத்தைத் தருகின்ற உடம்பை வளர்க்கின்ற அம்மையும், நூல்களை மிக உணர்த்திப் பாச ஞானத்தைப் போக்கிப் பசுஞான பதிஞானங்களைத் தருகின்ற அப்பனும் செய்யும் செயல்களாவன முறையே, ஐம்புலன்களைப் பகுத்துணரும் வகையில் உயிர்கட்குப் பலவகைப் பிறப்புக்களைத் தருதலும், அவற்றின் அறிவுக்கறிவாய் நிற்றலைப் புலப்படுத்துதலும் ஆகும்.

விளக்கவுரை

'பிறவியை வகுத்த' என மாற்றிக்கொள்க. தொகுத் தற்குச் செயப்படுபொருள் மேல் *(தி.10 பா.468)* 'வேதம் முதலாக இசைந்த பரப்பினை' என்பதனால் பெறப்பட்டது. அருளை அம்மையாகவும், சிவனை அப்பனாகவும் கூறும் முறை பற்றியும் உடலை வளர்ப்பவள் தாயும், அறிவை வளர்ப்பவன் தந்தையுமாகச் சொல்லப்படும் வழக்குப்பற்றியும் 'அருளே பிறப்பைத் தருவது' எனவும், 'சிவனே வீடு தருபவன்' எனவும் இருபொருளும் வேறு வேறுபோலக் கூறினார். அங்ஙனம் கூறினாராயினும், 'இருபொருளும் ஒன்றே' என்பது மேலைத் திருமந்திரத்தால் இனிது விளக்கப்பட்டது. 'வகுத்த, நீக்கிய' என முன்னர் உடம்பொடு புணர்த்தலால் பொது வாகச் சுட்டிய வற்றைப் பின்னர்ச் சிறப்பாக இனிது விளக்கினார் என்க.

இதனால், கண்ணுதல்தானே உயிர்களைக் கட்டியும், அவிழ்த்தும் நிற்குமாறு *(தி.10 பா.467)* கூறப்பட்டது. அஃதாவது திரோதான சத்தி வழியே கட்டுப்படுத்தும், அருட் சத்தியால் வீடுபெறு வித்தும் நிற்பான் என்றவாறு.

மாண்பது வாக வளர்கின்ற வன்னியும்
காண்பது ஆண்பெண் அலியென்னுங் கற்பனை
பூண்பது மாதா பிதாவழி போலவே
ஆம்பதி செய்தான்அச் சோதிதன் ஆண்மையே. *#472*

மாட்சிமையோடு கருப்பையுள் வளர்கின்ற கருவைச் சிவபெருமான் செய்வது, 'ஆண், பெண், அலி' என்னும் மூவகை அச்சாக. அவ்வச்சுக்கள் அமைவது, மாதா பிதாக்களின் உடற் கூறாகிய காரணப் பொருட்கு ஏற்பவாம். அவற்றிற்கெல்லாம் தக்கவாறே அப்பெருமான் தனது ஆற்றற் பதிவைச் செய்கின்றான்.

விளக்கவுரை

தந்தை தாயரது வெண்டுளி செந்துளிகளை 'வன்னி - நெருப்பு' என்றார்,

அவை அப்பூதத்தின் கூறாதல் பற்றி. அச்சு, வடிவை அமைப்பதாகலின் அதனைக் 'கற்பனை' என்றார். 'கற்பனையாக' என ஆக்கம் வருவிக்க. 'பூண்பது' என்பது தொழிற்பெயர். வழி - வாயில்; காரணம். பதிவை 'பதி' என்றது முதனிலைத் தொழிற்பெயர். ஆண்மை - ஆற்றல். 'ஆம்பதி' என்றது இன எதுகை.

இதனால், கருவைச் சிவபெருமான் மூவகை அச்சுப்பொருந்த அமைத்தல் கூறப்பட்டது.

ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகிற் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகும்
தாண்மிகு மாகில் தரணி முழுதாளும்;
பாணவ மிக்கிடில் பாய்ந்ததும் இல்லையே. *#473*

கலவியால் கருப்பையுள் கலக்கும் பொருள்களில் ஆண்மகனது வெண்டுளி மிகுந்திருக்குமாயின் பிறக்கும் குழவி ஆணாகும். பெண்மகளது செந்துளி மிகுந்திருக்குமாயின் பிறக்கும் குழவி பெண்ணாகும். இரண்டும் சமமாய் இருக்கின் பிறக்கும் குழவி அலியாகும். அதுவன்றி, மிகுந்துள்ள வெண்டுளியில் உயிராற்றல் மிக்கிருக்குமாயின் பிறக்கும் மகன் ஆற்றல் மிக்கவனாய் அரசாளுதற்கும் உரியவனாவான். அவ்வாறன்றி மிகுந்திருக்கும் செந்துளியில் அழிக்கும் ஆற்றல் மிக்கிருக்குமாயின் பதிந்த கருப் பயனின்றி அழிந்தொழியும்.

விளக்கவுரை

வெண்டுளி கருவாதலும், செந்துளி அதனை வளர்ப்பதும் ஆகும். அதனால், அவை இரண்டின் தன்மைக்கும் ஏற்பக் கரு அமையும் என்க. பாழ் நவம், 'பாணவம்' எனப் புணர்ந்தது. நவம் - புதிது புதிதாய்த் தோன்றும் பொருள். பாழ் நவம் - பாழாதற்கு ஏதுவாம் பொருள். ஆண், பெண் என்பவற்றுள் முன் வந்தவை ஆகுபெயர்கள்.

இதனால், முன்னை மந்திரத்துள் 'பூண்பது மாதா பிதாவழி போலவே' என்றது விளக்கப்பட்டது.

பாய்ந்தபின் அஞ்சோடில் ஆயுளும் நூறாகும்
பாய்ந்தபின் நாலோடில் பாரினில் எண்பதாம்
பாய்ந்திடும் வாயுப் பகுத்தறிந் திவ்வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலு மாமே. *#474*

துணையர் (தம்பதிகள்) கூட்டத்தில் வெண்டுளி கருப்பையினுள் சென்றபின்பும் ஆடவனுக்கு ஐந்து மூச்சு நிகழுங் காறும் இருவரும் பிரியாது முன்போலவே புல்லிக் கிடப்பாராயின், பிறக்கின்ற குழவியது வாழ்நாள் நூறாண்டாக அமையும். நான்கு மூச்சு நிகழுங்காலும் பிரியாதிருப்பாராயின் அஃது எண்பது ஆண்டாக அமையும். இவ்வாறே ஒரு மூச்சிற்கு இருபது ஆண்டாகக் கணக்கிட்டு அறியலாம். ஆயினும்,

மூச்சுக்களின் கணக்கை உண்மையாக அறிவதோ, மூச்சினை நெறிப்படுத்தி இயக்குதலோ பொதுமக்களுக்கு இயலாது. யோகிகளாயின் அக்கணக்கினை அறியவும், அதன்படி மூச்சினை நெறிப்படுத்து இயக்கவும் வல்லராவர்.

விளக்கவுரை

வெளிக்காற்றை ஒருமுறை உள்ளே வாங்கிச் சிறிது நிறுத்திப் பின் வெளியே செல்லவிடுத்து மீண்டும் அவ்வழியே வாங்கி உள்ளே நிறுத்துதல் 'ஒருமூச்சு' எனப்படும். இஃது எல்லா மக்கட்கும் இயல்பில் நிகழ்வதே. ஆழ்ந்த நினைவு இயற்கைக்கு மாறுபட்ட வழிச்செலவு, வருந்திச் செய்யும் தொழில் முதலியவற்றில் மூச்சின் இயக்கம் இயற்கை நிலையினின்றும் வேறுபடும். அவ்வாற்றால் கலவி முடிவின்கண்ணும் அது மாறுபடுதல் இயல்பே. அதனால், கலவிக்குப் பின்னும் கலந்தோர் இருவரும் தம் இயற்கை நிலையில் இருத்தல், கருக்குழவியது உடற்கட்டு முதல் நிலையிலே நன்கு அமைதற்கு வாயிலாய் அமைகின்றது என்க. மூக்கு, வாய் என்பவை வழியாக மூச்சு நிகழ்தலே வெளிப்படையாக விளங்கினும், உடம்பு முழுதும் உள்ள நுண்டுளைகள் அனைத்து வழியாகவும் அது நிகழ்வதேயாம். அதனால் தந்தை தாயரது - சிறப்பாகத் தந்தையது - மூச்சுக் காற்று, கருவுற்ற குழவிக்குப் பயன்தருவதாகும் என்க.

பாய்ந்திடும் யோகிக்கு - மூச்சு நெறிப்பட இயங்கி நிற்கும் யோகிக்கு - 'பாய்ந்திடும் யோகிக்கு இவ்வகை பகுத்தறிந்து பாய்ச்சலும் ஆம்' எனக் கூட்டுக. 'பாய்ச்சல்' என்றது, இங்கு மூச்சுக் காற்றினை.

இதனால், சிவபெருமான் குழவிக்கு வாழ்நாளை வரையறுக்குமாறு கூறப்பட்டது.

பாய்கின்ற வாயுக் குறையிற் குறளாகும்
பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்
பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனாகும்
பாய்கின்ற வாயுமா தர்க்கில்லைப் பார்க்கிலே. ***#475***

முன்னை மந்திரத்துள், 'அஞ்சு, நாலு' எனக் குறிக்கப்பட்ட மூச்சுக்காற்று அங்ஙனம் இயங்கும்பொழுது இயல்பாக இயங்கும் அளவில் சிறிதே குறையுமாயின், குழவி குறளாய் (வளராது குட்டையாய்க் கிடப்பதாகப்) பிறக்கும். மிகக் குறையுமாயின் குழவி கைகால்கள் முடமாகப் பிறக்கும். இஃது ஆடவரது மூச்சுக் கணக்கேயன்றி மகளிரது மூச்சுக் கணக்கன்று.

விளக்கவுரை

எனவே, மகளிரது அப்போதைய மூச்சின் அளவு குழவி உடலைத் தாக்குதல் இல்லை என்பதாம்.

மாதா உதரம் மலமிகில் மந்தனாம்
மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே. *#476*

கலவிக் காலத்தில், தாயது வயிற்றில், நீங்கற் பாலதாகிய மலம் நீங்காது தங்கியிருக்குமாயின், அவள் வயிற்றில் தந்தையிடமிருந்து வந்து கருவாய்ப் பொருந்திய குழவி, மந்த புத்தி உடையதாய் இருக்கும். நீங்கற் பாலதாகிய நீர் நீங்காது அவள் வயிற்றில் தங்கியிருக்குமாயின், குழவி ஊமையாகும். மலம், நீர் இரண்டுமே நீங்கற்பாலன நீங்காது தங்கியிருக்கின், குழவி குருடாகும்.

விளக்கவுரை

'ஆதலின், கலவிக் காலத்தில் துணையர் மல சல உபாதிகள் இல்லாதவராய் இருத்தல் வேண்டும்' என்பதாம். இவ்வாறு இருத்தற்கு அவர் இயல்பிலே நல்லுடல் உடையராதல் வேண்டும். இந்நிலை குழவி வளர்ச்சிக் காலத்தில் எனவும் கருதுவர். நாயனார் முன்னும் பின்னும் கலவிக்காலத்தையே கூறி வருதல் நோக்கத் தக்கது.
இவ்விரண்டு திருமந்திரங்களாலும் குழவியது வினைக் கீடாகச் சிவபெருமான் அதன் புற உறுப்புக்களையும், அகக் கருவிகளையும் அமைக்குமாறு கூறப்பட்டது.

குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்
குழவி இரண்டாம் அபானன் எதிர்க்கில்
குழவி அலியாகும் கொண்டகால் ஒக்கிலே. *#477*

கலவிக் காலத்தில் கணவனுக்கு மூச்சுக்காற்று வலமூக்கின் வழி இயங்கிக் கொண்டிருப்பின், குழவி ஆணாய் அமையும். இடமூக்கின் வழி இயங்கிக்கொண்டிருப்பின், குழவி பெண்ணாய் அமையும். இருவழியிலும் மாறி மாறி இயங்கிக் கொண் டிருப்பின் குழவி அலியாய் அமையும். இவை நிற்க, கருத் தங்கும் காலத்தில் தாய் வயிற்றில் கீழ்ப்போகும் காற்றுப் போக்கப் படாமல் தடுக்கப்பட்டு மேலெழுந்து பாயுமாயின், இரண்டு கரு தங்கும்.

விளக்கவுரை

ஆண் பெண் அலியாதற்குத் தந்தையது கூறே முதற் காரணமாதலோடு, 'பாய்கின்ற வாயு மாதர்க்கில்லை' என மேல் *(பா. 474)* எடுத்தோதியதனால், 'வலத்தது' முதலியன தந்தையது மூச்சு என்பதும், குழவி ஒன்றும் பலவுமாய்க் கருக்கொண்டு பிறத்தற்குத் தாயது கருப்பையில் உள்ள பூப்புப் பொருளே முதற்காரண மாதலோடு, 'மாதா

உதரம் மலம்மிகில்' என மேல் *(பா.475)* எடுத்தோதியதனால், 'அபானன் எதிர்க்கில்' என்றது தாயது வயிற்றிலே என்பதும், பின்னர், 'கொண்ட கால் ஒக்கில்' என்றதனால், 'வலத்தது, இடத்தது' என்றதும் அக்காற்றையே யாதலும் அறியப்படும். மூன்றாம் அடியை இறுதியில் வைத்து உரைக்க. மேல், *(பா. 472)* 'ஆண்மிகில் ஆணாகும்' என்றற் றொடக்கத்தனவாகக் கூறினமையின், இங்கு வலத்தது வாதல் முதலாகக் கூறப்பட்டவை, அவை அவ்வாறு மிகுதற்குக் காரணங்கள் ஆதல் பெறப்படும். அதனால் இவை துணைக்காரணமும், மேற் கூறியவை முதற்காரணமும் ஆதல், விளங்கும். அபானன் எதிர்த்தலும் துணைக்காரணமேயாம். அதனால், இவை, அவற்றிற்கு இவ்வாறு ஒருதலையாக வேண்டப்படாமையும் பெறப்படுவதாம். இவை எல்லாம் தந்தை, தாய், குழவி இவரது வினைக்கீடாகவே நிகழும் என்பது அறிக. இதனால், குழவியது அச்சு அமைப்பிற்கும், எண் அமைப் பிற்கும் துணைக்காரணமாவன இவை என்பது கூறப்பட்டது.

கொண்டநல் வாயு இருவர்க்கும் ஒத்தெழில்
கொண்ட குழவியுங் கோமள மாயிடும்
கொண்டநல் வாயுஇரு வர்க்குங் குழறிடில்
கொண்டதும் இல்லையாம் கோல்வளை யாட்கே. ***#478***

கலவிக் காலத்தில் மூச்சுக் காற்று இருவர்க்கும் வலம், இடம் என்னும் வகையில் ஒருவகையிலே, ஓரளவிலே இயங்குமாயின், தங்கிய கருச் சிதையாது மேற்கூறியவாறு குழவி ஆணும், பெண்ணுமாய் நிலைபெறுதலோடு, அழகாயும் இருக்கும். அவ்வாறின்றி அவர்க்கு மாறி மாறி இயங்கின், தங்கிய கரு பின் நிலைபெறாது அழியும்.

விளக்கவுரை

'ஒத்து' என்றது, இடம், அளவு இரண்டற்கும் ஒப்பக் கூறியது. அதனானே, 'அளவு ஒவ்வாதொழியின், அழகின்றி யிருக்கும்' என்பது பெறப்படும். 'மாறிடில்' என்னாது, 'குழறிடில்' என்றார், 'பன்முறை மாறி நிகழின்' என்பது அறிவித்தற்கு.

குழவி ஆணும், பெண்ணும் ஆதற்குத் தந்தையது மூச்சுக் காற்றுத் துணைக்காரணம் என்பது மேற்கூறி, இதனால், 'அதனோடு தாயது மூச்சுக்காற்று ஒத்தல் அழகிற்குக் காரணம்' என்பதும், தாயது மூச்சு ஒவ்வாமை கரு நிலைபெறாதொழிதற்குக் காரணம் என்பதும் கூறினார். 'கொண்டதும்' என்ற உம்மை, சிறப்பு. 'கோல்வளை யாட்கு' என்பதனை, 'கோல்வளையாள் கண்' எனத் திரித்து, 'கோல்வளை யாள்கண் கொண்டதும் இல்லையாம்' என மாற்றுக. கொண்டது - கொண்ட கரு.

கோல்வளை உந்தியிற் கொண்ட குழவியும்
தால்வளை யுள்ளே தயங்கிய சோதியாம்

பால்வளர்ந் துள்ளே பகலவன் பொன்னுருப்
போல்வளர்ந் துள்ளே பொருந்துரு வாமே. *#479*

தாய் தனது கருப்பையில் ஏற்றுக்கொண்ட குழவி, முதற்கண் தந்தையது நடுநாடியில் தீயின் கூறாக விளங்கி முதிர்ந்து, பின் தாயது கருப்பையினுள்ளே ஞாயிற்றின் நிறம்போலும் செந்நிறத்தை உடையதாய் முற்றி, அதன்பின்னர், வகைபடத் தோன்றுகின்ற உறுப்புக்களை உடையதாகும்.

விளக்கவுரை

தால் - தாலு; நாக்கு. நாக்கின் முதலிடம் நடுநாடி (சுழுமுனை) ஆதல் பற்றி இவ்வாறு கூறினார். சோதி - தீ. பால் - பகுதி. 'சோதியாம் பாலாய்' என ஆக்கம் கொடுக்க. இரண்டிடத்தும், 'உள்ளே வளர்ந்து' என மாற்றுக. 'தந்தையது, தாயது' என்பன ஆற்றலாற் பெறப்பட்டன. பொருந்துதல் - வளர்ந்து பொருந்துதல். கரு, தாயது செந்நீரால் முதற்கண் செந்நிறம் உடையதாயே இருக்கும் என்க.

தந்தையது வெண்டுளியை, 'நீர்க் கூறு' என்பராயினும், அதன்கண் உள்ள உயிராற்றல் தீயின் கூறேயாதலை இந்நூலால் அறிகின்றோம். இவ்வுயிராற்றலை, இக்காலத்தார் 'அணு' என்பர். 'நீர்' என்னாது, 'துளி' (விந்து) என வழங்குதலும் நுண்ணிதாதல் பற்றியும், கருவாகி நிலைபெறுதல் சிறிதளவேயாதல் பற்றியுமாம். தந்தையது உடற் கூற்றில் வளரும் உயிராற்றல், தாயது கருப்பையில் உள்ள பூப்புப் பொருளினுள் புகுந்து கெடாது நிற்றலே கருத் தங்குதலாம். குழவி ஒன்றாதல் பலவாதற்கும் உயிராற்றல் புகப்பெறும் பூப்புப் பொருள்களின் எண்ணிக்கையே காரணம். இக் காரணங்கள் முதற் காரணங்கள் ஆதலின், பிறவாறு மேற்கூறியன பலவும் துணைக் காரணங்களேயாம் என்க. தாயது வயிற்றில் வந்தபின் வளருமாறு கூறுவார், அதற்கு முன்னர் வளர்ந்தவாறும் உடன் கூறினார். இதனால், கரு வளருமாறு கூறப்பட்டது.

உருவம் வளர்ந்திடும் ஒண்டிங்கள் பத்தில்
பருவம தாகவே பாரினில் வந்திடும்
மருவி வளர்ந்திடு மாயையி னாலே
அருவம தாவதிங் காரறி வாரே. *#480*

தங்கிய கருவின் உருவம் பத்துத் திங்கள்காறும் கருப் பையிலே வளரும். பத்தாந்திங்களே பிறக்கும் பருவமாக, அப்பொழுது நிலத்தில் வந்து சேரும். வந்தபின் தாய் தந்தையரைப் புறந்தருபவராகப் பொருந்தி வளரும். அவ்வளர்ச்சி, சுவரெடுத்தல், ஆடைநெய்தல், மாலைதொடுத்தல் முதலியவற்றிற்போலக் கட்புலனாகாது, மாயையினாலே கணந்தோறும் நிகழ்தலை ஒருவரும் காணவல்லரல்லர்.

விளக்கவுரை

'வளர்ந்தபின் அவ்வளர்ச்சியைக் கண்டு வியப்ப தல்லது, வளர்ச்சி கட்புலனாகாது' என்றற்கு 'மாயையினாலே' என எடுத்தோதினார். இதனால், மாயையின் ஆற்றலும் அறியப்படும் என்க. அருவம் - கட்புலனாகாமை. ஆவது - வளர்வது; என்றது தொழிற்பெயர். 'அருவமதாகிய ஆவது' என்க.

இதனால், கரு, கருப்பையுள் வளர்ந்து குழவியாய்ப் பிறக்குமாறும், பிறந்து வளருமாறும் கூறப்பட்டன.

இட்டான் அறிந்திலன் ஏற்றவள் கண்டிலள்
தட்டான் அறிந்தும் ஒருவர்க் குரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்குளன்
கெட்டேன் இம்மாயையின் கீழ்மைஎவ் வாறே! *#481*

கருவை இட்டவனாகிய தந்தையும் அதனை இட்டமை இடாமைகளை அறிந்தானில்லை. ஏற்றவளாகிய தாயும் அதனை ஏற்றமை ஏலாமைகளை அறிந்தாளில்லை. அக்கருவாகிய பொன்னைக் குழவியாகிய அணியாக்குகின்ற பொற்கொல்லனாகிய பிரமன் அவற்றை அறிந்திருந்தும் அவருள் ஒருவர்க்கும் சொல்லிற் றிலன். வினை நிகழ்ச்சி இருந்தவாறே அப்பொற் கொல்லனுக்குப் பணிக்கின்ற தலைவனாகிய சிவனும் அவ்விருவரோடே இருக் கின்றான்; அவனும் அவர்க்கு அவ் வினையியல்பையே உரைத்திலன். அந்தோ! இம்மாயையின் வஞ்சனை எவ்வகையினதாய் உள்ளது!

விளக்கவுரை

'இதனினின்றும் உயிர்கள் உய்திபெறுதல் எவ்வாறு' என்பது குறிப்பெச்சம். 'பட்டாங்கு' என்பதில் படுதற்கு வினை முதலாகிய 'வினை' என்பது வருவிக்க. சொல்லுதல் - பணித்தல். 'பரமன்' என்றது, 'தலைவன்' என்னும் பொருட்டு. கெட்டேன், இரக்கக் குறிப்பு இடைச்சொல். தட்டானும், பரமனும் உரையாமை, இட்டானும் ஏற்றாளும் தம்மை எண்ணாமையாலாம்.

இதனால், கருவினது தோற்றம் முதலியவற்றிற்குத் தந்தை தாயரே உண்மை நிமித்த காரணர் அல்லாராதல், அவர் மாயையின் வலியைக் கடக்கமாட்டாமையின் வைத்து வலியுறுத்தப்பட்டது.

இன்புற நாடி இருவருஞ் சந்தித்துத்
துன்புறு பாசத்தில் தோன்றி வளர்ந்தபின்
முன்புற நாடி நிலத்தின்முன் தோன்றிய
தொண்புற நாடிநின் றோதலு மாமே *#482*

ஒருவன், ஒருத்தி ஆகிய இருவர் தம்முள் இன்பம் நுகரவே விரும்பிக்

கூட, துன்பத்திற்குக் காரணமான அவ்விருப் பத்தால் ஓர் உயிர் பிறந்து வளர்ந்தபின், அவ்வுயிர், தான் நிலத்தில் வந்து சேர்தற்கு முன்பு கருப்பையினுள் உள்ள துன்பத்தால் 'விரைவில் வெளிப்படல் வேண்டும்' என்று விரும்பிப் பெரிதும் முயன்று வெளிப் பட்டுப் பிறந்த செய்தியைப் பின் அறிவுடையோர் அவ்வுயிரும் தம்போல அறிவைப் பெறுமாறு அதற்குச் சொல்லுதல் கூடுமோ!

விளக்கவுரை

'இருவரும் கூடினமை தம் இன்பம் கருதியல்லது, ஓர் உயிர் மக்கள் உடம்பைப்பெற்று உய்தல் வேண்டும் என்னும் கருத்தினால் அன்று' என்பார் 'இன்புற நாடி இருவரும் சந்தித்து' என்றும், 'அக்கூட்டத்தால் அவர் பின்பு குழந்தையை வளர்க்கக் கடமைப்பட்டவராய்த் துன்புறுகின்றனர்' என்பார், 'துன்புறு பாசத்தில் தோன்றி' எனவும் கூறினார். இவையெல்லாம் பெரும்பாலராய் உலகியலின் நிற்பாரது செயல்பற்றிக் கூறியன. 'உலகுய்ய மகப்பெறுவான்' (தி.12 பெ. பு. திருஞான - 59) சந்திப்பாரும் உளர் என்க. 'சந்தித்து' என்றதனை, 'சந்திக்க' எனத் திரிக்க. 'நிலத்தின்' எனப்பின்னர் வருகின்றமையின், 'உற நாடி' என்றொழிந்தார். ஒண்மை, 'ஒண்பு' என வந்தது. ஒண்மை - அறிவு. 'பிறத்தற்கு முன் தான் பட்ட துன்பத்தை உணரின், அவ்வுயிர் மீளப் பிறவி எய்தாது வீடடைய விரையும்; அறிவிப்பினும் அதனை அறியமாட்டாமையால், மேலும் அது பிறவிக்கே வழிதேடுகின்றது; இஃது அதன் வினையிருந்தவாறு' என்றதாம். நான்காம் அடி, இன எதுகை. 'தொன்பு' என்பது பாடம் அன்று.

இதனால், இட்டான், ஏற்றாள் என்பவரேயன்றி இடப்பட்ட அது தானும் தனது நிலையைத் தான் அறியாது நிற்றல் கூறப்பட்டது.

குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக்கூட் டிட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்
இயக்கில்லை போக்கில்லை ஏனென்ப தில்லை
மயக்கத்தால் யாக்கை வளர்க்கின்ற வாறே. **#483**

குயிற்குஞ்சாகத் தக்கமுட்டையை அவ்வாறாதற் பொருட்டு அதன் தாய் காக்கையினது கூட்டில் இட, காக்கை அதனைச் சிறிதும் வேறாக நினையாது தன் முட்டை என்றே கருதி அடை காத்தல்போல, சிவன் தனது மகவாகிய உயிர், உடல் பெற்றுச் செயற்படுதற் பொருட்டுக் கருவிலே இட, தாய் அதனைச் சிறிதும் வேறாக நினையாது, உடல் வருந்தத் தொழில் செய்யாமலும், அதனைப் போக்கிவிட நினையாமலும், 'ஏன் வந்தது' என்று மனம் வருந்தாமலும் பேணிக் காத்தல் மயக்கத்தாலாவதே.

விளக்கவுரை

குயில் தன் முட்டையை அடைகாத்துக் குஞ்சு பொரிக்க அறியாமையால் காக்கையின் கூட்டில் அதனை இடும் என்பர். வளர்த்தல், இங்கு முட்டையை அடை காத்தல். 'குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக்கூட்டிட்டால்' என்றது சுட்டிக் கூறா உவமம் ஆதலின், அதற்கேற்ற பொருள் வருவிக்கப்பட்டது. அங்ஙனம் காக்கப்பட்ட கரு, தாயது விருப்பம்போல இல்லாமையும் காணப் படுதலால், அது, காக்கையது விருப்பத்திற்கு மாறாய்த் தோன்றும் குயிற்குஞ்சு போல்வதே என்றபடி 'இல்லை' என்பவற்றை 'இன்றி' எனத் திரிக்க. 'வளர்க்கின்றவாறு மயக்கத்தாலாம்' என்க.

இதனால், 'கருவாய்த் தோன்றும் குழவி, உண்மையில் சிவன் மகவே' என்பது கூறப்பட்டது.

முதற்கிழங் காய்முளை யாய்அம் முளைப்பின்
அதர்ப்புத லாய்ப்பல மாய்நின் றளிக்கும்
அதற்கது வாய்இன்ப மாவது போல
அதற்கது வாய்நிற்கும் ஆதிப் பிரானே. ***#484***
மரவகைகளுள் சில, கிழங்காய் நின்றே பயன் படும்; சில, முளையானபின் பயன்படும்; சில, முளைக்குப் பின் புதலாய் நின்று பயன்படும்; சில, காய்த்துப் பழமாய்ப் பயன்படும். அந்த அந்த மரவகைக்கு அந்த அந்தப் பொருளே உளதாகிப் பயன் தருதல்போலச் சிவபெருமான் மக்கள் உயிர்க்கேயன்றிப் பிற உயிர்கட்கும் அவ்வவற்றின் தோற்றத்திற்கு ஏற்ப அத்தோற்றப் பொருள்களாய் நின்று அவற்றைத் தோற்றுவிப்பன்.

விளக்கவுரை

'எல்லா மரங்களும் பழமாய்த்தான் பயன்படும் என்பதின்றிப் பல்வேறு வகையில் பயன்படுதல்போல, எல்லா உயிர்களும் மக்களேயாய் - அல்லது கருப் பையில் தோன்றுவனவேயாய் நின்று தோன்றும் என்பதின்றிப் பலவேறு வகையில் தோன்றும்' என்றற்கு இவ்வாறு உவமை கூறினார். 'மரவகை' என்பது தோன்றா எழுவாயாய் நின்றது. அதர் - வழி. இதனால், மக்கள் உயிர்களின் தோற்றத்தை இவ்வாறு செய்விக்கின்ற சிவபெருமான், பிற பிற உயிர்களையும் அவ்வவற்றிற்கு ஏற்ற பெற்றியால் தோற்றுவிப்பன் என்பது இதுபற்றி அறியப்படும் என ஒரு திருமந்திரத்தால் தொகுத்து உணர்த்தப்பட்டது.

பரத்திற் கரைந்து பதிந்தநற் காயம்
உருத்தரித் திவ்வுடல் ஓங்கிட வேண்டின்
திரைக்கடல் உப்புத் திரண்டது போலத்

திரித்துப் பிறக்குந் திருவரு ளாலே. *#485*

உலகம் ஒடுங்குங் காலத்து உடம்பும் பல தத்துவங்களாய் ஒடுங்கி, முடிவில் எல்லாவற்றுடனும் மாயையில் ஒடுங்கும். ஒடுங்கிய உடல் மீளவும் முன்போலத் தோன்றுதல் வேண்டும் எனச் சிவபெருமான் திருவுளம் கொள்ளின், கடல் நீரில் தோன்றாது நின்ற உவர்ப்புச் சுவை பின் தோன்றி நிற்கும் உப்பாகத் திரண்டு உருவெடுத்தல்போல, அவனது திருவருட் செயலாலே மீளவும் முன்போலத் தோன்றும்.

விளக்கவுரை

மாயையில் ஒடுங்கும் உலகத்தை, அதற்கு நிலைக்களமாதல் பற்றி முதல்வனிடத்தில் ஒடுங்குவதாகக் கூறினார். 'வேண்டில்' என்றது இச்சையையும், 'திருவருளாலே' என்றது கிரியையும் என்க. திரித்து - மீண்டு.

இதனால், உடம்பு ஒடுக்கமும், தோற்றமும் உடையதாதல் கூறப்பட்டது.

*4.15.*மூவகைச் சீவ வர்க்கம்

விஞ்ஞானர் நால்வரும் மெய்ப்பிரள யாகலத்
தஞ்ஞானர் மூவரும் தாங்கு சகலத்தின்
அஞ்ஞானர் மூவரு மாகும் பதின்மராம்
விஞ்ஞான ராதியர் வேற்றுமை தானே. *#486*

எல்லா உயிர்களும் 'விஞ்ஞானகலர், பிரளயா கலர், சகலர் என்னும் மூவகையுள் அடங்கி நிற்கும். அம்மூவகையினருள் விஞ்ஞானகலர் நான்கு வகையினர்; பிரளயாகலரும், சகலரும் தனித்தனி மும்மூன்று வகையினர்; ஆக அனைவரும் பத்து வகையினராவர்.

விளக்கவுரை

விஞ்ஞானம் - விசேட ஞானம்; மெய்யுணர்வு. 'விஞ்ஞானாகலர்' என்பது 'விஞ்ஞானகலர்' என மருவி வழங்கும். அகலர் - கலை நீங்கினவர் கலை - மாயாகாரியம் என்றல் முக்குண வடிவாகிய பிரகிருதியை.

விஞ்ஞானத்தால் கலை நீங்கியவர் விஞ்ஞானாகலர். விஞ்ஞானமாவது, சிவனால் உணர்த்தப்படும் விசேட ஞானம். இது வருதற்கு ஆணவமலத்தின் சத்தி மெலிதாதல் வேண்டும். அஃது இயல்பாகவே அமையப் பெற்றோர், இயற்கை விஞ்ஞானகலர்; இயற்கையாகவன்றித் தவத்தால் இந்நிலை வாய்க்கப்பெற்றுச் சிவனால் உணர்த்தப்படும் ஞானத்தைப்பெற்றுக் கலை நீங்கினோரும் மேற்கூறியவரோடு ஒப்பர் ஆதலின், அவர் செயற்கை விஞ்ஞானகலராவர்.

பிரளயாகலர் - பிரளயத்தில் (உலகம், யாவும் ஒடுங்கிய காலத்தில்) கலை நீங்கப் பெற்றவர். எனவே, 'இவர் உலகம் ஒடுங்கிய காலத்தில் ஆணவ மலத்தின் சத்தி மெலிவடையப் பெற்றவர்' என்பது விளங்கும். இவர்

இயற்கைப் பிரளயாகலர்; உலக ஒடுக்கத்திற்கு முன் இந்நிலையைப் பெற்றோர் செயற்கைப் பிரளயாகலர்.
சகலர் - பாசப்பற்று நீங்காதவர்; அஃதாவது ஆணவமல சத்தி வலிதாகப் பற்றப்பட்டவர். இவ்வன்மை மென்மைகளை, 'தூலதரம், தூலம், சூக்குமம்' எனப் பகுப்பர். ஆணவமலப் பிணிப்புத் தூல தரமாக (மிகவன்மையாக) உடையவர் சகலர்; தூலமாக (சிறிது வன்மையாக) உடையவர் பிரளயாகலர். சூக்குமமாக (மென்மையாக) உடையவர் விஞ்ஞானகலர். இவருள், 'நால்வர்' மூவர், மூவர்' எனப்பட்டோர் இவர் என்பது வருகின்ற திருமந்திரத்தால் விளங்கும்.
தம் ஞானம் - பசுஞானம். அஞ்ஞானம் - பாசஞானம் ஒரு புடை ஒற்றுமைகொண்டு சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலரது ஞானத்தைப் பாசஞான பசுஞான பதிஞானங்களாக ஓதினார் என்க.
'விஞ்ஞானராதியர் வேற்றுமை' என்றது 'அனைவரது வகையும்' என்றவாறு.
இதனால், 'உயிர்கள் மூவகைப்படும்' என்பதும், 'அவற்றின் உள்திறங்கள் பத்தாம்' என்பதும் கூறப்பட்டன.

விஞ்ஞானர் கேவலத் தாராது விட்டவர்
தஞ்ஞானர் அட்டவித் தேசுரம் சார்ந்துளோர்
எஞ்ஞானர் ஏழ்கோடி மந்திர நாயகர்
மெய்ஞ்ஞானர் ஆணவம் விட்டுநின் றாரே. **#487**

மேற்கூறியோருள் விஞ்ஞானகலர் நால்வராவார், 'ஆணவமலத்தில் அழுந்தாத அவ்வளவில் நிற்போரும், அட்ட வித்தியேசுரபதவி, சத்தகோடி மகாமந்திரங் கட்குத் தலைவராம் பதவி இவற்றைப் பெற்றோரும், ஞானம் முதிரப் பெற்றோரும், அம்முதிர்ச்சியால் ஆணவமலம் பெரிதும் நீங்கப்பெற்ற முத்தரும்' என இவராவர்.

விளக்கவுரை

மூவகை உயிர் வருக்கத்திலுள்ளாரும் 'அபக்குவர், பக்குவர்' என இருதிறத்தினராய் இருப்பர். அபக்குவர், 'சிவனைப் பெறவேண்டும் என்னும் ஆர்வம் இன்றித் தாம் உள்ள உலகத்துப்' போகங்களை நுகர்ந்திருப்போர். பக்குவர், சிவனைப்பெறவேண்டும் என்னும் ஆர்வத்தால் அவனை அடைந்திருப்பவர். ஆர்வம் உளதாய வழி அடைதற்கு இடையீடில்லை. இந்த ஆர்வம் சத்திநிபாதத்தால் உண்டாவதாகும். இவருள், 'கேவலத்து ஆராது விட்டவர்' என்றது அபக்குவரை. கேவலமாவது ஆணவ மலத்தில் மூழ்கி அதுவேயாய்க் கிடத்தல், எனவே, இதுவே, 'விஞ்ஞானகலர்' என்பவரது இயல்பாதல் பெறப்பட்டது. அவர் பக்குவம் எய்தியவழி ஞானத்தைப் பெற்று மூவகை நிலையில் நிற்பர். அஃதாவது, ஆணவ மலம் நீங்கிய தாயினும் அதன்

வாசனை, 'இலயம், போகம், அதிகாரம்' என்னும் மூன்று நிலையினதாய் நீங்காது நிற்கும். இவை ஒன்றின் ஒன்றுமிக்க வன்மையுடையன; அவற்றுள் இலயமல வாசனை உடையவரையே, 'ஆணவம் விட்டு நின்றார்' என்றார். 'விட்டு' என்றதனால் மலம் நீங்கப் பெற்றமையும், 'நின்றார்' என்றதனால், இலய வாசனை யளவாய் நிற்கப்பெற்றமையும் பெறப்பட்டன. இவர் சாந்திய தீத கலையில் சத்தி சிவ தத்துவ புவனங்களில் உள்ள போகங்களை நுகர்ந்திருப்பர். 'அபரமுத்தர்' எனப்படுவார் இவரே என்க. ஆணவம் விட்டபின் இவர்போல நில்லாது, சிவனோடு இரண்டறக் கலந்து சிவனது பேரின்பத்தையே நுகர்ந்திருப்பவர் பரமுத்தராவர். அவரை உயிர் வருக்கத்தினருள் வைத்து எண்ணுதல் கூடாமையின், அவரைக் குறித்திலர்.

இனிப் போகமல வாசனை உடையவரையே 'ஆணவம் விட்டார்' என்னாது 'மெய்ஞ்ஞானர்' என்று மட்டும் குறித்தார். இவர் சாந்தி கலையில் சதாசிவ தத்துவத்தில் உள்ள புவனங்களில் அமைந்த போகங்களை நுகர்ந்திருப்பர். ஆகமங்களைக் கேட்டவராகச் சொல்லப்படும் 'பிரணவர்' முதலிய பதின்மரும் இந் நிலையினராகவே சொல்லப்படுகின்றனர். உயிர் வருக்கத்தினராய்ச் சதாசிவ புவனத்துள் சாலோகம் முதலிய நிலைகளைப் பெற்று நிற்றலின் இவர்கள், 'அணு சதாசிவர்' எனப்படுகின்றனர்.

அட்ட வித்தியேசுரராவார், அனந்தர், 'சூட்சுமர், சிவோத்தமர் ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, சீகண்டர்' சிகண்டி என்போர். இவர்கள் சிவாகமங்களைப் பலர்க்கும் உணர்த்துபவராதலின் 'வித்தியேசுரர்' எனப் பெயர் பெற்றனர்.

சத்த கோடி மகா மந்திரங்கள், 'நம:, ஸ்வாஹா, ஸ்வதா, வஷட், வௌஷட், பட், ஹும் பட்' என்னும் ஏழுமுடிபுகளை உடையன. கோடி - முடிபு. இம் மந்திரங்களைக் கணிப்போருக்கு அவற்றின் பயனைத் தரும் தலைவராய் உள்ளோரே 'மந்திர மகேசுரர்' எனப்படுவர்.

இவ்விருதிறத்தாரும் இப்பதவிகளைப் பெற்றுச் சாந்தி கலையில் ஈசுர தத்துவ புவனங்களில் வாழ்பவராவர். அதனால், இவ்விருவரும் ஒருவகையினரே என்க.

இவருள், அனந்த தேவர் சுத்த வித்தியா தத்துவத்திலும் சென்று அங்குள்ள பிரமனுக்கு வேதத்தையும், சீகண்டவுருத்திரருக்குச் சிவாகமத்தையும் அறிவுறுத்தி அங்குள்ள உருத்திரன், மால், அயன், இந்திரன் முதலியோர் வழியாக வித்தியா கலையுட்பட்ட புவனங் களையும், சீகண்ட உருத்திரர் வாயிலாகப் பிரதிட்டை நிவிர்த்தி கலைகளுட்பட்ட புவனங்களையும் நடத்துவர். இங்ஙனம், விஞ்ஞான கலர் நால்வரது இயல்பு ஒருவாறு கண்டுகொள்க.

எஞ்ஞானர் - எல்லா ஞானமும் உடையோர்; என்றது, 'மந்திரம் கணிப்போர் அனைவரது செயலையும் உணர்வர்' என்றபடி. 'விஞ்ஞானர்' என்றது, 'விஞ்ஞான வகையினராவர்' என்றவாறு. இறுதியில் 'இந்நால்வருமே' என்னும் தொகை எஞ்சி நின்றது. வித்தியேசுரர்களும் மந்திர மகேசுரர்களும் ஒருவகையினரேயாதல் வெளிப்படை.
இதனால், மேல், 'விஞ்ஞானர் நால்வர்' எனப்பட்டார் இவர் என்பது கூறப்பட்டது.

இரண்டா வதில்முத்தி எய்துவர் அத்தனை
இரண்டாவ துள்ளே இருமல பெத்தர்
இரண்டாகு நூற்றெட் டுருத்திரர் என்பர்
முரண்சேர் சகலத்தர் மும்மலத் தாரே. ***#488***

இனிப் பிரளயாகலர் மூவராவார், 'அபக்குவரும், பக்குவரும்' என இருதிறப்படும் நிலையில் பக்குவர், 'சுத்தவித்தையில் நின்று அசுத்த மாயா புவனங்களைக் காவல் செய்பவரும், குண தத்துவத்தில் நின்று பிரகிருதி மாயா புவனங்களைக் காவல் செய்பவரும், எனத் தனித்தனி நூற்றெண்மராம் உருத்திரர்களாவர். எனவே, இவ்விருவரோடு, பெத்தராகிய அபக்குவரும் கூடப் பிரளயாகலர் மூவராகின்றனர். இனிச் சகலராவார் ' ஆணவம், கன்மம், மாயை' என்னும் மும் மலமும் உடையவரே.

விளக்கவுரை

'இரண்டாவதில் முத்தி எய்துவார்' என்றது, 'அடுத்த படைப்பில் முத்தி எய்துபவர்' என்றவாறு. எனவே, இது 'பிரளயாகலர்' என்னும் பொருளதாயிற்று. எய்துவார்' என்றது பெயர். அத்தனை - அத்துணையர், அஃதாவது 'இரண்டாவது' என்பதில் அமைந்த 'இரண்டு' என்னும் துணையினர். 'அத்தனை யராவர் பெத்தரும், உருத்திரரும் என்பர்' என முடிக்க. மீள 'இரண்டாவதுள்ளே' என்றது, பிரளயாகலர் என்னும் வகையுள்' என்றவாறு. 'உருத்திரர்' என்பதன்பின் 'உளர்' என்னும் பயனிலை எஞ்சி நின்றது. முரண் - (ஆணவமலத்தின்) வலிமை. மேல் 'ஆணவம் விட்டு நின்றார்' என்றதனால் 'விஞ்ஞானகலர் ஆணவம் ஒன்றே உடையார்' என்பதும், 'கலை, என்பது மாயையைக் குறிப்பதாகலின், 'அகலராகிய பிரளயாகலர்க்கு அஃது இல்லை' என்பதும் போந்தன. 'பெத்தர்' என்று ஒழியாது, 'இருமல பெத்தர்' என்றது, அவரது இயல்பை விதந்தவாறு. 'நூற்றெட்டு' என்னும் தொகைச் சொல் ஒரு சொல் தன்மைப்பட்டு நிற்க, 'இரண்டாகும்' என்றது, அத்தொகை முழுவதையும் விசேடித்தது. 'சகலராவார் இவர்' என்பதனையும் ஈற்றடியால் ஈண்டே கூறினார்.

இதனால், 'பிரளயாகலர் மூவர் இவர்' என்பது கூறப்பட்டது. பன்மை பற்றி இவரையே எடுத்தோதி, சுத்தவித்தையில் நிற்கும் உருத்திரன், மால், அயன், இந்திரன், சீகண்ட உருத்திரர், நந்தி, கணங்கள் என்பவரையும் உபலக்கணத்தால் தழுவிக்கொள்ள வைத்தார் என்க. 'பிரளயாகலர் மூவரும் தவத்தால் விஞ்ஞான கலரோடொத்து அவரது நிலைகளில் நிற்றல் உண்டு' என்பதுமேலே குறிக்கப்பட்டது.

பெத்தத்த சித்தொடு பேண்முத்தச் சித்தது
ஒத்திட் டிரண்டிடை யூடுற்றார் சித்துமாய்
மத்தத்து மும்மலம் வாட்டுகை மாட்டாதார்
சத்தத் தமிழ்ந்து சகலத்து ளாரே. ***#489***

சகலரும், 'அபக்குவர், பக்குவர்' என இருதிறப் பட்ட நிலையில் பக்குவர், 'சாதகரும், சீவன்முத்தரும்' என இரு வகையினர் ஆவர்.

விளக்கவுரை

எனவே, 'அபக்குபவர்', சாதகர், சீவன் முத்தர்' எனச் சகலரும் மூவராகின்றனர்.

பெத்தத்த சித்து, ஆன்மா. முத்தச் சித்து, சிவம். இவ் விரண்டும் ஒருமைப்பட இரண்டிலும் நிற்பவரே, 'சீவன்முத்தர்' எனப்படுவர். சித்துமாய் (சிவமாயும்) மலமயக்கத்தை முற்றக் கழிக்கமாட்டாமல் அதனைக் கழித்தற்பொருட்டு முயல்பவரே 'சாதகர்' எனப்படுவர். 'சித்தாயும்' என உம்மையை மாற்றியுரைக்க. சத்தம் - உலக ஆரவாரம். ஈற்றடியினால் சகலருள் அபக்குவரது தன்மையை விளக்கினார். எனவே, அந்நிலையை உடையார் அபக்குவர் என்பது போந்தது. ஊடு, எழனுருபு. மத்தம் - மயக்கம். 'சகலத் துளார் ஊடுற்றாரும், மாட்டாரும் ஆவர் என முடிக்க. 'ஆவர்' என்பது சொல்லெச்சம்.

இதனால், 'சகலர் மூவராவர் இவர்' என்பது கூறப்பட்டது. இவருள்ளும் தவத்தால் பிரளயாகலரோடு ஒப்பவும், விஞ்ஞான கலரோடு ஒப்பவும் அவ்வப்புவனங்களிற் செல்வார் உளர் என்பது மேலே குறிக்கப்பட்டது. *[இதன்பின், பதிப்புக்களில் காணப்படும் மந்திரம் இவ்வதிகாரத்தின் இறுதியதாம்.]*

விஞ்ஞானர் ஆணவ கேவல மேவுவோர்
தஞ்ஞானர் மாயையில் தங்கும் இருமலர்
அஞ்ஞானர் அச்சக லத்தர் அகலராம்
விஞ்ஞான ராதிகள் ஒன்பான்வே றுயிர்களே. ***#490***

இயற்கையில் அகலராய் நில்லாது, தவமாகிய செயற்கையால் அகலராய் நிற்பார் ஒன்பது வகைப்படுவர். அவரும், 'விஞ்ஞானகலர், பிரளயாகலர்' என்னும் பெயரைப் பெறுவர். அவ்வொன்பதின்மராவர், விஞ்ஞானகலருள் அபக்குவர் ஒழிந்த நால்வரும், பிரளயாகலருள்

அபக்குவர் ஒழிந்த, 'உருத்திரர், மால், அயன், இந்திரன், பிறகடவுளர்' என்னும் ஐவருமாவர்.

விளக்கவுரை

இங்கு, 'வித்தியேசுரர், மகேசுரர்' இருவரையும் வெறெண்ணியும், உருத்திரராவர் அனைவரையும் ஒன்றாக வைத்து ஏனையோரை உடன்வைத்து எண்ணியும் தொகை கூறினார், 'சகலரும் இவ்வாறெல்லாம் ஆவர்' என்பது உணர்த்துதற்கு.

மூன்றாம் அடிமுதலாகத் தொடங்கி, 'சகலத்தர் அகலராம் ஒன்பானான வேறுயிர்களாவார்' என்று எடுத்துக்கொண்டு, கேவலம் மேவுவோரும், தங்கும் இருமலரும் ஆவர்' என முடிக்க. 'விஞ்ஞானராகிய மேவுவோரும்' எனவும், 'தஞ்ஞானராகிய இருமலரும்' எனவும் இயையும். 'இருமலரும்' என்பதன் பின் 'ஆவர்' என்பது எஞ்சிநின்றது. 'வேறுயிர்கள்' என்றது, 'இயற்கையாலன்றிச் செயற்கையால் உயரும் உயிர்கள்' என்றதாம். சகலரை இவ்வாறு கூறவே, பிரளயாகலரும் விஞ்ஞானகலராதல் சொல்லாமே அமைந்தது.

இதனால், விஞ்ஞானாகலர், பிரளயாகலர்' என்னும் வகையைச் செயற்கையால் பெறுவோரும் உளர்' என்பது கூறப்பட்டது.

'கேவலம்' என்பது, இங்கு 'ஒன்று என்னும் பொருள்பட நின்றது.

இத்திருமந்திரத்தைப் பாடம் பலபட ஒதுவாரும், 'விஞ்ஞானகலர் முதலிய ஒவ்வொரு வகையினருள்ளும் அங்ஙனமே விஞ்ஞானகலர் முதலிய மூவர் உட்பிரிவினராக உளர்' என இயற்கை நிலையினரே வேறோராற்றால் ஒன்பது வகையினராவர் என்பது இதற்குப் பொருளாக உரைப்பாருமாவர். அவ்வுரையால் சிறப்பு ஒன்றும் இல்லாமை அறிக.

வெஞ்ஞான கன்மத்தால் மெய்யகங் கூடியே
தஞ்ஞான கன்மத்தி னால்சுவர் யோனிபுக்
கெஞ்ஞான மெய்தீண்டி யேயிடை யிட்டுப்போய்.
மெய்ஞ்ஞான ராகிச் சிவமேவல் உண்மையே. ***#491***

சகல வருக்கத்தினர் வெவ்விய ஞானமாகிய சீவ போதத்தால் செய்துகொண்ட வினைகளில் சில நல்வினை காரணமாக மக்களுடம்பைப் பெற்றுப் பூலோகத்தில் வாழ்ந்து, அங்கும் அந்தச் சீவபோதத்தால் செய்த கன்மங்களில் சில நல்வினை காரணமாகச் சுவர்க்கலோகத்தில் தேவராய் இன்பந்துய்த்துப் பின் எம் ஞானம் போல்வதாகிய மெய்ஞ்ஞானத்தைத் தலைப்பட்டு, அது முதி ராமையால் இடையீடுபட்டுப் பதமுத்தி அபரமுத்திகளில் நின்று, முடிவில் மெய்ஞ்ஞானம் முதிரப்பெற்றுச் சிவத்தோடு இரண்டறக் கலத்தல் உள்ளதே.

விளக்கவுரை

'அதனால் அவர் பிரளயாகலர் விஞ்ஞானகலராதற்குத் தடையில்லை' என்பது குறிப்பெச்சம். இதனானே, சகல வருக்கத்தினர் மேல் நிலையை எய்துமாறு கூறப்பட்டவாறு அறிக. சகலர்க்குக் கூறிய இம்முறைபற்றி ஏனை இருவகையினர் மேல் நிலை எய்துமாறும் அறியப்படும்.
'கூடி, புக்கு, போய், மேவல்' என்பதற்கு, 'சகலத்தார்' என்னும் எழுவாய், மேலைத் திருமந்திரத்தினின்றும் வந்து இயைந்தது. 'விஞ்ஞான, அஞ்ஞான' என்பன பாடம் அல்ல.
இதனால், ஏதுக் கூறி மேலது வலியுறுத்தப்பட்டது.

ஆணவந் துற்ற அவித்தா நனவற்றோர்
காணிய விந்துவாம் நாத சகலாதி
ஆணவ மாதி யடைந்தோர்க்க வரன்றே
சேணுயர் சத்தி சிவதத்வ மாமே *#492*

ஆணவத்தால் மிகுவிக்கப்பட்ட அறியாமையில் நிகழும் சாக்கிரம் முதலிய அவத்தைகளைக் கடந்தவர்க்கே, நாதம், விந்து முதலிய எல்லாத் தத்துவங்களும் தெளிவாய் விளங்கும். ஏனெனில், ஆணவமும், அதுவழியாகக் கன்ம மாயைகளும் ஆகிய அவற்றுட் கட்டுண்டு நின்றவர் பொருட்டன்றோ அவ் விந்து நாதம் முதலிய தத்துவங்கள் தோன்றுகின்றன!

விளக்கவுரை

துற்ற-செறிவித்த. 'அவித்யா' என்னும் ஆரியச்சொல்; 'அவித்தா' எனத் திரிந்தது. 'நனவு', என்றது உபலக்கணம். அஞ்ஞானத்தில் நிகழும் சாக்கிரம் முதலிய ஐந்தவத்தைகள், கேவல சாக்கிராதியும், சகல சாக்கிராதியுமாம். அவற்றை நீங்கினோர் சுத்த சாக்கிரம் முதலியவற்றை எய்துவர். அவர்கட்கே தத்துவங்கள் பலவும், 'உருவம் தரிசனம், சுத்தி' என்னும் முறையில் படிப்படியாக விளங்கும். அங்ஙனம் விளங்கவே மாயா காரியங்களாகிய அத்தத்துவங்களும், அவற்றைப் பற்றுக்கோடாகக் கொண்டு நிற்கும் கன்மங்களும் நீங்கும். இவற்றின் நீக்கத்திற்கு, மூலமலமாகிய ஆணவம் நீங்கியதே காரணமாகும். அதனால், 'ஆணவம் துற்ற ... ... சகலாதி' என்றார்.
காணிய 'செய்யிய' என்னும் வினையெச்சம். 'காணிய ஆம் விந்து நாத சகலாதி' என மாற்றுக. சகலம் - எல்லாம். 'சகலாதி' என்றதில் ஆதி, தத்துவம். இது தமிழ் வழக்காய்ப் பன்மை குறித்து நின்றது, ஈற்றடியையும் 'சிவதத்துவம் சத்தியாம்' என மாறிக் கூட்டுக. 'தத்வம்', ஆரியமாயே நின்றது. 'நாதம், விந்து முதலிய தத்துவங்களும் அவற்றின் காரியமாகிய தாத்துவிகங்களும் ஆணவமாதி அடைந் தோர் பொருட்டு'

எனவே, ஆணவமாதி உள்ள துணையும் இவை இனிது காட்சிப்படா என்பது விளங்குதலின், ஆணவ முதலிய அகன்றோர்க்கு அவை காட்சிப்படுதல் அருத்தாபத்தியால் பெறப் படும் என்றவாறு. 'அவர் அன்றே' என்பது பாடம் அன்று.
இதனால், 'விஞ்ஞானகலரேயாயினும் மெய்ஞ்ஞானமின்றி வீடு அடையார்' என்பது கூறப்பட்டது.

சிவமாகி ஐவகைத் திண்மலஞ் செற்றோர்
அவமாகாச் சித்தர்முத் தாந்தத்து வாழ்வார்
பவமான தீர்வோர் பசுபாசம் அற்றோர்
நவமான தத்துவம் நாடிக்கண் டோரே. *#493*

ஐவகை மலங்களையும் முற்றக் கெடுத்துச் சிவமானவரே முடிந்த பயனைப் பெற்ற வல்லுநர். அதனால், அவமே பரமுத்தியாகிய சிவசாயுச்சத்தைப் பெற்று என்றும் இன்புறுவர். இனி வியப்பைத் தருவனவாகிய தத்துவங்களின் இயல்பை ஆராய்ச்சியால் உணர்கின்றவர் பாசஞான பசுஞானங்களின் நீங்கினாராயினும், அதன் பின்னர் அவற்றைத் தெளிய உணருங்காலத்தே பதிஞானம் எய்தி வீடுபெறுவர்.

விளக்கவுரை

நாடிக் காணுதலே, 'தத்துவ தரிசனம்' எனப்படும். தெளியக் காணுதலே தத்துவ சுத்தியாம். தத்துவ சுத்தி எய்தினோர் ஆன்மதரிசனமும் சிவரூபமும் உடன் நிகழப்பெற்றுப் பின் சிவதரிசன சிவயோகங்களால் ஆன்மசுத்தி எய்தப் பெறுவராகலின் 'பசுபாசம் அற்றோர்' என்றாற்போல இறந்த காலத்தாற் கூறாது, 'பவமான தீர்வோர்' என எதிர்காலத்தாற்கூறினார். 'பசு பாசம்' என்பன, அந்த அந்த ஞானத்தைக் குறித்த ஆகுபெயர்கள். 'நாடிக்கண்டோர் அற்றோர், தீர்வோர்' எனக் கூட்டுக.
இதனால், 'ஞானம் பெறினும் அது முதிராதவழிப் பரமுத்தி கூடாது' என்பது கூறப்பட்டது. இவ்விரு திருமந்திரங்களும், 'விஞ்ஞானகலராதலே வீடுபேறு போலும்' என மலையாமைப் பொருட்டு அருளிச்செய்யப்பட்டமையின், இவ்வதிகாரத்தவாயின.

<u>4.16.பாத்திரம்</u>

திலமத் தனையே சிவஞானிக் கீந்தால்
பலமுத்தி சித்தி பரபோக முந்தரும்
நிலமத் தனைப்பொன்னை நின்மூடர்க் கீந்தால்
பலமுமற் றேபர போகமுங் குன்றுமே. *#494*

கொடுக்கப்படுவது எள்ளளவு பொன்னேயாயினும் அதனைச்

சிவஞானம் கைவரப்பெற்ற ஒருவர்க்குக் கொடுத்தால், அது தன் பயனாக எண்பெருஞ் சித்திகளையும், பதமுத்தி அபர முத்திகளையும், பரமுத்தியையும் தரும். வேட மாத்திரத்தால் சிவஞானிகள் போல நின்று யாதும் அறியாத முழுமூடர்க்கு நிலமத்தனைப் பொன்னைக் கொடுப்பினும், அது யாதும் பயன் தாராமையேயன்றி, ஞானம் குறைதற்கு ஏதுவாயும் விடும்.

விளக்கவுரை

சிவஞானியர்க்குச் செய்யப்படுவதைச் சிவன் தனக்குச் செய்ததாக ஏற்றுக்கொள்ளுதலால், அது பெரும்பயன் தரவல்ல தாகின்றது. யாதும் அறியாதார்க்கு ஈவது வஞ்சரை வளர்க்கும் செய்கையாய் முடிவதால், அது, கருதிய பயன் தாராமையே யன்றிக் கெடுதற்கும் ஏதுவாம் என்க. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின் துணைத்துணை வேள்விப் பயன். - குறள், *87* எனவும், 'தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால் வான்சிறிதாப் போர்த்து விடும்' -நாலடியார், *38* எனவும் உயர்ந்தோர்க்குக் கொடுத்தலின் சிறப்பு இவ்வாறே யாண்டும் எடுத்தோதப்படுதல் அறிக. ஈண்டுக் கூறுவன தற்போதம் இறவாத நூனெறி பற்றியனவும், 'எவரேனுந் தாமாக இலாடத்திட்ட திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி' *(தி.6 ப.1பா.3)* என்றற்றொடக்கத்தன தற்போதம் இறந்த பத்திநெறி பற்றியனவும் ஆகலான், இவை தம்முள் முரணா என்க. ஈதல், இங்கு, 'கொடுத்தல்' என்னும் பொருளது. அறங்கருதித் தாழ்ந்தோர்க்கு அவர் வந்து இரந்தவழி ஈதல் ஈகையாகும். குறித்ததொரு பயனுக்குத் தடையாய் நிற்கும் தீவினை நீங்குதலும், அதற்கு ஏதுவாய நல்வினை கிடைத்தலும் கருதி உயர்ந்தோரை வருவித்து அவரை வழிபட்டுக்கொடுத்தல் கொடையாகும். இவற்றுள் கொடை செய்யும்வழிக் கொள்பவரையே, 'பாத்திரம்' என்பர். அதனால், இவ்வதிகாரம் கொடை செய்வாரை நோக்கியதன்றி, ஈகை செய்வாரை நோக்கியது ஆகாமை அறிக. இதனானே, இது பயன் கருதிச் செய்யப்படுவதாதலின், பின்னர் *(தி.10, 7*ஆம் தந்திரம்*)* வருகின்ற, பயன்கருதாத 'மாகேசுரபூசையின்' வேறாதல் அறிக. கொடை, 'தானம்' என்றும், ஈகை, 'தருமம்' என்றும் சொல்லப்படும். ஈகை, 'ஐயம்' எனவும்படும். திருவள்ளுவர் கொடையை விருந்தோம்பலில் கூறினார். ஈகையை, ஈகை என்றே வைத்துக் கூறினார். ஔவையாரும், 'ஐயம் இட்டுண்' 'தானமது விரும்பு' *(ஆத்திசூடி)* என்றார். பயன்பெரிதாதலும், பயன் கெடுதலும் இனிது விளங்குதற்பொருட்டு அபாத்திரத்தையும் இங்கு உடன் வைத்துக் காட்டினார். இத்திருமந்திரப் பொருளே பற்றி, சிவஞானச் செயலுடையோர் கையில் தானம் திலமளவே செய்திடினும் நிலம்மலைபோல் திகழ்ந்து பவமாயக் கடலில் அழுந் தாதவகை எடுத்துப்

பரபோகம் துய்ப்பித்துப் பாசத்தை அறுத்துத் தவமாரும் பிறப்பொன்றில்
சாரப் பண்ணிச் சரியைகிரி யாயோகம் தன்னினும்சா ராமே நவமாகும்
தத்துவஞா னத்தை நல்கி நாதனடிக் கமலங்கள் நணுகுவிக்குந் தானே.
எனச் சிவஞானசித்தி *(சூ. 8 - 26)* நூல் கூறுதல் காண்க. *'சித்தி'* என்றதை *'முத்தி'* என்பதற்கு முன்னர்க் கூட்டுக. இதனால், கொடை செய்வோர் சற்பாத்திரத்தால் எய்தும் பயன் கூறப்பட்டது.

கண்டிருந் தார்உயிர் உண்டிடுங் காலனைக்
கொண்டிருந் தார்உயிர் கொள்ளுங் குணத்தனை
நன்றுணர்ந் தார்க்கருள் செய்திடு நாதனைச்
சென்றுணர்ந் தார்சிலர் தேவரு மாமே. ***#495***

உலகத்தில் உணர்வுடையார் சிலரே உயிர்கள் அனைத்தையும் ஒவ்வொரு கால எல்லையில் கூற்றுவன் கொண்டு போதலை மனத்துட் கொண்டார்கள். பின்னும் தன்னை உட்கொண் டவரது உயிரைத் தான் தன்னுட்கொள்ளும் குணம் உடையவனும், நன்னெறியாகிய ஞானநெறியில் சென்றவர்மாட்டு அருள்மீக் கூர்கின்றவனும் ஆகிய சிவபெருமானை அந்நன்னெறியிலே சென்று உணர்ந்தார்கள். அவர் மேன்மக்களாதலன்றியும், *'தேவர்'* எனவும் போற்றப்படுதற்கு உரியராவர்.

விளக்கவுரை

'அதனால், அவரே சற்பாத்திரர்' என்பது குறிப் பெச்சம்.
'உயிர்கொள்ளும் குணத்தான்' என்றதனை, தி.*8* *'உயிருண்ணிப் பத்து'* என்பதனோடு வைத்து நோக்குக. *'ஆம்'* என்பதனை நாயனார் படர்க்கை ஐம்பாற்கும் உரித்தாகவே ஓதுவர். இதனால், சிவஞானிகள் சிலரேயாதல் கூறப்பட்டது.

கைவிட்டி லேன்கரு வாகிய காலத்தும்
மெய்விட்டி லேன்விகிர் தன்னடி தேடுவன்
பொய்விட்டு நானே புரிசடை யானடி
நெய்விட் டிடாத இடிஞ்சிலு மாமே. ***#496***

நான் சிவபெருமானது திருவடியைக் கருவில் இருந்தபொழுதும் மறந்திலேன், பிறந்து வாழ்கின்ற இப்பொழுதும் அதனை மெய்யன்போடே நான் தேடுகின்றேன். அதனால், அத் திருவடி எனக்கு நெய்விட்டு ஏற்றாது இயல்பாகவே ஒளிவிடும் விளக்காகும்.

விளக்கவுரை

'அவ்விளக்கினை அடைந்தோரே சற்பாத்திரர்' என்பது குறிப்பெச்சம்.
மெய் - உடம்பு. *'விட்டிலேன்'* என்றது, அதனொடு கூடி வாழ்தலைக் குறித்தது. இடிஞ்சில் - அகல். அஃது ஆகுபெயராய் விளக்கை

உணர்த்திற்று. 'இடிஞ்சிலும் ஆம்' என்ற உம்மை, 'காணப்படு பொருளும் ஆம்' என ஆக்க உம்மை. 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' *(தி.8 சிவபுராணம், 18)* என அருளிச் செய்தமை காண்க. ஈற்றடியை, 'நெய் விட்டிலாத' என ஓதி, 'ஆமே' என்பதற்கு, 'பயன்தருமோ' என உரைத்து, சிவஞானம் இல்லாதவரால் பயன் இன்றாதலை ஒட்டணி வகையால் பெறுவாரும், 'புரிசடையான் அடியாகிய நெய்' என உருவகமாக்கி அப்பொருள் பெறுவாரும் ஆவர். அவருள் முன்னையோர்க்கு 'அடி' என்பதனை இருகாற் கூறவேண்டாமையும், பின்னை யோர்க்கு இடிஞ்சிலாதற்கு ஏற்புடைய பொருள் கூறப்படாமையும் உணர்க.

ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவின செய்யும் இலங்கிழை யோனே. ***#497***

விளங்குகின்ற மெய்ந்நூலை உணர்ந்தவன், 'ஆகற்பாலன ஆகுமேயன்றி அழியா; அழியற்பாலன அழியுமேயன்றி அழியாதொழியா; நீங்குவன நீங்குமே யன்றி நில்லா; வருவன வருமே யன்றி நீங்கா' என்பதனை உணர்ந்து, ஒன்றையும் தானே காணாது, அவை அனைத்திற்குங் காரணனான சிவன் காட்டியதைக் கண்டு, அவன் அருளாணையால் ஏவிய செயல்களையே செய்திருப்பான்.

விளக்கவுரை

'அவனும் சற்பாத்திரனே' என்பது குறிப்பெச்சம். காவலன் - அரசன்; முதல்வன். 'கண்டு, அவன் ஏவின செய்யும்' என்க. இழை - நூல். 'இலங்குநூல்' *(குறள், 410)* என்றார் திருவள்ளுவரும். 'இளங் கிளையோன்' எனப் பாடம் ஓதி, 'புத்தடியான்' எனப் பொருள் உரைப்பாரும் உளர். சிவன் காட்டிற்றையே கண்டு அவன் ஆணைவ ழியே நிற்றல் புத்தடியாற்குக் கூடாமை அறிக. அன்றியும் இத்திரு மந்திரம் பின்னர் ஓரிடத்தில் உள்ளவாற்றையும் நோக்குக. இதனால், சற்பாத்திரராய சிவஞானியருள் நூனெறியாளரது சிறப்புக் கூறப்பட்டது.

4.17.அபாத்திரம்

கோல வறட்டைக் குனிந்து குளகிட்டுப்
பாலைக் கறந்து பருகுவ தேயொக்கும்
சீலமும் நோன்பும் இலாதவர்க் கீந்தது
காலங் கழிந்த பயிரது ஆகுமே. ***#498***

சிவநெறி ஒழுக்கமும், தவமும் இன்மையால் உயர்வு பெறாத மக்களை வேடமாத்திரத்தால் வழிபட்டுத் தானம் செய்வது, வறட்டுப் பசுவைப் பிறவி மாத்திரத்தால் வணங்கி உணவளித்துப் பாலைக் கறந்து பருக நினைத்தலோடு ஒக்கும். இனித் தானத்தை உயர்ந்தோரை அறிந்து செய்யாமல் எவரிடத்தும் செய்தல், ஒரு பயிரைக் காலம் அறிந்து செய்யாது, எக்காலத்திலும் செய்தலையும் ஒக்கும்.

விளக்கவுரை

பசுவினது வறட்டுத் தன்மையை அறிதலினும், காலத்தை அறிதல் அரிதாதல் பற்றி, உயர்ந்தோரை அறிதலின் அருமையை விளக்கப் பின்னும் அவ்வுவமையைக் கூறினார். இரண்டு உவமைகளானும் 'உயர்ந்தோர் எய்தியவழி இகழ்ந்திராது ஏற்று வழிபட்டுத் தானம் செய்க' என்பதும் பெற்றாம். 'குனிந்து' என்பது பொருளினும் சென்று இயையும். 'ஈந்தது' என்றே போயினா ராயினும், 'ஈந்து பயன்பெற நினைப்பது' என்பது உவமையால் விளங்கும். 'அது பயிரும் ஆகும்' என்க. உம்மை, தொகுத்தல். இதனால், அசற்பாத்திரத்தில் செய்த தானம் பயன்படாமை கூறப்பட்டது.

ஈவது யோக இயம நியமங்கள்
சார்வ தறிந்தன்பு தங்கு மவர்க்கன்றி
ஆவ தறிந்தன்பு தங்கா தவர்களுக்
கீவ பெரும்பிழை யென்றுகொ ளீரே. ***#499***

பொருளைத் தானம் செய்தல், யோக நெறியில் இயம நியமங்களாகச் சொல்லப்படும் தவிர்வன செய்வன அறிந்து அந் நிலைக்கண் உறைத்து நிற்கும் உரனுடையோர்க்கேயாம். அவ் வாறன்றி, அவ்வுரனிலார்க்குச் செய்தல் பெருங்குற்றமாம் என்பதை உணர்மின்கள்.

விளக்கவுரை

'ஈவது' முதலிய நான்கும் தொழிற்பெயர்கள். 'தவிர்வன செய்வன' என்னாது 'யோக இயம நியமங்கள்' என்றார், 'அறநெறியளவில் நில்லாது, கடவுள் நெறியினும் சென்றவராதல் வேண்டும்' என்றற்கு. 'அன்பால் தங்கும்' என உருபு விரிக்க. பின்னர் வந்த, 'அறிந்து' என்னும் எச்சம் 'தங்காதவர்' என்பதன் எதிர் மறையோடு முடிந்தது. இத்தொடர், 'அந்நிலையில் நில்லாதவர்' என்னும் சுட்டளவாய் நின்றது, 'அவர்க்கே'

என்னும் ஏகாரம் தொகுத் தலாயிற்று. 'அன்றி' என்பது முதலியவற்றை வேறு தொடராக்குக. 'தகாதார்க்குக் கொடுக்கப்படும் பொருள் தீய வழியிற் சென்று பலர்க்கும் தீங்கு விளைக்குமாகலின், அக்குற்றம் பொருளை ஈந்தாரையே முன்னர்ச் சாரும்' என்பது கருத்து. அடங்கலர்க் கீந்த தானப் பயத்தினால் அலறு முந்நீர்த் தடங்கடல் நடுவுள் தீவு பலஉள அவற்றுள் தோன்றி உடம்பொடு முகங்கள் ஒவ்வார் ஊழ்கனி மாந்தி வாழ்வார் மடங்கலஞ் சீற்றத் துப்பின் மானவேல் மன்ன ரேறே. - சீவகசிந்தாமணி - முத்தியிலம்பகம் , *27* என்றதும் காண்க. இதனால், அசற்பாத்திரத்தில் இட்ட தானம் பயன்படா தொழிதன் மேலும், துன்பம் பயக்கும் என்பது கூறப்பட்டது.

ஆமா றறியான் அதிபஞ்ச பாதகன்
தோமாறும் ஈசர்க்குந் தூய குரவற்குங்
காமாதி விட்டோர்க்குந் தூடணம் கற்பிப்போன்
போமா நரகில் புகான்போதங் கற்கவே. ***#500***

குற்றம் நீங்குதற்கு நிமித்தனாய சிவபிரானுக்கும், சிவகுரவர்க்கும், சிவயோகியர்க்கும் குற்றம் கற்பித்து இகழ்பவன் பின் விளைவதை அறியான். அவன் பஞ்ச மாபாதகனிலும் பெரும் பாதகன். அதனால், அவன் பின்னர்ப் பெரு நரகில் வீழ்வான். இகழ்ந்து நிற்கும் அவன் பின்னொரு ஞான்று நல்லறிவைப் பெற்று அவர்களைப் புகழ்ந்து வழிபடுவானாயின், முன் செய்த பாதகத்தினின்றும் நீங்கி நரகம் புகாதொழிவான்.

விளக்கவுரை

முதலடியை மூன்றாமடிக்குப் பின்னர் வைத்து 'மா நரகில் போம்' எனவும், 'போதம் கற்கப் புகான்' எனவும் கூட்டி உரைக்க. இதனால், சற்பாத்திரராய் உள்ளாரை அசற்பாத்திரராக இகழ்தலால் வரும் குற்றம் கூறப்பட்டது. இதுவும் தானம் செய்வார்க்கு ஆகாமை பற்றி இவ்வதிகாரத்திற் கூறப்பட்டது.

மண்மலை யத்தனை மாதனம் ஈயினும்
அண்ணல் சிவனென்றே யஞ்சலி யத்தனாய்
எண்ணி இறைஞ்சாதாற் கீந்த இருவரும்
நண்ணுவர் ஏழாம் நரகக் குழியிலே. ***#501***

'தலைவனே, சிவபெருமானே' என்று அவனது நாமத்தைச் சொல்லிக் கைகூப்பி அவனை நினைத்து வணங்கித் தானம் வாங்க அறியாதவர்க்கு, நிலத்தளவும், மலையளவுமான பெரும் பொருளைத் தானமாகக் கொடுத்தாலும் அப்பொருளால் பயன் பெறாது, ஈந்தோனும் ஈயப்பட்டோனும் (ஏற்போனும்) ஆகிய இருவரும் மீளாத நரகக் குழியிலே வீழ்வர்.

விளக்கவுரை

'அத்தனை' என்றதனை, 'மண்' என்றதற்கும் கொள்க. 'இறைஞ்சாதார்க்கு ஈயினும்' என மேலே கூட்டுக. தானம் வாங்கு வோர் அதனைத் தமக்கு உரியதாக நினையாது சிவனுடையதாக நினைந்து, 'சிவனுக்கு ஆகுக' (சிவார்ப்பணமஸ்து) எனக் கூறியே ஏற்றல் வேண்டும். அவ்வாறு ஏலாதார் சிவனது பொருளைக் கவர்ந்த சிவத் துரோகிகளாவர். அதனால், 'அவரும், அவருக்குக் கொடுத் தோரும் நரகுறுவர்' என்றார். தானம் வாங்காது தம் பொருளை நுகர்வோரும் அங்ஙனமே நினைத்தல் வேண்டுமாயினும், அவர், 'அங்ஙனம் நினைக்கும் உயர்ந்தோர்' எனத் தம்மைக் கூறிக் கொள்ளாமையின் அவர்க்கும், அவரொடு பழகுவோர்க்கும் பெருங் குற்றம் இல்லை'. தானம் வாங்குவோர் அத்தன்மையுடைய உயர்ந் தோராகத் தம்மைக் கூறிக்கொண்டு, தானம் செய்வாரை வஞ்சித்தலின் குற்றமுடையராகின்றனர். இதனை உட்கொண்டே திருவள்ளுவரும், நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணார் இல். - குறள் - *276* என்றார். இனிக் கொடுப்பாரும் அவ்வாறே சிவனை நினைந்து, ஏற்போரைச் சிவனாகவும், பொருளைச் சிவனுடையதாகவும் கருதி 'சிவனுக்கு ஆகுக' என்று சொல்லிலே கொடுத்தல் வேண்டுமாதலின் 'இருவரும்' என்றார். 'ஈந்த' என்னும் பெயரெச்சம் வினைமுதற் பொருண்மையும், கோடற் பொருண்மையுமாக இருநிலைமை எய்திநின்றது. இதனால், மேல், 'பெரும்பிழை' எனப்பட்ட, அசற் பாத்திரத்தில் இடும் குற்றத்தால் விளையும் துன்பம் கூறப்பட்டது.

***4.18.*தீர்த்த உண்மை**

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின் றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியி லோரே. ***#502***

உள்ளத்திற்றானே நற்புண்பகளாகிய பல தீர்த்தங்கள் உள்ளன. வினை நீங்குமாறு அவற்றில் மூழ்குதலை மெல்லப் பயிலாத வஞ்ச மனம் உடைய அறிவிலிகள், புறத்தே பல தீர்த்தங்களைத் தேடிப் பள்ளமும், மேடும் கடந்து நடந்து இளைக்கின்றனர்.

விளக்கவுரை

கல்வி, அத்தீர்த்தத்தில் மூழ்கக் கற்றல்.
இதனால், அகத்தூய்மையின்றிப் புறத்தே தீர்த்தத்தில் மூழ்குதலால் பயனில்லை என்பது கூறப்பட்டது.
கங்கை யாடிலென்! காவிரி யாடிலென்!

கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்!
ஓங்கு மாகடல் ஓதநீ ராடிலென்!
எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே. -தி.5 ப.99 பா.2
கோடி தீர்த்தம் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல்
ஓடு நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே.
என அப்பரும் அருளிச்செய்தல் காண்க. -தி.5 ப.99 பா.9

தளியறி வாளர்க்குத் தண்ணிதாய்த் தோன்றும்
குளியறி வாளர்க்குக் கூடவும் ஒண்ணான்
வளியறி வாளர்க்கு வாய்க்கினும் வாய்க்கும்
தெளியறி வாளர்தஞ் சிந்தையு ளானே. **#503**

தெளிந்த ஞானிகளது உள்ளத்தில் வீற்றிருப் பவனாகிய சிவபெருமான், அன்பினால் கண்ணீர் துளிக்கத் தெரிந் தவர்க்குக் குளிர்ச்சி உடையனாய் விளங்குவான். யோக நெறியில் மூச்சை அடக்க அறிந்தவர்க்கும் அவன் ஒருகால் விளங்குதல் கூடும். ஆயினும், ஞானம், அன்பு, யோகம் என்ற இவற்றுள் ஒன்றும் இன்றித் தீர்த்தத்திலே மட்டும் சென்று முழுகத் தெரிந்தவர்க்கு அவன் அடைதற்கு அரியன்.

விளக்கவுரை

நான்கு, இரண்டாம் அடிகளை ஒன்று நான்காம் அடிகளாக வைத்து உரைக்க. தளி - நீர்த்துளி. 'தண்ணிது' என்பது பண்புப்பெயராய் நின்றது. குளி - குளித்தல், முதனிலைத் தொழிற் பெயர். 'கூடவும்' என்ற உம்மை, சிறப்பு. தியான சமாதிகளிற் செல்லாது இயம நியம பிராணாயாமங்களில் நிற்பவர்க்கு எளிதன்மை கூறுவார், 'வளியறி வாளர்க்கு வாய்க்கினும் வாய்க்கும்' என்றார்.
இதனால், ஞானமாகிய அன்பும் இல்லாதவர் தீர்த்ததில் சென்று முழுகின் பயன் இல்லை என்பது கூறப்பட்டது.

உள்ளத்தின் உள்ளே உணரும் ஒருவனை
கள்ளத்தின் ஆருங் கலந்தறி வாரில்லை
வெள்ளத்தை நாடி விடும்அவர் தீவினைப்
பள்ளத்தில் இட்டதோர் பத்தல்;உள் ளானே. **#504**

அகத்தே உயிர்க்குயிராக உணரப்படும் ஒருவ னாகிய சிவபெருமானை அவ்வுள்ளத்துள் அன்பில்லாது ஆரவார மாத்திரையாகச் செய்யும் செயல்களால் ஒருவரும் அடைதல் இயலாது. ஆகவே, அன்புமிகும் வழியை நாடாமலே புறத்தில் தீர்த்தங்கள் பலவற்றை நாடிச்செல்பவர், தீவினையாகிய கிணற்றில் போகடப்பட்ட பத்தலேயாவர். அதனால், அவருள்ளத்தில் அவன் விளங்குவனோ!

விளக்கவுரை

'நாடிவிடும்' என்பது ஒருசொல். 'பத்தலாவர்' எனவும், 'அவருள் உள்ளானே' எனவும் இருதொடராகக் கொள்க. பத்தல் - நீர்முகக்கும் கருவி. 'அன்பின்றித் தீர்த்தத்தில் முழுகுதலாலே சிவனைப் பெறுதல் கூடுமாயின், நீர்ப்பத்தலும் சிவனை அடையும்' என நகையுண்டாகக் கூறியவாறு.

இதனால், தீர்த்தங்களில் மூழ்குவார் மேற்கூறியவாறு தளியறிவினராதல் வேண்டும் என்பது கூறப்பட்டது.

அறிவார் அமரர்கள் ஆதிப் பிரானைச்
செறிவான் உறைபதஞ் சென்று வலங்கொள்
மறியார் வளைக்க வருபுனற் கங்கைப்
பொறியார் புனல் மூழ்கப் புண்ணியராமே. ***#505***

சிவபெருமானை அறிவால் அறிகின்றவரே அமரர் (இறப்பும், பிறப்பும் இல்லாதவர்) ஆவர். அவரே சிவலோகத்தில் சென்று வீறு பெற்று வாழ்ந்து, பின் மீளாநிலையைப் பெறுவர். ஆகவே, சிலர் அவனை அங்ஙனம் அறிவால் அறிதலைச் செய்யாமலே, தன்னிடத்து மூழ்குவாரை ஈர்த்துச் செல்ல வருகின்ற கங்கையாற்றில் மரக்கலம் செல்லத்தக்கவாறு ஆழ்ந்தும் அகன்றும் ஓடும் நீரில் முழுகிய துணையானே அறிவராய் விடுவரோ!

விளக்கவுரை

'ஆதிப்பிரானை அறிவார்' என முன்னே கூட்டுக. செறிவான் - எங்கும் செறிந்தான்; (தி.8 திருவம்மானை, 13) சிவன். அவன் உறைபதம், சிவலோகம். 'திருக்கோயில்கள்' என்பாரும் உளர். அவற்றிற்கு இங்கு இயைபின்மை அறிக. வலம் - வெற்றி; வீறு. 'கொள்' என்னும் முதனிலை, 'கொண்டு' என எச்சப்பொருள் தந்தது. 'மறியார்' என்பதைப் பெயராக்கி, 'வலங்கொள் மறியார்' என வினைத்தொகை யாக்கலுமாம். வளைத்தல் - ஈர்த்து ஆழ்த்தல். 'வளைக்கைக் கங்கை' எனப்பாடம் ஓதி, உமையம்மையது கைவிரல்களினின்றும் கங்கை தோன்றிய புராண வரலாற்றை அதற்குப் பொருளாக உரைப்பாரும், பிற கூறுவாருமாவார். பொறி - எந்திரம். காற்றால் இயங்குதலின், பாய்மரக் கப்பலையே அக்காலத்தார் எந்திரமாகக் கருதினர். 'புண்ணியர்' என்றது, 'ஞானியர்' என்னும் பொருளது.

இதனால், தீர்த்தங்களில் மூழ்குவார் மேற்கூறியவாறு தெளியறிவினராதல் வேண்டும் என்பது கூறப்பட்டது. சரியை முதலியன இறைவனை அறிவால் அறியும் முறையேயாதல் அறிக.

கடலிற் கெடுத்துக் குளத்தினிற் காண்டல்

உடலுற்றுத் தேடுவார் தம்மையொப் பாரிலர்
திடமுற்ற நந்தி திருவரு ளாற்சென்
றுடலிற் புகுந்தமை ஒன்றறி யாரே. ***#506***

சிவபெருமானை, 'எங்குளன்' என்று தீர்த்தங்களில் வருந்தி முழுகிக் காணச் செல்பவரது செயல், கடலில் போகடப்பட்ட பொருளைக் குளத்தில் எடுக்கச் செல்பவரது செயல்போல்வதாம். அவரை ஒத்த அறிவிலிகள் பிறர் இலர். ஏனெனின், என்றும் ஒருபெற்றியனாகிய சிவபெருமான், தனது திருவருள் காரணமாக யாவர் உடலிலும் புகுந்து நிற்றலைச் சிறிதும் உணராமையால்.

விளக்கவுரை

'தேடுவார்' என்றது ஆகு பெயர். 'உடலிலே நிற்பவனை அவ்வுடலைப் பெற்றிருந்தும் பிறவிடத்துக் காண முயன்று வருந்துதல் அறியாமைப்பாலது' என்பதாம். உயிருள் நிற்பவனை உடலில் நிற்பவனாக ஓதியது, அவனை அதனுள் நிற்பவனாக நினைத்து யோகநெறியில் முயல்வார்க்கு அவன் அங்கு வெளிப்படுதல் பற்றி. இதனால், 'தீர்த்தங்களில் முழுகுவார் மேற்கூறியவாறு தளியறிவினராதல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

கலந்தது நீர துடம்பிற் கறுக்கும்
கலந்தது நீர துடம்பிற் சிவக்கும்
கலந்தது நீர துடம்பில் வெளுக்கும்
கலந்தது நீர்நிலங் காற்றது வாமே. ***#507***

நீர்தான், 'நிலம், காற்று' என்பவற்றில் கலப்பினும் அது அதுவாம் இயல்புடையது. ஆதலின், அஃது எவ்வுடம்பிற் கலந்ததாயினும் அவ்வுடம்பின் தன்மைக்கு ஏற்பக் கறுத்தும், சிவத்தும், வெளுத்தும் நிற்பதாம்.

விளக்கவுரை

'அதனால், சிவஞானமின்றி வாளா தீர்த்தத்தில் மூழ்கு வோர்க்கு அவரவர்க்கு உள்ள குணமே பின்னும் மிகுந்து நிற்கும்' என்றவாறு. நான்கிடத்தும், 'கலந்தது' என்றதன்பின், 'ஆயின்' என்பன சொல்லெச்சமாய் நின்றன. 'கலந்ததேல்' என்றே பாடம் ஓதுதலும் ஆம். ஈற்றடி நீரின் தன்மையைக் கூறிற்று; நீர் காற்றாதல் ஆவியாய்க் கலந்தபொழுதாம். ஈற்றடியை முதலில் வைத்து, 'நிலம், காற்று' என்றவற்றிலும் 'உடம்பில்' என்பனபோல இல்லுருபு விரிக்க. 'நீரது' நான்கிலும் அது, பகுதிப்பொருள் விகுதிகள். கறுத்தல் முதலிய மூன்றும் தாமத இராசத சாத்துவிக குணங்களை மிகுவித்தலைக் குறித்த குறிப்பு மொழிகள். 'கலந்ததன் இயல்பாகும்' என்றதனால், 'உடம்பு' என வாளா

கூறினாரேனும், கறுத்தல் முதலிய மூன்றிலும், 'அவ்வக் குணமுடைய உடம்பு' என்பது கொள்ளப்படும்.
இதனால், 'தீர்த்தம் தெய்வ நீராதல், உள்ளத்துணர்வாலன்றி இல்லை' என்பது கூறப்பட்டது. அப்பரும், நீராண்ட புரோதாயம் ஆடுங்காலத்து, 'மாதேவா மாதேவா என்று வாழ்த்தி ஆடப் பெற்றோம்' *(தி.6 ப.93 பா.3)* என்று அருளிச்செய்தமை அறியற்பாற்று.

4.19.திருக்கோயிற் குற்றம்

தாவர லிங்கம் பறித்தொன்றில் தாபித்தால்
ஆவதன் முன்னே அரசு நிலைகெடும்
சாவதன் முன்னே பெருநோய் அடுத்திடும்
காவலன் பேர்நந்தி கட்டுரைத் தானே. ***#508***

ஒரு திருக்கோயிலில் உள்ள அசையாத சிவக் குறியைப் பெயர்த்தெடுத்துக் கொண்டுபோய் வேறொரு திருக்கோயிலில் நிறுவினால், அச்செயல் முற்றுப்பெறுவதற்கு முன்பே அரசனது ஆட்சி நிலைகுலையும்; அச்செயலுக்கு உரியவன், தான் இறப்பதற்கு முன்பு தொழுநோய் கொண்டு துன்புற்று இறப்பான். இவ்வாறு எங்கள் தலைவராகிய நந்திபெருமான் எங்கட்கு உறுதிப்பட உரைத்தார்.

விளக்கவுரை

எனவே, 'அரசன் தனது நாட்டில் இச்செயல் எங்கும் நிகழாதவாறு காத்தல் வேண்டும்' எனவும், 'அரசன் அறியாதவாறு இச்செயலை முடித்துவிட ஒருவரும் எண்ணலாகாது' எனவும் கூறியவாறாம்.
'இலிங்கம் இல்லாத கோயிலின் நலம் கருதி இலிங்கம் உள்ள கோயிலைப் பாழாக்கிவிடுதல் கூடாது' என்பதும், ஒரு கோயிலில் உள்ள இலிங்கம் எப்பொழுது யாரால் நிறுவப்பெற்றதோ அதனை அவர்களது கருத்திற்கு மாறாகப் பெயர்த்துக்கொண்டுபோய் வேறிடத்தில் வைத்தல் கூடாது என்பதும் கருத்து. 'சிறந்து விளங்கும் கோயிலில் உள்ள இலிங்கத்தைக் கொண்டுபோய்ப் புதிய கோயிலில் நிறுவினால் அக்கோயிலுக்குச் சிறப்பு உண்டாகும்; இதனால் குற்றமில்லை' என்று எண்ணும் சிலரது அறியாமையைப் போக்குதற் பொருட்டு இத்திருமந்திரத்தை அருளிச்செய்தார். இதனானே, ஒரு கோயிலில் முன்பு உள்ள மூர்த்தியைத் தக்க காரணம் இல்லாமல் நீக்கி வேறொரு மூர்த்தியை நிறுவுதலும் குற்றம் என்பது பெறப்பட்டது.
இதனால், திருக்கோயிலில் உள்ள மூர்த்திக்குச் செய்யும் குற்றம் விலக்கப்பட்டது.

கட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கிடில்
வெட்டுவிக் கும்அபி டேகத் தரசரை

முட்டுவிக் கும்முனி வேதிய ராயினும்
வெட்டுவித் தேவிடும் விண்ணவன் ஆணையே. **#509**

திருக்கோயிலில் மதிலைக்கட்டுவித்தவரே பின்பு பொருளாசை முதலிய காரணங்களால் அதினின்றும் ஒரு கல்லை எடுப்பினும், சாதாக்கிய தத்துவத்தில் இருந்துகொண்டு ஆகமங்களை அருளிச்செய்த சதாசிவ மூர்த்தியின் ஆணை அவரை அழிக்கும். அக் குற்றம் நிகழாவாறு காவாமைபற்றி, அப்பொழுது முடிசூடி ஆள்கின்ற அந்நாட்டு அரசரையும் அவ்வாணை இடருறச் செய்யும். அக் குற்றத்தைச் செய்தவர், 'முனிவர்' என்று உயர்த்துச் சொல்லப்படுகின்ற அந்தணராயினும், அவ்வாணை அவரைக் கொலையுண்டு மடியவே செய்யும்.

விளக்கவுரை

'கட்டுவித்தவர்க்கே இவ்வாறாம் எனின், பிறர் அது செய்யக் கருதுவராயின் என்னாவார்' என்பது சொல்ல வேண்டா வாயிற்று. இதனானே, கோயில் மதில் முதலியவற்றிற்கே யன்றி அதன் உள்ளிடம், திருக்குளம், நந்தவனம் முதலியவற்றிற்கும் பழுதுண்டாக்க லாகாமை அறிந்துகொள்க. 'வாங்கிய' என்பதன்பின், 'அவரை' என்பது வருவிக்க. இதனால், திருக்கோயில் முதலிய இறைவன் இடத்திற்குச் செய்யும் குற்றம் விலக்கப்பட்டது.

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே. **#510**

சிவபெருமானது திருக்கோயில்களில் அன்றாட வழிபாடு, சிறப்புநாள் விழாக்கள் முதலியவை இல்லாதொழியினும், ஆகமங்களில் சொல்லப்பட்ட முறை தவறி நடப்பினும், நாட்டில் தீர்க்கலாகாத நோய்கள் பரவி, மழையும் பொய்த்துப்போக, சிற்றரசரால் வணங்கப்படுகின்ற பேரரசர்களும் பகைவரை வெல்லும் வலியிலராய்த் தம் நாட்டை இழப்பர்.

விளக்கவுரை

ஆதலால், அரசர் தம் நாட்டில் திருக்கோயில்களில் நித்திய நைமித்திகங்கள் செவ்வனே நடைபெறச் செய்தலைத் தம் தலையாய கடமையாகக் கொள்ளல் வேண்டும் என்பதாயிற்று. 'அவனி' என்றது, அக்கோயிலில் உள்ள நாட்டைக் குறித்தது. 'பூசை' என்றது நைமித்திகத்தையும் அடக்கியேயாம். \"மழை குன்றும்\" என்பதும் பாடம்.

முன்னவ னார்கோயில் பூசைகள் முட்டிடின்

மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே. *#511*

சிவபெருமானது திருக்கோயில்களில் மேற்கூறிய குறைகள் உளவாகுமாயின், அரசர்கள் வலிமை யிழத்தலேயன்றிப் பிற தீமைகளையும் அடைவர். நாட்டில் விளைவும், பிற வருவாய்களும் குறையும். மாளிகைகளில் கன்னம் இட்டுக் களவாடுதல், கொள்ளை முதலிய பிற களவுகள் மிகுதியாகும். எங்கள் அருளாசிரியராகிய நந்திபெருமான் எங்கட்கு இவ்வாறு எடுத்து அருளிச்செய்தார்.

விளக்கவுரை

முதலடி அனுவாதம். கன்னம் இடுதலை முன்னர்ப் பிரித்தமையின், *'களவு'* என்றது பிறவற்றையாயிற்று. *'காசினிக்கு'* என்பதும் பாடம். இவ் இரண்டு திருமந்திரங்களாலும் திருக்கோயில்களில் நித்திய நைமித்திகங்கட்குக் குறையுண்டாகச் செய்தல் விலக்கப் பட்டது.

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை
அர்ச்சித்தாற் போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாம்என்றே சீர்கொண்ட நந்தி
தெரிந்துரைத் தானே. *#512*

பிறப்புப் பற்றிப் பலராலும் சொல்லப்படுகின்ற *'பார்ப்பான்'* என்னும் பெயரைமட்டும் பெற்றுச் சிவபிரானிடத்து அன்பும், சிவாகம அறிவும், ஒழுக்கமும் இல்லாத அந்தணன் திருக் கோயிலில் சிவபெருமானைப் பிறர் பொருட்டு வழிபடுவானாயின், அக்கோயிலை உடைய நாட்டில் உள்நாட்டுக் கலகங்களும், வெளி நாட்டுப் போர்களும் விளைதலோடு, அந்நாட்டில் கொடிய நோய் களும், வயல்கள் வன்னிலங்களாய் விளைவில்லாது பஞ்சமும் உள வாகும் என்று எங்கள் திருமரபின் முதல்வராம் சிறப்புப் பொருந்திய நந்திபெருமான் எங்கட்கு ஆகமங்களை ஆய்ந்துரைத் தருளினார்.

விளக்கவுரை

'மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்'(குறள், 134) எனவும், *'அந்தணர் நூல்' (குறள், 543)* எனவும் கூறியவாற்றால், வேதம், *'அரசரும், வணிகரும்'* என்னும் ஏனையிருவர்க்கும் பொதுமையின் உரியதாயினும், அந்தணர்க்கே சிறந்ததாதல் அறியப்படும். படவே, *'வேதம் ஓதுதலைத் தொழிலாக உடையோரே அந்தணர்'* என்பதும் போதரும்.
திருவள்ளுவர், *'பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்' (குறள், 134)* என்று ஓதுதலானும், பிறப்புப் பற்றிவரும் பெயரைப் பெறாமல், வேதாகமங்களை ஓதும் தொழிலாகிய சிறப்பை மட்டும் பெற்ற

அந்தணன் சிவபிரானைப் பிறர் பொருட்டு அர்ச்சித்தலை இங்கு நாயனார் விலக்காமையானும் பிறப்பைவிடச் சிறப்பே அர்ச்சனைக்கு யாண்டும் வேண்டப்படுதல் விளங்கும்.
பிறப்பாவது சில பல தலைமுறைகளில் உள்ளார், ஒழியாது ஒரு தொழிலே கடைப்பிடித்தமை பற்றி அவர் அந்தணர் முதலிய பெயரைப் பெற்று நிற்க, அவர்தம் வழித் தோன்றலாய்ப் பிறந்தோரும் அப்பிறப்புப் பற்றி அப்பெயரை உடையராதல். சிறப்பாவது அவரவர் அவ்வப்பொழுது தத்தமக்குரியதாகக் கொண்ட தொழில்.
சிறப்பு நிலையில் சிவபெருமானையே முதற் கடவுளாகக் கொண்டு திருநீறும் உருத்திராக்கமும் ஆகிய சிவசின்னங்களை அணிந்து அப்பெருமானை வழிபடுவோர் யாவரும் 'சைவர்' எனப் படுவர். அவருள் சிவாகமத்தின்வழித் தீக்கை பெற்றோர் 'சிறப்புச் சைவர்' எனவும், அவ்வாறு தீக்கை பெறாதோர், 'பொதுச் சைவர்' எனவும் பெயர் பெறுவர். சிறப்புச் சைவருள் உபநயனமும் பெற்றுச் சிவாகமத்தைப் பொதுவாகவும், வேதத்தைச் சிறப்பாகவும் ஓது தலையே தொழிலாகக் கொண்டு சிவபெருமானை வேத மந்திரங் களால் வேத விதிப்படி வழிபடுவோர் 'மகா சைவர்' என்றும், வேதத்தைப் பொதுவாகவும், சிவாகமத்தைச் சிறப்பாகவும் ஓது தலையே தொழிலாகக் கொண்டு, சிவபெருமானைச் சிவாகம மந்திரங் களால், சிவாகம விதிப்படி வழிபடுவோர் 'ஆதி சைவர்' எனவும் பெயர்பெறுவர். மகாசைவரும், ஆதிசைவரும் உபநயனமும் பெற்று வேதாகமங்களை ஓதுதலையே தொழிலாக உடைமையால், 'அந்தணர்' எனவும் படுவர். ஆகவே, மகா சைவர் 'மகாசைவ அந்தணர்' என்றும், ஆதி சைவர் 'ஆதிசைவ அந்தணர்' என்றும் சொல் லப்படுவர். இவருள் மகாசைவ அந்தணர் சிவாகமவழி நில்லா மையால், அவருக்கு ஆசாரியாபிடேகமும், அதன்வழி வரும் ஆசிரியத் தன்மையும் இல்லை. அதனால், அவர் சைவரல்லாத பிறர்க்கே ஆசிரியராதற்கு உரியர். ஆதி சைவ அந்தணர் சிவா கமத்தையே சிறப்பாக ஓதி அவற்றின்வழி நிற்றலால், அவருக்கே அபி டேகமும், அதன்வழி ஆசிரியத் தன்மையும் பெறும் உரிமை உண்டு.
உபநயனம் இன்றி வேதத்தில் உரிமை கிட்டாததுபோலச் சிவ தீக்கையின்றிச் சிவாகமத்தில் உரிமை கிட்டாது. அதனால்; சிவ தீக்கையின்றி உபநயனம் மட்டுமே பெற்று வேதத்தை ஓதுதல், ஓதுவித்தல், வேதத்தின்வழி வேட்டல், வேட்பித்தல்களைச் செய்து, சிவபெருமானையே முதற்கடவுளாகக் கொள்ளுதலில் வழுவாது நிற்போர், 'வைதிக சைவர்' எனப் பெயர்பெறுவர். அதனால், இவர் 'வைதிக சைவ அந்தணர்' எனப்படுவர். இவர் பொதுச் சைவரே. இவர் சிவாகமங்களை இகழார்.

வேதத்தை ஓதுதல், ஓதுவித்தல், அவற்றின்வழி வேட்டல், வேட்பித்தல்களைச் செய்யினும், சிவபெருமானை முதல்வனாகக் கொள்ளாமல் பிறவாறு கொள்வோருள் சிவாகமங்களையும், அவற்றின் வழி நிகழும் தீக்கை முதலியவற்றையும் இகழ்வோர் ஒருவாற்றானும் 'சைவர்' எனப்படாமையேயன்றி, அவர் அந்தணராதலும் இல்லை என்னும் கருத்தால், 'துர்ப்பிராமணர்' எனச் சைவர்களாலும், சைவ நூல்களாலும் இகழப்படுவர். செந்நெறியில் நில்லாது கொடுநெறியில் செல்லுதலால் இவரை, 'கொடுநெறி அந்தணர்' எனலாம்.
பிறப்பு மாத்திரத்தால் ஆதி சைவ அந்தணரும், மகாசைவ அந்தணருமாய்ப் பிறந்து, அவற்றிற்குரிய நெறியில் நில்லாதோர் 'அப்பிராமணர்' எனப்படுவர். இவரை 'ஒழுக்கமில் அந்தணர்' எனலாம். இன்னும் புறத்தே சிவவேடம் புனையினும், அகத்தே சிவபிரானை முதற் கடவுளாகக் கொண்டு சிறப்பு வகையில் அன்பு செய்யாத அந்தணரும் அப்பிராமணரேயாவர். இவர் யாவரும் 'பார்ப்பார்' எனவே படுகின்றனர். அதனால், ஆதிசைவப் பார்ப்பார், மகாசைவப் பார்ப்பார், வைதிகசைவப் பார்ப்பார், கொடுநெறிப் பார்ப்பார், ஒழுக்கமில் பார்ப்பார் எனப் பெயரால், பார்ப்பார் ஐவகையராகின்றனர். 'இவருள், ஆதிசைவப் பார்ப்பாரே தலை யாயவர்' என்பது மேற்கூறியவாற்றானே இனிது விளங்கிக் கிடத்தலால், அவரையே, 'உண்மைப் பார்ப்பார்' என வைத்து, ஏனை நால்வரையும் நாயனார் பேர்கொண்ட பார்ப்பாராக ஓதினார் என்பது நன்கு பெறப்பட்டது.
'அர்ச்சிக்கில்' என்பதில் அர்ச்சித்தல், 'பிறர்பொருட்டு' என்பது, பின்னர்க் கூறிய தீய விளைவுகளை நாட்டிற்கு ஓதிய குறிப் பால் நன்கறியப்படும். பிறர்பொருட்டு வழிபடுதல், 'பரார்த்த சை' எனப்படும். ஆன்மார்த்த பூசையை அவரவரும் தமக்கென எழுந் தருளுவித்துக்கொள்ளும் விருப்பக் குறி (இட்டலிங்கம்) ஆகிய பெயர் வுடைக் குறியில் (சல லிங்கத்தில்) செய்தல், எளிதின் இயல வேண்டிய தேயன்றித் திருக்கோயிலில் உள்ள பெயராக் குறியில் (அசல லிங்கத்தில்) செய்தல் விலக்கப்பட்டதன்று. திருக்கோயிலில் சென்று ஆன்மார்த்த பூசையைச் செய்தல் அரிதாதலின், அது பண்டே அருகி விட்டது. ஆன்மார்த்த பூசையைச் சைவர்கள் திருக்கோயிலில் சென்று செய்து வந்தமைக்குத் தி.12 திருத்தொண்டர் புராணத்தில் உள்ள திரு நீலநக்க நாயனார், அரிவாட்ட நாயனார் இவர்களது வரலாறுகளே போதிய சான்றாகும். இவ்விருவரும் செய்த பூசை ஆன்மார்த்த பூசையே என்பது அவ்வரலாறுகளிலேயே தெற்றென விளங்கிக் கிடப்பது. திருக் கோயில்களில் மூல இலிங்கமேயன்றி, அதனைச் சூழ வேறும் சில இலிங்கங்கள் காணப்படுதல், அங்குச் சென்று ஆன்மார்த்த பூசை

செய்வோர் அவைகளையே மூல இலிங்கமாகக் கருதிக் கொண்டு அவற்றில் அவ் வழிபாட்டினைச் செய்தற்பொருட்டேயாம். இனி, மூல இலிங்கங்கள்தாமும் ஓரொரு காலத்தில் ஓரோவொருவர் ஓரோஒரு பயன்கருதி நிறுவித் தம் பொருட்டாக வழிபட்டு அப்பயன்களைப் பெற்றுப் பின் நிலையாக வைத்துச் சென்றனவே எனத் தல புராணங்கள் பலவும் இனிதெடுத்து விளம்புதலும் கருதத்தக்கது.

'ஆன்மார்த்தம், பரார்த்தம்' என்னும் பகுப்புப் பூசையின் பயனைப் பெறுவாரை நோக்கியதன்றிப் பூசிக்கப்படும் மூர்த்தியை நோக்கியதன்றாதல் வெளிப்படை. அஃதாவது, பூசை செய்பவர், 'அப் பூசையின் பயன் தமக்கு ஆகுக' என நினைத்துச் செய்தல் ஆன்மார்த்த பூசையும், 'பிறர்க்கு ஆகுக' என நினைத்துச் செய்தல் பரார்த்த பூசையும் ஆகும். அதனால், திருக்கோயிலில் உள்ள மூர்த்தியையே தம் பொருட்டாகப் பூசிக்கின் அஃது ஆன்மார்த்த பூசையாதலும், தாம் எழுந்தருளுவித்துக் கொண்ட மூர்த்தியையை பிறர் பொருட்டாகப் பூசிக்கின் பரார்த்த பூசையாதலும் தாமே விளங்கும். எனினும், பெரும்பான்மை பற்றித் திருக்கோயிற் பூசை பாரார்த்தமாகவும், தம் பொருட்டாய மூர்த்தி பூசை ஆன்மார்த் தமாகவும் சொல்லப் படுகின்றன. 'இவற்றுள் திருக்கோயிலில் உள்ள மூர்த்தியைப் பிறர் பொருட்டாகப் பூசிக்கும் உரிமை சிறப்புச் சைவ அந்தணருக்கே சிறப் பாக உரியது' எனவும், 'அவருள்ளும் ஆதிசைவ அந்தணர்க்கே சிறப் பாக உரியது' எனவும் வைத்து, ஏனைய அந் தணர்க்கு அஃது இல்லை என்பதையே நாயனார் இத்திரு மந்திரத்தால் அருளிச் செய்தமை அறிக. 'மக்களுட் சிறந்தார் அந்தணர்' என்பதே பற்றி, சிறப்புச் சைவ ரல்லாத ஏனை அந்தணரையும் திருக் கோயிலிற் பரார்த்த பூசைக்கு உரியராக்குதலையே நாயனார் இத்திரு மந்திரத்தால் விலக்கினாரன்றிச் சிறப்புச் சைவருள் ஒருவரையும் விலக்கினாரல்லர் என்பது நுண்ணுணர்வான் நோக்கி உணர்ந்து கொள்க.

மேற்கூறிய ஆதிசைவர், மகாசைவரேயன்றிப் பிற சைவரும் உளர். அவர் 'அனு சைவர், அவாந்தர சைவர், பிரவர சைவர், அந்திய சைவர்' என இவர். சிவபெருமானைப் பொதுநீக்கி வழிபடுவாருள் நாடாளும் தொழில் உடையவரும், வாணிகத் தொழில் உடையவரும் அனு சைவர். உழவுத் தொழில் செய்வோர் அவாந்தர சைவர். பிறதொழில் செய்வோர் பிரவர சைவர். இவரெல்லாரும் சுதந்திரர். யாதொரு தொழிலாயினும் அதனைப் பிறருக்கு அடியவராய் இருந்து செய்பவர் அந்திய சைவர். எனினும், அமைச்சர், படைத்தலைவர் போன்றோர் அரசரோடொப்ப மதிக்கப்படுதலால் அனுசைவரே யாவர். இங்குக் காட்டிய அறுவகைச் சைவரொடு சதாசிவக் கடவுளையும், 'அனாதி சைவர்' என வைத்துச்

சைவர் எழுவராகச் சொல்லப்படுதலை, 'சைவ சமயநெறி, சிவதருமோத்தரம்' முதலிய நூல்களிற் கண்டுகொள்க.
ஆதிசைவரும், மகாசைவரும் சிறப்புச் சைவரேயன்றி, அவருள் பொதுச் சைவர் இல்லை. ஏனைய அனுசைவர் முதலிய நால்வரும் தீக்கை பெறாது இருப்பின் பொதுச் சைவரும், தீக்கை பெற்று இருப்பின் சிறப்புச் சைவரும் ஆவர். எவ்வாற்றானும் சிவனை வழிபடாதவரும், வழிபடினும் பொது நீக்கிச் சிறப்பாக வழிபடாதவரும் 'சைவர்' எனப்படார்.
ஊன் உணவும், கட்குடியும் இல்லாதவரே சிவதீக்கை பெறுதற்கு உரியர். அவற்றை உடையோர் சிவதீக்கையைப் பெறின் அவரும், அவருக்கு அதனைப் பெறுவித்தோரும் நிரையம் புகுவர். அதனால், தீக்கைக்கு உரியரல்லாதார் பொதுச் சைவராயே இருந்து சிவநூலை ஓதல், கேட்டல், சிவாலயத்திற்கும், சிவனடியார்க்கும் ஏற்புடைத் தொண்டு செய்தல் என்னும் இவற்றையே மேற்கொண்டு வாழக்கடவர்.
இனிச் சிவதீக்கையும் அவரவர் ஆற்றலுக்கேற்ப, 'சமயம், விசேடம், நிருவாணம், அபிடேகம்' என நால்வகைத்தாகும். அவற்றால் அவற்றைப் பெற்றோரும் 'சமயிகள், புத்திரர், சாதகர், ஆசிரியர்' என நால்வகைப்படுவர்.
சமய தீக்கையாவது, சிவ மூல மந்திரமாகிய திருவைந் தெழுத்தை முறையறிந்து கணித்தற்கும், 'சிவாகமம், திருமுறை, சாத்திரம்' என்னும் சைவப் பெருநூல்களை ஓதுதற்கும், சரியை முறை யால் சிவபெருமானைச் சிறக்க வழிபடுதற்கும் உரிமைதந்து, சிறப்புச் சைவராகச் செய்வது. இச்சமய தீக்கை பெற்றோரே 'சமயிகள்' எனப்படுவர்.
விசேட தீக்கையாவது, மேற்கூறியவற்றோடு கிரியை முறையாலும், யோக முறையாலும் சிவபெருமானை வழிபட்டு அவனுக்கு அணுக்கராயும், அவனோடு ஒப்பவும் இருக்கும் உரிமையைத் தருவது. இதனைப் பெற்றோரே 'புத்திரர்' எனப்படுவர்.
நிருவாண தீக்கையாவது, சரியை கிரியா யோகங்களின் பயனாக மலம் பரிபாகமாயிட, இருவினையொப்பும், நாலாம் சத்தி நிபாதமும் வரப்பெற்று, அதனால் சிவனையே அடையும் அவா உண்டாகப் பெற்றவர்க்கு அவனை அடையுமாற்றை அறிந்து அடைதற் பொருட்டு முப்பொருளின் இயல்பை இனிதுணர்த்துவது. இங்ஙனம் உணர்த்தப் பெற்றவர் சிவபெருமானை அடையும் நெறிக்கண்ணே நிற்றலின், 'சாதகர்' எனப்படுவர்.
சமயம் முதலிய தீக்கை மூன்றும் 'சாதிகாரை, நிரதிகாரை' எனத் தனித்தனி இருவகைப்படும். அவற்றுள் சாதிகாரையாவது, நித்திய

வழிபாட்டோடு, 'நைமித்திகம், காமியம்' என்னும் இரு வழி பாடுகளையும் இயற்றுதற்கு உரிமை தருவது. நிரதிகாரையாவது, நித்திய வழிபாடு ஒழிந்த ஏனை இருவழிபாட்டிற்கும் உரிமை தாராதது. நித்திய வழிபாடாவது அன்றாடம் காலை, மாலை என்னும் இருபொழுதினும் நீராலும், நீற்றாலும், மந்திரங்களாலும் தம்மைத் தூய்மை செய்துகொண்டு, தருப்பணம் செய்து, சிவபெருமானது திருவைந்தெழுத்தைக் கணித்தலும், வேத சிவாகம திருமுறை சிவ புராணங்களை ஓதுதலும், கேட்டலும், சிவாலய தரிசனம் செய்தலும், அழல் ஓம்பலும், சிவனடியார்களை வரவேற்று உணவு முதலியன அளித்தலுமாம்.

நைமித்திக வழிபாடாவது யாதானும் ஒரு சிறப்புப் பற்றிச் சில நாட்களில் செய்வது. அது, அட்டமி, பூரணை, பிரதோடம், சதுர்த்தசி, மாதப் பிறப்பு, அயனப் பிறப்பு, சூரிய சந்திர கிரகணங்கள் முதலிய காலங்களில் மேற்கூறியவற்றைச் சிறப்பாகச் செய்யும் வழிபாடாகும். வேதமாதிய நூல்களைத் தக்கார்க்கு ஓதுவித்தலும் நைமித்திகமேயாம்.

காமியமாவது தான் செய்த தீவினை நீங்குதல் கருதிச் செய்யப்படும் கழுவாயும் (பிராயச்சித்தமும்) இம்மை மறுமைப் பயன்களில் ஒன்றையாயினும், பலவற்றையாயினும் வேண்டி அவ்வவற்றிற்கு ஏற்ற முறையில் செய்யும் வழிபாடுமாம்.

இவற்றுள் சாதிகார தீக்கை அதனைப் பெற்றபின்னர் நைமித் திகத்தையும், காமியத்தையும் தவறாது செய்யும் ஆற்றல் உடையார்க்கே செய்யப்படும். அவ் வாற்றல் இல்லாதார்க்கெல்லாம் நிரதிகார தீக்கையே செய்யப்படும். நிரதிகார தீக்கை பெற்றோர் ஓரோவொருகால் தம்பொருட்டாக நைமித்திகமும் காமியமும் செய்ய விரும்புவராயின், சாதிகார சாதகர் ஆசாரியர் என்போரால் செய்வித்துக் கொள்ளுதல் வேண்டும்.

சாதிகார சமய விசேட தீக்கைகளுக்குமேல், சாதிகார நிருவாண தீக்கை பெற்றோர், நைமித்திக காமியங்களைப் பிறர் பொருட்டாகச் செய்யும் உரிமையையே அபிடேகத்தாற் பெறுவர். அவ்வுரிமையும் 'அங்க உரிமை, அங்கி உரிமை' என இருவகைத்து. அங்க உரிமையாவது, அங்கிக்கு இன்றியமையாத கழிப்பு (சாந்தி) மண்கோள் (மிருத்துசங்கிரகணம்) முளை தெளித்தல் (அங்குரார்ப் பணம்) குட நீர்க்கோள் (கலசாகருடணம்) முதலியவற்றைச் செய்யும் உரிமை. அங்கி உரிமையாவது தீக்கைசெய்தல், திருக்கோயில்களில் சிறப்புக் காலங்களில் விழா எடுத்தல், குடவழிபாடு செய்தல் (கலச பூசை செய்தல்) வேள்வி (யாகம்) செய்தல் முதலியவற்றில் பெறும் உரிமையாம்.

ஆன்மார்த்த மூர்த்தியைப் பிறருக்கு எழுந்தருளு வித்தலும் 'விசேட

தீக்கை' எனத் தீக்கை செய்தலுள் அடங்குவதாம்.
இவற்றுள், அங்க உரிமைமட்டும் பெற்றோர் 'சதகாசாரியர்' எனவும், அங்கி உரிமையைப் பெற்றோர் 'ஆசாரியர்' எனவும் சொல்லப்படுவர். சாதகாசாரியர், மணவினை, மாய்ந்தோர்வினை முதலியவற்றில் வேட்டல் முதலியவற்றைச் செய்வித்தற்கும், சிவன் கோயிலில் நித்திய பூசைக்கும் பிறகோயில்களில் நித்திய, நைமித்திக, காமியத்திற்கும் உரியராவர். அங்கி உரிமையைப் பெற்ற ஆசாரியர் எல்லாவற்றிலும் உரிமையுடையராதலின், அவரது உரிமை 'பேரதிகாரம்' எனப்படும்.
ஆசிரியராதற்குச் சத்திநிபாதம், ஒழுக்கம் என்னும் இவை மட்டுமே போதா; சிறந்த பல நூற்கல்வியும், நல்லுடலும், செய்முறைப் பயிற்சியும் வேண்டும். அவற்றுடன் இரண்டு தலைமுறைக்குக் குறையாத முன்னோர், ஊனுங் கள்ளும் உண்டறி யாதவராயும், அவற்றை உண்பாரொடு உறவுகொள்ளாதவராயும் இருத்தல் வேண்டும். அதனால், அபிடேகத்திற்கு உரியவர் ஒருசிலரேயாவர். அவரும் முன்னர்ச் சாதகாசாரியராய் இருந்து பின்னர் ஆசிரியராதலே பெரும் பான்மை.
பெரும்பான்மை ஆதிசைவ அந்தணருள்ளும் சிறு பான்மை ஏனைச் சைவருள்ளும் ஆசாரியராய் உள்ளவரே சிவன் கோயிலில் பிறர்பொருட்டுச் செய்யும் பூசையைச் செய்தற்கு உரியர் எனின், வைதிகப்பார்ப்பார் முதலிய பிற பார்ப்பனர் எங்ஙனம் திருக்கோயிற் பூசைக்கு உரியராவார். அதுபற்றியே நாயனார், 'பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றனை அர்ச்சிக்கில் ... ... பஞ்சமும் ஆமே' என்று விலக்கினார். அபிடேகம் பெற்றாருள் சாதகாசாரியர் சிறுபான்மை பிற பிழைப்புத் தொழில் செய்யினும், ஆசாரியர் ஒருபோதும் அவற்றைச் செய்யார்.
அபிடேகம் பெறாது நிருவாண தீக்கை பெற்றோரை, 'சாதகர்' என்னாது 'விசேடபுத்திரர்' என்றும், அபிடேகத்தால் அங்கவுரிமை பெற்றோரையே 'சாதகர்' என்றும் கூறுப. ஆதிசைவருள் ஆசாரிய ராயினாரை, 'சிவாசாரியர்' என்றும், பிற சைவருள் ஆசாரிய ராயினாரை 'சைவாசாரியர்' என்றும் குறியிட்டு வழங்குவர்.
மாணாக்கர், (பிரமச்சாரிகள்) இல்வாழ்வார், (கிருகத்தர்) இல்லந்துறந்தார், (வானப்பிரத்தர்) முற்றத்துறந்தார் (சந்நியாசிகள்) என்னும் நால்வகை நிலையினருள் மாணாக்கர், 'இற்புகா மாணாக்கர்' (நைட்டிகப் பிரமச்சாரிகள்) என்றும், 'இற்புகு மாணாக்கர்' (பௌதிகப் பிரமச்சாரிகள்) என்றும் இருவகைப்படுவர். மணம்புரிந்து கொள்ளாது வாழ்நாளளவும் மாணாக்கர் நிலையில் நின்றே வீடு பெறுவோர் இற் புகா மாணாக்கராவர். அவ்வாறின்றி வாய்க்கும் காலத்தில் மணம் புரிந்து கொண்டு இல்லறம் நடத்த விரும்புவோர் இற்புகு மாணாக் கராவர்.

'இல்வாழ்வார் ஆசாரியராதல் ஆதிசைவருள்ளேயன்றிப் பிற சைவருள் இல்லை' என்றும், 'பிறசைவர் ஆசிரியராதல் வேண்டின், அவர் இற்புகா மாணாக்கராயிருத்தல் வேண்டும்' என்றும் சில ஆகமங் களில் விதி காணப்படுகின்றது. எனினும் அதனை, 'இவ் யுகத்திற்கு ஒவ்வா விதி' என விடுத்து, எல்லாச் சைவருள்ளும் அபிடேகத்திற்கு மேற்குறித்த தகுதியெல்லாம் உடையவர் உரியவர் என்னும் விதியே கொள்ளப்படுகின்றது. அதனால், சிவன்கோயிலில் பிறர்பொருட்டுச் செய்யப்படும் நித்திய நைமித்திக காமிய வழிபாடு கட்குப் பிற சைவா சாரியர்களும் மேற்குறித்த சாதக, ஆசாரிய முறையின்படி உரியவரே யாவர். ஆயினும், வழக்கில் ஆதிசைவ சாதக, ஆசாரியர்களே சிவன் கோயிலில் பரார்த்த பூசைக்கு உரியவராய் விளங்குகின்றனர். அங்குப் பூக்கொய்து கொடுத்தல், மாலை கட்டித் தருதல், திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கேற்றுதல் முதலிய புறத்தொழிலில் மட்டுமன்றித் திருவமுது அமைத்தல், திரு மஞ்சன நீர் நிரப்புதல், தூபம், தீபம் முதலிய பொருள்களை எடுத்துக் கொடுத்தல் முதலிய அகத்தொழிலுக்கும் எல்லாச் சைவரும் உரிமை பெறத்தக்கவரே. எனினும், வழக்கத்தில் ஆதிசைவ அந்தணர்க்கேற்ப, மகாசைவ அந்தணரேயன்றி வைதிக அந்தணரும் அத்தொழிலில் உரிமையுடை யாராய் உள்ளனர். 'சிவ தீக்கை பெற்றவருள்ளும் சிலர் தாம் திருக் கோயிலில் அகத் தொழின்மைக்கு உரியர்' என்பது சொல்லப் படுமாயின், தீக்கையே இல்லாதவரை அதற்கு உரியராக்குதல் எத்துணை முறைகேடான செயல் என்பதை எடுத்துக்கூற வேண்டுவது இல்லை.

'செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு நற்கலை
தெரிந்த அவரோ(டு)
அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்யஅமர்
கின்ற அரன்ஊர் ... ...வீழிநகரே' -தி.3 ப.80 பா.4

தடங்கொண்டதோர் தாமரைப் பொன்முடி தன்மேல்
குடங்கொண்டடி யார்குளிர் நீர்சுமந் தாட்டப்
படங்கொண்டதோர் பாம்பரை யார்த்த பரமன்
இடங்கொண்டிருந் தான்றன் இடைமரு தீதோ.-தி.1 ப.32 பா.2

நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாள்தோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையும் செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச் சரத்தானே.-தி.1 ப.61 பா.1

பாலினால் நறுநெய்யால் பழத்தினால் பயின்றாட்டி
நூலினால் மணமாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்தச்

காலினால் கூற்றுதைத்தான் கணபதீச் சரத்தானே.-தி.1 ப.61 பா.5 என்றாற்போலும் அருட்டிருமொழிகளால் 'வடமொழி, தென்மொழி' என்னும் மொழி வேறுபாடும், 'ஆதிசைவர், பிற சைவர்' என்னும் இன வேறுபாடும் இன்றி இருமொழிகளாலும் அனைத்துச் சைவரும் திருக் கோயிலில் சிவபிரானைப் பல்வகையாலும் நாள்தோறும் முறை வகுத்துக்கொண்டு வழிபாடு செய்தல் வழக்கத்திலிருந்தமை நன் கறியப்படுதலால், அதற்கு மாறாக, 'ஆதிசைவர் ஒருவர்தாம் வட மொழியானே திருக்கோயிலில் வழிபாடு செய்தற்கு உரியர்' எனக் கட்டளை வகுத்தல், விருத்திப் பொருட்டாகச் செய்யப்பட்டது என்றே கொள்ளப்படும். இன்னோரன்ன கட்டளைகள் கங்கைகொண்ட சோழன் (முதல் இராசேந்திர சோழன்) காலத்திற்குப் பிறகே தமிழ்நாட்டில் தோன்றினவாதல் வேண்டும். ஏனெனில், 'அச்சோழ மன்னன் கங்கைக் கரையிலிருந்து ஆதிசைவர் பலரைக் கொணர்ந்து தமிழ்நாட்டில் ஆங்காங்குக் குடியேற்றினான்' என்பது சித்தாந்த சாராவளி உரையிலேயே சொல்லப்பட்டுள்ளது.

இனி, 'முப்போதும் திருமேனி தீண்டுவார்' (தி.7 ப.39 பா.10) என்ற சுந்தரர் வாக்கும், பிறப்பு வேறுபாடு மொழிவேறுபாடுகளைக் குறிக்கும் கடப்பாடுடையதன்று; என்னை? அஃது உடையதாயின், 'தில்லை வாழ்ந்தணர்' எனவும், 'திருநீலகண்டத்துக் குயவனார்' எனவும், 'திருநீலகண்டத்துப் பாணனார்' எனவும் பிறப்பினை எடுத் தோதினாற்போல எடுத்தோதப்பட்டிருக்கும் என்க.

இனி, முப்போதுந் திருமேனி தீண்டுவாரைப் பற்றிக் கூறு மிடத்தில் நம்பியாண்டார் நம்பிகள்தாமும், 'நீடாகமத்தின் அறிவால் வணங்கி அர்ச்சிப்பவர்' (தி.11 திருத்தொண்டர் திருவந்தாதி, 74) என்று, 'சிவபெருமானிடத்து அன்பு உண்டாதற்குச் சிவாகம ஞானம் இன்றியமையாதது' என்னும் அளவே குறித்ததன்றி இன வரையறையும் மொழி வரையறையும் கூறினாரில்லை. எனவே, சேக்கிழார் நாயனார், 'முப்போதும் அர்ச்சிப்பார் முதற் சைவராம் முனிவர்' எனவும், 'வருங் காலமானவற்றின் வழிவழியே திருத்தொண்டின் விரும்பிய அர்ச்சனைகள்சிவ வேதியர்க்கே உரியன; அப் பெருந்தகையார் குலப் பெருமை யாம்புகழும் பெற்றியதோ' (தி.12 முப்போதும் திருமேனிதீண்டுவார் புராணம்) எனவும், 'முப்போதும் திருமேனி தீண்டுவார் ஆதிசைவரே' என்றும், 'அவர்தாம் வழி வழிவரும் பிறப்புரிமையர்' என்றும் வரையறுத்துக் கூறியது அஃது அங்ஙனம் அவர்க்குச் சிறப்புரிமையாதல் குறித்தேயாம். அங்ஙனம் கொள்ளாக்கால், மேற்காட்டிய ஞானசம்பந்தரது திருவாக்கோடும், அனுபவத்தோடும் முரணும் என்க. எனவே, இது, முந்நூலணிதலும்,

வேதம் ஓதுதலும அந்தணர்க்கேயன்றி அரசர் வணிகர்கட்கும் உரித்தாயினும் வேதத்தை 'அந்தணர் நூல்' *(குறள், 543)* என்றும், 'அதற்குரியார் அநத்ணரே' *(திருவள்ளுவமாலை, 23)* என்றும், பிறவாறும் கூறுதல் போல்வதும், அந்தனரையே 'முந்நூல் மார்பர்' எனவும் 'இருபிறப்பாளர்' எனவும் 'மறையவர், வேதியர்' எனவும் குறிப்பிடல் போல்வதும் ஆம் என்பது ஓர்ந்துணர்ந்து கொள்ளப்படும்.
'குலவிச்சை கல்லாமல் பாகம் படும்' *(பழமொழி நானூறு, 6)* ஆகலின், யாதொரு செயலும் அது வழிவழியாக இடையறாது வருவதொரு குடியிற் பிறந்தார்க்குச் சிறப்புரிமை உடைத்தாதல் இயல்பே. அஃதே பற்றிப் பிற குடியிற் பிறந்தாரும் தமது சிறப்பினால் பெறும் உரிமை விளக்கப்பட்டதாம். அது கருதியே பிறப்புரிமை கருதிய தமிழ் நூல்களில் யாண்டும் சிறப்புரிமை விலக்கப்பட்டிலது என்பது அறியற்பாலது. பிறப்பினாலன்றிச் சிறப்பினால் உரிமை பெற்றவராக வடநூல் முனிவருள்ளும் பலர் கேட்கப்படுகின்றனர். தமிழாசிரியருள்ளும் திருநாவுக்கரசரை அப்பூதியடிகளும் மெய்கண்ட தேவரைச் சகலாகம பண்டிதரும் தம்மின் மிக்கராய்த் தமக்கு நெறியருளவல்ல ஆசிரியராகக் கொண்டமை வெளிப்படை. 'இவ்வாறாகவும் பிறப்புரிமை ஒன்றே கொள்ளப்படுவது சிறப்புரிமை கொள்ளப்படாது' என முரணிக் கூறுதல் விருத்தி வேண்டுவாரது கூற்றேயாய் முடியும் என்க.
இதனால் திருக்கோயிலில் நிகழும் பெருவழிபாடு பற்றிய குற்றம் விலக்கப்பட்டது.

*4.20.*அதோமுக தரிசனம்

எம்பெரு மான்இறை வாமுறை யோஎன்று
வம்பவிழ் வானோர் அசுரன் வலிசொல்ல
அம்பவழ் மேனி அறுமுகன் போய்அவர்
தம்பகை கொல்லென்ற தற்பரன் தானே. *#513*

பிரகிருதி புவனத்தில் நிலவுலகத்தில் வாழ்ந்த சூரபதுமனாகிய அசுரனால் விளைந்த துன்பத்தை இயற்கை மணம் கமழும் மேனியராகிய தேவர்கள் விண்ணப்பித்து, 'எம் பெருமானே, இறைவனே, முறையோ' என்று சொல்லி முறையிட, 'அழகிய பவழம் போலும் மேனியை உடைய அறுமுகன் சென்று அவர்தம் பகைவனை அழிக்க' என்று திருவுளம் பற்றிய பெருமான் சாதாக்கிய தத்துவத்தில் சதாசிவனாய் நிற்கும் அவனே.

விளக்கவுரை

'ஆகவே, அவன் சுத்தமாயையில் உள்ளார்க்கு மட்டுமின்றி, ஏனை அசுத்தமாயை பிரகிருதி மாயைகளில் உள்ளார்க்கும் அருளி புரிபவனே; அதனால், எவ்விடத்து அவனை வழிபடினும் அவ்விடத்து அவன் ஏற்ற பெற்றியால் நின்று அருள் புரிவன்; எனவே, நிலவுலகத்துத் திருக்கோயில்களில் திருமேனிகளில் அவன் நின்று அருள் புரிதற்கு ஐயமில்லை' என்பது குறிப்பெச்சம்.

'தாபர சங்கமங்கள் எனும்இரண் டுருவில் நின்று
மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்பன்' என்ற
சிவஞானசித்தி *(சூ. 2,28)* இங்குக் காணத்தக்கது.

வம்பு - மணம். 'வலி' என்றது, அதனால் விளைந்த துன்பத்தைக் குறித்தது. 'பவழம்' என்பது கடைக்குறைந்து நின்றது. 'பவளம்' என்றேயும் பாடம் ஓதுப. 'பவழத் தன்ன மேனி' (குறுந்தொகைக் கடவுள் வாழ்த்து*)* என, வேறிடத்தும் முருகனது மேனிக்கு பவழம் உவமையாகக் கூறப் பட்டது. பகைவனை 'பகை' என்றது ஒற்றுமை வழக்கு.

பல்லாற்றானும் தீமையைத் தேய்த்து நன்மையை வளர்த்து நிலவுலகத்து உயிர்களைப் புரந்தருளுதல் கூறுவார், கந்தபுராண வரலாற்றை எடுத்தோதியருளினார். அதோ முகத்தது இயல்பு கூறுகின்றாராதலின், அது வெளிப்பட நின்ற இவ்வரலாற்றையே எடுத்தோதியருளினார். இதனால், சிவபெருமான், மேலுலகத்துள்ளார்க்கேயன்றிக் கீழுலகத்துள்ளார்க்கும் அருள்புரிதல் கூறப்பட்டது. இவர்க்கு அருளுதலே 'அதோ முகம்' என்பது குறிப்பால் உணர்த்தப் பட்டமை காண்க.

அண்டமொ டெண்டிசை தாங்கும் அதோமுகம்

கண்டங் கறுத்த கருத்தறி வாரில்லை
உண்டது நஞ்சென் றுரைப்பர் உணர்விலோர்
வெண்டலை மாலை விரிசடை யோற்கே. ***#514***

சிவபெருமானது அதோமுகமே நிலவுலகத்தைப் புரப்பது. அதற்கு அறிகுறியாகவே அது கறுத்த கண்டத்தையுடைய வடிவினதாய்த் தோன்றுதலை அறிபவர் ஒருவரும் இல்லை. அதனால், பலரும், 'அது நஞ்சுண்டது' என்று மட்டுமே கூறி யொழிகின்றனர். இனி அவ்வடிவாகிய கறைமிடற்றண்ணலுக்கு மார்பில் அணியும் மாலையும் இறந்தாரது வெள்ளிய தலைகளால் ஆயதே. அதனது உண்மையையும் அறிவாறில்லை.

விளக்கவுரை

'அண்டமொடு எண்சை' என்றது, 'உலகம்' என்னும் பொருளது. 'உலகம்' என வாளா கூறின், நிலவுலகத்தையே குறித்தல் வழக்கு. 'அதோமுகம் தாங்கும்' என மாற்றி உரைக்க. 'அதோமுகமே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. அதனால் பிரிக்கப் பட்டன ஈசானம் முதலிய ஏனைத் திருமுகங்கள். ஆகவே, சுத்த மாயையில் ஐந்தொழில் செய்வனவாகச் சொல்லப்படுகின்ற அவை, நிலவுலகத்துள்ளார்க்கு வந்து அருள்புரிதல் யாங்ஙனம்' என்பார்க்கு, 'நிலவுலகத்துள்ளார்க்கு வந்து அருள்புரிதல் ஆறாவதாகிய மற்றொரு திருமுகமாம் அதோ முகமே' என மலைவு நீக்கியவாறாயிற்று.

'அதோமுகம்' என்பதற்குப் பொருள், 'கீழ்நோக்கி நிற்பது' என்பதேயாகலின், அது கீழ் உலகத்தார்க்கு அருளுதல் குறித்த கருணையே என்பது சொல்லாமே அமைந்தது. 'அது கண்டம் கறுத்த கருத்தறிவார் இல்லை' என்றதனால், 'அத்திருமுகமே நிலவுலகத் தார்க்குக் கறைமிடற்றண்ணல் வடிவினதாய்த் தோன்றும்' என்பது அனுவாத முகத்தாற் பெறப்பட்டது. இதனுள் 'அது' என்பது தோன்றா எழுவாய். கருத்து என்றது, 'அகலரையன்றிச் சகலரையும் ஏற்றுக் கொள்ளும் கருணையது' என்பதனை.

'அஃது எவ்வாறு பெறப்படும்' எனின், மூவகைச் சீவ வருக்கத்தார்க்கும் ஆணவமலம் உளதேயெனினும், சகல வருக்கத் தார்க்கே அது பெரிதும் உளது எனப்படுவதாலும், ஆணவ மலம், 'இருள், மூர்ச்சை, மிருத்து' முதலிய பெயர்கட்கும் உரித்தாய் நிற்ற லானும் இறைவனது கண்டத்தில் உள்ள கறை (இருள் - நஞ்சு) ஆணவ மலத்தை அவன் நீக்கி யருளுதற்குச் சிறந்த அடையாளமாம் என்க. இனி, அக் கறைதானும் மார்பு, வயிறு முதலிய பிற இடங்களில் நில்லாது முகத்திற்குக் கீழ்க் கண்டத்திலே நிற்றல், அஃது ஆறாவதாகிய அதோ முகத்தின் வடிவாதல் குறிக்கும். ஆகவே, 'இத்துணை உண்மை களும் உணரற் பாலனவாக,

அவற்றைவிடுத்து நஞ்சுண்டதாகிய வரலாற்றை மட்டுமே கூறியொழிதல் கூடாது' என்றற்கு, 'கருத்தறி வார் இல்லை; உண்டது நஞ்சென் றுரைப்பர் உணர்விலோர்' என்றார்.
'உண்டது' என்றது முற்று. 'நஞ்சு' என்றதில் இரண்டாவது இறுதிக்கண் தொக்கது. இறுதிக்கண் வருவித்துரைத்த, 'அதனையும் அறிவாரில்லை' என்பது இசையெச்சம். 'கறைமிடற்றண்ணல் மார்பில் உள்ள மாலையாக அமைந்த வெண்டலைகள் அமரர் தலைகளே' எனப்படுதலால், 'அவரும் ஏனை மக்கள் போலச் சகலரே என உணர்தல் வேண்டும்; அங்ஙனம் உணரவே, அவர் பொருட்டு நஞ்சுண்ட வரலாறு அனைத்துச் சகலர்க்கும் அருள் புரிதலைக் குறித்தல் விளங்கும்' என்றற்கு அதனையும் உடன் கூறினார்.
இனி, பரமசிவன் ஐந்தொழில் செய்யுங்கால் அவற்றைச் சுத்த மாயையில் தானே நேர்நின்று செய்வன்' என்பதும், 'அசுத்தமாயையில் அனந்தேசுரர் வாயிலாகச் செய்வன்' என்பதும், 'பிரகிருதி மாயையில் அனந்ததேவர் வழிச் சீகண்ட உருத்திரர் வாயிலாகச் செய்வன்' என்பதும் ஆகமங்களின் முடிபு ஆதலால், சுத்த மாயைக்குச் சாதாக்கிய தத்துவத்தில் சதாசிவனாய் நின்று நேராகவும், அசுத்தமாயைக்குச் சுத்த வித்தியா தத்துவத்திலே வித்தியேசுரனாய் நின்று அநந்ததேவர் வாயிலாகவும் ஐந்தொழில் செய்தல் போலப் பிரகிருதி மாயைக்கும் சுத்த வித்தியா தத்துவத்திலேயே சீகண்டனாய் நின்று அனந்த தேவர் வழிச்சீகண்ட உருத்திரர் வாயிலாக ஐந்தொழில் செய்வன் என்பது பெறப்படும்; என்னை? அசுத்த மாயையில் நிகழும் காரியத்திற்கு 'அனந்தர்' என்னும் வித்தியேசுரர் கர்த்திருத்துதவம் பெறுதற்குப் பரமசிவன் வித்தியேசுரனாய் நிற்றல் இன்றியமையாதவாறு போல, பிரகிருதி மாயையில் நிகழும் காரியத்திற்குச் சீகண்ட வுருத்திரன் கர்த்திருத்துவம் பெறுதற்கும் பரமசிவன் சீகண்டனாய் நிற்றல் இன்றி யமையாதாகலின்.
சுத்தமாயையில் போக (பரிபாலன) மூர்த்தியாய் நிற்கும் பரமசிவனுக்கு உரித்தாய், நிற்றலின், போக தத்துவம் (சாதாக்கிய தத்துவம்) ஒன்றேயாக, அதற்குக்கீழ் அதிகார தத்துவம் அவ்வாறு ஒன்றாகாது, 'ஈசுரம், வித்தை' என இரண்டாயினமை, ஒன்றுமேல் நின்று சுத்தமாயையில் அதிகாரம் புரிதற்கும், மற்றொன்று கீழ்நோக்கி நின்று அதிகாரம் புரிவித்தற்குமேயாம். முன்னையதில் கிரியாசத்தி மிக்கு நிற்றல் செயலாற்றுதற் பொருட்டு என்பதும், பின்னையதில் ஞானசத்தி மிக்கு நிற்றல் பிறரை ஏவுதல் மாத்திரையாய் நிற்றற் பொருட்டும் என்பதும் தெரிந்து கொள்ளப் படுமாறு அறிக.
பரமசிவனது 'இலயம், போகம், அதிகாரம்' என்னும் மூன்று நிலைகளுள் அதிகாரம் ஒன்றாகாது 'சூக்குமம், தூலம்' என இரண்டா யினமை,

முறையே செய்தலும், செய்வித்தலும் பற்றியேயாம். அவற்றுள் தூலவதிகாரமாகிய செய்வித்தல் நிலையில் நிற்றற் பொருட்டே 'சுத்த வித்தை' என்னும் சுத்த தத்துவம் உளதாயிற்று என உணர்க.
இனி, இலய தத்துவமும் ஒன்றாகாது இவ்வாறே தூலம், சூக்குமம் என இரண்டாவது, அபர முத்தருள்ளும் அதிகாரமல வாசனை நீங்குங்கால் தூல லயமாயும், சூக்குமலயமாயும் இவ்வாறு படி முறையானன்றி நீங்குதல் கூடாமையின், அவ்வந்திலையினின்று அவரவர்கட்கு அருளுதற்பொருட்டேயாம் என்பதும் உணர்ந்து கொள்க. இலய தத்துவம் இரண்டனுள் 'சத்தி தத்துவம் தூல லயம்' என்பதும், 'சிவ தத்துவம் சூக்கும லயம்' என்பதும் நன்கறியப் பட்டவை.
இனி அசுத்த மாயையிலும், பிரகிருதி மாயையிலும் பிறர்வழி நிகழ்த்தும் 'ஐந்தொழில்களுள் ' அருளல்' என்பது அபர ஞானமாகிய சிவாகமங்களை அறிவுறுத்தலேயாம். பரஞானத்தை அசுத்த மாயையில் உள்ளார்க்கும் வித்தியேசுரனாயும், பிரகிருதி மாயையில் உள்ளார்க்குச் சீகண்டனாயும் நிற்கும் பரமசிவனே ஏற்றபெற்றியால் அருளுவான், என்னை? சீகண்ட உருத்திரனும், அனந்தேசுரனும் மலம் நீங்கப் பெற்ற முத்தரேயாயினும், அதிகார மலம் நீங்கப் பெறாதவரேயாதலின், மலம் முழுவதையும் பற்றறக் கழிக்கும் பரஞானத்தை அவரைப் பற்றி நின்று பரமசிவன் உணர்த்துதல் கூடாமையின், 'சகல ருக்குப் பரமசிவன் ஞானத்தை அருளுதல் சீகண்ட உருத்திரன் வழி' என்னாது, 'ஆசான் மூர்த்தி வழியேயாம்' என ஆகமங்கள் கூறுதலும் இது பற்றியே என்க. எனவே, பிரளயா கலருக்குப் பரமசிவன் பர ஞானத்தை அருளுதலும் இவ்வாறு ஏற்ற பெற்றியானேயாம் என்பது உணரப்படும்.
இங்ஙனமாகவே, 'அறுபான் மும்மை நாயன்மார் முதலியோர்க்குப் பற்றற்ற பரஞானத்தை அருளியவன் பரமசிவனே' என்பதும், ஆகவே, 'அவர் அடைந்த பதமுத்தி அபர முத்திகள் அவனுக்கு நேரே இடமாய சுத்த மாயையின்கண் உள்ள புவனங்கள்' என்பதும் தானே பெறப்படும். இவ்வாறு சீகண்டனாய் நிற்கும் பரமசிவனும், அவனது அருளால் அவனோடு ஒத்த உருவமும், பெயரும், பிறவும் பெற்று விளங்கும் சீகண்ட உருத்திரனும் வேறு வேறு என்பது உணரமாட்டாதார், 'அறுபான் மும்மை நாயனார் முதலாகப் பரஞானத்திற்கு உரியராய் நிற்போர்க்கு அருளுபவனும் சீகண்ட உருத்திரனே' எனவும், 'அவர் அடைந்த முத்திப் பேறும் அவனது இடமே' எனவும் மயங்கிப் பெறலரும் பேறு பெற்ற உயர் ஞானத்தின ராகிய பலரை ஏனைப் பொதுத் தவத்தாரோடு ஒப்ப வைத்து எண்ணுபவராவர்.
சமய தீக்கை பெற்றுச் சரியையில் நிற்போர்க்குச் சிவநூல்களை ஓதினும் தத்துவ ஞானம் விளங்காமையானும், விசேட தீக்கை பெற்றுக்

கிரியையிலும், யோகத்திலும் நிற்பார்க்கு அவை விளங்குதல், ஒரு நாட்டினை நேரே சென்று காணாது அதன் படத்தைக் காண்பார்க்கு அந் நாட்டியல்பு விளங்குதல் போலப் பாவனையானன்றி உண்மையான் அன்றாகலானும் அவ்விருவர்க்கும் பரமசிவன் சீகண்ட உருத்திரர் வழியாகவே அருள் புரிபவன். நிருவாண தீக்கை பெற்றார்க்குத் தத்துவ ஞானம் உண்மையான் விளங்குமாகலின், அவர்க்குப் பரம சிவன் பற்றற்ற பரஞானத்தால் சீவன் முத்தராய் நிற்கும் ஆசான் மூர்த்தி களது சுத்தான்ம சைதன்னியத்தில் விளங்கி அவராய் நின்றே அருள் புரிவன். ஆகவே, சமய தீக்கையின்பின் விசேட தீக்கை பெற்றுக் கிரியை அனுபவமும், யோக அனுபவமும் பெற்றார்க்குச் செய்யப் படும் நிருவாண தீக்கையே உண்மை நிருவாண தீக்கையாம். ஏனை யோர்க்கு அதனைச் செய்தல் நாடக மாத்திரையேயாம். இன்னும் முன்னைப் பிறவியிலே ஆசான் அருள்பெற்று நிட்டைகூட மாட்டாத வராய் அது கூடுதற் பொருட்டு நிலவுலகில் பிறந்தார்க்கும் சீகண்ட னாய் நிற்கும் பரமசிவன் தானே நேர் நின்று அருள்புரிவன் என்க.

மேன்மேல் உள்ள தத்துவங்கள் கீழ்க்கீழ் உள்ள தத்துவங் களினும் வியாபகமாவன வேயன்றி, இயைபின்றி மேலே நிற்பன அல்ல என்பது மேலேயும் *(388, 407 பாடல்கள்)* காட்டினாம் ஆதலின், இங்குக் கூறப்பட்டன அனைத்தும் பொருந்துவனவாதல் அறிந்து கொள்க.

சமயம் முதலிய மூவகைத் தீக்கைகளைப் பெற்றச் சரியை முதலிய நான்கினும் நிற்போர் திருக்கோயில் வழிபாட்டினைச் செய் தும், செய்வித்தும் நிற்கும் பொழுது பரமசிவனைத் தத்தம் இயல்பிற்கு ஏற்பவே உணர்ந்து நிற்பராகலான், பரமசிவனும் அவர்தம் உணர் விற்கு ஏற்ப மேற்கூறிய முறையானே அங்கு நின்று அருள் புரிவன் என்பது,

'திருக்கோயி லுள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவன்எனவே கண்டவர்க்குச் சிவன் உறைவன் அங்கே;
'உருக்கோலி மந்திரத்தால்' என நினையும் அவர்க்கும்'
'உளன் எங்கும் இலன் இங்கும் உளன் என்பார்க்கும்'
விருப்பாய வடிவாகி இந்தனத்தின் எரிபோல்
மந்திரத்தில் வந்துதித்தும், மிகும்சுரபிக் கெங்கும் உருக்காண; ஒண்ணாத பால்; முலைப்பால் விம்மி
ஒழுகுவது போல் வெளிப்பட்டருளுவன் [அன்பர்க்கே

எனச் சிவஞான சித்தியுட் *(சூ. 12.4)* கூறப்படுதல் காண்க.

இதனால். சிவபெருமான் கீழுலகத்துள்ளார்க்கு அதோ முகத்தின் வழியாகவே அருள் புரிதல் கூறப்பட்டது.

செய்தான் அறியுஞ் செழுங்கடல் வட்டத்துப்
பொய்யே யுரைத்துப் புகழும் மனிதர்கள்

மெய்யே யுரைக்கில்அவ் விண்ணோர்தொழச் செய்வன்
மைதாழ்ந் திலங்கு மணிமிடற் றோனே. *#515*

படைப்பவனாகிய பிரமதேவனது அண்டம் எனப்படும் நிலவட்டத்தின் கண் நின்றுகொண்டு அறியாமை காரணமாக வேறு வேறு தேவரை, 'முதற்கடவுள்' என்று சொல்லிக் கொண்டாடுகின்ற மனிதர்கள், அறியாமை நீங்கிப் பரமசிவன் தமக்குக் கறைமிடற்றண்ணலாய் *(சீகண்டனாய்)* நின்று அருள் புரிதலை உணர்ந்து புகழவல்லாராயின், அவ்வண்ணல் அவர்களை முன்பு அவரால் புகழப்பட்ட தேவர்களே வந்து வணங்குமாறு உயர் நிலையில் வைத்தருளுவன்.

விளக்கவுரை

எனவே, நிலவுலகத்தார்க்குச் சீகண்ட உருத்திரன், மற்றும் குணிருத்திரன், மால், அயன், இந்திரன் முதலாகப் பலரிடத்தும் நின்று அருள்புரிவது பரமசிவனது அதோமுகமே என்பதாம்.

'யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்'

என்ற சிவஞானசித்தி *(சூ. 2.25)* க்கும் இதுவே கருத்தாகக் கொள்க. இங்கு 'மெய்' எனப்பட்டது, 'பொருள்சேர் புகழ்' *(குறள், 5)* எனத் திருவள்ளுவர் கூறிய புகழையாம்.

மேல், 'அதோமுகந்தானே கண்டங் கறுத்து நின்றது' எனக் கூறினமையால், இங்கு 'மைதாழ்ந்திலங்கு மணிமிடற்றோன்' என்பது அம் முகத்தையே குறித்தல் இனிது விளங்கும்.

'தொழப்படுந் தேவர்தம் மால்தொழுவிக்குந்தன் தொண் டரையே' *(தி.4 ப.112 பா.5)* என்ற அப்பர் திருமொழியை இங்கு, 'விண்ணோர் தொழச்செய்வன்' என்றதனோடு வைத்துக் காண்க.

நந்தி எழுந்து நடுவுற ஓங்கிய
செந்திக் கலந்துட் சிவனென நிற்கும்
உந்திக் கலந்தங் குலகம் வலம்வரும்
அந்தி இறைவன் அதோமுக மாமே. *#516*

சிவபெருமானது அதோமுகம் வடதிசைத் தீ, *(ஆகவநீயம் தென்றிசைத்தீ, (தக்கிணாக்கினி)* என்னும் இரண்டற்கும் நடுவிலே இல்லத் தீ, *(காருகபத்தியம்)* எனப் பெயர்பெற்று வளர்ந்து எரிகின்ற தீயினுள் நின்று அதனைச் சிவாக்கினியாகச் செய்யும். இனி ஏனைய இரண்டு தீயினுள்ளும் சென்று கலந்து உலகம் முழுதும் பரவியும் நிற்கும்.

விளக்கவுரை

எனவே, 'நிலவுலகில் இல்லத்து வைத்துச் செய்யும் வழிபாட்டில் நின்று அருள்புரிவதும், திருக்கோயில்களில் வைத்துச் செய்யும் வழிபாட்டில்

நின்று அருள்புரிவதும் சிவபெருமானது அதோ முகமே' என அத்திருமுகம் நிலவுலகத்தார்க்கு அருள் புரியும் வகைகளைக் கூறியவாறாயிற்று. 'செந்தீ' என்றே போயினாராயினும், அதன் வடிவாய்ப் பல பொருள்களால் அமைந்த இலிங்கங்களையும் கூறியதேயாம்.

'இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை'
-தி.8 திருவெம்பாவை, 17

'நின் அடியார் பழங்குடில்தொறும் எழுந்தருளிய பரனே'
-தி.8 திருப்பள்ளியெழுச்சி

என்றாற் போலும் திருமொழிகள் இறைவன் தன் அடியவர் இல்லத்துக் கொண்ட குறியினுள் நின்று அருள்புரிதலைக் குறிப்பனவேயாம். அக்குறியை அந்தணரும், ஆசாரியரும் நித்தியாக்கினியாகவும், ஏனையோர் ஆன்மார்த்த லிங்கமாகவும் கொள்வர் என்க. 'செந்தீ' என்பது குறுகிநின்றது.

இனி, 'நடுவுற ஓங்கிய செந்தீ' என்றதும், 'உந்திக் கலந்து அங்கு உலகம் வலம்வரும்' என்றதும் முறையே அகத்தே இருதயத்துள் சுடர்வடிவில் நிற்றலையும், மூலாதாரத்தினின்று, சுவாதிட்டானம், மணிபூரகம் முதலாக மேலோங்கி உடல் முற்றும் பரவும் மூலாக்கினியையும் குறித்துப் பொதுமையில் நிற்பனவேயாம். அதனால், கிரியையாளர் செய்யும் அகவழி பாட்டிலும், யோகியர்கள் செய்யும் யோக பாவனைகளிலும் நின்று அவர்க்கு அருள்புரிவதும் அவ்வதோமுகமே என்பதும் பெறப்பட்டது. 'உலகம் வலம் வரும்' என்று உடலையும் உலகம் போலவே கூறியொழிந்தது, சிவபெரு மானது அதோ முகத்துடன் தோன்றிய அறுமுகக் கடவுள் 'உலகத்தை யெல்லாம் ஒரு நொடியில் வலம் வந்தான்' என்ற புராண வரலாறும் இவ்வுண்மையையே விளக்கும் என்பது தோன்றுதற்கு. அந்தி இறைவன் - அந்திச் செவ்வானம் போலும் நிறமுடைய சிவன். 'காலை, நண்பகல், அந்தி' என்னும் காலங்களில் செய்யும் வழி பாடுகளில் அந்தியில் வழிபடப்படும் இறைவன் என்றலுமாம்.

இதனால், அதோமுகம் நிலவுலகத்தார்க்கு நின்று அருள் புரியுமாறெல்லாம் கூறப்பட்டன.

அதோமுகங் கீழண்ட மான புராணன்
அதோமுகந் தன்னொடும் எங்கும் முயலும்
சதோமுகத் தொண்மலர்க் கண்ணிப் பிரானும்
சதோமுகன் ஊழித் தலைவனு மாமே. **#517**

அதோ முகத்தால் அதோ மாயையாகிய அசுத்த மாயையின்

காரியங்களாகிய அண்டங்களில் நிறைந்து நிற்கும் பழையோனாகிய சிவபெருமான், அவ்வதோ முகத்தோடே எங்கும் பொருந்தி நின்று செயலாற்றுவான். அதனால், தாமரை மலர் மாலையை அணிந்த பிரமதேவனும், பிரம கற்பத்திற்குத் தலைவனும் அவனேயாவன்.

விளக்கவுரை

நூற்றிதழ்த் தாமரை, 'சதோமுகம்' எனப் பட்டது. 'நிவிர்த்தி கலைக்குத் தலைவன் எனப் படுகின்ற பிரமனாகி நிற்பதும் அதோமுகமே' என்றவாறு.

இதனால், அதோமுகமே கீழுலகத்தார்க்கு அருளுவது என்பது வேறோராற்றால் வலியுறுத்தப்பட்டது.

அதோமுக மாமல ராயது கேளும்
அதோமுகத் தாலொரு நூறாய் விரிந்து
அதோமுக மாகிய அந்தமில் சத்தி
அதோமுக மாகி அமர்ந்திருந் தானே. ***#518***

சிவபெருமானது அதோமுகம் பெரியதொரு தாமரை மலராய் நிற்கும் முறையினைக் கேண்மின்கள்; சுத்த மாயை யினின்றும் கீழ்நோக்கி வருகின்ற அவனுடைய அளவில்லாத சத்திகள் அதோமுகமாகி நூறிதழ்களை உடையதாய் விரிந்து நிற்க, அம்மலரின் கண்ணே சிவபெருமான் அமர்ந்திருக்கின்றான்.

விளக்கவுரை

'நூறு' என்றது, பன்மை குறித்தற்கு ஓர் எண் கூறியவாறு. ஒன்றாகிய சிவனது சத்திதானே காரியங்களை நோக்கிப் பலவாய் நிற்குமாதலின், அதனை ஒரு மலரின்கண்ணே உள்ள பல இதழ்களாக உருவகித்தார். 'அளவிறந்த காரியங்கள்' என்றவற்றை, 'வித்தை, பிரதிட்டை, நிவிர்த்தி' என்னும் கலைகளோடே ஒன்றின் ஒன்று வியாப்பியமாய் நிற்கும் ஏனைத் தத்துவங்களையும் எண்ணாற்கூறி, அவற்றில் நிகழற்பாலனவாகிய காரியங்களின் விரியைக் கருதி உணர்ந்துகொள்க. சத்திமான் இன்றிச் சத்தி செயற் படாதாகலின், அவன் அவற்றோடெல்லாம் இயைந்து நிற்றலையும் உணர்த்தினார். 'ஆகி' என்றது, 'ஆக' என்பதன் திரிபு. மூன்றாம் அடியை இரண்டாம் அடிக்கு முன்னே கூட்டியுரைக்க.

இதனால், 'சிவபிரானது அதோமுகம் எனப்படுவது, அசுத்த மாயை பிரகிருதி மாயைகளில் நிறைந்து நின்று காரியங்களைச் செய்யும் அவனது சத்தியே' என்பது கூறப்பட்டது.

4.21.சிவநிந்தை கூடாமை

தெளிவுறு ஞானத்துச் சிந்தையின் உள்ளே

அளியுறு வார்அம ரர்பதி நாடி
எளியனென் றீசனை நீசர் இகழில்
கிளியொன்று பூசையின் கீழது வாமே. *#519*

யாவர்க்கும் முதல்வனாகிய சிவபெருமானது திருக் கோலத்தின் உண்மைகளை நூல்களாலும், நாட்டில் அமைந்த திருக் கோயில்கள், அவற்றில் நிகழும் விழாவகைகள் முதலியவற்றாலும் ஓர்ந்துணர்ந்து, அதனால் தெளிவுபெற்ற ஞானத்தை உடையராய் உள்ளத்தில் அன்புமிகப் பெறுவோர் பின்னர்த் தேவராவர். அவ்வாறு ஓர்ந்துணரவும், தெளியவும் மாட்டாத கீழ்மக்கள் அப்பெருமானை, எலும்பு, தோல், சாம்பல், வெண்டலை முதலியவைகளை உடைய வனாய்ச் சுடுகாட்டில் ஆடுதல், தலையோடு ஏந்தி இரத்தல் முதலிய வைகளையே நோக்கிச் சிறுதெய்வமாகக் கருதி இகழ்வார்களாயின், அச்செயல், கிளி ஒன்று தானே பூனையின் அருகுசென்று அகப்பட்டு நின்றது போல்வதாய்விடும்.

விளக்கவுரை

'பதி நாடி' என்றதனை முதலிற்கூட்டி உரைக்க. அளியுறுதல் - அன்பினால் நெகிழ்ந்து உருகுதல். *'அமரராவர்'* என்னும் ஆக்கம் விரித்துரைக்க. பதி - தலைவனாம் தன்மை. *'ஈசன்'* என்பது முன்னே *'பதி'* என்றதனோடும் ஆறாவதன் பொருள்படச் சென்று இயைந்தது. *'அமரர்'* என்றது பொதுப்பட உயர்நிலையைக் குறித்ததாகலின், பதமுத்த, அபர முத்தர் முதலிய பலரது நிலைகளும் கொள்ளப்படும். *'அமராபதி'* என்பது பாடம் அன்று. கீழது - கீழ்நின்றாற்போல்வதொரு செயல். கீழ் நிற்கும் நிலையை, *'கீழ்'* என்றார். இதற்குக் *'கீழ்தல் - கிழித்தல்'* எனப் பொருள் உரைப்பாரும் உளர். இங்குக்கூறிய உவமையை, *'கூற்றத்தைக் கையால் விளித் தற்று'* *(குறள், 894)* என்றாற் போல்வனவற்றோடு வைத்துக் காண்க. சிவபெரு மானது முதன்மையை அறியாது நிற்றல்தானே தீங்கு பயப்பதாக, அதன்மேலும் அப் பெருமானை இகழ்தல் விரையப் பெருங்கேடு எய்துவிப்பதாம் என்பது இவ்வுவமையாற் பெறப் படுவது. *'இதற்குத் தக்கன் வரலாறு சிறந்த எடுத்துக்காட்டு'* என்பது முன்னர் கூறப்பட்டது *(தி.10 பா.336 உரை).*

நிந்தனை செய்வாரது இழிநிலை இனிது விளங்குதற்கு, துதித்தல் செய்வாரது உயர் நிலையையும் உடன் கூறிக்காட்டினார்.

இதனால், சிவநிந்தை உய்தியில் குற்றமாதல் கூறப்பட்டது.

முளிந்தவர் வானவர் தானவர் எல்லாம்
விளிந்தவர் மெய்ந்நின்ற ஞானம் உணரார்
அளிந்தமு தூறிய ஆதிப் பிரானைத்
தளிர்ந்தவர்க் கல்லது தாங்கஒண் ணாதே. *#520*

'தேவர்' எனவும், 'அசுரர்' எனவும் சொல்லப் படுவோர் பேராற்றல் உடையவர்போலச் சொல்லப்படினும், அவரெல்லாம் வினைவெப்பத்தில் அகப்பட்டு உயர்கின்றவர்களும், அழிகின்றவர்களுமேயாவர். அதனால், அவர் திரிபின்றி நிலைபெறும் உணர்வை அடைந்திலர். ஆகவே, தன்னை உணர்வாரது உணர்வில் அமுதம் கசிந்து ஊறுவதுபோல ஊறி நின்று இன்பம் பயக்கும் சிவபெருமானை நினைந்து உள்ளம் குளிர்பவர்க்கல்லது உண்மை ஞானத்தைப் பெறுதல் இயலாது.

விளக்கவுரை

'அமரர்' எனப் பெயர் பெற்றாராயினும் கற்ப காலங்களை வருணிக்கும் நூல்களில் அவர் இறந்தமை நன்கெடுத்துக் கூறப்படுதலாலும், அசுரர் பலர் தம் அகந்தையால் அழிந்தமை, பலராலும் நன்கறியப்பட்டதாகலானும், 'எல்லாம் விளிந்தவர்' என்றும், இறப்பைக் கடக்க மாட்டாமையால் வினையின் நீங்காமை பெறப்படுதலால், 'முளிந்தவர்' என்றும், வினையுள்ள துணையும் ஞானம் விளங்காதாகலின், 'மெய்ந்நின்ற ஞானம் உணரார்' என்றும் கூறினார். மெய்ம்மை - திரிபின்மை. 'மெய்யாய்' என ஆக்கம் விரிக்க. 'தாமே ஞானத்தை எய்தாதார் பிறர்க்கு ஞானத்தைத் தருதல் எவ்வாறு' என்பது கருத்து. 'உயிர்கட்குப் பெருந்துன்பந் தருவது அஞ்ஞானமும், பேரின்பம் தருவது மெய்ஞ்ஞானமுமேயாகலின், அவற்றை முறையே போக்குதலும், ஆக்குதலும் மாட்டாதாரைப் புகழ்தலும், அவை வல்லானை இகழ்தலும் பேதைமைப் பாலவாம்' என்றவாறு. அறிவுடையோர் பலர் தேவரைப் புகழ, அறிவிலார் சிலர் அசுரரையும், அவரொடு ஒத்த தீய தெய்வங்களையும் (துர்த்தேவதைகளையும்) புகழ்ந்து அடைதல் பற்றித் தானவரையும் எடுத்தோதினார். தளிதல் - குளிர்தல்; அன்பு செய்து மகிழ்தல். தாங்குதலுக்கு மேல் நின்ற 'ஞானம்' என்னும் செயப்படுபொருளை வருவிக்க.

இதனால், சிவநிந்தை குற்றமாதற்கு ஏதுக் கூறப்பட்டது.

அப்பகை யாலே அசுரருந் தேவரும்
நற்பகை செய்து நடுவே முடிந்தனர்
எப்பகை யாகிலும் எய்தார் இறைவனைப்
பொய்ப்பகை செய்யினும் பொன்றுப தாமே. ***#521***

அசுரரும், தேவரும் அறியாமையாகிய பகை தம் உணர்விலே நின்று கெடுத்தலால் தம்முள் மிக்க பகைகொண்டு தம் வாழ்நாள் முடிவதற்கு முன்பே அழிந்தனர். ஆகவே, சிவபெருமானை உண்மையில் இகழும் கருத்தினரல்லாதவரும், அவனை இகழ்வார்க்கு அஞ்சித் தாமும் இகழ்வார் போல நிற்பினும் அவர் அழிவே எய்துவர்.

விளக்கவுரை

'பகையாகிய தீக்குணம் அழிவைத் தருதலல்லது ஆக்கத்தைத் தாராது' என்பது உணர்த்துதற்குத் தேவாசுரரது நிலைமையை எடுத்துக் காட்டினார். 'இவ்வாறு எவ்விடத்தும் தீமையையே பயக்கும் பகை, சிலரது உள்ளத்தில் சிவபிரானைப் பற்றித் தோன்றின், அவர் பெருந்தீங்கிற்கு உள்ளாதல் சொல்ல வேண்டுமோ' என்பது பின்னிரண்டு அடிகளால் பெறப்படும் கருத்து.

தேவர்கட்கு இறப்பில்லையாயினும், இறந்தாரொடு ஒப்பக் கரந்துறைதலும், அசுரர்க்கு அடிமைசெய்து நிற்றலும் ஆகிய நிலையை இறத்தலாக வைத்துக் கூறினார். 'எப்பகையாகிலும் எய்தார்' என்றது, 'உள்ளத்தில் சிறிது பகையும் இல்லாதவர்' என்றவாறு. தமக்குப் பகையில்லையாயினும், பகைகொண்டாரைத் திருத்தும் வலியின் மையால் தாமும் பகைகொண்டு சிவபிரானை இகழ்வார்போல நிற்பார் அழிதற்கு, தக்கன் வேள்வியில் சென்றிருந்த தேவர்களே சான்றாவர். 'எய்தாரும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று.

இதனால், எளியன் என்று எண்ணும் எண்ணத்தினாலன்றிப் பகையால் சிவநிந்தை செய்தலின் குற்றமும், அச்செயலுக்கு உடன் படுதலின் குற்றமும் கூறப்பட்டன.

போகமும் மாதர் புலவி யதும்நினைந்
தாகமும் உள்கலந் தங்குள ராதலின்
வேதிய ராயும் விகிர்தனாம் என்கின்ற
நீதியுள் ஈசன் நினைப்பொழி வாரே. ***#522***

வேதத்தை ஓதும் உரிமை பெற்றமையால் 'வேதியர்' எனப் பெயர்பெற்றிருந்தும் சிலர், மகளிர் இன்பத்தில் பற்று நீங்காமையால், சிவபெருமானை வழிபட நினையாமல், பிற தெய்வங் களை வழிபடுதலில் முனைந்து நிற்பர்.

விளக்கவுரை

'வேதியராயும்' என்பதனை முதலிற் கொள்க. 'மாதர்' என்பது தாப்பிசையாய் நின்றது. 'மாதரது போகத்தையும் புல வியையும் நினைந்து தமது நெஞ்சேயன்றி உடம்பும் அவர் வசப்பட்டு கிடக்கின்றாராதலின், நினைப்பொழிவார்' என்க. விகிர்தனாம் நீதி - உலகியலுக்கு வேறுபட்ட முறைமை. அது, மணிமுடி சூடாது சடைமுடி தாங்குதல், பொன்னாலும் மணியாலும் இயன்ற அணிகளை அணியாது எலும்பும் தலையும் பாம்பும் அணிதல், சந்தனம் குங்குமம் பூசாது சாம்பலைப் பூசிக் கொள்ளுதல், பட்டும் துகிலும் உடுத்தாது தோலை உடுத்தும் போர்த்தும் நிற்றல், யானை குதிரை சிவிகைகளில் ஏறாது

எருதின்மேல் ஏறிவருதல் முதலிய ஒழுகலாறு. இதுபற்றி 'அவன் இகமும் பரமுமாய செல்வம், இன்பம், வெற்றி என்பவற்றை அருள வல்லனல்லன்' என விடுத்து, அவற்றின் பொருட்டு அவனின் வேறாய ஒரு தெய்வத்தையோ, பல தெய்வங் களையோ அன்போடு வழிபடும் அறியாமையுடையார் வேதியருள்ளும் சிலர் உள்ளனர் என்பது பின்னிரண்டடிகளில் கூறப்பட்டது. எனவே, 'இது கற்றறி வுடையார்க்குச் சிவநிந்தையாம்' என்பதும், 'இந்நிந்தையால் அவர் விரும்பிய பயன் கைகூடாமையேயன்றி, அவற்றிற்கு நேர்மாறாய தீங்கு விளைதலும், ஒரோவொருகால் பயன் கைகூடினும் அது நிலை பெறாது இடையே நீங்குதலும் உளவாம்' என்பதும் கூறியவா றாயிற்று. இவற்றிற்கு, அமுதம் வேண்டிக்கடலைக் கடைந்த தேவர்க்கு ஆலகால விடம் கிடைத்ததும், நூறுபரிமேத வேள்வி செய்து இந்திர பதவியை அடைந்த நகுடன் அதனை ஒருநொடியில் இழந்து மலைப் பாம்பாய் நெடுங்காலம் இன்னலுற்றதும் போல்வனவாகிய வரலாறுகள் சிறந்த எடுத்துக் காட்டாதல் அறிக. 'வேதத்தை ஓதும் வேதியர் தாமே அதன் விழுப் பொருளை உணரமாட்டாது இன்ன ராவார் எனின், ஏனையோரைப் பற்றிச் சொல்லவேண்டுமோ' என்ற வாறு. இவ்வேதியர் சுமார்த்தரும், வைணவரும் போல்வார் என்க. 'நீதியுள் நின்று' என ஒருசொல் வருவிக்க.

'சிவபெருமான் முத்தியைக் கொடுப்பவன்' என்பது எங்கும் எடுத்துச் சொல்லப்படுதற்குக் கருத்து, 'முத்தியை அவனன்றிக் கொடுப்பவர் பிறரில்லை' என்பதேயன்றி, அவன் அதனிற் பன் மடங்கு சிறுமையுடையனவாய இகபர நலங்களை அருளமாட்டான் என்பதன்று. இது செயற்கரியவற்றைச் செய்யவல்லார் செயற்கெளிய வற்றைச் செய்தல் தானே பெறப்படும் முறைமை பற்றி விளங்குவதாம். இம் முறைமையை விளக்குதற்கு, 'தண்டா பூபிகா நியாயம்' (தண்டம் - கழி. அபூபம் - பணியாரம். 'பணியாரத்தைப் பூனை வந்து விழுங்காதிருத்தற்கு அதனை ஒரு கழியில் கட்டி வைத்திருக்க, ஒரு பூனை அந்தக்கழியை விழுங்கிவிட்டது என்பது அறியப்பட்டால், பணியாரத்தை விழுங்கியது என்பது தானே அமைதல்போல' என்பதே தண்டா பூபிகா நியாயம். மற்றைப் பூனைகளால் விழுங்கமுடியாத கழியை ஒரு பூனை விழுங்குமாயின், அது மற்றைப் பூனைகளால் விழுங்கத்தக்க பணியாரத்தை எளிதின் விழுங்குதல் தானே பெறப்படுதல் போலப் பிற கடவுளால் தரமுடியாத முத்தியைச் சிவபெருமான் கொடுப்பன் என்றால், அவன் பிற தெய்வங்களால் தரப்படுகின்ற இகபர நலங்களை எளிதின் வழங்குதல் தானே பெறப்படும் என்பது இங்குக் கொள்ளத்தக்கது.) என்றொரு நியாயம் கூறுவர் நியாய நூலார்.

இக்கருத்துப்பற்றியே திருமுறைகளில்,
'சிவபுரம் நினைபவர் திருமகளொடு திகழ்வரே, செயமகள் தலைவரே, கலைமகள் தர நிகழ்வரே, எழில்உரு உடையவர்களே, சிவபுரம் நினைபவர் புகழ்மிகும் உலகிலே, குலன் நிலனிடை நிகழுமே, வழி புவிதிகழுமே' -தி.1ப.21
'அன்பன்அணிஆரூர் - நன்பொன் மலர்தூவ -
இன்பம்ஆகுமே'

'ஐயன்அணிஆரூர் - செய்ய மலர்தூவ -
வையம் உமதாமே' -தி.1ப.91
'நீலமாமிடற் - றாலவாயிலான் - பாலதாயினார் -
ஞாலம் ஆள்வரே'
'அண்ணல் ஆலவாய் - நண்ணினான்றனை - எண்ணியேதொழத் -
திண்ணம்இன்பமே'
'அம்பொன் ஆலவாய் - நம்பனார்கழல் -
நம்பிவாழ்பவர் - துன்பம் வீடுமே' -தி.1ப.94
'அண்ணல் மருதனைப் பண்ணின் மொழிசொல்ல விண்ணுந்தமதாமே'
'எரியார் மருதரைத் தரியா தேத்துவார்
பெரியார் உலகிலே'
'எந்தை மருதரைச் - சிந்தை செய்பவர் - புந்தி நல்லரே'
'மறையார் மருதரை - நிறையால் நினைபவர் -
குறையார் இன்பமே' -தி.1ப.95
'அரவன் அன்னியூர் - பரவுவார் விண்ணுக் -கொருவ ராவரே' -தி.1ப.96
என்றாற்போல்வன பலவும் ஆங்காங்குப் பலபட எடுத்துக் கூறப் படுகின்றன. எனினும் வேதியரேயாயினும், இன்னோரன்ன அருள் முழக்கங்கள் செவியில் ஏறப்பெறுதலும், அவற்றில் தெளிவுண் டாதலும் முன்னைத் தவத்தாலன்றி ஆகாவாம்.
இனி, முத்தி சிவபெருமானால் அன்றிப் பிறரால் தரப் படாமையை, பரசிவன் உணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையும் என்றும் விரவிய துயர்க்கீ றெய்தி வீடுபே றடைதும் என்றல்
உருவமில் விசும்பின் தோலை உரித்துடுப் பதற்கொப் பென்றே
பெருமறை இயம்பிற் றென்னில் பின்னுமோர் சான்றுமுண்டோ.
-கந்த புராணம் - தட்ச காண்டம் - உபதேசப் படலம் , 25 மானுடன் விசும்பைத் தோல்போற் சுருட்டுதல் வல்ல னாயின் ஈனமில் சிவனைக் காணா திடும்பைதீர் வீடும் எய்தும்;
மானமார் சுருதி கூறும் வழக்கிவை ஆத லாலே
ஆனமர் இறையைக் காணும் உபாயமே அறிதல்வேண்டும்.

-காஞ்சிப் புராணம், சனற்குமார படலம், *43*

அவனவ ளதுவெனு மவைதொ றொன்றுமிச்
சிவனலால் முத்தியில் சேர்த்து வாரிலை;
துவளரும் இம்முறை சுருதி கூறுமால்;
இவனடி வழிபடின் முத்தி எய்துவாய்.

-காஞ்சிப்புராணம், திருநெறிக்காரைக் காட்டுப் படலம், *29*

என்றாற்போல்வனவற்றால் நன்கறியப்படும். வீடாவது பிறவி யறுதலேயாகலின், 'அதனைப் பிறவியுடைய வேறு சிலரும் தருவர்' என்றல் பேதைமைப்பாலதேயாம். இவற்றுள், 'சுருதி என்றது அதர் வணவேதம்' என்பது காஞ்சிப் புராண வயிரவேசப் படலத்துள் கூறப்பட்டது.

இதனால், பேதைமையால் சிவபெருமானை இகழ்தலும் குற்றமாதல் கூறப்பட்டது.

*4.22.*குரு நிந்தை கூடாமை

பெற்றிருந் தாரையும் பேணார் கயவர்கள்
உற்றிருந் தாரை உளைவன சொல்லுவர்
கற்றிருந் தார்வழி உற்றிருந் தாரவர்
பெற்றிருந் தாரன்றி யார்பெறும் பேறே. *#523*

கீழ்மக்களாயுள்ளார் ஏனைப் பெரியோரைப் பேணிக் கொள்ளாமையேயன்றித் தம்மைப் பெற்ற தாய் தந்தையரையும் பேணமாட்டார். மற்றும் உறவினராய் உள்ளவரையும் அவர் மனம் நோகத்தக்க சொற்களைச் சொல்லி இகழ்வர்; தாய் தந்தையரையும், உடன் பிறந்தார் முதலிய சுற்றத்தாரையும் தக்கவாற்றால் பேணுதல் ஆகிய சான்றோர் நெறியில் நிற்பவரன்றி நல்லன பலவும் வேறு யாவர் பெறும் பேறாகும்!

விளக்கவுரை

'கற்றிருந்தார்' என்றது 'கற்று வல்ல சான்றோர்' என்றவாறு. 'உற்றிருந்தாரவர்' என்றதில் அவர் பகுதிப் பொருள் விகுதி. 'நல்லன பலவும்' என்பது ஆற்றலாற் கொள்ளக் கிடந்தது.

தாய், தந்தை, தமையன்மார் மாதுலன் முதலிய மூத்த உறவினர் இவரெல்லாம் 'குரவர்' எனப்படுவராகலின், 'அவரை நிந்தித்தல் கூடாது' என்பதனையும் இவ்வதிகாரத்துள் முதற்கண் வைத்துக் கூறினார். இனி 'கல்வி கற்பிக்கும் ஆசிரியர் குரவராதல்' வெளிப்படை. அவரை, 'கற்றிருந்தார்' என்பதனுள் அடக்கினார்; அவர்தாம் எழுத்தறிவிப்பவரும், நூற்பொருள் உணர்த்துபவரும், தொழில் கற்பிப்பவரும் முதலாகப் பல திறத்தராதலின்.

இதனை அடுத்துப் பதிப்புக்களில் காணப்படும் 'ஓரெழுத்தொரு பொருள்' என்னும் பாடல் முழுவதும் யாப்பு வேறுபட்டுக் கிடத்தலின், அது நாயனார் திருமொழியன்றாம். அதன் பொருளும், 'மந்திரம் ஒன்றை' என வரும் திருமந்திரத்துட் பெறப்படுகின்றது.

ஓரெழுத் தொருபொருள் உணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்தங் கோருகம்
வாரிடைக் கிருமியாய் மாய்வர் மண்ணிலே.

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே. ***#524***

கற்புடை மகளிர், சிவனடியார்கள் தத்துவ ஞானம் உடையவர்கள் இவர்களது மனம் வருந்தும்படி அவர்தம் நெறிக்கு அழிவு செய்தவரது செல்வமும், வாழ்நாளும் ஓராண்டுக்குள்ளே அழிந்தொழியும். இஃது, எங்கள் நந்தி பெருமான்மேல் ஆணையாக, உண்மை.

விளக்கவுரை

'பத்தினிகள்' என்பதில் விகுதி தொகுத்தலாயிற்று. தத்துவ ஞானம் நூலானும், அநுபவத்தானும் வருவது. பத்தினிகள் முதலிய மூவரும் நேரே குரவராகாவிடினும், தமது ஒழுக்கத்தால் உலகம் நன்னெறி நிற்கச் செய்தலால் உலக ஆசிரியராதல் பற்றி அவர்கட்குத் தீங்கு செய்வது உலகிற்கே தீங்கு செய்வதாய் முடிதலின், அதனால் விளையும் தீமை பெரிதாயிற்று. சதாநந்தி - சதா ஆநந்தி; எப்பொழுதும் இன்பம் உற்றிருப்பவர்.

இவை இரண்டு திருமந்திரங்களாலும், உபதேச குரவரையே யன்றிப் பிற குரவரை இகழ்தலும் கூடா என்பது கூறப்பட்டது.

மந்திரம் ஒன்றே உரைசெய்த மாதவர்
சிந்தையில் நொந்திடத் தீமைகள் செய்தவர்
பிந்திச் சுணங்காய்ப் பிறந்தொரு நூறுரு
வந்து புலையராய் மாய்வர்கள் மண்ணிலே. ***#525***

மந்திரமாவனவற்றுள் ஒன்றையே உபதேசித்தவ ராயினும், அவரது மனம் நோவத் தீமைகளைச் செய்தவர்கள், இம் மண்ணுலகில் யாவரும் இகழ்ந்து ஒதுக்குகின்ற நாயாய் நூறுமுறை பிறந்து, பின்பு மக்களாய்ப் பிறக்கினும் புலையராய்ப் பிறந்து, இம்மை மறுமைகளில் யாதொரு பயனையும் எய்தாது வாளா இறந்தொழிவர்.

விளக்கவுரை

'ஒருபிறப்பில் குருவை இகழ்ந்தவர் பல பிறப்புக்களில் பலராலும் இகழும் நிலையை அடைவர்' என்பதாம். மந்திரத்தைப் பன்முறை கணித்துப் பயன் பெற்றவரை 'மாதவர்' என்றார். 'சுணங்கன்' என்பது கடைக்குறைந்தது. இத் திருமந்திரத்தின் பாடம் பெரிதும் வேறுபட்டுள்ளது.
இதனால், மந்திர குருவை (கிரியா குருவை) நிந்தித்தல் விலக்கப்பட்டது.
இதன்பின்னர் உள்ள, 'ஈசனடியார்' என்னும் திருமந்திரம் அடுத்த அதிகாரத்ததாம்.

சன்மார்க்க சற்குரு சந்நிதி பொய்வரின்
நன்மார்க்க முங்குன்றி ஞானமுந் தங்காது
தொன்மார்க்க மாய துறையும் மறந்திட்டுப்
பன்மார்க்க முங்கெட்டுப் பஞ்சமு மாமே. ***#526***

ஞான நெறியை உணர்த்துகின்ற ஞானகுருவின் திருமுன்பில், 'பொய், குறளை, கடுஞ்சொல், பயனில சொல்' என்னும் தீய சொற்கள் எவர் வாய்வழியாக நிகழினும் உலகில் நன்னெறி அழிந்து, மெய்யுணர்வும் இல்லாதொழியும். தொன்றுதொட்டு வரும் உலகியல் துறைகளும், மெய்ந்நெறித் துறைகளும் மக்களால் மறக்கப்பட்டுப் பல சமயங்களும் கெட, நாட்டில் பஞ்சமும் உண்டாகும்.

விளக்கவுரை

ஞானநெறி, 'சன்மார்க்கம்' என வழங்கப்படுதலை அறிந்துகொள்க.
'பொய்' என்றது உபலக்கணம்.
இதனால், ஞான குருவை இகழ்தல் பெரிதும் தீமை தருவதாம் என, அது விலக்கப்பட்டது.

கைப்பட்ட மாமணி தானிடை கைவிட்டு
வெய்ப்பட்ட கல்லைச் சுமப்போன் விதிபோன்றும்
நெய்ப்பட்ட பால்இள நீர்தயிர்தான் நிற்கக்
கைப்பிட்டுண் பான்போன்றும் கன்மிஞா னிக்கொப்பே. ***#527***

கன்மி ஞானிக்கு ஒப்பாதல் - அஃதாவது, ஞானிக்கு ஒப்பாகக் கருதி, ஞானகுரு இருக்கவும் அவனை விடுத்துக் கன்மியைக் குருவாகக் கொள்ளுதல், கையில் மாணிக்கம் கிடைத்திருக்கவும் அதனை எறிந்துவிட்டு, வெயிலால் வெதும்பிக் கிடக்கும் பரற்கல்லைக் கையில் எடுத்துச் சுமப்பவன் செயல்போலவும், கையில் நெய்யுள்ள பாலும், இளநீரும், தயிரும் இருக்க அவற்றை உண்ணாமல், பின்புதான் அழிதற்கு ஏதுவாகிய எட்டிப்பழத்தை முயன்று பெற்று உண்பவன் செயல் போலவும் ஆம்.

விளக்கவுரை

ஒப்பு - ஒத்தல். இஃது ஒப்பாகக் கருதிச் செய்யும் செயலின் மேல் நின்றது. கன்மி - 'கன்மமே முத்தி தரும்; ஞானம் வேண்டுவதில்லை' என்பவன். இக்கொள்கையினரை, 'கன்ம காண்டிகள்' என்பர். கன்மி ஞானிக்கு ஒத்தல், சுமப்பான் விதி போன்றும், கைப்பு இட்டு உண்பான் (செயல்) போன்றும் ஆம் என ஒருசொல் வருவித்து முடிக்க.

இதனால், உண்மைக் குரவரது பெருமையை அறியாமையும் குற்றமாதல் கூறப்பட்டது.

*4.23.*மாகேசுர நிந்தை கூடாமை

ஆண்டான் அடியவ ரார்க்கு விரோதிகள்
ஆண்டான் அடியவர் ஐயமேற் றுண்பவர்
ஆண்டான் அடியாரை வேண்டாது பேசினோர்
தாந்தாம் விழுவது தாழ்நர காகுமே. ***#528***

சிவனடியார் உலகில் உள்ளாரில் யார்க்கு என்ன தீங்கு செய்கின்றனர்! அவர்கள் அறவுள்ளம் உடையார், இடுகின்ற பிச்சையை ஏற்று உண்டு போகின்றார்கள். ஆதலின், அவரிடத்து வெறுப்புக் கொண்டு இகழ்ந்து பேசியவர் அடைவது மிகக் கீழான நரகமே.

விளக்கவுரை

'சிவனடியாரை வெறுத்துப் பேசுதற்குக் காரணம், செல்வம் முதலியவற்றால் வரும் செருக்கும், சமயக் காழ்ப்பும் போல்வனவேயன்றிப் பிறிதில்லை' என்றற்கு முதல் இரண்டடிகளைக் கூறினார். 'ஊர்கள்தோறும் அட்டுண்பார் இட்டுண்பார் விலக்கார் ஐயம்' (தி.6 ப.98 பா.2) என்றதும், 'சிவனடியார்க்கு உலகத் தாரோடு உறவினா லாதல், பகையினாலாதல் தொடர்பில்லை என்பது விளக்கியதேயாம்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக உலகியற்றி யான். -குறள், *1062*

என்றதில், 'இரத்தல் இல்வாழ்வார் மேற்கொள்ளும் தொழில்களுள் ஒன்றன்று' என்றதன்றி,

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை. -குறள், *41*

என்புழிக் கூறப்பட்ட இயல்புடைய மூவரை விலக்கியதன்று. இனி,

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை. -குறள், *42*

என்புழித் 'துறந்தார்'என்றது கிளைஞரால் கைவிடப்பட்டவரை. இவரை, 'அனாதைகள்' என்பர். இவர் சிறுமகாரும், கழிமூப்பினரும், 'காணார் கேளார் கால் முடம்பட்டார்' *(*மணிமேகலை, காதை.*13,* வரி.*111)*

முதலியோருமாய், முயற்சி செய்யமாட்டாதவராய் இருப்பவர். இவர் தாமே கிளைஞரால் கைவிடப்படாதவழி. அவரால் வயிறு நிரம்பப் பெறாராயின், 'துவ்வாதவர் வறியார்' எனப்படுவர். 'இவர்க்கும் 'இல்வாழ்வான் துணை' என்றமையால், இவரையும் மேற்காட்டிய 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்' என்னும் குறள் விலக்கியதின்றாம். ஆகவே, இவரையெல்லாம் பொதுப் பட நோக்கியே, 'ஈகை' (குறள் அதிகாரம், 23) என்னும் அதிகாரமும்,

இரப்பாரை யில்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று. -குறள், 1058

என்னும் குறளும் சொல்லப்பட்டனவாம். இவ்வாசிரியரும் 'யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி' (பா. 51) என்றதும் இவரை நோக்கியேயாம்.

இங்ஙனம் நூல் முழுவதையும் முற்றநோக்கி உண்மை உணரமாட்டாதார். 'இங்குக் காட்டியன பலவும் தம்முள் ஒன்றி நில்லாது ஒன்றை ஒன்று விலக்குவனவாய் முரணிநிற்கும்' என்று இகழ்வர். அவர் 'ஏற்பதிகழ்ச்சி, ஐயம் இட்டுண்' (ஆத்திசூடி, 8,9) என்றாற் போல்வனவற்றையும் அன்னவாக வைத்து இகழ்தல் சொல்ல வேண்டுமோ என்பது.

சிவனடியாராகிய மாகேசுரரை நல்விருந்தினராக வரவேற்று ஓம்புவார் சத்திநிபாதர். அவர் உலகத்து அரியராக, இரவலராக வைத்து ஐயம் ஏற்று உண்டலையே கூறினார். ஐயம் இடுவோர் அவரின் மிக்குளதாதல் பற்றி இங்கு 'ஆர்க்கும் விரோதிகள்' என்பது பாடமாயின், 'ஆண்டான் அடியவராய யார்க்கும் விரோதிகளாய் ஐயம் ஏற்றும் உண்பவராய அவ்வடியவரை வேண்டாது பேசினார்' என உரைத்தலன்றிப் பிறவாறுரைத்தல் பொருந்தாமை அறிக. 'தாந் தாம் விழுவது' என்பதில் இரண்டாவது 'தாம்' அசைநிலை.

இதனால், மாகேசுர நிந்தை மாபாதகமாதல் கூறப்பட்டது.

ஈசனடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாயிடும் நம்நந்தி யாணையே. **#529**

சிவனடியாரது உள்ளம் எவ்வாற்றாலேனும் நோகு மாயின். அதற்குக் காரணமாய் உள்ள மண்ணுலக நாடும், அதன் சிறப்புக்களும் அழிதலேயன்றி விண்ணுலக வேந்தன் ஆட்சி பீடத் துடன் மண்ணுலக மன்னன் ஆட்சி பீடமும் அழிந்தொழியும். இஃது எங்கள் நந்திபெருமான்மேல் ஆணையாகச் சொல்லத்தக்க உண்மை.

விளக்கவுரை

இவ்வாறே,
தாம் அடங்க இந்தத் தலம் அடங்கும்; தாபதர்கள்
தாம்உணரில் இந்தத் தலம்உணரும் - தாம்முனியில்
பூமடந்தை தங்காள்; புகழ்மடந்தை போயகலும்;
நாமடந்தை நில்லாள் நயந்து.
எனத் திருக்களிற்றுப்படி(பா.68)யும் கூறிற்று. இதனால், சிவனடியாரது மனம் நோவாமைக் காத்தல் நாடாளும் அரசர்க்கு முதற்கடமையாதல் பெறப்படுதலின், அது பற்றியே நாயனார் முன்னர்,
ஆவையும் பாவையும் மற்றற வோரையும்
தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையும்
காவலன் காப்பவன்; காவா தொழிவனேல்,
மேவும் மறுமைக்கு மீளா நரகமே. -தி.10 பா. 242
என விதித்தார்.
'மதுரையில் ஆளுடைய பிள்ளையாரோடு ஒட்டி வாதில் தோற்ற சமணரை நின்றசீர் நெடுமாறர் கழுவில் ஏற்றியது, அவர்தாமே, 'வாதில் அழிந்தோமாகில் - வெங்கழு வேற்றுவான் இவ் வேந்தனே' (தி.12 பெ.பு ஞானசம், 798) என உடன்பட்டமையை முதன்மையாகக் கொண்டன்று; அதற்கு முன்பே பிள்ளையார் எழுந்தருளியிருந்த திருமடத்தில் இரவில் தீயிட்டுத் திருக்கூட்டத்தார் பலரை உளம் நடுங்கச் செய்த மாபாதகம் அவரையும், தன்னையும், பின்பு தொடராமைப் பொருட்டே'
என்பதையும் 'அஃது அன்னதாகலின் அதனை விலக்கின் தமக்கும் குற்றமாம் என்று கருதியே பிள்ளையார் அரசன் செயலைத் தடுத்திலர்'
என்பதையும் சேக்கிழார்,
மன்னவன் மாறன் கண்டு மந்திரி யாரை நோக்கித்
துன்னிய வாதில் ஒட்டித் தோற்றஇச் சமணர் தாங்கள்
முன்னமே பிள்ளை யார்பால் அனுசிதம் முற்றச் செய்தார்
கொன்னுனைக் கழுவில் ஏற்றி முறைசெய்க என்று கூற.
-தி.12 பெ.பு ஞானசம். 853
எனவும்,
புகலியில் வந்த ஞான புங்கவர் அதனைக் கேட்டும்
இகல்இலர் எனினும் சைவர் இருந்துவாழ் மடத்தில் தீங்கு
தகவிலாச் சமணர் செய்த தன்மையால் சாலும் என்றே
மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடா திருந்த எல்லை.
-தி.12 பெ.பு ஞானசம். 854
எனவும் இனிது விளங்க அருளிச்செய்தார். ஆயினும், அவற்றைச் செவிமடாது, 'பிள்ளையார் வேந்தன் செய்கையை விலக்காதிருந்தமை அவர்க்கு அறமாதல் இல்லை' எனக் கூறிப் பிணங்குவார் உளராயின்,

அவர்க்கு நாம் கடவதொன்றில்லை. தண்டியடிகள் நாயனாரோடு ஒட்டித் தோற்ற சமணரைச் சோழ மன்னன் ஊரை விட்டு அகற்றியது அவர் செய்த தீமையை ஒப்பநாடி அத்தக ஒறுத்ததேயாதல் அறிக. *(புறம், 10)*
இச் சிவாகமப் பொருளை மணிமேகலைக் காப்பியத்துள் புத்தர்க்கு ஏற்றியுரைத்தார் அதன் ஆசிரியர். *(காதை.14, 29, 29, 21, 22)*
இதனால் மாகேசுர நிந்தையால் விளையும் கேடு கூறப் பட்டது.

ஞானியை நிந்திப் பவனும் நலனென்றே
ஞானியை வந்திப் பவனுமே நல்வினை
யான கொடுவினை தீர்வா ரவன்வயம்
போன போழுதே புகுஞ்சிவ போகமே. ***#530***

'சிவஞானியை நிந்திப்பதே நலம்' என்று கருதி நிந்திப்பவனும், அவ்வாறன்றி, 'வந்திப்பதே (வணங்குவதே) நலம்' என்று அறிந்து வந்திப்பவனும் முறையே நல்வினையின் நீங்கித் தீவினையை எய்துபவனும், தீவினையின் நீங்கி நல்வினையை எய்துபவனுமாவர். ஏனெனில், சிவஞானிகட்கு அடியவரான பின்பே எவர்க்கும் சிவபெருமானது திருவருள் கிடைப்பதாகலின்.

விளக்கவுரை

'ஞானி' என்றது கிளைப்பெயர். 'நல்வினை தீவினை தீர்வார்' என்றதனை, மேல் 'நிந்திப்பவன், வந்திப்பவன்' என்றவற்றோடு நிரனிரையாக இயைக்க. 'அவன்வயமாக' என ஆக்கம் வருவிக்க. போதல் - அடைதல். 'ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கன்பில்லார் *(சிவஞானசித்தி. சூ. 12 - 2)* ஆதலின், 'அவன் வயமானபொழுதே புகும் சிவபோகம்' என்றார். இவ் ஏகாரம் பிரிநிலை. சிவனது திருவருளால் கிடைப்பது சிவானந்தமாகலின், அத்திருவருள் புகுதலைச் சிவானந்தம் புகுதலாகவே கூறினார். இங்கு 'நல்வினை, தீவினை' எனப்பட்டவை, சிவ நல்வினை தீவினைகளேயாதலின், சிவ ஞானிகளை வந்திப்பவர் சிவபுண்ணியச் சீலராய் சிவஞானம் பெற்று அதன் வழிச் சிவானந்தத்தை எய்துதலும், சிவஞானிகளை நிந்திப்பவர் சிவாபராதிகளாய் அருநரகும், இழிபிறப்பும் எய்துதலும் பெறப் பட்டன. இதனாலன்றோ,
'நமக்கு உண்டுகொலோ, தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே' -தி.4 ப.101
என அப்பரும் திருவாய்மலர்ந்தருள்வாராயினர்.
இதனால், 'சிவனடியாரை வந்தியாதொழியினும். நிந்தித்தல் ஆகாது' என்பது கூறப்பட்டது.

ஞானம் விளைந்தவர் நம்பிட மன்னவர்
சேனை வளைந்து திசைதொறுங் கைதொழ
ஊனை விளைத்திடும் உம்பர்தம் ஆதியை

ஏனை விளைந்தருள் எட்டலு மாமே. *#531*
சிவஞானம் கிடைக்கப்பெற்ற சிவனடியார்களை விரும்பி வழிபட்டால்,
எவ்விடத்தும் அரசர்கள் தம் படையுடன் வந்து வணங்க,
சிறுபயன்களைத் தருகின்ற தேவர்க்கெல்லாம் முதல்வ னாகிய
சிவபெருமானை அவன் அருளால் அடைந்து பேரின்பம் எய்துதல்
கூடும்.

விளக்கவுரை

'விளைந்தவரை என்னும் இரண்டனுருபு தொகுத்த லாயிற்று. நம்புதல் - விரும்புதல்; அன்புசெய்தல், 'ஊனம்' என்பதும், 'ஏனையது' என்பதும் கடைக்குறைந்து நின்றன. ஊனம் -குறை யுடைது. 'அருளால்' என உருபு விரிக்க. ஈற்றடியில் உள்ள சொற்களை, 'அருளால் எட்டி, ஏனையது விளைதலும் ஆம்' எனப் பின்முன்னாக நிறுத்தி, விகுதிபிரித்துக் கூட்டி உரைக்க. விளைதல் - விளையப் பெறுதல். 'வணங்குவார்க்கு இப்பயனெல்லாம் விளையும்' எனவே, 'வணங்காது பிணங்குவார்க்கு இவற்றின் மறுதலையாய அரச தண்டமும், இருளுலகமும் கிடைக்கும்' என்பது பெறப்பட்டது.
இதனால், மாகேசுர நிந்தை செய்வார்க்கு வரும் குற்றம் மறுதலை முகத்தாற் கூறப்பட்டது.
இங்கு நிற்கத்தக்கதாய இத்திருமந்திரம், பதிப்புக்களில் அடுத்த அதிகாரத்தில் காணப்படுகின்றது.

*4.24.*பொறையுடைமை

பற்றிநின் றார்நெஞ்சிற் பல்லிதான் ஒன்றுண்டு
முற்றிக் கிடந்தது மூக்கையும் நாவையும்
தெற்றிக் கிடந்து சிதைக்கின்ற சிந்தையுள்
வற்றா தொழிவது மாகமை யாமே. *#532*
பற்றறாதவர் உள்ளத்தில் பல்லி ஒன்று உள்ளது; அஃது அவரது
மூக்கையும், நாக்கையும் பற்றிக்கிடந்து, எந்த நேரமும், எவற்றையேனும்
படபடவென்று சொல்லிக்கொண்டிருக்கின்றது. பற்றுக்களைத்
துடைத்தவரது உள்ளத்திலோ பெரிய பொறுமை என்னும் நீர் வற்றாது
நிறைந்து நிற்கின்றது.

விளக்கவுரை

கடுஞ்சொற் பேசுதற்குக் காரணமான வெகுளியை, அடக்கமின்றிப் பலகாலும் படபடத்து ஒலிக்கின்ற பல்லியாக உரு வகித்தார். அது மூக்கையும் நாக்கையும் மூடிக்கிடப்பதாகக் கூறியது, அவை இரண்டுமே எழுத்தொலி புறப்படும் இடமாய் இருத்தல் பற்றி. வெகுளியால் முணுமுணுக்கின்றவர்கட்குப் பேச்சுப் பெரும் பான்மையும் மூக்கின்

துணையோடே நிகழ்தல் அறிக. தெற்றுதல் - துடைத்தல். 'பற்றி நின்றார்' என்றதற்குச் சொல்லெச்சத்தால் வந்தியைந்த 'பற்று' என்பது தானே 'தெற்றுதல், சிதைத்தல். என்ப வற்றிற்கும் செயப்படு பொருளாதல் காண்க. 'காமம், வெகுளி, மயக்கம்' என்னும் முக்குற்றங்களுள் நடுவுநின்ற வெகுளியுளதாயின் ஏனை இரண்டும் நீங்கினவாகா ஆதலின், அவ்விரண்டையும் விட்ட மாகேசுரர் வெகுளியுடையராதல் கூடாது என்பதனை வலியுறுத்தற்கு, வெகுளி, காமமும், மயக்கமும் உடையாரையே பற்றிநின்று கடுஞ் சொற் பிறப்பித்தலை உடன் கூறினார். அதனானே, மாகேசுரர் கடுஞ் சொற் கூறலாகாமையும் பெறப்பட்டது. ஆளுடைய பிள்ளையார் சமணரால் இடப்பட்ட தீயைப் 'பாண்டியன்பால் செல்க' என வெஞ் சொற் சொல்லியது' மாகேசுரராய அவர்க்குத் தகுவதோ' என ஐயுறாமைப் பொருட்டன்றே அவர், 'செல்க' என வாளா கூறாது, 'பையவே செல்க' எனப் பணித்தமையை எடுத்துக்காட்டி, 'பையவே ' என்றாராயினும் 'செல்க' என்றது என்னை என்பார்க்கு.

'... ... ... அரசன்பால் அபராதம் உறுதலாலும்
மீண்டுசிவ நெறியடையும் விதியி னாலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடையன் ஆத லாலும்
தீப்பிணியைப் பையவே செல்க என்றார்'
-தி.12 பெ.பு.ஞானசம். 705

என விளக்கியருளினார் சேக்கிழார். அப்பர் பெருமான், தம்மை நீற்றறையில் இடுதல் முதலியவற்றைச் செய்தும், செய்வித்தும் நின்றார் மாட்டு வெகுளுதலும், வெஞ்சொற் சொல்லுதலும் இன்றிவாளா அமைந்திருந்தமை, மாகேசுரரது பொறையுடைமைக்கு எல்லையாய் அமைந்ததோர் எடுத்துக்காட்டாதல் அறிக.

'வற்றாதெழுவது' என்றது குறிப்புருவகம். 'வற்றா தொழிவது' என்பது பாடம் அன்று. பயிர்வளர்வதற்கு நீர்போலச் சிவபத்தி வளர்வதற்குப் பொறை யுடைமை இன்றியமையாதததாதலின் அதனை நீராக உருவகம் செய்தார்.

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தைவித்திப் பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப்பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகில் சிவகதி
விளையு மாறே. -தி.4 ப.76 பா.2

என்று நாவுக்கரசரும் அருளிச்செய்தார்.
இதனால், 'மாகேசுரர் பிறர் செய்யும் மிகையைப் பொறுத்துக் கொள்ளல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.
இதன் பின் பதிப்புக்களில் காணப்படும், 'ஓலக்கம் சூழ்ந்த' என்னும் திருமந்திரம் சிறிது வேறுபட முன்புவந்துள்ளதே. *(பா. 91).*

வல்வகையால்உம் மனையிலும் மன்றிலும்
பல்வகை யாலும் பயிற்றிப் பதஞ்செய்யும்
கொல்லையில் நின்று குதிகொள்ளுங் கூத்தனுக்
கெல்லையி லாத இலயமுண்டாமே. ***#533***

காட்டில் ஆடுகின்ற கூத்தனுக்கு அளவு கடந்த பொறுமையே பொருளாக அமைவது. அதனால், மாகேசுரர்களே, நீவிர் வாழும் இடத்திற்கு உள்ளும், புறம்பும் இயன்ற அளவில் பலவகையாலும் உள்ளத்தைப் பொறுமையோடு இருக்கப் பழக்கிப் பக்குவப்படுத்துங்கள்.

விளக்கவுரை

மூன்றாம் அடிமுதலாகத் தொடங்கி உரைக்க. செய்யும் - செய்யுங்கள். பயிற்றிப் பதஞ் செய்தற்கு, 'உள்ளம்' என்னும் செயப்படுபொருள் வருவித்துக்கொள்க. 'கொல்லை, காடு' என்பன ஒருபொருட் சொற்கள். இலயம் - ஒடுக்கம்; பொறுமை. உண்டு ஆம் - உள்ளதாய் (பொருளாய்) நிற்கும். பொருண்மையாவது உளதாந் தன்மையாதலின், பொருளை 'உள்ளது' என்றார். இங்ஙனம் அன்றிக் கிடந்தவாறேகொண்டு, 'பதம் செய்தால் உம்மிடத்துக் கூத்தனுக்கு எல்லையில்லாத ஒற்றுமை (இரக்கம்) உண்டாகும்' என உரைத்தலும் ஆம். வெகுளியுடைய உள்ளத்தில் அன்பும், அருளும் தோன்றா ஆதலின், அன்பையும், அருளையும் பொருளாக விரும்பும் சிவ பெருமான் அதற்கு முதலாகிய பொறையைப் பொருளாக விரும்புவன் என்பது உணர்க.
இதனால், மகேசுரனுக்கு இனிதாவனவற்றுள் பொறை யுடைமை முதலதாதல் கூறப்பட்டது.
இவ்வாறு, பொறையுடைமையை விதிக்கவே, அதனடியாகப் பிறக்கும் இன்னா செய்யாமையும் விதிக்கப்பட்டதாம். புலால் உண்ணாமையாகிய இயைபு பற்றி, கொல்லாமை முன்பே விதிக்கப் பட்டது.

4.25.பெரியாரைத் துணைக்கோடல்

ஓடவல் லார்தம ரோடு நடாவுவன்
பாடவல் லாரொலி பார்மிசை வாழ்குவன்
தேடவல் லாரொலி பார்மிசை வாழ்குவன்
கூடவல் லாரடி கூடுவன் யானே. ***#534***

சிவபிரானை அடைய விரும்பிய யான், பத்தி காரணமாக, அவன் வெளிப்படும் இடங்கட்கெல்லாம் ஓடியும், அவனையே புகழ்ந்து பாடியும் இன்னோரன்னவற்றால் அவனை அடையவல்லாரது அடிநிழலைப் பிரியாது சேர்ந்திருப்பேன்.

விளக்கவுரை

எனவே, 'அச் சேர்ச்சிதானே அவனை அடை விக்கும்' என்பதாம். 'ஓடவல்லார், பாடவல்லார்' என்றதும் கூட வல்லார் கூடுமாற்றை விதந்தவாறேயாம். ஆகவே, 'நடாவுவன், வாழ்குவன்' என்பனவும். 'கூடுவன்' என்றதனை வகுத்தோதியவாறாம். 'ஓட வல்லாராகிய தமர்' என்க. 'சிவனையடைய விரும்புவார்க்கு அவனடியவரே உறவினர்' என்பதை'

'உறவாவார் உருத்திரபல் கணத்தினோர்கள்'

-தி.6 ப.98 பா.4

என்பதனாலும் அறிக. 'ஓலியொடு' என உருபு விரிக்க. ஒலியொடு வாழ்தலாவது தாமும் அவரொடு சேர்ந்து பாடுதல். பாடவல்லாரை. 'பரமனையே பாடுவார்'*(தி.7 ப.39 பா.10)* எனத் திருத்தொண்டத் தொகையுள் அருளிச் செய்தமை காண்க. 'பாடவல்லாரொடு' என்றே பாடம் ஓதுதலும் ஆம். தேடுதல் - அடையுமாற்றாலெல்லாம் முயலுதலும். 'ஓட வல்லார்' முதலிய நான்கும், பெரியாராவாரது இயல்பு இவை என்றவாறாம்.

பாடிற் றிலேன்;பணி யேன்; மணி நீயொளித்
தாய்க்குப்பச்சூன்
வீடிற் றிலேனை விடுதிகண் டாய்; வியந்
தாங்கலறித்
தேடிற் றிலேன், சிவன் எவ்விடத் தான் எவர்
கண்டனரென்
றோடிற் றிலேன்;கிடந்துள்ளுரு கேன்;நின்
றுழைத்தனனே. *-தி.8 நீத்தல், 45*

என்றதனையும் நோக்குக. இங்கு, கூடவல்லார் அடி கூடுவன் என்றாற் போலவே,

'கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே' *-தி.6 ப.96 பா.10*

'... ... ... ஆதியை நாளும்
இறைவன் என்றடி சேர்வார்
எம்மையும் ஆளுடை யாரே' *-தி.7 ப.75 பா.1*

என்றற்றொடக்கத்தனவாக வருவன பலவற்றுள்ளும் அடியார்க்கு அடியவராதலே சிறந்தெடுத்துப் பேசப்படுதல் அறிக. 'யான்' என்றது

இசையெச்சத்தால், 'சிவபிரானை அடைய விரும்பிய யான்' எனப் பொருள் தருதல் காண்க.
இதனால், 'பெரியாரைத் துணைக்கோடலே இறைவனை அடைவிக்கும்' என்பது கூறப்பட்டது.

தாமிடர்ப் பட்டுத் தளிர்போல் தயங்கினும்
மாமனத் தங்கன்பு வைத்த திலையாகும்
நீயிடர்ப்பட்டிருந் தென்செய்வாய் நெஞ்சமே
போமிடத் தென்னொடும் போதுகண் டாயே. *#535*

நெஞ்சே, நீ உன்னை அகப்படுத்துகின்ற துன்பத்தில் அகப்பட்டுத் தீயில் வீழ்ந்த தளிர்போல் வாட்டமுற்றாலும் சிவபெரு மானிடத்து அன்பு வைத்திலை. இவ்வாறு அத்துன்பத்திலே இருந்து நீ என்ன செய்யப் போகின்றாய்? நான் போகின்ற இடத்திற்கு நீயும் என்னோடு வா.

விளக்கவுரை

'தாவும்' என்னும் பெயரெச்சத்து உகரம் கெட்டது. தாவுதல் - அகப்படுத்தல். 'தளிர்போல்' என்றாராயினும், தீயில் வீழ்ந்த தளிர்போல்' என்றல் கருத்தாதல் அறிக. நெஞ்சை முன்னிலைப் படுத்தமையின், அதற்கும் ஒரு மனம் இருப்பது போலக் கூறினார். 'என் செய்வாய்' என்றது, 'வேறு பயன் என்ன பெறப் போகிறாய்' என்றவாறு. 'பெறுவது ஒன்று இன்மையால் என்னொடு வருதலால் இழப்பில்லை' என்பதாம். 'சிறியார் பெரியாரை அணுக வாரார்' என்பது தோன்றுதற்குப் 'பெரியோரிடத்து' என்னாது, 'போமிடத்து' எனப் பொதுப்படக் கூறினார். 'போந்தால் அத்துன்பம் நீங்கும் 'என்பது குறிப்பெச்சம். 'கண்டாய்' முன்னிலை அசை. இத் திருமந்திரத்துள் மூன்றாம் அடி உயிர் எதுகை பெற்றது.
இதனால், 'பெரியாரைத் துணைக் கொள்வார்க்குத் துன்பம் நீங்கும்' என்பது கூறப்பட்டது.

அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிவதத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன் கூடல் பேரின்ப மாமே. *#536*

அறிவுடைய பெரியோர், தேவர்க்குத் தலைவ னாகிய சிவபிரானை அடையும் வழிகளை யெல்லாம். ஆராய்ந்து; அவற்றானே அவனை அடைவர். பின்னர் அவனேயாய் நிற்பர், ஆதலின், தாமும் நன்னெறியில் உறைத்துநின்று, பிறரையும் அவ்வாறு நிற்கச்செய்து உலகிற்கு நயம்புரிகின்ற பெரியாருடன் கூடுதலே பேரின்பம் எய்துவதற்கு வழியாகும்.

விளக்கவுரை

'அறிவார் செறிவார்' எனவும், 'நெறி நின்று' எனவும் இயையும். 'ஆதலின்' என்பது சொல்லெச்சம். பேரின்பத்தைத் தருவதனைப் பேரின்பம் என்றார்.
இதனால், பெரியாரைத் துணைக்கோடல் பேரின்பத்தைத் தருதல் காரணத்துடன் கூறப்பட்டது.

தாழ்சடை யான்றன் தமராய் உலகினிற்
போர்புக ழால்எந்தை பொன்னடி சேருவார்
வாயடையா உள்ளந் தேர்வார்க் கருள்செய்யுங்
கோவடைந் தந்நெறி கூடலு மாமே. *#537*

நீண்ட சடையை உடைய சிவபெருமானுக்கு அடி யவராயினமையினால் உலகம் முழுதும் போர்த்த புகழை உடையவ ராய், அப்பெருமானது அழகிய திருவடியையன்றிப் பிறிதொன்றையும் அடைய விரும்பாதவராகிய அவரிடத்துச் சென்று சேர்ந்து உள்ளம் தெளிவடைபவரிடத்துச் சிவபெருமான் அருளுடையவனாவன். அதனால், அவன் அருள் புரியும் நெறி வாய்க்கப் பெற்று. அவனோடு ஒன்றுதலாகிய பேற்றினையும் பெறுதல் கூடும்.

விளக்கவுரை

'தார் சடையான்' என்பது பாடம் அன்று. 'போர் புகழ்', வினைத்தொகை. 'வாய்' என்றது ஏழனுருபு. 'கோ அருள் செய்யும்' என மாற்றுக. 'அந்நெறி அடைந்து (அவனைக்) கூடலும் ஆம்' என்க. இத்திருமந்திரத்துள் இன எதுகை வந்தது.
இதனால், பெரியாரைத் துணைக்கோடல், பிரானருளைப் பயத்தல் கூறப்பட்டது.

உடையான் அடியார் அடியா ருடன்போய்ப்
படையா ரழலான் பதிசென்று புக்கே
கடையார நின்றவர் கண்டறி விப்ப
உடையான் வருகென ஓலமென் றாரே. *#538*

சிவபெருமான் அடியவர் யாவரும் தம்மைப் போலும் அடியாருடன் கூடியே சிவபுரத்தை அடைந்து அதன் வாயிலில் நின்றனர். அப்பொழுது அவ்வாயிலில் உள்ள கணங்கள் சிவபெருமானிடம் சென்று, 'அடியவர் குழாமாக வந்துள்ளனர்' என்று விண்ணப்பிக்க, அப்பெருமான், 'அவர்கள் உள்ளே வருவாராக' எனத் திருவாய் மலர்ந்தருள, அவ்வருளிப்பாட்டினை அக் கணங்களால் உணர்ந்து, 'முறையோ' என்று ஓலமிட்டுச் சென்று தம் குறை தீர்ந்தனர்.

விளக்கவுரை

என்றது, 'சிவனடியார்கள் பலரும் பெரியாரைத் துணைக்கொண்டே அவனை அடைந்தார்கள்' என்றபடி இதற்குச் சேரமான்பெருமாள் நாயனார் வரலாறு சிறந்த எடுத்துக்காட்டாகும். படை - சூலம். 'படையும், ஆரழலும் உடையவன்' என்க. 'புக்கு, அறிவிப்ப' என்னும் எச்சங்கள் இரண்டும், 'என்றார்' என்பதனோடு முடிந்தன. அடியாருடன் புக்கே' என்ற ஏகாரம், தனித்துப் புகாமையை விளக்கி நின்றது. இதனால், சிவனை அடைதற்கு அவனை அடைந்த பெரியாரைத் துணைக்கோடல் இன்றியமையாததாதல் கூறப்பட்டது.

அருமைவல் லான்கலை ஞானத்துள் தோன்றும்
பெருமைவல் லோன்பிற விச்சுழி நீந்தும்
உரிமைவல் லோன் உணர்ந் துழி யிருக்கும்
திருமைவல் லாரொடு சேர்ந்தனன் யானே. ***#539***

எல்லாம் வல்லவனாகிய சிவபெருமானை உணர்த் தும் நூலறிவினால் வருகின்ற பெருமையை உடைய கலைஞன், காலக் கழிவின்கண் பிறவிக் கடலைக் கடந்து சிவபெருமான் திருவடியை அடைவான். அந்நூலறிவைத் தன தாக்கிக் கொள்ளும் அனுபூதிமான், அப்பொழுதே சிவனைப் பெற்று, உலகம் உள்ளளவும் வாழ்வான். ஆகையால் சிவமே பெறும் திரு நெறியொழுக்கம் வல்ல சிவானுபூதிச் செல்வரோடேயான் சேர்ந்திருக்கின்றேன் *(தி.8 திருச்சதகம்)*.

விளக்கவுரை

அருமை வல்லான் - பிறரால் ஆகாதவற்றையும் செய்ய வல்லவன்; சிவபெருமான். வல்லான் கலை என்னும் ஆறாவதன் தொகை 'வனைகலத்தது திகிரி' என்பதுபோல, செயப்படுபொருள் ஆகிய காரகத்தின்கண் வந்தது. 'ஞானத்துள்' என்றது வேற்றுமை மயக்கம். 'தோன்றும்' என்றது எச்சம். 'நீந்தும், இருக்கும்' என்ற செய்யுமென் முற்றுக்கள் எதிர்காலம் உணர்த்தி நின்றன. 'ஆகையால்' என்பது சொல்லெச்சம். 'திருமை' என்பதில் 'மை' உடையராந் தன்மை குறித்து நின்றது. 'யானே' என்ற பிரிநிலை ஏகாரம் 'வல்லாரொடு' என்பதனோடு பிரித்துக் கூட்டப்பட்டது. அதனால், 'அவரொடு சேர்தல் பெரும்பயன் உடைத்தாதல்' விளங்கிற்று.

இதனால், 'பெரியாருள்ளும் மிகப் பெரியாரைத் துணைக் கொள்ளுதல் பெரும்பயன் தரும்' என்பது கூறப்பட்டது.

இங்கு உரைத்தவாற்றானே இறுதியிரண்டு அதிகாரங்களும் பொது அறம் ஆகாது ஈண்டே கூறுதற்குரிய சிறப்பறம் ஆதல் அறிந்துகொள்க.

மூன்றாம் தந்திரம்

5.1.அட்டாங்க யோகம்

உரைத்தன வற்கரி ஒன்று முடிய
நிரைத்த இராசி நிரைமுறை எண்ணிப்
பிரச்சதம் எட்டும் முன்பேசிய நந்தி
நிரைத்த இயமம் நியமஞ்செய் தானே. ***#540***

கணிநூலில் *(சோதிட நூலில்)* சொல்லப்பட்ட வரிசையான பன்னிரண்டு இராசிகளையும் யாடும் *(மேடமும்)*, அரிமாவும் *(சிங்கமும்)* முதலாய் நிற்பத் தொடங்கி முடியும் வகைகளில் முறையானே எண்ணி யோக உறுப்புக்கள் எட்டனையும் முன்பு உணர்த்தியருளிய நந்திபெருமான், அவைகளில் முறையான விலக்கு விதிகளை அருளிச் செய்தார்.

விளக்கவுரை

வற்கு - யாடு. பன்னிரண்டு இராசிகளை எண்ணும் பொழுது மேடம் முதலாக எண்ணுதலே யன்றி, சிலவற்றிற்குச் சிங்கம் முதலாக எண்ணுதலும் உளதாதலின், 'வற்கு அரி ஒன்று முடிய' என்றார். ஒன்று முடிய - ஒன்றாகத் தொடங்கி முடிய. 'நிரைத்த இராசி' என்றதனை, 'உரைத்தன' என்றதன் பின்னர்க் கூட்டுக. 'இராசியை எண்ணி' என்றது, யோக நூற்குக் கணிநூல் துணையாக நிற்றல் கூறியவாறு. பிராசாதம் - யோகம்; அது, 'பிரச்சதம்' என மருவி நின்றது. யோக உறுப்புக்கள் எட்டு, பின்னர்க் கூறப்படும். 'இயமம், நியமம்' என்பன இங்கு யோக உறுப்புக்களைக் குறியாது 'விலக்கு, விதி' என்னும் பொருளவாய் நின்றன.

இதனால், யோகப் பயிற்சி, கணிநூல் கூறும் கால இயல்பை நோக்கி அதற்கேற்பச் செய்யப்படுதலும், யோகத்தின் உறுப்புக்கள் எட்டாதலும் கூறப்பட்டன.

செய்த இயம நியமஞ் சமாதிசென்
றுய்யப் பராசத்தி உத்தர பூருவம்
எய்தக் கவச நியாசங்கள் முத்திரை
எய்த வுரைசெய்வன் இந்நிலை தானே. ***#541***

மேற்கூறியவாறு நந்திபெருமான் அருளிச்செய்த விலக்கு விதிகளால் சமாதி நிலையை அடைந்து யாவரும் உய்தற் பொருட்டு, ஞானம் இறுதித் தந்திரங்களில் வர நிறுத்தி, முன்னே உள்ள சில தந்திரங்களில் கிரியைகளாகிய கவசம், நியாசம், முத்திரை முதலியவைகளுடன் யோக நெறியையும் கூறுவேன். 'இயம நியமத்தால்' என உருபு விரிக்க.

விளக்கவுரை

'உத்தரம் பராசத்தி எய்த, பூருவம் கவசம் நியாசங்கள் முத்திரை இந்நெறி எய்த உரைசெய்வன்' எனக் கூட்டுக. ஞானமாவது திருவருளே யாதலின், 'பராசத்தி' என்றார். 'முத்திரையோடு' என உருபு விரிக்க. 'இந்நிலை' என்றது, மேல் 'பிரச்சதம்' எனக்கூறிய யோகத்தை. இதனால், சரியை கிரியா யோகங்களாகிய தவங்கள் ஞானத்திற்குச் சாதனமாதல் கூறப்பட்டது.

அந்நெறி இந்நெறி என்னாதே அட்டாங்கந்
தன்னெறி சென்று சமாதியி லேநின்மின்
நன்னெறி செல்வார்க்கு ஞானத்தில் ஏகலாம்
புன்னெறி ஆகத்திற் போக்கில்லை யாகுமே. ***#542***

'நாம் கொண்ட நெறி நன்றோ, இது வல்லாத பிறிதொரு நெறி நன்றோ' என்று ஐயுற்று அலமராது, எந்நெறிக்கும் வேண்டப்படுவதாகிய அட்டாங்கத்தை உடைய யோக நெறியிலே சென்று, உம்மால் விரும்பப்படுகின்ற பொருளிலே உள்ளம் ஒடுங்குங்கள். இவ்வாறு ஒடுங்கும் நன்னெறியில் நிற்பவர்க்கு ஞானத்தை எளிதில் தலைப்படுதல் கூடும். பின்பு அந்த ஞானத்தின் பயனாகப் பிறவியாகிய இழி நெறியிற் செல்லுதல் இல்லையாம்.

விளக்கவுரை

யோகம் மெய்ந்நெறியாளர் பலர்க்கும் வேண்டப் படுவது ஆதலின், அவர் அனைவர்க்கும் பொதுவாயிற்று. புறத்துச் சென்று அலமந்த மனம் அவ்வலமரல் நீங்கி ஒருக்கம் உற்றபின், பொரு ளியல்புகள் எளிதில் உள்ளவாறு விளங்குமாகலின், 'இந்நன்னெறி செல்வார்க்கு ஞானத்தில் ஏகல் ஆம்' என்றார். 'ஆம்' என்றது எளிதிற் கூடும் என்றவாறு. 'பிற நெறிகளால் பொருளியல்பு உள்ள வாறு விளங்குதல் அரிது' என்பதை விளக்கவே, 'இந்நெறி அந்நெறி என்னாது' என முதற்கண் கூறினார். 'போலும்' என்பது 'போன்ம்' என நிற்றல்போல், 'நில்லும்' என்பது உம்மையுள் உகரங்கெட, 'நின்ம்' என நின்றது. 'நின்மின்' என்பது பாடமாயின், 'இந்நன்னெறி' எனச் சுட்டு வருவிக்க. ஆகம் - உடம்பு. இதனால், ஞானத்திற்குச் சிறந்த வழி யோகமாதல் கூறப் பட்டது.

இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணாயா மம்பிரத்தி யாகாரம்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறும் அட்டாங்க மாவது மாமே. ***#543***

அட்டாங்கம் (யோகத்தின் எட்டுறுப்புக்கள்) ஆவன, 'இயமம், நியமம், ஆதனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி' என்பன.

விளக்கவுரை

'எண்ணிலா ஆதனம்' என்றதனால், 'ஆதனங்கள் பல' என்பதும், 'நயமுறும் பிரணாயாமம்' என்றதனால், 'பிரணா யாமமே மனத்தின் அலமரலாகிய இன்பத்தைத் தரும்' என்பதும், 'சய மிகு தாரணை' என்றதனால், 'தாரணை கைவரப் பெற்றவரே மனத்தை அடக்குதலில் வெற்றிபெற்றவராவர்' என்பதும் பெறப்படும். நயம் - இன்பம். சயம் - வெற்றி. அயம் -குதிரை. அயம்உறும் - குதிரை அடங்கப்பெறுகின்ற. 'குதிரை' என்பது, உவம ஆகுபெயராய் வேகம் மிக்க மனத்தைக் குறித்தல் யோகநூல் வழக்கு. குதிரைக்கு வடமொழி யில் 'வாசி' என்பது பெயராகையால் அஃது அடங்குதற் பொருட்டுச் செய்யப்படும் யோகம் 'வாசி யோகம்' எனப்படுகின்றது.

இதனால், யோகத்தின் எண்வகை உறுப்புக்களும் தொகுத்து உணர்த்தப்பட்டன. இவை எட்டும் இங்குக் கூறிய முறையானே முதற் படி, இரண்டாம்படி முதலியவாய் அமையும் என்பது உணர்ந்து கொள்க.

5.2.இயமம்

கொல்லான்பொய் கூறான் களவிலான் எள்குணன்
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் நியமத் திடையில்நின் றானே. *#544*

கொல்லாமை, பொய்யாமை, விருப்பு வெறுப்புக்கள் இன்மை, கரவாமை, மாசின்மை, கள்ளுண்ணாமை, காமம் இன்மை, என்னும் பத்தனையும் முற்ற உடையவனே இயம யோகம் கைவரப் பெற்றவனாவான்.

விளக்கவுரை

எனவே, 'யோகியாக வேண்டுவான், முதற்கண் இந்நிலையை முற்றப்பெறுதல் வேண்டும்' என்பதும், 'முற்றப் பெறாத வழி, முற்றுப்பெறுமாற்றின் முயலுதல் வேண்டும்' என்பதும் பெறப் பட்டன. செய்யுட்கு ஏற்பச் சிலவற்றை உடம்பாட்டு முகத்தாற் கூறினா ரேனும், எல்லாவற்றையும் எதிர்மறையாகக் கூறுதலே கருத்தாம்; என்னை? 'இயமம்' என்பதற்கு 'விலக்கியன ஒழிதல்' என்பதே பொருளாதலின். இவற்றுள், திருவள்ளுவர், 'கொல்லாமை, பொய்யாமை, (வாய்மை) கள்ளாமை, வெகுளாமை, காமம் இன்மை, (கூடா ஒழுக்கம் இன்மை) என்னும் ஐந்தையே துறவறத்துள் எடுத்தோதி, கரவாமையை (ஈகையை) இல்லறத்துள்ளும், 'நிரம்ப உண்ணாமை, (மருந்து) கள்ளுண்ணாமை' என்னும் இரண்டனையும் பொருட் பாலுள்ளும் எடுத்தோதினார். அவை முறையே பொருளுள்ள வழி யும், உடல் நலம் நோக்கியவழியும்

வேண்டப்படுவனவாதல் பற்றி.
அவர் கூறிய 'வெஃகாமை, கள்ளாமை' என்பவற்றுள் வெஃகாமை பொருள் பற்றியே நிற்பது. கள்ளாமை பொருளன்றியும் புகழ், நூற்பொருள், மெய்ப்பொருள் உணர்வு முதலியன பற்றியும் நிற்பது. புகழ் முதலியவற்றைத் தாமே தலைவராய் நின்றும், வழிபட்டுக் கொள்ளாது இகலுரை கூறியும் கொள்ளக் கருதுதலும், பிறவும் கள்ளல் எனப்பட்டன. இஃது உணரமாட்டாதார், 'கள்ளாமை இல்லறத்துள்ளும், வெஃகாமை துறவறத்துள்ளுமாக மாறிக் கூறற்பாலன' எனத் தாம் வேண்டுமாறே கூறிக்கொள்வர்.
இனி, விருப்பு வெறுப்பின்மையை, 'வேண்டுதல், வேண்டாமை இலானடிசேர்ந்தார்' *(குறள், 4)* என்பதனுள்ளும், மாசின்மையை, 'மாண்டார் நீராடி'*(குறள், 278)* என்பதனுள்ளும் அவர் உய்த்துணர வைத்தமை அறிக.
வரையறையின்றிக் கிடப்பனவற்றை யாதானுமோராற்றால் வரையறைப்படுத்துக் கூறுதலே நூல்கட்கு இயல்பாகலின், இங்குப் பத்தினையே எடுத்துக் கூறினாராயினும், இவற்றோடு எண்ணத்தக்க பிறவும் கொள்ளப்படும் என்க. வரையறை இல்லவற்றை வரையறைப் படுத்தலை, 'சிறப்புடைப்பொருளைத்தான் இனிது கிளத்தல்' *(*தொல். சொல். சேனாவரையம் *33)* என்பர். இவ்வாறே தொல்காப்பியனார் சிறப்புடையவற்றைக் கிளந்தோதி, ஏனையவற்றை, 'பிறவும்' எனப்புறனடை தந்து போதலை அவர் நூலுள் ஆங்காங்குக் கண்டுணர்க. நாயனார் இங்குப் 'பத்து' என்று தொகைகொடாமை கருதத்தக்கது.
எள்கு உணன் - மறுக்கின்ற உணவை உடையான். திருவள்ளுவரும் குறைய உண்டலை, 'மறுத்துண்டல்' *(குறள், 945)* என்பர். எள் குதல் - மறுத்தல். 'உணன்' என்பது, 'உண்' என்னும் முதனிலைத் தொழிற் பெயர் அடியாகப் பிறந்த பெயர். 'ஊணன்' எனப் பாடம் ஓது தலும் ஆம். 'எண்குணன்' என்பது பாடம் அன்று. 'நல்லான்' என்றது, இங்கு, 'பொறுமை உடையான்' என்னும் பொருட்டாயும் 'அடக்கம்' என்றது, 'அடக்குதல்' என்னும் பொருட்டாயும் நின்றன. 'நல்லனாய்' என்னும் ஆக்கமும், 'வெகுளியை' என்னும் செயப்படு பொருளும் வருவித்துக்கொள்க. நடு - நடுவு நிலைமை. இதனை, 'சமநிலை' எனவும், 'சாந்தம்' எனவும் கூறுப. செய்தல், தனதாகப் பெறுதல்.

5.3.நியமம்

ஆதியை வேதத்தின் அப்பொரு ளானைச்
சோதியை அங்கே சுடுகின்ற அங்கியைப்
பாதியுள் மன்னும் பராசத்தி யோடுடன்

நீதி யுணர்ந்து நியமத்த னாமே.

தூய்மை அருளூண் சுருக்கம் பொறைசெவ்வை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமம் களவு கொலையெனக் காண்பவை
நேமியீ ரைந்து நியமத்த னாமே. #545

சிவபெருமானைச் சத்தியோடு உடனாய் நிற்பவனாக உணர்பவனே நியமத்தில் நிற்க வல்லவனாவான்.

விளக்கவுரை

'சிவபெருமானது ஒறுக்கும் ஆற்றலையும், அருளும் ஆற்றலையும் உணர்பவனே இயம நியமங்களில் நிற்க வல்லவ னாவான். ஆயினும், இயமத்தையும் அன்பின் வழிக்கொள்ளுதலே சிறப்பு என்பார் இதனை இங்குக் கூறினார். இயமம் இறைவனது ஒறுப்பிற்கு அஞ்சும் அச்சத்தினாலும், நியமம் அவனது அருளை விரும்பும் அன்பினாலும் ஆகற்பாலனவாதலை அறிந்துகொள்க.

'அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ' -தி.5 ப.23 பா.9

என அப்பரும் அருளிச்செய்தார்.

வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின் - வஞ்சித்த
எங்கும் உளன் ஒருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு.

என்றார் குமரகுருபர அடிகள். அங்கி - அக்கினியாய் நிற்பவன். நீதி - நடுவுநிலைமை; அஃதாவது பொல்லார்க்கும், நல்லார்க்கும் தெறலும், அளியும் அவரவர் செயலுக்குத் தக்காங்கு செய்தல். உடன் நீதி - உடனாய் நின்று செய்யும் நீதி. 'அளி, தெறல் இரண்டும் கருணையே' என்றற்கு, பராசத்தியோடு உடனாய் நிற்றலை எடுத்தோதினார். இதனால், இயம நியமங்கள் வருமாறு கூறப்பட்டது.

இதன்பின் பதிப்புகளில் காணப்படும், 'தூய்மை அருளூரண் சுருக்கம்' என்ற பாடல் இயமத்தையே கூறுதலானும், அதன் பொருள் மேலே, 'கொல்லான் பொய் கூறான்' என இயமத்துள் கூறப்பட்டமையானும், மூன்றாம் அடிப் பொருத்த மற்றதாகக் காண்கையிலும் அது பிறர் பாடலாதல் அறியப்படுகின்றது.

தவம்செபம் சந்தோடம் ஆத்திகம் தானம்
சிவன்றன் விரதமே, சித்தாந்தக் கேள்வி,
மகம்சிவ பூசைஒண் மதிசொல் ஈரைந்து
நிவம்பல செய்யின் நியமத்த னாமே. #546

தவம் முதலாக மதி ஈறாகச் சொல்லப்பட்ட பத்தினையும் நியமமாகக் கொண்டவன் நியம யோகியாவான்.

விளக்கவுரை

தவம், நெறிப்பட்ட வாழ்க்கை. செபம், வாய்ப்புப் பெற்றுழி மந்திரங்களை மிகுதியாகக் கணித்தல், ஆத்திகம், நூல்களில் சொல்லப்படும் கடவுள், இருவினை, மறுபிறப்பு, துறக்க நிரையங்கள் உள்ளன என உணரும் உணர்வு. சந்தோடம், 'உள்ளது போதும்' என்னும் உள்ள நிறைவு. தானம், பொருளை நல்வழியில் ஈட்டி, உயர்ந்தோர்க்குக் கொடுத்தல். சிவன் விரதம், சிவனுக்குரிய சிறப்பு நாள்களில் தவச்செயல்களை மிகச் செய்தல். சித்தாந்தக் கேள்வி, சிவாகமங்களின் ஞானபாதப் பொருளைக் கேட்டல். மகம், இயன்ற பொழுது தீ வேட்டலைச் செய்தலும், செய்வித்தலும். சிவபூசை, சிவலிங்க வழிபாட்டினை இன்றியமையாததாகக் கொண்டு, விடாது செய்து வருதல். ஒண்மதி, நற்பண்பு. நியமமும் இவ்வாறு 'பத்து' என வரையறுத்து ஓதப்படினும், இவை போல்வன பிறவும் கொள்ளப்படும் என்க. நிவம் - நிபந்தம். மகம், உயிரெதுகை.

இதனால், நியமம் சிறப்பாகப் பத்தாதல் கூறப்பட்டது. இதனை,

பெற்றதற் குவத்தல் பிழம்புநனி வெறுத்தல்
கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை
பூசனைப் பெரும்பயன் ஆசாற் களித்தலொடு
நயனுடை மரபின் நியமம் ஐந்தே.

என்றார் நச்சினார்க்கினியர்

5.4.ஆதனம்

பங்கய மாதி பரந்தபல் ஆதனம்
அங்குள வாம்இரு நாலும் அவற்றினுள்
சொங்கில்லை யாகச் சுவத்தி யெனமிகத்
தங்க இருப்பத் தலைவனு மாமே. *#547*

'பதுமம்' முதலியவற்றின் வடிவத்தால் அவ்வப் பெயரைப் பெற்று பரந்து நிற்கும் ஆதனங்கள் யோக முறையில் பல உள்ளன. அவற்றுள் எட்டு ஆதனங்கள் தாழ்வில்லாது உயர்ந்தனவாய் நிற்க, அவற்றுள்ளும், 'சுவத்தி' ஆதனத்தில் ஒருவன் இருப்பனாயின் யோகத்தில் மிக்கவனாவான்.

விளக்கவுரை

எனவே, 'சுவத்தி ஆதனம் ஏனை எல்லாவற்றினும் மேலானது' என்பது பெறப்பட்டது. பங்கயம் - பதுமம்; தாமரை. 'அவற்றுள் இருநாலும் சொங்கில்லை' எனக்கூட்டுகை. சொங்கு - இழிவு. 'இழிவில்லை' என்றது,

'உயர்ந்தன - உத்தமம்' என்றவாறு. உத்தமாதனங்களை வருகின்ற திருமந்திரங்களுட் காண்க.
இதனால், ஆதனங்களின் இயல்பு தொகுத்துக் கூறப்பட்டது.

ஓரணை யப்பதம் ஊருவின் மேலேறிட்
டார வலித்ததன் மேல்வைத் தழகுறச்
சீர்திகழ் கைகள் அதனைத்தன் மேல்வைக்கப்
பார்திகழ் பத்மா சனமென லாகுமே. *#548*

பாதங்கள் துடைகளின்மேல் ஒன்றாகப் பொருந்துமாறு ஏற்றி, பின் நன்றாக வலித்து இழுத்து அவை துடைகளின் புறம் நிற்குமாறு செய்து, அப்பாதங்களின்மேலே இரு கைகளையும் மலர வைப்பின், அந்நிலை தாமரை மலர் வடிவிற்றாய், 'பதுமாதனம்' என்று சொல்லுதலைப் பெறும்.

விளக்கவுரை

ஆதனங்களில் விலக்குண்ணாத இடங்களில், 'உடலை நேரே நிமிர நிறுத்தி, இருகண்களாலும் மூக்கு நுனியை நோக்கி நிற்றல்' என்பது பொதுவாகச் சொல்லுதலை உடைத்து. இதனுள், உடலை நேராக நிறுத்துதலைப் பத்திராதனத்திலும், மூக்குநுனியை நோக்குதலைச் சிங்காதனத்திலும் எடுத்தோதுவார். ஓர் அணைய - ஒன்றாகச் சேர. ஊரு - துடை. 'அழகுற' என்றது, 'மலர' என்றவாறு. 'தன்' என்றது, பாதத்தை. 'அதனை, தன்' என்பன பன்மை ஒருமை மயக்கம்.
இதனால், உத்தமாதனங்கள் எட்டனுள் பதுமாதனத்தின் இயல்பு கூறப்பட்டது.

துரிசில் வலக்காலைத் தோன்றவே மேல்வைத்து
அரிய முழந்தாளில் அங்கையை நீட்டி
உருசி யொடும்உடல் செவ்வே யிருத்திப்
பரிசு பெறுமது பத்திரா சனமே. *#549*

'பதுமாதனத்தைச் சிறிது வேறுபடுக்கப் பத்திராதனமாம்' என்கின்றார். பத்திரம் - வாள்.
பதுமாதனத்தினின்றும், வலக்காலை எடுத்து இடமுழந்தாள் மேலாக ஊன்றி, இரண்டு கைகளையும் அவ்வலக்கால் முழந்தாளின்மேல் நீட்டி, உடலை நேர் நிற்க நிறுத்தினால், அந்நிலை வாளின் வடிவிற்றாய், 'பத்திராதனம்' என்னும் பெயரைப் பெறும்.

விளக்கவுரை

'அது பத்திராசனப் பரிசு பெறும்' என மாற்றுக. பரிசு - தன்மை; என்றது, பெயரை. இதனைப் பிற நூல்கள் பிறவாறும் கூறும்.
இதனால், பத்திராதனத்தின் இயல்பு கூறப்பட்டது.

ஒக்க அடியிணை யூருவில் ஏறிட்டு
முக்கி யுடலை முழங்கை தனில்ஏற்றித்
தொக்க அறிந்து துளங்கா திருந்திடிற்
குக்குட ஆசனங் கொள்ளலு மாமே. ***#550***

'பதுமாதனத்தை வேறொரு வகையாக மாற்றக் குக்குடாதனமாம்' என்கின்றார். குக்குடம் - கோழி.

பதுமாதனத்தில் மேல்வைக்கப்பட்ட கைகளை உள்ளே விடுத்து நிலத்தில் அழுந்த ஊன்றி, அவ்வாறே முயன்று முழங் கையளவாக மேலெழுந்து சுமைமுழுதும் கைகளில் நிற்றலை அறிந்து வீழாது நின்றால், அந்நிலை கோழி வடிவிற்றாய், 'குக்குடாதனம்' எனக் கொள்ளத்தகுவதாம்.

விளக்கவுரை

முதல் அடி பதுமாதனத்தின் பகுதியைக் குறித்தது. 'கொள்ளலும்' என்ற உம்மை சிறப்பு. பிருட்டங்கள் குதிகால்களின் மேல் நிற்க, கால் விரல்களை நிலத்தில் ஊன்றிக் குதிகால்கள் மேல்நிற்க எழுந்து முழங்கால்களின்மேல் கைகளை வைத்து எளிதின் இருத்தலும் ஒருவகைக் குக்குடாதனமாம். எனினும், சிறப்புடையதனையே கூறினார் என்க.

இதனால், குக்குடாதனத்தின் இயல்பு கூறப்பட்டது.

பாத முழந்தாளிற் பாணி களைநீட்டி
ஆதர வோடும்வாய் அங்காந் தழகுறக்
கோதில் நயனங் கொடிமூக்கி லேயுறச்
சீர்திகழ் சிங்கா தனமெனச் செப்புமே. ***#551***

'குக்குடாதனத்தை வேறுபடுக்கச் சிங்காதனமாம்' என்கின்றார். இருகைகளையும் இருமுழந்தாள்களின் இடையே புகச் செலுத்தி இருபாதங்களிலும் படுமாறு நீட்டி, வாயைத் திறந்து கொண்டு, இருகண்களும் மூக்கு நுனியை நோக்க இருக்கின், அவ் இருக்கை சிங்கவடிவிற்றாய், 'சிங்காதனம்' என்று பெயர் சொல்லப் படும்.

விளக்கவுரை

'கோடி' என்பது குறுகிநின்றது. செப்பும் - செய்யப் படும்.

இதனால், சிங்காதனத்தின் இயல்பு கூறப்பட்டது.

பதுமாதனம் முதலியவற்றை முறையானே கூறிவந்த நாயனார் குன்றக் கூறார் ஆதலால், 'கோமுகாதனம், வீராதனம், சுகாதனம், சுவத்திகாதனம்' என்பவற்றையும் கூறிய திருமந்திரங்கள் கிடையாதொழிந்தன என்றே கொள்க. இங்ஙனமாகவே அவற்றது இயல்பு பிற நூல்களின் வழிக் கொள்ளப்படுவனவாம்.

பத்திரங் கோமுகம் பங்கயம் கேசரி
சொத்திரம் வீரம் சுகாதனம் ஓரேழும்
உத்தம மாம்முது ஆசனம் எட்டெட்டுப்
பத்தொடு நூறு பலஆ சனமே. *#552*

'பத்திரம், கோமுகம், பதுமம், சிங்கம், திரம், வீரம், சுகம்' எனப் பெயர் பெற்ற ஏழ் ஆதனங்களும் உத்தம ஆதனங்களாம். அவற்றொடு உத்தமோத்தம ஆதனமாக முதலிற் கூறப்பட்ட சுவத்திகாதனமும் கூடச் சிறப்புடைய ஆதனங்கள் எட்டாகும். ஆதனங்களை இவ்வாறு 'எட்டு' என்பதேயன்றி, 'பத்து' என்றும், 'நூறு' என்றும், மற்றும் பலவாகவும் கூறுவர்.

விளக்கவுரை

'அவற்றுள் மிகச் சிறப்புடைய எட்டு ஆதனங்களையே யான் கூறினேன்' என்றவாறு. எனவே, இவையே சிவயோகத்திற்கு அமையும் என்பதும் 'வேண்டுழிச் சிறுபான்மை பிறவும் கொள்ளத் தகும்' என்பதும் பெறப்பட்டன. சொல்லப்பட்ட ஆதனங்களுள் குக்குடாதனத்தை இங்குக் கூறாது, சொல்லப்படாத 'திரம்' என்பதனைக் கூறியவாற்றால் 'திராசனம்' என்பது குக்குடாதனமே யாதல் பெறுதும்.
இங்கு எடுத்துச் சொல்லப்படாத ஆதனங்களுள் சிறப்பு உடையன சில வருமாறு:-
மச்சம், (மீன்) கூர்மம், (ஆமை) மகரம், (முதலை) தனுசு, (வில்) பச்சிமோத்தானம், (பின்பாகம் மேல் எழுதல்) மயூரம், (மயில்) மண்டூகம், (தவளை) மற்கடம், (குரங்கு) ஏகபாதம், (ஒற்றைக்கால்) சிரசு, (தலை) அலம், (கலப்பை) நௌகம், (ஓடம்) சருவாங்கம், (முழுதுடல்) சவம் (பிணம்) முதலியன. மற்றும் இவற்றைப் பலவாகச் சிறிது சிறிது வேறுபடுத்துக் காட்டுவர்; அவற்றின் இயல்புகளை எல்லாம் இங்கு விரிக்கிற் பெருகும். வேண்டுவோர் அடயோக தீபிகை, பதஞ்சலி சூத்திரம் முதலிய யோக நூல்களுள்ளும், சில உபநிடதங்களினும் கண்டுகொள்க.
முது ஆதனம் - முன்னே சொல்லப்பட்ட ஆதனம்; சுவத்திகாதனம். 'முது ஆதனத்தோடு எட்டு' என உருபு விரித்து முடிக்க. இனி, 'எட்டு, எட்டு, பத்து, நூறு' எனக் கூறப்பட்ட தொகை களை ஒருங்கு கூட்டி, ஆதனங்கள் 'நூற்றிருபத்தாறு' என வரையறை காண்பாரும் உளர்.
'நிற்றல் இருத்தல் கிடத்தல் நடத்தல்என்
றொத்த நான்கின் ஒல்கா நிலையோ
டின்பம் பயக்கும் சமய முதலிய
அந்தமில் சிறப்பின் ஆதன மாகும்'
என நச்சினார்க்கினியரும் ஆதனங்களை வரையறாதே கூறினார். அவர்

இதனுள் நடத்தலைக் கூறியதும், 'சமயம்' என்றதும் அறியத் தக்கன.
இதனால், ஆதனங்கட்குப் புறனடை கூறப்பட்டது.

5.5.பிராணாயாமம்

ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக்கொண் டேறுங் குதிரைமற் றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்கும் கொடாதுபோய்ப்
பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே. *#553*

ஐவர் பணியாளர்க்குத் தலைவன் ஒருவன்; அவனே அவ்வூர்க்கும் தலைவன். அவன், தான் நலன் அடைதற் பொருட்டுத் தனதாகக் கொண்டு ஏறி உலாவுகின்ற குதிரை ஒன்று உண்டு. அது வல்லார்க்கு அடங்கிப் பணிசெய்யும்; மாட்டார்க்கு அடங்காது குதித்து அவரைக் கீழே தள்ளிவிட்டு ஓடிவிடும்.

விளக்கவுரை

'ஆகவே, அதனை அடக்க வல்லராதலைப் பயிலுதலே ஆண்மையுடையோர்க்கு அழகாகும்' என்பது குறிப்பெச்சம். இத்திருமந்திரம் பிசிச் செய்யுள். இதனை, 'ஐவர், ஐம் பொறிகள்; நாயகன்; உயிர்க்கிழவன்; ஊர், ஐம்பொறியும் தங்கி யுள்ள உடம்பு; குதிரை பிராணவாயு; துள்ளி விழுத்தல், வாழ்நாள் முடிவில் அவரறியாதவாறு விட்டு நீங்குதல்' என விடுத்துக் கண்டுகொள்க. 'மெய்யர், பொய்யர்' என்பன, வன்மை மென்மை பற்றி வந்தன. 'பொய்யரை வீழ்த்திடும்' எனவே, 'மெய்யரை வீழ்த்தாது செல்லும்' என்பது பட்டு, மெய்யர்க்கு வாழ்நாள் நெடிது செல்லுதலும், அவர் விடுத்து நீக்க நீங்குதலும் உளவாதலை உணர்த்தி நிற்கும். இதனால், பிராணாயாமம் செய்வார் மக்களுடம்பை நெடிது நிறுத்திப் பயனடைதல் கூறப்பட்டது.

ஆரியன் அல்லன் குதிரை இரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை
கூரிய நாதன் குருவின் அருள்பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படுந் தானே. *#554*

எல்லா மக்களிடத்தும் 'நல்லன்' என்றும், 'அல்லன்' என்றும் இரண்டு குதிரைகள் உள்ளன. அவைகளைக் கடிவாளம் இட்டு அடக்குதற்குரிய சூழ்ச்சியை அறிகின்றவர் அவருள் ஒருவரும் இல்லை. அறிவுத் தலைவனாகிய குருவின் அருளால் அச்சூழ்ச்சியை அறிந்து அதன்வழி அடக்கினால், அக்குதிரைகள் இரண்டும் அடங்குவனவாம்.

விளக்கவுரை

'ஆரியன்' என்றது, 'நல்லன்' என்னும் பொருளது. 'ஆரியன், அல்லன் என்பன' இயற்பெயர்த் தன்மையவாய் விரவி, அஃறிணைக்கண் வந்தன. மேல், 'குதிரை ஒன்று உண்டு' என்று கூறி, இங்கு, 'குதிரை இரண்டுள'

என்றது, 'இடவகையால் இரண்டு' என்னும் குறிப்பினதே யாதலின், மாறு கொள்ளாது என்க. எனவே, 'ஒன்று' எனப்பட்ட பிராணவாயு, 'இடைகலை, பிங்கலை என்னும் இரண்டு நாடிகளின் வழி இரண்டாய் இயங்கும்' என்பது கூறப் பட்டதாம். இடைகலை நாடி, வலக்கால் பெருவிரலினின்று தொடங்கி மேலேறிப்படரும். பிங்கலை நாடி இடக்கால் பெருவிரலினின்று தொடங்கி மேலேறிப் படரும்; இவை இரண்டும் கொப்பூழில் பிணைந்து இடைகலை இடப்பக்கமாகவும், பிங்கலை வலப்பக்க மாகவும் மாறி, முதுகு, பிடர், தலை வழியாகச்சென்று, முறையே மூக்கின் இடத் துளை வலத் துளைகளில் முடியும். அதனால் இரு நாடிகளும் பிணையும் இடமாகிய உந்தியில் (கொப்பூழில்) மூக்கின் வழியே அந்நாடிகளின்வழி வந்து நின்ற காற்று, மீளவும் அவற்றின் வழி வெளிச்செல்லும். அதனால், பிராணவாயு ஒன்றே இரண்டாகச் சொல்லப்படுகின்றது என்க. கடிவாளம், உயிர்க்கிழவனது ஆற்றல். அதனை வீசி அக்குதிரைகளை அடக்க வேண்டும் என்றார். அது தன்னை முறையறிந்து செய்ய வேண்டுதலின், 'அறிவார் இல்லை' எனவும், 'குருவின் அருளால் அறிந்து பிடிக்க' எனவும் கூறினார். 'கூரிய' என்றதில், 'கூர்ப்பது அறிவு' என்க. இனி, 'அம்முறைதான் அசபா மந்திரத்தால் ஆவது' என்பதை, நான்காந் தந்திரத்துட் கூறுவார். இதனுள், 'வீசி' என்பது உயிரெதுகை. இதனால், 'பிராணாயாமம் செய்யும் முறையைக் குருவருளால் அறிந்து செய்தல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டாற்**;**
கள்ளுண்ண வேண்டா**;** தானே களிதரும்**;**
துள்ளி நடப்பிக்கும் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னோம் உணர்வுடை யோர்க்கே**. *#555***

பறவையினும் விரைய ஓடுகின்ற பிராணனாகிய அக்குதிரையின்மேல் ஏறிக்கொண்டால், களிப்பிற்கு வேறு கள்ளுண்ண வேண்டுவதில்லை; அது தானே மிக்கக் களிப்பைத் தரும். அக்களிப்பினாலே துள்ளி நடக்கச் செய்யும்; சோம்பலை நீக்கச் செய்யும்; இவ்வுண்மையை, நாம் சொல்லியவாறே உணரவல்ல வர்க்கே சொன்னோம்.

விளக்கவுரை

மேற்கொள்ளுதல், ஏறிச்செலுத்துதல். அஃது இங்கு அடக்கி ஆளுதலைக் குறித்தது. உடலின் உள்ளுறுப்புக்கள் யாவும் - சிறப்பாக இருதயம் - நன்கு செயற்படுதலும், படாமையுமே உடலின் வலிமைக்கும், வலிமை இன்மைக்கும் காரணம். அவ்வுறுப்புக்களின் நன்மை, குருதி ஓட்டத்தின் தன்மையைச் சார்ந்தது. குருதி ஓட்டம் மூச்சுக் காற்றின் இயக்கத்தை ஒட்டியது. ஆகவே, அவ் இயக்கத்தை வழிப்படுத்தினால், உடல் வலிமை

பெற்று, உள்ளமும் கிளர்ச்சி அடைவதாம்.
இதனால், பிராணாயாமம் உள்ளக் கிளர்ச்சியைத் தருதல் கூறப்பட்டது.

பிராணன் மனத்தொடும் பேரா தடங்கிப்
பிராணன் இருக்கிற் பிறப்பிறப் பில்லை
பிராணன் மடைமாறிப் பேச்சறி வித்துப்
பிராணன் அடைபேறு பெற்றுண் டிரீரே. *#556*

பிராண வாயுவால் கிளர்ச்சியுற்று ஓடும் இயல் புடைய மனத்தை உடன்கொண்டு, அப்பிராண வாயு வெளியே ஓடாது உள்ளே அடங்கி இருக்குமாயின், பிறப்பு இறப்புக்கள் இல்லா தொழியும். ஆகவே, அந்தப் பிராண வாயுவை அதன் வழியினின்றும் மாற்றி வேறு வழியில் செல்லச் செலுத்தி, அதனால் மோனநிலையை எய்தி, பிராண வாயுவால் அடையத்தக்க பயனை அடைந்து இன்புற்றிருங்கள்.

விளக்கவுரை

மனம் செயற்பட்டுப் பயன் தருதற்பொருட்டு அமைந்ததே பிராண வாயுவாயினும், இங்கு நுதலிய பொருள் பிராண வாயு ஆதல் பற்றி அதனைத் தலைமைப் பொருளாக வைத்து, 'மனத் தொடும் அடங்கிப் பிராணன் பேராது இருக்கின்' என்றார். 'மனத் தொடும்' என்றதில் ஓடு, 'கைப்பொருளொடு வந்தான்' என்றாற்போல உடைமைப் பொருட்கண் வந்தது. எனவே, பிராணாயாமத்தால் மனம் அடங்குதலாகிய பயன் கூறப்பட்டதாம். வழியை 'மடை' என்றது, ஒப்புமை வழக்கு.
பிராண வாயு உலாவும் வழி இட நாடி (இட மூக்கு) ஆகிய இடைகலையும், வல நாடி (வல மூக்கு) ஆகிய பிங்கலையும், நடு நாடி (முதுகந்தண்டைச் சார்ந்துள்ள வழி) ஆகிய சுழுமுனையும் என மூன்று. அவற்றுள் பிராணவாயு இயல்பாக உலாவும் வழி இடைகலை பிங்கலைகளாம். அவைகளை மாற்றிச் சுழுமுனையில் செலுத்து தலையே, 'மடை மாற்றி' என்றார். 'நடை மாற்றி' என்னாது, 'மடை மாற்றி' என்றதனால், அதற்கு, 'இடைகலை பிங்கலைகளுள் ஒன்றின் வழியாகவே விடுதலும் வாங்குதலும் செய்தல்' என உரைத்தல் கூடாமை அறிக. 'பேச்சறுதல்' என்பது, 'மோனம்' என்பது குறித்த வாறு. உண்மை மோனம், வாய் வாளாமையோடு ஒழியாது மனம் அடங்குதலேயாம் என்க. உண்ணுதல் இங்கு, துய்த்தல். இத்திருமந்திரம் சொற்பொருட் பின் வருநிலை.
இதனால், பிராணாயாமத்தால் மன அடக்கம் உளதாதல் கூறப்பட்டது.

ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பகம் அறுபத்து நால்அதில்
ஊறுதல் முப்பத் திரண்டதி ரேசகம்
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சக மாமே. *#557*

இது முதல் பிராணாயாமம் செய்யும்முறை கூறுகின்றார். (பிரணாயாமம், 'பூரகம், கும்பகம், இரேசகம்' என்னும் மூன்று வகையினை உடையது. அவற்றுள்,) 'பூரகம்' என்பது வெளியே உள்ள தூயகாற்று உடலினுள் புகுதற்கு உரித்தாய செயல். (எனவே, உயிர்க்கிழவன் தனது முயற்சியால் அக்காற்றினை உள்ளாக இழுத்தலாம்) இதன் உயர்ந்த அளவு பதினாறு மாத்திரை. இஃது இடை நாடியால் இடமூக்கு வழியாகச் செய்யற்பாலது. 'கும்பகம்' என்பது உள்ளே புகுந்த காற்று அங்கே அடங்கி நிற்றற்கு உரித்தாய செயல். (எனவே, அங்கே நில்லாது ஓடுகின்ற அதனை அங்ஙனம் ஓட வொட்டாது தடுத்து நிறுத்தலாம்) இதன் உயர்ந்த அளவு அறுபத்து நான்கு மாத்திரை. 'இரேசகம்' என்பது, உள் நின்ற காற்று வெளிப் போதற்கு உரித்தாய செயல். (எனவே, உயிர்க்கிழவன் அதனை வெளிச் செல்ல உந்துதலாம்) இதன் உயர்ந்த அளவு முப்பத்திரண்டு மாத்திரை. இம்மூன்றும் ஒருமுறை இவ்வளவில் அமைவது ஒரு முழு நிலைப் பிராணாயாமமாகும். பூரகம் முதலிய மூன்றும் தம்முள் இவ்வாறு இவ்வளவில் ஒத்து நில்லாது ஒன்றில் மாறுபடுதலும், பிரணாயாமம் புரைபடுதற்கு ஏதுவாம்.

விளக்கவுரை

'பூரகம் வாமத்தால் ஈரெட்டாக ஏறுதல்; கும்பகம் அறுபத்து நாலாக அதில் ஆறுதல்; இரேசகம் முப்பத்திரண்டாக ஊறுதல், ஒன்றின்கண் மாறுதல் வஞ்சகமாம்' எனக் கூட்டுக. 'பூரகம் இடைநாடியால்' எனவே, 'இரேசகம் பிங்கலையால்' என்பது சொல்லாமை அமைந்தது. 'ஏறுதல்' முதலிய மூன்றும் காரிய ஆகு பெயராய், அவற்றிற்குரிய செயல்களை உணர்த்தின. மாத்திரைகள் மந்திரங்களின்வழி அறியப்படும். அம்மந்திரங்கள் அவரவர் தம் தம் குருமுகத்தால் பெறற்பாலர். அனைவர்க்கும் பொதுவாக நிற்பது 'பிரணவம்' எனப்படும் ஓங்காரம். அதனை ஒரு மாத்திரை வேண்டும்பொழுது 'உம்' என்றே கொள்வர். இது சமட்டியாகக் கொள்ளும் முறை. இதனையே, 'அம், உம்' எனப் பகுத்து வியட்டியாகக் கொள்வர். சமட்டியாக ஓதுபவர் இரண்டு மாத்திரைக்கு 'ஓம்' என்றும், அதனின் மிக்க மாத்திரைக்கு அவ்வளவான அள பெடை கூட்டியும் ஓதுவர். 'அம்' என்பதன்பின் 'சம்' என்பது கூட்டி, 'அம்ச மந்திரம்' எனக் கொண்டு, ஓதுதலைப் பெருவழக்காகச் சொல்வர். 'ஓம்' என்பது போலவே, 'ஆம், ஈம், ஊம், ஏம், ஐம், ஔம்' என்பவனவும், 'அம், உம்' என்பன போலவே, 'இம், எம், ஓம்' என்பனவும் முதல் (மூல) மந்திரங்களாம் என்பதனை நாயனார் நாலாந் தந்திரத்துள் அருளிச் செய்வார். மந்திரங்களில் ஒற்றெழுத்தின் மாத்திரையைக் கணக்கிடுதல் இல்லை. மந்திரங்களைக் கணிக்கும் முறை 'வாசகம், உபாஞ்சு, மானதம்'

என மூன்று. வாசகம், தன் செவிக்கும், பிறர் செவிக்குங் கேட்குமாறு வெளிப்படக் கூறுதல். உபாஞ்சு, நாப்புடை பெயருமளவாக மெல்ல உச்சரித்தல். இதனை 'முணுமுணுத்தல்' என்றல் வழக்கு. மானதம், நாவாற் கூறாது மனத்தால் நினைத்தல். இவற்றுள், 'வாசிகம் சரியையாளர்க்கும், உபாஞ்சு கிரியையாளர்க்கும், மானதம் யோகியர்க்கும் உரியன' எனப் பெரும்பான்மை பற்றிக் கூறப்படும் என்க. மந்திரத்தில் பற்றில்லாதவர் செய்யும் பிரணாயாமம் பெரும்பயன் தாராது.
ஈரெட்டு முதலிய எண்கள், அவ்வவ்வளவினதாகிய மாத்திரையைக் குறித்தன. 'ஊருதல்' என்பது எதுகை நோக்கித் திரிந்தது. 'ஊருதல்' என்பதே பாடம் எனினுமாம். ஊருதல் - மேலே (வெளியே) செல்லுதல். 'முப்பத்திரண்டது' என்றதில், அது பகுதிப் பொருள் விகுதி. 'மாறுதலும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத் தலாயிற்று. வஞ்சகம் - பொய்; போலி. பூரிக்கும் அளவில் நான்மடங்கு கும்பித்த வழியே அக் காற்று உடற்குப் பயன் படுவதாகும். எனினும், பூரித்த காற்று முன்னுள்ள காற்றுடன் பயன்பட்டபின் நிலை வேறு படுதலால், மேற்குறித்த கால அளவில் இரேசகம் வேண்டப்படுகிறது.
இதனால், பிரணாயாமத்தின் இயல்பு கூறப்பட்டது.
இதனுள், 'கும்பக மாத்திரை பூரக மாத்திரையின் நான் மடங்காம்' என்பதும், 'இரேசக மாத்திரை கும்பக மாத்திரையின் அரை மடங்காம்' என்பதும் உய்த்துணர வைக்கப்பட்டவாறு அறிந்து கொள்க. 'இஃது உயரளவு' எனவே, 'அவ்வளவை எட்டுதற்கு, முதற் கண் சிறிது சிறிதாக அம்முறையிற் பயிலுதல் வேண்டும்' என்பது பெறப்பட்டது. பிராண வாயுவை இவ்வாறு நெறிப்படச் செய்வதால், உடல் தூய்மை பெற்று, ஆற்றல் மிகுந்து, நற்பண்புகளுக்கு இடமாகும்.

வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியனும் வெட்ட வெளியனு மாமே. ***#558***

ஒருவன் தன் பிராண வாயுவை வளைத்துத் தன்வயப்படுத்தி ஆள வல்லனாயின், ஆண்டுகள் பல செல்லினும் அவனது உடல் முதுமை எய்தாது, பளிங்குபோல அழகிதாய் இளமை யுற்று விளங்கும். அந்நிலையில் அவனது உணர்வு தெளிவு பெறுதற்கு ஞான குருவின் அருளைப் பெறுவானாயின், அவன் சாந்தி, சாந்தி யதீத கலைகளில் உள்ள புவனங்களை அடையும் அபர முத்தி நிலைகளை அடைவான்.

விளக்கவுரை

எனவே, 'யோக முதிர்ச்சி, ஞானத்தின் பயனை எளிதில் தரும்'

என்றவாறாம். உடல் நெடுநாள் நிற்றற்குப் பயன், பிறிது பிறவி வேண்டாது, எடுத்த பிறவியிலே ஞானத்தைப் பெறுதலாம். இவ் வாறன்றி, அணிமாதி அட்ட சித்திகளையும், பிறவற்றையுமே யோகத் தின் பயனாகக் கொள்வோர், உபாய யோகிகளேயன்றி, உண்மை யோகிகள் அல்லர்; அவர்க்கு வினையும், அதன் விளைவாகிய பிறப்பும் நீங்கா என்க.

'யோக சாக்கிரம், யோக சொப்பனம், யோக சுழுத்தி, யோக துரியம், யோக துரியாதீதம்' என்னும் யோகாவத்தை ஐந்தனுள் இயமம் முதல் பிராணாயாமம் ஈறாக உள்ளவை யோக சாக்கிரம். பிரத்தி யாகாரம் முதலாக உள்ள நான்கும் முறையே யோக சொப்பனம் முதலிய நான்குமாம். ஆகவே, 'யோக சாக்கிரத்தின் முதிர்வாகிய பிரணாயாமம் கைவந்தோர் ஏனைய நான்கையும் அடைதல் தப்பாது' என்பது பற்றி இதனையே யோக முடிவுபோல வைத்துக் கூறுதல் வழக்கு. அம் முறையே பற்றி நாயனாரும் ஈண்டே யோகத்தின் பயனைக் குறித்தருளினார். 'பழுக்கினும்' என்றது, 'ஆண்டளவையால் முதுமை பெறினும்' என்றவாறு. 'பழுக்கினும், காயம் பளிங்கொத்துப் பிஞ்சாம்' என மாறிக் கூட்டுக. 'முதிரினும்' என்னாது 'பழுக்கிலும்' என்றதனால், 'முதுமை வந்தபின் இது செய்யினும் அது நீங்கும்' என்பது கொள்க. குரு, ஞான குரு ஆதல், யோகிகட்கு ஏனைக் குரு வேண்டாமை பற்றி அறியப்படும். 'வளி, வெளி' என்பவை சாந்தி, சாந்தியதீத கலைகளைக் குறித்து நின்றன. இவ்வாறன்றி, வாயுத் தம்பனமும், ஆகாயத் தம்பனமும் வல்லராதற்கு ஞான குரு வேண்டாமை அறிக. ஈற்றடியைப் பிறவாறு ஓதுவன பாடம் அல்ல.

இதனால், பிரணாயாமம் யோகத்தின் சிறப்புறுப்பாய்ப் பயன் தருதல் கூறப்பட்டது.

எங்கே இருக்கினும் பூரி இடத்திலே
அங்கே அதுசெய்ய ஆக்கைக் கழிவில்லை
அங்கே பிடித்தது விட்டள வுஞ்செல்லச்
சங்கே குறிக்கத் தலைவனு மாமே. ***#559***

எந்த ஆசனத்தில் இருந்து பிராணாயாமம் செய்யினும், பூரகத்தைச் செய்தல் இடைநாடி வழியாகவே யாம். அவ்வாறு செய்தலால், உடலுக்கு ஊறு ஒன்றும் உண்டாகாது. அந்த ஆசனத்திலே பூரகம், கும்பகம், இரேசகம் என்பவற்றை மேற்கூறிய வாறு செய்யச் சங்கநாதம் முதலிய ஓசைகளை உள்ளே கேட்கும் நிலைமை உண்டாகும். அஃது உண்டாகப் பெற்றவன் பின்னர் யோகருள் தலைவனாய் விளங்குவான்.

விளக்கவுரை

'எங்கு' என்னும் இடப்பெயர் இங்கு யோகா சனத்தைக் குறித்தது. பூரி,

முதனிலைத் தொழிற்பெயர். இங்கும், 'பூரித்தல் இடமூக்கு வழியாக' எனவே, 'இரேசித்தல் வலமூக்கு வழியாக' என்பதும் கூறியதாயிற்று. இவ்வாறு வலியுறுத்து ஓதியதனால், 'மூக்குத் துளை இரண்டாகப் படைக்கப்பட்டது பூரக இரேசகங்களை இவ்வாறு செய்தற் பொருட்டே' என்பது விளங்கும். விளங்கவே, வாய்வழியாக அவற்றைச் செய்தல் கூடாமையும் பெறப் படும். 'அது' என்றது பிராண வாயுவை. பிடித்தல், பூரித்தல், விடுதல், இரேசித்தல், அளவும் - மேற்குறித்த உயரளவுகாறும். செல்ல - பிரணாயாமத்தில் பயில. சங்க நாதம் முதலிய தச நாதங்கள் *(பத்து ஒலிகள்)* இவை என்பது பின்னர்க் கூறப்படும்.
இதனால், 'ஆசன வேறுபாட்டால் பிரணாயாம முறை வேறுபடுதல் இல்லை' என ஐயம் அறுக்கப்பட்டது.

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே. ***#560***

பிராண வாயுவை இடை நாடியால் உட்புகுத்திப் பூரிக்கும் கணக்கையும், பிங்கலை நாடியால் இரேசிக்கும் கணக்கையும் அறிந்து, அதனானே கும்பிக்கும் கணக்கையும் நன்கு அறிகின்றவர் இல்லை. அக்கணக்குகளை ஆசிரியன் அறிவுறுக்கும் யோக நூல் வழியாக மேற்கூறியவாறாக நன்கு உணர்பவர்கட்குக் கூற்றுவனை வெல்லும் பயன் அம்முறையிற் பயிலுதலேயாய் முடியும்.

விளக்கவுரை

இரு கால் - முதற் காற்று, *(இடை நாடி வழியது)* கடைக் காற்று *(பிங்கலை வழியது)* என்பன. இது தொகை நிரல்நிறை. 'பூரிக்கும்' என்பதன்பின், 'இரேசிக்கும்' என்பது எஞ்சி நின்றது. 'பூரிக்கும், இரேசிக்கும், பிடிக்கும்' என்னும் எச்சங்கள், 'கணக்கு' என்னும் ஒரு பெயர் கொண்டன. 'இரு கால்' மேலே கூறப் பட்டமையின், பின்னர் 'காற்று' என்றது இடைக்காற்றாதல் *(நடுநாடி வழியது)* விளங்கும். குறி - குறிக்கோள்; இலட்சியம். துணிவுபற்றி, வழியையே பயனாக அருளினார்.
இதனால், பிரணாயாமத்தைச் செம்மையாகச் செய்தலின் அருமை கூறப்பட்டது.

மேல்கீழ் நடுப்பக்கம் மிக்குறப் பூரித்துப்
பாலாம் இரேசகத் தாலுட் பதிவித்து
மாலாகி உந்தியுட் கும்பித்து வாங்கவே
ஆலாலம் உண்டான் அருள்பெற லாமே. ***#561***

பிராண வாயுவை உடல் முழுதும் பரவுமாறு பூரகத்தையும், அந்த வாயுத்

தூய்மையாயிருத்தற் பொருட்டு இரேசகத்தையும், நீண்ட வாழ்நாளையும், மிக்க ஆற்றலையும், பெறுதற் பொருட்டுக் கும்பகத்தையும் மேற்கூறிய முறையிற் செய்து பிராணவாயுவை வசப்படுத்தினால், இப்பிறப்பிற்றானே சிவபெரு மானது திருவருளைப் பெறலாம்.

விளக்கவுரை

'பாலாம்' என்பதனை, 'பால்போல ஆகின்ற' என விரிக்க. பால் தூய்மைக்கு உவமை. 'ஆம்' என்ற பெயரெச்சம், 'இரேசகம்' என்னும் ஏதுப் பெயர் கொண்டது. 'இரேசகத்தால் உட் பதி வித்து' என்றது, இரேசகம் இல்லாது ஒழியின் கும்பகம் தூய்மை யாகாது என்பதனைப் புலப்படுத்தி, இரேசகத்தின் இன்றியமை யாமையைக் குறித்தது. நெடுங்காலம் வாழ்தலால் 'அமரர்' எனப்படும் தேவர் பலருள்ளும் வாழ்நாள் மிக்கவன் மாயோனாதலின், 'மாலாகி' என்றது, நெடுங்காலம் வாழ்தலைக் குறித்தது. 'ஆகி' என்னும் ஆக்கச்சொல் உவமை மேல் நின்றது. உலக காரணன் ஆகத்தக்க ஆற்ற லால் நான்முகனை உந்தி வழித்தோற்றுவித்தோனாதல்பற்றி, உந்தித் தானத்தில் கும்பகம் செய்து ஆற்றல் மிகுதற்கும் அவனையே உவமை யாகக் கூறினார். வாங்குதல் - வளைத்தல். 'இப்பிறப்பிலே' என்பது ஆற்றலால் கொள்ளக்கிடந்தது. நெடுங்காலம் வாழ வேண்டுதற்குக் காரணம் கூறுவார், 'ஆலாலம் உண்டான் அருள்பெறலாமே' என்றார்.
இதனால், பூரகம் முதலிய மூன்றின் பயன் வகுத்துணர்த்தப் பட்டது. கும்பகத் தானம் உடம்பொடு புணர்த்துக் கூறப்பட்டது.

வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே
ஏமுற்ற முப்பத் திரண்டும் இரேசித்துக்
காமுற்ற பிங்கலைக் கண்ணாக இவ்விரண்
டோமத்தால் எட்டெட்டுக் கும்பிக்க உண்மையே. ***#562***

பூரக இரேசகங்களை முற்கூறியவாறு இடைகலை பிங்கலைகளால் செய்தலே முறையாம். கும்பகத்தை ஓமத்தானமாகிய உந்தித் தானத்திற் செய்தலே முறையாம்.

விளக்கவுரை

'உண்மை' என்பது 'இவ்விரண்டு' என்பதனோடும் இயையும். 'வாமத்தில் பூரித்து, பிங்கலைக்கண் இரேசித்து ஆக, இவ்விரண்டு உண்மை; ஓமத்தால் கும்பிக்க உண்மை' என்க. ஆதல்- முடிதல். 'இவ்விரண்டு' என்ற சுட்டு, பூரக இரேசகங்களைச் சுட்டிற்று. உண்மை - செம்மை. 'ஓமம்' என்பது ஆகுபெயராய் அதற் குரிய இடத்தை உணர்த்திற்று. அகப் பூசையில் இருதயம் பூசைத் தானமாகவும், நாபி ஓமத்தானமாகவும், புருவ

நடு தியானத் தானமாகவும் கொள்ளப்படுதல் அறிக. 'ஓமத்தால்' என்பது உருபு மயக்கம். இதற்கு 'ஓம்' என்னும் அம்மந்திரத்தால் எனவும் உரைப்பர். 'ஆக, கும்பிக்க' என்ற எச்சங்கள். 'உண்மை' என்னும் குறிப்பு வினை கொண்டன. 'உண்மையது' எனற்பாலதனை 'உண்மை' என்றே கூறுதல் பிற்கால வழக்காயிற்று. ஆகவே, அப் பண்புச் சொல் பண்பிமேல் நின்றதாக உரைத்துக் கொள்ளப்படும். 'கும்பிக்க' என்பதன்பின், 'அஃது' என்னும் தோன்றா எழுவாய் வருவிக்க. இதனால், மேல் உடம்பொடு புணர்த்துக் கூறப்பட்டது, எடுத்தோதி வலியுறுத்தப்பட்டது. முன்னவை இரண்டும் அனுவாதம்.

இட்டதவ் வீடிள காதே யிரேசித்துப்
புட்டி படத்தச நாடியும் பூரித்துக்
கொட்டிப் பிராணன் அபானனுங் கும்பித்து
நட்டங் கிருக்க நமனில்லை தானே. ***#563***

இறைவன் உயிரைக் குடிவைத்ததாகிய அந்த இல்லம் *(*உடம்பு*)* தளர்வுறா வண்ணம் வீணே போக்கப் படுவதாகிய பிராணவாயுவை அங்ஙனம் போகாதவாறு பிராணாயாமத்தால் பயன்படச் செய்யின் இறப்பு இல்லையாகும். *(*நீண்ட நாள் வாழலாம் என்பதாம்*)*

விளக்கவுரை

அவ்வீடு - அத்தன்மையதாகிய வீடு. எனவே, "அஃதழியின் உயிர் தீங்கெய்தும்" என்பதாம். புட்டி, வடசொல்; 'நிறைவு' என்பது பொருள். தச நாடிகளாவன, 'இடைகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, சங்குனி, வைரவன், குகுதை' என்பன. கொட்டி - கொட்டப்படுவது. இஃது யோகியரல்லாதாரது செயல் பற்றிக் கூறியது. பிராணன், மூக்கு வழியாக இயங்கும் காற்று. அபானன், எருவாய் வழியாக வெளிப்படும் காற்று. பிராணனை மூக்கு வழிப் புறப்படாது கும்பிக்கும்பொழுது, அஃது எருவாய்வழிப் புறப் பட முயலும். அதனை அடக்குதலையே, "அபானனைக் கும்பித்தல்" என்றார். எனவே, இயல்பாக வெளிச்செல்லும் அபானனைக் கும்பிக்கக் கூறினாரல்லர் என்க. "அங்கு நட்டு இருக்க" என மாற்றுக. அங்கு - உந்தித் தானத்தில். நடுதல் - நிலைபெறுத்தல். இக்கும் பகத்தால் முதுகெலும்பின் அடியில் உள்ள "சுழுமுனை" என்னும் நாடியுள் பிராணவாயுச் செல்வதாகும். அதனால் பல நலங்கள் விளையும். அது பற்றி "நமன் இல்லை" என்றார். "நட்டம் இருக்க" என்பது பாடம் அன்று. இதனால், "கும்பகம் ஓட்டைபோகாதவாறு காத்தல் வேண்டும்" என்பது கூறப்பட்டது.

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட உள்ளே நின்மல மாக்கில்

உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே. **#564**

வெளி வருவதும், உட்புகுவதுமாய்ப் பயனின்றி அலைகின்ற பிராண வாயு, மேற்கூறிய நெறிக்குட்பட்டு நிற்குமாற்றால் தூயதாகச் செய்யின், உடம்பு ஒளிவிட்டு விளங்கும்; தலை, முகம் முதலானவற்றில் உள்ள மயிர்கள் நரையாது கறுப்பனவாம். இவற்றினும் மேலாகச் சிவபெருமான் அத்தகைய யோகியின் உள்ளத்தை விட்டுப் புறம் போகான்.

விளக்கவுரை

புறப்பட்டுப் போகான் என்றது 'தியானம் சலியாது' என்றவாறாம். எனவே, "இதுவே பிராணாயாமமாகிய பேருழைப் பிற்குச் சிறந்த பயன்" என்பது போந்தது.

இதனால், பிராணாயாமம் மேல் வரும் யோக உறுப்புக்கட்கு இன்றியமையாச் சாதனமாதல் கூறப்பட்டது.

கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண் டங்குலம்
நீடுவர் எண்விரல் கண்டிப்பர் நால்விரல்
கூடிக் கொளிற்கோலம் அஞ்செழுத் தாமே. **#565**

ஆடரங்கு ஒன்றை அமைத்து, அதனுள் ஆடப் புகுந்த மங்கையர் இருவர் தாங்கள் ஆடும்பொழுது பன்னிரண்டங்குல தூரம் முன்னோக்கிச் செல்கின்றனர்; ஆயினும், பின்னோக்கி வரும் பொழுது எட்டங்குல தூரமே வருகின்றனர். ஆகவே, அவர் ஒவ்வொரு முறையிலும் நாலங்குல தூரம் கூடத்தை விட்டு நீங்கு பவராகின்றனர். (இவ்வாறே அவர்களது ஆட்டம் நடைபெறு மாயின் எப்பொழுதாவது அவர்கள் அவ்வாடரங்கை முழுதும் விட்டு அப்பாற் போதலும், மீள அதன்கண் வாராமையும் உளவாதல் தப்பா தன்றோ!) ஆகையால், ஒவ்வொரு முறையும் அந்த நாலங்குல தூரமும் அவர்கள் மீண்டு வருவராயின், அக் கூடத்தின் அழகு என்றும் அழியா அழகாய் நிலைத்திருக்கும்.

விளக்கவுரை

ஓடுவர் பன்னிரண்டங்குலம்; மீளுவர் எண்விரல் என நிரல்நிரையாக்கிப் பின், "நீடு உவர் இவ்வாற்றால் நால் விரல் கண்டிப்பர்; (அதனையும் அவர்) கூடிக்கொளின், கோலம் அஞ் செழுத்தாம்" எனக் கூட்டி உரைக்க. நீடு உவர் - ஆட்டத்தில் நீடு நிற்கின்ற இவர். கண்டிப்பர் - துணிப்பர். மந்திரங்களே அழிவில்லன; அவற்றுள்ளும் அஞ்செழுத்து மந்திரம் அழிவிலதாதலின், அழியாமை குறித்தற்கு, அஞ்செழுத்தாக்கி அருளிச்செய்தார். அஞ்செழுத்து, திருவைந்தெழுத்தும், வியட்டிப்

பிரணவமுமாம். இனி, ஓவியத்தின் மறுபெயராகிய 'எழுத்து' என்பதும், "கோலம்" என்பதுபோலவே ஆகுபெயராய் அழகினைக் குறித்தது எனக் கொண்டு, ஏகாரத்தை எதிர்மறை வினாவாக்கி, 'அழியுமோ என்று அஞ்சப்படும் அழகாகுமோ! ஆகாது' என உரைத்தலுமாம். இனி, இதற்கு "அஞ்செழுத்துருவமாதற்கு ஏற்றதாகும்" என உரைத்தலுமாம். ஆடல் மங்கையர் அப்பாற்போய், மீளவும் அதனுள் வாராதொழியின், ஆடரங்கு அழிந்தொழியும் என்பதாம்.

கூடம், உடம்பு, ஆடல் மங்கையர், இரு மூக்கு வழியாக இயங்குகின்ற பிராண வாயு, "மக்களது மூச்சுக் காற்று இயல்பாக வெளிச் செல்லும் பொழுது பன்னிரண்டங்குல அளவு செல்லும்" என்பதும், "மீண்டு அஃது உட்புகும்பொழுது, முன் சென்ற அளவு புகாது, இயல்பாக எட்டங்குல அளவே புகும்" என்பதும் யோகநூல் வரையறை. எனவே, "வெளிச் சென்ற காற்றில் மூன்றில் இரண்டு பங்கே உட்புக, ஒருபங்கு இழப்பாகின்றது" என்பதும், 'அவ் இழப்பினாலே நாள்தோறும் வாழ்நாள் அளவு குறைந்துகொண்டே வருகின்றது' என்பதும், 'அவ்வாறாகாது தடுப்பது பிராணாயாமம் என்பதும்' கருத்தாதல் அறிந்துகொள்ளப்படும்.

இதனால், பிரணாயாமத்தால் வாழ்நாள் நீட்டிக்குமாறு தெரித்துணர்த்தப்பட்டது.

பன்னிரண் டானை பகல்இர வுள்ளது
பன்னிரண் டானையைப் பாகன் அறிகிலன்
பன்னிரண் டானையைப் பாகன் அறிந்தபின்
பன்னிரண்டா னைக்குப் பகல்இர வில்லையே. ***#566***

பன்னிரு முழ உயரமுள்ள யானை ஒன்று பகலும், இரவுமாய் மாறிவரும் காலச் சுழலில் அகப்பட்டுள்ளது. அஃது அவ்வாறிருத்தலை அதன் பாகன் தனது பேதைமையால் அறிந்தானில்லை. அதனை அவன் அறிவானாயின், அந்த யானை அச் சுழலைக் கடந்து நின்று, அவனுக்கு உதவுவதாகும்.

விளக்கவுரை

ஆனை, மூச்சுக் காற்று. வசப்படுத்துதற்கு அருமை நோக்கி, அதனை யானையாக அருளிச்செய்தார். 'சிறந்த யானை ஏழுயர் யானை' என்பது யானை நூல் மரபு. அதனோடொப்ப, 'பன்னிரண்டுயர்ந்த யானை' என்றார். 'முழம்' எனவும், 'உயர்ந்தது' எனவும் கூறாது, பொதுமையில் நயம்பட 'பன்னிரண்டு' என்றது, மேல், 'அங்குலம்' என்றதனோடும், "முன்னோக்கி ஓடும்" எனக் கூறியவற்றோடும் மாறுகொள்ளாமைப் பொருட்டு. "பகல் இரவு" என்றது, பகல், இரவு, நாள், பக்கம், திங்கள், யாண்டு எனப் பலவாற்றாற் காலம் கழிதலைக் குறித்தவாறு.

'பிராணாயாமம் செய்யின், அங்ஙனம் கழிதலாற் கெடுவதொன்றில்லை' என்பதாம். பாகன் - உயிர்.
இதனால், 'பிராணாயாமத்தில் மனவெழுச்சி செல்லாமை அறியாமையினாலாம்' என்பது கூறப்பட்டது.
'பிராணாயாமத்துள் பூரகம், கும்பகம், இரேசகம் மூன்றும் தனித்தனியானவை அல்ல; மூன்றும் யாண்டும் கூடி நிற்பனவே; அவற்றுள் "பூரகம், கும்பகம், இரேசகம்" என்னும் முறையால் செய்யப்படுவது இரேசகம். "பூரகம், இரேசகம், கும்பகம் மறித்தும் பூரகம்" என்னும் முறையால் செய்யப்படுவது பூரகம். "பூரகம், இரேசகம், கும்பகம்" என்னும் முறையால் செய்யப்படுவது கும்பகம். எனவே, இவை இறுதியில் நிகழ்வனவற்றால் பூரகம் முதலிய பெயர்களைப் பெற்றன' எனக்கொண்டு, அவ்வாறே, "ஏறுதல் பூரகம், மேல்கீழ் நடுப்பக்கம், வாமத்தில் ஈரெட்டு" என்னும் திரு மந்திரங்களை முறையே 'இரேசகம், பூரகம், கும்பகம்' என்பவற்றைக் கூறுவனவாக அரசஞ் சண்முகனார் தமது பாயிர விருத்தி (பக். *45,46*) யுள் எழுதியுள்ளார். இன்னும் அவர் பிராணாயாமம் 'இம்மூன்றல்லாது, 'நிலை' என்ற நான்காவதும் உடையது' எனக் கொண்டு, "இட்டதவ் வீடு கூடம் எடுத்து, பன்னிரண் டானைக்கு" என்னும் திருமந்திரங்கள் அதனையே கூறுகின்றன என்கின்றார். ஆயினும், "நிலை" என்பதைக் குறிக்கும் வடமொழிப் பெயர் இது என்பதனை அவர் கூறவில்லை. 'தாபித்தல்' என்ற ஒருசொல் திருமந்திரத்திற் காணப்படுகின்றது; அதனையே கருதினாரோ, என்னவோ*!* இனி, கும்பகம் என்பது காற்றை உள்ளே நிறுத்துதலன்று; வெளியே நிறுத்துதல் என்கின்றார் விவேகானந்த அடிகள். இவையெல்லாம் முன்னை மரபிற்கு வேறானவையாய் உள்ளன.

<u>*5.6.*பிரத்தியாகாரம்</u>

கண்டுகண் டுள்ளே கருத்துற வாங்கிடிற்
கொண்டுகொண் டுள்ளே குணம்பல காணலாம்
பண்டுகந் தெங்கும் பழமறை தேடியை
இன்றுகண் டிங்கே இருக்கலு மாமே. ***#567***

மனத்தை அகநோக்கிலே காணத்தக்க ஆதார நிலைகளைக் கண்டு கண்டு நிற்குமாறு அடக்கினால், அங்குத்தானே களிப்புப் பெற்று பயன்கள் பலவற்றை அடையலாம். முடிவில் பழைய வேதங்கள் எல்லாம் காண விரும்பிப் பண்டு தொட்டு எங்கும் சென்று தேடியும் காணாத சிவனை இன்றே, இவ்விடத்தே கண்டு, அமைதி யோடு இருத்தலும் கூடும்.

விளக்கவுரை

'கருத்தினை உள்ளே கண்டு கண்டு உறவாங்கிடின்' என மாறிக் கூட்டுக. காணுதல், கொள்ளுதல். இவற்றிற்குச் செயப்படு பொருள்கள் வருவிக்கப்பட்டன. ஆதார நிலைகள் இனிக் கூறப்படும். 'குணம்' என்பது, 'கோளில் பொறியிற் குணமிலவே' (குறள், *9)* என்பதிற் போல, 'பயன்' எனப் பொருள் தந்தது, தேடி - தேடப்பட்டவன்.
இதனால், பிரத்தியாகாரத்தது சிறப்புக் கூறப்பட்டது.

நாவிக்குக் கீழே பன்னிரண் டங்குலந்
தாவிக்கும் மந்திரந் தன்னை அறிகிலர்
தாவிக்கும் மந்திரந் தன்னை அறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடியிருந் தானே. ***#568***

உந்திக்குக் கீழ்ப்பன்னிரு விரற்கிடையளவில் உள்ள இடத்தில் மனத்தை நிலைபெறச் செய்வதாகிய இரகசிய முறையை உலகர் அறியார். அதனை அறிந்து மனத்தை அங்கே நிறுத்துவராயின், இறைவன் தானே வந்து அவர்களைத் தன்பால் வர அழைத்து, அங்கு வீற்றிருப்பான்.

விளக்கவுரை

இதில் குறிக்கப்பட்ட இடம் 'மூலம்' (அடிநிலை) எனப்படும். இது முதல் ஆதாரம், இஃது எருவாயுமன்று; கருவாயு மன்று; இரண்டிற்கும் இடைப்பட்ட இடம் என்பது பின்னர் இனிது விளங்கும். தாபித்தல் நிலைபெற வைத்தல். அவ்வாறு வைப் பதனையே 'மந்திரம்' என்றாராகலின், 'தாபிக்கும்' என்ற பெய ரெச்சம் வினைப்பெயர் கொண்டதாம். 'மந்திரம்' என்றது, 'இரகசியம்' என்னும் அளவாய் நின்றது. இனி, 'மந்திரம்' என்றே பொருள் உரைப்பின், 'அறிகிலர்' எனப் பிறரை இகழ்கின்ற நாயனார், தம் மாணாக்கர்க்கு அதனை அறிவியாது வாளாபோதல் அடாதாம். அன்றியும், இஃதொன்றற்கே யன்றி ஏனைப் பலவற்றிற்கும் மந்திரம் உண்மையின் அவ்விடங்களிலும் அவற்றைக் கூறல் வேண்டும்; அவ்வாறு கூறிற்றிலர். இனி, மந்திரமே யன்றி அதிதேவர், அக்கரம், அடையாளம் முதலாக மற்றும் பல உள ஆகலின், அவற்றையும் குறியாது போதல் குன்றக் கூறலாம். அங்ஙனமாயின், அவையும் எடுத்தோதற் பாலனவாகலின் அவற்றை அவ்வாறு ஓதாதுபோதல் என்னை எனின், அவையெல்லாம் யோகத்துட் கிரியையேயாய், நூல்கள் தோறும், மரபு தோறும் வேறு வேறாகக் கொள்ளப்படும் வழி பாட்டு முறைகளேயாதலால், சிவநெறியாளர் அனைவர்க்கும் பொதுப் பட அருளிச் செய்யும் இந்நூலூல் அவற்றுட் பொதுவாவன சிலவற்றை யன்றி ஏனையவற்றை வரையறுத்தோதுதல் ஆகாமையின், 'அவற்றை அவரவர் தம் தம் வாய்ப்பிற்கு ஏற்பப் பெற்றுக் கடைப்பிடிக்க' என்னும் கருத்தால் வாளா போகின்றார்; ஆதலின், அது நாயனார்க்குக் குற்றமாதல் எங்ஙனம் என்க. சைவாகமங் களுள்ளும்

இவற்றுட் சிலவற்றை வேறு வேறாகக் கூறப்படுதற்கும் காரணம், 'இவை யெல்லாம் சில வழிபாட்டு முறையே' என்னும் கருத்தினாலேயாம்.
யோகமும், மன ஒருமைக்கும், ஆன்ம பரிபக்குவத்திற்கும் உரிய ஒரு சாதனமேயன்றிப் பொருளியல்பை உள்ளவாறுணரும் தத்துவ ஞானம் (மெய்யுணர்வு) அன்று' என்பது உணரமாட்டாதார், யோகத்தையே, 'ஞானம்' என மயங்கி, ஒரு நெறியையே பற்றிப் பிற வற்றை இகழ்வர், இங்கு யோகத்தை உணர்த்தும் நாயனார், பின்னர் ஞானத்தையே முடிவாக உணர்த்துதல் காண்க.
இவ்வாறாயினும், இவ்வழிபாட்டு முறைகளுள் சிலவற்றை இவ்வதிகாரத்திறுதியில் சிறிது காண்போம். பிற அறங்களினும், பிற தெய்வ வழிபாட்டினும், சிவதன்மமும் சிவ வழிபாடும் வேறாதல் போலப் பிற யோகங்களினும் சிவயோகம் வேறு, சரியை முதலிய நான்கனுள் மூன்றாவதாகிய யோகம் சிவயோகமே என்பது உணர்க. முதல் மூன்று அடிகளிலும் வடவெழுத்துப் பகரம் தமிழில் வகரமாய்த் திரிந்தது.
இதனால், பிரத்தியாகாரத்தில், 'மூலாதாரம்' என்னும் முதல் ஆதார நிலை கூறப்பட்டது.

மூலத் திருவிரல் மேலுக்கு முன்நின்ற
பாலித்த யோனிக் கிருவிரற் கீழ்நின்ற
கோலித்த குண்டலி யுள்ளெழுஞ் செஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரற் கீழதே. ***#569***

எருவாய்க்கு இருவிரற்கிடைமேலாகவும், வெளியே தோன்றி நின்று கருவைப் பயக்கும் கருவாய்க்கு இருவிரற்கிடை கீழாகவும் நிற்கின்ற வட்ட வடிவான குண்டலி சத்தியுள் தோன்றுகின்ற செவ்வொளியின் இடம், உந்திக்கு நான்கு விரற்கிடை கீழே உள்ளது.

விளக்கவுரை

இங்கு'மூலம்' என்றது எருவாயை. எனவே, இஃது ஆதாரங்களுள் முதலாவதாகிய மூலாதாரத்தினை இனிது விளங்கக் கூறியதாயிற்று.
ஞாலம் - பூமி; இடம். இதில் 'அத்து' வேண்டாவழிச் சாரியை, 'குண்டலி' எனப்படுவது சுத்த மாயையில் தோன்றும் எழுத் தோசையாகிய நாதமே.
இதற்கு வட்டமே வடிவாகக் கொள்ளப்படு தலின், 'குண்டலி' எனப் பெயர் பெற்றது. 'கோலித்த' என்றதும் இதன் வடிவைக் குறித்ததேயாம்.
'வட்டமாய் வளைந்து நிற்பது' என்பது பற்றி, இது பாம்பாக வைத்துப் பாவிக்கப்படுகின்றது. இது பற்றியே உலகத்துப் பாம்பையும் வழிபாட்டிற்கு உரியதாகக் கருதும் வழக்கம் உளதாயிற்று.
உண்மையாகச் செய்யும் வழிபாடு யாதா யினும், அதற்குப் பயன் தருபவன் சிவபெருமான் என்பதை நினைவு கூர்க.

'குண்டலி எனப்படும் பாம்பு ஐந்து தலைகளை உடையது' என்றல், வாக்குகள் சுத்த மாயையின் பஞ்ச கலைகளில் விருத்திப் பட்டு நிற்றலைக் குறிப்பது. சிவாலயங்களில் சிவலிங்கத்திருமேனிக்கு ஐந்து தலைப்பாம்பைக் கவசமாகச் சாத்தி வழிபடுதலும் சிவபெருமான் தனது சத்தி நிவிர்த்தி முதலிய ஐந்தாகிச் சுத்தமாயையின் ஐந்து கலை களிலும் நிற்க, அவ்விடங்கள் எல்லாவற்றிலும் சிவன் நிற்றலையே குறிக்கும். மந்திரங்கள் அனைத்தும் நால்வகை வாக்கு வடிவமாகிய சுத்த மாயையின் காரியங்களே. அக் கருத்து விளங்குதற் பொருட்டு, 'அனைத்து மந்திரங்கட்கும் மூலமாகிய ஓங்காரமே குண்டலி சத்தி' என்பர். நால்வகை வாக்கினாலேயே யாவர்க்கும் பொருளுணர்வு உண்டாகின்றது. அவ்வுணர்வு ஆணவத்தின் சார்பால் உலகப் பொருள்களையே உணர்ந்து நிற்குங்காறும் 'அறிவு' எனப்படாது 'அறியாமை' என்றே சொல்லப்படும். அதனால், உலகர் எல்லாரிடத்தும் உள்ள குண்டலி சத்தியாகிய பாம்பு, கண்ணை விழியாது உறங்கிக் கிடப்பதாகின்றது.

உலக நடையிலும் அறிவு புருவ நடுவாகிய மேலிடத்திலும், அறியாமை மூலாதாரமாகிய கீழிடத்திலும் உள்ளன என்பதால், 'குண்டலிப் பாம்பு தனது அறிவுக்கு நிலைக்களமாகிய தலையை அறியாமைக்கு இடமாகிய மூலாதாரத்திலும், அறிவுக்கு நிலைக் களமாகாத வாலை அறிவுக்கு இடமாகிய நெற்றியிலும் வைத்துத் தலைகீழாகக் கிடந்து உறக்கத்தில் ஆழ்ந்துள்ளது' எனவும், 'அர ணியில் அடங்கியுள்ள அக்கினி, கடைந்தபொழுது எரிந்து சுடுதல் போல, மூலாதாரத்தில் அடங்கியுள்ள அக்கினி, பிராணாயாம பிரத்தி யாகாரங்களால் மூண்டெழுந்து தாக்க, அக் குண்டலிப் பாம்பு கண் விழித்து எழுந்து தலைமேலாகவும், வால் கீழாகவும் சுழன்று, இயற்கை நிலையில் நிற்கும்' எனவும் யோக நூல்கள் கூறும். இவற்றால் எல்லாம் பெறப்படுவது, 'யோக நெறியிற் பழகினால் உயிரினது உணர்வு புறப் பொருள்களாகிய உலகத்தைப் பற்றி நிற்றலை ஒழிந்து, உயிர்க் குயிராய் நிற்கின்ற இறைவனை உள்ளுணர்வாற் பற்றும்' என்பதே. அதற்குச் சிறந்த துணையாவன பிரணவம் முதலிய மந்திரங்களும், பாவனைகளும், மனத்தால் அகத்தே செய்யும் வழிபாடுகளுமாகும். அவ்வழிபாடுகட்கு முதலாய் நிற்கும் திருமேனிகள் முன்பு உருவத் திருமேனியாய் நின்று, பின்பு அருவுருவத் திருமேனியாய், முடிவில் அருவத்திருமேனியாகும் என்க.

இதனுள்,'குண்டலியுள் எழும் செஞ்சுடர்' என்றது, இறைவனது அருவுருவத் திருமேனியை, இது புறத்தே இலிங்கமாக வணங்கப்படுதல் போல, அகத்தே யோகத்தில் பேரொளிப் பிழம்பாகக் கொண்டு தியானிக்கப்படும். அதன் விளக்கம் எல்லா ஆதாரங்களிலும் நிறைந்து

நிற்பதாயினும், இங்குக் குறிக்கப்பட்ட இடமே அஃது இருக்கும் இடம் என்பது இதனால் பெறப்பட்டது. இதுபற்றியே இவ்விடம் 'சுவாதிட்டானம்' எனப் பெயர் பெற்றது. 'தனது இடம் ' என்பது இப்பெயரின் சொற்பொருள். தான், உள்ளெழும் சோதி. சோதியின் இயல்பு கீழிருந்து மேல் நோக்கி எழுவதாகலின், பிரத்தியாகாரப் பயிற்சியால் இது மேல் நோக்கி வளர்ந்து காட்டும். மூலாதாரம் குண்டலிக்கு இடமாயினமையின், அதற்கு மேலுள்ள இதுவே இச் சோதிக்கு இடமாயிற்று. இஃது இரண்டாவது ஆதாரம். இதன் இயல்பு கூறவே, 'மனத்தை மூலாதாரத்தில் நிறுத்திப் பயின்றபின், இவ்விடத்து நிறுத்திப் பயில்க' என்றதாயிற்று.
இதனால், 'சுவாதிட்டானம்' என்னும் இரண்டாவது ஆதார நிலை கூறப்பட்டது.
மூன்றாவது ஆதாரம் 'மணிபூரகம்' என்பது; இஃது உந்தித்தானமே, 'மாலாகி உந்தியுட் கும்பித்து வாங்க' என மேற் கூறியதனானே இதுவும் ஓர் ஆதாரமாதல் அறியப்படுதலின், இவ் விடத்தும் மனத்தை நிறுத்துதல் உய்த்துணர்வகையால் பெறப்படுதல் பற்றி எடுத்தோதாராயினார், வாயுவைக் கும்பிக்கும் சிறந்த இடமாதல் பற்றி, 'மணிபூரகம்' எனப் பெயர் பெற்றது.

நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குலம்
நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்யும்
தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாமே. ***#570***

மூக்கிற்குப் பன்னிரு விரற்கிடை கீழாக உள்ள இடத்தில் நீ மனத்தை நிறுத்தித் தியானிக்க வல்லையாயின், அட்டமா சித்திகளைத் தரும் சித்தியோகம் தானே வந்து உன்னை அடையும், உடம்பிற்கும் அழிவு இல்லையாகும்.

விளக்கவுரை

மூக்கிற்குப் பன்னிரு விரற்கிடைக்கீழ் உள்ளது இருதயத் தானம், இஃது 'அனாகதம்' எனப்படும்; 'வரவற்றது' என்பது இப் பெயரின் பொருள். மனத்தின் இடம் இதுவே' என்பது கருத்து. 'இவ் வளவிலே சிவயோகமல்லாத பிற யோகங்கள் கைவரும்' என்பதையே பின்னிரண்டடிகள் உணர்த்தின. அட்டமாசித்திகளைப் பயனாக உடைய யோகம் 'ஹட யோகம்' எனவும், உடம்பு நரை திரை மூப்பு இன்றி நெடுங்காலம் நிற்றலைப் பயனாக உடைய யோகம் 'ராஜயோகம்' எனவும் சொல்லப்படும். இவையெல்லாம் ஞானத்தைப் பயவாமை மாத்திரையேயன்றி, அதற்குத் தடையாவனவுமாம்; ஆதலின், ஞானத்தை விரும்புவோர் இவற்றை விரும்புதல் இல்லை. இதனுள்,

மூன்றாம் அடி மூன்றாம் எழுத்து எதுகை.
இதனால், 'அனாகதம்' என்னும் நான்காவது ஆதார நிலை கூறப்பட்டது.

சோதி இரேகைச் சுடரொளி தோன்றிடிற்
கோதில் பரானந்தம் என்றே குறிக்கொண்மின்
நேர்திகழ் கண்டத்தே நிலவொளி எய்தினால்
ஓதுவ தும்முடல் உன்மத்த மாமே. *#571*

'சுவாதிட்டானத்தில் உள்ளது' என மேலே சொல்லப் பட்ட பேரொளி, உங்களுக்குக் கீற்றுப்போன்ற விளக்கொளியாகப் புலப்படுமாயின், 'அப்பொழுதே பேரின்பம் கிடைத்து விட்டது' எனக்கொண்டு, அவ்வொளியை நோக்குதலையே குறியாகக் கொள்ளுங்கள். இருதயத்திற்கு அடுத்ததானமாய் விளங்குகின்ற கண்டத்தில் (மிடற்றில்) நிலைத்துள்ளதாகிய அவ்வொளியைத் தலைப் பட்டால், அதன் பயனாகச் சொல்லப்படுவது, அதுகாறும் கண்டறியாத ஒரு புதிய இன்ப அனுபவமாம்.

விளக்கவுரை

இங்ஙனங் கூறவே, 'ஞான நாட்டம் உடையோரே முற்கூறிய நிலையின் மேலும் முயன்று இவ்வொளியைக் காண்பர்' என்பதும், 'அந்த நாட்டம் இல்லாதோர் முற்கூறிய நிலையோடே நின் றொழிவர்' என்பதும் பெறப்பட்டன. கண்டம் 'விசுத்தி' எனப்படும். 'மிக்க தூய்மை' என்பது இதன் பொருள். ஞான நெறியிற், செல்லும் முதல் இடமாதல் பற்றி இப்பெயர் பெற்றது. 'நிலவொளி' வினைத் தொகை. 'ஆம் அதுவே' என்பதில் 'அது' என்பது எஞ்சிநின்றது.
இதனால், 'விசுத்தி' என்னும் ஐந்தாவது ஆதார நிலை கூறப்பட்டது.

மூலத் துவாரத்தை முக்கார மிட்டிரு
மேலைத் துவாரத்தின் மேல்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்திது தானே. **#572**

(மாணவனே! பிரத்தியாகாரத்தில் நீ விசுத்திக்கு மேலும் செல்ல விரும்புவையாயின், கும்பகத்தால் நின்ற வாயு கீழே போகாமல்) எருவாய்ப் புழையை இறுக அடைத்து, (அவ் வாயு மேல் அண்ணத்தில் உள்ள துளை வழியாக மூக்குத் துளையை அடைந்து புறப்படுமாறு) மனத்தை அவ் அண்ணத்தின் துளையிடத்தே வைத்துப் புருவ நடுவில் நில் - அந்நிலையில் (அக்காற்று, கண் காதுகள் வழியாகவும் பரவிப் புறப்படும் ஆதலின்), கண்களை இமையும் கொட்டாமல் விழித்திரு. இதுவே நீ காலத்தை வெல்லும் முறை.

விளக்கவுரை

தந்துரைத்தன எல்லாம் இசையெச்சங்கள், புருவ நடு வாகிய இடம், 'ஆஞ்ஞை' (ஆக்ஞை) என்னும் பெயருடையது. 'அறிவிற்கு நிலைக்களம் என்பது இதன்பொருள். இஃது 'இலாடம்' என்றும் சொல்லப்படும். இயல்பாக மூக்கின் வழியே உட்புகுந்து மீண்டும் மூக்கின்வழியே வெளிச் செல்லுகின்ற காற்றை அவ்வாறு செல்லாமல் தடுத்து நிறுத்தி, மூலாதாரத்தின் மேல் உள்ள முது கெலும்பின் அடிப்பாகத்திலிருந்து அம் முதுகெலும்பின் உள்ளால் செல்லும்படி செலுத்தினால், அது சிறிது சிறிதாக அவ்வழியே அண்ணத்தில் உள்ள துளையை அடையும். அதனை வாய்வழி வாராது தடுத்தால், உச்சியை அடைந்து மூக்கு வழியாக வெளிவரும். இந்த மாற்று வழியால் உடலுக்குப் பல நன்மைகள் உண்டாதலுடன், தொழிற்படாமலே மடிந்து கிடக்கின்ற அறிவுக் கருவிகள் பலவும் எழுச்சியுற்றுத் தொழிற்படும். அதனால், உண்மைகள் பல எளிதிற் புலனாகும். இம்முறையைத் தான், 'இருவழியை (இடைகலை பிங்கலைகளை) அடைத்து, ஒரு வழியை (சுழுமுனையை)த் திறத்தல் வேண்டும்' என்று யோக நூல்கள் கூறுகின்றன. ஞானசம்பந்தரும்,

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி, ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி, நன்புலத்(து)
ஏனை வழிதிறந்(து) ஏத்துவார்க்(கு), இட
ரான கெடுப்பன அஞ்செ ழுத்துமே. -*தி.3 ப.22 பா.3*

என்றும்

'ஐம்புலன், நாலாம் அந்தக் காரணம்,
முக்குணம், இருவளி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை' -*தி.1 ப.128*

என்றும் அருளிச் செய்தார். இவ்வாறு மூச்சை அடக்கும்பொழுது இருதயத் துடிப்பும் நிற்கலாம். ஆயினும் அஃது இருதயம் கெட் டொழிந்ததாகாது. சிறிதுபொழுது அதன் செயலை நிறுத்திவைத்து, மீட்டும் தொடங்குவதேயாகும். இது, கடிகாரத்தில் ஊசலியை - பெண்டுலத்தைச் சிறிதுபொழுது நிறுத்திவைத்து, மீட்டும் அசைய விடுவது போன்றது. இவ்வாறாகவே, இது வாழ்நாள் நீட்டிப்பதற்கு ஏதுவாதல் விளங்கும். எவ்வாறாயினும், இவையெல்லாம் முறையறிந்து செய்யாத வழிப் பெருந்தீங்கு விளைப்பனவாகவே முடியும். 'மூச்சைப்பிடிப்பது' என்றால், முருட்டுத்தனமாக, விடாமலே பிடித்துக் கொண்டிருப்பது என்பது பொருளன்று; முறையறிந்து சிறிது சிறிதாகப் பயின்று, இயன்ற ஒரு கால எல்லை அளவேதான் பிடிக்கத்தக்கது. 'சிரசாசனத்தில் இருப்பது' என்றால், 'எப்பொழுதும் அப்படியே இருப்பது' என்பது பொருளாகாதது போலத்தான், பிராணாயாமம்,

பிரத்தியாகாரம் முதலிய யாவும். சிறிது நேரம் செய்த சிரசாசனம், பின் பல நேரத்திற்குப் பயன் தருதல் போலத்தான் பிராணாயாமம் முதலியவைகளும் பயன்தரும்.
மூக்கு வழியாக உட்புகுந்த காற்று மீளவும் அவ்வழியே திரும்பிப் போகாதவாறு தடுத்து, அதனைச் சுழுமுனை வழியாகச் செலுத்தி உச்சியினின்றும் மூக்கு வழியாக மீளச் செய்கின்ற யோகிகள், தங்கள் உடலை விட்டுப் போய்விடக் கருதுவார்களாயின், உச்சியை அடைந்த காற்று மூக்கு வழியாகப் புறப்பட ஒட்டாமல் மூக்கைப் பிடிப்பர்; அதனால், அக்காற்று உச்சியில் மென்மையாக மூடப் பட்டிருக்கும் பெருந்துளையை (பிரமரந்திரத்தை)த் திறந்துகொண்டு வெளியேறிவிடும். அதனுடன் 'உடல்' என்னும் இயந்திரம் செயலற்று வீழ்ந்துவிடும். இது பற்றற்ற நிலைமையில் வீடுபெறும் விருப்பத்தால் இறை நினைவுடன் செயப்படுதலின், பாவமாதல் இல்லை. யோகியர் பலர் இவ்வாற்றால் உடல் விடுத்துச் சென்றதை நூல்களால் அறிகின்றோம். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு, பெருமிழலைக் குறும்ப நாயனாரது செயலாகும். அதனைச் சேக்கிழார் பின் வருமாறு எடுத்தோதுவார்.
மண்ணில் திகழுந் திருநாவ லூரில் வந்த வன்றொண்டர் நண்ணற் கரிய திருக்கயிலை நாளை எய்த நான்பிரிந்து
கண்ணிற் கரிய மணிகழிய வாழ்வார் போல வாழேன் என்(று)
எண்ணிச் சிவன்தாள் இன்றேசென் றடைவன் யோகத்தால்
என்பார்.
நாலு கரணங் களும்ஒன்றாய் நல்ல அறிவு மேற்கொண்டு
காலும் பிரம நாடிவழிக் கருத்துச் செலுத்தக் கபாலநடு
ஏலவே முன் பயின்றநெறி எடுத்த மறைமூ லந்திறப்ப
மூல முதல்வர் திருப்பாத மடைவார் கயிலை முன்னணைந்தார்.
(மறை மூலம் - மூல மறை; மூல மந்திரம்; திருவைந்தெழுத்து. 'கபால நடுவை மூல மந்திரம் திறக்க' என்க)
காலத்தை வெல்லுதல் - காலத்தால் தடைப்படாது, முக்காலப் பொருளையும் ஒருங்குணர்தல். இப்பேரறிவு பிறக்கவே, கருவி கரணங்களின் வழிச்செல்லும் ஏகதேச அறிவில் விருப்பம் நிகழாது என்க. 'மேலைத் துவாரத்தில்' என்னாது, 'மேலைத் துவாரத்தின் மேல்' என்றதனால், 'நிற்றல் புருவ நடுவில்' என்பது பெறப்பட்டது.

எருவிடும் வாசற் கிருவிரல் மேலே
கருவிடும் வாசற் கிருவிரற் கீழே
உருவிடுஞ் சோதியை உள்கவல் லார்க்குக்
கருவிடுஞ் சோதி கலந்துநின் றானே. ***#573***

சுவாதிட்டானத்தில் நின்று மூலாதாரத்திலும் ஊடுருவி விளங்குகின்ற பேரொளியைப் புருவ நடுவில் நின்று தியானிக்க வல்லவர்கட்கு, பிறப்பை நீக்குகின்ற ஞான மயனாகிய இறைவன் இரண்டற நின்று, அவரே தானாகி விளங்குவான்.

விளக்கவுரை

'பிரத்தியாகாரத்தை ஆஞ்ஞையில் செய்ய வல்ல வர்க்குச் சிவோகம் பாவனை கைவர, அவரே சிவமாய் நின்று. எல்லாம் செய்ய வல்லராவர்' என்றவாறு. முதலிரண்டடிகள், 'மூலத் திருவிரல்' என்னும் திருமந்திரத்திற்போல மூலாதாரத்தை வரையறுத் துணர்த்தின. 'உரு விடும்' என்ற 'விடு' துணைவினை, 'கருவிடும்' என்றதில் விடுதல், நீக்குதல்.

இவை இரண்டு திருமந்திரங்களாலும், 'ஆஞ்ஞை' என்னும் ஆறாவது ஆதார நிலை கூறப்பட்டது.

ஒருக்கால் உபாதியை ஒண்சோதி தன்னைப்
பிரித்துணர் வந்த உபாதிப் பிரிவைக்
கரைத்துணர் வுன்னல் கரைதல்உள் நோக்கல்
பிரத்தியா காரப் பெருமைய தாமே. *#574*

மனத்தை ஒருக்குதலால், கருவி கரணங்களின் தொடக்கையும், ஆன்ம அறிவையும் வேறு பிரித்துக் காணுதலும், அவ்வாறு காணும் காட்சியையும் மெல்ல மெல்ல மறந்து, அறிவு வடிவாகிய இறைவனை உணர்தலும், அந்த உணர்வினால் அவனிடத்து அன்பு மிகப் பெறுதலும், அந்த அன்பினால் அவனிடத்தே அழுந்திக் கிடக்க முயலுதலும் ஆகிய இவையே பிரத்தியாகாரத்தால் அடையும் பெரும் பயன்களாம்.

விளக்கவுரை

இதனானே, 'பிரத்தியாகாரமாவது இது, என்பது விளங்கும். 'ஒருக்கு' பிறவினையாய முதனிலைத் தொழிற்பெயர். உபாதி - குற்றச் சார்பு; அது மாயேயத்தொகுதி, சடமாய அவையும் ஒருவாற்றால் 'சோதி' எனப் படுமாகலின், சித்தாய ஆன்ம அறிவை, 'ஒண்சோதி' என்றார். உணர்வு, தொழிற்பெயர். பிரிவும், உணர்வும் ஆகுபெயர்கள். கரைத்தல் - அழித்தல். கரைதல் - இளகுதல். 'உள' என்பதன்பின், 'ஆதல்' என்பது வருவிக்க. 'பயன்' என்னாது, 'பெருமை' என்றார். 'சித்தி, காயகற்பம் முதலியன சிறந்த பயன்கள் அல்ல' என்றற்கு.

இதனால், பிரத்தியாகாரத்தின் சிறப்புப் பயன் கூறப்பட்டது.

புறப்பட்ட வாயுப் புகவிடா வண்ணந்
திறப்பட்டு நிச்சயஞ் சேர்ந்துடன் நின்றால்
உறப்பட்டு நின்றதவ் வுள்ளமும் அங்கே

புறப்பட்டுப் போகான் பெருந்தகை யானே. *#575*

பிராணாயாமத்தை அறியாத முன்னெல்லாம் சிறிதும் நின்று பயன் தராமல் வெளியே போய்விடுகின்ற பிராணவாயு, பிராணாயாமத்தில் பூரகத்தால் உள்ளே புகுதலும் அது முன்போலப் போய்விடாதவாறு யோகி கும்பகம் செய்தலில் உறுதி பெற்று நிற்றலால் அவ்வாயு உண்மையாக அவனோடு ஒத்து நிற்குமாயின், மனமும் அவனால் அடையப்பட்ட பொருளாய், அவன், வழிப்பட்டு நின்றதே யாம். அதனால், இறைவன் அவ் யோகியினது உள்ளத்தினின்றும் புறம் போகான்; *(சிவனை மறக்கும் நிலை உண்டாகாது என்றபடி.)*

விளக்கவுரை

'புக' என்பது, *'நின்றால்'* என்பதனோடு முடிந்தது. *'திறப்பட'* என்னும் செயவெனெச்சம் காரணப் பொருட்டாகலின், *'திறப்பட்டு'* எனத் திரிந்து நின்றது. இதற்கு, *'யோகி'* என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க. *'நின்றது'* என்பது, துணிவுபற்றி எதிர்காலம் இறந்தகாலமாய் வந்த கால வழுவமைதி.

இதனால், பிரத்தியாகாரத்தினது இன்றியமையாமை கூறப்பட்டது. இது கூறுவார், இதற்குப் பிராணாயாமம் இன்றியமை யாமையும் உடன் கூறினார்.

குறிப்பினின் உள்ளே குவலயந் தோன்றும்
வெறுப்பிருள் நீங்கி விகிர்தனை நாடுஞ்
சிறப்புறு சிந்தையைச் சிக்கென் றுணரில்
அறிப்புறு காட்சி அமரனு மாமே. *#576*

பிரத்தியாகாரத்தை மனப்பயிற்சி அளவில் செய்தால், கால வரையறை இடவரையறைகள் இன்றி, எல்லா வற்றையும் ஒருங்கே உணரத்தக்க யோகக் காட்சியைப் பெறுதலே அதற்குப் பயனாய் முடியும். அதனை அஞ்ஞான இருள் நீங்கி இறைவனை உணரும் கருத்தோடு செய்யின், தான் இறைவனை உணர்தலேயன்றிப் பிறரையும் உணரச் செய்கின்ற கடவுள் தன்மையையும் உடையவனாகலாம்.

விளக்கவுரை

மனத்தைக் குறித்த இடத்தில் செல்லச் செய்தலாதல் பற்றிப் பிரத்தியாகாரத்தை, *'குறிப்பு'* என்றார். வெறுப்பு இருள் - வெறுக்கப்படுவதாகிய அறியாமை. *'நாடும்'* என்பது எச்சம். சிக்கென்று உணர்தல் - உறுதியாகப் பற்றுதல். *'அறிவிப்பு'* என்பது இடைக்குறைந்து நின்றது. *'பிறருக்கு உணர்த்தும் தன்மை'* என்றது, குருவாகும் தன்மையை, எந்நிலையிலும் குரு இறைவனேயாதல் பற்றி, *'அமரன்'* என்றார்.

இதனால், பிரத்தியாகாரத்தின் கன்ம வகை ஞானவகைகளின் பயன்கள் கூறப்பட்டன. 'தாரணை, தியானம், சமாதி' என்பவற்றையும் இங்ஙனம் பகுத்துக் கூறுதல் காண்க.
உயிருக்கு மாயாபந்தத்தின் அடிநிலை, மாயாகாரியங்களை மறவாது உணர்ந்து நிற்கும் பொருள் உணர்வேயாம். இவ்வுணர்வு சொல்லால் உண்டாகலின், அவ்வுணர்வு சொல் வடிவிலே அமைவ தாகின்றது. ஆகவே, அப்பந்தத்தினின்றும் நீங்குதற்குச் சொற்களைச் சுட்டி உணர வேண்டியுள்ளது.
சொற்கள் அளவில்லனவாயினும், அச் சொற்களுக்கு மூலமாய் உள்ள எழுத்துக்கள் அளவிற்கு உட்பட்டன. ஆகவே, எழுத்துக்களைச் சுட்டி உணரின், அது சொற்களை உணர்வதே ஆகும். அதனால், அனைத்து எழுத்துக்களையும் மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங் களில் ஏற்ற பெற்றியில் வைத்துச் சிந்திக்கும் முறை யோக நூல்களில் கூறப்படுகின்றது.
'அனைத்து மொழிகளில் உள்ள எழுத்துக்களும் வடமொழி எழுத்துக்களில் அடங்கிக் கிடக்கின்றன' என்பது வேத மதங்களின் கொள்கை. அதனால், அவற்றை அவை, 'மாத்துருகாட்சரம்' (எல்லா மொழிக்கும் மூலமாய் உள்ள எழுத்துக்கள்) எனக் கூறும்.
வட மொழியில் உள்ள எழுத்துக்கள் ஐம்பத்தொன்று, க்ஷகாரத்திற்குப் பின்பும் வேறு இரண்டெழுத்தைச் (:க:வ!) சேர்த்து 'ஐம்பத்து மூன்று' என்று ஒருசிலர் (நன்னூலார் முதலியோர்) கூறுவர். பாணினியார் முதலாகப் பலரது கொள்கையும் 'ஐம்பத்தோரெழுத்து' என்பதே, அவற்றுள்ளும் 'லகாரம் ளகாரங்கட்கும் தம்முள் வேற்றுமை இல்லை' என்று கொண்டு, ளகாரத்தை நீக்கி, 'ஐம்பதெழுத்து' என்றே கூறுவர். க்ஷகாரமே நீக்கற்பாலது என்பது மற்றொரு கொள்கை. 'ளகாரம் க்ஷகாரம்' இரண்டையுமே நீக்கி, 'நாற்பத்தொன்பது எழுத்து' என்றே கொள்ளவேண்டும் என்பது வேறொரு கொள்கை. 'ஆல வாய்க் கடவுள் அகாரத்திற்கு உரியவனாய் நிற்க, ஆகாரம் முதலிய ஏனை நாற்பத்தெட்டிற்கு நாற்பத்தெண்மர் புலவர்களாக, கடைச்சங்கப் புலவர் கண்ணுதற் கடவுளை உள்ளிட்டு நாற்பத்தொன்பதின்ம ராயினர்' எனத் திருவிளையாடற் புராணம் கூறுவது, இறுதியிற் கூறிய கொள்கையை வலியுறுத்துவதாய் உள்ளது. எனினும், இந்நாயனார் (திருமூலர்) பலவிடத்தும் ஐம்பதெழுத்தே கூறுகின்றார்.
வடமொழிக்குச் சிறப்பெழுத்தாகக் கூறப்படுவன பல இருப்பினும், அதற்குச் சிறப்பிற் சிறப்பாக உள்ள எழுத்து முப்பத்து மூன்றாவது மெய் (ஹ என்னும்) எழுத்தே, உயிரெழுத்தில் இறுதியில் உள்ள ஒன்றும், இம் மெய்யின் சார்புடையதே, 'அ' என்றால் பிறமொழி; 'ஹ' என்றால்

வடமொழி; 'ஆம் ஊம், ஓம்' என்றால் பிற மொழி; 'ஹாம், ஹூம், ஹோம்' என்றால் வடமொழி எனக்கொள்ளப் படுகின்றது.
வடமொழியைத் 'தெய்வமொழி' என்றும், அதனால் 'அதுவே மந்திர மொழி' என்றும் சொல்வதற்குச் சிறந்த காரணம், இம்முப்பத்து முன்றாம் மெய்யைச் சிறப்பாக ஆள்வதேயாகும்.
தமிழில் ஆய்த எழுத்திற்கு இத்தன்மை உண்டு. பிற மொழி களிலும் இந்த மெய்யெழுத்து உண்டு. என்றாலும், அம்மொழிகள் இவ்வெழுத்திற்குத் தனிச் சிறப்புக் கொடுக்கவில்லை. ஆகவே, இந்த முப்பத்து மூன்றாவது மெய்யை யோகநூல்கள் ஆறு ஆதாரங்களில் மேலானதாகிய ஆஞ்ஞையில் (புருவ நடுவில்) வைத்துத் தியா னிக்கும்படி கூறுகின்றன, அதனோடு கணக்கில் கொள்ள வேண்டாத க்ஷகாரமும் அங்குச் சேர்க்கப்படுகின்றது. ஆஞ்ஞைக்குக் கீழ் உள்ள விசுத்தியில் (கண்டத்தில்) உயிரெழுத்துப் பதினாறும், அதற்குக் கீழுள்ள நான்கு ஆதாரங்களிலும் கீழிருந்து முறையே ககாரம் முதலாக, 'பன்னிரண்டு, பத்து, ஆறு, நான்கு' என்னும் அளவிலான மெய் யெழுத்துக்கள் ஸகாரம் ஈறாக வைத்துத் தியானித்தல் கூறப் படுகின்றது. ஆகவே, *2+16+12+10+6+4= 50* எழுத்துக்களும் *6* ஆதாரங்களில் வைத்துத் தியானிக்கும் முறை பெறப்படுகின்றது. இதில் ளகாரம் சேர்க்கப்படாமை குறிப்பிடத் தக்கது. எழுத்துக்களின் முறைவைப்பில் முன்முன் உள்ளவை சிறப் புடையன; பின் பின் உள்ளவை சிறப்பில்லன.
ஒவ்வோர் எழுத்தும் தாமரை மலரின் ஒவ்வோர் இதழின் மேல் உள்ளனவாகத் தியானித்தல் வேண்டும் எனப்படுகின்றது. எனவே, மூலாதாரம் முதலாக ஆறு ஆதாரங்களும் முறையே நான்கு, ஆறு, பத்து, பன்னிரண்டு, பதினாறு, இரண்டு' என்னும் இதழ்களை உடைய தாமரை மலர்களாகச் சொல்லப்படுகின்றன. இருதய கமலம் எட்டிதழ்த் தாமரையாகக் கூறப்படுதல் தத்துவக் கோட்பாடு பற்றியது; ஆகவே, அதற்கும், இதற்கும் தொடர்பில்லை. உணர்வு, தொடக்கம் முடிவு இரண்டிலும் குவிந்தே இருக்கும். இடைநிலையில் விரிந் திருக்கும்; தொடக்கத்தில் உள்ள குவிவிற்குக் காரணம் அறியாமையும், முடிவில் உள்ள குவிவிற்குக் காரணம் அடக்கமும் ஆகும். ஆகவே, கீழே உள்ள மூலாதாரக் கமலமும், மேலே உள்ள ஆஞ்ஞைக் கமலமும் குறைந்த இதழ்களைக் கொண்டவையாகவும், இடையில் உள்ள ஆதாரங்கள் மிக்க இதழ்களைக் கொண்டவையாகவும் குறிக்கப் படுகின்றன.
இனி, ஆறு ஆதாரங்களில் மேலானதாகிய ஆஞ்ஞை 'விந்துத் தானம்' எனப்படுதலால், அதற்குக் கீழ் உள்ள விசுத்தி முதல் நான்கு ஆதாரங்கட்கு அதிதேவராய் அங்குள்ள கமல மலராகிய ஆசனத்தின்

மேல் வீற்றிருக்கின்ற கடவுளர் முறையே, 'சதாசிவர், மகேசுரர், உருத்திரர், திருமால்' என்பவராவர். இந்த நால்வரும் முறையே, 'ஆகாயம், வாயு, தேயு, அப்பு' என்னும் பூதங்கட்கு அதிதேவர் ஆதலால், அப் பூதங்களுக்குரிய பீச மந்திரங்களாகிய 'ஹம், யம், ரம், வம்' என்பன அத் தாமரை மலர்ப் பொகுட்டின்கண் வைத்து எண்ணப் படுகின்றன. இவற்றிற்கேற்ப மூலாதாரத்தில் பிருதிவிக்கு அதி தேவராகிய பிரமாவையும், அதற்குரிய பீசமாகிய 'லம்' என்பதையுமே வைத்துத் தியானித்தல், வேண்டுமாயினும், மூலாதாரம் 'குண்டலிக்கு இடம்' எனப்படுதலால், அதற்குரிய விநாயகரையும், பிரணவத் தையுமே அங்கு வைத்துத் தியானித்தல் சொல்லப்படுகின்றது.
இனி, மந்திரத்தை மட்டும் 'லம்' என்பதாகவே வைத்துத் தியானித்தலும் காணப்படுகின்றது. ஆகவே, உலகில் கோயிலைப் பெறாத பிரம தேவர், ஆதாரங்களிலும் பிரமசாரியாராகிய விநாயகர் இடத்தில், அல்லது தமது தோற்றத்திற்கு முதலாகிய திருமாலிடத்தில் அடங்கி நிற்பவராகின்றார். இனி, சுவாதிட்டானம் முதலாகப் பிரமா முதலிய தேவர்களை வைத்து, சதாசிவரை ஆஞ்ஞையில் கொள் வாரும் உளர். சதாசிவரை விசுத்தியில் கொள்ளும் நிலையில் ஆஞ்ஞையில் சதாசிவருக்கு மேல் உள்ள சத்தியே தியானிக்கப் படுவாள். இவ்வாறெல்லாம் மனத்தை அகமுகப்படுத்தி நோக்க, புற நோக்குக் குறைந்து, அகநோக்கு மிகுவதாம் என்க. இத்துணையும் பிரத்தியாகாரம் கூறியவாறு.

5.7.தாரணை

கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணாத்தண் டூடே வெளியுறத் தான்நோக்கிக்
காணாக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
வாணாள் அடைக்கும் வழியது வாமே. *#577*

கோணுதல் (புலன்வழி ஓடுதல்) உடையதாய் இருந்த மனம், பிரத்தியாகாரத்தில் அதனை விடுத்து ஒருவழிப் பட, அதனை அவ்வழியில் முன்போல மீளாதவாறு குறிக் கொண்டு தடுத்து, சுழுமுனை வழியாக மேலே செல்கின்ற வாயுவே பற்றுக்கோடாக மேற்செலுத்தி, ஆஞ்ஞையை அடையு மாற்றால் அவ்விடத்திலே செய்யும் தியானத்தால் ஐம்பொறிகள் செயலற்றிருக்கும் நிலையை எய்தினவர்கட்கு, அந்நிலைதானே பிறவி வரும் வழியை அடைக்கின்ற உபாயமாகிவிடும்.

விளக்கவுரை

கீழ் - கீழ்மையான வாயில்; அவை ஐம்பொறிகள் கட்டுதல், இங்கு, 'தடுத்தல்' என்னும் பொருளது. விலா எலும்பு, நாடிகள்

முதலியவைகளைக் கட்டியுள்ளமையால், முதுகெலும்பைத் தந்திகள் முதலியவற்றை உடைய வீணைத் தண்டோடு உவமித்தல் நூல் வழக்கு. 'சிவபெருமான் திரிவிக்கிரமரது முதுகெலும்பை வீணை யாகக் கொண்டார்' என்பது புராணம். ஆஞ்ஞை ஆகாயமாகச் சொல்லப்படுதலின், 'வெளி' என்றார். நோக்கப்படும் பொருள் அவரவர்க்கு ஏற்ற பெற்றியான் அமைதலின், அதனைக் கூறாராயினர். 'கண், செவி' என்பவை பிற பொறிகளையும் தழுவி நின்ற உப லக்கணம். 'என்று', என்னும் எண்ணிடைச் சொல்லின்பின் 'இவற்றை உடையராய்' என்பது வருவிக்க. இனி, 'காணா கண் கேளா செவி' என முற்றுத் தொடராகப் பாடம் ஓதுதலுமாம். 'வாணாள் வழி அடைக்கும் வழி' என்பதனை, 'வாழ்நாள் வழியடைக்குங் கல்' *(குறள், 38)* என்னும் திருக்குறளோடு ஒப்பிட்டு நோக்குக. 'பிறவாமைக்கு வழியாதல், ஞானத்தின் வழியாக' என்க.
இதனால், 'தாரணையாவது இது' என்பதும், அதனது சிறப்பும் கூறப்பட்டன.

மலையார் சிரத்திடை வானீர் அருவி
நிலையாரப் பாயும் நெடுநாடி யூடுபோய்ச்
சிலையார் பொதுவில் திருநட மாடும்
தொலையாத ஆனந்தச் சோதி கண் டேனே. ***#578***

மேருமலையின் உச்சியினின்றும் வானீர் அருவி எப்பொழுதும் வீழ்ந்துகொண்டிருக்கும். வில் வடிவாய் அமைந்த அம்பலத்தில் ஒளிவடிவாகிய சிவன், எல்லையில் இன்பத்தைத் தரும் ஆனந்தத் திருக்கூத்தினை எப்பொழுதும் ஆடிக் கொண்டே இருப்பான். இவ்விரண்டையும் நான் நீண்ட சுழுமுனை நாடி வழியாகச் சென்று கண்டேன்.

விளக்கவுரை

நீங்களும் இவற்றைக் காண முயலுதலேநன்று என்பது குறிப்பெச்சம். 'மலை' என்பதனை உயர்வு பற்றி, 'மலையார்' என உயர்திணையாககிக் கூறினார். 'மலை' என்பது' தலைமை பற்றி மேருவைக் குறித்தது. முதுகெலும்பை 'வீணைத் தண்டு' என்பது போல, 'சந்திரசூரியர்' எனப்படுகின்ற இடைநாடி பிங்கலை நாடிகளால் சூழப்பட்டுள்ளமைபற்றி, 'மேருமலை' எனக் கூறலும் யோகநூல் வழக்கு. 'அதன் தலை' என்பது, 'புருவநடு. தலை' என்பவற்றை ஏற்ற பெற்றியாற் குறிக்கும். இங்கு அது புருவநடுவைக் குறித்தது. 'வானீர்' என்பது சிலேடையாய் 'ஆகாய கங்கை' (வான் நீர்) என்றும், 'விந்து' எனப்படும் வெண்பால் - சுக்கிலம்' *(வால் நீர்)* என்றும் இரு பொருள் குறித்து, உருவக நயத்திற்கு இயைந்து நின்றது.

'கருவிற்கு வித்தாகிய வெண்பால், நெற்றியில் தோன்றிப் புருவநடுவில் உருப்பட்டு நிற்கின்றது' என்பதும், 'அஃது இயற்கை யாக இடைநாடி பிங்கலைநாடிகள் வழியாகக் கீழ் இறங்கிச் சுவாதிட் டானத்தை அடைவதனாற்றான் பால் உணர்ச்சியாகிய இழி நிலை உண்டாகின்றது' என்பதும், 'அவ் இழிநிலை எவ்வாற்றானும் உடற்குக் கேடுபயப்பதே' என்பதும், அதனை அவ்வாறு அவ் இரு நாடிகள் வழியாக இறங்காது, யோகசாதனையால் நடுநாடியாகி சுழு முனை வழியாக இறங்கச்செய்தால், 'அஃது உடலுக்கு வலுவூட்டி, நரை திரை மூப்புப் பிணிகள் வாராமற் காக்கும் அமுதமாய்ச் சிறந்து நிற்கும்' என்பதும் யோகநூற் கொள்கைகள். அதுபற்றியே அவை இவ் வெண்பாலை, 'அமுதம்' என்றே குறிப்பிடுதலுடன், அவற்றை நடுநாடிவழியாக ஏற்பதை, 'பருகுதல்' என்றேயும் கூறுகின்றன.
சிறப்புமுதலாய காரணங்கள் பற்றி இவற்றையெல்லாம் ஆடவரை நோக்கியே அவை கூறுகின்றனவாயினும், பெண்டிர்க்கும் இவை ஒத்தன என்பதே கருத்து. எவ்வாறெனில், யாதொரு சாதனையும் பெண்டிரை விலக்கி, ஆடவர்க்கு மட்டுமேயாகக் கூறுதல் வேதமதங்களின் கருத்தன்று ஆதலின். சாதனங்களை மேற்கொள்ளும் முறைகளில் சிறிது மாறுபடுதல் கூடும்; அவ்வளவே வேற்றுமை. அதனால், 'புருவநடு விந்துத்தானம்' என்பது பெண்டிர்க்கும் பொதுப்படக் கூறுவதேயாம். ஆயினும், அவர்கட்குப் பால் உணர்ச்சிக் காரணமாய நீர் மணிபூரகத்தை அடையும்பொழுதே கருப்பையிற் கலந்து செம்பாலாக (சோணிதமாக) மாறிப் பின் சுவாதிட்டானத்தை அடைவதாகும்.
'பாயும், நாடும்' என்பன முற்றுக்கள். 'நெடுநாடி ஊடு போய்' என்பதனை, 'கண்டேன்' என்பதற்கு முன்வைத்து உரைக்க. புருவ நடு பிறைவடிவிற்று ஆதலாலும், அங்கு இறைவனது நடனம் உளதாதலாலும் அதனை 'சிலைஆர் பொது' என்றார். இஃது உயிர்கட்கு அறிவைப் பயக்கும் பர நடனம் - அதிசூக்கும நடனம் ' என்பதை ஞான நூல்களை நோக்கி அறிக. இருதயத்தில் செய்யும் நடனம் சூக்கும நடனமேயாம். இருதயம் அருள்வெளி - சிற்றம்பலம். புருவ நடு ஆனந்த வெளி - பேரம் பலம். 'சோதி திருநடம் ஆடும்' என மேலே கூட்டி, 'ஆடும்' என்பதன்பின், இவற்றை' என்னும் சொல்லெச்சம் வருவித்துக் கொள்க. இதனால், ஆஞ்ஞைத் தாரணையின் இயல்பு கூறப்பட்டது.

மேலை நிலத்தினாள் வேதகப் பெண்பிள்ளை
மூல நிலத்தில் துயில்கின்ற மூர்த்தியை
ஏல எழுப்பி இவளுடன் சந்திக்கப்
பாலனும் ஆவான் பராநந்தி ஆணையே. ***#579***

கருவை ஏற்றுக் குழவியாக மாற்றித் தருகின்ற பெண், மேல் மாடத்தில் எதிர்நோக்கி இருக்கின்றாள். அவளுடன் சேர வேண்டிய ஆடவனோ அடித் தலத்தில் உறங்கிக் கொண்டிருக் கின்றான். அவனை நன்றாக விழித்தெழச் செய்து அப் பெண்டுடன் கூடப்பண்ணினால், நல்ல பாலகன் பிறப்பான்; இதற்கு என் குருவின்மேல் ஆணை.

விளக்கவுரை

மேலை நிலம், ஆஞ்ஞை. வேதகம் - இரசவாதம்; இங்கு, பாசஞான பசுஞானங்களைப் பதி ஞானமாக மாற்றுதல். பெண் பிள்ளை, திரோதான சத்தி. இவளது செயல் உயிரின் உணர்வைப் பக்குவப்படுத்துதலின், 'வேதகப் பெண்பிள்ளை' என்றார். எழுகின்ற - எழுப்பினால் எழத்தக்க; இஃது எதிர் காலத்தில் நிகழ் காலம். 'துயில்கின்ற' எனப் பாடம் ஓதுதலே சிறக்கும். மூர்த்தி, உறங்கிக் கிடக்கின்ற குண்டலியோடு சேர்ந்து அதுவேயாய், அறியாமையாயுள்ள உயிரின் உணர்வு. இஃது எழுந்து மேலுள்ள ஆதாரங்களையும் கடந்து ஆஞ்ஞையை அடைந்து, அங்குநின்று அறிவைப் பயக்கின்ற திரோதான சத்தியை உணருமாயின், அவ் வுணர்வு 'யான், எனது' என்னும் பற்றுக்களினின்றும் நீங்கித் தூய்மை பெறுவதாகும். அதனையே 'பாலன்' என்றார். 'பாலனும்' என்ற சிறப்பும்மையால், 'அப் பாலன், இம்மை மறுமை நலங்களுடன், வீட்டையுந் தரத்தக்கவன்' என உரைக்க. இனி 'மூர்த்தி' என்பதற்கு, 'விநாயகர்' என்றாயினும், 'பிரமன்' என்றாயினும் பொருள் கொள்ளின், 'பெண்பிள்ளை' என்றவளை வல்லபை, வாணி' என ஏற்ற பெற்றியான் உரைத்துக்கொள்க. இவ்விருவர்க்கும் பிள்ளை இல்லையாயினும் 'பிறப்பான்' என்பதனை உம்மையால் உரைத்துக் கொள்க. இவ்வாறு பொருள் உரைப்பினும், கருத்து மேற்கூறியதே யாம். 'ஆதல்' - உண்டாதல்.
இதனால், ஆஞ்ஞைத் தாரணையது சிறப்புக் கூறப்பட்டது.

கடைவாச லைக்கட்டிக் காலை எழுப்பி
இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி
மடைவாயிற் கொக்குப் போல் வந்தித் திருப்பார்க்
குடையாமல் ஊழி இருக்கலு மாமே. ***#580***

பூரக இரேசகம் செய்து கும்பிக்கப்பட்ட பிராணவாயு கீழ்ப்போகாதவாறு எருவாயை அடைத்து அதனால் போகாது நின்ற வாயுவை மூலாதாரம், சுவாதிட்டானம் முதலாக மேல் நோக்கிப் போகச்செய்து, ஆஞ்ஞைக்குக் கீழ் உள்ள இடை ஆதாரங்கள் ஒவ்வொன்றிலும் மனத்தை நன்றாகப் பொருந்த வைத்து, நீர் மடையில் கொக்கு, தான் வேண்டுகின்ற மீன் வரும் வரையில் அதனையே குறிக்கொன்டு நோக்கிச் செயலின்றியிருத்தல் போல, அங்குக் கருதப்படுகின்ற கடவுளரால்

அவ்வாதாரயோகம் கைவருமளவும் அவரை வழிபட்டிருப்பவர்கட்கு, யோகநிலை முற்றும் கைவரும் காலம் வரையில் இறவாமலே இருத்தலும் கூடும்.

விளக்கவுரை

'மடை வாயிற்கொக்கு', 'கொக்கொக்க கூம்பும் பருவத்து' *(குறள், 490)* 'இரைதேர் கொக்கொத் திரவுபகல் ஏசற்றிருந்தே வேசற்றேன்' *(தி.8* கோயில் மூத்த திருப்பதிகம், *5)* மடைத்தலையில் - ஓடுமீனோட உறுமீன் வருமளவும் - வாடியிருக்குமாம் கொக்கு' *(*மூதுரை, *16)* எனப் பலவிடத்தும் கூறப்படுதல் காண்க.
யோகம் கைவருதல், ஆதார யோகங்கள் ஆறும் பெற்று, அதற்குமேல் நிராதார யோகத்தை அடைந்து, அப்பால் மீதானத்தை உணர்ந்து நிற்றலாம். 'அந்நிலை கைகூடுதற்கு நெடுங்காலம் செல்ல வேண்டியிருப்பினும், 'அதுகாறும் உடல் அழியாது நிற்கும் நிலையும் தாரணையாலே உளதாகும்' என்பார், 'உடையாமல் ஊழி இருக்கலும் ஆமே' என்றார். உம்மை, யோகம் கைவருதலைத் தழுவிநின்ற எச்ச உம்மை. முதல் மூன்று அடிகள் தாரணையைச் செய்யும்முறை கூறின. வந்தித்தலுக்குச் செயப்படுபொருளாகிய 'கடவுளர்' என்பது சொல்லெச்சமாக வந்து இயைந்தது. 'சிவயோகம் பயில்வார்க்கு இக் கடவுளர் சம்பு பட்சத்தவர்' எனவும், 'பிறயோகம் பயில்வார்க்கு இவர் அணுபட்சத்தினர்' எனவும் உணர்க.
இதனால், தாரணை செய்யுமாறு கூறப்பட்டது. ஒரு கருத்துப் பற்றித் தாரணை வாழ்நாள் நீட்டிப்பிற்கு ஏதுவாதலும் உடன் கூறப்பட்டது.

கலந்த உயிருடன் காலம் அறியில்
கலந்த உயிரது காலின் நெருக்கம்
கலந்த உயிரது காலது கட்டிற்
கலந்த உயிருடல் காலமும் நிற்குமே. ***#581***

காலத்தால் கலந்திடப்பட்ட உயிருடன் அக்காலம் கலந்து நிற்கும் இயல்பை ஆராய்ந்து அறியின், அது பிராண வாயுவின் திட்பமேயாம். ஆகவே, அந்த உயிர் பிராண வாயுவை அடக்கும் முறையை அறிந்துகொள்ளுமாயின், உயிர் நிற்பது போலவே அதனைக் கலந்து நிற்கின்ற காலமும் ஓடாது ஒரு நிலையாய் நிற்கும்.

விளக்கவுரை

'அஃதாவது வாழ்நாள் கழியாது' என்பதாம். இஃது ஒருவாறு முன்னே கூறப்பட்டதாயினும், துணிவு பிறத்தற்பொருட்டு இங்கும் இனிது விளங்கக் கூறினார். இவ்வாறு இன்றியமையாத இடங்களில் சிலவற்றைப் பின்னரும் இவ்வாறு வலியுறுத்தி அருளிச் செய்வார்.

இதனால், 'தாரணை, வாழ்நாள் நீட்டிப்பிற்கு ஏதுவாம்' என மேற்கூறியதற்கு ஏதுக் கூறப்பட்டது.

வாய்திற வாதார் மனத்திலோர் மாடுண்டு
வாய்திறப் பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர்
வாய்திற வாதார் மதியிட்டு மூட்டுவர்
கோய்திற வாவிடிற் கோழையு மாமே. ***#582***

யாவரிடத்திலும் உள்ளமாகிய கருவூலத்தில் ஒரு பெருஞ்செல்வம் உள்ளது. ஆயினும், அக்கருவூலத்திற்கு வாயிலாய் உள்ள சுழுமுனை வழியைத் திறக்க மாட்டாதவர் அச்செல்வத்தை எய்தப் பெறார். அவ்வழியைத் திறக்க விரும்புவோர் பிராண வாயுவை அங்குக் கும்பகம் செய்து திறந்து கும்பித்த அவ்வாயுவை உள்ளே பாய்ச்சுவர். அது செய்யாதோர் மேற்கூறிய செல்வத்தைப் பெறுதற்குத் தம் அறிவை அக் கருவூலத்தின் புறத்தே மோதவிட்டு அல்லற்படுவர். கருவூலத்தைத் திறவாமலே அதிலுள்ள செல்வத்தைப் பெற முயலுபவன் அதனைப் பெறாது பாழுக்கு உழைப்பவனாதலே யன்றி, 'அறிவிலி' என அறிவுடையாரால் இகழவும் படுவான்.

விளக்கவுரை

'வாய்திறவார்' என்பது யோகியரல்லாத பலரையும் குறித்தது. 'மனம்' என்றது அதற்கு இடமாகிய ஆதாரங்களை 'வாய் திறத்தல்' என்பதனை 'உரையாடல்' எனக் கொண்டு, அதற்கு இயையவும் உரை உரைப்பர். அவர், 'மதி' என்பதனைச் சந்திர மண்டலமாகக் கொள்வர். 'வளியிட்டுப் பாய்ச்சுவர்' என்பதற்கு, 'பிராணவாயுவைப் பாழ்படுத்துவர்' என்னும் பொருள் ஏலாமை யாலும், பிறவாற்றாலும் அஃது உரையாகாமையறிக. 'கோயில்' என்பது கடைக் குறையாயிற்று. 'கோய், செப்பு; சிமிழ்' எனவும் கொள்வர்.

இதனால், தாரணையது இன்றியமையாச் சிறப்புக் கூறப் பட்டது.

வாழலு மாம்பல காலம் மனத்திடைப்
போழ்கின்ற வாயு புறம் படாப் பாய்ச்சுறில்
ஏழுசா லேகம் இரண்டு பெருவாய்தற்
பாழி பெரியதோர் பள்ளி அறையே. ***#583***

சுழுமுனை வழியை ஊடறுத்துச் செல்ல வல்ல தாகிய பிராணவாயுவைப் புறத்துப் போகாதவாறு தடுத்து அச்சுழு முனை வழியுட் பாய்ச்சினால் ஏழு பலகணிகளையும், 'தலைவாயில், கடைவாயில்' என்னும் இரண்டு பெரு வாயில்களையும் உடைய பாழ் வீடு இன்பமாகக் கிடந்து உறங்கத் தக்க நல்ல பள்ளியறை யாய்விடும். அப்பொழுது அதில் ஆதாரங்களாகிய கட்டிலிற் கிடந்து பல காலம் இன்புற்றிருக்கலாம்.

விளக்கவுரை

முதலடியை இறுதியில் வைத்துரைக்க. இங்கு, 'பாய்ச்சுதல்' என்பது 'புறப்படாப் பாய்ச்சுதல்' என விளக்கிக் கூறப்பட்டமை காண்க. ஏழு சாலேகம், கண், காது, மூக்கு இவற்றின் ஆறு துளைகளுடன், சிறுநீர் வழித்துளை, தலைவாயில், வாய் கடை வாயில், எரு வாய். பாழி - பாழை உடையது. இத் துணை அமைப்புக்கள் இருந்தும் ஆன்மா அதனைத் தூய்மைசெய்து, விளக் கேற்றி வைத்து இன்பமாக வாழாமல் வாளா இருத்தலால், உடம்பை, 'பாழ் வீடு' என்றார். 'இயமம், நியமம், பிராணாயாமம் என்ப வற்றால் அவ்வீடு தூய்மையும், விளக்கமும் செய்யப்பட்டால், தாரணையில் பல காலம் நலம் பெற்று வாழலாம்' என்பார் 'பெரிய தோர் பள்ளியறை; 'வாழலுமாம்பலகாலம் என்றார். பிற வற்றை உரு வகம் செய்து, ஆதாரங்களை வாளா கூறினமையால், இது வியநிலை யுருவகம். 'இரண்டுவாசல் - ஏலுடைத்தா அமைத்தங் கேழு சாலேகம் பண்ணி' *(தி.4 ப.33 பா.4)* 'பாழறை உனக்குப் பள்ளி யறையாக' *(தி.11 கழுமல)* என்னுந் திருமொழிகளை இங்கு நினைவு கூர்க.

யோக நெறியில் நிற்பவர் உடம்பு ஓங்கி நிற்பதொரு கோபுரம் போல்வதும், ஆதாரங்கள் அக்கோபுரங்களில் உள்ள நிலைகள் போல்வனவும், மனம் அக்கோபுரத்தினைப்பற்றி ஏறுதற்குரிய கை கால் முதலிய உறுப்புப் போல்வனவும், பிராண வாயு அவ்வுறுப்புக் களுக்குப் பற்றுக் கோடாய் உதவும் நூலேணி போல்வதும் ஆகும். ஆகவே, கோபுரத்தின்மேல் ஏறிச் செல்பவர்க்கு நூலேணி இன்றியமை யாததுபோல, யோகிகட்குப் பிராணாயாமம் இன்றியமையாததாம், அதனால், 'யோகம்' என்றாலே, பிறவற்றை எல்லாம் விடுத்து, 'மூச்சை அடக்குதல்' என்றே பொதுவாகக் கொள்கின்றனர். நாயனார் 'போழ்கின்ற வாயுப் புறப்படாப் பாய்ச்சுறில்' என இங்கும், இவ்வாறே பல விடத்தும் பிராணயாமத்தை எடுத்தோதிப் போதல், அதன் இன்றியமையாமை பற்றியேயாம் என்க.

இதனால், 'பிரணாயாம பிரத்தியாகாரங்களைப் பயின்ற வர்க்குத் தாரணைக்கண் சலியாது நிற்றல் அரிதன்று' என்பது கூறப்பட்டது.

நிரம்பிய ஈரைந்தில் ஐந்திவை போனால்
இரங்கி விழித்திருந் தென்செய்வை பேதாய்
வரம்பினைக் கோலி வழிசெய்கு வார்க்குக்
குரங்கினைக் கோட்டை பொதியலு மாமே. ***#584***

ஒன்றும் அறியாத மாணவனே! உடம்பினுள் நிறைந்திருக்கின்ற பத்து வாயுக்களில் இயங்கும் வாயுக்கள் ஐந்து வீணாய்ப் போய்விட்டால், நீ விழித்திருந்தும் என் செய்ய மாட்டுவாய்! கழிந்ததற்கு இரங்கி

நிற்பவனேயாவாய். ஆகையால், பிராணா யாமத்திற்குக் கூறிய முறையைக் கடைப்பிடித்துப் பிராண வாயு மேலேறுதற்கு வழியை உண்டாக்குபவர்கட்கு, மனமாகிய குரங்கை ஆதாரங்களாகிய கோட்டையை விட்டுப் புறத்தே குதித்து ஓடாதபடி நிற்கச் செய்தலும் கூடும்.

விளக்கவுரை

அஃதாவது, 'தாரணையைப் பெறுதலும் கூடும்' என்பதாம். 'ஈரைந்து, ஐந்து' என்பவை அதிகார இயைபால் வாயுக்களைக் குறித்து நின்றன. 'இரங்கி' என்பது பெயர். இதன்பின் 'ஆவாய்'என்பது எஞ்சிநின்றது. 'குரங்கு, கோட்டை' என்பது குறிப்புருவகங்கள்.

உடம்பின்கண் உள்ள வாயு, 'இயங்குவதும், நிற்பதும்' என இருவகைத்தாம். 'நிற்பது' என்றல், இயங்குவதை நோக்கியாம். அவற்றுள் இயங்கும் வாயு மூக்கு வழியாக வெளிச் செல்லின் 'பிராணன்' என்றும், வாய் வழியாக வெளிச்செல்லின் 'உதானன்' என்றும், எரு வாய் வழியாக வெளிச் செல்லின், 'அபானன்' என்றும், உடம்பெங்கும் பரவும்பொழுது 'சமானன்' என்றும், உணவுப் பையுள் நின்று உணவைச் செரிப்பிக்கும் பொழுது 'வியானன்' என்றும் இவ்வாறு ஐந்தாகி நிற்கும். இனி நிற்கும் வாயுவும், தும்மல் இருமல்களாக வலிதிற் புறப்பட்டு வேண்டாப் பொருளைப் புறத்திடும் பொழுது 'நாகன்' என்றும், கண்ணைப் பல திசைகளிலும் நோக்குமாறு இயக்கும்பொழுது 'கூர்மன்' என்றும், சோம்பல் காரணமாகப் பிராணவாயுவை இயல்பு திரிந்து கொட்டாவி முதலியனவாக ஆக்கும்பொழுது 'கிரிகரன்' என்றும், கண் இமைத்தல் வாயசைத்தல் முதலியவற்றைச் செய்யும்பொழுது 'தேவ தத்தன்' என்றும், குருதியில் உளதாகும் நோய் காரணமாக உடலை வேறுபடுத்தி நிற்கும்பொழுது 'தனஞ்சயன்' என்றும் இவ்வாறு ஐந்தாகும். ஆகப், பத்து வாயுக்களில் முதலாவதாகிய பிராணனே ஏனை இயங்கும் காற்று நான்கிற்கும் ஆற்றல் தருவது; இயங்கும் காற்றுக்கள் ஆற்றல் கெட்டவிடத்து, நிற்கும் காற்றும் தம் தொழிலைச் செய்யமாட்டா. ஆகவே 'நிரம்பிய ஈரைந்தில் ஐந்து போனால் என் செய்வை' என்றார். பிராண வாயு இங்கு அதிகாரப்பட்டமையால், அதன் வழியவாகிய அனைத்தையும், 'இவை' எனச் சுட்டினார்.

'பிராணன், உதானன், அபானன், சமானன், வியானன்' என்பவற்றை முறையே, 'உயிர்வளி, எழுவளி, விழு வளி, நிறை வளி, அறு வளி,' எனவும், 'நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன்' என்பவற்றை முறையே, 'தும்மு வளி, நோக்கு வளி, சோம்பு வளி, நுண் வளி, பரு வளி' எனவும் தமிழிற் கூறலாம்.

இதனால், யோகத்திற்குச் சிறந்ததாகிய பிராண வாயுவின் சிறப்புக்

கூறுமுகத்தால், பிராணாயாமம் அதற்கு மேல் உள்ள யோகங்கட்கு இன்றியமையாமை கூறப்பட்டது.
(இதன் பின்னர், 'முன்னம் வந்தனர்' என்னும் பாடல் இடைச் செருகலாய் உள்ளது.)

முன்னம் வந்தனர் எல்லாம் முடிந்தனர்
பின்னை வந்தவர்க் கென்ன பிரமாணம்
முன்னுறு கோடி உறுகதி பேசிடில்
என்ன மாயம் இடிகரை நிற்குமே.

அரித்த வுடலைஐம் பூதத்தில் வைத்துப்
பொருத்தஐம் பூதம்சத் தாதியிற் போந்து
தெரித்த மனாதிசித் தாதியிற் செல்லத்
தரித்தது தாரணை தற்பரத் தோடே. ***#585***

தாரணையை மேற்கூறிய பாவனையளவில் செய்யாது, தத்துவ ஞானத்தைப் பெற்று அதன் வழிச் செய்யின், அஃது இறைவனோடே ஒன்றி நிற்பதாகும்.

விளக்கவுரை

அரித்த உடல் - பசி பிணி மூப்புக்களால் அரிக்கப்பட்ட உடம்பு. இவ்வாறு கூறியது, 'உதிரம் முதலிய தாதுக்களால் ஆகிய தாத்துவ தூல தேகம்' என்பது விளங்குதற்கு. பொருத்த - ஓன்றாக்க; 'ஒடுக்க' என்றபடி. உதிரம் முதலிய தாதுக் களாலான தேகம் ஐம்பூதங்களின் காரியமாகலின், அஃது ஐம் பூதங்களில் ஒடுங்கு வதாயிற்று. ஒடுக்குதல், இங்கு, 'அவற்றின் காரியம்' என்று உணர்தல். சத்தாதி - சத்தம் முதலிய தன்மாத்திரைகள். தன்மாத்திரைகளின் காரியங்களே பூதங்களாதலின், அவை தன்மாத்திரைகளுள் ஒடுங்கு வனவாம். மனாதி 'மனம், அகங்காரம், புத்தி' என்னும் அந்தக் கரணங்கள். சித்த ஆதி - சித்தமாகிய முதல்; சித்தமாயும், குண தத்து வமாயும் நிற்பது மூலப் பிரகிருதியேயாகலின், 'சித்தாதியிற் செல்ல' என்றது, 'மூலப்பிரகிருதியில் ஒடுங்க' என்றதாம். மனம் அகங் காரத்திலும், அகங்காரம் புத்தியிலும், புத்தி சித்தத் திலும் ஒடுங்குமாயினும், சித்தம் முடிவாக நிற்றல் பற்றி, 'மனாதி சித்தாதியில் செல்ல' என்றார். தத்துவ ஒடுக்கங்களை இங்கு ஒருவாறு சிறிது கூறினாரன்றி, முற்றும் விரித்துக் கூறிற்றிலர், இஃது அதற்கு இடமன்மையில், 'பொருத்த, செல்ல' என்பனபோல, 'போத' எனச் செயதவனைச்சமாக ஓதாது, திரித்து ஓதினார்; முன்னின்ற எச்சங்கள் இரண்டும் எண்ணின் கண் வந்தமை தோன்றுதற்கு, 'ஆன்மா, தத்துவங்கள் அனைத்தினும் நீங்கின் சிவமே, அதற்குச் சார்பாய் விடுமாதலின், மனத்தை அவ்வகையிற் பயிற்றும் யோகம், அந்த

ஞானத்தை நிலை பெறுவிக்கும்' என்பதாம்.
இதனால், ஞான தாரணையின் இயல்பும், பயனும் கூறப்பட்டன.

5.8.தியானம்

வருமாதி யீரெட்டுள் வந்த தியானம்
பொருவாத புந்தி புலன்போக மேவல்
உருவாய சத்தி பரத்தியானம் உன்னும்
குருவார் சிவத்தியானம் யோகத்தின் கூறே. *#586*

தாரணை இறுதிக்கண் சொல்லியவாறு, 'பூதம் ஐந்து, தன்மாத்திரை ஐந்து, அந்தக்கரணம் நான்கு, பிரகிருதி ஒன்று' என்னும் பதினைந்துடன் புருடன் ஒன்று கூடப் பதினாறையும் தியான முறைப் படி அவ்வவ் வாதாரங்களில் வைத்துத் தியானித்தல், கருவி கரணங்களினின்று நீங்கிநிற்கும் சாதன யோகமாகவே முடியும். அதற்குமேல் ஒளி வடிவாகிய சத்தியையும், அதற்குமேல் அருவாய் நிற்கும் சிவத்தையும் தியானித்தலே சாத்திய யோகமாம். ஆகவே, தியான யோகம், சாதன சாத்திய வகையால் இங்ஙனம் இருகூறாய் நிற்கும் என்க.

விளக்கவுரை

வரும் - வந்த; தாரணையுள் சொல்லிப் போந்த. ஆதி - முதல்; தத்துவம். அவைகளை ஆதாரங்களில் வைத்துத் தியானிக்கும் முறை, 'நிலம்' என்னும் பூதத்தையும், அதற்குரிய 'கந்தம்' என்னும் தன்மாத்திரையையும் மூலாதாரத்திலும், பின்னும் முறையே ஏனைய பூதங்களையும், தன்மாத்திரைகளையும் சுவாதிட்டானம் முதலிய வற்றிலும் வைத்தும், அந்தக்கரணங்களை 'மனம், அகங்காரம், புத்தி, சித்தம்' என்னும் முறையில் சுவாதிட்டானம் முதலாக முறையே வைத்தும், சித்தமே பிரகிருதியாய் அடங்கப் புருடனை ஆஞ்ஞையில் வைத்தும் தியானித்தல். பொருவாத புந்தி புலன் போக மேவல் - ஆன்ம அறிவொடு மாறுபட்டு வாதிக்கின்ற பொறி புலன்களின் வாதனை அற்றுப்போக, அமைதியுற்று நிற்றற்குரிய சாதனையாம். புந்தி, மேவல் இவை ஆகுபெயர்கள். ஆஞ்ஞையில் புருடனை விழுங்கி நிற்கும் ஒளி வடிவாக இறைவனைத் தியானிப்பின், அது சத்தித் தியானமாகும். பரம் - மேலானது. ஒளி வடிவிற்கு மேலானது அருவம். இறைவனை நிராதாரமான உச்சியில் அருவமாகத் தியானித்தல் சிவத்தியானமாகும். இந்தச் சத்தி சிவத் தியானமே சாத்திய யோகத்தியானம் என்க. 'பரத்தியானமாக' என ஆக்கம் வருவிக்க. குரு - திட்பம்.
இதனால், ஞான யோகத்தின் நிலைகள் இவை என்பது கூறப்பட்டது. இயமம் முதலிய எட்டனுள் 'தியானம், சமாதி' என்னும் இறுதி இரண்டுமே யோகத்தில் சாத்தியக் கூறாதலின், இதனை, ஈண்டுப் போதந்து கூறினார்.

கண்ணாக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட்

பண்ணாக்கி நின்ற பழம்பொருள் ஒன்றுண்டு
அண்ணாக்கின் உள்ளே அகண்ட ஒளிகாட்டிப்
பிண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே. *#587*

கண் முதலிய பொறியறிவின் சேர்க்கையால் நம்மைப் பண்படுத்தி நின்ற முதற்பொருள் ஒன்று உளது. அஃது, எல்லையற்ற பேரொளியாயினும், அதனை நாம் உள் நாக்கினை ஒட்டி உள்ள சிறிய துளை வழியில் சென்று காண்கின்ற ஒரு சிற்றொளியாகத் தரிசிக்கச் செய்தவாற்றால், 'பாம்பு' எனப்படுகின்ற குண்டலி சத்தி நம்மை உய்வித்தது வியக்கத்தக்கது.

விளக்கவுரை

ஞானக்கூட்டம் - ஞானத்தொடு கூடும் கூட்டம். கருவி கரணங்களாகிய மாயேயங்களோடு கூடுதலால் உயிர் பெறுவது அறிவு விளக்கமும், அவ்விளக்கத்தை அவ்வாற்றால் உயிர்கள் பெறச் செய்வது திருவருளும் ஆதலால், 'பண்ணாக்கி நின்ற பழம்பொருள் ஒன்றுண்டு' என்றார். அப்பொருளை இங்ஙனம் சிறப்பித்துக் கூறவே, 'அதனைக் காணுதலே உயிர் பெறத்தக்க பேறு' என்பது போந்தது. 'இனி அப்பேற்றை அடைய வழியறியாது திகைக்கின்ற உயிர்க்கு வாசி யோகத்தின் வழிக் கிடைக்கும் குண்டலி சத்தியே அதனை அடைவித்து உதவி செய்வது' என்பார் 'அண்ணாக்கின் ... ... பிழைப்பித்தவாறே' என்று அருளினார். 'வியக்கத்தக்கது' என்பது சொல்லெச்சம். 'கொல்லும் இயல்புடைய பாம்பு, பிழைக்கச் செய்தது வியப்பு' என்பது நயம். பிள் நாக்கி - பிளவுபட்ட நாவை யுடையது; பாம்பு. அண்ணாக்கினை அடுத்துள்ள துளைவழி உச்சியை அடைகின்ற பிராணவாயு, அவ்வுச்சி வழியாகப் புருவ நடுவை அடையும் சுழு முனை நாடியைத் தாக்குதலால், ஆஞ்ஞையில் அனுபவம் நிகழ்தல் பற்றி, 'அண்ணாக்கின் உள்ளே அகண்ட ஒளிகாட்டி' என்றார். 'நம்மைப் பிழைப்பித்தவாறே' எனத் தமது அனுபவத்தைக் கூறிய வாற்றால், 'அவ்வொளியைக் காண வேண்டுவார்க்கு வழி இதுவே' என்பது குறிப்பெச்சமாயிற்று. இங்ஙனம், சுருங்கக் கூறினாராயினும், 'தாரணையில் மின்னல்போலத் தோன்றுகின்ற அவ்வொளியை இடைவிடாது உன்ன, அவ்வொளி மறைவின்றி நின்று பயன் தரும்' என விரித்துரைத்துக் கொள்ளப்படும். இதனால், ஆஞ்ஞைத் தியானத்தின் இயல்பு கூறப்பட்டது.

ஒண்ணா நயனத்தில் உற்ற ஒளிதன்னைக்
கண்ணாரப் பார்த்துக் கலந்தங் கிருந்திடில்
விண்ணாறு வந்து வெளிகண் டிடவோடிப்
பண்ணாமல் நின்றது பார்க்கலு மாமே. *#588*

புறத்தில் உள்ளவர்களால் பார்க்க இயலாத கண்ணில் (திறவாது

மூடியிருக்கின்ற நெற்றிக் கண்ணில்) மின்னல் போலத் தோன்றிய ஒளியைப் பின் அக்கண் நிரம்பக் குறைவின்றிப் பார்த்து, அதனொடு உணர்வு ஒன்றியிருப்பின், பிற முயற்சிகளுள் யாதும் செய்யாமலே அந்த ஒளியை நன்கு தரிசித்திருக்கலாம்.

விளக்கவுரை

ஒண்ணா நயனம் - பிறர் 'கண்' என்று உடன்படவே முடியாத கண். 'அக் கண்ணார' எனச் சுட்டு வருவிக்க. விண் ஆறு - வான் வழி. 'சென்று' எனற்பாலது, 'வந்து' என இடவழுவமைதியாய் நின்றது. 'கண்டிட' என்பது, 'அளந்தறியுமாறு' என்றபடி. அஃதாவது, 'வான் வெளி முழுதும் ஓடி' என்பதாம். 'ஓடிப் பண்ணாமல்' என்றது, 'இவ்வாறெல்லாம் உழல வேண்டாமல்' என்றவாறு 'ஞான யோகம் செய்ய மாட்டாமையால் இறைவனைக் காணுதற்குச் சிலர் தாம் பெற்ற சித்தியால் ஆகாயத்தில் சென்று அவனைப் பல இடங்களில் தேடியும், பிரமன் முதலிய தேவர்கள் வானவெளியில் தேடி உழன்றும் எய்க்கின்றனர்; அவை வேண்டா' என்றபடி. 'நின்று பார்க்கலும் ஆம்' என இயையும். உம்மை, சிறப்பு. இதனால், ஆஞ்ஞைத் தியானத்தின் சிறப்புக் கூறப்பட்டது.

ஒருபொழு துன்னார் உடலோ டுயிரை
ஒருபொழு துன்னார் உயிருட் சிவனை
ஒருபொழு துன்னார் சிவனுறை சிந்தையை
ஒருபொழு துன்னார் சந்திரப் பூவே. ***#589***

உலகர் பலரும் அழிபொருளாகிய உடம்பை உணர்கின்றார்களே யன்றி, அதனோடு வேறறக் கலந்து நிற்கின்ற அழிவில் பொருளாகிய உயிரை அறிதல் இல்லை. இனி, ஒரு சிலர் உயிரை அறியினும், அவ்வுயிர்க்கு உயிராய் நிற்கின்ற சிவனை அறிகின்றார்களில்லை. இனிச் சிலர், 'உயிர்க்குயிராய்ச் சிவன் ஒருவன் இருக்கின்றான்' என்று உணரினும், 'அவன், ஆஞ்ஞைத் தியானத்தால் காணத்தக்கவன்' என்று உணரமாட்டாதவராகின்றனர். இன்னும் ஒரு சிலரோ, 'அவ்வாறு காணத் தக்கவன்' என்று உணர்ந்தும் ஒரு நொடி நேரமாயினும் அந்தத் தியானத்தைத் தலைப்பட எண்ணாமலே யிருந்தொழிவர்!

விளக்கவுரை

'இஃது இரங்கத்தக்கது' என்பது குறிப்பெச்சம். 'தியானத்தின் சிறப்பை அறிந்திருந்தும் அதில் நில்லாதவர் அறியாதா ரோடு ஒப்ப அறிவிலிகளே' என்றற்கு இங்ஙனம் அறியாமையது நிலையைப் பலபட வகுத்துரைத்தருளினார். நான்கிடத்தும் 'ஒரு பொழுதும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. 'சிந்தை' என்பது

மனத்து விளக்கினை மாண்பட ஏற்றிச்

சினத்து விளக்கினைச் செல்ல எருக்கி
அனைத்து விளக்குந் திரியொக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாயா விளக்கே. *#590*

மேல் மாடத்தில் ஏற்ற வேண்டுவதாகிய விளக்கை நன்றாக ஏற்றிய பின்னும், மாளிகையை அழிக்க அதன் ஒரு பக்கத்தில் பற்றியுள்ள 'சினம்' என்னும் நெருப்பை முற்ற அணைத்துவிட்டுக் கீழ் நிலையில் உள்ள மற்றைய விளக்குகளும் அணைந்து போகாதபடி எல்லாவற்றிலும் திரியை ஒரு சேரத் தூண்டி வைத்தால், முன்பு மேல் மாடத்தில் ஏற்றப்பட்ட விளக்கு உண்மையில் ஏற்றப்பட்டதாகும்.

விளக்கவுரை

'மனம்' என்பது இங்குச் செய்யும் உருவகத்திற்கு ஏற்ப, 'மேல்மாடம்' எனப் பொருள் தருதலை, அதனை எடுத்தல் ஓசையாற் கூறிக் காண்க. அவ்வாறே 'அனைத்து விளக்கும்' என்பதும் இங்கு உரைத்தவாறே பொருள் படுதலைப் படுத்தல் ஓசையாற் கூறியறிக. சினத்து விளக்கு, உருவகம். இதில் உள்ள 'விளக்கு' என்பது காரண இடுகுறியாய் நில்லாது, காரண அளவில் நின்று, நெருப்பைக் குறித்தது. எருக்குதல் - அழித்தல். 'நெருக்கி' என்பது பாடம் அன்று. 'அனைத்து விளக்கு' என்றது, கருவி கரணங்களை. 'திரிதூண்ட' என்பதில், சினை முதலொடு சார்த்தப்பட்டது. மனத்து விளக்கு அது - மனத்தில் ஏற்றத்தக்க விளக்காகிய அந்த விளக்கு, சிவ ஒளி. 'மாயா விளக்கு' என்று, மனத்து விளக்கின் இயல்பைத் தெரிவித்துக் காட்டியது. இதன்பின் நின்ற தேற்றேகாரம், அஃது அத்தன்மைத்தாயே நிலைபெறுதல் காட்டி நின்றது. இங்கு, 'ஆகும்' என்பது எஞ்சி நின்றது.
'தியானம்' என்பது, உலகர்கொள்ளும் உறக்கம் போல்வது அன்று என்பதற்கு, 'அனைத்து விளக்கும் திரியொக்கத்தூண்ட' என்றார். எனவே, 'யோகநிலையில் நிற்பவர்கட்குக் கருவி கரணங்கள் செயற்படாது நிற்குமேயன்றி, மடிதல் இல்லை' என்பது விளங்கும். இதனை விளக்கவே இந்நிலையே, 'யோக நித்திரை, அறி துயில்' என்னும் பெயர்களால் கூறுவர். இவ்வாறன்றிக் கேவல சுழுத்தியாகிய உறக்கம் வருமாயின், இருள் மூடிக் கொள்வதல்லது விளக்கேற்றிய தாகாது; அதனைக் குறிக்கவே, பின்னிரண்டடிகளை அருளிச் செய்தார். இஃது அறியாது ஏகான்ம வாதிகள், 'அன்றாடம் உலகர்க்கு வருகின்ற கேவல சுழுத்தியே பேரின்ப நிலை' எனக் கூறி மகிழ்வர். 'சினத்து விளக்கினைச் செல்ல எருக்கி' என்று வெகுளி நீக்கம் கூறிய தனால், ஏனைக் காமம், மயக்கம் என்பவற்றது நீக்கமும் கொள்ளப் படும். 'காம வெகுளி மயக்கங்கள் அற்றிருத்தல்' என்றால் 'உறங்கிக் கிடப்பது என்பது பொருளன்று' என்றதற்கு, 'அனைத்து விளக்கும் திரியொக்கத்

தூண்ட' என்றார்.
இதனால், தியானத்தில் செயற்பாலன, தவிரற்பாலன கூறப்பட்டன.

எண்ணா யிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணார் அமுதனைக் கண்டறி வாரில்லை
உண்ணாடி உள்ளே ஒளிபெற நோக்கிடில்
கண்ணாடி போலக் கலந்துநின் றானே. ***#591***

நெடுங்காலம் யோகம் செய்யினும், மேற்கூறிய தியான நிலையை அடைய முயல்பவர் அரியர். அந்நிலையை அடைந்தால், சிவன், கண்ணாடியுள்ளே இருக்கின்ற பொருள் இனிது விளங்குதல்போல, உயிர்க்குயிராய் நிற்கின்ற நிலை இனிது விளங்கும்.

விளக்கவுரை

'கண்' என்றது, மேற்கூறிய அகக்கண்ணை. மூன்றாம் அடி, தியானத்தைப் பெறும் முறையை நினைப்பித்தது. 'உள்ளே' என்றதை, 'கண்ணாடி' என்பதன் பின்னும் கூட்டுக.
'அடுத்தது காட்டும் பளிங்குபோல்'*(குறள், 706)* என்பதையும் நோக்குக.
இதனால், ஆஞ்ஞைத் தியானம் இல்வழி யோகத்தால் பயன் இன்மை கூறப்பட்டது.

நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமும் இல்லை சிவன்அவன் ஆமே. ***#592***

ஒருவன் ஆஞ்ஞைத் தியானம் செய்தால் துன்பம், இறப்பு, கவலை, 'எனது' என்னும் பற்று, 'யான்' என்னும் முனைப்பு, இவை காரணமாகச் சிலவற்றைத் தேட முயலும் முயற்சி ஆகிய அனைத்தும் அவனுக்கு இல்லாதொழியும். பின்பு அவன் சிவனேயாய் விடுவான்.

விளக்கவுரை

எனவே, 'இன்பமே உளதாகும்' என்பதாம். 'நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்தல்' என்பது, கிரியை நிலையில் செபம் முதலியவற்றில் இருவிழிகளையும் மூடி யொழியாமலும், அலர விழியாமலும் சிறிது திறந்த பார்வையுடன் மூக்கின் இருதுளைக்கும் மேலே உள்ள நுனிமூக்கை நோக்கி நிற்றலைக் குறிப்பது. அத்தொடரை இங்கு இயைபுபட எடுத்தோதி, 'நான், சிவன்' என்னும் இரண்டு எண்ணத்தையும் புருவ நடுவிலே வைத்தல் என 'நாட்டம் இரண்டு' என்பதற்கு உட்பொருள் கொள்ள வைத்தார். இங்ஙனம் உட்பொருள் கொள்ளாவிடில், இங்கு இது பயன் தாராமை அறிக. மனை, உடம்பு.
இதனால், மேற்கூறியதற்குக் காரணம் கூறப்பட்டது.

நயனம் இரண்டையும் நாசிமேல் வைத்திட்
டுயர்வெழா வாயுவை உள்ளே அடக்கித்
துயரற நாடியே தூங்கவல் லார்க்குப்
பயனிது காயம் பயமில்லை தானே. ***#593***

ஆஞ்ஞைத் தியானத்தை முறைப்படி செய்து அதனால் இன்புற்றிருப்பவர்க்கு இவ்வுடம்பு தரும் பயன் இவ்வின்ப நிலையேயாம். ஆகவே, இப்பயனை இவ்வுடம்பு தாராதொழியின், அதனால் பயன் வேறில்லை.

விளக்கவுரை

உயர்வு எழா - வெளியே போகாமல், 'துயர் அற' என்றதனால், 'இன்புற்று' என்பது பெறப்பட்டது. 'தூங்குதல்' என்பது, அமைதியுற்றிருத்தலைக் குறித்தது. 'இந்நிலை கூடுதல் அரிது' என்றற்கு, 'வல்லார்க்கு' என்றார். 'வல்லார்க்குப் பயன்' எனவே, 'பயம் இல்லை' என்றது மாட்டாதார்க்கு ஆயிற்று.

இதனால், 'இந்நிலையைப் பெறாத வழி, யோகமேயன்றி, உடம்பும் பயன் இலதாம்' என்பது கூறப்பட்டது.

மணிகடல் யாஅனை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபே ரிகையாழ்
தணிந்தெழு நாதங்கள் தாம்இவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கஒண் ணாதே.

(இதற்குப் பின் உள்ள 'கடலொடு மேகம்' என்னும் பாடல் நாயனார் திருமொழியன்று.)

கடலொடு மேகங் களிறொடும் ஓசை
அடவெழும் வீணை அண்டரண் டத்துச்
சுடர்மன்னு வேணுச் சுரிசங்கின் ஓசை
திடமறி யோகிக்கல் லாற்றெரி யாதே. ***#594***

'மணி நா ஓசை, கடல் ஓசை, யானை பிளிறும் ஒலி, குழல் இசை, மேகத்தின் முழங்கு குரல், வண்டு, தும்பி இவற்றின் ஒலி, சங்கநாதம், முரசின் முழக்கம், யாழ் இசை' என்னும் ஒலிகள் போன்ற மெல்லிய ஒலிகள் பத்தினையும் ஆஞ்ஞைத் தியானத்தை அடைந்தவர் கட்கல்லது, மற்றையோர்களுக்குக் கேட்டல் கூடாததாகும்.

விளக்கவுரை

எனவே, 'கேட்கப்படுதல் தியானத்தில் நிலைத்து நின்றமைக்கு அறிகுறி' என்றவாறாயிற்று. இவ்வோசைகள், பிராண வாயு மேற்கூறிய பத்து

நாடிகளிலும் நிற்றலால் உளவாவனவாம். 'இந்த இந்த நாடியில் இன்ன இன்னவாறு ஓசை எழும்' என வரை யறுத்தும் சில நூல்கள் கூறும். வார் - நீண்ட. அணி - அழகு. தணிந்து எழுநாதம் - மெல்ல ஒலிக்கின்ற ஓசை. எனவே, 'மேக ஒலி' என்றது 'இமயத்து ஈண்டு இன்குரல் பயிற்றி' (புறம். 34) என்றாற்போல மழை பொழிய வரும் மேகம் மெல்லென முழங்கும் முழக்கத்தையாயிற்று. பணிந் தவர் - (தியானத்துள்) அடங்கியவர். 'அல்லது பார்க்க ஒண்ணாதே' என எதிர்மறையாற் கூறினமையின், 'இஃது அறிகுறி' என்பது பெறப் பட்டது. படவே, தியான நிலையில் நிற்போர் அவ்வோசையைக் கேட்டலிலும் செல்லுதல் கூடாமை அறிந்துகொள்ளப்படும்.

இதனால், தியான நிலையை உணர்தற்கு ஆவதோர் அடையாளம் கூறப்பட்டது.

ஈசன் இயல்பும் இமையவர் ஈட்டமும்
பாசம் இயங்கும் பரிந்துயி ராய்நிற்கும்
ஓசை அதன்மணம் போல விடுவதோர்
ஓசையாம் ஈசன் உணரவல் லார்க்கே. **#595**

தியான யோகத்தால் இறைவனை உணரமாட்டா தவர்க்கு அவனது இயல்பும், தேவர் கூட்டம் முதலிய பிற எல்லாப் பொருள்களும், அவரது உணர்வைத் தம்பால் ஈர்த்து அடக்கி அவரது உணர்வேயாய் நிற்கின்ற, மேற்கூறிய, 'மணி கடல் யானை' முதலிய ஓசைகளாகவே தோன்றும். அவ்யோகத்தால் அவனை உணர வல்லவர்க்கு அவ்வாறின்றி, ஈசன் இயல்பு முதலிய யாவும், 'அவ் வோசையின் வாசனை' எனச் சொல்லத்தக்கவாறு, அவ்வோசை நீங்கிய பின்னும் நிலைபெறுவதொரு நுண்ணிய ஓசையாய் விளங்கும்.

விளக்கவுரை

'பாசமாய்' என ஆக்கச் சொல் வருவிக்க. பாசம், பிறவற்றிற் செல்லாதவாறு தடுத்துத் தம்பால் ஈர்ப்பவை. 'இயங்கும், நிற்கும்' என்னும் எச்சங்கள், 'ஓசை' என்னும் ஒரு பெயர் கொண்டன. 'உயிர்' என்றது, அதன் உணர்வை. ஓசை நிகழ்ச்சியை, 'பாசம்' என்றதற்கு ஏற்ப, அதன் நீக்கத்தை 'விடுவது' என்றார். 'விடுவது' என்றது விட்டபின் நிலை பெறுவதாகிய தன் காரியம் தோன்ற நின்றது. 'ஈசனை' என்னும் உருபு தொகுத்தலாயிற்று. இதனால், சொல்லியவை, 'மணி கடல் யானை முதலிய ஓசையின் வழி இறைவனை உணர்தல் தியான யோகத்தின் முதல் நிலை' என்பதும், 'அவை அடங்கப்பெற்று அவனை உணர்தலே அவ் யோகத்தின் முடிவு நிலை' என்பதுமாம். 'ஓசையெலாம் அவற்றால் ஒலிக்கும் திருச் சிலம்பின் ஓசை' என்றார் திருக்களிற்றுப் படியாரிலும் (வெண்பா, 33).

இதனால், தியான யோகத்தின் முதல் நிலை முடிவு நிலைகள் இவை என்பது கூறப்பட்டது.

நாத முடிவிலே நல்லாள் இருப்பது
நாத முடிவில்நல் யோகம் இருப்பது
நாத முடிவிலே நாட்டம் இருப்பது
நாத முடிவிலே நஞ்சுண்ட கண்டனே. ***#596***

தத்துவ நிலையிலும் சத்தியும் சிவமும் இருப்பது நாத தத்துவத்திற்கு அப்பாலாகலின், தியான யோகத்தின் முடிவு நிலையும் மேற்கூறிய பத்து வகை ஓசைகள் அடங்கிய இடமேயாம். அதனால், யோகியரது நோக்கம் அவ்விடத்திற் செல்வதே.

விளக்கவுரை

'தியான முதிர்ச்சியில் சிவானுபவத்தைத் தலைப்படல் கூடும்' என்பதற்கு, 'நாத முடிவிலே நஞ்சுண்ட கண்டன்' என்பதனை இறுதிக்கண் கூறினாராயினும், அதனை இரண்டாம் அடியாக வைத்து, அதன்பின், 'ஆதலால்' என்னும் சொல்லெச்சம் வருவித்துரைத்தல் கருத்தென்க. நல்யோகம் - தியானம். 'இருப்பது' எனவந்த எழுவாய்கள் மூன்றும், 'முடிவில்' என்னும் பயனிலைகளை முதலிற் பெற்று நின்றன. 'நஞ்சுண்ட கண்டன்' என்பதன் பின்னும் அவ் எழுவாய் எஞ்சிநின்றது.
இதனால், ஓசை அடங்கிய இடமே தியான யோகத்தின் முடிவு நிலையாதல் தத்துவத்தில் வைத்து வலியுறுத்தப்பட்டது.

உதிக்கின்ற ஆறினும் உள்ளங்கி ஐந்தும்
துதிக்கின்ற தேசுடைத் தூங்கிருள் நீங்கி
அதிக்கின்ற ஐவருள் நாதம் ஒடுங்கக்
கதிக்கொன்றை ஈசன் கழல்சேர லாமே. ***#597***

ஆதார மூர்த்திகள் வெளிப்படும் இடமாகிய ஆறு ஆதாரங்களுள்ளும் உள்ளொளியாகிய பிரமன் முதலிய ஐவரையும் தியானிக்கும் தியானத்தால், புகழப்படுகின்ற ஒளியை உடைய, ஆயினும், சிவனைத் தலைப்பட ஒட்டாத - மயக்கம் நீங்க, அதன்பின், மேம்பட்டவராக மாயோனை முதலில் வைத்து இறுதிக்கண் நாதமூர்த்தியைக் கூட்டி எண்ணும் ஐவருள் நாதமூர்த்தியும் ஒடுங்கக் காணின், பரமசிவனது திருவடியை அடைதல் கூடும்.

விளக்கவுரை

'ஆறினுள்ளும்' என உருபு விரிக்க. 'ஆறினுள்' எனப் பாடம் ஓதுதலும் ஆம். உம்மையுடைய இப்பாடத்திற்கு, முற்றும்மை எச்சப்பொருள் தந்ததாக உரைக்க. அங்கி - ஒளி. உள்ளே விளங்கு தலின் ஆதார மூர்த்திகளை 'உள்ளொளி' என்றார். ஆஞ்ஞையாகிய ஆறாவது

ஆதாரத்தில் விந்துச் சத்தியுடன் விளங்குபவர் நாதமூர்த்தி. ஆகவே, அவருக்குக் கீழுள்ள ஐவராலும் பத்துவகை ஓசைகளைக் கேட்கும் தியானயோகம் முதிர்ந்து வருதலை இருள் நீங்குதலாகக் கூறினார். இங்கு "இருள்" என்பது, சிவாநுபவத்தைப் பெற ஒட்டாது தன்னையே கேட்டு நிற்கச் செய்யும் பத்து வகை ஓசை நிகழ்ச்சியே என்றற்கு, "துதிக்கின்ற தேசுடை" என்றும், ஆதார மூர்த்திகளுள் கீழுள்ளவன் மலரோன் ஆதலின், அவனுக்கு மேல் உள்ளவரை 'அதிக் கின்ற ஐவர்' என்றும் தெரித்துக் கூறினார். நாதம் - நாதமூர்த்தி. அவர் ஒடுங்கினமை கூறவே, ஓசை ஒடுங்கினமை தானே பெறப்பட்டது. கதி - புகலிடம். 'கதியாகிய ஈசன்' என்க. 'கதியாகிய கழல்' எனினு மாம். "கதி" எனவே, அஃது ஒன்றே அடையத் தக்கது என்றவாறு.

பள்ளி அறையில் பகலே இருளில்லை
கொள்ளி அறையிற் கொளுந்தாமற் காக்கலாம்
ஒள்ளி தறியில்ஓர் ஓசனை நீள்இது
வெள்ளி அறையில் விடிவில்லை தானே. ***#598***

மேற் *(பா. 568-573)* கூறிவந்த இடங்களுள் முடிவாகிய பள்ளியறையில் பகலன்றி இரவே இல்லை. இவ்வொளி யிடத்தை அடைய நினைத்தால் இஃது ஒரு யோசனை தூரத்தில் உள்ளது. இதனை அடைந்துவிட்டால், வீட்டை எக்காலத்தும் தீப்பற்றிக் கொள்ளாமலும் காப்பாற்றலாம். இப்பள்ளியில் சென்றவர் விழித்தெழுந்து வெளிப்போத வேண்டுவதில்லை.

விளக்கவுரை

நாத மூர்த்தி விந்துச் சத்தியுடன் பிரிவின்றி நின்று அறிவைப் பிறப்பிக்கும் இடமாதல் பற்றியும், தியான யோகத்தின் முதிர்ச்சியில் ஆன்மா 'சமனை' என்னும் சத்தியோடு கூடி நிற்கும் இடமாதல் பற்றியும் ஆஞ்ஞையை, 'பள்ளியறை' என்றார். 'இதனை அடைந்துவிட்டால்' என்பது இசையெச்சம். 'அறையில் கொள்ளி கொளுந்தாமற் காக்கலாம்' என மாற்றி உரைக்க. அறை, உடம்பு. 'தியானம் முதிரப் பெற்றோர்க்கு வாழ்நாள் நீட்டிப்பும் உளதாகும்' என்றபடி. 'ஓர் ஓசனை நீள்' என்பது சிலேடை. ஓர் ஓசனை (யோசனை) ஒப்பற்ற தியானம். நீளம் - உயரம்; முடிவு. 'நீளம்' என்பது கடைக்குறையாயிற்று. வெள்ளி அறை, சுவரும், நிலமும் வெள்ளியால் ஆக்கப்பட்ட அறை. 'ஒளியிடம்' என்பது உண்மைப் பொருள். 'அவ்வெள்ளி அறை' எனச் சுட்டு வருவித்து உரைக்க. 'விடிவில்லை' என்றது, 'எழுந்து வர வேண்டுவதில்லை' என்பதைக் குறித்த குறிப்பு மொழி.

இதனால், தியான யோகத்தின் முடிவு நிலையது சிறப்புக் கூறப்பட்டது.

கொண்ட விரதம் குறையாமல் தான்ஒன்றித்

தண்டுடன் ஓடித் தலைப்பட்ட யோகிக்கு
மண்டலம் மூன்றினும் ஒக்க வளர்ந்தபின்
பிண்டமும் ஊழி பிரியா திருக்குமே. *#599*

இயமம் முதலாகத் தான் மேற்கொண்ட நோன்புகள் சிறிதும் குறைவுறாதவாறு அவற்றில் உறைத்து நின்று, பிராணா யாமத்தால் சுழுமுனை நாடி வழியே சென்று ஆஞ்ஞையை அடைந்த யோகிக்கு, உடம்பு, 'அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம்' என்னும் மூன்று பகுதிகளிலும் செம்மையுற்று, நிற்க வேண்டிய முறையில் சிறிதும் பழுதின்றி நிற்கும் ஆதலால், அஃது ஊழிக் காலம் வரினும் நீங்காத தன்மையைப் பெற்றிருக்கும்.

விளக்கவுரை

'ஆறு ஆதாரங்களுள், மூலாதாரம், சுவாதிட்டானம் இரண்டும் அக்கினிமண்டலம்; மணிபூரகம், அனாகதம், விசுத்தி மூன்றும் சூரியமண்டலம்; ஆஞ்ஞையும் பிரமரந்திரமும் சந்திர மண்டலம்' என்பது யோக நூற்கருத்து. இம்மூன்று மண்டலங்களிலும் உடல் செம்மையுற்றிருத்தல் வேண்டும். அவ்வாறில்லாமல் ஆங் காங்குப் பழுதுறுவதினாலே வாழ்நாள் குறைகின்றது. யோகப் பயிற்சி யால், உடற் செம்மை தானே அமைந்துவிடுதலின், யோகியர்க்கு வாழ்நாள் நீடுவதாம் என்க.
இதனால், மேல், 'கொள்ளி அறையிற் கொளுந்தாமற் காக்கலாம்' என்றது, ஏதுக்காட்டி வலியுறுத்தப்பட்டது.

அவ்வவர் மண்டல மாம்பரி சொன்றுண்டு
அவ்வவர் மண்டலத் தவ்வவர் தேவராம்
அவ்வவர் மண்டலம் அவ்வவர்க் கேவரில்
அவ்வவர் மண்டலம் ஆயம்மற் றோர்க்கே. *#600*

(அக்கினி மண்டலம் முதலாகக் கூறிய மண்டலங்கள் மூன்றுக்கும் சிவபெருமான் ஒருவனே முதல்வனாக அறிந்து, எவ்விடத்தும் அவனையே தியானித்து அவனாகின்ற யோகமே உண்மை யோகம்; அது சத்தி நிபாதர்க்கல்லது கூடாது. அது நிற்க.) அம் மூன்று மண்டலங்கட்கும் அக்கினி முதலிய மூவரையே முதல்வராகக் கருதி ஆங்காங்கு அவ்வவரைத் தியானித்து அவரா கின்ற பொது முறைமையும் உண்டு. (அது சத்திநிபாதரல்லாதார்க்கு உரியதாம். மூன்று மண்டலங்கட்கும் மூவர் முதல்வராகிவிடின், கலாம் விளையுமன்றோ எனின்,) மூவரையும் முதல்வராக எண்ணுவோர், ஒருவர் மற்றை இருவர்க்கும் தோழமை யுடையவராக, மூவரிடை இணக்கமே கொள்ளுதலின், கலாம் விளையாதாம்.

விளக்கவுரை

'அவ்வவர் மண்டலம் ஆம் பரிசு' என்றது, 'மூன்று மண்டலங்களையும் தனித்தனி மண்டலங்களாகக் கருதும் முறை' எனவும், 'அவ்வவர் மண்டலத்து' என்பது, 'அம்முறையுள்' எனவும், 'அவ்வவர்க்கே வரில்' என்றது, 'அவரவருக்கே உரிய தாய்விடின்' எனவும் கூறியவாறாம். 'அவ்வவர் மண்டலம் மற்றோர்க்கு ஆயம்' என மாறிக் கூட்டுக. ஆயம் - தோழமை.

இதனால், 'இறப்பில் தவம்' *(சிவஞானபோதம், சூ.8, அதி.1)* எனப்பட்டு ஞானத்தைப் பயக்கும் சிவயோகத்தின் வேறான யோகமும், 'யோகம்' எனச் சிலரால் மேற்கொள்ளப்படுகின்றது எனமேல் *(பா. 557)* கூறியதனை

உளத்துட் கொண்டு, அம்முறை பற்றிய மும்மண்டலங்களின் இயல்பு ஈண்டுக் கூறப்பட்டது.

இளைக்கின்ற நெஞ்சத் திருட்டறை உள்ளே
முளைக்கின்ற மண்டலம் மூன்றினும் ஒன்றித்
துளைப்பெரும் பாசம் துருவிடு மாகில்
இளைப்பின்றி மார்கழி ஏற்றம தாமே. ***#601***

ஒவ்வொரு பயனைத் தருபவர் ஒரோவொரு தேவராக நினைந்து அவர் அனைவரிடத்தும் ஓடி இளைக்கின்ற நெஞ்சத்தைத் தனது சரக்காக உடைய இருட்டறையாகிய உடலி னுள்ளே தனித்தனி முதன்மை பெற்றுத் தோன்றுகின்ற மண்டலங்கள் மூன்றிலும் பொருந்தி ஊடுருவிச் செல்வதாகிய பெரிய நூல் அவ்வாறு அவற்றை ஒன்றுபடக் கோத்துச் செல்லுமாயின், உயிர் மேற்கூறிய இளைப்பை அகன்று, மார்கழி நீராட்டுப்போல இன்ப வெள்ளத்தில் மூழ்கிச் சிறக்கும்.

விளக்கவுரை

இருட்டறை, அறியாமைக்கு இடமாகிய உடம்பு. 'நிட்டையிலா உடல்' *(தி.9 திருப்பல்லாண்டு, 3)* என்றாற்போல, ஞானத்திற்கு ஏதுவாகாத குறையை உடல்மேல் ஏற்றிக் கூறுதலும் மரபாதல் அறிக.

'அறியாமை காரணமாக மூன்றும் மூன்று தனி மண்டலங்களாய்த் தோன்றுகின்றன' என்பது உணர்த்துதற்கு, 'இருட்டறை யுள்ளே முளைக்கின்ற மண்டலம் மூன்றினும்' என்றார். துளை, முதனிலைத் தொழிற் பெயர். 'துளைத்தலை யுடைய பாசம்' என்க. துளைப்பது ஊசியேயாயினும், 'இஃது ஊசியின்றியே உருவிச் செல்வதோர் அதிசய நூல்' என்றவாறு. இது குண்டலி சத்தி என உணர்க.

சத்திநிபாதரல்லாதவர்க்கு இம் மண்ட லங்களைத் துளைத்துக் கோத்து ஒன்றாக்கமாட்டாது நிற்கும் இந்நூல், சத்தி நிபாதர்க்குத் துளைத்து

ஒன்றாகக் கோக்கும் வன்மையுடையதாம் என்பார், 'பெரும்பாசம்' என்றார்.
பாசம் - நூல்; கயிறு. நெளிவும், வளைவும் உடையதாதல் பற்றி, 'பாம்பு' எனப்படுகின்ற இதனை, இங்கு, 'பாசம்' என்றார். 'பிறர்க்குப் பல தெய்வ உணர்வைத் தருகின்ற குண்டலிசத்தி, சத்திநிபாதர்க்குச் சிவனது தனிப்பெரு முதன்மையைத் தந்து நிற்கும்' என்பது கருத்து. சிவயோகம் அல்லாத யோகம் பிறவியைப் போக்காமையேயன்றி அதனை வருவித்தலும் செய்யு மாகலின், அது பவ யோகமாம்.
'மார்கழி' என்பது, அத்திங்களில் ஆடும் நீராட்டைக் குறித்தது. 'மார்கழி போல' என உவம உருபு விரிக்க.
இதனால், சிவத்தியான யோகமே பேரின்பத்தைத் தருவது என்பது கூறப்பட்டது.

முக்குண மூடற வாயுவை மூலத்தே
சிக்கென மூடித் திரித்துப் பிடித்திட்டுத்
தக்க வலமிடம் நாழிகை சாதிக்க
வைக்கும் உயிர்நிலை வானவர் கோனே. ***#602***

பிராணாயாமம் முதலியவற்றை முறைப்படி பயில வல்லவர்க்கு அவற்றின் பயனைத் தருபவன், தேவ தேவனாகிய சிவபெருமானே; *(அவன் வழி நிற்போராகிய ஏனைய தேவர் அது மாட்டார்.)*

விளக்கவுரை

'அதனால், அவனைத் தியானிப்பார்க்கல்லது துன்பம் நீங்காது' என்பதாம். முதல் மூன்று அடிகளும் பிராணாயாம முறையை அனுவதித்தவாறு. 'முக்குணங்களாகிய பந்தத்தினின்று விடுபடுதற் பொருட்டு மேற்கொள்ளப்படுவதே யோகம்; அப்பயன் சிவயோகத் தாலன்றி எய்தாது' என்பதனை 'முக்குணம் மூடு அற வாயுவைப் பிடித்திட்டு' என உடம்பொடு புணர்த்து ஓதினார். 'உயிரை அவ்வந் நிலையில் வைக்கும்' என்க.
இதனால், மேலதற்குக் காரணம் கூறப்பட்டது.

நடலித்த நாபிக்கு நால்விரல் மேலே
மடலித்த வாணிக் கிருவிரல் உள்ளே
கடலித் திருந்து கருதவல் லார்கள்
சடலத் தலைவனைத் தாமறிந் தாரே. ***#603***

சிவயோகியரேயாயினும், அனாகதத்தளவிலே நிற்பவர் ஆன்ம நிலையையே உணர்வர்; சிவ நிலையை உணர மாட்டார்.

விளக்கவுரை

'ஈத்த' என்பனவும், 'ஈத்து' என்பதும் குறுக்க லாயின. அவற்றுள்

இறுதியில் நின்றது உவம உருபு. நடல் - நடுதல்; நிலை நிறுத்தல். பிராண வாயுவைக் கும்பித்தல். நாபி - மணிபூரகம். மடல் - தாமரை இதழ். வாணி - வாக்கு. ஆகுபெயராய் மத்திமை வாக்குக்கு இடமான விசுத்தியைக் குறித்தது. 'உள்ளே' என்றது, 'கீழே' என்றவாறு. 'கீழே' எனப் பாடம் ஓதுதலும் ஆம். மணி பூரகத் திற்கும், விசுத்திக்கும் இடையில் உள்ளது, 'அனாகதம்' எனப்படும் இருதயம். கடல் - கடலின் தன்மை. அது கரை இன்மையும், ஆழம் அறியப்படாமையும், தெளிவுமாம். சடலம் - உடல். அதன் தலைவன், உயிர். 'தியான யோகத்தை இருதயமட்டாகச் செய்து, அப்பால் ஏறமாட்டாதவர், ஆன்ம இயல்பையே உணர்வர்' என்பதாம்.

இதனால், 'தியான யோகத்தை முற்றப் பயிலல் வேண்டும்' என்பது வலியுறுத்தப்பட்டது.

அறிவாய் அசத்தென்னும் ஆறா றகன்று
செறிவான மாயை சிதைத்தரு ளாலே
பிறியாத பேரரு ளாயிடும் பெற்றி
நெறியான அன்பர் நிலையறிந் தாரே. ***#604***

யோகத்தை முறைப்படி பயின்ற அடியவரே, அறிவில்லாத பொருளாகிய முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து அறிவுருவாய் நின்று, அதனால், வலிய மாயையின் மயக்கத்தையும் வென்று, இறைவனது திருவருளால், வேறு நில்லாது அவனது தன்மையையே தமது தன்மையாகப் பெற்று நிற்கின்ற ஞானத்தை நிலைபெற உணர்ந்தோராவர்.

விளக்கவுரை

யோகமும் வழிபாடேயாதலின், அதனைச் செய் வோரை, 'அன்பர்' என்றார். 'அன்பரே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. 'நிலையாக' என ஆக்கம் வருவித்துரைக்க. 'அறிந்தார்' என்றதனை, 'அறிவறிந்த மக்கட் பேறு' *(குறள், 61)* என்றாற் போல, 'அறிதற்கு உரிமையுடையார்' எனக் கொள்க. 'துணிவுபற்றி, எதிர்காலம் இறந்த காலம் ஆயிற்று' என்றலுமாம். 'நெறியான அன்பர்' என்பதை முதலில் வைத்து உரைக்க.

இதனால், 'யோகம் முற்றியவர்க்கே ஞானம் கூடும்' என, யோகத்தது இன்றியமையாமை கூறப்பட்டது. இதனைச் சமாதி இறுதியிற் கூறாது ஈண்டுக் கூறினார், தியானத்திற்கும், சமாதிக்கும் இடையே உள்ள வேற்றுமை சிறிதேயாகலின்.

5.9.சமாதி

சமாதி யமாதியிற் றான்செல்லக் கூடும்
சமாதி யமாதியிற் றானெட்டுச் சித்தி

சமாதி யமாதியிற் றங்கினோர்க் கன்றே
சமாதி யமாதி தலைப்படுந் தானே. *#605*

'சமாதி' என்னும் முடிவுநிலை, இயமம் முதலிய ஏனை உறுப்புக்களில் வழுவாது நிற்றலாலே வாய்ப்பதாம். இச்சமாதி யேயன்றி அட்டமாசித்திகளும், இயமம் முதலிய அவ்வுறுப்புக்களால் விளையும். இத்துணைச் சிறப்புடைய இயமம் முதலியவற்றை முற்றிச் சமாதியில் நிலைபெற்றவர்க்கேயன்றோ யோகம் முற்றுப்பெறுவது!

விளக்கவுரை

'யமாதி' என்பது ஆரியப்புணர்மொழி. 'இன்' மூன்றும், ஏதுப் பொருளில் வந்த ஐந்தாம் உருபு. 'தான்' என்பது பிரி நிலை ஏகாரப் பொருளது; இதனை, 'தங்கினோர்க்கு' என்பதனுடன் கூட்டுக. செல்லல் - வாய்த்தல். இரண்டாம் அடியில், 'சமாதியோடு' எனவும், மூன்றாம் அடியில், 'சமாதிக்கண்' எனவும் ஏற்கும் உருபு விரித்துக் கொள்க. நான்காம் அடியை, 'யமாதியும், சமாதியும் தலைப்படும்' என மாற்றி உம்மை விரித்து 'யோகம்' என்பது அதன் கருத்தாக உரைக்க. 'சித்தி' என்பதன்பின், 'உளவாம்' என்னும் பயனிலை எஞ்சிநின்றது. இதனால், சமாதியே யோகத்தின் முடிவு நிலை என்பதும், அஃது அதற்கு முன்னே செயற்பாலனவற்றால் அடையத் தக்கது என்பதும், அட்டமாசித்திகள் இயமம் முதலியவற்றின் இடைநிலைப் பயன் என்பதும் கூறப்பட்டன.

விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடிற்
சந்தியி லான சமாதியிற் கூடிடும்
அந்த மிலாத அறிவின் அரும்பொருட்
சுந்தரச் சோதியுந் தோன்றிடுந் தானே. *#606*

கருவிற்கு வித்தாய வெண்பாலும் (சுக்கிலமும்) குண்டலி சத்தியும் ஆஞ்ஞைத் தானத்தில் சோர்வின்றி நிற்குமாயின், அவ்விடத்தில் ஆன்மா சமாதியைத் தலைப்படும். அத்தலைப்பாட்டில் ஏகதேச உணர்வு நீங்கிய வியாபக உணர்வு தோன்ற, அதன்கண் அடைதற்கரிய பொருளாகிய அழகிய சிவம் விளங்கும்.

விளக்கவுரை

வெண்பால் (சுக்கிலம்) சோராமை, ஆன்மா புறப் பொருளையும், தன்னையும் மறந்து தியானப் பொருளோடு ஒன்றுதலாம். குண்டலியாவது 'வாக்கு' என்பதை மேலே குறித்தாம். அதுவும் மேற்குறித்த இரு பொருளையும் பற்றாது நிற்றலை, 'ஆஞ்ஞையில் நிற்றல்' என்றார். இதனை நாவுக்கரசர் அரம்பையர் ஆடல் பாடலைக் கண்டு அகம் இளையாதிருந்த ஞானநிலையோடு ஒப்பிட்டு உணர்க.

இவ்விரண்டும் உயிர், சமாதிநிலை கூடினமைக்கு அறிகுறி என்றவாறாயிற்று. ஆகவே, தியான நிலையில் இவ்விரண்டும் இந்நிலையினின்றும் சோர்தல் உண்டு என்பது பெறப்பட்டது. 'விந்து, நாதம்' என்பவற்றிற்கு இங்குப் பிறவாறு உரைத்தல் ஏலாமை அறிக. சுழுமுனையாகிய நடுநாடியின் உச்சியாகிய புருவ நடுவை, 'மேரு' என்றல் வழக்கு என்பது மேலேயும் கூறப்பட்டது. பின்னிரண்டடிகள் சமாதியில் சிவ நிலை அனுபவமாய் விளங்குதல் கூறப்பட்டது. தியான நிலையில் பாவனை மாத்திரமே உளதாம் என்க.
இதனால், சமாதி நிலையில் விளைவன கூறப்பட்டன.

மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலய மாமே. ***#607***

புறப் பொருளிடத்தும், ஆன்மாவிடத்தும் நிற்கின்ற மனம் எப்பொழுது உண்டோ, அப்பொழுதெல்லாம் பிராண வாயுவின் இயக்கமும் உளதாகும்; அத்தன்மையான மனம் இல்லாத பொழுது, பிராணவாயுவின் இயக்கமும் இல்லையாம். மேற்கூறிய இரண்டையும் விடுத்து தேயப்பொருளில் (தியானிக்கப்படும் பொருளில்) நிலை பெற்ற மனத்தால் அல்லல் அற்று இன்புற்றிருப் பவர்க்கு, அத்தேயப் பொருளிடத்தே அவரது மனம் ஒடுங்கி நிற்கும்.

விளக்கவுரை

'மன் மனம்' நான்கில் முதலன மூன்றும் வினைத் தொகை. மன்னும் இடங்கள் ஏற்ற பெற்றியாற் கொள்ளப்பட்டன. இறுதியது, 'தலைமைப் பொருளது மனம்' என ஆறாவதன் தொகை. 'மனம் மனத்தில் ஒடுங்கும்' என்னும் நயம் தோன்ற 'மன் மனத்துள்ளே மனோலயம் ஆம்' என்றாரேனும், 'மன்னுள்ளே' என்பதே கருத்தாம். மூன்றாம் அடியில், 'மனத்தால்' என மூன்றாவது விரிக்க. 'மனோலயம் உளதாம்' என்பதே சொற்பொருளாயினும், கருத்து நோக்கி மேற்கூறியவாறு உரைக்கப்பட்டது.
இதனால், 'சமாதி நிலையில் உயிர்ப்புத் தானே அடங்கி நிற்கும்' என அந்நிலையில் உளதாகின்ற மற்றொன்று கூறப்பட்டது. இதற்குக் கீழ்ப்பட்ட நிலைகளில் உயிர்ப்பை யோகியர் தமது முயற்சியால் அடக்குவர். இவற்றை, தியான யோக துரியமும், சமாதி யோக துரியாதீதமுமாதல் பற்றி அறிந்து கொள்க.

விண்டலர் கூபமும் விந்தத் தடவியுங்
கண்டுணர் வாகக் கருதி யிருப்பர்கள்
செண்டு வெளியிற் செழுங்கிரி யத்திடை

கொண்டு குதிரை குசைசெறுத் தானே. ***#608***

சமாதி நிலை எய்தினவரைப் பிறர், மனத்தைப் புற விடயங்களில் ஓடவிட்டிருப்பவராகக் கருதிக் கொண்டிருப்பார்கள். ஆயினும், அவர்களோ தமது மனத்தைத் தேயப் பொருளில் ஒடுக்கி விட்டிருப்பர்.

விளக்கவுரை

'குதிரையேற்றம் வல்லான் ஒருவனது குதிரை யேற்றத்தைக் காணவேண்டிச் செண்டு வெளியில் (குதிரையேறிக் காட்டும் இடம்; இதனை 'வையாளி வீதி' எனவும் கூறுவர்) கூடியிருந் தோர் பலரும், 'அவன் தனது குதிரையை, மலை, பாழ்ங்கிணறு முதலி யவை நிறைந்த காடுகளில் ஓட்டிக்காட்டி வருவான்' என்று நினைத் திருந்தார்கள். அவனோ அவ்வாறு ஒன்றும் செய்யாமல், அச்செண்டு வெளியில் உள்ள ஒரு பெரிய மலையின் பக்கத்தில் கொண்டுபோய் அக்குதிரையை எங்கும் போகவொட்டாமலே கட்டிவிட்டான் என்பது இத்திருமந்திரத்தின் சொற்பொருள். அஃது உள்ளுறை உவமமாய் நின்று, மேல் உரைத்த பொருளைத் தோற்று வித்தது என்க. விண்டு - மலை. 'விண்டுவும்' என உம்மை விரிக்க. அலர் கூபம் - வாய் விரிந்த கிணறு; பாழ்ங்கிணறு. 'விண்டலர் கூபம்' என ஒன்றாக்கி உரைப்பினுமாம். இப்பொருட்கு, விண்டு அலர்தல், ஒரு பொருட் பன்மொழி. விந்தத்து அடவி - விந்த மலையைச் சூழ்ந்துள்ள காடு. 'இதுவே மிக்க இன்னல் உடையது' என்றல் நம் நாட்டு வழக்கு.
'சிந்தாகுல இல்லொடு செல்வமெனும்
விந்தாடவி என்று விடப்பெறுவேன்' -கந்தர் அநுபூதி, *33*
என்றார் அருணகிரியாரும். 'உயிர் பூத உடலைவிட்டுக் கூற்றுவன் உலகிற்குச் செல்லும்பொழுது இடையில் இத்தன்மைத்தான ஒரு காட்டினைக் கடக்கும்' எனப் புராணம் கூறும். கண்டு உணர்வாக - கண்டறிந்து வருவானாக. கருதி யிருத்தற்கும், குசை செறுத்தற்கும் எழுவாய்கள் வருவித்துக்கொள்க. குசை - கடிவாளம். செறுத்தல் - கட்டுதல். 'குசையொடு செறுத்தான்' என்க. 'கிரியத்திடை' என்பதில் அத்து, வேண்டாவழிச் சாரியை. இனி 'கிரி உண்டு; அதனிடை' என உரைத்தலுமாம். குதிரை, மனம், குசை, பிராண வாயு, கிரி, தியானிக்கப்படும் பொருள்.

இதனால், சமாதி நிலை புறத்தாரால் அறிதற்கு அருமை கூறப் பட்டது. இதன்பின், 'மூலநாடி' எனக் காணப்படும் செய்யுள் நாயனார் திருமொழியன்று.

மண்டலம் ஐந்து வரைகளும் ஈராறு
கொண்டிட நிற்குங் குடிகளும் ஆறெண்மர்
கண்டிட நிற்குங் கருத்து நடுவாக

உண்டு நிலாவிடும் ஓடும் பதத்தையே. *#609*

நாடு சுற்றும் ஒருவன் அங்ஙனம் சுற்றி வரும் நாடுகள் ஐந்து; அவற்றில் உள்ள மலைகள் பன்னிரண்டு; அங்கு வாழும் குடிகள் நாற்பத்தெட்டு வகையினர். அவைகளை எல்லாம் முழுதும் காணவேண்டும் என்று விரும்பிய அவனது மனம் இடையே ஒரு பெரு வெள்ளத்தைக் கண்டு அதில் அழுந்திவிட, அவன் அதனையே குடித்தும், அதனுள்ளே மூழ்கியும் இன்புற்றிருக்கின்றான்.

விளக்கவுரை

மண்டலம் ஐந்து, பஞ்சபூதங்களின் எல்லைகள், வரைகள் பன்னிரண்டு, பிரணவ கலைகள். குடிகள் நாற்பத்தெட்டு, அக்கரங்கள் (ஐம்பதில் க்ஷகாரம், ளகாரம் என்னும் இரண்டும் ஒழித்து ஏனையவை. அடிநிலை எழுத்தாகிய அகரமும் இங்குக் குறிக்கப்பட வில்லை, அது சிவமாதல் பற்றி) இவை மூலாதாரம் முதல் விசுத்தி வரையில் உள்ள ஐந்து ஆதாரங்களிலும் மேலே காட்டப்பட்டவாறு நிற்றலின் 'குடிகள்' என்றார். 'இவற்றைக் கண்டிட விரும்பும் கருத்து' என்க. அஃதாவது, இவற்றையே நோக்கி நிற்கும் எண்ணம். 'நிலா விடும்' என்ற செய்யுமென்முற்று ஆண்பாலில் வந்தது. இதற்கு, 'சமாதி எய்தினோன்' என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க. 'ஓடும்' என்னும் அடைமொழியால் 'பதம்' வெள்ள நீரைக் குறித்தது. வெள்ளம், சிவானந்தம்.

இதனால், சமாதிநிலை எய்தினோர் பிறவற்றை எய்த விரும்பாமை கூறப்பட்டது.

பூட்டொத்து மெய்யிற் பொறிப்பட்ட வாயுவைத்
தேட்டற்ற அந்நிலஞ் சேரும் படிவைத்து
நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குத்
தோட்டத்து மாம்பழந் தூங்கலு மாமே. *#610*

கிணற்றில் உள்ள பூட்டைச் சுழல்போல, உடலில் முன்னும் பின்னுமாய் இயங்குதல் தன்மைபெற்று நிற்கும் பிராண வாயுவை, பிற பொருள்களைத் தேடித் திரியாது நிலைத்து நிற்கின்ற ஆஞ்ஞையில் சேர்ந்து அசையாதபடிநிறுத்தி, அதனாலே மனத்தையும் வெளிப்போகாதவாறு தடுத்துத் தியானப் பொருளில் நிலைத்து நிற்பவர்க்கு இன்பம் அங்குத் தானே கிடைக்கும்.

விளக்கவுரை

பொறி - இயங்குந் தன்மை. நாட்டம் - நாடுதல்; தொழிற்பெயர்; இது மனத்தின் தொழில். இதனை மீட்டல், மனத்தைத் தடுத்து நிறுத்துதலாம். நயனம் - கண். கண் போன்று உயிர்க்குயிராய் உள்ள பொருள். 'மாம்பழம் தோட்டத்துத் தூங்கலும் ஆம்' என மாற்றிக் கொள்க. ஈற்றடி,

ஒட்டணி.
இதனால், சமாதிநிலை தளர்வுறுதல் உளதாயின், பிராணாயாம தாரணை தியானங்களால் அத் தளர்ச்சியை நீக்கி அதன் கண் உறைத்து நிற்குமாறு கூறப்பட்டது.

உருவறி யும்பரி சொன்றுண்டு வானோர்
கருவரை பற்றிக் கடைந்தமு துண்டார்
அருவரை யேறி அமுதுண்ண மாட்டார்
திருவரை யாமனந் தீர்ந்தற்ற வாறே. *#611*

அகத்தே ஆஞ்ஞையாகிய மலையின் உச்சியை அடைந்து அங்குள்ள அமுதத்தைத் தேவர்களும் உண்ண மாட்டாராய்ப் புறத்தே பெரிய மலையைப் பெயர்த்துக் கொணர்ந்து திருப்பாற் கடலைக் கடைந்து, அதினின்றும் தோன்றிய அமுதத்தையே உண்டார்கள். (ஆயினும், அதனால் அவர் இறவாதிருக்கின்றார் களில்லை; ஆகவே) இறவாமைக்குப் பொருளாக அறியும் வழி ஒன்றே உண்டு; அஃது ஐம்புல வேட்கையை முடிவின்றிக் கொள்ளும் மனம் முற்றும் ஒடுங்கிய நிலையேயாம்.

விளக்கவுரை

'ஆதலின், அதனையே பெற்றுப் பேணிக்காக்க' என்பது குறிப்பெச்சம். முதல் தொடரை இரண்டாம் அடியின் பின் வைத்து நான்காம் அடிக்கு முன்னே கூட்டி உரைக்க. உரு - பொருள்; மெய்ம்மை. 'உருவாக' என ஆக்கம் வருவிக்க. 'ஒன்றே' என்னும் தேற்றேகாரமும், 'வானொடும்' என்னும் சிறப்பும்மையும் தொகுத் தலாயின. கருமை - பெருமை. ஏறுதற்கு அருமைபற்றி 'அருவரை' என்றார். 'மாட்டாராய் உண்டார்' என எச்சமாக்கி மேலே கூட்டி முடிக்க. 'இது மாட்டாமையால் அதனை உண்டார்' என்றதனால், உண்டதனால் கருதிய பயன் விளையாமை பெறப்பட்டது. 'திரு' என்பது, 'முயற்சி திருவினையாக்கும்' *(குறள், 616)* என்பதிற்போல நின்றது.
இதனால் சமாதிநிலையது அருமையும், பெருமையும் கூறப் பட்டன.

நம்பனை ஆதியை நான்மறை ஓதியைச்
செம்பொனின் உள்ளே திகழ்கின்ற சோதியை
அன்பினை யாக்கி அருத்தி ஒடுக்கிப்போய்க்
கொம்பேறிக் கும்பிட்டுக் கூட்டமிட் டாரே. *#612*

சிவனது பெருமையை உணர்ந்தோர் அவன்பால் அன்பு செய்து, அவ்வன்பினாலே பிற ஆசைகளை ஒழித்து, அவனையே நோக்கி ஆஞ்ஞையை அடைந்து அவனை வணங்கி, அவனோடு ஒன்றாய்க் கலந்தார்கள்.

விளக்கவுரை

எனவே, 'சிவனை அடைய விரும்புவோர் செய்யத் தக்கன அவையே' என்பதாம். 'சிவனது பெருமையை உணர்ந்த வழியே அவனிடத்து அன்பு செல்லும்' என்றதற்கு அவனது பெருமைகளை உடம்பொடு புணர்த்துக் கூறினார். நம்பன் - விரும்பத் தக்கவன். நான்மறையை ஓதியது, அனைவரும் தன்னை அடையு மாற்றை அறிதற்கு. 'பொன்னில் நின்று ஒளிர்கின்ற மாற்றுப்போல, உயிரில் நின்று ஒளிர்பவன்' என்பது இரண்டாம் அடியின் பொருள். ஆக்குதல் - பெருக்குதல். அருத்தி - ஆசை. 'கொம்பு' என்றது, சுழுமுனையை. 'ஏறி' என்றதனால், அதன் உச்சியை அடைதல் பெறப்பட்டது. கூட்டம் - கூடுதல், புணர்தல்; இரண்டறக் கலத்தல்.

இதனால், சமாதி கூடுதற்கு இயமம் முதலியவற்றில் நிற்கு மிடத்தும் அன்புடையராதலும், உலகப் பற்றை விடுதலும் வேண்டும் என்பது கூறப்பட்டது.

மூலத்து மேலது முற்சது ரத்தது
காலத் திசையிற் கலக்கின்ற சந்தினில்
மேலைப் பிறையினில் நெற்றிக்குநேர் நின்ற
கோலத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே. ***#613***

மூலாதாரத்திற்குமேல் முதற்கண் காணப்படுகின்ற நாற்கோண வடிவுள்ள இடத்தில் (சுவாதிட்டானத்தில்) நிற்பதாகிய பிராணவாயு அவ்விடத்தில் உள்நுழைகின்ற புழையின் (சுழுமுனை நாடிக்கு) மேலிடத்தில், வானத்தில் உள்ள பிறைபோன்ற புருவநடுவில் நிற்கின்ற பொருளின் வடிவங்கள் பலவாய்த் தோன்றும்.

விளக்கவுரை

இது தியான நிலையாம். 'மேலதாகிய சதுரம்' எனவும், 'சதுரத்ததாகிய கால்' எனவும் கொள்க. பிராணவாயு கும்பகத்தில் சுவாதிட்டானத்தில் நின்று, பின் சுழுமுனை வழிமேற்செல்லும் என்க. அத்திசை - அவ்விடம். 'முச்சதுரத்தது' என்பது பாடம் அன்று. ஆஞ்ஞைத் தியானத்தில் மின்னல், விண்மீன், விளக்கு, பேரொளி முதலிய வடிவில் தியானப் பொருள் பலபடத்தோன்றும். 'அவற்றுள் பேரொளித் தோற்றத்தில் ஒன்றுதல் சமாதி' என்றற்கு இதனை முன்னர்க் கூறினார்.

இதனால், சமாதியைத் தலைப்படுங்கால் இடைநிகழ் காட்சி கூறப்பட்டது.

கற்பனை யற்றுக் கனல்வழி யேசென்று
சிற்பனை எல்லாஞ் சிருட்டித்த பேரொளிப்
பொற்பனை நாடிப் புணர்மதி யோடுற்றுத்

தற்பர மாகத் தகுந்தண் சமாதியே. ***#614***

மூலாதாரம் முதலிய ஆதாரங்களில் செய்யும் பாவனைகளை விடுத்து, அவ்வாதார யோகங்களால் மூண்டெழுந்த கனலைமட்டும் துணையாகப் பற்றி ஆஞ்ஞையிற் சென்று, அங்குச் சிவனது பேரொளித் தோற்றம் ஒன்றையே எதிர்நோக்கி அதனுள் ஒடுங்கும் அவா மிக்கிருந்து, அவ்வொளி தோன்றிய காலத்து அதனையே தனக்கு வியாபகமாகக் கொண்டு அதன்கண் புகுந்து ஒடுங்கி நிற்றலே சமாதியாகும்.

விளக்கவுரை

'சிற்பி' என்பதனை, 'சிற்பன்' என்றார். 'எல்லாம்' என்றது, முன்னை ஆதார மூர்த்திகளையும், ஆஞ்ஞையில் தியானத்தில் தோன்றும் பல வகை வடிவங்களையுமாம். 'சிருட்டித்த சிற்பன்' என மாறுக. எனவே, 'யோகத்தின் தலையாய பொருள் பேரொளி ஒன்றே' என்பது போந்தது. மதி - அறிவு. அஃது இங்கு ஆர்வத்தை உணர்த்திற்று. 'பரம்' என்றது, 'வியாபகம்' என்னும் பொருட்டு. ஆக - ஆகிவிட. தகும் - தக்கிருக்கும். தண்மை, இதுகாறும் உழன்ற உழப்பாகிய வெப்பம் நீங்கிய குளிர்ச்சி. 'தண் சமாதி தக்கிருக்கும்' என்க.

இதனால், சிவ சமாதியைத் தலைப்படும் முறையும், அச்சமாதியது இயல்பும் கூறப்பட்டன.

தலைப்பட் டிருந்திடத் தத்துவங் கூடும்
வலைப்பட் டிருந்திடும் மாதுநல் லாளும்
குலைப்பட் டிருந்திடும் கோபம் அகலும்
துலைப்பட் டிருந்திடந் தூங்கவல் லார்க்கே. ***#615***

துலை நாப்போல உள்ள ஆஞ்ஞையில் அசை வற்றிருக்க வல்லவர்க்கு, மெய்ப்பொருளைத் தலைப்பட்டிருக்குமாறு, அது, தானே கிடைக்கும். ஆணவமாகிய வலையில் தானே சென்று நின்று, அந்நிலை காரணமாகச் சினங்கொண்டவள்போல இருந்த அருட் சத்தியும் சினந்தணிந்து, பிறவிக் கடலுக்குக் கரையாகி நிற்பாள்.

விளக்கவுரை

தத்துவம் - மெய்ப்பொருள். அருட் சத்தியே பாசத்தின் வழி நின்று அதனை நடத்துங்கால் 'திரோதான சத்தி' எனப்படுதலும், அது, 'சின மருவு திரோதாயி' (சிவப்பிரகாசம், 48) எனக் கூறப்படுதலும் காண்க. குலை - கரை. குலைப்பட்டு - கரையின் தன்மை எய்தி. 'கோபம் அகலும்' என்பதை, குலைப்பட்டிருத்தற்கு முன்னே கூட்டிப் பொருள் கொள்க. திரோதான சத்தி, சினந்தணிந்து அருட் சத்தியாய் ஆன்மாவிற் பதிதலே சத்தி நிபாதம் என்பது அறிக. 'இருந்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தல்.

இதனால், சிவயோகத்தின் முடிவு நிலையாகிய சிவ சமாதியால் சத்திநிபாதம் முதிர்தல் கூறப்பட்டது. அது கூறவே, 'தத்துவம் கூடும்' என்றது, ஞானத்தைப் பெறும் பக்குவம் எய்தலைக் குறித்ததாயிற்று.

சோதித் தனிச்சுட ராய்நின்ற தேவனும்
ஆதியும் உள்நின்ற சீவனு மாகுமால்
ஆதிப் பிரமன் பெருங்கடல் வண்ணனும்
ஆதி அடிபணிந் தன்புறு வாரே. **#616**

சிவசமாதி கைவரப் பெற்ற நிலையில் சீவனும், சிவம் சத்திகளாய் நிற்கும். அதனால், அத்தகைய யோகீசுரனைப் பிரம விட்டுணுக்களும் வணங்குவர்.

விளக்கவுரை

'ஆதி' மூன்றும் முறையே சத்தி, முதல், முதல்வன் என்னும் பொருளன. உம்மை நான்கனுள் முன்னவை இரண்டும் எண்ணுப் பொருளிலும், இறுதியது உயர்வு சிறப்புப் பொருளிலும் வந்தன. ஏனையது இழிவு சிறப்பு. உள்நிற்றல் சமாதியில் நிற்றல். 'உள்நின்ற சீவனும்' என்பதை முதலிற் கொள்க. 'சிவமாம்' என்று ஒழியாது, 'சத்தியுமாம்' என்றது, 'சிவன் செய்யும் செயலெல்லாம் இவ்யோகி செய்யவல்லன்' என்பது உணர்த்துதற்கு.

'தாமடங்க இந்தத் தலமடங்கும்'

என்ற திருக்களிற்றுப்படி மேலேயும் (பா. 528) காட்டப்பட்டது. இறுதியில் உள்ள 'ஆதி' என்பதற்கு 'அவ் ஆதி' எனச் சுட்டு வருவிக்க. இதனால், சமாதி எய்தினோரது சிறப்புக் கூறப்பட்டது.

சமாதிசெய் வார்க்குத் தகும்பல யோகம்
சமாதிகள் வேண்டா இறையுட னேகில்
சமாதிதா னில்லை தானவ னாகில்
சமாதியில் எட்டெட்டுச் சித்தியும் எய்துமே. **#617**

சமாதி யோகத்தைத் தலைப்பட்டவர்க்கு 'யோகம்' எனப்படுவன பலவும் வாய்ப்புடையனவாய்ப் பயன் தரும். இனி, இறைவன் அருள்வழியே எச்செயலையும் செய்வார்க்கு இச் சமாதி யோகம் வேண்டுவதில்லை. சீவன் சிவமாய் நிற்கும் நிலையில் சமாதி என்னும் யோக நிலை இல்லை. (நிட்டை என்னும் ஞான நிலையே உளதாம்) சமாதி யோகத்தால் ஞானம் வருதலேயன்றி அறுபத்து நான்கு சித்திகளும் கிடைக்கும்.

விளக்கவுரை

'பல யோகம்' என்றது, மனம் ஒன்றி நின்று செய்யப் படுதல் பற்றி, 'மந்திரயோகம், கன்மயோகம், பத்தியோகம்' என வழங் கப்படுவனவற்றை. இடைநின்ற இரண்டடிகளாலும் ஞானம், யோகத்

தின் வேறாய் மேம்பட்டு நிற்றல் குறித்தவாறு. இறையுடன் ஏகல், அவன் அருள்வழியே செயற்படல். தான் அவனாதல், ஆன்மா இறை வனது எண்குணங்களையும் பெற்று நிற்றல். இவை இரண்டும் யோகத் தில் எய்தாமை அறிக. ஈற்றடியால் யோகத்தின் இடைநிலைப் பயன் கூறப்பட்டது. 'எட்டுச் சித்திகளும் கீழ் உலகம் ஒன்றோடு மேல் உலகம் ஏழினும் அவ்வவ்விடத்திற்கு ஏற்பப் பெறப்படுமாற்றால் அறுபத்து நான்காம்'. இது சிவஞானமாபாடியத்துட் *(சூ.2 அதி.2)* கண்டது. இதனால், யோகத்தின் எல்லை கூறப்பட்டது.

<u>*5.10.*அட்டாங்க யோகப் பேறு</u>

போதுகந் தேறும் புரிசடை யானடி
யாதுகந் தாரம ராபதிக் கேசெல்வர்
ஏதுகந் தானிவன் என்றருள் செய்திடும்
மாதுகந் தாடிடு மால்விடை யோனே. ***#618***

மலர்களை விரும்புதலால், அவை பொருந்தப் பெற்ற புரிந்த சடையினையுடைய சிவபெருமானது திருவடியை எத்துணைச் சிறிதளவு விரும்புவராயினும், அவர் சுவர்க்கத்தையே அடைவர்; நிரையம் புகார், இறைவியை ஒருபால் விரும்பிவைத்து நடனம் புரிகின்ற அப்பெருமான், தன்னை விரும்புபவன் எவனாயினும் அவனுக்கு 'இவன் விரும்பியது யாது' என்று நினைந்து அதனை அருள்செய்பவன் ஆதலின்.

விளக்கவுரை

'ஆகவே, யோகத்தின் முதற்படியில் நின்றோர்க்கு அவன் இம்மையில் அவன் விரும்பிய பயனையும், மறுமையில் சுவர்க்கத்தையும் அருளுவன்' என்பதாம். 'யாது' என்பது, 'சிறிது' என்னும் பொருட்டாய், அல்லவை செய்தலை ஓம்புதலாகிய (புறம். *195)* இயமத்தைக் குறித்தது. 'உகந்தாரும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. பின்னிரண்டடிகளால் சிவபெருமான், 'வேண்டுவார் வேண்டுவதை ஈயும்' *(தி.6 ப.23 பா.1)* கருணையாளனாதலைக் குறித்தவாறு மாதொரு பாகானாதலும், நடனம் ஆடுதலும் அக் கருணையைத் தெளிவிப்பனவாம். விடையூர்தியும் விரைந்து வந்து அருளுதலைக் குறிப்பதேயாம்.

'சுவர்க்கம்' என்பது பவ யோகியர்க்குத் தேவர் உலகமும், சிவயோகியர்க்கு உருத்திரர் உலகமுமாகக் கொள்க. பவயோகியர் சிவபெருமானைப் போற்றினும், பிற தேவரோடு ஒப்ப நினைந்து போற்றுபவரே என்க.

இதனால், இயமத்தின் பயன் கூறப்பட்டது.

பற்றிப் பதத்தன்பு வைத்துப் பரன்புகழ்

கற்றிருந் தாங்கே கருது மவர்கட்கு
முற்றெழுந் தாங்கே முனிவர் எதிர்வரத்
தெற்றுஞ் சிவபதம் சேரலு மாமே. ***#619***

சிவபிரானது திருவடியைத் துணையாகப் பற்றி அன்பு செய்து, அவனது புகழைக் கற்றும், கேட்டும் ஒரு பெற்றியே ஒழுகுவார்கட்கு, பின்னர், முனிவர் குழாம் முழுவதும் சுவர்க்க லோகத்தே முன்வந்து எதிர்கொள்ள ஒளிமயமாகிய அவ்வுலகத்தை அடைதல் கூடும்.

விளக்கவுரை

'பரன்' எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, 'பதத்து' என்றார். பரன்புகழ் கற்றல், பிற நியம ஒழுக்கங்கட்கு உபலக்கணம் 'ஆங்கே' இரண்டில் முன்னது, 'ஒருபெற்றியே' என நியமத்தைக் குறித்தது. பின்னது செய்யுளில் சுட்டு முன் வந்தவாறு. 'முற்றும்' என்னும் உம்மை தொகுத்தல். தெற்றுதல் - விளங்குதல். 'முனிவர்' என்பது சிவயோகியர்க்கு உருத்திர கணங்களையும், 'சிவபதம்' என்பது பவயோகியர்க்கு, 'இன்ப உலகம்' என்னும் பொதுப் பொருட்டாய்த் தேவருலகத்தையும் உணர்த்தி நிற்கும். 'சேர்தலும்' என்னும் உம்மை, சிறப்பு.

இதனால், நியமத்தின் பயன் கூறப்பட்டது. 'உயர்ந்தோராய்ப் போற்றப்படுதல் இங்குக் குறிக்கப்பட்ட சிறப்பு' என்க.

வருந்தித் தவஞ்செய்து வானவர் கோவாய்த்
திருந்தம ராபதிச் செல்வன் இவனெனத்
தருந்தண் முழவங் குழலும் இயம்ப
இருந்தின்பம் எய்துவர் ஈசன் அருளே. ***#620***

மக்கள், மெய் வருத்தத்தைப் பெற்றுத் தவம் செய்தபின் சிவபெருமானது அருளால் விண்ணவர்க்குத் தலைவராய், 'வானுலகச் செல்வத்திற்கு உரிமையுடையவர் இவரே' என்று பலரும் புகழும்படி, மத்தளம், குழல் முதலிய வாச்சியங்கள் ஒலிக்க வீற்றிருந்து, தலைவராம் இன்பத்தை அடைவர்.

விளக்கவுரை

வருந்துதல், இங்கு, மெய் வருந்தல், எனவே, இஃது ஆசனத்தைக் குறித்தது. 'தவம்' என்பது ஏற்புழிக் கோடலால் யோகமாயிற்று. 'செய்தபின்' என்பது 'செய்து' எனத் திரிந்து நின்றது. 'வானவர்' என்பது பவயோகியர்க்குத் தேவர்களையும், சிவயோகியர்க்கு உருத்திரர்களையும் குறிக்கும். எனவே, தேவர்க்குத் தலைவராதல் திசைகாவலர் ஆதலையும், உருத்திரர்களுக்குத் தலைவராதல் உருத்திர புவனங்கட்கு அதிபதிகள் ஆதலையும் குறிப்பனவாம். 'கோ, செல்வன்,

இவன்' என்பன, பன்மை யொருமை மயக்கங்கள். 'அருளால்' என்னும் உருபு தொகுத்தலாயிற்று.
இதனால், ஆசனத்தின் பயன்கூறப்பட்டது.

செம்பொற் சிவகதி சென்றெய்தும் காலத்துக்
கும்பத் தமரர் குழாம்வந் தெதிர்கொள்ள
எம்பொற் றலைவன் இவனா மெனச்சொல்ல
இன்பக் கலவி இருக்கலு மாமே. ***#621***

பிராண வாயுவைக் கும்பகம் செய்ததன் பயனாக மக்கள் செம்பொன் மயமான இன்ப உலகத்தில் சென்று சேரும் பொழுது, விண்ணவர் குழாம் வந்து எதிர்கொள்ள, விண்ணுலக மகளிர் தாம் தாம் 'எமக்கு அரிதிற் கிடைத்த தலைவன் இவனே' என மைய லுற்றுச் சொல்லுமாறு கலவி இன்பம் மிகப்பெற்று இருத்தல் கூடும்.

விளக்கவுரை

'கும்பத்து' என்பதனை முதலிற் கொண்டு உரைக்க. 'கும்பகத்து' என்பது குறைந்து நின்றது. 'சிவகதி, அமரர்' என்ப வற்றிற்கும் மேல் உரைத்தவாறே உரைக்க. பொன்தலைவன், உவமத் தொகை. உவமை, பயன்பற்றி வந்தது. 'இன்பக் கலவி' எனப் பின்னர் வருதலால், சொல்வோர் மகளிராதல் பெறப்பட்டது. மையலுற்றுக் கூறுவோர் ஆடல் மகளிர். அவர் அவ்வாறு கூறினும் சிவயோகியர் இன்புறுவது உரிமை மகளிரோடேயாம். ஐம்புல இன்பங்கள் பலவற்றையும் நிரம்பத் துய்த்தலை விளக்கும் குறிப்பு மொழியாக இன்பக் கலவி எய்துதலை எடுத்தோதினார். உருத்திரலோக இன்பம் சிவனை மறப்பியாது என்க.
இதனால், பிராணாயாமத்தின் பயன் கூறப்பட்டது. மேலது பதவிக்களிப்பும், இது துய்த்தற்பேறுமாகிய வேறுபாடு நுனித்துணர்ந்து கொள்க.

சேருறு காலந் திசைநின்ற தேவர்கள்
ஆரிவன் என்ன அரனாம் இவனென்ன
ஏருறு தேவர்கள் எல்லாம் எதிர்கொள்ளக்
காருறு கண்டனை மெய்கண்ட வாறே. ***#622***

இம்பருள்ளாரை விடுத்து, உம்பருள்ளாரைப் பாவனையால் அடைந்தோர், அதன் பயனாக அவரை உண்மை யாகவே அடையுங் காலத்து, அவ்விடத்துள்ளார், 'மக்களுள் இவ்வுயர் நிலையை அடைந்தோன் யாவன்' என்று வியப்புற்று வினாவ, (ஒரு சாரார் ஓர்ந்துணராது வடிவம் ஒன்றே பற்றி) 'இவன் சிவபெருமான் தான்' என்று மயங்கிக் கூற, இவ்வாறு அமரர் பலரும் ஒருங்குவந்து எதிர்கொள்ளத் திருநீலகண்டப் பெருமானைக் கண்ட முறைமையே எங்கும் நிகழ்வதாகும்.

விளக்கவுரை

உம்பரைப் பாவனையால் அடைதலே பிரத்தியாகா ரமாம். சேர்தல் உண்மை வகையைக் குறித்தலால், அதற்கு வாயில் முன்னர்ச்செய்த பாவனையாதல் பெறப்பட்டது. சேர்தற்குச் செயப்படு பொருள் திசை என்ற குறிப்பாற் பெறப்பட்டது. திசை - இடம். மெய் - வடிவம். 'கண்டனை மெய்யைக் கண்டவாறு' என, முதல், சினை இரண்டன்பாலும் ஐயுருபு வந்தது. 'நிகழ்வது' என்பது சொல்லெச்சம். 'காருறு கண்டனை மெய்கண்டவாறே' என்றதனால், சீகண்ட உருத்திர வடிவம் பெறுதல் கூறப்பட்டது. இவர் பவயோகியராயின், ஈசான னாகிய திசைக்காவலனது சுற்றமாய் நிற்பர் என்க.
இதனால், பிரத்தியாகாரத்தின் பயன் கூறப்பட்டது.

நல்வழி நாடி நமன்வழி மாற்றிடுஞ்
சொல்வழி யாளர் சுருங்காப் பெருங்கொடை
இல்வழி யாளர் இமையவர் எண்டிசைப்
பல்வழி எய்தினும் பார்வழி யாகுமே. ***#623***

மக்கள் நல்வழி ஒழுகுமாற்றை ஆராய்ந்து, அவரைத் தீவழியினின்றும் நீக்குகின்ற நிறைமொழி யுடையராகிய முனிவர், பின் விண்ணுலகில் எவ்விடத்துச் செல்லினும், அவ்விடம் மண்ணுலகில் மிக்க கொடையுடைய இல்லறத்தவர் வாழ்கின்ற இடம்போலவே எதிர்கொண்டு பேணும் இடமாம்.

விளக்கவுரை

சொல்வழியாளர் - சொல்லால் வழிப்படுத்தும் ஆற்றல் உடையவர். எனவே, 'அவரது சொல், அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயனைத் தப்பாது தருவது, என்பது பெறப்பட்டது. இதனையே 'நிறைமொழி' எனத் தொல்காப்பியரும், *(*தொல். செய்யுளியல், *171)* திருவள்ளுவரும் *(*குறள், *28)* ஒருபடித்தாகக் கூறினர். இங்ஙனம் கூறவே, 'அறமுதற் பொருள்களை உலகிற்கு உள்ளவாறுணர்த்துவார் இவரே' என்பது போந்தது. இவர் இவ்வாறு நிறைமொழி யுடையராதல் தாரணை யோகத்தில் நிற்றலால்; அஃதாவது, மனத்தைப் பிறழவிடாது குறித்த பொருளிடத்தே நிறுத்தி நிற்றலாலாம். இவரே ஐம்புல ஆசையை முழுதும் வென்றவராவர்.

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயம்இன்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -குறள், *354*

என்னும் குறளின் உரையில் பரிமேலழகரும், 'ஐயுணர்வு எய்து தலாவது, மனம் மடங்கி ஒருதலைப்பட்டுத் தாரணைக்கண் நிற்றல்' என்று உரைத்தார். எனவே, 'உரன் என்னுந் தோட்டியான் ஓரைந்துங் காத்தல்'

(குறள், 24) என்பதும் தாரணையே யாயிற்று. இந்நிலையைப் பெற்றோர் நிறைமொழியாளராதலை,

ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி. -குறள், 25

என்பதனாலும் அறிக. இவையெல்லாம் பிரத்தியாகார நிலைக்கு ஏலாமையும், தியான சமாதிகளில் சிறுபான்மையன்றிப் பெரும் பான்மை நிகழாமையும் அறிந்துகொள்க. இமையவரது பல்வழி என இயையும். 'பாரில் இல்வழியாளர் வழியாகும்' என மாறிக் கூட்டுக. ஆக்கம் உவமை குறித்து நின்றது. இத்தொடர் தாம் எய்திநின்ற உலகத்தேயன்றி அதற்குக் கீழுள்ள உலகங்களினும் வியாபகம் உடையராதலை உணர்த்திற்று.

இதனால், தாரணையின் பயன் கூறப்பட்டது.

தூங்கவல் லார்க்கும் துணையேழ் புவனமும்
வாங்கவல் லார்க்கும் வலிசெய்து நின்றிடந்
தேங்கவல் லார்க்கும் திளைக்கும் அமுதம்முன்
தாங்கவல் லார்க்குந்தன் தன்இட மாமே. ***#624***

சமாதி, பிரத்தியாகாரம், தாரணை, தியானம் இவற்றில் நிற்பாற்கு அவரவரது தியானப் பொருளின் இடமே அடையுமிடமாகும்.

விளக்கவுரை

எனவே, தியானத்திற்குப் பயன் தியானிக்கப்பட்ட கடவுளது உலகத்தில் இருந்து இன்பம் நுகர்தல் ஒன்றேயாயிற்று. செய்யுள் நோக்கிச் சமாதி முதற்கண் கூறப்பட்டது. 'புவனத்தினின்றும் மனத்தை வாங்க வல்லார்' என உருபு விரித்துச் செயப்படுபொருள் வருவிக்க. இது பிரத்தியாகாரமாதல் அறிக. 'நின்ற' என்பதன் அகரம் தொகுத்தலாயிற்று. 'நின்ற இடத்தில் தேங்குதலே தாரணை' என்பதும், அமுதத்தை உண்டு தேக்குவார் தியான யோகிகள் என்பதும் வெளிப்படை. தான், தியானிக்கப்படும் கடவுள். 'தன்தன்' என்பது அடுக்கு. தியானத்தின் பயனே கூறக்கருதினாராயினும், சிவயோகம், பிறயோகம் என யோகம் இருவகையாய் நிகழும் என்பதனை ஈண்டு உணர்த்துதற்குப் பிறவற்றின் பயனையும் உடன் கூறினார். பிரத்தி யாகாரத்திற்குக் கீழ்உள்ளவற்றில் சிறப்புப்பயன் இன்மை அறிக. இத்திருமந்திரத்திற்கு, 'திருப்பாற் கடலில் தூங்க வல்லார்' என ஒரு சொல் வருவித்தும், 'வாங்குதல்' என்பதற்குப் 'படைத்தல்' எனவும் 'தேங்குதல்' என்பதற்கு, தான் அழியாது நின்று பிறவற்றை அழித்தல், எனவும் பொருள் கூறியும் இடர்ப்பட்டுத் தாம் தாம் வேண்டியவாறே உரைத்தனர்.

இதனால், தியானத்தின் பயன் கூறப்பட்டது.

காரிய மான உபாதியைத் தான்கடந்

தாரிய காரணம் ஏழுந்தன் பாலுற
வாரிய காரணம் மாயத் தவத்திடைத்
தாரியல் தற்பரஞ் சேர்தல் சமாதியே. *#625*
தாத்துவிகங்களாகிய தனு, கரணம் புவனம், போகம் என்னும் அனைத்துப் பந்தங்களையும் கடந்தபின், அவற்றிற்கு நிரம்பிய காரணமாகிய தத்துவங்கள் ஏழனது இயல்பும் தன் அறிவிடத்தே இனிது விளங்கித் தோன்றவும், இடையறாது கிளைத்து வருகின்ற வினையாகிய காரணம் கெட்டொழியவும் அடைவுபடப் பயின்ற யோகத்தால் மறுமையில் தனது கடவுளோடு ஒப்ப இருத்தல், சமாதியாலே பெறத்தக்கதாம்.

விளக்கவுரை

'உபாதி' எனினும், 'செயற்கை' எனினும் ஒக்கும். அது தாத்துவிகத்தின் மேல் ஆதற்கு, 'காரியமான உபாதி' என அடை கொடுத்து ஓதினார். 'கடந்தபின்' என்பது 'கடந்து' எனத் திரிந்து நின்றது. 'ஆரிய' என்பது, 'ஆர்' என்பது அடியாகப் பிறந்த பெய ரெச்சம். ஆர்தல் - நிரம்புதல்; காரியத்தின் தோற்றத்திற்கு ஏற்புடைத் தாதல். தாத்துவிகங்கட்குக் காரணம் தத்துவமாதல் வெளிப்படை. ஏழென்னும் தொகையானே, இவை வித்தியா தத்துவமாதல் விளங்கும். இவற்றோடே அசுத்தம் நீங்குதல் பற்றி, இவற்றின் மேல் உள்ளவற்றைக் கூறிற்றிலர். 'வாரிய' என்பது, 'வாரி' என்பது அடியாகத் தோன்றிய பெயரெச்சம். வாரி - வருவாய். இது முடிவின்றி வருதலை உணர்த்திற்று. முடிவின்றிக் கிளைத்து வரும் காரணப் பொருள் வினையேயாதல் அறிக. 'தாரியல் தவம்' என மாற்றுக. தார் - ஒழுங்கு. 'தற்பரம்' என்பதில் தன் என்பது ஈறு திரிபெய்தி முடிந்தது. 'சமாதி' என்றது, அதன் பயனை. உபாதியைக் கடத்தல் முதலிய மூன்றும் யோகத்தின் குறிக்கோள் என்பதை முன்னர் உணர்த்தி, மறுமையில் தான் தியானித்த பொருளோடு ஒப்ப நிற்றல் யோகத்தின் முடிந்தபயன் என்பதனை இறுதியிற் கூறினார். சித்தாந்த நெறி உணராதார், 'உபாதி' என்பதே பற்றி இத்திருமந்திரத்திற்குச் சொற்களை வேண்டியவாறே நலிந்துரைத்து, மாயாவாதப்பொருள் கூறுவர்.
இதனால், சமாதியின் பயன் கூறப்பட்டது.

5.11.அட்டமா சித்தி

பணிந்தெண் திசையும் பரமனை நாடித்
துணிந்தெண் திசையும் தொழுதெம் பிரானை
அணிந்தெண் திசையினும் அட்டமா சித்தி
தணிந்தெண் திசைசென்று தாபித்த வாறே. ***#626***

யாவரும் அட்டமா சித்திகளைப் பெற்று, அவற்றை எட்டுத் திக்கிலும் சென்று விளங்கக் காட்டிப் பெருமை பெற்றது, சிவபெருமானைப் பல்லாற்றானும் வழிபட்டேயாம்.

விளக்கவுரை

பணிதல், நிலத்தில் வீழ்ந்து வணங்குதல், தொழுதல், கும்பிடுதல், அணிதல், ஒப்பனை செய்து மகிழ்தல், தணிதல், அடங் குதல். துணிதல் - நம்புதல். 'எண்திசை சென்று அட்டமா சித்தி தாபித் தவாறு, பரமனை நாடித் துணிந்து எண்திசையிலும் சென்று பணிந்து, தொழுது, அணிந்து, தணிந்து' எனக் கூட்டுக. 'சிவபெருமானை எவ்வகையிலேனும் நினையாமல் சித்தி பெறுதல் கூடாது' என்பதாம்.
இதனால், அட்டமா சித்திப் பேற்றிற்கு ஆவது கூறப்பட்டது.

பரிசறி வானவர் பண்பன் அடியெனத்
துரிசற நாடியே தூவெளி கண்டேன்
அரிய தெனக்கில்லை அட்டமா சித்தி
பெரிதருள் செய்து பிறப்பறுத் தானே. ***#627***

'யான் பெறும் பரிசாவது சிவபெருமானது திரு வடிப் பேறு ஒன்றே' எனக் குற்றமற உணர்ந்து அவனை யான் அகத்தே தியானித்தேன். ஆகவே, எனக்குப் பெறற்கரிதாய பேறு யாதும் இல்லை; (எல்லாப்பேறும் எளியனவே) அதனால், பிறர் அரியனவாக உணர்கின்ற அட்டமாசித்திகளை அவன் எனக்கு நிரம்பக் கொடுத்துப் பெரும்பயனாகிய பிறவி நீக்கத்தையும் அளித்தருளினான்.

விளக்கவுரை

அறிவானவர்; உருத்திர சிவகணத்தார். பண்பன் - அவருக்கு நல்லன். தூவெளி - சிறந்த ஒளி. இஃது ஆஞ்ஞையில் தியானிக்கப்படுவது.
இதனால், சிவயோகியர்க்கு அட்டமாசித்தி தாமே கிடைத்தல் கூறப்பட்டது.

குரவன் அருளிற் குறிவழி மூலன்
பரையின் மணமிகு சங்கட்டம் பார்த்துத்
தெரிதரு சாம்பவி கேசரி சேரப்
பெரிய சிவகதி பேறெட்டாஞ் சித்தியே. ***#628***

யோக குருவின் அருளால் அவன் குறித்த முறைப் படியே மூலாதாரத்தை

நோக்கி ஓடப் பார்க்கும் வாயு, அவ்வாறு ஓடாது சத்தித் தானமாகிய இலாடத்திற் சென்று சேரும் அரிய நேரத்தைப் பார்த்து, அவ்வாறு சேரும் வாயுவே துணையாகச் சாம்பவி யோகம் கேசரி யோகங்களைச் செய்வார்க்குப் பெரிய சிவகதி போலக் கிடைப்பது, எட்டாம் சித்தியாகிய வசித்துவமாம்.

விளக்கவுரை

'குறிவழிசேர' என இயையும். மூலத்தின் வழிச் செல்லுங்காற்றை, 'மூலன்' என்றும், 'நாதம், விந்து' என்பவற்றில் விந்து, சத்தி பேதமாகக் கூறப்படுதலின், விந்துத் தானத்தை 'பரை' என்றும் கூறினார். மணம் - கூடுதல்; சேர்தல். 'சங்கடம்' என்பது விரித்தலாயிற்று. சங்கடம் - சிறிதிடம். மந்திரத்தை உபாஞ்சுவாகக் கணித்தல் சாம்பவி யோகம். இதில் கண்கள் சிறிது திறந்திருக்கும். மந்திரத்தை மானதமாகக் கணித்தல் கேசரி யோகம். இதில் கண்கள் மூடியிருக்கும். இவையே இவை பற்றிக் கூறும் வாக்கியங்கட்குக் கருத்தாதல் அறிந்துகொள்க. சாம்பவி - அம்பாளோடு (சத்தியோடு) கூடியது. 'சாம்பவி தீக்கை, சாம்பவி முத்திரை' என்னும் இடங்களிலும் சாம்பவி, இப்பொருட்டாதல் அறிக. சத்தி, உலகிற்கும், சிவத்திற்கும் இடைநிற்கும் நிலை. 'எட்டாவது சித்தி இவ் யோகங்களாற் கிடைக்கும்' எனவே, இவை ஒழிந்த ஏனை யோகங்களால் சில சித்திகளே கிடைக்கும் என்பது பெறப்பட்டது. இதனால், சித்திகளை முற்றப் பெறுமாறு கூறப்பட்டது.

காயாதி பூதங் கலைகால மாயையில்
ஆயா தகல அறிவொன் றனாதியே
ஓயாப் பதியதன் உண்மையைக் கூடினால்
வீயாப் பரகாயம் மேவலு மாமே. ***#629***

ஆகாயம் முதலிய பூதங்களையும், கலை காலம் முதலிய உள்ளந்தக் கரணங்களையும் பற்றி நின்று ஒரு பொருளைச் சுட்டி யறியாமல் வியாபகமாக அறியும் அறிவால், ஒன்றாய், அனாதியே தனக்கு அறிவைத் தருதலை ஒழியாத பதிப்பொருளின் உண்மையை அடைய விரும்பினால், என்றும் அழியாத பரவெளியிற் சேரலாம்.

விளக்கவுரை

என்றது, 'சித்திகளை விரும்பாது மெய்ஞ்ஞானத்தை விரும்பி யோகம் செய்தலே சிறந்தது' என்றவாறு. சிவத்தை விரும்புதல் வியாபக அறிவாதலும், பிறவற்றை விரும்புதல் ஏகதேச அறிவாதலும் உணர்க. 'அகலம்' என்னும் பண்புப்பெயர் ஈறுகெட்டு, 'அறிவு' என்பதனோடு புணர்ந்தது. அகலம் - விரிவு. 'அறிவு உண்மையைக் கூடினால்' என்க. உண்மை - தன்னியல்பு. பர காயம் -மேலான வெளி. 'பராகாயம்' எனவும்

பாடம் ஓதுவர்.
இதனால், சித்தி காம யோகத்தினும், முத்தி காம யோகமே சிறப்புடைத்தாதல் கூறப்பட்டது. எனவே, 'பரகாயப் பிரவேசம்' என்பது சித்தி காமத்திற்கு, 'பிறிதோர் உடம்பிற் புகுதல்' எனவும், முத்திகாமத்திற்கு, 'சிதாகாசத்திற் புகுதல்' எனவும் பொருள் தந்து நிற்றல் குறிக்கப்பட்டவாறு அறிக.

இருபதி னாயிரத் தேழ்நூறு பேதம்
மருவிய கன்மமாம் மாபந்த யோகந்
தருமிவை காய உழைப்பாகும் தானே
அருமிகு நான்காய் அடங்குமா சித்திக்கே. ***#630***

கன்மத்தையே பொருந்தச் செய்கின்ற சித்தி காம யோகம், இருபதினாயிரத்து எழுநூறாய் விளங்கும். சித்திகளையே தருகின்ற இவை அனைத்தும் உடல் உழைப்பாவனவன்றி, உணர்வுப் பெருக்கமாதல் இல்லை. இவை இத்துணையாக விரிவன வாயினும், சித்திகளின் தொகை நோக்கி எட்டாய் அடங்கும்.

விளக்கவுரை

எனவே, அவ்வெட்டும் அவ்வச் சித்தியோகம் எனப்படும் என்க. சித்தி யோகம் இத்துணைத் தாய் விரியுமாறு பின்னர், 'முந்திய முந்நூற்றறுபது' எனவரும் திருமந்திரத்தால் அறியப்படும். அதனானே 'எண்ணூறு' என்பது பாடம் ஆகாமையும் விளங்கும். 'ஆரும்' என்பது குறுகி நின்றது. ஆர்தல், நிரம்புதல். 'சித்திக்கு' என்றது, 'சித்திக்குத் தக' என்றவாறு. இதனால், சித்தி யோகத்தின் அல்லற்பாடும், அதன் இழிபும் கூறப்பட்டன.

மதிதனில் ஈராறாய் மன்னுங் கலையின்
உதய மதுநா லொழியஓ ரெட்டுப்
பதியும்ஈ ராறாண்டு பற்றறப் பார்க்கில்
திதமான ஈராறு சித்திக ளாமே. ***#631***

பன்னிரு கலையுடைய சில அதிசய நிலவுகள் முற்றும் மறைந்து பின் தோன்றும்பொழுது அக்கலைகளில் நான்கு ஒழிந்தேபோக, எட்டே நிலைபெறுகின்றன. அவ்வொழிவு நீங்கி அனைத்துக் கலைகளும் நிலைபெறும் செயலைப் பன்னிரண் டாண்டுகள் அயராது செய்தால், அவ்வாண்டெல்லைக்குள் சித்திகள் கைகூடும்.

விளக்கவுரை

பிராண வாயுவின் அளவான பன்னிரண்டங்குலத்தைக் கலையாக உருவகித்தற்கு, அவ்வாயுவைத் திங்களாக உருவகம் செய்தார். இவ்விரண்டு உருவகங்களும், தேய்தல், வளர்தலுக்கு

ஏற்புடையவாயின. 'உதயமதில்' எனவும், திதமான ஈராறில் எனவும் உருபு விரிக்க. 'பற்று' என்பது, 'செலவு' என்றவாறு. திதம் - நிலைபேறு. 'அவ்வீராறில்' எனச் சுட்டு வருவிக்க. கன்ம யோகங்கள் யாவும் காய உழைப்பேயாதலின், 'பிராணாயாமத்தால் காயம் செம்மையுற்றிருந்தாலன்றி, அவற்றின் பயனாகிய சித்திகள் எய்தா' என்க. 'பிராண வாயு இயங்குங்கால் பன்னிரண்டங்குலமாக வெளிச் சென்று எட்டங்குலமாக உட்புகும்' என்பதும், அவ்வாறின்றி உட்புகும் பொழுதும் பன்னிரண்டங்குலமாகச் செய்யின் உடல் தளர்ச்சியுறாது என்பதும் முன்னே கூறப்பட்டன.

இதனால், சித்திகள் எய்துதற்கு யோக கால அளவு கூறப்பட்டது.

நாடும் பிணியாகும் நம்சனம் சூழ்ந்தக்கால்
நீடும் கலைகல்வி நீள்மேதை கூர்ஞானம்
பீடொன்றி னால்வாயா சித்திகள்பே தத்தின்
நீடுந் தூரங்கேட்டல் நீள்முடி வீராறே. ***#632***

சுற்றத் தொடர்பு யோகத்திற்குத் தடையாகும். யோகமின்றி, நூலறிவு, உலகியலறிவு, இயற்கை நுண்ணறிவு முதலியவற்றுள் ஒன்றினாலும் சித்திகள் கிடைக்கமாட்டா. அவை வேறு வேறாகக் கிடைத்தற்குச் செல்லும் தீர்ந்த யோக கால எல்லையாக நூல்களில் கேட்கப்படுவது, மேற்குறித்த பன்னிரண்டாண்டுகளாம்.

விளக்கவுரை

ஆகவே, 'சித்திகளைப் பெறவேண்டுவார் சுற்றத் தொடர்பு, நூலாராய்ச்சி முதலியவற்றிற் காலம் கழியாது, பன்னிரண் டாண்டு யோகத்தில் நிற்க' என்பதாம். கேட்டல், கேட்கப்படும் கால அளவு; ஆகுபெயர்.

இதனால், மேலது நன்கு வலியுறுத்தப்பட்டது.

ஏழா னதிற்சண்ட வாயுவின் வேகியாம்
தாழா நடைபல யோசனை சார்ந்திடும்
சூழான ஓரெட்டில் தோன்றா நரைதிரை
தாழான ஒன்பதிற் றான்பர காயமே. ***#633***

யோகத்தைக் குறைவின்றிப் பயின்றால், ஏழாவ தாண்டில், பிறர் உடன் தொடர இயலாதவாறு காற்றைப் போலக் கடிதிற் செல்லும் நடை உளதாகும். அந்நடையது வேகம் எத்துணைக் காவதம் நடந்தாலும் குறையாது. எட்டாவது ஆண்டில், நரை திரை இருப்பினும் மறைந்து இளமைத் தோற்றம் காணப்படும். ஒன்பதாவது ஆண்டில் உடம்பு தேவ சரீரம்போல ஒளிவிடும்.

விளக்கவுரை

'தோன்றா' என்பது, 'மறையும்' என்னும் பொருட்டு. திரை, தோல் சுருங்கி

மடிந்து தொங்குதல். 'தான்' என்றது, தன் உடம்பைக் குறித்த ஆகுபெயர். 'பரம்' என்பது 'தெய்வம்' என்னும் அளவாய் நின்றது.
இதனால், குறைவிலா யோகத்தின் அடையாளங்கள் சில கூறப்பட்டன.

ஈரைந்திற் பூரித்துத் தியான உருத்திரன்
ஏரொன்றும் பன்னொன்றில் ஈறாகும் எண்சித்தி
சீரொன்று மேலேழு கீழேழ் புவிச்சென்றவ்
வோரொன்றில் வியாபியாய் நிற்றல்ஈ ராறே. *#634*

யோகத்தில் பத்தாவதாண்டில் முன்பு இளைத்த உடம்பு பருத்துக் காணப்படும். பதினொன்றாவது ஆண்டில் நெருப்புப்போன்ற உருவினை உடைய உருத்திரனைப் போன்ற செம்மேனியும், எல்லாவற்றையும் வெல்லும் ஆற்றலும் உளவாகும். மேல், 'எட்டாவது சித்தி' எனக்குறித்த அது, மேல் ஏழ் உலகம், கீழ் ஏழ் உலகம் இவைகளிற் சென்று அங்குள்ளாரையும் தன்வசப்படுத்தி நிற்றலாம். அது பன்னிரண்டாவது ஆண்டில் எய்தும்.

விளக்கவுரை

பூரித்தலுக்கு 'உடம்பு' என்னும் வினைமுதல் வரு வித்துக்கொள்க. 'பூரித்து' என்னும் எச்சம் எண்ணின் கண் வந்தது. 'தீயான' என்பது குறுகிநின்றது. 'திருத்தார் நன்றென்றேன் தியேன்' (யாப்பருங்கலக் காரிகை, 24, உதாரணம்) என்றாற்போல. 'ஈராறில் எண் சித்தியாம்' என மாற்றிக்கொள்க. சீர் - தட்டு நிலை. 'வியாபி' என்றது, தான் பணியப்படுதலை. மேல் (பா.627) 'எட்டாஞ் சித்தி' எனப்பொதுப்படக் கூறியதனை, இதன் பிற்பகுதியால் விளங்கக் கூறினார். 'ஓரொன்றிலும்' என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று. 'அஃது ஈராறில் ஆம்' என முடிக்க.
இதனால், எஞ்சிய அடையாளங்களுடன், முடிந்தது முடித்துக் காட்டப்பட்டது.

தானே அணுவும் சகத்துத்தன் நோன்மையும்
மானாக் கனமும் பரகாயத் தேகலும்
தானாவ தும்பர காயஞ்சேர் தன்மையும்
ஆனாத வுண்மையும் வியாபியு மாம்எட்டே. *#635*

எட்டுச் சித்திகளாவன, யோகி ஒருவனே தான் வேண்டியவாறு எட்டுத் தன்மையனாக நிற்றல். அவை அணுவி னுள்ளும் அணுவாய் நுழைதல், அண்டத்தினும் பெரியோனாய் அவற்றைக் கடந்து நிற்றல், காற்றினும் நொய்ம்மையனாய் வானத்தில் உலாவுதல், எத்துணை ஆடவர் கூடி எடுப்பினும் எடுக்கமாட்டாத வராம்படி மலை போலத் திண்மை யுடையனாயிருத்தல், நினைத்த இடத்தில் நினைத்த மாத்திரத்தில் செல்லுதல், நினைத்ததை அடைதல், எல்லோராலும் ஏற்றுப்

போற்றப்படுதல், யாவரையும் தன்வழிப் படுத்தி நிற்றல் என்பனவாம்.

விளக்கவுரை

இவை முறையே, 'அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்' என்னும் காரணப்பெயர் உடையன என்க.

இம்முறைக்கு ஏற்ப இத்திருமந்திரத்தில் 'பரகாயம் சேர் தன்மை' என்பதை 'மானாக் கனமும்' என்பதற்கு முன்னும், 'வியா பியும்' என்பதை 'ஆனாத உண்மையும்' என்பதற்கு முன்னும் கூட்டி உரைக்க. 'சகத்து' என்றது நில அண்டத்தை. நோன்மை - வலிமை; ஆற்றல். அஃதாவது எல்லாப் பொருளையும் உள்ளடக்கி நிற்றல். இங்கு அஃது அதுபோன்ற ஆற்றலைக் குறித்தது. மானா - ஒரு பொருளும் ஒப்பாகமாட்டாத. பரகாயத்து ஏகல் - பிற உயிரின் உடம்பிற் புகுதல். இஃது எவ்விடத்தும் எளிதிற் செல்லுமாற்றிற்குச் சிறந்து நின்ற உபலக்கணம். ஆவது - பொருட் பேற்றால் உயர்தல். பர காயம் - மேலான ஆகாயம்; என்றது பூதாகாசத்தையேயாம். 'தன்மையும்' என்பதனை, 'நொய்ம்மையும்' என ஓதுதல் சிறக்கும். ஆனாத உண்மை - பிறர் தன்னை விட்டு நீங்காத நிலை. 'வியாபி' என்றதை மேலை மந்திரத்திற்போலவே கொள்க.

இச்சித்திகளை ஞானியர் விரும்புதல் இல்லை; எனினும் அவர்களிடத்து இவை தாமே அடையும். அடையினும், இவற்றை அவர் பயன்படுத்துதல் இல்லை. இனி, ஞானசம்பந்தர் முதலியோரிடத்து நிகழ்ந்த அற்புதங்கள் இறைவனே நிகழ்த்தினவல்லது, இச்சித்திகளின்பால அல்ல என்பது உணர்க.

வீரவாகு தேவரிடத்தும், அநுமனிடத்தும் அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, சித்திகள் விளங்கினமை அவரவர் வரலாற்றுட் கேட்கப்படுகின்றன. 'மவுற்கல்லியர்' என்னும் முனிவர், வேண்டிய வடிவங்கொண்டார் என்பதும் 'பிராத்தி'. வசிட்டர் முதலியோர் தாம் இருந்த இடத்தில் காமதேனு முதலியவற்றை வருவித்துப் பயன் கொண்டனர் என்பதும் 'பிராகாமியம்' என்னும் சித்தியாம். முனிவர் பலரும் பலராலும் புறக்கணியாது பணியப்பட்டமை 'ஈசத்துவம்' என்னும் சித்தியாம். நெருப்புச் சுடாதவாறு நின்று அதன்மேல் இருத்தல், நீர் ஆழ்த்தாதவாறு நின்று அதன்மேல் நடத்தல், கொடிய விலங்குகளையும் ஏவல் கேட்டு நடக்கச்செய்தல், மழையைப் பெய்வித்தல், நிறுத்தல் முதலியன 'வசித்துவம்' என்னும் சித்தியாம். மற்றும் இவற்றின் இயல்புகளை ஓர்ந்துணர்ந்துகொள்க.

'கரி' என்பது யானை; அது திண்மையைக் குறித்து நின்றது. ஆயினும், அதற்கு, 'சாட்சி' எனப்பொருள்கொண்டு, 'விடயங்களை நுகர்ந்தும் அவற்றில் தொடக்குண்ணாமை கரிமா' என்கின்றார், சிவஞான போதப்

பாடியம் உடையார். அஃது ஒருசார் நூல்களில் - அல்லது ஆகமங்களில் காணப்படும் சிறுபான்மை வழக்காதலன்றிப் பெரும் பான்மை வழக்காகத் தெரியவில்லை. மேலும், அணிமாவிற்கு மறுதலைப்பட மகிமா இருத்தல் போல, இலகிமாவிற்கு மறுதலைப் பட்ட தொன்று இருத்தலும் வேண்டடப்படுவதே. அன்றியும், விடயத்தில் தொடக்குண்ணாதிருத்தல் முத்திப் பகுதியாவதன்றிச் சித்திப் பகுதியும் ஆகுமோ என்பது ஆராயத்தக்கது. இனிச் சித்திகளை 'உடம்பால் பெறுவனவும், மனம் முதலியவற்றாற் பெறுவனவும்' என இருவகையவாகப் பகுத்துணர்த்துகின்ற அவர், 'இருவகையவும் தனித்தனி நந்நான்காய் உள்ளன' என்னாது, 'உடம்பாற் பெறுவன அணிமா, மகிமா, இலகிமா' என்னும் மூன்றே என்கின்றார். இவற்றுடன் கரிமாவையும் உடம்பாற் பெறுவனவாகக் கொள்ளின் சாலப் பொருந்தும். 'கனமும்' என்பதை, 'ககனமும்' என ஓதுவாரும் உளர்; அஃது யாப்பிற்கு ஒவ்வாமை அறிக.

இதனால், 'எட்டுச் சித்திகளாவன இவை' என்பது கூறப்பட்டது.

தாங்கிய தன்மையுந் தானணுப் பல்லுயிர்
வாங்கிய காலத்தும் மற்றோர் குறையில்லை
ஆங்கே எழுந்தோன் அவற்றுள் எழுந்துமிக்
கோங்கி வரமுத்தி முந்திய வாறே. ***#636***

யோகி, அணிமாவால் தான் நினைத்த உயிருட் புகுந்தவிடத்தும் மகிமாவால் அவற்றைக் கடந்து நிற்கும் தன்மை குறைபடுதல் இல்லை. எவ்வாறெனில், மகிமா நிலையில் நின்ற அவனே அணிமாவால் அவ்வுயிர்களுள் செறிந்துவர, அவற்றைக் கடந்து நிற்கும் நிலை திரிபின்றி நிற்கும் ஆகலான்.

விளக்கவுரை

'தான் அணுவாய்ப் பல உயிர்களால் ஏற்கப்பட்ட காலத்தும் தாங்கிய தன்மை ஒர் குறையில்லையாய் நிற்கும்' என்க. 'தன்மையும்' என்னும் உம்மை இறந்தது தழுவிய எச்சம். எழுதல் - கடத்தல். 'எழுந்தோம்' என்பது பாடமாயின், யோகியின் தன்மையைத் தம்மேல் வைத்து ஓதியதாக உரைக்க. அவற்றுள் - முற்கூறிய பல்லுயிர்களுள், 'ஆகலான்' என்பது சொல்லெச்சம்.

இதனால், அணிமாவின் இயல்பறியாது ஐயுறும் மாணாக்கர்க்கு அவ்வையம் அகற்றப்பட்டது.

முந்திய முந்நூற் றறுபது காலமும்
வந்தது நாழிகை வான்முத லாயிடச்
சிந்தைசெய் மண்முதல் தேர்ந்தறி வாய்வலம்
உந்தியுள் நின்று வுதித்தெழு மாறே. ***#637***

'ஓர் ஆண்டு முந்நூற்றறுபது கூறுகளைக் கொண்டது' எனத் தொன்றுதொட்டுக் கொள்ளப்பட்டு வருகின்ற அக் காலக் கூறு - அஃதாவது, 'ஒருநாள் என்பது, நாழிகைகளின் தொகுதியால் அமைந்தது. அந்த நாழிகைகளை ஐந்து கூறாகப் பகுத்து அப்பகுதி ஐந்தையும் ஐம்பூதங்கட்கும் உரிய பகுதிகளாகப் பாவனை செய்துகொள். பின்பு நிலம் முதலிய பூதங்களின் ஆற்றல் சுவாதிட்டானம் முதலாகத் தோன்றி நிலைபெறுவனவாகக் கொண்டு யோகம் செய்.

விளக்கவுரை

'நாள்' என்னாது, 'காலம்' என்றார். 'யாவும் காலத்தின் வழிப்பட்டு நடப்பன' என்றற்கு. 'ஓர் ஆண்டிற்கு இத்துணை நாள்' என்பதில் வேறுபாடுகள் பல உள. அவற்றுள் இங்குக் குறிக்கப்படுவது, 'முந்நூற்றறுபது நாள்களைக் கொண்டது' என்பார், அதனை எடுத்தோதினார். இது கதிர்யாண்டு (சௌரமான வருடம்) இதற்கு முந்நூற்றறுபத்தைந்து நாள் சொல்லப்படுமாயினும், ஐந்து நாள்களை நாயனார் கொண்டிலர். இவ் யாண்டு ஒன்றே மக்கட்கு ஒரு வயது. இதன்படி மக்கள் வாழ்நாள் காலம் நூறு வயது. இனிக் கிரக தசா வருடங்கள். 'முந்நூறு நாள்கள் கொண்டது ஒரு வருடம்' என்னும் கணக்கில் அமைந்தவை. அதன்படி, 'மக்கள் தாய் வயிற்றில் ஓர் ஆண்டுக் காலம் இருக்கின்றனர்' என்பதும், 'பிறந்தபின் நூற்றிருப தாண்டு வாழ்வர்' என்பதும், 'அந்நூற்றிருபதாண்டுகளும் ஒன்பது கோள்களுக்கு ஏற்ற பெற்றியால் அமைந்து நிற்கும்' என்பதும் சோதிட நூற்கொள்கைகள். எனினும், இஞ்ஞான்று கிரகதசா வருடங்களும், முதற்கண் கூறிய கதிர்யாண்டின்படியே கொள்ளப்படுகின்றன. 'அறுபது நாழிகை கொண்டது ஒரு நாள்' என்பதில் பரத கண்டத்தில் வேறுபாடின்மையால், அதனை விதந்தோதாது வாளா, 'வந்தது, நாழிகை' என்றார். 'நாழிகையால்' என உருபு விரித்து, 'நாழிகையால் வந்தது' என மாறிக் கூட்டுக. 'அவற்றை வான் முதலாயிடச் சிந்தைசெய்' என ஒருசொல் வருவித்துக் கொள்க. 'வலம் மண்முதல் உந்தியுள் நின்று உதித்தெழுமாறு தேர்ந்தறிவாய்' எனக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்க. 'தேர்ந்தறிவார் வலர்' என்பது பாடமாயின், இதனை, யோகியரது இயல்பாக்கி உரைக்க. 'உந்தி' என்றது இங்கு அதற்குக் கீழ் உள்ள சுவாதிட்டானத்தை.

இதனாற் சொல்லியது, 'ஒரு நாளில் உள்ள நாழிகையை ஐந்து கூறிட்டு அக்கூறுகளை ஐந்து பூதங்கட்கு உரியவாக்கி, சுவாதிட்டானம் முதலிய ஆதார யோகங்களை அப்பூதங்கட்கு உரிய அந் நாழிகைகளில் செய்தல் வேண்டும்' என்பதாம். 'ஒருநாளின் தொடக்கம் வைகறைப் போது' எனக் கொள்ளப்படுதலால், பகலவன் தோற்றத்திற்கு முன் ஆறு நாழிகையை

நிலம் என்னும் பூதத்தின் காலமாகக் கொண்டு முதலதாகிய சுவாதிட்டான யோகத்தைத் தொடங்கல் வேண்டும். பின் அவ் ஆறு நாழிகை நீர், நெருப்பு, காற்று, வானம் என்பவற்றுக்கு உரியனவாகக் கொண்டு மணிபூரகம் முதலாக ஆஞ்ஞை வரையில் செல்லுதல் வேண்டும். செல்லின், பகல் பதி னெட்டு நாழிகை முதல் இருபத்து நான்கு நாழிகை வரையில் ஆஞ்ஞையில் நிற்கவேண்டி வரும். யோக நிலையில் இதனோடே பகற் காலம் முடிவுறும். பின்னும் இவ்வாறே சுவாதிட்டானம் முதலாகத் தொடங்கி, இரவு பதினெட்டு முதல் இருபத்து நான்கு நாழிகை வரையில் உள்ள பகுதியில் ஆஞ்ஞை யோகத்தில் இருத்தல் வேண்டும். இவையெல்லாம் உய்த்துணர்ந்து உரையிற் கொள்ளப்படும். 'வான் முதலாயிட' என்பதற்குச் 'சூரியோதயம் தொடங்கி' எனவும், 'மண் முதல்' என்பதற்கு 'அத்தமனம் தொடங்கி' எனவும் தாம் வேண்டுமாறே அச்சொற்களை வருவித்துக்கொண்டு தமக்குத் தோன்றியவாறேயும் உரைப்பர். அஃது, 'உந்தியுள் நின்று உதித்தல்' என்றதனோடு ஒவ்வாமை அறிக.
'இவ்வாறு இடைவிடாது யோகத்தில் இருப்பின், உண்டல், உறங்கல் முதலியவற்றிற்குக் காலம் எப்பொழுது' என ஐயுறல் வேண்டா; என்னை? இது, 'ஆதார யோகத்திற் குரிய காலமுறை இவ்வாறு கொள்ளத்தக்கது' எனக் கூறியதன்றி, 'அவற்றை இடையறாது செய்தல் வேண்டும்' எனக் கூறியதன்று ஆகலான். யோகமாகிய அறிதுயிலில் இருப்போர் அதனை விடுத்து உலகியலில் விழித்தல் எளிதாதலின் அஃது எந்த நேரத்திலும் இயல்வதேயாம். சிலர் சில நாள்காறும் ஊண் உறக்கம் இன்றி இடைவிடாது செய்ய வல்லராயும் இருப்பர். ஆகவே 'இஃது அவரவரது ஆற்றலுக்கு ஏற்பக் கொள்ளப் படுவதே' என்க. எனினும், பொருள் ஈட்டலில் கருத்துடையவர் பொழுதை வீண்போக்குதலும், பொருட் பேற்றிற்கு மாறானவற்றைச் செய்தலும் இல்லாமை போல. யோகத்தில் கருத்துடையோரும் பொழுதை வீண்போக்குதலும், யோகத்திற்கு மாறானவற்றைச் செய்தலும் இலர் என்க.
இங்ஙனமாகவே, மேல் *(பா.632)* 'ஏழானதிற் சண்டவாயுவின் வேகியாம்' என்பது முதலாகக் கூறிய ஆண்டுக் கணக்குகள் இங்குக் குறித்த முறையில் ஆதாரயோகம் நிகழும் நாழிகை யளவால் அமைவ தன்றி, ஏனையோர்க்குப் போலப் பகலவனது தோற்ற மறைவு மாத்திரையானே அமைவதன்று என்பது பெறப்படும். அந்த நாழிகைத் தொகையே, மேல், *(பா.629)* 'இருபதினாயிரத்தேழ்நூறு பேதம்' எனக் குறிக்கப்பட்டது. ஒருநாளைக்கு அறுபது நாழிகையாக, முந்நூற்றறுபது நாள்களுக்குக் கணக்கிட வருவது. *(360 x 60 = 21600)* இருபத் தோராயிரத்து அறுநூறு நாழிகை. இதில் பதினைந்துநாள் குறையினும் ஓராண்டாகவே

பயன்தரும் என்றற்கே, தொள்ளாயிர நாழிகை தள்ளி, *(21600 - 900 = 20700)* 'இருபதினாயிரத்து ஏழ் நூறு பேதம்' எனக் கூறினார். எனவே, சுவாதிட்டானம் முதலிய ஐந்தில் ஒவ்வோர் ஆதார யோகமும் நாலாயிரத்து நூற்று நாற்பது *(4,140)* நாழிகையிற் குறையாது சம அளவில் நிகழின், அதுவே யோகத்தின் ஓராண்டு எனவும், 'அவ் வகையில் பன்னிரண்டாண்டுகள் சென்ற பின்பே சித்திகள் எய்தப் பெறும்' எனவும் கொள்க. 'இவ்வாறு சொல்லிய யோக காலத்தை, யோகிகள், மந்திரம் கணிப்பவர் தாம் கருதிய உருவளவை இடை விட்டாயினும், இடைவிடாதாயினும் கணித்து முடித்தல் போல முடிப்பர்' எனவும், அவ்வாறு முடிக்குங்கால் இங்குக் கூறியமுறை வழுவாது செய்து முடிப்பர் எனவும், 'யோகப்பயிற்சி உடையவர் தாம் விரும்பும் ஆதார யோகத்தை விரும்பியவாறே செய்ய வல்லராய் இருப்பர்' எனவும் உணர்க. மூலாதாரயோகம், குண்டலியை எழுப்பு தல் மாத்திரையாய் அமைதலின், அது சுவாதிட்டான யோகத்தில் அடங்கிற்று. 'நின்று வுதித்து' எனக் குற்றியலுகரம் கெடாது நின்று, உடம்படு மெய் பெற்றது. இதனால், 'பன்னிரண்டாண்டு யோகம் செய்க' என மேற்கூறிய ஆண்டின் இயல்பு கூறப்பட்டது.

சித்தந் திரிந்து சிவமய மாகியே
முத்தந் தெரிந்துற்ற மோனர் சிவமுத்தர்
சுத்தம் பெறலாக ஐந்தில் தொடக்கற்றோர்
சித்தம் பரத்தின் திருநடத் தோரே. ***#638***

(அட்டமா சித்திகளை அடைய விரும்பி அவற்றைப் பெறும் பவயோகம் செய்பவர் அதனிடையே மலபரி பாகம் காரணமாக) மனம் வேறுபட்டு, சிவனை அடையும் வேட்கை யராய் முத்திப்பேற்றிற்குரிய வழியை உணர்ந்து ஐம்புல ஆசையற்றுச் சிவஞான ஒழுக்கத்தில் நிற்கும் சிவயோகியராதலும் உண்டு. அவ் வாற்றால் தத்துவங்களின் நீங்கவேண்டி மேற்கூறிய ஐம்பூதங்களின் கட்டினின்றும் நீங்கினோர், உள்ளம் இறைவனது ஆனந்த நடனத்தில் ஒடுங்கப் பெறுவர்.

விளக்கவுரை

சிவமயமாதல் சிவனை அடைதலாகிய ஒன்றிலே குறியாய் இருத்தல். 'முத்தி' 'முத்தம்' எனத் திரிந்து நின்றது. முத்தி, என்றது, அதனை அடையும் நெறியாகிய ஞான ஒழுக்கத்தை. 'உற்ற' என்ற அநுவாதம், உறுதல் உண்மைபற்றிக் கூறியது. 'முத்தர்' என்றது யோகியரை. சுத்தமாவது, தத்துவங்களினின்று நீங்குதல். 'ஐந்து' என்றது, மேல், 'வான்முதல்' எனவும், 'மண்முதல்' எனவும் கூறிய பூதங்களை. அவற்றின் தொடக்காவது, ஆதாரங்களையும், மேற் கூறியவாறு அப் பூதங்கட்கு உரியனவாக்கி அவற்றின்வழி நிற்றல். சித்திகளை வெறுத்தோர்க்கு

அம்முறை வேண்டாமையின், அவரை, 'அத்தொடக்கு அற்றவர்' என்றார். 'பரத்தின் திருநடம்', ஆறாவதன் தொகை.
இதனால், 'சித்தியோகமாகிய பவயோகம் சிவயோகமாய் வேறுபடுதலும் உண்டு' என்பது கூறப்பட்டது. கூறவே, 'இப்பயன் கருதியே ஞான நூல்களும் யோகத்தை விதிக்கின்றன' என்பது அறியப்படும்.
இங்கு நின்றும் மேற்குறித்த சிவயோகம் பற்றியே கூறுகின்றார்.

ஒத்தஇவ் வொன்பது வாயுவும் ஒத்தன
ஒத்தஇவ் வொன்பதின் மிக்க தனஞ்சயன்
ஒத்தஇவ் வொன்பதில் ஒக்க இருந்திட
ஒத்த உடலும் உயிரும் இருந்தவே. ***#639***

சிறப்பால் தம்முள் ஒத்தனவாகிய, தனஞ்சயன் ஒழிந்த ஏனை வாயுக்கள் ஒன்பதும் வேறு வேறு நின்று செயற்படுவன. சிறப்பால் அவ்வொன்பதிலும் மேம்பட்டது 'தனஞ்சயன்' என்னும் வாயு. அஃது ஏனை ஒன்பது வாயுக்களினும் ஒப்பக் கலந்து, அவற் றிற்கு வன்மையைத் தந்து நிற்கும். அஃது அவ்வாறு நிற்பதனாலே உயிரும், உடம்பும் இணங்கியிருக்கின்றன.

விளக்கவுரை

முதலடியில் ஈற்றில் நின்ற 'ஒத்தன' என்பது, ஒன்றை யொன்று அவாவி நில்லாது தனித்து நிற்றலைக் குறித்தது. 'மிக்க' என்றது அநுவாதம்.
'ஏனை வாயுக்கள் ஒழிய இஃது ஒன்றும், ஏனையவற்றில் கலந்து நிற்றல் எவ்வாறு' என்னும் ஐயத்தை நீக்குதற்கு அதனது இயல்பை விதந்தார்.
வாயுக்களில் பிராணனே சிறந்ததன்றித் தனஞ்சயன் சிறத்தல் எவ்வாறு எனின், பிராணனுக்கும் இயக்கத்தைத் தருவது தனஞ்சயன் ஆதலின் அது சிறந்தது என்க. மூர்ச்சையில் பிராணன் இயங்காது நின்றவிடத்தும் மீள அதனை இயங்கச் செய்வது இத்தனஞ்சயனேயாம். இது பற்றியே, 'இஃது இறப்புக்காலத்தில் பிராணனை உள்ளிட்ட ஒன்பது வாயுக்களும் நீங்கிய பின்பு தலைக்குள் இருந்து தலை ஓட்டை உடைத்துக்கொண்டு செல்லும்' என்கின்றனர்.
பவயோகத்தை விடுத்துச் சிவயோகத்தில் நிற்பார் அதனை முற்றச் செய்தற்பொருட்டு வாழ்நாளை நீடித்துக் கொள்ளுதற்கு வழி கூறத்தொடங்கி, முதற்கண் இம்மந்திரத்தால் உடல் நிலைத்திருத்தற்குக் காரணம் இது என்பது இதனாற் கூறினார்.

இருக்குந் தனஞ்சயன் ஒன்பது காலில்
இருக்கும் இருநூற் றிருபத்து நான்கின்
இருக்கு முடலி லிருந்தில தாகில்
இருக்கும் உடலது வீங்கி வெடித்ததே. ***#640***

வாயுக்களுள் ஒன்றாய் இருக்கின்ற தனஞ்சயன், மேற்கூறியவாறு ஏனை

ஒன்பது வாயுக்களிலும் கலந்திருக்கும். 'தனஞ்சயன்' என்ற வாயு இல்லை என்றால், உடம்பே நிலைபெறாது பதங்கெட்டு அழியும்.

விளக்கவுரை

'இருக்கும்' நான்கில் இரண்டாவது முற்று, ஏனை யவை எச்சம். 'இருநூற்றிருபத்து நான்காய் இருக்கும் உடல்' என்றது, 'பிண்டம், அண்டம் அவை சமமாதல்' *(கோயிற் புராணம், பதஞ்சலி சருக்கம், 70)* பற்றி, உடம்பில் இருநூற் றிருபத்து நான்கு புவனங்களும் உளவாக வைத்து நோக்கப்படுதல் பற்றியாம். 'இத்துணைச் சிறப்புடைய உடம்பு', 'தனஞ்சயன்' என்ற ஒரு காற்று இல்லையாயின் அழிந்துவிடும் என்றவாறு. 'வீங்கி வெடித்தது' என்பது, 'பதங்கெட்டு அழிந்தது' என்றபடி.
இதனால், மேற்கூறிய காரணம் வலியுறுத்தப்பட்டது.

வீங்குங் கழலை சிரங்கொடு குட்டமும்
வீங்கும் வியாதிகள் சோகை பலவதாய்
வீங்கிய வாதமுங் கூனும் முடமுமாம்
வீங்கும் வியாதிகள் கண்ணில் மருவியே. ***#641***

பலவகை நோய்களும், உறுப்புக் குறைகளும் தனஞ்சய வாயு, அளவில் செம்மையுற்று இராமையால் உளவாவன.

விளக்கவுரை

'தனஞ்சயன் செம்மையுற்றிராமையால்' என்பது அதிகாரத்தால் கொள்ளக்கிடந்தது. இத்தீங்குகள் பிறப்பிலும், வாழ்வு இடையிலும் வருதல், இவ்வாயு, கருவிலும், இடையிலும் குறைபடுதலாலேயாம் என்க. கழலை - கட்டி. சிரங்கு - சொறிப் புண். 'பலவதாய்' என்பதில் 'அது' என்பது 'அத்தன்மை' எனப் பொருள் தந்தது. வீங்குதல் நான்கில் முதல் ஒழிந்த மூன்றும், மிகுதற் பொருளன. 'ஆம்' என்பதை இறுதியில் வைத்து, 'கண்ணில் மருவி வீங்கும் வியாதிகளும் ஆம்' என மாற்றியும், உம்மை விரித்தும் உரைக்க.
இதனால், உடற்குறைக்குக் காரணம் கூறுமுகத்தால், மேலது வலியுறுத்தப்பட்டது.

கண்ணில் வியாதி உரோகந் தனஞ்செயன்
கண்ணிலிவ் வாணிகள் காச மவனல்லன்
கண்ணினிற் கூர்மன் கலந்தில னாதலாற்
கண்ணினிற் சோதி கலந்ததும் இல்லையே. ***#642***

(மேல், 'வீங்கும் வியாதிகள் கண்ணில் மருவியே' என்றதனால், 'கண் அமைவதற்குத் தனஞ்சயனே காரணம் போலும்' என மயங்கற்க.)
கண்ணில் உளவாகும் நோய்கட்கு மட்டுமே தனஞ் சயனது

செம்மையின்மை காரணமாகும். கண்ணில் பொருந்தியுள்ள நரம்புகளின் செயற்பாட்டிற்கும், அச் செயற்பாட்டினால் அமையும் கண்ணொளிக்கும் தனஞ்சயன் காரணமன்று; அவற்றிற்குக் 'கூர்மன்' என்னும் வாயுவே காரணம்.

விளக்கவுரை

'கண்ணில்' என்பன பலவும் சொற்பொருட் பின்வரு நிலை யணி. 'வியாதி, ஆணிகள், காசம்' என்பன அவற்றின் காரணங்களை உணர்த்திய ஆகுபெயர்கள், அவற்றுள் 'ஆணிகள்' என்பது முதற்கண் அவற்றின் செயற்பாட்டை உணர்த்தி இருமடி யாகு பெயராய் நின்றது. 'தனஞ்சயன் உரோகம்' என மாற்றுக. 'நோய்' எனப் பொருள்படும் 'உரோகம்' என்னும் வடசொல் இங்கு, செப்பம் இன்மையைக் குறித்தது. பின்னிப் பிணைந்து ஒட்டி நிற்றல் பற்றி நரம்புகளை 'ஆணிகள்' என்றார். 'பிரகாசம்' என்னும் வடசொல், முதற்குறைந்து, 'காசம்' என நின்றது. 'தனஞ்சயன்' என்பதும், 'கூர்மன்' என்பதும் சொல்லால் ஆண்பாலோடு ஒத்து நிற்றலின், 'அவனல்லன்' என்றும், 'கலந்திலன்' என்றும் கூறினார். 'கண்ணின் அமைப்பிற்குக் காரணம் 'கூர்மன்' என்னும் வாயுவே' என்பதனைப் பின்னிரண்டடிகளில் எதிர்மறை முகத்தாற் கூறினார்.
இதனால், மேலது பற்றி நிகழ்வதோர் ஐயம் அறுக்கப்பட்டது.

நாடியின் ஓசை நயனம் இருதயம்
தூடி யளவுஞ் சுடர்விடு சோதியைத்
தேவருள் ஈசன் திருமால் பிரமனும்
ஓவற நின்றங் குணர்ந்திருந் தாரே. ***#643***

கடவுளருள் சிறந்தோராகிய உருத்திரன், மால், அயன் என்னும் மூவருங்கூட யோகத்தில் பத்து நாடிகளிற் கேட்கப் படுவனவாக மேலே சொல்லிய பத்து ஓசைகளாகிய முழக்கத்தைக் *(பா.593)* கேட்டலை விடுத்து, கண்ணிலும், இருதயத்திலும் நிலைபெற்று நின்று உடம்பில் துடிப்புள்ளளவும் 'துஞ்சும்போதும் சுடர்விடு சோதி' *(தி.5 ப.93 பா.8)* யாகிய சிவனை அங்கே தியானம் செய்கின்றனர்.

விளக்கவுரை

'மூவரும், நயனம் இருதயம் நின்று, நாடியின் ஓசை ஓ அற, சோதியை அங்கு உணர்ந்திருந்தார்' எனக் கூட்டுக. 'துடிப்பு' என்பதன் முதனிலைப் பெயராகிய 'துடி' என்பது நீட்டல் பெற்றது. 'பிரமனும்' என்ற உம்மைச் சிறப்பு. 'ஓ' என்பது ஒலிக்குறிப்பு இடைச்சொல். 'ஓவுற' எனப்பாடம் ஓதி, ஓவுதல் - ஒழிதல் என உரைத்தலுமாம். 'மூவரும் உணர்ந்திருந்தார்' என்றதனால், 'சிவனை அடைய விரும்புவோர் அவ்வாறு நிற்க' என்பது

குறிப்பெச்ச மாயிற்று. 'நாடி ஓசைகளைக் கேட்டுக் களித்திருத்தல் சித்தி யோகி கட்கே பொருந்துவது' என்றவாறு. சோதியை நயனத்திற் காண்டல், புறநோக்கு உளதாயவழிச் செய்யும் பாவனை. இருதயத்திற் காண்டல், தாரணை தியான சமாதிகளால் சிவனது ஒளி உருவை இருதயத்தில் காணுதல். அங்ஙனம் காணவே, பவ யோகம் ஒழியச் சிவயோகம் உண்டாகும் என்பதாம். இதனுள் இரண்டடி எதுகை வந்தது. இதனால், சிவ யோகத்தைத் தலைப்படுமாறு கூறப்பட்டது.

ஒன்பது வாசல் உடையதோர் பிண்டத்துள்
ஒன்பது நாடி யுடையதோ ரோரிடம்
ஒன்பது நாடி ஒருங்கவல் லார்களுக்
கொன்பது வாசல் உலைநல மாமே. ***#644***

ஒன்பது வாயில்களை உடைய ஒரு வீடாகிய உடம்பில், ஒன்பது நாடிகளும் சுழுமுனை நாடியில் ஒவ்வோரிடத்தில் ஒருங்கு கூடுவனவாம். அவ்விடங்களை அறிந்து அந்த நாடிகளைத் தம்வசப்படுத்த வல்லவர்க்கு ஒன்பது துருத்திகளை உடைய ஓர் உலைபோல்வதாகிய உடம்பு ஞானத்தைத் தருவதாய் அமையும்.

விளக்கவுரை

நாடிகள் ஒன்பதும் தொகும் இடங்களே. நடுநாடி யாகிய சுழுமுனையில் உள்ள ஆறு ஆதாரங்கள். நாடிகள் பலவும் இணைதல் பற்றி இவற்றை 'கிரந்தி' (முடிச்சு) எனவும் யோக நூல்கள் கூறும். நாடிகளைத் தம் வசப்படுத்துதலாவது, அவ்வவ்வாதாரத்திற் செய்யும் தியானம் முதலியவற்றிற்கு அவை இடையூறு செய்யாதவாறு அடக்குதல். இறுதியில் 'வாசல்' என்றது காற்றைப் புகுத்துவதாகிய துருத்தியை. 'உலையில் உள்ள நெருப்பால் இரும்பு ஒரு துருத்திக் காற்றினால் வேகின்றது; உடம்பில் உள்ள வெப்பத்தால் உயிர் ஒன்பது துருத்திக் காற்றால் துன்புறுகின்றது' என்றபடி. 'சிவயோகத்தைத் தலைப்பட்டால், இவ்வுடம்பே உயிர்க்கு இன்பம் தருவதாய் அமையும்' என்பது கூறியவாறு.

இதனால், சிவயோகிகட்கு உடம்பு திருவருள் நெறிக்குத் துணையாய் நிற்றல் கூறப்பட்டது.

ஓங்கிய அங்கிக்கீழ் ஒண்சுழு னைச்செல்ல
வாங்கி இரவி மதிவழி ஓடிடத்
தாங்கி உலகங்கள் ஏழுந் தரித்திட
ஆங்கது சொன்னோம் அருள்வழி யோர்க்கே. ***#645***

மூலாதாரத்தில் உள்ள அக்கினியை எழுப்பிச் சுழு முனை நாடி வழியே தலையளவும் செல்லச் செலுத்துதல், பிங்கலை இடைகலை வழியாகப் பிராணனை முறையே வெளியே ஓடவிட்டும், உள்ளே செல்ல இழுத்தும்

பயிலுதல், ஏழுலகங்களையும் சுமந்து நிற்றல் ஆகிய முறைகளை நாம் சொன்னது, சிவனது அருள்வழியில் நிற்க விரும்புபவரை நோக்கியேயாம்.

விளக்கவுரை

'ஆயினும், அவை மருள்வழியாகிய சித்தியை விரும்பி நிற்பவர்க்கும் பயன்படுகின்றன' என்பது குறிப்பெச்சம். 'கீழங்கி' என்பது, பின்முன்னாக மாறிநின்றது, 'கீழ் நீர்ச்செவ் வரும்பு' (திருமுருகாற்றுப்படை, *29*) என்பதுபோல. வாங்கி - மேல் ஏற்றி. ஓடவிடுதல், தாங்குதல்; இவற்றை இரவி மதி வழிகட்கு நிரனிறை வகையால் பொருத்துக. தாங்குதல் - தடுத்தல்; அஃது உள்ளிழுத்தலைக் குறித்தது. 'எங்கே யிருக்கினும் பூரி இடத்திலே' (பா.*558*) என்றதனான் இம்முறை கூறப்பட்டமை காண்க. 'இரவி மதி வழி ஓடிட' என்றதனால், 'மதி இரவிவழி ஓடிட' என்பது பெறப்பட்டதாக வைத்து, இதனை 'விபரீத கரணி' என்னும் எதிரியக்கலாக உரைப்பாரும் உளர்.
'உலகங்கள் ஏழு' என்றது, ஆறு ஆதாரங்களுடன், உச்சியை. இவற்றைச் சுமத்தலாவது, இவற்றின் இயல்புகளை உணர்ந்து அவைகளில் நிற்கப்பழகுதல். இவை ஏழும் ஒவ்வொரு கடவுளின் உலகமாக மதிக்கப்படுதல் அறிக. இந்த ஆதார நிராதார யோகங்களின் அருமைப் பாட்டினை இவ்வாறு விளக்கி, 'இத்துணை அருமுயற்சிக்குப் பயன் அட்டமா சித்திகளே என்பது நூல்களின் கருத்தன்று' என அறிவுறுத்தருளினார். 'அருவழியோர்க்கே, அறிவுடையோர்க்கே' என்பவை பாடமாயினும், கருத்து இதுவே என்க. தரித்திட - தரிக்கும்படி. 'ஆங்கது' என்பது ஒருசொல் நீர்மைத்து.
இதனால், 'யோகமாகிய அரு முயற்சியால், திருவருளாகிய பெரும்பயன் பெற விரும்புதலே அறிவுடைமை' என்பது கூறப் பட்டது.

தலைப்பட்ட வாறண்ணல் தையலை நாடி
வலைப்பட்ட பாசத்து வன்பிணை மான்போல்
துலைப்பட்ட நாடியைத் தூவழி செய்தால்
விலைக்குண்ண வைத்ததோர் வித்தது வாமே. ***#646***

இடைகலை பிங்கலை நாடிகட்கு நடுவே துலை நாப்போல நிற்கும் சுழுமுனை நாடியையே நல்வழியாகக் கொண்டு இயங்கத் தெரிந்தால், வலையில் அகப்பட்ட பெண் மானை வந்து அடையும் ஆண்மான்போல, அந் நாடியின் முடிவில் விளங்கும் சத்தியைத் தேடிச் சிவனும் வந்து பொருந்துவான். இந்நடு நாடி வழி, விலைக்கு விற்க வைத்திருந்த வித்துத் தனக்கே பயன்படுதல் போல்வதொரு தன்மையுடையது.

விளக்கவுரை

மூன்றாம் அடியைத் தாப்பிசையாக முன்னும், பின்னும் இயைத்துப் பொருள் கொள்க. *'தலைப்படும் ஆறு'* எனற்பாலதனை, துணிவு பற்றி, *'தலைப்பட்ட ஆறு'* என்றார். பாசத்துப் பிணை, அன்புக்குரிய பெண்மான், முன்னர், *'பிணை'* என்றதனால், பின்னர், *'மான்'* என்றது, *'கலை'* என்பது விளங்கிற்று. *'பிணை மான்'* என்னும் தொகைச் சொல்லை *'பிணையை அணையும் மான்'* என விரித்துக்கொள்க. *'தூவழி செய்தால், பிணைமான்போல், அண்ணல் தையலை நாடித் தலைப்பட்டவாறு'* எனவும், *'தூவழி செய்தால் அது விலைக்கு உண்ண வைத்தது ஓர் வித்தாம்'* எனவும் இரு தொடராக இயைத்துரைக்க. சத்திவழியே சிவத்தைச் சார வேண்டுதலின், அதனை அண்ணல் தையலை நாடி வருவதாக ஓதினார்.
'விலைக்கு உண்ண' என்பது, *'பிறர், விலைக்குக் கொண்டு உண்ண'* என்றதாம். வைத்தது - வைக்கப்பட்ட நெல், *'ஓர்வித்தாம்'* என்றது வித்தாய்த் தனக்கே பயன்படுவதொரு தன்மையையுடையது என்னும் கருத்தினது. 'நெல்லை ஒருவன் அடுத்த ஆண்டிற்கு விதையாக வைத்துப் பெரும்பயன் கொள்ள நினையாமல் விலைக்கு விற்றுச் சிறிது பயன் கொள்ள இருக்கையில் அறிவு திருந்தினானாயின், அந்நெல்லே விதையாய் அவனுக்குப் பெரும் பயன்தருதல்போல, யோகமுயற்சியை ஒருவன் ஞானத்திற்கு வாயிலாகக் கொண்டு அதனை அடையக் கருதிச் செய்யாமல் சித்திகளைப் பெற விரும்பிச் செய்கையில் இடையே பக்குவம் அடைவானாயின், அவ்யோகமே அவனுக்கு ஞானத்திற்கு வாயிலாக அமையும்*'* என்பது, ஈற்றடியிற் கூறப்பட்ட உவமையின் பொருள். *'தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளையும்' (மதுரைக் காஞ்சி, 11)* அத்துணைப் பயன், விலைக்கு விற்றலால் எய்துதல் கூடாமை அறிக. இதனால், *'சித்தியோகந்தானே முத்தியோகமாய்ப் பயன்படும்'* என்பது கூறப்பட்டது.

ஓடிச் சென்றங்கே ஒருபொருள் கண்டவர்
நாடியி னுள்ளாக நாதம் எழுப்புவர்
தேடிச்சென் றங்கேயுந் தேனை முகந்துண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் கட்டுமே. ***#647***

பல இடங்களிலும் ஓடிச்சென்று அங்கெல்லாம் ஒவ்வொரு பொருளைக் கண்டவர், அக்காட்சியின் பயனாகப் பத்து நாடிகளிலும் வேறுபட்ட பத்து ஓசைகள் எழக் கேட்டு இன்புறுவர். நீவிர் அதனைச் செய்யாது, தேனை உண்ண விரும்பி அஃது இருக்கும் மலை உச்சியைத் தேடி அடைந்து அங்கே பொருந்தியுள்ள தேனை உண்டு களித்திருத்தலே யன்றி, உம்மை அழிக்கப் பாசறையில் தங்கிக் காலம் பார்த்திருக்கும் பகைவரைச் சிறைப்பிடித்தலையும் செய்யுங்கள்.

விளக்கவுரை

'ஓடிச்சென்று' என்றதனால், 'பல இடங்கள்' என்பதும், 'தேடிச்சென்று' என்றதனால், 'குறித்த பொருள் உள்ள இடம்' என்பதும் பெறப்பட்டன. 'தேன்' என்றது, திருவருளை. விந்துவை, 'அமிர்தம்' என்றலே வழக்கன்றி, 'தேன்' என்றல் வழக்கன்று. 'தேன்' என்றதற்கு ஏற்ப, 'மலையுச்சி' என்பது கொள்ளப்பட்டது. மலையுச்சியாவது நாதாந்தம். அதனை இங்கே, தச நாதங்கள் அடங்கிய இடமாகக் கொள்க. பாடி - பாசறை; என்றது உடம்பை. பகைவர், காம வெகுளி மயக்கங்கள். சித்தியை விரும்புவோர் இவற்றை வெல்லமாட்டார் என்க. கட்டும், 'கட்டுமின்' என்பதன் மரூஉ.

இதனால், 'சிவயோகமே காம வெகுளி மயக்கங்களை அறுத்துப் பேரின்ப நுகர்ச்சிக்கு வழிசெய்யும்' என்பது கூறப்பட்டது.

கட்டிட்ட தாமரை நாளத்தில் ஒன்பது
மட்டிட்ட கன்னியர் மாதுடன் சேர்ந்தனர்
தட்டிட்டு நின்று தளங்களி னூடுபோய்ப்
பொட்டிட்டு நின்றது பூரண மானதே. ***#648***

ஓர் இல்லத்தில் உள்ள பல கட்டுக்களை ஒத்த ஆதாரத் தாமரை மலர்களில் அதன் தண்டினைப் பற்றி அங்கங்கு நின்று சிறிது சிறிது தேனைத் தெளித்த ஒன்பது மகளிர், அவ்விடங்களை விட்டுத் தேனை நிரம்ப முகர்ந்து வார்க்கின்ற அவ் இல்லத் தலைவியோடு சேர்ந்து விட்டார்கள். அவ்விடங்களில் நின்ற அவர்கள் அவற்றை விட்டு நீங்கித் திலகம் இட்டு நின்றதே தலைவியுடன் ஒன்றாய் நின்ற நிறைவு நிலையாயிற்று.

விளக்கவுரை

'கட்டு இட்ட' என்பதில் 'இட்ட' உவம உருபு. ஒன்பது கன்னியர் என இயையும். கன்னியரை, 'கட்டுக்களில் நின்றவர்' என்றதனால், மாது, 'அவ்வில்லம் முழுவதற்கும் தலைவி' என்பது பெறப்பட்டது. மட்டு - தேன்; இஃது சிறிதளவாகத் துளிக்கின்ற தேனுக்கே காரணப் பெயர். பின்னர் இது மிக்க தேனைக் குறித்தல் மரூஉ வழக்கே. இல்லத்தின் ஒவ்வொரு பகுதியில் இருப்பவர் தேனைச் சிறிது சிறிது வார்ப்பவர் என்பதனால், இல்லத் தலைவி தேனை நிரம்ப முகந்து வார்த்தல் அறியப்படும். 'தளங்களி னூடு தட்டிட்டு நின்று பூரணமானது' என்க. தட்டிடுதல் - தடைப்படுதல். முன்னர், 'தாமரை நாளத்தில்' என்றதனால், 'போனது, அதன்வழியாகவே' என்பதுபோந்தது. ஒன்பது கன்னியர், 'வாமை, சேட்டை, இரௌத்திரி, காளி, கலவி கரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சருவபூததமனி, மனோன்மனி' என்னும் நவசத்திகள்.

இவர்களில் வாமை மூலாதாரத்திலும், சேட்டை சுவாதிட்டானத்திலும், இரௌத்திரியும் காளியும் மணிபூரகத்திலும், கலவிகரணி முதலிய நால்வரும் அனாகதத்திலும், மனோன்மனி விசுத்தியிலும் நிற்பர். ஆஞ்ஞையில் ஆதிசத்தி இருப்பள் என்க. 'வாமை முதலிய ஒன்பதின்மரும் ஏகதேச சத்திகள்' எனவும், 'ஆதி சத்தியே பூரணசத்தி' எனவும், 'பவயோகியர்க்கு அனைத்துச் சித்தியும் தருகின்ற ஆதி சத்தியே, சிவயோகியர்க்கு அருட்சத்தியாய்ச் சிவானந் தத்தைத் தருவள்' எனவும், உணர்க. வாமை முதலிய சத்திகள் சித்தி களுள் ஓரோஒன்றையும், சிவானந்தத்தின் ஏகதேசத்தையும் தருவர். ஆகவே, சிவயோகியர் அவர்களை ஆஞ்ஞையில் அருட்சத்திபால் சேர்த்துச் சிவானந்தத்தை வேண்டிநிற்பர் என்பது உணர்த்தியவாறு. பொட்டிட்டு நிற்றல், ஆஞ்ஞையை அடைந்து நிற்றல்.
இதனால், சிவயோகமே நிறைவுடைய யோகமாதல் கூறப்பட்டது.

பூரண சத்தி எழுமூன் றறையாக
ஏரணி கன்னியர் ஏழ்நூற்றஞ் சாக்கினர்
நாரணன் நான்முக னாதிய ஐவர்க்குங்
காரண மாகிக் கலந்து விரிந்ததே. ***#649***

பூரண சத்தியாகிய ஆதிசத்தி, 'இச்சை, ஞானம், கிரியை' என மூன்றாகி, குண்டலியில், 'அகாரம், உகாரம், மகாரம், அபரவிந்து, அபரநாதம், பரவிந்து, பரநாதம்' என்னும் ஏழு கலை களிலும் பொருந்தி இருபத்தொரு கூறாதலால், அவ் விருபத்தொரு கூறும் பிரமன் முதலிய ஐவரது தொழிற்கும் காரணமாய் அவரொடு பொருந்தி நிற்குமாறு ஏகதேச சத்திகள் அக் காரணப்பகுதிகளை (ஐ இருபத்தொன்று) நூற்றைந்தாக்கிக் கொண்டனர். (எனவே, அவை பிரம இச்சா அகாரம், பிரமஞான அகாரம், பிரமகிரியா அகாரம் என்றற்றொடக்கத்தனவாகப் பெயர்பெற்று நிற்பனவாம்.) இனி அந்த நூற்றைந்தையும் மூலாதாரம் முதலிய ஆறாதாரங்களோடும், ஆஞ்ஞைக்கு மேல் உள்ள நிராதாரத்தோடும் கூட்டி மூலாதாரப் பிரம இச்சா அகாரம், மூலாதாரப் பிரமஞான அகாரம், மூலாதாரப் பிரம கிரியா அகாரம் என்றற் றொடக்கத்தனவாக உறழ்ந்து கூற, ஏழடுக்கிய நூற்றைந்தாம் (ஏழு நூற்றைந்து - *7 x 105 = 735* ஆம்) ஆதலின், அங்ஙனமும் ஆக்கினர்.

விளக்கவுரை

அறை - பங்கு; கூறு. குண்டலி சத்தியைப் பிரமன் முதலியவரோடும் ஏழ் நிலத்தோடும் வைத்து இங்ஙனம் பலவாகப் பகுத்துக் கூறுதல், 'உயிர்களின் உணர்வு அந்நிலங்களில் அதிதேவர் வழிவாக்கு வடிவாய் அளவற்றனவாகத் தோன்றும்' என்றற்கும், 'அவை அனைத்தையும் ஒடுக்கித் திருவருளில் நிறுத்திப் பயன்பெற வேண்டும்' என்றற்குமாம்.

உணர்வுகள் அளவின்றித் தோன்றுதலையே,
ஒருபொழுதும் வாழ்வதறியார்; கருதுப
கோடியு மல்ல பல. குறள் - *337*
எனக் கூறினார் திருவள்ளுவர். 'எழு நூற்றஞ்சாக்கினர்; அவ் ஆக்கப் பாடு கலந்து விரிந்தது' என்க.
இதனால், 'பலவகை உணர்வுகளையும், சிவயோக நெறியால் திருவருள் உணர்வில் ஒடுங்கச் செய்தல் வேண்டும்' என்பது கூறப் பட்டது.

விரிந்து குவிந்து விளைந்தஇம் மங்கை
கரந்துள் எழுந்து கரந்தங் கிருக்கிற்
பரந்து குவிந்தது பார்முதற் பூதம்
இரைந்தெழு வாயு விடத்தில் ஒடுங்கே. ***#650***

பல ஏகதேச சத்திகளாய் விரிந்தும் ஒன்றேயான பூரண சத்தியாய்க் குவிந்தும் சிவத்தினின்றும் புலப்பட்டுச் செயல் ஆற்றுகின்ற இவ் ஆதி சத்தி, சிவத்தில் ஒன்றாய் அடங்கியிருக்கும் நிலையினின்றும் வெளிப்பட்டுச் செயலாற்றினால் மண் முதலிய பூதங்கள் தூலமாய் வெளிப்பட்டு விரிந்தும், அவள் சிவத்தில் அடங்கி ஒன்றாய் இருப்பின், அவை (பூதங்கள்) சூக்குமமாய் ஒடுங்கியும் இருக்கும். (ஆகவே, எல்லாம் ஆதிசத்தியால் ஆவனவாகலின்) பூரக இரேசகங்களில் பாம்பு சீறினாற் போன்ற ஓசையை உடையதாய், கும்பகத்தில் சுழுமுனை நாடி வழியே மேல் நோக்கி எழுகின்ற பிராணவாயுவால் அவளிடத்தில் சென்று ஒடுங்குவாயாக.

விளக்கவுரை

'எழுந்து கரந்து இருக்கின், பரந்துகுவிந்தது' என நிரனிறையாகக் கொள்க. எழுதற்கு முன்னுள்ள நிலையை 'கரந்து உள் - உள் கரந்து' என்றார். 'குவிந்தது' என்பது பன்மை ஒருமை மயக்கம். 'வாயுவால்' என உருபு விரித்து, 'அவளிடத்தினில்' என வருவித்துரைக்க.
இதனால், திருவருளது ஆற்றல் கூறப்பட்டது.

இடையொடு பிங்கலை என்னும் இரண்டும்
அடைபடு வாயுவும் ஆறியே நிற்கும்
தடையவை ஆறெழுந் தண்சுட ருள்ளே
மிடைவளர் மின்கொடி தன்னில் ஒடுங்கே. ***#651***

யோகத்தில் இடநாடி, வலநாடி இரண்டும் அடை பட, நடுநாடி வழியே செல்லும் பிராணவாயு தன் முரண் அவிந்து உனக்குத் துணையாகியே நிற்கும். அதனைப் பற்றிக்கொண்டு சென்று, ஆறு ஆதாரங்களின்மேல் எழுகின்ற சந்திரனுள்ளே பொருந்தி வளர்கின்ற மின்னற்கொடி போன்ற பூரண சத்தியில் நீ ஒடுங்கிவிடு.

விளக்கவுரை

'பின்பு உனக்குத் துன்பமில்லை' என்பது குறிப்பெச்சம். 'அடைபடும்' என்பது, அடைபட வேறுவழியால் செல்கின்ற எனத் தன்காரியம் தோன்ற நின்றது. 'வாயுவும்' என்னும் உம்மை, 'மனம் திருந்தியகாலத்து' என இறந்தது தழுவிய எச்ச உம்மை. ஆறுதல் - இகல் நீங்குதல். இகலாவது தன்வழிப்படாமை. 'ஆறு' என்பதன்பின், 'மேல்' என்னும் பொருட்டாய கண்ணுருபு விரிக்க. 'மேல்' என்பது ஆறாவதனையும், அதன்மேல் உள்ள உச்சியையும் இவ் இரண்டிடங்களும் 'சந்திர மண்டலம்' எனப்படும் என்க. 'மிடை' என்னும் முதனிலை 'மிடைந்து' என வினையெச்சப் பொருள் தந்தது.

இதனால், வாயுவை வயப்படுத்தியதனால் பெறத்தக்க பயன் திருவருட்பேறே என்பது கூறப்பட்டது.

ஒடுங்கி ஒருங்கி யுணர்ந்தங் கிருக்கின்
மடங்கி அடங்கிடும் வாயு அதனுள்
மடங்கி அடங்கிடும் மன்னுயி ருள்ளே
நடங்கொண்ட கூத்தனும் நாடுகின் றானே. ***#652***

சந்திரமண்டலத்தில் ஒடுக்கி, மனம் ஒருங்கித் திருவருளையே உணர்ந்திருந்தால், பிராணவாயுவும் மெத்தென இயங்குதலும் ஒழிந்து, அடங்கியிருக்கும். இவ்வாறு மனமும், வாயுவும் அடங்குதலால், அவற்றின் வழிப் புறஉணர்வும், தன் உணர்வும் அற்றிருக்கும் உயிரின் உள்ளத்தையே ஐந்தொழிற் கூத்து இயற்றும் இறைவனும் தனக்குரிய இடமாக விரும்புகின்றான்.

விளக்கவுரை

'அதனுள்' என்றது, 'அதன்வழி' என்றவாறு. 'உள்ளம்' என்பது, குறைந்து நின்றது. 'உள்ளையே' என உருபு விரிக்க. 'கூத்தனை நாடுகின்றேனே' என்பதும் பாடம்.

இதனால், 'சிவயோகத்தால் சந்திர மண்டலத்தில் நிற்பவர் கட்குச் சிவனை அடைதல் வாய்க்கும்' என்பது கூறப்பட்டது.

நாடியின் உள்ளெழு நாதத் தொனியுடன்
தேடியுடன் சென்றத் திருவினைக் கைக்கொண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் கட்டிட்டு
மாடில் ஒருகை மணிவிளக் கானதே.

அணுமாதி சித்திக ளானவை கூறில்
அணுவில் அணுவின் பெருமையில் நேர்மை
இணுகாத வேகார் பரகாய மேவல்

அணுவத் தனையெங்குந் தானாத லென்றெட்டே. **#653**
பத்து நாடிகளின் உள்ளே எழுகின்ற பத்து ஓசை களாகிய மங்கல முழக்கத்துடன் திருவருளாகிய நிதிக் குவியலைத் தேடிச் சென்று அடைந்து, அதனைக் கவர நினைக்கும் காமம் முதலிய குற்றங்களாகிய பகைவரைச் சிறைப்படுத்தி, அரண்மனையின் மேல் நிலமாகிய நிலாமுற்றத்தில் நந்தா மணிவிளக்கு (அணையாத இரத்தின தீபம்) ஆகிய சிவஞானத்தை ஏற்றிவைத்து இருத்தலே அதுவாம். (மேல், 'ஒடுங்கி ஒருங்கி உணர்ந்து அங்கிருக்க' எனக் கூறிய சிவயோக சமாதியாம்.)

விளக்கவுரை

'திரு' முதலாக வந்தவை இப்பொருளையுடைய சிறப்புருவகங்கள். 'தொனி' என்றது மங்கல முழக்கத்தைக் குறித்தது. மங்கலமாவது பகைவரை அழித்து அவரது கோட்டையைக் கைப் பற்றிய வெற்றி விழா. இது தமிழ் நூல்களில் 'மண்ணு மங்கலம்' எனக் கூறப்படும். இங்குப் பாசங்களை வென்று திருவருட் கோட்டையைப் பிடித்த வெற்றி குறிப்பிடப்பட்டது. மாடு இல் - செல்வ மனை; அரண் மனை. ஒரு கை - ஓரிடம்; மேல் மாடம். இஃது இங்கே சந்திர மண் டலத்தைக் குறித்தலின், 'நிலாமுற்றம்' என்றற்கு ஏற்புடைமை அறிக.
'மூலை யிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியர்என் றுந்தீபற
தவத்தில் தலைவர்என் றுந்தீபற'
என்றார் திருவுந்தியாரினும் (பா.12)
இதனால், சிவயோகத்தது பெருமை கூறப்பட்டது.
(இதன்பின் உள்ள 'அணுமாதி சித்திகள்' என்னும் பாடல் 'தானே அணுவும்' என்ற திருமந்திரத்தின் பொருளையே மீள அரை குறையாகக் கூறலின், நாயனாரது திருமொழியன்றாம்.)

எட்டா கியசித்தி யோரெட்டி யோகத்தாற்
கிட்டாப் பிராணனே செய்தாற் கிடைத்திடும்
மொட்டாம் நடுநாடி மூலத் தனல்பானு
விட்டால் மதியுண்ண வும்வரு மேலதே. **#654**
வசப்படாத பிராணனை அட்டாங்க யோகத்தால் வசப்படுத்தினால் அட்டமாசித்தி உண்டாகும். இனி மூலாதாரத்தில் உள்ள அக்கினி, மொட்டுப்போல் மூடியுள்ள நடுநாடியைத் திறந்து கொண்டு சூரிய மண்டலத்தையும் கடந்து சென்று அப்பால் நின்ற சந்திர மண்டலத்தில் உள்ள அமுதை உண்ணுதலும் யோகத்தாலே உண்டாவ தாகும்.

விளக்கவுரை

'சித்தி கிடைத்திடும்' என இயையும். 'கிட்டச் செய்தால்' என ஒரு சொல் வருவிக்க. 'மதி உண்ணவும் வரும்' என்றதனால், 'அவ்விடத்துத் திருவருளில் நிற்றலும் கூடுவதாம்' என்பது பெறப்பட்டது. எனவே, 'அவ்வாறு நிற்கவே முயல்க' என்ற தாயிற்று. 'மேலதாகிய மதி' எனக் கூட்டுக. மதி, ஆகுபெயர்.
இதனால், ஆஞ்ஞைக்குக் கீழ், சித்தி பெறும் அளவில் நிற்றல் சிறப்பில்லாமை கூறப்பட்டது.

சித்திக ளெட்டன்றிச் சேரெட்டி யோகத்தாற்
புத்திக ளானவை எல்லாம் புலப்படும்
சித்திகள் எண்சித்தி தானாந் திரிபுரை
சத்தி அருள்தரத் தானுள வாகுமே. ***#655***

அட்டாங்க யோகத்தால் அட்டமாசித்திகளே யன்றித் தத்துவ ஞானங்கள் பலவும் விளங்குவனவாம். 'சித்திகள்' என்பவற்றைத் தமக்கே பெயராக உடைய அட்டமாசித்திகளும், திருவருளேயாய் நிற்கின்ற அந்தச் சித்திகள், மும்மாயைகளினும் நின்று செயல் செய்யும் ஆதிசத்தி அருள் புரிதலால் உளவாகும்.

விளக்கவுரை

திரிபுரம் - மூன்று நகர். 'சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை' என்னும் மூன்று மாயையே இவ்வாறு உருவகிக்கப் படும்.
இம்மூன்றினும் நின்று செயலாற்றுதல் பற்றி ஆதிசத்தி, 'திரிபுரை' எனப்படுகின்றாள். 'திரிபுர சுந்தரி' எனக் கூறுதலும் உண்டு.
இதனால், 'அபர சித்திகள்' எனத் தக்க மருட் சித்திகளாகிய அட்டமா சித்திகளினும் மேற்பட்டு, 'பர சித்திகள்' எனத் தக்க அருட் சித்திகளும் உள்ளன' என்பது கூறி, அவற்றிற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

எட்டிவை தன்னோ டெழிற்பரங் கைகூடப்
பட்டவர் சித்தர் பரலோகஞ் சேர்தலால்
இட்டம துள்ளே இறுக்கல் பரகாட்சி
எட்டு வரப்பும் இடந்தானின் றெட்டுமே. ***#656***

பர சித்தியாகிய இந்த அருட் சித்தி எட்டனையும் அடைந்து, இவற்றால் சிவப்பேறும் கைகூடப் பெற்றவரே பர லோகத்தை அடைவராதலால் அவரே 'சித்தர்' (சித்திகளைப் பெற்றவர்) என்று சொல்லத் தக்கவர். அவர்கள் தங்கள் விருப்பம் எல்லாவற்றையும் சிவனது திருவருள் வியாபகத்துள் ஒடுக்கி அத்திரு வருளையே கண்டுகொண்டிருத்தலே உண்மை யோகக் காட்சியாம். மாயையைக் கடந்த இந்த அருட்சித்தியன்றி மாயைக்குட்பட்ட மருட்சித்திகள் அம்மாயைகளில் நின்று சிவத்தை அணுகுதல் கூடுமோ!

விளக்கவுரை

'அதனால், இந்தச் சித்தியையும் காட்சியையுமே பெற முயல்க' என்பது குறிப்பெச்சம். இங்குக் கூறியவை யெல்லாம் விசேட தீக்கை பெற்று யோக நெறியால் திருவருளையும் சிவத்தையும் மனத்தால் பாவித்து நிற்கின்ற யோகத்தில் ஞானமே யன்றி, நிருவாண தீக்கை பெற்றுக் கேட்டல் சிந்தித்தல் முதலியவற்றால் திருவருளையும், சிவத்தையும் அறிவால் உணர்ந்து நிற்கின்ற ஞானச் செய்திகள் அல்ல என்க.
'பரலோகம்' என்றது, உருத்திர லோகத்தை.
இதனால், பரசித்தியது உயர்வு கூறப்பட்டது.

மந்தரம் ஏறு மதிபானு வைமாற்றிக்
கந்தாய்க் குழியிற் கசடற வல்லார்க்குத்
தந்தின்று நற்கா மியலோகஞ் சார்வாகும்
அந்த வுலகம் அணிமாதி யாமே. ***#657***

'மேரு' எனப் பெயர் பெற்ற சுழுமுனை நாடியைச் சூழ்ந்து இயங்குகின்ற, 'சந்திர கலை, சூரிய கலை' என்னும் பெயரை உடைய இடைநாடி பிங்கலை நாடிகளின்வழி இயங்கும் பிராண வாயுவை அடக்கிச் சுழுமுனை நாடியின் உள்ளே செல்லுமாறு மாற்றி யமைத்தபின், மூலாதாரம் முதலிய பள்ளங்களில் தறிபோல நில்லாது, அங்ஙனம் நிற்கும் குற்றத்தின் நீங்க வல்லவர்க்குப் பின் ஞானத்திற்கு ஏதுவாகிய விருப்பத்தைத் தரும் பரலோக இன்பம் இப்பொழுதே உண்டாகிப் பின்பு அவ்வுலகத்தைச் சார்தல் உண்டாகும். அத்தகை யோர்க்கு அந்த உலக இன்பங்களே அணிமாதி அட்டசித்திகளாம்.

விளக்கவுரை

மேருவை, 'மந்தரம்' என்றார். 'குழியில் நிற்கும்' என ஒருசொல் வருவிக்க. மூலாதாரம் முதல் விசுத்தி ஈறாக நின்று சித்தி களை அடைதலின் இழிபுணர்த்துகின்றாராகலின், அவ்வா தாரங்களை, 'குழி' என்றார். தர, என்பது, 'தந்து' எனத் திரிந்து நின்றது. 'நிட்காமி யமாவது, உலகியலை விரும்பாது மெய்ந்நெறியை விரும்புதலே' என்றற்கு, அதனை, 'நற்காமியம்' என்றார். 'அக் கசடறு நற்காமிய லோகத்தை இன்றே தரப் பின் அதனைச் சார்வு ஆகும்' எனக் கூட்டுக.
இதனால், 'சிவயோகிகட்குத் தவயோகப் பேறே அட்டமா சித்திகளாய் நிற்கும்' என, பரசித்தியாவது இது என்பது கூறப்பட்டது.

முடிந்திட்டு வைத்து முயங்கில்ஓ ராண்டில்
அணிந்த அணிமாகை தானாம் இவனும்
தணிந்தஅப் பஞ்சினுந் தான்நொய்ய தாகி
மெலிந்தங் கிருந்திடும் வெல்லவொண் ணாதே. ***#658***

கீழ் ஆதாரங்களில் இறங்காமல், ஆஞ்ஞையிலே தன்னைச் சத்தியுடன் ஓர் ஆண்டின் முடியிட்டு வைத்து, அவளுடன் நீக்கமின்றியிருந்தால், அச்சத்தி இவனுக்கு அணுவிலும் அணுவாகின்ற 'அணிமா' என்னும் சித்தியாய் நிற்கும். அந்தச் சித்தியால் இவனும் அந்நிலையினனாவான். இந்த அருட்சித்தியைப் பெற்றவனை, மருட்சித்திகளால் வெல்ல இயலாது.

விளக்கவுரை

இவ் யாண்டு மேற்கூறிய யோக ஆண்டே என்க. 'அணிந்த' என்பது, 'அணுவாய் நின்ற' என்னும் பொருளது 'அணி மாவாகை' என்பது குறைந்து நின்றது. அருள் நிலையில் அணுவாத லாவது, எல்லாப் பொருளிலும் நுண்ணிதாய் நிற்கின்ற திருவருளை. தானும் அங்ஙனம் நுண்ணியனாய் நின்று பாவித்தல். முன்னர், 'தான்' என்றது, திருவருளை. தணிந்த - சிறிதாய. நொய்ம்மை, இங்கு சிறுமை மேல் நின்றது. நொய்யது - சிறிய பொருள்; 'நொய்யனாகி' என ஓதில் சிறக்கும். 'இருந்திடும்' என்னும் முற்று, ஆண்பாலில் வந்தது.

கொண்ட தொருபொருளைக் கோடிபடக் கூறுசெயின், கொண்டவனும்
அப்பரிசே கூறுபடும்;-கொண்ட
இருபொருளு மன்றியே இன்னதிது என்னா*(து)*
ஒருபொருளே யாயிருக்கும் உற்று.
-திருக்களிற்றுப்படியார், *24*

என வருதல் காணத்தக்கது. இதன் முதலடியும் ஈற்றடியும் உயிரெதுகை. இதனால், பரசித்திகள் எட்டனுள், அணிமாவாவது, சிவ சத்தி எப்பொருளிலும் நிறைந்திருத்தலை உணர்தல் என்பது கூறப்பட்டது.

ஆகின்ற அத்தனி நாயகி தன்னுடன்
கின்ற தத்துவம் எங்கும் புகலதாய்ச்
சாய்கின்ற காலங்கள் தன்வழி நின்றிடின்
மாய்கின்ற தையாண்டின் மாலகு வாகுமே. ***#659***

தான் காண்கின்ற எப்பொருளிலும், அணிமா வாகின்ற அந்த ஒப்பற்ற சத்தியுடனே சென்று, அச்சத்தியே தனக்கு நிலைக்களமாக, தனக்குக் கழிகின்ற காலம் முழுதும் அச்சத்திவழியே நிற்பானாயின், தற்போதங் கெடுதல் ஐந்தாண்டில் கூடும். அதுவே, பர லகிமாவாகும்.

விளக்கவுரை

'புகலது' என்பதில் அது, பகுதிப்பொருள் விகுதி. 'தன்' என்றது சத்தியை. மாய்தலுக்கு வினைமுதல் வருவிக்கப் பட்டது. 'அதுவே மா லகுவாகும்' என வேறு தொடராக்கி உரைக்க. தற்போதம் அறுதலால் உயிர் பொறை நீங்கி நிற்குமாகலின், இது, 'இலகிமா' எனப்பட்டது. இது முதல் பல

மந்திரங்கள் அந்தாதியாய் வருகின்றன.
இதனால், 'பரசித்திகளுள் பர லகிமாவாவது தற்போதம் கெடுதல்' என்பது கூறப்பட்டது.

மாலகு வாகிய மாய்வினைக் கண்டபின்
சாலொளி யாகித் தழைத்தங் கிருந்திடும்
பாலொளி யாகிப் பரந்தெங்கும் நின்றது
மேலொளி யாகிய மெய்ப்பொருள் காணுமே. *#660*

பர லகிமாவாகிய தற்போதம் கெடுதல் உளதாயின் ஏகதேச உணர்வாய்ப் பொருள்களைப் பற்றுதல் விடுதல்களைச் செய்து நின்ற உயிர், நிறைந்த பேரொளியாம் திருவருளேயாய் நிற்கும்; அதன் பயனாகப் பரம்பொருளாகிய சிவத்தை அறியும்.

விளக்கவுரை

'மாயனை, தானொளி' என்பன பாடமல்ல. மூன்றாம் அடியை முதலடியின் பின்வைத்து உரைக்க. 'நின்றது' என்பது வினையாலணையும் பெயர்.
இதனால், மேலதன் பயன் கூறப்பட்டது.

மெய்ப்பொருள் சொல்லிய மெல்லிய லாளுடன்
தற்பொரு ளாகிய தத்துவங் கூடிடக்
கைப்பொரு ளாகக் கலந்திடும் ஓராண்டின்
மைப்பொரு ளாகும் மகிமாவ தாகுமே. *#661*

இலகிமா சித்திக்குப்பின் மெய்ப்பொருளாகிய சிவத்தைச் சத்தி உணர்த்தி நிற்பாள். அவ்வுணர்வினால் அதனை அடைதல் ஓராண்டில் கைப்பொருளாகக் கிடைக்கும். அதுவே, ஒன்றும் தோன்றாத சூனிய நிலையாகிய பர மகிமா வாகும்.

விளக்கவுரை

'சொல்லிய' என்றனால், சொல்லுதல் அனுவாத முகத்தாற் பெறப்பட்டது. சொல்லுதல் - உணர்த்துதல். தத்பொருள் - அந்தப்பொருள்; என்பது பரம்பொருள். இதுவே மெய்யாதல் பற்றி மீள, 'தத்துவம்' என்றார். சத்திவழிச் சிவம் வெளிப்படுங்கால் முதற் கண் அஃது இன்னதென அறிய வாராமையானும், பிறிதொரு பொருளும் அங்குப் புலனாகாமை யானும் வெறும் சூனியமாய்த் தோன்றுமாதலின் அதனை, 'மைப்பொருள்' என்றார். மைப் பொருள் - விளங்காத பொருள். இது வியாபக நிலையின் தலைப் பாடாகலின், 'மகிமா' எனப்பட்டது.
இதனால், 'அருட்சித்தியாகிய பர மகிமா இது' என்பது கூறப் பட்டது.

ஆகின்ற காலொளி யாவது கண்டபின்
போகின்ற காலங்கள் போவது மில்லையாம்

மேனின்ற காலம் வெளியுற நின்றன
தானின்ற காலங்கள் தன்வழி யாகுமே. *#662*

எல்லாவற்றிற்கும் அடிநிலை ஒளியாகிய சிவத்தைக் கண்டபின், காலக் கழிவும் அங்ஙனம் கண்டவனது உணர்வில் தோன்றாது. இனி, எல்லாப் பொருள்கட்கும் மேலான தாகிய காலம், தன்னியல்பில் பொருள்களைத் தன்வழிப்படுத்து நடத்தி நிற்குமாயி னும், அவனது காலங்கள் அவனைக் கட்டுப்படுத்தாது அவன் வழியவேயாம்.

விளக்கவுரை

'போவதும் இல்லை' என்றது, அப்போக்கு உணர்வில் தட்டாமைபற்றி. மேல் நிற்றல், எல்லாப் பொருட்கும் மேலே நிற்றல். வெளி உறுதல், வேறிடத்தில் செயலாற்றுதல். 'தான் நின்ற' என்றது, 'தனக்கு நிலைக்களமான' என்றபடி. தன்வழியாதல், தனது மாற்றத்தை விளைக்கமாட்டாது நிற்றல். 'எல்லாவற்றினும் பெரிதாகிய காலத்தையும் அருள்வழி நின்று கடத்தலால், இது மகிமாவாயிற்று' என்பது விளக்கியவாறு. இதில் இரண்டடி யெதுகை வந்தது.
இதனால், மேலதற்குக் காரணம் கூறப்பட்டது.

தன்வழி யாகத் தழைத்திடும் ஞானமும்
தன்வழி யாகத் தழைத்திடும் வையகம்
தன்வழி யாகத் தழைத்த பொருளெல்லாம்
தன்வழித் தன்னரு ளாகிநின் றானே. *#663*

தற்போதம் இழந்து சிவத்தை உணர்ந்து நின்றால், ஞானம் மேன்மேல் பெருகும். அங்ஙனம் பெருகப் பெற்றவனால், உலகமும் நலம் பெறும். அங்ஙனம் நலம்பெற்ற உலகம் அவன் வழிப்படுமாயினும், அவன் அவற்றை ஆள நினையாது, சிவனது அருள்வழி நின்று அதுவேயாய் நிற்பன்.

விளக்கவுரை

'நின்றான்' என்பது காலவழுவமைதி.
இதனால், சிவத்தை உணர்ந்தவன் உலகியலால் தாக்கப் படாமை கூறுமுகத்தால், 'மகிமா' என்பதற்குப் பிறிதொரு காரணமும் கூறப்பட்டது.

நின்றன தத்துவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படையவை யெல்லாங்
கொண்டவை ஓராண்டுக் கூட இருந்திடில்
விண்டது வேநல்ல பிராத்திய தாகுமே. *#664*

தோன்றி நின்று தொழிற்படுவனவாகிய தத்துவங்கள் அனைத்திற்கும் தலைவியாகிய ஆதி சத்தியுடன் ஒற்றித்து நின்று கண்ட அத்

தத்துவங்களை எல்லாம் யோகி தனக்குக் கீழ்ப்பட்ட வையாக உணர்ந்து ஓராண்டுக்காலம் அவற்றின் தொழிற்பாடுகளைத் தன்னின் வேறாகக் கண்டுகொண்டிருப்பானாயின், அத்தத்துவங் களால் உளவாகும் வாதனை ஒழிந்து அவ்வொழிவே அருட்சித்திப் பிராத்தியாகும்.

விளக்கவுரை

'நின்றன தத்துவம், கண்டன பூதப்படை' என்பன இருபெயரொட்டு. 'தத்துவத்துக்கு நாயகி' என நான்காவது விரிக்க. தத்துவங்களை அவளுடன் நின்று காணுமாறு இலகிமாவில் சொல்லப்பட்டது. கண்டன - காணப்பட்டன. 'பூதம்' என்பது, ஏனைத் தத்துவங்கட்கு உபலக்கணம். 'எல்லாவற்றையும் கொண்டு' எனவும், 'அவற்றொடு கூட இருந்திடில்' எனவும் உருபுகள் விரிக்க. கொள்ளுதல், அவைகளை வியாப்பியமாக உணர்தல். கூட இருத்தல், ஒட்டின்றிக் கண்டிருத்தல். தத்துவங்கள் தன்னின் வேறாய்த் தனக்குக் கீழ்ப்பட்ட வழி, அவை அனைத்தும் தான் நினைத்தவாறே செயற் படுதல் பற்றி இது பிராத்தி எனப்பட்டது. இதனால், பர சித்திப் பிராத்தியின் இயல்பு கூறப்பட்டது.

ஆகின்ற மின்னொளி யாவது கண்டபின்
பாகின்ற பூவிற் பரப்பவை காணலாம்
மேகின்ற காலம் வெளியுற நின்றது
போகின்ற காலங்கள் போவது மில்லையே. ***#665***

பிராத்தியில் குண்டலி சத்தியையும் தன் வழிப்படக் கண்ட பின்பு, சுத்த மாயையில் உள்ள சுத்த காலமும் அக்குண்டலிக் குள்ளே அடங்கிவிடும். அதனால், சுத்த தத்துவ நிகழ்ச்சிக்கு ஏதுவாக நிகழ் கின்ற சுத்த காலங்களும் நிகழா. ஆதலால், இந்நிலையில் பாகுபட்ட அனைத்துலகங்களில் உள்ள பொருள்களையும் தன் அறிவினுள்ளே காணுதல் கூடும்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை இறுதியில் வைத்து உரைக்க. 'பகுகின்ற' என்பது, 'பாகின்ற' என மரூஉவாயிற்று. 'பூ' என்றது 'நிலம்' என்னும் பொருட்டாய்ப் புவனங்களை உணர்த்தி நின்றது. பூவிற் பரப்பவை - பல உலகங்களிலும் நிறைந்து கிடக்கின்ற பொருள்கள். இது வினையாலணையும் பெயர். 'மேனின்ற காலம்' என மேல் *(பா.661)* அசுத்த காலம் குறிக்கப்பட்டமையின். இங்கு, 'மேவுகின்ற காலம்' என்றது, அதற்கு 'மேலே பொருந்தியுள்ள காலம்' எனப் பொருள்பட்டு, சுத்த காலத்தைக் குறித்தல் அறிக. 'அசுத்த மாயையில்' உள்ள தத்துவங்கள் அனைத்தும் சுத்த மாயையிலும் உள்ளன என்பது மேலேயும் *(பா.407)* காட்டப்பட்டது. சிவயோகத்தால் குண்டலி சத்தியை

இனிது கண்டவரைச் சுத்த மாயை பந்தியாது என்றவாறு.
இதனால், 'சுத்த மாயா காரியங்களின் கட்டு நீங்கப் பெறுதலே பரசித்தி கரிமா' என்பது கூறப்பட்டது. இதனானே, மேல் 'கண்டன பூதப் படையவை' என்றது, அசுத்த தத்துவங்களையே யாதல் அறிக.
அவற்றை, 'பூதப்படை' என்றதும் அதுபற்றி

போவதொன் றில்லை வருவது தானில்லை
சாவதொன் றில்லை தழைப்பது தானில்லை
தாமத மில்லை தமரகத் தின்னொளி
ஆவது மில்லை அறிந்துகொள் வார்க்கே. *#666*

குண்டலி சத்தியை நன்கு காண வல்லவர்க்குப் பல்வேறு வகைப்பட்ட புவனங்களில் சித்திவழிப் போக்கு வரவு புரிதலும், எடுத்த உடம்பு இடையே வீழ்தலும், நுகர்ச்சிப் பொருள் களால் இன்புறுத்தலும், (மயக்கமுறுதலும்) துன்புறுதலும், யோகத்தில் நாடிகளில் பல இனிய ஓசைகளைக் கேட்டலும், மற்றும் ஆதாரக் காட்சிகளில் நிற்றலும், இவைபோல்வனவும் ஆகிய உலகியல்கள் சிறிதும் இல்லையாம்.

விளக்கவுரை

'இல்லை' என்றது, 'அவற்றால் உணர்வு திரிதல் இல்லை' என்றதாம்.
எனவே, 'இந்நிலை கரிமாவாதல் பொருந்தும்' என்பது காட்டியவாறு.
தழைத்தல், இன்புறுதல். தாமதம் - மயங்கல். இவை கூறவே துன்புறுதலும் பெறப்பட்டது. தமரம் - ஒலி; இது கடைக் குறைந்து நின்றது. 'அகத்து இன்' என்பது தமரம் என்பதனோடும் இயைந்தது மூன்றாம் அடி மூன்றாம் எழுத்தெதுகை.

அறிந்த பராசத்தி யுள்ளே அமரில்
பறிந்தது பூதப் படையவை யெல்லாம்
குவிந்தவை ஓராண்டுக் கூட இருக்கில்
விரிந்த பரகாயம் மேவலு மாமே. *#667*

அணிமா முதலாகப் பல நிலைகளிலும் தன்னால் அறியப்பட்ட சிவசத்தி, பின் யோகியின் உள்ளத்தில் நீங்காதிருப்பின், தத்துவங்களின் குறும்புகள் முற்றிலும் நீங்கினவாம். அங்ஙனம் அவை நீங்கிய நிலையில் அந்தச் சத்தியுடன் அமைதியுற்று இருப்பின், ஓராண்டுக் காலத்தில் நாதத்திற்கு மேல் அளவின்றிக் கிடக்கின்ற அருள்வெளி வியாபகத்தை அவன் அடைதல் கூடுவதாம்.

விளக்கவுரை

முன்னிரண்டடிகளில் கரிமா நிலையை அனுபவித்த வாறு.
'இந்நிலையில் அமைதிதோன்றும்' என்றற்கு, 'குவிந்தவை' என்றார்.
அவை - அவைபற்றிய உணர்வுகள். 'அவை குவிந்து' என மாற்றுக.

'குவிய' என்பது 'குவிந்து' எனத் திரிந்து நின்றது. பர காயம் - எல்லாப் பொருட்கும் மேலே உள்ள ஆகாயம். 'மேவலும்' என்ற உம்மை, சிறப்பு. விரிந்த பர காயம் மேவலின் மிக்க பயனில்லை யாதலின். இது 'கரிமா' எனப்படும். மூன்றாம் அடி உயிரெதுகையும், மூன்றாமெழுத்தெதுகையும் பெற்றது. அடிமுரண் ஆதலும் அறிக.
இதனால், பர சித்தியாகிய கரிமாவின் பயன் கூறப்பட்டது.

ஆன விளக்கொளி யாவ தறிகிலர்
மூல விளக்கொளி முன்னேயு டையவர்
கான விளக்கொளி கண்டுகொள் வார்கட்கு
மேலை விளக்கொளி வீடெளி தாம்நின்றே. ***#668***

எல்லா ஒளிகட்கும் மூல ஒளியாகிய திருவருளை அனாதியே தம்மிடத்து உடைய அனைவரும் அது தமக்கு நலம் செய்யும் ஒளியாயிருத்தலை அறிந்திலர். அதனைச் சிவயோகப் பயிற்சியால் காட்டுத் தீப்போன்ற பேரொளியாகக் கண்டு மகிழ்பவர் கட்குப் பரஞ்சோதியாகிய சிவ பரம்பொருளில் ஒன்றுபடுகின்ற முத்தி எளிய பொருளாய் நிலைபெற்று நிற்கும்.

விளக்கவுரை

'எல்லா விருப்பத்தினும் வீடு பெறும் விருப்பே உயர் வுடையதாகலின், அது கிடைக்கப் பெறுதலே பிராகாமியமாம்' என்ற வாறு. 'எளிதாய் நிற்கும்' என விகுதி பிரித்துக் கூட்டி உரைக்க. இதன் கண் இடையிட்டு எதுகை வந்தது. 'கால விளக்கொளி' என்பதும் பாட மாதலின், அதனையே கொண்டு, முதலடியை 'ஆல விளக்கொளி' என ஓதினும் ஆம். ஆலம், 'அகலம்' என்பதன் மரூஉமாம். காலம் - பக்குவம் எய்திய காலம்.
இதனால், பரசித்திப் பிராகாமியம் கூறப்பட்டது.

நின்ற சதாசிவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படையவை எல்லாம்
கொண்டவை ஓராண்டுக் கூடி யிருந்திடிற்
பண்டை அவ் வீசன் பரத்துவ மாகுமே. ***#669***

முன்னைச் சித்திகளில் பல்லாற்றானும் நீங்கிப் போன தத்துவங்களையெல்லாம் ஆஞ்ஞையில் யோகிக்குத் துணை யாய் நிற்கின்ற சிவசத்தி வழியவாகக் கொண்டு அவற்றோடு ஓராண்டுக் காலம் கூடியிருப்பானாயின், அவனுக்கு, எப்பொருட்கும் முன்னோனாகிய சிவனது இறைமைத் தன்மைகள் எல்லாம் கிடைப்பனவாகும்.

விளக்கவுரை

எனவே, 'இதுவே பர சித்தியுள் ஈசத்துவமாம்' என்ற தாயிற்று. ஐந்தொழில் நிலையில் மேற்பட்டது சதாசிவ நிலையாதலின், அதனையே எடுத்துக் கூறினார். 'பூதம்' என்றது இங்குத் தத்துவம் முப்பத்தாறனையும். 'எல்லாவற்றையும், அவற்றொடு' என உருபுகள் விரிக்க. 'நாயகி, தன்னுடன் (யோகி) கண்டன எல்லா வற்றையும் கொண்டு அவற்றொடு கூடியிருந்திடில்' என்க. தத்து வங்கள் எல்லாவற்றையும் சத்தியே கைக்கொண்டு அவற்றொடு கூடியிருத்தலாவது, 'இவன் செய்தியெலாம் என்செய்தி என்றும், செய்தது எனக்கு இவனுக்குச் செய்தது என்றும்' (சிவஞானசித்தி. சூ. *10)* யோகியின் செயல் அனைத்தையும் தன் செயலாக ஏற்று அனைத்துச் செயல்களையும் அவனுக்கு நலமாக அமையும் வகையிலே புரிதலாம். 'ஓராண்டுக் கூடி இருந்திடில்' என்றது, 'யோகி தன் செயல்கள் அனைத்தையும் சத்தியின் செயலாக ஒப்புவித்து நிற்றல் வேண்டும்' என்பதனைச் சத்திமேல் வைத்து ஓதியவாறு. 'பண்டைய தத்துவம்' என இயையும். அவை சிவனது பரத்துவம், தன் வயத்தனாதல் முதலியவையாம். இவைகளைப் பெறுதல் ஈசத்துவமாதல் வெளிப்படை. 'தத்துவ மாகுமே' என்பது பாடம் அன்று.
இதனால், பரசித்தியுள் ஈசத்துவத்தின் இயல்பு கூறப்பட்டது.

ஆகின்ற சந்திரன் தன்னொளி யாயவன்
ஆகின்ற சந்திரன் தட்பமு மாயிடும்
ஆகின்ற சந்திரன் தன்கலை கூடிடில்
ஆகின்ற சந்திரன் தானவ னாமே. ***#670***

ஆஞ்ஞையாகிய சந்திர மண்டலத்தை அடைந்த யோகி அங்கு நின்றும் மீளாது நிற்குமிடத்து முதற்கண் அம் மண்டலத்தின் ஒளியைப் பெற்றுப் பின்னர் அதன் குளிர்ச்சியைப் பெறு வான். அதன்பின் அம்மண்டலத்தின் பகுதிகளை ஒவ்வொன்றாக அடைவானாயின், இறுதியில் அச்சந்திர மண்டலமே தானாய் விடுவான்.

விளக்கவுரை

எனவே, 'இங்கு, சிவம்' என்பது ஆஞ்ஞை யோகத்தில் விளங்குகின்ற தியானப் பொருள் என்பதும், 'சத்தி' என்பது, அப்பொருளின் அருள் என்பதும் போந்தன. போதரவே, தன்வயத்தனாதல் முதலியனவும் அவ்வளவில் ஏற்புடைய குணங் களாதல் பெறப்படும். ஆகின்ற - உண்டாகின்ற; கிடைக்கின்ற. 'ஒளி யாயவன்' எனவே, ஒளியாதலும் அனுவாத முகத்தாற் பெறப்பட்டது. கலை - கூறு. அவையாவன, ஆஞ்ஞைக்குமேல் உள்ள இடங்கள். அவை, 'நெற்றி, தலையின் முற்பக்கம், பிற்பக்கம், வலப்பக்கம், இடப் பக்கம், பிரமரந்திரம்' எனப் பலவாறு யோக நூல்கள் கூறும். இவ் அனைத்திடங்களிலும் தொடர்பு

கொண்டு நிற்கும் ஆற்றலை, 'ஆயிர இதழ்த் தாமரை' என உருவகித்தும் கூறும்.
இதனால், ஓராண்டில் மேலது கைவருமாறு கூறப்பட்டது.

தானே படைத்திட வல்லவ னாயிடும்
தானே அளித்திட வல்லவ னாயிடும்
தானேசங் காரத் தலைவனு மாயிடும்
தானே சிவனெனுந் தன்மைய னாமே. ***#671***

ஈசத்துவத்தைப் பெற்ற யோகி இறைவன் செய்யும் செயலெல்லாம் தானே செய்ய வல்லவனாவான். இதனால், 'சிவன் இவனே' என உலகத்தாரால் எண்ணப்படும் தன்மை உடையவனாய் இருப்பன்.

விளக்கவுரை

'படைத்திடும், அளித்திடும்' என்னாது, 'வல்லவ னாயிடும்' என்றதனால், 'அத்தன்மையனாதலன்றி, அச்செயல் களைச் செய்ய அவன் முற்படான்' என்பது கூறப்பட்டதாம். பவ யோகியின் ஈசத்துவம் இதனின் மிகச் சிறியதாயினும் அதுகொண்டு அவன் பலவும் செய்ய முற்பட்டு, அச்செயல்களால் வினையைத் தேடிக்கொள்வான்; 'சிவயோகி பிறப்பிற்கு அஞ்சுதலின், இது கொண்டு யாதும் செய்ய முற்படான்' என்க.

எல்லாம் அறியும் அறிவுறினும் ஈங்கிவர் ஒன்*(று)*
அல்லா தறியார் அற. -திருவருட்பயன், *93*

என்றது இங்கே நினைக்கத்தக்கது. இவ்வாறாகவே உலகத்தார் இவனை, 'சிவனே' என்றும், 'சிவனது கூற்றின் அவதாரம்' என்றும் கூறுவனவெல்லாம் மயக்க உரையேயன்றி, உண்மை யுரையாகா என்றற்கு, 'தானே சிவன்' என்று ஒழியாது, 'தானே சிவன் எனும் தன்மைய னாமே' என்றார். 'எவ்வாற்றானும் பிறப்பது உயிரே யன்றி, இறையாகாது' என்பது கருத்து.
இதனால், ஈசத்துவத்தின் பெருமை கூறப்பட்டது.

தன்மைய தாகத் தழைத்த கலையினுள்
பன்மைய தாகப் பரந்தஐம் பூதத்தை
வன்மைய தாக மறித்திடில் ஓராண்டின்
மென்மைய தாகிய மெய்ப்பொருள் காணுமே. ***#672***

ஈசத்துவத்தை அடைந்தோன், பலவாகப் பரந்து விரிந்து கிடக்கின்ற தத்துவங்களை, சத்தியின் தன்மையால் அமைந்த நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகளுள் அடங்கி நிற்பனவாக உணர்ந்து ஓராண்டு நிற்பானாயின், சூக்குமப் பொருளாகிய மெய்ப்பொருளைக் காண்பான்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதலில் வைத்து உரைக்க. 'பூதம்' என்றது தத்துவத்திற்கு உபலக்கணமாய் பின் ஏனை நான்கு அத்துவாக்களுக்கும் உபலக்கணமாயிற்று. தத்துவங்களுள் மிகவும் தூலமாய்ப் பலராலும் அறிந்துரைக்கப் படுவன பூதங்களாதல் பற்றி அவற்றையே பலவிடத்தும் எடுத்தோதினார். உலகம் முழுதும் பஞ்ச பூதங்களுள் அடங்குவனவாகக்கொண்டு, அவற்றை அதிதேவர்கள் வழி வயப்படுத்தல் பொதுநெறியாகிய வேதநெறி; உலகம் அனைத்தும் சிவ சத்திக்கு நேரே தொடர்புடைய பஞ்ச கலைகளில் அடங்கி நிற்பனவாக வைத்து அவற்றின் அதிதேவர்வழி அனைத்துப் பொருள்களையும் வயப்படுத்துதல் உண்மை நெறியாகிய சைவநெறி. சிவசக்தியின் பெருமை உணரப்படுதல் சைவ நெறியில் உள்ள சிறப்பு. அதனால், 'தன்மையதாகத் தழைத்த கலை' என்றார். பூதங்களை வயப்படுத்துதலால் மருட்சித்திகளன்றி, அருட்சித்திகள் சித்தியா. அதனால் அருட்சித்தி வேண்டுவோர் சைவ நெறியிலே நிற்றல் வேண்டும். அங்ஙனம் நின்று அருட்சித்தி பெற்றோர் சிவனை அடை தற்குத் தடையில்லையாகலின், 'பூதத்தைக் கலையினுள் மறித்திடில் மெய்ப்பொருள் காணும்' என்றார். இதனானே, நிலம் முதலிய பூதங்கட்குச் சொல்லப்படும் முறைமைகள் எல்லாம், நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகட்கும் ஏற்புடையனவாதல் அறியப்படும். மென்மை இங்கு நுண்மையைக் குறித்தது.

இதனால், பரசித்தியுள் ஈசத்துவத்தின் பயன் கூறப்பட்டது.

மெய்ப்பொரு ளாக விளைந்தது வேதெனின்
நற்பொரு ளாகிய நல்ல வசித்துவம்
கைப்பொரு ளாகக் கலந்த உயிர்க்கெல்லாம்
தற்பொரு ளாகிய தன்மைய னாகுமே. ***#673***

ஈசத்துவத்தால் மெய்ப்பொருட் காட்சி கிடைத்த பின், அதனால் விளையும் பயன் யாது எனின், சித்திகள் எல்லா வற்றுள்ளும் சிறந்த 'வசித்துவம்' என்னும் சித்தி பெறுதலேயாம். வசித்துவ சித்தியைப் பெற்றோன், இறைவனுடையவாய்ப் பொருந்தி யுள்ள எல்லா உயிர்கட்கும் தானே மெய்ப்பொருள் போலும் தன்மையை உடையவனாவான்.

விளக்கவுரை

என்றது, 'எல்லா உயிர்களும் அவனையே இறைவனாகக் கருதி அச்சமும் அன்பும் உடையவாய் அவன்வழி நிற்கும்' என்பதாம். கைப்பொருளாகக் கலந்த உயிர்களாவன ஈசத் துவத்தால் தனக்குக்கீழ்ப்பட்டு நின்ற உயிர்கள். பின்னிரண்டடிகள் வசித்துவமாவது இதுவென்பதை விளக்கின. முதல் அடியில் குற்றிய லுகரம் கெடாது நின்று உடம்படு

மெய் பெற்றது. இம்மந்திரம் வல்லின எதுகை பெற்றமை காண்க. இதனால், வசித்துவ சித்தியின் இயல்பும், அச்சித்தி கைவருமாறும் கூறப்பட்டன. மருட்சித்தி, மருளுடைய உயிரை யன்றி, அருளுடைய உயிரை வசம் செய்யாது. அருட்சித்தி, அனைத்து உயிரையும் வசம் செய்யும். இதுவே அவை தம்முள் வேற்றுமை என்க.

தன்மைய தாகத் தழைத்த பகலவன்
மென்மைய தாகிய மெய்ப்பொருள் கண்டிடின்
புன்மைய தாகிப் புலன்களும் போயிட
நன்மைய தாகிய நற்கொடி காணுமே. ***#674***

மேற்கூறியவாறு பல்லுயிர்கட்கும் மெய்ப் பொருள் தன்மையனாய்ப் பெருமை பெற்று நிற்கின்ற அருளொளிக் கதிர வனாகிய சிவயோகி மெய்ப்பொருளைக் கண்டவனாதலின், ஐம்புல ஆசைகள் அருவருக்கத்தக்க பொருள்களாய்த் தலைகாட்டா தொழிய, ஞானஉருவான திருவருளையே நோக்கி நிற்பான்.

விளக்கவுரை

'கண்டிடின்' என்னும், *'செயின்'* என்னும் எச்சம் காலம் உணர்த்தாது. காரண மாத்திரையில் நின்று, *'அதனால் அதன் காரியம் நிகழ்தல் உறுதி'* என்பதை விளக்கி நின்றது; ஒருவன் தான் மெலியனாயிருந்தும் தனது நிலையை அறியாது வலியவன் மேற் சென்றபொழுது, அதனைக் கண்டோர் *'அவன்மேற் சென்றானாயின், இவன் விரையக் கெடுவான்'* என்பதிற் போல. *'புன்மையது'* என்பது, பன்மை ஒருமை மயக்கம். நன்மை - ஞானம்; *'கொடி'* என்பது உருவகமாய் அஃறிணையாயினமையின், அதன்கண் இரண்டன் உருபு தொக்கது. *'பகலவன் கண்டிடின் காணும்'* என்க.

இதனால், அருட் சித்தியாகிய வசித்துவம் பெற்றோர், அதனால் உலகப் பயன் கொள்ள நினையாமை கூறப்பட்டது.

நற்கொடி யாகிய நாயகி தன்னுடன்
அக்கொடி ஆகம் அறிந்திடில் ஓராண்டுப்
பொற்கொடி யாய புவனங்கள் போய்வருங்
கற்கொடி யாகிய காமுக னாமே. ***#675***

ஞான உருவான திருவருளோடு கூடி, அதனது இன்பத்தை யோகி ஒருவன் அறிவானாயின், அதன் பின் ஓராண்டுக் காலத்தில் பொன்மயமான கொடிகளும், தருக்களும் நிறைந்த விண்ணுலகங்களில் சென்று மீள வல்லவனாவான். ஆயினும், அவன், மேருவை அடைந்து பொன்னிறத்தைப் பெற விரும்புகின்ற காக்கையினது ஆசைபோன்ற அவ்வாசையை உடையனாவனோ!

விளக்கவுரை

அஃதாவது, 'அச்சித்தியின் வழி விண்ணவர் உலகங்களிற் சென்று மீளுதலால் தானும் விண்ணவன் எனச் சொல்லப் படும் பெருமையை அடைய விரும்புவனோ! விரும்பான்' என்பதாம். ஆகம் - உரு; இயல்பு. 'வரும்' என்றது, 'வரத்தக்க ஆற்றல் பெறும்' என்றபடி. கல் - மலை; அஃது இங்கு, மேருவைக் குறித்தது. இதனை அடுத்துள்ள 'கொடி' காகம். காகம் மேருவை அணுகியவிடத்து அதன் ஒளியால் தானும் பொன்னிறம் உடையதுபோலத் தோன்றுதலன்றி, உண்மையில் தன் நிறம் மாறப் பெறுதல் இல்லை. அதுபோல, மனித உடம்பு விடப்படுங்காறும் யோகி உண்மையில் தேவனாதல் இல்லை, ஆகவே, இவ்வுடம்பில் நின்றே, 'தேவன்' எனப்பெறும் பொய்யான புகழைச் சிவயோகி விரும்பான் என்பதாம். ஏகாரவினா எதிர்மறைப் பொருள் உணர்த்திற்று. இனி ஏகாரத்தை ஈற்றசையாக்கின், 'கற்கொடி ஆகிய' என்பதற்குக் 'கல்லின்மேல் முளையாத கொடிபோலத் தனது உள்ளத்தில் தோன்றாத ஆசையையுடையவனாவன்' என உரைக்க. 'தோன்றாத ஆசையை உடையவன்' என்பது, 'ஆசை தோன்றாமை உடையவன்' என்னும் கருத்தினதாம்.

இதனால், 'அட்டமா சித்திகளும் கைவந்தவர்கட்குப் பிற உலகங்களிலும் செல்லும் ஆற்றல் கூடும்' என்பதும், 'அது கூடினும், சிவயோகி, அவ்வாறெல்லாம் உழலும் தன்மையன் அல்லன்' என்பதும் கூறப்பட்டன.

காமரு தத்துவ மானது கண்டபின்
பூமரு கந்தம் புவனம தாயிடும்
மாமரு வுன்னிடை மெய்த்திய மானனாம்
நாமரு வும்ஒளி நாயக மானதே. ***#676***

ஈசத்துவ சித்தியிற்றானே, விரும்பத் தக்க மெய்ப் பொருட்காட்சி கிடைத்து விடுதலால், அதன்பின் எல்லா உலகமும், பூவினுள் அடங்கித் தோன்றும் மணம்போல உன்னிடத்தே அடங்கித் தோன்றும். அதனால் அவ்வுலகங்கட்கெல்லாம் வியாபகமாம் தன்மையைப் பொருந்திய உன்னிடத்தில், அவற்றிற்கெல்லாம் நீயே உண்மைத் தலைவனாய்நிற்க, புகழ்பொருந்திய அருள் ஒளியே தலைமைபெற்று நிற்கும்.

விளக்கவுரை

'உலகங்கட்கும், சிவயோகிக்கும் இடையே உள்ள இழி வுயர்வுகள் மிகப் பெரியவாகலானும், அவனது இச்சா ஞானக் கிரியைகட்குத் திருவருளே முதலாய் நிற்றலானும் அவன் வசித்துவ சித்தியால் உலகப் பயனை நாடான்' என்றவாறாம். தத்துவம் - மெய்ப் பொருள். 'புவனம் பூ மரு

கந்தம் ஆயிடும்' என்க. இதனுள் ஆக்கம், உவமை குறித்து நின்றது. மா - பெருமை; 'அத்தகைய மா மருவு உன்னிடை' எனச் சுட்டு வருவித்துக்கொள்க. மெய்த்தல் - உண்மையாகி நிற்றல். 'மெய்த்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத் தலாயிற்று. 'இயமானன்' என்பது இழிவழக்கில், 'எசமானன்' என வழங்கும். 'வேட்போன்' என்பது இச்சொல்லின் பொருளாயினும், இது 'தலைவன்' என்னும் பொருளில் வழங்கும். நா - புகழ்; ஆகு பெயர். 'நாம் மருவும்' எனப் பிரித்து, நாயனார் சிவயோகியைத் தம்மோடு உளப்படுத்துக் கூறியதாகவும் உரைக்கலாம். இதனால், மேலதற்குக் காரணம் கூறப்பட்டது.

நாயக மாகிய நல்லொளி கண்டபின்
தாயக மாகத் தழைத்தங் கிருந்திடும்
போயக மான புவனங்கள் கண்டுபின்
பேயக மாகிய பேரொளி காணுமே. *#677*

சிவயோகியானவன் எல்லாவற்றுக்கும் தலைமை யான நல்ல திருவருள் ஒளியைக் கண்டபின் அதனையே தனக்கு உறைவிடமாகக் கொண்டு அதனிடத்தே இருத்தலல்லது, அவரவரது புண்ணியங்கட்கு ஏற்ப அவரவருக்கு உரியவாய் உள்ள உலகங்களிலே சென்று, அவற்றைக் கண்டு, பின், அவைகளில், காவல் மிகுதியால் அச்சத்தைத் தரும் தலைமை இடத்தில் வீற்றிருக்கின்ற அவற்றின் தலைமைக் கடவுளரைக் காண்கின்ற அச்செயலை விரும்புவானோ! விரும்பான்.

விளக்கவுரை

'அகமான புவனங்கள் போய்க் கண்டு' என்க. இதில், 'அகம்' என்றது, 'உரிமையாய இடம்' என்றவாறு. பே, 'அச்சம்' எனப் பொருள்தரும் உரிச்சொல்.(தொல். சொல். *365)* உரிச்சொல்லாதலின் யகர உடம்படுமெய் பெற்றது. அகத்துள்ளாரை 'அகம்' என்றும், ஒளியுடையாரை 'ஒளி' என்றும் பான்மை வழக்காற் கூறினார். 'பேரொளி' என்பதில் பெருமை, தலைமை.

இதனால், 'திருவருளை அடைந்த சிவயோகி, ஏனைப் பவயோகிகள் போலப் பல புவன இன்பங்களையும், புவனபதிகளது அருளையும் நாடுதல் இல்லை' என்பது கூறப்பட்டது. 'கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு' *(தி.8* திருச்சதகம், *2)* என்றற் றொடக்கத்து அருட்டிரு மொழிகள் இங்கு நினைவுகூரத் தக்கன.

பேரொளி யாகிப் பெரியஅவ் வெட்டையும்
பாரொளி யாகப் பதைப்பறக் கண்டவன்
தாரொளி யாகத் தரணி முழுதுமாம்
ஓரொளி யாகிய காலொளி காணுமே. *#678*

பவயோகியர்க்குப் பெரும் பேறாய்த் தோன்றி விரிந்து விளங்குகின்ற,

மேற்சொல்லிய உலகங்கள் எட்டனையும் தான் இருக்கும் நிலவுலகத்தோடு ஒத்தனவாகவே உணர்ந்து, அவற்றின் மேல் மனம் செல்லாது அடங்கிய சிவயோகி, இந்நிலவுலகம் முழு தினும் பொருந்தியுள்ள ஒன்றான ஒளியாகிய பிராண வாயுவின்வழிக் காணத்தக்க குண்டலி ஒளியைப் படிமுறையில் பெருகக் காண்பான்.

விளக்கவுரை

'ஆகி' என்னும் எச்சம், 'பெரிய' என்னும் பெயரெச்சக் குறிப்பைக் கொண்டது. மேல், 'புவனங்கள்' என வாளா கூறியதனை, 'எட்டு' என வரையறுத்துணர்தல் வேண்டும் என்பார், 'அவ் எட்டையும்' எனச் சுட்டிக் கூறினார். அட்டமா சித்தி வகையில் உலகங்கள் எட்டாமாறு மேலே *(பா.616)* காட்டப்பட்டது.

'பாரொளியாக' என்பதில், 'ஒளி' என்பது 'புலம்' என்னும் பொருட்டாய் நின்றது, இதனுள்ளும் ஆக்கம், உவமைப் பொருட்டு. பதைப்பு மனோவேகம்; அஃதாவது ஆசை. நிலவுலகத்தில் உயிர்களை நிலவச்செய்து அதற்கு விளக்கத்தைத் தருவது பிராணவாயுவாகலின், அதனை, 'தரணி முழுதுமாம் ஓரொளி' என்றார். 'கால்ஒளி' என்பதனை, 'காலால் அறியப்படும் ஒளி' என விரிக்க. யோகத்தின் பயன், பிராணாயாமத்தால் குண்டலி ஒளியை அகத்துக் காணு தலாதலின், அங்ஙனம் காணப்படும் ஒளியை, 'காலொளி' என்றார். 'தாரொளியாக' என்பதனை, 'காரொளி' என்பதன்பின் கூட்டுக. தார் - ஒழுங்கு; என்றது படிமுறையை. யோகியர்க்குக் குண்டலி ஒளி, 'மின்னல், விண்மீன், விளக்கு, பகலவன், திங்கள்' என்னும் இவற்றின் ஒளிபோலப் படிமுறையாற் பெருகித் தோன்றும் என்பது மேலே *(612)* கூறப்பட்டது. இக்காட்சியை இங்குவந்து கூறியது, 'பரசித்தி' எனத்தக்க வகையில் அருள் நிலை அனைத்தும் கைகூடிய பின்பே யோகத்தில் மனம் ஒருங்கி அதனை முற்றுப்பெறச் செய்யும் என்பது உணர்த்துதற்கு. இது, புதியதோர் அரண்மனையிற் புகுந்தவன் முதற்கண் அதனை முழுதும் சென்று கண்ட பின்னரே உரிய இடத்தில் அமர்ந்து இன்புறுதல் போல்வதாம்.

இதனால், பரசித்தி முழுதும் கைவரப் பெற்றபின்பே சிவயோகம் முற்ற முடிவதாதல் கூறப்பட்டது.

'உலகத்தை உணரும் பவயோகத்தினும், திரு வருளை உணரும் சிவயோகமே சிறந்தது' என்பதை உணர்த்துதற்கு அத்திருவருளே யோகத்திற்கு முதலாய் நிற்குமாற்றை இவ் வதிகாரத்துள் இங்கு நின்றும் பதினெட்டுத் திருமந்திரங்களால் உணர்த்துகின்றார்.

காலோ டுயிருங் கலக்கும் வகைசொல்லிற்
காலது வக்கொடி நாயகி தன்னுடன்

காலது ஐஞ்ஞூற் றொருபத்து மூன்றையும்
காலது வேமண்டிக் கண்டஇவ் வாறே. *#679*

பிராணவாயுவும், உயிரும் தம்முள் இயைந்த வாற்றைக் கூறுமிடத்து, பிராணவாயு, உடம்பில் உள்ள நாடிகள் அனைத்திலும் நிறைந்து நிற்கின்ற சிவசத்தியுடன் முன்னர்ப் பொருந்திப் பின்னர், அஃது 'ஐஞ்ஞூறு' என்றும், 'பத்து' என்றும், 'மூன்று' என்றும் சிறந்தெடுத்துக் கூறப்படுகின்ற நாடிகளில் நிறைந்து நிற்கும் வகையினாலேயாம்.

விளக்கவுரை

'கொடி' என்றது, உடம்பிற் பொருந்தியுள்ள நாடியை. அந்நாடிகள் இவை என்பது நூல்களின்வழி நன்கறியப்பட்டது ஆதலின், 'அக்கொடி' எனப் பண்டறி சுட்டாற் கூறினார். கொடி நாயகி - கொடிகளில் நிறைந்து நிற்கும் தலைவி. 'நாயகி தன்னுடன்' என்பதன்பின், 'ஆய்' என்பது எஞ்சிநின்றது. உடம்பில் உள்ள நாடிகள் 'எழுபத்தீராயிரம்' என்பதுயோகநூல் துணிவு. அவற்றுள், ஐந்நூறு சிறந்தன. அவற்றுள்ளும் சிறந்தன பத்து. அவைமுன்னே *(பா.562)* சொல்லப்பட்டன. அவற்றுள்ளும் சிறப்புடையன மூன்று; அவை, 'இடை, பிங்கலை, சுழுமுனை' என்பன. 'ஐந்நூற் றொருபத்து மூன்று' என்றது உம்மைத் தொகையேயன்றி, அத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையன்று. மண்டுதல் - செறிந்து நிற்றல். கண்ட - காணப்பட்ட. இவ்வாறே - இவ்வாற்றினாலேயாம். இத்திரு மந்திரத்துள் சத்தியின் செயல்களை வாயுவின்மேல் வைத்துச் சொற் பொருட் பின்வருநிலையாக அருளிச்செய்தார். இதனுள் குற்றிய லுகரம் பலவிடத்தும் கெடாது நின்று, உடம்படு மெய் பெற்றது.
இதனால், 'யோகத்திற்கு முதலாகிய பிராண வாயுவை யோகிக்குக் கூட்டுவித்துப் பின் காத்து நிற்பது திருவருளே' என்பது கூறப்பட்டது. எனவே, உடலில் உள்ள ஆற்றல்கள் பலவும் இயற்கையாய் அமைந்தன எனக் கருதும் பவயோகிகளது கருத்தை விலக்கி, உண்மை யுணர்த்தியவாறாயிற்று.

ஆறது வாகும் அமிர்தத் தலையினுள்
ஆறது ஆயிரம் முந்நூற் றொடைஞ்சுள
ஆறது வாயிர மாகும் அருவழி
ஆறது வாக வளர்ப்ப திரண்டே. *#680*

யாறு போல உண்டாகின்ற விந்துவாகிய அமுதத்தை உடைய ஆஞ்ஞையில் அந்த யாறு பாய்கின்ற வாய்க்கால்கள் 'ஆயிரமும், முந்நூறும், ஐந்தும்' என்று கூறத்தக்க அளவில் உள்ளன. அந்த அரிய வழியிலே அந்த அமிர்த யாறு பெருகிப் பாயச் செய்து உடம்பை வளர்ப்பன இடை நாடி பிங்கலை நாடி என்னும் இருநாடிகளில் நிற்கும்

இரு சத்திகளே யாகும்.

விளக்கவுரை

ஆகும் - உண்டாகின்ற. 'ஆறு' என்பது, 'யாறு, வழி' என்னும் பொருள்களில் மாறி மாறி வந்தன. ஓடு, எண்ணிடைச்சொல். அஞ்சாவன, இடை, பிங்கலை, சுழுமுனைகளோடு, கண்ணில் நிற்கும் காந்தாரியும், உடம்பெங்கும் நிற்கும் அத்தியும் என்க. பின்னர் 'ஆயிரமாகும்' என்றது, முன்னர்க் கூறிய முந்நூறு அஞ்சு என்பவற்றிற்கும் உபலக்கணமாய் நின்றது.

இதனால், 'சிவ சத்தி, இடை நாடி பிங்கலை நாடிகளில் நின்று பிராணனை இயக்குமாற்றால் உடல் உறுதிக்கு இன்றியமையாத விந்துவை உண்டாக்கிப் பெருக்குவது' என்பது உணர்த்து முகத்தால், 'யோகத்தில் பருகத் தக்க அமுதத்தை முன்பே தோற்றி வளர்ப்பது திருவருளே' என்பது கூறப்பட்டது. இதனுள்ளும், 'பிராண வாயு இடைகலை பிங்கலை வழியாக இயங்கி உடலை நிலைப்பித்தல் இயற்கை' எனக் கருதுவாரது கருத்து விலக்கப்பட்டதாம்.

இரண்டினின் மேலே சதாசிவ நாயகி
இரண்டது கால்கொண் டெழுவகை சொல்லில்
இரண்டது ஆயிரம் ஐம்பதொ டொன்றாய்த்
திரண்டது காலம் எடுத்தது அஞ்சே. ***#681***

இடைகலை பிங்கலைகளின்மேல் சுழுமுனைத் தலையில் நிற்கும் சத்தி, இடையும், பிங்கலையுமாகிய இரண்டன் வழியாகப் பிராணனை இயக்கிச் செயல் புரிகின்ற முறையைச் சொல்லுமிடத்து, இரண்டாகிய அந்தப் பிராணன் ஆயிர நாடிகளோடும், ஐம்பத்தோர் அக்கரங்களோடும் கூடியுள்ள ஆறு ஆதாரங்களில் பொருந்தி, ஐந்து காலத்தைக் கொண்டிருக்கும் வகையிலேயாம்.

விளக்கவுரை

'ஆயிரம்' என்றது, 'பல' என்றவாறு. ஐம்பத்தோர் அக்கரங்களும், ஐந்து காலமும் முன்னே *(பா.573, 627)* கூறப்பட்டன. அவற்றை இங்கு மீளக் கூறியதன் கருத்து, 'யோக நிலையில் வேண்டப் படும் அவற்றை எல்லாம் அவ்வாறாக அமைத்து நின்றது திருவருளே' என்பது உணர்த்துதலாம். 'திரண்டது, எடுத்தது' என்னுந் தொழிற் பெயர்கள் 'எழுவகை' என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் நின்றன. 'காலம் அஞ்சு எடுத்தது' என்க.

இதனால், 'ஆறு ஆதாரங்களை ஆக்கிக் காத்து நிற்பது திருவருளே' என்பது கூறப்பட்டது.

அஞ்சுடன் அஞ்சு முகமுள நாயகி

அஞ்சுடன் அஞ்சது வாயுத மாவது
அஞ்சது வன்றி இரண்டது வாயிரம்
அஞ்சது காலம் எடுத்துளும் ஒன்றே. *#682*

சதாசிவ மூர்த்தியின் சத்தி, பத்துக் கைகளில் பத்து ஆயுதங்களை ஏந்தி இருப்பவளாகக் கிரியாவான்கள் கருதுவர். ஆயினும், யோகத்தில் அவளை இரண்டாயிரம் கைகளில் இரண்டா யிரம் ஆயுதங்களை ஏந்தி நிற்பவளாகக் கூறலாம். அவள் மேற்கூறிய ஐந்து காலங்களிலும் தங்கி நின்று அருளுதல், உயிர் ஒன்றையேயாம்.

விளக்கவுரை

சதாசிவமூர்த்தி, வேறுபட்ட ஐந்து நிறங்களை உடைய ஐந்து முகங்களையும், அவற்றிற்கு ஏற்ப அமைந்த பத்துக் கைகளில் பத்து ஆயுதங்களையும் உடையராயிருத்தல் பற்றி அவரது சத்தியையும் அத்தன்மையளாகவே கூறினார். எனவே, 'அஞ்சுடன் அஞ்சு முகம்' என்றதில் முதலில் உள்ள ஐந்து, ஐந்து நிறங்களைக் குறிப்பதாம். மூன்றாம் அடியில் 'அஞ்சுடன் அஞ்சு' என்பதனையே 'அஞ்சு' எனச் சுருங்க ஓதினார். 'இரண்டது ஆயிரம்' என்றது மேலைத் திருமந்திரத்தில் இரு பிராணனும் ஆயிர நாடிவழிச் செல்லுதலைக் குறித்ததாம். 'அஞ்சு காலத்தும் ஒன்றையே எடுத்து உள்ளும்' என்க. உள்ளுதல் - நினைத்தல்; அருளுதல். 'காலம்' என்னும் பொதுமைபற்றி, 'அஞ்சது' என ஒருமையாற் கூறினார். எனவே, 'அஞ்சாகிய அக்காலம்' என்பது பொருளாயிற்று. 'காலத்தும்' என்பதில் அத்தும், உம்மையும் தொகுத்தல் பெற்றன. 'ஒன்று' என்பதில், இரண்டன் உருபு இறுதிக்கண் தொக்கது.
இதனால், நாடிகள் பலவற்றையும் இயக்கி உயிரைத்தாங்கி நிற்பது திருவருளே என்பது உணர்த்தப்பட்டது.

ஒன்றது வாகிய தத்துவ நாயகி
ஒன்றது கால்கொண்டு ஊர்வகை சொல்லிடில்
ஒன்றது வென்றிகொள் ஆயிரம் ஆயிரம்
ஒன்றது காலம் எடுத்துளும் முன்னே. *#683*

தன்னோடு ஒப்பது ஒன்று இல்லாது, தானே தனிப்பொருளாய் நிற்கும் சத்தி, பொதுவில் இரு நாடிகள் இயக்கி நின்ற பிராணனை யோக நிலையில் நடுநாடியாகிய ஒன்றன்வழியே செலுத்தி மேல் ஏறுகின்ற தன்மையைச் சொல்லுமிடத்து, அவ்வொரு வெற்றிச் செயலே அளவற்ற வெற்றிச் செயலாய் அமையும்படி ஒரு காலத்துள்ளே உயிரை உயர்த்தி, அருளுதலைச் செய்வாள். ஆதலின், அவளையே நினை.

விளக்கவுரை

'காலினை ஒன்றதன் வழியாகக் கொண்டு ஊர்வகை சொல்லிடின்'

என்க. 'ஒன்றது வாகிய வென்றி' என உரைக்க. கொள், முதனிலைத் தொழிற்பெயர். 'ஆயிரம் ஆயிரம் ஆக' என்னும் ஆக்கச் சொல் தொகுத்தலாயிற்று. இவ்வொரு வெற்றியே பல வெற்றியோடு ஒத்தலாவது, அபர சித்தி, பரசித்தி இரண்டாலும் அனைவரிலும் மேம்படல், 'ஒன்றது காலம்' என்றது, 'எடுத்த பிறப்பிலே' என்றவாறு. முன்னுதல் - நினைத்தல்.
இதனால், 'யோகம் கைகூடச் செய்வதும் திருவருளே' என்பது கூறப்பட்டது.

முன்னெழும் அக்கலை நாயகி தன்னுடன்
முன்னுறு வாயு முடிவகை சொல்லிடில்
முன்னுறும் ஐம்பதொ டொன்றுடன் அஞ்சுமாய்
முன்னுறு வாயு முடிவகை யாமே. ***#684***

உயிரோடு உடல் தொடர்பு பட்டபொழுதே தான் எழுந்து இயங்குகின்ற இடைகலை பிங்கலைகளின் தலைவியாகிய சத்தியைப் பற்றி நின்று இயங்குகின்ற பிராணவாயு, பின் முடிவுபெறும் வகையைச் சொல்லுமிடத்து, ஐம்பத்தோர் அக்கரங்களில், பிருதிவி காலம் முதலிய ஐவகைக் காலத்திலும் இயங்கி முடியும் வகையேயாம்.

விளக்கவுரை

'அக்கரங்கள் ஐம்பத்தொன்று' என்றது, குண்டலியின் வழி உணர்வு பலவகையாய் நிகழ்தலைக் கூறியவாறு. எனவே, பிராணவாயு உடல் நிற்குங்காறும் உயிருக்கு உணர்வுகள் பலவும் எழுதற்குக் காரணமாய் இயங்கியிருந்து முடிந்து விடும் என்றதாயிற்று.
இதனால், 'வாழ்நாளளவும் உணர்வுகள் பலவும் நிகழுமாறு பிராணவாயுவை இயக்கி உயிரினது பக்குவத்தை முதிர்வித்து வருவது திருவருளே' என்பது கூறப்பட்டது.

ஆய்வரும் அத்தனி நாயகி தன்னுடன்
ஆய்வரு வாயு அளப்பது சொல்லிடில்
ஆய்வரும் ஐஞ்ஞூற்று முப்பத்தொன் றொன்பது
மாய்வரு வாயு வளப்புள் ளிருந்ததே. ***#685***

ஆய்ந்துணர்தற்கு அரியவாகிய மேற்சொல்லிய சிவசத்தி, தன்னுடனாய் இயங்கிவருகின்ற பிராண வாயுவை வரையறை செய்யும் வகையைக் கூறுமிடத்து, இயல்பாக இயக்குகின்ற மூச்சு (சுவாசக்) கணக்கிலிருந்து, ஆராயவருகின்ற ஐந்நூற்று நாற்பது மூச்சு அழிந்தொழிய எஞ்சியவை வலிமையுற்று உள்நிற்றலாம்.

விளக்கவுரை

இயல்பான மூச்சுக்கணக்கு, ஒரு விநாடிக்கு ஆறாக, ஒருநாளைக்கு

இருபத்தோராயிரத்து அறுநூறு (*6 x 60 x 60* என்பது நன்கறியப்பட்டது ஆகலின், அதனை எடுத்துக்கூறாது) வாளா, 'வாயு அளப்பது' என்றார். அளப்பது - கணக்கிடுதல். 'மாய்தல்' என்பது ஆற்றலை இழந்து பயனின்றிக் கழிதலாம். 'மூச்சுக்கணக்கில் இயங்கி உடலை நிலைப்பிக்கின்ற பிராணவாயு, ஒவ்வொரு மூச்சிலும் நாற் பதில் ஒருகூறு தனது ஆற்றல் கெடுகின்றது' என்பதை இருபத்தோரா யிரத்து அறுநூற்றில் ஐந்நூற்று நாற்பது மாய்கின்றன, என்றார். எனவே, 'மக்களது வாழ்நாள் அளவு நூறாண்டு' என்னும் பொதுக் கட்டளை, தொண்ணூற்றேழரையாண்டாகவே முடியும் என்பது கூறினாராயிற்று. இதனைக் கூறியது, 'யோகிகளுக்குத் திருவருள் இம் மாய்வினை நீக்குதலே யன்றிப் பிராணாயாமத்தால், பிராணனின் புறக்கழிவு மூன்றில் ஒருபங்கை (பன்னிரண்டில் நான்கினை)க் கழியாது காத்தும், கும்பகத்தால், ஒரு நாளைக்கு 'இருபத்தோரா யிரத்து அறுநூறு' என்னும் மூச்சுக் கணக்கினைக் குறைத்தும் வாழ் நாளை நீட்டிக்கச் செய்கின்றது என்பதும், யோகியரல்லாத பிறருள் நெறிப்பட்ட வாழ்க்கை இல்லாதார்க்குத் தீக்காரணங்கள் பலவற்றால் பிராணன் பல வகையிலும் வலிகுன்ற மேற்குறித்த, 'தொண்ணூற் றேழரை' என்னும் அளவினும் குறையப் பண்ணும் என்பதும் உணர்த்துதற்காம்.
'ஆய்வரும்' மூன்றில் முதலது, 'ஆய்தற்கு அரிய' என்றும், பின்னது 'ஆய்தல் வருகின்ற' என்றும், இடையது 'பொருந்தி வருகின்ற' என்றும் பொருள் தந்தன. மாய் வருவாயு - மாய, எஞ்சுகின்ற வாயு. வளப்பு - வளமை. 'வளப்பாக' என ஆக்கம் வருவிக்க. 'முப்பதொடொன்பது' என்பது பாடம் அன்று.
இதனால், பிராண வாயுவின் இயக்க வேறுபாடு வாயிலாகத் திருவருள் மக்கள் உலகை நடத்தும் முறை கூறப்பட்டது.

இருநிதி யாகிய எந்தை யிடத்து
இருநிதி வாயு இயங்கு நெறியில்
இருநூற்று முப்பத்து மூன்றுடன் அஞ்சாய்
இருநிதி வாயு இயங்கும் எழுந்தே. ***#686***

உயிர்களின் வாழ்நாளுக்கு முதலாய் உள்ள பிராண வாயு உயிர்கட்கு இருநிதி (சங்க நிதி, பதும நிதி) போல உதவுகின்ற இறைவனது திருவருளிடத்து இயங்கும் நிலை உண்டாயின், அஃது, 'இருபத்தோராயிரத்து அறுநூறு' என்னும் கணக்கினை விட்டு, 'இருநூற்று முப்பத்து எட்டு' என்னும் நிலையை அடையும்.

விளக்கவுரை

இஃது இயற்கைக் கணக்கில் சிறிதுகூடத் தொண்ணூற்றில் ஒருபங்காதல் அறிக. மூச்சுக் கணக்கு இங்ஙனம், இயற்கையினின்றும்

தொண்ணூற்றில் ஒருபங்காய்க் குறையவே, வாழ்நாள், சிறிது குறைய ஒன்பதினாயிரம் யாண்டாதல் பெறப்படும். மூச்சுக் கணக்கினை இதற்குமேல் குறைத்துக் கூறாமையால், இவ்யாண்டு மேல் எல்லையாதல் அறியப்படும். பிராணன் திருவருளிடத்து இயங்குதலாவது, ஆஞ்ஞை யோகத்திலே நிற்றல். 'எழுத்தே' என்பது பாடம் ஆகாமையை, வருகின்ற மந்திரத்தின் தொடக்கச் சொல்பற்றியும் அறிக.

இதனால், பிறர்க்கு வாழ்நாளை வரையறுக்கின்ற திருவருள் சிவயோகியர்க்கு அதனை மிகுவிக்குமாறு கூறப்பட்டது. 'பவ யோகியர்க்கு இந்நிலை கூடாது' என்க.

எழுகின்ற சோதியுள் நாயகி தன்பால்
எழுகின்ற வாயு இடமது சொல்லில்
எழுநூற் றிருபத்தொன் பானது நாலாய்
எழுந்துடன் அங்கி இருந்ததிவ் வாறே. ***#687***

யோகக் காட்சியில் தோன்றுகின்ற ஒளியிடத்தில் அறியப்படும் சத்தியினது இடமாகிய ஆஞ்ஞையில் (சுழுமுனை வழியே) பிராணவாயு அடைவதனால் உளவாகும் நிலையைச் சொல் லுமிடத்து, மூலாதாரத்தில் உள்ள அக்கினி மேல் எழுந்து, எழுநூற் றிருபத்தொன்பது நாடிகள் இடையில் உள்ள நான்கு ஆதாரங்களிலும் தொடர்புபட்டு நிற்க, அவற்றின் வழி உடம்பெங்கும் பரவி நிற்கும்.

விளக்கவுரை

'இவ்வக்கினிப் பரப்பால் இங்கெல்லாம் குண்டலி சத்தி விளங்கி நிற்கும்' என்பது கருத்து.

இதனால், யோகியர்க்கு விளங்குகின்ற குண்டலி விளக்கத்திற்குத் திருவருளே முதல் என்பது கூறப்பட்டது.

ஆறது கால்கொண் டிரதம் விளைத்திடும்
ஏழது கால்கொண் டிரட்டி இறக்கிட
எட்டது கால்கொண் டிடவகை யொத்தபின்
ஒன்பது மாநிலம் ஒத்தது வாயுவே. ***#688***

ஆறு ஆதாரங்கட்குமேல் ஏழாவதான உச்சி யளவும் பிராணவாயுவை ஏற்றியும் இறக்கியும் பயின்றால், ஆறு ஆதாரங்களிலும் தாரையாய்ப் பாயும்படி திருவருள் அமுதத்தை விளைத்து நிற்கும். இனி எட்டாந்தானமாகச் சொல்லப்படுகின்ற தலைக்குமேல் பன்னிரண்டங்குலம் பிராண வாயுவை நீக்கி நிற்றலால் ஆதார வேற்றுமைகள் நீங்கியபின், சுழுமுனையோடு மற்றை ஒன்பது நாடிகளிலும் பிராண வாயு ஒருதன்மைத்தாய் நிற்பதாம்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதலில் வைத்து உரைக்க. 'கால்' மூன்றனுள் முதலது, வாய்க்கால். ஏனைய இரண்டும், காற்று. 'ஏழு, எட்டு' என்பவை அவ்வெண்ணு முறைக்கண் நின்ற இடத்தைக் குறித்தன. அமுதத்தை 'இரதம்' (ரசம்) என்றார். விளைத்தற்கு வினை முதலாக மேற்சொன்ன நாயகியைக் கொள்க. இரட்டுதல் - மாறி மாறி வரச்செய்தல். யோகிகள் பிராண வாயுவைச் சுழுமுனை வழியில் மேல் ஏற்றவும், கீழ் இறக்கவும் வல்லராயிருப்பர். அவ்வன்மையைப் பிர மரந்திரம் வரையிலும் பெற்றவர்க்குச் சந்திர மண்டலத்திலுள்ள அமுதம் தாரையாய்க் கீழுள்ள ஆதாரங்களிலும் பாய்வதாம். துவா தசாங்குலத்தில் உணர்வு சென்றவர்க்கு வாயுப்பயிற்சி நீங்குவதால், அதனை, அந்த எட்டாந்தானம் வாங்கிக் கொண்டதாக ஓதினார். 'அஃது அங்ஙனம் கொள்ள வைப்பவளும் நாயகியே' என்பது குறிப்பு. கொண்டு - கொள்ளுதலால். இடவகை - ஆதார நிலைகள். அவை ஒத்தலாவது, அவற்றில் வெவ்வேறு வகையாய் நிகழும் பிராணா யாமம் முதலிய உறுப்புக்கள் அங்ஙனம் நிகழாது துவாதசாங்குலத் தியானம் ஒன்றேயாக நிகழ்தல். 'இந்நிலையில் பிராண வாயு, தானே தச நாடிகளிலும் நிறைந்து நிற்கும்' என்பார் 'ஒன்பது மாநிலம் ஒத்தது வாயுவே' என்றார். சுழுமுனைப் பயிற்சியே சொல்லப்பட்டு வருதலின், அதனுடன் ஏனை நாடிகளிலும் ஒருபடித்தாய் நிற்கும் என்றவாறு. துவாதசாங்குலம் 'நிராதாரம்' எனவும், அதனைக் கடந்த தாகிய துவாதசாந்தம், 'மீதானம்' எனவும்படும். இத்திரு மந்திரத்தின் அடிகள் எண்ணலங்காரமாய், அடி முரண் பெற்று நின்றது.

இதனால், 'ஆதார யோகம், நிராதார யோகம், மீதான யோகம் அனைத்தும் கைவரப் பெறுதல் திருவருளாலே' என்பது கூறப்பட்டது.

சந்திரன் சூரியன் தற்பரன் தாணுவிற்
சந்திரன் தானுந் தலைப்படுந் தன்மையைச்
சந்தியி லேகண்டு தானாஞ் சகமுகத்
துந்திச் சமாதி யுடையொளி யோகியே. ***#689***

'சந்திரகலை' எனப்படுகின்ற இடநாடிக் காற்றும், 'சூரியகலை' எனப்படுகின்ற வலநாடிக் காற்றும் சிவனது திருமுடியில் உள்ள சந்திரகலை எனப்படுகின்ற பரஞானமாகிய திருவருளும் ஒன்றாய் நிற்கின்ற தன்மையை, அனைத்து நாடிகளும் கூடுகின்ற இடமாகிய ஆஞ்ஞையிலே விளங்கக் கண்டு அத்திருவருளேயாகி நிற்பான், உலகியலை அறவே ஒதுக்கித் தள்ளிச் சிவசமாதி ஒன்றையே உடைய சிவ ஞான யோகியே.

விளக்கவுரை

'தாணு' என்றது, நீண்ட திருமேனியைக் குறித்தது. 'தாணுவின்' என்றே போயினாராயினும், 'தாணுவின்' தலையில் என்பது ஆற்றலால் கொள்ளக் கிடந்தது. சிவபெருமான் சந்திர கலையைத் திருமுடியில் அணிந்திருத்தல் ஞானத்தை உணர்த்தும் அடையாளமாம். திருவருளாகிய சிவனது சத்தி ஞானமாதல் வெளிப்படை. சிவபெருமான் தனது நெற்றிக்கு நேராகப் பிறையை அணிந்திருத்தல், இலாடத் தானத்தில் நின்று அறிவைத் தரும் குறிப்பினையும் உடையது. இடைநாடி வலநாடி வழிச்செல்லும் காற்றுச் சுழுமுனை வழிச் சென்று ஆஞ்ஞையை அடையத் திருவரு ளாகிய ஒளி விளங்குதலின், ஆஞ்ஞையை, சந்திரன் முதலிய மூன்றும் கூடும் இடம் என்றார். ஒளி யோகி - ஞான யோகி; என்றது சிவ யோகியை.

இதனால், ஆஞ்ஞையில் திருவருளைக் கண்டு தான் அதுவேயாய் நிற்றல் சிவயோகிக்கே கூடும் என்பது கூறப்பட்டது.

அணங்கற்ற மாதல் அருஞ்சனம் நீவல்
வணங்குற்ற கல்விமா ஞான மிகுதல்
சிணுங்குற்ற வாயர்தம் சித்தி தாம்கேட்டல்
நுணங்கற் றிருத்தல்கால் வேகத்து நுந்தலே. ***#690***

மனைவியைத் துறத்தல், மக்கள் முதலிய பிற சுற்றத்தையும் துறத்தல், சிவனை வழிபடுகின்ற நூல் அறிவு மிகுதல், வாய்வாளாதிருக்கும் சிவயோகிகள் அடைந்துள்ள பர சித்திகளை அவரிடம் கேட்டல், உலகியலின் தாக்குதலால் உள்ளம் திரிவுபடா திருத்தல், பிராணாயாமத்தை எளிதாகச் செய்தல்.

விளக்கவுரை

இதனுடன், வருகின்ற திருமந்திரத்தையும் கூட்டி வினை முடிவு செய்க. அணங்கு - பெண்டு. அற்றம் - அறுதி. அருஞ் சனம் - சுற்றம். நீவல் - நீக்குதல். சிணுங்குதல் - முணுமுணுத்தல்.

மரணஞ் சரைவிடல் வண்பர காயம்
இரணஞ் சேர்பூமி இறந்தோர்க் களித்தல்
அரனன் திருவுரு வாதல்மூ வேழாங்
கரனுறு கேள்வி கணக்கறிந் தோனே. ***#691***

மூப்பு இறப்புக்கள் இன்மை, அருள் வெளியிற் கலந்திருத்தல், தன் முன்னோர்களைத் தனது நற்செய்கையால் நற்கதி பெறச் செய்தல், சிவனது திருவுருவைத் தான் பெறுதல் என்னும் பத்து இயல்புகளையும், கைப்பொருள் போன்ற கேள்வியால் யோகநூற் பொருளை நன்குணர்ந்தோன் பெறுவான்.

விளக்கவுரை

செய்யுள்நோக்கிச் சரை (மூப்பு) பின் நின்றது. 'இரணியம்' என்பது 'இரணம்' என மருவிற்று. இரணிய பூமி - பொன்னுலகம். முற்றத் துறந்தவற்கல்லது இல்வாழ்க்கைக் கடன் முற்றும் நீங்காமையின், சிவயோகியும் தென்புலத்தார் கடன் செயற்பாலன் என்பது கூறினார். 'இல்வாழ்வாரினும் சிவயோகிக்கு இஃது எண்ணிய வாறே எளிதின் முற்றுப்பெறும்' என்பது கருத்து. சிவயோகத்தின் இடைநிலைப் பயன்களில் மேலானது சாரூப பதவி பெறுதலாதலின், அதனை இறுதிக்கண் கூறினார். நன் திருவுரு - நல்ல திருவுருவம். மூவேழ் - மூன்றுடன் கூடிய ஏழ்; பத்து. 'ஆம்' என்றது, 'பொருந் துவான்; அடைவான்' என்றவாறு. 'மூவேழனையும் ஆம்' என இரண்டாவது விரித்துக்கொள்க. 'கரம்' என்னும் வடசொல், இறுதிப் போலியாகிய தமிழ் முடிபு ஏற்றது. 'கேள்வியால்' என மூன்றாவது விரிக்க. கணக்கு - நூல். 'அறிந்தோன்' என்றது, அறிந்து அந்நெறி நின்ற, மேற்கூறிய ஒளி யோகியை. 'அறிந்தோன் ஆம்' என மேலே கூட்டி முடிக்க.
இவ்விரண்டு திருமந்திரங்களாலும், சிவயோகி பெறும் இடைநிலைப் பயன்களைக் கூறுமுகத்தால், அவனுக்குத் திருவருள் செய்யும் முதல் நலங்கள் கூறப்பட்டன.

ஓதம் ஒலிக்கும் உலகை வலம்வந்து
பாதங்கள் நோவ நடந்தும் பயனில்லை
காதலில் அண்ணலைக் காண இனியவர்
நாதன் இருந்த நகரறி வாரே. ***#692***

ஆர்வத்தால் சிவனைக் காணுதற்பொருட்டுக் கடல் சூழ்ந்த உலகம் முழுதும் கால்கள் நோவ நடந்து சுற்றி வரினும் பயன் இல்லை. அது நிற்க, சிவனுக்கு மிக இனியவராகிய சிவயோகியரே அவன் இருக்குமிடத்தை அறிந்து காண்பர்.

விளக்கவுரை

'காண, நடந்து வலம் வந்தும் பயனில்லை' என மாறிக் கூட்டுக. இது, சரியை கிரியைகளில் நின்று அன்பு முதிரப் பெற்றோரை நோக்கிக் கூறியதன்றிப் பிறரை நோக்கிக் கூறியதன்று என்பதை இடம் நோக்கி யுணர்க. 'நாதன் இருந்த நகர், ஆதார நிராதார மீதானங்களே' என்பது குறிப்பு. 'இவற்றை அறிந்து அடைதல் சிவ யோகிக்கல்லது கூடாது' என்பதாம்.
இதனால், திருவருட் காட்சிக்குச் சிவயோகம் இன்றி யமையாததாதல் கூறப்பட்டது.

மூல முதல்வேதா மாலரன் முன்னிற்கக்

கோலிய ஐம்முகன் கூறப் பரவிந்து
சாலப் பரநாதம் விந்துத் தனிநாதம்
பாலித்த சத்தி பரைபரன் பாதமே. ***#693***

மகேசுரனுக்குக் கீழ் அயன், மால், உருத்திரன் என்னும் மூவரும் மூலாதாரம் முதலிய மூன்று ஆதாரங்களிலும் முறையே நிற்க, மகேசுரனுக்குமேல், 'விசுத்தி, ஆஞ்ஞை, நா அடி, உச்சி, தலைக்குமேல் பன்னிரண்டங்குலம்' என்னும் இடங்களில் சதாசிவன், விந்து, நாதம், பரவிந்து, பரநாதம் என்போர் முறையே நின்று பயன் தருமாறு உயிர்களுக்கு அளித்த சத்தி, 'பரை' எனப்படும் சிவனது திருவருளே.

விளக்கவுரை

இதனுள் ஒன்பது இடங்கள் குறிக்கப்பட்டமை புலனாகும். 'முன்' எனவே, 'பின்' என்பதும், அவ்விரண்டனாலும் 'இடை' என்பதும் பெறப்பட்டன. 'முன், பின்' என்பன 'கீழ், மேல்' என்னும் பொருளவாய் நின்றன. கீழே உருத்திரன் ஈறாகவும், மேலே சதாசிவர் முதலாகவும் கூறினமையின் இடையே அனாகதத்தில் மகேசுரர் இருத்தல் பெறப்பட்டது. எனவே, நாயனாரது துணிபு இம்முறையே யாதல் பெறப்படும். பிற முறைகளில் சிறிது மேலே *(பா. 575 உரை)* காட்டப்பட்டது. அம்முறை பற்றி, நிற்பார், இங்கு, 'மூல முதல்' என்பதற்கு, 'கணபதி' எனவும், 'மூலாதாரத்திற்கு மேல்' எனவும் பொருள் உரைப்பர். 'பரவிந்து' முதலியவை செய்யுளுக்கு ஏற்ப வைக்கப்பட்டன. திருவருளை, இறைவன் பாதம் என்றல் மரபு.

இதனால், மேல், 'நாதன் இருந்த நகர்' எனப்பட்டன இவை என்பது கூறி, இவ்வாறெல்லாம், திருவருள், யோகிகட்கு நலம் செய்தல் கூறப்பட்டது.

ஆதார யோகத் ததிதே வொடுஞ்சென்று
மீதான தற்பரை மேவும் பரனொடு
மேதாதி யீரெண் கலைசெல்ல மீதொளி
ஓதா அசிந்தம்ஈ தானந்த யோகமே. ***#694***

மூலாதாரம் முதலாக ஆறு ஆதாரங்களையும் அவற்றில் உள்ள கடவுளரைத் தியான சமாதிகளால் வழிபட்டுப் பயன்பெறுமாற்றால் கடந்து, அவற்றிற்கு மேல் நிராதாரமாகிய உச்சிமுதற் பன்னிரண்டங்குலத்தை அடைந்து பரவிந்து பரநாதங் களின் அருள்பெற்று இவ்வாற்றால், மேதை முதலிய பிரணவகலை பதினாறும் கடக்கப்பட்டனவாய்விட, அதற்கு மேல், சொல்லவும், நினைக்கவும் வாராத மீதானமாகிய துவாதசாந்தத்தில் *(பன்னிரண்டு அங்குலத்திற்கு அப்பால்)* பரமசிவனை அடைந்து நிற்றலே ஆனந்த யோகமாகும்.

விளக்கவுரை

'ஆனந்தயோகம் நிகழ் புதல்வா' (உண்மை விளக்கம்) என்பது நினைக்கத்தக்கது. 'சிவயோகத்துள்ளும் மூலாதாரம் முதலிய ஐந்து ஆதாரங்களில் நிற்றல் தவயோகமும், ஆஞ்ஞை முதலியவைகளில் நிற்றல் அருள் யோகமும், துவா தசாந்தத்தை அடைதல் ஆனந்த யோகமும் ஆம்' என்றவாறு. 'மேதாதி ஈரெண் கலை செல்ல' என்றது வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்று வாய் செய்தவாறு. எனவே, 'அக் கலைகளாவன இவை' என்பது அவ் வதிகாரத்திலே அறியற்பாலதாம்.

மதியமும் ஞாயிறும் வந்துடன் கூடித்
துதிசெய் பவர்அவர் தொல்வா னவர்கள்
விதியது செய்கின்ற மெய்யடி யார்க்குப்
பதியது காட்டும் பரமன்நின் றானே. ***#695***

சந்திர கலையாகிய இட நாடிக் காற்றும், சூரிய கலையாகிய வல நாடிக் காற்றும் ஒடுங்கிச் சுழுமுனையில் வந்து பொருந்தச் செய்து, வாசி யோகத்தில் நின்று, ஆதாரங்களில் உள்ள கடவுளரைப் போற்றுகின்ற பொது யோகிகள் மேலுலகத்தில் அவ்வக் கடவுளராய் நின்று இன்பம் நுகர்வர். சிவனை உணர்தலாகிய முறைமையில் வழுவாது நின்று, அருள் யோகம் ஆனந்த யோகங் களைச் செய்கின்ற உண்மை யோகிகட்கே, நிலையான வீடுபேற்றைக் காட்டும் பரமசிவன் முன்னிற்பான்.

விளக்கவுரை

'சந்திர சூரியரோடு கூடி நிற்பவர் வானவரே' என்னும் நயம் தோன்ற முதல் இரண்டடிகளை அவ்வாறு ஓதினார். கூடி - கூடிய பின். துதி செய்தலுக்குச் செயப்படுபொருள் வருவிக்க. 'அவர்' என் பதன்பின், 'கொண்ட' என ஒருசொல் வருவிக்க. 'வானவர்கள்' என் பதன் பின் 'ஆவர்' என்பது எஞ்சிநின்றது. தொன்மை, முன்னே துதிக் கப்பட்டமையைக் குறித்தது. 'நின்றான்' என்பதில் நிற்றல், வெளிப் பட்டு நிற்றல் என்னும் பொருளது. பதி - நிலைத்து வாழும் ஊர்.

கட்டவல் லார்கள் கரந்தெங்குந் தாமாவர்
மட்டவிழ் தாமரை யுள்ளே மணஞ்செய்து
பொட்டெழக் குத்திப் பொறியெழத் தண்டிட்டு
நட்டறி வார்க்கு நமனில்லை தானே. ***#696***

பிராண வாயுவைத் தம்வழியில் இயக்குமளவே வல்லராய்ப் பவயோகம் கைவந்தவர் மருட் சித்திகளையே பெறுவர். ஆஞ்ஞையில் அருள் இன்பத்தைத் தருகின்ற அருள் யோகத்தைத் தலைப்பட்டு, பின் சுழுமுனைத் தலையை அடைந்த பிராண வாயுவால் அவ்விடத்தில் வடு உண்டாகத் தாக்கிப் பின்பு, அவ்வாயுவை மண்டை ஓட்டில் தீப்பொறி உண்டாகுமாறு மோதி, உணர்வை அசையாது நிறுத்திச் சிவனை

அறியும் ஆனந்த யோகத்தில் நின்று சிவயோகம் கைவந்தவர்க்கு இறப்பு உண்டாகாது. (எடுத்த பிறப்பிலே வீடு உண்டாகும் என்பதாம்)

விளக்கவுரை

கட்டுதற்கும் நடுதற்கும் செயப்படுபொருள் வருவித்துக் கொள்க. மணம் செய்தல் - கூடுதல். இது, 'தாமரையுள்ளே மணம் போல நிற்றல்' என்னும் நயம் தோற்றி நின்றது. 'கரந்தெங்கும் தாமாவர்' என்பது பிராத்தியைக் குறித்துப் பிற சித்திகட்கு உபலக் கணமாய் நின்றது. புருவநடுவில் தோன்றும் வடு, பொட்டுப்போலத் தோன்றுதல் பற்றி 'பொட்டெழ' என்றார். யோகத்தால் இவ்வடுத் தோன்றுதல் பலநாள் பயிற்சியால் ஆதலின், தாமரையுள்ளே மணஞ் செய்தற்குப் பின்னர்க் கூறினார். பொறியெழத் தாக்குதல், வன்மையை மிகுத்துக் கூறியவாறு. தண்டு - சுழுமுனை. அஃது ஆகுபெயரால் அதன்வழிச் செல்லும் பிராண வாயுவைக் குறித்தது. 'இறப்பில்லை' என்னும் பொருளதாகிய 'நமனில்லை' என்பது, இறந்தவர் பின் பிறப்பராதலின், பிறவியற்ற நிலையை அடைதலை உணர்த்தி நின்றது. 'கட்ட வல்லார்கள் கரந்தெங்குந் தாமாவர்' எனவும், 'நட்டறிவார்க்கு நமனில்லை' எனவும் கூறியன, பவ யோக சிவ யோகங்களது இழிபு உயர்வுகளை உறழ்ந்து காட்டியவாறு.

இவ் இருமந்திரங்களாலும், இருவகை யோகங்களின் இழிபு உயர்வுகளை ஒருங்கு வைத்துக் காட்டிச் சிவயோகம் வலியுறுத்தி முடிக்கப்பட்டது.

'பரகாயப் பிரவேசம்' என்பதை நாயனார் இங்ஙனம், 'மேலான ஆற்றல் பெற்ற உடம்பு' எனவும், 'அருளுடம்பு' எனவும் இரு பொருள்பட இரட்டுற மொழிதலாக வைத்து, 'சித்திகள் எட்டன்றி' என்னும் திருமந்திரம் முதல் இது காறும் சிவயோகமாகிய பரயோகத்தையும், பரசித்தியாகிய அதன் பயனையுமே உணர்த்தினமை அறிக.

5.12.கலைநிலை

காதல் வழிசெய்த கண்ணுதல் அண்ணலைக்
காதல் வழிசெய்து கண்ணுற நோக்கிடிற்
காதல் வழிசெய்து கங்கை வழிதரும்
காதல் வழிசெய்து காக்கலு மாமே. ***#697***

தன்னை அடைவதற்கு அன்பு ஒன்றையே வழியாக அமைத்துள்ள முக்கட் கடவுளாகிய சிவபெருமானை, அவ் அன்பைத் தரும் வழியாகிய அறிவை உண்டாக்கி, அவ் அறிவு பொருந்த அவனை நோக்கினால், அன்பு பெருகி, அது வழியாக இன்ப வெள்ளம் பெருகும். அது பெருகியபின், அந்த அன்பையே பின்னும் துணையாகப் பற்றி, அந்த இன்ப வெள்ளம் வற்றிப் போகாதவாறு பாதுகாத்துக் கொள்ளுதலும் கூடும்.

விளக்கவுரை

'காதல் வழி' நான்கனுள் இரண்டாவது, நான்காவதன் தொகை. முதலதும், ஈற்றதும் உருவகங்கள். மூன்றாம் அடியில் *'வழிசெய்து''வழிதரும்'* என்பன*' 'வழியும் பெருகும்'* என்னும் பொருளன. *'கண்'* என்றது அறிவை. எனவே, *'இது மந்திர யோகம்'* என்பது விளங்கும். அறிந்தவிடத்தன்றி அன்பு நிகழாதாகலின், அன்பைத் தரும்வழி அறிவாதல் அறிந்துகொள்க. *'அறிவை உண்டாக்கி அறிவுற நோக்கி'* என்றது *'அறிவைச் செயற்படுத்தி, அதன் வழியே நோக்கி'* என்றவாறு.

இதனால், *'பிராசாத யோகம் வழி முறையில் வீடு தரும்'* என அதனது சிறப்புக் கூறப்பட்டது.

காக்கலு மாகுங் கரணங்கள் நான்கையும்
காக்கலு மாகுங் கலைபதி னாறையும்
காக்கலு மாகுங் கலந்தநல் வாயுவும்
காக்கலு மாகுங் கருத்துற நில்லே ***#698***

மாணாக்கனே*!;* நீ பிரணவ கலைகளில் அறிவு பொருந்த நில், அங்ஙனம் நிற்பாயாகில், பிராண வாயுவையும், அக்கலைகள் பதினாறனையும், அவற்றின் வழி இயங்குகின்ற மனம் முதலிய அந்தக்கரணங்களையும் மருள் நெறியிற் செல்லாது தடுத்து, அருள் நெறியில் நிறுத்துதல் கூடும்.

விளக்கவுரை

'பிரணவ கலைகள் சந்திரனது கலைபோல்வன' என உவமை முகத்தான் உணர்த்தற்கு சோடச கலாப் பிராசா தத்தைக் கூறினார். இதனை, மேலேயும் *(பா.692)* காண்க. வாயுவைக் காத்தலால் மனம் ஒருங்குதல் முன்னே *(பா.606)* கூறப்பட்டது. *'கரணங்கள்'* முதலிய மூன்றும் காரிய

காரண முறையில் வைக்கப்பட்டன.
இதனால், பிராசாத யோகத்தின் முதற்பயன் கூறப்பட்டது.

நிலைபெற நின்றது நேர்தரு வாயு
சிலைபெற நின்றது தீபமும் ஒத்துக்
கலைவழி நின்ற கலப்பை அறியில்
மலைவற வாகும் வழியது வாமே. ***#699***

வலமும், இடமும் செல்லாமல், நடுநாடி வழிச் செல்கின்ற பிராண வாயு. அத்தகைய செலவிற் பிறழாது நிற்றலே அசை வில்லாது நிற்கும் பிராணாயாம நிலையாம். அந்நிலையால் அறிவும், பிரணவ கலைகளில் நிலைபெற்று நின்று, முதல்வனது திருவருள் அக்கலைகளில் பல்வேறு வகையாய்க் கலந்து நிற்கின்ற கலப்பினை அறியுமாயின், அவ்வாறு அறிந்து நிற்கின்ற அந்நிலையே, அவ்வறிவு பின் பலதலைப்படாது ஒரு தலைப்படும் வழியாம்.

விளக்கவுரை

'ஆதலின், அவ்வாற்றால் அக்கலப்பினை அறிக' என்பது குறிப்பெச்சம். தொழிற் பெயராய் நின்ற 'நின்றது' இரண்டனுள் முன்னது எழுவாய்; பின்னது பயனிலை. 'நேர்தரு வாயு' என்பதனை முதலிற்கொள்க. சிலை, கல்; மலையுமாம். 'சிலை' என்றது அதன் தன்மையை; அஃதாவது, அசை வின்மை. 'தீபம்' என்றது, அறிவை. உம்மை, இறந்தது தழுவிய எச்சம். ஒத்தல், பிறழாது நிற்றல். 'கலை' எனப் பின்னர் வருதலின், வாளா, 'ஒத்து' என்றார். 'அலை வற' என்பதும் பாடம்.
இதனால், பிராசாத யோகம், உணர்வு அருள் வழிப்படுவதற்கு வழியாதல் கூறப்பட்டது.

புடையொன்றி நின்றிடும் பூதப் பிரானை
மடையொன்றி நின்றிட வாய்த்த வழியில்
சடையொன்றி நின்றஅச் சங்கர நாதன்
விடையொன்றி லேறியே வீற்றிருந் தானே. ***#700***

எஞ்ஞான்றும் உடனாய் நீங்காது நிற்கின்ற சிவபெருமானைச் சாரமாட்டாது புறத்தே ஓடிய உணர்வு, அவ்வாறு ஓடாது மடங்கி அவனைச் சார்ந்து நிற்றற்குப் பொருந்திய பிராசாத யோக நெறிக்கண் அவன் இனிது விளங்கி நிற்கின்றான்.

விளக்கவுரை

புடை ஒன்றி நிற்றல், அருகிலே நிற்றல், ஐம் பொறிகளைக் குறிப்பதாய 'மடை' என்பது ஆகுபெயராய், அவற்றின் வழிச் செல்லும் உணர்வைக் குறித்தது. 'பிரானை ஒன்றி நின்றிட' என இயையும் 'அதற்கு வாய்த்த வழியாவது பிராசாத யோகமே' என்பது அதிகாரத்தால் விளங்கிற்று,

'விடை ஒன்றில் ஏறி' என விதந்தது, 'தடத்தமாய்க் காணப்படுவன்' என்றவாறு. ஏகாரங்கள் தேற்றம், இருத்தல், உண்மை குறியாது, அமர்தலைக் குறித்தலின், இறந்த காலம் ஆயிற்று. 'வாய்த்த வழியும்' எனப் பாடம் ஓதியும், 'விடை' என்றதனைப் பிற குறிப்பு மொழியாக்கியும் தமக்கு வேண்டியவாறே உரைத்துக்கொள்வர்.
இதனால், பிராசாத யோகத்தில் இறைவனது பொதுநிலை இனிது விளங்குதல் கூறப்பட்டது.

இருக்கின்ற காலங்கள் ஏதும் அறியார்
பெருக்கின்ற காலப் பெருமையை நோக்கி
ஒலிக்கின்ற வாயு ஒளிபெற நிற்கத்
தருக்கொன்றி நின்றிடும் சாதக னாமே. *#701*

தாம் வாழும் நாளின் எல்லை இவ்வளவினது என்பதை அறியாதவர் அது நீட்டித்தற்பொருட்டு ஒரு வழிப்படுத்து கின்ற பிராணவாயு, அவ்வாறு கால நீட்டிப்பிற்கு மட்டும் ஏதுவா யொழியாது, மெய்யுணர்வைப் பெறுதற்கு ஏதுவாகுமாயின், அத்தகைய சாதனத்தைப் புரிந்த சாதகன், பின்னர்ப் பேரின்பத்தில் திளைத்து மகிழ்ந்திருப்பான்.

விளக்கவுரை

எனவே, 'வாயுவை அங்ஙனம் நிற்குமாறு நிறுத்துக' என்பது குறிப்பெச்சமாயிற்று. இருத்தல், உண்மை குறித்து நின்றது. 'அறியார்' என்னும் எழுவாய் 'ஒருக்கின்ற' என்பதனோடு முடிந்தது. 'ஒருக்குகின்ற' பெருக்குகின்ற' என்பன குறைந்து நின்றன. பெருமை - சிறப்பு. 'ஒளிபெற நிற்கும் வழி பிராசாத யோகம்' என்பது கருத்து. 'நின்றிடும்' என்பது முற்று; 'ஆம்' என்னும் அசை நிலையை இதனுடன் கூட்டுக.
இதனால், எடுத்த பிறப்பில் ஞானத்தைப் பெற விழைபவர் வாழ்நாள் நீட்டிப்பின் பொருட்டுப் பிராணாயாமத்தினை ஒரு தலையாகச் செய்தல் வேண்டும் என அநுவாத முகத்தான் வலியுறுத்தப்பட்டது. படவே, அடுத்து வருகின்ற 'காயசித்தி, கால சக்கரம்' என்னும் அதிகாரங்கட்கு வழிவகுத்தது மாயிற்று.
இதனால், பிராசாத நெறியல்லாத பிற நெறி யோகங்கள் சிறப்பிலவாதல் கூறப்பட்டது.

சாதக மானஅத் தன்மையை நோக்கியே
மாதவ மான வழிபாடு செய்திடும்
போதக மாகப் புகலுறப் பாய்ச்சினால்
வேதக மாக விளைந்து கிடக்குமே. *#702*

'ஒருக்கின்ற வாயு ஒளிபெற நிற்குமாறு நிறுத்துதல்' என மேற்கூறிய செயலே சாதகன் சாதிக்கத்தக்க முறையாதலை உணர்ந்து, பெருந்தவமாகிய அவ்வழி பாட்டினை ஒருவன் செய்யும் பொழுது,

பிரணவ கலைகளின் உள்ளீடாய திருவருளிலே தனது உணர்வு செல்லுமாறு செலுத்துவானாயின், அச்செயலே, அவனது புலன் உணர்வாகிய இரும்பினை மெய்யுணர்வாகிய பொன்னாக மாற்றுகின்ற இரச குளிகையாய் அமைந்து பயனைத் தந்துவிடும்.

விளக்கவுரை

அகத்தொழில் மாத்திரையாற் செய்யும் வழிபாடே யோகமாகலானும், சரியை, கிரியை யாகிய ஏனைத் தவங்களின் மேம்பட்ட யோகத்துள்ளும் பிராசாத யோகம் மிகச் சிறந்ததாகலானும், அதனை 'மாதவமான வழிபாடு' என்றார். 'செய்திடும்போது' என்பது ஒருசொல், அகம் கலைகளின் உள்ளிடம். அஃது, ஆகு பெயராய், அவ்விடத்துள்ள திருவருளைக் குறித்தது. 'அகத்தாக' என வரற்பாலதாய சாரியை வாராது விகற்பித்தது. பாய்ச்சுதலுக்குச் செயப்படு பொருள் ஆற்றலால் கொள்ளப்பட்டது. துணை வினையாய் வந்த கிடத்தல், துணிவுணர்த்தி நின்றது.

கிடந்தது தானே கிளர்பயன் மூன்று
நடந்தது தானேஉள் நாடியுள் நோக்கிப்
படர்ந்தது தானே அப் பங்கய மாகத்
தொடர்ந்தது தானே அச் சோதியுள் நின்றே. ***#703***

மேல், 'வேதகமாக விளைந்து கிடக்கும்' எனப் பட்ட அச்சாதனைதான், மிகத் தருகின்ற பயன் மூன்றாகும். இனி, இயல்பாக இயங்கும் பிராண வாயுவின்வழி எப்பொழுதும் புறத்தே ஓடிய உணர்வுதானே, சாதனையால் சுழுமுனைவழிச் செலுத்தப்பட்ட வாயுவின்வழியே உள்நோக்கிப் படர்ந்து, பின்னும் உச்சிக் கண்ணதாகிய பெரிய தாமரை மலரிடத்து அவ்வாயுவின் வழியே படிமுறையாற் புக, அவ்விடத்து நன்கு விளங்கும் பேரொளியாகிய திருவருள், முன்பு கீழுள்ள ஆதாரங்களினின்று அவ்வுணர்விற்கு விடயமாய்த் தொடர்ந்து விளங்கிவருவதாம்.

விளக்கவுரை

பயன் மூன்றாவன புலன்களின்மேற் சென்ற அவா அறுதலும், திருவருள் தோற்றமும், திருவருட் பேறுமாம். இவை, மேல், *(பா.700)* 'ஒளிபெற' என்றதனானே, 'பொழுது புலர்தல், செவ்வொளி தோன்றல், ஞாயிற்றைக் காண்டல்' என்பவற்றில் வைத்து அறியக் கிடத்தலின், இவற்றைக் கிளந்தோதாது போயினார். திருவருட் பேறு, படிமுறையானன்றி முதற்கண்ணே முற்றக் கிடையாமையைப் பயன் வகையாலும் உணர்த்துதற்கு, 'கிளர் பயன் மூன்று' என்றார். 'கிளர் பயன்' என்பது, 'கிளர்த்தும் பயன்' என, பிறவினை வினைத்தொகை.

'தான்' என்னும் அசை நிலை நான்கிடத்தும் பிரிநிலை ஏகாரத்தோடு வந்தது. 'அச்சோதி தானே, உள்நின்று தொடர்ந்தது' என்க. 'தொடர்ந்தது தானேயாம்' என்பதில், 'ஆம்' என்பது எஞ்சி நின்றது. எனவே, 'தொடர்ந்தது' என்றது எதிர்காலத்தில் இறந்த காலமாம். 'அவ்விடத்து நிற்கும் சோதி' எனற் பாலதனை, 'அச் சோதி' என்றார்.
இதனால், மேற்கூறிய சாதனை, வேதகமாக விளையும் முறை விளக்கப்பட்டது.

தானே எழுந்தஅத் தத்துவ நாயகி
ஊனே வழிசெய்தெம் உள்ளே யிருந்திடும்
வானோர் உலகீன்ற அம்மை மதித்திடத்
தேனே பருகச் சிவாலய மாகுமே. ***#704***

உயிர் தனது முயற்சியால் அடையலா காமையின், தானாகவே அதற்குப் புலப்பட்டு நிற்கின்ற மெய்ப் பொருளாகிய தலைவி தன்னை நாம் அடைவதற்கு இவ்வுடம்பையே வழியாக அமைத்து நம்முள் இருக்கின்றாள். அவளையே பொருளாக நாம் கொள்ளின், இவ்வுடம்பு சிவானந்தமாகிய தேனைப் பருகி இன்புறுகின்ற இடமாய்விடும்.

விளக்கவுரை

'வானோர் உலகீன்ற அம்மை' என்பது, 'அவள்' என்னும் சுட்டுப் பெயரளவாய் நின்றது. 'அம்மையை' என்னும் இரண்டனுருபு தொகுக்கப்பட்டது. 'பருகி' என்பது பாடமன்று. சிவம், இங்கு, 'இன்பம்' என்னும் பொருளது. 'ஆகும்' என்பதற்கு எழுவாய் வருவிக்க.
இதனால், பிராசாத யோகத்தாற் பெறும் திருவருட்பேறு, பின், சிவப் பேற்றிற்கு ஏதுவாதல் கூறப்பட்டது.

திகழும் படியே செறிதரு வாயு
அழியும் படியை அறிகிலர் ஆரும்
அழியும் படியை அறிந்தபின் நந்தி
திகழ்கின்ற ஆயுவைச் சேர்தலு மாமே. ***#705***

உடம்பு ஒளி பெற்று நெடுநாள் விளங்குதற் பொருட்டுப் பொருந்தியுள்ள பிராணவாயு, ஒவ்வொரு மூச்சிலும் சிறிது சிறிதாக அழிந்துகொண்டு வருதலை யாரும் அறிந்து கவலைப் படுதல் இல்லை, அதனை அறிந்து கவலைப்பட்டு, அவ்வாயுவை அழியாமற் காப்பார் உளராயின், அவர்க்கு, எடுத்த பிறப்பிலே சிவனை அடைதற்கு ஏதுவான நீண்ட ஆயுளைப் பெறுதல் கூடும்.

விளக்கவுரை

'செறிதல், சிவனருளால்' என்க. அழிதல், பன்னிரண்டு அங்குலமாகப் புறப்பட்டது, பின், நாலங்குலம் அழிய, எட்டங் குலமாகவே புகுதல்.

நந்தி, சிவன் அவன் திகழ்தலாவது, காட்சிப் படுதல், 'திகழ்கின்ற' என்னும் பெயரெச்சம், 'ஆயு' என்னும் ஏதுப் பெயர் கொண்டது. உம்மை, சிறப்பு, இடையிரண்டடிகள் மூன்றாம் எழுத்து எதுகை.
இதனால், 'ஆசனம் முதலிய உறுப்புக்களால் யோக நெறி கைவரப் பெற்றுப் பின் பிராசாத நெறியைத் தலைப்பட்டு மெய் யுணர்வைப் பெறுதற்கு, வாழ்நாள் நீட்டித்தல் வேண்டும்' என்ப துணர்த்தி, 'அதற்குப் பிராணாயாமம் இன்றியமையாதது' என வலியுறுத்தப்பட்டது.

சோதனை தன்னில் துரிசறக் காணலாம்
நாதனும் நாயகி தன்னிற் பிரியும்நாள்
சாதன மாகுங் குருவை வழிபட்டு
மாதன மாக மதித்துக்கொ ளீரே. *#706*

'சிவன், உடலைக் காக்கின்ற சத்தியினின்றும் பிரிகின்ற நாள் இது' என்பதைக் குறிகள் சிலவற்றால் ஐயமற உணரலாகும். 'அக் குறிகள் இவை' என்பதை யோக குருவை வழிபட்டே பெற்று, அங்ஙனம் பெற்ற அறிவைப் பெரிய செல்வம் போல மதித்துப் போற்றிக்கொள்ளுங்கள்.

விளக்கவுரை

காக்கும் சத்தியை, 'ஆரணி' என்பர். சிவன் காக்கும் சத்தியினின்றும் பிரிதலாவது. 'நிலை பெறுக என நினைக்கும் நினைவைவிட்டொழிதல். அங்ஙனம் ஒழியின் உடல் ஒரு நொடியும் நிலைபெறாது அழியும். இதனையே,

'கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்,
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே'
-தி.5 ப.90 பா.4

என்று அருளிச்செய்தார் ஆளுடைய அரசர். எனவே, 'நாதனும், நாயகி தன்னிற் பிரியும் நாள்' என்றது, 'உடல் அழியும் நாள்' என்றவாறாம். ஞான குரு, சாத்திய குருவாகலின், யோக குருவை, 'சாதனகுரு' என்றார். எனவே, கிரியா குருவும் அத்தன்மையரே யாதல் அறியப்படும். இனி, 'நாதன், உடம்பினை உடையதாகிய உயிர்; நாயகி குண்டலினி சத்தி' எனவும் உரைப்பர்.
இதனால், பிராணாயாமத்தில் உளஞ்செல்லுதற் பொருட்டு, வாழ்நாளின் எல்லையை உணருமாறு கூறி, பின் வருகின்ற ஆயுள் பரீட்சைக்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

ஈராறு கால்கொண் டெழுந்த புரவியைப்
பேராமற் கட்டிப் பெரிதுண்ண வல்லிரேல்
நீரா யிரமும் நிலமாயிரத் தாண்டும்
பேராது காயம் பிரான்நந்தி ஆணையே. *#707*

பிராணாயாம வன்மையால் தலையில் உள்ள அமுதத்தைப் பெற்று

மிகவும் நுகர வல்லீராயின், உமக்கு உடம்பாய் அமைந்த, நிலம், நீர்
முதலிய தத்துவங்கள் பலவும் அவை யவை ஒடுங்கும் முறையில்,
வலிமை கெட்டு ஒடுங்குதற்குத் தனித்தனிப் பல்லாண்டுக் காலம்
செல்லும்; அங்ஙனம் செல்லவே, உடம்பு கெட் டொழியாது, நெடுநாள்
நிலைத்து நிற்கும்; இஃது எங்கள் அருளாசிரி யரான நந்தி தேவர்மேல்
ஆணையாக நான் சொல்லும் உண்மை.

விளக்கவுரை

பிராணாயாமத்தின் அருமை உணர்த்தற்குப் பிராண வாயுவை நான்கு காலன்றிப் பன்னிரண்டுகால்கொண்டு அதிவேக மாய் ஓடும் குதிரையாக உருவகம் செய்து கூறினார். 'பன்னிரண்டு கால்' என்றது. அது புறப்படும் அங்குல அளவை. முன் நிற்கற் பாலதாய நிலம், செய்யுள் நோக்கிப் பின் நின்றது. மூன்றாம் அடியின் இறுதியில் எஞ்சி நின்ற, 'என இவ்வாறாக' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. மூன்றாம் அடிக்குப் பிறவாறு உரைப்பாரும் உளர்

இதனால், மேல் வலியுறுத்தப்பட்ட பிராணாயாமம் வாழ்நாள் நீட்டிப்பிற்கு ஏதுவாதல் இவ்வாற்றான் என்பது கூறி. அடுத்து வருகின்ற காய சித்திக்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

ஓசையில் ஏழும் ஒளியின்கண் ஐந்தும்
நாசி யினில்மூன்றும் நாவில் இரண்டும்
தேசியும் தேசனுந் தம்மிற் பிரியுநாள்
மாசறு சோதி வகுத்துவைத் தானே. *#708*

மேற்கூறியவாறு சத்தி சிவங்கள் தம்மிற் பிரிந்து நீங்குகின்ற நாளின்
எல்லையை, 'சத்தம், உருவம் கந்தம், சுவை, பரிசம்' என்னும் புலன்களில்
முறையே, 'ஏழு, ஐந்து, மூன்று, இரண்டு, ஒன்று' என இவ்வாறாகப்
பொது வகையில், இருளை அறுக்கும் ஒளியாகிய இறைவன் வகுத்து
வைத்துள்ளான்.

விளக்கவுரை

எனவே, 'இறப்பு நேருங் காலத்து இப் புலன் உணர்வுகள் இங்குக் கூறிய கால முறையில் கெடுவனவாம்' என்பது இத் திருமந்திரத்தின்வழி அறியப்படுகின்றது. இவ்வாற்றால், 'முதலில் பரிச உணர்வும், முடிவில் ஓசை உணர்வும், அவற்றிற்கு இடையே இங்குக் கூறிய முறையில் ஏனைய புலனுணர்வுகளும் கெடும்' என்பது பெற்றாம். புலன்களை மேல்நின்றிழியும் கால முறையில் கூறினார். அதனால், பரிச உணர்வு ஒரு நாளிற் கெடும் முறையில் கூறினார். அதனால், பரிச உணர்வு ஒரு நாளிற் கெடும் என்பது தானே விளங்குதலின், செய்யுள் நோக்கி அதனை உபலக்கணத்தால் கொள்ள வைத்தார். 'விளம்பிய உள்ளத்து மெய் வாய்

கண், மூக்கு' *(சிவஞான போதம், சூ.5)* எனப் பிறவிடத்தும் இவ்வாறு எஞ்ச வைத்தல் காண்க. புலன்களின் கேடு கூறவே, அவற்றிற்கு முதலாய பூதங்களும் இவ்வாற்றால் சத்தி கெடப் பௌதிகமாகிய உடம்பு அழியும் வகை பெறப்படுவதாம். செய்யுள் நோக்கிப் பொறியும், புலனும் விரவ ஓதினார். தேசி - ஒளியாயுள்ளவள். தேசன், அவ்வொளியை உடையவன். இவ்விருவரையும் மேல், *(பா.705)* 'நாதனும், நாயகி' என்றதற்கு உரைத்தவாறே அவர் உரைப்பர். இத்திருமந்திரத்திற்குப் பிறர் பிறவாறு உரைத்த உரை பொருந்துவதாகாமையை அறிந்து கொள்க.
இதனால், யோகத்தால் வாழ்நாள் நீட்டிக்குமாறு கூறிய இயைபு பற்றி, யோகம் இல்லாதார்க்கு உள்ள வாழ்நாள் எல்லை கூறப் பட்டது.

*5.13.*காய சித்தி உபாயம்

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே. *#709*

உடம்பு அழியுமாயின், அதனைப் பெற்றுள்ள உயிரும் அழிந்ததுபோலச் செயலன்றி நிற்பதாம். ஆகவே, உடம்பு அழிந்தபின், அவ்வுடம்பைத் துணைக்கொண்டு இயங்கிய உயிர், தவமாகிய துணையைப் பெறவும், பின் அதனால் இறையுணர்வை அடையவும் இயலாததாய்விடும். இதுபற்றி, உடம்பை நிலைபெறுவிக்கும் வழியை அறிந்து அவ்வழியில் அதனை நிலைபெறுவித்த யான், உயிரை நலம் பெறச் செய்தவனே ஆயினேன்.

விளக்கவுரை

'ஆகவே, என்னை உடம்பையே பொருளெனக் கொண்டவனாகக் கருதி அறிவுடையோர் இகழார்' என்பது கருத்து. எனவே, 'நீவிரும் உடம்பை நிலை பெறுவிக்க முயலுங்கள்' என்பது குறிப்பெச்சமாயிற்று.
'உடம்பார், உயிரார்' என்றவை, நிலையாமை யுடைய இழிவு பற்றி வந்த திணை வழுவமைதி. இதனை, 'உயர்வு பற்றி வந்தது' என்பாரும் உளர்;, 'அழியின் ' எனவும், 'அழிவார்' எனவும் அழிபொருளாகக் கூறப்பட்டவை, உயர்வுடையனவாதல் எவ்வாறு என எண்ணி ஒழிக.
திடம்படல், உறுதி யுண்டாகப் பெறுதல், 'உயிர்க்கு உறுதி' என்றது, இங்குத் தவத்தை, 'திடம்பட' என்பதில் எண்ணும்மை தொகுக்கப்பட்டது. இனி, 'சேரவும்' என்னும் எண் ணும்மையைச் சிறப்பும்மையாக வைத்து, 'திடம்பட' என்பதனைச் சேர்தற்கு அடையாக்கியே உரைப்பர் பலரும்.
உடம்பை வளர்க்கும் உபாயம், வருகின்ற திருமந்திரம் முதலாக உள்ளவற்றிற் கூறப்படுவன. 'வளர்த்தேன்' இரண்டில் முன்னது வினைமுற்று. அதன்பின், 'அதனால்' என்பதும் இறுதியில், 'ஆயினேன்' என்பதும் எஞ்சி நின்றன.
இதனால், காயசித்தி இன்றியமையாமையாதற்குக் காரணம் உணர்த்து முகத்தால், அதன் சிறப்புக் கூறப்பட்டது. இதனானே, உடம்பை உயிர் நலத்திற்குக் கருவியாகக் கொள்ளுதலல்லது, அதனையே பயனாகக் கொள்ளுதலும், உடம்பு கருவியாதலை உணராது அதனைப் பகை எனக் கொண்டு வருத்துதலும் ஆகா என்பதும் பெறப்பட்டன.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று

உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே. *#710*

சிவ நூல் கேட்பதற்கு முன்பெல்லாம் உடம்பை அழுக்கு ஒன்றையே உடையதாகக் கருதி இகழ்ந்திருந்தேன். சிவநூல் கேட்ட பின்னர், அதற்குள்தானே பயனை அடைதற்குரிய வழிகள் பலவும் இருத்தலை அறிந்தேன். அதனால், அவ்வறிவின் வழியே, உடம்பிற்குள் தானே இறைவன் தனக்கு இடம் அமைத்துக் கொண்டிருக்கின்றான் என்பதையும் அறிந்து, இப்பொழுது நான் உடம்பைக் கேடுறாதவாறு குறிக்கொண்டு காக்கின்றேன்.

விளக்கவுரை

'இத்தகைய அறிவையும் செயலையும் நீவிரும் பெறுதல் வேண்டும்' என்பது குறிப்பெச்சம். இழுக்கு, குற்றம்; மாசு. இழுக்குடையதனை, 'இழுக்கு' என்றார், 'சிவ நூல் கேட்கும் முன்னர், கேட்டபின்னர்' என்பன இயைபெச்சமாய் வந்து இயையும். உறுதல், பயனைப் பெறுதல். உறுபொருள், உறுதற்கு ஏதுவாய பொருள்; என்றது வழியை. செய்யுளின் இடைக்கண்நின்ற ஏகாரங்கள் தேற்றம். கோயில் - ஆதார, நிராதார, மீதானங்களாகிய இடங்கள். 'இருந்து' என்றது 'குறிக்கொண்டிருந்து' என்றவாறு.

இதனால். 'உடம்பு, உயிர் நலத்திற்குக் கருவியாதல் இவ்வாறு என்பது கூறப்பட்டது.

சுழற்றிக் கொடுக்கவே சுற்றிக் கழியும்
கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்
துழற்றிக் கொடுக்கும் உபாயம் அறிவார்க்
கழற்றித் தவிர்ந்துடல் அஞ்சன மாமே. *#711*

பிராண வாயுவை வாங்கியும், விட்டும் சுழலும்படி செய்ய, உடம்பில் உள்ள மாசுகளும் அதனோடே சுழன்று நீங்கும். அவ்வாற்றால் மாசுகளைப் போக்கித் தூய்தான பிராணவாயுவை ஆதாரத் தாமரைகளில் நிரப்பி, அவை வழியாக உடம்பில் உள்ள எல்லா நாடியினுள்ளும் அவ்வாயுச் சென்று உலவும்படி செய்து, அதன் ஆற்றலை அந்நாடிகட்குத் தருகின்ற இவ்வுபாயத்தை முறை யறிந்து செய்ய வல்லவர்க்கு, உடம்பு நெருப்பிலிட்டுச் சுடப்படுதலினின்றும் நீங்கி, உயிரினுள் ஒளிந்து நிற்கும் கள்வனாகிய இறைவனைப் புலப்படக் காட்டும் மந்திர மையாய் அமையும்.

விளக்கவுரை

'சுழற்றிக் கொடுக்க' என்பது ஒரு சொல் நீர்மைத்து. 'கொடு' என்பது செயப்படுபொருள் குன்றாவினையில் இவ்வாறு துணைவினையாய் வருதலை, 'கிண்டிக் கொடுத்தல், புரட்டிக் கொடுத்தல்' முதலாகவரும்

வழக்குநோக்கி அறிக. 'சுத்தி' என்பது பாடமன்று. 'மலம்' எனப் பின்னர் வருதலின்' வாளா,'கழியும்' என்றார், 'உழற்றிக் கொடுக்கும்' என்பதில் உழலுதற்கு இடமும், கொடுத்தலுக்குச் செயப்படுபொருளும் ஆற்றலால் கொள்ளக் கிடந்தன. உழற்றிக் கொடுத்தலையே உபாயம் என்கிறாராதலின், 'கொடுக்கும் உபாயம்' என்பதில், பெயரெச்சம் வினைப்பெயர் கொண்டதாம். 'அழற்றப்படுவது' என்னும் பொருளதாய 'அழற்றி' என்பது இங்கு அன்னதாம் தன்மையைக் குறித்தது. மந்திர மை, புதையுண்டு கிடக்கும் பொருட்குவை முதலியவற்றைப் புலப்படக் காட்டுதல் நன்கறியப்பட்டது.

இதனால், காயசித்தி உபாயங்களுள் முதல் உபாயம் பிராணாயாமம் என்பது கூறப்பட்டது.

அஞ்சனம் போலுடல் ஐஅறும் அந்தியில்
வஞ்சக வாதம் அறும்மத்தி யானத்தில்
செஞ்சிறு காலையிற் செய்திடில் பித்தறும்
நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நாசமே. *#712*

மந்திரமைபோல நின்று பயன்தரத் தக்கதாகிய உடலை. அன்ன தாகாதவாறு, 'ஐ, வளி, பித்து' என்னும் மூன்றானும் தோன்றிக் கெடுக்கின்ற நோய்கள், முறையே, 'மாலை, நண்பகல், காலை' என்னும் பொழுதுகளில் செய்யும் பிராணாயாமத்தால் நீங்கும். அதுவேயன்றி, முப்பொழுதும் செய்யும் பிராணாயாமத்தாலும் நரை திரைகள் வாராதொழியும். இவ்வுபாயத்தை இங்கு, உடலைக் கொல்லும் நஞ்சுபோன்ற தீமைகள் நீங்குதல் நோக்கிக் கூறினோம்.

விளக்கவுரை

போல் உடல், வினைத்தொகை. 'போன்றுடல்' என்பது பாடமன்று. 'உடற்கண்' என ஏழாவது விரிக்க. 'வஞ்சகம், செய்திடில்' என்பவற்றை ஏனையவற்றிற்கும் கூட்டுக. 'ஐ, வாதம், பித்து' என்ற மூன்றும் காரண வாகுபெயராய், அவற்றால் உளவாகும் நோய்களைக் குறித்தன; என்னை? அற்றொழியற்பாலன அந் நோய்களே யாதலின். காலைப் பொழுது எச் செயலுக்கும் சிறப்புடைய தாகலின். அதனை 'செஞ்சிறு காலை' என்றார். செய்தலுக்குச் செயப்படுபொருள், அதிகாரத்தால் வந்தது. 'நஞ்சறச் சொன்னோம்' என்பதனை ஈற்றில் வைத்து உரைக்க. 'நரை, திரை நாசம்' என்றதனால், இளமைநீங்காமை குறிக்கப்பட்டது. இதனைக் காலம் வரையாது கூறினமையின் 'எக்காலத்தும் செய்தலால்' என்றதாயிற்று.

இதனால், மேற்கூறிய உபாயத்தைச் செய்யுமாறும், அவற்றால் வரும் பயன்களும் கூறப்பட்டன.

மூன்று மடக்குடைப் பாம்பிரண் டெட்டுள

ஏன்ற இயந்திரம் பன்னிரண் டங்குலம்
நான்றஇம் மூட்டை யிரண்டையுங் கட்டியிட்
டூன்றி யிருக்க உடம்பழி யாதே. *#713*
மூன்று வளைவை யுடையதாகிய பாம்பு, பதினாறு அங்குல அளவினவாகிய கயிறுகளைக் கொண்ட பூட்டையில் அழுந்தப் பொருந்தி யிருக்குமாயின், உடம்பு அழியாது நிலை பெற்றிருக்கும். அப்பாம்பு அங்ஙனம் பொருந்தி நிற்றற்கு, மேற்கூறிய பூட்டையில், அவிழ்ந்து கிடக்கும் நிலையினவாய்ப் பன்னிரண்டங்குல நீளம் தொங்குகின்ற இரண்டு மூட்டைகள், அவிழ்ந்து வீழாதவாறு கட்டப்படல் வேண்டும்.

விளக்கவுரை

'பாம்பு' என்றது குண்டலினியை; 'இயந்திரம்' என்றது நடுநாடியை. 'பதினாறு அங்குலக் கயிறு' என்றது, அந்நாடியுள் பதினாறு மாத்திரையளவு பூரிக்கப்படும். பிராணவாயுவை, 'பன்னிரண்டு அங்குல நீளம் தொங்குகின்ற இரண்டு மூட்டை' என்றது, இடைகலை பிங்கலை நாடிகளின் வழி இயல்பிலே பன்னிரண்டங்குலம் வெளிச் செல்லும் பிராண வாயுவை. 'அம் மூட்டையை அவிழ்ந்து வீழாமல் கட்டுதல்' என்றது, அந்த இரு வழியையும் அடைத்தலை. எனவே, 'இடைகலை பிங்கலை நாடிகளின் வழி இயல்பாக இயங்குகின்ற பிராண வாயுவை அடக்கிப் பதினாறு மாத்திரையளவு நடுநாடி வழிப் பூரித்துக் குண்டலி சத்தியை நடு நாடியில் பொருந்தி யிருக்கச் செய்தால், உடம்பிற்கு அழிவு உண்டாகாது' என்பது இம் மந்திரத்தால் போதரும் பொருளாம். 'மூன்று மடக்கு' என்றது, உடம்பில், 'அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம்' எனப் பகுக்கப்படும் மூன்று வட்டங்களை. அம்மூன்றிலும் குண்டலினி வியாபித்துள்ளமை அறிக. இனி, 'அப் பாம்பு அவ் யந்திரத்தில் ஊன்றி யிருக்க' என்றது, பொது மக்களிடத்து உணர்வின்றித் தூங்குவது போல் இருக்கின்ற நிலையில் லாமல், விழித்திருப்பதுபோல் செயற்படும் நிலையில் நிற்க, என்றதாம். பிராண வாயுவால் சட ஆற்றல் மிக்கு நிற்கும் உடல் உறுப் புக்கள், பின் அறிவாற்றலால் தூண்டப்படுதலும் அவை செயற் பாடின்றிக் கெட்டொழியாமைக்கு ஏதுவாம் என்க. குண்டலியின் தன்மை மேலே பலவிடத்தும் விளக்கப்படது. 'கட்டியிட்டு' என்பதில் 'இட்டு' அசைநிலை. 'பாம்பு, இரண்டு எட்டுள இயந்திரத்தில் நான்ற மூட்டை இரண்டையும் கட்டி ஊன்றியிருக்க உயிர் அழியாதே' என வினை முடிவு செய்க. 'இரண்டெட்டு' என்பது எண்ணலளவை யாகுபெயர். 'முட்டை' என்பது பாடம் அன்று.
இதனால், காய சித்தி உபாயங்களுள் குண்டலினி இயக்கம்

இரண்டாவதாதல் கூறப்பட்டது.

நூறும் அறுபதும் ஆறும் வலம்வர
நூறும் அறுபதும் ஆறும் இடம்வர
நூறும் அறுபதும் ஆறும் எதிரிட
நூறும் அறுபதும் ஆறும் புகுவரே. *#714*

நூறு மாத்திரை காலமேயாயினும், அறுபது மாத்திரை காலமேயாயினும், ஆறு மாத்திரை காலமேயாயினும் பிராண வாயு சுழுமுனை நாடியை வலமாகச் சூழ்ந்தும் இடமாகக் சூழ்ந்தும், அதன் உட்புகுந்து மேலேறியும் வருமாயின், அத்துணை ஆண்டுக்கால வாழ்நாளினை மக்கள் எய்துவர்.

விளக்கவுரை

நூறு முதலிய மூன்றினும் நான்கிடத்தும், 'ஆயினும்' என்பது எஞ்சி நின்றது. 'பிராண வாயுவைக் கும்பகம் செய்யும் ஆற்றலுக்கு ஏற்பவே வாழ்நாளின் அளவு அமையும்' என்றற்கு இங்ஙனம் நயம்படப் பலவாறு விகற்பித்துக் கூறினார். யோகநெறியிற் கொள்ளப்படும் மாத்திரை என்பது, கைவிரலை இயல்பான இயக்கத்தில் முழந்தாளை ஒருமுறை சுற்றச் செலுத்தி நொடித்தலைச் செய்யும் கால அளவாம். யோக முறையால் பெறப்படும் வாழ்நாள் நீட்டிப்பு, இயல்பாய் அமைந்த வாழ்நாளின் எல்லையோடு கூடிநிற்கும்; அதனால் 'ஆறாண்டு' என்பதும் நீட்டிப்பே என்க.
இதனால், 'மேற்கூறியவற்றுள் முதலதாகிய பிராணாயாமத் தால் பெறப்படும் ஆற்றல் காயசித்திக்குச் சிறந்தது' என்பது கூறப் பட்டது.

சத்தியார் கோயில் இடம்வலம் சாதித்தால்
மத்தியா னத்திலே வாத்தியங் கேட்கலாம்
தித்தித்த கூத்தும் சிவனும் வெளிப்படும்
சத்தியம் சொன்னோம் சதாநந்தி ஆணையே. *#715*

மூன்று மடக்குடைப் பாம்புபோல உடம்பில் உள்ள குண்டலி சத்தி, மேற்கூறியவாறு ஊன்றியிருக்கும் இடமாகிய நடு நாடியைப் பிராண வாயு வலமும் இடமுமாகச் சுற்றிவருகின்ற சாதனையைப் புரிந்தால், உலக நோக்கில் இருக்கும்பொழுதே உடலில் உள்ள பத்து நாடிகளில் உண்டாவனவாக மேல் (பா.593) கூறிய 'மணி, கடல், யானை' முதலியவற்றின் ஓசைபோலும் ஒலிகளைக் கேட்டல் கூடும். இனிச் சிவ பெருமான். தாள அறுதிக்கு இயைய ஆடும் ஆட்டத்தின் ஓசையும் கேட்கப்பட்டுப் பின் அப்பெருமானே விளங்கித் தோன்றுவான். மெய்யான இன்பமே வடிவமான எங்கள் ஆசிரியர் மேல் ஆணையாக, இவ்வாறு நாம் உண்மையையே உங்கட்குச் சொன்னோம்.

விளக்கவுரை

முதலடி, மேல், 'மூன்று மடக்குடை' என்ற மந்திரத்துட் கூறியதனை அநுவதித்தது. எனவே, இச்சாதனையால் குண்டலியின் இயக்கம் மிகுதல் பெறப்பட்டது. சகல நிலை 'பகல்' எனப்படுதலின், சகல சாக்கிர நிலையை, 'மத்தியானம்' என்றார். யோகாவத்தை யிலன்றிச் சகலாவத்தையில் தச நாதங்களைக் கேட்டல் அரிதாகலின், 'மத்தியானத்திலே வாத்தியங்கேட்கலாம்' எனச் சிறந்தெடுத் தோதினார். இஃது உடம்பு சட ஆற்றல் மிக்கிருத்தற்கு அறிகுறியாகும். 'தித்தித் தா' என்னும் ஒலிக் குறிப்பினை, 'தித்தித்த' எனக் குறுக்கி ஓதினார். அஃது இரட்டுற மொழிதலாய் நின்று, கூத்து, அருள் இன்பக் கூத்தாதலை உணர்த்திற்று. கூத்து, கருவியாகுபெயர்; என்னை? சிவனின் வேறாக ஓதப் பட்டமையின் சிவன், தடத்த சிவன். 'வெளி ப்படும்' என்பதனைத் தனித் தனி இயைக்க. 'சொன்னேன்' என்பதும் பாடம்.
இதனால், இரண்டாவதாகிய குண்டலியின் இயக்கம் திருவருட் பேற்றிற்குச் சிறந்ததாதல் கூறப்பட்டது.

திறத்திறம் விந்து திகழும் அகாரம்
உறப்பெற வேநினைந் தோதும் சகாரம்
மறிப்பது மந்திரம் மன்னிய நாதம்
அறப்பெறல் யோகிக் கறநெறி யாமே. **#716**

நாதத்தை முற்றப் பெறக் கருதிச் சொல்லப்படுகின்ற, முறையே மகர மெய்யையும் புள்ளி வடிவினதாய எழுத்தையும் உடன் கொண்டு விளங்கும் அகரமும், சகரமுமே பிராண வாயுவைத் தடுத்தற்குரிய மந்திரமாம்; ஏனெனில், நாதத்தை முற்றும் உணரப் பெறுதலே யோகம் கைவந்தவனுக்குரிய தன்மையாதலின்.

விளக்கவுரை

'உறப் பெறவே நினைந்து ஓதும்' என்பதை முதலிற் கொள்க. பிரணவ கலைகளுள் அகர உகரங்கள் பெருங்கூறாயும், மகர மெய் உட்கூறாயும் நிற்குமாதலின், மகர மெய்யை, 'திறத்திறம்' என்றார், 'விந்து' என்றது இங்கு, புள்ளி, வடிவத்தை, மகரத்தை உடன்கொண்ட அகரம் எனவே, 'அம்' என்பதும், புள்ளி வடிவை உடன்கொண்ட சகரம் (ஸ) எனவே, 'ஸ'என்பதும் விளங்கின. இவை இரண்டுங் கூட, 'அம்ஸ:' என்றாகுமாகலின், அதுவே பிராணா யாமத்திற்கு உரிய மந்திரம் என்பது போந்தது. 'அகரம்' என வாளா கூறினும், மகரம் தானே பெறப்படுமாயினும், சகரத்திற்கு வேறு கூறு கின்றாராகலின், அகரத்தின்கண் ஐயம் நிகழாமைப் பொருட்டு, அதனை எடுத்தோதினார். 'அசபை' எனப்படுவது இவ் அம்ஸ மந்திரமே. உபதேசத்தாற் பெறற்பாலனவாய மந்திரங்களை வெளிப் படக் கூறாது, இங்ஙனம் மறைத்துக் கூறுதலே மந்திர நூல்கட்கு இயல்பென்க.

அம்ஸ மந்திரத்துள் 'அம்' என்பது மூச்சினை உள் வாங்குதற்கும், 'ஸ' என்பது மூச்சினை வெளிவிடுதற்கும் உரியன, இதனை அவற்றது ஓசை இயல்பாலும் உணரலாகும். இவ்வாறன்றி இவற்றை மாறிக் கூறுவாரும் உளர். உயிர் முதலாய மந்திரங்கள் அனைத்திற்கும் முதற்கண் ஹகாரத்தைச் சேர்த்தல் வடமொழி மரபாகலின், 'அம்ஸ:' என்பது, 'ஹம்ஸ:' என்றும் 'அம்ச மந்திரம்' என்பது 'ஹம்ஸ மந்திரம்' என்றும் அம்மொழியில் சொல்லப்படும். இனி, ஸகாரத்திற்கும் மகர மெய்யைச் சேர்த்து 'அம்சம்' எனச் சொல்லப்படுவதே அம்ச மந்திரம் என்னும் கொள்கையும் உண்டு. 'அதனையே மேற்கொண்டு, இதற்கு அவ்வாறு உரை கூறுவாரும் உளர்.

இது பிராணனின் இயல்பான இயக்கத்தாலே நடை பெறுதலின், 'அசபை' எனப்பட்டது. அசபை, வாய்விட்டுச் செபிக்கப் படாதது, 'அஜபா' என்பது வடமொழிப் பெண்பாற்சொல். 'செபிக்கப் படாதது' எனவே, இதனை, 'மானதமாகக் கணித்தலே சிறப்பு' என்பது பெறப்படும்.

'அம்' என்பதனை, 'அஹம்' எனத் திரித்து, 'ஸ:' என்பதன் பின் வைக்க, 'ஸோஹம்' என்றாகி, 'அவன் நான்' எனப் பொருள் தரும். அதனால், 'ஸோஹம்' எனப் பாவிக்கும் மந்திரமும் அம்ஸ மந்திரத்தின் வேறுபாடே என்பர், அம்ஸ மந்திரத்தால் பாச நீக்கமும், ஸோஹம் பாவனையால் சிவப்பேறும் உளவாகும் என்க.

இதனால், 'காயசித்தி முதலிய பலவற்றிற்கும் துணையாகிய பிராணாயாமத்திற்கு உரிய மந்திரம் இது' என்பது, காய சித்தி உபாய இயைபு பற்றிக் கூறப்பட்டது.

உந்திச் சுழியி னுடனேர் பிராணனைச்
சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினால்
முந்தி முகட்டின் நிறுத்தி அபானனைச்
சிந்தித் தெழுப்பச் சிவனவ னாமே. *#717*

பூரக ரேசகங்களை மேற்கூறியவாறு அம்ஸ மந்திரத்தாற் செய்தபின் கும்பகம் செய்யும் பொழுது 'ஹாம்' என்னும் வித்தெழுத்தாலே (பீஜாட்சரத்தாலே) பிராணனைச் சுழுமுனை நாடி வழியே கண்டத்தளவும் செலுத்திப் பின், 'ஹௌம்' என்னும் வித்தெழுத்தால் ஆஞ்ஞையை அடைவித்து, அங்கே மலவெழுத் துக்கள் நீங்கிய திருவைந்தெழுத்து, 'தத்துவமசி' மகாவாக்கியப் பொருளையும், 'சோஹம்' என்பதன் பொருளையும் தருமாற்றை உபதேச முறையான் உணர்ந்து அதனானே அவ்வாயுவை அசையாது நிறுத்திப் பின் அபானவாயு எழத் தொடங்குமாயின், அதனைப் பிரணவத்தால் அடக்கிப் பிராணனை முன்போலவே மேலெழச் செய்யின், அவ்வாறு

செய்பவன் சிவமாந் தன்மையை அடைவான்.

விளக்கவுரை

'உந்திச் சுழியின் உடன் ஏர் பிராணன்' என்றது, 'பிராணனை அஃது எழுமிடத்திலிருந்தே இவ்வாறு எழுப்புக' என்றவாறு. உடன் - விரைவாக. ஏர்தல் - எழுதல். நிறுத்துதற்கு 'சிவமந்திரத்தினால்' என விதந்தோதியது போலப் பிராணனையும், அபானனையும் எழுப்புதற்கு உரிய மந்திரங்களை விதவாமையானும், 'எழுப்பி' என வாளாகூறி யொழியாது 'சிந்தித் தெழுப்புக' என்றமையானும், பிராணனை உள்வாங்குதற்குரிய 'ஹம்' என்பதனை மாத்திரை கூட்டி அது நெடிது செல்லுமாறு எழுப்பி, அப்பிராணன் நிற்றற்கு அம்மந்திரத்தை ஹௌகாரமாகத் திரித்து முடித்தல் வேண்டும் என்பதும், அபானனை மூலாதாரத்திற்குரிய பிரணவத்தால் எழுப்புதல் வேண்டும் என்பதும் பெறப்பட்டன.

மந்திரங்கள் வாயினால் சொல்லப்படும் சொற்களும், அவற்றொடு கூட்டப்படும் வித்தெழுத்துக்கள் (பீஜாட்சரங்கள்) மனத்தால் சிந்திக்கப்படும் எழுத்துக்களும் ஆம் என்க. 'முந்தி நிறுத்தி' என இயையும். 'முகடு' என்றது, சுழுமுனையின் உச்சியாகிய ஆஞ்ஞையை. பிராணனை அவ்விடத்து நிறுத்தும் முன்னே அபான வாயு கீழ்ச் செல்லுதல் குற்றமாகாமையின், 'முந்தி முகட்டின் நிறுத்தி' என்றார், எனவே, 'மூலத்துவாரத்தை முக்காரம் மிட்டிரு' (பா.571) என மேற் கூறியதும் இதுவேயாதல் அறியப்படும். 'அவன் சிவனாம்' என மாறுக. இனி 'அவ்வாறு செல்பவன்' என்பதைத் தோன்றா எழுவாயாகக் கொள்ளின், 'அவன்' என்பது பகுதிப் பொருள் விகுதியாம், 'ஆம்' என்றது 'அப்பாவனையைத் தலைப்படுவன்' என்றவாறு.

இதனால், காயசித்தி பெற்றவன் அதனால் பெறற்பாலதாய பயனைப் பெறுமாறு கூறப்பட்டது.

மாறா மலக்குதந் தன்மேல் இருவிரல்
கூறா இலிங்கத்தின் கீழே குறிக்கொண்மின்
ஆறா உடம்பிடை அண்ணலும் அங்குளன்
கூறா உபதேசங் கொண்டது காணுமே. ***#718***

அசுத்தத் தன்மை நீங்காதே எருவாய்க்கு இரண்டு விரற்கிடைமேலேயும், தன் சொல்லாற் சொல்லப்படாத குறிக்குக் கீழே யுமாய் உள்ள இடத்தில் தியானியுங்கள் 'யாரை' எனின், உடம்பின் கண் ஆறு வகையில் உள்ள இறைவன் அங்கும் உளன். எனவே, அவனையே தியானியுங்கள் என்பதாம். அங்குத் தியானிக்குமிடத்து, 'ஊமை எழுத்து' எனப்படும் பிரணவத்தால் தியானியுங்கள்.

விளக்கவுரை

இறைவனைத் தியானிக்கும் இடங்களில் ஒன்றாகிய 'மூலாதாரம் எனப்படுவது எருவாயுமன்று; கருவாயுமன்று' என மேற் (பா.*568*) கூறியதனை நன்கு வலியுறுத்தற்கு, 'குதந்தன்மேல்' எனவும், 'இலிங்கத்தின் கீழே' எனவும், அங்கு இறைவன் இருக்கு மாறு உணர்த்து முகத்தான் 'யாரை' என்னும் அவாய் நிலையை நிரப்புதற்கு, 'ஆறா உடம்பிடை அண்ணலும் அங்குளன் 'எனவும் கூறினார். மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களிலும் இறைவன் முறையே 'அதோ முகன், பிரமன், மால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன்' என்பவராக வீற்றிருப்பான். 'அதோமுகம் கீழண்ட மான புராணன்' 'அதோமுகமாகிய அந்தமில் சத்தி- அதோ முகமாகி அமர்ந்திருந் தானே' என்பவற்றால், அதோமுக மூர்த்தியின் நிலை பற்றி அறிந்துகொள்க. பிற யோகநூல்கள் மூலாதாரத்தில் விநாயகராய் இருப்பன் எனக் கூறும். கீழ்நோக்கித் தொங்கும் தும்பிமுகத்தை யுடைய விநாயகர் அதோமுகரே. ஐந்து முகத்தோடு அதோ முகமுங் கூடிய அறுமுக மூர்த்தி முருகன். 'உடம்பிடை' என்பதன்பின், 'உள்ள' என்பது சொல்லெச்சமாய் நின்றது. 'அண்ணல் அங்கும் உளன்' என உம்மையை மாற்றி யுரைக்க. இதனால், அபானனை எழுப்புதலும் இன்றியமையாத தென்ப துணர்த்த வேண்டி, அதனை எழுப்புமாறு கூறப்பட்டது. இதனுள், 'கூறா உபதேசம்' என்றது 'அபானனைச் சிந்தித் தெழுப்பி' என்றதனைத் தெரிந்துணர்த்தியவாறு. உபதேசிக்கப் படுவதனை, 'உபதேசம்' என்றார்.

நீல நிறமுடை நேரிழை யாளொடுஞ்
சாலவும் புல்லிச் சதமென் றிருப்பார்க்கு
ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவர் பராநந்தி ஆணையே. *#719*

பிராணனை முந்தி முகட்டில் நிறுத்திய பின், அதற்கு மேலே உள்ள ஏழாந்தானமாகிய உச்சியில் திருவருளோடு நேரே கூடி, 'இத்திருவருளல்லது பிறிதொன்றும் நிலையுடையதன்று' என்பதை எவரேனும் உணர்ந்திருப்பார்களாயின், அவர்கள் ஆன்ம லாபத்தைப் பெறுதலேயன்றி, நரை திரை அணுகாது, என்றும் இளமையோடு இருக்கும் நன்மையையும் அடைவர். இஃது எங்கள் ஆசிரியர் ஆணை யாகச் சொல்லப்படும் உண்மை.

விளக்கவுரை

'குண்டலி சத்தியன்றிச் சிவசத்தி' என்பது உணர்த் துதற்கு, 'நீலநிறமுடை நேரிழையாள்' என்றார். ஆறாந்தானமாகிய ஆஞ்ஞை விந்துத்தானமாகலின், அதற்கு மேலுள்ள உச்சி சத்தித் தானமாம். சத்தி

அருவ நிலையது ஆகலானும், அதில் அருவுருவ நிலையாகிய ஆஞ்ஞையினும் மிக விளக்கமாகத் திருவருள் விளங்கு மாகலானும் அதனையே, 'நீல நிறமுடை நேரிழையாளொடும் சாலவும் புல்லி' என்றார். 'பாலனும் ஆவர்' என்ற உம்மை, இறந்தது தழுவிய எச்சம். 'ஆவர்' என்றது, 'ஆதலை மிகப் பெறுவர்' என்றவாறு. பராநந்தி - பரானந்தத்தை எய்தியவர், பரானந்தம் - மேலாய இன்பம்; சிவானந்தம். இதனால், 'காய சித்தி பெற்றோன் அதனாலாம் பயனை மிகப் பெறுவானாயின், அதனானே, காய சித்திப் பயனும் மிகும்' என்பது கூறப்பட்டது.

அண்டஞ் சுருங்கில் அதற்கோ ரழிவில்லை
பிண்டஞ் சுருங்கிற் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கில் உபாயம் பலவுள
கண்டங் கறுத்த கபாலியு மாமே. *#720*

உணவுக் குறைவால் முகத்தில் தசை ஒட்டிக் கண்குழியுமாயினும், அதனால், உடலுக்கு அழிவு வந்து விடாது. மாறாக, உடம்பு இளைத்தால் பிராணவாயு வசப்பட்டு காய சித்தி கைகூடும். ஆகவே, உணவு குறையின், உயிர், நலம் பெறுதற்குரிய வழிகள் பலவும் அமையும். அதனால், உண்டி சுருக்கியவன், இறவாமையாலும், இன்ப நிறைவாலும் சிவனோடொத்து நிற்பான்.

விளக்கவுரை

'அண்டம்' என்றது தலையை. 'அண்டம், பிண்டம்' என்னும் நயம்பற்றி இவ்வாறு ஓதினார். வருகின்ற திருமந்திரத் துள்ளும்'அண்டத்துள் உற்று' என்பார். மகளிர் இன்பத்தை விரும்புவோருள்ளும், அதனைக் கை விடின் உடல் கெடும்' என்று அஞ்சுவார் இல்லை. ஆகவே, 'அவ்வின்பம் குறையின் உடற்கு அழிவில்லை' என விலக்குதல் வேண்டாமையின், அப்பொருள் பட ஈண்டு நலிந்துரைத்தல் வேண்டாமை அறிக. 'உள' என்பதன்பின், 'ஆம்' என்பது எஞ்சிநின்றது.

இதனால், 'காய சித்தியும், உயிர் நலமும் வேண்டுவோர் உண்டி சுருக்கல் இன்றியமையாதது' என்பது கூறப்பட்டது.

பிண்டத்துள் உற்ற பிழைக்கடை வாசலை
அண்டத்துள் உற்ற தடுத்தடைத் தேவிடின்
வண்டிச்சிக் கும்மம் மலர்க்குழல் மாதரார்
கண்டிச்சிக் கும்மந்நற் காயமு மாமே. *#721*

உடலில் பொருந்தியுள்ள, தவ ஒழுக்கத்திற்கு இழுக்குத் தருகின்ற கடைப்பட்ட வழியை. உச்சியில் விளங்குவதாகிய திருவருளைத் தலைப்படுமாற்றால் அடைத்தே விடின், உடம்பு, மகளிர் கண்ட உடன் விரும்பத் தக்க அழகைப் பெற்று விளங்கும் பயனையும் அடையலாகும்.

விளக்கவுரை

'புழைக் கடை' என்பது திரிந்து வழங்கும் இழிவழக் கோடு ஒத்துத் தோன்ற, 'பிழைக் கடை' என நயம்பட ஓதினார். பிழை - குற்றம். எனவே, இஃது உண்மையில் புணர்ச்சி தவிர்தல் கூறியதேயாம். திருவருள் உணர்வும், சிவானந்தப் பேறும் உடையவர்க் கன்றி புணர்ச்சி தவிர்தல் இயல்பாக உண்டாகாது. ஆயினும், யோக முயற்சியால் தவிர்தல் கூடும்; அம்முயற்சி இது என்பதனை இதனுள் நாயனார் உணர்த்தியருளினார். 'பிழைக்கடை' என்பதன் உட் பொருளை உணராமல் வெளிப்பொருளே பற்றி, 'எருவாய்' எனப் பலரும் உரைத்தார். அப்பொருள் மேலே பலவிடத்தும் பெறப்பட்டது. நன்மை - அழகு. உம்மை, 'மேற்கூறியவையேயன்றி' என இறந்தது தழுவிற்று. 'நற்காயமும் ஆம்' என்றாராயினும், 'காயம் நல்லது மாம்' என்றலே கருத்தாதல் அறிக. மகளிரை விரும்ப விரும்ப அவரால் வெறுக்கப்படும் நிலையும், அவரை விரும்பாது ஒழிய ஒழிய அவரால் விரும்பப்படும் நிலையும் உளவாகின்ற வியப்பினைக் குறித்தற்குப் பின்னிரண்டடிகளை அவ்வாறு ஓதினார். இம்மந்திரத்திற் பாடம், பலவிடத்துப் பிழைபட்டது.
இதனால், காய சித்திக்கு வேண்டப்படுவதாய மற்றும் ஓர் உபாயம் கூறப்பட்டது.

சுழலும் பெருங்கூற்றுத் தொல்லைமுன் சீறி
அழலும் இரதத்துள் அங்கியுள் ஈசன்
கழல்கொள் திருவடி காண்குறில் ஆங்கே
நிழலுளுந் தெற்றுளும் நிற்றலும் மாமே. *#722*

சிவபெருமான், எவ்வுயிரையும் அதன் உடலினின்றும் பிரித்துக் கொண்டுபோதற்குச் சுற்றிக் கொண்டிருக் கின்ற கூற்றுவனைத் தொன்றுதொட்டே சினந்து, முக்கோண வடிவான மூலாதாரத்தில் உள்ள அக்கினியில் காய்ந்து கொண்டிருக்கின்றான்; ஆகையால், அவ்விடத்தில் அவனது கழல் அணிந்த திருவடியைக் காணப்பெற்றால், பின்னர் நிழலில் நிற்பினும், வெயிலில் நிற்பினும் ஒன்றே; அஃதாவது, அவற்றால் வரும் கேடு ஒன்றுமில்லையாம்.

விளக்கவுரை

'ஈசன்; இரதத்துள் அங்கியுள் சீறி அழலும்' என மாறிக் கூட்டுக. 'கூற்றுச் சீறி' என இரண்டாவதன் தொகையாய் இயையும், 'முன்' என்பது, 'முதலாக' எனப்பொருள் தந்தது, 'தொன்மை' என்றது, உடம்பு தோன்றிய காலத்தை. முக்கோண வடிவை 'இரதம் - தேர்' என்றார். இறைவன் உயிர்களின் உடம்பில் மூலாதாரத்தில் அக்கினியையும், அவ்வக்கினியுள் உடலை நிலைப்பிக்கின்ற ஆற்றலையும் படைத்து,

அவற்றை நீங்காது நிறுத்தித் தானும் உடன் நிற்றலானும், அவற்றை அறிந்து, அவ்வக்கினியை எழுப்பி அவ் விடத்தில் அவனைத் தியானிப்பவர், காய சித்தியைப் பெறுவர் ஆகலானும் இவ்வாறு கூறினார். கூறவே, மேற்கூறியவாறு பிராணனையும், அபானனையும் மூலாதாரத்தினின்றும் மேல் எழச் செய்யுங்கால் முதல்வனது திரு வருளை நினைந்து செய்தல் வேண்டும் என்பது பெறப்பட்டது. 'திருவருளை நினைந்து செய்யும் முயற்சியே வெற்றி பயக்குமல்லது, அதனை மறந்து செய்யும் முயற்சி ஒன்றொழிய ஒன்றாகும்' என்பது கருத்து.
இதனால் 'காய சித்தி உபாயத்தை இறையருள் வழி நின்று' செய்தல் வேண்டும்' என்பது கூறப்பட்டது. இவ்வாறன்றி, 'உபாயந் தானே காய சித்தியைப் பயந்துவிடும்' என மயங்குவர் பவ யோகிகள் என்க.

நான்கண்ட வன்னியும் நாலு கலையேழுந்
தான்கண்ட வாயுச் சரீர முழுதொடும்
ஊன்கண்டு கொண்ட உணர்வு மருந்தாக
மான்கன்று நின்று வளர்கின்ற வாறே. *#723*

ஈசன் இருத்தலை மேல் நான் தெரிந்து சொல்லிய மூலாக்கினி, 'அகார கலை, உகார கலை, மகார கலை, விந்துகலை' என்னும் நான்கு கலைகள், மூலாதாரம் முதல் பிரமரந்திரம் ஈறாக உள்ள ஏழு ஆதாரங்களைப் பொருந்திய பிராண வாயு, உடம்பு முழுதும் உள்ள ஊன் ஆகிய இவைகளையே தன் பசிப் பிணிக்கு மருந்தாக உண்டு, ஒரு மான் கன்று வளர்கின்றவாறு வியப்புடைத்து!

விளக்கவுரை

மான், மகான்' என்பதன் திரிபு. மகான் - பெரியோன்; சிவன். 'மகான்' என்பதை மான் எனத் திரித்து அதற்கேற்ப, சிவனது மக்களாகிய உயிர்களை, 'கன்றாக' உருவகித்து, 'புல்லை உண்ணு தலால் 'புல்வாய்' எனப் பெயர் பெற்ற மான் ஒன்று, புல்லை உண்டு வளராமல், நெருப்பு, நிலாவொளி, காற்று, ஊன் என்பவற்றை உண்டு வளர்தல் வியப்பாகின்றது' என நயம்படக் கூறினார். எனவே, மேலை மந்திரத்துட் கூறியவாறு மூலாக்கினியை எழுப்புதல் முதலிய யோகமுயற்சியால் வாழ்நாள் நீட்டித்தல் கூறியவாறாயிற்று. புல்லாவது, ஐம்புல இன்பம். இதனால், காயசித்தி உபாயங்களால் அப் பயன் வியக்கத்தக்க வகையில் உளதாதல் கூறப்பட்டது.

ஆகுஞ் சனவேத சத்தியை அன்புற
நீகொள்ளின் நெல்லின் வளர்கின்ற நேர்மையைப்
பாகு படுத்திப்பல் கோடி களத்தினால்
ஊழ்கொண்ட மந்திரந் தன்னால் ஒடுங்கே. *#724*

மேன்மேல் வளரத்தக்கதாகிய காய சித்தி ஆற்றலைப் பெற நீ விரும்புவையாயின், அச்சத்தி ஒவ்வொரு நெல்லின் அளவாக மெல்ல மெல்ல வளர்கின்ற நுட்பத்தை உடலில் அளவற்ற இடங்களில் பாகுபடுத்திக் கண்டு. அவ்விடங்களில் எல்லாம், மேற்பலவகையாலும் முறைப்படச் சொல்லிய மந்திரங்களின்வழி அதனுள் ஒடுங்குவாயாக.

விளக்கவுரை

'சனனம்' என்பது இடைக்குறைந்து நின்றது. 'சனனம்' என்றது காயத்தை. இவ்வாறன்றி, 'ஆகுஞ்சன இருக்கை' எனவும் உரைப்பர். வேத சத்தி, உடம்பின் நிலையாமையைமாற்றி நெடிது வாழச் செய்கின்ற ஆற்றல். 'அன்புறக் கொள்ளின்' என்பதை, 'கொள்ள அன்புறின்' என மாற்றிக் கொள்க. தினை, எள், கடுகு முதலியன போல, சிறுமைக்குக் காட்டப்படுவனவற்றுள் நெல்லும் ஒன்றென்க. நெல்லின் - நெல்லின் அளவாக. இனி, 'நெல் - நெற்பயிர்' எனக் கொண்டு, 'நீர் கொளு நெல்லின்' எனவும் பாடம் ஓதுப. 'களத்தினால்' என்றது வேற்றுமை மயக்கம்.

இதனால், காய சித்தி உபாயங்கள் மேற் சில வகையால் தொகுத்துணர்த்தப்பட்டதாயினும், உண்மையில் அது பரந்து கிடப்பது என்பது உணர்த்தி, 'அவற்றை அறிந்து அனுபவமாகச் செய்க' என முடித்துக் கூறப்பட்டது.

5.14.கால சக்கரம்

மதிவட்ட மாக வரையைந்தும் நாடி
இதுவிட்டிங் கீரா றமர்ந்த அதனால்
பதிவட்டத் துள்நின்று பாலிக்கு மாறும்
அதுவிட்டுப் போமாறும் ஆயலுற் றேனே. *#725*

திங்களினது சுற்றாக வரையறுக்கப்படுகின்ற ஐந்து பகுதிகளையும் முன்னே ஆராய்ந்து, பின்பு அதனை விடுத்து, ஞாயிறு பன்னிரண்டும் பொருந்திய அக் கூற்றினால் இறைவன் கால சக்கரத்துள் நின்று உடலைக் காக்கின்ற வகையையும், பின்பு அங்ஙனம் காக்கப்படுகின்ற உடலை விட்டு உயிர் போகின்ற வகையையும் இங்கு ஆராயத்தொடங்கினேன்.

விளக்கவுரை

சந்திரன் பன்னிரண்டு இராசிகளையும் ஒருமுறை சுற்றிவருகின்ற வட்டத்தில் ஓர் அரை வட்டம் - ஆறு இராசி அளவு - வளர் பிறையாயும், மற்றோர் அரைவட்டம் - ஆறு இராசியளவு தேய் பிறையாயும் தோன்றும். சூரியனும், சந்திரனும் ஒன்று சேர்ந்திருக்கும் நாளே அமாவாசியை. அப்பொழுது சந்திரன் சூரிய ஒளியில் மறைந்து விடுவதால் காணப்படுதல் இல்லை. சூரியனை விட்டு விலகிச் செல்லச் செல்லச் சந்திரனது ஒளி சிறிது சிறிதாக மிகுந்து காணப்படும். இந்நிலையில் சந்திரன் சூரியனுக்கு முன்னே செல்வதாய் இருக்கும். அதனால், அந்நிலை 'முற்பக்கம்' (பூர்வ பட்சம்) எனப்படும். இது சந்திரனது வெள்ளொளி மிகுந்துவரும் காலம் ஆதலின், 'சுக்கில பட்சம்' என்றும் சொல்லப்படுகின்றது. சுக்கிலம் - வெண்மை. சந்திரன் சூரியனுக்கு ஆறாவது இராசியில் நிற்கும்பொழுதே முழு நிலவாய்க் காட்சியளிக்கும். அதுவே பூரணை (பௌர்ணிமை) யாகும். பின்பு சந்திரன் சூரியனுக்கு ஏழாவது இராசி முதலாக வரும்பொழுது சூரியனை நெருங்குவதால், அதன் ஒளி மறையத் தொடங்கும். அந் நிலையில் சந்திரன் சூரியனுக்குப் பின் செல்வதாய் இருக்கும். அதனால், அந்நிலை 'பிற்பக்கம்' (அபர பட்சம்) எனப்படுகின்றது. ஒளி குறைய இருள் மிகுவதால் இந்நிலை 'கிருஷ்ண பட்சம்' என்றும் சொல்லப் படுகின்றது. கிருஷ்ணம் - கறுப்பு. இந்த அரைவட்டம் ஒவ்வொன்றும் சூரியனது நாட்கணக்கில் ஏறக்குறையப் பதினைந்தாக அமைவதால், அப்பதினைந்திலும் உள்ள சந்திரனது நிலைகள் ஒன்று, இரண்டு என்று முறையாக எண்ணப்பட்டு 'பிரதமை, துவிதியை' முதலிய பதினைந்து திதிகளாகச் சொல்லப்படுகின்றன. ஒவ்வொரு கூற்றிலும் உள்ள ஐந்து திதிகள் நந்தை, பத்திரை, சயை, இரித்தை, பூரணை எனப் பெயர் பெறும்.

இவ்வைந்தையும் நன்கு உணர்வதே சந்திரகதியை நுண்ணி தாக அறிவது ஆதலின், 'மதி வட்டமாகவரை ஐந்தும் நாடி' என்றார். 'வரை ஐந்து' வினைத்தொகை. சந்திர கதியை முன்னே ஆராய்தல், அதுவே நிலவுலகின் உயிர்களது வினை நுகர்ச்சிக்குச் சிறந்த காரண மாதல் பற்றியாம். இதுபற்றியே திதியும், நட்சத்திரமும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. முன்னர் 'மதி' என்றதனாலும், 'சூரியர் பன்னிருவர்' என்பது பயின்ற வழக்கு ஆதலாலும், வாளா, 'ஈராறு' என்றே போயினார். பின் வந்த 'வட்டம்' கால சக்கரம் என்பது முன்னிரண்டடிகளாலும் விளங்கிக் கிடந்தது. காலம் இறைவனது ஆணைவழி நின்றே உலகத்தைத் தொழிற்படுத்தும் என்பது உணர்த்துதற்கு, 'காலம், பாலிக்குமாறு' என்னாது 'பதி வட்டத்துள் நின்று பாலிக்கு மாறு' என, இறைவனது செயலாகவே ஓதினார்.
"காலமும் கடவு ளேவ லால்துணைக் கார ணங்காண்'
என்பது சிவஞான சித்தி. *(சூ. 1-10)*
இதனால், 'இவ்வதிகாரம் நுதலிய பொருள் இது' என்பது கூறப்பட்டது.

உற்றறி வைந்தும் உணர்ந்தறி வாறேழும்
கற்றறி வெட்டும் கலந்தறி வொன்பதும்
பற்றிய பத்தும் பலவகை நாழிகை
அற்ற தறியா தழிகின்ற வாறே. ***#726***

உடற் கூற்றால் ஐம்புலன்களை ஐம்பொறிகள் பொருந்திப் பொதுவாக அறிகின்ற ஐந்தினாலும், பொறிகள் பொதுவாக அறிந்தவற்றை மனம் முதலிய உட்கருவினைப் பற்றி நின்று சிறப்பாக அறிகின்ற நிலையில் அந்த ஆறினாலும், மனம் சிறப்பாக அறிபவற்றில் உயிர் அழுந்தி நிற்கும் நிலையில் அந்த ஏழினாலும், உயிர்க்கு உறுதி தேட எண்ணி நூல்களைக் கற்கும் நிலையில் அந்த எட்டினாலும் கற்றவற்றை அநுபவமாக உணரும் நிலையில் அந்த ஒன்பதினாலும், அநுபவமாக உணர்ந்த நூற் பொருளைக் கடைப்பிடிக்கும் நிலையில் அந்தப் பத்தினாலும் இவ்வாறு பலவகைத் தொழிலால் உடலிற்கு அளந்த நாழிகை, கழிந்தது தெரியாமல் கழிந்து போவது இரங்கத்தக்கது.

விளக்கவுரை

புலனுணர்வில், ஒரு காலத்திலே ஒரு பொருளின்கண் ஐம்புலன்களையும் உணர்தல் சிறந்ததாகலின், காலக்கழிவை ஐந்தின் மேல் வைத்தே கூறினார். 'ஒருகாலம்' என்றல் விரைவு பற்றியாதலின், 'ஐந்து' என்றது மலைவாகாமை அறிக. 'ஐந்து' முதலியவற்றில் ஆன் உருபு விரிக்க. 'இப்பலவகை' என்னாது, 'பல வகை' என்றே கூறினமையால், 'இவ்வாறு பலவகையால்' என்பதே பொருளாயிற்று. ஆகவே, ஒன்றனையும் அறியாது அறியாமையுள் அழுந்துதலாலும் காலம் கழிதல் பெறப்படும்.

இதனால், உடலிற்கு அளந்த காலம் ஒழிவின்ற உருண்டோடு கின்றமையும், அவ்வோட்டந்தான் பல்வேறு வகையினதாதலும் கூறப்பட்டன.

அழிகின்ற ஆண்டவை ஐயைஞ்சு மூன்று
மொழிகின்ற முப்பத்து மூன்றென்ப தாகும்
கழிகின்ற கால்அறு பத்திரண் டெண்ப
தெழுகின்ற ஈரைம்ப தெண்ணல் திருந்தே. *#727*

உலகர்க்குப் பதின்மூன்றாண்டுகள் பயனின்றி இறக்கும் எல்லையாகவும், முப்பத்து மூன்று ஆண்டுகள், பலரும் இரங்கிப்பேச இறக்கும் எல்லையாகவும், அறுபத்திரண்டாண்டுகள் பயன்பெற்று இறக்கும் எல்லையாகவும் எண்பது ஆண்டுகளும், நூறாண்டுகளும் நிறைந்து முற்றிய எல்லையாகவும் கணக்கிடப்படுதல் கால சக்கரத்தின் முறையாகும்.

விளக்கவுரை

எல்லையே கூறினமையால், அவற்றுக்கு உட்பட்ட ஆண்டுகளும் அத்தகையனவாதல் தெளிவு. திருந்து - முதனிலைத் தொழிற்பெயர். இஃது அதனையுடைய முறைமையைக் குறித்தது.
இதனால், கால சக்கரம் அனைவரிடத்தும் ஒருவகையாற் சுழலாது பல்வேறு வகையால் சுழன்று செல்லுதல் கூறப்பட்டது.

திருந்து தினமத் தினத்தி னொடுநின்
றிருந்தறி நாளொன் றிரண்டிரு மூன்று
பொருந்திய நாளொடு புக்கறிந் தோங்கி
வருந்துத லின்றி மனைபுக லாமே. *#728*

பிறந்த நட்சத்திரமும், அதனோடு 'இரண்டு, நான்கு, ஆறு' என்பவற்றைக் கூட்ட வருகின்ற 'மூன்று, ஐந்து, ஏழு' என்னும் எண்ணுமுறைக்கண் வருகின்ற நட்சத்திரங்களும் ஒழித்து மற்றைய நட்சத்திரங்களிலே, இல்வாழ்க்கைக்குரிய யாதொரு செயலையும் தொடங்குதல் பொருந்தும்.

விளக்கவுரை

பொருந்துதல், அச்செயல் பற்றி நிகழும் நாள்கள் பலவும் பயன் தரும் நாளாதற்கு ஏதுவாதல். எனவே, விலக்கப்பட்ட நட்சத்திரங்களில் தொடங்கினால் அந்நாள் வீணாகக் கழியும் என்க. இதனானே, யோகியர் யோகம் தொடங்குதற்கு உரியநாளும் இங்கு 'ஆம்' எனப்பட்ட அவையே என்பதும் கூறியவாறாம். ஒன்று - கூடுகின்ற. 'இருமூன்று' என்பதில் 'இரு' என்பது முன்னும் சென்று இயையும். அதற்கேற்ப 'இரண்டு' என்பதும் இருமுறை ஓதப்படும். 'எட்டு மூன்று' என்பது பாடம் அன்று. ஒருவன் பிறந்த நட்சத்திரம் முதலாக இருபத்தேழு நட்சத்திரங்களையும்

ஒன்பது ஒரு கூறுபடுத்து மூன்று கூறாக வகுக்க. மூன்று கூற்றிலும் முதலில் உள்ள நட்சத்திரங்கள் முறையே 'சென்ம நட்சத்திரம், அனுசென்ம நட்சத்திரம், திரிசென்ம நட்சத்திரம்' எனப்படும். அவை மூன்றும் ஆகா என்பது வெளிப்படை மற்றும் அம்மூன்று கூறுகளிலும், 'மூன்று ஐந்து ஏழு' என்னும் எண்ணு முறைமைக்கண் நிற்கும் நட்சத்திரங்களும் ஆகா என்பதும், 'இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, ஒன்பது' என்னும் எண்ணுமுறைமைக்கண் நின்ற நட்சத்திரங்கள் ஆகும் என்பதும் இங்குக் கூறப்பட்டன. நட்சத்திரங் களை இவ்வாறு அறிதலை, 'தாரா பலன் பார்த்தல்' எனச் சோதிட நூல்கள் கூறும். அதனை வாழ்நாள் பற்றிய ஆராய்ச்சியில் இங்கு நாயனார் கூறினார் என்க. 'மனை' என்றது மனைவாழ்க்கைக்குரிய செயலைக் குறித்த ஆகுபெயர். இதனால், கால சக்கரத்துள் நன்மை தரும் பகுதிகள் சில கூறப்பட்டன.

மனைபுகு வீரும் மகத்திடை நாடி
எனைஇரு பத்தஞ்சும் ஈரா றதனால்
தனையறிந் தேறட்டுத் தற்குறி யாறு
வினையறி யாறு விளங்கிய நாலே. *#729*

ஞாயிற்றின் வட்டத்துள், 'முப்பது நாள் ஒரு கூறாகப் பன்னிரண்டு கூறு கூடியது ஒருவட்டம்' என்று அறிந்து, அவ் வட்டம் சிலபோது, பன்னிரண்டு கூறும் கூட வருகின்ற முந்நூற்றறுபது நாள்களுக்கு மேல் ஆறு நாளும், சில போது நான்கு நாளும் கூடி நிற்றலையும் உங்கள் மனத்தில் நன்கு ஆராய்ந்து மேற்சொல்லிய செயல்களில் புகுவீராக.

விளக்கவுரை

'நாள்' என்பது, 'ஞாயிறு தோன்றி மறைந்து மீளத் தோன்றுமளவும் உள்ள காலம்' என்பதும், அக்காலத்துள் ஞாயிறு காணப்பட்டு நிற்பது, 'பகல்' என்றும், காணப்படாது நிற்பது 'இரவு' என்றும் சொல்லப்படுதலும் யாவரும் அறிந்தவை. அவ்வளவான நாள் முப்பது கூடியது, ஞாயிற்றின் பகுதி வட்டம். இதனை, மேடம் முதலிய ராசிகளின் தொடர்பு பற்றி, 'மேடரவி, இடபரவி' முதலாக வழங்குவர். எனினும், இப்பகுதிகளில் சந்திரன் முழுநிலவாய்த் தோன்றும் நட்சத்திரத்தை ஒட்டி, இவற்றை, சித்திரைத்திங்கள் வைகாசித் திங்கள் முதலாக வழங்குதலே பெரும்பான்மை. இவ்வாற்றால், ஞாயிற்றின் வட்டப் பகுதியும் வேறே. திங்களின் வட்டப்பகுதியும் வேறே. ஞாயிற்றின் வட்டப்பகுதி பெரும்பான்மை என்றும் ஒருபடித்தாய் நிகழும். திங்களின் வட்டப்பகுதி அவ்வப்பொழுது வேறுபடும். ஞாயிற்றின் வட்டப்பகுதி ஒருபடித்தாய் நிகழ்தலின், அதனை உலகியல் நடை முறைக்கும், திங்களினது வட்டப்பகுதியால் உலகின் விளைவுகள் வேறுபடுதலின் அதனை நோன்புகள் முதலியவற்றிற்கும் வகுத்தனர்

முன்னோர். கோள்களின் நிலைகளால் உலகில் விளைவுகள் வேறு படுதலை, நாவுக்கரசர், ஞானசம்பந்தர் பாண்டிநாடு செல்ல நினைத்த பொழுது, 'நாளும் கோளும் வலியில' எனக் கூறியருளினமை யாலும், அதுபொழுது ஞானசம்பந்தர், 'அவை அன்ன வாயினும் சிவனடி யாரை வாதியாது, நல்லனவாம்' என்பதை வலியுறுத்தித் திருப்பதிகம் அருளிச்செய்தமையானும், பின்னும் அவர் (ஞானசம்பந்தர்) புனல் வாதத்திற்கு அருளிச்செய்த திருப்பாசுரத் திருப்பதிகத்துள்,

'கோட்பா லனவும் வினையுங் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்க'

என்று அருளிச் செய்தமையானும் அறியலாம்.

'மகத்திடை நாடி' என்பது பாடம் அன்று. பத்து அஞ்சு - பதினைந்து. இரு பதினைந்து - முப்பது. 'எனை முப்பதும்' என்றது எந்த ஒரு முப்பதுநாள் கூடிய பகுதியும் ஞாயிற்றின் வட்டத்தில் பன் னிரண்டில் ஒருகூறாய் நிற்கும் என்றவாறு. இக் கூறு 'மாதம்' எனவும், இம் மாதம் பன்னிரண்டு கூடிய ஒரு வட்டம் 'யாண்டு அல்லது வருடம்' எனவும் படும். ஞாயிற்றின் ஒரு வட்டத்தில் முந்நூற்றறுபது நாள் களுக்கு மேலும் சில நாள் கூடுதல், சில மாதங்கள் முப்பதுக்கு மேலும் சில நாள்களைப் பெறுதலினாலாம். சில மாதங்கள் முப்பது நாளிற் குறைதலும் உண்டு. இவை எல்லாம் சூரியன் அந்த அந்த இராசியோடு தொடர்புகொண்டு நிற்கும் நிலையைப் பற்றியன. சில யாண்டுகளில் ஆறு நாளும், சில யாண்டுகளில் நான்கு நாளும் கூடுதலை, 'யாண் டொன்றுக்கு முந்நூற்றறுபத்தைந்து நாள்' என்று அமைத்துப் போவர். இவற்றையெல்லாம் அவ்வப்பொழுது அறுதியிட்டுக் கூறுவர் அறிந்தோர். இவர் 'கணிவர்' எனப்படுவர். 'தனை' என்றதும், 'தற் குறி' என்றதும் முறையே, ஞாயிற்றின் முழு வட்டத்தையும், அதன் பகுதி யாய நாளினையுமாம். 'ஏற அட்டும்' என்பது குறைந்து நின்றது. ஏற அட்டுதல் - கூடச் சேர்த்தல். வினை அறி ஆறு - ஞாயிற்றின் செலவை அறியும் வழி. 'எனை முப்பதும் ஈராறு என்னும் அடுக்காகக் கூட்டி ஞாயிற்றின் முழு வட்டத்தின் அளவை உணர்ந்து, தற்குறி ஆறு, விளங்கிய நால் இவற்றையும் உம் மனத்திடை நாடி மனை புகுவீர்' என முடிக்க. முப்பது முதலியன, அவ்வளவினவாகிய நாள்களைக் குறித்தன.

இதனால், கால சக்கரத்தின் பெரும்பான்மை இயல்பு இனிது விளங்கக் கூறப்பட்டது. 'சிறுபான்மை இயல்புகளைக் கணி நூல்களில் கண்டுகொள்க' என்பது கருத்து.

நாலுங் கடந்தது நால்வரும் நால்ஐந்தும்
பாலங் கடந்தது பத்துப் பதினைந்து
கோலங் கடந்த குணத்தாண்டு மூவிரண்

டாலங் கடந்ததொன் றாரறி வாரே. *#730*

ஒருவன் பிறந்து நான்கு ஆண்டுகளைக் கடந் தானாயின், பின்னும் நான்கு நான்கு ஆண்டாக இருமுறை கடத்தல் வேண்டும். இனி, ஐந்து ஆண்டுகளைக் கடந்தானாயின், அப்பால் பின்னும் பத்து, பதினைந்து என்னும் ஆண்டுகளைக் கடத்தல் வேண்டும். எனவே, நான்கு, ஐந்து, எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினைந்து என்னும் ஆண்டுகள் வாழ்நாள் இடையறும் காலமாகும் என்பது அறியப்படும். பதினைந்து யாண்டு வரையில் ஒருவன் யோகத்தைத் தொடங்க இயலாது. ஆகவே, அதுகாறும் வாழ்நாளை நீட்டித்துக்கொள்ளுதலும் இயலாது. அதனால், இவ்வாறு, பிறந்து, ஆண்டுகள் பலவாக வளர்கின்ற உடம்பினை, உடம்பினை உடைய தாகாத தன்மையுடைய ஒரு பொருளால் அருள்புரியப்பட்டு மேற்சொல்லிய ஆறு இடையறவுகளையும் (கண்டங்களையும்) கடந்த ஓர் அருமையை அறிகின்றவர் உலகில் யார் உளர்!

விளக்கவுரை

'அறிவாராயின், பதினாறாவது வயது முதலாகவே அப்பொருளை அடைதற்கு யோகம் முயல்வர். அதனால், காலத்தைக் கடந்து, என்றும் பதினாறாண்டாகவே இருக்கும் பயனையும் பெறுவர்' என்பதாம். மார்க்கண்டேயரது வரலாறு இங்கு நினைவு கூரத் தக்கது.

நான்கு முதலியன, அவ்வளவினவான ஆண்டுகளைக் குறித்தன. 'கடந்தது' இரண்டும், 'கடந்ததேல்' என்னும் பொருள தாகிய முற்றெச்சங்கள். 'வரும்' என்றது, 'கடத்தற்கு அரிதாய் வரும்' என்றவாறு. இதனைப் பின் வந்த, 'நால், பத்து, பதினைந்து' என்பவற் றோடும் கூட்டுக. பாலனாம் தன்மை தமிழில், 'பாலம்' என நின்றது. குணம் உடையதனை, குணமாகக் கூறினார். இனி, 'சிவன்' எனத் தோன்றா எழுவாய் வருவித்து உரைத்தலும் ஆம். ஆண்டு - ஆளப் பட்டு. ஆலம் - நஞ்சு; என்றது நஞ்சு போலும் ஆண்டெல்லைகளை.

இதனால், காலசக்கரத்தின் கொடுமையை விதந்து, 'அஃது உணர்ந்து, காலம்பெற, யோகத்தைத் தொடங்குக' என்பது கூறப் பட்டது.

ஆறும் இருபதுக் கையைஞ்சு மூன்றுக்குந்
தேறு மிரண்டு மிருபத்தொ டாறிவை
கூறு மதியொன் றினுக்கிரு பத்தேழு
வேறு பதிஅங்கண் நாள்விதித் தானே. *#731*

முதல் ஆறு திங்கட்குத் தனித்தனி நாள்கள் இருபதும், அடுத்த மூன்று திங்கட்குத் தனித்தனி நாள்கள் இருபத் தைந்தும், அடுத்த இரண்டு திங்கட்குத் தனித்தனி நாள்கள் இருபத் தாறும், இறுதி ஒருதிங்கட்கு நாள் இருபத்தேழும் என்று இவ்வாறு இறைவன் யோகத்திற்குரிய திங்களின்

நாட்கணக்கை உலகியலுக்கு வேறாக வகுத்துள்ளான்.

விளக்கவுரை

உலகியலுக்கு வந்துள்ள கணக்கு, மேல், 'மனை புகுவீர்' என்னும் மந்திரத்தும் கூறப்பட்டது. யோகத்தைத் தொடங்குவோர் இத்துணை நாளளவே யோகம் புரிந்து எஞ்சிய நாள்களில் ஓய்வு கொள்ளுதல் வேண்டும் என்பதாம். ஓய்வுகொள்ளும் நாள்கணக் கையும், பகிர்ந்து இடைஇடையே கொள்ளுதல் நலமாகும். ஓய்வுநாள் கணக்கை நாழிகையாகவும் பகுத்துக் கொள்ளலாம். தொடக்கத்தில் ஓய்வு மிகுதியாகவும், போகப்போக ஓய்வு குறைந்தும் நிற்றல் அறியத் தக்கது. இவ்வகையில் ஓராண்டு சென்றபின் மீளத் தொடங்கும் பொழுதும் இக்கணக்கின்படியே செய்தல் வேண்டும் என்க.

ஆறுக்கு இருபதும் என உருபையும், உம்மையையும் மாற்றி யுரைக்க. 'மதி, நாள்' என்றவை இறுதி விளக்காய், மேலான வற்றோடும் சென்று இயைந்தன. 'நாள்' - 'வேறு விதித்தான்' என இயையும். பதி - சிவன். அங்கண் - அவ்விடம். அஃது யோகத்தை ஆராயும் இடம்.

இதனால், 'யோகம் புரிதற்குரிய நாள் முறை இத்தன்மையது' என்பது கூறப்பட்டது.

விதித்த இருபத்தெட் டொடுமூன் றறையாகத்
தொகுத்தறி முப்பத்து மூன்று தொகுமின்
பதித்தறி பத்தெட்டும் பாரா திகள்நால்
உதித்தறி மூன்றிரண் டொன்றின் முறையே. *#732*

யோகத்தில் நிற்க விரும்புகின்ற நீ! தத்துவங்களைச் சுருக்கி எண்ண வேண்டின், அசுத்த தத்துவங்களில் மூன்று நீங்கலாக ஏனைய இருபத்தெட்டோடு, சுத்த தத்துவம் ஐந்தனையும் அங்ஙனமே கொண்டு, 'தத்துவம் முப்பத்து மூன்று' என வைத்துக்கொள். இனி அத்தத்துவங்களில் இந்திரியம் பத்து சூக்கும தேகமாய் உள்ள எட்டு இவைகளையும் நிலம் முதலிய பஞ்ச பூதங்களில் அடங்கி நிற்பன வாகவே பாவித்துக்கொள். இனி நிலம் முதலிய அப் பூதங்கள் ஐந்தும் ஒன்றின் ஒன்று - அஃதாவது, ஐந்தாவது பூதமாகிய நிலம் நான்காவது பூதமாகிய நீரிலும், நான்காவது பூதமாகிய நீர் மூன்றாவது பூதமாகிய தீயிலும் இவ்வாறு முறையே தோன்றின என்பதை உணர்.

விளக்கவுரை

நீக்கப்படுகின்ற தத்துவங்கள் 'பிரகிருதி, புருடன், மாயை' என்க. என்னை? அவை தனி தத்துவமாதற் சிறப்பில ஆதலின். அறை - அறுக்கப்படுவன; அஃதாவது குறைக்கப்படுவன. 'மூன்று அறையாக இருபத்தெட்டொடு' என மாறுக. 'இருபத் தெட்டொடு' என்றது,

இருபத்தெட்டு உளப்பட என்றவாறு. இருபத் தெட்டு உளப்பட முப்பத்து மூன்று எனவே, சுத்தத் தத்துவங்களில் ஒன்றையும் குறையாது ஐந்தையும் கொள்ளல் வேண்டும் என்பது விளங்கிற்று. 'தொகுமின்' என்றது, ஒருமை, பன்மை மயக்கம். 'பத்து எட்டும் பாராதிகளில் பதித்து அறி' என்க. எட்டு; தன்மாத்திரை ஐந்தும், 'மனம், அகங்காரம், புத்தி' என்னும் அந்தக் கரணம் மூன்றுமாம். சித்தம் பிரகிருதியாய் ஒழியும். பத்து எட்டுப் பாரா திகளில் அடங்கவே, ஆன்ம தத்துவம் அனைத்தும் பஞ்ச பூதங்கள் அளவாய் நிற்றல் விளங்கும். இக்கருத்துப் பற்றியே, நாம் காணும் உலகம், 'பஞ்சபூத பரிணாமம்' என்றே சொல்லப்படுகின்றது.

'நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலக மாதலின்' -தொல். மரபியல்

என்றார் தொல்காப்பியனாரும். மற்றும் திருமுறைகளிலும் பிற இடங்களிலும் உலகம் முழுவதும் பஞ்ச பூத பரிணாமம் என்னும் கருத்தே பெரும்பான்மையாகக் காணப்படுதல் தெளிவு. நான்கு முதலியன அவ்வவ் எண்ணு முறைக்கண் நின்ற பூதங்களை உணர்த்தின. 'உதித்தது' என்னும் தொழிற் பெயர் இடைக்குறைந்து நின்றது. 'உதித்தது அறி' என்பதனை இறுதிக்கண் கூட்டி, 'அப் பாராதிகள் உதித்தது அறி' என எடுத்துக்கொண்டு முடிக்க. என்னை? ஏனைய எல்லாவற்றையும் பாராதிகளில் அடக்கவே, பின்னர் அறியற்பாலன அப் பாராதிகளே யாதலின். பூதங்களின் தோற்ற முறையை அறிதலால், அவற்றைக் கடக்குமாறு புலனாகும். 'தத்துவங்களை இவ்வாறு அறிக' என்றது, மேற்கூறியவாறு காலத்தை அவற்றிற்கு அதிதேவர்க்கு உரிய பகுதிகளாக வைத்து அவ்வப்பொழுது அவரவரைத் தியானித்து அக்காலங்களால் வாதிக்கப்படாமல் இருத்தற்காம்.

இதனால், 'காலத்தை யோகத்திற்கு உரிய வகையில் பகுத்துணர்கின்ற யோகி, அவற்றைக் கடத்தற்குத் தத்துவங்களின் முறைமையையும் உணர்தல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

முறைமுறை யாய்ந்து முயன்றில ராகில்
இறையிறை யார்க்கும் இருக்க அரிது
மறையது காரணம் மற்றொன்று மில்லை
பறையறை யாது பணிந்து முடியே. *#733*

யோகம் முயலும்பொழுது இங்குச் சொல்லிய முறைகளை எல்லாம் முறையாக உணர்ந்து முயலாது, அவரவர் தாம் தாம் அறிந்தவாறே முயல்வார்களாயின், ஒருவர்க்கும் காலத்தைச் சிறிது வென்று நிலைபெறுதலும் இயலாது. இம்முறைகளைப் பெரியோர் வெளிப்படச் சொல்லாமல் மறைத்துச் சொல்லுதற்குக் காரணம் வேறொன்றுமில்லை; யோகத்தோடு சிறிதும் இயல்பில்லா தவரும் வாளா வாய்ப்பறை சாற்றிப்

பெருமை பேசிக்கொள்ளாமல், விருப்பம் உடையவர்கள் தக்காரை அணுகிப் பணிந்து கேட்டு முயன்று கருத்தை முடிக்க வேண்டும் என்பது ஒன்றுதான் காரணம்.

விளக்கவுரை

இறை இரண்டில் முன்னது சிறிது; பின்னது தங்குதல்; வாழ்தல். இருத்தல் - உளதாதல். முடி, முதனிலைத் தொழிற் பெயர். அஃது, அதனைக் கருதுதலைக் குறித்தது. இறுதியில், 'காரணம்' என்பது சொல்லெச்சம்.

இதனால், 'காலத்தை வெல்லும் முறையைத் தக்கார் வாய்க் கேட்டுணராவழிப் பயனில்லை' என்பது கூறப்பட்டது.

முடிந்த தறியார் முயல்கின்ற மூர்க்கர்
இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டு
கடிந்தனல் மூளக் கதுவவல் லார்க்கு
நடந்திடும் பாரினில் நண்ணலு மாமே. *#734*

அகல் இனித் தேட வேண்டாது முன்பே கிடைத் திருக்க, விளக்கெரியப் பண்ணி முன்னே இருளை நீக்கிப் பின் அதனானே நெருப்பை, மூண்டு எரியும்படி மூட்ட வல்லவர்க்கு, கால சக்கரம் சுழன்றவழியே சுழன்று செல்லும். இவ்வுலகத்தில் அச் சுழற்சியுட்படாமல், ஒரு நிலையாய் நிற்றலும் கூடும். இம் முறையால் பலருக்கு விளைந்த பயனை, வேறு வழியில் முயலும் மடவோர் அறியமாட்டார்.

விளக்கவுரை

முதலடியை இறுதியிற் கூட்டி உரைக்க. இடிஞ்சில், மூலாதாரம். விளக்கு, அவ்விடத்துள்ள அக்கினி. 'எரியக்கொண்டு' என்பது குறைந்து நின்றது. கடிதலுக்கு 'இருள்' என்னும் செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது. இருள், குண்டலியின் உறக்கம். அனல் மூளுதல், மூலாக்கினி எழுந்து உச்சி யளவும் செல்லுதல். வேறுவழி, சில பச்சிலை போன்ற மருந்துகளை உண்டலும், பிறவுமாம்.

இதனால், யோக நெறியே காலத்தை வெல்லுதற்கு உபாய மாதல் கூறப்பட்டது.

கூற்றங் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. -குறள், *269*

என்புழித் திருவள்ளுவர், 'நோற்றல்' என்றது பெரும் பான்மையும் இவ்யோக முயற்சியையே என்க.

நண்ணும் சிறுவிரல் நாணாக மூன்றுக்கும்
பின்னிய மார்பிடைப் பேராமல் ஒத்திடும்
சென்னியில் மூன்றுக்குஞ் சேரவே நின்றிடும்

உன்னி உணர்ந்திடும் ஓவியந் தானே. *#735*

உற்று நினைக்கத்தக்க இடை, பிங்கலை, சுழுமுனை என்னும் மூன்று நாடிகளும் கையில் சிறுவிரலைப் பெருவிரலோடு சேர்த்து நாண்போல ஆக்க மேல் நிற்கும் ஏனை மூன்று விரல்களைப் போல, இருதயத்தில் வேறு வேறு நிற்கும். பின்பு தலையில், 'புருவநடு, நெற்றிநடு, உச்சித் துளை' என்னும் மூன்றிடங்களிலும், அதன்பின், தலைக்குமேல் 'சூரியன், சந்திரன், அக்கினி' எனப்படும் மூன்று மண்டலங்களிலும் வேறு வேறாய் நில்லாது ஒன்றியேவிடும்.

விளக்கவுரை

எனவே, அவற்றை உன்னி உணரும் உணர்வும் அவ்வாறாதல் போந்தது. இவ்வாறு உணர்வு அலையாது நிற்றலால் உடம்பும் நிலைக்கும் என்க. 'சிறுவிரல் நாணாக' என்றது, 'காள கர்ணி' என்றும், 'திரிசூலம்' என்றும் சொல்லப்படும் முத்திரையைக் குறித்தவாறு. 'இடை, பிங்கலை, சுழுமுனை' என்னும் மூன்று நாடி களும் இருதயத்தில் அம்முத்திரைபோல நிற்கும் எனவும், 'சேரவே' என்றதனால், 'ஆஞ்ஞை முதலிய இடங்களில் ஏனை இரு நாடிகளின் ஆற்றலும் சுழுமுனையில் ஒன்றிவிடும்' எனவும் உணர்க. 'சென்னியில் மூன்று' என்றது, 'இரட்டுற மொழிதலாய்' நின்று இவ்வாறு பொருள் பயந்தது. ஓவியம் போல்வனவற்றை ஓவியம் என்றே ஆகுபெயராக ஓதினார். 'ஒத்திடும், நின்றிடும்' என்பன முற்றுக்கள். உன்னி உணர்தல் - அறிவுடையதாதல். 'ஓவியமாய் விடும்' என்றது, உடம்பை, இங்கு அதிகாரப்பட்டது அதுவே யாகலின். உடம்பு ஓவியமாதல், காலக் கழிவால் மாறுபடாது, என்றும் இளமையோடிருத்தல்.

இதனால், 'யோகத்தின்வழி உணர்வு ஒருங்குதல் காலத்தை வெல்லும் வழியாகும்' என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது.

ஓவிய மான உணர்வை அறிமின்கள்
பாவிகள் இத்தின் பயனறி வாரில்லை;
தீவினை யாம்உடல் மண்டலம் மூன்றுக்கும்
பூவில் இருந்திடும் புண்ணியத் தண்டே. *#736*

ஓவியம்போல உணர்வு அலைவற நிற்றற்குரிய வழியை அறியுங்கள். இவ்வுணர்வினால் காலத்தை வெல்வதாகிய பயன் விளைதலை முன்னை நல்வினை இல்லாதோர் அறியமாட்டார்; (அதனால் அவர் வேறு உபாயங்களைத் தேடி அலைவர்.) இனி அவ்வழியாவது, பந்தமாய் நிற்கும் வினை காரணமாக வந்த இவ்வுடலில் உள்ள சூரிய சந்திர அக்கினி மண்டலங்கள் மூன்றிற்கும் ஓர் இணைப்பாகப் பல தாமரை மலர்களில் ஊடுருவி நிற்கும், யோகத்திற்கு ஏதுவாகிய தண்டேயாம்.

விளக்கவுரை

'அதன்வழி உணர்வைச் செலுத்தி நில்லுங்கள்' என்பது குறிப்பெச்சம். பின்னிரண்டடிகளால் குறிக்கப்பட்டது சுழுமுனை நாடி. 'யோகம் செய்யாத உடலால் பயனில்லை' என்றற்கு, 'தீவினையாம் உடல்' என்றும், அதனைப் பயன்படச் செய்வது 'சுழுமுனை' என்பார், 'புண்ணியத் தண்டு' என்றும் கூறினார்.
இதனால், 'காலத்தின், வாதனையைக் கடத்தற்கு யோக நெறியால் உணர்வொன்றியிருத்தலே சிறந்த உபாயம்' என்பது கூறப்பட்டது.

தண்டுடன் ஓடித் தலைப்பெய்த யோகிக்கு
மண்டல மூன்றும் மகிழ்ந்துடல் ஒத்திடும்;
கண்டவர் கண்டனர் காணார் வினைப்பயன்
பிண்டம் பிரியப் பிணங்குகின் றாரே. *#737*

மேற்சொல்லியவாறு புண்ணியத்தண்டின்வழிச் சென்று உணர்வைப் பிரமரந்திரத்தில் வைத்த யோகிக்கு உடலில் 'சூரியன், சந்திரன், அக்கினி' என்னும் மூன்று மண்டலங்களும் தக்கவாறு அமைந்திருக்கும். ஆகவே, உடல், காலத்தால் வாதிக்கப் படாதாம். இந்நிலையைக் கண்டவர், உடல் கால வயப்படாது நிற்கும் பயனைக் கண்டனர். காணாது வேறு உபாயங்களில் சென்றோர், உடல் கால வயப்பட்டு நீங்க, அதனைக்கண்டு துன்புறுகின்றார்கள்.

விளக்கவுரை

மேல், 'பாவிகள் இத்தின் பயனறிவாரில்லை' என்றதனால், 'கண்டவர் கண்டனர்' என்பதற்கு இதுவே பொருளாதல் அறிக. 'பிரிய' என்றதும், 'பிரியும் நிலையை எய்த' என்றதாம். இனி, 'பந்தல் பிரிந்தது' (தி.*10* பா.*151)* என்றாற்போல, 'கட்டுக் குலைந்தது' என்றலுமாம்.
இதனால், 'உணர்வு ஒன்றுதல் காலத்தை வெல்லும் உபாயம் ஆமாறு இவ்வாறு' என்பது கூறப்பட்டது.

பிணங்கி அழிந்திடும் பேறது கேள்நீ
அணங்குடன் ஆதித்தன் ஆறு விரியின்
வணங்குட னேவந்த வாழ்வு குலைந்து
சுணங்கனுக் காகச் சுழல்கின்ற வாறே. *#738*

யோகம் செய்யாது பிணங்குகின்றவனுக்கு அவன் அடையத்தக்கதாகிய பயன் கிட்டாது கெடும். அஃது அங்ஙனம் ஆகின்றவாற்றை நீ கேட்பாயாக; பெண்டுடன் கூடுகின்ற நாள் மிகு மாயின், முற்பிறப்பில் இறைவனை வணங்கிய புண்ணியத்தால் வந்த மானுடப் பிறப்பின் வாழ்நாள் அளவு தேய, தான் சிலநாள் வாழ்கின்ற வாழ்வும், நாய்க்காக உடம்பை வளர்க்க முயல்வதாய் முடியும்.

விளக்கவுரை

'பிணங்கிக்கு' என்னும் நான்கனுருபு தொகுத்த லாயிற்று. 'நான்' எனப்படுவது ஞாயிற்றின் வட்டப்பகுதியே என்றற்கு, 'ஆதித்தன் ஆறு' என்றார். 'ஆதித்தன் ஆறு அணங்குடனாய் விரியின்' என மாற்றியும், ஆக்கம் வருவித்தும் உரைக்க. ஆய், ஆகுமாற்றால். விரிதல் - மிகுதல். 'சில வாயினும் குற்றமின்றாம்' என்றற்கு 'விரியின்' என்றார். 'வணங்கு' என்ற முதனிலைத் தொழிற்பெயர், அதன் பயனாகிய காரியத்தின்மேல் நின்றது. சிற்றின்பத்தை மிக விரும்புவோர்க்குக் கால சக்கரம் விரையச் சுழன்று நிற்கும் என்பதாம்.
இதனால், 'காலத்தை வெல்ல வேண்டினோர் சிற்றின்பத்தைத் துறத்தல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

சுழல்கின்ற ஆறின் துணைமலர் காணான்
தழலிடைப் புக்கிடுந் தன்னு ளிலாமல்
கழல்கண்டு போம்வழி காணவல் லார்க்குக்
குழல்வழி நின்றிடுங் கூத்தனு மாமே. *#739*

'சக்கரம்' எனப்படுகின்ற ஆறு ஆதாரங்களிலும் சிவனது திருவடியாகிய திருவருளைக் காணாதவன், அத்திரு வருளினுள் புகாமல், நெருப்பில் புகுந்து அழிவான். அவற்றில் அத்திரு வருளைக் கண்டு அதனுட்புகும் உபாயத்தை அறிய வல்லவர்க்கு, ஐந்தொழிற் கூத்தினை இயற்றுகின்ற சிவன் அவ்வாதாரங்களில் விளங்கியே நிற்பன்.

விளக்கவுரை

'கூத்தன் நின்றிடும்' என்றது, 'காலத்தைக் கருவியாக வைத்து உலகத்தை நடாத்துகின்ற அப்பெருமானது அருளால் காலத்தை வென்று நிற்பர்' என்றவாறு. 'சுழல்கின்ற' என்பது, 'சுழல்வதனோடு ஒப்பிக்கின்ற' என்றதாம். துணைமலர் - இரண்டு மலர்போலும் திருவடிகள்; உவம ஆகுபெயர். 'கூத்தன்' எனப் பின்னர் வருதலின், வாளா, 'துணைமலர்' என்று போயினார். திரு வருளை, 'திருவடி' என்றார். உடல் தழலிடைப் புகுதலை, உயிர் தழ லிடைப் புகுவதாக அருளினார், உயிர் அதனால் பயனிழந்து கெடு தலின். 'தன்' என்றது திருவருளை. 'அதனுட் போம் வழி' என்க. குழல், சுழுமுனை நாடி. ஆதாரங்களை அவற்றிற்குப் பற்றுக் கோடாகிய சுழுமுனையாக உபசரித்தார்.
இதனால், யோகநெறி வேறோராற்றானும் காலத்தை வெல்லும் உபாயமாதல் கூறப்பட்டது.

கூத்தன் குறியிற் குணம்பல கண்டவர்
சாத்திரந் தன்னைத் தலைப்பெய்து நிற்பர்கள்
பார்த்திருந் துள்ளே அனுபோகம் நோக்கிடில்

ஆத்தனு மாகி அமர்ந்திடும் ஒன்றே. *#740*

புறத்தில் சிவபெருமானது திருவுருவில் உண்மைகள் பலவற்றை உணர்ந்தவர், நூலுணர்வாகிய அபர ஞானத்தைப் பெற்றவராவர். அகத்தில் அவனைக் கண்டு, அதனால் விளையும் பயன்களை உணரின், அப்பெருமான் அங்ஙனம் உணர் பவர்க்கு உறவாயும் வேறாய் நில்லாது ஒன்றாயும் உடன் இருப்பான்.

விளக்கவுரை

'அதனால், அவ்வநுபவம் பெற்றவர்களும் அவனைப் போலவே காலத்தைக் கடந்து நிற்பர்' என்பது கருத்து. பின்னர் 'உள்ளே' என்றலால், முன்னர், 'வெளியே' என்பது பெறப்பட்டது. குறி - வடிவம். 'குறிகளும் அடையாளமும் கோயிலும்' என்ற ருளியது காண்க. வடமொழியில் 'இலிங்கம்' எனப்படுதலையும் நினைக. குணம் - தன்மை; உண்மை. அவை 'தோற்றம் துடியதனில், தோயும் திதி அமைப்பில்' (தி.*5* ப.*90* பா.*6*) என்றாற்போல்வன. 'அகம்' என்றது ஆதார நிராதாரமீதானங்களை. அங்குப் பார்த் திருத்தல் பாவனையினாலாம். 'பாவனை' என்பது பொய்யன்று என்பதற்கு, 'அனு போகம்' என்றார். 'அனுபோகம் நோக்கிடில்' எனவே 'பார்த் திருப்பின், அனுபோகம் விளையும்' என்பது பெறப்பட்டது. அநுபவங் காரணமாகச் சமாதியில் நீங்காது நிற்றல் கூடுமாகலின், நோக்கிடில் 'ஆத்தனும் ஒன்றாய் அமர்ந்திடும்' என்றார். 'ஆத்தன்' என்றது, கூத்தனைச் சுட்டும் அளவாய் நின்றது. 'ஆத்தனும்' என்ற உம்மை 'அங்ஙனம் நோக்குவோனுக்கு இயைய' என இறந்தது தழுவிற்று. 'ஆத்தனும் ஒன்றேயாகி அமர்ந்திடும்' என மாறிக் கூட்டுக. 'யோகத்தாலன்றி ஏனைச் சரியை கிரியா மார்க்கங்களால் காலத்தைக் கடந்து நிற்றல் அரிது' என்றற்கு, அவற்றின் பயனை இங்கு எடுத்துக் கூறினார்.

இதனால், 'யோகம் மேற்கூறிய வகையில் உபாயமாதல் இவ்வாறு' என்பது கூறப்பட்டது.

ஒன்றில் வளர்ச்சி உலப்பிலி கேளினி
நன்றென்று மூன்றுக்கு நாளது சென்றிடும்
சென்றிடும் முப்பதுஞ் சேர இருந்திடில்
குன்றிடைப் பொன்திகழ் கூத்தனு மாமே. *#741*

மேற்கூறியவாறு சிவன் வேறின்றி நிற்கப் பெறின். உளவாகும் நன்மைகள் அளவில. அதனைப் பெறும் முறையை, 'நன்மை பயக்கத் தக்கது' என்று உணர்ந்து இப்பொழுது கேட்பாய். 'இடை, பிங்கலை, சுழுமுனை' என்னும் மூன்று நாடிகளிலும் ஒன்றில் பத்துநாள் பிராணன் இயங்குதல் யோக முறையாகும். மூன்று நாடிகளிலும் முப்பது நாள்கள் முறையாக அஃது அங்ஙனம் இயங்குமாறு ஒருவன் யோகத்தில்

நின்றால்,மேரு மலையில் விளங்கும் சிவனாகவும் ஆய்விடுவான்.

விளக்கவுரை

மூன்றுக்கு - மூன்றின்வழி இயங்குதற்கு. செய்யுளில் சுட்டுப் பெயர் முன்வந்து, பின்னர் வரும் முப்பதைக் குறித்தது. 'சென்றிடும்' என்றது, 'செல்லுதல் இயல்பு' என்னும் பொருட்டாய், 'அதுவே நெறி' என்பது உணர்த்திற்று. சேர - அம்முறையில் பொருந்த. 'பொன்திகழ் குன்றிடை' என மாற்றிக்கொள்க. கயிலை, 'மேரு' எனவும்படும். சுழுமுனை நாடியையும், 'மேரு' எனக் கூறும் யோக நூல்கள். இங்கு, அதனையும் கொள்க.

இதனால், உள்ளே பார்த்திருத்தற்கு ஆவதொரு முறை கூறப்பட்டது.

கூத்தவன் ஒன்றிடுங் கூர்மை அறிந்தங்கே
ஏத்துவர் பத்தினில் எண்டிசை தோன்றிடப்
பார்த்து மகிழ்ந்து பதுமரை நோக்கிடிற்
சாற்றிடு நூறு தலைப்பெய்ய லாமே. *#742*

சிவன் ஒன்றி நிற்றற்குரிய இம்முறையை அறிந்து இதன்படி, ஒன்றில் பத்து நாளாக மூன்று நாடிகளிலும் மாறி மாறிப் பிராணன் இயங்க, அம்முறை யானே அவனை ஆதார நிராதாரத் தாமரைகளில் வழிபட்டு நிற்பவர், அவ்வழிபாட்டினால் எட்டுத் திக்கும் தாம் இருந்த இடத்திலே விளங்க, அவைகளைப் பார்த்து (தமக்கு யோகம் கைவந்தமைக்கு) மகிழ்ச்சியுற்றுப் பின், அத்தாமரை களில் சிவனை முறையாகக் கண்டு நிற்பார்களாயின், நூல்களிற் சொல்லிய நூறாண்டுக் காலத்தை அவர்கள் குறையாது பெறுதல் கூடும்.

விளக்கவுரை

கூத்தவன் - கூத்தன். கூர்மை - நுட்பம். அஃது அன்னதாகிய முறையைக் குறித்தது. 'அங்கே' என்றது, பின்வரும் பதுமங்களைச் சுட்டிற்று. 'ஏத்துவர்' வினையாலணையும் பெயர். 'பத்தினில் ஏத்துவர்' என மாற்றிக்கொள்க. எண்டிசை தோன்றுதலைக் கூறியது, யோகம் கைவந்தமை அறியும் குறி கூறியவாறு. பதுமர் - பதுமத்தில் இருப்பவர். 'சாத்திடும்' என்பது பாடமன்று. இது, வருகின்ற திருமந்திரத்திற்குமாம். இதனால், நூறாண்டிற் குறையாது வாழ்தற்குரிய உபாயம் கூறப்பட்டது.

சாற்றிடு நூறு தலைப்பெய்து நின்றவர்
காத்துடல் ஆயிரங் கட்டுறக் காண்பர்கள்
சேர்த்துடல் ஆயிரஞ் சேர இருந்தவர்
மூத்துடன் கோடி யுகமது வாமே. *#743*

முதலில் யோகப் பயிற்சியால் நூறாண்டு வாழ்ந் தவர், பின்பு அம்முறை அவர்க்குக் கைவந்து நிற்றலால், அதனை எளிதாகச் செய்து, 'ஆயிர

ஆண்டு, (பின் பதினாயிரம், நூறாயிரம் என்று பல ஆயிர ஆண்டுக் காலம்) இருப்பர். பின்பு யுக முடிவு, அதன் பின் கோடிக் கணக்கான யுகம்' என்று இப்படிப் பலகாலமும் காலத்தை வென்றிருப்பர்.

விளக்கவுரை

'இவை, அவர்கள் விரும்பிய பொழுது' என்க. மூத்தல், உலகில் உள்ள பலர்க்கும் ஆண்டினால் முதியராதல், அறிவினால் முதியராதல் பிறவாற்றானும் கூடுமாகலின், ஈண்டு இவ்வுபாயத்தாற் பெறுவது ஆண்டின் முதிர்ச்சியேயாம். ஆயிரம் முதலியன பன்மை குறித்து நின்றன.

இதனால், மேற்கூறிய உபாயம் காலத்தை வெல்லுதற்கு எத்துணையும் பேருதவியாதல் கூறப்பட்டது.

உகங்கோடி கண்டும் ஒசிவற நின்று
அகங்கோடி கண்டுள் அயலறக் காண்பர்கள்
சிவங்கோடி விட்டுச் செறிய இருந்தங்
குகங்கோடி கண்டங் குயருறு வாரே. *#744*

யோகத்தால் அளவற்ற காலம் வாழ்ந்தும் உடல் தளர்தல் இன்றி நின்று யோகக் காட்சியில் அளவற்ற காட்சிப் பொருள் கருத்துப் பொருள்களைக் கண்டு, பின் 'அகம், புறம்' என்னும் வேறுபாட்டைக் கடந்தவர், தாம் முன்பு கண்ட பொருள்களுள் ஒன்றையும் பொருளாக மதியாமல் விடுத்துச் சிவம் ஒன்றையே பொருளாகக் கொண்டு, அதனோடு ஒன்றும் நிலையைப் பெறுதற் பொருட்டு வாழ்ந்து, அவ் வாழ்வில், காலமும் முடிவு எய்துதலைக் கண்டு, அதனின்றும் அக் காலத்தைக் கடந்து மேற்போவர்.

விளக்கவுரை

'அகத்துக் கண்டு' என்க. அயல் - வெளி. 'கோடி விட்டுச் சிவம் செறிய' என மாறுக. இறுதியில் உள்ள 'கோடி', 'முடிவு' என்னும் பொருளது. 'சிவம்' என்றது, உயிரெதுகை.

இதனால், காலத்தை முற்றக் கடப்பாரது இயல்பு கூறப்பட்டது.

உயருறு வார்உல கத்தொடுங் கூடிப்
பயனுறு வார்பலர் தாமறி யாமற்
செயலுறு வார்சிலர் சிந்தையி லாமல்
கயலுறு கண்ணியைக் காணகி லாரே. *#745*

உலகத்தில் உடம்பையும், அது வழியாக வரும் பல பற்றுக்களையும் உடையவராய் இருந்தும் பலர் மேற்கூறியவாறு காலத்தை வென்று மேற்போகின்றார்கள். அதனால், உடம்பு எடுத்ததன் பயனையும் அவர்கள் அடைகின்றார்கள். ஆயினும், சிலர், அறிவில்லாமையால்

காலச் சுழலைக் கடக்க மாட்டாது அதில் அகப்பட்டு அதன்வழியே வினையுட்படுகின்றனர். அவ்வறியாமை யானே அவர் இவ்வுடம்பு எடுத்ததன் பயனாகப் பெறவேண்டிய திருவருட்காட்சியைப் பெறமாட்டாதவராகின்றனர்.

விளக்கவுரை

'உயர்', முதனிலைத் தொழிற் பெயர். 'உலகத்தொடு கூடியும்' என உம்மையை மாற்றி யுரைக்க. 'பலர், சிலர்' என்றது, பயனது அனுபவமும், அறியாமையாகிய இழிவும் குறித்தவாறு.

இதனால், காலத்தை வெல்லுதலும், அதனாற் பயன் பெறுதலும் அனுபவமாதல் கூறப்பட்டது.

காணகி லாதார் கழிந்தோடிப் போவர்கள்
நாணகி லார்நயம் பேசி விடுவர்கள்
காணகி லாதார் கழிந்த பொருளெலாம்
காணகி லாமற் கழிகின்ற வாறே. *#746*

அறிவின்மையால் மேற்கூறியவாறு திருவருளை உணரமாட்டாதவர், கால வயப்பட்டு அழிகின்றவரேயாவர். இனிக் கல்வியால் அறிவு பெற்றவரும் ஊக்கம் இன்மையால் தாம் கற்றறி மூடராகின்ற நிலைக்கு நாணாமல், நூலறிவைப் பிறர்க்கு இனிமை உண்டாக (க் கிளிப்பிள்ளைகள் போல) விரித்துரைத்துப் போவார்கள். இவ்வாறு இருதிறத்தாரும் உயர்ந்த பொருள்கள் பலவற்றை அறியமாட்டாதவராய் அழிகின்றமை இரங்கத் தக்கது.

விளக்கவுரை

'இரங்கத் தக்கது' என்பது சொல்லெச்சம். 'நாண கிலாதார்' என்றதனால், 'கற்றவர்' என்பது பெறப்பட்டது. கழிந்த பொருள் - மிக்க பொருள்; உயர்ந்த பொருள்.

இதனால், காலத்தை வெல்லும் அறிவும், ஊக்கமும் இல்லாதவரது குற்றம் கூறப்பட்டது.

கழிகின்ற அப்பொருள் காணகி லாதார்
கழிகின்ற அப்பொருள் காணலு மாகும்
கழிகின்ற வுள்ளே கருத்துற நோக்கிற்
கழியாத அப்பொருள் காணலு மாமே. *#747*

எல்லாப் பொருள்களும் கால வயப்பட்டு நிலை யின்றி மறைந்துபோதலை உணர மாட்டாதவர், அதனை உணர்தல் கூடும். எப்பொழுதெனின், அவற்றை உளத்துட்கொண்டு ஊன்றி நோக்குவாராயின். இனி அந்நோக்கினாலே, கால வயப்படாது நிலைத்து நிற்கின்ற முதற்பொருளையும் காணலாம்.

விளக்கவுரை

'கழிகின்ற அப்பொருள்' என்றாராயினும், 'பொருள் கழிகின்ற அதனை' என்பதே கருத்தென்க. பின்னர் வந்த 'கழிகின்ற அப்பொருள்' என்பது 'அது' என்னும் சுட்டுப் பெயரளவாய் நின்றது. மூன்றாம் அடியில் உள்ள 'கழிகின்ற' என்பது வினையாலணையும் பெயர். அதனிடத்து, 'கழிகின்றவற்றை நோக்கின்' என இரண்டாவது விரிக்க. 'நோக்கின் ஆகும்' என மேலே கூட்டிமுடித்துப் பின் 'அதனானே' என்பது வருவித்து உரைக்க.

இதனால், அவ்வறிவும், ஊக்கமும் பிறத்தற்கு வழி கூறப் பட்டது.

கண்ணன் பிறப்பிலி காண்நந்தி யாய்உள்ளே
எண்ணுந் திசையுடன் ஏகாந்த னாயிடும்
திண்ணென் றிருக்குஞ் சிவகதி யாய்நிற்கும்
நண்ணும் பதமிது நாடவல் லார்கட்கே. *#748*

அருள் உடையவனும், பிறப்பில்லாதவனும் ஆகிய சிவன் உயிர்களின் அகத்தே அவர்கள் காண்கின்ற குருமூர்த்தி வடிவாயும், புறத்தே எட்டுத் திசைகளாயும், முடிவில் ஒருவனேயாயும் இருப்பான். அவனே நிலையான இன்ப வீடும் ஆவான். உண்மையை ஆய்ந்துணர வல்லவர்க்கு, அவர்கள் அடையத்தக்க, முடிந்த பயன் மேற்சொல்லியவற்றை உணர்தலேயாம்.

விளக்கவுரை

'கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர்; கண் ணுடையார் - கண்ணோட்டம் இன்மையும் இல்' (குறள், 720) என்பவாகலின், கண்ணோட்டம் உடையவன் என்பதனைக் குறிக்க, 'கண்ணன்' என்றார். பெயக் கண்டும் நஞ்சுண்டு அமையும் (குறள், 580) கண்ணோட்டத் திற்குச் சிவபிரான் ஒருவனே இலக்கியமாதல் வெளிப்படை. 'சாதனை யாற் காலத்தை வெல்லும் யோகிக்கு இயல்பாகவே காலத்தைக் கடந்தவனே சார்பாவான்' என்றற்குப் பிறப்பின்மை கூறுவார், சார்ந்தாரைக் காக்கும் கண்ணோட்டத்தையும் உடன் எடுத்தோதினார். 'நந்தி' என்றது பொதுப்படக் 'குரு' என்றவாறு. முன்னர், 'உள்ளே' என்றதனால், பின்னர், 'வெளியே' என்பது பெறப்பட்டது. 'சிவகதி' என்றதில் சிவம், இன்பம், பதம், பதவி. பயனை, 'பதவி' என்றார். இதனால், மேல், 'கழியாத அப் பொருள்' எனப்பட்டதன் இயல்பு தெரித்துக் கூறப்பட்டது.

நாடவல் லார்க்கு நமனில்லை கேடில்லை
நாடவல் லார்கள் நரபதி யாய்நிற்பர்
தேடவல் லார்கள் தெரிந்த பொருளிது

கூடவல் லார்கட்குக் கூறலு மாமே. *#749*

மேற்கூறிய உண்மையை ஓர்ந்துணர வல்லவர்க்குக் காலத் தாக்கு இல்லை. ஆகவே, அவர்கட்கு இறப்பும் இல்லை. அவர்கள் மக்கள் வடிவில் காணப்படுகின்ற கடவுளாய் விளங்குவர். நூல்களின் முடிந்த பொருளைத் தேடிக் கண்டவர்கள் கண்ட பொருள் இதுவே. இதனைப் பெறவல்ல ஆற்றல் உடையவர்கட்கே இஃது உணர்த்தத் தகும்.

விளக்கவுரை

காலத்தை அதற்குரிய நமன்மேல் வைத்துக் கூறினார். நமனது தாக்குதலை 'நமன்' என்றது ஆகுபெயர். நரபதி - நரனாகிய பதி. அறிவும், காதலும் இல்லாதார்க்குக் கூறின், அங்கணத்துள் உக்க அமிழ்துபோலப் *1* பயனில் சொல்லாய் முடியும் ஆதலின், 'கூட வல்லார்கட்குக் கூறலும் ஆம்' என்றார். உம்மை, 'சிந்திப்பித்தலும், தெளிவித்தலும் ஆம்' என எதிரது தழுவிற்று.

இதனால், கழியாத அப்பொருள் காணவல்ல முயற்சியை உடையார் பெறும் பயன் கூறப்பட்டது.

கூறும் பொருளி தகார வுகாரங்கள்
தேறும் பொருளிது சிந்தையுள் நின்றிடக்
கூறும் மகாரங் குழல்வழி யோடிட
ஆறும் அமர்ந்திடும் அண்ணலு மாமே. *#750*

மத்திமையாயும், வைகரியாயும் வெளிப்படுகின்ற மந்திரங்கள் உணர்த்தும் பொருளும், அவை உணர்த்தியவாற்றானே உள்ளே உணர்ந்து பற்றத்தக்க பொருளும் மேற்கூறிய பிறப்பில் பொருளாகிய சிவமேயாம். அச்சிவம் சிந்தையுள் நிலைபெறாது நிற்றற்கு, 'சூக்குமை வாக்கு' எனப்படும் நாதம் புறம்பற்றி நிகழாது, சுழுமுனைவழி அகம்பற்றி நிகழ்தல் வேண்டும். அவ்வாறு நிகழின், அங்ஙனம் நிகழப் பெறும் சாதகன், ஆறு ஆதாரங்களிலும் அவ்வவ் வாதாரங்கட்கு ஏற்ப நிற்கும் சிவனாகவும் ஆய்விடுவான்.

விளக்கவுரை

'அகார உகாரங்கள் கூறும் பொருள் இது' என மாற்றிக் கொள்க. 'அகாரம், உகாரம்' என்பன மத்திமை வைகரியான மந்திரங் கட்குக் குறி. சிந்தையுள் நிற்றற்கு 'இது' என மீண்டும் எழுவாய் வருவிக்க. 'நின்றிட' என்ற காரியப் பொருட்டாய வினையெச்சம், 'ஓடிட' என்னும் காரணப் பொருட்டாய வினையைக் கொண்டு முடிந்தது. இவ்வாறன்றி, 'நின்றிட' என்பதனை உடனிகழ்ச்சியாக வைத்து உரைப்பின், மகாரம் குழல்வழி ஓடுதலைக் கூறுதல் வெற் றெனத் தொடுத்தலாய் முடியும்.

ஆதாரங்கள்தோறும் படிமுறையால் நின்று பயன்பெறுவான் என்றற்கு,

ஆறும் அமர்ந்திடுதலைக் குறித்தார். 'சாதகன் சிவனாய் விடுவன்' என்றது 'காலத்தைக் கடப்பன்' என்றவாறு.
இதனால், நாட வல்லார்கட்கு நண்ணும் பதம் இதுவே யாதல் யோக நெறியில் வைத்து வலியுறுத்தப்பட்டது.

அண்ணல் இருப்பிடம் ஆரும் அறிகிலர்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்துகொள் வார்களுக்
கண்ணல் அழிவின்றி உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவன்இவன் ஆகுமே. *#751*

சிவனது இருப்பிடத்தை ஒருவரும் அறிய மாட்டாது அல்லல் உறுகின்றனர். அதனைக் குருவின் உபதேசப்படி சிந்தித்துத் தெளிகின்றவர்கட்கு, அவன் என்றும் அழியாது உயிர்க் குயிராய் இருத்தல் விளங்கும். அவ்விளக்கத்தின்வழி அவனைக் கண்டால், அவன் காணுகின்றவனுக்கு வேறாய் இராமல் இவனேயாகி விடுவான்.

விளக்கவுரை

இவனேயாகி விடுதலாவது, இவன் செயல்கள் எல்லா வற்றிற்கும் அவனே முதலாய தன்மை விளங்க நிற்றல். 'அது விளங்கவே, பின்னர் இவன் தானாய் நில்லாது அவனேயாய் விடுவன்' என்பது கருத்து.
இதனால், சாதகன் ஆறும் அமர்ந்திடும் அண்ணல் ஆமாறு கூறப்பட்டது.

அவன்இவ னாகும் பரிசறி வாரில்லை
அவன்இவ னாகும் பரிசது கேள்நீ
அவன்இவன் ஓசை ஒளியினுள் ஒன்றிடும்
அவன்இவன் வட்டம தாகிநின் றானே. *#752*

சிவன் சீவனேயாய் நிற்கும் முறையை உள்ளவாறு உணர்கின்றவர் ஒருவரும் இல்லை. அதனை, மாணவனே, உனக்குச் சொல்கின்றோம்; கேள். சீவன் அறிகின்ற ஓசை, ஒளி முதலிய புலன்களையும் சிவன் அச்சீவனின் பொருட்டு அறிந்து நிற்கின்றான். அதனோடு, சீவனது சுட்டுணர்வை நிகழ்வித்தும் நிற்கின்றான்.

விளக்கவுரை

'இதுவே சிவன் சீவனேயாய் நிற்கும் முறைமை' என்பது குறிப்பெச்சம். 'சிவன் சீவனுமாய் நிற்கின்றான்' என்பதற்கு, 'பொன்னே பூடணமாய் நிற்றல்போல' எனவும், 'மரந்தானே, கிளை, இலை, பூ, காய் முதலியனவாய் நிற்றல்போல' எனவும், 'மகா ஆகாயந் தானே கடாகாயம், மடாகாயம் முதலியனவாய் நிற்றல்போல' எனவும், 'நீர்தானே நுரை, குமிழி, திவலை முதலியனவாய் ஆதல் போல' எனவும் பலர் பலவாறு விளக்கங்கூறி மலைதல் பற்றி, 'அவன் இவனாகும் பரிசறிவார் இல்லை' என்றார். ஓசை ஒளி, உபலக்கணம். ஒன்றுதல்

அறிவினால் என்க. வரம்புபட்ட சுட்டுணர்வை வட்டமாக உருவகித்தார். இதனால், ஞாயிறு கண்ணுக்குப் பொருள்களைக் காட்டுதல் போலச் சிவன் சீவனுக்கு எல்லாவற்றையும் அறிவித்தும், ஆன்ம போதம் கண் ஒன்றைக் காணுதற்குத் தானும் உடன்சென்று காணுதல் போலச் சிவன், சீவன் ஒன்றை அறிதற்குத் தானும் உடன்நின்று அறிந்தும் ஒற்றுமைப்பட்டிருத்தலே 'அவன் இவனாய் நிற்கும் முறை' என, மேலே சுட்டியதன் இயல்பு தெரித்துக் கூறப்பட்டது.

வட்டங்கள் ஏழும் மலர்ந்திடும் உம்முளே
சிட்டன் இருப்பிடஞ் சேர அறிகிலீர்
ஒட்டி யிருந்துள் உபாயம் உணர்ந்திடக்
கட்டி இருப்பிடங் காணலு மாகுமே. *#753*

ஆதாரச் சக்கரம் ஆறு, அதற்குமேல் உள்ள மதி மண்டலச் சக்கரம் ஒன்று, இந்த ஏழு சக்கரங்களும் உங்கள் உடம் பினுள்ளே ஏழுவகைத் தாமரை மலர்களாய் மலர்ந்து நிற்கும். அவைகள் யாவும் சிவனது இருப்பிடங்களே. அங்ஙனமாகவும் அவனை அடையும் முறையை நீங்கள் அறியவில்லை. மேற்கூறிய வாறு அவன் உங்களோடு ஒன்றாய் ஒட்டியிருத்தலை அறிந்து, நீங்களும் அவனின் வேறாகாது, அவனோடு ஒன்றாய் ஒட்டி அவனையே நினையும் உபாயத்தை உணர்வீர்களாயின், அங்ஙனம் உணர்பவர்களுக்குக் கருப்பங்கட்டிபோல இனிக்கின்ற அவனைக் கண்டுவிடலாம்.

விளக்கவுரை

யோகக்காட்சி கைவருதலும், ஞானச்செய்தி முறையில் முயலும் பொழுதே கூடும் என்றற்கு இதனைக் கூறினார். கட்டி, உவமையாகுபெயர். 'இருப்பிடம்' என்றே போயினாராயினும், 'அவ்விடத்து உள்ள பொருளை' என்றலே கருத்தாதல் அறிக. இதனால், கழியாத அப்பொருளைக் காணுமாறு கூறப்பட்டது.

காணலு மாகும் பிரமன் அரியென்று
காணலு மாகுங் கறைக்கண்டன் ஈசனைக்
காணலு மாகுஞ் சதாசிவ சத்தியும்
காணலு மாகுங் கலந்துடன் வைத்ததே. *#754*

மேற்கூறியவாற்றால் சிவனை உணர்வோர்க்கு, அவன், 'அயன், மால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன், சத்தி' என நிற்கின்ற நிலை வேறுபாடுகளும், தனது திருவருளை ஆன் மாக்களோடு ஒற்றித்து நிற்கவைத்து அவைகளை நடாத்துகின்ற முறைமைகளும் நன்குணர்தல் கூடும்.

விளக்கவுரை

எனவே, 'ஆதார நிராதார தரிசனங்கள் எளிதில் கூடும்' என்பதாம். 'இத்தகையோர்க்குக் காலத்தை வெல்லுதல் ஒரு பொருளன்று' என்பது கருத்து. 'என்று' என்னும் எண்ணிடைச் சொல்லின் பின், 'அவரை' என்பது எஞ்சி நின்றது.
இதனால், காலத்தைக் கடந்தாரது பெருமை கூறப்பட்டது.

5.15.ஆயுள் பரீட்சை

வைத்தகை சென்னியில் நேரிதாய்த் தோன்றிடில்
உத்தமம் மிக்கிடில் ஓராறு திங்களாம்
அத்தம் மிகுத்திட் டிரட்டிய தாயிடில்
நித்தல் உயிர்க்கொரு திங்களில் ஓசையே. *#755*

ஒருவனது வாழ்நாள் எல்லையை அளந்தறிகின்றவன் தனது கையை அளக்கப்படுபவனது தலையின்மேல் வைக்க, அஃது அவனுக்கு இயல்பான எடையுள்ளதாய்த் தோன்றுமாயின், அவனது வாழ்நாளுக்குக் கேடில்லை. அவ்வாறன்றி, மிகுந்த எடையுள்ளதாய்த் தோன்றுமாயின், அவனது வாழ்நாள் அதுமுதல் ஆறுதிங்கள் அளவின தாம். மேலும், அஃது இரட்டிப்பான எடையுள்ளதாய்த் தோன்றின், அவனது உயிர்க்கு ஒருதிங்களில் பிறக்கும் சொல் 'இறப்பு' என்பதாம்.

விளக்கவுரை

'நீத்தல்' என்பது குறுகி நின்றது. 'பிறக்கும்' என்பது சொல்லெச்சம்.
இதனால், ஒருவகைப் பரீட்சை கூறப்பட்டது.

ஓசையும் ஈசனும் ஒக்கும் உணர்வின்கண்
ஓசை இறந்தவர் ஈசனை உள்குவர்
ஓசை இறந்தவர் நெஞ்சினுள் ஈசனும்
ஓசை உணர்ந்த வுணர்வது வாமே. *#756*

உணர்விற்கு முதலாய் நிற்றலில் சொல்லும், இறைவனும் ஒரு நிகரானவர். (ஆயினும் இஃது உலகியலிலாம். ஆதலால்,) சொல்லை விடுத்தவரே இறைவனை உணர்கின்றவாராவர். சொல்லை விடுத்தவரது உள்ளத்தில் இறைவனும் அச்சொல்லைத் தம்மின் வேறாக உணர்ந்த உணர்வு வடிவாய் நிற்பன்.

விளக்கவுரை

எனவே, 'வாய் வாளாமை கடவுட்டன்மையை மிகு விக்கும்' என்றவாறு. 'ஈசனை உள்காது வாய்வாளாமை மட்டுமே உடையவர் சொல்லை விடுத்தவர் ஆகார்' என்றற்கு, 'ஓசை இறந்தவர் ஈசனை உள்குவர்' என்றும், 'நாத ஞானமும் பாச ஞானமே' எனவும், ஆதலின் 'அதுவும் நீக்கற்பாலது' எனவும், 'உணர்த்தற்கு ஓசை உணர்ந்த உணர்வது வாமே' என்றும் கூறினார்.

இதனால், வாய் வாளாமை இறையுணர்வோடு நிகழ்தல் வாழ்நாள் குறைபடாமைக்குக் குறியாதல் கூறப்பட்டது.

ஆமே அழிகின்ற வாயுவை நோக்கிடில்
நாமே உறைகின்ற நன்மை அளித்திடும்
பூமேல் உறைகின்ற போதகம் வந்திடும்
தாமே உலகில் தலைவனு மாமே. *#757*

ஒவ்வொரு மூச்சிலும் பிராண வாயு அழிதலை அறியும் அறிவு உண்டாகுமாயின், அது பயனுடையதாகும். அஃதாவது, நாம் நெடுங்காலம் இவ்வுலகில் வாழ்கின்ற நன்மையைக் கொடுக்கும். அதனால், ஆதார கமலங்களில் நிலைத்து நிற்றற்குரிய ஞானமும் கைவரும். அந்த ஞானம் கைவரப் பெற்றோர் உலகில் கட் புலனாய் நிற்கின்ற இறைவனாகி நிற்கும் பெருமையையும் அடைவர்.

விளக்கவுரை

எனவே, 'வாயுப் பயிற்சி உடையவரை அத்தன்மை உடையவராக அறிக' என்பது குறிப்பெச்சம். போதம் - ஞானம்.

இதனால், வாயுப்பயிற்சி ஒன்றேயும் வாழ்நாள் குறை படாமைக்குக் குறியாதல் கூறப்பட்டது.

தலைவன் இடம்வலஞ் சாதிப்பார் இல்லை
தலைவன் இடம்வலம் ஆயிடில் தையல்
தலைவன் இடம்வலம் தன்வழி அஞ்சில்
தலைவன் இடம்வலந் தன்வழி நூறே. *#758*

இறைவன் கொடுத்த இடைநாடி பிங்கலை நாடி வழிகளைப் பயனுடையனவாகின்ற வகையில் சாதனை செய்பவர் உலகத்து அரியர். அந்நாடிகள் பயனுடையனவாய் விடின், அவற்றால் பஞ்சேந்திரியங்களும் தன்வழிப்படும். அவை தன்வழிப்பட்ட நிலையில் பின்னும் அச்சாதனையைச் செய்யின், அவ்வாறு செய் பவனது வாழ்நாள் நூறாண்டு அளவினதாய்க் குறைவின்றி நிற்கும்.

விளக்கவுரை

இடைநாடி பிங்கலை நாடிகள் பயனுடையன வாதல், அவை முறையே பிராண வாயுவை உள்வாங்குதற்கும், வெளி விடுதற்கும் உரியவாம் பொழுதாம். எனவே, அவற்றின் பொருட்டே அவை தரப்பட்டன என்க. 'ஆயிடில்' எனப்பின்னர் வருதலின், வாளா, 'சாதிப்பார்' என்றார். ஆதல், பயன்படுதல். 'இடைநாடி பிங்கலை நாடிகள் இறைவனால் கொடுக்கப்பட்டனவாதலேயன்றி, அவை சத்தி சிவங்களாயும் நிற்கும்' என்பது உணர்த்துதற்கு, 'தையல் தலைவன் இடம் வலம்' என்றார்; இது நிரல்நிறை. பின்னிரண்டி டத்திலும், 'வலத்தால்' என உருபு விரிக்க.

'தன்வழி அஞ்சில்' என அனுவாதகமாகக் கூறவே, அஞ்சும் தன்வழியவாதலும் பெறப்பட்டது. 'வழி' இரண்டில் பின்னது, வாழ்நாளின் வழிமுறை.
இதனால், வாயுவசம், இந்திரியவசம், யோக அனுபவம் மூன்றன் கூட்டம் நிறை வாழ்நாட்குக் குறியாதல் கூறப்பட்டது.

ஏறிய ஆறினில் எண்பது சென்றிடும்
தேறிய ஏழிற் சிறக்கும் வகையெண்ணில்
ஆறொரு பத்தாம் அமர்ந்த இரண்டையுந்
தேறியே நின்று தெளிஇவ் வகையே. ***#759***

பிராண வாயு வலநாடி இட நாடிகளில் முறையே, 'ஒன்று, ஆறு' என்னும் முறையில் வெளிப்போகுமாயின், வாழ்நாள் எண்பதாண்டு வரையிற் செல்லும். அவ்வாறன்றி, 'ஒன்று, ஏழு' என்னும் முறையில் வெளிப்போகுமாயின், வாழ்நாள் அறு பதாண்டாம். இவ்விரண்டையும் உணர்ந்து, இவ்வாறே இடை நாடியின் வழி இயங்கும் இயக்கம் மிக மிக, வாழ்நாளின் எல்லை குறையும் என்று மேற்கூறுவனவற்றையும் உணர்வாயாக.

விளக்கவுரை

இடை நாடி வழியால் பிராண வாயு உட்செல்லின் உடல் வலிமை மிகும். அவ்வாறன்றி அவ்வழியே வெளிச்செல்லுமாயின், உடல் வலிமை குன்றும். ஒவ்வொரு முறையும் மூச்சு வெளிச்சென்று உட்புகும்பொழுது குறைந்தே புகுகின்றது என்பதுமேலெல்லாம் சொல்லப்பட்டது. அக்குறைவு வல நாசியின்வழி நிகழின் தீங்குமிக இல்லை. இடநாடியின் வழி நிகழின், தீங்கு மிகுதியாம். ஆகவே, கன்மத்துக்கு ஈடாகச் சிலர்க்குப் பிராண வாயு நெடுநேரம் வல நாசியின்வழி வெளிப்போதலும், சிலர்க்கு இடநாசியின்வழி நெடுநேரம் வெளிப்பேதாலும் உளவாகின்றன. அந்நிகழ்ச்சியைச் சரவோட்டம் அறியும் முறையாற் காணின், அவரவரது வாழ்நாள் எல்லையை அறிந்துகொள்ளலாம் என்பது கருத்து. இடை நாடி சத்தியை மிகுவிக்கும் வாயிலாதல் பற்றியே 'சத்தி நாடி' எனப்படு கின்றது. அறியாமையால், உலகர் பிராண வாயுவை அது போகின்ற போக்கிலே விட்டிருப்பர். யோகியர் அதனைத் தம் வழிப்படுத்து முறைப்படி இயங்கச்செய்வர். அம்முறை, 'ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்' *(தி.10 பா.556)* 'எங்கே யிருக்கினும் பூரி இடத்திலே' *(தி.10 பா.558)* 'வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே' *(தி.10 பா.561)* என மேற்கூறப்பட்டது. இங்கும் வருகின்ற திருமந்திரத்துள், 'இடம் பெற ஓடிடில்' எனக் குறிக்கப் படும். அதனால், ஏறுதல் இடநாடியின் வழி என்பது ஆற்றலால் கொள்ளப்பட்டது. 'தெளி இவ்வகையே' என்றது சரவோட்டத்தின் பயன் முறையை விளக்கியவாறு. 'ஆறொரு பத்து'

என்னும் பெயர்ப் பயனிலை வினையின் இயல்பினதாய், 'எண்ணில்' என்னும் எச்சத் திற்கு முடிவாயிற்று. 'இவ்வாறாய் அமர்ந்த இரண்டையும்' என்க.
இதனால், சர ஓட்டத்தால் வாழ்நாள் எல்லையை அறியும் முறை இரண்டு கூறப்பட்டன.

இவ்வகை எட்டும் இடம்பெற ஓடிடில்
அவ்வகை ஐம்பதே யென்ன அறியலாம்
செவ்வகை ஒன்பதுஞ் சேரவே நின்றிடின்
முவ்வகை யாமது முப்பத்து மூன்றே. *#760*

பிராண வாயு மேற்கூறிய வகையில், 'ஒன்று, எட்டு' என்னும் முறையில் இயங்கினால், 'வாழ்நாள் ஐம்பதாண்டே' என்று அறியலாம். இனி, 'ஒன்று, ஒன்பது' என்ற முறையில் இயங்கினால் அது முப்பத்து மூன்றாண்டேயாம்.

விளக்கவுரை

முவ்வகையாம் - மூன்று கூற்றில் ஒரு கூறாகின்ற 'அது, முவ்வகையாம் முப்பத்து மூன்றே' என மாற்றுக.
இதனால், அம்முறை மற்றும் இரண்டு கூறப்பட்டன.

மும்மூன்றும் ஒன்றும் முடிவுற நின்றிடில்
எண்மூன்றும் நாலும் இடவகை யாய்நிற்கும்
ஐம்மூன்றும் ஓடி அகலவே நின்றிடிற்
பன்மூன்றொ டீராறு பார்க்கலு மாமே. *#761*

பிராண வாயு மேற்கூறிய வகையில், 'ஒன்று, பத்து' என்னும் முறையில் வெளிச்சென்றால், வாழ்நாள் இருபத்தெட்டு ஆண்டாகும். இனி, 'ஒன்று, பதினைந்து' என்னும் முறையில் இயங்கினால், 'வாழ்நாள் இருபத்தைந்து ஆண்டு' என்று அறியலாம்.

விளக்கவுரை

'இட வகை' என்பதை, 'முடிவுற' என்றதற்கு முன்னர்க் கூட்டுக. 'ஈராறு' என்பதன்பின், 'என்று' என்பது எஞ்சி நின்றது.
இதனால், அம்முறை, மற்றும் இரண்டு கூறப்பட்டன.

பார்க்கலு மாகும் பகல்முப் பதுமாகில்
ஆக்கலு மாகுமவ் வாறிரண் டுள்ளிட்டுப்
போக்கலு மாகும் புகலற ஒன்றெனில்
தேக்கலு மாகுந் திருத்திய பத்தே. *#762*

பிராணவாயு பகல் முப்பது நாழிகையும் இடநாடி வழியே வெளிப்போதுமாயின், 'வாழ்நாள் பன்னிரண்டாண்டு' என்று வரையறுத்துவிடலாம். அதனை அநுபவமாகவும் காண முடியும்.

இடையே மாற்றம் புகாதொழிய ஒருநாள் முழுதும், (அஃதாவது அறுபது நாழிகை) பிராணவாயு இடை நாடி வழியே உள்வந்து வெளிச் செல்லுமாயின், 'வாழ்நாள் இனிப் பத்தாண்டு' என்று துணியலாம்.

விளக்கவுரை

'பகல் முப்பதும் ஆகில், ஆறிரண்டை ஆக்கலும் ஆகும்; பார்க்கலும் ஆகும்' என்க. 'புகல் அற, ஒன்று உள்ளிட்டுப் போக்கலும் ஆகும் எனில்' என மாற்றுக. ஒன்று, ஒருநாள். தேக்கல் - நிலைநாட்டல்.
இதனால், அம்முறை மற்றும் இரண்டு கூறப்பட்டன.

ஏயிரு நாளும் இயல்புற ஓடிடிற்
பாயிரு நாலும் பகையற நின்றிடும்
தேய்வுற மூன்றுந் திகழவே நின்றிடில்
ஆயுரு வாறென் றளக்கலு மாமே. ***#763***

பிராண வாயு இரண்டு நாள் அளவு இடைநாடி வழியாக இயங்கின், உயிர் எட்டாண்டுகாறும் இடையூறுநின்றி உடலில் நிற்கும். மூன்றுநாள் இயங்கின், வாழ்நாளை, 'ஆறு ஆண்டு' என்று அளந்து கூறிவிடலாம்.

விளக்கவுரை

'ஆயுரு' என்பது வடநூல் முடிபு.
இதனால், அம்முறை மற்றும் இரண்டு கூறப்பட்டன.

அளக்கும் வகைநாலும் அவ்வழி ஓடில்
விளக்கும் ஒருநாலு மெய்ப்பட நிற்கும்
துளக்கும் வகையைந்துந் தூய்நெறி ஓடில்
களக்க மறமூன்றிற் காணலு மாமே. ***#764***

வாழ்நாளை அளந்தறிகின்ற வகையில் நான்கு நாள்கள் பிராணவாயு இடைகலை வழியே இயங்கின், நான்கு ஆண்டுகள் உயிர் உடலிற் பொருந்தி நிற்கும். ஐந்து நாள் அவ்வாறு இயங்கின், தெளிவாக மூன்றாண்டு அளவில் வாழ்நாள் எல்லையைக் காணலாம்.

விளக்கவுரை

'கலக்கம்' என்பது திரிந்து நின்றது.
இதனால், அம்முறை மற்றும் இரண்டு கூறப்பட்டன.

காணலு மாகுங் கருதிய பத்தோடிற்
காணலு மாகுங் கலந்த இரண்டையும்
காணலு மாகுங் கலப்பற மூவைந்தேற்
காணலு மாகுங் கருத்துற ஒன்றே. ***#765***

பிராண வாயு பத்து நாள் இடை நாடி வழியே இயங்கின், உயிர் உடலிற் கலந்து வாழும் ஆண்டு இரண்டு என்பதை அறியலாம். பதினைந்து நாள் அவ்வாறு இயங்கின், 'வாழ்நாள் ஓர் ஆண்டு' என்பதை மனம் பொருந்தக்

கொள்ளலாம்.

விளக்கவுரை

'இரண்டையும்' என்னும் உம்மை இறந்தது தழுவிற்று.
இதனால், அம்முறை மற்றும் இரண்டு கூறப்பட்டன.

கருதும் இருபதிற் காணஆ றாகும்
கருதிய ஐயைந்திற் காண்பது மூன்றாம்
கருதும் இருப துடன்ஆறு காணில்
கருதும் இரண்டெனக் காட்டலு மாமே. ***#766***

பிராண வாயு இருபது நாள் இடைநாடி வழியே இயங்கினால், வாழ்நாள் ஆறு திங்களாம். இருபத்தைந்து நாள் இயங்கினால் மூன்று திங்களாம். இருபத்தாறுநாள் இயங்கினால் இரண்டு திங்களாம்.

விளக்கவுரை

ஆறு முதலியவை, 'திங்கள்' என்பது ஆற்றலால் கொள்ளக் கிடந்தது.
இதனால், அம்முறை மற்றும் மூன்று கூறப்பட்டன.

காட்டலு மாகுங் கலந்திரு பத்தேழில்
காட்டலு மாகுங் கலந்தெழும் ஒன்றெனக்
காட்டலு மாகுங் கலந்திரு பத்தெட்டிற்
காட்டலு மாகுங் கலந்தஈ ரைந்தே. ***#767***

பிராண வாயு இருபத்தேழு நாள் இடைநாடி வழியே இயங்கின், அப்பால் ஒரு திங்களே வாழ்நாள் என்பதை மெய்ப்பித்துக் காட்டமுடியும். இருபத்தெட்டுநாள் இயங்கின், அப்பால் பத்து நாள்களே வாழ்நாள் என்று காட்டலாம்.

விளக்கவுரை

இயக்கம் இருபத்தேழு நாள் என்பது, ஒரு நாள் கூட இருபத்தெட்டு நாளாகுமாயின், எத்துணைத் தீங்கு மிகுகின்றது என்பது இங்கு ஊன்றி உணரத்தக்கது.
இதனால், அம்முறை மற்றும் இரண்டு கூறப்பட்டன.

ஈரைந்தும் ஐந்தும் இருமூன்றும் எட்டுக்கும்
பாரஞ்சி நின்ற பகைபத்து நாளாகும்
வாரஞ்செய் கின்ற வகைஆறஞ் சாமாகில்
ஓரஞ்சொ டொன்றொன் றெனவொன்றும் நாளே. ***#768***

பிராண வாயு மேற்கூறியவாறு இருபத்தொன்பது நாள் இயங்கினும் இருபத்தெட்டு நாள் இயங்குதலோடு ஒப்பதேயாம்; வேறுபாடில்லை. இனி, முப்பது நாள் இயங்கின், வாழ்நாள் அப்பால் ஏழு நாளாகவே நிற்கும்.

விளக்கவுரை

பார் அஞ்சி நின்ற பகை - உலகம் அஞ்சுகின்ற பெருந்தீங்கு; இறப்பு. வாரம் - கூறு. 'நாள், ஓர் அஞ்சொடு, ஒன்று, ஒன்று என ஒன்றும்' எனக் கூட்டுக.
இதனால், அம்முறை மற்றும் இரண்டு கூறப்பட்டன.

ஒன்றிய நாள்கள் ஒருமுப்பத் தொன்றாகிற்
கன்றிய நாளுங் கருத்துற மூன்றாகும்
சென்றுயிர் நாலெட்டுஞ் சேரவே நின்றிடின்
மன்றியல் பாகு மனையில் இரண்டே. *#769*

பிராண வாயு இடை நாடி வழியே முப்பத்தொரு நாள் இயங்குமாயின், வாழ்நாள் அப்பால் மூன்று நாளே. முப்பத் திரண்டு நாள் இயங்கின், அப்பால் இரண்டு நாளில் அவ்வுயிர் உடலை விட்டுச்செல்ல, அது வாழ்ந்த இல்லத்தில் பலர் கூடி ஒலிக்கின்ற மன்றத்தின் இயல்பு தோன்றுவதாகும்.

விளக்கவுரை

கன்றிய நாள் - உயிர் உடலில் அழுந்தியிருக்கும் நாள். 'சென்று' என்பது, 'செல்ல' என்பதன் திரிபு.
இதனால், அம்முறை மற்றும் இரண்டு கூறப்பட்டன.

மனையினில் ஒன்றாகும் மாதம்மும் மூன்றும்
சுனையில்ஒன் றாகத் தொனித்தனன் நந்தி
வினையற ஓங்கி வெளிசெய்து நின்றால்
தனையுற நின்ற தலைவனு மாமே. *#770*

உயிர் வளர்கின்ற மாதங்கள் முதற்கண் ஓர் அறை யில் ஒன்பதும், பின் நீர்க்குட்டத்தில் ஒன்றும் என்று எங்கள் நந்தி பெருமான் திருவாய் மலர்ந்தருளினார். (அஃதாவது தாயின் வயிற்றில் ஒன்பது மாதம் உருப்பெற்று வளர்ந்து, பத்தாம் மாதம் நீரில் மிதந்து கிடக்கும் என்றவாறு) பத்தாம் மாதம் அவ்விடத்தை விட்டு அகன்று திருவருள் உணர்வோடு சிறப்புற்று வெளிவருமாயின், அது தன்னைப் பெறுதலாகிய பேற்றினால் உலகர்க்குத் தலைவனாதலும் கூடும்.

விளக்கவுரை

எனவே, 'அவ்வாறின்றி வினைவயப்பட்டே வெளி வருமாயின், அளவற்ற உயிர்களுள் தானும் ஒன்றாய், மேற்கூறிய வாழ்நாள் எல்லைகளுள் ஒன்றைப் பெற்றுக் கழியும்' என்றதாயிற்று. ஒன்றாகும் - பொருந்துதல் உடையதாம்.
இதனால், யோக முயற்சி முன்னைத் தவம் உடையார்க்கே கூடும் என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது.
தவமும் தவமுடையார்க் காகும்; அவம் அதனை

அஃதிலார் மேற்கொள் வது.
-குறள், *262*
என்றார் திருவள்ளுவ நாயனாரும்.

ஆரு மறியார் அளக்கின்ற வன்னியை
ஆரு மறியார் அளக்கின்ற வாயுவை
ஆரு மறியார் அழிகின்ற அப்பொருள்
ஆரு மறியா அறிவறிந் தேனே. *#771*

வாழ்நாளை அளந்தறிதற்குக் கருவியாகிய (எனவே, உயிர் வாழ்தற்கு முதலாகிய) மூலாக்கினி, பிராண வாயு இவற்றின் பெருமைகளை அறிகின்றவர் உலகில் எவரும் இல்லை. அதனால், அவற்றை ஒழுங்குபட நிறுத்தாமையால் விரைவில் நீங்குகின்ற உயிரினது பெருமையையும் அறிகின்றவர் இல்லை. யான் திருவருளால் அவ்விரண்டையும் அறியப் பெற்றேன்.

விளக்கவுரை

எனவே, 'யான் மேற்கூறியவை ஒருவரும் அறிந்திராத அருமறை' என்றவாறு.
இதனால், ஆயுள் பரீட்சை முறையின் அருமை கூறப்பட்டது.

அறிவது வாயுவொ டைந்தறி வாய
அறிவா வதுதான் உலகுயிர் அத்தின்
பிறிவுசெய் யாவகை பேணிஉள் நாடிற்
செறிவது நின்று திகழும் அதுவே. *#772*

அறியவேண்டுவது, பிராணவாயுவின் இயக்கமும், அதனால் நிலைபெறுகின்ற ஐம்பொறிகளாகிய அறிவும் ஆகிய வற்றையே, 'அறிவு' என்று சொல்லப்படுவது எதுவோ அதுவே, உலகில் 'உயிர்' என்று சுட்டப்படுவது. அவ்வுயிர் உலகினின்றும் பிரிந்து போகாதவாறு அதற்குரிய முறைகளை அறிந்து, அறிந்த வழியிலே பேணிக் காப்பின், அது உடம்பில் அழுத்தம் உடையதாய் நிலைபெற்று விளங்கும்.

விளக்கவுரை

பின்னர் வரும், பிறிவு செய்யா வகையை அறிதற்கு, முதற்கண், 'அறிவது வாயுவொடு ஐந்தறிவாய' என்றார். 'ஆய' என்பது வினைப்பெயர். அதனிடத்து, 'ஆயவற்றை' என உருபு விரித்துக்கொள்க. 'அதனின்' என்பது, 'அத்தின்' என மருவிற்று. 'அது' என்றது, முற்போந்த உலகினை. இதனால், 'அறிவுடையார் ஆயுள் நீட்டிக்கும் முறையை அறிந்து அவ்வழியில் நிற்றல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

அதுவரு ளும்மரு ளான துலகம்
பொதுவரு ளும்புக ழாளர்க்கு நாளும்

மதுவரு ளும்மலர் மங்கையர் செல்வி
இதுவருள் செய்யும் இறைஅவ னாமே. #773

'அது' என்று பொதுமையிற் சுட்டப்படும் முதற் பொருள் செய்கின்ற அருள் அனைத்துயிர்க்கும் பொதுவாக உலகின்பத்தையும், உயர்ந்தோர்க்குச் சிறப்பாகப் பேரின்பத்தையும் தரும். அவ்வருளும், செந்தாமரை வெண்டாமரை மலர்களில் வீற்றிருக்கின்ற திருமகள், கலைமகள் என்னும் இருவர்க்கும் தலைவியாகிய உமையே. அதனால், வாழ்நாளை நீட்டிக்கும் அருளைப்புரியும் இறைவன், அவ்வுமைக்குத் தலைவனாகிய சிவபெருமானே.

விளக்கவுரை

'அதனால் அப்பெருமானை நினைந்தே வாழ்நாள் நீட்டிப்பில் முயல்க' என்பது குறிப்பெச்சம். 'அருளும்' மூன்றில் முன்னது எச்சம்; ஏனையவை முற்று. 'உலகத்திற்கு' என்னும் உருபு தொகுத்தலாயிற்று. மது, சிவானந்தத் தேன்.

இதனால், வாழ்நாள் நீட்டிப்பின் முயற்சிக்கு இன்றியமை யாததொரு துணை கூறப்பட்டது.

பிறப்பது சூழ்ந்த பெருந்தகை நந்தி
குறிப்பது கூடிய கோலக் குரம்பைப்
பழப்பதி யாவது பற்றறும் பாசம்
அழப்படி செய்வார்க் ககலும் மதியே. #774

'உயிர்கள் பிறத்தல் வேண்டும்' என்று கருதிய இறைவனது குறிப்பின்படி அவற்றிற்குக் கிடைத்த அழகிய உடம்பு, 'பிஞ்சு, காய், செங்காய்' என்று ஆகி முடிவில் பழமாய்ப் பழுத்து விழுந்துவிடும். அதற்குள் பாசங்கள் ஆழ்ந்து போம்படி அதற்குரிய முறைகளில் பழகினால், பாசம் விலகி, ஞானம் மிகும்.

விளக்கவுரை

'அவ்வாறு முயலுதற்பொருட்டே, இவ்வாயுள் பரீட்சை கூறப்பட்டது' என்பது குறிப்பெச்சம். 'குறிப்பதனால்' என உருபு விரிக்க. உடம்பை, 'குரம்பை, பதி' என்பனவாகக் குறித்தார். 'ஆவது, அறும்' என்பன முற்றுக்கள். 'பற்றறும்' என்பதை, 'செய்வார்க்கு' என்பதன் பின் கூட்டுக. உரைக்க - 'ஆழ' என்பது குறுகிநின்றது. படி - முறை.

இதனால், இவ்வதிகாரத்திற்குக் காரணம் கூறப்பட்டது.

5.16.வார சரம்

வெள்ளிவெண் திங்கள் விளங்கும் புதன்இடம்
ஒள்ளிய மந்தன் இரவிசெவ் வாய்வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறையிடம்

தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே. #775

கிழமைகள் ஏழனுள், 'வெள்ளி, திங்கள், புதன்' என்னும் மூன்றில் இடநாடி வழியாகவும், 'சனி, ஞாயிறு, செவ்வாய்' என்னும் மூன்றில் வலநாடி வழியாகவும், வியாழனில் வளர் பிறையாயின் இடநாடி வழியாகவும், தேய் பிறையாயின் வல நாடி வழியாகவும் இயங்குதல் உடல் நலத்திற்கு ஏற்புடைய இயற்கைப் பிராண இயக்கமாகும்.

விளக்கவுரை

எனவே, மாறி இயங்குதல் உடல் நலத்திற்குப் பொருந்தாது என்பதாம். இதனால், சர ஓட்டத்தின் இயற்கைத் தன்மை கூறப்பட்டது.

வெள்ளிவெண் திங்கள் விளங்கும் புதன்மூன்றும்
தள்ளி இடத்தே தயங்குமே யாமாகில்
ஒள்ளிய காயத்துக் கூன மிலையென்று
வள்ளல் நமக்கு மகிழ்ந்துரைத் தானே. #776

'பிராணன், மேற்கூறியவாறு, குறித்த கிழமைகளில், குறித்த நாடியின் வழியே இயங்குமாயின், ஞானத்தைப் பெறுதற்கு வாயிலாகிய உடம்பிற்கு யாதொரு குறையும் உண்டாகாது' என்று, அருள் வள்ளலாகிய நந்தி பெருமான் எங்கட்குத் திருவுளம் உவந்து அருளிச்செய்தார்.

விளக்கவுரை

****

செவ்வாய் வியாழம் சனிஞாயி றேஎன்னும்
இவ்வா றறிகின்ற யோகி இறைவனே
ஒவ்வாத வாயு வலத்துப் புரியவிட்
டவ்வா றறிவார்க்கவ் வானந்த மாமே. #777

பிராணன், மேற்கூறியவாறு செவ்வாய், வியாழன், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வல நாடி வழியே இயங்குதல் வேண்டும் என்பதை அறிந்த யோகியை, 'சிவன்' என்றே சொல்லலாம். அஃது அவ்வாறு இயங்காது மாறி நிகழும்பொழுது அதனை ஒத்த முறையில் இயங்கச்செய்து அதன் பயனை அறிபவர்க்கு, அப்பயன் சிவானந்தமாய் முடியும்.

விளக்கவுரை

மேலைத் திருமந்திரத்துள், 'காயத்துக்கு ஊனம் இல்லை' என்றதனையும், இத்திருமந்திரத்துள், 'ஒவ்வாத வாயு வலத்து (ஒவ்வுமாறு) புரியவிட்டு' என்றதனையும் இரண்டற்கும் பொதுவாமாறு கூட்டிப்பொருள் கொள்க. அங்ஙனங் கொள்ளவே, 'பிராணன் முதலிற் கூறிய இயல்பில் இயங்காது மாறி இயங்கின், அஃது, உடல், இயற்கை நிலையில் இல்லாமைக்கு

அறிகுறியாய், மேலும் உடலின் இயற்கை நிலையைக் கெடச்செய்யும்' என்பதும், 'அதனால் யோகியானவன் தனது பிராணாயாம முறையால், ஒவ்வா இயக்கத்தை மாற்றி, ஒத்த இயக்கத்ததாக ஆக்குதல் வேண்டும்' என்பதும் போதரும். இத்திருமந்திரத்துள் வல நாடி இயக்கத்திற்குச் சொல்லியன யாவும் இடைநாடி இயக்கத்திற்கும் பொருந்துதல் எளிதின் அறியப்படும்.

'பிராணன் எஞ்ஞான்றும் ஒரு நாடி வழியாகவே இயங் குதலோ, அல்லது மாறி நிகழினும் அம்மாற்றம் முன்னை நிலையொடு பின்னை நிலை ஒத்த அளவினதாய் நில்லாது மிக்காதல் குறைந்தாதல் நிற்றலோ உளதாயின், உடல் தன் இயற்கை நிலைகெடும்' என்பது இம் மூன்று திருமந்திரங்களாலும் அறியப்படும். படவே, 'அவ் இரு வகையும் ஆகாது ஒரு நிகரான மாற்றத்ததாமாறு கிழமைக் கணக்கில் வைத்து அமைக்கப்பட்டது' என்பதும் உணர்ந்து கொள்ளப்படும்.

இவ் விரண்டு திருமந்திரங்களாலும் சர ஓட்டத்தின் ஒத்த நிலையது பயன் கூறப்பட்டது.

மாறி வரும்இரு பால்மதி வெய்யவன்
ஏறி இழியும் இடைபிங் கலையிடை
ஊறும் உயிர்நடு வேஉயிர் உக்கிரம்
தேறி அறிமின் தெரிந்து தெளிந்தே. *#778*

இடை நாடி பிங்கலை நாடிகளாகிய வழியால், முறையே, 'சந்திர கலை' என்றும், 'சூரிய கலை' என்றும் ஆகின்ற பிராணன், எஞ்ஞான்றும் அவ்வாறே இயங்கி அப்பெயரையே பெற்று நில்லாமல் மாறி வரும். (அஃதாவது, இடை நாடியில் இயங்கி, 'சந்திர கலை' எனப் பெயர்பெற்று நின்ற பிராணனே அந்நிலையினின்றும் மாறிப் பிங்கலையில் இயங்கி, 'சூரிய கலை' எனப் பெயர்பெற்று நிற்கும். பின்னும் அச் சூரிய கலைதானே சந்திர கலையாய் மாறும். இம் மாற்றத்திற்கு முடிவில்லை) இனி, பிராணன் மேற்கூறியவாறு, 'சந்திர கலை, சூரிய கலை' எனப்பெயர் பெறும்பொழுது, அவ்வந் நாடியின் வழி முன்னர் வெளிச் செல்லுதலையும், பின்னர் உட்புகுதலையும் உடையதாய் இருக்கும். நீர் ஊற்றுப்போல இங்ஙனம் சுரந்து முடி வின்றிச் சர ஓட்டமாய் ஓடுகின்ற பிராணன், மேற்கூறிய இரு நாடிகளின் வழி ஓடாது, நடு நாடி (சுழுமுனை நாடி) வழியே இயங்குமாயின், (அஃதாவது, பிராணாயாமமாய் அமையுமாயின்,) அஃது உடற்கே யன்றி, உயிர்க்கும் வலிமை தருவதாம். ஆகவே, அதனை அறிந்து, உலகீர், பிராணனை நடு நாடியிற் செலுத்தும் முறையைக் குருமுகமாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளியுங்கள்.

விளக்கவுரை

'மதி வெய்யவன் இரு பால் மாறி வரும்; அவை இடை பிங்கலையிடை ஏறி இழியும்' என்க. முதல் அடியால், 'மதி, வெய்யவன்' என்பன பொருள் வேறாதலைக் குறியாது, ஒருபொருள் தானே இடம் பற்றிப்பெறும் நிலை வேறுபாட்டினையே குறிக்கும் என்பது உணர்த்தியவாறு. இரண்டாம் அடி, அஃது அவ்வப்பெயர் பெறுங் காலத்தை உணர்த்திற்று. பால் - இடமும், வலமும் ஆகிய பக்கங்கள். 'இரு பாற்கண்' என உருபு விரிக்க. மாறுதல் - வேறிடம் செல்லுதல். வருதல் - முன்னையிடத்திற்கு மீளுதல். 'இருபாற்கண் வரும்' என இயையும். எனவே, ஏழாவது இறுதிக்கண் தொக்கதாம். மதியும், வெய்யவனும் ஆகுபெயர்கள்.

'உயிர்' இரண்டனுள் முன்னது பிராணன்; பின்னது ஆன்மா. 'நடுவே' என்பதன் பின், 'இயங்கின்' என்பதும், 'உக்கிரம்' என்பதன்பின் 'ஆம்' என்பதும் எஞ்சி நின்றன. 'இதனைத் தேறி' என எடுத்துக்கொண்டு, 'அறிமின்' என்பதற்கு, 'நடுவே இயங்குதற்குரிய வழியை' என்னும் செயப்படுபொருள் வருவித்து முடிக்க. 'குருமுகமாக' என்பது ஆற்றலாற் கொள்ளக் கிடந்தது.

இதனால், சரவோட்டம் இரு நிலையது ஆமாறும், பின்னும் அதுதானே பிராணாயாமமாய்ப் பயன் தருமாறும், அப்பயனை எய்துமாறும் கூறப்பட்டன.

உதித்து வலத்திடம் போகின்ற போது
அதிர்த்தஞ்சி ஓடுத லாம்அகன் றாரும்
உதித்தது வேமிக ஓடிடு மாகில்
உதித்த இராசி யுணர்ந்துகொள் உற்றே. *#779*

பிராண வாயு வல நாடியால் நுழைந்து, இட நாடியால் வெளியேறுமாயின், அது, பிராணன் தனது நிலை கலங்கி இயங்குதலாம். ஏனெனில், அவ்வாறான ஓட்டத்தால் பிராணன் தனது வலிமையை மிக இழந்து நிற்கும். இனி, அதுதானே இட நாடியால் நுழைந்து வல நாடியால் வெளியேறுமாயின், 'அது தன் இயற்கையில் உள்ளது' என அறிவாயாக.

விளக்கவுரை

'வலத்து உதித்து' என மாறுக. அகலுதல் - நீங்குதல். இதற்கு 'வலிமையை' என்னும் செயப்படுபொருள் வருவிக்க. 'ஆரும்' என்பதன்பின், 'ஆகலான்' என்பது எஞ்சி நின்றது. 'அதுவே' என்ற தேற்றேகாரத்தால், உதித்தலும், ஓடுதலும் முற்கூறியதற்கு மாறாய் நிகழ்தல் பெறப்பட்டது. இராசி - இயல்பு.

இதனால், சரவோட்டம் பொதுவே நன்றாமாறும், தீதாமாறும் கூறப்பட்டன.

நடுவுநில் லாமல் இடம்வலம் ஓடி

அடுகின்ற வாயுவை அந்தணன் கூடி
யிடுகின்ற வாறுசென் றின்பணி சேர
முடிகின்ற தீபத்தின் முன்னுண்டென் றானே. *#780*
சுழுமுனையில் நில்லாமல், ஏனை இருவழிகளிலும் ஓடி, அதனால்
வாழ்நாளைத் தேய்க்கின்ற பிராண வாயுவை யோகி தன் வசமாக்கிக்
கொள்ளும் வழியிலே சென்று, அதனால் குண்டலி சத்தியை
உணர்ந்தபின், அவ்வுணர்வு வாயிலாக அணையும் விளக்குப் போல மிக
ஒளிவிடுகின்ற திரோதான சத்தியை அனுபவமாகக் காண்பான்.

விளக்கவுரை

அந்தணன் - முனிவன்; யோகி. கூடுதல் - அடைதல்; 'கூடியிடுகின்ற' என்பது ஒருசொல். பணி - பாம்பு; குண்டலினி. தீபத்தின் - தீபத்தைப்போல. இதன்பின், திரோதான சத்தியைக் குறிக்கின்ற. 'ஒன்று' என்னும் சொல் எஞ்சி நின்றது. முன் - முன்பே. 'என்பான்' என எதிர்காலத்தால் கூறற்பாலதனை, துணிவு பற்றி 'என்றான்' என இறந்த காலத்தாற் கூறினார். 'யோக முறையால் குண்டலினி சத்தியை உணரப் பெற்றவன், அதனால் திரோதான சத்தி உண்மையை இனிது உணர்வான்' என்பது இம்மந்திரத்தின் திரண்ட பொருள். 'உலகர்க்கு விளக்குப்போல நிற்கின்ற திரோதான சத்தி, யோகத்தில் ஞானத்தை எய்தினோர்க்கு அருட் சத்தியாய் மாறும் நிலையை அடையும்' என்றற்கு அணைகின்ற விளக்கை உவமையாகக் கூறினார். அதனானே, அஃது இனிது காட்சிப்படுதலும் பெறப்பட்டது.
இதனால், யோகப்பயிற்சி சத்திநிபாதத்திற்கு ஏதுவாதல் கூறும் முகத்தால், 'அப்பயிற்சியை மேற்கொள்ளுதலே சரவோட்டத் தின் இயல்புணர்தற்குப் பயன்' என்பது கூறப்பட்டது.

*5.17.*வார சூலம்

வாரத்திற் சூலம் வரும்வழி கூறுங்கால்
நேரொத்த திங்கள் சனிகிழக் கேயாகும்
பாரொத்த சேய்புதன் உத்தரம் பானுநாள்
நேரொத்த வெள்ளி குடக்காக நிற்குமே. *#781*

சிவபெருமானது சூலம் மாறி மாறி வருகின்ற திசை களைச் சொல்லுமிடத்து, திங்களும், சனியுமாகிய கிழமைகளில் கிழக்காம். செவ்வாயும், புதனுமாகிய கிழமைகளில் வடக்காம். ஞாயிறும், வெள்ளியுமாகிய கிழமைகளில் மேற்காம். இக்கிழமை களில் சூலம் இவ்வாறாக நிற்கும்.

விளக்கவுரை

எஞ்சிய கிழமையில் நிற்கும் திசையை அடுத்து வரும் திருமந்திரத்திற் காண்க. அத்திருமந்திரத்தில், 'அக்கணி சூலம்' என வருமாறே, இத்திருமந்திரத்திலும், 'சூலம்' என்பதுடன் 'அக்கணி' என்பதனைக் கூட்டிப் பொருள்கொள்க. பார் ஒத்தல் - நிலத்திற்குப் பொருந்துதல். செவ்வாயை 'நில மகன்' (நிலத்திற்கு உரிமை யுடையவன்) எனச் சோதிட நூல் கூறும்.

தெக்கண மாகும் வியாழத்துச் சேர்திசை
அக்கணி சூலமும் ஆம்இடம் பின்னாகில்
துக்கமும் இல்லை வலம்முன்னே தோன்றிடின்
மிக்கது மேல்வினை மேன்மேல் விளையுமே. *#782*

வியாழக்கிழமையில் சூலம் இருக்கும் திசை தெற்காகும். சிவபெருமானுடைய சூலம் (பயணம் செய்பவனுக்கும், யோகிக்கும்) இடப் பக்கத்திலும், பிற்பக்கத்திலும் இருப்பின் ஏற்புடையதாகும். ஆகவே, அப்பொழுது அவர்கட்குத் தீங்கு இல்லை. வலப் பக்கத்திலும், முற்பக்கத்திலும் இருப்பின் தீங்கு மிக விளையும்.

விளக்கவுரை

அக்கு அணி - எலும்பை அணிந்தவன். உம்மை இரண்டும் அசைநிலைகள். 'சூலம் இடம் பின் ஆகில் ஆம்; துக்கம் இல்லை' எனவும், வலம் முன் தோன்றிடில் மிக்கதாகிய மேல்வினை மேன்மேல் விளையும் எனவும் கூட்டி வினை முடிவுசெய்க.
இவ் இரண்டு திருமந்திரங்களாலும் கூறப்பட்ட பொருள்கள் சோதிட நூல்களிலும் இவ்வாறே கூறப்படுகின்றன.

*5.18.*கேசரி யோகம்

கட்டடக் கழன்றுகீழ் நான்றுவீ ழாமலே

அட்டத்தைக் கட்டி அடுப்பை அணைகோலி
விட்டத்தைப் பூட்டிப்பின் மேற்பையைத் தாட்கோத்து நட்ட மிருக்க
நமனில்லை தானே. *#783*

இம் மந்திரத்தின் பொருள், மேல் ஆதனம் கூறிய விடத்துச் சிங்காதனம் கூறிய மந்திரத்தின் பொருளே மேலும் சிறிது உறுதிப்படக் கூறுதலாய் இருத்தல் கண்டுகொள்க. 'கேசரி' என்பது சிங்கத்தின் மறுபெயராதல் வெளிப்படை.

விளக்கவுரை

'கட்டக் ... ... கட்டி' என்பது, 'கட்டவும் நில்லாது கழன்று கீழே நான்று விழுந்து பதுமாசனம்போல் ஆகிவிடுகின்ற முழங் காலை அவ்வாறு ஆகாதபடி கைகளால் துடைகளோடு சேரக் கட்டி' என்றவாறு. அட்டம் - முழங்கால். இதனை, முழங்கால்மேல் வைக்கும் காலை 'அட்டங்கால்' என வழங்கும் வழக்குப் பற்றியும் அறிய லாகும். முழங் கால்களைக் கைகளால் துடைகளோடு சேரக்கட்டுத லாவது, கைகளை முழங்காலின் கீழ்ப்புகுத்தி வெளிக்கொணர்ந்து சுற்றி யிழுத்துச் சேர்த்தல். அடுப்பு, மூலாதாரம். முக்கோண வடிவிற்றாய் நெருப்பை உடைத்தாதல் பற்றி இஃது இவ்வாறு கூறப்பட்டது. மூலாதாரத்தை அணையால் தடுத்தல், மேலே நில்லாமல் தரையிற் பொருந்தவைத்தல். 'அணை' என்பது, இருக்கும் ஆசனத்திற்குச் சிலேடை. 'அணையாற் கோலி' என மூன்றாவது விரிக்க. கோலுதல் - தடுத்தல். விட்டம், குறி. 'அதனைப் பூட்டி' என்றது, கோவணம் கட்டுதலை விதித்தவாறு. பின்னர், 'மேற்பையைத் தாட் கோத்து' என்பார் ஆகலின், அதுபற்றி, 'வெற்றரையுடன் இருத்தல் வேண்டும் போலும்' என ஐயுறாமைப் பொருட்டு இதனை எடுத்தோதினார். பை, விதை. தாள் - பாதம். 'பையைத் தாள்மேற் கோத்து' என மாறிக் கூட்டுக. இதனால், பாதங்கள் விதைக்குக் கீழ்ப்பொருந்துதல் கூறப் பட்டது. நட்டு இருத்தல் - உடலை அசையாது நிமிர்த்திருத்தல். 'நமன் இல்லை' என்றது, 'யோகம் வாய்ப்புடையதாகும்' என்றபடி. இவ் ஆதனத்தை இங்கு முதற்கண் வலியுறுத்திக் கூறவே, 'கேசரி யோகம்' என்பது ஆதனத்தாற் பெற்ற பெயர் என்பது போந்தது. பிற ஆதனங்களிலிருந்து செய்யும் யோகங்களினும் இது மேலானது ஆதலால் இதனையே நாயனார் சிறந்தெடுத்து உணர்த்துகின்றார். இதன் மேன்மை வருகின்ற திருமந்திரங்களுட் காணப்படும். இதனால், கேசரி யோகத்தின் இருக்கை நிலை கூறப்பட்டது.

வண்ணான் ஒலிக்குஞ் சதுரப் பலகைமேற்
கண்ணாறு மோழை படாமற் கரைகட்டி
விண்ணாறு பாய்ச்சிக் குளத்தை நிரப்பினால்

அண்ணாந்து பார்க்க அழுக்கற்ற வாறே. *#784*
ஆடையை அழுக்கு நீக்க விரும்புகின்ற வண்ணான் முதலில் தனக்குப் பயன்படுகின்ற வாய்க்காலை ஓட்டை போகாமற் கட்டிப் பின் ஆடை ஒலிக்கின்ற கல்லிற்கும் உயரமான அளவில் கரை கட்டி, மழை நீரால் பெருகி வருகின்ற ஆற்று நீரை அவ்வாய்க்காலின் வழியால் புகவிட்டுப் பள்ளத்தை நிரப்பினாலே அதில் ஆடையைத் தோய்த்து எடுத்து உயரத்தில் விரித்து உலர்த்திப் பார்க்கும்பொழுது அவ் ஆடை அழுக்கு நீங்கி விளங்கும். அம்முறை போல்வதுதான், யோகத்தால் உயிர் மல மாசு நீங்கி விளங்கும் முறையும்.

விளக்கவுரை

எனவே, 'இவ்வுவமையோடு யோக நிலையைப் பொருத்தி உணர்ந்துகொள்க' என்றதாயிற்று. அங்ஙனம் உணருமாறு:-
வண்ணான், யோகி, ஆடை, யோகியது ஆன்ம அறிவு. ஆடை ஒலிக்கும் பலகை, (கல்) நெற்றி. 'நெற்றி' என்பது விளங்குதற் பொருட்டே 'சதுரப் பலகை' என்றார். ஆன்ம அறிவு மாசு நீங்குதல் ஆஞ்ஞைத் தியானத்தால் ஆகலின், ஆஞ்ஞை இடமாகிய நெற்றியை ஆடை ஒலிக்கும் கல்லோடு உவமித்தார். கண் ஆறு - வாய்க்கால். அஃது அண்ணாவை அடுத்து மேற்செல்லும் துளைக்கு உவமை. உச்சித் துளையை மோழை படாமற் கட்டுதலாவது, அதனை நாவின் நுனியால் அடைத்தல். தலையினின்றும் வரும் அமுதம் இத் துளை வழிக் கீழே ஒழுகிப் போகாமைப் பொருட்டு இது வேண்டப்பட்டது. விண் ஆறு - விண்ணால் பெருகியெழும் யாறு. விண் - மழை, 'விண்ணின்று பொய்ப்பின்' *(குறள், 13)* என்பதிற்போல. இது மேற் குறித்த அமுதத்திற்கு உவமை. 'குளம்' என்றது சிலேடை. இஃது உவமை யில், 'நீர் நிலை' எனவும், பொருளில், 'நெற்றி' எனவும் பொருள் தரும். அண்ணாந்து பார்த்தல், புருவ நடுவை நோக்குதல். 'உயிர் தூய்மை பெறுதல் இவ்வாற்றால் ஆகலின் இவ்வாற்றானே முயல்க' என்பது குறிப்பெச்சம்.
'வண்ணான் கட்டிப் பாய்ச்சி நிரப்பினால்' என இயையும். 'தான் ஒலிக்கும்' என்க. 'கட்டி' என்பதனை, 'கண்ணாறு மோழை படாமல்' என்பதனோடும் கூட்டி, அத்தொடரை, 'வண்ணான்' என்பதன்பின் வைத்துரைக்க. ஆறு - முறை. இஃது உவமையாகு பெயராய் அது போல்வதொரு முறையைக் குறித்தது. 'நிரப்பினால்' என்பதில், அழுக்கு அறுதற்கு. கட்டுதல் முதலியவை இன்றி அமை யாதனவாதலை விளக்கி நிற்கும் தேற்றேகாரம் தொகுத்தலாயிற்று.
இதனால், கேசரி யோகத்தைப் புரியுமாறெல்லாம் தொகுத் துணர்த்தப்பட்டன. இவற்றால் ஆஞ்ஞை யோகம் ஒன்றே கேசரி யோகமாதல் அறியப்படும். சிங்காதனம் கூறியவழி 'அங்காந்து'

என்றதனை வலியுறுத்தியதே இதனுள் 'அண்ணாந்து பார்க்க' என்றதாம்.

இடக்கை வலக்கை இரண்டையும் மாற்றித்
துதிக்கையால் உண்பார்க்குச் சோரவும் வேண்டா
உறக்கத்தை நீக்கி உணரவல் லார்கட்
கிறக்கவும் வேண்டா இருக்கலு மாமே. ***#785***

இடநாடி. வலநாடி இரண்டையும் விடுத்து, நடு நாடியாகிய சுழுமுனை நாடியால் பிராணனைப் பயன்படுத்திக் கொள்ளும் யோகிகட்கு, உடல், நரை திரை மூப்புக்களால் தளர்தல் இல்லை. இதற்குமேல், உலக மயக்கத்தில் ஆழ்தலை ஒழித்துத் திருவருளை நினைந்திருக்க வல்லவர்க்கு அவர் தம் விருப்பத்திற்கு மாறாய் இறப்பு உண்டாகாது; அவர் விரும்புமளவும் இவ்வுலகில் வாழ்தல் கூடும்.

விளக்கவுரை

பவ யோகிகள் சித்திக் களிப்பாலும், சிவ யோகிகள் திரு வருட் களிப்பாலும் மத யானைபோலக் களித்திருப்பர் என்பதனைக் குறிப்பால் உணர்த்துவார், சுழுமுனை நாடியைத் தும்பிக்கையாக உருவகம் செய்தார். இதனானே, விநாயகர் யோக மூர்த்தி யாதலும் விளங்கும். சுழுமுனையை உருவகித்தற்கு ஏற்ப ஏனை இட நாடி வல நாடிகளை இடக் கை வலக் கைகளாகவும், பிராணனை உணவாகவும் உருவகித்தார். பவ யோகிகள், 'வெற்று யோகந்தானே காய சித்தியைப் பயக்கும்' எனக் கூறுதலை மறுத்தற்குப் பின்னிரண்டு அடிகளைக் கூறினார். 'திருவருள் உணர்வைப் பெறுவார் யோகியருள்ளும் அரியர்' என்றற்கு, 'உண்பார்க்கு' என்றாற்போல 'உணர்வார்க்கு' என்று ஒழியாது, 'உணர வல்லார்கட்கு' என ஓதி யருளினார். மூன்றாம் அடிக்கு இங்கு உரைத்தவாறு உரையாதார்க்கு அவ்வடி வெற்றெனத் தொடுத்தலாய் முடியும் என்க. 'வேண்டா' என்பன இரண்டும், 'நீங்காது வருவன நீங்கும்' என்னும் பொருள் குறித்து நின்றன.
இதனால், கேசரி யோகத்துள் பிராணாயாமத்தது சிறப்பு வகுத்துக் கூறப்பட்டது.

ஆய்ந்துரை செய்யில் அமுதம்நின் றூறிடும்
வாய்ந்துரை செய்யும் வருகின்ற காலத்து
நீந்துரை செய்யில் நிலாமண் டலமதாய்ப்
பாய்ந்துரை செய்தது பாலிக்கு மாறே. ***#786***

யோக நூல்கள் ஆராய்ந்து கூறிய முறையை மேற் கொண்டு பிரத்தியாகாரம் முதலியவற்றைச் செய்தால், உடம்பினின்றே அமுதம் சுரக்கும். சுரக்கும் அவ்வமுதம் நாடிகளிற் பாய்கின்றபோது அதனை யோகி தனது அநுபவமாகப் பிறர்க்கும் சொல்லுவான். இனி, நரை திரை மூப்புப் பிணி சாக்காடுகளை யேயன்றிப் பிறவிக் கடலையும் யோகி

கடக்கின்ற முறையைச் சொல்லுமிடத்து, மேற் சொல்லிய அமுதம் சந்திர மண்டலத்திலிருந்து பாய்ந்து உடலைக் காப்பாற்றுகின்ற அதுவேயாம்.

விளக்கவுரை

'ஆய்ந்துரை செய்யில்' என்பதில் 'உரை' என்பதும், மூன்றாம் அடியில் உள்ள 'நீந்து' என்பதும் முதனிலைத் தொழிற் பெயர்கள். அவை முறையே செயப்படு பொருளையும், கருவியையும் உணர்த்தி நின்றன. 'அது வருகின்ற காலத்து வாய்ந்துரை செய்யும்' எனச் சுட்டுப் பெயர் வருவித்து, முன்னே கூட்டி முடிக்க. 'நீந்து உரை செய்யின் உரை செய்தது நிலாமண்டலமதாய்ப் பாய்ந்து பாலிக்குமாறு' எனக் கொண்டு கூட்டி உரைக்க. நிலாமண்டலத்தில் உள்ளதனை 'நிலாமண்டலம்' என்றே பான்மைப்படுத்து ஓதினார். 'நிலா மண்டலத்ததாய்' என்றே பாடம் ஓதுதலும் ஆம்.

இதனால், 'யோகம் பிறவியைக் கடப்பிக்கும் சிறப்புடையது' என்பது கூறப்பட்டது.

நாவின் நுனியை நடுவே சிவிறிடிற்
சீவனும் அங்கே சிவனும் உறைவிடம்
மூவரும் முப்பத்து மூவரும் தோன்றுவர்
சாவதும் இல்லை சதகோடி ஊனே. *#787*

பிராண வாயு சுழுமுனை வழியே மேல் ஏறும் பொழுது அது மீளக் கீழ்ப் பாயாதபடி நாவின் நுனியால் அண்ணாக் கினை அடுத்துள்ள துளையை அடைத்தால், (அவ்வாயு தலையிலும், நெற்றியிலும் உள்ள நாடிகள் வழியாகப் பரவுதலால்) சீவனும், சிவனும் இருக்கும் இடம் தலையில் உள்ள அவ் ஆயிர இதழ்த் தாமரை யாகவே முடியும். (அஃதாவது, பாச ஞானங்கழல, பசு ஞான பதி ஞானங்கள் விளங்குவனவாம்.) ஆகவே, அப்பொழுது மூவர் காரணக் கடவுளரையும், ஏனை முப்பத்து மூவர் தேவரையும் காணும் ஒளிக்கண் கிடைக்கும். மற்றும் நூறு கோடி யுகங்கள் சென்றாலும் உடம்பு அழியாது நிலைபெற்றிருக்கும்.

விளக்கவுரை

'சிவிறுதல்' என்பது, 'விசிறுதல்' என இக்காலத்து எழுத்து நிலைமாறி வழங்கும். நாவின் நுனியால் உச்சித் துளையை அடைக்க, அதன்வழி மேற்சென்ற பிராணன் மீளாமையும், அதனாற் பெருகும் அமுதம் கீழ்ப் போகாமையும் உளவாதலால் விளைகின்ற பயன்கள் பல என்றவாறு. இதனுள், 'நாவின் நுனியை நடுவில் சிவிறிடில்' எனவும், பின் வருகின்ற திருமந்திரங்களிலும் இவ்வாறு இப் பொருளே படக் கூறுவனவும், மேல் சிங்காதனம் கூறியவழி, 'அங்காந்து' என்றதனுள்ளே உய்த்துணர்ந்து கொள்ளக் கிடந்தன. ஆகவே, இது கேசரி யோகத்தைக் குறிக்கும்

குறிப்பாதல் பெறப்படும். 'அங்கே' என்பதன்பின், 'உளதாம்' என்பதும், 'உறைவிடம்' என்பதன்பின் 'அதுவேயாம்' என்பதும் எஞ்சி நின்றன. ஆக்கங்கள் புதியனவாய் அறியப்படுதலைக் குறிக்கும்.
காரணக் கடவுளர் மூவர் ஆவார், 'அயன், அரி, அரன்' என்போர். முப்பத்து மூவர் ஆவார், 'உருத்திரர், சூரியர், அசுவினி தேவர், வசுக்கள்' என நால்வகைப்பட்டு, முறையே பதினொருவர், பன்னிருவர், இருவர், எண்மர் என்னும் தொகை பெற்று நிற்பவர். இவரை, 'நால்வே றியற்கைப் பதினொரு மூவர்' (திருமுருகாற்றுப்படை, *167*) என்றார் நக்கீர தேவர். இவர் ஒவ்வொருவரும் தம்மைப் போலும் 'கோடி' என்னும் எண்ணுடையோரைச் சுற்றமாகக் கொண்டு நிற்றலால், 'தேவர் முப்பத்து முக்கோடியர்' என்பர். பொதுவே 'மூவரும் முப்பத்து மூவரும் தோன்றுவர்' என்றாராயினும், சிவயோகியர்க்கு அவரது வரம்புபட்ட நிலைகளும் உடன் அகப்பட்டுத் தோன்றும், என்பது கருத்து என்க. இவ் விளக்கங்கள் தத்துவ விளக்கம் ஆதல் அறிக.
இதனால், கேசரி யோகத்தால் பாச பசு பதிகளின் காட்சி கிடைத்தல் கூறப்பட்டது. பாசக் காட்சியைக் கடைக்கண் ஓதினார், பாசங்களது இழிபு பற்றி. இதனுள், நாவின் நுனியை நடுவே சிவிறுதல் சிறப்பாகக் குறிக்கப்பட்டது.

ஊனூறல் பாயும் உயர்வரை உச்சிமேல்
வானூறல் பாயும் வகையறி வாரில்லை
வானூறல் பாயும் வகையறி வாளர்க்குத்
தேனூறல் உண்டு தெளியலு மாமே. ***#788***

குருதி பாய்ந்து ஓடுகின்ற தலையிலிருந்தே தேவ ருலகத்து அமுதம் பாய்கின்ற வகை அறிகின்றவர் உலகில் ஒருவரும் இல்லை. அதனை அறிதல் உடையவர்க்கு அந்தத் தேன்போலும் அமுதத்தை உண்டு, அதன் சிறப்பை உணர்தலும் கூடும்.

விளக்கவுரை

ஊனின்கண் சுரப்பதனை 'ஊன் ஊறல்' என்றும், வானின்கண் குறையாது நிற்பதனை, 'வான் ஊறல்' என்றும் கூறினார். வான் ஊறல் என்பது ஒரு சொல்லாய்ப் பின் உவமையாகு பெயராயிற்று. வரை - மலை; அஃது அதன் உச்சியைக் குறித்தது. 'வரைபோலும் உச்சி' என்க. முதனிலைத் தொழிற் பெயரும் பெய ராதலின், அதனை இரண்டாவதன் பொருள்பட, 'அறிவாளர்க்கு' என ஓதினார். 'தேன்' என்பதும் உவமையாகுபெயர். இதன் சிறப்பு வருகின்ற திருமந்திரத்திற் பெறப்படும்.
இதனால், கேசரி யோகத்தால் அண்டத்து அமுதம் பிண்டத்துட் கிடைத்தல் கூறப்பட்டது.

மேலைஅண் ணாவில் விரைந்திரு காலிடிற்
காலனும் இல்லை கதவும் திறந்திடும்
ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவான் பராநந்தி ஆணையே. *#789*

அண்ணாக்கின் அருகில் உள்ள துளையில், 'இடை கலை, பிங்கலை' என்னும் இரு நாடிகளின் வழியே இயங்கும் பிராணனைப் பொருத்தினால், யம பயம் இல்லை. மேலுலகத்து வாயிற் கதவும் திறக்கும். உளவாய் இருந்த நரை திரைகளும், உலகத்தார் கண்டு வியக்கும் வண்ணம் மாறிவிடும். அதன்பின் யோகி இளமைத் தோற்றத்தையும் உடையவனாவான். இஃது எங்கள் ஆசிரியர்மேல் ஆணையாகச் சொல்லுகின்ற உண்மை.

விளக்கவுரை

'நாக்கில் இரு கால்களை இடுதல் எவ்வாறு' என வியக்கும் முறையில் நயம்பட ஓதினார், இச்செயல் செயற்கரிதாதல் தோன்றுதற்கு. 'இரு காலால் உதைத்தால் கதவு திறந்துகொள்ளும்' என்பதும் ஓர் நயம். 'கதவு' மேல் 'உலகத்தது' என்பது ஏற்புழிக் கோடலால் விளங்கும். மேல் உலகத்தை, அண்டம், பிண்டம் இரண்டிலும் கொள்க. கட்டிளமை யுடையாரையும் 'பாலியர்' என்றல் வழக்கு. இனி, 'குழவிப் பருவத்துத் தோற்றம் உடையவராவர்' என உரைப்பினும் குற்றமின்று. என்னை? தோற்ற மாத்திரமேயன்றி அறிவு முதலியன அப்பருவத்தன ஆகாமையின்.

இதனால், கேசரியோகத்தால் இம்மை மறுமைப் பயன்கள் கிடைத்தல் கூறப்பட்டது. இவற்றுள், இம்மைப் பயன் மேற்கூறிய அமுதத்தின் பயனாதல் அறிக.

நந்தி முதலாக நாமேலே யேறிட்டுச்
சந்தித் திருக்கில் தரணி முழுதாளும்
பந்தித் திருக்கும் பகலோன் வெளியாகச்
சிந்தித் திருப்பவர் தீவினை யாளரே. *#790*

கேசரி யோகத்தைச் சிவபெருமானையே முதல் வனாக உணரும் உணர்வில் நின்று செய்து, அதனானே, அவனைத் தலைப்படுகின்ற யோகி, உலகத்தார் யாவரையும் ஆட்கொள்கின்ற திருவருட் செல்வம் உடையவன் ஆவான். அங்ஙனமாகவும், அவ்யோகத்தை மேற்கொள்ளாது உலகியலில் பலவற்றை ஆக்க நினைத்துக்கொண்டிருப்போர், நல்வினை இல்லாதவரே யாவர்.

விளக்கவுரை

'முதலாக' என்பது, 'முதல்வனாக' எனப் பொருள் தந்து நின்றது. ஆளுதல்

இங்கு, 'அருள் வழியில்' என்பது வெளிப் படை. எனவே, யோகாசாரியனாதல் கூறியவாறாயிற்று. பந்தித்தல் - இருத்தற்குரிய. பகலோன், சூரியகலை. இது பொதுவாக வெளிச் செல்வது ஆதலின், 'பகலோன் வெளியாக' என்றார். சிந்தித்தல், 'கருதுப கோடியும் அல்ல பல' (குறள்) என்றாற்போல, நினைவு மாத் திரமாய்க் கழிவனவற்றை எண்ணுதல். இது பிராணன் வீணேகழிதலை உணராமையைக் குறித்து நின்றது. சூரியன் உதயமான பின்பும், 'எப்பொழுது உதயமாகும்' எனக் கவலையுறுபவர் என்பது ஒரு நயம்.

இதனால், கேசரி யோகத்தால் யோகாசாரியனாதற் சிறப்புக் கிடைத்தல் கூறப்பட்டது.

தீவினை ஆடத் திகைத்தங் கிருந்தவர்
நாவினை நாடின் நமனுக் கிடமில்லை
பாவினை நாடிப் பயனறக் கண்டவர்
தேவினை ஆடிய தீங்கரும் பாமே. ***#791***

முன் செய்த தீவினை வந்து விளையாட, அவ் ஆடலைப் போக்க வழியறியாது நின்றவர், கேசரி யோகத்தைச் செய்யின், அவ் ஆடல் இல்லையாய்விடும். மேலும் அதனானே, அவர்க்குச் சிவனோடு கூடித் திளைத்தற்கு, இனிய கரும்புபோலும் திருவருளும் கிடைப்பதாகும்.

விளக்கவுரை

நா வினை - நாவால் உச்சித் துளையை அடைக்கும் செயல். பா வினை - பரவிய (மிக்க) வினை என்றது முன்னர், 'தீ வினை' எனக் கூறியவற்றை. அவற்றோடு ஆடுதலாவது, அவற்றின் பயன்களில் அழுந்துதுதல். பயன், அவை அற்றொழிதல். இம் மூன்றாம் அடி, மேல், 'திகைத்து அங்கிருந்தவர்' எனக் குறித்தவரைச் சுட்டும் அளவாய் நின்றது. இவ்வடியின் ஈற்றில் நான்காம் உருபு தொகுத்தலாயிற்று. தே - சிவம். இஃது இன் சாரியையோடு இரண்டாம் உருபு ஏற்று நின்றது. 'ஆடிய' என்பது, 'செய்யிய' என்னும் வினையெச்சம். ஆடுதல் - திளைத்தல்; அநுபவித்தல்.

இதனால், கேசரி யோகம் கீழ் நிலையில் உள்ளாரை எளிதில் மேல் ஏற்றுதல் கூறப்பட்டது.

தீங்கரும் பாகவே செய்தொழில் உள்ளவர்
ஆங்கரும் பாக அடையநா ஏறிட்டுக்
கோங்கரும் பாகிய கோணை நிமிர்த்திட
ஊன்கரும் பாகியே ஊனீர் வருமே. ***#792***

மேற்சொல்லிய கரும்பைப் பயிரிட (திருவருளைப் பெற) விரும்புவோர் கேசரி யோகத்தால் குண்டலியை எழுப்பி நிராதாரத்திற் செலுத்துதல் வேண்டும். செலுத்தினால், அருவருக்கத் தக்க இவ்வுடம்பே

ஆனந்தத்தைத் தரும் கரும்பாகி, நிராதாரத்தில் உள்ள திருவருள் வெள்ளம் பாய்ந்தோடி வரும்.

விளக்கவுரை

'தீங் கரும்பாக' என்பதில், ஆதல், விளைதல். ஆக - ஆமாறு. ஆங்கு - அத்தொழிற்கண். 'நாவை அரும்பாக அடைய மேல் நிமிர்த்தி' என உரைக்க. இதில் ஆக்கம் உவமை குறித்து நின்றது. கோங்கின் அரும்பு, உறக்கத்தால் சுருங்கிக் கிடக்கும் பாம்பின் முகத்திற்கு உருவகம். 'அரும்பினதாகிய' என்பதை 'அரும்பாகிய' என்றார். குண்டலியை 'கோண்' என்னும் தமிழ்ச் சொல்லாற் கூறினார். 'ஆகி' என்னும் வினையெச்சம் எண்ணின்கண் வந்தது. 'ஊன் நீர்' என்பதில் ஊன் - உவ்விடம்; மேலிடம்; என்றது நிராதாரத்தை. எனவே, குண்டலி நிமிர்தல் இதுகாறுமாயிற்று. 'நிராதாரத்தில் உள்ள நீர்' எனவே, அது திருவருள் வெள்ளமாயிற்று.
இதனால், கேசரி யோகத்தை நிராதாரமாகச் செய்தவழித் திருவருட் பேறு கிடைத்தல் கூறப்பட்டது.

ஊனீர் வழியாக வுண்ணாவை யேறிட்டுத்
தேனீர் பருகிச் சிவாய நமவென்று
கானீர் வரும்வழி கங்கை தருவிக்கும்
வானீர் வரும்வழி வாய்ந்தறி வீரே. *#793*

மேற்கூறிய திருவருள் வெள்ளம் பெருகுதல் உண்டாகும் முறையிலே கேசரி யோகத்தைச் செய்து, அதனால், தேன்போல இனிய அந்த வெள்ளத்தைப் பருகி, திருவைந்தெழுத்தைச் சிகாரம் முதலாக வைத்து ஓதியிருக்க, காற்றும், நீரும் உலாவும் இடமாகிய இந்த உடம்பு ஆகாய கங்கையை உம்மிடம் வரச்செய்யும். அவ்வாறு அக்கங்கை வரும் வழியை அமைந்துணர்ந்து, முயலுங்கள்.

விளக்கவுரை

'ஊன் நீர்' என்பதற்கு, மேல் உரைத்தவாறே உரைக்க. 'உள் நாவை ஏறிட்டு' என்றது கேசரியோகத்தைக் குறித்தவாறு. இதனை, 'நாவை உள் ஏறிட்டு' என மாற்றி யுரைக்க. 'உள்' 'அண்ணத் துளையினுள்' என்றவாறு. தேன் நீர், இல்பொருள் உருவகம். இஃது அணிநூலில் புறனடையாற் கொள்ளப்படும். 'என்று' என்பதன்பின், 'இருக்க' என ஒருசொல் வருவிக்க. 'வான் நீர்' என்பது, முன்வந்த 'கங்கை' என்றதனைச் சுட்டும் அளவாய் நின்றது. 'ஊன் நீர்' என்றாற் போலப் பொதுப்பட 'நீர்' என்றொழியாது, 'கங்கை' என உயர்த்துக் கூறினமையின், அதனைச் சிவானந்த வெள்ளமாகக் கொள்க.
இதனால், நிராதார கேசரி யோகத்தால் சிவானந்த அனுபவம் உளதாதல்

கூறப்பட்டது.

வாய்ந்தறிந் துள்ளே வழிபாடு செய்தவர்
காய்ந்தறி வாகக் கருணை பொழிந்திடும்
பாய்ந்தறிந் துள்ளே படிக்கத வொன்றிட்டுக்
கூய்ந்தறிந் துள்ளுறை கோயிலுமாமே. *#794*

நிராதார கேசரி யோகம் சிவானந்தத்தைத் தருமாற்றை அறிந்து அதன்கண் நின்றவர், அவ் யோகத்தானே பாசங்களை வென்று அறிவே வடிவாய் இருக்குமாறு சிவன் தனது திருவருளைப் பொழிவான். மேலும், அவரை அவன் தனது வியாபகத்துள் அடக்கிக் காப்பவனும் ஆவான்.

விளக்கவுரை

'வழிபாடு' என்றது மேற்கூறிய நிராதார யோகத் தையே என்பது இயைபுபற்றி இனிது விளங்கும். மூன்றாம் அடியும் அதனை மீள அநுவதித்ததேயாம். 'உள்ளே பாய்ந்து' என முன்னே கூட்டுக. உள் - பிரம ரந்திரம்; அறிதல், நிராதாரத்தில் உள்ள சமனை உன்மனை சத்திகளை. படி - வாயில். வாயிலில் கதவு இடுதல், நாவின் நுனியால் அண்ணத் துளையை அடைத்தல். 'குவிந்து' என்பது எதுகை நோக்கி, 'கூய்ந்து' எனத் திரிக்கப்பட்டது. குவிவது மனம். இறுதியில் உள்ள 'அறிந்து' என்பதனை, 'அறிய' எனத் திரிக்க. உள் உறைபவன் யோகியும், கோயில் ஆகின்றவன் சிவனும் என்க.
இதனால், நிராதார கேசரி யோகம் முதிருந்தோறும் விளையும் பயன்கள் கூறப்பட்டன.

கோயிலின் உள்ளே குடிசெய்து வாழ்பவர்
தாயினும் நல்லார் தரணி முழுதுக்கும்
காயினும் நல்லவர் காய்ந்தவர் தம்முளுந்
தீயினுந் தீயரத் தீவினை யாளர்க்கே. *#795*

சிவனது வியாபகத்துள்ளே ஒடுங்கிப் புறம் போகாது நிற்கும் நிராதார கேசரி யோகிகள், எல்லா உயிரிடத்தும் தாயினும் மிக்க அருளுடையராய் இருப்பர். அறியாமையால் சிலர் அவர்க்கு ஊறு செய்யினும், அவரிடத்தும் அவர் அவ்வருள் நீங்குதல் இலர். ஆயினும், அவர்க்கு ஊறு செய்தவர் அத்தீவினையால் தம்மால் தாம் கேடுறுவர் ஆதலின், அது பற்றி அவர்க்கு அவ்யோகிகள் தீயினும் கொடியராகவும் சொல்லத்தக்கவர்.

விளக்கவுரை

'தீயினும் தீயர்' என்றதனை,
என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். -குறள், *77*

என்றதுபோலக் கொள்க. 'ஈசன் அடியார் இதயம் கலங்கிட' (பா.528) 'தானே படைத்திட வல்லவ னாயிடும்' (பா.670) என்னும் திருமந்திரங் களையும் இங்கு நினைவு கூர்க. 'தம்முளும்' என்னும் உம்மையைப் பிரித்து, 'தீயரும் ஆவர்' எனக் கூட்டி யுரைக்க.
இதனால், கேசரி யோகம் முற்றி நின்றாரது பெருமை கூறப் பட்டது.

தீவினை யாளர்தஞ் சென்னியி லுள்ளவன்
பூவினை யாளர்தம் பொற்பதி யானவன்
பாவினை யாளர்தம் பாவகத் துள்ளவன்
மாவினை யாளர் மதியிலுள் ளானே. **#796**

தன்னை வழிபடும் நல்லூழ் இல்லாதவர்க்கு அவர் தலைக்கு அப்பால் மறைந்தே நிற்கின்றவனும், தன்னை யாதானும் ஒரு குறியில் புறத்தே வைத்து வழிபடுகின்றவர்கட்கு அக்குறியேயாய் நின்று அருள் செய்கின்றவனும், தன்னை அகத்தே ஆதாரங்களில் வைத்துப் பாவிக்கின்றவர்கட்கு அப்பாவனையிலே விளங்கு கின்றவனும் ஆகிய சிவன், பெருஞ்செயலாகிய நிராதார யோகத்தைச் செய்கின்றவர்கட்கு அவர்களது உணர்வு வடிவாய் நிற்கின்றான்.

விளக்கவுரை

'சென்னியில்' என்றது, 'உச்சிக் கூப்பிய கையினர்' (திருமுருகாற்றுப்படை, 185), 'சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்' (தி.8 திருப்பள்ளியெழுச்சி, 4) என்பனபோல 'துவாத சாந்தத்தில்' என்றவாறு. சிவன் யாவரையும் விடாதே தொடர்ந்து நிற்பவன் ஆகலின், அவ்வாறு அவன் நிற்கும் இடம் துவாதசாந்தமே. அவனை வழிபடுவார் புறத்தே பல குறிகளிலும், அகத்தே ஆதார நிரா தாரங்களிலும் அவனைத் தலைப்பட்டுப் பின் துவாதசாந்தத்திலும் தலைப்படுவர். வழிபடாதார் ஓரிடத்தும் அவனைச் சாராமையின், அவர்க்கு அவன் துவாதசாந்தத்தில் தோன்றாது நிற்கும் அவ்வளவிலே யிருப்பன். அதனால், 'தீவினையாளர்தம் சென்னியில் உள்ளவன்' என்றார். பூ வினை - பூவைக்கொண்டு செய்யும் செயல்; வழிபாடு. பொற்பதி - அழகிய தலம்; அது தானியாகு பெயராய் அதன்கண் உள்ள குறியை உணர்த்திற்று. இங்குச் சரியையும் கிரியையுள் அடக்கப் பட்டது. பா வினை - பரவுகின்ற செயல். பரவுவது மனம் என்க. பாவகம் - பாவனை.
இதனால், நிராதார யோகம் முதிரப் பெற்றோர் உண்மை ஞானத்தைப் பெறுதற்குரியராதல் கூறப்பட்டது.

மதியின் எழுங்கதிர் போற்பதி னாறாய்ப்
பதிமனை நூறுநாற் றிருபத்து நாலாய்க்
கதிமனை யுள்ளே கணைகள் பரப்பி
எதிர்மலை யாமல் இருந்தனன் தானே. **#797**

மாவினையாளர் மதியில் உள்ள சிவன், அதில், சந்திரனது கலைகள் போல்வனவாகிய பிராசாத கலைகள் பதினாறாய் நின்றும், புவன பதிகளின் இடமாகிய புவனங்கள் இருநூற்றிருபத்து நான் காய் நின்றும், இயங்கும் இல்லமாகிய உடம்பினுள் வினைகள் ஆகிய பகைவர் அவ்யோகியர் எதிர்சென்று போர்புரியாதவாறு தனது அருளாற்றலாகிய கணைகளைப் பொழிந்து கொண்டு இருக்கின்றான்.

விளக்கவுரை

பிராசாத கலைகள் பலவற்றுள் சிறப்புடையன சோடச கலைகளாதலின் அவற்றையே கூறுவார். அவை யோகியின் உணர் விற்கு உரியவாதல் இனிது விளங்குதற்கு 'மதியின் எழுங்கலை போல' எனச் சிலேடித்துக் கூறினார். 'பதிகள்' என்னாது 'பதி' என்றது பன்மையொருமை மயக்கம், 'ஏவல் இளையர் தாய் வயிறு கரிப்ப' என்பதிற்போல. 'நூறுநூற்' றென்னும் சீரில் குற்றியலுகரம் அலகு பெறாது நின்றது.
அத்துவாக்களுள் புவனங்களே பருப்பொருளாய் இனிது விளங்கலின், அவற்றைக் கூறவே, அவற்றொடு பிரிப்பின்றி நிற்கும் ஏனையவும் கொள்ளப்படும். ஆறு அத்துவாக்களுடன் நால் வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பின் எண்பத்து நான்கு நூறாயிர யோனிபேதங்களாகிய சராசரங்கள் யாவும் நெறியில் பிண்டத்துள்ளே நிற்கும் முறையைப் பிராசாத நூல்கள் இனிது விளங்கக் கூறுதலை அந்நூல்களுட் காண்க; ஈண்டு விரிப்பிற் பெருகும். கதி - நடை.
யோகிகளது உணர்வில் அத்துவாக்கள் பலவும் தானேயாய் நின்று அவர்களது, உலகியல் உணர்வைத் தடுக்கும் முகத்தால் சஞ்சித பிராரத்த கன்மங்களின் வலியைக் கெடுத்தலின், 'கணைகள் பரப்பி - எதிர் மலையாமல் இருந்தனன்' என்றார். மலைதற்கு வினைமுதல் வருவித்துக் கொள்க.
இதனால், கேசரி யோகத்தை நிராதாரமாகச் செய்தலின் மேல், பிராசாதமாகச் செய்தல் பெரும்பயன் உடைத்தாதல் கூறப்பட்டது.

இருந்தனள் சத்தியும் அக்கலை சூழ
இருந்தனள் கன்னியும் அந்நடு வாக
இருந்தனள் மான்ஏர் முகநில வார
இருந்தனள் தானும் அமுதம் பொழிந்தே. ***#798***

மதியின் எழுங்கதிர்போல நிற்கும் பிராசாத கலைகள் பதினாறும் தன்னைச் சூழ்ந்து நிற்க, அவற்றின் நடுவே திரோதான சத்தி, தனது அழகிய முகமாகிய சந்திரன் நிறைந்த ஒளியுடன் விளங்க, அந்தப் பிராசாத கலைகளின் வழி அமுதத்தைப் பொழிந்துகொண்டு, அவற்றோடு தானும் இருக்கின்றாள்.

விளக்கவுரை

'அதனால், அன்ன சிறப்பினதாகிய அந்தப் பிராசாத யோகத்தையை முயலுங்கள்' என்பது குறிப்பெச்சம். சத்தி, கன்னி, மான் என்பன ஒருத்தியையே குறித்தன. அந்நடு - அவற்றின் நடு. 'சூழ நடுவாக இருந்தனள்' என்றது, 'ஆட்சி செய்திருக்கின்றாள்' என்ற வாறு. திரோதான சத்தி தன் நிலைமாறி அருட் சத்தியாகும் நிலை மையைக் குறிக்க, 'முக நிலவு ஆர அமுதம் பொழிந்து இருந்தனள்' என்றும், அஞ்ஞானம், 'மிருத்தியு' எனப்படுதலால், அதனைப் போக்குகின்ற மெய்ஞ்ஞானத்தை 'அமுதம்' என்றும் கூறினார்.
இதனால், மேற்கூறிய அவ்யோகம் அங்ஙனம் பெரும்பயன் உடைத்தாமாறு கூறப்பட்டது.

பொழிந்தவி ரும்வெள்ளி பொன்மன் றடையில்
வழிந்துள் ளிருந்தது வான்முதல் அங்குக்
கழிந்தது போகாமற் காக்கவல் லார்க்குக்
கொழுந்தது வாகும் குணமது தானே. ***#799***

பிராசாத கலைகளின் வழிச் சத்தியால் பொழியப் பட்டு விளங்குகின்ற அந்த ஞானம், அகார கலை முதலிய கலைகளின் அளவில் சுவாதிட்டானம் முதலிய கீழ் இடங்களோடு நில்லாது, அருத்த சந்திர கலை முதலிய கலைகளின் வழி ஆஞ்ஞை முதலிய மேல் இடங்களை அடையுமாயின், அவ்விடத்தே அந்த ஞானத்திற்கு முத லாகிய சிவம் வியாபகப் பொருளாய் விளங்கித் தோன்றும். அதன்பின் அந்த அருத்த சந்திராதி கலைகளின் ஞானங்கள் மறைந்து முன் போலக்கீழே போய்விடாமல் காக்க வல்லவர்கட்கு அந்த ஞானம் முடி நிலை வளர்ச்சியை எய்தும். அதுவே, அந்தக் கலா யோகத்தின் பயனாம்.

விளக்கவுரை

'புறத்துப் பொன்மன்றுபோல, அகத்தே விளங்குவது ஆஞ்ஞை' என்றற்கு அதனை, 'பொன் மன்று' எனக் கூறுகின்றவர், அதனோடு இயைந்து ஓர் நயத்தைத் தோற்றுவித்தற்கு, பிராசாத ஞானத்தை, வெள்ளியாக உருவகம் செய்து கூறினார். 'வெள்ளி' எனப்பட்டது இந்த ஞானமே என்பது, 'பொழிந்தவிரும் வெள்ளி' என மேற்கூறியதனையே அனுவதித்துக் காட்டியதனானே இனிது உணரப்படும். இதனையும், 'பொன் மண்' என்பது பாடம் ஆகாமையையும் உணராது 'வெள்ளி, பொன்' என்றவற்றைச் சுக்கில சோணிதங்களாகக் கொண்டு உரைப்பின், அஃது இவ்விடத்திற்கு யாதோர் இயைபுமின்றிப் போதல் அறிந்து கொள்க.
இதனால், பிராசாத யோகத்தின் முடிநிலையும், அதன் பயனும்

கூறப்பட்டன. குணம் - பயன்.

குணமது வாகிய கோமள வல்லி
மணமது வாக மகிழ்ந்தங் கிருக்கில்
தனமது வாகிய தத்துவ ஞானம்
இனமது வாக இருந்தனன் தானே. ***#800***

சத்தி, பிறர்க்குப் பிறவித் துன்பத்தைத் தருபவள் போலாது வீட்டின்பத்தைத் தருபவளாய் மாறுகின்ற அந்நிலை யிலேயே நிற்கும்படி யோகி மேற்கூறிய மேல் நிலையினின்றும் தாழாது நிற்பானாயின், அச்சத்தியால் நிதிபோலக் கிடைக்கின்ற உண்மை ஞானத்தின் வழியாகச் சிவனும் அவனிடத்தினின்றும் நீங்காதிருப்பான்.

விளக்கவுரை

குணம் - நன்மை. நன்மை யுடையவளை, 'நன்மை' என்றார். மணம் - பொருந்துதல்; அந்நிலையிலே நிற்றல். ஆக - உண்டாகும்படி. 'அங்கே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்த லாயிற்று. 'யோகி' என்பது பொருட்டொடர்பால் வந்தது. இனம் - பொதுத்தன்மை; அஃது இயைபின்மேல் நின்றது. தான், சிவன்; இதனுள் இன எதுகை வந்தது. இதனால், 'பிராசாத யோகத்தின் முடிநிலையை எய்தினார் அந்நிலையிலே உறைத்து நிற்றல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

இருந்த பிராணனும் உள்ளே எழுமா
பரிந்தஇத் தண்டுடன் அண்டம் பரிய
விரிந்தஅப் பூவுடன் மேலெழ வைக்கின்
மலர்ந்தது மண்டலம் வாழலு மாமே. ***#801***

சுவாதிட்டானத்தில் இருந்த பிராண வாயு வெளிப் புறமாக அன்றி உட்புறமாக எழுமாறு திறக்கப்பட்ட சுழுமுனை நாடி வழியே சென்று, ஆஞ்ஞையும் திறக்க, அதற்குமேல் விரிந்து விளங்கு கின்ற ஆயிர இதழ்த் தாமரை மலரின்மேல் பின்னும் மேல் எழும் வகையில் பொருந்தச் செய்தால், ஞான மண்டலமாகிய நிராதாரமும், அதற்குமேல் உள்ள பரமண்டலமாகிய மீதானமும் இனிது விளங்கு வனவாம். அதுவன்றி, நெடுங்காலம் வாழ்தலும் கூடும்.

விளக்கவுரை

'எழுமாறு' என்பது செய்யுளிடத்துக் கடைக் குறைந்து நின்றது. பரிதல் - உடைதல்; திறத்தல். அண்டம் - ஆகாயம். ஆஞ்ஞை முதலாக உள்ளவை ஆகாயமண்டலம் என்க. 'நெடுங்காலம்' என்பது சொல்லெச்சம். இதனால், 'கேசரி யோகத்தை வாசி வகையிற் செய்யினும், பிராசாத வகையிற் செய்யினும் ஆதாரங்களைக் கடந்து, நிராதாரமாகச் செய்தல் நன்று' என்பது கூறப்பட்டது.

மண்டலத் துள்ளே மனஒட்டி யாணத்தைக்
கண்டகத் தங்கே கருதியே கீழ்க்கட்டிப்
பண்டகத் துள்ளே பகலே ஒளியாகக்
குண்டலக் காதனுங் கூத்தொழிந் தானே. *#802*

ஞானமண்டலமாகிய நிராதாரத்தில், மனம் ஒடுங்கும் நிலை உள்ளதை உணர்ந்து, தியானத்தை அவ்விடத்தே செய்து, அதனாலே மனம் கீழ்ப் போகாதவாறு தளைத்து, உடம்பில் எக்காலத்தும் இருள் இன்றி ஒளியே வீசப் பண்ணினால், சிவன், ஆடும் பெருமானாய் அசைந்து கொண்டிராமல், ஏக பாதனாய் அசையாது நிற்பான்.

விளக்கவுரை

மனம் நிராதாரத்திற்செல்லின் ஒடுக்கம் பெறுதலால், அங்குள்ள ஆற்றலை மனத்தை வளைக்கும் ஒட்டியாணமாகக் கூறினார். ஒட்டியாணம் - இடைப்பூண். பண்டம் - உடம்பு. மகரங் கெட்டபின் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'பகல் ஒளியே ஆக' என, ஏகாரத்தை மாற்றி யுரைக்க. கூத்து, இங்கு அதி சூக்கும ஊன நடனம். இது புலனுணர்வைத் தந்து மனத்தை அலைப்பதாகலின், 'அதனை ஒழிவான்' என்றார். 'ஒழிந்தான்' என்பது துணிவுபற்றி வந்த கால வழுவமைதி. 'கூத்து ஒழிந்தான்' எனவே அசையாது நிற்றல் பெறப்பட்டது. அதனால், மனம் ஒடுங்குதல் கூறப்பட்டதாம். உடம்பில் எப்பொழுதும் ஒளியே விளங்குதல், கருவி கரணங்களும் ஞானமயமாய் நிற்றல். இதுவும் அனுவாத முகத்தால் இடையே கூறப்பட்டமை காண்க.
இதனால், நிராதார யோகத்தின் பயன் கூறும் முகத்தால், அதன் சிறப்பிற்குக் காரணம் கூறப்பட்டது.

<u>*5.19.*பரியங்க யோகம்</u>

பூசு வனஎல்லாம் பூசிப் புலர்த்திய
வாச நறுங்குழல் மாலையுஞ் சாத்திய
காசக் குழலி கலவி யொடுங்கலந்
தூசித் துளையுறத் தூங்காது போகமே. *#803*

யோகி போகத்தை விளைவிக்கின்ற ஒப்பனையுடன் வருகின்ற தன் மனைவியோடு கூடினானாயினும், அவனது மனம் பிரமந்திரத்திலே நிற்கும் ஆதலின், அவனுக்கு அதனால் போகம் மிகாது; (யோகமே மிகும்.)

விளக்கவுரை

'புலர்த்திய, சாத்திய' என்னும் பெயரெச்சங்கள் அடுக்கி, 'காசக்குழலி' என்னும் ஒரு பெயர் கொண்டன. காசம் - மயிர்ச்சாந்து. 'கலந்தும்' என உம்மையை மாற்றியுரைக்க. ஊசித் துளை, பிரம ரந்திரம். தூங்குதல்,

மேலிடல்.
இதனால், பரியங்க யோகம் ஆமாறு கூறப்பட்டது.

போகத்தை உன்னவே போகாது வாயுவும்
மோகத்து வெள்ளியும் மீளும் வியாழத்தில்
சூதொத்த மென்முலை யாளும்நற் சூதனுந்
தாதிற் குழைந்து தலைக்கண்ட வாறே. ***#804***

போகத்தில் மனம் சென்றவழிப் பிராணன் சுழு முனை வழியில் செல்லமாட்டாது. காமத்தை விளைக்கின்ற வெண்பாலும் செம்பாலில் வீழ்ந்தொழியும், ஆகவே, துணைவியும், துணைவனும் ஆகிய இருவரும் தங்கள் செம்பால் வெண்பால்களால் மன வலி இழந்து தாழ்தலைப் பின்னர் உணர்ந்து வருந்துவதுதான் போகத்தால் அவர்கள் எய்தும் பயன்.

விளக்கவுரை

'அதனால், போகத்தை மேற்கொள்ளா திருத்தலும், மேற்கொள்ளினும் அதில் அழுந்தாதிருத்தலுமே அறிவுடைமை' என்பது குறிப்பெச்சம். இதனை உணர்த்துதற் பொருட்டே போகத்தின் இயல்பையெல்லாம் விரித்தார் ஆதலின், அது மிகை யாகாமை அறிக. போகத்தில் ஈடுபடினும் அதன் கண் அழுந்தா திருக்கும் நிலை முன்னை மந்திரத்திற் கூறப்பட்டது. சூது - சூதாடு கருவி, சூதன் - அக் கருவியைப் பயன்படுத்துகின்றவன். தலைக்காண்டல் என்பது ஒரு சொல்.
இதன்கண் ஈரடி எதுகை வந்தது.
இதனால், இல்லறத்துள் நிற்கும் யோகிக்குப் பரியங்கயோகம் இன்றியமையாமை கூறப்பட்டது.

கண்டனுங் கண்டியுங் காதல்செய் யோகத்து
மண்டலங் கொண்டிரு பாலும் வெளிநிற்கும்
வண்டியை மேற்கொண்டு வான்நீர் உருட்டிடத்
தண்டொரு காலுந் தளராது அங்கமே. ***#805***

ஒருவர் மற்றொருவர் வரைக்கண் நிற்பவராகிய கணவனும், மனைவியும் அவருள் ஒருவராயினும், இரு வருமாயினும் விரும்புவதாகிய போகத்தின்கண், வல, இட நாசிகளின்வழி ஏறியும், இறங்கியும் சுழன்று வீணாகின்ற சரவோட்டமாகிய தேரினில் ஏறி, அதனையே ஏழாந்தானமாகிய வானத்தில் அமுதமாகிய வெள்ளத்தில் ஓட்டினால், போகமாகிய, பகையை வெல்கின்ற யோகமாகிய படை தனது சதுரங்கம் (நான்கு உறுப்பு - யானை, தேர், குதிரை, காலாள்) ஆகிய பிரத்தியாகாரம் முதலியவை ஒருபோதும் தளர்ச்சியடையா திருக்கும்.

விளக்கவுரை

'இருபால்' எனவும், 'வெளிநிற்கும்' எனவும் கூறியதனால் அவை பிராணாயாமத்தைக் குறியாது சரவோட் டத்தையே குறித்தல் தெளிவு. பிராணாயாமத்தால் ஏழாந் தானத்தில் செல்வோர் வானவூர்தியின்வழி வானத்திற் செல்பவர். 'அவ்வாறன்றிச் சரவோட்டத்தில் நின்றே அதனை அடைதல், தேரில் நின்றே வானத்திற் செல்லுதல் போல்வது' என அதன் அருமை கூறியவாறு. 'தேர் வானத் திற் செல்லுதலேயன்றி, அவ்விடத்து நீரிலும் செல்ல' என மேலும் ஓர் வியப்புத் தோன்றக் கூறினார். 'தண்டு, அங்கம்' என்பன சிலேடை யாய், 'சுழுமுனை, படை' எனவும், 'படையின் உறுப்பு, யோகத்தின் உறுப்பு' எனவும் இவ்விரண்டு பொருள் பயந்தன. 'சுழுமுனை' என்றது அதன்வழிச் செய்யும் யோகத்தினை. போகமும், யோகமும் தம்முள் மாறாவன ஆகலின், அவற்றை முறையே பகையாவும், படையாகவும் உருவகம் செய்தார். 'தண்டு' என்றது குறிப்புருவகம்.

இதனால், பரியங்க யோகத்தின் அருமைப்பாடும் அதன் பயனும் கூறப்பட்டன.

அங்கப் புணர்ச்சியும் ஆகின்ற தத்துவம்
மங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்
பங்கப் படாமற் பரிகரித் துத்தன்னைத்
தங்கிக் கொடுக்கத் தலைவனு மாமே. ***#806***

கணவனும், மனைவியும் மெய்யுறுகின்ற செய் கையும் யோகத்தால் விளைகின்ற மெய்யுணர்வை மழுங்கச் செய்வதே யாம். அச்செய்கையில் வெண்பால் வெளிப்படுகின்ற இன்ப நிலைக் கண் யோகி அது வெளிப்பட்டுக் கெடாதவாறு காத்துக் கொண்ட அச்செயலில் நின்று தன்னைத் தன் மனைவிக்கு இன்பந்தருபவனாகக் கொடுத்தால், தனது யோகம் கெடாமையே யன்றி, யோகிகட்குத் தலைவனாயும் விளங்குவான்,

விளக்கவுரை

யோகியின் உணர்வைத் தாக்குவனவாகிய பசி, பிணி முதலியவற்றுள் இணை விழைச்சும் ஒன்று என்பார். 'அங்கப் புணர்ச் சியும்' என உம்மை கொடுத்து ஓதினார். 'மங்கு' என்னும் முதனிலைத் தொழிற்பெயர், மங்குதற்கு ஏதுவாவதன் மேல் நின்றது. 'புணர்ச்சியுள்' எனப்பாடம் ஓதி, 'தத்துவம் மங்குதலையுடைய தாம்' என உரைத் தலும் ஆம். 'அதில்' என்பது 'அத்தில்' என விரித்தலாயிற்று. 'தம்மை' என்பது பாடம் அன்று. மேலெல்லாம் உணர்வு மாத்திரத்தால் யோகமாமாறு கூறி, இதனுள் உடலாலும் யோகமாமாறு கூறினார். இதனை, வேறோர் இயைபு பற்றி, 'விந்துசயம்' எனப் பின்னர் விரிப்பார், *(தி.10 ஏழாந் தந்திரம்)* விந்து சயம் பெறுதலாவது, விந்து கீழே வீழ்ந்து கெடாது, சுழுமுனைவழி

மேலேசென்று ஒளியாகப் பெறுதல்.
இதனால், விந்து சய பரியங்கயோகம் சிறப்புடைத்தாதல் கூறப்பட்டது.
இதனானே, பரியங்க யோகத்து 'விந்து சயம்' என்பது ஒன்று உண்டு என்பதும் பெறப்பட்டது,

தலைவனு மாயிடுந் தன்வழி ஞானம்
தலைவனு மாயிடுந் தன்வழி போகம்
தலைவனு மாயிடுந் தன்வழி உள்ளே
தலைவனு மாயிடுந் தன்வழி அஞ்சே. ***#807***

பரியங்க யோகத்தால் உணர்வும், விந்துவும், அந்தக் கரணமும், ஐம்பொறியும் தன்வழிப்பட்டு நிற்க, யோகி அவை அனைத்தையும் தன் விருப்பப்படி ஆளும் தலைவன் ஆவான்.

விளக்கவுரை

'ஆயிடும்' நான்கும் முற்றுக்கள். உம்மைகள், ஞானம் முதலியவற்றிற்குத் தலைவனாதலைத் தழுவும் எச்ச உம்மை
இதனால், பரியங்க யோகி போகத்தால் தனது நிலையி னின்றும் தாழாமை கூறப்பட்டது.

அஞ்சு கடிகைமேல் ஆறாங் கடிகையில்
துஞ்சுவ தொன்றத் துணைவி துணைவன்பால்
நெஞ்சு நிறைந்தது வாய்கொளா தென்றது
பஞ்ச கடிகைப் பரியங்க யோகமே. ***#808***

யோகி தன் மனைவியுடன் ஐந்து நாழிகை கலவியில் ஈடுபட்ட பின், மனைவி அவன் பக்கலில் அமைதியாய் உறங்குதல் ஒன்றே பரியங்க யோகத்தின் பயன். அதனால், 'நெஞ்சு நிறைந்தது வாய்கொளாது' என்னும் இன்பமுறை, ஐந்து நாழிகையை எல்லை யாக உடைய பரியங்கயோகத்தின் கண்ணே மிகப் பொருந்துவதாம்.

விளக்கவுரை

'அஞ்சு கடிகைமேல்' எனவும், 'பஞ்ச கடிகை' எனவும் போந்தவற்றால் பரியங்க யோகத்திற்குக் கொள்ளத்தக்க காலம் வரையறுக்கப்பட்டது.
'அத் துணைவி துணைவன் பால் துஞ்சுவது ஒன்று' என மாற்றியுரைக்க.
'ஒன்று' என்பது, ஒன்றாம் பயனைக் குறித்தது. 'ஒன்றே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுக்கப் பட்டது. அதனை விரிக்கவே, 'ஒன்றே பயனாம்' என்பது பொருளாம். 'இஃது ஒன்றே பயன்' என்றதனால், 'துறவு பூண மாட்டாது இல்லறத்தில் நிற்கும் யோகிக்கு இப்பரியங்க யோகம் ஆண் கடன் இறுத்தற் பொருட்டு உடன்படப்பட்டது' என்பது போந்தது. இனி, அவ் ஆண் கடன் இறுத்தலும், விலக்கிய காலத்துக் கூடாமை அறிந்து கொள்க. 'விலக்கப்பட்ட காலங்கள் இவை' என்பதை,

'மிகத் தெளிந்தார் ஓதி விதிநிசித்தம் எல்லாம்
பகற்பொழுது பாரார் பகம்'
-சைவ சமயநெறி, பொது இலக்கணம் *224*
'அட்டமி சட்டி பதினான்கைம் மூன்றினும்
தொட்டிடேல் இல்லவள்வேய்த் தோள்'
-சைவ சமயநெறி, பொது இலக்கணம் *235*
'சென்மமொரு மூன்றும் திருவா திரைஓணம்
என்னுமிவை தம்மினுந்தீண் டேல்'
-சைவ சமயநெறி, பொது இலக்கணம் *226*

என்பன முதலியவற்றான் அறிக. சென்மம் மூன்றாவன:- சென்மம், அனுசென்மம், திரிசென்மம். இவை தான் பிறந்த நட்சத்திரமும், அதனைச் சேர்ந்து எண்ண ஒன்று பத்தாவதும், அவ்வாறே அதற்குப் பத்தாவதுமான நட்சத்திரங்களுமாகும்.

'பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம்' என உலக நூலாகிய வைதிக நூல்கள் பொதுவாகக் கூறும் நால் வகை நிலைகளையே மெய்ந்நூல்களாகிய சைவ நூல்கள், 'சரியை கிரியை, யோகம், ஞானம்' என ஓராற்றால் சிறப்பாகக் கூறும். அதனால், யோகி இல்லறத்தவனாயும், ஞானி துறவறத்தவனாயும் நிற்றலே பெரும் பான்மையாதலின், யோகியைப் பற்றிக் கூறும் இப்பகுதியுள் இப் பரியங்க யோகம் கூறப்படுகின்றது. அகத்தியர், கௌதமர் முதலியோர் போல ஞானியராயும் இல்லறத்தில் நிற்றல் சிறுபான்மை, அவர்க்கும் இப்பரியங்கயோகம் உரித்து என்க. 'யோகம்' என்பதில் ஏழாவது இறுதிக்கண் தொக்கது. நெஞ்சு நிறைந்தது. வாய்கொளாமையாவது, உள்ளத்தில் நிறைந்த இன்பம் வாயால் சொல்ல வாராமை
இதனால், பரியங்க யோகத்திற்கு நாழிகை வரையறை கூறப் பட்டது.

பரியங்க யோகத்துப் பஞ்ச கடிகை
அரியஇவ் யோகம் அடைந்தவர்க் கல்லது
சரிவளை முன்கைச்சி சந்தனக் கொங்கை
உருவித் தழுவ ஒருவர்க்கொண் ணாதே. ***#809***

பரியங்க யோகத்தில் ஐந்து நாழிகையளவு நிலை யின் திரியாது நிற்பதாகிய இவ் அரிய செயலைப் பொருந்தினவர்க் கல்லது வேறொருவனுக்கும் இணை விழைச்சு கொள்ளத் தகாததே.

விளக்கவுரை

பின் வந்த 'யோகம்' 'செயல்' என்னும் அளவாய் நின்றது. சரி வளை, இருபெய ரொட்டு. 'உருவி' என்பதனை, 'உருவ' எனத் திரிக்க. 'வேறு ஒருவற்கும்' என ஒரு சொல் வருவித்தும், உம்மை விரித்தும் உரைக்கப்பட்டது. 'ஒருவன், யோகியருள் ஒருவன்' என்பது

அதிகாரத்தால் விளங்கிற்று. ஒண்ணாததாதல், தவநெறி ஒழியப் பவநெறியாதல் பற்றி.
இதனால், இல்லறத் தவருள் யோகியர் பரியங்க யோகத்தைக் கொள்ளாதவழிப் படும் குற்றம் கூறப்பட்டது.

ஒண்ணாத யோகத்தை உற்றவர் ஆரென்னில்
விண்ணார்ந்த கங்கை விரிசடை வைத்தவன்
பண்ணார் அமுதினைப் பஞ்ச கடிகையில்
எண்ணா மென்றெண்ணி இருந்தார் இருந்ததே. ***#810***

செய்தற்கரிய இப்பரியங்க யோகத்தைப் பொருந் தினவர் எத்தகைய பெருமையுடையவர் என்றால் 'நேரிழையைக் கலந்திருந்தே புலன்கள் ஐந்தும் வென்றவ ' னாயும் *(தி.6 ப.50 பா.3)* 'மங்கை யோடிருந்தே யோகு செய்பவ ' னாயும் *(தி.9 ப.13 பா.11)* உள்ள சிவபெருமானே எனத் தக்க பெருமை யுடையவர். ஏனெனில், தாம் பெற்ற அரிய அமுதத்தை அதனை நுகர்தற்குரிய ஐந்து நாழிகை யளவிலும் 'உளத்தால் நுகரேம்' என உறுதிபூண்டு, முன்பு இருந்த ஏழாந் தானத்திலே இருப்பர் ஆதலால்.

விளக்கவுரை

பண்ணுதல் - தேடிக்கொள்ளுதல், இங்குத் துணைவியை மணந்துகொள்ளுதல். 'ஆரமுது' என்றது வாயூறலை. என்னை*?* இன்பத்தை விரும்புவார்க்கு அது பாலொடு தேன் கலந்தாற் போல *(குறள், 1121)* இனிதாகலின். 'கடிகையினும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. 'இருந்தது' என்பதில் ஏழாவது இறுதிக்கண் தொக்கது. அதன்பின், 'ஆதலால்' என்னும் சொல் லெச்சம் வருவிக்க. பின்னிரண்டு அடிகளால் பரியங்க யோகத் திருத்தலின் அருமை கூறியவாறு.
இதனால், பரியங்க யோகத்தில் நிற்பாரது பெருமை கூறப் பட்டது.

ஏய்ந்த பிராயம் இருபதும் முப்பதும்
வாய்ந்த குழலிக்கும் மன்னற்கும் ஆனந்தம்
ஆய்ந்த குழலியோ டைந்தும் மலர்ந்திடச்
சோர்ந்தனன் சித்தமும் சோர்வில்லை வெள்ளிக்கே. ***#811***

பெண்மகளுக்கும், ஆண்மகனுக்கும் வேட்கை மிக்கிருக்கின்ற அகவையளவு முறையே இருபது ஆண்டும், முப்பது ஆண்டுமாம். முப்பது ஆண்டிற்குமேல் ஆண்மகன் ஐம்புலன்களையும் ஒருங்கு நுகரும் வேட்கை மிகுவனாயின், விந்து சயம் பெற்று நிற்கற்பாலன்.

விளக்கவுரை

'இதுவும் யோகியைக் குறித்ததே' என்பதை மறவற்க. 'சோர்ந்தனன்' என்பதன் பின், 'ஆயினும்' என்பது எஞ்சி நின்றது. 'சித்தமும்' என்ற

உம்மை, சிறப்பு. 'சோர்வில்லையாகுக' என ஆணையாக ஓதற்பாலதனை, 'இல்லை' என இயல்பாக வைத்து ஓதினார். 'பன்னீராட்டைப் பிராயமும், பதினாறாட்டைப் பிராயமும் முறையே பெண்டிர்க்குப் பெண்மையும், ஆடவர்க்கு ஆண்மையும் உளதாம் காலம்' (இறையனார் அகப்பொருள் உரை. தொல்காப்பிய உரைகள்) என்பர் ஆதலின், 'அதுமுதல் எட்டாண்டுக் காலமே பெண்டிர்க்கு வேட்கை மிக்கிருக்கும் காலம்' என்று கூறியவர், 'ஆடவர்க்குப் பதினான்கு ஆண்டுக் காலம் வேட்கை மிக்கிருக்கும்' என்று கூறியதனால், ஆடவர் வழிமுறைக் கிழத்தியரோடும் வேட்கை மிக்கிருத்தல் பெறப்பட்டது. இதனால், பரியங்க யோகி விந்து சயம் பெற முயலுதற்குக் காலம் கூறப்பட்டது.

வெள்ளி யுருகிப்பின் பொன்வழி ஓடாமே
கள்ளத்தட் டானார் கரியிட்டு மூடினார்
கொள்ளி பறியக் குழல்வழி யேசென்று
அள்ளிஉண் ணாவில் அடக்கிவைத் தாரே. *#812*

பரியங்க யோகம் செய்பவர்க்கு வெண்பால் உருகிச் செம்பாலில் வீழாதபடி, அவரது உள்ளத்துள்ளே ஒளிந்து நிற்கும் சிவபெருமான், எல்லாவற்றிற்கும் சாட்சியாய் நிற்கும் தனது திருவருளைக் கொண்டு தடுப்பான். அதுவன்றி, அந்த யோகியர் தமது மூலாக்கினி மூண்டெரியச் சுழுமுனை வழியே சென்று அள்ளி உண்ணும்படி அமுதத்தை அவர் நாவடியில், பொருந்த வைத்தும் உள்ளான்.

விளக்கவுரை

'குழல்' என்பது 'வெளிப்பொருளில் நெருப்பூதும் குழலைக் குறிக்கும். 'உண்ண' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தல் பெற்றது. உண்ணுதற்கும், அடக்குதற்கும் செயப்படுபொருள் மேலெல் லாம் விளங்கிக் கிடந்தது. உண்ண அமுதத்தை வைத்தமை கூறியது, பின் யோகம் முதிர்ந்து பயன் தருமாறு தோன்றுதற்பொருட்டு.
இதனால், 'விந்து சயமும் திருவருளாற் பெறற்பாலது' என்பதும், அச் சயம் யோகம் முற்றுதற்குத் துணையாதலும் கூறப் பட்டன.

வைத்த இருவருந் தம்மின் மகிழ்ந்துடன்
சித்தங் கலங்காது செய்கின்ற ஆனந்தம்
பத்து வகைக்கும் பதினெண் கணத்துக்கும்
வித்தக னாய்நிற்கும் வெங்கதி ரோனே. *#813*

இன்பம் துய்த்தற்குச் சிவனால் அமைக்கப்பட்ட துணைவன், துணைவி என்னும் இருவரும் அவ்வின்பத்தில் திளைப் பினும், உள்ளம் திரியாது நின்றே செய்கின்ற கலவித் தொழிலால் யோகி, பத்துத் திக்கினர்க்கும், பதினெண்கணத்தவர்க்கும் ஞான சூரியனாய் நிற்கும்

திறப்பாடுடையவனாவான்.

விளக்கவுரை

'ஆனந்தம்' என்றது, அதற்கு ஏதுவாய செயலை, 'ஆனந்தத்தால்' என உருபு விரித்து, 'வெங்கதிரோன் ஆவன்' என முடிக்க. 'வித்தகனாய் நிற்கும் வெங்கதிரோனே' என்றாராயினும், 'வெங்கதிரோனாம் வித்தகனாம்' என்றலே கருத்து. நிற்றற்கு, 'யோகி' என்னும் எழுவாய் வருவிக்க.

இதனால், பரியங்க யோகி கலவிக் காலத்திலும் உணர்வு திரியாது நிற்றல் கூறப்பட்டது.

வெங்கதி ருக்கும் சனிக்கும் இடைநின்ற
நங்கையைப் புல்லிய நம்பிக்கோ ரானந்தம்
தங்களிற் பொன்னிடை வெள்ளிதா ழாமுனம்
திங்களிற் செவ்வாய் புதைத்திருந் தாரே. ***#814***

அறிதுயிலுக்கும், அறியாத் துயிலுக்கும் இடையே நிற்கின்ற துணைவியைத் துணைவன் புல்லுமிடத்து இருவரும் அவ்வின்பம் முற்றுங்காறும் திங்கள் போன்ற முகத்தில் உள்ள சிவந்த வாயைப் பொத்தியேயிருந்தாராயினும், துணைவனுக்கு வேறோர் இன்பமும் அவ்விடத்து உளது.

விளக்கவுரை

சூரியன் ஒளிப்பொருளாகலின் ஞானத்திற்கும், சனி'மைம்மீன்' *(புறம். 117)* ஆகலின், அஃது அஞ்ஞானத்திற்கும் உவமை யாயின. அறிதுயில், யோகம். அறியாத் துயில், உறக்கம், புணர்ச்சி இவ் விரண்டிற்கும் இடைநிகழ்வதேயாகலின், அதற்கு உரியவளாகிய துணைவியை, அவ்விடத்து நிற்பவளாகக் கூறினார். 'ஓர் ஆனந்தம்' என்றது, 'வேறோர் ஆனந்தம்' என்னும் குறிப்பினது. அவ்வானந்தம் சிவானந்தமாதல் வெளிப்படை. 'தங்களில் புதைத்திருந்தார்' என இயையும். 'பொன், *(வியாழன்)* வெள்ளி, சனி, வெங்கதிர், திங்கள், செவ்வாய்' என்பன சில சொல் நயங்கள். 'பொன், வெள்ளி' என்ப வற்றின் உட்பொருள் மேல் *(818)* உரைக்கப்பட்டன. 'புதைத்தல்' என்பது இரட்டுற மொழிதலாய், செய்தல், செய்யப்படுதல் என்னும் இரு பொருளையும் தந்தது. 'திங்களிற் செவ்வாய் புதைத்திருந்தாரே' என்பது, 'வளி இடை போழப்படாதவாறு முயங்கினாரே' *(குறள், 1108)* எனப் பொருள் தந்தது. ஏகாரம், தேற்றம். இதன்பின், 'ஆயினும்' என்னும் சொல்லெச்சம் விரித்து, மூன்றாம் அடி முதலாகத் தொடங்கிப் பொருள் உரைக்க.

இதனால், பரியங்க யோகி சிற்றின்பத்திலும் பேரின்பத்தினை இழவாமை கூறப்பட்டது.

திருத்திப் புதனைத் திருத்தல்செய் வார்க்குக்
கருத்தழ காலே கலந்தங் கிருக்கில்
வருத்தமு மில்லையாம் மங்கை பங்கற்கும்
துருத்தியுள் வெள்ளியுஞ் சோரா தெழுமே. *#815*

இன்பத்தில் வேட்கை கொண்ட மனம் கலவியால் நிறைவு பெற்றபின், மேலும் அவ்வேட்கையை உற்றுக் குறைபடாத வாறு திருத்துகின்ற 'சிவன் சத்தி' என்னும் இருவரிடத்தும் தனது மனம் பொலிவோடு பொருந்தி அவ்விடத்தே நிற்கப்பெற்றால் துணைவியை யுடைய யோகிக்கும் அவளையுடைமையால் உலகியல் துன்பமும் உண்டாகாது. விந்துவும், கீழ் விழுவதாகாது, மேல் எழுவது *(ஊர்த்துவ ரேதசு)* ஆகும்.

விளக்கவுரை

'திருத்தி' என்பது, 'நிறைவு' என்னும் பொருட்டாய வடமொழிப் பெயர்ச்சொல். புதன் - புத்தி; மனம். 'யோகி, தன்மனத்தை நல்வழிப்படுத்துவர் சிவனும், சத்தியுமே என உணரின், அவன் மனம் அவரிடத்தே பதிந்து நிற்கும்' என்றற்கு, 'மனத்தைத் திருத்தல் செய்வார்க்கு' என உடம்பொடு புணர்த்து ஓதினார்.

'திருத்தித் திருத்தி வந்தென் சிந்தை
இடங்கொள் கயிலாயா' -தி.*7* ப. *47* பா. *8*

'நெஞ்சினைத் தூய்மை செய்து
நினைக்குமா நினைப்பி யாதே
வஞ்சமே செய்தி யாலோ
வானவர் தலைவ னேநீ' -தி.*4* ப. *23* பா.*9*

என்பவற்றால் இறைவன் தன் அடியவர் மனத்தைத் திருத்துபவனாதல் அறிக. 'செய்வார்க்கு' என ஒருமையாக ஓதாது, 'செய்வார்க்கு' எனச் சத்தியை வேறாக வைத்து ஓதினார், இங்குக் கூறப்படுவன திரோதான சத்தியின் செயலாதல் பற்றி இனி, ஒருமையாகவே பாடம் ஓதுதலும் ஆம். 'செய்வார்க்கு' என்றது உருபு மயக்கம். இவ்வா றெல்லாம் இன்றி, 'செய்வார்' என்பதனை யோகியர்க்கு ஆக்கி, 'அங்கு' என்பதனைப் பண்டறி சுட்டாக வைத்து, 'இருக்கில்' என்பதற்கு, 'இருக்கும் நிலை வாய்க்கப் பெற்றால்' என உரைத்தலும் ஆம். இப்பொருட்கு, 'மங்கை பங்கர்க்கும்' என்பது பாடமாதல் வேண்டும். பிறவாறு கூறாது, யோகியை 'மங்கை பங்கன்' என்றார், 'ஊர்த்துவ ரேதசுடையானாய்ச் சிவனோடு ஒப்பன்' என்றற்கு. 'பங்கன்' என்பதில் உள்ள பங்கு, வாழ்க்கைக் கண்ணது. இவ்வா றாயினும், 'முற்றத் துறந்த யோகி சிறப்புடையன்' என்றற்கு, 'மங்கை பங்கற்கும்' என இழிவு சிறப்பும்மை கொடுத்தார். ஏனை இரண்டு உம்மைகளும் எச்சங்கள். துருத்தி - உடம்பு. இதனால், பரியங்க யோகி உலகியலால் தாக்குண்ணாமை

கூறப்பட்டது.

எழுகின்ற தீயைமுன் னேகொண்டு சென்றால்
மெழுகுரு கும்பரி செய்திடும் மெய்யே
உழுகின்ற தில்லை ஒளியை அறிந்தபின்
விழுகின்ற தில்லை வெளியறி வார்க்கே. *#816*

இம் மந்திரம் ஒட்டணி. ஆகவே, இதன் பொருள் வருமாறு:- மூலாக்கினியைத் தலையளவும் கொண்டு செலுத்தினால், அங்குள்ள அறிவாற்றல் சிவனை அறிந்து அவனிடத்துத் தோயும் அன்பாக மாறுவது உண்மை. இவ்வாற்றால் ஏழாந்தானத்திற் சென்று சத்தியை உணர்ந்தவர்கள். பின் உலகியலில் கிடந்து தடுமாறுதல் இல்லை. அதற்குமேல் நிராதாரத்திற் சென்றவர்கள் சுவாதிட்டானத்தில் நிகழும் காமத்தில் வீழ்தல் இல்லை.

விளக்கவுரை

'மெழுகு எய்திடும்' என இயையும். உருகும் பரிசு - உருகுதலாகிய தன்மை. உழுதல் காலாலும் கையாலும் வழியைத் தடவுதல். வெளி - வான். இது வானில் இயங்கும் முறையைக் குறித்தது. 'இம்முறையை உணர்ந்தோர் நிலத்தில் வீழ்ந்து நடந்து இளைத்தல் இல்லை' என்க. இம்மந்திரத்துள் அடியோடு அடிக் கூட்டத்து நிரையொன் றாசிரியத்தளை சிறுபான்மை மயங்கிற்று.
இதனால், 'வருத்தமும் இல்லை', 'வெள்ளியும் சோராது எழும்' என மேற் கூறப்பட்டவை உவம வாயிலாகத் தெளிவிக்கப் பட்டன.

வெளியை அறிந்து வெளியின் நடுவே
ஒளியை அறிவின் உளிமுறி யாமே
தெளிவை அறிந்து செழுநந்தி யாலே
வெளியை அறிந்தனன் மேலறி யேனே. *#817*

யான் என் ஆசிரியர் நந்தி பெருமானது அருளால் வான மண்டலமாகிய நிராதாரத்தையும், அதில் விளங்குகின்ற அருளொளியையும், அவ்வொளியால் தெளியப்படுகின்ற மெய்ப் பொருளையும் உணர்ந்து, அவ்வுணர்வு கெடாதிருக்க விந்து சயம் பெறும் முறையையும் உணர்ந்தேன். யோகத்தில் இதற்குமேல் அறியத் தக்கது ஒன்று இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

விளக்கவுரை

'அறிந்து' என்பதனை, 'ஒளியை' என்பதற்கும் கூட்டுக. 'அறிவின் உளி' என்பதில் இன் வேண்டா வழிச் சாரியை. 'உளி' என்றது, 'கருவி' என்றவாறு. இஃது உருவக அணி. 'உளி - கூர்மை' எனின், 'அறிவின் உளி' என்பது ஆறாவதன் தொகையாம். 'அறியின்' என்பது பாடம்

அன்று, 'அறிவின் உளி முறியாமே' என்ற தனை, நான்காமடியின் முன்னே கூட்டி உரைக்க. நான்காம் அடியில், 'வெளி' என்பது, 'வெள்ளி' என்பதன் இடைக்குறை அஃது அதனை வசப்படுத்தும் முறையைக் குறித்தது. விந்து சயம் துறவிகளும் கொள் ளத் தக்கதாகலின், நாயனார் அஃது உடையராய் இருந்தார் என்க.

இதனால், விந்து சயம் அநுபவ நிகழ்ச்சியால் கூறும் முகத்தால், பரியங்க யோகி அஃது உடையனாதல் கூறப்பட்டது.

மேலாந் தலத்தில் விரிந்தவர் ஆரென்னில்
மாலாந் திசைமுகன் மாநந்தி யாயவர்
நாலாம் நிலத்தின் நடுவான அப்பொருள்
மேலா வுரைத்தனர் மின்னிடை யாளுக்கே. *#818*

'இல்லறத்தவருள் நிராதார யோகத்தில் நின்று அதனால் வியாபக உணர்வைப் பெற்றிருந்தோர் எவரேனும் உளரோ' எனின், அயன், மால், நந்தி கணங்கள், ஆகிய யாவரும் அத்தகை யோரே. இவரெல்லாம் துரிய மூர்த்தியாகிய சிவனை உணர்ந்து, அவனையே பரம்பொருளாகத் தம் துணைவியருக்கு உணர்த்தினர்.

விளக்கவுரை

எனவே, 'அத் துணைவியரும் தம் துணைவர் செயலை உவந்திருந்தினர்' என்பது போந்தது. 'இல்லறத்தவருள்' என்பது அதிகாரத்தால் வந்தது. 'ஆர்' என்பதன்பின், 'உளர்' என்பது எஞ்சி நின்றது. 'நந்திகள்' என்னாது, 'நந்தி' என்றது பன்மை ஒருமை மயக்கம். 'மாலும் திசைமுகனும் மாநந்தியாயவரும் ஆவர்' என்க. துரியம், இங்கு, யோக துரியம். சாக்கிரம் முதலிய நான்கும் யோகத்தில் முறையே இருதயம், கண்டம், உச்சி நிராதாரம் என்பவை இடமாக நிகழும். 'மின்னிடையாளுக்கு' என்றதும் பன்மை ஒருமை மயக்கம். 'மின்னிடையாருக்கு' என்றே பாடம் ஓதுதலும் ஆம்.

இதனால், உயர்நிலை வானவர் பரியங்க யோகத்தால் அந்நிலை இழவாது நிற்றல் கூறும் முகத்தால், அவ்யோகப் பயன் தெளிவிக்கப்பட்டது.

மின்னிடை யாளும்மின் னாளனுங் கூட்டத்துப்
பொன்னிடை வட்டத்தின் உள்ளே புகப்பெய்து
தன்னொடு தன்னைத் தலைப்பெய்ய வல்லாரேல்
மண்ணிடைப் பல்லூழி வாழலு மாமே. *#819*

துணைவனும், துணைவியும் தாம் கூடுகின்ற காலத்துத் தங்கள் உள்ளத்தை ஆஞ்ஞை முதலிய மேலிடங்களில் பொருந்த வைத்து, அங்கு விளங்குகின்ற சிவனுடன் தங்களை ஒன்று படுத்த வல்லவராயின், இவ்வுலகத்திலும் பல்லூழி காலம் வாழ்தல் கூடும்.

விளக்கவுரை

'மின்னாளன்' என்பதில் மின் - பெண்டு. பொன் இடை வட்டம், பொன்னை உள்ளிட்ட இடம்; பொன்னம் பலத்தை, 'பொன்' என்றார், அதனை உள்ளிட்ட இடம். ஆஞ்ஞை முதலாக மேலே உள்ளவை. புகப் பெய்தலுக்கு, 'உள்ளம்' என்னும் செயப்படு பொருள் வருவிக்க. 'தன்னொடு' என்பதில் தான், சிவன். 'தன்னை' என்பது 'மின்னிடையாள், மின்னாளன்' என்பவற்றோடு தனித்தனி சென்று இயையும். விண்ணிடைப் பல்லூழி வாழ்தல் இயல்பாகவே பெறப்பட்டுக் கிடத்தலின் மண்ணிடைப் பல்லூழி வாழ்தலும்' என் னும் உம்மை இறந்தது தழுவிற்று. இதன்கண் இனவெதுகை வந்தது.
இம்மந்திரத்தினை நாயனார், துணைவி, துணைவன் இருவர்க்கும் ஒப்பக் கூறியதனால், பரியங்க யோகம் பெண்டிர்க்கும் உரித்தாதல் பெறப்பட்டது. இதனால், சிவநெறி, மெய்ந்நெறியை இருபாலார்க்கும் ஒப்ப உரித்தாகக் கூறுதல் அறியப்படும். காரைக்கால் அம்மையார் தாம் கணவனோடு வாழ்ந்த காலத்தில் தம் உடம்பை அவனுக்காகவே தசைப் பொதியாகச் சுமந்து நின்றமை *தி.12* திருத் தொண்டர் புராணத்தால் அறியப்படுதலின், அக்காலத்து அவர் பரியங்க யோகம் உடையராய் இருந்தமை உய்த்துணர்ந்து கொள்ளப் படும்.
இதனால், பரியங்க யோகம் காயசித்தியையும் தருதல் கூறப்பட்டது.

வாங்க இறுதலை வாங்கலில் வாங்கியே
வீங்க வலிக்கும் விரகறி வாரில்லை
வீங்க வலிக்கும் விரகறி வாளர் தாம்
ஓங்கிய தம்மை உதம்பண்ணி னாரே. ***#820***

துணைவி வாங்கிக் கொள்ளத் துணைவனிட மிருந்து நீங்குவதாகிய விந்துவை அங்ஙனம் நீங்காமல் உள்வாங்கிக் கொள்ளும் முறையில் வாங்கி, பின் அஃது உடம்பினுள் ஆற்றலாய் மிகுமாறு உறுதிப்படுத்திக் கொள்ளும் வழியை அறிகின்றவர் ஒருவரும் இல்லை. *('அரியர்' - என்றபடி.)* இனி, அவ்வழியை அறிந்தவர் யோகத்தில் மிக்கு விளங்கும் தம்மைப் போகத்திற்கும் தகுதியுடையவராகச் செய்து கொண்டவராவர்.

விளக்கவுரை

முதற்கண் நின்ற வாங்குதலுக்கு, 'துணைவி' என்னும் எழுவாய் வருவிக்க. இறுதல் - அழிதல்; அஃது இங்கு, நீங்குதலைக் குறித்தது. 'வாங்கல்' என்பது அதற்குரிய முறையை உணர்த்திற்று. முதற் சீரினையும் 'வாங்கல்' என்றே பாடம் ஓதின், 'வாங்கலால் ' என உருபு விரிக்க. 'வலித்தல் - திட்பம் செய்தல். 'யுக்தம்' என்னும் ஆரியச் சொல்லின் திரிபாகிய 'உத்தம்' என்பது இடைக் குறைந்து நின்றது. இது

வருகின்ற திருமந்திரத்திற்கும் ஆம். 'போகத்திற்கு' என்பது அதிகாரத்தால் வந்தது. உத்தராவாரை. 'உத்தம்' என்றது. ஆகுபெயர். 'போகத்திற்குத் தகுதி' என்றது, அதனால், ஆற்றலும், மனப் பண்பும் கெடாமையை. மேலேயும், *(பா.815)* அரிய இவ்யோகம் அடைந்தவர்க்கல்லது ... ... ஒருவற்கு ஓண்ணாதே' எனக் கூறினார். இம்மந்திரம் பலவிடத்துப் பாடம் திரிந்துள்ளது.
இதனால், பரியங்க யோகத்துள் விந்து சயத்துடன் நிற்றலின் அருமை கூறப்பட்டது.

உதமறிந் தங்கே ஒருசுழிப் பட்டால்
கதமறிந் தங்கே கபாலங் கறுக்கும்
இதமறிந் தென்றும் இருப்பாள் ஒருத்தி
பதமறிந் தும்முளே பார்கடிந் தாளே. ***#821***

போகத்தை நுகர்தற்குத் தகுதியான வழியை அறிந்து அவ்வெள்ளத்தில் மூழ்கினால், அவ்வழி உம்மால் நன்கு பயிலப்பட்டு அந்நிலையிற்றானே நரை வாராதொழியும். எக் காலத்தும் உமது நன்மையையே நினைத்திருப்பவளாகிய சத்தியும், உமது பக்குவ காலத்தை அறிந்து உங்கள் உணர்வில் உலகியலைப் போக்கி யருள்வாள்.

விளக்கவுரை

'உதம்' (உத்தம் என்றது, அதற்குரிய வழியை. கதம் - அடையப்பட்டது. அது, முதற்கண் கூறிய வழியேயாம். அறிந்து - அறியப்பட்டு. இது, காரணப் பொருட்டாய்ப் பின் வரும் கபாலம் கறுத்தற்கு ஏதுவாதலை உணர்த்திற்று. கபாலம், ஆகுபெயர். பார் - உலகம், என்றது உலகியலை. இறுதிக்கண் இங்ஙனம் பொதுப் படக் கூறவே, உலகியலுள் தலையாயதான காம இன்பம் பற்றிப் 'பரியங்க யோகம்' எனக் கூறப்பட்டதாயினும், அந்நிலை யோகியர்க்குப் பிற உலகியலிலும் உளதாதல் குறிக்கப்பட்டதாம்.
இதனால், பரியங்க யோகியர்க்கு நல்வாழ்வும், வீடு பேறும் கேடுறாமை கூறப்பட்டது. 'இவை அனைத்திற்கும் திருவருளே காரணம்' என அறிவுறுத்தப்பட்டவாற்றைக் கடைப்பிடிக்க.

பாரில்லை நீரில்லை பங்கயம் ஒன்றுண்டு
தாரில்லை வேரில்லை தாமரை பூத்தது
ஊரில்லை காணும் ஒளியது ஒன்றுண்டு
கீழில்லை மேலில்லை கேள்வியிற் பூவே. ***#822***

இது பிசிச் செய்யுள் ஆதலின், இதனை விடுத்துக் காணுமாறு:- பங்கயம் - தாமரைக் கொடி. 'இது, மண்ணும், தண்ணீரும் இல்லாமலே முளைத்து வளர்ந்தது' என்றதனால், சுழுமுனைத் தண்டைக் குறித்தது. 'அக்கொடிக்குச் சல்லிவேர், ஆணிவேர் முதலியன இல்லாமலே பூப்

பூத்தது' என்றதனால், அஃது அத்தண்டு ஆதார பங்கயங்களை உடைத்தாதலைக் குறித்தது. தார் - இழை போன்றவை. 'ஊர்' என்றது ஊரின்கண் வாழ்வாரை. 'அவர் (ஏற்றுவார்) ஒருவரும் இல்லாமலே காணப்படுகின்ற விளக்கு ஒன்று உண்டு' என்றதனால், அஃது, அவ்வாதார நிராதாரங்களில் ஏற்ற பெற்றியால் விளங்கும் அருளுருவத்தைக் குறித்தது. பூ - நிலம்; உலகம் 'காட்சிக்கு வாராது, ஆசிரியர் தம் அருள் மொழிக் கேள்வி யால் அறியப்படுகின்ற உலகம்' என்றதனால், அஃது அண்டத்தைப் போலவே பிண்டத்திற்குக் கொள்ளப்படும் உலகங்களைக் குறித்தது. கீழ்மேல் இல்லை என்றதனால் அவை பாவனைப் பொருளாதல் குறிக்கப்பட்டது. 'பூவிற்கு' என்னும் நான்கன் உருபு தொகுத்தல் ஆயிற்று.

விளக்கவுரை

'யோக நெறியில் உள்ள பொருள்கள் இத்துணை வியப்புடையன' என்றவாறு. இதனை இவ்விடத்திற் கூறினார். 'மான் தோல், புலித்தோல, தருப்பை முதலிய ஆசனங்களின் மேல் இருத்தலும் காடு, மலை, முழை முதலிய இடங்களில் தனித்திருத்தலும் போல்வன இல்லாமல், கட்டிலிற் பஞ்சணையின் மேல் துணைவியுடன் கிடந்தும் முனிவராய் நிற்கும் வியத்தகு நிலையும் யோகத்தால் கூடும் என்பது தோன்றுதற்கு. இதனால், 'பரியங்க யோகம் வியப்புடையதொன்று' என்பது கூறப்பட்டது.

5.20.அமுரி தாரணை

உடலிற் கிடந்த உறுதிக் குடி நீர்
கடலிற் சிறுகிணற் றேற்றமிட் டாலொக்கும்
உடலில் ஒருவழி ஒன்றுக் கிறைக்கில்
நடலைப் படாதுயிர் நாட்டலு மாமே. *#823*

உடம்பில் இயல்பிலே பொருந்தியுள்ள ஆற்றல் மிக்க, குடிக்கத் தகும் நீர், கடலில் சிறிய கிணற்றுக்கு இடப்படும் ஏற்றத்தை இட்டு இறைத்துக் கொள்ளுதலோடு ஒத்திருக்கும். (அஃதாவது, 'மிகுதியாய் வெளிப் போகும் சிறுநீரில் சிறிதளவு உளதாகும்' என்பதாம்) அதனை உடலினின்று வெளிப்போதும் முன்பே வேறொரு வழியால் அவ்வுடலுக்கே ஆகுமாறு பாய்ச்சினால், உயிர் துன்பப் படாது நெடுங்காலம் நிற்கும்படி நிறுத்துதல் கூடும்.

விளக்கவுரை

'அமுரி' என்றாயினும், 'நீர்' என்றாயினும் ஒரு பெயர்ச் சொல்லால் ஓதின், 'அது சிறுநீரே போலும்' என மலைய வரினும் வரும் என்னும் கருத்தால், அங்ஙனம் மலையாமைப் பொருட்டு, 'உறுதிக் குடி நீர்' எனத்

தொடர்மொழியால் பொருள் இனிது விளங்க ஓதினார். சிறுநீர் தீப்பொருளாய்க் கழிக்கப்படுவது ஆதலின், அஃது உறுதியைத் தருவதாய்க் குடிக்கத் தக்கதாகாமை வெளிப்படை.
'உடலில் இறைக்கில்' என்றது, 'உடலினுள் இருக்கும் பொழுதே இறைத்தால்' என்றவாறு. வேறொரு வழி, சுழுமுனைத் தண்டு; உடலில் உள்ள பல நாடிகளும் இதனைச் சுற்றிக்கிடத்தலால், அவற்றின்வழி அமுரியைப் பிராண இயக்கத்தால் உடல் எங்கும் செல்லுமாறு பாய்ச்சுதல் கூடும் என்க. யோக முயற்சி இல்லாதார்க்குப் பிராணன் அபானனாதல் பெரும்பான்மையாய்க் கீழ்ப்போய் ஒழிய, யோக முயற்சி உடையார்க்கு அஃது அவ்வாறாகாமல் சுழுமுனைவழிச் சென்று உடற்குப் பயன் தருதல்போல, அமுரியும் பிறர்க்குச் சிறுநீரோடு ஒன்றாய் வெளிப்போந்து ஒழிய, யோகியர்க்கு அவ்வாறாகாமல் உடற்கண் சென்று பயன்படுவதாம். அதனை அங்ஙனம் பயன்படச் செய்யும் முறையையே, 'உடலில் ஒருவழி ஒன்றுக்கு இறைக்கில்' என்றார். ஒன்று - ஒன்றாய் நிற்கும் உடல். நடலை - துன்பம். 'உயிர் நாட்டலும் ஆம்' என்றது, அமுரியின் பயன் கூறும் முகத்தால் பெயர்க் காரணத்தை விளக்கியவாறு.
இதனால், 'அமுரியாவது இது' என்பதும், அதனைத் தரிக்கும் முறையும், அதன் பயனும் கூறப்பட்டன.

தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்
ஒளிதரும் ஓராண்டில் ஊனமொன் றில்லை
வளியுறும் எட்டில் மனமும் ஒடுங்கும்
களிதரும் காயம் கனகம தாமே. ***#824***

யோக முறையால் வடித்துக்கொள்ளப்படுதலால் 'சிவ நீர்' எனச் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற இந்த அமுரியைப் பருகுதலை மேற்கொண்டால், ஓராண்டுக் காலத்தில் அறிவு மிக விளக்கம் பெறும். உடலுக்கு உள்ள நோய், இளைப்பு முதலிய குறைகள் நீங்கும். எட்டாண்டில் வாசி யோகம் கைவரும். அதனால், மன ஒருமை உளதாகும். அதனால் அமைதியான ஓர் இன்பம் தோன்றும். உடம்பு பொன் போல அழகு பெற்று விளங்கும்.

விளக்கவுரை

'தெளி தரும்' என்றது, 'தெளித்துத் தரப்படும்' என்னும் பொருளது. இதனானும், சிறுநீரே அமுரி அல்லது சிவ நீர் ஆகாமை அறியப்படும். 'பருகில்' எனப் பொதுவகையாற் கூறினாரேனும், மேல், 'உடலில் ஒருவழி ஒன்றுக்கு இறைக்கில்' என்றதே பொருளாம். 'ஓராண்டில் எட்டில்' என்பவற்றை அவ்வவ் அடியின் முதற்கண் வைத்து உரைக்க. இதனால், அமுரி தாரணையின் பயன்கள் பலவும் எடுத்துக்

கூறப்பட்டன.

நூறும் மிளகு நுகரும் சிவத்தின் நீர்
மாறும் இதற்கு மருந்தில்லை மாந்தர்காள்
தேறி இதனைத் தெளிஉச்சி கப்பிடின்
மாறும் இதற்கு மறுமயி ராமே. ***#825***

யோகியர்களே, நீவிர் பொடி செய்த மிளகை உண்ணுங்கள்; அதனால், சிறுநீர் சிவநீராய் மாறும். அவ்வாறு மாறுவதற்கு மருந்து ஒன்றும் வேண்டுவதில்லை. மிளகுப் பொடியின் ஆற்றலைத் தெளிந்து அறிவிற்கு நிலைக்களமான உச்சியில் அதனை அப்பினாலும் அவ்வாறாம். இன்னும் இதனாலே நரையும் மாறும்.

விளக்கவுரை

நூறுதல் - பொடித்தல். 'நூறு மிளகு' எனக் கொண்டு, எண் வரையறையாக உரைத்தல் கூடாமை அறிக. நுகரும், பன்மை ஏவல். 'மாந்தர்கள்' என்பது பாடமாக ஓதின், இதனை, 'நுகர' எனச் செயவென் எச்சமாக ஓதுக. 'நீர் சிவத்தின் மாறும்' என மாற்றி யுரைக்க. சிவத்தின் - சிவமாக. 'மருந்தில்லை' என்றதனால் இங்குக் கூறப்பட்டவை யோகியர்தம் ஒழுக்கப் பகுதியாய், அமுரி தாரணை யாய யோகத்திற்குத் துணையாவனவாயின. கப்புதல் - மூடுதல் 'கப்பஇடின்' என்பதில் அகரமும், 'கப்பிடினும்' என்னும் எச்ச உம்மையும் தொகுத்தல் பெற்றன. 'உச்சிக்கு அப்பிடின்' எனப் பாடம் ஓதி, 'உச்சிக்கு என்பது உருபு மயக்கம்' என்றலும் ஆம். 'இதற்கு' என்பது உருபு மயக்கம். இதனால், அமுரி தாரணைக்குத் துணையாவன சில கூறப்பட்டன.

கரையரு கேநின்ற கானல் உவரி
வரைவரை என்பர் மதியிலா மாந்தர்
நுரைதிரை நீக்கி நுகரவல் லார்க்கு
நரைதிரை மாறும் நமனுமங் கில்லையே.

அளக நன்னுத லாயோ ரதிசயங்
களவு காயங் கலந்தஇந் நீரிலே
மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
இளகும் மேனி இருளுங் கபாலமே. ***#826***

உண்ணத் தகுவதனையும், தகாததனையும் அறிய மாட்டாத சிலர், தம்வழி நிற்பாரை, கடற்கரையின் அருகில் கானலிலே உள்ள உப்பங்கழியின் நீரை அப்படியே முகந்து உண்ணுமாறு பணிப்பர். அந்நீரை நுரையையும், பிற மாசுகளையும் நீக்கி உண்ண வல்லவர்க்கே பயன் உளதாம்.

விளக்கவுரை

இது ஒட்டணி. இதனுள் 'உவரி' என்பது அடை பொதுவாக்கி மொழிதலும், ஈற்றடி அடை விரவத்தொடுத்தலும் ஆம். *(தண்டியலங்காரம், 51)* இதனாற் பெறப்படும் பொருள் வருமாறு:- சுவாதிட்டானத்திற்கு அருகில் நின்று குறிவழியே வெளிப்போதுகின்ற சிறு நீரையே சிலர் 'அமுரி' எனச் சொல்லிப் பிறரை உண்பிக்கின்றனர்; அஃது அறியாமைப்பாலது. அச் சிறுநீரைக் குற்றம் களையும் முறையறிந்து களைந்து உண்ண வல்லவர்க்கே அமுரியால் விளையும் பயன் உளதாகும்.

கானல் - கடற்கரையை அடுத்த இடம். 'கானல்' எனவே, கரை, கடற்கரையாயிற்று. 'உவரி' என்பது காரணக் குறியாய் உப்பங்கழி நீரைக் குறித்துச் சிறுநீர் மேலும் நோக்குடைத்தாயிற்று. வரைதல் - கொள்ளுதல். 'வரை வரை' என ஏவல் முற்று, வலியுறுத்தற்கண் அடுக்கி வந்தது. இது பன்மை ஒருமை மயக்கம். முதற்கண் நின்ற திரை, அலை. அஃது ஆகுபெயராய் அதன்மேல் மிதக்கும் மாசுகளைக் குறித்தது. 'நரை திரை மாறும்' என்றது, 'மூப்பு நீங்கி இளமை உண்டாகும்' எனவும், 'நமனும் அங்கு இல்லை' என்றது கூற்றுவன் வருதலும் அவரிடம் இல்லை எனவும் கூறியவாறு. 'நமன்' என்பது அவனது வருகைமேல் நின்ற ஆகுபெயர். வரைதலைத் தள்ளுதலாக்கி, அதற்கியைய உரைப்பாரும் உளர்.

இதனால், 'அமுரி' என்பதனை உள்ளவாறு உணராத வழிப் பயன் இன்மை கூறப்பட்டது.

இதன்பின், பதிப்புக்களில் காணப்படும் 'அளக நன்னு தலாய்' என்னும் செய்யுள் நாயனார் திருமொழி அன்று என்பது, யாப்பமைதியானே எளிதின் விளங்கும். அன்றியும், மகடூஉ முன்னிலையாக நாயனார் மந்திரம் செய்யாமையும் நோக்கற்பாற்று. யாப்பமைதியைச் சீர்செய்தற்கு நிகழ்ந்த சிறு முயற்சி, 'அழகிய நன்னுத லாயோ ரதிசயம்' எனவும், 'இளகிடும் மேனி' எனவும் காணப்படுகின்ற பாட வேற்றுமைகளால் அறியப்படுகின்றது.

வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்றும் நந்தி அருள்செய்தான்
ஆதி மருந்தென் றறிவார் அகலிடஞ்
சோதி மருந்திது சொல்லவொண் ணாதே. ***#827***

அமுரியை, 'வீரத்தைத் தரும் மருந்து' என்றும், 'தேவர் உண்கின்ற அமுதம்' என்றும், 'மகளிரோடு மெலிவின்றிக் கூடுதற்குரிய மருந்து' என்றும் எங்கள் நந்தி பெருமான் அருளிச் செய்தார். 'இஃது இறைவனே மக்கட்குப் படைத்துத்தந்த இயற்கை மருந்து' என்று குருமொழியால்

அறிகின்றவர்கள், இதன் பயனை இவ்வுலகத்தில் கண்கூடாகக் காணும் மருந்து இது. இதன் பெருமையைப் பொதுமக்கட்குச் சொல்லுதல் கூடாது.

விளக்கவுரை

'சொன்னால் இதனைப் பெறும் முறை அறியாமையால் சிறுநீரையே உண்பவராவர்' என்பது கருத்து. நாரி, பன்மை ஒருமை மயக்கம். ஆதி - இறைவன். சோதி மருந்து, வினைத்தொகை. இதன்கண் உயிரெதுகை வந்தது.

இதனால், அமுரியின் சிறப்பு விரித்துக் கூறப்பட்டது.

*5.21.*சந்திரயோகம்

எய்தும் மதிக்கலை சூக்கத்தில் ஏறியே
எய்துவ தூலம் இருவகைப் பக்கத்துள்
எய்துங் கலைபோல ஏறி இறங்குமாம்
துய்யது சூக்கத்துத் தூலத்த காயமே. *#828*

சந்திரனிடத்துப் பொருந்தியுள்ள கலைகள் நுண்மை யினின்று வளர்ந்து பருமையாக நிறைவெய்தும், (பின் பருமை யினின்றும் தேய்ந்து நுண்மையாக ஒடுங்கும்) வளர்பிறை தேய்பிறை என்னும் இருவகைப் பக்கத்திலும் அவை அவ்வாறாதல் போல உடம்பில் உள்ள சந்திர மண்டலத்தின் ஆற்றல்களும் நுண்மை யினின்றும் வளர்ந்து பருவுடம்பில் நிறைதலும், பருவுடம்பினின்றும் தேய்ந்து நுண்ணுடம்பில் ஒடுங்குதலும் உடையவாம்.

விளக்கவுரை

'சூக்குமம்' என்பது, 'சூக்கம்' என மருவிற்று. உவமையில் வளர்தல் கூறியதனானே தேய்தலும் பெறப்பட்டது. அஃது, 'இருவகைப் பக்கத்துள்' என்பதனானும் அறியப்படும் 'அவ்வாறு எய்தும் கலைபோல' என்க. ஆம், அசைநிலை. 'துய்யது' என்றது, சந்திரமண்டலத்தை, என்னை? சந்திரனோடு ஒப்பிக்கத் தக்கது அதுவேயாகலின், உவமையிற்போலப் பொருளிலும் 'சூக்கத்தில், தூலத்தில்' என நீக்கப் பொருட்கண் வந்த ஐந்தாம் உருபு விரிக்க. 'காயம்' என்பதில் ஏழாவது இறுதிக்கண் தொக்கது. 'துய்யது காயத்தில் சூக்கத்தினின்றும் தூலத்தினின்றும் ஏறி இறங்கும்' எனக் கூட்டி உரைக்க. சந்திர மண்டலத்தின் ஆற்றலைத் தனக்கேற்ற வகையில் பெற்ற நுண்ணுடம்பையே நாயனார்மேல் (பா.625) 'பரகாயம்' எனக் கூறியிருத்தல் இங்கு நினைவு கூரத்தக்கது.

இதனால், பிண்டத்தில் உள்ள சந்திர மண்டலம் அண்டத்தில் உள்ள சந்திர மண்டலத்தோடு ஒத்ததாதல் கூறப்பட்டது.

ஆகின்ற சந்திரன் சூரியன் அங்கியுள்
ஆகின்ற ஈரெட்டொ டாறிரண் டீரைந்துள்
ஏகின்ற அக்கலை யெல்லாம் இடைவழி
ஆகின்ற யோகி அறிந்த அறிவே. *#829*

யோகத்திற்கு உரியனவாகின்ற சந்திர கலை, சூரிய கலை, அக்கினி கலை என்பவை முறையே பதினாறு, பன்னிரண்டு, பத்து என்னும் எண்ணிக்கையை உடையன. இயங்குகின்ற அவ் எல்லாக் கலைகளும் யோகி தனது அறிவால் அறிந்து அமைக்க அமைவனவே; அண்டத்தில் உள்ள சந்திரன் முதலியவற்றின் கலைகள் போல இயல்பாக அமைந்தன அல்ல.

விளக்கவுரை

யோகியால் அறிந்து அமைக்கப்படுதலாவது, ஒரு முறை பூரித்துக் கும்பித்து இரேசித்து முடிப்பது 'ஒருகலை' எனப் படுதல். 'உள்' என்னும் முதனிலை, 'உள்ளன' எனப் பொருள் தந்தது. இடைவழி - நடு நாடி. 'இடைவழி ஆகின்ற யோகி' என்றது, யோகியின் தன்மையை விதந்தவாறு. யோகத்தில் கொள்ளப்படும் 'சந்திரன், சூரியன், அக்கினி' என்பன, இடை பிங்கலை சுழுமுனை நாடிகளின்வழி இயங்கும் பிராண வாயுக்கள் என்பது மேலே பலவிடத்தும் பெறப்பட்டது. உலகச் சந்திரனுக்குக் கலைகள் பதினாறாதலும், சூரியர் பன்னிருவர் எனப் படுதலும் ஆகிய ஒற்றுமைபற்றி இங்குச் சொல்லப்படும் கலைகளும் இயல்பாய் அமைந்தவை போலும் என மலையாமைப் பொருட்டுப் பின்னிரண்டு அடிகளைக் கூறினார்.
இதனால், யோகத்திற்குரிய சந்திரன் முதலிய மூன்றற்கும் உரியகலை யளவுகள் கூறப்பட்டன.

ஆறாற தாங்கலை ஆதித்தன் சந்திரன்
நாறா நலங்கிளர் ஞாலங் கவர்கொளப்
பேறாங் கலைமுற்றும் பேருங்கால் ஈரெட்டும்
மாறாக் கதிர்கொள்ளும் மற்றங்கி கூடவே. *#830*

சூரியன் பன்னிரண்டு கலைகளையே உடைய தாயினும் அது சந்திரனது பதினாறு கலைகளையும், அதற்கு ஏதுவாய் நிற்கும் பதினாறு மாத்திரைப் பிராண வாயுவையும் உட்கொள்ளும் ஆற்றல் படைத்தது. அஃது அன்னதாவது, தான் அக்கினி கலையோடு சேரும்பொழுதேயாம்.

விளக்கவுரை

எனவே, 'சந்திரனிலும் சூரியன் ஆற்றல் மிக்கது' என்றவாறு. இஃது உலகியல்பானே அறியப்படுமாயினும், 'யோக முறையில் வேறாங்கொல்லோ' என ஐயுற நிற்குமாதலின், அது நீக்க வேண்டி

எடுத்தோதினார். அன்றியும், ஒப்பினாற் பெற்ற பெயர் உடைமை பற்றியே உவமைக்கு உள்ளன வெல்லாம் பொருட்கும் கொள்ளல்வேண்டும் என்னும் கட்டளை இன்மையால் 'இது கொள்க' என்றற்கும் ஓதினார். இனி 'சூரியன் அக்கினியோடு சேர்ந்தே ஆற்றல் மிக்கு நிற்கும்' என்பது இங்கு இன்றியமையாது ஓதற்பால தாயினமையும் அறிக.

'ஆறாறு' என்பதனை 'ஆறோடு கூடிய ஆறு' என விரிக்க. 'ஆதித்தன் ஆறாறதாயினும் கொள்ளும்' என ஒருசொல் வருவித்து இயைக்க. 'சந்திரன் நாறாமலும், ஞாலம் கவர் கொளவும் கதிர் கலை களையும், காலினையும் கொள்ளும்' எனக் கூட்டி வினை முடிவு செய்க. நாறுதல் - தோன்றுதல். கவர் - கவர்த்தல்; ஐயுறல். அஃது இங்கு மருட்கை எய்தலின் மேற்று. பேறாங் கலை - சந்திரனுக்கு இயல்பாய் உள்ள கலை. பேர்தல் - இயங்குதல். மாறாக் கதிர் - என்றும் மறையாத கதிர்; சூரியன். இது, 'மாறாக் கதிராகிய அது' எனப் பொருள் தந்தது. 'மற்றும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. 'அங்கியோடு' என மூன்றாவது விரிக்க. ஏகாரம் பிரிநிலை. இம் மந்திரம் பெரிதும் பாடம் வேறுபட்டுள்ளது. இதனால், மேற்கூறிய சந்திரன் முதலிய மூன்றனுள் சூரியனது ஆற்றல் வகுத்துக் கூறப்பட்டது.

பத்தும் இரண்டும் பகலோன் உயர்கலை
பத்தினொ டாறும் உயர்கலை பால்மதி
ஒத்தநல் அங்கிய தெட்டெட் டுயர்கலை
அத்திறன் நின்றமை ஆய்ந்துகொள் வீரே. ***#831***

'சூரியன், சந்திரன்' என்னும் இரண்டற்கும் மேற் சொல்லிய கலையளவில் வேறுபாடில்லை. ஆயினும், அக்கினிக்கு மேற்சொல்லப்பட்ட கலையளவு இழிபளவாக, உயர்பளவு அறுபத்து நான்காம். இதனை யோக முறையை ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள்.

விளக்கவுரை

அக்கினி கலைக்குத் திரிபு கூறுவார், பிறவற்றின் கலைகளில் ஐயம் வாராமைப் பொருட்டு அவற்றின் அளவுகளைப் பெயர்த்துங் கூறி வலியுறுத்தினார். 'அடங்கு தீ, அழலுந் தீ' என அக்கினி இரு நிலைமை உடைத்தாதலின், அதற்கேற்ப அதன் கலை களும் இழிபு உயர்வுகளை உடையவாயின. இது பற்றியே அக் கினியைச் சில இடங்களில் இரண்டாக வைத்து எண்ணுவார் ஆசிரியர்.

இதனால், சந்திரன் முதலிய மூன்றனுள் அக்கினியின் கலைக்கு எய்தியதன்மேல் சிறப்புணர்த்தப்பட்டது.

எட்டெட் டனலின் கலையாகும் ஈராறுட்
சுட்டப் படுங்கதி ரோனுக்குஞ் சூழ்கலை

கட்டப் படுமீரெட் டாகும் மதிக்கலை
ஒட்டப் படாஇவை ஒன்றோடொன் றாகவே. *#832*
அக்கினி முதலிய மூன்றற்கும் சொல்லப்பட்ட கலை அளவுகளை ஒன்றற்கு உரியது மற்றொன்றற்கு ஆகுமாறு பொருத் துதல் கூடாது.

விளக்கவுரை

என்றது, 'அதனதன் அளவில் கூட்டுதல் - அல்லது குறைத்தல் கூடாது' என்றவாறு. இங்ஙனம் வலியுறுத்தி ஓதியதனால், மேற்கூறிய அளவை மாற்றின் தீங்கு பயக்கும் என்பது பெறுதும். மேற்கூறிப் போந்த அளவுகளை எல்லாம் மீளவும் வகுத்தோதியது வரையறையை வலியுறுத்தற் பொருட்டாதல் அறிக. சுட்டப்படுதல் - சிறப்பித்துச் சொல்லப்படுதல். கட்டப்படுதல் - வரையறுக்கப்படுதல்.
இதனால், கலைகளின் அளவு வரையறையே அவற்றால் விளையும் நன்மைக்கு ஏதுவாதல் கூறப்பட்டது.

எட்டெட்டும் ஈராறும் ஈரெட்டும் தீக்கதிர்
சுட்டிட்ட சோமனில் தோன்றுங் கலையெனக்
கட்டப் படும்தா ரகைக்கதிர் நாலுள
கட்டிட்ட தொண்ணூற்றொ டாறுங் கலாதியே. *#833*
அக்கினிக்கு அறுபத்து நான்கு, சூரியனுக்குப் பன்னிரண்டு, சந்திரனுக்குப் பதினாறு எனக் கலைகள் மேற்கூறியவாறு வரையறுக்கப்படும் பொழுது அவற்றிற்கு மேலும் நட்சத்திரக் கலை என நான்கு சொல்லப்படும். ஆகவே, அவையும் கூடக் கலைகள் தொண்ணூற்றாறாம். இத்தொண்ணூற்றாறு கலைகளையும் தத்துவ தாத்துவிகங்களாகிய தொண்ணூற்று ஆறுமாகக் கொள்க.

விளக்கவுரை

அங்ஙனம் கொள்ளுதலால் வரும் பயனும், 'நட்சத்திரக் கலையாவன இவை' என்பதும் வருகின்ற மந்திரத்துட் பெறப்படும். நட்சத்திரக் கலை நான்கு உளவென்பது உணர்த்து தலேயன்றி, அனைத்தையும் எண்ணித் தொகை கொள்ளுதலும் செய்கின்றாராதலின், அதன் பொருட்டு மேற்கூறிய அவ்வளவு களையும் உடன் கூட்டி எண்ணினார். 'சுட்டியிட்ட, கட்டியிட்ட' என்பவை குறைந்து நின்றன. 'கலாதி' என்றது கலையைத் தோற்ற முறையிலும், ஒடுக்க முறையிலும் முதலாக வைத்துக் கூறியவாறு.
இதனால், கலையளவிற்கு எய்தாதது எய்துவித்து முற்ற முடிக்கப்பட்டது.

எல்லாக் கலையும் இடைபிங் கலைநடுச்
சொல்லா நடுநாடி யூடே தொடர்மூலம்
செல்லா எழுப்பிச் சிரத்துடன் சேர்தலால்

நல்லார் திருவடி நண்ணிநிற் பாரே. *#834*

தொண்ணூற்றாறு கலைகளும், 'இடை, பிங்கலை, சுழுமுனை' என்பவற்றுடன், நடுநாடி வழியாகக் கீழ்ப் போய்த் தொடர்கின்ற, இதுகாறும் சொல்லப்படாத மூலாதாரத்திலும் 'பூரகம், கும்பகம்' என்பவற்றில் ஏற்ற பெற்றியால் பொருந்திப் பின் மேல் எழுந்து தலையிலே சேர்தலால், யோகிகள் சிவனது திருவடியை அடைய வல்லவராவர்.

விளக்கவுரை

'இடை, பிங்கலை' என்பவற்றில் பூரகத்தாலும், சுழுமுனையில் கும்பகத்தாலும் பொருந்துவன முறையே சந்திர கலை சூரிய கலை அக்கினி கலைகளாதல் மேலெல்லாம் இனிது பெறப் பட்டமையின் 'மூலம்' என்றது நட்சத்திரக் கலை பொருந்தும் இடத்தையே குறித்தது என்பது நன்கு பெறப்படும். 'அவ்விடத்துத் தொடர்தலும் கும்பகத்தாலே' என்றற்கு 'நடுநாடி யூடே தொடர் மூலம்' என்றார். 'சொல்லா மூலம் தொடர் மூலம்' எனத் தனித்தனி கூட்டி யுரைக்க. எல்லாக் கலையும் உடன் சிரத்துச் சேர்தலால், 'பெத்தத்தில் தத்துவ வன்னரூபனாய் (சிவப்பிரகாசம், 64) உள்ள சீவன் அவ்வுருவத் தோடே சிவனடியைச் சேர்பவனாவன்' என்பது மேல் தொண்ணூற் றாறு கலைகளையும் தொண்ணூற்றாறு தத்துவங்களாகக் கொள்க என்றதனால் பெறப் பட்டது. 'சிவனது திருவடி சீவர்களது தலைமேல் உள்ளது' என்பது யோக நெறி. 'இறைவன் அடியை அவன் அடியவர் தம் முடிமேற் கொள்வர்' என்பதனைச் சரியையாளரும், கிரியையாளரும், தாம் வழிபடும் மூர்த்தியின் திருவடி தம் சென்னி மேல் பொருந்துமாறு வீழ்ந்து வணங்குதலாகவும், யோகியர், சகத்திராரத்தும், நிராதாரத்தும் இறைவன் திருவடியைத் தியானித்தலாகவும், ஞானியர், தமது ஞான சத்தி கிரியா சத்தி இரண்டனையும் இறைவனது ஞான சத்தி கிரியா சத்திகளில் அடங்கப்பண்ணி அவனது அருள்வழி நிற்றலாகவும் கொண்டு ஒழுகுவர் என்க.

இனி, 'எல்லாக் கலையும் எழும்பிச் சிரத்துடன் சேர்தலால் திருவடி நண்ணி நிற்பார்' என்றதனால், அங்ஙனம் சேரும் நிலையை அக்கலைகள் படிமுறையால் பெற்று நிறைவுறுதலே சந்திரயோகம் என்பதும் விளங்கும்.

இதனால், மேற்கூறிய கலைகள் பயன் தருமாறு கூறப்பட்டது.

அங்கியிற் சின்னக் கதிரிரண் டாட்டத்துத்
தங்கிய தாரகை யாகும் சசிபானு
பங்கிய தாரகை யாகும் பரையொளி
தங்கு நவசக்ர மாகுந் தரணிக்கே. *#835*

'அக்கினிகலையில் சந்திரன், சூரியன்' என்னும் இரண்டன் கலைகள் தாக்குதலால் அவற்றொடு வைத்து எண்ணப் படுகின்ற நட்சத்திரக் கலைகள் தோன்றும். இங்கு, 'சந்திரன், சூரியன், அவற்றின் கூறுகளாகிய நட்சத்திரம்' என்று சொல்லப்படுவன வெல்லாம் சத்தியது ஒளிப்பகுதிகளே. அதனால், இவை பிரணவ யோகிகட்கு நவமண்டலமாயும் நிற்கும்.

விளக்கவுரை

இம்மந்திரத்துச் சொல்லப்பட்ட பொருள்களுள் முதலது 'அங்கி மதிகூட' *(பா.847)* என்னும் மந்திரத்திலும், ஈற்றது வருகின்ற மந்திரத்திலும் விளங்கும். சின்னம் - துண்டம்; என்றது கலையை. 'கதிர் இரண்டு' என்பது ஒரு சொல் தன்மைப்பட்டு நிற்க, 'சின்னக்கதிர் இரண்டு' என்பது, பின் முன்னாகத் தொக்க ஆறாவதன் தொகை யாயிற்று. 'பங்கு' என்பதன் அடியாகப் பிறந்த 'பங்கிய' என்பது, 'பக்கு நின்ற' எனப் பொருள் தந்தது. திரோதான சத்தியையே இங்கு, 'பரா சத்தி' என்றார். யோகியர்க்கு அஃது அவ்வாறு சிறந்து நிற்றலின். அதன் ஒளியாவது குண்டலி சத்தி. சந்திர கலை முதலியவாய் நிற்கும் வாயுக்களையே 'குண்டலி சத்தி' என்றது, அவை அச்சத்தியை விளக்கி அதனோடு ஒற்றித்து நிற்றல்பற்றி. இவ்வாற்றால், இவை குண்டலி சத்தியாதல் இனிது விளங்குதற் பொருட்டே பிரணவ யோகிகட்கு இவை நவமண்டலமாய் நிற்றலும் உடன் கூறினார். தொண்ணூற்றாறு கலைகளையும் முன்னர்த் தொண்ணூற்றாறு தத்துவமாகக் கூறிப் பின் அவற்றைக் குண்டலி சத்தியாகக் கூறியவதனால், தத்துவ வன்ன ரூபியாகிய சீவன் சந்திர யோகத்தால் குண்டலி சத்தி வடிவாய்ச் சந்திர மண்டலத்தை அடைந்து சிவனது திருவடியைச் சேர்வான் என்பது போந்தது. 'பரையொளியாகும்' என மாறிக்கூட்டுக.

இதனால், கலைகளுக்கு எய்தியதன் மேற் சில சிறப்பு இயல்புகள் கூறப்பட்டன.

தரணி சலங்கனல் கால்தக்க வானம்
அரணிய பானு அருந்திங்கள் அங்கி
முரணிய தாரகை முன்னிய ஒன்பான்
பிரணவ மாகும் பெருநெறி தானே. ***#836***

'பிரணவயோகம்' எனப்படுகின்ற பெரிய நெறி, 'பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சந்திரன், சூரியன், அக்கினி, நட்சத்திரம்' என்னும் நவமண்டலங்களை (ஒன்பான் வட்டங்களை) உடையது.

விளக்கவுரை

இங்கு, 'பிரணவம்' என்றது பிராசாதத்தினை. மண்டலம் அல்லது

வட்டமாவது பகுதி. ஒன்பான் வட்டங்களுள், தீயைப் பஞ்ச பூதங்களிடை, 'கனல்' என்றும், முச்சுடரில் இறுதிக்கண் 'அங்கி' என்றும் இருகால் ஓதியதனாலும், மேலேயும் *(பா.835, 837)* அக்கினிக்கு இருவகைக் கலையளவு கூறினமையாலும் 'அடங்கு தீ, அழலுந் தீ' எனத் தீயை இரண்டாகக் கொள்ளுதலும், பூதத் தீ அடங்கு தீயும், சுடர்த் தீ அழலுந் தீயும் ஆதலும் பெறப்படும்.

பிருதிவி வட்டம் முதலிய ஒன்பான் வட்டங்களை, 'பிரணவ மாகும் பெருநெறி' என்றமையால், அவை பிராசாத கலைகளின் தானங்களேயாயின. அத் தானங்கள் பன்னிரண்டனுள் இறுதி நான்கும் நிராதாரமாதலின், சந்திர கலை முதலிய நால்வகை கலைகளும் அவ் விடத்துச் சொல்லமாட்டா. எனவே, எஞ்சிய எட்டுத் தானங்களோடு சோடசகலைத் தானங்கள் இரண்டு கூடத்தானங்கள் பத்தாம். ஆயினும், 'அருத்த சந்திரன், நிரோதினி' என்னும் இருகலைகட்கு இடையேயும், அவற்றின் தானங்கட்கிடையேயும் உள்ள வேற்றுமை சிறிதாகலின் அத்தானங்கள் இரண்டையும் ஒன்றாகக் கொள்ளத் தானங்கள் ஒன்பதாய், அவை இங்குக் கூறிய ஒன்பான் வட்டங்களாயும் அமையும். இவற்றுள், அழலுந் தீயை மரபுபற்றிச் சுடர்களோடு வைத்து எண்ணினாரேனும், 'அது மூலாதாரத்தில் உள்ளது' என்பதே யோக நூல் துணிபாதலின், அதனை அங்ஙனமே வைக்க, 'மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, நெற்றி, தலை, தலையின் பின்புறம்' என்னும் இடங்கள் முறையே, 'அங்கி, பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், நட்சத்திரம்' என்பவற்றின் வட்டங்களாம் என அறிக. பிராசாத கலைத் தானங்களை இவ்வாறான ஒன்பான் வட்டங்களாகக் கூறியது, 'மேற்கூறிய சந்திர கலை முதலிய நால்வகைக் கலைகளும் இப்பிராசாத கலைத் தானவகையினால் இங்குக் கூறிய பிருதிவி கலை முதலிய ஒன்பான் கலைகளாயும் நிற்கும்' என்பது உணர்த்துதற்கு என்க. அரணியம் - காடு; என்றது ஒளிக்கற்றையை. முரணிய - தம்முள் மாறுபட்டு விளங்குகின்ற. இதனால், மேல் தோற்றுவாய் செய்யப்பட்ட நவ மண்டலங்கள் (ஒன்பான் வட்டங்கள்) இவை என்பது கூறப்பட்டது.

தாரகை மின்னும் சசிதேயும் பக்கத்துத்
தாரகை மின்னா சசிவளர் பக்கத்துத்
தாரகை பூவிற் சகலத்தி யோனிகள்
தாரகைத் தாரகை தானாம் சொரூபமே. *#837*

நட்சத்திரங்கள் சந்திரன் தேயும் பக்கத்தில் விளங்கு தலன்றி, அது வளரும் பக்கத்தில் தனியே விளங்கா; சந்திரனது ஒளியிலே ஒன்றி அதுவாய்விடும். யோகத்தில் 'நட்சத்திரங்கள்' எனப்படுபவை, பூமியில்

உள்ள பலவகை உயிர்கள். எனவே, யோகியின் சந்திர மண்டலம் விளங்கி நிற்கும்பொழுது உலகப் பொருள் பற்றிய உணர்வுகள் முன்னை மந்திரத்துட் கூறிய நட்சத்திர மண்டலத்தில் வேறு நின்று விளங்காது, சிவ உணர்விலே ஒன்றிவிடும்.

விளக்கவுரை

பூ - பூமி. 'சகலத்து யோனிகள்' என்பதில் அத்து வேண்டாவழிச் சாரியை. சிறப்புப் பற்றி உயிர்களையே கூறினா ராயினும், பிற உலகப் பொருள்களும் கொள்ளப்படும். சொரூபம் - மெய்யுணர்வு; என்றது சிவ உணர்வை. உலகுணர்வை 'நட்சத்திரம்' என்றதற்கு ஏற்பச் சிவ உணர்வை, 'சந்திரன்' என்னாமையால், இஃது ஏகதேச உருவகம். இதனானே 'சந்திர மண்டலத்தின் ஆற்றலாவது சிவ உணர்வே' என்பது அறியப்படும். 'சொரூபத்துக்கண்' என இறுதிக்கண் ஏழாவது விரிக்க. 'தாரகை தாரகைக்கண் சொரூபத்தின் கண் தானாம்' எனக் கூட்டுக. தாரகை இரண்டில் முன்னது நட்சத்திர மண்டலமாகிய இடம்; பின்னது நட்சத்திரம். தான், பன்மை ஒருமை மயக்கம். மூன்றாம் அடி இடைநிலையாய் நிற்க, ஏனையடிகள் தொக்கு எடுத்துக்காட்டுவமையாயின.
இதனால், சந்திர யோகத்தில் நிகழ்வன சில கூறப்பட்டன.

முற்பதி னஞ்சின் முளைத்துப் பெருத்திடும்
பிற்பதி னஞ்சிற் பெருத்துச் சிறுத்திடும்
அப்பதி னஞ்சும் அறியவல் லார்கட்குச்
செப்பரி யான்கழல் சேர்தலு மாமே. ***#838***

பிண்டத்தில் உள்ள சந்திர மண்டலமும், அண்டத்தில் உள்ள சந்திர மண்டலம் போலவே தனது முற்பக்க நாள் பதினைந்தில் தோன்றி வளர்ந்து, பிற்பக்க நாள் பதினைந்தில் நிறை வினின்றும் தேய்ந்துவிடும். அதனால், அவ்விருவகைப் பதினைந்து நாள்களையும் அறிந்து முற்பக்க நாளில் யோகம் புரிய வல்லவர்கட்கு, சொல்லுதற்கரிய சிவனது திருவடியைச் சேர்தலும் கூடும்.

விளக்கவுரை

'அப்பதினைஞ்சும்' என்பதில், 'பதினைஞ்சு' என்னும் பால்பகா அஃறிணைப் பெயர் பன்மையாய் நின்றது. 'அறிய வல்லார்' என்றதனால், இங்கு, 'முற்பக்கம், பிற்பக்கம்' எனப்பட்டவை உலகில் காணப்படும் பக்கங்கள் அல்ல; யோக நிலையில் உள்ளவையே என்பது விளங்கும். 'அவை இவை' என்பது வருகின்ற மந்திரத்தால் பெறப்படும். இதனால், பிண்ட, சந்திரனுக்கும் அண்ட, சந்திரன்போல இருவகைப் பக்கங்கள் உளவாதல் கூறப்பட்டது.

அங்கி எழுப்பி அருங்கதிர் வட்டத்துத்
தங்குஞ் சசியினால் தாமம்ஐந் தைந்தாகிப்
பொங்கிய தாரகை யாம்புலன் போக்கறத்
திங்கள் கதிரங்கி சேர்கின்ற யோகமே. *#839*

முதற்கண் மூலாக்கினியை எழுப்பிப் பின் அவ்வக் கினியோடே சூரிய வட்டத்தில் தங்குகின்ற சந்திர கலையாகிய வாயு அங்ஙனம் ஓடித் தங்குதற்கு நாள்கள் பத்தாகிவிடப் பின் அவ்வக்கினி, நட்சத்திரங்களாகிய புலன் உணர்வு ஒழியும்படி சந்திர மண்டலத்தில் சென்று சேர்கின்ற யோக நாள்களே முற்பக்க நாள்களாம்.

விளக்கவுரை

சூரிய வட்டம், இங்கு மும்மண்டலங்களுள் ஒன்றாய அது. தாமம் - வரிசை; இது நாளின் அடைவைக் குறித்தது. 'ஆகி' என்பதனை 'ஆக' எனத் திரிக்க. கதிர் அங்கி - சூரிய வட்டத்தில் உள்ள அக்கினி. இது திங்களைச் சேர்கின்ற யோகம் 'முற்பக்கம்' என்க. மந்திரத்து இறுதியில் 'முற்பக்கம்' என்பது எஞ்சி நின்றது. இதனானே, 'யோகம்' என்பது அது நிகழ்கின்ற காலத்தைக் குறித்தமை தெளிவு.
இதனால், பிண்ட சந்திரனுக்கு உரிய முற்பக்க நாள் இவை என்பது கூறப்பட்டது.
'சந்திர கலையாகிய வாயு இவ்வாறு வளர்ந்து செல்வது முற் பக்கம்' என்றதனானே, 'சூரிய கலையாகிய வாயு இவ்வாறாதல் பிற் பக்கமாம்' என்பதும் உய்த்துணர வைக்கப்பட்டவாறு அறிக. முற்பக்க நாள்கள் முடிந்தபின் பிற்பக்க நாள் தொடங்குதல் ஒருதலையாதல் பொருட் பெற்றியாகலின், யோகத்திலும் முற்பக்கம் முடிந்தபின் யோகியால் பிற்பக்க யோகம் ஒருதலையாகச் செய்யப்படும். அவ்வாறு செய்யாதொழியின், விளைவுகள் வேறு வேறாம் என்க.

ஒன்றிய ஈரெண் கலையும் உடலுற
நின்றது கண்டும் நினைக்கிலர் நீசர்கள்
கன்றிய காலன் கருக்குழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே. *#840*

இங்குக் கூறிய இருவகைப் பக்கங்களின் படி வளர்ந்தும், தேய்ந்தும் நிற்கின்ற சந்திர கலை பதினாறும் அண்டத்தில் உள்ளது போலவே பிண்டத்திலும் பொருந்தி உள்ளதை உயர் நெறியில் வேட்கையில்லாதோர் நினைப்பதில்லை. அதனால், வாழ்நாளை வீணாளாக்கிய குற்றம்பற்றி அவர்கள்மேல் சீற்றங் கொள்கின்ற கூற்று வன் அவர்களை இழிபிறப்பில் தள்ளியபின், அதிலே சென்று வீழ்ந்து மேல் ஏற வழியறியாது திகைத்தலையே அவர்கள் உடையராவார்கள்.

விளக்கவுரை

கரு - பிறப்பு. 'குழி' என்றதனால் அஃது இழிபிறப் பாயிற்று. 'வீழ்த்தபின்' எனப் பாடம் ஓதுதல் சிறக்கும்.

இதனால், பிண்ட, சந்திரனை நினையாதவரது குற்றம் கூறப்பட்டது.

அங்கி மதிகூட ஆகும் கதிரொளி
அங்கி கதிர்கூட ஆகும் மதியொளி
அங்கி சசிகதிர் கூடஅத் தாரகை
தங்கி அதுவே சகலமு மாமே. ***#841***

இடை நாடி வழியாகப் பூரிக்கப்படும் சந்திர கலை யாகிய வாயு அக்கினி கலையாகிய சுவாதிட்டான கும்பகத்தில் முன்னர்ப் பொருந்தி நிற்பின், பின்னர் வல நாடி வழியாகப் பூரிக்கப் படும் சூரிய கலையாகிய வாயுவே அவ்வக்கினி கலையில் சென்று பொருந்துவதாகும். அவ்வாறே, சூரிய கலையாகிய வாயு முன்னர்ச் சென்று அக்கினி கலையில் பொருந்தின், பின்னர்ச் சந்திரகலையே அதன் கண் சென்று பொருந்துவதாகும். இவ்வாறு அக்கினி கலையில் சந்திர கலை, சூரிய கலை என்னும் இரண்டும் பொருந்திய பின்னரே, அதனை மூலா தாரத்திற் செலுத்துதலாகிய அந்த நட்சத்திர, கலை மூலா தாரத்தில் சென்று தங்கி, அதுவே அனைத்துக் கலைகளுமாய் அங்கு நிரம்பி நிற்கும்.

விளக்கவுரை

என்றது, 'சந்திர கலையைச் சுவாதிட்டானத்தில் பூரித்த பின்னரே சூரிய கலையை அங்குப் பூரித்தல் வேண்டும்' எனவும், 'இரண்டையும் அங்குப் பூரித்த பின்னரே நட்சத்திர கலையை அங்கு நின்றும் மூலாதாரத்தில் பூரித்தல் வேண்டும்' எனவும் மேற்சொல்லிய கலைகளைத் தொகுக்கும்முறை கூறியவாறு. 'அங்கியிற் சின்னக் கதிரிரண்டாட்டத்துத் - தங்கிய தாரகை யாகும்' என மேலேயும் *(பா.841)* கூறினார். 'இதுவே முறை' என்றதனால், 'மூலாக்கினி இவ்வாற்றானே எழுப்பப்படும்' என்பதும் அறியப்படும். படவே, மேல் *(பா.845)* 'அங்கி யெழுப்பி' என்றது, 'இவ்வாற்றால் எழுப்பி' என்றதாயிற்று. ஆகவே, அவ்விடத்தில், 'சசியால்' எனச் சந்திரகலை ஒன்றையே கூறியது தலைமை பற்றியாதல் விளங்கும்.

மூன்றிடத்தும், 'அங்கி' என்பதன் பின் ஏழாவது விரிக்க. சசி கதிர், உம்மைத் தொகை. அகரச்சுட்டு, நட்சத்திர கலையது இயல்பாக மேற்கூறியதனைச் *(பா.841)* சுட்டிற்று. 'அது' என்றது, தங்குதலாகிய அத்தொழிலை உணர்த்திற்று. 'சகலமும் ஆம்' என்றது, 'எல்லாக் கலைகளும் ஒருங்கு தொக்க தொகை நிலையாம்' என்றபடி.

இதனால், சந்திர கலை முதலிய கலைகளை ஆக்கி மூல அங்கியை

எழுப்புமாறு கூறப்பட்டது.

ஈராறு பெண்கலை எண்ணிரண் டாண்கலை
பேராமற் புக்குப் பிடித்துக் கொடுவந்து
நேராகத் தோன்றும் நெருப்புற வேபெய்யில்
ஆராத ஆனந்தம் ஆனந்த மானதே. *#842*

'பன்னிரண்டு' என வரையறுக்கப்பட்ட சூரிய கலைகள் பெண் கலைகள். 'பதினாறு' என வரையறுக்கப்பட்ட சந்திர கலைகள் ஆண் கலைகள். இவைகளை இந்த அளவுகளில் குறையாமல் பூரித்து, மூலாக்கினி விளங்கும் இடமாகிய சுவாதிட்டானத்தில் கும்பித்தால், அவ்விடத்துத் தெவிட்டாது தோன்றுகின்ற இன்பம் பேரின்பமே.

விளக்கவுரை

சூரிய சந்திரர்களை முறையே ஆண்மையும், பெண்மையும் உடையவராகக் கூறுதல் மரபாயிருக்க, இங்குச் சூரிய கலை சந்திர கலைகளை மாறிக் கூறியது என்னை யெனின், சந்திர கலையே சந்திர மண்டல ஆற்றலை மிகுவித்தல் பற்றி என்க. இது பற்றியே யோகத்தில் சந்திர கலையை முன்னர் வைத்துக் கூறுதல் பெரு வழக்காயிற்று. 'பன்னிரண்டு, பதினாறு' என்பவைகளை எடுத்தோதி யதனால், முன்னை மந்திரத்தில் 'கூட' என்றது, 'இந்த அளவில் குறையாது கூடியபின்' என்பது பெறப்பட்டது.

'ஒரு கலை' எனப்படுவது, ஒரு முறை பூரித்துக் கும்பித்து, இரேசித்தலாம், என்பது மேலேயும் *(பா. 835)* கூறப்பட்டது. 'பூரக, கும்பகம்' என்னும் முறையில் நிகழும். இரேசகங்களுக்கு மேல் *(பா.556)* சொல்லப்பட்ட மாத்திரை அளவுகள் சந்திர கலைக்கு உரியன. பதினாறு கலைகளையுடைய சந்திர கலைக்கு மாத்திரை அளவு சொல்லப்பட்டதனானே, பன்னிரண்டும் பத்தும் நான்கும் ஆகிய கலைகளை உடைய சூரியகலை அக்கினி கலை நட்சத்திர கலைகட் குரிய மாத்திரை அளவுகள் கணக்கிட்டுக் கொள்ளப்படும் என்க. அக்கினி கலைக்குப் பூரித்தலாவது சுவாதிட்டானத்தில் கும்பிக்கப் பட்ட வாயுவை மணி பூரகம் முதலிய ஆதாரங்களில் செல்ல மேற் செலுத்தல். கும்பித்தலாவது, ஆஞ்ஞை முதலிய மேல் இடங்களில் அவ்வாயுவை நிறுத்துதல். இரேசகமாவது அவ்விடங்களிற் சென்ற வாயுவை இரு மூக்கு வழியாகவும் வெளிச் செலுத்துதல்.

'பேராமல் பெய்யில்' என இயையும். புக்கு - முயன்று. மூலாதாரத்தில் உள்ளது காரண நிலையில் நிற்றலால், அஃது எழுந்து செல்லும் நிலையை, 'நேராகத் தோன்றும் நெருப்பு' என்றார். இங்கு, 'நெருப்பு' என்றது அஃது அடையும் இடத்தைக்குறித்தது. கும்பித்த பின் சந்திர மண்டலத்தில் உளதாம் இன்பத்தை, கும்பித்ததனானே உளதாகக்

கூறினார். இஃது உடற்கண்ணே தோன்றுவதாயினும் வீட்டின்பமே என்றற்கு, 'ஆனந்தம் ஆனந்தம் ஆனதே' என்றார். ஆணும், பெண்ணும் கூடியவழி இன்ப நுகர்ச்சியும், அவ்விருவரும் ஒருங்கே தீப்புக்கவழித் துறக்க இன்பமும் உளவாம் என வேறு பொருளும் இதன்கண் தோன்றிற்று.
இதனால், 'அங்கி கதிர் கூட, அங்கி மதி கூட' என்றவற்றின் அளவுபற்றி ஐயம் அறுக்கப்பட்டது.

காணும் பரிதியின் காலை இடத்திட்டு
மாணும் மதியதன் காலை வலத்திட்டுப்
பேணியிவ் வாறு பிழையாமற் செய்வீரேல்
ஆணி கலங்காதவ் வாயிரத் தாண்டே. ***#843***

சூரிய கலையைப் பூரித்துப் பின் இடநாடி வழி இரேசித்தும், சந்திர கலையைப் பூரித்துப் பின் வலநாடி வழி இரேசித்தும் பிராணாயாமத்தை இவ்வாறு பன்முறை தவறாமல் போற்றிச் செய்வீராயின், ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் உம் உடல் தளர்ச்சி யடையாமலே யிருக்கும்.

விளக்கவுரை

'சந்திர கலை சூரிய கலைகளைப் பூரித்தவழியே இரேசித்தலே முறை' என்பது, மேலே *(பா.777)* கூறப்பட்டமையின், இது பூரித்தவழியாலன்றி வேறு வழியால் இரேசித்தலும் வேறொரு முறையாதல் கூறியதாயிற்று. 'பேணி' எனவும், 'பிழையாமல்' எனவும் கூறியவாற்றால், 'இம்முறையை மேற்கொண்டு செய்யு மிடத்துப் பிழைபடாதவாறு குறிக்கொண்டிருத்தல் வேண்டும்' என்பது அறியப்படுகின்றது. ஆணி - இணைப்புக் கருவிகள். 'வலக் கால் இடக் கால்களை எதிர்ப் பக்கங்களில் மடக்கிப் பின்னி, இருக்கையில் இருந்தால், அசைவின்றி யிருக்கலாம்' என வேறொரு பொருளும் இதன்கண் தோன்றிற்று.
இதனால், சந்திர கலை சூரிய கலைகளை இயக்குதற்குரிய பிறிதொருமுறை கூறப்பட்டது.

பாலிக்கும் நெஞ்சம் பறையோசை ஒன்பதில்
ஆலிக்கும் அங்கே அமரர் பராபரன்
மேலைக்கு முன்னே விளக்கொளி யாய்நிற்கும்
காலைக்குச் சங்கு கதிரவன் தானே. ***#844***

சிவன், யோகிகளது உள்ளத்திற்குத் தோன்றும்படி தருகின்ற தச நாதங்களில் சங்கொலி ஒழிந்த ஒன்பது நாதங்களாய் முதற்கண் அவர்கட்கு அநுபவப் படுவான். பின்பு மேலிடமாகிய ஆஞ்ஞையில் விளக்கொளி போலக் காட்சியளிப்பான். அஞ்ஞானம் ஆகிய இருள் நீங்கி ஞான ஒளி வெளிப்படுகின்ற நான்காம் சத்தி நிபாதமாகிய காலைப் பொழுதில் காலைச் சங்கொலியாயும், காலைக்

கதிரொளியாயும் கேள்வியிலும், காட்சியிலும் அனுபவமாவான்.

விளக்கவுரை

'பாலிக்கும்' என்பது எச்சம்; 'ஆலிக்கும்' என்பது முற்று. 'நெஞ்சம்' என்பதை முதற்கண் வைத்து, நான்காவது விரிக்க. ஆலித்தல் - மகிழ்தல், ஒலித்தலுமாம். தச நாதங்கள் மேலே *(பா.593)* கூறப்பட்டன. 'மேலைக்கு, காலைக்கு' என்பவற்றைத் தொல் காப்பியர், 'இக்குச்சாரியை' என்பர்; பிற்காலத்தார், 'உருபு மயக்கம்' என்பர். 'முன்னே ஆலிக்கும்' என மேலே கூட்டி முடிக்க. 'காலைச் சங்கும், காலைக் கதிரவனும் ஆவான்' எனப் படிமுறையை வகுத்துக் கூறவே, சந்திர யோகத்தால் சந்திர மண்டலம் இவ்வாறு படிமுறையான் வளர்தல் பெறப்பட்டது.
இதனால், சந்திர மண்டல வளர்ச்சியின் படிமுறை தெரித்துக் கூறப்பட்டது.

கதிரவன் சந்திரன் காலம் அளக்கும்
பொதிரவ னுள்ளே பொழிமழை நிற்கும்
அதிரவன் அண்டப் புறஞ்சென் றடர்ப்ப
எதிரவன் ஈசன் இடமது தானே. ***#845***

சூரிய கலை சந்திர கலைகள் சரவோட்டத்தில் மக்களது வாழ்நாளைப் படிமுறையாகக் குறைத்து நிற்பன. உடல் அழியாது நிலைபெறும்படி பொழிகின்ற அமுத மழை, யோகத்தால் ஆற்றல் மிகுகின்றவனது உடலினுள்ளே நீங்காது நிலைபெற்றுள்ளது. பிராணாயாமத்தால் நாடிகள் மாற்றத்தை எய்தப்பெறுகின்ற யோகி, 'அண்டம்' எனப்படுகின்ற தலைக்கு அப்பால் நிராதாரத்திற் சென்று அதனை ஒளி மண்டலமாகச் செய்ய, அவன் அங்குக் காண்பது சிவனது இருப்பிடத்தையே.

விளக்கவுரை

அளத்தல். இங்குப் படிமுறையால் கழித்தல். பொதிர்த்தல் - பெருத்தல். 'பொதிர் அவன், அதிர் அவன்' என்பன வினைத்தொகைகள். 'அவன் எதிர் காண்பது ஈசன் இடமே' என ஒருசொல் வருவிக்க. அது, பகுதிப் பொருள் விகுதி. தான், அசை நிலை. வாழ்நாள் கழிதலை முன்னே விதந்து, பின் யோக முறை யையும், பயனையும் விதந்தமையால், 'காலம்பெற அம்முறையை மேற்கொண்டு அப்பயனையே பெறுக' எனக் குறித்ததாயிற்று.
இதனால், 'சந்திரயோகத்தை வாழ்நாள் கழியுமுன்னே மேற்கொண்டு, அதன் பயனைப் பெறல் வேண்டும்' என்பது வலியுறுத்தப்பட்டது.

உந்திக் கமலத் துதித்தெழுஞ் சோதியை
அந்திக்கும் மந்திரம் ஆரும் அறிகிலார்

அந்திக்கும் மந்திரம் ஆரும் அறிந்தபின்
தந்தைக்கு முன்னே மகன்பிறந் தானே. *#846*

நாபித் தானத்தில் தோன்றிப் பின் மேல் ஓங்குகின்ற குண்டலி சத்தியைத் தலைப்படுதற்குரிய மந்திரத்தை அறிபவர் அரியர். அதனை அறிந்தால், தந்தைக்கு முன்னே மகன் பிறத்தலாகிய புதுமை காணப்படும்.

விளக்கவுரை

'கனல்' என்னாது, 'சோதி' என்றதனால் அது குண்டலியேயாதல் அறிக. மூலாதாரம் குண்டலிக்குத் துயிலிடமாக, அது விழித்தெழுந்து செயற்படும் இடம் மணிபூரகம் முதலிய ஆதாரங்களேயாதல் பற்றி, மணிபூரகத்தினையே குண்டலி தோன்றும் இடமாகக் கூறினார். அந்தித்தல் - சந்தித்தல். 'மந்திரம்' என்றது அசபையை. சுவாதிட்டானம் முதலிய ஆதாரங்களுள் கீழ்க்கீழ் உள்ள ஆதாரங்களில் நிற்கும் கடவுளர், மேன்மேல் உள்ள ஆதாரங்களில் நிற்கும் கடவுளருக்கு மைந்தர் ஆதலாலும், ஆதாரங்களைக் கீழ்நின்று மேற்சொல்லும் முறையானே அடைந்து நீங்க வேண்டுதலானும் 'தந்தைக்கு முன்னே மகன் பிறந்தான்' என மருட்கை விளையக் கூறினார். 'மகன் இருந்தான்' என்பதும் பாடம். 'பிராணாயாமத்தை வறிதே செய்யாது, அசபா மந்திரத்துடன் செய்து, அதனால் குண்டலி சத்தியை மணிபூரகத்திலே அடையப்பெற்று, அச்சத்தி யோடே மேல் ஏறிச் சென்று சந்திர மண்டலத்தை அடைந்த வழியே யோகம், சந்திர யோகமாம்' என்றபடி. மந்திரமின்றியும், குண்டலியைத் தலைப் படாமலும் செய்யப்படுவது அட யோகம் என்க. இதனால், 'உண்மைச் சந்திர யோகமாவது இது' என்பது கூறப்பட்டது.

ஊதியம் ஏதும் அறியார் உரைப்பினும்
ஓதியும் ஏதும் அறியாத ஊமர்கள்
ஆதியும் அந்தமும் அந்திக்க வல்லிரேல்
வேதியன் அங்கே வெளிப்படுந் தானே. *#847*

நூல்களைக் கற்பினும் அவற்றின் பயனைச் சிறிதும் உணரமாட்டாத அறிவிலிகள், அவற்றைப் பிறர் உரைப்பினும் உணர் வாரல்லர். ஆதலின், அவர் நிற்க. நீவிர் யாம் கூறிய முறையால் குண்டலி சத்தியை அது தோன்றுகின்ற மணிபூரகத்தில் சந்தித்தலோடு ஒழியாது, அதன் முடிவிடமாகிய சந்திர மண்டலத்திலும் விடாது பொருந்தி நிற்றல் வேண்டும். அவ்வாறு நிற்க வல்லிராயின், அவ்விடத்தில் சிவன் வெளிப்பட்டுத் தோன்றுவான்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதற்கண் கூட்டி உரைக்க. 'ஆதியும் அந்தமும்' என்னும் உம்மைகள் எச்ச உம்மைகள் ஆதலின், அதற்கு, மேல்

உரைத்தவாறு உரைக்கப்பட்டது. 'ஆதி, அந்தம்' என்பவை ஆதாரங்களை முறையாற் குறித்தன.
இதனால், அசபா யோகமும் சந்திர மண்டலங்காறும் சென்று முற்றிய வழியே சந்திர யோகமாதல் கூறப்பட்டது.

பாம்பு மதியைத் தினலுறும் அப்பாம்பு
தீங்கு கதிரையுஞ் சேரத் தினலுறும்
பாம்பும் மதியும் பகைதீர்த் துடன்கொளீஇ
நீங்கல் கொடானே நெடுந்தகை யானே. ***#848***

குண்டலினியாகிய பாம்பு சந்திரகலை, சூரியகலை என்னும் இருகலை வாயுவையும் ஒருங்கே உட்கொண்டு சிறந்து எழும். பின் பெருந்தகையோனாகிய சிவபிரான் அந்தப் பாம் பினையும், சகத்திராரத்தில் உள்ள சந்திரனையும் மாறிநிற்க விடாமல் ஒன்றியிருக்கச் செய்து, அவ்வொன்றுதலில் தானும் நீங்காது நிற்பான்.

விளக்கவுரை

குண்டலியைப் பாம்பாகக் கூறுதல் வடிவுபற்றியன்றியும் சந்திர சூரிய கலைகளையும், அப்பெயர்த்தாகிய காற்றினையும் உண்ணும் செயல் பற்றியுமாம் என்பதும் குறிப்பால் உணர்த்தியவாறு. மதியைத் தினல் உறுதலை வேறாக முன் வைத்துக் கதிரைத் தினல் உறுதலை உம்மை கொடுத்துப் பின் வைத்தமையால், சந்திர கலையே சிறப்புடைத்தாதல் பெறப்பட்டது. இராகு கேதுக்களாகிய பாம்புகள் சந்திரன், சூரியன் என்னும் இரு கோள்களையும் விழுங்குகின்றன எனக் கூறும் உலக வழக்காகிய நயம்தோன்ற நின்றது இம்மந்திரம்.
குண்டலிப் பாம்பும் சகத்திராரத்தில் உள்ள சந்திரனும் மாறி நிற்றலாவது, குண்டலிப் பாம்பு சந்திரனுடன் தனது முகத்தைப் பொருந்தவையாது, வாலைப் பொருந்த வைத்திருத்தல். சந்திர யோகத்தால் அப்பாம்பு கீழ்மேலாகச் சுழன்று முகத்தை அச்சந்திர னிடத்து வைத்து விளையாடுவதாம். அவ்விளையாட்டில் சிவபிரான் நீங்காது நிற்றலாவது, சிவ உணர்வு மறையாது விளங்குதல். சிவபெரு மான், 'பாம்பும் மதியும் புனலும் தம்மில் பகைதீர்த்து உடன் வைத்த பண்பன்' *(தி.6 ப.5பா.4)* ஆதல் அறிக.
'சந்திர சூரியரை விழுங்கிய பாம்பு பின், சந்திரனோடு நட்புக் கொண்டு சிவபிரானிடம் விளையாடுகின்ற சிறப்புடையது, சந்திர யோகம்' என ஓர் வியப்புத் தோன்றக் கூறியவாறு; இதனுள் இன வெதுகை வந்தது. இம்மந்திரம் பாட வேறுபாடு மிகக் கொண்டுள்ளது.
இதனால், சந்திர யோகம் சந்திர மண்டலத்தில் சிவபிரானை அடையச்செய்தல் கூறப்பட்டது.

அயின்றது வீழ்வள வுந்துயில் இன்றிப்

பயின்ற சசிவீழ் பொழுதில் துயின்று
நயந்தரு பூரணை உள்ளம் நடத்தின்
வியந்தரு பூரணை மேவும் சசியே. *#849*

சர நிலையில் சந்திர கலை இயங்கும்பொழுது உறங்காமல் விழித்திருந்து, சந்திர கலை நின்று சூரிய கலை இயங்கும் பொழுது உறங்கி, இரண்டு கலையும் சேர இயங்கும்பொழுது யோகத்திற் சென்றால், சந்திர மண்டலம், விரிவடைதலாகிய பௌர்ணிமை நிலையை எய்தும்.

விளக்கவுரை

அயின்றது - அயிலப்பட்டது. யோகத்தில் பதினாறு கலையாகப் பூரிக்கப்படும் சிறப்புப்பற்றி, 'அயின்றது, பயின்றது' என்பன சந்திர கலையையே குறித்தன. சந்திர கலை வீழ்தலைக் கூறி யொழிந்ததனானே, சூரிய கலை இயங்குதல் பெறப்பட்டது. இரு கலைகளும் சேர இயங்குதலை, 'பூரணை' என்றார். அஃது யோகத்திற்குரிய காலமாதல் பற்றி, 'நயந்தரு பூரணை' எனச் சிறப்பித்தார். உள்ளத்தை நடத்துதல், மனோலயம் செய்தல். எனவே, யோகம் புரிதலாயிற்று. 'நடத்தி' என்பது பாடம் அன்று.
'யோகி சரவோட்டத்தில் சந்திர கலை இயங்கும் பொழுது உறங்குதல் கூடாது' என்பதும், 'சந்திர கலை, சூரிய கலை இரண்டும் சேர இயங்கும் பொழுது யோகத்திற் செல்லுதல் வேண்டும்' என்பதும் இங்குக் கூறப்பட்டவை. இதனால், யோகிகட்குச் சர நிலையில் சந்திர கலை இயங்குதல் முற்பக்கமும், சூரிய கலை இயங்குதல் பிற்பக்கமும், இரண்டும் இயங்குதல் பூரணையும் ஆயின. உலகர் இவற்றை மறுதலைத்துக் கொள்வர்.
இதனால், சந்திர யோகம் செய்வார்க்குரிய சில கால முறைகள் கூறப்பட்டன.

சசியுதிக் கும்அள வந்துயி லின்றிச்
சசியுதித் தானேல் தனதூண் அருந்திச்
சசிசரிக் கின்றள வுந்துயி லாமற்
சசிசரிப் பிற்கண்தன் கண்டுயில் கொண்டதே. *#850*

சந்திர யோகத்தில் சந்திர மண்டலம் தோன்று மளவும் சோம்பல் இன்றி யோகத்தில் முயன்று, அது தோன்றியபின் அதினின்றும் பெருகும் அமுதத்தைப் பருகிச் சரவோட்டத்தில் சந்திர கலை இயங்காமல் சூரிய கலை இயங்கும் பொழுது உறங்குதல் தக்கது.

விளக்கவுரை

'துயில்' இரண்டனுள் முன்னது சோம்பல். 'சரிப் பின் கண்' என்பதில் சரி -

சரித்தல்; முதனிலைத் தொழிற்பெயர். 'பின்' என்பது இங்குப் பெயராய் நின்று, சரிப்பிற்குப் 'பிற்கண்' என ஏழன் உருபு ஏற்றது. 'கொண்டது' என்பது கால மயக்கம். இதன்பின், 'முறை' என்பது சொல்லெச்சமாய் நின்றது. முன்னை மந்திரத்தின் முன் இரண்டடிகளில் கூறியவற்றையே இம் மந்திரத்தின் பின்னிரண் டடிகளில் கூறினார்; முன்னை மந்திரத்தின் பின் இரண்டடிகளில் கூறிய வற்றை இம் மந்திரத்து விளங்கக் கூறினமை பற்றி அவை நெகிழ்ந் தொழியாது நிற்றற்பொருட்டு.
இதனால், முன்னை மந்திரப் பொருள் இனிது விளங்கக் கூறப்பட்டது.

ஊழி பிரியா திருக்கின்ற யோகிகள்
நாழிகை யாக நமனை அளப்பர்கள்
ஊழி முதலாய் உயர்வார் உலகினில்
தாழஅல் லார்இச் சசிவன்னர் தாமே. **#851**

ஊழிகள் பல சென்றாலும் உலகிலே வாழ்கின்ற காய சித்த யோகிகள், தாம் யோகத்தில் இருக்கின்ற நாழிகையையே முழம் அளக்கும் கையாகக் கொண்டு எமனது ஆற்றலை அளப் பார்கள். ஆயினும், இங்குக் கூறப்படுகின்ற சந்திர யோகிகள் ஊழிக்கு முதல்வனாய் உள்ள சிவனேயாகின்ற உயர்நிலையை அடைவர்; உலகியலில் தாழ்தற்கு உரியரல்லராவர்.

விளக்கவுரை

'நாழிகை' என்பது கடைக்குறைந்து நின்று, 'நாழி என்னும் முகத்தல் அளவைக் கருவி கையிடத்ததாக' என வேறோர் பொருளையும் தோற்றுவித்தது. நமன், ஆகுபெயர். அளத்தல், உட்படக் கொள்ளுதல்.
'இச் சசிவன்னர்' என்பதை மூன்றாம் அடியின் முதற்கண் வைத்து உரைக்க.
இதனால், காய சித்தரினும் சந்திர யோகிகள் மேம்பட்டு நிற்றல் கூறப்பட்டது.

தண்மதி பானுச் சரிபூமி யேசென்று
மண்மதி காலங்கள் மூன்றும் வழிகண்டு
வெண்மதி தோன்றிய நாளில் விளைந்தபின்
கண்மதி வீழ்வள விற்கண மின்றே. **#852**

மக்களது உணர்வு அவர்களது தலையில் உள்ள சந்திர மண்டலம் உருப்பெற்றுத் தோன்றிய பின் அவர்களது சந்திர கலை சூரிய கலைகளாகிய வாயுக்கள் இயங்கும் வழியிலே விளங்கி, உலகம் மதிக்கின்ற இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலங் களிலும் நிகழும் நிகழ்ச்சிகளை முறையே கண்டு விளங்கிய பின், முடிவில் அச்சந்திர மண்டலம் வீழ்ச்சி அடையும்பொழுது ஒரு நொடி நேரமும் இல்லாதொழியும்.

விளக்கவுரை

'ஆகவே, உணர்வின் விளக்கமாகிய மெய்யுணர்வைப் பெற வேண்டுவார் மேற்கூறியவாறு சந்திர யோகத்தால் சந்திர மண்டலத்தை விளக்கம் பெறச் செய்தல் வேண்டும்' என்பது குறிப் பெச்சம். 'உணர்வு' என்னும் பொருட்டாகிய 'கண்' என்பதனை 'வெண்மதி தோன்றிய நாளில்' என்பதற்கு முன்னே கூட்டி, அனைத்தையும் முதற்கண் வைத்து உரைக்க. நான்காம் அடியில் 'தண்மதி' என்பது பாடம் அன்று. 'கணமும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று.

இதனால், சந்திர யோகம் மெய்யுணர்விற்கு இன்றியமை யாததாமாறு விளக்கப்பட்டது.

வளர்கின்ற ஆதித்தன் தன்கலை ஆறும்
தளர்கின்ற சந்திரன் தன்கலை ஆறும்
மலர்ந்தெழு பன்னிரண் டங்குலம் ஓடி
அலர்ந்து விழுந்தமை யாரறி வாரே. ***#853***

சந்திரனிலும் ஆற்றல் மிகுகின்ற சூரியனது கலைகள் ஆறும், சூரியனும் ஆற்றல் மெலிகின்ற சந்திரனது கலைகள் ஆறும் தனித்தனி இருதயத்திற்குமேல் பன்னிரண்டங்குலம் சென்று சந்திர மண்டலத்தில் பரவி நின்றதன் பயனை அறிகின்றவர் உலகத்து அரியர்.

விளக்கவுரை

வாயு சுழுமுனை வழியாக மேற்செல்லும் பொழுது இருதயத் தானத்தை அடைந்தபின் வலிமிகுமாகலின் அவ்வாறு மிக்குச் செல்வதை, 'மலர்ந்தெழுதல்' என்றும் சந்திர மண்டலத்தை அடைந்த வாயு பயனுடைத்தாகலின், அதனை, 'அலர்ந்து விழுதல்' என்றும் கூறினார். 'சந்திர கலை சூரிய கலையினும் மிக்கிருத்தல் உடல் உயிர்கட்கு முற்பக்கத்து முதிர்ச்சியும், அது சூரிய கலையினும் குறைந்திருத்தல் பிற்பக்கத்து முதிர்ச்சியுமாம் ஆதலின், இரண்டும் சமமாதல் அட்டமியாம். ஆகவே, முற்பக்கத்தை முதிரச் செய்யா விடினும் பிற் பக்கத்தை முதிரச் செய்யாமலேனும் இருத்தல் வேண்டும்' என்றவாறு.

இதனால், சூரிய கலை சந்திர கலைகளைச் சமமாகச் செய்கின்ற சமநிலை யோகம் கூறப்பட்டது.

ஆமுயிர்த் தேய்மதி நாளே யெனல்விந்து
போம்வழி எங்கணும் போகாது யோகிக்குக்
காமுற வின்மையிற் கட்டுண்ணும் மூலத்தில்
ஓமதி யுள்விட் டுரையுணர் வாலே. ***#854***

யோகிக்கு உணர்வு பெருகுகின்ற உயிர் போல் வதாகிய சந்திர கலை குறைகின்ற நாளே விந்து இழப்பாகின்ற காலம் என்க. ஆகவே,

முன்னை மந்திரத்திற் கூறியவாறு சந்திர கலையைக் குறைவுறாதபடி செய்கின்ற சமநிலை யோகத்தையுடைய யோகிக்கு எக்காலத்தும் விந்து இழப்பாகாது. ஏனெனில், மூலாதாரத்தில் உள்ள ஓங்கார உணர்வு நுண்ணிய நாதமாத்திரையாய்ச் சந்திர மண்டலத்துட் சேர்க்கப்பட்டதனால் ஆகிய உரை உணர்வுகளால் காமம் மீதூரா தொழிய, விந்து தனக்கு மூலமாகிய சுவாதிட்டானத்தில் கட்டுண்டு நிற்கும் ஆதலால்.

விளக்கவுரை

'உயிர் மதி' எனக் கொண்டு கூட்டி, உவமத் தொகை யாக்குக. 'எனல்' என்னும் வியங்கோட்சொல்லை, 'போம் வழி' என்பதன் பின் கூட்டுக. 'போம் வழி' என்பதும், 'எங்கணும்' என்பதும் காலத்தை உணர்த்தின. 'யோகி' என்றே போயினார், முன்னை மந்திரத்துட் கூறிய யோகம் இடையறாது நிற்றலின், 'அது போகாது' எனச் சுட்டுப் பெயர் வருவித்துக்கொள்க. இறுதியடியை மூன்றாம் அடிக்கு முன்னே கூட்டியுரைக்க. 'மூலம்' என்பது, 'விந்துவுக்கு மூல மான இடம்' எனவே பொருள் தந்தது. 'மூலத்திற் கட்டுண்ணும்' என மாற்றி, 'ஆதலால்' என்னும் சொல்லெச்சம் வருவித்து முடிக்க. 'விட்ட' என்பதன் அகரம் தொகுத்தலாயிற்று. விட்ட - விட்டதனால் ஆகிய.
'சமநிலை யோகத்தை உடைய யோகிக்குச் சந்திர மண்டல உணர்வு குறைவுபடாது நிற்பக் காமம் மீதூராது ஒழியும்' என்றதனால், அவ்யோகம் யோகிக்கு இன்றியமையாததாதல் கூறப்பட்டது.

வேறுறச் செங்கதிர் மெய்க்கலை ஆறொடுஞ்
சூறுற நான்குந் தொடர்ந்துற வேநிற்கும்
ஈறில் இனன்கலை ஈரைந்தொ டேமதித்
தாறுட் கலையுள் அகலுவா வாமே. ***#855***

மேல் சூரிய கலை பன்னிரண்டினின்று வேறாகத் தோன்றக் கூறிய ஆறனுடன், சுவாதிட்டானத்தினின்றும் கீழ்ச் சென்று மூலாதாரத்தைத் தாக்குவதாகிய அக்கினி கலை நான்கு தொடர்ந்து பொருந்தி நிற்கும் இயல்புடையன. அவற்றால் பத்தாகின்ற சூரிய கலைகளோடு சந்திரனது அடக்கமான கலை ஆறு கூடின், அந்நிலை யோகிக்கு மேற்கூறிய உரை உணர்வுகள் முழுதும் அற்றொழிகின்ற அமாவாசியை நாளாம்.

விளக்கவுரை

'ஆதலின், மேலே *(பா.859)* கூறிய அட்டமி நிலையில் அக்கினி கலை எழாதவாறு காக்க' என்பது குறிப்பெச்சம். சூறுதல் - அகழ்தல். 'மதித்து' என்னும் குறிப்பு வினைப்பெயர், பன்மை யொருமை மயக்கம். 'மதித்து உட்கலை ஆறுள்' என மாற்றுக. உட் கலை - அடங்கும் கலை. ஆறுள் -

ஆறு கூடிய காலத்தில். அகலுதல் - நீங்குதல். இதற்கு 'உரை உணர்வு' என்னும் எழுவாய் முன்னை மந்திரத்தினின்றும் வந்தது. 'சந்திர மண்டலத்து உரை யுணர்வு முற்றும் அகல்உவா' என்றதனால், அப்பொழுது காம இச்சை மிக்கு, விந்து சயம் சிறிதும் இலதாதல் பெறப்பட்டது. சூரியனது பேரொளியுள் சந்திரன் அடங்கி நிற்றலே உவா (அமாவாசியை) ஆதல் உலகியல்பும் ஆதல் அறிந்துகொள்க. இதனால், மேற்கூறப்பட்ட சமநிலை யோகத்தின் இன்றியமை யாமை எதிர்மறை முகத்தாற் கூறப்பட்டது.

உணர்விந்து சோணி உறஇனன் வீசும்
புணர்விந்து வீசுங் கதிரிற் குறையில்
உணர்வும் உடம்பும் உவையொக்க நிற்கில்
உணர்வும் உடம்பும் ஒருகால் விடாவே. ***#856***

புணர்ச்சிக் காலத்துச் சந்திர கலை குறையுமாயின், சூரிய கலை உணர்விற்கு முதலாகிய வெண்பாலினையும், உடம்பிற்கு முதலாகிய செம்பாலினையும் மிக இழக்குமாறு தனது ஆற்றலைச் செயற்படுத்தி நிற்கும். ஆகவே, உணர்வும், உடம்பும் போல்வன வாகிய சூரிய கலை, சந்திர கலைகளாகிய அவை தம்மில் ஒத்து நிற்பின், உணர்விற்கு முதலாகிய வெண்பாலும், உடம்பிற்கு முதலாகிய செம்பாலும் ஒருபோதும் மிக இழக்கப்படா.

விளக்கவுரை

எனவே, 'அப்பயன் கருதியே மேல் (பா.859) இருகலையும் சமமாதல் வேண்டும் எனக் கூறப்பட்டது' என்றவாறு. இரண்டாம் அடியை முதற்கண் கூட்டி உரைக்க. முதற்கண் நின்ற உணர், முதனிலைத் தொழிற் பெயர். 'சோணிதம்' என்பது குறைந்து நின்றது. வெண்பாலினை 'உணர்வு' என்றதனால், செம்பால் உடம் பாதல் பெறப்பட்டது. உற - மிகுதியாய்க் கழிய. புணர்வு - புணர்ச்சி. இந்து - சந்திரன். 'இந்து தான் வீசும் கதிரிற் குறையில்' என்க. 'உணர்வும் உடம்பும்' என்னும் தொடர் இருமுறை வந்து, மேற்கூறிய வாறு வேறு வேறு பொருளைக் குறித்தன. 'உற' என்பததை 'விடா' என்பதனோடும் கூட்டுக.

இதனால், 'மெய்யுணர்வில் விருப்பமுடையவர்க்குச் சமநிலை யோகம் புணர்ச்சிக் காலத்து மிக இன்றியமையாதது' என்பது கூறப்பட்டது. இதனை ஆடவர், மகளிர் இருபாலார்க்கும் ஒப்ப வைத்துக் கூறினமை குறிக்கொண்டு நோக்கத்தக்கது.

அமுதப் புனல்வரும் ஆற்றங் கரைமேல்
குமிழிக்கத் தற்சுடர் ஐந்தையுங் கூட்டிச்
சமையத்தண் டோட்டித் தரிக்கவல் லார்க்கு

நமன்இல்லை நற்கலை நாள்இல்லை தானே. *#857*

சந்திர மண்டலத்தில் ஊறுகின்ற அமுதம், தான் பாய்கின்ற யாறாகிய புருவ நடுவின் எல்லையைக் கடந்து வழிந்து கொண்டிருக்க, அப்புருவ நடுவினின்றும் மேன்மேல் சுடர்விட்டு விளங்குகின்ற ஒளிகள் ஐந்தையும் ஒன்று படுத்தி, அவற்றிற்கு ஏற்பு டையதான அந்தத் தண்டின் முனையில் அவைகளை ஓங்கி எரியச் செய்து, அவற்றைச் சுமக்க வல்லவர்கட்கு, நமனது வருகையும், கலை, நாள் முதலாகச் சொல்லப்படுகின்ற காலப்பகுதிகளும் இல்லையாகும்.

விளக்கவுரை

'குமிழி' என்னும் பெயர்ச்சொல்லடியாக, 'குமிழிக்க' என்னும் செயவெனெச்சம் பிறந்தது. இவ்வெச்சம் நிகழ்காலத்தின்கண் வந்தது. 'தன்' என்றது முன்னர்ப்போந்த யாற்றினை. தற்சுடர் ஐந்து, தற்சுடரை முதலாக உடைய ஐந்து. 'கூட்டி, ஒட்டி' என்னும் எச்சங்கள், அடுக்கி, 'தரிக்க' என்னும் ஒருவினை கொண்டன. 'சமைந்த அத்தண்டு' என்க. சமைதல் - அமைதல். 'அத்தண்டு' என்றது, சுழுமுனையை. அது மேற் பலவிடத்தும் பெறப்பட்ட மையின், இவ்வாறு சுட்டி யொழிந்தார். 'தண்டு' என்பதன்பின், 'மேல்' என்னும் பொருளதாகிய கண்ணுருபு விரிக்க. ஓட்டுதல், இங்கே ஒளியைப் பரவச் செய்தல். 'விளக்கைத் தண்டின்மேல் வைத்து ஓங்கி எரியச் செய்தல்' என்னும் நயமும் இங்குத் தோற்றுவிக்கப்பட்டது. புருவ நடு முதலாக மேன்மேல் விளங்கும் ஒளிகள் ஐந்தாவன:- 'விந்து, அருத்த சந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம்' என்பன. 'நமன் இல்லை; நற்கலை நாள் இல்லை' என்றது, 'இறப்பும், பிறப்பும் அற்ற வீட்டு நிலை உளதாம்' என்றவாறு. இதனால், சந்திர யோகம், பிராசாத முறையில் முதிர்ந்து ஞானயோகமாதல் கூறப்பட்டது.

உண்ணீர் அமுதம் உறும் ஊறலைத்திறந்
தெண்ணீர் இணையடித் தாமரைக் கேசெலத்
தெண்ணீர்ச் சமாதி யமர்ந்துதீ ராநலங்
கண்ணாற் றொடேசென்று கால்வழி மாறுமே. *#858*

உலகீர், அமுதம் நிறைந்துள்ள ஊற்றின் மடையைத் திறந்து, அவ்வமுதம் பெருகிவர, அதனை உண்ணுங்கள். அதனை உண்டதன் பயனாக இவ்வுலகிலே நெடுங்காலம் வாழ நினையாமல், ஞான சமாதியில் அமர்ந்து சிவனது இரண்டு திருவடிகளாகிய தாமரை மலரின்கீழ்ச் சென்று இருக்கவே நினையுங்கள். அங்ஙனம் இருத்தலாகிய அழியா இன்பத்தின் பொருட்டு முதற்கண் உங்கள் மூச்சுக் காற்றினை இருமூக்காகிய வழிகளை மாற்றிக் கண்வழியாகச் செலுத்துங்கள்.

விளக்கவுரை

'அமுதம் உறும் ஊறலைத் திறந்து உண்ணீர்' எனவும், 'தெள்நீர்ச் சமாதி அமர்ந்து இணையடித் தாமரைக்கே செல எண்ணீர்' எனவும், எச்சங்களை முன்னே கூட்டி முடிக்க. 'நலம் மாறும்' என்பது, 'இப்பெற்றங்கள் அறங் கறக்கும்' என்பதுபோல நான்காவதன் தொகை. 'சென்று மாறும்' என்பதை, 'மாறிச் செல்லும்' என விகுதி பிரித்துக் கூட்டிக் கொள்க. 'உம்முடைய கால்கள் குருட்டு வழியை விட்டுக் கண் தெரிந்த வழியில் செல்வனவாகும்' எனவும், 'உம்முடைய சந்ததிகளும் நீவிர் சென்ற வழியிற் சென்று திருந்தும்' எனவும் வரும் நயங்களும் ஈற்றடியில் தோன்றுதல் காண்க.

இதனால், உலகர்க்கு உறுதியுரைக்கும் முகத்தால், சந்திர யோகத்தினது சிறப்பு வலியுறுத்தப்பட்டது.

மாறும் மதியும்ஆ தித்தனும் மாறின்றித்
தாறு படாமல்தண் டோடே தலைப்படில்
ஊறு படாதுடல் வேண்டும் உபாயமும்
பாறு படாஇன்பம் பார்மிசைப் பொங்குமே. ***#859***

இடநாடி வழியாகவும், வலநாடி வழியாகவும் இயங்குகின்ற தம் இயல்பினின்றும் மாறுகின்ற சந்திர கலையும், சூரியகலையும் பின், யோகத்திற்குரிய முறையில் மாறுபடாமலும், குறைவுறாமலும் சுழுமுனை வழியே சென்று சந்திர மண்டலம் உள்ள தலையை அடையுமாயின், உடல், தனது நலத்திற்கு வேண்டுகின்ற வழிகளில் சிறிதும் சிதைவு உண்டாகாது. என்றும் அழிவில்லாத வீட்டின்பமும் இவ்வுலகில் மிகுவதாகும்.

விளக்கவுரை

தாறு - குலை. இது, சொல்லொற்றுமையால் குலைதலை *(சிதைதலை)* உணர்த்திற்று. இதனை, 'புத்தி சேனன்' என்பவனை, 'திங்கள் விரவிய பெயரினான்' *(சீவகசிந்தாமணி - காந்தருவ தத்தையார் இலம்பகம் - 181)* என்றது போலக் கொள்க.

'உபாயமும் ஊறுபடாது' என முன்னே கூட்டுக. பாறு படுதல் - அழிவெய்துதல். 'பொங்குமே' என்னும் ஏகாரம் தேற்றம்.

இதனால், யோக முறையும், அதன் பயனும் இறுதிக்கண் ஒரு திருமந்திரத்தால் தொகுத்துக் கூறி முடிக்கப்பட்டன.

விடாத மனம்பவ னத்தொடு மேவி
நடாவு சிவசங்க நாதங் கொளுவிக்
கடாவிடா ஐம்புலன் கட்டுண்ணும் வீடு
படாதன இன்பம் பருகார் அமுதமே. ***#860***

ஓடுதலை விடாத மனம் பிராணாயாமத்தால் ஒருவழிப்பட்டுச் சிவநாத ஒலியைக் கேட்பிக்கும். மதம் நீங்காத ஐம்பொறிகளாகிய யானைகளும் உரிய இடத்தில் கட்டுப்படும். அதனால், பருகப்படுகின்ற சந்திர மண்டலத்து அரிய அமிர்தமே பெத்த காலத்தில் விளையாத பேரின்பமாய் நிற்கும்.

விளக்கவுரை

'ஓடுதலை' என்பது ஆற்றலால் கொள்ளக் கிடந்தது. 'சங்கம்' என்பது பொதுப்பட நாதத்தை உணர்த்தி நிற்ப, 'சிவசங்க நாதம்' என்பது இருபெயரொட்டாயிற்று. 'கொளுவுதலால்' என்பது, 'கொளுவி' எனத் திரிந்து நின்றது. 'வீடு' என்றது சிலேடை. படாத னவாகிய இன்பம், பேரின்பம். இஃது ஒன்றேயாயினும் எல்லை யின்றிப் புதிது புதிதாய் விளைதல் பற்றிப் பன்மையாக ஓதப்பட்டது. 'பருகு ஆரமுதமே படாதனவாகிய இன்பங்களாய் நிற்கும்' என்க.
இதனால், சந்திர யோகம் வாசி முறையில் முதிர்ந்து ஞான யோகமாய் விளங்குதல் கூறப்பட்டது.

நான்காம் தந்திரம்

*6.1.*அசபை

போற்றுகின் றேன்புகழ்ந் தும்புகல் ஞானத்தை
தேற்றுகின் றேன்சிந்தை நாயகன் சேவடி
சாற்றுகின் றேன்அறை யோ சிவ யோகத்தை
ஏற்றுகின் றேன்நம் பிரான்ஓர் எழுத்தே. *#861*

நமக்கெல்லாம் தலைவனாகிய சிவனுக்குரிய ஓரெழுத்து மந்திரமாம் பிரணவத்தின் சிறப்பே, ஏனை எல்லா மந்திரங்களினும் உயர்வுடையதாதலை இத்தந்திரத்துள் யான் கூறுவேன். அதனானே, ஞானங்கள் பலவற்றினும் மேலானதாக உயர்ந்தோர் சொல்கின்ற சிவஞானத்தைப் புகழ்ந்து பாதுகாப்பவனும், யாவருடைய உள்ளத்திலும், 'சிவனது திருவடியே பொருள்' எனத்தெளிவிப்பவனும், சிவயோகத்தையும் சுருங்கக் கூறுபவனும் ஆவேன். பிரணவத்தினை அறிய விரும்புபவர்களே! இதனைச் செவிக்கொண்மின்.

விளக்கவுரை

'நம் பிரான் ஓர் எழுத்தே ஏற்றுகின்றேன்; (அதனால்) புகல் ஞானத்தைப் புகழ்ந்தும் போற்றுகின்றேன்; சிந்தை நாயகன் சேவடி தேற்றுகின்றேன்; சிவயோகத்தைச் சாற்றுகின்றேன்; அறையோ' எனக்கூட்டுக. சிந்தை நாயகன் சேவடி தேற்றுகின்றேன்; சிவயோகத்தைச் சாற்றுகின்றேன்; அறையோ' எனக் கூட்டுக.

'புகழ்ந்தும்' என்னும் உம்மை எதிரது தழுவிய எச்சம். ஏற்றுதல் - உயர்த்துதல்; என்றது உயர்வை உணர்த்துதலை.

'ஓர் எழுத்து' என்பது ஓகாரத்தைக் குறித்தல் மந்திர நூல் மரபு. 'ஏகாட்சரம்' என்பர். யாதொரு மந்திர எழுத்தும் இறுதியில் மகர மெய்யைப் பெற்று நிற்றலும் மந்திர மரபு. அதனால், ஓகாரம் 'ஓம்' என நின்று, 'ஓங்காரம்' என வழங்கப்படும். மெய்யெழுத்து எண்ணப்படுவ தில்லையாகையால், 'ஓம்' என நிற்பினும் ஓரெழுத்தேயாம். 'மந்திரம்' என்பது ஓரெழுத்தாலாய மந்திரத்திற்கே சிறப்பாக உரிய பெயராதல் மந்திர நூல்களால் அறியப்படுவது. அவற்றின் இறுதியில் நிற்கும் மகர மெய் 'விந்து' (பிந்து) எனப்படும்.

சொல்லுவோன், தனது கருத்தைப் பிறர்க்கு இனிது விளங்க வெளிப்படக் கிளந்து சொல்லுங்கால், புறத்து நிகழ்கின்ற இசையோசையையே ஒற்றுமை பற்றி எழுத்தோசையாக ஆசிரியர் கூறுவராயினும், 'உண்மையில் எழுத்தோசை அவ் இசையோசையின் வேறே' என்பதனை ஆசிரியர் தொல்காப்பியனார், 'அகத்தெழு

வளியிசை' எனவும், 'அதனை யான் இங்குக் கூறிற்றிலேன்' எனவும் கூறியுணர்த்தினார். மேற்குறித்த இசையோசையை, 'எழுந்து புறத்திசைக்கும் -மெய் தெரி வளியசை என்றார்.
'நாதம்' என்பது, எழுத்தோசைக்கே பெயராக மெய்யுணர்வு நூல்கள் (தத்துவ சாத்திரங்கள்) கூறும். இசையோசையை 'ஓசை' எனவும், எழுத்தோசையை 'ஒலி' எனவும் குறியிட்டு, 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' *2* எனத் திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்தார்.
இசையோசை கருவியாக அன்றி எழுத்தோசையை நேரே உணரும் ஆற்றல் உலகர்க்கு இல்லை.
'ஓ' என்பது இசையோசையைக் குறிக்கும் குறிப்பிடைச் சொல் என்பது, 'ஓ' என அரற்றினான்' என்பது முதலிய வழக்குக் களால் நன்கு அறியப்படும். அதுபற்றி இசையோசைக்கு முதல் 'ஓ' என்பது பட்டு நிற்றலின், இசையோசையானே அறியப்படுகின்ற எழுத்தோசைக்கும், 'ஓகாரமே முதல்' எனப்பட்டது. படவே, சொல்லுலகம் முழுவதற்கும் ஓங்காரமே முதலாயிற்று. அதனால், எல்லா மந்திரங்கட்கும் முன்னும், பின்னும் ஓங்காரத்தைக் கூட்டிக் கூறுதல் இன்றியமையாததாயிற்று. இவ்வாற்றால், சொல்லுலகம் முழு வதற்கும் முதலாய் நிற்கும் ஓங்காரத்திற்கு, எல்லாவற்றிற்கும் முதல் வனாகிய சிவபெருமானே முதல்வனாதலும் இயல்பான் அமைந்தது. அதனால், நாயனார் ஓங்காரத்தை, 'நம்பிரான் ஓரெழுத்து' என்றார். மொழிகளில் உள்ள எழுத்துக்கள் போலச் சொற்கு உறுப்பாய் நின்று பொருள்விளக்காமையால் இதனை 'ஊமையெழுத்து' என்பர்.
சொல்லுலகத்திற்கு முதலாய் இதனை நிற்றல்பற்றி ஓங்காரம் 'தாரக மந்திரம்' எனவும்படும். பற்றுக் காரணமாகத் தேவர் பிறரை முதற்கடவுளராக எண்ணும் சமயத்தவர் இத்தாரக மந்திரத்திற்கும் தாம்தாம் கொள்ளும் கடவுளரையே முதல்வராகக் கூறி மகிழ்வர். அவையெல்லாம் வெறும் முகமனேயாதல் அக்கடவுளரது இயல் புகளை உள்ளவாறு உணர்வார்க்குத் தெற்றெனவிளங்கும்.
எழுத்தோசையைப் பற்றுக்கோடாகக்கொண்டே மக்கட்கு எண்ணங்கள் பலவும் தோன்றும். புதிது புதிதாகத் தோன்றி வரும் எண்ணங்கட்குக் கடலில் புதிது புதிதாகத் தோன்றிவருகின்ற அலையை உவமையாகக் கூறும் சிவஞானபோதம்.
புதிது புதிதாய்த் தோன்றிவரும் எண்ணங்கட்கு மேற்கூறிய வாற்றால் முதலாதல்பற்றி ஓங்காரம், 'பிரணவம்' எனப் பெயர் பெற்றது. நவம் - புதுமை.
சொல்லுலகம் அனைத்திற்கும் முதல் ஓங்காரம் எனப்படுதல் பற்றி, 'அனைத்து மந்திரங்களும் ஓங்காரத்தின் சூக்கும பரிணாமமே' என்பர்.

எனினும், அதன் கருத்து மந்திரங்கள், நாதமாய் நிற்கும் சுத்த மாயையின் காரியம் என்பதே. அதனால், 'ஓங்காரம்' 'ஓரெழுத்து' என்னும் சொற்கள் 'ஓம்' என ஒலிக்கும் இசையோசையைக் குறித்தலேயன்றி. சங்கேதத்தால் நாதத்தையும் குறிக்கும்.

அவ்வாறான மந்திரங்களுள் 'அம், சம்' என்னும் இரண் டெழுத்தாகச் சொல்லப்படுகின்ற மந்திரம் 'அம்ச (ஹம்ஸ) மந்திரம்' எனப்படும். அவ்இரண்டெழுத்தும் பிராணாயாமத்துள் இரேசக பூரகங்கட்கு உரியனவாம். இரேசக பூரகங்கள் யோக முறைப்படி அறிந்து செய்யப்படும்பொழுது அம்மந்திரச் சேர்க்கைகளோடு செய்யப்படுதல் சிறப்பு. அது பிற மந்திரங்கள் போலாது பிராணனின் இயக்கமாகவே கொள்ளப்படுதலால், 'அசபை' (செபிக்கப்படாமல் தானாகவே இயல்வது) எனப் பெயர்பெற்றது. எனவே, பிராண இயக்கத்தை உடைய ஒவ்வோர் உயிரிடத்தும் இஃது உளதாகக் கொள்ளப்படும்.

திருப்பாற்கடலில் திருமால் கொள்கின்ற அறிதுயிலிலும் இம்மந்திரம் இயல்பாக விளங்கினமையால், 'அவரது இதயத்தில் வீற்றிருந்த தியாகேசப்பெருமான் அங்கு அசபா நடனம் புரிந்தனர்' எனவும், அப்பெருமானே முசுகுந்தச் சக்கரவர்த்தியால் திருவாரூரில் கொணர்ந்து எழுந்தருள்விக்கப்பெற்றமையால் 'திருவாரூர்த் தியாகேசரது நடனம் அசபா நடனம்' எனவும் கூறுவர்.

அம்ச மந்திரத்துள் 'சம்' என்பதை விசர்க்கத்துடன் கூடியதாக ஆக்கி 'ச:' என முன்னும், 'அம்' என்பதை 'அஹம்' என வேறுபடுத்திப் பின்னும் வைத்து உச்சரிக்க வருவதே 'சோஹம்' என்பது. 'அவன் நான்' என்பது இதன் பொருள். எண் வகை யோகமும் கைவந்த நிலையில் தியானத்தானமாகிய ஆஞ்ஞையில் யோகி இச் சோஹம் பாவனையைச் செய்வானாயின், 'அவன்' எனக் கருதுதல் இறைவனையே யாகலின், சாத்திய மந்திரங்களால் மந்திரான்மாவாய் நிற்கின்ற அவ்யோகி பசுத்துவம் நீங்கிப் பதிநிலையை எய்திப் பரமா காச வடிவாக ஆவான். சிவயோகி, 'சோஹம்' எனப் பொதுப்படப் பாவியாது, 'சிவோஹம்' எனச் சிறப்பாகப் பாவிப்பான். அதனால், அவன் சிவமாய் நின்று சிவானந்தத்தை நுகர்வான். ஞானத்தை எய்தினோரும் நிட்டையில் நிற்கமாட்டாதபொழுது அம்மாட் டாமைக்குக் காரணமாகிய வாசனா மலம் நீங்குதற் பொருட்டுத் திருவைந்தெழுத்தை அதற்குரிய முறையில் சுத்தமானதமாகக் கணிக்கும் போது சிவோகம் பாவனையை உடையவராயே இருந்து கணிப்பர். தத்துவமசி முதலிய மகா வாக்கியங்களும் 'சோஹம்' என்னும் பொருளையே வேறுவேறு வகையில் கூறுவனவாம். 'அம்சம்' என்ப தேயன்றி, இச் 'சோஹம்'

என்பதும் அசபையாகச் சொல்லப் படும். 'சோஹம்' என்பதன் பொருள் திருவைந்தெழுத்தில் இன்னும் விரிவாக அமைந்துள்ளது. ஆகவே, பிரணவத்தின் காரியங் களுள் அம்சம், சோஹம், திருவைந் தெழுத்து ஆகிய மந்திரங்கள் முதன்மை யுடையன. ஆகவே, அவை யெல்லாம் குறிப்பால் உணரக் கூறுகின்ற இவ்வதிகாரத்தை நம்பிரான் ஓர் எழுத்தைக் கூறுவதாக நாயனார் அருளிச்செய்தார்.

இதனால், 'இவ்வதிகாரம் நுதலிய பொருள் இது' என்பது கூறப்பட்டது.

ஓரெழுத் தாலே உலகெங்கும் தானாகி
ஈரெழுத் தாலே இசைந்தங் கிருவராய்
மூவெழுத் தாலே முளைக்கின்ற சோதியை
மாவெழுத் தாலே மயக்கம துற்றதே. ***#862***

'ஓம்' என்று ஓரெழுத்தாகச்சொல்லப்படுகின்ற சமட்டிப் பிரணவத்தின் பொருளாகிய 'இலய சிவன்' என்னும் அருவ நிலையால் உலகெங்கும் வரம்பின்றி நிறைந்து நின்று பின், 'அ, உ' என்று, மகாரம் இன்றி இரண்டெழுத்தாகச் சொல்லப்படுகின்ற சூக்கும வியட்டிப் பிரணவத்தில் முறையே அவ்வெழுத்துக்களின் பொரு ளாகிய சிவமும், சக்தியும் செம்பாதியான ஒளிவடிவாயுள்ள 'போக சிவன்' என்னும் அருவுருவ மூர்த்தியாய் உலகத்தைத் தொழிற் படுத்த நினைந்து, பின், மேற்கூறிய இரண்டெழுத்துடன் மகாரத்தையும் கூட்டி 'அ,உ,ம்' என மூன்றெழுத்தாகச் சொல்லப் படுகின்ற தூல வியட்டிப் பிரணவத்தில் முறையே அவ்வெழுத்துக் களின் பொருளாகிய 'அயன், அரி, அரன்' என்னும் மூவராம் 'அதிகார சிவன்' என்னும் உருவ மூர்த்தியாய்ப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் தொழில்களில் தலைப்பட்டு நிற்கின்ற சிவனை அவனது திருவைந்தெழுத்தில் மகாரத்தின் பொருளாகிய மலத்தின் மறைப்பினால் அறியமாட்டாது உலகம் திகைக்கின்றது.

விளக்கவுரை

எனவே, 'பிரணவத்தினை அதன் முறைகளை யெல்லாம் உணர்ந்து ஓதின் அவனைப்படிமுறையால் உணர்ந்து உய்யலாம்' என்பது கருத்தாயிற்று. உணரப்படுபொருளாகிய சிவனது சிறப்பினை உணர்த்தும் முகத்தால் அவனை உணர வேண்டுவதன் இன்றியமையாமையை உணர்த்தவேண்டி இவ்வாறு சிவன்மேல் வைத்து ஓதினாரேனும், பிரணவத்தை ஓதும் முறைமைகளையும், அவற்றது பயனையும் உணர்த்தலே கருத்தென்க.

'இருவராய் இசைந்து' என மாற்றியுரைக்க. 'இசைந்து' என்ற தனால், அஃது அவ்விருவரும் வேறு நில்லாது ஒன்றாய் இயைந்து நிற்கும் அருவுருவ நிலையைக் குறித்ததாயிற்று. முளைத்தல்,

உருவாய்த்தோன்றித் தொழில் இயற்றல், 'சோதியை' என்பதன்பின், 'அறியாது' என்னும் சொல்லெச்சமும், மயக்கம் உறுதற்கு, 'உலகம்' என்னும் எழுவாயும் வருவித்துக் கொள்க. இதன்கண் ஈரடி எதுகைவந்தது. உயிரெதுகையுமாம். 'மவ்வெழுத்து' என்பது இத்தொடை நோக்கி விகாரமாயிற்று.
இதனால், அசபை சிவபெருமானுக்கு அருள்வாயிலாய் நின்று அவனை உணர்வித்தல் கூறப்பட்டது.

தேவர் உறைகின்ற சிற்றம் பலம்என்றும்
தேவர் உறைகின்ற சிதம்பரம் என்றும்
தேவர் உறைகின்ற திருவம் பலம்என்றும்
தேவர் உறைகின்ற தென்பொது ஆமே. ***#863***

சிவபெருமானார் தாம் இயல்பாக என்றும் எழுந் தருளியிருக்கின்ற சிதாகாசமாகவே திருவுளத்துக் கொண்டு வெளிநின் றருள்கின்ற தில்லையம்பலமும் மேற்கூறிய ஓரெழுத்தேயாகும்.

விளக்கவுரை

'தேவர்' என்றது சிவபிரானையே. முதல் மூன்று அடிகளிலும் ''தேவர்' என்பவற்றின்பின் 'தாம்' என்பது வருவிக்க. 'சிற்றம்பலம்' என்பதில் உள்ள சிறுமை, 'நுண்மை' என்னும் பொருளதாய், 'சிதம்பரம்' என்பதில் உள்ள 'சித்து' என்னும் பொருளையே குறிக்கும். உபநிடதத்துள் 'தகராகாசம்' எனப்படுவதில் உள்ள 'தகரம்' என்பதற்கும் 'சிறுமை' என்பதே பொருளாதல் அறிக. 'திருவம்பலம்' என்பதிலுள்ள 'திரு' என்பதும் அருளையே குறிப்பது. 'சித்து, அருள்' என்னும் வெளிப்படைச் சொற்களாலும்., 'சிறுமை, தகரம்' என்னும் குறிப்புச் சொற்களாலும் உணர்த்தப் படுவது சிவனது சக்தியே. அதனால் 'சிற்றம்பலம், சிதம்பரம், திருவம்பலம், தென்பொது' என்னும் இந்நான்கும் சிவன் இயல்பாய் இருக்கின்ற பரவெளியாய் நிற்பது அவனது சத்தியே என்பது போந்தது. எனவே, சிவன் நிலவுலகத்தார்க்கு அருள் புரிதல் காரணமாகத் தில்லையம் பலத்தையே தனது பரவெளியாக ஏற்று எழுந்தருளியுள்ளான் என்பதை நாயனார் இம்மந்திரத்துள் முதற்கண் உடம்பொடு புணர்த் தலாற் கூறியருளினாராயிற்று. என்று - என்றுகொண்டு. ஊரின் திசை அதன்கண் உள்ள அம்பலத்திற்குப் புணர்த்துரைக்கப்பட்டது. 'பொது வும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. அதனால் 'அசபை மேற் கூறியவாறு, இலய சிவன் முதலியோர் வடிவாதலேயன்றி' என்னும் பொருள் தோன்றிற்று. 'ஆம்' என்பதற்கு 'அசபை' என்னும் எழுவாய், அதிகராத்தால் வந்தியைந்தது.
இதனால், அசபை மேற்கூறியாவறு இலயசிவன் முதலியோர் வடிவாதலே யன்றி, இந்நிலவுலகில் அதிகார சிவன் வெளிநிற்கின்ற

தில்லையம்பலமாயும் நிற்றல் கூறப்பட்டது.

ஆமேபொன் னம்பலம் அற்புதம் ஆனந்தம்
ஆமே திருக்கூத் தனவரத தாண்டவம்
ஆமே பிரளய மாகும்அத் தாண்டவம்
ஆமேசங் காரத் தருந்தாண் டவங்களே. *#864*

பொன்னால் இயன்றுள்ளதாகிய மேற்கூறிய தென்போது, மேற்கூறியவாறு ஞானமாய் நிற்க. அதன் கண் நின்று சிவபிரான் நிகழ்த்துகின்ற திருக்கூத்து, அந்த ஞானத்தின் வழியே விளையும் ஆனந்தமாய் நிகழும். மேலும், அத்திருக்கூத்து இடை யறாது நிகழ்ந்து, ஊழிக்காலம் முழுவதும் உலகைத் தொழிற் படுத்துதலாகிய தூல ஐந்தொழிலை இயற்றுவதுமாம். அதுவேயன்றிச், சருவ சங்காரத்தின்பின், உலகத்தை மீளத் தோற்றுவித்தற்பொருட்டுச் செய்யப்படுகின்ற செயல்களாகிய சூக்கும ஐந்தொழில்களை இயற்றும் திருக்கூத்தும் அதுவேயாம்.

விளக்கவுரை

'பொன்னம்பலம் அற்புதம் ஆமே; திருக்கூத்து ஆனந்தம் ஆமே; அத்தாண்டவமே பிரளயம் ஆகும்' எனக்கூட்டுக. அற்புதம் - ஞானம். 'பொன்னம்பலம் அற்புதம் ஆமே' என்றது, திருக்கூத்து ஆனந்தமாதற்குரிய இயைபுணர்த்தற்குக்கூறிய அனு வாதம். அவ்வியைபால் திருக்கூத்து ஆனந்தமாதலை உணர்த்தியவர், அதுதானே தூல ஐந்தொழில் நடன மாதலின் இயைபு உணர்த்தற்கு, அனவரத தாண்டவமாதலை, முன்னர்க் கூறினார். மூன்றாம் அடியில் 'ஆமே' என்பதன்பின் 'அதனால்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. 'பிரளயம்' என்றது 'ஊழி' என்னும் பொருளதாய், ஆகுபெயரால் அதன் கண் நிகழும் தூல ஐந்தொழிலை உணர்த்திற்று. 'ஆம்' என்பதன்பின் எல்லா இடத்தும் தேற்றேகாரம்புணர்த் தோதினார், அங்ஙனம் ஆகிநின்றதன் அருமை புலப்படுத்தற்கு. 'சங்காரம்' என்றது அதன் முடிவை. அருமை, காண்டல் கூடாமையை உணர்த்திற்று. 'சூக்குமம்' என்றவாறு. இச்சூக்கும நடனத்தைக் காண்பவள் அம்மை ஒருத்தியே, அவ்விடத்துப் பிறர் ஒருவரும் இல்லாமையால் தாண்டவம் ஒன்றேயாயினும், அதன் பகுதிகள் பலவாதல் பற்றி, 'தாண்டவங்கள்' எனப்பன்மையாகக் கூறினார். ஈற்றில் நின்ற ஏகாரம் பிரிநிலையாய், 'அத்தாண்டவம்' என்றதனோடு இயைவதாய் நின்றது.

அசபை தென்பொதுவாதலின் சிறப்புணர்த்தற்கு அப்பொது வின் சிறப்பை மேலைத்திருமந்திரத்துள் வகுத்தோதிய நாயனார், அசபை அப்பொதுவில் நிகழும் திருக்கூத்துமாய் நிற்றலின் சிறப்பை வருகின்ற திருமந்திரத்தால் உணர்த்தற்கு, அத்திருக்கூத்தின் சிறப்பை இதனால்

வகுத்தோதினார் என்க.

தாண்டவ மான தனியெழுத் தோரெழுத்துத்
தாண்டவ மான தனுக்கிர கத்தொழில்
தாண்டவக் கூத்துத் தனிநின்ற தற்பரம்
தாண்டவக் கூத்துத் தமனியந் தானே. ***#865***

மேற்குறித்த அனவரத தாண்டவ உருவாய் நிற்கின்ற ஒப்பற்ற திருவைந்தெழுத் தாவதும் 'ஓர் எழுத்து' எனப்பட்ட அசபையேயாம். அத்தாண்டவம் உயிர்கட்கு அருள்புரியும் செயலே, அதனால், அஃது ஒப்பற்ற பரம் பொருளால் செய்யப்படுகின்றது. இப்பெருமையை உணர்த்தும் குறிப்பே அத்தாண்டவம் நிகழும் அம்பலம் பொன்மயமாய் நிற்றல்.

விளக்கவுரை

கூத்தப் பெருமானது வடிவம் ஐந்தெழுத்தாதல் நன்கறியப்பட்டதாகலின், அதனை அனுவாதமாகக்கூறி, அத்தகைய ஐந்தெழுத்தாய் நிற்பதும் அசபையே என்றார். அதனானே, அசபை கூத்தப்பெருமானது வடிவாதலும் தானே அமைந்தது. ''தனி யெழுத்தும்' என்னும் உம்மை தொகுக்கப்பட்டது. இங்ஙனம் உணர்த்திய பின்னர் இயைபு பற்றியும், மேல் வகுத்துக் காட்டிய தாண்டவத்தின் சிறப்பும், அதுநிகழிடம் ஆகிய அம்பலத்தின் சிறப்பும் உணர்த்தினார் என்க.
கூத்தப் பெருமானது வடிவம் ஐந்தெழுத்தால் அமைந் திருத்தலை உண்மைவிளக்கம் முதலியவற்றான் அறிக. மேல் 'அன வரத தாண்டவம்' என்றதனையே இதனுள்'தாண்டவம்' எனச் சுருங்கக் கூறினாராதலின், 'தாண்டவக் கூத்து' என்பது இருபெய ரொட்டாம். 'பொன்போற் பொதிந்து'.*1* 'பொன்போற் புதல்வர்' *2* 'பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரை' *3* என்றாற் போல்வன வற்றால் பொன்னினது சிறப்பினை உணர்க. தற்பரத்தால் செய்யப் படுவதனை, 'தற்பரம்' என்றார். 'ஓரெழுத்' எனத் தகரவுகரமின்றி ஓதுதல் பாடம் அன்று.
இதனால், அசபை கூத்தப்பெருமானது வடிவாதற் சிறப்புடைய திருவைந்தெழுத்தாயும் நிற்றல் கூறப்பட்டது.

தானே பரஞ்சுடர் தத்துவ மாய்நிற்கும்
தானே அகார உகாரம தாய்நிற்கும்
தானே பரஞ்சுடர் தத்துவக் கூத்துக்குத்
தானே தனக்குத் தராதலந் தானே. ***#866***

கூத்தப்பெருமான் ஒருவனே தத்துவம் எல்லா வற்றையும் கடந்து நிற்கும் பேரொளிப் பொருளாயும், தத்துவம் எல்லா வற்றிலும் அவையேயாய்க் கலந்துநிற்பவனாயும், பிரணவ மாயும், மூவகை ஐந்தொழிற் கூத்திற்கும் முதல்வனாயும், அக்கூத்து இயற்றுங் கால் தன்னைத் தாங்கி நிற்கின்ற

அம்பலமாயும் உள்ளான்.

விளக்கவுரை

'அதனால், பிரணவமாகிய அசபை மேற்கூறிய வாறெல்லாம் நிற்றல் அவனது திருவருட் சங்கற்பத்தாலல்லது தானாக அன்று' என்பது குறிப்பெச்சம். 'அகார உகாரம்' என்பது 'பிரணவம்' என்னும் பொருளதாயும், 'பரஞ்சுடர்' இரண்டில் பின்னது, 'முதல்வன்' என்னும் பொருளதாயும் நின்றன. தராதலம் - தாங்குகின்ற இடம். தத்துவக் கூத்து - தத்துவங்களை ஆக்குகின்ற கூத்து.

'அசபை மேற்கூறியவாறெல்லாம் நிற்றல் தானாகவே போலும்' என மலையாமைப்பொருட்டு 'எல்லா முதன்மையும் உடையவன் சிவன் ஒருவனேயாதலின், அசபையின் காரியமும் அவனன்றி ஆகாது' என இதனால் ஓர் ஐயம் அறுத்தவாறு.

தராதல மூலைக்குத் தற்பரம் மாபரன்
தராதல வெப்பு நமவா சியஆம்
தராதலம் சொல்லின் தான்வா சியஆம்
தராதல யோகம் தயாவாசி ஆமே. ***#867***

ஆதாரங்களில் ஏனையவற்றிற்கெல்லாம் அடி யாகிய மூலாதாரத்திற்கு உரிய தெய்வ மந்திரம், நகாரம் முதலாக முழுமையாய் மாறாது நிற்கும் திருவைந்தெழுத்தாம். அதற்கு மேல் உள்ள அக்கினி மண்டலத்தில் அம்மந்திரம் அருள் எழுத்து மாறி இடை நிற்க ஏனைய எழுத்துக்கள் முன் நின்றவாறே நிற்க இருக்கும். அதற்குமேல் உள்ள சூரியமண்டலத்தில் பாச எழுத்துக்கள் நீங்க, ஏனைய மூன்றும் முன்நின்றவாறே நிற்க இருக்கும். அதற்கு மேல் யோகத்தால் அடையப்படும் சந்திர மண்டலத்தில் பசு எழுத்து நீங்க, அருளேயான ஏனை இரண்டழுத்தும் அவ்வாறே நிற்க இருக்கும்.

விளக்கவுரை

'அதனை யறிந்து சிவயோகி தனது சிவயோகத்தைச் செய்க' என்பது குறிப்பெச்சம்.

திருவைந்தெழுத்து,
மூலாதார மண்டலத்தில் - நமசிவாய - என்றும்,
அதற்குமேல் அக்கினி மண்டலத்தில் - நமவாசிய - என்றும்,
அதற்குமேல் சூரிய மண்டலத்தில் - வாசிய - என்றும்,
அதற்குமேல் சந்திர மண்டலத்தில் - வாசி - என்றும்
நிற்கும் என்பது இதன் தெளிபொருளாதல் காண்க. 'பிற யோகிகள் யோகத்தை அமந்திரமாகவும், பிரணவமாகவும் செய்வாராயினும், சிவயோகி இவ்வாறு திருவைந்தெழுத்து மந்திரத்தால் யோகம்

செய்யக்கடவன்' என்பது குறிப்பால் உணர்த்தியவாறு, இச் சிவயோக நெறியால் பாசமும், அதன்வாதனையால் நிற்கும் பசுத்துவமும் நீங்கச் சிவமாம் தன்மையைப் பெறுவன் என்க.

மூலாதாரத்தை, 'மூலை' என மறைபொருளாகக் கூறுதல் சித்தமுறை. அது பற்றி,

'மூலை யிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியர்என் றுந்தீபற;
தவத்தில் தலைவர்என் றுந்தீபற'

என்ற திருவுந்தியாரையும் (பா.12) நோக்குக. தற்பரம் - அதிதெய்வம். மாபரன் - பதியாய் (முழுமுதல் தலைவனாய்) நிற்கும் சிவன். 'தற்பரம், மாபரன்' என்ற இரண்டும் ஆகுபெயராய் அவர்க்குரிய மந்திரத்தைக் குறித்தது, வாளா, 'தரா தலம்' என்றாரேனும், 'அதற்கு மேல் உள்ள தராதலம் என்றல் கருத்தாதல் அறிக. வெப்பு, இடை நின்ற இரு தராதலம், யோகம் இவையும் ஆகுபெயராய் அவ்விடத்து நிற்கும் மந்திரங்களைக் குறித்தன. யோகம் - கூடுதல். வெப்பு, இருமடியாகு பெயர்.

இதனால், 'சிவயோகம் செய்வார் அறிதற்குரிய நான் மண்டல மந்திரங்கள் இவை' என்பது கூறப்பட்டது.

ஆமே சிவங்கள் அகார உகாரங்கள்
ஆமே பரங்கள் அறியா இடம்என்ப
ஆமே திருக்கூத் தடங்கிய சிற்பரம்
ஆமே சிவகதி ஆனந்த மாமே. ***#868***

பிரணவ யோகிகட்கு அகார உகாரமாய் நிற்கின்ற பிரணவ கலைகள் சிவயோகிகட்கு முறையே திருவைந் தெழுத்தில் சிகார வகாரங்களாய் நிற்கும். (எனவே சிகார வகாரங்களின் பொருள்களாகிய அபர சிவனும், ஆதி சத்தியும் சொல்லால் உணரப் படுபவர் என்பதாம்.) சொல்லால் உணரப்படாத நிலையில் நிற்பவர் பரசிவனும், பராசத்தியுமே. அவர்களது நிலை ஐந்தொழிற்கூத்தொழிய ஞான மாத்திரமாய், மேல் நிற்பதாம். 'சிவ கதி' எனவும், 'சிவானந்த மயம்' எனவும் சொல்லப்படுகின்ற பரநிலை அவர்களது நிலையேயாம்.

விளக்கவுரை

'பிரணவ யோகத்தோடு நில்லாது, சிவமந்திர யோகத்தில் செல்வோரே நாதத்தைக் கடந்து, பரநிலையை எய்துவர்' என்பதை உணர்த்துவார், அவர்க்கும் பிரணவம் பயனளிக்குமாற்றை முதற்கண் கூறினார். 'அகார உகாரங்கள் சிவங்கள் ஆமே' எனக் கூட்டுக.

சிவங்கள் என்றது, 'சிம், வம்' என்னும் எழுத்துக்கள் என்றவாறு. சிகார வகாரங்களைத் தனிப்பட எடுத்துக் கூறுமிடத்து இவ்வாறு

விந்துவுடனாகக் கூறுதலும் உண்டு. 'அறியா இடம் பரங்களே ஆம்' என்க. இடத்தில் உள்ளவர்களை 'இடம்' எனவும், பரமாய் நிற்பவர்களை, 'பரம்' எனவும் கூறினார். சிவனையும், சத்தியையும் வேறுவேறாக வைத்து எண்ணுதலின், 'பரங்கள்' எனப் பன்மையாற் கூறினார். இரண்டாம் அடியின் இறுதியில், 'அவையே' என்னும் எழுவாய் வருவிக்க. 'இவை அறியா இடம்' எனவே முன்னர்க் கூறியன அறியும் இடமாதல் பெறப்பட்டது.
இதனால், அசபை சிவ யோகிகட்குச் சிவமந்திரமாய்ப் பயன்படுதல் கூறப்பட்டது.

ஆனந்தம் மூன்றும் அறிவிரண் டொன்றாகும்
ஆனந்தம் சிவாய அறிவார் பலர்இல்லை
ஆனந்த மோடும் அறியவல் லார்களுக்கு
ஆனந்தக் கூத்தாய் அகப்படுந் தானே. ***#869***

திருவைந்தெழுத்தில் துன்பத்தைத் தரும் பாச எழுத்துக்களாகிய நகாரம் மகாரம் இரண்டும் நீங்க, எஞ்சிய மூன்றும் நின்றவழி உளதாவது இன்பமே. அம் மூன்றெழுத்துக்களில் சிகாரமும், வகாரமும் ஆகிய இரண்டெழுத்துக்கள் அறிவெழுத்துக்களாம். (சிகாரம் அறிவைச் செலுத்துவதும், வகாரம் செலுத்தியவாற்றிலே சென்று அறிவதும் ஆம்.) அவற்றுள்ளும் அறிவதாகிய வகாரம் தன்னைச் செலுத்துவதாகிய சிகாரத்திலே அடங்க, சிகாரமும் வகாரமும் ஆகிய இரண்டெழுத்தும் சிகாரமாகிய ஓர் எழுத்தேயாய் விடும். (அதுவே ஆனந்தாதீத நிலையாம்.) இவ்வாறு, 'சிவாய' என்னும் மூன்றெழுத்து ஆன்மாக்களுக்கு ஆனந்தப்பேற்றினை வழங்குவனவாதலை அறிபவர் மிகச் சிலரே. அவற்றை அன்போடு அறிய வல்லவர்கட்கு ஆனந்தம், அம்பலத்தில் கண்கூடாகக் காணப்படும் அருள்நடனத்திலேயே எளிதில் உண்டாகும்.

விளக்கவுரை

'சிவாய' எனப்பின்னர் வருதலின், முன்னர் வாளா, 'மூன்று' என்றார். 'இரண்டு அறிவு; அவை ஒன்றும் ஆகும்' என்க. 'ஒன்றும்' என்னும் எதிர்மறை உம்மையும், 'ஆனந்தக்கூத்தாயே' என்னும் பிரிநிலை ஏகாரமும் தொகுத்தல்பெற்றன. 'இரண்டு, ஒன்று' என்பன அவ்வவ்வெழுத்துக்களைத் தொகைக் குறிப்பால் உணர்த்தின. 'சிவாய' என்பதன்பின், என்பதை என்பது எஞ்சி நின்றது. 'சிவாய' என்னும் மூன்றெழுத்தில் சிகாரம் பேறும், வகாரம் பெறுவிப்பதும், யகாரம் பெறுவானும் ஆக நிற்கும் நுட்பமும், அம் மூன்றும் உள்ளவழியே ஆனந்தானுபவம் நிகழ்தலும் நல்லாசிரியர் வழி மரபில் நின்று உணர்பவர்க்கல்லது உணர வாராமையின் 'அறிவார் பலர் இல்லை'

என்றார். மூன்றாவதாக வந்த 'ஆனந்தம்' அன்பின்மேல் நின்றது, சிவயோகிகட்குத் திருவம்பலக் கூத்து ஆனந்த நடனமாதல் அனுபவமாய் விளங்கலின், 'ஆனந்தக் கூத்தாய் அகப்படும்' என்றார்.
'உணர்வின் நேர்பெற வரும்சிவ போகத்தை
ஒழிவின்றி உருவின்கண்
அணையும்' ஐம்பொறி யளவினும் எளிவர
அருளினை' *1*
என்ற அனுபவத்தினை இங்கு நினைவு கூர்க.
இதனால், அசபா யோகத்தின் முதிர்ந்த நிலையாகிய சிவ மந்திர யோகத்தினது சிறப்புக் கூறப்பட்டது.

படுவ திரண்டு பலகலை வல்லார்
படுகுவ தோங்கார பஞ்சாக் கரங்கள்
படுவது சங்காரத் தாண்டவப் பத்தி
படுவது கோணம் பரந்திடும் வாறே. ***#870***

யோக நூல்களிலும், ஞானநூல்களிலும் வல்ல வர்கள் பொருந்துவது 'அம், சம்' என்னும் இரண்டெழுத்திலும், ஓங் காரத்திலும் திருவைந்தெழுத்திலும் சிவனது அருளல் நடனத்தின் அன்பிலும், அவையெல்லாம் பலவகைச் சக்கரங்களில் பரவி விளங்குகின்ற முறைமைகளிலுமாம்.

விளக்கவுரை

'படுவது' என்பன தொழிற்பெயர்கள். அவை சொற் பொருட்பின்வருநிலையாய் வந்தன. முத்தொழிலாகக் கூறுமிடத்தில் அருளல் அழிப்பில் அடங்குகின்ற முறை பற்றி, ஐந்தொழிலில் இறுதிக்கண்ணதை, 'சங்காரம்' என்றார். 'கோணம்' என்றது பலவகையாக வரையப்படும் சக்கரங்களை, 'இரண்டு, பஞ்சாக்கரம், பத்தி, கோணம், வாறு' - இவைகளில் ஏழாம் உருபு விரித்துக் கொள்க. 'ஆறு' என்பது சில இடங்களில் முதற்கண் வகரமெய் பெற்றும் வருதல் உண்டு. சங்கச் செய்யுட்களில் மகரமெய் பெற்று, 'மாறு' என வருதல் அறியத்தக்கது. ஆறு - வழி; முறை. 'ஓங்கார பஞ்சாக் கரங்கள்' என அஃறிணை உம்மைத்தொகை பன்மையீற்றொடு வந்தது.
இதனால், மேற்கூறிய மந்திரங்கள், தாண்டவம் இவை யோகத்திற்கும், ஞானத்திற்கும் வாயிலாதல் கூறப்பட்டது. புற வழிபாட்டிற்கும் உரியதாகப் பின்னர்க் கூறப்படும் சக்கரங்களும் இங்கு எதிரதுபோற்றிக் குறிப்பிடப்பட்டது.

வாறே சதாசிவ மாறிலா ஆகமம்
வாறே சிவகதி வண்துறை பின்னையும்
வாறே திருக்கூத்தா கமவ சனங்கள்

வாறே பொதுவாகும் மன்றின் அமலமே. *#871*
மேற்கூறிய மூன்று மந்திரங்களும் சதா சிவ மூர்த்தியால் அருளிச்செய்யப்பட்ட ஆகமங்களின் ஞானப் பகுதி களும், அவற்றால் அடையப்படும் சிவகதியாகிய வளப்பமான கடல் துறையும், அத்துறையில் மூழ்கினோர்க்கு ஐம்பொறி வழியிலும் அவ் வானந்தத்தைத் தருகின்ற திருநடனமும், மற்றும், ஆகமங்களின் கிரியைப் பகுதிகளும், ஞானிகட்கேயன்றிப் பிறர் அனைவர்க்கும் பொதுவாகச் செய்யப்படுகின்ற அம்பலக்கூத்தும் ஆகிய அனைத்து மாய் நிற்கும்.

விளக்கவுரை

'இவ்வாறே' எனச் சுட்டியுரைத்தல் கருத்தாகலின், 'வாறு' என்பன மேற்கூறிய மந்திரங்களைச் சுட்டி நின்றன. 'சதாசிவம்' என்பது, செய்யுட் கிழமைக்கண் வந்த ஆறாவதன் தொகையில் ஈறு கெட்டுப் புணர்ந்தது. ஞானப் பகுதிகள் தம்முள் முரணுதல் இன்மையின், 'மாறிலா ஆகமம்' என்றது அவற்றை யாயிற்று, 'பின்னையும்' என்பது 'மற்றும்' எனப் பொருள் தந்து, ஞானத்தின் வேறாகிய கிரியை முதலியவற்றைக்கூறும் குறிப்புணர்த்தி நின்றது. 'புன்னையும்' என்பது பாடம் அன்று. இதனை, 'திருக்கூத்து' என்றதன் பின்னர்க் கூட்டுக. 'அமலம்' என்பது ஆகுபெயரால் அதனையுடைய கூத்தினைக் குறித்தது.
இதனால், மேலானவற்றின் சிறப்பு உணர்த்தப்பட்டது.

அமலம் பதிபசு பாசங்கள் ஆகமம்
அமலம் திரோதாயி ஆகும்ஆ னந்தமாம்
அமலஞ்சொல் ஆணவ மாம்மாயை காமியம்
அமலம் திருக்கூத்தங் காமிடந் தானே. *#872*
'அமலம்' எனப்பட்ட நடனமே முப் பொருள்களாயும், ஆகமங்களாயும், திரோதான சத்தி அருட் சத்திகளாயும், முப்பாசங்களாயும் நிற்கும். அந்நடனம் நிகழ்கின்ற அம்பலம் அருளே.

விளக்கவுரை

இப்பொருள்களின் இயக்கங்களாய் நிற்றல் பற்றித் திருக்கூத்தினை இப்பொருள்களாகவே கூறினார். 'இயக்கம்' என்பதைப் பதியொழிந்தவற்றில் காரியம் காரணமாக உபசரிக்கப் பட்டது என்க. பதி - ஐந்தொழில் செய்பவன். 'இத்தகைய கூத்து நிகழ் தற்கு இடமும் தக்கதாயுள்ளது' என்றற்கு அதனது சிறப்பினை இறுதிக் கட்கூறினார். 'ஆமிடந் தானும்' எனற்பாலதாய எச்சவும்மை தொகுத் தலாயிற்று. 'ஆம்' இரண்டில் முன்னது முற்று; அதனை, 'காமியம்' என்பதன்பின்னர்க் கூட்டுக. பின்னதும், 'ஆகும்' என்பதும் எச்சங்கள். 'ஆகும்' என்பதில்

ஆதல், எல்லையின்றிப்பெருகுதல். மூன்றாம் அடியை 'ஆம்' என்பதை ஒழித்து ஓதின் தளை சிதைதல் அறிக.
இதனால், மேல் 'திருக்கூத்து' எனவும், 'அமலம்' எனவும் முறையே குறிக்கப்பட்ட ஞான நடன ஊன நடனங்களுள் ஊன நடனமும் சிறுமையுடைத்தாகாது பெருமையுடைத்தாதல் கூறப் பட்டது.

தானே தனக்குத் தலைவியு மாய்நிற்கும்
தானே தனக்குத் தனமலை யாய்நிற்கும்
தானே தனக்குத் தனமய மாய்நிற்கும்
தானே தனக்குத் தலைவனு மாமே. **#873**

'திருக்கூத்து ஆமிடம்' என மேற்குறிக்கப் பட்ட அருளாகிய சத்தி தனக்கு ஒரு தலைவியை வேண்டாது தானே தனக்குத் தலைவியாய் நிற்பாள்; மேலும், தானே தனக்கு இன்றியமையாத பொருள்களாயும், தன்னுள்ளே சூக்குமமாயும் நிற்பாள். இனி, தனக்குத் தலைவனாகிய சிவனும் அவளே.

விளக்கவுரை

முதல் அடியில் 'தலைவனுமாய்' என ஓதுதல் பாடம் ஆகாமை அறிந்துகொள்க. தன மலை - செல்வமாகிய மலை; இதனை 'விபூதி' என்பர், பின்வந்த 'தனம்', 'தன்னம்' என்பதன் இடைக் குறை.
இதனால், மேல். 'அருள்' எனப்பட்ட சத்தியது சிறப்பு உணர்த்தப்பட்டது.

தலைவனு மாய்நின்ற தற்பரக் கூத்தனைத்
தலைவனு மாய்நின்ற சற்பாத் திரத்தைத்
தலைவனு மாய்நின்ற தாதவிழ் ஞானத்
தலைவனு மாய்நின்ற தாளிணை தானே. **#874**

யாதொரு தொழிலுமின்றிச் சிவனாய் நிற்றலே யன்றி ஐந்தொழில் செய்யும் பதியாயும் நிற்கின்ற முதல்வனது தன்மையையும், அம்முதல்வனது தொழில்களில் பிறவற்றின் பயனையன்றி, இறுதித் தொழிலாகிய அருளலின் பயனையும் ஏற்கும் நல்ல கொள்கலமாகிய பக்குவம் வாய்ந்த உயிரினது தன்மையையும் மகரந்தங்களாக உதிர்த்து மலர்கின்ற திருவாய்மலரையுடைய சிறந்த ஞானாசிரியனாயும் நிற்பன சிவனது இரண்டு திருவடிகளே.

விளக்கவுரை

தற் பரம் - தனக்கு (ஆன்மாவிற்கு) மேலானவன். ஆசிரியன் தன்னைச் சிவமாகப் பாவிக்கும் பாவனையில் நின்றே உபதேசித்தல் பற்றி இங்கு, 'தன்' என்று ஆசிரியனையே சுட்டி, 'அவனுக்கு மேலானவன்' என்றார். அபக்குவிகட்கு மேலாய் நிற்றல் பற்றிப் பக்குவியை, 'தலைவன்' என்றார். 'தாதவிழ்' என்றதை அவ்வடியின் முதற்கண்வைத்து உரைக்க.

அது, 'ஞானத்தலைவன்' என்னும் முதற்பெயரோடே முடியும்.
மூன்றாவதாக வந்த 'தலைவன்' என்பது, 'ஞானாசிரியருள் மேம்பட்டவன்' எனப் பொருள் தந்தது. இறுதியில் உள்ள 'நின்ற' என்பது முற்று. 'தானே' என்பது பன்மை யொருமை மயக்கம்.
இதனால், தடத்த நிலையில் உள்ள சிவனுக்குத் திருவடிகளாய் உள்ளது அவனது 'அருள்' எனப்படும் சத்தியே என்பது குறிக்கப் பட்டது. இதனது பயன், வருகின்ற மந்திரம் முதலியவற்றுள், 'இணையார் திருவடி' என்பனபோலக் கூறும் வழக்கினது உண்மையை உணர்தல்.

இணையார் திருவடி எட்டெழுத் தாகும்
இணையார் கழலிணை யீரைஞ்ச தாகும்
இணையார் கழலிணை ஐம்பத்தொன் றாகும்
இணையார் கழலிணை ஏழா யிரமே. ***#875***

சிவனது, இணைதல் பொருந்திய திருவடிகளே வித்தெழுத்துக்கள் மூன்றோடு கூடி எட்டெழுத்தாய் நிற்கும் பஞ்சாக்கரமும், பத்துக் கூறுகளாகப் பகுக்கப்பட்டு நிற்கும் பிரணவமும், மூல எழுத்துக்களாகிய (மாதுருகாட்சரங்களாகிய) அகாரம் முதல் க்ஷகாரம் ஈறாக உள்ள ஐம்பத்தோரெழுத்துக்களும், ஏழு கோடிகளையுடைய பல மந்திரங்களுமாய் நிற்கும்.

விளக்கவுரை

இணை, முதனிலைத் தொழிற்பெயர். 'இணையாகப் பொருந்திய' என்றும் ஆம், 'இறைவனது ஞான சத்திகிரியா சத்திகளே அவனது இரண்டு திருவடிகள்' என்பது உணர்த்துதற்கு, 'இணையார் திருவடி' என்றார். 'இணையார் கழல்' மூன்றும் அடையடுத்த ஆகுபெயர்களாய் நின்றன. எனவே, இணைதல், கழல் என்னும் அணியைச் சிறப்பித்து நின்றனவாம். அங்கு இணைதல், அறியப் படுதல். 'ஏழு' என்பதும் ஆகுபெயராய் அத்துணைக் கோடியை உணர்த்திற்று. ஆயிரம், பன்மை குறித்தது.
இதனால், எல்லாவற்றிலும் நீக்கம் அற நிறைந்து நிற்கின்ற சிவ சக்திக்குச் சிறப்பிடம் மந்திரங்கள் என்பது கூறப்பட்டது.

ஏழா யிரமாய் இருபதாய் முப்பதாய்
ஏழா யிரத்தும் எழுகோடி தானாகி
ஏழா யிரத்துயிர் எண்ணிலா மந்திரம்
ஏழாய் இரண்டாய் இருக்கின்ற வாறே. ***#876***

மந்திரங்கள் அளவற்றனவாய் நின்று அளவற்ற உயிர்களில் நிற்பினும் அவை அனைத்தும் ஐம்பதெழுத்திற்குள்ளும், 'ஏழு கோடி' என்னும் வகைக்குள்ளும், 'ஏழு, இரண்டு' என்னும் வடிவத்துள்ளும், அடங்கி நிற்கும் முறைமை அறியத் தக்கது.

விளக்கவுரை

'எண்ணிலா மந்திரம் ஏழாயிரத்துயிர் ஏழாயிரமாய்' எனக் கூட்டுக. 'எழுவகைப் பிறப்பிலும் பலவாய் உள்ள உயிர்' என்றற்கு 'ஏழாயிரத்துயிர்' என்றார். ஏழாயிரத்துயிர்க்கும்' என்னும் நான்கனுருபும், முற்றும்மையும் தொகுத்தல் பெற்றன. 'இருபதாய் முப்பதாய்' என்றது, 'ஐம்பதாய்' என்றவாறு. மாதுருகாட்சரங்களை ஈற்றிலுள்ள க்ஷகாரத்தைக் கூட்டி 'ஐம்பத்தொன்று' என்றல், கூட்டாது விடுத்து 'ஐம்பது' என்றல் ஆகிய இருமரபுகளும் உள்ளன என்க. உயிர்களைக் குறிப்பதாய் இரண்டாம் அடியில் வந்த 'ஏழாயிரத்தும்' என்பது சொற்பொருட் பின்வருநிலை. 'எல்லாப் பொருள்கட்கும் மந்திரம் உண்டு' என்பதைச் சிவஞான போத ஒன்பதாம் சூத்திரத்தின் இரண்டாவது அதிகரண பாடியத்திற் காண்க.
கோடி - இறுதி. மந்திரங்கள் அனைத்தும் எழுவகை இறுதி உடையனவாம். அவை:- 'நம:, ஸ்வதா, ஸ்வாஹா, வஷட், வௌஷட், பட், ஹூம்' என்பன. (ஹூம், பட்' - இரண்டும் ஓரிடத்தே இணைந்தும் வரும். அவ்விடத்து, 'ஹூம் பண்' என நிற்றலும் உண்டு.) 'ஏழு, இரண்டு' எனப்பட்டவை பஞ்சாக்கர பேதங்கள். மேல் 'எட்டெழுத்து' என்றதில் வித்தெழுத்து மூன்றனுள் இறுதி நின்றதை நீக்கி, இங்கு 'ஏழு' என்றார். அவ்வாறு நிற்றலும் உண்மை பற்றி. இரண்டு, சிகார வகாரங்கள். 'அறியத்தக்கது' என்பது சொல்லெச்சம்.
இதனால், மந்திரங்கள் விரிந்தும், ஒடுங்கியும் நிற்குமாறு கூறப்பட்டது.

இருக்கின்ற மந்திரம் ஏழா யிரமாம்
இருக்கின்ற மந்திரம் எத்திறம் இல்லை
இருக்கின்ற மந்திரம் சிவன்திரு மேனி
இருக்கின்ற மந்திரம் இவ்வண்ணந் தானே. *#877*

உண்மையில் உள்ள மந்திரங்கள் அளவற்றன. எந்தப் பொருட்கு மந்திரம் இல்லை! அனைத்து மந்திரங்களும் சிவனது திருமேனியே. அவற்றின் உண்மை இதுவே.

விளக்கவுரை

முன்னிரண்டடிகள், 'கற்றது கைமண்ணளவு; கல் லாதது உலகளவு' *1* என்பதுபோல, அறியப்படாது பல மந்திரங்கள் உள என்பது உணர்த்தின. சிவனுக்குத் திருமேனியாவது அவனது சத்தியேயாகலின், மூன்றாம் அடி மந்திரங்கள் சத்தியின் வடிவமாதல் குறித்ததாம். அதனானே, மந்திரங்கள் அவனது உறுப்புக்களில் நியசிக்கப்படுவதற்குக் காரணமும் கூறியதாயிற்று. 'மந்திரங்கள் சிவ சத்தியே' என்பதனை ஈற்றடி உணர்த்திற்று. மூன்றாம் அடியில், 'மந்திரம்'

என்னும் வட சொல்லின் இகரம் அலகு பெறாது நின்றது.
இதனால், மேல் 'சத்தி மந்திரமாய் நிற்கும்' எனச் சத்திமேல் வைத்துக் கூறியது, 'மந்திரங்கள் சத்தியாம்' என மந்திரங்களின்மேல் வைத்து வலியுறுத்தப்பட்டது.

தானே தனக்குத் தகுநட்டந் தானாகும்
தானே அகார உகாரம தாய்நிற்கும்
தானேரீங் காரம்அத் தத்துவக் கூத்துக்குத்
தானே உலகில் தனிநடந் தானே. ***#878***

சிவன், தானே தான் ஆடத்தக்க கூத்து வகைகளை வகுத்துக்கொள்வான்; பின்பு அக்கூத்துக்களை மந்திரங்களையே வடிவாகக்கொண்டு ஆடுவான். அக்கூத்து வகைகளுள் சத்தியின் கூத்திலும் தான் நிறைந்து நிற்பான். சில கூத்துக்களைத் தன்னுடையன வாகவே ஆடி நிற்பான்.

விளக்கவுரை

'அவனது நிலையை அறிபவர் யார்' என்பது குறிப் பெச்சம். 'அகார, உகாரம்' என்றது அவற்றை அடியாகக் கொண்டு எழும் மந்திரங்களை உணர்த்திற்று. 'ஹ்ரீம்' என்பது சத்தி பீஜம் ஆதலின் அத்தத்துவக் கூத்து சத்தியினுடையதாயிற்று. 'ரீங்காரம்' என்றது, 'அக்கூத்திற்கு மூலம்' என்றவாறு. 'தனி நடம்' என்றது, தன்னுடை யவற்றை. மூன்றாம் அடியை அகரச்சுட்டின்றி ஓதுதல் பாடம் அன்று.
இதனால், மேல், 'சிவன் திருமேனி' எனக் கூறப்பட்டதில் இடம்பெற்றுநின்ற சிவனது பெருமை கூறப்பட்டது. சத்தியின் பெருமை மேலெல்லாம் சொல்லப்பட்டது.

நடம்இரண் டொன்றே நளினமதாய் நிற்கும்
நடம்இரண் டொன்றே நமன்செய்யுங் கூத்து
நடம்இரண் டொன்றே நகைசெயா மந்திரம்
நடம்சிவ லிங்கம் நலம்செம்பு பொன்னே. ***#879***

'தனிநடம்' என மேற்குறிக்கப்பட்ட சிவ நடனம் இரு வகைத்து. ஒன்று இன்பத்தையே தரும்; மற்றொன்று துன்பத்தையே தரும். துன்பத்தைத்தருவது மறைத்தலைச் செய்கின்ற எழுத்துக்களை முதலாகக் கொண்ட மந்திரத்தையே வடிவமாகக் கொள்ளும்; இன்பத்தைத் தருவது விளக்கத்தைச் செய்கின்ற எழுத்துக்களை முதலாகக் கொண்ட மந்திரத்தையே வடிவமாகக் கொள்ளும். பின்னதனால் விளைகின்ற நலம் செம்பு பொன்னானது போல அதியற்புதம் உடையதாகும்.

விளக்கவுரை

பிரிநிலை ஏகாரங்கள் பிரித்துக் கூட்டப்பட்டன. நளினம்- இன்பம்.

நமனது செயலாகிய கொல்லுதலை 'நமன்' என்றது ஆகுபெயர். அதனின் மிக்க துன்பச்செயல் இன்மையின் அதனைக் கூறினார். இன்பம் வீடும், துன்பம் பந்தமும் ஆதல் வெளிப்படை. இக் கூத்து இரண்டும் முறையே, 'ஞான நடனம், ஊன நடனம்' எனப்படும். மறைத்தலைச் செய்யும் எழுத்துக்கள்நகார மகாரங்கள். அவை திரோதான சத்தியும், மலமுமாய் நிற்பனவாம். விளக்கத்தைச் செய்யும் எழுத்துக்கள் சிகார வகாரங்களாம். அவை முறையே சிவமும், அருட்சத்தியுமாய் நிற்பன. இவற்றான் அமையும் இரு வேறு வடிவங்களை 'ஆடும் படி கேள்', 'சேர்க்கும் துடி சிகரம்' என்னும் உண்மைவிளக்க வெண்பாக்களால் அறிக. 'நகை செய்யும் மந்திரம்' என ஓதுதல் பாடம் அன்று.
செய்யுட்கு ஏற்ப 'மந்திரம், லிங்கம்' என்றவற்றை வேறு வேறிடத்து வைத்து ஓதினாராயினும், இரண்டையும் ஈரிடத்தும் ஒருங்கோதுதல் கருத்தென்க. உருவத் திருமேனியும் 'வியத்தலிங்கம்' எனப்படுதல் அறிந்துகொள்க. 'ஒன்று நகை செயா மந்திரம்' எனவே, 'மற்றொன்று நகை செயும் மந்திரம்' என்பது தானே விளங்கிற்று. 'இரண்டு' என வந்தவை மூன்றில் முதலது பயனிலையாயும், ஏனையவை ஏழன் உருபேற்ற பெயராயும் நின்றன. உருபேற்றுத் தொடர்ந்த பெயர்களை நான்காம் அடியிலும் கூட்டிப் பொருள் கொள்க. 'செம்பு, பொன்' என்னும் உவமைகள் முறையே உயிர்க்கும், சிவத்திற்கும் ஆயின. இதனால், 'வாறே சதாசிவம்' என்ற மந்திரத்துள் குறிக்கப் பட்ட இருவகை நடனத்தின் இயல்புகளும் தெரித்துக் கூறப்பட்டன.

செம்புபொன் னாகும் சிவாய நமஎன்னில்
செம்புபொன் னாகத் திரண்டது சிற்பரம்
செம்புபொன் னாகும் சிறீயும் கிரீயும்எனச்
செம்புபொன் னான திருவம் பலமே. ***#880***

மேற்கூறிய, செம்பு பொன்னாவது போன்ற அதிசயப்பயன் மேற்கூறிய ஞானநடனத்தின் வடிவாய் அமைந்த 'சிவாயநம' என்பதை ஓதினால் கிடைக்கும். அப்பயன் உயிர்கட்குக் கிடைத்தற்பொருட்டே சிவன் அம்மந்திர வடிவைக் கொண்டான். இனி, 'ஷ்ரீம், ஹ்ரீம்' என்பன அவ்வடிவம் நிற்கும் செம்பொன் மய மான திருவம்பலமாகிய சத்தியின் எழுத்துக்களாதலின், அவற்றை ஓதினாலும் மேலை மந்திரத்திற் சொல்லிய பயன் விளைவதாம்.

விளக்கவுரை

இறுதியில் உள்ள 'செம்பு' 'செம்மை' என்றவாறு, 'ஷ்ரீயும், கிரீயும் எனச் செம்பு பொன்னாகும், அது திருவம்பலம் ஆதலால்' என்க. 'எனவும்' என்னும் எச்சவும்மை தொகுத்தல். 'ஆதலால்' என்பது சொல்லெச்சம். இதனால், மேற்கூறிய ஞானநடனத்தின் பயனை எய்துமாறு

கூறப்பட்டது.

திருவம் பலமாகச் சீர்ச்சக் கரத்தைத்
திருவம் பலமாக ஈராறு கீறித்
திருவம் பலமா இருபத்தஞ் சாக்கித்
திருவம் பலமாச் செபிக்கின்ற வாறே. #881

சக்கர வழிபாட்டில் திருவம்பலம் அமைதற்கு அச்சிறப்பினதாகிய சக்கரத்தை நெடுக்கில் ஆறு கீற்றும், குறுக்கில் ஆறு கீற்றும் கீறி இருபத்தைந்து அறைகளாகத் தோற்றுவித்து மந்திர எழுத்துக்களை உரிய முறையால் அவ்வறைகளில் பொறித்து வழிபட்டுச் செபிக்க.

விளக்கவுரை

'மந்திரமாவது இது' என்பது வருகின்ற பாட்டிற் கூறப்படும். 'திருவம்பலமாக' என்பன சொற் பொருட் பின்வரு நிலை. 'பொறித்து வழிபடுக' என்பது சொல்லெச்சம். 'பொறிக்க' என்றே ஒழிதலும் ஆம். இதனால், நடனம் நிகழும் அகண்டமான திருவம்பலத்தைக் கண்டமாகக் கண்டு வழிபடும் முறை கூறப்பட்டது.

வாறே சிவாய நமச்சிவா யந்நம
வாறே செபிக்கில் வரும்பேர் பிறப்பில்லை
வாறே அருளால் வளர்கூத்துக் காணலாம்
வாறே செபிக்கில் வருஞ்செம்பு பொன்னே. #882

மேற்கூறிய முறையால் ஞான நடனத்தின் வடிவமாகிய, 'சிவாயநம' என்னும் மந்திரத்தைப் பலகாலும், தொடரஓதிப் பயின்றால் இறப்பும், பிறப்பும் இல்லையாகும். அதற்குமுன்னே அவ்வோதுதலானே ஞானநடனத்தை நேரே காணுதல் கூடும். முன்னே சொன்ன செம்பு பொன்னானது போன்ற பயனாகிய சிவமாந்தன்மைப் பெரு வாழ்வும் கிடைக்கும்.

விளக்கவுரை

அடுக்கு, பன்முறை கூறுதலை உணர்த்திற்று. பேர், முதனிலைத் தொழிற்பெயர். பேர்தல், உயிர் ஓருடலை விட்டுப் பிறிதோர் உடலைத் தேடிச் செல்லுதல். அஃது இல்லை என்றது, 'வீடடையும்' என்னும் பொருட்டாய் நின்றது. 'பிறப்பில்லை' என்று மேற்கூறியதனை எதிர்மறை முகத்தான் வலியுறுத்தவாறு.
இதனால், மேற்கூறிய சக்கரத்தில் பொறித்தற்கு உரிய மந்திரமும், அதன் சிறப்பும் பயனும் கூறப்பட்டன. இவ் விரு மந்திரங்களால் சக்கர வழிபாடு பொதுவாக விதிக்கப்பட்டது; விளக்கம் வருகின்ற அதிகாரத்துட் கூறப்படும்.

பொன்னான மந்திரம் புகலவும் ஒண்ணாது

பொன்னான மந்திரம் பொறிகிஞ் சுகத்தாகும்
பொன்னான மந்திரம் புகைஉண்டு பூரிக்கில்
பொன்னாகும் வல்லோர்க் குடம்புபொற் பாதமே. *#883*

பொன்போலச் சிறந்ததாகிய மேற் சொன்ன மந்திரம் வாயாற் சொல்லப்படாது. அதனால், அது மேற்கூறிய சக்கரத்துள் குங்குமத்தால் பொறிக்கப்படும். அங்ஙனம் பொறிக்கப் பட்ட அது தூப தீபங்களை ஏற்று மகிழுமாயின், அவ்வாறு மகிழ்விப் போரது உடம்பு பொன்போல ஒளிவிட்டு விளங்கும். மேலும், அதனை நன்கு வழிபட வல்லவர்க்கு அதனால் விளையும் பெரும் பயன், சிவபெருமானது பொன்போலும் திருவடியை அடைதலாகும்; அஃதாவது, 'சிவனது அருள் கைவரப்பெறுதல் கூடும்' என்பதாம்.

விளக்கவுரை

பொறி, முதனிலைத் தொழிற் பெயர். கிஞ்சுகம் - முள்முருக்கு. அஃது அதனோடு நிறத்தால் ஒத்த குங்குமத்திற்கு உவம ஆகுபெயராயிற்று. குங்குமத்தால் எழுதுதல் வெட்டுவாயின்மேல் என்க. 'உடம்பு' என்பதை, 'பொன்னாகும்' என்பதன்பின்னர்க் கூட்டி வேறு தொடராக முடிக்க. 'பயன்' என்பது சொல்லெச்சமாக எஞ்சிநின்றது.

இதனால், மேலதன் வழிபாட்டுமுறை சிலவும், அதன் பயன்களுள் முதலதும் கூறப்பட்டன.

பொற்பாதம் காணலால் புத்திரர் உண்டாகும்
பொற்பாதத் தாணையே செம்புபொன் னாயிடும்
பொற்பாதங் காணத் திருமேனி யாயிடும்
பொற்பாதம் நன்னடஞ் சிந்தனை சொல்லுமே. *#884*

திருவருள் கைவரப் பெறுதலால் சிவனுக்கு மைந்தராம் தன்மை உளதாகும்; 'செம்பு பொன்னாதல் போல்வது' என மேலெல்லாம் சொல்லிவந்த சிவமாம் தன்மையும் கிடைக்கும். அதனால், மாயாகாரிய உடம்பும் சிவனது அருள்மயமான உடம்பாய்விடும். ஞான நடனத்தின் உண்மை தெளிவாகும்.

விளக்கவுரை

இதனுள்ளும் பொருட் பின்வருநிலையணி வந்தமையின், முதலடியில் 'காணலாம்' என ஓதுதல் பாடம் அன்று. 'புத்திரர்' என்பது பொருளாகுபெயராய் அவரது பண்பின்மேல் நின்றது. அங்ஙனமன்றாயின், 'உண்டாகும்' என்பதனோடு இயை யாமை அறிக. 'ஆணையாலே' என உருபு விரிக்க. ஈண்டும் 'செம்பு பொன்னாயிடும்' என ஒட்டணியாக ஓதியது, 'இவ்வுலகில் உண்மை யாகவே செம்பைப் பொன்னாக்குதல் முதலிய சித்திகளாகிய இடை நிலைப் பயனும் கூடும்'

என்பதும் தோன்றுதற்பொருட்டு. புத்திரராந் தன்மை பெறுதற்கு முத்தினாலான சிவிகை, சின்னம் முதலிய சிறப்புக்களைப் பெற்று ஞானாசிரியத் தன்மைபெற்று விளங்கிய ஆளுடைய பிள்ளையாரிடத்தும், செம்பு பொன்னாவதற்குச் செங்கல் பொன்னாகவும், ஆற்றிலிட்ட பொன் குளத்திற் கிடைக்கவும், தம்மை வழிபட்ட பெருமிழலைக் குறும்பர்க்குச் சிவயோகம் எளிதில் கூடவும் பெற்று விளங்கிய ஆளுடைய நம்பிகளிடத்தும் எடுத்துக்காட்டுக் கண்டுகொள்க. அவ்விருவரையும் திருவருள் கைவரப் பெற்றமை மாத்திரத்திற்கு ஒப்புமைகொள்க. நான்காம் அடியில், 'பொற்பாதம் சொல்லும்' என இயையும். 'நடஞ் சிந்தனை' என்பது தொழிற் பெயரொடு தொக்க இரண்டாவதன் தொகை. 'சிந்தனை' என்பது அதன் முடிவின்மேல் நின்றது.

இதனால், திருவருளால் மக்கள் எய்தும் பயன்கள் வகுத்தோதப்பட்டன.

சொல்லும் ஒருகூட்டில் புக்குச் சுகிக்கலாம்
நல்ல மடவாள் நயந்துட னேவரும்
சொல்லினும் பாசச் சுடர்ப்பாம்பு நீங்கிடும்
சொல்லும் திருக்கூத்தின் சூக்குமந் தானே. *#885*

(இம்மந்திரம் இருபொருள் கொள்ள நிற்பது) ஓர் உரை:- தான் நிற்கும் உடல் துன்பம் உடையதாயும், மற்றோர் உடம்பு இன்பம் உடையதாயும் எவ்வகையாலேனும் தோன்றினால் நிற்கும் உடம்பை விட்டுத் தான்விரும்பிய வேறோர் உடம்பில் புகுந்து இன்புறலாம்; இல்லறத்தில் நிற்க விரும்பினால் நல்ல மனையாள், தன்னை விரும்பி விரைவில் வந்து அடைவாள்; மாணிக்கத்தைக் கொண்டு விளங்கும் கொடிய நாகமும் தான் சொல்லிய அளவில் கட்டுண்டு அகலும். மேற்சொல்லிய திரு வம்பலச் சக்கரத்து வழிபாட்டின் மறைபொருள் *(இரகசியம்)* இது.

விளக்கவுரை

'ஒரு கூடு' என்பதை எடுத்தல் ஓசையாற் கூறி இப்பொருள் காண்க. இப்பயனுக்கு எடுத்துக்காட்டாக இந் நாயனாரையே கொள்ளலாம். 'மனம் சொல்லும் ஒரு கூடு' என்க. 'பாசம்' என்பது 'கட்டு' என்னும் பொருளதாய் 'கட்டுட்பட்டு' எனப் பொருள் தந்துநின்றது. சுடர், ஆகுபெயர். 'திருக்கூத்து' என்றது தானியாகு பெயராய் அது நிகழும் இடத்தின்மேல் நின்று, இடஇயை பால் மேற்குறித்த சக்கரத்தைக் குறித்தது. சூக்குமம் - மறைப் பொருள்.

மற்றோர் உரை:- சிறப்பித்துச் சொல்லப்படும் திருவருளாகிய அவ்வுறைக்குள்ளே தனது சீவபோதமாகிய வாள் புகுந்து அடங்கி நிற்றலால், சிவானந்தத்தைத் துய்க்கலாம். அப்பயன் உண்டாகும்படி திரோதான சத்தி நீங்க அருட்சத்தி தன்னை விரும்பி வந்து விரைவில்

தன்னிடத்தில் பதியும். திருவைந் தெழுத்தை ஓதுதலானே கொடிய நாகம் போல்வதாகிய ஆணவம் வாதனையும் கெட்டுப் பற்றறக் கழியும். *(நான்காம் அடிக்கு மேற்கூறியவாறே உரைக்க.)*
இங்கு, 'கூடு' என்றதை, 'கூட்டில் வாள் சார்த்தி நின்றுந் தீபற' என்னும் திருவுந்தியார் *(30)* பகுதியொடு வைத்து உணர்க. தனது போதம் புகுதலை ஒற்றுமை பற்றித் தானே புகுதலாகக் கூறினார். அருட்சத்தி என்பது விளங்குதற்கே, 'நல்ல மடாவள்' என்றார். பாசப் பாம்பு, உருவகம். இவ்விருவகைப் பயனையும் அவரவர் தகுதிக்கு ஏற்பக் கொள்க.
இதனால், மேற்கூறிய வழிபாடு புத்தி, முத்தி இரண்டனையும் தருவதாதல் கூறப்பட்டது.

சூக்குமம் எண்ணா யிரஞ்செபித் தால்உம் மேல்
சூக்கும மான வழிஇடைக் காணலாம்
சூக்கும மான வினையைக் கெடுக்கலாம்
சூக்கும மான சிவனதா னந்தமே. ***#886***

மறைவாகச் சொல்லப்படும் மொழியாகிய மேற் சொன்ன மந்திரத்தை இடைவிடாது செபித்தால் உங்கள் தலைமேல் உள்ள நுண்ணிய வழியை அச் செபத்திற்கு இடையே காணுதல் கூடும். அதனால், முன்னே முகந்து கொண்டதனால் நுண்ணியதாய்ப் பொருந்தி நிற்கின்ற பிராரத்த வினையையும் அழிக்க இயலும். அதனை அழிக்கவே, உயிரிடத்து விளைவதாகிய சிவானந்தம் வெளிப்படும்.

விளக்கவுரை

வழி, பிரமரந்திரம். இது ஆதார யோகத் தினின்றும் நிராதாரத்திற்குச் செல்லும் வழியாதல் பற்றி 'வழி' எனப் பட்டது. சஞ்சிதம் ஞானிகட்கு முன்பே கெடுக்கப்பட்டமையானும், யோகி யர்க்கு இனி வேறோராற்றால் கெடுக்கப்படுமாகலானும் இங்கு 'வினை' என்றது பிராரத்தத்தையே. அது முகந்துகொள்ளப்பட்ட நிலையில் சூக்குமமாய் நின்று, பயன் தருங்கால் தூலமாய் வந்து பொருந்தும். ஆதலின், 'சூக்குமமான வினை' என்றார். இம் மந்திரம் ஞானியர்க்கும், யோகியர்க்கும் பொதுப்பட ஓதப்பட்டமையின், 'வழி காணுதல், வினையைக் கெடுத்தல்' என்பவற்றை உடனே வீடுபெற விரும்புவார்க்கு, தலையைப் பிளந்துகொண்டு உடலை விட்டு நீங்கும் வழியாகவும், பிராரத்தத்தை நசிக்கச் செய்தலாகவும், சீவன் முத்தர்க்கும், யோகியர்க்கும் முறையே ஆதார யோகத்திலிருந்து நிராதார யோகத்திற் செல்லும் வழியாகவும், பிராரத்தத்தை மெலி வித்து உடல்ஊழாய் ஒழியவும், யோகத்தைத் தடுக்காது நீங்கவும் செய் தலாகவும் விளக்க. சிவானந்த வெளிப்பாடும் முறையே பரமுத்தி யிலும் சீவன் முத்தியிலும்,

யோக சமாதியிலும் நிகழ் வனவாகவும் கொள்க.
இதனால், மேற்கூறிய வழிபாடு வீட்டு நெறி நிற்பார்க்கும் உதவுவதாதல் சிறந்தெடுத்துக் கூறப்பட்டது.

ஆனந்தம் ஆனந்தம் ஒன்றென் றறிந்திட
ஆனந்தம் ஆஈஊ ஏஓம்என் றைந்திட
ஆனந்தம் ஆனந்தம் அஞ்சும்அ தாயிடும்
ஆனந்தம் ஆம்ஹிரீம் ஹம்க்ஷம்ஹாம் ஆகுமே. *#887*

'சிவானந்தம் ஒன்றே ஆனந்தம்' என்று உணர, அவ்வானந்தம் விளைவதாம். 'ஆ, ஈ, ஊ, ஏ, ஓம் என்னும் ஐந்தெழுத்துக்களை அச்சக்கரத்தில் இட்டுச் செபிக்க அவ்வானந்தம் மிக விளையும். அந்த ஐந்தெழுத்துத் தொடரே' திருவைந்தெழுத்துத் தொடருமாம். இனி, அம், ஹ்ரீம், ஹம், க்ஷம், ஹாம்' என்னும் ஐந்தைத்தாமும் மேற்கூறிய 'ஆ' முதலிய ஐந்திற்கு ஈடாகவும், திருவைந்தெழுத்திற்கு ஈடாகவும் கொள்ளலாம்.

விளக்கவுரை

முதலடியில் இரண்டாவதாக நின்ற ஆனந்தம்', சிவானந்தத்தைச் சிறப்பு வகையாற் குறித்தது. 'ஒன்றே' என்னும் தேற்றேகாரம் தொகுத்தல் பெற்றது. மூன்றாம். அடியில் பெயர்ப் பயனிலையாய் நின்ற அடுக்கு, மிகுதி குறித்து நின்றது. 'ஆ' முதலிய ஐந்தும் மகாரத்தைக் கூட்டியும், கூட்டாதும் ஓதப்படும் என்பது உணர்த்துதற்கு முதல்நான்கனை மகாரம் இன்றியும், இறுதியதை மகாரம் கூட்டியும் ஓதினார் 'அது அஞ்சும் ஆயிடும்' என மாற்றிக்கொள்க. ஈற்றடியில் நின்ற 'ஆனந்தம்' அதனைத் தருவதாய மந்திரத்திற்கு ஆகி, எழுவாயாய் நின்றது. இவ்வடியில் மூன்றாவதாக நிற்கும் எழுத்தையும் 'அம்' என ஓதுதலும், இரண்டாம் நான்காம் அடிகளிலும் அடுக்கிவர ஓதுதலும் பாடமாகா.
இதனால், மேற்கூறிய வழிபாட்டில் செபித்தற்கு உரிய மந்திரங்கள் இவை என்பது கூறப்பட்டது.

மேனி யிரண்டும் விலங்காமல் மேற்கொள்ள
மேனி யிரண்டும்மிக் கார்அவி காரியாம்
மேனி யிரண்டும்ஊ ஆஈஏ ஓ என்னும்
மேனி யிரண்டும்ஈ ஓஊஆ ஏகூத்தே. *#888*

மேலை மந்திரத்தில் உயிரெழுத்துக்களாகவும், திருவைந்தெழுத்தாகவும் சொல்லப்பட்ட இருவகை மந்திரங்களும் சிவனது திருமேனிகளாய் நிற்றற்கு உரியனவாம். அவற்றைப் பிழை யின்றி ஓதுதலைச் செய்தால், சிவனது திருமேனி திரிபின்றி அமையும். இனி அவ்விருவகை மந்திரங்களையும் இருவேறு வகையாக மாற்றி உச்சரிக்க, இறைவனது இருவகை நடனங்களும் அமைவனவாம்.

விளக்கவுரை

'அவிகாரி' என்றது பன்மை ஒருமை மயக்கம். மேலை மந்திரத்தில் தமிழ் உயிர் நெட்டெழுத்து ஏழில் 'ஐ, ஔ' என்னும் இரண்டை ஒழித்து ஏனைய ஐந்தும் முறைப்படியே கூறப் பட்டன. அதனால், அவை மேல், 'வாறே சிவாய நம' *(888)* எனக் குறித்த முறையில் அமைந்த மந்திரத்தில் முறையே சிகாரம் முதலிய ஐந்திற்கும் ஈடாக அமைதல் அறியப்படும். அதனானே, மேலை மந்திரத்து இறுதி அடியிற் சொல்லிய 'அம்' முதலிய ஐந்தும் அம் முறையில் அமைதலும் பெறப்படும். படவே, இம்மந்திரத்து மூன்றாம் அடியில் ஓதியவாறு உச்சரிக்க ஞான நடனமும், நான்காம் அடியில் ஓதியவாறு உச்சரிக்க ஊன நடனமும் நிகழ்வனவாம் என்க. மேலை மந்திரத்துள் இரண்டாம் அடியிற் கூறியன தமிழ் கூறுவார்க்காகவும், நான்காம் அடியில் கூறியன ஆரியங் கூறுவார்க் காகவும் என்க. பரதகண்டத்தில் இவ்விரண்டல்லாத பிறமொழிகள் சிறப்பிலவாதல் அறிக. இவை இருதிற எழுத்துக்களும் சங்கேத மாத்திரமாய் நிற்பனவன்றிச் சொற்கு உறுப்பாய் எழுத்தாந் தன்மை யிலவாகலின், இருதிறத்தாரும் 'சிவாய நம' என்பதை ஓதுதலே சிறப்பு என்பது கருத்து.

இதனுள், ஞானநடன மந்திரத்தில் ஆன்மஎழுத்தை முன்னர் எடுத்து அது இறையெழுத்தோடு புணரவும் இறை அருளோடு புணரவும், அருள் திரோதானத்தோடு புணரவும், திரோதானம் மலத்தோடு புணரவும் வைத்தல் அறிக. இறுதியில் நின்ற மல எழுத்து, பின் ஆன்மாவோடு புணரும்நிலை உள்ளதாயினும், அது வேறு உருவாகலானும், ஆன்மா இறையை நோக்கிச் செல்லுதலானும் அவ்விடத்து மலம் ஆன்மாவைப் பற்ற மாட்டாமை அறிக.

இனி ஊன நடன மந்திரத்தில் அருளை முன்னர் எடுத்து அது மலத்தோடு புணர்ந்து தோன்றாது நிற்கவும், அந்த மலம் ஆன்மா வோடு புணரவும், ஆன்மா சிவத்தோடு புணரினும் அந்தச் சிவம் அருளோடு புணராது திரோதானத்தோடு புணர்ந்து பந்தத்தை நிகழ்த்துவதாகவும் வைத்தல் அறிக. இவ்இருமுறையும் மேலை மந்திரத்துட் கூறிய மூவகை எழுத்திற்கும் கொள்க. 'என்னும்' என்பதும், 'கூத்தாம்' என்பதும் ஏனை இடங்களிலும் சென்று இயையும்.

இதனால், மேற்சொல்லிய மந்திரங்கள் இருவகை நடனத் திலும் நிற்குமாறு கூறப்பட்டது. 'சுத்த மானதம்' என்னும் அறிவாற் கணித்தலாகிய ஞானநிலைக்குத் திருவைந்தெழுத்து ஒன்றே மந்திர மாகவும் அஃது ஒன்றே அந்த ஞானத்தின் படிநிலைக்கு ஏற்ப வேறு வேறு நிலையில் நிற்பதாகவும் சொல்லப்படுமாகலின், இங்குக்கூறிய இம்முறைகள் வழிபாட்டு நிலையில் நின்று பயன்பெறுதற்கு உரியன

என உணர்க.

கூத்தே சிவாய நமமசி யாயிடும்
கூத்தே, ஈஊ ஆ ஏஓசி வாய நமஆயிடும்
கூத்தேஇ, உஅஎ ஒசி வயநம வாயிடும்
கூத்தேஈ, ஊஆஏ ஓநமசி வாயகோள் ஒன்றுமே. **#889**

மேற்கூறிய இருவகை நடனங்களுள் ஞான நடனம், 'சிவாயநம' என்பதனாலேயும் அமையும். அம் மந்திரம் இவ்வாறு தனியாக உச்சரிக்கப் படுதலேயன்றி ஈம், ஊம், ஆம், ஏம், ஓம் என்னும் வித்தெழுத்துக்களுள் ஒன்றேனும் பலவேனும் கூட்டியும் உச்சரிக்கப்படலாம். இனி, மேற்கூறிய அவ்வெழுத்துக்கள் நெடிலாய் இல்லாமல் குறிலாய் நிற்கவும் கொண்டு உச்சரித்தற்கு உரியன. 'சிவாய நம' என்னும் சூக்கும பஞ்சாக்கரமே நகாரம் முதலாய தூல பஞ்சாக்கரமாய் நிற்குமாதலின் அது ஊன நடனத்திற்கு உரியதாய் மேற்கூறியவாறே வித்துக்களைக் கூட்டாதும், கூட்டியும் உச்சரிக்கப் படும்.

விளக்கவுரை

தேற்றேகாரங்களைப் பிரித்துத் திருவைந்தெழுத்து மந்திரத்தின் பின்னர்க் கூட்டிப் பொருள் கொள்க. ஏற்புழிக் கோடலால் ஈற்றில் உள்ள கூத்து ஊன நடனமாகவும் ஏனைய மூன்றும் ஞான நடனமாகவும் கொள்ள நிற்றல் அறிக. கூறியது கூறலாகவும், பின்னர்த் திருவைந்தெழுத்துக் குறிலாக வருவதனோடு இயையாதனவாகவும் மூன்றாம் அடியிலும் உயிரெழுத்துக்களை நெட்டெழுத்தாக ஓதுதலும், நான்காம் அடியில் முதல் உயிரைக் குற்றெழுத்தாக ஓதுதலும் பாடம் ஆகாமை அறிந்து கொள்க. 'சிவாயநம' என்பதைத் திரும்பத் திரும்ப ஓதினால் மகாரம் சிகராத்தோடு புணரும் நிலை உண்டாகும், உண்டாயினும் அதனால் தீங்கில்லை என்றற்கு 'மசி' என்பதையும் முதலடிக்கண் கூறினார். 'வாயிடும்' என்பது பாடம் அன்று. திருவைந்தெழுத்தைப் பீசங்களோடு கூட்டாதது 'நிர்ப்பீசம்' என்றும், கூட்டுவது 'சபீசம்' என்றும் சொல்லப்படும். சபீசம் உயர்ந் தோர்க்கே உரியன; நிர்ப்பீசம் பிறர்க்கும் உரியன. இப் பீசங்களை மேலை மந்திரத்திற் கூறிய முறையாற் கூறாது வேறுபட ஓதினார், அவை திருவைந்தெழுத்தோடு கூட்டப்படுங்கால் முன்னவை இரண்டினும் பார்க்கப் பின்னவை மூன்றும் திருவைந்தெழுத்தோடு இயையக் கூட்டுதல் பெரும்பான்மை என்பது உணர்த்துதற்கு. உகார ஊகாரங்கள் 'ஔ' என்னும் நெட்டெழுத்தாய்ப் பரிணமிக்கின், அதுவும் பெரும்பான்மையதாம் என்க. கோள் ஒன்றும் - பீசங்களைத் திருவைந்தெழுத்துக் கொள்ளுதலைப் பொருந்தும். முதலடி ஒழிந்த

அடிகளில் 'கூத்தே' என்பன கூனாகி நின்றன.
இதனால், திருவைந்தெழுத்தைச் சபீசமாகக் கூறும் முறை கூறப்பட்டது.

ஒன்றிரண் டாடஓர் ஒன்றும் உடனாட
ஒன்றினில் மூன்றாட ஓரேழும் ஒத்தாட
ஒன்றினா லாடஓர் ஒன்ப துடனாட
மன்றினில் ஆடினான் மாணிக்கத் கூத்தே. ***#890***

ஒன்று முதலாவது; சிவதத்துவம், இரண்டு இரண்டாவது; சத்தி தத்துவம், ஓர் ஒன்று, சத்தி தத்துவத்தின்பின் அடுத்தடுத்து நிற்கின்ற ஒன்றும், ஒன்றும்; சாதாக்கிய தத்துவமும், ஈசுர தத்துவமும். ஒன்றினில் மூன்று. ஈசுர தத்துவத்தை அடுத்துள்ள சுத்த வித்தியா தத்துவத்தில் 'அரன், அரி, அயன்' என்பவரது அதிட்டானங் களாகிய மூன்று. ஓர் ஏழு, இந்த ஏழும். ஒன்பது, இவற்றுடன் இவற்றிற் கெல்லாம் மேலே உள்ள நாத விந்துக்கள் கூடிய அனைத்துத் தத்து வங்களும். ஒன்றினால் ஆட - அவை அனைத்தும் அங்ஙனம் ஆடல் மூர்த்தமாகிய ஒன்றினாலே ஆடும்படி இறைவன் மன்றினில் மாணிக்கக் கூத்து ஆடினான்.

விளக்கவுரை

'ஒன்பது உடனாட' என்பதை, 'ஒன்றினால் ஆட' என்றதற்கு முன்னே கூட்டுக. 'இறைவன்' என்பது தோன்றா எழு வாயாய் நின்றது.
மாணிக்கக் கூத்து - மாணிக்கம் போல வரம்பறிய லாகாத தாண்டவம்.
ஒன்பது தத்துவங்களும் ஆடுதல், (செயற்படுதல்) சம்புபட்சமாயாதல், அணுபட்சமாயாதல் அவ்வப்பெயர் பெற்று நிற்கும் முதல்வராகலாம் ஆதலின், 'ஆட, ஆட' என வந்தன பலவும் அவர்கள் ஆடலின் வழியாடலேயாம் என்க. எனவே, அனைத்து முதல்வர்களது ஆடற்கும் இவ் ஒரு மூர்த்தத்தின் ஆடலே முதலாதல் அறியப்படும். 'மாகேசுர மூர்த்தங்களில் ஒன்றாக எண்ணப்பட்ட வடிவத்தையுடைய கூத்தப்பிரானின் வேறாய்ச் சிவதத்துவத்தில் இலய நிலையில் நிற்கும் கூத்தப் பிரான் ஒருவர் உளர்' என மகுடாகமம் கூறுகின்றது.
தத்பரம் சிவதத்வம் ச பூஜயேத் ஞான மூர்திகம்
ஸர்வகாரண தேவேசம் த்யாத்வா தாண்டவ மீச்வரம்
ஆவாஹயேத் ததோ தேவம் புஷ்பஹஸ்தம் ஸுகாஸந:
இவர் இருக்கும் இடமே இருக்கு வேதத்தில் சொல்லப்பட்ட பரம வியோமம் என்பதும், பிருகதாரணியத்தில் சொல்லப்பட்ட இருதய ஆகாசம் என்பதுமாம் எனவும், இதுவே தமிழில் திருச்சிற்றம்பலம் எனப்படுகின்றது எனவும் இதனால், மேற்கூறிய இடங்களில் முறையே 'பிரபஞ்ச அத்தியட்சகர்' என்றும்; 'ஈசானர்' என்றும் சொல்லப் பட்டவர் சிவதத்துவத் தாண்டவேசுரரே எனவும் கொள்ளப் படுகின்றன.
ஆதலால், இங்கு 'மன்று' (திருச்சிற்றம்பலம்) எனப் பட்டது

பரமவியோமமும் அதன்கண் ஆடுவார் சிவதத்துவத் தாண்டவேசுரரும் எனவே கொள்க. *'அருமறைச் சிரத்தின் மேலாம் - சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம்பலம்' 1* என்ற சேக்கிழார் வாக்கும் இங்கு நினைவுகூரத்தக்கது.

6.2. திருவம்பலச் சக்கரம்

இருந்தஇவ் வட்டங்கள் ஈரா றிரேகை
இருந்த இரேகைமேல் ஈரா றிருத்தி
இருந்த மனைகளும் ஈராறு பத்தொன்
றிருந்த மனையொன்றில் எய்துவன் தானே. ***#891***

மந்திரங்களைச் செபிக்கும் முறைகளுள் ஒன்றாதல் பற்றி மேலையதிகாரத்துள் பொது வகையாகக் கூறப்பட்ட திருவம்பலச் சக்கரத்தின் இயல்புகளை இனி இவ்வதிகாரத்துள் எண்பத்தொன்பது திருமந்திரங்களால் கூறுகின்றார்.

சக்கரங்கள் பலவற்றில், நெடுக்கும், குறுக்குமாகப் பன்னிரு, பன்னிரு கீற்றுக்கள் கீற, நூற்றிருபத்தோர் அறைகளாக அமைகின்ற சக்கரத்தில் கூத்தப் பெருமான் விளங்கித் தோன்றுவான்.

விளக்கவுரை

'வட்டங்களுள்' என ஏழாவது விரித்து, அதனை, 'ஒன்றில் எய்துவன்' என்பதனோடு முடிக்க. 'தான்' என்றது மேலை மந்திரத்தில் 'ஆடினான்' எனப்பட்டவனைக் குறித்தல் வெளிப்படை. 'இருத்தி' என்பதை முதலடியின் இறுதியிலும் கூட்டி பின், 'அவ்வாறிருந்த' என உரைக்க. ஈராறு - பன்னிரண்டு; பன்னிருபத்து - நூற்றிருபது; அதனுடன் ஒன்று சேர்க்க நூற்றிருபத்தொன்றாகும்.

இதனால், திருவம்பலச் சக்கரத்துள் ஒன்றனை வரையுமாறு கூறப்பட்டது. பிறவற்றை வருகின்ற மந்திரங்களுள் கூறியருளுவார்.

தான்ஒன்றி வாழ்இடம் தன்னெழுத் தேயாகும்
தான்ஒன்றும் அந்நான்கும் தன்பேர் எழுத்தாகும்
தான்ஒன்று நாற்கோணம் தன்ஐந் தெழுத்தாகும்
தான்ஒன்றி லேஒன்றும் அவ்அரன் தானே. ***#892***

தான்மேலே குறிக்கப்பட்ட பெருமான், ஒன்றி வாழ்தல், நடுவிடத்தை ஒட்டியிருத்தல். தன் எழுத்து சிகாரம். தன்பேர் எழுத்து, தனது திருப்பெயராகிய மூல மந்திர எழுத்துக்கள். அவற்றுள் சிகாரமாகிய ஒன்று முன்னே கூறப்பட்டமையின், இவை ஏனைய நான் கெழுத்துக்களாம். நாற்கோணம், நான்கு திசைகளிலும் இடை வெளி யாய் நீண்டு, நான்கு மூலைகளிலும் ஒவ்வொரு சக்கரத்தைப் பிரித்து நிற்கும் நேர்க்கோட்டு அறைகள். அவைகளில் ஐந்தெழுத்துக் களும் சிகாரம் முதலாக அமையும். ஒன்றிலே ஒன்றுதல், நடுவண தாகிய ஓர் அறையிலே பொருந்துதல். அரன், 'ஹர': என்னும் மந்திரம். இஃது 'ஓம்' என்பதனை முன்னர்க்கொண்டு நிற்கும் என்பது ஆற்ற லால் விளங்கும்.

விளக்கவுரை

இடத்தில் நிற்பவற்றை 'இடம்' என்றார். 'அந்நான்கு' என்றதும், 'எஞ்சிய நான்கிடங்களில் நிற்கும் எழுத்துக்கள்' என்றதேயாம். 'அவ்வரன்' என்பதில் அகரம் பண்டறிசுட்டு. 'அரன்' என்னும் சொல் இங்குத்தன்னையே குறித்து நின்றது. ஈற்றில் நின்ற 'தான்', அசை. ஏகாரம், 'அரனாகிய' எனத் தேற்றமாயிற்று. இனி இச்சக்கரத்தைப் புலப்படக் காணுமாறு கீழே காண்க.
பெருந்திசை நான்கில் நான்கு சிகாரங்களும், கோணத்திசை (மூலை கள்) நான்கில் நான்கு சிகாரங்களும் உள்ளன. அவற்றை முதலாகத் தொடங்கி, 'சிவாயநம' என ஓதுதல் வேண்டும். அங்ஙனம் ஓதுங்கால் பெருந்திசையில் உள்ள சிகாரம் ஒவ்வொன்றும் இருமுகமாகத் தொடர் தலும், கோணத் திசையில் உள்ள சிகாரம் ஒவ்வொன்றும் மூன்று முகமாகத் தொடர்தலும் காணலாம். ஆகவே, அவற்றைக் கிழக்கு முதலாகத் தொடங்கி வட கிழக்கில் மூன்று முகமும் ஓதி முடித்தால், இருபது *(20)* உருச் செபித்தலாகும். அவ்வாறு ஐந்து முறை திரும்பத் திரும்ப ஓதி, அதன் பின்னர்ப் பெருந்திசை முதலாக மட்டும் தொடங்கி ஓதி முடித்தால், நூற்றெட்டு *(108)* உருச் செபிக்கப்பட்டு முடியும். ஐம்பது முறை முற்ற ஓதி, இறுதியில் மேற்சொன்னவாறு பெருந் திசையில் தொடங்கிமட்டும் ஓதி முடித்தால், ஆயிரத்தெட்டு *(1008)* உருச் செபிக்கப்பட்டு முடியும். சித்தி பெறும் வரையில் இவ்வாறே இச்சக்கரத்தை வழிபட்டுப் பலமுறை ஓதுதல் செய்யத்தக்கதாம்.

அரகர என்ன அரியதொன் றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப் பன்றே. **#893**
இதன் பொருள் வெளிப்படை

விளக்கவுரை

இதனால், மேற்குறித்த சக்கரத்தின் நடுவண் நிற்கும் 'ஹர': என்னும் மந்திரத்தின் சிறப்புக் கூறப்பட்டது. சிவனுக்கு இப்பெயர் பாசங்களைப் போக்குபவனாதல் பற்றி வந்தது. மெய்கண்ட தேவரும் தமது நூலுள் *1* இப்பெயரையே சிறந்தெடுத்தோதினார். 'சிவன்' என்னும் பெயரது சிறப்பே இதுகாறும் கூறிவந்தமையின், இதனை இங்குக் கூறல் வேண்டினார்.

எட்டு நிலையுள எங்கோன் இருப்பிடம்
எட்டினில் ஒன்றும் இருமூன்றும் ஈரேழும்
ஒட்டிய விந்துவும் நாதமும் ஓங்கிடப்
பட்டது மந்திரம் பான்மொழி பாலே. **#894**

எட்டுநிலை, மேற்காட்டிய சக்கரத்துள் நடு அறையைச் சுற்றியுள்ள

அறைகள். அவற்றில் சிகாரம் நிற்றல் மேலே கூறப்பட்டது. அவ்வெட்டில் கோணத்திசை (மூலைகள்) நான்கும் ஒழித்து எஞ்சிய நான்கிற்கும் நேர் நேராக நடு அறையுள் மேலைச் சக்கரத்தில் உள்ள 'ஹர': என்பதை நீக்கி ஹூம், ஹௌம், ஹம், ஹ: என்பவற்றைப் பிரணவத்திற்கு மேலே பொறிக்கப் பெருமானோடு, பெருமாட்டிக்கும் உரிய சக்கரமாய் விளங்கும்.

விளக்கவுரை

இருமூன்று, ஆறாவது உயிரெழுத்து; ஊ. ஈரேழு, பதினான்காவது உயிரெழுத்து; ஔ. இவை தனியாய் நிற்றலேயன்றி, மேற்காட்டியவாறும் நின்று பீசங்களாம். விந்து, அம். நாதம், அஃபான்மொழி, சத்தி. 'ஓங்கிட மந்திரம்பான்மொழி பாலேபட்டது' என வேறு தொடராக்குக.
இதனால், மேற்காட்டிய சிவ சக்கரம் சிவம் சக்திகளது சக்கரம் ஆமாறு கூறப்பட்டது.

மட்டவிழ் தாமரை மாதுநல் லாளுடன்
ஒட்டி யிருந்த உபாயம் அறிகிலர்
விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
கட்டவல் லார்உயிர் காக்கவல் லாரே. ***#895***

தேனோடு மலர்கின்ற இதயத் தாமரையுள் சிவன் அருட் சத்தியுடன் எழுந்தருளியிருக்கும் முறையை மக்கள் அறி கின்றார்களில்லை. அதனை அறிந்து பாசங்களை நீக்கி விட்ட ஆன்ம எழுத்தைச் சிவத்தை ஒருபோதும் விட்டு நீங்காத அருளெழுத்துடன் பிணைக்கவல்லவர் உளராயின், அவரே தம்மைப் பிறவிக்கடலில் வீழ்ந்து அழியாமல் காத்துக்கொள்ள வல்லவராவர்.

விளக்கவுரை

மேற்கூறிய சக்கரத்தில் நடுவண் நிற்கும் ஓர் அறை இதயத் தாமரையாக அறியத்தக்கது என்பது முதலிரண்டடிகளில் குறிப்பாற் கூறப்பட்டது. அவ்வறையைச்சூழ எல்லா இடத்தும் சிகாரம் நிற்றலைச் சிவன் சத்தியோடு ஒட்டியிருத்தலாகக் கூறினார். பின் இரண்டடிகளால் மேல், 'தானொன்றும் அந்நான்கும் தன்பேரெழுத் தாகும்' *(898)* எனக் குறித்ததை, 'வாயநம' என, எழுத்து இவை என்ப தும், அவை பொறிக்கப்படும் முறையும் இனிது விளங்கக் கூறினார். இச்சக்கரத்தில் உள்வட்டம் மூன்றும் அக வட்டங்களும், வெளி வட்டங்கள் இரண்டும் புறவட்டங்களும், ஆதலின், பாச எழுத்துக்கள் புறவட்டத்திலும், அவற்றுள்ளும் மல எழுத்து விளிம்பு வட்டத்திலும் நிற்பவாயின என்க. தேன், இதயத்தாமரையில் சிவானந்தமாம்.

ஆலய மாக அமர்ந்தபஞ் சாக்கரம்
ஆலய மாக அமர்ந்தஅத் தூலம்போய்
ஆலய மாக அறிகின்ற சூக்குமம்
ஆலய மாக அமர்ந்திருந் தானே. *#896*

இறைவன் தனக்கு இடமாக விரும்பி எழுந்தருளி யிருக்கின்ற திருவைந்தெழுத்து, முதற்கண் அவன் அங்ஙனம் எழுந் தருளியிருந்த தூல நிலை போகப் பின்பு அவனுக்கு மிக உவப்பான இடமாக அறியப்படுகின்ற சூக்கும நிலையைத் தனக்கு இடமாகும்படி கொண்டு அதன்கண் மிக விரும்பி எழுந்தருளியிருக்கின்றான்.

விளக்கவுரை

'ஆகையால், இந்தச் சூக்கும பஞ்சாக்கரமே திருவம் பலச் சக்கரத்துள் கொள்ளப்படுவதாயிற்று' என்பது குறிப்பெச்சம்.
எனவே, இதனால், 'மேற்கூறிய சக்கரத்தில் தூல பஞ்சாக் கரமும் கொள்ளத் தக்கதோ, அன்றோ' என எழும் ஐயத்தினை அறுத்த தாம்.
இதனானே, இது சூக்கும திருவம்பலச் சக்கரம் ஆதலும் பெறப் பட்டது.

இருந்தஇவ் வட்டம் இருமூன் றிரேகை
இருந்த அதனுள் இரேகைஐந் தாக
இருந்த அறைகள் இருபத்தஞ் சாக
இருந்த அறை ஒன்றில் எய்தும் மகாரமே. *#897*

இறைவன் அமர்ந்திருக்கின்ற மேற்சொல்லிய சக்கரத்தில் இருபத்தைந்து அறைகள் அமைந்துள்ள ஒரு பகுதியைத் தனியாக வாங்கித் தனிச்சக்கரமாகக் கொண்டு, அதன் நடுவிடத்தில் மகாரத்தைப் பொறிக்க.

விளக்கவுரை

எஞ்சிய அமைப்பு முறைகளை அடுத்த மந்திரத்தில் கூறி முடிப்பார்.
நூற்றிருபத்தொன்றாகக் காணப்படும் மேற் சொல்லிய சக்கர அறைகள் ஒன்று இருபத்தைந்து அறைகளாக அமைந்த நான்கு சக்கரங்களின் கூட்டாக அமைந்திருத்தலின் 'அவற்றுள் ஒன்றை மட்டும் கொள்க' என்பார், அதுதானே பிறிதொரு சக்கரமாதலை உணர்த்தற்பொருட்டுச் செய்முறையை விரித்துக் கூறினார் என்க.

மகாரம் நடுவே வளைத்திடும் சத்தியை
ஒகாரம் வளைத்திட் டுப்பிளந் தேற்றி
யகாரம் தலையா இருகண் சிகாரமா
நகார அகாரம்நற் காலது வாமே. *#898*

மேற்சொல்லியவாறு நடுவே பொறிக்கப்பட்ட மகாரத்தைச் சூழ வகாரத்தைப் பொறியுங்கள்; பின்பு அவ்விரண் டையும் ஒகாரத்தால்

வளைத்து, அவ் ஒகாரத்துள் உகாரத்தைத் தொடங்கி அடுத்த அறைகள் இரண்டிரண்டாகும்படி பிளந்து ஏறக் கீறிப் புறவட்டத்தில் இருபக்கத்து அறைகளைத் தலைகளாகவும், மற்றைய இருபக்கத்து அறைகளைக் கால்களாகவும் கருதிக் கொண்டு, தலைகளாகின்ற அறைகளில் யகாரத்தையும், கால்களாகின்ற அறைகளில் ஒன்றில் நகாரத்தையும், மற்றொன்றில் அகாரத்தையும் பொறித்து வழிபடுதலையும், செபித்தலையும் செய்யுங்கள்.

விளக்கவுரை

இதன் வடிவத்தைக் கீழே காண்க.
இதனால், உருவாகும் மந்திரங்கள், 'அ உ ம வ சி ய' என்பதும், ' ந ம உ வ சி ய' என்பதும் ஆகும். இரண்டற்கும் முன்னே 'ஓ' கொள்ளப்படும். அகாரம் முதலாகவும், நகாரம் முதலாகவும் தொடங்கும்பொழுது உள் வட்டத்திலிருந்தே தொடங்கிப் பலமுக மாகவும் செல்ல ஓதுதல் கூடுமாற்றை அறிந்து கொள்க. விளிம்பு வட்ட தலைக்குப் பக்கங்களில் உள்ள அறைகள் நடனத்தில் இறை வனது தலைசெல்லும் பக்கங்களாகவும், கால்களுக்கு நேரே உள்ள ஓர் அறை, நிற்கும் நிலை இட மாகவும், அவற்றின் பக்கத்தில் ஒற் றித்தும் இரட்டித்தும் உள்ள இடங்கள் நடனத்தில் தலை, கை, கால்கள் பெயர்ந்து செல்லும் இடங்களாகவும் கருதிக்கொள்க. இங்ஙனமெல்லாம் கருதிக்கொள்ளுதற்காகவே' தலை, கண், கால்' என உருவகித்து ஓதினார். சமட்டி, வியட்டிப் பிரணவங் களோடு தூல பஞ்சாக்கரம் அமைந்திருத்தலால், இது தூலத் திருவம்பலச் சக்கரம் ஆதல் அறியப்படும்.
இவ்விரண்டு திருமந்திரங்களாலும் மற்றொருவகைத் திருவம்பலச் சக்கரம் கூறப்பட்டது.

நாடும் பிரணவம் நடு இரு பக்கமும்
ஆடும்அவர் வா அமர்ந்தங்கு நின்றது
நாடும் நடுஉள் முகம்ந மசிவாய
வாடும் சிவாயநம புறவட்டத் தாயதே. ***#899***

மேற்சொல்லிய தூலசக்கரத்தில்தானே முன் சொன்ன எழுத்துக்களை நீக்கி நடுவிடத்தில் நடுவிலே பிரணவத் தையும், (நடுவிடத்தை இருமுக்கோணத்தின் கூட்டாகக் கருதி) மேல் முக் கோணப் பகுதியில் சிகாரம் நான்கும், கீழ் முக்கோணப் பகுதியில் வகாரம் நான்கும், நடுவிடத்தைச் சூழ்ந்துள்ள உள்வட்டக் கட்டங்கள் எட்டினையும் முன்சொன்ன வாறே பகுதிப்படக் கருதி மேற் பகுதி அறை ஒவ்வொன்றிலும் 'நம' என்பதனையும், கீழ்ப் பகுதி அறை ஒவ்வொன்றிலும் 'ய' என்பதனையும், சுற்று வட்டத் தின் (விளிம்பு

வட்டத்தில்) மேற் புறத்து இடப்பக்க மூலையிலும், கீழ்ப்புறத்து வலப்பக்க மூலையிலும், 'சி' என்பதை நிறுத்தி, அவற்றின் இருபக்கக் கட்டங் களிலும் முறையே, 'வா, ய, ந, ம' என்னும் எழுத்துக்களையும் பொறித்து வழிபட்டுச் செபிக்க.

விளக்கவுரை

இதன் வடிவம் வருமாறு:-

இதனுள், பிரணவத்தை முதலிற் கொண்டு, 'நமசிவாய' என்பதை நான்கு முறையாலும், 'சிவாயநம' என்பதை நான்கு முறையாலும் செபிக்க ஒரு வட்டமாம். ஐம்பத்து நான்குவட்டம் செபிக்க தூல சூக்கும பஞ்சாக்கரங்கள் தனித்தனி நூற்றெட்டு உருவாக முடியும். இருநூற்று ஐம்பத்து நான்கு வட்டம் செபிக்கின் அவை தனித்தனி ஆயிரத்தெட்டு உருவாக முடியும்.

இவற்றுள், தூல பஞ்சாக்கரத்தில் பாச எழுத்து இரண்டும் தம்முள் இணைந்தும், பதி எழுத்து இரண்டும் தம்முள் இணைந்தும் ஆன்ம எழுத்து அருளெழுத்தோடும், திரோதான எழுத்தோடும் தொடர்புற்றும் நிற்றல் அறிந்துகொள்க.

சமட்டிப் பிரணவத்தோடு 'தூலம், சூக்குமம்' என்னும் இருபஞ்சாக்கரங்களும் செபிக்கப்பட நிற்றலால் இது சூக்குமா சூக்கும திருவம்பலச் சக்கரமாகும். சூக்கும சக்கரம் தவிரப் பிற்கூறிய இரண்டிற்கும் தலை, கால் பக்கங்கள் உளவாதலை அறிக.

இதுகாறும் விளக்கப்பட்டு வந்தவற்றுள் சூக்கும சக்கரம் வீடுபேற்றினை விரும்புவோர்க்கும், தூல சக்கரம் உலக இன்பத்தை விரும்புவோர்க்கும், சூக்குமா சூக்கும சக்கரம் இரண்டனையும் விரும்புவோர்க்கும் உரியனவாம் என்க.

இதனால், வேறொருவகைத் திருவம்பலச் சக்கரம் கூறப் பட்டது.

ஆயும் சிவாய நமமசி வாயந
ஆயும் நமசி வயய நமசிவா
ஆயுமே வாய நமசியெனும் மந்திரம்
ஆயும் சிகாரம்தொட் டந்தத் தடைவிலே. ***#900***

'சிவாயநம' என்பதை ஒன்று, ஐந்து, நான்கு, மூன்று, இரண்டாம் எழுத்துக்களை முறையே முதலில் வைத்து ஏனைய எழுத்துக்களையும் முறையானே மேற்கூறிய சக்கர அறைகளில் பொறிக்கச் சிகாரமே முதலாகத் தொடங்கி, முடிவாகவும் முடியும்.

விளக்கவுரை

'இதுவும் ஒருவகைத் திருவம்பலச் சக்கரமாம்' என்பது கருத்து.

அச்சக்கரம் ஆமாறு:-

மேற்கூறிய சக்கரங்களைக் கொள்ளமாட்டாதவர் பொருட்டுக் கூறப்பட்டது. ஐந்தெழுத்தின் பேதங்கள் பலவும் இதில் அடங்கி யுள்ளன என்பது உட்கிடை. இரண்டாம் அடியில் வகர ஆகாரம் செய்யுள் நோக்கிக் குறுக்கலாயிற்று. இவ்வடியின் இறுதியை வேறு வகையாக ஓதுதல் கூடாமையறிக.
இதனால், மற்றும் ஒருவகைத் திருவம்பலச் சக்கரம் கூறப்பட்டது.

அடைவினில் ஐம்பதும் ஐயைந் தறையின்
அடையும் அறைஒன்றுக் கீரெழுத் தாக்கி
அடையும் அகாரத்தில் அந்தமாம் க்ஷவ்வும்
அடைவின் எழுத்தைம்பத் தொன்றும் அமர்ந்ததே. *#901*

இதுமுதல் ஐந்து மந்திரங்களால் பெரியதொரு திருவம்பலச் சக்கரம் கூறுகின்றார். எனவே, இது பேரம்பலச் சக்கர மாம். பெருமை, எல்லா மந்திரங்களும், எல்லா எழுத்துக்களையும் கொண்டிருத்தல். இதனால், முன்னவை சிற்றம்பலச் சக்கரங்களாய் நிற்பனவாம். சிறுமை, சிலமந்திரங்களையே கொண்டிருத்தல்.
மேற் சொல்லிய வகையில் நெடுக்கில் ஐந்தும், குறுக்கில் ஐந்துமாக இருபத்தைந்து அறைகள் உள்ள சக்கரத்தில் மாதுரு காட்சரங்கள் (மூல எழுத்துக்கள்) ஐம்பதும் அடங்கி நிற்கும். அம் முறையில் உயிரெழுத்துப் பதினாறு, உடலெழுத்து முப்பத்தைந்து (வட மொழி எழுத்துக்கள்) ஆக ஐம்பத்தொன்றினையும் 'அ, ஆ' முதலாக முறையே ஓர் அறைக்கு இரண்டாக வைத்துப் பொறித்துவர, ளகாரம் ஈறாக மேற்கூறியவாறு ஐம்பது எழுத்துக்களும் நிரம்பும். அதற்குமேல் ஐம்பத்தொன்றாவது எழுத்தாக நிற்பது க்ஷகாரம். அதனை எல்லா எழுத்திற்கும் பொதுவாகிய 'ஹ' என்பதுடன் கீழ்வரிசை அறை ஐந்தில் நடு அறையின் கீழ் வெளியில் பொறித்துவிடல் வேண்டும்.

விளக்கவுரை

மூன்றாம் அடியில், 'அகாரம்' என்றது ஹகாரத்தை யேயாம். அடைவு, நெடுங்கணக்குமுறை. 'அமர்ந்தது' என, இடம் வினைமுதல்போலச் சொல்லப்பட்டது. 'அமர்ந்தது சக்கரம்' எனச் சொல்லெச்சம் வருவித்துமுடிக்க.

அமர்ந்த அரகர வாம்புற வட்டம்
அமர்ந்த அரிகரி யாம்அதனுள் வட்டம்
அமர்ந்த அசபையாம்அத னுள்வட்டம்
அமர்ந்த இரேகையும் ஆகின்ற சூலமே. *#902*

சதுரத்தில் அமைந்த மேற்கூறிய சக்கரத்திற்கு வெளியே அதனை உள்ளடக்கி 'புறம், நடு, உள்' என மூன்று வட்டங்களை வரைந்து, சதுர சக்கரத்தில் அறைகள் உண்டாதற் பொருட்டுக் கீறியுள்ள கீற்றுக்களை

வெளியே நிற்கும் புற வட்டம் வரையில் நீட்டி, மேலும் வெற்றவெளியிலும் செல்ல நீட்டி, அக்கீற்றுக்களின் முனைகளைச் சூலவடிவாக ஆக்குதல் வேண்டும். பின்னர் வெற்ற வெளியை ஒட்டிநிற்கும் புறவட்டத்தில் உள்ள அறை களில் ஒவ்வொன்றிலும் 'ஹர' என்பதையும், நடுவட்ட அறைகளில் 'ஹரி' என்பதையும், சதுரத்தை அடுத்து நிற்கும் உள்வட்டத்தில் 'ஹம்ஸம்' என்பதையும் பொறித்தல் வேண்டும்.

விளக்கவுரை

'ஹர' என்பதும், 'ஹரி' என்பதும் தமிழ் முறையில் அடுக்கிக் கூறப்பட்டன. அடுக்குக்கள், பன்மைபற்றி வந்தன. அசபை யாவது, அம்ஸ மந்திரமாதல் வெளிப்படை. 'ஆகின்ற' என்றது முற்று.

சூலத் தலையினில் தோற்றிடும் சத்தியும்
சூலத் தலையினில் சூழும்ஓங் காரத்தால்
சூலத் திடைவெளி தோற்றிடும் அஞ்செழுத்
தால்அப் பதிக்கும் அடைவது ஆமே. ***#903***

மேற்கூறிய சூலங்கள் ஒவ்வொன்றின் முனை யிலும் சத்தி பீசம் (ஹ்ரீம்) காணப்படும்; அங்ஙனம் காணப்படுதல் தன்னைச் சூழ நிற்கும் ஓங்காரத்துடனாம்.

இனி ஒரு சூலத்திற்கும், மற்றொரு சூலத்திற்கும் இடையே யுள்ள வெற்றிடங்கள் ஐந்திலும் இடத்திற்கு ஒன்றாக ஐந்தெழுத்துக்கள் பொறிக்கப்படும். இதுவும் மேற்கூறிய சக்கரத்தின் முறையாம்.

விளக்கவுரை

'இடைவெளி அஞ்செழுத்தால் தோற்றிடும்' என்க. ஆல் உருபு இரண்டும் உடனிகழ்ச்சிக்கண் வந்தன. அடைவது - அடையும் இடம். இடமாவது அவ் இடைவெளி என்க. ஐந்தெழுத்து இவை என்பது வருகின்ற மந்திரத்தில் அறியப்படும்.

அதுவாம் அகார இகார உகாரம்
அதுவாம் எகார ஒகாரம தஞ்சாம்
அதுவாகும் சக்கர வட்டமேல் வட்டம்
பொதுவாம் இடைவெளி பொங்குநம் பேரே. ***#904***

அகார, இகார, உகார, எகார, ஒகாரங்களே மேற் கூறிய அவ் ஐந்தெழுத்துக்களாம். அவ் வெழுத்துக்களையுடைய ஐந்து ஓங்காரங்களே புறவட்டத்திற்குமேல் மற்றொரு வட்டமாய் நிற்கும். இனி, அறைகளாய் நில்லாது சதுரத்தின் மேல் பொதுவாய் நிற்கும் இடைவெளிகளில் பஞ்சாக்கர பேதங்களுள் ஒன்று எழுதப்பட்டு விளங்கும்.

விளக்கவுரை

'அது' என்றது, மேற்சொன்ன அஞ்செழுத்தைத் தொகுதி வகையாற் சுட்டிற்று. முன்னிரண்டடி சொற்பொருட் பின்வருநிலை.

பேர்பெற் றதுமூல மந்திரம் பின்னது
சோர்வுற்ற சக்கர வட்டத்துட் சந்தியில்
நேர்பெற் றிருந்திட நின்றது சக்கரம்
ஏர்பெற் றிருந்த இயல்பிது வாமே. ***#905***

மேல் 'நம் பேர்' என்றது சிவமூல மந்திரத்தை யாம். அதன் பேதங்களில் இறுதியானதாகிய சிகார வகாரங்கள் இணைந்துநிற்கும் மந்திரம், வளைந்து நிற்கும் வட்டங்கட்கு உள்ளே சதுரத்திற்கும் அவற்றிற்கும் இடையே உள்ள சந்தி அறைகளில் நிற்பதாம். இங்கு எடுத்துக்கொண்ட சக்கரத்தின் இயல்பு இவ்வாறாம்.

விளக்கவுரை

இதனுள், சதுரத்திற்கு மேல் உள்ள சந்தி அறை ஒவ் வொன்றிலும் 'சிவ' என்பது பொறிக்கப்பட வேண்டும் என்பது கூறப்பட்டமை காண்க. 'சக்கரம் ... ... இயல்பிது வாமே' என்றது முடித்துக்கூறி முற்றுவித்தது. சோர்வு, பொதுவாய் நிற்றல். 'சோர்வுற்ற சந்தி' என இயையும். இதனுள், எல்லா மந்திரங்களும், எல்லா மூல எழுத்துக்களும் அடங்கியுள்ளன என்பது கருத்து. வடமொழி நோக்கில் எழுத்துக்கள் மிகப் பலவாதல் பற்றி அவையும் அடங்குதற் பொருட்டு அறை ஒன்றில் இரண்டெழுத்துக்களை அமைக்குமாறு விதித்தார். எனவே, இதனைத் தமிழ் முறையில், மேல்வரிசையில் உள்ள ஐந்து அறைகளில் மட்டும் 'அ, இ, உ, எ, ஒ' என்னும் ஐந்து குற்றெழுத்துக்களோடு அவற்றிற்கு இனமான ஆ, ஈ, முதலிய ஐந்து நெட்டெழுத்துக்களையும் சேர்த்து இரண்டிரண்டெழுத்தாக முறையே எழுத, எஞ்சி நிற்பவை இருபது அறைகளாம். அவற்றில் முதல் இரண்டு அறைகளில் 'ஐ, ஔ' என்னும் இரு நெட்டெழுத்துக்களை யும், அவற்றின்பின் 'க,ங' முதல் 'ன' ஈறான பதினெட்டெழுத்துக் களையும் எழுத, இருபத்தைந்து அறைகளும் எழுத்துக்களால் நிரம்பி நிற்கும்; வடமொழி வகையில் அமைந்த சக்கரத்தில் 'க்ஷகாரம்' எழுதப் பட்ட இடத்தில் 'அஃகேனம்' என்பதை எழுதலாம். 'ஓம், ஹ்ரீம், ஹர, ஹரி, ஹம்ஸ:, ஸோஹம், ‹ிவ'என்பவற்றை, 'ஓம், க்ரீம், அர, அரி, அம்ச, சோகம், சிவ' என எழுதிக் கொள்ளலாம். அகரம் முதலிய ஐந்து குற்றெழுத்துக்களைத் தமிழில் எழுதுவதில் தடையொன்றும் இல்லை. ஆதலின், இச்சக்கரம் வடமொழி கூறுவார்க்கேயன்றித் தமிழ் கூறுவார்க்கும் உரியதாதல் பெறப்படுதலின், அதனை, இவ்வாற்றால் அறிந்து செய்து கொள்க.

வடமொழியில், 'எ, ஒ' என்னும் குற்றெழுத்துக்கள் இல்லை; ஆயினும், அவை மந்திரங்கட்கு வேண்டப்படுகின்றன. அதனால், தமிழிலிருந்து அவை அவற்றில் கொள்ளப்படுகின்றன. வடவெழுத் துக்களில் பல தமிழில் இல்லையாயினும் மந்திரங்களைத் தமிழாகக் கூறுமிடத்தில் தமிழ் முறையிலே அவை சொல்லப்படலாம். அது குற்றமாகாது. 'குற்றமாம்' எனின், இந்நாயனாரும், பிற அருளா ளர்களும் அவற்றைத் தமிழ் முறைப்படியே கூறியிருத்தல் குற்றமாய் விடும். அம்முறை செய்யுட்களிற் கொள்ளப்பட்டது எனின், செய் யுளில் குற்றம் ஆகாத ஒன்று வழக்கில் குற்றமாய்விடும் என்றல் ஏற்கத் தக்கதாகாது. நாயனார் தம்மை, இறைவன் தன்னைப் பலபடியாலும் தமிழால் போற்றும் முறையை அருளிச் செய்யவே மூலன் உடம்பில் இருக்கவைத்தான் எனப் பாயிரத்துட் கூறியிருத்தல் *1* பொருட்படுத்தி உணரத்தக்கது.
பஞ்சப் பிரம மந்திரத்தின் பீசங்களுள் ஈசானம், தற்புருடம் இரண்டற்கும் முறையே 'ஒ, எ' என்னும் குறில்களே கொள்ளற்பாலன என்பது ஏனைய மூன்றன் பீசங்களையும் நோக்கினால் நன்கு தெரியவரும். ஆயினும், அங்கு நெடிலே கொள்ளப்படுகின்றன. 'பிரம மந்திரத்திற்குக் குறில்களும், கலா மந்திரம், அங்க மந்திரங்கட்கு நெடில்களும் பீசங்களாகும்' என்பதே அம் மந்திரங்களைக் கூறிய நூற்குக் கருத்தாகலின், பிரம மந்திரங்கள் இரண்டற்கு நெடிலைக் கொள்ளுதல் ஏற்புடைத்தாகாமை அறிக.
இவ் ஐந்து மந்திரங்களாலும் பெரியதொரு திருவம்பலச் சக்கரத்தின் இயல்பு கூறப்பட்டது.

இயலும்இம் மந்திரம் எய்தும் வழியில்
செயலும் அறியத் தெளிவிக்கும் நாதன்
புயலும் புனலும் பொருந்தங்கி மண்விண்
முயலும் எழுத்துக்கு முன்னா யிருந்ததே. **#906**
மேற்சொல்லிய சக்கரத்தில் உள்ள மந்திரங்கள் பொறிக்கப்படும் வழியையும், பொறித்து வழிபட வேண்டிய முறை களையும் அறிந்தால் அவ்வாறு அறிபவர்கட்கு இறைவன் அவர்களது உணர்வு தெளிவுபெறும்படி செய்வான். இனி, அம்மந்திரங்களில் ஒவ் வொன்றும் நிலம் முதலிய மா பூதங்களை வழிபடுவதற்கு அமைந்த வித்துக்களில் (பீசாக்கரங்களில்) ஒவ்வொன்றின் முன்னதாயிருக்கும். அதுவும் அவை எய்தும் வழிகளில் ஒன்றாகும்.

விளக்கவுரை

இதனுட் சிறப்பாகச் சொல்லியது, நிலம் முதலிய பூதங்கட்கு உரிய 'ஹ்லாம், ஹ்வீம், ஹ்ரீம், ஹ்யைம், ஹ:' என்னும் வித்தெழுத்துக்கள் மேற்கூறிய சக்கரத்திலுள்ள 'ஹம்ஸ:, ஹரி, ஹர, ஹ்ரீம், ‹ிவ' என்னும்

மந்திரங்கட்கு முன்னே சேர்த்துச் சொல்லப் படும் என்பது. 'இவ் வித்தெழுத்துக்கள் இம்முறையே நிவிர்த்தி முதலிய கலைகட்கும் உரியன. என்பது' சிவஞான சித்தியாரிலும் *(சூ. 2 - 67, 68)* சொல்லப்பட்டது. 'இது பற்றியேமேலைச் சக்கரத்தில் சூலங் கட்கு இடையே அகரம் முதலிய ஐந்து குற்றெழுத்துக்களும் பொறிக்கப் பட்டன' என்பது கருத்து.
நிலம் முதலிய பூதங்களைச் செய்யுள்பற்றி முறை பிறழக் கூறினார். முயலுதல் - வழிபடுதல். இங்கு 'முன்' என்றதை எழுத்திலக்கணத்துள் புணர்ச்சி விதிகளில் 'முன்' என்பது போல இடமுன்னாகக் கொள்க. இதனால், மேலைச் சக்கரத்திற்கு எய்தியதன்மேல் மற்றொரு செய்தி கூறப்பட்டது.

ஆறெட் டெழுத்தின்மேல் ஆறும் பதினாலும்
ஏறிட் டதன்மேலே விந்துவும் நாதமும்
சீறிட்டு நின்று சிவாய நமஎன்னக்
கூறிட்டு மும்மலம் கூப்பிட்டுப் போமே. ***#907***

மேற்கூறிய சக்கரத்தில் உள்ள ஐம்பத்தோர் எழுத்துக்களில் நாற்பத்தெட்டாம் எழுத்துடன் *('ஸ்' என்பதுடன்)* ஆறாம் எழுத்தையும், *('உ' என்பதையும்)* பதினான்காம் எழுத்தையும் *('ஔ' என்பதையும்)* ஏறச்செய்து, *('ஸு' என்றும், 'ஸௌ' என்றும் ஆக்கி,)* அவற்றின் இறுதியில் முறையே விந்துவையும் நாதத்தையும் சேர்த்து ஒலிக்கப் பண்ணிப் பின்பு, 'சிவாயநம' என்று உச்சரித்தால் மூன்று மலங்களும் அலறி ஓடிவிடும்.

விளக்கவுரை

'ஏற இட்டு, சீற இட்டு' என்பவற்றில் அகரங்கள் தொகுத்தலாயின. 'கூறிட்டு' என்பது கூறிட என்பதன் மரூஉ. கூப்பிட்டு என்றது. இலக்கணை. இதனுட் கூறப்பட்டது, 'திருவைந் தெழுத்தை, 'ஓம் ஸும் ஸௌ: சிவாயநம' எனச் செபித்தல் மிகச் சிறந்ததாகும்' என்பதும் 'அதன் பயன் வீடுபேறே' என்பதுமாம்.
இதனால், மேலெல்லாம் பலவகைப்படக் கூறிவந்த திருவைந் தெழுத்துச் செபத்திற்கு ஆவதொரு சிறப்புமுறை கூறப்பட்டது.

அண்ணல் இருப்ப தவளக் கரத்துளே
பெண்ணினல் லாளும் பிரானக் கரத்துளே
எண்ணி இருவர் இசைந்தங் கிருந்திடப்
புண்ணிய வாளர் பொருளறி வார்களே. ***#908***

சிவனும், சத்தியும் தம்முள் வேறல்லர். ஆதலால், அவருள் ஒருவர்க்கு உரிய பீசங்களிலும், மந்திரங்களிலும் மற் றொருவர் பொருந்தியே நிற்பர். என்றாலும் இருவரையும் வேறுபோல எண்ணி, இருதிறத்து

மந்திரங்களையும் செபிக்கின்ற செயல் உடையவர்களே
மெய்ப்பொருளை உணரப் பெறுவார்கள்.

விளக்கவுரை

'உண்மையில் இருவரும் வேறல்லராயினும் வழி பாட்டில் வேறுபோல நின்றே பயன் தருவர்; ஆதலின், அவ்வாறே வழி படல் வேண்டும்' என்பதாம். வழிபாட்டில் அவ்வாறு நிற்றல் வழிபடு வோரது இயல்புபற்றி என்க.
'உள்ளே' என்பவற்றுள் இரண்டாவதன் இறுதியில், 'இருக்கும்' என்பது எஞ்சிநின்றது. 'எனினும் வேறுபோல எண்ணி' என்க. இப்பொருட்கு, 'அக்கரம்' என்பன ஒருமருங்கு ஆகு பெயராம். 'இருந்திட' என்பது 'ஆளர்' என்பதில் ஆளுதல் தொழிலோடு முடிந்தது.
இனி, இதற்கு மற்றோர் உரை:- சிவனது எழுத்தும், சக்தியின் எழுத்திற்கு இடையில் நிற்கும். அவ்வாறே, சக்தியின் எழுத்தும் சிவன் எழுத்திற்கு இடையில் நிற்கும். இந்நிலைமையை ஓர்ந்துணர்ந்து, இருவரது எழுத்துக்களும் இணைந்திருக்கச் செபிக்கும் செயல் உடையவர்களே மெய்ப்பொருளை உணரப் பெறுவார்கள்.
கு-ரை: இவ்வுரையாற் பெறப்படுவது, 'சிவ' என்னும் மந்திரமே யாதலும், அதனைத் தொடர்பாக ஓத, சிவசத்தியரது எழுத்துக்கள் மேற்கூறியவாறு நிற்றலும் அறிந்துகொள்க. இப் பொருட்கு, 'அண்ணல், நல்லாள்' என்பன ஆகுபெயர்கள். இவ் இரண்டனையும் இதற்கு உரையாகக் கொள்க.
இதனால், மேலைச் சக்கரத்துள், பொறிக்கத்தக்க மந்திரங்களுள் தலையாயதன் சிறப்புக் கூறப்பட்டது.

அவ்விட்டு வைத்தங் கரவிட்டு மேல்வைத்து
இவ்விட்டுப் பார்க்கில் இலிங்கமதாய் நிற்கும்
மவ்விட்டு மேலே வளியுறக் கண்டபின்
தொம்மிட்டு நின்ற சுடர்க்கொழுந் தாமே. ***#909***

மேற்கூறிய சக்கரத்தில் சந்திகளில் உள்ள குற்றெழுத்துக்களில் முதலாவதாகிய அகாரத்தை வாங்கி அடியிலும், இகாரத்தைவாங்கி முடியிலும் வைத்து இடையில் 'ஹர' என்னும் மந்திரத்தை வாங்கியிட்டு நோக்கினால் இலிங்கமாய்த் தோன்றும். ஆதலின் அவற்றை அம்முறைப்படி மூலாதாரம், இருதயம், புருவநடு என்பவற்றில் வைத்துத் தியானித்து மகாரத்துடன் கூட்டிப் பிராணா யாமத்துடன் செபித்தால், கூத்தப்பிரானது ஒளிவடிவு காட்சிப்படும்.

விளக்கவுரை

இங்குக் கூறிய முறையில் இலிங்க வடிவம் அமையுமாறு:-

இவற்றை மகாரத்துடன் கூட்டி செபிக்குமாறு, 'அம் இம் ஹரோம்' என செபித்தலாம். 'அம், இம்' என்பன அம்ச மந்திரம் போல வாயுப்பயிற்சியைத்தரும். 'தொம்' என்பது நடனக் குறிப்பு.
இதனால், மேலைச் சக்கரத்துள் நின்ற சில எழுத்துக்கள் மந்திரம் என்பவற்றது சிறப்புணர்த்தும் முகத்தால் அவை தம்முட் கூடிநின்று பயன் விளைக்குமாறு கூறப்பட்டது.

அவ்வுண்டு சவ்வுண் டனைத்தும்அங் குள்ளது
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வார்இல்லை
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாளர்க்குச்
சவ்வுண்டு சத்தி சதாசிவன் றானே. ***#910***

எங்கே அகாரமும், சகாரமும் உள்ளனவோ அங்கே அனைத்துப் பொருள்களும் உள்ளனவாம். இவ்வாறு, இந்த இரண் டெழுத்துக்களில் எல்லாப் பொருளும் அடங்கிநிற்கின்ற நுட்பத்தை அறிபவர் உலகில் இல்லை. அதனை அறியவல்லவர்க்குச் சத்தி வடி வாகிய சிவன் சகாரத்திலே உளனாய்த் தோன்றுவான்.

விளக்கவுரை

'அ, ச' என்பவை விந்துவோடு கூடியன என்பதும், அவ்வாறே, ஈற்றில் உள்ள 'சை' என்பது நாதமாகிய விசர்க்கத்தோடு கூடியது என்பதும் கருத்துக்களாம். எனவே 'அம்ச மந்திரத்தின் வழி சோகம்பாவனை செய்யச் சிவம் விளங்கும்' என்றதாயிற்று. 'அம்ச மந்திரம் உயிர்ப்பு மந்திரம் ஆதலின், அஃது எல்லா மந்திரத்திற்கும் மூலமாம்; ஆகவே, அதனுள் அனைத்துப் பொருளும் அடங்குவன வாம்' என்றவாறு. பின்னர் 'அங்கு' என வருதலால், முன்னர் 'எங்கு' என்பது கொள்ளப்படும். கவ்வுண்டு நிற்றல் - அகப்பட்டு நிற்றல்.
இதனால், மேற்கூறியவற்றில் இரு மந்திரங்களின் சிறப்புக் கூறப்பட்டது. இம் மந்திரம் ஹௌம், ஸௌம்' என்னும் பீசங்களது சிறப்புணர்த்துதல் மேலும் நோக்குடையதாதல் அறிக.

அஞ்செழுத் தாலே அமர்ந்தனன் நந்தியும்
அஞ்செழுத் தாலே அமர்ந்தபஞ் சாக்கரம்
அஞ்செழுத் தாகிய அக்கர சக்கரம்
அஞ்செழுத் துள்ளே அமர்ந்துநின் றானே. ***#911***

மேல், 'அதுவாம் அகார' என்னும் மந்திரத்தில் *(910)* கூறப்பட்ட ஐந்தெழுத்து வழியாகவே சிவபிரான் வந்து அமர் கின்றான். அந்த ஐந்தெழுத்தினாலே அவனது பஞ்சாக்கர மந்திர எழுத் துக்களும் அமைகின்றன. ஆகவே, அவ் இருதிற எழுத்துக்களாலும் அமைகின்ற சக்கரங்களிலே அவன் தங்கி நிற்கின்றான்.

விளக்கவுரை

'அக்கர சக்கரம் அஞ்செழுத்தாலே ஆகிய' என்க.
இதனால், மேலைச் சக்கரங்களில் உள்ள அகாரம் முதலிய வற்றின் சிறப்பும், திருவைந்தெழுத்தின் சிறப்பும் கூறப்பட்டன.

கூத்தனைக் காணும் குறிபல பேசிடின்
கூத்தன் எழுத்தின் முதலெழுத் தோதினால்
கூத்தனொ டொன்றிடுங் கொள்கைய ராய்நிற்பர்
கூத்தனைக் காணும் குறியது வாகுமே. *#912*

கூத்தப்பெருமானைப் பருவடிவிற்காண நிற்கும் பொருள்கள் பலவாம். அவற்றுள் மந்திரம் சிறந்தது ஆதலின், அவற்றுள் தலையானதாகிய மந்திரத்தை முதலெழுத்தளவில் ஓதி னாலும் அப்பெருமானோடு ஒற்றித்து நிற்கும் உணர்வை மக்கள் பெறு வார்கள். ஆகவே, இதுகாறும் சக்கர வடிவில் மந்திரங்களைக் கூறி வந்ததன் குறிக்கோள் அப்பெருமானை அடைவிப்பதேயாம்.

விளக்கவுரை

'பேசிடில்' என்பதை முதலில் வைத்து உரைக்க.
இதனால், மேல் பலபடக் கூறியதன் பயன் இது என்பது கூறப் பட்டது.

அத்திசைக் குள்நின் றனலை எழுப்பிய
அத்திசைக் குள்நின்ற நவ்வெழுத் தோதினால்
அத்திசைக் குள்நின்ற அந்த மறையனை
அத்திசைக் குள்ளுற வாக்கினள் தானே. *#913*

மேற்காட்டிய சக்கரங்களில் யாதானும் ஒன்றில் உணர்வை நிறுத்திப் பிராணாயாமத்தால் மூலாதாரத்தில் உள்ள அனலை ஓங்கி எழச் செய்து, சக்கரத்தில் உள்ள எழுத்துக்களில் நகாரத்தைச் செபித்தால், அச்சக்கரத்தில் மறைந்து நிற்கும் கூத்தப் பெருமானை அந்த நகாரத்திற்கு உரியவளாகிய திரோதன சக்தி அச்சக்கரத்திலே பொருந்தச் செய்வாள்.

விளக்கவுரை

திசை - பகுக்கப்பட்ட இடம். உறுதல் இங்கே உலகப் பயனைப் பெற்று மகிழ்தலாம். ஆகவே 'நின்ற', என்பதும், போகியாய் நின்றதனையாதல் அறிக. 'ஆக்கினன்' என்பது பாடம் ஆகாமை அறிந்துகொள்க. தான், திரோதான சக்தி.
இதுமுதல் நான்கு மந்திரங்களால், மேலை மந்திரத்துள் ஓதியவாறு ஒவ்வோர் எழுத்தே பயனளித்தலை வகுத்தோதப் புகுந்து, இதனால் நகாரத்தை ஓதுதலின் பயன் கூறப்பட்டது.

தானே அளித்திடும் தையலை நோக்கினால்

தானே அளித்திட்டு மேல்உற வைத்திடும்
தானே அளித்த மகாரத்தை ஓதினால்
தானே அளித்ததோர் கல்ஒளி யாமே. ***#914***
தானாகவே முன் வந்து காக்கின்ற அருட் சத்தியின் எழுத்தாகிய வகாரத்தை ஓதினால், அவள் தானே முன்வந்து சிவ ஞானத்தை அளித்துப் பரமுத்தியை அடையச் செய்வாள். இனி, அவளாலே உபதேசிக்கப்பட்ட மல எழுத்தாகிய மகாரத்தை ஓதினால், அவ்வருட் சக்தியால் வழங்கப்பட்ட மாணிக்கமாகிய உயிர் மாசுநீங்கி ஒளியுடையதாய் விளங்கும்.

விளக்கவுரை

'குரு சிவமேயாதலின், தானே உபதேசித்த' என்றார். கல், உவம ஆகுபெயர். ஒளியுடையதனை 'ஒளி' என்றார்.
இதனால், வகார மகாரங்களை ஓதுதலின் பயன் கூறப்பட்டது.

கல்லொளி யேஎன நின்ற வடதிசைக்
கல்லொளி யேஎன நின்றநல் லிந்திரன்
கல்லொளி யேஎன நின்ற சிகாரத்தைக்
கல்லொளி யேஎனக் காட்டிநின் றானே. ***#915***
வெள்ளியேயானும் மாணிக்கத்தைப் போலச் சிறப் புற்று நிற்கின்ற, வடதிசைக்கண் உள்ள மலை ஆகிய கயிலாயத்தின் கண் தழல்போன்ற உருவினையுடையவனாய் உள்ள சிவபெரு மான், திருவைந்தெழுத்தில் மாணிக்கம் போலச் சிறந்து நிற்பதாகிய சிகாரத் தையே தானாக உணரும்படி, மாணிக்கமாகக் காட்டி நிற்கின்றான்.

விளக்கவுரை

இந்திரன் - தலைவன். பிறதலைவரினின்றும் பிரித்தற்கு 'நல்லிந்திரன்' என்றார். இனி, 'இந்தீரன்' என்பது குறுகியது எனக் கொண்டு, 'சந்திரனை அணிந்து காத்த அருளுடையவன்' என உரைத்த லுமாம். 'மாணிக்கமாகக் காட்டிநின்றான்' என்றதனால், 'அதனின் மிக்கது பிறிதில்லை' என்பது பெறப்பட்டது. படவே, 'அதனால் சிவானந்த விளைவு உண்டாகும்' என்றவாறாயிற்று. இரண்டாம் அடியில் உள்ள 'ஒளி' ஆகுபெயர். ஏனைய அடிகளில், 'ஒளிக்கல்' என்பது பின் முன்னாக நின்றது.
இதனால், சிகாரத்தை ஓதுதலின் பயன் கூறப்பட்டது.

தானே எழுகுணம் தண்சுட ராய்நிற்கும்
தானே எழுகுணம் வேதமு மாய்நிற்கும்
தானே எழுகுணம் ஆவதும் ஓதிடில்
தானே எழுந்த மறையவ னாமே. ***#916***

ஆன்மா சீவ நிலையினின்றும் ஏழு மடங்கு உயர்ந்து தண்ணிய சந்திரனைப் போல விளங்கி நிற்றலும், நூலறிவை உடைய தாதலும், நல்லியல்பைப் பெறுதலும் தனது எழுத்தை ஓதுவதனாலாம். தனது எழுத்தாவது ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ள 'ய' என்பதாம்.

விளக்கவுரை

'தான்' நான்கும் ஓதுபவனைக் குறித்தன. குணம் - மடங்கு. ஏழு, மிகுதி குறித்து நின்றது. 'தண்சுடராய் நிற்கும்' என்றது வாலிதாய் (தூய்மை பெற்று) நிற்கும் என்றதாம். வேதத்தால் பெறும் அறிவை 'வேதம்' என்றார். நல்லியல்பு, சீவத்தன்மை நீங்குதல். மறை - மந்திர எழுத்து. யவன் - யகரத்தை உடையவன். 'தானே யவன் ஆம்' என்க. 'நிற்கும், நிற்கும்' என்று ஓதினாராயினும் பின்னர் வரும் 'ஆவதும்' என்பதனோடு இயைய 'நிற்பதும், நிற்பதும்' என ஓதுதலே கருத்து என்க. 'நிற்பது, ஆவது' என்பன தொழிற் பெயர்கள்.
இதனால், யகாரத்தை ஓதுதலின் பயன் கூறப்பட்டது.

மறையவன் ஆக மதித்த பிறவி
மறையவன் ஆக மதித்திடக் காண்பர்
மறையவன் அஞ்செழுத் துள்நிற்கப் பெற்ற
மறையவன் அஞ்செழுத் தாம்அவர் தாமே. ***#917***

ஆன்மா மந்திர ஆன்மாவாய் விளங்கிச் சிவமாக வேண்டியே சிவபிரானால் கொடுக்கப்பட்டது மக்கட்பிறவி. ஆகவே, அதில் நிற்கும் ஆன்மா அங்ஙனமே மந்திர ஆன்மாவாய் விளங் குதலை அறிந்து அப்பெருமான் மகிழ்வதைக் காணக்கூடியவர்கள், எல்லா மந்திர வடிவினனுமாயினும் சிறப்பாகத் திருவைந்தெழுத்துள் மறைந்து நிற்கும் கள்வனாகிய அப்பெருமானது திருவைந்தெழுத்தே தாமாய் நிற்பவரே; பிறரல்லர்.

விளக்கவுரை

'ஆகையால், அப்பயனைப் பெற விரும்புவோர் அம்மந்திரத்தையே செபிக்க' என்பது குறிப்பெச்சம். சிவபெருமான் பின்னர்க் குறிக்கப்படுதலின், 'மதித்த' என்றும், 'மதித்திட' என்றுமே கூறிப்போயினார். மதித்தல், இங்கு அதன் காரியம் தோன்ற நின்றது. பிறவியைப் பெற்றவனை, 'பிறவி' என்றார், 'அவன் ஒரு தெய்வப் பிறவி, அதிசயப்பிறவி' என்பன போல. மூன்றாம் அடியில் 'மறையவன்' என்பதன்பின், 'ஆயினும்' என்பது வருவிக்க. நான்காம் அடியில் அச்சொல்லின்பின் ஆறாவது விரிக்க.
இதனால், மேற்கூறிய ஐந்து எழுத்துக்களின் சிறப்பும் தொகுத்துக் கூறி, அவை ஒருங்கு தொடர்ந்து நின்ற மந்திரத்தது சிறப்புக் கூறப்பட்டது.

ஆகின்ற பாதமும் அந்நவ்வாய் நின்றிடும்
ஆகின்ற நாபியுள் அங்கே மகரரமாம்
ஆகின்ற சீஇரு தோள்வவ்வாய்க் கண்டபின்
ஆகின்ற அச்சுடர் அவ்வியவ் வாமே. *#918*

திருவைந்தெழுத்தில் நகாரம் கூத்தப் பெரு மானுக்குத் திருவடியாயும், மகாரம் வயிறாயும், சிகாரம் தோள் களாயும், வகாரம் முகமாயும், யகாரம் சென்னியாயும் நிற்கும்.

விளக்கவுரை

இவ்வாறே உண்மை விளக்க நூலிலும் கூறப்படுதல் காண்க. (வெண்பா - 33). ஆதல் - மந்திரமேயாதல். மூன்றாம் அடி யிலும், 'ஆகின்ற இருதோள், ஆகின்ற வாய்' எனக் கூட்டிக் கொள்க. 'இரு தோள் வாய் சீ வவ்வாகக் கண்டபின்' என, ஆக்கம் வருவிக்க. 'சி' என்பது நீட்டல் பெற்றது. சுடர் - ஒளி. அஃது ஆகுபெயராய் அதனையுடைய தலைக்கு ஆயிற்று. ஒளி சடையினால் உளதாவது. 'அவ்வியல்பாமே' என்பது, பாடம் அன்றாதல் அறிக. அடுத்த மந்திரம், 'அவ்வியல்பு' எனத் தொடங்குவதாயினும், இதனுள், 'அவ் விய' என்பதே அதற்கு அமையும். மேலை மந்திரத்துள் 'ஆம்' என்ற அதனைக் கொண்டே இம்மந்திரம் 'ஆகின்ற' எனத் தொடங்கிற்று. 'அவ்ய' என்பது இடையே இகரம் விரித்தல் பெறநின்றது.

திருவைந்தெழுத்து இம்முறையால் இறைவனுக்குத் திருமேனி யாதல் கூறவே, அவனை வழிபடுபவரும் தம் உடல் உறுப்புக்களில் அதனை இம்முறையில் நியாசம், திருநீற்றுத் திரிபுண்டரம் இடல் முதலியவற்றால் பொருந்தக் கொள்ளல் முறையாதலும் பெறப்பட்டது.

இதனால், மேற்கூறிய மந்திரம் இறைவனுக்குத் திரு மேனியாய் நிற்கும் முறை வகுத்துக் கூறப்பட்டது.

அவ்வியல் பாய இருமூன் றெழுத்தையும்
செவ்வியல் பாகச் சிறந்தனன் நந்தியும்
ஒவ்வியல் பாக ஒளியுற நோக்கிடின்
பவ்வியல் பாகப் பரந்துநின் றானே. *#919*

மேற்கூறியவாறு தனக்குத் திருமேனியாய் அமைகின்ற, பிரணவத்தோடுகூடி ஆறெழுத்தாய் நிற்கின்ற நகாரம் முதலிய ஐந்தெழுத்தினாலும் ஆகிய மந்திரத்தையே சிவபெருமான் தனக்கு நேர் வாயிலாகக் கொண்டு நிற்கின்றான். ஆகையால், அவனை அந்தப் பிரணவத்தின் காரியங்களாகிய ஏனை எழுத்துக் களையும் அவனது ஒளிக்கதிர்களாகப் பொருந்தக் கொண்டு தியானித்தால், அவன் தனது ஆனந்தக் கடலாய் அளவின்றி நிற்பான்.

விளக்கவுரை

பிரணவம் இயல்பாகவே எல்லாமந்திரத்தின் முன்னும் நிற்குமாதலின், அதனை, 'இருமூன் றெழுத்தையும்' என அனுவாத முகத்தாற் கூறினார். 'செவ்வியல்பாக' என்றதன்பின், 'கொண்டு' என ஒரு சொல் வருவிக்க. 'ஓ' என்பது தொடை நோக்கிக் குறுகி நின்றது. அதனது காரியத்தை 'இயல்பு' என்றார், பரிணாமமமாகாது, விருத்தி யாதல் பற்றி. 'ஒளியாக உறநோக்கிடில்' என மாற்றிக்கொள்க. 'அனு வாதத்தாற் கூறிய ஓங்காரம் ஒளிப் பிழம்பாகிய திருவாசியாயும், அதனது விருத்தியாகிய அகாரம் முதலிய எல்லா எழுத்துக்களும், அத்திருவாசியின் மேல் விளங்கும் சுடர்களாயும் நிற்கும் என்பது மூன்றாம் அடியாற் குறித்தவாறு.

'ஓங்கார மேநல் திருவாசி; ஆங்கதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம்'

என்னும் உண்மை விளக்க வெண்பாவை *(35)* நோக்குக. 'பவ்வம்' என்பது கடைக்குறைந்து நின்றது.

இதனால், மேலைச் சக்கரத்தில் கூறிய ஓங்காரமும், பிற எழுத்துக்களும் கூத்தப்பெருமானுக்குத் துணை உறுப்புக்களாய் *(உபாங்கங்களாய்)* நின்று பயன் தருதல் கூறப்பட்டது.

பரந்தது மந்திரம் பல்லுயிர்க் கெல்லாம்
வரந்தரும் மந்திரம் வாய்த்திட வாங்கித்
துரந்திடு மந்திரம் சூழ்பகை போக
உரந்தரு மந்திரம் ஓம்என் றெழுப்பே. ***#920***

மந்திரம் வகையாலும், விரியாலும், பலவாய்ப் பரந்து கிடப்பது. அதனால், அவை பலதிறத்து எல்லா உயிர்கட்கும் அவை விரும்பிய பயனைத்தரும் தன்மையன ஆதலின், உனக்கு உன் குரு வினது அருளால் மந்திரம் கிடைக்குமாயின் அதனைப் பெற்று அதன் துணையால் உன்னைச் சூழ்ந்துள்ள வினையாகிய பகை தொலையும் படி ஓட்டு. ஓட்டுமாறு எங்ஙனம் எனின், அதற்குரிய வலிமையை உனக்குத் தருகின்ற மந்திரத்தை முதற்கண் பிரணவத்தை வைத்து உச்சரி.

விளக்கவுரை

பல திறமாவன, பிறப்புவகைகள். மூன்றாம் அடியில் உள்ள 'மந்திரம்' என்பதை மேலே, 'வாய்த்திட' என்பதற்கு முன்னே கூட்டுக. முதல் மூன்றடிகள் சொற்பொருட் பின்வருநிலை. மக்கள் உடம்பில் நின்ற உயிர் சில தீவினை காரணமாகக் கீழ்ப்பிறப்பை எடுக்குமாயின், அப்பிறப்பிலே அவை எவ்வகையாலேனும் மந்திரங் களை அறிந்து

எண்ணிப் பயன்பெறும் என்பது உண்மை நூல் துணி பாகலின், 'பல்லுயிர்க்கெல்லாம் வரந்தரும்' என்றார். அஃறிணை உயிர்கள் பல இறைவனை வழிபட்டுப் பயன்பெற்றமை புராணங் களில் பெரும்பான் மையது. இனி, 'இங்கு உயிர்' என்றது, 'மக்கள் உயிரையே' எனக் கொள் ளினும் கொள்க. 'மந்திரங்கள் மேற்கூறிய ஆற்றலை உடையதாதல் அவற்றை இறைவன் தனக்கு வாயிலாகக் கொள்ளுதலாலே என்பது மேலை மந்திரத்தால் அறியக்கிடந்தது.

இதனால், இறைவன் உயிர்கட்குத் தனது அருளை வழங்கு தற்கு வாயிலாக மந்திரங்களை அமைத்துள்ள சிறப்புக் கூறப்பட்டது.

ஓமென் றெழுப்பித்தம் உத்தம நந்தியை
நாமென் றெழுப்பி நடுவெழு தீபத்தை
ஆமென் றெழுப்பிஅவ் வாரறி வார்களே
மாமன்று கண்டு மகிழ்ந்திருந் தாரே. ***#921***

மந்திரங்கட்கெல்லாம் தலையானதாகிய சிவமூல மந்திரமாம் திருவைந்தெழுத்தை முதற்கண் பிரணவமும், நகார மகா ரங்களும் முற்பட்டு நிற்க ஓதிப் பின்னர், அவ் ஐந்தெழுத்தில் நடுவண் விளக்குப்போல எழுச்சிபெற்று விளங்குகின்ற சிகாரம் முதலிய மூன் றெழுத்துக்களையும் அம்ச மந்திரத்தாற் செய்யப்படும் பிராணா யாமத்தால் இதய வெளியில் உள்ள ஒளி விளக்கமுறும்படி செய்து, தியானிக்கப்படும் பொருளை மேற்கூறிய சிகாரம் முதலிய மூன் றெழுத்தின் முறைமையதாகவே அறிந்து நிற்பவர்கள், திருவம் பலத்தை உள்ளவாறு தரிசித்து மகிழ்ந்திருப்பார்கள்.

விளக்கவுரை

'நந்தி' என்பது ஆகுபெயராய் அவனது மந்திரத்தை உணர்த்திற்று. 'உத்தமம்' என்பது ஆகுபெயர்ப் பொருளைச் சிறப் பித்து நின்றமையால், 'உத்தம நந்தி' என்பது இருபெயரொட்டாகு பெயர். இத் தொடரை முதலில் வைத்து உரைக்க. 'நம என்று' என்பது 'நாம என்று' எனவும் 'அம் என்று', என்பது 'ஆம்' எனவும் தொடைக் கேற்ப வேண்டுந்திரிபு பெற்று நின்றன. 'நடுவெழு தீபம்' என்பது இரட்டுற மொழிதலாய், சிகாரம் முதலிய மூன்றெழுத்துக்களையும், இருதய ஒளி யையும் குறித்து நின்றது. மூன்றெழுத்து நின்ற முறைமை யாவது, உயிர் பாசத்தை விடுத்து அருளைச் சார்ந்து அதுவழியாகச் சிவத்திற்கு அடிமையாதலாம். இவ் எழுத்துக்கள் இருதயத்தில் வைத்து எண்ணவும், புருவ நடுவில் வைத்துத் தியானிக்கவும் படும் என்க. இவை 'தத்துவமசி' என்னும் வேதாந்த மகாவாக்கியப் பொருள், 'சிவத்துவமசி' என்னும் சித்தாந்த மகாவாக்கியப் பொருள் என்ப வற்றையும் தந்து நிற்குமாறு அறிந்துகொள்க. 'உண்மைத் திருவம் பலம்' என்றதற்கு 'மாமன்று'

என்றார். இது இதய வெளியும், புருவ நடுவுமாகும்.
'சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்பலத்தும் என்
சிந்தையுள்ளும் உறைவான்' (திருக்கோவையார் - *20)*
எனப் புறத்தும், அகத்தும் விளங்கும் மன்றுகளைக் குறிப்பால் அருளிச் செய்தவாறு அறிக. இதனால், மேல் பலவாய்ப் பரந்து நிற்பவனவாகக் கூறிய மந்திரங்களுள், சிறந்து நிற்பதும் மிகச் சிறந்து நிற்பதும் இவை எனக்கூறி, அவற்றை ஓதுமாறும் அதனால் பெறும் பயனும் கூறப்பட்டன.

ஆகின்ற சக்கரத் துள்ளே எழுத்தைந்தும்
பாகொன்றி நின்ற பதங்களில் வர்த்திக்கும்
ஆகின்ற ஐம்பத் தொருவெழுத் துள்நிற்கப்
பாகொன்றி நிற்கும் பராபரன் றானே. ***#922***

மேற்கூறிய சக்கரத்தில் பாகுபட்டு நின்ற அறை களில் வழங்கப்படுகின்ற ஐம்பத்தோரெழுத்துக்களின் இடையே திருவைந்தெழுத்து நிற்குமாயின், கூத்தப்பெருமான் அந்தச் சக்கரத்தில் பாகுபோல இனிதாய ஆனந்த நடனத்தைப் பொருத்தி நிற்பன்.

விளக்கவுரை

'எழுத்தைந்தும்' என்பதை முதலிற்கொண்டு உரைக்க. 'வர்த்திக்கும், ஆகின்ற' என்னும் பெயரெச்சங்கள், 'ஐம்பத்தொரு எழுத்து' என்னும் தொகைநிலைப் பெயர் கொண்டு முடிந்தது. இறுதி யிலுள்ள பாகு, உவம ஆகுபெயர். 'ஐந்தெழுத்து நிற்க ஆனந்த நடனத்தைப் பொருந்தி நிற்பவன்' எனவே 'அவை நில்லாதபொழுது அருள் நடனமாத்திரையே பொருந்தி நிற்பான்' என்பது போந்தது. பதங்கள் - இடங்கள்; அறைகள். 'ஐம்பத்தோரெழுத்து' என நிற்கற் பாலது, செய்யுள் நோக்கி, 'ஐம்பத்தொரு எழுத்து' எனத் திரிந்து நின்றது.
இதனால், மேற்கூறிய சக்கரம் சிறந்து நின்று பயன் தருமாறு கூறப்பட்டது.

பரமாய அஞ்செழுத் துள்நடு வாகப்
பரமா யநவசிம பார்க்கில் மவயநசி
பரமா யசியநம வாபரத் தோதில்
பரமாய வாசி மயநவாய் நின்றதே. ***#923***

திருவைந்தெழுத்து மேற்கூறியவாறு ஐம்பத் தோரெழுத்துக்களின் இடை நிற்குங்கால் நெடுக்காயினும் குறுக் காயினும் நடுவரிசை யுள்ளே நிற்கும். ஆகவே, அதன்பொருட்டு ஏனைய இடங்களில் எழுத்துக்கள் நடுவரிசைக்கு மேல் வரிசையில் *(2)* 'ய ந வா சி ம' என்றும், அதற்கு மேல் வரிசையில் *(3)* 'ம வா ய ந சி' என்றும், அடி வரிசையில் *(4)* 'சி ய ந ம வா' என்றும் அதற்கு மேல் வரிசையில் *(5)* 'வா சி ம ய ந' என்றும், மாறி

நிற்பனவாம்.

விளக்கவுரை

அஃது ஆமாறு:-
இதனால், நடுவரிசையை இடமிருந்து வலமாகவும், கீழிருந்து மேலாகவும் ஓதத் திருவைந்தெழுத்து நகாரம் முதலாக அமைதலும், சிகாரங்கள் முக்கோணக் கூட்டிரேகையில் முழுதும் நின்று சிகாரம் முதலாக ஏற்ற பெற்றியால் ஓதிக் கொள்ளுமாறு அமைதலும் காண்க. மேற்கூறிய சக்கரத்தில் வடமொழி எழுத்துக்களோடு இவற்றை எழுது வதாயின் இரண்டெழுத்திற்கும் இடைநிற்கவும், தமிழ் எழுத்துக் களோடு எழுதுவதாயின் அவ் எழுத்திற்கு மேல் நிற்கவும் எழுதுதல் வேண்டும் என்க. 'மிகவும் உள்ளிடம்' என்பார் 'உள்நடு' என்றார்.
பரம் - மேன்மை, மேல். நடுவரிசை தொடங்கி மேன்மேற் செல்லுங்கால் அடிவரிசைக்குத் திரும்பிப் பின் நடுவரிசையை அணுக வருதல் அறிக. வகார ஆகாரத்தைச் செய்யுள் நோக்கிச் சில இடங்களில் வகரமாக ஓதினார்.
இதனால், மேற்கூறிய பேரம்பலச் சக்கரத்திற்கு மேலை மந்திரத்திற் கூறிய ஒரு சிறப்பு முறை விளக்கிக் கூறப்பட்டது.

நின்ற எழுத்துக்கள் நேர்தரு பூதமும்
நின்ற எழுத்துக்கள் நேர்தரு வண்ணமும்
நின்ற எழுத்துக்கள் நேர்தர நின்றிடில்
நின்ற எழுத்துள்ளும் நின்றனன் தானே. ***#924***

மேலை மந்திரத்திற் சொல்லப்பட்டவாறு பொறிக்கப் பட்டபின் செங்குத்தாய் நின்ற வரிசைகளில் முதல் வரிசையிலுள்ள எழுத்துக்களை மேல்நின்று நோக்கினால், 'ம ய ந வா சி' என வரும். அவை முறையே, 'நிலம், நீர், தீ, வளி, வான்' என்னும் பூதங்களாய் நிற்கும். ஆதலால், அவற்றை முதலாகக் கொண்டு வலம் நோக்கிச் செல்லும் தொடராகிய மந்திரங்களும் அப்பூதங்கள் ஆதலை யுடையவாம். அதனால், அவ்வெழுத்துக்களும், தொடர் களும் அப்பூதங்கட்கு உரிய 'பொன்மை, வெண்மை, செம்மை, கருமை, புகைமை' என்னும் நிறங்களாயும் நிற்பனவாம். அவை இவ்வாறு நிற்றலால், அவை அடங்கி நின்ற சக்கரத்தைக் கூத்தப்பெருமான் தனக்கு இடமாகக் கொண்டு விளங்குகின்றான்.

விளக்கவுரை

முதலிரண்டடிகளில், 'ஆம்' என்பன எஞ்சி நின்றன. மூன்றாம் அடியில், 'நின்ற எழுத்துக்கள் நேர்தர நின்றிடில்' என்பது, முன்னும் பின்னும் உள்ள அடிகளுடன் சென்று இயையும், நேர்தர நிற்றல் -

செம்மையுண்டாக நிற்றல். நின்ற எழுத்துக்கள்நேர்தர நின்றிடில்' என்றதனால், முதல் எழுத்துக்கள் மட்டிலே முதன்மை யாகக் கொண்டு, பின்னர் அவற்றைத் தொடர்ந்த வல எழுத்துக்கள் அவற்றின் வழியவாக்கப்படும். உம்மை, 'பிறவிடத்து நிற்றலேயன்றி' என எச்சம். பொது நெறிபற்றிப் பூதங்களையே கூறினாராயினும், சிவநெறியின் வழி அவை பஞ்ச கலைகளாயும் நிற்கும் என்க.

இதனால், திருவைந்தெழுத்தை மேலைமந்திரத்திற் கூறிய வாறு பொறித்தால் உண்டாகும் சிறப்புக் கூறப்பட்டது

நின்றது சக்கரம் நீளும் புவியெல்லாம்
மன்றது வா நின்ற மாயநன் னாடனைக்
கன்றது வாகக் கறந்தனன் நந்தியும்
குன்றிடை நின்றிடுங் கொள்கையன் ஆமே. *#925*

மேற்கூறிய பேரம்பலச் சக்கரம் மேலை மந்திரத்திற் கூறியவாறு அமைந்த பெருமையுடையது ஆகலின், அதன்கண் எல்லா உலகங்களும் அடங்குவனவாம். அதனால், அந்தச் சக்கரத்தையே திருவம்பலமாகக் கொண்டு விளங்கும், சிதாகாய வெளியனாகிய சிவபெருமானாகிய பசுவை, அந்தச் சக்கரத்தையே கன்றாகக் கொண்டு , அவனது திருவருளாகிய பாலைத்தருமாறு எம் ஆசிரியர் நந்தி பெருமான் கறந்து கொண்டார். அதன் பயனாகக் குன்றின் உச்சியில் ஏறி நின்றவர் போன்ற உயர்வை அவர் பெற்றவரானார்.

விளக்கவுரை

உலகரால் அறியவராத நுண்பொருளாய் இருத்தல் பற்றிச் சிதாகாசத்தை, 'மாய நாடு' என்றும், ஆயினும் அது மாயம் (வஞ்சனை) உடையதன்று என்றற்கு, 'நன்னாடு' என்றும் கூறினார். நடு இரண்டடிகள் ஏகதேச உருவகம். மெய்யுணர்வின் மிக்காரை, 'குன்றேறி நின்றார்'1 என்பவாகலின், 'குன்றிடை நின்றிடுங் கொள்கையன்' என்றார். 'ஆம்' என்றது. 'முந்நிலைக் காலம் தோன்றும் இயற்கை மெய்நிலைச் சொல்லாய்' 2 நின்றது. ஈற்றடி, நந்தி பெருமான் கயிலையைக்காக்கும் அதிகாரம் பெற்று நின்றதையும் உட்கிடையாகக் கொண்டது. நந்தி பெருமான் பயன்பெற்றவாற்றைக் கூறி, 'பிறரையும் அவ்வாறு பெறுக' என அருளிச் செய்தவாறு.

இதனால், மேற்கூறிய சக்கரம் பயன்தருதற்கு அனுபவம் காட்டப்பட்டது.

கொண்டஇச் சக்கரத் துள்ளே குணம்பல
கொண்டஇச் சக்கரத் துள்ளே குறிஐந்து
கொண்டஇச் சக்கரம் கூத்தன் எழுத்தைந்தும்
கொண்டஇச் சக்கரத் துள்நின்ற கூத்தே. *#926*

கூத்தப்பெருமானது பஞ்சாக்கர பேதங்கள் அனைத்தும் இச்சக்கரத்தை இடமாகக் கொண்டன. அதனால், இதன்கண் அமைந்த நலங்கள் இன்னும்பல. அவை அத்திருவைந் தெழுத்தால் குறிக்கப்படும், 'சிவன், அருள், ஆன்மா, திரோதாயி, ஆணவம்' என்பனவும், அவற்றுள் சிவன் ஆன்மாக்களின் பொருட்டுச் செய்யும் அளவிறந்த கூத்துக்களும், பிறவுமாம்.

விளக்கவுரை

மூன்றாம் அடியை, 'கூத்தன் எழுத்தைந்தும் இச்சக்கரம் கொண்ட' என மாற்றி, முதற்கண் வைத்து உரைக்க. ஏனை இடங்களில் 'கொண்ட' என்பது, செயப்படு பொருள் வினைமுதல் போலக் கூறப் பட்டதாம். குணம் - நன்மை. 'பல' என்றதை எடுத்தல் ஓசையாற் கூறி, இப்பொருள் காண்க. குறி - குறிக்கோள்; குறிக்கப்பட்ட பொருள். நின்ற - நின்றன. 'பல, ஐந்து' என்பவற்றின்பின் 'உள்ளன' என்பது எஞ்சி நின்றது. கூத்து, 'ஞான நடனம், ஊன நடனம்' என இருவகைப் பட்டு, அவை ஒவ்வொன்றும் ஐவைந்தாதலேயன்றி, 'தூல நடனம், சூக்கும நடனம், பர நடனம்' என்று ஆதலும், அனைத்து நடனங்களும் சிறப்புவகையால் தத்துவந்தோறும், ஆன்மாக்கள்தோறும் வேறு வேறாதலும் ஆகிய பலவும் அடங்கப் பொதுமையில் 'கூத்து' என்றார்.
இதனால், மேற்கூறிய சக்கரத்தது சிறப்பின் மிகுதி கூறப் பட்டது.

வெளியில் இரேகை இரேகையில் அத்தலைச்
சுளியில் உகாரமாம் சுற்றிய வன்னி
நெளிதரு கால்கொம்பு நேர்விந்து நாதம்
தெளியும் பிரகாரஞ் சிவமந் திரமே. *#927*

வெறுவெளியாய் யாதும் எழுதப் படாத பரப்பு ஒன்றில் ஒரு நேர்க்கோடு இழுத்து, அக்கோட்டின் தலையில் ஒரு சுழியை இட்டால் அஃது உகாரவடிவாய்த் தோன்றும். அதில் 'கொம்பு' எனப்படுகின்ற சுழியும், நேர்க்கோடும் முறையே விந்துவிற்கும், நாதத்திற்கும் உரிய வரிவடிவமாகும். இனி அவையே 'தீ, காற்று' என்னும் பூதத்திற்கு உரிய குறிகளாயும் நிற்கும். இவற்றை இவ்வாறு தெளிவதே சிவ மந்திரத்தை உணர்தலாகும்.

விளக்கவுரை

இதில் சொல்லப்பட்ட வடிவம் - '*f*' - என்பது. இதனைப் 'பிள்ளையார் சுழி' என்பர். இதனைச் சுழி கீழாக ஆக்கினால் - ' ' - இவ்வாறாம். இதனையே ஏழாந் தந்திரத்துள் 'ஆன்மலிங்கம்' என்னும் அதிகாரத்தில்,
'விந்துவும் நாதமும் மேவும் இலிங்கமாம்;
விந்துவதே பீடம்; நாதம் இலிங்கமாம்'.

எனக் கூறுவார். பூதங்களுள் தேயு *(தீ)* இலிங்கவடிவாய் நிற்றலாலும், அது கீழே சுழித்துக் கொண்டு மேலே கொழுந்துவிட்டு ஓங்குவது ஆதலாலும் சுழியை, 'தீ' என்றும், செங்குத்து நேர்க்கோட்டினை, 'காற்று' என்றும் கூறினார். தீ கொழுந்து விட்டு எரிதல் காற்றினால் என்பது வெளிப்படை. விந்து சத்தியும், நாதம் சிவமும் ஆதலின், இச்சுழியை இவ்வாறு தெளியும் உணர்வே சிகார வகாரங்கள் கூடிய சிவ மந்திரத்தைத் தெளிதலாய் முடியும் என்றார் என்க. எனவே, 'மேற்கூறிய சக்கரங்களை யாதானும் ஒரு பரப்பில் பொறிப்பதற்கு முன்னே. மேலிடத்தில் இச்சுழியைப் பொறிக்க' என்பது குறிப்பு ஆயிற்று. 'சுழி' என்பது எதுகை நோக்கித் திரிந்தது. சுளியில் - சுழித்தால் - 'வெளியில் இரேகை உளதாக, இரேகையில் அத்தலைச் சுளியில்' என்க. அத்தலை - அதன் தலை. சுற்றிய - சுழித்தெழுந்த' 'கொம்பு, நேர்' என்பன, 'வன்னி, நேர்' என்பவற்றுடன். எதிர் நிரல் நிறையாயும் 'விந்து, நாதம்' 'என்பவற்றுடன் முறை நிரல்நிறையாயும் இயையும். நெளிதரல் - நில்லாது இயங்குதல். பிரகாரம் - வகை. இதில் 'பிரகாரம்' என்ற வடசொல்லின் இகரம் அலகு பெறாது நின்றது.
ஓங்காரம் உச்சரிக்கப்படுவதாய் நாதத்தை உணர்த்தி, மந்திரங்கட்கெல்லாம் முன்னிற்கும். 'நாதம்' என்பதனானே அதனை, 'ஊமை யெழுத்து' என்பர். எனினும், இங்குக் கூறிய இவ்வடிவம் யாதோர் உச்சரிப்பையும் உடையதாகாமையால், உண்மை ஊமை எழுத்தாய், விந்து நாதங்களாய் நிற்கும். அதனானே, எவற்றையேனும் வரிவடிவு எழுத்தால் எழுதத் தொடங்குமுன் முதலில் இவ்வடிவினை எழுதுதல் மரபாயிற்று. 'அம்மரபினை இங்குக் கூறிய சக்கரங்கட்கும் கொள்க' என்பது இதனால் உணர்த்தினார். எனவே, இம்மந்திரம் மேற்கூறிய சக்கரங்களைப் புறத்தில் புலப்பட அமைக்கும்பொழுது முதற்கண் செயற்பாலது ஒரு மரபு செயலினைக் கூறியதாயிற்று.

அகார உகார சிகாரம் நடுவா
வகாரமொ டாறும் வளியுடன் கூடிச்
சிகார முடனே சிவஞ்சிந்தை செய்ய
ஒகார முதல்வன் உவந்துநின் றானே. ***#928***

சிகாரம் அகார உகாரங்களின் நடுவே நிற்கக் கொண்டு செய்கின்ற பிராணாயாமத்தில் கும்பிக்கப்பட்ட பிராணவாயு வோடே ஆறு ஆதாரங்களில் பொருந்தி, 'சிவ என்னும் மந்திரத்தை ஓதிச் சிவனைத் தியானித்தால், பிரணவ முதல்வனாகிய அப்பெரு மான் மகிழ்ந்து சக்கரங்களில் நின்று அருள் செய்வான்.

விளக்கவுரை

'சிகாரம் அகார உகார நடுவாக' என்க, இது, 'சிம்' என்பது நடுவேவர,

முன்னே 'அம்' என்பதையும், பின்னே 'உம்' என்பதனையும் ஓதல் வேண்டும் என்றதாம். அஃதாவது, பிராணனை 'அம்' என்று பூரித்து, 'உம்' என்று இரேசித்து, 'சிம்' என்றுகும்பித்தல் வேண்டும் என்றவாறு. இதுவும் ஒருவகைப் பிராணாயாம முறை. 'வகாரமோடு சிகாரமுடனே' என எண்ணிடைச்சொல் எண்ணப் படும் பெயர் தோறும் வந்தது. அதனால், அப்பெயர்களை ஒருங்கு இணைய வைத்து உரைக்க. 'ஓகாரம்' என்பது குறுக்கலாயிற்று.

இதனால், மேற்கூறிய சக்கரங்களின் வழிபாட்டிற்குரிய, சிறந்ததொரு செபம், அதற்குரிய பிராணாயாமத்துடன் சொல்லப் பட்டது.

அற்ற இடத்தே அகாரம தாவது
உற்ற இடத்தே உறுபொருள் கண்டிடச்
செற்றம் அறுத்த செழுஞ்சுடர் மெய்ப்பொருள்
குற்றம் அறுத்தபொன் போலும் குளிகையே. ***#929***

மேற்கூறியவாறு அகாரம் முதலியவற்றால் ஆயாமம் (தடுத்தல்) செய்யப்பட்ட பிராண வாயு நிராதாரமாகிய உச்சியை அடைந்தபொழுது, அடைதற்குரிய பொருளாகிய சிவனைக் காணலாம். அப்பொழுது முன்பெல்லாம் மறக்கருணை உடையனாய் இருந்த சிவன் அந்நிலை நீங்கி அறக்கருணை உடையனாய், வளவிய ஒளியாயும், உண்மையாயும் நின்று, செம்பைக் களிம்பு நீக்கிப் பொன்னாகச் செய்யும் குளிகைத் தன்மையைப் பொருந்தி நிற்பன்.

விளக்கவுரை

அற்ற இடம் - 'ஆதாரம்' எனப்பட்டவைகளைக் கடந்த இடம். 'அகாரம்' என்றது உபலக்கணம். 'அகாரமதனால்' என உருபு விரித்துக் கொள்க. ஆவது - உண்டாவது. 'அகாரமதனால் ஆவது அற்ற இடத்தே உற்றவிடத்து' என்க. 'செற்றம் அறுத்த செழுஞ்சுடர்' என்றது அனுவாதமாய் நின்று பொருள் பயந்தது. 'செழுஞ்சுடர் குளிகை போலும்' என இயையும். ஈற்றடி, 'பொன்னினது குற்றத்தை அறுத்த குளிகைபோலும்' என்னும் பொருளது.

இதனால், 'மேற்கூறிய ஆதார யோக செபங்களிலும் நிராதாரயோக செபம் சிறந்தது' என்பது கூறப்பட்டது.

அவ்வென்ற போதினில் உவ்வெழுத் தாலித்தால்
உவ்வென்ற முத்தி உருகிக் கலந்திடும்
மவ்வென்றென் னுள்ளே வழிபட்ட நந்தியை
எவ்வண்ணஞ் சொல்லுகேன் எந்தை இயற்கையே. ***#930***

அகாரத்தை உச்சரித்த உடனே உகாரத்தை உச்சரித்தால், மேலிடத்ததாக அறியப்படுகின்ற வீட்டின்பம் பொங்கி வழிந்து உயிரின்கண் கலக்கும். அந்த இரண்டெழுத்தையும் மகாரத்துடன்

சேர்த்து உச்சரித்து என் உடலகத்தே நான் சிவனை வழிபட்ட செயலால் விளைந்த அவனது இன்பத்தை நான் எவ்வாறு பிறர்க்குச் சொல்லுவேன்! அவ்வின்பம் அத்தகையதாய் இருந்தது.

விளக்கவுரை

முதலடி, மேற்கூறிய பிராணாயாம முறையை அனுவதித்தது. மேல் எடுத்துக் கூறாத மகாரத்தை இதனுள் எடுத்துக் கூறினார். உ என்ற - உகரச்சுட்டால் சுட்டப்பட்ட. 'முத்தி, நந்தி' என்பன ஆகுபெயர்கள். 'அருள் வழியே ஆனந்தம் பிறக்கும்' என்பதை விளக்க, 'பெருகிக் கலக்கும்' என்னாது, 'உருகிக் கலக்கும்' என்றார். 'இயற்கை' என்றது, அவனுக்கு இயல்பாய் உள்ள இன்பத்தையேயாம். இதன்பின், 'அன்னது' என்னும் பயனிலை வருவித்துக் கொள்க.

இதனால், மேற்கூறிய பிரணவயோக செபம் வீட்டின்பத்தைத் தருதல் கூறப்பட்டது.

நீரில் எழுத்திவ் வுலகர் அறிவது
வானில் எழுத்தொன்று கண்டறி வாரில்லை
யாரிவ் வெழுத்தை அறிவார் அவர்களே
ஊனில் எழுத்தை உணர்கிலார் தாமே. ***#931***

இவ்வுலகத்தில் உள்ள பலரும் அறிதல் நீர்மேல் எழுத்துப் போலும் அழியும் எழுத்துக்களையேயாம். மேலை வெளியில் அழியாத எழுத்து ஒன்று உள்ளது. அதனை அறிபவர் ஒருவரும் இல்லை. அதனை அறிபவர் எவரோ அவரே உடம்பில் நின்று அறியும் நிலையில்லாத எழுத்தை அறியாதவர் ஆவர்.

விளக்கவுரை

'நீர்மேல் எழுத்துப்போல பிற எழுத்துக்கள் நிலையில் லாதன அல்ல எனப் பொதுவாகக் கருதப்பட்டாலும் உண்மையில் அவையும் நிலையில்லாத எழுத்துக்களே' என்பது முதலடியில் உணர்த் தப்பட்டது. 'வான்' என்றது, ஏற்புழிக் கோடலால் மேலை வெளி யாயிற்று. மேலை வெளியாவது விந்து. அதன்கண் உள்ள எழுத்துப் பிரணவம். வழக்கிடத்தும், செய்யுளிடத்துமாக அறியப்படும் எழுத் துக்கள் உடம்பில் இயல்பாக நின்று அறியப்படுவனவாதல் அறிக. 'ஊனில் எழுத்து' என்றது, உலகப் பொருளைக் குறித்த குறிப்பு மொழி. 'உணர்கிலர்' என்றது, 'அவற்றை உணர்ந்து அவற்றில் தொடக்குறுதலினின்றும் நீங்குவர்' என்றவாறு. இதனுள் இடையீட்டெதுகை வந்தது.

இதனால், மேற்கூறிய பிரணவ யோக செபம் பாசத்தின் நீங்குதற்கு வாயிலாதல் கூறப்பட்டது.

காலை நடுவுறக் காயத்தில் அக்கரம்
மாலை நடுவுற ஐம்பதும் ஆவன
மேலை நடுவுற வேதம் விளம்பிய
மூலன் நடுவுற முத்திதந் தானே. *#932*

பிராண வாயுவை உடம்பில் நடு நாடியாகிய சுழுமுனையில் பொருந்தும்படி செலுத்தினால், அந்நாடியில் நிற்கின்ற ஆதார மலர்களில் ஐம்பத்தோர் எழுத்துக்களும் முறையானே விளங்கி நிற்கும். அவ்வாறு நிறைவிடத்து முதற்காலத்திலே யாவர்க்கும் பொதுவாக வேதத்தை அருளிச்செய்த முதற்பொருளாகிய சிவன் தன் அடியார் நடுவில் இருக்கும் வீடுபேற்றைத் தருதல் திண்ணம்.

விளக்கவுரை

முதலடியில், *'நடுவுறச் செய்ய'* என ஒருசொல்லும், இரண்டாம் அடியில் *'மாலையாக'* என ஆக்கமும் வருவிக்க. *'காலைக் காயத்தில் நடுவுறச் செய்ய'* என்க. கால் - காற்று. *'காலை உடம்பின் நடுவிடத்தில் கொணர்ந்து ஊன்ற'* என்பது நயம். ஆதல் - தோன்றுதல். *'தோன்றவே, அவற்றைச் சுட்டியறிந்து நீங்குதல் கூடும்'* என்பது கருத்து. அடியார் நடுவுறும் முத்தி, அபரமுத்தியாம். துணிபுபற்றி, எதிர் காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது.
இதனால், மேற்கூறிய செபத்திற்குப் பிராணாயாமம் இன்றியமையாததாதல் கூறப்பட்டது.

நாவியின் கீழது நல்ல எழுத்தொன்று
பாவிகள் அத்தின் பயனறி வாரில்லை
ஓவிய ராலும் அறியஒண் ணாதது
தேவியும் தானும் திகழ்ந்திருந் தானே. *#933*

உந்தியின் கீழ் மூலாதாரத்தில் சிறப்புடைய ஓர் எழுத்து உள்ளது. அதன்மேலேதான் சிவன் தானும், தன் துணைவி யுமாக எழுந்தருளியிருக்கின்றான். அதனைத் துறவுபூண்ட முனிவ ராலும் அறிதல் இயலாது. எனவே, துறவுள்ளம் தோன்ற ஒட்டாது மயக்கி நிற்கின்ற வினைக்கட்டில் அகப்பட்டுள்ளவர் அறிய மாட்டாதவராதல் சொல்லவேண்டுமோ!.

விளக்கவுரை

'ஓர் எழுத்து' என்றது, ஓங்காரத்தை. *'தவத்தால் அதனைக் காண முயலுதலே செய்யத்தக்கது'* என்பது குறிப்பெச்சம். ஓவியர் - ஓவினவர்; பற்று நீங்கினவர். பொருளுக்கு ஏற்ப அடிகளை மாற்றி உரைக்க. *'அறிவாரில்லை'* என்பது ஒரு சொல் நீர்மைத்தாய எதிர்மறை முற்று, *'அது அறிய ஒண்ணாது'* என்க. இதனால், மேற்கூறிய அகார உகார

மகாரங்களது சமட்டியாகிய அதனது சிறப்புக் கூறப்பட்டது.

அவ்வொடு சவ்வென் றரனுற்ற மந்திரம்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிகிலர்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிந்தபின்
அவ்வொடு சவ்வும் அனாதியு மாமே. ***#934***

சிவனை, *'ஔ'* என்றும், *'சௌ'* என்றும் பிறந்து பொருந்திய மந்திரமே *'அம்'* என்றும், *'சம்'* என்றும் அமைந்த மறை பொருளை ஒருவரும் அறியவில்லை. அறிந்தார்களாயின் *'அம்சம்'* எனப்படுகின்ற அந்த மந்திரந்தானே அனாதியான சிவமாய் நிற்கும்.

விளக்கவுரை

'அரனை' என்னும் இரண்டனுருபு தொகுக்கப்பட்டது. *'அவ், சவ்'* நான்கில் முதலது, *'ஔ, சௌ'* என்பவற்றின் போலி. ஏனை யவை, ஈற்றில் மகாரத்தோடு கூடிய மந்திரங்கள். *'சவ்வும், அனாதியும்'* என்ற உம்மைகள் முறையே இழிவு சிறப்பும், உயர்வு சிறப்புமாம். இதனால், *'அம்சமந்திரம் சிவ மந்திரமாம் சிறப்பினை யுடையது'* என்பது உணர்த்து முகத்தால், மேல், *'அகார உகார', (934) 'அவ்வென்ற போதில்' (936)* என்னும் மந்திரங்களிற் கூறிய உகாரத்திற்கு ஈடாக *'சம்'* என்பதனை வைத்து அம்ச மந்திரத்தால் பிராணாயாமத்தைச் செய்தலும் பொருந்தும் என்பது கூறப்பட்டது.

மந்திரம் ஒன்றுள் மலரால் உதிப்பது
உந்தியி னுள்ளே உதயம்பண் ணாநிற்கும்
சந்திசெய் யாநிற்பர் தாம தறிகிலர்
அந்தி தொழுதுபோய் ஆர்த்தகன் றார்களே. ***#935***

மேல், *'நல்ல எழுத்து'* எனப்பட்ட அந்த ஓர் எழுத்தே, அக மலர்களாகிய ஆதார பங்ககயதந்தோறும் பலவகை யாகக் காட்சிப்படும். அது மூலாதாரத்தில் நிற்பதாயினும், சுவாதிட் டானத்தில் கும்பிக்கப்பட்ட பிராண வாயுவாய் மேலெழுந்து மணி பூரகம் முதலாக விளங்கத் தொடங்கும். சந்திக்காலங்களில் சந்திவழி பாட்டினைத் தவறாது செய்பவர்களுங்கூட, *'அவ்வழிபாடு இக் காட்சியை எய்துதற்கு வழி'* என்பதை அறிவதில்லை. ஏதோவோர் ஒழுக்கமாகக் கருதி அந்தியிலுங்கூடத் தவறாமல் அவ்வழிபாட்டினை முடித்து, வேறு செயல் செய்யச் சென்றுவிடுகிறார்கள்.

விளக்கவுரை

'ஒன்றே' என்னும் தேற்றேகாரம் தொகுத்தலாயிற்று. 'மலரில்' என்பதில், 'ஆல்' உருபு, 'தொறுப்' பொருளில் வந்தது. ஆர்த்தல் - நிரப்புதல். பிரணவம் பல்வேறு கலைகளாய் ஆதாரந் தோறும் நிற்குமாறு, மூன்றாம் தந்திரத்துள் 'கலை நிலை' என்னும் அதிகாரத்துட் குறிக்கப்பட்டது. இதனால், சந்திவழிபாடு முதலியவை வாயிலாக, மேற்கூறிய பிரணவக் காட்சியைப் பெற முயலுதல் வேண்டும் என்பதும் கூறப் பட்டது.

சேவிக்கும் மந்திரம் செல்லும் திசைபெற
ஆவிக்குள் மந்திரம் ஆதார மாவன
பூவுக்குள் மந்திரம் போக்கற நோக்கிடில்
ஆவிக்குள் மந்திரம் அங்குச மாமே. ***#936***

மக்கட் பிறப்பு எடுத்தோர் ஒருதலையாக வணங் குதற்குரிய இத்தந்திரத்தில் தொடக்கம் முதலாகப் பலவிடத்தும் கூறி, இங்கும் கூறப்பட்ட ஓரெழுத்தாகிய பிரணவம், மேற்கூறியவாறு விளங்கி நிற்கும் நிலையைப் பெறுவதற்கு, உயிர்ப்புக்கு இன்றியமை யாததாகிய அம்சமந்திரம் முதலிய பிராணாயாம மந்திரங்களே பற்றுக் கோடாகும். ஆகவே, ஆதார பங்கயங்களில் பிரணவத்தை மேற்கூறிய வாறு குற்றமறக் காணவேண்டின், அந்தப் பிராணாயாம மந்திரங்களே ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கும் அங்குசமாய் நின்று, மனத்தை ஒருவழிப்படுத்துவனவாகும்.

விளக்கவுரை

'அதனால், அம்மந்திரங்களுடன் பிராணாயாமத்தை முன்னர்ச் செய்க' என்பது குறிப்பெச்சம். செல்லுதல், முறையாக விளங்குதல். திசை - இடம். 'செல்லும் திசைபெற' என்றாராயினும், 'திசைகளில் செல்லும் நிலையினைப் பெற' என்றலே கருத்து. காற்றை, 'ஆவி' என்றலும் ஒரு வழக்கு. காற்று, இங்கே நெறிப்படுத்தப்படும் காற்று. 'ஆவிக்கு' என்னும் நான்கனுருபு. 'கூலிக்கு வேலை செய்தான்' என்பது போல் நிமித்தப் பொருளில் வந்தது. உள் மந்திரம் - நினைக்கப் படுகின்ற மந்திரம். 'அங்குசம்' என்றது, குறிப்பு உருவகம்.

இதனால், பிரணவக் காட்சிக்கு இன்றியமையாத பிராணா யாமம். மந்திரத்தோடுகூடச் செய்தலின் இன்றியமையாமை கூறப் பட்டது.

அருவினில் அம்பரம் அங்கெழும் நாதம்
பெருகு துடியிடை பேணிய விந்து
மருவி யகார சிகாரம் நடுவாய்
உருவிட ஆறும் உறுமந் திரமே. ***#937***

சிவம் சூக்குமமான நிலையில் பரவெளியாய் நிற்க, அதன்கண் நாதம்

தோன்றும். பின்பு சத்தி அச்சிவத்தைவிட தூலமாய் அவ்வெளியினுள் தோன்ற, அதனிடத்து விந்து தோன்றும். ஆகவே, அப்பெற்றியவாய நாத விந்துக்களின் நடுவில் சிகார யகாரங்கள் பொருந்தி நிற்க நின்ற ஆறு எழுத்துக்களும் உயர்ந்த மந்திரமாய் விளங்கும்.

விளக்கவுரை

'அதனால், அம்மந்திரத்தை மேற்கொண்டு செபிக்க' என்பது குறிப்பெச்சம். இங்குக் கூறியவாறு ஆறு எழுத்தாய் நிற்கும் மந்திரம், 'ஓம் நமச்சிவாயம்' என்பது. முன்னர் நின்ற விந்துவை அடுத்து நிற்பது யகாரமாதலின் அதனை முன்னர்க் கூறினார். நாதம் சகாரமோடு புணருமிடத்து சகார மெய்யாய் நிற்கும்.

'ஓoநம‹‹ிவாய' என்னும் மந்திரம், தமிழில் 'ஓநமச் சிவாய' என்றும், 'ஓநமச்சிவாயம்' என்றும் நிற்கும் என்பதை,

'போற்றியோ நமச்சிவாய' *1*

என்னும் திருவாசகத்தாலும்,

'நமச்சிவா யம்சொல்ல வல்லோம்' *2*

என்னும் திருத்தாண்டகத்தாலும் அறிக. இங்ஙனமாகவே, 'தமிழ் கூறுவார்க்கு இஃது ஆம்' என்றதாயிற்று. ஆக்கங்கள் வருவித்துக் கொள்க. பெருகுதல் - தூலமாதல், உருவிட - ஊடே நிற்க. 'ஆறும் மந்திரமாய் உறும்' என்க.

இதனால், மூலமந்திரம் தமிழில் நிற்பதொரு முறை கூறப்பட்டது.

விந்துவும் நாதமும் மேவி உடன்கூடிச்
சந்திர னோடே தலைப்படு மாயிடின்
அந்தர வானத் தமுதம்வந் தூறிடும்
அங்குதி மந்திரம் ஆகுதி யாமே. ***#938***

விந்துவும், நாதமும் திருவைந்தெழுத்து மந்திரத் தோடு ஒருசேரப் பொருந்திச் சந்திர மண்டலமாகிய ஆயிர இதழ்த் தாமரையுள்ள தலையை அடையுமாயின் நிராதாரத்தில் உள்ள தேவாமிர்தமாகிய சிவன் இன்ப ஊற்றாய் வெளிப்படுவான். அவனுக்கு அவ்விடத்து நினைக்கப்படுகிற அந்த மந்திர செபமே வேள்வியாய் அமையும்.

விளக்கவுரை

'திருவைந்தெழுத்து மந்திரம்' என்பது மேலை மந்திரத் தினின்றும் வந்து இயைந்தது. அல்லாவிடில், விந்து நாதங்கள் மட்டில் மந்திரம் ஆகாமை அறிக. இப்பயனை விதந்து கூறியது, 'மேற் சொல்லிய முறையால் இழுக்கொன்றும் இல்லை' என்றவாறு.

இதனால், 'திருவைந்தெழுத்தை விந்து இறுதியாகச் சொல்லு தலால் அதனது தன்மை சிறிதும் குறைவுறாது' என்பது கூறப்பட்டது.

ஆறெழுத் தோதும் அறிவார் அறிகிலர்
ஆறெழுத் தொன்றாக ஓதி உணரார்கள்
வேறெழுத் தின்றி விளம்பவல் லார்கட்கு
ஓரெழுத் தாலே உயிர்பெறல் ஆமே. *#939*

திருவைந்தெழுத்தைப் பிரணவத்தோடு சேர்த்து ஆறெழுத்தாக ஓதி உணரும் உணர்வின் பயனை அறிபவர் உலகில் ஒருவரும் இல்லை. அதனால், அந்த மந்திரத்தை ஒப்பற்ற ஒன்றாகக் கொண்டு ஓதிப் பெறும் உணர்வையும் யாரும் அடைவதில்லை. வேறு மந்திரத்தை அதற்கு நிகரானதாக நினையாமல் அந்த மந்திரம் ஒன்றையே ஓத வல்லவர்கட்கு அதன்கண் உள்ள ஓர் எழுத்தாலே ஆன்ம லாபத்தைப் பெறுதல் இயையும்.

விளக்கவுரை

ஈரிடத்தும் 'ஆறெழுத்து' என்றே ஓதினாராயினும், 'அவ் ஆறெழுத்து' எனச் சுட்டி ஓதுதலே கருத்து. 'இன்றி' என்றதும், 'இணையில்லையாக' என்றவாறு. 'ஓரேழுத்து' என்றது பொதுப்பட நின்று, சிகாரமாகிய அவ்வொன்றின்மேல் நோக்குடையதாய் நின்றது. இதன்கண் உயிரெதுகை வந்தது.

இதனால், மேற்சொல்லப்பட்ட மந்திரங்கள் பலவற்றுள் திருவைந்தெழுத்து இன்றியமையாச் சிறப்பினதாய் ஆன்ம லாபத்தைத் தருவதாதல் கூறப்பட்டது.

ஓதும் எழுத்தோ டுயிர்க்கலை மூவைஞ்சும்
ஆதி எழுத்தவை ஐம்பதோ டொன்றென்பர்
சோதி எழுத்தினில் ஐயிரு மூன்றுள
நாத எழுத்திட்டு நாடிக்கொள் ளீரே. *#940*

உச்சரிக்கும் எழுத்தாகிய அகாரத்தோடு ஏனைய பதினைந்தும் உயிரெழுத்துக்களாம்; ஆயினும், 'மூல எழுத்துக்கள் ஐம்பத்தொன்று' என்று மந்திர நூலார் கூறுவர். அவையெல்லாம் எவ் வாறாயினும், முதல்வனுக்குரிய முதன்மை மந்திரத்தில் மேற் சொல்லிய ஆறெழுத்துக்களே உள்ளன. அவற்றை நால்வகை வாக்கிலும் வைத்து ஆராய்ந்து கொள்ளுங்கள்.

விளக்கவுரை

'அகரம், ஒலிப்பின் முதல் முயற்சியிலே தோன்றி எல்லா எழுத்துக்களிலும் கலந்து நிற்கும் சிறப்பினது; அதனால், அஃது உயிரெழுத்திற்கும் உயிராய் நிற்பது' என்பார், 'ஓதும் எழுத்தோடு' என அதனது இயல்பும், உயர்வும் தோன்ற ஒடுஉருபு கொடுத்து, வேறுவைத்து ஓதினார். இது பற்றியே இறைவன் அகரவடிவினன் எனக்

கூறப்படுகின்றான். 'ஓதும் எழுத்து' என்றது, 'ஓதப்படும் - உச்சரித்தல் உண்டான பொழுதே தோன்றுகின்ற - எழுத்து' என்றவாறு, கலை - கூறு. 'சொற்களது உறுப்பு' என்பதாம். 'மூவைஞ்சும் உயிர்க்கலை' என மாறிக்கூட்டுக' 'அவை' பகுதிப்பொருள் விகுதி. சோதி, இறைவன், நாத எழுத்து - நாதத்தின் காரியமாகிய எழுத்து; 'பூதகாரியமாகிய எழுத்தாகக் கொள்ளுதலோடு ஒழியாது' என்றவாறு. 'நாத எழுத்தில் இட்டு' என்க. 'திருவைந்தெழுத்தை யோகமுறையால் நாத எழுத்தாக உணர்ந்து சுத்தமானதாகக் கணிக்க, சுத்த தத்துவத்தில் விளங்கிநிற்கும் தடத்த சிவனைத் தலைப்பட்டு அபரமுத்தியை எய்திப் பின் பரமுத்தியை எளிதிற்பெறலாம்' என்பது கருத்து.
இதனால், 'மூல எழுத்துக்கள் ஐம்பத்தொன்று என்றாலும், அவற்றுள் உயிரெழுத்தாவன பதினாறே' என்பதும், 'அவற்றுள்ளும் அகரம் உயிர்க்குயிராய எழுத்து' என்பதும், 'எனினும், மேற்கூறிய ஆறெழுத்துக்கள் அவை எல்லாவற்றினும் மேம்பட்டன' என்பதும் கூறி, மேற்கூறிய மந்திரத்தின் சிறப்பு வலியுறுத்தப்பட்டது.
'ஐம்பத்தோரெழுத்து இவை' என்பதை மேற்காட்டிய பேரம்பலச் சக்கரத்துட் காண்க.

விந்துவி லும்சுழி நாதம் எழுந்திடப்
பந்தத் தலைவிபதி னாறு கலையதாய்க்
கந்தர வாகரம் கால்உடம் பாயினாள்
அந்தமும் இன்றியே ஐம்பத்தொன் றாயதே. ***#941***

சுத்த மாயையினின்றும் ஓங்காரமாய் நாதம் தோன்ற, அந்த நாதத்தின் தலைவியாகிய குண்டலினி சக்தி, பதினாறு கலைகளையுடைய பிரணவமே தானாகி மக்களது உடம்பில் 'தலை, கால், உடல்' என்னும் உறுப்புக்களில் நிற்கின்றாள். அவள் ஒன்றி நிற்கப் பெறுதலே பிரணவம் அழிவின்றி மேற்கூறிய ஐம்பத்தோரெழுத் தாயிற்று.

விளக்கவுரை

'சுழி' என்றது ஒங்காரத்தின் வடிவத்தை. 'சுழியாய்' என, ஆக்கம் வருவித்துக்கொள்க. நாதமாவது வாக்கு. உயிர்களைப் பிணித்துள்ள பந்தங்களில் நீக்குதற்கரிய பரமபந்தமாய் நிற்பது வாக்காதலின், அதனையே 'பந்தம்' என்றார். 'பதினாறுகலைகள் இவை' என்பதும், அவை உடம்பில் நிற்கும் இடங்களும் மேல் மூன்றாம் தந்திரத்துள் 'கலைநிலை' அதிகாரத்திற் காட்டப்பட்டன. கந்தரம் - கழுத்து. ஆகாரம் என்பது குறுகி நின்றது. ஆகாரம் - வடிவம். கழுத்தோடு கூடிநிற்கும் வடிவம் தலை. 'அந்தம் இன்றி ஆயது' என்றது 'அக்கரம்' (அட்சரம்) எனப்பட்டது என்றவாறு. இதனால், 'உண்மை அக்கரம் குண்டலினிசத்தியே என்பதும், அவட்கு இடமாதல் பற்றியே வாக்கின்

வடிவாக எழுத்துக்கள், 'அக்கரம்' என உபசரித்துக் கூறப்படுகின்றன' என்பதும் பெறப்பட்டன. உண்மை விளக்கத்துள், 'திருவைந்தெழுத்து ஏனையெழுத்துக்கள் போல அழியும் எழுத்துக்கள் அல்ல' *(40, 41)* எனக் கூறியதையும் இவ்விடத்து நினைவுகூர்க. 'அந்தமும்' என்ற உம்மை 'ஆதியின்றி' என இறந்தது தழுவிய எச்சம். 'ஆயது' என்பதற்கு, 'அது' என்னும் எழுவாய் வருவிக்க. அச்சுட்டுப் பெயர், முன்னர், 'பதினாறு கலைய' என்ற பிரணவத்தைக் குறிக்கும்.

இதனால், 'மேற்கூறிய ஆறெழுத்தின் பொருளாகிய சிவனுடைய சத்தியினது சார்பு காரணமாகவே பிரணவமும், அதன் காரியமாகிய எழுத்துக்களும் சிறப்புற்றன' என்பது கூறப்பட்டது.

ஐம்ப தெழுத்தே அனைத்துவே தங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்தா கமங்களும்
ஐம்ப தெழுத்தேயும் ஆவ தறிந்தபின்
ஐம்ப தெழுத்தும்போய் அஞ்செழுத் தாமே. **#942**

மேற் சொல்லிய ஐம்பத்தோரெழுத்துக்களே வேதம், ஆகமம் அனைத்துமாய் நிற்கும். அவ் உண்மையை உணர்ந்த பின் 'ஐம்பதெழுத்து அல்லது ஐம்பத்தோரெழுத்து' என்றெல்லாம் எண்ணுகின்ற அலைவு நீங்கி, 'ஐந்தெழுத்து' என்று உணர்ந்து நிற்கின்ற அடக்கம் உண்டாகும்.

விளக்கவுரை

'ஐம்பதெழுத்துமே' என்பதில் உம்மையும், ஏகாரமும் மாறிநின்றன. ஆவது, அனைத்தும் ஆவது. 'ஐம்பதெழுத்தும்' என்றது, எல்லா வகையான எழுத்துக்களும்' என்றவாறு. எழுத்துக் களை, 'ஐம்பத்தொன்று'என்பதனோடு, 'ஐம்பது' என்றலும் வழக்கு என்பது உணர்தற்கு, மேல், 'ஐம்பத்தோரெழுத்து' என்றவர், இங்கு, 'ஐம்பதெழுத்து' என்றார். இது மூன்றாம் தந்திரத்திலும் விளக்கப் பட்டது.

வேதம், ஆகமம் முதலிய பல நூல்களையும் கற்றோர், 'அவை அனைத்திலும் சொல்லப்படுவது திருவைந்தெழுத்தின் பொருளே' என்பதை நன்குணர்வர் ஆதலின், 'ஐம்பதெழுத்தும் போய் அஞ்செழுத்தாமே' என்றார்.

'அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் அஞ்சின்
பொருள்நூல் தெரியப் புகின்'

என்னும் திருவருட்பயனையும் காண்க. மூன்றாம் அடியில் ஏகாரம் பிரிநிலையும், உம்மை முற்றும்மையுமாம். ஆகவே, 'ஐம்பதெழுத் துமே அனைத்துமாவது' என்பது பொருளாயிற்று.

இதனால், அனைத்தெழுத்துக்களும் மேற்கூறிய ஆறெழுத்தின் விரிவேயாதல் கூறப்பட்டது.

இது முதலாக, இருபத்தொரு மந்திரங்களால் திருவைந் தெழுத்தின் பெருமையே கூறி வலியுறுத்துகின்றார்.

அஞ்செழுத் தால்ஐந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தால்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தால்இவ் வகலிடம் தாங்கினன்
அஞ்செழுத் தாலே அமர்ந்துநின் றானே. *#943*

சிவபெருமான் தத்துவங்களைப் படைத்தும், அவற்றின் காரியமாகிய எண்பத்து நான்கு நூறாயிர வகைப்பிறவி களான உடம்புகளையும் ஆக்கி உயிர்கட்குத் தந்தும், அவைகளைக் காத்தும், அவ்வுயிர்கள் தன்னை மன மொழி மெய்களால் வழிபட்டு நலம் பெறுதற் பொருட்டுத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருப் பதும் ஆகிய எல்லாம் திருவைந்தெழுத்தாலேயாம்.

விளக்கவுரை

'ஐந்து பூதம்' என்றது உபலக்கணம். ஐந்தொழில்களில் இங்கு வேண்டற்பாலனவாகிய இரண்டையே கூறினார். ஐந் தொழிலையும் சிவபெருமான் ஏவுதல் வகையானும், இயற்றுதல் வகையானும் செய்தருளுவன்.

'மூவகை அணுக்களுக்கும் முறைமையால் விந்து ஞானம்
மேவின தில்லை யாயின் விளங்கிய ஞானம் இன்றாம்'*1*

என்றவாறு, நாதம் இன்றி ஒருவர்க்கும் சிறப்புணர்வு கூடாது ஆதலால், 'ஏவுதல் ஐந்தெழுத்தாலே' என்பது தெளிவாகும். இனி, அத் தொழில்களைத் தானே இயற்றுமிடத்தும் அவற்றால் உயிர்கள் பயன் கொள்ளுதற்கு நாதம் இன்றியமையாமை பற்றி அதனையும் ஐந்தெழுத் தாலே ஆவனமாகக் கூறுதல் அமைவுடைத்தாம். ஐந்தெழுத்தாலே திருமேனி கொள்ளுதல் எவ்விடத்தும் ஒத்ததாதல் அறிக.

வீழ்ந்தெழல் ஆம்விகிர் தன்திரு நாமத்தைச்
சோர்ந்தொழி யாமல் தொடங்கும் ஒருவற்குச்
சார்ந்த வினைத்துயர் போகத் தலைவனும்
போந்திடும் என்னும் புரிசடை யோனே. *#944*

சிவனது திருப்பெயராகிய திருவைந்தெழுத்தைத் தளர்ச்சியின்றி ஓத உறுதிபூண்டு நிற்பவர்கட்கு, வினைக்குழியில் வீழ்ந்து கிடந்தாலும் எழுந்து கரையேறுதல் கூடுவதாம். மேலும் அப்பெருமான் அவர்களை வினைத்துன்பம் விட்டொழியுமாறு தன்மாட்டு அழைத்து ஆண்டுகொள்வான்.

விளக்கவுரை

'வீழ்ந்தும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத் தலாயிற்று. போந்திடும்

என்னும் - 'வாருங்கள்' என்று அழைப்பான். 'புரிசடையோனாகிய தலைவனும்' என மேலே கூட்டி உரைக்க.

உண்ணும் மருந்தும் உலப்பிலி காலமும்
பண்ணுறு கேள்வியும் பாடலு மாய்நிற்கும்
விண்ணின் றமரர் விரும்பி அடிதொழ
எண்ணின் றெழுத்தஞ்சு மாகிநின் றானே. *#945*

சிவபெருமான், தேவர்கள் தன்னை விண்ணுலகத் தில் விருப்பத்தோடு அடிபணிய, அவர்கட்கு அவர்கள் உண்ணுகின்ற அமுதமாயும், அதன் பயனாகிய நீண்ட வாழ்நாளாயும், அவர்கட்கு விருப்பத்தைத் தருகின்ற இசையாயும், பாட்டாயும் நிற்றலேயன்றி, அவர்களது கருத்தில் நிற்கும் திருவைந்தெழுத்தாயும் நின்று மேலை மந்திரத்திற்கூறிய பயன்களை அளிப்பன்.

விளக்கவுரை

மூன்றாம் அடியை முதலில் வைத்து, இரண்டாம் அடியிறுதியில், 'அதுவன்றி' என்பது வருவித்து உரைக்க. 'நிற்கும்' என முன்னவற்றை முடித்தமையால், பின்னதற்குப் பயன் மேற்கூறிய தாயிற்று. 'எண்ணின்ற' என்பதில் அகரம் தொகுத்தலாயிற்று. 'அஞ்சும்' என்ற உம்மை, 'அவ்வாறு நின்றதன்றியும்' என, இறந்தது தழுவிநின்றது. 'தேவர்களும் தாம் விரும்பிய பயனைப் பெறுதல் திருவைந்தெழுத்தை ஓதியே' என்பது இங்குக் கூறப்பட்டது.

'மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றுஅவர் தம்மை ஆள்வன
... ... அஞ்செழுத்தும்மே' *1*

என்ற திருஞானசம்பந்தர் திருமொழியும் காண்க. 'தலைவன்' என்னும் எழுவாய் இயைபினால் வந்து இயையும்.

ஐந்தின் பெருமையே அகலிட மாவதும்
ஐந்தின் பெருமையே ஆலய மாவதும்
ஐந்தின் பெருமையே அறவோன் வழக்கமும்
ஐந்தின் வகைசெயப் பாலனும் ஆமே. *#946*

உலகம் நிலைபெற்றிருத்தலும் கல் முதலியவற்றால் கட்டப்பட்டு அமைந்த இடங்கள் சிவபெருமானது அருள் நிலையங் களாதலும், அந்நிலையங்களில் அவன் விளங்கி நின்று, வேண்டு வார்க்கு வேண்டுவன வழங்குதலும் திருவைந்தெழுத்தாலேயாகும். இனி, அதனை அதன் வகை பலவற்றையும் அறிந்து ஓத, அப்பெருமான் அங்ஙனம் ஓதுவாரது பக்கத்திலே எப்பொழுதும் இருப்பவனாவான்.

விளக்கவுரை

அகலிடம் - உலகம்; என்றது உயிர்களை. 'அவை நிலைபெறுதல்' என்பதனை,
'வானின் றுலகம் வழங்கி வருதலால்' *1*
என்பது போலக் கொள்க. 'ஆலயம் ஆவது' என்றது 'ஆலயம் ஆலயமாவது' என்றவாறு. 'சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன்' என்னும் முறைமையிற் சிறிதும் வழுவாதவன் என்பார், 'சிவபெருமானை, 'அறவோன்' என்றார். செய்தல், இங்கே ஓதுதல். பால் - பக்கம். பாலன் ஆதலை,
'இவன்எனைப் பன்னாள் அழைப்பொழி யான்என்
றெதிர்ப்படுமே' *1*
'எங்குற்றாய் என்றபோதில்
இங்குற்றேன் என்கண்டாயே' *2*
'தோன்றாத் துணையாய் இருந்தனன்
தன்னடியோங்களுக்கே' *3*
'ஆரூரர்தம் - அருகிருக்கும் விதியன்றி அறம் இருக்க
மறம்விலைக்குக் கொண்டவாறே' *4*
என்பன முதலிய திருமொழிகளை நோக்கி அறிக.
'சிவனே சிவனே சிவனேஎன் பார்பின்
சிவன்உமையா ளோடுந் திரிவன்'
என்பதொரு வெண்பாவையும் காண்க. இதன் முதலடி மூன்றாம் அடிகளில் னகர ஒற்றுக்கள் அலகு பெறாது நின்றன.

வேரெழுத் தாய்விண்ணாய் அப்புற மாய்நிற்கும்
நீரெழுத் தாய்நிலம் தாங்கியும் அங்குளன்
சீரெழுத் தாய்அங்கி யாய்உயி ராம்எழுத்
தோரெழுத் தீசனும் ஒண்சுட ராமே. ***#947***

சிவபெருமான் நாத எழுத்தாகிய பிரணவமாய் அதன் வழியே வானத்தில் பொருந்தி எல்லாப் பொருட்கும் வியாபக மாய் நிற்பான். நீரெழுத்தாகிய நகாரமாய் அதன்வழியே நீரில் பொருந்தி அதன்வழியே பொருள்களைப் பதம் செய்வான். நில வெழுத்தாகிய மகாரமாய் அதன்வழியே நிலத்திற் பொருந்தி எல்லா வற்றையும் தாங்குவான். நெருப்பெழுத்தாகிய சிகாரமாய் அதன் வழியே நெருப்பில் பொருந்திப் பொருள்களைச் சுட்டுப் பக்குவப் படுத்துவான். காற்றெழுத்தாகிய வகாரமாய் அதன்வழியே காற்றிற் பொருந்திப் பரந்து சலித்துப் பொருள்களைத் திரட்டுவான். எஞ்சிய ஓரெழுத்தாய யகாரமாய் அதன்வழியே ஆன்மாவிலும், இருசுடரிலும் பொருந்தி அறிதலும், ஒளிவீசலும் செய்வான்.

விளக்கவுரை

செய்யுள் நோக்கி, வேண்டும் சொற்கள் பலவற்றைத் தொகுத்து அவை குறிப்பால் தோன்றக் கூறினாராகலின், அவற்றை இவ்வாறு விரித்துரைத்துக்கொள்க. பூதம் முதலியவற்றைத் திருவைந் தெழுத்தில் எழுத்துக்கள் நிற்கும் முறைபற்றிக் கூறினமை அறிக. இங்குக் கூறிய ஐந்தெழுத்துப் பிரணவத்தோடுகூடிய தூல ஐந்தெழுத் தாதல் வெளிப்படை. 'ஒண் சுடர்' என்பது அகத்தொளியாகிய அறி வையும், புறத்தொளியாகிய சூரிய சந்திரர்களையும் குறித்தது. அப்புற மாதல், வியாபகமாய் நிற்றல். 'ஓரெழுத்து' என்பதன் பின்னும் ஆக்கம் வருவிக்க. 'ஈசனும்' என்ற உம்மை சிறப்பு. இவ்வெழு வாயை முதலிற்கொண்டு உரைக்க. மேலை மந்திரத்தில், 'ஐந்தின் பெருமையே அகலிட மாவது' என்றது இனிது விளங்குதற்பொருட்டு, அஃது ஆமாற்றை இதனுள் வகுத்துக் கூறினார். ஆகவே, நீரெழுத்து முதலியவற்றைப் பூதங்கட்குரிய பீசாக்கரங்களாகக் கொள்ளல் வேண்டாமை அறிக. இங்குக் கூறிய எழுத்துக்கள், அவ்வப்பொருட்கு உரியனவாதலை ஆணையாற்கொள்க.

நாலாம் எழுத்தோசை ஞாலம் உருவது
நாலாம் எழுத்தினுள் ஞாலம் அடங்கிற்று
நாலாம் எழுத்தே நவிலவல் லார்கட்கு
நாலாம் எழுத்தது நன்னெறி தானே. ***#948***

மேற்கூறிய எழுத்துக்களில் பிரணவம் நீங்க நகாரம் முதலாக முறையானே நின்ற ஐந்தெழுத்துக்களில் இறுதிநின்ற யகாரம் ஒழித்து நான்காய்நின்ற எழுத்துக்களது ஓசையே உலகெங்கும் வியாபிப்பது. அதனால், எல்லா உலகமும் அவ்வெழுத்திற்குள்ளே அடங்கியுள்ளன. அதனால், அவற்றாலாய அவ்வோசையின் பெருமை அறிந்து அதனையே ஓதவல்லவர்கட்கு அதுவே நன்னெறி யாய் நன்மை பயக்கும்.

விளக்கவுரை

கடவுளரைப் போற்றுமிடத்து அவர்தம் பெயரோடு பெரும்பான்மையும் நான்காம் வேற்றுமையைப் புணர்த்து அவரைப் படர்க்கையில் வைத்துப் போற்றுதல் வடமொழி வழக்கு. அப்பெயர் களைப் பெரும்பான்மையும் எட்டாம் வேற்றுமையாக்கி அவரை முன்னிலைப் படுத்திப் போற்றுதல் தமிழ் வழக்கு. அதனால், 'சிவாய' என்பது தமிழ் முறையில் 'சிவ' என்றே நிற்குமாதலின், 'சிவமூல மந்திரம், மேல், 'ஆறெழுத்தோதும்' என்ற மந்திரத்துட் கூறியவாறு பிரணவத்தோடு கூடி ஆறெழுத்தாலேயன்றி, யகாரம் நீங்க ஐந்தெழுத் தாயும் நிற்றலுடையது' என்பது உணர்த்துவார் ஐந்தெழுத்தின் பெருமையெல்லாம் எடுத்தோதினார். எனவே, யகாரம் அவற்றுள் அடங்கி நிற்பதாயிற்று. 'இம் மந்திரத்திற்கு இதுவே பொருள்' என்பதை வருகின்ற மந்திரங்களால் அறிக.

நால் ஆம் எழுத்து - 'நான்கு' என்னும் தொகையை உடைய வாகின்ற எழுத்து. 'அவற்றால் ஆய ஓசை' என்றது, 'மந்திரம்' என்ற வாறு. 'உருவுவது' என்பது குறைந்து நின்றது. எழுத்து அது - எழுத்தாய் நின்ற அம்மந்திரம். 'அதுவேயும்' என்னும் பிரிநிலை ஏகாரமும், இறந்தது தழுவிய எச்ச உம்மையும் விரித்துக் கொள்க.

இயைந்தனள் ஏந்திழை என்உளம் மேவி
நயந்தனள் அங்கே நமசிவ என்னும்
பயந்தனை ஓரும் பதமது பற்றும்
பெயர்த்தனன் மற்றுப் பிதற்றறுத் தேனே. ***#949***

மேற்கூறியவாறு யான் அந்நான்கு எழுத்தையே ஓதினமையால் சிவசத்தி என்னிடத்து வந்து பொருந்தி, எனது உள்ளத்தை இடமாகக் கொள்ள விரும்பி, அங்ஙனம் அதன்கண்ணே அமர்ந்தாள். அதனால், யான் எனது சீவநிலையினின்று நீங்கினேன். பிறமந்திரங்களைப் பல்வேறு பயன் குறித்துப் பிதற்றுதலையும் ஒழித்தேன். ஆகவே, நீவிரும் 'நமசிவ' என்று ஓதுதலின் பயனை ஆய்ந்து உணர்மின்; உணர்ந்து அம்மந்திரத்தைப் பற்றுமின்.

விளக்கவுரை

'அந்நான்கெழுத்தையே ஓதினால்' என்பது இயைபு பற்றிக் கொள்ளக் கிடந்தது. 'நமசிவ என்னும்' என்பது தொடங்கி மூன்றாம் அடியை இறுதியில் வைத்து உரைக்க.

ஆமத் தினிதிருந் தன்ன மயத்தினை
ஓமத்தி லேஉதம் பண்ணும் ஒருத்திதன்
நாம நமசிவ என்றிருப் பாருக்கு
நேமத் தலைவி நிலவிநின் றாளே. ***#950***

அரிசி முதலியவற்றில் உடலுக்கு நலந்தரும் பொருளாய் நின்று, அவை சோறு முதலியனவாய்ப் பக்குவப்பட்ட பின்பு அவற்றை, வயிற்றுத்தீ வேள்வித்தீயாகுமாறு அதில்நின்று அவிசாகச் சீரணிப்பிக்கின்ற அத்தன்மையளான திரோதான சத்திக் குரிய நகாரம் முதலாக நின்ற அந்நான்கெழுத்தே துணை என்று இருப் பவர்கட்குச் சிவசத்தி அவர்களது வழிபாட்டின் பயனைத் தரும் முதல் வியாய் நீங்காது நிற்பாள்.

விளக்கவுரை

ஆமம் - அரிசி. அன்னம் - சோறு. இவை உபலக்கணம். 'ஓமம், உதம்' என்பன உருவகங்கள். உதம் - அவிசு. 'இருந்து பண்ணும்' என்னும் அடைமொழியால், 'ஒருத்தி' என்றது திரோதான சத்தியையாயிற்று. நகாரம் திரோதான சத்தி எழுத்தாகலின், அதனை முதலாக உடைய

மந்திரமும் அவளதாயிற்று. நேமம், 'நியமம்' என்பதன் மரூஉ. 'இனிதாய், உதமாக, தலைவியாய்' என ஆக்கங்கள் வருவிக்க. 'உலகப் பயனை வேண்டுவார்க்குத் தூல பஞ்சாக்கரம் உரியது' என்பதை விளக்கியவாறு.

பட்ட பரிசே பரன்அஞ் செழுத்தின்
இட்டம் அறிந்திட் டிரவு பகல்வர
நட்டம தாடும் நடுவே நிலயங்கொண்
டட்டதே சப்பொருள் ஆகிநின் றானே. ***#951***

சிவன், 'ஐம்பூதம், இருசுடர், ஆன்மா' என்னும் உலகப் பொருள் எட்டுமாய் நிற்பவன் ஆதலால், அவரவர் விருப் பத்தை உணர்ந்து அவரவர் மேற்கொள்ளப்பட்ட வகையிலே அமைந்த அஞ்செழுத்தின் உள் நின்று இரவும் பகலும் ஆகிய காலங்கள் மாறிமாறித் தொடர்ந்துவர இடையறாது நடம் புரிந்து நிற்பான்.

விளக்கவுரை

'பட்ட பரிசே அஞ்செழுத்தின் நடுவே நிலயங்கொண்டு ஆடும்' என்க. பட்டபரிசே ஆடுதலாவது, தூல பஞ்சாக்கரத்தின் நடுவில் ஊன நடனத்தையும், சூக்கும பஞ்சாக்கரத்தின் நடுவில் ஞான நடனத்தையும் செய்தல். ஈற்றில் 'ஆதலால்' என்னும் சொல்லெச்சம் வருவிக்கப்பட்டது. ஈற்றடி, வேண்டுவோர் வேண்டுவனவற்றை அறிதல் கூறி, 'அங்ஙனம் அறிதலால், அவரவர்க்கு உரிய பயனை அளித்தல் அல்லது நியதியின்றி அளியான்' என்பது உணர்த்தப் பட்டது. தூலமும், சூக்குமமும் ஆகிய பஞ்சாக்கரங்கள் தத்தம் பயனையே தருதலன்றிப் பிறிது பயன் தாராமையைக் காரணங்காட்டி விளக்கியவாறு. 'நம' ஊன நடனத்தையும், 'சிவ' ஞான, நடனத்தையும் குறித்தலை *955, 956* இல் உணர்த்தியுள்ளார் எனக் கோடல் பொருத்தம்.

அகாரம் உயிரே உகாரம் பரமே
மகாரம் மலமாய் வரும்முப்பத் தாறில்
சிகாரம் சிவமா வகாரம் வடிவா
யகாரம் உயிரென் றறையலும் ஆமே. ***#952***

முப்பத்தாறு தத்துவங்களில் ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் அகாரத்தைப் பற்றியும், சிவ தத்துவம் ஐந்தும் உகாரத்தைப் பற்றியும், வித்தியா தத்துவம் ஏழும் மகாரத்தைப் பற்றியும் நிற்கும். இனித் திருவைந்தெழுத்தில் சிறப்புடைய மூன்றில் அவ்வாறின்றிச் சிகாரம் சிவமும், வகாரம் சத்தியுமேயாக, யகாரம் ஆன்மாவேயாம் என்று சொல்லுதலும் கூடும்.

விளக்கவுரை

மேல் பிரணவ கலைகளையும், திருவைந்தெழுத்தை யும் ஒப்ப வைத்துக்

கூறிவந்தமைபற்றி மயங்காமைப் பொருட்டு இவ்வாறு கூறி அக்கலைகளினும் திருவைந்தெழுத்துக்கள் உயர்ந்தன வாதலை விளக்கினார்.
'முப்பத்தாறில்' என்பதை முதலில் வைத்து உரைக்க. 'முப்பத்தாறில்' என்றதனால், 'உயிர், பரம், மலம்' என்பன அவை பற்றிய தத்துவங்களே ஆதல் விளங்கும். 'மலம்' என்றது, 'அசுத்தம்' என்னும் பொருட்டாய், அசுத்தமாயா தத்துவங்களை உணர்த்திற்று. வடிவு - சிவனது உருவம்; அது சத்தியாதல் அறிக. 'சிவம், வடிவு, உயிர்' என்பவற்றில் தேற்றேகாரங்கள் தொகுத்தலாயின. அவற்றால், அவற்றின் பொருள்கள் சடமாகாது சித்தாதலும் அப்பொருள்களோடு அவ்வெழுத்திற்கு உள்ள பேருரிமையும் தோன்றுவனவாம். அவை பற்றியே 'அறையலும் ஆம்' என உயர்வு சிறப்பும்மை கொடுத்துக் கூறினார்.

நகார மகார சிகாரம் நடுவா
வகாரம் இரண்டு வளியுடன் கூடி
ஒகாரம் முதற்கொண் டொருகால் உரைக்க
மகார முதல்வன் மனத்தகத் தானே. **#953**

நகார மகாரங்களை முன்னர் உடைய சிகாரம் நடுவணதாய் நிற்க, அவற்றின் பின்னதாகிய வகாரம் இடைகலை, பிங்கலை என்னும் இரு வாயுக்களுடன் பொருந்தி, ஓங்காரத்தை முதற்கண்ணே பெற்று ஓதப்படின், மேற்கூறிய எழுத்துக்களில் மகாரத்திற்கு முதல்வனாய் நின்று அதனைப் பரிபாகப்படுத்திவரும் சிவன், அங்ஙனம் ஓதுவாரது உள்ளத்தைத் தனக்கு இடமாகக் கொண்டு எழுந்தருளியிருப்பான்.

விளக்கவுரை

'நடுவாய்' என்றமையால், நகார, மகாரங்களை உடைமை முதற்கண்ணதாயிற்று. 'நடுவாய் நிற்க' என ஒரு சொல் வருவிக்க. உரைக்க - உரைக்கப்பட. தூல பஞ்சாக்கரமாதலின் ஊன நடனப் பிரானையே கூறினார். மேல் இரண்டிடங்களில் *(955, 56)* எடுத்தோதிய 'நமசிவ' என்பதனை முதலில் பிரணவத்தோடு கூட்டிப் பிராணாயமத்துடன் ஓதல் வேண்டும் என்பது உணர்த்தியவாறு. 'நாலாம் எழுத்தோசை' *(954)* என்பது முதல், இதுகாறும் அஞ்செழுத்து நாலெழுத்தாயும் நிற்கும் முறைமையே கூறினார்.

அஞ்சுள ஆனை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத் தங்குச மாவன
அஞ்சையுங் கூடத் தடுக்கவல் லார்கட்கே
அஞ்சாதி ஆதி யகம்புகல் ஆமே. **#954**

ஒரு காட்டில் வாழ்வனவாகிய ஓர் ஐந்து யானைகள் உள்ளன. அவைகளை அடக்குதற்குச் சிவ நாமத்தில் உள்ள ஐந்து எழுத்துக்களே

அங்குசங்களாய் உதவும். அந்த அங்குசத்தைக் கொண்டு அவைகளை முழுதும் அடக்கவல்லவர்கட்கே ஐந்து பூதம் முதலிய தத்துவங்கட்கு முதல்வனும், முதற்கடவுளுமாகிய சிவனது இடத்தில் புகுதல் கூடும்.

விளக்கவுரை

'அஞ்சு ஆனை' என்றதும் 'அடவி' என்றதும், 'தாம் குறித்த அவை' என்னும் பொருளவாய் நின்றன. அவை ஐம்பொறி களும், தத்துவதாத்துவிகக் கூட்டங்களுமாம். 'அஞ்சுக்கும் அஞ்செழுத்து' என்றது நயம் தோற்றி நின்றது. நகாரம் முதலியவற்றை மூக்கு, நாக்கு, கண், மெய், செவி என்பவற்றோடு முறையே இயைத்துக் காட்ட முயல்வாரும் உளர். கூட - ஒருசேர, 'அஞ்சாதி யாகிய ஆதி' என்க. அகம் திருவடி நிழல்.

ஐந்து கலையில் அகராதி தன்னிலே
வந்த நகராதி மாற்றி மகாராதி
நந்தியை மூலத்தே நாடிப் பரையொடும்
சந்திசெய் வார்க்குச் சடங்கில்லை தானே. ***#955***

நிவிர்த்தி முதலிய ஐந்து கலைகளில் உள்ள அகரம் முதலிய எழுத்துக்களில் சிலவாயுள்ள நகாரம் முதலிய ஐந்தெழுத் துக்களை அம்முறையில் நில்லாது பிரணவம் முதலாக மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களிலும் முறையே நிற்க மாற்றி வைத்து, தடத்த சிவனை மூலாதாரம் முதலாகவே திரோதன சத்தியோடுகூடத் தியானித்து, இவ்வாறு சந்தியா காலங்களில் வழிபடுபவர்க்கு வேறு சந்தியாவந்தனம் முதலிய சடங்குகள் வேண்டுவதில்லை.

விளக்கவுரை

'ஐந்து கலையில் அகராதி' என்பதில், ஏழனுருபு பெயரோடு முடிந்தது. 'தன்னில்' என்பது பன்மையொருமை மயக்கம். 'ஐந்து கலையில் அகராதி தன்னிலே வந்த நகராதிமாற்றி' என்றது, 'பிற எழுத்துக்களுள் சிலவாய அவையாக நிலையாமல், வேறாக மதிக்க' என்பது உணர்த்தற்கு. மேல் *(959)* 'மகார முதல்வன்' என்றவாறே இங்கு 'மகாராதி' என்றார். இங்குக் கூறுகின்றதும் தூல பஞ்சாக்கரமாதல் பற்றி. தூல பஞ்சாக்கரத்தை இறைவன் திருவடி முதலாகக் கொண்டு நிற்கும் முறையிலே ஆதாரங்களில் அமைத்தல் வேண்டும் என்பது கருத்து. ' மூலத்தே ' என்றது, 'மூலத்தில் தொடங்கியே' என்றவாறு. மூலாதாரம் முதலிய எல்லா ஆதாரங் களிலும் 'சிவனையே அவனது சத்தியோடு தியானிக்க' என்றது, 'ஆதார மூர்த்திகளைச் சம்பு பட்சத் தினராகத் தியானிக்க' என்றதாம். சிறப்புப் பற்றிச் சந்தியாகாலத்தையே வரைந்தோதினார். அதனால், பிற காலங்கள் தவிர்க்கப்பட்டன அல்ல வாம். 'சடங்கு'

என்றது, 'பிறிது சடங்கு' என்னும் குறிப்பினது. 'தான்' என்பது கட்டுரைச் சுவைபட நின்றது.
பேரம்பலச் சக்கரத்தில் நிற்கும் ஐம்பத்தோரெழுத்துக்களை அகாரம் முதலாகத் தொடங்கி எண்ணுதல் அவற்றின் தோற்ற முறையாகும். அம்முறையில் முதல் தொடங்கிப் பதினாறு (உயிர்) எழுத்துக்கள் சாந்தியதீத கலையில் நிற்கும் (மெய்யெழுத்துக்களில்) ஒன்று, இரண்டு, மூன்று ஆகிய மூன்றெழுத்துக்கள் சாந்தி கலையில் நிற்கும். அடுத்த ஏழெழுத்துக்கள் வித்தியா கலையில் நிற்கும். அடுத்த இருபத்து நான்கு எழுத்துக்கள் பிரதிட்டா கலையில் நிற்கும். இறுதி எழுத்தாகிய க்ஷகாரம் ஒன்றும் நிவிர்த்தி கலையில் நிற்கும் என்க.

மருவுஞ் சிவாயமே மன்னும் உயிரும்
அருமந்த யோகமும் ஞானமு மாகும்
தெருள்வந்த சீவனார் சென்றிவற் றாலே
அருள்தங்கி அச்சிவ மாவது வீடே. ***#956***

உயிர்கள் சிவனை அடைவதற்கு வாயிலாகப் பொருந்திய, 'சிவாய' என்னும் மூன்றெழுத்துக்களே உயிர்கட்கு உயிரும், கிடைத்தற்கரிய யோகமும், ஞானமுமாய்ச் சிறந்து நிற்பன. இவ்வுண்மையைப் பரிபாகம் வரப்பெற்றமையால் நகர மகரங்களின் நீங்கி யகரமாய் நின்ற உயிர், வகரமாகிய அருளிலே தங்கிப் பின் சிகரமாகிய சிவத்தை அடைந்து அதுவாய் விடுதலே வீடுபேறாம்.

விளக்கவுரை

வருவித்துரைத்தவை ஆற்றலால் வந்தன. அரு மருந்து - தேவாமுதம். அருமந்த, 'அருமருந்தன்ன என்பதன் மரூஉ. 'சிவயோகம்' என்றற்கு, 'அருமருந்தன்ன யோகம்' என்றார். இவ் அடை ஞானத்திற்கும் உரியதாதலின், அதுவும் சிவஞானமாயிற்று. சிவயோக சிவஞானங்களன்றிப் பிற யோக ஞானங்கள் வீடு பய வாமை அறிக. 'வீடே' என்னும் ஏகாரம், பிரிநிலையாய்ப் பிறவாறு கூறப்படும் வீடுகள் வீடல்ல' என்பது உணர்த்தி நின்றது. மேல், 'பல எழுத்துக்களுள் நின்ற சில எழுத்தாகாது அவற்றின் வேறாய் உயர்ந்து நிற்பன' எனக்கூறப்பட்ட ஐந்தெழுத்துக்களுள் மூன்றெழுத்து முத்தி மந்திரமாய்ச் சிறந்து நிற்பன என்பது உணர்த்தியவாறு. இங்கு, 'சிவாயமே' என ஓதிய இதனாலும், அஞ்செழுத்து இறுதியில் மகாரத்தோடு நிற்றலும் உண்டு என்பது அறியப்படும். 'சிவாயவே' எனப் பாடம் ஓதினும் ஆம்.

அஞ்சுக அஞ்செழுத் துண்மை அறிந்தபின்
நெஞ்சகத் துள்ளே நிறையும் பராபரம்
வஞ்சகம் இல்லை மனைக்கும் அழிவில்லை
தஞ்சம் இதுஎன்று சாற்றுகின் றேனே. ***#957***

ஐந்து மலங்களும் நீங்கிப் போகும்படி அஞ் செழுத்தின் பொருளை எவரேனும் அறிந்தபின், இறைவன் அவர்களது நெஞ்சத்தில் நிரம்பி விளங்குவான். அவர்களது உறைவிடத்திற்கும் 'அழிவு' என்பது உண்டாகாது. ஆகையால், இந்த மந்திரமே யாவர்க்கும் புகலிடமாகும். நான் உண்மையாகவே சொல்லுகின்றேன்; இதில் சிறிதும் பொய்யில்லை.

விளக்கவுரை

ஐந்து மலங்களாவன; 'ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி' என்பன.

'மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்றான்' *1*

என்றதேயன்றி

'மலங்கள் ஐந்தாற் சுழல்வன் தயிரிற்பொரு மத்தெனவே' *2*

எனவும் அருளிச் செய்தமை காண்க. உகுதல் - சிந்திப்போதல். 'உண்மை' என்றது பொருளை. அஞ்செழுத்தின் பொருள்கள் மேலே பலவிடத்தும் கூறப்பட்டன. 'உண்மை விளக்கம், திருவருட்பயன்' என்னும் நூல்களிலும் தெளியக் காண்க. 'பொருளை அறிதல்' மேற்கூறிய மூன்றெழுத்துக்களின் சிறப்பு உணர்தலைப் பயக்குமாதலின், 'அறிந்த பின், நெஞ்சகத்து உள்ளே நிறையும் பராபரம்' என்றார், மனை, பெத்தத்தில் உடம்பும், முத்தியில் அருளுமாம். 'மனைக்கு அழிவில்லை' எனவே, 'அருளே நிலைக்களமாய்விடும்' என்றதாயிற்று. ஆகவே, மேற் கூறிய மூன்றெழுத்தின் பெருமை இதனால் வலியுறுத்தப்பட்டதாம்.

சிவாயவொ டவ்வே தெளிந்துளத் தோதச்
சிவாயவொ டவ்வே சிவனுரு வாகும்
சிவாயவொ டவ்வும் தெளியவல் லார்கள்
சிவாயவொ டவ்வே தெளிந்திருந் தாரே. ***#958***

மேற்கூறிய 'சிவாய' என்னும் மூன்றெழுத்தை 'ஔ' என்னும் வித்தெழுத்தோடு ஒரு மந்திரமாகத் தெளிந்து, அங்ஙனமே ஓதினால், அம்மந்திரமே சிவனது வடிவாய் விளங்கும். அதனால், அத்தெளிவை உடையவர்கள் பிற மந்திரங்களைத் தெளிதல் இல்லை.

விளக்கவுரை

இதனால் மேற்கூறிய மந்திரம் 'ஔ' என்னும் பீசாக்கரத்தை உடைமை கூறப்பட்டது. 'ஔ' என்றே விதிப்பினும், 'ஔம்' என்பதே கருத்து என்பது மேலே கூறப்பட்டதைக் கடை பிடிக்க. இது, 'ஹௌம்' எனப்படுதலும் இயல்பு. 'ஓம்' என்பது முதற் கண் நிற்றலை எடுத்துச் சொல்ல வேண்டுவதில்லை. 'ஔ' என்பதைச் செய்யுளின்பம் நோக்கி, 'அவ்' என்றே ஓதினார். இவ்வாறன்றி, வகர ஈற்றுச் சுட்டுப் பெயராக

உரைப்பின் பொருள்படாமை அறிக.

சிகார வகார யகார முடனே
நகார மகார நடுவுற நாடி
ஒகார முடனே ஒருகால் உரைக்க
மகார முதல்வன் மதித்துநின் றானே. ***#959***

மேல், 'நகார மகார சிகார நடுவாய்' *(959)* என்ற மந்திரத்தின் பொருளே இதன் பொருளாகும்.

விளக்கவுரை

அங்கு, நகார முதலாக நிற்கும் மந்திரத்தை ஓதும் முறை கூறுதல் கருத்து; இங்கு அம்மந்திரத்தின் பயனையும் மேலை மந்திரங்களிற் கூறிய மூன்றெழுத்து மந்திரத்தின் பயனையும் புடைபட வைத்து உணர்த்து முகத்தால் பின்னதன் சிறப்பை வலியுறுத்துதல் கருத்து. இவையே இரண்டற்கும் வேற்றுமை. இது, வருகின்ற மந்திரத்திற்கும் பொருந்தும்.

நம்முதல் ஓரைந்தின் நாடுங் கருமங்கள்
அம்முதல் ஐந்தில் அடங்கிய வல்வினை
சிம்முதல் உள்ளே தெளியவல் லார்கட்குத்
தம்முத லாகும் சதாசிவன் றானே. ***#960***

நகாரம் முதலாக நின்ற ஐந்தெழுத்து மந்திரத்தால் நினைத்த செயல் கைகூடும்; எவ்வாறெனில், ஆன்மாக்களுக்குப் பயனை விளைக்கின்ற வினைகள் அதன்கண் அடங்கியிருத்தலால். சிகாரம் முதலாக நின்ற மேற்கூறிய மூன்றெழுத்து மந்திரத்தில் அவையின்மையால், அதனைத் தெளிந்து ஓத வல்லவர்கட்கு உண்மை முதல்வனாகிய சதாசிவ மூர்த்தியே தலைவனாய் நிற்பான்; என்றது, 'அபரமுத்திப் பெரும் பயன் உளதாகும்' என்றவாறு.

விளக்கவுரை

முதலடியின் இறுதியில், 'கூடும்' என்னும் பயனிலை எஞ்சி நின்றது. இதன்பின், 'என்னை' என எடுத்துக் கொண்டு உரைக்க. 'அடங்கிய' என்பது முற்று. 'வல்வினை அடங்கிய' என மாற்றி. 'ஆதலால்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. அடங்கியது நகாரத்திலாம். 'சிம் முதல்' என்பது அதனை முதலாக உடைய மேற் கூறிய மந்திரத்தைக் குறித்தது. 'தானே' என்னும் பிரிநிலை உயர்வு சிறப்பு உணர்த்தி நின்றது. மந்திரங்களை ஓதும் நிலை நாதத்தைக் கடவாத நிலையாதலின், அதற்கு அபரமுத்தியே பயனாதல் அறிக.

நவமும் சிவமும் உயிர்பர மாகும்
தவம்ஒன் றிலாதன தத்துவ மாகும்
சிவம்ஒன்றி ஆய்பவர் ஆதர வால்அச்

சிவம்என்ப தானாம் எனும்தெளி வுற்றதே. *#961*

பிரணவமும், சிவமந்திரமும் என்னும் இரண்டுமே உயிர் சிவமாதற்குரிய சாதனமாகும். அவற்றோடே நில்லாமல் பிறவற்றோடு பொருந்தி நிற்பனவெல்லாம் கருவிக் கூட்டத்துள்ளே நிறுத்துவனவே. சிவத்தோடு ஒன்றிய நிலையில் எல்லாவற்றையும் காண்கின்ற அனுபூதிச் செல்வர்களும் தமக்குத் தாம் சிவமேயாய் நிற்கும் தெளிவு உண்டானது அச்சிவமந்திரத்தால் என்றே ஆர்வத்துடன் கூறுவர்.

விளக்கவுரை

'பிரணவம்' என்பதை 'நவம்' என்றே கூறினார். 'சிவம்' மூன்றில் முதலதும், இறுதியதும் அதன் மந்திரத்தின்மேல் நின்றன. சிவ மந்திரம், 'சிவ' என்பது. 'நவமும் சிவமும்' என்றதனால், 'ஓம் சிவ' என்பதைக் குறித்ததாயிற்று. ஈற்றில் மகாரத்தைக்கூட்டி 'ஓம் சிவம்' என்றலும் பொருந்துவதாதல், 'சிவ' என்னாது, 'சிவம்' என்ற தனால் பெறப்படும், 'ஒன்றிலாதன' என்பது பிறவற்றோடும் கூடி நிற்றலைக் குறித்தது. அதனால்,, இங்கு நகர மகரங்களேயன்றி யகரமும் விலக்கப்பட்டது. 'தானாம்' என்பது, 'தாம் தானாம்' எனப் பொருள் தந்தது ஆற்றலால். தான், சிவம். ஈற்றடி முதலில், 'சிவத்தால் என்னும் உருபு தொகுத்தலாயிற்று. மேற் கூறிவந்த மூன்றெழுத்து மந்திரத்தினும் இவ் இரண்டெழுத்து மந்திரம் சிறப்புடைத்தாதல் இதனுள் கூறப்பட்டதாம். 'ஐம்பதெழுத்தே' *(948)* என்பது முதலாக இதுகாறும் திருவைந்தெழுத்தின் பெருமையே விரித்துக் கூறினார்.

கூடிய எட்டும் இரண்டும் குவிந்தறி
நாடிய நந்தியை ஞானத்துள் ளேவைத்து
ஆடிய ஐவரும் அங்குற வாவர்கள்
தேடி யதனைத் தெளிந்தறி யீரே. *#962*

அறிவுடையோர் நாடி நிற்கின்ற சிவனை அறிவின் கண் உள்ளவனாக உணர்ந்து, அவ்வறிவைப் பெறுதற்கு அகார உகாரங்களின் கூட்டாகிய ஓகாரத்தையாவது அல்லது யகாரத்தை யாவது நீயாக மனம் ஒருங்கித் தியானி. அங்ஙனம் தியானித்தால் இது காறும் உன்னோடு மாறுபட்டுப் போராடி வந்த பஞ்சேந்திரியங்களும் உன் வயத்தனவாய் உனக்குத் துணைசெய்து நிற்கும். ஆதலால், அவ் இந்திரியங்களை வயப்படுத்த நீ தேடிக்கொண்டிருந்த வழியை இவ்வாறு தெளிந்தறிக.

விளக்கவுரை

'எட்டு' என்னும் எண்ணின் வடிவம் 'அ' என்பதும், 'இரண்டு' என்னும் எண்ணின் வடிவம் 'உ' என்பதும் ஆதலால், அவற்றைக் குறிக்கும் குறிப்பு மொழியாக முறையே, 'எட்டு' என்பதும், 'இரண்டு' என்பதும்

குழூஉக்குறியாகச் சொல்லப்படுதல் வழக்கம். 'கூடிய அ, உ' என்றதனால், 'ஓகாரம்' என்பது விளங்கிற்று.
இனி, இஃது, எட்டும், இரண்டும் கூடிய வழி ஆவது பத்தாத லின், 'பத்தின் வடிவமாகிய யகரம்' என்பதும் பொருளாகும். ஆகவே, ஆன்மா தன்னை அசுத்த தத்துவங்களினின்றும் வேறாகக் காணுதற்குத் தன்னைப் பிரணவ வடிவாகவேனும், திருவைந்தெழுத்தில் யகார வடிவாகவேனும் உணர்தல் வேண்டும் என்பது இதனால் உணர்த்தப் பட்டதாம். 'எட்டினோடிரண்டும் அறியே னையே' *(திருச்சதகம் - 53)* என்ற திருவாசகத் தொடரும் இங்கு நினைக்கத் தக்கது.
இரண்டாம் அடியை முதலில் வைத்து உரைக்க. தேடியது - தேடப்பட்டது. ஈற்றில், 'அறியீர்' என்றது, உயர்த்தற்கண் வந்த பால் வழுவமைதி. திருவம்பலச் சக்கரத்தில் அமைந்த மந்திரங்களுள், திருவைந் தெழுத்தின் சிறப்பினைப் பல்லாற்றானும் வலியுறுத்தி ஓதியபின், இதுமுதலாகப் பிறவற்றின் சிறப்பை வலியுறுத்துகின்றார்.

எட்டும் இரண்டும் இனிதறி கின்றிலர்
எட்டும் இரண்டும் அறியாத ஏழையர்
எட்டும் இரண்டும் இருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே. ***#963***

மேல், 'எட்டும் இரண்டும்' என்னும் குறிப்பு மொழியால் உணர்த்தப்பட்ட அப்பொருள்களை அனுபவமாக உணராதவர், 'அ, உ' என்று எழுத்தை அறியத் தொடங்கும் அத் தொடக்க அறிவுகூட இல்லாதவரேயாவர். இன்னும், எட்டு என்னும் எண்ணை யும் இரண்டு என்னும் எண்ணையும் கூட்டுத்தொகை காணும் அறிவும் இல்லாதவரே யாவர். இனி, 'எட்டும், இரண்டும்' என்பதற்கு, மேற் சொல்லப்பட்ட இருபொருள்களில் பின்னதாகிய 'பத்து' எனக் கொண்டு யகாரத்தைக் கொள்ளுதலே சிவாகமங்களின் ஞானபாதக் கருத்தாகும்.

விளக்கவுரை

கல்வியறிவு மிக்கிருந்தும் அதனாற் பயன் கொள் ளாமைபற்றி அவரை இத்துணை அறிவிலிகளாகக் கூறினார். ஆகவே, இரண்டாம் அடிக்கு இந்த இருபொருளும் கொள்க.
அவ் இருபொருள்களில் ஒன்றை,
'அ உ அறியா அறிவில் இடைமகனே' *1*
என்பதிலும் காணலாம். மேற் காட்டிய திருவாசகத்தொடர் மேற்போக் கில் இங்குக் கூறியவாறே இவ் இருபொருளையும் குறித்தல் வெளிப் படை. இரு மூன்று நான்கு - பத்து. சிவாகமங்களே சித்தாந்தமாதல் நன்கறியப்பட்டது.
இவ் இரண்டு மந்திரங்களாலும் முன்னர்க் கூறிப் போந்த மந்திர

எழுத்துக்களுள் சிலவற்றின் சிறப்பு வலியுறுத்தப்பட்டது. 'தமிழில் மந்திரம் உண்டோ' என ஐயுறுவார்க்கு 'உண்டு' என இம்மரபு தெளிவுறுத்துதல் காண்க.

எட்டு வரையின்மேல் எட்டு வரைகீறி
யிட்ட நடுவுள் இறைவன் எழுத்தொன்றில்
வட்டத்தி லேஅறை நாற்பத்தெட் டும்இட்டுச்
சிட்டஞ் செழுத்தும் செபிசீக் கிரமே. ***#964***

செங்குத்தாக எட்டு நேர்க்கோடு கிழித்து, அவற்றின் மேல் குறுக்காக எட்டுக் கோடுகளை இழுக்க நாற்பத்தொன்பது அறைகள் உண்டாகும்; அவற்றுள் நடு அறையில் இறைவன் எழுத் தாகிய சிகாரம் அமையுமாறு மேல் *(906)* மேற்கூறியபடி திருவைந் தெழுத்தை ஐந்து வகையாக மாற்றி முறையே இருபத்தைந்து அறைகளில் பொறித்தபின், நடு அறையொழிந்த நாற்பத்தெட்டு அறைகளிலும் எழுத்துக்கள் இருக்கச்செய்ய வேண்டும்; அஃதாவது எஞ்சிய இருபத்து நான்கு அறைகளிலும் பிற எழுத்துக்களைப் பொறிக்க வேண்டும். அவ்வாறு செய்தவுடன் சக்கரத்தை வழிபட்டுத் திருவைந்தெழுத்தைச் செபிக்கத் தொடங்கலாம்.

விளக்கவுரை

'கீறியிட்ட' என்பது ஒருசொல். கீறியிட்ட நடுவு - கீறிய தனால் உண்டான நடு அறை. 'ஒன்றியபின்' என்பது, 'ஒன்றில்' எனத் திரிந்து நின்றது. வட்டம் - சக்கரம். 'நாற்பத்தெட்டிலும் எழுத்தை இட்டு' எனச் செயப் படுபொருள் வருவித்துக் கொள்க. 'சிட்ட' என்பதில் அகரம் தொகுத்த லாயிற்று. சிட்டம் - மேன்மை. எஞ்சிய இருபத்து நான்கு அறைகளிலும் பொறித்தற்கு உரிய எழுத்துக்கள் வருகின்ற மந்திரத்திற் கூறப்படும்.

தானவர் சிட்டர் சதுரர் இருவர்
ஆனஇம் மூவரோ டாற்ற அராதிகள்
ஏனைப் பதினைந்தும் விந்துவும் நாதமும்
சேனையும் செய்சிவ சக்கரந் தானே. ***#965***

தானம் - இடம். தானவர் -இடங்காவலர்; *(க்ஷேத் திர பாலகர்)* பைரவர். சட்டர் - செப்பம் செய்பவர்; குற்றம் செய் தோரை ஒறுத்துத் திருத்துபவர்; வீரபத்திரர். சதுரர் இருவர் - திற முடைய மகார் இருவர்; பிள்ளையாரும், முருகரும். ஆன இம் மூவர் - இவ்வாறு மூன்று வகையாகச் சொல்ல நின்றவர். ஆற்ற அராதிகள் - நெறியில் உள்ள உருத்திரர் முதலியோர்; உருத்திரர் முதலாகக் கீழ் நோக்கி எண்ண வருகின்ற மாலும், அயனும், உருத்திரர் முதலாக மேல் நோக்கி எண்ணவருகின்ற மகேசுரர், சதாசிவரும் ஆக ஐவர். ஏனைப் பதினைந்தும் - மேற்சொல்லிய

ஒன்பதின்மரது எழுத்துக்களையும் பொறித்தபின் எஞ்சி நிற்கின்ற பதினைந்து அறைகளிலும், விந்து, நாதம், சூழ்படை (பரிவாரங்கள்) என்ப வற்றது எழுத்துக்களைப் பொறிக்கச் சிவசக்கரம் அமையும்.

விளக்கவுரை

இச்சக்கரத்தின் வடிவம் ஆமாறு:

'கள்' விகுதி உயர்திணைப் பன்மையையும் உணர்த்தி நிற்றல் பிற்கால வழக்காதல் வெளிப்படை. 'ஏனைப் பதினைந்து' என்ற தனால்,, 'முன்னர்க் கூறப்பட்டன ஒன்பது' என்பது பெறப்பட்டது. பதினைந்தில் விந்து நாதங்களைப் பிரித்தமையால். சேனை பதின் மூன்றாயிற்று. 'சேனை' எனப்பட்ட பதின்மூவராவார் திசை காவலர் எண்மரும், 'நந்தி, மாகாளர், பிருங்கி, இடபர், சண்டர்' என்னும் ஐவரும் ஆவர். ஈற்றில், 'அமையும்' என்னும் பயனிலை எஞ்சி நின்றது.

விளிம்பு அறை இருபத்து நான்கிலும் உள்ள எழுத்துக்களின் விளக்கம் வருமாறு:-

1. ளம் - இந்திரன், *2.* ரம் - அக்கினி, *3.* யம் - யமன். *4.* ந்ரூம்- நிருதி, *5.* வம் - வருணன், *6.* ஹ்யம் - வாயு, *7.* கம் - குபேரன், *8.* ஈம் - ஈசானன்.

9. ஹ்லாம் - பிரமன், *10.* ஹ்வீம் - திருமால், *11.* ஹ்ரூம் - உருத்திரன், *12.* ஹ்யைம் - மகேசுவரன், *13.* ஹ - சதாசிவன், *14.* அம்- விந்து, *15.* அ - நாதம்.

16. கம் - கணபதி, *17.* ஸம் - கந்தன், *18.* நம் - நந்தி, *19.* டும்- இடபன், *20.* ஸம் - மகாகாளன், *21.* ப்ரும் - பிருங்கி, *22.* ஹ்வம் - வீரபத்திரன். *23.* சம் - சண்டன், *24.* பம் - பைரவன்.

மையக் கட்டத்தில் இறைவன் எழுத்தாகிய சிகாரம் நிற்றலைக் காண்க இவ் வரிசை எண் வழிபாட்டு முறை பற்றியது. நாயனார் சொல் சுருங்கிச் செய்யுளாமாறு பற்றியே கூறினார்; வழிபாட்டு முறை பற்றிக் கூறினாரல்லர், அஃது ஆசிரியன்மார் அறிவுறுக்க அறிந்து கொள்ளப்படும் ஆதலின்.

சக்கரத்தின் மேற்பக்கம் வடக்காகும். ஆன்மார்த்த வழி பாட்டில், வழிபடுவோர் வடக்குநோக்கி அமர்ந்திருக்க, வழி பாட்டிடம் மேற்குநோக்கிய நுழைவாயிலைக் கொண்டிருக்கும். அதனால், சக்கரத்தின் நுழைவாயிலும் மேற்கு நோக்கியே நிற்கும்.

அம்முறையில் இருத்தப்பட்ட இச்சக்கரத்தில் முதற்கண் திசை காவலரை இந்திரன் முதலாக ஈசானன் ஈறாக முறையே வலமாக வழிபட்டு, அதன்பின் பிரமன் முதலாக நாதம் ஈறாக முறையே வலமாக வழிபட்டு, மூன்றாவது கணபதி முதலாகப் பைரவர் ஈறாக முறையே வலமாக வழிபட்டு, வழிபாடு முடிந்த பின்னர் அம்முறையே ஒவ்வொரு மந்திரத்தையும் பத்து பத்து உருச் செபித்துப் பின் திரு வைந்தெழுத்தை

நூற்றெட்டு முதலாக வேண்டும் அளவு செபிக்கலாம். இது, போக சாதன முறை.
முத்தி சாதன முறைக்குத் திசை காவலரைவழிபட்ட பின்னர்க் கணபதி முதலாகத் தொடங்கி நேரே வலமாகச் சென்று பைரவனோடு ஒரே வழிபாடாக முடிக்கப்படும். திருவைந்தெழுத்தும் இவ் இருமுறை கட்கும் ஏற்றவாறு செபிக்கப்படுதல், மேற் பலவிடத்தும் கூறப்பட்டது.
இச்சக்கரத்தை மேற்கூறியவாறு வைத்து நோக்கின், வலப் பாதி காரணக் கடவுளர் பகுதியாயும், இடப்பாதி காரியக் கடவுளர் பகுதியாயும் நிற்றல் காணலாம். இவையெல்லாம் மரபு வழி அறிய வைத்தார் என்க.
இவ்விரண்டு மந்திரங்களாலும் மேற்கூறிய சிற்றம்பலச் சக்கரத்தைச் சிவசக்கரமாகச் செய்து வழிபடுமாறு கூறப்பட்டது.
இதனுள், இந்திரதிசையில் சூரியனும், குபேரதிசையில் சந்திரனும் அடங்குவர். சூரியனிடத்து அங்காரகன் முதலிய ஐங்கோ ளினரும் அடங்குவர். உருத்திரனிடத்தில் உருத்திரர் யாவரும் அடங் குவர். வித்தியேசுரர்களும், மந்திர மகேசுரர்களும் மகேசுரனிடத்தில் அடங்குவர். அணு சதாசிவர்கள் சதா சிவனிடத்தில் அடங்குவர். நந்தி யிடத்துச் சிவகணங்கள் பலரும் அடங்குவர். பிருங்கியினிடத்து முனிவர்கள் அடங்குவர். இன்னும் பிற தேவர்களும் இந்திரனிடத்தே அடங்குவர். இங்குக்கூறிய தலைவர் பலர்க்கும் பரிவாரங்களாய் உள்ளவர்கள் அவ்வத் தலைவரிடத்தே அடங்கி நிற்றல் சொல்ல வேண்டா. இதனால், இச்சக்கரம் கடவுளர் பலரையும் புறஞ் சூழக் கொண்ட சிவசக்கரமாய் அமைந்து நிற்றல் அறிக.

பட்டன மாதவம் ஆற்றும் பராபரம்
விட்டனர் தம்மை விகிர்தா நம என்பர்
எட்டனை யாயினும் ஈசன் திறத்திறம்
ஒட்டுவன் பேசுவன் ஒன்றறி யேனே. ***#966***

இயன்ற அளவு செய்யப்பட்ட சிவன் பணியே, மேலானவற்றிற்கெல்லாம் மேலான வீட்டினைப் பெறுவிப்பதாகும். அதனால், தற்போதத்தை விட்டவர்கள் சிவனையே புகலிடமாக அடைவர். ஆகலின், யானும் அவனது பணி வகைகள் பலவற்றில் ஏதேனும் ஒன்றில் எள்ளளவாயினும் மேற்கொள்வேன்; போற்றுங் கால் அவனது திருநாமத்தையன்றி வேறொன்றைச் சொல்ல அறியேன்.

விளக்கவுரை

'இறப்பில்தவம்' 1 என்பார். *'மாதவம்'* என்றார். *'பராபரம் ஆற்றும்'* என மாறிக் கூட்டுக. ஆற்றுதல் - தருதல். *'பராற்பரம்'* என்பது *'பராபரம்'* என மருவிற்று.

இதனால், 'சிவசக்கரத்தை அமைத்து அதன் வழி இயன்றளவு சிவழிபாடு செய்யுங்கள்' என்பது குறிப்பால் உணர்த்தப் பட்டது.

சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்த
அவைமுதல் ஆறிரண் டொன்றொடொன் றான
அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதல் சங்கரன் தன்பெயர் தானே. ***#967***

[இம்மந்திரம் மேலே 89 ஆம் மந்திரமாகவும் வந்திருத்தலால் இதன் பொருளை அவ்விடத்தே கண்டு கொள்க].

விளக்கவுரை

இது முன்னே வந்திருப்பினும், அங்கு, 'எல்லாப் பேத மும் சிவபேதமே' என்பதை விளக்குதற் பொருட்டும், இங்கு, எல்லா மந்திரங்களும் சிவனது மந்திரமே' என்பதை விளக்குதற் பொருட்டும் வந்தன. எனவே, இரண்டிடத்தும் கருத்து வேறுபடுதல் அறிக. தொல்காப்பியத்திலும் சூத்திர வடிவம் பல இடங்களில் ஒன்றாய் இருப்பினும், பொருளால் அவை வேறு வேறு சூத்திரங்களாய் நிற்றல் காண்க. இதனால், 'சவை' என்பது, மேல், 'தொகுதி' என்றும், இங்கு, 'திருவம் பலம்' என்றும் பொருள்படுதல் அறிந்து கொள்க.

வித்தாஞ் செகமய மாக வரைகீறி
நத்தார் கலைகள் பதினாறு நாட்டிப்பின்
உத்தாரம் பன்னிரண் டாதிகலை தொகும்
பத்தாம் பிரம சடங்குபார்த் தோதிடே. ***#968***

உலகத்திற்குக் காரணமாகிய தத்துவங்களின் எண்ணிக்கை (முப்பத்தாறு) அளவில் அறைகள் கீறி, அவற்றுள் இடப் பால் பதினாறு அறைகளைச் சந்திரன் கூறாகக் கொண்டு ஐம்பத்தோ ரெழுத்துக்களில் ஐவருக்கத்தில் இடைநின்ற பதினைந்தும் நீக்கி ஒடுக்க முறையில் க்ஷகாரம் முதலாக டகாரம் ஈறாக உள்ள பதினாறு எழுத்துக் களையும் சந்திரனது பதினாறு கலைகளாகப் பாவித்தும், வலப்பால் பன்னிரண்டு அறையில் ஞகாரம் முதலாக உயிரெழுத்துக்களில் எகர ஒகரக் குறில்களையும் சேர்த்து எகரம் ஈறாகப் பன்னிரண்டெழுத்துக் களையும் சூரியனது கலைகளாகப் பாவித்தும், எஞ்சி நின்ற எட்டு அறைகளோடு மேற்பக்கத்தில் கொடு முடிபோல நடுவிரண்டு அறைக்கு நேராக இரண்டு அறைகள் நிராதார மாகப் பரசிவன் பராசத் திகளுக்குக் கீறி, ஆகப் பத்து அறைகளில் எஞ்சிய, ளுகாரம் (ளு) முதலிய பத்து உயிரெழுத்துக்களையும் அக்கினி கலைகளாகப் பாவித்தும் பொறித்துக் காயத்திரியை முறைப்படி செபித்தபின், இவ்வெழுத்துக்களை விந்து ஈறாக ஓதுக.

விளக்கவுரை

'செக வித்தாம் அவை மயமாக' என்க. 'வித்துக் கூறவே அவற்றின் நிலமாய பரையும், அந்நிலத்தைப் பக்குவப்படுத்து வோனாகிய பரசிவனும் கொள்ளப்படுவர்' என்பது பின்னர் முப்பத் தெட்டு இடங்களைக் குறித்தலால் அறியப்படும். யோகத்திலும், சிவனது கூற்றிலும், 'இடப்பால், வலப்பால், நடு' என்னும் மூன்று பகுதியும் சந்திர சூரிய அக்கினிகளின் கூறாதல் தெளிவாதலின், சக்கர அறைகளிலும் அவ்வாறு கொள்ளுதல் பெறப்பட்டது. இம்முறையில் இச்சக்கரம் அமையும் முறை வருமாறு:-

சிவனது அதிட்டானங்களில் (இடங்களில்) சந்திர சூரிய அக்கினி மண்டலங்கள் சிறந்தனவாகலின் அம்மண்டல வடிவில் அமைவது இச்சக்கரம். இதனால், இது திரிமண்டலச் சக்கரமாகும். இறைவனது அதிட்டானங்களுள் திருவம்பலமாகும் என்பது கருத்து. 'நந்து' என்பது வலித்தல் பெற்றது. நந்துதல் - வளர்தல். உத்தாரம் - பின்பு. ஆதி - ஆதித்தன். அவன் கலையொடு தொகுவது அக்கினிகலை.

இதனால், இது மற்றொருவகைத் திருவம்பலமாகிய திரிமண்டலச் சக்கரம் ஆமாறு கூறப்பட்டது.

கண்டெழுந் தேன்கம லம்மல ருள்ளிடைக்
கொண்டெழுந் தேன்உடன் கூடிய காலத்துப்
பண்பழி யாத பதிவழி யேசென்று
நண்பழி யாமே நமஎன லாமே. ***#969***

யான் சிவனை இச்சக்கரத்தின் வழியே கண்டு உயர்வு பெற்றேன்; அதனால், பின்பு அவனை நான் எனது உள்ளத் தாமரையிலே அடங்கக் கொண்டு மேலும் உயர்வு பெற்றேன்; ஆகவே, இனித் தன் இயல்பு கெடாத பதிஞானத்தின் வழியே சென்று அழியாத அன்புடன் திருவைந்தெழுத்தைச் செபிக்கும் பேற்றினைப் பெறுதல் திண்ணம்.

விளக்கவுரை

'அதனால், நீவிரும் இவ்வாறு அப்பேற்றினைப் பெறு மின்' என்பது குறிப்பெச்சம். பதி, ஆகுபெயர். 'நம' என்றது, 'நம சிவாய' என்பதை முதற் குறிப்பாற் கூறியவாறு. இங்குக் கூறிய பஞ் சாட்சரம் அதன் பேதங்கள் அனைத்தையும் கொள்ள நின்றது.

இதனால், மேற்கூறிய திரிமண்டலச் சக்கரம் அதற்கு முன்னர்க் கூறப்பட்ட சிவசக்கரத்திற் செலுத்துவதாதல் கூறப்பட்டது.

புண்ணிய வானவர் பூமழை தூவிநின்
றெண்ணுவர் அண்ணல் இணையடி மந்திரம்
நண்ணுவர் நண்ணி நமஎன்னும் நாமத்தைக்

கண்ணென உன்னிக் கலந்துநின் றாரே. *#970*

தேவர்களுக்குள் பக்குவம் எய்தினோர் பூக்களை மழைபோலத் தூவிச் சிவசக்கரத்தில் உள்ள திருவைந்தெழுத்து வாயிலாகச் சிவபெருமானது இரண்டு திருவடிகளைத் தியானிப் பார்கள். பின்னும் அம்மந்திரத்தையே துணையாகப் பற்றி அத்திருவடி களைக் கண்போலச் சிறந்தனவாக உணர்ந்து அவற்றில் இரண்டறக் கலந்து நிற்பார்கள்.

விளக்கவுரை

இதனால், சிவசக்கரம் திரிமண்டலச் சக்கரத்தின் பயனாதல் கூறி, அதன் சிறப்பு வலியுறுத்தப்பட்டது.

ஆறெழுத் தாகுவ ஆறு சமயங்கள்
ஆறுக்கு நாலே இருபத்து நாலென்பர்
சாவித் திரியில் தலைஎழுத் தொன்றுளது
பேதிக்க வல்லார் பிறவியற் றார்களே. *#971*

பிரணவத்தோடு கூடிய ஆறாகிநிற்கும் திருவைந் தெழுத்து மந்திரத்தையே ஆறு சமயங்களும் பற்றி நிற்றல் வெளிப் படை. ஆயினும், சிலர் 'அந்த ஆறெழுத்து மந்திரத்தினும் இருபத்து நான்கு எழுத்தாகிய காயத்திரி மந்திரமே சிறந்தது' என மயங்குவர். 'ஆறு' என்னும் எண்ணினது நான்மடங்கே இருபத்து நான்கு என்னும் எண் ணியல்பை நோக்கினாலே, 'திருவைந்தெழுத்தில் அடங்குவது காயத்திரி' என்பது புலனாய் விடும். இன்னும் காயத்திரியின் முதலிலே 'ஓம்' என்ற ஓர் எழுத்து உள்ளது. அதனைப் பகுத்தறிய வல்லவர் திரு வைந்தெழுத்தின் உண்மையையும் உணர்ந்து பிறவி நீங்கவல்லவராவர்.

விளக்கவுரை

'எனவே, அங்ஙனம் அறியமாட்டாதவரே, 'திருவைந் தெழுத்திற்கு மேற்பட்டது காயத்திரி' எனக் கூறிப்பிறவியில் அழுந்துவர்' என்பது பெறப்பட்டது. 'இருபத்து நான்கு' என்னும் எண்ணிற்குக் காரண எண் ஆறேயன்றி, 'நான்கு, மூன்று, இரண்டு' என் பனவும் ஆதலின், 'திருவைந்தெழுத்தும் அவ்வெண்களின் அளவாக நின்று மேன்மேல் உயர்ந்த பயன்களைத் தருதல் மேலெல்லாம் கூறி வந்தவாறு பற்றி அறிந்து கொள்க' என்பது குறிப்பாற் கூறியதாயிற்று. 'சாவித்திரி, காயத்திரி' என்பார் வேறு வேறு தேவியாராயினும், ஒற்றுமைபற்றி ஒருவராகச் சொல்லும் வழக்கும் உண்மை பற்றி இங்குக் காயத்திரி மந்திரத்தை, 'சாவித்திரி' என்றார். தலை - முதல்.
பிரணவமாகிய ஓங்காரம், 'அ, உ, ம்' எனப் பிரிக்கப்படும் என்பது மேல் பலவிடத்தும் சொல்லப்பட்டது. அப்பிரிவு மூன்றனுள் அகாரம் தோற்றத்தையும், உகாரம் நிலையையும், மகாரம் இறுதியை யும்

குறிக்கும். அதனால், அவை பிரமன் முதலிய மூவரைக் குறிப்பனவுமாம். வியட்டி நிலையில் பிரணவம் இவ்வாறாதலை உணர்வார், சமட்டி நிலையில் முத்தொழிற்கும் முதல்வனாகிய சிவபெருமானையே குறிக்கும் என்பதை ஐயம் அற உணர்வர். பிரணவத்தின் பின் பூ: முதலிய வியாகிருதியைச் சேர்த்தால் காயத்திரி; சேர்க்காதது சாவித்திரி எனப்படும்.

இனிச் சடப்பொருள்களாகிய தனு கரண புவன போகங் களினது தோற்றம் முதலிய மூன்றனைக் குறிக்கின்ற அவ் அகாரம் முதலிய மூன்றும் சித்துப் பொருளாகிய உயிரினது அறிவின் தோற்றம், நிலை, ஒடுக்கம் என்னும் மூன்றனையும் கூடக் குறிப்பனவாம். ஆகவே, அகார உகாரங்கள் சகல நிலையில் புருவ நடுவில் நிகழும் சகலசாக்கிரம் முதலிய ஐந்திலும் உயிர்கட்குப் பாசஞான பசுஞானங் களைத் தோற்றுவித்து நிறுத்தலாகிய நினைப்பினையும் ஒடுக்கு தலாகிய மறப்பினையும் குறித்தலும், சுத்தநிலையில் அவை சுத்தாவத் தைகளில் பதிஞானத்தினைத் தோற்றுவித்து நிறுத்துதலாகிய அருள் நிலையையும் பின் பசுபேத ஒடுக்கமாகிய ஆனந்த நிலையையும் குறித்தலும் பெறப்பட்டன. படவே, பிரணவம் வியட்டிநிலையில் பிரமன் முதலிய மூவரையும் இயைபுபற்றி ஓர் ஓர் எல்லையளவும் உபசாரத்தாற் குறிப்பதாயினும், உண்மையில் அஃது எந்நிலையிலும் சிவபெருமானையே உணர்த்தி நிற்றல் இனிது பெறப்படும். அதனால், பிரணவத்தின் பொருளும் திருவைந்தெழுத்தால் உணர்த்தப்படும் சிவபெருமானே யாதல் நன்கு அறியப்படும்.

இன்னும் காயத்திரி மந்திரம் மூன்று பிரிவுகளாய் (வியாகிருதி களாய்) நிற்றலைப் பலரும் எடுத்துக் கூறுவர். அவற்றுள், முதற்பிரிவு சிவசத்தியையும், இரண்டாவது பிரிவு சிவத்தையும், மூன்றாவது பிரிவு உயிரையும் முதன்மையாக நோக்கி நிற்பன. ஆகவே, அம்மூன்றையும் குறித்து நிற்கின்ற திருவைந்தெழுத்தின் பொருளே காயத்திரியின் பொருளு மாதல் தெளிவாம். இன்னோரன்ன காரணங்கள் பற்றியே நாயனார், இங்கு,

'சாவித் திரியில் தலையெழுத் தொன்றுள;
பேதிக்க வல்லார் பிறவியற் றார்களே'

என அறுதியிட்டு அருளிச் செய்தார்.

காயத்திரி மந்திரத்துள் அமைந்த 'சவிதா, பர்க்கஸ்' என்னும் சொற்களுக்கு முறையே, 'சூரியன்' என்றும், 'சூரியனது ஒளி' என்றுமே வைதிகர் பொருள் கொள்வர். ஆனால், சைவர் அவ்வாறன்றி அவற்றிற்கு முறையே 'சிவன்' என்றும், 'அவனது சத்தி' என்றுமே பொருள்கொள்வர். 'வேதம் ஓரோர் இடத்தில் ஓரொரு தேவரைப்

புகழ்ந்து கூறினாலும் உண்மை முதற்கடவுளாவான் சிவபெருமானே என்பதே அதற்குக் கருத்து' எனவும், 'ஆகவே, காயத்திரிக்கும் மேற் கூறியவாறு சைவர் கூறும் பொருளே பொருள்' எனவும் உணர்ந்து, அதனானே, திருவைந்தெழுத்து மந்திரமே அனைத்து மந்திரங்களினும் தலையானதாகக்கொண்டு அவ்வுணர்வோடே முத்தீவேட்டல், சந்தியா வந்தனம் செய்தல் முதலிய செயல்களைச் செய்வோரே சிறப்புடைய வேதியர் ஆவார் என்பதனைத் திருஞானசம்பந்தர் தமக்கு வேதியர்கள் உபநயனச் சடங்குசெய்து பூணூல் அணிவித்தல், பிரமோபதேசம் செய்தல், வேதம் ஓதுவித்தல் என்பவற்றைச் செய்த பொழுது அவர்கட்குத் தாம் கூறும் அறிவுரையாக,

'செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்திஉள் மந்திரம் அஞ்செ ழுத்துமே' *1*

என அருளிச் செய்தமையும், திருநாவுக்கரசரும் தமது ஆதி புராணத் திருக்குறுந்தொகையில்

'அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்;
அருக்க னாவான் அரனுரு அல்லனோ!
இருக்கு நான்மறை ஈசனை யேதொழும்
கருத்தி னைஅறி யார்கல் மனவரே' *2*

என அருளிச் செய்தமையும் இங்கு இன்றியமையாது நோக்கற் பாலன. திருஞானசம்பந்தர் குறிப்பிட்டருளிய செம்மை வேதியரை இக்காலத்துக் காண்டல் அரிது.

'ஆறு சமயங்கள்' என்றது 'காணாபத்தியம், கௌமாரம், சாத்தம், சைவம், ஸௌரம், ஸௌமியம்' என்பவற்றை. இவற்றில் நிற்போர் தம் தம் விருப்பக் கடவுளர் (இஷ்டதேவர்) ஆகிய கணபதி முதலியோரிடத்து அன்பு பூண்டு அவர்தம் மந்திரங்களை அன்பினால் ஓதினாராயினும், 'சிவபெருமானே முதற் கடவுள்' என்பதிலும், 'அதனால், அவனது திருவைந்தெழுத்தே முதல் (மூல) மந்திரம்' என்பதிலும் மாறுகொள்ளாதவராய் உடம்பட்டு ஒழுகுதல்பற்றி, 'ஆறெழுத்தாகுவ ஆறு சமயங்கள்' என்றார். 'சமயத்தில் உள்ளது நீறு' என்ற திருநீற்றுப் பதிகத் தொடரும் இங்கு உடன் வைத்து உணரத்தக்கது. இதனானே, இவை 'அகச் சமயம்' எனப்பட்டன.

இவற்றோடு ஒரு காலத்தில் ஒருங்குவைத்து எண்ணப்பட்ட வைணவம், பிற்காலத்தில், சிவபெருமானது ஆற்றலைத் தெளிய மாட்டாது தக்கனது ஆற்றலுக்கு அஞ்சி அவனது வேள்வியிற் சென்றிருந்து, அதனால், அவ்வேள்வியை ஒதுக்கிநின்ற சில திண்ணிய பேரிருடிகளது சாபத்திற்கு உட்பட்டோரால் மேற்கூறிய கருத்துக் களோடு மாறுகொண்டு வேறு நிற்பதாயிற்று. அதுபற்றி அதுவும் புறச் சமயமாக எண்ணப்படுகின்றது.

இது,
'தாயி னும்நல்ல சங்கர னுக்கன்ப
ராய வுள்ளத் தமுதருந் தப்பெறார்
பேயர் பேய்முலை உண்டுயிர் போக்கிய
மாயன் மாயத்துட் பட்ட மனத்தரே' *1*
என்னும், மேற்குறித்த திருக்குறுந்தொகைப் பதிகத் திருப்பாடலால் நன்கறியப்படும். இதனுள் 'மாயன்' என்றது, 'மாயம் செய்யும் இயல்பினன்' என்பதையும், 'பேய் முலை உண்டு உயிர் போக்கிய' என்றது, 'நல்லோரை வஞ்சனையாற் கெடுக்க என்னும் தீயோரைக் தானும் வஞ்சனையாற் கெடுப்பவன்' என்பதையும், வெளிப்படை யினாலும், குறிப்பினாலும் உணர்த்தி நின்றன. 'மாயன் மாயம்' என்றது, அவன் இவ்வாறான கருத்துப் பற்றிச் செய்த நூல்களை.
இதனால், ஆறெழுத்தின் பெருமை கூறும் முகத்தால் சிவசக்கரத்தினது சிறப்பே வலியுறுத்தப்பட்டது.

எட்டினில் எட்டறை யிட்டோ ரறையிலே
கட்டிய ஒன்றெட்டாய்க் காண நிறையிட்டுச்
சுட்டி இவற்றைப் பிரணவம் சூழ்ந்திட்டே
ஒட்டும் உயிர்கட் குமாபதி யானுண்டே. ***#972***

வெளியில் நான்கு கோடுகளும், உள்ளால் நான்கு கோடுகளும் ஆக எட்டுக் கோடுகளால் சுற்றிலும் எட்டு அறைகள் உண்டாக்கி, அவற்றின் நடுவில் உள்ள ஓர் அறை எட்டின் வடிவமாகிய அகாரத்தைப் பெற்று எட்டு முகமாய் அந்த எட்டு அறைகளையும் நோக்கும்படி அவற்றைப் பிரணவ கலைகளால் நிரப்பிப் பின்பு எல்லா அறைகளையும் உட்படுத்துச் சூழும்படி ஓங்காரத்தைப் பொறித்து அவற்றைப் பொருந்திச் செபிப்போர்க்குச் சிவன் உமா சகாயனாய் வெளிப்படுவான்.

விளக்கவுரை

எனவே, 'இஃது உமாபதி சக்கரம்' என்பது பெறப் பட்டது. 'மேற்கூறிய சிவ சக்கரத்தால் சிவன் அனைத்துக் கடவுளர் அதிபதியாய்த் தோன்றுவன்' என்பதும், இதனால், 'உமையோடு மட்டும் கூடியே தோன்றுவான்' என்பதும், அறிந்து கொள்ளப்படும். இச்சக்கரத்தைக் காணுமாறு.
இதனால், மற்றொருவகைத் திருவம்பலச் சக்கரமாகிய உமாபதி சக்கரம் கூறப்பட்டது.

நம்முதல் அவ்வொடு நாவின ராகியே
அம்முத லாகிய எட்டிடை யுற்றிட்டு
உம்முத லாக உணர்பவர் உச்சிமேல்
உம்முத லாயவன் உற்றுநின் றானே. ***#973***

மேற்கூறிய சக்கரத்தின்படியே சமட்டிப் பிரண வத்தை முன்வைத்து வியட்டிப் பிரணவத்தைச் செபிக்குங்கால் இடையே நகார முதலும் யகார ஈறுமான தூல பஞ்சாக்கரத்தை ஓதுதலையும் முறையாகக் கொண்டு, 'இச்செபம் உகாரத்தை முதலிற் கொண்ட மந்திரத்திற்குரிய உமாதேவியின் தலைவனாகிய சிவனுக்கு உரியது' என்பதனை ஐயம் அறத் தெளிந்து செபிப்பவர் சென்னிமேல் அந்த உமாபதியாகிய சிவன் எழுந்தருளியிருப்பன்.

விளக்கவுரை

'நம்முதல் அவ்வொடு' என்றதில், 'அ' என்றது, யகரத்தையே, 'யவ்வொடு' என்றே பாடம் ஓதினுமாம். 'அவ்வொடு' என்றது அகர ஈற்றோடு என்றவாறு. அவ்வொடு என்றதன் பின் 'பொருந்திய' என்பது எஞ்சி நின்றது. 'நம்முதலொடும் அவ்வீற் றொடும் பொருந்திய நாவினர் ஆகி' என்க. 'எட்டு' என்றது, எட்டு முகமாகவும் செபிக்கப்படும் எட்டு உருக்களை. 'நாவினராகியே எட்டிடை உற்று' என்ற தனால், வியட்டிப் பிரணவத்திற்கு முன்னே தூல பஞ்சாக்கரத்தை வைத்து ஓதுதல் பெறப்பட்டது. உகாரம் முதலாகிய மந்திரம், 'உம' என்பது, இதனால், மேற்கூறிய சக்கரத்திற்கு, முன்னர்க் கூறிய முறைகளின்மேல் மற்றொரு முறை கூறப்பட்டது.

நின்ற அரசம் பலகைமேல் நேராக
ஒன்றிட மவ்விட்டு ஓலையில் சாதகம்
துன்ற மெழுகைஉள் பூசிச் சுடரிடைத்
தன்றன் வெதுப்பிடத் தம்பனம் காணுமே. ***#974***

மாந்திரிக முறையில் 'அட்ட கன்மவித்தை' என்ற ஒரு முறை சிறப்பாகச் சொல்லப்படுவது. 'அவற்றுள் சிறந்தன ஆறே' என்பர். அந்த ஆறனையும் இது முதலாக ஆறு மந்திரங்களும் கூறுகின்றன. இவை வாம மார்க்கமாய் உயர்ந்தோர்கட்குரியன அல்ல ஆகையால், திவ்வியாகமப் பொருளாதல் அமையாது. அதனால், இவை பிறரால் சேர்க்கப் பட்டனவோ என எண்ண வேண்டியுள்ளது.

அட்ட கன்ம வித்தையுள் இது தம்பனம் கூறுகின்றது தம்பன மாவது பிறபொருள்களின் ஆற்றலைக் கட்டுப்படுத்துதல். நீரை அமிழ்த்தவொட்டாது தரைபோலநின்று தாங்கச்செய்வது 'ஜலத்தம் பனம்' என்றும், நெருப்பைச் சுடவொட்டாது தடுத்து அதன்கண் இருத்தல், அதனைக் கையிற் கொள்ளுதல் முதலியவற்றைச் செய்தல் 'அக்கினித்தம்பனம்' என்றும், காற்றை மோதி அலைக்கவொட்டாது தடுத்தலும், மூச்சுக்காற்றினை இயங்காது உள்நிறுத்தி உடம்பை மேலெழுப்பப் பண்ணுதலும் 'வாயுத்தம்பனம்' என்றும் இவ்வாறு பல தம்பனங்கள் சொல்லப்படுகின்றன. மக்களை அசைய வொட்டாது

தூண்கள் போல நிற்கச் செய்வதும், ஓடுகின்ற ஊர்திகளை ஓடவொட்டாமல் நிறுத்திவிடுதலும் போல்வனவும் இத் தம்பன வித்தையேயாம். தம்பனம் முதலிய ஒவ்வொன்றிற்கும் வேண்டப் படுவன மரப்பலகை, அதில் பொறிக்கப்படும் மந்திரம், ஓலையின் மேல் பூசத்தக்க பூச்சுப்பொருள், அவ்வோலையை இடும் இடம் முதலியன. அவற்றுள் தம்பனத்திற்குப் பலகை, அரசமரப் பலகை. அதில், மேல் தொள்ளாயிரத்து ஆறாம் *(906 ஆம்)* மந்திரத்துள் சொல்லப்பட்ட ஐந்தெழுத்து மாற்றுமுறைகளில் இரண்டாவதனை முதலாகக் கொண்டு ஐயைந்து இருபத்தைந்தாகிய சதுரச் சக்கர அறைகளில் பொறித்து, அம்மந்திரம் முயற்சியால் பயனளித்தற்பொருட்டு ஓலையிலும் அவ்வாறே எழுதி, அதன்மேல் எந்த மெழுகையேனும் பூசி, விளக்கிலே அதன் வெப்பம் தாக்கும்படி அவ்வோலையைக் காய்ச்சி, யந்திரத்தை வழிபட்டு, மந்திரத்தை அம்முறையிலே செபித்து வர, 'தம்பனம்' என்னும் வித்தை கைவரும்.

விளக்கவுரை

'நேராக ஒன்றிட' என்றது, 'சக்கரத்தின் மேல்வரிசை யாகிய வடக்கு விளிம்பில்' என்றவாறு. 'ம இட்டு' 'மகாரத்தை முதலிலே பொருந்த எழுதி' என்றதாம். இம்மந்திரம் 'மசி' எனத் தொடங்குவதால், தம் பனத்திற்கு உரியதாம்; 'தன் தன்' என்றதில் இரண்டாவது 'தன்', சாரியை, 'வெதுப்பில் இட' என்க. இங்குக் கூறிய சக்கர அமைப்பு வருமாறு:-
இதனுள் மேல் விளிம்பில் உள்ள மந்திர எழுத்துக்கள் ஈசான மூலை தொடங்கி நிருதி மூலையில் முடியும் ஒரு கோடு தொடங்கி முன்னோக்கி அமைந்திருத்தல் காண்க.
இது 'மோகனம்' என்னும் வித்தை கூறுகின்றது. மோகனம் - மயக்குதல். பொதுமக்கள், அரசர், செல்வர், மாதர், பகைவர், தெய்வம், பேய், பூதம், விலங்கு முதலிய அனைத்துயிர்களையும் தம்மிடத்து மயங்கித் தம்வழி நிற்கப்பண்ணுதலே மோகனம் என்க.

கரண இறலிப் பலகை யமன்திசை
மரணமிட் டேட்டில் மகார எழுத்திட்டு
அரணமில் ஐங்காயம் பூசி அடுப்பில்
முரணப் புதைத்திட மோகனம் ஆகுமே. ***#975***

இதற்குப் பலகை கொன்றை மரப்பலகை. மந்திரம் மேற்சொல்லியவாறேயாம். மகாரத்தை முதலிற் கொண்டு நிற்றலால் இதுவே மாரண மந்திரமுமாம். (மலம். 'மிருத்தியு' எனவும், 'மூர்சை' எனவும் சொல்லப்படுதலால், அதனைக் குறிக்கும் எழுத்தை முதலில் உடைய இம் மந்திரமே அவற்றை யெல்லாம் தருவதாம். இவ்வாறன்றி, 'நசி என மாறித்தொடர்வதே மாரண மந்திரம்' என்னும் கருத்திற்கு இங்கு

ஆசிரியர் நேர்ச்சி காணப்படவில்லை). மந்திரம் மேற்கூறிய வாறே யாயினும், அவற்றைச் சக்கரத்திலும், ஏட்டிலும் யமன் திசையாகிய தெற்கில் உள்ள வரிசையை முதலாகவும், வடக்கில் உள்ள வரிசையை இரண்டாவதாகவும் கொண்டு முறையே எழுதி ஓலையில் ஐங்காயத்தை அரைத்துப் பூசி அதனை அடுப்பு வாயில் அழுந்தப் புதைத்துச் சக்கரத்தை வழிபட்டு, மந்திரத்தைக் கீழ் விளிம்பு தொடங்கி மேற்கூறிய முறையிலே செபித்து வர, 'மோகனம்' என்னும் வித்தை கைவரும்.

விளக்கவுரை

கரணம் - உபகரணம்; கருவி. அரணம் - பாதுகாவல். அரணம் இல் ஐங்காயம் - பிறரை பாதுகாவல் நீக்கி மயங்கச் செய்யும் ஐங்காயம். சுக்கு, மிளகு, கடுகு, ஈருள்ளி, வெள்ளுள்ளி என்பனவே ஐங்காயமாம். முரண் - வலிமை.

இங்குக் கூறிய சக்கர அமைப்பு வருமாறு:-

இதனுள், மாரண மந்திர எழுத்துக்கள் வாயுமூலை தொடங்கி அக்கினி மூலையில் முடியும் ஒரு கோடு தொடங்கி முன்னோக்கி அமைந்திருத்தல் காண்க.

ஆங்கு வடமேற்கில் ஐயனார் கோட்டத்தில்
பாங்கு படவே பலாசப் பலகையில்
காண்கரு வேட்டில் கடுப்பூசி விந்துவிட்
டோங்காரம் வைத்திடு உச்சா டனத்துக்கே. ***#976***

இஃது உச்சாடனம் என்னும் வித்தை கூறுகின்றது. உச்சாடனம் - ஓட்டுதல். மேல்மயங்கிப் பண்ணின உயிர்களையே விலகி ஓடப் பண்ணுதல் உச்சாடனம் என்க.

இதற்குப் பலகை புரசம் (பூவரசம்) பலகை. சக்கரத்திலும், ஏட்டிலும் எழுத வேண்டிய மந்திரம் மேற்கூறிய வாறேயாம். ஓலையில் கரியும், நஞ்சும் பூசி, ஓங்காரத்தில் மகாரத்தை நீக்கி ஓகாரம் மட்டும் பலகையிலும், ஓலையிலும் சக்கரத்தைச் சுற்றி வளைத்து எழுதி, அதை ஒருமுறை பலகையோடு வழிபட்டு ஓலையைக் கொண்டுபோய் ஐயனார் கோவிலில் வடமேற்கு மூலையில் பாதுகாப்பாகப் புதைத்து விட்டுச் சக்கரத்தை வழிபட்டு, மந்திரத்தை மேற்கூறியவாறே செபித்து வர, 'உச்சாடனம்' என்னும் வித்தை கைவரும்.

விளக்கவுரை

'ஐயனார் கோட்டத்தில்' என்பதனை முதலில் கொண்டு உரைக்க. பாங்கு பட - பாதுகாப்பு உண்டாகும்படி. 'காரேடு' என வரற்பாலது, 'கருவேடு' என வந்தது. இதில் இன எதுகை வந்தது. இதற்குரிய சக்கரம் மேற் காட்டியதே ஆயினும், சக்கரத்தை ஓகாரத்தால் வளைத்தல் வேண்டும்.

உச்சியம் போதில் ஒளிவன்னி மூலையில்
பச்சோலையில் பஞ்ச காயத்தைப் பாரித்து
முச்சது ரத்தில் முதுகாட்டில் வைத்திடு
வைச்சபின் மேலுமோர் மாரணம் வேண்டிலே. *#977*

இது 'மாரணம்' என்னும் வித்தை கூறுகின்றது. மாரணம் - மரணத்துன்பம். 'அழிக்கப்படற்பாலன' என்று எண்ணும் உயிர்களை அழித்தொழிப்பதே மாரணம் என்க. உச்சாடனத்திற்குமேல் மாரணம் செய்ய விரும் பினால், மேலே சொல்லியவாறு செய்தபின் மற்றோர் ஓலை அதுபோல எழுதி, ஐங்காயம் பூசி உச்சி வேளையில் (நண்பகற்போதில்) சுடு காட்டிற் கொண்டுபோய் அக்கினிமூலையில் ஒன்றின்மேல் ஒன்றாய் எட்டு மூலை உண்டாக இரண்டு சதுரங்களையும் அவற்றின் உள்ளே ஒரு சதுரத் தையும் வரைந்து உள்ளே புதைத்துவிட்டு வந்து வழிபாட்டினையும், செபத்தையும் முன்போலச் செய்துவர, 'மாரணம்' என்னும் வித்தை கைவரும்.

விளக்கவுரை

ஈற்றடியை முதலிற் கொண்டு உரைக்க. 'பச்சோலை' என்றது, 'எழுதுவதற்குப் பதமாயுள்ள ஓலை' என்றவாறு. முச்சதுரம் வரையும் முறை:-

ஏய்ந்த அரிதாரம் ஏட்டின்மே லேபூசி
ஏய்ந்த அகார உகார எழுத்திட்டு
வாய்ந்ததோர் வில்லம் பலகை வசியத்துக்
கேய்ந்தவைத் தெண்பதி னாயிரம் வேண்டிலே. *#978*

இது, 'வசியம்' என்னும் வித்தை கூறுகின்றது. மோகனம் செய்யப்பட்டேனும், அது செய்யப்படாது இயல்பாகவேனும் தம்வழி நிற்கும் உயிர்களை எவ்வாற்றானும் பிரிந்து போகாதபடி தம்வசப் படுத்தி வைப்பதே வசியம் என்க. இதற்குப் பலகை, வில்வமரப் பலகை. மந்திரம் அகார உகாரங்கள், அகார உகாரங்கள் விந்துவோடு கூடினவையாக மேற் சொல்லிய சக்கரத்தில் ஈசான மூலையிலிருந்து தொடங்கிப் பொறித்து, ஓலையிலும் அவ்வாறே எழுதி, அதன்மேல் அரிதாரத்தை (மஞ்சள் நிறமுடைய ஒன்றை)ப் பூசி, அதனை அந்தப் பலகைமேலே வைத்து வழிபட்டு அம்மந்திரத்தை எண்பதினாயிரம் உருச் செபித்தால், 'வசியம்' என்னும் வித்தை கைகூடுவதாகும்.

விளக்கவுரை

ஈற்றடியில் 'ஏய்ந்தது' என்பது ஈறு குறைந்து, 'ஏய்ந் ததில்' என ஏழாவதன் தொகைபட நின்றது. வேண்டில் - விரும்பிச் செபித்தல், இதன்பின் 'ஆம்' என்னும் பயனிலை எஞ்சிநின்றது. இங்குக் கூறிய சக்கர அமைப்பு

வருமாறு:-

எண்ஆக் கருடணைக் கேட்டின் யகாரமிட்
டெண்ணாப் பொன் நாளில் எழுவெள்ளி பூசிடா
வெண்ணாவ லின்பல கையிட்டு மேற்குநோக்
கெண்ணா எழுத்தொடண்ணாயிரம் வேண்டியே. *#979*

இஃது, 'ஆகருடணம்' என்னும் வித்தை கூறுகின்றது. உயிர்ப் பொருளாயினும், உயிரல் பொருளாயினும் தொலைவில் உள்ளவற்றைத் தான் இருந்த இடத்தில் இருந்தே வரவழைத்தல் 'ஆகருடணம்' என்னும் வித்தையாம். இதற்குப் பலகை வெண்ணாவல் மரப்பலகை. மந்திரம் மேற்கூறிய ஐந்தெழுத்து மாறலில் யகராம் முதலாக அமைவது யகாரம் முதலாக உள்ளது முதல் ஐந்து தொடர்களையும் முறையே ஐந்து வரிசை அறைகளில் பொறித்து, ஓலையிலும் அவ்வாறே எழுதி, அதன்மேல் யாதேனும் ஒரு வெண்பூச்சினைப் பூசி வியாழக் கிழமையில் மேற் சொன்ன பலகை மேல்வைத்து வழிபட்டு அன்று முதலாக மேற்கு நோக்கி அமர்ந்து அம் மந்திரங்களை அசபாமந்திரத்தோடே எண் ஆயிர உரு விரும்பிச் செபித்தால், 'ஆகருடணம்' என்னும் வித்தை கைவரும்.

விளக்கவுரை

'உகாரம் இட்டு' என்பதும் பாடமாதலால், மேல் வசியத்திற்குச் சொல்லிய அம் மந்திரத்தை உகாரம் முதலாக மாற்றிக் கொள்ளுதலும் இதற்குப் பொருந்துவதே. 'ஆகருடணை' என்பது, 'ஆக்கருடணை' என மருவி நின்றது. இங்குக்கூறிய சக்கர அமைப்பு வருமாறு:- இதனுள் மந்திரங்கள் குறுக்கு வரிசையிலும், நெடுக்கு வரிசையிலும் ஒரே வகையாக அமைந்திருத்தலும், 'நமசிவாயநமசி', சிவாயநம சி' என மூலை நோக்கில் அமைந்திருத்தலும் காண்க. மேற்கூறியவாறு இச்சக்கரத்தில் ஈசான மூலை தொடங்கி முறையே 'அம், உம்' என்பவற்றை 'உம், அம்' என மாறி மாறி எழுதுதலும் பொருந்தும் என்க. இரண்டாம் அடியில், 'எண்ணா' என்பதற்கு, 'நாள்களை எண்ணி' என உரைக்க. எண்ணா எழுத்து - செபியாத மந்திரம்; அசபை. 'வேண்டி நோக்கு' என்றாராயினும், 'நோக்கி வேண்டு' என்றலே கருத்தாதல் அறிக. இதனுள், மூன்று, நான்காம் அடிகளைப் பிறவாறு ஓதுவன பாடம் ஆகாமை அறிந்து கொள்க.

*6.3.*அருச்சனை

அம்புயம் நீலம் கழுநீர் அணிநெய்தல்
வம்பவிழ் பூகமும் மாதவி மந்தாரம்
தும்பை வகுளம் சுரபுன்னை மல்லிகை
செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே. *#980*
தாமரை முதல் செவ்வந்தி ஈறாக இங்குக் கூறப்பட்ட பூக்கள்
வழிபாட்டிற்குக் கொள்ளத் தக்கனவாம்.

விளக்கவுரை

அம்புயம் - தாமரை. நீலம் - நீலோற்பலம்; குவளை, கழுநீர் - செங்கழுநீர்; இதுவும் குவளையின் வகை. நெய்தல் - ஒரு வகை ஆம்பல். வம்பு அவிழ் - வாசனையோடு மலர்கின்ற. பூகம் - கமுகு; இஃது இதன் பாளையில் உள்ள அரும்புகளாம். மாதவி - குருக் கத்தி; இதுவும் ஒருவகை மல்லிகை. மந்தாரம் - மந்தாரை. வகுளம் - மகிழ். வழிபாட்டிற்கு வேண்டும் பொருள்களுள் முதன்மை யானதாகிய பூவின் வகைகள் இதனால் எடுத்துக் கூறப்பட்டன.

சாங்கம தாகவே சாந்தொடு சந்தனம்
தேங்கமழ் குங்குமம் கர்ப்பூரம் காரகில்
பாங்கு படப்பனி நீராற் குழைத்துவைத்
தாங்கே அணிந்துநீர் அற்சியும் அன்பொடே. *#981*
சந்தனத் தேய்வையைக் குங்குமப்பூ, பச்சைக் கர்ப்பூரம், அகிற் சாந்து
இவை சேர்த்துப் பனிநீராற் குழம்பாக்கிச் சாத்தி நீரால் ஆட்டி
அன்போடு வழிபடுங்கள்.

விளக்கவுரை

சாங்கமதாக - திருமேனியில் படத்தக்கதாக. சாந்து - தேய்வை. தேம் கமழ் - இனிதாக மணக்கின்ற. பாங்கு - நன்மை. 'பாங்காகப் பட' (பொருந்த) என்க 'வைத்து' என்றார், 'முன்னே ஆட்ட வேண்டிய பொருள்களை ஆட்டியபின்' என்றற்கு. 'அர்ச்சித்தல்' என்னும் பொதுச் சொல், இங்கு, ஆட்டுதல்மேல் நின்றது, இனி, 'நீர்' என்பதை முன்னிலைப் பெயராக்கி உரைத்தலும் ஆம்.
இதனால், சிறப்புடைய ஒன்றை எடுத்துக் கூறும் முகத்தால் அபிடேகம் விதிக்கப்பட்டது.

அன்புட னேநின் றமுதமும் ஏற்றியே
பொன்செய் விளக்கும் புகையும் திசைதொறும்
துன்பம் அகற்றித் தொழுவார் நினையுங்கால்
இன்ப முடனேவந் தெய்திடும் முத்தியே. *#982*
நிவேதனம், தீபம், தூபம் என்பவைகளால், எட்டுத் திக்கிலும்

வரற்பாலனாவாகிய தடைகளை அகற்றி வழிபாடு செய்பவர், தாம் விரும்பும் பொழுது முத்திநிலை இன்பமே வடிவாய் வந்து எய்தப் பெறுவர்.

விளக்கவுரை

ஏற்றுதல் - ஏற்பித்தல். பொன் - உலோகம். 'பொன் னால் செய்த' என்க. அமுதம் முதலிய மூன்றிலும் மூன்றாம் உருபு விரிக்க.
முதலிரண்டடிகளை வேறாக ஓதுவன பாடம் அல்ல. திசை தொறும் வரும் துன்பங்கள் தீத் தெய்வங்களால் ஆவன. அவற்றைத் திக்குப் பந்தனம் முதலியவற்றால் நீக்கல் வேண்டும் என்க.

எய்தி வழிபடில் எய்தா தனஇல்லை
எய்தி வழிபடில் இந்திரன் செல்வம்உண்
டெய்தி வழிபடில் எண்சித்தி உண்டாகும்
எய்தி வழிபடில் எய்திடும் முத்தியே ***#983***

வழிபாட்டினை அன்போடு மனம் பற்றிச் செய்தால், கிடைக்காதன இல்லை. எண்வகைச் சித்திகளும், இந்திராதி போகங்கள் மட்டுமன்று; முக்தியும் கிடைப்பதாகும்.

விளக்கவுரை

'வழிப்படில்' என்பன பாடமல்ல.

நண்ணும் பிறதாரம் நீத்தார் அவித்தார்
அண்ணிய நைவேத் தியம்அனு சந்தானம்
நண்ணிய பஞ்சாங்கம் நண்ணும் செபம்மன்னும்
மண்ணும் அனல்பவ னத்தொடு வைகுமே**. *#984***

பிறருக்கு உரியராய மனைவியரை விரும்புதலை விட்டவர்களும், புலனடக்கம் உள்ளவர்களும் ஆகிய அவர்களது நிவேதனம், தோத்திரம், வணக்கம், செபம், ஓமம் என்னும் இவையே வழிபாட்டிற்கு உரியனவாம். அவ்விடத்தில் காற்றும் தூய்மை யுள்ளதாய் இருக்கும்.

விளக்கவுரை

மேற்கூறியவையன்றி மேலும் உள்ள பொருள்களைக் கூறுவார், 'அவற்றை ஈட்டிக் கொண்டு வழிபடுவோர் முதற்கண் நல்லொழுக்கத்தில் நிற்பவராய் இருத்தல் வேண்டும்' என்பதனை அஃது இயல்பென்பது தோன்ற, அனுவாத முகத்தாற் கூறினார். கூறவே, 'வழிபாடு சிறந்த ஓர் ஒழுக்கமாதலின் அது செய்வார் பிற ஒழுக்கங்களைக் கடைப் பிடித்தல் வேண்டும் என்னும் கட்டளை யில்லை' என்று எண்ணுதல் மடமையாகும் என்பது இனிது விளங்கிற்று. புலனடக்கம், நாச் சுவை, வேட்கை முதலியவற்றை அடக்குதல் யோக நெறியிலும் இயம நியமங்கள் அடிநிலையாகக் கூறப்படுதல் இங்கு நினைக்கத்தக்கது.

'தாரம்' என்பது தமிழில் அஃறிணை இயற்பெயர் போலவே வருதலை அறிக. 'நீத்தாருடையனவும், அவித்தாருடையனவும்' என உரைக்க. அண்ணிய - இனிய. அனுசந்தானம் - இடைவிடாது தொடர்ந்து செய்தல். பஞ்சாங்கம் - ஐந்துறுப்புக்கள் நிலத்திற் பொருந்த வணங்கும் வணக்கம். ஐந்துறுப்புக்களாவன; தோள் இரண்டு, முழந்தாள் இரண்டு, முகம் ஒன்று, இவற்றோடு காது இரண்டு, மார்பு ஒன்று இவையும் நிலத்திற் பொருந்த வணங்குதல் அட்டாங்க வணக்கமாம். இதனை 'சாஷ்டாங்கம்' என்பார்கள். இனம் பற்றி இதனையும் இங்குக் கொள்க. மகளிர்க்குப் பஞ்சாங்க வணக்கம் ஒன்றே உரியது. மண்ணும் அனல் - சிவாக்கினியாகச் செய்யப்பட்ட நெருப்பு. பவனம் - காற்று.
இதனுள்ளும் பிறவாறு ஓதுவன பாடம் அல்ல
இதனால், மேற்கூறப்பட்டவற்றிற்குப்பின் எஞ்சி நின்ற பொருள்கள் கூறப்பட்டன்.

வேண்டார்கள் கன்மம் விமலனுக் காட்பட்டோர்
வேண்டார்கள் கன்மம் அதில் இச்சை யற்றபேர்
வேண்டார்கள் கன்மம் மிகுசிவ யோகிகள்
வேண்டார்கள் கன்மம் மிகுதியோர் ஆய்ந்தன்பே. ***#985***

சிவபெருமானுக்கு அடியவராகத் தம்மை ஒப்படைத்துவிட்டவர்களும், பசு புண்ணியத்தால் விளையும் சிறு பயன்களில் விருப்பம் இல்லாதவர்களும். உயர்ந்த சிவயோகத்தில் நிற்பவர்களும், பயன் கருதிச் செய்யும் காமிய வழிபாடுகளை மேற்கொள்ளாது, ஆய்ந்துணர்ந்த உணர்வினால் மிக்க அன்பு ஒன்றே காரணமாக வழிபாட்டினை மேற்கொள்வர்.

விளக்கவுரை

ஈற்றடியை, 'கன்மம் வேண்டார்களாய், ஆய்ந்து அன்பே மிகுதியோராவர்' எனக் கூட்டி முடிக்க. 'கன்மம்' என்பதற்கு இங்கு இதுவே பொருளாதல் அறிக.

அறிவரு ஞானத் தெவரும் அறியார்
பொறிவழி தேடிப் புலம்புகின் றார்கள்
நெறிமனை யுள்ளே நிலைபெற நோக்கில்
எறிமணி யுள்ளே இருக்கலும் ஆமே. ***#986***

அறிவுருவாகிய இறைவனை எவரும் அவனறி வாலே அறிய முயலாமல் தம் அறிவால் ஐம்பொறிகளாலும், மனம் முதலிய உட்கருவிகளாலும் ஆராய்ந்து துன்புறுகின்றார்கள். ஆயினும், முறைப்படி, மேற்கூறிய சக்கரம் முதலியவற்றின் வழி மனம் ஒருங்கிநினைத்தால், ஒளி வீசுகின்ற மாணிக்கம் போல்பவனாகிய இறைவனது அருளில் மூழ்கியிருத்தல் கூடும்.

விளக்கவுரை

'அறிவு அறியார்' என இயையும். 'ஞானம்' என்பது சிறப்புப்பற்றிப் பதி ஞானத்தையே குறித்தல் வழக்கு முறைமை. 'நெறி யால் நோக்கில்' என்க. மனை, இங்குச் சக்கரத்தில் உள்ள அறைகள். இனம் பற்றிக் கும்ப விம்ப தம்பங்களும் கொள்க.

இதனால் 'வழிபாடுகள் பதிஞானத்தைத் தந்து, அது வழி யாகப் பதியை அடைவிக்கும்' என்று அதனது சிறப்புக் கூறப்பட்டது.

இருளும்வெளி யும்போல் இரண்டாம் இதயம்
மருள்அறி யாமையும் மன்னும் அறிவும்
அருள் இவை விட்டறியாமை மயங்கும்
மருளும் சிதைத்தோ ரவர்களா வாரே. ***#987***

ஆன்ம அறிவு இருளே போன்றும், ஒளியே போன்றும் இருதன்மையதாய் நிற்கும் இயல்புடையது. அதனால் அதனிடத்தே மயக்கத்தைத் தரும் அறியாமையும், தெளிவைத்தரும் அறிவும் என்னும் இரண்டுமே என்றும் நிலை பெற்றிருக்கும், எனினும், அறிவால் இருதன்மையை நீக்கி ஒரு தன்மையாகிய அறிவேயாய் நிற்பவரே, அழிவற்ற அறியாமையை அழியப் பண்ணினவராகவும் சொல்லப்படுவர்.

விளக்கவுரை

'ஆதலால், மேற்கூறிய முறையால், அறிவாய் நிற்கும் நிலையைப் பெற முயலுங்கள்' என்பது குறிப்பெச்சம் 'போல்' என்றது 'அவையே போலத் திரிந்து' என்றவாறு. ஆன்ம அறிவை 'இதயம்' என்றல் பொருந்துமாறு,

'சிந்தையைச் சீவன் என்றும்
சீவனைச் சிந்தை என்றும் ... ... வந்திடும்' 1

என்னும் சிவஞான சித்தியால் அறிக. 'அறிவும் மன்னும்' என முன்னே கூட்டி முடிக்க. 'அறியாமை' என்றது அதனைச் செய்யும் ஆணவ மலத்தையும், 'அறிவு' என்றது இறைவனது திருவருளையும் ஆதல் அறிக. 'இரண்டும் அழிவுற்ற பொருளாயினும், மலம் திருவருளை வெல்லமாட்டாமையால் அதனைக் கொண்டு அறியாமையைப் போக்க வேண்டும்' என்பார், 'அருளால் இவை விட்டு' என்றார். உருபு தொகுத்தலாயிற்று. 'இது பக்குவம் எய்திய வழிக்கூடும்' என்பது கருத்து.

'ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்; ஒன்றுமேலிடின், ஒன்று
ஒளிக்கும் எனினும் இருள் அடராது; உள் உயிர்க்குயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனும் திரிமலத்தே
குளிக்கும் உயிர் அருள் கூடும்படி கொடி கட்டினனே' 2

என்பதிலும் இவ்வாறு கூறப்படுதல் காண்க.

இதனால், மேற்கூறியவாற்றால் பதிஞானத்தைப் பெற்றோரது சிறப்புக்

கூறப்பட்டது. அறியாமை மயங்கும் மருள் - உண்மையை உணராமல் திரிய உணர்வதற்கு ஏதுவாகிய மலம்.

தானவ னாக அவனேதா னாயிட
ஆன இரண்டில் அறிவன் சிவமாகப்
போனவன் அன்பிது நாலாம் மரபுறத்
தானவன் ஆகும்ஓர் ஆசித்த தேவனே. *#988*

சிவம் தான் தோன்றாது ஆன்மாவேயாய் நிற்றலும், ஆன்மா தான்தோன்றாது சிவமேயாய் நிற்றலும் என்னும் இருநிலைகளுள், அறிபவனாகிய ஆன்மா அறியப்படுபொருளாகிய சிவமேயாகி விடுகின்ற இரண்டாம் நிலையை எய்தினவன் பின்பு 'அறிபவன்' என்பதோடு நில்லாது, அன்பு செய்பவனாயும் நிற்பான். இந்நிலையே, 'சிவ ரூபம், சிவதரிசனம், சிவ யோகம், சிவ போகம்' என்னும் நான்கனுள் இறுதிக்கண்ணதாகிய சிவபோகத்தை அடையச் சிவமாம் தன்மையை எய்தும் வழியாம்.

விளக்கவுரை

இரண்டு: பெத்தமும், முத்தியும். 'அவனே தானே ஆகிய அந்நெறி - ஏக னாகி' என்னும் சிவஞானபோதத்தை இங்கு உடன் வைத்துக் காண்க. அன்பு வடிவானவனை,'அன்பு' என்றார். ஈற்றடியை' தான் ஆசித்ததேவனாகிய அவனாகும் ஓர் நிலை' எனக் கொண்டு கூட்டிக் கொள்க. 'ஆசிரயித்த' என்பது 'ஆசித்த' எனச் சிதைந்து நின்றது. 'யாசித்த' எனப் பாடம் ஓதலுமாம். யாசித்தல் - வேண்டுதல். இதனால், பதி ஞானம் முதிர்ந்து முற்றுமாறு கூறப்பட்டது.

ஓங்காரம் உந்திக்கீழ் உற்றிடும் எந்நாளும்
நீங்கா அகராமும் நீள்கண்டத் தாயிடும்
பாங்கார் உகாரம் பயில்நெற்றி உற்றிடும்
வீங்காகும் விந்துவும் நாதம்மேல் ஆகுமே. *#989*

பிரணவத் தியானத்தில் ஓங்காரம் மூலாதாரத்திலும், மகாரம் உந்தியிலும், அகாரம் இருதயம்,கண்டம் என்ப வற்றிலும், உகாரம் புருவ நடுவிலும், விந்துவும் நாதமும் அதற்குமேல் நெற்றியில் உள்ள வேறு வேறு இடங்களிலும் வைத்துத் தியானிக்கப்படும் என்க.

விளக்கவுரை

மகாரம் நிற்கும் இடம் குறிப்பினாற் கொள்ள வைத்தார். 'பாங்கார் நகாரம்' என்பது பாடம் ஆகாமை யறிக.
இதனால், வழிபாட்டில் பிரணவத்தைத் தியானிக்கும் முறை கூறப்பட்டது.

நமஅது ஆசன மான பசுவே

சிவமது சித்திச் சிவமாம் பதியே
நமஅற ஆதி நாடுவ தன்றாம்
சிவமாகும் மாமோனம் சேர்தல்மெய் வீடே. *#990*

'நம' என்பதை அடிநிலையாகக் கொண்டு பசுவாய் நிற்கின்ற உயிரே. 'சிவ' என்பதனை அடிநிலையாகக் கொள்ளும் நிலை கிடைக்கப்பெறுமாயின், சிவத்தோடு ஒன்றிப் பதியாய்விடும். ஆதலால், நகார மகாரங்களால் குறிக்கப் பெறுகின்ற திரோதாயியும், மலமும் அறுவதற்கு வழி அவற்றை முதலாகக் கொண்டு ஓதுவதன்று; மற்று, சிகார வகாரங்களை முதலாகக் கொண்டு ஓதுதலேயாகும். அவ்வாறு செபித்தல் பரமுத்திக்கு வாயிலாம்.

விளக்கவுரை

'பசுவே சிவமாய்ப் பதியாம்' என்க. 'சித்தி' என்னும் முதனிலையே 'சித்திக்க' என வினையெச்சப் பொருள் தந்தது. 'ஆதி யாவது' என ஆக்கம் வருவித்து, அதனை, 'சிவம் ஆதி ஆவதாகும்' என ஈற்றிலும் கூட்டுக. மோனம் சேர்தல் - செபித்தல். இவ்வாறே,

'நம்முதலா ஓதில் அருள் நாடாது; நாடும் அருள்
சிம்முதலா ஓதுநீ சென்று' (வெண்பா - 14)

என்னும் உண்மை விளக்கம் முதலிய சித்தாந்த நூன்மொழிகளையும் இங்கு நோக்குக. இதனுள் உயிரெதுகை வந்தது.

இதனால், நிட்காமிய வழிபாட்டில் திருவைந்தெழுத்தைச் செபிக்கும் முறை கூறப்பட்டது.

தெளிவரும் நாளில் சிவஅமு தூறும்
ஒளிவரும் நாளில் ஓர் எட்டில் உகளும்
ஒளிவரும் அப்பதத் தோரிரண் டாகில்
வெளிதரும் நாதன் வெளியாய் இருந்தே. *#991*

'சிவனன்றி வேறு யாதும் இல்லை' என்ற தெளிவு வந்து சிவத்தில் அழுந்தித் தன்னையும் மறந்த பொழுதே சிவானந்தம் ஊற்றெடுப்பதாகும். அவ்வாறன்றி, 'சிவனை யான் உணர்கின்றேன்' எனத் தன்னை உணர்ந்து நிற்றலாகிய அறிவு உண்டாய காலத்தில் ஆன்மா அந்தப்பசு அறிவிலே நின்று அலமரும். ஒருதலைப்படாது இவ்வாறு இருதலைப்பட்டு நிற்கும் நிலையில் சிவம் வெளிப்பட்டு நின்றும் வெளிப்படாததேயாய் இருக்கும்.

விளக்கவுரை

எட்டு - அகாரம். அது நாதத்தைக் குறித்தல் வழக்கு. 'பசுபோதம் தலையெடுத்தும் வழி வாக்காகிய பாச ஞானமும் விரையத் தோன்றி அலைவை உண்டு பண்ணும், என்பார், 'எட்டிலே உகளும்' என்றார்.

'இவ்வாறு ஓரிரண்டாகில்' என அனுவாத மாக்கியுரைக்க. 'வெளி' இரண்டில், முன்னது புறம்; பின்னது வெளிப்படை. திரிபுடி நீங்காதாயின் அருள் நிலையன்றி, ஆனந்த நிலை எய்தாமை பற்றி 'நாதன் வெளியாய் இருந்தே வெளிதரும்' என்றார். வெளிதருதல் - ஆன்மாவிற்குத் தன்னின் வேறான இடத்தைத் தருதல். திரிபுடி - காண்பான், காட்சி, காட்சிப் பொருள் என்பனவாம். 'ஞாதுரு, ஞானம், ஞேயம்' என்றும் சொல்லப்படும்.

இதனால், 'திரிபுடி நீங்கும் தெளிவைப் பெறமுயல வேண்டும்' என்பது கூறப்பட்டது.

6.4.நவகுண்டம்

நவகுண்ட மானவை நானுரை செய்யின்
நவகுண்டத் துள்எழும் நற்றீபந் தானும்
நவகுண்டத் துள்எழும் நன்மைகள் எல்லாம்
நவகுண்ட மானவை நானுரைப் பேனே. ***#992***

அழலோம்புதற்குரிய குண்டங்கள் ஒன்பது வகையின. அவற்றின் சிறப்பை நான் சொல்லுமிடத்து, சிவபெருமானது சிறந்த உருவமாகிய ஒளிப்பிழம்பு ஓங்கி விளங்குவது அக்குண்டங்களிலே தான். அதனால், அப்பெருமானை அம்முறையில் வழிபடும் வழி பாட்டினால் எல்லா நன்மைகளும் விளையும். அது பற்றி அவற்றின் முறையை நான் இங்குக் கூறுகின்றேன்.

விளக்கவுரை

'நல்தீபம்' என்றது சிவனது ஒளி உருவத்தையாம். 'தானும்' என்பதில் தான், அசை. உம்மை, சிறப்பு.

இதனால், அதிகாரம் நுதலியது கூறப்பட்டது.

உரைத்திடுங் குண்டத்தி னுள்ளேமுக் காலும்
வகைத்தெழு நாற்கோண நன்மைகள் ஐந்தும்
பகைத்திடு முப்புரம் பார் அங்கி யோடே
மிகைத்தெழு கண்டங்கள் மேலறி யோமே. ***#993***

மேற் சொல்லப்பட்ட குண்டங்களிலே முக்காலங் களையும், ஐம்பெரும் பூதங்களையும், மும்மல நீக்கத்தையும் 'அக்கினி' என்ற ஒன்றன் வழியாகவே காணுதல் கூடும். ஆதலின், அக் குண்டங்கட்கு மேலான தெய்வ இடங்களாக நான் வேறொன்றை அறிந்திலேன்.

விளக்கவுரை

'முக்காலம்' என்றது, அவற்றின்கண் உள்ள நிகழ்ச்சிகளை. அவற்றுள், இறந்தோரை நற்கதி எய்துவித்தல் முதலியன இறந்தகாலம் பற்றியன, பகைவரை அழித்தல் முதலியவை நிகழ்காலம் பற்றியன, மகப் பேறு

முதலியவை எதிர்காலம் பற்றியன. ஐம்பெரும் பூதங்களைக் காணுதல் அவற்றின் வடிவாய் அமைந்த குண்டங்களை வழிபட்டுப் பயனடைதல். 'நிலம், நீர், தீ, வளி, வானம்' என்னும் பூதங்கட்கு வடிவம் முறையே, 'நாற்கோணம், பிறை, முக்கோணம், அறுகோணம், வட்டம்' என்பனவாதல் நன்கு அறியப் பட்டது. *1* இதனுள் பிறை வடிவம் சந்திரனுக்கு ஆகும். சூரியனுக்கு வட்டத்தின் வகையாகிய தாமரை ஆகும். முக்கோணத்தைச் சிறிது வேறுபடுத்தி யோனி வடிவாக்கச் சத்திக்கு ஆகும். ஒரு சதுரத்தின் மேல் மற்றொரு சதுரம் வடக்கு முதலிய திசைகளை நோக்கி அமைந்த மூலைகளை உடையன போல அமைக்க அட்டகோணம் அட்டமூர்த்தி வடிவினனாகிய சிவபிரானுக்கு ஆகும். பஞ்சமுகம், பஞ்சாக்கரம், பஞ்சக்கிருத்தியம், பஞ்ச மூர்த்திகள் முதலியன பலவற்றிற்கும் இயைபுடைய பஞ்சமுக குண்டமும் பதும குண்டத்தின் வேறுபாடாய் அமைவதாம். இவ்வாறாக நவகுண்டமும் காண்க. இவற்றை நாயனார் பின்னர் *(1027)* விதித்தல் அறியத் தக்கது. குண்டங்கள் வழிபாட்டிற்கு ஏற்பப் பல வகையாக அமைத்தல் சொல்லப்படினும், எல்லாவற்றிற் கும் பெரும் பான்மை நாற்கோண குண்டமே அமைத்தல் காணப்படு கின்றது. அது பிருதிவியின் அடையாளமாதல் பற்றிப் போலும்.
இதனால், நவகுண்ட வடிவுகள் குறிப்பாற் கூறப்பட்டன.

மேலறிந் துள்ளே வெளிசெய்த அப்பொருள்
காலறிந் துள்ளே கருத்துற்ற செஞ்சுடர்
பாரறிந் தண்டம் சிறகற நின்றது
நானறிந் துள்ளுளே நாடிக்கண் டேனே. ***#994***

பிராணாயாம முறையை அறிந்து அதன்வழியே தியானிக்கப்பட்ட சிவந்த ஒளிப்பிழம்பே புறத்திலும் குண்டத்தின் அழலாய் அறியப்பட்டுக் காட்சிப்பட நின்ற பொருளாய், நிலவுலகத் தாரல் நன்கறியப்பட்டு, அண்டங்களின் திசைவரம்பைக் கடந்த பெரும் பொருளாய் நிற்கும். அவ்வுண்மையை நான் நன்கறிந் திருத்தலால். அப்பொருளை அகத்தே தியானத்தினாலும், புறத்தே அழலோம்பலாலும் பெற்றேன்.

விளக்கவுரை

மூன்றாம் அடியை முதலில் வைத்து, 'அப் பொரு ளாய்' என ஆக்கம் வருவித்துரைக்க. முதலடி மூன்றாம் அடிகளில் உள்ள, 'அறிந்து' என்பன, 'அறியப்பட்டு' என்னும் பொருளன.
'சுடர்விட்டுளன் எங்கள் சோதி' *1*
என்னும் திருப்பாசுரத் திருமொழிக்குச் சேக்கிழார் இவ்வாறே.
'தோன்று காட்சிச் 'சுடர்விட் டுளன்' என்பது
ஆன்ற அங்கிப் புறத்தொளி யாய், அன்பில்

ஊன்ற உள்ளெழும் சோதியாய் நின்றனன்;
ஏன்று காண்பார்க் கிதுபொருள் என்றதாம்' 2
எனக் கருத்துரைத்தல் காண்க. இதனுள் உயிரெதுகை வந்தது.
இதனால், 'நவகுண்டத் துள்ளெழும் நல்தீபத்தது' உண்மை கூறப்பட்டது.

கொண்டஇக் குண்டத்தினுள்ளெழு சோதியால்
அண்டங்கள் ஈரேழும் ஆக்கி அழிக்கலாம்
பண்டையுள் வேதம் பரந்த பரப்பெலாம்
இன்றுசொல் நூலாய் எடுத்துரைத் தேனே. *#995*

நான் மெய்ப்பொருளைப் பெற்ற வகைகளுள் ஒன்றாகிய குண்டத்தீயால் பதினான்கு உலகங்களை ஆக்கவும் முடியும்; பழமையாய் அவற்றுப் பரந்து கிடந்த மறைகளின் விரிந்த பொருள்களை நான் இன்று செய்கின்ற இந்தச் சிறிய ஒரு நூலின் பகுதியிலே எடுத்துக் கூறினேன்.

விளக்கவுரை

'உள் வேதம்' என்பதை, 'வேதத்துள்' என மாற்றிக் கொள்க. இதனுள் இன எதுகை வந்தது.
இதனால், மேற்கூறிய தீபத்தது சிறப்புக் கூறப்பட்டது.

எடுத்தஅக் குண்டத் திடம்பதி னாறில்
பதித்த கலைகளும் பாலித்து நிற்கும்
கதித்தனல் உள்ளெழக் கண்டுகொள் வார்க்கே
கொதித்தெழும் வல்வினை கூடகி லாவே. *#996*

புறத்தே அமைக்கப்பட்ட குண்டத்தினில் எழுகின்ற தீயினிடத்தும் உடம்பில் சொல்லப்பட்ட பதினாறு இடங்களைக் கற்பித்து வழிபட அவ்விடங்களில் உள்ளே தியானிக்கப்பட்ட பிராசாத கலைகள் பதினாறும் இனிது அருள் வழங்கி நிற்கும். இவ்வாறு அகவழி பாட்டோடு ஒன்றி நிற்கும் வகையில் குண்டத் தீயைக் காண்பவர் களுக்கே அவர்கள் மேல் சீற்றங்கொண்டு எழுகின்ற வினைகள் அவரைச் சாரமாட்டாவாய் ஒழியும்.

விளக்கவுரை

எனவே, 'பிறவாறு காண்பார்க்கு அவையொழியாது பற்றுவனவாம்' என்றதாயிற்று. உலகில் நிகழுந் தீமைகட்குக் காரணம் அவரவர் முன்செய்த வினையே. அவையொழிந்தாலல்லது, துன்பங்கள் முற்ற ஒழியா. மாற்று முறைகளால் (பரிகாரங்களால்) ஓரளவே ஒழியும் என்க. வேள்வித்தீயின் வழியாகத் தேவர் பலரை வழிபடுதலினும், பிராசாத கலையின் அதிதேவர்களை இவ்வாறு வழிபடுதல் சிறப் புடைத்து என்றவாறு. பிராசாத கலை பற்றி முன்னைத் தந்திரக் குறிப்பில் விரித்துக் கூறப்பட்டது. இதனுள்ளும் முதலடி இன எதுகையாய்

நின்றது.
இதனால், மேற்கூறிய குண்ட வழிபாட்டில் மிக்கதொன்றன் சிறப்புக் கூறப்பட்டது.

கூடமுக் கூடத்தி னுள்ளெழு குண்டத்துள்
ஆடிய ஐந்தும் அகம்புற மாய்நிற்கும்
பாடிய பன்னீ ரிராசியும் அங்கெழ
நாடிக்கொள் வார்கட்கு நற்சுடர் தானே. *#997*

ஒன்பது வகைக் குண்டங்களுள் அறுகோணமாய் அமைந்த குண்டத்தில் ஐம்பெரும் பூதங்களும் அக்குண்டத் தீயின் அக மாயும், அதன் புறமாயும் நிற்கும். அதனையும் நினைந்து நிலவுலகத் தின் பகுதிகளாகிய மேடம் முதலிய பன்னிரண்டு ராசிகளையும் அக் குண்டத்திலே பாவித்து வழிபடுவார்க்கு அதனின்றும் எழுகின்ற தீ எல்லாத் தேவரையும், கோள்களையும் மகிழ்விக்கின்ற நல்ல தீயாய் அமையும்.

விளக்கவுரை

'கூட முக்கூடம்' என்றது, 'அறுகோணம்' என்றவாறு, ஆடிய - காரியங்களைத் தோற்றுவித்த. பாடிய - நூல்கள் சொல்லிய. அறுகோண குண்டத்துள் பன்னிரண்டு ராசிகளைப் பாவிக்குமாறு, கோணம் ஒன்றிற்கு இரண்டிரண்டு ராசியாகக் கிழக்கு முதல் வலமாகச் சென்று வடக்கில் முடிய வைத்துப் பாவித்தல் என்க. குண்டம், இடவாகு பெயர். 'தான்' என்றது, மேற்குறித்த குண்டத் தீயை.
இதனால், பொதுவகை வழிபாடு ஒன்றன் முறை கூறப்பட்டது.
இதன்கண் அறுகோண குண்டம் பயன்படுமாறும் பெறப்பட்டது.

நற்சுட ராகும் சிரம் முக வட்டமாம்
கைச்சுட ராகும் கருத்துற்ற கைகளில்
பைச்சுடர் மேனி பதைப்பற்ற லிங்கமும்
நற்சுடர் ராய்எழும் நல்லதென் றாளே. *#998*

அங்கியங் கடவுட்குச் சிரசும், முகமும், கொழுந் தாகிய சுடர்களாம். பக்கங்களில் படர்ந்து தாவுகின்ற சுடர்கள் கைகளாம், கீழ்நின்று பசிய நிறத்தை உள்ளே உடையதாய் எழுகின்ற இடை ஒளிப் பிழம்பே மேனியாம், இவ்வாறாதலின் வேள்வித் தீயே சிவனது வடிவமாகவும் எண்ணப்படுகின்ற நன்மையை உடைய தாகின்றது என்று சிவசக்தி கூறினாள்.

விளக்கவுரை

முதல் 'நற் சுடர்' - சிறந்த சுடர்; அவை கொழுந்தாகி மேலே உள்ளன. சிரம் கூறவே சிகையும் கொள்ளப்படுவதாம். 'நற் சுடர் சிரமாகும்; முக வட்டமாம்' என்க. 'கைகளில் ஆகும் சுடர் கை,' எனக் கொண்டு கூட்டி

உரைக்க, 'கை' இரண்டில் பின்னது பக்கம் 'பைஞ்சுடர்' என்பது வலிந்து நின்றது. பதைப்பு அறுதலாவது, சாந்தம் உறுதல். எழவே, 'சிவலிங்கம்' என்றதாயிற்று. ஈற்றடியை 'நற்சுடர் பதைப்பற்ற லிங்கமுமாய் எழும் நல்லது' எனக் கூட்டி உரைக்க. சிவ சத்தி கூறியதாக அருளிச் செய்தது, அவளே வேள்விக்குரிய மந்திரங் களைப் பிரேரிப்பவளாதல் பற்றி. தீயின் வடிவத்தை இவ்வாறு அங் கியங் கடவுள் வடிவாகக் கற்பித்துக் காட்டினார், மேற்கூறிய பிராசாத கலா நியாசத்தையும், பிறவற்றையும் செய்தற் பொருட்டு. 'லிங்கம்' என்றது, வியத்த லிங்கத்தை என்பது மேல் உறுப்புகளைக் கற்பித்துக் காட்டியதனால் கொள்க. இதனுள்ளும் இன எதுகை வந்தது.
இதனால், வேள்வித் தீ தீக் கடவுளாய் நிற்குமாறு கூறப்பட்டது.

நல்லதென் றாளே நமக் குற்ற நாயகம்
சொல்லதென் றாளே சுடர்முடி பாதமா
மெல்லநின் றாளை வினவகில் லாதவர்
கல்லதன் தாளையும் கற்றும்வின் னாளே. ***#999***

வேள்வித் தீயினது சிறப்பைக் கூறிய அந்தச் சிவ சக்தியே, 'நம்மைச் செலுத்தி நிற்பன மந்திரங்களே' என அருளிச் செய் தாள். அம் மந்திரங்களையே தனக்கு முடி முதல் அடிவரையும் உள்ள உறுப்புக்களாகக் கொண்டு அருளோடு நிற்கின்ற அவளது உண்மை யை உணராதவர்கள், எல்லாக் கல்விகளையும் அடி தொடங்கி முறையாகக் கற்றும் அக்கல்விகள் பகலில் காணப்படுகின்ற வான வில்போல வெறுந்தோற்ற மாத்திரையாய்ப் பயன்படாதொழியும்.

விளக்கவுரை

சொல், இங்கு மந்திரம். மென்மை - அருள். கல், கல்வி; முதனிலைத் தொழிற் பெயர். நாள் - பகல்.
இதனால்,' அங்கியங் கடவுட்கு மந்திரமும் வடிவாம்' என்பது பெறுதற் பொருட்டு யாவர்க்கும் மந்திரம் வடிவாமாறு கூறப்பட்டது.

வின்னா இளம்பிறை மேவியகுண்டத்துச்
சொன்னா இரண்டும் சுடர்நாகம் திக்கெங்கும்
பன்னாலு நாகம் பரந்த பரஞ்சுடர்
என்னாகத் துள்ளே இடங்கொண்ட வாறே. ***#1000***

வில்லின் நுனி போன்ற இரண்டு நுனிகளுடன் விளங்கும் இளம்பிறை வடிவாகப் பொருந்திய குண்டத்தில் அந்த இரு நுனிகளிலும் எழுகின்ற தீ இரண்டு பாம்புகளாய் எங்கும் ஒளி வீசும். அவை ஒவ்வொன்றிற்கும் உள்ள பற்கள் நான்கு. இந்த நாகங்களுடன் பரந்தெழுகின்ற தீ எனது உடம்பினுள்ளும் இடங் கொண்டிருத்தல் வியப்பு.

விளக்கவுரை

'வில் நாப்போலும் நாவினையுடைய இளம் பிறை போல் மேவிய குண்டம்' என்க. 'சொல் நால்' என்பது பாடமன்று. சுடர் நாகம், வினைத்தொகை. 'திக்கெங்கும் தாவும்' என்க. இவ்வாறு உடம் பினுள் அமையுமாறு:- நாபித்தானம் குண்டமாகவும், இட நாடி வல நாடிகள் பாம்பாகவும், மூலாக்கினி மேல் எழுந்து நடு நாடிவழிச் செல்லுதல் குண்டத்தீ ஓங்குவதாகவும் அமைதலாம். 'பல் நாலு' என்றது, அவ் வாயுவிற்கு வலுவூட்டுகின்ற அம்ச மந்திரத்தை. அம்ச மந்திரத்துள் ஈரிடத்தும் இங்கு விந்துவை வேறெண்ணித் தொகை கூறப்பட்டது. இதனால், ஒளி நிலை அகத்தும், புறத்தும் ஒரு படித்தாய் நிற்குமாறு கூறப்பட்டது. இதனுள் பிறைக் குண்டம் குறிக்கப்பட்டது.

இடங் கொண்ட பாதம் எழிற்சுட ராக
நடங்கொண்ட பாதம்நன் னீராம் அவற்குச்
சகங்கொண்ட கைஇரண் டாறும் தழைப்ப
முகங்கொண்ட செஞ்சுடர் முக்கண னார்க்கே. ***#1001***

சிவபிரானது அகத்தொளி வடிவில் ஊன்றிய திருவடி அக்கினி மண்டலமாகிய மூலாதாரமும், சுவாதிட்டானமும் ஆம். தூக்கி யாடுந் திருவடி நீர் மண்டலமாகிய மணிபூரகமும், அனா கதமுமாகும். திசைகளை அளக்கும் எட்டுக் கைகள் உடலகம் எங்கு மாகும். முகமும், அதன்கண் உள்ள முச்சுடர்களாகிய மூன்று கண்களும் விசுத்தியும், ஆஞ்ஞையுமாகிய இடங்களாகும்.

விளக்கவுரை

இடங் கொள்ளுதல் - நிலத்தை இடமாகக் கொள்ளுதல், சுடர் - நெருப்பு. சகம், இங்குத் திசை. இரண்டு ஆறு - எட்டு. இதனுள் ஈரடி எதுகை வந்தது.

இதனால், இறைவனது அகத்தொளியுருவம் உடம்பினுள் இடங்கொண்டு நிற்குமாறு கூறப்பட்டது.

முக்கணன் றானே முழுச்சுட ராயவன்
அக்கணன் றானே அகிலமும் உண்டவன்
திக்கண னாகி திசைஎட்டும் கண்டவன்
எக்கணன் றன்னுக்கும் எந்தை பிரானே. ***#1002***

மூன்று கண்களை உடையவனாகிய சிவபெரு மானே அனைத்துத் தேவர்க்கும் வாயிலாகும் நிறைவான ஓமாக்கினி. அஃது எவ்வாறெனில், மண்ணை உண்டு உமிழும் அந்த மாயோனும், உலகங்களைப் படைக்கும் எண்கணனாகிய பிரமனும் தானேயாய் நிற்றலால். இதனானே, எங்கு யாவன் ஒருவன் தேவன் இருப்பினும் அவனுக்குப்

பற்றுக்கோடாகின்றவன் சிவனே என்பது விளங்கும்.

விளக்கவுரை

எனவே, 'ஓமாக்கினியில் அவன் ஒருவனையே மந்திர நியாசங்களுடன் வழிபடின் அஃது எல்லாத் தேவர்க்கும் உவப்பாகும்' என்பது கருத்தாயிற்று. இவ்வுணர்வு தோன்றி நிலைபெறுதற் பொருட்டே, வைதிக வேள்வியில் ஓமாக்கினியை அங்கியங் கட வுளாகக் கொள்ளுதல் போலல்லாது, சிவவேள்வியில் வாகீசுவரியது பூப்பு நீராட்டு, கர்ப்பாதானம் முதலிய சடங்குகளால் அக்கினியை வாகீசுவரனால் பிறப்பித்து, அவனுக்குப் பிறப்புச் சடங்கு இயற்றி, 'சிவாக்கினி' என நாம கரணம் செய்து சிவாக்கினியாக்கிக் கொள்ளும் முறை சைவாகமங்களில் விரிவாகக் கூறப்பட்டது என்க.
'அகிலமும் உண்ட அக்கண்ணனும் தானே; திசை எட்டும் கண்டவனாகிய திக்குக் கண்ணனும் ஆகி' என்க. எச்ச உம்மைகள் தொகுத்தலாயின. 'ஆகி' என்பது பெயர். இறுதியில் 'பற்றுக்கோடு' என்பது சொல்லெச்சம்.
இதனால், வேள்வித் தீ சிவாக்கினியாதலின் சிறப்புக் கூறப் பட்டது.

எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்
தந்தைதன் முன்னமே சண்முகன் தோன்றலால்
கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலால்
மைந்தன் இவனென்று மாட்டுக்கொள் ளீரே. ***#1003***

சிவபிரானுக்கு இயல்பாகவே ஆறு முகம் இருப்பினும் அவற்றுள் அதோமுகம் தோன்றாதிருக்க அதுவும் கூடி ஆறுமுகம் வெளிப்படையாய்த் தோன்றும்படி முருகன் உமையிடத்து உதியாது சிவபிரானது, முகங்களினின்றே தோன்றினமையாலும், பின்னும் சிவனும், சத்தியுமாகிய தந்தை தாயரது இடையிலே முருகன் குழவியாய் என்றும் நீங்காதிருத்தலாலும் 'மைந்தன் தந்தையின் மறுவடிவமே' என்னும் ஒற்றுமை பற்றி, மேற்கூறிய ஓமாக்கினியை, 'சிவாக்கினி' என்றலேயன்றி, 'குகாக்கினி' எனவும் ஆகமங்கள் கூறுதலின் பொருத்தத்தை உணர்ந்து கொள்ளுங்கள்.

விளக்கவுரை

இஃது 'ஈசானஸ் ஸர்வ வித்யானாம் ஈஸ்வரஸ் ஸர்வ பூதா நாம் *I* பிரஹ்மாதிபதிர் பிரஹ்மணோதிபதிர் பிரஹ்மாசிவோமே அஸ்து சதாசிவோம் *II* ' எனச் சதாசிவனையே 'ஓம்' மொழிப் பொருளாகக் கூறிய வேதம்.
'சுப்ரஹ்மண்யோம்! சுப்ரஹ்மண்யோம்! சுப்ரஹ்மண்யோம்' எனக் கூறுதல் பற்றி ஐயம் நிகழாமைப் பொருட்டு அறுமுகன் ஐம்முக

னின் வேறாகாமை விளக்கப்பட்டது. இதனானே, சிவாக்கினி எல்லாத் தேவர்க்கும் வாயிலாதலே யன்றிச் சிறப்புடைய முருகனுக்கும் உரித் தாதல் கூறப்பட்டதாம்.
வட்டம், இங்கு முகம். 'வட்டமாயும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. ஏகாரம், உமையினின்றும் பிரித்த பிரிநிலை, அதனால், சிவனின் வேறன்மை இனிது விளக்கப்பட்டதாம். 'கந்தனும், சுவாமியும்' என்க. 'சுவாமி' என்பது சிவனுக்கே உரிய பெயராதலை, 'சுவாமி நாதன்' என்னும் முருகனது பெயருள்ளும் காண்க. மாட்டு - பொருத்தம். அஃதாவது, வேத மொழியின் பொருத்தம். திருவுருத் திரத்துள் 'யாதே சிவாதநூ:' எனத் தொடங்கும் மந்திரத்தின் தியான உருவம் அறுமுகனாகச் சொல்லப்படுதலும் இங்கு நினைக்கத்தக்கது. சிவஞான யோகிகள் தமது காஞ்சிப் புராணம் குமரகோட்டப் படலத்துள், மேற்காட்டிய வேத மந்திரங்களை,
'எக்கலைக்கும் பூதங்கள் எவற்றினுக்கும் பிரமனுக்கும்
ஈசன் என்னத்
தக்கமுதல் பரப்பிரமம் சதாசிவன்ஓம் எனவேதாம்
சாற்றும் அல்லால்
முக்கனல்சூழ் வேள்வியிற்சுப் பிரமணியன் ஓமெனவும்
முக்காற் கூறும்
இக்கருத்தை யறியானை எவ்வாறு விடுவிப்ப
தியம்பு மின்னோ'
என மொழி பெயர்த்துக் கூறினார். முருகன் அறுமுகச் சிவனாதலை நாயனார் இரண்டாம் தந்திரத்துள் 'அதோமுக தரிசனம்' என்னும் அதிகாரத்துள்ளும் கூறினார்.
இதனால், 'வேள்வித் தீ சிவாக்கினியே' என்பது பற்றி நிகழ்வதோர் ஐயம் அறுக்கப்பட்டது.

மாட்டிய குண்டத்தி னுள்எழு வேதத்துள்
ஆட்டி கால்ஒன் றிரண்டும் அலர்ந்திடும்
வாட்டிய கையிரண் டொன்று பதைத்தெழ
நாட்டுஞ் சுரர்இவர் நல்லொளி யானே. ***#1004***

அகமும், புறமும் ஒற்றுமைப்படக் காட்டிய குண்டங்களில் எழுகின்ற தீயினுள்ளே, 'காற்று' என்னும் ஒன்று, 'இடைகலை, பிங்கலை' என இரண்டாய் இயங்கும். அவ் இயக்கத் திற்கு உரிய வழி மூன்றில் இரண்டு தடுக்கப்பட, ஒன்றில் மட்டுமே இயங்கச் செய்வோர் மேற்கூறிய ஒளியால் தேவராக மதிக்கப்படுவர்.

விளக்கவுரை

வேத மந்திரத்தின் வடிவாதல் பற்றி வேள்வித் தீயை, 'வேதம்' என்றே

கூறினார். ஆட்டிய - பொருள்களைச் சலிப்பிக் கின்ற. 'ஒன்றே' என்னும் தேற்றேகாரம் தொகுத்தல் பெற்றது. 'இரண்டு மாய்' எனவும், 'கையிரண்டு வாட்டியவாக' எனவும் ஆக்கம் வருவித்துக் கொள்க. கை - பக்கம்; என்றது வழியை. 'ஒன்றில் பதைத்து எழ' என உருபு விரிக்க. 'எழ நாட்டும் இவர் நல்லொளி யானே சுரராவர்' என்க. 'சிவபுத்திரனாய் நிற்கும் அக்கினியையும் யோகியாக்கித் தாமும் யோகராயிருந்து வேட்பார் பெரும் பயன் எய்துவர்' என்றவாறு.

இதனால், அழல் ஓம்புதற்கு ஒரு சிறப்புமுறை கூறப்பட்டது.

நல்லொளி யாக நடந்துல கெங்கும்
கல்லொளி யாகக் கலந்துள் இருந்திடும்
சொல்லொளி யாகத் தொடர்ந்த உயிர்க்கெலாம்
கல்லொளி கண்ணுளு மாகிநின் றானே. ***#1005***

மொழியையே அறிவாகப் பெற்று இயங்கிவரும் மக்களுயிர்க்கெல்லாம் மாணிக்க ஒளிபோல உள்நின்று, கண்மணி போல உதவி வருகின்ற சிவன், இவ்வுலக முழுதிலும் வேள்வித் தீயாக விளங்கியே திருக்கோயிற் படிமங்களில் உள்ளொளியாய்க் கலந்து நிற்கின்றான்.

விளக்கவுரை

மூன்றாம் அடிமுதலாகத் தொடங்கி உரைக்க. 'கல்' இரண்டில் முன்னது அதனாலாகிய படிமம். பின்னது மாணிக்கம். 'ஆகி' என்பதை அதன்முன் உள்ள 'கல்லொளி' என்பதனோடும் கூட்டுக.

இதனால், அழலோம்பல் திருக்கோயிற் சிறப்பிற்கு இன்றி யமையாததாதல் கூறப்பட்டது.

நின்றஇக் குண்ட நிலைஆறு கோணமாய்ப்
பண்டையில் வட்டம் பதைத்தெழும் ஆறாறுங்
கொண்டஇத் தத்துவம் உள்ளே கலந்தெழ
விண்ணுளும் என்ன விடுக்கலும் ஆமே. ***#1006***

மேற் கூறியவாறு சிவன் திருக்கோயிலில் விளங்கி நிற்றற்கு உரியது, சிறப்பாக அறுகோணக் குண்டமே. அவற்றோடு முன்னே சொன்ன பிறவும் இருத்தல் சிறப்பே இதனுள், விளங்கு கின்ற சிவாக்கினியையும், தம்மையும் முன்போல யோகியராகச் செய்தலேயன்றி, முப்பத்தாறாய தத்துவ ரூபிகளாகவும் செய்தால், எவ் வுலகத்தில் உள்ளார்க்கும், எப்பொருளையும் அவன் வாயிலாகக் கொடுத்தல் கூடும்.

விளக்கவுரை

'குண்டநிலை ஆறுகோணமாக, வட்டமும் பதைத் தெழும்' என முடிக்க. 'கொண்ட தத்துவம் ஆறாறும்' என மாறிக் கூட்டுக. 'உள்ளே' எனப் பொதுப்படக் கூறியதனால், இருவருள்ளும் கொள்க. 'வட்டமும்,

என்னவும்' என்னும் உம்மைகள் தொகுத்தல் ஆயின. 'எடுக்கலுமாமே' என்பது பாடமாகாமை அறிக. இதனுள் ளும் முதலடி இன எதுகையாய் நின்றது.
இதனால், அழலோம்புதற்கண் உள்ள மற்றொரு சிறப்பு முறை கூறப்பபட்டது.

எடுக்கின்ற பாதங்கள் மூன்ற(து) எழுத்தைக்
கடுத்த முகம் இரண் டாறுகண் ணாகப்
படித்தெண்ணும் நாஏழு கொம்பொரு நாலு
அடுத்தெழு கையான தந்தமி லாற்கே. *#1007*

குண்டத்தில் தீயாய் விளங்கும் சிவனுக்கு, (சிவாக்கினிக்கு) நடக்கின்ற பாதங்கள் மூன்று; 'ஐ' என்னும் எழுத்தின் வடிவை ஒத்த முகம் இரண்டு; அம்முகங்களில் உள்ள கண்கள் ஆறு; நாக்கு ஏழு; தலையிரண்டிலும் கொம்புகள் நான்கு; கை ஏழு; இவ்வாறு அமைந்துள்ளன.

விளக்கவுரை

'இவ்வாறு ஆகமங்களுட் சொல்லப் பட்டது' என்பதாம். மூன்றது - மூன்று என்னும் எண்ணினையுடையது. படித்து - ஒரு படித்தாக. 'அடுத்து' என்றது, 'மற்று' என்னும் பொருளது. 'ஆனது' என்பதனை எல்லாவற்றோடும் கூட்டி, ஏற்ற பெற்றியால் முடிக்க. 'எழுகண்ணானது' என்பது பாடம் ஆகாமை அறிக.
இதனால், சிவாக்கினியது உருவம் கூறப்பட்டது.

அந்தமி லானுக் ககலிடந் தானில்லை
அந்தமி லானை அளப்பவர் தாமில்லை
அந்தமி லானுக் கடுத்தசொல் தானில்லை
அந்தமி லானை அறிந்துகொள் பத்தே. *#1008*

அழிவில்லாத சிவாக்கினியைத் தன்னுள் வியாப் பியமாகக் கொள்வதோர் இடமில்லை. (அவனே எல்லாவற்றிலும் வியா பகன்.) அவனுக்குத் தோற்றமும், முடிவுமாகிய கால எல்லையும் இல்லை. (என்றும் உள்ளவன்.) அவனது இயல்பை முற்றக் கூறச் சொல்லில்லை. ஆகவே, அவனைத் திருவைந்தெழுந்துள் யகர வாச்சியமாகிய ஆன்மாவினுள்ளே காண்பதே அறிவுடைமையாம்.

விளக்கவுரை

'சிவாக்கினியாவான் சிவனே' என்பதனை இவ்வாற்றால் உணர்த்தினார். 'பத்தின் கண்' என்னும் ஏழாவது இறுதிக்கண் தொக்கது. இதனால், 'சிவாக்கினியாவான் சிவனே' என்பது கூறி, அதன் சிறப்புணர்த்தப்பட்டது, இதனானே, சிவன் அவ்வக்கினியாய் யாண்டும் நின்று அருள்புரிதலும் பெறப்பட்டது படவே, 'பொங்கழல் உருவன்'1

என்ற திருஞானசம்பந்தர் திரு மொழி, - 'அழல்போலும் உருவத்தை உடையவன்' என உவமத் தொகையாயும், 'அழலை உருவாக உடையவன்' என இரண்டாம் வேற்றுமைத் தொகையாயும் நிற்றலேயன்றி, 'அழலாகிய உருவத்தை உடையவன்' எனப் பண்புத்தொகையாயும் நின்று பொருள்படுதல் கொள்ளப்படும். உவமத் தொகையை நிறமும், வடிவும் பற்றிக் கொள்க. வடிவு இலிங்கத் திருமேனி.

பத்திட்டங் கெட்டிட்டு ஆறிட்டு நாலிட்டு
மட்டிட்ட குண்டம் மலர்ந்தெழு தாமரை
கட்டிட்டு நின்று கலந்தமெய் ஆகமும்
பட்டிட்டு நின்றது பார்ப்பதி பாலே. *#1009*

பத்தும், எட்டும், ஆறும், நான்குமாகிய கோணங்களால் வரையறுக்கப்பட்ட குண்டமாகிய பொய்கையில் வளர்ந்து மலர்கின்ற தீயாகிய தாமரை மலரில் அடங்கிக் கலந்து நிற்கின்ற முப்பத்தாறு தத்துவங்களும், அவற்றின் காரியமாகிய உடம்பும் சத்தியிடமே அடங்கிநிற்பனவாம்.

விளக்கவுரை

நவ குண்டங்களுள் சிறப்புடையவற்றை எடுத்துக் கூறியவாறு. தீயைத் தாமரையாக உருவகித்தது, அகத்தும், புறத்தும் தத்துவங்களைச் சிவனுக்குக் கமலாசனமாகக் கற்பிக்கும் முறையோடு மாட்டேற்றுதற்கு. ஆசனமாய் அடங்கும் தத்துவங்கள் யாவும் மூர்த்தியாகிய சத்திக்குக் கீழே அடங்கிவிடுதல் பற்றி, 'மெய்யும், ஆகமும் பார்ப்பதிபாலே பட்டிட்டுநின்றது' என்றார். மெய் - தத்துவம்; இதனிடத்து எண்ணும்மை தொகுத்தல் பெற்றது. இதனுள்ளும் முதலடி இன எதுகையாய் நின்றது. இதனால், மேல் *(1012)* 'ஆறாறும் கொண்ட இத்தத்துவம்' எனக் குறிக்கப்பட்ட தத்துவங்கள் அகத்தொளி, புறத்தொளிகளில் கலந்து நிற்கச் செய்யுமாறு கூறப்பட்டது.

பார்ப்பதி பாகன் பரந்தகை நாலஞ்சு
காற்பதி பத்து முகம்பத்துக் கண்களும்
பூப்பதி பாதம் இரண்டு சுடர்முடி
நாற்பது சோத்திர நல்லிருப் பத்தஞ்சே. *#1010*

மேற் கூறிய கமலாசனத்தில் எழுந்தருளியிருப்பவ ராகிய, மனோன்மனி மணாளராகிய சதாசிவ மூர்த்திக்கு முகம் ஐந்தாக லின், உச்சி முகம் நீங்க ஏனைய நாற்றிசையில் உள்ள நான்கு முகங் கட்கும் முகம் ஒன்றிற்கு நான்காகக் கைகள் இருபதும், எல்லா முகங் கட்குமாக வாய் ஐந்தும், கண்கள் ஐம்மூன்று பதினைந்தும், காதுகள் பத்துமாய் உள்ளன.

விளக்கவுரை

'கால் பத்துப் பத்து (இருபதில் காற்பங்கு) முகம்' எனவும், 'கால் பதி - காற்பங்கு குறைந்த - பத்துப் பத்து (இருபது) கண்கள்' எனவும் கொள்க. பூப்பதி பாதம் - கமலாசனத்தில் பொருந்தி யுள்ள திருவடி' 'நாற்பத்து' என்பது முதல் நீண்டது, 'இருப்பு' என்னும் குற்றுகர ஈற்றுச் சொல், அத்துச் சாரியை பெற்றது. 'சுடர் முடி பத்துச் சோத்திரம் இருப்பத்து அஞ்சே' என இயைந்து நிற்கும். இதனை, முதற் கண் எடுத்துக் கொண்டு உரைக்க. இங்ஙனங் கூறவே, மேல், 'எடுக் கின்ற பாதங்கள்' என்னும் மந்திரத்துட் கூறியாங்குச் சிவாக்கினியை வேறு வடிவில் தியானித்தலே யன்றிச் சதாசிவ மூர்த்தியாகவே தியானித்தலும் முறை என்பது பெறப்பட்டது. இஃது இன எதுகை.

அஞ்சிட்ட கோலம் அளப்பன ஐயைந்தும்
மஞ்சிட்ட குண்டம் மலர்ந்தங் கிருத்தலால்
பஞ்சிட்ட சோதி பரந்த பரஞ்சுடர்
கொஞ்சிட்ட வன்னியைக் கூடுதல் முத்தியே. ***#1011***

ஐந்து முகங்களால் ஐந்து வேறுபட்ட நிலைகள் போலக் காணப்படுகின்ற சதாசிவரால் அளவிட்டறிந்து ஆளப்படும் மகேசுவரரது நிலைகள் இருபத்தைந்தும் புகை பொருந்திய ஓம குண்டத்தில் பொருத்தி விளங்குதலால், சதாசிவர் முதல் ஐவராக விரிந்து நிற்கின்ற சிவன் மகிழ்ந்து தோன்றுகின்ற ஓமாக்கினியை நல்ல வகையில் ஓம்பி வாழ்தலே முத்தி நிலையாகும்.

விளக்கவுரை

மஞ்சு - மேகம்; என்றது புகையை. 'மஞ்சம்' என்பது கடைக் குறைந்து நின்றது. 'சிவபிரான் அவ்வப்பொழுது அடியவர்க்கு அருளக் கொண்ட பழைய உருவத் திருமேனிகள் இருபத்தைந்து' என ஒரு வரம்பு செய்யப்பட்டுள்ளன. அவையாவன:- *1.* விக்கினப் பிரசாதர், *(*விநாயகரை அளித்தவர் - கஜமுகானுக்கிரகர்*) 2.* பிரமசிரச் சேதர், *(*நகமுக நிக்கிரகர்*) 3.* பிட்சாடனர், *4.* வீரபத்திரர், *5.*கஜசம்மாரர், *(*யானையுரித்த பெருமான்*) 6.* சிராதர், *(*வேடர் -அருச்சுனனுக்கு அருள்புரிந்தவர்*) 7.* காளகண்டர், *(*விஷாப ஹரணர் - நஞ்சுண்ட பெருமான்*) 8.* கங்காளர், *(*கங்காளம் - பரம விட்டுணுக் களது எலும்புக்கூடு*) 9.* சக்கரப் பிரதானர், *(*திருமாலுக்குச் சக்கரம் அருளியவர்*) 10.* சண்டேசானுக்கிரகர், *11.* சுகாசனர், *(*யோக மூர்த்தி*) 12.* ஏகபாதர், *(*உலகைத் தோற்றுவித்தவர்*) 13.* நடராஜர், *14.* சலந்தராரி *(*சலந்தரனை அழித்தவர்*) 15.* திரிபுராரி, *(*திரிபுரத்தை எரித்தவர்*.) 16.* காலாரி, *(*காலனை உதைத்தவர்*) 17.* காமாரி, *(*மன்மதனை எரித்தவர்*) 18.*

இலிங்கோற்பவர், *19.* சந்திரசேகரர், *(*பிறைமுடிப் பெருமான்*) 20.* சோமாஸ்கந்தர், *21.* இடபாரூடர், *22.* உமாமகேசர், *23.* கல்யாணசுந்தரர், *24.* அர்த்தநாரீசுரர், *25.* அரியர்த்தர் *(*திருமாலை இடப்பாதியில் உடையவர்*)*என்னும் மூர்த்தங்களாம்.

இவை சிறிது மாறுபடவும் கூறப்படும். அவ்விடத்தில் தட்சிணாமூர்த்தி, யக்ஞேஸ்வரர், உக்கிரர், கங்காதரர், ஆபற்சகாயர், மச்ச கூர்மவராக நரசிங்க சங்காரர்கள், அந்தகாரி *(*அந்தகாசுரனை அழித்தவர்*)* என்னும் மூர்த்தங்கள் சொல்லப் படும். வீரபத்திரரையும், பைரவரையும் மாகேசுர மூர்த்தங்களுள் வையாது சிவகுமாரர்களாகக் கொள்ளுதலே மரபு.-

ப்ரதமம் ஸோம தாரீச த்விதீய முமயாசகம் *I*
த்ருதீயம்து வ்ருஷாரூடம் சதுர்த்தம் ந்ருத்தரூபகம் *II*
வைவாஹ்யம்பஞ்சமம் வித்யாது ஷஷ்டம்பிக்ஷாடனம்பவேது *I*
காமாரிம் ஸப்தமம் வித்யாது காலகால மதாஷ்டமம் *II*
நவமம் த்ரிபுராரிஸ்யாது ஜலந்தர வதோதச *I*
ஏகாதசம் தஜாரிஸ்யாது த்வாதசம் வீரபத்ரகம் *II*
த்ரயோதசம் ஹரேரர்த்தம் அர்த்தநாரீ சதுர்தசம் *I*
பஞ்சாதசம் கிராதம்ஸ்யாது கங்காளம் ஷோடசம்பவேது *II*
சண்டேசானுக்கிரஹம்சைவ ததஸ்ஸப்த தசோபவேது *I*
விஷாபஹரணஞ்சைவ த்வஷ்டாதச மிதிஸ்ம்ருதம் *II*
சக்ரதானஸ்வரூபந்து ஏகோநவிம்சமீரிதம் *I*
விக்னப்ரஸாதம் விம்சஸ்யாது ஸோமாஸ்கந்தமத*:*பரம் *II*
த்வாவிம்ஸதேக பாதந்து த்ரயோவிம்சத்ஸுகாஸநம் *I*
தக்ஷிணாமூர்த்திரூபந்து சதுர்விம்சத்ப்ரகீர்த்திதம் *II*
லிங்கோத்பவஸ்வரூபந்து பஞ்சவிம்சத்ப்ரகீர்த்திதம் *I*
ஏதந்மஹேசரூபாணாம் மூர்த்தி பேதா*:* ப்ரகீர்த்திதா*: II*

இதனால்,'ஓமாக்கினியே அனைத்துச் சிவமூர்த்திகளாயும் நிற்கும்' என்பது கூறப்பட்டது.

முத்திநற் சோதி முழுச்சுட ராயவன்
கற்றற்று நின்றார் கருத்துள் இருந்திடும்
பற்றற்று நாடிப் பரந்தொளி யூடுபோய்ச்
செற்றற் றிருந்தவர் சேர்ந்திருந் தாரே. ***#1012***

வீடு பேற்றைத் தருகின்ற ஞானவடிவினனும், வேள்வியில் நிறைவுடைய தீயாய் நிற்பவனுமாகிய சிவன், வேதங்களைக் கற்று அவ்வொழுக்க நெறியில் குற்றமின்றி நிற்பவரது உள்ளத்திலே விளங்கி நிற்பான். உலகப் பற்றுக்களைவிடுத்து அவனை யே நாடி, படர்ந்து எரிகின்ற அத்தீயிடமாக அவனை அணுகி வெகுளி முதலிய குற்றம் நீங்கி நின்றவர் அவனைப் பெற்று நின்றார்கள்.

விளக்கவுரை

வேத ஒழுக்க நெறியாவது முத்தீ வேட்டல். 'செற்றம்' என்பது குறைந்து நின்றது, வெகுளி முதலிய குற்றமாவன, வெகுளி, காமம், மயக்கம் என்பன. இக்குற்றங்கள் நீங்கினோர் உலக நலத்தின் பொருட்டே வேள்வி வேட்பர்; அவ்விடத்தில் அவர் சிவனைத் தாம் அன்பால் வழிபடுவர்; அவ்வழிபாடு ஞானம் வாயிலாக வீட்டைத் தரும் என்க. இதனுள்ளும் முதலடி இன எதுகை பெற்றது.

இதனால், வேள்வி வீடும் பயக்குமாறு கூறப்பட்டது.

சேர்ந்த கலைகளும் சேரும்இக் குண்டமும்
ஆர்ந்த திசைகளும் அங்கே அமர்ந்திடும்
பாய்ந்தஐம் பூதமும் பார்க்கின்ற வன்னியைக்
காய்ந்தவர் என்றும் கலந்தவர் தாமே. ***#1013***

எல்லாவற்றையும் வியாபித்து நிற்கின்ற நிவிர்த்தி யாதி பஞ்சகலைகளும், ஓமத் தீயும் ஒன்றாய் இயைந்து நிற்கும், அதனால், எல்லா உலகங்களும் அத்தீயினிடத்து அடங்கி நிற்பன வாம். ஆகையால், அந்தத் தீயை நிவிர்த்திக்குமேல் பிரதிட்டையில் சிறிது எல்லையளவிலே நிற்கின்ற ஐம்பூதங்களின் ஒன்றாகிய தீயாக எண்ணும் எண்ணத்தை வெறுத்தவரே மேற் சொல்லியவாறு சிவ னோடு என்றும் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையைப் பெற்றவராவர்.

விளக்கவுரை

வேள்வித் தீயைப் பூதாக்கினியாக நினைப்பவர் வைதி கரும், அந்நினைப்பை விடுத்துச் சிவாக்கினியாக நினைப்பவர் சைவரும் ஆவர் என்க. 'கலை அஞ்சும் இக்குண்டமும் சேரும் எனக் கூட்டுக. இதனுள்ளும் ஈரடி எதுகைவந்தது.

இதனால், 'வீடுபயக்கும் வேள்வி சிவவேள்வியே' என்பது உணர்த்தப்பட்டது.

மெய்கண்ட மாம்விரி நீர்உல கேழையும்
உய்கண்டஞ் செய்த ஒருவனைச் சேருமின்
செய்கண்ட ஞானம் திருந்திய தேவர்கள்
பொய்கண்ட மில்லாப் பொருள்கலந் தாரே. ***#1014***

கடல் சூழ்ந்த நிலவுலகின் ஏழு பொழில்களையும் (தீவுகளையும்) உயிர் உய்தி பெறுதற்கு உரிய உலகமாக அமைத்த ஒருவனாகிய சிவனை அவ்விடங்களில் பிறந்துள்ள நீங்கள் வழிபாட்டினால் அடையுங்கள், அவனால் படைக்கப்பட்ட அவ் வுலகம் முழுதையும் அறியும் அறிவைப் பெற்ற தேவர்களும் அதன்கண் சென்று அவனை வழிபட்டே மெய்ப் பொருளைப் பெற்றார்கள் ஆதலால்.

விளக்கவுரை

'மெய்க்கண்டம், பொய்க்கண்டம்' என்பவற்றின் ஒற்று எதுகை நோக்கித் தொகுத்தலாயிற்று. 'விரிநீர் உலகு ஏழையும் மெய்க்கண்டமாகவும், உய்கண்டமாகவும் செய்த ஒருவன்' என்க. 'கண்டம்' நான்கில் இறுதி ஒன்றும் தடை; அஃதாவது பாசம். ஏனைய, உலகம். 'மெய்யுணர்வு பெறுதற்கு ஏற்ற இடம் நிலவுலகமே' என்பது சிவநூல் துணிபு. அதனுள்ளும், பரத கண்டமும், அதனுள்ளும் குமரிக் கண்டமும் சிறந்தன என அவை கூறும் என்க. 'இந்தப் பூமி சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு' எனவும், *1* 'வானிடத் தவரும் மண்மேல் வந்து அரன்றனை அற்சிப்பர்' *2* எனவும் போந்தன காண்க.

இதனால், வழிபாட்டுலகமாகிய இவ்வுலகத்தின் சிறப்பு உணர்த்தும் முகத்தால் இதன்கண் செயற்பாலாகிய முத்தீ வழிபாட்டின் சிறப்பு உணர்த்தப்பட்டது.

கலந்திரு பாதம் இருகர மாகும்
அலர்ந்திரு குண்டம் அகாரத்தோர் மூக்கு
மலர்ந்தெழு செம்முகம் மற்றைக்கண் நெற்றி
உலர்ந்திருங் குஞ்சி அங் குத்தம னார்க்கே. ***#1015***

சிவாக்கினியது உருவத்தை மேல் 'எடுக்கின்ற பாதம்' *(1013)* என்னும் மந்திரத்திலும், 'பார்ப்பதி பாகன்' *(1016)* என்ற மந்திரத்திலும் கூறியவாறன்றி வேள்வி வேட்பார் தம் வடிவு போன்ற வடிவமாகவும் தியானிக்கலாம். அவ்விடத்திடல் நெற்றிக்கண் ஒன்று மட்டுமே சிறப்புருவமாகக் கொள்ளத்தக்கது.

விளக்கவுரை

'கலந்த, அலர்ந்த, உலர்ந்த' என்பவற்றின் அகரங்கள் தொகுத்தலாயின. கலத்தல் - இணைதல்; அஃதாவது ஒன்றுபோலவே மற்றொன்றும் இருத்தல். 'குண்டலம்' என்பது இடைக்குறைந்து நின்றது. 'அகாரம்' என்றது நாதத்தை. அஃது அதனைக்கேட்கும் செவியை உணர்த்திற்று, 'அகாரத்து அலர்ந்த இரு குண்டலம்' என்க. 'உலர்ந்த' என்றது, 'விரிக்கப்பட்டும், சிவந்தும் உள்ள' என்றவாறு. எனவே, 'சடை' என்றதாயிற்று. பாதம் முதலியவற்றில் 'உள்ளன, உள்ளது' என்னும் பயனிலைகள் எஞ்சி நின்றன.

இதனால், சிவாக்கினியின் மற்றொரு வகைத் தியான உருவம் கூறப்பட்டது.

உத்தமன் சோதி உளன்ஒரு பாலனாய்
மத்திம னாகி மலர்ந்தங் கிருந்திடும்
பச்சிம திக்கும் பரந்து குழிந்தன

சத்திமா னாகத் தழைத்த கொடியே. *#1016*
சிவபெருமான் வாகீசுவரிக்கு நாயகனாய் இன் புற்று மகிழ்ந்ததனால் உண்டாகிய ஓமத்தீ குண்டத்தின் கீழ்ப்பாதியோடு நில்லாமல் மேற்பாதியிலும் பரத்தலால், அங்கு உள்ள இடங்களும் வேறுபடும். அந்நிலையில் அச்சிவனே அந்தத் தீயுருவில் முதலிலே குழவிப் பருவத்தனாயும், பின்பு காளைப் பருவத்தனாயும் இருப்பான்.

விளக்கவுரை

இதன்கண் உள்ள அடிகளை 'ஈறு, ஈற்றயல், முதல், இரண்டு' என்னும் முறையிற் கொண்டு உரைக்க. 'ஒரு சோதிப் பாலனாய் உளன்; சோதி மத்திமனாய் இருந்திடும்' என்க. வடக்கில் தோற்றுவிக்கப்பட்ட தீ வலமாக எழுந்து மேற்கில் பரந்து ஓங்கும் என்பார் 'பச்சிம திக்கும்' என்றார். இதனால், 'வடக்கில் பாலனாய்த் தோன்றி வளர்ந்த சிவாக்கினி மேற்கில் காளையாய் நிற்பன்' என்பது பெறப்பட்டது. 'சத்திமானாக' என்பதற்கு எழுவாய் 'உத்தமன்' என்பதேயாம். தழைத்த கொடி - உண்டாய கொடி; கொடி, தீயின் சுடர். சிவவேள்வியில் தீயை வாகீசுவர வாகீசுவரியர்தம் புதல்வனாகத் தோற்றுவிக்கும் முறை சிவாகமங்களுட் கூறப்படுதல் மேலும் *(1008)* குறிப்பிடப்பட்டது. இதனுள் இன எதுகை வந்தது.
இதனால், சிவசத்திகளது கூறாகிய ஓமாக்கினியது நிலைகள் கூறப்பட்டன.

கொடிஆறு சென்று குலாவிய குண்டம்
அடிஇரு கோணமாய் அந்தமும் ஒக்கும்
படிஏ ழுலகும் பரந்த சுடரை
மடியாது கண்டவர் மாதன மாமே. *#1017*

மேற்கூறியவாறு நிற்கும் சிவாக்கினிக்கு இரு முக்கோணங்களை ஒன்றன்மேல் ஒன்றாய் இட்டது போல அமைக்கும் அறுகோண குண்டமே சிறந்தது. அதன் கண் சிவசோதியை அவியாத வாறு கண்டவர்க்குப் பெரிய செல்வம் உண்டாகும்.

விளக்கவுரை

'கொடி' என்பதற்குப் பொருள் மேற்கூறப்பட்டது. 'ஆறு பக்கம் சென்று குலாவிய குண்டம்' என்க. 'இருகோணமாய் அடியும் அந்தமும் *(மேலும்)* ஒக்கும்' எனக் கூட்டுக. 'ஆறு பக்கம்' எனவே, இரண்டும் முக்கோணமாதல் பெறப்பட்டது 'கண்டவர்க்கு' என்னும் உருபு தொகுத்தலாயிற்று. மாதனம் - பெரிய செல்வம். இது அருட் செல்வத்தையும் குறிப்பதாம்.
அறுகோணம் சிறந்த குண்டமாதல், சிவனது முகத்தோடும்,

குணத்தோடும் ஒத்து நிற்றலாலும், உடம்பினுள் ஆதாரங்களும் ஆறாத லாலும் என்க. இதனானே, இஃது ஆறுமுகனுக்கும் மிக ஏற்புடைய தாதல் அறியப்படும். இதன் பயனும் சிறப்பாகப் போகமாதல் கூறப் பட்டமை காண்க.

இதனால், அறுகோண குண்டத்தின் சிறப்பு வலியுறுத்தப் பட்டது.

மாதன மாக வளர்கின்ற வன்னியைச்
சாதனமாகச் சமைந்த குருஎன்றும்
போதன மாகப் பொருந்த உலகாளும்
பாதன மாகப் பிரிந்தது பார்த்தே. ***#1018***

தன்னைக் காண்பவர்க்குப் பெரிய செல்வமாய் வளர்கின்ற ஓமத்தீயைத் தனக்குப் பயன் தரும் சாதனமாகக் கொண்ட ஆசாரியன், எப்பொழுதும் மாணவர்களது சத்திநிபாத வகையைத் தெரிந்து, அதற்கேற்ப அவர்களுக்கு அதனை அறிவித்தலை மேற் கொள்வானாயின், அவன் உலகம் முழுதிற்கும் குருவாய்ப் பலரை ஆட்கொள்ள வல்லவனாவன்.

விளக்கவுரை

மூன்றாம் அடியை ஈற்றில் வைத்து உரைக்க. 'போதனம், பாதனம்' என்பன, 'போதித்தல், வீழ்தல்' எனத் தொழிற் பெயராய் நின்றன. நான்காம் அடியில், 'ஆக' 'உண்டாக' என்னும் பொருட்டு.

இதனால், அழலோம்பல் ஆசாரியர்கட்குச் சிறப்புக் கடனாதல் கூறப்பட்டது.

பார்த்திடம் எங்கும் பரந்தெழு சோதியை
ஆத்தம தாகவே ஆய்ந்தறி வார்இல்லை
காத்துட லுள்ளே கருதி யிருந்தவர்
மூத்துடல் கோடி யுகங்கண்ட வாறே. ***#1019***

உருவத்தால் ஓம குண்டத்தளவிலே நின்ற தாயினும், ஆற்றலால் எவ்விடத்தும் நிறைந்து நிற்கும் ஓமாக்கினியைத் தமக்கு எல்லா நலனையுந் தரும் அருந்துணையாக ஆராய்ந்தறிபவர் ஒருவரும் இல்லை, அவ்வாறு அறிந்து அதனை முறைப்படி ஓம்பி, மனத்திலும் தியானிப்பவர் உடல், ஆண்டுகள் பல சென்றாலும் அழிவின்றிப் பல யுகங்களைக் கண்டு கொண்டிருந்தவாறு பல இடங்களில் கேட்கப் படுகின்றது.

விளக்கவுரை

'பார்த்த' என்பதன் அகரம் தொகுத்தலாயிற்று. 'கேட்கப் படுகின்றது' என்பது சொல்லெச்சம்.

இதனால், வேள்வி வேட்டல் காய சித்தியையும் தருதல் கூறப்பட்டது.

உகங்கண்ட ஒன்பது குண்டமும் ஒக்க

அகங்கண்ட யோகிஉள் நாடி எழுப்பும்
பகங்கண்டு கொண்டஅப் பாய்கரு ஒப்பச்
சகங்கண்டு கொண்டது சாதன மாமே. *#1020*
அக வழிபாடாகிய யோகத்தை நன்கறிந்த யோகி, மேற்கூறியவாறு பல யுகங்கள் அழியாதிருத்தற்கு ஏதுவாகிய நவ குண்ட வேள்வியையும் ஒருங்கே தன் உடலகத்துள் முறையறிந்து வளர்ப்பான். தாய் வயிற்றினுள் தங்கிப் பிறக்கின்ற கருவிற்கு அவளது குறிபோல எல்லாப் பயன்களது விளைவிற்கும் இன்றியமையாச் சாதனமாக உலகம் கண்டது வேள்வியே.

விளக்கவுரை

'அகங் கண்ட யோகி', என்பதை முதலிற் கொண்டு உரைக்க. 'பகத்தைச் சாதனமாகக் கண்டு கொண்ட கரு' என்க. இவ்வாறு உவமை கூரியதனால். காய சித்தி முதலிய சிவ பயன்களுக்கு யோனி குண்டம் சிறந்ததாதல் பெறுதும்.
இதனால், யோகிகள் வேள்வியை அகத்து ஓம்பியே பயன் பெறுதல் கூறப்பட்டது.

சாதனை நாலு தழல் மூன்று வில்வயம்
வேதனை வட்டம் விளைவாறு பூநிலை
போதனை போ*(து)* அஞ்சு பொற்கய வாரணம்
நாதனை நாடும் நவகோடி தானே. *#1021*
பயன்களில் சரியை முதலிய நான்கிற்கும் நாற்கோண குண்டமும், வேள்விக் கடன் முற்றுதற்கு முக்கோண குண்டமும், வெற்றிக்கு வில்லை ஒத்த பிறைக் குண்டமும், துன்ப நீக்கத்திற்கு விருத்த குண்டமும், எல்லாப் பயன்கட்கும் அறுகோண குண்டமும், நிலைபேற்றிற்கு அட்டகோண குண்டமும், ஆசிரியத் தன்மைக்குப் பதும குண்டமும், அழகிய கையையுடைய யானைமேற் செல்லும் அரசச் செல்வத்திற்குப் பஞ்சகோண குண்டமும் சிறப்பாக உரியனவாம். நவகுண்டங்களை இவ்வாறு பெரும்பான்மை பகுத்துணர்ந்து கொள்க.

விளக்கவுரை

யோனி குண்டம் மேலே குறிக்கப்பட்டமையால், அதனை உளப்படுத்து இங்கு, 'நவ குண்டம்' என்றார். சாதனை முதலிய எல்லாவற்றிலும் நான்கனுருபு விரித்துக் கொள்க. 'வேதனைக்கு' என்பதனை, 'துன்பத்திற்கியாரே துணையாவார்' *1* என்பது போலக் கொள்க. 'கைய' என்பது போலியாயிற்று. பூ - பூமி; என்றது அதன் திசைகளை கோடி - கோடுதலை உடையது; குண்டம்.
இதனால், நவ குண்டங்கட்குப் பெரும்பான்மை உரிய பயன்

கூறப்பட்டது.

6.5.சத்திபேதம்

மாமாயை மாயை வயிந்தவம் வைகரி
ஓமாயை நாரணி ஓராறு கோடியில்
தாமான மந்திரம் சத்திதன் மூர்த்திகள்
ஆமாய் அலவாம் திரிபுரை ஆங்கே. *#1022*

மாமாயை முதலாகச் சொல்லப்படும் பொருள்கள் யாவும் தானேயாயும், அல்லவாயும் சிவ சத்தி நிற்பாள்.

விளக்கவுரை

மா மாயை - சுத்த மாயை. இதுவே வியாபகமாய்ப் பெரிதாதலின் இப்பெயர் பெற்றது. 'மாயை' என வாளா கூறும் வழியெல்லாம் அஃது அசுத்த மாயையையே குறிக்கும். வயிந்தவம் - விந்துவின் காரியம்; சுத்ததத்துவங்கள். சுத்த மாயைக்கு 'விந்து' என்பது பெயராகலின், அதன் காரியங்கள் 'வைந்தவம்' எனப்படும். அசுத்த மாயையின் காரியங்கள் 'மாயேயம்' என்றும், பிரகிருதியின் காரியங்கள் 'பிராகிருதம்' என்றும் சொல்லப்படும் என்பதும் இங்கு உணர்ந்து கொள்க. வைகரி - வைகரி, முதலிய நால்வகை வாக்குகள். அவை, 'வைகரி, மத்திமை, பைசந்தி, சூக்குமை' என்பன. சூக்குமை, 'பரை' எனவும்படும். இது காரணநிலையாய், நுண்ணிதாய் நிற்பது. 'நாதம்' எனப்படுவதும் இதுவே. இதன் விருத்தி (வளர்ச்சி) வகைகளே பைசந்தி முதலிய ஏனைய மூன்றும். ஓ மாயை - அசுத்த மாயை யினின்றும் தோன்றிய, ஆன்ம தத்துவங்கள் தோன்றுதற்கு முதலாகிய பிரகிருதி மாயை. 'மூலப் பிரகிருதி' எனப்படுவது இதுவே. ஓவுதல் - நீங்குதல்; வெளிப்படுதல். உள்ளொளி - குண்டலி சத்தி. மந்திரங் களின் கோடி (முடிவு) ஏழனுள், 'ஹூம், பட்' என்னும் இரண்டும் சிலவிடத்து ஒன்றாக எண்ணப்படும். அம்முறை பற்றி இங்கு 'ஓராறு கோடியில் தாமான மந்திரம்' என்றார். ஏழு கோடிகள் முன் தந்திரத்தில் கூறப்பட்டன. சத்தி தன் மூர்த்திகள் - சத்தியின் வேறுபாடுகள்தாம் பல. அவை, 'ஞானசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி' என்பனவும், 'ஆரணி, ஜெனனி, உரோதயித்திரி' என்பனவும், 'வாமை, ஜேஷ்டை, இரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப் பிரமதனி, சருவபூததமணி, மனோன்மனி,' எனவும், 'சத்தி, விந்து, மனோனமனி, மகேசுவரி, உமை, திரு, வாணி' எனவும், மற்றும் பலவுமாம். 'ஆம் ஆய்' ' என்பதில், 'ஆம்' அசை நிலை. 'அன்று, அல்ல' என்பன வற்றைப் பொதுவினை போலக்கூறுதல் சிலவிடத்துக் காணப்படு கின்றது. ஆங்கு - சிவன் நினைத்தவிடத்து.

இதனால், 'சிவனது சத்தியே பிற பொருள்களில் கலப்பினால் ஒன்றாயும், பொருள் தன்மையால் வேறாயும் நிற்கும்' என்பது கூறப்பட்டது.

'பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்
எண்ணும் சுவையும்போல் எங்குமாம் - அண்ணல்தாள் அத்துவித மாதல்'
1
என்ற சிவஞான போதத்தைக் காண்க. இதனுள் 'தான்' என்றது சத்தியாதல் அறிக. ஒன்றாதலும் வேறாதலும் கூறவே உடனாதலும் பெறப்பட்டது.
'பண்ணில் ஓசை பழத்தினில் இன்சுவை' *2*
என்பது அப்பர் திருமொழி. இங்ஙனமாகவே சிவனுக்குப் பிற பொருள்களோடு தொடர்பு உண்டாதல் அவனது சத்திவழியேயாதல் அறியப்படும்.
இதனால், 'எல்லாப் பொருளும் சத்தியே' என அவளது சிறப்புக் கூறப்பட்டது.

திரிபுரை சுந்தரி அந்தரி சிந் தூரப்
பரிபுரை நாரணி ஆம்பல வன்னத்தி
இருள்புரை ஈசி மனோன்மனி என்ன
வருபல வாய்நிற்கும் மாமாது தானே. **#1023**

மகாதேவியாகிய சிவசத்தி, திரிபுரை முதலிய பல காரணப் பெயர்களைப் பெற்று, அவ்வகையிலெல்லாம் விளங்குவாள்.

விளக்கவுரை

'திரிபுரை' என்பதன் காரணம் இவ்வதிகாரத் தொடக்கத்தில் கூறப்பட்டது. சுந்தரி - மிக்க அழகுடையவள். அந்தரி - ஆகாயத்தில் விளங்குபவள். சிந்துரம் - திலகம். இது நீட்டல் பெற்றது. 'சிந்துரத்தை அணிந்த பரிபுரை' என்க. 'சிந்துரை' என வேறோதற்பாலதனைச் செய்யுள் நோக்கித் தொகுத்தோதினார். பரிபுரை - சிலம்பணிந்தவள். நாரணி - 'நாரணன் தங்கை' எனப் படுபவள். நாரணன் சிவனுக்குப் புருட ரூப சத்தியாதல் பற்றிப் பெண்ணாகச் சொல்லப்படுகின்ற இவள், 'அவனுக்குத் தங்கை' எனப் படுகின்றாள். ஆம் - பொருந்திய, பல வன்னத்தி - பல்வேறு நிற வடிவத்தையும் உடையவள். அந்நிறங்களுள் சிறப்பாக நீல நிறத்தை உடையவளாய் 'ஈசுவரி,மனோன்மனி' என்னும் பெயர்களைப் பெற்று நிற்பாள் என்பது மூன்றாம் அடியின் பொருள். இவ்வாறு வருகின்ற பல்வேறு நிலைகளில் நிற்பாள் என்க.
இதனால், மேலை மந்திரத்து இறுதியிற் கூறப்பட்ட சத்திதன் மூர்த்தி வேறுபாடுகள் பல விரித்துக் கூறப்பட்டன. அதிகாரமும் சத்திபேதம் ஆதல் நினைவு கூரத்தக்கது.

தானே அமைந்தஅம் முப்புரந் தன்னிடைத்
தானான மூவுரு ஓருருத் தன்மையள்
தானான பொன்செம்மை வெண்ணிறத் தாள் கல்வி

தானான போகமும் முத்தியும் நல்குமே. *#1024*
சத்தி, தனது வியாபகத்தைப் பெற்றுள்ள, 'உருத்திர லோகம், விட்டுணுலோகம், பிரமலோகம்' என்னும் மூன்று உலகங்களில் தலைமை பூண்டு நிற்கின்ற உருத்திரன், விட்டுணு, பிரமன் என்னும் மூவரையும் தோற்றி ஒடுக்கும் நான்காவது பொருளாய் நிற்பாள். அவள் ஓருத்தியே பொன்னிறம் உடைய சத்தியாய் நின்று முத்தியையும், செந்நிறம் உடைய திருமகளாய் நின்று செல்வத்தையும், வெண்ணிறம் உடைய கலைமகளாய் நின்று கல்வியையும் தருவாள்.

விளக்கவுரை

'உருத்திரன், மகேசுரன், சதாசிவன்' என்னும் மூவரும் ஒற்றுமை பற்றி, 'சிவன்' என ஒருவராக அடக்கப்பட்டனர். மூவுரு ஓர் உரு - மூவுருவையும் அடக்கி உள்ள ஓர் உரு. எனவே, பிரேரக தத்துவங்களில் பலவாகி நிற்கும் ஆதிசத்தியைக் குறித்ததாயிற்று. சத்தி, 'நீல நிறம் உடையள்' என்பது பற்றி 'நீலி' எனப்படுதலேயன்றி, 'கௌர நிறம் உடையள்' என்பது பற்றி, 'கௌரி' எனவும் படுவளாதலின், இங்கு அவளுக்குப் பொன்னிறம் கூறினார்.
இதனால், ஒருத்தியே மூவராய் முத்தொழில் இயற்றியும், ஐவராய் ஐந்தொழில் இயற்றியும் நிற்கும் தலைவர் அனைவர்க்கும் தலைவியாய் உயிர்கட்குப் போக மோட்சங்களைத் தந்து நிற்றல் கூறப்பட்டது.

நல்குந் திரிபரை நாத நாதாந்தங்கள்
பல்கும் பரவிந்து பார்அண்ட மானவை
நல்கும் பரை அபிராமி அகோசரி
புல்கும் அருளும் அப் போதம்தந் தாளுமே. *#1025*
ஐந்தொழில் முதல்வரைத் தருகின்ற திரிபுரை நாதம், நாதாந்தம், பலவாய் விரியும் பரவிந்து, நிலம், வானம் முதலிய அளவற்ற பொருள்களை ஆக்குவாள். அதனால், அவள் அனை வர்க்கும் மேலானவள்; பலரையும் இன்புறச் செய்பவள்; மன வாக்குகளுக்கு அகப் படாதவள். பக்குவம் வந்த நிலையில் அருட் சத்தியாயும் பதிவாள். பின்பு ஞானத்தைக் கொடுத்துத் தன் திருவடிக்கு ஆளாக்கிக் கொள்வாள்.

விளக்கவுரை

நல்குதல் இரண்டில் முன்னது அருளல்; பின்னது படைத்தல். நாதம் முதலியன, காரியப் பொருள்கள் பலவற்றுள் சிலவற்றை விதந்தவாறு. பரை முதலிய மூன்றும் காரணப்பெயர்களாய் நின்றன. புல்குதல் - பதிதல். 'அருளும்' என்னும் உம்மை சிறப்பு. 'மெய்யுணர்வு' என்றற்கு. 'அப்போதம்' எனச் சிறப்பித்துக் கூறினார். 'போதமும்' என்னும் எண்ணும்மை தொகுத்தலாயிற்று.

இதனால், சத்தி போக மோட்சங்களைத் தருமாறு வகுத்துக் கூறப்பட்டது.

தாளணி நூபுரம் செம்பட்டுத் தான் உடை
வாரணி கொங்கை மலர்க்கன்னல் வாளிவில்
ஏரணி அங்குச பாசம் எழில்முடி
காரணி மாமணிக் குண்டலக் காதிக்கே. *#1026*

திருவடிகளில் சிலம்பு, இடையில் சிவந்த பட்டுடை, மார்பில் கச்சு, நான்கு கைகளிலும் கரும்பு வில், மலர்க்கணை, அங்குசம், பாசம், சென்னியில் நவமணிகளின் அழகு விளங்கும் முடி, காதுகளில் நீல ரத்தினம் மின்னுகின்ற குண்டலம் - இவைகளே திரிபுரைக்கு உள்ள அடையாளங்களாம்.

விளக்கவுரை

'குண்டலக் காதிக்கு' என்றது உடம்பொடு புணர்த்ததாகலின் அதற்கு இவ்வாறு உரைத்தல் கருத்தாயிற்று.
'பனிமலர்ப்பூங் - கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங் [குசமும் கையில்
அணையுந் திரிபுர சுந்தரி யாவதறிந்தனமே' *1*
எனப் பின்வந்த அடியார் ஒருவரும் அம்மைதன் திருவடிவை இங்ஙனமே கூறினார். இவ்வடிவத்தை 'இராசேசுவரி கோலம்' என்பர். முதலடி இனஎதுகையாய் நின்றது.
இதனால், திரிபுரையது ஒருவகைத் தியான உருவம் கூறப்பட்டது.

குண்டலக் காதி கொலைவிற் புருவத்தள்
கொண்ட அரத்த நிறம்மன்னு கோலத்தள்
கண்டிகை ஆரம் கதிர்முடி மாமதிச்
சண்டிகை நாற்றிசை தாங்கிநின் றாளே. *#1027*

குண்டலம் அணிந்த காதினை உடையவள்; கொலை செய்கின்ற வில்லை ஒத்த புருவத்தை உடையவள்; சிவந்த மேனியை உடையவள்; உருத்திராக்க மாலையைப் பூண்டவள்; ஒளிவீசுகின்ற கிரீடத்திலே பிறை அணிந்தவள்; 'சண்டிகை' என்னும் பெயர் உடையவள்; இவள் உலகங்களைத் தீமையினின்றும் நீக்கிக் காத்தருள்கின்றாள்.

விளக்கவுரை

தீயவர்களை அழித்து, நல்லவர்களைக் காப்பாற்று கின்றாள்' என்றபடி.
இவளுக்குச் சிவந்த நிறம் - நெருப்புப் போன்ற காட்சி கூறினமை அறியத் தக்கது. 'முடியில் மதியை உடைய சண்டிகை' என்க.
இதனால், திரிபுரையது மற்றொருவகைத் தியான உருவம் கூறப்பட்டது.

நின்ற திரிபுரை நீளும் புராதனி

குன்றலில் மோகினி மாதிருக் கும்சிகை
நன்றறி கண்டிகை நாற்கால் கரீடிணி
துன்றிய நற்சுத்த தாமரைச் சுத்தையே. *#1028*

நித்தியளாகிய திரிபுரை கால எல்லையைக் கடந்த பழமை உடையவள். மாயை வழியாக உயிர்களை மயக்குபவள்; அழகிய கூந்தலை உடையவள் ; நன்கு விளங்குகின்ற உருத்திராக்க மாலையை அணிந்திருப்பவள்; நான்கு கால்களை உடைய யானையை ஊர்பவள். வெண்டாமரைமேல் வீற்றிருக்கும் வெள்ளைத் திருமேனியை உடையவள்.

விளக்கவுரை

தாமரை, திருமேனி என்பவற்றது நிறத்தோடு ஒப்ப யானையின் நிறத்தையும் வெண்மையென உணர்க. வெண்மை, ஞானத்தின் அடையாளம். 'பின்னர் ஞானத்தை வழங்கும் இவளே முன்னர் மயக்கத்தைச் செய்பவள்' என்பார், 'குன்றலில் மோகினி' என முன்னே கூறினார். மாது - அழகு. கூந்தலை, 'சிகை' என்றது வழு வமைதி. சுத்தமாவது வெண்மை. 'சுத்தை' என்பது பெண்பாற் பெயர். இதனால், திரிபுரையது முதல் தியான உருவம் கூறப்பட்டது.

சுத்தஅம் பாரத் தனத்தி சுகோதையள்
வத்துவ மாய்ஆளும் மாசத்தி மாபரை
அத்தகை யாயும் அணோரணி தானுமாய்
வைத்தஅக் கோலம் மதியவ ளாகுமே. *#1029*

திரிபுரை இன்னும் தூய, அழகிய, திண்ணிய கொங்கைகளை உடையவள்; பேரின்பத் தோற்றத்திலே விளங்கு பவள்; மெய்ப்பொருள்களை உணரும் ஞானமாய் நின்று உயிர்களை ஆட்கொள்கின்ற பேராற்றலை உடையவள். எல்லாச் சத்திகளினும் பெரியளாய் மேலான சத்தி; அப்பொழுதே அணுவினுள் அணுவாய் நிற்கும் நுண்ணியளுமாய் எண்ணப்பட்டு அழகிய நிறைமதி போலும் ஒளியினை உடையவளுமாவாள்.

விளக்கவுரை

ஞானம் நிறைந்து நிற்றலைக் குறிக்க, 'சுத்த, அம், பாரத்தனம்' என்றார். வத்து - பொருள்; மெய்ப்பொருள். அதன் தன்மை, 'வத்துவம்' எனப்பட்டது. வத்துவம் உடையதனை, 'வத்துவம்' என்றார். 'வாஸ்துவம்' என்னும் வழக்குண்மை காண்க. எழுவாய், மேலை மந்திரத்தினின்றும் வந்தது. 'கோலம் மதியவள்' எனப் பண்புப் பெயர் பண்பி வினையொடு முடிந்தது.
இதனால், திரிபுரை தியானத்தில் அவளைப் பற்றி அறியத் தக்க

பெருமைகள் கூறப்பட்டன. தனமும், ஒளியும் உருவவழியாக ஞானத்தை உணர்த்தின.

அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன் றில்லை
அவளன்றி ஊர்புகும் ஆறறி யேனே. *#1030*
[இதன் பொருள் வெளிப்படை.]

விளக்கவுரை

ஐவர், படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்யும் தலைவர். ஊர், முத்தி. சிவ பரத்துவம் உணர்த்திய. 'அவனை ஒழிய அமரரும் இல்லை' என்ற மந்திரத்தினை *(41)* இதனுடன் வைத்து நோக்குக.

இதனாலும், அவளது பெருமை பிற சில கூறப்பட்டன.

அறிவார் பராசத்தி ஆனந்தம் என்பர்
அறிவார் அருவுரு வாம்அவள் என்பர்
அறிவார் கருமம் அவள்இச்சை என்பர்
அறிவார் பரனும் அவளிடத் தானே. *#1031*

திரிபுரையை அனுபவமாக உணர்ந்தவர்கள் அவளை, 'ஆனந்தமாய் இருப்பவள்' என்றும், 'அருவமாயும், உருவ மாயும் விளங்குபவள்' என்றும் 'நிறைந்தஞானம், கிரியை, இச்சை என்னும் வகையினள்' என்றும் கூறுவர். அதனால், அறிவுருவின னாகிய சிவனும் அவள் வழியாகவே தோன்றுவான்.

விளக்கவுரை

அருவமும், உருவமும் கூறவே, அருவுருவம் கொள்ளப்படும். மூன்றாமடி நான்காமடிகளில் 'அறிவார்' என்ற வற்றை, 'அறிவு ஆர்' எனப் பிரித்து. 'ஆர்ந்த அறிவு' முதலியன வாகவும், 'அறிவாய் ஆர்ந்த பரனும்' எனவும் உரைக்க. இரண்டாம் அடியை 'அறிவுரு' எனப்பாடம் ஓதுவாரும் உளர். அவர்க்கு அவள் அருவம் முதலியன ஆதல் கிடையாமை அறிக.

மூன்றாம் அடியிலும் 'அவள்' என்பதை 'இசை' என்பதன் பின் கூட்டுக. 'இடம்' என்றது, 'வழி' என்றவாறு.

இதனாலும், வேறும் சில பெருமையே கூறப்பட்டன.

தான்எங் குளன்அங் குளள்தையல் மாதேவி
ஊன்எங் குளஅங் குளஉயிர் காவலன்
வான்எங் குளதங் குளேவந்தும் அப்பாலாம்
கோன்எங்கும் நின்ற குறிபல பாரே. *#1032*

உடம்புகள் எங்கு உள்ளனவோ அங்கெல்லாம் உள்ள உயிர்களைக் காப்பவனாகிய சிவன், தான் எங்கு இருப்பவனாக

அறியப்படுகின்றானோ அங்கெல்லாம் சத்தியும் உடன் இருக் கின்றாள். அதனால், ஆகாயம் உள்ள இடங்களில் எல்லாம் இருக்கின்ற எல்லாப் பொருள்களிலும் நிறைந்து நின்றும், அப்பொருள்களையும், அவற்றிற்கு இடம் தந்து நிற்கின்ற ஆகாயத்தையும் கடந்து நிற்பவ னாகிய சிவன் எங்கும் விளங்குகின்ற எந்த உருவமும் சத்தி என்றே அறிவாயாக.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதலில் கொண்டு உரைக்க. இரண்டாம் அடி உயிர்கள் உடம்பையின்றி அமையாமையும், மூன்றாம் அடி எப்பொருள்களும் வானத்தையின்றி அமையாமையும் கூறியவாறு. வந்தும் அப்பாலாதற்கு 'அவள்' என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க. குறி, வடிவம்.
இதனால், சிவனது வடிவங்கள் யாவும் சத்தியே யாதல் கூறப்பட்டது.
'தானும் தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்' 1
என்றாற் போலவரும் திருமொழிகளும், தென்முகக் கடவுள் முதலிய கோலங்களும் அம்மையோடு உடனாய உருவமாகக் கூறப்படுதலும், பிறவும் இக்கருத்தே பற்றியனவாதல் அறிக.

பராசத்தி மாசத்தி பல்வகை யாலும்
தராசத்தி யாய்நின்ற தன்மை உணராய்
உராசத்தி ஊழிகள் தோறும் உடனாம்
புராசத்தி புண்ணிய மாகிய போகமே. ***#1033***

'திரிபுரை' என்னும் சத்தியே மேலானவளும், பெரியவளும் ஆவள். அதனால், அவளே பல்வேறு வகையான காப்புச் சத்தியாய் நிற்றலை, மாணவனே, நீ அறிவாயாக. இனி, அக் காப்புத்தான், திரிவுபடுகின்ற ஊழிகள் தோறும் உடனாய் நின்று புண்ணியத்தின் பயனாகிய உலகின்பத்தைத் தருதலேயாம்.

விளக்கவுரை

'புரா சத்தி' என்பதனை முதலிற் கொண்டு உரைக்க. தரா சத்தி - தாங்கும் சத்தி. தாங்குதல், காத்தல், உராவுதல், திரிவு படுதல். புண்ணியத்தின் பயனை, 'புண்ணியம்' என்றே கூறினார். பெத்தத்தின் வகையாகிய முத்தொழில்களுள் கன்மத்தை நுகர்விப்பது காத்தலேயாகலின், அஃது ஒன்றனையே திரோதானசத்தியது தொழிலாகக் கூறினார். பாவத்தின் பயனாகிய துன்பத்தைத் தருதல் விருப்பின்றிச் செய்யப்படுவதாதலின், அதனையொழித்துப் புண்ணியத்தின் பயனாகிய இன்பத்தைத் தருதல் ஒன்றையே கூறினார். 'முன்னர்த் திரோதான சத்தியாய் உலகின்பத்தையும், பின்னர் அருட் சத்தியாய் வீட்டின்பத்தையும் தருபவள் திரிபுரை' என்பது குறிப்பு. பிற்பகுதியில் 'அச்சத்தி' என்னும்

எழுவாய் வருவித்துக் கொள்க.
இதனால், திரிபுரை ஒருத்தியே திரோதான நிலையில் பல்வேறு வகையினளாய் நின்று உயிர்களைப் புரத்தல் கூறப்பட்டது.

போகம்செய் சத்தி புரிகுழ லாளொடும்
பாகம்செய் தாங்கே பராசத்தி யாய்நிற்கும்
ஆகம்செய் தாங்கே அடியவர் நாள்தொறும்
பாகம்செய் ஞானம் படர்கின்ற கொம்பே. *#1034*

அடியார்கள் நாள்தோறும் தங்கள் உள்ளத்தில் தியானிக்க, அங்ஙனம் தியானிக்குந்தோறும் அவர்களது உள்ளத்தைப் பக்குவப்படுத்தி, உண்மை ஞானமாகிய கொடி படர்தற்கு ஏற்ற கொழு கொம்பாய் நிற்கின்ற அருட்சத்தியே, முன்பு ஒரு கூற்றில் அவ் விடத்துத் திரோதான சத்தியாய் நின்று, பின் அருட் சத்தியாயே விளங்குவாள்.

விளக்கவுரை

'அடியவர் நாள்தொறும் ஆகம் செய்தாங்கே' என மாற்றி, அது முதலாகத் தொடங்கி உரைக்க. 'அகம் செய்தல்' என்பது முதல் நீண்டது. அங்கு, 'செய்து' என்றது, 'செய' என்பதன் திரிபு. 'பாகம் செய் கொம்பு' என இயையும். இங்கு, பாகம் செய்தல், பக்குவப்படுத்தல். முன் வந்த 'பாகம் செய்தல்', பங்கில் கொள்ளுதல். போகம்செய் சத்தி, திரோதான சத்தி. 'போகம் செய் சத்தியாகிய புரிகுழலாள்' என்க.
இதனால், திரோதான சத்தி அருட் சத்தியின் வேறாகாமை கூறப்பட்டது. அருட் சத்தியது இயல்பும், திரோதான சத்தியால் உளதாகும் பயனும் என்னும் இவைகளும் அனுவாத முகத்தால் ஈண்டே கூறப்பட்டன.

கொம்பனை யாளைக் குவிமுலை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்
செம்பவ ளத்திரு மேனிச் சிறுமியை
நம்பிஎன் னுள்ளே நயந்துவைத் தேனே. *#1035*
[இதன் பொருள் வெளிப்படை.]

விளக்கவுரை

கொம்பு அனையாள் - பூங்கொம்பு போன்றவள். வம்பு அவிழ்கோதை - வாசனையோடு மலர்கின்ற பூக்களையுடைய மாலையை அணிந்தவள். நாடி - நாடப்பட்டவள். சிறுமி - கன்னி. நம்பி - தெளிந்து. நயந்து - விரும்பி. இதனுள்ளும் அம்மைக்குச் செம்மை நிறம் கூறப்பட்டமை அறியத் தக்கது.
'மென்கடிக் குங்கும தோயம் என்ன விதிக்கின்ற மேனி [அபிராமி' 1
எனப் பின்வந்த அடியவரும் கூறினார்.
இதனால், திரிபுரையது தியானச் சிறப்புக் கூறப்பட்டது.

வைத்த பொருளும் மருவுயிர்ப் பன்மையும்
பத்து முகமும் பரையும் பாரபரச்
சித்தக் கரணச் செயல்களும் செய்திடும்
சத்தியும் வித்தைத் தலைவிய ளாம. *#1036*

பலவகை வழிபாட்டிலும் விளங்கும் தலைவி யாகிய திரிபுரையே, உலகத்தில் வைக்கப்பட்டுள்ள பல சடப்பொருள் களும், அளவிறந்த உயிர்களாகிய சித்துப்பொருள்களும், உலகின் பத்துத் திசைகளும், சூக்குமை முதலிய நால்வகை வாக்குகளும் அந்தக் கரணங்களது உயர்வும், தாழ்வுமாகிய எண்ண அலைவுகளும், அவ் எண்ணங்களின் வழி நிகழ்கின்ற செயலாற்றல்களுமாய் நிற்பாள்.

விளக்கவுரை

'பரை' என்றது உபலக்கணம். 'வித்தைத் தலைவியள் வைத்த பொருள் முதலிய பலவும் ஆம்' என்க.

இதனால், திரிபுரையே வழிபாடுகள் பலவற்றிலும் விளங்கிப் பல பயன்களையும் தருதல் கூறப்பட்டது.

தலைவி தடமுலை மேல்நின்ற தையல்
தொலைவில் தவம்செய்யும் தூய்நெறித் தோகை
கலைபல ஏன்றிடும் கன்னி என் உள்ளம்
நிலைபெற இங்கே நிறைந்துநின் றாளே. *#1037*

'வழிபாடுகளின் தலைவி' என மேற்கூறப்பட்ட திரிபுரை கொங்கைகள் விம்ம நிற்பவள்; அழிவில்லாத தவத்தைச் செய்யும் தூய நெறியை உடையவள்; நூல்கள் பலவற்றையும் தன்னுள் அடக்கி நிற்பவள் ; என்றும் கன்னியாய் இருப்பவள். அவள் இவ்வுலகில் என் உள்ளத்திலே நீங்காது நிறைந்து நிற்கின்றாள்.

விளக்கவுரை

'தலைவி' என்றது அனுவாதம். கொங்கைகள் பால் சுரந்து விம்ம நிற்றல் அருட் பெருக்கையும், தவம் செய்தலும், நூல்களை அடக்கி நிற்றலும் ஆசிரியத் தன்மையையும், கன்னிமை பற்றின்மையையும் விளக்குவனவாம்.

இதனால், திரிபுரை ஒன்றொடொன்றொவ்வாத நிலைகள் பலவற்றையும் உடையளாதல் கூறப்பட்டது.

நின்றவள் நேரிழை நீள்கலை யோடுற
என்றன் அகம்படிந் தேழுல கும்தொழ
மன்றது ஒன்றி மனோன்மனி மங்கலி
ஒன்றொனொ டொன்றிநின் றொத்தடைந் தாள. *#1038*

மேற்கூறியவாறு எனது உள்ளத்திலே நிறைந்து நிற்பவளாகிய திரிபுரை,

மனத்துக்கு மேலே உள்ளவளாயும், அழியாத மங்கலத்தை யுடையவளாயும் இருப்பவள். தனது பல வகைப்பட்ட நிலைகளுடனும் என் உள்ளத்தில் பொருந்தியும், உலகமெல்லாம் வணங்கும்படி அம்பலத்தில் நின்றும் அவளையே பற்றி நிற்கின்ற என்னிடத்தில் வேறற நிற்க இசைந்து, அங்ஙனமே வந்து நின்றாள்.

விளக்கவுரை

'நின்றவளாகிய நேரிழை' என்க. கலை - கூறு. 'அகம் படிந்து' எனவும், 'மன்றது ஒன்றி' எனவும் கூறியன, அகத்தும் புறத்தும் விளங்குபவளாதலைத் தெரித்தனவாம். 'அவளொடு ஒன்றுகின்ற என்னோடு அவளும் ஒன்றி நின்றாள்' என்றதனை,
'அற்றவர்க்கு அற்ற சிவன்' 1
எனவும்,
'தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்பன்' 2
எனவும் வருவனவற்றோடு வைத்துக் காண்க 'ஒன்றி நின்று ஒத்து அடைந்தாள்' என்பதனை 'ஒத்து அடைந்து ஒன்றி நின்றாள்' எனப் பின் முன்னாக நிறுத்தி, விகுதி பிரித்துக் கூட்டி உரைக்க. ஒத்தல் - உள்ளம் ஒத்தல்; இசைதல்.
இதனால், திரிபுரை அன்பர்களையே அடைதல் கூறப்பட்டது.

ஒத்தடங் குங்கம லத்திடை ஆயிழை
அத்தகை செய்கின்ற ஆய பெரும்பதி
மத்தடை கின்ற மனோன்மனி மங்கலி
சித்தடைக் கும்வழி தேர்ந்துண ரார்களே. ***#1039***

அன்பர்களிடத்தில் ஒன்றியிருக்க இசைந்து, அவர்களது உள்ளத் தாமரையிலே அடங்கி நிற்கின்றவளும், அத் தன்மையை உடைய உயர்ந்த பெரிய தலைவனாகிய சிவனிடத்தில் நிறைந்து நிற்பவளும், மனோன்மனியும், நித்திய சுமங்கலியும் ஆகிய திரிபுரை பல வகைச் சித்துக்களையும் உயிர்களிடத்தில் புரிந்து நிற்கின்ற முறையை உலகர் ஆராய்ந்து அறிகின்றார் களில்லை.

விளக்கவுரை

'கமலத்திடை அடங்கும் ஆயிழை' என மாற்றிக் கொள்க. 'பதியோடு' என உருபு விரிக்க. 'மத்து' என்பது, நிறைவை உணர்த்தும் வடசொல். 'சித்து' என்றது 'அதிசயச் செயல்கள்' என்றபடி. 'வழி' என்றது தான் சிவத்தொடு நின்றே எதனையும் செய்பவளாதலை. இதனால், திரிபுரை எதனையும் சிவத்தொடு நின்றே செய்தல் கூறப்பட்டது.

உணர்ந்துட னேநிற்கும் உள்ளொளி யாகி
மணங்கமழ் பூங்குழல் மங்கையுந் தானும்

புணர்ந்துட னேநிற்கும் போதருங் காலைக்
கணிந்தெழு வார்க்குக் கதிஅளிப் பாளே. ***#1040***

உண்மையை உணர்ந்தவழி விரைய விளங்கும் உள் ளொளியாகிய சிவன் எவ்விடத்தும் சத்தியும், தானுமாய், இயைந்தே நிற்பான். அங்ஙனம் நிற்குங்கால் தம்மை எண்ணுகின்ற வர்கட்கே திரிபுரை நற்கதி வழங்குவாள்.

விளக்கவுரை

'உணர்ந்தவழி' என்பது 'உணர்ந்து' எனத் திரிந்து நின்றது, நிற்றல் - விளங்கி நிற்றல். 'ஆகி' என்பது பெயர். மூன்றாம் அடியில் 'உடனே' என்றது, 'உடனாகியே' என்றவாறு. 'கணித்து' என்பது மெலிந்து, நின்றது. அளித்தலுக்கு எழுவாய், அதிகாரத்தால் வந்தது.

இதனால், சத்தியைச் சிவனோடன்றித் தனித்து நிற்பவளாக எண்ணுதல் கூடாமை கூறப்பட்டது. மேல் *(1038)* சிவனைச் சத்தியோ டன்றித் தனித்து நிற்பவனாக எண்ணுதல் கூடாமை கூறப்பட்டதையும் இங்கு நினைவு கூர்க.

அளியொத்த பெண்பிள்ளை ஆனந்த சுந்தரி
புளியுறு புன்பழம் போல்உள்ளே நோக்கித்
தெளியுறு வித்துச் சிவகதி காட்டி
ஒளியுற வைத்தென்னை உய்யஉண் டாளே. ***#1041***

அன்பர்களது உள்ளத் தாமரையை வண்டுபோல விரும்பி உறைகின்றவளும், ஆனந்தமே உருவாய் அழகொடு நிற் பவளும் ஆகிய திரிபுரை, எனது உள்ளம் புளிய மரத்தில் பொருந்திய பழுத்த பழம்போல ஆகும்படி அருள் நோக்கம் செய்து பக்குவப் படுத்திச் சிவஞானத்தைத் தந்து சிவத்தைப் பெறுவித்து, யான் உய்யும் வண்ணம் என்னைத் தன்னுள்ளே அடக்கிக் கொண்டாள்.

விளக்கவுரை

புளி - புளிய மரம். புன்மை, இங்கு முற்றி முதிர்ந்து வீழும் மென்மை நிலையைக் குறித்தது. போல - போல ஆகும்படி; அகரம் தொகுத்தலாயிற்று. உள்ளம் புளியம் பழம்போல ஆதலாவது, புளியம் பழத்தின் உள்ளேயிருக்கின்ற புளி அங்ஙனம் உள்ளே யிருப்பினும் ஓட்டில் பற்றுவிட்டுத் தனித்து நிற்றல்போல், உலகியலோடு உடனாய் இருப்பினும், பற்று நீங்கியதாதல். கதி - ஞானம். ஒளியுடையதனை, 'ஒளி' என்றார்.

இதனால், திரிபுரை மேற்கூறியபடி கதியளிக்குமாறு கூறப் பட்டது.

உண்டில்லை என்ன உருச்செய்து நின்றது
வண்டில்லை மன்றினுள் மன்னி நிறைந்தது

கண்டிலர் காரண காரணி தன்னொடும்
மண்டிலம் மூன்றுற மன்னிநின் றாளே. *#1042*

காரணங்கட்கெல்லாம் காரணமாய் உள்ள திரி புரை, சிவத்தோடு மூன்றுலகங்களிலும் நீக்கமற நிறைந்து நிற்கின்றாள்; அதனையும், அவளே சமய வாதிகள் 'உண்டு' என்றும், 'இல்லை' என்றும் தம்முள் மாறுபட்டு வழக்கிட மறைந்து நிற்றலையும், அடியார் கட்கு உருவொடு தோன்றிக் காட்சியளித்தலையும், வளவியதில்லை யின் அம்பலத்துள் நிலைபெற்று நிற்றலையும் உலகர் அறிந்திலர்.

விளக்கவுரை

'காரண காரணி' என்பது முதலாகத் தொடங்கி உரைக்க. 'நின்றது' முதலிய மூன்றும் தொழிற் பெயராய்ச் செவ் வெண்ணாக எண்ணப்பட்டன. காரணமாவன, தத்துவங்களும், அவற்றின் தலைமைக் கடவுள்களுமாம். முன்னர் அக்கடவுள்களைப் படைத்து, அவர்கள் வாயிலாகத் தத்துவங்களைத் தோற்றி, நிறுத்தி, ஒடுக்கச் செய்து, பின்பு அக்கடவுள்களையும் ஒடுக்குதல் பற்றி, 'காரண காரணி' என்றார். இது நான்காவதன் தொகை. காரணி - காரணமாய் நிற்பவள், 'தான்' என்பது சிவத்தைக் குறிக்கும் குறியீட்டுச் சொல். மண்டிலம் - வட்டம்; 'உலகம்' என்றவாறு. 'உடம்பில் உள்ள அக்கினி சூரிய சந்திர மண்டலங்கள்' என்றலும் ஆம். ஈற்றில், 'அதனையும்' என்பது சொல்லெச்சமாய் நின்றது.

இதனால், திரிபுரை மெய்ப் பொருளேயாதல் கூறப்பட்டது.

நின்றாள் அவன்றன் உடலும் உயிருமாய்ச்
சென்றாள் சிவகதி சேரும் பராசத்தி
ஒன்றாக என்னுட் புகுந்துணர் வாகியே
என்றாள் பரஞ்சுடர் ஏடங்கை யாளே. *#1043*

சிவனது செயல்களிலெல்லாம் உடன் சேர்ந்தே நிற்கின்ற மேலான சத்தியாகிய திரிபுரை, அச்சிவனோடு உடலும் உயிரும்போலப் பிரிப்பின்றி வாளாதும் இருப்பாள்; செயற்பட்டும் நடப்பாள். மேன்மை பொருந்திய ஞானமே யாகின்ற அவள், முதலில் புத்தகம் ஏந்திய கையினையுடைய நாமகளாய் நின்று எனக்கு நூலறிவைத் தந்தும், பின்பு எனது உணர்வினுள் உணர்வாய் இன்புறச் செய்தும் என்னைத் தன் அடியவனாக ஏற்றுக்கொண்டாள்.

விளக்கவுரை

'அவன்' எனச் சுட்டுப்பெயர் செய்யுளில் முன்னர் வந்தது. 'சிவன்' என்னும் உயர்திணைப்பெயர் இங்குத் திரிபு புணர்ச்சி எய்தியது. கதி - நடை; செயல். 'சிவகதி' என்பது, 'அரச தண்டம்' என்பதுபோல

ஆறாவதன் தொகை, 'சிவ கதியில் சேர்ந்திருக்கும் பராசத்தி அவன்றன் உடலும் உயிருமாய் நின்றாள்; சென்றாள்' எனக் கூட்டி உரைக்க. 'உணர்வு' என்பது அனுபவ ஞானத்தை. அதனால், இன்பமும் பெறப்பட்டது. 'ஏடு அங்கையாள்' என்பது உடம்பொடு புணர்த்ததாகலின், அதற்கு இவ்வாறு உரைத்தல் கருத்தாதல் அறிக. 'ஏன்றாள்' என்பது குறுகிநின்றது. நான்காம் அடியில் 'நின்றாள்' என ஓதுதல் பாடமன்று.
இதனால், திரிபுரை ஞானத்தைப் படிமுறையால் அளித்தல் கூறப்பட்டது.

ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும்வெண் டாமரை
பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னி வாய்த்தோத்திரங்கள் சொல்லுமே. *#1044*

எங்கள் தலைவியாகிய திருபுரையே புத்தகத்தைக் கையில் ஏந்தி யிருக்கும் நாமகளாகி நிற்பவள். அந்நிலையில் அவளது நிறம் பளிங்கு போல்வது. இருக்கை வெண்டாமரை மலர். கையில் உள்ள புத்தகமும் இசையோடு கூடிய திருப்பாட்டு எழுதப்பட்டது. ஆதலால், அவளைப்பிறள் ஒருத்தியாக நினையாது திரிபுரையாகவே அறிந்து, அவளது பாதமாகிய மலர்களைச் சென்னியில் சூடிக் கொள்ளுங்கள்; வாயால் அவளது புகழ்களைச் சொல்லுங்கள்.

விளக்கவுரை

'இறை' என்பது தொழிலாகு பெயராதலின், பெண் பாற்கும் உரியதாம். 'இறைவி' என்பது குறைந்து நின்றது எனினுமாம். 'எங்கள் இறை' என மாறிக் கூட்டுக. 'பாடுந் திருமுறை' என்றது, வீணையுடைமையையும் குறித்தவாறு. 'திருமுறையைப் பாடும்' என்ற லுமாம். 'பார்ப்பதி' என்றது 'பார்ப்பதியேயான அவள்' என்றபடி.
இதனால், முதற்கண்ணதாகிய நூலறிவைத் தரும் அவளது வடிவியல்பு வகுத்துக் கூறப்பட்டது.

தோத்திரம் செய்து தொழுது துணையடி
வாய்த்திட ஏத்தி வழிபடு மாறிரும்
பார்த்திடும் அங்குச பாசம் பசுங்கரும்
பார்த்திடும் பூப்பின்னை ஆகுமாம் ஆதிக்கே. *#1045*

காணப்படுகின்ற அங்குச பாசங்கள் ஈரமுடைய கரும்பினாலாகிய வில், அதன்கண் பொருத்தப்படும் பூவாகிய கணைகள், இவை ஆதிசத்தியாகிய திரிபுரைக்கு உரிய அடையாளங்க ளாகும். அவைகளை அறிந்து, அவளது இரண்டு பாதங்களும் உங்கட்குக் கிடைத்தற் பொருட்டு அவளைத் தோத்திரித்தும், வணங்கியும் வழிபடுதற்காகவே உலகில் வாழ்வீராக.

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி உரைக்க. 'வழிபடுமாறு' என்பது, வினையெச்சப்பொருட்டாய் நின்றது. 'பின்னை' என்பது, 'மற்று' என்னும் பொருளது. 'பிள்ளை' என்பது பாடமன்று. 'ஆகுமாம்' என்பதில் ஆம், அசைநிலை. 'ஆம் ஆதி' என இயைத்து, 'நன்மையை அடைதற்கு நிமித்தமாகிய ஆதிசத்தி' என உரைப்பினும் ஆம்.

இதனால், திரிபுரையை இராசேசுவரியாகக் கண்டு வழிபடுக என்பது கூறப்பட்டது. அதன் பொருட்டு, அவளது வடிவம் மறித்தும் உணர்த்தப்பட்டது.

ஆதி விதம்மிகுத் தண்டந்த மால்தங்கை
நீதி மலரின்மேல் நேரிழை நாமத்தைப்
பாதியில் வைத்துப் பலகாற் பயில்விரேல்
சோதி மிகுத்துமுக் காலமும் தோன்றுமே. ***#1046***

ஆதி சத்தியின் பேதங்கள் அனைத்துமாய் உலகத்தைச் சார்ந்து நிற்கின்றவளும், 'திருமாலின் தங்கை' எனப்படு பவளும், நீதியாளர்களது நெஞ்சத் தாமரையில் விளங்குபவளும் ஆகிய திரிபுரையது மந்திரத்தை, நெஞ்சில் இருத்திப் பலமுறை கணிப் பீர்களாயின், அறிவு விரிவுற்று, முக்கால நிகழ்ச்சிகளும் ஒரு காலத்திதே உங்கட்கு விளங்குவனவாகும்.

விளக்கவுரை

'அண்ணுதல்' என்பது 'அண்டுதல்' என மருவி வழங்கும். நீதி - நடுவு நிலைமை. 'நீதியாளரது மனத்தாமரை என்றற்கு, 'நீதி மலர்' என்றார். திரிபுரையது மந்திரம், 'ஓம் ஹ்ரீம் ஷ்ரீம் த்ரிபுராயை நம;' என்பது. இது நவாக்கரியாதலை நோக்குக. மூலாதாரம் முதலிய ஏழ் நிலையுள் நடுவணதாகிய அனாகதத்தை, 'பாதி' என்றார். 'ஆறாதாரங்களில் மேற்பாதியில் முன் உள்ளது' என்றலுமாம்.

இதனால், திரிபுரையது ஆசனமும், மந்திரமும், அவ்வாற்றாற் செய்யும் வழிபாட்டின் பயனும் கூறப்பட்டன.

மேதாதி ஈரெட்டு மாகிய மெல்லியல்
வேதாதி நூலின் விளங்கும் பராபரை
ஆதார மாகியே ஆய்ந்த பரப்பினள்
நாதாதி நாதத்து நல்லரு ளாளே. ***#1047***

திரிபுரை, மேதை முதலிய பிராசாத கலைகள் பதினாறுமானவள்; வேதம் முதலிய நூல்களின் பொருளாய் விளங்குபவள்; 'இலயம், போகம்' என்னும் மேல் நிலையிலும் 'அதிகாரம்' என்னும் கீழ் நிலையிலும் இருப்பவள்; எல்லாப் பொருள் கட்கும் நிலைக்களமாய் நுணுகிப் பரந்த வியாபகத்தை உடையவள்; நாதத்திற்கு முதலாகிய பரநாதத்தில் நிற்கும்

அருள் வடிவானவள்.

விளக்கவுரை

'அவளது பெருமையை இவ்வாறு அறிந்து கொள் ளுங்கள்' என்பது குறிப்பெச்சம். எழுவாய் மேலை மந்திரத்தினின்றும் வந்தது. 'பிரசாத கலைகள் பதினாறு இவை' என்பது முன்னைத் தந்திரத்திற் காட்டப்பட்டது.

இதனால், திரிபுரையது மிக்க பெருமை கூறப்பட்டது.

அருள்பெற் றவர்சொல்ல வாரீர் மனிதர்
பொருள்பெற்ற சிந்தைப் புவனா பதியார்
மருளுற்ற சிந்தையை மாற்றி அருமைப்
பொருளுற்ற சேவடி போற்றுவன் யானே. ***#1048***

மனிதர்களே, நான் மயக்கம் பொருந்திய என் மனத்தை மாற்றி உண்மையை உணரப் பெற்ற அதன்கண், புவனங்கள் அனைத்துமாய் நிற்றல் பற்றி, 'புவனை' எனப்படுகின்ற திரிபுரைக்குத் தலைவனாகிய சிவனது, அரிய பொருளாய்ப் பொருந்திய செம்மை யான திருவடிகளையே போற்றுவேன்; உங்களில் அருள் பெற்றவரா யுள்ளோர் என்னுடன் வாருங்கள்; அனைவரும் ஒருங்கு கூடிப் போற்றுவோம்.

விளக்கவுரை

'பொருள் பெற்ற சிந்தையில் உற்ற புவனாபதியார் சேவடி' என இயைத்துக் கொள்க. 'சத்தி வழிபாடு சிவனை நீக்கிச் செய்யப்படுவதன்று' என்பது உணர்த்தியவாறு.

இதனால், சத்தி வழிபாட்டின் கண்ணது ஓர் ஐயம் அறுக்கப் பட்டது.

ஆன வராக முகத்தி பதத்தினில்
ஈனவ ராகம் இடிக்கும் முசலத்தோ
டேனை எழுபடை ஏந்திய வெண்ணகை
ஊனம் அறஉணர்ந் தார்உளத் தோங்குமே. ***#1049***

திரிபுரை, ஒறுப்பிற்கு ஏற்ற வராக முகத்தை உடை யவள்; இழிகுணம் படைத்த தீயோரது உடலங்களைக் காலத்தில் அழிப்பாள்; உலக்கையோடு மற்றும் ஏழு ஆயுதங்களை ஏந்தி இருப்பாள்; சிரித்த முகத்தையுடையவள். தங்கள் துன்பங்களை நீக்க வேண்டித் தியானிப்பவர்களது உள்ளத்தில் அவள் இவ்வாறு விளங்குவாள்.

விளக்கவுரை

'இறைவன் போகி, யோகி, வேகி - என்னும் மூன்று நிலையில் நிற்குங்கால் சத்தியும் அவற்றிற்கு ஏற்பவே நிற்பாள்' என்பது, 'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்' *1*

என்பதனால் அறியப்படும். அற்றுள் சத்தியது வேகவடிவத்தில் 'வராகி' - என்பவள் மிகக் கடுமையானவளாகக் குறிக்கப்படுதலால் அவளது நிலையை இங்குச் சிறப்பாக எடுத்துக் கூறினார். இதனானே, ஏனை வேகவடிவங்களும் கொள்ளப்படும்.

இதனால், சத்தியது மறக்கருணை நிலையாகிய வேகவடி வத்தின் இயல்பு கூறப்பட்டது.

ஓங்காரி என்பாள் அவள்ஒரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை உடையவள்
ஆங்காரி யாகியே ஐவரைப் பெற்றிட்டு
இரீங்காரத் துள்ளே இனிதிருந் தாளே. ***#1050***

பரவிந்துவாய் நிற்கின்ற சிவ சத்தியே 'ஒரு கன்னிகை' எனச் சொல்லவும், பச்சை நிறத்தையுடைய திருமேனி யளாக எண்ணவும் படுகின்றது. ஏனெனில், அஃது எழுச்சிபெற்றுப் பரநாத வடிவினனாகிய இறைவனோடு கூடிச் சதாசிவன் முதலிய ஐவரைக் கால்வழியினராகத் தோற்றுவித்து, 'ஹ்ரீம்' என்னும் வித்தெழுத்தை இடமாகக்கொண்டு நன்கு பயனளித்து நிற்றலால்.

விளக்கவுரை

'உயிர்களின் வாக்கு மனங்கட்கு அப்பாற்பட்ட சிவ சத்தி அவற்றிற்கு அகப்படுதற் பொருட்டுக் கருணையால் இவ்வாறு உருவும், பெயரும்கொண்டு நின்று, உயிர்களை உய்வித்தற்குரிய செயல்களைச் செய்கின்றது' என்பதாம். அகங்காரம் - 'யான் இது செய்வேன்' என முனைதல். இது தனக்கு ஏலாததன்கண் தோன்றின் குற்றமாகும். ஆகவே, தமக்கெனச் சுதந்திரம் இல்லாத உயிர்கட்கு இது குற்றமாகின்றது. சிவசத்திக்குச் சிறப்பாகின்றது. அகங்காரம், 'ஆங்காரம்' என மருவி வழங்கும்.

'ஓருரு வாயினை; மான் ஆங்காரத்து
ஈரியல்பாய், ஒரு விண்முதல் பூதலம்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை' *1*

என்பது காண்க. சதாசிவன் முதலிய ஐவராவார், 'சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன்' என்போர். இவர் சம்பு பட்சத் தினர் என்க. ஈற்றடி அவள் தன் அடியார்க்குப் பயன் தரும் முறையைக் கூறியவாறு. 'ஹ்ரீம்' என்பதில் முதற்கண் உள்ள மெய்யின் சிதை வாகிய இகரம், அம்மெய்போலவே வேறெண்ணப் படாது நின்றது.

இதனால், திரிபுரையது கருணைச் சிறப்புக் கூறப்பட்டது.

தானே தலைவி எனநின்ற தற்பரை
தானே உயர்வித்துத் தந்த பதினாலும்
மானோர் தலமும் மனமும்நற் புத்தியும்

தானே சிவகதித் தன்மையு மாமே. **#1051**

உயிர்களால் பொதுப்பட 'அது' எனக் கூறப்பட்ட தலைவியாய், அவ்வுயிர்கட்கு மேலே இருப்பவளும், ஐந்தொழிற்கும் முதல்வியும், சுத்த மாயை அசுத்த மாயைகளின் காரியங்கள் பதினான் கும், பிரகிருதியும், அதன் காரியங்களாகிய அந்தக்கரணம் முதலியன வுமாய் நின்று உயிர்களைப் பந்திப்பவளும், பின் அவற்றினின்றும் நீக்கி வீட்டை எய்துவிப்பவளும் எல்லாம் திரிபுரையே ஆவள்.

விளக்கவுரை

தத் + பரை = தற்பரை; 'தத்' என்னும் சொல்லால் குறிக்கப்படுகின்ற மேலிடத்தவள். உயர் வித்து - பிரகிருதிக்கு மேலே உள்ள முதனிலைகள்; அவை சுத்த மாயையும், அசுத்த மாயையுமாம். அவற்றுள் சுத்த மாயையின் காரியம் ஏழு. அவை, பரநாதம், அபர நாதம், சாதாக்கியம், ஈசுரம், சுத்த வித்தையின் ஊர்த்துவ பாகம், மத்திய பாகம், அதோ பாகம்' என்பன. ஊர்த்துவபாகம் உருத்திர னுக்கும், மத்திய பாகம் திருமாலுக்கும், அதோபாகம் அயனுக்கும் இடமாய் இருக்கும். அசுத்த மாயையின் காரியம் ஏழு வித்தியா தத்துவங்கள். மான் - பிரகிருதி. 'மானாகிய ஓர் தலம்' என்க. இது பிரகிருதியாதல் பற்றி, 'தலம் - இடம்' என்றார். 'மனமும், நற்புத்தியும்' என்றது ஆன்ம தத்துவம் அனைத்திற்கும் உபலக்கணம். தன்மை - ஈகைக் குணம். தன்மை உடையவளை, 'தன்மை' என்றார்.

இதனால், திரிபுரையது முழுமுதல் தன்மை இனிது விளக்கப் பட்டது.

<u>*6.6.6.*வயிரவி மந்திரம்</u>

பன்னிரண் டாங்கலை ஆதி பயிரவி
தன்னில் அகாரமும் மாயையும் கற்பித்துப்
பன்னிரண் டாதியோ டந்தப் பதினாலும்
சொன்னிலை சோடசம் அந்தம்என் றோதிடே. **#1052**

பன்னிரு கலைகளை உடையதாகச் சொல்லப்படு கின்ற ஓங்காரத்தில் நாத விந்துக்களைப் பாவித்து, அதன் பின் ஆதி யாகிய வயிரவியது மந்திரத்தில் முதல்எழுத்து அகாரம் முதலிய வற்றில் பன்னிரண்டாம் எழுத்தாகிய 'ஐ' எனவும், ஈற்றெழுத்து அவற்றில் பதினான்காம் எழுத்தாகிய 'ஔ' என்பது பதினாறாம் எழுத்தாகிய விசர்க்கத்தோடு கூடியது எனவும் அறிந்து அவ்வாறே ஓதிப் பயன் பெறுக.

விளக்கவுரை

'பன்னிரண்டாம் கலை' என்பதில் 'கலை' சினையாகு பெயராய் அவற்றையுடைய ஓங்காரத்தைக் குறித்தது. ஓங்காரமே பிராசாத கலைகளாய் விரிந்து நிற்பதாதல் அறிக. 'கலையின்கண்' என ஏழாவது

விரித்து, அதனை, 'கற்பித்து' என்பதனோடு முடிக்க. அகாரம் - நாதம். எனவே, மாயை சுத்த மாயையாயிற்று. 'ஆதி பயிரவிதன்னில்' என்பதை மூன்றாம் அடியில் முதலிற் கூட்டுக. பயிரவியது மந்திரத்தையே ஒற்றுமை பற்றி, 'பயிரவி' என்றார். 'பயிரவி தன்னில் ஆதி பன்னிரண்டோடு, அந்தம் அந்தப் பதினாலு சோடசமும் சொல்நிலை என்று ஓதிடு' எனக் கூட்டி வினைமுடிவு செய்க. 'ஓடு' 'உம்' என்பன எண்ணிடைச் சொற்கள். இங்ஙனம் கூறியதனால், 'ஹோம் ஹைம் ஹௌ: பைரவ்யே நம:' என்பதே வயிரவி மந்திரமாதல் பெறப்பட்டது. தொடக்கத்தில் கூறப்பட்ட பொருளாகிய இது பற்றியே இவ்வதிகாரம், 'வயிரவி மந்திரம்' எனப் பெயர் பெற்றது என்க. 'பைரவ்யே நம:' என்பது 'பயிரவிதன்னில்' என்பதனானே விளங்கிக் கிடந்தது. 'வயிரவி' என ஓதாது, 'பயிரவி' என ஓதியதும் இதன் பொருட்டு.
இதனால், வயிரவியது முதனிலை (மூல) மந்திரம் உணர்த்தப் பட்டது.

அந்தம் பதினா லதுவே வயிரவி
முந்தும் நடுவும் முடிவும் முதலாகச்
சிந்தைக் கமலத் தெழுகின்ற மாசத்தி
அந்தமும் ஆதியும் ஆகிநின் றாளே. **#1053**

மேற் கூறியவாறு விசர்க்கத்தோடு கூடி இறுதியில் நிற்கின்ற 'ஔ' என்னும் எழுத்தே வயிரவி மந்திரமாகிய சொல் தொடருக்கு முன்னும், ஏனைய 'ஐ, ஓம்' என்பவை முறையே அந்த ஔகாரத்திற்கு முன்னே நடுவணதாயும், முதற்கண்ணதாயும் உள்ள பீசங்கள் முன்னே நிற்க. அவ்வாற்றால் உள்ளக்கமலத்தில் விளங்கு கின்ற பராசத்தியாகிய வயிரவி, உலகிற்கு முடிவும் முதலுமாய் உள்ளாள்.

விளக்கவுரை

'அந்தம் பதினாலதுவே முந்து' என அனுவதித்து ஓதினமையால், ஏனையிரண்டும் சொல்லாமே விளங்கிக்கிடந்தன. எனவே, இதன் முதல்மூன்று அடிகளாலும், 'ஹோம் ஹைம் ஹௌ: பைரவ்யே நம:' எனபதே வயிரவி மூலமந்திரம் என்பதை வலியுறுத் தியதாயிற்று. ஈற்றடி அவளது முதன்மை உணர்த்திற்று. அது, பகுதிப் பொருள் விகுதி.
இதனால், வயிரவியது முதன்மை கூறப்பட்டது.

ஆகின்ற மூவரும் அங்கே அடங்குவர்
போகின்ற பூதம் பொருந்து புராதரர்
சார்கின்ற சார்வுழிச் சாரார் சதிர்பெறப்
போகுந் திரிபுரை புண்ணியத் தோரே. **#1054**

உலகிற்குக் காரணர்களாகின்ற 'அயன், அரி, அரன்' என்னும் மூவரும் வயிரவியது அழிப்பும், காப்பும், படைப்பும் ஆகிய செயல்களில் ஒரு கூற்றிலே அடங்குபவர் ஆதலின், வீடாகிய பெரும் பயனைப்பெற

விரும்பி அவளை வழிபடுகின்ற சிறந்த புண்ணியத்தை உடையவர்கள், நிலையற்ற அம்மூவர் பதவிகளுள் ஒன்றனையும் விரும்பார்.

விளக்கவுரை

முதலடியின் ஈற்றில், 'ஆகலான்' என்பது சொல்லெச்ச மாய் நின்றது. போகின்ற - அழிகின்ற. 'பூதத்தில்' என உருபுவிரிக்க. 'புரம்' என்றது புவனத்தை. ஆதரர் - விரும்புபவர். என்றது, முன்னர்க் கூறிய மூவரையே. எனவே, 'புராதரர் ஆகிய அவர்' என்றதாயிற்று. 'சார்வுழி' என்பதில் சார்தல், வாளா அடையாயிற்று. போகும் - அவ் வழியில் ஒழுகுகின்ற. 'போகும் புண்ணியத்தோர்' என இயையும்.
இதனால், 'வயிரவியை வினைநீக்கம் வேண்டி நிட்காமிய மாக வழிபடுதலே சிறந்தது' என்பது கூறப்பட்டது.

புண்ணிய நந்தி புனிதன் திருவாகும்
எண்ணிய நாட்கள் இருபத்தேழ் சூழ்மதி
பண்ணிய வன்னி பகலோன் மதியீறு
திண்ணிய சிந்தையன் தென்னனு மாமே. ***#1055***

இருபத்தேழு நாட்களைக் கொண்ட மதியளவை (சாந்தரமான) மாதம் ஒன்றுகாறும் அகத்தும், புறத்தும் வளர்க்கப் படுகின்ற ஓமாக்கினியே வயிரவி வடிவமாகும். அதனைப் பகல் இரவு இடைவிடாது ஓம்புகின்ற மன உறுதியுடையவன் 'சிவனே' என எண்ணத்தக்கபெருமை யுடையவனாவன்.

விளக்கவுரை

'புண்ணிய நந்தி, புனிதன்' என்றவை, 'சிவன்' என்ற வாறு. அவனது திரு, சத்தி. இங்கு வயிரவி 'எண்ணிய ... ... வன்னி, புண்ணிய ... ... திரு ஆகும்' எனக் கூட்டியுரைக்க. 'பகலோன், மதி' என்றது அவர்கள் விளங்கி நிற்கும் பகலும், இரவுமாகிய காலத்தைக் குறித்தன. 'நாளின் தொடக்கம் பகலவன் தோற்றமும், இறுதி மதியின் மறைவும்' என்னும் பொது முறை பற்றி 'மதியீறு' என்றார். 'மதியீறாக அதனை (அவ்வன்னியை)ப் பண்ணும் திண் ணியன்' என்றார். 'பண்ணிய வன்னி' எனப்பொதுப்படக் கூறி யதனால், அகத்தும், புறத்தும் பண்ணுதல் கொள்ளப்பட்டது. அவ்வாறு பண்ணும் முறை மேலெல்லாம் சொல்லப்பட்டது. வடக்கில் கயிலைச் சிகரமாகிய ஓரிடத்தில் அரிதிற்காண இருக்கின்ற சிவன், தென்னாட்டில் அளவற்ற கோயில்களில் எளிதிற் காண இருத்தலால் அவனை, 'தென்னன்' எனத் தமிழாகமம் கூறிற்று என்க. வாதவூரடிகளும் சிவனை இவ்வாறு கூறுதல் இது பற்றியே எனக் கொள்ளலுமாம்.
இதனால், வயிரவி வழிபாட்டில் சிறப்புடையது ஒன்று கூறப் பட்டது.

தென்னன் திருநந்தி சேவகன் றன்னொடும்

பொன்னங் கிரியினிற் பூதலம் போற்றிடும்
பன்னும் பரிபிடி அந்தம் பகவனோ
டுன்னும் திரிபுரை ஓதிநின் றானுக்கே. *#1056*

உள்ளத்தில் பொருள் வடிவாக எண்ணப்படுகின்ற திரிபுரை மந்திரத்தை, உயர்த்துச் சொல்லப்படுகின்ற அன்பினாலாகிய மேற்கோளோடு வாழ்நாளின் இறுதிவரை சிவனொடு வைத்து, சொல் வடிவிலும் ஓதிவரும் அன்பன் பொருட்டாக அவளை நிலவுலகம் கயிலாய மலைபோலவே சிவனோடு தன்னகத்து வைத்துப் போற்று கின்றது.

விளக்கவுரை

சேவகன் - வீரன். கிரியினில் - கிரியைப் போல. பரிதல் - அன்பு செய்தல். 'கட்டு, ஒட்டு' முதலியன போல, 'பிடி' என்பது முதனிலைத் தொழிற்பெயர். 'பரி பிடி' நிகழ்கால வினைத் தொகை. 'பிடியொடு' என உருபு விரிக்க. 'திரிபுரை' என்றது அவளது நாமத்தை. ஓதி நின்றானுக்காக அவள் கயிலையிற் போல சிவனோடு வெளிநிற்றலை, 'பூதலம் போற்றிடும்' என உலகின்மேல் வைத்துக் கூறினார். 'ஓதி நின்றான் அவனைச் சிவனோடு இங்குத்தானே காண்பான்' என்றவாறு. இதனால், 'மேற்கூறிய வழிபாடு இம்மையிற்றானே பயன் தரும்' என்பது கூறப்பட்டது.

ஓதிய நந்தி உணருந் திருவருள்
நீதியில் வேத நெறிவந் துரைசெயும்
போதம் இருபத் தெழுநாள் புணர்மதிச்
சோதி வயிரவி சூலம்வந் தாளுமே. *#1057*

நூல்களால் சொல்லப்படுகின்ற சிவனுடையதும், உணர்வுடையோரால் உணரப்படுவதும் ஆகிய திருவருட்சத்தியும், வேதத்தின்வழி வழுவாது ஒழுகிவருவோரால் வழிவழியாக உபதேசிக் கப்பட்டு வருகின்ற ஞானமும், மேற்கூறியவாறு இருபத்தேழு நாள்களை உடைய ஒரு மதி வட்டங்காறும் விளங்கி நிற்கின்ற ஓமாக்கினியை வயி ரவிதேவி தன் அடியார்களின்முன் சூலத்தோடு வந்து அருள்புரிவாள்.

விளக்கவுரை

'நந்தி அருள், உணரும் அருள்' எனத் தனித்தனி முடிக்க. 'நீதி -முறை, நீதியில்வந்து' என இயையும். சோதி, ஆகு பெயர். திரு வருள், போதம், சோதி என்பன ஒரு பொருள்மேல் வந்த பல பெயராய் வயிரவியையே குறித்தன. 'சூலத்தோடு' என உருபு விரிக்க. 'சூலம் அவட்குச் சிறப்படையாளம்' என்பது தோன்றுதற் பொருட்டு அதனை விதந்தவாறு.வருகின்ற மந்திரத்துள் மறித்தும் 'சூலி' என்றலும் இது பற்றி.

இதனால், மேற்கூறிய வழிபாட்டினது சிறப்பு வலியுறுத்தப் பட்டது.

சூலம் கபாலம்கை யேந்திய சூலிக்கு
நாலங் கரம்உள நாகபா சாங்குசம்
மாலங் கயன்அறி யாத வடிவற்கு
மேலங்க மாய்நின்ற மெல்லிய லாளே. *#1058*

வயிரவிக்கு அழகிய கைகள் நான்கு. அவைகளில் சூலம், கபாலம், நாகபாசம், அங்குசம் என்பவற்றை ஏந்தியிருப்பாள். இவள், மாலாலும், அயனாலும் அறியப்படாத அழல் வடிவத்தை உடைய சிவனுக்குச் சிறந்த திருமேனியாகின்ற அருளேயன்றி, வேறல்லள்.

விளக்கவுரை

'சூலம் கபாலம் கையேந்திய சூலி' என்றது உடம் பொடு புணர்த்தல். வலக்கையிரண்டில் மேலதிற் சூலமும், கீழதில் அங்குசமும் இடக்கை யிரண்டில் மேலதில் கபாலமும், கீழதில் நாகபாச மும் உள எனக் கொள்க. 'இவள் சிவனது அருளே' என்றது, 'சாந்த ரூபி' என்பதன்கண் ஐயம் அறுத்தவாறு.

மெல்லியல் வஞ்சி விடமி கலைஞானி
சொல்லியல் கிஞ்ச நிறம்மன்னு சேயிழை
கல்லியல் ஒப்பது காணும் திருமேனி
பல்லியல் ஆடையும் பன்மணி தானே. *#1059*

மேலும் இவள், மென்மையான இயல்பை உடையவள்; வஞ்சிக் கொடிபோலும் வடிவினை யுடையவள்; சிறிது சினங்கொண்ட மனத்தினள்; பலகலையும் உணர்ந்தவள் ; தோன்றுகின்ற வாய் முள்முருக்க மலர்போலச் சிவந்திருப்பவள்; நீல மணி போன்ற நிறத்தை உடையவள்; பல நிறத்தோடும், பல மணிகளோடும் கூடிய உடையை அணிந்தவள்.

விளக்கவுரை

'சொல் இயல்' என்பதில் இயலுதல், அதற்குரிய இடத்தின் மேல் நின்றது. கிஞ்சுகம் 'கிஞ்சம்' என மருவிற்று. 'காணும் திருமேனி கல் இயல் ஒப்பது' எனக் கூட்டுக. 'ஆடையும்' என்னும் உம்மை, சிறப்பு. மணியை உடையதனை 'மணி' என்றார்.

பன்மணி சந்திர கோடி திருமுடி
சொன்மணி குண்டலக் காதி உழைக் கண்ணி
நன்மணி சூரிய சோம நயனத்தள்
பொன்மணி வன்னியும் பூரிக்கின் றாளே. *#1060*

இன்னும் இவள், பல வயிரங்கள் இழைத்த கோடி சந்திரன்போலும் அழகிய முடியை அணிந்தவள்; சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற

இரத்தின குணடலத்தை அணிந்த காதினை உடையவள்; மான் போல மருண்டு பார்க்கும் பார்வையை உடையவள்; சிறந்த ஒளிகளாகிய சூரியனையும், சந்திரனையும் கண்களாகக் கொண்டவள்; பொன்னாலாகிய மணி போலும் நெருப்புக் கண்ணையும் நிரம்ப உடையவள்.

விளக்கவுரை

திருமுடி, அன்மொழித்தொகை. 'கன்மணி குண்டலக் காதி' எனப் பாடம் ஓதி, இங்கும், 'மணி' என்பதற்கு 'அழகு' எனப் பொருள் கொள்ளுதல் சிறக்கும், 'வன்னி' என்றது அதனையுடைய கண்ணினை. உம்மை, இறந்தது தழுவிய எச்சம். நிரம்புவது சிவசத்தித் தன்மை என்க. இவை மூன்று மந்திரங்களாலும் வயிரவியது தியானவடிவம் கூறப்பட்டது.

பூரித்த பூவிதழ் எட்டினுக் குள்ளேஓர்
ஆரியத் தாள்உளள் அங்கெண்மர் கன்னியர்
பாரித்த பெண்கள் அறுபத்து நால்வரும்
சாரித்துச் சத்தியைத் தாங்கள்கண் டாரே. ***#1061***

விரிந்துநின்ற ஒரு தாமரை மலரின் எட்டிதழின் நடுவில் (பொகுட்டில்) மேலான சத்தி ஒருத்தி இருக்கின்றாள். அவ் எட்டிதழ்களில் கன்னியர் எண்மரும், அவருள் ஒருத்திக்கு எண்மராக அறுபத்து நால்வர் பணிமகளிரும் அங்குச்சூழ்ந்து பணிபுரிந்து அந்தச் சத்தியைத் தொழுது கொண்டிருக்கிறார்கள்.

விளக்கவுரை

இவளே 'மனோன்மனி' எனப்படுபவள். நான்கு திசை யிலும் திசைக்கு இரண்டாக உள்ள எட்டிதழ்களில் கிழக்கு முதலாகத் தொடங்கி வலமாக முறையே 'வாமை, சேட்டை, இரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சர்வபூத தமனி' எனச் சொல்லி, எண்மர் கன்னியரை அறிக. பாரித்தல் - சூழ்தல். 'சரித்து' என்பது முதல் நீண்டது. இதன்கண் கூறப்பட்ட தாமரை மலர் வடிவத்தையும், அதன்கண் இருக்கும் முதற்சத்தி ஒருத்தி பரிவாரசத்தி எண்மர் ஆகியோரைக் கீழ் உள்ளவாறு கண்டுகொள்க.

சிவனைப் பூசித்தற்குரிய பதுமாசனத்தின் அமைப்பு ஆகமங் களில் ஆங்காங்கு வேறு வேறுவகையாகச் சொல்லப் படுகின்றது. அவற்றுள் இங்குக் கூறிய எட்டிதழ்களும் சுத்த வித்தை ஒன்றும், வித்தியா தத்துவம் ஏழும் கூடியவையாம். ஆகவே, இதன் பொகுட்டு முதலியன ஏனைச் சிவத்தத்துவங்களும், இதன் தண்டு ஆன்ம தத்துவம் இருபத்து நான்குமாம். இதனை, அகத்தே பாவிக்கும் பொழுது தண்டினைக்

கொப்பூழ் அடி முதலாகவும், மலரை இருதயத் திலும் கொள்ள வேண்டும். மனோன்மனியே இங்குப் பூசிக்கப் படுவள். ஏனையோர் அவளுக்குப் பரிவாரமும், பரிவாரங்கட்குப் பரி வாரங்களும் ஆவர். சிவ வழிபாட்டு முறையே சத்திக்கும் ஆதலின், அதனை இங்குக் கூறினார். இதனானே, எந்தச் சத்தியை யார் வழி படினும் வழிபடப்படுபவளைத் தலைவியாகப் பொகுட்டில் வைத்துப் பரிவாரங்களை இதழ்களில் நிறுத்திப் பூசித்தல் வேண்டும் என்பது கொள்ளப்படும்.

இதனால், சத்தியை அகத்தும், புறத்தும் ஆசனத்தில் வைத்து வழிபடுமாறு கூறப்பட்டது.

கண்ட சிலம்பு வளைசங்கு சக்கரம்
எண்டிசை யோகி இறைவி பராசத்தி
அண்டமொ டெண்டிசை தாங்கும் அருட்செல்வி
புண்டரி கத்தினுட் பூசனை யாளே. ***#1062***

இறைவியாகிய பராசத்தி மேற்கூறிய மனோன் மனியாய்ப் பூசிக்கப்படும் பொழுது கன்னித் தன்மையைக் குறிக்கச் சிலம்பும், வளையலும் அணிந்தவளாகவும், உலகத்தைக் காக்கின்ற செயலைக் குறிக்கச் சங்கு சக்கரங்களை ஏந்தியவளாகவும், எட்டுத் திசையும் நிறைந்தவளாதலைக் குறிக்க எட்டிதழ்த் தாமரையின் நடுவில் உள்ளவளாகவும் கருதப்படுவாள்.

விளக்கவுரை

'எண்டிசை யோகி', 'எண்டிசை தாங்கும் அருட் செல்வி' என்பன உடம்பொடு புணர்த்தலாய் நின்றமையின், இதற்கு இவ்வாறுரைத்தல் கருத்தாதல் அறிக. யோகி - பொருத்தி யிருப்பவள்.

மேற்கூறிய மனோன்மனியைத் தியானிக்கும் முறை கூறப்பட்டது.

பூசனை கந்தம் புனைமலர் மாகோடி
யோசனை பஞ்சத் தொலி வந் துரைசெய்யும்
வாச மிலாத மணிமந் திரயோகம்
தேசந் திகழும் திரிபுரை காணே. ***#1063***

எங்கும் நிறைந்தவளாகிய சத்திக்கு உரிய பூசைப் பொருள்களாவன. சந்தனம் குங்குமம் பனிநீர் முதலிய நறுமணப் பொருள்கள். சூடத்தக்க மிக்க பல மலர்கள், ஐவகை வாத்தியங்கள், ஒலிக்காத மணிபோல வாய்க்குள்ளே சொல்லப்படும் மந்திரங்கள் முதலியனவாம்.

விளக்கவுரை

பூசனைப் பொருள்களில் சிறந்தன சிலவற்றை எடுத்தோதி, ஏனையவற்றை உபலக்கணத்தால் கொள்ள வைத்தார். வழக்கம் பற்றி அவற்றை உணர்தல் எளிதாதலின், 'தேசந் திகழும் திரிபுரை' என்பதனை

முதற்கண் வைத்து, *'திரிபுரைக்கு'* என உருபு விரித்துக்கொள்க. காண். முன்னிலையசை.
இதனால், சத்தி வழிபாட்டிற்குரிய பொருட்படை கூறப் பட்டது.

காணும் பலபல தெய்வங்கள் வெவ்வேறு
பூணும் பலபல பொன்போலத் தோற்றிடும்
பேணும் சிவனும் பிரமனும் மாயனும்
காணுந் தலைவிநற் காரணி காணே. ***#1064***

உலகில் காணப்படுகின்ற பலப்பல தெய்வங் களும், வேறு வேறு வகையாய் அணியப்படுகின்ற அணிகலங்கள் பலப்பலவும் ஒரு பொன்னின் வேறுபாடேயாதல் போலத் தோன்று வனவாம். அவைகளுள் முதல்வராகப் போற்றப்படுகின்ற மும் மூர்த்தி களாயும் காணப்படுந்தலைவி உலக காரணியாகிய ஆதி சத்தியே.

விளக்கவுரை

'வெவ்வேறாய், மாயனுமாய்' என ஆக்கம் வருவிக்க. *'பூணும் பல பலவும்'* என்னும் முற்றும்மை தொகுத்தல் பெற்றது. *'பொன்'* என்றது அதன் காரிய வேறுபாட்டினை. *'தெய்வங்கள் தோற்றத்தில் பலப் பல வாய்க் காணப்படினும் பொருளால் ஒன்றே'* என்பது முன் இரண்டடிகளால் கூறப்பட்டது. இதனை எடுத்தோதியது, *'சத்தி ஒருத்தியே முதல்வி'* எனப் பின்னர் வருவதனை நிறுவுதற் பொருட்டு. வேறுபட்டுக் காணப்படுகின்ற பல தெய்வங்களும், *'சம்பு பட்சமும், அணுபட்சமும்'* என இருதிறத்தன என்பது முதல் தந்திரத்தில் *(90)* காட்டப்பட்டது. சிவபுண்ணிய மிகுதியால் உருத்திரன் மாலும், அயனும் ஆகிய ஏனை இருவர்போல ஒரோவழியும் மயக்கம் எய்துதல் இலனாயினமையின் அவனைச் சிவனாகவே கூறுதல் உண்டு என்க. *'சிவன்'* முதலிய மூன்றிலும் உள்ள உம்மைகள் எண்ணோடு உயர்வு சிறப்பு. *'மும்மூர்த்திகட்கும் முதல்வி யாதல் கூறவே, ஏனையோர்க்கு முதல்வியாதல் கூற வேண்டா'* என்பது கருத்து. சத்தியது முதன்மையை விதந்தது. அவளை வழிபட்டால் அனைத்துத் தேவரையும் வழிபட்டதாம் என்பது உணர்த்துதற்கு என்க.
இதனால், மேற்கூறிய வழிபாட்டின் சிறப்புக் கூறப்பட்டது.

காரண மந்திரம் ஓதும் கமலத்துப்
பூரண கும்ப இரேசம் பொருந்திய
நாரணி நந்தி நடு அங் குரைசெய்த
ஆரண வேதநூல் அந்தமு மாமே. ***#1065***

தூலம், சூக்குமம் முதலாக வகுத்துச் சொல்லப் படுகின்ற மந்திரங்களுள் காரண மந்திரத்தை ஓதுவோரது உள்ளக் கமலத்தில், பூரக கும்பக இரேசகங்களாகின்ற பிராணாயாமத்தால் விளங்கி நிற்கின்ற சத்தி,

சத்தனாகிய சிவனது நடுவில் உள்ளவளாய் இருப்பாள். இவ்வாறு சொல்லுகின்ற வேதப் பகுதி வேதத்தின் முடிவாய் விளங்குவதாம்.

விளக்கவுரை

'பூரகம், கும்பகம், இரேசகம்' என்பன திரிவுபெற்று நின்றன. 'இரேசகத்தால்' என உருபு விரிக்க. 'நடு' என்பதன்பின், 'இருப்பாள்' என்னும் பயனிலை எஞ்சி நின்றது. இதனுள், 'மந்திரம்' என்றது பஞ்சாக்கரத்தை. 'காரணம்' என்றதும், மகா காரணமாம். அஃது ஒன்பதாந் தந்திரத்தில் பஞ்சாக்கர பேதங்களைக் கூறுமிடத்து ஈரெழுத்தின் ஈரடுக்காக எடுத்தோதப்படுதல் காண்க. அதன்கண் சத்தி சிவத்தின் நடுவிலும், சிவம் சத்தியின் நடுவிலும் இருப்பினும் இங்கு இயைபு பற்றிச் சத்தி சிவத்தின் நடுவில் இருத்தலையே குறித்தார். ஓதுபவரது வினை அவரது உள்ளத்தின்மேல் ஏற்றப்பட்டது.

'உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீஇருத்தி' *1*

என்பது இம் மகாகாரண பஞ்சாக்கரத்தின் மேலும்,

'அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதனால்'

என்பது மூன்றெழுத்தாய் நின்று அடுக்கிவரும் காரண பஞ்சாக் கரத்தின்மேலும் நோக்குடையன என்றல் மரபு. இதனின் மிக்க மந்திரம் இன்மையின் இதனைக் கூறும் உபநிடதமே வேத முடிவாகும் என்றார். மகாகாரண பஞ்சாக்கரத்தைச் சத்தி பரமா ஓதுங்கால் சத்தியெழுத்தை நெடிலாக ஓதுதல்வேண்டும் என்பது உய்த்துணர்ந்து கொள்க. இதனால், மேற்கூறிய வழிபாட்டின் மந்திரங்களுள் தலையாயது கூறப்பட்டது.

அந்தம் நடுவிரல் ஆதி சிறுவிரல்
வந்த வழிமுறை மாறி உரைசெய்யும்
செந்தமி ழாதி தெளிந்து வழிபடும்
நந்தி இதனை நவம்உரைத் தானே. ***#1066***

கைகளில் மோதிரவிரல், சிறுவிரல் முதலாகத் தொடங்கி வலமாகப் பெருவிரலின் நுனியால் வரைகளைத்தொட்டு உருவை எண்ணி நடுவிரலில் முடிக்கும் வகையால் மீள மீள உருவேற்றப்படும் தமிழ்மந்திரம் முதலிய மந்திரங்களை அவ்வவற்றிற் குரிய தெய்வங்களாகவே தெளிந்து வழிபடுங்கள்; (பயன் விளையும்.) இதனை எங்கள் நந்திபெருமான் நான் உணரும் வண்ணம் உரைத்தருளினார்.

விளக்கவுரை

நடுவிரலிற் சிறியவாதல்பற்றி மோதிரவிரலையும் 'சிறுவிரல்' எனப் பொதுப்படக் கூறினார். எனவே, 'தீரச் சிறியவிரல்' எனக் கூறவில்லை

என்க. கையில் உள்ள ஐந்து விரல்களில் பெருவிரல் எண்ணுவதும், ஏனை நான்கு விரல்களும் எண்ணப்படுவனவுமாய். நிற்கும். ஒவ்வொரு விரலிலும் மும்முன்று கீற்றுக்கள் உள; எண்ணப் படும் விரலின் வரைகள் பன்னிரண்டில் நடுவிரலிலும், மோதிர விரலிலும் உள்ள நடுக்கீற்று இரண்டும் எப்பொழுதும் தீண்டப்படா. 'அவையிரண்டும் சிவமும், சத்தியும்' என்பர். அவை ஒழிய ஏனைப் பத்துக் கீற்றுக்களை மோதிரவிரலின் அடிக்கீற்று முதலாகத் தொடங்கி வலமாகச் சுற்றிவந்து நடுவிரலின் அடிக் கீற்றில் முடிக்க உளவாகின்ற உருக்கள் பத்தாம். இவ்வாறு பெருவிரலின் நுனியால் மீள மீளச் சுழன்று எண்ண உருக்கள் பலவாக ஏறும். 'எட்டு' என்னும் உருவும் உண்மையில் பத்தாகவே எண்ணப்படும். அவ்வாறு எண்ணப்படுத லால் இடையில் நிகழ்ந்த குறை நிரம்பும் என்பது கருத்து. இனி எட்டு வேண்டியவிடத்துச் சிறுவிரலின் அடி தொடங்கிச் சென்று சுட்டு விரலின் அடிக்கண் முடித்தல் வேண்டும் என்பாரும் உளர்.

செபமணியிலன்றிக் கைவிரல்களால் மந்திரங்களைக் கணிக்கும் வகையில் பலவேறுமுறைகள் பலவிடத்து உள்ளன. அவற்றுள் ஒன்றனை நாயனார் விதந்தார்.

'மேற்கூறிய பத்துக் கீற்றுக்களோடு பெருவிரலில் இரண்டு கீற்றுக்களைக் கூட்டிப் பன்னிரண்டு பன்னிரண்டாக ஒன்பது முறை கணிக்க நூற்றெட்டு உருவாகும் என்பாரும், 'சிறு விரலின் அடி தொடங்கிப் பெருவிரலின் ஒரு கீற்றேகொண்டு நடுவிரல் அடிமுடியப் பத்தாகும்' என்பாரும் இங்ஙனம் பலதிறத்தர் கிரியையாளர் என்க.

தமிழ் மொழியிலும் மந்திரம் உண்மையை வலியுறுத்துபவர் இந் நாயனார் ஆதலின் 'செந்தமிழாதி' என்றார். 'செந்தமிழாதி மந்திரங் களை' என்க. 'தமிழ்' என்பது அதனாலாகிய மந்திரத்தைக் குறித்தது. தமிழ்ச் செய்யுட்கே இலக்கணம் கூறவந்த தொல்காப்பியர் அதன் செய்யுட்களை ஏழாகவகுத்து, 'அவற்றுள் ஒன்று மந்திரம்' எனக்கூறி,

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப' 1

என நூற்பாச் செய்வாராயின், அந்நூற்பாவினுள் 'மந்திரம்' என்றது வடமொழி மந்திரமே என உரைத்தல் உரையாதல் எங்ஙனம்? இந்நூற் பாக் கூறும் மந்திரம் தமிழ் மந்திரமே என்பதில் உரையாளர் யாவரும் ஒத்த கருத்தினர் ஆதலை அவர் உரைநோக்கி உணர்ந்து கொள்க. நவம் - புதுமை; அஃதாவது முன்னர் அறியாதிருந்து பின்னர் அறிதல்.

இதனால், மந்திரங்களைக் கணிக்கும் முறைகளுள் எளிதான ஒன்று இயைபு பற்றிக் கூறப்பட்டது.

இதற்குப் பிறர் இவ்வாறன்றி, வயிரவி மந்திரங்களால் கர நியாசம்

செய்யுமாறு கூறியதாகக்கொண்டு, அம்மந்திரங்களை இங்குத் தந்துரைப்பாரும், பஞ்சாக்கரத்தால் இருவைகப்படக் கரநியாசம் செய்யுமாறு கூறியதாகக் கொண்டு, அம்மந்திரத்தைத் தந்துரைப் பாரும் ஆவர். அவரெல்லாம், 'செந்தமிழாதி' என்பதற்கு, 'தமிழுக்கு முதல்வியாகிய வயிரவி' என இயைபின்றியும், 'செந்தமிழாவது ஆகமம்' எனவும் 'செந்தமிழ் மந்திரமாவது திருவைந்தெழுத்தே' எனவும் தத்தமக்கு வேண்டியவாறே உரைத்துக் கொள்வர். அவ் வுரைகளது தன்மை ஓர்ந்துணர்க.

உரைத்த நவசக்தி ஒன்று முடிய
நிரைத்த இராசி நெடுமுறை எண்ணிப்
பிரச்சதம் எட்டும்முன் பேசிய நந்தி
நிரைத்து நியதி நியமம்செய் தானே. ***#1067***

'மேல்,' 'பூரித்த பூவிதழ்' *(1067)* என்னும் மந்திரத் திற் சொல்லப்பட்ட ஒன்பது சத்திகளுள் இறுதியதாகிய 'மனோன்மனி' என்ற ஒன்று முடிவாய் நிற்க. மற்றைய எட்டினையும், வரிசைப்பட்ட எட்டு இடங்களில் வைத்துஒன்றன்பின் ஒன்றாக முறையே எண்ணிப் பிராசாத கலைகள் பன்னிரண்டில் இறுதி எட்டோடும் அவற்றை முன்னே கூறிய நந்திபெருமான், அவ்வாற்றானே வரிசைப்பட நியமிக்கப்பட்ட முறையில் வழிபாட்டு முறையை ஆக்கியருளினார்.

விளக்கவுரை

'ஆதலின் அங்ஙனமே அச்சத்திகளை வழிபடுக' என்பது குறிப்பெச்சம். இராசி - இடம். 'இராசிக்கண்' என ஏழாவது விரிக்க. 'நெடுமுறை' என்பது, 'நெடுங்கணக்கு' என்பது போல இடை யில் ஒன்று விடாது கூறுதலைக் குறித்தது. 'பிராசாதம்' என்பது எதுகை நோக்கித் திரிந்தது. 'பிரைச்சதம்' என்பதும் பாடம். 'பிராசாதம்' என்றது அதன் கலைகளை, இங்குக் குறிக்கப்பட்டது, துவாதச கலாப் பிராசாதமே, அதன் இறுதி எட்டுக்கலைகளாவன உன்மனைக்குக்கீழே உள்ளனவாம். அவை, 'விந்து, அருத்த சந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம், சத்தி, வியாபினி, சமனை என்பன. 'இவற்றிற்கு உரிய இடங்கள் ஆஞ்ஞை முதலாக மேலே உள்ளவை' என்பதை முன்னைத் தந்திரத்துள் 'கலை நிலை' என்னும் அதிகாரத் தொடக்கத்தே விளங்கக் கூறினோம். கிழக்கு முதலாக ஒரு திக்கிற்கு இரண்டாக உள்ளன என மேற்காட்டிய எட்டிதழ்களில் வாமை முதலிய எட்டுச் சத்திகளையும், பொகுட்டில் மனோன்மனியையும் வைத்து எண்ணுங்கால் விந்து, முதலிய பிராசாத கலைகளோடு ஒன்றுபட வைத்து எண்ணுதல் வேண்டும் என்பதே இம்மந்திரத்தால் கூறப்பட்டது. இவ்வாறு எண்ணு தலால் சத்தி வழிபாடு பிராசாத யோகமாயும் அமையும் என்பது கருத்து. 'எட்டோடும் நிரைத்து'

என்க. நியதி - நியமிக்கப்பட்டமுறை. நியமம் - வழிபாட்டுமுறை, செய்தான் - ஆக்கினான். சத்தியை அஃறி ணையாகக் கூறுதலும் உண்மையின் இங்கு அவ்வாறு கூறப்பட்டது.
இதனால், வயிரவி வழிபாட்டினைப் பிராசாத முறையிற் செய்யின் சிறப்பாதல் கூறப்பட்டது.

தாமக் குழலி தயைக்கண்ணி உள்நின்ற
ஏமத் திருளற வீசும் இளங்கொடி
ஓமப் பெருஞ்சுடர் உள்ளெழு நுண்புகை
மேவித் தமுதொடு மீண்டது காணே. ***#1068***

மாலையையணிந்த கூந்தலை உடையவளும், அருள் பொழியும் கண்களை உடையவளும், உயிரின் அறிவில் பொருந்திய வலிய ஆணவ இருள்போகும்படி ஞான ஒளியைப் பரப்பு கின்ற இளமையான கொடிபோல்பவளும் ஆகிய வயிரவி, வெளியில் ஓமத்தீ வடிவாயும், உள்ளே மூலாக்கினி வடிவாயும் பொருந்தி, விந்துத் தானத்து அமுதத்தோடு இருதயத்தில் வந்து நின்றதை, நீ காண்பாயாக.

விளக்கவுரை

பின்னர், உள்ளெழுதல் கூறப்பட்டமையால், முன்னர் வெளியில் எழுதல் பெறப்பட்டது. மூலாக்கினி கருத்துப் பொருளா தலின், அதனை நுண்ணிதாகக் கூறியதோடு 'புகை' எனவும் கூறினார். 'மேவி' என்பது ஈறுகெட்டு நின்றது, 'விந்து' என்பது வலித்தல் பெற்றது.
இதனால், சத்தி வழிபாட்டினைப் புறத்தும், அகத்தும் அழலோம்பல் முறையால் செய்க என்பது கூறப்பட்டது.

காணும் இருதய மந்திரமும் கண்டு
பேணும் நமஎன்று பேசும் தலைமேலே
வேணு நடுவு மிகநின்ற ஆகுதி
பூணும் நடுவென்ற வஞ்சஞ் சிகையே. ***#1069***

இருதய மந்திரமும், சிரோமந்திரமும் 'நம:' என்னும் முடிபினை உடையன. சிகா மந்திரமும் 'வஷட்; என்னும் முடிபினை உடையது.

விளக்கவுரை

'இருதய மந்திரமும் 'நம' என்று கண்டு பேசும்; தலை மேல் 'மந்திரமும்' 'நம' என்று கண்டு பேசும், சிகை 'வம்சம்' என முடிவு கொள்க. 'மந்திரமும்' என்பது, 'தலைமேல்' என்பதனோடும் சென்று இயையும். 'வம்,சம்' என்பன வகாரத்தையும், ஷகாரத்தையும் குறித்து 'வஷட்' என்பதை உணர்த்தின. 'பேசும்' என்பது, 'பேசப் படும்' என்னும் பொருளது. 'வேணு நடுவு மிக நின்ற ஆகுதி பூணும் நடு என்ற' என்றது, 'மூங்கிற் குழல்போலும் சுழுமுனை நாடியின் உள்ளே ஓங்குகின்ற

மூலாக்கினியை எதிரேற்றுக்கொள்கின்ற நடுவிடமாகிய உச்சிக்கு உரியது எனப்பட்ட சிகை வம்சம், என்றவாறு.

சிகைநின்ற அந்தம் கவசம்கொண் டாதி
பகைநின்ற அங்கத்தைப் பட்டென்று மாறித்
தொகைநின்ற நேத்திரம் முத்திரை சூலம்
வகைநின்ற யோனி வருத்தலும் ஆமே. ***#1070***

சிகா மந்திரத்தில் உள்ள 'வஷட், என்னும் முடிபு சிறிது வேறுபட்ட 'வௌஷட்' என்பது கவச மந்திரத்திற்கும், 'பட்' என்பது அத்திர மந்திரத்திற்கும் முடிபாகும். நேத்திரங்கட்குரிய மந்திரத்திற்கு, பொதுவாயுள்ள, 'நம:' என்பதே முடிபாம். நேத்திர நியாசத்தில் திரிசூல முத்திரை காட்டல் வேண்டும். சத்தி வழிபாட்டில் யோனி முத்திரை காட்டலும் பொருந்தும்.

விளக்கவுரை

இவ் இரண்டு மந்திரங்களிலும் எடுத்துச் சொல்லப் பட்டவை, 'இருதயாய நம:, சிரசே நம:, சிகாயை வஷட், கவசாய, வௌஷட், அஸ்த்ராய பட், நேத்ரோப்யோந் நம:' என்னும் அங்க மந்திரங்கள் ஆறுமாம். 'கொண்டு' என்பதை, 'கொள்ள' எனத் திரிக்க 'பகை நின்ற' என்பது, 'பகைக்கு - பகையை அழித்தற்கு - நின்ற, என்றவாறு, ஆதி - வயிரவி. 'ஆதியிடத்து நின்ற' என்க, 'பாரென்று' என்பது பாடம் அன்று. தொகை - பொது 'நேத்திரம் தொகையோடு நின்றன' என மாறிக் கூட்டுக. 'நின்றன' எனப் பன்மை கூறியதனால் அது பன்மை வாசகமாகச் சொல்லப்படுதல் கொள்க. 'வருவித்தல்' என்பது இடைக் குறைந்து, 'வருத்தல்' என நின்றது. 'சிரோ மந்திரம் சுவஹாந்த மானது', என்பாரும் உளர். 'நம:' பொதுவாக எல்லாவற்றிற்கும் உரியதே. அஃது ஒன்றே பட இம்மந்திரங்கட்குப் பொருளுரைப் பாரும் உளர். அவர், 'வம்சம்' என்பதையும், 'அந்தம்' என ஓதித் தமக்கு வேண்டியவாறு உரைத்துப் போவர்.

இவ் இரண்டு மந்திரங்களாலும் அங்க மந்திரங்கள் கூறப்பட்டன, வழிபாட்டில் இவை அங்க நியாசத்திற்கும், பிறவற்றிற் கும் பயன்படுதல் கருதி.

சம்மிதா மந்திரங்களுள் பிரம மந்திரம் ஐந்தும் சத்தி வழிபாட்டில் சத்திக்கு ஏற்பச்சொல்லப்படும். அங்கமந்திரங்கள் அவ்வாறன்றி எவ்விடத்தும் ஒருபெற்றியவாயே வரும் என்க.

வருத்தம் இரண்டும் சிறுவிரல் மாறிப்
பொருத்தி அணிவிரல் சுட்டிற் பிடித்து
நெரித்தொன்ற வைத்து நெடிது நடுவே
பெருத்த விரல்இரண் டுள்புக்குப் பேசே. ***#1071***

கைகளை உள்முகமாகக் கொண்டு முயற்சியோடு சிறுவிரல் இரண்டையும் ஒன்றின்மேல் ஒன்றாக மாறி வைத்து அணிவிரல்களையும் அவ்வாறே சுட்டு விரல்களால் மாறிப்பிடித்து மோதிர விரல்களின் மேல் நீண்டதாகிய நடுவிரல் ஒவ்வொன்றையும் நிமிர்த்திப் பொருந்த வைத்துப் பெருவிரல் இரண்டையும் மாற்றமின்றி உள்ளே புகச் செய்தபின், நேத்திர மந்திரத்தைச் சொல்லுக.

விளக்கவுரை

இவ்வாறு அமைப்பது யோனிமுத்திரையாம். இது பஞ்சமுக முத்திரையினின்றும் சிறிதே வேறுபடுதல் அறிக. மாறி வைக்கப்பட்ட சிறு விரல்களைப் பின் நடு விரல்களின் மேல் சார்த்த வேண்டுதல் காண்க. மேற்கூறிய இரண்டில், 'திரிசூல முத்திரை நன்கு அறியப்பட்டது' என்னும் கருத்தால். ஏனை ஒன்றன் அமைப்பையே கூறினார். சிலர் வலக்கையில் உள்ள சிறுவிரலைப் பெருவிரலால் வளைத்துப்பிடித்து அவற்றின் நடுவில் உள்ள மூன்று விரல்களை நிமிர்த்திக் காட்டும். ஆக்ரகண்ட முத்திரையையே 'நேத்ர முத்திரை' என்றும், 'திரிசூல முத்திரை' என்றும் கொள்வர். எனினும், இரு கை விரல்களையும் நன்கு கோத்துப் பிடித்துச் சிறுவிரல்கள், நடுவிரல்கள், பெருவிரல்கள் என்பவற்றை நிமிர்த்தித் தம்முள் பொருந்த வைத்துக் காட்டுவதே திரிசூல முத்திரை என்க.
'வருத்தத்தோடு சிறுவிரல் இரண்டும் மாறிப் பொருந்தி' எனவும், 'நெடிதாகிய நடுவை நெரித்து ஒன்ற வைத்து' எனவும் கூட்டுக.
'புக்கபின்' என்பது, 'புக்கு' எனத் திரிந்தது.
இதனால், அரிதில் அறியப்படுவதொரு முத்திரையை அமைக்குமாறு கூறப்பட்டது.

பேசிய மந்திரம் இகாரம் பிரித்துரை
கூச மிலாத சகாரத்தை முன்கொண்டு
வாசிப் பிராணன் உபதேச மாகைக்குக்
கூசிய விந்து வுடன்கொண்டு கூவே. ***#1072***

சத்தி வழிபாட்டில் பிராண வாயு வசப்படுதற்கு உரியதாகிய உபதேசத்திற்குச் சொல்லப்பட்ட மந்திரமாவது, இகர உயிர், அம்ச மந்திரத்தினின்று பிரித்துத் தனியே தயக்கம் இல்லாமல் சொல்லப்படுகின்ற சகர மெய்யை முன்னர்க் கொண்டு, இறுதியில், முடித்துச் சொல்லப்படும் விந்துவாகிய மகாரத்தையும் ஏற்று நிற்கச் சொல்லப்படுவதாம்.

விளக்கவுரை

எனவே, 'சிம்' என்பதே அம்மந்திரமாதல் அறிக. மூன்றாம் அடியை

முதற்கண்வைத்து உரைக்க. 'மந்திரம்' என்னும் வட சொல்லில் 'இகரம் சகாரத்தை முன்கொண்டு' என்க. இங்கு, 'முன்' என்பது, புணர்ச்சிவிதிகளின் முறைப்படி, 'இடமுன்' என்க. வாசிப் பிராணன் - யோக நூல்களில் 'வாசி' எனவழங்கும் பிராணன். 'பிராணனுக்கு' என்னும் நான்காவது தொகுத்தலாயிற்று, கூசுதல், இங்கு, அடங்கு தலின் மேற்று. 'கூவு' என்னும் முதனிலைத் தொழிற் பெயர் ஆகு பெயராய்ச் செயப்படுபொருள் மேல் நின்றது. இனி ஏவல் முற்றாக்கி, அது கருத்து வகையால் பெயர்ப் பயனிலையாய் நின்றதாக உரைத்தலுமாம்.

இதனால், சத்தி வழிபாட்டில் கொள்ளப்படும் பிராணாயாம மந்திரம் கூறப்பட்டது.

கூவிய சீவன் பிராணன் முதலாகப்
பாவிய சவ்வுடன் பண்ணும் மகாரத்தை
மேவிய மாயை விரிசங்கு முத்திரை
தேவி நடுவுள் திகழ்ந்துநின் றாளே. ***#1073***

மேற்சொல்லிய பிராணாயாம மந்திரத்தைச் சொல்லிப் பிராணாயாமம் செய்த அடியவன், பின்பு மாயையின் அடையாளமாகக் காட்டுகின்ற சங்க முத்திரையின் நடுவில் சத்தி விளங்கி நிற்பாள்.

விளக்கவுரை

முதல் இரண்டடிகள் அனுவாதம். கையை நிமிர்த்திப் பெருவிரல் தவிர மற்றைய நான்கு விரல்களையும் சேர்த்து நீட்டிச் சிறிது வளைத்துப் பெருவிரலை வளைத்து அதன் நுனி சுட்டுவிரலின் அடியில் பொருந்த வைப்பதே சங்க முத்திரையாம். 'இது மாயையின் விரிவைக் குறிக்கும்' என்பது இங்குக் கூறப்பட்டது. இம்முத்திரை தேவர்கட்கும், தேவகணங்கட்கும் செய்யும் தர்ப்பணத்திற்குக் கொள்ளப் படுவது. இதனால் விரல் நுனிகளின்வழிச் செல்லும் நீர் 'தேவதீர்த் தம்' எனப்படும். 'கணபதி, கந்தர், தேவர், நந்தி, மகாகாளர், பிருங்கி, இடபர், சண்டர்' என்னும் இவர்களுக்கும் இவ்வாறே தர்ப்பணம் செய்யப்படும் ஆகையால், 'சங்க முத்திரையின் நடுவில் தேவி விளங்கு வாள்' என்றார். எனவே, 'பிராணாயாமத்தின் வழியான தியானம், செபம் இவைகளோடு தேவிக்குத் தர்ப்பணமும் செய்க என்றாராயிற்று.

'கூவிய சீவன்' என்பதை மூன்றாம் அடியின் முதற்கண் வைத்து, 'மாயையாக விரிக்கின்ற சங்க முத்திரை நடுவுள் தேவி திகழ்ந்துநின்றாள்' என முடிவுசெய்க.

இதனால், சத்தியது தர்ப்பணம் விதிக்கப்பட்டது.

நின்ற வயிரவி நீலி நிசாசரி
ஒன்றும் இரண்டும் ஒருங்கிய உள்ளத்துச்

சென்றருள் நாயகி தேவர் பிரானுக்கே
நன்றருள் ஞாலத்து நாடிடும் சாற்றியே. *#1074*

துன்பத்தை நீக்க முன்னிற்கும் வயிரவி நீல நிறத்தை உடையவள்; இரவில் உலாவுபவள்; மனமாகிய ஒன்றும், வாக்கும் காயமுமாகிய ஏனை இரண்டும் ஒருவழிபட்டோரது உள்ளத்தில், தானே விளங்கி அருள்புரிபவள்; சிவபிரானுக்கே உரியசத்தி; அவளைத் துதித்து, அவளது நல்ல திருவருளை இவ்வுலகத்தில் பெற விரும்புங்கள்.

விளக்கவுரை

இரவில் உலாவுதல் தீயவரை ஒறுத்தற்கு. 'மனம்' என்பதும், 'உள்ளம்' என்பதும் வேறு வேறாதலை அறிக. 'தேவர் பிரானுக்கு நாயகி' என்றது, 'வயிரவி சிவசத்தியே' என்பதனை வலி யுறுத்தியதாம். இத்தொடர் ஒருபெயர்த்தன்மைப்பட்டு, 'சென்றருள்' என்பதனோடு வினைத்தொகையாகத் தொக்கது. 'நன்றாகிய அருள்' என்க. 'ஞாலத்து நாடிடும்' என்றது, 'உலகில் பகை முதலிய துன்பங்கள் நீங்கி வாழலாம்' என்றவாறு.

இதனால், வயிரவி வழிபாடு உலகில் வரும் துன்பங்களை நீக்குவதாதல் கூறப்பட்டது.

சாற்றிய வேதம் சராசரம் ஐம்பூதம்
நாற்றிசை முக்கண்ணி நாடும் இருள்வெளி
தோற்றும் உயிர்ப்பன்மை சோதி பராபரை
ஆற்றலொ டாய்நிற்கும் ஆதி முதல்வியே. *#1075*

முக்கண்ணியும், சோதி (ஒளி) வடிவானவளும், பராபரையும், 'ஆதி' என்னும் பெயரொடு முதல்வியாய் நிற்பவளும் ஆகிய வயிரவி தனது ஆற்றலால் வேதம் சராசரப் பொருள்கள், ஐம்பூதம், நான்குதிசை, இருள், ஒளி, பலவகை உடம்புகளாய்த் தோன்றுகின்ற பல உயிர்கள் முதலிய எல்லாமாய் நிற்கின்றாள்.

விளக்கவுரை

மேல், 'திரிபுரை' எனப்பட்ட அவளே இங்கு, 'வயிரவி' எனப்படுகின்றாள் என்பது உணர்த்துதற்கு முன்னை யதிகாரத்தில், 'வைத்த பொருளும்' *(1042)* என்னும் மந்திரத்திற் கூறியதனையே இங்கும் கூறினார். பர+ அபரை = பராபரை; மேலாய பொருளும், கீழாய பொருளுமாய் நிற்பவள். ஒடு உருபு ஆனுருபின் பொருளில் வந்தது.

இதனால், வயிரவி உலகப் பயனைத் தருதற்கு உரியவள் ஆமாறு குறிப்பால் உணர்த்தப்பட்டது.

ஆதி வயிரவி கன்னித் துறைமன்னி
ஓதி உணரில் உடலுயிர் ஈசனாம்

பேதை உலகில் பிறவிகள் நாசமாம்
ஓத உலவாத கோலம்ஒன் றாகுமே. *#1076*

தென்கோடியாகிய குமரித்துறையில் நிலைபெற் றிருப்பவளும் எப்பொருட்கும் ஆதியுமாகிய வயிரவியைத் துதித்தும், தியானித்தும் நின்றால், உடலில் உள்ள உயிர் சிவமாகும். அறியாமை பொருந்திய இவ்வுலகில் பலவாறு பிறக்கும் பிறவிகள் ஒழியும். அவளது வடிவு எண்ணிறந்த வகையினது ஆகலின், அஃது ஒன்றாயே இருத்தல் கூடுமோ!

விளக்கவுரை

எவ்விடத்தும் சிவமும், சத்தியும் பிரிப்பின்றியிருப் பினும், சிலவிடத்துச் சிவத் தன்மையும், சிலவிடத்துச் சத்தித் தன்மை யும் முனைந்து தோற்றும். அவ்வாற்றால் வடக்கில் கயிலைமலை, சிவ மலையாகின்றது. அதுபோலத் தெற்கில் 'குமரி' என்னும் மலை சத்தி மலையாய் இருந்தது. காலவேறுபாட்டால் அம்மலையைக் கடல் தன்னுள்ளே அகப்படுத்து வடக்கில் மிகப்பரந்து நின்றமையின், அதன் வடகரையில் சத்திகுமரியாய் எழுந்தருளியிருக்க, அக் கடல் முனை யும் 'குமரி முனை' எனப் படுவதாயிற்று. அவ்விடம் சிவனுக்குக் கயிலைபோல, உமைக்கு மிகச் சிறந்த இடமாதலை உணர்த்தற்கு வயிரவியை, 'கன்னித் துறைமன்னி' என்றார். இறையன்புடையோர் யாவரும் கயிலையை அணுகிக் காணலையும், குமரி தீர்த்தத்தில் (கடலில்) முழுகுதலையும் ஒருபெற்றியவாக மேற்கொள்ளல் இன்றும் நிகழ்வது. இதனால், ஒரு கருத்துப் பற்றிச் சிவனை, மேல், *(1061, 62)* 'தென்னன்' எனக் குறித்த நாயனார், தேவியை இங்கு, 'கன்னித் துறை மன்னி' என்றார். பின்னரும், *(1088)* 'இனிய தென்மூலை இருக்கும் குமரி' என்பார். 'நல் ஆவடு தண்டுறை ஆவின் கிழத்தி' *(1105)* எனவும் கூறுவார். பாயிரத்திலும், 'சிவன் ஆவடு தண்டுறை சீருடையாள்' *(17)* என்றார். 'மன்னி' என்பது பெயர். இதில் ஐயுருபு தொகுத்தலாயிற்று. கன்னித் துறையைப் பிறரெல்லாம் உருவகமாக்கித் தாம் தாம் வேண்டும் பொருளை உரைப்பர். 'சத்தியது வடிவு ஒன்றாகாது பலவாதல் செயல் வேறுபாடு நோக்கியாதலின், அவற்றை அவ்வாறே கொள்க' என்பார், 'ஓத உலவாத கோலம் ஒன்றாகுமே' என்றார். ஏகாரம் எதிர்மறை வினா. இதனால், வயிரவி சிவ சத்தியேயாதல் இங்கும் தெளிவிக்கப்பட்டது.
இதனால், வயிரவி வழிபாடு வீடுபேற்றினையும் தருதல் கூறப்பட்டது.

கோலக் குழலி குலாய புருவத்தள்
நீலக் குவளை மலரன்ன கண்ணினாள்
ஆலிக்கும் இன்னமு தானந்த சுந்தரி
மேலைச் சிவத்தை வெளிப்படுத் தாளே. *#1077*

'அழகிய கூந்தல், வளைந்த புருவம்' நீல நிறத்தை உடைய குவளை மலர்போலும் கண்கள்' களிப்பைத் தருகின்ற இனிய அமுதம் போன்ற ஆனந்தமே உருவான அழகிய வடிவம், இவைகளை உடைய வயிரவியே எப்பொருட்கும் மேலான சிவத்தை உயிர்கட்கு வெளிப்பட்டுத் தோன்றச் செய்தாள்.

விளக்கவுரை

'சத்தி வழியாக அன்றிச் சிவத்தை நேரே காணுதல் இயலாது' என்பது தோன்ற, நேரே சென்று காணுதலினின்றும் பிரித்த, 'சுந்தரியே' என்னும் பிரிநிலை ஏகாரம், தொகுத்தலாயிற்று. அவ் ஏகாரத்தை இரட்டுற மொழிந்து தேற்றேகாரமாக்கி, 'உலகப் பயனைத் தருகின்ற வயிரவியே மெய்ப் பயனையும் தருகின்றாள்' என்பது கொள்க. மெய்ப்பயன் கருதி வழிபடுவோர் அவளைச்சாந்த ரூபியாகக் கண்டு வழிபடுக என்பார், 'கோலக் குழலி' என்பது முதலாக உடம் பொடு புணர்த்துக் கூறினார். இதனால், வயிரவியையே சாந்த ரூபியாகக் கண்டு வழி பட்டுப் பேரின்பத்தினைப் பெறுதல் கூடுவதாதல் கூறப்பட்டது.

வெளிப்படு வித்து விளைவறி வித்துத்
தெளிப்படு வித்தென்றன் சிந்தையி னுள்ளே
களிப்படு வித்துக் கதிர்ப்படு சோதி
ஒளிப்படுவித்தென்னை உய்யக்கொண் டாளே. *#1078*

முன்னே சிவத்தை வெளிப்படுவித்துக் காணச் செய்து, பின் அக்காட்சியின் பயனாக முற்றறிவையும், முற்றறிவின் பய னாகத்தெளிவையும், தெளிவின், பயனாக இன்ப அனுபவத்தையும், அவ்வனுபவத்தின் பயனாக, சிவத்தைவிட்டு நீங்காது அதனுள்ளே அடங்கியிருத்தலையும் முறையே பெறச் செய்து என்னை உய்யக் கொண்டாள் வயிரவி.

விளக்கவுரை

இதனால் சத்தி மெய்ப்பயனைத் தரும் முறை, நிரல்படக் கூறப்பட்டது.

கொண்டனள் கோலம் கோடி அனேகங்கள்
கண்டனள் எண்ணெண் கலையின்கண் மாலைகள்
விண்டனள் மேலை விரிகதிர் மூன்றையும்
தண்டலை மேல்நின்ற தையல்நல் லாளே. *#1079*

வணங்குவாரது உச்சிமேல் நிற்பவளாகிய 'வயிரவி' என்னும் நல்ல சத்தி, அளவிறந்த வடிவுகளைக் கொண்டாள், கொண்டு, அக இருளை நீக்குதற்கு 'அறுபத்து நான்கு' எனப்படும் கலைத்துறைகள் அனைத்திலும் நூல்களை ஆக்கினாள். புற இருளைப் போக்குதற்கு வானத்தில் விளங்கும் ஞாயிறு, திங்கள், தீ என்னும் மூன்று ஒளிகளையும்

படைத்தாள்.

விளக்கவுரை

'உயிர்களின் பொருட்டு அவள் அளித்தன தாம் பல, என்றவாறு.
'அதனால், அவளை மறாவது வழிபடுதல் உயிர்கட்குக் கடன், என்பது குறிப்பெச்சம். மாலை, மொழிமாலை. விண்டனள் - தோற்றுவித்தாள். தண்மை - தணிவு; வணக்கம். வணங்குவாரது தணிவு, அவரது தலைமேல் ஏற்றிச் சொல்லப்பட்டது.
இதனால், சத்தியது உதவியை உயிர்கள் மறக்கலாகாமை கூறப்பட்டது.
'அவளால் வந்த ஆக்கம் இவ் வாழ்க்கை யெல்லாம்' *1*
எனச் சிவஞானச்சித்தி கூறும்.

தையல்நல் லாளைத் தவத்தின் தலைவியை
மையலை நூக்கும் மனோன்மனி மங்கையைப்
பையநின் றேத்திப் பணிமின் பணிந்தபின்
வெய்ய பவம்இனி மேவகி லாவே. ***#1080***
(இதன் பொருள் வெளிப்படை.)

விளக்கவுரை

'பைய' என்றது, 'இயன்ற அளவு' என்றவாறு, அவளது பெருமை முழுவதையும் அறிந்து துதித்தலும், அப்பெருமை யளவிற்குத் தக வழிபடுதலும் ஒருவர்க்கும் கூடாமையின் 'பைய' என்றார். 'மலையளவு சுவாமிக்குக் கடுகளவு கர்ப்பூரம்' என்பது பழமொழி.
'ஏழை அடியார் அவர்கள் யாவைசொன
சொல்மகிழும் ஈசன்' *2*
என்பதில் ஞானசம்பந்தர். அடியார்களை, 'ஏழை அடியார்' என்றருளிச் செய்ததும் இக்கருத்துப் பற்றி,
'யானறி யளவையின் ஏத்தி ஆனாது
நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி உள்ளி வந்தனென்' *3*
என்றார் முருகாற்றுப்படையிலும், நூக்குதல் - போக்குதல். பவம் - பிறப்பு.
இதனால், சத்தியது பெருமையும், உயிர்களது சிறுமையும் கூறுமுகத்தால், உயிர்கள் அவளை வழிபடும் கடப்பாடுடையன வாதல் கூறப்பட்டது.

வேயன தோளி விரையுறு மென்மலர்
ஏய குழலி இளம்பிறை ஏந்திழை
தூய சடைமுடிச் சூலினி சுந்தரி
ஏயென துள்ளத் தினிதிருந் தாளே. ***#1081***

[இதன் பொருள் வெளிப்படை.]

விளக்கவுரை

வேய் - மூங்கில். விரை - நறுமணம். ஏய - பொருந்திய. குழல் - கூந்தல். *'பிறையைச் சூடிய ஏந்திழை'* என்க. பிறைசடையில் உள்ளது. சூலினி - சூலத்தை ஏந்தியவள். ஏய் உள்ளம் - தான் இருத் தற்குப் பொருந்திய உள்ளம்; அஃதாவது, அறிவும், அன்பும் நிரம்பிய உள்ளம். *'சுந்தரி'* என்பதை *'குழலி'* என்பதன் பின்னர்க் கூட்டி, அது காறும் ஒருவகைக் கோலமும், பின், *'சூலினி'* என்பது காறும் வேறொரு வகைக் கோலமும் ஆக இருவேறு வடிவங்களைக் கூறினமை கொள்க. முன்னது அமைதிக்கோலமும், பின்னது கடுமைக் கோலமுமாதல் அறிக. எழுவாய் அதிகாரத்தால் வந்து இயைந்தது.

இது முதல் ஐந்து மந்திரங்களால் சத்தி தமக்கு அருள் புரிந்த வாறு கூறினார் என்க.

இனியதென் மூலை இருக்குங் குமரி
தனியொரு நாயகி தானே தலைவி
தனிப்படு வித்தனள் சார்வு படுத்து
நனிப்படு வித்துள்ளம் நாடிநின் றாளே. ***#1082***

தென்கோடியில் உள்ள இனிய கடற்கரையில் எழுந் தருளியிருக்கும் குமரியாகிய வயிரவி, தன்னோடு இணை ஒருவர் இல்லாத ஒப்பற்ற தலைவி; அதனால், அவள் ஒருத்தியே உலகத்திற்கு முதல்வி. அவள் என்னை உலகச் சார்பினின்றும் நீக்கித் தனியனாகச் செய்து, பின் தனது துணைமையில் இருக்கவைத்து, இன்பத்தை மிக உண்டாக்கி, இவ்வாறு என் உள்ளத்தில் நின்று பயனளித்தாள்.

விளக்கவுரை

மேல் *(1082)* *'கன்னித்துறை'* என்பதனை உருவக மாக்கி உரைத்தாரும், இங்கு, *'தென் மூலை'* என்றதற்கு அவ்வாறு உரைத்தலில் திட்பங் கொள்ளாது நெகிழ்ந்து, இப்பொருளையே கருதுவாராயினார். *'நனிபடுவித்து'* என்பதில் பகர மெய் விரித்தல். படுவித்தலுக்குச் செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது.

நாடிகள் மூன்றுள் நடுவெழு ஞாளத்துக்
கூடி யிருக்கும் குமரி குலக்கன்னி
பாடகச் சீறடி பைம்பொற் சிலம்பொலி
ஊடகம் மேவி உறங்குகின் றேனே. ***#1083***

'இடை, பிங்கலை, சுழுமுனை' என்னும் மூன்று நாடிகளுள் நடுவிலே ஓங்குகின்ற நாளம் போல்வதாகிய சுழுமுனை நாடியுள்ளே பொருந்தி நின்ற, இளையவளும், கன்னிகையும் ஆகிய சத்தியது பாடகம் அணிந்த

சிறிய பாதத்திலே உள்ள பசிய பொன்னா லாகிய சிலம்பினது ஒலி அந்த நாடிக்குள்ளே ஒலித்துக் கொண்டிருக் கவும் அதனைக் கேட்கமாட்டாமல் உறங்குகின்றேன் என்றால், எனது அறியாமையை என்னென்பது.

விளக்கவுரை

'ஊடகம்' என்பதை, 'அகத்தூடு' என மாற்றிக் கொள்க. 'மேவி' என்பது 'மேவ' என்பதன் திரிபு. 'மேவியும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. 'உறங்குகின்றாளே' என்பது பாடம் ஆகாமை. அடுத்த மந்திரத்தின் முதலடியால் விளங்கும். 'உயிரின் உறக்கத்திற்குக் காரணம் குண்டலியின் உறக்கமே' என்பது மேல் பலவிடத்தும் கூறியவாற்றால் அறியக் கிடத்தலின், அதனை இங்கு உய்த்துணர்ந்து கொள்ள வைத்தார். எனவே, 'யோக முயற்சியால் மூலாக்கினியை எழுப்பி, அதனால் குண்டலியைத் துயில் உணரச் செய்தவழியே அச்சிலம்பொலியைக் கேட்டல் கூடும்' என்பது போந்தது. அங்ஙனம் கேட்குமாறு நடு நாடியிற் பொருந்தியிருத்தலே சத்தியானவள் உயிருக்கு அளிக்கும் கருணையாதல் விளங்கும்.

உறங்கு மளவில் மனோன்மனி வந்து
கறங்கு வளைக்கைக் கழுத்தாரப் புல்லிப்
பிறங்கொளித் தம்பலம் வாயில் உமிழ்ந்திட்
டுறங்கல்ஐ யாஎன் றுபாயஞ்செய் தாளே. ***#1084***

மேற் கூறியவாறு யான் உறங்கிக் கொண்டு இருக்கும் பொழுது மனோன்மனியாகிய சத்தி வந்து, ஒலிக்கின்ற வளையணிந்த தனது கைகள் என் கழுத்திற் பொருந்தும்படிக் கட்டிக்கொண்டு, விளங் குகின்ற ஒளியை உடைய தம்பலத்தை என் வாயில் உமிழ்ந்து உடனே 'யான் சிறிது விழித்தபொழுது, ஐயா உறங்கியே காலத்தைக் கழிக் காதே' என்று சொல்லி, உறக்கம் வாராதிருத்தற்கு வழியும் செய்தாள்.

விளக்கவுரை

'கழுத்தாரப் புல்லியது, உலக உணர்வை மாற்றி அருட் சத்தியாய்ப் பதிந்தமை' எனவும், 'தம்பலத்தை வாயில் உமிழ்ந்தது, உணர்வின்கண் விழிப்பை உண்டாக்கியது' எனவும் 'உபாயத்தைச் செய்தது யோக முயற்சியை உண்டாக்கியது' எனவும் ஒட்டணி வகையால் உணர்ந்துகொள்க.

'கறங்கு வளைக் கை' என்றதும் விழிப்பைத் தரும் செயலை மேற்கொண்ட ஆற்றலையேயாம். 'யோகத்திற் செலுத்தும் சத்தி நிபாத நிலையை இங்ஙனம் நயம்படக் கூறுதல் சித்தர்மரபு' என்பது இதனாற் பெறுதும். பெறவே, இம்மரபுணராது, வாம மார்க்கத்தார் இதற்குச் சிற்றின்பப் பொருளே கொண்டு, குழியை வழியாக மயங்கி வீழ்வர்

என்பது விளங்குவதாம்.

உபாயம் அளிக்கும் ஒருத்திஎன் உள்ளத்
தபாயம் அறக்கெடுத் தன்பு விளைத்துச்
சுவாவை விளக்கும் சுழியகத் துள்ளே
அவாவை யடக்கிவைத் தஞ்சல்என் றாளே. **#1085**

எல்லாவற்றுக்கும் வழியைத் தருகின்ற ஒப்பற்றவள் ஆகிய சத்தி எனது மனத்தில் உண்டாகின்ற தீங்குளையெல்லாம் அறவே போக்கி, அவ்விடத்தில் அன்புவிளையச் செய்து, நல்லாள் ஆகிய குண்டலியை விளங்கச் செய்கின்ற சுழுமுனை நாடியினுள்ளே எனது மனத்தை ஒடுங்கப் பண்ணி 'இனி நீ எதற்கும் அஞ்சவேண்டா' என்று என் அச்சத்தை நீக்கியருளினாள்.

விளக்கவுரை

'சுபா' என்பது 'சுவா' எனத் திரிந்தது. சுபா - சுபை; நல்லவள். துயிலுணர்ந்தாளாயின் எல்லா நலன்களையும் தருதல் பற்றிக் குண்டலியை 'நல்லாள்' என்றார். அவாவுதலைச் செய்து அதனால் தீங்கு விளைக்கின்ற மனத்தை 'அவா' என்றார், ஆகு பெயரால். இதன்கண் ஈரடி எதுகை வந்தது. இது வருதற்பொருட்டே 'சுபா' என்பதை, 'சுவா' எனத் திரித்து ஓதினார்.

அஞ்சொல் மொழியாள் அருந்தவப் பெண்பிள்ளை
செஞ்சொல் மடமொழி சீருடைச் சேயிழை
தஞ்சம்என் றெண்ணித்தன் சேவடி போற்றுவார்க்
கின்சொல் லளிக்கும் இறைவிஎன் றாரே. **#1086**

'சத்தி தனது திருவடியையே தஞ்சமாகக் கருதிப் போற்றுபவர்க்கே அருள்புரியும் இறைவியாவாள்' என்று அறிந்தோர் சொல்லுவர்.

விளக்கவுரை

முதல் இரண்டு அடிகள் சத்தியின் இயல்புகளை விரித்தவாறு. 'அஞ்சொல் மொழி, செஞ்சொல் மொழி' என்பவற்றை, 'இடைச்சொற் கிளவி, உரிச் சொற்கிளவி' *1* என்றாற்போலக் கொள்க. சத்தி தவம் செய்தல், ஆட்டுவான் ஆடிக்காட்டுதல் போல்வதாம். செஞ்சொல் - என்றும் செவ்வே நிற்கின்ற (மாறுபடாத) சொல். மடப்பம் - இளமை; இது பெண்மையியல்பு. சீர் - அழகு. சேயிழை - நன்கமைந்த ஆபரணம். மடமொழி, சேயிழை என்பன அன்மொழித் தொகைகள். இன்சொல், அருளின் அடையாளம். 'போற்றுவார்க்கே' என்னும் பிரிநிலை ஏகாரம், தொகுத்தலாயிற்று. போற்றுவார்க்கு அருளல் கடனாதலின், பிறர்க்கு அருளாமை கோட்டமன்றாம்.

'சலமிலன்; சங்கரன்; சார்ந்தவர்க்கலால் நலமிலன்' 2

எனவும்,
'*சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்*
சார்ந்தாரைக் காத்தும் சலமிலனாய்' 3
எனவும் போந்தவற்றையும் காண்க.
இதனால், 'சத்தியைப் போற்றுகின்றவரே, அவளது அருளைப் பெறுதற்கு உரியர்' என்பது கூறப்பட்டது.

ஆருயி ராயும் அருந்தவப் பெண்பிள்ளை
காரியல் கோதையள் காரணி நாரணி
ஊரும் உயிரும் உலகும் ஒடுக்கிடும்
கோரிஎன் உள்ளங் குலாவிநின் றாளே. ***#1087***

சத்தியானவள், அரிய உயிர்களின் பக்குவங் களையே எப்பொழுதும் நோக்கி நிற்பவளாதலின், இயல்பிலே அவள் ஞானத்தைத் தருகின்ற சாந்த ரூபியாயினும், உயிர்களது அபக்குவ நிலைபற்றிப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் துன்பத்திற்கு ஏதுவான தொழில்களைச் செய்பவளாகின்றாள். எனினும், என் உள்ளத்தில் அவள் சாந்தரூபியாயே விளங்கு கின்றாள்.

விளக்கவுரை

'அருந்தவம்' என்பது அதன் பயனாகிய ஞானத்தின் மேல் நின்றது. காரியல் - மேகம் போன்ற. கோதை, அதனை அணிந்த கூந்தலை உணர்த்திற்று. இது சாந்த வடிவத்தைக் குறித்தவாறு. காரணி - தோற்றத் திற்குக் காரணமாய் இருப்பவள்; படைப்பவள், 'நாரணி' என்றது, 'காப்பவள்' என்றவாறு, ஊர்தல் - உலாவுதல். 'ஊர் - உடம்பு' என்பாரும் உளர். 'ஊரும் உயிரும் உலகும்' என்றது தாப்பிசையாய் முன்னும் சென்று இயையும். கோரி - கோரம் உடையவள். கோரம் - கொடுமை. இதனால், சத்தி உயிர்களின் பொருட்டு முத்தொழில் செய்தலைக் கூறுமுகத்தால், வயிரவி அச்சத்தியாதல் கூறப்பட்டது.

குலாவிய கோலக் குமரிஎன் னுள்ளம்
நிலாவி யிருந்து நெடுநாள் அணைந்தும்
உலாவி யிருந்துணர்ந் துச்சியி னுள்ளே
கலாவி யிருந்த கலைத்தலை யாளே. ***#1088***

மேற்கூறியவாறு என் உள்ளத்திலே மகிழ்ச்சியோடு இருக்கின்ற அந்தச் சத்தி அவ்வாறு அளவற்ற காலங்கள் இருந்தும் நீங்குதல் இல்லாதவளாய், நான் பிராசாத யோகத்திலே உழன்று நின்ற பொழுது அதன் கலைகளில் முடிவானதற்கு இடமாகிய துவாத சாந்தத்தில் பொருந்தி நிற்பவளாயினாள்.

விளக்கவுரை

'இஃது அவளது கருணையிருந்தவாறு' - என்பது குறிப்பெச்சம். 'உணர்ந்தவழி' என்பது 'உணர்ந்து' எனத் திரிந்து நின்றது. பிராசாத கலையில் முடிவாயுள்ளது உன்மனை. தலை - முடிவில் உள்ளது. இதனால், அவளது பேரருள் கூறப்பட்டது.

கலைத்தலை நெற்றிஓர் கண்ணுடைக் கண்ணுள்
முலைத்தலை மங்கை முயங்கி யிருக்கும்
சிலைத்தலை யாய தெரிவினை நோக்கி
அலைத்தபூங் கொம்பினள் ஆங்கிருந் தாளே. ***#1089***

மேற் கூறிய அச்சத்தி, உன்மனாகலையின் இடமாகிய அந்தத் துவாதசாந்தத்தில் தான் தனியே இராது சிவத்தோடு கூடியே விளங்குவாள். அவ்வாறு விளங்குதல், பிராசாத யோகிகட்கு அவ்யோகத்தால் புருவ நடுவில் அவ்வப்பொழுது புதிது புதிதாகத் தோன்றுகின்ற உணர்வைக் கண்டுகொண்டேயாம்.

விளக்கவுரை

'முலைத்தலை மங்கை' என்பதை முதலில் வைத்து உரைக்க. 'முலையையுடைய தலை மங்கை' என்க. 'முலையை உடைய' என்னும் விதப்பு. அபர ஞான பரஞானங்களைத் தருபவ ளாதலைக் குறித்து நின்றது. தலை மங்கை - தலைவி. 'அக்கலைத் தலைக்கண்' எனச் சுட்டு வருவித்தும், உருபு விரித்தும் 'இருக்கும்' என்பதனோடு முடிக்க. 'கலைத் தலை, சிலைத் தலை' என்பவற்றில் தலை, இடம். 'கண்' இரண்டனுள், பின்னது, 'உயிர்கட்குக் கண் போலச் சிறந்தவன்' எனப் பொருள் தந்து, சிவபிரானைக் குறித்தது. 'உள் முயங்கி' என்றது. 'இரண்டறக் கலந்து' என்றவாறு. 'முயங்கியே' என்னும் தேற்றேகாரம் தொகுத்தலாயிற்று. சிலை - வில். அஃது உவமையாகுபெயராய்ப் புருவத்தை உணர்த்திற்று. தெரிவு - அறிவு. அலைதல் - அசைதல். 'அலைந்த' என்பது வலிந்துநின்றது கொம்பினள் - கொம்புபோல்பவள். 'அலைத்த பூங்கொம்பினள்' என்பது, சுட்டுப் பெயரளவாய் நின்றது. இதனால், சத்தி துவாதசாந்தத்தில் விளங்கும் முறை கூறப்பட்டது.

இருந்தனள் ஏந்திழை என்னுள்ளம் மேவிப்
பொருந்திரு நால்விரல் புக்கனள் புல்லித்
திருந்திய தாணுவில் சேர்ந்துடன் ஒன்றி
அருந்தவம் எய்தினள் ஆதியி னாளே. ***#1090***

என் இருதயத்தில் இருப்பவளாகிய அந்தச் சத்தி, மேற்கூறியவாறு சிவனுடன் துவாதசாந்தத்தில் விளங்குதல், பிராசாத யோகத்தைப் பற்றி இருதயத்தினின்றும் எழுந்து கண்டத் தானத்தை அடைந்து, அதன்பின்னர் அங்கு நின்றும் துவாதசாந்தத்தில் சென்றே யாம். அந்நிலையும் பழமையானதேயன்றிப் புதியதன்று.

விளக்கவுரை

'என்னுள்ளம் மேவி இருந்தனளாகிய ஏந்திழை, பொருந்து இருநால் விரல் கடந்து புக்கனளாய்ப் புல்லியபின், தாணுவில் சேர்ந்து உடன்ஒன்றி, ஆதியின் நாளே அருந்தவம் எய்தினள்' என முடிவு செய்க. தவம் எய்துதல், ஞானத்தைக் கொடுத்தலில் குறிக்கோளாய் இருத்தல். 'அந்நிலை யோகத்தால் புலனாவதன்றிப் புதிதாக உளதாவதன்று' என்பார், 'ஆதியின் நாளே' என்றார். இவ்விடத்து இன், வேண்டாவழிச் சாரியை.

இதனால், மேற்கூறிய நிலை பிராசாத யோகத்தானே அறியற் பாலதாதல் கூறப்பட்டது.

ஆதி அனாதி அகாரணி காரணி
சோதி அசோதி சுகபர சுந்தரி
மாது சாமாதி மனோன்மனி மங்கலி
ஓதிஎன் உள்ளத் துடன்இயைந் தாளே. ***#1091***

என் உள்ளத்தில் இருந்துகொண்டு எனக்கு எல்லா வற்றையும் அறிவித்துக்கொண்டு என்னோடு உடனாய் இயைந்திருக் கின்ற சத்தி, ஆதியாதல் முதலிய பல பெருமைகளை உடையவள்.

விளக்கவுரை

ஆதி - தானே எல்லாவற்றிற்கும் முதல்வி. அனாதி - தனக்கு ஒரு முதற்பொருள் இல்லாதவள். காரணி - தானே எல்லா வற்றுக்கும் காரணமாய் இருப்பவள். அகாரணி - தனக்கு ஒரு காரணம் இல்லாதவள். சோதி - ஒளியாய் இருப்பவள். அசோதி - இருளாயும் இருப்பவள். சோதி, 'அசோதி' என்பன முறையே அறிவையும், அறி யாமையையும் உணர்த்தி நின்றன. அறியாமையைச் செய்வது மலமே. எனினும், அதன் சத்தியைத் தூண்டி அதனைத் தொழிற்படச் செய்தல் பற்றிச் சத்தி, இருளாயும் இருக்கின்றாள். 'சுகபரம்' என்பதை, 'பரசுகம்' என முன்பின்னாக வைத்து, 'மேலான இன்பம்' என உரைக்க. 'மேலான இன்பத்தை *(சிவானந்தத்தை)*த் தரும் சுந்தரி' என்க. 'சுந்தரி' என்பது இயற்பெயரளவாய் நின்றது. 'சமாதியில் மனோன்மனி மாது' எனக்கூட்டி, 'சமாதி நிலையில் மனோன்மனி என்னும் சத்தியாய் விளங்குபவள்' என்க. சமாதி, இங்கு மேற்கூறிய துவாதசாந்தத்தில் உணர்வை நிறுத்தி ஒன்றச்செய்தல். மங்கலி - என்றும் நன்மையே உடையவள்; 'சிவை' என்றவாறு.

இதனால், 'கலைத்தலை இருக்கும்' என மேற்கூறிய அவளது பெருமைகள் பலவும் விரித்துக் கூறப்பட்டன.

இயைந்தனள் ஏந்திழை என்னுள்ளம் மேவி

நயந்தனள் அங்கே நமசிவ என்னும்
பயன்தனை ஓரும் பதமது பற்றும்
பெயர்ந்தனள் மற்றுப் பிதற்றறுத் தாளே. *#1092*

சத்தி எனது உள்ளத்தில் பொருந்தியதனோடு அதனை விரும்பியும் இருக்கின்றாள். அவள், நான் அஞ்செழுத்தை ஓதி உணரும் பொழுது அவ்விடத்தைப் பற்றியிருக்கின்றாள். அதனை ஓதாத பொழுது நீங்கிவிடுகின்றாள். ஆயினும், பிற மந்திரங்களையும், பயனில்லாத சொற்களைப் பேசுதலையும் என்னிடத்தினின்றும் நீக்கிவிட்டாள்.

விளக்கவுரை

'நயந்தனள் மேவி' என்பதனை *'நயந்து மேவினள்'* என மாற்றி யுரைக்க. அஞ்செழுத்தில் யகாரம் தொகுத்தலாயிற்று. பதம் - காலம். பற்றும் - பற்றுவாள். *'பதத்தில் அங்கே பற்றும்'* எனக் கூட்டுக. மற்று. வினை மாற்றின்கண் வந்தது. பிதற்றுதலுக்குச் செயப் படுபொருள் ஆற்றலால் வந்தது.

இதனால், *'சத்தியது விளக்கம் உள்ளத்தில் இடையறாது நிற்றற்குத் திருவைந்தெழுத்தை மானதமாக ஓதுதலை ஒழியாது செய்தல் வேண்டும்'* என்பது கூறப்பட்டது.

பிதற்றிக் கழிந்தனர் பேதை மனிதர்
முயற்றியின் முத்தி யருளும் முதல்வி
கயற்றிகழ் முக்கண்ணும் கம்பலைச் செவ்வாய்
முகத்தருள் நோக்கமும் முன்னுள்ள வாமே. *#1093*

ஞானத்தைக் கொடுத்துப் பின் அது வழியாக முத்தியைத் தருகின்ற முதல்வியாகிய சத்தியது கயல்போலும் மூன்று கண்களும், அறைகூவி அருள்செய்கின்ற சிவந்த வாயும், முகத்திலே உள்ளதாகிய திருவருட் பார்வையும் அடியார்களுக்குத் கண்முன் னாகவே நிற்பனவாயிருக்க, அவைகளை எண்ணித் துதியாமல் அறிவில்லாதமக்கள் எதைஎதையோ பிதற்றிவிட்டுப் போய்விடுகின் றார்கள்; அவர்தம் அறியாமை இருந்தவாறு என்!

விளக்கவுரை

முயற்று, *'முயற்சி'* என நின்றது. *'முயற்சி'* என்பதே பொருள் - முயற்சி, இங்கு ஞானச் செய்திகள். இது மேற்கூறிய அஞ் செழுத்தோதலைச் சிறப்பாகக் குறித்தது. *'அதுவழியாக முத்தியைத் தருபவள்'* என்பதனால், முன்னே அம்முயற்சியைத் தருதல் பெறப் பட்டது. கயலாகிய உவமை இனம் பற்றி நெற்றிக் கண்ணிற்கும் சொல்லப்பட்டது.

இதனால், திருவைந்தெழுத்தை ஓதுபவர்க்குச் சத்தி நேரே எளிவந்தருளுதல் கூறப்பட்டது. இதனுள் உயிரெதுகையும்,

மூன்றாமெழுத் தெதுகையும் வந்தன.

உள்ளத் திதயத்து நெஞ்சத் தொருமூன்றுள்
பிள்ளைத் தடம்உள்ளே பேசப் பிறந்தது
வள்ளற் றிருவின் வயிற்றினுள் மாமாயைக்
கள்ள ஒளியின் கருத்தாகுங் கன்னியே. ***#1094***

பரசிவத்தினது சத்தியாகிய பராசத்தியது வயிற்றில் உள்ள சுத்த மாயையின் தோன்றி மறையும் ஒளியாகிய கருவினுள் நிற்பவளாகிய ஆதி சத்தி, பிள்ளையாய்ப் பிறந்து தவழும் இடமும் அகத்து உள்ளதாகவே சொல்லும்படி அங்குப் பிறந்தது, 'சித்தம், புத்தி, மனம்' என்னும் மூன்றனிடத்துமாம்.

விளக்கவுரை

மூன்றாம் அடிமுதலாகத் தொடங்கி, இரண்டாம் அடியை முதலடியின் முன் வைத்து உரைக்க. சித்தம் முதலிய மூன்றனையும் நாயனார் உள்ளம் முதலிய மூன்றாக அருளினமை காண்க. ஆதி சத்தி உயிர்கட்குப் புலனாதல் வாக்கு அல்லது மொழி வடிவிலேயாதலானும், சுத்தமாயையின் காரியமாகிய வாக்குகள் அசுத்த மாயையின் காரியங்கள்போல மயக்கத்தைச் செய்யாது அறிவைத் தருவதேயாயினும், அவ்வறிவும் வினைக்கீடாக நிகழ்வதே யாகலானும் ஆதிசத்தியை 'மாமாயைக் கள்ள ஒளியின் கருத்தாகும் கன்னி' என்றார். மாமாயைக்கு ஆதிசத்தி ஆதி வியாபகமேயாக. அனாதி வியாபகம் பராசத்தியே யாதல் பற்றி அதனைப் பராசத்தியின் வயிற்றில் உள்ள கருவாகக் கூறினார். ஆதி சத்தி பராசத்தியின் கூறாதலை, 'வள்ளல் திருவின் வயிற்றினுள் கருத்து' என்பதனால் விளக்கினார். கருத்து - கருவினுள் இருப்பது. இருப்பது - இருப் பதாகிய பொருள். 'வயிறு, கரு, கருவினுள் இருப்பது' என்பன உரு வகங்கள். தடம் - வழி; இங்கு இயங்கும் இடத்தைக் குறித்தது. வாக்கு வடிவில் பொருள்கள் தோன்றும் பொழுது மனத்தில் பொதுவாயும், புத்தியில் சிறப்பாயும், சித்தத்தில் பல்காலும் எண்ணி உணரும் உணர்வாயும் தோன்றுமாதலின், ஆதி சத்தியும் உயிர்கட்கு அவ்வாறே புலனாம் என்பார். 'பிறந்தது உள்ளம் மூதலிய மூன்றிடத்திலும்' என்றார். 'பிறந்தது' என்பது தொழிற்பெயர். ஆதிசத்தி தோன்றும் முறையை இங்ஙனம் விளக்கியது திருவைந்தெழுத்து உணர்வின் வழியே அவள் விளங்குதலை வலியுறுத்தற் பொருட்டு.

இதனால், மேலது இனிது விளங்க வலியுறுத்தப்பட்டது.

கன்னியும் கன்னி அழிந்திலள் காதலி
துன்னிஅங் கைவரைப் பெற்றனள் தூய்மொழி
பன்னிய நன்னூற் பகவரும் அங்குளர்

என்னேஇம் மாயை இருளது தானே. ***#1095***

பராசக்தியின் வயிற்றினின்றும் பிறந்த ஆதி சத்தி யாகிய பெண் தனது கன்னித்தன்மை அழியாமலே ஒருவனுக்கு மனைவியாய்ப் பொருந்தி ஐவர்மக்களைப் பெற்றாள். அவர்கள்பால் நல்ல நூல்களைக் கேட்டுணர்ந்த அறிவரும் பலர் உளர். இவ்வியப்பு தான் என்னே!

விளக்கவுரை

'கன்னியும் அழிந்திலள்' எனச்சிறப்பும்மையை மாற்றி யுரைக்க கன்னித்தன்மை அழியாமையாவது, படைத்தலைக் கரணத்தால் செய்து திரிபு எய்தாது, சங்கற்ப மாத்திரையாற் செய்து, என்றும் ஒருபெற்றியளாய் இருத்தலாம். 'காதலியாய்த் துன்னி' என ஆக்கம் வருவித்துக்கொள்க. துன்னப்பட்டவனாகிய ஒருவன் ஆதி சிவனாதல் வெளிப்படை. ஐவராவார். 'சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன் என்போர். இவர் யாவரும் சுத்த தத்துவத்தில் உள்ளோர். மொழி - நூல்; என்றது ஆகமங்களையும், அவற்றிற் சொல்லப்பட்ட மந்திரங்களையும். 'பன்னிய' என்னும் பெயரெச்சம் 'பகவர்' என்னும் கோடற்பொருட் பெயர் கொண்டது. ஆகமங் களைப் பிரணவர் முதலியோர் சதாசிவ மூர்த்தியிடத்துக் கேட்டமை முதல் தந்திரத்துள் 'ஆகமச்சிறப்பு' என்னும் அதிகாரத்துள் விளக்கப் பட்டது. மந்திரத்தைச் செலுத்தி நிற்போர் மந்திரமகேசுரர். இவர்களும் மகேசுரரைச் சூழ்ந்திருப்பவர். ஆகவே, 'அங்கு' என்றது சதாசிவ புவனத்தையும், மகேசுர புவனத்தையும் ஆயிற்று. அரிதற்கரிய பொருளாய் வியப்பைத் தருதல் பற்றியே, இதனை 'மாயை' என்றும், 'இருள்' என்றும் கூறினார். இதனால், ஆதிசத்தி தனது சங்கற்பத்தானே சதாசிவர் முதலிய முதல்வர்களைப் படைப்பவளாதல் கூறப்பட்டது.

இருளது சத்தி வெளியதெம் அண்ணல்
பொருளது புண்ணியர் போகத்துள் இன்பம்
தெருளது சிந்தையைத் தெய்வம்என் றெண்ணில்
அருளது செய்யும்எம் ஆதிப் பிரானே. ***#1096***

சிவம் வெளிப்படாது நிற்க நிகழும் செயல் களெல்லாம் ஆதிசக்தியுடையன. அவற்றின் பயனாகப் பின்னர்ச் சிவம் வெளிப்படுவதாகும். அவ்வெளிப்பாட்டினைப் பெற்ற புண்ணியர்கள் இம்மையிலும் பொருளாகத் தெளிவது சிவானந்தம் ஒன்றையே. அத்தகைய தெளிவைப் பெற்ற உள்ளமே சிவனுக்கு இருப்பிடம் என்று அறிந்தால், சிவன் முன்னின்று அருள்செய்வான்.

விளக்கவுரை

'அது' என்பன பலவும் பகுதிப் பொருள் விகுதி. 'வெளியது' என்பதில்,

'வெளியதாம்' என ஆக்கம் வருவித்துக் கொள்க. 'புண்ணியர் பொருளது போகத்துள் இன்பம்' எனக் கூட்டுக. போகம் - இம்மை நுகர்ச்சி. தெய்வத்தின் இடத்தை, 'தெய்வம்' எனப் பாற்படுத்து ஓதினார். இதனால், மேற் கூறிய படைத்தல் முதலிய செயல்களின் பயன் கூறப்பட்டது.

ஆதி அனாதியும் ஆய பராசத்தி
பாதி பராபரை மேலுறை பைந்தொடி
மாது சமாதி மனோன்மனி மங்கலி
ஓதுமென் உள்ளத் துடன்முகிழ்த் தாளே. **#1097**

உலகத்தைத் தோற்றுவிக்க நினைப்பவளும், அத்தோற்றத்திற்கு முன்னே உள்ளவளும், சிவத்தில் செம்பாதியாய் நிற்பவளும் ஆகிய பராசத்தி, எல்லாப்பொருளிலும் நிறைந்து, அவற்றிற்கு அப்பாலும் உள்ளவளாய்ப் பின்பு சமாதியில் மேற் கூறிய வாறு மனோன்மனியாயும், நன்மையையே உடையவளாயும் உள்ள அவளைத் துதிக்கின்ற எனது உள்ளத்தில் விரையத் தோன்றினாள்.

விளக்கவுரை

'பராபரை' என்பது எல்லாப் பொருளிலும் உள்ளன வளாதலைக் குறித்தது. இதுமுதலாக, 'மங்கலி' என்பது காறும் வருவனவற்றில் 'ஆய்' என்பது வருவித்துக்கொள்க.
இதனால், சத்தி, 'பரை, ஆதி, அருள்வல்லி' என்னும் மூன்று நிலைகளை உடையவளாதல் கூறப்பட்டது.

ஓதிய வண்ணம் கலையின் உயர்கலை
ஆதிஇல் வேதமே யாம்என் றறிகிலர்
சாதியும் பேதமும் தத்துவ மாய்நிற்பள்
ஆதிஎன் றோதினள் ஆவின் கிழத்தியே. **#1098**

'பிறப்புக்கள் பலவும், பலவேறு வகைப்பட்ட ஏனைப் பொருள்களும், அவற்றிற்கு முதலாகிய தத்துவங் களுமாய் ஆதி சத்தி ஒருத்தியே நிற்பாள்' என்று ஆவுருவாய் நிற்கும் பெரு மாட்டி எனக்கு அறிவித்தாள். எல்லா நூல்களிலும் மேம்பட்டதும், தனக்கு ஒரு முதல்நூல் இன்றித் தானே முதல் நூலாய் நிற்பதுமாகிய வேதம் சொல்லிய முறையும் இதுவே என்பதைப் பலர் அறிந்திலர்.

விளக்கவுரை

மூன்றாம் அடிமுதலாகத் தொடங்கி, 'வேதம் ஓதிய வண்ணமேயாம் என்று அறிகிலர்' என முடிக்க. வேதப் பொருளின் சிறப்பை உணர்தற்கு, 'கலையின் உயர்கலை, ஆதி இல்' என்பவற்றை விதந்து ஓதினார். 'சாதி, பிறப்பு' என்பன ஒருபொருட் சொற்கள். இவை இங்கு உடம்பைக்

குறித்தன. 'தத்துவம்' என்பதில் எண்ணும்மை தொகுத்தலாயிற்று. 'ஆவின் கிழத்தி' என்பதில் இன், அல்வழிக்கண் வந்த சாரியை. நாயனார் எழுந்தருளியிருந்த ஆவடுதுறையில் அம்மை ஆவுருவாய் வந்தமை வெளிப்படை. இத்தொடர்க்கு இதுவே பொருளாதல், வருகின்ற மந்திரத்தாலும் அறியப்படும்.
இதனால், 'சத்தி மேற்கூறிய மூன்று நிலைகளில் 'ஆதி' என்னும் நிலை ஒன்றில் நின்றே அனைத்துக் காரியங்களையும் செய்வள் என்பதே வேதம் முடிபாதலை அறிதல் திருவருளானே கூடும்' என்பது கூறப்பட்டது. ஆகவே, பல தெய்வக் கொள்கை. பக்குவம் இல்லாதாரை நோக்கி அமைந்தன என்பதாம்.

ஆவின் கிழத்தி நல் ஆவடு தண்டுறை
நாவின் கிழத்தி நலம்புகழ்ந் தேத்திடும்
தேவின் கிழத்தி திருவாம் சிவமங்கை
மேவுங் கிழத்தி வினைகடிந் தாளே. ***#1099***

ஆவுருவாய் நின்ற பெருமாட்டி திருவாவடு துறையில் பக்குவர்களுக்கு உண்மையை யுணர்த்துபவளும், தனது நன்மைகளை உயர்ந்தோர் பலரும் எடுத்துக் கூறித் துதிக்கின்ற கடவுள் தன்மை உடையவளும், முத்திச் செல்வத்தை உயிர்கள் அடைதற்கு ஏதுவான சிவசத்தியாய் நிற்பவளுமாய் இருந்து, உயிர்களின் சஞ்சித வினையை நீக்குகின்றாள்.

விளக்கவுரை

'அவளை யடைந்த எனக்கு வினை நீங்காது நிற்குமோ' என்பது கருத்து. தேவின் கிழத்தி - தேவினையுடைய கிழத்தி. கிழத்தி - எப்பொருளையும் தன்னுடையனவாக உடைய தலைவி. 'முத்தியை அளிப்பவன் சிவன் ஒருவனேயாதலின், அவனது சத்தியாய் நின்று முத்தியையளிப்பாள்' என்றவாறு 'சிவமங்கையாய்' என ஆக்கம் வருவிக்க.
இதனால், தமக்கு உண்மையை உணர்த்திய சத்தியது பெருமை கூறப்பட்டது.

வினைகடிந் தார்உள்ளத் துள்ளொளி மேவித்
தனையடைந் தோர்க்கெல்லாம் தத்துவ மாய்நிற்பள்
எனையடி மைக்கொண்ட ஏந்திழை ஈசன்
கணவனைக் காண அனாதியு மாமே. ***#1100***

என்னை அடிமையாகக் கொண்ட அந்தத் தலைவி, வினை நீங்கியவரது உள்ளத்தில் ஞானமாய் நின்று, தன்னைப் புகலிட மாக அடைந்தவர்க்கெல்லாம் மெய்ப்பொருளாய் (சத்தாகி) நிற்பாள். இனி அவள், சிவனிடத்தில் அவனைத் தலைப்பட்டுணரும் பொழுது அவனோடு இயற்கையாயுள்ள எண் குணங்களாயும் நிற்பாள்.

விளக்கவுரை

'உள்ளொளியாய்' என ஆக்கம் வருவிக்க. 'ஈசன் கண்' என்றதில் ஏழாம் உருபு வகையுளியாய் அடுத்த அடிமுதற்கண் நின்றது. இவ்வாறன்றி, 'ஈசன் அவளுக்குக் கணவன்' என்பாரும் உளர். அனாதியானவற்றை 'அனாதி' என்றார். 'காண' என்னும் செயவெனெச்சம், தனக்குரிய நிகழ்காலத்தில் வந்தது. சிவனது எண்குணங்களில் 'வரம்பில் இன்பம்' எனப்படும் நிரதிசயானந்தம் இங்குச் சிறப்பாகக் கருதப்பட்டது.
இதனால், தமக்கு அருள்புரிந்த சத்தி சத்துச் சித்து ஆனந்தமாய் நிற்றல் கூறப்பட்டது.

ஆதி அனாதி அகாரணி காரணி
வேதம தாய்ந்தனள் வேதியர்க் காய் நின்ற
சோதி தனிச்சுடர்ச் சொரூபம தாய்நிற்கும்
பாதி பராபரை பன்னிரண் டாதியே. ***#1101***

சத்தியே வேதியர்கள் பொருட்டு வேதத்தை நுட்பமாக ஓதியும், உணர்த்தியும் நின்றாள். ஒளி வடிவினனாகிய சிவனுக்கு அவ்வுருவமும் ஆவாள். பன்னிரு கலையை உடைய பிரணவ ரூபியாகிய குண்டலியாயும் விளங்குவாள்.

விளக்கவுரை

முதலடியில் உள்ளவை, பாதி, பராபரை இவற்றிற்குப் பொருள் மேலே கூறப்பட்டது. ஆய்தல் - நுணுகி நிற்றல். வேதியர், 'சொல் நயம், ஓசை நயம்' என்பவற்றைச் சிறப்பாக விரும்புபவர் ஆகலின், அவர்கட்கு வேதத்தை அவ்வாறெல்லாம் அருளிச்செய்து, அடியார் கட்கு அருட்டிருமேனியாய் நின்றாள் என்க.
இதனால், சத்தி அவரவர்க்கு ஏற்ப அருள்புரிதல் கூறப்பட்டது.

*6.7.*பூரண சத்தி

அளந்தேன் அகலிடத் தந்தமுன் ஈறும்
அளந்தேன் அகலிடத் தாதிப் பிரானை
அளந்தேன் அகலிடத் தாணொடு பெண்ணும்
அளந்தேன் அவனருள் ஆய்ந்துணர்ந் தேனே. *#1102*

சத்தியது அருட் பெருமையை நான் சிந்தித்து தெளிந்தேன். அதனானே, உலகத்திற்கு ஆதியும், அந்தமும் ஆன பொருளினையும், உலகத்தார் பலபடக் கூறுகின்ற முதற்கடவுளையும், உலகில் உள்ள உயிர்களின் இயல்பையும் என் அறிவின்கண் அகப்படும்படி நன்கு உணர்ந்தேன்.

விளக்கவுரை

என்றது, 'சத்தியை விட்டு வேறாய் யாதொரு பொருளும் இல்லை' என்றவாறு. ஈற்றடியை முதலில் வைத்து, அதன் பின், 'அதனானே' என்பது வருவித்துரைக்க. 'முன்னும்' என்னும் எண்ணும்மை தொகுத்தலாயிற்று. அவன் - சிவன். அருள் - சத்தி; என்றது அவளது இயல்பை. 'அந்த முன்' என்பதில் சுட்டு, 'அந்தத்தை உணர்தலினும் ஆதியை உணர்தல் அரிது' என்பதை விளக்கி நின்றது.
இதனால், சத்தியை முற்ற உணர்தலே முற்றறிவாதல் கூறப் பட்டது.

உணர்ந்திலர் ஈசனை ஊழிசெய் சத்தி
புணர்ந்தது பூரணம் புண்ணியர் தங்கள்
கணங்களைத் தன்னருள் செய்கின்ற கன்னி
கொணர்ந்த வழிகொண்டு கும்பக மாமே. *#1103*

பல ஊழிகளையும் ஆக்குபவளாகிய சத்தியை உணர்தலே 'பேரறிவு' எனப்படும் முற்றுணர்வாகும். இதனை உணராதவர் சிவனையும் உணராதவரே. தன்னை அடைகின்ற புண்ணியம் உடையவர்களைத் தனது அருள்வடிவாகச் செய்கின்ற சத்தி, அங்ஙனம் பலரைப் புண்ணியராகச் செய்தற்கு ஆக்கியுள்ளவழி பிராணனைக் கும்பிப்பதே.

விளக்கவுரை

'உணர்ந்திலர் ஈசனை' என்றது, சிவனைத் தனித்து நிற்பவனாகக் கருதுவோரை நோக்கி யாதலின் அதனை, 'பூரணம்' என்பதன் பின்னர்க் கூட்டியுரைக்க. 'கொண்டு' என்பதை, 'கொள்ள' எனத்திரிக்க. 'உணர்ந்திலர் ஈசனை, ஊழி செய் சத்திபுணர்ந்தது பூரணம்' என்றது, மேலதனை வலியுறுத்தியவாறு.
இதனால், சத்தியைப் பெறுதற்குரிய வழி கூறப்பட்டது.

கும்பக் களிறைந்தும் கோலொடு பாகனும்
வம்பில் திகழும் மணிமுடி வள்ளலும்
இன்பக் கலவி இனிதுறை தையலும்

இன்பக் கலவியுள் இன்பமுற் றாரே. *#1104*

மத்தகத்தை யுடைய களிற்றியானைகளாகிய ஐந்து புலன்களும், அவற்றை மனமாகிய கோலால் செலுத்துகின்ற பாகனாகிய உயிரும், அவ்யானைகட்கும், பாகனுக்கும் தலைவனும், அரசனாகிய சிவனும், அச்சிவனோடு இன்பக் கலவி செய்து இனிதே உறையும் அரசியாகிய சத்தியும் இனிதாகிய கூட்டத்தில் இன்ப முற்றிருக்கின்றனர்.

விளக்கவுரை

என்று, 'மாயா காரியமாகிய கருவி கரணங்களுள், அவற்றைக் கொண்டு செயலில் ஈடுபடுகின்ற ஆன்மாவும், சிவனும், சத்தியும் ஒருங்குகூடி நிற்றலாலே உலகியல் நடைபெறுகின்றது' என்ற வாறு. இங்ஙனங் கூறினும், சத்தியது இன்றியமையாமையே இங்குக் கருதப்பட்டது என்க. ஐம்புலன்களே உலகியலாம். ஐம்புல அவா வையே 'யானை' என்றல் மரபாயினும், அவ் அவாவினோடு காரண காரியத் தொடர்ச்சிகளை யுடையனவாதல் பற்றி இங்கு அப்புலன் களையே 'களிறு' என்றார். வம்பு - வாசனை. அஃது அதனையுடைய மாலையை உணர்த்திற்று. இன்பக் கலவி' இரண்டில் முன்னது காமக் கூட்டம் ; பின்னது இனிய நட்பு, நட்டாரை, 'கலந்தார்' என்றல் வழக்காதைல,

'கலந்தாரைக் கைவிடு தல் கானக நாட,
விலங்கிற்கும் விள்ள லரிது' (நாலடி - 76.)

என்பது முதலியவற்றால் அறிக. ஈற்றடியை, 'அன்பிற் கலவியுளா யொழிந்தாரே' என ஓதுதல் பாடமாகாமை, அந்தாதிக்கு ஒவ்வாமை யான் அறிக. இதனுள் இனவெதுகை வந்தது.

இதனால், மெய்ந்நெறியே யன்றி உலகியலும் சத்தியின்றி அமையாமை கூறப்பட்டது. இந்நிலையில் சத்தி, 'திரோதாயி' எனப் படுவாள் என்பது பலவிடத்தும் கூறப்பட்டது.

இன்பக் கலவியில் இட்டெழு கின்றதோர்
அன்பிற் புகவல்ல னாம் எங்கள் அப்பனும்
துன்பக் குழம்பில் துயருறும் பாசத்துள்
என்பிற் பராசத்தி என்னம்மை தானே. *#1105*

எங்கள் தந்தையாகிய சிவன் ஆணும், பெண்ணு மாய உயிர்களைக் காமக் கூட்டத்தில் செலுத்தி, அதுகாரணமாக எழுகின்ற அன்பினையே வாயிலாகக்கொண்டு அவ்வுயிர்களின் உள்ளத்தில் புகுந்து நலம்செய்யும் தன்மையை உடையவன். என் தாயாகிய சத்தி, உயிர்கள் துன்ப மயமாகிய கருப்பைக் குழம்பில் அகப் பட்டுத் துன்புறுகின்ற அவ்வுடம்பில் தானே அவற்றின் சுழுமுனை நாடியிற் பொருந்தி நலம் புரிகின்றவளாவள்.

விளக்கவுரை

'பாசம்' என்றது, இங்கு உடம்பினை, என்பு முதுகந் தண்டு. அஃது அதன்கண் உள்ள சுழுமுனை நாடியைக் குறித்தது. அப்பனுக்குக் கூறிய புகல் வன்மை, அம்மைக்கும் 'என்பில்' என்பதன்பின் வந்து இயைந்தது. இதனால், சத்தி பெத்த நிலையிலும் முதற்றொட்டு உயிர் களைப் புரந்து வருதல் கூறப்பட்டது.

என் அம்மை என் அப்பன் என்னும் செருக்கற்று
உன் அம்மை ஊழித் தலைவன் அங்குளன்
மன் அம்மை யாகி மருவி உரைசெய்யும்
பின் அம்மை யாய்நின்ற பேர்நந்தி தானே. ***#1106***

உடல்வழிப்பட்டு, 'என் தாய், என் தந்தை' எனக் கூறி உலகியலில் மயங்குகின்ற மயக்கத்தை விடுத்து நினைத்தவழி, உண்மைத் தாயாய் ஊழிக் காலத்தும் அழியாத உயிர்த் தலைவன் அவ் விடத்தே உளனாவன். இனி, 'அத் தலைவனாவான் யாவன்' எனின், முதலிலே திரோதான சத்தியாய்ப் பொருந்தி, உண்மையை மறைத்து நின்று, பின் அருட் சத்தியாகிய உண்மையை விளக்குகின்ற சிவனேயாம்.

விளக்கவுரை

உம்மை, சிறப்பு. உரை செய்தல் - உபதேசித்தல், உண்மை ஞானத்தை விளக்குதல். 'உரை செய்யும்' எனவும், 'பின்' எனவும் பின்னர் வருகின்றமையால் முன்னர் அவற்றின் மறுதலைகள் கொள்ளப் பட்டன. 'பின் உரைசெய்யும் அம்மையாய் நின்ற நந்தி' என இயைக்க. 'பேர் நந்தி' என்பது அடையடுத்த சொல்லாகுபெயர். சிவனே சத்தியாதலன்றி வேறின்மை இங்குத் தோன்றும்படி இவ்வாறு ஓதினார்.

இதனால், திரோதான சத்தி அருட் சத்திகளும், ஆதி சிவன், அநாதிசிவன் இவர்களுமே உலகிற்கு உண்மைத் தாயும் தந்தையும் ஆதல் கூறப்பட்டது. 'அம்மையப்பரே உலகுக்கம்மையப்பர்' என்பது திருக்களிற்றுப்படியார்.

தார்மேல் உறைகின்ற தண்மலர் நான்முகன்
பார்மேல் இருப்ப தொருநூறு தானுள
பூமேல் உறைகின்ற போதகி வந்தனள்
நாமேல் உறைகின்ற நாயகி ஆணையே. ***#1107***

காரணக் கடவுளர்களது வரிசையில் முதற்கண் பிருதிவி அண்டத்தின்மேல் இருக்கின்ற பிரமன் அவ்வாறிருப்பது நூற்றிதழ்த் தாமரை மலரின் மேலேயாம். அவனுக்குத் துணைவியாய் வெண்டாமரைமேல் வாணி அமர்ந்திருக்கின்றாள். இவையெல்லாம் வாகீசுவரியாய் நிற்கின்ற திரோதான சத்தியது ஆணையாலேயாம்.

விளக்கவுரை

தார் - மாலை; அது வரிசையைக் குறித்தது. 'உள' என்னும் வினைக்குறிப்புப் பெயர், உண்மைக்கு இடமாய மலரினைக் குறித்தது. 'தான்' என்பது பன்மை யொருமை மயக்கம். 'நூறு' என்பது மலரின் இதழாதல் விளங்குதற்கு முதற்கண், 'தண்மலர் நான் முகன்' என உடம்பொடு புணர்த்து ஓதினார். ஈற்றடியின் முதலில், 'எல்லாம்' என்னும் எழுவாய் வருவிக்க. இதனுள் ஆசெதுகை வந்தது.

இதனால், படைப்புத் தொழிலும் திரோதான சத்தியதாதல் கூறப்பட்டது. பொதுமக்களாய் உள்ளவர், உலகத்தைப் படைக்கும் தொழில் ஒன்றையே இறைவனது அதிசயத் தொழிலாக எண்ணுவர். ஆதலின், அஃதொன்றனையே இங்குச் சிறந்தெடுத்துக் கூறினார்.

ஆணைய மாய்வருந் தாதுள் இருந்தவர்
மாணைய மாய மனத்தை ஒருக்கிப்பின்
பாணைய மாய பரத்தை அறிந்தபின்
தாணைய மாய தனாதனன் தானே. ***#1108***

திரோதான சத்தியின் வசமாய் வருந்தாது பற்றற்றுத் திருவருளில் இருப்பவர். அதன் மேலும், எப்பொழுதும் பெரிய ஐயத்தையே கொண்டு அலைவதாகிய மனத்தை அவ்வாறு அலையாமல் ஒருவழிப்படுத்தி எல்லாம் அற்ற இடத்தில் விளங்குவ தாகிய பரம் பொருளை உணர்வார்களாயின், அப்பொருளாகிய சிவன் அப்பொழுது தனது அருட்சத்தியாகிய இயற்கை ஆசனத்தில் விளங்கி நின்று அருள் புரிவான்.

விளக்கவுரை

ஆணை, திரோதானசத்தி, 'அகமாய்' என்பது இடைக் குறைந்து நின்றது. திரோதான சத்தியின் வசமாய் நிற்றலாவது வினைப் பயனை நுகர்வதிலும், ஈட்டுவதிலும் முனைந்து நிற்றல், அதனால் வருவது அல்லலே யாதலாலும், அதனின் நீங்கினார்க்கு அருளே தாரகம் ஆதலாலும் 'வருந்தாது உள் இருந்தார்' என்றார். 'மாண் ஐயம்' என்பதில் மாண்பு, பெரிது. 'பாழ் நயம், தாள் நயம்' என்ப வற்றில், நயம் 'நையம்' எனப் போலியாயிற்று. 'பாணயம், தாணயம்' என்பனவும் பாடம். தத்துவம் அனைத்தும் கடந்த இடத்தை, 'பாழ்' என்றார். அவ்விடத்துள்ள நயம், இன்பம். பின் வந்த நயம் விருப்பம் 'தாள் ஆய நய ஆதனம்' என மாற்றிக் கொள்க.

இதனால், படைப்பு முதலியவற்றைச் செய்யும் திரோதான சத்தி செயற்கையேயாக, அருட்சத்தியே இயற்கையாதல் கூறப்பட்டது.

தானே எழுந்தஇத் தத்துவ நாயகி

வானோர் எழுந்து மதியை விளக்கினள்
தேனேர் எழுகின்ற தீபத் தொளியுடன்
மானே நடமுடை மன்றறி யீரே. ***#1109***

உயிர்களின் முயற்சியாலன்றித்தானே விளங்கி நின்றவளாகிய அருட்சத்தி, இன்ப மழையைப் பொழிகின்ற மேகமாய் நின்று, ஞானத்தை விளங்கச்செய்தாள். இனி, இனிமையைத் தருவ தாகிய தேன்போல விளங்கிய அந்த ஞான ஒளியுடனே கூத்தப் பெருமான் செய்கின்ற ஆனந்த நடனத்தைக் கண்டு இன்புற வேண்டுவதுதான் உங்கட்குக் கடமை.

விளக்கவுரை

தத்துவம் - மெய்ப் பொருள். 'போல' என்பது 'போல்' என வருதல்போல, 'நேரே' என்பது இரண்டிடத்தும், 'நேர்' என வந்தது. 'மானே' என்னும் பிரிநிலை ஏகாரம் 'ஞான நடம் புரிகின்ற பெருமான்' என்பது உணர்த்தி நின்றது. 'நடம் உடை மன்று' என்பதை, 'மன்று உடை நடம்' என மாற்றிக்கொள்க. இஃது அருள் பெற்றுநின்ற ஞானியரை நோக்கிக் கூறியவாறாக அருளிச் செய்யப் பட்டது.
இதனால், அருட் சத்தி பக்குவ நிலையில்தானே தோன்று தலும், அத் தோற்றத்தின் பயன் முறையே அறிவும், ஆனந்தமும் ஆதலும் கூறப்பட்டன.

அறிவான மாயையும் ஐம்புலக் கூட்டத்
தறிவான மங்கை அருளது சேரின்
பிறியா அறிவறி வாருளம் பேணும்
நெறியாய சித்தம் நினைந்திருந் தாளே. ***#1110***

அருள்வழி நிற்கும் அறிவேயன்றி, மாயா கருவிகளின் வழி நிற்கும் அறிவும்தான் ஐம்புலன்களை நுகர்கின்ற பொழுது அறிவே வடிவான அருட் சத்தியோடு கூடியிருக்கப் பெறு மாயின், உயிர்க்குயிராய் உள்ள சிவத்தையே நினைக்கின்றவருடைய உள்ளத்தையே விரும்பியிருக்கும் தனது முறைமையை அவர்கள் இடத்தும் அருட்சத்தி கொண்டிருப்பாள்.

விளக்கவுரை

அஃதாவது, 'அவர்கள் உள்ளத்திலும் விரும்பியிருந்து, அவர்கள் செயலெல்லாம் தன் செயலாகச் செய்வள்' என்பதாம். 'மாயையேயான அறிவு' எனற்பாலதனை, 'அறிவான மாயை' என ஓதினார். உம்மை, இறந்தது தழுவிய எச்சம். கூட்டம் - கூடி நுகர்தல். 'கூட்டத்துச் சேரின்' என இயையும். 'சித்தம்' என்பது அதன்கண் கொள்ளப்படும் பொருளை உணர்த்திற்று. 'சேரின்' என்பதன்பின், 'அவள்' என்பது வருவிக்க.
இதனால், அருட்சத்தி ஞானிகட்கு உலகியலால் பழுதுண்து ஆகாதவாறு

காத்தல் கூறப்பட்டது. இந்நிலையே, 'பெற்ற சிற்றின்பமே பேரின்பமாம்' *1* நிலை என்க.

இரவும் பகலும் இலாத இடத்தே
குரவஞ்செய் கின்ற குழலியை நாடி
அரவஞ்செய் யாமல் அவளுடன் தூங்கப்
பருவஞ்செய் யாததோர் பாலனும் ஆமே. ***#1111***

'இரவு, பகல்' என்னும் வேறுபாடுகள் இல்லாத ஓர் அதிசய இடத்திலே சென்று அங்கே உள்ளவளாகிய அருட் சத்தி யையே நினைந்து, பிறிதொன்றும் செய்யாமல் அவளது அருளுடனே கூடித் தன்னை மறந்திருப்பவன், என்றும் இளையவனாய் இருக்கும் அவள்தன் மகனாய் விளங்குவான்.

விளக்கவுரை

நினைப்பும் மறப்பும் ஆக மாறிமாறி நிகழும் மாயா உணர்வுகளை, 'இரவு, பகல்' எனக் குறித்தல் மரபு. அவை அற்ற இடம் என்றும் ஒரு பெற்றியாய அருளுணர்வு. மகளிரது கூந்தலில் குராமலர் முடிக்கப்படுதலை ஒரு சிறப்பாகக் கூறும் இலக்கிய மரபு பற்றி,' குரவம் செய்கின்ற குழலி' என்றார். அரவம் செய்யாமை, மௌனமாய் இருத்தல்; என்றது செயலற்றிருத்தலை, பருவம் செய்தல், 'காளை, முதியன்' என்னும் நிலைகளை அடைதல், 'அவை இல்லாமை' என்றது, என்றும் ஒரு பெற்றியனாய் இருத்தல். எனவே, உலகியலால் வேறுபட்டு வருந்தாமை பெறப்பட்டது.

இதனால், அருட் சத்தியால் பாதுகாக்கப்பட்டவர்களது பெருமை கூறப்பட்டது.

பாலனு மாகும் பராசத்தி தன்னொடு
மேலனு காவிந்து நாதங்கள் விட்டிட
மூலம தாம்எனும் முத்திக்கு நேர்படச்
சாலவு மாய்நின்ற தற்பரத் தாளே. ***#1112***

'முத்திக்கு மூலம்' என்றும், எல்லாவற்றிற்கும் மேலான பொருள்' என்றும் சொல்லப்படுகின்ற அருட்சத்தி, சிவ புண்ணிய மிகுதியால் தனக்குக் கிடைக்க அவளோடு கூடி நின்றவன். அதன் பயனாக மாயா காரியங்கள் பலவும் தன்னை அணுகமாட்டாது நீங்க, இதுகாறும் மாயையின் மகனாய் நின்ற நிலைநீங்கி, அவ்வருட் சத்தியின் மகனாகின்ற பேற்றைப் பெற்று விளங்குவான்.

விளக்கவுரை

உம்மைகள், சிறப்பு. 'பராசத்தி' என்பது சுட்டுப் பெயரளவாய் நின்றது, 'நேர்பட' என்பதை ஈற்றடியின் பின் வைத்து, 'முத்திக்கு மூலமதாம்

எனும் … … தற்பரத்தாள் நேர்பட, பராசத்தி தன்னொடு கூடி மேலணுகா … … விட்டிடப் பாலனும் ஆகும்' எனக் கூட்டி உரைக்க.
இதனால், அருட் சத்தியைச் சார்ந்தவழி மாயை அணுக மாட்டாமை கூறி, அவளை அடைந்தவர் துன்புறாதிருத்தற்குக் காரணம் கூறப்பட்டது.

நின்ற பராசத்தி நீள்பரன் றன்னொடு
நின்றறி ஞானமும் இச்சையு மாய்நிற்கும்
நன்றறி யுங்கிரி யாசத்தி நண்ணவே
மன்றன் அவற்றுள் மருவிநின் றானே. ***#1113***

'முத்திக்கு மூலமாய் உயிர்களிடத்தில் நிற்பாள்' என மேற்கூறப்பட்ட அந்த அருட் சத்தியே முன்பு, உயிர்களை உய் விக்க விரும்பும் சிவனுடனே அந்த விருப்ப ஆற்றலாயும், பின், உயிர் களை உய்விக்கும் வழிகளை அறிகின்ற அறிவாற்றலாயும் நிற்பாள். (அப்பொழுதெல்லாம் சிவன் விரும்பியும், அறிந்து நிற்பதன்றிச் செயலில் ஈடுபடுதல் இல்லை.) பின்பு, அவள் நல்லவளாக அறியப் படுகின்ற கிரியா சத்தியாய் நின்ற பொழுதே, சிவன் அம் மூன்று சத்திக ளோடும் கூடிநின்று எல்லாச் செயலையும் செய்கின்றவனாவான்.

விளக்கவுரை

நீள் பரன் - தன்னிலையினின்றும் உயிர்களை உய் விக்கும் நிலைக்குச் செல்லும் சிவன். இங்ஙனம் செல்லும் நிலையே 'ஆதி சிவன்' என்னும் நிலையாகும். எனவே, இந் நிலையில் அவனது சத்தியும் 'ஆதி சத்தி' எனப்படுவாள் என்பது விளங்கும். 'திரோதான சத்தி, திரோதானகரி, திரோதாயி' என்னும் பெயர்களால் குறிக்கப் படுபவளும் இந்த ஆதி சத்தியே. இவளே, 'இச்சை, ஞானம், கிரியை' என முதற்கண் மூன்றாய் நின்று, பின், பற்பல காரணங்கள் பற்றிப் பல்வேறு வகையாய், அளவிறந்து நிற்பாள். ஆதிக்கு முன் உள்ள நிலை அநாதி. அந்நிலையில் சிவனும், சத்தியும் முறையே 'பரசிவன்' என்றும், 'பராசத்தி' என்றும் சொல்லப்படுவர்.
மன்றன் - மன்றில் (சபையில்) நிற்பவன் என்றது. 'ஐந் தொழில் செய்து நிற்பவன்' என்றதாம். செயலே உயிர்களால் அறியப் படுதலின், அதனையே 'நன்றறி கிரியா சத்தி' என்றார். 'நன்றாக, கிரியா சத்தியாய், மன்றனாய்' என்னும் ஆக்கச் சொற்கள் தொகுத் தலாயின. 'மன்றனாய் அவற்றுள் மருவிடும்' என்றாராயினும், 'அவற்றுள் மருவி மன்றனாயிடும்' என்பதே கருத்தாதல் அறிக.
இதனால், அருட்சத்தியே முதற்கண் ஆதிசத்தியாய் இறைவனது செயல்கள் எல்லாவற்றிற்கும் நீங்காத் துணையாய் நிற்றல் கூறப்பட்டது.

மருவொத்த மங்கையும் தானும் உடனே

உருவொத்து நின்றமை ஒன்றும் உணரார்
கருவொத்து நின்று கலக்கின்ற போது
திருவொத்த சிந்தைவைத் தெந்தைநின் றானே. *#1114*

சத்தியும் சிவனும் மலரும், மணமும் போலக் குண குணித்தன்மையால் இயைந்து, பொருள் ஒன்றேயாய் நிற்கும் உண்மையைச் சிலர் சிறிதும் உணர்வதில்லை. (அதனால், இரு வரையும் வேறு வேறுள்ளவர்களாகக் கருதி, அவர்களிடையே தார தம்மியம் கற்பித்து வாதிடுவர் என்றவாறு) சிவசத்திகள் பற்றிய இவ் வுண்மையை ஒத்துணர்ந்து அவர்களிடத்தில் உணர்வு செல்ல நிற்கும் பொழுதுதான் சிவன் அவ்வுணர்வை அருட்சத்திக்கு ஏற்புடையதாகச் செய்து, அச்சத்தியோடு தானும் அதன்கண் விளங்கிநிற்பான்.

விளக்கவுரை

'மருவொத்த' என்றதனால், 'மலரொத்த' என்பது கொள்ளப்பட்டது. உரு - பொருள். உருஒத்து நிற்றல் - பொருள் ஒன்றேயாய் நிற்றல். கரு - அடிநிலை உண்மை. 'கருவை ஒத்து (உடம்பட்டு) நின்று' என்க. திரு - அருட்சத்தி. 'திருவுக்கு ஒத்த' என்க.
இதனால், 'சத்தியைச் சிவனின் வேறாக உணர்தல், அறியாமையின் காரியமாய், அல்லற்படுத்தும்' என்பது கூறப்பட்டது.

சிந்தையி னுள்ளே திரியும் சிவசத்தி
விந்துவும் நாதமும் மாயே விரிந்தனள்
சந்திர பூமி சடாதரி சாத்தவி
அந்தமும் ஆதியும் ஆம்வன்னத் தாளே. *#1115*

மேற்கூறிய பண்பமைந்த உள்ளத்திலே நீங்காது விளங்குபவளாகிய அருட் சத்தியே, மேற்கூறியவாறு ஆதி சத்தியாய் நின்று, நாதம், விந்து முதலிய மாயா காரியங்கள் அனைத்தையும் தோற்றுவித்து, அவைகளில் வியாபித்து நிற்பாள்; பிண்டத்தில் சந்திர மண்டலத்தில் விளங்குவாள்; சடைமுடி தரித்துத் தவக் கோலத்துடனும் காணப்படுவாள். சாத்தேய மதத்திலும் நின்று, அவர்களது தகுதிக்கு ஏற்ப அருள் செய்வாள். அகாரம் முதல் க்ஷகாரம் ஈறாக உள்ள மூல எழுத்துக்களாயும் நிற்பாள்.

விளக்கவுரை

'விரிந்தனள்' என இறந்த காலத்தாற் கூறியதும், 'விரி யும் இயல்பினை உடையவள்' என்றதேயாம். இடைநின்ற ஏகாரம், பிரித்து, 'சத்தி' என்பதனோடு கூட்டப்பட்டது. 'பூமி' என்பதன்பின் வினைமுதற் பொருண்மை உணர்த்தும் இகர விகுதி புணர்ந்து கெட்டது.
'ஆதியதோடு அந்தமாம் வன்னம்' எனற்பாலதனைச் செய்யுள் நோக்கிப் பிறழக் கூறினார். அது, பகுதிப் பொருள் விகுதி.

இதனால், சத்தி, ஆதியாய் நின்று செய்யும் செயல்களெல்லாம் தொகுத்துக் கூறப்பட்டன.

ஆறி யிருந்த அமுத பயோதரி
மாறி யிருந்த வழிஅறி வார்இல்லை
தேறி யிருந்துநல் தீபத் தொளியுடன்
ஊறி யிருந்தனள் உள்ளுடை யார்க்கே. *#1116*

தோன்றாது அடங்கியிருந்த, ஞான உருவின ளாகிய அருட் சத்தி, அந்நிலைமாறி வெளிப்பட்டுநின்ற நிலையை அறிபவர் உலகருள் ஒருவரும் இல்லை, ஆயினும் புற நோக்கத்தை விடுத்து அக நோக்கத்தைக் கொண்டுள்ளவர்களுக்கு அவள் வெளிப் பட்டு, அவர்களைத் தன் அடியார்களாக ஏற்றுக்கொண்டு ஞான ஒளியின்வழிப் பேரின்பப் பெருக்காய்ச் சுரந்து நிற்கின்றாள்.

விளக்கவுரை

அமுத பயம் - அமிர்தமாய் (ஆணவத்தைப் போக்கு கின்ற மருந்தாய்) உள்ள பால். 'அதனைக் கொண்ட தனங்களை யுடையவள்' என்க. அருட்சத்தியாதல் தெளிவு. தேறுதல் - தெளிதல்; ஏற்றுக்கொள்ளுதல். 'சத்தி ஆறியிருத்தல், சிவத்தில் அடங்கித் திருவைந்தெழுத்தில் சிகாரத்தின் பின்னிற்றல்' எனவும், 'மாறி இருத்தல், சிகாரம் பின்னாகத் தான் முன்னே நின்று 'வசி' என்பதாக நிற்றல்' எனவும், 'அவ்வாறு மாறிநிற்கும் வழியை அறிவார் இல்லை' எனவும் முதலிரண்டடிகட்குக் குறிப்புப் பொருள் கொள்வாரும் உளர். அக நோக்காவது அருட்கண். இதனால், அருட்கண்ணைப்பெறும் பக்குவம் உடையார்க்கே அருட்சத்தி பயன் தருதல் கூறப்பட்டது.

உடையவன் அங்கி உருத்திர சோதி
விடையவன் ஏறி விளங்கி யிருக்கும்
கடையவர் போயிடும் கண்டவர் நெஞ்சத்
தடையது வாகிய சாதகர் தாமே. *#1117*

எல்லாப் பொருள்களையும் அடிமையும், உடை மையுமாக உடையவனும், அக்கினியைச் சிறப்பு வடிவமாகக் கொண்டவனும், 'உருத்திர மூர்த்தி' எனப்படுபவனும், இடப வாகனத்தை ஊர்பவனும் ஆகிய சிவன் இனிது விளங்கியிருக்கும் இடமே, மேற்கூறிய அக நோக்குடையவர் சென்று சேரும் இடமாகும். ஆகவே, அவ்விடத்திற் சென்று சிவனை நேர்படக் கண்டவர்களே உள்ளமாகிய வாயில் வாயிலாகப் பயன்படப் பெற்ற சாதகராவர்.

விளக்கவுரை

'விடை ஏறியாகிய அவன்' என மாற்றிக் கொள்க. கடை - இடம், போதல்,

இங்குச் சேர்தலைக் குறித்தது. 'போயிடும்' என்பது இங்குச் செயப்பாட்டு வினையாய் 'கடை' என்றதற்கு முடிபாயிற்று. அறிவை 'நெஞ்சம், உள்ளம்' முதலியனவாகக் கூறுதல் வழக்கு. தடை - வாயில். அதுவாதல் - வாயிலாகவே நின்று பயன்தருதல். 'நெஞ்சத்து அடையதுவாகிய' எனப் பிரித்தல் மோனை நயத்திற்கு ஏலாமையும், 'அடை' என்பதற்கு 'அடயோகம்' எனப் பொருளுரைத்தலும், 'அடயோகமே சிவனை விளங்கக் காணுதற்குச் சாதகம்' என்றலும் ஒவ்வாமையும் அறிந்துகொள்க.
இதனால், அருட்சத்தி விளக்கத்திற்கு உரியவர் ஆயினோர், பின் சிவப்பேறாகிய முடிந்தபயனைப் பெறுதல் கூறப்பட்டது.

தாமேல் உறைவிடம் ஆறித ழானது
பார்மேல் இதழ்பதி னெட்டிரு நூறுள
பூமேல் உறைகின்ற புண்ணியை வந்தனள்
பார்மேல் உறைகின்ற பைந்தொடி யாளே. ***#1118***

மேற் கூறிய சாதகர் உலகரின் மேம்பட்டுத் தங்கு கின்ற இடம் ஆறு. அவற்றுள் ஒவ்வொன்றும் தாமரைகளாய் விளங்கும். அவர்கட்குப் பிருதிவி 'முதலாக மேல்நோக்கி எண்ணு கின்ற தத்துவம் முப்பத்தாறினையும் இதழ்களாகக் கொண்ட மாயை யாகிய தாமரையிலும், உண்மையாகவே நூறிதழ் உள்ள தாமரையிலும் உள்ளவளாய்க் காட்சியளிக்கின்ற அச்சத்தி, உலகர் பொருட்டுப் பூமியில் தேவியாயும் விளங்குகின்றாள்.

விளக்கவுரை

முதற்கண் உள்ள இதழ், சினையாகுபெயர். ஆறு தாமரைகளாகிய இடம் ஆறு ஆதாரங்கள். 'இரு பதினெட்டு' என மாறிக் கூட்டுக. 'இதழ் இருபதினெட்டு உள பூ, நூறுள பூ' எனத் தனி இயைக்க. வழிபாட்டிற்குச் சிறந்த ஆசனம் தாமரை மலரும், அதனுட் சிறப்புடையது நூறிதழ் உடையதும் ஆதலின், தேவியை அதன்மேற் கண்டு அன்பர்கள் வழிபடுதல் மரபு. 'பார்' இரண்டில் முன்னது பிருதிவி தத்துவம்; பின்னது பூவுலகம். 'பைந்தொடியாளாய் வந்தனள்' என மேலே கூட்டுக. இதனுள்ளும் ஆசெதுகை வந்தது. 'புண்ணியம்' என்பது பாடமாயின், அதனை ஆகுபெயராகக் கொள்க.
இதனால், ஆறாதாரங்களின்வழி அகநோக்கிற் செல்ல மாட்டாத உலகர் பொருட்டு அச்சத்தியே திருக்கோயில்களில் உருக்கொண்டு எழுந்தருளியிருத்தல் கூறப்பட்டது.

பைந்தொடி யாளும் பரமன் இருந்திடத்
திண்கொடி யாகித் திகழ்தரு சோதியாம்
விண்கொடி யாகி விளங்கி வருதலால்

பெண்கொடி யாக நடந்த துலகே. *#1119*
சிவன் யாதொன்றையும் நினையாது வாளா இருக்கும் பொழுது, சத்தியும் அசைதல் இல்லாத கொடிபோல ஞானமாத்திரையாய் நிற்பாள். சிவன் மேகத்தில் உண்டாகின்ற மின்னலைப்போல உலகை நோக்கித் தெய்வ நாயகனாய் வருதலினால், சத்தி தெய்வநாயகியாய் அவனுக்குத் துணை நிற்கின்றாள். அதனாலே உலகம் நடைபெற்று வருகின்றது.

விளக்கவுரை

'பரமன் இருந்திட' என்பதை முதற்கண் வைத்து உரைக்க. 'திண்கொடி' இல்பொருள் உவமை. 'ஆக' இரண்டில் முன்னது உவம உருபு., 'பெண்கொடியாக' என்ற அனுவாதத்தால், பெண்கொடியாதலும் பெறப்பட்டது. 'பரமன், பைந்தொடியாள்' என்பன பின்னும் சென்று இயைந்தன.
இதனால், சத்தி சிவங்களது சொரூப தடத்த நிலைகள் கூறப்பட்டன. சொரூபம் அநாதி; பரம். தடத்தம் ஆதி; அபரம்.

நடந்தது அம்மலர் நாலுடன் அஞ்சாய்
இருந்தனர் கன்னிகள் எட்டுடன் ஒன்றாய்
படர்ந்தது தன்வழிப் பங்கயத் துள்ளே
தொடர்ந்தது உள்வழிச் சோதி அடுத்தே. *#1120*

உலகம் நடைபெறுவது ஒன்பது இதழ்த்தாமரை வடிவாகியாம். அதனால், சத்தியின் பேதங்களாய் உள்ள கன்னியரும் வாமை முதலிய எண்மரும், முதல்வியாகிய மனோன்மனியும் என ஒன்பதின்மராயினர். அவர் அனைவரும் இயங்குவது ஆதி சத்தியின் வழியேயாம். அவர்களை உலகத்தார் தொடர்வது மேற்கூறிய தாமரை மலரிலே. இவையெல்லாம். இங்ஙனம் இருத்தல் சிவனைச் சார்ந்தேயாம்.

விளக்கவுரை

1067 - ஆம் மந்திரத்தின் உரை பார்க்க. இரண்டாம் அடி மூன்றாம் எழுத்தெதுகை.
இதனால், சத்தியின் நிலைகளை வழிபாட்டு முறையிற் காணுமாறு கூறப்பட்டது.

அடுக்கின்ற தாமரை ஆதி இருப்பிடம்
எடுக்கின்ற தாமரை இல்லகத் துள்ளது
மடுக்கின்ற தாமரை மத்தகத் தேசெல
முடுக்கின்ற தாமரை முற்சது ரத்ததே. *#1121*

பிராணன் எளிதில் சென்று பொருந்துகின்ற ஆஞ்ஞா சக்கரத்தில் உள்ள தாமரையே ஆதிசத்தி நின்று உயிர்களுக்கு அறிவிக்கின்ற இடமாகும். ஆன்மாவைக் கீழே செல்லாது தியானம் முதலியவற்றால் மேலெழச்

செய்கின்ற ஆசனமாகிய தாமரை மலர் உடலின் நடுவிடத்தில் உள்ளது. (அனாகதம் - இருதயம் என்றவாறு.) வழிபடுவோன் சந்திரனது அமுதத்தைப் பருகும் இடமாகிய ஆயிர இதழ்த் தாமரை மலர் உள்ள தலையிலே உயிருணர்வு செல்லும்படி ஓட்டுகின்ற தாமரை மலர், மேற்சொல்லிய அனைத்திற்கும் முதலிலே நாற்கோண நிலையினதாய் உள்ளது. (மூலாதாரத்திலே உள்ளது என்பதாம்.)

விளக்கவுரை

'அம்முறையறிந்து சத்தியை அங்கெல்லாம் வழிபடுக' என்பது குறிப்பெச்சம். 'அடுக்கும்' என்பது முதலாகவும், 'முச்சதுரத்து' எனவும் ஓதுவன பாடம் ஆகாமையறிக.
இதனால், 'சத்தியை யோக முறையில் வழிபடுதல் மிக்க பயனைத் தரும்' என்பது கூறப்பட்டது.

முற்சது ரத்தே எழுந்த முளைச்சுடர்
எச்சது ரத்தும் இடம்பெற ஓடிடக்
கைச்சது ரத்துக் கடந்துள் ஒளிபெற
எச்சது ரத்தும் இருந்தனள் தானே. ***#1122***

முதல் ஆதாரமாகிய மூலத்தினின்றும் எழுகின்ற தீக் கொழுந்து ஏனை ஆதாரங்களிலும் சென்று பரவுதற்பொருட்டும், அங்ஙனம் பரவுதலின் பயனாகிய உள்ளொளியைத் தரிசித்தற் பொருட்டும் சத்தி அந்த ஆதராங்களாகிய சிறிய இடங்களில் அடங்கு பவள் அல்லளாய் இருந்தும் அவைகளில் எழுந்தருளியிருக்கின்றாள்.

விளக்கவுரை

'அதற்குக் காரணம் கருணையே' என்பது கருத்து. முன்னது, 'சதுரம்' எனக் கூறினமையால், ஏனைய ஆதாரங்களையும் பொதுப்பட, 'சதுரம்' என்றார். மந்திரக் கட்டங்கள் சதுர வடிவாயினும், 'சக்கரம்' என வழங்கப்படுதல் போல, 'சக்கரம்' எனப்படுபவற்றை 'சதுரம்' என்றார். 'கடந்தும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. முதலடி இன எதுகை.
இதனால், 'எங்கும் வியாபியாய் உள்ளவளைச் சக்கரங்கட் குள்ளே காணுதல் எவ்வாறு' என்னும் ஐயம் நீக்கப்பட்டது.

இருந்தனள் தன்முகம் ஆறொடு நாலாய்
பரந்தன வாயு திசைதிசை தோறும்
குவிந்தன முத்தின் முகம்ஒளி நோக்கி
நடந்தது தேறல் அதோமுகம் அம்பே. ***#1123***

சத்தி பத்துத்திருமுகங்களைக்கொண்டு பத்துத் திசைகளையும் நோக்கியிருக்கின்றாள். அதனாலே, காற்று எங்கும் சென்று அசைதலும், நெருப்பு மேல்நோக்கி எரிதலும், நீர் கீழ்நோக்கிப் பாய்தலும்

உடையனவாய்த் தம்தம் செயலைச்செய்கின்றன.

விளக்கவுரை

'திசை திசைதோறும்' என்றமையால் பத்துத் திசையையும் நோக்குதற் பொருட்டுப் பத்து திருமுகங்களையுடைய ளாயினமை பெறப்பட்டது. சிறப்புடைய மூன்றனை எடுத்துக்கூறிப் பிறபிற பொருள்களும் சத்தியின் பார்வையாலே செயற்பட்டு நிற்றலைக் கொள்ளவைத்தார். வாயு ஒன்றேயாயினும் திசைநோக்குப் பற்றிப் பலவாக வழங்கப்படுதல் நோக்கிப் பன்மையாகக் கூறினார். 'ஒளி' என்றது சுடரை. தீயின் சுடர்கள் பலவாதல் வெளிப்படை. 'முத்து' என்றது நகைப்பினை. 'ஒளிமுத்தின் முகம் நோக்கிக் குவிந்தன' எனக் கூட்டுக. குவிதல், மேல்நோக்கி எழுதல். தேறல் - தேன். 'அம்பு தேறல்போல அதோமுகம் நடந்தது' என்க. தேன் போறல், இனிமையை உண்டாக்கல். இதனுள் பின்னிரண்டடிகள் மூன்றாம் எழுத்தெதுகை.

இதனால், பொருள்தன்மை பலவும் சத்தியது அருள் நோக்காலே நிலைபெறுதல் கூறப்பட்டது.

அம்பன்ன கண்ணி அரிவை மனோன்மனி
கொம்பன்ன நுண்ணிடைக் கோதை குலாவிய
செம்பொன்செய் யாக்கை செறிகமழ் நாடொறும்
நம்பனை நோக்கி நவிலுகின் றாளே. ***#1124***

சத்தி, சிவனது சிவந்த பொன் போலும் திரு மேனியில் நிறைந்த நறுமணம் கமழும்படி அவனையே நாள்தோறும் பற்றிப் பயில்கின்றாள்.

விளக்கவுரை

முன்னிரண்டடிகளின் பொருள் வெளிப்படை. 'செறி கமழ்' என்பது, 'செறிந்து கமழ' எனப்பொருள் தந்தது. நவிலுதல் - பயிலுதல். முதலடி உயிரெழுத்தெதுகை.

இதனால், சத்தி மேற்கூறிய செயல்கள் அனைத்தையும் சிவனிடத்தில் நின்றே செய்தலன்றித் தனித்து நின்று செய்யாமை கூறப்பட்டது.

நவிலும் பெருந்தெய்வம் நான்மறை சத்தி
துகிலுழை யாடை நிலம்பொதி பாதம்
அகிலமும் அண்டம் முழுதும்செம் மாந்து
புகலும்முச் சோதி புனையநிற் பாளே. ***#1125***

நான்கு வேதங்களும் சொல்கின்ற பெருந்தெய்வம் (முதற்கடவுள்) ஆகிய பூரணசத்தி, திக்குகளையே ஆடையாகக் கொண்டு, பாதம் பூமியைக் கடந்தும், முடி வானத்தைக் கடந்தும் இருக்க, 'சூரியன், சந்திரன், அக்கினி' என்னும் முச்சுடர்களே மணிகள் இழைத்த அணிகளாய் அழகுபடுத்த நிற்பாள்.

விளக்கவுரை

'உலகம் முழுவதையும் தனக்குத் திருமேனியாகக் கொண்டு விளங்குவாள்' என்றபடி. இதனையே 'விசுவரூபம்' என்பர். விசுவம் - உலகம்.

'நான்மறை நவிலும் பெருந் தெய்வசத்தி' என மாறிக் கூட்டுக. உழை - பக்கம்; திசை. துகில் - உயர்வகைப்புடைவை. புலித்தோலே யல்லது மான்தோல் உடையாகச் சொல்லப்படாமையால், 'உழை' என்பதற்கு 'மான்' என உரைத்தல் பொருந்தாமை அறிக. நிலம் பொதி - பூமியை உள்ளடக்கிய. செம்மாந்து - நிமிர்ந்து; கடந்து.

'நிலமுதற்கீழ் அண்டம் உள நிமிர்ந்தது' என்றல் காண்க. முதலடி உயிரெதுகை.

இதனால், 'சில பொருள் அளவிலே வியாபகமாகாது, எல்லா உலகத்திற்கும் வியாபகமாகின்ற சத்தியே பூரண சத்தியாம்' என அவளது இயல்பு கூறப்பட்டது.

புனையவல் லாள்புவ னத்திறை எங்கள்
வனையவல் லாள்அண்ட கோடிகள் உள்ளே
புனையவல் லாள்புவ னத்தொளி தன்னை
புனையவல் லாளையே போற்றியென் பேனே. ***#1126***

உலகத் தலைவனாகிய சிவனையும், உயிர்களாகிய எங்களையும் தாங்க வல்லவள்; உலகங்கள் அனைத்தையும் ஆக்க வல்லவள்; அவைகளைத் தனக்குள்ளே அடக்கிக் காக்க வல்லவள்; உலகத்து ஒளிகள் அனைத்தையும் தனது திருமேனியின் ஒளியாகச் செய்ய வல்லவள்; அத்தகைய பேராற்றல் உடையவளாகிய பூரண சத்தியையே நான் துதிக்கின்றேன்.

விளக்கவுரை

முதற்கண் உள்ள புனைதல் - தரித்தல். 'இறை' என்பதில் இரண்டனுருபு இறுதிக்கண் தொக்கது. 'எங்கள்' என்பதில் இரண்டனுருபு தொகுக்கப்பட்டது. சத்தி இறைவனைத் தாங்குதல் ஆவது, உற்ற துணையாய் இருத்தல். 'மண்டலம்' என்பது 'அண்டம்' என்னும் பொருளதாய் நின்றது. 'அப்புனைய வல்லாளையே' எனச் சுட்டு வருவிக்க.

இதனால், பூரண சத்தியது ஆற்றலின் பெருமை வகுத்துரைத்து, 'சத்தி' எனப்படுவாள் அவளேயாதல் கூறப்பட்டது.

போற்றிஎன் பேன் புவனாபதி அம்மை என்
ஆற்றலுள் நிற்கும் அருந்தவப் பெண்பிள்ளை
சீற்றங் கடிந்த திருநுதற் சேயிழை

கூற்றந் துரக்கின்ற கோட்பைந் தொடியே. *#1127*
எனது இச்சா ஞானக்கிரியைகளாகிய ஆற்றலில் இயைந்து நின்று அவற்றை இயக்குகின்ற, அரியதவத்தால் அடையப் படுபவளும், 'சாந்த ரூபம், யமனையும் வெல்லும் வேக ரூபம்' என்னும் இரு நிலைகளையும் உடையவளும் ஆகிய அந்த உலகத் தலைவியாம் பூரண சத்தியையே நான் வணங்குதல், வாழ்த்துதல் முதலியவற்றைத் தெரிவிக்கும் சொற்களைச் சொல்லி வழிபடுகின்றேன்.

விளக்கவுரை

புவனாபதி அம்மை - உலகத்தோடு இயைந்து நின்று அதனைச் செயற்படுத்திகின்ற சத்தியும், அச்சத்தியோடு கூடி நிற்பவ னாகிய 'பதி' என்னும் சிவனும் என்னும் இருவராகவும் அறியப் படுகின்ற அம்மை. 'சத்தியும், சிவமும் தம்மில் வேறல்லவாகலின், இங்குக் கூறிவருகின்ற பெருமைகளை அவ்விருவரில் எவருக்கு உரியதாகக் கூறினும் குற்றம் இன்று' என்பதை விளக்க. 'அம்மை' என்றாயினும் கூறாது புவனாபதி அம்மை' எனக் கூறினார். 'இங்ஙனமாயினும், அவரவர்க்கு அன்பு செல்லும் வழியாற் கூறுதலே முறை' என்பது பற்றி இந்நூலுள் இத்தன்மைகளைச் சில விடத்துச் சிவனுக்குரியவாகவும், சிலவிடத்துச் சத்திக்குரியவாகவும் கூறப்படு கின்றன' என்பது பெறப் பட்டமை காண்க. 'புவனாபதி அம்மை என்பதன் பொருள் விளங்கினமையின், 'புவனாபதி' என்னும் அளவாகவே பின்னர்க் கூறுமிடத்து, அச்சொற்பொருளும் இதுபற்றி அறிந்துகொள்ளப்படும். அஃதாவது, 'அம்மை என்பது ஆற்றலால் விளங்க வைத்துக் கூறப்படுதல் அறியப்படும்' என்க.
சீற்றங் கடிதல், சாந்தமாய் இருத்தல். கோள் - கருத்து. கூற்றந் துரக்கின்ற கோள் - பகையை அழிக்கும் கருத்து. 'அம்மை' முதலியவற்றில் இரண்டனுருபுகள் தொகுத்தலாயின.
இதனால், பூரண சத்தி, 'அமைதி, சீற்றம்' என்னும் இரு நிலையிலும் நின்று நலம் செய்தல் கூறப்பட்டது. வேகநிலை துன்பத்தைப் போக்குவது. சாந்த நிலை இன்பத்தை ஆக்குவது.

தொடியார் தடக்கைச் சுகோதய சுந்தர
வடிவார் திரிபுரையாம் மங்கை சங்கைச்
செடியார் வினைகெடச் சேர்வரை என்றென்
அடியார் வினைகெடுத் தாதியு மாமே. *#1128*

வளையல் அணிந்த கைகளையுடையவளும், இன்பத் தோற்றத்திற்குக் காரணமாயிருப்பவளும், அழகிய வடிவத்தை யுடைய 'திரிபுரை' என்னும் தேவியும் ஆகிய சத்தி, ஐயத்திற்குக் காரண மாயுள்ள கீழான முன்னை வினைகள் கெடுதலினால் தன்னை உணர்ந்து வந்து அடைபவர்களை,

'என் அடியார்கள்' என்று சொல்லி ஏற்று, அவர்கட்கு, மேல் வினை வாராமல் காக்கின்ற தலைவியாயும் நிற்பாள்.

விளக்கவுரை

'சுந்தரி' என்பது பாடமாகாமை அறிக. 'சேர்வாரை' என்பது குறுகிநின்றது. 'என் அடியார் என்று வினை கெடுத்து' எனக் கூட்டுக. 'ஆதியும் ஆம்' என்னும் உம்மை, இறந்தது தழுவிய எச்சம்.
இதனால், பூரணசத்தியைத் தெளிந்து அடைந்தோர் வினைக்கட்டு நீங்கி வீடுபெறுதல் கூறப்பட்டது.

மெல்லிசைப் பாவை வியோமத்தின் மென்கொடி
பல்லிசைப் பாவை பயன்தரு பைங்கொடி
புல்லிசைப் பாவையைப் போகத் துரந்திட்டு
வல்லிசைப் பாவை மனம்புகுந் தாளே. ***#1129***

மென்மைத்தன்மையோடு பொருந்து தலை யுடைய பெண்மகளாகக் காட்சியளிப்பவளும், ஆகாயத்தில் தோன்றும் மின்னலை ஒப்பவளும், பலவாகிய புகழையுடைய தேவியாய் நின்று பல பயன்களைத் தருகின்ற, பசிய கொடி போன்றவளும் ஆகிய சத்தி, கீழ்மையோடு இசைதலையுடைய அக இருளாகிய பெண்டினை என் மனமாகிய வீட்டினின்றும் ஓட்டிவிட்டுத் தான் வலிமையோடு கூடிய பெண்டாய் அதனுள் குடிபுகுந்தாள்.

விளக்கவுரை

'இசை' நான்கில் இரண்டாவது, புகழ். ஏனையவை முதனிலைத் தொழிற் பெயர்.
இதனால், பூரணசத்தி, மேற்கூறிய வினைகட்குக் காரணமாய் நின்று அக இருளையும் போக்கியருள்கின்ற ஆற்றலுடையளாதல் கூறப்பட்டது.

தாவித்த அப்பொருள் தான் அவன் எம்மிறை
பாவித் துலகம் படைக்கின்ற காலத்து
மேவிப் பராசத்தி மேலொடு கீழ்தொடர்ந்
தாவிக்கு மப்பொரு ளானது தானே. ***#1130***

சத்தி மேற்கூறியவாறு மனம் புகுந்தபின் அவளால் அங்கு நிறுவப்பட்ட (நிலைப்பிக்கப்பட்ட) அப்பொருள் எம் இறைவனாகிய சிவனேயாகும். எதனால் எனின், அவன் உலகைப் படைக்க நினைக்கும்பொழுது சத்தியும் அதனையே விரும்பி, மாயையின், மேல் கீழ் ஆகிய இரு பகுதிகளையும் சார்ந்து நின்று பல்வேறு வகையாகப் புலனாகின்ற அப்பொருளாய் நிற்கின்ற அச்செயலையே தான் செய்வாள் ஆதலின்.

விளக்கவுரை

'தாவித்த அப்பொருள்' என்ற அனுவாதத்தால், தாவித்தலும்

பெறப்பட்டது. படவே, சத்தி தான் மனம் புகுந்தபின் சிவனை அங்கு நிலைப்பிக்கச் செய்தலும் ஒருதலையாக நிகழ்தல் அறியப்படும். இதனை, சிவனே முதல்வனாக, சத்தி துணைவியாய் நிற்றலாகிய உண்மைபற்றித் தெளிந்து கொள்ளுதற்குப் பின்மூன்று அடிகளைக் கூறினார். 'அவன்தான்' என மாற்றியுரைக்க. 'பாவித்துப் படைக்கின்ற காலத்து' என்றாராயினும் 'படைக்கப் பாவிக்கின்ற காலத்து' என்றலே கருத்தென்க. தொடர்தற்குச் செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது.' ஆவித்தல் - உயிர்த்தல் புலனாதல். 'ஆனதே செய்தாள்' எனவும், 'ஆதலின்' எனவும் சொல்லெச்சங்கள் வருவித்துக் கொள்க. 'தானது தானே' என்பது பாடமன்று.

இதனால், பூரணசத்தி, பின் சிவத்தைத்தருதல் கூறப்பட்டது.

அதுஇது என்பார் அவனை அறியார்
கதிவர நின்றதோர் காரணம் காணார்
மதுவிரி பூங்குழல் மாமங்கை நங்கை
திதமது உன்னார்கள் தேர்ந்தறி யாரே. ***#1131***

'அதற்குக் காரணம் அதற்கு முன்னுள்ள அந்த ஒன்று; இதற்குக் காரணம் இதற்கு முன்னுள்ள இன்னொன்று' என்று இப்படிக் காரியப்பொருள்கள் பலவற்றிற்கும் பல காரணப் பொருள்களையே முடிந்த காரணப் பொருளாக மயங்கி, அனைத்துக் காரணங்கட்கும் காரணமாய் உள்ள பொருளை உணரமாட்டாதவர் சிவனை அறியுமாறில்லை. அதனால், முத்திக்கு வழியை அவர் அறியாதவரே யாகின்றனர். அவர் அன்னராதல் சத்தியின் இயல்பை முற்பட உணராமை யாலேயாம். ஆதலின், அவர் உண்மைச் சிந்தனையாளர் அல்லர்.

விளக்கவுரை

ஓர் காரணம் - பிறிதுகாரணம் இல்லையாகத் தான் ஒன்றேயாய் உள்ள காரணம். திதம் - நிலைமை; இயல்பு. அது, முன்னே திரோதாயியாய் நின்று பக்குவத்தை வருவித்துப் பின் அருட் சத்தியாய்ப் பதிதல்.

இதனால், பூரண சத்தியது இயல்பை உணர்தலின் இன்றி யமையாமை கூறப்பட்டது.

6.8. ஆதார ஆதேயம்

நாலிதழ் ஆறில் அவிர்ந்தது தொண்ணூறு
நாலித ழானவை நாற்பத்து நாலுள
பாலித ழானஅப் பங்கய மூலமாய்த்
தானித ழாகித் தரித்திருந் தாளே. *#1132*

நான்கு இதழ்களையுடைய தாமரையாகிய மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களில் சுத்த
தத்துவம் ஐந்தும், புருடன் ஒன்றும் தவிர, ஏனையதத்துவ தாத்துவிகங்கள் தொண்ணூறும் அடங்கி நிற் கின்றன. இடைநான்கு ஆதாரத்தின் தாமரைகளில் நாற்பத்து நான்கு இதழ்கள் உள்ளன. இரண்டிதழ்களையுடைய அந்த ஆஞ்ஞைத் தாமரைக்கு அடியாயுள்ள ஏனைய ஆதாரத் தாமரைகளாய் நின்று அந்த ஆஞ்ஞையைத் தாங்கியும், அவ் ஆஞ்ஞைத் தாமரையாய் நின்று அதன்கண் விளங்கும் தியானப்பொருளைத் தாங்கியும் அருள் புரிகின்றாள் சத்தி.

விளக்கவுரை

ஆறு ஆதாரங்களும், அவற்றின் அமைப்புக்களும், அவற்றில் உள்ளனவும் முன்னைத் தந்திரத்தில் விளங்கக் கூறப் பட்டன. 'இதழ்' நான்கில் முதலதும், ஈற்றதும் ஆகுபெயர். முத லடியில் 'நாலிதழ்' என்பதன்பின் 'முதலிய' என்பது எஞ்சி நின்றது. சுத்த தத்து வங்கள் ஏழாந் தானத்தில் நிற்றல் பற்றியும், புருடன் ஆஞ் ஞையைக் கடந்தும் செல்லுதல் பற்றியும் அவை ஒழிந்தன ஆறா தாரங்களில் நிற்கும் என்க. 'நாலிதழானவை' என்பதில் 'நாலின்கண் இதழானவை' என ஏழன் உருபு விரித்துக்கொள்க. 'அவிர்ந்தது' என்பது 'நவின்றது' என இருந்தது போலும். பால் - பகுப்பு. எனவே, 'இரண்டு' என்றதாயிற்று. தரித்தல் - தாங்குதல்; இதற்குச் செயப்படு பொருள் வருவித்துக்கொள்க. உயர்ந்ததாகிய ஆஞ்ஞையின் ஆதார ஆதேயங்களாதல் கூறவே, கீழுள்ளவற்றிற்கும் அவ்வாறாதல் பெறப் பட்டது. மூலாதாரத்திற்கு ஆதார மாதல் நேரேயாம். 'சத்தி' என்பது முன்னை அதிகாரத்தினின்றும் வந்து இயைந்தது. ஈற்றடி உயிரெதுகை.
இதனால், சத்தி ஆதார பங்கயங்களின் ஆதார ஆதேயமாய் நிற்றல் கூறப்பட்டது.

தரித்திருந் தாள்அவள் தன்னொளி நோக்கி
விரித்திருந் தாள்அவள் வேதப் பொருளை
குறித்திருந் தாள்அவள் கூறிய ஐந்தும்
மறித்திருந் தாள்அவள் மாதுநல் லாளே. *#1133*

சத்தி அனைத்துயிர்க்கும் தாயாகலின் அவள் மேற் கூறியவாறு ஆதார

பங்கயங்களின் ஆதாரமும், ஆதேயமுமாய் நிற்றல் தனது ஒளியுருவை யோகியர் காணுதல் குறித்தும், கலைஞானத்தை மிகத்தந்தும், ஐம்புல ஆசைகளின் கொடுமையைக் கண்டு அதனைத் தடுத்துக் கொண்டுமாம்.

விளக்கவுரை

'மாதுரு' என்னும் வடசொல் ஈறுதொகுத்தல் பெற்று நின்றது. இதன்பின் 'ஆதலின்' என்பது எஞ்சி நின்றது. 'மாதுரு நல்லா ளாகலின்' என எடுத்துக்கொண்டு உரைக்க. 'தன்னொளி நோக்கி' என்பது, 'தன்னொளியை அடியவர் காணுதல் குறித்து' எனப் பொருள் தந்தது. 'கூறிய ஐந்தும்' என்பது, இடைநிலைத் தீவகமாய் நின்றது. பின்னிரண்டடிகள் ஒப்பெதுகை.
இதனால், சத்தி ஆதார பங்கயங்களின் ஆதார ஆதேயமாய் நின்று செய்வன இவை என்பது கூறப்பட்டது.

மாதுநல் லாளும் மணாளன் இருந்திடப்
பாதிநல் லாளும் பகவனும் ஆனது
சோதிநல் லாளைத் துணைப்பெய்ய வல்லிரேல்
வேதனை தீர்தரும் வெள்ளடை யாமே. ***#1134***

சத்தி தனது மணாளனாகிய சிவன் ஒருபோதும் தன்னைவிட்டு நீங்காதிருத்தலினாலே ஒரு பாதியேதானாய், மற்றொரு பாதி அச்சிவனாய் இருக்கின்றாள். (இந்நிலை எக்காலத்தும் வேறு படுதல் இல்லை என்றபடி) அத்தன்மையை உடைய ஒளி வடிவி னளாகிய அவளைத் துணையாக உங்கள் உள்ளத்தில் இருத்த வல்லீ ராயின், எல்லாத் துன்பமும் நீங்கும்; வெளுக்கப்பட்ட ஆடைபோல் ஆன்மா மும்மலங்களும் நீங்கத் தூயதாய் விளங்கும்.

விளக்கவுரை

'மாது நல்லாளும்' என்னும் உம்மை சிறப்பு. 'மாது நல்லாளும் ஆனது இருந்திட' என இயையும். சொல்லமைதி இங்ஙன மாயினும், கருத்து நோக்கி மேற்கண்டவாறு உரைக்கப்பட்டது. 'துணை யாக' என ஆக்கம் வருவிக்க. வெள்ளாடை என்பது குறுகி நின்றது. இயல்பாகவே கொண்டு, 'உயிர் தூய்மையை அடைதல் உண்டாகும்' என உரைத்தலுமாம். வெள்ளாடையாதற்கு வினைமுதல் வருவிக்க.
இதனால், 'சத்தியை, சிவனை ஒரு பாதியில் உடையவ ளாகவே தியானித்தல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

வெள்ளடை யான்இரு மாமிகு மாமலர்க்
கள்ளடை ஆரக் கமழ்குழ லார்மனம்
மள்ளடை யானும் வகைத்திற மாய்நின்ற
பெண்ணொரு பாகன் பிறவிபெண் ணாமே. ***#1135***

கருவி கரணங்கள் சென்று பற்றும் வகையில் வெளி நில்லாதவனும், கரிய வண்டுகள் மொய்க்கின்ற மலர்களின் தேன் பொருந்தி நிரம்புதலால் நறுமணம் கமழ்கின்ற கூந்தலையுடைய மகளிரால் மனம் வருந்துதல் இல்லாதவனும் ஆகிய சிவன், அத் தன்மையனாயினும், சிலபொழுது தனது கூறேயான ஒரு பெண்ணைத் தன் உடம்பில் ஒருபாதியில் கொண்டவனாய்க் காணப்படுதலும், சிலபொழுது பெண்ணேயாய்க் காணப்படுதலும் உடையன்.

விளக்கவுரை

'மா' இரண்டில் முன்னது வண்டு, 'கள் அடை' என்பதில் 'அடை' என்னும் பகுதி 'அடைந்து' என வினையெச்சப் பொருள் தந்தது. 'குழலாரால்' என்னும் உருபு தொகுத்தலாயிற்று. மள் - மள்கல்; முதனிலைத் தொழிற் பெயர். 'மழுங்குதல்' என்பது பொருள். 'வெள்ளடையானாகிய மள்ளடையானாயினும்' என்பது சொல் அமைதி. 'ஆம்' என்பதை, 'பாகன்' என்பதனோடும் கூட்டுக. 'பிறவியே' என்னும் ஏகாரம் தொகுத்தலாயிற்று. 'சிவன் உண்மையில் ஆணும் அல்லன்; பெண்ணும் அல்லன்; அதனால், வேடங்கட்டி ஆடுவார் போன்று பொது நிலையில் எவ்வகையாயும் தோன்றுவன்' என்பது ஈற்றடியின் கருத்து. எனவே, சிவனது ஆண் தோற்றம் ஒன்றையே கொண்டு 'அதுவே அவனது உண்மையியல்பு' என வழக் கிடுதலும், பெண் தோற்றம் ஒன்றையே கொண்டு, 'அதுவே அவனது உண்மை யியல்பு' என வழக்கிடுதலும், மாதொரு கூறாய தோற்றம் ஒன்றையே கொண்டு 'இரண்டும் கூடியுள்ளதே அவனது உண்மை யியல்பு' என வழக்கிடுதலும் பேதைமைப் பாலவாதல் விளங்கும். இவ்வியல்பு சிவன், சத்தி இருவர்க்கும் உரியதென்க. எனவே, கடவுளது ஆண் தோற்றம் முதலிய மூவகைத் தோற்றங்களுள் எதனைக் காணினும், 'இஃது உயிர்கள் பொருட்டு ஏற்ற பெற்றியாற் கொண்ட பொதுவியல்பாம்' என உணர்தலல்லது, 'சிவன், சத்தி இவர்களது உண்மை யியல்பு என மயங்குதல் பொருந்தாதாயிற்று. இவ்வியல்பினை,

'ஒன்றொடொன் றொவ்வா வேடம்ஒருவனே தரித்துக்
[கொண்டு
நின்றலால் உலகம் நீங்கி நின்றனன் என்றும் ஓரார்' 1

என விளக்கிற்றுச் சிவஞான சித்தி. இன்னும்,

'எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன் தமையன்' 2

எனவும்,

'சிவம் சத்தி தன்னை யீன்றும் சத்திதான் சிவத்தை யீன்றும்
உவந்திரு வரும் புணர்ந்திங் குலகுயி ரெல்லாம் ஈன்றும்

பவன்பிரம சாரி யாகும்; பால்மொழி கன்னி யாகும்;
தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் தெரியுமன்றே' 3
எனவும் வருவன போல்வன பலவும், இவையெல்லாம் கடவுள் தனது அருள் நாடகத்திற்கொள்ளும் பொதுவியல்பாதலன்றி உண்மை யியல்பாகாமையை விளக்க எழுந்தனவேயாம். ஆகவே,
'கூத்தினர் தன்மை வேறு கோலம்வே றாகு மாபோல்' 4
என்ற பெரியவர் ஒருவர் வாக்கின்படி ஆடவர் போலவும், மகளிர் போலவும் வேடங்கட்டியாடுவார். அவ்வேடத்திற்கு ஏற்பவே நடித்து நிற்பினும் அவரது உண்மைத் தன்மை அவ்வேடத்திற்கு வேறாயினாற் போலவே, ஆணாயும், பெண்ணாயும் தோன்றும் கடவுளின் உண்மையியல்பு அவற்றின் வேறேயாம் என்பது இனிது விளங்கும்.
'சத்திதான் நாத மாதி தானாகும்; சிவமும் அந்தச்
சத்திதான் ஆதி யாகும்; தரும்வடி வான வெல்லாம்
சத்தியும் சிவமும் ஆகும்' 1
என்ற சிவஞான சித்தியையும் அதற்கு மாபாடியம் உடையார் உரைத்த உரையும் இங்கு இனிது நோக்கி உணர்க. இங்ஙனம், உணரமாட்டாது தம்முள் மாறுபட்டு வழக்கிடுவாரை நோக்கியேயன்றோ தாயுமான அடிகள்,
'அன்னே அனே எனும் சிலசமயம் நின்னையே;
ஐயா ஐயா என்னவே
அலறிடும் சிலசமயம்'
என முதற்கண் நகையாடியும், பின்னர்,
'என்னே எனேகருணை விளையாட் டிருந்தவாறு' 2
என வியந்தும் கூறியருளினார். ஈற்றடி இனவெதுகை.
இதனால், 'சிவம் சத்தி இவர்களிடையே சொல்லப்படும் நாயக நாயகித் தன்மை குணியும், குணமுமாய் நிற்கும். அதனை விளக்கும் அத்துணையதேயல்லது முழுவதுமாகின்ற உண்மையியல்பு அன்று' என்பதும், 'அதனால் அத்தன்மைக்கு ஏற்ப அவர்கள் கொள்ளும் கோலம் அவர்களது பொதுவியல்பேயாம்' என்பதும் குறிப்பு மொழியாற் கூறப்பட்டன. இது பற்றியன்றே ஞானசம்பந்தரும், இறைவனை 'ஒருமை பெண்மை யுடையனாக' 3 முன்னரே கண்டு வைத்திருந்தும், வையைக் கரையில் பாண்டியன் கேட்க அருளிச் செய்த திருப்பாசுரத் திருப்பதிகத்தில்
'எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ' 4
என அருளிச் செய்தார்! அதனால், இறைவனது உண்மையியல்பு உயிர் களால் 'இன்னதுதான்' என வரையறுத்துணரப் படாததாதல் தெற்றென விளங்கும். இதனை விளக்கும் முகத்தானே ஆதார ஆதேயங்களாய்

நிற்றல் சத்தி, சிவம் இருவர்க்கும் பொதுவேயாதல் உணர்த்தப்பட்டது.

பெண்ணொரு பெண்ணைப் புணர்ந்திடும் பேதைமை
பெண்ணிடை ஆணும் பிறந்து கிடந்தது
பெண்ணிடை ஆணின் பிறப்பறிந் தீர்க்கின்ற
பெண்ணுடை ஆணிடைப் பேச்சற்ற வாறே. *#1136*

ஒரு பெண் மற்றொரு பெண்ணோடு புணர்தலால் பயனின்மையின் அங்ஙனம் புணர்தல் பேதமைச் செயலாதல் தெளியப் பட்டதாயினும், அச்செயலால் ஆண் ஒன்று பிறந்த பயன் ஓரிடத்தில் காணப்படுகின்றது (இஃது அதிசயம்) இனி, புணரப்பட்ட அப் பெண்ணிடத்தினின்றும் பிறந்த அந்த ஆணின் உண்மையை உணர்ந்து, யாவரையும் அந்த ஆணினிடத்தே ஈர்த்து வைக்கின்ற அந்தப் பெண்ணைத் துணைவியாக உடைய அந்த ஆணின் பக்கல் அந்தப் பெண் ஈர்த்தவாறே சென்று அடைவதே, 'இஃது இயற்கைக்கு மாறாய் இயலாததொன்றாம்' என்று பேசும் பேச்சு அற்றொழிதற்கு வழியாம்.

விளக்கவுரை

முதலில் உள்ள 'பெண்' பராசத்தி. அடுத்த வந்த பெண் ஆதிசத்தி. பராசத்தி ஆதிசத்தியோடு புணர்தலாவது அந்நிலையில் கலந்து நிற்றல். ஆதிசத்தியினின்றும பிறந்த ஆண் சதாசிவ மூர்த்தி. 'இவ் வுண்மையை அறிதல் வேண்டும்' என்றவாறு. 'பேதைமையால்' என உருபு விரிக்க. ஈர்க்கின்ற பெண், அனுக்கிரக மூர்த்தியாகிய சதாசிவர் பால் உயிர்களை ஈர்த்துச் சேர்க்கின்ற மனோன்மனிசத்தி, 'ஆணிடைப் பேச்சறும்' என்றது, ஆணிடை அடைந்தால் பேச்சறும் என்றதாம்.

இதனால், 'தவந்தரும் ஞானத்தோர்க்கு இத்தன்மைதான் தெரியும்' என மேற்காட்டியவாறு. மேற்கூறிய உண்மைகள் எல்லாம் திருவருள் கிடைக்கப்பெற்ற பின்பு இனிது விளங்கும், என்பது நகைச்சுவை படக்கூறப்பட்டது.

பேச்சற்ற நற்பொருள் காணும் பெருந்தகை
மாச்சற்ற சோதி மனோன்மனி மங்கையாம்
காச்சற்ற சோதி கடவு ளுடன்புணர்ந்
தாச்சற்றெ னுட்புகுந் தாலிக்குந் தானே. *#1137*

சொல்லற்ற இடத்தில் நிற்கும் தலைவனாகிய சிவன் குற்றம் அற்ற ஒளிப்பொருள். துணைவியாகிய சத்தியும் அங்ஙனம் குற்றம் அற்ற ஒளிப்பொருளே. ஆயினும் சத்தியே சிவத்துடன் வந்து குற்றம் அற்ற என்உள்ளத்தில் புகுந்து ஆரவாரிக்கின்றாள்.

விளக்கவுரை

அஃதாவது, 'சிவமும் சத்தியும் ஒரு பொருளே யாயினும், அப்பொருள்

உயிர்களோடு தொடர்புகொள்ளும் நிலையில் 'சத்தி' எனப்படுகின்றது' என்பதாம். பெருந்தகை - தலைவன். காண், உம் அசைகள். 'குற்றம்' என்னும் பொருளைத் தருகின்ற, 'மாசு, காசு, ஆசு' என்பன எதுகை நோக்கி விரிதல் பெற்றன. இறுதியடியில், 'அற்ற' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. மங்கையாம் மனோன்மனி என மாறுக. இங்கு உம்மை தொகுக்கப்பட்டது 'மங்கையும்' என்றே ஓதுதலுமாம். 'அவள் புணர்ந்து புகுந்து ஆலிக்கும்' என வேறு தொடராக்கி முடிக்க. 'கடவுளுடன் புணர்ந்து' என்றது. தனித்து நில்லாமையை வலியுறுத்தியதாம்.

இதனால், 'முதற்பொருள் இரண்டில்லையாயினும், செய லிடத்துச் சத்தியாய் நிற்கும்' என்பதுணர்த்தி, மேல், 'சத்தியே ஆதார ஆதேயமாய் நிற்கின்றாள்' எனக் கூறியதன்கண் ஐயம் அறுக்கப் பட்டது.

ஆலிக்குங் கன்னி அரிவை மனோன்மனி
பாலித் துலகில் பரந்துபெண் ணாகும்
வேலைத் தலைவியை வேத முதல்வியை
ஓலித் தொருவன் உகந்துநின் றானே. ***#1138***

என் உள்ளத்தில் புகுந்து ஆரவாரிக்கின்ற கன்னிப் பெண்ணாகிய சத்தி பெண் தன்மையை உடையளாய் உலகெங்கும் நிறைந்து உலகினைப் பாதுகாத்து நிற்பாள். உலகத்தலைவியும், வேதங்களால் குறிப்பிடப்படும் முதல்வியுமாகிய அவளை வேதங்களும் காணமாட்டாது ஓலமிட்டு நிற்கின்ற சிவன் யாண்டும் பிரியாதே கூடி நிற்கின்றான்.

விளக்கவுரை

'பாலித்துப் பரந்து பெண்ணாகும்' என்பதை, 'பெண் ணாகிப் பரந்து பாலிக்கும்' எனப் பின் முன்னாகவைத்து, விகுதி பிரித்துக் கூட்டிக் கொள்க. ஓலித்தல் - ஓலம் இடுல். 'ஓலித்த' என்னும் அகரம் தொகுத்தல். வேலை - கடல். அஃது அதனாற் சூழப்பட்ட உல கிற்கு ஆயிற்று. ஈற்றடியைப் பிறவாறு ஓதுவன பாடம் ஆகாமை அறிக.

இதனால், மேற்கூறியவாறு சத்தி சிவனோடு கூடியே நிற்றல் போல, சிவனும் சத்தியோடுகூடியே நிற்றலைக் கூறி, இருமையின் ஒருமை வலியுறுத்தப்பட்டது.

'துரியம் கடந்தசுடர்த் தோகையுடன் என்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான்' *1*
என்றார் திருக்களிற்றுப்படியாரினும்.

உகந்துநின் றான்நம்பி ஒண்ணுதற் கண்ணோ
டுகந்துநின் றான்நம் முழைபுக நோக்கி
உகந்துநின் றான்இவ் வுலகங்க ளெல்லாம்
உகந்துநின் றான்அவ டன்றோ டொகுத்தே. ***#1139***

நம்பியாகிய சிவன் காமனை எரித்த நெற்றிக் கண்ணோடு நின்றே மேற்கூறிய நங்கையாகிய வேத முதல்வியை விரும்பி நின்றான். பின்பு அவளது தோள்களைத் தன் தோளோடு ஒன்றாகும்படிச் சேர்த்து மகிழ்ந்து நின்றான். இவை முறையே அவன் உயிர்களாகிய நம்மிடம் வருதல் குறித்தும் அனைத்து உயிர்களுக்கும் போகத்தைத் தருதல் குறித்துமாம்.

விளக்கவுரை

'இல்லையேல் அவை இயலா' என்பது கருத்து. மூன்றாம் அடிக்கு, 'இவ்வுலகங்கள் எல்லாம் போகத்தை எய்த உகந்து நின்றான் ஆதலின்' என உரைக்க.

இதனால், 'சிவன் தனது உண்மை நிலையில் அணியனல்ல னாயினும், உயிர்களின் பொருட்டு அணியனாதற்கும், போகியல்ல னாயினும் உயிர்கள் போகத்தை எய்துதற் பொருட்டும் சத்தியோடு மணந்து நிற்பன்' என்பது கூறப்பட்டது.

குத்து முலைச்சி குழைந்த மருங்கினள்
துத்தி விரிந்த சுணங்கினள் தூமொழி
புத்தகச் சீறடிப் பாவை புணர்வினைத்
தொத்த கருத்தது சொல்லகி லேனே. *#1140*

சத்தி பெண்ணியல்புகள் பலவும் தோன்ற நின்று சிவனை மணந்ததில் உள்ள கருத்து சொல்லுதற்கரிதாம்.

விளக்கவுரை

துத்தி - பாம்பின் படப்பொறி. விரிதல் - பரத்தல். 'துத்தி போல விரிந்து சுணங்கு' எனவும், 'புத்தகம் போலும் சீறடி' எனவும் விரித்துக்கொள்க. தொத்தல் - பற்றுதல் 'தொகுத்த' என்பதன் விகார மாகக் கொண்டு, 'உள்ளீடான' என்று உரைப்பினும் அமையும். சத்தி சிவங்களது குறிப்பு முழுதும் உயிர்களால் அறிதல் கூடாது என்பதாம். 'புணர்வினை' என்பது இரண்டாவதன் விரியாக முன்னர்க் கூறிய பொருளும், வினைத் தொகையாகப் பின்னர்க் கூறிய பொருளும் அமைவனவாம்.

இதனால், சிவம் சத்திகளது ஆதார ஆதேயங்களாய் நிற்கும் அருட்பெருமை கூறப்பட்டது.

சொல்லவொண் ணாத சுடர்ப்பொதி மண்டலம்
செல்லவொண் ணாது திகைத்தங் கிருப்பர்கள்
வெல்லவொண் ணாத வினைத்தனி நாயகி
மல்லவொண் ணாத மனோன்மனி தானே. *#1141*

அருள் ஒளி மண்டலம் உயிர்களது சொல்லுக்கு எட்டாதது. அதனால், அங்குச் செல்லமாட்டாது பலரும் திகைத்து நிற் கின்றார்கள்.

அம்மண்டலமாவாள் பிறரால் கடத்தற்கரிய செயல்களை உடையவளும், வலிந்து பற்றிக் கொள்ளவாராதவளும் ஆகிய சத்தியே.

விளக்கவுரை

'அங்கு' என்றது, அவரவர் இருக்கும் இடத்தை. 'வலிமை' எனப் பொருள்தரும் 'மல்' என்னும் உரிச் சொல்லடியாக 'மல்ல' என்னும் செயவெனச்சம் பிறந்தது.
இதனால், சத்தி ஒளி மண்டலமாய் நின்று அனைத்திற்கும் ஆதாரமாமாறு கூறப்பட்டது.

தானே இருநிலம் தாங்கிவிண் ணாய்நிற்கும்
தானே சுடும்அங்கி ஞாயிறுந் திங்களும்
தானே மழைபொழி தையலுமாய் நிற்கும்
தானே வடவரை தண்கடற் கண்ணே. *#1142*
(இதன் பொருள் வெளிப்படை)

விளக்கவுரை

'தான்' என்றது சத்தியை. தாங்குதல், இடந்தருதல். மழை பொழி தையல், கங்காதேவி. எனவே, கங்கையை உமைக்கு மாற்றாள்போல வைத்துச் சொல்வனவெல்லாம் செய்யுளின்பம் படக்கூறும் கூற்றேயாதல் தெளியப்படும். வடவரை - மேருமலை. தலைமை பற்றி இதனைக் கூறவே பிறமலைகளும் கொள்ளப்படும். 'கண்' என்பது, 'இடம்' எனப் பொருள்தரும் பெயர்ச்சொல். எனவே, 'கடற்கண்' என்பது இருபெயரொட்டாயிற்று. 'தண்கடலாகுமே' என்பதும் பாடம்.
இதனால், சத்தி ஆதராமாய் நிற்கும் வகைகள் சில கூறப் பட்டன. மழை பொழி தையலாய் நிற்றல் உயிர்கள் அழியாதவாறு நிறுத்தலாம்.
இதனுள் 'தான்' என்றதனைச் சிவத்திற்கு ஆக்கி, சிவ பரத்துவ அதிகாரத்திலும் இம் மந்திரத்தை, 'பொன்னாற் புரிந்திட்ட' என்னும் மந்திரத்தின்பின் ஒருமுறை ஓதுவாரும் உளர்.

கண்ணுடை யாளைக் கலந்தங் கிருந்தவர்
மண்ணுடை யாரை மனித்தரிற் கூட்டொணா
பண்ணுடை யார்கள் பதைப்பற் றிருந்தவர்
விண்ணுடை யார்களை மேலுறக் கண்டே. *#1143*

எவ்விடத்தையும் தனதாக உடைய சத்தியைக் கூடி அவளுடன் எங்கும் வியாபகமாய் நின்ற அறிவர் சிவத்தன்மை பெற்றவர்; சீவத் தன்மையாகிய முனைப்பு நீங்கியவர். அதனால் பர வெளியில் நிற்பவராகிய அவரை மிக்க மேன்மை உடையவராக அறிந்து, மண்ணில், வாழ்பவராகிய மனிதரில் வைத்து எண்ணா தொழிதல் வேண்டும். *('*விண்ணில் வாழும் கடவுளரில் வைத்து எண்ணல்

வேண்டும்' என்றபடி).

விளக்கவுரை

'கண்' என்பது மேலை மந்திரத்தில் வந்தவாறே வந்தது. இதற்கு, 'விழி - நெற்றிக்கண்' என உரைத்தற்கு ஓர் இயை பின்மை அறிக. இரண்டாம் அடியில் நின்ற ஐகாரம் சாரியை. 'மண் ணுடையாராகிய மனிதர்' என்க. பண் - பண்ணப்படுதல்; செம்மை யாக்கப்படுதல். இரண்டாம் அடியை இறுதியில் கூட்டியுரைக்க.
இதனால், சத்தியது ஆதாரமாய் நிற்கும் நிலையை உலகில் வைத்து உணர்பவர் ஏகதேச உணர்வு நீங்கி வியாபக உணர்வைப் பெறுதல் கூறப்பட்டது. சத்தியது ஆதார ஆதேயமாம் நிலையை உலகில் வைத்து உணர்தலை, 'பாரயோகம்' என்பர்.

கண்டெண் டிசையும் கலந்து வருங்கன்னி
பண்டெண் டிசையும் பராசத்தி யாய்நிற்கும்
விண்டெண் டிசையும் விரைமலர் கைக்கொண்டு
தொண்டெண் டிசையும் தொழநின்ற கன்னியே. *#1144*

எல்லா உலகங்களையும் நினைவு மாத்திரத்தாலே உண்டாக்கி, அவை அனைத்திலும் நிறைந்து நிற்கின்ற சத்தி, அதற்கு முன்னே அவ்வுலகங்களைக் கடந்து நின்ற ஒரு சத்தியாய் இருப்பாள். அதனால், எட்டுத்திக்கில் உள்ளாரும் தாம் தாம் தமக்கு ஏற்ற பெற்றியால் மணம் பொருந்திய மலர்களைக் கையிலே கொண்டு தோத்திரங்களைச் சொல்லித் தொண்டுபட்டு அம்மலர்களைத் தூவித் தொழுகின்ற தேவி அப்பராசத்தியே யாவாள்.

விளக்கவுரை

கு-ரை: 'அந்நிலையை அறியாதவர் வேறு வேறு தேவியராகக் கருதிச்செய்யும் வழிபாடுகளையும் ஏற்று அவர்கட்கு ஏற்ற பெற்றியால் அருள் புரிபவளும் அவளன்றி வேறில்லை' என்றபடி,
'யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்'*1*
என்னும் சிவஞான சித்தியை நோக்குக. காணல் - கருத்தாற் படைத்தல். 'எண்திசையும் கண்டு' எனக் கூட்டுக. 'நிற்கும்' என்பது இறந்த காலத்தில் நிகழ்காலம். இதன்பின் 'அதனால்' என்பதும், இறுதியில் 'அவளே' என்பதும் எஞ்சி நின்றன. இவ்வாறன்றி, மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி, 'தொழநின்ற கன்னி கலந்து வருங் கன்னியாம். அவள், பண்டு பராசத்தியாய் நிற்கும்' என உரைத்தலும் ஆம். இவ்வுரையில் மேற்கூறிய கருத்து உடம்பொடு புணர்த்தலாய் அமையும். மூன்றாம் அடியில் 'தசை' ஆகுபெயர். ஈற்றடியில், 'எண்டிசையிலும்' என்னும்

உருபு விரித்துக் கொள்க. இதனால், சத்தி ஆதார ஆதேயமாய் நிற்றலின் பெருமை கூறப்பட்டது.

கன்னி யொளியென நின்றஇச் சந்திரன்
மன்னி யிருக்கின்ற மாளிகை செந்நிறம்
சென்னி யிருப்பிடம் சேர்பதி னாறுடன்
பன்னி யிருப்பப் பராசத்தி யாமே. *#1145*

இறைவி அழியாத ஒளி வடிவாய் நிற்கும் இடம் இது போலும் பிறைவடிவம் பொருந்தியிருக்கின்ற ஆஞ்ஞைத் தானமாம். அது சிவந்த நிறத்தை உடைய தாமரை மலர் வடிவும் உடையது. அவள் தலையாகிய இருப்பிடத்தில், நிரம்பிய பதினாறு கலைகளை யுடைய சந்திரனோடு கூடியிருக்கும் பொழுது பராசத்தியாய் விளங்குவாள்.

விளக்கவுரை

என்றது, 'சத்தி, ஆதாரயோகத்தில் ஒளியுருவாயும், நிராதார யோகத்தில் உருவம் அற்ற அருவப் பொருளாயும் நிற்பாள்' என்றதாம். கன்னி - அழியாமை, 'இச்சந்திரன்' என்றது, 'இவ்வாறு கன்னி ஒளியாயுள்ள சந்திரன்' என்றவாறு. இதில் கன்னிமை இளமையைக் குறித்தது. 'சந்திரன்' என்றது அவனது வடிவைக் குறித்த ஆகுபெயர். 'சென்னியாகிய இருப்பிடத்தில் இருப்ப' என இயையும். 'இருப்பிடத்தில்' என்னும் சாரியை தொகுத்தலாயிற்று. முன்னர் 'சந்திரன்' என வந்தமையால், 'பதினாறு' என்பது அவனது கலைகளைக் குறித்தது. நிரம்பிய சந்திரன் போல்வதாய், 'சந்திர மண்டலம்' எனப்படுவது, நெற்றிக்கு மேலிடத்துள்ள ஆயிர இதழ்த் தாமரை மலராகும். 'பன்னி' என்பது, 'பத்நி' என்னும் ஆரியச் சொல்லின் சிதைவு. இதனையே முதற்கண் கொண்டு உரைக்க. 'பராசத்தி' என்பது, 'உருவத்தைக் கடந்தவள்' என்னும் அளவினதாய் நின்றது.
இதனால், சத்தியது ஆதார ஆதேயமாய் நிற்கும்நிலை உடலில் வைத்து உணர்த்தப்பட்டது.

பராசத்தி என்றென்று பல்வகை யாலும்
தராசத்தி யான தலைப்பிர மாணி
இராசத்தி யாமள ஆகமத் தாள்ஆங்
குராசத்தி கோலம் பலஉணர்ந் தேனே. *#1146*

'பராசத்தி' என்றே பல வகையிலும் பன்முறை துதிக்கப்பட்டு எல்லாவற்றிற்கும் ஆதார சத்தியாய் நிற்கின்ற, வேதத் தின் வழி அறியப்படுகின்ற அவளே முழுமுதற் சத்தியாம். அவளை யாமள ஆகமம் பலபடக் கூற, அவ்வாறும் பல்கி நின்ற அவளது பல கோலங்களையும் யான் அவளது அருளாலே அறிந்தேன்.

விளக்கவுரை

'என்று' என்பது, 'எனப்பட்டு' எனப் பொருள் தந்தது. 'பல்வகையானும் பராசத்தி என்றென்று' என மாற்றி உரைக்க. அடுக்கு, பன்மை குறித்தது. தலைப்பிரமாணம் - தலையாய நூல். அது வாயிலாக அறியப்படுபவளை, 'தலைப்பிரமாணி' என்றார். 'இரா சாத்தி' என்பது குறுகிநின்றது. இராணியை 'இராசாத்தி' என்றல் நாட்டு வழக்கு. யாமள ஆகமம் வாம மார்க்கத்ததாய்ச் சத்தியின் வடி வங்களைப் பலப்படக் கூறி, அவற்றிற்குரிய வழிபாடுகளையும் பலபட விதிக்கும். அந்நிலையில் நிற்பாரையும் உய்வித்தல் சத்திக்குக் கடப்பாடாதலின், அவ்வாறு நின்று அவர்கட்கும் அருள்புரிதல் பற்றி, ஆங்கு 'உரா சத்திகோலம் பல உணர்ந்தேன்' என்றார். உராவுதல் பரந்து தோன்றல். 'உராவு' என்பது குறைந்து நின்றது, 'உராவு கோலம்' என இயையும். முருகனும் இவ்வாறு தாழ் நிலையில் நின்று செய்வாரது வழிபாட்டினையும் ஏற்று, அவர்க்கு ஏற்றவாறு அருள் புரிதலைத் திரு முருகாற்றுப்படை 'சிறுதினை மலரொடு விரைஇ மறி அறுத்து' என்பது முதலாகப் பல அடிகளால் உணர்த்துதல் காண்க. 'ஆகமத் தாளாக' என ஆக்கம் விரிக்க.

இதனால், சத்தி தன்னை அறிவார் அறிந்த வாற்றான் வழி படும் இடங்களில் எல்லாம் ஆதார ஆதேயங்களாய் நின்று அவர வர்க்குத் தக அருள் செய்தல் கூறப்பட்டது.

உணர்ந்துல கேழையும் யோகினி சத்தி
உணர்ந்துயி ராய்நிற்கும் உன்அதன் ஈசன்
புணர்ந்தொரு காலத்துப் போகம*(து)* ஆதி
இணைந்து பரமென் றிசைந்திது தானே. *#1147*

சிவன் தனது சங்கற்ப மாத்திரையானே தோற்று வித்த ஏழு உலகங்களையும், அவ்வுலகத்தோடே பொருந்துவதாகிய சத்தி, தான் அறிந்து, அவற்றிற்கு உயிராய், அவைகளோடு கலந்து நிற்கும். அங்ஙனம் நிற்கின்ற அச்சத்திக்குச் சத்தனாய் நிற்கின்ற இறைவன் அச் சத்தியை மணந்த பொழுதே உயிர்கட்குப் போகம் அமையும். அச் சிவத்தோடு இணைந்து நின்ற இச்சத்தியே உலகிற்குத் தலைமையாவது.

விளக்கவுரை

'என்றது, சத்தி படைப்புக் காலத்தில் இறைவனது சங்கற்பரூப ஆதி சத்தியாய் நின்று உலகைத் தோற்றுவித்துப் பின் யோகினி சத்தியாய் உலகெங்கும் வியாபித்துப் பின் இறைவனோடு இணைந்து நின்று போக சத்தியாகி உலகிற்குப் போகத்தைத் தந்து, உலகிற்குத் தலைமை பூண்டு நிற்கின்றது' என்றவாறு. முதலடி மூன்றாம் அடிகளில் 'உணர்ந்த,

புணர்ந்த' என்னும் பெயரெச்சத்து அகரங்களும் தொகுத்தலாயின. 'இசைந்த' என்பதன் அகரமும் அன்னது. 'யோக சத்தி' எனின் பிறிது பொருள் படுமாகலின் 'யோகினி' என்றார். எனவே, இதனை யாமள தந்திரங் கூறும் யோகினிகளாகக் கொள்ளுதல் பொருந்தாமை அறிக. 'அதனோடு' என உருபு விரிக்க. ஆதி, பரம் இவை இங்குத் தலைமை. 'இதுதானே ஆதி' என மேலே கூட்டி முடிக்க.
இதனால், 'சத்தி 'யோகினி' என நின்று ஆதார ஆதேயங் களாய்ப் போகத்தைப் பயப்பித்தல் கூறப்பட்டது.

இதுவப் பெருந்தகை எம்பெரு மானுள்
பொதுவக் கலவியுள் போகமு மாகி
மதுவக் குழலி மனோன்மனி மங்கை
அதுவக் கலவியுள் ஆயுழி யோகமே. ***#1148***

'போகத்தைத் தருவது' என மேற்கூறப்பட்ட இம் மறைப்புச் சத்தி சிவனுடன் உயிர்கட்கெல்லாம் பொதுவாயுள்ள போகக் கலப்பில் நின்று போகத்தைத் தந்து 'அருட்சத்தி' என்னும் அந்தச் சத்தியாய் அச்சத்திக்கும் சிவத்திற்குமே சிறப்பாய் உள்ள அந்த அருட்கலவியுள் நின்றவழி உயிர்கட்கு யோகம் உளதாகும்.

விளக்கவுரை

'போகமும்' என்னும் உம்மை இழிவு சிறப்பு. அனுக் கிரக மூர்த்திதன் சத்தியின் பெயராகிய 'மனோன்மனி' என்பது, இங்கு 'அருட்சத்தி' எனப் பொருள் தந்தது. அது - அந்நிலை. 'அதுவாய்' என ஆக்கம் வருவிக்க. 'அக்கலவி' என்னும் சுட்டு, அவர்கட்கே உரித்தாகி, சிறப்புணர நின்றது. 'பொதுவக் கலவி, மதுவக் குழல்' என்பவற்றில் அகரம் விரித்தல். 'பொதுக்கலவி' என்றது, 'பொதுக்கலவி போலும் படிக் கலக்கும் கலவி' என்றவாறு. இதனுள் முன்னிரண்டடி அனு வாதம். 'ஆயுழி' என்பது முன்னரும் சென்று இயைந்தது.
இதனால், சத்தி ஆதார ஆதேயங்களாய் நின்று உயிர்கட்கு யோகத்தைப் பயக்குமாறு கூறப்பட்டது.

யோகநற் சத்தி ஒளிபீடந் தானாகும்
யோகநற் சத்தி ஒளிமுகம் தெற்காகும்
யோகநற் சத்தி உதரம் நடுவாகும்
யோகநற் சத்திதாள் உத்தரம் தேரே. ***#1149***

'போகசத்தி, யோகசத்தி' என்னும் இருசத்திகளில் யோக சத்திக்கு வானத்தில் சூரியனும், பூமியில் வேள்வித்தீயும் ஆசனமாகும். அவ்வாசனங்களின்மேல் அவள் தெற்கு நோக்கிய முகத்துடன் உடம்பை நடுவில் வைத்துக் கால்களைப் பாதங்கள் வடக்குநோக்க மடக்கி நீட்டிக்கிடந்த கோலமாய் இருப்பாள். இதனை அறிந்து வழிபடுக.

விளக்கவுரை

தெற்கு நோக்குதல், வழிபடுவோர்க்கு அருளுதற் பொருட்டு. கிடத்தல், தாயாகிய தான் தன்னை வழிபடுவோராகிய மகவுகளை யோகத்தில் ஆழ்த்தற்பொருட்டு. யோகம் வேண்டுவோர் இச்சத்தியை இங்ஙனம் சூரிய மண்டிலத்திலும், வேள்வித்தீயிலும் கண்டு வழிபடின் பயன்பெறலாம் என்றமை அறிக. முதலடியில், 'சத்திக்கு' என்னும் உருபு தொகுத்தலாயிற்று.

இதனால், சத்தி யோகியர்க்குச் சில ஆதாரங்களில் நின்று பயன்தருமாறு கூறப்பட்டது.

தேர்ந்தெழு மேலாம் சிவனங்கி யோடுற
ஆர்ந்தெழு மாயையும் அந்தம தாய்நிற்கும்
ஓர்ந்தெழு விந்துவும் நாதமும் ஓங்கிடக்
கூர்ந்தெழு கின்றனள் கோல்வளை தானே. ***#1150***

யோக சத்தி யோகத்தை விரும்புவர்க்கு அதனை அருளுமாற்றை யறிந்து சிவாக்கினியோடு பொருந்தி நிற்பின், பல்வேறு வகையாய்ப் பரிணமித்து நின்று பந்திக்கின்ற மாயை அங் ஙனம் பந்தத்தைச் செய்தலைத் தவிர்ந்து, ஞானத்திற்குத் துணையாய் நிற்கும். அதன்பின் விந்து நாதங்களின் வடிவாய் உள்ள குண்டலி சத்தி துயிலெழுந்து மேலோங்கிச் செல்லுமாறு யோகசத்தி மேலும் அருள் மிகுந்து நிற்பாள்.

விளக்கவுரை

அக்கினியைச் 'சிவாக்கினி' என்று கூறவே, சூரியனும் 'சிவசூரியன்' என்பது பெறப்பட்டது. 'கோல் வளைதான்' என்பதை முதலில் வைத்து உரைக்க.

இதனால், யோகசத்தி மேற்கூறியவாறு நிற்றலால் வரும் பயன் வகுத்துக் கூறப்பட்டது.

தானான வாறெட்ட தாம்பரைக் குள்மிசை
தானான வாறும்ஈ ரேழும் சமகலை
தானான விந்து சகமே பரமெனும்
தானாம் பரவா தனையெனத் தக்கதே. ***#1151***

சத்திக்குத்தானே அதுவாய் நின்று அருள்செய் கின்ற சிறந்த ஆதாரம், உள்ளே எட்டாயும் வெளியே பதினான்காயும், இடையில், 'இரண்டு பத்து' என்னும் சம அளவினவாயும் உள்ள கோணங்களை உடைய சக்கரமாகும். இச்சக்கரம் சொல்லும், பொரு ளும் ஆகிய இருவகை உலகங்களாயும், அவற்றைச் செயற்படுத்து கின்ற கடவுளராயும், அக்கடவுளரது செயல்களாயும் விளங்கும்.

விளக்கவுரை

'ஆதலின் அச்சக்கரத்தில் சத்தியை வழிபடுதல் தக்கது' என்பது குறிப்பெச்சம். இங்குக் குறிக்கப்பட்ட சக்கரம் ஷ்ரீசக்கரமாகும். இது மேல்நோக்கிய முனைகளையுடைய முக்கோணம் நான்கு, கீழ் நோக்கிய முனைகளையுடைய முக்கோணம், நான்கு, நடுமுக்கோணம் ஒன்று இவை ஒன்பதும் வேறு வேறாய்த் தோன்றாது ஒன்றினுள் ஒன்று கோத்து நிற்கும் வண்ணம் உபதேச முறையால் வரையப்பட்டு, நடுக் கோணத்தில் விந்துப்புள்ளி இடப்படும். மேலும், பதினான்காய் உள்ள வெளிக் கோணங்களைச் சுற்றி எட்டிதழ்த் தாமரையும், அதனைச் சுற்றி ஒருவட்டமும், அதற்குமேல் பதினாறு இதழ்த்தாமரையும், அதற்கு மேல், மேல் மூன்று வட்டங்களும் வரைந்து, எல்லாம் ஒரு நாற் கோணத்தின்மேல் அமைந்துள்ளதாக வரையப்படும். நாற்கோண மேடையை, 'பூ புரம்' என்பர். *1*

இவற்றுள் மேல் நோக்கிய முனைகளையுடைய முக் கோணங்கள் சிவ கோணங்களும் கீழ்நோக்கிய முனைகளையுடைய முக்கோணங்கள் சத்தி கோணங்களுமாகும். இவற்றுள் நடு முக் கோணம் மேல் நோக்கியிருப்பது, சிருட்டிக்கிரம சக்கரமும், கீழ் நோக்கி யிருப்பது சங்காரக் கிரம சக்கரமும் ஆகும்.

இப்பாட்டில் நாயனார் நடுக்கோணம் ஒழிந்த நாற்பத்திரண் டினைக் குறித்தார். எனவே, 'நடுக்கோணத்தையும் கூட்ட இச் சக்கரத்தில் அமையும் முக்கோணம் நாற்பத்து மூன்றாம், என்பது தெளி வாகும். சத்திக்குரிய சக்கரங்கள் அனைத்தும் இதனுள் அடங்கும் என்பதுபற்றி இது 'ஷ்ரீசக்கரம்' எனப்படுகின்றது.

இதில் எழுதப்பட வேண்டிய எழுத்துக்கள் எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஆயினும், சத்திக்குரிய பொதுச் சக்கரம் ஆதலின், பின்வருமாறு கொள்ளுதல் பொருந்தும்.

பூ புரமாகிய நாற்கோணத்தில் மேற்பக்கம் தொடங்கி வலமாக 'ஓம், ஐம், க்லீம், ஸௌ': என்பனவும், பதினாறு இதழ்களில் ஓம் என்ப தன் கீழ் 'ஷ்ரீம்' என்பதும், அதனையடுத்து வலமாக, ககாராதி பஞ்சத சாட்சரங்களும், எட்டிதழ்களில் 'ஷ்ரீம்' என்பதன் கீழ்முதல் வலமாக வும், அங்ஙனமே பதினான்கு கோணம், வெளிப்பத்துக் கோணம், உட்பத்துக் கோணம், உள் எட்டுக் கோணம் என்னும் ஐம்பது கோணங் களிலும் ளகாரம் நீக்கி ஏனை அகராதி ஐம்பதெழுத்தும், நடுக்கோணத் தில் பிரணவமும், விந்துவில், 'ஹ்ரீம்' என்பதும் எழுதப் படலாம். பிறவகை சொல்லப்படின் ஏற்பது கொள்க. 'பஞ்சத சாட்சரங்களில் சிவாட்சரங்களும் உள' எனவும், ஷ்ரீசக்கர கோணங்களில் சில கோணங்களும், விந்துவும் சிவாம்சங்கள் எனவும் கூறப்படுதல் அறிக. இன்னும் பஞ்சதசாட்சர அம்சங்கள் முப்பத்தேழும் முப்பத்தாறு

தத்துவமும், தத்துவாதீதப் பொருளும் ஆகும் எனப் படுதலும் காண்க. இங்ஙனம் இச்சக்கரம் அனைத்தையும் தன்னுள் அடங்கக் கொண்டிருத்தல் பற்றி, 'விந்து, சகம், பரம்' எனவும், 'பரவாதனை' எனவும் சொல்லத் தக்கது என்றார். விந்து - வாக்கு; சொற்பிரபஞ்சம். பரவாதனை - கடவுளர்தம் அதிகாரம். 'பரைக்கு' என்பதை முதலிற்கொண்டு உரைக்க. 'தானானவாறும்' என்னும் உம்மையை, 'சமகலை' என்பதனோடு கூட்டுக.
இதனால், சத்தி தன்னை வழிபடுவார் பொருட்டுக் கொள்ளும் ஆதார ஆதேயங்கள் கூறப்பட்டன.

தக்க பராவித்தை தான்இரு பானேழில்
தக்கெழும் ஓர்ருத்தி ரஞ்சொல்லச் சொல்லவே
மிக்கிடும் எண்சத்தி வெண்ணிற முக்கண்ணி
தொக்கதை யோடுதொன் முத்திரை யாளே. ***#1152***

ஷ்ரீசக்கரத்தில் சத்தியை வழிபட்டு, அவளுக்கு உரிய மந்திரங்களில் எந்த ஒரு மந்திரத்தையேனும் திரும்பத்திரும்பச் சொல்லி உருவேற்றினால், வெண்ணிறமும், மூன்று கண்களும், திரு மேனி அழகும், அபய வரத முத்திரைகளும் உடையவளாகிய ஞான சத்தியாகிய மனோன்மனியே ஏனை வாமாதி எண் சத்திகளாயும் மிகத்தோன்றி அருள்புரிவாள்.

விளக்கவுரை

சக்கரத்தையே 'வித்தை' என்றார். இருபத்தேழு, ஒன்பது முக்கோணங்களிலும் உள்ள கீற்றுகள். இஃது ஆகுபெயராய் அவற்றாலாகிய சக்கரத்தை உணர்த்திற்று. காரணக் குறியாக மந்திரத் தினையே 'ருத்திரம்' என்றார். ஷ்ரீசக்கர வழிபாட்டிற்குரிய ஷ்ரீவித் தியா மந்திரம், 'யாம் - ராம் - லாம் - வாம் - ஸாம் - த்ராம் - த்ரீம் - க்லீம், - ப்லூம் - ஸ: ஸர்வ ஜம்பநேப்யோ காமேஸ்வரீ காமேஸ்வர பாணேப்யோநம: பாண சக்தி பாதுகாம் பூஜயாமி' என்பது.
இனி, 'ஓர் ருத்திரம்' என்பதற்கு 'தேவிக்குரிய யாதேனும் ஒரு மந்திரத்தை' எனப் பொருள் உரைத்தலுமாம். தொக்கு - மெய்; உடம்பு. ஐ - அழகு.
இதனால், ஷ்ரீசக்கர வழிபாடாகிய ஷ்ரீவித்தை சத்தியின் எல்லா வழிபாட்டுப் பயனையும் தருதல் கூறப்பட்டது.

முத்திரை மூன்றின் முடிந்தமெய்ஞ் ஞானத்தள்
தத்துவ மாய்அல்ல வாய சகலத்தள்
வைத்த பராபர னாய பராபரை
சத்தியும் ஆனந்த சத்தியும் கொங்கே. ***#1153***

மலரில் மணம் போலச் சிவத்தில் வேறாகாது நிற்பவளாகிய சத்தி மூன்று பிரிவுகளாய் அமைந்த பஞ்ச தசாட்சரி (பதினைந் தெழுத்து) மந்திரத்தில்

முற்ற விளங்குகின்ற மெய்ஞ்ஞான வடிவினள்; தத்துவங்களாயும், அவை யல்லவாயும் எல்லாமாய் இருப்பவள்; வேதம் முதலிய நூல்கள் பலவும் முடித்துக் கூறுகின்ற சிவனோடு ஒன்றான சிவையாய் விளங்குபவள்; அருட் சத்தியும், ஆனந்த சத்தியுமானவள்.

விளக்கவுரை

கொங்கு - மணம்; உவமை யாகுபெயர். இதனை முதலிற் கொண்டு உரைக்க. பஞ்சதசாட்சரத்தின் உட்கூறுகளே தத்துவ மாயும், தத்துவாதீதப் பொருளாயும் நிற்றல்மேலே கூறப்பட்டது. 'முத்திரை மூன்று' என்பதற்கு வேறு பொருள் உரைப்போர், இரண்டாம் அடிஈற்றில் 'ச-க-ல' என்று பிரித்து, அதனைப் பஞ்ச தசாட்சரியின் மூன்றாம் பிரிவாகக் கொள்வர். பஞ்ச தசாட்சரங்களை நாயனார் புவனாபதி சக்கர அதிகாரத்தின் முதலிற் குறிப்பிடுவார்.
இதனால், ஷ்ரீசக்கரத்தில் விளங்கும் சத்தியது பெருமை கூறப் பட்டது.

கொங்கீன்ற கொம்பிற் குரும்பை குலாங்கன்னி
பொங்கிய குங்குமத் தோளி பொருந்தினள்
அங்குச பாசம்எனும் அகி லம்களி
தங்கும் அவள்மனை தானறி வாயே. ***#1154***

'நறுமணத்தை வெளிப்படுத்துகின்ற பூங்கொம்பில் தென்னங்குரும்பைகள் விளங்குவது போலும் தோற்றத்தையுடைய கன்னிகையாகிய சத்தி, குங்குமம், பூசப்பட்ட தோள்களை உடை யவள்' என்றும், அங்குச பாசங்களை ஏந்தியவள்' என்றும், 'அவளது மகிழ்ச்சியுள்ள கோயில் அகில உலகங்களும்' என்றும் உண்மை நூல்கள் கூறும். இதனை அறிந்து போற்றுவாயாக.

விளக்கவுரை

உடம்பு பூங்கொம்பு போலவும், தனங்கள் குரும்பை போலவும் இருத்தலை முதலடியில் இல்பொருள் உவமையாகக் குறித்தார். 'அங்குச பாசம் பொருந்தினள்' என்க. 'எனும்' என்பதை 'அவள் மனை' என்பதன்பின் கூட்டியுரைக்க. அறிதல், இங்கு அதன் காரியமும் உடன் தோன்ற நின்றது.
இதனால், ஷ்ரீசக்கரத்தில் விளங்கும் தேவியது வடிவம் கூறப்பட்டது. எனவே, அகிலமாவது, இச்சக்கரத்தில் பூபுரமாம்.

வாயும் மனமும் கடந்த மனோன்மனி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும்நல் தாரமும் ஆமே. ***#1155***
(இதன் பொருள் வெளிப்படை).

விளக்கவுரை

இப்பொருள் மேலேயும் குறிக்கப்பட்டது. 'தாய்' எனல், சத்தி தத்துவ சத்தியினின்று சதாசிவன் தோன்றுதல் பற்றி. 'மகள்' எனல், சிவ தத்துவ சிவத்தினின்று மேற்கூறிய சத்தி தத்துவ சத்தி தோன்றுதல் பற்றி. 'தாரம்' எனல், யாண்டும் சத்தனுக்குச் சத்தியாய் நிற்றல் பற்றி. வாய் - வாக்கு. கணம் - பூதக் குழாம்.

இதனால், சத்தி சிவனுடன் பல்வேறு வகையில் இயைந்து நின்று செயலாற்றுதல் கூறப்பட்டது.

தாரமும் ஆகுவள் தத்துவ மாய்நிற்பள்
காரண காரிய மாகும் கலப்பினள்
பூரண விந்து பொதிந்த புராதனி
பாரள வாந்திசை பத்துடை யாளே. ***#1156***
(இதன் பொருளும் வெளிப்படை).

விளக்கவுரை

தத்துவம் - முதற்பொருள். தாய் நிலை காரணமும், மகள் நிலை காரியமும் ஆதல் அறிக. கலப்புச் சிவனோடென்பது வெளிப் படை. பூரணம் - பெரு வியாபகம். விந்து - சுத்த மாயை. 'விந்துவிற் பொதிந்த' என்க. புராதனி - பழமையானவள். பார் - உலகம். அளவு - எல்லை. உடையாள் - தன்னுடையனவாக உடையவள்.

இதனால், மேலதனை வேறோராற்றால் விளக்கி, சத்தி உலக நாயகியாதல் கூறப்பட்டது.

பத்து முகமுடை யாள்நம் பராசக்தி
வைத்தனள் ஆறங்கம் நாலுடன் தான்வேதம்
ஒத்தனள் ஆதாரம் ஒன்றுடன் ஓங்கியே
நித்தமாய் நின்றாள் எம் நேரிழை கூறே. ***#1157***

பத்துத் திசைகளையும் நோக்கிய பத்து முகங்களை உடையவளாகிய, நமக்குத் தலைவியாம் பராசத்தி நம் பொருட்டு நான்கு வேதங்களையும், ஆறு அங்கங்களையும் ஆக்கி வைத்து, அவற்றிற் கூறப்பட்ட பொருளாகியும் நின்றாள். அத்தகைமைய ளாகிய அவள் ஒப்பற்ற ஓர் ஆதாரமாகிய ஷ்ரீசக்கரத்தில் நீங்காது நிற்கின்றாள். அவளை அந்நூல்களின் வழிப்போற்றுக.

விளக்கவுரை

'வேதம் நாலுடன் தான்வைத்தனள்' என இயைக்க. ஒத்தல் - தான் வைத்தற்கு ஏற்ப இருத்தல். முன்னர், 'வைத்தனள்' என்றும், 'ஒத்தனள்' என்றும் கூறிப்போந்தமையின், கூறுதல் அவற்றின் வழியதாயிற்று. 'நேரிழை' என்பதில் இரண்டனுருபு தொகுத்தலாயிற்று.

இதனால், 'ஷ்ரீசக்கரத்தில் தேவியை வேத நெறியான் வழிபடுக' என்பது கூறப்பட்டது.

கூறிய கன்னி குலாய பருவத்தள்
சீறிய ளாய்உல கேழுந் திகழ்ந்தவள்
ஆறிய நங்கை அமுத பயோதரி
பேறுயி ராளி பிறிவறுத் தாளே. ***#1158***

மேற் சொல்லப்பட்ட சத்தி இளமையான தோற்றத்தையுடையவள்; ஏழுலகிலும் நுண்ணியளாய் நிறைந்தவள்; அடக்கமான பெண்மை இயல்புடையவள்; அமுதமயமாம் பால் நிறைந்த தனங்களை உடையவள்; வீடு பெறுதற்குரிய உயிர்களை ஆட்கொண்டு, அவை தன்னை விட்டுப் பிரிதலை நீக்குபவள்.

விளக்கவுரை

'சிறியள்' என்பது நீட்டலாயிற்று. இம் மந்திரத்தின் எல்லா அடிகளையும் ரகர எதுகைப் படவும், ஒன்றிரண்டு அடிகளை அவ் எதுகைப் படவும் பாடம் ஓதி, அவற்றிற்கேற்ப உரைப்பாரும் உளர். அவர், மேலைமந்திரத்தின் இறுதிச் சீரினையும் 'கூரே' எனப்பாடம் ஓதுவர். அவையெல்லாம் சிறவாமை அறிந்துகொள்க.

இளமைப் பருவ சத்தி, 'வாலை, வாலாம்பிகை' (பாலை, பாலாம்பிகை) எனப்படுவாள்.

இதனால், சத்தி பக்குவிகளுக்குச் சிறந்த தலைவியாய் வீடு பேறளித்தல் கூறப்பட்டது. இதனானே, ஷ்ரீவித்தை வீடுபேற்றையும் தருதல் பெறப்பட்டது.

பிறிவின்றி நின்ற பெருந்தகைப் பெண்பிள்ளை
குறியொன்றி நின்றிடும் கோமளக் கொம்பு
பொறியொன்றி நின்று புணர்ச்சிசெய் தாங்கே
அறிவொன்றி நின்றனள் ஆருயி ருள்ளே. ***#1159***

சிவத்தோடு வேற்றுமையின்றி நிற்பவளாகிய சத்தி அடியவரது தியானத்திலே பொருந்தி விளங்குகின்ற அழகிய பூங் கொம்பு போன்றவள்; அதனால், முன்னர் மனம் முதலிய அந்தக் கரணங்களின் வழியே தலைப்பட்டுப் பின்னர் உயிர்களினது அறிவுக் கறிவாய் விளங்குவாள்.

விளக்கவுரை

குறி - இலட்சியம்; தியானம். பொறி - அந்தக்கரணம்.

இதனால், சத்தி முதற்கண் தியானத்தில் விளங்கிப் பின் அறிவினுள் விளங்குதல் கூறப்பட்டது.

உள்ளத்தி னுள்ளே உடனிருந் தைவர்தம்

கள்ளத்தை நீக்கிக் கலந்துட னேபுல்கிக்
கொள்ளத் தவநெறி கூடிய இன்பத்து
வள்ளற் றலைவி மருட்டிப் புரிந்ததே. *#1160*

தன்னைக் கூடியதனால் விளைகின்ற இன்பத்தை யுடைய வள்ளலாகிய சிவனுக்குத் தேவியாய் உள்ள சத்தி அடி யேனைத் தன்வசப்படுத்தித் தவநெறியை அடையச்செய்தது, என் உள்ளத்திலே நின்று ஐம்புலக்கள்வர் தம் கள்ளத்தைப் போக்கி இரண்டறக் கலந்து, என்றும் உடனாய் இருந்ததாம்.

விளக்கவுரை

தலைவி என்னை மருட்டி, யான் தவநெறி கொள்ளப் புரிந்தது, இருந்து, நீக்கி, கலந்து, புல்கி, எனக் கூட்டி முடிக்க. 'இஃது அவளை வழிபட்டதன் பயன்' என்பது குறிப்பெச்சம். எதுகை நோக்கி, 'வள்ளல்' என்பதன் ஈறு கெடாது திரிந்து நின்றது.

இதனால், சத்தி தன்னை வழிபடுபவரை மலத்தின்வழிச் செல் லாது தடுத்துத் தன்வழிப்படுத்தித் தவநெறியருளுதல் கூறப்பட்டது.

புரிந்தருள் செய்கின்ற போகமா சத்தி
இருந்தருள் செய்கின்ற இன்பம் அறியார்
பொருந்தி யிருந்த புதல்வி பூவண்ணத்
திருந்த இலக்கில் இனிதிருந் தாளே. *#1161*

உயிர்களுக்கு நலம் செய்ய விரும்பி அங்ஙனமே செய்துவருகின்ற போக சத்தி, உயிர்களிடத்துத் தான் தங்கியிருந்து ஆக்க இருக்கின்ற இன்பம் இது என்பதனை உலகர் ஒருவரும் அறிய மாட்டார். பூவில் நிறம்போல உயிர்களிடத்தில் பொருந்தியிருக்கின்ற அவள், தான் அவ்வாறிருக்கின்ற குறிக்கோளினின்றும் சிறிதும் மாறுபடாமலே இருக்கின்றாள்.

விளக்கவுரை

'இருந்தருள் செய்கின்ற இன்பம் வீட்டின்பமே; உலக இன்பம் அன்று' என்றதாம். இருந்த இலக்கும் அதனைத் தருதலேயாம். 'புதல்வி' என்பது முறை சுட்டாது, இளமை குறித்து நின்றது. 'பூவில் வண்ணம்போல' என்பது ஒன்றாய்க் கலந்திருத்தற்கு உவமை.

'பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்
எண்ணும் சுவையும்போல் எங்குமாம் - அண்ணல்தான்' *1*
என்றது காண்க.

இதனால், சத்தியது குறிக்கோள் வீட்டின்பத்தைத் தருதலே யாதல் கூறப்பட்டது.

இருந்தனள் ஏந்திழை என்னுளம் மேவி
திருந்து புணர்ச்சியில் தேர்ந்துணர்ந் துன்னி

நிரந்தர மாகிய நீர்திசை ஓடு
பொருந்த விலக்கில் புணர்ச்சி அதுவே. *#1162*

சத்தி, யான் உள்ளம் திருந்தித் தன்னை அடைய விரும்பிய நிலையில் அந்நிலையை நன்குணர்ந்து அவளும் எனது உள்ளத்தை விரும்பி, அதன்கண் இருப்பாளாயினாள். அவ் இருப்பு, இடையறாது ஓடும் நீர், தான் ஓடுகின்ற திசையை நோக்கி ஓடும் ஓட்டத்தை ஒப்ப இடையறாது இருக்கும் இருப்பாம்.

விளக்கவுரை

'திருந்து புணர்ச்சியில்' என்பதில், 'புணர்ச்சி' என்பது அதனை விரும்பி நின்ற காலத்தைக் குறித்தது.
இதனால், சத்தி பக்குவான்மாக்களது உள்ளத்தையே விரும்பி அவற்றில் இடையறாது விளங்குதல் கூறப்பட்டது.

அதுஇது என்னும் அவாவினை நீக்கித்
துதியது செய்து சுழியுற நோக்கில்
விதியது தன்னையும் வென்றிட லாகும்
மதிமல ராள்சொன்ன மண்டலம் மூன்றே. *#1163*

'எனக்கு அது வேண்டும், இது வேண்டும்' என்று அவாவுகின்ற அவாவை விடுத்து, சந்திர மண்டலத்தில் உள்ள ஆயிர இதழ்த்தாமரையில் விளங்குபவளாகிய சத்தி விளக்கியருளிய மூன்று மண்டலங்களில் உள்ள பொருள்களைப் போற்றி செய்து சுழுமுனை யில் நின்று பொருந்த நோக்கினால் விதியையும் வெல்லுதல் கூடும்.

விளக்கவுரை

ஈற்றடியை முதலடியின் பின்னர்க் கூட்டியுரைக்க. சுழு முனையை, 'சுழி' என்றார். மண்டலம் மூன்றாவன அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம். இவை 'உடம்பில் உள்ளன' என்பது அடுத்த மந்திரத்தில் கூறப்படும். 'மூன்று' என்பது இடவாகுபெயர்.
இதனால், சத்தியது குறிக்கோள் நிறைவுறுதற்கு யோக சாதனை வேண்டப்படுதல் கூறப்பட்டது. இதன்கண் மண்டலமாகிய ஆதாரமும், அவற்றின்கண் உள்ள ஆதேயமும் கூறப்பட்டமை காண்க.

மூன்றுள மண்டலம் மோகினி சேர்விடம்
ஏன்றுள ஈரா றெழுகலை உச்சியில்
தோன்றும் இலக்குற லாகுதல் மாமாயை
ஏன்றனள் ஏழிரண் டிந்துவொ டீறே. *#1164*

மேற்கூறிய மூன்று மண்டலங்களும் அசுத்த மாயையின் காரியங்களாய் நிற்கும் உடம்பில் உள்ள இடங்களே. எனினும், உச்சிக்கு மேல் பன்னிரண்டங்குலத்தில் உணர்வு செல்லின் அது சுத்த மாயையைப்

பொருந்தியதாகும். அங்ஙனம் உணர்வு செல்லும்பொழுது சத்தி, பிராசாத கலைகள் பதினாறில் ஒன்பதை ஏற்றுச் சந்திர மண்டலத்தைக் கீழ்படுத்தி நிற்பாள்.

விளக்கவுரை

ஆறு ஆதாரங்களில் மூலாதாரம் முதல் சுவாதிட்டானம் முடிய அக்கினி மண்டலமும், சுவாதிட்டானத்திற்குமேல் விசுத்தி முடியச் சூரிய மண்டலமும், விசுத்திக்கு மேல் பிரமரந்திரம் முடியச் சந்திர மண்டலமும் ஆதலின், 'மூன்று மண்டலங்களும் உடம்பினுட் பட்டன' என்றார். 'உச்சியின் ஈராறாய் எழுதலையில் தோன்றும் இலக்கு' என்க. கலை - கூறு; அங்குலம். இவ்வாறன்றி, 'பிராசாதகலை பன்னிரண்டு, என உரைப்பின், அதற்கு அப்பால் உள்ளது பரசிவம் ஆதலின்' அதனை, 'மாமாயை' என்றல் கூடாமை அறிக. ஆதார யோகத்தில் சவிகற்ப உணர்வு உடம்பைப் பற்றாது விடுதல் இன்றி, நிராதார யோகத்திலே அதனை விட்டு நீங்குதலின், அது நாத மாத்திரை யாம் மாமாயை ஆயிற்று. பிராசாத கலைகளில் ஒன்பதாவதாகிய சத்தி கலையே ஆதாரத்தைக் கடந்த முதற்கலையாதலின், 'ஏழிரண்டில், இந்துவொடு ஈறாக ஏன்றனள்' என்றார். ஒடு, எண்ணொடு. 'முன்னர் இந்துவை ஏன்று, பின் அஃது ஈறாதலை ஏன்றனள்' என்க. ஈறாதல், கீழ்ப்படுதல். பிராசாத கைகளின் விளக்கம் மேல், *696* ஆம் மந்திர உரையில் தரப்பட்டது.

இதனால், சத்தி ஆதார நிராதாரத்தானங்களில் நிற்குமாறு கூறப்பட்டது.

இந்துவி னின்றெழும் நாதம் இரவிபோல்
வந்துபின் நாக்கின் மதித்தெழும் கண்டத்தின்
உந்திய சோதி இதயத் தெழும் ஒலி
இந்துவின் மேலுற்ற ஈறது தானே. ***#1165***

பிறை வடிவாயுள்ள ஆஞ்ஞை எல்லையினின்று மேலெழுந்து நுணுகிச் செல்கின்ற நாதம், (வாக்கு) கீழே வந்து, நாவினால் பிராணவாயு அலைக்கப்படும் பொழுது பரு வடிவினதாய்ச் செவிக்குப் புலனாகிக் கேட்போருக்கும் பொருளை இனிது விளங்கச் செய்யும் முடிவு மொழியாம். ஆகவே, கண்டத் தானத்தில் உதான வாயுவால் உந்தப்பட்டுச் சொல்வோனுக்கு மட்டும் பொருள் விளங்க நிற்கின்ற இடைமொழியும், அங்ஙனம் உதான வாயுவாலும் உந்தப் படாமல் இதயத்தானத்தில் பொதுமையில் விளங்கியும் விளங்காதும் நிற்கும் முதல்மொழியும், ஆஞ்ஞை எல்லையினின்று மேலெழும், எனப்பட்ட, ஒடுக்கமாகிய அந்த நாதத்தின் விரிவேயாகும்.

விளக்கவுரை

முடிவுமொழி 'வைகரி வாக்கு' என்றும், இடைமொழி மத்திமை வாக்கு என்றும், முதல் மொழி 'பைசந்தி வாக்கு' என்றும் சொல்லப்படும். 'நாதம்' எனப்படுகின்ற அதுவே இவ்வாறு 'பைசந்தி, மத்திமை, வைகரி' என மூவகை நிலையாய் விரியும் என்பது இங்குக் கூறப்பட்ட பொருளாகும். இம்மூவகை வாக்குகளும் இங்ஙனம் தோன்றவும், ஒடுங்கவும் உள்ள சுத்த மாயையின் பகுதியே 'நாதம்' எனப்படுவது என்பார், 'நாதம் நாக்கின்மதித்தெழும்' எனவும், 'கண்டத்தின் உந்திய சோதியும், இதயத்தெழும் ஒலியும் இந்துவின் மேல் உற்ற ஈறு அதுவே' எனவும், கூறினார்.
பொருளை விளங்கச் செய்தல்பற்றி வாக்குகளை இரவிபோல் எழுவதாகவும் சோதியாகவும் கூறினார். இவை பற்றிப் பிறிது பொருள் தோன்றி மயக்காமைப் பொருட்டு, 'ஒலி' என்று வெளிப்படக் கூறினார். 'இரவிபோல்வது' எனவும் 'சோதி' எனவும் கூறப் பட்டவை இனிது பொருள் விளங்க நிற்பனவும், 'ஒலி' எனப்பட்டது அங்ஙனம் விளங்க நில்லாததும் ஆதல் தெரிந்துணரற்பாலது. 'இரவிபோல் எழும்' என இயையும். 'பின்' என்றது கீழிடத்தை. 'பின்வந்து' என மாறுக. மதித்தல் - கடைதல்; அலைத்தல். 'மதித்து' என்பதனை, 'மதிக்க' எனத் திரிக்க. 'எழும்' என்பது முற்று. மதித் தற்குச் செயப்படு பொருளும், உந்துதற்கு வினைமுதலும் வருவிக்கப் பட்டன. 'சோதி, ஒலி' என்பன செவ்வெண். 'ஈறாகிய அது' என்க. தான், அசைநிலை. ஏகாரம் தேற்றம்.
இதனால், மேற்கூறப்பட்ட இரு மாயைகளில் சுத்த மாயையின் சிறப்புக் காரியமாகிய சொல்லுலகம் ஆதார நிராதார யோகங்களில் காட்சிப் படுமாறு கூறப்பட்டது. இதனானே, 'அவ் வுலகத் தொடக்கு அவ் யோகங்களால் முறையே ஒரளவிலும், பெரிய அளவிலும் மெலிவடையும்' என்பதும் உணர்ந்து கொள்ளப்படும்.

ஈறது தான்முதல் எண்ணிரண் டாயிரம்
மாறுதல் இன்றி மனோவச மாஎழில்
தூறது செய்யும் சுகந்தச் சுழியது
பேறது செய்து பிறந்திருந் தாளே. ***#1166***

மேல், 'இந்துவின் மேல் உற்ற ஈறு' எனப்பட்ட அந்த நாதமே சொல்லுலகங்கள் எல்லாவற்றிற்கும் (வேதம், வேதாங்கம், ஆகமம், புராணம், இதிகாசம், மிருதி முதலிய எல்லா நூல் கட்கும், பலவாய் வழங்கும் மொழிகட்கும்) முதல். சில சுழிக் கூட்டத்தால் பூங்கொத்துப் போல்வதாய வடிவினையுடைய அது நிராதார யோகத்தில் பிராசாத கலைபதினாறில் முடிவாயுள்ள உன்மனா கலையிலும், ஆதாரயோகத்தில் ஆயிர இதழ்த் தாமரை யிலும் மனம் யாதோர் அசைவுமின்றி நின்று வசமாகும்படி உயிரினது ஆற்றலை மிகக்

குவிப்பதாகும். அதனால், அதனைக் காணுதலையே சத்தி தன் அடியவர்க்குப் பெரும்பேறாக அளித்துத் தானும் அவ்விடத்தே அவர்கட்குக் காட்சியளித்து நிற்பாள்.

விளக்கவுரை

ஈறு அதுதான் - 'ஈறு' எனப்பட்ட அதுவே. 'எண்ணிரண் டிலும், ஆயிரத்திலும் மனம் மாறுதல் இன்றி வசமாக' எனக் கூட்டுக. எண்ணுப் பெயர்கள் முறையே அவ் எண்ணு முறைக்கண் நிற்கும் கலையையும், அத்துணை இதழ்களையுடைய மலரையும் குறித்தன. இவைகளில் ஏழன் உருபுகள் தொக்கு நின்றன. ஆக - ஆகும்படி. இதன் ஈறு குறைந்து நின்றது. 'எழில் - எழுச்சி; ஆற்றல். தூறு - குவியல். இதன் பின் நின்ற 'அது', பகுதிப் பொருள் விகுதி. சுகந்தம், முன்னர்ப் பூவையும், பின்னர் அதன் கொத்தினையும் குறித்த இருமடி ஆகுபெயர். 'சுகந்தம் போலும் சுழியாகிய அது' என்க. 'சுகந்தச் சுழி யாகிய அது, எண்ணிரண்டிலும் ஆயிரத்திலும் மனம் மாறுதல் இன்றி வசமாக, எழிலைத் தூறு செய்யும்' எனவும், 'அதுபேறு செய்து பிறந் திருந்தாள்' எனவும் கூட்டி முடிக்க. பூங்கொத்துப் போலும் வடிவுடை யது விந்து வின் பகுதியாகிய நிரோதினி கலையே யாயினும், அவ் விடத்துச் சத்தி உருவப் பொருளாய் விளங்குதல் கூறுவார், விந்துவின் நுண்ணிலையாகிய அதனையே 'நாதம்' என உபசரித்துக் கூறினார்.

இதனால், சத்தி விந்துத் தானத்தில் உருவப் பொருளாய்க் காட்சியளித்துப் பின் அடியவரை ஆதாரயோக முடிவிலும், நிராதார யோக முடிவிலும் மனோலயம் பெற்றவராக ஆக்குதல் கூறப்பட்டது.

இருந்தனள் ஏந்திழை ஈ(று) அதில் ஆகத்
திருந்திய ஆனந்தம் செந்நெறி நண்ணிப்
பொருந்து புவனங்கள் போற்றிசெய் தேத்தி
வருந்த இருந்தனள் மங்கைநல் லாளே. **#1167**

சத்தி மேற்கூறிய அவ்விடத்தே இனிது விளங்கி யிருக்கின்றாள்; பல புவனங்களில் உள்ளோரும் தாம் பேரானந்தத்தை அடைதற்குரிய செவ்விய வழியைப் பொருந்தித் தன்னை, 'போற்றி' என்று சொல்லித் துதித்துப் பெருமுயற்சி செய்யவும் சத்தி அவர்கள் முன் வெளிப்படாமல், மேற்கூறிய இடத்தே அந்த ஆனந்தம் விளையும்படி அங்கே விளங்கி நிற்கின்றாள்.

விளக்கவுரை

'ஏந்திழை ஈறு இருந்தனள்' எனவும், 'மங்கை நல்லாள், புவனங்கள் வருந்த, திருந்திய ஆனந்தம் அதில் ஆக இருந்தனள்' எனவும் கூட்டி முடிக்க. 'ஈறு' என்பது ஏழாவதன் தொகையில் ஒற்றிரட்டாமை,

இரண்டாவதற்குத் திரிபு ஓதிய இடத்து நின்ற இலேசினால் அமையும். (தொல் - எழுத்து. *158)*
இதனால், மேற்கூறிய ஆதாரத்தது சிறப்புக் கூறப்பட்டது.

மங்கையும் மாரனுந் தம்மொடு கூடிநின்
றங்குலி கூட்டி அகம்புறம் பார்த்தனர்
கொங்கைநல் லாருங் குமாரர்கள் ஐவரும்
தங்களின் மேவிச் சடங்குசெய் தார்களே. ***#1168***

சத்தியும், சிவனும் தம்மிற் கூடிநின்று, தம்மைப் போலவே மங்கையர் ஐவரையும், அவர்கட்கு ஏற்ற காளையர் ஐவரையும் கை கோத்துவிட்டு, அவர்களது கருத்தையும் செயலையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அத்தம்பதியர் தங்களுள் அன்பு செய்து கூடித் தங்கள் தொழிலைக் கடமையாக நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

விளக்கவுரை

சத்தியும், சிவனும் இங்குக் குறிக்கப்பட்ட நிலை, வாகீசு வரியும், வாகீசுவரனுமாய் நிற்கின்ற நிலையாம். கொங்கை நல்லார் ஐவர், 'மனோன்மனி, மகேசுவரி, உருத்திராணி, திரு, வாணி' என்பவரும், அவருக்கு ஏற்ற காளையர் ஐவர் முறையே, 'சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், மால், அயன்' என்பவரும் ஆவர். இவர் செய்யும் செயல், முறையே, 'அருளல், மறைத்தல், அழித்தல், காத்தல், படைத்தல்' என்பவையாம். இவர்களை இங்குக் குறித்தது, முறையே, 'ஆஞ்ஞை, விசுத்தி, அனாகதம், மணிபூரகம், சுவாதிட்டானம்' என்னும் ஆதாரங்களில் வைத்து. எனவே, சத்தியும், சிவனும் வாகீவரியும், வாகீசுவரனுமாய், நிற்றல், ஆஞ்ஞைக்கு மேல் உள்ள தானங்களிலாம். ஆகவே, 'சத்தி சிவங்கள் இங்ஙனம் நிற்றலால், யோக நெறி, நின்று பயன் தருகின்றது' என்பது பெறப்பட்டது.
'மாரன்' என்பது 'அழகன்' என்னும் அளவினதாய் நின்றது. அங்குலி - கை விரல்கள். கூட்டுதல் - இருவர் கைகளையும் கோத்து விடுதல். 'மணம் செய்வித்தனர்' என்றபடி. 'அகம், புறம்' என்பன ஆகுபெயராய், கருத்தையும் செயலையும், 'பார்த்தனர்' என்பது அவர்கள் அவ் ஐவருடனும் உடனாய் நிற்றலையும் குறித்தன. 'கொங்கை நல்லாள்' என்பது பாடம் அன்று. 'குமாரர்கள்' என்பது பருவம் குறித்து நின்றது. இலய நிலையின் கீழ்வந்து அதிகார நிலையில் நிற்பவர் என்பது தோன்ற, இவ்வாறு கூறினார். 'சடங்கு' என்றது, திருமணச் சடங்கையும், தங்கட்கு உரிய கடமைகளையும்.
இதனால், சத்தியும், சிவனும் மேல் ஆதாரத்தினின்று, கீழ் ஆதாரங்களைப் புரந்தருளுதல் கூறப்பட்டது.

சடங்கது செய்து தவம்புரி வார்கள்

கடந்தனி னுள்ளே கருதுவ ராயின்
தொடர்ந்தெழு சோதி துணைவழி ஏறி
அடங்கிடும் அன்பின தாயிழை பாலே. *#1169*
புறத் தொழிலைச் செய்யும் அளவில் தவத்தில் நிற்போர், உடம்பில் அகமுகத் தியானித்தலில் பழகுவார்களாயின், அந்தத் தியான உணர்வு தொடர்ந்து முதிர்ந்து, சுழுமுனை பற்றுக் கோடாக மேல் ஏறிச் சென்று, உயிர்களின் அன்பிற்குச் சார்பாகிய சத்தியிடத்தில் மேற்கூறிய இடத்தில் சென்று அடங்கும்.

விளக்கவுரை

'அதனால், அங்ஙனம் தியானிக்க என்பது குறிப் பெச்சம். 'உள்ளே கருதுவராகில்' எனப் பின்னர்க் கூறியதனால், முன்னர், சடங்கது செய்தல் புறத்தின்கண்ணதாயிற்று. கடம் - குடம்; என்றது, மண்ணாற் செய்யப்படும் குடம் போல்வதாகிய உடம்பைக் குறித்தது. அதன் உள்ளே கருதுதல், ஆதார பங்கயங்களிலாம். எனவே, புறமாவதும் உடம்பின் கண்ணதேயாய், சடங்காவன கர நியாசம், அங்க நியாசம் முதலியனவாம்.
இதனால், மேற்கூறிய குமாரர்கள் ஐவரையும் அவர்தம் தேவி யரோடு முறையாகத் தியானித்துச் செல்வோர், விந்துத் தானத்தில் மங்கை நல்லாளை மாரனோடு தலைப்படுபவர் என்பது கூறப்பட்டது.

பாலித் திருக்கும் பனிமலர் ஆறினும்
ஆலித் திருக்கும் அவற்றின் அகம்படி
சீலத்தை நீக்கத் திகழ்ந்தெழு மந்திரம்
மூலத்தின் மேலது முத்தது வாமே. *#1170*
துணைவழி ஏறுதற்குத் துணையாகின்ற மந்திரம் முதல் நிலையாகிய மூலாதாரத்திலே உள்ளது. அதுவே இரண்டாவது முதல் ஏழாவது முடிய உள்ள ஆறு நிலங்களின் தாமரைகளிலும் ஏற்ற பெற்றியிற் பொருந்தி, அவற்றைக் காத்து நிற்கும். அதனால், அம் மந்திரம் ஒன்றே அந்நிலங்களில் அழுந்தி விடுவதாகிய நிலையினை விடுத்து மேன்மேற் செல்லுதற்குச் சிறந்த துணையாம்.

விளக்கவுரை

'திகழ்ந்தெழு மந்திரம் மூலத்துமேலது; பனி மலர் ஆறினும் பாலித்திருக்கும்; 'ஆலித்திருக்கும் அவற்றின் அகம்படி சீலத்தை நீக்க அதுவே முத்தாம்' எனக்கொண்டு கூட்டி முடிக்க. ஆலித் திருக்கும் அவை - மகிழ்ந்து அழுந்தியிருத்தற்கு இடமாகிய அவை. அகம்படி சீலம் - ஆதாரங்களினுள்ளே அழுந்தியிருக்கும் நிலை.
மந்திரம், பிரணவம். அது பிராசாதமாய்ப் பரிணமித்து ஆறு

ஆதாரங்களிலும், அவற்றிற்குமேலும் பல கூறுகளாய் விளங்கி நிற்பதாம். 'முத்து' என்றது, உயர்வுணர்த்தியவாறு, இதற்கு ஈண்டைக்கு இயைபில்லாத ஒரு பொருளையும் கூறுவார் உளர்.
இதனால், கடந்தனின் உள்ளே கருதித் துணைவழி ஏறுதற் குரிய மந்திரத் துணை கூறப்பட்டது.

முத்து வதனத்தி முகந்தொறும் முக்கண்ணி
சத்தி சதுரி சகளி சடாதரி
பத்துக் கரத்தி பராபரன் பைந்தொடி
வித்தகி என்னுள்ளம் மேவிநின் றாளே. ***#1171***

மேல் *(1155 - ல்)* கூறப்பட்ட யோக நற்சத்தி முத்து வதனம் முதலியவைகளை உடையவளாய், என் உள்ளத்தில் விரும்பி இருக்கின்றாள்.

விளக்கவுரை

எனவே, 'அவளை அவ்வாறு தியானித்தல் வேண்டும்' என்பதாம். 'சத்தி' என்பதை முதலிற்கொள்க. முத்து, பற்களைக் குறித்து உவமையாகுபெயர். வதனம் - முகம்; என்றது வாயினை, சதுரி - திறமை உடையவள். சகளி - உருவத் திருமேனி கொண்டவள். 'பைந்தொடி' என்பது, 'தேவி' எனப் பொருள் தந்தது. ஏனையவை வெளிப்படை. பத்துக்கரம் கூறப்படுதலால் ஐம்முகம் உடையளாதல் பெறப்பட்டது. இதனால் யோக சத்தியது வடிவு கூறப்பட்டது.

மேவிய மண்டலம் மூன்றுடன் கீழ்எரி
தாவிய நற்பதத் தண்மதி அங்கதிர்
மூவருங் கூடி முதல்வியாய் முன்னிற்பர்
ஓவினும் மேலிடும் உள்ளொளி ஆமே. ***#1172***

அக்கினி மண்டலம் முதலிய மூன்று மண்டலங் களுடன் அவற்றிற்குரியோராகிய, 'அக்கினிதேவன், நிலவோன், கதிரோன்' என்னும் மூவரும் கலந்து, அவரே சத்தியாய் முன்னிற்பர். அவர்களுக்கு உள்ளீடாக ஓங்காரத்தினின்றும் மேலெழுந்து செல்கின்ற மந்திர ஒளி உளதாகும்.

விளக்கவுரை

'மேவிய மண்டலம் மூன்றுடன்' என்பதை, 'கூடி' என்பதற்கு முன் கூட்டியுரைக்க. 'கீழ், தாவியநற்பதம்' என்பவற்றால் முறையே எரியும், மதியும் பிண்டத்தில் நிற்குமிடம் குறிக்கப்பட்டன. அதனால், கதிருக்குரிய இடம் இடைப்பட்டது என்பதுதானே பெறப்படும். தாவிய நற்பதம் - உயரநிற்கும் இடம்; எனவே, அக்கினி அடியிலும், கதிர் இடையிலும், மதி முடியிலும் நிற்பனவாதல் அறிக. எரி முதலிய மூன்றும்

அவ்வவற்றிற்குரிய தேவரைக் குறித்தன. அவரே சத்தியாய் முன்னிற்றலாவது, சத்தியது கலப்பால் அவனேயாக அறிய நிற்றல். அவர்களை 'அங்ஙனம் அறிந்து நோக்க உள்ளொளி மேலிடும்' என்பது ஈற்றடியிற் கூறப்பட்ட பொருள்.

இதனால், மும்மண்டலங்களில் உள்ள மூவராகிய ஆதாரங்களைச் சத்தியின் வடிவாகக் கண்டு வழிபடுதலும் உள்ளொளியைப் பெறுதற்கு வழியாதல் கூறப்பட்டது.

உள்ளொளி மூவிரண் டோங்கிய அங்கங்கள்
வெள்ளொளி அங்கியின் மேவி அவரொடும்
கள்ளவிழ் கோதைக் கலந்துட னேநிற்கும்
கொள்ளவி சித்திக் கொடியமு தாமே. ***#1173***

மேற்கூறிய உள்ளொளி உயர்ந்து செல்கின்ற ஆறு ஆதாரங்களாகிய உறுப்புக்கள் வெண்மையான வேள்வித் தீயிலும் அவற்றின் அதிதேவர் வழியாகச் சத்தியைப் பொருந்தி விளங்கும். அதனால், அத்தீயின் வழியாகத் தேவர்கள் ஏற்கின்ற அவிசுகளும், யாவர்க்கும், எல்லாப் பயனையும் தருகின்ற சத்தியே யாய் நிற்கும்.

விளக்கவுரை

ஆகையால், 'ஆதார தேவர்களும், ஏனைத் தேவர் களும் சத்தியால் நிலை பெறுகின்றவர்களேயாவர்' என்பதாம். 'உள் ளொளி யோங்கிய மூவிரண்டு அங்கங்கள்' எனக்கூட்டுக. 'வெள் ளொளி அங்கி' என்றது, 'இனிது வளர்க்கப்பட்டு விளங்குகின்ற தீ' எனப் பொருள்தந்து, வேள்வித் தீயைக் குறித்தது. 'மூவிரண்டு அங்கங்கள்' என்றதனால், அவற்றின் அதிதேவரை, 'அவர்' எனச் சுட்டியொழிந்தார். 'கள்ளவிழ் கோதை' என்னும் உயர்திணையிடத்து இரண்டனுருபு தொக்குநின்றது. 'மூவிரண்டு அங்கங்கள் அங்கியில் அவரொடு மேவிக் கோதையைக் கலந்து உடனே நிற்கும்' என இயைத்து முடிக்க, சித்திக் கொடி சத்தி. 'சித்திக்கொடியாகிய அமுதம்' என உருவகங் காண்க. 'அவி அமுதேயாம்' என்க. 'சுத்திக் கொடி' என ஓதிப் பிறிது பொருளுரைத்தல் பொருந்தாமை அறிக.

இதனால், சத்தி யோகியர்க்கு உள்ளமுதாதல் போலத் தேவர்க்கு வெளியமுதாய் நிற்றல் கூறப்பட்டது.

கொடிய திரேகை குருவுள் ளிருப்பப்
படிவது வாருணைப் பைங்கழல் ஈசன்
வடிவது ஆனந்தம் வந்து முறையே
இடுதல் ஆறங்கம் ஏந்திழை யாளே. ***#1174***

'சிந்திக்கொடி' என மேற் கூறப்பட்ட சத்தியது உருவம் ஆஞ்ஞை முதலிய மேல் நிலங்களில் வெளிப்படாது மறைந்து நிற்கும் நிலையில் யாவரும்

மூழ்குவது சிற்றின்பத்திலேயாம். ஆகவே, சிவனது வடிவாய் உள்ள ஆனந்தத்தை (சிவானந்தத்தை,ஆறு ஆதாரங் களிலும் முறையே வந்து வழங்குகின்ற முதல்வி யோக சத்தியே.

விளக்கவுரை

இரேகை - மின்னல்போலத் தோன்றுகின்ற ஒளி யுருவம். குரு - திண்மை; என்றது உயர்வினை. அது மேல் நிலமாகிய ஆஞ்ஞை முதலியவைகளை உணர்த்திற்று. அந்நிலங்களில் சத்தி உருவம் எப்பொழுதும் இருப்பினும், அந்நிலங்களில் சத்தியைக் காணு மளவு யோகம் முதிரப் பெற்றவர்கட்கே அது காட்சிப் படுவதாகும். அந்நிலையில்தான் சிவானந்தம் தோன்றும். அதனை அந்நிலையில் எங்கும் ஏற்ற பெற்றியால் வழங்குபவள் யோக சத்தி. ஆகவே, அவளை அங்ஙனம் அடையாத பொழுது யோகியரும் சிற்றின்ப வேட்கையைக் கடக்கமாட்டார் என்பது இதனுள் கூறப்பட்டது.
வாருணை - நீர்ச்சத்தி. இவள் சிற்றின்ப வேட்கையை உண்டாக்கி இன்புறுத்துபவள். 'வாருணைக்கண்' என உருபு விரிக்க. 'ஈசன் வடிவதுவாகிய ஆனந்தத்தை ஆறங்கங்களிலும் வந்து முறையே இடும் முதல் ஏந்திழையாள்' எனக் கூட்டுக. 'அவ் ஏந்திழை யாளே' எனச் சுட்டு வருவித்துக் கொள்க. 'படியது' என்பது பாடம் அன்று.
இதனால், சத்தி, சுவாதிட்டானம் முதலிய ஆதாரங்களில் மறைந்து நின்று சிற்றின்பத்தையும், ஆஞ்ஞை முதலிய மேல் நிலங் களில் வெளிப்பட்டு நின்று சிவானந்தத்தையும் தருதல் கூறப்பட்டது.

ஏந்திழை யாரும் இறைவர்கள் மூவரும்
காந்தாரம் ஆறும் கலைமுதல் ஈரெட்டும்
மாந்தர் உளத்தியும் மந்திரர் ஆயமும்
சார்ந்தனர் ஏத்த இருந்தனள் சத்தியே. ***#1175***

மேற் கூறப்பட்ட யோக சத்தி 'அயன், மால், உருத்திரர்' என்னும் மும்மூர்த்திகளும், அவர்களுக்குத் தேவியராய் உள்ளோரும், ஒளியை உடைய ஆதாரங்கள் ஆறுமாய் உள்ள ஆதார சத்தியும், 'கலை' என்னும் பொருளாகச் சொல்லப்படுகின்ற மேதை முதல் உன்மனை ஈறாக உள்ள பதினாறு நிலைகளையுடைய குண்ட லினியும், மக்கள் அறிவில் பொருந்திப் புலன்களை அறிவிக்கின்ற திரோதாயியும், மந்திர மகேசுவர மகேசுவரிகளாய் உள்ள கூட்டத் தினரும் தன்னையடைந்து துதிக்கும்படி மேற்கூறிய மேல் நிலங்களில் எழுந்தருளியிருக்கின்றாள்.

விளக்கவுரை

'ஏந்திழையாளும்' என்பது பாடமன்று. 'மூவர்' எனப் பின்னர் வருதலின், வாளா, 'ஏந்திழையார்' என்றார். காந்துதல் - ஒளி வீசுதல். ஆரம் -

சக்கரம். 'கலையாகிய முதல்' என்க. மூதல் பொருள், பராசத்தியின் சிறுகூறாதல் பற்றித் திரோதாயியை வேறுபோலக் கூறினார். (ஆயம் - மகளிர் கூட்டம்) திணை விராய் எண்ணிய விடத்துப் பெரும்பான்மைபற்றி, 'சார்ந்தனர்' என உயர்திணை முடிபு கொடுக்கப்பட்டன. இது முற்றெச்சம். 'அச்சத்தி' எனச் சுட்டு வருவித்துக்கொள்க.

இதனால், யோக சத்தியது உயர்வு இனிது விளங்கக் கூறப் பட்டது.

சத்தி என்பாள்ஒரு சாதகப் பெண்பிள்ளை
முத்திக்கு நாயகி என்ப தறிகிலர்
பத்தியைப் பாழில் உகுத்தஅப் பாவிகள்
கத்திய நாய்போல் கதறுகின் றாரே. ***#1176***

'சத்தி' என்று யாவராலும் போற்றப்படுகின்ற தேவி, வேண்டுவார் வேண்டும் பயனைப் பெறுதற்குத் துணைபுரிகின்ற ஒரு கன்னிகை. ஆயினும், வீடு பேற்றைத் தரும் முதல்வி அவளே என்பதைப் பலர் அறியமாட்டாதவராய் அவளிடத்துத் தாம் செய்கின்ற அன்புக்கு உலக வாழ்வே பயனாக எண்ணி அந்த அன்பினை வீணாக்கி யொழிகின்ற அறிவிலிகள் அவளை உலக வாழ்வை அளிப் பவளாகவே சொல்லிப் புகழ்ந்து, அறிவுடையோரால் நாய் போன்ற வராக வைத்து இகழப்படுகின்றது.

விளக்கவுரை

'இவரது நிலை இரங்கத் தக்கது' என்பது குறிப்பெச்சம். பொன்னும், மணியும் போல்வனவற்றை வாரி வழங்கும் வள்ளன்மை யுடையவரிடத்துக் கூழும், காடியும் இரந்து பெறுவாரை யொத்தலின், 'அப்பாவிகள்' என்றும்' அவர், தாம் எல்லாம் அறிந்தவர்போலக் கூறுதலை, நாய் விருந்தினரையும் கள்வர்போலக் கருதிக் குரைத்த லோடு உவமித்தும் கூறினார். 'பாவிகள் - புத்தியுடையோர்' ஆதலின், அப்பாவிகள், புத்தியில்லாதவர் என்க. இனி, 'அந்தத் தீவினை யுடையோர்' என உரைத்து, இரக்க மிகுதியால் அவ்வாறு கூறியதாகக் கொள்ளலுமாம்.

இதனால், சத்தியை யோக சத்தியாகக் கண்டு வழிபட்டு முத்திப் பயன் பெறுதலே அறிவுடைமை யாதல் கூறப்பட்டது.

ஆரே திருவின் திருவடி காண்பர்கள்!
நேரேநின் றோதி நினையவும் வல்லார்க்குக்
காரேய் குழலி கமல மலரன்ன
சீரேயுஞ் சேவடி சிந்தைவைத் தாளே. ***#1177***

பிறிது பயனை வேண்டாது தன்னைப் பெறு தலையே பயனாகக் கருதி, மந்திரங்களைச் சொல்லி, மறவாது தன்னை நினைக்கவும்

வல்லவர்களுக்கே அம்மை தனது தாமரை மலர் போன்ற அழகு பொருந்திய சிவந்த திருவடிகளை அவர்களது உள்ளக் கம லத்தில் பதிய வைத்துக் காட்சி வழங்குகின்றாள். ஆகவே, அந்நிலை யில் நின்று அவளது திருவடிகளைக் காண வல்லார் உலகருள் எவர்!.

விளக்கவுரை

முதலடியை இறுதியில் வைத்து உரைக்க. பிற பயன் கருதுவார் கோடுதல் (வளைதல்) உடையராகலின், அவரது நிலை நேரியதன்றாதல் தோன்ற, 'நேரே நின்று' என்றார். சேவடி சிந்தை வைத்தல், அவ்விடத்துக் காட்சி தருதலை உணர்த்திற்று.
இதனால், மேலை மந்திரத்துக் கூறிய நிலையது அருமை கூறப்பட்டது.

சிந்தையில் வைத்துச் சிராதியி லேவைத்து
முந்தையில் வைத்துத்தம் மூலத்தி லேவைத்து
நிந்தையில் வையா நினைவதி லேவைத்துச்
சந்தையில் வைத்துச் சமாதிசெய் வீரே. ***#1178***

தேவியை முதலில் உங்கள் உடம்பில் சிரம் முதலிய இடங்களிலே வைத்தும், பின்பு இருதயம் முதலிய உறுப்புக்களிலே வைத்தும், அதன்பின் உங்கள்முன் உள்ள திருவுருவத்தில் வைத்தும், அதன்பின் மூலம் முதலிய ஆதாரங்களில் வைத்தும் வழிபட்டு அவளோடு ஒன்றாகி நில்லுங்கள். அங்ஙனம் வழிபடும் பொழுது பிற வற்றை நினைத்தலாகிய குற்றத்தில் அகப்படுத்தப்படாத மனத்தை அவ் விடங்களிலே பிறழாது நிறுத்துதலையும், அவ்வவற்றிற்கு ஏற்ற மந்திரங்களில் அவளை எண்ணுதலையும் இன்றியமையாததாகக் கொள்ளுங்கள்.

விளக்கவுரை

'மந்திரம், கிரியை, பாவனை' என்னும் வழிபாட்டுப் பகுதி மூன்றனுள், 'சந்தையில் வைத்து' என்பதனால் மந்திரமும், 'நினைவு வைத்து' என்பதனால் பாவனையும், ஏனையவற்றால் கிரியையும் கூறப்பட்டன. சிராதிகளாவன, 'தலை, முகம், மார்பு, குய்யம், பாதம், முதலாக எஞ்சியவை' என்னும் ஐந்துமாம். இவ்விடங்களில் அம்மையின் தலை முதலியன முறையே பஞ்சப் பிரம மந்திரங்களால் வைத்து எண்ணப்படும். இருதயம் முதலியவை யாவன, 'இருதயம், சிரசு, கூந்தல், கவசம், நேத்திரம், அஸ்திரம்' என்னும் ஆறுமாம். இவற்றில் அம்மையின் அங்கங்கள் அவ்வம் மந்திரங்களால் முறைப்படி வைத்து எண்ணப்படும். முந்தை - முன்னுள்ள இடம்; இஃது ஆகுபெயராய் அங்கு உள்ள திருவுரு வத்தைக் குறித்தது. திருவுருவத்தில் மேற்கூறிய இருவகை மந்திரங் களால் மேற்கூறிய இருவகையாகவும், வேறு பல மந்திரங்களால் விரிவாகவும் வைத்து அம்மை வழிபடப்படுவாள். 'இருதயம், மூலம்'

என்பன உபலக்கணமாய் நின்றன. மூலம் முதலிய ஆதாரங்களில் வைத்து வழிபடுதலே யோகம் என்பது வெளிப்படை. யோகத்திலும் கிரியை உளதாதலை நினைக்க. சந்தை - ஓசை; அஃது அதனையுடைய மந்திரத்தை உணர்த்திற்று. இங்ஙனம் செய்யும் வழிபாடுகளால் தேவியது காட்சியை நாளடைவில் பெறுதல் கூடும் என்பதாம். இதனால், சத்தி தன் அடியார்களது உடம்பும், அவர்கள் முன் நிற்கும் படிவங்களும் ஆகிய ஆதாரங்களில் நின்று அருள் புரிதல் கூறப்பட்டது.

சமாதிசெய் வார்கட்குத் தான்முத லாகிச்
சிவாதியில் ஆகும் சிலைநுத லாளை
நவாதியில் ஆக நயந்தது ஓதில்
உவாதி அவளுக் குறைவில தாமே. ***#1179***

தன்னைத் தியானித்துத் தன்னிடத்து வேறற ஒன்றி நிற்கும் உணர்வுடையவர்கட்குத் தலைவியாய், *'சிவா'* என்பதை முதலாகக் கொண்ட மந்திரத்தில் பொருந்தி நிற்பவளாகிய சத்தியை, *'நவாக்கரி'* எனப்படும் ஒன்பது பீஜங்களில் பொருந்த வைத்து அந்த மந்திரத்தை விருப்பத்துடன் ஓதினால், செயற்கையாய் நிற்கின்ற நிலைமை அவளிடத்துப் பொருந்துதல் இல்லையாம்.

விளக்கவுரை

'நவாதி' என்பதில், *'பீஜம்'* *'ஆதி'* எனப் பட்டது, வித்து, *'முதல்'* எனப்படுமாதலின். *'அது'* என்றது, *'சிவாதி'* என முன்னே கூறப்பட்ட மந்திரத்தை, உவாதி - உபாதி; செயற்கை. சத்திக்குச் செயற்கை நிலையாவது, மலத்தின்வழி நின்று மறைத்தலைச் செய்தல். *'அஃது இலதாம்'* எனவே, *'இயற்கையான தனது விளக்க நிலையை உடையவளாய் நிற்பாள்'* என்பது போந்தது. முதலடி உயிரெதுகை. இதனால், *'சத்தியை நவாக்கரியோடு கூடிய அஞ்செழுத்து மந்திரத்தால் வழிபடின் மருள்நிலை நீங்க, அருள்நிலையைப் பெறலாம்'* என்பது கூறப்பட்டது. நவ பீஜம் *'நவாக்கரிசக்கரம்'* என்னும் அதிகாரத்திற் கூறப்படும்.

உறைபதி தோறும் உறைமுறை மேவி
நறைகமழ் கோதையை நாள்தொறும் நண்ணி
மறையுட னேநிற்கும் மற்றுள்ள நான்கும்
இறைதிளைப் போதிடில் எய்திட லாமே. ***#1180***

சத்தி இந்நிலவுலகத்தில் தனக்கு இடமாகக் கொண்டு எழுந்தருளியுள்ள தலங்களில் அவள் எழுந்தருளியிருக் கின்ற வகைகளை விருப்பத்துடன் உணர்ந்து, நாள்தோறும் அவ்விடங் களை அடைந்து, அவளுக்குரிய மந்திரத்தோடு நீங்காது நிற்கின்ற *'பிர ணவம், பீஜம், சக்தி, கீலகம்'* என்னும் நான்கினையும் தெய்வத் தன்மை மிகும்படி ஓதி வழிபட்டால்,

பயன்கள் பலவற்றை அடையலாம்.

விளக்கவுரை

உறை முறையாவன: காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி, அன்னபூரணி, அபிராமி முதலாகப் பலவாம். ஆங்காங்கு உள்ள அவ்வகைகளை அறிந்து அன்புடன் வணங்கின், அவ்வவற்றால் அடையும் பலன்கள். கைகூடும் என்பதாம். இறை - இறைமை, தெய்வத் தன்மை, திளைத்தல் - மிகுதல், 'திளைப்ப' என்னும் செய வென் எச்சத்தது அகரம் தொகுத்தலாயிற்று. எய்துதலும், 'அவ்வப் பயன்கள்' என்னும் செயப்படுபொருள் வருவித்துக்கொள்க. தலங்கள் பலவற்றில் சத்தி பீடங்களாய் உள்ளவை அம்மைக்குச் சிறந்தனவாம்.

எய்திட லாகும் இருவினை யின்பயன்
கொய்தளிர் மேனிக் குமரி குலாம்கன்னி
மைதவழ் கண்ணிநன் மாதுரி கையொடு
கைதவம் இன்றிக் கருத்துறு மாறே. ***#1181***

ஞானிகட்கு உரிய இருவினைப் பயனாவன, அம்மையிடத்தில் அன்பு செய்தலும் 'செய்யாமையுமாகிய அவற்றால் வருவனவாம்.

விளக்கவுரை

'ஆகும்' என்பது எச்சம். குலாம் - விளங்குகின்ற, மாதுரிகை - இனிமையைச் செய்பவள். கைதவம் - வஞ்சனை; அஃது அவளை ஐய உணர்வுடன் எண்ணுதல். 'கை தவமும் அஃது இன்றிக் கருத்துறு மாறும்' என்க. இவற்றால் விளையும் பயனை இவையேயாக உபசரித்துக் கூறினார். 'இருவினைப் பயன் மாதுரிகையோடு கைதவ மும், அஃது இன்றிக் கருத்துறுமாறுமாம்' என இயையும். 'கருத்து அவள்பால் உறுமாறு' என்க. 'பிறரெல்லாம் எண்ணும் புண்ணிய பாவங்கள் போலாது ஞானியர் எண்ணும் புண்ணிய பாவங்கள் அம்மையை நினைதலும், நினையாமையு மேயாம்' என்றவாறு. எனவே, 'அவரது எண்ணமே உண்மை' என்பது அறியப்படும். ஒடு உருபைக் கண்ணுருபாகத் திரித்துக் கொள்க. அன்றி, ஒடு 'அதனொடு மயங்கற்' பொருளது எனினுமாம்.

இதனால், உயர்ந்தோர்க்குச் சத்தியது வழிபாடு இன்றியமை யாததாதல் கூறப்பட்டது.

கருத்துறுங் காலம் கருது மனமும்
திருத்தி யிருந்தவை சேரும் நிலத்து
ஒருத்தியை உன்னி உணர்ந்திடு மேன்மேல்
இருத்திடும் எண்குணம் எய்தலும் ஆமே. *#1182*

சத்தியிடத்து மனம் செல்லும் பொழுது அதனை நன் மனமாகச் செய்து, அதன்கண் உள்ள எண்ணங்களெல்லாம் குவிகின்ற இடமாகிய இருதயத்தில் ஒப்பற்றவளாகிய அவளையே முதல்வியாக உணர்ந்து தியானி. அங்ஙனம் தியானித்தால், அவள் உன்னை மேன் மேல் உயரச் செய்வாள். அதனால், நீ முடிவில் சிவனது எண்குணங் களையும் பெற்று விளங்கலாம்.

விளக்கவுரை

மனம் திருந்தியபொழுது உண்டாகின்ற எண்ணம், 'எல்லாம் சத்தியின் செயலே' என்பதும், 'அவளையின்றி நமக்குச் சுதந்திரம் இல்லை' என்பதும், மற்றும் இவை போல்வனவுமாம். சிவனது எண்குணங்களாளாவன: 'தன்வயம், தூய உடம்பு, இயற்கை யுணர்வு, முற்றுணர்வு, இயல்பாகவே பாசம் இன்மை, முடிவிலாற்றல், பேரருள், வரம்பில் இன்பம்' என்பன. 'எண்குணத்துளோம்' *1* என்று நாவுக்கரசரும் அருளிச்செய்தமையால், திருவருள் பெற்றோர் இவ் எண் குணங்களையும் பெறுதல் அறியப்படும்.

இதனால், சத்தியது வழிபாடு உயிர்களை மேன்மேல் உயரச் செய்து, முடிவில் சிவமாகச் செய்தல் கூறப்பட்டது.

ஆமைஒன் றேறி அகம்படி யான்என
ஓமஎன் றோதிஎம் உள்ளொளி யாய்நிற்கும்
தாம நறுங்குழல் தையலைக் கண்டபின்
சோம நறுமலர் சூடிநின் றாளே. *#1183*

யான் ஆமையைப்போல ஐம்புல ஆசைகளைத் திருவருளுக்குள்ளே அடக்கி, மெல்லென மேலேறிச் சென்று, புறத்தே செல்லாது அகத்தே நிற்பவனாகி, ஓங்காரத்தை உச்சரித்து, எம்போல் வார்க்கு உள்ளொளியாய் விளங்குகின்ற யோக சத்தியைத் தரிசித்த பின்பு, அவள் சந்திரமண்டலத்தில் உள்ள நறுமணம் பொருந்திய தாமரை மலரைச் சூடி வெளிநின்றாள்.

விளக்கவுரை

ஐம்புல ஆசையை அடக்குவோர்க்கு ஐந்துறுப்புக் களையும் ஓட்டிற்குள் அடக்கிக்கொள்ளும் ஆமை உவமையாதல்,
'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து' (குறள் - *126*)

எனவும்,
'புலன் அடக்கித் தம்முதற்கண் புக்குறுவார்; போதார்
தலன்நடக்கும் ஆமை தக' *1*
எனவும் போந்தவற்றால் நன்கறியப்பட்டது. 'ஒன்ற' என்னும் உவம உருபின் இறுதி அகரம் தொகுத்தலாயிற்று. அகம்படி - அகத்தேபடிந்து நிற்பவன். 'என' - என்று ஆகி. 'ஓம்' என்பது அகரச் சாரியை பெற்று வந்தது. சந்திரமண்டலம், சென்னி. அங்குள்ளது ஆயிர இதழ்த் தாமரை மலர். அதனைச் சூடிநிற்றல். ஆஞ்ஞை முதலாக வெளிப்பட்டு நிற்றல். இதனால், ஐம்புலன்களை அடக்கிப் பிரணவ யோகம் செய்தால் யோக சத்தியைத் தரிசித்தல் கூடும் என்பது கூறப்பட்டது.

சூடிடும் அங்குச பாசத்துளை வழி
கூடும் இருவளை கோலக்கைக் குண்டிகை
நாடும் இருபதம் நன்னெடு ருத்திரம்
ஆடிடம் சீர்புனை ஆடக மாமே. ***#1184***

யோக சத்தியை அணுகும் வழி சுழுமுனா நாடி. அவளது இருகைகளில் காணப்படுவன சங்கமும், குண்டிகையும். அவளுக்குரிய சீருத்திர மந்திரம் சிகாரமும், வகர ஆகாரமும் ஆகிய இரண்டெழுத்துக்களால் ஆகிய சொல். அவள் நடனம் புரிகின்ற அரங்கு 'புகழை உடைய பொன்மன்று' எனப்படும் புருவநடு.

விளக்கவுரை

அங்குசம்போல மேலே வளைந்து நிற்கும் முதுகந் தண்டினைச் சூழ்ந்து செல்லும் கயிறு போன்றுள்ளது பற்றிச், சுழுமுனை நாடியை, 'அங்குச பாசத் துளை' என்றார். அங்குச பாசங்கள் அம்மைதன் ஆயுதமுமாதல் பற்றி, 'சூடிடும்' என்றார். 'இரு கோலக் கையில் வளை குண்டிகை' எனக் கூட்டுக. ருத்திரம், சீருத்திரப் பிரச்சினம். அஃது ஆகுபெயராய் அதன்கண் உள்ள மந்திரத்தைக் குறித்தது. 'வேத பாகங்களில் சிறந்தது சீருத்திரமே' என்பதைக் குறிக்க, வாளா, 'மந்திரம்' என்னாது, 'ருத்திரம்' என்றார். 'சிவா' என்னும் பதம் சீருத்திரத்துள் பலவிடத்து வருதல் அறிக. எழுத்தை, 'பதம்' என்றது, 'வகரக் கிளவி' *2* என்பது போல ஆகுபெயர். 'ஆடிடும்' என்பது பாடமன்று, 'சீர்' என்பது மிகுத்துக் கூறப்படுதலை உணர்த்திற்று.
இதனால், யோகசத்தியை அணுகுதற்குரிய வழி முதலியன கூறப்பட்டன.

ஆம்அயன் மால் அரன்ஈசன் சதாசிவன்
தாம்அடி சூடிநின் றெய்தினர் தம்பதம்
காமனும் சாமன் இரவி கனலுடன்
சோமனும் வந்தடி சூடநின் றாளே. ***#1185***

உலகிற்கு முதல்வராம் 'அயன், மால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன்' என்னும் ஐவர்தாமும் சத்தியை வழிபட்டே தங்கள் பதவியைப் பெற்றார்கள். மற்றும் காமன், சாமன், சூரியன், அங்கி, சந்திரன் என்னும் இவர்களும் வந்து வணங்க அவள் வீற்றிருக்கின்றாள்.

விளக்கவுரை

இங்குக் கூறப்பட்ட அயன் முதலிய ஐவர் அணுபட்சத் தினர் என்க.
'சாமன்' என்பான் காமனுக்குத் தம்பி என்ப.
இதனால், 'சத்தியே கடவுளர் பலர்க்கும் தலைவி' என்பது கூறப்பட்டது.

சூடும் இளம்பிறை சூலி கபாலினி
நீடும் இளங்கொடி நின்மலி நேரிழை
நாடி நடுவிடை ஞாளம் உருவநின்
றாடும் அதன்வழி அண்ட முதல்வியே. ***#1186***

உலக முதல்வியாகிய சத்தி இளம் பிறையைச் சூடிக் கொண்டும், சூலத்தையும் கபாலத்தையும் ஏந்திக் கொண்டும், என்றும் மாறாத கொடிபோல்பவளாய் இருப்பாள்; இயல்பாகவே மலம் நீங்கியவள்; நேரிய (நுண்ணிய வேலைப்பாடமைந்த) அணி கலங்களை யணிந்தவள். அவள் நடு நாடியாகிய சுழுமுனையிடத்து அதன் உள்துளையில் பிராணவாயு ஊடுருவிச் செல்லும்பொழுது அவ்வாயுவின் வழியே நின்று நடனம் புரிவாள்.

விளக்கவுரை

'சூடும்' என்பது முற்று. 'இளம்பிறை' என்பதில் இரண்டாவது இறுதிக்கண் தொக்கது. 'நடுநாடியிடை' என மாற்றி யுரைக்க. 'நாளம்' என்பது 'ஞாளம்' எனப் போலியாயிற்று. உரு வுதலுக்கு வினைமுதல் வருவிக்க. 'அதன்வழி நின்று ஆடும்' என்க. 'ஆடுதல்' இங்கு விளங்கித் தோன்றுதல்.
இதனால், யோகிகட்கு அவரது அகக்காட்சியில் சத்தி விளங்கி நிற்றல் கூறப்பட்டது.

அண்ட முதலா அவனி பரியந்தம்
கண்டதொன் றில்லைக் கனங்குழை யல்லது
கண்டனும் கண்டியு மாகிய காரணம்
குண்டிகை கோளிகை கண்டத னாலே. ***#1187***

ஆகாயம் முதல் பூமி ஈறாகப் பார்த்தால் நாம் கண்டது சத்தியைத் தவிர வேறொரு பொருளும் இல்லை. சத்தி தான் மாத்திரமாய் நின்று உலகிற்கு முதற்பொருளாகாது சிவத்தொடு கூடி நின்றே முதற்பொருளாயிருத்தல், உலகம், 'ஆண், பெண்' என்னும் இரு பகுதிப்பட்டே நிற்றலைக் காண்கின்ற அதனானே அறியப்படும்.

விளக்கவுரை

'கனங்குழை யல்லது கண்டதொன்றில்லை' என்றது, 'சத்தியது கலப்பில்லாமல் எதுவும் இல்லை' என்றவாறு. 'கண்டன், கண்டி' என்பன, 'சிவம்' என்றும் 'சத்தி' என்றும் வரையறுக்கப்படும் தன்மை யுடையவர்களாய் இருத்தலைக் குறித்தது. காரணம் - காரணத் தன்மை. 'குண்டிகை, கோளிகை' என்பன ஆடவர் பெண்டிர் அவயவங்களை, 'குண்டு' எனவும் 'குழி' எனவும் மறைத்து வழங்கும் வழக்குப்பற்றி வந்தன. கோளிகை - கொள்வது. 'கோளகை' என ஓதலுமாம், ஈற்றில், 'அறியப்படும்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க.

இதனால், சத்தியே உலக முதல்வியாயினும், அவள் சிவனைப் பற்றி நின்றே முதலாதல் கூறப்பட்டது.

ஆலம்உண் டான்அமு தாங்கவர் தம்பதம்
சாலவந் தெய்தும் தவத்தின்பந் தான்வரும்
கோலிவந் தெய்தும் குவிந்த பதவையே
டேலவந் தீண்டி யிருந்தனள் மேலே. ***#1188***

சத்தி, எல்லா உலகங்களையும் கடந்து சென்று எய்தப்படுவதாகிய சிவலோகத்திற்குத் தலைவனாகிய சிவனுடனே மிக அணிமையில் வந்து யோகியர்தம் உச்சியிலே இருக்கின்றாள். அவளை அடைதலாலே, சிவன் நஞ்சை உண்டதனால் அமுதத்தை உண்ணப் பெற்ற அந்தத் தேவர்கள் பதவிகள் மிகக் கிடைக்கும்; அதுவேயன்றிச் சரியை முதலிய தவங்களால் வருகின்ற சிவலோகத்து இன்பமும் கிடைக்கும்.

விளக்கவுரை

'ஆலம் உண்டானால் ஆங்கு அமுதுண்ட அவர்' என உருபும், ஒருசொல்லும் விரித்துக் கொள்க. கோலுதல் - விலக்குதல். 'கோலி வந்து' என்பதில் 'வந்து' என்பது இட வழுவமைதி, 'குவிந்த' என்றது, 'முடிந்த' என்றவாறு. ஐ - தலைவன். மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி, ஈற்றடியின் பின் 'அவளால்' என்பது வருவித்துக் கொண்டு உரைக்க.

இதனால், சத்தியது அருளால் எல்லா இன்பமும் எய்தப் படுதல் கூறப்பட்டது.

மேலாம் அருந்தவம் மேன்மேலும் வந்தெய்தக்
காலால் வருந்திக் கழிவர் கணத்திடை
நாலாம் நளினம்நின் றேற்றிநட் டுச்சிதன்
மேலாம் எழுத்தினல் ஆமத்தி னாளே. ***#1189***

உணவுப் பொருளாய் நின்று உடம்பையும், அது வழியாக உயிரையும் வளப்பவளாகிய சத்தி, நாலிதழ்த் தாமரையாகிய மூலாதாரத்திலிருந்து மேலேற்றிப் பல ஆதாரங்களில் ஊன்றப்பட்டு முடிவில் தலைக்குமேல்

உள்ள துவாதசாந்தத்தில் முடிகின்ற பிரணவ வடிவாய் இருந்து அருள் புரிகின்றாள். இதனை யறியாது, பலர் மேலாகிய ஞானயோகம் முதிர்தற்பொருட்டு மலை, காடு, தீர்த்தக்கரை முதலிய இடங்களை அடைந்து துன்புற்று விரைய இறந்தொழி கின்றார்கள்.

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி உரைக்க. 'ஏத்தி' என்பது பாடமாயின், 'ஓதி' என உரைக்க. நட்டு, நடப்பட்டு, ஆமம் - உணவுப் பொருள். 'பிறர் கணத்திடைக் கழிவர்' என்றதனால், யோகத்தினர் நீண்ட நாள் வாழ்தல் பெறப்படும்.
இதனால், 'சத்தியைப் பிரணவ யோகத்தினாலே தலைப்படல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

ஆமத் தினிதிருந் தன்ன மயத்தினள்
ஓமத்தி லேயும் ஒருத்தி பொருந்தினள்
நாமம் நமசிவ யவ்வென் றிருப்பார்க்கு
நேமத் துணைவி நிலாவிநின் றாளே. ***#1190***

அடப்படாத உணவுப் பொருளாயிருந்து பின் அடப்பட்ட உணவாகவும் ஆகின்ற சத்தி, வயிற்றுத் தீயும், குண்டத் தீயு மாகிய ஓமத் தீக்களிலும் ஒப்பற்ற ஒருத்தியாய் இருந்து அவற்றை அடையும் பொருள்களைச் செரிப்பித்தும், அவியாக்கியும் உதவு கின்றாள். அவளது பெயராகிய திருவைந்தெழுத்தையே துணையாகப் பற்றி அமைதியுற்று இருப்பவர்கட்கு, தவத்தின் முதல்வியாகிய அவள் இனிது விளங்கி அருள்புரிவாள்.

விளக்கவுரை

'இருந்து' என்னும் எச்சம் 'அன்ன மயத்தினள்' என்பதில் தொக்குநின்ற 'ஆவாள்' என்பதனோடு முடிந்தது. உணவு கொள்ளுங்கால் வயிற்றுத்தீயும் ஓமாக்கினியாகக் கருதப்படுதலை நினைக. வயிற்றுத் தீயில் நின்று மண்ணுலகத்தவர்க்கும், வேள்வித் தீயில் நின்று விண்ணுலகத்தவர்கட்கும் உதவுதலைக் குறித்தவாறு. இவ்வாறு யாவர்க்கும் உதவுபவளாகிய அவளை அஞ்செழுத்து வழியாக அடைந்து பயன்பெற வேண்டும் என்பதாம். 'நமசிவ' எனப் பாடம் ஓதின் யாப்புக் கெடுதலை நோக்குக. சத்தி சிவங்கட்கு இடையே வேற்றுமையின்மையின், சிவனது நாமத்தைச் சத்தியது நாமமாகவே அருளிச் செய்தார். 'நமச்சிவாயை என்று' எனப் பாடம் ஓதலுமாம். நியமம், 'நேமம்' என மருவிற்று.
இதனால், சத்தி உயிர்களைச் சில ஆதாரங்களில் நின்று காக்குமாறு கூறப்பட்டது.

நிலாமய மாகிய நீள்படி கத்தி
சிலாமய மாகுஞ் செழுந்தர ளத்தி
சுலாமய மாகும் சுரிகுழற் கோதை
கலாமய மாகக் கலந்துநின் றாளே. ***#1191***

நிலவைப் போன்ற ஒளியையுடைய படிகத்தின் நிறத்தையும், ஒளிக் கல்லாகிய முத்தின் நிறத்தையும் உடையவளும், செறிந்த சுரிந்த கூந்தலை உடையவளும் ஆகிய சத்தி பிரணவ கலைகளின் வடிவாய் யோகிகளிடத்தில் கலந்து நிற்கின்றாள்.

விளக்கவுரை

'ஆதலின், அவளை அக்கலை வழியாகக் காணுதலே சிறந்தது' என்பது குறிப்பெச்சம். படிகமும் தரளமும் அவற்றின் நிறத்தை உணர்த்தின. 'படிகத்தின், தரளத்தின்' என்பன பாடம் ஆகாமை அறிக.
இதனால், சத்தி யோகிகளிடத்தில் நிற்குமாறு கூறப்பட்டது.

கலந்துநின் றாள்கன்னி காதல னோடும்
கலந்துநின் றாள்உயிர்க் கற்பனை யெல்லாம்
கலந்துநின் றாள்கலை ஞானங்கள் எல்லாம்
கலந்துநின் றாள்கன்னி காலமு மாயே. ***#1192***

சத்தி சிவனோடு தாதான்மியமாய் ஒன்றுபட்டு நின்றே, உயிர்களின் அறிவு. வேதம் முதலிய எண்ணிறந்த நூல்கள், காலம் முதலிய தத்துவங்கள் ஆகிய எல்லாப் பொருளிலும் அத்து விதமாய் ஒன்று பட்டிருக்கின்றாள்.

விளக்கவுரை

'ஆகவே, அவளைச் சிவனது பண்பாகவே உணர்தல் வேண்டும்; தனித்த ஒருத்தியாக எண்ணுதல் கூடாது, என்பதாம். 'கற்பனை' - எண்ணம்; என்றது அறிவை. 'கலைஞானங்கள்' என்பதை 'ஞானக்கலைகள்' எனமாற்றிக் கொள்க. இம்மந்திரம் சொற்பொருட் பின்வருநிலை. இதனால், 'அண்ட முதலா அவனி பரியந்தம்' *(1193)* அனைத்தும் சத்தி மயமாமாறு இவ்வாறு என்பது கூறப்பட்டது.

காலவி எங்கும் கருத்தும் அருத்தியும்
கூலவி ஒன்றாகும் கூடல் இழைத்தனள்
மாலினி மாகுலி மந்திர சண்டிகை
பாலினி பாலவன் பாகம தாகுமே. ***#1193***

காலமாய் இருப்பவளும், எல்லா இடமுமாய் இருப் பவளும், உயிர்களின் எண்ணமும், விருப்பமும் கைகூட உதவியாய் இருப்பவளும், எல்லாப்பொருளிலும் தான் ஒன்றாயிருக்கும் கலப்பினைச் செய்தவளும், உயிர்களை மயக்குகின்றவளும், அம்மயக்கம் நீங்கத் தெளிவைத்

தருகின்ற மேன்மை வாய்ந்தவளும், மந்திரங்களின் ஆற்றலாய் நிற்பவளும், உயிர்களைக் காக்கின்றவளும் ஆகிய சத்தி தன்னில் ஒரு கூறாய் நிற்கின்ற சிவனிடத்துத் தான் அவனிடத்தில் ஒரு கூறாய் இருப்பாள்.

விளக்கவுரை

'காலத்தி, கூலத்தி' என்பவை அத்துச் சாரியை தொக வந்தன. அனுகூலத்தை, 'கூலம்' என முதற் குறைத்துக் கூறினார். 'எங்கு' என்பது பெயர்த்தன்மைப்பட்டது. மாகுலம் - உயர்குலம்; அஃதாவது தெளிவிக்கும் தன்மை. சண்டிகை - வேகம் (மந்திரத்தினது ஆற்றல்) ஆகின்ற தன்மையுடையவள். பாலினி - பாலனம் செய் பவள். 'சத்தியும், சிவனும் தம்மில் தாம் கூறாய் இருப்பர்' என்பதை விளக்க, 'பாலவன்' என்றும், 'பாகமதாம்' என்றும் கூறினார்.

இதனால், பல்வகைப் பெருமைகளும் உடையவளாகிய சத்தி சிவனது கூறாயே நிற்றல் கூறப்பட்டது.

பாகம் பராசத்தி பைம்பொற் சடைமுடி
ஏக இருதயம் ஈரைந்து திண்புயம்
மோக முகம்ஐந்து முக்கண் முகந்தொறும்
நாகம் உரித்து நடம்செய்யும் நாதற்கே. ***#1194***

பசிய பொன்போலும் சடைமுடியையும், ஒரே எண்ணத்தையும். திண்ணிய பத்துத்தோள்களையும், விருப்பத்தைத் தருகின்ற ஐந்து முகங்களையும், முகந்தோறும் மும்மூன்று கண் களையும் கொண்டு, யானையை உரித்துப் போர்த்து நடனம் புரிபவ னாகிய சிவபெருமானுக்கு அவனது ஒரு கூறாய் இருப்பாள் பராசத்தி.

விளக்கவுரை

'சிவபிரானது பல்வகை உருவும், குணமும், செயலும் ஆகிய எல்லாம் சத்தியால் அமைவனவே' என்பதை விளக்க, அவனது உருவம் முதலியவற்றை வகுத்துரைத்து, 'அவனுக்குப் பாகம் பராசத்தி' என முடித்தார். ஆகவே, 'பைம்பொற் சடைமுடி' என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.

இதனால், 'சிவனின்றிச் சத்தி யில்லாமைபோலச் சத்தியின்றி யும் சிவனில்லை' என்பதுணர்த்தி, இருவரும் யாண்டும் பிரிந்து நில்லாமை கூறப்பட்டது.

நாதனும் நாலொன்ப தின்மருங் கூடிநின்
றோதிடும் கூடங்கள் ஓரைந் துளஅவை
வேதனும் ஈரொன் பதின்மரும் மேவிநின்
றாதியும் அந்தமும் ஆகிநின் றாளே. ***#1195***

தலைவனாகிய இறைவனும், அவனால் செயற் படுத்தப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களும் ஏற்ற பெற்றியால் பொருந்தி நிற்பவனவாகச் சொல்லப்படுகின்ற நிலையங்கள் ஐந்து உள்ளன. அவைகளில் பிரமன் முதலியோரும், பதினெண், கணங்களும், வந்து வணங்கச் சத்தி அவற்றிற்கு முதலும், முடிவுமாகி நிற்கின்றாள்.

விளக்கவுரை

ஐந்து நிலையங்கள் என்றது. 'நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை' என்னும் ஐந்து கலைகளை. இவைகளிலே முப்பத்தாறு தத்துவங்கள் முதலிய பிற அத்துவாக்கள் ஐந்தும் அவற்றிற்கு ஏற்ற பெற்றியால் அடங்கி நிற்க, இறைவனும் பெற்றியால் ஆதியும் அந்தமுமாம் தலைவனாய் நிற்றலின், சத்தியும் அங்கு அவ்வாறு நிற்கின்றாள் என்க. 'வேதனும் ஈரொன்பதின்மரும் மேவ நின்று' என்றது, அவளது பெருமை கூறியவாறு. 'அவை மேவ' என இயையும்.

'பதினெண் கணத்தவர் இவர்' என்பதை

'விரவுசா ரணரே, சித்தர், விஞ்சையர், பசாசர், பூதர்,
கருடர்,கின் னரர், இயக்கர், காந்தர்வர், சுரர், தைத்தியர்,
உரகர் ஆகாச வாசர் உத்தர குருவோர் யோகர்
நிருதர்,கிம் புருடர், விண்மீன் நிறைகணம், மூவா றாமே' *1*

என்பதனான் அறிக. தைத்தியர் - அசுரர். நிருதர் - இராக்கதர். உத்தர குரு - போக பூமி. யோகர் - முனிவர். 'விண்மீன்' என்றதும் அவற்றிற்குத் தலைவரை.

இதனால், சத்தி பஞ்சகலைகளிலும் ஏற்ற பெற்றியால் அனைத்திற்கும் ஆதியும், அந்தமுமாய் நிற்றல் கூறப்பட்டது.

ஆகின்ற நாள்களில் ஐம்பத் தொருவர்கள்
ஆகிநின் றார்களில் ஆருயி ராம்அவள்
ஆகிநின் றாள்உட னாகிய சக்கரத்
தாகிநின் றான்அவன் ஆயிழை பாடே. ***#1196***

உலகம் தோன்றும்பொழுது பஞ்ச கலைகளிலும் நிற்கும் எழுத்துக்கள் ஐம்பத்தொன்றும் முதலில் முறையானேதோன்ற, அவற்றிற்கு முதல்வர் ஐம்பத்தொருவரும் உடன்தோன்றி நிற்பர். அங்ஙனம் நிற்கும் அவர் எல்லார்க்கும் சத்தி உயிராய் உள் நிற்பாள். ஆகவே, அவ் எழுத்துக்களைப் பல்வேறு முறையில் தம்முட்கொண்ட சக்கரங்களில் எல்லாம் அச்சத்தி உயிராய் நிற்றல் பெறப்படுதலின், சிவனும் அவளிடத்து நீக்கமின்றி அச்சக்கரங்களில் நிற்பவனாவான்.

விளக்கவுரை

மூன்றாம் அடியை, 'அங்ஙனம் ஆகிநின்ற அவள் நீங்காது நிற்கின்ற

சக்கரம்' என எடுத்துக்கொண்டு உரைக்க. பின் னிரண்டடிகளில், 'ஆகிநின்றாருடன் நாயகி சக்கரத் - தாகிநின்றான் அவன் ஆயிழை யோடே' என்பதும் பாடமாய் உள்ளது.

இதனால், 'சக்கரங்களாக அமைக்கப்படுவனயாவும் சத்தி சிவமயமேயன்றித் தனியில்லை' என்பது கூறி, தனிப்பட்ட வேறு ஆற்றல் உடையனவாகக் கருதுதல் அறியாமையாதல் விளக்கப் பட்டது.

ஆயிழை யாளொடும் ஆதிப் பரனிடம்
ஆயதொ ரண்டவை ஆறும் இரண்டுள
ஆய மனந்தொ றாறுமுக மாமவற்
றேய குழலி இனிதுநின் றாளே. *#1197*

சத்தி, சிவன் இருவருக்கும் உரிய இடம், உலக முதல்களுக்கு மேலாய், எட்டாய் அமைந்த இதழ்களையுடைய தாமரை மலராகும். அதுவன்றியும் தியான வகையால் வேறுபடுகின்ற ஆறு இடங்களும் உள. எல்லாவற்றிலும் சத்தி இனிது வீற்றிருக் கின்றாள்.

விளக்கவுரை

அண்டகம் - உலகம்; ஐ - முதல்; என்றது தத்து வங்களை. 'தத்துவங்கள்' எனப் பொதுப்படக் கூறினும் சகலர்க்கே உரிய ஆன்ம தத்துவங்களே குறிக்கப்பட்டன. அவற்றின் மேல் உள்ள எட்டிதழ்க் கமலம், இருதய கமலமாம். இதனிடத்திலும், ஆறாதாரங்களிலும் சத்தியும், சிவமும் கலந்து நிற்பினும், தன்னை இவ்விடங்களில் நினைபவர்க்குச் சத்தி இனிது விளங்குவாள் என்றவாறு. பின்னிரண்டடிகளில் பாடம்பெரிதும் திரிபுபட்டுள்ளது.

இதனால், சத்தி தியான இடங்களில் விளங்குதல் கூறப் பட்டது.

நின்றனள் நேரிழை யோடுடன் நேர்பட
இன்றென் அகம்படி ஏழும் உயிர்ப்பெய்தும்
துன்றிய ஓரொன் பதின்மரும் சூழலுள்
ஒன்றுயர் வோதி உணர்ந்துநின் றாளே. *#1198*

யான் சத்தியோடு ஒன்றிச் செவ்வியனாகும்படி அவள் எனக்கு இனிது வெளிநிற்கின்றாள். எதனால் எனின், இப் பொழுது என் உடலுள்ளே உயிர்ப்புக் காற்று என் வசமாய் ஆறு ஆதாரங் களிலும், அவற்றின்மேல் உள்ள ஏழாந்தானமாகிய சிரசிலும் செல் கின்றது. பத்து வாயுக்களும் நெருங்கி நின்று சுழலுகின்ற உடம்பினுள் ஏனை ஒன்பதினும் உயர்வுடையது. உயிர்ப்புக் காற்று ஒன்றே என்பதை எனக்கு அவள் அறிவித்து, என்பொருட்டு அறிந்தும் நின்றாள்.

விளக்கவுரை

'ஏழிலும்' என உருபு விரிக்க. இதனுள் வந்த மூன்று தொடர்களும்

முறையே ஒன்றற்கொன்று காரணமாம் பொருள்களை உணர்த்தி நின்றன.
இதனால், வாசி யோகம் சத்தியைக் காணுதற்கு வழியாதல் கூறப்பட்டது.

உணர்ந்தெழு மந்திரம் ஓம்எனும் உள்ளே
மணந்தெழு மாகதி யாகிய தாகும்
கொணர்ந்தெழு சூதனும் சூதியும் கூடிக்
கணந்தெழும் காணும்அக் காமுகை யாமே. ***#1199***

உயிர் உணர்ந்து உணர்ந்து மேன்மேல் உயர்தற் குரிய மந்திரம் 'ஓம்' என்பது எனச்சொல்லப்படும். உணர்வால் இறையொடு கூடி மேன்மையுறுகின்ற முடிந்த பேறாகிய வீடுபேறும், பிறவும் அதனாலே கிடைக்கும். உயிரை இவ்வாறு மேல்நிலைக்குக் கொண்டு செல்கின்ற கள்வனும், கள்வியுமாகிய சிவனும், சத்தியும் இணைந்து நிற்றலும், அதனால் விரைய விளங்கும். அங்கு முன்னர்க் காணப்படுபவள் சிவனிடத்துப் பெருவிருப்புடையளாகிய சத்தியே.

விளக்கவுரை

'எனும்' என்பது செயப்பாட்டு வினைப்பொருள் உணர்த்தி நின்றது. 'உள்' என்றது உணர்வை, 'கணத்து' என்பது எதுகை நோக்கி மெலிந்து நின்றது. இறுதியில் உள்ள 'எழும்' என்பதில், செய்யும் என்முற்று பலர்பாலில் வந்தது. ஆரிடவமைதி 'காணும்' என்றது முன்னர்த் தோன்றுதலை.
இதனால், 'வாசியோகம் பிரணவயோகமாயவழிச் சத்தியை எளிதில் அடைவிக்கும்' என்பது கூறப்பட்டது.

ஆமது அங்கியும் ஆதியும் ஈசனும்
மாமது மண்டலம் மாருத மாதியும்
ஏமது சீவன் சிகைஅங் கிருண்டிடக்
கோமலர்க் கோதையும் கோதண்ட மாகுமே. ***#1200***

'ஆதி' எனப்படுபவளாகிய சத்தியும், 'ஈசன்' எனப் படுபவனாகிய சிவனும் வழிபாட்டிற்கு மிகச்சிறந்ததாகச் சொல்லப் படுகின்ற வேள்வித்தீ, யோகத்தில் சிறப்பிடம் பெற்று நிற்கும் சந்திர மண்டலம், வாயு முதலிய பூதங்கள் என்னும் இவைகளாய் நின்று உயிருக்கு நலம் செய்கின்றனர். அவ்விடத்தில், சத்தி, யோகியரது உடம்பில் தோன்றுகின்ற நரை முதலியவை அங்ஙனம் தோன்றாது அகலச் சிகை கறுத்தல் முதலிய இளமைத் தன்மைகள் தோன்றும்படி அவரது ஆஞ்ஞைத் தானத்தில் விளங்கி நிற்பாள்.

விளக்கவுரை

'ஆதியும், ஈசனும்' என்பவற்றை முதலில் எழுவாயாக வைத்து, 'மாருதம், ஆதியுமாய்' என ஆக்கம் வருவித்து, 'ஏமம் ஆகின்றனர்' என முடிக்க. 'ஆம் அதுவாகிய அங்கி' என்க. இதனுள் 'அது' என்றது வேள்வித் தீயைக் குறித்த பண்டறி சுட்டு. 'மா மண்டலம், மது மண்டலம்' எனத் தனித்தனிச் சென்று இயையும். மது, இங்கே அமுதம். பூதங்களில் மாருதத்தை ஆதியாகக் கூறினார். யோகத்திற்கு அது சிறந்ததாதல் பற்றி. 'ஏமம்' என்பது இடைக் குறைந்து நின்றது. இதன்பின் உள்ள 'அது', பகுதிப் பொருள் விகுதி. 'சீவன்' என்பது, சொல்லுவாரது குறிப்பால், யோகத்தில் நிற்கும் சீவனைக் குறித்தது. 'சீவனது சிகை' என்க. கோ - தலைமை; இஃது ஒரு சொல் தன்மை எய்தி நின்ற, 'மலர்க் கோதை' என்பதனுடன் இரண்டாவதன் பொருள்படத் தொக்குநின்றது. கோதண்டத்தில்' என உருபு விரித்துக் கொள்க.
இதனால், அனைத்துமாய் நின்று காத்துவருகின்ற சத்தி சிவன் என்பாருள் சத்தி யோகத்தில் விளங்கிநின்று நலம் செய்தல் கூறப்பட்டது.

ஆகிய கோதண்டத் தாகும் மனோன்மனி
ஆகிய ஐம்ப துடனே அடங்கிடும்
ஆகும் பராபரை யோடப் பரைஅவள்
ஆகும் அவள்ஐங் கருமத்தள் தானே. ***#1201***

'மேன்மைத் தானம்' எனப்படுவதாகிய ஆஞ்ஞை யில் சத்தி விளக்கமுற்றுத் திகழும் நிலையில் அது முதல் மூலாதாரம் ஈறாக நிற்கின்ற ஐம்பது எழுத்துக்களும் அவளிடத்தே செயலற்று அடங்கிவிடும். அஃது எவ்வாறெனின், சுத்த மாயையினின்றும் விருத்திப்படுகின்ற நால்வகை வாக்குகளில் அவ் எழுத்துக்களுக்கு முதல் நிலைகளாகிய 'பைசந்தி, சூக்குமை' என்னும் வாக்குகளாய் நிற்றலோடு, ஐந்தொழிலையும் தன்னுடையனவாக உடையவள் அவளேயாதலின்.

விளக்கவுரை

'மனோன்மனி' என்பது, 'சத்தி' என்னும் அளவாய் நின்றது. 'மனோன்மனிபால்' என ஏழாவது விரிக்க. 'ஐம்பதும்' என்னும் முற்றும்மை தொகுத்தல் பெற்றது. உடனே - ஒருசேர. பைசந்தி சூக்குமை வாக்குகளை முறையே 'பராபரை, பரை' என்றல் வழக்கு. பராபரை - பரை அபரை இருதன்மையும் உடையது. எழுத்துக்கள் அடங்கவே. உயிரினது பல தலைப்பட்ட உணர்வு அடங்கிச் சத்தியையே உணர்ந்து நிற்றல் பெறப்பட்டது. ஆஞ்ஞையில் விளங்கி நிற்கும் சத்தியது விருப்பம், அவ்வுயிரினது உணர்வைத் தன்பால் அடக்கிக் கொள்ளுதலே யாதலின், அவளது விருப்பத்திற்கு மாறாகப் பிறி தொன்று நிகழ மாட்டாமை பின்னிரண்டடிகளால் விளக்கப்பட்டது.

இதனால், (கோமலர்க் கோதை கோதண்டம்) ஆதலின் (முன்னை மந்திரம்) பயன் கூறப்பட்டது.

தானிகழ் மோகினி சார்வான யோகி
போன மயமுடை யார்அடி போற்றுவர்
ஆனவர் ஆவியின் ஆகிய அச்சிவந்
தானாம் பரசிவம் மேலது தானே. *#1202*

சிவசத்தி தனக்கு இடமாகக் கொள்கின்ற குண்டலினி சத்தி, அவளைச் சார்பாகக் கொண்டு விளங்கும் யோகினி சத்தி என்னும் இவர்கள் நீங்கத் தாம் தூயராய் நிற்போரே ஆதி சத்தியைத் தலைப் படுவர். அவரது உணர்வில் அவையேயாய்க் கலந்து நிற்கின்ற ஆதி சிவமாம் நிலையை அடைகின்ற பரசிவம் அந்நிலைக்கு மேலுள்ளது.

விளக்கவுரை

எனவே, 'அந்தப் பரசிவத்தின் சத்தியாகிய பராசத்தியும் மேற்சொல்லிய அனைத்திற்கும் மேல் உள்ளது' என்றவாறு. முதற்கண் 'தான்' என்றது, முன்னை மந்திரத்திற்கூறிய மனோன்மனியை. குண்டலியும் பந்தமாதல் பற்றி 'மோகினி' என்றார். யோகினி - யோகத்தைப் பயப்பிக்கின்றவள். அடி, சிவனடி. ஆதி சத்தியை இங் ஙனம் கூறுதல் வழக்கு. 'முன்னர்க் கூறப்பட்ட ஆதி சத்திக்கு முதலாகிய சிவம், என்பது தோன்ற, 'அச்சிவம்' எனச் சுட்டிக் கூறினார். பரசிவ பராசத்திகளின் இயல்பை இவ்வாறு எடுத்துக் கூறியது, அவர்களை அடைதலின் அருமை யுணர்த்தற்கு. ஈற்றில் உள்ள தான், ஏ அசைகள்.
இதனால், சத்தி சிவங்களின் உண்மை நிலையின் அருமை கூறப்பட்டது.

தானந்தம் மேலே தருஞ்சிகை தன்னுடன்
ஆனந்த மோகினி யாம்பொற் றிருவோடு
மோனையில் வைத்து மொழிதரு கூறது
ஆனவை ஓம்எனும் அவ்வுயிர் மார்க்கமே. *#1203*

ஆதி சத்தி, யோகியரது உச்சியிலும், அதற்கு மேலுள்ள பன்னிரண்டு அங்குலமாகிய நிராதாரத்திலும் குண்டலி சத்தியோடு அவட்கு முன்னவளாம்படி வைத்துச் சொல்லப்படும் வியட்டிப் பிரணவநிலைகளே பிரணவ யோக நெறியாகும்.

விளக்கவுரை

'தான்' என்றது மேலே போந்த ஆதி சத்தியை. அந்தம்- முடி; தலை. தலைக்குமேல் உள்ள நிராதாரத்தையே இங்கு, 'சிகை' என்றார். 'அந்தமும் அதன்மேலே தரும் சிகையும் ஆகிய இவற்றுடன் ஆனந்த மோகினியாம் திருவோடு மோனையில் ஆக வைத்து மொழிதரு கூறு' என்க. தரும் - சொல்லப்படுகின்ற. அசுத்த மாயையாகிய

மோகினியினின்று பிரித்தற்குக் குண்டலினியை 'ஆனந்த மோகினி' என்றார். பொன் திரு - பொன்போலச் சிறந்த சத்தி. 'மோனை' எனினும், 'முதல்' எனினும் ஒக்கும். 'கூறு' என்பது தொகையால் ஒன்றாகலின், 'கூறது' என்றார்; 'அது', பகுதிப்பொருள் விகுதி. உயிர் மார்க்கம் - உயிர்ப்பு நெறி; யோக நெறி. யோக நெறி களுள் குண்டலினியைப் பொதுவே செயற்படுத்தலும், அவளைப் பிராசாத முறையாற் காணுதலும் ஒன்றின் ஒன்று ஏற்றமாவன என மேலெல்லாம் கூறிவந்தவற்றோடு, பிராசாத கலைகளை ஆதி சத்திக்குப் பொருந்திய இடமாக வைத்துச் செய்யப்படுதல் மிகச் சிறந்ததாதல் இதனுட் கூறப்பட்டதாம்.
இதனால், சத்தியை அடைதற்கும் பிரணவகலைகளில் அவை யேயாய்க் கலந்து அவற்றைச் செயற்படுத்துபவள் சத்தி என்பதை உணர்ந்து செய்யும் சத்தி யோகமே மிக மேலானதாதல் கூறப்பட்டது.

மார்க்கங்கள் ஈன்ற மனோன்மனி மங்கலி
யார்க்கும் அறிய அரியாள் அவளாகும்
வாக்கும் மனமும் மருவஒன் றாவிட்டு
நோக்கும் பெருமைக்கு நுண்ணறி வாமே. ***#1204***

ஆதி சத்தி, பலவகைப்பட்ட யோக நெறிகளையும் அவரவரது பக்குவத்திற்கு ஏற்ப அமைத்து வைத்தவள்; நிலையான மங்கலத்தை உடையவள்; ஆதலின், அவள் யார்க்கும் அறிதற்கரிய வளாவாள். ஆயினும் பாச ஞானம், பசுஞானம் என்னும் இரண்டும் ஒருசேர நீங்கும்படி விட்டுப் பதிஞானத்தால் அறிகின்ற பெரியோர்க்கு அவரது அறிவுக் கறிவாய் அவள் விளங்குவாள்.

விளக்கவுரை

'மார்க்கம்' என்பதற்கு, 'சமயங்கள்' என உரைத்தல் இவ்விடத்திற்கு இயைபற்றதாம். 'மனோன்மனி, மங்கலி' என்னும் பயனிலைகட்கு, மேல்நின்ற 'தான்' என்பது எழுவாயாய்வந்து இயைந்தது.
அறிவரிதாவதும், நுண்ணறிவாவதும் அவளது உண்மை இயல்பாம். ஆகவே, தடத்த நிலையில் அவரவரது பக்குவத்திற்கு ஏற்ப அறியப்படுவாள் என்பது 'மார்க்கங்கள் ஈன்ற' என்பதனால் பெறுதும்.
'வாக்கு, மனம்' என்பன முறையே பாச ஞானமும், பசு ஞானமும் ஆதலைச் சிவ ஞானபோத ஆறாம் சூத்திர உரையான் அறிக. 'ஒன்றாய் விட்ட' என்பதும் பாடம் அன்று. 'பெருமை' என்றது அதனையுடைய பதிஞானத்தை. பதிஞானமே வியாபக ஞானமாதல் அறிக.
பெருமையுடைய ஞானத்தைப் பெற்றோரே பெரியராதல் உணர்க.
இதனால், பல்வகையான யோகங்களாலும் அடையப்படுவது சத்தியின் தடத்த நிலையேயாதல் கூறி, 'அவைவாயிலாக ஞான நெறியை அடைய

முயல்க' என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது.

நுண்ணறி வாகும் நுழைபுலம் மாந்தர்க்கு
பின்னறி வாகும் பிரானறி(வு) அத்தடம்
செந்நெறி யாகும் சிவகதி சேர்வார்க்குத்
தன்னெறி யாமது சன்மார்க்க மாமே. *#1205*

மக்கட்கு ஐம்புலன்களில் செல்லுகின்ற அறிவு சுதந்திர அறிவாகவே தோன்றும்; ஆயினும், சிவனுடைய அறிவு அவர் தம் அறிவை அவற்றின் பின்னே இருந்து செலுத்துகின்ற அறிவாய் நிற்கும். (அஃது இல்லையாயின், எவரது அறிவும் ஒன்றிலும் நுழைய மாட்டாது. ஆகவே, உயிர்களின் அறிவு இறைவனது அறிவின் வழி யவேயன்றிச் சுதந்திரம் உடையன அல்ல). இங்ஙனம் சிவனது அறிவாய காட்டினை (காட்சிக்குத் துணையாவதை) அறிவதே செந்நெறியாம். இனிச் சிவனை அடைய விரும்புவோர்க்கு அவனது அறிவாலே அவனை அறிதலே தக்க நெறியாம்.

விளக்கவுரை

'நுண்ணறிவு' என்பது, 'இயற்கையில் நுண்ணிதாய்ப் புலன்களில் நுழையும் அறிவு' எனப்பொருள் தந்து நின்றது. இவ்விடத்து நின்ற 'ஆகும்' என்பது 'போலும்' என்னும் பொருளது. நுழை புல மாந்தர்க்கு அவர்தம் அறிவு நுண்ணறிவாகும்; ஆயினும் பிரான் அறிவு பின்னறிவாகும்' எனக்கூட்டி, வேண்டும் சொற்கள் வருவித்து உரைக்க. தடம் - வழி. அத்தடம் - அவ்வாறு உணரும் நெறி. தன் நெறி - தன்னாலே தன்னை அறியும் நெறி. 'தன்னெறியாவது' என்பது பாடம் அன்று. சன்மார்க்கம் - நல்ல வழி; நன்மையைத் தரும்வழி. எனவே, பிறவெல்லாம் தீமையைத் தருவனவாயின. தீமையாவது பாசங்களையும், உயிரையும் இன்பப் பொருளாக அடைவித்தல். இங்ஙனமாகவே, 'பாசஞான பசுஞானங்களை நீக்கிப் பதிஞானத்தால் உணரவரினும்' அது கொண்டு பதியாகிய சிவனை உணராது, பாசங்களையும், உயிரையும் உணர்தல் துன்பந் தரும் நெறியாதல் வலியுறுத்தப்பட்டதாம். இதனுள் இன எதுகை வந்தது.
இதனால், மேற்கூறிய பதிஞானத்தது சிறப்பும், அதனால், பயன் எய்துமாறும் கூறி, மேற்குறித்த ஞானநெறி பற்றி அறியற் பாலவை இனிதுணர்த்தப்பட்டன.

சன்மார்க்க மாகச் சமைதரு மார்க்கமும்
துன்மார்க்க மானவை யெல்லாம் துரந்திடும்
நன்மார்க்கத் தேவரும் நன்னெறி யாவதும்
சன்மார்க்கத் தேவியும் சத்திஎன் பாளே. *#1206*

ஒன்றாக அமைந்த நன்னெறி ஏனை தீநெறிகள் பலவற்றையும்

போக்கிவிடும்; அந்நன்னெறிக்கு முதல்வராய கடவுள ராயும், அவரால் தோற்றுவித்துக் காக்கப்படும் அந்நன்னெறியாயும், அந்நன்னெறியால் அடையப்படும் அருட் சத்தியாயும் உள்ளவள், தலைமை பற்றி, 'சத்தி' என்று, அடைகொடாது யாவராலும் சொல்லப்படுகின்ற சிவசத்தியேயாவாள்.

விளக்கவுரை

'சன்மார்க்கமாக' என்றது, 'தான் ஒன்றே முழு நன் னெறியாக' என்னும் குறிப்பினதும், 'சமைதரு' என்றது, 'இயற்கையில் அமைந்த' என்னும் குறிப்பினதுமாயின, 'சமைதரு மார்க்கமும்' என்னும் உம்மை, சிறப்பு. 'துன்மார்க்கமானவை' என்றது, முழுத் தீமை முதலாகச் சிறிதே தீமையுடையது ஈறாக உள்ள ஏனை எல்லா நெறிகளையும், 'மேற்குறித்த முழு நன்னெறி முதலியவாகக் கூறிய மூன்றுமாயிருப்பவள் சிவசத்தியே எனக் கூறிய அதனால், 'அவ்வொன்றாய நன்னெறி சிவநெறியே' என்பது பெறப்பட்டது.

'முன்னெறி யாகிய முதல்வன், முக்கணன்
றன்னெறி யேசர ணாதல் திண்ணமே'
(திருமுறை - 4)

என அப்பரும் அருளிச் செய்தார். நன்னெறியாவது சிவநெறி' எனவே, அதற்கு முதல்வராவார் சதாசிவர், மகேசுவரர், உருத்திரர் முதலியோ ராதல் பெறப்பட்டது. அவர் சிவநெறியைத் தோற்றுவித்தலாவது, தம்பால் கேட்டற்கு உரியவர்கட்கு அதனை அறிவுறுத்தல். அதனைக் காத்தலாவது, ஆசிரிய மாணாக்கர் முறையால் வழிவழியாக விளங்கி வரச் செய்தல். சிவசத்தி நன்மார்க்கத் தேவர் முதலாக நிற்றல் கூறுவார், அந் நன்மார்க்கத்துச் சிறப்பினை முதற்கண் எடுத்துக் கூறினார். இதனால், சத்தி, மேற்கூறிய செந்நெறி முதலியனவாய் நின்று உயிர்கட்கு அருள்புரிதல் கூறப்பட்டது.

சத்தியும் நானும் சயம்புவும் அல்லது
முத்தியை யாரும் முதல்அறிவா ரில்லை
அத்திமேல் வித்திடின் அத்தி பழுத்தக்கால்
மத்தியில் ஏற வழியது வாமே. ***#1207***

'சத்தியும், யானும், சிவமும்' என்னும் மூவர் தவிர, வீடுபேற்றினை அதன் முதல் பற்றி அறிபவர் ஒருவரும் இல்லை. முதுகந் தண்டாகிய எலும்பின்கண் பிராண வாயுவைக் கும்பித்தால், அவ் எலும்பு பக்குவப்பட்டு, அந்தப் பிராணவாயு சுழுமுனையூடே மேல் ஏறிச் செல்லுதற்கு ஏற்றதாகும்.

விளக்கவுரை

'இதுவே முத்தி முதல்' என்பது குறிப்பெச்சம். 'திருவருள் பெற்றோர்க்கு இது விளங்கும்' என்பார், அப்பேறு பெற்ற தமது பெருமை தோன்ற, 'யானும்' என்றார்.

'முதல்முன் ஐவரின் கண்ணென் வேற்றுமை
சினைமுன் வருதல் தெள்ளி தென்ப' *1*

என்பதனால், 'முதற்கண் அறிவாரில்லை' என ஏழாவது விரிக்க. முதல் - வேர். வியப்புச் சுவை நயம் பற்றி, 'அத்திமேல் வித்திடில் அத்தி பழுத்தக்கால்' என ஓதினாராதலின், 'அத்தி' என்பதற்கு, 'எலும்பு' என்பதும், 'மேல்' என்பதற்கு, 'கண்' என்பதும், 'பழுத்து அக்கால்' என்பதும் பொருளாதல் விளங்கும். வித்திடுதல் நிலத்திலாதலின், 'அத்திமேல்' என்றது, 'அத்தியது அடிக்கண்' என்றதாம். 'அக்கால்' எனப்பின்னர் சுட்டிக்கூறலின், வித்து என்றது அக்காலினை (பிராணவாயுவை) யாயிற்று. யோகத்திற்கு முதலாவது பிராணன் ஆதலின், அதனை 'வித்து' என்றார். 'மத்தி' என்பது ஆகுபெயராய் நடுநாடியாகிய சுழுமுனையைக் குறித்தது.

இதனால், முன்னர்ச் சத்தியை அடைந்து, பின் அவள் வழியாகச் சிவத்தை அடைவதாகிய முத்திக்கு வழி யோகம் என்பது கூறப்பட்டது. முத்திக்கு முடிநிலை வழியாகிய ஞானம் சத்தியேயாதல் அறிக.

அதுஇது என்றவ மேகழி யாதே
மதுவிரி பூங்குழல் மங்கைநல் லாளைப்
பதிமது மேவிப் பணியவல் லார்க்கு
விதிவழி தன்னையும் வென்றிட லாமே. **#1208**

வீடுபேற்றைத் தரும் வழியாவது 'அது' என்றும் 'இது' என்றும், சொல்லும் வழியில் எல்லாம் சென்று வாழ்நாளை வீணே கழிக்காமல், ஒருநெறியாய் உறுதிப்பட்ட மனத்துடன் சிவ சத்தியையே முத்தியைத் தரும் முதல்வியாகத் துணிந்து அவளை யோக நெறியால் சந்திர மண்டலத்திற் சென்று வணங்க வல்லவர்க்கு, வினை வழியாகிய பிறப்பு நெறியைக் கடக்கும் அப்பயனும் கூடும்.

விளக்கவுரை

பதி - இடம். மது, இங்கே அமுதம்; அஃது அதனை யுடைய சந்திரனை உணர்த்திற்று. 'மதுப்பதி' எனப் பின்முன்னோக்கி உரைக்க. 'விதி' என்றது வினையை. வினை வழி - வினையால் உளதாகும் வழி.

இதனால், சத்தி யோகமே வீடுபேற்றைத் தருவதாதல் கூறப்பட்டது சத்தியும், சிவமும் வேறல்ல ஆதலின், 'சத்தியோகம், சிவயோகம்' என்பன வேறு வேறாகாமை அறிக.

வென்றிட லாகும் விதிவழி தன்னையும்
வென்றிட லாகும் வினைப்பெரும் பாசத்தை

வென்றிட லாகும் விழைபுலன் றன்னையும்
வென்றிடு மங்கைதன் மெய்யுணர் வோர்க்கே. *#1209*

யாவரது ஆற்றலையும், எப்பொருளது ஆற்றலை யும் வெல்லும் பேராற்றலை உடையவளாகிய சிவ சத்தியினது உண்மை நிலையைத் தவத்தால் உணர வல்லவர்க்கு' விதியின் வழி யாகிய பிறப்பு, அப்பிறப்பிற்கு முதலாகிய 'வினை, எனப்படுகின்ற அந்தப் பெரியகட்டு, அதனால், வந்து சார்ந்து மயக்குகின்ற ஐம் புலன்கள் என்னும் இவ்வனைத்துத் தீமைகளையும் வெல்லுதல் கூடும்.

விளக்கவுரை

இது சொற்பொருட் பின்வருநிலை, 'விழைபுலன்' என்றது, 'ஆசையை விளைத்து மயக்குகின்ற புலன்' என்னும் குறிப்பினதான உடம்பொடு புணர்த்தல். 'தன்னை' என ஒருமையாற் கூறியது, 'ஒருகாலத்து வருவது ஒன்றேயாயினும், ஒவ்வொன்றும் அத்தன்மையது' என்றற்கு. காம இன்பத்தை, ஒருகாலத்தே ஐம்புலனும் நுகரப்படுவதாகக் கூறுதல் விரைவு பற்றியாதலின், அதனிடத்தும், ஐம்புலன்கள் நுகரப்படுதல் ஒரு காலத்து ஒன்றேயாம் என்க. மங்கை தன் மெய்யுணர்வார்க்கும் அவளது ஆற்றல் உளதாம் ஆதலின் மேற்கூறிய எல்லாம் அவர்க்குக் கூடும் என்பார், 'வென்றிடு மங்கைதன் மெய்யுணர்வோர்க்கே' என்றார். இதனால், மெய்யுணர்வே தீமை அனைத்தையும் முற்றப் போக்குவதாதல் கூறப்பட்டது.

ஓரைம்ப தின்மருள் ஒன்றியே நின்றது
பாரம் பரியத்து வந்த பரமது
தாரங் குழலாளும் அப்பதி தானும்முன்
சாரும் பதம்இது சத்திய மாமே. *#1210*

தொன்று தொட்டு வழிவழியாகச் சத்தி சிவர்களைப் போற்றிவருகின்ற மரபு, ஐம்பதெழுத்துக்களின் அதிதேவரிடத்து அவர்கள் நிற்கின்ற முறைமையில் வைத்தேயாம். சத்தியும், சிவமும் முதற்கண்ணே சார்ந்திருக்கும் இடம் அவ் எழுத்துக் களும், அவற்றின் அதிதேவருமாம். இஃது உண்மையான ஒன்று.

விளக்கவுரை

'ஆதலின் இது மரபாயிற்று' என்பது குறிப்பெச்சம். எழுத்துக்களை வழிபடுமிடத்துச் சத்தியும், சிவமும் அவற்றின் அதி தேவர் வழியாய்ப் பயன்தருதலை உணர்தற்கு, 'ஓர் ஐம்பதின்மரும்' என அருளினார். எழுத்துக்கள் அவற்றின் அதிதேவர் வழியாகவே பயன்தருதலை,
'எண்ணில வோங்காரத் தீசர் சதாசிவராம்
நண்ணிய விந்துவோடு நாதத்துக் - கண்ணிற்

பகர்அயன்மா லோடு பரமனதி தெய்வம்
அகரஉக ரம்மகரத் தாம்' *1*

என்பதனானும் உணர்க. சத்தி சிவ வழிபாட்டிற்கு எழுத்துமுறை சிறந்ததாதல் பற்றி அகாரம் முதலிய எழுத்துக்கள் முறையானே தொடர்ந்து வர அமையும் மந்திரங்களை, 'மாலா மந்திரம்' எனச் சிறந்தெடுத்துப் போற்றுவர். பரம் - கடன்.

இதனால், சத்தி சிவ வழிபாட்டிற்கு எழுத்துமுறை (பீஜாக்கர மரபு) சிறந்ததாதல் கூறப்பட்டது. சத்தி வழிபாடு பற்றிக்கூறுவார், ஒப்புமை பற்றிச் சிவ வழிபாட்டினையும் உடன்வைத்துக் கூறினார்.

சத்தியி னோடு சயம்புவும் நேர்படில்
வித்தது இன்றியே எல்லாம் விளைந்தன
அத்தகை யாகிய ஐம்பத் தொருவரும்
சித்தது மேவித் திருந்திடு வாரே. ***#1211***

சத்தியும், சிவமும் ஒருவர்க்கு உண்மையாற் கிடைப்பார்களாயின், எல்லாப் பயன்களும் அவற்றுக்கு உரிய காரணங்கள் இல்லாமலேயும் விளைந்து விடும். ஆதலால், அப் பொழுது ஐம்பத்தோர் அக்கரங்களின் அதிதேவர்களும் அச் சத்தி சிவங்களின் வழிபட்டபொழுது அவர்கள் உயிரினிடத்தும் கொடுமை நெறியின் நீங்கிச் செம்மையின் நிற்பவராவர்.

விளக்கவுரை

சத்தி சிவங்கள் எப்பொருளிலும் எக்காலத்தும் நீங்கி நிற்றல் இல்லையாகலின், 'நேர்படில்' என்றது, பொதுமையானன்றி, உண்மையாற் கிடைத்தலையாயிற்று. ஆகவே, 'அத்தகையாகிய' என்றதும், உண்மையால் நிற்கும் சத்தி சிவங்கட்கு ஆதாரமாதலை யாயிற்று. 'தகையர் ஆகிய' எனற்பாலதனை ஆகுபெயரால், 'தகையாகிய' என்றார். 'அத்தகையராய் மேவித் திருந்திடுவார்' என்பது கருத்தாயிற்று. மேல், 'ஓரைம்பதின்மருள்' எனக்கூறி, இங்கு, 'ஐம்பத்தொருவரும்' என்றது இரண்டும் மரபாதல் பற்றியாதலின், மலைவின்மை அறிக. 'சித்து' என்றது உயிரை. 'வித்தது, சித்தது' என்பதில் அது, பகுதிப் பொருள் விகுதி. அத்தகையராய்த் திருந்துத லாவது, உலகியல் உணர்வை எழுப்பாது, மெய்ந்நெறி உணர்வை எழுப்புதல். இவர் இங்ஙனம் திருந்துதலை வலியுறுத்தற்கே முதலிரண் டடிகள் கூறப்பட்டன. வித்தின்றியே விளைதல், வினை முதலிய பிற நிமித்தங்கள் இன்றி அருளே நிமித்தமாக விளைதல். தெளிவு பற்றி எதிர்காலத்தை 'விளைந்தன' என இறந்தகாலமாக்கிக் கூறினார். இதனால் எழுத்து முறை வழிபாட்டால் மேற் (1215) கூறிய மங்கைதன் மெய்யுணர்வு பிறத்தல் கூறப்பட்டது.

திருந்து சிவனும் சிலைநுத லாளும்
பொருந்திய வானவர் போற்றிசெய் தேத்த
அருந்திட அவ்விடம் ஆரமு தாக
இருந்தனர் தானம் இளம்பிறை யென்றே. *#1212*

மெய்நெறியில் விளங்குகின்ற சத்தியும், வந்து பொருந்திய வானவர்கள் தம்மை வணங்கித் துதிக்க, அவர்கள் பருகுதற்கு அந்த இடம் அரிய அமுதம் சுரக்கும்படி சந்திரமண்டலமே தமக்கு இடம் என்று சொல்லி, அங்கு வீற்றிருக்கின்றார்கள்.

விளக்கவுரை

'வந்து பொருந்திய' என்பது, 'தாம் இருக்கின்ற அந்தச் சந்திரமண்டலத்தில் வந்து பொருந்திய' என்பதாம் அவ்வாறு பொருந்துவோர் யோகியர். அவர்யோகத்தால் அவ்விடத்தில் உயர்ந்து செல்லுதலின், அவரை வானவரோடு ஒப்பித்து, அப்பெயராற் கூறினார். 'அவர் அருந்திட' எனத் தோன்றா எழுவாய் வருவித்து, அத் தொடரை, 'அமுது ஆக' என்பதனோடு முடிக்க. ஆக - உண்டாக. 'அவ்விடம்' 'அங்கு' எனச் சுட்டுச் சொற்கள் செய்யுளில் முன் வந்தன 'அவ் இடம் ஆக' என, இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின் மேல் ஏற்றப்பட்டது. இடையிரண்டடிகள் சிவனும் சத்தியும் தேவர்கள் போற்ற அவர்கள் பொருட்டு ஆலகால விடத்தை உண்டவர்' என, மற்றும் ஒரு நயம் தோன்ற வைக்கப்பட்டன. 'இருந்தனள் தான் அங்கு' என்பது பாடம் ஆகாமை அறிக.

இதனால், சிவனும், சத்தியும், ஞானயோகிக்குச் சந்திர மண்டலமாகிய ஏழாந்தானத்திருந்து மெய்யுணர்வைத் தந்து, அது வழியாகச் சிவானந்தத்தை நுகர்வித்தல் கூறப்பட்டது.

என்றும் எழுகின்ற ஏரினை எய்தினோர்
தன்றது வாகுவர் தாழ்குழ லாளொடு
மன்றரு கங்கை மதியொடு மாதவர்
துன்றிய தாரகை சோதிநின் றாளே. *#1213*

என்றும் யோக நெறியால் குண்டலி வழி மேல் ஏறும் முயற்சியில் இடைவிடாது நிற்பவர், சத்தியைத் தலைப்பட்டு, முடிவில் அவளது உடைமையேயாய்விடுவர். இனி அச்சத்திதான் யோகியர்க்கு அவர் பொருந்தும் தானந்தோறும் விளக்கொளி, விண்மீன், திங்கள், கங்கை என்னும் இவைகளாய் ஏற்ற பெற்றியில் விளங்குவாள்.

விளக்கவுரை

ஏர் - எழுச்சி; எழுகின்ற முயற்சி. 'தனது' என்பது எதுகை நோக்கி விரிந்தும், திரிந்தும் நின்றது. தனது - அவளது உடைமை. 'சிவானந்த

வெள்ளம்' என்பது தோன்ற 'மன் தரு கங்கை' என்றார். மன் தருநிலைபேற்றைத் தருகின்ற (புலப்படுத்துகின்ற) [மாதவர்க்கு, என்னும் நான்கனுருபு தொகுத்தல் பெற்றது.] விளக் கொளி முதலிய நான்காய் விளங்குதல் முறையே இருதயம் நெற்றி, உச்சி, உச்சிக்குமேல் பன்னிரண்டங்குலம் என்னும் இடங்களிலாம். 'சோதியாய்' என ஆக்கம் வருவித்துக்கொள்க.

இதனால், ஞான யோகியர்க்குச் சத்தி படிமுறையால் விளங்கும் காட்சி வகை கூறப்பட்டது.

நின்றனள் நேரிழை யாளொடு நேர்பட
ஒன்றிய துள்ளொளி யாலே உணர்ந்தது
சென்ற பிராணிகள் சிந்தையில் வேண்டிய
துன்றிடும் ஞானங்கள் தோன்றிடுந் தானே. *#1214*

மேற்கூறியவாறு ஏற்ற பெற்றியில் விளங்குகின்றவ ளாகிய சத்தியை உண்மையாகத் தலைப்பட்டு அவளோடு ஒன்றுதலாவது, உள்ளொளியாகிய பதிஞானத்தால் உணர்தலேயாம். அவ்வாறு உணர்ந்தோர், இனத்தால் பசுக்களேயாயினும், அவர் வேண்டிய யாவும் வந்து நிறையும், மற்றும் மெய்யுணர்வு வகைகளும் விளங்கும்.

விளக்கவுரை

'நின்றவளாகிய நேரிழை' என்க. அருள்பெறாத மருள் நிலையது எளிமையும், பின்னர் அவர்பெறும் அருள்நிலையின் அருமையுமாகிய நயம்தோன்ற, 'பிராணிகள்' என்றாராயினும் 'பிராணனை வழிப்படுத்திய யோகியர்' என்பதே பொருளாகக் கொள்க. கேட்டல், சிந்தித்தல் முதலிய வகையானும், அவற்றின் விரியானும் ஞானங்கள் பலவாதல் அறிக.

இதனால், சத்தியின் உண்மைக் காட்சி முறையும், அக்காட்சியும் பயன்களும் கூறப்பட்டன.

தோன்றிடும் வேண்டுரு வாகிய தூய்நெறி
ஈன்றிடும் ஆங்கவள் எய்திய பல்கலை
மான்றரு கண்ணியும் மாரனும் வந்தெதிர்
சான்றது வாகுவர் தாம்அவ ளாயுமே. *#1215*

மேற்கூறியவாறு ஞானங்கள் தோன்றும்பொழுது; சிவமும், சத்தியுமே அவரவர் விரும்பித் தொழுகின்ற தெய்வங்களாய் நின்று அருள்புரிகின்ற உண்மை விளங்கும். சிவசத்தியே அவரவரது பக்குவ நிலைக்கு ஏற்ப மேற்கூறிய தெய்வங்களையே முதற் பொருளாகக் கூறும் பற்பல சமய நூல்களைப் படைத்தவாறும் புலப் படும். தாம் (மேற்கூறிய ஞானங்களைப் பெற்றோர்) சத்தியும் சிவ முமேயாய்விட்ட அந்நிலையிலும் அவ்விருவரும் தமக்கு இன்றி யமையாத உயிர்த் துணைவராய் நின்று உதவுதலும் காணப்படும்.

விளக்கவுரை

'ஞானங்கள் தோன்றும் பொழுது' என்பது இயை பினால் கொள்ள நின்றது. வேண்டுருவாதலில், வேண்டுதல் பிறர் உடையதும், உருவாதல் பின்வரும் சத்தி சிவங்களுடையது மாயின. 'ஈன்றிடும்' என்றது, 'ஈன்றமை புலனாகும்' என்றவாறு. எய்திய - மேற்சொல்லிய உருவங்களைப் பொருந்திய. 'பல்கலை' என்பதில் இரண்டாவது இறுதிக்கண் தொக்கது. 'எதிர்வந்து சான்றாகுவர்' என்பது, 'உதவி புரிந்து நிற்றல் இனிது காணப்படும்' என்பதாம். முத்தி யின்பத்தையும் சத்தியும், சிவனும் அம்மை அப்பராய் நின்று நுகர் விக்கவே உயிர் நுகர்வதாக, 'அறியாதார் சிலர்க்கு முத்தி நிலையில் சத்தி சிவரது உதவி வேண்டாத ஒன்று' என்னும் மயக்கம் உண்டாதல் போல, உண்மை ஞானிகட்கு உண்டாதல் இல்லை' என்பதை இறுதி யடியிற் கூறினார். இதனால், ஞானத்தின் பயன்கள் சில கூறப்பட்டன.

ஆயும் அறிவுங் கடந்*(து)* அணு வோரணி
மாயம தாகி மதோமகி ஆயிடுஞ்
சேய அரிவை சிவானந்த சுந்தரி
நேயம் தாம்நெறி யாகிநின் றாளே. ***#1216***

பொருள்களை அறிதலில் மனத்தினும் நுண்ணிய தாகிய அறிவையும் கடந்து, சிறுமையில் அணுவுக்கு அணுவாயும், பெருமையில் மகத்துக்கு மகத்தாயும் நிற்கின்றவளும், உயிர்களால் எட்ட ஒண்ணாதவளும் ஆகிய சிவசத்தி, உயிர்கள் விரும்புகின்ற எல்லா நெறிகளுமாய் நின்று அருள் புரிகின்றாள்.

விளக்கவுரை

'அணோ ரணீ, மகதோ மகி' (கடோபநிடதம்) என்னும் வடசொற்றொடர்கள் தற்பவமாயின; மாயம், இங்கு, வியப்பு. 'ஆயிடும் அரிவை' என இயையும்.
இதனால், 'சிவசத்தி அணுவுக்கு அணுவாயும் மகத்துக்கு மகத்தாயும் நிற்க வல்லளாதலின், வேண்டுருவாகிய தூய்நெறி ஈன்றிடுகின்றாள்' என மேலதன்கண் ஐயமறுக்கப்பட்டது.

நெறியது வாய்நின்ற நேரிழை யாளைப்
பிறிவது செய்யாது பிஞ்ஞக னோடும்
குறியது கூடிக் குறிக் கொண்டு நோக்கும்
அறிவொடும் ஆங்கே அடங்கிட லாமே. ***#1217***

மேற்கூறியவாறு பலப்பல நெறிகளாய் நின்று உயிர்களுக்கு அருள்புரிகின்ற சத்தியை ஒருவனாகிய சிவனின் வேறாகாதவளாக அறிந்து அவளை அச்சிவனோடு ஒன்றவைத்தே அவரையே

பொருளாகப் பொருந்திக் குறிக்கொண்டு எண்ணும் அறிவுத்திறன் படைத்தவரே, அவ்வறிவால் அம்மை யப்பராகிய அவ்விருவரிடையே அடங்கி ஆனந்தம் எய்துவர்.

விளக்கவுரை

குறி, குறிக்கப்பட்ட பொருள். 'குறியதுவாக' என ஆக்கம் வருவித்துக்கொள்க. குறிக்கொண்டு நோக்குலாவது அயராது எண்ணுதல்.

இதனால், சிவ சத்தியது உண்மை நிலையை அறிந்து அழுந்தி நிற்பவரே உண்மை ஞானியராதல் கூறப்பட்டது.

ஆமயன் மால்அரன் ஈசன்மேல் ஆம்கதி
ஓமய மாகிய ஒன்பதும் ஒன்றிடத்
தேமயன் நாளும் தெனாதெனா என்றிடும்
மாமய மானது வந்தெய்த லாமே. ***#1218***

சுவாதிட்டானம் முதலிய ஆதாரங்களில் முறையே பொருந்தியிருக்கும் அயன், மால், உருத்திரன், மகேசுவரன் என்னும் இவர்கட்கு மேல் உள்ள 'விந்து' நாதம்' என்பவற்றுக்குரிய சதா சிவனும், அவனுக்கு மேற்பட்ட சத்தி, வியாபினி, சமனை, உன்மனை என்னும் நால்வரும் ஆகிய ஒன்பதுபேர் நிலைகளிலும் யோக நெறி யால் பொருந்தியவழி ஆன்மா இன்ப மயனாய்த் தேனுண்ட வண்டு அக்களிப்பினால் இசைபாடித் திரிவதுபோலுந் தன்மையை அடைவான்.

விளக்கவுரை

'மாலாங் கதி' என்பது பாடம் அன்று. கதி - தானம்: இடம். 'ஒன்பதும்' எனத் தொகை கூறவே, 'மேலாங்கதி நான்கு' என்பது பெறப்பட்டது. 'தேமயனாய்' என ஆக்கம் வருவிக்க. மா - வண்டு. எய்தல், எய்தப்பெறுதல்.

இதனால், சிவ, 'சத்தியைப் பிரணவ யோகத்தால் தலைப் படுதல் சிறப்புடைத்தாதல் கூறப்பட்டது.

வந்தடி போற்றுவர் வானவர் தானவர்
இந்து முதலாக எண்டிசை யோர்களும்
கொந்தணி யுங்குழ லாளொடு கோனையும்
வந்தனை செய்யும் வழிநவில் வீரே. ***#1219***

சத்தியையும், சிவனையும் அடைய விரும்புவர் யாராயினும் அவர்களை வழிபட்டு அடைதல் அல்லது, பிறிதொரு வழியாலும் அடைய வல்லுநரல்லர். ஆதலின், மக்களில் அவர்களை அடைய விரும்பும் நல்லீர், நீவிரும் அதன் பொருட்டு அவர்களை வழிபடுதலையே நெறியாகக் கொண்டு பயிலுங்கள்.

விளக்கவுரை

மூன்றாம் அடியை முதலிற் கொண்டு, 'வந்தடி போற்றுவர்' என்பதை இரண்டாம் அடியின் இறுதியிற் கூட்டி, அதன் பின், 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவித்து உரைக்க. இந்து - சந்திரன்; இவனும் வடக்கிற்குத் தலைவன். வந்தனை செய்தலையே 'வழி' என்றார் ஆகலின், அவ்விடத்துப் பெயரெச்சம் வினைப்பெயர் கொண்டதாம். நவிலுதல் - பயிலுதல்.

இதனால், சிவன், சத்தி இவர்களை வழிபாட்டினால் அல்லது அடையலாகாமை கூறப்பட்டது.

நவிற்றுநன் மந்திரம் நன்மலர் தூபம்
கவற்றிய கந்தம் கவர்ந்தெரி தீபம்
பயிற்றும் உலகினில் பார்ப்பதி பூசை
அவிக்கொண்ட சோதிக்கோர் அர்ச்சனை யாமே. ***#1220***

சத்தியைச் சிவனது ஆற்றலாக அறியும் அறிவில்லா தவர் சத்தியை வேறாகவும், சிவனிற் பெரியவளாகவும் கருதி அவளையே வழிபடினும், அவ்வழிபாடு தூய முறையில் அமைந் திருப்பின், சத்தியையேயன்றிச் சிவனையும் உவப்பிக்கும்.

விளக்கவுரை

'கள், ஊன் முதலியன கொண்டு செய்யும் வாம முறை வழிபாடு சத்தி சிவரை உவப்பியாது' என்பார், நன் மந்திரம் முதலிய நற்பொருள்களை எடுத்தோதிப் பிறிதொன்றையும் கூறாதொழிந்தார். கவற்றுதல், விருப்பத்தை மிகுவித்து மனத்தை மறுகச் செய்தல். கவர்தல், நெய்யை உண்ணுதல்,. 'பயிற்றுதல்' என்பது, 'தேற்றா ஒழுக்கம்' என்பதுபோல இங்குத் தன்வினையாயிற்று. 'பயிற்றும் சை' என இயையும். அவி - படையற் பொருள். 'சோதி' என்றது, சிவனை. 'சோதிக்கும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. இதனுள், உயிரெதுகை வந்தது.

இதனால், 'சத்தி வழிபாடும் தூயதாய வழிச்சிவ வழிபாடாய்ப் பயன் தரும்' என்பது கூறப்பட்டது.

தாங்கி உலகில் தரித்த பராபரன்
ஓங்கிய காலத் தொருவன் உலப்பிலி
பூங்கிளி தாங்கும் புரிகுழலாள் அன்று
பாங்குடன் ஏற்பப் பராசத்தி போற்றே. ***#1221***

உலகத் தோற்றத்திற்கு முன்னும், ஒடுக்கத்திற்குப் பின்னும் ஒருவனேயாய் உள்ள சிவன், உலகைத் தொழிற்படுத்தி நிற்குங் காலத்தில், சத்தியை ஒருபாற் கொண்டு அவளோடு உடனாய் இருவராயே நிற்கின்றான், ஆதலின், மாணவகனே, நீ சிவனோடு

சத்தியையும் உடன் வைத்தே வழிபடு.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதற்கண் வைத்து உரைக்க. தாங்குதலும் உவகை என்க. தரித்தல், நிலைபெறுதல், 'தன்னைத் தாங்குவார் பிறரின்றித் தானே நிலைபெறுகின்றான்' என்றற்கு, 'தரித்த' என்றார். 'பராபரன்' என்றது, 'பராபரன் ஆயது' எனக் குறிப்பு வினைப்பெயராய், 'பாங்குடன் ஏற்ப' என்பதனோடு முடிந்தது. ஓங்கிய காலம், உலகம் விரிந்த காலம்; இஃது அதன் தொடக்க நிலையைக் குறித்தது. 'ஒருவன்' என்பது பின்னும் சென்று இயையும். 'உலப்பிலி' எனவே, உலகம் உலந்தமை பெறப்பட்டது. சிவன் 'பூங்கிளி தங்கும்' என்பது பாடமன்று. சத்தியோடு கூடினவனாய் நின்றே உலகைச் செயற்படுத்தலின், அவனை அவ்வாற்றானே வழிபடுதல் வேண்டும் என விளக்கியவாறு, 'சத்தியோடு' என்னும் உருபு தொகுத்தலாயிற்று. 'சத்தியோடே போற்று' என ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டி உரைக்க.
இதனால், சிவனைச் சிலர் சத்தியை நீக்கி வழிபடுதலும் கூடாததாதல் கூறப்பட்டது.

பொற்கொடி மாதர் புனைகழல் ஏத்துவர்
அங்கொடி மாதுமை ஆர்வத் தலைமகள்
நற்கொடி மாதை நயனங்கள் மூன்றுடை
விற்கொடி மாதை விரும்பி விளங்கே. *#1222*

மாணவனே, நீ, துவண்ட தோற்றத்தால் கொடி போலுதல் கொண்டு, நிறம் பற்றி, 'பசுங்கொடி' என்றும், பயன் பற்றி, 'நற்கொடி' என்றும், அழகு பற்றி 'ஒளிக்கொடி' என்றும், புகழப் படுபவளும், மெய்யுணர்ந்தோரது அன்பிற்குத் தலைவியும், மூன்று கண்களை உடையவளும் ஆகிய பராசத்திக்கு அன்பு செய்து மேம்படு; அழகிய கொடிபோல்பவராகிய கலைமகளும், திருமகளும் உன் பாதங்களைப் போற்றுவார்.

விளக்கவுரை

முதலடியை ஈற்றிற் கூட்டி உரைக்க. 'பொற்கொடி மாதர்' என்பது பின்னர்க் கூறப்பட்ட மாதோடு உடன் எண்ணப்படு வாரைக் குறித்தது. இவ்வாறன்றி இயைபில்லாத மக்கட் பெண்டினர் எண்ணுதல் கூடாமையானும்' அங்ஙனங் கொண்டுரைப்பின் வாம நெறியாமாகலானும் அது பொருந்தாமை யறிக. 'பராசத்தியை வழிபடினும் கல்வியின் பொருட்டும், செல்வத்தின் பொருட்டும் கலைமகளையும், திருமகளையும் வழிபடுதல் இன்றியமையாது போலும்' என ஐயுற்றமாணாக்கனை, 'பேரன்புடைப் பெருமக்கட்குப் பராசத்தியே

அனைத்தையும் தருவாள்' எனத் தெளிவித்தவாறு.
இதனால், சிவசத்தி வழிபாடு ஒன்றே அனைத்துப் பயன்களையும் தருதல் கூறப்பட்டது.

விளங்கொளி யாய விரிசுடர் மாலை
துளங்கு பராசத்தி தூங்கிருள் நீங்கக்
களங்கொள் மணியுடன் காம வினோதம்
உளங்கொள் இலம்பியம் ஒன்று தொடரே. *#1223*

விளங்குகின்ற விளக்குப் போல்பவளும், மிக்க ஒளியுடைய மணி மாலைகள் அசையும் மார்பினை உடையவளும் ஆகிய பராசத்தி, செறிந்த இருள் மறையும்படி கண்டத்தில் நீல மணியைக் கொண்டு விளங்கும் சிவனுடன் இன்ப விளையாடலைக் கருதுகின்ற, நாணம் பொருந்திய ஒரு தோற்றத்தையும் நினைத்து வழிபடு.

விளக்கவுரை

'வழிபடின் இன்பத்தைப் பெறுவாய்' என்பது குறிப் பெச்சம். இன்பத்திற்காகவும் பிறதேவியரை வழிபட வேண்டுவ தில்லை என்றபடி. மணியையுடையவனை, 'மணி' என்றார். இலம்பியம், நாணத்தால் தலை இறைஞ்சிய தோற்றம்.
இதனால், சத்தி வழிபாடு இன்பத்தையும் அளித்தல் வகுத்துக் கூறப்பட்டது.

தொடங்கி உலகினில் சோதி மணாளன்
அடங்கி யிருப்பதென் அன்பின் பெருமை
விடங்கொள் பெருஞ்சடை மேல்வரு கங்கை
ஒடுங்க உமையொடும் ஓருரு வாமே. *#1224*

பாம்பை அணிந்த விரிந்த சடையில் பெரிய கங்கை நீர் ஒரு புல்நுனியில் நீர்போல் அடங்கியிருக்கச் சிவன் சத்தியோடு இரு திறமும் ஒருவடிவிலே அமைய நிற்கின்றான். உலகில் பிறந்து அறிவு தொடங்க நின்ற நாள் முதலாக அவனது அழகிய அந்த மணக் கோலத்திலே அடங்கி நிற்பதே எனது அன்பின் பெருமையாகும்.

விளக்கவுரை

'அதனால், இன்பம் முதலிய எந்த உறுதிப்பொருளிலும் எனக்குக் குறை இல்லை; உலகீர், நீவிரும் அவ்வாறு அடங்கி நின்று அனைத்துப் பயனையும் பெறுவீர்' என்பது குறிப்பெச்சம். 'மணாளன் பால்' எனத்தொகுக்கப்பட்ட உருபை விரித்துக்கொள்க. 'கங்கை பாம்பணிந்த சடையில் ஒடுங்க' என்றது ஓர் இன்ப நயம். 'பாம்பையும், கங்கையையும் அடக்கின ஆற்றலுடையவன்' என்பது உண்மைப் பொருள். விடம், ஆகுபெயர். 'ஒடுங்கி' என்பது பாடம் அன்று.

இதனால், சிவனைச் சத்தியோடு உடனாகக் கண்டு வழிபடுவார் எய்தாத பயன் இல்லை என்பது கூறப்பட்டது.

உருவம் பலஉயி ராவல்ல நந்தி
தெருவம் புகுந்தமை தேர்வுற நாடின்
புரிவளைக் கைச்சினம் பொன்னணி மாதை
மருவி இறைவன் மகிழ்வன மாயமே. ***#1225***

பல உடம்புகளும், அவற்றில் உள்ள பல உயிர் களுமாய் நிறைந்து நிற்கின்ற சிவன் உயிர்களுக்குப் பல வேறு வடிவினனாய்க் காட்சியளித்தலை ஆராயின், அவையெல்லாம் அவன் தனது சத்தியோடு மணந்து மகிழ்கின்ற அருள் நாடகமே.

விளக்கவுரை

'பல' என்பது 'உருவம்' என்பதற்கு முன்னும் சென்று இயைந்தது. எளியனாய்க் காட்சிப்படுதலை, தெருவம் புகுதலாகக் கூறினார். 'இறைவன்' என்பது சுட்டுப் பெயரளவாய் நின்றது. 'மகிழ்வனவாகிய மாயம்' என்க, அருவனாய் நிற்கின்ற சிவன் உருவனாய் விளங்குதல் சத்தியினாலே என்றவாறு.

இதனால், சிவன் உருவங் கொள்ளுதல் சத்தியால் என்பது கூறுமுகத்தால், சத்தியை மறத்தல் கூடாமை வலியுறுத்தப்பட்டது.

மாயம் புணர்க்கும் வளர்சடை யானடித்
தாயம் புணர்க்கும் சலதி அமலனைக்
காயம் புணர்க்கும் கலவியுள் மாசத்தி
ஆயம் புணர்க்கும்அவ் வியோனியு மாமே. ***#1226***

உயிர்களின் பொருட்டுப் பலப்பல நாடகங்களைத் திருவுளத்துக் கொள்கின்ற சிவனது திருவடியாகிய உரிமைப் பொருளை உயிர்களுக்கு கூட்டுவிக்கின்ற நடிகையாகிய சிவசத்தி அச்சிவனை உருவம் உடையவனாகச் செய்தற்கு, அவனோடு கூடுகின்ற கூட்டத்திலே அவனுக்கு உருவத்தைக் கொடுத்தலேயன்றிப் பல்வேறு இனங்களாக அமைக்கின்ற பிறப்பு வகைகளாயும் நிற்பாள்.

விளக்கவுரை

'மாயம் புணர்ப்பவனுக்கு ஏற்ற மாயா வல்லபை' என்பார், சத்தியை, 'சலதி' என்றார். 'சல நதி' என்பது பாடம் ஆகாமையறிக. 'அமலன், மாசத்தி' என்பன சுட்டுப் பெயரளவாய் நின்றன. சத்தி சிவனை மணத்தலால் சிவனுக்கு உருவம் உண்டாதலே யன்றிப் பல்வேறு பிறப்பு வகைகளும் அமைகின்றன என்பதாம். 'அவ்வியோனி' என்னும் தற்பவ மொழியில் இடைநின்ற இகரம் குற்றியலிகரத்தின் இயல்பினதாய் அலகு பெறாமல் நின்றது.

இதனால், சத்தி சிவனை மணத்தலால் உளதாகும் மற்றொரு பயன் கூறப்பட்டது.

உணர்ந்தொழிந் தேன்அவ னாம்எங்கள் ஈசனைப்
புணர்ந்தொழிந் தேன்புவ னாபதி யானை
அணைந் தொழிந் தேன்எங்கள் ஆதிதன் பாதம்
பிணைந்தொழிந் தேன்தன் அருள்பெற்ற வாறே. *#1227*

உயிர்களால், 'அவன்' என்று சேய்மைச் சுட்டாகப் பொதுவே உணரப்படுபவனாகிய எங்கள் தலைவனாகிய சிவனை நான், 'அவன் அன்ன அருமையினன்' என முதற்கண் உணர்ந்தேன். பின்னர் அவன் உலக முதல்வியாகிய சத்தியை யுடைய சத்திமா னாதலை அறிந்து அவனை அணுகினேன். அதன்பின்னர் அவனோடு ஒன்றினேன். முடிவாக ஒருஞான்றும் அவனை விட்டு விலகாத நிலைமையனாயினேன். இவையே நான் சிவனது திருவருளைப் பெற்ற முறைமை.

விளக்கவுரை

'நீவிரும் அவ்வாறே பெற்றுய்ம்மின்' என்பது குறிப் பெச்சம். 'புவனாபதியார்' என்னும் உயர்வுப்பன்மை ஒருமையோடு மயங்கிற்று. 'ஈசற் புணர்ந்தொழிந்தேன்' எனப் பாடம் ஓதுதல் சிறக்கும்.
இதனால், 'சிவனைச் சத்தி வழியாகவே பெறுதல் கூடும்' என்பது கூறப்பட்டது.

பெற்றாள் பெருமை பெரிய மனோன்மனி
நற்றாள் இறைவனே நற்பய னேஎன்பர்
கற்றான் அறியும் கருத்தறி வார்கட்குப்
பொற்றாள் உலகம் புகல்தனி யாமே. *#1228*

இறைவனைப் போற்றுபவர், 'நல்ல திருவடிகளை உடைய இறைவனே' என்றும், 'அடியார்கட்கு மிக நல்ல பயனாய் உள்ளவனே' என்றும் அழைத்துப் போற்றுவர். அந்தத் திருவடிகளும், பயனுமாய் இருக்கின்ற பெருமையைப் பெற்றுள்ளவள் உயர்பெருந் தேவியாம் சத்தியே, இறைவனைப் பற்றிக்கூறும் நூல்களைக் கற்றுணர்ந்தவன் அறியும் பொருளாகிய இதனை அறிய வல்லவர்கட்கு இறைவனது அருளுலகத்தை அடைதல் சிறப்புப் பயனாகும்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதற்கண் வைத்தும், 'அப் பெருமை பெற்றாள்' எனமாற்றியும் உரைக்க. நல்தாள், துன்பம் துடைத்து இன்பத்தைப் பொழியும்தாள். கற்றான் அறியும் கருத்தும் இதுவேயாதலை வேறுபோலக் கூறினார், அதனது அருமை தோன்று தற்கு, திருவருளை,

'சிவன்தாள்' என்றல் வழக்கு. அருளுலகம், சுத்தமாயா புவனமாகிய அபரமுத்தித் தானங்கள். சிறப்புப் பயனாவது, அவருக்கே உரியதாய்ப் பிறருக்கு உரித்தாகாதது.
இதனால், சத்தியை உணரவல்லவரே உண்மை ஞானத்தைப் பெறுபவராதல் கூறப்பட்டது.

தனிநா யகன்றனோ டென்நெஞ்சம் நாடி
இனியாள் இருப்பிடம் ஏழுல கென்பர்
பனியான் மலர்ந்தபைம் போதுகை ஏந்திக்
கனியா நினைவதென் காரண அம்மையே. *#1229*

ஒப்பற்ற தலைவனாகிய சிவனோடே எனது நெஞ்சத்தை விரும்பி இனியவளாய் இருக்கின்ற சத்தி ஏழுலகத்திலும் நிறைந்திருப்பவளே. ஆயினும், எனக்குத் தாயாகிய அவளை நான் நல்ல புதுமலர்களைக் கையில் கொண்டு உண்ணுவது உள்ளங்கை நெல்லிக்கனியாகவே.

விளக்கவுரை

'இனியார்' என்பது பாடம் அன்று. 'பனியால்' என்றது, 'குளிர்ச்சியோடு' என்றவாறு. காரண அம்மை - ஈன்ற தாய். 'அம்மையை' என்னும் இரண்டனுருபு தொகுத்தல் பெற்றது. 'அம்மையைப் போது கை ஏந்தி நினைவது கனியா' எனக் கூட்டுக.
இதனால், சத்தி பெரியவளும், அரியவளுமாயினும், வழி படுவார்க்கு எளியளாதல் கூறப்பட்டது.

அம்மனை அம்மை அரிவை மனோன்மனி
செம்மனை செய்து திருமக ளாய்நிற்கும்
இம்மனை செய்த இருநில மங்கையும்
அம்மனை யாகி அமர்ந்துநின் றாளே. *#1230*

சிவனுக்கு அழகிய மனைவியும், உயிர்களுக்குத் தாயும் ஆகிய சத்தி, உயிர்களின் பல்வேறு நிலைகளிலும் அவற்றிற்கு ஆதாரமாய் நின்று, வேண்டுவனவற்றை வழங்குபவளாயும் இருப்பாள். அதனால், இன்று நமக்கு ஆதாரமாய் நிற்கின்ற நிலமகளும் அந்தச் சிவசத்தியாகவே எனக்குத் தோன்றுகின்றாள்.

விளக்கவுரை

'செம்மனை, இம்மனை' என்பவற்றில், நிலைக்களம் 'மனை' எனப்பட்டது. ஈற்றில் உள்ள அம்மனை, அனைவர்க்கும் தாயாகிய சத்தியைக் குறித்தது.
'பரஞானத் தால்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர்; பதார்த்தங்கள் பாரார்'. *1*
என்னும் முறைபற்றி, 'இருநில மங்கையும் அம்மனையாகியமர்ந்து

நின்றாள்' என்றாள்.
இதனால், சத்தி அனைத்து ஆதார ஆதேயங்களுமாய் நிற்றல் முடித்துக் கூறப்பட்டது.

அம்மையும் அத்தனும் அன்புற்ற தல்லது
அம்மையும் அத்தனும் ஆரறிவார் என்னை
அம்மையொ டத்தனும் யானும் உடனிருந்
தம்மையொ டத்தனை யான்புரிந் தேனே. ***#1231***

உலகத்தாயும், தந்தையுமாகிய சத்தியும், சிவனும் என்பால் அன்புவைத்து எனக்கு ஆவன செய்தலல்லது, என்னைப் பெற்ற தாய் தந்தையர்தாம் என்னை எந்த அளவில் அறிந்து எனக்கு என்ன செய்யவல்லுவர்! ஆகையால், உண்மைத் தாயாகிய சத்தியும், தந்தையாகிய சிவனும், மகனாகிய யானும் மட்டும் ஒன்றி யிருந்த காலத்து யான் அவ்விருவரையே விரும்பி அவரிடம் அயரா அன்பு உடையவனாயினேன்.

விளக்கவுரை

'அதனால், அளவிலா ஆனந்தத்தையும் பெற்றேன்' என்பது குறிப்பெச்சம். இரண்டாம் அடிக்கு, 'அம்மையும் அத்தனுந் தாம் என்னை யாராக அறிவர்?' என உரைக்க. 'உயிர்களே தம்மில் ஒன்றற்கு ஒன்று யாதும் செய்து கொள்ளல் இயலாது' என்பது முதல் இரண்டடிகளில் விளக்கப்பட்டது. அதனானே, உயிர்கட்குப் பெத்தம், முத்தி ஆகிய எக்காலத்தும் சத்தியும், சிவனுமே பரம ஆதாரமாதல் விளக்கப்பட்டதாம். இம்மந்திரம் முத்தி பஞ்சாக்கரப் பொருளதாய் நிற்றலை நுனித்துணர்ந்து கொள்க.
இதனால், உயிர்கட்குப் பரம ஆதாரம் இது என்பது வலியுறுத்தப்பட்டது.

*6.9.*ஏரொளிச் சக்கரம்

ஏரொளி உள்எழு தாமரை நாலிதழ்
ஏரொளி விந்துவி னால்எழும் நாதமாம்
ஏரொளி அக்கலை எங்கும் நிறைந்தபின்
ஏரொளிச் சக்கரம் அந்நடு வன்னியே. *#1232*

தன்னுள்ளே ஏரொளி எழப்பெறுவதாகிய தாமரை மலர் நான்கிதழ்களை யுடையது. அவ் ஏரொளியாவது, சுத்த மாயையினின்றும் தோன்றும் வாக்கேயாம். அவ்வொளி பல கூறுகளாய் வளர்ந்து உடம்பெங்கும் குறைவின்றி நிறையப் பெற்ற பின், உடலாகிய சக்கரம் (யந்திரம்) ஏரொளிச் சக்கரமாய்விடும். அப்பொழுது ஐம்பூதங்களில் ஒளிப் பொருளாகிய தீ, அச்சக்கரத்தின் நடுவிலே அணையாது நின்று ஒளிர்வதாம்.

விளக்கவுரை

'எழப்பெறுவதாகிய தாமரை' எனவே, 'அதுவே ஏரொளி தோன்றுவதாகிய முதலிடம்' என்பது பெறப்பட்டது. இது 'மூலாதாரம்' என்பதும், இதன் இயல்பும் முன்னையதிகாரத்தில் விளக்கப்பட்டன. இவற்றைத் தோற்றுவாய் செய்யவே, 'பிற ஆதாரங்களின் இயல்பையும் ஈண்டு நினைவு கூர்க' என்றதாயிற்று. விந்துவினால் - 'விந்து' என்னும் காரணப் பொருளால், 'அவ் ஏரொளிக் கலை'எனச் சுட்டினை மாற்றி யுரைக்க. 'எங்கும்' என்றது, 'உடலெங்கும்' என்னும் பொருளதே யாதலின், 'ஏரொளிச் சக்கரமாய் அமைவது உடம்பே' என்பதுபோந்தது. போதரவே, அஃது அங்ஙனம் அமையுமாற்றைப் புறத்துக் கண்டு வழிபடும் முறை இனி இங்குக் கூறப்படுவது என்பது விளங்கும். 'அந்நடு' என்றது 'அதன் நடு' என்றவாறு. 'உடலாகிய சக்கரத்தின் நடுவே தீ நிற்கும்' எனவே, 'புறத்து வரையப்படும் சக்கரத்தின் நடுவில் அக்கினிக்குரிய 'ஹ்ரூம்' என்னும் பீசாக்கரம் அடைக்கப்படும் என்பது புலனாம்.

இதனால், இவ்வதிகாரப் பொருள்கட்குத் தோற்றுவாய் செய்யப்பட்டன.

வன்னி எழுத்தவை மாபலம் உள்ளன
வன்னி எழுத்தவை வானுற ஓங்கின
வன்னி எழுத்தவை மாபெருஞ் சக்கரம்
வன்னி எழுத்திடு மாறது சொல்லுமே. *#1233*

தீயின் பீசாக்கரங்களே ஏனைய பூத அக்கரங்கள் எல்லாவற்றினும் சிறந்து நிற்கும். அதனால், அவை வானத்தையும் அளாவி நிற்கும். அவற்றையே 'சக்கரம்' என்று கூடச் சொல்லி விடலாம்; அவற்றைச் சக்கரத்துள் இடும் முறை இங்குச் சொல்லப்படும்.

விளக்கவுரை

பிரணவத்தோடு கூடி நிற்றல் பற்றிப் பன்மையாக ஓதப் பட்டது. மூன்றிடத்தும் 'அவையே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தல் பெற்றது. 'சொல்லும்' என்றது 'சொல்லப்படும்' என்றவாறு. இதனால், மேல், 'அந்நடு வன்னி' என்றதன் சிறப்புக் கூறப்பட்டது. இச்சிறப்பு, ஒளிச் சக்கரமாகிய இயைபு பற்றிக் கொள்ளப்படுவது என்க.

சொல்லிய விந்துவும் ஈராறு நாதமாம்
சொல்லிடும் அப்பதி அவ்வெழுத் தாவன
சொல்லிடு நூறொடு நாற்பத்து நால்உருச்
சொல்லிடு சக்கர மாய்வரும் ஞாலமே. ***#1234***

'விந்துவினால் எழும் நாதம்' என்புழிச் சொல்லப் பட்ட சுத்த மாயை வாக்காக விருத்திப்படுமிடத்துப் பன்னிரு பிராசாத கலைகளாயும் விருத்திப்படுவதாம். அக்கலைகளே சிவமாயும் விளங்கும். அவைகளை, நூற்று நாற்பத்து நான்கு அறைகளில் அமைக்க, மேற்கூறிய ஏரொளிச் சக்கரம் தோன்றுவதாம்.

விளக்கவுரை

நாதம் - வாக்கு. அதன் கலைகளையும் நாதம் என்னும் பெயராற் கூறினார். 'எழுத்து' என்றதும் அதனை. பிராசாத கலைகள் முன்னைத் தந்திரத்தில் சொல்லப்பட்டன. 'அவ்வெழுத்து அப் பதியாவன' என மாறிக் கூட்டுக. 'பதியும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. சிவசத்தியால் நேரே இயக்கப்படுதலால், 'சிவமும் ஆவன' என்றார். நூற்று நாற்பது அறைகள் அமையுமாறு பின்னர்க் காட்டப்படும். இதனால், ஏரொளிச் சக்கரத்தின் வடிவு பொதுமையிற் கூறி, அது திருவருளைப் பெறுதற்கு வாயிலாதற் சிறப்புக் கூறப்பட்டது.

மேல்வரும் விந்துவும் அவ்வெழுத் தாய்விடும்
மேல்வரும் நாதமும் ஓங்கும் எழுத்துடன்
மேல்வரும் அப்பதி அவ்வெழுத் தேவரின்
மேல்வரு சக்கர மாய்வரும் ஞாலமே. ***#1235***

உயிரெழுத்துக்களின் ஈற்றில் ஓதப்படும் விந்து வாகிய 'அம்' என்பது தனிஓர் எழுத்தாய் நிற்பினும், அகரம் முதலிய பிற உயிர்களோடு கூடி நிற்றலும் உடைத்து, முடிவில் உள்ள நாதமாகிய 'அ;' என்பதும் அத்தன்மையது. சக்கரங்களில் முதற்கண் உள்ள அறையில் எந்த எழுத்து உள்ளதோ, அந்த எழுத்துக்குரிய கலையின் சக்கரம் அதுவாகும். அவ்விடத்து அச்சக்கரம் அக்கலைக்குரிய பிண்டமாதலேயன்றி அண்டமாயும் விளங்கும்.

விளக்கவுரை

'அவ்வெழுத்து' மேற்சொல்லப்பட்ட கலைக்குரிய எழுத்து, அவை பின்னர் அறியப்படும். 'சக்கரமே ஞாலமாய் வரும்' என மாற்றிக் கொள்க.
இதனால், ஏரொளிச்சக்கர எழுத்துக்கள் சிலவற்றின் இயல்பு கூறப்பட்டது.

ஞாலம தாக விரிந்தது சக்கரம்
ஞாலம தாயிடும் விந்துவும் நாதமும்
ஞாலம தாயிடும் அப்பதி யோசனை
ஞாலம தாக விரிந்த எழுத்தே. ***#1236***

ஏரொளிச் சக்கரம் பல உலகங்களாயும் அமையும் பெருமையது. அதில் உள்ள விந்து நாதங்களும் அன்ன. அதனால் அச்சக்கரத்தில் இருக்கும் எழுத்துக்களை அறிவுடையோர் சிவமேயாக எண்ணுதலில் தலைப்படுவர்.

விளக்கவுரை

'எழுத்தை அப்பதியாக யோசித்தலில் ஞாலம் ஆயிடும்' என்க. மூன்றாம் அடியில் 'ஞாலம்' என்றது அறிவுடையோரை. இதனால், ஏரொளிச் சக்கரத்தின் எழுத்துக்களைச் சிவமாக எண்ணுதல் வலியுறுத்தப்பட்டது.

விரிந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விரிந்த எழுத்தது சக்கர மாக
விரிந்த எழுத்தது மேல்வரும் பூமி
விரிந்த எழுத்தினில் அப்புறம் அப்பே. ***#1237***

சுத்த மாயையினின்றும், விருத்திப் பட்ட எழுத்துக்கள் முதற்கண் 'நாதமும், விந்துவும்' என்னும் சூக்கும, சூக்குமாசூக்கும நிலைகளாய் நின்று, பின்னரே தூலமாயினவாம். அந்த எழுத்துக்களால் சக்கரங்கள் அமையுமிடத்து ஒடுக்க முறையில் முதற்கண் பிருதிவி சக்கரமும், அதன்மேல் அப்பு சக்கரமும் நிற்கும்.

விளக்கவுரை

'விந்துவும் நாதமும் ஆய்' என ஆக்கம் வருவித்து முடிக்க. 'விந்துவும், நாதமும்' என்றது ஒடுக்கமுறை. விந்துவே, 'பைசந்தி' எனவும், நாதமே 'சூக்குமை அல்லது பரை' எனவும் சொல்லப்படும். விரிந்தநிலை மத்திமையும், வைகரியும், இச் சக்கரங்கள் அமையுமாற்றைப் பின்னர்க் காண்க. இதனால், ஏரொளிச் சக்கரத்தின் பகுதிகள் சில கூறப்பட்டன.

அப்பது வாக விரிந்தது சக்கரம்
அப்பினில் அப்புறம் அவ் அன லாயிடும்
அப்பினில் அப்புறம் மாருத மாய் எழ
அப்பினில் அப்புறம் ஆகாச மாமே. ***#1238***

மேற்சொல்லிய அப்புசக்கரத்தின்மேல் தேயுசக்கரம், அதன்மேல் வாயுசக்கரமும், அதன்மேல் ஆகாய சக்கரமும் அமையும்.

விளக்கவுரை

முதலடி அனுவாதம், இம் மந்திரத்தில் அப்புவை அடியாக எடுத்தமையின்யாவும் அதன்மேல் உள்ளனவாக ஓதினார்.
இதனால், அவை மற்றும் சில கூறப்பட்டன.

ஆகாச அக்கர மாவது சொல்லிடில்
ஆகாச அக்கரத் துள்ளே எழுத்தவை
ஆகாச அவ்வெழுத் தாகிச் சிவானந்தம்
ஆகாச அக்கரம் ஆவ தறிமினே. ***#1239***

ஆகாய பீசத்தைச் சொல்வதனால், ஆகாய சக்கரத்தில் அமைந்த எழுத்துக்கள் யாவும் அந்த ஆகாய பீசமாகவே ஆய்விடும். அதனால், ஆகாய சக்கரம் சிவானந்தத்தைப் பயக்கும் ஆற்றலுடையதாம்.

விளக்கவுரை

'சொல்லிடில்' என்பது காரணப்பொருளில் வந்தது. இறுதிக்கண் இவ்வாறு கூறவே, ஏனைய பூத எழுத்துக்களைச் சொல் வதனால், அவ்வச்சக்கரத்தில் உள்ள எழுத்துக்களும் அவ்வாறாய்ப் பயன் தருதல் கொள்ளப்படும்.
இதனால், முன்னை இருமந்திரங்களில் எய்திவற்றிற்கு மேலும் ஒரு சிறப்புநிலை கூறப்பட்டது.

அறிந்திடும் சக்கரம் ஐயைந்து விந்து
அறிந்திடும் சக்கரம் நாத முதலா
அறிந்திடும் அவ்வெழுத் தப்பதி ஓர்க்கும்
அறிந்திடும் அப்பக லோன்நிலை ஆமே. ***#1240***

இங்கு அறியப்பட்டு வரும் ஏரொளிச் சக்கரம், வரிசைக்கு ஐந்தாக ஐந்துவரியில் இடப்படும், இருபத்தைந்து புள்ளி களால் அமைவது. (எனவே அப்புள்ளிகளை நேர்க் கோடுகளால் இணைக்கத் தோன்றும் நானான்கு *(4X4=16)* பதினாறு அறை களால் அமைதல் பெறப்பட்டது.*)* அவ் அறைகளில் உயிரெழுத்துப் பதினாறும் நாதம் முதலாக அடைக்கப்படும். இவ்வாறாக அமையும் இச்சக்கரம் பொதுவே சிவசூரியனால் விளக்கப்படுவது.

விளக்கவுரை

'நாதம் முதலா' என்றது ஒடுக்கமுறைபற்றி. உயிரெழுத் தின் ஈற்றில் நிற்கும் விசர்க்கத்தை *'நாதம்'* என்றும், அதன் அயலில் நிற்கும் அநுசுவாரத்தை *'விந்து'* என்றும் குறிப்பிடுதல் வழக்கு. பதி - பதம்; அறை. ஓர்க்கும் - பதிகளில் வைத்து நினைக்கப்படும். இருபத் தைந்து

புள்ளிகளால் பதினாறு அறையுள்ள சக்கரம் அமைக்குமாறு:-
இதனால் ஏரொளிச்சக்கரத்தின் பகுதி வடிவம் கூறப்பட்டது.

அம்முதல் ஆறும்அவ் ஆதி எழுத்தாகும்
எம்முதல் ஆறும்அவ் அம்மை எழுத்தாகும்
இரும்முதல் நாலும் இருந்திடு வன்னியே
இரும்முத லாகும் எழுத்தவை எல்லாம். *#1241*

மாதுருகாட்சரங்களில் அகாரம் முதலிய ஆறு எழுத்துக்களும் சிவன் எழுத்துக்களும் ஏகாரம் முதலிய ஆறு எழுத் துக்கள் சத்தி எழுத்துக்களும், இவற்றுக்கு இடையே உள்ள நான்கு எழுத்துக்கள் அங்கி எழுத்துக்களும் ஆகும். ஆதலின், உடலெழுத் துக்கள் பலவும் இந்த உயிரெழுத்துப் பதினாறனுள்ளே அடங்கிநிற்கும்.

விளக்கவுரை

உயிரெழுத்துக்களில் ஆறாவது எழுத்தினையே 'இரு' எனத் தமிழ்முறையாற் குறித்தார். இதில் மூன்றாம் எழுத்தெதுகை வந்தது. நான்காம் அடியில், 'முதல்' என்று, 'முதன்மையான எழுத்து' என்றதாம். இரண்டாம் அடியின் முதற்சீரை முதலடியின் முதற்சீரே போலவும், மூன்றாம் அடியின் முதற்சீரை நான்காமடியின் முதற்சீரே போலவும் ஓதுவன பாடம் ஆகாமையறிக. உடலெழுத்துக்கள் பலவும் உயிரெழுத்துக்களில் அடங்கும் எனவே, அவ்வுயிரெழுத்துப் பதினாறினாற்றானே ஏரொளிச் சக்கரம் ஆக்கப்படும் என்றதாயிற்று, அங்ஙனம், அச்சக்கரம் அமையுமாறு:-

எழுத்துக்களின் வைப்பு முறையில் ஏழாவது முதலாகப் பத்தாவது முடிவாக உள்ள அந்நான்கு எழுத்துக்களை அம்முறை யானே அடைத்தல் வேண்டுமாயினும், நாயனார் அவற்றை அங்கி எழுத்துக்களாக ஈற்றில் வைத்து ஓதினமையின் அவைகளை மேற் காட்டிய முறையானே அடைத்தல் வேண்டும். மேல் *(1240)* 'சொல்லிடு விந்துவும் ஈராறு நாதமாம்' என்றமையால், ஆதி எழுத்தாய அம்முதல் ஆறும், அம்மை எழுத்தாய ஏமுதல் ஆறும் ஆகிய பன்னீரெழுத்துக்களையும் முறையானே அகார கலை முதலிய பிராசாத கலை பன்னிரண்டிற்குரிய பன்னிரு கலைக்கும் உரிய எழுத்துக்களாகக் கொள்ளல் வேண்டும்' 'மேல்வரும் அப்பதி அவ்வெழுத் தேவரின் மேல்வரு சக்கரமாய்வரும்' *(1241)* என்றமையால், மேற்காட்டியவாறு இருபத்தைந்து புள்ளிகளால் பிறந்த பதினாறு அறைகளையுடைய சக்கரம் பன்னிரண்டு வரைந்து, அவை ஒவ்வொன்றின் முதல் அறையிலும் அ ஆ முதலிய பன்னிரண்டு எழுத்துக்களையும் முறையானே வைத்து ஏனைய எழுத்துக்களையும் முறையானே

அடைத்து, எல்லாச் சக்கரங்களிலும் இங்குக் காட்டிய வாறே நான்காம் வரிசையில் ஏழாம் உயிர் முதலிய நான்கனையும் அடைத்து முடிக்க.
அகாரம் முதற்கண் நின்றது முதலிய சக்கரங்கள் பன்னிரண்டும், முறையானே அகார கலா சக்கரம், உகார கலா சக்கரம் முதலாக உன்மனா கலாசக்கரம் இறுவாய்ப் பன்னிரு பிராசாத கலா சக்கரங்களாய் விளங்கும். பிராசாத கலைகள் பன்னிரண்டில் வியாபினிக்கும், சமனைக்கும் இடையே வியோம ரூபினி முதலிய நான்கு கலைகள் அடங்கி நிற்கும். ஆதலால், எல்லாச் சக்கரங்களிலும் நான்காம் வரிசையில் உள்ள ஏழாம் உயிர் முதலிய நான்கு கலைகட்கும் உரிய எழுத்துக்களாகக் கருதிக்கொள்க.
பன்னிரண்டு சக்கரங்களிலும் உள்ள அறைகள் அனைத்தும் கூடி, *(12X16=192)*நூற்றுத்தொண்ணூற்றிரண்டாம் ஆயினும், ஏழாம் உயிர் முதலிய நான்கெழுத்துக்கள் உள்ள*(4X12=48)* நாற்பத் தெட்டு அறைகளை எண்ணாது விடுப்ப, எஞ்சிய அறைகள் *(12X12 =144)*நூற்று நாற்பத்து நான்காய் வரையறைப்படும். அதனையே மேல் *(1240)*'சொல்லிய நூறொடு நாற்பத்து நால்உரு' என்றார்.
இன்னும், 'விரிந்த எழுத்து, அப்பதுவாக' என்னும் மந்திரங்களில் *(1243, 44)* அகார கலை முதலிய பன்னிரு கலைகளும் பிருதிவி முதலிய ஐம்பூதங்களில் நிற்கும் எனக் கூறினமையாலும், பிருதிவி முதலிய பூதங்கள் நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகளாகவும் கருதப்படும் ஆதலாலும், அகார கலை முதலிய நான்கு கலைகளும் நிவிர்த்தி முதலிய நான்கு கலைகளிலும், அர்த்த சந்திரன் முதலிய நான்கு கலைகளும் சாந்தியதீத கலையிலும் நிற்க, சத்தி முதலிய நான்கு கலைகள் சாந்தியதீத கலைக்கு மேல் உள்ள மந்திர கலையில் நிற்கும் ஆதலாலும் அவற்றின்மேல் முறையானே அப்பன்னிரு சக்கரங் களையும் அமைத்தல் வேண்டும்.
இதனால், ஏரொளிச் சக்கரத்தில் அடைக்கப்படும் எழுத்துக் களது தொகையும், முறையும் கூறப்பட்டன.

எழுத்தவை நூறொடு நாற்பத்து நாலும்
எழுத்தவை ஆறது அந்நடு வன்னி
எழுத்தவை அந்நடு அச்சுட ராகி
எழுத்தவை தான்முதல் அந்தமு மாமே. ***#1242***

ஏரொளிச் சக்கரத்தில் அடைக்கப்படும் எழுத்துக் கள் நூற்று நாற்பத்து நான்கும் மந்திர கலை உளப்பட ஆறு வட்டங் களில் நிற்பனவாம். அவ் ஆறுவட்டங்களின் நடுவே அமைந்த இடமே ஏரொளிச் சக்கரத்தின் நடுவிடமாக, அவ்விடத்திலே முதற்கண் *(1238)* கூறிய வன்னி பீசமாகிய 'ஓம் ரம்' என்பதுபொறிக்கப்படும். அவ் விடத்து நிற்கும் பிரணவமும்,

பீசமுமாகிய அவையே சிவசோதி சொரூபமாய் ஏரொளிச் சக்கரத்தில் உள்ள அனைத்து எழுத்துக் களிலும் தனது ஆற்றலால் வியாபித்து நிற்கும்.

விளக்கவுரை

முதற்றொட்டு இதுகாறும் கூறிவந்த ஏரொளிச் சக்கரத் தின் முழு வடிவம் இங்குத் தனியாகக் கொடுக்கப் பட்டிருத்தல் காண்க.

இதனால், ஏரொளிச் சக்கரத்தின் ஒளி எழுத்தின் சிறப்புக் கூறப்பட்டது.

அந்தமும் ஈறும் முதலா னவைஅற
அந்தமும் அப்பதி னெட்டுடன் ஆதலால்
அந்தமும் அப்பதின் மூன்றில் அமர்ந்தபின்
அந்தமும் இந்துகை ஆருட மானதே. ***#1243***

உடலெழுத்துக்களில் கவர்க்கமாதி ஐவருக்கத்தின் ஈற்றெழுத்துக்களும், யகாராதி சகாராதி (‹) வருக்கங்களின் ஈற்றெழுத்துக்களும் அவ்வவ் வருக்கத்தின் முதலெழுத்துக்களோடு கூடி அனாகத சக்கரத்தோடே நீங்கி யொழிய, விசுத்தி, ஆஞ்ஞை என்னும் இறுதி இரண்டாதாரங்களிலே உயிரெழுத்துப் பதினாறனோடு மற்றிரண்டெழுத்துக் கூடப் பதினெட்டெழுத்தே நிற்றலால், எல்லா உயிர்கட்கும் புகலிடமாகிய பரசிவனும் ஏரொளிச் சக்கரத்தில் உள்ள பன்னிரண்டு எழுத்துக் கடந்து நிற்பவனாகவே எண்ணப்படுகின்றான். அதனால், யோகத்தின் முடிவும் சந்திர மண்டலத்தையும் கடந்து துவாதசாந்தத்தை அடைவதே யாகின்றது.

விளக்கவுரை

'முதலானவற்றொடு' என உருபு விரிக்க. முன்னை மந்திரத்தில் 'எழுத்தவை நூறொடு நாற்பத்து நாலும்' என்றதனானே, 'அப்பதினெட்டு' எனப்பட்டவை எழுத்துக்களாதல் பெறப்பட்டது. இறுதி 'அந்தம்' இரண்டு முறையே சிவனையும், யோகத்தின் முடிவை யும் உணர்த்தின. பன்னிரண்டைக் கடந்தவனை, பதின் மூன்றாவதில் நிற்பவனாகக்கூறினார். கை - பக்கம்; இடம். நாத காரியமாவன் ஐம்ப தெழுத்துக்களாக, அவற்றுட் சிலவற்றானே ஏரொளிச் சக்கரம் அமை யும் என்றது என்னை? என்னும் ஐயத்தினை, முன்னிரண்டடிகளால் காரணங் காட்டி அறுத்தருளினார். பதின்மூன்றாந் தானமே துவாத சாந்தம்; அங்கே உள்ள பரவெளியே பரசிவன் விளங்கும் இடம்.

'ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல்க உந்தீபற;
விமலற் கிடமதென் றுந்தீபற' *1*

என்றார் திருவுந்தியாரிலும். பதின்மூன்றாந் தானத்தில் நிற்றலை

எடுத்தோதியது பன்னிரண்டு எழுத்துக்களைக் கடந்தவனாக எண்ணப் படுதலை உணர்த்தற்கு. ஈற்றடியால். ஆதார யோகத்தோடு நின்றொழி யாது, நிராதாரத்தின்வழி மீதானத்துச் செல்லுதலின் இன்றியமை யாமையைக் குறித்தார்.
இதனால், இவ்வதிகாரத்தின் கண்ணது, ஓர் ஐயம் அறுக்கப் பட்டது. முதற்றொட்டு இதுகாறும் வந்த மந்திரங்களின் வழி, அமையும் சக்கர வடிம் தனியாகக் காட்டப்பட்டிருத்தல் காண்க.

ஆஇன மானவை முந்நூற் றறுபதும்
ஆஇனம் அப்பதி னைந்தின மாய்உறும்
ஆஇனம் அப்பதி னெட்டுட னாய்உறும்
ஆஇனம் அக்கதி ரோன்வர வந்தே. ***#1244***

ஐம்பதெழுத்துக்களில் ஏரொளிச் சக்கரத்தில் உள்ள அவ்வுயிரெழுத்துக்கள் பன்னிரண்டுமே முந்நூற்றறுபது நாள்களாகிய ஆண்டும், பதினைந்து நாள்களாகிய பக்கமும், ஆறும், பன்னிரண்டும் ஆகிய இருதுக்களும், மாதங்களும் என்று இவை அனைத்துமாய் நிற்கும். அவற்றிற்கு அச்சிறப்பு, சிவ சூரியனது தோற்றத்தால் ஆனதாம்.

விளக்கவுரை

அ இனம் - அகரம் முதலிய உயிரெழுத்துக்கள் தொடை நோக்கி அகரம் நீட்டல் பெற்றது. எனவே, மேல் *(1246)* 'அறிந்திடும் அப்பகலோன் நிலையாமே' என்றதனை வலியுறுத்தியவாறாயிற்று. வலியுறுத்தவே, பிராசாத யோகிகட்கு இச்சக்கர பாவனா முதிர்ச்சியே காலக் கணக்காய் அமைதல் கொள்க.
இதனால், ஏரொளிச்சக்கர எழுத்துக்கள் பற்றியதோர் இயல்பு கூறப்பட்டது.

வந்திடும் ஆகாச ஆறது நாழிகை
வந்திடும் அக்கரம் முப்ப திராசியும்
வந்திடும் நாளது முந்நூற் றறுபதும்
வந்திடும் ஆண்டும் வகுத்துறை அவ்விலே. ***#1245***

ஏரொளிச் சக்கரமே மேற்கூறிய சிவசூரியன் தோன்றும் ஆகாச வழியாகும். அதனால், அதன்கண் உள்ள எழுத்துக் களே அச்சூரியன் இயக்கத்தால் அமைகின்ற நாழிகைகளும், அந் நாழிகையால் ஆம் நாட்களும், அந்நாட்களால் ஆம் மாதங்களும், அம் மாதங்களின் நாள் முந்நூற்றறுபதால் அமைகின்ற ஆண்டும் ஆகும்.

விளக்கவுரை

'அது' என்றது ஏரொளிச் சக்கரத்தை. செய்யுள் நோக்கி, நாழிகைக்குரிய 'அறுபது' என்பதும், இராசிக்குரிய 'பன்னிரண்டு' என்பதும் ஆகிய

எண்ணுப் பெயர்கள் தொகுக்கப் பட்டன. 'இராசி' என்றது மாதத்தை. 'அக்கரமே வந்திடும் நாழிகை அறுபதும், வந்திடும் நாளது முப்பதும். இராசிபன்னிரண்டும் வந்திடும் நாளது முந் நூற்றறுபது வந்திடும் ஆண்டுமாகிய அவ் வில்லாக வகுத்துரை' எனச் சொற்களை விரித்தும் மாறிக் கூட்டியும் பொருள் உரைத்துக்கொள்க. வில் - ஒளி; என்றது, 'சோதிட வகை' என்றவாறு.

இதனால், மேற்கூறிய சிறப்புப்படும் வகையெலாம் கூறப் பட்டன.

அவ்வினம் மூன்றும்அவ் ஆடது வாய்வரும்
கெவ்வினம் மூன்றும் கிளர்தரு ஏறதாம்
தவ்வின மூன்றும் தழைத்திடும் தண்டதாம்
இவ்வினம் மூன்றும் இராசிகள் எல்லாம். ***#1246***

இராசிகள் பன்னிரண்டில் இடபம் முதல் நான் கினை முதற் கூறாகவும், விருச்சிகம் முதல் நான்கினைக் கடைக் கூறாகவும், எஞ்சிய நான்கையும் இடைக் கூறாகவும் பகுத்து, அக்கூறுகளை முறையே 'மேட வீதி, மிதுன வீதி, இடப வீதி' எனக் கொள்க. இராசிகள் பன்னிரண்டும் இங்ஙனம் இம் மூன்று வீதிகளாய் அமைவனவாம்.

விளக்கவுரை

'அவ்வினம்' - முதலாய்சிறந்து நிற்கும் அக்கூட்டம். 'கவ்வினம்' என்பது விகாரமாயிற்று. கவ்வுதல், தனை அடுத்திருத்தல். தவ்வினம் - தவிர்ந்தன; எஞ்சியன, 'இனம்' என்றது தமக்கு ஒரு முதல் உடையவற்றை. எனவே, அம் முதலோடு கூட நான்கிராசி ஒரு கூறுபடும் என்க. 'வீதி' என்பது, 'சூரியன் செல்லும் வழி' என்பர். இதனால், மேலவை பற்றியதொரு முறைமை கூறப்பட்டது.

இராசியுட் சக்கரம் எங்கும் நிறைந்தபின்
இராசியுட் சக்கரம் என்றறி விந்துவாம்
இராசியுட் சக்கரம் நாதமும் ஒத்தபின்
இராசியுட் சக்கரம் நின்றிடு மாறே. ***#1247***

ஏரொளிச் சக்கரத்தில் உள்ள பன்னிரு சக்கரங் களும் முறையே மேடம் முதலிய பன்னிரண்டு இராசியுள் நிற்பன வாகக் கருதித் தியானிக்கப்படும். அத்தியானம் பன்னிரண்டாம் ராசி முடியச்சென்று முற்றின், தியானிப்பவன் விந்து வெளியைப் பெற்ற வனாய்த் திகழ்வான். அவன் பின்னும் அந்தத் தியானத்திலே அழுந்தி நிற்பின், நாத ஒலியைக் கேட்பவனாகவும் ஆவான். பன்னிரு சக்கரங் களும் பன்னிரண்டு இராசிக்குள் நிற்பனவாகக் கருதும் கருத்திற்கு இதுவே பயனாகும்.

விளக்கவுரை

'எங்கும் நிறைந்தபின்' எனவும் 'ஒத்தபின்' எனவும் போந்த அனுவாதத்தால், அங்ஙனம் நிறைவுறும்படித்தியானித்தலும், ஒத்தலும் பெறப்பட்டன. 'விந்துவாம் என்றறி' எனமாற்றிக் கொள்க. பிராசாத கலைகள் பலவாயினும், இடைநிற்கும் விந்து நாத கலைகளையே சிறந்தனவாகக் கூறுவர். அக்கலைகள் அனுபவத்தில் முறையே ஒளியாயும், ஒலியாயும், தோன்றும் என்க.
இதனால், ஏரொளிச் சக்கரத் தியான முறையும், அதன் பயனும் கூறப்பட்டன.

நின்றிடு விந்துவென் றுள்ள எழுத்தெலாம்
நின்றிடும் நாதமும் ஓங்கும் எழுத்துடன்
நின்றிடும் அப்பதி அவ்வெழுத் தேவரில்
நின்றிடும் அப்புறம் தாரகை யானதே. ***#1248***

தம்மை அடுத்து நிற்கும் எழுத்துக் காரணமாகத் தாமும் விந்துவாய் நிற்கின்ற, ஏரொளிச் சக்கர எழுத்துக்கள், அன்ன காரணத்தானே நாதமாயும் நிற்கும். அவ்வெழுத்துக்களை அங்ஙனம் தியானித்தலில் சிறிதும் திரியாது நிற்பின், அந்நிலையின்பின் மேற்கூறிய ஒளிக்காட்சி விண்மீன்போலப் புலப்படும்.

விளக்கவுரை

'உயிரெழுத்துப் பதினாறனுள் ஈற்றில் நிற்கும் இரண் டெழுத்துக்கள் முறையே விந்து நாதங்களாய் நிற்கும்' என்பது முன்பே கூறப்பட்டது. அவற்றைத் தங்கீழ்ப் பெற்றவழி ஏனை உயிரெழுத் துக்கள், உயிர்மெய்யெழுத்துக்கள் எல்லாம் அங்ஙனமே விந்துவும், நாதமுமாய் நிற்கும் என்பதை இங்கு முதல் இரண்டு அடிகளில் எடுத் தோதினார். இரண்டாம் அடியின் பொருள், 'நாதம் ஓங்கும் எழுத்துடன் *(கூடி)* அதுவாயும் நின்றிடும்' என்பதாம். நின்றிடும் அப்பதி - மனம் நிலைபெற்று நிற்கின்ற அந்த அறைகளில். அவ் வெழுத்தே வருதல், அந்த எழுத்தே தியானிக்கப்படுவனவாய் நிகழ்தல். நின்றிடும் அப்புறம் - நிற்கும் அந்நிலைக்குப்பின் 'ஆகும்' எனற்பாலது, தெளிவு பற்றி, 'ஆனது' எனப்பட்டது. ஒலியனுபவம், ஒளியனுபவம் இரண்டுமே நிகழுமாயினும் பரியதாய் முதற்கண் நிகழும் ஒளி யனுபவத்தையே சிறந்தெடுத்து ஓதினாராதலின், ஒலி யனுபவத்தை விலக்கிற்றிலர் என்க.
இதனால், மேற்கூறிய பயன்களுள் ஒன்றன் நிலை வகுத்துக் கூறப்பட்டது.

தாரகை யாகச் சமைந்தது சக்கரம்
தாரகை மேலோர் தழைத்ததோர் பேரொளி
தாரகை சந்திரன் நற்பக லோன்வரத்
தாரகை தாரகை தாரகை கண்டதே. ***#1249***

மேற் கூறியது காரணமாக ஏரொளிச் சக்கரத்தில் உள்ள பன்னிரு கலா சக்கரங்களைப் பன்னிரு விண்மீன்கள் என்று கூறலாம். ஆயினும் அவற்றின் தியான முதிர்ச்சியில் விண்மீனினும் மிக்க பேரொளி ஒன்று மேலே உள்ளமை புலனாகும். ஆதலால், அந்த விண்மீன்போல நிற்கும் ஒளிக்காட்சியை இடைவிடாது காணுதல் அப்பேரொளி சிறிதுசிறிதாக மிக்கு விளங்குதற் பொருட்டாம்.

விளக்கவுரை

'சமைந்தது' என்றது ஒப்புமை வழக்கு. 'ஓர் பேரொளி தழைத்தது' என மாற்றிக்கொள்க. 'மேலே தழைத்ததோர் பேரொளி' என்றே பாடம் ஓதலுமாம். 'சந்திரனும், பகலோனுமாய்' என ஆக்கம் விரிக்க. வருதல் - புலனாதல். அடுக்கு, இடைவிடாமைப்பொருட்டு. 'கண்டது வர' என மேலே கூட்டி முடிக்க.

இதனால், ஒளிக் காட்சி முதிர்வு தியான முதிர்ச்சியாதலால் கூறப்பட்டது.

கண்டிடு சக்கரம் விந்து வளர்வதாம்
கண்டிடு நாதமும் தன்மேல் எழுந்திடக்
கண்டிடு வன்னிக் கொழுந்தள வொத்தபின்
கண்டிடும் அப்புறங் காரொளி யானதே. ***#1250***

மேற்கூறியவாற்றாற் கண்டு தியானிக்கின்ற சக்கரத்தின் பயன் விந்துவாகிய ஒளிக்காட்சியின் வளர்ச்சியே. அவ்வளர்ச்சியோடுகூட அதற்குத் தக நாத ஒலியும் மிக மிகக் கேட்கப்படும், அவ்விரண்டனாலும் ஆன்மாவின் உள்ளொளியாய் அதனுட் கரந்து நின்ற சிவமும் அனுபவப் பட்டுவரும். அன்னதொரு சிவானுபூதிக்குப்பின் ஆன்மாவைத் தன்னுள் அடங்கக்கொண்டு விரிந்துள்ள சத்தி ஒளியாகிய நீல ஒளி காட்சிப்படுவதாம்.

விளக்கவுரை

'வளர்வது' என்பதில் அது, பகுதிப் பொருள் விகுதி. கண்டிடும் நான்கில் இடை இரண்டும் 'அனுபவித்திடும்' என்னும் பொருளன. இறுதியது, 'கண்டிடப்படும்' என்னும் பொருளது. இஃதொன்றும் முற்று; ஏனையவை எச்சம். 'வன்னி' என்றது 'ஒளி' என்றவாறு. 'காரொளியானது கண்டிடப்படும்' என்க. 'எழுந்திட, ஒத்தபின்' என்ற அனுவாதங்களால், எழுதலும், ஒத்தலும் பெறப் பட்டமை அறிக. ஒத்தல், விந்து நாதங்களின் வெளிப்பாட்டுக்குச் சமமாதல். 'அப்புறக்காரொளி' என்பது மெலிந்து நின்றது. விந்து ஒளியை வளர்த்தலேயன்றிச் சிவஒளி சத்தி ஒளிகளையும் முறை யானே பயக்கும். இதனானும் இச்சக்கரம் ஏரொளிச் சக்கரமாதல் காண்க.

இதனால், ஒளிக் காட்சி முதிர்வின்பின் நிகழ்வன இவை என்பது

கூறப்பட்டது.

காரொளி அண்டம் பொதிந்துல கெங்கும்
பாரொளி நீரொளி சாரொளி காலொளி
வானொளி ஒக்க வளர்ந்து கிடந்த பின்
நேரொளி ஒன்றாய் நிறைந்தங்கு நின்றதே. ***#1251***

யோக முதிர்ச்சியில் நீல ஒளியாய்க் காணப்படும் சத்திஒளி பூதாகாயத்தின் மேற்பட்ட பராகாயமாய் உலகத்தைத் தன்னுட் கொண்டு பரந்து நிற்றலாலே ஐம்பெரும் பூதங்கள் முதலிய பொருள்கள் பலவும் பயன் தரும் பொருளாய்ச் சிறந்து விளங்கு கின்றன. அச்சத்தி ஒளியூடே அதனினும் நுண்ணிய சிவமாகிய மெய்ப் பொருள் ஒன்றுபட்டு அச்சத்தி ஒளி உள்ள பொருள்களில் எல்லாம் தானும் உடன் நிறைந்து நிற்கின்றது.

விளக்கவுரை

'அதனை மறத்தல் கூடாது' என்பது குறிப்பெச்சம். அண்டம் - ஆகாயம். 'அண்டமாய்' என ஆக்கம் விரிக்க. பொதிந்து - பொதிதலால். 'உலகெங்கும் பொதிந்து' என மாற்றுக. விளக்கத்தையே இங்கு, 'ஒளி' எனப் பன்முறையும் ஓதினார். சார் - யாதானும் ஒன்றைப் பற்றியே நிற்பதாகிய நெருப்பு. நேர்மை - நுண்மை. மூன்றாம் அடி உயி ரெதுகை. இதனால், மேற்கூறிய சத்தி ஒளியது சிறப்பும், அதனோடு உடனிலையாய் நிற்பதும் கூறப்பட்டன.

நின்றது அண்டமும் நீளும் புவியெலாம்
நின்ற இவ் அண்டம் நிலைபெறக் கண்டிட
நின்ற இவ் அண்டமும் மூல மலமொக்கும்
நின்ற இவ் அண்டம் பலமது விந்துவே. ***#1252***

மேற் கூறியவாறு சத்தியாகிய பராகாயம் பல அண்டங்கள் முதலிய எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கிப் பரந்து நிற்பது, அவை நிலைபெறுதலைச் செய்தற் பொருட்டாம். இனி அவ்வண்டம் முதலிய பொருள்கள் மாயையின் விளைவுகளாய் உயிர்கட்குச் சிவத்தை மறைத்துத் தம்மையே காட்டி நிற்றலால், அவற்றை அவ்வாற்றாற் செயற் படச் செய்யும் சத்தியும் ஓராற்றால் ஆணவ மலத்தோடு ஒப்பதாம்.

விளக்கவுரை

உம்மை இரண்டனுள் முன்னது சிறப்பு; பின்னது இறந்தது தழுவிய எச்சம். அவற்றுள் சிறப்பும்மையைப் பிரித்து, 'நின்றதும்' எனக்கூட்டி உரைக்க. 'அண்டம் நின்றதும் நிலைபெறக் கண்டிட' என முடியும். 'இவ்வண்டம்' மூன்றனுள் இடையது ஒன்றும் பராகாயம்; ஏனையவை பௌதிக அண்டங்கள். பலம் - பயன்; விளைவு; 'காரியம்' என்றவாறு.

'விந்து பலமதே; ஆதலின் சத்தியும் மூல மலம் ஒக்கும்' எனக் கூட்டி முடிக்க. இச்சத்தி இவ்வாற்றால் திரோ தானகரி எனப்படுதலும் அங்ஙனமாதற்குப் பயன் மூல மலத்தைப் போக்குதலும் ஆதல் வெளிப்படை. மாயையையும் இங்கு 'விந்து' என்றே போயினார். அதனுள் வியாப்பியமாம் ஒற்றுமை பற்றி.

இதனால், சத்தியது வியாபகத்தின் பயன் கூறப்பட்டது.

விந்துவும் நாதமும் ஒக்க விழுந்திடில்
விந்துவும் நாதமும் ஒக்க விதையதாம்
விந்திற் குறைந்திட்டு நாதம் எழுந்திடில்
விந்துவை எண்மடி கொண்டது வீசமே. ***#1253***

'ஏரொளிச் சக்கரம் எல்லா உலகங்களையும் அடக்கி நிற்கும்' என்பது விளக்குதற்கு இது முதல் நான்கு மந்திரங்களால் உலக உற்பத்தி முறையை உணர்த்துகின்றார்.

'விந்து, நாதம்' என்ற இரண்டு தத்துவங்கள் உலகிற்கு அடி நிலையாய் உள்ளன. அவை யிரண்டும் முதற்கண் நிற்றல் போலத் தனித்து நில்லாது சமமாய்க் கலந்து கீழ்வருமாயின், அங்ஙனம் கலந்த அக்கலப்பே உலகத்திற்கு முதலாய் நிற்கும். பின்பு விந்து மிகுதியாக நாதம் குறைந்து நிற்க வேண்டில், அங்ஙனம் நிற்றற்கும் நாதத்தினும் விந்துவை எண்மடங்கு மிகுதியாகக் கொண்ட ஒருநிலை முதலாக அமையும்.

விளக்கவுரை

ஒப்பற்ற தனிப்பெரும் பொருளாகிய சிவம் உலகத்தை எண்ணாது இயல்யாய் நிற்கும் நிலையில் 'சிவம்' என்னும் ஒரு பொருளேயாய் நிற்கும். பின் அது உலகத்தைத் தோற்றுவிக்க எண்ணும் பொழுது' தானும், தன் சக்தியும்' என இருகூறுபட்டு நிற்கும். அவ் இரு கூற்றுள் சிவத்திற்கும், சத்திக்கும் முறையே 'நாதம், விந்து' என்பனவும் பெயராம். ஆகவே, நாதத்தினின்றே விந்து தோன்றுவ தாம். அத் தோற்றத்தின்கண் நாதமும், விந்துவும் முறையே தனித்தனி நின்று, பின் இரண்டும் சமமாய்க் கூடி நிற்கும். அந்நிலைக்குச் 'சதாசிவம்' அல்லது 'சாதாக்கியம்' என்பது பெயர். பின்னர், விந்துக் கூறு மிகுதியாக நாதக் கூறு குறைந்த ஒரு நிலை உளதாம். அதற்கு, 'ஈசுரம்' அல்லது 'மகேசுரம்' என்பது பெயர். அம் மகேசுரத்திலிருந்து விந்து குறைய நாதம் மிகுந்த ஒரு நிலை தோன்றும். அதற்கு 'வித்தை' என்பது பெயர். இங்ஙனம் 'நாதம், விந்து, சாதாக்கியம், மகேசுரம், வித்தை' என்னும் ஐந்து நிலைகள் அமைந்த பின்னரே, உலகம் பலப் பல வகையில் வியத்தகத் தோன்றுவனவாம். ஆகவே, அவ் அனைத்துத் தோற்றங்கட்கும் முதலாய் அமையும் ஐந்து நிலைகளையே இம்மந்திரத்திற் கூறினார் என்க.

'ஒக்க விழுந்திடில்' என்றதனால் அவை இரண்டும் முன்னர்த் தனித் தனி

நின்றமை பெற்றாம். 'எழுந்திடில்' என்பது 'எழுந்திடல் வேண்டுமாயின்' எனப் பொருள் தந்தது. 'எண்மடி' என்றது, மிகுதி கூறியவாறு. மூன்று, நான்காம் அடிகள் முறையே வித்தை மகேச்சுரங்களைக் குறித்தமையும், ஐந்து நிலைகளையும் சொற் பல்காது செய்யுட்கேற்பச் சுருங்கி வர ஓதி முடித்தமையும் அறிக. விந்துவை முற்கூறியது ஒடுக்க முறைபற்றி. 'விதை, வீசம், (பீசம்) என்னும் பொருட்சொற்கள் 'முதனிலை' என்னும் பொருளவாய் நின்றன. இங்கும் இனி வருகின்றவற்றுள்ளும், 'விதை' என்னும் இடங்களில் எல்லாம் 'விரை' என்றே பாடம் ஓதுவாரும் உளர். இதனால், உலகத்திற்கு முதல் முதனிலையாகிய ஐந்து பொருள்கள் கூறப்பட்டன. இவை ஐந்தும் இறைவனாகிய சிவ னுக்கும், அவனுக்கு அவ்வந் நிலைகளில் இடமாய் நிற்கும் சுத்த மாயையின் விரிவுகட்கும் பொது என உணர்க. நாத விந்து நிலை வேறு பாட்டிற்குக் காரணம் முறையே சிவனது சத்தியின் 'ஞானம், கிரியை' என்னும் வேறுபாடேயாம். உலகில் ஆண் பெண் கூறுகளாய சுக்கில சோணிதங்களையும் 'விந்து, நாதம்' என்னும் பெயர்களால் கூறுப. ஆதலின் இம்மந்திரம் கருவுற்பத்தியாகிய வேறொரு பொருளையும் நயம்படக் தோற்றுவித்து இப்பொருட்குப் பின்னிரண்டடிகள் கருவுற்பத்திக்குச் சோணிதம் குறைதல் நலமாதலைக் குறிக்கும்.

வீசம் இரண்டுள நாதத் தெழுவன
வீசமும் ஒன்று விரிந்திடும் மேலுற
வீசமும் நாதம் எழுந்துடன் ஒத்தபின்
வீசமும் விந்து விரிந்தது காணுமே. ***#1254***

சிவத்தினின்றும் தோன்றும் உலக முதல்கள் இரண்டு உள்ளன. அவற்றுள் ஒன்று மேலாய் நிற்கும். (எனவே, மற்றொன்று கீழாய் நிற்பதாம்.) சிவத்தினின்றும் தோன்றும் அவ் இரு முதல்களும் முதற்கண் தனித்து நின்றவாறு நில்லாது சமமாய்க் கூடி நின்ற, பின்பே சுத்தமாயை பல உலகங்கட்கு முதலாய் நின்று, அவையாய் விரியும்.

விளக்கவுரை

'இரண்டு' என்றது நாதவிந்துக்களையும், 'மேலுற விரிந்திடும்' என்றது நாதத்தையும் என்க. இங்கு, 'நாதம்' இரண்டும் 'சிவம்' என்னும் பொருளவாய் நின்றன, 'வீசமும்' என்னும் உம்மைகள் சிறப்பு. இறுதியதைப் பிரித்து விந்துவும்' எனக் கூட்டுக. 'விந்து' இங்கு, சுத்த மாயை 'விந்துவும் வீசமாய் விரிந்தது' என ஆக்கம் விரிக்க. காண் உம் அசைகள். 'விரைந்திடும், நாதமும்' என்பன பாடம் அல்ல.
இதனால், மேற்கூறிய ஐந்தனுள் சிலவற்றது இயல்பு வகுத்துக் கூறப்பட்டது. அவற்றுள் சாதாக்கியத்தது இன்றியமையாமை வலியுறுத்தப்பட்டமை காண்க.

விரிந்தது விந்துவும் கெட்டது வீசம்
விரிந்தது விந்துவும் நாதத் தளவு
விரிந்தது உட்பட்ட எட்டெட்டு மாகில்
விரிந்தது விந்து விதையது வாமே. ***#1255***

சுத்த மாயையே அனைத்தையும் வியாபித்து நிற்ப தாகலின், அதனை அறியாதார், 'முக்குண வடிவான பிரகிருதி ஒன்றே உலகிற்கு முதனிலை' எனக் கூறும் கூற்று உண்மையன்றாய் ஒழிந்தது. சுத்த மாயை வித்தை முதலாக நாதம் முடிய விரிந்துநின்று அறுபத்து நான்கு கலைகளாகச் சொல்லப்படுகின்ற நூல்களையும் தன்னுட் கொண்டு நிற்குமாயின், சுத்த மாயையே வியாபகமானது; அதுவே உலகிற்குப் பெரு முதல்நிலை.

விளக்கவுரை

உம்மைகள் சிறப்பு. முதலில் உள்ள 'விந்துவும்' என்பதன்பின், 'அதனால்' என்பது வருவிக்க. இதனுள், 'வீசம்' *(பீசம்)* என்றது, சாங்கியர் முதலிய பலருங் கூறும் முதனிலையைக் குறித்தது. அதுபற்றிக் கூறுவோரது கூற்று வீழ்தலை, அதுவே வீழ்தலாகக் கூறினார். 'உட்பட்ட எட்டெட்டுமாய் விரிந்ததாகில்' எனவும், 'அதுவே விதையாம்' எனவும் மாற்றுக. 'எட்டெட்டுமாய்' என ஆக்கம் வருவிக்க. 'உட்கட்ட' என்பதும், 'அளவினில்' என்பதும் பாடம் அல்ல. 'அறுபத்துநான்கு கலைகளும்' என்றது. 'சொல்லுலகம் அனைத்தும்' என்றவாறு. இதனாலும், 'சொல்லுலகம் ஆகாய பூதத்தின் காரியமே' என்றொழியும் சாங்கியர் முதலியோரது கூற்றுக்களை மறுத்தார். 'ஆகில்' என்பது, 'நீரின் றமையா துலகெனின்' *1* என்பதிற்போலத் தெளிவுப் பொருள்தந்தது.
இதனானே, பிற மதத்தார் கூறும் கூற்றுக்களை மறுத்து மேற் கூறியவை வலியுறுத்தப்பட்டன.

விதையது விந்து விளைந்தன எல்லாம்
விதையது விந்து விளைந்த உயிரும்
விதையது விந்து விளைந்தவிஞ் ஞானம்
விதையது விந்து விளைந்தவன் தாளே. ***#1256***

சுத்த மாயை முதனிலையாக நிற்பவே பலவகை உலகங்களும், அவற்றுள் வாழும் பல உயிரினங்களும், அவற்றுள் வாழும் பல உயிரினங்களும், சவிகற்ப ஞானமும் உளவாவன. ஆயினும் அவை அங்ஙனம் உளவாதல் அம்மாயை சிவசத்தியை நிலைக்களமாகக் கொள்ளுதலாலேயாம்.

விளக்கவுரை

நான்கிடத்தும், 'விந்து விதையதுவாகவே' என மாற்றி ஆக்கமும், தேற்றேகாரமும் விரித்துரைக்க. 'உயிர்' என்றது அவற்றின் பிறப்பாகிய

உடம்பை. சவிகற்ப ஞானம் உண்டாதல் சொல்லுலகத்தாலாம். ஈற்றடியில், 'விளைந்த' என்னும் வினைப்பெயர் அகரம் தொகுத்தலாயிற்று. அப்பெயர் அத்தொழில் மேல் நின்றது. 'அவன் தாட்கண்ணேயாய்' என இறுதியில் உருபும், ஆக்கமும் விரிக்க. இதனால், மேலவற்றைப் பிறவாற்றால் வலியுறுத்தி, சுத்த மாயை முதனிலையாதல் சுதந்திரமாய் அன்று; சிவசத்தியின் வழியே யாம் என்பது உணர்த்தப்பட்டது.

விளைந்த எழுத்தவை விந்துவும் நாதம்
விளைந்த எழுத்தவை சக்கர மாக
விளைந்த எழுத்தவை மெய்யினுள் நிற்கும்
விளைந்த எழுத்தவை மந்திர மாமே. ***#1257***

காரணகாரியங்கட்கு உள்ள ஒற்றுமையால் விந்து நாதங்களின் காரியமாகிய எழுத்துக்கள் பலவும் விந்து நாதங் களாகவே கொள்ளப்படும். அத்தன்மையவான எழுத்துக்களாலே எல்லாச் சக்கரங்களும் அமைதலின், அச்சக்கரத் தியானத்தால் அவை உடம்பினுள் மூலாதாரம் முதலிய ஆதாரங்களில் நின்று உடம்பை யும் விந்து நாதமயமாக்கி, ஆன்மாவையும் மந்திரான்மாவாகச் செய்யும்; அஃது எவ்வாறெனில் எழுத்துக்கள்தாமே மந்திரமாய் உருப் பெறுதலின்.

விளக்கவுரை

'நாதமும்' என்னும் எண்ணும்மையைத் தொகாது வைத்தோதுதல் பாடம் அன்று. 'ஆக' என்ற வினையெச்சம் காரணப்பொருளில் வந்தது. 'தியானத்தால்' என்பது ஆற்றலால் வந்தது. 'நிற்கும்' என்பது, தன் காரியத்தையும் தோற்றுவித்துநின்றது. ஈற்றில் 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. சக்கரங்களின் இயல்பாகப் பொதுப்படக் கூறினாராயினும், சிறப்புடைய இவ் ஏரொளிச் சக்கரத்தின் இயல்பு உணர்த்துதலே கருத்து.
இதனால், இச்சக்கரத்தால் எய்தும் பயன் கூறப்பட்டது.

மந்திரம் சக்கர மானவை சொல்லிடில்
தந்திரத் துள்ளெழுத் தொன்றெரி வட்டமாம்
தந்திரத் துள்ளும் இரேகையில் ஒன்றில்லை
பெந்தம தாகும் பிரணவம் உன்னிடே. ***#1258***

'மந்திரம், சக்கரம்' என்பவற்றின் உண்மையைச் சொல்லுமிடத்து, அவைகளைக்கூறும் நூல்களின் கருத்து, 'நாதமாகிய உண்மை எழுத்து ஒன்றே சோதி மண்டலமாம்' என்பதே. ஆகையால், அவ்வுண்மை எழுத்துக்களை உணர்த்தும் கருவிகளாகிய ஆகாய ஒலியையும், அதற்கு அறிகுறியாய் உள்ள வரிவடிவத்தையும் மிகச் சிறப்பித்துக் கூறும் அந்நூன்மொழிகள் முகமனாய் (உபசாரமாய்) அமைவனவே. இதனை,

உணர்ந்து பரமபந்தமாய் உள்ள பிரணவத்தைத் தியானிப்பாயாக.

விளக்கவுரை

'தியானிப்பின் அது வேறாய்ப் புலப்பட்டுப் பந்தியா தொழியும்' என்பது கருத்து. உள் எழுத்து - உண்மையெழுத்து. அதனை 'ஒன்று' என்றது வகைபற்றி. 'ஒன்றே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. வரிவடிவைக் கூறவே, அவற்றால் அறியப்படும் ஒலிவடிவும் பெறப்பட்டது. 'ஒன்றில்லை' என்றது, 'உண்மை ஒன்றில்லை' என்றதாய், உபசாரமாதலை உணர்த்திற்று. ஒன்று - சிறிது. 'ஒன்றும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தல் பெற்றது. 'இல்லை' என்பதன்பின் 'ஆதலின்' என்பது எஞ்சி நின்றது.
இதனால், மந்திரம், சக்கரம் என்பவற்றது உண்மை கூறிப் பிரணவத் தியானம் வலியுறுத்தப்பட்டது.

உன்னிட்ட வட்டத்தில் ஒத்தெழு மந்திரம்
பின்னிட்ட ரேகை பிழைப்பது தானில்லை
தன்னிட்ட டெழுந்த தகைப்பறப் பின்னிறகப்
பன்னிட்ட மந்திரம் பார்க்கலு மாமே. ***#1259***

தியானத்தின் பொருட்டு வரையப்பட்ட அறை களில் பொருந்தி விளங்கும் எழுத்துக்கள் அவ் அறைகளின் எல்லைக் கோடுகளைக் கடந்து ஒன்று மற்றொன்றிற் செல்வதில்லை. ஆகை யால், தியானிப்பவன் அவைகளைத் தனக்கு இயல்பாயுள்ள மறதி யாகிய தடை அற்றொழிய, அவ் அறைகளின் வழியே நின்று நினைக்கும் நிலையுடையனாயின், மேற்சொல்லிய உண்மை மந்திரத்தை நேரே காணுதல் கூடும்.

விளக்கவுரை

'உன்ன' என்பதன் ஈற்று அகரமும், 'பின்னி, பன்னி' என்பவற்றின் ஈற்று இகரமும் தொகுத்தலாயின. 'உன் வட்டம்' என இயைத்து வினைத்தொகை யாக்கலுமாம். தன் இட்டு - தன்னைக் கீழ்ப்படுத்தி.
இதனால், வரிவடிவங்கள் உபசாரத்தால் 'மந்திரம்' எனவும், 'சக்கரம்' எனவும் கூறப்படுகின்றன என்றமை பற்றி, அதன் கண் உறுதி நெகிழலாகாது என்பது கூறப்பட்டது. நெகிழின் பயன் விளையாது; நெகிழாத வழியே பயன் விளையும் என்றவாறு.

பார்க்கலு மாகும் பகையறு சக்கரம்
காக்கலு மாகும் கருத்தில் தடம்எங்கும்
நோக்கலு மாகும் நுணுக்கற்ற நுண்பொருள்
ஆக்கலு மாகும் அறிந்துகொள் வார்க்கே. ***#1260***

மேற்கூறிய முறைகளை அறிய வல்லவர்க்கு மந்திரங்களின் உண்மைக்

காட்சியைக் காணுதலும், புறப்பகை அகப் பகைகளை நீக்குவதாய சக்கரத்தை நழுவ விடாது பற்றி அதனாற் பயன் அடைதலும், இருந்த இடத்திலிருந்தே எவ்விடப் பொருளையும் அகத்தில் காண்டலும், நுண்ணியவற்றிலும் நுண்ணிதாகிய சிவத்தைக் தன்னிடத்திலே பெறுதலும் கூடும்.

விளக்கவுரை

பார்த்தலுக்குச் செயப்படு பொருள் மேல் நின்று வந்தது. 'கருத்தில் நோக்கல்' என இயையும். தடம் - வழி; இடம் ஆகு பெயர். நுணுக்கற்ற நுண்பொருள் - தன்னினும் நுணுகியது ஒன்றில்லாத நனி நுண்பொருள். இதனால், மேலதன்கண் நெகிழ்வின்றி நிற்றலால் வரும் பயன்கள் பல கூறப்பட்டன.

அறிந்திடுஞ் சக்கரம் ஆதி எழுத்து
விரிந்திடுஞ் சக்கரம் மேலெழுத் தம்மை
பரிந்திடுஞ் சக்கரம்பார் அங்கி நாலும்
குவிந்திடுஞ் சக்கரம் கூறலு மாமே. ***#1261***

ஏரொளிச்சக்கரத்தில் உள்ள எழுத்துக்கள் மேல் 'அம் முதல் ஆறும்' என்னும் மந்திரத்தில் *(1247)* கூறியபடி முதலில் ஆறும், ஈற்றில் ஆறும், இடையில் நான்கும் ஆகிய எழுத்துக்கள் முறையே 'சிவன், சத்தி, அக்கினி' என்னும் மூவருக்கும் உரியன ஆதலின், அவை முத்திறமும் கூடிநிற்கும் இச்சக்கரத்தின் பெருமை சொல்லில் அடங்குவதோ!

விளக்கவுரை

'நாலும் அங்கி; பார்' என மாற்றி இருதொடராக்கி உரைக்க. 'நாலும்' என்றது 'மேற்கூறியவாறு' என நினைவுறுத்திய வாறு.
இதனால், இச்சக்கரத்தின் பெருஞ்சிறப்புக் கூறப்பட்டது.

கூறிய சக்கரத் துள்எழு மந்திரம்
ஆறியல் பாக அமைந்து விரிந்திடும்
தேறிய அஞ்சுடன் சேர்ந்தெழு மாரண
மாறியல் பாக மதித்துக்கொள் வார்க்கே. ***#1262***

ஏரொளிச் சக்கரத்தில் உள்ள எழுத்துக்களாகிய மந்திரங்கள், சிற்றறிவினார் மதித்து விரும்பும் 'தம்பனம், வசியம், மோகனம், ஆகருடணம், உச்சாடனம்' என்னும் ஐந்தோடு 'மாரணம்' என்பதும் கூட ஆறாகின்ற மாறுபட்ட செயல்களை நல்லனவாக மதித்து விரும்புகின்றவர்கட்கு அவ்வாறே வேறுபட்டனவாகவும் அமைந்து விரிந்துநிற்கும்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை இறுதியில் வைத்துரைக்க. 'அவ் ஆறியல்பாகவும்'

என்னும் சுட்டும் எச்ச உம்மையும் தொகுத்தலாயின. தம்பனம் முதலியவற்றின் இயல்புகள் முன்னைத் தந்திரத்திற் சொல்லப்பட்டன. 'மாறு மதித்து' என இயையும். மாறுபட்டனவற்றை, 'மாறு' என்றார்.

மதித்திடும் அம்மையும் மாமாதும் ஆகும்
மதித்திடும் அம்மையும் மங்கனல் ஒக்கும்
மதித்தங் கெழுந்தவை மாரண மாகில்
கொதித்தங் கெழுந்தவை கூடகி லாவே. *#1263*

மேற்கூறிய அம் மந்திரங்கள் அவரவரது பக்குவத் திற்கு ஏற்ப, ஒருத்தியே ஆய அருட்சத்தியாயும், அளவற்றவளாய திரோதான சத்தியாயும் நிற்கும். அச்சத்திகள் பலவுமாகின்ற பராசத்தி நீறுபூத்த நெருப்பு போல்பவள். ஆதலின், அம்மந்திரங் களால் உலகப் பயன்கள் கைகூடுமாயினும், பிறரை நலிய எண்ணு கின்ற தம்பனம் முதலியவைகளைச் சிறப்பாக மாரணத்தைப் பெரிதாக மதித்து அவற்றைச் செபித்தால் அவை சீற்றம் அடையும்; அதனால், அவ் இழி பயன்கள் கைகூட மாட்டா.

விளக்கவுரை

அருட்சத்தி, பராசத்தி இவர்களையே 'அம்மை' என்றார், சிறப்பு நோக்கி. மாமாது - பெரியவள்; என்றது எண் பற்றி. 'ஆகும்' என்பது எச்சம். மங்கி உள்ள அனல் அதன் இயல்பு அறியாது தீண்டினாரைச் சுடுமாதலின், அது அம்மையின் இயல்பறியாது தீங்கிற்குத் துணைபுரிய வேண்டி அணுகுவாரை ஒறுக்கின்ற பராசக்திக்குத் தொழில் உவமையாயிற்று. 'ஆகில்' என்பதை, 'மதித்தங் கெழுந்தவை' என்றதனோடும் கூட்டுக. 'காரணமாகில்' என்பது பாடம் அன்று. கொதித்து அங்கு எழுந்து - அவ்விடத்துக் கொதித்து எழுதலால். பின்னர், 'கூடகிலா' என்றே ஒழிந்தாராயினும், அவற்றிற்கு எதிரானவை விளைதல் இதனால் பெற்றாம். இங்ஙனமாயினும் சிறுபான்மை அப்பயன்கள் அப்பொழுதைக்கு நலமாய் விளைதலும், மேல், 'ஆறியல்பாக அமைந்து விரிந்திடும்' என்றதனாற் பெறுதும்,

கூடிய தம்பனம் மாரணம் வச்சியம்
ஆடியல் பாக அமைந்து செறிந்தடும்
பாடியுள் ளாகப் பகைவரும் வந்துறார்
தேடிஉள் ஆகத் தெளிந்துகொள் வார்க்கே. *#1264*

ஏரொளிச் சக்கரத்தின் சிறப்பை ஆராய்ந்து அதனை, 'இம்மை மறுமை நலங்களைப் பயக்கும் திருவருளின் வாயில்' என்பதாக உள்ளத்திலே தெளிந்து, அவ்வாற்றால் அதனை மேற்கொள்பவர்க்கு, மேலே கூறிய தம்பனம் முதலிய ஆற்றல்கள் விளையாட்டின் தன்மையாக அவர்களிடம் தாமேவந்து பொருந்தி நிற்கும். அதனால், அவர்களைக் கெடுக்க

எண்ணுகின்ற பகைவரும் அவர் இருக்கும் திருவருளாகிய பாசறைக்குள் புகமாட்டாதவராவர்.

விளக்கவுரை

'ஆதலின், அவர் அவைபற்றி இச்சக்கர வழி பாட்டினைச் செய்யார்' என்பது குறிப்பெச்சம். தம்பனம் முதலிய ஆறனுள் மூன்றை எடுத்தோதிப் பிறவற்றை உபலக்கணத்தால் தழு வினார், வச்சியம் - வசியம்; ஆரியச்சிதைவு, 'ஆடியல்பாக அமைந்து செறிந்திடும்' என்றதனால், உயர்ந்தோரும் சிலவிடத்து உலகரை மகிழ்வித்தற்கு மாரணம் ஒழிந்தவற்றைப் பிறர்க்குத் தீங்கு பயவாத வகையில் சிறுபான்மை செய்தல் பெறப்படும். 'பகைவரும் வந்துறார்' என்றேபோயினாரேனும், 'பகைவரது மந்திர வலிகளும், அவரால் ஏவப்படும் தீய தெய்வங்களும் புகமாட்டா' என்பதும் கொள்க.

'ஆதி மந்திரம் அஞ்செழுத் தோதுவார் நோக்கும் மாதி ரத்தினும் மற்றைமந் திரவிதி வருமே' *1*
என்ற சேக்கிழார் திருமொழி இங்கு ஆழ்ந்து உணர்தற்கு உரியது. இம் மூன்று மந்திரங்களாலும், 'ஏரொளிச் சக்கர வழிபாடு தம்பனம் முதலிய இழி பயன்களையும் பயப்பதாயினும், அஃது உயர்ந்தோர்க்கு ஆகாது' என்பது கூறப்பட்டது.

தெளிந்திடுஞ் சக்கர மூலத்தி னுள்ளே
அளிந்த அகாரத்தை அந்நடு வாக்கிக்
குளிர்ந்த அரவினைக் கூடிஉள் வைத்து
அளிந்தவை அங்கெழும் ஆடிய காலே. ***#1265***

ஏரொளிச் சக்கரத்துள் அகார கலா சக்கரத்தை மூலா தாரத்தில் கருதிக் குண்டலினியோடு பொருந்த வைத்துத் தியானத்தைத் தொடங்க, கலா சக்கரங்கள் பலவும் பிராணாயாமத்தால் முறையே அருளுருவாய் முதிர்ந்து பயன் தரும்.

விளக்கவுரை

'சக்கர அகாரத்தை' எனக் கூட்டுக. அளித்தல் இரண்டிடத்தும் அருளுருவாதல். ஆடுதல், அசைதல், இயங்கல். 'நாடிய கால்' என்பது பாடமாயின் 'நளிந்தவை' எனப்பாடம் ஓதுக. நளிதல் - செறிதல். குளிர்ச்சி, உறக்கத்தைக் குறித்தது. 'வைத்து' என்றதனை, 'வைக்க' எனத் திரிக்க. 'வைக்க' என்றே போயினா ராயினும், 'வைத்துத் தொடங்க' என்றலே கருத்தாதல், பின்னர் 'எழும்' என்பதனால் பெறப்படும். 'காலால்' என்னும் மூன்றனுருபு தொகுத்தலாயிற்று. 'காலால் எழும்' என உடம்பொடுபுணர்த்து ஓதியதனால், 'பிராணாயாமம் செய்ய' என்பது

கூறியதாம்.
இதனால், ஏரொளிச் சக்கரத்தின் தியான முறை கூறப்பட்டது.

காலரை முக்கால் முழுதெனும் மந்திரம்
ஆலித் தெழுந்தமைந் தூறி யெழுந்தவாய்ப்
பாலித் தெழுந்து பகையற நின்றபின்
மாலுற்ற மந்திரம் மாறிக்கொள் வார்க்கே. ***#1266***

கால், அரை, முக்கால், ஒன்று என இங்ஙனம் பல வகையால் வரையறுக்கப்பட்ட மாத்திரைகளின் படி அகாரம் முதலிய கலைகள் மந்திரங்களாக உச்சரிக்கப்பட்டுத் தோன்றிப் பொருந்தி அழுந்தி நின்று வளர்ந்து தம் தம் பயனைத் தந்து மேற்போய் பிறவி யாகிய பகை நீங்கும்படி முற்றி நிற்குமாயின், ஏரொளிச் சக்கரத்தில் உள்ள அம்மந்திரங்களை அம் முறையானே மாறி நிற்கக் கொண்டு செபிக்கின்ற அவர்களுக்கு அம்மந்திரங்கள் அவர்களை மிகவும் விரும்புகின்றனவாய் அமையும்; 'அஃதாவது அவர்க்குக் கைவந்து நிற்கும்' என்பதாம்.

விளக்கவுரை

'காலரை முக்கால் முழுது' என்றது, 'பல்வேறு வரையறையானவை' என்றவாறு. பிராசாதகலைகளின் மாத்திரை யளவை 'பிராசாத சட்கம்' முதலிய நூல்களிற் காண்க. ஆலித்து - ஒலித்து; ஒலிக்கப்பட்டு, ஒலிக்கப்படுதல் சக்கரத்தில் உள்ள எழுத்துக் களின் வழியாம். 'மாலுற்ற' என்றது முற்று. 'மந்திரம் மாறிக்கொள் வார்க்கு மாலுற்ற' என்க. இதனால், 'ஏரொளிச் சக்கர மந்திரங்களை மாத்திரை பிறழாது உச்சரித்தல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

கொண்டஇம் மந்திரம் கூத்தன் எழுத்ததாய்ப்
பண்டைஉள் நாவில் பகையற விண்டபின்
மன்றுள் நிறைந்த மணிவிளக் காத்ஞளி
என்றும் இதயத் தெழுந்து நமவே. ***#1267***

பிராசாத கலைகளுக்குரிய மந்திரங்களாகக் கொள்ளப்பட்ட ஏரொளிச் சக்கர எழுத்துக்கள் இறைவன் எழுத் தாகவே ஆகி, யோக முறைப்படி உள்நாக்கில் மாறுபாடு நீங்க ஒலிக்கப் பட்ட பின்னர், முத்திக்கு நேரே வாயிலாகிய திருவைந்தெழுத்து இருதயத்திலே தோன்றி, அவ்வம்பலத்தில் நிறைந்து நிற்கின்ற, சிவமாகிய தூண்டாவிளக்காய் என்றும் ஒளிவிட்டு விளங்கும்.

விளக்கவுரை

பண்டை - பண்டை நெறி. 'பண்டையின்' என ஐந்தன் உருபு விரிக்க. பகை - மாறுபாடு. 'இன்றும்' என்பது பாடம் அன்று. 'விண்டபின் நம

எழுந்து ஆயிடும்' என முடிக்க. 'நம' என்பது, திருவைந்தெழுத்தை முதற்குறிப்பாற் கூறியவாறு. பிராசாத யோகம் முதிர்ந்தவர்க்குத் திருவைந்தெழுத்து மந்திரம் எளிதில் பயன்தரும் என்றவாறு. இதனால், ஏரொளிச்சக்கரத்தின் முடிந்த பயன் கூறப்பட்டு.

*6.10.*வயிரவச் சக்கரம்

அறிந்த பிரதமையோ டாறும் அறிந்து
அறிந்த அச்சத்தமி மேலவை குற்ற
அறிந்தவை ஒன்றுவிட் டொன்றுபத் தாக
அறிந்த வலமது வாக நடத்தே. *#1268*

முற்பக்கம் (பூர்வ பக்கம்) பிற்பக்கம் (அபர பக்கம்) என்னும் இருபக்கங்களில் உள்ள பதினைந்து திதிகளையும் அவ்ஆறு திதிகளாகப் பிரிக்கும் முறையில் சக்கரத்தை அமைத்து, உவாக்களோடு கூடப் பதினாறு திதிகட்கும் பதினாறு உயிரெழுத்துக்களில் அகாரத்தைக் கடையுவாவிற்கும், (அமாவாசைக்கும்) பதினாறாவது உயிரெழுத்தைத் தலையுவாவிற்கும் (பௌர்ணிமைக்கும்) உரியவாக வைத்து, ஏனையவற்றை ஆகாரம் முதலாக நேர்முறையில் முற்பக்க பிரதமை முதலியவற்றிற்கு உரியவாக எண்ணியும், பதினைந்தாம் உயிர் முதலாக எதிர்முறையில் பிற்பக்கப் பிரதமை முதலியவற்றிற்கு உரியவாகவும் கொண்டு, முதல் அறை ஒன்றில் மட்டும் அகாரத்தை யும், அடுத்து உள்ள அறைகளில் முறையே வலமாக ஆகாரம் முதல் பதினைந்தாம் உயிர்முடிய ஓர் எழுத்தை இவ்விரண்டு அறைகளிலும், பதினாறாம் உயிரெழுத்தை மட்டும் ஓர் அறையிலும் அடைக்க, (14X2) இருபத்தெட்டும், இரண்டும் ஆக முப்பது அறைகள் நிரம்ப, ஆறு அறைகள் நடுவில் வெற்றிடங்களாய் நிற்கும். அவற்றிற்கு நடுவில் 'ஓம் பம்' என்னும் பிரணவ பீசங்களையும், அவற்றின் கீழ்த் தொடங்கி, 'பைரவாய நம' என்னும் ஆறெழுத்துக்களை ஆறு அறைகளிலும் எழுதச்சக்கரம் நிரம்பியதாம். இரண்டிரண்டாய் உள்ள ஆகாரம் முதலியவற்றை அமாவாசை தொடங்கி அகரத்தை அடுத்த ஆகாரம் முதலியவற்றை ஒன்றுவிட்டு ஒன்றான அறைகளில் நேரே முற்பக்கப்பிரதமை முதலியவாக ஓர் எழுத்தைப்பத்துருச் செபித்துப் பௌர்ணிமை முடிவில் நடுவில் உள்ள பிரணவ பீசங்களோடு மூலமந்திரத்தைப் பத்துருச்செபித்து அமாவாசை முதல் பௌர்ணிமை முடிய ஒவ்வொரு நாளும் இவ்வாறு வழிபாடு செய்தல் வேண்டும். பின்பு பௌர்ணிமை தொடங்கிப் பிற்பக்கப் பிரதமை முதல் ஒவ்வொருநாளும் பதினைந்தாம் உயிர் முதலாக எதிர் முறையில் அவ்வாறே ஒன்றுவிட்டொன்றாக ஒவ்வோர் எழுத்தையும் பத்துருச் செபித்து,

முடிவில் மேற்கூறியவாறு நடுவில் உள்ள மந்திரத்தைச் செபித்து வழிபாடு செய்ய வேண்டும். வழிபடும் நாளில் அன்றைய திதிக்குரிய எழுத்து முதலாகத் தொடங்கி அதற்கு முன்னுள்ள எழுத்தில் வந்து முடியவே செபித்தல் வேண்டும். எழுத்துக்களை முதலில் பிரணவத்தையும், ஈற்றில் மகாரத்தையும் கூட்டி உச்சரித்தலேமுறை. பதினைந்தாம் உயிரைமட்டும் ஹகாரத்தின் மேல் ஏற்றி 'ஹம்' எனக்கூறல் வேண்டும். அகாரம் ஒழிந்த பிற உயிர்களையும் ஹகாரத்தின் மேல் ஏற்றிக் கூறுதல் வடமொழி வழக்கு.

விளக்கவுரை

வயிரவர் எந்நாளும் பாதுகாப்பவராதல் பற்றி, 'கால பைரவர்' எனப்படுதலின், கதிரளவை, (சௌரமானம்) மதியளவை (சாந்திரமானம்) இரண்டிற்கும் பொதுவான திதிக்காலத்தை ஒட்டி வழிபடுதல் வேண்டும் என்பது இம் முறையால் அறிந்து கொள்ளப் படும். 'வலமாக' என்றாரேனும் அது முற்பக்கத்தில் என்பது எழுத்து முறையாற் பெறப்படுதலின், பிற்பக்கத்தில் எதிர் முறையால் இடமாகச் செல்ல வேண்டும் என்பது உணர்ந்து கொள்ளப்படும். நடுவில் பிரணவம், பீசம், மூலமந்திரம் இவற்றை எழுதுதல் பொது முறையானே கொள்ளப்படும். 'நடவே' என்பது பாடம் அன்று. இங்ஙனம் கூறப்பட்ட இச்சக்கர அமைப்பினைக் காண்க.
மேல் வை குற்ற - பின்னர்ப் பொருந்தியுள்ள எழுத்துக்கள். இவற்றை 'சத்தமி முதலாக' என்றமையின், ஒரு வரிசையில் ஆறு எழுத்துக்கள் உள்ளமை விளங்கும்.
இதனால், வயிரவச் சக்கரத்தின் அமைப்புக் கூறப்பட்டது.

நடந்த வயிரவன் சூல கபாலி
கடந்த பகைவனைக் கண்ணது போக்கித்
தொடர்ந்த உயிரது உண்ணும் பொழுது
படர்ந்த உடல்கொடு பந்தாடல் ஆமே. ***#1269***

இச்சக்கரத்தில் விளங்கும் வயிரவ மூர்த்தி, சிறப்பாகச் சூல கபாலங்களை ஏந்திய வேக வடிவத்தினர். அதனால், அவர் தம் அடியவரை வென்ற பகைவரைத் தாம் போர்ச்சூழ்ச்சி அற்றவராகச் செய்து, அவர்தம் உயிரையும் போக்கித் தமது வெற்றிக்கு அறிகுறியாக அவர்களது உயிர் நீங்கிய உடலங்களைப் பந்துபோல எறிந்து வீர விளையாட்டுச் செய்தருளுவார்.

விளக்கவுரை

கண், இங்கே, அறிவு. 'பகைவர்' என்றது அடியவர் தவச் செயலுக்குப் பகையாய் நிற்பவரை.

'ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்' *1*
என்னும் திருக்குறள் உரையில் பரிமேலழகரும், 'ஒன்னார், உவந்தார்' எனப்பட்டவரை, 'தம் அறத்&#

ஆமேவப் பூண்டருள் ஆதி வயிரவன்
ஆமே கபாலமும் சூலமும் கைக்கொண்டங்கு
ஆமே தமருக பாசமும் கையது
ஆமே சிரத்தொடு வாளது கையே. ***#1270***

நரசிங்கன், திரிவிக்கிரமன் இவர்களது தோலைப் போர்த்துள்ள ஆதி வயிரவர் மேற்கூறிய சூல கபாலங்களைச் சிறப்பாக ஏந்தி விளங்குவார். இனித் தமருகம், பாசம், வெட்டப்பட்ட தலை, வாள் என்னும் இவைகளையும் அவர் கொண்டிருப்பார்.

விளக்கவுரை

'ஆகம் மேவ" என்பது குறைந்து நின்றது. ஆகம் - உடம்பு; தோல்; ஆகுபெயர். "ஆகம்" என்றதனை வயிரவருடைய தாக்கி, திருமேனியில் எலும்பு முதலியவைகளை விரும்பிப்பூண்ட என உரைத்தலுமாம். இதில் பூணுதற்குச் செயப்படுபொருள் ஆற்றலால் கொள்ளப்படும். இரண்டாம் அடி முதலிய மூன்றனையும் "ஆமே" என்பவற்றோடு முன்னே கூட்டி முடிக்க. அவ்விடத்து முதற்கண் நின்றது வயிரவரது செயலாம். இதனால், வயிரவரது கையில் உள்ள படைக்கலம் முதலியவை கூறப்பட்டன.

கையவை ஆறும் கருத்துற நோக்கிடு
மெய்யது செம்மை விளங்கு வயிரவன்
துய்ய ருளத்தில் துலங்குமெய் உற்றத்தாப்
பொய்வகை விட்டுநீ பூசனை செய்யே. ***#1271***

ஆறுகைகளும் நெஞ்சில் விளங்கும் படி நினைக்கப் படுகின்ற திருமேனி செந்நிறம் உடையதாக விளங்குகின்ற வயிரவ மூர்த்தியினது, தூயவர் உள்ளத்தில் துலங்கி நிற்பதாகிய வடிவம், உனது நெஞ்சிலும் உள்ளதாகக் கருதி, மாணவகனே, நீ வஞ்சனை யற்ற, மெய்யான அன்போடு அக்கடவுளை வழிபடுதலைச் செய்.

விளக்கவுரை

'செய்தால் பகைவரை அழிக்கும் பயன் உனக்குக் கிட்டுவதாகும்' என்பது குறிப்பெச்சம். பொய் - வஞ்சனை. அஃதாவது உறுதிப்பாடு இன்மை. மேலே குறிப்பால் உணர்த்திய வயிரவ மூர்த்தி ஆறு கைகளை உடையவர் என்பது இங்கு வெளிப்படையாக உணர்த்தப்பட்டது. இதனை, இந்நூலாற் பெறுதும். பெறவே, மேற்கூறிய படைக்கலம்

முதலியவைகளில் சூலம், தமருகம், வாள் என்பன வலக்கைகளிலும், பாசம், கபாலம், வெட்டப்பட்ட தலை என்பன இடக்கைகளிலும் இருத்தல் புலனாகும்; தலையும், கபாலமும் பிரமனுடையனவே. அவை முறையே தலையைக் கிள்ளினமையை யும், அதன் ஓட்டில் எங்கும் சென்று குருதிப்பலி ஏற்றமையையும் நினைப்பிக்கும். நோக்கிடு மெய், வினைத்தொகை. 'செம்மையாக' என ஆக்கம் வருவிக்க. 'வயிரவன் மெய்' என இயையும்.

இதனால், வயிரவத் தியான முறை கூறப்பட்டது.

பூசனை செய்யப் பொருந்திஓர் ஆயிரம்
பூசனை செய்ய அதுஉடன் ஆகுமால்
பூசனை சாந்துசவ் வாது புழுகுநெய்
பூசனை செய்துநீர் பூசலை வேண்டுமே. *#1272*

வயிரவ வழிபாட்டினைச் செய்ய விரும்பினால், மேற்கூறிய வயிரவச் சக்கரத்தினை மேற்கூறிய வகையில் ஓர் ஆயிரம் நாள் வழிபடல் வேண்டும். வழிபடின் அச்சக்கர வழிபாட்டின் பயன் கூடுவதாகும். அவ்வழிபாட்டினை, சந்தனம், சவ்வாது, புனுகு, நெய் என்னும் இவைகளைச் சிறப்பாகக் கொண்டு செய்து. அது நிறை வெய்திய பின் பகைவர்பால் உங்கள் பகையைப் புலப்படுத்திக் கொள்ளுங்கள்.

விளக்கவுரை

'அவ்வாறு செய்தால் வெற்றி கிடைக்கும்' என்பது குறிப்பெச்சம். வாம மார்க்கத்தை விரும்புவார் இதன் இரண்டாம் அடியை 'மதுவுடன் ஆகுமால்' எனப் பாடம் ஓதுவர்.

இதனால், வயிரவ வழிபாட்டு முறை கூறப்பட்டது.

வேண்டிய வாறு கலகமும் ஆயிடும்
வேண்டிய ஆறினுள் மெய்யது பெற்றபின்
வேண்டிய ஆறு வரும்வழி நீநட
வேண்டிய வாறது வாகும் கருத்தே. *#1273*

ஒரு வரிசையில் ஆறு அறைகளை உடைய சக்கர வழிபாட்டின் பயன் கிடைக்கப்பெறின் பகைவர்பால் நீ கருதிய மாறுபாட்டுச் செயல் நீ நினைத்தவாறே முடியும். இனித்தம்பனம் முதலிய அறு செயல் ஆற்றலை அடைய விரும்பி இவ்வழிபாட்டினைச் செய்யின் அவ்விருப்பமும் இதனால் நிறைவுறும்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதற்கண் வைத்து உரைக்க. 'கலகமும் வேண்டியவாறு ஆயிடும்' என்க. மெய் - சித்தி. 'ஏரொளிச் சக்கரத்திற் கூறப்பட்ட ஆறுபயன்கள் இதனாலும் கிடைக்கும்' என்றற்கு

அதனையும் இறுதிக்கண் கூட்டிக் கூறினார்.
இதனால், இச்சக்கரத்தின் பயன் பலவும் முடித்துக் கூறப்பட்டது.

6.11. சாம்பவி மண்டலச் சக்கரம்

சாம்பவி மண்டலச் சக்கரம் சொல்லிடில்
ஆம்பதம் எட்டாக இட்டிடின் மேலதாக்
காண்பதம் தத்துவம் நால்உள் நயனமும்
நாம்பதம் கண்டபின் நாடறிந் தோமே. *#1274*

'சாம்பவி மண்டலம்' என்னும் பெயரினதாகிய சக்கரத்தின் அமைப்பினை யாம் சொல்லின், வரிசைக்கு எட்டு அறைகளாக எட்டு வரிசையில் அறுபத்து நான்கு அறைகளைக் கீறி, அவற்றின் நடுவில் நான்கு அறைகளை, 'சிவம், சத்தி, நாதம், விந்து' என்னும் நான்கும் அருவத் திருமேனிகளாகக் கருதி, அவற்றையே அச்சக்கரத்தின் கண்களாக வைத்து, அனைத்தையும் முற்ற நோக்குதல் வேண்டும். அப்பொழுதே அச்சக்கர வழிபாட்டினை நாம் அறிந்தவராவோம்.

விளக்கவுரை

'மண்டலம், சக்கரம்' என்பன ஒருபொருட் சொற் களாதலின், 'சாம்பவி மண்டலச் சக்கரம்' என்பது இருபெயரொட்டு. 'இட்டிடின் காண்பதம்' என இயையும். மேல் என்றது இரட்டுற மொழிதலாய், உள்ளிடத்தையும், மேலிடத்தையும் உணர்த்தி, இரண்டாவது பொருளில் 'தத்துவம்' என்பதனோடு இயைய, "நால்" என்பது காண்பதம் என்பதனோடும் சென்றியைந்தது. தத்துவம் நாலாக என ஆக்கம் வருவிக்க. 'உள்ளே நயனமும் கண்டு' எனக் காணுதலை நயனத்திற்குங் கொள்க. நாடு - நாடுதல்; வழிபடுதல்; முதனிலைத் தொழிற்பெயர்.

நாடறி மண்டலம் நல்லஇக் குண்டத்துள்
கோடற வீதி கொணர்ந்துள் இரண்டழி
பாடறி பத்துடன் ஆறு நெடுவீதி
ஈடற நாலைந் திடவகை ஆமே. *#1275*

நாடறிந்த மண்டலமான இந்த நல்ல சக்கரத்தில் வளைதல் இல்லாது நேராய்ச் செல்லும் வீதிகளை நாற்புறத்தும் அமைத்து, அவற்றில் ஒவ்வொரு வீதிக் குள்ளாலும் நடுவில் இரண்டிரண்டு அறைகளை இடைவெளியாகவிடுக. 'நெடிய வீதி' எனப்பட்டவைகளில் உள்ள அறைகள் பதினாறாகும். இங்ஙனம் ஆனபின் வீதிக்குள் அமைந்த அறைகளின் எண்ணிக்கையும், உட்சுற்றில் உள்ள அறைகளின் எண்ணிக்கையும் தனித்தனி இருபதாம்.

விளக்கவுரை

பாடு அறி - படுதல் (உண்டாதல்) அறியப்பட்ட. பத்து, ஆறு என்பன அறைகள். ஈடேறுதல் - இடையீடின்றி வலம் செல்லல். 'நடுவீதி' என்பதும். 'ஏடற என்பதும் பாடம் அல்ல.

நாலைந் திடவகை உள்ளதோர் மண்டலம்
நாலுநல் வீதியுள் நந்நால் இலிங்கமா
நாலுநற் கோணமும் நண்ணால் இலிங்கமா
நாலுநற் பூநடு நண்ணல்அவ் வாறே. ***#1276***

இருபது அறைகளை உடைய ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனிவட்டமாய் நிற்கும். நல்ல வீதிகள் நான்கிலும் திசைக்கு நான் காகப் பதினாறு இலிங்க உருவங்கள் இருக்க, நடுவில் உள்ள நான்கு அறை களிலும் அவ்வாறே நான்கு இலிங்கங்கள் நடுவில் உள்ள ஓர் இலிங்கத் துடன் நான்கு தாமரை மலர்களோடு நடுவொரு தாமரை மலரில் இருக்கும்.

விளக்கவுரை

பெருந்திசை பற்றிப் பதினாறே கூறினும், கோணத்திசை நான்கிலும் நான்கு இலிங்கங்கள் கொள்க. நள் - நடு; இதனைக் கோணத்திற்கும் கூட்டி, 'நள் நாலு கோணமும் நள் நால் இலிங்கமா' என்க. இதனானே, நடுவிலும் ஓர் இலிங்கம் இருத்தல் கொள்ளப்படும். இதனால், இலிங்கங்கள் அனைத்தும் இருபத்தைந்தாகும். இது சதாசிவமூர்த்தியே மாகேசுர மூர்த்தி தம் இருபத்தைந்து ஆதலை விளக்கும். "அவ்வாறே" என்பதனை, "கோணமும்" என்றதன் பின்னர்க் கூட்டுக. கோணமும் அவ்வாறே 'நண்ணலையுடையது' என ஒரு சொல் வருவித்து முடிக்க.

ஆறிரு பத்துநால் அஞ்செழுத் தஞ்சையும்
வேறுரு வாக விளைந்து கிடந்தது
தேறிநீர் உம்மில் சிவாய நமஎன்று
கூறுமின் கூறிற் குறைகளும் இல்லையே. ***#1277***

எட்டு எட்டு*(8X8)* அறுபத்து நான்கு அறைகள் உள்ள இச்சக்கரத்தில் சுற்று வீதியில் உள்ளவை இருபத்தெட்டு, நடு வில் உள்ளவை நான்கு ஆக முப்பத்திரண்டுடன் திசைக்கு இரண்டாக நான்கு திசைகளிலும் இடைவெளியாக நிற்கும் அறைகள் எட்டுக் கூட அறைகள் நாற்பது. நடுவு நான்கு அறைகளின் நடுவையும் ஓர் அறை யாகக் கொள்ள, கூடிய அறைகள் நாற்பத் தொன்று இவைகளில்.

உடலெழுத்துக்களில் ஐவருக்கத்து இருபத்தைந்தையும் இருபத்தைந்து இலிங்கங்கட்கும் உரிய எழுத்துக்களாக நடுவண் ஐந்தில் தென்கிழக்கு முதலாகத் தொடங்கிப் பின் மேற்கு முதலாக வலஞ்சென்று இலிங்கங்கட்கு அணியவான கீழ் அறைகளில் அடைத்தல் வேண்டும். பின்னர் யகரமாதி நான்கு, ‹ கரமாதி நான்கு ஆக எட்டினையும் சுற்று வீதியில், இடைவெளியாக உள்ள எட்டு அறைகளில் மேற்கு முதல் வலமாக அடைத்து, உட்சென்று வெற்றிடமாய் உள்ள எட்டு அறைகளில் முறையே, 'ள, க்ஷ, ஓம், சி, வா, ய, ந, ம' என்னும் எட்டு எழுத்துக்களையும் அடைத்து நிரப்பிச் செபித்தல் வேண்டும். செபிக்கின்

குறையின்றி வாழலாம்.

விளக்கவுரை

ஆறு + இருபது + நால் + அஞ்சு = முப்பத்தைந்து. இரண்டாவது அஞ்சு, திருவைந்தெழுத்து, 'வேறு உருவாகக் கொண்டு' என ஒருசொல் வருவிக்க. உம்மில் கூறுமின் - வாய்க்குள் மெல்லெனச் செபியுங்கள். அஞ்செழுத்துக்களையே எடுத்துக்கூறினாராயினும் ஓங்காரமும் இயல்பாகக் கொள்ளப்படும்.
ஐவருக்கத்தது இருபத்தைந்து எழுத்துக்களும் மகேசுர எழுத்துக் களாய் நிற்றல் வெளிப்படையாக அறியப்படவே, பிரணவத் தோடு கூடிய திருவைந்தெழுத்து, சதாசிவ எழுத்தாதல் குறிப்பால் அறியப்படும். இவை இருதிறத்தனவும் இங்ஙனமாகவே, இவற்றிற்கு இடைநிற்கும் யகாராதி பத்தும் ஆன்ம எழுத்துக்களாய் ஆன்மாவை மகேசுரர், சதா சிவர் இருவர்களிடை வைத்துக் கீழ் நின்று மேல் ஏற்றுவனவாம் என்க.
ஏரொளிச் சக்கரம் பிரணவயோக சக்கரமாய் முழுவதும் உயிரெழுத்துக்களாலே அமைதலும், இது சாம்பவ யோக சக்கரமாய் முழுவதும் உடலெழுத்துக்களாலும் திருவைந்தெழுத்தாலும் அமைதலும் கண்டு கொள்க.
இவை நான்கு மந்திரங்களாலும் சாம்பவி மண்டலச் சக்கரத்தின் அமைப்புக் கூறப்பட்டது. இவ்வாற்றால் அமைந்த இச்சக்கர வடிவைக் காண்க.
இதில் உள்ள எழுத்துக்களைக் ககாரம் முதலாக ஒவ்வொன் றனையும் பத்துப் பத்து உருச் செபித்து, முடிவில் திருவைந் தெழுத்தையும் அவ்வாறு செபித்தல் ஒருவட்டமாகும் என்பது மேலை அதிகாரத் தொடர்ச்சியால் விளங்கும். ஏரொளிச் சக்கர வழிபாடு ஞானசாதனமும், இது போக சாதனமும் ஆகும் என்க. இம் மந்திரத்துள், "குறைகளும் இல்லையே" என்றது போகம் பற்றிய குறிப்பேயாம்.

குறைவதும் இல்லை குரைகழல் கூடும்
அறைவதும் ஆரணம் அவ்வெழுத் தாகில்
திறம்அது வாகத் தெளியவல் லாருக்
கிறவில்லை என்றென் றியம்பினர் காண. ***#1278***

வேதத்தால் மூலமந்திரமாகச் சொல்லப்படுவதும் திருவைந்தெழுத்தேயாதலின், அதனை அவ்வாறே தெளிய வல்லவர்கட்கு உலகப் பயன்களிலும் யாதும் குறைதல் இல்லை. வழிநிலைக் காலத்தில் 'இறப்பு' என்பது இல்லாமல், சிவபெருமானது ஒலிக்கும் வீரக்கழலை யணிந்த திருவடியும் கிடைக்கும் என்று, அறிந்தோர் பன்முறையும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

விளக்கவுரை

இரண்டு, மூன்றாம் அடிகளை முதலிற் கொண்டு, "இறவில்லை' என்பதனைக் "குறைவதும் இல்லை" என்பதன் பின் கூட்டி உரைக்க. 'குரைகழலும்' என்னும் சிறப்பும்மை தொகுத்த லாயிற்று. அடுக்குப்பன்மைப்பொருட்டு.

காணும் பொருளும் கருதிய தெய்வமும்
பேணும் பதியும் பெருகிய தீர்த்தமும்
ஊணும் உணர்வும் உறக்கமும் தானாகக்
காணுங் கனகமும் காரிகை யாமே. ***#1279***

ஐம்புல நுகர்ச்சியவாக உலகில் காணப்படுகின்ற பல பொருள்களும், நினைக்கின்ற பலதெய்வங்களை வழிபடுதல், போற்றப்படுகின்ற திவ்ய தலங்களில் வாழ்தல், பெருகி ஓடுகின்ற நதி முதலிய புண்ணிய தீர்த்தங்களில் மூழ்குதல் ஆகியவற்றால் வரும் பயன்களும் நுகர்ச்சியும் நல்ல அறிவும், கவலையற்ற உறக்கமும், எல்லாம் தானேயாய் நிற்கும் பொன்னும் ஆகிய எல்லாம் இச் சாம்பவி மண்டலச் சக்கர வழிபாட்டினால் கிடைக்கும்.

விளக்கவுரை

தெய்வம் முதலிய மூன்றும் அவற்றால் ஆம் பயனைக் குறித்தன. பொன் உண்டாயின் எல்லாம் உளவாம்' என்பது பற்றி "தானாகக்காணும் கனகம்" என்றார். காரிகை - சாம்பவி; என்றது அவளுக்குரிய இச்சக்கரத்தை. 'காரிகையால் ' என்னும் உருபு தொகுத்தலாயிற்று. இவை இரண்டு மந்திரங்களாலும் சாம்பவி சக்கர வழிபாடு எல்லாப்பயனையும் தருதல் கூறப்பட்டது.

ஆமே எழுத்தஞ்சும் ஆம்வழி யேஆகப்
போமே அதுதானும்? போம்வழி யேபோனால்
நாமே நினைத்தன செய்யலும் ஆகும்
பார்மேல் ஒருவர் பகையில்லை தானே. ***#1280***

திருவைந்தெழுத்து எஞ்ஞான்றும் நன்மைக்கு ஏதுவாம் வழி உண்டாகவே செய்யும். அதனையே தெளிந்து வல்லாராதல் யாருக்குக்கூடும்! கூடுமாயின், நினைத்தவற்றை முடித்தல்கூடும். உலகில் நமக்குப் பகைவரும் இலாரவர்.

விளக்கவுரை

'ஆம் வழியே ஆக ஆம்' என முன்னே கூட்டி முடிக்க. போதல், மூன்றிடத்தும் 'கைவருதல்' என்னும் பொருட்டு "போமே" என்பதில் ஏகாரம் வினாப் பொருளது. 'தாமே' எனற்பாலதனை, "நாமே" எனத் தன்மையில் வைத்து ஓதினார். 'ஒருவரது பகை' என ஆறாவது விரிக்க.

'பகையும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று.

பகையில்லை என்றும் பணிந்தவர் தம்பால்
நகையில்லை நாணாளும் நன்மைகள் ஆகும்
வினையில்லை என்றும் விருத்தமும் இல்லை
தகையில்லை தானும் சலமது வாமே. *#1281*

திருவைந்தெழுத்தை ஓதுபவரிடத்தில் பகை, பெரியோர் இகழும் இகழ்ச்சி, இருவினை, பொருந்தாச் செயல்கள், இடையூறு என்பவை இல்லையாம். நாள்தோறும் நன்மைகளே விளையும். அம்மந்திரமே மலத்தை முற்றக் கழுவித் தூய்மையைத் தரும் நீராம்.

விளக்கவுரை

பணிந்தவர் - பணியப்பட்டவர். 'தம்மால்' எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். "நாணாளும் நன்மைகள் ஆகும்" என்பதை, "தகையில்லை" என்பதன்பின் கூட்டி உரைக்க. மூன்றாம் அடி உயிரெதுகை.

இவை இரண்டு மந்திரங்களாலும், 'முத்தியைத் தருவதாகிய திருவைந்தெழுத்து மந்திரத்தைப் போகம் வேண்டுவார் கணித்தல் பொருந்துமோ' எனப் பேரறிவில்லாதார்க்கு இச்சக்கரம் பற்றி எழும் ஐயம், 'திருவைந்தெழுத்து எல்லாவற்றையும் தரும்' எனக் கூறி நீக்கப்பட்டது.

ஆரும் உரைசெய்ய லாம்அஞ் செழுத்தாலே
ஆரும் அறியாத ஆனந்த ரூபம்ஆம்
பாரும் விசும்பும் பகலும் மதியதில்
ஊரும் உயிரும் உணர்வது மாமே. *#1282*

மண்ணும், விண்ணுமாகிய எல்லா இடத்திலும், பகலும், இரவுமாகிய எல்லாக் காலத்திலும் வாழ்தலை யுடைய எல்லா உயிரும், அவற்றின் உணர்வுமாய் இருப்பது திருவைந்தெழுத்து. அதனால், எதனை வேண்டுவோரும் அந்த மந்திரத்தை ஓதலாம். ஓதுவதால் உலகில் பிறர் அறிந்திலாத விடய இன்பமும், இறை இன்பமும் மிகவும் உளவாம்.

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி உரைக்க. "அஞ்செழுத்து" என்பது தாப்பிசையாய் இடைநின்றது. ஆனந்த ரூபம் - இன்பமே உருவாம் நிலை. இன்பம் இருவகை இன்பத்திற்கும் பொதுவாய் நின்றது. "மதியதில்" என்பதிலும் தொகுக்கப்பட்ட எண்ணும்மையை விரிக்க. ஊர்தல் - உலாவுதல்; வாழ்தல்.

இதனால், மேலதனை முடிந்தது முடித்தலாகக் கூறி, அது வலியுறுத்தப்பட்டது.

இம்மந்திரத்தின் பின் முன்பு "ஆதார ஆதேயம்" என்னும் அதிகாரத்துட்

போந்த. "உணர்ந்தெழு மந்திரம்" என்னும் மந்திரம் சிறிது வேறுபடப் பதிப்புக்களில் காணப்படுதல் மிகையாகும்.

*6.12.*புவனாபதிச் சக்கரம்

ககாராதி ஓர்ஐந்தும் காணிய பொன்மை
அகாராதி ஓர் ஆ றரத்தமே போலும்
சகாராதி ஓர்நான்கும் தாம்சுத்த வெண்மை
ககாராதி மூவித்தை காமிய முத்தியே. *#1283*

மேல் *(1158)* "தக்க பராவித்தை" என்னும் மந்திரத்தில் சொல்லப்பட்ட 'ஷ்ரீவித்தை' எனப்படும் பராவித்தையை மேற்கொள்ள மாட்டாத மெலியோர்க்கு அமைந்தது இச்சக்கரம் என்பது உணர்த்துதற்கு முதல் நான்கு மந்திரங்களால் ஷ்ரீ வித்தையின் இயல்பே கூறுகின்றார். ககாரத்தை முதலில் உடைய ஐந்தெழுத்துக் களும் பொன்னிறம் உடையன; ஹகாரத்தை முதலில் உடைய ஆறெழுத்துக்களும் செந்நிறம் உடையன; ஸகாரத்தை முதலில் உடைய நான்கெழுத்துக்களும் தூய வெண்ணிறம் உடையன. ககாரத்தை முதலில் உடையது முதலிய இம்மூன்று வித்தைகளும் 'போகம், மோட்சம்' என்னும் இரு பயன்களையும் தருவனவாம்.

விளக்கவுரை

ககாரத்தை முதலில் உடைமை பற்றி இவ்வித்தை (ஷ்ரீவித்தை) 'காதி வித்தை' என்றும் சொல்லப்படுகின்றது.
ககாரதி ஐந்தாவன: 'க, ஏ, ஈ, ல, ஹ்ரீம்' என்பன. ஹகாரத்தையே தமிழ் முறையால், "அகாரம்" என ஓதினார். ஹகாராதி ஆறாவன; 'ஹ, ஸ, க, ஹ, ல, ஹ்ரீம்' என்பன. ஸகாரத்தையே அவ்வாறு "சகாராதி" என்றார். ஸகாராதி நான்காவன; 'ஸ, க, ல, ஹரீம்' என்பன.
இப்பதினைந்தெழுத்தின் தொகுதி, 'பஞ்ச தசாட்சரி' எனப்படும்.
சத்திக்குரிய மந்திரங்களில் தலையானதாகக் கொள்ளப் படுவது, 'லலிதா திரிசதி தோத்திரம்' என்னும் முந்நூறு நாமங்கள் கொண்ட கோவை. அந்நாமங்கள் இங்குக் காட்டிய எழுத்துக்களில் ஒவ்வொன்றை முதலாகக் கொண்டு ஒரெழுத்திற்கு இருபதாக *(15X20)*முந்நூறு உள்ளன. எனவே, அவற்றின் முதலெழுத்துக் களின் தொகுதியே இப்பஞ்ச தசாட்சரியாம்.
இப் பதினைந்தெழுத்தும் இம்மந்திரத்திற் சொல்லப்பட்ட வாறு மூன்று பகுதிகளாகக் கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு பகுதியும் 'ஹ்ரீம்' என்பதை ஈற்றில் கொண்டு நிற்றல் அறியத் தக்கது. இம்மூன்று பகுதிகளும் முறையே, 'வாக்பவ கூடம், காமராஜ கூடம், சத்தி கூடம்' எனப்படுகின்றன. இம் மந்திர மாலையின் பெருமை. இப்பகுதிகளின்

பெருமை. இவ் வெழுத்துக்களின் பெருமை முதலி யவை இம்மாலையின் பூர்வ பாகம், *'வரிவஸ்யாரகசியம்'* என்னும் நூல் முதலியவற்றில், பலவாகச் சொல்லப்படுகின்றன. இவற்றிற்கு முதல் நூல், *'திரிபுரை'* என்னும் சத்திக்குரிய உபநிடதமாகிய திரிபுரோபநிடதமாம்.
'இப் பஞ்ச தசாட்சரி மந்திரம் காயத்திரியின் மற்றொரு வடிவம்' எனவும், இன்னும், *'பொதுவாக யாவராலும் அறிந்து சொல்லப்பட்டு வரும் காயத்திரியினும் இது மிக மேலானது'* எனவும், *'காயத்திரியை* வெளிப்படையாகக் கூறும் வேதம், இதனை அவ்வாறு கூறாமல், மிக மறை பொருளாகச் சில சங்கேத *(குறியீட்டு)*ச் சொற் களால் கூறுகின்றது எனவும், இங்ஙனமாகவே, இவ் எழுத்துக்களைக் கொண்ட லலித திரிசதி தோத்திர வழிபாடே எல்லா வழிபாட்டின் பயனையும் தந்து, *'ஸர்வ பூர்த்திகரி'* யாகின்றது எனவும் கூறுவர். இம்மந்திர வழிபாட்டிற்குரிய ஷ்ரீ சக்கரம் பற்றி மேற்குறித்த பரா வித்தை கூறிய இடத்தில் சொல்லப்பட்டது. *'ஷ்ரீ0'* என்பது இலக்குமி பீசம் எனவும், இதனை இவற்றோடு கூட்டி சோடசாட்சரியாகக் கொள்வது மிக உயர்ந்தோர்க்கு உரியது எனவும் கூறுவர். இவ் அக்கரத்தை நாயனார் புவனாபதி சக்கரத்திற்குக் கூறுகின்றார்.
'வாக்பவ கூடம்' முதலிய மூன்று பகுதிகளில் நிறங்கள் வரிவஸ்யரகசியத்தில் முறையே, *'பிரளய கால அக்கினியின் நிறம், கோடி சூரியப்பிரகாச நிறம், கோடி சந்திரப்பிரகாசநிறம்'* எனச் சொல்லப்பட்டன. அவற்றை நாயனார் இங்குக் கூறியவாற்றோடு இயைவனவாகக் கொள்ளுதலே ஏற்புடைத்து, *'கண்ட'* என்பது இங்கு, *'காணிய'* எனத்திரிந்து நின்றது. காமிய முத்தி, உம்மைத் தொகை. *'போலும்'* என்பது உரையசை. இவற்றைத் தருவனவற்றை ஒற்றுமை பற்றி இவையாகவே கூறினார்.
இதனால், சத்தி வழிபாடாகிய ஷ்ரீவித்தைக்குரிய சிறந்த பஞ்ச தசாட்சர மந்திரத்தின் சிறப்புக் கூறப்பட்டது.

ஓரில் இதுவே உறையும் இத் தெய்வத்தைத்
தேரில் பிறிதில்லை யானொன்று செப்பக்கேள்
வாரித் திரிகோணம் மாவின்ப முத்தியும்
தேரில் அறியும் சிவகாயந் தானே. ***#1284***

மாணவகனே, யான் உனக்கு ஒரே முடிவைச் சொல்லுகின்றேன்; கேள்; உண்மையை ஆராயுமிடத்து மேற்கூறிய பதினைந்தெழுத்து மந்திரமே மந்திரங்களில் தலையாயது. இம்மந்திரத் திற்குரிய தேவிதன் பெருமையை ஆராயின் இவளையன்றித் தெய்வம் வேறில்லையாம். இம்மந்திரத்தைக் கொண்ட *'ஷ்ரீசக்கரம்'* எனப் படுகின்ற முக்கோணச் சக்கரமே பேரின்பமாகிய வீட்டின்பக் கடலாயும் விளங்கும். இன்னும்

ஆழ்ந்து நோக்கின், ஷ்ரீசக்கரமே மெய்யுணர்ந்தோர் காணும் சிவன் வடிவாகிய சிதாகாசமாம்.

விளக்கவுரை

யானொன்று செப்பக் கேள் என்பதை முதலிற் கொள்க. "இதுவே" என்றது, மேற்கூறிய ககாராதி பதினைந்தெழுத்துக் கூடிய மந்திரத்தை, "இத்தெய்வம்" என்றது, 'இதன் தெய்வம்" என்றவாறு. பிறிது - பிறிது தெய்வம். வாரி - கடல் 'திரிகோணம் மா இன்ப வாரியாம் முத்தியும்' எனக்கூட்டுக. 'மனமின்ப' என்பது பாடம் ஆகாமை அறிக.
உம்மை, சிறப்பு, காயம் - சரீரம், சிவனுக்குச் சரீரமாவது சிதாகாசமேயாதலை அறிக. 'சிதாகாயம்' எனப்பாடம் ஓதினுமாம்.
திரிகோணங்களால் ஆகின்ற ஷ்ரீசக்கரம் ஆதார ஆதேயம், என்னும் அதிகாரத்தில் காட்டப்பட்டது.
இதனால், மேற்கூறிய மந்திரத்தின் சிறப்பும், அதனோடு தொடர்புடையவற்றது சிறப்பும் கூறப்பட்டன.

ஏக பராசத்தி ஈசற்காம் அங்கமே
ஆகம் பராவித்தை ஆம் முத்தி சித்தியே
ஏகம் பராசத்தி யாகச் சிவன்உரு
யோகம் பராசத்தி உண்மைஎட் டாமே. ***#1285***

பராசத்தியாய் உள்ளது ஒன்றே; அதுவே பரசிவத்திற்கு வடிவம். அந்தச் சத்திக்கு வடிவம், 'பராவித்தை' எனப்படும் ஷ்ரீவித்தை. அந்த வித்தையால் முத்தி, சித்தி இரண்டும் உளவாம். இனிப் பராசத்தி ஒன்றேயாயினும் சிவன் அங்கியாய் நிற்கச் சத்தி அவனுக்கு அங்கமாய் நிற்றல் உண்மையால், எட்டாய்ப் பிரிந்து நிற்றல் உண்டாகின்றது.

விளக்கவுரை

ஏக பராசத்தி என்றது உடம்பொடு புணர்த்தல், "அங்கமே" என்னும் ஏகாரம் பிரித்துக் கூறப்பட்டது, எட்டுப் பிரிவாவன; பரை, ஆதி, விந்து, மனோன்மனி, மகேசுவரி, உமை, திருமகள், கலைமகள்' என்னும் நிலைகளாம். 'சிவன் அங்கியாகத் தான் அங்கமாதல் உண்மையின்' என்றமையால், 'சிவனது சங்கற்பமே இங்ஙனம் பிரிதற்குக் காரணம்' என்பது பெறப்பட்டது.
"எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்" *1*
என்ற சிவஞானசித்தியை நோக்குக. 'சிவன் உருவாம் யோகம் பராசத்திக்கு உண்மையில் எட்டாம' என்க. 'சிவகுரு' என்பது பாடம் அன்று. யோகம் - தொடர்பு. 'பராசத்தியே ஏனை ஏழுமாம்' என்றற்கு அதனையும் உடன் கூட்டி எண்ணினார்.
இதனால், ஷ்ரீவித்தைக்குரிய தெய்வமாகிய சத்தியது இயல்பு

தெளிவிக்கப்பட்டது.

எட்டாகிய சத்தி எட்டாகும் யோகத்துக்
கட்டாகும் நாதாந்தத் தெட்டும் கலப்பித்த (து)
ஒட்டாத விந்துவும் தான்அற் றொழிந்தது
கிட்டா தொழிந்தது கீழான மூடர்க்கே. *#1286*

பராசத்தி வழிபாடாகிய பராவித்தையால், அச்சத்தி பேதங்களாகிய மேற்கூறிய எட்டும் அட்டாங்க யோகத்தின் வழியே படிநிலைகள் எட்டினையும் அடையச்செய்து, முடிவில் நாதாந்தத்தில் சேர்க்கும். அதன்பின் பரசிவத்தை அடைதற்குத் தடையாய் உள்ள விந்து நாதங்களும் அகன்றொழியும். (ஒழியவே பரசிவத்தைக்கூடிப் பரானந்தம் எய்தலாம்.) இத்தகைய பராவித்தை அறிவாலும், ஆற்றலாலும் கீழ் நிலையில் உள்ளோர்க்கு இயலாததாம்.

விளக்கவுரை

கட்டு - நிலை. அவை எட்டாவன; ஆறு ஆதாரம், சகத்திரதாரம், நிராதாரம் என்பன, 'யோகத்தால் கட்டாகும் எட்டும் கலப்பித்தது நாதாந்தத்துக் கலப்பித்தது' என்க. 'சத்தி யோகத்துக் கலப்பித்தது' எனவே, பராவித்தையைக் கிரியையளவில் மட்டுமின்றி, யோக நிலையில் கொண்டு செய்தவழியே பெரும்பயன் உளதாதல் கூறப்பட்டதாம். 'அப்பெரும்பயனும் முத்தியே' என்பார், "ஒட்டாத விந்துவும் தான் அற்றொழிந்தது" என்றார். நாதத்தால் வரும் ஞானத்தை "வைந்தவ ஞானம்" என்றே கூறுவராகலின், 'நாதமும் அற்றொழிந்தது' என்னாது, 'விந்துவும் அற்றொழிந்தது' என்றார்.

"ஓவிட விந்து ஞானம் உதிப்பதோர் ஞானம் உண்டேல்
சேவுயர் கொடியி னான்றன் சேவடி சேர லாமே" *1*

என்னும் சிவஞான சித்தியை இங்கு நினைவு கூர்க.

"ஒழிந்தது" என்பது வினைப்பெயர். அது, "கிட்டா தொழிந்தது" என்பதனோடு முடிந்தது. ஷ்ரீசக்கர வழிபாட்டின் முறையும், பயனும் கூறும்முகத்தால் அதனது சிறப்புணர்த்தி, அது மெலியோர்க்குக் கூடாமை கூறப்பட்டது.

ஏதும் பலமாம் இயந்திரரா சன்னடி
ஓதிக் குருவின் உபதேசம் உட்கொண்டு
நீதங்கும் அங்க நியாசந் தனைப்பண்ணிச்
சாதங் கெடச் செம்பில் சட்கோணந் தான்இடே. *#1287*

இதுமுதலாகவே புவனாபதிசக்கரம் கூறுகின்றார். வழிபடுவோர்க்கு எப்பயனையும் தருவதாய், 'இயந்திரராசன்' எனப்படுகின்ற புவனாபதி சக்கரத்தை எந்தத் துதியினாலேனும் துதித்து, அதனை வழிபடும் முறையைக் குருவின் உபதேசத்தால் அறிந்து. நீ இயல்பாகச்

செய்துவருகின்ற கர நியாச அங்க நியாசங்களை இவ்வழிபாட்டிற்கு ஏற்பச்செய்து, பிறவி நீக்கத்தைச் சிறப்பாக விரும்பி, செப்புத்தகடு ஒன்றில் முதலில் அறுகோணச் சக்கரத்தை வரை.

விளக்கவுரை

பலம் ஆம் - பயன் விளைதற்கு ஏதுவாய, 'இயந்திர ராசன்' என ஆண்பாலாகக்கூறியது வடமொழி மதம். 'இதனைப் புவனாபதியாகவே கருதுக' என்றற்கு, "அடி ஓதி" என்றார். அங்க நியாசமே கூறினாராயினும் கரநியாசமுங் கூறுதல் கருத்தாம். 'அவைகளை இதற்கேற்பச் செய்க' என்றது, 'இச் சக்கரத்தில் அடைக்கப்படும் பீசங்களாலே செய்க' என்றபடி. அவற்றை வருகின்ற மந்திரங்களில் காண்க.

சட் கோணந் தன்னில் சிரீம்இரீம் தானிட்டு
அக்கோணம் ஆறின் தலையில்இரீங் காரம்இட்
டெக்கோண முஞ்சூழ் எழில்வட்டம் இட்டுப்பின்
மிக்கீரெட் டக்கரம் அம்முதல் மேல்இடே. ***#1288***

மேற்கூறியவாறு வரையப்பட்ட அறுகோணச் சக்கரத்தின் அறைகளில் 'ஸ்ரீம், ஹ்ரீம்' என்னும் பீசங்களைப் பொறித்து, அச்சக்கரத்தின் ஆறுமூலைகளின் மேலும், 'ஹ்ரீம்' என்னும் பீசத்தை மட்டும் எழுதி, எல்லா மூலைகளும் உள்ளே அடங்கும்படி அவற்றைச் சுற்றி வட்டம் ஒன்று வரைந்து, அவ்வட்டத்திற்கு வெளி யில் திக்கிற்கு ஒன்றாக எட்டுத் தாமரையிதழ் தோன்ற அமைத்து, அவ் இதழ்களின் கீழே வட்டத்தில் வடக்குமுதல், திக்கிற்கு இரண்டாக உயி ரெழுத்துப் பதினாறனையும் அகாரம் முதலாக முறையானே எழுதுக.

விளக்கவுரை

சட்கோணந் தன்னில் என்ற ஒருமையால், "சட் கோணம்" என்பது ஆகுபெயராய், அவற்றாலாய சக்கரத்தைக் குறித்த தாம். "இட்ட இதழ்கள்" எனப் பின்னர் அனுவதித்துக் கூறலால், அவற்றை இடுதல் இங்குக் கொள்ளப்பட்டது. 'மிக்க' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தல் பெற்றது. மிகுதல் உயர்தலாதலின், அஃது உயி ரெழுத்தை உணர்த்தி நின்றது. உயிரெழுத்து என்றே கூறினாராயினும், விந்துவொடு கூட்டியே கொள்க. முதலடியில் இனவெதுகை வந்தது.

இட்ட இதழ்கள் இடைஅந் தரத்திலே
அட்டஹவ் விட்டிட் டதன்மேலே உவ்விட்டுக்
கிட்ட இதழ்களின் மேலே கிரோம்சிரோம்
இட்டுவா மத் **(து)** ஆம் கிரோம்என் மேவிடே. ***#1289***

சக்கரத்தைச் சூழ்ந்த வட்டத்திற்கு வெளியில் உள்ள இதழ்களின்

இடைநிலம் எட்டிலும் எட்டு ஹகார மெய்யை உகார உயிர் புணர்த்து எழுதி, அவ் இதழ்கள் எட்டிலும் பொருந்தி நிற்க, 'க்ரோம், ஹ்ரோம்' என்பவற்றைப் பொறித்து, இதழ்களின் இடப்பக்கங்களில் 'ஆம், க்ரோம், என்னும் பீசங்களை எழுதுக.

விளக்கவுரை

அதன் மேலே என ஒருமையாற் கூறியது, ஒற்றுமை நயங்கொண்டு. இங்ஙனம் கூறுதலை, 'சாதியொருமை' என்பர். "மேலே விட்டு" என்றது, 'மேலே ஏற்றி' என்றவாறு. 'இதழ்களின் மேலே கிட்டும் படி இட்டு' என்க. 'மேவ' என்பது ஈறு குறைந்து நின்றது.

மேவிய சக்கர மீது வலத்திலே
கோவை யுடைய குரோம்சிரோம் என்றிட்டுத்
தாவில் இரீங்காரத் தால்சக் கரஞ்சூழ்ந்து
பூவை புவனா பதியைப்பின் பூசியே. ***#1290***

பொருந்திய சக்கரத்தின் வெளியே உள்ள இதழ்களின் வலப்பக்கங்களில் எங்கும் வரிசையாக, 'க்ரோம், ஹ்ரோம்' என்பவற்றை எழுதி, எல்லாவற்றையும் கேடில்லாத ரீங்காரத்தால் வளைத்து முடித்தபின், அம்மையாகிய புவனாபதியை வழிபடு.

விளக்கவுரை

பின் என்பதனை, "சூழ்ந்து" என்றதன் பின்னர்க் கூட்டுக.
இச்சக்கரத்திற்குச் சொல்லப்பட்ட பீசாட்சரங்கள், 'ஷ்ரீம், ஹரீம், ஹுஂ *0*, க்ஷோம், ஸ்ரோம், ஆம்' என்னும் ஆறுமேயாதலால், கர நியாச அங்க நியாசங்களும் இவற்றானே செய்யப்படும் என்க. அங்ஙனம் செய்யுங்கால் கரநியாசத்தைக் தர்ச்சனி (பெருவிரல்) முதலாக முறையே ஐந்து விரல்களிலும், ஆறாவதாக அகங்கை புறங்கைகளிலும் நியசிக்க. அங்க நியாசம் இருதயம் முதலாகச் செய்யப்படுதல் இயல்பு.
இவை நான்கு மந்திரங்களாலும் புவனாபதி சக்கரத்தை அமைக்கும் முறை கூறப்பட்டது. இங்ஙனம் அமைந்த சக்கர வடிவைக் காண்க.

பூசிக்கும் போது புவனா பதிதன்னை
ஆசற் றகத்தினில் ஆவா கனம்பண்ணிப்
பேசிப் பிராணப்பிர திட்டை யதுசெய்து
தேசுற் றிடவே தியான மதுசெய்யே. ***#1291***

புவனாபதி யம்மையை வழிபடும் பொழுது முதலில் மனத்தைக் காமாதி குற்றங்களின் நீங்கித் தூய்மையுடை யதாகப் பண்ணி, அகத்தில் அவளது உருவத்தை நினைவுகூர்ந்து, பின்பு வெளியில் கும்பம், (நிறை குடம்) விம்பம், (திருவுருவம்) இச் சக்கரம் என்பவைகளில், அவ்வம் மறைமொழிகளால், (மந்திரங் களால்) ஆவாகனம், (வரவழைத்தல்)

தாபனம், (இருத்துதல்) சந்நிதானம், (முகநோக்கம்) சந்நிரோதனம், (வேண்டிக்கோடல்) என்பவை களால் விளக்கம் பெற நிறுத்திப்பின் உபசாரங்கள், (முகமன்கள்) பலவும் செய்து முடித்து, அவளது ஒளிமிக்க வடிவம் மனத்திலே நன்கு பொருந்தும்படி தியானித்து நில்.

விளக்கவுரை

அகத்தில் என்பது தாப்பிசையாய் இடை நின்றது. அகத்தினில் ஆவாகனம் - நினைவுகூர்தல். புறத்தினில் ஆவாகனம் - வரைவழைத்தல். பிராணப் பிரதிட்டை - உயிர் கொடுத்து நிலைப் பித்தல். என்று, ஆவாகனம் முதலிய நான்கையும் உணர்த் திற்று. இவை புறத்திலாதல் வெளிப்படை. அதனால், இவை செய்யப்படும். இடங்களாகிய கும்பம் முதலியனவும் பெறப்பட்டன. "பேசி" என்பதற்குச் செயப்படுபொருள் வருவித்துக்கொள்க. "பிரதிட்டை செய்து" என்றே போயினாராயினும், பின்னர்ச் செய்யப் படும் உபசாரங்கள் ஆற்றலால் விளங்கும். அவை அபிடேகம், (திருமுழுக்கு) அலங்காரம், (ஒப்பனை. இஃது ஆடை, அணிகலம், சந்தனம், பூமாலை, இவைகளை அணிந்து அழகுசெய்தலாம்.) தூபம், (நறும்புகையிடுதல்) தீபம், (பல விளக்குவகை காட்டல்) நிவேதனம், (நைவேத்தியம் - படையல்கள்) அருச்சனை, (மலரிடல்) நிருத்தம், (ஆடல்) கீதம், (பாடல்) வாத்தியம், (பல்லியம்) பிரதட்சிணம், (வலம் வரல்) நமஸ்காரம், (அடிபணிதல்) பிரார்த்தனை, (வேண்டுகோள்) என்பன. 'செபம்' (மந்திரம் கணித்தல்) என்பது இவற்றுடனே கொள்க. தேசு, ஆகுபெயர்.

இதனால், புவனாபதி அம்மையது வழிபாட்டு முறை கூறப் பட்டது.

செய்ய திருமேனி செம்பட் டுடைதானும்
கையில் படைஅங் குசபாசத் தோடபயம்
மெய்யில் அணிகலன் ரத்தின மாம்மேனி
துய்ய முடியும் அவயவத் தோற்றமே. *#1292*

புவனாபதி யம்மைதன் வடிவில் விளங்குவன செம்மை நிறம், செம்பட்டு உடை , கைகளில் அங்குசம், பாசம் என்னும் படைக்கலங்களும், அபய வரதங்களும், அவயங்களில் அவ்வவற் றிற்கு ஏற்ற அணிகலன்கள் தலையில் இரத்தின கிரீடம் என்பவாம்.

விளக்கவுரை

அபயம் என்றதனால், வரதமும் உடன் கொள்ளப் படும். மெய், அவயவம் இவை ஆகுபெயர்கள். "இரத்தினமாம் மேனி" என்றது "இரத்தினஉருவான' என்றவாறு. தோற்றம் உடைய வற்றை, "தோற்றம்' என்றார்.

இதனால், புவனாபதி தியானத்திற்கு அவளது வடிவு கூறப் பட்டது.

மேல் பராவித்தை கூறியவிடத்தில் *(1158)* அம்மைதன் வடிவம் வேறாகக் கூறப்பட்டிருத்தலை நோக்குக.

தோற்போர்வை நீக்கித் துதித்தடைவில் பூசித்துப்
பாற்போ னகம்மந் திரத்தால் பயின்றேத்தி
நாற்பால "நாரதா யைசுவா கா' என்று
சீர்ப்பாகச் சேடத்தை மாற்றியபின் சேவியே. ***#1293***

புவனாபதிக்கு முறைப்படி வழிபாடு செய்யும் பொழுது, மேலாடையை எடுத்து அரையில் கச்சு போலக் கட்டிக் கொண்டு செய்தல் வேண்டும். நிவேதனம் பால் அடிசிலேயாம். நிவே திக்கும் மந்திரம் 'ஓம் நாரதாயை சுவா:" என்பது, இம் மந்திரத்தால் நான்கு திசைகளிலும் நிவேதனம் செய்தல் வேண்டும். வழிபாடுயாவும் முடிந்தபின்பு பாரங்முக அர்க்கியத்தால் அம்மையை முகம் மாற்றிய பின்பே நிர்மாலிய நிவேதனத்தைக் கைக்கொள்ளல் வேண்டும்.

விளக்கவுரை

தோல் - உடம்பு; ஆகுபெயர். "பால் போனகம்" என்ற மையால், வாம மார்க்க நிவேதனங்கள் கூடாவாயின. "மந்திரத்தால் பயின்றேத்தி" என்பதை, துதித்து என்பதன்பின் கூட்டுக. நான்கு திசைகளிலும் நிவேதித்தல் கூறினமையால், விம்பத்திலும் அம்மையை நான்கு முகம் உடையவளாகக் கொள்ளுதல் பெறப்பட்டது. பாகம் - சமைக்கப்பட்ட பொருள். நிர்மாலியத்தையே "சேடம்" *(எஞ்சியது)* என்றார். அதனைக் கொள்ளுதலைச் சேவித்தலாகக் கூறியது மரபு பற்றி.
இதனால், புவனாபதி வழிபாட்டிற்கு, முன்னர் எய்திய வற்றின் மேல் சில கூறப்பட்டன.

சேவிப் பதன்முன்னே தேவியைஉத் வாபனத்தால்
பாவித் திதய கமலம் பதிவித்தங்
கியாவர்க்கு மெட்டா இயந்திர ராசனை
நீவைத்துச் சேமி நினைந்த தருமே. ***#1294***

'சேடம்' எனப்படுகின்ற நிவேதப் பொருளைக் கைக்கொள்வதற்குமுன், கும்ப விம்ப சக்கரங்களில் நிறுவப்பட்ட தேவியை ஒடுக்கிக் கொள்ளுதற்குரிய மந்திரம் கிரியை பாவனை களால் இருதயத்தில் ஒடுக்கி, யாவர்க்கும் அணுகுதற்கரிய மேலான இச்சக்கரத்தை நீ வைப்புப்பொருள் போல உள்ளத்திலே மறவாது வை; பின்பு இது நினைத்தவற்றை யெல்லாம் உனக்குக் கொடுக்கும்.

விளக்கவுரை

'பராங்முக அர்க்கியத்திற்குப் பின் இதுவும் செய்க' என்றற்கு, 'சேவிப்பதன்முன்' என மீட்டுங் கூறினார். உத்வாபனம் - மீட்டுக்

கொள்ளுதல். இதனை, 'உத்வாகனம்' என்றல் பிழை. இஃது இதற்குரிய மந்திரம் முதலியவற்றைக் குறித்த ஆகுபெயர். "பாவித்து" என்றது, 'இருதயத்துள் ஒடுக்கி' என்றவாறு, "இதய கமலம் பதிவித்து" என்றது, பின்னர் மறவாது ஊன்றிக்கொள்ளுதலை. 'தேவியைப் பதிவித்து, இயந்திர ராசனைச் சேமி' என்க. "நினைந்த" என்பது அஃறிணைப் பன்மை வினைப்பெயர். 'நினைந்தது' என்பது பாடம் ஆகாமை அறிக. இதனால், இச்சக்கர வழிபாட்டினை நிறைவு செய்யும் முறை கூறி முடிக்கப்பட்டது. பலர்க்குப் பயன்படுதல் பற்றி, "இயந்திர ராசன்" எனப்பட்ட இதன் வழிபாட்டில் இதனைக் கூறியதனால், ஏனைச் சக்கரங்களின் வழிபாட்டிற்கும் இஃது உரியதாதல் அறியப் படும்.

*6.13.*நவாக்கரி சக்கரம்

நவாக்கரி சக்கரம் நான்உரை செய்யின்
நவாக்கரி ஒன்று நவாக் கரியாக
நவாக்கரி எண்பத் தொருவகை யாக
நவாக்கரி அக்கிலீம் சௌம்முதல் ஈறே. *#1295*

நவாக்கரி சக்கரத்தின் இயல்பை நான் உனக்குச் சொல்லுமிடத்து, ஒன்பதெழுத்துத் தொகுதியில் ஒவ்வொன்றும் ஒன்பதெழுத்தாகின்ற முறையால் ஒன்பதெழுத்துக்கள், 'எண்பத்தோ ரெழுத்து' என்னும் தொகை பெறும்படி ஒன்பதெழுத்தாய் நிற்கும் அத் தொகுதியாவது 'ஸௌம்' என்னும் முதலினையும், 'க்லீம்' என்னும் இறுதியையும் உடையது.

விளக்கவுரை

இம் முதல் ஈறுகளை உடைய எழுத்து அனைத்தையும் வருகின்ற மந்திரத்தால் அறிக. தொகுதியைச் சுட்டுதற்கு, 'நவாக்கரம்' என்னாது "நவாக்கரி" என்றார். "முதல் ஈறே" என்றது எதிர் நிரனிறையாதல் வருகின்ற மந்திரத்தாற் பெறப்படும்.

இதனால், நவாக்கரி சக்கரம் அமையுமாறு தொகுத்துக் கூறப் பட்டது.

சௌம்முதல் அவ்வொடும் ஔவுடன் ஆம்கிரீம்
கௌவுமும் ஐமும் கலந்திரீம் சிரீம்என்
றொவ்வில் எழும்கிலீம் மந்திர பாதமாச்
செவ்வுள் எழுந்து சிவாயநம என்னவே. *#1296*

'ஸௌம்' என்பது 'முதல்' என மேற்கூறிய அவற்றோடு, 'ஔம், ஆம், க்ரீம், கௌம், ஐம், ஹ்ரீம், ‹ ◌ரீம்' என்பவை முறையே தொடர்ந்தபின் 'க்லீம்' என்பதை மந்திரத்தின் முடி வெழுத்தாக வைத்து, ஒவ்வொரு முறையும், 'சிவாய நம' என்று சொல்; நவாக்கரி சக்கர வழிபாடு கைவரும்.

விளக்கவுரை

'அவ்' என்பது வகர ஈற்றுச் சுட்டுப் பெயர். விந்துவை நோக்கிப் பன்மையாகக் கூறினார். 'ஔம்' என்பதை இங்கு 'ஹௌம்' என ஓதல் வேண்டாமை அறிக. 'கௌம், ஐம்' என்பவற்றில் செய்யுள் நோக்கி விந்துவிற்கு முன் ஓர் உகரம் தந்தும், எண்ணும்மை கொடுத்தும் ஓதினார். 'கலந்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்த லாயிற்று. ஒவ்வில் - பொருந்தில்; என்றது, 'பொருந்தியபின்' என்றவாறு. முதற்கண் உள்ள எழுத்துத் தலையாய் நிற்றலின் ஈற்றெழுத்தை, 'பாதம்' என்றார். செவ்வுள் எழுந்து - செம்மையான நெறியில் முயன்று. 'நவமே' எனற்பாலது, 'நவே' எனக் குறைந்து நின்றது. நவம் - நவாக்கரமாம்.

'நமஎன்னே' என்றே பாடம் ஓதுதல் அந்தாதிக்கு ஒவ்வாமை அறிக. இதனால், நவாக்கரி சக்கரத்திற்குரிய. நவாக்கரங்கள் முழுதும் எடுத்தோதப்பட்டன.

நவாக் கரியாவதும் நானறி வித்தை
நவாக் கரியுள்ளெழும் நன்மைகள் எல்லாம்
நவாக் கரிமந்திரம் நாவுளே ஓத
நவாக் கரிசத்தி நலந்தருந் தானே. *#1297*

நவாக்கரி சக்கர வழிபாடும் நான் சிறந்த ஒன்றாக அறிந்த வழிபாடாம். அதனால், நலங்கள் பல விளையும். ஆதலின், நவாக்கரி மந்திரத்தை நாம் புடைபெயரும் அளவாகக் கணித்தால், அம்மந்திரத்திற்குரிய சத்தி எல்லா நன்மைகளையும் தருவாள்.

விளக்கவுரை

'நவாக்கரியின் உள்நின்று எழும்' என்க. அஃதாவது 'நவாக்கரி வழிபாடு ஏதுவாக' என்றவாறு.

நலந்தரு ஞானமும் கல்வியும் எல்லாம்
உரந்தரு வல்வினை உம்மைவிட் டோடிச்
சிரந்தரு தீவினை செய்வ தகற்றி
வரந்தரு சோதியும் வாய்த்திடுங் காணே. *#1298*

நவாக்கரி சக்கர வழிபாட்டினால் பெருநன்மை யைத் தருவதாகிய அனுபவ ஞானமும் அதற்கு ஏதுவாகிய கலா ஞானமும் வலியுற்று நிலைபெறும். அதற்கு முன்னே உம்முடைய வலிய வினைகள் உம்மை நோக்காது விட்டு ஓடிவிடும். 'அஃது எவ்வாறு' எனில், இவ்வழிபாட்டினால், வேண்டுவார் வேண்டுவதைத் தருகின்ற சிவனது திருவருள் கைவந்து, உமக்குத் துன்பத்தைத் தரஇருந்த அந்தத் தீய வினைகளை ஓட்டும் ஆதலால்,

விளக்கவுரை

'சிரமம்' என்பது, இடைக்குறைந்து, 'சிரம்' என நின்றது. செய்வது, இனிச் செய்யக்கடவது; இது சாதி யொருமை. உம்மை, சிறப்பு. 'அகற்றி வாய்த்திடும்' என்பதை, 'வாய்த்து அகற்றிடும்' என மாற்றி முடித்து, இறுதியில் 'ஆதலால்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. முதல் அடி இன எதுகை.

இவை இரண்டும் மந்திரங்களாலும் நவாக்கரி வித்தையும் ஷ்ரீவித்தையோடு ஒத்த சிறப்புடையதாய்ப் பயன்தருதல் பொது வகையிலும், சிறப்பு வகையிலும் கூறப்பட்டது.

கண்டிடும் சக்கரம் வெள்ளிபொன் செம்பிடை
கொண்டிடும் உள்ளே குறித்த வினைகளை

வென்றிடும் மண்டலம் வெற்றி தருவிக்கும்
நின்றிடும் சக்கரம் நினைக்கு மளவே. *#1299*
நவாக்கரி சக்கரத்தை வெள்ளி, பொன், செம்பு என்னும் இவற்றுள் ஒன்றாலான தகட்டிலே அமையுங்கள்; பின்பு மனத்திலும் அதனை ஊன்றி நினையுங்கள். அங்ஙனம் நினைத்தலால் உள்ளத்தில் நிலைபெறுகின்ற அச்சக்கரம் உம்மை நோக்கி வருகின்ற வினைகளை வெல்லவும், உலகத்தை வெற்றிகொள்ளவும் நீவிர் நினைப்பீராயின் நினைத்த அளவிலே அப்பயன்களை உங்களுக்குத் தரும்.

விளக்கவுரை

'சக்கரத்தை வெள்ளி முதலியவற்றில் கண்டிடும்; உள்ளே கொண்டிடும்; நின்றிடும் சக்கரம் நினைக்கும் அளவே வென் றிடும்; தருவிக்கும்' எனக் கூட்டிமுடிக்க. இதில் இனவெதுகை வந்தது.
இதனால், நவாக்கரி சக்கரத்தை அமைத்தற்காம் பொருள் களும், அவற்றால் ஆம் பயனும் கூறப்பட்டன.

நினைத்திடும் அச்சிரீம் அக்கிலீம் ஈறா
நினைத்திடும் சக்கரம் ஆதியும் அந்தமும்
நினைத்திடும் நெல்லொடு புல்லினை உள்ளே
நினைத்தி **(டு)** அருச்சனை நேர்தரு வாளே. *#1300*
உன்னத் தக்க க்லீம் என்பவற்றை ஈறாக உடைய நவாக்கரங்களை அங்ஙனமே வைத்து உன்னப்படுகின்ற சக்கரத்தின் முதலெழுத்துமுதல் ஈற்றெழுத்து முடிய, இச்சக்கர சத்தி தன்னுள்ளே விரும்புகின்ற செந்நெல், அறுகம் புல் என்பவற்றை நீயும் மனத்திலே கொண்டு அவற்றைக்கொண்டு அருச்சனை செய். அப்பொழுது உனது அருச்சனையை அச்சத்தி ஏற்றுக்கொள்வாள்.

விளக்கவுரை

மூன்றாம் அடியில் *'நினைத்திடும்'* என்பதற்கு எழுவாய் வருவித்துக் கொள்க. *'நேர்தருவாள்'* என்பது, *'நேர்ந்து மேற்குறித்த பயன்களைத் தருவாள்'* என்றவாறு.
இதனால், இச்சக்கர வழிபாட்டிற்கு ஆவதொரு சிறப்புமுறை கூறப்பட்டது.

நேர்தரு மந்திர நாயகி யானவள்
யாதொரு வண்ணம்**?** அறிந்திடு பொற்பூவை
கார்தரு வண்ணம் கருதின கைவரும்
நார்தரு வண்ணம் நடந்திடு நீயே. *#1301*
வழிபடுவார்க்கு நேர் வந்து அருள் புரிகின்ற அந்தச் சக்கர சத்தி என்ன நிறத்தை உடையவள்? அழகிய தேவியாகிய அவள் மேகம்போலும்

நிறத்தை உடையவள். இதனை அறிந்து அவள்பால் உனது அன்பு செல்லும் வண்ணம் நீ நட; அப்பொழுது நீ நினைத்தவை யெல்லாம் உனக்குக் கைகூடும்.

விளக்கவுரை

'திரிகை' என்பது கடைக்குறைந்து நின்றது. திரிகை - சக்கரம். 'யாதொரு வண்ணம், கார்தரு வண்ணம்' என வினாவும், விடையும் தாமே கூறினார். 'யாதொரு வண்ணம்' என வினாவி அறிந் திடு' என்று உரைப்பினும் ஆம். 'கார்தரு' என்பதில் தரு உவம உருபு.
இதனால் இச்சக்கரசத்தியது தியானவண்ணம் கூறப்பட்டது.

நடந்திடும் பாரினில் நன்மைகள் எல்லாம்
கடந்திடும் காலனும் கண்ணிய நாளும்
படர்ந்திடும் நாமமும் பாய்கதிர் போல
அடைந்திடும் வண்ணம் அடைந்திடு நீயே. **#1302**

இச்சக்கர சத்திபால் நீ அன்புசெய்து ஒழுகினால் நீ இவ்வுலகில் நினைக்கின்ற நன்மைகள் எல்லாம் நினைத்தபடியே முடியும்; கூற்றுவன் உன்னைக் கொண்டுபோவதற்குக் குறித்துவைத்த நாளும் அங்ஙனம் கொண்டுபோகாமலே கடந்துவிடும். உனது பெயர் உலகெங்கும் பரவும்; உனது உடம்பின் நிறம் பகலவனது விரிந்து வீசுகின்ற கதிர்கள் போல விளங்குவதாகும். இப்பயன்களை யெல்லாம் இவ்வகையில் நீ எய்துவாயாக.

விளக்கவுரை

'கண்ணிய' என்பதனை, 'எண்ணிய' எனவும் ஓதுவர். 'வண்ணம் கதிர்போல அடைந்திடும்' எனக்கூட்டுக.
இதனால். இச்சக்கர வழிபாட்டின் இம்மைப் பயன் வகுத்துக் கூறப்பட்டது.

அடைந்திடும் பொன்வெள்ளி கல்லுடன் எல்லாம்
அடைந்திடும் ஆதி அருளும் திருவும்
அடைந்திடும் அண்டத் தமரர்கள் வாழ்வும்
அடைந்திடும் வண்ணம் அறிந்திடு நீயே. **#1303**

பொன், வெள்ளி, நவமணிகள் ஆகிய பொருள்கள் யாவும் குறைவின்றி உன்பால் வந்துசேரும்; நல்வினை யாலன்றிச் சிவனது அருளால் ஆம் செல்வங்கள் கிடைக்கும். தேவர்கள் பதவியும் தாமாகவே வரும்; இவையெல்லாம் இங்ஙனம் ஆமாற்றை அறிந்து இச்சக்கர வழிபாட்டினை நீ செய்.

விளக்கவுரை

'அருளும்' என்பது எச்சம். அருளால் வரும் செல்வம் வினையால் வரும்

செல்வம் போல மயக்கம் செய்யாமையால் 'அச்செல்வமே இதனால் கிடைக்கும்' என்றார். 'அறிந்திடு' என்றது, தன் காரியம் தோன்ற நின்றது.
இதனால், இவ்வழிபாட்டின் இம்மை மறுமைப் பயன் இரண்டும் ஒருங்கு கூறப்பட்டன.

அறிந்திடு வார்கள் அமரர்க ளாகத்
தெரிந்திடு வானோர் தேவர்கள் தேவன்
பரிந்திடு வானவன் பாய்புனல் சூடி
முரிந்திடு வாளை முயன்றிடும் நீரே. ***#1304***

மெய்யறிவுடையோர் உண்மை அமரர்களாதல் பொருட்டு அறிந்து வழிபடுகின்ற தேவதேவனும், வானத்தைப் பிளந்துகொண்டு கீழே பாய்ந்த வலிய ஆகாய கங்கையைச் சடையில் சூடிக்கொண்டவனும் ஆகிய சிவபிரான் பணிகின்ற சத்தியை நீவிர் வழிபட்டு மேற்கூறிய பயன்களைப் பெறுங்கள்.

விளக்கவுரை

அமரர் - இறவாதவர், இப்பெயர் மார்க்கண்டேயர் போலும் சிவனடியார்கட்கே உண்மையில் பொருந்தும் ஆதலின், சிவபெருமானை, 'அறிந்திடுவார்கள் அமரர்களாகத் தெரிந்திடு தேவன்' என்றார். வானோர் - வானுலகில் உள்ளவர். 'வானோராகிய தேவர்கள்' என்க. 'வானத்து வன்புனல்' என்றவாறு. சடையில் புல் நுனிமேல் துளியளவாக மலர் போலும்படி எளிதில் ஏற்றமை தோன்ற, 'சூடி' என்றார். முரிதல் - வளைதல்; இங்கு, பணிதலைக் குறித்தது. நாயக நாயகி பாவம் பற்றி இன்பச்சுவை தோன்றச் சிவன் உமைதன் ஊடலைத் தீர்க்க அவளை அடிபணிவதாகப் புனைந்துரை கூறும் இலக்கிய மரபினை இங்குச் சத்திதன் பெருமை புலப்படுதற்கு எடுத்தாண்டார். 'முரிந்திடுவானை' என்பது பாடம் ஆகாமை அறிக.
இதனால், சத்திதன் பெருமை கூறும் முகத்தால், மேற்கூறிய பயன்கள் உளவாதல் வலியுறுத்தப்பட்டது.

நீர்பணி சக்கரம் நேர்தரு வண்ணங்கள்
பாரணி யும்இரீம் உன்சிரீம் ஈறாம்
தாரணி யும்புகழ்த் தையல்நல் லாளைக்
காரணி யும்பொழில் கண்டுகொள் வீரே. ***#1305***

நீங்கள் வழிபடுகின்ற நவாக்கரி சக்கரத்தின் வகை ஒன்பதில் "ஹ்ரீம்" என்பது முதலாகவும், 'ஷ்ரீம்' என்பது இறுதி யாகவும் அமையும் வகை சிறந்ததாகும்.

விளக்கவுரை

இதனைப் பின்னர்க் காட்டப்படும் சக்கரத்தில் கண்டு கொள்க. "சக்கரம்" என்பதில் ஏழனுருபு விரிக்க, வண்ணங்கள் - எழுத்துக்கள். பார் - நிலம், என்றது சக்கரம் அமைந்த தகட்டினை. அணிதல் - அழகு செய்தல். 'இவ்வகைச் சக்கரம் மிக அழகாக அலங் கரிக்கப்படும்" என்பது இதனால் விளங்கும். உம்மை, முற்றுப் பொருட்டாய் நிலமுழுதும் எனப்பொருள் தந்தது. 'பொழிலின்' என ஒப்புப் பொருளில் வந்த ஐந்தன் உருபு விரிக்க. பொழில் போலுதல், தண்ணிய திருவருளைத் தந்து இன்புறுவித்தல்.

இதனால், இச்சக்கர வகைகளுள் ஒன்று சிறந்ததாதல் உணர்த்தப்பட்டது.

கண்டுகொள் ளும்தனி நாயகி தன்னையும்
மொண்டுகொள் ளும்முக வச்சியம தாயிடும்
பண்டுகொ ளும்பர மாய பரஞ்சுடர்
நின்றுகொ ளும்நிலை பேறுடை யாளையே. ***#1306***

மேற்கூறிய வகைச் சக்கரத்தின் வழியே ஒப்பற்ற அச்சத்தியைக் காணுங்கள். கண்டால், முகந்து கொள்ளலாம் போலும் முக வசீகரம் உங்கட்கு உண்டாகலாம். அநாதி பரஞ்சுடராகிய சிவபெருமானும் நீவீர் காணநின்று, அழிவற்ற அவளைத் தன்பால் எடுத்து வைத்துக்கொள்வான்.

விளக்கவுரை

பண்டு கொள்ளுதல் - அநாதியாம் தன்மையைக் கொண்டிருத்தல். பரமாய பரஞ்சுடர் - மேலானவற்றிற்கெல்லாம் மேலான சுடர். ஈற்றடி இன எதுகை.

இதனால், மேற்கூறிய வகையின் வழிபாட்டினால் சிவபரஞ்சுடரது காட்சியும் எய்துதல் கூறப்பட்டது.

பேறுடை யாள்தன் பெருமையை எண்ணிடில்
நாடுடை யார்களும் நம்வச மாகுவர்
மாறுடை யார்களும் வாழ்வது தான்இலை
கூறுடை யாளையும் கூறுமின் நீரே. ***#1307***

நீங்கள் பெறத் தக்க பேறுகட்கெல்லாம் உரிய வளாகிய சத்தியின் பெருமையை அறிந்து வழிபட்டால் மன்னரும் நம் வசப்படுவர்; பகைவர்கள் சீவித்திரார். ஆதலின், சிவனது ஒரு கூற்றைத் தனதாக உடைய அவளை நீவிர் துதியுங்கள். இரண்டாம் அடி உயிரெதுகை.

விளக்கவுரை

எண்ணுதல் - ஆய்ந்தளித்தல். இது தன் காரியம் தோன்ற நின்றது. இதனால், அனைத்துப் பேற்றையும் சத்திதர வல்லளாதல் தெரிவிக்கப்பட்டது.

கூறுமின் எட்டுத் திசைக்கும் தலைவியை
ஆறுமின் அண்டத் தமரர்கள் வாழ்வெனல்
மாறுமின் வையம் வரும்வழி தன்னையும்
தேறுமின் நாயகி சேவடி சேர்ந்தே. ***#1308***

சத்தி எல்லா உலகங்களையும் உடையளாதலை அறிந்து துதியுங்கள்; அதனால், உலகின் சில பகுதிகட்குத் தலைவ ராயுள்ள தேவர்களது வாழ்வுவேண்டும் என்னும் ஆசை நீக்குங்கள்; பின்னும், மீள மீள இவ்வுலகில் பிறக்கும் நிலையையும் நீங்குங்கள். முடிவாக அச்சத்தியது திருவடியைச் சேர்ந்து மயக்கமெல்லாம் அற்றுத் தெளிவு பெறுங்கள்.

விளக்கவுரை

'அமரர்களது அண்டத்து வாழ்வு' எனக் கூட்டுக. ஆறுதல் - தணிதல்; நீங்குதல். வாழ்வு எனல் - வாழ்வு வேண்டும் என விரும்புதல்.
இதனால், இவ் வழிபாட்டினை முத்தியை விரும்பிச் செய்தல் சிறந்ததாதல் கூறப்பட்டது.

சேவடி சேர்ந்து செறிய இருந்தவர்
நாவடி யுள்ளே நவின்றுநின் றேத்துவர்
பூவடி இட்டுப் பொலிய இருந்தவர்
மாவடி காணும் வகையறி வாரே. ***#1309***

சத்தி தன் திருவடியில் சேர்ந்து நீங்காது இருக்க எண்ணினவர் அவளது மந்திரத்தை நாவிற்குள்ளே சொல்லித் துதிப்பர். புறத்திலே மலர்களை அவளது திருவடியிலே தூவி விளக்கம் பெற்றிருப்பவர், அவளது பெருமை பொருந்திய திருவடிகளைத் தரிசிக்கும் வழியை அறிந்தவராவர்.

விளக்கவுரை

'சேர' என்பது பாடம் அன்று.
இதனால், அருச்சனையிலும் செபம் சிறந்ததாதல் கூறப் பட்டது. சக்கர வழிபாட்டில் செபமே முதன்மையாதல் வெளிப்படை.

ஐம்முத லாக அமர்ந்தெழு சக்கரம்
ஐம்முத லாக அமர்ந்திரீம் ஈறாகும்
ஐம்முத லாகி யவற்றுடை யாளை
மைம்முத லாக வழுத்திடு நீயே. ***#1310***

நவாக்கரி சக்கர வகைகளுள் 'ஐம்' என்பதை முதலாகப் பொருந்திச் செல்லுகின்ற சக்கரம் அந்த 'ஐம்' என்பது முதலாகப் பொருந்திப் பின்பு, 'ஹ்ரீம்' என்பதை ஈற்றில் உடைய தாகும். அந்த 'ஐம்' என்பதை முதலாகக் கொண்ட அனைத் தெழுத்துக்களையும் தன்னுடையனவாக உடைய அந்தச் சக்கர சத்தியையே உன்னுடைய அறியாமையைப்

போக்கும் தலைவியாக அறிந்து நீ துதிசெய்.

விளக்கவுரை

'துதித்தால், உனது அறியாமை நீங்கி மெய்யறிவு பிறக் கும்' என்பது கருத்து. மை - இருள்; மலம். 'அதற்கு முதல்வி' என்றது, 'அதனை ஏற்றவழியால் கழுவுபவள்' என்றவாறு. மேலை மந்திரத்தில் "வகை" என்பதில் உள்ள ஐகாரமே இதில் ஆதியாகக் கொள்ளப் பட்டது. 'அவர்க்குடையாளை' என்பது பாடம் ஆகாமை அறிக.

இதனால், 'இச்சக்கர வழிபாடு அஞ்ஞானத்தைப் போக்கும்' என்பது உணர்த்தி, மற்றொரு வகையின் சிறப்பு வகுத்துக் கூறப் பட்டது.

வழுத்திடும் நாவுக் கரசிவள் தன்னைப்
பகுத்திடும் வேதம்மெய் யாகமம் எல்லாம்
தொகுத்தொரு நாவிடை சொல்லவல் லாளை
முகத்துளும் முன்னெழக் கண்டுகொ ளீரே. *#1311*

மேற்கூறிய சக்கர சத்தி சிவாகமங்கள் கூறும் வாகீசுவரியாம், 'வேதம்' என்றும், 'ஆகமம்' என்றும் இவ்வாறு பலவாகப் பகுத்துச் சொல்லப்படும் நூல்கள் அனைத்தையும் தனது ஒரு நாவினாலே எளிதிற் சொல்ல வல்லவளாகிய இச்சத்தியை நீங்கள் உங்கள் வாக்கிலும் விரையத் தோன்றும் வண்ணம் வணங்குங்கள்.

விளக்கவுரை

'வணங்கினால் கலா ஞானமும் நிரம்பவரும்' என்பது கருத்து. 'உங்கள் முகத்துளும்' என்பது ஆற்றலால் வந்தது. வாயை 'முகம்' என்றல் வடமொழி வழக்கு. "முன்" என்றது, 'விரைய' என்ற வாறு. முதலடி உயிரெதுகை. இவ்விரு மந்திரங்களிலும் 'வகுத்திடும்' என்றேயும் பாடம் ஓதுப.

இதனால், மேற்கூறிய மலநீக்கத்தோடு கலாஞான நிறைவும் மேலைச் சக்கர வழிபாட்டால் உளதாதல் கூறப்பட்டது.

கண்டஇச் சக்கரம் நாவில் எழுதிடில்
கொண்டஇம் மந்திரம் கூத்தன் குறியதாம்
மன்றினுள் வித்தையும் மானுடர் கையதா
வென்றிடும் வையகம் மெல்லியல் மேவியே. *#1312*

மேற்சொல்லிய வகையில் அறியப்பட்ட இச்சக்கரத்தினை நாவில் பதித்துக்கொண்டால், இதற்குக் கொள்ளப் பட்ட இந்த எழுத்துக்களேசிவனது எழுத்துக்களாய் விடும். அதனால், திருவம்பலத் தியானமாகிய தகர வித்தையும் மக்களுக்குக் கைவர, ஞானசத்தி பதிதலால், இவ்வழிபாட்டைச் செய்பவனும் உலக மாயையை வெல்லுபவனாவான்.

விளக்கவுரை

'மானுடர்' என்பது வேறு முடிபு கொண்டு பொதுமை யுணர்த்தி நிற்றலின், 'வென்றிடும்' என்பது பால்வழு ஆகாதாயிற்று. வெல்லுதற்கு 'இவன்' என்னும் எழுவாய் வருவித்துக்கொள்க. சத்தி சிவத்தின் வேறன்மை, 'கொண்ட இம்மந்திரம் கூத்தன் எழுத்தாம்' என்ற இதனானும் நன்கறியப்படும். இஃது அறியாதார் சத்தியை வேறு நிற்பவளாக மயங்கி, ஏற்றங் கூறி மகிழ்வர். இதனுள் இன எதுகை வந்தது.

இதனால், இச்சக்கரவித்தையே தகர வித்தையின் பயனையும் தருவதாதல் கூறப்பட்டது.

மெல்லிய லாகிய மெய்ப்பொரு ளாள்தனைச்
சொல்லிய லாலே தொடர்ந்தங் கிருந்திடும்
பல்லிய லாகப் பரந்தெழு நாள்பல
நல்லிய லாக நடந்திடுந் தானே. *#1313*

மெய்ப்பொருளாம் இயல்பினளாகிய இச்சத்தியை இங்குக் கூறிய இம்மந்திரத்தின் வழியே பற்றி அவ்வழிபாட்டில் நில்லுங்கள். பல்வேறு வகையினவாய் மிக்குச் செல்லுகின்ற உங்கள் நாள்கள் பலவும் நல்ல நாள்களேயாய்ச் செல்லும்.

விளக்கவுரை

முதலடியை, 'மெய்ப்பொருளாகிய மெல்லியலாள் தனை' என மாற்றிக்கொள்க. பல்லியல்பு, இருவினைகளுக்கு ஈடாகப் பல்வேறான எண்ணமும், செயலும், நுகர்ச்சியும். நல்லியல்பு, எல்லாம் திருவருட் செயலாகத் தோன்றுதல் அங்ஙனம் தோன்றின் வினைப் பயன்கள் வாதியாமையோடு, தீமை தானும் நன்மையாச் சிறக்கும்.*1*

இதனால், இவ்வழிபாட்டினால்வினைப்பயன்களால் தாக்குண்ணாமை கிடைத்தல் கூறப்பட்டது.

நடந்திடும் நாவினுள் நன்மைகள் எல்லாம்
தொடர்ந்திடும் சொல்லொடு சொற்பொருள்கள் [தானும்
கடந்திடும் கல்விக் கரசிவளாகப்
படர்ந்திடும் பாரில் பகையில்லை தானே. *#1314*

இச்சக்கர சத்தி வாகீசுவரி யாதலின், இவளது அருள் கிடைக்கப் பெற்றவனுக்கு அவன் வேண்டிய நன்மைகள் யாவும் அவன் சொன்ன அளவிலே அங்ஙனமே முடியும். வழக்கும் செய்யுளுமாய்த் தொடர்கின்ற சொற்கள் அனைத்தையும், அவற்றின் பொருளோடு அவன் முற்ற உணர்ந்தவனாவான். விரிந்துகிடக்கின்ற இவ்வுலகில் ஓரிடத்தும் அவனுக்குப் பகையாவர் இல்லை. (நண்பரும் உறவினருமே உளராவர்

என்பதாம்.)

விளக்கவுரை

'கல்விக் கரசிவ ளாக' என்பதனை முதலில் கொண்டு உரைக்க. 'அரசி' என்பதன் இகரம் தொகுத்தலாயிற்று. 'படர்ந்திடும் பார்' என்றது, 'பிரபஞ்சம்' என்பதன் பொருள்பற்றிக் கூறியவாறு. கூறவே ஓரிடத்தும் பகையில்லாமை கூறியதாயிற்று. கல்வியைக் கரை கண்டவர்க்கு, 'யாதானும் நாடாம் ஊராம்' 1 என்பது ஈற்றடியாற் கூறியவாறு. இதனால், வாகீசுவரி வழிபாட்டினால், மேன்மைச் சொல்லும், நிறைபுலமையும் உளவாதல் கூறப்பட்டது. மேன்மைச் சொல்லை, 'நாவசைத்தால் நாடசையும்' என்று குறிப்பர்.

பகையில்லை கௌம்முதல் ஐம் அது ஈறாம்
நகையில்லை சக்கரம் நன்றறி வார்க்கு
மிகையில்லை சொல்லிய பல்லுரு வெல்லாம்
வகையில்லை யாக வணங்கிடுந் தானே. **#1315**

இனி, 'கௌம்' என்பதை முதலாகவும், 'ஐம்' என்பதை இறுதியாகவும் கொண்ட சக்கரத்தின் பெருமையை நன்கு அறிந்து வழிபடுகின்றவர்கட்கு இவ்வுலகில் வெளிப்படையாய் வருகின்ற பகைவரும், மறைவாக நின்று புறங்கூறுபவரும் இலராவர். (நண்பரும், உறவினருமாய் நெஞ்சாரப் புகழ்கின்றவரே உளராவர் என்றபடி.) மேலும் பல்வேறு வகையினவாய உயிர்களும் இவனை எதிர்க்க வழியில்லாமல் பணிந்து நடக்கும். யான் சொல்லிய இவை மிகையாதல் இல்லை; உண்மையேயாம்.

விளக்கவுரை

'ஐம் அது ஈறாம் சக்கரம் நன்றறிவார்க்கு' என்பதனை முதலிற் கொள்க. 'சொல்லிய மிகை இல்லை' என் மாற்றி, இறுதிக்கண் வைத்து உரைக்க. 'உரு' என்றது, அவற்றோடு கூடிய உயிரை. அரிமா, புலி முதலிய கொடு விலங்குகள் பாம்பு முதலிய நச்சுயிர்கள் முதலிய பலவும் அடங்குதற்கு, 'பல் உரு' என்றார். இவை 'பணிந்து நடக்கும்' என்பதனால், தம் கட்டளைப்படியே நடத்தல் பெறப்பட்டது.
இதனால், மற்றொரு வகைச் சக்கர வழிபாட்டின் சிறப்பு வகுத்துக் கூறப்பட்டது.

வணங்கிடும் தத்துவ நாயகி தன்னை
நலங்கிடும் நல்லுயி ரானவை யெல்லாம்
கலங்கிடும் காம வெகுளி மயக்கம்
துளங்கிடும் சொல்லிய சூழ்வினை தானே. **#1316**

மும்மலங்களால் வருந்துகின்ற பல உயிர்களுள் பக்குவம் எய்தப் பெற்ற

உயிர்கள் சத்திதன் பெருமையை உணர்ந்து அவளை வணங்கும். அவ்வணக்கத்தின் பயனாக அவைகளைப் பற்றியுள்ள, 'காமம், வெகுளி, மயக்கம்' என்னும் முக்குற்றங்களும் நீங்கும். அவை நீங்கவே 'அவற்றால் உண்டாகும்' என நூல்கள் சொல்லிய வினைகளும் இல்லையாம்.

விளக்கவுரை

'நலங்கிடும்' என்றது உயிர்களின் பொது வியல்பு உணர்த்தியது. 'காமம் முதலியவை கலங்கிடும்' எனவும், 'வினை துளங்கிடும்' எனவும் முன்னே கூட்டி முடிக்க. முதலடி உயிரெதுகை; ஈற்றடி இனவெதுகை. 'துலங்கிடும்' என்பது பாடமாயின், அதனை நேரே காமம் முதலியவற்றிற்கு முடிபாக்கி, 'வினை கலங்கிடும்' எனக் கூட்டி முடிக்க. இதனால், 'சத்தியை இச்சக்கர வழியாக வழிபடுதல் பக்குவர்க்கே உண்டாம்' என்பதும் அதனால் அவர்க்கு உளவாம் பயனும் தொகுத்துக் கூறப்பட்டன.

தானே கழறித் தணியவும் வல்லனாய்த்
தானே நினைத்தவை சொல்லவும் வல்லனாய்த்
தானே தனிநடங் கண்டவள் தன்னையும்
தானே வணங்கித் தலைவனு மாமே. ***#1317***

பக்குவ முதிர்ச்சியால் சத்தியை வழிபடுபவன், தனது தவற்றைத் தானே திருத்தியமையவும், தான் ஆய்ந்துணர்ந்த வற்றைப் பிறருக்குச் செவியறிவுறுக்கவும் வல்லனாய், இறைவனது ஒப்பற்ற நடனத்தை எஞ்ஞான்றும் காண்பவளாகிய சத்தியையும் தானே விரும்பி வழிபட்டுச் சமயத் தலைவனாயும் விளங்குவான்.

விளக்கவுரை

கழறுதல் - இடித்துத் திருத்தல். தணிதல் - அடங்குதல். நினைத்தல், இங்கு அதன் காரியம் தோன்ற நின்றது. எஞ்ஞான்று மாவது படைப்பிற்கு முன்னும், காப்புக் காலத்தும், அழிப்பிற்குப் பின்னும் எனவும், இடையறாமை எனவும் வரும் இரண்டுமாம். அவ்வாறு காண்பவள் சத்தியன்றிப் பிறர் இன்மையின் அவளை, 'தனி நடம் தானே கண்டவள்' என்றார். எனவே, அவள், நடிப்பவனின் வேறல்லளாதல் உணரப்படும். படவே, அவளை வணங்குதலால் இப்பயன்கள் உளவாதல் தெளிவு. தானே வணங்குதல், பிறர் வலிசெய்ய வேண்டாது, தானே இயல்பால் வணங்குதல்.

ஆமே அனைத்துயிர் ஆகிய அம்மையும்
தாமேசகலமும் ஈன்றஅத் தையலும்
ஆமே அவளடி போற்றி வணங்கிடில்
போமே வினைகளும் புண்ணிய னாகுமே. ***#1318***

தானே எல்லாமாய் நிற்கின்ற சத்தி, அனைத்துயி ராகியும் நிற்கின்றாள். எல்லாப் பொருள்களும் தம் தன்மையில் தாமேயாயும், சத்தியின் வியாபகத்தால் தம்மை ஈன்ற அவளாகியும் நிற்கும். ஆகையால் பக்குவன் அவளை வணங்கிய வழியே வினை நீக்கமும், தவப் பேறும் ஆகிய பயன்களை எய்துவான்.

விளக்கவுரை

'அம்மையும்' என்னும் உம்மையைப் பிரித்து 'அனைத் துயிர்' என்பதனோடு கூட்டி, 'ஆகிய அம்மை அனைத்துயிரும் ஆம்' எனவும், 'சகலமும் தாமே ஆம், ஈன்ற அத் தையலும் ஆம்' எனவும், 'ஆதலின் அவள் அடிபோற்றி வணங்கிடினே வினைகளும் போம்; புண்ணியன் ஆகும்' எனவும் கூட்டி உரைக்க. புண்ணியம், இங்கு தவம்.

புண்ணிய னாகிப் பொருந்தி உலகெங்கும்
கண்ணிய னாகிக் கலந்தங் கிருந்திடும்
தண்ணிய னாகித் தரணி முழுதுக்கும்
அண்ணிய னாகி அமர்ந்திருந் தானே. ***#1319***

சத்தியைப் பக்குவ முதிர்ச்சியால் வழிபடுபவன் உலக முழுவதும், தவமிகுதியால் வரும் பெருமையுடையவானகவும், அருளுடைமையால் இனியவனாகவும், அனைவர்க்கும் உரியவனாய் விளங்குவான்.

விளக்கவுரை

'பெருமை, தவத்தினாலாயது' என்பதும், 'இனிமை அருளால் ஆயது' என்பதும் தோன்றுதற்கு வேறு வேறு தொடராக வைத்து ஓதினார். அமர்தல் - அமைதல். அமர்ந்திருத்தல், ஒரு சொல் நீர்மையது.
இவை மூன்று மந்திரங்களாலும் அவர்க்கு வரும் பயன்களே வகுத்துக் கூறப்பட்டன.

தானது கம்இரீம் கௌமது ஈறாம்
நானது சக்கரம் நன்றறி வார்க்கெலாம்
கானது கன்னி கலந்த பராசத்திக்
கேனது**!** வையம் கிளரொளி யானதே. ***#1320***

தானே சக்கரமாகின்ற முதலெழுத்து 'க்ரீம்' என்பதும், ஈற்றெழுத்து 'கௌம்' என்பதுமாக அமைகின்ற அந்தச் சக்கரமே ஞானத்தை விரும்புவார்க்கு நான் சொல்வது. அது சத்திக்கு மகிழ்ச்சியைத் தருகின்ற நல்ல சோலையாய் விளங்கும். ஆயினும், அதில் வேறறக் கலந்து நிற்கின்ற அவளுக்கு அஃது எதன்பொருட்டு வேண்டும்! உலகம் ஒளி பெற்று விளங்குவதே அதன்பயன்.

விளக்கவுரை

பல அக்கரங்கள் உள்ள சக்கரங்கள் முதற்கண் உள்ள எழுத்தின்

சக்கரமாகவே கூறப்படுதலின், முதலெழுத்தை, 'தான் அதுவாவது' என்றார். 'க்ரீம்' என்பதை, 'கம்' என்வும், 'இரீம்' எனவும் செய்யுள் நோக்கிப் பிரித்து ஓதினார். 'நான் சொல்வது' என ஒருசொல் வருவிக்க. 'கன்னிக்கு' என்னும் நான்கனுருபு தொகுத்தலாயிற்று. 'அது கன்னிக்குக் கான்' என்க. ஆதலுக்கு 'அதனால்' என்னும் வினை முதல் வருவிக்க. ஒளியாவதும் ஞானமே. 'ஆனதே' என்பதன் பின், 'பயன்' என்னும் பயனிலை எஞ்சி நின்றது.

இதனால், நவாக்கரி சக்கரத்தின் வகை ஒன்றனது சிறப்புக் கூறப்பட்டது.

ஒளிக்கும் பராசத்தி உள்ளே அமரின்
களிக்கும் இச் சிந்தையிற் காரணங் காட்டித்
தெளிக்கும் மழையுடன் செல்வம்உண் டாக்கும்
அளிக்கும் இவளை அறிந்துகொள் வார்க்கே. ***#1321***

இச்சக்கத்தில் நின்று ஞானத்தை வழங்குகின்ற சத்தி ஒருவனது உள்ளத்தில் நிலைபெறுவாளாயின், அவனது உள்ளம் அவனையும் அறியாமல் ஒரு களிப்பினை யுடையதாகும். தன் அடியவரைப் பல்லாற்றானும் நன்னிலையில் வைத்துக் காக்கின்ற இச்சத்தியது பெருமையை அறிந்து இவளை அடைகின்றவர்கட்கு இது பற்றிய ஆராய்ச்சியில் இதனைக் காரணங் காட்டித் தெளிவிப்ப தாகிய அருள்மழையுடன், பொருட் செல்வத்தையும் இவள் உண்டாக்குவாள்.

விளக்கவுரை

ஒளிக்கும் - ஒளியைச் செய்யும். களித்தலுக்கு, 'அது' என்னும் எழுவாய் வருவிக்க. ஈற்றடியை இதன் பின் கூட்டுக. இச் சிந்தை - இது பற்றிய சிந்தனை. தெளிக்கும் மழை, கருணை மழை.

அறிந்திடுஞ் சக்கர அற்சனை யோடே
எறிந்திடும் வையத் திடரவை காணின்
மறிந்திடும் மன்னனும் வந்தனை செய்வான்
பொறிந்திடும் சிந்தை புகையில்லை தானே. ***#1322***

உண்மையை நோக்குமிடத்து, இங்கு அறியப் படுகின்ற இச்சக்கர வழிபாட்டினால் உலகத்துன்பங்கள் அழிக்கப் படும். பிணங்குகின்ற அரசனும் இணங்கி வணங்குதல் செய்வான். தீக்குணத்தை உடைய உள்ளம் அஃது இன்றித் திருந்தும்.

விளக்கவுரை

'எறிந்திடும்' என்பது செயப்பாட்டு வினைப் பொருட்டாய் நின்றது. 'காணின்' என்பதை முதலிற் கூட்டி உரைக்க. பொறிதல், பொறியோடு கூடியதாய் இருத்தல். பொறி, தீப்பொறி. 'புகையில்லையாம்' அஃதாவது, 'தணிந்து குளிரும்' என்க. 'அருச்சனை' என்பது பாடம் ஆகாமை அறிக.

புகையில்லை சொல்லிய பொன்னொளி உண்டாம்
குகையில்லை கொல்வ திலாமையி னாலே
வகையில்லை வாழ்கின்ற மன்னுயிர்க் கெல்லாம்
சிகையில்லைச் சக்கரஞ் சேர்ந்தவர்க் காமே. *#1323*

மேற் சொல்லியவாறு தீக்குணம் அகலும்; முன்பு யோக நிலையிற் சொல்லிய பொன்போலும் உடல் ஒளியும் உண்டாகும். பகை யாதும் இல்லாமையால், அரண்தேட வேண்டுவ தில்லை. இப்பயன்களைப்பெற உலகருக்கு வகை இல்லை. தனக்கு மேல் ஒன்றில்லாத இச்சக்கர வழிபாட்டினை மேற்கொண்டவர்க்கே இவை கிடைப்பனவாம்.

விளக்கவுரை

தொடர்பு தோன்ற, 'புகையில்லை' என அனு வதித்தார். 'குகை' என்றது, 'கரந்துறையும் இடம்' என்றவாறு. அஃறிணையும் அடங்க, 'கொல்வது' எனப் பொருளாக வைத்துப் பொதுப்பட ஓதினார். கொல்வது, சாதி யொருமை. இதனைத் தொழிற் பெயராக வைத்து, 'பாவம் இன்மையால் நரகம் இல்லையாம்' எனவும் உரைப்ப. 'சிகை' என்று, மேல் உள்ளதனைக் குறித்ததாம். சிகை யில்லையாகிய சக்கரம் என்க. 'சேர்ந்தவர்தாமே' என்பது பாடமன்று.

சேர்ந்தவர் என்றும் திசையொளி யானவர்
காய்ந்தெழும் மேல்வினை காணகி லாதவர்
பாய்ந்தெழும் உள்ளொளி பாரிற் பரந்தது
மாய்ந்தது காரிருள் மாறொளி தானே. *#1324*

இச் சக்கர வழிபாட்டினை மேற் கொண்ட வரிடத்தில் மிக விரைந்து எழுகின்ற உள்ளொளியாகிய ஞானம் உலகில் பலராலும் அறியப்படும். ஆதலின், ஆணவத்தால் விளையும் அறியாமையும், திரிபுணர்வும் கெடும். அதனால் இவர்கள் எட்டுத் திசைக்கும் விளக்குப்போல்பவரும், தம்மை வந்து வருத்துகின்ற ஆகாமிய வினை தோன்றப்பெறாதவரும் ஆவர்.

விளக்கவுரை

மூன்றாம் அடிமுதலாகத் தொடங்கி உரைக்க. 'திசைக்கு' என நான்காவது விரிக்க. மாறுஒளி - திரிந்த உணர்வு. 'மாய்ந்தது' என்பதை இதனோடும் கூட்டுக. முதலடி இனவெதுகை.
இவை நான்கு மந்திரத்தாலும் இச்சக்கர வழிபாட்டின் பயனே கூறப்பட்டது.

ஒளியது ஹௌம்முன் கிரீமது ஈறாம்
களியது சக்கரம் கண்டறி வார்க்குத்
தெளியது ஞானமும் சிந்தையும் தேறப்

பளியது பஞ்சாக் கரமது வாமே. *#1325*
ஒளியை உடையதாகிய 'ஹௌம்' என்னும் பீசத்தை முதலிலும், 'க்ரீம்' என்னும் பீசத்தை இறுதியிலும் கொண்ட, களிப்பைத் தருவதாகிய அச்சக்கரத்தின் உண்மையை நன்குணர்ந்த வர்கட்குத் தெளிவாகிய ஞானமும் தோன்ற, அதனை உள்ளமும் பற்ற, அதனால், அச்சக்கரம் எல்லா ஞானத்திற்கும் இடமாயுள்ள திருவைந்தெழுத்துமாய் விடும்.

விளக்கவுரை

கண்டறிதல், ஒருபொருட் பன்மொழி. தெளி, முதனிலைத் தொழிற்பெயர். "தேற" என்பது "ஞானம்" என்பத னோடு இயையுங்கால் 'உண்டாக' எனப் பொதுமையில் நிற்பதாம். 'பள்ளி' என்பது இடைக் குறைந்து நின்றது. பள்ளி - இடம். 'பள்ளி யாகிய பஞ்சாக்கரம்' என்க. 'பஞ்சாக்கரமதுவும்' என்னும் சிறப்பு உம்மை தொகுத்தலாயிற்று. இதனால், நவாக்கரி சக்கரத்தின் மற்றொரு வகையினது சிறப்புக் கூறப்பட்டது.

ஆமே சதாசிவ நாயகி யானவள்
ஆமே அதோமுகத் துள்அறி வானவள்
ஆமே சுவைஒளி ஊறோசை கண்டவள்
ஆமே அனைத்துயிர் தன்னுள்ளும் ஆமே. *#1326*
'சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை' என்னும் மூன்று மாயைகளினின்றும் மூவகைக் கருவிகளைத் தருபவளாகிய சத்தி, அக்கருவிகளைப்பெறும் உயிர்களாய் நிற்றலே யன்றி, இச் சக்கரத்துள்ளும் இதுவேயாய் நிற்பாள்.

விளக்கவுரை

'ஆமே' ஐந்தில் முதல் மூன்றும், இறுதி ஒன்றும் இச்சக்கரத்துள் நிற்றலையும், ஏனையது அது அதுவாதலையும், குறித்தன. சதாசிவ நாயகி - சதாசிவனுக்கு நாயகி; மனோன்மனி. அறிவானவள், வித்தியேசுரனுக்கு நாயகியானவள், வித்தியேசுவரி. சுவையொளி ஊறோசை கண்டவள், சீகண்டனுக்கு நாயகியாகிய உமை. அதோமுகம் - கீழிடம். இஃது இடவாகுபெயராய் அசுத்த மாயையை உணர்த்திற்று. இதனைக் கூறவே முன்னர்ச் சுத்த மாயையும், பின்னர்ப் பிரகிருதி மாயையும் கொள்ளக் கிடந்தன. 'சுவையொளி ஊறோசை', ஆன்ம தத்துவம் அனைத்திற்கும் உபலக்கணம். பிரகிருதி மாயையில் ஆன்ம தத்துவத்தைக் கண்டமை கூறவே, அசுத்த மாயையில் வித்தியா தத்துவத்தைக் கண்டமையும், சுத்த மாயையில் சிவ தத்துவத்தைக் கண்டமையும் பெறப்பட்டன. காணுதல் - தோற்றுவித்தல் ஈற்றடியில், 'தன்னுள்' என்றது, சக்கரத்துள் என்றவாறு. 'சட சித்துக்கள்

அனைத்திற்கும் முதல்வியாய் நிற்கும் சத்தி இச்சக்கரத்தில் விளங்குவள்' என்றவாறு.

இதனால், 'இச்சக்கரத்தின் தெய்வம் இது' என்பது கூறப் பட்டது.

தன்னுளு மாகித் தரணி முழுதுங்கொண்
டென்னுளு மாகி இடம்பெற நின்றவள்
மண்ணுளும் நீரனல் காலுளும் வானுளும்
கண்ணுளும் மெய்யுளும் காணலு மாமே. *#1327*

இச்சக்கரத்தில் நின்றும், உலக முழுதையும் தன்னுடையதாகக் கொண்டும், என் உள்ளத்திலும் இருந்தும் எல்லாப் பொருளும் தன்னிடத்தில் அடங்க நிற்கின்ற சத்தி, பஞ்ச பூதங்களின் உள்ளும், என் கண்ணின் உள்ளும், உடம்பின் உள்ளும் காணக் கூடியவளாகின்றாள்.

விளக்கவுரை

கண்ணுட் காணப்படுதல் புறக்காட்சியாலும், உடம்புட் காணப்படுதல் அகக் காட்சியாலுமாம். ஆகவே 'உயிர்களின் அகத்தும், புறத்தும் காணப்படுகின்ற இவளை நீவிரும் இவ்வழிபாட்டி னால் காண்பீராக' என்றதாயிற்று. பின்னிரண்டடிகள் இனவெதுகை.

இதனால் அத்தெய்வத்தின் சிறப்புக் கூறப்பட்டது.

காணலு மாகும் கலந்துயிர் செய்வன
காணலு மாகும் கருத்துள் இருந்திடில்
காணலு மாகும் கலந்து வழிசெயல்
காணலு மாகும் கருத்துற நில்லே. *#1328*

சத்தியின் துணையாலே உயிர்கள் செயற்பட்டு வரும் முறைகளை உணரலாம். 'எப்பொழுது' எனின், அவள் உனது உள்ளத்தில் விளங்கும்பொழுது. அப்பொழுதே அவள் உயிர்களுக்கு உய்யும் வழியைச்செய்து வருதலையும் உணரலாம். ஆதலின், இவ்வுணர்வுகளைப் பெற நீ உனது உள்ளம் அவளிடத்திற்பொருந்தும் வகையில் நிற்பாயாக.

விளக்கவுரை

இரண்டாம் அடி நான்காம் அடிகளில் 'காணலுமாகும்' என்றவை அனுவாதம். 'உயிர் செய்வன' என்றது வினைவழி ஒழுகு தலையும், 'வழிசெயல்' என்று பக்குவம் வருவித்தலையுமாம். கலக்கப்படுதல், கருத்துள் இருத்தல் முதலியவற்றிற்கு வேண்டும் 'சத்தி' என்பது முன்னை மந்திரத்தினின்றும் வந்தியைந்தது.

இதனால், 'அச்சத்தியை ஒருதலையாகத் தியானிக்க' என்பது கூறப்பட்டது.

நின்றிடும் ஏழு புவனமும் ஒன்றாகக்

கண்டிடும் உள்ளம் கலந்தெங்கும் தானாகக்
கொண்டிடும் வையம் குணம்பல தன்னையும்
விண்டிடும் வல்வினை மெய்ப்பொரு ளாகுமே. ***#1329***
சத்தியது தியானத்தால் ஏழுலகங்களில் ஒன்றைச் சுட்டியறியும் ஏகதேச உணர்வு நீங்கப்பெற்று, அனைத்தையும் ஒன்றாகக் காண்கின்ற வியாபக உணர்வு வரப் பெற்ற உயிர் அவ்வுணர்வானே தனது வியாபகத்தையும் உணர்வதாகும். அதனால், முக்குண வயப்படுதலும், வினைத் தொடக்கும் ஒழியும். அஃது ஒழியவே, அவ்வுயிர் மெய்ப்பொருளைத் தலைப்படும்.

விளக்கவுரை

'உள்ளம் - உயிர். வையம் எங்கும் கலந்து தானாகக் கொண்டிடும்' எனக் கூட்டுக. கொள்ளுதல் - அகப்படுதல்; என்றது அகப்பட்டிருத்தலை உணர்தலை. முக்குண வயப்படுதலினின்றும் நீங்குதலாவது, பிராரத்துவத்தை நுகர்தலும், அதனால் ஆகாமியத்தைச் செய்யாமையுமாம். 'வல்வினை' என்று சஞ்சிதத்தை. 'மூவினைத் தொடக்கும் அறச் சீவன் முத்தனாம்' என்றபடி, முதலடி இனவெதுகை. இதனால், அந்தத் தியானத்தால் வரும் பயன் கூறப்பட்டது.

மெய்ப்பொருள் (ஔம்)முதல் (ஹௌம)து ஈறாக்
கைப்பொரு ளாகக் கலந்தெழு சக்கரம்
தற்பொரு ளாகச் சமைந்தமு தேச்சரி
நற்பொரு ளாக நடுவிருந் தாளே. ***#1330***
சத்தி 'அமுதேசுவரி' என்னும் பெயருடன், மெய்ப் பொருளை உணர்த்தும் 'ஔம்' என்னும் பீசம் முதலாகவும், 'ஹௌம்' என்னும் பீசத்தை ஈறாகவும் பொருந்திக் கைப்பொருள்போலத் தப்பாது பயன்தருகின்ற சக்கரத்தைத் தனது பொருளாகக் கொண்டு நன்மையைத் தருகின்ற ஒருபொருளாய் அதன் நடுவில் இருக்கின்றாள்.

விளக்கவுரை

நன்மை - பயன். இனவெதுகையும், ஆசெதுகையும் வந்தன. இதனால், நவாக்கரி சக்கரத்தின் மற்றொரு வகையும், அதற்குரிய தெய்வமும் கூறப்பட்டன.

தாளதி னுள்ளே சமைந்தமு தேசுவரி
காலது கொண்டு கலந்துற வீசிடில்
நாளது நாளும் புதுமைகள் கண்டபின்
கேளது காயமும் கேடில்லை காணுமே. ***#1331***
இச்சக்கரத்திலே தனது திருவடி பொருந்த நிற்கின்ற அமுதேசுவரி வாசி யோகத்தால் வெளிப்படத் தோன்றும்படி பிராண வாயுவை அவள்பாற்

கலக்கச் செய்யின், ஒவ்வொரு நாளும் புதுமைகள் பல தோன்றும். உடம்பும் அழிதலை யொழிந்து நிலை நிற்கும். ஆதலின், அங்ஙனம் செய்யப்படும் யோக முறையை வல்லார் வாய்க் கேட்டு, அதனை மேற்கொள்வாயாக.

விளக்கவுரை

'சமைந்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'அமுதேசுவரி' என்னும் பெயரானே, அவள் 'சகத்திராரம்' எனப்படு கின்ற சந்திர மண்டலத்தில் வீற்றிருந்து அமுதத்தைப் பொழிபவள் என்பது பெறப்பட்டமையின், வாளா, 'வீசிடில்' என்றொழிந்தார். 'அமுதேசுவரி கலந்துற, காலதுகொண்டு வீசிடில்' எனக் கூட்டுக. 'கேள் அது' என்பதனை இறுதியில் வைத்து உரைக்க. காண், உம் அசைகள். இதனால், 'அச் சக்கர தெய்வத்தை யோக நெறியாலே தலைப்படுக' என்பது கூறப்பட்டது. இரண்டாமடி உயிரெதுகை.

கேடில்லை காணும் கிளரொளி கண்டபின்
நாடில்லை காணும் அந் நாள்முதல் அற்றபின்
மாடில்லை காணும் வரும்வழி கண்டபின்
காடில்லை காணும் கருத்துற் றிடத்துக்கே. ***#1332***

பேரொளிப் பொருளாகிய அமுதேசுவரியை மேற்கூறியவாறு கண்டபின் காண விரும்பவேண்டுவது ஒன்றும் இல்லை; உடம்பிற்கு அழிவும் இல்லை. அழிவு இல்லாமையால், நாள் முதலிய பாகுபாடுகளையுடைய காலம் நீங்கினமையின், காலத்தோடு கூடியே தம் பயனைத் தருகின்ற இடப்பாகு பாடுகளும் இல்லையாம். இனி முற்கூறிய பேரொளியால் உயிரினது குறிக்கோள் பொருந்திய இடத்திற்குச் செல்லும் வழி நன்கு காணப்படுதலின், அதன்பின் அவ்வழியை மூடி மறைக்கும் வினைக்காடு இல்லையாம்.

விளக்கவுரை

'கிளரொளி கண்டபின்' என்பது தாப்பிசையாய் இடை நின்றது. நாடு, முதனிலைத் தொழிற்பெயர். 'அற்றபின், கண்டபின்' என்ற அனுவாதத்தால், அறுதலும், காணுதலும் தாமே பெறப்பட்டன. மாடு - பக்கம்; இட வேறுபாடு. செல்லுதலை 'வருதல்' என்றது, இட வழுவமைதி. கருத்து - குறிக்கோள். 'உற்ற' என்பதன் அகரம் தொகுத்தலாயிற்று. 'உற்ற இடத்துக்கு வரும் வழி' என மேலே கூட்டுக. இதனுள்ளும் 'காண், உம்' என்பன அசைநிலைகள்.
இதனால், மேற்கூறிய யோகக் காட்சியால் உளவாம் பயன்கள் கூறப்பட்டன.

உற்றிட மெல்லாந் உலப்பிலி பாழாகிக்

கற்றிடமெல்லாம் கடுவெளி யானது
மற்றிட மில்லை வழியில்லை தானில்லை
சற்றிட மில்லை சலிப்பற நின்றிடே. ***#1333***

கிளரொளியாகிய அமுதேசுவரியைக் கண்டபின் அக்காட்சி சலித்தற்குச் சிறிதும் இடனில்லாதபடி உறைத்து நில். நின் றால், காணப்பட்ட இடங்கள் யாவும் அழிவற்ற பாழாய், கற்ற நூல்கள் தாமும் வெற்ற வெளியாய் அவ்விடத்திற்குப் பயன் செய்யாதவை யாய்விடும். அங்ஙனம் ஆகாத இடங்களும், நூல்களும் இல்லை யாம். அதனால், அவளிடத்தினின்றும் விலகிச் செல்லுதற்கு ஏதுவே யில்லை. இனி, விலகிச்செல்ல, 'தான்' என்று ஒரு முதலும் இல்லையாம்.

விளக்கவுரை

ஈற்றடியை முதலில்வைத்து உரைக்க. 'உற்ற, கற்ற' என்பவற்றது ஈற்று அகரம் தொகுத்தலாயின. உறுதல் - எதிர்ப்படுதல். பாழாதல், காட்சிப்படாதொழிதல். நூலை. 'புலம்' என்பவாகலின், அதனை இங்கு 'இடம்' என்றார். கடுமை - மிகுதி. கடு வெளி - வெளியாந் தன்மையை மிக உடையவெளி. 'ஆகும்' என்னும் எதிர்காலம் துணிவுபற்றி இறந்தகாலமாயிற்று. 'மற்றிடம் இல்லை' என எதிர்மறுத்தும் கூறினார், வலியுறுத்தற் பொருட்டு. 'வழியில்லை' என்ற காரண மொழிக்கு, விலகுதலாகிய காரிய மொழி 'சலிப்பற' என்பதனால் பெறப்பட்டது. தான் இலனாதலும், தன்னை உணரும் நிலை நீங்குதலேயாம்' சத்தியை ஒழித்துத் தன்னையும், பிறவற்றையும் உணரின் துன்பமாம் ஆதலின், வரம்பில் இன்பத்தில் அவை இலவாயின. 'சற்றிடம் இல்லையாக' என ஆக்கம் வருவித்து உரைக்க.

இதனால், 'மேற்கூறிய காட்சியில் அசைவற நின்று, பெரும் பயன் எய்துக' என்பது கூறப்பட்டது.

நின்றிடும் ஏழ்கடல் ஏழ்புவி எல்லாம்
நின்றிடும் உள்ளம் நினைத்தவை தானொக்கும்
நின்றிடும் சத்தி நிலைபெறக் கண்டிட
நின்றிடும் மேலை விளக்கொளி தானே. ***#1334***

அமுதேசுவரியைச் சலிப்பின்றிக் காணின், நிலை பெற்றுள்ள ஏழ் கடல், ஏழ் நிலம் முதலியயாவும், அலைவின்றி நிலைத்த அவ்வுள்ளத்தில் நினைத்தவாறே ஆகும். முடிவாக கிளரொளி யாகிய அச்சத்தி ஒழிவின்றித் தன்னிடத்தில் நிலைபெற்று நிற்கும்.

விளக்கவுரை

மூன்றாம் அடி தாப்பிசையாய் முன்னும். பின்னும் சென்று இயைந்தது. 'புவி' என்றது தீவுகளை. 'நினைத்தவாறே ஆம்' என்றது, 'அவற்றைக்

காக்கவும், அழிக்கவும் அவற்றைத் தன் விருப்பப்படி பயன்படுத்தவும் வல்லனாம்' என்றவாறு. மேலை விளக்கொளி - மேற் கூறப்பட்ட விளக்கொளி; 'மேலிடமாகிய சந்திர மண்டலத்தில் விளங்கும் விளக்கொளி' என்றுமாம்.

இதனால், அக் காட்சியின் பயன் வேறும் சில கூறப்பட்டன.

விளக்கொளி (ஸௌம்)முதல் (ஔம)து ஈறா
விளக்கொளிச் சக்கரம் மெய்ப்பொரு ளாகும்
விளக்கொளி யாகிய மின்கொடி யாளை
விளக்கொளி யாக விளங்கிடு நீயே. **#1335**

விளக்கொளி போல்வதாகிய 'ஸௌம்' என்னும் பீசம் முதலும், 'ஔம்' என்னும் பீசம் ஈறும் ஆகி நிற்பின் அச் சக்கரம் விளக்கொளிச் சக்கரமாம். அது மெய்ப்பொருளாயே நிற்கும். எல்லா வற்றையும் விளக்கியருள்கின்ற ஒளியாகிய சத்தியை அச்சக்கரத்தில் விளக்கொளி வடிவமாகவே நீ கருதி வழிபடு.

விளக்கவுரை

காரணப் பொருளில் வந்த "ஈறாக' என்பது "ஆகும்" என்பதனோடு முடிந்தது. மூன்றாம் அடியில் உள்ள விளக்கொளி, வினைத்தொகை. விளங்கிடு - அறிந்திடு. இங்ஙனங் கூறவே, இச்சக்கரத்தின்மேல் விளக்கை வைத்தலும் பொருந்துவதாயிற்று.

இதனால், நவாக்கரி சக்கரத்துள் ஒன்றன் முறைமை கூறப் பட்டது.

விளங்கிடு மேல்வரு மெய்ப்பொருள் சொல்லின்
விளங்கிடு மெல்லிய லானது வாகும்
விளங்கிடு மெய்நின்ற ஞானப்பொருளை
விளங்கிடு வார்கள் விளங்கினர் தானே. **#1336**

விளங்கி நிற்பதாக மேலைமந்திரத்திற் சொல்லப் பட்ட மெய்ப்பொருளை இன்னதெனக் கூறின், அது சிவ சத்தியேயாம். தானே விளங்குந் தன்மையுடையதும், மெய்ம்மையானதும், அறிவே வடிவாய் உள்ளதும் ஆகிய அந்தப்பொருளை உணர்பவர்களே ஞானம்பெற்றவராவர்.

விளக்கவுரை

மேலை மந்திரத்துள், "மெய்ப்பொருள்" எனவும், "மின்கொடியாள்" எனவும் வேறுவேறு போலக் கூறப்பட்டவை அங்ஙனமாகாது ஒன்றேயாதலை முன்னிரண்டடிகளில் விளக்கிப் பின் னிரண்டடிகளில் அப்பொருளின் சிறப்புணர்த்தினார். "விளங்கிடும், வரும்" என்னும் பெயரெச்சங்கள் அடுக்கி, "மெய்ப் பொருள்" என்னும் ஒருபெயர் கொண்டன. "மேல்" என்றது மேல் நின்ற இடத்தை. 'வந்த' எனற்பாலதனை, "வரும்" என்றதும், 'தாமே' எனற்பாலதனை "தானே"

என்றதும் வழுவமைதி. மெய்ம்மையும். ஞானமும் ஆதல் கூறவே. ஆனந்தம் ஆதலும் கொள்ளப்படும். சத்தி அஃறிணையாகவும் கூறப்படுதல் பற்றி எழுவாயை, 'ஆனது' எனக் கூறினார்.

தானே வெளியென எங்கும் நிறைந்தவள்
தானே பரம வெளியது வானவள்
தானே சகலமும் ஆக்கி அழித்தவள்
தானே அனைத்துள அண்ட சகளமே. *#1337*

மேற்கூறிய மெய்ப்பொருளாகிய ச்ததி, தான் ஒருத்தியே பூதாகாயமாகி எங்கும் நிறைந்தும், பராகாயமாகி எல்லா வற்றிற்கும் மேலாகியும் நிற்பாள். தானே எல்லாப் பொருளையும் தோற்றுவித்து அழிப்பவளாவாள். தானே பலவாயுள்ள அண்டங் களையும் தனது வடிவமாக உடையவளாவாள்.

விளக்கவுரை

பூதாகாயமாய் நிற்கும் நிலைமை கூறவே, பராகாய மாய் நிற்கும் நிலையும் கொள்ளப்பட்டது. சகளமாய் நிற்பவளை, "சகளம்" என்றார். இவை இரண்டு மந்திரங்களாலும் அச்சக்கர தெய்வத்தின் சிறப்புக் கூறப்பட்டது.

அண்டத்தி னுள்ளே அளப்பரி தானவள்
பிண்டத்தி னுள்ளே பெருவெளி கண்டவள்
குண்டத்தி னுள்ளே குணம்பல காணினும்
கண்டத்தி னுள்ளே கலப்பறி யார்களே. *#1338*

அளத்தற்கு அரிய பொருளாய் அனைத்து அண்டங்களிலும் பரவி நிற்பவளும், உடம்பினுள்ளே தானே பரவெளியை அமைத்துள்ளவளும் ஆகிய சத்தியது தன்மைகள் பலவற்றை ஓம குண்டத்தில் பலர் மந்திரம் கிரியை பாவனைகளால் காண்பார்களாயினும், உடம்பினுள்ளே அவள் பொருந்தி நிற்கும் நிலையை அவர் அறிதல் இல்லை.

விளக்கவுரை

பரவெளியை அமைத்தமையாவது, தியானத்தானங் களாகிய ஆதார நிராதாரங்களை நிறுவினமை. 'கண்டவள் குணம்' என இயைக்க. கண்டம் - வரையறைப்பட்டது. இங்கு, உடம்பு சத்தியைக் கிரியை முறையால் உணரும் உணர்வோடே அமைந்து, யோக முறையால் உணர்தலை மேற்கொள்ளாது ஒழிவாரை நோக்கி இவ்வாறு இரங்கிக் கூறினார் என்க.

இதனால், அச்சத்தியைக் கிரியை முறையால் வழிபடுதலோடு ஒழியாது, யோக முறையால் தலைப்படுதல் வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

கலப்பறி யார் கடல் சூழுல கெல்லாம்
உலப்பறி யார் உட லோடுயிர் தன்னைச்
சிலப்பறி யார் சில தேவரை நாடித்
தலைப்பறி யாகச் சமைந்தவர் தானே. *#1339*

சிவ சத்தி இருக்க அவளை வணங்காமல் சில தேவர்களை நாடிச் சென்று வணங்குதலால், தலை இருந்தும் அஃது அற்றொழிந்த உடலை உடையார்போல ஆகி விட்டவர்கள் தாம் அடையத் தக்க பொருள் எது என்பதனையும், உலகம் அழிவது என்பதனையும் வாழும் பொழுதே உடலோடு கூடிய தம் உயிரை நல்வழியிற் செயற்படச் செய்வதனையும் அறிவாரல்லர்.

விளக்கவுரை

'கலப்பு' என்னும் தொழிற்பெயர் ஆகுபெயராய், கலக்கப்படும் பொருளை உணர்த்திற்று. சிலைப்பு - ஒலிப்பு. செயற் படாதிருத்தலை, 'பேசாதிருத்தல்' எனக் கூறும் வழக்குப் பற்றிச் செயற் படுதலை 'ஒலிப்பு' என்றார். நாடுதல். அதன் காரியம் தோற்றி நின்றது. தலைப் பறி - தலையது நீக்கத்தை உடையது.

'கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணஙகோத் தலை' *1*

என்றதனை நினைவு கூர்க.

இதனால், சத்தியை அணுகாதவர் எய்தும் குற்றம் கூறப் பட்டது.

தானே எழுந்தஅச் சக்கரம் சொல்லிடின்
மானே மதிவரை பத்திட்டு வைத்தபின்
தேனே இரேகை திகைப்பற ஒன்பதில்
தானே கலந்த வரைஎண்பத் தொன்றுமே. *#1340*

ஒன்ப தெழுத்துக்களால் இயல்பாக அமைந்த சக்கரத்தின் இயல்பைக் கூறின், நெடுக்காகப் பத்துக் கோடும், குறுக்காகப் பத்துக்கோடும் இட்டு, ஒன்பதிற்றொன்பது *(9X9)* எண்பத்தொன்றா கின்ற அறைகளை அறிவாயாக.

விளக்கவுரை

'மானே, தேனே' என்பன மகடூஉ முன்னிலை. இதுவும் நூல் வழக்கு. 'மதி' என்பதனை இறுதிக்கண் கூட்டுக. 'வரை, இரேகை' என இருகாற்கூறி, நெடுக்கும் குறுக்கும் கொள்ள வைத்தார். ஈற்றடியில், 'வானே கலந்த' எனப்பாடம் ஓதுதல் சிறக்கும். இங்ஙனம் இச்சக்கரம் அமையுமாறு காண்க:-

ஒன்றிய சக்கரம் ஓதிடும் வேளையில்
வென்றிகொள் மேனி மதிவட்டம் பொன்மையாம்

கன்றிய ரேகை கலந்திடும் செம்மையில்
என்றியல் அம்மை எழுத்தவை பச்சையே. *#1341*
மேற்கூறிய சகக்ரத்தின் இயல்பை இன்னும் சொல்லும்பொழுது,
வெற்றியைக் கொண்ட அதன் வடிவமாகிய அறைகளின் நிறம்
பொன்மை; அழுந்த இடப்பட்ட கோடுகளின் நிறம் செம்மை.
ஞாயிற்றைப் போல ஒளிவிட்டு விளங்கும் சத்தி வடிவ மாகிய
எழுத்துக்களின் நிறம் பச்சை.

விளக்கவுரை

அறைகள் சதுர வடிவினவாயினும் 'சக்கரம்' எனப் படுதல் பற்றி, 'வட்டம்' என்றார். மதி வட்டம், வினைத்தொகை. செம்மையில் -செம்மை நிறத்தில். என்று - சூரியன்.
இவை இரண்டு மந்திரங்களாலும் சக்கரவடிவு கூறப்பட்டது.
இவ்வடிவினைக் காண்க.

ஏய்ந்த மரவுரி தன்னில் எழுதிய
வாய்ந்தஇப் பெண்எண்பத் தொன்றில் நிரைத்தபின்
காய்ந்தவி நெய்யுட் கலந்துடன் ஓமமும்
ஆய்ந்தவி ஆயிரம் ஆகுதி பண்ணுமே. *#1342*
பொருந்திய மர உரியில் (மரப் பட்டையில்) எழுதப்பட்டுப் பொருந்திய
எழுத்துக்களை மேற்சொல்லிய எண்பத் தோர் அறைகளில் அடைத்த
பின்பு, வெண்ணெய் அப்பொழுது காய்ந்து அடங்கியதனால் உண்டான
நெய்யில் நன்கு ஆய்ந்த அரிசியால் முறைப்படி அடப்பட்ட சோற்றைக்
கலந்து ஆயிரமுறை ஆகுதியால் ஓமம் பண்ணி வழிபடுங்கள்.

விளக்கவுரை

'ஏய்ந்த' என்பது, 'மரம்' என்பதனோடு முடிந்தது. 'உரித்தற்குப் பொருந்திய மரம்' என்றபடி. 'எழுதிய வாய் வாய்ந்த' என்க. 'பெண்' என்றது சத்தியை. அது மேலை மந்திரத்திற் கூறிய வாறு அவளது வடிவாய் நிற்கும் எழுத்திற்கு ஆகுபெயர். 'ஆய்ந்த' என்பதன் அகரம் தொகுத்தலாயிற்று. 'நூலாக் கலிங்கம்' என்பதிற் போல, 'ஆய்ந்த' என்னும் பெயரெச்சம் அவிக்குக் காரணமாகிய அரிசிக்கு உரித்தாய், ஒற்றுமை பற்றி அவிக்குப் புணர்க்கப்பட்டது. 'ஆய்ந்த அவியை, காய்ந்து அவிந்த நெய்யுள் உடன் கலந்து ஆகுதி ஆயிரத்தால் ஓமம் பண்ணும்' எனக் கூட்டுக.
இதனால், இச்சக்கரத்தை வழிபடும் முறை கூறப்பட்டது.

பண்ணிஅப் பெண்ணைப் பரப்பற நீபிடி
எண்ணிய நாட்களில் இன்பமும் எய்திடும்
நண்ணிய நாமும் நான்முகன் ஒத்தபின்

துண்ணென மேயநற் சொக்கனு மாமே. *#1343*

மேற்கூறிய முறையில் ஓமம் செய்து அச்சத்தியை நீ மெல்லப் பிடித்தால், கணக்கிட்டுக் கூறப்பட்ட நாள்களுக்குள்ளே நன்மை உண்டாகும். ஒமத்தைச் செம்மையாக வளர்த்தமையால், 'பிரமனுக்கு நிகரான பிராமமணனாயினான்' என்ற புகழை உலகத்தார் சொல்லும் அளவிற்கு இவ்வழிபாட்டில் சிறந்து நின்றபின், விரைவில் அவன் மிக உடல் அழகு பெற்றும் விளங்குவான்.

விளக்கவுரை

'பண்ணிய பொன்னை' என்பதும், 'துண்ணென நேயநற் சேர்க்கலு மாமே' என்பதும் பாடம் அல்ல. எண்ணிய நாள், ஒருமண்டலம்; நாற்பத்தெட்டுநாள். இதனை வழக்குப் பற்றிக் கொள்ள வைத்தார். 'நான்முகனோடு' என உருபு விரிக்க. சொக்கு - அழகன்.

இதனால், இவ்வழிபாடு பயன் தரும் காலம் கூறப்பட்டது.

ஆகின்ற சந்தனம் குங்குமம் கத்தூரி
போகின்ற சாந்து சவாது புழுகுநெய்
ஆகின்ற கப்பூரம் ஆகோ சனம்நீரும்
சேர்கின்ற ஒன்பதும் சேரநீ வைத்திடே. *#1344*

மேற்கூறிய சக்கரத்திற்கு ஆகும் பொருள்கள், 'சந்தனம், குங்குமப்பூ, மான்மதம், கண்ணேறு போதற்கு ஏதுவான கருஞ்சாந்து, சவ்வாது, புனுகுசட்டம், நெய், கோரோசனை, நீர்' என்னும் ஒன்பதுமாம். இவற்றை ஒருங்கு கூட்டி வைத்துக்கொண்டு வழிபாட்டினைத் தொடங்குவாயாக.

விளக்கவுரை

இவை ஆட்டுதல், பூசுதல், அணிவித்தல் முதலாக ஏற்ற பெற்றியாற் பயன்படுவன என்க.

இதனால், 'இவ்வழிபாட்டிற்குச் சிறப்பாகவேண்டும் பொருள்கள் இவை' என்பது கூறப்பட்டது.

வைத்திடும் பொன்னுடன் மாதவம் நோக்கிடின்
கைச்சிறு கொங்கை கலந்தெழு கன்னியைத்
தச்சிது வாகச் சமைந்தஇம் மந்திரம்
அர்ச்சனை ஆயிரம் ஆயிரம் சிந்தியே. *#1345*

இச்சக்கரத்தில் வைத்துத் தியானிக்கப்படும் பொன் போன்றவளாகிய சத்தியுடன் பொருந்தத்தக்க சிறந்த வழிபாடு யாது என ஆராயின், சத்தியை மிக இளைவளாகவும், அவளுக்கு உரிய மந்திரம் இவ் எழுத்துக்களேயாகவும் கொண்டு, தேவிதன் ஆயிர நாமங்களால் ஆயிரமுறை அருச்சனை செய்தல் என அறிவாயாக.

விளக்கவுரை

'பொன்னுடன் பொருந்தும் மாதவம்' என ஒருசொல் வருவிக்க. 'தைத்து' என்பது "தச்சு" எனப் போலியாயிற்று. கைச் சிறு - மிகச் சிறிய. தைத்தல் - உள்ளத்தில் பொருத்துதல். 'சமைந்த இம் மந்திரம் இதுவாக' என மாற்றிக் கொள்க. இது, இந்நிலை; தேவி இளை யளாய் விளங்கும்கோலம். 'ஆயிரம் ஆயிரம் எனச் சிந்தி' என்க. சிந்தி - சிந்தித்து உணர். இன எதுகையும், ஆசெதுகையும் வந்தன.

இதனால், 'இச்சக்கரத்தைத் தேவியது ஆயிர நாமத்தால் ஆயிர முறை அருச்சிக்க' என்பது கூறப்பட்டது.

சிந்தையி னுள்ளே திகழ்தரு சோதியாய்
எந்தாய் கரங்கள் இருமூன்றும் உள்ளன
பந்தமா சூலம் படைபாசம் வில்அம்பு
முந்தை (கிலீம்)எழ முன்னிருந் தாளே. ***#1346***

வழிபடுவோரது உள்ளத்திலே ஒளி விட்டு விளங்கு பவளாய், 'க்லீம்' என்னும் பீசத்தை முதலில் வைத்துக் கணிக்க அங்ஙனம் கணிப்பவர்களது கண்முன் தோன்றிநின்று அருளுகின்ற சத்தியாகிய எம் தாயது ஆறு கைகளிலும் உள்ளவைகளில் படைகள் ஆவன, விடாது பறறிய 'சூலம், பாசம், வில், அம்பு' என்பன.

விளக்கவுரை

ஏனை இருகரங்கள் அபயமும், வரதமுமாதல் நன் கறியப்பட்டது. ஈற்றடியை முதலடியின் பின்னர்க் கூட்டுக. 'எந்தை' என்பதும், 'உள்ளது' என்பதும் பாடம் அல்ல. 'இருமூன்றிலும்' என உருபு விரித்து, "படை" என்பதை அதன் பின்னர்க் கூட்டி உரைக்க.

இதனால், நவாக்கரிசக்கரத்துள் ஒன்றில் விளங்கும் சத்தியது வடிவு கூறப்பட்டது.

இருந்தனர் சத்திகள் அறுபத்து நால்வர்
இருந்தனர் கன்னிகள் எண்வகை எண்மர்
இருந்தனர் சூழ எதிர்சக் கரத்தே
இருந்த கரம்இரு வில்லம்பு கொண்டே. ***#1347***

வழிபடுவோனுக்கு எதிரே மேற்கூறிய சக்கரத்தில் சக்கர தேவியைச் சூழ்ந்து ஒவ்வொருத்திக்கு எண்மராக அறுபத்து நால்வர் சூழ எண்மர் சத்திகள் இருப்பர். அவர்கள், கையில் வில்லும் அம்பும் கொண்டிருப்பர்.

விளக்கவுரை

அவ் எண்மர் வாமை முதலியோராவர். 'அறுபத்து நால்வரும் எண் வகையாய் உள்ள எண்மர்கன்னிகள் இருந்தனர்'*1* என்க. 'இருந்த கரம் இரண்டில் வில் அம்பு கொண்டு' என்றவாறு. இருந்த அனைத்துக் கரம்

நான்கு, 'எதிர் சக்கரத்தே' என்பது முதலாகத் தொடங்கி, மேற்கூறியவாறு முடித்து, "இருந்தனர் சூழ" என்பதனை வேறு தொடராக்கியுரைக்க.
இதனால், மேற்கூறிய சத்தியது பரிவாரங்கள் கூறப்பட்டன.

கொண்ட கனங்குழை கோமுடி ஆடையாய்க்
கண்டஇம் மூர்த்தம் கனல்திரு மேனியாய்ப்
பண்டமர் சோதிப் படரித ழானவை
உண்டங் கொருத்தி உணரவல் லாருக்கே. ***#1348***

மணிகளால் கனமான குழை, அரசு முடி நல்ல ஆடை இவைகளை உடையதாய்க் காணப்படுகின்ற இவ்வடிவம் நெருப்புப் போன்றதாய் இருக்க, இயல்பாகவே பல இதழ்களை யுடைய விளக்கம் மிக்க தாமரைமலர் இருக்கையில் எழுந்தருளியிருக் கின்ற ஒருத்தி, தன்னை உணரவல்லவர்க்குத் தன் இருப்புத் தோன்ற நிற்பாள்.

விளக்கவுரை

படர்தல் - பலவாய் விரிதல்.
இதனால், அச்சத்தியது உருவச் சிறப்பு சில கூறப்பட்டன.

உணர்ந்திருந் துள்ளே ஒருத்தியை நோக்கிற்
கலந்திருந் தெங்குங் கருணை பொழியும்
மணந்தெழும் ஓசை ஒளியது காணும்
தணந்தெழும் சக்கரம் தான்தரு வாளே. ***#1349***

உணர வல்லார்க்கு உள்ளவள் ஆகின்ற அச் சத்தியை உள்ளே உணர்ந்து காணின், அவள் எங்கும் தானாய்க் கலந்து அருள்மழையைப் பொழிவாள்; (எவ்விடத்திலும் அவ் அடியவ னுக்குத் தடையின்றி அருளுவாள் என்றபடி.) அவள் அங்ஙனம் அருளும்பொழுது அவளோடு கூடி இனிய ஓசையும், அழகிய ஒளியும் தோன்றும். அவளும் அச்சக்கரத்தினின்றும் வெளிப்பட்டு வருவாள்; வந்து, வேண்டும் வரங்களைத் தருவாள்.

விளக்கவுரை

ஓசையாவன தோத்திரங்களாலும், வாக்கியங்களாலும் ஆவன.
இரண்டாம் அடி உயிரெதுகை.
இதனால், அச்சத்தி வழிபடுவார்க்கு முன்னின்று அருளுமாறு கூறப்பட்டது.

தருவழி யாகிய தத்துவ ஞானம்
குருவழி யாகுங் குணங்களுள் நின்று
கருவழி யாகுங் கணக்கை அறுத்துப்
பெருவழி ஆக்குமப் பேரொளி தானே. ***#1350***

மேலெல்லாம் 'பேரொளி' எனச் சொல்லப்பட்ட சத்தி, வீடுபேற்றைத் தரும் வழியாகிய உண்மை ஞானம் ஆசிரியர் வழியாகப் பெருகும் செயலிடமாக விளங்கி நின்று, பிறவிக்கு ஏது வாகும் அவை தோன்றுகின்ற முறைமையை அழித்து, மேலான நெறி யாகிய அருளை வழங்குவாள்.

விளக்கவுரை

செயலை, "குணம்" என்றார். கணக்கு - வரையறை; நியதி.
இதனால் அவளால் ஞானமும் எய்துதல் கூறப்பட்டது.

பேரொளி யாய பெரிய பெருஞ்சுடர்
சீரொளி யாகித் திகழ்தரு நாயகி
காரொளி யாகிய கன்னிகை பொன்னிறம்
பாரொளி யாகிப் பரந்துநின் றாளே. ***#1351***

பொதுவாக, 'பேரொளி' எனக் குறிக்கப்படுகின்ற, பெரிய ஒளிகட்கெல்லாம் பெரிய ஒளியாகிய சிவனது சிறப்புப் பொருந்திய ஒளியாய்த் திகழ்கின்றமையால் அவனுக்கு நாயகியாய், இயல்பிலே நீல நிறம் உடையவளாகிய சத்தி, பூமியின் நிறமாகிய பொன்னிறம் உடையவளாய்ப் பூமியில் எங்கும் நிறைந்து நிற்கின்றாள்.

விளக்கவுரை

'ஆகையால், அவளை இச்சக்கரத்தில் பொன்னிறம் உடையவளாகக் கருதுதலும் பொருந்தும்' என்பதாம்.
இதனால், அச்சத்தியது தியானத்திற்கு ஆவதொன்று கூறப்பட்டது.

பரந்த கரம்இரு பங்கயம் ஏந்திக்
குவிந்த கரம்இரு கொய்தளிர்ப் பாணி
பரிந்தருள் கொங்கைகள் முத்தார் பவளம்
இருந்தநல் லாடை மணிபொதிந் தன்றே. ***#1352***

உடம்பிற்கு வெளியே நீட்டியுள்ள இருகைகள் இரு தாமரை மலர்களை ஏந்தியிருக்க, உடம்பிற்கு உள்ளே அடக்கியுள்ள இரு கைகள் யாதும் ஏந்தாதே விளங்க, உயிர்கட்குத் தாயாகி அருளு கின்ற தனங்கள் முத்து மாலையும், பவழ மாலையும் உடையனவாக, உடுத்தியுள்ள ஆடை மிகச் சிறந்த ஆடையாய் மணிகளால் பொதியப்பட்டு அவள் மாட்டு இருந்தது.

விளக்கவுரை

'ஏந்தி' என்பதனை, 'ஏந்த' எனத் திரிக்க. 'யாதும் ஏந்தாதவை' என்பதை விளக்க, 'கொய்தளிர்ப்பாணி' என இயல்பு கூறி யொழிந்தார். அவை அபய வரதங்களாதல் இயல்பாக அறியப் பட்டது. 'பாணி, பவளம்' என்பவற்றின் பின் 'ஆக' என்பன வரு விக்க. பின்வரும் 'ஆக' என்பதற்கு, 'பொருந்த' என்பது பொருள். பொதிந்தன்று - பொதிந்தது.

இதனுள் உயிரெதுகை வருக்க எதுகை களுடன் மூன்றாமெழுத்தெதுகை வந்தது.
இதனால், அவளது வடிவச் சிறப்பு வேறு சிலவும் கூறப் பட்டன.

மணிமுடி பாதம் சிலம்பணி மங்கை
அணிபவ ளன்றி அருளில்லை யாகும்
தணிபவர் நெஞ்சினுள் தன்னரு ளாகிப்
பணிபவர்க் கன்றோ பரகதி யாமே. **#1353**

தலையில் இரத்தின கிரீடத்தை அணிபவளும் பாதத்தில் சிலம்பை அணிபவளும் ஆகிய இச்சத்தியையன்றித் 'திருவருள்' என்பது வேறில்லை. ஆகவே, பிற தெய்வங்களின் மேல் செல்லும் அவா அடங்கித் தன்னை நினைப்பவர் நெஞ்சினுள்ளே தான் தனது இயல்பாகிய அருளோடு விளங்கிப் பின்னும் பலவாற்றால் தன்னை வழிபடுவார்க்கு அன்றோ இவள் மேலான கதியாயும் நிற்பாள்!

விளக்கவுரை

'தலையில்' என்பது ஆற்றலால் விளங்கிற்று. 'அணிபவள்' என்பதை 'மணிமுடி' என்றதன் பின்னர்க் கூட்டுக. தணிதலுக்கு வினைமுதல் வருவிக்கப்பட்டது. 'அணிபவள்' முதலிய மூன்றனையும், 'அணிந்தவர்' என்பது முதலாகப் பிறிது பொருள்படப் பாடம் ஓதுவாரும் உளர்.
இதனால், அவளது வடிவச் சிறப்புச் சில கூறி, அவளே பரகதியாதல் கூறப்பட்டது.

பரந்திருந் துள்ளே அறுபது சத்தி
கரந்தனர் கன்னிகள் அப்படிச் சூழ
மலர்ந்திரு கையின் மலரவை ஏந்தச்
சிறந்தவர் ஏத்தும் (சிரீம்)தன மாமே. **#1354**

இச்சத்தி, தன்னை வழிபடுவோனது உள்ளத்திலே நிறைந்திருந்து, அறுபத்து நால்வரும், எண்மரும் ஆகிய சத்திகள் மேற்கூறப்பட்டவாறு *(1353)* தன்னைச் சூழ்ந்திருக்க, பரந்த இரு கைகளில் இருதாமரை மலர்களையும் மேற்கூறியவாறு *(1358)* ஏந்தி, உயர்ந்தவர்கள் துதிக்கின்ற 'ஷ்ரீம்' என்னும் பீசத்திற்குரிய திருமகளாய் நின்று செல்வத்தையும் அளிப்பாள்.

விளக்கவுரை

அறுபத்து நான்கில், 'அறுபது' என்னும் பேரெண் ணினை மட்டுமே கூறி நினைவுறுத்தார். மேற்கூறியவைகளை மீளவும் நினைவுகொள்ளச் செய்தது, அவற்றை நன்கு தியானிப்பித்தற்கு. கரத்தல் - அடங்குதல்; கீழ்ப்படிதல். 'கிரீம் ஆகிய தனம்' என்க. 'தனம்' என்றது அதனைத்தரும் திருமகளை உணர்த்திற்று. இங்ஙனம் உணர்த்தி நிற்கக் கூறியது,

வழிபடுபவனக்குச் செல்வத்தைத் தருதலை உணர்த்தற்கு. இச்சக்கரத் தலைவியாகின்ற சத்தி, இதன் ஒரு பகுதியாகிய ஷ்ரீம் ஆகிநின்று அருளுதற்கு ஐயமில்லை என்றவாறு.
உயிரெதுகையும்,மூன்றாமெழுத்தெதுகையும் வந்தன.
இதனால், பரகதியாய் நிற்கும் அவள் செல்வத்தையும் தருதல் கூறி, ஐயமறுக்கப்பட்டது.

தனமது வாகிய தையலை நோக்கி
மனமது ஓடி மரிக்கில்ஓ ராண்டில்
கனமவை அற்றுக் கருதிய நெஞ்சம்
தினகர னாரிடச் செய்திய தாமே. ***#1355***

சத்தியை 'ஷ்ரீம்' பீச வழிச் செல்வத் தலைவியாக வைத்து, மனம் பற்றித் தியானித்து வந்தால், ஓராண்டிற்குள் அம்மனம் செல்வத்தில் உள்ள பற்றாகிய சுமை நீங்கப்பெற்று, ஞான சூரியனாகிய சிவனிடத்திற் செல்லும் செயலை உடையதாகும்.

விளக்கவுரை

'ஸ்மரிக்கில்' என்பது, "மரிக்கில்" எனத்தற்பவ மாயிற்று. 'சுமை' என்றது, வேண்டாததாதல் பற்றி. நேரே திருமகளை வழிபடுவார்க்கு மேலும் மேலும் அச்செல்வத்தில் பற்று மிகுமாகலின், அதனை விட வேண்டுவார் செல்வத்தின் பொருட்டும் சிவ சத்தியையே திருமகளாக வைத்து வழிபடல் வேண்டும் என்றவாறு.
இதனால், இச்சத்தி தரும் செல்வத்தது சிறப்புக் கூறப்பட்டது.

ஆகின்ற மூலத் தெழுந்த முழுமலர்
பேர்கின்ற பேரொளி யாய மலரதாய்ப்
போகின்ற பூரண மாக நிறைந்தபின்
சேர்கின்ற செந்தழல் மண்டல மானதே. ***#1356***

பக்குவம் முதிர்தற்கு முதலாய் உள்ள மூலாதாரத் தாமரையினின்றும் வளர்ந்து செல்கின்ற மூலாக்கினி, சுவாதிட்டானம் முதலியமற்றை ஆதாரங்களில் உள்ள தாமரை மலர்களில் பொருந்திச் சென்று, அவற்றிற்கு மேலும் போகின்ற பூரண ஒளியாய் நிறைந்த பின்பு, அவ்வக்கினி யோகியின் உடம்பு முழுதுமான மண்டலமாய் நிற்கும்.

விளக்கவுரை

'அப்பொழுது மனம் பற்றற்றதாகும் ஆதலின், அம்முறையானே சத்தியைத் தியானிக்க' என்பது குறிப்பெச்சம். 'போகின்ற பேரொளி' என்பது பாடம் அன்று.
இதனால், பற்றறுதியை விரும்புவார் சிவ சத்தியை வழிபட வேண்டுதல், மேலும், யோக நெறியால் வழிபடின், விரையப் பயன் தருதல்

கூறப்பட்டது.

ஆகின்ற மண்டலத் துள்ளே அமர்ந்தவள்
ஆகின்ற ஐம்பத் தறுவகை யானவள்
ஆகின்ற ஐம்பத் தறுசத்தி நேர்தரும்
ஆகின்ற ஐம்பத் தறுவகைச் சூழலே. *#1357*

வழிபடுவோன் ஆக்கம் பெறுதற்கு ஏதுவாகிய இச் சக்கரத்தில் வீற்றிருக்கும் சிவசத்தி, மாதுருகாட்சரம் ஐம்பத்தொன்றும், வியட்டிப் பிரணவமாகிய சூக்கும அக்கரம் ஐந்தும் ஆகிய ஐம்பத்தாறு அட்சரங்கட்கும் தலைவியாகிய முழுமுதல்வி. பிற சத்திகள் யாவரும் தனித்தனி இடங்களையுடைய அவற்றுள் ஒவ்வொன்றற்கே முதல்வியராவர்.

விளக்கவுரை

'ஆகவே, இச்சத்தியை வழிபட எல்லாப் பயன்களும் எய்தும்' என்பதாம். 'ஐம்பத்தாறு' என்பது தொகைக் குறிப்பாய் அக்கரங்களை உணர்த்திற்று. ஐம்பத்தாறும் வகையேயாக, அவற்றின்வழி விரியாய்ப் பிறக்கும் எழுத்துக்கள் அளவில ஆதலின், "ஐம்பத்தறு வகை" என்றார். "சத்தி" என்பது அஃறிணையாய் ஒரு கால் பன்மையும் உணர்த்துமாதலின், "ஐம்பத்தறு சத்தி" என ஓதினார். நேர்தரல்,பொருந்துதல். சூழல் - இடம்; என்றது, சக்கர அறைகளை. இதனால், சிவ சத்தியது முழுமுதல் தன்மையை விளக்கி மேலது தெளிவிக்கப்பட்டது.

சூழ்ந்தெழு சோதி சுடர்முடி பாதமா
ஆங்கணி முத்தம் அழகிய மேனியும்
தாங்கிய கையவை தார்க்கிளி ஞானமாய்
ஏந்து கரங்கள் எடுத்தமர் பாசமே. *#1358*

அவளது அழகிய மேனி சுற்றிலும் ஒளி வீசி விளங்குவது. அதில் கேசாதி பாதம் அணியப்பட்ட அணிகள் முத்தாலாகியன. கீழ் இரண்டு கைகளில் கிளியும், ஞான முத்திரையும், உயர எடுத்த இரண்டு கைகளில் பாச அங்குசங்களும் விளங்கும்.

விளக்கவுரை

'மேனியும்' என்னும் உம்மை, சிறப்பு. 'அழகிய மேனி' என்பதை முதலிற் கூட்டி உரைக்க. பாசத்தைக் கூறவே, அங்குசமும் பெறப்பட்டது. இதனால், வருகின்ற மந்திரத்திற் கூறப்படும் பயனுக்கு ஏற்புடைய வடிவு கூறப்பட்டது.

பாசம தாகிய வேரை அறுத்திட்டு
நேசம தாக நினைத்திரும் உம்முளே

நாசம தெல்லாம் நடந்திடும் ஐயாண்டில்
காசினி மேலமர் கண்ணுத லாக்குமே. ***#1359***
சத்தியை மேற்கூறிய வடிவினளாக உங்கள் உள்ளத்தில் அன்போடு தியானியுங்கள்; துன்பங்கள் யாவும் ஒழியும்; ஐந்தாண்டிற்குள்ளே, பிறவிக்கு முதலாகிய மலங்களைப் போக்கி, 'பூமியிலே காணப்படும் சிவன்' என்னும் நிலையை நீங்கள் அடையச் செய்வாள்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதலிற் கொள்க. வேராதல் பிறவிக்கு. 'கண்ணுதலாகுமே' என்பது பாடம் அன்று. மேல், *(1361)* 'ஓராண்டில் தினகரனாரிடச் செய்தியதாம்' என்பது சிவயோக சித்தியைக் கூறியதும் இது சிவமாந் தன்மைப் பெருவாழ்வைக் கூறியதும் என்க.
இதனால், பிறிதொரு பயன் பற்றிய வழிபாடு கூறப்பட்டது.

கண்ணுடை நாயகி தன்னரு ளாம்வழி
பண்ணுறு நாதம் பகையற நின்றிடில்
விண்ணமர் சோதி விளங்க ஹிரீங்காரம்
மண்ணுடை நாயகி மண்டல மாகுமே. ***#1360***
அருட் சத்தியின் அருள் கிடைத்தற்குரிய வழியில் நாதமும் ஒத்து நிற்கும்படி நிற்க வேண்டில், சிவசோதி விளங்கும்படி சத்தியை வழிபடுதற்குரிய சக்கரம் ஹ்ரீங்கார சக்கரமேயாம்.

விளக்கவுரை

இச்சக்கரம் முன்னை யதிகாரத்திற் கூறிய புவனாபதி சக்கரமே. அதிகாரம் வேறாய வழியும் அதனைக் கூறியது, அதன்வழி நின்று அருளாகிப் பின் இங்குக் கூறிய சிவமாதலை எய்துக என்றற்கு. கண் - கண்ணோட்டம்; அருள்.
இதனால், ஒரு பயன்கருதி மேற்போந்ததொன்று மறித் துணர்த்தப்பட்டது.

மண்டலத் துள்ளே மலர்ந்தெழு தீபத்தைக்
கண்டகத் துள்ளே கருதி யிருந்திடும்
விண்டகத் துள்ளே விளங்கி வருதலால்
தண்டகத் துள்ளவை தாங்கலு மாமே. ***#1361***
நவாக்கரி சக்கரத்துள் விளக்குப் போல ஒளி விட்டுத் தோன்றுகின்ற சத்தியை உள்ளத்திலே கண்டு, பின் இடை யறாது தியானித்திருங்கள். அத்தியானத்தில் அவள் மேலும் விளக்கு முற்று வருதலால், சுழுமுனையில் உள்ள ஆதாரங்களில் நிகழும் அனுபவங்களை நீங்கள் முறையானே பெற்று உயரலாம்.

விளக்கவுரை

விண்டு - தனது இயல்பைப் புலப்படுத்தி. தண்டு - முதுகந்தண்டு; அஃது ஆகுபெயராய்ச் சுழுமுனை நாடியை உணர்த்திற்று. 'நவாக்கரி சக்கரங்களை முறையாக வழிபட யோகம் படிமுறையால் முதிர்ந்து பயன்தரும்' என்றவாறு.

இதனால், நவாக்கரி சக்கர வழிபாட்டின் பயன் ஒன்று கூறப் பட்டது.

தாங்கிய நாபித் தடமலர் மண்டலத்
தோங்கி யெழுங்கலைக் குள்உணர் வானவள்
ஏங்க வரும்பிறப் பெண்ணி யறுத்திட
வாங்கிய நாதம் வலியுட னாகுமே. *#1362*

உந்தித் தானம் தாங்கியுள்ள தாமரை மலராகிய ஆதார சக்கரத்தினின்றும் வளர்ந்தெழுவதாகிய பிராசாத கலை களுக்குள் அறிவு வடிவாய் நிற்கின்ற சத்தி, பிராசாத யோகி வருந்தும் படி வருகின்ற அவனது பிறப்பை நீக்க எண்ணி, அங்ஙனமே நீக்குத லால், அவனைத் தன்வழிப்படுத்திவந்த நாதம் அவனது வழிக்குத் துணையாய் அவன் வயமாகும்.

விளக்கவுரை

உந்தித் தானச் சக்கரம், மணிபூரகம். அது மேதா கலைத் தொடக்கமாதலின் அதனையே பிராசாத கலை ஓங்கி எழும் இடமாகக் கூறினார். ஈற்றடியிற் கூறியது. மேல் *(1366)* 'நாதம் பகையற' என்றதேயாதலை நோக்குக.

இதனால், மேற்கூறிய வழிபாட்டினால் வாசியோக மேயன்றிப் பிராசாத யோகமும் கைவருதல் கூறப்பட்டது.

நாவுக்கு நாயகி நன்மணி பூண்ஆரம்
பூவுக்கு நாயகி பொன்முடி ஆடையாம்
பாவுக்கு நாயகி பாலொத்த வண்ணத்தள்
ஆவுக்கு நாயகி அன்றமர்ந் தாளே. *#1363*

நாதத்திற்குத் தலைவியாகிய வாகீசுவரி நல்ல மாணிக்கத்தால் ஆகிய ஆபரணத்தையும், ஆரத்தையும் அணிந்தவள். செந்தாமரை மலராம் இல்லத்திற்குத் தலைவியாகிய திருமகள் பொன் னாலாகிய முடியையும், ஆடையையும் கொண்டவள். பாடல் களுக்குத் தலைவியாகிய கலைமகள் பால்போலும் வெண்ணிறம் பெற்றவள். பசுக்களாகிய உயிர்கள் அனைத்திற்கும் தலைவியாகிய சிவசத்தி படைப்புக் காலந்தொட்டே இவரிடத்து இருந்து அருள் புரிகின்றாள்.

விளக்கவுரை

அவரவர் தோற்றப் பொலிவுகளை எடுத்துக் கூறியது, அவர்க்கிடையே உள்ள தார தம்மியங்களைக் குறிப்பாற் கூறி, சிவசத்தி அவர்

எல்லாரிடத்தும் உள்நின்று பல செயல்களையும் ஏற்ற பெற்றி யால் அவர்வழி நிகழ்வித்தலை உணர்த்தற்கு. 'அங்கமர்ந் தாளே' என்பது பாடம் ஆகாமை அந்தாதிக்கு ஏலாமையான் அறியப்படும்.
இதனால், வேறு வேறு தேவியர் வழி பெறப்படும் பயன்களும் சிவ சத்தியால் தரப்படுவவேயாதல் கூறப்பட்டது.

அன்றிரு கையில் அளந்த பொருள்முறை
இன்றிரு கையில் எடுத்தவெண் குண்டிகை
மன்றது காணும் வழியது வாகவே
கண்டங் கிருந்தவர்க் காரணி காணுமே. ***#1364***

பிரமசாரியாய் இருந்தபொழுது இரு கைகளிலும் இருந்தது பொருள்களின் இயல்பை அளந்து காணும் நூல் எழுதப்பட்ட சுவடி. யோகியாய்விட்ட இன்று இரு கைகளிலும் இருப்பது தூய கமண்டலம். இவ்வாறு படி முறையான ஆச்சிரம ஒழுக்கத்தில் நிற் பதையே இறைவன் நடனம் புரியும் அம்பலத்தை உள்ளபடி காணும் முறையாகக் கொண்டு, அங்ஙனமே கண்டு அங்கு இருப்பவரை அனைத்துக்கும் காரணியாகிய சத்திதான் கடைக் கணித்திருப்பாள்.

விளக்கவுரை

இருகைகளிலும் இருப்பனவாகக் கூறியது. அதனைப் போற்றிக் கொண்டமையைக் குறித்தவாறு. அம்பலத்தை உள்ளபடிக் காணுதலாவது, புருவ நடுவில் உணர்ந்திருத்தல்.
இதனால், சக்கரம் முதலிய சத்தி வழிபாட்டிற்கு ஒழுக்க முறை துணையாதல் கூறப்பட்டது.

காரணி சத்திகள் ஐம்பத் திரண்டெனக்
காரணி கன்னிகள் ஐம்பத் திருவராய்க்
காரணி சக்கரத் துள்ளே கரந்தெங்கும்
காரணி தன்னரு ளாகிநின் றாளே. ***#1365***

எப்பொருட்கும் காரணியாகிய சிவ சத்தி, பிற சத்திகளாய்க் கன்னியராய் உள்ள ஐம்பத்திருவராய்ச் சக்கரங்களுள் மறைந்து தனது இயல்பான அருள் வெளிப்பட நிற்கின்றாள்.

விளக்கவுரை

'காரணி' என்பன பலவும் சொற்பொருட் பின்வரு நிலையாய் நின்றன. சத்திகள் ஐம்பத்திருவராவார், ஐம்பத்தோர் அச்சக்கரங்கட்கும், ஓங்காரத்திற்கும் உரியவர் என்க.
இதனால், எந்த அக்கரங்கள் எந்த வகையில் அமைந்த சக்கர மாயினும் அதில் நின்று அருள்புரிபவள் சிவ சத்தியே என்பது உணர்த்து முகத்தால், நவாக்கரி சக்கரங்களும் அன்னவாதல் கூறப்பட்டது.

நின்றஇச் சத்தி நிலைபெற நின்றிடில்
கண்டஇவ் வன்னி கலந்திடும் ஓராண்டில்
கொண்ட விரதம்நீர் குன்றாமல் நின்றிடில்
மன்றினில் ஆடும் மணியது காணுமே. ***#1366***

நவாக்கரி சக்கரத்தில் நிற்கின்ற சத்தி உங்கள் உள்ளத்தில் நிலைபெறும் வகையில் நீங்கள் ஒழுகினால், உங்களைக் கண்டுகொண்டிருந்த ஒளியாகிய சத்தி ஓராண்டில் உங்கட்கு வெளிப் படுவாள். அதற்குப் பின்னும் நீங்கள் அவ்வொழுக்கம் சிறிதும் குறையாதபடி கடைப்பிடித்து நின்றால், மேற்கூறிய அம்பலத்தில் நடிப்பவன் உங்கட்குக் காணப்படுவான்.

விளக்கவுரை

இதன்கண் இனவெதுகை வந்தது.
இதனால், உறுதியான ஒழுக்கம் படிமுறையில் பயனை மேன் மேலாகத் தருதல் கூறப்பட்டது.

கண்டஇச் சத்தி இருதய பங்கயம்
கொண்டஇத் தத்துவ நாயகி யானவள்
பண்டை அவாவுப் பகையை யறுத்திட
இன்றென் மனத்தில் இனிதிருந்தாளே. ***#1367***

எல்லா உயிரையும் காண்கின்றவளும், எனது உள்ளத் தாமரையை இடமாகக் கொண்டு இருக்கின்ற மெய்ப் பொருளானவளும் ஆகிய இச்சத்தி, தொன்று தொட்டு வருகின்ற எனது 'அவா' என்கின்ற பகையை அறுத்து அருள் செய்தற் பொருட்டே என் உள்ளத்தில் இனிது வீற்றிருக்கின்றாள்.

விளக்கவுரை

'ஆதலின், அவளை நீங்களும் உங்கள் உள்ளத்துள் இருக்கச் செய்தால் உங்கட்கும் அவ்வாறு அருள் செய்வாள்' என்பது குறிப்பெச்சம்.
'இன்பம் இடையறா தீண்டும் அவாஎன்னும்

துன்பத்துள் துன்பங் கெடின்' *1*
என்ப ஆகலின், அவாவே பெரும்பகையும், அதனைப் போக்குதல் முதற்பயனும் ஆயின. 'அவா' என்பதன் ஈற்றில் ஓர் உகரம் கூட்டி ஓதினார். இதனை, 'பண்டைய ஆயு' எனவும், 'பண்டைய வாயு' எனவும் தாம் வேண்டுமாறே ஓதி, அவற்றிற்கு ஏற்ப உரைப்ப. இதனுள்ளும் இனவெதுகை வந்தது.
இதனால், இச்சத்தி வழிபாடு ஆசையை அறச்செய்தல் கூறப்பட்டது.

இருந்தஇச் சத்தி இருநாலு கையில்

பரந்தஇப் பூக்கிளி பாசம் மழுவாள்
கரந்திடு கேடகம் வில்லம்பு கொண்டங்
குரந்தங் கிருந்தவள் கூத்துகந்தாளே. ***#1368***

என் உள்ளத்தில் இருக்கின்ற இவளே எட்டுக் கைகளை உடையவளாயும், அக்கைகளில், 'தாமரை மலர், கிளி, பாசம், மழு, வாள், எதிர்வரும் கருவியைத் தடுக்கின்ற கேடகம், வில், அம்பு' என்ற இவைகளை ஏந்தி வீரநடனம் புரிபவளாயும் விளங்குவாள்.

விளக்கவுரை

கைகளின் பரப்பை அவற்றில் உள்ள படைக்கலங்கள் மேல்வைத்து ஓதினார். 'பரந்த இருநாலுகையில்' எனக் கூட்டினும் ஆம். உரம் இங்கு, வீரம். இதன்பின் உள்ள 'தங்க' என்பதன்ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. இவ் அடியில் மோனை ஈற்றயற்சீரின் இறுதி அசைக்கண் வந்தது.

இதனால், நவாக்கரி சக்கர சத்தியது மற்றொரு வடிவு வேறுபாடு கூறப்பட்டது.

உகந்தனள் பொன்முடி முத்தார மாகப்
பரந்த பவளமும் பட்டாடை சாத்தி
மலர்ந்தெழு கொங்கை மணிக்கச் சணிந்து
தழைந்தங் கிருந்தவள் தான்பச்சை யாமே. ***#1369***

மேற்கூறிய வீர சத்தி பச்சை நிறங்கொண்டவள்; பொன்முடியை விரும்பிக் கவித்தவள்; ஆரமாகப் பரந்த முத்துக் களையும், பவளங்களையும் அணிந்து, பட்டாடை உடுத்து, புடை பரந்த கொங்கைகளின்மேல் இரத்தினக் கச்சு அணிந்து, மிகவும் பொலிவுடன் விளங்குவாள்.

விளக்கவுரை

'தான் பச்சையாம்' என்பதை முதலிற் கொள்க. அவ்வாறின்றி முதற்கண் எழுவாய் வருவித்துரைத்தலுமாம். தான், மேற்கூறப்பட்டவள். 'பச்சையம்மன்' என ஒரு தேவி தமிழ்நாட்டில் இருத்தல் இங்கு நினைக்கத்தக்கது. 'பச்சையம்மாள், பச்சையப்பன்' என்னும் பெயர்கள் இவளை ஒட்டியே மக்களுக்கும் இடப்படுகின்றன. இது மூன்றாமெழுத்தெதுகை பெற்றது.

இதனால், மேற்கூறிய சத்தியது வடிவழகு வகுத்துக் கூறப்பட்டது.

பச்சை இவளுக்குப் பங்கிமார் ஆறெட்டு
கொச்சையார் எண்மர்கள் கூடி வருதலால்
கச்சணி கொங்கைகள் கையிருங் காப்பதாய்
எய்ச்ச இடைச்சி இனிதிருந் தாளே. ***#1370***

பச்சை நிறம் உடைய இச்சத்திக்குப் பொதுமைப் பாங்கியர் நாற்பத்தெண்மரும், அணுக்கப்பாங்கியர் எண்மரும் சேர்ந்து பணிவிடை புரிந்து வருதலால், அவர்கள் எம்மருங்கும் பெரிய காவலாய் இருக்க இவள் பெருமையோடு வீற்றிருக்கின்றாள்.

விளக்கவுரை

மேல் *(1363)* 'ஐம்பத்தறு சத்திகள்' எனப்பட்டார் இங்ஙனம் நாற்பத்தெண்மரும், எண்மருமாய்ப் பிரிந்து நிற்கின்றார் என்க. எண்மர், முதற்கண்நிற்கும் அகாரத்திற்கும். இறுதி இரண்டெழுத் திற்கும் சூக்கும பஞ்சாக்கரத்திற்கும் உரியவராகக் கொள்ளுதல் பொருந்தும்.
கொச்சையார் - கொஞ்சிப் பேசும் சொற்களை யுடையவர். இப்பெயரும், 'கச்சணி கொங்கைகள்' என்றதும் பாங்கிமார்களையே. 'கொங்கைகள்' என்ற பன்மை மகளிர் மேலது. கை - பக்கம்; என்றது திசைகளை எனவே, எட்டுத் திசைக்கும் எண்மர் உளர் எனவும், 'ஆறெட்டு' என்றதனால், 'அவருள் ஒருத்திக்கு அறுவர் துணை, யாவர்' எனவும் கொள்க. 'எய்த்த' என்பது 'எச்சை' எனப்போலியாயிற்று.
இதனால், இச்சத்தி தனது முதன்மை தோன்ற வீற்றிருக்கும் முறை கூறப்பட்டது.

தாளதி னுள்ளே தயங்கிய சோதியைக்
காலது வாகக் கலந்து 'கம் ஜம்' என்று
மாலது வாக வழிபாடு செய்துநீ
பாலது போலப் பரந்தெழு விண்ணிலே. ***#1371***

நாவடியில் பொருந்திய ஒளிவடிவாய் விளங்கு கின்ற சத்தியைப் பிராண வாயுத் துணையாக, 'கம், ஜம்' என்று செபிக்கும் செபத்தால் தலைப்பட்டு அன்போடு வழிபட்டு, அதன் பயனாக மிக்க ஒளியுடைய உடம்போடு வானத்தில் இயங்கும் (ஆகாய கமனம் செய்யும்) ஆற்றலைப் பெறுவாயாக.

விளக்கவுரை

அந்தாதி நயம் வேண்டி, சிறுபான்மை லகரத்திற்கு ளகரம் போலியாகும் முறைமையை மேற்கொண்டு. 'தாலது' எனற் பாலதனை, 'தாளது' என ஓதினார். 'கம்' என்பதும் ஆகாயத்திற்குரிய பீசமாகும். 'ஜம்' என்பது ஜகத்துக்குத் தலைவியாம் ஜகதா தேவிதன் பீசம். இவற்றைச் செபித்து இவளை வழிபடவே வான்வழி இயங்கும் ஆற்றல் உண்டாவதாம். 'ஜம்' என்னாது, 'ஐம்' என்ப பொதுப்பட ஓதுதல் பாடமாகாது. இனி, 'கம்ஜம்' என்பதன் கருத்து அறியாதார். 'கலந்து கொள்' எனப் பாடம் வேறாக ஓதுவர். மிக்க ஒளியது நிறம் வெண்மையாகலின், 'பாலதுபோலப் பரந்து' என்றார். முதலடி இனவெதுகை.

இதனால், இச்சத்தியை ஒரு சிறப்புப் பயன் கருதி வழிபடும் முறைமை கூறப்பட்டது.

விண்ணமர் நாபி இருதய மாங்கிடைக்
கண்ணமர் கூபம் கலந்து வருதலால்
பண்ணமர்ந் தாதித்த மண்டல மானது
தண்ணமர் கூபம் தழைத்தது காணுமே. *#1372*

நன்கமைந்த சூரிய மண்டலமானது பிராணவாயு கும்பிக்கப்பட்டுத் தங்கியிருக்கின்ற, கொப்பூழின் அடியாகிய சுவாதிட் டானத்திற்கும், இருதயத்திற்கும் இடைக்கண் உள்ள மணிபூரகத்திலும் கலந்து நிற்றலால், குளிர்ச்சியுடைய அந்த மணிபூரகமும் சிறந்து நிற்கின்றது.

விளக்கவுரை

மூன்றாம் அடியை முதலில் கூட்டி உரைக்க. 'ஆங்கு' என்றது, 'அவ்விடங்கட்கு' எனப் பொருள்தந்தது. சூரியமண்டல மாவது, 'மணிபூரகம், அநாகதம்' என்னும் இரண்டு ஆதார எல்லைக் குட்பட்ட பகுதி. அஃது அன்னதாதலாலே நீர்மண்டலமாய் உள்ள மணி பூரகமும் சிறப்பதாயிற்று' என்றவாறு. நீர்மண்டலமே இன்னதாயிற்று என்றதனால், பிற மண்டலம் அதனால் சிறப்படைதல் கூறவேண்டா வாயிற்று. 'ஞாயிற்று மண்டலத்தாலே யாவும் நலமுறுகின்றன' என்றவாறு. இங்ஙனமாகவே மேற்கூறியவாறு வானில் இயங்கும் வன்மை பெற்றவர் நலம்பல எய்துவர் என்பதாம். நீர்மண்டலமாயதை, 'கூபம்' என்றார்.
இதனால், மேற்கூறிய பயனைப் பெற்றாரது சிறப்புக் குறிப்பால் உணர்த்தப்பட்டது.

கூபத்துச் சத்தி குளிர்முகம் பத்துள
தாபத்துச் சத்தி தயங்கி வருதலால்
ஆபத்துக் கைகள் அடைந்தன நாலைந்து
பாபத் தறுக்கப் பரந்தன சூலமே. *#1373*

சூரிய மண்டலத்துச் சத்தியின் கூறு மணிபூரக சத்தி யோடு கலந்து நிற்றலால், மணிபூரக சத்திக்குப் பத்து முகங்கள் உள்ளன வாம். பத்து முகங்கள் உளவாகவே கைகள் இருபது உள்ளன. பாபத்தை அறுப்பது சூலம் ஆதலால், சூலங்கள் பல கைகளில் உள்ளன.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதலிற் கூட்டி உரைக்க. 'ஆபத்தைப் போக்குகின்ற கைகள்' என்க. 'பாபத்தை' என்னும் ஐகாரம் தொகுத்தலாயிற்று. 'பாசம் அறுக்க' என்பது பாடம் அன்று.
இதனால், 'தழைத்தது' என மேற்கூறிப்பட்ட ஆதாரத்தில் விளங்கும்

சத்தியது வடிவு கூறப்பட்டது.

சூலந்தண் டொள்வாள் சுடர்பர ஞானமாம்
வேலம்பு தமருகம் மாகிளி வில்செண்டு
காலம்பூப் பாசம் மழுகத்தி கைக்கொண்டு
கோலஞ்சேர் சங்கு குவிந்தகை எண்ணதே. *#1374*

மேற்கூறிய சத்திதன் கைகள் இருபதில் மேற்கூறிய வாறு பல சூலங்களுடன், 'தண்டு, வாள், நெருப்பு, மேலான ஞான மாகிய வேல், அம்பு, தமருகம், கிளி' வில், செண்டு, தாமரை மலர், பாசம், மழு, கத்தி, சங்கு என்பன உள.

விளக்கவுரை

சுடர், ஆகுபெயர். குவிந்த - குவிந்தன; சேர்ந்தன. 'கை எண்ணதில் சேர்ந்தன' என்க. எண் - தொகை. சூலமல்லாது இங்குக் கூறப்பட்டவை பதினான்கு. அபயமும், வரதமும் இயல்பாக உள்ளன. ஆகவே, எஞ்சிய நான்கு கைகளிலும் சூலமே உளவாதல் மேலை மந்திரத்தால் பெறப்பட்டது. செண்டு, ஓர் ஆயுதம். 'கொண்டு' என்பது பாடம் அன்று. இரண்டாமடியில் முதல் இரு சீர்களை வகையுளி செய்து கொள்க. இதனால், மேற்கூறிய சத்தியின் கைகளில் உள்ளவை கூறப்பட்டன.

எண்ணமர் சத்திகள் நாற்பத்து நாலுடன்
எண்ணமர் சத்திகள் நாற்பத்து நால்வராய்
எண்ணிய பூவித ழுள்ளே யிருந்தவள்
எண்ணிய எண்ணம் கடந்துநின் றாளே. *#1375*

தியானத்திற்குப் பொருந்திய சுவாதிட்டானம் முதலிய நான்கு ஆதாரங்களில் உள்ள தாமரையிதழ்கள் நாற்பத்து நான்கில் அமர்ந்திருக்கும் நாற்பத்து நான்கு சத்திகளோடும் தானும் நாற்பத்து நான்கு சத்தியாய் அந்த நாற்பத்து நான்கு இதழ்களிலும் வீற்றிருக்கின்ற சிவ சத்தி, அவ்வாதாரங்களில் வைத்துத் தியானிக் கின்ற தியானத்தைக் கடந்தவளாவாள்.

விளக்கவுரை

'அஃதாவது, ஆஞ்ஞை முதலிய மேல் நிலங்களில் இருப்பவள்' என்பதாம், எண் - எண்ணம்; முதனிலைத் தொழிற் பெயர். அஃது எண்ணத்திற்கு உரிய இடத்தை உணர்த்திற்று. "சத்திகள்" இரண்டில் முன்னது, சத்திகளைப் பெற்று நின்றவரைக் குறித்த முகமனுரை. அவர்களை அஃறிணை போலவே கூறியதும் இதுபற்றி. மேல் நிலத்தில் உள்ள சத்தி, கீழ்நிலங்களில் உள்ள தெய்வங்களிடமாக நின்று அருள்புரியும் முறை கூறியவாறு.

இதனால், இச்சக்கர வழிபாட்டில் நிகழும் பல தியானங் கட்குப் பயன்

தருபவள் சிவசத்தியாதல் விளக்கப்பட்டது.

கடந்தவள் பொன்முடி மாணிக்கத் தோடு
தொடர்ந்தணி முத்துப் பவளம் கச்சாகப்
படர்ந்தல்குற் பட்டாடை பாதச் சிலம்பு
மடந்தை சிறியவள் வந்துநின் றாளே. *#1376*

கீழ் நிலங்களைக் கடந்து மேல் நிலத்தில் இருப் பவளாகிய அச் சத்தி அடியவர் பொருட்டு, தலையிற் கவிக்கும் முடி பொன்னால் இயன்றதும், காதில் அணியும் தோடு மாணிக்கத்தால் இயன்றதும், கழுத்து முதலியவற்றில் தொடரப் பொருந்திய அணிகள் முத்துக்களால் இயன்றனவும், கச்சுப் பவளத்தால் இயன்றதும், அரையில் உடுத்திய உடை பட்டினால் இயன்றதும், பாதத்தில் அணிவது சிலம்புமாக, இளம் பெண்ணாய்க் கீழ் நிலங்களிலும் வந்த நிற்கின்றாள்.

விளக்கவுரை

'பொன் முடி, மாணிக்கத்தோடு' முதலியவற்றை. 'முடி பொன், தோடு மாணிக்கம்' முதலியனவாக மொழிமாற்றி, எல்லா இடங்களிலும் 'ஆக' என்பதை இயைத்துக் கொள்க. 'அல்குல் ஆடைபட்டு' எனக் கூட்டுக. பாதம் ஆகுபெயர். 'மடந்தை சிறியவள்' என்பது இருபெயரொட்டு. 'சிறியவளாய்' என ஆக்கம் வருவிக்க. சிறியவள், வாலை. 'சிறியவளாய்' என்பதை, 'சிறீயினில், குமீறியில், கமீறியில்' என்பனவாக வேறு வேறு ஓதி, 'அவ்வப் பீசாக்கரத்தில் வந்து நின்றாள்' எனவும் பொருள்கொள்வர். கும் - க்ரோம்.

இதனால், மேலைச்சத்தி கீழ் நிலங்களில் இளையவளாய் நிற்றலும், அவளது வடிவமும் கூறப்பட்டன.

நின்றஇச் சத்தி நிரந்தர மாகவே
கண்டிடு மேரு அணிமாதி தானாகிப்
பண்டைய வானின் பகட்டை அறுத்திட்டு
ஒன்றிய தீபம் உணர்ந்தாற்குண் டாமே. *#1377*

படிமுறையால் மேருவின்மேல் ஏறிச் சென்று, முடிவாகப் பார்க்கின்ற அதன் உச்சியில் அணிமா ஆதி அட்ட சித்திகளும் கைவந்தவனாய் நின்று, பழைய வெளியிடத்தில் உள்ள புறக் கவர்ச்சிகளை ஒதுக்கித் தள்ளி அவ்விடத்தில் பொருந்திய ஒளியை உணர்ந்து நிற்பவனுக்கு, மேற் சொல்லிய சத்தி இடையறாது உடன் நிற்றல் உளதாகும்.

விளக்கவுரை

இரண்டாம் அடி முதலாகச் சென்று, 'உண்டாம்' என்பதனை முதலடியின் இறுதியிற் கூட்டி உரைக்க. இதன்கண் இன எதுகை வந்தது.

இதனால், மேற்கூறிய சத்தி, என்றும் உடனாகப்பெறும் பயனைப்

பெறுமாறு கூறப்பட்டது.

உண்டோர் அதோமுகம் உத்தம மானது
கண்டஇச் சத்தி சாதாசிவ நாயகி
கொண்ட முகம்ஐந்து கூறுங் கரங்களும்
ஒன்றிரண் டாகவே மூன்றுநா லானவே. *#1378*

சதாசிவனது சத்தியாகிய சதாசிவைக்கு (அவனைப் போலவே) யாவரும் காண உள்ள முகங்கள் ஐந்து. எனினும், ஆறாவதாக அதோமுகம் ஒன்றும் (அங்ஙனமே) உண்டு. மேலான அந்தமுகமே, மேல் 'சிறியள்' (வாலை - *1382)* எனப்பட்ட சத்தி. இனிச் சதாசிவைக்கு முகம் ஆறானதற்கு ஏற்பக் கரங்களும் ஒருமுகத்துக்கு இரண்டாகப் பன்னிரண்டு ஆயின.

விளக்கவுரை

'சதாசிவ நாயகி கொண்ட முகம் ஐந்து' என்பதனை முதலில்வைத்து. அதன்பின், 'எனினும்' என்பது வருவிக்க. 'உத்தம மான அது' என்பதில் ஓர் அகரமும், 'அதுவே' என்னும் ஏகாரமும் தொகுத்தல் பெற்றன. 'கொண்ட' என்பதற்கு. 'யாவரும் அறியக் கொண்ட' என்பது ஆற்றலால் வந்தது. 'ஒன்றுக்கு' என நான்கவாது விரிக்க.
மூன்று நால் - பன்னிரண்டு ஈற்றடி எண்ணலங்காரமாயும் நின்றது. இரண்டாம் தந்திரத்துள், 'சிவனுக்கு அதோமுகம் ஒன்று உண்டு' என்பதும், 'அதுவே நிலவுலகத்தார்க்கு முருகன் முதலாக வந்து அருள் புரிவது' எனவும் கூறியவாறே *1* இங்கும் கூறப்பட்டமை நோக்கத் தக்கது. இதனுள்ளும் இன எதுகை வந்தது.
இதனால், மேல் நிலச் சத்தியது முழு நிலையின் பகுதியே கீழ் நிலத்திற்கு வந்து அருளுவதாதல் கூறப்பட்டது.

நன்மணி சூலம் கபாலம் கிளியுடன்
பன்மணி நாகம் மழுகத்தி பந்தாகும்
கன்மணி தாமரை கையில் தமருகம்
பொன்மணி பூணாரம் பூசனைக் கானவே. *#1379*

சதாசிவையின் கைகளில், 'நல்ல ஒலியை எழுப்பு கின்ற மணி, சூலம், கபாலம், கிளி, பாம்பு, மழு, கத்தி, பந்து, தாமரை மலர், தமருகம்' என்னும் இவைகள் இருத்தலாலும், பொன்னாலும், மணியாலும் ஆகிய அணிகலன்கள், மாலைகள் என்பவற்றை அவள் அணிந்திருத்தலாலும் அவனது கூறாகிய சத்திகளது வழிபாட்டிலும் இவை கொள்ளப்படும் பொருள்களாயின.

விளக்கவுரை

'பன் மணி' என்றது நாகத்திற்கு அடை. 'ஆகும் தாமரை' என இயையும்.

ஆகும் - ஏந்துதற்குப் பொருந்திய, கன்மணி தாமரை - மாணிக்கக் கல்போலும் செந்தாமரை மலர். மணி முதலிய பத்துடன், அபயமும், வரதமும் கூடக் கைகள் பன்னிரண்டாதல் அறிக. பூணும், ஆரமும் மேனியில் அணியப்படுவன. 'பூசனை யானதே' என்பது பாடம் அன்று. இதனால், மேற்கூறிய சத்திகள் பலரது வடிவுகள் அவ்வாறானமைக்குக் காரணம் கூறப்பட்டது.

பூசனைக் கன்னிகள் எண்ணைவர் சூழவே
நேசவண் சத்திகள் நாற்பத்து நேரதாய்க்
காசினிச் சக்கரத் துள்ளே கலந்தவர்
மாசடை யாமல் மகிழந்திருந் தார்களே. **#1380**

நவாக்கரி சக்கரங்களின் அடியில் சதுரமாய் உள்ள 'பூபுரம்' என்பதின் நான்கு மூலைகளிலும் ஒரு மூலைக்குப் பதின் மராக, வழிபடுதற்குறிய நாற்பதின்மர் தேவியர் சூழப் பொருந்தி யிருப்பவர்கள், அருள்வடிவாகிய சிவசத்திக் கூறுகள் தங்களிடம் சேர்ந்திருத்தலாலே, இடையூறின்றி, மகிழ்ச்சியுடன் இருக்கின்றார்கள்.

விளக்கவுரை

'கன்னிகள், சத்திகள்' என்பவற்றை அடிமாற்றி ஓதுதல் பாடமன்று. 'காசினிச் சக்கரத்துள்ளே' என்பதை முதலில் வைத்தும், 'கலந்தவர்' என்பதை முதலடியின் இறுதியிற் கூட்டியும் உரைக்க.
இதனால், நவாக்கரி சக்கரங்களின் பூபுரத்தில் தேவியர் பலர் இருத்தல் கூறப்பட்டது. 'நேசவண் சத்திகள் நாற்பத்து நேரதா - மாசடையாமல் மகிழ்ந்திருந்தார்களே' என்றது, இவர்கட்கும் சிவசத்தியது அருள் இன்றியமையாததனை நினைவுறுத்தியவாறு.

தாரத்தி னுள்ளே தயங்கிய சோதியைப்
பாரத்தி னுள்ளே பரந்துள் ளெழுந்திட
ஏரது ஒன்றி எழுந்த மனோமயம்
காரது போலக் கலந்தெழும் மண்ணிலே. **#1381**

மேற்கூறிய பூபுர தேவியர்பால் விளங்குகின்ற ஒளிவடிவான சிவசத்தியை உடன்பின் அகத்திலே ஆதாரங்களில் தியானிக்கின். எழுச்சி பெற்றுப் புற விடயங்களின் மேல் செல்லுகின்ற மனம், நிலத்திற் கலந்த நீர் அந்நிலத்தின் தன்மையதே ஆனாற் போலத்தியானிப்போனது தன்மைக்கு மாறாகாமல் அவனோடே பொருந்தி நிற்கும்.

விளக்கவுரை

தாரம் - ஆதாரம், இது மேற்கூறிய சக்கரங்களுக்கு உரியதாயப் பூபுரத்தைக் குறித்துப் பின் அவற்றில் உள்ள தேவியர்களைக் குறித்தது. பாரம் - பருவுடல். 'பரந்து' என்பதை, 'பரக்க' எனத் திரிக்க. 'மண்ணிலே

காரது போலக் கலந்தெழும்' என மாற்றிக் கொள்க. கார் - மேகம்; அது நீருக்கு ஆயிற்று. 'தாரம் மூலாதாரம்' எனவும், 'சோதி அதன் கண் உள்ள தீ' எனவும் கொண்டு, 'யோகமுயற்சியால் மனோலயம் உளதாம்' என்பதே இம்மந்திரத்திற்குப் பொருளாக உரைப்பாரும் உளர். அது, மேல் பலவிடத்துங் கூறப்பட்டதன் மேலும், இவ்விடத்திற்குச் சிறிதும் பயனுடைத் தாகாமை அறிக.

இதனால், இச்சக்கர வழிபாட்டில் சிவ சத்தியை மறவாமை வேண்டுதல் கூறப்பட்டது.

மண்ணில் எழுந்த மகார உகாரங்கள்
விண்ணில் எழுந்த சிவாய நமஎன்று
கண்ணில் எழுந்தது காண்பரி தன்றுகொல்
கண்ணில் எழுந்தது காட்சி தரஎன்றே. ***#1382***

பிருதிவி மண்டலமாகிய மூலாதரத்தினின்று பிரணவமாகிய சூக்கும எழுத்தாய்ப் புறப்பட்ட நாதம், பின் வளர்ச்சி யுற்று ஆகாச மண்டலமாகிய ஆஞ்ஞையில் 'சிவாய நம' என்னும் தூல எழுத்தாய் வெளிப்பட்டு, அதற்குப் பின் கண்ணில் ஒளி வடிவாயும் என்னிடத்துப் பதிந்து நின்றது. ஆதலின் ஒளிக்காட்சி ஒருவராலும் காணப்படாதது அன்று; மற்றும் அது தன்னைக் காணுலுறுவார்க்குக் காட்சி தரவேண்டும் என்றே முன் வரும் இயல்புடையது.

விளக்கவுரை

'விண்ணில் சிவாய நம என்று எழுந்து கண்ணில் எழுந்தது' என்க. பூபுர சத்திகட்கு உள்ளாயிருக்கும் சிவ சத்தியது காட்சி நாத தரிசனத்தின் வழிக் கூடும் என உணர்த்தியவாறு. தோற்ற முறைபற்றி, 'அகார உகார மகாரம்' என்றலேயன்றி, ஒடுக்கமுறை பற்றி 'மகார உகார அகாரம்' என்றலும் கூடுமாதலின், 'மகாரம் உகாரங்கள்' என்றார். மோனை நயம் வேண்டாது, 'அகார உகாரங்கள் ' என்றேயும் பாடம் ஓதுப. கொல், அசை.

இதனால், மேல், 'தாரத்தினுள்ளே தயங்கிய சோதி' எனப் பட்ட சத்தியைத் தரிசிக்குமாறு கூறப்பட்டது.

என்றங் கிருந்த அமுத கலையிடைச்
சென்றங் கிருந்த அமுத பயோதரி
கண்ட கரம்இரு வெள்ளிபொன் மண்டைவாய்க்
கொண்டங் கிருந்தது வண்ண அமுதே. ***#1383***

சூரிய மண்டலமாகிய விந்துத் தானத்தில் உள்ள சிவசத்தி, தன்னிடத்தில் காணப்படும் கரங்களில் இரண்டில் வெள்ளி யாலான மண்டையிலும், பொன்னாலான மண்டையிலும் வைத் திருப்பது அழகிய அமுதமே.

விளக்கவுரை

'அதனை அவள் அடியவர்க்கு அள்ளிவழங்குவாள்' என்பது குறிப்பு. விந்துத் தானத்தில் அமுதம் உளதாதல் பற்றி அதனை 'அமுத கலை' என்றார். 'தானம் அமுதம்; தானும் அமுத பயோதரி; அவற்றுக்குமேல் அவள் இரு கைகளில் அமுத பாத்திரத்தைக் கொண்டுள்ளாள்; அவள் தன் அடியவர்க்கு அமுதத்தை வழங்கத் தடை என்னை' என்பது நயம். 'கரத்தில்' என உருபுவிரிக்க. 'இரு மண்டைவாய்' என இயையும். அமுதத்திற்கு அழகு வெண்மை. இஃது இன எதுகை பெற்றது. இதனால், ஆஞ்ஞையில் உள்ள சத்தியை அடைவோர் அமுதுண்ணப் பெறுதல் கூறப்பட்டது.

அமுதம தாக அழகிய மேனி
படிகம தாகப் பரந்தெழும் உள்ளே
குமுதம தாகக் குளிர்ந்தெழு முத்துக்
கெழுமும தாகிய கேடிலி தானே. ***#1384***

ஆம்பல் போலும் வாயிடத்துக் குளிர்ந்த முத்துப் போலும் நகைபொருந்தி விளங்கும் அந்நிலையினளான, அழிவற்ற அச்சத்தி, தன் அடியவர்க்குச் சந்திர மண்டலத்து அமுதம் உளதாகும் படி தனது அழகிய மேனி படிகம்போல்வதாகக் கொண்டு அவர்தம் அகத்தே நிறைந்து விளங்கி நிற்பாள்.

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கியுரைக்க. குமுதமும், முத்தும் உவம ஆகுபெயர்கள். கெழுமுதல் - பொருந்துதல். 'அது' நான்கில், முன்னைய மூன்றும் பகுதிப் பொருள் விகுதிகள்; இறுதியது 'அந்நிலை' என்னும் பொருட்டு. 'கெமுதமுது' என்பது பாடம் அன்று. நான்காமடி மூன்றாமெழுத்தெதுகை பெற்றது. இரண்டாமடியும் அன்னதுபோலும்! இதனால், அச்சத்தி அவர்க்கு அமுதம் வழங்குமாறு கூறப் பட்டது. இதனுள் அவளது திருக்கோலமும் உடம்பொடு புணர்த்தலால் கொள்க.

கேடிலி சத்திகள் முப்பத் தறுவரும்
நாடிலி கன்னிகள் நாலொன் பதின்மரும்
பூவிலி பூவித முள்ளே யிருந்திவர்
நாளிலி தன்னை நணுகிநின் றார்களே. ***#1385***

வியட்டியாய் நின்ற சிவ சத்திகள் முப்பத்தறுவரும், அவரைத் தேட வேண்டாது தம்மிடத்தே பொருந்தப் பெற்ற தேவியர் முப்பத்தறுவரும் ஆகப் பூபுரத்தை யிடமாகக் கொண்டு விளங்கும் தாமரைமலர்களின் இதழ்களில் உள்ள இவர்கள் நாள் வரையறையின்றி எந்நாளும் வழிபடுகின்ற அடியவன்பால் பொருந்தி நிற்பார்கள்.

விளக்கவுரை

'முப்பத்தறுவர்' எனவே, இவர்கள் தத்துவங்களைச் செலுத்துவோராதல் பெறப்படும். படவே, இவர்களது விளக்கத்தைப் பெற்றோன் தத்துவத் தொடக்கின் நீங்குதல் விளங்கும். பின்னிரண் டடிகளில் உயிரெதுகை வந்தது.

இதனால், நவாக்கரி சக்கர வழிபாட்டை வாழ்நாளளவும் செய்ய, மாயைத் தொடக்கு நீங்குதல் கூறப்பட்டது.

நின்றது புந்தி நிறைந்திடும் வன்னியும்
கண்டது சோதி கருத்துள் இருந்திடக்
கொண்டது ஓராண்டு கூடி வருதற்கு
விண்ட ஔகாரம் விளங்கின அன்றே. ***#1386***

இயல்பாக உள்ளத்தில் உள்ள, நிரம்பிய விளக் கொளியாகிய சத்தி, நவாக்கரி சக்கரத்தில் கட்புலனாம் விளக்கொளி யாய் விட்டது. இனி அவ்வொளி உள்ளத்திலும் தோன்றி விளங்குதற்கு வேண்டப்பட்ட காலம் ஓராண்டு. அப்பயன் கைக்கூடுதற்குத் துணை யாகவே மேற்கூறப்பட்ட ஔகாரம் முதலிய பீசாக்கரங்கள் அச் சக்கரத்தில் விளங்கி நிற்கின்றன.

விளக்கவுரை

'நின்றதாகிய வன்னி' என இயையும். வன்னி, ஆகுபெயர். 'கண்டதாகிய சோதியாயிற்று' என்க. கொண்டது. வேண்டப்பட்டது. 'ஔகாரம்' என்றது, 'அது முதலாகிய அக்கரங்கள்' எனப் பொருள் தந்தது. 'கூடி வருகைக்கு அவை விளங்கின' எனவே, ஓராண்டுக் காலம் அவற்றைக்கணிக்க' என்றதாயிற்று. முதலடி இனவெதுகை.

இதனால், அவ்வழிபாட்டினை ஓராண்டுச் செய்வார் பெறும் பயன் கூறப்பட்டது.

விளங்கிடு வானிடை நின்றவ ரெல்லாம்
வணங்கிடு மண்டலம் மன்னுயி ராக
நலங்கிளர் நன்மைகள் நாரண னொத்துச்
சுணங்கிடை நின்றவை சொல்லலு மாமே. ***#1387***

ஒளிவிட்டு விளங்குகின்ற வானுலகத்தில் உள்ள தேவர் யாவரும் வழிபடுகின்ற நவாக்கரி சக்கரம் மக்கள் உள்ளத்தில் நிலைபெற்ற பின் அதனால் உண்டாகும் இன்பம் மிகுகின்ற நன்மைகள் பரம பதத்தில் இருக்கும் மாயோனுக்கு உள்ள நன்மைகளை ஒக்குமாயின், அவற்றின் பெருமைகளை வினைத்துன்பத்தில் நின்று கொண்டு சொல்ல இயலுமோ!

விளக்கவுரை

'மன்னுயிர்' என்றது தலைமை பற்றி மக்களுயிரைக் குறித்தது. 'ஆக' என்பதை 'ஆனபின்' எனவும் 'ஒத்து' என்பதை. 'ஒக்கின்' என்வும் திரித்துக் கொள்க. 'நாரணன்' ஆகுபெயர். சுணங்கு - நலிவு. ஒன்று, மூன்று அடிகள் உயிரெதுகை பெற்றன.
இதனால், இச்சக்கர வழிபாடு போகத்தை மிகத் தருதல் கூறப்பட்டது.

ஆமே அதோமுகம் மேலே அமுதமாய்த்
தானே உகாரம் தழைத்தெழும் சோமனும்
காமேல் வருகின்ற கற்பக மானது
பூமேல் வருகின்ற பொற்கொடி யானதே. ***#1388***

பிரணவ கலைகளுள் உகாரகலை மிகுந்து ஓங்கி முற்றுகின்ற சந்திர மண்டலம் நெற்றிநடு முதலாகிய மேல் நிலங்களில் அமுதமாய், கீழ்நோக்கியுள்ள ஆயிர இதழ்த் தாமரையாய் விளங்கும். சோலைகளில் வெளிநிற்கின்ற கற்பகத் தருபோலும் சிவசத்தி, அச்சந்திர மண்டலத்தின் கீழுள்ள தாமரை மலர்களில் தேவியர் பலராய் விளங்குவாள்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதலில் வைத்து, 'மேலே அமுதமாய் அதோமுகம் ஆம்' எனக் கூட்டி உரைக்க. 'தானேயாய்' என ஆக்கம் வருவிக்க. தானேயாதல், மிகுந்திருத்தல், அகார கலை பிரணவத்தின் தொடக்கமாக உகாரகலையே அதன் எழுச்சியாதல் அறிக.
சத்தி எழுந்தருளியிருத்தற்குச் சிறந்தது சோலையாதலின், அவளை அவ்விடத்து வெளிநிற்பவளாகக் கூறினார். இது சிறப்பாகக் கடம்பாடவியைக் குறிக்கும் என்பர். 'கற்பகம்' என்றது உருவகம். சந்திர மண்டலத்தில் நேரே விளங்குகின்ற சிவசத்தி. கீழ் ஆதாரங்களில் தேவியர் பலரிடமாக விளங்குவாள் என்றபடி. முதலிரண்டடிகளில் இது குறிப்பால் உணர்த்தப்பட்டது. இரண்டாமடி இன எதுகைபெற்றது. 'தாமே' என்பது பாடமன்று.
இதனால், 'ஆதார யோக முறையால் சத்தியை அடைக' என்பது கூறப்பட்டது.

பொற்கொடி யாரிடைப் பூசனை செய்திட
அக்களி யாகிய ஆங்காரம் போயிடும்
மற்கட மாகிய மண்டலந் தன்னுளே
பிற்கொடி யாகிய பேதையைக் காணுமே. ***#1389***

ஆதாரங்களில் விளங்கும் சாதன தேவியரைச் சிவச் சத்தியுடன் கூட வழிபடின், போக்குதற்கரிதாகிய அகங்காரம் நீங்கும். அங்ஙனம் வழிபட்டவன் அகங்காரத்தினின்று நீங்கி, நிறைந்த அமுதக்குடம்போலும் சந்திர மண்டலத்தில் சாத்திய தேவியாகிய சிவசத்தியைத் தலைப்படுவான்.

விளக்கவுரை

'பொற்கொடியாளுடன்' என மேற்போந்ததனை அனு வதித்ததனால், பூசிக்கப்படுவார் சாதன தேவியராதல் பெறப்பட்டது. அகரம், பண்டறிசுட்டு. 'அக்களியாகிய ஆங்காரம்', இருபெய ரொட்டு. மத் கடமாகிய மண்டலம், சந்திர மண்டலம் சத்தியத்தை, 'பின்' என்றார். இதனால், ஆதார தேவியரது வழிபாட்டின் இன்றியமை யாமை கூறிப்பட்டது. இரண்டாம் அடி இன எதுகை.

பேதை இவளுக்குப் பெண்மை அழகாகும்
தாதை இவளுக்குத் தாணுவுமாய் நிற்கும்
மாதை இவளுக்கு மன்னும் திலகமாக்
கோதையர் சூழக் குவிந்திடங் காணுமே. ***#1390***

பெண்ணாகக் காணப்படுகின்ற இச் சத்திக்கு அங்ஙனம் காணப்படுதலே ஏற்புடைத்து. இவளுக்குத் தலைவனாய் உள்ள சிவன் அங்ஙனம் தலைவனாதலேயன்றித் தந்தையாயும் நிற்கும் இயல்புடையவனாவான். அழகியாய் உள்ள இச்சத்திக்கு இப்பூ மண்டலமே நெற்றித் திலகமாய் நிற்க, எண்ணிறந்த சத்திகள் சூழ்ந்து பணி செய்ய, இவள் உயரிய ஆசனத்தில் வீற்றிருக்கும் பெருமையுடையள்.

விளக்கவுரை

'அப்பெண்மையே' எனச் சுட்டுவருவித்துத் தேற்றே காரம் விரிக்க. 'பெண்மையே ஏற்புடைத்தாம்' என்றது, சிவத்தின் வழிநிற்பவளாதல் குறித்து. எனினும், இவளும், சிவனும் உலகத்துப் பெண்டிரும் ஆடவரும்போல இருவேறுபட்டவர்கள் அல்லர்' என்றற்கு, 'தாதை இவளுக்குத் தாணுவுமாய் நிற்கும்' என்றார். தாணு - தலைவன். தாணு தாதையுமாய் நிற்கும்' என மாறிக் கூட்டுக. மாது - அழகு. ஐகாரம் சாரியை. அழகு இயற்கையாலும், செயற்கையாலும் உள்ளது. அவற்றுள் செயற்கை 'அழகில் பூமியே திலகமாகின்ற அத்துணைப் பெரியாள்' என்பதை மூன்றாம் அடியிலும், பிறர் யாவரும் இவளுக்குக் கீழ்பட்டவர்களே' என்பதை நான்காம் அடியிலும் குறித்தார். குவிதல் - இங்கு, உயர்தல், 'குவிந்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.

குவிந்தனர் சத்திகள் முப்பத் திருவர்
நடந்தனர் கன்னிகள் நாலெண்மர் சூழப்
பரந்தித ழாகிய பங்கயத் துள்ளே
இருந்தனர் காணும் இடம்பல கொண்டே. ***#1391***

சிவ சத்தியின் கூறாகிய முப்பத்திருவர் சத்திகள் தலைமை பெற்று நிற்கின்றனர். அவர்கள் வழிப்பட்டு முப்பத்திருவர் தேவியர் ஒழுகுகின்றார்கள். இவ்இருதிறத்தாரும் ஒரு தாமரை மலரில் சூழ

விரிந்தபல இதழ்களில் இடம் பெற்று இருக்கின்றனர்.

விளக்கவுரை

இங்குக் கூறிய தாமரை மலர் மேற்காட்டிய சக்கரங் களில் உள்ளனவாம். அவற்றின் இதழ்கள் எட்டாகும். அவற்றில் அகம், நுனி, இருபுறம் என்பவற்றால் இடங்கள் முப்பத்திரண்டாம். அம் முப்பத்திரண்டிலும் தேவியர் முப்பத்திருவர் இருக்க, அவர் களிடமாகச் சத்திகள் முப்பத்திருவரும் உளர் என்க. இம்முறை ஆதார பங்கயங்கட்கும் பொருந்துவதாம். 'பரந்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. இதன் கண் மூன்றாமெழுத்தெதுகை வந்தது.
இதனால், சிவசத்திகளும், அவர்கள் வழியொழுகும் தேவியரும் சக்கரங்களிலும், உடம்பகத்து ஆதாரங்களிலும் நின்று பயன் தருமாறு கூறப்பட்டது.

கொண்டங் கிருந்தனர் கூத்தன் ஒளியினைக்
கண்டங் கிருந்தனர் காரணத் துள்ளது
பண்டை மறைகள் பரந்தெங்குந் தேடுமால்
இன்றென் மனத்துள்ளே இல்லடைந் தாளுமே. ***#1392***

சிவனது விளக்கமாம் சத்திகளையும், அவள்வழி நிற்கும் தேவியரையும் பல சக்கரங்களிலும் உடம்பினுள் ஆதார பங்கயங்களிலும் வழிபட்டுக் கொண்டிருப்பவர்கள், உலகத்திற்குக் காரணமாய் உள்ள முதற்பொருளைக் கண்டிருப்பார்கள். அம்முதற் பொருளை வேதங்களும் எங்கும் சென்று தேடி அலைகின்றன. ஆயினும் இஃது இன்று எனது உள்ளத்தையே இல்லமாகக் கொண்டு அதனை ஆளுகின்று.

விளக்கவுரை

'கூத்தன் ஒளியினை' என்பதையும், காரணத்துள்ளது' என்பதையும் அவ்வவ் வடியின் முதலிற் கூட்டி யுரைக்க. காரணத்து - காரணமாகின்ற நிலையில், நான்காமடி இன எதுகை பெற்றது.

இல்லடைந் தானுக்கும் இல்லாத தொன்றில்லை
இல்லடைந் தானுக் கிரப்பது தானில்லை
இல்லடைந் தானுக் கிமையவர் தாமொவ்வார்
இல்லடைந் தானுக்கில் லாததில் லானையே. ***#1393***

இல்லத்தைத் திறமையாக ஆளுகின்ற துணை வியைப் பெற்றால், அவளுக்கேயன்றி, பெற்ற அவனுக்கும் இல்லாத நன்மை ஒன்று இல்லை. (எல்லா நன்மைகளும் குறைவின்றி உள வாம்.) அதனால், அவன் பிறரிடம் சென்று இரந்து பெற வேண்டுவது யாதும் இல்லை. ஆகவே, இன்ப நுகர்ச்சியில் தேவரும் அவனுக்கு நிகராகார். ஆதலின், 'இல்லாதது' என்பது யாதும் இல்லாதவனாகிய சிவனையே அவனுக்கு

உவமிக்க.

விளக்கவுரை

இல் - இல்லாள். 'மனமாகிய இல்லத்தை நன்முறையில் ஆண்டு துணைபுரியும் அளவில் சிவ சத்தி தன் அடியவனுக்கு வாழ்க்கைத் துணைவிபோல்வாள்' என்பது பற்றி, 'இல்லதென் இல்லவள் மாண்பானால்' எனவும், 'இல்லாளகத்திருக்க இல்லாத தொன்றில்லை' எனவும் போந்த உலகியல் முறையை எடுத்தோதி, சத்தியது அருள் கிடைக்கப் பெறுதல் பெரும்பேறாதலை விளக்கினார். ஈற்றில் வருவித்து உரைத்த 'உவமிக்க' என்பது சொல்லெச்சம்.

இவை இரண்டு மந்திரங்களாலும் மேற்கூறியோரை, மேற் கூறிய இடங்களில் வழிடுதலின் பயன் கூறப்பட்டது.

ஆனை மயக்கும் அறுபத்து நால்தறி
ஆனை யிருக்கும் அறுபத்து நால்ஒளி
ஆனை யிருக்கும் அறுபத்து நால்அறை
ஆனையும் கோடும் அறுபத்து நாலிலே. ***#1394***

ஐம்புலன்களாகிய யானைகளையும் மயங்கி அடங்கச் செய்து கட்டி வைக்கும் அறுபத்து நான்கு தறிகளாயும், இடப வாகனத்தில்மேல் வருகின்ற தலைவனாகிய சிவபிரானிடத்தில் உள்ள அறுபத்து நான்கு சத்திகளாயும் விளங்குவன. பிரணவத்தை முதலாகக் கொண்ட பிராசாத மந்திரத்தின் அக்கரங்கள் அடங்கிய சக்கரத்தில் உள்ள அறுபத்து நான்கு அறைகள். அவ் அறைகளை யுடைய சக்கரத்தை வழிபட்டால், மத யானையும் வணங்கும் கடவுள் தன்மையைப் பெறலாம்.

விளக்கவுரை

'ஆனை' நான்கில் இரண்டாவதை, 'ஆன்+ஐ' எனப் பிரித்துப் பொருள்கொள்க. ஏனைய மூன்றும் சொல் ஒன்றாயினும் வேறு வேறு பொருளைக் குறித்தலின் சொற்பின் வருநிலை. இரண்டாம் அடி, மடக்கு. முதலடியில், உள்ள ஆனை. உருவகம். மூன்றாம் அடியில் உள்ள ஆனை உவம ஆகுபெயராய் அதனோ டொத்த ஓங்காரத்தைக் குறித்தது. நான்காம் அடியில் உள்ளது அஃறிணை இயற்பெயராய், ஆற்றலால், மதங்கொண்ட யானையைக் குறித்தது. கோடுதல் - வளைதல்; வணங்குதல். 'ஆனையும், அதன் கொம்பும் அறுபத்து நாலு அறைகளில் அடங்கிவிடும்' என்பது நயம். 'அறுபத்து நால்' என்பது அதன் வழிபாட்டின்மேல் நின்றது. அதில் உள்ள 'இல்' ஏதுப் பொருட்கண் வந்த ஐந்தாம் உருபு. அறுபத்து நான்கு அறைகளும் அறுபத்து நான்கு சத்திகளாதல் இரண்டாமடியில் கூறப்பட்டது. இச்சக்கரம் எட்டெழுத்துக்களால் ஆவதாகலின், 'அட்டாட்சரி சக்கரம்' எனவும்

அவை பிராசாத அட்சரங்கள் ஆதலின், 'பிராசாத சக்கரம்' எனவும் சொல்லப்படும். அஃது, கீழே தனியே தரப்பெற்றுள்ளது.
இதனுள், அக்கரங்கள் இடந் தொட்டு வலமாகச் செல்லும் வரிகளை முறையே நோக்கினும், மேற்றொட்டுக் கீழாக வரும் வரிகளை முறையே நோக்கினும் ஒருவகையாகவே இருத்தல் அறியத் தக்கது. அதனால், அவ் அக்கரங்களை ஒருமுறை இடமிருந்து வலமாகவும், மறுமுறை மேற்றொட்டுக் கீழாகவும் மாறிமாறி நோக்கிக் கணித்து வழிபடின் பயன் கூடும்.
இதனை, இத்தந்திரத்தின் முடிவாக இறுதிக்கண் அனைத்தும் அடங்கக் கூறினார் என்க.

ஐந்தாம் தந்திரம்

*7.1.*சுத்த சைவம்

ஊரும் உலகமும் ஒக்கப் படைக்கின்ற
பேரறி வாளன் பெருமை குறித்திடில்
ஏருமிம் மூவுல காளி இலங்கெழுந்
தாரணி நால்வகைச் சைவமு மாமே. *#1395*

பல உலகங்களையும், அவை அடங்கியுள்ள பல அண்டங்களையும் ஒரு சேரப் படைக்கின்ற பேரறிவினையுடையவ னாகிய சிவனது பெருமையைக் கூறுமிடத்து, எழுச்சியை உடைய இந்த உலகங்கள் மூன்றினையும் தன்னடிப் படுத்து ஆள்கின்ற தலைவனாம் அவன், விளங்கத் தோன்றும் நிலைக்களம் நால்வகைச் சைவமுமாகும்.

விளக்கவுரை

'ஊர், உலகம் என்பன அவற்றிற்கு இடமான உலகத்தை யும், அண்டத்தையும் ஆகுபெயரால் உணர்த்தின, ஏர்தல் - எழுச்சி யுறுதல். 'மேருவும்' என்பது பாடமன்று. 'இலங்க' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'தாரணி' என்றது, 'நிலைக்களம்' என்ற வாறு. சைவ சமயத்தின் பெருமை கூறுவார். அதன் முதல்வனாகிய சிவனது பெருமையை முன்னர்க் கூறினார்.
இதனால், 'முழுமுதற் கடவுளாகிய சிவன் விளங்கித் தோன்றும் சமயம் சைவசமயமே' என்பதும், 'அது நால்வகைப்படும்' என்பதும் கூறப்பட்டன, அந்நால்வகையும் வருகின்ற மந்திரங்களிலும் அதிகாரங்களிலும் அறியப்படும்.

சத்தும் அசத்தும் சதசத்தும் தான்கண்டு
சித்தும் அசித்துமுன் சேர்வுறா மேநீத்த
சுத்தம் அசுத்தமும் தோய்வுறா மேநின்ற
நித்தம் பரம்சுத்த சைவர்க்கு நேயமே. *#1396*

சுத்த சைவர்க்கு, சத்தாகிய பதியின் இயல்பையும், அசத்தாகிய பாசத்தின் இயல்பையும், இவற்றிற்கு இடைப்பட்டுச் சதசத்தாய் நிற்கின்ற பசுவின் இயல்பையும் உணர்ந்தபின், அறிவுடைப் பொருளாகிய உயிர்களுள்ளும், அறிவில் பொருளாகிய பாசங்களுள் ஒன்றாகாது வேறுபட்ட பொருளாய், சுத்தமாயுள்ள வைந்தவங்க ளிலும் அசுத்தமாயுள்ள மாயேயங்களிலும் தோய்ந்தும் தோயாமலி ருக்கின்ற நித்தியப் பொருளாகிய பரசிவம் ஒன்றே குறிப் பொருளாம்.

விளக்கவுரை

எனவே, தத்துவ ஞானத்தை விரும்புவது 'சுத்த சைவம்' என்றதாம்.

ஆகவே, சிவஞான பாடியம் முதலியவற்றில் 'சுத்த சைவம்' என்னும் பெயராற் குறிக்கப்படும் சுத்த சைவம் அன்று இது என்பது விளங்கும். சத்து - மாற்றமின்றி என்றும் ஒரு படித்தாய் இருப்பது. அசத்து - மாற்றத்தை உடையது, சதசத்து - இவ்விரண்டில் எதனோடும் சார்தற்கு உரியதாய்ச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்பது. 'சத்து' முதலிய ஐந்தும் ஆகுபெயராய் முன்னர் அத்தன்மையுடைய பொருளையுணர்த்திப் பின் அவற்றது இயல்பை உணர்த்தின. 'கண்டபின்' என்பது 'கண்டு' எனத் திரிந்தது. 'நீத்த, நின்ற' என்னும் பெயரெச்சங்கள் அடுக்கி, 'பரம்' என்னும் ஒரு பெயர் கொண்டன, அச்சித்தும், நின்று' என்பன பாடமல்ல. 'சுத்தம், அசுத்தம்' என்பன அவற்றையுடைய பொருள்களைக் குறித்தன. வைந்தவம் - விந்துவின் காரியம். விந்து - சுத்தமாயை, மாயேயம் - மாயையின் காரியம், மாயை - அசுத்த மாயை, 'நித்தப் பரம்' என்பது தொடைநோக்கி மெலிந்து நின்றது. 'ஞேயம்' என்பது 'நேயம்' என மருவிற்று. 'அறியப்படுபொருள்' என்பது இதன் பொருள்.
இதனால், நால்வகைச் சைவத்துள் 'சுத்த சைவமாவது இது' என்பது கூறப்பட்டது.

கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்
முற்பத ஞானம் முறைமுறை நண்ணியே
சொற்பதம் மேலித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே. ***#1397***

கற்கத் தக்கனவாகிய சிவாகமங்களைக் கற்று, அவைகளிலே சிறப்பாகப் பொருந்தியுள்ள பிராசாத யோகத்தின் வழிப் பிரணவ ஞானத்தைப் படிமுறையால் பொருந்தி, சாலோகம் முதலாகச் சொல்லப்பட்ட பதமுத்திகளையும், அடைந்து, இவை யெல்லாவற்றின் விளைவாகவும் அதிதீவிரபரிபாகமும், அதிதீவிர சத்திநிபாதமும் வரப்பெற்று, அனைத்துப் பொருளுக்கும் மேலாய், ஆன்ம வியாபகத் திற்கும் மேலான வியாபகப் பொருளாகிய பரசிவப் பொருளைத் தலைப்பட்டவரே 'சைவ சித்தாந்திகள்' எனப் படுகின்றனர்.

விளக்கவுரை

'சை சித்தாந்தர்' என்றது 'சித்தாந்த சைவர்' என்றவாறு. எனவே, 'சைவாகம நெறிகளின் வழி ஒழுகி, அதனால், பதமுத்தி, பரமுத்திகளை அடைவதே சித்தாந்த சைவம்' என்றதா யிற்று. ஆகவே, சித்தாந்த சைவமே மேற்கூறிய சுத்த சைவமாதல் பெறப்பட்டது. 'மெய்யோகம்' என்றது, 'பொருளுணர்வுக்குக் காரணமான நாதத்தையுணரும் யோகம்' என்றவாறு. முற்பதம் - முதற்சொல்: பிரணவம்.
இதனால், 'சித்தாந்த சைவமாவது இது' என்பது கூறப்பட்டது.

வேதாந்தம் சுத்தம் விளங்கிய சித்தாந்தம்

நாதாந்தம் கண்டோர் நடுக்கற்ற காட்சியர்
பூதாந்த போதாந்த மாகப் புனஞ் செய்ய
நாதாந்த பூரணர் ஞானநே யத்தரே. *#1398*

வேதத்தின் முடிந்த பொருள் இன்னது எனத் தெளிவாக விளங்குவதாகிய சித்தாந்த சைவத்தில் நின்று, நாத முடிவான தத்துவங்களைக் கண்டு கழித்தோரே, பின் ஒரு காலும் அசைவில்லாத திண்ணிய மெய்யுணர்வைப் பெற்றவராவர். பின்னும் அவர் 'நான்' என்னும் தற்போதமும் கழலும்படி உணர்வு திருந்தப் பெறுவாராயின், நாதமுடிவில் விளங்கும் நிறை பரம் பொருளாகிய சிவமாந்தன்மையைப் பெறுவர். அதனைப் பெற்றோரே உண்மை ஞானத்தால் உண்மை ஞேயத்தை எய்தினோராவர்.

விளக்கவுரை

'சுத்தமாய்' என ஆக்கம்வருவிக்க. 'சித்தாந்தத்துக்கண் நின்று கண்டோர்' என்பதில் இடைநின்றன தொக்கன. 'பூதம்', ஏனைத் தத்துவங்கள் பலவற்றிற்கும் உபலக்கணம். தத்துவங்களின் அந்தத்தில் உள்ள போதம், 'நான்' என்னும் பசுபோதம். அஃது அந்தமாதலாவது, நீங்குதல். புனம்செய்தல் - புனத்தைத் திருந்தச் செய்தல் போலச் செய்தல். ஞான நேயம் - ஞானத்தினால் பற்றப்படும் ஞேயம் 'வேதாந்தம் தெளிவாதல் சைவ சித்தாந்தத்திலே' என்பதை, 'வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்' *1* என்பதனால் அறிக.
இதனால், சித்தாந்த சைவத்தின் சிறப்பும், அதன்கண் நின்றாரது பயனும் கூறப்பட்டது.

*7.2.*அசுத்த சைவம்

இணையார் திருவடி ஏத்தும்சீ ரங்கத்
திணையார் இணைக்குழை ஈரணை முத்திரை
குணமா ரிணைக்கண்ட மாலையுங் குன்றா
தணைவாம் சரியை கிரியையி னார்க்கே. *#1399*

சரியை, கிரியை நெறிகளில் நிற்பவர்க்குச் சிவனது இரண்டு திருவடிகளைத் தாம் வணங்குதற்குரிய கோலமாக உடம்பில் ஒன்று இரண்டாய்ப் பிணைந்த இருகுழைகள். இரண்டாகப் பொருந்திய முத்திரைகள், இரட்டை வடமாக அமைந்த கண்ட சரமும் ஆகியவை குறையாது பொருந்துதற்கு உரியன.

விளக்கவுரை

சீர் - அழகு. அஃது அதனைத் தருவதாகிய கோலத்தைக் குறித்தது. இணையார் குழையை, 'ஆறுகட்டியும், சுந்தரவேடமும்' என்றும், இவை 'ஆசிரியர்க்கு உரியன' என்றும் கூறுவர். 'இவ்வாசிரியர் கிரியா குரவரே'

என்பது இம் மந்திரத்தாற் பெறுதும். இருமுத்திரைகளா வனவற்றை, 'இடபக்குறியும் சூலக் குறியும்' எனத் திருநாவுக் கரசரது வரலாறு பற்றிக் கூறுதல் கூடும். அவன் சமண் சமயஞ் சார்ந்திருந்த மாசு தீரவே அவற்றை வேண்டிப் பெற்றமையால், அவை சமய விசேட தீக்கைகட்கு உரியனவாக இங்குக் கூறப்பட்டன எனலாம். 'குன்றாது அணைவாம்' என்றது, 'தவறாது பொருந்துவது' என்றபடி. எனவே, சுத்த சைவர்க்கு அவை இலவாயினும் குற்றமின் றாதல் அறியப்படும்.
இதனால், 'அசுத்த சைவருள் ஒருசாரார் இவர்' என்பது கூறப்பட்டது.

காதுப்பொ னார்ந்த கடுக்கன் இரண்டுசேர்த்
தோதுந் திருமேனி உட்கட் டிரண்டுடன்
சோதனை செய்து துவாதெச மார்க்கராய்
ஓதி யிருப்பார் ஒருசைவ ராகுமே. ***#1400***

காதில் பொன்னாற் செய்யப்பட்டுப் பொருந்திய கடுக்கன் இரண்டை அணிந்து, சிவாகமங்களில் சொல்லப்படுகின்ற 'தூலம், சூக்குமம், பரம்' என்னும் மூன்று உடம்புகளையும் சோதித்துத் தூய்மை செய்யப் பெற்று, துவாதச கலாப் பிராசாதயோக நெறியில்நின்று, அந்நிலைக்கு ஏற்பத் தாம் உபதேச முறையாற் பெற்ற திருவைந்தெழுத்தையும் ஓதுபவர் மேற்கூறியவரின் வேறுபட்ட ஒருசார் சைவராவர்.

விளக்கவுரை

தூல உடம்பையே 'திருமேனி' என்றார். சமய விசேட தீக்கைகளால் தூய்மை பெற்றமை தோன்ற அவ்வாறு கூறினார். சூக்குமம் பர உடம்புகளை 'உட்கட்டு' எனக் குறித்தார். 'செய்து' என்றது, 'செய்வித்துக் கொண்டு' என்றபடி. ஒருசைவர் - மற்றொருசைவர்; என்றது 'ஞானச்சைவர்' என்றவாறு. மேலை மந்திரத்துள் சரியை கிரியையினுள்ளும், இதன்கண் யோகம் ஞானத்துள்ளும் அடக்கப்பட்டன. இங்குக் குறிக்கப்பட்ட ஞானம் கேள்வியளவினது. இவற்றை 'சோதனை செய்து' எனவும், துவாதெச மார்க்கராய்' எனவும் போந்த குறிப்புக்களால் அறிக.
இதனால், அவருள் மற்றொருசாராரது இயல்பு கூறப்பட்டது.

கண்டங்கள் ஒன்பதும் கண்டவர் கண்டனர்
கண்டங்கள் ஒன்பதும் கண்டாய் அரும்பொருள்
கண்டங்கள் ஒன்பதும் கண்டவர் கண்டமா
கண்டங்கள் கண்டோர் கடுஞ்சுத்த சைவரே. ***#1401***

பாரத வருடத்தின் ஒன்பது பகுதிகளையும் சென்று கண்டவரே அவைகளில் உள்ள சான்றோர் ஆராய்ந்துகண்ட அரிய உண்மையைக் கண்டவராவர். அதனால், அவர் எல்லாவற்றையும் உணர்ந்த இறைவனது நவந்தரு பேதங்களையும் உணர்ந்தோரும், பின்னர்க்

கூறப்படும் கடுஞ்சுத்த சைவருக்கு நிகரானவரும் ஆவர்.

விளக்கவுரை

பாரத வருடத்தின் ஒன்பது கண்டங்களாவன:- 'இந்திரம், கசேரு, தாமிரவர்ணி, கபத்தி, நாகம், சாந்திரம் காந்தருவம், வாருணம், குமரி' என்னும் பெயருடையவாகச் சொல்லப்படுகின்றன.

'பரத கண்டமே 'கடவுள் நிலம்' (புண்ணிய பூமி)' என்றும், 'அது மேற் குறித்த ஒன்பது கண்டங்களையுடையது' என்றும் 'அக் கண்டங்கள் அனைத்திலும் அரும்பொருளை - மெய்ப்பொருளை ஆராய்ந்துணர்ந்த 'அறிவர்' பலர் நிரம்ப உளர்' என்றும் ஆகமங்கள் கூறுதலால், 'அவை அனைத்திலும் தொண்டரொடு கூடிச் சென்று தூநீராடியும், தொழுதகு படிவங்களை வணங்கியும், அறிவரை அடி பணிந்து அரும் பொருள் கேட்டும் வருவோர் அசுத்த சைவராயினும் மெய்ப்பொருளைக் கண்ட சுத்த சைவர் எனச் சொல்லத்தக்க பெருமை யுடையவர்' என்றவாறு 'பரத கண்டத்துக் கண்டங்கள் ஒன்பதுள்ளும் குமரிக் கண்டமே சிறந்தது' என்பதும் சிவாகம நூல் துணிபு. இரண் டாவதாய் நின்ற 'கண்டங்கள்', இடவாகு பெயர். 'கண்ட' எனப் பொதுப்படக்கூறிய அதனால், அது முழுதுங்கண்டதாயிற்று. இறைவனது பேதங்களை 'மாகண்டம்' என்றார். அப்பேதங்கள் ஒன்பதும் மேலே கூறப்பட்டன.

இதனால், 'சுத்த சைவரல்லாதார் தீர்த்த யாத்திரை தல யாத்திரைகளை இன்றியமையாது மேற்கொள்ளல் வேண்டும்' என்பது கூறப்பட்டது, இதன் பயன் ஞானத்தைப் பெறுதலாகும்.

'மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே' *1*

என்ற தாயுமானவர் மொழி இங்கே நினைக்கத் தக்கது.

ஞானி புவியெழு நன்னூ லனைத்துடன்
மோன திசையும் முழுஎண்ணெண் சித்தியும்
ஏனை நிலமும் எழுதா மறையீறும்
கோனொடு தன்னையும் காணும் குணத்தனே. ***#1402***

'ஞானத்தை விரும்புபவன்' என்று சொல்லப் படுவோன், உலகில் விளங்கித் தோன்றுகின்ற சமய நூல்கள் அனைத்தையும் உணர்ந்த உணர்வோடு, மன ஒடுக்கம் வரும் நிலையையும், முழுமையாக எண்ணப்படுகின்ற 'எட்டு' என்னும் தொகையைப் பெற்றுள்ள சித்திகளையும், இவ்வுலகமேயன்றி, ஏனை மேல் கீழ் உலகங்களின் இயல்புகளையும், இருக்கு முதலிய நான்கு வேதங்களின் முடிவாகிய 'ஆரணியகங்கள், உபநிடதங்கள்' என்பவற்றின் பொருள்களையும், எல்லாவற்றிற்கும் முதல்வனாகிய இறைவனது இயல்பையும், அவனுக்கு என்றும் அடிமையாகின்ற தனது இயல்பையும் உணரும்

பண்புடையவனேயாவன்.

விளக்கவுரை

'ஞானி' என்றது மேற்கூறியவாறு பொருள் படு மாற்றைப் பின் வருவனவற்றால் அறிக. நன்நூல் - ஞானநூல். இங்ஙனம் பல நூலும் கண்டபின்பே, பொய் பொய்யாய் ஒழிய மெய் மெய்யாய்த் தோன்றும் என்பது பற்றி, இங்ஙனம் ஓதினார். 'நூல் பல கல்' *1* என்று ஔவையாரும் கூறினார். 'கல்லார் நெஞ்சில் - நில்லான் ஈசன்' *2* என்று அருளிச்செய்ததும் இது பற்றி. 'கண்டதைக் கற்கப் பண்டிதன் ஆவான்' என்பது பழமொழி. இதில் 'கண்டது' என்பது கொள்கை வேறுபட்ட அறிஞர் பலரும், 'இதுவே நன்னூல்' எனக் கண்டது என்பதாம். சைவ சந்தான குரவர் நால்வருள் ஒருவர் அருட் குரவரது அருளுரையைப் பெறுதற்குமுன் 'சகலாகம பண்டிதர்' எனப் பலராலும் புகழப்பெற்றிருந்தமை அறியத்தக்கது.

இதனால், சுத்த சைவராக வேண்டுவார் கேள்வி ஞானத்திற்குப் பின் சிந்தனையால் முதிர்ச்சி பெறவேண்டுதல் கூறப்பட்டது.

*7.3.*மார்க்க சைவம்

பொன்னால் சிவசா தனம்பூதி சாதனம்
நன்மார்க்க சாதன மாஞான சாதனம்
துன்மார்க்க சாதனந் தோன்றாத சாதனம்
சன்மார்க்க சாதன மாம்சுத்த சைவர்க்கே. ***#1403***

சுத்த சைவநிலையை அடைய வேண்டுவார் கொள்ளத்தக்க முதற் சாதனங்கள், பொன்னாற் பொதியப்பட்ட உருத்திராக்கங்களின் மாலை, விபூதி என்னும் இரண்டுமாம். இவை நன்மையைத் தருகின்ற பெரிய ஞான சாதனமும், தீமை தோன்றாவாறு செய்கின்ற பெரிய காப்புச் சாதனமுமாம். ஆதலால், அவர்கட்கு இவை இன்றியமையாச் சாதனங்களாகும்.

விளக்கவுரை

எனவே, 'இச்சாதனத்தளவில் நிற்போர் ஒரு கூற்று மார்க்க சைவர்' என்றதாயிற்று. முதற்கண் 'சாதனம்' என்றது உருத்திராக்கத்தை, இதனை 'எவரேனும் தாமாக இலாடத்திட்ட திருநீறும் சாதனமும் கண்டால்'*1* என்பதிலும் காண்க.

இதனால், மார்க்க சைவத்துள் ஒரு பகுதி கூறப்பட்டது.

கேடறு ஞானி கிளர்ஞான பூபதி
பாடறு வேதாந்த சித்தாந்த பாகத்தி
னூடுறு ஞானோ தயன்உண்மை முத்தியோன்
பாடுறு சுத்தசை வன்பத்தன் நித்தனே. ***#1404***

பின்னர்க் கெட்டொழியாது நிலை பெற்று நிற்கும் ஞானத்தை உணர்ந்தவனும், அதனால் 'ஞான வேந்தன்' எனப் புகழப்படுபவனும், அழிவில்லாத வேத முடிவில் தொடங்கி விரிந்த சிவாகமங்களின் நாற்பாதங்களினுள்ளும் பொருந்தி விளங்கும் பொருள்கள் விளங்கப்பெற்ற அறிவையுடையவனும், அவற்றால் உண்மை முத்தியாகிய பரமுத்தியைப் பெறும் தகுதியை அடைந்தோனு மாகிய பெருமை பொருந்திய சுத்த சைவனுக்குத் தொண்டு பூண்டவன் பிறவிப் பயனைப் பெற்றவனாவன்.

விளக்கவுரை

எனவே, 'இவன், மார்க்க சைவத்துள் மற்றொரு பகுதியினன்' என்பது பெறப்பட்டது. இதனுள் சுத்த சைவனது பெருமையை யே விரித்து, 'அவன்பால் பத்தி பூண்டவன் சித்தன்' எனக் கூறப் பட்டது. சித்தன் - சித்திக்கப் பெற்றவன். பெறுதலுக்குச் செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது. 'சித்தாந்தம்' என்றது சிவாகமங்களை.
இதனால், சுத்த சைவர்க்குத் தொண்டு பூண்டொழுகுதலும் மார்க்க சைவத்தின் ஒரு பகுதியாதல் கூறப்பட்டது.

ஆகமம் ஒன்பான் அதில்ஆன நாலேழு
மோகமில் நாலேழும் முப்பேதம் உற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்ம்மைஒன்
றாக முடிந்த தருஞ்சுத்த சைவமே. ***#1405***

தொல் ஆகமங்கள் ஒன்பதே, 'இருபத்தெட்டு' என்பன அவற்றினின்றும் விரிந்தனவாம். 'சிவபேதம், உருத்திர பேதம், தேவ பேதம்' என்னும் முப்பேதங்களும் 'இருபத்தெட்டு' என்னும் அவற்றில் சொல்லப்படுவனவே. ஆகமங்கள் எத்துணையாக விரிந்து, எத்துணைப் பேதப்பட்டிருப்பினும் தற்போதத்தைப் போக்க வல்ல, வேதாந்தத் தெளிவாம் சித்தாந்த மாகிய அவற்றின் துணிபு ஒன்றேயாக முடிந்ததே சுத்த சைவநிலை வாய்ப்பதாகும்.

விளக்கவுரை

எனவே, 'அங்ஙனம் பல ஆகமங்களின் பொருள்களை யும் ஒருமைப்பட உணர்தலும் மார்க்க சைவப் பகுதியாம்' என்ற தாயிற்று. இங்குக் கூறப்பட்ட ஆகமம் பற்றிய செய்திகளை முதல் தந்திரம் - ஆகமச் சிறப்பு அதிகாரத்தில் காண்க. ஆன - ஆனவை. மெய்ம்மை - முடிந்த பொருள்.
இதனால், சைவாகமங்களின் பொருள்களை ஒன்றோடு ஒன்று முரணாதவாறு ஒருமைப்படக் காண்டலும் மார்க்க சைவமாதல் கூறப்பட்டது.

சுத்தம் அசுத்தம் துரியங்கள் ஓரேழும்

சத்தும் அசத்தும் தணந்த பராபரை
உய்த்த பராபரை உள்ளாம் பராபரை
அத்தன் அருட்சத்தி யாய்எங்கு மாமே. *#1406*

'சுத்தம், அசுத்தம், மிச்சிரம்' என்னும் மூவகைப் பல்வேறு நிலைகளையும், மாயை கன்மங்களின் காரண காரிய நிலை களையும் கடந்து, பரையாவும், அபரையாதற்குரியவளாயும் உள்ள, சிவனது அருளாகிய சத்தி, எல்லாப் பொருள்களையும் நடத்து பவளாய், அவற்றின் உட்பொருளாகி எவ்விடத்திலும் நிறைந்து நிற்கின்றாள்.

விளக்கவுரை

'துரியங்கள்' என்றதனால், 'சுத்தம், அசுத்தம்' எனப் பட்டனவும் அவற்றில் நிகழும் சாக்கரம் முதலியனவும் அவத்தையாதல் அறியப்படும். இங்கு, 'சுத்தம்' என்றது, கேவலமல்லாத சகலத்தை, அசுத்தம், கேவல சாக்கிரம் முதலியன. இவற்றின்பின் வாளா 'துரியங்கள்' என்றதனால் அவை முன் இரண்டைக் கடந்த சுத்த சாக்கிரம் முதலியவாயின. இவ்வைந்தோடு சுத்த அசுத்தங்களை ஒவ் வொன்றாக்கி, 'ஏழு என்றார், காரண காரியங்களையே சத்து, அசத்து என ஓதினார், அவை அங்ஙனம் சொல்லப்படுதற்கு உரியன வாகலின். உய்த்தல் - நடத்துதல், இதற்குச் செயப்படுபொருள் வருவித்துக்கொள்க. பின்வந்த 'பராபரை' இரண்டும், 'சத்தி' என்னும் அளவாய் நின்றன. 'அத்தன் அருட் சத்தி' என்பதை இரண்டாம் அடியின் இறுதியிற் கூட்டி யுரைக்க. 'அத்தன் அருட் சத்தி எங்குமாம்' என்றது, 'அந்நிலையை உணர்ந்து அதில் அடங்கி நிற்போர் மார்க்க சைவர்' என்றதாம். இதனால், அத்தனது அருள்நிலையை அடைந்தோர் மார்க்க சைவராதல் கூறப்பட்டது.

சத்தும் அசத்தும் தணந்தவர் தானாகிச்
சித்தும் அசித்தும் தெரியாச் சிவோகமாய்
முத்தியுள் ஆனந்த சத்தியுள் மூழ்கினோர்
சித்தியும் அங்கே சிறந்துள தானே. *#1407*

எங்குமாய் நிற்கும் அருட் சத்தியை அடைந்து நிற்கும் நிலைக்குமேலே, எல்லாப் பொருளையும் கடந்த பராசத்தியை அடைந்தவர், அச்சத்திக்கு முதலாய பரசிவமேயாய், சித்தும் சடமு மாய உலகங்களுள் யாதும் தோன்றாது சிவோகம் பாவனையில் அழுந்தி, பரமுத்தி நிலையில் விளையும் பேரின்பமாகிய ஆனந்த சத்தியில் மூழ்கி யிருப்பர். அவரது பேறே ஏனை எல்லார் பேற்றினும் சிறந்த பேறாகும்.

விளக்கவுரை

'தணந்தவர்' என்று மேற்கூறிய 'தணந்தபரையை' அடைந்தவர்

என்றவாறு. எல்லாமாய் நிற்பவள் அருட் சத்தியும், எல்லாவற்றையும் கடந்து நிற்பவள் ஆனந்த சத்தியும் ஆதலின் அந் நிலையே முடிந்த பேறாயிற்று. 'உளது' என்பது ஈறு தொகுத்தலாயிற்று. 'உளதாமே' எனப் பாடம் ஓதலுமாம்.
இதனால், 'மேற் கூறப்பட்டவர் மார்க்க சைவரேயாயின், அவருக்கு மேலேயுள்ள சுத்தசைவாராவார் யாவர்? என்னும் ஐயத்தினை நீக்குதற்கு. 'அருள் நிலையைக் கடந்து ஆனந்த நிலையை எய்தினோர் சுத்த சைவர்' என்பது கூறப்பட்டது.

தன்னைப் பரனைச் சதாசிவன் என்கின்ற
மன்னைப் பதிபசு பாசத்தை மாசற்ற
முன்னைப் பழமல முன்கட்டை வீட்டினை
உன்னத் தகும் சுத்த சைவர் உபாயமே. ***#1408***

ஆன்மா, 'யாதும் செய்யாது அமைதியாயுள்ள பரசிவன், 'சதாசிவன்' எனப்படுகின்ற ஐந்தொழில் முதல்வன், அப்பதியோடு ஏனைப் பசு பாசங்கள், அநாதி தொட்டே உள்ள ஆணவப் பிணிப்பாகிய முதற்பந்தம், அது நீங்கி நின்ற வீடு' என்னும் இவற்றை ஐயந்திரிபு அற ஆராய்ந்துணர்தல் என்பர். இவை சுத்த சைவராவார் தமக்கு உரிய உபாயமாகும்.

விளக்கவுரை

'மாசற்ற வீட்டினை' எனக் கூட்டியுரைக்க. 'சுத்த சைவராவார் உபாயம்' என ஆக்கம் வருவித்து உரைக்க.
இதனால், 'தத்துவ ஆராய்ச்சி மார்க்க சைவமாம்' என்பது கூறப்பட்டது.

பூரணந் தன்னிலே வைத்தற்ற அப்போதத்
தாரண வந்த மதிசித்தாந் தத்தொடு
நேரென ஈராறும் நீடும் நெடும்போகம்
காரண மாம்சுத்த சைவர்க்குக் காட்சியே. ***#1409***

சுத்த சைவராய் உள்ளார்க்கு உளதாகின்ற அனு பவத்திற்கு, எங்கும் நிறைந்த பொருளாகிய சிவனிடத்தே வைக்கப் பட்டதனால் பிற பற்றுக்கள் நீங்கிய ஆன்ம போதத்தில், வேதாந்தம், சித்தாந்தத்தோடு ஒற்றுமைப் பட்டுத் தோன்றப்பெற்ற உணர்வோடு, பிராசாத கலைகள் பன்னிரண்டும் காட்சிப்பட, அதனால் இடையறாது விளங்கும் பேரின்பமே காரணமாம்.

விளக்கவுரை

அதனால், அத்தகைய பிராசாத யோகத்தில் நிற்பவர் மார்க்க சைவராதல் பெறப்பட்டது. இம்மந்திரத்தில் பாடங்கள் மிகத் திரிந்துள்ளன.
'காட்சிக்கு' என்னும் நான்கனுருபு இன்னோசை நோக்கித்

தொகுக்கப்பட்டது.
இதனால், பிராசாத யோக நெறியும் மார்க்க சைவமாதல் கூறப்பட்டது.

மாறாத ஞானம் மதிப்பற மாயோகம்
தேறாத சிந்தையைத் தேற்றிச் சிவமாக்கிப்
பேறான பாவனை பேணி நெறிநிற்றல்
கூறாகும் ஞானி சரிதை குறிக்கிலே. ***#1410***

சித்தாந்த சைவத்தின் அங்கமாகும் மார்க்க சைவரது ஒழுக்கத்தைச் சொல்லுமிடத்து,தொன்று தொட்டுத் தொலையாது நிற்கின்ற தற்போதத்தைப் பெரிதாக எண்ணாமல், அஞ்ஞானத்தி னின்றும் நீங்கமாட்டாத அறிவை மேற்கூறிய உயர்ந்த யோகமாகிய பிராசாத யோகத்தால் அஞ்ஞானத்தினின்றும் நீங்கித் தெளிவடையும் படிச் செய்து, அதனைச் சிவனது அறிவேயாக ஆக்கிப் பெறற்கரிய பேறாகிய சிவோகம் பாவனையைத் தலைப்பட்டு அதனைப் போற்றி அந்தப் பதிஞான நெறியில் நிற்றலேயாகும்.

விளக்கவுரை

'யோகத்தால்' என உருபு விரிக்க. சிவம், ஆகுபெயர். 'பேறான' என்பது, 'சிறந்த பேறாகிய' என்னும் பொருளைக் குறித்தது. 'கூறாகும்' என்னும் பெயரெச்சம். 'ஞானி' என்பதன் முதனிலையோடு முடிந்தது.
ஞானமாவது, சித்தாந்த ஞானமே யாதல் அறிந்து கொள்க.
இதனால், மார்க்க சைவரது ஞான ஒழுக்கம் கூறப்பட்டது.

வேதாந்தங் கண்டோர் பிரமவித் தியாதரர்
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்
வேதாந்த மல்லாத சித்தாந்தங் கண்டுளோர்
சாதா ரணர் அன்ன சைவர் உபாயரே. ***#1411***

சிவாகமங்களை உணராது வேதாந்தத்தை மட்டும் உணர்ந்தோர் முதற் பொருளை உண்மை மாத்திரையான் உணர்ந் தவரே. அதன் இயல்பையும், அதனைப் பெறுமாற்றையும் பெற்றவழி உளதாகும் பயனையும் அறிந்தவரல்லர். பிராசாத நெறியால் நாத முடிவைக் கண்டவர் அசைவில்லாத யோகிகளேயவர்; ஞானிகள் அல்லர். சைவாகமங்களை வேதாந்தத்தோடு ஒற்றுமைப்படவைத்து உணராது தனிப்ப வைத்து உணர்ந்தோர் பொதுச் சைவரே; உண்மைச் சைவர் அல்லர். ஆதலால், அவர் மார்க்க சைவரே; சுத்த சைவர் அல்லர்.

விளக்கவுரை

இதன் ஈற்றடியின் பாடம், 'சாதாரணர்; அன்ன சைவர் உபாயரே' என இங்குள்ளபடியாவது, 'சாதாரணர் அன்னர்சைவம் உபாயமே' என்றாவது ஓதப்படல் வேண்டும். மார்க்க சைவருள் இங்குக் கூறப்பட்ட

சாதாரண சைவர் பாசுபதர் முதலிய அகப்புறச் சமயிகள் என்க. இவரைக் கூறுவார், மேற்கூறிய மார்க்க சைவரை அனுவதித்தும், புறச் சமயத்தாராகிய ஏகான்மவாதரைப் புடைபட வைத்தும் கூறினார். இதனால், சிவாகமத்தைப் பொதுவாக உணர்தலும் மார்க்க சைவமாதல் கூறப்பட்டது.

விண்ணினைச் சென்றணு காவியன் மேகங்கள்
கண்ணினைச் சென்றணு காப்பல காட்சிகள்
எண்ணினைச் சென்றணு காமல் எணப்படும்
அண்ணலைச் சென்றணு காபசு பாசமே. ***#1412***

பரந்துஎழும் மேகக் கூட்டம் அருவமாகிய ஆகாயத்தைப் பற்றமாட்டாது, பல காட்சிப் பொருள்களும் கண்ணொளியைத் தமக்கு இடமாகக் கொண்டு நிற்க மாட்டா. அவை போல, எண் வரையறை யில்லையாம்படி முடிவின்றி எண்ணப் படுவனவாகிய பசுக்களைப் பற்றிநிற்கின்ற பாசங்கள், தலைவனாகிய சிவனைச் சென்று அணுகமாட்டா.

விளக்கவுரை

இதனுள் இரண்டு எடுத்துக்காட்டுவமைகள் கூறப் பட்டன. 'பாசம்' என்னாது 'பசு பாசம்' என்றதனால், 'பசுக்களைப் பற்றுகின்ற அவை பதியாகிய இறைவனைப் பற்ற மாட்டா' என்ற தாயிற்று. ஆகவே, அப்பாசங்களால் தோற்றுவிக்கப் பட்ட அறிவைக் கொண்டோ, அவற்றின் நீங்கியவழி எதனையும் அறியமாட்டாத தனது அறிவைக்கொண்டோ உயிர் இறைவனை அறியமாட்டா' என உணர்த்துதல் இம்மந்திரத்தின் கருத்தாதல் விளங்கும். அதனால், 'பதி ஞானத்தால் பதியைத் தலைப்பட்டு உணர்வோரே சுத்தசைவர்' என்பதும், 'அவ்வாறன்றி, பாசஞான பசுஞானங்களால் உணர்வோர் மார்க்க சைவரே' என்பதும் கூறியவாறாம். 'அண்ணலைச் சென்றணுகா' என்பதை இறுதியிற் கூட்டி உரைக்க.

இதனால், மேற்கூறியவர் எல்லாரும் சுத்த சைவராகாது மார்க்க சைவராதற்குக் காரணம் கூறப்பட்டது.

ஒன்றும் இரண்டும் இலதுமாய் ஒன்றாக
நின்று சமய நிராகாரம் நீங்கியே
நின்ற பராற்பர நேயத்தைப் பாதத்தால்
சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே. ***#1413***

மேற் கூறிய, 'சிவனும், சீவனும் ஒருபொருளே' என்றுகூறும் 'பிரம வித்தியாவாதமும், இருவரும் வேறுவேறானவர் களே' எனக் கூறும் வேதாந்தம் அல்லாத அசுரௌத வாதமும் இன்றி, 'இருவரும் கலப்பினால் ஒன்றாய் பொருள் தன்மையால் வேறாய் இருப்பவர்'

என்னும் சித்தாந்த அத்துவித ஞானத்தில் நிலைபெற்று நின்று, பொருளில்லாத சூனியம்' எனத்தக்க பல சமயத் தொடக்கி னின்றும் நீங்கி, அந்தச் சமயங்கள் அனைத்திற்கும் மேலே உள்ள முதற் பொருளாகிய, அறியப்படுபொருளாம் சிவனை, அவனது திருவடி ஞானத்தின்வழியே சென்று பொருந்திப் பின் அவனேயாகி விடுதலே சித்தாந்த ஞானத்தின் பயனாகும்.

விளக்கவுரை

நிராகாரம் - உருவின்மை; என்றது பொருள் யாதும் இல்லாத சூனியத்தை. மூன்றாம் அடியில் 'நின்று' என்பது பாடம் அன்று 'பராபரை' என்பது பாடமாயின், 'பாதம்' என்பதற்கு 'நிபாதம்' எனப் பொருள் உரைத்து, 'நேயத்தை' என்பதை அதன் பின்னர்க் கூட்டியுரைக்க. 'சென்று' என்பதன்பின், 'தலைப்பட்டு' என்பது எஞ்சிநின்றது.

இதனால், அசுத்த சைவம். மார்க்க சைவம் என்பவற்றது நிலை இனிது விளங்குவதற்குச் சுத்தசைவத்தினது சிறப்புக் கூறப்பட்டது.

*7.4.*கடுஞ் சுத்த சைவம்

வேடங் கடந்த விகிர்தன்றன் பால்மேவி
ஆடம் பரமின்றி ஆசாபா சஞ்செற்றுப்
பாடொன்று பாசப் பசுத்துவம் பாழ்படச்
சாடும் சிவபோ தகர்சுத்த சைவரே. ***#1414***

துறவுக் கோலம் இன்றியே, ஆசையாகிய தளையையும் அறுத்தெறிந்து, துன்பத்தொடு படுதற்கு ஏதுவாகிய மலங்களாகின்ற பசுத்துவம் இல்லையாம்படி அடித்துப் போக்குகின்ற சிவஞானச் செயலரே கடுஞ்சுத்த சைவராவர்.

விளக்கவுரை

இல்லம் துறந்து, எங்கும் செல்பவரே துறவுக் கோலத்தை உடையராவர் ஆகலின், 'வேடங் கடந்து' என்றது இல்லந்துறத் தலாகிய புறத்துறவு இன்றி, அகத் துறவு மாத்திரம். உடையராதலைக் குறித்தது. இவர் சிவனிடத்தே அடங்கியிருத்தல், அலை ஒழியாத கடலில் அலைவின்றி மூழ்குதலோடு ஒக்கும் அருமை யுடைத்தாதல் அறிக. ஆடம்பரம் - ஆரவாரம். வேடங்கடந்தமை முன்னே கூறப்பட்டமையின், இது தமது நிலையைப் பிறர் அறிதற்கு ஏதுவாம் பேச்சினைக் குறிக்கும். இது முற்கூறியதினும் அருமை யுடையதாம். போதகர் - போதத்தை விடாதே செயற்படுவோர். 'சுத்தசைவர்' என்றது, அதிகாரத்தால் கடுஞ்சுத்த சைவரையாயிற்று.

இதனால், 'கடுஞ் சுத்த சைவ நிலை இது' என்பது கூறப்பட்டது.

உடலான ஐயைந்தும் ஒன்றும் ஐந்தும்
மடலான மாமாயை மற்றுள்ளம் நீவப்
படலான கேவல பாசந் துடைத்துத்
திடமாய்த் தனையுறல் சித்தாந்த மாமே. ***#1415***

தூல சூக்கும பர உடம்புகளாய் நிற்கும் முப்பத் தொரு தத்துவங்களும், அவற்றிற்கு மேல் உள்ள ஐந்து தத்துவங்களும் ஆக முப்பத்தாறு தத்துவங்களும் விரிவான நிலையை யுடைய பெரிய மாயையாம். அவற்றை ஆன்மா நீக்கின் அறிவை மறைத்து நிற்கும் ஆணவ மலத்தைக் கழுவித் தனது இயற்கை நிலையை உறுதிப்பட எய்தும். அவ்வாறு எய்துவதே சித்தாந்தச் சைவ நெறியாகும்.

விளக்கவுரை

'உடலான' என்பது 'ஐந்தும், ஓராறும்' என்னும் இரண்டோடே பொருந்தி நின்றது. அவற்றிற்கு மேல் உள்ள ஐந்தும் சுத்த தத்துவங்கள். அவை ஆன்மாக்களுக்கு உடம்பாய் வருதல் இல்லை. மடல் - விரிவு. 'படலம்' என்பது. அம் குறைந்து நின்றது. கேவல பாசம் - ஆன்மாவோடு இயல்பாக ஒட்டி ஒன்றாய் நிற்கும் பாசம்; ஆணவ மலம், உள்ளம் - ஆன்மா. ஆன்மா என்றும் சிவ வியா பகத்தில் உள்ளதே யாகலின், அந்நிலை தோன்றாதவாறு மறைத்துள்ள ஆணவம் நீங்கியவுடன் தனது இயற்கை நிலையை எய்தலாவது சிவ வியாபகத்தில் இருத்தலை உணர்ந்து இன்புறுதலேயாதல் அறிக. 'சித்தாந்தம்' என்பதே சுத்த சைவம் ஆதலின், 'அந்த நெறியில் கடுஞ்சுத்தசைவர் இவ்வாறு நிற்பர்' எனக் கூறியவாறு.

இதனால், மேற்கூறிய அரு நெறியின் இயல்பு வகுத்துக் கூறப்பட்டது.

சுத்தச் சிவனுறை தானத்தில் தோயாமல்
முத்தர் பதப்பொருள் முத்திவித் தாம்மூலம்
அத்தகை ஆன்மா அரனை அடைந்தற்றால்
சுத்த சிவமாவ ரே சுத்த சைவரே. ***#1416***

தடத்த சிவன் எழுந்தருளியிருக்கின்ற சுத்தமாகிய சிவலோகத்தை அடையினும் அங்குப் பற்றுக் கொள்ளாமல் 'முத்தர்' என்னும் சொல்லுக்குப் பொருளும் முத்தியாகிய நிலத்திற்கு வித்தும் ஆகியிருக்கின்ற அந்தத் தகுதியையுடைய முத்தான்மா ஆகின்றவர் அவ்வாற்றால் சிவனைச் சார்ந்து, அதனால், மூலமலம் பற்றறக் கழிந்தவழிச் சொரூப சிவனோடு இரண்டறக் கலப்பர். அங்ஙனம் கலப்பவரே உண்மைச் சுத்த சைவராவர்.

விளக்கவுரை

'அதனால்' வேடம் முதலியவற்றை மேற்கொள்ளாமலே

அத்தகுதியையுடையராய் இருப்பர் கடுஞ்சுத்த சைவர்' என்பது குறிப்பெச்சம் 'சுத்தத்தானம்' என இயையும். 'சிவனுரை' என்பது பாடமன்று. 'மூலம்' என்பதை, அற்றால் என்பதற்கு முன் கூட்டி உரைக்க. அத்தகைய ஆன்மா நிலையை அடைந்தவரை 'ஆன்ம' என்றே கூறியது ஆகுபெயர். இஃது இயற்கையில் அஃறிணை இயற் பெயராய்ப் பன்மைகுறித்து நின்று பின் ஆகுபெயர் ஆயிற்று. 'சுத்த சிவமாவர்; அவரே சுத்த சைவர்' என இருசொல் நீர்மைப்படுத்து உரைக்க. 'சிவலோகத்தை அடைந்தாரும் பற்று நீங்காதவழி மீள நிலத் திற்பிறப்பர்' என்பதும், 'பற்றற்றிருப்பின், அவ் விடத்திற்றானே சிவன் மூன்னின்று அவரை முத்தியிற் சேர்த்துவன் என்பதும் சிவாகம உண்மையாதலின் *1* அவரையே 'முத்தர் பதப் பொருள்' என்றும் 'முத்திக்கு வித்து' என்றுங் கூறினார். திருவள்ளுவநாயனாரும் இத்தகையோரை, 'வரன் என்னும் வைப்பிற் கோர் வித்து' *2* என அருளிச்செய்தார்.
இதனால், கடுஞ் சுத்தசைவரது சிறப்புக் கூறப்பட்டது.

நானென்றும் தானென்றும் நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பரம்
தானென்றும் நான் என்ற தத்துவம் நல்கலால்
தானென்றும் நானென்றும் சாற்றகில் லேனே. ***#1417***

'நான் எங்கே யிருக்கின்றேன், 'தத்' பதப் பொருளாகிய பரம் எங்கே உள்ளது' என்று நான் தேடி அலையும் நிலையில், 'தான் அதோ உள்ளது, நான் இதோ உள்ளேன்' என வேறு வேறு கண்டு எண்ணுமாறு 'இரண்டு' என்னும் எண்ணிற்கே இடம் இல்லாது, என்னுள் ஒன்றாயே நிற்கின்ற அது எனது அலைவுக்கு இரங்கி வெளிப்பட்டு வந்து, தான் என்றுமே நானாய் - என் உயிருக் குயிராய் - ஒன்றியிருக்கிற உண்மையை உணர்த்தினமையால், நான் இப்பொழுது 'தான்' என்று அதனைத் தனியாகவும், 'நான்' என்று என்னைத் தனியாகவும் எண்ணிச் சொல்லும் தன்மை இலேனாயினேன்.

விளக்கவுரை

'தற்பதம்' என்பது பாடமாயின், 'பதம்' என்பதைச் சொல்லாகு பெயராகக் கொண்டு உரைக்க.
'தேடிக் கண்டு கொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்' *3*
என்றதும் இங்கு நினைக்கத் தக்கது.
இதனால், புறக்காட்சியற்று அகக் காட்சியில் உறைத்து நிற்றல் கடுஞ்

சுத்த சைவமாதல், தம்நிலை உணர்த்து முகத்தால் கூறப்பட்டது.

சாற்றரி தாகிய தத்துவம் சித்தித்தால்
ஆற்றரி தாகிய ஐந்தும் அடங்கிடும்
மேற்றிகழ் ஞானம் விளக்கொளி யாய்நிற்கும்
பாற்பர சாயுச்சிய மாகும் பதியே. *#1418*

சொல்ல இயலாத மேற்குறித்த உண்மை நிலை கிடைக்கப்பெற்றால், பொறுத்தற்கரிய ஐம்புலன்களும் தம் குறும்புகள் நீங்கி அடங்கிவிடும். பாசஞான பசு ஞானங்களைக் கடந்து மேலாய் விளங்கும் பதிஞானம் நொந்தா விளக்குபோல நிலைபெற்று ஒளிரும். அதன் பயனாகப் பின்னர்ப் பதிப்பொருள், மேலான சாயுச்சியமாய்க் கிடைக்கும்.

விளக்கவுரை

'அத் தத்துவம்' எனச் சுட்டு வருவித்து உரைக்க. பால் -அப்பால்.
இதனால், கடுஞ் சுத்த சைவத்தின் அருமையும், பயனும் கூறப்பட்டன.

7.5.சரியை

நேர்ந்திடும் மூலன் சரியை நெறியேதென்
றாய்ந்திடுங் காலாங்கி கஞ்ச மலையமான்
ஓர்ந்திடுங் கந்துரு கேண்மின்கள் பூதலத்
தோர்ந்திடுஞ் சுத்தசை வத்த துயிரதே. *#1419*

'மூலன் உடன்பட்டுக் கூறிய சரியை நெறி யாது' என்று ஆராய்கின்ற கஞ்சமலையமானே, கந்துருவே' 'பூமியில் உண்மையை ஓர்ந்து உணரச் செய்வதாகிய சுத்த சைவத்தின் உயிர் நாடியாம் நெறிகள் இவை' எனக் கூறுகின்றேன்; கேண்மின்கள்.

விளக்கவுரை

'மூலன் நேர்ந்திடும் சரியை' என மாற்றிக் கொள்க. 'கஞ்சன் முதலியோர் நாயனார்க்கு மாணாக்கர் என்பது பாயிரத் துள்ளே அறியப்பட்டது, அவர் பெயரை ஒரோவழி நாயனார் எடுத் தோதுதல் செய்வர். 'சரியை நெறி எது' என்று எடுத்துக்கொண்டு, 'சைவத்துக்கு உயிர் கேண்மின்' எனப் பொதுப்படக் கூறியது, 'சரியையோடு பிறவற்றையும் கூறுவன்' என்றவாறு. இதனானே இவ்வதிகாரத்துள் பிறவும் பொதுப்பட உடன் வைத்துக் கூறுதல் பெறப்படும். இதனுள் பொருட்பின் நிலையும் வந்தது. இதனால், இனிவரும் அதிகாரங்கட்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

உயிர்க்குயிர் ஆய்நிற்றல் ஒண்ஞான பூசை
உயிர்கொளி நோக்கல் மகாயோக பூசை
உயிர்ப்புறும் ஆவாகனம் புறப் பூசை
செயிர்க்கடை நேசம் சிவபூசை யாமே. *#1420*

உயிர்க்கு உயிராய் உள்ள பொருளை ஆராய்ந் தறிவது ஞானபூசை.

உயிர்க்கு உணர்வுண்டாக்குகின்ற பிரணவத்தைப் பல வகையாலும் காணுதல் பெரியயோக பூசை. புறத்தில் விளங்கும் மூர்த்தி உயிருடையதாகும்படி மூர்த்திமானை அதன்கண் வருவித்துச் செய்தல் புறப் பூசை. இனிக் குற்றந் தீர்ந்த அன்புடன் செய்வனயாவும் சிவனுக்குச் செய்யப்படும் பூசையாம்.

விளக்கவுரை

அதனால், 'அன்பின்றி நிகழின் இங்கு எடுத்தோதப் பட்டனவும் பூசை யாதலில்லை' என்றதாம்.

'நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்;
பொக்கம் மிக்கவர் பூவும்நீ ருங்கண்டு
நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே' *1*

எனவும்,

'அன்பேஎன் அன்பேஎன் றன்பால் அழுதரற்றி
அன்பேஅன் பாக அறிவழியும் - அன்பன்றித்
தீர்த்தந் தியானம் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாத்தும் பழமன்றே தான்' *2*

எனவும் போந்தன காண்க. இதனுள் யாவற்றையும் 'சை' என்றே குறித்தலின், 'பசுக்களாகிய உயிர்கள் பதியாகிய இறைவன் எவ்வாற்றாலும் வழிபட்டு நிற்றலே சைவத்தில் உள்ள உய்யும் நெறி' என்பது விளங்கும். 'அவ்வழிபாடுதான், 'ஞான யோகக் கிரியா சரியைகள்' என நான்காய் நிற்கும்' என்பது அம்முறையானே கூறப்பட்டது. முதல் மூன்று அடிகளிலும் முறையே ஞானம் முதலிய மூன்றனையும் கூறி, 'அவையல்லாத பிறவெல்லாம் சரியையாம்' எனப் பொதுப்படக் கூறினார் என்க. 'பிராசாத யோகம்' என்பார், 'மகா யோகம்' என்றார். 'ஆய் நிற்றல்' என்பது, 'ஆய்' என்னும் முதனிலை, 'ஆய்ந்து' என வினையெச்சப் பொருள் தந்தது. 'உயிர்ப் பெறும்' என்பது பாடமாயின், 'பகரஒற்று விரித்தல்' என்க. செயிர் - குற்றம். 'அறன்கடை' என்பது அதன் மறுதலையைக் குறித்தல் போல, 'செயிர்க்கடை' என்பது அதன் மறுதலையைக் குறித்து.

இதனால், சைவத்தின் ஒழுகலாறு நால்வகைத்தாதலும், அவற்றின் இயல்பும் தொகுத்துக் கூறப்பட்டன.

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மான்என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்தைக் கோயிலாக் கொள்வனே. ***#1421***

இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

'நன்மை' என்றது அருள் விளக்கத்தை. இதனை முன் உள்ள 'நாடு, நகரம்' என்பவற்றிற்கும் கூட்டி, 'நல்ல நாட்டையும், அதனுள் நல்ல நகரத்தையும், அதனுள் நல்ல திருக்கோயிலையும் கருதித் தேடித் திரிந்து' என உரைக்க.

'தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்' *1*

என அருளிச்செய்ததும் அறிக. நெஞ்சத்தை உடையாரது தொழிலை நெஞ்சத்தின் மேல் ஏற்றி, 'கூடிய நெஞ்சம்' என்றார். கொள்ளுதற்கு எழுவாய், முன்னர் வந்த சிவபெருமானைச் சுட்டும். 'அவன்' என்பது வருவிக்க. இங்ஙனம் விரித்துக்கூறிய இவை, 'சரியை' என்பது அதிகாரத்தால் பெறப்பட்டது. 'நெஞ்சத்து' என்பது பாடம் அன்று.
இதனால், சரியை ஒழுக்கமாவன சில கூறப்பட்டன.

பத்தர் சரியை படுவோர் கிரியையோர்
அத்தகு தொண்டர் அருள்வேடத் தாகுவோர்
சுத்த இயமாதி தூயோகர் சாதகர்
சித்தர் சிவஞானம் சென்றெய்து வோர்களே. ***#1422***

சரியையில் நிற்போர் பத்தியையுடைய 'பத்தர்' என்றும், கிரியையில் நிற்போர் அணுக்கத் தொண்டு செய்யும் அத்தகுதியை யுடைய 'தொண்டர்' என்றும், இயமம் முதலிய யோக நிலைகளில் நிற்போர் 'சாதகர்' என்றும் ஞானத்தில் நிற்போர் 'சித்தர்' என்றும் பெயர் பெறுவர். இவருள் முதல் இருவரும் திருவேடத்தைத் தவிராது பூண்பர்.

விளக்கவுரை

எனவே, பின்னை யிருவரும் பெரும்பான்மையும் புறக் காட்சி யிலராகலின், திருவேடம் இன்றியும் காணப்படுவர் என்பது போந்தது. பத்தர் - பத்தியுடையவர். அணுக்கத்தொண்டே 'தொண்டு' எனப்படுமாதலின், இவர் 'தொண்டர்' எனச்சிறப்பித்துக் கூறப் பட்டாராயினர். அணுக்கத்தொண்டினை 'பணிவிடை' என்பர். சித்தர் - பேறு பெற்றவர். 'சாதகர் தூயோகர்' என்பது பாடமாயினும் இதுவே பொருள் என்க.

இதனால், காரணப்பெயர் கூறும் முகத்தால், சரியை முதலிய நான்கிலும் நிற்போரது தராதரம் உணர்த்துப்பட்டது.

சார்ந்தமெய்ஞ் ஞானத்தோர் தானவ னாயினோர்
சேர்ந்தஎண் யோகத்தர் சித்த சமாதியோர்
ஆய்ந்த கிரியையோர் அருச்சனை தப்பாதோர்
நேர்ந்த சரியையோர் நீள்நிலத் தோரே ***#1423***

சிவமாந் தன்மையை எய்தினோரே மெய்ஞ் ஞானம் முற்றினவராவர். மனம் சமாதிநிலையில் அடங்கப் பெற்றவரே அட் டாங்கயோகம் முற்றினவராவர். ஒருநாளேனும் அர்ச்சனை தவறி யொழி யாதபடி செய்தவரே நுணுகியதான கிரியை முற்றினவராவர். நெடுந் தொலைவான நாட்டிலும் சென்று மூர்த்தி தலம் தீர்த்தங்களை முறைப்படி வணங்கினவரே தாம் ஏற்றுக்கொண்ட சரியை முற்றின வராவர்.

விளக்கவுரை

'தான்' என்றது பன்மை யொருமை மயக்கம்.
இதனால், 'சரியை முதலியவற்றில் நிற்பவர் அவற்றைக் கடைப்பிடியாகக் கொண்டு முதிர்தல் வேண்டும்' என்பது கூறப் பட்டது.

கிரியையோ கங்கள் கிளர்ஞான பூசை
அரிய சிவனுரு அமரும் அரூபம்
தெரியும் பருவத்துத் தேர்ந்திடும் பூசை
உரியன நேயத் துயர்பூசை யாமே. ***#1424***

கிரியை வழிபாட்டிலும், யோக வழி பாட்டிலும் சிவனது அருள் உருவம் நிற்கும். ஞானவழிபாட்டில் உருவம் அற்ற அருவ நிலை தோன்றும். இவ்வழிபாடுகள் சத்தி நிபாத நிலைக்கு ஏற்பக் குருவின் வழி நூல் நெறியாற் செய்யப்படுவன. இவ்வாறன்றி அன்பு காரணமாகத் தத்தமக்கு இயலும் வகையிற் செய்யப்படுவன இவற்றினும் உயர்ந்த வழிபாடாய் அமையும்.

விளக்கவுரை

நிரல் நிறையில் கிரியை, யோகம் இரண்டும் 'உரு' என வரும் ஒன்றனோடே இயைதற் பொருட்டு, 'கிரியை யோகங்கள்' எனத் தொகைப்படுத்து ஓதினார். 'உரு' என்பதன் ஈற்று முற்றியலுகரம் உயிர்வரச் சிறுபான்மை கெட்டது. இவை, பருவத்துத் தேர்ந்திடும் பூசை எனச் சுட்டுப் பெயர் வருவித்து முடிக்க. தேர்தல், கேட்டல் சிந்தித்தல்களால் மெல்ல உணர்தல். உரியன, இயலுந் திறம்பற்றிக் கொள்ளுதற்கு உரியன. இவை திருநீலகண்டத்துக் குயவனார். அதி பத்தர் முதலியோரால் கொள்ளப்பட்ட செயல்கள் போல்வன. இவை யெல்லாம் உலகத்தார்க்குச் சரியை போலவும், பொதுச் சிவபுண் ணியங்கள் போலவும் தோன்றுதலின், இவ்வதிகாரத்துட் கூறினார். 'நேயத்து உரியன' என மாற்றிக்கொள்க. எடுத்த எடுப்பில் இதன்கண் நெறிகள் பலவும் தொகுத்துக் கூறப்படுதலும் நோக்கத்தக்கது. இதனால், நூன்முறை வழிபாடு, அன்பு முறைவழிபாடு' என வழிபாடு இருவகைத்தாதல் உணர்த்தப்பட்டது. இவற்றை முறையே, 'விதி

மார்க்கம், பத்தி மார்க்கம்' என்பர்.

சரியாதி நான்கும் தகும்ஞான நான்கும்
விரிவான வேதாந்த சித்தாந்தம் ஆறும்
பொருளானது நந்தி பொன்னகர் போந்து
மருளாகு மாந்தர் வணங்கவைத் தானே. ***#1425***

'சரியை, கிரியை, யோகம், ஞானம்' என்னும் நான்கு நெறிகளும், அவற்றில் முடிவாக உள்ள தகுதி பெற்ற ஞானம் ஒன்றிலே 'ஞானத்திற் சரியை' முதலிய நான்கும் விரிந்துள்ள இவையே வேதத்தின் தெளிவாய் அமைந்த சிவாகம நெறி. அரனையே பொருளாகின்ற நிலையைச் சிவபெருமான், அறியாமை யுடைய மக்கள் அதனினும் நீங்கித் தனது ஒளி யுலகத்தை யடைந்து தன்னை வணங்கி வாழ்தற் பொருட்டு' வைத்துள்ளான்.

விளக்கவுரை

'அதனால், இவையே வீட்டு நெறிகளாம்' என்பது கருத்து. ஏனை வேத நெறிகள் இம்மை, மறுமை என்னும் உலக நெறிகளாம் என்க. 'சித்தாந்தம்' என்பது இங்குச் சிவாகமத்திற்குப் பெயராய், அது பற்றிக் கொள்ளப்படும் நெறிகளைக் குறித்தது. அந்நெறிகள் ஆறாவன, 'பாடாண வாத சைவம், பேதவாத சைவம், சிவ சமவாத சைவம், சிவ சங்கிராந்தவாத சைவம், ஈசுர அவிகாரவாத சைவம், நிமித்த காரண பரிணாமவாத சைவம்' என்னும் அகச் சமயங்கள், இவற்றுள், இறுதியில் உள்ளது 'சிவாத்துவித சைவம்' எனவும் படும். ஐக்கியவாத சைவமும் சிவாகம நெறியே யாயினும். அது அவ் ஆகமங்கள் முதன்மையாகக் கூறும் ஆணவ மலத்தைக் கொள்ளாமை யால், வேதாந்தத் தெளிவாகாது. அகப்புறச் சமயங் களோடு கூட்டி எண்ணப்படுகின்றது. சிவலோகத்தை அடைந்து வாழும் வாழ்வுகள் யாவும் பதமுத்திகளே. அகச் சமயங்கட்குப் பதமுத்திகளே பயன் என்றதனால், பரமுத்தி சித்தாந்த சைவத்தினன்றி எய்தலாகாமை அறியப் படும். இதனால், 'சரியை முதலியவைகளே வீட்டு நெறிகள் என்பது வலியுறுத்தப்பட்டது.

சமையம் பலசுத்தி தன்செயல் அற்றிடும்
அமையும் விசேடம் அரன்மந் திரசுத்தி
சமையுநிரு வாணங் கலாசுத்தி யாகும்
அமைமன்னு ஞானமார்க் கம்அபி டேகமே. ***#1426***

வீட்டு நெறிளாகிய சரியை முதலியவைகளில் நிற்க விரும்புவோர், ஆசிரியரை அடைந்து தீக்கை பெற்று நின்ற வழியே அவை உண்மைச் சரியை முதலியனவாய்ப் பயன்தரும். அத்தீக்கை, 'சமயம், விசேடம், நிருவாணம், அபிடேகம்' என நான்கு வகைப்படும்.

சமய தீக்கை தூல உடம்பைப் பல வகையில் தூய்மைப் படுத்து வதாகும். அதன் பயனாக, மாணவன், இது காறும் எல்லாச் செயல் களையும் தன்னால் ஆகின்றனவாகவேயாக மயங்கியிருந்த மயக்கம் நீங்குமாறு. 'எல்லாம் அவன் செயல் (சிவன் செயல்)' ஆதலை உணரும் வாய்ப்பினைப் பெறுவான். அதனை அடுத்துச் செய்யப்படும் விசேட தீக்கை சிவமந்திரங்களைப் பீசங்களோடு கூட்டி உபதேசித்து, அதனால் பெரும்பயன் அடையச் செய்வதாகும். சாந்தத்தை உடைய நிருவாண தீக்கை, 'நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தி யாதீதை' என்னும் கலைகள் ஐந்தில் ஏனைய பொருட் பிரபஞ்சம், சொற்பிரபஞ்சங்களாய் அடங்கியுள்ள அத்துவாக்களிடமாக நிற்கும் சஞ்சித கன்மங்களை ஆகுதிகளால் அழித்து, மாணவனது ஆன்மாவை நின்மலம் (மாசற்றது) ஆக்குவதாம். அதற்குமேல் உள்ள அபிடேகம்' ஆசிரியராய் விளங்கிப் பிறர்க்கும் தீக்கை செய்தற்கு உரிய பெரிய ஞானத் தகுதியுடையவர்க்கு அவ் ஆசிரியத்தன்மையை அபிடேகம் செய்து அளிப்பது.

விளக்கவுரை

சமய தீக்கை பெற்றவன், 'சமயி' எனப் பட்டுச் சரியையில் நிற்றற்கு உரியன், 'இந்நிலையில் கணிக்கப்படும் மந்திரங்கள் நிர்ப்பீசம்' என்னும் கொள்கை பற்றி இதனை நாயனார் 'மந்திரசுத்தி' என்னாராயினார். எனினும், இங்கும் மந்திரங்களைச் சபீசமாகச் சொல்லும் வழக்கமும் காணப்படுகிறது. விசேட தீக்கையில் மந்திரங்கள் சபீஜமாகச் சொல்லும் அதிகாரத்தைத் தந்து, கிரியையிலும் யோகத்திலும் நிற்பித்தலால் இதனையே 'மந்திர சுத்தி' என்றார். மந்திரம் ஆறத்துவாக்களில் ஓரத்துவாவேயாம். நிருவாண தீக்கையில் மட்டுமே ஏனை ஐந்தத்துவாக்களையும் அடக்கியுள்ள கலைகளைச் சுத்தி செய்து சஞ்சித கன்மம் துடைக்கப்படுதலால், அதனையே 'கலா சுத்தி' என்றார். நிர்ப்பீசம் - பீசாக்கரங்களோடு கூடாதது - சபீசம் - பீசாக்கரத்தோடு கூடியது. 'சமயம், விசேடம், நிருவாணம்' என்னும் மூன்றிலும் 'நிர்ப்பீசம், சபீசம்' என்னும் இரண்டும் உள என்றலும், சமயம் நிர்ப்பீசமே; ஏனைய இரண்டும் சபீசமே, என்றலும் ஆகிய இருவேறு கொள்கைகளும் ஆகமங்களில் உள என்பர். 'சபீச தீக்கை உயர்ந்தோர்க்கே செய்யப்படும்' என்பது ஒரு படித்தான கொள்கை யாகையால், 'விசேடமும், நிருவாணமும் சபீசமே' என்னும் கொள்கை யில் 'அவ் இரு தீக்கையும் உயர்ந்தோர்க்கே செய்யப்படுவன' என்பது விதியாய் அமையும். 'அமை மன்னும்' என்பதற்கு. 'அமைந்து நிலைபெறும்' எனப் பொருள் உரைக்க. இதனால், சரியை முதலியவற்றைக் கூற எடுத்துக் கொண்ட நிலையில் அவற்றிற்கு உரிமையைத் தரும் தீக்கை வகைகள் இம்முதல் அதிகாரத்தில் சொல்லப்பட்டன.

*7.6.*கிரியை

பத்துத் திசையும் பரம்ஒரு தெய்வமுண்டு
எத்திக் கினில்இல்லை என்பது இனமலர்க்
கொத்துத் திருவடி நீழல் சரண்எனத்
தத்தும் வினைக்கடல் சாராது காணுமே.

கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுறு மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே. *#1427*

எல்லாத் தெய்வங்கட்கும் மேலான ஒரு தெய்வ மாகிய சிவபிரான் பத்துத் திசைகளிலும் நிறைந்திருக்கின்றான். அவனை எந்தத் திசையில் 'இல்லை' என்று கூறமுடியும்! ஆதலால், பலவகை மலர்க் கூட்டத்தைக் கொண்டு அவனது திருவடியையே புகலிடமாகக் கருதி வழி பட்டால், பொங்கிப் புரண்டு வருகின்ற வினையாகிய கடல் வந்து மோத மாட்டாது ஒழியும்.

விளக்கவுரை

'ஆதலின், அதனைச் செய்க, என்பது குறிப்பெச்சம். இரண்டாம் அடியில், 'எத்திக் கினிலில்லை' என்பதைப் பிறவாறு ஓதுவன பாடமாகா என அறிந்து கொள்க. 'கொத்தோடு' என மூன்றாவது விரிக்க.
இதனால், 'கிரியையாவது சிவபெருமானை மலர்தூவி வழி பகுதலேயாம்' என்பது கூறப்பட்டது.
இதன் பின் பதிப்புக்களில் உள்ள 'கானுறு கோடி' என்னும் மந்திரம் பின்னர் ஏழாம் தந்திரத்தில் 'குருபூஜை' அதிகாரத்தில் வருவது.

கோனக்கன் றாய குரைகழல் ஏத்துமின்
ஞானக்கன் றாய நடுவே உழிதரும்
வானக்கன் றாகிய வானவர் கைதொழும்
ஆனைக்கன் றீசன் அருள்வெள்ள மாமே. *#1428*

தலைவனாகிய சிவபெருமானது நடனம் புரிகின்ற திருவடிகளைத் துதியுங்கள். ஏனெனில், 'ஞானக்கன்றுகளின் கூட்டம்' எனத் தக்க அடியார் கூட்டத்தின் நடுவே திரிந்துகொண்டிருப்பவனும், வானத்தில் வாழும் பசுக்கன்றுகளாகிய தேவர்களால் தொழப் படுபவனும் ஆகிய சிறப்பால் யானையை ஒத்த அடியவனுக்கே மறுமையில் சிவனது திருவருட் பெருக்கு உளதாகும்.

விளக்கவுரை

'கோன் நக்கன் தாய குரை கழல்' எனவும் 'ஞானக் கன்று ஆய நடுவே'

எனவும், 'ஆனைக்கு அன்று' எனவும் கண்ணழித்து உரைக்க, 'உழிதரும், கைதொழும்' என்னும் பெயரெச்சங்கள் அடுக்கி, 'ஆனை' என்னும் ஒருபெயர் கொண்டன. 'ஆனைக்கே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தல் பெற்றது. 'அருள் பள்ளமாமே' எனவும் பாடம் ஓதுவர். 'வள்ளமாமே' என்பது பாடமன்று.
இதனால், கிரியையுள் தோத்திரம் சிறந்ததோர் உறுப்பாதல் கூறப்பட்டது. 'பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி' *1* என்றார் நாவுக்கரசரும்.

இதுபணிந் தெண்டிசை மண்டல மெல்லாம்
அதுபணி செய்கின் றவள்ஒரு கூறன்
எதுபணி மானுடர் செய்பணி? ஈசன்
பதிபணி செய்வது பத்திமை யாமே. ***#1429***

உலகங்கள் அனைத்தையும் செயற்படுத்தலாகிய அச்செயலைச் செய்பவளாகிய அம்மையும் அதனைச் செய்தல் அவளை ஒரு கூற்றிலே உடைய சிவனிடத்து இக்கிரியைத் தொண்டைச் செய்தேயாம். அங்ஙனமாயின், 'மக்கள் செய்யத் தக்க பணி' யாது என்பார்க்கு, பதியாகிய அவனிடத்துச் செய்யுங் கிரியையே' என்பது கூற வேண்டுமே! இனி, 'பத்திமை' எனக் கூறப்படுவது இக்கிரியையேயாம்.

விளக்கவுரை

'பணிந்த' என்பது, 'பணியைச் செய்து' என இருசொல் நிலைமைத்தாய் நின்றது. 'எண்டிசை மண்டலம் எல்லாம் செய் கின்றவள் அது பணி அவளொடு கூறன்பால் இது பணிந்து' எனக் கூட்டியுரைக்க. அம்மையும் இறைவனை வழிபட்டு வரம்பெற்றமை பல இடங்களில் வெளிப்படை. 'கூறன்' என்பதில் ஏழாவது இறுதிக் கண்தொக்கது. மூன்றாம் அடியிலும் 'இது பணி' என ஓதுதல் பாட மாகாது. 'பதியாகிய ஈசன் பணி' எனக் கூட்டுக. 'இது செய்வதே பத்திமை' என வேறு தொடராக்கியுரைக்க. சரியை முதலிய நான்கனுள் முன்னிரண்டும் 'பத்திச் செயல்கள்' எனவும், பின்னிரண்டும், 'ஞானச் செயல்கள்' எனவும் பொதுவாக வழங்கப்படுமாறு அறிக. இது வருகின்ற திருமந்திரத்தாலும் பெறப்படும். இதனால், கிரியையது சிறப்புக் கூறப்பட்டது.

பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச்
சுத்த அருளால் துரிசற்ற யோகத்தில்
உய்த்த நெறியுற் றுணர்கின்ற ஞானத்தால்
சித்தம் குருவரு ளால்சிவ மாகுமே. ***#1430***

பத்தியை வேண்டுபவன், முன்னே சரியை கிரியை களிற் பழகிப் பின்பு சத்திநிபாத முதிர்வால் குற்றம் அற்ற சிவயோகத் தில் மனத்தை செலுத்தும் வழியிலே பொருந்தி, அதனால், முதிர்ந்து வருகின்ற

ஞானத்தால் குருவருள் வாய்க்கப் பெற்றுப் பின்பு அவ்வருளானே சிவத்தை அடைந்து சிவமேயாவான்.

விளக்கவுரை

அதிகார இயைபுபற்றி, கிரியை முற்கூறப்பட்டது 'சுத்தம்' என்றது பிறவற்றைக் கீழ்ப்படுத்துத் தான்மிக்குத் தோன்று தலை. அடயோகம் முதலியவற்றால் மலம் நீங்காமையின் அது நீங்குத லாகிய சிவயோகத்தை, 'துரிசற்ற யோகம்' என்றார். உய்த்தலுக்குச் செயப்படுபொருள் வருவிக்க. 'சித்தம்' என்றது அறிவை 'குரு வருளால்'என்ற அனுவாதத்தால், குருவருள் ஆதலும் பெறப் பட்டது. 'சரியை கிரியைகளாகிய பத்தி நெறியில் நின்றோன் பின்பு யோக ஞானங்களாகிய ஞான நெறியைத் தலைப்பட்டுப் பின் அது வழியாகச் சிவமாம் தன்மைப் பெருவாழ்வு எய்துவன்' என்றவாறு.

இதனால், மேற் கூறிய பத்தி நெறி, ஞானம் வாயிலாக வீட்டைத் தருதல் கூறப்பட்டது.

அன்பின் உருகுவன் ஆளும் பணிசெய்வன்
செம்பொன்செய் மேனி கமலத் திருவடி
முன்புநின் றாங்கே மொழிவ ணொனக்கருள்
என்பினுட் சோதி இலிங்கம்நின் றானே. ***#1431***

செம்பொன்போலும் திருமேனியும், அதனுட் சிறப்பாகக் குறிக்கத் தக்க தாமரை மலர்போலும் திருவடிகளும் என் கண்முன் தோன்றினாற்போல, என் உடம்பகத்து இருதய கமலத்தில் ஒளியாய் விளங்குகின்ற சிவன், புறத்தில் இலிங்க மூர்த்தியிடமாக எனக்கு விளங்கிநிற்கின்றான். அதனால், அடியேன் அவன்மேல் வைத்த அன்பினால் மனம் நெகிழ்ந்து உருகுகின்றேன்; அவன் இடும் பணிகளைச் செய்கின்றேன்; எல்லாம் செய்து அவனை வேண்டுவது அவனது அருள் ஒன்றையே.

விளக்கவுரை

'மொழிவது எனக்கருள்' என்பதை முதலடியின் இறுதி யிற் கூட்டி அஃது ஈறாக அனைத்தையும் ஈற்றில் வைத்து உரைக்க. 'செய்' உவம உருபு. 'இலிங்கு நின்றானே. இலங்குகின்றானே' என்பன பாடமல்ல. இடும்பணி, ஆகமத்தின் வழியாகப் பணித்த பணிகள். மோனை நயம் கருதாது, 'நாளும் பணி செய்வன்' என்றலுமாம். இரண்டாம் அடி இன எதுகை.

இதனால், இலிங்க மூர்த்தியில் சிவனை முடிமுதல் அடிகாறும் தோன்ற வெளிநிற்கப் பாவித்து வழிபடுதலே கிரியையாதலும், அது பயன் கருதாது அன்பே காரணமாகச் செய்யப்பட்ட வழியே உண்மை யாதலும் கூறப்பட்டன, 'என்பினுட் சோதி இலிங்கம் நின்றான்' என்பதனால்,

கிரியையாளன் அவ்வாறு அகத்தும் புறத்தும் வழிபடல் வேண்டும் என்பதும் கூறியதாயிற்று.

7.7.யோகம்

நெறிவழி யேசென்று நேர்மையுள் ஒன்றித்
தறிஇருந் தாற்போலத் தம்மை இருத்திச்
சொறியினும் தாக்கினும் துண்ணென் றுணராக்
குறிஅறி வாளர்க்குக் கூடலு மாமே. *#1432*

வளி நிலை (பிராணாயாம) முறைப்படியே மூலாதார முதலிய ஆறு ஆதாரங்களிலும் உணர்வாய் ஏறிச்சென்று இறுதியில் சிவனது அருவத் திருமேனியில் நிலைத்து நின்று, ஊன்றி நிறுத்தப்பட்ட தூண்போலும்படி தமது உடலை நேராக நிமிர்த்துச் சிறிதும் அசைவற நிறுத்தி, அதனைப் பிறர் கீறினாலும், தாக்கினாலும் அவற்றால் உணர்வு பிறழ்ந்து விரைய அவரை நோக்குதல் இல்லாது, தியானப்பொருள் ஒன்றையே உணர்ந்திருக்க வல்ல மாயோகிகட்கே அந்தத் தியானப் பொருளாகிய சிவனை அடைதல் கூடும்.

விளக்கவுரை

நேர்மை - நுண்மை. அஃது அருவத்தை யுணர்த்திற்று. 'தாம்' ஆகுபெயர். 'இவ்வாறிருப்பார் யோகிகளே' என்பது வெளிப்படையாதலின், 'யோகியர்' என்பதனை எடுத்தோதாதே போயினார்.
இதனால், 'யோகத்தினது இயல்பு இது' என்பது கூறப்பட்டது.

ஊழிதொ றூழி யுணர்ந்தவர்க் கல்லது
ஊழிதொ றூழி உணரவுந் தானொட்டான்
ஆழி அமரும் அரிஅயன் என்றுளார்
ஊழி முயன்றும்ஓர் உச்சியு ளானே. *#1433*

யோகப் பயிற்சியால், பல ஊழிகள் செல்லவும் எடுத்த உடம்பு நீங்காது நிற்க, அதன்கண் நின்று அவ்வூழிகளைக் காண வல்லவர்க்கல்லது, ஊழிகள்தோறும் காரணக் கடவுளர்களது தொழிலிற்பட்டுப் பிறந்து இறந்து உழல்பவர்கட்கு அப்பிறப்புக்களில் பல்லூழிகள் சென்றாலும் அவர் தன்னை உணர நில்லான் சிவன். பாற் கடலில் பள்ளி கொள்பவனாகிய மாயோனும், பிரமனும்' என்று சொல்லப்பட்ட தலைமைத் தேவர்களே பல்லூழிக்காலம் தேடியும் காணவராமல் அவர்களது ஆற்றலுக்கு அப்பாற்பட்டு அவன் நின்றதே அதற்குச் சான்று.

விளக்கவுரை

'உச்சி' என்றது, மேல் உள்ள இடத்தை.
இதனால், இறைவன் 'சரியை, கிரியை' என்பவற்றிற் போலன்றி

யோகத்தில் வெளிப்பட்டு விளங்குதல் கூறப்பட்டது.

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணரவல் லார்கட்கு
நாவி அணைந்த நடுதறி ஆமே. *#1434*

பூ மலர்தற்குமுன் அதன் மணம் அதனுள் அடங்கி யிருத்தல் போல, உயிர் பக்குவப்படுதற்கு முன் அதன் அறிவுக்கு அறிவாய் அதனுள்ளே தோன்றாதிருந்த சிவம், பக்குவத்தால் உள்ளமும், உடலும், எழுதப்பட்ட ஓவியம் போல அசைவற்று நிற்கப் பெற்ற யோக உணர்வினர்க்கு வெளிப்பட்டு விளங்கும். அப்பொழுது அவர்களது உள்ளமும், உடலும் புனுகு பூனையால் கூடப்பட்ட மூங்கில் தறி அதன் மதநீரால் மணம்பெற்றுத் திகழ்ந்தது போலச் சிவமணம்கமழப் பெற்றுச் சிவதனுவும், சிவகரணமுமாய் விளங்கும்.

விளக்கவுரை

'பூத்தது' என்பதனை மூன்றாம் அடியில் இறுதியிற் கூட்டி,அதன்பின், 'அதனால்' என்னும் சொல்லெச்சமும், 'ஆம்' என்பதற்கு வினைமுதலும் வருவித்து உரைக்க. புனுகு பூனையே, 'கத்தூரி மான்' எனப்படுகின்றது. இதன் மதமே மிக்க நறுமணம் கமழ்வதாகிய கத்தூரி, கத்தூரியே 'மான் மதம்' என்றும், 'மிருக மதம்' என்றும் சொல்லப்படுவது.
இவ்விலங்கினிடமிருந்து இதன் மதத்தைக் கொள்ள வேண்டுவோர் இதனைக் கூட்டில் அடைத்து நல்லுணவு கொடுத்து, இதற்கு இன்ப வேட்கை மிகும்படி செய்வர். அதுபொழுது இஃது அக்கூட்டினுள் முன்பே பொருத்தப்பட்டுள்ள மூங்கிற் குழாயை அணைந்து தனது மதத்தை வெளிப்படுத்த, அதனை அம்மக்கள் எடுத்துக்கொள்வர். அம்மதம் உள்ள பொழுதும், எடுக்கப்பட்ட பின்பும் அம் மூங்கிற் குழாய் தன்னுள்ளே அம்மணம் கமழப் பெறுவதாயே இருக்கும். அதனையே, 'நாவி அணைந்த நடு தறியாமே' என உவமித்தார். ஆக்கம், உவமை குறித்து நின்றது.
'நாவியின்கண் - போதுறு மதம் விடுத்துப்
புன்மலங் கொள்ளு மாபோல்' *1*
என்ற சிவப்பிரகாசர் மொழியிலும் இம் மான்மதம் குறிப்பிடப்படுதல் காணலாம்.
இதனால், மேற்கூறிய சிவ விளக்கம் உவமையில் வைத்து இனிது விளக்கப்பட்டது.

உய்ந்தனம் என்பீர் உறுபொருள் காண்கிலீர்
கந்த மலரிற் கலக்கின்ற நந்தியைச்
சிந்தை உறவே தெளிந்திருள் நீங்கினால்

முந்தைப் பிறவி மூலவித் தாழுமே. ***#1435***

உலகீர்! நீவீர், உய்திக்குக் காரணமாய்ப் பொருந்தியுள்ள பொருளை அறியவில்லை. ஆயினும், 'யாம் உய்ந்தோம், உய்ந்தோம்' என்று மயங்கி உரைக்கின்றீர். மலரில் மணம்போல உம்மிடத்து உள்நின்று தோன்றக்கூடிய சிவனை, யோக நெறியால் உள்ளத்தில் பொருந்தக்கண்டு, அதனால் உம் மயக்கம் நீங்கப் பெற்றால், தொன்று தொட்டு வருகின்ற பிறவிக்கு மூல காரணமாய் உள்ள ஆணவ மலம், கீழ்ப்பட்டு அடங்கிவிடும்.

விளக்கவுரை

'உறுபொருள் காண்கிலீர், உய்ந்தமை என்பீர்' எனவும், 'மலரிற் கந்தம்' எனவும் மாற்றியுரைக்க. 'யோக நெறியால்' என்பது அதிகாரத்தால் வந்தது. ஆணவம் ஆழ்தலாவது தனது சத்தி மடங்கிக் கிடத்தல். மூலவித்தாமே, மூலவித்தாகுமே' என்பன பாடம் அல்ல.
இதனால், யோகத்தால் ஆணவ சத்தி மெலிவடைதல் கூறப்பட்டது.

எழுத்தொடு பாடலும் எண்ணெண் கலையும்
பழித்தலைப் பாசப் பிறவியை நீக்கா
அழித்தலைச் சோமனோ டங்கி அருக்கன்
வழித்தலைச் செய்யும் வகைஉணர்ந் தேனே. ***#1436***

இயல்நூற் கல்வி, பாடல்களை ஓதுதல், மற்றும் அறுபத்து நான்கு கலைகளையும் பயிலல் இவையெல்லாம் இகழ்ச்சிக் குரிய பாசத்தால் விளையும் பிறவியை நீக்கமாட்டா. அதனால், நான் அப்பிறவியை அழிக்கும் முறையை. 'சந்திர கலை, சூரிய கலை, அக்கினி கலை' எனப் பெயர்பெறும் மூச்சின் இயக்கங்களை நெறிப்படச் செய்யும் வகையால் அறிந்து கொண்டேன்.

விளக்கவுரை

பழித்தலைப் பாசம் - பழியின்கண் நிற்கும் பாசம். 'பிறவியும் நீங்கா' என்பது பாடம் அன்று. 'அழித்தலை உணர்ந்தேன்' என இயையும். இதற்குமுன், 'அதனை' என்பது வருவிக்க. 'இடை, பிங்கலை, சுழுமுனை' என்னும் நாடிவழி இயங்கும் பிராணன் 'சந்திர கலை' முதலிய பெயர்களைப் பெறுதல் அறிக. 'வழித்தலை' என்பதன்பின், 'பட' என்பது எஞ்சி நின்றது. 'வகையால்' என உருபு விரிக்க. நூலறிவு ஒன்றே பிறவியை நீக்கமாட்டாது; அதற்கு யோக முயற்சி வேண்டும்' என்றதாம்.
இதனால், யோகம் பிறவி நீக்கத்திற்கு வழியாதல் கூறப்பட்டது.

விரும்பிநின் றேசெயின் மெய்த்தவ னாகும்
விரும்பிநின் றேசெயின் மெய்யுணர் வாகும்
விரும்பிநின் றேசெயின் மெய்த்தவ மாகும்

விரும்பிநின் றேசெயின் விண்ணவ னாகுமே. *#1437*

யோகத்தைத் தியானப் பொருளிடத்து வைக்கும் பேரன்புடன் செய்த வழியே அதனால் விளையத்தக்க பயன்கள் யாவும் விளையும்.

விளக்கவுரை

'இல்லையேல், ஒரு பயனும் விளையாது' என்பதாம். நான்கிடத்தும், 'செயினே' என ஏகாரத்தை மாற்றியுரைக்க. மெய்த் தவன் - மெய்ப்பொருளைத் தலைப்பட்டு அதுவானவன். இது, 'மெய்' என்னும் பெயரடியாகப் பிறந்த வினைப்பெயர். இதன்பின், 'ஆகும்' என்ற செய்யுமென் முற்று. உயர்திணை ஆண்பாலில் வந்தது. ஈற்றில் வருவதும் அன்னது. இடை நின்ற இரண்டும் 'உண்டாகும்' என்னும் பொருளன. விண் - சிவலோகம். 'மெய்த்தவனாகும்' முதலிய நான்கும் சிறப்புடைப் பொருளை முற்படக் கிளக்கும் முறையிற் கூறப் பட்டன. முதலடியில் 'மெய்த்தவராகும்' என்பது பாடமன்று. இரண்டாம் அடியில் 'மெய்யுரையாகும்' எனப்பாடம் ஓதி, 'குருமொழி கிடைக்கும்' எனவும் பொருளுரைப்பர்.

இதனால், 'யோகம் பயன் தருதலும் அன்புள்ள வழியே' என்பது கூறப்பட்டது.

பேணிற் பிறவா உலகருள் செய்திடும்
காணில் தனது கலவியு ளேநிற்கும்.
நாணில் நரக நெறிக்கே வழிசெயும்
ஊனிற் சுடும்அங்கி உத்தமன் றானே. *#1438*

உடம்பினுள் நின்று வெப்பத்தைத் தருகின்ற மூலாக் கினியாய் உள்ள சிவன், அவ்வக்கினியை அணையாது ஓம்பி நின்றால் வீட்டுலகத்தை அளித்தருள்வான். அவ்வக்கினியை எழுப்பிக் காணும் அளவில் நின்றால், அங்ஙனம் நிற்கும் யோகிக்கு அவன் உறவான பொருளாய்ப் பல நலங்களைச் செய்தருள்வான். இவ் இரண்டும் இன்றி, உலகரது பழிப்பு நோக்கி அந்நெறியிற் செல்ல ஒருவன் கூசுவனாயின், அவன் நரகத்தை நோக்கிப் போகும் வழிக்கே வகையைச் சிவன் உண்டாக்குவான்.

விளக்கவுரை

'ஆதலின், மூலாக்கினியை எழுப்பிப் பயனடையும் விருப்பமும், ஆற்றலும் உடையோர் உலகரது இகழ்தல் புகழ்தல்களை நோக்காது, அதன்கண் முயல்க' என்பது குறிப்பெச்சம். 'கலவியுள்' என்பதில், 'உள்' என்பது ஏழனுருபு. ஈற்றடி இனவெதுகை பெற்றது.

இதனால், யோகத்திற்குத் தகுதியுடையோர் தப்பாது அதன் கண் முயலல் வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

ஒத்தசெங் கோலார் உலப்பிலி மாதவர்
எத்தனை ஆயிரர் வீழ்ந்தனர் எண்ணிலி
சித்தர்கள் தேவர்கள் மூவர் பெருமையாய்
அத்தன் இவனென்றே அன்புறு வார்களே. *#1439*

யோகத்தில் விருப்பங்கொண்டு, மேற்கூறியவாறு மூலாக்கினியை ஓம்பி நின்றவனைத் தனது பூத உடலை விட்டுப் போவதற்குள், நீதிக்கு ஒத்த செங்கோல் அரசராயும், அமர முனிவ ராயும் உள்ளோர் எத்தனை ஆயிரவர் இறந்தார்கள்! எண்ணில்லாதவர் இறந்தார்கள். அதனால், சித்தர், தேவர், மும்மூர்த்திகள் ஆகியோரும் மேற்கூறிய யோகியை, 'இவனே சிவன்' என்று பெருமையாகப் பேசி, அவனிடத்து அன்புடையராவர்.

விளக்கவுரை

'விரும்பி நின்றே செயின்' எனவும் பேணின் எனவும், மேற்போந்த அதிகாரம் அறாது வருதலின், இம்மந்திரமும் அவனது சிறப்புக்கூறுவதேயாய், 'இவன்' எனப்பட்டவனும் அவனேயாயினான் என்க. 'தேவ இருடியர், முனிவர்' என்பார், 'உலப்பிலி மாதவர்' என்றார். அவர் அவ் இருடியரும், முனிவரும் ஆயது முன்னைப்பசு புண்ணியத்தால் ஆதலின், அப்புண்ணியந் தீர்ந்தவழி அவரும் அப்பதவியின் நீங்குதல் பற்றி, அவரையும் வீழ்வாருள் ஒரு சாராராக ஓதினார். இங்குக் கூறும் யோகம் சிவயோகமாதலின், இவன் இறவாது வீட்டுலகம் புகுவன் என்க. 'எண்ணிலி, உலப்பிலி' என்பவற்றை ஓர் எண்ணுப் பெயர்போலவும் வைத்து ஓதுவார் இந்நாயனார். இதனால், சிவனிடத்துச் செய்யும் அன்போடு கூடிய யோகத்தை உடையவனது பெருமை கூறப்பட்டது.

யோகிக் கியோகாதி மூன்றுள தொண்டுற்றோற்
காகத் தகுங்கிரியை ஆதி சரியையாம்
தாகத்தை விட்ட சரியைஒன் றாம் ஒன்றுள்
ஆகித்தன் பத்தியுள் அன்புவைத் தேனே. *#1440*

யோக நெறியில் நிற்பவனுக்கு, 'யோகம், கிரியை, சரியை' என்னும் மூன்றும் செய்ய உரிமை உண்டு. கிரியை நெறியில் நிற்பவனுக்கு, 'கிரியை, சரியை' என்னும் இரண்டும் செய்ய உரிமை உண்டு. உலகியல் அவாவை விட்டுச் சரியையில் நிற்பவனுக்கு அஃது ஒன்றற்குமட்டுமே உரிமை உண்டு. அங்ஙனமாயினும் எந்த ஒன்றில் அன்புடையவனாயினும் அவனது அன்பை நான் விரும்புகின்றேன்.

விளக்கவுரை

'சரியை முதலியவற்றுள் எந்த ஒன்றில் நின்றோரும் பின்னர் உலகியலில்

வீழாது வீடு பெறுதல் உறுதி' என்பதாம். இம் மந்திரத்துள் திரிவுபட்ட பாடங்கள் பற்றி இடர்ப்பட்டுப் பொரு ளுரைப்பர். ஆதிசரியை - முதற்படியாகிய சரியை. மூன்றாம் அடியில் 'சரியையில் ஒன்றேயாம்' என விரிக்க. ஈற்றடியில் 'ஆகி' என்பது பெயர். அதன்பின் ஒற்றுமிக்கது செய்யுள் விகாரம்.

'... ... ... ஞானி நாலினுக்கும் உரியன்;
ஊனமிலா யோகமுதல் மூன்றினுக்கும் உரியன்
யோகி; கிரியா வான்தான் ஒண்கிரியை யாதி
ஆனஇரண் டினுக்குரியன்; சரியையினில் நின்றோன்
அச்சரியைக் கேயுரியன்' *1*

எனச் சிவஞான சித்தியிலும் இவ்வாறே கூறப்படுதல் காண்க. இதனால், யோகி, 'சரியை, கிரியை' என்னும் இரண்டில் நிற்பாரின் உயர்ந்தவனாதல் கூறப்பட்டது. அங்ஙனமாயினும் 'அவை பசு புண்ணியங்கள் போல மலத்தின் வழிப்பட்டன ஆகா' என்றற்கு. 'ஒன்றுள் ஆகித்தன் பத்தியுள் அன்புவைத்தேனே' என்றருளிச் செய்தார்.

யோகச் சமயமே யோகம் பலஉன்னல்
யோக விசேடமே அட்டாங்க யோகமாம்
யோகநிர் வாணமே உற்ற பரோதயம்
யோகாபி டேகமே ஒண்சித்தி உற்றலே. ***#1441***

யோக நூல் பற்றி யோக வகைகள் பலவற்றையும் உணர்தல் 'யோகத்தில் சரியை' எனப்படும். இயமம் நியமம் முதலிய எட்டுநிலைகளிலும் நிற்றல் 'யோகத்தில் கிரியை' எனப்படும். உள்ளொளிக் காட்சி கிடைக்கப் பெற்று நிற்றல். 'யோகத்தில் யோகம்' எனப்படும். மூன்றாம் தந்திரத்தில் 'பரசித்தி' எனக் கூறப்பட்ட அவற்றைப் பெறுதல் 'யோகத்தில் ஞானம்' எனப்படும்.

விளக்கவுரை

சரியை முதலியவற்றை அவற்றிற்குரிய தீக்கைப் பெயர் களாற் கூறினார், 'யோக நிலையில் அவ் அவ்யோகப் பகுதிகளே அவ்வத் தீக்கைகளாயும் அமையும்' என்றற்கு நிர்வாண தீக்கை ஞான தீக்கையாயினும் சாதகருக்கு ஞானத்தை முதிர்விக்கப் பிராசாத யோகம் உண்மை பற்றி யோகப் பகுதியாகக் கூறினார். அதற்கேற்ப ஞானத்தின் மிக்க ஆசாரிய நிலையையே 'ஞானம்' என்றார், வருகின்ற அதிகாரத்து இறுதியிலும் இவ்வாறே கூறுதல் காணத்தக்கது. யோகத்தில் சரியை முதலியன பிறவாறுகூறப்படினும், 'இவ்வாறு கூறுதலும் உண்டு' என்பது இதனால் பெறப்படுகின்றது, 'உற்றல்' என்பதில் றகர ஒற்று விரித்தல்.

இதனால், யோகத்தின் படிநிலைகள் பல கூறப்பட்டன.

*7.8.*ஞானம்

ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே. *#1442*

ஞானத்திற்கும் மேலான ஓர் அறநெறி உலகத்தில் இல்லை. இருப்பதாகக் கருதும் சமயம் யாதேனும் உண்டாகுமானால், அது நல்ல சமயம் ஆகாது. ஞானத்தின் நீங்கிய எந்தச் சாதனங்களும் முடிநிலை முத்தியைத் தரமாட்டா. அதனால், ஞானத்திற் சிறந் தவர்களே மக்களுட் சிறந்தவராவர்.

விளக்கவுரை

மேற் சரியை முதலியவற்றின் சிறப்புக்களை இதுபோல மிக உயர்த்துக் கூறாமையால், 'அவையெல்லாம் ஞானம் வாயிலாக வீட்டிற்குச் சாதன மாதலல்லது நேரேசாதனமாவன அல்ல' என்பதும், 'ஞானம் ஒன்றே வீட்டிற்கு நேர்ச்சாதனம்' என்பதும் பெறப்பட்டது.

'ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம்
நல்லஆ கமம்சொல்ல, 'அல்லவாம்' என்னும்
ஊனத்தார் என்கடவர்! அஞ்ஞா னத்தால்
உறுவதுதான் பந்தம்; உயர் மெய்ஞ்ஞானந்தான்
ஆனத்தால் அதுபோவ தலர்கதிர்முன் இருள்போல்
அஞ்ஞானம் விடப் பந்தம் அறும்; முத்தி ஆகும்' *1*

எனச் சிவஞான சித்தியிலும் இவ்வாறே வலியுறுத்தி ஓதினமை காண்க. ஞானம் - மெய்யுணர்வு. அஃதாவது, 'பொருளல்லவற்றைப் பொருள் என்று உணராது' *2*மெய்ப்பொருளை உணர்தல். இது 'பதி, பசு, பாசம்' என்னும் முப்பொருள்களின் இயல்பை அளவைகளாலும், பொருந்துமாற்றானும் நன்கு சிந்தித்துத் தெளிதலே உளதாவதாம். இதனையே, வடமொழியில் 'தத்துவ ஞானம்' என்பர். இம்மெய்யுணர் வாவது சிவஞானமே என்பதையும் சித்தியார் மேற்குறித்த செய்யுளின் இறுதியில்,

'ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்;
இறைவனடி ஞானமே ஞானம் என்பர்'

எனக் கூறி முடித்தது. உண்டி சுருக்கல், கொல்லாமை, புலால் உண் ணாமை, ஐம்பொறி யடக்கல், உயிர்கள்மாட்டு இரக்கம் முதலிய பொது அறங்களும், நித்திய நைமித்திக கன்மங்களாகிய சிறப்பறங்களும் ஞானத்தை உணரும் பக்குவத்தை உண்டாக்குவன வன்றி, அவை தாமே ஞானமாய் நின்று வீட்டினைப் பயவா. ஆதலின், அவற்றையே 'ஞானம்'

என்றாயினும், 'ஞானத்தினும் மேம்பட்டன' என்றாயினும் கூறுவார் உளராயின், அவர் கூற்று அறியாமையின்பாற் பட்டதாகும் என்ப தனையே முதலிரண்டு அடிகளில் குறித்தார். அங்ஙனம் கூறுவோர் சமணரும் பௌத்தரும் ஆகிய அவைதிகரும், வைதிகருள் மீமாஞ்சகரும் ஆவர். ஆகவே, அவரது மதங்களை உளத்திற் கொண்டே இதனைக் கூறினார் என்க. அவருள் மீமாஞ் சகரையே மாணிக்கவாசகரும்,

'விரத மேபர மாக வேதியரும்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்' *1*

என்று அருளிச் செய்தார். இடை இரண்டு அடிகளில் வந்த மிகுதி,

'மிகுதியான் மிக்கவை செய்தாரை' *2*

என்பதிற்போலப் புறம்பாதலை உணர்த்திற்று.

இதனால், ஞானத்தது சிறப்புக் கூறப்பட்டது.

சத்தமும் சத்த மனமும் தகுமனம்
உய்த்த உணர்வும் உணர்த்தும் அகந்தையும்
சித்தம்என் றிம்மூன்றும் சிந்திக்கும் செய்கையும்
சத்தங் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே. ***#1443***

ஓசை முதலிய புலன் வகைகளும், அவற்றைப் பொறிகளின் வழிச்சென்று பற்றுகின்ற மனமும், பின்பு அம்மனம் பொதுப்படப்பற்றி ஐயுற்றதை ஒருதலையாகத் துணியும் புத்தியும், எவ்விடத்தும் எழுச்சியுற்று எவ்வுணர்வையும் உணரத் தூண்டுகின்ற அகங்காரமும். அம்மூன்றானும் பெற்ற தெளிவுணர்வைப் பதியக் கொண்டு பின்னும் நினைப்பதாகிய சித்தமும் என்னும் இவற்றினது இயல்பை நன்குணர்தலே ஓசை முதலிய ஐம்புலன்களையும் கடந்த ஞானிகள் பெற்ற ஞானமாகும்.

விளக்கவுரை

ஓசை முதலிய புலன்களே காரண நிலையில் தன் மாத்திரைகளாய் நின்று ஆகாயம் முதலிய பூதங்களைத் தோற்று வித்தலாலும், பின்னும் தன்மாத்திரையாய் ஐம்பூதங்களோடும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களுக்குத் துணையாய் நின்று அவை தத்தம் காரியங்களைச் செய்ய உதவுதலாலும், 'ஞானேந்திரியம், கன்மேந்திரியம், மாபூதம்' என்பவற்றையும் 'புலன்வகை' என அடக்கினார். எவ்விடத்தும் 'சத்தம்' என்றது, ஏனைப் பரிசம் முதலிய வற்றிற்கு உபலக்கணம். அஃது அதன் வகையை உணர்த்திற்று. ஆகவே, 'புலன் வகை' என்றதனால், 'பூதம் ஐந்து, தன்மாத்திரை ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து' ஆக இருபது கூறப் பட்டனவாம். இவற்றோடே மனம் முதலிய அந்தக் கரணங்கள் நான்கும் கூறப்பட்டமையால், சிவாகமங்களில் 'ஆன்ம தத்துவம்' என எண்ணப்படும் இருபத்து நான்கு தத்துவங்களும் கூறப்பட்டதாயிற்று.

சிறிது சிறிது வேறுபாட்டோடே இவை வைதிக சமயங்கள் எல்லா வற்றாலும் உணரப்பட்டன. ஆதலின், இவற்றது இயல்பை உணரும் ஞானத்தையே தத்துவஞானமாக ஓதினார். 'சுவைஒளி ஊறோசை' என்னும் திருக்குறளையும் நோக்குக. வைதிக சமயங்களின்வழியும், அவற்றிற்கு ஒத்த அளவில் சைவாகமங்களின் வழியும் இவற்றின் இயல்பை உணர்ந்த பின்பு, சைவாகமம் பற்றியே சிறப்பாக உணரத் தக்க வித்தியா தத்துவ சிவ தத்துவங்களின் இயல்பை விரைய உணர்வர் என்பது கருத்து. வித்தியா தத்துவம், 'காலம், நியதி' கலை, வித்தை, அராகம், புருடன், மாயை' என ஏழு. சிவதத்துவம், 'சுத்த வித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம்' என ஐந்து, ஆக, 'தத்துவம் முப்பத்தாறு' என்பது சைவாகமங்களின் முடிபு. இவற்றின் இயல்பெல்லாம் அவ் ஆகமங்களிலும், அவற்றை முதலாகக் கொண்டெழுந்த பிரகரணங்களிலும், மெய்கண்ட சாத்திரம் முதலிய சித்தாந்த நூல்களிலும் காணப்படுகின்றன.

சிவ தத்துவம் ஐந்தும் ஏனைத் தத்துவங்களை இயக்கிநிற்கும் முறையால் ஆன்மாவிற்கு உதவுவன அன்றி, அவை ஏனைத் தத்துவங்கள்போல் ஆன்மாவிற்குநேரே உடம்பாய்ப்பொருந்தி நின்று உதவுவன அல்ல. வித்தியா தத்துவங்கள் ஆன்மாவின் அறி விச்சை செயல்கள் வெளிப்படுதற்குக் காரணமாய், அதனோடு ஒட்டி ஒன்றாய் நின்று ஆன்மாவை ஆன்மாவாகச் செய்யும் இயல்புடைமையால் அவை அனைத்தையுமே 'புருடன்' என ஒன்றாக வைத்து, தத்துவங்களை, 'இருபத்தைந்து' என்றே கூறுதலும் உண்டு.

'ஐயஞ்சின் அப்புறத் தானும், ஆரூ ரமர்ந்தஅம் மானே'

என்ற திருநாவுக்கரசர் திருமொழி இம்முறைபற்றி எழுந்ததே. தத்துவங்கள் மாயையின் காரியங்களாம். அவற்றின் இயல்பை ஆராய்ந்து உணரவே அவற்றினின்றும் நீங்குதல் உளதாம் என்க. தொகுத்தல் பெற்ற அகரத்தை விரித்து, 'சித்தம் என்ற செய்கையும்' என இயைக்க. செய்கையுடையதனை, 'செய்கை' என்றார். இதனால், தத்துவங்களை ஆராய்ந்து உணர்தல் ஞானமாதல் கூறப்பட்டது.

தன்பால் உலகம் தனக்கரு காவதும்
அன்பால் எனக்கரு ளாவது மாவன
என்பார்கள் ஞானமும் எய்தும் சிவோகமும்
பின்பாலின் நேயமும் பெற்றிடுந் தானே. *#1444*

சிவனது வியாபகத்தில் உள்ள உலகம் சிவனது உடைமையும், அடிமையுமாய் அவனுக்கு உரித்தாதலை உணர் தலையே 'ஞானம்' என்றும், சிவனிடத்து வைத்த அன்பு காரணமாக அவனது திருவருள்

தமக்குக் கிடைக்கப் பெறுதலையே 'சிவோகம் பாவனை' என்றும் ஞானிகள் கூறுவார்கள். அவ் இரண்டையும் பெற்றோர், அவற்றின் பயனாகப் பின்பு, அறியத்தக்க பொருளையே அறிந்து, அதில் அழுந்துவார்கள்.

விளக்கவுரை

'ஆவதும், ஆவதும் - ஞானமும், சிவோகமும்' என்றது நிரல்நிறை. 'என்பார்கள்' என்பதனை மூன்றாம் அடியின் இறுதியிற் கூட்டி உரைக்க. 'தன்' என்றது சிவனாதல் விளங்குதற்கே, பின்னர், 'எனக்கு' எனத் தம்மேல் வைத்துக் கூறினார். 'பெற்றிடும்' என்பதற்கு, 'அந்நிலையை எய்தினோன்' என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க. சடமும், சித்துமாகிய இருவகை உலகத்துள் சடம் சிவனது உடைமையும், சித்து சிவனது அடிமையும் ஆம் என்க.
இதனால், தத்துவ ஆராய்ச்சியால், 'யான்' எனத் தன்னையே முதல்வனாக மதிக்கும் அகமயக்கமும், பலவற்றையும் தனித்தனி 'எனது' எனப் பற்றும் புற மயக்கமும் நீங்கி. எல்லாம் சிவனது அடிமை யும், உடைமையுமாகின்ற உண்மையை உணர்தலே ஞானமாதல் கூறப்பட்டது. இதனையே, 'தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்' *1* என்றார் மெய்கண்ட தேவநாயனார்.

இருக்குஞ் சேம இடம்பிரம மாகும்
வருக்கஞ் சராசர மாகும் உலகம்
தருக்கிய ஆசார மெல்லாந் தருமே
திருக்கிலா ஞானத்தைத் தேர்ந்துணர்ந் தோர்க்கே. ***#1445***

மாறுபாடில்லாத ஞானத்தை ஓர்ந்துணர்ந்தவர்க்கு அவர் இருத்தற்குரிய பாதுகாவலான இடம் 'பிரமம்' எனப்படுகின்ற சிவமே. ஏனெனில், உலகம் 'இயங்கியற்பொருளும், நிலையியற் பொருளும்' என்னும் ஈரினமாய் நின்று உணர்வை அலைப்பனவாம். (ஆதலின் அவை அவர்க்கு இருத்தற்குரிய இடமாகா என்பதாம்.) ஆதலின், சிவ வியாபகத்தில் நிற்கின்ற பெருமகிழ்வோடு செய்கின்ற செயல்களே, எல்லா இன்பங்களையும் தருவனவாம்.

விளக்கவுரை

ஈற்றடியை முதலில் வைத்தும், 'உலகம் சராசர வருக்க மாகும்' என மாற்றியும் உரைக்க. முதல் இரண்டடிகள் காரிய காரணப் பொருளவாய் நின்றன. தருக்குதலோடு நிகழ்கின்ற ஆசாரத்தை, 'தருக்கிய ஆசாரம்' என்றார். ஆசாரம் - நடை; செயல்கள் 'எல்லாம்' என்றது, 'உலகர்க்கு 'நன்மை, தீமை' என இருவகையாய்த் தோன்றி நிகழும் பலவும்' என்றவாறு. 'அருள்வழி நின்று செய்யின், தீயசெயல்களும் நல்ல

செயல்களாய் இன்பம் பயக்கும்' என்றதனால், 'அருளை மறந்துசெய்யின், நல்லசெயல்களும் தீயசெயல்களாய்த் துன்பம் பயக்கும்' என்பது போந்தது.

'அரனடிக் கன்பர் செய்யு ம் பாவமும் அறமதாகும்;
பரனடிக் கன்பி லார்செய் புண்ணியம் பாவ மாகும்;
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி
நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே'*

என்னும் சிவஞான சித்திச் செய்யுளும், திருமுறைகளிலும் இத்தக்கன் வரலாறு சண்டேசுர நாயனார் வரலாறுகள் சிறந்தெடுத்தோதப்படுத லும் நன்குணரத்தக்கன. 'சிவவியாபகத்தின்நீங்கி உலகிடைப்புகின் தீங்கு வருதலையுணர்ந்து ஞானிகள் அதனின் நீங்காது அதனுட்டானே நிற்பர்' என்பதை உமாபதிதேவர்,

'புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவர்; போதார்
தலன்நடக்கும் ஆமை தக' *1*

என்று அருளிச் செய்தார். இதனானே,

'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து'*2*

என்னும் திருவள்ளுவர் திருமொழியும் இப்பொருட் குறிப்புடைய தாதல் அறிந்து கொள்ளப்படும்.

இதனால், தன் பணியறுத்து அருள்வழி யொழுகுதல் ஞானமாதல் கூறப்பட்டது.

அறிவும் அடக்கமும் அன்பும் உடனே
பிறியா நகர்மன்னும் பேரரு ளாளன்
குறியுங் குணமும் குரைகழல் நீங்கா
நெறியறி வார்க்கிது நீத்தொளி யாமே. ***#1446***

தமது அறிவிற்குச் சிவனது அருளே முதலாதலை உணரும் உணர்வும், அவ்வுணர்வால் அதற்குட்டானே அடங்கி நிற்கும் அடக்கமும், அடங்கி, அதனைமறவாதுஉணர்கின்ற உணர்வால் பெருகுகின்ற அன்பும் என்னும் இவை ஒரு சேரக் கூடி நீங்கா திருக்கின்ற அந்த உள்ளமாகிய கோயிலிலே நீங்காதிருக்கின்ற பேரரு ளாளனாகிய சிவனது அருட்டிரு மேனி, அருட்குணம், ஒலிக்கின்ற கழலையணிந்த திருவடி இவைகளை மறவாதிருக்கின்ற முறையை உணர்ந்த ஞானிகட்கு இவ்வுலகமாகிய இருள் நீங்கி, ஞானமாகிய ஒளி பிரகாசிக்கும்.

விளக்கவுரை

'குரை கழலும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. ஈற்றடியில் 'இது நீர்த்தொனி யாமே, நீர்த் தோணி யாமே' என்பன பாடம் அல்ல. '
'அறிவும் ... ... பிறியா நகர்',

இதனால், அருளது உபகாரத்தை உணர்தல் முதலிய மூன்றும் ஞானமாதல் கூறப்பட்டது.

ஞானம் விழைந்தெழு கின்றதோர் சிந்தையுள்
யானம் விழைந்தெதி ரேகாண் வழிதொறும்
கூனல் மதிமண் டலத்தெதிர் நீர்கண்டு
ஊனம் அறுத்துநின் றொண்சுட ராகுமே. ***#1447***

ஞானத்தை விரும்பி எழுச்சி பெற்ற உள்ளத்தில், பிராணவாயுவாகிய ஊர்தியை விரும்பி ஏறி மேலே செல்லும்பொழுது வழியில் எதிர்ப்படுகின்ற இடந்தோறும், சந்திர மண்டலத்திலிருந்து பெருகும் அமுத தாரை நிரம்பியிருக்கக் கண்டு, அதனால் உடற்கும், உள்ளத்திற்கும் வருவனவாகிய குறைகளைப்போக்கி நிலைபெற்று ஒளிமயமாக ஆகுங்கள்.

விளக்கவுரை

இரண்டாம் அடியில் 'ஏனம்' என்பது பாடம் அன்று. உடற்கு வரும் குறைகள், 'நரை, திரை, மூப்பு, சாக்காடு' என்பன. உள்ளத்திற்கு வரும் குறை, ஒருவழி நில்லாமை. இவை யோகத்தால் நீங்குதல் அறிக. ஒளி, உடற்பொலிவும், ஞானமும் என்க.

இதனால், ஞானவேட்கை யுடையோர் யோகத்தால் உள்ளமும் உடலும் நிலையுடையதாகப் பெறின், இப்பிறப்பிலே அதனைத் தப்பாது அடைதல் கூறப்பட்டது.

ஞானிக் குடன்குணம் ஞானத்தில் நான்குமாம்
மோனிக் கிவைஒன்றும் கூடா முன் மோகித்து
மேனிற்ற லால்சத்தி வித்தை விளைத்திடும்
தானிக் குலத்தோர் சரியை கிரியையே. ***#1448***

ஞானத்தைத் தலைப்பட்டவனுக்கு, ஞானத்திற் சரியை முதலிய நான்கு படிகள் உள்ளன. நான்காவது படியிற் சென்று முற்றிய மௌன எல்லையை அடைந்தவனுக்குப் பின் இவை என்றும் வேண்டாவாம். ஞானத்தைத் தலைப்படுதற்குமுன் யோகத்தையே 'ஞானம்' என மயங்கிச் சத்தி மண்டலத்திலே நின்று, அங்குள்ள சத்தியைத் தரிசித்தோர்க்கு அந்தச்சத்தி ஞானத்தைத் தருதலாகிய பயனைத்தரும். அதற்குக் கீழ் உள்ள ஆறு ஆதார சத்திகளை அடைந்தவர்கட்குக் கிடைக்கும் பயன் யோகத்தில் சரியை, யோகத்தில் கிரியை என்பனவேயாம்.

விளக்கவுரை

'ஆறு ஆதாரங்களிற் பெறுவன யோகத்தில் சரியையும், யோகத்தில் கிரியையும்' எனவே, 'ஏழாந் தானமாகிய சகத்திராரத்தில் நிற்போர்க்கு விளைவது யோகத்தில் 'யோகம்' என்பதுபோந்தது. குணம் - இயல்பு.

வித்தை - ஞானம். தானி - ஆதாரசத்தி 'குலத் தோர்க்கு' என்னும் நான்கனுருபு தொகுத்தல் பல ஆதாரங்களிலும் விளங்குவது ஒரு சத்தியேயாதல்பற்றி ஒருமையாற் கூறினார். 'கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல்' என்னும் நான்குமே ஞானத்திற் சரியை முதலிய நான்கு என்க. நிட்டை கூடினவனையே 'மோனி' என்றார். இதனால், யோக முதிர்ச்சி யுடையோன், பின் ஞானத்தில் சென்று அதன் நான்கு படிகளில் ஏறுதல் கூறப்பட்டது.

ஞானத்தில் ஞானாதி நான்குமாம் ஞானிக்கு
ஞானத்தில் ஞானமே நான்என தென்னாமை
ஞானத்தில் யோகமே நாதாந்த நல்லொளி
ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே. ***#1449***

ஞானத்தில் ஞானத்தை அடைந்தவனுக்கு, அந்த ஞானத்திற்குக் கீழுள்ள மூன்றும் முன்பே கைவந்தனவாம். ஞானத்தில் ஞானமாவது 'யான், எனது' என்னும் ஞாதுரு ஞானங்கள் தோன்றாது, ஞேயம் ஒன்றேயாக அதனுள் அழுந்துதல். ஞானத்தில் யோகமாவது தத்துவாதீதத்தில் எல்லையற்ற சிவ ஒளியில் சேர்தல். ஞானத்தில் கிரியையாவது தத்துவக் கூட்டத்தினின்றும் விடுபடுமாற்றைச் சிந்தித்தல்.

விளக்கவுரை

சிந்தித்தல் கூறியதனானே, தான் தத்துவங்களின் வேறாதலைக் கேள்வியுறுதல் ஞானத்தில் சரியை என்பது அறியப் படும். 'ஞானி' என்றது இவ்வாறே பொருள்படுதல் அறிந்துகொள்க.
இதனால், 'மேற் குறித்த நான்கு படிகள் இவை' என்பது கூறப்பட்டது.

நண்ணிய ஞானத்தில் ஞானாதி நண்ணுவோன்
புண்ணிய பாவம் கடந்த பிணக்கற்றோன்
கண்ணிய நேயம் கரைஞானம் கண்டுளோன்
திண்ணிய சுத்தன் சிவமுத்தன் சித்தனே. ***#1450***

ஞானத்தில் ஞானம் முதலியவற்றை அடைவோன், முதற்கண் வினைக்கட்டு அற்றவனாயும், இரண்டாவது சிவஞானத் தால் ஞேயமாகிய சிவத்தைத் தரிசித்தவனாயும், மூன்றாவது மும் மலங்களின் வாசனையும் நீங்கிய நின்மலனாயும், முடிவில் சிவனை அனுபவமாய்ப் பெறுதலாகிய முத்தியை அடைந்த, முடிந்த பேறுடையவனாயும் விளங்குவன்.

விளக்கவுரை

ஞானாதி நண்ணுவோனது தன்மையைக் கீழிருந்து கூறும் முறையாற் கூறினார். இந்நான்கு அனுபவங்களும் கேட்டல் முதலிய நான்கினாலும் நிகழ்வனவாதல் அறிக. வினைக்கட்டு நீங்கினமைகூறவே, அதற்குப்

பற்றுக்கோடாகிய மாயைக்கட்டு நீங்கினமையும் தானே பெறப்பட்டது. கண்ணல் - கருதல். கரை ஞானம் - மேல் எல்லையாகிய ஞானம். 'கரை ஞானத்தால்' என உருபு விரிக்க. திண்மை வாதனை காரணமாக அசைதல் இன்மை. 'உறைப்பு' என்றபடி. சித்தன் - சித்திக்கப் பெற்றவன். இதனால், மேற்கூறிய நான்கு படிகளிலும் நிகழும் அனுபவங்கள் கூறப்பட்டன.

ஞானச் சமயமே நாடுந் தனைக்காண்டல்
ஞான விசேடமே நாடு பரோதயம்
ஞானநிர் வாணமே நன்றறி வானருள்
ஞானாபி டேகமே நற்குரு பாதமே. *#1451*

ஞானத்திற் சரியை முதலிய நான்கையும் பெற்றோர் முறையே ஞான சமயி, ஞான புத்திரன், ஞான சாதகன், ஞான ஆசாரியன் என்பவராயும் நிற்பர்.

விளக்கவுரை

நாடும் தனைக்காண்டல் 'நான் யார்' என்று ஆராய் கின்றவன் தன்னை 'இன்னான்' என அறிதல், பர உதயம் - பரம் பொருட்காட்சி. நன்றறிவான் - எல்லாவற்றையும் நன்கு அறிகின்ற சிவன். அருள் - அவனது அருளைப் பெறுதல். இங்கு, 'நற்சிவோகம் பாவம்' என்ற பாடமும் காணப்படுகின்றது. குரு பாதம் - குருவாம் நிலை. இதனால், மேற்கூறிய நால்வரும் உலகில் விளங்கும் முறை கூறப்பட்டது.

*7.9.*சன்மார்க்கம்

சாற்றுஞ்சன் மார்க்கமாம் தற்சிவ தத்துவத்
தோற்றங்க ளான சுருதிச் சுடர்கண்டு
சீற்றம் ஒழிந்து சிவயோக சித்தராய்க்
கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே.

சைவப் பெருமைத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத்துள் ளார்க்கு வகுத்துவைத் தானே. *#1452*

எல்லாவற்றினும் மேலானதாகச் சிறப்பித்துச் சொல்லப் படுகின்ற சொரூப சிவத்தின் உண்மை இயல்பை விளக்குவனவாகிய வேத சிவாகமங்களில் ஞானப் பகுதியின் பொருளை உள்ளவாறு உணர்ந்து, அதனால் 'வெகுளி, காமம், மயக்கம்' என்னும் முக்குற்றங் களும் நீங்கிச் சிவத்தோடு ஒன்று படும் நிலை சித்திக்கப் பெற்றுக் காலனை

வென்றவரே குறிப்பொருளை (இலட்சியப் பொருளை) அறிந்து அடைந்தோராவர்.

விளக்கவுரை

'சன்மார்க்கமாம் சுடர்' என இயையும். இயல்பினை, 'தோற்றம்' என வைத்து, காரணத்தைக் காரியமாகக் கூறினார். சிவா கமங்களும் சுருதியாதல் அறிக. 'சுருதியில் கண்டு' என உருபு விரித்து முடிக்க. சுடர் - ஞானம்; அஃது அதனை உணர்த்தும் பகுதியைக் குறித்தது. 'சீற்றம்' என்றது உபலக்கணம். கூற்றத்தை வெல்லுத லாவது, தூல உடம்பை விட்டு எமலோகம்போகாது, தூல, சூக்கும, பர உடம்புகளாகிய அனைத்தையும் விடுத்து இறைவனை அடைதல். 'வெல்வார்' எனறப்பாலது, துணிபு பற்றி 'வென்றார்' எனப்பட்டது.
இதனால், சரியை முதலிய நான்கனுள் முடிவாகச் சொல்லப் படுகின்ற உண்மை ஞானம், பிறவியாகிய பெருந்துன்பத்தை நீக்கிச் சிவானந்தமாகிய எல்லையில் இன்பத்தைத் தருதலால், 'சன்மார்க்கம் - நன்னெறி' எனப்படுவதாயிற்று என்பது கூறப்பட்டது. 'இதனின் மிக்க நன்னெறி பிறிதில்லை' என்பதாம்.
[இதன் பின் பதிப்புக்களில் உள்ள 'சைவப்பெருமை' என்னும் மந்திரம் இத்தந்திரத்தின் இறுதி யதிகாரத்தில் வருவது.]

தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்
பரிசிக்க கீர்த்திக்கப் பாதுகஞ் சூடக்
குருபத்தி செய்யுங் குவாலயத் தோர்க்குத்
தரும்முத்தி சார்பூட்டும் சன்மார்க்கந் தானே. ***#1453***

குருபத்தி செய்யும் நன்மாணாக்கர் கண்ணால் காணுதல், திருமுழுக்கு, ஒப்பனை, புகை, ஒளி, படையல், மலரிடல் முதலாக முறைப்படி வழிபடுதல், தியானித்தல், தீண்டி அடிவருடல் முதலியன செய்தல், துதித்தல், பாதுகையைத் தலைமேல் தாங்குதல் முதலியவற்றால் குருவை வழிபட்ட வழியே சன்மார்க்கமாகிய ஞானம் கைகொடுத்து, முத்தி நிலையைத் தரும்.

விளக்கவுரை

'குருபத்தி செய்யும் குவலயத்தோர்' என்று எடுத்துக் கொண்டு, 'சூட' என்பதன்பின், 'அவர்க்கு' என ஓதற்பாலதனை இவ்வாறு ஓதினார். 'கீர்த்திக்க' என்பது வடநூல் மதமுடிபு. 'குவலயத் தோர்க்கே சன்மார்க்கம் சார்பு ஊட்டும்; முத்தி தரும்' எனக் கூட்டுக. சார்பு ஊட்டுதல், தன்னோடு இயைபினை உண்டாக்குதல். தான், அசை.
இதனால், 'ஞானம், நல்லாசிரியரானே (சற்குருவாலே) தரப் படும் நன்னெறி - சன்மார்க்கமாம்' என்பது கூறப்பட்டது. அந்நெறி

ஞானமேயாதல் அறிக. இதனுள் குருபத்தி செய்யும் வகையும் கூறப் பட்டமை காண்க.

தெளிவறி யாதார் சிவனை அறியார்
தெளிவறி யாதார் சீவனு மாகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதவர் தீரார் பிறப்பே. ***#1454***

குருவருளால் பெறப்படும் உண்மை ஞானத்தைப் பெறாதவர் சிவனது இயல்பை உணரமாட்டார், அதனால், அவர் ஆன்மலாபத்தை அடைதற்குரிய ஆன்மாவும் ஆகார். ('சடத்தோ டொப்பர்' என்பதாம்.) ஆதலின், அவர் சிவமாம் நிலையைப் பெறுதலும், அப்பேற்றால் பிறவி யற்றவராதலும் இல்லை.

விளக்கவுரை

கேட்டுச் சிந்தித்துத் தெளிவதனையே 'தெளிவு' என்றார். உம்மை, எச்சப்பொருட்டு.

இதனால், குருவருளாலன்றிப் பிறவாற்றாற் பெறும் ஞானங்கள் உண்மை ஞானம் அல்லவாய், நன்னெறி சன்மார்க்க மாகாதொழிதல் கூறப்பட்டது.

தானவவ னாகித்தான் ஐந்தாம் மலம்செற்று
மோனம தாம்மொழிப் பால்முத்த ராவதும்
ஈனமில் ஞானானு பூதியில் இன்பமும்
தானவ னாய்உற லானசன் மார்க்கமே. ***#1455***

சீவன் சிவனேயாய் நிற்கும் முறையால் அஃது ஐந்து மலங்களை அழித்து, மௌனோபதேசத்தின் வழி முத்தி நிலையைப் பெறுதலும், பின் குறையில்லாத ஞானத்தால் உண்டாகும் அனுபவத் தில் விளைகின்ற இன்பமும் ஆகிய இவையே சீவன் சிவனேயாய் விடுகின்ற சன்மார்க்கமாகும்.

விளக்கவுரை

'தான் அவனாதல்' இரண்டனுள் முன்னது அவ்வாறு உணர்தலாகிய சாதனையையும், பின்னது, அங்ஙனமேயாதலாகிய பயனையும் குறித்தன. ஐந்து மலங்களாவன. 'ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம்' என்பன. 'மலங்கள் ஐந்தாற் சுழல் வேன் தயிரிற் பொரு மத்துறவே' *1* என மணிவாசகரும் அருளிச் செய்தார். மௌனோபதேசம், சின்முத்திரையால் உணர்த்தல். இனி, 'மௌன நிலையைத்தரும் மொழி' என்றும் ஆம்.

இதனால், ஞானமே சன்மார்க்க மாதல், ஏதுக்காட்டி விளக்கப் பட்டது.

சன்மார்க்கத் தார்க்கு முகத்தொடு பீடமும்

சன்மார்க்கத் தார்க்கு இடத்தொடு தெய்வமும்
சன்மார்க்கத் தார்க்கு வருக்கந் தரிசனம்
எம்மார்க்கத் தார்க்கும் இயம்புவன் கேண்மினோ. ***#1456***
எந்நிலையில் நிற்போர்க்கும் நோக்கும் திசை, இருக்கும் இருக்கை, உறையும் இடம், தியானிக்கப்படுகின்ற தெய்வம், இணங்கும் கூட்டம், வழிபடப்படும் குறி முதலிய எல்லாம் சன் மார்க்கத்தார்க்குப் போலவே குருவருளால் கொள்ளத் தக்கனவாம்.

விளக்கவுரை

'அங்ஙனம் கொண்டவழியே அவை சன்மார்க்கத்திற் குரிய மார்க்கமாய் தாமும் சன்மார்க்கமாம் தன்மையைப் பெறும்; இன்றேல் துன்மார்க்கமாய்விடும்' என்றவாறு. 'சற்குருவே இங்குக் கூறிய திசை முதலியவற்றைச் சிவனையடையும் முறையில் உணர்த் துவர்; பிறர் அதுமாட்டாது பிறவற்றை உணர்த்துவர்' என்பதாம். 'சன்மார்க்கத் தார்க்கு' என்றது, 'சன்மார்க்த்தார்க்கு உள்ள' என்ற வாறு. 'சன்மார்க்கத் தார்க்கும்' என்னும் உம்மை அசைநிலை. 'எம் மார்க்கத்தார்க்கும் ஆம்' என ஒருசொல் வருவிக்க. 'இயம்புவன் கேண்மின்' என்றது 'என் சொல்லைக் கேளுங்கள்' என வலியுறுத்தவாறு.
இதனால், சன்மார்க்கம் அல்லாதன நல்லன ஆகாமை கூறப்பட்டது.

சன்மார்க்க சாதனந் தான்ஞானம் ஞேயமாம்
பின்மார்க்க சாதனம் பேதைய தாய்நிற்கும்
துன்மார்க்கம் விட்ட துரியத் துரிசற்றார்
சன்மார்க்கம் தானவ னாகும்சன் மார்க்கமே. ***#1457***
ஞானம் ஒன்றே சன்மார்க்கத்தில் கொள்ளப்படும் சாதனமாகும். அந்தச் சாதனம் பின் ஞேயமாகிய சாத்தியத்தை அடை விக்கும். சகமார்க்கம் முதலியவைகளில் ஞானமல்லாத பிறவே சாதனங்களாம். பிற மார்க்கங்களைக் கடந்து சன்மார்க்கத்தில் நிற்போர் அதில் துரியத்தைக் கடந்தபொழுது விரும்புகின்ற சன்மார்க்கம் சீவன் சிவமாம் தன்மையாகிய சன்மார்க்கமே.

விளக்கவுரை

'ஞானந்தான் சன்மார்க்க சாதனம்' என மாற்றி, 'அதனால், ஞேயம் ஆம்' என வேறு தொடராக்கியுரைக்க. பிறவற்றை, 'பேதை - பேதைமை' என்றது, ஞானமல்லவாதல் பற்றி. 'ஞான மாவது, தத்துவ ஞானமே' என்பது மேலே கூறப்பட்டது. சன்மார்க் கத்தில் நிகழ்வதை, 'துன்மார்க்கம் விட்டது' என்றார். துரிய நிலை யிலும் திரிபுடி ஞானம் அற்றொழியாமையால் 'துரிசு' என்றார்.
இதனால், அதீதமாகிய ஆனந்த நிலையே சன்மார்க்கத்தில்

சன்மார்க்கமாதல், துரிசறுதலாகிய ஏதுக்காட்டி விளக்கப்பட்டது.

சன்மார்க்கம் எய்த வரும்அருஞ் சீடர்க்குப்
பின்மார்க்கம் மூன்றும் பெறலியல் பாமென்றால்
நன்மார்க்கந் தானே சிவனொடு நாடலே
சொன்மார்க்க மென்னச் சுருதிகைக் கொள்ளுமே. *#1458*

சன்மார்க்கம் கைவரப்பெறும் தகுதியை அடைய விரும்பும் அரிய மாணாக்கர்க்கு, அதற்கு முன்னே ஏனை, யோகம் முதலிய மூன்றும் முற்ற வேண்டுதலே முறையாகுமாயின், வீடடையும் நெறியாவது, தன்னைச் சிவனுக்கு உரிய பொருளாக உரிமைப்படுத்து அறிதலேயாகின்றது, 'இதுதான் ஆசிரியன்மார் தம் மாணாக்கர்க்கு அறிவுறுத்தத்தக்க நெறி' என்று உண்மை வேதம் தனது துணிவாகக் கொண்டு கூறுகின்றது.

விளக்கவுரை

அருமை, பக்குவ நிலை. 'என்றால்' என்பது, 'என்பதே முறை என்றால்' எனத் தெளிதற் பொருள் உணர்த்தி, ஏனைப் பசுபுண்ணியத்தளவில் அத்தகுதி வாராமை யுணர்த்திற்று. நன்மை - வீடு. அதனை அடையும் மார்க்கம். 'நன்மார்க்கம்' எனப்பட்டது. 'சிவனொடு படுத்து' என ஒரு சொல் வருவித்து, படுத்தல், நாடல் இரண்டற்கும் 'தன்னை' என்னும் செயப்படுபொருள் வருவித்துக் கொள்க. இம்மந்திரம், 'சிவ ஞானமாகிய சிறப்புணர்வின்றி, பிரம்ம ஞானமாகிய பொதுவுணர்வே வீடு பயக்கும் என்பதே வேதத்தின் முடிபு, என்பாரை மறுத்துக் கூறியது.
இதனால், உண்மைச் சன்மார்க்கம் சிவஞானமேயாதல் கூறப்பட்டது.

அன்னிய பாசமும் ஆகும் கருமமும்
முன்னும் அவத்தையும் மூலப் பகுதியும்
பின்னிய ஞானமும் பேதாதி பேதமும்
தன்னொடுங் கண்டவர் சன்மார்க்கத் தோரே. *#1459*

பூர்வபக்க மதங்களின் உணர்வுக்கு அப்பால் உள்ள பிரதி பந்தமாகிய ஆணவ மலத்தை, முன்னர் உணர்ந்து பின்னர் ஏனைய கன்மம், மூலப்பகுதி, அம்மதங்களால் உணரப்பட்ட சாக்கிரம் முதலிய அவத்தைகள், அவைகளில் தொடக்குண்டு நிற்கின்ற அறிவின் நிலைகள், பொருள்களிடையே உள்ள சிறியனவும், பெரியனவுமாகிய வேறுபாடுகள் என்பவற்றோடு தலைவனாகிய இறைவனையும் உணரும் சித்தாந்த ஞானம் வாய்க்கப் பெற்றவரே 'சன்மார்க்கத்தோர்' எனப்படுவர்.

விளக்கவுரை

'சித்தாந்த ஞானம் கைவரப்பெற்றவர்க்கே பிற வெல்லாம் பூர்வ பக்கமாதல் இனிது விளங்கும்' என்றவாறு. 'முன்னும் அவத்தையும்'

என்பதனை, 'மூலப்பகுதியும்' என்பதன் பின்னர்க் கூட்டியுரைக்க.
அதிபேதம் - பெரியவேற்றுமை. 'தன்' என்றது ஒருவனான இறைவனை.
இது, 'கண்டவர்' என்பதனோடு இயைதல் கூடாமையின், கண்டவரை உணர்த்தாமை அறிக.
இதனால், பிற ஞானங்கள் 'சன்மார்க்கம்' எனப்படாது, சித்தாந்த ஞானமே 'சன்மார்க்கம்' எனப்படுதல் பொருந்துமாறு கூறப் பட்டது.

பசுபாசம் நீக்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சம் கசியக் கசிவித்
தொசியாத உண்மைச் சொரூபோ தயத்துற்
றசைவான தில்லாமை ஆனசன் மார்க்கமே. *#1460*

ஆன்மாவின் பசுத்துவம் காரணமாக வந்து பொருந் திய சம்பந்தங்களாகிய கருவி கரணங்கள் அனைத்தையும், 'தன்னின் வேறானவை' எனக்கண்டு கழித்துத் தன்னைப் பதியாகிய சிவனுடன் பொருத்தி, அங்ஙனம் முன்பு பொருந்தாதிருந்த நிலையில் மறந்திருந்த அவனது உபகாரத்தை இடைவிடாது உணர்தலால், முன்பு அன்பினால் நெகிழ்தல் இன்றி வன்மையுற்றிருந்த மனத்தை இப்பொழுது நெகிழ்ந்து உருகும்படி உருகப்பண்ணி, அவ்வன்பினாலே, என்றும் மாற்றம் இன்றி நிற்கும் மெய்ம்மையாகிய சிவனது தன்னியல்பு வெளிப் பாட்டில் அசைவின்றி நிற்றலே முற்ற முதிர்ந்த சன்மார்க்கமாகும்.

விளக்கவுரை

'பசு பாசம் நீக்கி' என்றது, ஆன்ம தரிசனத்தில் நிகழும் தத்துவ சுத்தியாகிய சுத்த சுழுத்தியையும், 'பதியுடன் கூட்டி' என்றது, சிவயோகத்தில் நிகழும் ஆன்ம சுத்தியாகிய சுத்த துரியத்தையும், ஏனையவெல்லாம் சிவபோகமாகிய அதீதத்தையும், குறித்தனவாம்.
இரண்டாம் அடி முதலாயவற்றில் கூறியவற்றை மெய்கண்ட தேவரும்,
'அயரா அன்பின் அரன்கழல் செலுமே' *1*
என அருளிச்செய்தல் காண்க.
இதனால், முற்ற முதிர்ந்த சித்தாந்த ஞானத்தின் சிறப்புணர்த்து முகத்தால், அது சிறந்த சன்மார்க்கமாதல் கூறப்பட்டது.

மார்க்கம்சன் மார்க்கிகள் கிட்ட வகுப்பது
மார்க்கம்சன் மார்க்கமே யன்றிமற் றொன்றில்லை
மார்க்கம்சன் மார்க்க மெனும்நெறி வைகாதோர்
மார்க்கம்சன் மார்க்க மதுசித்த யோகமே. *#1461*

இங்குக் கூறிய சன்மார்க்கம் இதனைப் பெறுதற் குரியோர் பெறுதற் பொருட்டு வகுக்கப்படுவது. தலை சிறந்த நெறி. இந்தச் சன்மார்க்கமன்றி வேறொன்று இல்லை ஆயினும், இந்தச் சன் மார்க்கத்தை அடைந்து இன்புற்றிருக்க மாட்டாதவர்க்குரிய சன்

மார்க்கம், மன ஒடுக்கத்தைப் பயனாக உடைய யோக நெறியேயாம்.

விளக்கவுரை

முதலடியில், 'இம் மார்க்கம்' எனச்சுட்டு வருவித்து உரைக்க. இரண்டாம் அடி, 'இஃது ஒருதலையாக அடையத் தக்கது' என்பதனை நிலைபெறுத்தியது. மூன்றாம் அடியில் உள்ள தொடர், 'இந்நெறி' என்னும் சுட்டளவாய் நின்றது. 'வைகாதோர்' என்றது, 'சென்று வைக்காதோர்' எனப் பொருள் தந்தது. 'வைகாதோர் சன்மார்க்கம் சித்தயோக மார்க்கமாம்' எனக்கூட்டுக. சித்த யோக மார்க்கம் - மனம் ஒடுங்கும் நெறி.

இதனால், சன்மார்க்கத்தை அடையமாட்டாதார்க்கு அதனை அடையும் வழி கூறும் முகத்தால், வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்று வாய் கூறப்பட்டது.

*7.10.*சகமார்க்கம்

சன்மார்க்கந் தானே சகமார்க்க மானது
மன்மார்க்கம் மாமுத்தி சித்திக்குள் வைப்பதாம்
பின்மார்க்க மானது பேராப் பிறந்திறந்
துன்மார்க்கம் ஞானத் துறுதியு மாமே. *#1462*

சிவநெறியில் யோகத்தை, *'சகமார்க்கம்'* - ஒத்துடன் நிற்கும் தோழமை நெறி - எனக் கூறுதல், சன்மார்க்கமாகிய ஞானத்தின் தன்மையையே கொண்டு விளங்குதல் பற்றியாம். அதனால், சிவநெறியோகம், உண்மை ஞானத்தால் உளதாகின்ற முத்திப் பேற்றுள் உய்க்கும். ஏனையோர் கூறும் யோகங்கள் ஓயாது பிறந்து இறத்தலை வெறாது விரும்பிக் கொள்வனவேயாகும். அவற்றால் ஞானமாகிய உறுதிப் பொருள் கிடைத்தலும் கூடுமோ!

விளக்கவுரை

சிவமாந்தன்மையைப் பெறுதற்கு அணித்தாம் நிலையை எய்துவித்தல் பற்றியே யோகம், *'சகமார்க்கம் தோழமை நெறி'* எனப்படுகின்றது என்பதும், அதனால், அந்நிலையை எய்து விக்கமாட்டாத பிற யோகங்கள் *'சகமார்க்கம்'* என்பதற்குப் பொரு ளாகா என்பதும் கூறியவாறு. எனவே, பிற யோகங்களைச் சிவ நூல்கள் யோகமாகச் கொள்ளுதல் இல்லை என்பது பெறப்பட்டது. யோகத்திலும் ஞானத்தன்மையே உளதாதல், ஆதார பங்கயங்களை ஆறு அத்துவாக்களாகவும், நிராதார சத்தி மண்டலம் கொள்ளப்படுத லும் அதற்கும் மேலான மீதானம் கூறப்படுதலும் பிறவுமாம். இவை அடயோகம், பாதஞ்சலி யோகம் முதலியவற்றில் இல்லாமை அறிக.

'சன்மார்க்க ஞானமதின் பொருளும், வீறு
சமயசங்கே தப்பொருளுந் தான்ஒன் றாகப்
பன்மார்க்க நெறியினிலும் கண்ட தில்லை' 1

என்றார் தாயுமான அடிகளும்.

'மெய்ம்மைச் - சிவயோக மேயோகம்; அல்லாத எல்லாம்
அவயோகம் என்றே அறி' 1

என்ற திருக்களிற்றுப்படி இங்கு நினைக்கத் தக்கது. *'பிறந்து, இறந்து உன்மார்க்கம்'* என்றது, *'பிறந்து இறந்து உழன்றும் அதனையே விரும்புகின்ற மார்க்கமாம்'* என்றவாறு. எனவே, அவை மல நடையே யாய் பிறவியை அறுக்கமாட்டா என்பது போந்தது. *'ஆனது'* என்றது, பிறவற்றுள் ஒவ்வொன்றையும் தனித்தனி நோக்கிற்று. *'இறந்தும்'* என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. *'அதனையே உன்னும் மார்க்கமாம்'* என்க. *'உறுதியும்'* என்னும் உம்மை சிறப்பு. *'ஆமே'* என்பது

எதிர்மறைப் பொருட்டு.
இதனால், சிவயோகத்தது சிறப்புக் கூறும் முகத்தால், அது 'சகமார்க்கம்' எனப்படுதற்கு ஏது கூறப்பட்டது.

மருவுந் துவாதச மார்க்கமில் லாதார்
குருவும் சிவனும் சமயமும் கூடார்
வெருவும் திருமகள் வீடில்லை யாகும்
உருவும் கிளையும் ஒருங்கிழப் பாரே. ***#1463***

சிரசிற்குமேல் பன்னிரண்டங்குலமாகச் சொல்லப் படுகின்ற நிராதாரத்தைப் பொருந்துகின்ற யோகநெறி யில்லாது, பிற வற்றையே யோகமாக மயங்குவோர், ஞான குருவையும், சிவனை யும், உண்மைச் சமயத்தையும் அடையமாட்டார். அவர் அணி மாதியாக விரும்பும் சித்திகளாகிய செல்வத்தைத் தரும் திருமகளும் அவர்பால் அணுக அஞ்சுவாள்; மோட்சமும் அவருக்கு இல்லை. உடம்பையும், சுற்றத் தொடர்பையும் வீணே இழப்பர்.

விளக்கவுரை

துவாதச மார்க்கம், பிராசாத யோகமுமாம். மேற் காட்டிய திருக்களிற்றுப்படியின்படி, சிவயோகம் அல்லாதன அவ யோகமாதலை வலியுறுத்துக் கூறியவாறு, சுற்றமும் பயன் செய்யாமை கூறவே, இறைவன் தோழன்போல அணியனாய் நின்று அருளுதல் இன்மையும் தானே பெறப்பட்டது. அதனால், அவை சகமார்க்கம் ஆகாமை அறிக. 'சிவனும்' என்பதில் இரண்டனுருபு தொகுத்தல் பெற்றது.
இதனால், சிவயோகமே சிவனை அணியனாக்கும் சகமார்க்க மாதல் எதிர்மறை முகத்தால் கூறப்பட்டது.

யோகச் சமாதியி னுள்ளே அகலிடம்
யோகச் சமாதியி னுள்ளே உளரொளி
யோகச் சமாதியி னுள்ளே உளள்சத்தி
யோகச் சமாதி உகந்தவர் சித்தரே. ***#1464***

சிவயோக சமாதியுள்ளே உலக முழுதும் அடங்கித் தோன்றும். உள்நிற்கும் ஒளியும் விளங்கும். அருட்சத்தியும் விளங்கு வாள். ஆதலால், சிவயோக சமாதி பெற்றவரே எல்லாம் சித்திக்கப் பெற்றவராவர்.

விளக்கவுரை

'இடம், ஒளி' என்பவற்றின்பின், 'விளங்கும்' என்பது எஞ்சி நின்றது. உளர்தல் - அசைதல்; ஒளிவிடல். இவ்வொளி திரோ தான சத்தியாம். 'அகலிடமும், இவ்வொளியும் உள்ளன' என்றது, கால இடங்களைக் கடந்த பொருள்கள் விளங்குதல் கூறியதாம். அருட்சத்தி விளங்குதலாவது, சத்திநிபாதம் முதிர்தல்.

இதனால், சிவயோகத்தால் உலகம் கடந்த வியாபகம் பெற்றுச் சிவனோடு ஒக்கும் நிலைவாய்த்தலால் அது சகமார்க்கமாதல் கூறப்பட்டது.

யோகமும் போகமும் யோகியர்க் காகுமால்
யோகம் சிவரூபம் உற்றிடும் உள்ளத்தோர்
போகம் புவியிற் புருடார்த்த சித்திய
தாகும் இரண்டும் அழியாத யோகிக்கே. *#1465*

சிவயோகிகட்கு யோகத்தோடு உலக போகமும் சுத்தபோகமாய் வரும். சிவயோகத்தால் சிவசாரூபம் கிடைக்கும். ஆகவே, இம்மை, மறுமை இரண்டையும் இழவாது பெறும் சிவ யோகிக்கு அவன் உலகில் விரும்புகின்ற புருடார்த்தம் உளதாகும்.

விளக்கவுரை

இரண்டாம் அடியில், 'யோகத்தால்' என உருபு விரிக்க. 'உள்ளத்தின்கண் ஓர்கின்ற போகமாகிய புருடார்த்தம் சித்தியாகும்' என்க. அது, பகுதிப் பொருள்விகுதி.

இதனால், சிவரூபம் உற்றிடுதல் பற்றிச் சிவயோகம் சக மார்க்கம் ஆதல் தெரித்துக் கூறப்பட்டது.

ஆதார சோதனை யால்நாடி சுத்திகள்
மேதாதி ஈரெண் கலாந்தத்து விண்ணொளி
போதா லயத்துப் புலன்கர ணம்புந்தி
சாதா ரணங்கெட லாம்சக மார்க்கத்தே. *#1466*

சிவயோகத்தில் ஆறு ஆதாரங்களிலும் சிவனது நிலைகளையே காணுதலால் உணர்வை உண்டாக்கும் நாடிகள் நல்லனவாகும். மேதாகலை முதலிய பதினாறுகலைகளின் முடிவில் பர வெளியில் விளங்கும் ஒளியாகிய சிவம் தோன்றும். சீவ போதம் ஒடுங்கிப் பஞ்சேந்திரியங்கள், அந்தக்கரணம் இவையும் சீவத் தன்மை கெடச் சிவத்தன்மையைப் பெறும். அதனால், அவ்யோகம் சகமார்க்கம் ஆதற்குத் தடையில்லை.

விளக்கவுரை

சுத்திப்பட்டனவற்றை, 'சுத்தி' என்றார். இதன்பின் 'ஆம்' என்னும் பயனிலையும், 'விண்ணொளி' என்பதன்பின், 'தோன்றும்' என்னும் பயனிலையும் எஞ்சிநின்றன. 'ஆலயம்' என்பதும் 'ஒடுக்கம்' எனப்பொருள்தரும். சாதாரணம் - பொதுமை. 'சகமார்க்கத்தே' என்பதனை, முதலில் வைத்து உரைக்க. 'சகமார்க்கமே' என்பது பாடமன்று.

இதனால், சிவயோகத்தின் பயன்கள் பலவும் கூறி, அது சகமார்க்கமாதல்

விளக்கப்பட்டது.

பிணங்கிநிற் கின்றவை யைந்தையும் பின்னை
அணங்கி எறிவன் அயில்மன வாளால்
கணம்பதி னெட்டும் கருதும் ஒருவன்
வணங்கவல் லான்சிந்தை வந்துநின் றானே. *#1467*

சிவயோகம் வல்லானது சிந்தையிடமாகப் பதினெண் கணங்களும் வணங்குகின்ற தனித்தலைவனாகிய சிவன் வந்து நிலைத்து நிற்பானாயின், பின்பு அவன் தன்னோடு இகலி நிற்கின்ற ஐம்பொறிகளாகிய பகைவர்களைத் தனது மனமாகிய கூரிய வாளால் தாக்கி வெட்டி யொழிப்பான்.

விளக்கவுரை

'பிணங்கி நிற்கின்றவையாகிய ஐந்தையும்' என்க. 'பிணங்கி நிற்கின்ற ஐயைந்தையும்' எனப் பிரித்து, 'இருபத்தைந்து தத்துவங்களையும்' எனவும் உரைப்பர். அணங்குதல் - வருத்துதல். 'அணங்க' எனப்பாடம் ஓதுதலுமாம். 'அயில்மனம்' என்பது, 'இன்பதுன்பங்களை நுகர்கின்ற மனம்' என்னும் பொருட்டாய், 'சிலேடை வகையால் கூர்மையான மனம்' எனப் பொருள் தந்தது. இனி, 'மனத்துக்குக் கூர்மை நுண்ணிதாக நோக்கல்' எனலுமாம். 'அயிர்மனம்' என்பது பாடம் அன்று. யோகமாகிய அக வழிபாட்டினையே இங்கு, 'வணங்குதல்' என்றார். 'நின்றானேல்' என்பதில், 'எனில்' என்பதன் மரூவாகிய 'ஏல்' என்பது எஞ்சி நின்றது, 'நாளை அவன் வாளொடு வெகுண்டு வந்தால், பின் நீ என் செய்வை' என்பதிற்போல. 'சிந்தை சிவன் வந்து நின்றானேல்' 'பின்னை ஐந்தையும் எறிவன்' என்றது, 'சிவன் வந்து நிற்கும் சிந்தை யில்லாதார் அது மாட்டார்' என்பதைத் தோற்றுவித்து நின்றது.

இதனால், சிவயோகமே ஐம்பொறிகளை வென்று, சிவனோடு சிந்தையால் கூடி நிற்கின்ற சகமார்க்கமாதல் கூறப்பட்டது.

வளங்கனி யொக்கும் வளநிறத் தார்க்கும்
வளங்கனி யொப்பதோர் வாய்மைய னாகும்
உளங்கனிந் துள்ளே உகந்துநிற் பார்க்குப்
பழங்கனிந் துள்ளே பகுந்துநின் றானே. *#1468*

மேற் கூறிய சிவன், வேடத்தால் வளப்பமானகனி (சிவப் பழம்) போன்ற பொலிவையுடையராய் உள்ள சரியை கிரியா மார்க்கத்தார்க்கும் வளப்பமான கனி கிடைத்தாற்போலும் உண்மையையே உடையனாவன். ஆயினும், யோகத்தால் உள்ளம் பழுத்து அவனை உள்ளத்தே விரும்பிக் கண்டுகொண்டிருப்பவர்க்குப் பழம் அளிந்து கிழிந்து சாற்றைப் பொழிதல் போல மிக்க இன்பத்தைத் தருபவனாய் இருப்பன்.

விளக்கவுரை

வளங்கனி - வளவிதாகிய கனி. பகுதல் - கிழிதல். 'பகுந்து' என்றது, 'கிழிந்து பொழிந்தாற் போன்று' எனப் பொருள் தந்தது. ஈற்றடி இனவெதுகை பெற்று நின்றது.

இதனால், சரியை கிரியைகள் சகமார்க்கமாகாது, யோகமே சகமார்க்கமாயினவாறு கூறப்பட்டது.

*7.11.*சற்புத்திர மார்க்கம்

மேவிய சற்புத் திரமார்க்க மெய்த்தொழில்
தாவிப்ப தாம் சக மார்க்கம் சகத்தொழில்
ஆவ திரண்டும் அகன்று சகமார்க்கத்
தேவியோ டொன்றல் சன் மார்க்கந் தெளிவதே. ***#1469***

விரும்பப்படுகின்ற சற்புத்திர மார்க்கமாகிய கிரியை யாவது, அகத்தில் மட்டுமன்றிப் புறத்திலும் ஒளிவடிவில் சிவனை நிறுத்தி முகம் முதலிய உறுப்புக்களை நினைவால் (பாவனை யால்) கண்டு பல முகமன்களும் (உபசாரங்களும்) செய்து வழி படுதலாம். சகமார்க்கமாகிய யோகமாவது, உலகத்தோடு ஒட்டி நிகழும் முகமன் நிகழ்ச்சிகள் 'அகம், புறம்' என்னும் இரண்டிடத்தும் நிகழ்தலாகிய அத்தன்மை இன்றி, யோகத்தில் வெளிப்படும் யோக சத்தியை அகத்தில் கண்டு, அதனோடு ஒன்றாதலாம். அனைத்தினும் மேலான சன்மார்க்கமாவது, தெளிவான ஞானமேயாகும்.

விளக்கவுரை

'உண்மை ஞானம் சன்மார்க்கமாய் நிற்க, உடனாய் நிகழும் திருவருளோடு கூடுமாற்றால் யோகம் சகமார்க்கமாதலின், அவ் இரண்டிற்கும் முன்னே நிகழும் ஒளியுருவ வழிபாடு சற்புத்திர மார்க்கமா யிற்று' என்பதாம். ஆகவே, இக்கருத்து இனிது விளங்குதற் பொருட்டே சகமார்க்க சன்மார்க்கங்களின் இயல்புகள் இங்கு எடுத்துக் காட்டப் பட்டன என்பது விளங்கும். சற்புத்திரமார்க்கம் - மகன்மை நெறி - அல்லது - மைந்தர்நெறி. மகன் தந்தைக்கு வேண்டும் உபசாரங் களை அணுக்கமாயிருந்து அவனது மெய்யைத்தீண்டி அன்புடன் செய்தல் போலச் செய்தலே கிரியையாதல் அறிக. 'அகல நின்று செய்யும் புறம்படித் தொழில்கள் சரியையாக, அணுகி நின்று செய்யும் அகம்படித் தொழில்களே கிரியை' என உணரலாம். 'கிரியைக்கு உரியது அருவுருவத்திருமேனி' என்பது 'தாவிப்பது' என்றதனால் பெறப்படும்; என்னை? உருவத் திருமேனியாயின், வழிபடும் பொழுதெல்லாம் தாவித்து வழிபடல் வேண்டாமையின். இங்ஙனம் செய்யும் அருவுருவ வழிபாடு பின்னர் அருவ வழிபாடாகிய யோகத்தில் செலுத்த

வல்லதாகும். அதனானே, கிரியையில் அக வழிபாடும் ஒரு பகுதியாய் நிகழ்கின்றது. அருவுருவத்திருமேனி அல்லது ஒளியுருவமாவது இலிங்க வடிவாம்.

'மெய்த்தொழில்' என்றது 'கிரியை' என்றவாறு, 'சகத் தொழில்' என்பது, 'உலகியலோடு ஒத்த மார்க்கம்' என்னும் பொருட் டாய்ப் பல முகமன் செயல்களை உணர்த்திற்று. இரண்டு - அகம், புறம். 'இரண்டினும் ஆவது அகன்று' என்க. 'சகமார்க்கம் ... ... இரண்டும் அகன்று ... ... தேவியோடு ஒன்றல்' என இயையும்.

இதனால், கிரியை சற்புத்திர மார்க்கம் ஆமாறு ஏனைய வற்றோடு வைத்துக் காட்டி விளக்கப்பட்டது.

பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை
நேசித்திட் டன்னமும் நீர்சுத்தி செய்தல்மற்
றாசற்ற சற்புத் திரமார்க்க மாகுமே. ***#1470***

அருக்கிய. பாத்திய. ஆசமனாதி முகமன்களைச் செய்தலும், தோத்திரம் சொல்லலும், திருமேனியைக் கண்ணை இமை காத்தல்போலப் பேணிக் காத்தலும், வழிபாட்டு முடிவில் மந்திரத்தைப் பலமுறை கணித்தலும், பசி தாகம் முதலியவற்றைப் பொறுத்துக் கொண்டு, செயல்களை விரையாது அமைந்து செய்தலும், உண்மையே பேசலும், காம வெகுளிகளாகிய மனக் குற்றங்கள் இல்லா திருத்தலும், அன்போடு படைக்கப்படுகின்ற அன்னம், பெரிதும் உதவு கின்ற நீர் என்பவற்றையும் செயலாலும், பாவனையாலும் மிகத் தூயன ஆக்குதலும், மற்றும் இன்னோரன்ன செயல்கள் பலவும் அன்போடும், ஆர்வத்தோடும் செய்யப்படுதலால், கிரியை குற்றம் அற்ற சற்புத்திர மார்க்கம் ஆகின்றது.

விளக்கவுரை

'உற்றநோய் நோன்றல்' *(திருக்குறள் - 291)* முதலிய வற்றை வாளா செய்யாது வழிபாடு பற்றிச் செய்தலை, 'நற்றவம்' என்றார். 'இட்ட' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'இடுதல்' என்பது 'படைத்தல்' என்னும் பொருட்டாய் 'அன்னம்' என்பத னோடும், 'உதவுதல்' என்னும் பொருட்டாய் 'நீர்' என்பதனோடும் இயைந்தது. சிறப்புடைய இவ் இரண்டற்கும் நேசித்தல் கூறவே, பிறவற்றிற்கும் அஃது உண்மை தானே பெறப்பட்டது. 'அன்னமும்' என்னும் சிறப்பும்மை 'நீர்' என்பதனோடும் இயையும். அதனால், பிறவும் சுத்தி செய்யப் படுதல் தானே அமைந்தது. சுத்திகளை ஐந்தாகக் கிரியாபாதம் கூறும். அவை: 'பூத சுத்தி, தான சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தி' என்பன. இவற்றின் இயல்பெல்லாம் கிரியை பற்றிய நூல்களிற் கண்டு கொள்க.

இதனால், இவையெல்லாம் அன்பின் வெளிப்பாடாக நிகழ்தலால், கிரியை சற்புத்திர மார்க்கமாதல் கூறப்பட்டது.

அறுகாற் பறவை அலர்தேர்ந் துழலும்
மறுகா நரைஅன்னம் தாமரை நீலம்
குறுகா நறுமலர் கொய்வன கண்டும்
சிறுகால் அரன்நெறி சேரகி லாரே. *#1471*

'அறுகாற் பறவை' எனப்படுகின்ற வண்டுகள் தேன் உள்ள மலர்களையே தேடித் திரியும்; வெறும் மலர்களை அணுக மாட்டா. வெண்ணிறத்தையுடைய அன்னப் பறவைகள் தாமரை மலரையே விரும்பியடையும்; நீலப் பூவை அடையமாட்டா. அவை போலச் சிவ வழிபாடு செய்வோர் சிவனுக்கு உவப்பாகின்ற நல்ல மலர்களையே பறிப்பர்; பிற மலர்களைப் பறியார். இவற்றையெல்லாம் நேரிற் கண்டும் நல்லறிவில்லாதார் இளமைக்காலத்திற்றானே சிவனை வழிபட்டு சிவபுத்திரராய் விளங்கும் வழியை அறிகின்றிலர்.

விளக்கவுரை

'அலர்' என்பது, இசையெச்சத்தால், 'தேன் நிறைந்த மலர்' எனப்பொருள் தந்தது. 'அன்னம் தாமரையைக் கண்டு மறுகா; நீலம் குறுகா' எனக் கூட்டுக. மறுகுதல் - வருந்துதல்; வெறுத்தல். அஃது இன்மை விரும்புதலை உணர்த்திற்று. 'அரன் நெறி சேரகிலார்' எனப் பின் வருதலின், நறுமலர் கொய்வார் அந்நெறியைச் சேர்ந்தோராதல் அறியப்படும். 'சிறுகால்' என்பது 'முன் நேரம்' எனப் பொருள் தந்து இளமைப் பருவத்தைக் குறிக்கும்.

'கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்கால் துயராண் டுழவார்' *1*

என்பதனானும் அறிக. 'சிவ புத்திரராதற்கு இளமைப் பருவம் மிக ஏற்புடைத்து' என்றற்கு, 'சிறுகால் சேரகிலார்' என்றார்.

'முன்னடைந்தான் சம்பந்தன்' *2* என ஞான சம்பந்தர் தாமே அருளியவாறும், சேய்ஞலூர் பிள்ளையாரும் அங்ஙனமே ஆயின வாறும், 'முன் இளங் காலத்திலே பற்றினேன்' *3* எனப்பிறரும் அருளியவாறும் இங்கு நினைவு கூரத்தக்கன.

இதனால், கிரியை இளமைக் காலத்தேயும் கொள்ளத் தக்கதாய்ச் சற்புத்திர மார்க்கமாதல் கூறப்பட்டது.

அருங்கரை யாவ தரனடி நீழல்
பெருங்கரை யாவது பிஞ்ஞகன் ஆணை
வருங்கரை ஏகின்ற மன்னுயிர்க் கெல்லாம்
ஒருங்கரை யாய்உல கேழின் ஒத்தானே. *#1472*

பிறவிக் கடலுக்கு காணுதற்கு அரிய கரையாய் உள்ளது அரனது

திருவடி நிழலே. உலகில் உயிர்கள் ஒழுக வேண்டிய நெறிமுறையாகச் சொல்லப்படுவது அவனது ஆணையே. அவ் வாணையின்வழி அவனது திருவடி நிழலாகிய கரையை நோக்கிச் செல்கின்ற உயிர்கள் பலவற்றிற்கும் தொகை நிலையாய் அமைந்த ஒரு பேரரசினை உடையவனாய், அனைத்துலகின் மேலும் கோட்டம் இன்றி ஒருபடித்தான கருணையையே யுடையவனாய் அரன் இருக்கின்றான்.

விளக்கவுரை

ஆகவே, 'உயிர்கள் யாவும் அவ்வரசன் மைந்தரே யாய் இருந்தும், அதனை அறியாமல் மயங்குகின்றன' என்பதாம்.

'மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது' *1*

என்றமை காணத்தக்கது. 'உயிர்களாகிய மைந்தர்க்கெல்லாம் பெரு நிலையையும், பெருநலத்தையும் தருகின்ற பேரரசத் தந்தை அரன்' என்பது கூறுவார், 'அவனது திருவடி நிழலே உயிர்கள் அடையும் இடம்' என்பதும் அதனை அடையுமாறும் உடன் கூறினார். 'அவ்வடி நீழல்' என்பது பாடமன்று. 'பெருங்கரை' என்பதில் கரை. 'வரம்பு' என்னும் பொருளாய், ஒழுகும் நெறியைக் குறித்தது. அந்நெறியை இறைவன் தன் ஆணையாக வகுத்து வைத்திருத்தலை இரண்டாம் அடியிற் குறித்தார். 'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி' *2* எனத் திருவள்ளுவரும் கூறினார். 'அரசாய்' என்பது, 'அரைசாய்' எனப் போலியாய்ப் பின், 'அரையாய்' என நின்றது.

இதனால், எஞ்ஞான்றும் உயிர்கள் இறைவன் மைந்தராய் இருக்கும் உரிமையுடைமையின் கிரியை இளமைக் காலத்தில் மறந் தொழியினும் பின்னராயினும் அறிந்து மேற்கொள்ளுதற்கு உரித்தாய்ச் சற்புத்திர மார்க்கமாதல் கூறப்பட்டது.

உயர்ந்தும் பணிந்தும் உகந்தும் தழுவி
வியந்தும் அரனடிக் கேமுறை செய்மின்
பயந்தும் பிறவிப் பயன்அது வாகும்
பயந்து பரிக்கிலர் பால்நவை யாமே. ***#1473***

அரனது திருவடிகளின் நேரேநின்றும், வீழ்ந்தும், மனம் விரும்பியும், கைகளால் பிடித்தும், புகழ்ந்தும் முறைப்படி வழிபாடு செய்யுங்கள். அம்முறையீடு உலகப் பயனையும் தருவதா யினும், மானுடப் பிறப்பின் பயனாகிய வீடு பேற்றைத் தருவது அஃது ஒன்றே, ஆதலின், அதனை மேற்கொள்ள அஞ்சி ஒழிவாரிடத்தில் குற்றம் வந்துதங்குவதாம்.

விளக்கவுரை

'தழுவி' என்புழியும் எண்ணும்மை விரிக்க. 'முறை' என்பது அதன்

வழிபட்ட செயலைக் குறித்து. 'விதி' என ஓதினுமாம். பிறவற்றைப் பயந்தும், என்பது 'பிறவிப் பயன்' என்றதனால் போந்தது. ஈற்றடியைப் பிறவாறும் பாடம் ஓதுவர்.
இதனால், கிரியை இறைவன் மைந்தராகிய மக்கட் பிறப்பினர் யாவரும் தவறாது மேற்கொள்ளற்பாலதாய்ச் சற்புத்திர மார்க்கமாதல் கூறப்பட்டது.
'யாவர்க் குமாம்இறை வற்கொரு பச்சிலை' *1*
என இந்நாயனாரும்,
'உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில் ... ...
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே' *2*
என்று திருநாவுக்கரசு நாயனாரும் அருளினமை அறிந்து போற்றற் குரியது.
'எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம்விரும்பும்
உண்மை யாவது பூசனை என உரைத்தருள' *1*
என்றே சேக்கிழாரும் கூறினார்.

நின்று தொழுவன் கிடந்தெம் பிரான்றன்னை
என்றுந் தொழுவன் எழிற்பரஞ் சோதியை
துன்றுமலர் தூவித் தொழுமின் தொழுந்தொறுஞ்
சென்று வெளிப்படுந் தேவர் பிரானே. ***#1474***

எம் பெருமானாகிய சிவனை யான் அவன் முன்னே, நின்றும், கீழே வீழ்ந்தும் மிகுந்த மலர்களைத் தூவி வணங்குவேன். இஃது ஒருகாலத்தில் மட்டுமன்று; எக்காலத்துமாம். இவ்வாறு தொழு வாரிடத்தில் அவர் தொழுந்தோறும் தேவர் தலைவனாகிய சிவபிரான் சென்று வெளிப்பட்டு நிற்பான். அதனால், நீங்களும் அவனை அவ்வாறு வணங்குங்கள்.

விளக்கவுரை

தம்மை அடுத்தார்க்கு மலர் தூவித்தொழுமாறு பணித் தமையால், தாமும் அவ்வாறு தொழுதல் பெறப்பட்டது. 'என்றும்' என்றது, 'யோக ஞானங்கள் கைவந்த பின்னும்' என்றவாறு.
இதனால், கிரியை சிவனை வெளிப்படக் காணும் பயனைத் தருவதாய்ச் சகமார்க்க சன்மார்க்கங்களை அடைந்தோர்க்கும் ஒழியலாகாத சற்புத்திர மார்க்கமாதல் கூறப்பட்டது. இந்நாயனார் இம் மந்திரத்தில் தம் செய்கையை எடுத்துக் கூறினமையே இதற்குப் போதிய சான்றாகும். மற்றும் 'புறம்பேயும் அரன்கழல்கள் பூசிக்க' *2* என்றற் றொடக்கத்தனவாகச் சாத்திரங்களிலும், வரும் உரையளவை களும், நால்வர் ஆசிரியர் முதலியோரது ஒழுகலாறுகளுமாகிய சான்றுகள் பலவும் நோக்கி உணர்க.

திருமன்னும் சற்புத்திர மார்க்கச் சரிதை

உருமன்னி வாழும் உலகத்தீர் கேண்மின்
கருமன்னு பாசங் கைகூம்பத் தொழுது
இரும்மன்னும் நாடோறும் இன்புற் றிருந்தே. *#1475*
மக்கள் உடம்பிற் பொருந்தி வாழ்கின்ற உலகத் தவரே! சிவனாகிய தந்தைதன் செல்வத்தில் பொருந்தி வாழ்தற்குரிய சற்புத்திர மார்க்கத்தின் மரபினைக் கூறுகின்றேன்; கேளுங்கள். பிறவிக்கு ஏதுவாய் நிலைபெற்றிருக்கின்ற ஆணவ மலம் தனது செயல் மடங்கி நிற்குமாறு உங்கள் இருகைகளும் ஒன்றாய்ச் சேர்ந்து குவியும் படி சிவனைத் தொழுது, என்றும் இன்பத்திலே பொருந்தியிருங்கள்.

விளக்கவுரை

'கைகூம்ப' என்பதனை இரட்டுற மொழிந்து பாசத்திற்குச் 'செயல் மடங்க' எனவும், தொழுவார்க்கு, 'கைகள் குவிய' எனவும் உரைத்துக் கொள்க. கை செயலாதல், 'கையறுதல்' என்னும் சொற் பற்றியும் அறியப்படும். ஆணவம் செயல் மடங்குதல் ஆவது, தன் சத்தி மடங்கி நிற்றல். தொழுதல், மலர் தூவித் தொழுதலாம். இதனை, 'கைகாள் கூப்பித் தொழீர்;- கடி - மாமலர் தூவி நின்று'*1* என்பதனாலும் அறிக. 'இது செய்யாதார் வாளா பொழுது போக்குபவராவார்' என்பதை,
'தொழுது தூமலர் தூவித் துதித்துநின்
றழுது காமுற் றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே' *2*
என்னும் நாவக்கரசர் திருமொழியால் உணர்க. ஈற்றடியில் உள்ள 'மன், உம்' அசைகள். 'உற்றிருந்து' என்பது ஒரு சொல்.
இதனால், சற்புத்திர மார்க்கத்தது முறையும், பயனும் சுருங்கக் கூறி, அது வலியுறுத்தப்பட்டது.

7.12. தாச மார்க்கம்

எளியநற் றீபம் இடல்மலர் கொய்தல்
அளியின் மெழுகல் அதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிபணி பற்றல் பன்மஞ்சன மாதி
தளிதொழில் செய்வது தான்தாச மார்க்கமே. *#1476*
திருக்கோயிலில் விளக்கிடுதல், மலர்களைக் கொய்து கொடுத்தல், தொடுத்துக் கொடுத்தல், அலகிடல் மெழுகல், துதி பாடல், ஊர்தி சுமத்தல், பலவகைத் திருமஞ்சனப் பொருள்களைக் கொணர்ந்து கொடுத்தல் முதலிய எளிய பணிகளைச் செய்தல், தாச மார்க்கம், தொண்டர் நெறியாகும்.

விளக்கவுரை

'எளியன' என்பதை ஈற்றடியின் முதலிற் கூட்டி உரைக்க. எளிமையாவது, மன ஒருக்கம், பொறியடக்கம் முதலியன செய்ய வேண்டாமை. தளி - கோயில். இதனைக் குறிக்கும் 'அது' என்னும் சுட்டுப்பெயர் செய்யுளில் முன் வந்தது. தூர்த்தல் - குப்பைகளைப் போக்கல்; அஃதாவது அலகிடல். பள்ளி - இருக்கை. சிவிகை முதலிய ஊர்திகள்; இஃது இடைக் குறைந்து நின்றது. அதற் குரிய பணியாவது சுமத்தல். 'தளித்தொழில்' என்பதில் தகரவொற்றுத் தொகுத்தல் பெற்றது. 'தான்' என்பது கட்டுரைச் சுவைபட நின்று, 'புறத்தொழில் மாத்திரையால் சேய்மையில் நின்று செய்தலால் சரியை தாச மார்க்கமாயிற்று' என்பது விளக்கி நின்றது.

இதனால், 'சரியைத் தொண்டாவன இவை' என விளக்கும் முகத்தால், சரியை தாசமார்க்கமாதல் கூறப்பட்டது.

அதுவிது ஆதிப் பரமென் றகல்வர்
இதுவழி சென்றங் கிறைஞ்சின ரில்லை
விதிவழி யேசென்று வேந்தனை நாடும்
அதுவிதி நெஞ்சில் அளிக்கின்ற வாறே *#1477*

'அந்தத் தெய்வம் முதற்கடவுள், இந்தத் தெய்வம் முதற்கடவுள்' என்று பலவான எண்ணங்களைக் கொண்டு பலர் சிவனை அடையாது நீங்குவர். அதனால், 'சிவனை அடைவதே உய்யும் நெறி' என்று தெரிந்து, அவனை வணங்குவார் அரியர். 'எல்லாத் தேவர்க்கும் தலைவன் சிவபெருமான்' என்பது வேதாகமங் களை உணரின் தெளிவாம். ஆதலால், அம்முறையே சென்று அவனையே விரும்பி அடையுங்கள். அவ்வாறு அடையும் முறையே மக்கள் உள்ளத்தில் பொருந்தி நிற்கும்படி ஆன்றோர் உணர்த்துகின்ற நெறியாகும்.

விளக்கவுரை

'வேந்தனை' என்பது பின்னர் வருதலால், வாளா, 'இறைஞ்சினரில்லை' என்றார். 'வேந்தன்' என்று, முன் 'அது, இது' எனச்சுட்டிய தெய்வங்கட்கு வேந்தனை என்றவாறு. 'விதி' என்றது, சிறப்புப்பற்றி வேதாகம விதியையே குறித்தது. 'அதன் வழியே சென்று நாடும்' என்றதனால், அது சிவனே வேந்தனாதலை இனிது விளக்கி நிற்றல் பெறப்பட்டது. ஈற்றடியைப் பிறவாறு ஓதுவன பாடம் அல்ல.

இதனால், 'சிவனுக்குரிய தொண்டுகளைச் செய்தலே, தொண்டர் நெறி' என்பது ஆன்றோர் துணிபாதலை விளக்கும் முகத்தால், சரியையே தாசமார்க்கமாதல் கூறப்பட்டது.

அந்திப்பன் திங்கள் அதன்பின்பு ஞாயிறு
சிந்திப்பன் என்றும் ஒருவன் செறிகழல்
வந்திப்பன் வானவர் தேவனை நாடொறும்

வந்திப்ப தெல்லாம் வகையின் முடிந்ததே. *#1478*

நான் முதலில் இடநாடியின் வழியும், பின்பு வல நாடியின் வழியும் பிராண வாயுவை அடக்கியும், விட்டும் ஒப்பற்ற ஒருவனாகிய சிவனது திருவடிகளை என்றும் தியானிப்பேன். பின்பு அவனைப் புறத்திலும் சில இடங்களில் கண்டு வழிபடுவேன். இவை எல்லாமும் இங்குக் கூறிய தாசமார்க்கத்தில் இயன்றன.

விளக்கவுரை

அந்தித்தல் - அடக்குதல். இதனை, 'ஞாயிறு' என்ப தற்கும் கூட்டுக. திங்கள் - சந்திர கலை. ஞாயிறு - சூரிய கலை. 'மந்திர செபம், தியானம்' என்பவையும் பிராணாயாமத்தோடு கூடியவழிச் சிறந்து நிற்றலை முதல் இரண்டடிகளில் கூறியவாறு. புறத்தே சிவனை வழிபடும் இடங்களில் ஞாயிற்று மண்டலம் இங்கு முதற்கண் கொள்ளத் தக்கது. வகை, தாசமார்க்கமாதல் அதிகாரத்தால் பெறப்பட்டது. சரியை யாகிய தாசமார்க்கத்தில் நிற்போர் சமயதீக்கை பெற்று மூல மந்திர செபம், சதாசிவத் தியானம், கதிர் வழிபாடு என்பவற்றை நாள்தோறும் தவறாது செய்வராயின், அவரது சரியைத் தொண்டு பொதுவாய் ஒழியாது சிறப்பாய் விளங்கிப் பயன் தரும் என்றவாறு.

இதனால், தாச மார்க்கம் சிறப்பு நிலை எய்துமாறு கூறப் பட்டது.

அண்ணலை வானவர் ஆயிரம் பேர்சொல்லி
உன்னுவர் உள்மகிழ்ந் (து) உள்நின் றடிதொழக்
கண்ணவன் என்று கருது மவர்கட்குப்
பண்ணவன் பேரன்பு பற்றிநின் றானே. *#1479*

சிவனைத் தேவர்கள் ஆயிரம் பெயர்களைச் சொல்லி உளம் மகிழ்ந்து போற்றித் தியானிப்பர். அவர் அவன்பாலே நின்று அங்ஙனம் செய்யினும் அவன் தன்னைத் தமக்குக் கண்போலச் சிறந்தவன் எனக் கருதி, அன்பும், ஆர்வமும் கொண்டு வழிபடுகின்ற அடியவரது உள்ளத்தில் நீங்காது நின்று, அவர்கள்பாலே பேரருள் உடையவனாகின்றான்.

விளக்கவுரை

தேவர்கள் ஆயிரம் பெயர்களைச் சொல்லிப் போற்றுதலை,
'பேரா யிரம் பரவி வானோர் ஏத்தும் - பெம்மானை' *1*
என அப்பரும் எடுத்தோதியருளினார். தேவர்கள் எத்துணைப் பணி வுடையராயினும், 'யாம் தேவர்' என்னும் செருக்கு முற்றிலும் நீங்கப் பெறாமையின், அச் செருக்குச் சிறிதும் இல்லாத அடியார்களிடத்தே சிவன் மிக்க கருணையுடையவனாய் இருக்கின்றான் என்பதாம்.
'கனவிலும் தேவர்க் கரியாய் போற்றி

நனவிலும் நாயேற் கருளினை போற்றி' *2*
'தேவர் கனாவிலும் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள்' *3*
என்பவனவற்றையும் நோக்குக. 'உள்மகிழ்ந்து உன்னுவர்' என மாற்றிக்கொள்க. 'தொழவும்' என்னும் சிறப்பும்மை தொகுத்த லாயிற்று. தேவ இனத்தராய் அருகணைதல் பற்றி 'உள் நின்று' என்றார். 'பண்ணவன்' என்பது சுட்டுப் பெயரளவாய் நின்றது. இரண்டாம் அடி இன எதுகை.
இதனால், சிறப்பு நிலைத் தாச மார்க்கமும் செருக்கு நீங்கி அன்போடு கூடியவழியே பெரும் பயன் தருவதாதல் கூறப்பட்டது.

வாசித்தும் பூசித்தும் மாமலர் கொய்திட்டும்
பாசிக் குளத்தில்வீழ் கல்லாம் மனம் பார்க்கின்
மாசற்ற சோதி மணிமிடற் றண்ணலை
நேசித் திருந்த நினைவறி யாரே. ***#1480***

சிவபெருமானது புகழைக் கூறும் நூல்களை ஓதுதல், இயன்ற வகையில் சிவனை வழிபடுதல், மலர் கொய்து கொடுத்தல் முதலிய தொண்டுகளைச் செய்தல் என்னும் இவை போல்வனவற்றைச் செய்யினும், கல் வந்து விழப்பட்ட பாசிக் குளம் அக் கல்வீழ்ச்சியின் வேகம் உள்ள துணையும் பாசி நீங்கி நின்று, பின் பாசியுடையதாய் விடுதல் போல, மனத்தின் இயல்பை ஆராயுமிடத்து அத் தொண்டு களில் ஈடுபடும் துணையும் அஃது ஐம்புல ஆசையின் நீங்கி நின்று, பின் அதனை உடைத்தாய்விடும். அப்பொழுது மக்கள் சிவன்பால் அன்பு கொண்டிருக்கும் நிலை இல்லாதவராவர்.

விளக்கவுரை

'ஆதலின், புறத்தொண்டு இல்லாதபொழுதும், செபம், தியானம் என்ற இவற்றை யுடையராதல் யாவர்க்கும் நன்று' என்பது குறிப்பெச்சம். 'பாசிக் குளத்தில் வீழ் கல்லாம் மனம்' என்றா ராயினும், 'கல்வீழ் பாசிக் குளமாம் மனம்' என மாற்றியுரைத்தல் கருத்தென்க.
'பாசிபடு குட்டத்திற் கல்லினைவிட் டெறியப்
படும்பொழுது நீங்கி அது விடும்பொழுதிற் பரக்கும்' *1*
என்றார் சிவஞான சித்தியிலும். இரண்டாம் அடி யிறுதியில் 'அவ்விடத்து' என்னும் சொல்லெச்சம் வருவிக்க.
இம்மந்திரம் பின்வருமாறும் ஓதப்படுகின்றது:-
'வாசித்தும் பூசித்தும் மாமலர் கொய்திட்டும்
பாசக் கிணற்றினில் வீழ்கின்ற பாவிகாள்
மாசற்ற சோதி மணிமிடற் றண்ணலை
நேசித் திருக்க நினைவறி யீரே.'

இது கொள்ளப்படுமாயின், இரண்டாம் அடியை முதல் அடியாகக் கொண்டு ஓதிக் கொள்ளுதல் நன்று.
இதனால், 'சிவனை எஞ்ஞான்றும் மறவாதிருக்க முயலல் வேண்டும்' என்பது, இறுதிக்கண், நான்குமார்க்கத்திற்கும் பொதுமை யாக வைத்துக் கூறப்பட்டது.

*7.13.*சாலோக மாதி

சாலோகம் ஆதி சரியா தியிற்பெறும்
சாலோகம் சாமீபம் தங்கும் கிரியையால்
சாலோகம் சேரில் வழிஆகும் சாரூபம்
பாலோக மில்லாப் பரனுறு ஆமே. *#1481*

சாலோகம் முதற் பயன் அது சரியையாகிய முதல் நெறியாற் பெறப்படுவதாகும். கிரியையாகிய நெறியால் அந்தச் சாலோகப் பயனில் சாமீபப்பயன் உண்டாகும். சாலோகத்தில் சாமீபம் கிடைத்தால் அதன் பின் சாரூபம் வரும். முடிவாக விரிந்த பல உலகங்களில் யாதொன்றிலும் இல்லாது பரசிவத்தோடே ஒன்றாகின்ற பயன் கிடைப்பதாம்.

விளக்கவுரை

'லோகம்' என்பது சிறப்புப் பற்றிச் சிவலோகத்தையே உணர்த்தலின், 'சாலோகம்' என்பது சிவலோகத்தை அடைந்து அங்கு எவ்விடத்தும் செல்லும் உரிமையைப் பெறுதலாம். 'பெறும்' என்றது, 'பெறப்படும்' என்றதாம். ஏனைச் சாமீப சாரூபங்களும் அவ்வுலகத்தில் பெறும் பயனே யாதலின், அவற்றை, 'சாலோகம் தங்கும்' எனவும், 'மாலோகம் சேரில் ஆகும்' எனவும் கூறினார். இரண்டாம் அடியில், 'சாலோகத்துக்கண்' என உருபு விரிக்க. இவ்வடியில், 'சரியையால்' என்பது பாடம் அன்று. மூன்றாம் அடியிலும் அவ்வாறே 'மாலோகத்துக்கண்' என உருபு விரித்துக் கொள்க. மாலோகம் - பெரிய உலகம்; சிவலோகம் 'சேரில்' என்பதற்கு, 'சாமீபம்' என்னும் வினைமுதல் மேலையடியினின்றும் வருவிக்க. வழி - பின்பு. பரன் - பரசிவன். அவன் உரு ஆதல், அவனோடு ஒன்றாதலாம். இதுவே சாயுச்சம். 'வழி ஆகும்' என்றதனால் 'அஃது யோகத்தால் வரும்' என்பது பெறப்பட்டது. படவே எஞ்சி நின்ற ஞானத்தின் பயனே சாயுச்சமாதல் விளங்கிற்று' சாயுச்சம் - இரண்டறக் கலத்தல். சாலோக முதலிய பயன்கள் மூன்றும் முறையே பணியாளர், மைந்தர், தோழர் என்னும் இவர்கட்கு உள்ள உரிமையோடொத்தலின், சரியை முதலிய மூன்றும் முறையே 'தாசமார்க்கம் சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம்' எனவும் சாயுச்சமே சிறந்தபயனாகலின் ஞானம் 'சன்மார்க்கம்' எனவும் பயன் பற்றிப் பெயர் பெற்றன என்றார் சிவஞான போத மாபாடியம் உடையார்.

இதனால், சரியை முதலிய நானெறியின் பயன் சாலோகம் முதலிய நான்குமாதல் கூறப்பட்டது.

சமயம் கிரியையில் தன்மனம் கோயில்
சமய மனுமுறை தானே விசேடம்
சமயத்து மூலந் தனைத்தேறல் மூன்றாம்
சமயாபி டேகம்தா னாகும் சமாதியே. *#1482*

தீக்கைகளில் சமயதீக்கை சிவனை மனத்தால் நினைக்கப் பண்ணும். விசேடதீக்கை சைவ சமய மந்திரங்கள் பல வற்றை பல முறையில் பயிலப் பண்ணும். மூன்றாவதாகிய நிருவாண தீக்கை சைவ சமயத்தின் முதற் பொருளுளாகிய சிவனது பெருமையை உள்ளவாறுணர்ந்து, 'அவனே முதற்கடவுள்' எனத் தெளியப் பண்ணும். சைவ அபிடேகம் தான் சிவமாயே நின்று பிறர் சிவனது திருவருளைப் பெறும் வாயிலாய் விளங்குப் பண்ணும்.

விளக்கவுரை

இங்கு, 'கிரியை' என்றது, சிவனது கிரியா சத்தியின் செயற் பாடாகிய தீக்கையை. இதனை முதலில் வைத்து, எல்லா வற்றோடும் கூட்டி உரைக்க. மனத்தைக் கோயிலாக்குதலாவது, சிவனைப் புறத்தில் பல வடிவங்களில் கண்டு தொழுதல் மாத்திரையான் அன்றி, தியானிக்கும் நெறியைத் தருதல். இதனை 'அனுட்டானம்' எனப. பல மந்திரங்களைப் பல வகையில் பயிலல் எனவே, 'கிரியை, யோகம்' என்னும் இரண்டும் அடங்கின. தான் சிவமாய் நின்று பிறரும் திருவருள் பெறுதற்கு வாயிலாவது ஞானா சிரியனாய் விளங்குதலாம். 'சரியை முதலிய நான்கும் சமயம் முதலிய தீக்கைகளால் இங்ஙனம் ஒன்றின் ஒன்று உயர்ந்த நிலையை உடைய ஆதலின், பின்னர் அவற்றால் விளையும் பயனும் அன்னவாயின' என்றவாறு.

இதனால், மேற்கூறிய நெறிகட்கும், அவற்றின் பயன்கட்கும் உளவாய இயைபு கூறப்பட்டது. அபிடேகம் பெறாதோரும் ஞானியராய்ச் சாயுச்சம் பெறுவராயினும், அவரினும் ஆசிரியராய் விளங்கினோர் பிறரையும் உய்விக்கும் சிறப்புடையர் என்றற்கு அவரையே சாயுச்சம் பெறுவார்போலக் கூறினார்.

பாசம் பசுவான தாகும்இச் சாலோகம்
பாசம் அருளான தாகும்இச் சாமீபம்
பாசம் சிவமான தாகும்இச் சாரூபம்
பாசங் கரைபதி சாயுச் சியமே. *#1483*

சாலோகம், மாயா கருவிகள், தாமே உயிர் என்று உயிரை மருட்டி அதனைத் தம் வயப்படுத்தியிருந்த நிலை நீங்கித் தாம் அதனின் வேறாய சடங்களாதலைத்தோற்றி, அதன்வயப்பட்ட நிலையை உடையது.

சாமீபம், அக்கருவிகள் அருள்வயப்பட்டதாய் உயிர் இறைவனை அணுகுதற்குத்துணை செய்து நிற்கும் நிலையை உடையது. சாரூபம், அக்கருவிகள் சிவமயமாய் உயிருக்குச் சிவானந்தத்தைத் தரும் நிலையை உடையது. சாயுச்சம், அக்கருவிகள் யாவும் கழிய, உயிர் தான் நேரே சிவனைக் கூடியிருக்கும் நிலையை உடையது.

விளக்கவுரை

மூன்றாம் அடியில், *'சிரமானது'* என்பது பாடம் அன்று. *'பதி'* என்பது, *'பதியோடு ஒன்றாய் இருக்கும் நிலை'* எனப் பொருள் பட்டு, *'பழம் உதிர்ந்த கோடு'* என்பது போல நீக்கப் பொருட்டாய வினைத் தொகையாய்க் *'கரை'* என்பதனோடு தொக்கது. *'ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள'1* என்ற அனுபவநிலை. பாசம் அருளானதாதலை ஓர்ந்துணர்ந்துகொள்க.

இதனால், சரியை முதலியவற்றின் பயனாய சாலோகம் முதலிய நான்கின் இயல்பு வேற்றுமை கூறப்பட்டது.

*7.14.*சாரூபம்

தங்கிய சாரூபந் தான் எட்டாம் யோகமாம்
தங்கும் சன் மார்க்கம் தனிலன்றிக் கைகூடாது
அங்கத் தடல் சித்தி சாதன ராகுவர்
இங்கிவ ராக இழிவற்ற யோகரே. ***#1484***

சாலோக சாமீபங்கட்கு மேலே பொருந்தியுள்ள சாரூபம் அட்டாங்க யோகங்களுள் எட்டாம் நிலையாகிய சிவ சமாதி கைவரப் பெற்றோர்க்கே கிடைப்பதாம். அந்தச் சாரூப நிலையினராய முதிர்ந்த யோகியர்க்கு அல்லது அதற்கு மேலே உள்ள சன்மார்க்க மாகிய ஞானம் உண்டாக மாட்டாது. மேலும் அட்ட அங்கங்களும் நிரம்பிய இந்த யோகத்தாலே காய சித்தியும் உண்டாகும். அதனால், இம்மையில் காய சித்தியும், மறுமையில் சாரூபமும் பெறுபவரே குறைவற்ற யோகத்தைப் பெற்றவராவர்.

விளக்கவுரை

'எட்டாம் யோகத்தால்' எனவும், *'அங்கத்தால்'* எனவும் உருபு விரித்துக் கொள்க. *'அங்கம்'* என்றது அவற்றை முற்ற உடைய யோகத்தை குறித்த ஆகுபெயர். *'தனில்'* என்றது, யோகத்தையே குறித்தது, *'ஆவர்'* என ஓதற்பாலதனை,*'ஆக'* என விதியாக ஓதினார். அன்றி *'ஆவர்'* என்றே பாடம் ஓதலுமாம்.

இதனால், சாரூபம் வருமாறும், அவ்வாற்றானே பிற பயன்கள் கிடைத்தலும் கூறப்பட்டன. *'சன்மார்க்கம் தனில் அன்றிக் கை கூடாது'* என்றதனால், *'சரியை முதலிய மூன்றற்கும் உண்மைப் பயன் ஞானமே'*

என்பதும், 'சாலோகம் முதலியவை இடைநிலைப் பயன்களே' என்பதும் போந்தவாறு அறிந்துகொள்க.

சயிலலோ கத்தினைச் சார்ந்த பொழுதே
சயிலமா தாகும் சராசரம் போலப்
பயிலுங் குருவின் பதிபுக்க போதே
கயிலை யிறைவன் கதிர்வடி வாமே. ***#1485***

பொன்மலையைச் சார்ந்த சராசரங்கள் யாவும் பொன்னேயாய் விளங்குதல்போல், திருக்கயிலாய மலையில் கல்லால் நிழலில் தென்முகக் கடவுளாய் நீங்காதிருந்து ஞான நெறியைத் தக்கார் வழியாக உலகிற்கு என்றும் அளித்து வரும் சிவபிரான் வீற்றிருந் தருளுகின்ற சிவபெருமானது உலகத்தை அடைந்த யோகிகளது உருவம் கயிலையில் மேற்கூறியவாறு வீற்றிருந்தருள்கின்ற பெரு மானது ஒளி பொருந்திய உருவத்தோடு ஒத்த உருவமேயாகிவிடும்.

விளக்கவுரை

உவமை, 'கதிர்வடிவாம்' என்பது. அதனோடு ஒன்றேயாய் அதுவாகிவிடாது, அதனோடு ஒத்த தாம் என்பது விளக்கி நின்றது 'லோக சயிலத்தினை' என மாற்றி உரைக்க. 'அச்சயிலம தாகும்' எனச் சுட்டியுரைக்க, உலோகம், இங்கு,பொன். முன்னர், 'பொற் சயிலம்' என்றதனால், பின்னர், 'அச்சயிலம்' என்பது, 'பொன்' என்னும் பொருட்டாய் நின்றது. பொன் மலையைச் சார்ந்தன யாவும் பொன்னாய் விளங்குதலை,

'கனக மலையருகே - போயின காக்கையும் அன்றே படைத்தது பொன்வண்ணமே' *1*

என்னும் பொன்வண்ணத் தந்தாதியானும் அறிக. 'புக்க போதே' எனப் பொதுப்படக் கூறினாரேனும், யோகத்தால் ஒன்றிப் புக்க பொழுது' என்பது, 'சார்ந்த பொழுதே' என்ற உவமையிற் போந்த சார்ச்சி வகை யால் பெறப்பட்டது. படவே, கதிர்வடிவாதல் அவரது உருவமேயாதல் விளங்கிற்று. இவ்வுலகரும் தன் உலகத்தை அடைதற் பொருட்டுச் சிவபெருமான் அருள்புரியுமாற்றை உணர்த்தற்கு, 'பயிலுங்குருவின் பதி' எனவும், 'கயிலை இறைவன்' எனவும் அருளிச் செய்தார்.

'மண்ணுல கிற்பிறந்து - நுமை - வாழ்த்தும் வழியடியார் பொன்னுல கம்பெறுதல் - தொண்ட - னேன்இன்று [கண்டொழிந்தேன்' *2*

என்று அருளிச்செய்ததும் காண்க.

இதனால், சாரூபத்தினது இயல்பு உவமையின் வைத்து விளக்கப்பட்டது.

*7.15.*சாயுச்சம்

சைவம் சிவனுடன் சம்பந்த மாகுதல்
சைவம் தனையறிந் தேசிவம் சாருதல்
சைவம் சிவமன்றிச் சாராமல் நீங்குதல்
சைவம் சிவானந்தம் சாயுச் சியமே. ***#1486***

'சைவம்' என்னும் சொல்லின் பொருள் 'சிவனுடன் தொடர்புற்று நிற்றல்' என்பது, ஆகவே, சீவன்தான் சிவனது அடிமை என்னும் உண்மையை உணர்ந்து அவனைச் சார்ந்து நிற்றலே நிறை வான சிவநெறியாம். சிவனைச் சார்ந்து நின்றபின்னும் அவனை யன்றிப் பிறிதொன்றையும் சாராது அற விடுத்தலும் அந்நெறி நிறை வுடையதாதற்கு இன்றியமையாதது. அத்தகைய நிறைவான சிவ நெறி யின் பயன் சிவனது பேரின்பமே. அவ்வின்பத்தைப் பெற்று அதில் மூழ்கியிருக்கும் நிலையே சாயுச்சமாம்.

விளக்கவுரை

மூன்றாம் அடியில், 'சிவந் தன்னை' என ஓதுதல் பாடம் அன்று.
இவ்வடியை, 'சைவம் பசுபாசம் சாராமல் நீங்குதல் - (அல்லது) நீவுதல்' எனவும் ஓதுவர்.
இதனால், 'சிவநெறியின் முடிந்த பயன் சாயுச்சமே' என்பது பல்லாற்றானும் வலியுறுத்தப்பட்டது.

சாயுச் சியஞ்சாக்கி ராதீதம் சாருதல்
சாயுச் சியம்உப சாந்தத்துள் தங்குதல்
சாயுச் சியஞ்சிவ மாதல் முடிவிலாச்
சாயுச் சியம்மனத் தானந்த சத்தியே. ***#1487***

சாயுச்சம், சீவன் முத்தி நிலையில் சாக்கிராதீதமாய் அமைதியிற்படுத்தி, சிவம் அன்றிப்பிறிதொன்றும் தோன்றாமல் சிவம் ஒன்றையே தோற்றுவித்து, அறிவின்கண் சிவனது குணமான எல்லையில் இன்ப வெள்ளத்தைத் தந்து நிற்கும்.

விளக்கவுரை

இவற்றைப் படிமுறையால் வேறு வேறு தொடராக ஓதினாரேனும் அவற்றை ஒருங்கெண்ணித் தொகுத்தல் கருத்து என்க. 'முடிவிலா' என்பதனை 'ஆனந்தம்' என்பதற்கு முன் கூட்டுக. மனம், கருவியாகுபெயர். குணத்தை 'சத்தி' என்றார்.
இதனால், சிவநெறியின் முடிந்த பயன் இம்மையிற்றானே பெறப்படுதல் கூறப்பட்டது.
'மூதறிவார்க்கு - அம்மையும் இம்மையே யாம்' *1*
என்பது திருவருட்பயன். இந்நிலை எய்தினாரையே, 'சீவன்மூத்தர்',

எனவும், 'அணைந்தோர்' எனவும் கூறுவர்.

*7.16.*சத்திநிபாதம்

இருட்டறை மூலை யிருந்த கிழவி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
னருட்டி அவனை மணம்புணர்ந் தாளே. ***#1488***
இதன் சொற்பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

இஃது ஒட்டணியாய், 'இருட்டறை' என்பது ஆணவ பந்தத்தையும் 'மூலையிருந்த' என்றது, தன் இயல்பு தோன்றாது மறைந்திருந்ததையும், 'கிழவி' என்றது அநாதியாய அருட் சத்தியை யும், 'குருடு' என்றது அஞ்ஞானத்தையும்,'கிழவன்' என்பது ஆன்மாவையும், 'குணம் பல' என்றது நிலையாமை உணர்வு, துற வுள்ளம் முதலியவற்றையும், 'மருட்டுதல் என்பது மேற்கூறியவாறு உலகியல் உணர்வில் ஓர் அதிர்ச்சியை உண்டாக்கு தலையும், 'மணம் புணர்தல்' என்பது ஆன்ம அறிவிற் பதிதலையும் உணர்த்தி நின்றன. இருட்டறை மூலையிருத்தல் முதலாகக் கூறிய பலவற்றானும் இது சத்திநிபாதத்தின் முதற்படியின் இயல்பாதல் இனிது விளங்கும். 'கிழவி' என்பதனை, 'குமரி' எனவும் பாடம் ஓதுப.
இதனால், சத்திநிபாதம் முதற்கண் நிகழுமாறு கூறப்பட்டது.

தீம்புல னான திசையது சிந்திக்கில்
ஆம்பு லனாய்அறி வார்க்கமு தாய்நிற்கும்
தேம்புல னான தெளிவறி வார்கட்குக்
கோம்புலன் நாடிய கொல்லையு மாமே. ***#1489***

'உண்மையில் இன்பப் பொருளாய் உள்ள சிவனை அறிந்து அவனை அடையும் வழியை நாடினால், அங்ஙனம் அறிந்து நாடுவோர்க்கு அவன் தான் ஒருவனே இன்பப் பொருளாய்த் தோன்றித் தேவாமுதம்போலத் தித்தித்து நிற்பான். அவ்வாற்றால் அதற்குமேல் அவனது உண்மை நிலையைத் தெளிந்தவர்கட்கு அவன், தனக்கு நல்ல புல்லும், நீரும், நிழலும் உள்ள இடம் யாது என நோக்கிய பசுவிற்கு அங்ஙனமே உள்ளதாய்க் கிடைத்த புனம்போல நின்று எல்லையில் இன்பத்தை அளிப்பான்.

விளக்கவுரை

'புலன்' என்பதனை நான்கிடத்தும் 'புனல்' எனப் பாடம் ஓதுவாரும் உளர். கோ - பசு. 'கோப்புலன்' என்பது எதுகை நோக்கி மெலிந்து நின்றது.

இதனால், இச்சத்திநிபாதம் வரப் பெற்றார்க்குச் சிவானந்த வேட்கை விளைதல் கூறப்பட்டது.

இருள்நீக்கி எண்ணில் பிறவி கடத்தி
அருள்நீங்கா வண்ணமே ஆதி அருளும்
மருள்நீங்கா வானவர் கோனொடுங் கூடிப்
பொருள்நீங்கா இன்பம் புலம்பயில் தானே. *#1490*

'ஆதி' எனப்படும் சத்தி (முற்பக்கத்து நிலவுபோல) ஆணவ இருளை நாள்தோறும் படிமுறையாகப் பல பிறவிகளிலும் நின்று கழித்து, அம்மலம் பரிபாகம் உற்ற காலத்து அருளாகிய தனது இயற்கை தன்னைவிட்டு நீங்கியது போலக் காட்டிய அதனைவிடுத்து அருளேயாதலில் மாறாது நின்று, தனது மறைத்தலினின்றும் நீங்கமாட்டாத தேவர்களை அவரவர்க்கு ஏற்ற நிலையில் வைத்து ஆள்பவனாகிய சிவனோடு நீங்காதுநின்று அழிவில்லாத இன்பத்தை நுகர்தலாகிய நிலையை ஆன்மாவுக்கு அருளுவாள்.

விளக்கவுரை

'ஆதி' என்பதனை முதலில் வைத்து 'எண்ணில் பிறவி கடத்தி' என்பதனை அதன்பின்னரும்,. 'அருளும்' என் பதனை இறுதியிலும் கூட்டி உரைக்க. 'அருள்' என்பது 'அருளாகிய இயல்பு' என்றவாறு. 'நீங்காவண்ணமாய்' என ஆக்கம் வருவிக்க. மருள் - மயக்கம். இது மலங்களின் காரியம். இக்காரியமும் சிவனது சத்தியின்றி நிகழாது. அதனால், அச்சத்தி இதனை நிகழ்த்து விக்கும் நிலையில் 'திரோதானசத்தி' எனப் படுகின்றது. இங்கு, 'ஆதி' என்றது திரோதான சத்தியையே. ஓரிடத்தினின்றும் நீங்கிப் பிறிதோ ரிடத்துச் செல்லுதலினின்றும் நீக்கி, நசித்தலை உணர்த்தற்கு, 'பொருள் நீங்கா' என்றார். புலம் - அறிவு. அஃது ஆகுபெயராய் ஆன்மாவைக் குறித்தது. பயில் - பயிலல். நுகர்தல்; முதனிலைத் தொழிற்பெயர்.
இதனால், சிவனது சத்தி மலபரிபாகம் வருதற்கு முன்பு திரோ தானமாய் நின்று உபகரித்து, பரிபாகம் வந்தபின் அருட்சத்தியாய்ப் பதிந்து உபகரித்தல் கூறப்பட்டது.

இருள்சூ ழறையில் இருந்தது நாடிற்
பொருள்சூழ் விளக்கது புக்கெரிந் தாற்போல்
மருள்சூழ் மயக்கத்து மாமலர் நந்தி
அருள்சூழ் இறைவனும் அம்மையு மாமே. *#1491*

இருள் சூழ்ந்திருந்த அறையில் உள்ள பொருளைக் காணலுறும்பொழுது ஒளிமிக்க விளக்குச் சென்று எரிந்தாற்போல, அறியாமை சூழ்தலால் மயக்கம் பொருந்தி நின்ற உள்ளத்தாமரை யின்கண் சிவன், அருள் மிகுந்து, அப்பனும், அம்மையுமாய் நிற்பான்.

விளக்கவுரை

எனவே, விளக்குச் சென்று எரிந்தபொழுது அந்த அறையில் இருள் நீங்கினாற்போல, இறைவன் அருள் மிகுந்து நின்ற பொழுது உள்ளம் மருள் நீங்கி உண்மையை உணர்தல் பெறப்பட்டது. இது பயன் பற்றிய சுட்டிக்கூறா உவமை. பொருளாவது, இங்கு ஒளி 'மயக்கத்து மலர்' எனவும் 'நந்தி ஆம்' எனவும் இயையும். 'மலரின் கண்' என உருபுவிரித்து, அதனையும், 'ஆம்' என்பத னோடு முடிக்க.

இதனால், முதற் சத்திநிபாதத்தின் இயல்பு உவமையில் வைத்து விளக்கப்பட்டது. முதற் சத்திநிபாதத்தில் சத்தி நிவிர்த்தியாய்ப் பதிந்து, நிலை, நிலையாமை உணர்வைத் தோற்றுவித்து, 'உலகப் பற்றை நீக்கும்' என்பர் சிவாக்கிர யோகிகள்.

1498. இனி ஐந்து மந்திரங்களால் இரண்டாம் சத்தி நிபாதம் உணர்த்துகின்றார்.

மருட்டிப் புணர்ந்து மயக்கமும் நீக்கி
வெருட்டி வினைஅறுத் தின்பம் விளைத்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
அருட்டிகழ் ஞான மதுபுரிந் தாளே. ***#1492***

'இருட்டறை மூலை' என்னும் மந்திரத்திற் கூறியவாறு, ஆன்மாவைத் தன் வயமாக்கிப் பதிந்த சத்தி, பின்பு, ஆன்மாவின் மயக்க உணர்வை முற்றிலும் போக்கி, வினைகளை வெருண்டோட ஓட்டி, அவ்வினைகளால் உளவாகிய அலமரல் நீங்கியதனால் உண்டாகும் அமைதியை உணர்த்தி, சிவனை உணரமாட்டாதிருந்த அந்நிலையை நீக்கி, அவனது அருட்குணங்கள் பலவற்றை உணரப் பண்ணி, அவனது அருளில் விளங்கி நிற்கும் உணர்வைத் தருவாள்.

விளக்கவுரை

அருட் சத்தி தனது முதற் பதிவில் உலகப் பற்று நீங்கச் செய்தபின், 'ஊசல் கயிறற்றால் தாய் தரையே யாந் துணையான்' *1* என்றவாறு, தனது இரண்டாம் பதிவில் சிவனது திருவடியை நோக்கிச் செலச் செய்தலை இவ்வாறு விரித்தார் என்க. 'இரண்டாம் முறையில் சத்தி பிரதிட்டையாய்ப் பதிந்து, மேற்கூறிய நிவிர்த்தி நிலையை நிலை பெறுத்தும்' என்பர் சிவாக்கிர யோகிகள். 'புணர்ந்து' என்றது, 'புணர்ந்தபின்' என்றவாறு. 'குணம்', இங்கு சிவனுடையன. புரிதலுக்கு, 'சத்தி' என்னும் எழுவாய் அதிகாரத்தால் வந்து இயைந்தது.

இதனால், இரண்டாம் சத்திநிபாதத்து இயல்பு கூறப்பட்டது.

கன்னித் துறைபடிந் தாடிய ஆடவர்
கன்னித் துறைபடிந் தாடுங் கருத்திலர்

கன்னித் துறைபடிந் தாடுங் கருத்துண்டேல்
பின்னைப் பிறவி பிறிதில்லை தானே. *#1493*

கன்னியாகுமரிக் கடல் துறையில் மூழ்கி விளை யாடும் மாந்தர் அந்நீர் வடிவாய் நிற்கும் சத்தியின் பதிவில் மூழ்கி விளையாடும் எண்ணத்தினைக் கொள்கின்றாரில்லை. அக்கருத்து அவருக்கு உண்டாகுமாயின், அடுத்து ஒரு பிறவிதானும் உண்டாக மாட்டாது; வீடு பெறுவர்.

விளக்கவுரை

'ஆடிய, ஆடுங் கருத்திலர்' என்ற குறிப்புக்களால், 'கன்னித் துறை' என்பது சொற்பின் வருநிலையாய், இரண்டிடத்தும் வேறு வேறு பொருளைக் குறித்தது.
இதனால், சத்திநிபாதம் வரப்பெற்றார்க்குப் பிறவியறுதல் கூறப்பட்டது. இதுபோல்பவை இவ்வதிகாரத்தின் எப்பகுதியிலும் இயையுடையனவாம்.

செய்யன் கரியன் வெளியன் பசியனென்
றெய்த உணர்ந்தவர் எய்வர் இறைவனை
ஐயனற் கண்ணல் லடுகரி போர்த்தவெங்
கைய னிவனென்று காதல்செய் வீரே. *#1494*

சிவனை யடையும் வேட்கை யுண்டாயினோரே, அவனை, 'சிவப்பன்' என்றோ, 'கறுப்பன்' என்றோ. 'வெளுப்பன்' என்றோ, 'பச்சையன்' என்றோ நன்கு உணரவல்லவராவர். ஆதலால், அவனை, 'நெருப்புமிழுங் கண்களையுடைய பெரிய கொலை யானையை யாவரும் வியக்கும் வண்ணம் உரித்து அத்தோலைப் போர்த்த வெவ்விய கையை உடையவன்' என்று அறிந்து அவனை அடையும் வேட்கையுடையீராகுங்கள்.

விளக்கவுரை

முதலடியின் ஈற்றில் நின்று, முன் வந்த எல்லாவற் றோடும் இயைந்த 'என்று' என்னும் எண்ணிடைச் சொல் விகற்பத் தின்கண் வந்தது. எய்த உணர்தல், அடைய விரும்புதல். எய்வர் - அறிவார். 'ஐ' வியப்பு 'ஐயெனெப் போர்த்த' என்க. கரி, ஆகுபெயர். 'மைவென் றகன்ற பகடுரி போர்த்தவன்' என்பது பாடமாகவும் ஓதுப. யானையை உரித்துப் போத்தமை அவனது எல்லாம் வல்ல தன்மையை வெளிப்படையினாலும், ஐம்புல ஆசையை அறுக்கும் தன்மையைக் குறிப்பினாலும் உணர்த்தி, அவற்றை உணர்தல் அவன் மாட்டு அன்பு நிகழ்தற்கு ஏதுவாதலைக் கொள்ள நின்றது. 'சிவனை அடையும் காதல் உடையவரே அவனை அடைதல் கூடும்; ஆதலின், அக்காதல்

உண்டாதற்கு ஏதுவாய அறிவைப் பெறுங்கள்' என்றவாறு. 'அவ்வறிவும், அதன் வழியான இக்காதலும் சத்திநிபாதத்தால் உண்டாம்' என்பது கருத்து. இரண்டாம் அடியின் ஈற்றில், 'ஆகலான்' என்பது சொல்லெச்சமாய் எஞ்சி நின்றது.

இதனால், சத்திநிபாதம் சிவஞானத்திற்கும், சிவ பக்திக்கும் ஏதுவாதல் கூறப்பட்டது.

எய்திய காலங்கள் எத்தனை யாயினும்
தையலும் தானும் தனிநா யகம்என்பர்
வைகலும் தன்னை வணங்கு மவர்கட்குக்
கையிற் கருமஞ்செய் காட்டது வாமே. *#1495*

'பிறந்து இறந்து உழன்ற காலங்கள் எத்துணையன கழியினும், அவ்வுழலலை நீக்கி நிலைபெறச் செய்யும் தலைவர் சத்தியும், சிவனுமாய அவரன்றிப் பிறர் இலர்' என, அனுபவம் வந்தோர் அறுதியிட்டுரைப்பர். இனித் தன்னை நாள்தோறும் தப்பாது வழிபடுவோர்க்குச் சிவன் கைமேல் பயனைப் பெறுவிக்கின்ற துணைவனாய் விளங்குவான்.

விளக்கவுரை

எய்திய காலங்கள் - சென்ற காலங்கள். யாண்டும், உகமும், கற்பமும் என்னும் இப்பகுதிகள் பற்றி, 'காலங்கள்' எனப் பன்மைப்படுத்து ஓதினார். தனி - ஒப்பின்மை; 'தம்மோடொப்பர் பிறரை இவர்' என்றவாறு. நாயகம் - தலைமை; தலைமை யுடையாரை, 'தலைமை' என்றே உபசரித்து ஓதினார். முன்னர், 'சிவனும்' என்னாது 'தானும்' என்றமையால், பின்னர், 'தன்னை' என்றது சிவனையே யாயிற்று. கருமம் - பயன். காட்டு - காட்டாய் நிற்கும் பொருள். 'அது' பகுதிப் பொருள் விகுதி. காட்டாதற்கு. 'தான்' என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க. 'சத்திநிபாதம்' என்றே கூறப்படினும், சத்தி தனித்து நில்லாமை உணர்த்துவார். 'தையலும் தானும்' என முன்னர்க் கூறிப்பின்னர்க் காட்டாதலைச் சிவன்மேல் வைத்தே கூறினார். சிவாக்கிர யோகிகளும் 'சத்தி தனது பதிவில் நிவிர்த்தி முதலியவளாய் உள்ள பொழுது, சிவனும் நிவிர்த்தீசன், பிரதிட்டேசன், வித்தியேசன் முதலியவனாய் நிற்பன்' என்பர். 'வணங்கும் அவர்கட்குக் காட்டாம்' என்றதனால், இச்சத்திநிபாதம் கிரியையின்வழி மலத்தைப் பாகம் அடைவித்துத் தானும் முதிருதல் பெறப்பட்டது.

இதனால், இரண்டாம் சத்திநிபாதம் கிரியையால் ஆன்மாவை உய்வித்தல் கூறப்பட்டது.

கண்டுகொண் டோம்இரண் டுந்தொடர்ந்தாங்கொளி
பண்டுபண் டோயும் பரமன் பரஞ்சுடர்

வண்டுகொண் டாடும் மலர்வார் சடைஅண்ணல்
நின்றுகண் டார்க்கிருள் நீக்கிநின் றானே. *#1496*
'சந்திர கலை, சூரியகலை' என்னும் இரு வாயுக்களை முறைப்படி தொடருமாற்றால் அவை ஒரு வழிப்பட்டு முடியும் அவ்விடத்தை அடைந்து, அங்குள்ள ஒளியை நாங்கள் கண்டு பற்றிக்கொண்டோம். அவ்வொளியே முன்னே முன்னே பலர் காண முயன்று காணாது இளைத்த பெரியோன்; எல்லா ஒளிகட்கும் மேலான ஒளியாய் இருப்பவன்; *(சிவன்)* அவன் அவ்விடத்தில் நிலைத்து நின்று தன்னைக் காண்பவர்க்கு அஞ்ஞான இருளைப்போக்குவான்.

விளக்கவுரை

'ஆங்கு' எனப்பண்டறி சுட்டாற் குறித்து, ஒளிக் காட்சியைக் கூறினமையால் இஃது யோகத்தை உணர்த்தியதாதலின், 'இரண்டு' என்று இப்பொருட்டாயிற்று. ஆங்கு என்றது, ஆஞ்ஞைத் தானத்தை. மூன்றாம் அடி, 'சிவன்' என்பது உணர்த்தி நின்றது. இரண்டாம் சத்திநிபாதம் தனது முதிர்வில் யோகத்தையும் தருதல் கூறியவாறு. இதனுள் ஈற்றடி இனவெதுகை.

இதனால், இரண்டாம் சத்திநிபாதத்தால் யோகமும் உண்டாதல் கூறப்பட்டது.

அண்ணிக்கும் பெண்பிள்ளை அப்பனார் /கொட்டத்தில்
எண்ணிக்கும் ஏழேழ் பிறவி உணர்விக்கும்
உண்ணிற்ப வெல்லாம் ஒழிய முதல்வனைக்
கண்ணுற்று நின்ற களியது வாமே. *#1497*
இனி, நான்கு மந்திரங்களால் மூன்றாவதாகிய சத்தி நிபாதம் உணர்த்துகின்றார்.
முன் துன்பமாய் நின்ற நிலை மாறி இப்பொழுது இன்பமாய் நிற்கின்ற சத்தி, சிவனால் கட்டிக்கொடுக்கப்பட்ட குடிலாகிய ஓர் உடம்பினுள் நின்று, 'ஏழ்' என்னும் வகையுட்டானே மாறி மாறி வருகின்ற பலவாகிய பிறப்புக்களிலும் உளவாகின்ற துன்பங்களை யெல்லாம் உணரச்செய்வாள். பின் அவ்வுணர்ச்சி காரணமாக உயிரின் அகத்தே யுள்ள பல வகையான விருப்பு வெறுப்புக்களும் ஒழிந்துபோக, முதல்வனாகிய சிவனைக் கண்டு களிக்கும் களிப்புமாவாள்.

விளக்கவுரை

அண்ணித்தல் - இனித்தல். 'எண்ணுவிக்கும்' என்பது திரிபெய்தி நின்றது. 'ஏழ் ஏழ்' ஒருசொல் அடுக்கு. அறிவு உடம்பிட மாக நிகழ்தலின், அறிவின்கண் நிற்றலை உடம்பின்கண் நிற்பதாகக் கூறினார். 'நிலவாத புலால் உடம்பே புகுந்து நின்ற - கற்பகமே'*1* என்ற அப்பர்

திருமொழியையும் காண்க. 'பிறவி' என்பது, விடாத ஆகுபெயர். 'கண்ணுற்று நின்ற' என்பது ஒருசொல் நீர்மைத்து. அப் பெயரெச்சம் 'ஆறு சென்ற வெயர்' என்பதுபோல, 'களி' என்னும் காரியப்பெயர் கொண்டது. 'உணர்விக்கும்' 'கண்ணுற்ற நின்ற களியாகும்' என்றதனால், தீவிர சத்திநிபாதம் ஞானத்தைத் தருதல் பெறப்பட்டது. சிவாக்கிர யோகிகளும், 'தீவிர சத்திநிபாதம் சிவஞானம் பிரகாசம்' என்றார். 'இதில் சத்தி வித்தையாய்ப் பதியும்' என்பதும் அவர் கூறுவது. இந்த ஞானம் சிவநூல்களைக் கற்றல் கேட்டல்களால் வரும் கருவி ஞானமே (அபர ஞானமே) என்க.

'ஞானநூல் தனைஓதல், ஓது வித்தல்,
நற்பொருளைக் கேட்பித்தல், தான்கேட்டல், நன்றா
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை' 1

என்பதில், முதலில் உள்ள மூன்றும் இந்த ஞானமேயாதல் அறிக.

'கற்றல் கேட்டல் உடையார் பெரியார்' 2

என்று அருளிச்செய்ததும் இந்நிலையினரை நோக்கியே என்க. இதனால், தீவிர சத்திநிபாதத்தின் இயல்பு கூறப்பட்டது.

பிறப்பை அறுக்கும் பெருந்தவம் நல்கும்
மறப்பை அறுக்கும் வழிபட வைக்கும்
குறப்பெண் குவிமுலை கோமள வல்லி
சிறப்பொடு பூசனை செய்யநின் றார்க்கே. **#1498**

இமய மலையில் தோன்றி வளர்ந்த மகளும், அபர ஞான பரஞானங்களையே இருதனங்களாகக் கொண்டு உயிர்கட்கு அந்த ஞானமாகிய பாலை ஊட்டி வளர்ப்பவளும் ஆகிய சத்தி, மேற் கூறியவாறு முதல்வனைக் கண்ணுற்று நிற்கும் ஞானத்தால் வழிபடு கின்றவர்கட்குத் தவங்கள் எல்லாவற்றினும் சிறந்த தவமாகிய சிவ புண்ணியத்தை வழங்குவாள்; அதனால் பிறப்பை ஒழிப்பாள்; சிவனை மறக்கும் மறதியாகிய அஞ்ஞானத்தை நீக்குவாள்; யாவரும் அவரை வழிபடும் நிலையில் உயர்த்து வைப்பாள்.

விளக்கவுரை

காரண காரிய முறையால் முன் நிற்கற்பாலதாய பெருந் தவம் நல்கல், செய்யுள் நோக்கிப் பின் நின்றது. குறச்சாதியாகக் கூறியது, மலைமகளாதலை நயம்படக் குறித்தவாறு. சிறப்பு, இங்கு ஞானம், ஒடு உருபு, 'வேலொடு நின்றான், கோலொடு நின்றான்' 1 என்பவற்றிற் போலச் சிறப்பித்தற் பொருளில் வந்தது. நின்றார் - உரியராயினார். இதனால், தீவிர சத்திநிபாதத்தின் பயன் கூறப்பட்டது.

தாங்குமின் எட்டுத் திசைக்கும் தலைமகன்

பூங்கமழ் கோதைப் புரிகுழ லாளொடும்
ஆங்கது சேரும் அறிவுடை யார்கட்குத்
தூங்கொளி நீலம் தொடர்தலு மாமே. *#1499*

எட்டுத் திசைக்கும் தலைவனாகிய சிவனை அவன் துணைவியோடும் அறிவினுள் அறிந்து மறவாதிருங்கள். ஏனெனில், அவ்வாறு இருக்கும் அறிவை உடையவர்கட்கே சத்திநிபாதம் தொடர்ந்து முதிர்வதாகும்.

விளக்கவுரை

தாங்குதல் - சுமத்தல்; இங்கு அறிவினுள் அறிதலைக் குறித்தது. 'தலைமகனை' என்னும் இரண்டனுருபு தொகுத்தல் பெற்றது. தூங்குதல் - மிகுதல். 'ஒளி நீலம்' என்பதில் பொதுப்பெயர் முன்னும், சிறப்புப்பெயர் பின்னுமாய் நின்றன. சிவ ஒளி செம்மையும் சத்தி ஒளி நீலமும் ஆதல் அறிக. 'தலைமகனைப் புரிகுழ லாளொடும் தாங்குமின்' எனக் கூட்டுக.
இதனால், 'சத்தநிபாதக் குறி தோன்றப் பெற்றோர் பின்னர் அந்நிலையை நெகிழாது பற்றி நிற்றல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

நணுகினும் ஞானக் கொழுந்தொன்றும் நல்கும்
பணிகினும் பன்மலர் தூவிப் பணிவன்
அணுகிய தொன்றறி யாத ஒருவன்
அணுகும் உலகெங்கும் ஆவியு மாமே. *#1500*

தனு காரணங்களின் வழிவருபவற்றுள் ஒன்றையும் நோக்குதல் இல்லாத சத்திநிபாதன், தன்னை யார் அணுகினாலும் அவர்கட்கு முதிர்ந்த ஞானம் ஒன்றையே உணர்த்துவன். சிவனைப் புறத்தில் மலர் தூவி வழிபடினும் படுவான். தான் அடையும் எவ்விடத் திலும் அங்கு உள்ளார்க்கு உயிர்போலச் சிறந்து விளங்குவான்.

விளக்கவுரை

மூன்றாம் அடியை முதலிற் கொள்க. சத்தி நிபாதர் தம்மை அணுகினவர்க்கு ஞானம் ஒன்றையே உணர்த்துவர், 'அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்துதவார் ஆகலான்' *1* என்பதில் எதிர்மறை முகத்தாற் கூறப்பட்டது. 'பணிகினும்' என்பதை 'பணிவன்' என்பதற்கு முன்னே கூட்டுக. உம்மை, அஃது ஒருதலை யாகாமை குறித்தது. 'உலகெங்கும்' என்பதின்பின், 'அவ்விடத் தார்க்கு' என்பது எஞ்சி நின்றது.
இதனால், தீவர சத்திநிபாதம் வந்தோரது இயல்பு கூறப் பட்டது.
இனி மூன்று மந்திரங்களால் தீவிரதர சத்திநிபாதம் உணர்த்து கின்றார். இஃது 'அதிதீவிரம்' எனவும் சொல்லப்படும்.

இருவி னைநேரொப்பில் இன்னருட் சத்தி
குருவென வந்து குணமல நீக்கித்

தருமெனு ஞானத்தால் தன்செய லற்றால்
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே. ***#1501***

இருவகை வினைகளும் ஒரு தன்மையவாக ஒத்து நிற்குங் காலத்தில் உண்டாவதே இனிய அருட்சத்தியது பதிவு. 'அஃது உண்டானபொழுது சிவன் குருமூர்த்தியாய் வந்து குற்றங்கள் யாவற்றையும் நீக்கி வழங்குவான்' எனப்படுகின்ற அந்த ஞானத்தாலே புருடன் தன் செயல் அற்று அருள் வழியில் நிற்பானாயின், மும்மலங்களும் பற்றற்று ஒழிய, அந்தச் சிவனே தானாவான்.

விளக்கவுரை

சத்திநிபாதமாவது சிறப்புடைய இந்நான்காஞ் சத்தி நிபாதத்தின் இயல்புகளை இங்கே முற்ற எடுத்தோதினார். இரு வினைகளும் நேரொத்தலாவது அவற்றது பயன்களாகிய உலகியல் இன்பம், துன்பம் இரண்டனையும் ஒரு பெற்றியவாகவே உணர்ந்து, அவற்றில் விருப்பு வெறுப்புக்கள் இல்லாதிருக்கும் நிலையாம். இதுவே ஆணவ மலம் பரிபாகமானதற்கு அறிகுறியாகும். ஆகவே, 'இருவினை யொப்பும், மலபரிபாகமும் வந்தால், சத்திநிபாதம் வரும்' என்பர். ஞானத்தைப் பரிபாகம் வருமுன் உணர்த்துதல், வந்தபின் உணர்த்தாதிருத்தல் இரண்டுமேகூடா ஆகலின், சத்தி நிபாதம் வரப்பெற்றார்க்குச் சிவன் குருவாய் வந்து ஞானத்தை உணர்த்துதல் ஒருதலையாம். இது பற்றிய செய்திகள் பலவற்றையும் சிவஞானபோத எட்டாம் சூத்திரத்திலும், அதன் உரைகளிலும் விளங்கக் காண்க. சத்தி நிபாதத்தின் வழிச் சிவன் வந்து செய்தலை அச்சத்தியே செய்வதாகக் கூறினார்.
இதனால், சத்திநிபாதத்து இயல்பெல்லாம் இதனுள் வைத்து முற்ற உணர்த்தப்பட்டது.

இரவும் பகலும் இறந்த இடத்தே
குரவஞ்செய் கின்ற குழலியை உன்னி
அரவசெய் யாமல் அவளுடன் சேரப்
பரிவொன்றி யாளும் பராபரை தானே. ***#1502***

உயிர் தனு கரணாதிகளைப் பெறாது ஆணவத் தோடு மட்டுமே கூடிச் சடம்போலக் கிடந்த இராக்காலமாகிய கேவல நிலையும், பின் தனு கரணாதிகளைப் பெற்றுப் பிறப்பு இறப்புக்களில் உழன்ற பகற் காலமாகிய சகல நிலையும் பின் ஒருபோதும் உண்டாகாது ஒழிந்த சுத்தநிலையாகிய முத்திக் காலத்திலே, சத்தி யாகிய திருவருள் ஒன்றையே நோக்கித் தற்போதத்தைச் சிறிதும் எழாத படி அடக்கி அவ்வருளோடே ஒன்றியிருக்க, அவ் அருளாகிய சத்தி யும் இவன்பால் இரக்கம் மிக்கவளாய் இவனைத் தன் அடியவனாக ஏற்றுக்கொள்வாள்.

விளக்கவுரை

'அதன்பின் துன்பம் ஏதும் இல்லை' என்பது குறிப் பெச்சம். கேவல சகலங்களை 'இரவு, பகல்' என்றல் மெய்ந்நூல் வழக்கு, 'இரவும்பகலும் இறந்த இடம்' என்றதனால் 'அழிப்புக் கேவலம், படைப்புச்சகலம்' என்பனவும், 'உறக்கக் கேவலம், விழிப்புச் சகலம்' என்பனவும், 'மறப்புக் கேவலம், நினைப்புச் சகலம்' என்பனவுமாகிய இடைநிலை மாற்றங்களும் எய்தாது ஒழிந்த நிலை என்பது போந்தது. இதனை இவ்வாறே,

'இராப்பகல் அற்ற இடத்தே இருக்கை எளிதல்லவே'

என்றும்,

'கங்குல் பகல் அற நின்ற எல்லையுளது எது' *1*

என்றும் பிறவிடங்களிலும் குறித்தல் காண்க. குரவம் செய்கின்ற - குராமலர் அழகைச் செய்கின்ற. அரவம் - ஓசை; பேச்சு; என்றது, தற்போதம் தலையெடுத்தலை. 'பரிவொன்றிலாளும்' என்பது பாடமன்று.

இதனால், சத்திநிபாத நிலையது அருமை கூறப்பட்டது.

மாலை விளக்கும் மதியமும்ஞாயிறும்
சால விளக்கும் தனிச்சுடர் அண்ணல் உள்
ஞானம் விளக்கிய நாதன்என் னுள்புகுந்
தூனை விளக்கி உடனிருந் தானே. ***#1503***

என்னுள் விளங்காது மறைந்து கிடைந்த ஞானத்தை அம்மறைவு நீக்கி விளங்கி எழச்செய்த என் குருநாதன் 'மாலை, இரவு, பகல்' ஆகியவற்றில் ஒரோவொரு காலத்தில் விளக்கத்தைத் தருகின்ற 'விளக்கு, சந்திரன், சூரியன்,' என்னும் ஒளிகளுக்கும் ஒளியைத் தருகின்ற ஒப்பற்றபேரொளி' அவன் என் உள்ளே புகுந்து உயிரை மட்டுமின்றி உடலையும் ஒளியாய் விளங்கச் செய்து, பின் என்னைவிட்டு அகலாது உடனாயே இருக்கின்றான்.

விளக்கவுரை

விளக்கு விளக்கந்தரும் காலத்தைக்கூறவே, ஏனை இரண்டும் விளக்கந்தரும் காலத்தையும் எடுத்துக்கூறுதல் கருத்தா யிற்று. 'விளக்கு முதலிய மூன்றும் காலத்தாலும், இடத்தாலும் வரை யறுக்கப்படும் ஒளிகள்' என்பதை எடுத்தோதி, 'அவற்றுக்கும் விளக்கம் தரும் ஒளி' எனவும், 'ஒப்பற்றது' எனவும் கூறியவற்றால் அக இருளாகிய அஞ்ஞானத்தைப் போக்கி, மெய்ஞ்ஞான ஒளியாய் விளங்குதலும், அது பிறிதொன்றால் ஆகாமையும் குறிக்கப்பட்டன, மாயையும் கன்மமும் ஆன்மா மருள்நிலையில் உள்ளபொழுது மருளாயும், அருள்நிலையை

எய்தியபொழுது அருளாயும் நிற்கும் இயல்புடையனவாதல் பற்றி, 'ஊனையும் விளக்கினான்' என்றார். மாயையும், கன்மமும் இவ்வியல்பின் ஆதலை,

'மாயைமா யேயம் மாயா வரும் இரு வினையின் வாய்மை
ஆயஆ ருயிரின்மேவும் மருளெனில் இருளாய் நிற்கும்;
மாயைமா யேயம் மாயா வரும்இரு வினையின் வாய்மை
ஆயஆ ருயிரின் மேவும் அருளெனில் ஒளியாய் நிற்கும்' *1*

என்னும் 'சிவப்பிரகாசத்தால்' அறிக. 'தீவிரதர சத்தநிபாதத்தால் அனுபவ ஞானமாகிய நிட்டை கைவந்து, ஆன்மா சிவமாம் தன்மையைப் பெறும்' என்றவாறு. சிவாக்கிர யோகிகளும் இங்கு சத்தி சாந்தியாய்ப்பதிந்து, உபசாந்தத்தைத்தரும் என்றார். இப்பாட்டு இருவிகற்பம் பெற்றது. இதனால், சத்திநிபாதத்தின் நிறைந்த இயல்பும், பயனும் கூறப்பட்டன.

*7.17.*புறச்சமய தூடணம்

ஆயத்துள்நின்ற அருசம யங்களும்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கில
மாயக் குழியில் விழுவ மனைமக்கட்
பாசத்துள் உற்றுப் பதைக்கின்ற வாறே. ***#1504***

முதுநூல்களின் கூற்றை அறவே புறக்கணித்து, முழுதும் தம் அறிவைக் கொண்டே ஆராய்தலாகிய அத்தொழிலில் நிற்கின்ற புறச்சமயங்கள் புறப்பொருள்களை எவ்வளவு ஆராய்ந் துணரினும், அவ்வாராய்ச்சி அறிவினுள்தானே உள்ள கடவுளைக் காணமாட்டாதனவாகின்றன. அதனால், அவை பொய்ம்மையாகிய குழியில் வீழ்ந்து கெடுவன ஆகின்றன. ஆகையால், அவையெல்லாம் மனைவி மக்கள் முதலாகிய தளையில் அகப்பட்டுத் துன்புறுதற்கான வழிகளேயாகும்.

விளக்கவுரை

'அறுசமயத்தவர் காண்கிலர், விழுவர்' என்பனவும் பாடம். 'அதனுள்' என்பதில் அன்சாரியை தொகுத்தல் பெற்றது, அறிவுள் நிற்பவனை ஒற்றுமைபற்றி உடலுள் நிற்பவனாக ஓதினார். முன்னும், பின்னும் பல இடங்களில் இவ்வாறே ஓதுதல் காண்க. மாயம் - பொய்; இங்கு மயக்கத்தைக் குறித்தது. 'பதைக்கின்ற ஆறே' என்னும் பயனிலைக்கு, 'அவை' என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க.

இதனுள் 'ஆய்தல்' என்பது 'சிவனே முதற்கடவுள்' என்னும் சைவத்தின் துணிபை முற்றாகவும், ஒருவாறாகவும் மறுத்துக் கூறுதலை ஆதலின், அச்செயலையுடையன மேற்கூறிய மதங்களேயாதல் அறிக. ஈற்றடியில் சகரமும் போலிவகையால் இன எதுகையாம். அன்றி, 'உயிரெதுகை பெற்றது எனினும் அமையும்'.

இதனால், புறச் சமயங்கள் சிவனது முதன்மையைச் சிறிதும் உணராதனவும், முற்ற உணராதனவுமாய்க் கேடுபயத்தல் கூறப்பட்டது.

உள்ளத்து ளேதான் உகந்தெங்கும் நின்றவன்
வள்ளற் றலைவன் மலருறை மாதவன்
பொள்ளற் குரம்பைப் புகுந்து புறப்படும்
கள்ளத் தலைவன் கருத்தறி யார்களே. ***#1505***

உயிர்க்கு உயிராய் அவற்றின் அறிவில் பொருந்தி யிருத்தலை விரும்பி, அண்டத்தில் உலகெங்கும் நிறைந்தும், பிண்டத்தில் உள்ளக்கமலத்தில் தியானப்பொருளாய் விளங்கியும் நிற்பவனும், அருள் வள்ளலும், அனைத்துலகிற்கும் தலைவனும், பொள்ளல் நிறைந்த உடலில் உயிர்ப்பாய், உட்புகுதல் வெளிவருதல் களைச் செய்தும் உயிர்களால் அறியப்படாது மறைந்து நிற்பவனும் ஆகிய முதற்பெருங்கடவுளாம் சிவபெருமானைப் புறச் சமயிகள் தங்கள் கருத்தில் கொள்ளமாட்டாதவர்களாகின்றனர்.

விளக்கவுரை

'இஃது அவர் வினை யிருந்தவாறு' என்பது குறிப் பெச்சம். 'எங்கும் நிற்றல் முதலிய பலவற்றிற்கும் உயிர்கள்மீது வைத்த கருணையே காரணம்' என்றற்கு, உள்ளத்துள்ளே நிற்றலை விரும் பினமையை முதற்கண் தனிப்பட எடுத்து ஓதினார். 'உள்ளம்' என்பது அறிவைக் குறித்தது என்னை? 'மலர்' எனப் பின்னர் இதயத்தைக் குறித்தலின். 'தவம்' என்றது தியானத்தை. தவன் - தவத்தால் அடையப்படுபவன். புகுதல் புறப்படுதல்களைக் கூறினமையின், அஃது உயிர்ப்பாதல் விளங்கிற்று.

'என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே' *1*

என்று அருளினமையும் இங்கு நோக்கத்தக்கது. இறைவன் உயிர்களின் உயிர்ப்பாய் நிற்றல். அவை உடலொடு நிலைத்து நின்று, அந்தக் கரணங்களின்வழி வினைகளை நுகர்ந்தும், ஈட்டியும் வருதற் பொருட்டாம். உயிர்ப்பு இதயத்துடிப்பின் வழித்தாதலையும், இறைவன் இதய வெளியில் ஆடுபவனாகக் கூறப்படுதலையும் இங்கு நினைக்க. இங்ஙனம் உயிர்ப்பாய் உள்ளவனை அறியமாட்டாதவர் தங்களை அறிவராக (ஞானியராக)ச் சொல்லிக்கொள்ளுதல் நகை விளைப்பது என்பதாம். 'தலைவனை' என்னும் இரண்டனுருபு தொகுத்தல் பெற்றது. இதனால், புறச்சமயிகள் உண்மை ஏதுக்கள் பல இருப்பவும் அவற்றைக்கொண்டு உண்மையைக் கருதியேனும் உணர மாட்டாதவ ராயிருத்தல் கூறப்பட்டது.

உள்ளத்தும் உள்ளன் புறத்துளன் என்பவர்க்

குள்ளத்தும் உள்ளன் புறத்துளன் எம்மிறை
உள்ளத்தும் இல்லை புறத்தில்லை என்பவர்க்
குள்ளத்தும் இல்லை புறத்தில்லை தானே. ***#1506***

எங்கள் இறைவனாகிய சிவபெருமானை அகச் சமயிகள் பொதுவாகவும், சிறப்பாகவும், 'அகம், புறம்' என்னும் இரண்டிடங்களிலும் உள்ளவனாக அறிந்து, இயன்ற அளவில் அவனை அணுக முயல்கின்றனர். அவர்கட்கு அவன் அவர்களது தகுதிக்கு ஏற்ப அவ்விடங்களில் ஏற்ற பெற்றியால் அகப்படுகின்றான். புறச்சமயிகள் அவனை 'எவ்விடத்திலும் இலன்' எனக் கூறிப் பிணங்கு கின்றார்கள், அவர்கட்கு அவன் அவற்றுள் ஓரிடத்தும் காணப்படுதல் இல்லை.

விளக்கவுரை

'உண்மையுமாய் இன்மையுமாய்'*1* என்ற திரு வாசகத்திற்கும் இதுவே கருத்தாதல் அறிக. நான்கிடத்தும் 'புறத்தும்' என்னும் எச்ச உம்மை தொகுத்தல் பெற்றது. தான், அசைநிலை, ஏகாரம், தேற்றம்.
இதனால், புறச்சமயிகள் அச்சமயத்தை விட்டு அகச்சமயம் புகுந்தன்றி உய்யமாட்டாமை கூறப்பட்டது.

ஆறு சமயமும் கண்டவர் கண்டிலர்
ஆறு சமயப் பொருளும் அவனலன்
தேறுமின் தேறித் தெளிமின் தெளிந்தபின்
மாறுதல் இன்றி மனைபுக லாமே. ***#1507***

புறச்சமயங்கள் ஆறனையும் தோற்றுவித்தவர்கள் மெய்ப் பொருளைக்கண்டு அதனைப் பிறருங் காணவழி கூறினா ரல்லர். அதனால் சிவன் அந்த ஆறுசமயப்பொருளில் ஒன்றேனும் ஆயிற்றிலன். இந்த உண்மையை, உலகீர், தெளிமின்கள்! நன்கு தெளி மின்கள்!! தெளிந்தீர்களாயின், அதன்பின் தவற்றின் நீங்கி, நேர் வழியை அடைந்து, வீடு பெறுதல் கூடும்.

விளக்கவுரை

'சமயம்' என்றது இங்குப் புறச் சமயத்தையே யாதல் வெளிப்படை. காணுதல் - உணர்தல். அதுபின் பிறர்க்கு உணர்த்தி யதனைக் குறித்தது. இனி, 'சமயம்' என்றதனை ஆகுபெயராக்கி, 'அவற்றை உணர்ந்தும்நூலை ஆக்கியவர்' என்று உரைப்பினும் ஆம். இச் சமயத்தவரும். இவர்தம் நூல்களும் பசுக்களும், பசு வாக்கியங் களும் ஆதலின், அவராலும் அவர்தம் நூலாலும் மெய்ப்பொருள் பற்றப்படாதாயிற்று.
'இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணம்

தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வோடும்
அவப்பெருந் தாபம் நீங்கா தசைந்தன' 2
எனவும்,
'சடங்கொண்ட சாத்திரத்தார் சாக்கியர் சமண்குண்டர்
மடங்கொண்ட விரும்பியராய் மயங்கிஓர் பேய்த்தேர்ப்பின்
குடங்கொண்டு நீர்க்குச்செல்வார்' 1
எனவும் போந்த திருவாக்குகளும் புறச்சமயங்கள் மயக்க உரைக ளாதலை விளக்குதல் காண்க.
'அவன்' என்றது, மேல், 'எம் இறை' என்றதனைச் சுட்டிற்று. 'தேறித் தெளிமின்' என்றது ஒருபொருட் பன்மொழி மறித்தும் இவ்வாறு கூறியது வற்புறுத்தற் பொருட்டு. மாறுதல் - நெறியின் நீங்குதல். 'அஃது இன்றி' எனவே, நேர்வழியைப் பற்றுதல் பெறப்பட்டது. 'வீடு' என்பது இல்லத்திற்கும் பெயராய் வழங்குதலின், அச் சொல் நயம் பற்றி 'மனைபுகலாமே' என்றார். 'வழி தவறிச் சென்று காடு மேடுகளில் அலையாமல், நேர்வழியைக் கண்டு, அதன் வழி விரைவில் இல்லத்தை அடைந்து இன்பறலாம்' என்பது நயம். இங்கு, 'அவன் அலன்' என்று, சிவமாய் விளங்காமையை ஆதலின், 'அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய்' 2என்றாற் போல்வன இதனொடு மாறுகொள்ளாமை அறிக.
இதனால், புறச் சமயங்கள் வீடாகிய பேரின்பத்தைப் பயவாமையே யன்றிப் பிறவியாகிய பெருந்துன்பத்தை மிகுவித்தல் கூறப்பட்டது.

சிவமல்ல தில்லை இறையே சிவமாம்
தவமல்ல தில்லை தலைப்படு வார்க்கிங்
கவமல்ல தில்லை அறுசம யங்கள்
தவமல்ல நந்திதாள் சார்ந்துய்யும் நீரே. **#1508**

சிவம் அல்லது வேறு பதிப்பொருளும், சிவமாம் பயனைத் தருகின்ற தவம் அல்லது வேறு தவமும் இல்லை. ஆறாகக் கூறப்படுகின்ற புறச்சமயங்கள் தம்மை அடைந்தவர்க்கு இவ்வுலகில் வீண் முயற்சியாவதன்றி வேறு இல்லை. அதனால், அவை தவமாதல் இல்லை. ஆகையால் மெய்ப்பொருளை அடைய விரும்புகின்ற வர்களே, நீங்கள் சிவபெருமானது திருவடியைச் சார்ந்து பிழை மின்கள்.

விளக்கவுரை

'சிவம் அல்லதில்லை அறையே' என்பது பாடமாயின், 'சிவம்' என்பதன்றிப் 'பொருள் பொதிந்த சொல் வேறில்லை' என உரைத்து, 'சிவமன்றி வேறு மெய்ப்பொருள் இல்லை' என்பது அதனாற் போந்த பொருளாகக் கொள்க. 'சிவமாந் தவம்' என்பதில், பெயரெச்சம், 'நோய் தீரும் மருந்து' என்பது போலத் 'தவமல்லது இல்லை தவம்' என

ஒருசொல் வருவிக்க, 'அவம்' என்பதன்பின், 'ஆதல்' என்பது எஞ்சிநின்ற கருவிப் பெயர் கொண்டது. 'அவை தவமல்ல' என எழுவாய் வருவித்துக்கொள்க. 'நீர்' என்றது உண்மையைத் தலைப்பட விரும்பினோரையாதலின், அவரே விளிக்கப்படுவாராயினர். 'சிவத்தைப் பேணின் தவத்திற் கழகு' *1* என்றார் ஔவையாரும்.
இதனால், புறச் சமயம் வேறு முயற்சியைப் பயத்தலல்லது' பயன் தாராமை கூறப்பட்டது.

அண்ணலை நாடிய ஆறு சமயரும்
விண்ணவ ராக மிகவும் விரும்பியே
முண்ணின் றழியும் முயற்றில ராதலின்
மண்ணின் றொழியும் வகைஅறி யார்களே. ***#1509***

சிவபிரானை இகழாது போற்றுகின்ற அகச் சமயங்கள் ஆறிலும் நிற்போர் அவ்வச்சமயக் கடவுளரது உலகத்தை அடைந்து இன்புற்றிருக்க, புறச் சமயிகள் அவற்றை விடுவித்துப் பிற விண்ணுலகங்களை அடைதலை மிகவும் விரும்பி, வினைக்கட்டி னின்றும் வெளிப்படமாட்டாது, அதனுள் நின்றே அழிகின்ற அவச் செயலாதலால், அவர்கள் பிரகிருதிக்கு மேல் செல்லும் வழியை அறியாதவர்களேயாவர்.

விளக்கவுரை

'ஆறு சமயமும்' என்பது இரட்டுற மொழிதலாய், 'வேறு விண்ணவர் ஆக' எனப்பொருள் தந்து, 'மிகவும் விரும்பியே' என்பத னோடும் இயைந்தது. 'முள்' என்றது முட்புதரை. 'வினையைக் காடாக உருவகித்துக் கூறலும் மரபு' என்பது, 'நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான் ... ... *2* என இதனுட் பின் வருதலும், 'இருவினை மாமரம்'*3* என்றமையும் போல்வன பற்றி உணர்க. முயற்று - முயற்சி; என்றது தவத்தை யாகலின், 'அதனை யிலர்' என்றது. அவச்செயலை உடையாராதலைக் குறித்தது. 'மண்' என்றது அது முதல் பிரகிருதிகாறும் உள்ள தத்துவங்கட்கு உபலக்கணமாய், அவ்வத் தத்துவ புவனங்களின் மேல் நின்றது.
அகச்சமயம் ஆறாவன:- பாசுபதம், மாவிரதம், வைரவம்' சாத்தம். காணாபதீயம், கௌமாரம் என்பன. காபாலமும், காளா முகமும், பாசுபதம், மாவிரதம் என்பவற்றுள்ளே அடங்கும். 'சாத்தம்' என்றது சுத்த சாத்தத்தையே; வாம மதத்தையன்று. இம்மதங்களில் நிற்போர் சிவதீக்கை பெறுதலில்லையாயினும், உருத்திரன் முதலி யோரைச் சிவனது மூர்த்தி பேதங்களாகக்கருதி வழிபடுதலும், சிவனைத் தேவருள் ஒருவனாக வைத்து இகழ்தல் இன்மையும் உடைய ராகலின். இவரை 'அண்ணலை நாடியசமயர்' என்றும், இவர் பிர கிருதிக்கு மேல் உள்ள

சீகண்ட வுருத்திரர் முதலிய உருத்திரலோகங் களை அடைவர் ஆகலின் பிறரை 'மண்ணின் றொழியும் வகையறி வார்களாய், விண்ணவராவர்' என்றும் அருளிச் செய்தார். இவருள் பாசுபதர் மதம் முதலியவற்றையே பொதுமையில் 'சைவம்' என வைத்து, 'சைவம், வைணவம், சாத்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம்' எனச் சமயங்கள் ஆறு என்பாரும் உளராயினர். சைவத்தை நீக்கி, 'சௌமியம்' என்பது கூட்டி, 'ஆறு' என்பாரும் ஒருசாரார்.

'உலகாயதர் விண்ணவராக விரும்புதல் இன்மையின்' அங்ஙனம் விரும்புபவராகக் கூறியது புத்தர் முதலிய பிறரையேயாம். அவரெல்லாம் தாம் தாம் ஓர் உலகத்தை முத்தியுலகமாகக் கற்பித்துக் கொண்டு அவற்றின்கண் செல்ல விரும்பினாராயினும், அவர் அடைவது பிரகிருதிக்குக் கீழ் உள்ள தத்துவ புவனங்களையே என்பது நாயனாரது திருவுள்ளமாதலின் அவரை, 'மண்ணின்றொழியும் வகையறியாதவர்' என்று அருளிச்செய்தார்.

இதனால், புறச்சமயங்கள் பிரகிருதியைக் கடப்பிக்க மாட்டாமை கூறப்பட்டது.

சிவகதி யேகதி மற்றுள்ள எல்லாம்
பவகதி பாசப் பிறவிஒன் றுண்டு
தவகதி தன்னொடு நேரொன்று தோன்றில்
அவகதி மூவரும் அவ்வகை ஆமே. ***#1510***

சிவனது உலகத்தையும், சிவனையும் அடைவதே பிறவியற்ற முத்தியாம். அவையன்றி, 'முத்தி' எனப் பிறராற் கூறப் படுவன எல்லாம் முத்தியல்லாத பிறப்பு நிலையேயாம். அதனால், அவைகளில் எல்லாம் பாசத்தால் வருகின்ற பிறவியாகிய ஒரு பெருந் துன்பம் இருக்கவே செய்யும். அதனால், சிவனை நோக்கிச் செய்யப் படுவனவாகிய சரியை முதலிய நெறிகள் ஒருவனுக்குக் கிடைக்கு மாயின், முத்தியுலகம் அல்லவாய்ப் பிறவி யுலகங்களாகிய 'அயன், அரி, அரன்' என்னும் குணமூர்த்திகள் மூவரது பதவிகளும் அத் தன்மையவாய்ப் போம்.

விளக்கவுரை

அஃதாவது, 'அவன் அப்பதவிகளை எய்தாது, மேற்கூறிய சாலோகம் முதலியவற்றையே அடைவான்' என்பதாம். 'கதி' என்றது பத முத்தி பரமுத்திகளை. பத முத்தியடைந்தோரும், 'நாதனே முன் நிற்கின்'*1* பரமுத்தியை அடைவர் ஆதலின், அதுவும் 'பிறவியற்ற நிலை' எனப்பட்டது.

ஒன்று - ஒன்றாய் பெரிய துன்பம். 'உண்டே' என்னும் தேற்றேகாரம் தொகுத்தல். தவகதி - தவமாகிய நெறி. தவமாவது சரியை முதலியனவே யாதல் அறிக. 'அதனொடு நேர்தலாகிய ஒரு பேறு வாய்க்குமாயின்'

என்க. 'மூவர்' என்றது ஆகுபெயர்.
இதனால், அகச் சமயங்களை மேல்; 'அண்ணலை நாடிய' சமயங்களாகக் கூறினமை பற்றி, அவையும் தவநெறிபோலும்' எனவும், அவற்றால் அடையும் நிலைகளும் 'முத்திபோலும்' எனவும் நிகழும் ஐயம் அறுக்கப்பட்டது.

நூறு சமயம் உளவாம் நுவலுங்கால்
ஆறு சமயம்அவ் ஆறுட் படுவன
கூறு சமயங்கள் கொண்ட நெறிநில்லா
ஈறு பரநெறி இல்லா நெறியன்றே. ***#1511***

சமயங்களைப் பற்றிச் சொல்லுமிடத்துச் சிறி யனவும், பெரியனவும் ஆகிய பல வேறுபாடுகளால் சமயங்கள் மிகப் பலவாய் உள்ளன. 'அகம், புறம்' என்பவற்றுள் 'ஆறு' என ஒருவாறு வரையறுத்துக் கூறப்படும் சமயங்கள் மேற்கூறிய பலவற்றுள்ளே உள் ளனவாம். அங்ஙனம் சொல்லப்படும் சமயங்கள் பலவும் 'உண்மை' எனக் கொண்ட நெறிகளிலே மக்கள் நின்று இறுதியாக அடையும் மேலான் நெறி, மேற் கூறிய அவற்றுள் ஒன்றிலும் இல்லாத நெறியாம்.

விளக்கவுரை

'அந்நெறி சித்தாந்த சைவமாம்' என்பதே நாயனாரது திருவுள்ளமாதலும், அந்நெறி பிற சமயங்களில் இல்லாமையும் இத் தந்திரத்தின் தொடக்கத்திலே அருளிப் போந்த மந்திரங்களான் அறிக. 'நூறு' என்றது, 'மிகப் பல' என்றவாறு. 'ஆறு' எனப் பொதுப்பட அருளிச் செய்ததனால், அகம், புறம் இரண்டும் கொள்ளப்படுவ ஆயின. பின் வந்த ஆறு, நெறி. 'ஆற்றுள்', 'ஈற்று' என்னும் ஒற்றுக்கள் தொகுத்தல் பெற்றன. நில்லா - நின்று. 'அவற்றுள் இல்லா நெறி' என்க.
இதனால், 'சித்தாந்த சைவத்துக்கு நிகராகாமை பற்றி இங்கு இகழ்ந்து கூறினும், பிற சமயங்கள் அதற்குப் படிகளாய் உள்ளன' எனக் கூறி, ஐயம் அறுக்கப்பட்டது.

கத்துங் கழுதைகள் போலுங் கலதிகள்
சுத்த சிவன்எங்கும் தோய்வற்று நிற்கின்றான்
குற்றந் தெரியார் குணங்கொண்டு கோதாட்டார்
பித்தேறி நாளும் பிறந்திறப் பார்களே. ***#1512***

தம் குரல் பிற உயிர்கட் கெல்லாம் கடியனவாய் வெறுக்கப்படுதலை அறியாது உவகையால் உரத்துக் கத்துகின்ற கழுதைகள்போலப் பாழ்நெறி நூல்களை உரத்து ஓதுகின்ற கன்மிகள், தம் குற்றத்தை உணர மாட்டார்கள். தூயனவாகிய சிவன் எல்லாப் பொருளிலும் நிறைந்து நின்றும், ஒன்றிலும் தோய்வின்றி நிற்கின்ற சிறப்பை அறிவு நூல்களைக் கற்கும் முகத்தால் உணர்ந்து பாராட்ட மாட்டார்கள். மற்று, மயக்கம்

மிகுந்து, வீணே பிறந்தும், இறந்தும் உழல்வார்கள்.

விளக்கவுரை

'கத்தும்' என உடம்பொடு புணர்த்ததனால் பயனில் லாத நூல்களாம். உவமை அதுபற்றியதாகலின் உவமிக்கப்பட்டார் பயனில்லாத நூல்களை ஓதுபவராயினர். பாராட்டிக் கற்கின்றவர் களைக் குறித்து.

'அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லா
துலகநூல் ஓதுவ தெல்லாம் - கலகல
கூஉந் துணையல்லால் கொண்டு தடுமாற்றம்
போஉந் துணையறிவா ரில்'
(நாலடி)

என்றார் பிறரும். கலதி - முகடி; 'கலதிகள்' என்றது, 'நல்வினை யில்லார்' என்றதாம். 'சுத்த சிவன்' என்றது, 'பிறவற்றிற் கலந்தும் அந் நிலை கெடான்' என்றற்கு 'தோய்வுற்று' என்பது பாடமன்று. 'குற்றந் தெரியார்' என்பதை முதலடியின் இறுதியிற் கூட்டி யுரைக்க. 'குற்றந் தெரியார்' என்பது பாடமாயின், அஞ்ஞானமாகிய குற்றம் நீங்கப் பெறார்; அதனால், குணங்கொண்டு கோதாட்டார்' என்க. 'அக்குணங் கொண்டு' எனச் சுட்டு வருவித்து உரைக்க. கோதாட்டல் - பாராட்டல்.

'குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டி' *1*

என்று அருளிச் செய்தார் வாதவூரடிகளும். மூன்றாம் அடி இன வெதுகை பெற்றது.

இதனால், பிற சமயங்களின் நிற்பாரது கல்வியின் இழிவு கூறப்பட்டது.

மயங்குகின் றாரும் மதிதெளிந் தாரை
முயங்கி இருவினை மூழை முகப்பா
இயங்கப் பெறுவரேல் ஈறது காட்டில்
பயங்கெட் டவர்க்கோர் பரநெறி ஆமே. ***#1513***

புறச் சமயங்களில் நின்று அறிவு மயங்குகின்றவர் களும் சைவசமயத்தை அடைந்து அறிவு தெளிந்தவர்கள்பால் சென்று கூடி, இருவினைப்பயன்கள் அகப்பையால் முகக்கும் அளவில், உடலூழாய்க் கழியும்படி ஒழுக வல்லவராயின், அவர்கட்கு அவ்வுடல் வாழ்க்கை முடிகின்ற நிலை தோன்றும்பொழுது யம பயம் இல்லாது ஒழிய, ஒப்பற்ற பரமுத்தி நிலை கிடைக்கும்.

விளக்கவுரை

'மயங்குகின்றாரும்' என்னும் உம்மை இழிவு சிறப்பு 'தெளிந்தாரும்' என்பது பாடமன்று. மூழை - அகப்பை. மூழை முகப் பதாவது உணவை முகக்கின்ற அகப்பை அதனை முகந்தொழிதல் அல்லது உண்ணுதல் இன்றி வாளா புறத்தே ஊற்றிவிடுதல் போல இருவினைகளின்

பயனாகிய இன்பத்துன்பங்களை விருப்பு வெறுப் பின்றி உடலூழாக்கிக் கழியவிடுதல். இந்நிலை திருவருள் நெறியில் நிற்பார்க்கல்லது கூடாமையானும், திருவருள் நெறி சைவ சமயத்தில் அல்லது இல்லாமையானும் 'புறச் சமயத்தவர் சைவ சமயிகள்பால் பகை பாராட்டாது நட்புக்கொண்டு பழகுவாராயின், பேரின்பமாகிய நலத்தைப் பெறுவர்' என்றார்.

'நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு' *1*

எனவும்,

'கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளுந் தலைப்படுவர்' *2*

எனவும் கூறப்படுதல் அறியத்தக்கது. 'காட்டில்' என்பது 'தோன்றில்' எனத் தன் தன்வினையாய் நின்றது. 'கெட்டு' என்பதனை, 'கெட' எனத் திரிக்க. 'அவர்க்கு' என்பதனை, 'பெறுவரேல்' என்பதன் பின்னர்க் கூட்டி உரைக்க. 'ஈறது... ... ஆமே' என்பதற்குப் பிறவாறும் உரைப்ப. இதனால், புறச் சமயத்தவரும் சைவ சமயிகளை அடையின் பயன் பெறுதல் கூறப்பட்டது.

சேயன் அணியன் பிணிஇலன் பேர்நந்தி
தூயன் துளக்கற நோக்கவல் லார்கட்கு
மாயன் மயக்கிய மானுட ராம்அவர்
காயம் விளைக்கும் கருத்தறி யார்களே. ***#1514***

சேயர்க்குச் சேயனாயும், அணியர்க்கு அணிய னாயும் நின்று, ஒன்றிலும் தொடக்குண்ணாதிருக்கின்ற அவனதுபெயர் 'நந்தி' என்பதாகும். அவன்தன்னை அலைவின்றி ஒரு பெற்றியே நோக்கி நிற்பார்க்குத் தெளிவைத் தருபவனாயும், அங்ஙனம் நோக்கா தார்க்கு மயக்கத்தைத் தருபவனாயும் இருக்கின்றான். அவனது மாயத்தால் மயங்கிய மக்களாகிய புறச்சமயிகள் தமக்குக் கிடைத்துள்ள மக்கள் உடம்பு தரும் பயனை அறியும் அறிவிலராய் அப்பயனை இழப்பர்.

விளக்கவுரை

'சேயன் அணியன் ஆகிய பிணியிலனது பேர் நந்தி' என்க. பிணி - பிணிப்பு; முதனிலைத் தொழிற்பெயர். சேயன் முதலிய மூன்றும் எதிர்மறை வினைக்குறிப்புப் பெயர். பின்னர், 'மாயன்' என்றலின், 'தூயன்' என்பது அதன் மறுதலையை உணர்த்திற்று. மாயன் - மாயத்தை - மயக்கத்தை - செய்பவன். 'துளக்கற நோக்கு வார்க்குத் தூயன்' எனவே. மாயனாதல், அங்ஙனம் நோக்காதார்க் காயிற்று. ஐந்தொழிலில் அருளலையே 'தெளிவித்தல்' எனவும், மறைத்தலையே 'மயக்குதல்' எனவும் கூறினார். இவை இரண்டும் அவரவரது பக்குவம் பற்றியாம்.

அதனால், பக்குவம் இல்லாதார் புறச் சமயங்களையே 'மெய்ச்சமயம்' என மயங்கி, மக்கட் பிறப்பின் பயனை எய்தா தொழிவர் என்பதாம்.
'பரசம யங்கட் கெல்லாப் பாக்கியம் பண்ணொ ணாதே' *1*
என்ற சிவஞான சித்தியையும் நோக்குக.
இதனால், புறச் சமயங்களின் நீங்குதல் பக்குவம் இல்லா தார்க்குக் கூடாமை கூறப்பட்டது.

வழியிரண் டுக்கும்ஓர் வித்தது வான
வழியது பார்மிசை வாழ்தல் உறுதல்
சுழியறி வாளன்றன் சொல்வழி முன்னின்
றழிவறி வார்நெறி நாடகில் லாரே. ***#1515***

'பிறப்பு, வீடு' என்னும் இருவழிகட்கும் வித்தாய் உள்ளது, நிலவுலகில் வாழ்தலாகிய ஒரே வழியாம். அதனால், இவ்வுலகில் வாழ்பவர் யாவராலும் அடையப்படுவது, பிறவிச் சூழலின் நிலையை அறிந்து, அதனை அகற்ற வல்ல ஆசிரியனது உப தேசமாகிய வழியே. ஆயினும், அத்தகைய ஆசிரியன் உளனாதலைக் கண்டு வைத்தும், தாம் கெடும் நெறியை அறிந்து அந்நெறியிலே செல்வோர் அவ்வாசிரியன் அறிவுறுத்தும் நெறியைப் பெற விரும்புதல் இலர்.

விளக்கவுரை

'உறுதல்' என்றது, அதன் செயப்படுபொருள் மேல் நின்ற ஆகுபெயர். 'சுழி' என்பதற்கு, 'தலைப்பொறி' என உரைப்பினும் ஆம். 'சொல்லாகிய வழி' என்க. 'முன்னின்றும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. 'அந்நெறி' எனச் சுட்டு வருவித்து உரைக்க.
இதனால், புறச் சமயிகள் நல்லாசிரியரை யடுத்து நன் னெறியை உணர அறியாமை கூறப்பட்டது.

மாதவர் எல்லாம்மா தேவன் பிரான்என்பர்
நாதம தாக அறியப் படும்நந்தி
பேதம்செய் யாதே பிரான்என்று கைதொழில்
ஆதியும் அந்நெறி ஆகிநின் றானே. ***#1516***

பெரிய தவத்தையுடையோர் யாவரும், 'மகா தேவன்' என்பதைத் தன் பெயராக உடைய சிவனே முதல்வன் என ஒருபடித்தாகக் கூறுவர். அதனால், அவர் கூறிய வாறே அறியப்படுபவ னாகிய சிவனைச் சிறிதும் வேறுபடாத அக்கருத்துடன், 'முதல்வனே' என்று அழைத்துக் கும்பிட்டால், அந்தச் சிவனும் நன்னெறியாய் நின்று நலம் தருவான்.

விளக்கவுரை

நாதம் - தலைமை. பிரான், அண்மை விளி பயனிலைப் பெயராகக் கொண்டுரைப்பின். அது முன்னரே கூறப்பட்டதாதல் அறிக. 'நந்தியை'

என்னும் இரண்டனுருபு தொகுத்தல் பெற்றது. 'அந்நெறி' என்பதே, 'அம் நெறி' எனப் பிரித்துப் பொருள் கூறுக. அம் - அழகு; நன்று. 'அந்நெறி' எனச் சுட்டாகவே கொள்ளின், 'தானே பிரானாம் நெறி' என உரைக்க. இதனால், 'சிவ நெறி யல்லாதன பலவும் அறியாதார் கொள்ளும் மயக்க நெறியே' என்பது கூறப்பட்டது.

அரநெறி அப்பனை ஆதிப் பிரானை
உரநெறி யாகி உளம்புகுந் தானை
பரநெறி தேடிய பத்தர்கள் சித்தம்
பரனறி யாவிடிற் பல்வகைத் தூரமே. *#1517*

'உலகியலின் மேம்பட்ட வீட்டு நெறியாது' என்று ஆராய்கின்ற அன்பர்களது உள்ளம், சிவ நெறித் தந்தையும், முதற் கடவுளும், ஞான நெறியாய் ஞானிகளது உள்ளத்து விளங்கு பவனும் ஆகிய சிவனை அறியா தொழியுமாயின், அவ்வுள்ளங்கள் பலவகையாலும் வீட்டு நெறிக்கு மிகச் சேய்மைப்பட்டனவே யாகும்.

விளக்கவுரை

'யதா சர்மவ தாகாசம் வேஷ்ட இஷ்யந்தி மானவா;I
ததாசிவ மவிக்ஞாய துக்க ஸ்யாந்தோ பவிஷ்யதி II'
என்னும் உபநிடத வாக்கியத்தையும்,
'பரசிவ னுணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையும் என்றும்
விரவிய துயர்க்கீ றெய்திவீடுபே றடைது மென்றல்
உருவமில் விசும்பின்தோலை உரித்துடுப்பதற் கொப்பென்றே
பெருமறைபேசிற்றென் னின்பின்னுமோர்சான்று முண்டோ' 1
எனவும்,
'மானிடன் விசும்பைத்தோல்போல் சுருட்டுதல் வல்லனாயின்
ஈனமில் சிவனைக் காணா திடும்பைதீர் வீடு மெய்தும்
மானமார் சுருதி கூறும் வழக்கிவை ஆத லாலே
ஆனமர் இறையைக் காணும் உபாயமேயறிதல் வேண்டும்' 2
எனவும் இதனை மொழிபெயர்த்துக் கூறியவற்றையும் இங்குக் காண்க.
உரம் - அறிவு. *'உரனென்னும் தோட்டி' 3* என்பதும் காணத்தக்கது.
'பரன்' என்பதை அவ்விடத்துத் தொகுக்கப்பட்ட இரண்ட னுருபை விரித்து, *'புகுந்தானை'* என்பதன்பின் கூட்டி உரைக்க.
இதனால், புறச்சமயங்கள் வீட்டுநெறி ஆகாமை கூறப்பட்டது.

பரிசறி வானவன் பண்பன் பகலோன்
பெரிசறி வானவர் பேற்றில் திகழும்
துரிசற நீநினை தூய்மணி வண்ணன்
அரிதவன் வைத்த அறநெறி தானே. *#1518*

மாணவனே, உயிர்களது வினையின் தன்மைகளை அறிந்து அவற்றிற்கு

ஏற்ப அவைகளைப் படைப்புத் தொழிலிற் படுத்துகின்ற பிரமன், உயர்குணமாகிய 'சத்துவ குணத்தை உடையன்' எனக் கூறப்படுகின்ற மாயோன். பகலவன், மக்களோடு படுத்து நோக்குங்கால் உயர்ந் தோராக எண்ணப்படுகின்ற இந்திரன் முதலிய தேவர்கள் இவர்களது பதவியில் விளங்க விருப்பும் உனது விருப்பம் அறும்படி நீதூய மாணிக்கம் போலும் நிறத்தை உடைய சிவனைநினை; ஏனெனில் அவன் அருளிச்செய்த சிவநெறி ஒன்றே அடைதற்கு அரிய நல்ல நெறியாகும்.

விளக்கவுரை

பெரிது, 'பெரிசு' என மருவிற்று. அப்பண்புகொள் பெயர்.
'பெரும்பொருள்' என நின்று, உயர்வை யுடையாரைக் குறித்தது. அன்றி ஆகுபெயராய் நின்ற பண்புப் பெயர்' என்றலுமாம். 'பெரிசாக' என ஆக்கம், வருவிக்க. 'திகழும்' என்பது திகழ விரும்பும் காரணத்தின்மேல் நின்றது. 'வண்ணனை, என்னும் இரண்டனுருபு தொகுத்தல் பெற்றது. அருமை, நிலையுடையதாதல் பற்றிக் கூறப்படுவது.
இதனால், புறச்சமயங்கள் பிற தேவர்களது பதவிகளை நிலை யுடையனவாகக் கருதும் குற்றத்தைப் பயப்பனவாதல் கூறப்பட்டது.

ஆன சமயம் அது இதுநன் றெனும்
மான மனிதர் மயக்க மதுவொழி
கானங் கடந்த கடவுளை நாடுமின்
ஊனங் கடந்த உருவது வாமே. ***#1519***

'அதுவே பொருத்தமான சமயம், இதுவே நன்றான சமயம்' என ஓரோர் காரணம் பற்றிப் பற்றுக் கொண்டு பிதற்றுகின்ற மக்களது பிதற்றலால் உண்டாகின்ற மயக்கம் உம்மை விட்டு நீங்க, நீவிர் நாதம் கடந்த கடவுளாகிய சிவனை நினையுங்கள்; ஏனெனில், அந்த நினைவே குற்றமற்ற வகைமையைத் தருவதாம்.

விளக்கவுரை

மானம் - அபிமானம். 'மாயம்' என்பது பாடமன்று. 'மனிதர் மயக்கம்' என்னும் ஆறாவதன் தொகை 'வாளது வெட்டு' என்பதுபோல நின்றது. 'மயக்கமது' என்னும் அது, பகுதிப்பொருள் விகுதி. 'ஒழிய' என்பதன் ஈற்று அகரம் குறைந்து நின்றது. அன்றி வினைத்தொகை யாக்கி, 'ஒழிக்கின்ற கடவுளை' எனலுமாம். 'கானம்' என்னும் இசையின் பெயர் சொல்லொற்றுமையால் நாத தத்துவத்தைக் குறித்தது. 'உரு' என்பது 'வண்ணம்' என்னும் பொருட் டன்மையை உணர்த்திற்று. உருவைத் தருவதனை 'உரு' என்றார்.
இதனால், புறச்சமயிகள் தம்மில் ஒற்றுமையிலாராய் மாறுபட்டுப்

பலதலைப்பட்ட கருத்துக்களைக் கூறிமக்களை அலைக்கழிப்பவராதல் கூறப்பட்டது.

'தம்மை - உணரார்; உடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்' *1*

என்றார் சிவஞான போதத்திலும்.

அந்நெறி நாடி அமரர் முனிவரும்
சென்னெறி கண்டார் சிவனெனப் பெற்றார் பின்
முன்னெறி நாடி முதல்வன் அருளிலார்
செந்நெறி செல்லார் திகைக்கின்ற வாறே. ***#1520***

தேவர்களும், முனிவர்களும் 'சிறப்புடைய நெறி யாது' என ஆராய்ந்து உணர்ந்து சென்ற நெறியையே நேரிய நெறியாகக் கொண்டு ஒழுகி, அதனால், சிவனேயாய் நின்ற பேற்றினைப் பெற்றார் சத்திநிபாதர். மற்றுச் சத்திநிபாதம் இல்லாதவர் தம் மனம் சென்ற நெறியையே நேரிய நெறியாக்கொண்டு முற்கூறிய நேரிய நெறியிற் செல்லமாட்டாது, பிறவிக் கடலுட் கிடந்து கலங்கு கின்றது இரங்கத்தக்கது.

விளக்கவுரை

'இரங்கத்தக்கது' என்பது சொல்லெச்சம். அம்நெறி - அழகியநெறி. 'முதல்வன் அருள்' என்றது சத்திநிபாதத்தை, பின்னதில். 'அருளிலார்' என்பதனால், முன்னதில் 'அஃது உடையார்' என்பது பெறப்பட்டது. முன்நெறி வினைத்தொகை.

இதனால், புறச்சமயங்கள் சத்திநிபாதம் வாயாத உலகர்க்கே உரியனவாய்ப் பிறவிக் கடலைக் கடப்பியாமை கூறப்பட்டது.

உறுமா றறிவதும் உள்நின்ற சோதி
பெறுமா றறியிற் பிணக்கொன்றும் இல்லை
அறுமா றதுவான அங்கியுள் ஆங்கே
இறுமா றறிகிலர் ஏழைகள் தாமே. ***#1521***

அடையத்தக்க நல்ல நெறியை அறிய எழுகின்ற அறிவைச் சாருமாற்றை அறிந்துவிடுமாயின், பிழை யாதும் இல்லையாகும். ஆனால், அறிவில்லாத மக்கள், குற்றங்கள் யாவும் எரிந் தொழிதற்கு ஏதுவாம் நெருப்பாகிய அந்த அறிவினுள் புகுந்து தம் அல்லலை ஒழியுமாற்றை அறிகின்றார்களில்லை.

விளக்கவுரை

'அதனால், அவர்கள் புறநெறிகளிற் சென்று அல்லல் உறுகின்றார்கள்' என்பது குறிப்பெச்சம். 'அறிவது' என்றது அறிவை. உம்மை சிறப்பு. அறுதற்கும், இறுதற்கும் வினை முதல்கள் வருவிக்கப்பட்டன.

இதனால், புறச் சமயங்கள் மயக்க அறிவினை யுடையார்க்கு ஆவன

ஆதல் கூறப்பட்டது.

வழிநடக் கும்பரி சொன்றுண்டு வையம்
கழிநடக் குண்டவர் கற்பனை கேட்பர்
சுழிநடக் குந்துய ரம்மதி நீக்கிப்
பழிநடப் பார்க்குப் பரவலு மாமே. *#1522*

பிறவிச்சுழலிலே கிடந்து எய்துகின்ற துன்பங்களை யெல்லாம் போக்கி, அதனால், அறிவுடையவர் பழிக்கும் பழியையும் போக்கிக்கொள்ள விரும்புவார்க்கு நிலத்திலே பயணம் செய்தல் போன்ற நல்லவழி ஒன்று உண்டு. அதைப் போற்றி அடைதல் அத்துன்பங்கள் நீங்கும் காலம் வரப்பெறாதோ ரெல்லாம் சுழிவழியே பயணம் செய்வோர் போலப் புறச் சமயிகள் கூறும் கற்பனை உரைகளை 'மெய்' என்று கேட்டு அவற்றின்படியே நடப்பர்.

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி, முதலடியில், 'வையம்' என்பதனை முன் வைத்து, 'பரவலும் ஆம்' என்பதற்கு முன்னே கூட்டி உரைக்க. 'வையத்தின்கண் வழி நடக்கும்' என்க. தரை வழியாகப் பயணம் செய்வோர் துன்பம் இன்றிக்குறித்த இடத்தை அடைதலும், சுழிவழியாகப் பயணம் செய்வோர் ஓரிடத்தும் தரையை அடையாவிடின் சுழன்று கொண்டே இருப்பவராதலும் அறிக. காலம், சத்தி நிபாதம் காலம், 'ஒன்று உண்டு' எனக்கூறியொழிந்தமையால், 'அஃது அருமறையாய், (அரிய இரகசியமாய்) தக்கார்க்கே உணர்த்தப் படுவது' என்னும் குறிப்பினதாயிற்று. அவ் ஒன்றாவது, சித்தாந்த சைவமாம். இதனால், புறச் சமயங்கள் வெறும் சுழற்சியாய்ப் பயன் தாராது உலகரை மயக்கி நிற்பனவாதல் கூறப்பட்டது.

வழிசென்ற மாதவம் வைக்கின்ற போது
பழிசெல்லும் வல்வினைப் பற்றறுத் தாங்கே
அழிசெல்லும் வல்வினை ஆர்திறம் விட்டிட்
டுழிசெல்லில் உம்பர் தலைவன் முன்ஆமே. *#1523*

'வையத்தின் கண் வழி நடக்கும் பரிசு ஒன்று உண்டு' என மேற்கூறப்பட்ட வழியிலே சென்றதாகிய பெரிய தவம் தனது பயனைக் கொடுக்கின்ற காலத்தில் மக்கள் தங்கட்குப் பழிவரக் கூடியதான வலிய வினைக்கட்டினை அறுத்தொழித்து, அது காரணமாக, முன்பெல்லாம் அழிவு வழியில் சென்று கொண்டிருந்த அச்செயலில் பொருந்துதலாகிய தன்மையை விடுத்து நல்ல இடத்தை அடைவர். அங்ஙனம் அடைந்தால், தேவர் பிரானாகிய சிவன் வெளிநின்று அருள் புரிவான்.

விளக்கவுரை

'வைக்கின்ற' என்பதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. 'வாய்க்கின்ற' எனப்பாடம் ஓதலுமாம். பழி, அறிவுடையோர் பழித்துச் சொல்லும் சொல். 'அழி' என்னும் முதனிலைத் தொழிற் பெயர் அதனைத்தரும் வழியை உணர்த்திற்று. 'அழிவில் செல்லும் அவ்வினை' என்க. ஆர்தல் - பொருந்துதல். 'உழி' என வாளா கூறினமையின், சிறந்த இடமாயிற்று. அது, ஞானமாகிய நிலம் என்க. 'செல்லில் என்ற அனுவாதத்தால், 'செல்லுவர்' என்பதும் பெறப்பட்டது.
இதனால், தவம் உடையார்க்கே புறச்சமய மயக்கம் நீங்கிப் பயன் உண்டாதல் கூறப்பட்டது. தவமாவது, மேற் கூறிய சரியை முதலிய மூன்றுமே யாதலை நினைக. இங்கு, 'மாதவம்' என்றதும் அதனைக் குறித்தற் பொருட்டேயாம்.

*7.18.*நிராசாரம்

சிமையங்க ளாய்நின்ற தேவர்கள் ஆறு
சமையங்கள் பெற்றனர் சாத்திரம் ஓதி
அமையறிந் தோம்என்பர் ஆதிப் பிரானும்
கமையறிந் தாருட் கலந்துநின் றானே. *#1524*

மலைபோன்றவர்களாக மதிக்கப்படுகின்ற தேவர் பலருக்குரிய புறச்சமயங்களைத் தமக்கு உரியனவாகக் கொண்டோர் அவற்றின் நூல்களை ஓதி, 'அதனால், நிறை நிலையை அறிந்து விட்டோம்' என்று பெருமை பேசிக்கொள்வார்கள். ஆயினும், முதற் கடவுளாகிய சிவபெருமான் அவர்களது உள்ளத்தில் தோன்றாது மறைந்து, பொறையுடைமை, வெகுளாமை முதலிய ஒழுக்கங்களை உடையவரது உள்ளத்திலே விளங்கி நிற்கின்றான்.

விளக்கவுரை

சிமயம் - மலை. ஆக்கம், உவமை குறித்து நின்றது. 'மலைபோல்வாராக மதிக்கப்படுதல் அறிவு நிரம்பாதாரால்' என்க. 'இமையங்கள்' என்பது பாடமன்று. 'சிமையம், சமையம்' என்ப வற்றில் அகரத்திற்கு ஐகாரம் போலியாய் வந்தது. அமை, முதனிலைத் தொழிற் பெயர். அமைதல் - நிரம்புதல். கமை - பொறை. இது மற்றைய ஒழுக்கங்கட்கு உபலக்கணம். 'புறச்சமய நூல்களையே உண்மை நூல்கள் என மயங்கினாராயினும், அவை பற்றிப் பிற சமயங்களைப் பழித்து நிற்றலை விடுத்து, அவை கூறும் ஒழுக்கத்தை உடைய ராயினார்க்குச் சிவன் அருள்புரிவன்' என்றவாறு. இதனானே சிவ நூலை ஓதினார்க்கும் இது குறிப்பாற் கூறப்பட்டவாறு அறிக.
இதனால், நூல்களை ஓதியவழியும் ஒழுக்கம் இல்வழிப் பயன் இன்றாதல் கூறப்பட்டது. இதனை,

'ஓதலின் நன்றே வேதியர்க் கொழுக்கம்' *1*
'மறப்பினும் ஓத்துக்கொளலாகும்; பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்' *2*
என உயர்குலத்தார்மேல் வைத்தும்,
'ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை' *3*
'ஓதியுண்ர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையார் இல்'
எனப் பொதுப்பட வைத்தும் பிறவிடங்களிலும் கூறுமாறு அறிந்து கொள்க.

பாங்கமர் கொன்றைப் படர்சடை யானடி
தாங்கு மனிதர் தரணியில் நேரொப்பர்
நீங்கிய வண்ணம் நினைவுசெய் யாதவர்
ஏங்கி உலகில் இருந்தழு வாரே. ***#1525***

நன்மை அமைந்த சிவபெருமானது திருவடிகளை எப்போதும் தாங்கி நிற்கின்ற மனத்தை உடையவர் இப்பூமியில் தமக்குத் தாமே ஒப்பாகும் பெருமையை உடையவராவார். அவ்வாறின்றி அவற்றை எஞ்ஞான்றும் நீங்கி நின்ற வண்ணமாய் ஒருபோதும் நினையாதவர் உலகில் விரும்பியது ஒன்றனையும் பெறாது வாளா இருந்து துன்புறுவார்கள்.

விளக்கவுரை

'தமக்கு நேர் தாமேயாவர்' என்பதனை, 'நேர் ஒப்பர்' என்றார். இது, செல்வம் முதலிய எல்லாவற்றாலுமாம். ஏங்குதல் - விருப்பம் நிறைவுறாமையால் அதனையே நினைத்துக் குறையுறுதல். இதனை 'ஏக்கறுதல்' எனவும் கூறுவர். 'இரந்தழுவார்' எனப்பாடம் ஓதி, 'இரத்தலை மேற்கொண்டு அதனானும் நிரம்பப் பெறாது துன்புறுவர்' என்று உரைப்பினுமாம்.
'வானகம் ஆண்டுமந் தாகினி ஆடினந் தாவனஞ்சூழ்
தேனக மாமலர் சூடிச்செல் வோரும், சிதவல் சுற்றிக்
கானகந் தேயத் திரிந்திரப் போரும் - கனகவண்ணப்
பானிற நீற்றற் கடியரும், அல்லாப் படிறருமே' *1*
என்றாற்போல்வனவற்றையும் இங்கு நினைக.
இதனால், சிவனடியை நினைதல் நினையாமைகளே ஒழுக்கமும், இழுக்கமுமாதல் கூறப்பட்டது.

இருந்தழு வாரும் இயல்புகெட் டாரும்
அருந்தவம் மேற்கொண்டங் கண்ணலை எண்ணில்
வருந்தா வகைசெய்து வானவர் கோனும்
பெருந்தன்மை நல்கும் பிறப்பில்லை தானே. ***#1526***

வாழும் வழி யாதும் அறியாது திகைத்திருந்து அழுகின்றவர்களும், முன்னர் வாழ்வுடையராய் இருந்து பின்னர்க் கேடு எய்தினவர்களும் (தாம் முழுத் தீவினையும், அரைத் தீவினையும் உடையராய் இருத்தலை அறிந்து அவை ஒழிதற்பொருட்டு) அந்நிலை யில் அரிய தவம் செய்தலை மேற்கொண்டு சிவபிரானை நினைவரா யின், தேவ தேவனாகிய அவன் அவர்களது தாழ்நிலையை நீக்கி, உயர் நிலையைத் தருவன் - அதுவே யன்றி அவர்கட்குப் பிறப்பற்ற வீடுபேறும் உண்டாகும்.

விளக்கவுரை

'சிவபிரானை நினைத்தலே மேலான தவமாம் என்றற்கு, 'அருந்தவம் மேற்கொண்டு' என்றார்.

இதனால், சிவ பத்தியாகிய தவ ஒழுக்கம் உடையோர் தீவினையின் நீங்கி நலம் பெறுதல் கூறப்பட்டது.

தூரறி வாளர் துணைவன் நினைப்பிலர்
பாரறி வாளர் படுபயன் தானுண்பர்
காரறி வாளர் கரந்து பிறப்பர்கள்
நீரறி வாளர் நெடுமுகி லாமே. *#1527*

தூர்ந்த அறிவினை உடையோர் தோன்றாத் துணை யாயுள்ள இறைவனை நினைக்கமாட்டாது யாதொரு பயனையும் எய்தார். தூல அறிவினை உடையோர் வருவதை அனுபவித்துக் கொண்டிருப்பர். மயக்க அறிவினை உடையோர் உள்ளதை 'இல்லை' என்று சொல்லி மறைத்து, அதனால், பின் வறியராய்ப் பிறப்பர். அறத்தின் தன்மையை அறிந்த அறிவினை உடையோர் பெரிய மேகம் போலப் பலர்க்கும் கைம்மாறு கருதாது உதவி, அதனால், பின் செல்வராய்ப் பிறப்பர்.

விளக்கவுரை

தூரறிவு, படுபயன் என்பன வினைத்தொகை. பாரறிவு, காரறிவு என்பன பண்புத்தொகை. தூர்ந்த அறிவாவது அறிவின்மை; பேதைமை. 'துணைவனை' என்னும் இரண்டன் உருபு தொகுத்தல் பெற்றது. 'நினைப்பிலர்' என்றது தன் காரியமும் உடன் தோன்ற நின்றது. 'நாகரது பலி' என்பது போலும் ஆறாவதன் தொகை எனினுமாம். 'காரறிவு, மயக்க அறிவு' என்பதனை, 'களவென்னும் காரறிவாண்மை'*1* என்பது பற்றியும் உணர்க. நீர் - நீர்மை. நீர்மையை அறியும் அறிவினை ஆளுதல் உடையார்' என்க. ஆக்கம் உவமை குறித்து நின்றது. 'ஆவரே' என்னாது 'ஆமே' என்றது ஆரிட அமைதி. 'கரந்து' என்றதனால், 'வறியவராய்ப் பிறப்பர்' என்பது பெறப் பட்டது. படவே, முகில்போல்வார் செல்வராய்ப் பிறத்தல் கூறப்பட்டதாம்.

இதனால், அவரவர் அறிவு நிலைக்கு ஏற்பவே அவரவரது ஒழுக்கம்

உண்டாமாறு கூறுமுகத்தால், மெய்யறிவினை யுடையோர் சிவ பத்தி யுடையராய் ஒழுகல் வேண்டும் என்பது கூறப்பட்டது.

அறிவுடன் கூடி அழைத்ததோர் தோணி
பறியுடன் பாரம் பழம்பதி சிந்துங்
குறியது கண்டும் கொடுவினை யாளர்
செறிய நினைக்கிலர் சேவடி தானே. ***#1528***

சிவனது திருவடியாகிய, ஞானத்தொடு பொருந்தி வருவித்துஏறிய ஒப்பற்ற ஓர் தோணி, வினையாகிய சரக்கினை அது நின்ற உடலாகிய மூடையோடு சிவலோகமாகிய பழைய நகரத்தை அடைந்து, இறக்கிவிடுகின்ற அறிகுறிகளை அறிந்தும், தீவினை யுடையோர் அத்திருவடிகளைப் பொருந்தி நிற்க எண்ணுவதில்லை.

விளக்கவுரை

'அறிவுடன் கூடி அழைத்தது' என்றது 'நல்ல தோணியை அறிந்து அழைத்து அதில் ஏறுதல் அறிவுடையோர்கன்றி ஆகாமைபோலச் சிவனடியை வேண்டிப்பெறுதல் ஞானிகட்கு அல்லது ஆகாது' எனக் கூறியதாம். பறி - கூடை, அது சரக்குப் பொதிந்த மூடையைக் குறித்தது. தோணி, பறி, பழம்பதி என்பன சிறப் புருவகங்கள். அறிகுறிகள், அவ் அடியைப்பற்றினோர் மாட்டுக் காணப்படும் ஏமாப்பு, நமனையும் அஞ்சாத அச்சமின்மை *1* முதலியன.
இதனால், அறிவேயன்றி, ஒழுக்கமும் நல்வினையுடையார்க் கன்றி வாயாமை கூறப்பட்டது.

மன்னும் ஒருவன் மருவு மனோமய
னென்னின் மனிதர் இகழ்வரிவ் வேழைகள்
துன்னி மனமே தொழுமின் துணையிலி
தன்னையும் அங்கே தலைப்பட லாமே. ***#1529***

அழிவிலனாகிய இறைவன் தன்னை நினைப்ப வரது நினைவே வடிவாய் விளங்குபவன் என்று வேதாகமங்கள் சொல்லவும் அதனை அறியாது இவ்வுலகத்தில் உள்ள அறிவிலிகள் அவனை நினையாது இகழ்ந்தொழிவார்கள். நீவிர் அங்ஙனம் செய்யாது மனம் பொருந்தி அவனை வணங்குங்கள். வணங்கினால், அப்பொழுதே ஒப்பற்ற ஒருவனாகிய அவனை அடைதல் கூடும்.

விளக்கவுரை

'என்னில்' என்பது, அதனை உணர்ந்து நினைதலே அவனைத் தலைப்படுதற்குக் காரணமாதலைக் குறித்தது. 'மனிதர்' என்னும் விதப்பு, 'மனிதத்தன்மை இலர்' என்னும் இகழ்ச்சிக் குறிப்பினது.
இதனால், அறிவிலும் ஒழுக்கமே சிறந்த சாதனமாதல் கூறப்பட்டது.

ஓங்காரத் துள்ளொளி உள்ளே உதயமுற்
றாங்கார மற்ற அனுபவம் கைகூடார்
சாங்காலம் உன்னார் பிறவாமை சார்வுறார்
நீங்காச் சமயத்துள் நின்றொழிந் தார்களே. **#1530**

பிரணவத்தின் உள்ளே விளங்குவதாகிய ஒளியை அறிவினுள்ளே வெளிப்படுதலால் உண்டாகின்ற அனுபவத்தை அடையப் பெறார்; இறப்பு என்றாயினும் ஒருநாள் உளதாதலை நினையார்; அதனை நினைந்து, மேலும் பிறந்து இறத்தலை ஒழியும் நெறியைப் பற்றார்; வாளா சமயத்தை மட்டும் பற்றிக்கொண்டு அதன் பயனைப் பெறாதொழிகின்றார்கள் மக்கள்.

விளக்கவுரை

சமயத்தில் நிற்பார் மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கங்களை எதிர்மறை முகத்தான் உணர்த்தி, அவற்றையுடை யோரே சமயத்தின் பயனைப் பெறுவர் எனக் கூறியவாறு. 'உறுதலான்' என்பதன் திரிபாகிய 'உற்று' என்பது 'கைகூடார்' என்பதன் முதனிலையோடு முடிந்தது.
இதனால், சமய ஒழுக்கம் இல்லாத சமயிகள் சமயத்தின் பயனை எய்தாமை கூறப்பட்டது.

<u>**7.19.**உட்சமயம்</u>

இமையவர் தம்மையும் எம்மையும் முன்னம்
அமைய வகுத்த அனாதி புராணன்
சமையங்க ளாறுந்தன் தாளிணை நாட
அமையங் கழல்கின்ற ஆதிப் பிரானே. **#1531**

தேவர்களையும், மக்களாகிய எம்மையும் உய்தி பெறுதற்குப் பொருந்தும் வகையினராகப் படைத்த அனாதியான பழையோன், அகச் சமயங்கள் ஆறும் தன் திருவடியையே நாடி நிற்கும்படி அமைய, அவற்றைக் கடந்து நிற்கும் முதல்வனாகின்றான்.

விளக்கவுரை

எழுவகைப் பிறப்பினுள் தெய்வப் பிறப்பும், மக்கட் பிறப்பும் ஒழிந்தவை பெரும்பாலும் வீடு பெறுதற்கு வாயிலாதல் இல்லையாக, இவ்விரு பிறப்புக்களுமே அதற்கு வாயிலாதல் வெளிப் படை. 'அவை அங்ஙனமாதலும் இறைவனது திருக்குறிப்பின் வழியது' என்பதும், 'அவ் இருவகைப் பிறப்பின் உயிர்களும் உய்தி பெறுதல் அகச் சமயங்களின் வழியே' என்பதும், 'அங்ஙனமாயினும் இறைவனது உண்மை நிலை சமயங்களைக் கடந்தது' என்பதும் கூறிய வாறு. 'சமையம்' என்பதில் அகரத்திற்கு ஐகாரம் போலியாய் வந்தது. 'தன் தாளினை நாட அமைந்தன' என்பதனால், 'சமயங்கள்' எனப் பட்டன உட்சமயங்களே

ஆயின. 'அமையக் கழல்கின்ற' என்னும் ககர ஒற்று மெலிந்து நின்றது. இவ்வாறன்றி, 'அச்சமயங்களது (செவ் வழிகளை) நிலைகளைக் கடந்து நிற்கின்ற எனலுமாம்.

இதனால், வீடுபெறும் உயிர்கட்கு அதற்குரிய வழிகளாய் நிற்பன அகச் சமயங்களே' என்பது கூறப்பட்டது.

ஒன்றதே பேரூர் வழிஆ றதற்குள
என்றது போலும் இருமுச் சமயமும்
நின்றிது தீதிது என்றுரை ஆதர்கள்
குன்று குரைத்தெழு நாயைஒத் தார்களே. *#1532*

இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

'உள' என்பதனை, 'இருமுச் சமயமும்' என்பதன் பின்னும் கூட்டுக. மூன்றாம் அடியாற்போந்த பொருள், 'கலாய்ப்பவர்' என்பது. ஆதர்கள் - அறிவில்லாதவர்கள். 'மலையைப் பார்த்து நாய் குரைத்தல் போல' என்பது பழமொழி. 'ஒத்தார்கள்' என்றது, அகச் சமயத்தவருள் ஒரு சமயத்துள் நின்றுபிற சமயங்களை இகழ்பவரை. 'அங்ஙனம் இகழ்தல் அவையும் பிறவாற்றால் உண்மையை உணர் தற்கு வழியாதலை அறியாமையாலாம்' என்பது கருத்து. இறுதியிற் போந்த உவமை, அகச் சமயிகளிடைப் பூசல் விளைப்பார்க்கே ஆதல், வெளிப்படை. இதன் முதல் அடியோடு ஒப்ப,

'சுத்தவடி வியல்பாக உடைய சோதி
சொல்லியஆ கமங்களெலாம் சூழப் போயும்
ஒருபதிக்குப் பலநெறிகள் உளவா னாற்போல்'*1*

எனச் சிவஞானசித்தியும் கூறுதல் காண்க. 'ஒரு பதிபோல்வது' கருத்து என்பதும், 'பல நெறிகள் போல்வன சொற்கள் என்பதும் சித்தியுள் தோன்றுதல் காண்க.

இதனால், அகச் சமயங்கள் சொல் வகையாலும், செயல்வகை யாலும் வேறுபடினும், கருத்து வகையால் ஒன்றாதலைக் கூறி, அஃது அறியாது அவற்றிடை நிற்போர் தம்மிடைக் கலாய்த்தலும், சைவரை இகழ்தலும் கூடாமை கூறப்பட்டது.

சைவப் பெருமைத் தனிநா யகன்றன்னை
உய்ய உயிர்க்கின்ற ஒண்சுடர் நந்தியை
எய்ய பெருமையர்க் கன்பனை இன்பஞ்செய்
வையத் தலைவனை வந்தடைந் துய்மினே. *#1533*

அகச் சமயங்கள் அறிந்தோ, அறியாமலோ கருத்து வகையால் சைவத்தோடு ஒன்றி நிற்றலை அவருள் அறியாதாரை நோக்கி அதனையே இதுமுதலாக அறிவுறுத்துகின்றார். இதனை, சைவ சமயச்

சிறப்பு என்பதொரு தனி அதிகாரமாகக் கொள்ளினும் பொருந்தும், சைவ சமயத்தால் கொள்ளப்படும் ஒப்பற்ற தலைவனும், மக்கள் உயிர் நெடிது வாழ்ந்து உய்தி பெறுதற் பொருட்டு உயிர்ப்பாய் இயங்கு கின்றவனும், சிறந்த ஞான வடிவானவனும், தன்னை உணரும் பெருமை யுடையவரிடத்துத் தானும் அன்பு செய்கின்றவனும், அனைத்துயிர்க்கும் முடிவில் அவை விரும்பும் பேரின்பத்தைத் தருபவனும், இவ்வியல்புகளால் உண்மைத் தலைவன் தானே ஆகின்றவனும் ஆகிய சிவபெருமானை நீவிர் நீங்கி நிற்றலை விடுத்து, அணுக வந்து அடைந்து பிழையுங்கள்.

விளக்கவுரை

'சைவ சமயமே தலையாய சமயம்' என்பது, மேல் பல விடத்தும், பலவகையானும் விளக்கப்பட்டமையின், அச்சமயத்தாற் கடவுளாகக் கொள்ளப்படுதலும் பெருமையாயிற்று. இறைவன் உயிர்ப்பாய் இயங்குதல் மேலேயும் *(1512)* கூறப்பட்டது. எய் - எய்தல்; அறிதல்; முதனிலைத் தொழிற்பெயர். 'எய்ய' என்பது இதனடியாகப் பிறந்த பெயரெச்சக்குறிப்பு. 'வையம்' என்றது உயிர்களை, 'வந்தடைந்து உய்மின்கள்' என்றது, அவர்மாட்டு எழுந்த கருணைபற்றி. இதனால், சைவக் கடவுளாகிய சிவபிரானது பெருமையை வகுத்துணர்த்தி, அவனைச் சார, அழைத்தல் செய்யப்பட்டது, அகச்சமயிகளாதலின் அவர்தாம் உணர்த்தியவாறே உணர்ந்து ஒழுகுவார்கள் ஆதலின், இனி வருவனவும் இவைபற்றி என்க.

சிவனவன் வைத்ததோர் தெய்வ நெறியில்
பவனவன் வைத்த பழவழி நாடி
இவனவன் என்ப தறியவல் லார்கட்
கவனவ னங்குள தாங்கட னாமே. **#*1534***

தெய்வந் தெளிந்து அதன் இயல்பை ஆராயும் எல்லாச் சமயங்களையும் உலகில் ஆக்கி வைத்தவன் சிவபெருமானே எனினும் அவற்றுள் முற்பட்டதாகிய சமயம் சைவமே. அதனை அடைந்தோர் 'இச்சமயக் கடவுளாகிய சிவனே ஏனைச் சமயங் களினும் நின்று பயன் தருகின்றான்' என்பதை உணர்வர். அங்ஙனம் உணர்ந்தவர்க்கு அவன் அச்சமயங்களில் ஏற்ற பெற்றியால் நின்று அருள்புரிதலும் விளங்கும்.

விளக்கவுரை

ஓர்தல் - ஆராய்தல் 'ஓர் நெறி' என இயையும். 'பவன்' என்பது சிவனது நாமங்களில் சிறந்ததொன்று. 'பழவழி' என்றது, 'முன்னர்த் தோன்றியநெறி' என்றவாறு.
'முன்னெறியாகிய முதல்வன் முக்கணன் தன்னெறி' *1* என அப்பரும்

அருளிச்செய்தார். மூன்று, நான்காம் அடிகளில் வந்த 'அவன்' என்பன, பிற சமயக் கடவுளரைத் தனித்தனிச் சுட்டிற்று. ஈற்றடியில் நின்ற 'அவன் அவன்' என்பது ஒரு சொல் அடுக்கு 'அவன் அவனாய் உளது' என ஆக்கம் வருவிக்க. 'உளது' என்பது அப்பண்பு குறித்துநின்றது. கடன்முறைமை. 'உள்ள முறைமை' என்பதனை 'உளதாங் கடன்' என்றார். இறுதிக்கண் 'ஆம்' என்றது 'விளங்கும்' என்றவாறு.
இதனால், 'அகச் சமயத் தோர்களிடமாக நின்று அருள் பவனும் சிவனே' என்பது கூறப்பட்டது.
'யாதொரு சமயங் கொண்டீர் அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்' *2*
என்ற சிவஞான சித்தியையும் காண்க.

ஆமா றுரைக்கும் அறுசம யாதிக்குப்
போமாறு தானில்லை புண்ணிய மல்லதுஅங்
காமாம் வழிஆக்கும் அவ்வே றுயிர்கட்கும்
போமாறவ் வாதாரப் பூங்கொடி யாளே. ***#1535***

பொருந்தும் வழியையே கூறுகின்ற அகச் சமயங்கள் ஆறுக்கும் தலைவனாகிய சிவபெருமானை நேரே சென்று அடைதற்குப் புண்ணியம் தவிர வேறில்லை. சைவத்தில் நிற்பவர்க்கேயன்றி பிறசமயங்களில் நிற்கும் அனைத்துயிர்கட்கும் மேற்செல்லும் வழியாகிய அந்தச் சிவசத்தியாகிய முதல்வியே அவ்வுயிர்கட்கு அச்சமயங்களைப் பொருந்தும் வழியாகக் கூட்டு விப்பாள்.

விளக்கவுரை

'சமயாதி' நான்காவதன்தொகை 'ஆதிக்கு' என்னும் நான்காவதை ஏழாவதாகத் திரித்துக்கொள்க 'ஆம் ஆம்' என்னும் அடுக்கு, 'அவ்வவற்றிகுப் பொருந்துகின்ற, என்னும் பொருட்டு. வழி ஆக்கும் - வழியாகக் கூட்டுவிக்கும். 'ஆமாம் வழி ஆக்கும்' என்பதனை இறுதியிற் கூட்டி உரைக்க. 'போமாறாகிய கொடி' என்க. ஆதாரம் - அனைத்திற்கும்' நிலைக்களம். அங்ஙனம் ஆவது சிவ சத்தியே யாதல் அறிக.
இதனால், 'அகச் சமயங்களும் சிவசத்தியின் செயலால் அமைந்தனவே' என்பது கூறப்பட்டது.

அரனெறி யாவ தறிந்தேனும் நானும்
சிவநெறி தேடித் திரிந்தஅந் நாளும்
உரநெறி உள்ளக் கடல்கடந் தேறும்
தரநெறி நின்ற தனிச்சுடர் தானே. ***#1536***

அகமாகிய சிவநெறிகளைத் தேடித் திரிந்த அக்காலத்திலும் ஞான நெறியால், அளவற்ற எண்ணமாகிய கடலைக் கடந்து ஏறுதற்குரிய

உயர்ந்த நெறியாய் உள்ள ஒப்பற்ற ஒளி நெறி யாவது சிவனது நெறியே யாதலை அறிந்தவனு மாயினேன் நானும்.

விளக்கவுரை

ஆகவே, 'அகநெறியில் (உட்சமயங்களில்) நிற்போர் சிவநெறியை அடைந்து உய்யும் நிலையைப் பெறுவர்' என்றவாறு. உம்மைகள் இரண்டனுள் முன்னது உயர்வு சிறப்பும், ஏனைய இழிவு சிறப்புமாம். 'அறிந்தேனும்' என்பதன்பின் 'ஆயினேன்' என்பது எஞ்சிநின்றது. முதலடியை இறுதியிற் கூட்டி உரைக்க. உரம் - ஞானம். 'உள்ளம்' என்றது, அதன்கண் தோன்றும் எண்ணத்தை,

'கருதுப - கோடியும் அல்ல பல'*1*

என்ப ஆகலின், அவற்றைக் கடலாக உருவகித்தார். 'அவற்றைக் கடத்தல் ஞானம் துணையாய வழிக் கூடும்' என்பதையும், அத் துணையைத் தருவதே உயரிய நெறி என்பதையும், அதனால், அஃது 'ஒளிநெறி' எனப்படுகின்றது என்பதையும் எடுத்தோதி, 'அவ் ஒளி நெறி அரன் நெறியே' என்பது உணர்த்தினார். 'இதனை அடைதல் உட் சமயிகளுக்கல்லது இயலாது' என்றவாறு. இதனுள் இன எதுகை வந்தது. இதனால், உட்சமயங்கள் சிவநெறிக்குத் தடையாகாது துணையாதல் கூறப்பட்டது.

தேர்ந்த அரனை அடைந்த சிவநெறி
பேர்ந்தவர் உன்னிப் பெயர்ந்த பெருவழி
ஆர்ந்தவர் அண்டத்துப் புக்க அருள்நெறி
போந்து புனைந்து புணர்நெறி ஆமே. ***#1537***

அறிவுடையோர் ஆராய்ந்து கண்டு பற்றிச் சிவனை அடைந்து உய்ந்த சைவநெறி, முன்னர் ஆராய்தல் இன்றி நீங்கினோர் பலர் பின்னர் ஆராய்ந்து மீண்டு வந்தடைந்த பெருமை யுடையதும், பொருந்தி நின்றோர் மேற்கதியைப் பெற்றதுமாகும். அதனால், அதுவே, யாவரும் புறநோக்கை விட்டுத் திரும்பிப் புகழ்ந்து அடைதற்குரிய நெறியாகும்.

விளக்கவுரை

'சிவன்' எனப் பின்னர் வருதலின்' முன்னர், 'தன்னை' என்றார். பெயர்ந்து வந்தவர் அப்பரைப் போல்வார். பொருந்தினோர் மேற்கதியிற் சென்றமை கூறவே, பொருந்தாது இகழ்ந்து நீங்கினோர் தாழ்கதியிற் சென்றமை பெறப்பட்டது.

'வெள்ளெ ருக்கர வம்விர வுஞ்சடைப்
புள்ளி ருக்குவே ளூர்அரன் பொன்னடி
யுள்ளி ருக்கும் உணர்ச்சி யிலாதவர்
நள்ளி ருப்பர் நரகக் குழியிலே' *1*

என அப்பரும் அருளிச் செய்தார். புகழை, 'புனைந்துரை' என்ப ஆகலின், புனைதல் புகழ்தலாயிற்று.
இதனால், அகச் சமயங்கள் மேற்கூறியவற்றால் தாழ்கதியிற் செலுத்தாதனவாதல் கூறப்பட்டது.

ஈரும் மனத்தை இண்டற வீசும் இய்
யூரும் சகாரத்தை ஓது முன் ஓதியே
வாரும் அரன்நெறி மன்னியே முன்னில் அத்
தூரும் சுடரொளி தோன்றலு மாமே. **#1538**

இருதலைப் படுகின்ற மனத்தை அவ்வாறு இரண்டாதலினின்றும் நீங்க நீங்குங்கள்; நீக்கி, இகரம் ஊர்ந்த சகர எழுத்தை ஓதுங்கள். ஓதி, சிவனது நெறியில் எம்முடன் வாருங்கள்; வந்து அதில் நிலையாக நின்று அவனை நினைத்தால், உம்முள் மறைந்து நிற்கின்ற விளக்கொளி உங்கட்கு வெளிப்படுதல் கூடும்.

விளக்கவுரை

இருதலைப் படுதல் - ஐயமாய் நிற்றல். 'இரண்டின் அற' என ஐந்தாவது விரிக்க. வீசுதல் நீக்குதல். 'வீசுமின்' என்பது பாடமாகாமை, பின்னர், 'வாரும்' என வருதலானும் அறியப்படும். இகரம் ஊர்ந்த சகரம், சி. திருவைந்தெழுத்தில் ஏனையவை இதன்கண் அடங்குதல் அறிந்துகொள்க. 'முன்னியத்' தென்பதும் பாடமன்று. முன்னுதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது.
இதனால், சிவநெறி திருவைந்தெழுத்தால் பல்லாற்றானும் பயன் தருதல் கூறப்பட்டது.

மினற்குறி யாளனை வேதியர் வேதத்
தனற்குறி யாளனை ஆதிப் பிரானை
நினைக்குறி யாளனை ஞானக் கொழுந்தின்
அனைக்குறி காணில் அரன்நெறி ஆமே. **#1539**

பெண்ணாகச் சொல்லப்படுகின்ற சத்தியாகிய நல்ல வடிவினையும், அந்தணர்கள் வேதத்தின்வழி வளர்க்கின்ற அக்கினி யாகிய வடிவினையும், அன்பர்கள் நினையும் நினைவாகிய வடிவினையும் உடைய சிவபெருமானை ஞானத்தின் முடிநிலை யாகிய அந்த வழியாற் காணுதல் உண்டாகுமாயின், அப்பொழுது சிவநெறி கைவந்ததாம்.

விளக்கவுரை

'மின்னாகிய நற்குறி' என்க. பின்னர்க் கூறப்படும் வடிவங்கள் பலவற்றினும் சிறப்புடையது இதுவேயாதல் பற்றி இதனை, 'நற்குறி' என்றார். 'சிவன்' என்னும் பொருட்டாய் நின்ற, 'ஆதிப்பிரான்' என்பதை, 'நினைக் குறியாளனை' என்பதன் பின்னர்க் கூட்டுக. 'நினை'

முதனிலைத் தொழிற்பெயர். 'அஃது' என்னும் பொருட்டாகிய 'அனைத்து' என்பது ஈறுகுறைந்துநின்றது. 'அயக்குறி, நயக்குறி' என்பன பாடமல்ல. ஆதல், இங்கு கைவருதல்.
இதனால், சிவநெறி முதல்வன் அவரவர் தகுதிக்கு ஏற்பப் பலவகையில் நின்று தருதல் கூறப்பட்டது.

ஆய்ந்துண ரார்களின் ஆன்மாச் சதுர்பல
வாய்ந்துண ராவகை நின்ற அரன்நெறி
பாய்ந்துணர் வார் அரன் சேவடி கைதொழு
தேய்ந்துணர் செய்வதோர் இன்பமு மாமே. ***#1540***

உண்மை நூல்களை ஆராய்ந்து உணர மாட்டாதவர் களது, ஏனைய பல திறமைகளும் பொருந்தி உணராதபடி நிற்பது சிவநெறி, அஃது, உண்மை நூல்களில் நுழைந்து அவற்றின் பொருளை உணர்கின்றவர்கள், அவ்வுணர்வின் வழியே சிவனது திருவடியை முதற்கண் அவற்றின் வேறாய் நின்று வழிபட்டுப் பின்னர், அவற்றோடு ஒன்றாய் இயைந்து நுகர்கின்ற இன்பமாய் உள்ளது.

விளக்கவுரை

நான்காம் அடியில், உரை என்பது பாடமன்று.
இதனால், சிவநெறி புறச்சமயிகட்கு உணர ஒண்ணாததாய்ச் சிவநெறியாளர்க்கு முன்னர்க் கரணத்தாற் பெறும் இன்பமாயும், பின்னர்க் கரணங் கடந்த இன்பமாயும் விளைதல் கூறப்பட்டது.

சைவ சமயத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத் துளார்க்கு வகுத்துவைத் தானே. ***#1541***

'சைவ சமயத்தின் ஒப்பற்ற தலைவன்' எனப் பலராலும் அறியப்பட்ட சிவன் ஆன்மாக்கள் உய்தற்பொருட்டு அமைத்த ஞானநெறி ஒன்றே உள்ளது. அது, தெய்வத் தன்மை பொருந்திய சிவநெறியே. உலகத்தில் ஞானத்திற்குத் தகுதியுடையராய் உள்ளார் அதனை அடைந்து உய்தற்கு அந்த ஒன்றையே அவன் அமைத்திருக்கின்றான்.

விளக்கவுரை

'சைவ சமயத் தனி நாயகன்' என்பது எழுவாயும், 'நந்தி' என்பது பயனிலையாயும் நின்று ஒரு பெயர்த் தன்மைப் பட்டது. 'சன்மார்க்கம் சேர்ந்துய்ய' என்பது முதலாக மறித்தும் கூறியது, நன்கு வலியுறுத்தற்பொருட்டு.
இதனால், உண்மை உய்யும் நெறி சிவநெறியேயல்லது வேறின்மை வலியுறுத்து உணர்த்தப்பட்டது.

இத்தவம் அத்தவம் என்றிரு பேர்இடும்
பித்தரைக் காணின் நகும்எங்கள் பேர்நந்தி
எத்தவ மாகில்என்! எங்குப் பிறக்கில் என்!
ஒத்துணர் வார்க்கொல்லை ஊர்புக லாமே. *#1542*

'இத்தவம், அத்தவம்' என்று தவங்கள் பல இருப்பனபோலச் சுட்டிப் பேசும் பித்தர்களைக் காணும்போதெல்லாம் எங்கள் பெரும்பெருமானாகிய சிவன் நகைப்பான். ஏனெனில், எந்தச் செயலாய் இருந்தால் என்ன? எந்தச் சமயத்தில் பிறந்தால் என்ன? தவத்தையும், அதனால் அடையப்படும் இறைவனையும் சிவநெறி யாளரோடு ஒத்த உணர்வினராய் உணர்பவர்கட்கு விரைவில் வீடு பெறுதல் கூடுவதாகும்.

விளக்கவுரை

'எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்' *1*
என்னும் முடிபுரையையும், அதற்கு இலக்கியமான சாக்கிய நாயனாரது வரலாற்றையும் உணர்க. 'பெருநந்தி' என்பது செய்யுள் முடிபெய்தி நின்றது.

தவம், தவச் செயல். 'எங்கு' எனச் சமயத்தை இடமாக வைத்து ஓதினார். இனி 'எந்நாட்டில்' எனப் பொருள்கொண்டு, 'நாடு களது வேறுபாட்டால் இங்குப் பெறப்படுவது சமயவேறுபாடு' என்றலு மாம். ஒத்தற்கும், உணர்தற்கும் செயப்படுபொருள்கள் வருவிக்கப் பட்டன. வீடு பெறுதலை, 'ஊர் புகல்' என்றது ஒப்புமை வழக்கு.

இதனால், பிறப்பின் சார்பால் அதன் சமயத் தொடக்கி னின்றும் நீங்கமாட்டாதோரும் சிவநெறிப் பற்றுடையராயின் உய்தி பெறுதல் கூறப்பட்டது.

ஆமே பிரான்முகம் ஐந்தொடும் ஆருயிர்க்
காமே பிரானுக் கதோமுகம் ஆறுள
தாமேய் பிரானுக்கும் தன்சிர மாலைக்கும்
நாமேய் பிரானுக்கு நாரியல் பாமே. *#1543*

சிவபெருமானுக்குத் தனது நிலைக்கு உரியன வான ஐந்து முகங்களோடு, கீழ்நிலையில் உள்ள உயிர்களுக்கு உரிய அதோமுகமும் உண்டு. இவ்வாறாக உள்ள ஆறுமுகங் கட்கும், அவன் அணிந்திருக்கின்ற தலைமாலைக்கும் உயிர்கள் அச்சத்தைப் பொருந்துகின்ற அப்பெருமானுக்கு அருள் இயல்பாய் உள்ளது.

விளக்கவுரை

'பிரான் முகம ஐந்தொடு ஆருயிர்க்கு ஆம் அதோ முகம் பிரானுக்கு ஆம்'

எனக் கூட்டி உரைக்க. 'ஆறாய் உள்ள தாம்' என ஆக்கம் வருவிக்க. 'அச்சக் கிளவிக்கு ஐந்தும் இரண்டும்' அன்றி நான் காவதும் வரும் பிற்கால வழக்குப்பற்றி, 'பிரானுக்கும் மாலைக்கும்' என்றார். நாம் - அச்சம். நார் - அருள். முன் இரண்டடிகள் சிவனது முழுமுதல் தன்மையையும், பின் இரண்டடிகள் அவனது வடிவை அஞ்சத்தக்கதாக எண்ணி மருள்வாரைத் தேற்றுதலையும் குறித்தன. யாவரும் அறியும் ஐம்முகம் அவன் தனது உலகத்தில் நின்று தானே ஐந்தொழில் செய்வதற்கும், ஞானியரே உணரத்தக்க அதோமுகம் அனந்த தேவர் சீகண்டர் வழி. உருத்திர லோக தேவ மானுட லோகங்களில் ஐந்தொழில் நிகழ் வித்தற்கும் அமைந்தன என்பது, மேல் இரண்டாம் தந்திரத்து, அதோ முக தரிசன அதிகாரத்துட் கூறப்பட்டதனை இங்குச் சிறப்புணர்த்துதற் பயன் நோக்கிக் கூறினார். எனவே, 'ஆருயிர்' என்றது 'நிறைந்த உயிர்' என்னும் பொருட்டாய்ப் பிரளயாகலர் சகலரைக்குறித்த தாயிற்று. இம்மந்திரத்துள் பிறவாறு ஓதுவன பாடம் அல்ல.
இதனால், சிவநெறியே மெய்ப்பொருளை முதலாக உடையது' என்பதும், 'அம் முதலது தன்மை யறியாது வெருளுதல் மயக்க உணர்வாம்' என்பதும் கூறப்பட்டன.

ஆதிப் பிரான் உல கேழும் அளந்தஅவ்
வோதக் கடலும் உயிர்களு மாய்நிற்கும்
பேதிப் பிலாமையின் நின்ற பராசத்தி
ஆதிக்கண் தெய்வமும் அந்தமும் ஆமே. ***#1544***

முதற் கடவுளாகிய சிவபெருமான், நிலவுலகத் தில் உள்ள ஏழு பொழில்களையும் (தீவுகளையும்) சூழ்ந்த ஏழு கடலாயும், அப்பொழில்களில் வாழ்கின்ற அனைத்து உயிர்களாயும் நிற்பான். அவனின் வேறுபடாநிற்கின்ற சத்தி, ஆக்கல் அழித்தல்களைச் செய்யும் கடவுளரிடத்துப் பொருந்தி அவர்கள் வழியாக அத்தொழில்களை நிகழ்த்துவாள்.

விளக்கவுரை

அளத்தல் - இங்கு உள்ளடக்கல். 'அளந்தவன்' என்பது பாடமாயின், அதன்பின், 'ஆதலான்' என்பது வருவிக்க. சிவனது பெருமையையும், ஏனையோரது சிறுமையையும் உணர்த்தற்குக் கடலும் உயிருமாய் நிற்றலைச் சிவன் மேல் வைத்தும், பிற கடவுளராய் நிற்றலைச்சத்திமேல் வைத்தும் கூறினார். 'அந்தம்' என்பதும் ஆகுபெயராய் 'அந்தத்தின் கண் தெய்வம்' எனப் பொருள் தந்தது.
இதனால், சிவநெறி முதல்வராகிய சிவனும், சத்தியுமே அனைத்துச் சமய முதல்வராயும் நின்று அருள் செய்தல் கூறப்பட்டது.

ஆய்ந்தறி வார்கள் அமரர்வித் தியாதரர்

ஆய்ந்தறி யாவண்ணம் நின்ற அரன்நெறி
ஆய்ந்தறிந் தேன்அவன் சேவடி கைதொழ
ஆய்ந்தறிந் தேன்இம்மை அம்மை கண்டேனே. *#1545*

எல்லாவற்றையும் ஆய்ந்து அறிபவர்களாகிய தேவர்கள், வித்தியாதரர் முதலியோர் ஆய்ந்து அறிய இயலாதவாறு உள்ள சிவனது நெறியை, நான் ஆய்ந்தறிந்தேன். அதன்பின் அச் சிவனது திருவடிகளை வழிபடும் முறைமையையும் ஆய்ந்தறிந்தேன். அதனால், இம்மை அம்மை இரண்டின் இயல்புகளையும் நன்குணர்ந்தேன்.

விளக்கவுரை

ஆய்ந்து அறிதலாவது ஆய்தலைச் செய்து, உண்மையை உணர்தல். பிற பொருள்களின் உண்மையை உணர் வோர்க்கும் முன்னைத் தவம் இல்வழி, 'சிவநெறியே நெறி' என்பது உணர்தல் கூடாமையை முதல் இரண்டடிகளிலும், முன்னைத் தவம் உடையார்க்கு அஃது எளிதில் கூடுதலை மூன்றாம் அடியில், உள்ள 'ஆய்ந்தறிந்தேன்' என்பதிலும், 'சிவநெறியே நெறி' என உணர்ந் தார்க்கும் அதிற் சொல்லப்படும் சாதனமும், பயனும் வாய்த்தல் அரிதாதலை ஏனைப் பகுதியிலும் கூறினார்.

இதனால், சிவநெறியைச் சார்தல் சார்ந்து பயன்கொள்ளுதல் இவற்றது அருமை கூறப்பட்டது.

அறியஒண் ணாத உடம்பின் பயனை
அறியஒண் ணாத அறுவகை ஆக்கி
அறியஒண் ணாத அறுவகைக் கோசத்
தறியஒண் ணாததோர் அண்டம் பதிந்ததே. *#1546*

அறிதற்கு அரிதாகிய மானுட உடம்பின் பயனை அறிதற்குத் தடையாக ஆறுசமயங்களைப் படைத்து, அறிதற்கு அரிய ஆறு ஆதாரங்களை உடைய உடம்பாகிய பிண்டத்தில், அறிதற்கு அரிதாகிய ஓர் அண்டம் பொருந்தியுள்ளது.

விளக்கவுரை

'அதனை அறிந்தால் மானுட உடம்பின் பயனைப் பெற்றுவிடலாம்' என்பது குறிப்பெச்சம். 'அரிய ஒண்ணாத' எனவந்த நான்கினுள் இரண்டாவ தொழித்து, ஏனையவற்றில் ஒண்ணாமை, அருமை குறித்து நின்றது. 'அறிய ஒண்ணாததோர் அண்டம், ஆக்கிக் கோசத்துப் பதிந்தது' எனக் கூட்டி முடிக்க. 'உடம்பு' என்றது சிறப்புப் பற்றி மக்கள் உடம்பைக் குறித்தது. அதன் பயன், வீடு பெறுதல். பொதுப்பட 'அறுவகை' என்றதனால், பிறசமயங்கள் யாவற்றையும் கொள்க. அவைபடிகளே யாயினும் தாம் தாமே மெய்யெனக் காட்டி நிற்றல் பற்றி அவற்றைத்

தடையாகக் கூறினார். 'அவற்றை ஆக்கியது படிகளாய் உதவுதற்பொருட்டு' என்பது மேல் பலவிடத்தும் கூறப்பட்டது. ஓர் அண்டம்' என்றது, 'பர வெளி' என்றவாறு. அது 'சத்தி' என்பதையும் அதனையே தனக்குக் குணமாக உடையது சிவம் என்பதையும் நினைக்க. 'அறு வகையை உடைய கோசத்துப் பதிந்தது' என்றதனால், அதனை யோக சாதனையால் அறிதல் கூடுவது பெறப்பட்டது. இதனால், 'சிவநெறியை அடைந்து சிவயோக ஞானங்களால் சிவனைத் தலைப்படுதலே மக்கட் பிறப்பின் பயன்' என முடித்துக் கூறப்பட்டது.
முன்னைத் தந்திரத்தில் சமயங்கள் பலவற்றையும் ஒருங்கு வைத்து அவற்றது நிலைகளை உணர்த்துமுகத்தால் சிவநெறியது சிறப்பினை உணர்த்திய நாயனார், இதன்கண் அந்நெறியில் நிற்றற்குரியாரது நிலைகளை உணர்த்துகின்றார்.
ஐந்தாம் தந்திரம் முற்றிற்று.

ஆறாம் தந்திரம்

8.1.சிவகுரு தரிசனம்

பத்தி பணித்துப் பரவும் அடிநல்கிச்
சுத்த உரையால் துரிசறச் சோதித்துச்
சத்தும் அசத்தும் சதசத்தும் காட்டலால்
சித்தம் இறையே சிவகுரு வாமே. ***#1547***

மெய்யாயபொருளிடத்து அன்பை உண்டாக்கி யாவராலும் துதிக்கப்படுகின்ற திருவடியைப் பற்றிக்கொள்ளக் கொடுத்து, தூயசொல்லாலே ஐயமும், திரிபும் ஆய குற்றம் முழுதும் போக நீக்கி, 'சத்து, அசத்து, சதசத்து' என்னும் மூவகைப் பொருளின் இயல்பையும் நன்கு உணர உணர்த்தலால், அப்பயனைச் சிவநெறி ஆசிரியர்பால் பெற்ற மாணாக்கர் அனைவரது உள்ளமும் அவரை, 'சிவன்' எனவே தெளிவன ஆகின்றன.

விளக்கவுரை

சுத்தம் - வாய்மை, சோதித்தல் - துடைத்தல். சத்து - நிலையுடையது, அசத்து - நிலையில்லாதது, சதசத்து - மேற்கூறிய அவற்றோடு கூடி அது அதுவாய் நிற்பது. இவை முறையே, 'பதி, பசு, பாசம்' என்பனவே யாதலும், இவையொழிய அறிதற்கு வேறுபொருள் இன்மையும் அறிக. 'இங்குக் கூறியவற்றைச் செய்வது சிவமன்றி வேறின்மையால், சிவகுருவைச் சிவம் என உணர்தலே மெய்யுணர்வாம்' என்றவாறு. எனவே, 'மேற்கூறிய செயலைச் செய்யச் சிவமாம் தன்மை எய்தி நின்ற அருளாளரே சிவகுரு ஆவர்' என்பதும் போந்தது. சிவகுரு - சிவத்தை உணர்த்தும் குரு. சித்தம், மாணாக்க ருடையதாதல் ஆற்றலால் விளங்கிற்று. 'சிவ குரு இறையே ஆம்' என மொழி மாற்றியுரைக்க. 'சிவகுரு இறையே' என்றது. அவ்வாறு உணரும் உணர்வை.

பாசத்தைக் காட்டியே கட்டுப் பறித்திட்டு
நேசத்த காயம் விடுவித்து நேர்நேரே
கூசற்ற முத்தியிற் கூட்டலால் நாட்டகத்
தாசற்ற சற்குரு அப்பர மாமே. ***#1548***

நாட்டவருள் உள்ள ஒருவன்போலத் தோன்றுகின்ற, குற்றமற்ற ஞானாசிரியன், உயிர்ச் சார்பும் பொருட் சார்புமாகிய தளை களின் இயல்பைத் தெளிவித்து, அதனானே அவற்றால் உளதாய கட்டினை அறுத்து, உடம்பின் மேல் உள்ள ஆசையாகிய தொடக்கி னின்றும் ஆன்மாவை விடுவித்து, உலகவரது போலியாகிய இகழ்ச்சிக்கு நாணுதல் இல்லாத முத்தி நிலையை இவ்விடத்தே பெறச் செய்தலால்,

யாவராலும் போற்றப்படுகின்ற அந்தப் பரமசிவனே யாவான்.

விளக்கவுரை

மெய்யுணர்வு வந்தவிடத்து நீங்குவன உலக பாசமே யாகலான், 'பாசம்' என்றது இங்கு அதனையேயாயிற்று. அதன் இயல் பாவது அழிவுடைமையும், உள்ளபொழுதும் திரிபுடைமையு மாம். 'நேர் நேர்' என்னும் அடுக்கு வலியுறுத்தற் பொருளது. 'நேரே கூட்டலால்' என இயையும். 'உலகவர் இகழ்ச்சி இகழ்ச்சியன்றாம்' என்பதை,

'சகம்பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றி'*1*

எனவும்,

'நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப'*2*

எனவும் மணிவாசகரும் அருளிச்செய்தார். இம்மந்திரம் பலவிடத்துப் பாடம் திரிய ஓதப்படுகின்றது.

இவ்இரண்டு மந்திரங்களாலும் சிவகுருவினது பெருமை ஏதுவுடன் கூறப்பட்டது.

சித்திகள் எட்டொடும் திண்சிவ மாக்கிய
சுத்தியும் எண்சத்தித் தூய்மையும் யோகத்துச்
சத்தியும் மந்திர சாதக போதமும்
பத்தியும் நாதன் அருளிற் பயிலுமே. ***#1549***

இறை அன்பும், அதன்வழி ஓதப்படும் பலவகை மந்திரங்களின் சித்திகளும், யோகத்தில் நிலைபெற்று நிற்கும் உறுதிப் பாடும், அந்த யோகத்தால் அடையப்படும் அட்டமா சித்திகளும், வாமை முதல் எட்டாய் விரிந்து நிற்கின்ற திரோதான சத்தி அங்ஙனம் நில்லாது, அருட் சத்தியாகி அருளுகின்ற சிவஞானமும், அந்த ஞானத் தின்வழி விளங்கிய சிவம் ஆன்மாவைத் தானாகச் செய்யும் முத்தியும் குருவருளால் இனிது கிடைப்பனவாம்.

விளக்கவுரை

'சித்திகள் எட்டு' முதலியவற்றைச் செய்யுள் நோக்கி முறை பிறழ வைத்தார். திண்மை - நிலைபேறு. இதனால், சிவமாகி விட்ட உயிர் மீளப் பிறிதாகாமை குறிக்கப்பட்டது. சுத்தம் - சுத்தநிலை. 'ஒடுக்கமுறையில் இறுதிக்கண் நிற்கும் மனோன்மணியே அருட் சத்தியாய் மாறியருளுவது' என்னும் கருத்தால், ஏனை எட்டையுமே திரோதாயிகளாகக் கூறினார். தூய்மை - பாசத்தின் பக்கத்தைவிடுத்துச் சிவத்தின் பக்கமாதல், அங்ஙனம் ஆகின்ற அதுவே சிவஞானம் ஆதலை

அறிக. சாதக போதம் - சாதித்தவனது அறிவு நிலை. குருவை 'நாதன்' என்றலை இந்நூற் பாயிரம் முதலியவற்றினும் காண்க.
இதனால், சிவகுருவால் சிவஞானமேயன்றிப் பிறபயன் களும் கைகூடுதல் கூறப்பட்டது.

எல்லா உலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்
நல்லார்கள் உள்ளத்து மிக்கருள் நல்கலால்
எல்லாரும் உய்யக்கொண் டிங்கே அளித்தலால்
சொல்லார்ந்த சற்குரு சுத்த சிவமே. ***#1550***

உலகங்கள் எல்லாவற்றையும் கடந்து நிற்கின்ற சுத்த சிவன், தனது அருள் காரணமாக, மலம் நீங்கியோரது சுத்தான்ம சைதன் னியத்தில் தயிரில் நெய்போல இனிது விளங்கிநின்று, பக்குவி களுக்கு உண்மை ஞானத்தை அருளுதலாலும், ஏனைய பலர்க்கும் அவரவர்க்கு ஏற்ற பெற்றியால் அருள்புரிந்து ஆட்கொண்டு இவ் விடத்தே நலம் செய் தலாலும் சொல்லுதல் நிறைந்த ஞானகுரு அந்தச் சுத்த சிவனேயாவன்.

விளக்கவுரை

சுத்தசிவன் தற்போதம் அற்று அருள்வழியே நிற்கும் அருளாளரது உள்ளத்திலே இனிது விளங்கி நிற்றலை
'அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்'*1*
என்னும் திருவாசகத்தாலும், 'இத்தகையோரே' 'சாக்கிரத்தே அதீதத்தைப் புரிபவர்' என்பதையும், 'இவரிடத்தே சிவன் அவராய் நின்று உலகிற்குச் செயத் தக்கனவற்றைச் செய்வன்' என்பதையும்,
'துரியங் கடந்தசுடர்த் தோகையுடன் என்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான் - துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யும் தன்மைகளும்
ஆக்கியிடும் அன்பர்க் கவன்'*2*
என விளக்கி, இதற்கு எடுத்துக் காட்டாக ஆளுடை நால்வரது அருட் செயல்களைக் குறித்தருளிய திருக்களிற்றுப்படி முதலியவற்றாலும் அறிக. மிக்கு - மிக விளங்கி 'நல்கலால், அளித்தலால்' என்பவற்றில் எண்ணும்மை தொகுத்தலாயின. சொல் - சொல்லுதல்; முதனிலைத் தொழிற் பெயர். ஐயம் திரிபு அற அனைத்தையும் இனிது விளங்கச் சொல்லுதல் என்க.
இதனால், ஞானகுரு எல்லாம் வல்ல சிவனேயாதல் அனுபவத்தின் வைத்து உணர்த்தப்பட்டது. இஃது இனிது விளங்கு தற்கே முன்னை மந்திரம் கூறப்பட்டது.

தேவனும் சுத்த குருவும் உபாயத்துள்

யாவையும் மூன்றாய் உனக்கண் டுரையாலே
மூவாப் பசுபாசம் மாற்றியே முத்திப்பால்
யாவையும் நல்கும் குருபரன் அன்புற்றே. *#1551*

சிவன் தான் நேரே அருளுதல், குருமூர்த்தியிடமாக நின்று அருளுதல் என்னும் இருவழிகளில் குருவாய் அருளுமிடத்து அக்குரு மாணாக்கன்பால் மிகவும் அன்பு கொண்டு உபதேச மொழியால் எல்லாப் பொருள்களையும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களில் அடக்கி உணரவைத்து, அவ்வுணர்வினால், அநாதியே பசுத்துவப்படுத்தி நின்ற பாசத்தை நீக்கி முத்திக் காலத்தில் உளவாகின்ற எல்லா நலங்களையும் அருளுவார்.

விளக்கவுரை

அஞ்ஞானம் அசுத்தமாதலின், சுத்தம் - ஞானம். 'சுத்த சைதன்னியம்' எனினும் ஆம். 'குருவும்' என்பதன் பின், 'ஆம்' என்பது வருவிக்க. சிவன் உயிர்களுக்கு ஞானத்தை உணர்த்தும் வகை 'நிராதாரம், சாதாரம்' என இரண்டாம். முன்னையது தான் நேரே அருளுதல். அது விஞ்ஞானகலர் பிரளயாகலர்கட்கு. குருமூர்த்தி யிடமாக நின்று அருளுதலே சாதாரம் அது சகலர்க்கு அவற்றுள் குருவிடமாக நின்று 'அருளும் முறை இஃது ஒன்றே அன்று' என்றற்கு ஏனையதையும் குறித்தார். காணுதல் - இங்குச் செய்தல். முத்திக் காலத்தில் உளவாகின்ற நலங்கள், 'நாமார்க்கும் குடியல்லோம்'*1* என்பது முதலாகவும், 'எங்கெழில் என் ஞாயிறு' *2* என்பது போலவும் அருளிச்செய்யப்பட்டன.
இதனால், சிவகுருவினது ஆற்றல் கூறப்பட்டது.

சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மைசெய்
தத்தனை நல்கருள் காணா அதிமூடர்
பொய்த்தகு கண்ணால் நமர்என்பர் புண்ணியர்
அத்தன் இவனென் றடிபணி வாரே. *#1552*

சுத்த சிவனே குருவாய் எழுந்தருளி வந்து மலங்களைப் போக்கித் தூய்மைப் படுத்தி, அங்ஙனம் தூய்மைப் படுத்தப்பட்ட உயிர் ஐம்புலன்களாகிய வேடர் கூட்டத்தினின்றும் நீங்கி*3* அரசனாகிய தன் தந்தையை அடையச் செய்கின்ற அருட் சிறப்பைக் கூறும் ஞானக்கண் இல்லாத பெரும் பேதையர் தமது ஊனக் கண்ணால் மட்டும் கண்டு அக்குருவையும் நம்மில் ஒருவனாக எண்ணுவர். ஆயினும் ஞானக்கண்ணை அடைந்த புண்ணியர் அக்குருவை, 'இவன் சிவனே' என்று அறிந்து அவனது பாதங்களை வணங்கி நிற்பர்.

விளக்கவுரை

'அத்தன்' என்றது முறை உணர்த்தி நிற்றலின், வேறொருவன்போலக்

கூறினார். அடையப்படுபவனைக் கூறிய தனாலே, நீக்கப்படுபவர் பெறப்பட்டனர். பொய்த் தகு - பொய்ம்மையாம் இயல்பைக் கொண்ட பொய்த்தகு கண்ணாரை இகழ்ந் தமையால் 'புண்ணியர்' என்னும் புகழுரை, மெய்த் தகு கண்ணை உடைமை பற்றியதாயிற்று.
'பார்வைஎன மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வைஎனக் காணா புவி'*1*
என்றார் திருவருட்பயனிலும்.
இதனால், சிவ குருவின் பெருமை உணரமாட்டாதவரது இழிவு கூறப்பட்டது.

உண்மையும் பொய்மை ஒழித்தலும் உண்மைப்பால்
திண்மையும் ஒண்மைச் சிவமாய அவ்வரன்
வண்மையும் எட்டெட்டுச் சித்த மயக்கமும்
அண்ணல் அருளன்றி ஆரறி வாரே. ***#1553***

மெய்ப்பொருள் இன்னது என்பதையும், அதனை உணர ஒட்டாது பொய்ப்பொருள்கள் மறைத்து நிற்கும் தன்மையை யும், அப் பொய்ப் பொருள்களினின்றும் நீங்கி, மெய்ப்பொருள் களில் நிலைத்து நிற்கும் முறையையும் அறிவுப் பொருளாம் சிவமாகிய நல்ல மேன்மையை உடைய இறைவன் உயிர்கட்குப் பெத்தம், முத்தி என்னும் இருநிலையிலும் உடனாய் நின்று செய்து உதவி வருதலையும், பெத்த காலத்தில் புத்தியின் அலைவுகளாகிய அறுபத்து நான்கினையும் குருவருளால் அன்றி யார் அறிந்து கொள்ள இயலும்!.

விளக்கவுரை

புத்தி மயக்கம் அறுபத்து நான்காவன, புத்திகுண பாவகங்களாகிய தன்மம் முதலிய எட்டனுள் அஞ்ஞானத்தின் விரியாகிய அவையாம். அவற்றைச் சிவஞான மாபாடியம் முதலிய விரிவுகளிற் கண்டுகொள்க. பாவகங்களுள் ஏனையவற்றைக் கூறாது அஞ்ஞானம் ஒன்றையே கூறியது. அதன் கொடுமை மிகுதி பற்றி 'குருவருளால் அன்றி இவற்றை ஒருவராலும் அறிய இயலாது' என்பதை,
'நானும் என் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோம்
தானும்தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்'*1*
எனவும்
'நானார்என் உள்ளம்ஆர் ஞானங்களார் என்னை யாரறிவார் வானோர் பிரான்என்னை ஆண்டிலனேல்'*2*
எனவும்,
'ஆகமங்கள் எங்கே! அறுசமயந் தானெங்கே!
யோகங்கள் எங்கே! உணர்வெங்கே! - பாகத்
தருள்வடிவுந் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்

பெருவடிவை யாரறிவார் பேசு'3
எனவும்,
'ஆரறிவார் எல்லாம் அகன்ற நெறிஅருளும்
பேரறிவான் வாராத பின்' 3
எனவும் வருவனவற்றாலும், பிறவற்றாலும் அறிக.
இதனால், குருவருளாலன்றி ஒருவராலும் உண்மை உணரலாகாமை கூறப்பட்டது.

சிவனே சிவஞானி யாதலால் சுத்த
சிவனே எனஅடி சேரவல் லார்க்கு
நலமான தத்துவ நன்முத்தி நண்ணும்
பவமான தின்றிப் பரலோக மாமே. ***#1554***

இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

'சிவஞானி சிவனே ஆதலால்' என மாற்றி அதன்பின் 'அவனை' என்பது வருவித்துக் கொள்க. சிவஞானியே சிவகுரு வாவன் என்றற்குச்சிவகுருவை அவ்வாறு கூறினார், நவமான தத்துவம் - புதிய பொருள் அது கருவிகளைக் கடந்த 'இன்பம் அதனை யுடைய முத்தி' என்க. நண்ணும் - கிடைக்கும் 'ஆம்' என்றதும் அது, பவம் - பிறப்பு. 'லோகம்' என்றது. ஆகாயம் என்றவாறு. 'நன் முத்தி' என்றது முத்தியின்' பயனையும், 'பரலோகம்' என்றது அதன் மேன்மையையும் கூறியவாறு. இதனால், சிவகுருவின் உண்மையை உணர்ந்து அடை வார்க்கு உளதாம் பயன் கூறப்பட்டது.

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவம்என் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே. ***#1555***

இதன் பொருளும் வெளிப்படை.

விளக்கவுரை

'நந்தி கூறினன்' என்றது தாம் அறிந்தவாற்றைக் கூறியது. என்பது - என்று வேதாகமங்களிற் சொல்லப்படும் பொருள். குறித்தல் - உளங் கொள்ளுதல். 'சிவனுமாய் நிற்கும்' என்றது, சிவனை வேறு வழிபட வேண்டாமைக் கூறியதாம். 'கோனுமாய் நிற்கும்' என்றதும் இவனது ஆணையே சிவனது ஆணையாக. அதன் வழி நிற்றலே அறமாதலை உணர்த்திற்று. ஈற்றடி, குரு உருவுடைய னாயினும், உருவிலனாகிய சிவனே எனச் சிவனோடு இவனிடை வேற்றுமை இன்மையை வலியுறுத்தவாறு.

இதனால், சிவகுருவை அணுகி நிற்கும் முறை பலவும் தெரித்துக் கூறப்பட்டன.

சித்த மியாவையும் சிந்தித் திருந்திடும்
அத்தன் உணர்த்துவ தாகும் அருளாலே
சித்த மியாவையும் திண்சிவ மானக்கால்
அத்தனும் அவ்விடத் தேஅமர்ந் தானே. **#1556**

உயிரின் அறிவு அறிவன அனைத்தும் சிவன் தனது அருளால் அறிவிப்பனவேயாகும். அந்நிலையில் உயிரின் அறிவு அறிவன யாவையும் உறுதியான சிவனேயாய் முடிந்துவிட்டால், சிவனும் அவ்வறிவில் பிறவற்றைத் தோற்றுவியாது தன்னைமட்டுமே தோற்றுவித்து நிற்பான்.

விளக்கவுரை

'சித்தம்' என்றது அறிவை. 'சித்தம் சிந்தித் திருந்திடும் யாவையும் அத்தன் அருளால் உணர்த்துபவதாகும்' என மாற்றுக. முதலடியை மாற்றாது ஆற்றொழுக்காகவே உரைப்பின், அது சித்தத்தின் இயல்பு கூறியதாக்கி அதன் இறுதியில் 'அவை' என்பது வருவித்துக்கொள்க. 'உணர்த்துவது' என்னும் ஒருமை அத்தொழில் மேல் நின்றது. 'உயிரின் அறிவு பக்குவம் எய்தாத பொழுது சிவன் அதன்கண் வினைக்கீடானவற்றை உணர்த்துவன். பக்குவம் எய்திய வழி அவற்றை ஒழித்துத் தன்னையே உணர்த்தி நிற்பான்' என்பது இதன் திரண்டபொருள். 'ஞானாசிரியர் சிவன் தன்னையே உணர்த்தி நின்ற அறிவையுடையராதலின், அவர் அச்சிவனேயாவார்' என்பது இதனால், உணர்த்தப்படும் பொருள். எனவே, 'குருவே சிவம்' என்பது முதலியன அமையுமாறு காட்டியதாயிற்று.
இதனால், சிவகுரு சிவமேயாதல் அதன் உண்மையுணர்த்தும் முகத்தால் தெளிவிக்கப்பட்டது.

தானந்தி நீர்மையுட் சந்தித்த சீர்வைத்த
கோனந்தி எந்தை குறிப்பறி வாரில்லை
வானந்தி என்று மகிழும் ஒருவற்குத்
தானந்தி அங்கித் தனிச்சுட ராகுமே. **#1557**

'ஞானத்தைப் பெற்றவன் சிவனது இயல்பைத் தனது அறிவில் காணும்படி வைத்த ஆசிரியன் அந்தச் சிவனே என்க' என்னும் சிவனது திருவுள்ளத்தை அறிபவர் உலகில் இல்லை. அதனை அறிய வல்ல ஒருவனுக்கு அச்சிவன் மாலைக் காலத்தில் ஏற்றப்பட்ட புறவிளக்குப் போன்று ஒப்பற்ற அக விளக்காய் நிற்பன்.

விளக்கவுரை

'நந்தியது சீர்மையை உள்ளே சந்தித்த சீர்' என்க. இச் சீரினைப் பெற்றவன் ஞானியாகையால் 'தான்' என்றது அவனையே யாயிற்று. 'கோன் நந்தி என்னும் குறிப்பு' என்க. மகிழ்தற்கு 'அக் கோனை' என்னும் செய்யப்படுபொருள் வருவிக்க. 'அந்தி அங்கி' என்றார். ஆக்கம் உவமை குறித்து நின்றது.
இதனால், சிவகுருவைச் 'சிவன்' என உணர்தலே சிவனது திருவுளத்திற்கு உவப்பாவது என்பது கூறப்பட்டது.

திருவாய சித்தியும் முத்தியும் சீர்மை
மருளா அருளும் மயக்கறும் வாய்மைப்
பொருளாய வேதாந்த போதமும் நாதன்
உருவாய் வராவிடில் ஓரவொண் ணாதே. ***#1558***

ஞானமாகிய பேறும், முத்திப்பயனும், மெய்ம் மையை மறவாத அருள்நிலையும், மயக்கம் நீங்குதற்கு ஏதுவாகிய உண்மைப் பொருளையுடைய வேதத்தின் விளக்கமும் சிவனே குருவாய் வாராவிடில் ஒருவற்கும் அறிய இயலாது.

விளக்கவுரை

'சீர்மை' என்றது மெய்மையை. 'மருளாதருளும்' என்பது பாடமாயின் மருளாத என்பதன் ஈற்றகரம் தொகுத்தல் பெற்றது என்க. 'பொருளாய வேதாந்தம்' எனக் காரணத்தைக் காரியமாக்கிக் கூறினார். 'வாராவிடில்' என்பது முதல் குறுகி நின்றது.
இதனால், சிவன் உருவாய் வரவேண்டுதலின் இன்றியமை யாமை கூறப்பட்டது. 'உண்மையும் பொய்ம்மை' என்னும் மந்திரம் *(1560)* குருவருளின் இன்றியமையாமை கூறியது.

பத்தியும் ஞானவை ராக்கிய மும்பர
சித்திக்கு வித்தாம் சிவோகமே சேர்தலால்
முத்தியின் ஞானம் முளைத்தலால் அம்முளை
சத்தி அருள்தரின் தான்எளி தாமே. ***#1559***

சிவபுண்ணியமும், அதன் பயனாகிய மல பரிபாக இருவினை ஒப்புக்களும் ஆகிய இவற்றால் பரமுத்திக்கு ஏதுவாகிய சிவோகம் பாவனையைத் தலைப்படும் நிலையே உண்டாதலாலும், அந்தப் பாவனையாலே அஞ்ஞானம் வாசனையும் இன்றிப்போக, முத்திக்கு நேரே வாயிலாகிய சிவஞானம் தோன்றி நிற்றலாலும் அத் தோற்றம் சிவனது அருள் அவ்விடத்து முன்னின்று அருளியவழியே உண்டாவதாம்.

விளக்கவுரை

'பத்தி' என்பது அதனாற் செய்யப்படும் சரியை, கிரியா யோகங்களைக்

குறித்தது. 'ஞான வைராக்கியம்' என ஒருங்கு தொகுத்து ஓதினமையால், அவ்விடத்து 'ஞானம்' என்றது, ஞானத்தை யுணரும் பக்குவத்தையாம். இருவினை ஒப்பினையே 'வைராக்கியம்' என்றார். 'சிவோகம்' என்றதும் அதற்குரிய தகுதியையே. 'பத்தியாலும், வைராக்கியத்தாலும்' என அவ்விடங் களில் மூன்றாவது விரிக்க. அவ்வாறன்றி எழுவாயாகவே வைத்து 'சேர்த்தலால்' எனப்பாடம் ஓதுதலுமாம் 'சேர்தலால்' என்பது, 'முளைத்தலால்' என்பதனோடே முடிந்தது. 'முத்தியின் ஞானம்' என்புழித் தொக்கு நின்ற ஆறாவது' 'வனைகலத்து திகிரி' என்றாற் போலக் கருவிக் காரகத்தின்கண் வந்தது. அதனால், அது முத்திக்கு நேரே வாயிலாய் ஒருதலையாகத் தருதல் பெறப்பட்டது. 'அருள் தரின்' என்பதில் தருதல் துணைவினையாய் நின்றது. 'முன் இரண்டு அடிகளால் சரியை முதலிய மூன்றையும் 'ஏனைக் குருமார்கள் வழி யாகவும் பெறுதல் கூடும்' என்பதும் பின்னிரண்டடிகளால் 'ஞானம் ஞான குரு வழியாலன்றி ஏனையோர் வழியால் பெறுதல் இயலாது' என்பதும் கூறியவாறு. சத்தி அருள்செய்தல், இங்குக் குருவாய் நின்று அருளுதல் என்பது அதிகாரத்தால் விளங்கிற்று.

இதனால், ஞானகுரு ஏனைக் குருமார்களினும் மேம்பட்ட வராதல் கூறப்பட்டது.

பின்னெய்த வைத்ததோர் இன்பப் பிறப்பினை
முன்னெய்த வைத்த முதல்வனே எம்மிறை
தன்னெய்துங் காலத்துத் தானே வெளிப்படும்
மன்னெய்த வைத்த மனமது தானே. ***#1560***

இவ்வுடம்பு நீங்கிய பின்பு அடையுமாறு வைத்துள்ள இன்பத் தோற்றத்தை அதற்கு முன்பே அடையும்படிச் செய்த ஞானகுரு எங்கள் சிவபெருமானே. அவன் தன்னை நிலை பேறாக அடைதற்கு வைத்த மனம் அங்ஙனம் அடையும் காலத்துத் தானே குருவாய் வெளிவந்து அருள் செய்வான்.

விளக்கவுரை

'பிறப்பு' என்றது தோற்றத்தை. ஈற்றடியை மூன்றாம் அடிக்கு முன்னர்க் கூட்டி, 'முதல்வன் எம் இறையே' என மாற்றி யுரைக்க. மனம் தன் எய்தும் காலம், பக்குவ காலம். 'அம்மன்னை' எனச் சுட்டு வருவித்தும், தொகுக்கப்பட்ட இரண்டாவதை விரித்தும் உரைக்க.

இதனால், இறைவன் குருவாய் வந்தருளும் காலம் இது என்பது கூறப்பட்டது.

சிவமான ஞானந் தெளியஒண் சித்தி
சிவமான ஞானந் தெளியஒண் முத்தி
சிவமான ஞானம் சிவபர தேகம்

சிவமான ஞானம் சிவானந்தம் நல்குமே. *#1561*
சிவஞானத்தைத் தெளிய உணர்தலாலே (மூன்றாம் தந்திரத்திற் சொல்லப்பட்ட) பரசித்திகளும், பின் பரமுத்தியும் உளவாகும். அவை முறையே அருளேதனுவாய் நிற்றலும், ஆனந்தத்து அழுந்தலுமாம்.

விளக்கவுரை

சிவஞானம் சிவகுருவால் அன்றி எய்தாமை மேற் பல்லாற்றானும் கூறிவந்தமையால், அந்தச் சிவஞானத்தால் விளைவன இவை என்பதனை இதன்கண் கூறினார். 'சிவபரதேகம், சிவானந்தம் இரண்டும் நல்கும்' எனச் செவ்வெண் தொகை வருவிக்க.
இதனால், குருவருளின் நேர் பயனும், அதன் வழிநிலைப் பயனும் கூறப்பட்டன.

அறிந்துணர்ந தேன்இவ் வகலிடம் முற்றும்
செறிந்துணர்ந் தோதித் திருவருள் பெற்றேன்
மறந்தொழிந் தேன்மதி மாண்டவர் வாழ்க்கை
பிறிந்தொழிந் தேன்இப் பிறவியை நானே.

16 தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாம் தலைவன்
இருக்கின்ற தன்மையை ஏதும் உணரார்
பிரிக்கின்ற இந்தப் பிணக்கறுத் தெல்லாம்
கருக்கொண்ட ஈசனைக் கண்டுகொண் டேனே. *#1562*
குருவின் அருளால் நான் இப்பெரிய பூமி முழுவதன் இயல்பையும் முன்னர்ப் பொதுவாகவும், பின்னர் உண்மை யாகவும் உணர்ந்தேன். அவ்வாறே அவரது அருளையடைந்து சிவனது இயல்பையும் முன்னர்க் கேள்வியளவில் உணர்ந்து, பின்பு நூல்களை ஓதி உணர்ந்து, அவனது திருவருள் கிடைக்கப்பெற்றேன். அதனால், அறிவையிழந்துள்ள உலகவரது வாழ்க்கையில் பற்றுச் சிறிதும் இல்லாதவனானேன். அதனால், இவ்வுடம்பில் இருந்தும் அதனில் நீங்கி நிற்கும் நிலையை உடையவனாயினேன்.

விளக்கவுரை

முதல் அடியால் தத்துவ சுத்தியும், இரண்டாம் அடியால் கேட்டல் சிந்தித்தல்களும், ஏனைய அடிகளால் முறையே தெளிதலும், நிட்டை கூடலும் கூறியவாறு. 'குருவருளால்' என்பது அதிகாரத்தால் வந்தது. அதனானே, 'செறிந்து' என்பது, அவரது அருளையடைத லாயிற்று. இதனால், சிவகுருவால் அடையும் பயன்கள் பலவும் தொகுத்துக் கூறி முடிக்கப்பட்டன.
[பதிப்புக்களில் இதன்பின் 'தரிக்கின்ற பல்லுயிர்' என வரும் மந்திரம்

அடுத்த தந்திரத்தில் வருவதாகும்].

*8.2.*திருவடிப்பேறு

இசைந்தெழும் அன்பில் எழுந்த படியே
பசைந்தெழு நீசரைப் பாசத்தின் ஏகச்
சிவந்த குருவந்து சென்னிகை வைக்க
உவந்த குருபதம் உள்ளத்து வந்தே. *#1563*

வினையின்வழி மனம் சென்றவாறே செல்லுதலால், உலகவர்மேற் செல்கின்ற அன்பின்வழியே மனம் நெகிழ்ந்து செல்லுகின்ற கீழோரைப் பாசத்தினின்றும் விடுபடச் செய்தற்கு ஞானகுரு வந்து அவர்களது தலையின்மேல் தனது கையை வைத்த வுடன் அவர்களது உள்ளமாகிய பொய்கையில் அவனது திருவடிகளா கிய தாமரை மலர்கள் மலர்ந்து பொருந்தி மலர்வனவாம்.

விளக்கவுரை

'ஈசரை' என்பது பாடம் ஆகாமைக்குப் பன்மை யாயதே சான்றாகும். *'பாசத்தின்'* என்பதும் பாடமன்று. *'ஏக'* என் பதன்பின், *'செய்ய'* என ஒருசொல் வருவிக்க. சிவத்தல் - தழல் போலும் ஒளியையுடையனாதல். சென்னியில் கையை வைத்தலே *'பரிச தீக்கை'* எனப்படுவது. அதன் இயல்பைக் கிரியை நூல்களிற் காண்க. *'உவந்த'* என்னும் அஃறிணைப் பன்மை முற்றினை இறுதி யிற் கூட்டியுரைக்க. உவத்தல் மகிழ்தல். இங்கே மலர்தலின் மேற்று. இது குறிப்புருவகம். மாணவன் ஆசிரியனது திருவடியைப் பற்றாகப் பற்றி இன்புறுதல் மெய்ஞ்ஞானத்தின் விளைவாதலும், மெய்ஞ்ஞானம் தீக்கையான் உளவாதலும் கூறியவாறு. இதனால், சிவகுரு சிவஞானத்தையும், அதுவழியாகச் சிவானந்தத்தையும் தருமாறு கூறப்பட்டது.

தாடந்த போதே தலைதந்த எம்மிறை
வாடந்த ஞான வலியையும் தந்திட்டு
வீடந்த மின்றியே ஆள்கென விட்டருட்
பாடின் முடிவைத்துப் பார்வந்து தந்ததே. *#1564*

தனது சத்தியை உலகுக்கு உதவ வைத்தபொழுதே, அவ்வுதவியைப்பெறும் உயிரை அந்நிலையில் வைத்த எங்கள் சிவ பிரான், பின்பு இப்பூமியில் குருவாகி வந்து பலருக்கு அருள் புரிந்தது, அஞ்ஞானமாகிய மரத்தை வெட்டி வீழ்த்தும் வாள்போல்வதாகிய ஞானத்தின் உறுதிப்பாட்டைத் தந்து, 'வீட்டுலகத்தை எல்லையில் காலம் ஆள்க' என அளித்தற் பொருட்டு, மும்மலக் கட்டினின்றும் வெளிப்படுத்தி அருள் தோற்றமாகிய தனது திருவடிகளை அவரது இனிய தலையிற் சூட்டியேயாம்.

விளக்கவுரை

சத்தியை, 'தாள்' எனவும், உயிரை, 'தலை' எனவும் உருவகித்துக் கூறுதல் மரபு. 'சத்தி, திரோதான சத்தி' என்பதும், 'உயிர்கள், சகல நிலையில் உள்ள உயிர்கள்' என்பதும், 'தந்த' என்ப தனால் பெறப்பட்டன. 'வாள் தந்த' என்பதில், 'தந்த' என உவம உருபு. 'தந்திட்டு' என்னும் செய்தென் எச்சம், எதிர்காலத்ததாய் நின்ற 'என' என்னும் செயவெனச்சத்தோடு முடிந்து, எதிர்காலத்தில் இறந்த காலமாய் நின்றது, என்னை?

'செய்தெ னெச்சத் திறந்த கால ம்
எய்திட னுடைத்தே வாராக் காலம்'1

என்பது கட்டளை யாகலின். விடுதல் - கட்டறுத்து இனிதியங்கச் செய்தல். பாடு - தோற்றம். அஃது அதற்கு இடமாகிய திருவடியைக் குறித்தது. 'தந்தது' எனத் தொழிற்பெயர் எழுவாய் நின்றமையின், 'வைத்து' என்னும் வினையெச்சம் பயனிலையாதல் பொருந்திற்று. 'எம் இறை பார் வந்து தந்தது, விட்டு, வைத்து' என வினை முடிபு கொள்க. அவ்விடத்து, 'தந்திட்டு ஆள்கெனற்கு' என்னும் தொடர் பயனிலையைச் சிறப்பித்து நின்றது.

இதனால், சிவகுருவினது திருவடியே பிறவிக்கு ஏதுவாகிய பாசத்தை அறுத்து, வீட்டிற்கு ஏதுவாகிய ஞானத்தைத் தருதல் கூறப்பட்டது.

தானவ னாகிச் சொரூபத் துவந்திட்டு
ஆன சொரூபங்கள் நான்கும் அகற்றின
ஏனைய முத்திரை ஈந்தாண்ட நன்னந்தி
தானடி முற்சூட்டித் தாபித்த துண்மையே. ***#1565***

ஆன்மா சிவனாகி, அச்சிவனது உண்மை இயல்பில் தனது உண்மை இயல்பு பொருந்துதலால் இன்புற்று, முன்னே செயற்கையாய் வந்து பற்றிய 'ஆணவம், கன்மம், மாயை, மாயேயம்' என்னும் நான்கின் இயல்புகளையும் நீக்கிநின்ற சின்முத்திரை நிலையைத் தந்து ஆட்கொண்ட சிவன், ஆங்ஙனம் ஆட்கொள்வதற்கு முன் தான் குருவாகிவந்து தனது திருவடியைச் சூட்டி, அங்ஙனம் சூட்டப்பட்டவனது உள்ளத்திலே நிலைபெறச் செய்தது உண்மை.

விளக்கவுரை

எனவே, 'திருவடியை அங்ஙனம் சூட்டித் தாபியாத வழி, முன்னர்க் கூறிய பயன்களை ஆன்மா எய்த மாட்டாது' என்பது போந்தது. ஆக்கம் கூறினமையால், செயற்கையாதல் அறியப்பட்டது. ஐம்மலங்களில் உண்மையில் மலங்களாவன திரோதாயி ஒழிந்தவை யேயாகலின், அவற்றையே கூறினார். 'மலங்களது சொரூபமே அகற்றப்பட்டது' என்றதனால், அவைபற்றறக் கழிந்தமை தெளிவா யிற்று. 'ஏனைய

முத்திரை' என வேறு வைத்துக் கூறினமையின், அது தலையாய சின்முத்திரையையே குறித்தது. 'முத்திரை' என்பது காரிய ஆகுபெயராய் அதனால் உணர்த்தப்படும் நிலையை உணர்த்திற்று. சின்முத்திரையின் இயல்பும், அஃது இங்குக் குறிக்கப் பட்ட நிலையை உணர்த்துமாறும் அறிந்துகொள்க. உயிர்வரக் குற்றியலுகர ஈறு உகரம்பெறுதல் செய்யுள்முடிபு.

இதனால், குருவின் திருவடியைப் பெறுதல் ஞானத்திற்கும், வீடுபேற்றிற்கும் வழியாதல் கூறப்பட்டது.

உரையற் றுணர்வற் றுயிர்பர மற்றுத்
திரையற்ற நீர்போல் சிவமாதல் தீர்த்துக்
கரையற்ற சத்தாதி நான்குங் கடந்த
சொரூபத் திருத்தினன் சொல்லிறந் தோமே. *#1566*

'இஃது இவ்வாறிருந்தது' எனச் சொல்லும் சொல்லும், 'இவ்வாறிருக்கின்றது' என உணரும் உணர்வும் அற்றமை யால் உயிர் தன் பசுத்துவம் முற்றும் நீங்கி, அலையில்லாத நிலைநீர் போல அசைவற நிற்கும் சிவமாம் தன்மையை எம் குருநாதன் எமக்கு முற்றத்தந்து, நாத காரியமாகிய நால்வகை வாக்குக்களையும் கடந்த இயற்கை நிலையில் எம்மை இருக்கச் செய்தான்; அதனால் யாம் பேச்சற்று நிற்கின்றோம்.

விளக்கவுரை

'இஃது அவனது திருவடியை யாம் பெற்ற பேற்றின் பயன்' என்பது குறிப்பெச்சம். உரை அறுதல் முதலிய மூன்றும் ஒன்றற்கு ஒன்று காரண நிலையாம் முறையில் வைத்துக் கூறப்பட்டன. படவே மலவாசனை படிமுறையான் நீங்கினமை பெறப்பட்டது. பரம் - முதன்மை. உயிரது முதன்மை 'யான்' என முனைந்து நிற்றல். 'நீரின்கண் எழுகின்ற அலை காற்றின் செய்கை யாதல்போல, உயிரினது தன் முனைப்பு ஆணவமலத்தின் செய்கையாய் உயிர்க்கு அல்லலை விளைவிக்கும்' என்பது, 'திரையற்ற நீர் போல்' என்னும் உவமையாற் பெறப்படும் குறிப்புப் பொருள். உவமை, இல்பொருள் உவமை. தீர்த்தல் - முடித்தல், முற்றச்செய்தல், சத்தாதி - சத்தத்தை ஆதியாக உடையன. நாதத்தை, 'சத்தம்' என்றார். நாதமே சூக்குமை வாக்காயினும் அதுவும் கடக்கப் பட்டமைதோன்ற 'நான்கும்' என்றார். 'கரையற்ற' என்றது, 'கடத்தற்கு அரிய' என்றவாறு.

'ஓவிட விந்து ஞானம் உதிப்பதோர் ஞானம் உண்டேல்
சேவுயர் கொடியி னான்றன் சேவடி சேர லாமே'*1*

என இவ்வாக்குகள் கடத்தற்கு அரிய பரம பந்தமாதல் கூறப்பட்டமை காண்க. உரை உணர்வு, ஆறுதலை,

'உரையுணர் வுணர்ந்துநின் றுணர்வதோர் உணர்வே'2
'உணர்ந்தார்க் குணர்வரியோன்'3
எனவும்,
'இங்ங னிருந்தென் றெவ்வண்ணம் சொல்லுகேன்
அங்ங னிருந்தென் றுந்தீ பற;
அறியும் அறிவதன் றுந்தீ பற'4
எனவும், மற்றும் இவ்வாறும் போதவற்றால் அறிக.
சொரூபம் - இயற்கைநிலை, இந்நிலை ஆணவ மலமாகிய
செயற்கையால் மாறுவதாயிற்று என்க.
இதனால், திருவடிப்பேறு பரமுத்தியாகிய முடிந்த பயனைத் தருதல்
கூறப்பட்டது.

குரவன் உயிர்முச் சொரூபமும் கைக்கொண்
டரிய பொருள்முத் திரையாகக் கொண்டு
பெரிய பிரானடி பேர்நந்தி பேச்சற்
றருகிட என்னைஅங் குய்யக்கொண் டானே. **#1567**

சிவகுரவன் உயிர்களுக்கு உள்ள மூன்று இயல்பு களையும் தான்
கைக்கொண்டு, அவன் காட்டிய சின்முத்திரையையே அறியத் தகும்
அரிய பொருளாக யான் கொண்டு, 'நந்தி' என்னும் பெயருடைய பெரிய
பெருமானாகிய சிவனது திருவடிக்கண் உள்ளம் உருகும்படி என்னை
அப்போழுதே உய்யக்கொண்டருளினான்.

விளக்கவுரை

'என் உள்ளம் பெரிய பிரானடிக்கண் உருகிடத் தனது திருவடி
சூட்டலால் செய்து உய்யக்கொண்டான்' என்றவாறு. உயிரின்
மூன்றியல்பாவன, 'கேவலம், சகலம், சுத்தம்' என்னும் நிலைகளில்
காணும் இயல்புகள் முதலிய மூன்றும் முறையே இருள்நிலை, மருள்
நிலை, அருள்நிலை என்க. எனவே, சுத்தம் என்றது அதன்கண் துரி யம்
ஈறாயவற்றையே யாயிற்று. 'முத்திரை பொருளாகக் கொண்டு' என
மாற்றிக்கொள்க. 'பேர்' என்பது அதனை உடையவனைக் குறித்தது.
வாளா 'நந்தி' என ஓதல் பாடம் அன்று. 'அங்கு' என்றது, திருவடி சூட்டிய
அப்பொழுது என்பது அதிகாரத்தால் பெறப்பட்டது.
இதனால், மேற்கூறிய பயன் நிகழும் முறைமை கூறப்பட்டது.

பேச்சற்ற இன்பத்துப் பேரானந் தத்திலே
மாச்சற்ற என்னைச் சிவமாக்கி மாள்வித்துக்
காச்சற்ற சோதிக் கடன்மூன்றும் கைக்கொண்டு
வாச்ச புகழ்மாளத் தாள்தந்து மன்னுமே. **#1568**

குற்றம் அற்ற அறிவுருவனாகிய சிவகுரவன் மல பரிபாகம் வாய்க்கப்
பெற்ற என்னைத் தன் திருவடியைச் சூட்டி, மலம் காரணமாக எனக்கு

நியதியாக வந்து பொருந்திய 'கேவலம், சகலம், சுத்தம்' என்னும் மூன்று நிலைகளும் இனி நிகழாவாறு தான் கைக் கொண்டு சிவமாகச் செய்து, பேச்சற்றதும், எல்லையில்லாததுமாகிய இன்பத்திலே என்னையே யான் அறியாதபடி மூழ்குவித்து, அதனால் எனக்கு வருகின்ற புகழையும் யான் எண்ணாதபடி என்னோடு உடன் இருந்து அருளுகின்றான்.

விளக்கவுரை

'சோதி, என்னை, தந்து, கொண்டு, ஆக்கி, ஆனந்தத் திலே மாள்வித்து, புகழ்மாள மன்னும்' என வைக்கற்பாலன, செய்யுள் நோக்கி முறைபிறழ வைக்கப்பட்டன. 'மாசு காசு' என்பன எதுகை நோக்கி விரித்தல் பெற்றன. 'மாசு அற்ற' என்பதில் அறுதல், அறும் நிலையைப் பெற்றமையைக் குறித்தது. 'துணிவு பற்றி எதிர் காலம் இறந்தகாலம் ஆயிற்று' என்றலுமாம். மாள்வித்தல் - வெளிப்படா திருக்கச் செய்தல். 'மாள' என்றதும் எண்ணப்படாமை பற்றியாம்.
'எனைநான் என்ப தறியேன் பக லிரவாவது மறியேன்
மனவாசகம் கடந்தான் எனை மத்தோன்மத்த னாக்கி'*1*
என ஓதுதல் காண்க. 'தாள்தந்து' என எடுத்தோதினமையால். 'இவை தாள் தந்தமையான் விளைந்தன' என்றவாறாம், 'இன்பம், ஆனந்தம்' என்பன அடையொடு வந்து ஒருபொருட் பல பெயர் ஆயின.
இதனால், தான் திருவடி சூட்டப் பெற்றவர்க்குச் சிவகுரு பின்னும் நீங்காது உடன் இருந்து பயன்விளைத்தல் கூறப்பட்டது.

இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும்
பதிவித்த பாதப் பராபரன் நந்தி
கதிவைத்த வாறும்மெய் காட்டிய வாறும்
விதிவைத்த வாறும் விளம்பஒண் ணாதே. ***#1569***

சிவன் குருவாகி வந்து, தனது திருவடிகளை எனது இதயத்திலும், கண்ணிலும், மனத்திலும் நீங்காது பொருந்தியிருக்கச் செய்து, அதனானே ஞானத்தை உணர்த்திய வகையும், அந்த ஞானத் தினால் மெய்ப்பொருளைத் தலைப்படுவித்த வகையையும், பின் அம் மெய்ப்பொருளை நீங்காதிருத்தற்குரிய முறைகளை உணர்த்திய வகையும் யான் சொல்லும் தரத்தன அல்ல.

விளக்கவுரை

'பதி வித்த பாத நந்தி' என உடம்போடு புணர்த்தமை பற்றி இவ்வாறு உரைக்கப்பட்டது முதலடியோடு,
'மனத்தான் கண்ணி னகத்தான் மறு மாற்றத்திடையானே'*1*
'சிந்தையி னுள்ளுமென் சென்னியி னும்சேர
வந்தவர் வாழ்களன் றுந்தீ பற'*2*

என்பன முதலியவற்றை வைத்துக் காண்க. 'கதி என்பது ஞானத்தை உணர்தல் வடமொழி மதம்'3 என்பர் சிவஞான யோகிகள். 'ஒண்ணாது' என்பது பன்மை யொருமை மயக்கம். 'ஒண்ணாவே' எனப் பாடம் ஓதினுமாம்.
இதனால், திருவடி சூட்டி அருள் செய்யும் முறைமையது பெருமை அளவிறந்ததாதல் கூறப்பட்டது.

திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப்
பெருவடி வைத்தந்த பேர்நந்தி தன்னைக்
குருவடி விற்கண்ட கோனைஎங் கோவைக்
கருவடி யற்றிடக் கண்டுகொண் டேனே. *#1570*

எனது சென்னிமேல் தனது திருவடிகளைச்சூட்டி, அருளே எனக்கு வடிவாம்படிப்பார்த்து, அதனால், பின்பு பரம் பொருளை யான் பெறும்படி தந்தவரும், குருவடிவில் பலராலும் காணப் பட்ட ஞானத்தலைவரும், எங்கள் தலைவரும் ஆகிய நந்தி பெருமானை நான் எனது பிறவியின் வேர் அற்றொழியுமாறு அடைந்தேன்.

விளக்கவுரை

'அருள் ஆக நோக்கி' என ஆக்கம் வருவிக்க. 'பெரு வடிவு' என்பதில் வடிவு - பொருள்;
'அந்தப் - பெருவடிவை யாரறிவார் பேசு'4
என்றதும் காண்க. 'பேர் நந்தி' என்னும் இரு பெயரொட்டு அதனை உடையானைக் குறித்தது. 'கண்ட' என்றது 'காணப்பட்ட' என்றவாறு. 'எம்' என்றது, 'நந்திகள் நால்வர்' முதலியோரை உளப்படுத்து. 'அற்றிட' என்பது காரியப் பொருளில் வந்தது கண்டுகொள்ளுதல், உணர்ந்துகொள்ளல் அஃது அடைக்கலமாக அடைதலாகிய தன் காரியம் தோன்ற நின்றது. நான்காம் அடியைப் பிறவாறு ஓதுவன பாடம் அல்ல.
இதனால், தம் ஆசிரியர் தமக்குத் திருவடி சூட்டி அருள் செய்த முறையும், அதனால் விளைந்த பயனும் கூறுமுகத்தால் தம் அனுபவம் கூறப்பட்டது.

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் நீக்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே. *#1571*
(இதன் பொருள் வெளிப்படை)

விளக்கவுரை

'திருவடி ஞானம்' நான்கையும் இரட்டுற மொழிந் து, 'திருவடியால் விளைந்த ஞானம், திருவடியால் விளங்கிய ஞானம்' என உரைத்துக் கொள்க. முதற் பொருளில் திருவடியும், இரண்டாவது பொருளில்

திருவடி திருவருளும் ஆம். மூன்றாம் அடியில், 'மீட்கும்' என்பது பாடமாயின், 'மலமாகிய சிறையினின்றும் மீட்கும்' என உரைக்க. இப்பொருட்டு, 'மலச் சிறை' என்பது பின் முன்னாய் நின்றது என்க. திண் சித்தி - அழியாப் பேறு. முத்தி தருவதனை 'முத்தி' எனப் பாற்பகுத்து ஓதினார்.

இதனால், திருவடி ஞானத்தது சிறப்புக் கூறப்பட்டது.

மேல்வைத்த வாறுசெய் யாவிடின் மேல்வினை
மால்வைத்த சிந்தையை மாயம தாக்கிடும்
பால்வைத்த சென்னிப் படரொளி வானவன்
தாள்வைத்த வாறு தரிப்பித்த வாறே. ***#1572***

எம் குரவர் எம் தலைமேல் தம் திருவடியைச் சூட்டிய அந்த முறைமையைச் செய்யாவிடில் அவர் அருள்செய்த பின்பும் வினைகள் தோன்றி, முன்பு மயங்கியிருந்த உள்ளத்தை மீளவும் அப்பழக்கம் பற்றி மயக்கம் உறச்செய்யும். அதனால், பிறை முடித்த, பேரொளி வடிவினனாகிய சிவபெருமான், குருவாகி வந்து தனது திருவடியைச் சென்னி மேல் வைத்துததுபோலச் சிந்தையிலும் நீங்காது தங்குவித்தான்.

விளக்கவுரை

'சஞ்சிதம் தீக்கையாலும், பிராரத்தம் நுகர்ச்சியாலும் கெட, ஆகாமியம் ஞானத்தாலே கெட வேண்டுதலின், இவ்வாறு செய்தான்' என அருளிச்செய்தவாறு.

'என்ற வினைஉடலோ டேகும்; இடை ஏறுவினை தோன்றில் அருளே சுடும்' 1

என்றது காண்க. இதனுள் இன எதுகை வந்தது.

இதனால், திருவடி சூட்டல் தரிப்பித்தல்களின் இன்றியமை யாமை கூறப்பட்டது.

கழலார் கமலத் திருவடி யென்னும்
நிழல்சேரப் பெற்றேன் நெடுமால் அறியா
அழல்சேரும் அங்கியுள் ஆழிப் பிரானும்
குழல்சேரும் என்னுயிர்க் கூடும் குலைத்தே. ***#1573***

வெற்றியை யுடையனவும், தாமரை மலர்போல் வனவும் ஆகிய குருவின் திருவடி என்னும் நிழலை யான் அடையப் பெற்றேன். அதனால், நெடியோனாகிய மாயோனாலும் அறியப்படா தவனும், ஓங்கி வளர்கின்ற வேள்வித் தீயில் விளங்குபவனுமாகிய சிவபிரான், எனது உயிர்க் கூடாகிய உடம்பின் தன்மையையும் மாற்றி, எனது இதயத் தாமரையில் எழுந்தருளி விளங்குகின்றான்.

விளக்கவுரை

அஞ்ஞானத்தைப் போக்கும் வெற்றியைக் குறிக்க, 'கழல் ஆர்' என்றும், 'அனைத்தெலும்புள் நெக ஆனந்தத் தேன் சொரிதலைக்3 குறிக்க, 'கமலம்' என்றும், பிறவி வெப்பம் நீங்க அடையும் இடமாதல் தோன்ற 'நிழல்' என்றும் கூறினார். 'அறியாப் பிரான், அங்கியுட் பிரான்' எனத் தனித்தனி முடிக்க. அழல், 'அழலுதல்' என முதனிலைத் தொழிற்பெயர். 'அழலுதல்' என்பது முறைப்படி வளர்க்கப்பட்டு வளர்தலைக் குறித்தது. 'குழல்' என்பது 'நாளம்' என்னும் பொருட்டாய், அதன்மேல் உள்ள மலரைக்குறித்தது. 'சேரும்' என்பது முற்று உடம்பின் தன்மையாவது மாயையின் காரியமாய் மயக்குதல்.

இதனால், திருவடிப் பேற்றால் சீவன் முத்தநிலை வருதல் கூறப்பட்டது.

முடிமன்ன ராய்மூ வுலகம தாள்வர்
அடிமன்னர் இன்பத் தளவில்லை கேட்கின்
முடிமன்ன ராய்நின்ற மூவர்கள் ஈசன்
குடிமன்ன ராய்க்குற்ற மற்றுநின் றாரே. **#1574**

ஆராயுமிடத்து, சிவனது திருவடியில் அறிவால் நிலைத்திருப்பவர் இந்நிலவுலகத்தில் மூவுலகையும் ஆளும் மன் னராய் இருந்து யாவர்க்கும் பெருந்தலைவராய் உள்ள மும்மூர்த்திகள் தாமும் சிவனது ஏவலைச் செய்யும் சிற்றரசராய் நின்றே குற்றம் அற்று விளங்குகின்றனர். அதனால், சிவனடியைச் சேர்ந்தவர் அடையும் இன்பத்திற்கு அளவில்லை.

விளக்கவுரை

'அடிமன்னர்' என்பதை முதலிலும் 'இன்பத்து அள வில்லை' என்பதை இறுதியிலும் கூட்டியுரைக்க. 'அடிமன்னர்' என்பதில் 'மன்னர்' என்பது, 'மன்னுதல் உடையவர்' எனப் பொருள் தந்து. மூன்றாம் அடியில் உள்ள 'முடிமன்னர்' என்பது வினைத் தொகையாய், 'மிகமேலே உள்ள தலைவர்' என்னும் பொருட் டாயிற்று. 'தேவர்கள்' என்பது பாடம் அன்று. 'குற்றம்' என்பது அதனால் விளையும் துன்பத்தின் மேல் நின்றது. இறுதியில் ஆதலால், என்பது எஞ்சிநின்றது. 'இன்பத்துக்கு' என்பதில் குகரம் தொகுத்தல் பெற்றது.

வைத்தேன் அடிகள் மனத்தினுள் ளேநான்
பொய்த்தே எரியும் புலன்வழி போகாமல்
எய்த்தேன் உழலும் இருவினை மாற்றிட்டு
மெய்த்தேன் அறிந்தேன்அவ் வேதத்தின் அந்தமே. **#1575**

என்னை, மயக்குவனவாயும் கொடியனவாயும் உள்ள ஐம்பொறி களின் வழிப்போகாமல், என் மனத்துள்ளே சிவனது திருவடிகளை வைத்தேன்.

அதனால், இணைத்து உழலுதற்கு ஏதுவாகிய இரு வினைகள் என்னும் புதரை அழித்து வேதமாகிய மரத்தின் உச்சிக் கொம்பில் உள்ள மெய்ப் பொருளாகிய தேனை அறிவினால் அடைந்து இன்புறுகின்றேன்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதலில் வைத்து உரைக்க. 'புலன்' என்றது பொறிகளை 'எய்த்தேன்' என்பது முற்றெச்சம். 'மாற்றிட்டு' என்பதில் இடு, துணைவினை. 'மெய்த்தேன்' என்பது ஏகதேச உருவகம், ஈற்றடி இறுதியில் ஏழாவது இறுதிக்கண் தொக்கது.

அடிசார லாம்அண்ணல் பாத மிரண்டும்
முடிசார வைத்தனர் முன்னை முனிவர்
படிசார்ந்த இன்பப் பழவடி வெள்ளக்
குடிசார் நெறிகூடி நிற்பவர் கொள்கையே. *#1576*

முற்காலத்து ஞானிகள் பலரும் இறைவன் திரு வடியை அடையவேண்டியே குருவின் திருவடியைத் தம் தலையில் வைத்து அங்ஙனம் நலம் பெற்றனர். அதனால், உலக இன்பத்தையே தருவதாகிய இந்தப் பழைய பௌதிக உடம்பை இகழ்ந்து ஒதுக்கும் அந்த உயர்ந்தோர் கூட்டத்தை யடைதற்குரிய நெறியைப் பற்றினவர்களது கொள்கையும் இதுவே.

விளக்கவுரை

'அடி சாரலாம்' என்பதின் ஈற்றில் 'என' என்பது எஞ்சி நின்றது. அண்ணல் - தலைவன்; ஞானத்தலைவன் ஞானாசிரியன். படி - உலகம். 'பழ வடிவை எள்ளும் அக்குடியைச் சாரும் நெறி' என்க. அந்நெறி, மெய்ந்நெறியே. குடி, 'குலம்' எனப்படும் அச் சொற்பற்றி, கூட்டத்தை, 'குடி' என்றார். 'கொள்கை' என்னும் எழுவாய்க்குரிய 'இது' என்னும் பயனிலையும் எஞ்சிநின்றது, ஏகாரம், தேற்றம்.

மந்திர மாவதும் மாமருந் தாவதும்
தந்திர மாவதும் தானங்க ளாவதும்
சுந்தர மாவதும் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்றன் இணையடி தானே. *#1577*

(இதன் பொருள் வெளிப்படை.)

விளக்கவுரை

தந்திரம் - நூல். 'தானம்' என்றது அறத்தை. சுந்தரம் - அழகு. உடல் அழகும் ஒருபேறே என்பதை அது பேறுகள் பதினாறனுள் ஒன்றாகக் கூறப்படுதலோடு, 'திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும்'*1* என்பதனுள், 'உருவாக்கும்' என்பதும் கூறப்பட் டமையான் அறிக. 'ஆவது' என்பன பலவும் ஒற்றுமை பற்றி வந்த ஒருமை.

இறுதி நான்கு மந்திரங்களாலும், இவ்வதிகாரத்தில் 'திருவடி எனப்பட்ட பொதுமையால் சிவனது திருவடிப் பேற்றினது சிறப்புக் கூறி முடிக்கப்பட்டது.

<u>*8.3.*ஞாதுரு ஞான ஞேயம்</u>

நீங்காச் சிவானந்த ஞேயத்தே நின்றிடப்
பாங்கான பாசம் படரா படரினும்
ஆங்கார நீங்கி அதனிலை நிற்கவே
*நீங்கா அமுதம் நிலைபெற லாமே. **#1578***

ஞானம் கைவரப் பெற்றவன் அந்த ஞானத்தால் அறியும் பொருள் சிவமே யாகையால், அஃது ஒன்றே அவனுக்கு ஞேயப் பொருளாம். அந்தப் பொருள் ஆனந்தமே வடிவினது ஆகையால், என்றும் நீங்குதல் இல்லாத சிவானந்தத்தையுடைய அந்த ஞேயப்பொருளிலே ஞானி ஒரு பொழுதும் நீங்காதே நிற்பானாயின், அநாதி தொட்டு அவனைவிடாது சூழ்ந்து நிற்கமாட்டாவாய் அகன் றொழியும். அவை முற்ற அகன்றொழியாது ஒரோவொருகால் சிறிய வாய் வந்து சூழுமாயினும் அச்சூழல், அவனை முன்போல அஞ் ஞேயப் பொருளை மறந்தொழியும் நிலையை எய்துவிக்கமாட்டா. (ஏனெனில், சிவகுருவின் அருளைப் பெற்ற சிவஞானியின் ஞானத்தை அப்பாசங்கள் முன்போலத் திரிவு படுத்தி, 'யான்' என்றும், 'எனது' என்றும் செருக்கு விக்கமாட்டா ஆகலான்.) அவ்வாற்றால் பழக்கம்பற்றிச்சிறிதே தலைப்படுகின்ற அந்தச் செருக்கு ஞானத்தால் முற்றாது கழிய, ஞேயத்தில் நிலைத்து நிற்றல் உண்டாகும். அதனால் அத்தகைய சிவஞானிக்கு, அளவிற்பட்டு நீங்குதல் இல்லாது என்றும் உளதாகிய சிவானந்தம் நிலை பெற்றிருத்தல் கூடுவதாம்.

விளக்கவுரை

'நீங்காச் சிவானந்த ஞேயம்' என்பது உடம்பொடு புணர்த்தது ஆகலான், அதற்கு இவ்வாறு உரைக்கப்பட்டது. 'நிற்க' என்னும் எச்சம், விதித்தற் கருத்தன்று இயல்பு கூறியதே. 'ஆங்காரம் நீக்கி' எனப் பிறவினையாகக் கூறாது. 'நீங்கி' எனத் தன்வினையாகக் கூறியது அது பற்றியே. 'நீங்கி' என்பதை 'நீங்க' எனத் திரிக்க. 'அதன்கண் நிலை நிற்க' என உருபு விரித்துக் கொள்க. 'நீங்கா அமுதம்' வெளிப்படை.

'சிவானந்த ஞேயம்' என்றதனால், 'ஞேயமாவது சிவம்' என்பது போந்தது. போதரவே, 'நின்றிட, நிற்க' என்பவற்றால், 'நிற்றல் சிவஞானத்தால்' என ஞானமும், 'நிற்பவன் அந்த ஞானத்தை யுடையவன்' என ஞாதுருவும் பெறப்பட்டு, 'ஞாதுருதன்னையும், தனது ஞானத்தையும் சிறிதும் எண்ணாது' ஞேயம் ஒன்றையே அறிந்து அதனால் 'அதனை அறிகின்றோம் என்ற அறிவும் நீங்கிய நிலையே

ஆனந்த நிலையாம் என்பது விளங்கிற்று. இதனையே, 'அதீத நிலை' என்றும், 'ஆனந்தாதீதம்' என்றும் கூறுவர். இந்நிலையில் ஞாதுரு ஞானஞேயங்கள் இருந்தும் அவை அவற்றை அறிபவனுக்குப் புலனாகாமையால், இந்நிலையை, 'திரிபுடி நீங்கிய நிலை' என்பர். அஃது அறியாது, 'ஞாதுரு ஞானங்களை ஞேயத்தின் வேறுபட்ட பொருளாக உணர்தலே மயக்க உணர்வாகிய அஞ்ஞானம்' என்றும், 'அங்ஙனம் உணராது அவை அவிச்சையால் ஞேயத்தின் வேறுபட்ட பொருள்போலத் தோன்றுகின்றன அவை உண்மையில் ஞேயமாகிய அதுவேயாம் என்று உணரப்பெறுதலே மெய்ஞ்ஞானம்' என்றும் கூறித் தமது அறிவின் நிலையைப் புலப்படுத்திக்கொள்வர் மாயாவாதிகள், அவர் தமது கூற்றால், பெறுவானையும், பேற்றையும் இழத்தல்தெளிவு. இனி, 'ஞாதுரு ஞானங்களைப் பெத்தத்திற்போலவே முத்தியிலும் உணர்ந்து நிற்றலே ஆனந்தானுபவம்' என்போரும் இடையீடில்லாத முத்தி யின்பத்தினராகாது, இடையிடையே பெத்தத் துன்பத்தை உடையவராவர். இவற்றையே உமாபதி தேவர் தமது வினா வெண்பாவில், *1.*

'காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் நீத்துண்மை காண்பார்கள்
நன்முத்தி காணார்கள் - காண்பானும்
காட்டுவதும் காண்பதுவும் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டுநெறி வாரா தவர்'

என அருளிச்செய்தார். இதனுள் காட்டுவது, ஞானம். காண்பது - காணப்படுவது.

இதனால், அதீத நிலையாகிய முடிந்தநிலையில் உளவாகும் ஞாதுரு முதலிய மூன்றன் இயல்புகளும் கூறப்பட்டன.

ஞேயத்தே நின்றோர்க்கு ஞானாதி நீங்கிடும்
ஞேயத்தின் ஞாதுரு ஞேயத்தில் வீடாகும்
ஞேயத்தின் ஞேயத்தை யுற்றவர்
ஆயத்தில் நின்ற அறிவறி யாரே. ***#1579***

சிவஞானத்தால் சிவமாகிய ஞேயப் பொருளிலே அன்பையும், பின் அந்த ஞேயப்பொருளையும் அடைந்தோர் தம்மையும், தமது அறிவையும் ஆராய்கின்ற அச்செயலில் நிற்கும் அறிவை உடையவராகார். அதனால், அவர் ஞேயத்தை அடைந்து நிற்கும் நிலையில் ஞானம், ஞாதுரு, ஞேயம் என்னும் முப்பகுப்பு அவர்க்கு நீங்குவதாம். அது நீங்கவே, ஞேயம் ஒன்றிலேநிற்கும் ஞாதுருவுக்கு அந்த ஞேயப் பொருளிலே வீட்டின்பம் எய்துவதாம்.

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி, ஈற்றடியின் இறுதியில், 'அதனால்,

என்பது, 'பறம்பிற் பாரி' என்பது போல நின்றது. 'ஞாதுருவுக்கு' என்னும் நான்கனுருபும், அதன் பின், 'அஞ் ஞேயத்திலே' என்னும் சுட்டும், தேற்றேகாரமும் தொகுத்தல் பெற்றன. மூன்றாம் அடியில் இடைநின்ற ஞேயம், 'நேயம்' என்பதன் போலி அதுவும், பின்வந்த ஞேயஞும் இரண்டாவதன் செல்வெண்ணாய் நின்றன.
சிவஞானமாவது, சிவம் ஒன்றே மெய்ப்பொருள்' என உணரும் ஞானம், அதனானே சிவம் அறியப்பட. அவ் அறிவின் வழி அச்சிவத்தின் மாட்டு அவ்வறிவனுக்கு அன்பு மீதூரும். அது மீதூர்ந்தவழி அச் சிவத்தை யன்றி அவன் வேறொன்றையும் அறியானாவன். அங்ஙனம் ஆய வழி அச் சிவத்தினது ஆனந்தம் இடையீடின்றி எல்லையில்லாமல் பெருகிநிற்கும்' என்பதனை இம்மந்திரத்தில் வகுத்துக்கூறியவாறு,
'அயரா அன்பின் அரன்கழல் செலுமே'*1* என்றார் மெய் கண்டதேவரும்.
'ஆய் அதனில்' என்பதில் 'அதனில்' என்பது 'அத்தில்' என மருவிநின்று.
'அறிவறிவாரே' என்பது பாடமன்று.
இதனால், மேற்கூறிய, 'நீங்கா அமுதம் நிலைபெறும்' நிலை கைவரும் முறைவகுத்துக் கூறப்பட்டது.

தானென் றவனென் றிரண்டாகும் தத்துவம்
தானென் றவனென் றிரண்டும் தனிற்கண்டு
தானென்ற பூவை அவனடிச் சாத்தினால்
நானென் றவனென்கை நல்லதொன் றன்றே. ***#1580***

'ஆன்மாவும், சிவமும்' எனப்பொருள் இரண்டாம். அவ்விரண்டையும் ஆன்மாவாகிய ஞாதா தனது ஞானத்தின்கண் வைத்து நன்கு காணுதல் வேண்டும். பின் அங்ஙனம் கண்டதன் பயனாக ஞாதா தானாகிய மலரைச் சிவனுக்கு அவனது அருபளாகிய திருவடியிலே சாத்திவிடுவானாயின், முதலில், 'ஆன்மா, சிவம் எனப் பொருள் இரண்டுள்ளன' என உணர்ந்த உணர்வு நல்லதோர் உணர்வாய்ப் பயன் தரும்.

விளக்கவுரை

'பரமான்மாவை யன்றிச் சீவான்மா என்பதொன்று வேறில்லை' என்பாரை மறுத்தற்கும், 'முத்தி நிலையில் பாசம் செயலற்று இருந்தும் இல்லாதனவாம்' என்பது உணர்த்தற்கும், 'தானென் றவனென் றிரண்டாகும் தத்துவம்' என்றாராகலின், இது, மேல், (... ... ...)
'பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி'
என்றதனோடு மாறுகொள்ளாமை அறிக. ஞாதா தன்னையும், சிவத்தையும் தன் அறிவில் வைத்துக் காணுதலாவது, சிவம் தானே விளங்கும் அறிவினதாய் அறிந்தும், தனது அறிவினுள் நின்று அறி

வித்தும் நிற்றலையும், தான் அச்சிவம் அறிவித்தாலன்றி அறிய மாட்டாமையையும் உணர்ந்து, அதனானே, தான் அடிமையும், சிவம் தன்னை உடைப்பொருளாதலையும் தெளிதல். அத் தெளிவு உள தாகவே, ஞாதா தனக்கெனச் செயல் இன்மையை உணர்ந்து, தான் சிவனது உடைமையாயே நிற்பனாகலின், அதனை உருவக வகையால், *'தானென்ற பூவை அவனடி சாத்துதல்'* என்றார். இதனை, *'கூட்டில் வாள் சாத்தி நிற்றல்'1* என வேறோர் உருவகத்தால் உணர்த்தினார் திருவுந்தியார் ஆசிரியர். *'என்று, என்கை'* என்பன எண்ணிச் சொல்லுதலைக் குறித்தன. *'அன்றே'* என்பது தேற்றத்தின் கண் வந்தது. இங்ஙனமன்றி, ஏகாரத்தை ஈற்றசை யாக்கி, *'திரிபுடி ஞானம் நில்லாது போவதாம்'* எனவும் உரைப்பர்.

இதனால், ஞாதாவும் ஞேயம்போல என்றும் உள்பொருளே யாயினும், அவன் ஞேயத்தில் அடங்கியவழியே இன்பம் பெறுதல் கூறப்பட்டது.

வைச்சன ஆறாறும் மாற்றி எனைவைத்து
மெச்சப் பரன்றன் வியாத்துவம் மேலிட்டு
நிச்சய மாக்கிச் சிவமாக்கி ஞேயத்தால்
அச்சங் கெடுத்தென்னை ஆண்டனன் நந்தியே. ***#1581***

எம் குரவராகிய நந்திபெருமான் என் மேல் வைத்த தமது அருளினால், முன்னே என்னைக் கட்டுட் படுத்து வைத்த முப்பத்தாறு தத்துவங்களையும் நீக்கி என்னை அவற்றினின்று வேறாக்கி வைத்து, என்னை யாவரும் *'பெரியோன்'* என்று புகழும் படிச் சிவ வியாபகத்தை என்பால் மேலிடுவித்துப் பின் உறுதியாக என்னைச் சிவமேயாகச் செய்து பிறவிக்கு அஞ்சும் எனது அச்சத்தை ஒழித்து என்னை ஆட்கொண்டருளினார்.

விளக்கவுரை

'அதனால், யான் இதுபொழுது ஞேயமேயாய் நிற்கின்றேன்' என்பது குறிப்பெச்சம். ஞேயமேயானபின் சொல்நிகழ வழியில்லையாதலின், இங்ஙனம் சொல் நிகழ்ந்தவாறு என்னை யெனின், அதுவும் அந்த ஞேயத்தது இயல்பாகிய அருளால், *'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'1* என்று எழுந்த உணர்வினா லேயாம் என்க. *'வியாபகத்துவம்'* என்பது *'வியாத்துவம்'* என மருவிற்று. *'மேலிடுவித்து'* என்பது தொகுத்தல் பெற்றது.

இதனால், ஞாதா ஞானத்தைப் பெற்று ஞேயத்து அழுந்தும் முறைமை கூறப்பட்டது.

முன்னை யறிவறி யாதஅம் மூடர்போல்
பின்னை யறிவறி யாமையைப் பேதித்தான்
தன்னை யறியப் பரனாக்கித் தற்சிவத்

தென்னை யறிவித் திருந்தனன் நந்தியே. *#1582*

யான் நந்தி பெருமானைக் குருவாக அடைதற்கு முன், அறியத்தக்க பொருளை அறியாது கிடக்கின்ற அறிவிலிகளோடு ஒருங்கொத்திருந்தேனாக, அவரை அடைந்த பின் அவ் அறியா மையை நீக்கிச் சிவத்தை உணருமாறு என்னைக் கருவிக் கூட்டத்திற்கு அயலானாக ஆக்கி, அவ் ஆக்கப்பட்டால் யான் சொரூப சிவத்தில் தோய்ந்தபின்பு மீளக் கருவிக் கூட்டத்திற் செல்லாதவாறு உணர்வைத் தந்து கொண்டிருக்கின்றார்.

விளக்கவுரை

'போல' என்னும் செயவெனெச்சத்தது ஈற்றகரம் தொகுத்தல் பெற்றது. அவ் எச்சத்திற்கு, 'யான்' என்னும் எழுவாய் வருவிக்க. 'அறிவறியாமை' என்பது முன்னர்ப் போந்ததனைச் சுட்டும் அளவாய் நின்றது. பேதித்தல் - வேறுபடுத்தல், நீக்குதல். தன்னை - சிவத்தை. 'சிவம்' என்பது, சிவமாய் நின்ற நிலையைக் குறித்தது. அறிவித்தல், இங்கு அறியாமை புகாதவாறு காத்தல். 'அங்ஙனம் காத்தலாலே யான் ஞேயத்தின் நீங்காதவனாயினேன்' என்பது கருத்து.

இதனால், 'குருவருளில் உறைத்து நிற்றலாலே ஞேயத்தழுந்து தல் உண்டாம்' என்பது கூறப்பட்டது.

காணாத கண்ணுடன் கேளாத கேள்வியும்
கோணாத போகமும் கூடாத கூட்டமும்
நாணாத நாணமும் நாதாந்த போதமும்
காணா யெனவந்து காட்டினன் நந்தியே. *#1583*

'எங்கள் குரவராகிய நந்தி பெருமான், கண் இன்றியே காண்கின்ற காட்சியையும், காது இன்றியே கேட்கின்ற கேள் வியையும், சித்தம் திரியாதே நுகர்கின்ற நுகர்ச்சியையும், கூடாமலே கூடி நிற்கின்ற கூட்டத்தையும், நாணாமலே நாணுகின்ற நாணத்தையும், நாதம் இன்றியே உணரும் உணர்வையும் காண்பாயாக' என அணுகி வந்து காட்டி யருளினார்.

விளக்கவுரை

கண் முதலிய கருவிகளின் துணையின்றியே காட்சி முதலிய புணலுணர்வுகளையும் நாதத்தின் துணையின்றியே சவிகற்ப உணர்வையும், முன்பு வேறாய் நின்று பின்பு கூடாது இயல்பிலே இரண்டற நிற்கும் நிலை விளங்கப் பெறுதலாகிய புணர்ச்சியையும், முக்குணங்களும் மாறி மாறி வருதலால் சித்தம் திரிபெய்துதல் இன்றி என்றும் ஒருபடித்தாய் நின்று நுகரும் சிவானுபவத்தையும், பிறர்முன் இளிவந்து நின்று நாணுதலாகிய நாணமின்றி, முன்னை அறியா மையை

நினைந்து வெள்கி விலாஇறச் சிரித்தலாகிய *1* நாணத்தையும் பெறுதல் சிவஞானம் பற்றுக்கோடாயவழிக் கிடைப்ப தாகலின், 'அதனை அவ்வாற்றால் தந்தருளினார்' என்றவாறு. 'கேளாதே எல்லாம் கேட்டான்'*2* என்னும் சிவனது இயல்பு அவனைச் சார்ந்தார்க்கும் உளதாதல் அறிக.

இதனால், சிவகுருவால் சிவஞானத்தைப் பெற்ற ஞாதுரு அந்த ஞானத்தால் ஞேயத்தை உணரும் முறை கூறப்பட்டது. இது துரிய நிலை.

மோனங்கை வந்தோர்க்கு முத்தியும் கைகூடும்
மோனங்கை வந்தோர்க்குச் சித்தியும் முன்னிற்கும்
மோனங்கை வந்தூமை யாம்மொழி முற்றுங்காண்
மோனங்கை வந்தைங் கருமமும் முன்னுமே. ***#1584***

மௌன நிலை கைவரப் பெற்றோர்க்குப் பரமுத்தி உண்டாகும். அதற்கு முன்னே பரசித்திகள் உளவாம். நாதத்தின் பிணிப்பும் விட்டொழியும். இறைவனது ஐந்தொழில்களில் இறுதிய தாகிய அருளால் தொழிலும் நிகழ்ந்து, அவை அனைத்தும் இயற்றப் பட்டு முடியும்.,

விளக்கவுரை

மௌன நிலையாவது தற்போதம் சிறிதும் எழாத அதீத நிலையாம். திரிபுடி அற்ற நிலையும் இதுவேயாதல் அறிக.

'மோனம் என்பது ஞான வரம்பு'*3* என்னும் ஔவையார் திருமொழியும் காண்க. பரசித்திகள் மூன்றாம் தந்திரத்திற் கூறப் பட்டன. ஊமை மொழி, பிரணவம். காரண நிலையது ஆதல் தோன்ற அஃது, 'ஊமை மொழி' எனப்படுகின்றது. அதுவே நாதமாதல் அறிக. முற்றுதல் - முடிவுற்று நீங்குதல். இதுவும் பாச ஞானமாய்ப் பந்தமாத லின் நீங்குதற்குரியதாயிற்று. முன்னுதல் - நினைத்தல் சங்கற்பித்தல். தன்காரியம் தோன்ற நின்ற இதற்கு, 'சிவன்' என்னும் எழுவாய் வரு விக்க. இவ்வாறன்றி, 'முன்னப் படும்' எனச் செயப்பாட்டு வினை யாக்கி உரைத்தலுமாம். பின்னிரண்டடிகளில் 'வந்து' என்பவற்றை 'வர' எனத் திரிக்க.

இதனால், திரிபுடி நீங்கிய நிலையினது இயல்பு வகுத்துக் கூறப்பட்டது.

முத்திரை மூன்றின் முடிந்தது மூன்றன்பால்
வைத்த கலைகாலை நான்மடங் கான்மாற்றி
உய்த்தவத் தானந்தத் தொண்குரு பாதத்தே
பெத்த மறுத்தோர் பிறந்திற வாரே. ***#1585***

சிவ குருவின் திருவடிப் பேற்றால் எல்லாப் பொருள் களும் அற்றுச் 'சிவஞாதா, சிவஞானம், சிவஞேயம்' என்னும் மூன்று பொருளிலே வந்து முடிந்த தன்மையை, 'சந்திர கலை, சூரிய கலை, அக்கினி கலை' என்னும்

மூன்று வகையில் இயங்கும் பிரணவாயுவை முறைப்படி அடக்குமாற்றால் ஞேயமாகிய ஒன்றில் அடங்கச் செய்தலால் விளைந்த ஆனந்தத்தால் திரிபுடியாகிய கட்டினை அறுத்தோர் அதன்பின் பிறந்தும், இறந்தும் வருதலைச் செய்யார் முத்தி பெறுவர் என்றதாம்.

விளக்கவுரை

'ஒண்குரு பாதத்தால்' என உருபு விரித்து. அத் தொடரை முதலிற் கூட்டி, 'முடிந்ததை உய்த்த வத்து ஆனந்தத்தால் பெத்தம் அறுத்தோர் பிறந்திறவார்' என வினை முடிவு செய்க. முத்திரை - குறி பொருள். 'மூன்று' இரண்டில் முன்னது ஞாதுரு முதலிய மூன்றையும், பின்னது இடைகலை முதலிய மூன்றையும் குறித்தன. நான்மடங்கா - ஒன்று நான்காக. அஃதாவது, பதினாறு மாத்திரையளவாகப் பூரித்ததை அறுபத்து நான்கு மாத்திரை யளவாகக் கும்பித்தல். இம்முறையில் ஞாதுரு முதலிய மூன்றையும் வத்துவின் கண் உய்த்தலாவது, இப்பிராணாயாமத்தால் ஞேயப் பொருளாகிய சிவத்தையே தியானித்து அதனில் ஒன்றி யிருத்தலாகிய சமாதி நிலையைப் பெறுதல். 'உய்த்த' என்னும் பெயரெச்சம், 'வத்து' என்னும் இடப்பெயர் கொண்டது. வத்து, பரவத்து பரம்பொருள். வத்துவினது ஆனந்தத்தால் பெத்தம் அறுத்தோர் - பரம்பொருளாகிய சிவனது ஆனந்த மேலீட்டார் திரிபுடி ஞானத்தை அறுத்தோர். திரிபுடி ஞானமும் ஆனந்தானுபவத்திற்குத் தடையாகலின், 'பெத்தம்' எனப்பட்டது. 'பிறந்திறவார்' என்றது, 'ஏனையோர் போலப் பிறப்பில் மீளாது, எவ்வாற்றானும் முத்தியைப் பெறுவர்' என்றதாம். இதனால், ஞாதுரு ஞான ஞேய வேறுபாடு நீங்குதற்கு யோகமும் தக்கதொரு சாதனமாதல் கூறப்பட்டது. 'இவ்யோகம் உபாய நிட்டை' என்க.

மேலைச் சொரூபங்கள் மூன்றும் மிகுசத்தி
பாலித்த முத்திரை பற்றும் பரஞானம்
ஆலித்த நட்டமே ஞேயம் புகுந்தற்ற
மூலச் சொரூபன் மொழிஞா துருவனே. ***#1586***

மேலே கூறிவந்த ஞாதுரு முதலிய மூன்றன் இயல் புகளையும் சிவசத்தி இனிது விளங்கக் காட்ட அங்ஙனம் கண்ட உணர்வே ஞேயத்தைப் பற்றுதற்குரிய மேலானஞானம். அந்த ஞானத்தில் ஆரவாரித்து திருநடனத்தையுடைய சிவனே ஞேயம். அந்த ஞேயத்தில் அழுந்தித்தானும், தனது ஞானமும் தோன்றாது. முதற்பொருளின் இயல்பு முற்றும் தனது இயல்பாக விளங்கப் பெற்ற ஆன்மாவே ஞாதுரு.

விளக்கவுரை

'இங்ஙனம் முத்தி நிலையிலும் இம்மூன்றும் உண்மை யால், முத்தி

என்பது பெறுவானும், பேறும் இல்லாத ஒன்றாகப் பிறர் கூறும் நிலைகள் அல்ல' என்றவாறு. எனவே திரிபுடி அற்ற நிலை என்பது, 'அவை அறியப்படாதநிலை' எனப் பொருள்படுதலன்றி, 'அவை இல்லாதொழியும் நிலை' என்றதாயிற்று. இஃது இவ்வதிகாரத்து முதற்கண் காட்டிய வினா வெண்பாவாலும் நன் கறியப்படும். சொரூபம் - இயல்பு. சிவசத்தியை, 'மிகு சத்தி' என்றார். 'மூன்றையும் மிகுசத்தி பாலித்த' என்க. 'பாலித்த' என்னும் பெயரெச்சம், 'முத்திரை' என்னும் செயப்படு பொருட் பெயர் கொண்டது. முத்திரை - குறி உணர்வு. 'முத்திரையே பரஞானம்' என ஏகாரம் விரித்துமுடிக்க. 'நட்டம்' என்றது அதனை உடைய பொருளை. 'சொரூபனே ஞாதுருவன்' என ஏகாரத்தை மாற்றிக் கூட்டியுரைக்க. 'ஞாதுரு' என்னும் வடசொல்லை. 'ஞாதுரு வாம் தன்மை யுடையவன்' எனத் தமிழ் முறைப்பட ஓதினார்.
இதனால், ஞாதுரு ஞான ஞேயங்களது இயல்புகளும், அம் மூன்றும் என்றும் உள்ள பொருள்களாதலும் கூறப்பட்டன.

<u>*8.4.4.*துறவு</u>

இறப்பும் பிறப்பும் இருமையும நீங்கித்
துறக்கும் தவங்கண்ட சோதிப் பிரானை
மறப்பில ராய்நித்தம் வாய்மொழி வார்கட்
கறப்பயன் காட்டும் அமரர் பிரானே. ***#1587***

இறப்பும், பிறப்பும் ஆகிய இரண்டினின்றும் இயல் பாகவே நீங்கி, உயிர்களும் அவற்றினின்றும் நீங்குதற்குத் துறத்த லாகிய தவநெறியின் முறைமையைச் சொல்லியருளிய சுயஞ்சோதி யாகிய சிவனை ஒரு ஞான்றும் மறத்தல் இல்லாதவராய், வாயாலும் வாழ்த்தி நிற்பவர்கட்கு அவன் இன்ப உலகமாகிய தனது உலகத்தை வாழும் இடமாகக் காட்டியருளுவான்.

விளக்கவுரை

சிவன் பிறவாமை உரையாலும் கருதலாலும் அறியப் படுதலின் அதனையே முன்னர்க் கூறினார். செவ்வெண்ணே யன்றி உம்மை யெண்ணும் தொகை பெறுமாதலின், இனிது விளங்க, 'இருமையும் நீங்கி' எனத் தொகைகொடுத்து ஓதினார். எனவே, 'இருமை' என்பது எண்ணின்கண் வந்தது. 'இருமையினும்' என ஐந்தாவது விரிக்க. சிவன் இருமையினும் நீங்கினமையை எடுத்தோதி யதனால், 'உயிர்களும் அவற்றின் நீங்குதற்கு' என்பது பெறப்பட்டது. தவம் - தவமாகிய நெறி. உயிர்கள் வினைவழியே இயங்குவது அவ நெறியும், வினை நீங்குதற்குரிய வகையில் இயங்குவது தவநெறியு மாதலின், அவற்றுள் துறவு தவநெறியாதல் உணர்த்துவார், 'துறக்கும் தவம்' என்றார். எனவே,

துறத்தலையே 'தவம்' என்றமையால், பெயரெச்சம் வினைப்பெயர் கொண்டதாம். 'கண்ட' என்றது 'தானே கண்ட' என்னும் பொருட்டாய், 'பிறர்க்குச் சொன்ன' எனத்தன் காரியம் தோன்ற நின்றது. சொல்லியது வேதாகமங்கள் வாயிலாக என்க. 'சோதிப் பிரான்' என்றதும் அவ்விரண்டும் பற்றி. எனவே, அவனல் லது பிறர் அதனை அறிவாரும், அறிவிப்பாரும் இல்லை என்க. மறப் பின்மை பிற பொருளை நினையாமே யாதலின், அது பற்றறுத்தலைக் குறித்தல் அறிக. வாய்மொழிதல் நினைவின் வழித்தாதல் வெளிப் படை. அறப் பதிபுண்ணியலோகம்; என்றது, சிவபுண்ணிய லோகத்தை என்னை?

'யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்' *1*

என்றமையால், துறந்தார் அடைவது பசு புண்ணியம் செய்வார். அடைதற்குரிய துறக்க லோகம் ஆகாமையின். 'அமரர் பிரான்' என்றது சுட்டுப் பெயரளவாய் நின்றது. இதன்கண் 'பிரான்' என்பது, 'அமரர்' என்பார் முகமகனாக அங்ஙனம் கூறப்பட, உண்மை அமரன் சிவனேயாதல் விளக்கிநின்றது.

'அச்சுதன் அயன் அமரர் ஆகிய பெயர் அவர்க்கு
நிச்சயம்படு முகமகனே. *2*

என்ற கந்தபுராணத்தை நோக்குக.

இதனால், பிறவி நீங்கும் நெறி துறவேயாதலும், அதுவும் சிவநெறியின் பொதுவும், சிறப்பும் ஆகிய நூல்களிற் சொல்லப்பட்ட தேயாதலும் கூறப்பட்டன.

பிறந்தும் இறந்தும்பல் பேதைமை யாலே
மறந்த மலஇருள் நீங்க மறைந்து
சிறந்த சிவன் அருள் சேர்பரு வத்துத்
துறந்த உயிர்க்குச் சுடரொளி யாமே. ***#1588***

ஆணவ மலம் பரிபாகம் எய்தாத பொழுது சத்தி நிபாதமும் வாராமையால் அம்மலம் பலமாயப் பொருள்களின்வழிப் பலவகை மயக்கத்தைச் செய்தலால் பிறந்தும், இறந்தும் உயிர்கள் தன்னை மறந்து நின்ற பொழுது அவற்றது அறிவினுள்ளே மறைந்து நின்றும், பின் அம் மலம் பரிபாகம் எய்தியபொழுது சத்திநிபாதம் வரு தலால் உயிர்கள் தன்னை நினைந்தவழி அச்சத்திநிபாத நிலை கட்கு ஏற்ப வெளி யிடத்தும், உள்ளே இதயத்தும் உருவம், அருவுருவம், அருவம் என்னும் தடத்தநிலைகளிலும், அறிவின்கண் சொரூப நிலை யிலும் முறையானே விளங்கிநிற்கின்ற சிவன் அச்சத்தி நிபாத நிலை கட்கு ஏற்பத்தோன்றும் துறவுணர்வின் அளவாக, முன்னர்ச் சிறிதாய்த் தோன்றிப் பின் பெரிதாய்ச் சுடர்விட்டு ஔிர்கின்ற பேரொளி போல விளங்கிநிற்பன்.

விளக்கவுரை

பேதைமை, இங்கு மயக்க உணர்வு. இதனைத்தரும் ஆணவ சத்தி, 'அதோநியாமிகாசத்தி' எனப்படும். இஃது உயிர் தோறும் ஒவ்வொன்றேயாயினும் அதற்கு வாயிலாய் உள்ள பொருள் களது பன்மை பற்றிப் பலவாயிற்று. 'பல்பேதைமையாலே' என்பதை முதற்கண்வைத்து உரைக்க. 'மறந்த' என்னும் பெயரெச்சம், 'இருள்' என்னும் ஏதுப்பெயர் கொண்டது. 'நீங்கச் சிறந்த' என்க. 'மறைந்து சிறந்த' என்பதற்கு, 'முன்னர் மறைந்து பின்னர்ச் சிறந்த' என உரைக்க, முன்னைநிலை மறத்தலாகவே, பின்னைநிலை நினைத்தலாயிற்று. 'சிறந்த' என்றது, 'படிமுறையான் ஓங்கி நின்ற' என்றவாறு. அருள் - அருட்சத்தி. 'அருள்சேர் பருவத்து' என்பதை 'மறைந்து' என்றதன் பின்னர்க் கூட்டுக. இதனானே, 'முன்னைநிலை அருள்சேராப்பருவம்' என்பது போந்தது. 'பருவத்து ஆம்' என இயையும். 'ஆதல் துறந்த உயிர்க்கு' என்றதனால், அவ்விடத்துத் துறவுதானே உண்டாதல் பெறப் பட்டது. சிவன் மறைந்து நின்ற காலத்துப் பிறப்பிறப்பாய பெருந் துன்பம் உளதாதல் கூறவே, அவன் விளங்கிநின்ற காலத்துப் பேரின்பம் உளதாதல் விளங்கிற்று. 'அது துறவால் வருவது' என்பதே இங்குக் கருதப்பட்டபொருள்.

'ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்;
ஆசை விடவிட ஆனந்த மாமே' *1*

என நாயனார் முதற்கண் அருளிச்செய்தமை காண்க.

இதனால் பற்றுள்ளம் - மலத்தாலும், சத்திநிபாதம் இன்மை யாலும் உளதாதலும், துறவுள்ளம் - மலபரிபாக சத்திநிபாதங்களால் உளதாதலும், அவ்விரண்டானும் முறையே பிறவித்துன்பமும், வீட்டின்பமும் உளவாதலும் கூறப்பட்டன.

அறவன் பிறப்பிலி யாரு மிலாதான்
உறைவது காட்டகம் உண்பது பிச்சை
துறவனுங் கண்டீர் துறந்தவர் தம்மைப்
பிறவி யறுத்திடும் பித்தன்கண் டீரே. ***#1589***

'அறவாழி யந்தணன்'*1* என்றற் றொடக்கத் தனவாக நூல்களில், 'பல வகை அறங்களையும் தனக்கு வடிவாக உடையன்' எனக் கூறப்படுகின்ற கடவுள், பிறப்பு இல்லாதவனும், அதனால், பற்றுச் செய்தற்குக் கிளைஞர் ஒருவரும் இல்லாதவனும், வாழும் இடம் காடாகவும், உண்ணும் உண் பிச்சையாகவும் உடைய வனுமாதலால் சிறந்த துறவியாய் உள்ள சிவனேயாவன். அதனால், அவன் துறவு பூண்டவர்களையே பிறவியைக் கடப்பித்து உய்விக் கின்ற பேரருளாளனுமாய் உள்ளான். இவற்றை அறிமின்கள்.

விளக்கவுரை

'அறவடிவானவன்' என்னும் பொருட்டாய்க் கடவுட்கு யாவரும் உடன்பட்டுக்கூறும் பொதுக் காரணப்பெயராய் 'அறவன்' என்பது எழுவாயாய் நின்று சிவனைக் குறித்த 'துறவன்' என்னும் சிறப்புக் காரணப் பெயராய பயனிலையைக் கொண்டது. பிறப்பிலி முதலிய நான்கும் சிவன் சிவன் சிறந்த துறவியாமாற்றை விளக்கி நின்றன. 'சிவன் சிறந்ததுறவி யாதலின், சிறந்த துறவியரிடத்தே அருள் மிக உடையனாய் அவர்களை உய்விக்கின்றான்' என்றவாறு. இல்லறத் தவரும் அன்பு, பொறை, ஒப்புரவு, ஈகை முதலியவற்றை உடையரா யினும் பற்றறாமையின், எல்லா உயிர்கள்மேலும் அருளுடையராய்த் 'தன்னுயிர் நீப்பினும் தான் பிறிது இன்னுயுர் நீக்காது'*2* ஒழுகுதல் முதலியவற்றை உடையராக மாட்டாமையின், 'அறவோர்' எனப் பெயர் பெறமாட்டார்கள். துறவியரே அந்நிலைக் கண் நிற்கவல்லராய் 'அற வோர்' எனப் பெயர் பெற்று நிற்றலின், அவரே அறவாழியந்தணனாகிய இறைவனது அருட்குப் பெரிதும் உரியராகின்றனர் என்பது தோன்ற, இறைவனை, 'அறவன்' எனப் பொதுவகையானும், 'துறவன்' எனச் சிறப்பு வகையானும் கூறினார். 'உறைவது காட்டகம், உண்பது பிசை' என்றவை, 'உடுப்பது தோல், முடிப்பது சடை, பூசுவது சாம்பல்' முதலிய வற்றிற்குத் தோற்றுவாயாய் நின்றன. நிற்கவே, இவை பற்றிச் சிவனை இகழ்வோர் துறவாது பெருமையை அறியும் அறிவிலார் என்பது அறியப்படும். அறிவுடையார் இன்னோரன்னவற்றைப் புகழ்ந்து போற்றுதல் அறியத் தக்கது. 'துறவனும்' என்னும் உம்மையை, 'பித்தன்' என்பதனோடு கூட்டுக. 'பிறவி யறுத்திடும்' என்னும் தொகைச்சொல் 'உய்விக்கும்' என்னும் ஒருசொற் பொருட்டாய் , 'துறந் தவர்தம்மை' என்னும் இரண்டாவதற்கு முடிபாயிற்று. பித்துப் போறலின் பேரருள். 'பித்து' எனப்பட்டது. உய்வித்தற்குக் காரணத்தைக் குறித்து நிற்றலின், இது துறந்தார் மேலதாதல் அறியப்படும்.

இதனால், துறந்தோரே சிவனருட்கு உரியராதல் கூறப்பட்டது.

இத்துறவு, 'தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணரும்'*1* உணர்வால் வரும் அகத்துறவாதல் அன்றி, வாளா, மனை துறந்து. *2*

'நாடுகளிற் புக்குழன்றும் காடுகளிற் சரித்தும்
நாகமுழை புக்கிருந்தும் தாகமுதல் தவிர்ந்தும் *3*
வருந்துதலாகிய புறத்துறவாகாமை அறிக.

நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்
நெறியில் வழுவின் நெருஞ்சில்முட் பாயும்
நெறியில் வழுவா தியங்கவல் லார்க்கு
நெறியில் நெருஞ்சில்முட் பாயகி லாவே. **#1590**

(இம்மந்திரம் பிறிது மொழிதல். இதன் நேர்பொருள் வெளிப்படை.)
இதன் குறிப்புப்பொருள்:- அறநெறியை வகுத்துணர்த்திய இறைவனே மறநெறியையும் வகுத்துணர்த்தினான். அதனால், அறநெறியின் வழுவியவழி மறநெறி உளதாய்த் துன்பம் விளைக்கும். ஆகவே, அறநெறியின் வழுவாது ஒழுக வல்லவர்கட்கு அந்நிலையில் மறநெறி தோன்றித் துன்பம் விளைக்க மாட்டாது.

விளக்கவுரை

'அந்நிலை துறவோர்க்கே முற்ற முடியும்; அதனால், துறவைப் பெறுக' என்பது கருத்து *'படைத்தான்'* இரண்டில் முன்னது வினைப்பெயர்; பின்னது முற்று. முன்னதில் தேற்றேகாரம் தொகுத்தல் பெற்றது. இதனால், துறவே துன்பம் துடைப்பாதல் கூறப்பட்டது.

கேடும் கடமையும் கேட்டுவந் தைவரும்
நாடி வளைந்தது நான்கட வேனலேன்
ஆடல் விடையுடை யண்ணல் திருவடி
கூடும் தவம்செய்த கொள்கையன் றானே. ***#1591***

'தீயன ஆவனவும், நல்லன ஆவனவும் இவை இவை' எனக் குருவினிடத்துக் கேட்டுணர்ந்து*'* தீயவற்றினின்றும் விலகி வந்து சிவனது திருவடியைச் சேர்தற்குரிய தவத்தைச் செய்த நல்ல கோட் பாட்டை யுடையேன். அதனால் நான் ஐம்புல வேடர்கள் நினைத்து வந்து என்னைச் சூழ்ந்து நின்ற செயலுக்கு யாதும் கடவேனல்லேன்.

விளக்கவுரை

முதலடியை *'ஐவரும்'* என்பதொழித்து மூன்றாமடிக்கு முன்னர்க் கூட்டியுரைக்க. *'குருவின்பால்'* என்பது ஆற்றலால் வந்தது. ஐவர், குறிப்புருவகம், *'வளைந்தது'* என்பது, அச்செயற்கு நிமித்த மாயதன்மேல் நின்றது. அதுதான் துறவு வாராது பற்றினை மிகுவித்தல். *'அதற்கு யாதும் கடவேனலேன்'* என்றதனால், *'அவரை வென் றொழிப்பேன்'* என்றதாயிற்று. *'யானேதும் பிறப்பஞ்சேன் இறப்ப தனுக் கென்கடவேன்'1* என்றார் ஆளுடைய அடிகளும், கூடும் தவம் - கூடுதற்கு ஏதுவாகிய தவம். ஈற்றடியின் இறுதியில், *'ஆகலான்'* என்பது எஞ்சி நின்றது. *'குருவின்பால் கேட்டு வந்து தவம் செய்த கொள்கையேன் ஆகலான் நான் கடவேனலேன்'* என்றதனால், நிரம்பிய துறவுக்குத் தவமும், அத்தவத்திற்குக் குருவருளும் காரண மாதல் பெறப்பட்டது. இக்குரு கிரியாகுரு என்க.
இதனால் துறவு வருமாறு கூறப்பட்டது.

உழவன் உழவுழ வானம் வழங்க
உழவன் உழவினிற் பூத்த குவளை

உழவன் உழத்தியர் கண்ணொக்கு மென்றிட்டு
உழவன் அதனை உழவொழிந் தானே. *#1592*

உழவன் உழவைச் செயதற் பொருட்டு மழை பெய்ய, அதன்பின் அவன் செய்த உழவினால் தோன்றி வளர்ந்து பூத்த குவளை மலரை அது களையாதலின் களைய வேண்டுவதாய் இருக்க, உழவன் தன் மனைவி முதலிய பெண்டிரது கண் போல உள்ளது என்று அதன்மேல் அன்புகொண்டு களையாமலே விடுகின்றான்.

விளக்கவுரை

'உலகப் பற்று அத்துணை வலிதாகின்றது' என்பது கருத்து. இங்ஙனங் கூறுதல் இலக்கிய வழக்காதலால், 'உலகப் பற்றின் வலிமையை இலக்கியங்களும் இன்னோரன்னவாற்றால் விளக்கி, அதனை விடுமாறு உணர்த்துகின்றன. என்பதும் குறிப்பாயின. 'உழவு உழ' என்பது 'உழுதலைச் செய்ய' என்றவாறு. 'உழவன் உழவு' என்பது காரகப்பொருட்டாய ஆறாவதன் தொகை. 'உழவினில்' என ஐந்தனுருபாகிய இன் இல்லெனத் திரிந்தமை பிற்கால வழக்கு. 'உழவொழிந்தான்' என்பதில், உழவு - களைதல்.
இதனால், 'கற்றோராயின் உலகப் பற்றினை விடுதல் வேண்டும்' என்பது கூறப்பட்டது. இம்மந்திரத்தினையும் பிறிது மொழிதலாகக் கொண்டு இடர்ப்பட்டுரைப்பர்.

மேற்றுறந் தண்ணல் விளங்கொளி கூற்றுவன்
நாட்டுறந் தார்க்கவன் நண்பன் அவாவிலி
கார்த்துறந் தார்க்கவன் கண்ணுத லாய்நிற்கும்
பார்த்துறந் தார்க்கே பதஞ்செய லாமே. *#1593*

அநாதியே துறவனாய் நிற்கும் இறைவன் அத் தன்மையாலே ஒருவர் விளக்க வேண்டாது தானே விளங்கும் ஒளியாய் உள்ளான். உலகருள் கூற்றுவன் வரும் நாளை யிலராயினா ர்க்கு அவன் தோழனாய் விளங்குகின்றான். ஒரு பொருளிலும் பற்று இல்லாதவனாகிய அவன் 'அஞ்ஞானம்' என்னும் இருளின் நீங்கி னவர்க்கு அவன் சிவனாய் வெளிநிற்கின்றான். அதனால், உலகப் பற்றின் நீங்கினவர்க்கே தம்மை அவனது நிலையைப் பெறுதற்குத் தக்கவராகச் செய்து கொள்ளுதல் கூடும்.

விளக்கவுரை

'மேலைத் - தவத்தளவே யாகுமாம் தான் பெற்ற செல்வம்'*1* என்பதிற்போல, 'மேல்' என்பது, 'முற்காலத்தில் என்னும் பொருட்டாய், அநாதி நிலையை உணர்த்திற்று. 'துறந்த அண்ணல்' என்பதில் பெயரெச்சத்து அகரம் தொகுத்தல் பெற்றது. 'மேல் துறந்த' என

உடம்பொடு புணர்த்ததனால், அதற்கு இவ்வாறு உரை கூறப்பட்டது. 'கூற்றுவன் வரும் நாள்' என்றது. 'இறப்பு' என்ற வாறு, 'தவத்தால் கூற்றங் குதித்தலும் கைகூடும்'2 ஆதலின், கூற்றுவன் நாள் துறந்தார். தவத்தவராயினர். இத்தவம் யோகம். இது 'கூற்றை யுதைக்கும் குறிப்பாதலும்', இதனை யுடையார்க்குச் சிவன் தோழனா தலும் நினைக. 'கருமை' என்பதன் திரிபாகிய 'கார்' என்பது இருளைக் குறித்தது. யோகிகட்குத் தோழனாகின்ற சிவன் ஞானிகட்கு உண்மைச் சிவனாதல் அறிக. பார் - பூமி; உலகம் இஃது இதன்மேற் செய்யப்படும் பற்றின்மேல் நின்றது. கார்த்துறந்தார், பார்த்துறந்தார் என்பன ஐந்தா வதன் தொகை. பதம் - பக்குவம். இது, கூற்றுவன் நாள் துறத்தற்கும், சிவனை நண்பனாகவும், சிவனாகவும் பெறுதற்கும் ஏற்கு மாற்றால் பல திறத்ததாம். 'இவை அனைத்திற்கும் துறவே காரணம்' என்றவாறு. இதனுள் இன எதுகை, மூன்றாமெழுத் தெதுகைவந்தன.
இதனால், துறவே வீட்டு நெறியின் பல நிலைகட்கும் முதலாதல் கூறப்பட்டது.

நாகமும் ஒன்று படம் ஐந்து நாலது
போகம் முட் புற்றில் பொருந்தி நிறைந்தது
ஆகம் இரண்டும் படம்விரித் தாட்டொழிந்
தேகப் படஞ்செய் துடம்பிட மாமே. ***#1594***

(இது பிசிச்செய்யுள்) நாகம், உயிர் ஐந்துபடம், ஐம் பொறிகள். போகம் - உணவு. நான்கு உணவு. அந்தக் கரணம் நான் கினும் நால்வகையாய்ப் புலப்படும் பொருள், முட்புற்று, துன்பம் நிறைந்த உடல். நிறைந்தது, மனநிறைவுபெற்றிருந்தது. ஆகம் - உடம்பு. பாம்பு தோலுரிப்பது ஆதலால், இரண்டுடம்பு உடையதாம். அவை இங்குத் தூலமும், சூக்குமமுமாகிய இரண்டுடம்புகளைக் குறித்தன. அவை படம்விரித்து ஆடல், ஐம்பொறிகளின்வழி ஐம்புலன் களையும் பொதுப்படக் கவர்தலும், பின் சிறப்பு வகையில் உணர்ந்து திரிபு எய்தலுமாம். அவ் ஆடலை ஒழிதல் ஐம்புல அவாவை அறுத் தலாம். ஐந்து படங்கள் இன்றி ஒருபடத்தையே எடுத்தலாவது, மெய்ப் பொருள் ஒன்றையே நோக்குதல். உடம்பே இடமாதல் - புற்றைவிட்டு நீங்கி அருள் தாரமாக நிற்றல்.

விளக்கவுரை

'நாகம் ஒன்று; அதற்குப் படம் ஐந்து; உணவு நான்காய் உள்ளது; முட்புற்றிலே பொருந்தி நிறைவு பெற்றிருந்தது. ஆயினும், பின்பு அது தனக்கு இயல்பாய் உள்ள இரண்டு உடம்புகளோடும் முன் சொன்ன ஐந்து படங்களையும் விரித்து ஆடுதலை ஒழிந்து ஒரு படத்தை எடுத்து வேறோர் உடம்பிடமாக நின்றது' எனப் பிசி வகைக்கு வினைமுடிவு காண்க.

'பசுத்துவம் உடைய உயிர் ஐம்பொறிகளின்வழி அலமந்து துன்பம் நிறைந்த உடம்பினுள் தங்கி வினைப்பயன்களை நுகர்ந்து களித்திருந்தது; ஆயினும், அஃது ஐம்புல அவாவை நீத்த பொழுது திருவருள் நாட்டம் ஒன்றே உடையதாய் அத் திருவருளே தாரமாகநின்று இன்புற்று' என்பது இதனுட் கூறப்பட்ட பொருள்.
'நாகமும்'என்னும் உம்மை இழிவு சிறப்பு. 'நாலது' என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. 'இரண்டோடும்' என உருபு விரிக்க. 'உடம்பே இடமாம்' எனப் பிரிநிலை ஏகாரத்தை மாற்றி உரைக்க. அங்ஙனம் உரைக்கவே, 'உடம்பு, அருளுடம்பு' என்பது பெறப்படும்.
இதனால், ஐம்புலப் பற்று அற்றவழியே துன்பம் நீங்கி, இன்பம் உண்டாதல் கூறப்பட்டது.

அகன்றார் வழிமுதல் ஆதிப் பிரானும்
இவன்றான் எனநின் றெளியனும் அல்லன்
சிவன்றான் பலபல சீவனு மாகும்
நயன்றான் வருவழி நாமறி யோமே. ***#1595***

துறந்தவரது குடிக்குத் தானே முதல் என நிற்கின்ற சிவபெருமான், 'இன்ன வகையினன்' என ஒருவராலும் இனங்கண்டு கூறற்கு எளியனாய் நிற்பானல்லன். அதனால், அவன் அளவற்ற உயிர்களில் நிறைந்து அவையேயாயும் நிற்பன்; அவனது அருள் எவ்வாற்றால்வரும் என்பதையும் நாம் அறியமாட்டோம்.

விளக்கவுரை

குடிக்கு முதலாதலாவது, 'குடிமுழுதாண்டு, வாழ்வற வாழ்வித்து'*1* அதனை 'சிவக்குடி' என யாவரும் கூற வைத்தல் 'சிவன் யாதொரு கூற்றினும் படாதவன்' என்பதை, 'எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ'*3* என்பது முதலியவற்றான் அறிக. 'சிவன்தான்' என்பதில் 'தான்' என்பது தேற்றப்பொருட்டாய், அனுவதித்தலை உணர்த்திற்று. 'உயிர்கள் அளவற்றன ஆதலின், அவற்றிற்கு அவன் அருளும் முறைமைகளும் அளவில்லனவாய். நம்மால் அறியவாரா' என்பார் அவன் அளவற்ற உயிர்களில் அவை யேயாய்க் கலந்துநிற்றலை எடுத்தோதினார். இவ்விடத்து, 'சிவன் தாள்' எனச் சத்திமேல் வைத்து ஓதுதற்கு இயைபின்மையின், அது பாட மாகாமை அறிக. நயம், 'நயன்' எனப் போலியாற்று. 'அருள்' என்பது இதன் பொருள். 'சிவனது அருள் உயிர்கட்கு வருமாறு இவையே' என வரையறுக்க ஒண்ணாமையை,
'ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகில்அள வில்லை கிளக்க வேண்டா' *1*
எனத் திருஞானசம்பந்தரும் அருளிச்செய்தார். இங்ஙனம் கூறவே, 'இல்லம் துறந்து, வேடம்பூண்டு ஓரிடத்தில் நில்லாது செல்வோரே

துறந்தாராவர்' எனக்கொண்டு, 'அவ்வாறில்லாத சிலரும் சிவனது அருள்பெற்றமை கேட்கப்படுதல் என்னை' என ஐயுற்றவர்க்கு, 'புறத் துறவு இல்லாது அகத்துறவே உணராய்ப் பல்வேறு நிலையில் நிற்பார்க்கும் சிவன் பல்வேறு வகையாய் அருள்புரிதல் உண்டு; ஆயினும் அதுபற்றுதல் இன்றியாகாது' என ஐயம் அறுத்தவாறாயிற்று. 'பற்றறாதவழிச் சிவனருள் கூடாது' என்றற்கே முதற்கண், 'அகன்றார் வழிமுதல் ஆதிப் பிரான்' என அருளிச்செய்தார்.

'... ... ... அகன்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்று விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றி'2

என்றது, நிறைவான துறவு நிலையை உணர்த்தியருளியவாறு. இதனுள் உயிரெதுகை வந்தது.

இதனால், திருவருளுக்குரிய துறவு நிலை தோற்றத்தால் பல வகையினதாதல் கூறப்பட்டது.

தூம்பு திறந்தன்ன ஒம்பது வாய்தலும்
ஆம்பற் குழலி னகஞ்சுளிப் பட்டது
வேம்பேறி நோக்கினன் மீகாமன் கூரையிற்
கூம்பேறிக் கோயிலிற் பூக்கின்ற வாறே. ***#1596***

ஓர் ஆம்பற் குழலினுள்ளே, அங்கணத்தை (சலதாரையைத்) திறந்தாற்போலக் காணப்படும், ஒன்பது புழைகளும் அடங்கி அடைபட்டன. அதனால், மாலுமி வெளியே பார்ப்பதற்கு வேறு வழியில்லாமல், வேம்பினால் ஆகிய தன் மரக்கலத்தின்மேலே ஏறியபொழுது பாய்மரத்தைச் சுற்றிய தாமரைக்கொடி ஒன்று அம்மரக் கலத்தின் கூரையில் பூத்தலைக் கண்டான்.

விளக்கவுரை

'ஆம்பற் குழல்' என்பதும், 'கூம்பு' என்பதும் முதுகந் தண்டினையும், 'ஒன்பது புழைகள்' என்பது உடம்பின் நவத் துவாரங் களையும், 'மீகாமன்' என்பது உடம்மை நடத்தும் உயிரையும், 'தாமரைக் கொடி' என்பது முதுகந்தண்டைச் சூழ்ந்துசெல்லும் சுழு முனா நாடியையும், 'அதன்மலர்' என்பது ஆயிரஇதழ் மலரையும் கொள்ள நிற்றலின், இதுவும் பிசிச்செய்யுளாம். 'பிராணாயாமத்தால் பிராணன் சுழுமுனையடியில் கும்பிக்கப்பட்ட பின் உடம்பின் நவத் துவாரங்களாலும் காற்றும், அதன்வழி மன உணர்வும் புறப்படா தொழிய அவ்வுணர்வு ஆறு ஆதாரங்களையும் கடந்து சென்று, ஆயிர இதழில் சத்தியைக் கண்டது' என்பது இம்மந் திரத்தாற் குறிக்கப்பட்ட பொருள். இந்நிலை துறவர்க்கல்லது ஆகாது' என்பது உணர்த்தற்

பொருட்டு இஃது இவ்வதிகாரத்துட் கூறப்பட்டது.
'பட்டது' என்பது பன்மை ஒருமை மயக்கம். 'வேம்பு' என்பது கருவியாகுபெயராய், 'அம்மரத்தாற் செய்யப்பட்ட மரக்கலம்' எனப் பொருள்தந்தது. 'உடல் வெறுக்கத்தக்கது' என்பதை உணர்த்த, சந்தனத்தாலாகிய மரக்கலம்' என்னாமல், 'வேம்பினால் ஆகிய மரக்கலம்' என்றார்.
இதனால், துறவறம் யோகத்தைப் பயந்து, அது வழியாக ஞானத்தையும், பின் வீட்டையும், தருதல் கூறப்பட்டது.

*8.5.5.*தவம்

ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்
நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை
இடும்பையும் இல்லை இராப்பகல் இல்லை
படும்பயன் இல்லை பற்றுவிட் டோர்க்கே. ***#1597***

உலகப் பொருள்கள் மேற்பரந்து செல்லுதலை யொழிந்து இறைவனது திருவடிக்கீழே சென்று ஒடுங்கி நிலைப்பெற்ற உயர்ந்தோரதுஉள்ளங்கள் யாதொன்றற்கும் அஞ்சுதல் இல்லை ; அவர்கள்பால் கூற்றுவன் செல்லுதலும் இல்லை; எல்லாப் பற்றுக்களை யும் முற்றும் விடுத்த அவர்கட்கு வரக்கடவொரு துன்பமும் இல்லை; இரவு பகல் முதலிய கால வேறுபாடுகள் இல்லை; உலகத்தில் விளைவ தொரு பயனும் இல்லை.

விளக்கவுரை

'உலகப் பற்றினின்றும் மீட்ட உள்ளத்தைப் பின் இறைவன் திருவடிக்கீழே ஒடுங்கி நிலைநிற்கச் செய்யும் முயற்சியே தவம்' என்பதனை, 'பற்றுவிட்டார்க்கு' எனவும், 'ஒடுங்கி நிலை பெற்றஉள்ளம்' எனவும் உடம்பொடு புணர்த்து, உணர்த்தினார். இதனானே மேலையதிகாரத்தோடு இதற்கு உளதாய இயைபு இனிது விளங்கும். உள்ளத்தைப் பற்றுக்களினின்றும் மீட்டு இறைவன் திருவடிக்கீழே ஒடுங்கி நிற்கச்செய்யும் முயற்சி, தோன்றி நிகழும் காலத்தே 'தவம்' எனவும், இனிது முற்றிய காலத்தே 'ஞானம்' எனவும் நிற்கும். தவநிலையையே சிவநூல்கள், 'சரியை, கிரியை, யோகம்' என மூன்றாகவும், 'சிவ தன்மம், சிவ யோகம்' என ஓராற்றல் இரண்டாக வும் பகுத்துக்கூறுதல் வெளிப்படை. அவற்றின் இயல்பையெல்லாம் நாயனார் முன்னைத்தந்திரத்தில் இனிது விளங்க அருளிச் செய்தார். இங்கு அவை சிவகுருவைத் தலைப்பட வேண்டினார்க்கு இன்றி யமையாச் சிறப்பின் ஆதலையே குறிக்கின்றார்.
'நடுங்குவது' என்பது தொழிற்பெயராய் நின்றது. 'இராப் பகல்' என்றது

உபலக்கணம். 'நடுக்கமும், நமனும் இல்லாமை ஒடுங்கி நிலைபெற்றமையால்' என்பதும், 'இடும்பை முதலியன இல்லாமை பற்று விட்டமையால்' என்பதும் குறிப்பால் தோன்ற வைத்தவாறு உணர்க.
இவற்றை, 'சுண்ணவெண் சந்தனச் சாந்தும் ... ...
... ... உடையார் ஒருவர் தமர்நாம்;
அஞ்சுவ தியாதொன்று மில்லை;
அஞ்ச வருவதும் இல்லை' *3*
'வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென்
மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென்
தண்கடலும்
மீனம் படிலென் இருசுடர் வீழிலென்
வேலைநஞ்சுண்
டூனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட
உத்தமர்க்கே' *l*
'நாமர்க்குங் குடியல்லோம்; நமனை யஞ்சோம்'*8* என்றாற் போலும் அனுபவமொழிகளான் அறிக. இம்மந்திரத்தின் ஈற்றடி.
'படும்பழி பாவம் பயமில்லை தானே' எனவும், 'கடும்பசி யில்லை கற்றுணர்ந்தார்க்கே' எனவும் பாடம் வேறு வேறாகவும் ஓதப் படுகின்றது.
இதனால், 'தவமாவது இது' என்பதும் அதன் பயனும் கூறப்பட்டன.

எம்மா ருயிரும் இருநிலத் தோற்றமும்
செம்மா தவத்துச் செயலின் பெருமையும்
அம்மான் திருவருள் பெற்றவ ரேயல்லால்
இம்மா தவத்தின் இயல்பறி யாரே. ***#1598***

நமது அரிய உயிருணர்வும், அவ்வுணர்விற்கு இன்றியமையாததாய் உள்ள உலகம் உண்டாகி நிற்பதும், அங்ஙனம் நிற்குங்கால் அதன்கண் நிகழற்பாலதாய செவ்விய பெரிய தவச் செய லின் சிறப்பும் ஆகிய யாவும் இறைவன் திருவருளை அடிநிலையாகக் கொண்டனவேயாம். அதனால், 'இத்தவத்தன் இயல்பு இது' என்பதை யும் அவ்வருளைப் பெற்றவரல்லது பிறர் அறிய மாட்டார்.

விளக்கவுரை

'உயிர்' என்றது அதன் உணர்வையேயாதல் அறிக. 'தோற்றம்' என்றது, அதனபின்னதாகிய நிலையையும் உணர நின்றது. செவ்விய பெரிய தவமாவது வீடுபயக்கும் தவம். அஃது இறைவனை வழிபடுதலேயாம். 'உண்மைத் தவமாவது இறை வழி பாடே என்பதை உணர்தலும் திருவருளின்றியாகாது' என்பது உணர்த்துகின்றவர், அதற்கு ஏதுவாக

அனைத்தும் திருவருளை திருவருளை முதலாகக் கொண்டமையை முன்னர் உணர்த்தினார். திருவருளை முதலாகக் கொண்டவற்றை ஒற்றுமை பற்றி, 'திருவருள்' என்றே கூறினார். 'அது பெற்றவரே யல்லால்' என வேறு தொடராக்கி யுரைக்க. திருவருள் பெறாதவர் பிறவற்றையே 'தவம்' என மயங்கி அல்லலுறுதலை நினைக.
இதனால், உண்மைத் தவம் உணர்தற்கரிதாதல் கூறப்பட்டது.

பிறப்பறி யார்பல பிச்சைச்செய் மாந்தர்
சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்
மறப்பில ராகியே மாதவம் செய்வார்
பிறப்பினை நீக்கும் பெருமைபெற் றாரே. ***#1599***

உலகப் பித்துப் பலவற்றையும் கொண்டு உழலு கின்ற மக்கள் பிறவித் துன்பத்தைச் சிறிதும் எண்ணுதல் இல்லை; *(*அதனால் அவர் அதனை நீககிக் கொள்ள முயல்வதும் இல்லை*)* வீடு பேற்றோடு தாம் விரும்பும் இம்மை மறுமைச் செல்வங்களையும் பெறுவார். இறைவனை ஒருஞான்றும் மறவாது பெரிய தவச்செயலைச் செய்பவரே யாதலின், அவரே பிறவித் துன்பத்தை நீக்கிக்கொள்ளும் பெருமையைப் பெற்றாருமாவர்.

விளக்கவுரை

இரண்டிடத்தும், 'பிறப்பு' என்பது அதனால், விளையும் துன்பத்தைக் குறித்தது. 'பித்து' என்பது 'பிச்சு' எனப் போலி யாயிற்று. சிறப்பு - வீடு. மறத்தற்குச் செயப்படுபொருள் வருவிக்கப் பட்டது. 'மாதவமாவது இது' என்பது மேலே சொல்லப்பட்டது.
இதனால், 'தவம் எல்லாப் பயனையும் தரும்' என்பதும், அதனை யொழிதல் மயக்கத்தினால் என்பதும் கூறப்பட்டன.

இருந்து வருந்தி எழிற்றவம் செய்யும்
பெருந்தன்மை யாளரைப் பேதிக்க வென்றே
இருந்திந் திரனே எவரே எனினும்
திருந்தும்தம் சிந்தை சிவனவன் பாலே. ***#1600***

பொறி புலன்களை அடக்கியிருந்து, உண்டி சுருக்கல் முதலியவற்றால் மெய்வருந்தி உயர்ந்த தவத்தைச் செய்து நிற்கும் பெரி யோரை மனம் கலங்கச் செய்வதற்கென்றே தமது இருப்பை வைத்து, இந்திரனேயாக, ஏனை எத்தேவரேயாக எதிர் வரினும் அப் பெரி யோர்க்கு அவர்தம் உள்ளம் சிவனிடத்தே அசையாது அழுந்தி நிற்கும்.

விளக்கவுரை

'அத்தகையோர்க்கே தவம் முற்றுவது' என்றவாறு.
'தவமும் தவமுடையார்க் காகும்; அவம்அதனை

அஃதிலார் மேற்கொள் வது'*
எனத் திருவள்ளுவரும் கூறினாராகலின், இப் பெருந்தன்மை யாளர், முற்பிறப்பில் தவம்செய்து பயின்றவர் என்க. தவத்தில் நின்றோர் பலரை இந்திரன், மாயோன் முதலியோர் மயக்கத்துட்படுத்து அவரது தவங்களை நிலைகுலையச் செய்தமை புராண இதிகாசங்களுட் கேட்கப் படுதலை உட்கொண்டு இவ்வாறு கூறினாராயினும், 'தவத்தை இடையறு விப்பது உண்மையில் அவரது முன்னை வினையே' என்பதும், 'அத் தன்மையாவனவினை, பல பிறப்புக்களில் முதிர்ந்து வரும் தவத்தின்முன் தன் வலிமைகெட்டொழியும்' என்பதுமே கருத்தென்க.
இதனால், தவம் பல பிறவிகளில் தொடர்ந்து நிகழ்ந்தே முற்றுதல் கூறப்பட்டது.

கரந்துங் கரந்திலன் கண்ணுக்குந் தோன்றான்
பரந்த சடையன் பசும்பொன் னிறத்தன்
அருந்தவர்க் கல்லால் அணுகலு மாகான்
விரைந்து தொழப்படும் வெண்மதி யானே. ***#1601***

அறிவரால் சிறிதும் தாழ்த்தலின்றி மிகவிரைந்து சார்ந்து தொழப்படுவோனாகியசிவன், கண்ணுக்கும் புலனாகாது மறைந்திருப்போனாயினும் சிலருக்கு வெளிநிற் பவனாகின்றான். அச்சிலராவார் அரிய தவத்தவரே யாகலான், அவருக்கல்லது அவன் அணுகலாகாதவனாம்.

விளக்கவுரை

'ஆகவே, அத்தவத்தையே ஒருதலையாகச் செய்க' என்பது குறிப்பெச்சம் இரண்டாம் அடி முதலாகத் தொடங்கி, அதன் பின் ஈற்றடியைக் கூட்டி, அதன்பின் முதலடியை, 'கண்ணுக்கும்' என்னும் உம்மை சிறப்பு பலனைச் சென்று பற்றுதல் கண்ணுக்குள்ள சிறப்பாம்.
இதனால், தவமே இறைவனைக் காட்டுவதாதல் கூறப் பட்டது.
இதன்பின் பதிப்புக்களில் உள்ள, 'பின்னெய்த வைத்தோர்' என்னும் மந்திரம் மேல், சிவ குரு தரிசன அதிகாரத்தில் வந்தது.

அமைச்சரும் ஆனைக் குழாமும் அரசும்
பகைத்தெழும் பூசலுட் பட்டார் நடுவே
அமைத்ததோர் ஞானமும் ஆத்தமும் நோக்கி
இமைத்தழி யாதிருந் தார்தவத் தாரே. ***#1602***

உலகில் நுண்ணறிவுமிக்க அமைச்சராய் விளங்கி னோரும், போரில் வலிமிக்கு விளங்கிய யானைகளது கூட்டமும், ஆணையால் உயர்ந்து அரசராய்ப் பொலிந்தோரும் பிறர்மேல் பகைத்துச் சென்ற போரில் இறந்தாராய் ஒழிய, அவர்கள் நடுவிலே, தவத்தவராயினார், சிவன்

உயிர்கட்குப் பொருந்த வைத்துச் சொல்லிய ஒப்பற்ற உண்மை ஞானத்தையும், அதனால் அடையப்படும் வீடு பேறாகிய உறுதிப்பொருளையுமே பொருளாக நோக்கி, கண் இமைத்தலும், அழிதலும், இல்லாத அமரராய் விளங்கினார்.

விளக்கவுரை

திணை விராய் எண்ணிய வழி, 'பட்டார்', என உயர் திணையான் முடிந்தது. 'பட்டாராக அவர் நடுவே என ஒரு தொடர் படுத்துக. 'தவம் ஒழிந்த பிற யாவும் அழிதலுடையனவே' என்பது முன்னிரண்டடிகளில் விளக்கப்பட்டது. இரண்டாமடி உயிரெதுகை.
இதனால், தவம் நிலைபேற்றைத் தருவதாதல் கூறப்பட்டது.

சாத்திரம் ஓதும் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தஅப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே. ***#1603***

'நூல்களை ஓதுவதே பெருமை' எனக் கருதும் கருத்தை விடுத்து, நீவிர் ஒரு மாத்திரை காலமாயினும் அறிவை அக முகப்படுத்தி அறிவினுள் நிற்கும் அறிவை நோக்குங்கள்; அந்நோக்கம் பச்சை மரத்தில் அறையப்பட்ட ஆணி அதனுள் நன்கு பதிந்தாற்போல நும் அறிவுனுள்ளே நன்கு பதிய தொன்று தொட்டு உடம்பைப் பிணித்து வருகின்ற பிறப்புச் சேயதாக உம்மை விட்டு ஓடிவிடும்.

விளக்கவுரை

'சதுர்' என்றது, ஓதுவாரது கருத்தினைக் கொண்டு கூறியது. கல்விக்குப் பயன் ஒழுக்கமேயாதலின், அஃது இல்லாத கல்வியை விடுக என்றார். மறித்தல் - வெளிச்செல்லுதலைத் தடுத்தல். உள் - அறிவினுள். நோக்குதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப் பட்டது 'போல்வதாக' எனப்பொருள்தரும் 'போல' என்னும் செய வெனெச்சத்து அகரம் தொகுத்தல் பெற்றது இவ்வாறு உரையாது, 'அகலவிட்டோட்டுமே' எனப்பாடம் ஓதிக்கொள்ளலுமாம். 'தொன்று தொட்டு விடாது வரும் பிறவிக்குக் காரணம் அறிவைப் பண்டே பற்றியுள்ள இருள்மலமாகலின், அஃது அப்பார்வையால் அகலப் பிறவியும் அகலும்' என்றவாறு.
இதனால், தவம் மலத்தை நீக்குதல் வாயிலாகப் பிறவியை அறுத்தல் கூறப்பட்டது.

8.6.தவ தூடணம்

தவம்வேண்டும் ஞானந் தலைப்பட வேண்டில்
தவம்வேண்டா ஞான சமாதிகை கூடில்
தவம்வேண்டா அச்சக சன்மார்க்கத் தோர்க்குத்

தவம்வேண்டா மாற்றந் தனையறி யாரே. *#1604*
ஞானத்தைப் பெறுதற்பொருட்டே தவம் வேண்டப் படுகின்றதாதலின், அந்த ஞானப்பேறு கிடைத்துவிடின், அதன்பின் தவம் வேண்டாததாகும். ஆகவே, சிவயோக சிவபோக நிலையை எய்தினார்க்குத் தவம் கடப்பாடன்றாம். அதனால் சிலவிடத்து, 'தவம் வேண்டா' எனச் சொல்லப்படும் சொல்லினது பொருளைப் பலர் அறியமாட்டார்.

விளக்கவுரை

'சமாதி' என்றது பேற்றை. 'அச் சகமார்க்கம்' எனச் சிறப்பித்துக் கூறினமையின், அது ஞானகுருவின் அருள்பெற்றபின் நிற்கும் சிவயோகமேயாயிற்று. இதற்குமுன் 'வேண்டா' என்றது, 'நியதமன்று' என்றவாறு. அஃதாவது சிவயோக சிவபோக நிலையிற் சென்றார்க்கு உலகியல் உணர்வு தோன்றாது மறைதலின், அவரது தவச் செயல்களும் 'உறங்கினோன்கை வெறும்பாக்கெனத் * தாமே தவிரு மாயின், அஃது அவர்க்குக் குற்றமாகாது என்பதாம். அங்ஙன மாகவே, 'அத்தகை யோர் அந்நிலைகளில் நீங்காது நிற்கவே முயலல் வேண்டு மன்றி, மீளத் தவநிலையில் நிற்க முயலுதல் கூடாது' என்பதும், 'மீட்சி தானே உள தாயபொழுதே மீள முன்போல உலகியல் வந்து சூழாத வாறு தவ நிலையில் நிற்றல் வேண்டும்' என்பதும் பெறப்பட்டன. இவையெல்லாம் குருவருள் பெற்றார்க்கன்றி அறியலாகாமையின், 'தவம் வேண்டா மாற்றந் தனையறியாரே' எனக்கூறி, 'அதனைக் குரு முகமாக அறிந்துகொள்க' எனக் குறிப்பால் முடித்தார். இறுதியிலுள்ள 'தவம் வேண்டா' என்னும் தொடர் தன்னையே குறித்துநின்றது.
இதனால், தவம் ஞானத்திற்குச் சாதனமாவதன்றிச் சாத்திய மாகாமை கூறி, அதனது நிலை இனிது விளக்கப்பட்டது.

ஓதலும் வேண்டா உயிர்க்கு யிருள்ளுற்றால்
காதலும் வேண்டாமெய்க் காயம் இடங்கண்டால்
சாதலும் வேண்டா சமாதிகை கூடினால்
போதலும் வேண்டா புலன்வழி போதார்க்கே. *#1605*

அறிவுக்கு அறிவாய் உள்ள பேரறிவாகிய சிவத்தைத் தன் அறிவினுள்ளே ஒருவன் தலைப்பட்டு விடுவானாயின் அதன்பின் அவன் ஞானநூல்களை ஓதவேண்டுவதில்லை. 'பர காயம்' எனப்படும் திருவருளையே ஒருவன் தனக்கு நிலைக்களமாகக் கண்டுவிட்டால், பின்பு அவன் தான் அதனின், வேறாய் நின்று அதனைப் பெற அவாவ வேண்டுவதில்லை திருவருள் கண்ணாகச் சிவத்தை அறிந்து அதிலே அழுந்தி நிற்கும் நிலை ஒருவனுக்கு இப்பொழுது கூடுமாயின், அவன் இவ்வுடல் வீழ்ந்தொழிய வேண்டும் என இதனை வெறுக்க வேண்டுவதில்லை. சிவயோக நிலையினின்று மீளுதல் இல்லாதார்க்குப்

புலன்கள் வந்து பற்றும் வழிகளாகிய பொறிகள் செயற்படாது கெட வேண்டுவதில்லை.

விளக்கவுரை

'சாத்தியம் கைவந்தபின் சாதனம்வேண்டா என்பதனைப் பல்லாற்றானும் வகுத்துக் கூறியவாறு.

கத்தவும் வேண்டா கருத்தறிந் தாறினால்
சத்தமும் வேண்டா சமாதிகை கூடினால்
சுத்தமும் வேண்டா துடக்கற்று நிற்றலால்
சித்தமும் வேண்டா செயலற் றிருக்கிலே. ***#1606***

உண்மை நூல்களின் கருத்தையறிந்து அதன்வழியே அடங்கி விட்டால் பின்பு அந்நூல்களைக் குரல் கம்ம ஓதவேண்டுவ தில்லை. சமாதி நிலை கைகூடிவிட்டால், துதித்தல் வேண்டுவதில்லை. அகத்தூய்மையாகிய பற்றறுதி உண்டாகி விட்டால், நீர் பலகால் மூழ்கல்*l* முதலிய புறத்தூய்மைக்குப் பெரிதும் முயலவேண்டுவ தில்லை. தன் முனைப்பு அற்று, எல்லாம் சிவச்செயலாக இருந்து விட்டால், ஒரு குறியைத் தியானிக்கும் தியானம் வேண்டுவதில்லை.

விளக்கவுரை

சத்தம் - இசை; பாட்டு; துதி.
இவ் இரு மந்திரங்களாலும் சாதனம் வேண்டாமை கூறப்பட்டது.

விளைவறி வார்பண்டை மெய்த்தவம் செய்வார்
விளைவறி வார்பண்டை மெய்உரை செய்வார்
விளைவறி வார்பண்டை மெய்யறம் செய்வார்
விளைவறி வார்விண் ணின்மிக் காரே. ***#1607***

தொன்று தொட்டு அடிபட்டு வரும் தவம் வாய்மை, அறம் என்பவற்றைச் செய்வார் யாவரும், 'அவற்றால் விளையும் பயன் இவை' என உணர்ந்தே செய்வர். அங்ஙனம் அறிந்து அவற்றைக் கடை போகச் செய்து அப்பயனைப் பெற்றவர்கள் விண், மண் என்னும் இரண்டுலகத்து உள்ளாரினும் மேம்பட்டவராவர்.

விளக்கவுரை

மெய்த்தவம் - நிட்காமியத்தவம் எனவும், மெய்யறம் - புகழ், கைம்மாறு முதலியவற்றை நோக்காது அன்பும், அருளும் பற்றியே செய்யப்படுவது எனவும் அறிக. 'விளைவறிந்தே செய்வார், விளைவுபெற்று உய்வார்' என்றதனால்' அவ்விளைவை அறிந்து செய்து பெறமாட்டாதாரது சாதனங்கள் தவம் முதலியன ஆகாவாயின.
இதனால், சாத்தியத்தைத் தருவனவே சாதனங்களாதல் கூறப்பட்டது.

கூடித் தவம்செய்து கண்டேன் குரைகழல்

தேடித் தவம்செய்து கண்டேன் சிவகதி
வாடித் தவம்செய்வ தேதம் இவைகளைந்*(து)*
ஊடிற் பலஉல கோர்எத் தவரே. *#1608*

சிவனடியார்களோடுகூடி, அவர்கள் செய்யும் தவத்தையே நானும் செய்து, அதன் பயனாகச் சிவனது திருவடியைத் தரிசித்தேன்; பின் அத்திருவடியின்கீழ் இருத்தலாகிய வீடுபேற்றை அடைய விரும்பியே பின்னும் தவத்தைச் செய்து அதனை அடைந்தேன். இவ் இருதன்மைகளையும் நீக்கி வாளா மெய்வருந்தச் செய்யும் தவம் தவமாகாது, அவமாம். ஆகவே, உலகோர் பலர் இவ்இரண்டையும் விரும்பாது பிணங்குவாராயின், அவரை எத்தவத்தோர் என்பது!.

விளக்கவுரை

'சிவகதி கண்டேன்' என்றதனால் குரை கழலும் அவனுடையதாயிற்று. அவ்விரண்டாலும் கூடுதற்கும், தேடுதற்கும் செயப்படுபொருள் இவையென்பது விளங்கிற்று. 'இவை களைந்து செய்வது ஏதம்' என மாற்றுக. பிணங்குதல், இந்நெறியொடு மாறுபட்டுப் பிறவாறு செய்தல். 'எத் தவத்தோர்' என்பது, 'யாதொரு தவத்தையும் உடையரல்லர்' என்பது குறித்து நின்றது.
இதனால், 'சிவநெறி வழிபடாது செய்வன தவமாகா' என அவைகளது இகழ்ச்சி கூறப்பட்டது. 'சிவத்தைப் பேணின் தவத்திற் கழகு'3 என்றார் ஔவையாரும்.

மனத்துரை மாகடல் ஏழுங்கை நீந்தித்
தவத்திடை யாளர்தம் சார்வத்து வந்தார்
பவத்திடை யாளர் அவர்பணி கேட்கின்
முகத்திடை நந்தியை முந்தலு மாமே. *#1609*

மனத்தின்கண் நிறைந்து நிற்கின்ற ஆசையாகிய பெரிய எழுகடல்களைக் கையாலே நீந்திக் கடந்து தவத்தில் நிற்பவரே தமக்கு என்றும் சார்பாகும் மெய்ப்பொருளை அடைவர். அது மாட்டாதே தவம்செய்து பிறவியில் அழுந்துவோர் மேற்குறிய அத் தவத்தோரை வழிபடுவாராயின், அவர் சிவனைத் தம் கண்முன் னாகவே காணுதலும் கூடும்.

விளக்கவுரை

'மனத்துறை மாகடல் ஏழ்' என்பது அற்புத உருவகமாய் ஆசையைக் குறித்தது. அதனை முற்றும் விடுத்த அருமை தோன்ற, 'கை நீந்தி' என்றார். தவம் இன்னதென்பது மேற்கூறப்பட்ட மையின், வாளா, 'தவத்திடையாளர்' எனவும் அஃதல்லாத பிற செயலாளரை 'பவத்திடையாளர்' எனவும் கூறினார். 'அவர் பணி கேட்கின் முந்தலும்

ஆம்' என்றது, 'கேளாதவழி முந்துதல் கூடாது' என வலியுறுத்தவாறு. இதனானும், முன்னை மந்திரத்தில் 'கூடி' என்றது, 'சிவனடியாரோடு கூடி' என்றதே எனல் விளங்கும். இதனுள் உயிரெதுகை வந்தது. இதனால், 'மேற்கூறியதவமும் ஆசையறாதவழித் தவமாகாது' என அதன் இகழ்ச்சி கூறப்பட்டது.

மனத்திடை நின்ற மதிவாள் உருவி
இனத்திடை நீக்கி இரண்டற வீர்ந்து
புனத்திடை அஞ்சும்போ காமல் மறித்தால்
தவத்திடை ஆறொளி தன்னொளி யாமே. ***#1610***

உள்ளமாகிய உறையிலே உள்ள ஞானமாகிய வாளை உருவி ஐம்பொறிகளாகிய பசுக்களைப் பிணித்துள்ள ஆசை யாகிய கயிற்றை இரண்டு துண்டாய் அறும்படி அறுத்து அவைகளை ஏனைப் பசுக் கூட்டத்தினின்றும் நீக்கி, அப்பசுக்களோடு தாமும் கொல்லையிற் சென்று மேயாதபடி அவற்றை மடக்கி வைத்தல் ஒருவனுக்கு கூடுமாயின், தவத்தில் தோன்றுவனவாகிய ஆறு ஒளிகளும் அவனுக்கு உரிய ஒளிகளாகிப் பயன் தரும்.

விளக்கவுரை

'அது கூடாதபொழுது அவனது தவம் ஒளியில்லாது, இருளேயாம்' என்றபடி, 'மதிவாள்', ஏகதேச உருவகம். 'புனத் திடைப் போகாமல்' என்றதனால், 'அஞ்சு' எனப்பட்டவை 'பசு' என்பது விளங்கிற்று. 'பார்ப்பா னகத்திலே பாற்பசு ஐத்துண்டு'l என ஐம்பொறிகளைப் பசுக் களாகப் பின்னும் கூறுதல் காண்க. ஆறு ஒளி - ஆறு ஆதாரங்களில் தோன்று இறையொளி. 'ஐம்புல ஆசையை அறுத்தவர்க்கே யோகமும் தவமாய்ப் பயன்படும்' என்பது உணர்த்தி, 'அது செய்யாதாரது யோகம் தவமன்றாம்' என இகழ்ந்தவாறு.
இதனால், 'மேற்கூறிய எழுகடல் போலும் ஆசை ஐம்பொறி களின்வழிப் பெருகித் துன்புறுத்துமாகலின், அவற்றை அடக்காதாரது தவம் தவமன்றாம்' என அதன் இகழ்ச்சி கூறப்பட்டது. இதன் பின்னிரண்டடிகள்,
'நினைத்த இடத்தே நிலைபெறுமாகில்
அனைத்துயிர்க் கெல்லாம் அதிபதி யாமே'
என்பது பாடமாகவும் காணப்படுகின்றது.

ஒத்து மிகவும்நின் றானை யுரைப்பது
பத்தி கொடுக்கும் பணிந்தடி யார்தொழ
முத்தி கொடுக்கும் முனிவ ரெனும்பதம்
சத்தான செய்வது தான்தவந் தானே. ***#1611***

அவரவரது பரிபாகநிலைக்கு ஏற்ப அவரோடு இயைந்து நீங்காது நின்று

அருளுபவனாகிய இறைவனை அவனுக்கு அடியராய் நின்று வாயார வாழ்த்துதல் அவன்பால் பக்தியை மிகுவிக்கும். ஐம்பொறி யடக்கல் முதலிய நோன்புச் செயல்கள் அவர் முனிவராம் நிலையை நிலைபெறுவிக்கும். இறைவனை அடிபணிந்து தொண்டுகள் பலவும் செய்து நிற்றல் முத்தியைத் தரும்.

விளக்கவுரை

அவை முத்திதரும் 'என்றால், அவற்றுள் ஒன்றும் அன் றாகிய தவம் என்னதவம்' என்பது குறிப்பு. 'அடியாராய்' என ஆக்கம் வருவிக்க. அடியாராதலாவது, 'பாரம் ஈசன் பணியலது ஒன்றிலர்' *8* ஆதல், இறுதிக்கண் வைக்கற்பாலதாகிய இது செய்யுள் நோக்கி இடையில் வைக்கப்பட்டது. சத்து - நிலைபேறு 'தான்' இரண்டும் அசை நிலைகள் 'சத்தானவையாகவேச் செய்வது' என ஆக்கம் விரித்து உரைக்க. முனிவர் நிலை பலவாதல் பற்றி, 'சத்தானவையாக' என்றார். தவம், இங்கு நோன்பு. அதுதான் செயல் வகையாற் பலவாயினும், 'நோன்பு' என ஒன்றாய் அடங்கல் பற்றி ஒருமையாற் கூறினார்.

இதனால், 'ஒத்து நின்றானை ஒருவாற்றானும் அணுகாத தவம் தவம் அன்றாம்' என அதன் இகழ்ச்சி கூறப்பட்டது.

இலைதொட்டுப் பூப்பறித் தெந்தைக்கென் றெண்ணி
மலர்தொட்டுக் கொண்டேன் வரும்பலன்காணேன்
தலைதொட்ட நூல்கண்டு தாழ்ந்ததென் உள்ளம்
தலைதொட்டுக் கண்டேன் தவங்கண்ட வாறே. ***#1612***

தலையாய நூல்களை அறியும் முன் நான் சிவனுக் கென்று கருதியே பச்சிலையைக் கிள்ளியும், பூவைப் பறித்தும், சில மலர்களைத் தொடுத்தும் பணிபுரிந்தேன். ஆயினும் அவற்றால் யாதொரு பயனும் விளையக் காணவில்லை. அந்நூல்களை அறிந்த பின் சிவனிடத்தே என் உள்ளம் குழைந்து நின்றது அதனால், சிவத்தைத் தலைப்பட்ட அனுபவத்தை அடைந்தேன். ஆகவே, நான் தவத்தை உணர்ந்தவாறு அதுவேயாயிற்று.

விளக்கவுரை

'பச்சிலையும், பூவும் முதலியன கொண்டு வழி படுதலும் அறிவின்வழிப் பட்டபொழுதே உண்மைத் தவமாம்' என்பது இதனுட் கூறப்பட்டது.

'கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடையார்' *1*

எனவும்

'பன்னும் பனுவற் பயன்தேர் அறிவிலார்
மன்னும் அறங்கள் வலியிலவே' *8*

எனவும் வந்தனபோல்வன காண்க. இரண்டாம் அடியில், 'தொடுத்து' என்பது, 'தொட்டு' என மருவிநின்றது. 'வளைத்துக்கட்டி' எனினுமாம். கொள்ளுதல் மேற்கொள்ளுதல். அதற்கு, 'பணி' என்னும் செயப்படு பொருள் வருவிக்க. பலன், உலகியலின் வேறானதோர் அனுபவம். அஃது அறிவில்வழி உளதாகாது என்பதாம். தலைதொட்ட - தலை யாய இடத்தில் பொருந்திய. ஈற்றில் நின்ற தலை, சிவம். 'அதுவே தவங்கண்டவாறு' என எழுவாய் வருவித்து முடிக்க.
இதனால், 'மேற்குறித்த தவந்தானும் அறிவோடு கூடாதவழித் தவமாகாது' என அதன் இகழ்ச்சி கூறப்பட்டது.

படர்சடை மாதவம் பற்றிய பத்தர்க்
கிடரடை யாவண்ணம் ஈசன் அருளும்
விடரடை செய்தவர் மெய்த்தவம் நோக்கில்
உடரடை செய்வதோ ருன்மத்த மாமே. ***#1613***

விரிந்த சடைமுடியோடு பெரிய தவத்தை மேற் கொண்ட அடியவர்க்கு யாதொரு துன்பமும் வாராதவாறு இறைவன் தனது அருளை வழங்குவன். அவ்வருளைத் தெளியாது தமக்குத் துன்பம் வராமல் மணி மந்திர ஔடதங்களால் காப்புச் செய்து கொள்வ தில் காலம் போக்குவாரது தவ நிலையை நோக்கின் அது, துன்பம் வந்து அடையும் வழியைத் தாமே ஆக்கிக்கொள்வதோர் பித்தச் செயலாகவே முடியும்.

விளக்கவுரை

தவ ஒழுக்கத்தோடு தவவேடமும்பூண்டாரது நிலை சிறப்புடையதாகலின், அநநிலையுடையாரை, 'மாதவம் பற்றிய பத்தர்' என்றார். இதனானே, 'சடை' என்பதில் தொக்குநின்ற உருபு, 'அன்போடு வரவேற்றான்' என்பதுபோலத் தவம் மேற்கொள்ளு தலைச் சிறப்பித்து நின்றமை விளங்கும். மாதவம் பற்றிய பத்தர்க்கு இடர் அடையா வண்ணம் ஈசன் அருளுதலை, அருச்சுனற்குப் பன்றி யால் இடர் வாராவண்ணம் காக்கச் சென்றமை முதலிய வரலாறுகளும், நாவுக்கரசருக்குச் சமணர்கள் விளைத்த இடர்கள் அவரை யாதும் செய்யாதொழிந்தமைமுதலிய அனுபவங்களும் இனிது விளங்கும். விடர் - பிறப்பு; அது தவத்தின் வேறாய செயல்களை குறித்தது. 'அடை' இரண்டும், 'குடல் - குடர்' என்பதுபோல லகரத்திற்கு ரகரம் போலியாய் வந்தன. 'உடர்' என்பதும் முதனிலைத் தொழிற் பெயர்கள், 'உடம்போடுயிரிடை நட்பு' *l* என்பதில், நட்பு அல்லாத கூட்டத்திளை 'நட்பு' என்றதுபோல, மெய்த்தவம் அல்லாத தவத் தினை 'மெய்த்தவம்' என நகை உள்ளுறுத்துக் கூறினார். உன்மத்தம் போல்வதனை 'உன்மத்தம்' என்றார்.
இதனால், 'திருவருளைத் தெளியாது மணிமந்திர ஔடதங்களால்

நலனடைய முயல்வாரது தவம் தவமாகாது' என அதன் இகழ்ச்சி கூறப்பட்டது.

ஆற்றில் கிடந்த முதலைகண் டஞ்சிப்போய்
ஈற்றுக் கரடிக் கெதிர்ப்பட்ட வாறொக்கும்
நோற்றுத் தவஞ்செய்யார் நூலறி யாதவர்
சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே. ***#1614***

நூல்முறைமையை அறியாதவர் பசி, வெயில், மழை முதலியவற்றால் வரும் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு தவத்தைச் செய்யமாட்டாராய், இல்லறத்தார் இடும் சோறு முதலிய வற்றைப் பெற்றுப் பிழைத்தற்பொருட்டுத் துறவு நிலையிற்புகுந்து தவத்தவர்போல வேடம்பூண்டு திரிதல், யாற்றில் ஒருதுறைக்கண் முதலை இருத்தலைக் கண்டு அஞ்சி அதனைவிட்டு நீங்கி, மற்றொரு துறைக்கண் குட்டிகளை ஈன்ற கரடி அக்குட்டிகளோடு குளித்துக் கொண்டிருத்தலை யறியாது அதன்கண் இறங்கி அக்கரடியினிடத்து அகப்பட்டாற்போல்வதாம்.

விளக்கவுரை

யாறு வாழ்க்கைக்கும், முதலை உள்ள துறை தொழில் முயற்சியோடு கூடிய இல்லறத்திக்கும், ஈற்றுக் கரடியுள்ள துறை நோன்றலோடு கூடிய துறவு நிலைக்கும் உவமையாயினவாறு அறிக. நோற்றல் - நோன்றல்; பொறுத்தல்.

இதனால், 'உள்ளத்தால் தவத்தவராகாது, புறத்தே வேட மாத்திரையால் தவத்தவர்போல நிற்பாரது போலித்தவம் முடிவில் துன்பமே பயத்தலல்லது, சிறிதும் இன்பம் பயலாது' என அதனது இகழ்ச்சி கூறப்பட்டது.

பழுக்கின்ற வாறும் பழம்உண்ணு மாறும்
குழக்கன்று துள்ளிஅக் கோணியில் புல்காக்
குழக்கன்று கொட்டிலிற் கட்டவல் லார்க்குள்
இழுக்காது நெஞ்சத் திடஒன்று மாமே. ***#1615***

தவ உணர்வாகிய பழம் பழுத்தற்பொருட்டும், பின் அத்தவத்தால் அனுபவம் பெறுதலாம் அப்பழத்தை உண்ணுதலைச் செய்தற் பொருட்டும், பிராணவாயுவாகிய இளங்கன்று துள்ளிச் சென்று அப்பழம் வைக்கப்பட்டுள்ள மனமாகிய அந்தக்கோணியில் புகுந்து அப்பழத்தைத் தின்றுவிடாதபடி - அஃதாவது தவ உணர்வைப் போக்கிவிடாதபடி - அதனைப் புருவ நடுவாகிய கொட்டிலில் கட்டி வைக்க வல்லவர்க்கு யாதொரு மனக் குற்றமும் உண்டாகாது; உள்ள மாகிய வயலில் ஊன்றுதற்கு ஞானமாகிய ஒப்பற்ற வித்தும் கிடைக்கும்.

விளக்கவுரை

'பழம் பழுக்கின்றவாறும்' என மாற்றி உரைக்க. "ஆறு" இரண்டிலும், 'ஆற்றுக்கும்' என நான்காவது விரிக்க. 'புல்காது' என்னும் எதிர்மறைவினையெச்சம் ஈறுகெட்டு நின்றது. "இட" என்றதனால், "நெஞ்சம்" என்பது நெஞ்சமாகிய வயல்' எனக் குறிப் புருவகம் ஆயிற்று. ஆகவே, "ஒன்று" என்றது விதை யாயிற்று. 'விதை யாவது ஞானமே' என்பது ஆற்றலால் பெறப்பட்டது. "ஒன்றும்" என்னும் உம்மை சிறப்பும்மை. வீடுபெற உணரும் உணர்வு ஒன்றே சாதனநிலையில் 'தவம்' எனவும், சாத்திய நிலையில் 'ஞானம்' எனவும் நிற்கும் என்பது மேலும் குறிக்கப்பட்டது அதனால் தவம்பழமாகவும், ஞானம் அதனாற் கிடைக்கும் வித்தாகவும் உருவகிக்கப்பட்டன.

இதனால், பிராண வாயுவை அடக்கிப் புருவ நடுவில் நிறுத்தி மனோலயம் பெறமாட்டாது அவ்வாயுவும், மனமும் சென்றவாறே செலவிடுவாரது தவம் நிலையாது' என அதனது இகழ்ச்சி அதன் எதிர்மறைக்கண் வைத்துக் கூறப்பட்டது.

சித்தம் சிவமாகச் செய்தவம் வேண்டாவால்
சித்தஞ் சிவானந்தஞ் சேர்ந்தோர் உறவுண்டால்
சித்தஞ் சிவமாக வேசித்தி முத்திஆம்
சித்தம் சிவமாதல் செய்தவப் பேறே. ***#1616***

ஒருவர்க்கு அவரது உள்ளம் சிவமேயானபொழுது அவருக்குச் செய்யக் கடவ தவம் யாதும் இல்லையாம். அவரைப் போல உள்ளம் சிவமாய்ச் சிவானந்தத்திலே திளைத்திருக்கப் பெற்றோரது உறவே அவருக்கு உண்டாகும்; பிறரது உறவுகள் யாவும் அற்றொழியும். சித்தியும், வீடுபேறும் அவர்க்கு எளிதின் உளவாம். ஆகையால், உள்ளம் சிவமாதல் ஒன்றே உண்மைத் தவத்தால் பெறும் பயனாகும்.

விளக்கவுரை

ஆக என்னும் செயவெனெச்சம், 'உண்ணப் பசி தீரும்' என்பதுபோலக் காரணப் பொருளில் வந்தது. எனவே, அஃது எதிர்காலத்தில் இறந்த காலமாம். 'அவர்க்கு உண்டாம்' எனக் கோடற் பொருள் வருவிக்க. "உறவாவார் உருத்திரபல் கணத்தினோர்கள்' *3* என்று அருளிச் செய்ததும் காண்க. "சித்தி முத்தி", உம்மைத் தொகை. மூன்றாம் அடியின் இறுதியில், 'ஆகலான்' என்பது எஞ்சி நின்றது. ஈற்றில் நின்ற பிரிநிலை ஏகாரத்தை "சிவமாதல்" என்பதனோடு கூட்டியுரைக்க. அங்ஙனம் உரைக்கவே 'அப்பயனைத் தாராத பிற தவங்கள் தவமல்ல' என்பது போந்து, அதிகாரப் பொருளை உணர்த்துவதாம்.

இதனால், 'சித்தத்தைச் சிவமாகச் செய்யம் பெருந் தவம் அல்லாத சிறு

தவங்கள் தவமாகா' என அவற்றது இகழ்ச்சி கூறப்பட்டது. இதனானே சித்தத்தைச் சிவமாகச் செய்வனயாவும் தவமாம் என்பதும் பெறப்படும்.

*8.7.*அருளுடைமையின் ஞானம் வருதல்

பிரானருள் உண்டெனில் உண்டுநற் செல்வம்
பிரானருள் உண்டெனில் உண்டுநன் ஞானம்
பிரானரு ளிற்பெருந் தன்மையும் உண்டு
பிரானரு ளிற்பெருந் தெய்வமு மாமே. *#1617*
(இதன் பொருள் வெளிப்படை)

விளக்கவுரை

பிரான் - சிவபிரான். நற்செல்வம் - அறத்தாற்றின் வரும் செல்வம். நன்ஞானம் - ஐயமும், திரிபும் இல்லாத மெய்ஞ் ஞானம். பெருந்தன்மை - வியாபக நிலை 'தெய்வம்' என்றது, தெய்வ நிலையை. பெருந்தெய்வ நிலைகளாவன அயன் மால் உருத்திரரது நிலைகள். இதனானே, 'மந்திகேசுரர், அணுசதாசிவர்' என்போரது நிலைகளும் உளவாதலை இனம் பற்றிக்கொள்க. 'அருளின்' இரண்டும், 'அருள் பண்ணினால்' என்றவாறு. 'அருள் உண்டெனின் உண்டு' எனவும், 'அருள் பண்ணினால் உண்டு' எனவும் கூறியதனால், 'அவை இல்லையாயின் யாதும் இல்லையாம்' என்பது போந்தது,

'அருளே உலகெலாம் ஆள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப தானால் - அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும் எப்பொருளு மாவ தெனக்கு'
-அற்புதத் திருவந்தாதி - *9*

அம்மை திருமொழியும் காண்க.
இதனால், சிவன் அருள் செய்தவழியல்லது யாதும் உளதாகாமை கூறப்பட்டது.

தமிழ்மண் டலம்ஐந்தும் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகர் திரிவார்
அவிழும் மனமும் ஆதி யருளும்
தமிழ்மண் டலம்ஐந்தும் தத்துவ மாமே. *#1618*

'சேர மண்டலம், சோழமண்டலம், பாண்டி மண்டலம், கொங்கு மண்டலம், தொண்டை மண்டலம் என்னும் தமிழ்வழங்கும் மண்டலம் ஐந்திலும், மிகப் பரந்த ஞானத்தை உணர்த்துவார்போலப் பிற நாட்டவர் புகுந்து திரிவார்கள். ஆயினும், அம்மண்டலம் ஐந்திலும், 'உயிர்களின் அன்பு, இறைவனது அருள்' என்னும் அவ்இரண்டுமே பொருளாக விளங்குகின்றன.

விளக்கவுரை

'ஆதலின், அவற்றை அறியாத பிறர் தமிழ் மண்டலத் தின் உள்ளார்க்கு

உணர்த்தும் சீரிய ஞானம் யாது மில்லை' என்றபடி, பிறநாட்டில் காசுமீரம் போன்ற சிறிதிடத்தில் சைவ சித்தாந்தம் ஓரளவு வழங்கப்படுகின்றதாயினும், அது தொன்று தொட்டு இன்றும் இனிதே விளக்கமுற்று நிற்பது தமிழ்நாட்டிலேயாகலானும், சைவ சித்தாந்தம், உயிர்கள் தம் பரிபாகத்திற்கு ஏற்பச் செய்யும் அன்பிற்குத் தகச் சிவன் அவைகள் மாட்டு அருளுடையனாய் ஞானத்தை வழங் குவன்' என்பதை முடிநிலைப் பொருளாகக் கூறுத லானும், 'அதனை யறியாத பிறநாட்டவர் தமிழ் நாட்டவர்க்கு உணர்த்த இருக்கும் தத்துவம் யாதுளது? என்றார். 'வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு' *l* என்பது முதலிய பண்டை நிலைக்குப் பின் நாயனார் காலத்தில் தமிழ் மண்டலம் ஐந்தாயிற்று என்க.

இரண்டிடத்தும் 'ஐந்தும்' என்பதில் ஐந்தன்கண்ணும் என உருபு விரித்து, 'திரிவார்' என்பதனோடும் 'ஆம்' என்பதனோடும் முடிக்க. அறிவு - ஞானம்; அஃது அருளேயாதல் அறிக. 'ஆதி அருளும்' என்றே பாடம் ஓதுதலுமாம் ஈற்றடியையும், 'தமிழ்மண் டலம் ஐந்தின் தத்துவ மாமே' ஓதுதல் சிறக்கும்.

இதனால், 'இவ் அதிகாரப் பொருள் தமிழ் நாட்டிலே உள்ள இணையிலா உயர்பொருள்' என்பது கூறப்பட்டது.

புண்ணியம் பாவம் இரண்டுள பூமியில்
நண்ணும் பொழுதறி வார்சில ஞானிகள்
எண்ணி இரண்டையும் வேரறுத் தப்புறத்
தண்ணல் இருந்திடம் ஆய்துகொள் ளீரே. ***#1619***

உலக வாழ்க்கையில் 'நல்வினை, தீவினை' என்று இருவினைகளின் தோற்றமும், பயனுமே உள்ளன. அத்தோற்றம், பயன் என்பவற்றை அவை நிகழுங்காலத்தே தெளிய அறிபவர் சில ஞானியரே, அதனால், நீவிர் அந்த ஞானியர் வழிநின்று அவற்றைக் கருதியுணர்ந்து, அவ்வினைகளையும் அடியோடு போக்கி, அவற் றிற்கு அப்பால் இறைவன் இருக்கின்ற இடத்தை ஆராய்ந்தறியுங்கள்.

விளக்கவுரை

'அப்பொழுது ஞானம் வரும்' என்பது குறிப்பெச்சம். *['புண்ணிய பாவம்' எனத் தொகையாக ஓதுதல் பாடமாகாமை அறிக.]* 'வினை உளதாய்ப் பயன் தருதலை உலகர் உணரார்; ஆதலின், நீவிர் உலகர் வழியிற் செல்லாது, அறிவர் வழியிற் செல்க' என்பார், 'நண்ணும் பொழுதறிவார் சில ஞானிகள்' என்றார். 'பொழு தறிவார்' என்றது, 'பொழுதிடத்தே நேர்பட அறிவார்' என்றவாறு.

'நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம்' *3*

என்றவாறு, உலகியல் வினைவழிப்பட்டதேயாக, மெய்ந்நெறி அவ் வினை வழிக்கு அப்பாற்பட்டதாகலின் அதனை, 'அப்புறத்து அண்ணல் இருந்திடம்' எனவும் 'அவ்விடமாவது அருளேயாகலின், அதனை ஆய்ந்துணர்ந்து அடைய ஞானம் வரும் என்பார், ஆய்ந்து கொளீரே' எனவும் கூறினார். 'இருந்த' என்பதன் ஈற்றகரம் தொகுத்தல் பெற்றது. 'இருப்பிடம்' என்பதும் பாடம். வினையை அடி யோடு அறுத்தலாவது. அதற்கு முதலாகிய விருப்பு வெறுப்புக்களை விடுதல். விருப்பு நல்வினைக்கண்ணும், வெறுப்பு, தீவினைக்கண்ணும் நிகழ்வன. அவ்விரண்டையும் விடுத்து இரண்டன் கண்ணும் ஒப்ப நிற்றலையே 'இருவினை ஒப்பு' என்பர், இதனை,
'ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவர்'l என்றாற் போலும் இயல்புகளால் விளக்குவர். இருவினையொப்பின்றி இறைவனது அருளைப் பெறுதல் கூடாமை யின், 'இரண்டையும் வேரறுத்து - அண்ணல் இருந்திடம் ஆய்ந்து கொளீரே' என்றார்.
இதனால், அருளுடைமை வருமாறு கூறப்பட்டது.

முன்னின் றருளும் முடிகின்ற காலத்து
நன்னின் றுலகில் நடுவுயி ராய்நிற்கும்
பின்னின் றருளும் பிறவியை நீக்கிடும்
முன்னின் றெனக்கொரு முத்திதந் தானே. ***#1620***

அடியேனுக்கு என் கண்முன் நின்று முத்தியை அளித்தருளிய சிவன், இருவினை நீங்கிய காலத்து அங்ஙனம் நீங்கப் பெற்றார்க்கு யாதானுமோராற்றல் கண்முன் நின்றே அருளை வழங் குவன். வினையில்லாத நன்மை பொருந்திய குழாத்தினர்க்கு உயிர்க் குயிராய் இருந்தே அருளை வழங்குவன். யாவர்க்கும் அருள் வழங்கிய பின்னும் அவ்அருள் நிலையினின்றும் வழுவாதவாறு பாதுகாப்பன்; அப்பாதுகாப்பின் பயனாக முடிவில் பிறவியை நீக்கிவிடுவான்.

விளக்கவுரை

நாற்றோள் முதலிய தனது இயற்கை வடிவோடு வெளி நிற்றல், குருவாய் வந்து, நோக்கல், தீண்டல், உரைத்தல் முதலியவை களைச் செய்தல் இரண்டையும், 'முன்னின்று அருளுதல்' என ஒன்றாக அடக்கினார். இவை இரண்டும் முறையே 'பிரளயாகலர், சகலர்' என்பவர்க்கு அருளும் முறையாக ஆகமங்கள் வரையறுக்கும். முடி தலுக்கு, 'இருவினை' என்னும் எழுவாய் முன்னை மந்திரத்தினின்றும் வந்து இயைந்தது. 'நன்மை' என்னும் பண்புப் பெயர் ஈறு குறைந்து நின்றது. மேல்வினை முடிகின்ற காலத்து என, அருளுக்கு வினை தடையாய் நிற்றலைக் கூறினமையின், நன்மை, அத்தடையில்லாமை யாயிற்று. 'நன்னின்ற' என்னும் பெயரெச்சத்து அகரம் தொகுத்த லாயிற்று. உலகு -

உயிர்தொகுதி. 'வினையில்லாத உயிரினத்தார் விஞ்ஞான கலர்' என்பது வெளிப்படை. நடுவுயிர் - உள்ளுயிர். 'மூவகை உயிர்கட்கும் மூவகையாக அருளுதலை நியதமாக ஆகமங்கள் கூறுதல் பெரும்பான்மை பற்றி' என்பதையும் 'சிறு பான்மை' கீழுள்ளார்க்கும் மேலுள்ளார்க்கு அருளுதல்போலவே அருளுதல் பரிபாக முதிர்ச்சியான் உண்டு' என்பதையும்,

'பண்டைநல் தவத்தால் தோன்றிப் பரமனைப் பத்தி பண்ணும்
தொண்டரைத் தானே தூய கதியினில் தொகுப்பன்' *

என்னும் சிவஞான சித்தியாலும், அதற்குச் சிவாக்கிர யோகிகள், சிவஞான யோகிகள் இருவரும் உரைத்த உரைகளாலும் உணர்க.

'ஈன்றுபுறந் தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே'l எனச் சிறப்புப் பற்றிக் கூறப்பட்டதாயினும், உடலைப்புறந்தந்து காத்தல், உறுதி கூறி நிற்றல் என்னும் இரண்டும் முறையே தாயர்க்கும், தந்தையர்க்கும் எஞ்ஞான்றும் கடனாயிருத்தல் கண்கூடு. ஆயினும், 'உடல் தாய் தந்தையர்க்கு அவற்றைக் கடைபோகச் செய்தல் கூடாதாயினும், உயிர்த்தாய் தந்தையாகிய இறைவன் தான் ஆட்கொண்ட உயிரைக் காத்தலை எஞ்ஞான்றும் கடனாகக் கொண்டிருக்கின்றான்' என்பார், 'பின்னின்று அருளும்' என்றார். 'பின்னும், என்னும் எச்ச உம்மை தொகுத்தலாயிற்று.

'அனாதி சிவனுடைமை யால்எவையும் ஆங்கே
அனாதிஎனப் பெற்ற அணுவை - அனாதியே
ஆர்த்த துயரகல அம்பிகையோ டெவ்விடத்தும்
காத்தல் அவன்கடனே காண்'

எனவும்,

'உடனா யிருக்கும் உருவுடைமை என்றும்
கடனாயிருக்கின்றான் காண்'3

எனவும் அருளிச்செய்தன காண்க. 'முடிவில் பிறவியை நீக்கும்' என ஒருசொல் வருவித்து முடிக்க.

இதனால், சிவன் உயிர்கட்கு அருள் செய்யுமாறெல்லாம் கூறப்பட்டன.

சிவனரு ளாற்சிலர் தேவரு மாவர்
சிவனரு ளாற்சிலர் தெய்வத்தோ டொப்பர்
சிவனரு ளால்வினை சேரகி லாமை
சிவனருள் கூடிற் சிவலோக மாமே. **#1621**

சிவனது அருளாலே சிலர், தேவர் பதவியை வேண்டின் அவற்றையும் பெறுவர். சிலர் அதனால் மக்களுடம்பில் நின்றே தெய்வங்களோடு ஒத்த ஆற்றல் பெற்று விளங்குவர். எனினும், சிவனது அருளால் சிறப்பாக வினை நீக்கம் உண்டாதலால், சிவனது அருள் ஒருவர்க்கு

உண்மையாகக் கூடிற்றுஎன்றால், அதன் பயனாக அவர்க்குச் சிவலோகமே கிடைக்கும்.

விளக்கவுரை

உம்மை சிறப்பும்மை. 'சேரகிலாமையால்' என உருபு விரிக்க. 'சிவனருள் கூரின்' என்பதும்பாடமாகலாம். 'கூறின்' என்பது பாடமன்று. இதனால், சிவனருளின் பெருமை கூறப்பட்டது.

புண்ணியன் எந்தை புனிதன் இணையடி
நண்ணி விளக்கென ஞானம் விளைந்தது
மண்ணவ ராவதும் வானவ ராவதும்
அண்ணல் இறைவன் அருள்பெற்ற போதே. ***#1622***

அற வடிவினனும், எம் தந்தையுமாகிய சிவபிரானது இரு திருவடிகளை அடைந்ததனாலே, இருளை நீக்கி ஒளிரும் விளக்குப்போல்வதாகிய ஞானம்எனக்கு உண்டாயிற்று. இல்லையேல் உண்டாக மாட்டாது. யாவராயினும் மக்களாய்ப் பிறப்பதோ அல்லது தேவராய்ப் பிறப்பதோ சிவனருள் வாய்க்கப் பெற்றபோதேயாம்.

விளக்கவுரை

'அவ்வாறான பொழுது ஞானியாதல் அவனது அருளின்றி எங்ஙனம் ஆகும்' என்பது கருத்து. 'சிவன்' என்னும் சொல்தரும் பொருள்களுள், 'தூயதன்மையன்* என்பதும் ஒன்றாக லால், 'புனிதன்' என்றது 'சிவன்' என்றவாறு. 'நண்ணி' என்னும் செய்தெனெச்சத்தை, 'நண்ண' எனச் செயவெனெச்சமாகத் திரித்துக் கொள்க. விளக்கு, பயன் பற்றிவந்த உவமை. பிறப்புக்களில் மக்கட் பிறப்பும், தெய்வப் பிறப்பும் சிறந்தனவாகலின் அவற்றை அடைதலையே எடுத்துக் கூறினார். இதனால், 'உயர்வு யாதும் சிவனருள் இன்றி ஆகாது' என்பது கூறும் முகத்தால் ஞானம் அவனருள் இன்றி வாராமை வலியுறுத்தப் பட்டது.

காயத்தேர் ஏறி மனப்பாகன் கைகூட்ட
மாயத்தேர் ஏறி மயங்கும் அவை உணர்
நேயத்தேர் ஏறி நிமலன் அருள்பெற்றால்
ஆயத்தேர் ஏறி அவன்இவன் ஆகுமே. ***#1623***

'உடம்பு' என்னும் நிலையில்லாத தேரின்மேல் ஏறி, மனமாகிய பாகன் தன் கைவன்மையைப் பொருத்தி, கண்ட இடங்களில் செல்லச் செலுத்துதலினால் வழியறியாது மயங்குகின்ற உயிர்கள் சிறிதே உணர்வு பெற்றுச் சிவன்மேற் செல்லும் அன்பாகிய தேரில் ஏறிச்சென்று அவனது அருளைப்பெற்றால், அங்ஙனம் அதனைப் பெற்றவரது குழாமாகிய தேரின்மேல் ஏறிச் சீவன் சிவனை அடைந்து அவனாய் விடும்.

விளக்கவுரை

காயத்தைத் தேராக உருவகிக்கின்றவர் அதன் இயல்பை உணர்த்தவேண்டி அதனை 'மாயத் தேர்' என்றும் கூறினார். கை, ஆகுபெயர். அன்றி, 'கைகூட்டல்' என்பது, கையைப் பொருத்தி ஒட்டுதலாகிய காரியத்தைக் குறித்தது என்றலுமாம். 'உணர்' என்னும் முதனிலைத் தொழிற் பெயரில் 'உணர்வால்' என உருபுவிரிக்க. 'உணர்ந்த பொருளிலன்றி அன்பு நிகழாது' என்பதனை உணர்த்த, 'உணர்வால் நேயத்தேர் ஏறி' என்றார். உணர்வு சிவனை உணர்தற்கு இருவினையொப்பில் நிகழும் சத்திநிபாதம் காரணமாம். 'நல்லினத்தி னூஉங்கும் துணையில்லை'*1* என இன்பத்தை எய்துதற்கு நல்லினம் சாதனமாகக் கூறலின், அதனையும் தேராக உருவகித்தார், 'அவன் இவன் ஆமே' என்றதனை, 'இவன் அவன் ஆமே' என மாற்றியுரைக்க. இது நிமலன் அருள் பெற்றதன் பயனை விளக்குவதாய் வேறு முடிபாகலின், திணை வழுவும், பால் வழுவும் ஆகாமையறிக. இதனால், 'சிவனருளைப் பெற்றுச் சிவமாவதற்கு முதற்கண் அன்பு வேண்டும்' என்பது கூறப்பட்டது.

அவ்வுல கத்தே பிறக்கில் உடலொடும்
அவ்வுல கத்தே அருந்தவம் நாடுவர்
அவ்வுல கத்தே அரனடி கூடுவர்
அவ்வுல கத்தே அருள்பெறு வாரே. ***#1624***

'சரியை, கிரியை, யோகம்' என்னும் இவற்றின் பயனாகச் சிவலோகவாசிகளாய் அங்குத்தோன்றினும் அங்ஙனம் தோன்றினோர் ஞானத்தைப் பெறுதற்கு அவ்வுடம்பொடு நின்று அங்கே அரிய தவத்தைச் செய்ய விரும்புவர். அத்தவத்தின் பயனாக ஞானத்தைப் பெற்றுச் சிவனடியையும் சேர்வர், அதற்குச் சிவனது அருளை அவர் முன்னர்ப் பெறுதலுடையவரேயாவர்.

விளக்கவுரை

'ஈசனியோ கக்கிரியா சரியையினில் நின்றோர்
ஊனமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லாம்
ஒடுங்குமபோ தான்முனிவா தொழியினுற்பவித்து
ஞானநெறியடைந்தவர் சிவனை'
எனவும்,
'அங்கு நாதனே முன்னிற்கின் நணுகுவர்நற்றாளே' *8*
எனவும் உணர்த்தினமை காண்க.
இதனால், 'எத்தகையோரும் தவத்தால் சிவனருளைப் பெற்றே ஞானத்தைப் பெறுவர்' என்பது கூறப்பட்டது.

கதிர்கண்ட காந்தம் கனலின் வடிவாம்
மதிகண்ட காந்தம் மணிநீர் வடிவாம்
சதிர்கொண்ட சாக்கி சரியன் வடிவாம்
எதிர்கொண்ட ஈசன் எழில்வடி வாமே. ***#1625***

சூரியனைக் கண்ட சூரியகாத்தக்கல் நெருப்பு வடிவாய் நெருப்பை உமிழும். சந்திரனைக் கண்ட சந்திரகாந்தக்கல் முத்துப்போலும் நீர் வடிவாய் நீரை உமிழும். பெருமைபொருந்திய கண் ஆடி எதிர்ப்பட்ட வழியின் வடிவாம். சிவனை உள்ளத்தில் ஏற்றுக் கொண்ட உயிர்கள் அந்தச் சிவன் வடிவேயாம்.

விளக்கவுரை

'கண்ணோடு கூடியது' என்னும் பொருட்டாகிய 'சாக்ஷி' என்னும் வடசொல், இங்கு 'சாக்கி' எனத்தற்பவமாயிற்று. கண்ணுக்கு உதவியாக அணியப்படும் ஆடியை 'உபநேத்திரம்' என்பர், அது வழியை நன்கு தெரிவிப்பதாய் அவ்வழிவடிவாய் நிற்கும், சரி - வழி, 'எரியின் வடிவாம்' என்பது பாடமன்று. 'எதிர் கொண்ட' என்பது அன்பெறாத அகர ஈற்றுப் பலவறி சொல், அஃது உயிர்களைக் குறித்து நின்றது. 'ஈசன்' எனப் பின்னர் வருகின்றமை யின், வாளா, 'எதிர்கொண்டன' என்றார். இங்கும், 'எரிகொண்ட' என்பது பாடமன்று. ஈசன் வடிவு அவன் அருளேயாதல் அறிக. இறைவனை உணரும் உயிர் அவனது அருள்வடிவாதல் இனிது விளங்குதற்குக் கதிரவனை எதிரேற்ற சூரிய காந்தக்கல் முதலியவற்றை ஒப்புமைக் கூட்டமாக உடன் வைத்து விளக்கினார்.

இதனால், இறைவனை அருளைப் பெற்ற உயிர் அடையும் சிறப்புக் கூறப்பட்டது.

நாடும் உறவும் கலந்தெங்கள் நந்தியைத்
தேடுவன் தேடிச் சிவபெரு மான்என்று
கூடுவன் கூடிக் குரைகழற் கேசெல
வீடு மளவும் விடுகின் றிலேனே. ***#1626***

நாட்டில் உள்ளார் பலரோடும், மற்றும் எனக்கு உற்றாராய அவரோடும் அளவளாவி, 'எங்கள் சிவபெருமான் யாண்டுளன்' என்று தேடுவேன்; அத்தேடுதலுக்கு அவன் அகப்படா தொழியான் ஆதலின், அவன் அகப்பட்ட இடத்தில் 'சிவபெருமான் கிடைத்தான்' என்று மகிழ்ந்து அவனோடு சேர்வன். சேர்ந்தபின் என் உயிர் பிறவிடத்தன்றி அவனது திருவடியிலே சென்று சேர்தற் பொருட்டு இந்த உடம்பு அழியும் வரையில் அவனை விடாதே பற்றிக்கிடப்பேன்.

விளக்கவுரை

'நீவிரும் அவ்வாறு செய்ம்மின்' என்பது குறிப்பெச்சம். *'நாடு'* என்றது அதில் உள்ளாரையும், *'உறவு'* என்றது அதனை உடையாரையும் குறித்தன. *'நாட்டோடும், உறவோடும்'* என உருபு விரிக்க. அளவளாவுதல் சிவன் இருக்குமிடத்தை அறிதற்கு.
'தேடுகின்றிலை தெருவுதோ றலறிலை' **திருவாசகம் - திருச்சதகம் *31*
எனவும்,
'வியந்தாங்கலறித் - தேடிற்றிலேன்
சிவன் எவ்விடத்தான் எவர்கண்டனர் என்று' 3
எனவும் ஆளுடைய அடிகள் அருளிச்செய்தமையும் காண்க.
'சிவபெருமான்' என்பதற்கு முன்னும், பின்னும் *'கிடைப்பின், கிடைத்தான்'* என்னும் சொற்கள் எஞ்சிநின்றன வீடுதற்கு வினைமுதல் உடலாதல் வெளிப்படை. உடம்பு உள்ள காலத்து அதன்வழிப்பட்டு வேறொன்றைப் பற்றியிருப்பின் அதுநீங்குங்காலத்து உயிர்முன் பற்றியிருந்த பொருளையே அடையுமாகலானும், அவ்வாறன்றி அக்காலத்தில் இறைவனையே பற்றியிருப்பின் அது நீங்கியபொழுது உயிர் அவனையே அடைந்து விடும் ஆகலானும், *'வீடு மளவும் விடுகின்ற லேனே'* என்றார். நாயனார் சிவனை விடாது பற்றி நின்றவரேயாதலின், *'தேடுவன்'* என்றும், *'தேடிக்கூடுவன்'* என்றும் கூறியது, *'விட்டொழிவேமோ'* என்னும் அச்சத்தால், *'ஒருகால் விடநேரினும் மீளவும் விரையப் பற்றுவேன்'* என்றதாக உரைக்க. என்னை*?*
'பெறாஅமை அஞ்சும்; பெறிற்பிரி வஞ்சும்;
*அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு'**
என்பது காதலர் இயல்பாதலின்.
இதனால், *'சிவபிரானது திருவருளை வேண்டுவார் அஃது ஒன்றையே நாடி முயலுதலும், முயன்று பெறின் பின்னர் விடாமையும் வேண்டும்'* என்பது கூறப்பட்டது.

***8.8.*அவ வேடம்**

ஆடம் பரங்கொண் டடிசிலுண் பான்பயன்
வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதைகாள்
ஆடியும் பாடி அழுதும் அரற்றியும்
தேடியும் காணீர் சிவனவன் தாள்களே. ***#1627***

முயலாது வைத்து வயிறு வளர்த்தலையே பயனகாகக் கருதித் தவத்தவரது பலவகைப்பட்ட வேடங்களைப் புனைந்து, அவற்றாலே பகட்டையும் மிகக் காட்டி உலகத்தாரை அஞ்சுவித்துத் திரிகின்ற அறிவிலிகாள், உலகத்தாரின் வேறுபட்ட வேடத்தைக் கொண்ட நீவிர்

அதற்கியைய உண்மை அன்பால் ஆடியும், துதிப்பாடல்கள் பலவற்றைப் பாடியும், அழுதும், 'சிவன் எங்கேனும் காணப்படுவானோ' என்று தேடியும் நிற்குமாற்றால் சிவனது திருவடிகளைக் காணும் பேற்றைப் பெறுங்கள் ; அது பயனுடைத்தாம்.

விளக்கவுரை

'ஆடம்பரங் கொண்டு' என்பதை, 'வேடங்கள் கொண்டு' என்பதன் பின்னர்க் கூட்டி உரைக்க. 'உண்பான்' என்பது தொழிற் பெயராய் நின்றது, 'உண்பான் ஏன்' என்பது முதலிய வற்றிற்போல. 'பயனாக' என்னும் ஆக்கச் சொல் எஞ்சி நின்றது. 'பாடியும்' என உம்மையைத் தொகாது. ஓதுதல் கூடாமை அறிக.

இதனால், அகத்துணர்வோடு கூடாத வேடத்திற்குப் பயன் புறத்தாரை வெருட்டுதலல்லது பிறிதில்லை என்பதும், அதனால், அத்தன்மையான வேடத்தைக் கொள்ளுதல் அறியாமையாம் என்பதும் கூறப்பட்டன.

ஞானமில் லார்வேடம் பூண்டிந்த நாட்டிடை
ஈனம தேசெய் திரந்துண் டிருப்பினும்
ஆன நலங்கெடும் அப்புவி ஆதலால்
ஈனவர் வேடம் கழிப்பித்தல் இன்பமே. ***#1628***

இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

'ஞானமில்லார் பூண்டு' என்றதனால், வேடம் ஞான முடையர்க்குரிய வேடமாயிற்று. 'இந்த நாட்டிடை ஈனம் செய்து' என்றது, 'இழிசெயலுக்கு நாணுதலுடைய ஞானியர் மிக்கு வாழும் இந்தநாட்டின்கண் நாணுதல் சிறிதும் இன்றி இழிசெயல்கின்றவர்' எனப் பொருள் தந்தது. 'இந்தநாடு' என்றது நமது பரத கண்டத்தை. 'எப்புவியிருப்பினும் அப்புவி ஆன நலங்கெடும்' என ஒருசொல் வருவித்தே உரைக்க. புவி - நாடு. இஃது, 'இந்த நாட்டை' எனச் சுட்டியதன் உட்பகுதியைக் குறித்தது. ஆன நலம் - உண்டான. நன்மை 'ஈனர்' என்பதில், ஓர் அகரம் விரித்தல் பெற்றது. 'எப்புவி யிருப்பினும் அப்புவி ஆன நலங்கெடும்' என்றதனால், 'ஈனரது வேடத்தை அகற்றுவிக்கற்பாலார் அந்நாட்டில் வாழ்பவர்' என்பது போந்தது. இன்பம் தருவதனை, 'இன்பம்' என்றார்.

'எவரேனும் தாமாக இலாடத் திட்ட' என்னும் திருத் தாண்டகம் இதனோடு முரணாமை மேல் 'வேட நெறியில்லார்' என்னும் மந்திரத்து உரையில் விளக்கப்பட்டது. இதன் மூன்றாம் அடியில், 'மான நலங்கெடும்; வையகம் பஞ்சமாம்' என்பதும் பாடம்,

இதனால், போலி வேடத்தாரை அறிந்து அகற்றுதல் அறிவுடையார்க்குக் கடனாதல் கூறப்பட்டது.

இன்பமும் துன்பமும் நாட்டா ரிடத்துள
நன்செயல் புன்செய லால்அந்த நாட்டிற்காம்
என்ப இறைநாடி நாடோறும் நாட்டினில்
மன்பதை செப்பம் செயின்வையம் வாழுமே. ***#1629***

'ஒருநாட்டில் வாழும் மக்களிடத்துள்ள நற்செயல் தீச்செயல்களாற்றானே அந்த நாட்டிற்கு இன்பமும், துன்பமும் உளவாவன' என்று அறிந்தோர் கூறவர். ஆதலால், அரசனாவான் தனது நாட்டில் நிகழும் நற்செயல் தீச்செயல்களை நாள்தோறும் சோர்வின்றி ஆராய்ந்து தீச்செயல் செய்யாதவாறு மக்களைத் திருத்து வானாயின், அவனது நாடு துன்பமின்றி, இன்புற்று வாழும்.

விளக்கவுரை

'ஆதலால் அரசன் அதனை ஒருதலையாகச் செய்க' என்பது குறிப்பெச்சம். போலி வேடத்தாரை அகற்றுதல் சிறப்பாக அரசற்குக் கடமை என வலியுறுத்துவார். அரசு முறைமையைப் பொதுப்பட எடுத்தோதினார். முதல் தந்திரத்துள் இதனையே அரசு முறை பற்றிக் கூறுதற்கண் பல மந்திரங்களால் நாயனார் விரித் துரைத்தமை காண்க.
'நாடு நன்றாவதும், தீதாவதும் அதன்கண் வாழும் மக்களது இயல்பானே' என்பதை,

'நாடா கொன்றோ, காடா கொன்றோ,
அவலா கொன்றோ, மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே' *

எனச் சங்கத்துச் சான்றோராய ஔவையாரும் கூறினார்.
இதனால், 'போலி வேடம் தலைகாட்டாதபடி செய்தல் சிறப்பாக அரசற்குக் கடன்' என்பது கூறப்பட்டது.

இழிகுலத் தார்வேடம் பூண்பர்மேல் எய்த
அழிகுலத் தார்வேடம் பூண்பர்தே வாகப்
பழிகுலத் தாகிய பாழ்சண்ட ரானார்
கழிகுலத் தோர்கள் களையப்பட் டோரே. ***#1630***

தாழ்ந்த குலத்திற் பிறந்தவர்கள் சிலர், ஒழுக்கத்தால் உயர்வெய்த நினையாமல், எளிதில் மேன்மையைப் பெறுதற் பொருட்டுத் தவவேடத்தைப் புனைந்து கொள்வர். உயர்ந்த குலத்திற் பிறந்தவர்கள் சிலரும் அக்குலத்திற்கு ஏற்ற ஒழுக்கமுடை யராய் நிற்கமாட்டாமையின் அக்குலத்தன்மை அழியப்பெற்று அந்நிலை நீங்கிக் கடவுளராக வைத்துப் போற்றப்படும் மிக உயரந்த நிலையைப் பெறுதற் பொருட்டுத் தவ வேடத்தைப் புனைந்து கொள்வர். இவ் இரு சாராரும், தொன்று தொட்டே பழிபாவங்களையுச் செயது பாழ்பட்டுவரும் கொடியராயினார்

நாட்டுவாழ் குலத்தோரி னின்றும் நீக்கப்பட்ட குலத்தராயினாற் போலவே அரசு முறைமையுள் நாட்டு வாழ்க்கையினின்றும் நீக்கப்பட்டனர்.

விளக்கவுரை

'வழிகுலத்தோர்' எனின் மோனை சிதைதலானும், பொருள் படாமையானும் அது பாடமாகாமை அறிக. 'தேவாக' என்ற தனால், இது 'பூசுரர்' எனப்படுவாரை உட்கொண்டு கூறிய தாயிற்று. பழிகுலம் - பழிக்கப்பட்டு வரும் குலம். இப்பழி, அருள் வடிவின வாகிய ஆக்களை அஞ்சாது கொல்லும் தொழிலுடைமை பற்றிப் பழிக்கப்படும் பழியாம். இக்குலத்தவரை, 'சண்டாளர்' என்றலும் இது பற்றி 'இவர் நாட்டில் ஏனையோரோடு கூடிவாழ்தற்கு உரியரல்லர்' என்பது பண்டை அரசுமுறை. அதனால், 'அம்முறையே போலி வேடத்தார்க்கும் உரித்தாகற்பாலது' எனக் கூறுமுத்தால், போலி வேடம் பூண்பாரது கொடுமையை விளக்கினார்.

'நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்' *3*

என்றார் திருவள்ளுவ நாயனாரும், 'கழிகுலத்தோர்கள் போல' என உவமஉருபு விரிக்க போலி வேடத்தால் உளவாகும்
தீமைகள் பல. அவற்றுள் உண்மை வேடத்தாரையும் உலகம் ஐயுறச் செய்தலும் அது காரணமாக உண்மை வேடம் தோன்றாது போதலும் தலையாய தீமைகள், 'அதனால் அது குறிக்கொண்டு களையற்பாலது' என நாயனார் பல்லாற்றானும் வலியுறுத்துகின்றார்.

'இவ்வேடர் - கொத்துக் கெலாமோர்
கொடும்பழியைச் செய்தீரே'*

என்னும் கந்தபுராணச் செய்யுளில், 'இவ்வேடர் கொத்து' என்றதற்கு, 'இத் தவவேடம் உடையராது கூட்டம்' என்பதே உட்பொருளாக உரைப்பர். அதனானும் போலி வேடத்தது கொடுமையை உணர்ந்து கொள்க.

மூன்றாம் அடியை, 'பாசண்டாரனார்' எனப்பாடம் ஓதி, 'சமயத் தலைவர்போல வேடம் பூண்டும் அத்தலைமைக் குணம் இல ராய்ப் பழிக்கப்படும் கூட்டத்தினர் மக்களால் விலக்கப்பட்ட கூட்டத் தினராய், அரசனாலும் களையப்பட்டார்' என்று உரைத்தலும் ஆம்.

இதனால், 'அரசன் தன் குடிகளில் உள்ளாரை இங்ஙனம் கழித்தல் கூடுமோ' என்னும் ஐயத்தையகற்றி, அது முறையாமாறு கூறப் பட்டது.

பொய்த்தவம் செய்வார் புகுவர் நரகத்துப்
பொய்த்தவம் செய்தவர் புண்ணிய ராகாரேல்
பொய்த்தவம் மெய்த்தவம் போகஉண் போக்கியம்

சத்திய ஞானத்தால் தங்கும் தவங்களே. *#1631*

அகத்தே தவ உணர்வின்றிப் புறத்தே பொய்யாகத் தவவேடத்தை மட்டும் கொண்டு நடித்தவர் புண்ணியராகாது பாவிகளேயாவர் என்பது உண்மையாயின், அச்செயலுடையார் மறுமையில் நரகம் புகுதலும் உண்மை. இனி அவலரது நடிப்பிற்குப் பயன் மெய்த்தவம் இல்லா தொழிய பொய்த் தவத்தால் இம்மையிற் சிறிது இன்பத்தை நுகர்தலும், மறுமையில் பெரிய நரகத் துன்பத்தை அடைதலுமேயாம். ஆகையால் உண்மையான அகத்துணர்வாலே தவம் உளதாகும்; பொய் வேடத்தால் உளதாகாது.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதற்கண் வைத்து உரைக்க. மூன்றாம் அடியை, 'போகத்துட் போக்கியம்' என ஓதுதல் பாடமன்று. ஈற்றில் நின்ற பிரிநிலை ஏகாரத்தை, 'ஞானத்தால்' என்பதனோடு கூட்டுக. 'ஞானம்' என்று இங்குத் தவ உணர்வை,

இதனால், போலி வேடம் மறுமையில் நரகம் பயத்தல் கூறப்பட்டது.

'தவம்மறைந் தல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று' *l*

என்றதனால், 'போலி வேடம் புனைதல் உயிர்க்கொலை செய்த லோடொத்த தீவினைச் செயல்' எனத் திருவள்ளுவரும் குறிப்பால் உணர்த்தினார். அதனால், 'அவர் நரகம் புகுதல் அவர்க்கும் உடன் பாடு' என்பது பெற்றாம்.

பொய்வேடம் பூண்பர் பொசித்தல் பயனாக
மெய்வேடம் பூண்போர் மிகுபிச்சை கைக்கொள்வர்
பொய்வேடம் மெய்வேடம் போலவே பூணினும்
உய்வேட மாகும் உணர்ந்தறிந் தார்க்கே. *#1632*

சிலர் தொழில் செய்யாது மடிந்திருந்து வயிறு வளர்க்கக் கருதியே பொய்யாகத் தவ வேடத்தைப் புனைந்து கொள்வர். ('அவர் இல்வாழ்வாரை மருட்டியும், வெருட்டியும், மிந்த பிச்சையை, நீக்காது ஏற்று உண்டு வாழ்வர்.) மெய்யாகவே தவ வேடத்தைப் பூண்பவர் இல்வாழ்வார் அன்போடு அழைத்து இடும் உயரிய பிச்சையையே ஏற்பர். (இவையும் அவ்இருசாராரையும் அறிதற்குக் குறியாம்.) தோற்றத்தில் பொய்வேடமும் மெய்வேடம் போலவே பூணப்பட்டாலும், உணர்வோடு கூடாத பொய் வேடம் அவர்க்கு உய்தற்கு ஏதுவாய வேடமாகாது கெடுதற்கு ஏதுவாய வேடமாக,) தவத்தினது பெருமையை உணர்ந்து அதனைப் பூண்டு நிற்போர்க்கே அஃது அவர் உய்தற்கு ஏதுவான வேடமாகும்.

விளக்கவுரை

மிகு பிச்சை - உயர்வுடையதாய பிச்சை உயர்வு அன்பொடு கூடிநிற்றல். 'மெய்வேடம் பூண்பார் கொள்ளும் பிசை உயர் பிசை' எனவே, 'பொய் வேடம் பூண்பார் கொள்ளும் பிச்சை இழி பிசை' என்பது போந்தது. 'மெய் வேடம் பூண்டார் இல்வாழ்வார் வருந்தாது மகிழ்ந்து இடக் கொள்ளும் பிச்சை. வண்டு, மலர் வருந்தாது அதனிடத்துள்ள தேனை உண்டல் போல்வது' என்றற்கு அதனை, 'மாதூகரி பிசை' என்பர் வடநூலார். 'பூணினும்' என்பது 'பூணப்பட்டாலும்' எனச்செயப்பாட்டு வினைப்பொருள் தந்தது. இனி, 'பொய்வேடத்தை' என இரண்டாவது விரிப்பினுமாம். 'அறிந்தோர்க்கே உய்வேடமாம்' என்றதனால், 'அறியாத பொய் வேடத்தார்க்கு அஃது உய்வேடமாகாது, கெடுவேடமாம்' என்பது விளங்கிற்று. 'உய்வேடம்' என்பதற்கு, 'அப்பொய்வேடம் ஒழிதற் குரிய வேடமாம்' என்றுரைப்பினுமாம். 'உணர்ந்தறிந்தோர்' என்ற ஒருபொருட் பன்மொழிகள் அவற்றதுகாரியமாகிய மெய் வேடத்தினையும், அதற்கேற்ற ஒழுக்கத்தையும் குறித்தன.
இதனால், 'போலிவேடமும் உண்மை வேடத்தோடு ஒத்துத் தோன்றினும், செயலாலும், பயனாலும் அவை தம்மில் பெரிதும் வேறுபட்டனவாம்' என்பது கூறுமுகத்தால், போலிவேடம் தவ வேடமாகாது அவவேடமாதல் உணர்த்தப்பட்டது.

<u>*8.9.*தவவேடம்</u>

தவமிக் கவரே தலையாய வேடர்
அவமிக் கவரே அதிகொலை வேடர்
அவமிக் கவர்வேடத் தாகலர் அவ் வேடம்
தவமிக் கவர்க்கன்றித் தாங்கஒண ணாதே. ***#1633***

அகத்துத் தவ உணர்வு மிகுந்தவரே புற வேடத்தால் உயர்த்துக் கூறப்படுவர். அகத்து அவ்வுணர்வில்லாது உலகியல் உணர்வு மிகுந்தோர் தவவேடம் புனையின் 'உயிர் கொலையை மிகச் செய்யும் வேடர்' எனப் பொருள் படுமாறு இருபொருட் சொல்லாக 'வேடர்' எனச் சொல்லப்படுவர். அவர் வேட மாத்திரையால் தவத்தோர் ஆகார் ஆதலின், தவ உணர்வுமிகுந்தவர்க்கல்லது, தவ வேடத்தைத் தாங்கிநிற்றல் பொருந்தாது,

விளக்கவுரை

'தலையான வேடர்' என்றாராயினும், 'வேடத்தால் தலையானவர்' என்றலே கருத்தாதல் அறிக.'தவ உணர்வு இல்லாதார் தவ வேடம் புனையின் இகழப்படுவர்' என்பது இரண்டாம் அடியில் கூறப்பட்டது, மூன்றாம் அடியில், 'வேடத்தால்' என உருபு விரிக்க. 'ஆகார்'

என்பதற்குமுன் 'தவத்தோர்' என்பதும், பின் 'ஆகலான்' என்பதும் எஞ்சிநின்றன.
இதனால், 'தவவேடம் தவ உணர்வு உடையோர்க்கே உரியது' என்பது, 'அதனைத் தாங்குதல் அவர்க்கு மிக்க சிறப்பைத்தரும்' என்பதும் கூறப்பட்டன. இதனுள் ஈரிடத்தும் 'தவத்தோர்' என்னாது, 'தவம்மிக்கவர்' என்றே அருளிச் செய்த குறிப்பு நோக்கற்பாலது.

பூதி அணிவது சாதனம் ஆதியில்
காதணி தாம்பிர குண்டலம் கண்டிகை
ஓதி யவர்க்காம் உருத்திர சாதனம்
தீதில் சிவயோகி சாதனம் தேரிலே. ***#1634***

தவவேட்கையோர் யாவர்க்கும் முதற்சாதனமாவது திருநீறணிதல். சிவநூல் கற்பிக்கும் ஆசிரியர்க்கு அதனோடு காதில் அணியப்படுகின்ற செப்புக் குழையும், செம்பை இடையிட்டுக் கோத்த உருத்திராக்க மாலையும் வேடங்களாம். சிவயோகிக்குரிய வேடத்தை ஆராயுமிடத்துச் சிவனிடத்துக் காணப்படும்' கோலங்கள் பலவுமாம்.

விளக்கவுரை

அவை வருகின்ற மந்திரத்தில் கூறப்படும். 'ஆதியில் சாதனம் பூதி அணிவது' என மாற்றி யுரைக்க. 'ஓதியவர்' என்பது, 'பிறரை ஓதுவிக்கும் ஆற்றலுடையார்' என்பது உணர்த்திநின்றது, 'சிவயோகி சாதனம் தேரில் உருத்திர சாதனம்' என்க.
இதனால், 'பொதுத் தவ வேடமும், ஒருசார்ச் சிறப்புத் தவ வேடமும் இவை' என்பது கூறப்பட்டது.

யோகிக் கிடுமது உட்கட்டுக் கஞ்சுளி
தோகைக்குப் பாகற்றுச் சுற்றம் சடையதொன்
றாகத்து நீறணி அங்கம் கபாலம்
சீகத்த மாத்திரை திண்பிரம் பாகுமே. ***#1635***

சிவயோகிக்கு அணியப்படும் பொருள்களாவன, அரையிற் கட்டும் கீளோடு கூடிய கோவணம் உமைக்குப் பாகம் இல்லாமல் ஒரு சடையால் சுற்றிக் கட்டப்படும் சடைமுடி, உடம்பு முழுவதும் முற்றுப் பூசிய திருநீறு, வேண்டும் பொழுது எடுத்துத் தன் உடம்பில் பூசிக் கொள்ளுதற்கும், தன்னை வனங்கினார்க்குக் கொடுத்தற்கும் திருநீறு வைக்கப்பட்ட பொக்கணம் அல்லது பை, பிரம கபாலத்தை நினைப்பிக்கும் பிச்சைப் பாத்திரம், திருக்கையில் பிடிக்கும் மாத்திரைக் கோல் அல்லது பிரம்பு என்னும் இவைகளாம்.

விளக்கவுரை

அது - அவ்வேடம். பின்வரும் பொருள்கள் பலவும் 'வேடம்' என ஒன்றாக

வைத்துச் சுட்டப்பட்டன. 'பாகம் அற்று' என்பது, 'பாகற்று' எனக் குறைந்து நின்றது, மேல், 'உருத்திர சாதனம்' என்றது பற்றிச் சிவன், 'மதுவிரிக் கொன்றை துன்று சடைபாகம், மாதர் குழல் பாகம்' ஆதல்3 கொள்ளப்படாது, சடை ஒன்றுமே கொள்ளப் படும் என்றற்கு, 'தோகைக்குப் பாகமற்றுச் சுற்றும் சடை ஒன்று' என்றார். இதனானே, சிவயோகி ஏனை உலக யோகிபோலத் துணைவி யோடிருத்தல் கூடாமை குறிக்கப்பட்டது. 'ஆகத்து நீறு' என முன்னர்ப் போந்ததனைப் பெயர்த்தும் கூறினமையின் உடம்பு முழுதும் பூசிய நீறு என்பது போந்தது.'அணி' என்பது, 'அணிகின்ற, அணி விக்கின்ற' என, 'இருவயினிலையும் பொருட்டாய்' 8 நின்றது, 'அதனை அணி அங்கம்' என்க. சாங்கமாகிய பொக்கணம், திருநீற்றுப் பை இவற்றை 'அங்கம்' என்றது பான்மை வழக்கு. 'ஷ்ரீஹஸ்தம்' என்னும் ஆரியச்சொல், 'சீகத்தம்' எனத் தற்பவமாயிற்று.

இதனால், 'சிவயோகிக்குரிய தவ வேடம் இவை' என்பது கூறப்பட்டது. இதனை,

'சுத்திய பொக்கணத் தென்பணி கட்டங்கம்சூழ் சடைவெண் பொத்திய கோலத்தினீர்' 1

என்பதனோடு வைத்துக் காண்க.

காதணி குண்டலம் கண்டிகை நாதமுன்
ஊதுநற் சங்கம் உயர்கட்டி கப்பரை
ஓதுமில் பாதுகம் யோகாந்த ஆதனம்
ஏதுமில் யோகபட் டம்தண்டம் ஈரைந்தே. **#1636**

காதில் அணியப்படும் குண்டலம், உருத்திராக்க மாலை, நல்ல ஒலி உண்டாக வாய்வைத்து ஊதுகின்ற திருச்சங்கு, குண்டலத்தினும் உயர்ந்ததாகிய ஆறு கட்டி, திருவோடு, சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற தவச் சாலை, பாதுகை, யோகம் முடிதற்குரிய இருக்கை, குற்றமற்ற யோக பட்டம், யோக தண்டம் என்னும் பத்தும் தவத்தோர்க்குரிய வேடங்களாம்.

விளக்கவுரை

பொதுப்படக் கூறியதனால், 'இவைகளை அவரவர் ஏற்ற பெற்றியாற் கொள்வர்' என்பது கருத்து. தவச்சாலையும் உபாங்கமாய்த் தவவேடமாதல் குறிக்கப்பட்டது.

இதனால், தவ வேடமாவன பலவும் தொகுத்துக் கூறப் பட்டன.

8.10.திருநீறு

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்

தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே. *#1637*

யாவரேனும் எலும்புக் கூட்டைத் தோளிலே கொள்ளும் சிவபெருமான் பூசுவதும், அணிந்தோர் யாவர்க்கும் கவசமாய் நிற்பதும் ஆகிய திருநீற்றை அதன் வெள்ளொளி மிக விளங் குமாறு பூசி மகிழ்ச்சியுறுவராயின், அவரிடத்து வினைகள் தங்கியிரா. சிவகதி கூடும். சிவனது அழகிய திருவடியையும் அவர் அடைவர்.

விளக்கவுரை

'கங்காளன் பூசும்' என்றது, 'எல்லாவற்றையும் ஒடுக்கியபின் அவை ஒடுங்கிய சாம்பலைப் பூசுகின்ற என்னும் குறிப்பினது.
சிவநெறியாளர்க்குத் திருநீறே கவசமும், திருவைந் தெழுத்தே அதிதிரமுமாதலை,
'வித்தக நீறணி வார்வி னைப்பகைக்கு
அத்திர மாவன அஞ்செ ழுத்துமே' *
என ஞானசம்பந்தரும் குறிப்பால் அருளிச் செய்தமை காண்க. இக் கவசமும், அத்திரமும் வினையாகிய பகை வந்து தாக்காமற் காப்பதும், அப்பகையை அழிப்பதும் ஆதலை இம்மந்திரத்தாலும் இங்குக் காட்டிய தேவாரத்தாலும் அறிக. அவை பிற கவசங்களாலும், அத் திரங்களாலும் இயலாமையும் உணர்க. 'சிவகதி' என்றது பத முத்தி அபர முத்திகளையும், 'திருவடி சேர்தல்' என்பது பர முத்தியையும் குறித்தனவாம். 'மகிழ்விரேயாமாகில் சேர்விரே' என்பதும் பாடம்.
இதனால், திருநீற்றது சிறப்பு வகுத்துணர்த்தப் பட்டது. இம்மந்திரம் சிவ பிரதிகளில் இவ்வதிகாரத்த்து இரண்டாம் மந்திர மாகக் காணப்படுதல் பொருந்தவில்லை.

நூலும் சிகையும் உணரார்நின் மூடர்கள்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
பாலொன்றும் அந்தணர் பார்ப்பார் பரம்உயிர்
ஓரொன் றிரண்டெனில் ஓங்காரம் ஓதிலே. *#1638*

அந்தண வேடத்துள் முதன்மை பெற்று விளங்கும் முப்புரிநூல், சிகை என்பவற்றது உண்மை இன்ன என்பதை முழு மூடராயுள்ளோர் சிறிதும் அறியமாட்டார். அவற்றின் உண்மையாவன யாவை எனின், 'முப்புரிநூல்' என்பது வேதத்தின் முடிநிலைப் பகுதியாகிய உபநிடதங்களும், 'சிகை' என்பது அவற்றின் பொரு ளுணர்வுமாம், நூலும், சிகையும் தம்பால் பொருந்தப் பெற்ற அந் தணர்கள், 'பரமான்மா, சீவான்மா' என்னும் இரண்டையும் நன்குணர்வர் எனில், அது வேதத்தை நன்கு ஓதி, வேதாந்தத்தை நன்கு உணரும் பொழுதேயாம்.
வாளாநூலையும், சிகையையும் பொருந்த வைத்துக் கொள்வதனால்

மட்டுமன்று.

விளக்கவுரை

இதனை இங்குக் கூறவே, 'வேத வேதாந்தங்களை நன்கு ஓதி உணர்ந்தவர் திருநீற்றின் பெருமையை உணர்வாராகலான், அதனை அணிதலை ஒழியார்' என்பது குறிப்பாயிற்று. 'வேதத்தில் உள்ளது நீறு'*l* என ஞானசம்பந்தர் பாண்டிய மன்னன் முன் பலரும் அறிய அருளிச் செய்தமை இங்கு ஒரு தலையாக உணரற் பாற்று. 'சபாலம்' என்னும் உபநிடதம் சிறப்பாகத் திருநீற்றின் பெருமை உணர்த்துவதாயுள்ளது. இவற்றால் 'திருநீறு அல்லது விபூதி' என நீவிர் புகழ்ந்துரைக்கும் பொருள் நறுமணம் முதலிய நலம் யாதுமில்லாத வெறும் சாம்பல்தானே என இகழ்தல் பேதமைப் பலது என்பது போந்தது. அதனால், 'நூலும், சிகையும் அறியார் நின்மூடர்கள்' என்றது போலவே, 'நீற்றது உண்மையும் அறியார் நின்மூடர்கள்' என ஓதுதலும் கருத்தால் பெறப்படும். நீற்றது உண்மையை இவர். மேல் 'கவசத் திருநீறு' என்பனால் குறித்தார். திருஞானசம்பந்தர் 'பராவண மாவது நீறு'*l* என இனிது விளங்க அருளிச் செய்தார். இருவரும் முறையே, 'பூசி மகிழ்வரே யாமாயின் தங்கா வினைகளும்' எனவும்'பாவம் அறுப்பது நீறு'*l* எனவும் ஓதியருளினார். இவ்விடங்களில், 'திருநீறாவது இறைவனது திருவருளே' என்பது தெற்றென விளங்கி நிற்கின்றது' இங்ஙனம்.

'தலைகல னாகஉண்டு தனியே திரிந்து
தவவாண ராகி முயல்வர்;
விலையிலி சாந்த மென்று வெறிநீறு பூசி
விளையாடும் வேட விகிர்தர்' *3*

என்றாற்போலவரும் சுருதிகளை யுணராமையால்,

'பூசுவதும் வெண்ணீறு; பூண்பதுவும் பொங்கரவம்' *l*
'கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை' *8*

என்று புறச்சமயத்தார் இகழ்தலேயன்றி, 'வேதத்தை ஓதுதலால் வேதியர் எனப்படுகின்றேம்' எனக் கூறிக் கொள்வாருள்ளும் சிலர் திருநீற்றை 'சாம்பல்' என்று இகழ்ந்தொக்குதல் அவருக்குண்டான சாபக்கேடே என்பது,

'பேசரிய மறைகளெலாம் பராபரன்நீ எனவணங்கிப்
பெரிது போற்றும்
ஈசனையும் அன்பரையும் நீற்றொடுகண் டிகையினையும்
இகழ்ந்து நீவிர்
காசினியின் மறையவராய் எந்நாளும் பிறந்திறந்து
கதியு றாது
பாசமதி னிடைப்பட்டு மறையுரையா நெறியதனிற்

படுதி ரென்றான்'*
என்னும் கந்தபுராணத்தால் அறியப்படும். படவே, 'அந்தணர்' என்பாருள்ளும் சிலர் இத்தன்மையராய் இருத்தலைத் திருவுளத்துட் கொண்டு அவரது இயல்பினை விளக்குதற்கே இம்மந்திரத்தை இவ்வதிகாரத்தில் நாயனார் அருளிச் செய்தார் என்பது விளங்கும். சிவபிரானது விகிர்த வேடத்தின் பெருமைகள் பலவும் அறிதற்கு மிக அரியன என்பதை உணர்த்தவே,
'சடையும் பிறையுமசாம்பற் பூச்சும் கீள்
உடையுங் கொண்ட உருவம் என்தொலோ'*
என்றார் போலப் பலவிடத்தும் அருளிச் செய்தார். இன்னோரன்ன திரு வருண்மொழிகட்குப் பின்னும் திருநீற்றிற்கு வேறாகச் சிலர் சில சமயக் குறிகளைப் படைத்துக் கொண்டது, மேற்காட்டிய சாபத்தின் வலி யெனவே வேண்டும் என்க.
அந்தணர் பரம், உயிர் இரண்டும் ஓர் ஒன்றாகப் பார்ப்பார் எனில், அஃது ஓங்காரம் ஓதிலேயாம்' என உம்மையும் ஆக்கமும் விரித்து மாற்றிமுடிக்க. பார்த்தல் - ஆராய்ந்துணர்தல். 'ஓர் ஒன்றாக' என்றது 'நுனித்து' என்றவாறு 'ஓங்காரம்' என்றது, வேதத்தில் அது முதலாகத் தொடங்கிச் செல்லும் மந்திரங்கள் அமைந்த பாகத்தைக் குறித்தது. மந்திர பாகத்தின் உண்மையை உணர்த்துவனவே உப நிடதங்களாதலின், அம்மந்திர பாகத்தை முன்னர் நன்கு ஓதிப் பின்னர் அவற்றின் உண்மைகளை உபநிடதங்களில் உணர்தல் வேண்டும் என்றற்கு, 'ஓங்காரம் ஓதிலே' என்றார். எனவே, 'ஓதி அவற்றை உப நிடதங்களில் உணரிலே' என்க. கூறுதலும் கருத்தாயிற்று. 'நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்' என மேல் அந்தணர் ஒழுக்கத்தில் *(229)* கூறிய நாயனார் அதனை இங்கும் மறித்தும் கூறியது பெரிதும் வலியுறுத்தற் பொருட்டாயிற்று. இதனுள் இன எதுகை வந்தது. இதனால், 'பிறப்பால் உயர்ந்தோர்' எனப்படுகின்ற அந்தண ராயினும் அவர் உயர்வெய்துதல் திருநீற்றாலே என்பது கூறப்பட்டது.

அரசுடன் ஆலத்தி ஆகும்அக் காரம்
விரவு கனலில் வியன்உரு மாறி
நிரவிய நின்மலந் தான்பெற்ற நீத
ருருவம் பிரம உயர்குல மாமே. ***#1639***

பசுவின் சாணம் அரசு முதலிய சமித்துக்கள் பொருந்தப்பட்ட சிவாக்கினியில் வெந்து தனது முன்னைப் பருவுரு மாறி அமைந்த அந்தத் திருநீற்றை உடல் முழுவதும் பூசித் தூய்மையை அடைந்த நல்லோரது உடம்பே பிரம ஞானத்தை அடையும் உயர்ந்த குலத்து உடம்பாம்.

விளக்கவுரை

ஆலத்தி - ஆப்பி.
'மறைக்குங் காலை மரீஇய தொரால்' *
என்பதனான் இஃது அவையல்கிளவி யாகாதாயிற்று. அன்றியும் ஒலி வகையால் 'ஆல் அத்தி' என்பது போலத் தோன்ற வைத்தமையானும் அன்னதாகாதாயிற்று. 'ஆல் அத்தி' என்றே பொருள் உரைப்பினும் திருநீற்றுக்கு முதலாகிய பசுச்சாணம் பெறப்படாமை அறிக. 'அரசு' என்றது பிற சமித்துக்களுக்கு உபலக்கணம். 'ஆலத்தி அரசுடன் விரிவு கனலில் வியன் உருமாறி ஆகும் அக் காரம்' எனக் கூட்டுக. திருநீற்றின் வேறு பெயர்களும் ஒன்றாகிய 'க்ஷாரம்' என்னும் ஆரியச் சொல், 'காரம்' எனத் தற்பவமாய் அகரச் சுட்டேற்று. 'அக்காரம்' என வந்தது. 'அக்காரம் நிரவிய' எனச் சுட்டிக், கூறவே, திருநீற்றை, 'சாம்பல், சுடலைப் பொடி' முதலாகப் பொதுவில் பலவகையாகக் கூறினும் 'தக்க பசுவின் சாணத்தைத் தக்க வகையில் பெற்று மந்திரத்தால் கோசலங்கொண்டு பிசைந்து உலர்த்திச் சிவவேள்வியில் இட்டுப் பெற்றதே உண்மைத் திருநீறாம்' என்பதனை முதல் இரண்டடி களாற்கூறினார். நிரவுதல் - நிரம்பப்பூசுதல். 'பிறப்பால் அந்தண ராதலே பிரமகுலமாகாது; திருநீற்றை நிரம்ப அணிந்தவழியே ஆகும்' என்றற்கு 'சிவனுருவாம்' என்னாது 'பிரம உயர்குலமாம்' என்றார்.
இதனால், 'திருநீற்றை இல்லாதவர் கடவுளை உணரமாட்டார்' என்பது கூறப்பட்டது.

*8.11.*ஞான வேடம்

ஞான மிலார் வேடம் பூண்டும் நரகத்தார்
ஞானமுள் ளோர்வேடம் இன்றெனில் நன்முத்தர்
ஞான முளதாக வேண்டுவார் நக்கன்போல்
ஞான முளவேடம் நண்ணிநிற் பாரே. *#1640*

ஞானம் இல்லாதவர் ஞானிகட்குரிய வேடத்தைப் பூண்டிருப்பினும் நரகத்திற்கு உரியவரேயாவர். ஞானம் உள்ளவர்கள் தம்மிடத்தில் ஞானிகட்குரிய வேடம் இல்லாதொழியினும் பரமுத்திக்கு உரியவரே. அதனால், ஞானம் உண்டான பின்னர் அதற்குரிய வேடத்தை விரும்புவோர் சிவபிரானைப் போலவே அந்த வேடத்தைப் பூண்டிருப்பர்.

விளக்கவுரை

'இன்றெனிலும்' என்னும் எச்ச உம்மை தொகுத்தல் பெற்றது. 'உளதாக' என்னும் செயவெனெச்சம், 'கைப்பொருள் ஒன்றுண்டாகச் செய்வான் வினை'* என்பதிற் போல இறந்த காலத் தின்கண் வந்தது. இவ்வாறன்றி, எதிர் காலத்ததாகக் கொண்டுரைப் பின், அது முன்னை யதிகாரத்துத் தவ

வேடமாயே முடிதல் அறிக. 'வேடம் நண்ணி நிற்பார்' எனப் பின்னர்க் கூறுதலின், வேண்டுதல் வேடத்தையே ஆயிற்று. 'ஞானிகட்குரிய வேடவாவது இது' என்பது உணர்த்துதற்கு 'நக்கன்போல்' எனவும், 'அவ்வேடம் காண்பார்க்கும் ஞானத்தை உண்டாக்கும்' என்றற்கு 'ஞானம் உள வேடம்' எனவும் கூறினார். 'நக்கன்பால்' என்பது பாடமன்று. நக்கன் - உடையில் லாதவன். 'அணியெல்லாம் ஆடையின்பின் என்பதை விடுத்தலின், 'நகப்படுவன்' என்பது இதன் பொருளாம். சிவபிரானை இப் பெயராற் கூறுதல் பட்டும், துகிலும் உடாது, தோலையே ஆடையாக உடுத்தல் பற்றியாம். இனிக் 'கீள், கோவணம்' என்னும் இவற்றளவே கொண்டு நிற்றலும் உடையின்மையாகவே கூறப்படும். இவ்வாறன்றி, 'திகம்பரன்' என்பதே வெற்றரையாய் நிற்றலைக் குறிக்கும், எனவே, 'நக்கன்' என்பதை 'நக்நன்' என்னும் ஆரியச் சொல்லின் திரிபாகக் கொள்ளின் அது 'திகம்பரன்' எனவே பொருள்படும். சிவபிரானை, 'திகம்பரன்' என்றல் அவனது வியாபக நிலையைக் குறிக்குமல்லது வேடத்தைக் குறியாது. 'சிவபிரான் பிச்சைக் கோலம் கொண்டு சென்ற பொழுது வெற்றரையாகச் சென்றனன்' என்பது உளதாயினும், கீள் கோவணத்தோடு சென்றனன் என்ற கருத்தும் உண்டு.

'உறைவது காடுபோலும்; உரிதோல் உடுப்பர்;
விடைஊர்வது ஓடு கலனா' *1*

என்றொடக்கத்தனவாய் வரும் திருமொழிகள் சிவபிரானது வேடங்கள் உலகரால் நகப்படுவனவாயிருத்தலையே உணர்த்தும்.
அவ்வாறிருப்பினும்,

'இறைஇவர் வாழும் வண்ணம் இதுவேலும்
… … … … … ,..
அறைகழல் வண்டுபாடும் அடிநீழல் ஆணை
கடவா தமர ருலகே' *3*

என்றற்றொடக்கத்தனவாய் வரும், திருமொழிகள் அவ்வேடங்கள் சிறிதும் பற்றுடபடாத தூய உணர்வைத் தெரிவிப்பனவாய்ப் பற்றுட் பட்டு மயங்கும் மயக்க உணர்வையுடைய தேவர் முதலிய பலரையும் ஆளும் தலைமைக் கோலங்களாய் இருத்தலை விளக்குமாகலின், அவை ஞானவேடங்களாதல் நன்கறியப்படும். அவ்வேடங்கள் காண்பார்க்கும் ஞானத்தைத் தோற்றுவித்தலை,

'ஓதிஓர்க் கப்படாப் பொருளை ஓர்விப்பன
… … … … … …
ஆதிஅந் தம் இலா அடிகள் வேடங்களே' *8*

என்றற்றொடக்கத்தனவற்றால் அறிக. 'நக்கன்பால்' என்பது பாடம்

அன்று.
இதனால், 'ஞானிகட்குரிய வேடத்தை ஞானம் இல்லாதார் புனைந்து வஞ்சிப்பின் நரகம் புகுவர்' என்பதும், 'ஞானிகட்குரிய வேடம் இது; இதனை ஞானியர் விரும்பிற் பூண்பார்; பூணாது விடினும் அவர்க்குத் தாழ்வில்லை' என்பதும் கூறப்பட்டன.

புன்ஞானத் தோர்வேடம் பூண்டும் பயனில்லை
நன்ஞானத் தோர்வேடம் பூணார் அருள்நண்ணி
துன்ஞானத் தோர்சம யத்துரி சுள்ளோர்
பின்ஞானத் தோர் ஒன்றும் பேசகி லாரே. ***#1641***

இழிந்த ஞானத்தை உடையவர்கள் உயர்ந்த ஞானத்தை உடையவரது வேடத்தைப் பூண்பாராயினும், அதனால் அவர்க்கு வருவதொரு நன்மை இல்லை. உயர்ந்த ஞானத்தை உடை யவர் இறைவனது அருளாகிய பயனைப் பெற்றுவிட்டமையால், 'குறித்ததொரு வேடத்தைப் பூணவேண்டும்' என்னும் விருப்பமும் இலராவர். தமது ஞானத்தையே பெரிதாக மதிக்கும் குற்றத்தை உடையவர் 'தத்தம் மதங்களே அமைவதாக அரற்றிமலையும்' *3* சமயப் பூசலை உடையராவர். மற்று, உண்மை ஞானம் உடையோர் அதற்குத் தகுதியில்லாதாரைக்காணின் ஒன்றும் பேசாது வாளாதே போவர்.

விளக்கவுரை

இழிவு, உலகியலுள் அழுந்தலும், உயர்வு அதனின் நீங்கி மேற்போதலுமாம். 'பூணார்' என்பது 'பூணுதலில் கருந் தூன்றார்' என்றதாம். 'வேண்டுமாறு விருப்புறு வேடத்தர்' *l* எனச் சேக்கிழாரும் கூறினார். 'சமயம்' சமயவாதத்தைக் குறித்தலின் ஆகு பெயர். 'பின்' என்பது, வினைமாற்றாய 'மற்று' என்னும் பொருளில் வந்தது. 'ஒன்றும் பேசகில்லார்' என்பது, 'தமது நிலையைப் பிறர்க்கு வெளிப்படுத்திப் புகழ்பெற விரும்புதல் இலர்' என்பது உணர்த்தி, 'அத்தகையோர் ஞானவேடத்தைப் புனைந்து கொள்ளுதலையும் ஒருதலையாக விரும்புதல் இல்லை' என்பதை வலியுறுத்தி நின்று. இதனுள் ' பூணார்' என்பதை, 'பூண்பர்' எனவும், முன்னை மந்திரத்தில், 'இன்றெனில்' என்பதை 'உண்டெனில்' எனவும் ஓதுவன திரிக்கப்பட்ட பாடங்களாதல் விளங்கும்.
இதனால், உண்மை ஞானியர் சாத்தியமாகிய திருவருளை யன்றிச் சாதனமாகிய வேடத்தைப் பெரிதாகக் கொள்ளாமை கூறப்பட்டது.

சிவஞானி கட்கும் சிவயோகி கட்கும்
அவமான சாதனம் ஆகாது தேரில்
நவமாம் அவர்க்கது சாதனம் நன்கும்
உவமான மில்பொருள் உள்ளுற லாமே. ***#1642***

பயனில்லாத வேடம் சிவஞானிகட்கும், சிவ யோகிகட்கும், ஆகாது. ஆராயுமிடத்து அது வேதாகமங்களாகிய தொன்னெறியல்லாத புதுநெறியில் நிற்போர்க்கு ஆவதாம். அது நிற்க, சரியை முதலிய நான்கு நெறிகட்குரிய வேடங்களே ஒருதனிச் செம்பொருளாகிய சிவம் உள்நிற்கும் வேடங்களாம்.

விளக்கவுரை

ஆகவே, 'அவையே சிவஞானிகட்கும், சிவயோ கட்கும் உரியன' என்பதாம். பயனில்லாத வேடங்கள் பாயுடுத்தல், தலைமுடியயைப் பறித்துக்கொள்ளல், மயிற்பீலி பிடித்தல், துவராடை அணிதல், வெற்றரையாய் இருத்தல் முதலியனவாம். இவை பரம் பொருள் வடிவாகாது, வாளா உடம்பை வருத்துதலாய் முடிதலின், பயனிலவாயின. இவை முதனூல்களாகிய வேதாகமங்களை இகழ்ந்து, புதியனவாய்ப் படைக்கப்பட்ட எதிர்நூல்களின் வழிநிற்பர் கொள்வன வாதல் வெளிப்படையாதலின், 'நவமாம் அவர்க்கு' என்றார். வேடம் வகையானும், விரியானும் பலவாயினும், தொகையால் ஒன்றே யாகலின், 'ஆகாது' எனவும், 'அது' எனவும் ஒருமையாற் கூறினார். 'நான்கு' என்றது ஆகமங்களின் வழி யவாதலின், 'சரியை முதலிய நான்கு' என்பது விளங்கிற்று. சரியை முதலிய நான்கில் நிற்போர் தாம் தாம் செய்யும் பணிகட்கு ஏற்ற வேடங்களை யுடையராய் இருத்தல் பற்றி, அவைகளை வகுத்தோ தினார். இங்கு எடுத்துக் கொண்டது ஞானவேடமேயாயினும், சரியை முதலிய மூன்றும் 'அரும்பு, மலர், காய்' *l* என்பனபோல ஞானத்தின் படிகிளைகளேயாதல் பற்றி, அவற்றது வேடங்களையும் உடன் ஓதினார். 'சாதனமாவது இங்குவேடமே' என்பது அதிகாரத்தால் விளங்கும். உவமானம் இப்பொருள், இரண்டாவதில்லாத தனிப் பொருள். இதனை 'ஏகம்' என்றல் உபநிடத வழக்கு 'ஒன்ற வன்றானே' என நாயனாரும் தொடக்கத்தே உணர்த்திப் போந்தார்.

இதனால், பிறவேடங்கள் கடுந்துறவை விளக்குவனபோல உலகரை மருட்டுவவாயினும், அவை சிவநெறியாளர்க்கு ஆகாமை கூறப்பட்டது. ஆகாதவற்றை. 'ஆகா' எனக் கண்ணோட்டமின்றி அறுதி யாக விலக்கி ஒழித்தலும் உண்மை நூல்கட்கு இயல்பு என்பதை ஊன்றி யுணர்க.

கத்தித் திரிவர் கழுவடி நாய்கள்போல்
கொத்தித் திரிவர் குரற்களி ஞானிகள்
ஒத்துப் பொறியும் உடலும் இருக்கவும்
செத்துத் திரிவர் சிவஞானி யோர்களே. ***#1643***

அனுபவத்தால் இன்பம் உறாது, பேச்சினாலே இன்ப மடையும் நூலறிவுடைய சிலர், கழுமரத்தடியில் நின்று அதன் உச்சியில் உள்ள

உடல் எட்டாதபொழுது குரைத்தலையும், சிறிது எட்டிய பொழுது அதனைக் கடித்தலையும் செய்கின்ற நாய்களைப் போலத் தாம் அறிந்தவற்றைக் காலம், இடம், தகுதி முதலியவற்றை நோக் காமலே உரக்க எடுத்துப் பேசுதலும், காலம் முதலியன சிறிது வாய்த்த வழிக் கேட்பாரது உள்ளத்தை அலைத்தலும் செய்து திரிவார்கள். சிவஞானத்தை அனுபவமாக அடைந்தோர் வாக்கும், காயமும் வன்மைபெற்றிருப்பினும் செத்தவரைப்போலயாதும் உரையாதே, எவ்விடமும் இடமாக உலாவிவருவர்.

விளக்கவுரை

'கழுவடி நாய்கள்போல்' என்பது தாப்பிசையாய் முன்னரும் சென்றியைந்து. குரல் களி - குரலால் களிக்கின்ற இதுவே பாடம்; 'குரக்களி' என்பது பாடமன்று என்பது உவமையால் இனி துணரப்படும். 'பொறியும், உடலும் ஒத்து இருக்க' என மாற்றுக. 'மூப்பொறி' என்னும் வழக்குப் பற்றி, 'வாக்கு' என்னும் தொழிற் கருவியை, 'பொறி' என்றார். வாக்கு வன்மைபெற்றிருத்தலாவது சொல்வன்மை வாய்த்திருத்தல். உடல்வன்மை உரத்தும், நீட்டித்தும் பேசுற்குத் துணையாகும். குரற்களி ஞானிகள் உரத்துப் பேசுதல் பயனில் செயலாம் என்பதை விளக்கவே, 'கத்தித் திரிவர்' என்றார். வைதுரை 'சொல்லம்பு' எனப்படுக் கேட்போர் உள்ளதைப் புண் படுத்தல் போல, இவரது பேச்சும் அலைவால் புண்படச் செய்யும் என்பதனை, 'கொத்தி' என்பதனாற் குறித்தார். மனம் இன்னல் உறுதலை, 'நெஞ்சு புண்ணாதல்' என்னும் வழக்குண்மையறிக. செத்து - செத்தாற் போன்று. 'திரிவர்' மூன்றில் இறுதியது பற்றின்றி இருத் தலையும், ஏனையவை பயனின்றி வாழ்தலையும் குறித்தன. இவர்களை நாயனார் முன்பு 'சோம்பர்' எனவும், 'தூங்குபவர்' எனவும் குறித்தமை காண்க.

இதனால், 'வாய்வாளாமையும் சிறந்ததொரு ஞானவேடப் பகுதியாம்' என்பது கூறப்பட்டது.

அடியா ரவரே அடியா ரலாதார்?
அடியாரு மாகாதவ் வேடமு மாகா
அடியார் சிவஞான மானது பெற்றோர்
அடியா ராலாதார் அடியார்கள் அன்றே. ***#1644***

குணத்தால் அடியவரல்லாதவர் பிறவாற்றால் அடியவராவரோ? ஆகார். அடியார் ஆகாதபொழது அவர்கட்கு அந் நிலைக்குரிய வேடங்களும் கூடா. அடியராவார் சிவஞானத்தை அடைந் தோர். ஆதலால், அத்தன்மையில்லாதவர் ஒருவாற்றானும் அடியரல்லர்.

விளக்கவுரை

'அடியாரவரே' என்னும் ஏகாரம் வினாப் பொருட்டாய், அடியவாரகாமையைக் குறித்தது. 'ஆகாதவழி' என்பது 'ஆகாது' எனத் திரிந்து நின்றது. மூன்றாம் அடி, அடியாராகும் முறைமையைக் குறித்தது. இதனால், ஞானவேடம் மட்டுமே ஞானியராகச் செய்யாமை கூறப்பட்டது.

ஞானிக்குச் சுந்தர வேடமும் நல்லவாம்
தானுற்ற வேடமும் தற்சிவ யோகமே
ஆனஅவ் வேடம் அருள்ஞான சாதனம்
ஆனது மாமொன்றும் ஆகா தவனுக்கே. ***#1645***

ஞானத்தைப் பெற்றவனுக்கு உலகர் கொள்ளும் அழகிய வேடமும், ஞானவேடமேயாய்ச் சிறந்து நிற்கும். அதனால், அவன் எந்த வேடத்தோடு இருப்பினும் அது பரம சிவனோடு ஒன்றி யிருத்தற்குரிய வேடமாயே அமையும். இனி, ஞானவேடமாகச் சொல்லப்பட்ட அவ்வேடம் ஞானம் சிறிதும் இல்லாதவனுக்கு ஏற்புடையதாதலும் உலகியலாய் உள்ளது.

விளக்கவுரை

சுந்தர வேடமாவது உலகத்தார் விரும்பி யணியும் வேடமாதலை, 'சுந்தர வேடங்களால் துரிசே செயும் தொண்டன் எனை' - திருமுறை - *7.100.3.*
என அருளிச் செய்தவாற்றால் அறிக. நன்மை - ஞானம். நல்ல - ஞானத்தையுடையன. சரியை முதலிய மூன்றில் நிற்போர் தடத்த சிவத்தையே சாரந்து நிற்க, ஞானி சொரூப சிவத்தைச் சார்ந்திருப்பன் ஆதலின், 'தற்சிவ யோகம்' என்றார். யோகம் - ஒன்றுதல். ஒன்று தலைத் தருவதனை 'ஒன்றுதல் என்றே கூறினார். 'அருள்ஞான சாதனம் அவ்வேடம்' என மாற்றிக்கொள்க. ஒன்றும் - சிறிதும். ஆகாதவன் இதற்கு 'ஞானம்' என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க. 'உலகியல் அவ்வாறிருப்பினும், அதனால் பயன் என்னை' என்பது கருத்து. இதனால், ஞானம் இல்லதார் ஞான வேடம் புனையினும் பயன்பெறுதல் இல்லை; ஞானம் உடையவர் ஞானவேடம் புனையா தொழியினும் பயன் இழத்தல் இல்லை என்பது கூறப்பட்டது.

ஞானத்தி னாற்பதம் நண்ணும் சிவஞானி
தானத்தில் வைத்த தனிஆ லயத்தனாம்
மோனத்தின் ஆதலின் முத்தனாம் சித்தனாம்
ஏனைத் தவசி இவனென லாகுமே ***#1646***

சிவஞானத்தை அடைந்தவன் அந்த ஞானத்தால் முடிவில் சிவனது திருவடியை அடைவான். அதற்கு முன்னேயும் தன்னைத் தான் சிவனது திருவடியிலே இருக்க வைத்த ஒப்பற்ற இருப் பிடத்தை உடையனாய்

இருப்பன். சொல்லேயன்றி மனமும் அடங்கி விட்ட நிலையை உடையனாதலின் அவன் இவ்வுலகில் இருப்பினும் முத்தி பெற்றவனே யாவன். அதனால் அவன்தான் பெறவேண்டிய பேற்றை முற்றப் பெற்றவனாம். சிவஞானத்தைப் பெறாது சிவான வேடத்தை மட்டும் புனைந்த மற்றையோனை இச்சிவஞானிபோல முத்தனும், சித்தனும் ஆவன் என்று சொல்லுதல் கூடுமோ! கூடாது.

விளக்கவுரை

'ஏனைத் தவசி சிவஞானியாகான்' எனவே, இத்தவசி (சிவஞானம் பெற்றவன்) வேடம் இன்றியும் சிவ ஞானியே என்பது பெறப்பட்டது. 'அதனில்' என்பது 'அத்தில்' எனமருவிற்று. 'அது' என்றது சிவன் பாதத்தை. 'இருப்பிடம்' சிவனுக்கு என்க. அஃது உயிரேயாம். மோனம் - மௌனம். அஃது இங்கு வாய் வாளாமை யோடு மனம் அடங்கியதையும் குறித்தது. 'தவசியை' என்னும் இரண்டாவது தொகுத்தல் பெற்றது. இதனால், அகத்தில் ஞானம் உடையவன் புறத்தில் வேடம் இலனாயினும் சீவன்முத்தனாய் விளங்குவன்; ஞானம் இன்றி வேட மாத்திரம் உடையவன் அத்தன்மையன் ஆகான் என்பது கூறப்பட்டது.

தானற்ற தன்மையும் தான் அவ னாதலும்
ஏனைய அச்சிவ மான இயற்கையும்
தானுறு சாதக முத்திரை சாத்தலும்
மோனமும் நந்தி பதமுத்தி பெற்றவே. *#1647*

தற்போதம் அற்றிருத்தல், தான் சிவமேயாய் நிற்றல், சிவனல்லாத ஏனை எல்லாப் பொருள்களிலும் சிவம் நிறைந்து நிற்றலை உணர்ந்து, அவற்றைச் சிவமாகவே காணுதல், ஞானத்தை நழுவாது நிலை நிறுத்தற்குத் துணையாய் உள்ள வேடங்களைப் பூணுதல் வாய்வாளாமை ஆகிய இவை யாவும் சிவனது திருவடிப்பேறாகிய முத்தியைப் பெற்ற நிலையின் இயல்புகளாம்.

விளக்கவுரை

ஏனைய - மற்றையவை. எல்லாவற்றையும் சிவமாகக் காணுதலை.
'மரத்தை மறைத்தது மாமத யானை'*1*
என்னும் மந்திரத்துள் நாயனார் பின்னர் இனிது விளங்க அருளிச் செய்வார்.
'காதல் மடப்பிடி யோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்' *2*
என்பது முதலாக நாவுக்கரசரும் பலபட அருளிச் செய்தமை காண்க.
'பரஞானத் தாற்பரனைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர்; பதார்த்தங்கள் பாரார்' *3*

என்பதும் காண்க. பெற்றதன்கண் உள்ளவற்றைப் 'பெற்றது' வேடத்தின் கால ஆகுபெயர்.
இதனால், ஞானம் பெற்றவழி நிகழ்வன பலவும் ஞான வேடத்தின் பாற் பகுத்துக் கூறப்பட்டன.

*8.12.*சிவ வேடம்

அருளால் அரனுக் கடிமைய தாகிப்
பொருளாந் தனதுடற் பொற்பது நாடி
இருளான தின்றி இருஞ்செயல் அற்றோர்
தெருளாம் அடிமைச் சிவவேடத் தாரே. *#1648*
சிவனது சத்திபதிவால் தாம் அவனுக்கு அடிமை யாதலை உணர்ந்து அதற்கேற்ப ஒழுகும் ஒழுக்கம் உடையவராய்த் தமது உடம்பும் ஏனைய பொருள்கள்போலச் சிவனது உடைமயாம் சிறப்பை உணர்ந்து, அவ் இரண்டுணர்வையும் தடுத்து நிற்கும் இருள் நீங்கப்பெற்றுத் தம்செயல் அற்றிருப்போர் வேடமே, 'சிவவேடம்' எனக் கொள்ளப்படும் சிறப்புடைய வேடமாம்.

விளக்கவுரை

'சிவவேடம் யாரிடத்துக் காணப்படினும் சிவவேடமே யாயினும், இத்தன்மை யாரிடத்துக் காணப்படும் சிவவேடமே உண்மைச் சிவவேடமாம் சிறப்புடையது' என்றவாறு. இதனானே இவர் சிவவேடத்தை மிகப்பூணாது சிறிதே பூண்டிருப்பினும் அது சிறந்த வேடமேயாதலும் பெறப்படும். 'அடிமையாதல் செயலா னன்றித் தெருட்சியாலே' என்றற்கு, 'தெருளாம் அடிமை' என்றார். 'அடிமை வேடத்தார்' என இயையும். அடிமை சிவனுக்கு ஆதல் 'சிவ வேடம்' என்றதனாற் பெறப்பட்டது. 'அன்றோர் வேடத்தார்' என்றா ராயினும் இவ்வாறு உரைத்தலே கருத்து என்க. 'பொற்பதி' என்பது பாடமன்று. இதனால், 'உண்மைச்சிவவேடம் இது' என்பது கூறப்பட்டது.

உடலில் துவக்குவே டம்முயிர்க் காகா
உடல்கழன்றால் வேடம் உடனே கழலும்
உடலுயிர் உண்மை என் றோர்ந்துகொள் ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டையொத் தாரே. *#1649*
உடம்பில் பொருத்தப்பட்ட வேடங்கள் உயிர்க்கு உரியன ஆகமாட்டா. அதனால், உடம்பு நீங்கினால் வேடமும் அத னோடே நீங்கிப் போதலன்றி உயிரோடு உடன் செல்லுதல் இல்லை. 'உடம்பு, உயிர் சிறிது காலம் தங்கியிருக்கும் ஓர் இடமே' என்னும் உண்மையை ஆராய்ந்து உணர்ந்து கொள்ளாதவர் கடலில் அகப்பட்ட மரத்துண்டு அதன் அலைகள் பலவற்றாலும் அலைக்கப்படுதல் போலப் பிறவியிற்

பட்டு பல்வேறு உடம்புகளால் அலைக்கப்படுவர்.

விளக்கவுரை

'உண்மை', 'உளதாதல்' எனத் தொழிலாய் நின்று அதற்குரிய இடத்தைக் குறித்தது.*l* 'உடம்பில் - துச்சில் இருந்த உயிர்க்கு' என்ற வாறு, சிறிது காலம் இருத்தலையே இங்கு, 'உண்மை' என்றார். 'கடலில் அகப்பட்ட கட்டை' என்பது சுட்டிக் கூறா உவமம் ஆதலின், அஃது இங்ஙனம் விரிக்கப்பட்டது. இது, 'வேடம் மாத்திரமே உயிர் உய்தற்கு வழியாம்' என மயங்கி, ஞானத்தைப் பெறும் வேட்கை இன்றி இருப்போரை நோக்கிக் கூறியது. எனவே, மேற்கூறியவாறு அரசனுக்கு அடிமையாதல் முதலியன உளவாய வழியே வேடம் சிவவேடமாதலைத் தெளிவித்தவாறாயிற்று.

இதனால், உடல் உயிர்த் தன்மைகளை இனிதுணர்த்து மாற்றால், மேலது வலியுறுத்தப்பட்டது.

மயலற் றிருளற்று மாமனம் அற்றுக்
கயலுற்ற கண்ணியர் கையிணக் கற்றுத்
தயலற் றவரோடுந் தாமேதா மாகிச்
செயலற் றிருப்பர் சிவவேடத் தாரே. ***#1650***

யாதும் அறியாமையும், மயங்கி யறிதலும் ஆகிய இரண்டும் நீங்கி, அதனானே புலன்மேற் செல்லும் மனம் அடங்கி, அவ் அடக்கத்தானே மகளிர் ஆசை முதலிய ஆசைகளும் அற்று, தமக்கு முன்னே அங்ஙனம் அற்று நின்றாரை அடைந்து 'அவர், தாம்' என்னும் வேற்றுமை யின்றி அவரே தாமாய் ஒன்றியியங்கித் தம் செயல் அற்றிருப்பர் உண்மைச் சிவவேடத்தார்.

விளக்கவுரை

முன்னிற்கற்பாலதாகிய 'இருள்', செய்யுள் நோக்கிப் பின்னின்றது. 'கண்ணியரோடு' என உருபு விரிக்க. கை, இடைச் சொல். இணக்கு - இணங்குதல்; முதனிலை திரிந்த தொழிற் பெயர். தையல், 'தயல்' எனப் போலியாயிற்று. 'தையலற்றவர்' என்றது, 'மேற்கூறிய நிலையை யெல்லாம் அடைந்தவர்' என்றவாறு. 'தாம்' இரண்டில் முன்னது, 'அவர்' என்னும் பொருட்டாய் நின்றது.

இதனால், அரனுக் கடிமையாதல் முதலியவற்றால் உண்மைச் சிவவேடத்தராயினாரது இயல்பு கூறும் முகத்தால், அவ்வேடத்தின் பயன் கூறப்பட்டது.

ஓடுங் குதிரைக் குசைதிண்ணம் பற்றுமின்
வேடங்கொண் டென்செய்வீர்? வேண்டா மனிதரே
நாடுமின் நந்தியை நம்பெரு மான்தன்னைத்

தேடுமின் பப்பொருள் சென்றெய்த லாமே. ***#1651***

மனிதர்காள், வேடமாத்திரத்தைக் கொண்டு என்ன செய்யப்போகிறீர்! அந்த நிலை வேண்டுவதில்லை. ஓடுகின்ற குதிரை போல உள்ள பிராணவாயுவை அதன் கடிவாளத்தை இறுகப் பிடித்து ஓட்டுதல் போல இரேசக பூரக கும்பக முறைகளை ஒழுங்காகக் கடைப் பிடித்தலால் அடக்குங்குள் அதனால், மனம் உம் வசப்பட, அது கொண்டு நம் பெருமானாகிய சிவபெருமானை அடைய விரும் புங்கள். அவ்விருப்பம் நிறைவுறுதற்குரிய வழியில் செல்லுங்கள். பின்பு பேரின்பப் பொருளாகிய முதற்பொருளைச் சென்று அடையலாம்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதலில் வைத்து உரைக்க. 'குதிரை, குசை' என்பன யோகநூற் குறிச்சொற்கள். 'திண்ணமாக' என ஆக்கம் வருவிக்க. இதனால், யோக நெறியில் நிற்பின் மனம் அடங்கச் சிவபத்தியும், சிவப்பணியும் வாய்க்க, வேடமும் உண்மைச் சிவ வேடமாய் பயன் தரும்' என்பது கூறப்பட்டது.

8.13.அபக்குவன்

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடுங் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடும் குழிவிழு மாறே. ***#1652***

குருடாய இரண்டு குழந்தைகள் தம்மிற் கூடிக் கண்ணைமூடி ஆடும் ஒருவகை விளையாட்டை விளையாடி, அதனால் இரண்டும் பாழுங் குழியில் விழுந்து அழுந்தினாற்போலப் பக்குவம் இல்லாத சிலர் தமது அறியாமையைப் போக்கும் ஆற்றலுடைய நல்ல குருவைக் கொள்ளாமல், அவ் ஆற்றல் இல்லாத போலிக் குருவைக் குருவாகக் கொண்டு, அவர் அருள் வழங்க பெறுதலைச் செய்யின், இருவரும் பிறவித் துன்பத்தில் வீழ்ந்து அழுந்துவார்கள்.

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி உரைக்க. முதற் கண் நின்ற 'குருடு' இரண்டும் சிறப்புருவகமாய். மல மறைப்பால் உண்டான அறியாமையைக் குறித்தன. இதனானே, நல்லாசிரியர் குருட்டினை நீக்கும் மருத்துவம் வல்ல மருத்துவராலும், போலி ஆசிரியர் அம் மருத்துவம் உணராத போலி மருத்துவராலும் பெறப் பட்டன. கண்ணுள்ள குழந்தைகள் கண்ணை மூடி ஆடினாலும் முன்னைப் பழக்கத்தால் தீங்கின்றி ஆடி மகிழ்வடையும். கண்ணில் லாத குழந்தைகள் பிற விளையாட்டு விளையாடினாலும் தீங்கடையா.

குருட்டாட்டம் ஆடின் வழியறியாது குழியில் வீழ்ந்தொழியும். அதுபோல நல்லாசிரியர் மாணவரது பக்குவத்திற்கு ஏற்ப எவ்வாறு அருளினும் பயன் உண்டாம். ஆசிரியரல்லாதார் கிரியா மார்க்கத்தை உணர்த்தினும், அவர்பால் அதனைச் சிலர் பெறினும் பயன் ஓரளவேனும் உளதாகும். அவர் ஞானத்தை உணர்த்தினும், அதனைச் சிலர் பெறினும், 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது' என்னும் பழமொழியோடொப்ப இருவரும் முன்னையினும் பார்க்கப் பெரிய தோர் அறியாமையில் வீழ்ந்து அழுந்துபவர் என்பது உவமையால் பெறப்பட்டது. 'கண் குருடுபோல அறியாமையும் அகக்கண் இன்மை யாகிய ஒருவகைக் குருடே' என்பது தோன்ற, மல மறைப்பினையும் இங்குக் குருடாகவே உருவகித்து ஓதினார்.
இதனால், பக்குவம் இல்லாதார்க்கு ஞானத்தைப் பெறும் வாயில் உண்டாகாமை கூறப்பட்டது.

மனத்தில் எழுந்ததோர் மாயக்கண் ணாடி
நினைப்பின் அதனில் நிழலையும் காணார்
வினைப்பயன் போக விளக்கியும் கொள்ளார்
புறக்கடை இச்சித்துப் போகின்ற வாறே. ***#1653***

உயிர்கட்கு முதற்றொட்டு அவற்றின் அறிவாகிய கண்ணிற்கு அமைந்த மாயையாகிய கண்ணாடி ஆணவமாகிய குற்றங் காரணமாகப் பொருளியல்பைத் திரித்துக் காட்டும் வாஞ்சனைக் கண்ணாடியாய் உள்ளது. கல்வி கேள்விகளால் பெற்ற அறிவுகொண்டு இதன் இயல்பை உணர்ந்து கொள்ளும் பக்குவம் இல்லாதவர் நல்லாசிரியர் அவர்களது வினை நீங்கும் வழியை விளக்கிக் கூறினாலும் விளங்கிக்கொள்ள மாட்டார். அவர் இயல்பு தலைவாயில் வழியைக் காட்டினாலும் புறக்கடை வாயிலை விரும்பி அதன்வழி நுழையும் இயல்பு போல்வதாம்.

விளக்கவுரை

அறிவை 'மனம்' என்றலும் வழக்கு. 'எழுந்தது' என்னும் வினைப்பெயர். 'தோன்றியதாகிய கண்ணாடி' என்பதைக் குறித்து எழுவாயாய் நின்று, 'மாயக்கண்ணாடி' என்னும் பெயர்ப் பயனிலை கொண்டது. மாயம் - பொய்; திரிபு. இங்ஙனம் கூறவே, 'அக்கண்ணாடியாவது மாயையே' என்பது விளங்கிற்று. 'நினைப்பு' என்று சிந்தனை அறிவை. 'அதனில் அதன் நிழலையும் காணார்' என்க. 'நிழலையும் காணார்' என்று, 'அதன் இயல்பைச் சிறிதும் அறியார்' என்றவாறு. 'காணார்' என்பதும் எதிர்மறை வினைப்பெயர். காணாமை பக்குவம் இன்மையினாலாம். 'விளக்கவும்' என்பது திரிந்து நின்றது 'விளக்கினும்' எனப் பாடம் ஓதலுமாம். 'விளக்குவார் நல்லாசிரியர்' என்பது ஆற்றலால்

பெறப்பட்டது. ஓர் இல்லத்தில் தலை வாயிலால் நுழையாது புறக்கடை வாயிலால் நுழைவார் இன்னல் பலவும் உறுதல் வெளிப்படை. இதனுள் ஒருவாற்றான் மூன்றாம் எழுத்தெதுகை வந்தது.
இதனால், பக்குவம் இல்லாதார்க்கு ஞானத்தைப் பெறும் வாயில் உளதாயினும் அது பயன்படாமை கூறப்பட்டது.

ஏயெனின் என்என மாட்டார் பிரசைகள்
வாய்முலை பெய்ய மதுரம்நின் றூறிடுந்
தாய்முலை யாவ தறியார் தமருளோர்
ஊனிலை செய்யும் உருவிலி தானே. ***#1654***

உலக மக்கள், அறிவுடையரோ 'ஏ' என அழைத்தால் அவர்க்கு, 'ஏன்' என மறுகுரல் கொடுக்கும் அத்துணைப் பக்குவமும் இலர். அவர் தாயின் முலை அவர் பெற்ற குழவி தன்வாயில் வைத்த பொழுதே பால் சுரத்தலல்லது, எப்பொழுதும் பால் சுரவாத தன்மையை உணர்தல் இயலாததே. அவ்வியல்புடைய இனத்தவரது உள்ளத்திலும் உருவமற்றவனாகிய சிவபெருமான் அங்ஙனம் உருவமற்றவனாகவே நிலை பெற்றிருக்கின்றான்.

விளக்கவுரை

'ஏ' என்பது வடமொழியில் திரிபு. வரையறை யின்மை யின் இதன்கண் யகர உடம்படுமெய் தோன்றிற்று. இதன்கண் யகர உடம்படுமெய் தோன்றிற்று. முதற்கண் நின்ற 'முலை' என்பது பின்னர் வரும் அதனைச் சுட்டும் சுட்டளவாய் நின்றது. பெய்தலுக்கு வினைமுதலாகிய 'குழவி' என்பது வருவிக்க. மதுரம் - இனிமை. அஃது ஆகு பெயராய்ப் பாலை யுணர்த்திற்று. 'குழவி வாய்வைத்த பொழுதே தாயின் முலை பால்சுரக்கும் இயல்பினை அறியார்' என்றது, 'இறைவனது அருள் அவனை உணர்ந்து போற்றுவார்க்கே விளங்கி நின்று நலம் செய்யும் என்பதனை அறிந்து அவனை உணர முயலார்' என்றதாம். 'அதற்குக் காரணம் பக்குவம் இன்மையே' என்பது கருத்து. 'அன்னோர்க்குத் தமராய் உள்ளோரது ஊனின்கண்ணும் உருவிலி நிலை செய்யும்' என்க. தமர் - சுற்றத்தார். இஃது இங்குப் பிறப்புப் பற்றியதாகாது, இயல்பு பற்றியதாய் நின்று. இதன் ஈற்றடி இரண்டாம் அசை எதுகையாய் நின்றது.
இதனால், பக்குவம் இல்லாதார் இறைவனை உணர்ந்து அவனது அருளால் நலம்பெறுந் தன்மை இலராதல் கூறப்பட்டது.

வாயொன்று சொல்ல மனமொன்று சிந்திக்க
நீயொன்று செய்யல் உறுதி நெடுந்தகாய்
தீயென்றிங் குன்னைத் தெளிவன் தெளிந்தபின்
பேயென்றிங் கென்னைப் பிறர்தெளி யாரே. ***#1655***

பெருந் தகுதியாகிய பக்குவத்தை எய்திய மாணவனே, நீ யாதொரு செயலிலும் 'மனம், மொழி மெய்' என்னும் மூன்றும் ஒருவழிப்பட நிற்றல் வேண்டுமன்றி, அவை தனித்தனி வேறு வேறு வழிப்பட நிற்றல் கூடாது. அங்ஙனம் அவை ஒருவழிப்பட நிற்றலே உனக்கு நன்மையைப் பயப்பதாகும். அவை வேறு வேறு வழிப்படல் இழந்தோரது இயல்பாதலின், நீ அவை அவ்வாறுபட நிற்பின், உன்னை யான், 'பக்குவம் வாயாத இழிமகன்' என்று உறுதி யாகக் கொண்டு விலக்குவேன். ஆனால், உணர்விலாராய உலகர் அது பற்றி என்னைப் பின் வெகுளி மிகுதியால் பேய்த்தன்மை எய்தியவன் என இகழ்வர்.

விளக்கவுரை

'அதுபற்றி எனக்கு வருவதோர் இழுக்கில்லை' என்பதாம். 'அங்ஙனம் செய்யாமையாகிய அதுவே உறுதி' என்க. அங்ஙனம் செய்யாமை, அவை ஒருவழிப்பட்டு நிற்கச் செய்தலை உணர்திற்று. 'தீயை' என்பதன் இறுதிநிலை தொகுத்தலாயிற்று. தீமை, இங்கு இழிவு. தன் ஈற்றடிக்கு இவ்வாறன்றி 'என்று' என்பது 'தெளியார்' என்பதன் முதனிலையோடு முடிந்தாக வைத்து, 'அது பற்றி என்னைப் பிறர் பழியார்' என்று உணர்த்தலுமாம். இங்கும் 'உன்னை' என்றே பாடம் ஓதி அதற்கு இயைய உரைப்பாரும் உளர்.

இதனால், பக்குவம் எய்திய மாணாக்கற்கு அபக்குவ நெறியிற் செல்லாதவாறு விழிப்பூட்டு முகத்தால் அபக்குவிகளது போலி ஒழுக்கத்தின் இயல்பும், அவர்க்கு நல்லாசிரியரது அருள் கூடாமையும் கூறப்பட்டன.

பஞ்சத் துரோகத்திப் பாதகர் தன்மையும்
அஞ்சச் சமையத்தோர் வேந்தன் அருந்தண்டம்
விஞ்சச்செய் திப்புவி வேறுசெய் யாவிடின்
பஞ்சத்து ளாய்ப்புவி முற்றும்பா ழாகுமே. ***#1656***

பஞ்சமா பாதகத்தோடு ஒத்த, வாயொன்று சொல்ல, மனம் ஒன்று சிந்திக்க, மெய்யொன்று செய்தலாகிய இப் பாதகத்தைச் செய்வோரையும் அரசன் அவ்வமையம் பார்த்து யாவரும் அஞ்சும்படி பொறுத்தற்கரிய தண்டனையை மிகச் செய்து திருத்தாவிடின், அவனது நாடு பஞ்சத்துட்பட்டு வருந்திப் பின் உருவும் அழிந்துவிடும்.

விளக்கவுரை

பாதகத்தை இங்கு, 'துரோகம்' என்றார். 'மாபாதம் ஐந்து இவை' என்பது மேற் கூறப்பட்டது. *l* 'துரோகத்து' என்னும் உவமம் 'பாதகர்' என்பதன் முதனிலையோடு முடிந்தது. 'துரோகத்திப் பாதகர் தம்மை' என்றாராயினும், 'துரோகத்துப் பாதகர் இவர்தம்மை' என்றலே

கருத்தென்க. உம்மை, மேல் முதல் தந்திரத்தில் 'அரசாட்சி முறை' அதிகாரத்தில் அரசனால் தண்டிக்கப்படத் தக்கவராகக் கூறப் பட்டவரைத் தழுவி நின்று. 'விஞ்சை' என்றது, செயலால் நல்லராய்த் தோன்றுதல் பற்றிக் கண்ணோடி அளவிற் குறையச் செய்யாது என்றதாம். வேறுசெய்தல் - திருத்துதல்.
இதனால், அபக்குவராயுள்ளார் பக்குவர்போல ஒழுகுதல் பல தீமைக்கு ஏதுவாதல் நோக்கிக் கடியப்பட்டது.

தவத்திடை நின்றவர் தாமுன்னும் கன்மம்
சிவத்திடை நின்றது தேவர் அறியார்
தவத்திடை நின்றறி யாதவர்க் கெல்லாம்
பவத்திடை நின்றதோர் பாடது வாமே. ***#1657***

தவத்தில் நிற்கும் பக்குவிகளுக்கு நுகர்ச்சியாய் நிற்கின்ற கன்மங்கள் அனைத்தும் அவற்றை ஊட்டுவிக்கின்ற முதல்வ னுடையனவேயாய், அவர்க்கு நுகர்ச்சி யாகாமையைத் தேவரும் அறியாமாட்டார். அதனால், கன்மங்கள், எடுத்த பிறப்பில் நுகர்ச்சி யாதல், பக்குவம் இன்மையால் தவத்தில் நிற்குமாற்றை உணராதவர் கட்கேயாம்.

விளக்கவுரை

'தவம்' என்றது இங்கு *'அவன் அருளாலல்லது ஒன்றும் செய்யாமை'3* ஆகிய இறை பணியை. இதன் கண் நின்றார்க்குப் பிராரத்தம் நுகர்ச்சி யாகாமையை,
'நாமல்ல இந்திரியம்; நம்வழியின் அல்ல; வழி
நாமல்ல; நாமும் அரனுடைமை - யாம்என்னில்
எத்தனுவில் நின்றும் இறைபணியார்க் கில்லைவினை;
முற்செய்வினை யும்தருவான் முன்' 3
என்பதனானும் அறிக. *'தேவரும்'* என்னும் சிறப்பும்மை தொகுத்த லாயிற்று. பவம் - பிறப்புய பாடு - நிகழ்ச்சி. நுகர்வு. கன்மங்கள் வகை யானும், விரியானும் பவவாயினும் தொகையான் ஒன்றே யாதல் பற்றி *'அது'* என ஒருமையாற் கூறினார். *'அறியாதவர் எல்லாம்'* என்பது பாடமன்று.
இதனால், பக்குவம் இல்லாதார்க்கு வினை நீங்காமை கூறப்பட்டது.
இதன்பின் பதிப்புக்களில் காணப்படும் *'கன்றலும் கருதலும்'* என்னும் பாடல் யாப்பு வேறுபட்டுக் கிடத்தலின், நாயனார் திருமொழி யன்றாம்.

விடிவ தறியார் வெளிகாண மாட்டார்
விடியில் வெளியில் விழிக்கவும் மாட்டார்
கடியதோர் ஊன்இமை கட்டுமின் காண்மின்
விடியாமை காக்கும் விளக்கது வாமே. ***#1658***

ஒளியைக் காணும் கண் இல்லாதவர் இருள் புலர்ந்தாலும் புலர்ந்ததனை

அறியமாட்டார். அதனால், விடிந்தபின் ஒளியில் பொருள்களை நன்கு கண்டு பயன் கொள்ளவும் மாட்டார். அதுபோலத் திருவருளை உணரும் பக்குவம் இல்லாதவர் தமக்குத் திருவருள் முன்னின்று அருளுதலை உணரமாட்டார். அருளிய பின்னும் அந்த அருள் நலத்தை நுகரமாட்டார். அதனால் நீவிர் அவ்வாறின்றிப் பரியதாகிய ஊனக் கண்ணை மூடி, நுண்ணிதாகிய ஞானக் கண்ணைத் திறந்து திருவருளைக் காணுங்கள்; அத்திருவருளே அறியாமை யாகிய இருள் வாராதபடிக் காக்கின்ற ஒளியாகும்.

விளக்கவுரை

முதலிரண்டடிகள் ஒட்டணி 'விடியிலும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. கடுமை பருமையை உணர்த்திற்று. 'இமை' என்றது ஆகுபெயர். கட்டுதல் - தடுத்தல். காணுதற்குச் செயப்படுபொருள். முதற்கட் கூறியவாற்றால் 'திருவருள்' என்பது பெறப்பட்டது. 'விடியாமை' என்பது 'இரவு' என்னும் பொருட்டாய் இருளைக் குறித்தது. 'காக்கும்' என்பது, 'குற்றமே காக்க பொருளாக' *l* என்பதிற் போல நின்றது. 'திருவருளே விளக்கு' என்றதனால் 'நீவிர் அவ்விளக்கையே நுமக்குக் காட்டாகக் கொள்ளுதல் வேண்டும்' என்பதும் கூறினாராயிற்று.

இதனால், 'இருளில் அழுத்துவதாகிய அபக்குவம் நீங்குமாறு முயலல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

வைத்த பசுபாசம் மாற்றும் நெறிவைகிப்
பெத்தம் அறமுத்த னாகிப் பிறழ்வுற்றுத்
தத்துவம் முன்னித் தலைப்படா தவ்வாறு
பித்தான சீடனுக் கீயப் பெறாதானே. ***#1659***

'உயிர்களையே பற்றுதற்கு உரியன' என நூல்களில் சொல்லிவைக்கப்பட்ட, பசுத்துவத்தைத் தரும் பாசத்தை அகற்றுவ தாகிய தவநெறியில்நின்று, அதனால் அப்பாசங்களின் கட்டு நெகிழ, வீடு பெறும் பக்குவத்தை எய்தி, முன் சென்ற உலகியலினின் றும் மாறி மெய்ந்நெறியைப் பற்றி, மெய்ப் பொருளையே அடைய விரும்பி அதற்கேற்ற முயற்சியால் அதனை அடையாது, மேற்கூறியவாறு விடிவதறியாப் பேதைமை மிக்கார்க்கு மேற்கூறிய விளக்கு நல்லாசிரியரால் ஈயப்படா.

விளக்கவுரை

'வைகி' என்பது முதலாகப் போந்த எச்சங்கள் பக்குவம் படிமுறையான் முதிர்ந்து வருமாற்றை உணர்த்தி நின்றன. முன்னை மந்திரத்தில் ஒட்டணி வகையாற் கூறியதனையே இங்கு, 'அவ்வாறு' எனச்

சுட்டினார். பித்துப் போலுதல் பற்றிப் பேதைமையை, 'பித்து' என்றார். பெறுவாரது பன்மையால் விளக்கும் பலவாம் ஆதலின் 'ஈயப்பெறா' எனப் பன்மையாக ஓதினார். 'தானே' என்பது பாடமன்று.
இதனால், அபக்குவர்க்கு ஞானமும், ஞானத்தின் பயனும் கிடையாமை கூறப்பட்டது. 'ஈயப் பெறா' என்பது ஆசிரிய ராயினார்க்கும் அறிவித்தாம்.

மன்னும் மலம்ஐந்தும் மாற்றும் வகைஓரான்
துன்னிய காமாதி தோயும் தொழில் நீங்கான்
பின்னிய பொய்யன் பிறப்பிறப் பஞ்சாதான்
அன்னிய னாவான் அதற்சீட னாமே. ***#1660***

இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

'ஓரான்' என்றது, 'ஓரும் முயற்சியிலன்' என்றவாறு, காமாதி 'காமம், வெகுளி மயக்கம்' என்பன. 'இவற்றில் தோயும் தொழில்' என்க. தோய்தல் - மூழ்குதல். பின்னுதல் - கட்டிச் சொல்லுதல். அன்னியன் - ஞானத்திற்கு அயலானவன் என்க. 'ஓரான்' முதலிய நான்கும் முற்றெச்சங்களாய் நின்று 'அன்னிய னாவன்' என்னும் வினைப்பெயர் பயனிலை கொள்ள, அஃது எழுவா யாயிற்று. 'ஓராமை முதலிய நான்கனுள் ஒன்றேயே உடையோனும், பலவற்றையுடையோனும் அன்னியனாவன்' என்க.
இதனால், அபக்குவிகளது இயல்புகள் கூறப்பட்டன. இறுதிக் கண் 'அசற்சீடனாம்' என்றதனால் இஃது ஆசிரியராயினாரை நோக் கிற்றாய், 'பக்குவம் எய்தாதாரையும், எய்தினாரையும் அறியுமாறு கூறிப்பக்குவம் எய்தாதார்க்கு ஞானத்தை உணர்த்துதலும், எய்தினார்க்கு அதனை உணர்த்தாது ஒழிதலும் செய்யற்க' என உணர்த்தியதாயிற்று.

8.14.பக்குவன்

தொழிலறி வாளர் சுருதிகண் ணாகப்
பழுதறி யாத பரம குருவை
வழியறி வார்நல் வழியறி வாளர்
அழிவறி வார்மற்றை யல்லா தாரே. ***#1661***

குற்றத்தைப் பொருந்துதல் சிறிதும் அறியாத மேலான் ஆசிரியரை நூல்முறை வழியே வழிபட்டு அவர்பால் உய்யும் வழியை அறிபவரே நல்வழியை அறிபவராவர். அல்லாதா ரெல்லாம் ஏனைக்கெடும் வழியை அறிபவரேயாவர்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதலிற் கொண்டும், முதலடியை மொழி மாற்றியும்

உரைக்க. ஈற்றடியிலும், 'அல்லாதவர் மற்றை அழிவறிவார்' எனக் கூட்டுக. குற்றம், காம வெகுளி மயக்கங்கள் அவற்றைச் சிறிதும் பொருந்தாமை சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகுதலால் அமைவதாகலின், அவரே மேலான ஆசிரியாரதல் அறிய 'அத்தகையோரை அறிந்து அடைந்து வழிபடப்பெறுதல் பக்குவிகட்கேகூடும்' என்பது, 'அறிவாளர்' எனவும், 'அறிவார்' எனவும் மறித்து மறுத்து வலியுறுத்தவாற்றால் பெறப்பட்டது.

இதனால், 'அதிபக்குவரே பரம ஆசிரியரை அடைந்து வழிபட்டு உய்வர் என்பது கூறப்பட்டது.

பதைத்தொழிந் தேன்பர மாஉனை நாடி
அகைத்தொழிந் தேன் இனி ஆரொடுங் கூடேன்
சிதைத்தடி யேன்வினை சிந்தின தீர
உதைத்துடை யாய்உகந் தாண்டரு ளாயே. ***#1662***

யாவர்க்கும் மேலானவரே, உம்மை அடைய விரும் பியே அடியேன் துடித்தேன்; அவ்விருப்பதின் படி உம்மை அடைந்து இனி ஒருவரோடும் சேரமாட்டேன்; அவரது சேர்க்கையை எல்லாம் அறுத்து விட்டேன். ஆகையால் அடியேனது வினைகள் அழிந்தொழி யும் படி போக்கி என்னை ஏற்று, என் தலையிலும், உள்ளத்திலும் உமது திருவடிகளைச் சூட்டி என்னை ஆட்கொண்டருள்வீர்.

விளக்கவுரை

'என்று பக்குவிகள் பரம குருவைக் கண்டவுடன் பணிந்து இரப்பர்' என்றவாறு. எனவே, இம்மந்திரம் அவர்களது கூற்றாம். 'ஒழிந்தேன்' என்பவற்றில் ஒழிதல் துணிவுப் பொருள்மைக் கண் வந்தன. அகைதல் - அறுத்தல். இங்கு உயிரெதுகையும், மூன்றாம் எழுத்தெதுகையும் வந்தன. 'சிந்தின' என்பது முற்றெச்சம் 'அதைத்து', 'சிந்தனை' என்பன பாடமல்ல. அறக் கருணைசெய்து ஆளாவிடினும், மறக் கருணை செய்தேனும் ஆளுதல் வேண்டும் என்றற்கு, 'திருவடி சூட்டி' என உயர் சொற்கூறாது, 'உதைத்து' எனத் தாழ்சொற் கூறப்பட்டது.

இதனால், அதிபக்குவர்கள் அருட்பேராசிரியரைக் கண்டவழி அவரை அடையும் வகை கூறப்பட்டது.

பதைக்கின்ற போதே பரமென்னும் வித்தை
விதைக்கின்ற வித்தினை மேல்நின்று நோக்கிச்
சிதைக்கின்ற சிந்தையைச் செய்வே நிறுத்தி
இசைக்கின்ற அன்பருக் கீயலு மாமே. ***#1663***

உள்ளமாகிய நிலத்தில் ஆசிரியராகிய உழவர் விதைக்கின்ற விதையை முளைத்து வளர ஒட்டாது தின்றொழிக்கின்ற ஐம்புல ஆசையாகிய கிருமியை உடைய மனமாகிய மேல்மண்ணை யோக முயர்ச்சியால்

ஆஞ்ஞையும், அதனைக்கடந்த ஏழந்தானமும் ஆகிய வானத்தில் நின்று நோக்கும் மெய்யுணர்வாகிய வெயிலால் அக் கிருமிகளை அழித்துச்செம்மை படுத்தி அம்மனத்தைத் தம்மோடு ஓத்துவரச் செய்கின்ற அடியவருக்குச் 'சிவஞானம்' என்னும் விதையை உள்ளத்தில் ஊன்றக் கொடுத்தல் தக்கது.

விளக்கவுரை

இரண்டாம் அடிமுதலாகத் தொடங்கி, 'மேல் நின்று நோக்கி' என்பதனை 'சிந்தையை' என்பதன் பின்னும் ஈயலும் 'ஆம்' என்பதனை முதலடியின் இறுதியிலும் கூட்டி அவ்வித்தினை எனச் சுட்டு வருவித்து உரைக்க. 'பதைக்கின்ற போதே' என்னும் ஏகார இடைச்சொல் இரட்டுற மொழிதலாய் 'பதையாமுன் ஈயற்க' எனப் பிரிநிலைப் பொருளும், பதைத்த பொழுது சிறிதும் தாழாதே ஈக' எனத் தேற்றப் பொருளும் தந்தது. பரம் - சிவம். இஃது ஆகுபெயராய் அதனை உணரும் ஞானத்தைக் குறித்தது. ஞானத்தை 'வித்து' என ஏகதேச உருவகமாகக் கூறியதனால், ஏனையவும் ஏற்றபெற்றியால் ஆகும் உருவகமாதல் பெறப்பட்டது.

'மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையு மன்றே' *

என்னும் திருநேரிசையும் இங்கு அறியத் தக்கது. 'ஈயலும்' என்னும் உம்மை, சிறப்பு.

இதனால், பக்குவிகள் ஆசிரியன் அருளைப் பெற்றபின், அதனைப் போற்றிக் கொள்ளுமாறு கூறப்பட்டது. இதனைப் பயன் நோக்கி, 'ஆசிரியராவார் போற்றுந்தன்மை யில்லார்க்கு விரைந்து அருளுதலும், கூடா' என்னும் முகத்தாற் கூறினார்.

கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக
உள்ள பொருள்உடல் ஆவி யுடன் ஈக
எள்ளத் தனையும் இடைவிடா தேநின்று
தெள்ளி அறியச் சிவபதந் தானே. ***#1664***

(இதன் பொருள் வெளிப்படை.)

விளக்கவுரை

'கொள்ளின்' என்பது, நல்லாசிரியரை அடையும் பக்குவத்தினது அருமையுணர நின்றது. உம்மை உயர்வு சிறப்பு. உள்ள பொருள் - தம்மிடம் உள்ள அனைத்துப் பொருளும். உடலையும், உயிரையும் நோக்க இப்பொருள் மிகச் சிறிதாகலின், 'உடல் ஆவி யுடன்' என உயர்பின்வழித்தாய* மூன்றாவதன் ஒருவினை ஒடுஉருபுசொல் கொடுத்துக் கூறினார். 'இப்போது நுகர்வனவும், நுகருங்காற் செய்வனவுமாய வினைகளும் பொருளேயாம்' என்பது சித்தாந்தமாதலை இவ்விடத்து நினைக. இடைவிடாமை ஆசிரியரை. தெள்ளுதல் - சிந்தித்தல். அறிதல் - தெளிதல். இவை உபதேச மொழியினை இடைவிடாமை, இவர்றின் பொருட்டேயாம். 'சிவபதம்' என்பதன் 'உளதாம்' என்பது சொல்லெச்சமாய் நின்றது. 'தான்' என்பது தேற்றப்பொருள் தந்தது.

இதனால், ஆசிரியரை அடையும் பக்குவர் அவரை அடையுமாறும், அடைந்து பயன் கொள்ளுமாறும் கூறப்பட்டன.

சோதி விசாகம் தொடர்ந்திரு தேள்நண்டு
ஓதிய நாளே உணர்வது தான் என்று
நீதியுள் நீர்மை நினைந்தவர்க் கல்லது**.**
ஆதியும் ஏதும் அறியகில் லானே**. *#1665***

'விரிச்சிகமும், கற்கடகமும் என்னும் இரண்டு ஓரைகளையுடைய 'சுவாதி, விசாகம்' என்னும் இரு நட்சத்திங்கள் பொருந்திய, முன்னோர் சொல்லிய இருநாட்களே குருமொழியை உணர்தற்கு உரிய நாள்கள்' என்று மரபு நெறியின் சிறப்பை எண்ணுவாருள் அங்ஙனம் உணர்ந்து ஒழுகுவார்க்குக் கூறியதல்லது, இறைவனும் அதற்குரிய காரணம் எதனையும் எங்கும் சொல்லி வைக்கவில்லை.

விளக்கவுரை

'அதனால், இன்றியமையாத பொழுது ஆசிரியர் எந்த நாளையும் நாளாக, எந்த ஓரையையும் ஓரையாகக் கொள்ளலாம்' என்பதாம். 'தேள், நண்டு தொடர்ந்த சோதி விசாகம் ஓதிய இருநாளே உணர்வது' எனக் கூட்டுக. 'தொடர்ந்த' என்னும் பெயரெச்சத்து அகரம் தொகுத்தலாயிற்று. உபதேசித்தற்கு ஆசிரியர் தாம் கொள்ளும் ஓரைதேளும், நண்டும் ஆதல் வேண்டும்' என்றமையால் அவற்றிற்கு ஏற்ற மாதம் தாமே அமையுமாதலின், அது கூற வேண்டாதாயிற்று. நீர்மை, ஆசிரியர் ஆணைவழியே நிற்றல் 'நினைந்தவர்க்கு' என்பதனஅபின், 'உணர்த்தியது' என ஒருசொல் வருவிக்க. ஆதி - முதல்வன், இறைவன். உயிர்வர மூன்றாமடியிறுதியில் குற்றுகரம் கெடாது நின்றது. 'அவ்வாதியும், என ஓதலுமாம். 'அறிவிக்கிலான்' என்பதில் பிறவினை விகுதி தொகுக்கப்பட்டது.

இதனால், பக்குவிகட்குப் பயன்படுவன சிலகால மரபுகள் கூறப்பட்டன.

தொழிலார மாமணித் தூய்தான சிந்தை
எழிலால் இறைவன் இடங்கொண்ட போதே
விழலார் விறலாம் வினையது போகக்
கழலார் திருவடி கண்டரு ளாமே. **#1666**

சரியை முதலிய பணிகள் நிரம்பிவர, அதனால், சிறந்த முத்துப்பேலும் தூயதான மனத்தில் உண்டாகும் எழுச்சி காரணமாக இறைவன் அதனைத் தனக்கு இடமாகக் கொண் டருளுவான். அப்பொழுது வீணரது வெற்றிப்பாடாம் வினை நீங்கிப் போக, அப்பணிகளில் நின்றோன் சிவனது வீரக்கழலை அணிந்த திருவடியை நேரே கண்டு, அவனது அருளேயாய் நிற்பன்.

விளக்கவுரை

தொழில், இங்கு இறைவன் பணி, மணி, இங்கு முத்து. வெண்மை தூய்மையைக் குறிக்குமாதலின், தூய்மை பெற்ற மனத்திற்கு முத்து உவமையாயிற்று. 'சிந்தை தூய்தாதல் பணி நிரம்புதலாம்' என்றதனால், சரியை முதலிய பணிகளால் பக்குவம் முதிர்தல் கூறப்பட்டதாம். 'பக்குவ முதிர்ந்தவழித் திருவடிப்பேறு கிடைக்கும்' என்றதனால், 'பக்குவ முதிர்ச்சி வேண்டுவோர் மேற்கூறிய இறைவன் பணியை மேற்கொண்டு செய்க, என்றதாயிற்று.

இதனால், பக்குவம் வருமாறு கூறப்பட்டது.

சாத்திக னாய்ப்பர தத்துவந் தானுன்னி
ஆத்திக பேத நெறிதோற்ற மாகியே
ஆர்த்த பிறவியின் அஞ்சி அறநெறி

சாத்தவல் லானவன் சற்சீட னாமே. **#1667**

சத்துவ குணம் மிக்கவனாய், பரம்பொருளை அடைய எண்ணி, அப்பரம் பொருள் முதலிய நுண்பொருள்களின் உண்மையை அடியாகக்கொண்ட சமயங்களே 'சமயங்கள்' என்னும் உணர்வு உள்ளத்தில் தோன்றப்பெற்று, தொன்று தொட்டு விடாது கட்டியுள்ள பிறவிக்கட்டிற்கு அஞ்சி அறநெறியைத் தளராது மேற்கொள்ள வல்லவனே சற்சீடன் - நன்மாணாக்கன் ஆவான்.

விளக்கவுரை

'சாத்துவிகன்' என்பது மருவி நின்றது. ஆத்திகம் - உண்மைப்பொருள்களை உண்டென்று உடம்படும் நெறி அவற்றை உண்டென உடம்படாது 'இல்லை' எனப்பிணங்குவது 'நாத்திகம்' எனப்படும். முன்னையது பொது வகையில் ஒன்றாயினும், சிறப்பு

வகையில் பலவாதலை, 'பேதநெறி' என்றார். தோற்றம் - உள்ளத்தில் தோன்றுதல் இதனையே,
'தெய்வ என்பதோர் சித்தம் உண்டாகி'
என அருளிச்செய்தார் ஆளுடைய அடிகள். இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேலாகிய 'தோற்றமாகி' என்னும் சினை வினை, 'அஞ்சி' என்னும் முதல் வினையோடு முடிந்தது. இவ்வாறன்றி, 'ஆகி' என்பதனை 'ஆக' எனகத் திரித்துக்கொள்லுமாம். சாத்தல் - தரித்தல்; தாங்கல்; மேற்கொள்ளுதல். ஆத்திக புத்தி உடையவனே அறநெறியை உள்ளவாறு மேற்கொள்வானாகலானும், அவனே மாணாக்கன் ஆதற்கு உரியவன் ஆகலானும், 'ஆத்திக பேத நெறி தோற்ற மாகியே ... ... அறநெறி சாத்த வல்லானவன் சற்சீடனாமே' என்றார். 'நூல்கேட்கும் மாணாக்கர்க்கும் இந்நிலை வேண்டும்' எனக் கல்வியாசிரியர் வேண்டுதலை இங்கு நினைக.*3* 'ஆத்திகம் அடியாக வரும் அறஉள்ளமே பக்குவத்தை வருவிக்கும்' என்பது கருத்து.
இதனால், நன்மாணாக்கராம் பக்குவத்தை எய்துமாறு கூறப்பட்டது.

சத்தும் அசத்தும்எவ் வாறெனத் தான்உன்னிச்
சித்தம் உருக்கிச் சிவனருள் கைகாட்டப்
பத்தியின் ஞானம் பெறப்பணிந் தானந்த
சத்தியின் இச்சை தகுவோன் சற் சீடனே. ***#1668***

சிவனது திருவருள் ஆன்மாவைப் பக்குவப் படுத்தி நன்னெறியை அடைவித்தமையால், 'நிலை யுடைய பொருள் நிலை யாமையுடைய பொருள்களின் இயல்புகள் யாவை' என்னும் ஆராய்ச் சியைத் தலைப்பட்டு அவற்றை உள்ளவா றுணரும் உணர்வைப் பெறுதல்பொருட்டு ஆசாரியரை அன்போடு வழிபட்டு, சிவனது ஆனந்தசத்தியில் மூழ்குதற்கண் வேட்கை மிக்கவனே சற்சீடனாவன்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதற்கண் வைத்து அதனுள், 'சிவனருள்' என்பதை முதலிற் கூட்டி உரைக்க. 'ஆறு' என்பது அதன்கண் நிற்கும் பொருளைக் குறித்தன, 'ஞானம் பெறப் பத்தியின் பணிந்து' என இயைக்க. சிவனது சக்தி ஆன்மாக்களுக்கு முதற்கண் அறிவாயும், முடிவில் ஆனந்தமாயும் நின்று பயன் தருமாதலின், அவற்றை முறையே 'ஞானம்பெற' எனவும், 'ஆனந்தசத்தியில் இச்சைதகுவோன்' எனவும் கூறினார்.
இதனால் பக்குவர்க்கு ஞான வேட்கை முதிரும் - படிநிலைவகை கூறப்பட்டது.

அடிவைத் தருளுதி ஆசான் இன்றென்னா
அடிவைத்த மாமுடி மாயப் பிறவி
அடிவைத்த காய அருட்சத்தி யாலே

அடிபெற்ற ஞானத்தன் ஆசற் றுளோனே. **#1669**
என்றும் சிவனது திருவடியைத் தாங்கி நிற்கின்ற தனது சீரியதலை, நிலையாமை யுடைய பிறவித் தொடர்ச்சியின் மூலங்களைக் காய்ந்தபின் அருட் சத்தியால் ஆசாரியரை அடைந்து, 'ஆசாரியரே, இன்றே அடியேனுக்கு உமது திருவடியைச் சூட்டி அருள்செய்ய வேண்டும்' என வேண்டி நின்று, அவ்வாறே திருவடி சூட்டி அருளப்பட்ட ஞானத்தால் அசைவற நிற்பவனே மலம் நீங்கிய முத்தனாவான்.

விளக்கவுரை

முதலடியை மூன்றாம் அடியின்பின் கூட்டி யுரைக்க முடிவில் வைத்த அடியினது தொழிலை அம்முடியின் மேல் ஏற்றி கூறினார். அவ்வடியாவது திரோதான சத்தி. அதுவே பிறவியின் மூலமாகிய ஆணவாதி பாசங்களைக் காய்ந்தொழிப்பது. திரோதான சத்தி அருட்சத்தியாவதன்றிப் பிறிதில்லையாயினும் மாறுதலைப்பட்டு நிற்றல் பற்றி வேறுபோல ஓதினார். இந்நிலையே 'சத்திநிபாதம்' எனப்படுவது, 'ஆசான்' அண்மை விளி. பின்னின்ற 'வைத்த' என்பது அஃறிணைப் பன்மை வினைப் பெயர். அஃது இரண்டாவதன் தொகை பட வந்தது. இதனால், சிவனது அருள் ஆன்மாவிற்கு இருநிலையிலும் உபகரிக்குமாற்றால் ஆன்மாப் பக்குவம் எய்திப்பயன் பெறுமாறு கூறப்பட்டது.

சீராரும் ஞானத்தின் இச்சை செலச்செல
ஆராத காதல் குருபரன் பால் ஆகச்
சாராத சாதகம் நான்கும்தன் பால்உற்றோன்
ஆராயும் ஞானத்த னாம்அடி வைக்கவே. **#1670**
சிறப்புப் பொருந்திய ஞானத்தின் கண் விருப்பம் மிக மிக, அது காரணமாகர ஞானாசிரியன்பால் அடங்காத அன்பு உளதாக, அதனால், அவ்வாசிரியன் அவன் மேல் தனது திருவடியைச் சூட்டி அருள்செய்ய, அவ்வாற்றானே, 'கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல்' என்னும் நான்கு சாதனங்களையும் முற்றி உலகியலில் நீங்கினவனே அறிவுடையோரால் 'ஞானி' என ஆராய்ந்து கூறப்படும் முதிர்ந்த ஞானியாவான்.

விளக்கவுரை

சீராரும் ஞானம், சிவஞானம். இதில் இச்சை மிகுதல் தீவிரதர சத்திநிபாதத்தினாலாம். 'சாராத சாதகம் நான்கும் உற்றேன்' என்றாராயினும், 'சாதகம் நான்கினாலும் சாராமை உற்றேன்' எனறலே கருத்தென்க. சார்தற்குச் செயப்படுபொருளாகிய 'உலகியல்' என்பது வருவிக்கப்பட்டது ஈற்றடியில் உள்ள 'அடிவைக்கவே' என்பதை

இரண்டாம் அடியின் இறுதியில் கூட்டி உரைக்க.
இதனால், முதிர்ந்த பக்குவத்தில் உளதாம் தீவிரதர சத்திநிபாதத்தில் நிகழும் இயல்பு கூறப்பட்டது.

உணர்த்தும் அதிபக் குவர்க்கே உணர்த்தி
இணக்கிற் பராபரத் தெல்லையுள் இட்டுக்
குணக்கொடு தெற்குத் தரபச்சி மங்கொண்
டுணந்த்தும் மின் ஆவுடை யாள்தன்னை உன்னியே. ***#1671***

உண்மை ஞானாசிரியனாயுள்ளவன் சிவ ஞானத்தை உணரத்தத்தக்க அதிபர்குவர்கட்கே அதனை முன்பு கேள்வியளவான் உணர்த்தி, அதன்பின் அவர்கள் அதனைச் சிந்தித்துத் தெளிந்த தெளிவு நிலையில் சிவனது வியாபகத்துள் அவர்களை வியாப்பியமாகச் செய்தலாகிய நிட்டையை எய்துவித்து, அந்நிட்டை நிலைபெற்ற வழி கிழக்கு முதலிய திசைப் பாகுபாடுகளுள் யாதும் இல்லாதவாறு சிவனது வியாபகத்தை முற்றுமாகத் தலைப் படுவிப்பன். அங்ஙனம் அச்செயல் அனைத்தையும் அவன் செய்வது, அனைத் துயிர்களையும் உடைய அருட் சத்தியைத் தியானித்தே.

விளக்கவுரை

மின் - மின்போலும் பெண். 'மின்னாகிய ஆவுடையாள்' என்க. அவளை உன்னுதலாவது. தனது ஞானேச் சாக்கிரியைகள் யாவும் அவளாகவே நிற்றல். 'ஆவுடையான்' எனப் பாடம் ஓதுவோர், 'மின்னையுடைய ஆவுடையான்' என உரைப்பர். 'ஆவுடையாள்' என்பதே வழக்கின்கண் மரபுப்பெயராய் வழங்கும். எவ்வாறு ஓதினும், அத்தொடர் சிவோகம் பாவனையைக் குறிப்பதே. துரியமாகிய அருள் நிலையுள் நிறுத்தலை, 'எல்லையுள் இட்டு' எனவும் அதீதமாகிய ஆனந்தநிலையுள் நிறுத்தலை, 'திசைப் பாகு பாடு நீக்கி' எனவும் கூறினார். குணக்கு - கிழக்கு. உத்தரம் - வடக்கு. பச்சிமம் - மேற்கு. கொண்டு - தான் கைக்கொண்டு. என்றது 'அவனுக்குத் தோன்றாவகை செய்து' என்றதாம்.
இதனால், அதிபக்குவம் உடையார் குருவருளால் முத்தி நிலையை விரையப் பெறுதல் கூறப்பட்டது. இதனானே, ஞானாசிரியராவார். அதிபக்குவர்க்கு விரைய அருளல் வேண்டும் என்பதும் குறிப்பாற் பெறப்பட்டது.

இறையடி தாழ்ந்ததை வணக்கமும் எய்திக்
குறையது கூறிக் குணங்கொண்டு போற்றச்
சிறையுடல் நீயறக் காட்டிச் சிவத்தோ
டறிவுக் கறிவிப்போன் சன்மார்க்கி யாமே. ***#1672***

குருவருளை விரும்பும் மாணவனே, உன்முன் குருவாய் வந்து நிற்கும் சிவனை அங்ஙனமான சிவனாகவே கண்டு அவனது திருவடிகளில்

வீழ்ந்து, ஏகாங்க திரியங்க பஞ்சாங்க சடங்க அட்டாங்கங்களாகிய ஐந்து வணக்கங்களையும் செய்து, பிறவித் துயரால் வருந்தும் உனது குறையை விண்ணப்பித்து, அச்சிவனது அருட்குணங்கள் பலவற்றையும் எடுத்துக் கூறிப் புகழ்ந்தபொழுது, நீயிருக்கும் சிறைக்கூடமாகிய உடம்பையே நீ என மயங்கியிருக்கும் உனது மயக்கத்தைப் போக்கி உனது உண்மையை உனக்குத் தெரிவித்து, நீ சிவத்தோடு ஒன்றாகும் நிலையை உன் அறிவு அறியும்படிச் செய்பவனே உண்மை ஞானாசிரியனாவான்.

விளக்கவுரை

'இறை', குருவாய் வந்து நிற்கும் இறை என்பது அதிகாரத்தால் விளங்கிற்று. ஏகாங்க வணக்கமாவது கைகட்டித் தலையால் மட்டும் வணங்குவது. திரியங்க வணக்கமாவது, இரு கைகளையும் தலைமேற் குவித்துக் கும்பிட்டுத் தலை தாழ்த்து வணங்குதல். பஞ்சாங்க வணக்கமாவது மோவாய் இரு தோள் இரு முழந்தாள் இவ் ஐந்துறுப்பும் நிலத்தில் தோய வணங்குதல். சடங்க வணக்கமாவது, மோவாய் இரு கைகள், மார்பு, இரு கால்கள் இவ் ஆறுறுப்பும் நிலத்தில தோய வணங்குதல், அட்டாங்க வணக்கமாவது, மேற்கூறிய ஆறுறுப்புக்களுடன், இருகாதுகளும் நிலத்தில் தோய வணங்குதல். வணக்கம் நமஸ்காரம் எனப்படும். எட்டுறுப்போடு கூடிய வணக்கத்தை 'சாட்டாங்க நமற்காரம்' என்பர். பல 'வகையாலும் வணங்கி' என்றவாறு, 'நீ' என்பதன்பின் 'ஒன்றாக' என்பதும், 'அறிவுக்கு' என்பதன்முன் 'உனது' என்பதும், எஞ்சி நின்றன. அறிவித்தல் அறியும் தன்மையை உளதாக்கல். இதனால், பக்குவி நல்லாசிரியனை அனுபவத்தில் தெளியுமாறு கூறப்பட்டது. பக்குவம் இன்மையால் நல்லாசிரியனைத் தலைப்படாது, ஆசிரியன் அல்லாதானைத் தலைப்பட்டவழி அதனை அனுபவத்தால் உணர்ந்து நீங்குமாறும் இதுவேயாதல் அறிக. ஆசிரியன் அல்லாதானை அடைந்து பயன் பெறாது எய்த்த மாணவன் அவனை வருத்தத்தோடு விட்டு நீங்கி நல்லாசிரியனை நாடிச் செல்லு தற்கு. தேன் இல்லாத மலரை அடைந்த தேனீ பின்னர் அதனைவிட்டுத் தேன் உள்ள மலரை நாடிச்செல்லுதலை உவமையாகக் கூறுவர்.

வேட்கை விடுநெறி வேதாந்த மாதலால்
வாழ்க்கைப் புனல்வழி மாற்றிச் சித் தாந்தத்து
வேட்கை விடும்மிக்க வேதாந்தி பாதமே
தாழ்க்கும் தலையினோன் சற்சீட னாமே. ***#1673***

காமியத்தை நிரப்பும் நெறி வேத நெறியாக, அதனை விடுத்து நிட்காமியமாவது சிவனிடத்துச் செய்யும் பத்தியே யாதலாலும், ஒழுக்கமாகிய நீரை உலகியலாகிய மடையினின்றும் மாற்றிச் சித்தாந்த நெறியாகிய மடையிற் பாய்ச்சி ஆசையை ஒழிக்கும் உண்மை

வேதாந்தியே குருவாகத்தெளிந்து அவன் திருவடிகளில் தாழ்ந்து வணங்கி, அவன் வழி நிற்பவனே சற்சீடனாவன்.

விளக்கவுரை

'வேதத்தை வேட்கைவிடும் நெறி' என்றமை யால், 'வேத நெறி அதனையுடையது' என்பது பெறப்பட்டது. அஃதாவது, பலவகை வேள்விகளால் இம்மை மறுமை உலகங்களில் உள்ள இன்பத்தை அடையும் நெறியாம். 'வாழ்க்கை' என்றது ஒழுக லாற்றை. 'புனலைச் சித்தாந்தத்து ஆக வழிமாற்றி என்க. வழி, இயல் பாய் அமைந்த உலகியல் 'ஆக' என்பது தொகுத்தப்பட்டது. முதல் மூன்று அடிகளால், 'உண்மை வேதாந்தியாவன் சித்தாந்தியே' என்பது உணர்த்தப்பட்டதாம். இதன்கண் மூன்றாமெழுத் தெதுகை வந்தது.

இதனால், சற்குரு (நல்லாசிரியன்) கிடைக்கப் பெற்றோனே பக்குவியான சற்சீடன் (நன்மாணாக்கன்) என்பது கூறப்பட்டது.

சற்குணம் வாய்மை தாயவிவே கம்தண்மை
சற்குரு பாதமே சாயைபோல் நீங்காமே
சிற்பர ஞானம் தெளியத் தெளிவோர்தல்
அற்புத மேதோன்றல் ஆகும்சற் சீடனே. ***#1674***

சற்குணம் முதல் அற்புதம் ஈறாக உள்ள ஏழியல்பும் உடையவனே சற்சீடனாவான்.

விளக்கவுரை

சற்குணம் - நற்பண்பு. அது மனம், மொழி, மெய் என்னும் மூன்றனுள் யாதொன்றானும் பிறவுயிர்க்குத் தீங்கு தேடாது இயன்ற அளவு நன்மை தேடுதல். விவேகம் - நன்மை தீமைகளைப் பகுத்துணர்ந்து, தீமையை விலக்கி, நன்மையைக் கொள்ளல். தண்மை - யாவர் மாட்டும். எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் உடைமை. சிற்பர ஞானம் - பேறறிவாகிய பரம்பொருளை அறியும் அறிவு. அதனைத் தெளிதற் பொருட்டு அதற்குரிய வாற்றால் ஓர்தலாவது. நூல்களாலும், பொருந்துமாற்றானும் ஆராய்ந்து ஒருமைபெற உணர்தல். அற்புதம் தோன்றலாவது*!* உலகியலில் நின்றபொழுது தோன்றாத புதுமைகள் தோன்றப் பெறுதல். அஃதாவது, 'பேரா, ஒழியாப், பிரிவில்லா, மறவா, நினையா, அளவிலா, மாளா இன்ப மாக்கடல்' *l* போலப் புதிது புதிதாக எல்லையின்றி விளையக் காண்டல். 'சற்சீடன்கண் ஆகும்' என ஏழாவது இறுதிக்கண் தொக்கது. 'சற்சீடன்கண் ஆகும்' எனவே, 'அது' பக்குவத்தின் பயன்' என்றதாயிற்று. 'சற்சீடற்கே' எனப் பாடம் ஓதலுமாம்.*b*

இதனால், பக்குவ மிகுதியது பெரும்பயன் கூறி முடிக்கப்பட்டது.

ஏழாம் தந்திரம்

9.1.ஆறாதாரம்

நாலும் இருமூன்றும் ஈரைந்தும் ஈராறும்
கோலின்மேல் நின்ற குறிகள் பதினாறும்
மூலங்கண் டாங்கே முடிந்த முதல்இரண்டும்
காலங்கண் டான்அடி காணலும் ஆமே. ***#1675***

ஆறு ஆதாரங்களுள் மூலாதாரம் முதலிய ஐந்தனையும் முதலில் நன்கு தரிசித்து, அதன்பின் ஆறாவதாய் உள்ள ஆஞ்ஞையைத் தரிசிக்கும் பொழுது சிவனது திருவடியைத் தரிசித்தல் கூடும்.

விளக்கவுரை

'நாலு' முதலாகக் கூறப்பட்டவை ஆதார தாமரைகளை அவற்றின் இதழ் எண்ணாற் கூறியனவாம். 'முதல்' என்பது 'தலைமை' என்னும் பொருட்டாய் ஆஞ்ஞை ஆதாரத்தை உணர்த்திற்று. 'முதல் இரண்டும்' - என்பதன்பின் 'காண' என ஒரு சொல் வருவித்து, அதனை 'மூலம் கண்டாங்கே' என்பதற்கு முடிவாக் குக. 'மூலம் கண்டவாறே காண்க' என்பதனால் மூலாதாரத்தை முதலில் கண்டமை அநுவாத முகத்தாற் கூறப்பட்டது. கோல், முதுகந் தண்டு. அதன்மேல் உள்ளது விசுத்தி. இதனால் ஆதார யோகத்தின் இயல்பு கூறப்பட்டது.

ஈராறு நாதத்தில் ஈரெட்டாம் அந்தத்தின்
மேதாதி நாதாந்த மீதாம் பராசத்தின்
போதா லயத்து அவிகாரந் தனில்போதம்
மேதாதி ஆதார மீதான உண்மையே. ***#1676***

பிரணவ கலைகளில் பன்னிரண்டளவும் ஏறிக் காணின், நாதத்தளவும் செல்லலாம். பதினாறளவும் ஏறிக் காணின், நாதத்தைக் கடக்கலாம். மேதை முதலாக நாதாந்தம் ஈறாக உள்ள கலை களுக்கு மேல் உள்ளது பராசத்தியே. அந்த சத்தி ஞானமயமானது; விகாரம் அற்றது. அதுவே ஞானத்தைப் பெறும் இடமாகும். மேதை முதலாகச் சொல்லப்படுகின்ற பிராசாதகலா யோகத்தின் உண்மை இதுவாகும்.

விளக்கவுரை

இதன் விளக்கங்களை மூன்றாம் தந்திரத்துள் 'கலை நிலை' என்னும் அதிகாரத்திற் காண்க. 'போத ஆலயத்து அவிகாரந்தனில் போதம் உளது' என்க. பிராசாத யோகத்தின் பயன் ஆதார நிராதாரங்களைக் கடக்கும் முறையால் பராசத்தியே வடிவமாகப் பரசிவன் நிற்கும் இடமாகிய மீதானத்தை அடைதலும், அங்ஙனம் அடைதலாலே பரமபந்தமாகிய நாதத்தையும் கடந்து 'சேவுயர் கொடியினான்றன் சேவடி சேர்தலும்'

(சிவஞான சித்தியார், சூ.1) ஆகும் என்றபடி. இதன் முதல் அடி உயிரெதுகை பெற்றது.
இதனால் பிராசாத யோகத்தின் முடிநிலை இயல்பு கூறப்பட்டது.

மேலென்றும் கீழென் றிரண்டறக் காணுங்கால்
தானென்றும் நானென்றும் தன்மைகள் ஓராறும்
பாரெங்கு மாகிப் பரந்த பராபரன்
காரொன்று கற்பக மாகிநின் றானே. **#1677**

நிராதாரத்தையும் கடந்து மீதானத்தில் பாரசத்தியைத் தலைப்பட்ட வழி ஏகதேச உணர்வு நீங்கி வியாபக உணர்வு எய்தப் பெறும். அவ்வுணர்விலே சருவ வியாபகனாகி சிவன் இனிது விளங்கித் தனது எல்லையில் இன்பத்தை இனிது வழங்கி நிற்பன்.

விளக்கவுரை

'கீழென்று' என்பதன் பின்னும் எண்ணும்மை விரிக்க. 'இரண்டறக் காணுங்கால்' - என்பதை 'நானென்றும்' என்பதன் பின்னர்க் கூட்டிப் பொருள் கொள்க. 'தன்மைகள்' - என்றது, ஆதார நிராதாரங்களில் நிகழ்ந்த அனுபவங்களை, 'கார் ஒன்று' - என்பதில் 'ஒன்று' உவம உருபு. கார் - மேகம். கற்பகத் தருவை, 'கார் போலும் கற்பகம்' எனச் சிறப்பிக்கும் முகத்தால் 'கார்போலவும், கற்பகம் போலவும் நிற்பான்' - எனக் குறித்தார். 'கார் ஒன்றோ' - எனப் பாடம் ஓதி, 'ஒன்றோ' - என்பதை 'எண்ணிடைச் சொல்' என உரைப்பினும் பொருந்தும், 'ஆகி நின்றான்' - என்பதில் ஆக்கம் உவமை குறித்து நின்றது. 'ஆள்வாரிலி மா டாவேனோ'*(தி.8 கோயில் மூத்த திருப்பதிகம், 7)* - என்பதிற் போல 'நின்றான்' - என எதிர்காலம் தெளிவு பற்றி இறந்தகாலமாகக் கூறப்பட்டது. இம்மந்திரமும் மேல் உள்ள மந்திரம் போல உயிரெதுகை பெற்று வந்தது.
இதனால் பிராசாத யோக முடிநிலைப் பயன் கூறப்பட்டது.

ஆதார சோதனை யால்நாடி சுத்திகள்
மேதாதி ஈரெண் கலாந்தத்து விண்ணொளி
போதா லயத்துப் புலன்கரணம் புந்தி
சாதா ரணம்கெட்டாற் றான்சக மார்க்கமே. **#1678**

ஆதார யோகத்தால் எய்தும் பயன் நாடிகள் சுத்தியாகி, அமுதம் நிரம்பப் பெறுதலே, *(அதனால் மனம் ஒருங்கிய தியான சமாதிகளே உண்டாகும்,)* ஆகவே, பிராசாத யோகத்தில் பதினாறாவது கலைக்கு அப்பால் உள்ள மீதானத்திற்றான் மேல் உள்ள மந்திரத்தில் கூறியவாறு 'சிதாகாசம்' எனப்படுகின்ற பராசத்தியின் விளக்கம் உள்ளது. 'போதாலயம்' என மேற் கூறப்பட்ட அதனை அடைந்து ஐம்புலன்களும், நாற்கரணங்களும், சீவ போதமும் என்னும் இவற்றின் குறும்புகளாகிய பெத்தம் நீங்கினால்

தான் 'சகமார்க்கம்' - என்னும் யோகம் முற்றியதாகும்.

விளக்கவுரை

எனவே, 'பிறவாறாக வரும் யோகங்கள் எல்லாம் நிறைவு பெறாத யோகங்களே' என்றபடி. 'சுத்திகள்' - என்பதன் பின், 'எய்தும்' என்னும் பயனிலையும் 'விண்ணொளி' என்பதன்பின் 'உளது' - பயனிலையும் அவாய் நிலையாய் நின்றன. 'அப் போதா லயத்து' எனச் சுட்டு வருவித்துக் கொள்க. 'ஆலயத்துக் கெட்டால்' என இயையும், அஃது ஏழாம் வேற்றுமைத் தொகை. சாதாரணம் - பொதுவியல்பு. உயிர்கட்குப் பெத்த நிலை பொதுவியல்பும், முத்திநிலை உண்மை யியல்பும் ஆதலை நினைவு கூர்க.

இதனால் பிராசாத யோக முடிநிலைப் பயனது சிறப்பு ஏனை யோகப் பயன்களின் சிறப்பின்மையோடு ஒருங்கு வைத்து உணர்த்தப் பட்டது.

மேதாதி யாலே விடாதோம் எனத் தூண்டி
ஆதார சோதனை அத்துவ சோதனை
தாதார மாகவே தான்எழச் சாதித்தால்
ஆதாரம் செய்போக மாவது காயமே. ***#1679***

மோதாதி கலைகளின் வழியே பிரணவ நினைவை இடைவிடாது வளர்த்து, அதனாலே ஆதார சோதனை அத்துவ சோதனைகளைச் செய்தால், உணர்வு மிகுதலே யன்றி, உடம்பும் விரைவில் வீழ்ந்தொழியாது சீவபோகத்தைத் தலைப்படுதற்குத் துணையாய் நெடிது நிற்கும்.

விளக்கவுரை

'சோதனை' எனினும், 'சுத்தி' எனினும் ஒக்கும். பிராசாத யோகத் தானங்களில் ஆறத்துவாக்களும் அடங்கி நிற்கும் முறையைப் பிராசாத நூல்களிற் காண்க. தாதாரம் ஆக - அதுவே பற்றுக் கோடாக, தான் - ஆன்மா. அஃது எழுச்சி பெறுதல் உணர்வினாலேயாகலின் அவ்வுணர்வினது எழுச்சியை ஆன்மாவின் எழுச்சியாகக் கூறினார். 'காயம் போகம் செய் ஆதாரம் ஆவது' - என மாற்றிக் கொள்க. போகம் - சிவபோகம்.

இதனால், 'பிராசாத யோகம் ஏனை யோகப் பயன்களையும் தரும்' என்பது கூறப்பட்டது.

ஆறந் தமும்கூடி ஆகும் உடம்பினில்
கூறிய ஆதாரம் மற்றுங் குறிக்கொண்மின்
ஆறிய அக்கரம் ஐம்பதின் மேலே
ஊறிய ஆதாரத் தோரெழுத் தாமே. ***#1680***

'உடம்பு ஆறாதாரங்களோடே அமைந்தது' - எனப் பொதுவாகச்

சொல்லப்பட்டாலும் மேற் கூறிய ஏழாந் தானமும், அதற்குமேல் உள்ள நிராதாரமும் ஆகிய அவைகளையும் தரிசிக்கக் கடவீர். ஏனெனில், ஆறாதாரங்களில் அடங்கி நிற்கின்ற ஐம்பது எழுத்துக் களும் காரிய எழுத்துக்களேயாக, காரண எழுத்தாகிய பிரணவம் அந்தக் காரண நிலையிலே நிற்கும் இடம் அவைகளே யாகலின்.

விளக்கவுரை

எனவே அதனை உணராதவழி உயிருணர்வு பாச ஞானம் ஆகாது பதிஞானமாய் நிற்றல் கூடாது' என்றபடி. 'ஆதாரம்' என்பதன் பின்னும் எண்ணும்மை விரிக்க, ஆறுதல், அடங்குதல். ஊறுதல் - அடிநிலையாய் நிற்றல். 'ஆதாரத்து' என்பதனை 'மேல்' என்பதன் பின்னர்க் கூட்டுக. இதனால் பிராசாத யோகத்தின் மேல்நிலையது சிறப்புக் கூறப்பட்டது.

ஆகும் உடம்பும் அகின்ற அவ்வுடல்
போகும் உடம்பும் பொருந்திய வாறுதான்
ஆகிய அக்கரம் ஐம்பது தத்துவம்
ஆகும் உடம்புக்கும் ஆறந்த மாமே. ***#1681***

தூலதேகம் தோன்றுதற்கு முதலாயுள்ள சூக்கும தேகமும் இறுதியில் அழிவதேயாம். இனிக் காரியமாதல் பற்றி அநித்திய மாதல் தெளிவுற நிற்கின்ற தூல தேகம் சூக்கும தேகத்தோடு இயைந்து நின்று அறிவும் செயலும் உடையதாதல் காரிய எழுத்துக்களாகிய ஐம்பதனாலேயாகும். ஆகவே சூக்குமதேகத்திற்கும் ஆறாதாரங்களின் இயைபு உள்ளதே.

விளக்கவுரை

'அதனால், ஆதார யோகத்தை இகழற்க' - என்பது குறிப்பெச்சம். 'காரணமாதல் பற்றியே - நித்தியம் - என மலையற்க' என்றற்கு அழிகின்ற அவ்வுடல்' என்பதனைக் கூறினார். 'உடலே' என்னும் தேற்றேகாரம் தொகுக்கப்பட்டது. தத்துவம்' - என்பது இங்கு எழுத்தின்மேல் நின்றது. இதன்பின் 'ஆதலின்' என்பது வருவிக்க. 'ஆம்' என்றது, 'உரியன' என்றவாறு.
இதனால், ஆதார யோகத்தின் இன்றியமையாமை வலியுறுத்தப் பட்டது.

ஆய மலர்இன் அணிமலர் மேலது
வாய இதழும் பதினாறும் அங்குள
தூய அறிவு சிவானந்த மாகிப்போய்
மேய அறிவாய் விளைந்தது தானே. ***#1682***

ஆராய்ச்சிக் கருவியாகிய மனத்திற்கு இடமாய் உள்ள இருதய தாமரையாகிய இனிய அழகிய மலரின் மேல் உள்ள தாகிய ஓர் ஆதாரமாய் நிற்கும் இதழ்கள் பதினாறும் அவ்விடத்திலே உள்ளன. அதனை அடைந்த அறிவே மாசு நீங்கிச் சிவத்தோடு கூடி அதன்

ஆனந்தத்தைப் பெற்று பின் அந்தச் சிவத்தின் வேறாய் நில்லாது
ஒன்றாய் நிற்கும் முடிநிலையை எய்தும்.

விளக்கவுரை

இருதயத்திற்குமேல் உள்ள ஆதாரம் விசுத்தி. அதனை அடையும் யோகமே ஆதார யோகத்தின் முடிநிலைக்கு அணித்தாவது ஆதலின், அதற்குக் கீழ் நிற்கும் யோகமெல்லாம் 'யோகம்' எனப் படாது என்றற்கு இவ்வாறு கூறினார். விசுத்தி பற்றிய விளக்கத்தைத் தந்து, அதன் பின்னர், 'தூய அறிவு' என்றமையால், அதனை அடைந்த அறிவு' என்பது பெறப்பட்டது. முடிநிலையை அடைதலை 'விளைதல்' - எனக் கூறினார். 'மேலது' என்பதன் ஈற்றுக் குற்றிய லுகரம் கெடாது நின்று உடம்படு மெய்பெற்றது. உம்மை இரண்டனுள் முன்னது இறந்தது தழுவிய எச்சம். பின்னது முற்று.

இதனால், 'யோகத்தைக் கடைபோகச் செய்யாவிடின் அஃது யோகமாய்ப் பயன் தராது என்பது கூறப்பட்டது.

*9.2.*அண்ட லிங்கம்

இலிங்கம தாகுவ தியாரும் அறியார்
இலிங்கம தாகுவ தெண்டிசை யெல்லாம்
இலிங்கம தாகுவ தெண்ணெண் கலையும்
இலிங்கம தாக எடுத்த துலகே. ***#1683***

[ஏதோ ஒன்றை மட்டுமே 'இலிங்கம்' என உலகவர் நினைத்தால்,]
இலிங்கம் - என்பதன் உண்மையை உணர்ந்தவர் அரியர். எட்டுத் திசைகளாய் விரிந்து காணப்படும் உலகம் முழுதுமே இலிங்கம். அறுபத்து நான்காகச் சொல்லப்படுகின்ற கலைகளும் இலிங்கம். இறைவன் உலகத்தைத் தனது அருட்குறியாகவே உண்டாக்கினான்.

விளக்கவுரை

'ஆவது' என்பன இரண்டும் தொழிற் பெயராய் நின்றன. 'எண்டிசை' என்றதனால் பொருளுலகமும் 'எண்ணெண் கலை' என்றதனால் சொல்லுலகமும் குறிக்கப்பட்டன.

இதனால் எல்லாம் இலிங்கமாதல் கூறப்பட்டது.

உலகில் எடுத்தது சத்தி முதலா
உலகில் எடுத்தது சத்தி வடிவா
உலகில் எடுத்தது சத்தி குணமா
உலகம் எடுத்த சதாசிவன் றானே. ***#1684***

உலகத்தைத் தோற்றுவித்த இறைவன் உலகில் அனைத்துப் பொருள்களையும் ஆக்கியது தனது சத்தியே பொருளாக வும், பொருளின் வடிவமைப்பாகவும், குணமாகவும் அமைத்தேயாம்.

விளக்கவுரை

'அதனால் உலகமே இலிங்கம் ஆதலில் ஐயமில்லை' என்பது குறிப்பெச்சம். 'எல்லாம் சிவமயம்' என்றல், சிவன் சத்தியாய் நிற்கும் நிலைபற்றியே என்பது தெளிவாகலின், இவ்வாறு கூறினார். கூறவே, 'சிவனது திருமேனி சத்தியாதல் பற்றி உலகமே இலிங்கமாதல் தெளிவாகும்' என்பதாம். 'பொருள்' என்றது செயலாற்றலும், பயன் தருதலுமாகிய இவைபற்றி. 'முதல்' எனினும் 'பொருள்' எனினும் ஒக்கும். ஈற்றடியை முதலிற் கொள்க.
இதனால், உலகமே இலிங்கமாதல் தெளிவிக்கப்பட்டது.

போகமும் முத்தியும் புத்தியும் சித்தியும்
ஆகமும் ஆறாறு தத்துவத் தப்பாலாம்
ஏகமும் நல்கி யிருக்கும் சதாசிவம்
ஆகம அத்துவா ஆறும் சிவமே. ***#1685***

ஆன்மா முப்பத்தாறு தத்துவங்களினின்றும் நீங்கித் தான் தனித்து நிற்கும் நிலையையும், அதன்பின் அது தன்னைப் பெற்று நிற்கும் நிலையையும், அந்நிலைக்கண் விளைகின்ற தனது பரபோகத்தையும் தருதலேயன்றி, உடம்பும், அதனால் உண்டாகின்ற புலன் உணர்வும் அதனால் வரும் புலன் இன்பமும் என்னும் இவற்றையும் தந்து நிற்பான் சிவன் ஆதலின் அவன், சிவாகமங்களில் பாசக் கூட்டமாகச் சொல்லப்படுகின்ற ஆறத்துவாக்களாயும் விளங்குவான்.

விளக்கவுரை

'ஏகமும், முத்தியும், போகமும் - ஆகமும், புத்தியும், சித்தியும், என ஓதற்பாலதனைச் செய்யுள் நோக்கி முறை பிறழ வைத்தார். சிவன் தன்னையடையச் செய்தலே முத்தியாதலை நினைக. யோகம், ஏற்புழிக் கோடலால் பரபோகமாயிற்று. எண்ணிய எண்ணியாங் கெய்தும் உலகபோகத்தை, 'சித்தி' என்றார். உயர்ந்தவற்றையும், தாழ்ந்தவற்றையும் உடன் வைத்துக் கூறிய குறிப்பால், 'உயர்ந்தவற்றையேயன்றித் தாழ்ந்தவற்றைத் தருபவனும் சிவனே' என்பது போந்தது. தாழ்ந்தவற்றைத் தருதல் அவற்றின்கண் உவர்ப்புத் தோன்றுதற் பொருட்டு,
'பந்தமும் வீடும் படைப்போன் காண்க'
-தி.*8* திருவண்டப்பகுதி, *52*
என்றாற்போலும் திருமொழிகளை நினைக.
'பாசமாகிய அண்டங்கள் அனைத்தையும் கடந்து நிற்பவ னாகிய சிவன் பாசங்களாகிய அண்டமாய் நிற்றல் எவ்வாறு என்னும் ஐயத்தை நீக்குதற்கு இவ்வாறு அருளிச் செய்தார்.

'அண்டமாய், ஆதியாய், அருமறையோ டைம்பூதப் பிண்டமாய்
உலகுக்கோர் மெய்ப்பொருளாம் பிஞ்ஞகனை'
-தி.4 ப.7 பா,4
என நாவுக்கரசரும் அருளிச்செய்தார். இதனானே பிண்டமும் இலிங்க
மாதற்கு ஐயமின்று என்பது பெறப்படும்.
இதனால் அண்டம் இலிங்கமாதல் பற்றி எழுவதோர் ஐயம்
அறுக்கப்பட்டது.

ஏத்தினர் எண்ணிலி தேவர்எம் மீசனை
வாழ்த்தினர் வாசப் பசுந்தென்றல் வள்ளலென்
றார்த்தனர் அண்டங் கடந்தப் புறம்நின்று
சாத்தனன் என்னும் கருத்தறி யாரே. **#1686**

தேவர் பலரும் தாம்செய்த புண்ணியத்தின் பயனாகச் சிவன்
உருவத்திருமேனி கொண்டு வெளிப்படக் கண்டு புகழ்ந்தும்,
வாழ்த்தியும், இன்பப் பொருளாக உணர்ந்தும், வேண் டுவார்
வேண்டுவதை அருளப்பெற்று, 'வரையாது வழங்கும் வள்ளல்' என
ஆரவாரித்தும் நின்றாராயினும், 'அவன் உண்மையில் உலகங்
கடந்தவனே' என்னும் உண்மையை உணர்கின்றிலர்.

விளக்கவுரை

'அஃது அவர்கள் அவனைத் தம்மில் ஒருவனாக எண்ணும் அதனால்
விளங்கும்' என்பது கருத்து. எனவே, 'அவன் அண்டலிங்கமாய் நின்று
வழிபடுவார் செய்யும் வழிபாட்டினை ஏற்றுப் பயன் தருவானாயினும்
உண்மையில் அவன் உலகங்கடந்தவன் என்பதை அறியாமை
குற்றமாம்' என்றபடி. அவனது உண்மை நிலையை அறிந்த பொழுதே,
'அவன் நமக்காக இறங்கி வந்து அருள் செய்கின்றான்' என்பது விளங்க,
அதனால் அவன்மாட்டு அன்பு நிகழ் தலும், அதனை அறியாத பொழுது
அங்ஙனம் அன்பு நிகழாமையும். அன்பு நிகழாது செய்யும் வழிபாடு,
வழிபாடு ஆகாமையும் உளவாதல் பற்றி, 'அவனது உண்மையை
உணராமை குற்றம்' எனக் கூறினார்.
இதனால் 'அண்டலிங்கம் முதலிய இலிங்கங்களாய்ச் சிவன் நிற்றல்
உயிர்கள் மாட்டுவைத்த அருள் காரணமாக' என்பது கூறப்பட்டது.

ஒண்சுட ரோன் அயன் மால் பிர சாபதி
ஒண்சுட ரான இரவியோ டிந்திரன்
கண்சுட ராகிக் கலந்தெங்குந் தேவர்கள்
தண்சுட ராய்எங்கும் தற்பரம் ஆமே. **#1687**

அந்தப் பரம்பொருளாகிய சிவம் தீக் கடவுள், அயன், மால், உபப்பிரமா,
சூரியன், சந்திரன் ஆகியோரது கண்களுக்கு அவரவர் வழிபடும்
இலிங்கமாகியும், அவ்விலிங்கங்களை வழிபடும் பொழுது அவர்கள்

விரும்பியவற்றை வழங்க எங்கும் வெளிப்படும் அழகிய மூர்த்திகளாயும் விளங்கினும் எங்கும் கலந்து நிற்கும் பெரும்பொருளேயாகும்.

விளக்கவுரை

'தற்பரம்' என்பதை முதலில் வைத்து உரைக்க. பிரமனால் அவனது படைத்தற்றொழிலை இயற்றப் படைக்கப் படுபவர், 'உபப்பிரமாக்கள்' எனப்பட்டு, 'பிரசாபதிகள்' எனவும் கூறப் படுவர். 'தட்சப் பிரசாபதி' என்பது காண்க. தேவருள் சிறப்புடைய சிலரை எடுத்துக் கூறியவாறு. செவ்வேள் ஈற்றில் 'இவர்தம்' என்பது தொகுத்தலாயிற்று. 'கட்சுடர்' என்னும் நான்காவதன் தொகை எதுகை நோக்கி மெலிந்து நின்றது. அதன்கண் 'சுடர்' என்றது இலிங்க வடிவினை. தேவர் யாவரும் லிங்க வடிவில் சிவனை வழிபடுதல் வெளிப்படை. 'கலந்தெங்கும்' என்பதை இறுதியில் 'ஆம்' என்பதனோடு இயைத்து முடிக்க. 'அத்தேவர்கள்' எனச் சுட்டுவருவித்துக் கொள்க. சிவனது மூர்த்தம் நிறத்தால் பொங்கழலோடு ஒப்பதாயினும், வெப்பம் இன்றித் தட்பக் குணமேயுடைத்தாய் இருத்தல் பற்றி, 'தண்சுடராய்' என்றும், வழிபடுவார் வழிபடும் இடங்கள்தோறும் அவர்க்கு அருள்புரியத் தோன்றுதலால், 'எங்கும் தண்சுடராய்' என்றும் கூறினார். 'எங்கும் கலந்து ஆம்' என்பதில் ஆதல் உளதாதல். இதனால், 'அவன் இலிங்கம் முதலிய கண்டப் பொருளாய்த் தோன்றினும் அகண்டப் பொருளேயாதலை நினைதல் வேண்டும்' என்பது கூறப்பட்டது. 'எங்கும் தண்சுடராய்' என்றதனால் இலிங்க வடிவில் வழிபடுவார்க்கு அவன் வெளிப்பட்டு அருள் புரிதல் குறிக்கப் பட்டது.

தாபரத் துள்நின் றருளவல் லான்சிவன்
மாபரத் துண்மை வபடுவா ரில்லை
மாபரத் துண்மை வபடு வாருக்கும்
பூவகத் துள்நின்ற பொற்கொடி யாகுமே. ***#1688***

சிவனது மிக மேலான உண்மை நிலையை உணர்ந்து அவனை வழிபடுவோர் மிக அரியர். அதனை உணர்ந்து வழிபடுகின்ற அவர்கட்கும் பூவைத் தன்னுள்ளே அடக்கியுள்ள அழகிய கொடி அப்பூவைச் சிறிது சிறிதாகவே வெளிப்படுத்துதல் போலத் தனது உண்மை நிலையை வெளிப்படுத்துவான். ஆகவே அவனது பொது நிலையாகிய இலிங்க வடிவிலும் அவன் நின்று படிமுறையால் மேல் நிலையை அருளுவான்.

விளக்கவுரை

'ஆகவே இலிங்க வடிவம் அவனது அகண்ட நிலையோ, உண்மை நிலையோ அன்று என இகழாது கொள்க' என்பது குறிப்பெச்சம்.

'தாபரத் துள்நின்று அருளவல்லான்' என்பதை இறுதியிற் கூட்டியுரைக்க. தாபரம் - பெயர்ப்பொருளாகிய திருவுருப் படிமங்கள்.
'வழிபடுவாளர்க்கும்' - என்பது பாடம் அன்று. 'ஆகும்' என்பதில் ஆக்கம் உவமை குறித்து நின்றது. சுட்டிக் கூறா உவமம் ஆகலின் பொதுத் தன்மை வருவிக்கப்பட்டது.
இதனால், இலிங்க வழிபாட்டின் சிறப்பு கூறப்பட்டது.

தூய விமானமும் தூலம தாகுமால்
ஆய சதாசிவம் ஆகும்நற் சூக்குமம்
பாய பலிபீடம் பத்திர லிங்கமாம்
ஆய அரன்நிலை ஆய்ந்துகொள் வார்கட்கே. *#1689*

கருவறையின்மேல் உயர்ந்து விளங்கும் விமானங்கள், 'தூல லிங்கம்' என்பதும், கருவறையில் மூலமாய் விளங்கும் இலிங்கம் 'சூக்கும லிங்கம்' என்பதும், திருவாயிலின் முன் விரிந்து காணப்படும் பலிபீடம், 'பத்திரலிங்கம்' என்பதும் சிவா லயங்களின் உண்மையைச் சிவாகம நெறியால் ஆராய்ந்துணர்வார்க்கு விளங்குவனவாகும்.

விளக்கவுரை

'விமானமும்' என்னும் உம்மை, 'சதாசிவ மூர்த்தியே யன்றி' என இறந்தது தழுவி நின்றது. அண்டத்தின் உள்ளாய் விளங்கும் பொருள்களும் இலிங்கங்களாதல் இதனால் கூறப்பட்டது.

முத்துடன் மாணிக்கம் மொய்த்த பவளமும்
கொத்தும்அக் கொம்பு சிலை நீறு கோமளம்
அத்தன்றன் ஆகமம் அன்னம் அரிசியாம்
உய்த்ததன் சாதனம் பூமணல் லிங்கமே. *#1690*

முத்து முதலிய இவை பலவும் இலிங்கமாகச் செய்து கொள்ளுதற்குரிய பொருள்களாகும்.

விளக்கவுரை

மொய்த்த - ஒளிமிகுந்த. கொம்பு - மரக்கழி. 'கொத்தும்' என்றதனால், அது செதுக்கி உருவாக்கப்படுதல்' விளங்கிற்று. கோமளம் - அழகு. அஃது ஆகுபெயராய் இரத்தினத்தை உணர்த்திற்று. இதனால், படிகம், மரகதம் முதலாக எஞ்சிய இரத்தினங்களைக் கொள்க. சிலை - கருங்கல் வகைகள். 'மாக்கல் கூடாது' - என்பர். ஆகமம் - சிவாகமம் எழுதப்பட்ட சுவடி. திருமுறைச் சுவடி களும் இதனானே பெறப்படும். அன்னம் - சோற்றுருண்டை. அரிசி - அரிசித்திரள். பூ - தனி மலரும், கோத்த மலரும். இனி இதனை இரட்டுற மொழிந்து, 'மண்' எனவும் கொண்டு, 'பிசைந்து பச்சையாக வைக்கும் மண்ணும், சுட்டுக் கொள்ளும் மண்ணும்' என உரைக்க. 'இலிங்கம் உய்த்து அதன் சாதனம் ஆம்' என மொழிமாற்றி,

'இலிங்க மாகச் செயப்பட்டு அதற்கு மூலப்பொருளாம்' என உரைக்க. சாதனம் ஆதல் முக்காலத்தினும் ஒக்கும் ஆதலின். அதனை இங்கு இறந்த காலத்தில் வைத்துக் கூறினார். ஏகாரம் ஈற்றசை.
சிவவழிபாடு 'ஆன்மார்த்தம், பரார்ரத்தம்' என இரு வகைப் படும். ஆன்மார்த்தம் - தன்பொருட்டு. பரார்த்தம் - பிறர் பொருட்டு. அவரவரும் தம் தம் இல்லத்திலாயினும், பூசைப் பெட்டகத்திலாயினும், இலிங்கத்தை எழுந்தருள்வித்துக் கொண்டு வழிபடுவது ஆன்மார்த்த வழிபாடு.
வீரசைவர், 'இலிங்கம் அங்கத்திலே (உடம்பிலே) ஒன்றாய் நீங்காதிருக்கத் தக்கது' எனக் கொண்டு வழிபாட்டுக் காலத்தில் இலிங்கத்தை இடக்கையிலே வைத்து, வலக்கையால் வழிபடுவர்.
உலகம் முழுவதற்குமாகத் திருக்கோயில்களில் இலிங்கம் எழுந்தருள்வித்துச் சிவாசாரியர்களால் செய்யப்படுவது பரார்த்த வழிபாடு.
இவ்விரண்டனுள் மேலை மந்திரம் பரார்த்த லிங்கம் ஆவன வற்றைக் கூற இம்மந்திரம் ஆன்மார்த்த லிங்கம் ஆவனவற்றைக் கூறிற்று.
பரார்த்த லிங்கம் இடம் விட்டுப் பெயராதிருத்தலால், 'அசல லிங்கம்' என்றும், ஆன்மார்த்த லிங்கம் வேண்டும் இடங்களில் கொண்டு செல்லப் படுதலாலும், வழிபாட்டின் பொழுதும், அதற்குப் பின்னும் இடம் மாற்றி வைக்கப்படுதலாலும் 'சல லிங்கம்' என்றும் சொல்லப்படும். சலம் - அசைவுடையது, அசலம் - அசைவில்லது. இவற்றுள் மேலைமந்திரம் அசல லிங்கமாவனவற்றைக் கூற, இம் மந்திரம் சவலிங்கமாவனவற்றைக் கூறிற்று. இவற்றுள் அசலல லிங்கம் ஆதற்கு உரியனவும் உள; அவற்றை அறிந்து கொள்க.
இனி சல லிங்கமும், 'கணிகம், திரம்' - என இரண்டு வகைப்படும்.
கணிகம் - நிலையில்லாதது; அவ்வப்பொழுது ஆக்கி அமைத்து, வழிபட்டவுடன் விட்டு விடப்படுவது.
திரம் - நிலையுள்ளது, அஃது ஒருமுறை எழுந்தருள்வித்துக் கொண்டு, வாழ்நாளளவும் விடாமல் வழிபடப்படுவது.
'இவற்றுள் இங்குக் கூறப்பட்டவை இன்ன இன்ன இலிங்கமாதற்கு உரியன' என்பது அந்த அந்தப் பொருள் இயல்பு பற்றியும் அவரவரது கருத்துப் பற்றியும் கொள்க.

துன்றுந் தயிர் நெய் பால் துய்ய மெழுகுடன்
கன்றிய செம்பு கனல்இர தம் சந்தம்
வன்றிறற் செங்கல் வடிவுடை வில்வம் பொன்
தென்றிருக் கொட்டை தெளிசிவ லிங்கமே. ***#1691***

மேற்கூறிய முத்து முதலியனவேயன்றித் தயிர் முதலியனவும் இலிங்கம் ஆதற்குரிய மூலப்பொருள்களாகும். அவற்றுள் ஒன்றைத்

தெரிந்தெடுத்துக்கொள்க.

விளக்கவுரை

'துய்ய' என்றது, 'பசுவினின்றும் தோன்றுவது' என்ற தாம். இதனை தயிர் முதலிய நான்கிற்கும் கொள்க. மெழுகு - மெழு குதல்; முதனிலைத் தொழிற்பெயர். இஃது ஆகுபெயராய், அதற்குக் கருவி யாகிய சாணத்தைக் குறித்தது. ஆனைந்தில் (பஞ்ச கௌவியத்துள்) கோ நீர் தவிர ஏனை நான்கும் இங்குக் கூறப்பட்டன. தயிர் பால் நெய்கள் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளப்பட்டும், சாணம் பிடித்து வைக்கப் பட்டும் ஆவில் ஐந்தும் கலந்து நிறைகுட வடிவில் இலிங்கமாகும். நெய், சிறப்பாக வெண்ணெயே ஆகும். கன்றிய செம்பு - உருக்கி வார்க்கப் பட்ட தாமிரம். கனல் - எரியும் நெருப்பு; இது வேள்வித் தீ. பெரிதாய் எரியும் விளக்கும் ஆகும். வேள்வித் தீயில் குண்டமும், விளக்கில் தகழியும் பீடமாய் இருக்கும். ஒரு தகழியில் பல சுடர்கள் ஏற்றப்பட்டால் அவை முகங்களாகும். இரதம் - சித்த மருத்துவ முறையில் பண்ணப் படும் இரசக் கல். சந்தம் - சந்தனம். வில்வம் - வில்வக் காயும், பழமும். பொன் செம்பொன்னும், வெண் பொன்னும். இவை உருக்கி வார்க்கப் பட்டு இலிங்கமாம். 'தேன்' என்பது எதுகை நோக்கிக் குறுகி நின்றது. தேனும் பாத்திரத்தில் கொள்ளப்படும். 'தென்', அழகுமாம். திருக் கொட்டை - உருத்திராக்கம்.
இதனால் கணிக லிங்கம் ஆம் ஆவனவே கூறப்பட்டன. 'சலம் தென்தியங்கொன்றை' என்பனவும் பாடம்.
இரத்தினத்தால் ஆயவை 'இரத்தினசம்' என்றும், பொன்னால் ஆயவை 'உலோகசம்' என்றும் கல்லால் ஆயவை 'சைலசம்' என்றும் பொதுப் பெயர் பெறும். ஏனைய ஒவ்வொன்றேயாம்.
இவ்விலிங்க வகையால் பயன் வகைகள் ஆகமங்களில் சொல்லப்படுகின்றன. எனினும் நாயனார் பொதுவாகவே கொள்ளவைத்தார்.

மறையவர் அற்சனை வண்படி கந்தான்
இறையவர் அற்சனை ஏய்பொன் னாகும்
குறைவில் வசியர்க்குக் கோமள மாகும்
துறையுடைச் சூத்திரர் சொல்வாண லிங்கமே. ***#1692***
(இதன் பொருள் வெளிப்படை.)

விளக்கவுரை

அந்தணர் முதலிய வருணங்களை ஒழுக்கம் பற்றிக் கொள்ளுதலே தமிழ்நெறி, வாணம் - பாணம். இதுகல்லால் ஆகியது; கோமளம் - இரத்தினம்' என்பதும் 'முத்துடன் மாணிக்கம்' என்னும் மந்திரத்தில்

(பா.1696) கூறப்பட்டது.
[பதிப்புகளில் இதன்பின் காணப்படுகின்ற இரண்டு மந்திரங்களும் இவ்வதிகார இறுதியில் நிற்றற்கு உரியன.]

போது புனைகழல் பூமிய தாவது
மாது புனைமுடி வானக மாவது
நீதியுள் ஈசன் உடல்விதம் பாய்நிற்கும்
ஆதி உறநின்ற**(து)** அப்பரி சாமே. ***#1693***

அண்டமாகிய இலிங்கத்தில் பூமி சிவனது திருவடி களாயும், அண்ட முகடு திருமுடியாயும், வானம் திருமேனியாயும் அமையும், ஆகவே, அண்டமாகிய இலிங்கத்துடன் சிவன் நிற்றல் மேற்கூறியவாறாகும்.

விளக்கவுரை

மாது - கங்கை, *'உள், ஈசன்'*, *'உளனாகிய ஈசன்'* எனப் பண்புத் தொகை, இது மேல் நின்ற *'கழல், முடி'* என்பவற் றோடும் இயைந்தது.
இதனால் அண்டலிங்கம் சிவனது திருவடி முதலிய உண்மை உறுப்புக்களாய் நிற்கும் முறைமை கூறப்பட்டது.

தரைஉற்ற சத்தி தனிலிங்கம் விண்ணாம்
திரைபொரு நீரது மஞ்சனச் சாலை
வரைதவழ் மஞ்சுநீர் வான்உடு மாலை
கரைஅற்ற நந்தி கலைஉந்திக் காமே. ***#1694***

இன்னும் அண்டலிங்கத்தில் பூமி பீடமாயும், வானம் பீடத்தின் மேல் உள்ள இலிங்கமாயும், கடல் நீர் திருமஞ்சனக் குட நீராயும், மேகம் அந்த நீரை முகக்கின்ற கலமாயும், திசைகள் எல்லையற்ற சிவனது உந்தியின்மேல் உடுக்கப்படும் உடையாயும் நிற்கும்.

விளக்கவுரை

'தரை, சத்தி' என இயையும். உள்ள - இலிங்கம் பொருந்தி நிற்கின்ற - பீடம் சத்தி வடிவாதல் பற்றி, *'சத்தி'* என்றார். நீர் - சால், குடம். *'ஐ'* *'அழகிய நீர்'* என்க. *'மஞ்சு நீர்'* என்பதில் உள்ள *'நீர்'*, தானியாகு பெயர். கரை - எல்லை; என்றது திசையை. *'கரை'* என முன் வந்தமையின் *'அற்ற'* என்றே போயினார். *'அற்ற நந்தி உந்திக்குக் கலை ஆம்'* என மாற்றிக்கொள்க. உந்திக்கு - உந்திக்கண், வேற்றுமை மயக்கம்.
இதனாலும் அண்டலிங்கம் சிவனது உபசார அங்க உபாங்கங்களாய் நிற்கும் முறைமை கூறப்பட்டது.

அதுஉணர்ந் தோன்ஒரு தன்மையை நாடி
எதுஉண ராவகை நின்றனன் ஈசன்
புதுஉணர் வான புவனங்கள் எட்டும்
இதுஉணர்ந் தென்னுடல் கோயில்கொண் டானே. ***#1695***

உபநிடதங்களின் வழி தன்னை 'அது' என்னும் அளவில் தன்னைப் பொதுவாக உணர்ந்தவன் பின்பு தனது ஒப்பற்ற இயல்புகளைச் சிறப்பாக உணர வேண்டி ஆராயும்பொழுது அவன் அவ்வியல்புகளுள் ஒன்றையேனும் உணராதபடி மறைந்து நிற்கின்ற சிவன், வேதாந்திகட்கு மிகவும் புதுமையாய்த் தோன்றுகின்ற அண்டலிங்கமாகிய இந்தத் தன்மையை உணர்ந்த என் உள்ளத்தையே கோயிலாகக் கொண்டு விளங்குகின்றான்.

விளக்கவுரை

'அது' என்றது வேதாந்த மகாவாக்கியத்தில் உள்ள - தற்பதத்தினை. அப்பதத்தின் பொருளை அப்பதமாகக் காரியத்தைக் காரணமாக உபசரித்துக் கூறினார். 'நாடி' என்னும் எச்சம் 'உணரா' என்னும் எதிர்மறைப் பெயரெச்சத்தைக் கொண்டு முடிந்தது. 'தேடி யறிந்திலர்' என்பது போல 'எதுவும்' என்னும் இழிவுசிறப்பும்மை தொகுக்கப்பட்டது; 'அண்டமே இலிங்கம்' என்னும் சைவாகமப் பொருள் வேதாந்திகட்குப் புதுமையாய்த் தோன்றுதல் பற்றி அதனை, 'புது உணர்வு' என்றார். அசுத்த மாயா புவனங்கள் பூதபுவனம், தன் மாத்திரைப் புவனம், மனோ புவனம், அகங்கார புவனம், புத்தி புவனம், பிரகிருதி புவனம், புருட புவனம், மாயா புவனம் என ஓராற்றால் எட்டு வகைப்படுதல் பற்றி அவற்றை, 'புவனங்கள் எட்டும்' என்றார். 'எட்டும்' என்றது அதிகார இயைபால், எட்டும் இலிங்கம் ஆதலைக் குறித்தது. 'இது உணர்ந்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. அண்டலிங்கத்தின் உண்மையை உணர்ந்ததனால் தாம் எய்திய பயனைக் கூறவே, 'பிறரும் அதனை உணர்வாராயின் அப்பயனைப் பெறுவர்' என்பது தானே அமைந்தது.

ஈசன் உடலைக் கோயிலாகக் கொள்ளுதல் உள்ளத்தில் வீற்றிருத்த லாலேயாம். இஃது இவ்வாறு கூறப்படும் பிற இடங்கட்கும் ஒக்கும். இதனை இட்டலிங்கமாக உடம்பில் பொருந்தியிருத்தலாக உரைப்பாரும் உளர்; முன்னைத் தந்திரத்தில் நாயனார் 'தவ வேடம்' கூறிய இடத்திலாதல், பிறிதோர் இடத்திலாதல் தூல உடலில் சிவன் வேறோர் இலிங்கமாய்ப் பொருந்தியிருத்தலைக் கூறிற்றிலர். ஆதலால், அது பொருளாகாமை அறிக.

இதனால், அண்டலிங்கத்தினை உணராதாரது தாழ்வும், அதனை உணர்ந்தாரது சிறப்பும் கூறப்பட்டன.

அகலிட மாய்அறி யாமல் அடங்கும்
உகலிட மாய்நின்ற ஊனத னுள்ளே
பகலிட மாம்உளம் பாவ வினாசன்
புகலிட மாய்நின்ற புண்ணியன் றானே. ***#1696***

அடியவரது பாவத்தை ஒழிப்பவனாகிய சிவன் அண்டமே இலிங்கமாகக் கொண்டு அமர்ந்திருத்தல் அன்றியும் உண்மையை உணராமையால் வீணாய் ஒழிகின்ற ஒரு நிலையில் பொருளாகிய உடம்பினுள்ளே அதன் நடுவிடமாகிய இருதய தாமரையைத் தான் எழுந்தருளியிருக்கும் இடமாகக் கொண்டு விளங்குகின்ற புண்ணிய மூர்த்தியாயும் இருக்கின்றான்.

விளக்கவுரை

'அகலிடமாயும்' என்னும் எதிரது தழுவிய எச்ச உம்மை தொகுத்தலாயிற்று. அறியாமையாவது, ஊனுடம்பே சிவனுக்கு ஆலய மாயும் இருத்தலை அறியாமை. 'அறியாமல்' என்பதன் பின், 'இருத் தலால்' என்பது எஞ்சி நின்றது. 'அறியாமை' எனப் பாடம் ஓதி, 'அறியா மையால்' என உருபு விரித்தலும் ஆம். 'அறியாமல் அடங்கும்' என்ற தனால், 'பயனின்றி' என்பது பெறப்பட்டது. உகல் - உகுதல்; அழிதல். பகல் - நடுவிடம். 'நுகத்திற் பகல் ஆணிபோல நடுவு நிலைமையை உடையர்' என்றல் வழக்காதல் அறிக. ('நெடு நுகத்துப் பகல்போல - நடுவு நின்ற நன்நெஞ்சினர்' - பட்டினப் பாலை - *106, 27.* 'பகலன்ன வாய்மொழி' - புறப்பொருள் வெண்பா மாலை - வாகைப்படலம் - அரச வாகைக்கொளு) 'முனம்' என்பது பாடம் அன்று. புண்ணியம், சிவபுண்ணியம், 'அப்புண்ணியத்திற்கு ஏற்புடைய மூர்த்தி' என்றபடி. உள்ளக் கோயிலில் வழிபடுதல், 'கிரியை, யோகம்' என்னும் சிவ புண்ணியங்களாதலை நினைக. சிவனை, 'பாவ வினாசன்' என்றதனால் 'இவ்வழிபாட்டில் நின்றாரது வினையைப் போக்குபவன் அவன்' என்பது குறிப்பால் உணர்த்தப் பட்டது. சிவபுண்ணியத்தை நோக்க உலக வினைகளுள் நல்வினையும் பாவமேயாகும்.

இதனால், முன்னை மந்திரத்தில் 'உடல் கோயில் கொண்டான்' எனப் பொது வகையாற் கூறியது சிறப்பு வகையால் இனிது விளக்கப்பட்டது. இவ்விரண்டு மந்திரங்களும் வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் ஆயின.

*9.3.*பிண்ட லிங்கம்

மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்
மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்
மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்
மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே *#1697*

மக்களது உடம்புகள் யாவும் சிவலிங்க வடிவம்; சிதாகாச வடிவம்; சதாசிவ வடிவம்; திருக்கூத்து வடிவம்.

விளக்கவுரை

'வடிவு' என்பவற்றை எல்லா அடிகளிலும் ஈற்றில் வைத்து உரைக்க. 'வடிவு' என்றது, 'அதன் மயம்' என்றபடி. இலிங்க மாதல் கூறுவார் பிறவாதலையும் உடன் கூறினார். அங்ஙனம் கூறவே, 'ஊன் மயமாய்ச் சிறிதாய் நிற்கும் மானுட யாக்கை அருள் மயமான இலிங்கமாதல் எவ்வாறு' என்னும் ஐயத்திற்கு இடமில்லையாயிற்று. 'இறைவன் எல்லாப் பொருளிலும் கலப்பினால் ஒன்றாய் நிற்றலால், மானுட யாக்கை அவனது பொருள்கள் எல்லாமாய் விளங்கும்' என்பது கருத்து. வந்தி - வந்தித்தல்; முதனிலைத் தொழிற்பெயர்.
இதனால், அண்டம்போலப் பிண்டமும் இலிங்கம் ஆதல் கூறப்பட்டது.

உலந்திலிர் பின்னும் 'உளர் என நிற்பீர்
நிலந்தரு நீர்தெளி ஊன்நவை செய்யப்
புலந்தரு பூதங்கள் ஐந்தும்ஒன் றாக
வலந்தரு தேவரை வந்திசெய் யீரே. ***#1698***

உடம்பில் பொருந்தியுள்ள அழுக்கினை மண் குழைத்த நீர் போக்கித் தூய்மை செய்து, சிவனை அந்த உடம்பாகிய இலிங்கத்திலே வழிபடுங்கள்; இறந்த பின்னும் இறந்தவராக மாட்டீர்; என்றும் ஒரு பெற்றியை உடையிராய் வாழ்வீர்.

விளக்கவுரை

முதலடியை இறுதியிற் கூட்டி, 'பின்னும் உலந்திலிர்' என மொழி மாற்றி யுரைக்க. 'உலந்திலிர்' எனப் பின் வருவதனால், 'உலந்த பின்னும்' என்பது பெறப்பட்டது. 'என்றும்' என்பது, ஆற்றலால் வந்தியைந்தது. 'உடம்பையே இலிங்கமாக வைத்து வழிபடப் புகும்பொழுது உடம்பை மாசு போக மண்ணாற் கழுவிக் குளித்தல் தவறாமற் செய்யத் தக்கது' என்பது உணர்த்துதற்கு அதனை எடுத்தோதினார், 'ஊன்நவை நிலந்தரு நீர் தெளி செய்ய' என்க. பூதங்கள் ஐந்திலும் தனித் தனியே இறைவனை எண்ணி வழிபடுதல் உண்டு ஆகலின், 'அவை ஐந்தும் ஒன்றாக வந்தி செய்யீர்' என்றது, 'அவை ஒருங்கு கூடி ஒன்றாய்ப் பரிணமித்த உடம்பிலே அவனை எண்ணி வழிபடுக' என்றதாயிற்று, வலம் - வெற்றி. சிவன் தன்னை வழிபடுபவர்க்கு வெற்றியைத் தருதலாவது, அவர் நினைத்தவற்றை நினைத்தவாறே கைகூடச் செய்தல். இதனால், இவ்வழிபாட்டின் இடைநிலைப் பயனாகச் சிலவற்றைப் பெறுதல் குறிக்கப்பட்டது. 'பிற பயன்கள் இடைநிலையாகக் கிடைப்பினும் முடிநிலைப் பயனாகிய வீடுபேறு உளதாம்' என்பது முதலடியில் கூறப்பட்டது. இறந்த பின்னும் இறந்தவர் ஆகாமையாவது, மீளப் பிறவாமை. என்னை? இறந்தவர் பிறத்தல் ஒருதலையாகலின். இதனால் பிண்டலிங்க வழிபாடு எல்லாப் பயனையும் தருதல் கூறப்பட்டது.

கோயில்கொண் டன்றே குடிகொண்ட ஐவரும்
வாயில்கொண் டாங்கே வநின் றருளுவர்
தாயில்கொண் டாற்போல் தலைவன்என் னுட்புக
ஆயில்கொண் டீசனும் ஆளவந் தானே. *#1699*

உடம்பை இறைவன் தன் இருப்பிடமாகக் கொண்டு அதன்கண் எழுந்தருளியவுடன், அதனைத் தங்கள் இல்லமாகக் கொண்டு வாழ்ந்து அதில் உள்ள உயிரை அலைக்கழித்து வந்த ஐம்புல வேடர், தம் நிலைமாறி, அந்த உடம்பு தானே அதில் உள்ள உயிர்க்கு உய்யும் வழியாக உடன்பட்டு, அவ்வுயிரின் வழிநின்று அதற்குத் துணைபுரிவர். அந்த முறையில்தான் அந்த ஐம்புல வேடரை அவர் குறும்பை அடக்கி ஆளுதற்குரிய தலைவனாகிய மனம் அவர் வழிப்படுதலை விட்டு என்வழிப்பட்டது. அதனால், 'அந்த உடம்பாகிய இல்லத்தைச் சிவன் தன் இல்லமாக ஏற்றுக்கொண்டு என்னை ஆட்கொள்ளுதற்கு அதன்கண் வந்து வீற்றிருக்கின்றான்' என்று உணர்கின்றேன்.

விளக்கவுரை

முன் இரண்டடிகளில் பொது முறைமையைக் கூறி, அஃதே பற்றித் தாம் எய்திய பயனைப் பின் இரண்டடிகளில் விளக்கினார்.
'கோயில் கொண்ட' - என்பதன் ஈற்றகரம் தொகுத்தலாயிற்று. இதில் உள்ள இறந்த காலம் எதிர்காலத்தது, 'நாளைக் கூற்றுவன் வந்தான், என் செய்வை' என்பது போல 'வாயில்' என்பதன் பின் ஆக்கச் சொல் வருவிக்க. இதன் பின் உள்ள கொள்ளுதல், ஏற்றுக் கொள்ளுதல்; உடன்படுதல்.
'தாய் இல் கொண்டாற்போல்' என்றது, 'அயலார் மனைகளில் மாறி மாறிச் சென்று ஒதுக்கிருந்தவன், தன் முன்னோர் கட்டி வைத்துத் தனக்கு உரித்தாகிய இல்லத்தை அடைந்து நிலைத்தாற் போல' என்றபடி. அகரச் சுட்டுச் செய்யுளில் நீண்டு நின்றது; 'அவ்வில்' என்றது, உடம்பாகிய இல்லத்தை.
இதனால், பிண்டலிங்க வழிபாட்டினால் புலன் அடக்கம் உண்டாக, இறையருள் கைகூடுதல் கூறப்பட்டது.

கோயில்கொண் டான்அடி கொல்லைப் பெருமறை
வாயில்கொண் டான்அடி நாடிகள் பத்துள
பூசைகொண் டான்புலன் ஐந்தும் பிறகிட்டு
வாயில் கொண்டான் எங்கள் மாநந்தி தானே. *#1700*

எங்கள் பெரும்பெருமான் மக்கள் உடம்பைக் கோயிலாக் கொண்ட நிலையில் புழைக்கடையாகிய மூலாதாரத்தை யும், அதற்குமேல் குய்யத்திற்கு அணித்தாயுள்ள சுவாதிட்டானத்தை யும் தன்னை அக்கோயிலிலே காண்பதற்குரிய வழிகளாகக் கொண்டும், உடம்பின்

உள்ளே உள்ள நாடிகளில் தலையானவையாம் பத்து நாடிகளின் செயற்பாடுகளை அக்கோயிலில் நிகழும் வழி பாட்டுச் செயல்களாக ஏற்றும் விளங்குதல் செய்து, அதனால் புலன்கள் ஐந்தனையும் அடங்கப் பண்ணி, அவ்வுடம்பையே தான் மக்கள் உயிர்க்கு அருள் பண்ணும் வாயிலாகக் கொண்டிருக்கின்றான்.

விளக்கவுரை

'அதனால் மக்கள் உடம்பு அவன் விளங்கி நிற்கின்ற இலிங்கமும் ஆகின்றது' என்பது குறிப்பெச்சம். 'அடி' இரண்டும் 'மூலம்' என்னும் பொருளைத் தந்தன.

பிறகிடுதல் - புறங்காட்டுதல்; தோல்வியுறுதல். 'பிறகிடு வித்து' என்பதில் விவ்விகுதி தொகுக்கப்பட்டது.

யோக முறையில் சிவனை உடம்பினுள்ளே காணுதல் அநுபவமாதல் பற்றி, மக்கள் உடம்பு அவனது இலிங்கமாதற்குத் தடையின்மை இதனால் கூறப்பட்டது.

*9.4.*சதாசிவ லிங்கம்

கூடிய பாதம் இரண்டும் படிமிசை
பாடிய கையிரண் டெட்டும் பரந்தெழும்
தேடும் முகம்ஐந்தும் செங்கயல் மூவைந்தும்
நாடும் சதாசிவ நல்லொளி முத்தே. *#1701*

சதாசிவ வடிவம் இரண்டு திருவடி, பத்துக் கை, ஐந்து முகம், முகம் ஒன்றற்கு மூன்று கண்களாகப் பதினைந்துகண் இவற்றை உடையதாகும்.

விளக்கவுரை

கூடிய பாதம் - இணைந்து காணப்படும் பாதம். படி மிசை பாடிய - உலகத்தில் புகழ்ந்து போற்றப்படுகின்ற. கண் அருளைப் பொழிதலால் சத்தியாதல் பற்றி 'கயல்' என்றார். 'சதாசிவமாகிய நல்ல ஒளியும், முத்துமாய தன் வடிவம்' என்க. ஒளியும், முத்தும் ஆகு பெயர்கள். நல் ஒளி' என்றதனால் இம்மூர்த்தம் ஒளியுருவே யாதல் விளங்கும். முத்து, மாணிக்கம், வயிரம் என்பன உயர்த்துக் கூறும் சொற்களாதல் வழக்கு, நோக்கியறிக.

இதனால் சதாசிவ லிங்கத்தின் வடிவு கூறப்பட்டது.

'நாலுகொ லாம்அவர் தம்முக மாவன' -தி.*4* ப.*18* பா.*4*

எனவும்,

'அஞ்சினாற் பொலிந்த சென்னி அதிகைவீ ரட்ட னீரே'

-தி.*4* ப.*26* பா.*5*

எனவும் அப்பர் அருளிச் செய்தன இச் சதாசிவ மூர்த்தத்தை நோக்கியேயாம்.

'சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி' -தி.*6* ப.*32* பா.*6*

'மனோன்மனியைப் பெற்ற - தாயிலான்' -தி.*5* ப.*91* பா.*1*

என்ற அவரது திருமொழிகளையும் நோக்குக.

வேதா நெடுமால் உருத்திரன் மேல்ஈசன்
மீதான ஐம்முகன் விந்துவும் நாதமும்
ஆதார சத்தியும் அந்தச் சிவனொடும்
சாதா ரணமாம் சதாசிவந் தானே. *#1702*

சதாசிவந்தானே கீழ் நின்று ஒடுக்க முறையில் மேல் நோக்கி எண்ணப்படுகின்ற 'அயன், மால், உருத்திரன், மகேசுரன்' என்னும் நால்வராயும், தனக்குமேல் முறையே நிற்கும் 'விந்து, நாதம், சத்தி, சிவம்' என்னும் நால்வராயும் இருக்கும். அதனால் அனைத்து மூர்த்தங்கட்கும் இது பொது மூர்த்தமாகும்.

விளக்கவுரை

ஆகவே, சதாசிவ மூர்த்தத்தை வழிபடவே சிவபேதம் அனைத்தையும் வழிபட்டதாம் என்பது பெறப்பட்டது.
சிவபேதம் ஒன்பது. அவை 'நவந்தரு பேதம்' எனப்படும். அவை அனைத்தும் இம்மந்திரத்துட் கூறப்பட்டமை காண்க.
விந்துவும், நாதமும், 'விந்து, பரவிந்து - நாதம், பரநாதம்' எனத் தனித்தனி இரண்டாகும். அவற்றுள் சில இடங்களில் பரவிந்து பரநாதங்களை, 'சத்தி, சிவம்' என்றும், சில இடங்களில் விந்து நாதங்களை, 'சத்தி, சிவம்' என்றும் கூறும் வழக்கம் சிவாகமங்களில் உள்ளது. இங்குப் பரவிந்து பரநாதங்களே அவ்வாறு கூறப்பட்டன.
சதாசிவத்திற்கு மேல் உள்ள நான்கும் அருவம். கீழ் உள்ள நான்கும் உருவம். நடுவில் உள்ள சதாசிவம் அருவுருவம், அருவம், உருவம் என்னும் இருதன்மையையும் உடைமையால் சதாசிவ மூர்த்தம் அனைத்து மூர்த்தமாயும் உள்ளது. இஃதே பற்றிச் சேக்கிழார் நாயனார்,
'காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்'
-தி.*12* சாக்கிய நாயனார் *8*
என அருளிச் செய்தார். சாதாரணம் - பொது.
இதனால், சதாசிவ லிங்கமே அனைத்து லிங்கமும் ஆதல் கூறப்பட்டது.

ஆகின்ற சத்தியின் உள்ளே கலைநிலை
ஆகின்ற சத்தியின் உள்ளெ கதிரெழ
ஆகின்ற சத்தியின் உள்ளே அமர்ந்தபின்
ஆகின்ற சத்தியுள் அத்திசை பத்தே. ***#1703***

அறிவு மாத்திரமாய் நிற்கின்ற சிவத்தினின்றும் செயல் வடிவாய்த் தோன்றுகின்ற சத்தியின் ஒருகூறு தோற்றமுறையில் சாந்தியதீதை முதலிய ஐந்து கலைகளாகின்ற ஆதார சத்திகளாய் நிற்கும். அந்தச் சத்திகளினின்றும் 'இலயம், போகம், அதிகாரம்', என்னும் ஆதேய சத்திகள் ஏற்ற பெற்றியால் தோன்ற, அந்தச் சத்திகளிலே சிவம் அதுவதற்கு ஏற்றவாற்றால் பொருந்தி நிற்க, அதன்பின் அந்த இலயம் முதலிய சத்திகளாலே அனைத்துலகங்களும் தோன்றும்.

விளக்கவுரை

முதலடிக்கண் வருவித்துரைத்தன ஆற்றலால் கொள்ளக் கிடந்தன. சாந்தியதீதை முதலிய ஐந்து சத்திகளாவன, 'சாந்தியதீதை, சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவிர்த்தி' என்பன. இவற்றுள் முதல் இரண்டு கலைகளில் இலயசத்தி தோன்றும். நடுவில் உள்ள ஒன்றின் முற்கூற்றில் போகசத்தி தோன்றும். அதன் பிற்கூற்றிலும், ஏனை இரு கலைகளிலும் அதிகார சத்தி தோன்றும். சத்தியை, 'கதிர்' என்றார். அவற்றுள் சிவன் இலய சத்தியில் 'சத்தன்' எனவும், போக சத்தியில் 'உத்தியுத்தன்' எனவும்,

அதிகார சத்தியில், 'பிரவிருத்தன்' எனவும் பொருந்தி நிற்பான். அங்ஙனம் பொருந்தி நின்று அச்சத்திகளை அவன் தூண்டுதலினாலே உலகங்கள் தோன்றி நின்று விளங்கும். அனைத்துத் திசைகளையும் எண்ணியவழி அவை பத்தாம் ஆதலின் 'அத்திசை பத்து' என்றார் 'பத்தும்' என்னும் முற்றும்மை தொகுக்கப்பட்டது. அதன்பின் 'ஆகும்' என்பது அவாய்நிலையாய் நின்றது, அமர்தலுக்கு, 'சிவம்' என்னும் வினைமுதல் வருவிக்கப்பட்டது.
இதனால், சதாசிவமே உலகிற்கு முதலாதல் கூறப்பட்டது. அஃதே சிவபேதம் அனைத்தும் ஆதலை முன்னை மந்திரத்துட் கூறியதனைக் கருதுக.

அத்திசைக் குள்ளே அமர்ந்தன ஆறங்கம்
அத்திசைக் குள்ளே அமர்ந்தன நால்வேதம்
அத்திசைக் குள்ளே அமர்ந்த சரியையோடு
அத்திசைக் குள்ளே அமர்ந்த சமயமே. ***#1704***

பத்துத் திசைகளாய் அமைந்த அந்த உலகத்துள்ளே தான் வேதங்களின் ஆறு அங்கங்களும், அந்த அங்கங்கட்கு முதலாகிய நான்கு வேதங்களும், அந்த வேதங்களின் பொருளைச் சரியை முதலிய நான்கு பாதங்களாய் நின்று தெளிய உணர்த்துகின்ற சிவாகமங்களும் பொருந்தி நிற்கின்றன.

விளக்கவுரை

'திசை' என்றதனால் அவற்றை உடைய உலகம் பொருளுலகமாதல் விளங்கும். ஆறங்கம் முதலியன சொல்லுலகம் ஆதல் வெளிப்படை. எனவே உலகம் இங்ஙனம் இருவகைத்தாதல் விளங்கும். இவை முறையே 'அத்தப் பிரபஞ்சம், சத்தப் பிரபஞ்சம்' என வடமொழியில் சொல்லப்படும். 'முன்னர்க் கூறிய உலகத்துள் பின்னர்க் கூறிய உலகம் விளங்குகின்றது' என்றதனால் அதனையும் சிவனே சத்தி வாயிலாகத் தோற்றுவித்தல் பெறப்பட்டது.
கீழ் நின்றும் கூறும் முறையால் ஆறங்கம் முதற்கண் கூறப் பட்டன. அவையாவை 'சிட்சை, வியாகரணம், கற்பம், நிருத்தம், சோதிடம், சந்தோ விசிதி' - என்பன.
அவற்றுள் சிட்சை வேத மந்திரங்களை உச்சரிக்கும் முறையை விளக்கும். வியாகரணம் - வேத மொழிகளின் இலக்கணத்தைக் கூறும். நிருத்தம் - வேத மொழிபற்றிய பல விளக்கங்களைத் தரும். சோதிடம் - வேதத்திற் சொல்லப்பட்ட கருமங்களை இயற்றுதற்குரிய கால வகைகளைக் கூறும். கற்பம் - சூத்திர வடிவில் அமைந்து வேதத்தில் சொல்லப்பட்ட கருமங்களைச் செய்யும் முறைகளை விவரிக்கும். அவை ஆசுவலாயனர், போதாயனர், ஆபத்தம்பர் முதலிய முனி வர்களால் செய்யப்பட்டன. சந்தோவிசிதி - வேத மந்திரங்களுக்கு எழுத்துக் கணக்கில்

சொல்லப்படுகின்ற சந்த வகைகளை விளக்கும். இவை வேதங்களை நன்கு உணர்தற்குக் கருவி நூல்கள் ஆகையால் இவற்றை உணராவிடில் வேதங்களால் பயனடைய இயலாது.
'சரியையாதியோடு கூடிய சமயம் அத்திசைக்குள்ளே அமர்ந்தன' என்க. இடை நின்ற சில பதங்கள் தொகுத்தலாயின, 'சமயம்' என்றது தலைமை பற்றிச் சைவத்தின் மேல் நின்று. ஆகு பெயராய் அதனை உணர்த்தும் ஆகமங்களைக் குறித்தன. 'அவ் ஆகமங்களில் சொல்லப்பட்ட சரியை முதலிய நான்கும் மேற்கூறிய உலகத்திலே நிகழ்வன' என்பதை 'அத்திசைக்குள்ளே அமர்ந்த சரியையோடு' என உடம்பொடு புணர்த்து ஓதினார்.
இதனால், சதாசிவமே மேற்கூறிய பொருளுலகம் போலச் சொல்லுலகங்களையும் தோற்றுவித்து உயிர்கட்குப் பயன்பட வைத்தல் கூறப்பட்டது.

சமயத் தெழுந்த அவத்தையீ ரைந்துள
சமயத் தெழுந்த இராசியீ ராறுள
சமயத் தெழுந்த சரீரம்ஆ றெட்டுள
சமயத் தெழுந்த சதாசிவந் தானே. ***#1705***

முன்னை மந்திரத்தில் தலைமை பற்றி, 'சமயம்' என்றே சொல்லப்பட்ட சைவ சமயத்தில் இறைவனுக்கு அவத்தைகள் பத்துச் சொல்லப்படுகின்றன. (அவத்தை - நிலை, அவை நவந்தரு பேதங்களுள் மேல் நிற்கும் நான்கொழிய ஏனை ஐந்தும் 'அணுபட்சம், சம்புபட்சம்' எனத் தனித்தனி இவ்விரண்டாவனவாம்.)
உலகத்தில் சூரியன் முதலிய கோள்கள் இயங்கும் இராசிகள் பன்னிரண்டு சொல்லப்படுதல் போலச் சைவத்தில் இறைவன் தானங்கள் பன்னிரண்டு சொல்லப்படுகின்றன. (அவை பிராசாத கலைகள் இருக்கும் இடங்களாம்.)
சைவத்தில், 'இறைவனுக்குத் திருமேனிகள் ஆறு' என்றும், 'எட்டு' என்றும் சொல்லப்படுகின்றன. (அவை முறையே ஆறு அத்துவாக்களும், அட்ட மூர்த்தங்களுமாகும்.)
இவை அனைத்துமாய் நிற்பது சைவ சமயத்தில் சொல்லப் படும் சதாசிவ லிங்கம்.

விளக்கவுரை

சைவ சமயத்தில் சொல்லப்படுவன சைவாகமங் களில் சொல்லப்பட்டனவே யாதலின், 'இவ்வாறெல்லாம் சைவா கமத்துள் சொல்லப்பட்டன' என்றபடி 'இலிங்க மூர்த்தத்தில் இதனுட் கூறிய வாறெல்லாம் சிவன் நிற்றல் கருதி வழிபாடு செய்யப்படும்' என்பது உணர்த்தியவாறு.

இதனால் சைவ சமயத்தில், எல்லாம் சதாசிவ லிங்கமாகக் கொள்ளப்படுதல் கூறப்பட்டது.

நடுவு கிழக்குத் தெற்குஉத் தரம்மேற்கு
நடுவு படிகம்நற் குங்கும வன்னம்
அடைவுள அஞ்சனம் செவ்வரத் தம்பால்
அடியேற் கருளிய முகம்இவை அஞ்சே. ***#1706***

இவ்வதிகாரத்து முதல் மந்திரத்துள், 'சதாசிவ லிங்கத்திற்கு ஐந்து முகங்கள் உள்ளன எனக் கூறிய முகங்கள் ஒரு வரிசையில் இல்லாமல், நடுவு, கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு' என்னும் திசைகளில் பொருந்தியுள்ளன.

அவற்றுள் நடுவண் உள்ள முகம் படிகம் போன்ற நிறத்தையும், கிழக்கில் உள்ள முகம் குங்குமம் போன்ற நிறத்தையும், வடக்கில் உள்ள முகம் செவ்வரத்தம் பூப்போன்ற நிறத்தையும் மேற்கில் உள்ள முகம் பால்போன்ற நிறத்தையும் உடையன.

(கிழக்கில் உள்ள முகம் பொன் போன்ற நிறத்தை யுடையதாகச் சொல்லப்படுதலால், இங்கு, 'குங்குமம்' என்பதற்கு, 'கலவைச்சாந்து' எனப்பொருள் கொள்ளுதல் பொருந்தும்.)

இந்த ஐந்து முகங்களுடன் தோன்றியே சிவன் அடியேனுக்கு அருள்புரிந்தான்.

விளக்கவுரை

சைவாகமங்களில் சொல்லப்பட்டதனை நாயனார் தாம் அனுபவமாக உணர்ந்தமையை இங்கும் எடுத்துக் கூறினார். இதனானே பிறவும் உண்மையாதல் தெளிவித்ததாம், முதற்கண் கூறியவாறே 'நடுவு' எனத் தொடங்கினமையால். ஏனை முகங்களும் மேற்கூறிய அம்முறையவாயின.

இதனால் சதாசிவ லிங்கத்து முகங்களின் இடமும், நிறமும் கூறப்பட்டன. 'நிறங்கள் ஓர் ஐந்துடையாய்' எனத் திருவாசகத்துள் கூறப்பட்டது இங்குக் கூறிய முகங்களின் நிறம் நோக்கியேயாம். *(தி.8 சிவபுராணம் - 49)*

அஞ்சு முகம்உள ஐம்மூன்று கண்உள
அஞ்சினொ டஞ்சு கரதலந் தானுள
அஞ்சுடன் அஞ்சுஆ யுதம்உள நம்பிஎன்
நெஞ்சு புகுந்து நிறைந்துநின் றானே. ***#1707***

இவ்வதிகாரத்து முதல் மந்திரத்துட் கூறிய வற்றுடன் பத்துக் கைகளிலும் பத்துப் படைக்கலங்களையுடைய சதாசிவ லிங்கமாய்ச் சிவன் என் இருதயத்துள் வந்து புகுந்து நிறைந்து நிற்கின்றான்.

விளக்கவுரை

சதாசிவ லிங்கமே தமது தியானப் பொருளாதலைக் கூறுவார் மேற்கூறிய அவற்றுடன் பத்துக் கைகளிலும் பத்துப் படைக் கலங்கள் இருத்தலை இங்குக் குறித்தருளினார். 'உள' என்னும் பெய ரெச்சக் குறிப்புக்கள், 'உடைய என்னும் பொருளவாய் அடுக்கி, 'நம்பி' என்னும் ஒருபெயர்கொண்டன. அப்படைகள் பத்தாவன வலக் கைகள் ஐந்திலும், 'சூலம், வச்சிரம், வாள், மழு, அபயம்' என்பனவும், இடக்கைகள் ஐந்திலும் பாம்பு, பாசம், அங்குசம், நெருப்பு, வரதம்' - என்பனவுமாம். அபய வரதங்கள் ஆயுதம் அல்லவாயினும் பெரும் பான்மை பற்றி 'ஆயுதம்' என்றார். புதிதாய்ப் புகுந்தது போலக் கூறினாராயினும், 'முன்பு விளங்கா திருந்தது விளங்கிற்று' என்பதே கருத்தென்க. மக்களுட் சிறப்புடையாரைக் குறிக்கும் 'நம்பி' என்பது, தேவர்கட்குத் தலைவனாகிய சிவபிரானுக்கும் சொல்லப் படுதல் நம்பி என்னும் திருப்பதிகத்தாலும் அறிக. *(தி.7 ப.63)*
இதனால் தமது தியானப்பொருள் சதாசிவ லிங்கமாதல் கூறப்பட்டது. அதனால், 'பிறரும் அதுகொள்க' என்றதாம்.

சத்தி தராதலம் அண்டம் சதாசிவம்
சத்தி சிவம்மிக்க தாபர சங்கமம்
சத்தி உருவம் அருவம் சதாசிவம்
சத்தி சிவம்தத் துவம்முப்பத் தாறே. ***#1708***

அண்டலிங்கத்துள் பூமி பீடமாயும், வானம் பீடத்தின்மேல் உள்ள இலிங்கமாயும் அமையும். *(எனவே, சதாசிவ லிங்கத்துள் பீடத்தில் பூமியும், இலிங்கத்துள் வானமும் அடங்கு வனவாம்.)*
இனி இறைவன் உயிர்கள் பொருட்டுக் கொள்கின்ற 'தாபரம், சங்கமம்' என்னும் இருவகை வடிவங்களுள் தாபரம் சிவக்கூறும், சங்கமம் சத்திக்கூறும் ஆகும். *(தாபரம் - பெயர்ந்து நிற்பன; திருவுருப் படிமங்கள். சங்கமம் - உலாவுவன; அடியார்கள்.)*
இறைவன் கொள்கின்ற திருமேனிகளில் உருவத் திரு மேனிகள் சத்திக் கூறும், அருவத் திருமேனிகள் சிவக்கூறும் ஆகும்.

விளக்கவுரை

'சிவக்கூறும், சத்திக் கூறும் சமமாக விரவியதே, சதாசிவம் ஆகையால், அது மேற்கூறிய அனைத்துமாய் நிற்கும்' என்றவாறு, 'தத்துவம் முப்பத்தாறு' எனப் பொதுவகையால் சதாசிவ தத்துவமும் அடங்கக் கூறினாராயினும் அதனைச் சிறப்பு வகையால் வேறு வைத்து உணர்த்துதலே கருத்தென்க. 'சதாசிவம்' - இரண்டில் முன்னது இலிங்கத்தைக் குறித்தது. பின்னது, சிவம்' என்னும் அளவாய் நின்றது.

'பருமை, நுண்மை என்னும் இருவகைப் பொருள்களில் பருமை யெல்லாம் சத்திக் கூறும், நுண்மை எல்லாம் சிவக்கூறும் ஆகும்' என்பது இதனால் உய்த்துணரக் கூறினமை காண்க.
'தாபர சங்கமம்' - என்றது எதிர்நிரல் நிறை. 'சங்கம தாபரம்' என்றே பாடம் ஓதுதலும் ஆம்.
இதனால் சதாசிவ லிங்கத்தினது சிறப்புக் காரண வகையால் கூறப்பட்டது.

தத்துவ மாவது அருவம் சராசரம்
தத்துவ மாவது உருவம் சுகோதயம்
தத்துவ மெல்லாம் சகலமு மாய்நிற்கும்
தத்துவ மாகும் சதாசிவந் தானே. ***#1709***

'தத்துவம்' எனப்படுவன காரியப் பொருள்கள் அனைத்திற்கும் மூலங்கள் ஆதலின், அவையே 'சரம், அசரம்' என்னும் இருதிறப் பொருளாயும் பரிணமிக்கும். தத்துவங்கள் யாவும் உயிர்கட்குத் துன்பம் நீங்கி, இன்பம் தோன்றுதற் பொருட்டே உள்ளனவாம், இவ்வாறு அனைத்துப் பொருளுமாய் நிற்கின்ற அனைத்துத் தத்துவங்களும் ஆவது சதாசிவலிங்கம்.

விளக்கவுரை

'அருவம், உருவம்' என்பன இங்கு, 'காரணம், காரியம்' என்னும் பொருளவாய் நின்றன. 'ஆவது' இரண்டும் எழுவாய் உருபாய் வந்தன. அவை இனம் பற்றி வந்த ஒருமை. 'சராசரம், சுகோதயம்' எனப் பாற்படுத்து ஓதினார்.

'தத்துவ ரூப மாகும் தரும்அரு உருவ மெல்லாம்;
... ... சகலமும் தத்துவங்காண்'

எனவும்,

எல்லாமாய்த் தத்துவங்கள் இயைந்ததென் அணுவுக்கென்னில்,
தொல்லாய கன்ம மெல்லாம் துய்ப்பித்துத் துடைத்தற் கும்பின்
நில்லாமை முற்று வித்து நீக்கவும், கூடி நின்ற
பொல்லாத ஆண வத்தைப் போக்கவும் புகுந்த தன்றே. -சிவஞான சித்தி சூ. *2. 71, 79*

எனவும் போந்த சிவஞான சித்தி இங்கு நினைக்கத் தக்கது. 'ஆகும்' என்பது முற்று.
இதனால், 'சதாசிவ லிங்கம் சிறப்புடைத் தாதற்குக் காரணம் அஃது அனைத்துத் தத்துவமுமாய் நிற்றலே' என்பது கூறப்பட்டது.

கூறுமின் நூறு சதாசிவன் எம்மிறை
வேறுரை செய்து மிகைப்பொரு ளாய்நிற்கும்
ஏறுரை செய்தொல் வானவர் தம்மொடும்

மாறுசெய் வான்என் மனம்புகுந் தானே. *#1710*
சதாசிவனாய் நிற்பவனைத் துதியாது வேறு சொற்களைச் சொல்லிக் காலம் போக்குபவரும், அந்தச் சதாசிவமூர்த்தி அவரவர்க்கு ஏற்புடைத்தாக அளித்து ஏவுகின்ற தொழில்களைச் செய் பவரும் ஆகிய வானவரது நெறியோடு எனது நெறிமாறுகொளச் செய்தற் பொருட்டு அவன் எனது நெஞ்சத்தில் புகுந்தான். ஆதலின் அவனே நாம் வழிபடும் கடவுளாயினான். (என்வழி நிற்பீராயின்) நீங்களும் அவனது திருப்பெயர்கள் பலவற்றையும் கூறி அவனை வழிபடுங்கள்.

விளக்கவுரை

'சதாசிவன் எம் இறை; கூறுமின் நூறு எனமாற்றி இறுதிக்கண் வைத்துரைக்க, 'கூறுமின்' என்றதனால், 'நூறு' என்பது பெயர்களாயிற்று, 'அவற்றைக் கூறுமின்' என வருதலால், 'வேறு' அவையல்லாத பிறவாயிற்று. 'உரை செய்தல்' இரண்டினுள் முன்னது 'சொல்லுதல்' எனவும், பின்னது 'ஏவுதல்' எனவும் பொருள் தந்தன. 'மிகைப் பொருள்' என்றது, 'பயனில் பொருள்' என்றவாறு. சிவனது திருநாமங்களைச் சொல்லாது பிறவற்றையே சொல்லுதலால் ஆன்ம லாபத்தையிழத்தல் பற்றி வானவரை, 'மிகைப்பொருள்' என்றார். 'நிற்கும் வானவர், தொழில் வானவர்' எனத் தனித்தனி இயையும், ஏறு - ஏறுதற்குரியன; பொருந்துவன. 'உரை செய்த தொழிலைச் செய்யும் வானவர்' என்க. அவரது நெறியெல்லாம் பிறவி நெறியாகலின் வீட்டு நெறி அதனின் மாறும் நெறியாயிற்று. அதனைச் செய்தலாவது, தருதல். 'செய்வான்', வானீற்று வினையெச்சம். மனம் புகுதலால் அந்நெறி எய்தினமை பற்றி, செய்வான் புகுந்தான் என்றார். பிறரெல்லாம் வந்த நெறியையே தருவாராக, சிவன் ஒருவனே வீட்டு நெறியைத் தருவோனாதல் பற்றி, 'சதாசிவன் எம் இறை' என்றார்.
இதனால், 'சதாசிவ வழிபாடொழிந்த செயல்களைச் செய்தலால் தேவரும் பந்தத்தின் நீங்காமையால், அதனின் நீங்க விரும்புவோர் சதாசிவ வழிபாடே செய்தல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

இருளார்ந்த கண்டமும் ஏந்து மழுவும்
சுருளார்ந்த செஞ்சடைச் சோதிப் பிறையும்
அருளார்ந்த நெஞ்சத்தெம் ஆதிப் பிரானைத்
தெருளார்ந்தென் னுள்ளே தெளிந்திருந் தேனே. *#1711*

அருளே நிறைந்த உள்ளத்தை உடையவனாகிய கடவுளை யான் எனது உள்ளத்திலே, கறுத்த கண்டத்தையும், மழு ஏந்திய கையையும், சுருண்ட சடையாகிய முடியையும், ஒளியை யுடைய பிறையாகிய கண்ணியையும் உடையவனாக நன்கு காண்கின்றேன்.

விளக்கவுரை

'அருவுருவனாகிய சதாசிவன் உருவனாய் விளங்கும் பொழுது இத்தன்மையனாய் விளங்குதலை யான் அநுபவத்தில் காண்கின்றேன்' என்பதாம். அதனால், 'கடவுளை இவ்வுருவத்தில் கண்டு வழிபடுதலும் சதாசிவ வழிபாடேயாகும்' என்பது உணர்த்தியவாறு. 'கடவுள் உருவத்திருமேனியனாய் விளங்கும் பொழுது இவ்வாறே நிற்பன்' என்பதை,

அண்டம் ஆரிரு ளூடு கடந்தும்பர்
உண்டு போலும்ஓர் ஒண்சுடர்; அச்சுடர்
கண்டிங் காரறிவார்! அறிவா ரெலாம்
வெண்டிங்கட் கண்ணி வேதியன் என்பரே. *-தி.5 ப.97 பா.2*

என்னும் அப்பர் திருமொழியாலும் அறிக.

சந்திரசேகரர், பிட்சாடனர் முதலிய திருமேனிகள் அவ்வப் பொழுது கொண்டு விடப்பட்ட வடிவங்களாக அவற்றை 'மாகேசுர பேதங்கள்' எனவும், இங்குக் கூறிய இவ்வடிவமே 'மகேசுர இயற்கை வடிவம்' எனவும் எங்கும் கூறப்படுதலையும், 'பிரளயாகலருக்கு ஞானத்தை முன்னின்று உணர்த்தும் பொழுது இவ் வடிவத்தில் நின்றே சிவன் உணர்த்துவன்' எனவும் எங்கும் கூறப் படுதல் காண்க.

கறைக் கண்டம், மழுப்படை, சடைமுடி, பிறைக் கண்ணி இவற்றைக் கூறியதனானே நாற்றோள், முக்கண் முதலிய பிறவும் கொள்ளப்படும். 'பிறையும்' என்பதன் பின் 'உடையவனாக' என்பது சொல்லெச்சமாய் எஞ்சி நின்றது.

இதனால், அருவுருவமாகிய சதாசிவ லிங்கம் உருவமாய் விளங்குமாறு கூறப்பட்டது. 'அனைத்தும் சதாசிவ லிங்கமே' என மேற் கூறியதனை நினைக.

சத்திதான் நிற்கின்ற ஐம்முகம் சாற்றிடில்
உத்தரம் வாமம் உரைத்திடும் சத்தி
பச்சிமம் பூருவம் தற்புரு டன்உரை
தெற்கில் அகோரம் வடகிழக் கீசனே. ***#1712***

சிவனது சத்தி ஒன்றே ஐந்தாகி அவனுக்கு மேற் கூறிய பக்கங்கள் ஐந்திலும் உள்ள ஐந்து முகங்களாய் நிற்கும். அதனால் அம்முகங்களின் பெயரானே அச்சத்திகளும் குறிக்கப்படும்.

விளக்கவுரை

முகங்களின் பெயர்களை ஈண்டே கூறுகின்றார் ஆதலின், அவற்றது திசையை மறித்து ஈண்டும் கூறினார். இதனால், 'ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோ சாதம், என்பன முறையே மேலே,

'நடுவு கிழக்குத் தாம்மேற்கு' என்னும் திசைகளில் உள்ளனவாகக் கூறப்பட்ட முகங்களின் பெயராதல் விளங்கிற்று.
சத்தி ஐந்தாதல், படைத்தல் முதலிய தொழில் ஐந்தனையும் செய்தற் பொருட்டு. படைத்தல் முதலிய தொழில்களைக் கீழே சத்தியோசாதம் முதலாக வைத்து, 'சத்தியோசாதம், வாம தேவம், அகோரம், தற்புருடம், ஈசானம்' என எண்ணிப் பொருத்திக் கொள்க. சத்தி, 'திருவடி' எனப்படுமாதலின். 'போற்றி யெல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்' என்பன முதலிய ஐந்தும் இவ்வைந்து சத்திகளையே குறித்தல் அறிக.
இதனால், சதாசிவ லிங்கத்தின் ஐந்து முகங்களின் பெயர்களும் அவற்றது உண்மையும் கூறப்பட்டன.

நாலுள்நல்ஈ சானம் நடுவுச்சி தானாகும்
தாணுவின் றன்முகந் தற்புரு டம்மாகும்
காணும்அ கோரம் இருதயம் குய்யமாம்
மாணுறு வாமம் ஆம் சத்திநற் பாதமே. *#1713*

கிழக்கு முதலிய நான்கு திசைகளில் உள்ள முகங்கட்கு நடுவேயுள்ள முகமாய் நிற்கின்ற 'ஈசானம்' என்னும் சத்தி சதாசிவனுக்கு அந்த முகமாய் நிற்றலேயன்றி, நடுத்தலையாகியும் நிற்கும். அவ்வாறே ஏனைய, 'தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோ சாதம்' என்னும் முகமாய் நிற்கின்ற சத்திகளும் அம்முகங்க ளாதலேயன்றிச் சதாசிவனது 'முகம், இருதயம், குய்யம், பாதம்' என்னும் அவ்வுறுப்புக்களாயும் நிற்கும்.

விளக்கவுரை

சத்தி சிவனுக்கு ஐந்து முகங்களாயும் 'உச்சி, முகம், இருதயம், குய்யம், பாதம்' என்னும் உறுப்புக்களாயும் நிற்றல் மந்திர ரூபமாயும் என்க. அதனால் ஐந்து முகங்களும், உச்சி முதலிய உறுப்புக்களும், இன்னும் அடுத்த மந்திரத்துக் கூறப்படுகின்ற சிகை முதலிய உறுப்புக்களும் கருதுகோள் (பாவனை) வகையால் அமைதல் விளங்கும்.
சதாசிவலிங்க வழிபாட்டில் வாய் மந்திரத்தைச் சொல்ல, மனம் அவற்றிற்கு ஏற்ற பாவனையைக் கொள்ள, கை கிரியையினைச் செய்ய, இவ்வாறு 'மந்திரம், கிரியை, பாவனை' என்னும் மூன்றானும் அது நிகழ்வதாகும்.
இதனுள் உயிரெதுகை வந்தது.

நெஞ்சு சிரம் சிகை நீள்கவசம் கண் அம்பாம்
வஞ்சமில் விந்து வளர்நிறம் பச்சையாம்
செஞ்சுறு செஞ்சுடர்ச் சேகரி மின்ஆகும்
செஞ்சுடர் போலுந் தெசாயுதந் தானே. *#1714*

பச்சை நிறத்தை உடையவளாய்ச் சிவனாகிய கதிரவனுக்கு அவனது

மிகச் செப்பமாகப் பொருந்திய கதிராய் விளங்குகின்ற பராசத்தியாகிய பெண்டு சதாசிவனுக்கு மந்திர வகையால் (மேற்கூறிய ஐந்து முகங்களும், உச்சி முதலிய உறுப்புக்களுமாய் நிற்றலேயன்றி,) இருதயம், சிகை, சிரம், கவசம், நேத்திரம், அத்திரம் என்னும் உறுப்புக்களாயும், அம்மூர்த்தியின் பத்துக் கைகளிலும் உள்ளனவாக மேற்கூறப்பட்ட பகலவன் போலும் ஒளியினையுடைய பத்துப் படைக்கலங்களாயும் நிற்பள்.

விளக்கவுரை

'பச்சையாம் ... ... மின்' என்பதனை முதலிற் கொண்டு, 'ஆகும்' என்பதனை 'தெசாயுதத்திற்'கும் கூட்டி, 'மின், விந்து ஆகும்: தெசாயுதம் ஆகும்' என உரைக்க.

விந்து - சுத்த மாயை, அஃது ஆகுபெயராய் அதன் காரியமாகிய மந்திரத்தைக் குறித்தது. இவற்றை 'மந்திரம்' எனக் கூறிய இதனானே மேற்போந்த ஐந்து முகங்களும், உச்சி முதலிய உறுப்புக்களும் மந்திரங்களே ஆயின. அவற்றைக் குறிக்கும் மந்திரங்கள் 'பஞ்சப் பிரம மந்திரம்' என்றும், இங்குக்கூறிய மந்திரங்கள் 'சடங்க மந்திரம்' என்றும் சொல்லப்படும். இப் பதினொன்றும் கூடிய தொகுதி. 'சங்கிதா மந்திரம்' எனப்படும். சைவத்தில் சிவ மூல மந்திரம் தலையானதாய் நிற்க இப்பதினொரு மந்திரங்களும் இன்றியமையாத் துணை மந்திரங்களாய் நிற்கும். இவற்றுள் பிரம மந்திரங்கள் ஐந்தும் 'நம' என்னும் முடிவினதாக, சடங்க மந்திரங்கள் 'நம' என்பதனோடு வேறு முடிவுகளையும் ஏற்ற பெற்றியால் உடையனவாகும்.

பஞ்சப் பிரம மந்திரங்கள் ஐந்தொழிற் சத்திகளேயாதல் போலச் சடங்க மந்திரங்கள் சிவனது எண்குணங்களில் தூய உடம்பின னாதல் இயல்பாகவே பாசங்களின் நீங்குதலிலும், இயற்கையுணர்வு முற்றுணர்விலும் அடங்க ஆறாய் நிற்கும் குணங்களேயாகும். எண் குணங்களில் ஆறினைச் சிறப்பாக எடுத்து இறைவனை, 'சுத்த சாட் குண்ணியன்' என்று கூறுவர்.

'செஞ்செவ்வுறு' என்பது குறைந்து நின்றது. செஞ்செவ் - மிக்க செப்பம். சேகரி மின் - தலைவியாய பெண்டு.

இவை இரண்டு மந்திரங்களாலும் முகமாய் நிற்கின்ற சத்திகள் பிறவாயும் நிற்றல் கூறப்பட்டது. இவற்றானே பிரம மந்திரம், அங்க மந்திரங்களது உண்மையும் கூறப்பட்டனவாம்.

எண்ணில் இதயம் இறைஞான சத்தியாம்
விண்ணிற் பரைசிரம்மிக்க சிகைஆதி
வண்ணக் கவசம் வனப்புடை இச்சையாம்
பண்ணும் கிரியை பரநேத் திரத்திலே. ***#1715***

இருதயம் முதலாகக் கூறிய சடங்க மந்திரங்கள் ஆறனுள் அத்திரம் ஒழிந்த ஏனைய ஐந்தில் சிவனது ஞான சத்தியே இருதய மந்திரமாயும், பராசத்தியே சிர மந்திரமாயும், ஆதி சத்தியே சிகா மந்திரமாயும், இச்சா சத்தியே கவச மந்திரமாயும், கிரியா சத்தியே நேத்திர மந்திரமாயும் நிற்கும்.

விளக்கவுரை

அத்திர மந்திரம் மேற்கூறிய குணங்களுள் ஒன்றேயாம். எண்ணில் - ஆராய்ந்து உணரின்.
இதனால் அங்க மந்திரங்களாய் நிற்கும் சத்தியின் வகைகள் கூறப்பட்டன.

சத்தி நாற்கோணம் சலம்உற்று நின்றிடும்
சத்தி அறுகோணம் சயனத்தை உற்றிடும்
சத்திநல் வட்டம் சலம்அற் றிருந்திடும்
சத்தி உருவாம் சதாசிவன் றானே. ***#1716***

இலிங்கத்தின் பீடம் நாற்கோணமாயிருப்பின் அது சிவனது இயக்கச் சத்தியாகும். அறுகோணமாய் இருப்பின் அது கிடத்தற் சத்தியாகும். வட்டமாய் இருப்பின் அது இருத்தற் சத்தியாகும். இதனால் சதாசிவன் சத்தி வடிவாய் நின்றே அருள்புரிவான் ஆகலின், சதாசிவ லிங்கமும் அத்தன்மையதேயாம்.

விளக்கவுரை

இலிங்கத்தில் சத்தியே பீடமாதல் பற்றி அதனை வேறு கூறாது 'சத்தி' என்றே போயினார். கிடத்தல், இருத்தல், இயங்கல் என்னும் மூன்றும் இலயம், போகம், அதிகாரம் என்க. சலம் - அசைவு.
இதனால், சதாசிவலிங்கத்து வேறுபாடுகளும், அவற்றது உண்மையும் கூறப்பட்டன.

மானந்தி எத்தனை காலம் அழைப்பினும்
தானந்தி அஞ்சில் தனிச்சுட ராய்நிற்கும்
கானந்தி உந்தி கடந்து கமலத்தின்
மேனந்தி ஒன்பதின் மேவிநின் றானே. ***#1717***

பெரியோனாகிய சிவனைக் கிரியையாளர்கள் எத்தனை முறை தம்பால் வருமாறு அழைப்பினும் அத்தனை முறையும் அவன் ஐந்து முகங்களையுடைய சதாசிவ லிங்கத்திடத்தே வந்து, ஒப்பற்ற ஒளிவடிவாய் நிற்பான். யோகிகள் சுவாதிட்டானத்தினின்றும் பிராண வாயுவை மேல் எழத்தூண்டி, மேலும் உள்ள ஆதாரங்களைக் கடந்தவழி, ஏழாந்தானமாகிய ஆயிர இதழ்த் தாமரையிடத்தும், அதற்குமேல் எட்டாந் தானமாகிய நிராதாரத்திடத்தும், அதனையும் கடந்த

ஒன்பதாவதாகிய மீதானத்திடத்தும் விளங்குவான்.

விளக்கவுரை

'யோகிகட்கே சிவன் அகத்தில் விளங்கி, ஏனைக் கிரியையாளர்க்குச் சதாசிவலிங்கத்திலே விளங்குவான்' என்பதாம். எனவே, 'கிரியையாளர்கள் சதாசிவ லிங்கத்திலே வழிபடுமாற்றால் அவனைக் காண்க' என்றதாயிற்று. 'நந்தி' நான்கில் முன்னது பெயராயும், ஏனைய வினையெச்சமாயும் நின்றன. நந்துதல், இங்கு ஆக்கத்தின் மேற்று. கால் - காற்று, 'கடந்தவழி' என்பது, 'கடந்து' எனத் திரிந்து நின்றது. 'மேல் நந்தி ஒன்பதின் மேவி நின்றான்' என்றதனால், கமலம், ஆயிர இதழ்க் கமலமே ஆயிற்று.
இதனால், சதாசிவ லிங்கம் கிரியை யாளர்க்கு இன்றி யமையாததால் கூறப்பட்டது.

ஒன்றிய வாறுஉம் உடலி னுடன்கிடந்து
என்றும்எம் ஈசன் நடக்கும் இயல்பது
தென்றலைக் கேறத் திருந்து சிவனடி
நின்று தொழுதேன்என் நெஞ்சத்தி னுள்ளே. ***#1718***

எங்கள் சிவபெருமான் தக்க முறையில் உங்களுடைய உடலின் உள்ளே பொருந்தி என்றும் விளங்குகின்ற முறை முன்னை மந்திரத்தின் பிற்பகுதியிற் கூறியவாறாகும். அதனால் நான் சிவனது திருத்தமான பாதங்கள் எனது அழகிய தலையிலே பொருந்துதற் பொருட்டு உள்ளத்துள் நின்றே வணங்கினேன்.

விளக்கவுரை

நீவிர் அது மாட்டீர் ஆகலின், மேற்கூறியவாறு சதாசிவ லிங்கத்தில் சிவனைக் கண்டு வழிபடுங்கள்' என்பதும், 'அவ்வாறு வழிபட்டுவரின் என்னைப் போல நெஞ்சத்தினுள்ளே நின்று தொழும் நிலையை எய்துவீர்' என்பது குறிப்பெச்சம். ஒன்றியவாறு - தக்கவாறு. 'அந்த அந்த ஆதாரங்கட்கு ஏற்ப' என்றபடி. யோகத்தால் 'தூய்மை பெற்ற தலை' என்பர், 'தென்தலை' என்றார். தென் - அழகு. 'சிவனது திருவடி தலைமேல் ஏற' என்றது, 'ஞானம் உண்டாக' என்றபடி.
இதனால், 'சதாசிவலிங்க வழிபாடு பின்னர் உளதாகும் ஆன்மலிங்க வழிபாட்டைத் தரும்' என்பது கூறப்பட்டது. இனி இங்கு நின்றும் ஆன்மலிங்க வழிபாட்டின் சிறப்பையே கூறுகின்றார். 'அதனைப் பெறுதற்குச் சதாசிவலிங்க வழிபாட்டைக் கடைப்பிடிக்க' என வலியுறுத்தற் பொருட்டு. இவ்வாற்றால் இனிவரும் அதிகாரத்திற்குத் தோற்றுவாயும் அமைகின்றது.

உணர்ந்தேன் உலகினில் ஒண்பொரு ளானைக்

கொணர்ந்தேன் குவலயம் கோயில்என் நெஞ்சம்
புணர்தேன் புனிதனும் பொய்யல்லன் மெய்யே
பணிந்தேன் பகல்அவன் பாட்டும் ஒலியே. *#1719*

ஒளிப் பொருளாகிய சிவனை நான் அத் தன்மையனாக இவ்வுலகிற்றானே உணர்ந்தேன். பின்பு அவனை இவ்வுலகத்திற்கே வருமாறு கொணர்ந்தேன். பின் என் மனமே கோயிலாக அவனைக் கூடினேன். அதனால் அவன் இல்லாதவன் அல்லன்; உண்மையாக உள்ளவனே. நாளெல்லாம் நான் பாட்டும், ஒலியுமாக அவனைப் பணிதலையே செய்கின்றேன்.

விளக்கவுரை

உணர்ந்தது, ஆசிரியர் மொழியாற் கேள்வியினால் ஆகும். பின்பு முன் உணர்ந்தவாறு உள்ளத்தே வைத்து நினைக்க, அவன் நினைவிலே விளங்கிநிற்றலால், 'குவலயம் கொணர்ந்தேன்' எனவும், 'என் நெஞ்சம் கோயிலாகப் புணர்ந்தேன்' எனவும், 'இங்ஙனம் அவன் எனக்கு அனுபவப் பொருளாகவே இருத்தலால் 'பொய்யல்லன் மெய்யே' எனவும் கூறினார். 'பொய்யல்லன்; மெய்யே' என்றது, 'இறைவன் என்று ஒருவன் உளனோ' என ஐயுறுவாரை நோக்கிக் கூறியது. 'நெஞ்சம்' என்பதன் பின் 'ஆக' என்பதும், 'ஒலி' என்பதன்பின் உம்மையும், 'ஆக' என்பதும் விரிக்க. 'பகல்' என்பதன்பின் 'எல்லாம்' என்பது எஞ்சி நின்கின்றது.

ஆங்கவை மூன்றினும் ஆரழல் வீசிடத்
தாங்கிடும் ஈரேழுள் தான்நடு வானதில்
ஓங்கிய ஆதியும் அந்தமும் ஆம்என
ஈங்கிவை தம்முடல் இந்துவும் ஆமே. *#1720*

உடம்பின்கண் ஒன்றின்மேல் ஒன்றாய் உள்ள அக்கினி மண்டலம், சந்திர மண்டலம் என்னும் மூன்றிலும் நெருப்புப் போன்ற ஒளி வீச, 'சிவனது பேதம் ஒன்பதுள் நடுவணதாகிய சதாசிவ மூர்த்தத்தில் உலகத் தோற்றமும், ஒடுக்கமும் நிகழ்வன' என்று உணர்ந்து நின்றால், அந்தச் சதாசிவ மூர்த்தமும், உலகத்தோற்றமும், ஒடுக்கமுமாய் நிற்கின்ற சத்தி, அவ்வுணர்ச்சியை உடையவனது உடலில் சந்திரன் போல ஒளிவிட்டு நிற்கும்.

விளக்கவுரை

'உடல்' எனப் பின்னர் வருதலின் 'ஆங்கு' என்னும் சுட்டுச் செய்யுளின் முதற்கண் நின்றது தாங்குதலுக்கு, 'சிவன்' என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க. 'வீசிட' என்னும் எதிர்கால வினை யெச்சம். 'என' என்பதின் சொல்லெச்சமாய் நிற்கும் 'உணர' என் பதனோடு முடிந்தது. உணர்தல், இங்கு, தியானித்தல். இவற்றை உடைய சத்தியை 'இவை' என்றது

பான்மை வழக்கு. 'இவற்றால்' என்னும் உருபு தொகுத்தலாயிற்று. 'இந்துவும்' என்னும் உம்மை உயர்வு சிறப்பு.

தன்மேனி தற்சிவ லிங்கமாய் நின்றிடும்
தன்மேனி தானும் சதாசிவ மாய்நிற்கும்
தன்மேனி தற்சிவன் தற்சிவா னந்தமாம்
தன்மேனி தானாகும் தற்பரன் றானே. *#1721*

அகவழிபாடு செய்பவனுக்கு அவனது உடம்பே சதா சிவமூர்த்தியாயும், அம்மூர்த்தி மானாயும் நிற்கும். இன்னும் அது சுத்த சிவனாயும், அச்சிவனது ஆனந்தமாயும் நிற்கும். அஃது இவ் வாறெல்லாம் ஆகும்படி சிவன் அவனது உடம்பே தானாய் விளங்கி நிற்பான்.

விளக்கவுரை

'அகவழிபாடு செய்வான்' என்பது அதிகாரத்தால் கொள்ளப்பட்டது. சதாசிவனையும், சுத்த சிவனையும் உணர்ந்து, அவ் வுணர்வானே சுத்த சிவனது ஆனந்தத்தைப் பெறுதற்கு வாயிலாதல் பற்றி உடம்பை அவையெல்லாமாகப் பாற்படுத்து அருளிச் செய்தார். மானுடராக்கை வடிவு சிவலிங்கம்' என்னும் மந்திரத்துட் கூறியன பிண்டம் இலிங்கமாதலைக் குறித்தற்கும் இங்குக் கூறியன அகவழி பாட்டின் சிறப்பினை உணர்த்துதற்கு கூறப்பட்டன ஆகலின், இவை கூறியது கூறல் ஆகாமை அறிக. தற்பரன் - தனக்கு மேலே உள்ளவன்.

ஆரும் அறியார் அகாரம் அவன்என்று
பாரும் உகாரம் பரந்திட்ட நாயகி
தாரம் இரண்டும் தரணி முழுதுமாய்
ஊறி எழுந்திடும் ஓசைய தாமே. *#1722*

சிவன் அகாரமாயும், சத்தி உகாரமாயும் நிற்க, அவ்விரண்டும் கூடி ஓகாரமாகும். அந்த ஓகாரம் உலக முழுதும் பரவி, உள்ளத்தினின்றும் எழுகின்ற எல்லா எழுத்துக்களுமாய் ஒலிக்கும்.

விளக்கவுரை

'அதனால் அந்த ஓகாரத்தை உன்னலே சிறப்புடைய வழிபாடாகும்' என்பது குறிப்பெச்சம். 'பீசாக்கரங்கள் அனைத்திலும் மகாரம் சேர்ந்து வருதல் இயல்பாகலின், அனைத்து மந்திரங்கட்கும் பொதுப் பீசமாகிய ஓகாரத்தோடு அது சேர்ந்து நிற்றல் சொல்ல வேண்டா' என்று போயினார். பாரும் - அறிமின். இதனை 'நாயகி' என்பதன் பின்னர்க்கூட்டுக. 'தாரகம்' என்பது இடைக் குறைந்து நின்றது. தாங்குவது, என்னும் பொருட்டாய்ப் பிறமந்திரங்கள் அனைத்திற்கும் அடிநிலையாவது' என்னும் கருத்தினைத் தருவது 'இரண்டும் தாரகம்' என மாற்றியுரைக்க. 'எழுத்து' என்பது, 'எழுது' என்பது அடியாகப்

பிறக்குமாயினும் உள்நின்று, 'எழு' என்பது அடியாகப் பிறப்பது - என்றலும் பொருந்தும் ஆகலின், 'எழுந்திடும்' என்றது எழுத்துக்களின் பிறப்பைக் குறித்து நின்றதாம். 'மாறி எழுந்திடும்' என்பது பாடம் அன்று. இதனுள் ரகரத்திற்கு றகரம் ஓராற்றால் இன எதுகையாயிற்று.

இலிங்கநற் பீடம் இசையும்ஓங் காரமாய்
இலிங்கநற் கண்டம் நிறையும் மகாரம்
இலிங்கத்துள் வட்டம் இறையும் உகாரம்
இலிங்கம் அகாரம் நிறைவிந்து நாதமே. *#1723*

(முன்னை மந்திரத்தில், 'ஓங்காரத்துள் சிவமும், சத்தியும் முறையே அகாரமும், உகாரமுமாய் நிற்பர், என்றதனால், அவ்விருவரது வடிவமுமாகிய இலிங்கம் ஓங்காரமாய் நிற்றல் எவ்வாறு' எனின்,) பீடம் சமட்டியான ஓங்கார வடிவேயாய் இருக்கும் இலிங்கம். ஒவ்வொரு கூற்றில் ஒவ்வோர் எழுத்தாய் வியட்டியாய் இருக்கும். அவற்றுள் பீடத்தின் உள்ளே மறைந்து நிற்கும் பகுதி மகாரமாயும், பீடத்தோடு இணைந்து வெளியே புலனாகி நிற்கின்ற பொருத்துவாயாகின்ற வட்டம் உகாரமாயும், இலிங்கம் கீழ் நின்று முக்கூறுபட்டு முறையே அகாரமும், விந்துவும், நாதமுமாய் இருக்கும்.

விளக்கவுரை

'இலிங்க நற் கண்டம் மகாரமாய் நிறையும்; இலிங்கத்து உள்வட்டம் உகாரமாய் நிறையும்' என ஆக்கச் சொல்லை ஏனையிரண்டிற்கும் கூட்டி, மொழிமாற்றி உரைக்க. பின்பு, 'இலிங்கம் அகாரம், நிறைந்து விந்து, நாதம் ஆம்' என்க. கண்டம் - கூறு, பீடத்துள் மறைந்து நிற்பது தனி ஒருபகுதியாய்ப் புலனாகாது நிற்றல் பற்றி அதனை, 'கண்டம்' என்றும், பீடத்தின் விளிம்பு வெளிவட்டம் ஆதலின், அதன் நடுவில் இலிங்கம் பொருந்தி நிற்கின்ற பொருத்து வாயை 'உள்வட்டம்' என்றும் கூறினார்.

இறைவனது உபசார வடிவங்களில் மந்திர வடிவம் சிறந்த தாதல் பற்றி அதனை முன்னை மந்திரத்துட் கூறி, அவ்வாற்றானே இலிங்கமும் மந்திர வடிவாதலை இம்மந்திரத்துட் கூறினார். புறத்து உள்ள இலிங்கம் இவ்வாறு மந்திர வடிவாதலைக் கூறியதனானே அகத்திலும் இலிங்கம் அவ்வாறே கொள்ளப்படுதல் பெறப்பட்டது. படவே, இவ்விரண்டு மந்திரங்களும் வருகின்ற அதிகாரத்திற்குச் சிறந்த தோற்றுவாய் ஆயினமை காண்க.

9.5.ஆத்தும லிங்கம்

அகார முதலாய் அனைத்துமாய் நிற்கும்
உகார முதலாய் உயிர்ப்பெய்து நிற்கும்

அகார உகாரம் இரண்டும் அறியில்
அகார உகாரம் இலிங்கம தாமே. *#1724*

சிவன் அகார கலைக்கு முதல்வனாம் முகத்தால் அனைத்துப் பொருளுமாய் நிற்பான். உகார கலைக்கு முதல்வனாம் முகத்தால் அப்பொருள்களைச் செயற்படுத்தி நிற்பான். அதனால் அந்த இருகலைகளை உணரின் அந்த உணர்வுதானே சிவனது வடிவமாகும்.

விளக்கவுரை

பிரணவ கலைகளில் பருநிலையை உடையன அகார கலை, உகார கலைகளேயாதலின், அவற்றை உணரும் உணர்வே முதற்கண் இலிங்கமாய் நிற்கும்' எனக் கூறினார், 'நிற்கும்' என்பவற்றிற்கு, 'சிவன்' என்னும் எழுவாய் வருவிக்க. உயிர்ப்பு - செயற்பாடு. எய்தல் - நிகழ்த்தல். சொல்லோடு பொருட்கு உள்ள ஒற்றுமை கருதி, மந்திர கலையையே பொருளாக ஓதினார்.

இதனால் மந்திர உணர்வே இலிங்கமாமாமறு தொகுத்துக் கூறப்பட்டது.

ஆதாரம் ஆதேயம் ஆகின்ற தெய்வமும்
மேதாதி நாதமும் மீதே விரிந்தன
ஆதார விந்து அதிபீடம் நாதமே
போதா இலிங்கப் புணர்ச்சிய தாமே. *#1725*

தனக்குக் கீழ் உள்ள அகாரம் முதலிய எழுத்துக்களை நோக்க அவற்றைத் தாங்கிநிற்கின்ற ஆதாரமாயும், தனக்கு மேல் உள்ள நாதத்தை நோக்க அதன்கண் பொருந்தியுள்ள ஆதேயமாயும் உள்ள விந்துவும், மேதை முதலிய அனைத்துக் கலைகட்கும் முதலாய் உள்ள நாதமும் முறையே ஒன்றின்மேல் ஒன்றாய் விளங்கி நிற்கும். அதனால், அவற்றுள் விந்துவே ஆதாரமாகின்ற பீடமாயும் நாதமே அந்தப் பீடத்தின்பால், வந்து இலிங்கத்தின் சேர்க்கையாயும் இயைந்து நிற்கும்.

விளக்கவுரை

மேதாதி நாதம், 'மேதை முதலியவற்றிற்கு முதலாகிய நாதம்' என நான்காவதன் தொகையாய் நின்றது. 'விந்து அதி ஆதார பீடம்' என மொழிமாற்றிக் கொள்க. 'விந்து, நாதம்' - என்றது, அவற்றால் உளவாகும் உணர்வுகளையே என்க.

இதனால், மந்திர உணர்வே இலிங்கமாமாறு வகுத்துக் கூறப்பட்டது.

சத்தி சிவமாம் இலிங்கமே தாபரம்
சத்தி சிவமாம் இலிங்கமே சங்கமம்
சத்தி சிவமாம் இலிங்கம் சதாசிவம்
சத்தி சிவமாகும் தாபரந் தானே. *#1726*

(மேற்கூறிய விந்து நாதங்கள் முறையே சத்தி சிவவடிவாகும் ஆதலால்,)

அவ்விரண்டும் ஒன்றாய் இயைந்த நிலையே புறத்தில் உள்ள தாபர சங்கமங்களும், சாதாக்கிய தத்துவத்தில் விளங்கும் சதாசிவ மூர்த்தியும் ஆகும். இனி சிவ வடிவம் யாதாயினும் அது சத்தி, சிவம் இரண்டும் இயைந்த வடிவமேயாகும்.

விளக்கவுரை

தாபரம் - திருக்கோயிலில் உள்ள திருவுருவங்கள். சங்கமம், அடியார்கள். ஈற்றில் நின்ற 'தாபரம்' என்பது இலிங்கத்தின் பரியாயப் பெயராய்ச் சிவவடிவை உணர்த்திற்று. எவ்வடிவமும் 'சத்தி சிவக்கூட்டே' என்றதனால், உணர்வாகிய வடிவமும் அன்னதேயாதல் பெறப்பட்டது.

தான்நேர் எழுகின்ற சோதியைக் காணலாம்
வான்நேர் எழுகின்ற ஐம்ப தமர்ந்திடம்
பூநேர் எழுகின்ற பொற்கொடி தன்னுடன்
தான்நேர் எழுந்த அகாரம தாமே. ***#1727***

பொன்னால் இயன்ற, பூவொடு கூடிய கொடிபோலும் சத்தியுடன் சிவன் ஆன்ம சிற்சத்தியை நேரே பற்றி அதற்குப் பொருள் தருகின்ற நாதமே தன் வடிவாகக் கொண்டு ஆன் மாவின் உணர்வில் விளங்குவான். அதனால் அந்த நாதத்தின் காரிய மாய் ஆகாயத்தின் ஒலியால் விளங்கி நிற்கின்ற ஐம்பது எழுத்துக் களும் பொருந்தியுள்ள இடத்தில் அடியவன் அடியார்களுக்கு நேரே விளங்கி நிற்கும் சிவசோதியைக் காண இயலும்.

விளக்கவுரை

'ஆதலால் அந்த ஐம்பது எழுத்துக்களையும் இலிங்கமாக வைத்துத் தியானிக்க' என்பது குறிப்பெச்சம். அத்து வாக்களுள் ஏனை ஐந்து கலைகளில் அடக்கம் ஆதல் வெளிப்படை ஆதலின், அவற்றுள் மந்திராத்துவா அக்கலைகளில் அடங்கி நிற்கும் முறையும் வெளிப்படை. ஆகவே நிவிர்த்தி பிரதிட்டா கலையில் அடங்கி நிற்கும் எழுத்துக்கள் ஆதார பீடமாகவும், வித்தியா கலையில் அடங்கி நிற்கும் எழுத்துக்கள் நடுக்கண்டமாகவும் சாந்தி கலையில் உள்ள எழுத்துக்கள் பீடமாகவும், சாந்திய தீத கலையில் உள்ள எழுத்துக்கள் இலிங்கமாகவும் நிற்றல் போதரும்.
இம்மந்திரத்தை மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி உரைக்க. 'அமர்ந்திடம்' - என்பதில் ஏழாவது இறுதிக்கண் தொக்கது. 'தான்' இரண்டில் முன்னது வழிபடுபவனையும், பின்னது வழிபடப்பட்டு சிவனையும் குறித்தன. நாதத்தை, 'அகாரம்' என்றலும், விந்துவை உகாரம் என்றலும் வழக்கு. அதனால், 'சத்தி உகாரமாய் நிற்க' என்பது இங்கு ஆற்றலால் பெறப்படும்.
நிவிர்த்தி கலையுட்பட்ட நம்மனோர்க்கு எழுத்தோசைகள் ஆகாயத்தின்

குணமாகிய இசையோசையாம் உபாதியோடு கூடியன்றிப் புலனாகாமையின் அவற்றை, 'வான் நேர் எழுகின்ற ஐம்பது' என்றார். இதனால் அக்கர உணர்வே ஆத்தும லிங்கமாதல் கூறப்பட்டது.

விந்துவும் நாதமும் மேவும் இலிங்கமாம்
விந்துவதே பீடம் நாதம் இலிங்கமாம்
அந்த இரண்டையும் ஆதார தெய்வமாய்
வந்த கருஐந்தும் செய்யும்அவ் வைந்தே. ***#1728***

சத்தி சிவங்கட்கு வடிவமாய் நிற்கின்ற விந்து நாதங்களின் வடிவமே இலிங்க வடிவம். அவற்றுள் விந்துவே பீடமாயும், நாதமே இலிங்கமாயும் நிற்கும். அந்த விந்து நாதங்களை முதலாகக் கொண்டு தோன்றிய 'சிவன் சத்தி, சதாசிவன், மகேசுரன், வித்தியேசுர' என்னும் முதல்வர் ஐவரும் முறையே, சிவம், சத்தி, சதாக்கியம், ஈசுரம், சுத்த வித்தை என்னும் சுத்த தத்துவம் ஐந்தையும் தோற்றுவிப்பார்கள்.

விளக்கவுரை

சிவன் முதலிய ஐவரே உண்மைக் கருத்தாக்களாக ஏனை, 'அனந்த தேவர், சீகண்டர், மால், அயன்' முதலியோர் உபசார கருத்தாக்களேயாதலின், 'அவரும், அவர்தம் செயல்களும் இவ் வுண்மைக் கருத்தாக்களாலே உள ஆவன' என்பது பெறப்படும். படவே, 'அக்கருத்தாக்கள் ஐவரும் விந்து நாதங்களை முதலாகக் கொண்டவர் ஆதலின், அவ்விந்து நாதங்கள் இன்றி உலகம் இல்லை' என்றதனால், அவ்விந்து நாதங்களின் வடிவாகிய இலிங்கம் உலக முதலாகும்' என்றதாயிற்று 'இவ்வாறு இலிங்க வடிவின் உண்மையை உணரும் உணர்வே ஆத்தும லிங்கம்' என்பது கூறப்பட்டது.

'விந்து; நாதம்' என்பன பரவிந்து பரநாதங்களையும் அபர விந்து அபர நாதங்களையும் ஏற்ற பெற்றியான் உணர்த்தி நிற்கும் ஆதலின், இங்கு அவை பரவிந்து பரநாதங்களை உணர்த்தின. அவை முடிநிலை முதலாய் நிற்றலின் அவற்றை ஒழித்து, அபர நாதம் முதலாகவே தத்துவங்கள் எண்ணப்படுகின்றன. அபர நாத மூர்த்தியே, 'சிவன்' என்றும், அபர விந்து மூர்த்தியே 'சத்தி' என்றும் சொல்லப் படுகின்றனர்.

அம்மூர்த்திகட்கு இடமாய் நிற்கும் தத்துவங்களே, 'சிவதத்துவம், சத்தி தத்துவம்' - எனப்படுகின்றன. 'இலிங்கம்' இரண்டினில் முன்னது பொதுவாக இலிங்க வடிவினையும், பின்னது சிறப்பாகப் பிழம்பினையும் குறித்தன.

முதல்வர் ஐவரையும் 'கரு ஐந்து' என அஃறிணை வாய்பாட்டாற் கூறினார். கடவுளரை எத்திணை வாய்பாட்டிலும் கூறுதல் வழக்காதலின் 'தெய்வமாய்' என்பதன்பின், 'கொண்டு' என ஒருசொல் எஞ்சிநின்றது.

இதனால், 'இலிங்க வடிவம் உலக முதலின் வடிவம் என உணரும் உணர்வே ஆத்தும லிங்கமாதல் கூறப்பட்டது.

சத்திநற் பீடம் தகும்நல்ல ஆன்மா
சத்திநற் கண்டம் தகுவித்தை தானாகும்
சத்திநல் லிங்கம் தகும்சிவ தத்துவம்
சத்திநல் லான்மாச் சதாசிவந் தானே. *#1729*

அருளே திருமேனியாகக் கொள்ளும் சிவனது திருவடியாகிய இலிங்கத்தில் பீடம் ஆன்மதத்துவமும், நடுக் கண்டம் வித்தியா தத்துவமும், கண்டத்திற்குமேல் உள்ள பகுதி சிவதத்துவமும் ஆகும். அந்த வகையினதாகிய இலிங்க மூர்த்திமான் சதாசிவராவர்.

விளக்கவுரை

இதனுள் 'சத்தி' என்றது, 'அருள்' என்றபடி. முன்னர் 'ஆன்மா' என்றது ஆன்ம தத்துவத்தையும், பின்னர் 'ஆன்மா' என்றது மூர்த்திமானையுமாகும். முப்பத்தாறு 'தத்துவங்களும் கூடிய கூட்டம் இலிங்க வடிவாம்' என்றதனால் அத்தத்துவங்களால் விளங்குகின்ற ஆன்ம உணர்வும் சிவனுக்கு இலிங்கத் திருமேனியாய் நிற்றல் கூறப்பட்டது. படவே, அவ்வுண்மையை உணராதவர்க்கு அவரது உணர்வு பாசமாயும், உணர்வார்க்கு அவரது உணர்வு சிவமாயும் நிற்கும் என்க.

மனம்புகுந் தென்னுயிர் மன்னிய வாழ்க்கை
மனம்புகுந் தின்பம் பொகின்ற போது
நலம்புகுந் தென்னொடு நாதனை நாடும்
இலம்புகுந் தாதியும் எற்கொண்ட வாறே. *#1730*

மனத்தின் தொழிற்பாடு நிகழ்தலால் நடை பெறுகின்ற என்னுடைய உயிர் வாழ்க்கையில் அந்த மனம் உலக இன்பத்தையே மிகுவித்துக் கொண்டிருக்கின்ற நிலைமையின் இடையே சிவனது திருவருள் புகுந்து செயலாற்றத் தொடங்கின மையால், அந்த மனமும் முன்னை நிலையை விடுத்து, என்னையும், என் தலைவனையும் நினைவதாயிற்று. சிவன் எனது உடம்பையே தனது இல்லமாகக் கொண்டு என்னை ஆட்கொண்டது இம் முறைமையினாலாம்.

விளக்கவுரை

எனவே, 'எனது உயிர் ஆத்தும லிங்கமானது இவ் வாற்றால்' என்றபடி. 'புகுந்து' நான்கில் முதலாவதும், மூன்றாவதும் 'புகுதலால்' என்பதன் திரிபு. 'நலம்' என்றது. திருவருளை, 'நாடும்' என்னும் பயனிலைக்கு எழுவாய், 'அம்மனம்' என வருவிக்க. இல்லம், 'இலம்' என இடைக் குறைந்து நின்றது. 'இல்லமாகப் புகுந்து' என ஆக்கம் வருவிக்க.

இதன் பின்னிரண்டு அடிகள் உயிர் எதுகை பெற்றன.

பராபரன் எந்தை பனிமதி சூடி
தராபரன் தன்அடி யார்மனக் கோயில்
சிராபரன் தேவர்கள் சென்னியில் மன்னும்
மராமரன் மன்னி மனத்துறைந் தானே. ***#1731***

மேற்கூறியவாறு என்னை ஆட்கொண்டபின் இறை யியல்பு அனைத்தையும் உடைய சிவன் எனது உயிரையேதான் இருக்கும் இடமாகக் கொண்டான்.

விளக்கவுரை

'அதனால் எனது உயிர் ஆத்தும லிங்கமாயிற்று' என்பது குறிப்பெச்சம். பரன் + அபரன் = பராபரன். 'மேலும், கீழுமாய் நிற்பவன்' என்பது பொருள். 'மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க' - எனத் திருவாசகத்துள்ளும் வந்தது. *(தி.8 திருவண்டப்பகுதி, 50)* 'இவ்வாற்றால் என் உயிரையும் இடமாகக் கொள்ளுதல் அவனுக்கு இயல்பாயிற்று' என்றபடி. எந்தை - அடைந்தவர் மேல் தந்தை போலும் அருள் உடையவன். மதி சூடுதல் சார்ந்தாரைக் காப்பவன் ஆதலைக் குறிப்பது. 'தராபரன்' என்றது மக்களை ஆட்கொள்ளுதலையும், 'தேவர்கள் மன்னும்' என்றது தேவர்களை ஆட்கொள்ளுதலையும் குறித்தவாறு. 'அடியார்களது மனத்திலும், சிரத்திலும் வீற்றிருப்பவன் எனது மனத்திலும் நீங்காது இருப்பவன் ஆயினான்' என்பது அவனது பேரருளை வியந்தவாறு. 'சிரபரன்' என்பது எதுகை நோக்கி நீண்டது. இங்கு உள்ள 'பரன்' என்பதை, 'கோயில்' என்பதனோடும் கூட்டுக. 'மன்னும்' என்பது முற்று. 'மராமரன் போல மன்னி உறைந்தான்' என்க. மரன் - மரம். மரங்களில் மிக்க வயிரம் உடையது மராமரம் ஆதலின், அஃது அகலாது இருத்தற்கு உவமையாயிற்று.

பிரான் அல்லன் ஆம்எனில் பேதை உலகம்
குரால் என்னும் என்மனம் கோயில்கொள் ஈசன்
அராநின்ற செஞ்சடை அங்கியும் நீரும்
பொராநின் றவர்செய்அப் புண்ணியன் தானே. ***#1732***

'பசு' எனப்படுகின்ற எனது மனத்தைப் பசுமனமாய் இல்லாது திருந்தப்பண்ணி அதனைத் தனக்குக் கோயிலாகக் கொண்ட தலைவன் சிவனேயாகும். அவனை, அங்ஙனம் பசுக்களைத் திருத்தி ஆட்கொள்கின்ற தலைவன் அல்லன்' என்றும், 'ஆம்' என்றும் இங்ஙனம் ஐயுற்று உலகம் பிணங்குமாயின் அது பேதையுலகமேயாகும்.

விளக்கவுரை

பின்னிரண்டடிடகள், சிவனைச் சிறப்பு வகையால் விளக்குகின்றன.

அதனால், முன்னர் 'ஈசன்' என்று பொதுமையிற் குறித்ததாம். 'செஞ்சடைப் புண்ணியன்' என இயையும். 'புண்ணியன் - புண்ணியத்தை வடிவாக உடையவனும், அதன் பயனாகின்றவனும்' என்க. தவம் செய்வார் கோடைக் காலத்தில் ஐந்தீ நாப்பண் நிற்றலும், மாரிக்காலத்தில் நீர்நிலையுள் நிற்றலும் செய்வர் ஆதலின் 'அங்கியும் நீரும் பொரா நின்றவர்' - என்றார். பொருதல், தாக்கப்படுதலும், பொறுத்து நிற்றலும் என்னும் இரண்டனையும் குறித்தது. 'செய் அப் புண்ணியம்' என விதத்து ஓதினமையால் இங்கு, 'புண்ணியம்' என்றது இறைவனை நோக்கிச் செய்யும் தவத்தையாயிற்று. பேதைமை உடையவனைப் 'பேதை' என்றல் பான்மை வழக்கு. அஃது இங்கு அஃறிணைக்கண் வந்தது. குரால் - பசு.
இதனால், உயிர் சிவனுக்கு வடிவாய் நிற்றலன்றிப் பிற தேவர்க்கு வடிவாய் நில்லாமை கூறும் முகத்தால், ஆத்தும லிங்கத்தின் சிறப்பு உணர்த்தப்பட்டது.

அன்றுநின் றான்கிடந் தான்அவன் என்றென்று
சென்றுநின் றெண்டிசை ஏத்துவர் தேவர்கள்
என்றுநின் றேத்துவன் எம்பெரு மான்றன்னை
ஒன்றிஎன் உள்ளத்தி னுள்இருந் தானே. ***#1733***

உலகர் ஏனைத் தேவர்களை முதல்வராக நினைந்து தாம்கொண்ட கடவுளை 'அவன் ஓரிடத்தில் நின்றான், இருந்தான்' என இவ்வாறான வடிவங்களைப் பல இடங்களில் சென்று கண்டு துதிப்பார்கள். நான் சிவபெருமானை, 'என் உயிராகிய வடிவத்தில் என்றும் இருக்கின்றான்' என்று நிலையாக நின்று துதிப்பேன்.

விளக்கவுரை

'தேவர்களை' என்னும் இரண்டன் உருபு தொகுத்த லாயிற்று. சிவபெருமானுக்குக் கிடந்த கோலம் ஓரிடத்தும் கூறப் படாமையால், 'தேவர்கள்' என்பதனை எழுவாய் வேற்றுமையாகக் கொள்ளுதல் பொருந்துவதன்று. சிவபெருமானைச் சுட்டி நின்ற அவன் என்பது 'முதற்கடவுள்' எனப் பொருள் தந்து நின்றது. முதற்கண் நின்ற 'என்று என்று' என்றது, 'இங்ஙனம் பலவாறாக' என்றபடி. 'என்று' என ஒரு சொல்லாகப் பாடம் ஓதின் வெண்டளை பிழைத்தலை அறிக.
ஏனைத் தேவர்கள் உருவ மேனியைத் தவிர, 'அருவுருவம், அருவம்' என்னும் மேனிகளை உடையர் ஆகாமையால், இலிங்க வடிவினராகக் கூறப்பட்டிலர். அதனால் அவர் ஆத்தும லிங்கத்தில் நிற்றலும் இல்லை' என இவ்வழிபாடு சிவநெறி நிற்பார்க்கே உரித்தாதல் கூறப்பட்டது.

9.6. ஞான லிங்கம்

உருவும் அருவும் உருவோ டருவும்
மருவும் பரசிவன் மன்பல் லுயிர்க்கும்
குருவும் எனநிற்கும் கொள்கைய னாகும்
தருவென நல்கும் சதாசிவன் தானே. *#1734*

யாதோர் உருவும் இலனாகிய பரமசிவன், தன்னைப் போலவே நிலைபெற்ற பொருளாய் உள்ள பல உயிர்களின் பொருட்டு, 'உருவம், அருவம், உருஅருவம்' என்னும் திரு மேனிகளைப் பொருந்தி நிற்பான். அஃதேயன்றிப் பக்குவான்மாக்கள் பொருட்டுக் குருவாகி வந்து அவர்களோடு உடன் உறையும் கொள்கையையுடைய, கற்பகத் தருவைப்போல அவர்கள் வேண்டியவற்றை வழங்குகினஅற சதாசிவ மூர்த்தியும் ஆவான்.

விளக்கவுரை

'பதிப்பொருளாகிய சிவனை இவ்வியல்பினனாக உணர்தலே சிவஞானம்' என அதன் இயல்பு உணர்த்தும் முகத்தால் ஞானலிங்கத்தின் இயல்பைத் தொகுத்துக் கூறியவாறு.
'குருவும்' - என்னும் உம்மை இறந்தது தழுவியதனோடு உயர்வு சிறப்பு. இதனை, 'சதாசிவன்' என்பதனோடு கூட்டுக. 'ஆகும், நல்கும்' என்னும் பெயரெச்சங்கள் அடுக்கி, 'சதாசிவன்' என்னும் ஒருபெயரைக் கொண்டமையால், 'ஆகும்' என்பதை வினையெச்சமாக்கி உரைக்கப்பட்டது. ஐந்தொழில்களில் அருளலைச் செய்தல் சதாசிவ மூர்த்தியாகியேயாதலால், 'குருவென நிற்கும் கொள்கையனாகும் சதாசிவன்' என்றார். இதன்பின் 'ஆம்' என்பது எஞ்சி நின்றது. தான், ஏ அசைகள்.

நாலான கீழ உருவம் நடுநிற்க
மேலான நான்கும் அருவம் மிகநாப்பண்
நாலான ஒன்றும் அருஉரு நண்ணலால்
பாலாம் இவையாம் பரசிவன் தனே. *#1735*

கீழும், மேலும் நான்கு நான்கு திருமேனிகளாய் உள்ள அவற்றிற்கு மிக நடுவிலே உள்ள ஒரு திருமேனி மட்டும் அருவுருவமும், அஃதொழிய அதற்குக் கீழ் உள்ள திருமேனிகள் நான்கும் உருவமும், மேல் உள்ள திருமேனிகள் நான்கு அருவமும் ஆக இவ்வாறு பொருந்துதலால், இவையாய் நிற்கின்ற பரமசிவன் ஒருவனேயாயினும் ஒன்பது பேதங்களாய் நிற்பன்.

விளக்கவுரை

இவற்றை 'நவந்தரு பேதம்' - என்பர். மூன்றாம் அடியில் 'நாலான' என்றது, முன்னர், கீழே. மேல் - எனக் குறித்த இடம் ஒவ்வொன்றிலும்

நாலான' - என்றதாம். அதனை முதற்கண் எடுத்து, நாலானவற்றின் மிகநாப்பண் ஒன்றும் அருவுரு, என இயைத்துரைத்து வைத்து, அதன்பின் 'நடுநிற்க' என்பதனை வைத்து, அதன்பின் முதற்றொட்டு உரைக்க. நடுண் நிற்கும் திருமேனி, 'நடு' எனப்பட்டது. 'நிற்க' என்றது, 'ஒழிய' என்றபடி 'நண்ணலால்' என்பதற்குமுன், 'இவ்வாறு' என்பது எஞ்சி நின்றது, 'நாலான கீழ், மேலான நான்கும், மிகநாப்பண் ஒன்றும்' என்றதனானே 'ஒன்பது' என்னும் தொகை பெறப்படுதலால் வாளா, 'பாலாம்' என்றார். 'இவையாம் பரசிவன்தான் ஒருவனே' பாலாம்' என இயைத்துக் கொள்க.

மேல் நான்கு, 'சிவம், சத்தி, நாதம், விந்து' என்பன. நாப்பண் ஒன்று சதாசிவ மூர்த்தம். கீழ்நான்கு, 'மகேசுரன், உருத்திரன், மால், அயன்' - எனப்படும் மூர்த்தங்கள். இவற்றின் இயல்பு சிவஞான சித்தியார் இரண்டாம் சூத்திரத்தில் கூறுமாற்றாண் அறிக.

உருவத் திருமேனிகளை இவ்வாற்றால் உணரும் ஞானமே சரியை' என்றும், அருவுருவத் திருமேனியை இவ்வாறு உணரும், ஞானமே 'கிரியை' என்றும், அருவத் திருமேனிகளை இவ்வாறு உணரும் ஞானமே 'யோகம்' என்றும், 'இம்மூவகைத் திருமேனிகளுள் யாதொன்றும் இன்றி அறிவுத் திருமேனியே பரசிவம்' - என உணரும் ஞானமே 'ஞானம்' என்றும் சொல்லப்படுகின்றன. 'இந்த நான்கும் ஞானத்தின் அரும்பு, மலர், காய், கனிபோலும் நிலையவாம்' என்பதை,

'விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே'

என்னும் தாயுமானவர் பாடலால் அறியலாம்.

இதனால், ஞான லிங்கங்கள் நால்வகையின ஆதலும், அவற்றின் படிநிலை உயர்வுகளும் ஞானத்தால் உணரப்படுகின்ற ஞேயங்களைக் கூறும்முகத்தால் கூறியவாறு.

தேவர் பிரானைத் திசைமுகர் நாதனை
நால்வர் பிரானை நடுவுற்ற நந்தியை
யாவர் பிரான்என் றிறைஞ்சுவார் அவ்வ
ஆவர் பிரான்அடி அண்ணலும் ஆமே. ***#1736***

மேற்கூறிய நவந்தரு பேதங்களில் 'உருத்திரன், மகேசுரன், சதாசிவன்' என்னும் பேதங்களை ஏனைத் தேவர்போல எண்ணுதல் கூடாது' என்றற்கு அவற்றது சிறப்புணர்த்துவார், 'அருவுருவத் திருமேனியும் தனியொரு நிலையது ஆனமை பற்றி இகழ்தல் கூடாது' என்றற்கு அதனையும் உடன் கூறினார்.

விளக்கவுரை

'தேவர்பிரான்' என்றது உருத்திரனை. என்னை? அவனோடு ஒத்த

உருவும், பெயரும், தொழிலும் உடையவன் தேவர்கட்குப் பிரானாய் நிற்றல் வெளிப்படையாதலின், திசைமுகம் - திக்கின் பகுதி. அவை எட்டாதலின் அவை போல எண்மராய் நிற்கும் வித்தியேசுரரை, 'திசைமுகர்' என்றார். இவருக்குத் தலைவன் மகேசுரன். சதாசிவ மூர்த்தி தனக்குக் கீழ் உள்ள நால்வர்க்கும் மேலானவன் ஆதல் பற்றி 'நால்வர் பிரான்' என்றும், அவன் காணாத அருவினர்க்கும், காணப்பட்டே நிற்கும் உருவினர்க்கும் நடுநிற்கும் சிறப்புப் பற்றி 'நடுஉற்ற நந்தி' என்றும் கூறினார்.

'அவ்வழியால்' என 'ஆல்' உருபும், 'அடிக்கண்' எனக் 'கண்' உருபும் விரிக்க. 'அண்ணலும் அவர் ஆம்' என ஒரு சொல் வருவிக்க. 'பிரான் என்று யாவர் இறைஞ்சுவார்' என்பதனை முன் இரண்டோடும் தனித் தனிக் கூட்டிப் பின்பு, நேரே உரைக்க.

இதனால் 'ஆன்மாவினது ஞானம் உண்மைப் பதிஞானம் ஆமாறு கூறும் முகத்தால், அஃதே உண்மை ஞான லிங்கம் ஆதல் கூறப்பட்டது.

வேண்டிநின் றேதொழு தேன்வினை போயற
ஆண்டொடு திங்களும் நாளும் அளக்கின்ற
காண்டகை யானொடும் கண்ணி யுணரினும்
ஊண்டகை மாறினும் ஒன்றது ஆமே. *#1737*

யாண்டும், திங்களும், நாளும் என்று இன்ன வகையாகக் காலத்தை வரையறை செய்கின்ற, ஒவ்வொரு வரும் காலை, நண்பகல், மாலை என்னும் காலங்களில் தவறாது கண்டு வணங்கத் தக்க பகலவனிடத்துக் கருதியுணரினும், உணவு முதலிய உலகியல் ஒழுக்கத்தின் நீங்கி யோகத்தின் நின்று உணரினும் அவ்விடங்களில் உணரப்படும் பொருள் ஒப்பற்றதாகிய அந்தத் தனிமுதற் பொருளே யாகும். அதனால் நான் எனது வினைக்கட்டு நீங்கி அழியுமாறு எவ் விடத்தும் அந்தத் தனிமுதற் பொருளையே விரும்பித் தொழுகின்றேன்.

விளக்கவுரை

'கன்னி யுணரினும்' - என்பது பாடமன்று. முதல் அடியை ஈற்றில் வைத்து உரைக்க. கண்ணல் - கருதல். பாவித்தல். 'மாறினும்' என்றது, 'மாறி யோக ஒழுக்கத்தில் நிற்பினும்' என்றவாறு. 'காண் தகையானொடும்' - என்னும் மூன்றன் உருபை ஏழன் உருபாகத் திரிக்க. ஒன்று - ஒப்பற்றது. முதற் பொருளை 'அது' என்றல் உபநிடத வழக்கு.

'யார் எவ்விடத்து எவ்வாறு வணங்கினும் அவ்வணக்கம் தனி முதலாகிய பரசிவத்தையே சாரும் - என உணரும் உணர்வே ஞான லிங்கமாய்ப் பயன்தரும்' என்பது இதனால் கூறப்பட்டது.

ஆதி பரதெய்வம் அண்டத்து நற்றெய்வம்
சோதி அடியார் தொடரும் பெருந்தெய்வம்

நீதியுள் மாத்தெய்வம் நின்மலன் எம்இறை
பாதியுள் மன்னும் பராசத்தி யாமே. *#1738*

மெய்யுணர்வினை உடைய அடியவர்களால், 'யாவர்க்கும் முன்னே மேலே உள்ளவன்' எனவும், அனைத்து உலகங்கட்கும் முதல்வனாகிய முழுமுதற் றன்மை உடையவன்' எனவும், 'நீதியின் உள்ளே விளங்குகின்ற பெரியோன்' எனவும், 'இயல்பாகவே பாசங்கள் இல்லாதவன்' எனவும் கொண்டு வழிநின்று போற்றுகின்ற பெருமையை உடையவன் எங்கள் கடவுள். அவனை அறிதற்கு உரிய அடையாளம் மாதொரு பாகனாய் இருத்தல்.

விளக்கவுரை

'இவ்வாறு உணரும் உணர்வே ஞான லிங்கமாம்' என்றவாறு. 'சோதி அடியார் தொடரும் பெருந் தெய்வம்' என்பதை அதற்குரிய காரணங்களுடன் விளக்கி, 'அத்தெய்வமாவான் சிவபெருமானே' எனக் கூறுதலே கருத்தாகலின், அதற்கு இவ்வாறு உரைக்கப்பட்டது. 'அண்டம்' என்றது, 'அகிலாண்டம்' என்றவாறு 'அண்டத்துக்கு' என்னும் நான்கன் உருபு தொகுத்தலாயிற்று. ஓரிடத்தும், 'தெய்வம்' என வாளா கூறாது, 'பரதெய்வம், நற்றெய்வம், பெருந்தெய்வம், மாத்தெய்வம்' - எனச்சிறப்பித்தே ஓதியது 'தெய்வம்' என்பது முதற் கடவுளையே உணர்த்தி நிற்றற் பொருட்டு. ஈற்றடியில் உள்ள சொற்களை, 'தன்பாதியுள் பராசத்தி மன்னும் ஆம்' என இயைத்து 'அவன்' என்னும் தோன்றா எழுவாய் வருவிக்க. ஆம், அசை.

சத்திக்கு மேலே பராசத்தி தன்னுள்ளே
சுத்த சிவபேதம் தோயாத தூவொளி
அத்தன் திருவடிக் கப்பாலுக் கப்பாலாம்
ஒத்தவும் ஆம்ஈசன் தானான உண்மையே. *#1739*

ஆதிசத்திக்குமேல் உள்ளதாகிய பராசத்தியில் விளங்குவதே வாக்கும், மனமும் எட்டாது நிற்கும் தூய ஒளியாகிய சுத்தசிவ நிலை. அதனால், சிவன் பிறிதொன்றோடும் படாது தானேயாய் நிற்கின்ற அவனது உண்மைநிலை, ஞானசத்தி கிரியா சத்திகட்கு முதலாய் உள்ள ஆதி சத்திக்கு அப்பால் உள்ள பராசத்தியின்கண் நிற்பதே யாகும். எனினும் அவனது நிலைகள் ஆதிசத்தி. ஞானசத்தி, கிரியா சத்திகள் ஆகிய அவைகளோடும் இயைந்து நிற்பனவேயாம்.

விளக்கவுரை

'அஃது அவனது பொதுநிலை' என்றபடி. 'அந்தப் பொதுநிலையை அவன் அடைதற்குக் காரணம் உயிர்களிடத்து வைத்த கைம்மாறு கருதாத கருணையே' என்பது கருத்து. 'ஈசன்' எனப் பின் வருதலால்,

'அத்தன்' என்றது, 'தன்' என்னும் அளவாய் நின்றது.
'தோயாத தூவொளி' என்பதை, 'சுத்த சிவபதம்' என்பதற்கு முன்னேயும், 'ஒத்தவும் ஆம்' என்பதை இறுதியிலும் கூட்டியுரைக்க. 'தடத்த நிலைகள் பல' என்பது உணர்த்துதற்கு அதனைப் பன்மையாக ஓதினார்.
இதனால், முதற்பொருளை இவ்வியல்பினதாக உணரும் உணர்வே ஞானலிங்கம் ஆதல் கூறப்பட்டது.

கொழுந்தினைக் காணின் குலயம் தோன்றும்
எழுந்திடம் காணின் இருக்கலும் ஆகும்
பரம்திடம் காணின்பிந் பார்ப்பதி மேலே
திரண்டெழக் கண்டவன் சிந்தை உளானே. *#1740*

'எல்லாப் பொருள்களின் முடிவுக்கும் முடிவாய் உள்ள' 'போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே'*3* பரமசிவனது உண்மையை உணரின் 'அவனே உலகம் அனைத்திற்கும் முதல்' என உலகத்தின் முடிநிலைக் காரணம் விளங்கும். பின் அந்தப் பரமசிவன் முதற்பொருளாய் எழுதற்கு காரணமான அவனது குணமாம் பராசத்தியை உணரின் அஃதே எல்லையில் இன்ப வெள்ள மாய் விலைதலால், அப்பால் அலைவுயாதும் இன்றி, அந்த இன்ப வெள்ளத்திலே அமைதியுடன் இருத்தல்கூடும். எப்பொருள் எத் தன்மைத்தாயினும் அப்பொருளில் மெய்ப்பொருளாகிய பரம சிவனை*l* அலைவின்றிக் காணும் மெய்யுணர்வைப் பெற்றால் அவ் வுணர்விலே முன்னே அருள்நிலை தோன்ற, அதன்பின் அதற்கு மேலாகப் பொருள் நிலையாகச் சிவன் விளங்குவான். அங்ஙனம் விளங்கக் கண்டவனது உள்ளத்தில்தான் அந்தச் சிவன் என்றும் இருக்கின்றான்.

விளக்கவுரை

'ஆகவே, அங்ஙனம் காணுதலாகிய உணர்வே ஞான லிங்கமாம்' என்பது கருத்து. முடிவில் உள்ளதை, 'கொழுந்து' என்றல் வழக்கு. குவலயம் - குவலயத்தின் உண்மை, 'எழுந்த' என்னும் பெயரெச்சத்து அகரம் தொகுத்தலாயிற்று. 'இருக்கலும்' என்னும் உம்மை உயர்வு சிறப்பு. பரம் - மேல். மேல் உள்ளவனை 'மேல் என்றது ஆகுபெயர்; திடமாக என ஆக்கம் விரித்துரைக்க. 'பார்ப்பதி' - என்றது 'சிவ சத்தி' என்னும் பொருளதாய்த் திருவருளைக் குறித்தது. 'திரண்டு எழ' என்றதனாலே, திரண்டு எழுதலும் அனுவாத முகத்தால் பெறப்பட்டது. உளனாதற்கு 'அவன்' என்னும் தோன்றா எழுவாய் வருவிக்க.
இதனால், சொரூப ஞானமாகிய ஞானலிங்கம் உளதாமாறு கூறப்பட்டது.

எந்தை பரமனும் என்னம்மை கூட்டமும்
முந்த உரைத்து முறைசொல்லின் ஞானம்ஆம்

சந்தித் திருந்த இடம்பெருங் கண்ணியை
உந்திக்கு மேல்வைத் துகந்திருந் தானே. *#1741*

தன்னையே அடைக்கலமாக அடைந்த எனக்குத் தந்தையாய் நிற்கும் பரமசிவனையும் அவன் எனக்குத் தாயாய் நிற்கும் சத்தியோடு கூடிய கூட்டு நிலையையும், ஞானாசிரியர் தம் மாணாக் கர்க்கு முதற்கண் சுட்டளவாக உணர்த்திப் பின்பு அவ்விருவரது முறைமையை எல்லாம் விளங்க உணர்த்துவாராயின், மாணாக்கர்க்கு உண்மை ஞானம் பிறக்கும். எனவே, ('அதுவே அவர்க்கு ஞானலிங்கமாய்ப் பயன் தரும்' என்றபடி) இனி என் அப்பன் என் அம்மையை மக்களது இருதய கமலத்தில் இருக்க வைத்துத் தானும் அந்த இடத்தையே விரும்பி அவளோடு கூடி யிருக்கின்றான். ஆகவே, அவ்விருவரும் வீற்றிருக்கின்ற இடம் அதுவே.

விளக்கவுரை

'ஆதலின் மக்கள் அவ்விடத்து அவனை ஞான லிங்கத்தில் காண்க' என்பது குறிப்பெச்சம். 'பரமனையும், கூட்டத்தையும்' என இரண்டாவது விரித்துரைக்க. 'என் அம்மை கூட்டம்' எனப்பின்னர் வருதலால், முன்னர் 'பரமன்' என்றது அவன் தனித்து நிற்கும் நிலையையாயிற்று. அஃது அவனது சொரூப நிலையும், அம்மையோடு கூடிய கூட்டம் அவனது தடத்த நிலையும் ஆகும் சொரூப சிவனே 'பரசிவன்' என்றும் சொல்லப்படுவான். தடத்த சிவன் 'சிவன்' என்றும், 'ஆதிசிவன்' என்றும் சொல்லப்படுவான். சத்தியை விட்டுச் சிவன் ஒருபோதும் தனித்து நிற்றல் இல்லை யாயினும், செயல்யாதும் நிகழாதபோது சத்தி இருந்து இல்லாதது போல நிற்றலின் அந்நிலை 'சிவனது தனிநிலை' என்றும், செயல் நிகழும் போது சிவன் செய்பவனும், சத்தி அவன் செயலுக்குத் துணையுமாய்ப் பிரிப்பின்றி நிற்றலின் அந்நிலை, 'சிவனும், சத்தியும் கூடிய கூட்டு நிலை' என்றும் சொல்லப்படுகின்றன.

'ஓருரு வாயினை; மானாங் காரத்(து) ஈரியல் பாய்' *
என்று அருளிச் செய்தது இவை பற்றியே.

சிவன் பரசிவனாய் நிற்கும் பொழுது சத்தி பராசத்தியாய் நிற்பாள். அவளே அருட்சத்தி. சிவன் ஆதிசிவனாய் நிற்கும்பொழுது சத்தி ஆதிசத்தியாய் நிற்பாள். அவளே திரோதான சத்தி. அவள் வழியாகவே இறைவனது ஐந்தொழில்கள் நிகழும். இதுபற்றி அருணந்தி தேவர்,
'அவளால் வந்த ஆக்கம் இல்வாழ்க்கை யெல்லாம்' *l*
என அருளிச் செய்தார். இவற்றையெல்லாம் இனிதுணர்த்தலே ஞானோபதேசமும், அங்ஙனம் உணர்த்தியவாறே உணர்தலுமே ஞானம் ஆகலின், 'முந்த உரைத்து முறை சொல்லின் ஞானமாம்' என்றார். உரைத்தற்கும் சொல்லுதற்கும் உரியவராகிய 'ஞானாசிரியர்' என்பது

ஆற்றலாற் கொள்ளக் கிடந்தது. 'சந்தித்திருந்த இடம்' என்பதற்கு, எஞ்சிநின்ற 'அது' என்னும் பயனிலையை வருவித்து இறுதியில் கூட்டியுரைக்க. 'உந்திக்கு மேல் என்றது இருதயத்தை. இதனை மூன்றாம் தந்திரத்துள்,

'நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குலம்' *3*

என்றார். 'உந்தியின் மேல்' என்பது பாடம் அன்று.

இதனால் ஞான லிங்கத்தின் இயல்பும், அந்த இலிங்கத்தைப் பெறும் முறையும், பெற்றுப் பயன் அடையும் முறையும் கூறப்பட்டன.

சத்தி சிவன்விளை யாட்டாம் உயிர்ஆகில்
ஒத்த இருமாயா கூட்டத் திடைஊட்டிச்
சுத்தம தாகும் துரியம் பிரிவித்துச்
சித்தம் புகுந்து சிவம்அகம் ஆக்குமே. **#*1742***

'உயிரின் இருப்பு, சத்தயோடு கூடிய சிவனது விளையாட்டே' என்றால், அச்சிவன் அவ்வுயிரை யாதாக்குவான் எனில், ஆணவத்தைப் போகக்தற்கண் தம்மில் ஒரு தன்மைப்பட்ட, 'சுத்தம், அசுத்தம்' என்னும் இருமாயையால் ஆகிய கருவிக் கூட்டத்துள் அவ்வுயிரை முதற்கண் புகுவித்து அந்நிலையில் அவற்றின் வினைகளை அவை நுகரச் செய்து, அக்கருவிகள் கூடுதல் குறைதல்களால் உளவாகின்ற கேவல ஐந்தவத்தை சகல ஐந்தவத்தை கட்குப் பின் திருவருளால் உளவாகின்ற சுத்த ஐந்தவத்தையை அடை வித்து இறுதியாகத் துரியத்தையும் நீக்கித் துரியாதீதத்தில் சேர்த்து, அங்ஙனம் சேர்க்கப்பட்ட அந்நிலையில் அதன் அறிவினிடமாகத் தான் விளங்கி, அதனாலே, தனது இன்ப வெள்ளமே அவ்வுயிர்க்கு என்றும் உறைவிடமாகச் செய்வான்.

விளக்கவுரை

'சத்தியோடு கூடிய சிவன்' என்றதனால், ஆதிசிவன்' என்பது பெறப்பட்டது. உயிரினது நிலைபேற்றை 'உயிர்' என்றது ஆகு பெயர். விளையாட்டால் ஆவதனை, 'விளையாட்டு' எனக் காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது. 'ஆகில்' என்னும் 'செயின்' என் எச்சம் தெளிவின்கண் வந்தது. 'சுத்தம், அசுத்தம்' என்பவற்றால் தம்மில் வேறுபாடு உடையவேனும், ஆணவத்தை நீக்குதற்கண் ஒரு தன்மைய ஆதல் பற்றி இரு மாயைகளையும் 'ஒத்த இரு மாயை' என்றார். மாயை, ஆகுபெயராய் அதன் காரியத்தை உணர்த்திற்று. 'இடை' என்பதன்பின், 'புகுவித்து' என்பது எஞ்சிநின்றது. இறுதி யாதல் பற்றி, சுத்த துரியத்தினின்றும் பிரிவித்தலை மட்டுமே கூறினாராயினும், அதற்கு முன் நிகழ்வனவாகிய அனைத்து அவத்தைகளினின்றும் பிரிவித்தல் ஆற்றலால் விளங்கிற்று. அறிவை, 'சித்தம்' என்றல் வழக்கு. 'சிவம்' என்பது, இங்கு, 'இன்பம்' என்னும் பொருளதாய் நின்றது. 'சிவத்தை' என

இரண்டாவது விரிக்க.
இதனால், மேலை மந்திரத்தில் 'முறைசொல்லின்' எனக் குறிக்கப்பட்ட 'முறை' இனிது விளக்கப்பட்டது.

சத்தி சிவன்றன் விளையாட்டுத் தாரணி
சத்தி சிவனுமாம் சிவன்சத் தியுமாகும்
சத்தி சிவனன்றித் தாபரம் வேறில்லை
சத்திதான் என்றும் சமைந்துரு வாகுமே. *#1743*

உலகமே ஆதி சிவனது விளையாட்டாம். அவன் ஆதி சத்தியைக் கொண்டே அனைத்தையும் செய்வனாயினும் அச் சத்தியும், அவனும் உலகத்துத் தலைவியரும், தலைவரும் போல வேறு வேறானவர் அல்லர். சத்தியே 'சிவனும்' சிவனே சத்தியும் ஆவர். எனினும் சில வேறுபாடு பற்றி, சத்தி எனவும், 'சிவன்' எனவும் பிரத்து வழங்கப்படுகின்றார்கள். அதனாலே இலிங்கத்திலும் அவ்வேறுபாடு காணப்படுகின்றது. அஃதே பற்றி, அதனை, 'உலகத்தாரது உருவம் போல இருவேறு பொருள்களின் கலப்பு' என மயங்கற்க. இனி உண்யைாக உணர்ந்தால், சத்தியே அனைத்துத் திருமேனிகளுமாய் நிற்கும்.

விளக்கவுரை

'தாரணி' என்பது 'தாங்குவது' என்னும் பொருட்டாய் நிலத்திற்கு, பெயராகும். அத்தகைய நிலமாவது மண்ணிலம் மட்டு மின்றிப் பொன்நிலம் முதலியனவும் நிலமேயாதலின், 'தாரணி' என்றது எல்லா உலகங்களையும் குறித்தது. அவற்றைச் சிவனது விளையாட்டு என்று, மேலைமந்திரத்திற் கூறியவாறே உபசாரமாம், 'விளையாட்டாம்' என மேற்கூறியதனையே இங்கு மீட்டுங் கூறியது, மேற்கூறிய உயிரேயன்றி, 'ஏனைப் பொருள்கள் பலவும் அத்தகை யனவே' என்பது உணர்த்துதற்கு. மேல், சிவனை, 'எந்தை' எனவும், சத்தியை, 'என்னம்மை' எனவும் கூறியதனால், அவ்விருவரும் 'உலகத்துத் தந்தை தாயரைப் போல வேறுவேறானவர் போலும்' என மலையாமைப் பொருட்டு, சத்தியே சிவனும் ஆவாள்; சிவனே சத்தியும் ஆவான்' என விளக்கிக் கூறினார். 'விந்துவதே பீடம்; நாதம் இலிங்கமாம்' என ஆத்துமலிங்க அதிகாரத்தில் கூறிய குறிப்பின்படி இலிங்கமும் ஒருபெற்றித்தாய் இராமல் இருவேறு வகையாய்க் காணப் படுதலால் அதுபற்றியும் மேற்கூறியவாறு மலையாமைப்' பொருட்டு, 'தாபரம் வேறில்லை' என்றார். 'இச்சத்தி சிவனன்றி' எனச்சுட்டு வரு வித்து, 'தாபராம் இத்தன்மையராகிய சத்தியும் சிவனுமேயன்றி வேறில்லை' என உரைக்க. 'தாபரமும்' என்னும் இறந்தது தழுவிய எச்ச உம்மை தொகுத்தலாயிற்று. 'திருமேனிகள் எல்லாவற்றிலும் சத்தி மூர்த்தியாய் நிற்கச் சிவன் மூர்த்திமானாய் நிற்பன்' என்றற்கு, 'திரு மேனிகளில் சில சிவனது

வடிவமே' என்றும், சில இருவரும் ஒன்றாய் இயைந்த வடிவம் என்றும் எண்ணுமாறு நிற்றல், கடவுட் பொருள் ஒன்றேயாயினும், அஃது இருதன்மையை உடையது' என்பதைக் குறித்து நிற்கும் அடையாளம் ஆதலேயனஅறிப் பிறிதில்லை' என்றதாயிற்று.
'வேர்த்து வெகுளார்' * என்பதனை, 'வெகுண்டு வேரார்' என முன்பின்னாக மாற்றிப் பொருள்கொள்ளுதல் போல, 'சமைந்துருவாகும்' என்றதை, 'உருவாகிச் சமையும்' என மாற்றிக் கொள்க. இதற்குப் பகலவன் ஒருவனே 'கதிரவனும், கதிரும்' என இருதன்மையை உடையனாய் இருத்தலை உவமையாகக் கூறுவர்.
சத்தி சிவனது இயல்பினை இங்குக் கூறியவாறே,
'அருளுண்டாம் ஈசற்*(கு)* அதுசத்தி, அன்றே;
அருளும் அவனன்றி யில்லை - அருளின்*(று)*
அவன்அன்றே யில்லை; அருட்கண்ணார் கண்ணுக்*(கு)*
இரவிபோல் நிற்கும்அரன் ஏய்ந்து' *
எனவும்
'அருளது சத்தியாகும் அரன்றனக்*(கு)* அருளையின்றித்
தெருள்சிவம் இல்லை; சிவம்இன்றிச் சத்தி யில்லை'
'சத்திதான் நாதமாதி தானாகும்; சிவமும் அந்தச்
சத்திதா னாதி யாகும்; தரும்வடி வான வெல்லாம்
சத்தியும் சிவமுமாகும்' *l*
எனவும் கூறப்பட்டன.
இதனால், மெய்ப்பொருளது தன்மையினை இங்ஙனம் உள்ளவாறுணர்தலே ஞானலிங்கமாதல் கூறப்பட்டது.

***9.7.*சிவலிங்கம்**

குரைக்கின்ற வாரிக் குவலயம் நீரும்
பரக்கின்ற காற்றும் பயில்கின்ற தீயும்
நிரைக்கின்ற வானிவை நீண்டகன் றானை
வரைத்து வலம்செயு மாறறி யேனே. ***#1744***

ஒலிக்கினஅற கடலை ஆடையாக உடைய நிலவட்டம், நீர், பல செயல்கட்கும் பயன்பட்டு நிற்கின்ற நெருப்பு, எங்கும் பரந்து செல்கின்ற காற்று, அனைத்தையும் தன்னுள் முறைப்பட அடக்கி நிற்கின்ற வானம் இவை அனைத்துமாய் அவற்றில் நிறைந்து நிற்கும் வகையில் உயர்ந்து சென்று, முடிவில் வானத்தையும் கடந்து உயர்ந்தோனாகிய சிவனை யான் உய்தி பெறுதற்கு, 'ஒரு சிறு வடிவினனாகக் கண்டு வலம் வருதல் முதலிய வகையால் வழிபடுதல் எவ்வாறு' என அறிகின்றிலேன்.

விளக்கவுரை

வருகின்ற திருமந்திரத்துள் அங்ஙனம் வழிபடுமாற்றை அருளுகின்றார் ஆகலின், இங்கு, 'ஆறு அறியேன்' என யாதுமத் அறியார்போலக் கூறினாராயினும், கீழ் உரைக்கப் படுகின்ற அதுவன்றிப் பிறிதோர் ஆறு அறியேன்' என்பதே கருத்தாகும். செய்யுள் நோக்கித் தீயைக் காற்றுக்குப் பின்னர் வைத்தார். 'குவலயமும், வானும்' என்னும் எண்ணும்மைகள் தொகுக்கப்பட்டன. 'வாறிவை' என்பது பாடமன்று. பூதங்களைக் கீழத் தொடங்கிக் கூறினா ராதலின், 'நீண்டு' என்றார். 'வரைந்து' எதுகை நோக்கி வலித்தல் பெற்றது. வரைதல், எல்லை வகுத்தல். 'அகண்ட மானவனைக் கண்டனாக்குதல் இயலாது' என்பதாம். இதனை, 'அசிந்தினாய் நின்ற பதியைச் சிந்திதனாகக் கண்டு வழிபடுமாறு' (சிவஞான போதம் - சூ. 12. கருத்துரை.)என்றார் மெய்கண்ட தேவர். இதனால் இலிங்கத்தாலன்றி இறைவனை அணுகலாகாமை உணர்த்தப்பட்டது.

வரைத்து வலஞ்செயு மாறிங்கொன் றுண்டு
நிரைத்து வருகங்கை நீர்மலர் ஏந்தி
உரைத்தவன் நாமம் உணரவல் லார்க்குப்
புரைத்தெங்கும் போகான் புரிசடை யானே. *#1745*

மேற்கூறியவாறு நீண்டகன்று வரம்பிலனாகிய சிவனை வரம்புட்படுத்து வழிபடும் வழி ஒன்று இந்நிலவுலகில் உண்டு. அஃது யாதெனின், அலைகளை வரிசையாக்கி அதனாலே கரையை அடைகின்ற கங்கையாற்றின் நீரையும், பூக்களையும் கையிலே கொண்டு, அவனது பெயர்கள் பலவற்றையும் சொல்லி ஆட்டியும், சாத்தியும் வழிபட்டு அவனை அங்ஙனம் வழிபடப்பட்ட அவ்வடிவத்தில் வைத்து உணர்தலேயாகும். அங்ஙனம் உணரவல்லார் உளராயின் அவ்வடிவைப் பொள்ளல் செய்து அதனை விட்டு அவன் வேறு எங்கும் போய்விட மாட்டான்.

விளக்கவுரை

'அதனுள் தானே இருந்து அருள் செய்வான்' என்பதாம். 'இவ்வாறு அவன் தான் அருளிச் செய்த ஆகமங்களில் உரைத்துள்ளான்' என்பது கருத்து.

'தாபர சங்க மங்கள் எனும்இரண் டுருவில் நின்று
மாபரன் பூசை கொன்டு மன்னுயிர்க் கருளை வைப்பான்' *
என்றதும் இக்கருத்தினாலேயாகும்.

'எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை என உரைத் தருள' *
என்று அருளிச் செய்தமை காண்க. 'இஃதொழிய உயிர்கள் அவனை வழிபட்டு உய்யுமாறு வேறில்லையாதலின். அவற்றை இவ்வாற்றால்

உய்வித்தல் வேண்டும் - என்னும் கருணை மிகுதியாலே அகண்டித னாகிய சிவன் இவ்வாறு கண்டிதனாய் நின்று அருள் புரிகின்றான்' என்னும் உண்மையைத் தெளிந்து கடைப்பிடிக்க - என்பதாம்.
'இங்கு' என்றதனால், 'இம்முறையைச் சிவன் நிலவுலகிலே தான் வைத்துள்ளான்' என்பது போந்தது.
இதனால், 'அசிந்திதனாகிய இறைவனைச் சிந்தித்தனாகக் கண்டு வழிபடும் ஒரே முறையாவது இது' என்பது கூறப்பட்டது.

ஒன்றெனக் கண்டேன்எம் ஈசன் ஒருவனை
நன்றென் றடியிணை நான்அவ னைத்தொழ
வென்றைம் புலனும் மிகக்கிடந் தின்புற
அன்றென் றருள்செயும் ஆதிப் பிரானே. *#1746*

'சிவபிரான் ஒருவனே ஒப்பற்ற தனிமுதற் பொருள்' என நான் உணர்ந்தேன். அதனால் 'அவனை மேற்கூறியவாற்றால் 'வழிபடுதல் ஒன்றே நன்னெறி' என உணர்ந்து வழிபடுந்தோறும் வழி படுந்தோறும் அவன் தனது பேரின்ப வெள்ளம் எனது ஐம்புலன்களில் அடங்காததாய் மிக்கெழுந்து என்பால் விளையப் பண்ணுதலை அப்பொழுது அப்பொழுதே செய்கின்றான்.

விளக்கவுரை

'எம் ஈசன்' என்றது 'சிவபிரான்' என்றவாறு. 'ஒருவனையே' என்னும் ஏகாரம் தொகுத்தலாயிற்று. 'அடியிணை தொழுதல்' என்பது 'வழிபடுதல்' என்னும் பொருளதாய் ஒரு சொல் நீர்மைப்பட்டு 'அவனை' என்னும் இரண்டாவதற்கு முடிபாயிற்று. ஆதலின், 'அவனை நான் அடியிணை தொழ' என மொழி மாற்றி யுரைக்க. வெல்லுதல், கிடத்தல், உறுதல் என்னும் தொழில்கட்கு இன்பமே வினைமுதல் என்க. 'என்பால் உற அருள் செய்யும்' என ஒரு சொல் வருவிக்க.
இதனால், 'சிவனைப் பொது நீக்கி உணர்ந்து இலிங்கத்தில் கண்டு வழிபடல் வேண்டும்' என்பதும், அங்ஙனம் வழிபடுதலால் விளையும் பயன் இது என்பதும் கூறப்பட்டன.

மலர்ந்த அயன்மால் உருத்திரன் ஈசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தரும் சத்தி சிவன்வடி வாகிப்
பலந்தரும் லிங்கம் பராநந்தி யாமே. *#1747*

சிவன் தனது தடத்த நிலையில் 'அயன், மால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன், சத்தி, சிவன், விந்து, நாதம் - என்னும் ஒன்பது நிலைகளில் நின்று உயிர்கட்கு அவன் நிலைகேற்ற பயனைத் தருவன் ஆகலின் அவை அனைத்துக்கும் பொதுக் குறி யாவது இலிங்கத் திருமேனியே. அதனால் அதனைப் பராசத்தியோடே நிற்கும் பரசிவனாகிய சொரூப

சிவனது குறியாகவும் உணர்ந்து வழிபடல் வேண்டும்.

விளக்கவுரை

'மலர்ந்த' என்றதனை இசை யெச்சத்தால் மாயோனது உந்திக் கமலம் மலர்ந்த' என விரித்துக் கொள்க. 'மலர்ந்த' என்னும் பெயரெச்சம் 'மலர்ந்ததனால் வெளிப்பட்ட' எனப் பொருள் தந்தது.

அயன், மால் முதலிய ஒன்பது நிலைகளும் 'நவந்தரு பேதம்' எனப்படும். அதனை

'சிவம்சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன்
உவந்தருள் உருத்தி ரன்றான் மால் அயன் ஒன்றின் ஒன்றாய்
பவ்தரும்; அருவம்நால்; இங்(கு) உருவம்நால்; உபயம்ஒன்றா
நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் என்பர்' *l*

என்னும் சிவஞானசித்திச் செய்யுளால் உணரலாம். இவற்றை 'இங்ஙனம் ஒன்றின் ஒன்றாய்ப் பவம்தரும்' - என்றமையால், 'இம்முறை தோற்றமுறை' என்பது விளங்கிற்று. எனவே, இம்மந்திரத்தில் நாயனார் அயன் முதலாகக் கூறியது ஒடுக்க முறையாதல் வெளிப்படை.

'பரநாதம்' - என்பதில் உள்ள 'பரம்' என்பதை விந்துவிற்கும் கூட்டுக. பரநாத பரவிந்துக்களையே 'சிவம், சத்தி' எனவும், சிவம் சத்திகளையே 'நாதம், விந்து' எனவும் வழங்கும் வழக்கம் ஆகமங்களில் உண்மையால் மேற்காட்டிய சிவஞான சித்திச் செய்யுளில் அவ்வாறு கூறப்பட்டது.

நவந்தரு பேதங்களாய் நிற்கின்ற சிவன் தனது ஞானத்தால் தன்னை அவ்வந் நிலைகளில் உணர்ந்து வழிபடுவோரையும் அந் நிலையினராகச் செய்வன். அங்ஙனம் செய்யப்பட்ட அவர் அணுபக்க அயன், மால் முதலியோராவர். சிவன் அவ்வாறு நிற்கின்ற நிலைகள் சம்பு பக்கமாகும். 'இம்மந்திரத்திற் கூறப்பட்டவை சம்பு பக்கம்' என்பது உணர்க.

மேற்கூறிய நவந்தரு பேதங்களில் மகேசுரனது பேதங்களாக இருபத்தைந்து வடிவங்களும், மற்றும் பல வடிவங்களும் உள. அவை யெல்லாம் 'மாகேசுவர மூர்த்தங்கள்' எனப்பட்டு 'மகேசுரன்' என்னும் ஒன்றிலே அடங்குவனவாம். ஆகவே, 'மாகேசுர வடிவங்கள் ஒவ் வொன்றும் அவ்வவ் வடிவத்திற்கு மட்டுமே உரிய சிறப்புக் குறிகளாய் அவ்வளவில் மட்டுமே பயன் தருவனவாய் நிற்க, இலிங்க மூர்த்தம் ஒன்றே நவந்தரு பேதங்கட்கும் பொதுக் குறியாய் நின்று எல்லாப் பயன்களையும் தருவது' என்பது இம்மந்திரத்தால் உணர்த்தப் பட்டதாம். எப்பயன் கருதிச் சிவனை வழிபட்டோரும் அவனை இவ்விலிங்கத் திருமேனியிற்றானே வழிபட்டு அவ்வப் பயன்களைப் பெற்றமையைப் புராணங்கள் பலவாக விரித்து கூறும்.

இங்குக் கூறிய அயன், மால் முதலிய பலரும் சம்பு பக்கம் ஆதலால் சிவலிங்கத்தில் 'இது பிரம பாகம், இது விட்டுணு பாகம்' என்றாற்

போலச் சில இடங்களில் கூறப்படுவதும் சம்பு பக்கத்தை நோக்கியே என்பது உளங்கொளத் தக்கது.
இதனால் சிவலிங்கம் அனைத்து மூர்த்திகளாயும் நிற்கும் சிறப்புடைத்தாதல் கூறப்பட்டது.

மேவி யெழுகின்ற செஞ்சுட ரூடுசென்*(று)*
ஆவி யெழுமள வன்றே உடல்உற
மேவப் படுவதும் விட்டு நிகழ்வதும்
பாவித் தடக்கிற் பரகதி தானே. ***#1748***

உயிரை உடம்பில் நிறுத்திச் செயற்பட்ச் செய்ய எழுந்த விருப்பத்தால் கீழ்நோக்கிக் கிடந்தும் மேல் நோக்கி எழுந்தும் விளங்குகின்ற குண்டலினி சத்தியோடு உயிர் பொருந்தி செயற்படும் வரையிலுமே உடல் நிலைபெற்றிருக்கும். அச்செயற்பாடு நின்றவுடன் உடல் நீங்கிவிடும். ஆகவே, உடல் உள்ளவரையும் உள்ளே விரும்பி ஈர்க்கப்படுவதும், வெளியே விடப்படுவதால் நீங்கிச் செல்வதும் ஆகிய மூச்சுக் காற்றினை அவ்வாற்றின் அடக்கி நடுநாடி வழியே செலுத்துமாற்றால் இதுகாறும் கூறிவந்த அண்ட லிங்கம் முதலிய அனைத்து இலிங்கங்களிலும் சிவனைப் பாவனை செய்து வழிபட்டால் மேலான கதி கிடைப்பதாகும்.

விளக்கவுரை

குண்டலினி சத்தி ஒடுங்கிக் கீழ்நோக்கிக் கிடத்தலால் உயிருக்குக் கீழான உணர்வுகளும், அஃது எழுச்சியுற்று மேல்நோக்கி இயங்குதலால் உயிருக்கு மேலான உணர்வுகளும் உடல் வழியாக நிகழும். அவற்றுள் சிறந்தது மேலான உணர்வேயாதலால் அஃதொன்றையே நாயனார் குறித்தருளினஆர். குண்டலினி சத்தி பொதுவாக எல்லோரிடத்திலும் உடம்பினுள் கீழ்நோக்கிக் கிடந்து துயில்வதாகச் சொல்லப்படுதல், அதனால் உண்டாக்கப்படும் உலகியல் உணர்வு உணர்வாகாமை பற்றியேயாம். துயிலுதல், இறத்தல் அன்று ஆதலின் அந்நிலையிலும் அஃது உயிருக்கு ஓர் உணர்வைத் தந்துகொணஅடுதான் இருக்கும். அங்ஙனம் தருகின்ற அதனையும் அந்தச் சத்தி கைவிடும்பொழுது உயிர் உடம்பைச் செயற் படுத்த மாட்டாது. அதனால் உடல் விழுந்துவிடும். அதுவே, 'இறப்பு' எனப்படுகின்றது. 'அத்தகைய இறப்பு நேர்வதற்குள் உயிர் சிவனை வழிபட்டு உய்தல் வேண்டும்' என்றற்கு, 'பாவித்து அடக்கிற் பரகதிதானே' என்றார்.
'அன்றே' என்பது, 'அந்நாள் வரையிலுமே' எனப்பொருள் தந்தது. 'உடல் உற' என அனுவாதமாகக் கூறிய அதனால், 'உடல் உறும்' என்பதை முதலில் உரைத்துக்கொள்க.
'பாவித்து அடக்கின்' என்பதை, 'அடக்கிப் பாவிக்கின்' என

முன்பின்னாக மாற்றி உரைக்க. பாவித்தற்குச் செயப்படுபொருள் அதிகார முறைமையால் வந்தியைந்தது.
'இலிங்க வழிபாட்டினையும் பிராணாயாமம் செய்து செய்தல் சிறப்புடையது' என்றற்கு, 'மேவப்படுவதும், விட்டு நிகழ்வதும் அடக்கிப் பாவிக்கின்' என்றார். 'விட்டு' என்பது, 'விடுதலால்' எனப் பொருள் தந்தது.
இதனால், 'சிவனை இதுகாறும் கூறிவந்த அனைத்து இலிங்கங்களிலும் வைத்து யோக முயற்சியுடன் வழிபடுதலே வீடடைதற்கு வழியாகும்' என முடித்துக் கூறப்பட்டது.

9.8.சம்பிரதாயம்

உடல்பொருள் ஆவி உதகத்தால் கொண்டு
படர்வினைப் பற்றறப் பார்த்துக் கைவைத்து
நொடியின் அடிவைத்து நுண்ணுணர் வாங்கிக்
கடிய பிறப்பறக் காட்டினன் நந்தியே. ***#1749***

எம் அருட்குரவராகிய நந்திபெருமான் எம் உடல், பொருள், ஆவி என்பவற்றை யாம் நீர் வார்த்து ஒப்புக் கொடுக்கச் செய்து அவை முழுவதையும் தம்முடையனவாக ஏற்றுக்கொண்டு, அதனால் விரிந்து கிடந்த எமது வினைப்பரப்பு முழுவதையும் ஒரு நொடியில் பற்றற்றொழியப்பண்ணி, அதன்பின் தமது திருக்கையை எம் தலைமேல் வைத்துத் தீண்டிப் பின்னும் தமது திருவடிகளை எம் தலைமேற் சூட்டி, இவ்வாற்றால் யாராலும் உரைப்படாதவற்றை யெல்லாம் உணரும் பேரறிவை எமக்குத் தந்து, வலிமை வாய்ந்த பிறவித் தொடக்கு அற்றொழியும்படி அருள்புரிந்தார்.

விளக்கவுரை

இதனால், 'மக்கட்கு ஞானம் கிடைக்குமாறு இவ்வாறு' என்பது உணர்த்தப்பட்டது. நூல் சகலருக்கேயாதலால், இங்குக் கூறிய முறையும் சகலர்க்கேயாதல் தெளிவு.
ஞானம் இறைவனாலல்லது தரப்படாது. 'அதனை அவன் சகலர்க்கு ஆசான் மூர்த்தியாய் நின்றே அருளுவான்' என்க. பிரளயா கலர்க்கு ஒருகால் தனது இயற்கை வடிவில் முன்தோன்றியும், விஞ்ஞான கலர்க்கு உயிர்க்குயிராய் உள்நின்றேயும் உணர்த்துவான்.
ஞான நெறியில் நிற்பவர் தமது உடல், பொருள், ஆவி மூன்றனையும் சிவனுடையனவாகவே உணர்ந்து அவற்றைக் குருவினிடத்தில் நீர் வார்த்து ஒப்புவிக்குமிடத்து, 'பொருள்' எனப்படுவன பொன், மணிமுதல் பல்வேறு வகையான செல்வங்கள் மட்டும் அல்ல; 'யான் இதனைச் செய்தேன்; என் செயல்கள் இவை' எனப் பற்றி நிற்கும் வினைகளும்

'பொருள்' எனப்பட்டு, அவைகளும் நீர்வார்த்து ஒப்புவிக்கப்படும். முதல் நாள் ஒப்புவித்த அந்த உணர்வு எந்நாளும் நீங்காது நிலைத்திருத்தற்குச் சிவனை நாடோறும் வழிபடும் போதெல்லாம் வழிபாட்டின் முடிவில் அந்த வழிபாட்டின் பயனையும் 'சிவோதாதா, சிவோபோக்தா' என்னும் மந்திரத்தை ஓதி நீர்வார்த்து அவனிடமே ஒப்புவிப்பர். அதுவும் இங்குச் 'சம்பிரதாயம்' என்றதனால் பெறப்படுகின்றது.

உயிரும் சரீரமும் ஒண்பொரு ளான
வியலார் பரமும்பின் மேவும் பிராணன்
செயலார் சிவமும்சிற் சத்திஆ திக்கே
உயலார் குருபரன் உய்யக்கொண் டானே. *#1750*

சிவனை அடைய வேண்டினார்க்கு உடல் பொருள், ஆவிகளை அவனுடையனவாக ஒப்புவித்த பின்பும் மூச்சுக் காற்றினை இயக்கம் இடைவிடாது இயங்கியே நிற்கும் ஆதலின் அதுவும் அவர்கட்குச் சுமையாகும். அதனால், அதனையும் 'ஆசிவன், ஆதிசத்தி' என்பவர்க்கு உரியன ஆகும்படி சிவகுரு நீர்வார்த்துக் கொடுக்கச் செய்து ஏற்றுக் கொள்வார்.

விளக்கவுரை

'பரமும்' என்னும் உம்மையை, 'பிராணன்' என்பதன்பின் கூட்டி, 'பரம்' என்பதை அதற்கும் கூட்டுக. வியல் - பரப்பு. அஃது இங்குப் பெரிதாதலைக் குறித்தது. பரம் - பாரம்; சுமை.

பிராரத்த வினை உள்ள வரையில் உடம்பு நீங்காது ஆகையால் உடம்பு நிற்றற்பொருட்டுப் பிராணவாயு இயங்கியே நிற்கும். அஃது இயங்கி உடம்பும் நிற்கவே, உடலோம்புதற் பொருட்டுச் சிறிதளவாயினும் உணவு தேடுதல், வெயில் பனி மழை முதலியவற்றால் வாட்டமும், மகிழ்ச்சியும் கொள்ளுதல் முதலியன நிகழும் ஆதலின் அவை ஆகாமியமாகி விடுதல் பற்றி, 'பின் பிராணனும் பரம்' என்றார். 'ஆயினும் மேற்கூறியன நிகழுங்கால் அவற்றைத் தம் செயலாகக் கொள்ளாது சிவன், சத்தி இவர்களது செயலாக உணரின் அவை ஆகாமியமாய் முடியா ஆதலின் அவற்றை அங்ஙனம் உணர்தற்பொருட்டு, குருமூர்த்திகள் நாள்தோறும் வழி பாட்டில் அவற்றையும் நீர்வார்த்துக் கொடுக்கச் செய்து ஏற்றுக் கொள்ளுதல் மரபு' என்றற்கு, 'உய்ய, உயல் ஆர் குருபரன் சிவன் சிற்சத்தி ஆதிக்கே கொண்டான்' என்றார். ஆர் குருபரன் = ஆர்க்கின்ற - நிறைக்கின்ற குருபரன். 'சிவகுரு' என்றற்கு, 'குரு' என்று ஒழியாது, 'குருபரன்' என்றார். சிவனும், சத்தியும் தொழில் செய்யாது வாளா இருக்குங்கால் 'அனாதி' என்று சொல்லப்பட, ஐந்தொழில் செய்யுங் கால் 'ஆதி' என்று சொல்லப்படுதல் பற்றி 'ஆதி' என்பதன் பின், 'ஆக' எந்பது வருவிக்க.

முன்னை மந்திரத்தில் சஞ்சிதத்தை ஒப்புவித்தல் கூறி, இம்மந்திரத்தில் ஆகாமியத்தை ஒப்புவித்தல் கூறினார்.

'தொல்லையின் வருதல் போலத் தோன்றிரு வினைய துண்டேல்
அல்லொளி புரையும் ஞானத் தழலுற அழிந்து போமே' *

எனவும்,

'இடை ஏறும்வினை - தோன்றில் அருளே சுடும்' *l*

எனவும் கூறுதல் காண்க.

ஞானம் பெறுமாற்றினைத் தாம் பெற்றவாற்றில் வைத்து விளக்கியவாறு.

பச்சிம திக்கிலே வைச்சஆ சாரியன்
'நிச்சலும் என்னை நினை'என்ற அப்பொருள்
உச்சிக்குக் கீழது உள்நாக்கு மேலது
வைச்ச பதம்இது வாய்திற வாதே. *#1751*

தான் வடக்கு நோக்கி அமர்ந்திருந்து, என்னைக் கிழக்கு நோக்கிச் சிவனை தியானித்து இருக்கும்படி பணித்த என் ஞானாசிரியர், பின்பு, 'சிவன் உன் சிந்தனைக்கு அகப்படவில்லை யாகையால் நீ என்னையே சிவனாகத் தியானம்செய்' என்று அருளிச்செய்தார். அவர் அங்ஙனம் அருளிச்செய்த அந்தத் தியானம் எனது உச்சிக்குக் கீழும், உள்நாக்கிற்கும் மேலும் ஆகிய புருவ நடுவில் நிகழ்வது. அவ்விடத்து நிகழ்வதாகிய அந்தத் தியானமானது சொல் நிகழ்ச்சியோடு கூடாது, மனத்தொழில் மாத்திரையாய் நிற்பதாகும்.

விளக்கவுரை

'பச்சிம திக்கிலே வைத்த ஆசாரியான்' என்ற ஞானத்தை உணர்த்தும் முறை மரபினை எடுத்துக் கூறியவாறு, 'வைச்ச இது பதம்' என மொழி மாற்றி யுரைக்க. இது பதம் - இந்த இடம். இஃது ஆகுபெயராய், இதன்கண் நிகழும் தியானத்தைக் குறித்தது. 'திறவாது' என்பது, 'திறக்கப் படாது' எனச் செயப்பாட்டு வினையாய் நின்றது. சொல் நிகழ்த்துதலை, 'வாய் திறத்தல்' என்றது பான்மை வழக்கு.

மனத்தின் தொழில் சொல் நிகழ்ச்சியோடு கூடியும் நிகழும் ஆகலின் அவ்வாறு நிகழ்வது 'தியானம்' எனப்படாது, - சொல் நிகழ்ச்சியின்றி நிகழ்வதே தியானமாம் - என்றற்கு 'வாய்திறாது' என்றார்.

அசிந்திதனாகிய சிவனைச் சிந்திதனாகக் காண்பதற்கு உரிய குரு, லிங்கம், சங்கமம் என்னும் மூன்றனுள் குரு சிறந்து நிற்றல் இங்குப் பெறப்பட்டது.

இதனால், ஞானத்தைப் பெறு முறையும், பின் அதனை நிலை பெறுத்திக் கொள்ளும் முறையும் கூறப்பட்டன.

பெட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனை

ஒட்டடித் துள்ளமார் மாசெலாம் வாங்கிப்பின்
தட்டொக்க மாறினன் தன்னையும் என்னையும்
வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே. *#1752*

'இவ்விடம், அவ்விடம்' என்பதில்லாமல் எங்கும் சென்று, எனது பிடிவாதக் கொள்கையையே வலிந்து கூறி வாயில் வந்தவற்றைப் பிதற்றிக்கொண்டு திரிந்து கொண்டிருந்த என்னைச் சிவகுரு எதிர்ப்பட்டு, எனது அகக்குற்றங்கள் எல்லாவற்றையும் ஒட்டடையை அடித்து நீக்குவது போல நீக்கி, அவைகளைத் தன் பக்கமாக எடுத்துக்கொண்டு, தன்னையும், என்னையும் ஒரு நிகராக வைத்துக் கொடுத்தும், கொண்டும் மாற்றிக்கொண்டான். என்னிடம் உள்ள குற்றங்களை முற்ற நீக்கினமையால், நாங்கள் இருவரும் ஒத்த வினையுடைய பொருளாயினோம். அதனால் கொடுத்துக் கொள்ளும் வாணிபம் தடையின்றி முடிந்தது.

விளக்கவுரை

பெள்+டு=பெட்டு. 'விரும்பப் பட்டது என்பது பொருள். அது விரும்பப்பட்ட கொள்கையைக் குறித்தது வலியுறுத்திப் பேசுதலை 'அடித்தல்' என்பர். 'அடித்து' என்றது 'அடித்தது போன்று' எனப் பொருள்தந்தது. 'ஒட்டு' என்னும் முதனிலைத் தொழிற்பெயர், அதனையுடைய பொருளைக் குறித்தது. வாங்குதல் - தனது ஆற்றலால் தன்னைக் கடந்து செல்லாது தன்பக்கமே நிறுத்துதல். மல மாயா கன்மங்கள் நீக்கப்படுமேயன்றி, அழிக்கப்படா ஆதலால், 'வாங்கி' என்றார். தட்டு - துலைத்தட்டு. ஒதத்ல், நிறையால் ஒத்து நேர் நிற்றல். 'மாறினன்' என்றொழியாது 'ஒக்க மாறினன்' என்றது, ஒவ்வாததனை ஒக்கப்பண் மாறினன்' என்பது தோற்றுதற் பொருட்டு. மாறுதல் - விற்றல். 'தன்னை மாறி யிறுக்க உள்ள கடனஅகள்'*1* என்றாற் போல்வன காண்க. விற்றமை கூறவே, வாங்கினமை தானே பெறப்பட்டது. தன்னை விற்றமை, தன் தன்மையை சீவனிடத்துப் பதிவித்தமை. என்னை வாங்கினமை, சீவபோதத்தைத் தன்னிடத்து ஒடுக்கினமை - 'வாணிபம் வாய்த்து' என்றதனால், 'அது பொருந்தா வாணிபம்' என்பதும், 'வட்டமதொத்தது' என்றதனால், 'அஃது அங்ஙனமாயினும் அதன்கண் உள்ள பொருந்தாமை நீங்கினமையால் அது தக்கதாயிற்று' என்பதும் போந்தன.

'தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்' *3*

என்பதிலும், 'சிவன் மேற்கொண்ட வாணிபம் பொருந்தா வாணிபம்' என்பது குறிக்கப்பட்டது. 'வட்டம், வாசி' என்பன, தரக்குறைவை உணர்த்தும் ஒருபொருட் சொற்கள். 'வட்டம தொத்தது' என்றது 'தரம்

குறைவு நீங்கி நேரியதாயிற்று' என்றபடி. 'ஒத்தது' என்பதன்பின், 'ஆகலான்' என்பது எஞ்சி நின்றது.
இதனால், இறைவன் தானே குருவாய் நின்று உயிரைச் சீவத்தன்மை நீக்கித் தன்மையை எய்துவித்துத் தானாக்கிக் கொள்ளுதலாகிய ஞானச் செய்தி இனிது விளங்கக் கூறப்பட்டது.

தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாம் தலைவன்
இருக்கின்ற தன்மையை ஏதும் உணரார்
பிரிக்கின்ற விந்துப் பிணக்கறுத் தெல்லாம்
கருக்கொண்ட ஈசனைக் கண்டுகொண்ட டேனே. *#1753*

உலகத்தார் உலக உணர்வைத் தருகின்ற நாதத்தின் புறப்போக்கினை நீக்கமாட்டாமையால் தன்னால் தாங்கப்படுகின்ற அனைத்துயிர்கட்கும் தலைவனாய் அவற்றின் உள்ளும் புறம்புமாய் உள்ள இறைவனது இருப்பையும், அவனது பெருந்தன்மையையும் சிறிதும் உணராது அல்லற்படுவர். யான் அவன் வந்து உண்மையை உணர்ந்தமையால் அந்த நாதத்தின் மாறுபாடாகிய புறநோக்கைப் போக்கி அவனது அருளையே கண்ணாகக் கொண்டு காணும் அக நோக்கினை எய்தினமையால் அவனது இருப்பையும், இயல்பையும் நன்கு உணர்ந்து கொண்டேன்.

விளக்கவுரை

'இஃதே ஞானமாவது' என்பதாம். ஞானத்தினது இயல்பு இனிது விளங்குதற் பொருட்டு அஞ்ஞானத்தினது இயல்பை யும் உடன் எடுத்து ஓதினார். வருவித்துரைத்தன இசையெச்சங்கள்.
விந்து - சுத்த மாயை. அதுவே நாதமாய் நின்று புறப்பொருள் உணர்வைத் தருதல் பற்றி, 'பிரிக்கின்ற விந்துப் பிணக்கு' என்றார்.
அகநோக்கால் சிவனைச் சார்தலும், புறநோக்கால் அவனின் நீங்கி உலகைச் சார்தலும் உயிர்க்கு உளவாதல் பற்றி, 'பிரிக்கின்ற விந்து' என்றார். 'விந்துவால் விளையும் ஞானம் பாசஞானம் என்பதையும், 'அந்த ஞானம் பதிஞானத்திற்குத் தடையாய் நிற்கும்' என்பதையும்,
'வேதசாத் திரமிருதி புராணகலை ஞானம்
விரும்பசபை வைகரியா தித்தறங்கள் மேலாம்
நாதமுடி வானவெலாம் பாசஞானம்' *
'ஓவிட விந்து ஞானம் உதிப்பதோர் ஞானம் உண்டேல்
சேவுயர் கொடியினான்றன் சேவடி சேர லாமே' *
எனவும் ஓதியவாற்றான் அறிக. 'கருக்கொள்ளுதல்' என்பது, உயிர்களைத் தனது வியாபகத்துள் அடக்கி நிற்றல், உயிர்களுக்கு உயிராய் அவற்றின் உள்நிற்றல் ஆகிய இரண்டினையும் குறித்து. 'தலைவன்' என்பதன்பின் 'தலைவனாய்' என ஆக்கச் சொல்

வருவித்துரைக்க. 'ஈசன்' எனப் பின்னர் வருதலால், முன்னர்
வருவித்துரைக்க. 'ஈசன்' எனப் பின்னர் வருதலால், முன்னர் வாளா, 'தலைவனாய் இருக்கின்ற தன்மையை' என்றார். 'கண்டேன்', என்னாது, 'கண்டு கொண்டேன்' என்றது நன்குணர்ந்தமை பற்றி.

இதனால், 'ஞானம் ஒன்றே அஞ்ஞானத்தை நீக்குவது' என்பது வலியுறுத்தி உணர்த்தப்பட்டது.

கூடும் உடல்பொருள் ஆவிக் குறிக்கொண்டு
நாடி அடிவைத் தருள்ஞான சத்தியால்
பாடல் உடலினிற் பற்றற நீக்கியே
கூடியே தான்அவ னாம்குறிக் கொண்டே. *#1754*

சிவன் தன்னை அடையும் செவ்வி வாய்ந்த உயிரையும், அதனது உடல் பொருள்களையும் தன்னுடையனவாக ஏற்றுக்கொள்ளுதலையே குறிக்கோளாகக் கொண்டு, அவ்வுயிர் வாழும் இடத்தை நாடி அடைந்து, தனது திருவடிகளை அதனது திரு வடிகளை அதனது முடிமேற் சூட்டி, அதன்பின் வழங்கிய ஞானத்தின் துணையால் அவ்வுயிர் இழிவுடைய உடலில் முன்பு கொண்டிருந்த பற்றை அறவே விடுத்து, அச்சிவன் ஒருவனையே குறிக்களோகக் கொண்டு அவனை அடைந்து, தான் அவனேயாகிவிடும்.

விளக்கவுரை

'ஆவி' என்பதை, 'கூடும்' என்பதன் பின்னர்க் கூட்டுக. 'அருள் ஞானம்' இறந்தகால வினைத்தொகை. 'தனது ஞானம்' என்பது உணர்த்தற்கு. 'ஞானம்' என்று ஒழியாது, 'ஞான சத்தி' என்றார். பாடு - மேன்மை. அதனை, 'பாடு பெறுதியோ நெஞ்சே' *l* என்பத னானும் உணர்க. மேன்மையன்மை கீழ்மையை உணர்த்திற்று. 'கூடிய' என்பதும், 'குளிக்கொண்டு' என்பது பாடம் அல்ல.

இதனால், 'ஞானம் பெற்றவரே வீடுபெறுவர்' என்பது கூறப்பட்டது.

கொண்டான் அடியேன் அடிமை குறிக்கொள்ள
கொண்டான் உயிர்பொருள் காயக் குழாத்தினை
கொண்டான் பலம்முற்றும் தந்தவன் கோடலால்
கொண்டான் எனஒன்றும் கூறகி லேனே. *#1755*

சிவன், யான் அவனுக்கு அடிமையாதலை உண்மையாக உணரும்படி அவன் நேர் வந்து என்னை ஆட் கொண்டான். அதனால் என் ஆவி, உடல், பொருள் அனைத்தையும் தன்னுடையனவாக ஏன்று கொண்டான். அவையேயன்றி, யான் செய்யும் செயலால் விளையும் பயனையும் தன்னுடையனவாகக் கொண்டான். இங்ஙனம் அவைகளை அவன் கொண்டது புதிதாகாது முன்பே அவன் என்பால் கொடுத்து வைத்தவறஅறைத் திரும்பப் பெற்றுக்கொண்டதே யாகலின்,

'என்னுடையவைகளை அவன் கொண்டு போய்விட்டான்' என்று யான் எங்ஙனம் முறையிட முடியும்? முடியாது ஆகையால் யான் பேசாதிருந்துவிட்டேன்.

விளக்கவுரை

முதல் மூன்று அடிகளிலும் இரண்டாம் வேற்றுமை, தொடர்களின் இறுதிகளில் இறுதிகளில் தொக்கும். விரிந்தும் நின்றது. 'அடியேன் குறிக்கொள்ள' என மாற்றி வைத்து உரைக்க.
இதனால், 'ஞானமாவது, உள்ளதாய், முன்பு உணரப்படாது இருந்ததனை உணர்தலேயன்றிப் புதுவதாய் விளைகின்ற ஒன்றை உணர்தல் அன்றஉ' என்பது கூறப்பட்டது.

குறிக்கின்ற தேகமும் தேகியும் கூடில்
நெறிக்கும் பிராணன் நிலைபெற்ற சீவன்
பறிக்கின்ற காயத்தைப் பற்றிய நேர்மை
பிறிக்க அறியாதார் பேயுடன் ஒப்பரே. ***#1756***

வினைக்கீடாகக் குறிக்கப்பட்ட உடம்பும், அவ் வுடம்பைத் தன்னுடையதாகக் கொள்ளும் உயிரும் ஒன்று சேர்ந்தவுடன், பிராணவாயுவும் நெறிப்பட்டு இயங்கத் தொடங்கும். (அங்ஙனம் இயங்குதல் உயிர் அவ்வுடம்பில் நிலைத்திருத்தற்குத் துணையாகவேயாம்) ஆகவே, அந்தப் பிராணவாயுவின் இயக்கத்தால் அந்த உடம்பில் நிலைபெற்றிருக்கின்ற அந்த உயிரிட மிருந்து அந்த உடம்பு ஒருகாலத்தில் பறிக்கவேபடும். அதனால், உயிர் உடம்பின் வேறாயினும், அஃது அதனைப்பற்றி நிற்றற்குரிய காரணத்தை உணர்ந்து அவ்வுணர்வால், தம்மை உடம்பின் வேறாக உணராது, உடம்பாகவே மயங்கி உலக வாழ்வில் இச்சை கொண்டு அலைபவர் பேயோடு ஒப்பர்.

விளக்கவுரை

'இவாவுயிருக்கு இஞ்ஞான்று இவ்வுடம்பு உரியது' எனக்குறிப்பதும், இவ்வுடம்பில் பிராணவாயுவை இயங்கச் செய்த அதனால் அவ்வுயிரை அவ்வுடம்பில் சிலகாலம் நிலைப்பிப்பதும், பின்பு அவ்வுடம்பை அவ்வுயிரிடமிருந்து பறித்துவிடுவதும் எல்லாம் இறைவனது ஆணையேயாதலும், அந்த ஆணை அவ்வாறெல்லாம் செய்தற்குக் காரணம் உயிர்களின் வினையே ஆதலும் ஆகிய வற்றையே இங்கு 'நேர்மை' என்றார். 'நீர்மை' எனப்பாடம் கொள்ளுதலும் பொருந்தும். 'பிராணன், நேர்மை' - என்பவற்றில், 'ஆல்' உருபு விரித்துக் கொள்க. 'நேர்மையால்' என்றது, 'நேர்மையை உணருமாற்றால்' என்றபடி, பேய்க்கு வயிற்றுக்குத் தேடுதல் ஒன்றன்றிப் பிறிது குறிகோள்

இல்லாமை பற்றி அத்தன்மையரைப் பேயோடு ஒப்பிட்டார்.
இதனால், 'ஞானம் பெறாதார் தம்மையும், தமக்கு உறுதியானவற்றையும் உணரமாட்டார்' என்பது கூறப்பட்டது.

உணர்வுடை யார்கட் குலகமும் தோன்றும்
உணர்வுடை யார்கட் குறுதுய ரில்லை
உணர்வுடை யார்கள் உணர்ந்தஅக் காலம்
உணர்வுட யார்கள் உணர்ந்துகண் டாரே. *#1757*

குருவருளால் ஞானத்தை உணர்வாட்கு உலகத்தின் இயல்பும் தோன்றும். *(*உம்மையால், உலகத்தைச் செயற்படுத்தி நிற்கின்ற முதல்வனது இயல்பும் தோன்றும்*)* ஆகவே, உலகத்தைப் பற்றாது விடுத்து முதல்வனையே பற்றி நிற்பர் ஆகையால் அவர்கட்கு உலகத்தால் ழிளக்கப்படும் துன்பம் இல்லையாகும். *(*முதல்வனால் தரப்படும் இன்பமே விளயும்.*)* குருவருளால் ஞானம் பெற்றவர்கள் அதனை முதற்கண் கேள்வியளவாகவே உணர்ந்தாராயினும், பின்பு சிந்தித்துத் தெளிந்து கொள்வார்கள்.

விளக்கவுரை

எனவே, 'கேட்டல் அடிப்படை' என்பதாம். உயிர்கள் ஞானத்தைப் பெறும் முறைமையை இவ்வதிகாரத்து முன் மந்திரத்திற்கு முன்மந்திரங்காறும் விரித்தருளிச் செய்தமையால் மீட்டும் அதனை எடுத்துக் கூறாராயினார்.
இம்மந்திரம் சொற்பொருட் பின்வருநிலையணி.
இதனால், ஞானம் படிநிலையான் முற்றுமாறும், அதன் பயனும் கூறப்பட்டன.

காயப் பரத்தின் அலைந்து துரியத்துச்
சால விரிந்து குவிந்து சகலத்தில்
ஆயஅவ் ஆறா றடைந்து திரிந்தேற்குத்
தூய அருள்தந்த நந்திக்கென் சொல்வதே. *#1758*

உடம்பாகிய சுமையைச் சுமந்து கொண்டே உலகெங்கும் திரிந்து, அவ்வுடம்பால் துரிய நிலையில் உணர்வு ஒடுங்கியும், சகல நிலையில் உணர்வு மிகவிரிந்தும் கருவிகள் முப்பத்தாறின் சேர்க்கையால் இவ்வாறெல்லாம் அலமந்து கிடந்த அடியேனுக்கு அக்கருவிகளில் ஒன்றோடும் படாது தூய்தாய் உள்ள திருவருளை வழங்கி அமைதியைக் கொடுத்தருளிய நந்தி பெருமானது கருணைக்கு நான் நன்று சொல்வது எவ்வாறு*!*

விளக்கவுரை

பரம் - சுமை. 'இன்' ஒடுவின் பொருளில் வந்த 'ஆள்' உருபின் மயக்கம்.

இனி இதனைச் சாரியையாக்கி 'ஒடு' உருபு விரிக்கினும் ஆம். 'துரியத்துக் குவிந்து' எனக் கூட்டுக. 'சாக்கிரம்' என்னின் கேவல சாக்கிரமும் ஆம் ஆதலின் அதனை விலக்கிச் சகல சாக்கிரத்தைக் குறித்தற்கு, 'சகலத்தில்' என்றார் துரியத்தை அங்ஙனம் கூறாது வாளா 'துரியம்' என்றமையால் அது கேவல துரியமே யாயிற்று. மக்களுடம்பையே பெற்றபோதிலும் உணர்வு இவ்வா றெல்லாம் கணந்தோறும் மாறி மாறஇ நிகழ்தலால் உயிர்க்கு உளதாகும் அலமரலைக் குறித்தவாறு. இவ்வலமரலையே நாயனார் முதல் தந்திரத்தில் 'உயிர் நிலையாமை' - என அருளிச் செய்தார். இதனால், அஞ்ஞானம் காரணமாக அலமரும் உயிர்கட்குக் குருவாகி வந்து ஞானத்தை அருளி அமைதியைத் தரும் சிவபெரு மானது பேரருட்கு அவ்வுயிர்கள் செய்யும் கைம்மாறு யாதும் இன்மை கூறப்பட்டது. இதன் இரண்டாம் அடியில் இன எதுகை வந்தது.

நானென நீயென வேறில்லை நண்ணுதல்
ஊனென ஊனுயி ரென்ன உடன்நின்று
வானென வானவர் நின்று மனிதர்கள்
தேனென இன்பம் திளைக்கின்ற வாறே. *#1759*

குருவருளால் ஞானத்தைப் பெற்ற சகல வருக்கத் தினர் பின்பு சிவன் ஆகாயம் போல வியாபகனாய் விளங்குதலை உணர்ந்து அதனால் சுட்டறிவை விட்டு எங்கும் வியாபகமாய் அவனை உணருமாற்றால் தேன் சுவையை நுகர்தல் போல அவனது தூய இன்பத்தை நுகருங்கால் அந்தச் சிவன் இவர்கட்குக் காட்சிப் படுதல், 'நான் இன்பத்தைத் தருகின்றாய்' என இவ்வாறு வேறு நின்று நுகருமாறு அவன் இவரின் வேறாய் நிற்றல் அன்று. மற்று, இவர் உடம்பு போலவும், அவன் அவ்வுடம்பினுள் உள்ள உயிர் போலவும் உடனாய் நிற்கவேயாம்.

விளக்கவுரை

'மனிதர்கள்' என்பதை மூன்றாம் அடியின் முதலிற் சுட்டி, அது முதலாகத் தொடங்கி 'நண்ணுதல்' என்பதன் முதற்கண் வைத்து உரைக்க. 'வானவர்' என்றது சிவனை உயர்வுப் பன்மையாற் குறித்தவாறு. 'நின்று' இரண்டில் பின்னது 'நிற்றலால்' எனக் காரணப் பொருட்டாய் நின்றது. முன்னது அப்பொருளில் வந்த செயவென் எச்சத் திரிபு. 'நண்ணுதல், நின்று' இவற்றிற்கும் வினைமுதல் பின்னர் வந்த 'வானவர்' என்பதே. 'திளைக்கின்ற வாற்றில்' என ஏழாவது விரிக்க.
'ஊன்' என்றது. 'உடம்பு' எனப் பொதுப்படவே அருளிச் செய்தாராயினும் அஃது அறிவுக்கருவிகளாகிய, உடம்பின் புறத்தில் உள்ள ஞானேந்திரியங்களையும், அகத்தில் உள்ள அந்தக் கரணங்களையுமே சுட்டி நின்றது. இவ் அறிவுக் கருவிகள் அறியுந்

தன்மை யுடையனவாயினும் அவற்றோடு ஆன்மா இயைந்து தானும் அறிந்தாலன்றி அறியமாட்டாமை போல, உயிர்கள் அறிவுடையன வாயினும் சிவன் அவற்றோடு ஆன்மா இயைந்து தானும் அறிந்தா லன்றி அறியமாட்டாமை போல, உயிர்கள் அறிவடையனவாயினும் சிவன் அவற்றோடு உடனாய் நின்று அறிந்தாலன்றி அவை அறியமாட்டா. இந்நிலை பெத்தத்தில் மட்டுமின்றி முத்தியிலும் ஆதலை, 'ஊன் என, (வானவர்) ஊன் உயிர் என்ன உடன் நின்று' என்றார். குருவருளை நினைப்பித்தற்கு மனித உயிரையே குறித்தார். இதனால், ஞானத்தின் முடிநிலைப் பயனாகிய பரமுத்தியின் இயல்பு கூறப்பட்டது.

அவனும் அவனும் அவனை அறியார்
அவனை அறியில் அறிவானும் இல்லை
அவனும் அவனும் அவனை அறியில்
அவனும் அவனும் அவன்இவன் ஆமே. ***#1760***

உயிர்க்கு உறுதியறியாமை பற்றி மெய்ந்நெறி யாளனால் 'அவன்' என அயலவனாகக் குறிக்கப்படுபவனும், தன்போன்றாரால் அடையலாகாத மேல் நிலையை அடைந்தமை பற்றி உலகியலாளனால் 'அவன்' என உயர்த்துக் கூறப்படும் மெய்ந்நெறி யாளனும் ஆகிய இருவருமே சிவனை அறிந்திலர், அஃது எவ்வா றெனில், சிவனை ஆன்மா உண்மையாகவே அறிவுமாயின் அதன் அறிவில், அறிபவனும், (உம்மையால் அறியும் அறிவும்) இல்லை யாகும். (மேற்கூறிய இருவர் அறிவிலும் அறிபவராகிய தம்மை அறியும் 'யான்' என்னும், தமது அறிவை அறிகின்ற 'எனது' என்னும் அறிவும் இருத்தலால் அவர் சிவனை அறிந்தாராதல் எங்ஙனம்?) அவ் விருவரும் 'யான், எனது' என்பன முற்றும் அறும்படி சிவனை அறிந்தா ராயின் அவருள் ஒவ்வொருவனும் ஒவ்வொருகாரணம் பற்றி மற்ற வனை, 'அவன்' என வேற்று நிலையில் வைத்து எண்ணும் நிலைநீங்கி, 'இவன்' என ஒருநிலையில் வைத்து எண்ணும் நிலை உண்டாய்விடும்.

விளக்கவுரை

'அவனை' என இரண்டன் உருபேற்று நின்றவை மூன்றும் பண்டறி சுட்டாய்ச் சிவனைக் குறித்து நின்றன. ஏனையவை, 'அவன்' என்று சுட்டப்படுபவன் எனப்பொருள் தந்தன. 'அவனும், அவனும்' என இருவரைக் கூறி, 'அவர் இருவரும் சிவனை அறியார்' என்றமையால் 'அவர் இருவரும் வேறு வேறு நிலையினர்' என்பதும், 'ஆயினும் அவர் அறியாராயினமைக்குக் காரணம் ஒன்றே என்பதும் போந்தன ஆதலின், 'அவ்இருநிலை' இவை என்பதும், 'ஒன்றாகிய காரணம் இது' என்பதும் ஆற்றலால் கொள்ளப்பட்டன.

'உலகியலான் சிவனை அறியான் - என்பது வெளிப்படை; ஆயினும் மெய்ந்நெறியாளன் சிவனை அறியானாதல் எவ்வாறு என வியக்கத் தோன்றும், அங்ஙனம் வியப்புத் தோன்றக் கூறியது சொல் நயமாகும். முத்தி நிலையிலும் சாக்கிரம் முதலிய அஞ்சவத்தைகள் உள; அவற்றுள் துரியம், துரியாதீதம் என்பவையே சிறந்தவை. அவற்றுள் துரியாதீதமே முடிநிலை. அதன்கண் அறிவானும், அவனது அறிவும் உணரப்படாமல் அறியப்படும். பொருள் ஒன்றே உணரப் படும். அவ்வாறன்றி, மூன்று பொருள்களும் உணரப்படுதல் துரிய நிலையேயாதல் பற்றி, அந்நிலையில் நின்றானையும் சிவனை யறியாதவனாகக் கூறினார். துரிய நிலை அருள் விளக்க நிலையும், துரியாதீதநிலை ஆனந்த விளக்கமும் ஆதல் அறிக. இம்மந்திரத்திலும் சொற்பொருட் பின்வரு நிலையணி வந்தது.

இதனால் ஞானத்தின் பயனாகிய முத்தியின் முடிநிலை இயல்பு கூறப்பட்டது.

நான்இது தான்என நின்றவன் நாடொறும்
ஊன்இது தான்உயிர் போல்உணர் வான்உளன்
வான்இரு மாமழை போற்பொழி வான்உளன்
நான்இது வாம்பரன் நாதனும் ஆமே. ***#1761***

உயிர் என்றும் உடம்பு போல இருக்க அதன்கண் உயிர்போல நின்று அறிகின்ற ஒருவன் இருக்கின்றான். அவன், 'இவ்வுயிர் நானே' எனத் திருவுளம் செய்து, அவ்வுயிரின் உள்ளத்தில் தனது கருணையை வானத்தில் உள்ள கரிய, பெரிய மேகம் மழையைப் பொழிவது போலப் பொழிவான். 'இவ்வுயிர் யான்' எனத் திருவுளம் செய்கின்ற அவன் குருவுமாய் வந்து அருள்பவனாவான்.

விளக்கவுரை

'தான்' இரண்டில் முன்னுத தேற்றப் பொருளிலும், பின்னது எழுவாய்ப் பொருளிலும் வந்தன. 'இதுதான்' என்றது, 'இந்த உயிர்தான்' என்றபடி. 'ஊன்' என்பதன்பன் 'ஆக' என்பது தொகுத்தலாயிற்று.

'இதுதான் ஊன் ஆக, உயிர்போல் உணர்வான் உளன்; அவன், - இது நான்தான் - என நின்று, உளன், வான் இருமாமழை போல் பொழிவான்' - எனக் கூட்டியுரைக்க.

உளன் - உளம்; போலி. 'உளனில் பொழிவான்' என்க. ஈற்றடியில், 'நான் இதுவாம்' என்றது, முதல் அடியில் கூறியதனை மீட்டும் அனுவதித்ததாம். 'நாதன்' என்பது குருவை உணர்த்துவதொரு பெயர். 'இது நானே' - என்றது 'சிவோதயம் அஸ்தி' என்னும் சித்தாந்த மகாவாக்கியப் பொருளைக் கூறியவாறு, ஆசிரியன் மாணவனது உயிரை இவ்வாறு பாவிக்கும் பாவனையால் அவனைச் சிவமாகச்

செய்வன் என்க. 'குரு சிவனே' என்றற்கு, 'நான் இது வாம் பரன் நாதனும் ஆமே' என்றார்.
இதனால் ஆசாரியனால் சீவன் சிவன் ஆதலாகிய ஞானச் செய்தி மரபு கூறப்பட்டது.

பெருந்தன்மைத் தான்என யான்என வேறாய்
இருந்ததும் இல்லைஅ தீசன் அறியும்
பொருந்தும் உடல்உயிர்போல் உண்மை மெய்யே
திருந்தமுன் செய்கின்ற தேவர் பிரானே. ***#1762***

உண்மையை உண்மையாக உணர்ந்து உயிர்கள் செம்மை எய்தும் வண்ணம் செய்கின்ற சிவன், 'தீர உயர்ந்த பெருந் தன்மையை உடைய தான் அங்கே' எனவும், 'தீர இழிந்த சிறு தன்மையை உடையயான் இங்கே' எனவும் இவ்வாறு வேறு வேறாய் முன்பு இருந்ததும் இல்லை. (உம்மையால், இனி இருக்கப் போவதும் இல்லை) மற்று, உடலில் உயிர் வேறறக் கலந்திருப்பது போல அவன் என்றும் என்னுள் ஒன்றாய்க் கலந்தேயிருக்கின்றான்; ஆயினும் அவன் அறிவான்; யான் அறிந்திலேன்.

விளக்கவுரை

'இது பொழுது அவன் அருளால் யானும் அதனை அறிந்தேன்' என்பது குறிப்பெச்சம். 'இவ்வாறு அறிந்த இதுவே ஞானம்' என்றபடி.
இதனால், படலத்தால் மறைக்கப்பட்டிருந்த கண்ணை யுடையவன் அப்படலம் நீங்கியவுடன் முன் தான் காணாதிருந்த பொருள்களைக் காண்பது போன்றதே ஞானத்தைப் பெறுதல்' என்பதும், அங்ஙனம் கண்பெற்றவன் தன்முன் உள்ள பொருள்களைக் கண்டு மகிழ்தல் போன்றதே முத்திநிலையை எய்துதல்' என்பதும் கூறப்பட்டன.

9.9. திருவருள் வைப்பு

இருபத மாவ திரவும் பகலும்
உருவது வாவ துயிரும் உடலும்
அருளது வாவ தறமும் தவமும்
பொருளது வுள்நின்ற போகம தாமே. *#1763*

'நாள்' என்பது, 'இரவு, பகல்' என்னும் இரு நிலைகளை உடையது. 'பிறப்பு' என்பது, 'உயிர், உடல்' என்னும் இரண்டின் கூட்டம். அவைபோலச் சிவனது திருவருட்பேறாவது, துறவும், நோன்பும் ஆகிய இரண்டின் நிகழ்ச்சியாகும். இனி அந் நிகழ்ச்சிக்குப் பயனாவது உயிர்க்குயிராய் உள்ள அந்த இன்பத்தை அறிந்து நுகர்தலேயாம்.

விளக்கவுரை

'இருபதமாவது' என்னும் பயனிலைக்கு 'நள், என்னும் எழுவாய் தோன்றாது நின்றது. 'இரவும் பகலும்' என்பதனைப் பயனிலையாக்கின் 'இருபதமாவன' என்பது பாடமாதல் வேண்டும். 'ஆவது' என்பது முன், பின் இரண்டிடத்தும் இயையாது.
'அது' நான்கும் பகுதிப் பொருள் விகுதிகள். காட்சிப் பொருளாதல் பற்றிப் பிறப்பை 'உரு' என்றார். முதல் இரண்டு அடிகளும் எடுத்துக் காட்டுவமையாய் நின்றன.
அருட்கு அடையாளமாவதனை, 'அருள்' என்று உபசரித்தார். துறவறமே சிறப்புடை அறமாதல் பற்றி 'அந்தணர் என்போர் அறவோர்'*l* எனத் துறவறத்தோரே 'அறவோர்' எனப்பட்டாற் போலத் துறவறத்தையே நாயனார் இங்கு 'அறம்' என்றார். அஃதாவது, 'உயிர்ச் சார்பு, பொருட் சார்பு' என்பவற்றுள் யாதொன்றின் மேலும் பற்றுச் செய்யாமை.
தவமாவன சரியை கிரியா யோகம் இவை பலவும் நிகழ் தலை 'நிகழ்ச்சி' என ஒன்றாய் அடக்கி, 'அருளதுவாவது' என்றார். பயன் 'பொருள்' எனப்பட்டது. 'சத்திநிபாதம் வரப்பெற்றோரது நிலை இவ்வாறாம்' என்பது கூறமுகத்தானே அது பெற்றோரும், பெறாதோரும் தம் தம் நிலையை உணர்ந்து மகிழ்ச்சியும் வருத்தமும் கொண்டு. மேல் செய்யத்தக்கதின் முயலுமாறு கூறப்பட்டதாம்.

காண்டற் கரியன் கருத்திலன் நந்தியும்
தீண்டற்கும் சார்தற்கும் சேயனாய்த் தோன்றிடும்
வேண்டிக் கிடந்து விளக்கொளி யான்நெஞ்சம்
ஈண்டிக் கிடந்தங் கிருளறு மாமே. *#1764*

(சிவனை உயிர்கள் அனாதியில் ஒராற்றானும் உணர்தல் இல்லை.) பின்பு உலகியல் உணர்வானே ஏனைப் பொருள்களைக் காண்டல், கருதல், தீண்டல், பற்றுதல் இவற்றைச் செய்தல் செய்து பெறுதல் போல

அவனை அவ்வுயிர் பெற முயன்றால், அவனும் அவ்வகையினால் எல்லாம் அவற்றால் எய்துதற்கு அறி யனாய், அவற்றிற்கு மிகத் தொலைவில் உள்ளவனாகியே நிற்பான். பின்பு ஒரு காலத்தில் அவனே விருப்பத்தை உடையவனாகிப் புறத்தே விளங்கும் இல்லக விளக்குப்போலும் *3* தன்மையுடன் அகத்தில் தானே நல்லக விளக்காய் நீங்காது நிற்றலால், அவ்விடத்துள்ள அறியாமையாகிய இருள் அற்றொழியா நின்றது.

விளக்கவுரை

என இதனையும், இனி வருகின்ற மந்திரங்களையும் திருவருள் வாய்க்கப் பெற்றார் அதனை உணர்ந்து மகிழ்ந்தெடுத்துக் கூறுவனவாக வைத்துரைக்க.
'நந்தியும்' என்னும் உம்மை இறந்தது தழுவி நிற்றலால், அதனால் தழுவப்பட்ட பொருள் வருவிக்கப்பட்டது. 'விளக்கொளி' என்றது அதுபோலும் தன்மையை. ஆன் உருபு 'கைப்பொருளொடு வந்தான்' என்பதில் உள்ளது போலும் ஒடு உருபின் பொருளில் வந்தது. 'நெஞ்சத்துக்கண்' என ஏழாவது விரிக்க. ஈண்டுதல் - செறிதல். அது நீங்காது நிற்றலைக் குறித்தது. 'கிடந்து' இரண்டில் பின்னது, 'கிடத்தலால்' எனப்பொருள் தந்து நின்றது. ஆம். ஏ அசைகள், இதனால், சிவன் அனாதியில் உயிர்கள் பக்குவமின்றி நிற்றலால் அரியனாயினும் பக்குவம் எய்தி காலத்தில் எளியனாய் விளங்கும் அவனது அருள் நிலை போற்றியுரைக்கப்பட்டது. 'அவ்வருட் பதிவானே முன்னை மந்திரத்துக் கூறிய அறமும், தவமும் தாமே நிகழும் என்பது கருத்து.

குறிப்பினின் உள்ளே குவலயம் தோன்றும்
வெறுப்பிருள் நீங்கில் விகிர்தனும் நிற்கும்
செறிப்புறு சிந்தையைச் சிக்கென நாடில்
அறிப்புறு காட்சி அமரரும் ஆமே. ***#1765***

முன் மந்திரத்திற் கூறியவாறு நிற்கும் நல்லக விளக்கை நோக்கும் நோக்கத்தால் முதற்கண் 'யான்' என்றும், 'எனது' என்றும் உயிர்மயங்குமாறு அதனோடு ஒற்றுமைப் பட்டு நின்ற உலகம், உண்மையில் அன்னவாகாது அதனின் வேறாய் அதன் அறிவினுள்ளே தோன்றும் அதன்பின் எல்லாவற்றிற்கும் தன்னையும், பிறரையுமே முதல்வராகக் கருதும் சீவபோதத்திற்குக் காரணமான மல இருள் நீங்க, 'எல்லாம் அவனே' என்னும் சிவபோதம் நிலைத்து நிற்கும். அச்சிவபோதத்தின் வழிச் சிவனையே நாடுதல் ஒழிந்து மீட்டும் தனது அறிவாற்றலைப் பற்றாக நாடின், பெத்தான்மாக்களை அவர்களது அறிவிச்சை செயல்களைச் செயற்படுத்தி ஆள்கின்ற காரணக்

கடவுளராம் நிலை எய்துவதாகும்.

விளக்கவுரை

'அந்நிலை எய்தும்படி சிந்தையை நாடச் செய்வது மலத்தின் வாசனை' என்பது கருத்து, எனவே, அவ்வாசனையும் நீங்கின் சிவானந்தானுபூதி உண்டாதல் பெறப்படும். 'சிவானந்தானு பூதி நிலையே பரமுத்தி' எனவும், காரணக் கடவுளராய் நிற்றல் இலய போக அதிகார முத்திகள் எனவும் உணர்க.

குறிப்பு: நோக்கு, அஃது அதிகார இயைபால் அகவிளக்கை நோக்கும் நோக்கின்மேல் நின்றது, 'குறிப்பினின்' எனச் சிறுபான்மை 'இன்' என் உருபு இன் சாரியை பெற்றது. வெறுப்பு இருளாவது உண்மைத் தலைவனை விரும்பாது விடுத்துத் தம் கள்ளத் தலைமையையே விரும்புதற்குக் காரணமாகிய அறியாமை. விகிர்தன் - உயிர்களின் இயல்பிற்கு வேறுபட்ட இயல்பினை உடையவன்; இறைவன். விகிர்தனது போதத்தை 'விகிர்தன்' என உபசரித்தார். உம்மை, உயர்வு சிறப்பு. செறிப்புறு சிந்தை - சார்ந்த பொருள்தோறும் அது அதுவாய் அழுந்தி நிற்கின்ற ஆன்ம அறிவு. சிக்கென - உறுதியாக. 'அறிவிப்பு' என்பது இடைக் குறைந்து 'அறிப்பு' என நின்றது. அறிவித்தலையே கூறினாராயினும் இனம் பற்றி இச் சிறப்பித்தலும், செய்வித்தலும் கொள்ளப்படும். காரணக் கடவுள ராவார்க்கு அவர் செய்த புண்ணியத்தானே ஆன்மாக்களது அறி விச்சை செயல்ளைச் செயற்படுத்தும் ஆற்றலைச் சிவன் அளித் தருள்வன் என்க. பரமுத்தியை விரும்புவோர் இதனை விரும்பாமையை,

'ஐந்தொழிலும் காரணர்க ளாத்தொழிலும் போகம்நுகர்
வெந்தொழிலும் மேவார் மிக' *

என்பதனான் அறிக.

இதனால் திருவருட் பேற்றினை முற்றப் பெறவே மேலோருள் மேலோர் விரும்புதல் கூறப்பட்டது.

தேர்ந்தறி யாமையின் சென்றன காலங்கள்
பேர்ந்தறி யான்எங்கள் பிஞ்ஞகன் எம்மிறை
ஆர்ந்தறி வார்அறி வேதுணை யாம்எனச்
சார்ந்தறி வான்பெருந் தன்மைவல் லானே. *#1766*

எங்கள் இறைவனாகிய சிவன் எம்மை விட்டு ஒரு போதும் நீங்கியதில்லை. அதனை அனுபவமாக உணர்ந்த அனுபூதி மான்களது அறிவுரையை 'இதுவே மநக்குத்துணையாவது' என்று பற்றி உணரவல்லவன் எவனோ அவனே பொரும்பொருள் தன்மையைத் தான் பெற வல்லவனாவன். அதனை முன்பே உணர்ந்து ஒழுகாமையால் பல காலங்கள் வீணாகவே கழிந்தன.

விளக்கவுரை

'என்றாலும் இப்பொழுதாயினும் அவ்வாறு உணர்ந்து ஒழுகத் திருவருள் கிடைத்தது தவப் பயன்' என்பது குறிப்பெச்சம்.

பிஞ்ஞகம் - தலைக்கோலம். பிறை, பாம்பு, கங்கை, கொன்றை மாலை முதலிய பலவகைப்பட்ட தலைக்கோலமும், சடை முடியும் சிவபிரானுக் கல்லது பிறர்க்கு இன்மையால் சிவபிரான் 'பிஞ்ஞகன்' எனப்படுகின்றான். அவனே இறைவனாதலைக் குறித்தற்கு, 'பிஞ்ஞகன் எம்மிறை' என்றார். முதல் அடியை ஈற்றில் வைத்துரைக்க.

இதனால், 'சிவனை அவனது அருளைத் துணையாகப் பற்றியே அறிய இயலும்' என்பதும், 'அதனை அவ்வாறு அவனை அடைந்தோரது அருளுரையே உணர்த்தும்' என்பதும், 'அவ்வருளுரையைத் தெளிதற்கும் சிவனது அருள் வேண்டும்' என்பதும் கூறப்பட்டன. அடைந்தோரது அருளுரைகள் அங்ஙனம் உண்ர்த்துதலை,

'அவன் அருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வணத்தன்
இவன் இறைவன் என்றெழுத்திக் காட்டொணாதே' *

என்பது முதலியவற்றான் உணர்க.

தானே அழியும் வினைகள் அழிந்தபின்
நானே அறிகிலன் நந்தி யறியுங்கொல்
ஊனே யுருகி உணர்வை உணர்ந்தபின்
தேனே அனையன்நம் தேவர் பிரானே. ***#1767***

முன் மந்திரத்திற் கூறியபடி ஆர்ந்தறிந்தார் அறிவை துணையாகச் சார்ந்தறிந்தமையால் உள்ளமேயன்றி உடம்பும் உருகுமாறு ஞானமே வடிவாய் நிற்கும். சிவமுதற்பொருளை உணர்ந்த பின் அம் முதல்வன் தேன்போல இனியனாய்த் தெவிட்டாது நின்றான். இந் நிலையில் சஞ்சித வினைகள் கெட்டொழிதலன்றி அவற்றிற்கு வேறு வழியில்லை. அங்ஙனம் அவை கெட்ட பின்பு யான் அவற்றை நுகர் வோனாதலும், சிவன் அவற்றை எனக்குக் கூட்டி நுகர்விப்போ னாதலும் ஆகிய நிலைமைகள் எங்ஙனம் உளவாகும்! உளவதால் இல்லை.

விளக்கவுரை

மூன்றாம் அடிமுதலாகத் தொடங்கி யுரைக்க. தம்மியல் பால் தாம் அழியற்பாலனவாதல் பற்றி, 'தானே அழியும்' என்றார். எனினும், 'அவை பயனிலவாயினமை பற்றி முதல்வன் அழித் தொழிப்பன்' என்பதே கருத்து. 'பக்குவம் எய்திய உயிரை அவைகளால் முன்னர்ச் செய்யப்பட்டுக் குவிந்து கிடந்த சஞ்சித வினைகள் சென்று பற்றமாட்டா' என்பதைத் திருவள்ளுவரும்,

'சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்' *
என அருளிச் செய்தார். உணர்வுடையதனை, உணர்வு என்றே உபசரித்தார். அது தேவர் பிரானேயாயினும், 'மெய்ப்பொருளது 'இயல்பு அது' என்றற்கு வேறு போலக் கூறினார்.

'தானே' என்றது பன்மை யொருமை மயக்கம். பக்குவம் வந்த உயிர்களது சஞ்சித வினைகள் வாளா அழிக்கப்படுதல், துறவு பூண்டோர் சந்ததியும் இலராயின் அவர், முன்பு எழுதித் தந்த கடன் பத்திரம் அழிக்கப்படுதல் போல்வது என்க.

'யானேதும் பிறப்பஞ்சேன்; இறப்பதனுக் கென்கடவேன்!' *
என்றதும் இந்நிலையில் நின்றேயாம்.

'எல்லைஇல் பிறவி நல்கும் இருவினை, எரிசேர் வித்தின்
ஒல்லையின் அகலும்'l
என்றது காண்க.

'நானே' என்னும் ஏகாரம், 'இன்றியமையாது அறியற் பாலன் யானே; பிறரல்லர்' என்பது உணர்த்தி நின்றது. 'அங்ஙனமாக, நந்தி அரியுங்கொல்' என்க. 'கொல்', இங்கு எதிர் மறைப் பொருட்டாய் நின்றது. ஊட்டுவித்தலும், உண்டலும் அறிந்தன்றி யாகாமையின் அவற்றை அறிதலின் மேல்வைத்துக் கூறினார்.

இதனால், திருவருட் பேற்றால் இன்பமாகிய பயன் விளைந்தபின் மீட்டும் துன்பம் இன்றாதல் கூறப்பட்டது. அதனால், இவ்வின்பம் நிலையான இன்பமாதல் விளங்கிற்று.

நானறிந் தன்றே யிருக்கின்ற தீசனை
வானறிந் தார்அறி யாது மயங்கினர்
ஊனறிந் துள்ளே உயிர்க்கின்ற ஒண்சுடர்
தானறி யான்பின்னை யார்அறி வாரே ***#1768***

என்னுள் இருக்கின்ற இறைவனை அறிய வேண்டி யவன் யானே யன்றோ! (அந்நிலை இன்று யான் கைவரப் பெற்றேன்.) வானுலகம் ஒன்றையே அறிந்து நிற்கும் வானவர் அந்த அறிவால் தம்முள் இருக்கும் இறைவனை அறியாது மயங்குவாராயினர். ஒவ்வொருவனும் தனது உடம்பின் இயல்பையும், அந்த உடம்பினுள் உள்ள உயிரையும், அந்த உயிருக்குள் உயிராய் நின்று அதற்கு அறிவைத் தருகின்ற உள்ளொளியாகிய இறைவனையும் அறிந்து அவ்வாற்றால் பயன்பெற வேண்டியவன் அவனேயாய் இருக்க அவனவனும் அதனைச் செய்யாது கிடப்பானாயின் அவனுக்காக மேற்கூறியவைகளை யார் அறிவார்!

விளக்கவுரை

'திருவருட் பேறில்லாமையால் அவரெல்லாம் அங்ஙனம் மயங்கிக்

கிடப்பர்' என்பது கருத்து.
'ஈசனை அறிந்து இருக்கின்ற நானன்றே' என மாற்றியுரைக்க.
இருக்கின்றது - 'இருக்க வேண்டுவது' இது தொழிற்பெயராய், அத்தொழிலுடையதனை உணர்த்திற்று. ஊன் - உடம்பு; ஆகுபெயர். அதனைக் கூறவே, அதனுள் நின்ற உயிரும் கொள்ளப்பட்டது.
இதனால், திருவருட் பெறில்லாதாரது நிலைமை கூறப்பட்டது.

அருள்எங்கு மான அளவை அறியார்
அருளை நுகரமு தானதுந் தேரார்
அருள்ஐங் கருமத் ததிசூக்க முன்னார்
அருள்எங்கும் கண்ணான தார்அறி வாரே. ***#1769***

திருவருளின் பெருவியாபகம், அஃது அதனைப் பெற்றார்க்குப் பேரின்பம் விளைத்தல், காரணக் கடவுளது தொழில்கள் எல்லாவற்றிற்கும் அதுவே முதலாதல், அனைத்தையும் அது முற்றுற அறிதல் ஆகியவற்றை எல்லாம் அதனைப் பெற்றோர் அறிதலன்றிப் பெறாதார் சிறிதும் அறியமாட்டார்.

விளக்கவுரை

'பெற்றார், பெறாதார்' என்பன ஆற்றலால் கொள்ளக் கிடந்தின.
'இவ்வுண்மையை யாமும் இப்பொழுதுதான் அறிந்தோம்' என்பது குறிப்பு. 'நுகர' என்பதன் இறுதி அகரம் தொகுத்தலாயிற்று.
அமுதானத்திற்கு, 'அஃது' என்னும் எழுவாய் வருவிக்க. அடிநிலையை, 'அதிசூக்கம்' என்றார்.
இதனால், திருருட் பேற்றின் பின் அதனது இயல்பு விளங்குமாறெல்லாம் கூறப்பட்டன.

அறிவில் அணுக அறிவது நல்கிப்
பொறிவழி ஆசை புகுத்திப் புணர்ந்திட்***(டு)***
அறிவது வாக்கி அடியருள் நல்கும்
செறிவோடு நின்றார் சிவமாயி னாரே. ***#1770***

உயிர் அறிவுடையதாயினும் அவ்வறிவு ஆணவத்தால் தடுக்கப்பட்டமையின் அத்தடையை நீக்கி அஃது அறிவை அடையும்படி தொடுத்துப் பின்பு அவ்வறிவு பொறிகளின் வழிச் சென்று புலன்களை விரும்பிப் பாச அறிவாகும்படி செய்து, அவ்விடத்து அவ்வறிவு தான் விரும்பும் புலன்களை நுகர்தற்கு உடனாய் நின்று, பின்பு பாச அறிவாய் நின்ற அதனைப் பதியறிவாகச் செய்து, அவ்வாற்றால் பதிநிலையை எய்திய அடியார் குழாத்துள் இருக்க அருளுவதாகிய திருவருளை எய்தி அதுவே பற்றாக நின்றவரே சிவமாம் தன்மைப் பெருவாழ்வை எய்தினார்.

விளக்கவுரை

'பிறரெல்லாம் யாதும் இல்லா ஏழையராய் அலமரு கின்றார்' என்றபடி. 'திருவருளே கேவல நிலையிற் கிடந்த ஆன் மாக் களைச் சகல நிலையிற் கொணர்ந்து, பின்பு சுத்த நிலையில் சேர்ப்பது' என அதனது உதவியை வகுத்தருளிச் செய்துமுகந்தான் அதனை உணரும் உணர்விலார் பயன் பெறாராதலை வலியுறுத்தியவாறு.

'அறிவில் அறிவு நணுக நல்கி' என்க. இரண்டிடத்திலும், 'அறிவது' என்னும் அது, பகுதிப் பொருள் விகுதி. செறிவு - எப்பொருளிலும் நிறைதல். அஃது ஆகுபெயராய் அதனையுடைய திருவருளைக் குறித்தது.

அருளின் பிறந்திட்*(டு)* அருளின் வளர்ந்திட்*(டு)*
அருளின் அழிந்*(து)*இளைப் பாறி மறைந்திட்*(டு)*
அருளான அவ்வந்தத்*(து)* ஆரமு தூட்டி
அருளால் என்நந்தி அகம்புகுந் தானே**.**

அருளால் அமுதப் பெருங்கடல் ஆட்டி
அருளால் அடிபுனைந் தார்வமும் தந்திட்
டருளான ஆனந்தத் தாரமு தூட்டி
அருளால்என் நந்தி அகம்புகுந் தானே *#1771*

யான் எம்பெருமானது திருவருளாற்றான் பிறந்தேன்; வளர்ந்தேன்; இறந்தேன். உலகம் ஒடுங்கிக் கிடந்த பொழுது யான் ஓய்வாக இருந்தேன்; மீட்டும் உலகம் தோன்றிய பொழுதும் பிறந்து வாழவே விரும்பினேன். இவ்வாறு முடிவின்றிச் சுழன்று வந்த யான் அவனது அருளே வடிவாகி நின்ற அந்த இறுதிக்காலத்தில் அப்பெருமான் எனக்கு எல்லையில் இன்பத்தை வழங்கி என் உள்ளத்தில் நீங்காது நின்றான் எல்லாம் அவனது அருளாலேதான் நிகழ்ந்தன.

விளக்கவுரை

'எல்லா உயிர்கட்கும் இவ்வாறுதான்; ஆயினும் அவ்வுயிர்கள் இவற்றை 'என்னைப்போல முடிவில்தான் உணரும்' என்பது கருத்து. 'அருள்' என யாண்டும் பொதுப்படவே ஓதினா ராயினும், 'முதற்றொட்டு' 'மறைந்திட்டு' என்பது காறும் கூறிய அருள் திருகுநிலை அருள் எனவும், 'ஏனைய நேர்நிலை அருள் அறக் கருணை. முன்னது 'திரோதான சத்தி' எனப்பட, பின்னதே 'அருட் சத்தி' எனப்படும். 'அருளின்' என்பதைப் பிறவற்றிற்கும் கூட்டுக.

'அருளான ஆனந்தத்து' என்பது பாடம் அன்று.

இதன் பின்னர்ப் பதிப்புக்களில் காணப்படும். 'அருளால் அமுதப் பெருங்கடல் ஆட்டி' என்னும் பாடல் இடைச்செருகல்.

பாசத்தில் இட்ட(து) அருள் அந்தப் பாசத்தில்
நேசத்தை விட்ட(து) அருள் அந்த நேசத்தின்
கூசற்ற முத்தி அருள் அந்தக் கூட்டத்தின்
நேசத்துத் தோன்றா நிலைஅரு ளாமே. *#1772*

என்னை எனது இயற்கைப் பாசம் தனது சத்தி கெடுதற்பொருட்டுச் செயற்கைப் பாகத்தில் இட்டுத் துன்புறுத்தியதும் திருவருளே (இது திரோதனகரியாய் நின்ற நிலை) இயற்பாசம் சத்தி கெட்ட பின்னர் யான் அச்செயற் கைப்பாசங்களையே மேலும், மேலும் விரும்பிய விருப்பத்தை விடச்செய்ததும் திருவருளே. பாசத் தொடர்பினால் மெய்ப்பொருளை அணுகக் கூசிய கூச்சம் நீங்கி அம் மெய்ப்பொருளை அடைந்து, அதனானே துன்பக் கடலினின்றும் கரை யேற்றுவித்ததும் திருவருளே, துன்பக் கடலினின்றும் கரையேறிய பொழுது விளைந்த எல்லையில்லாத இன்பத்தில் அவ்வின்பம் ஒன்றுமே தோன்றத்தான் தோன்றாது மறைந்ததும் திருவருளே.

விளக்கவுரை

'அதற்கு யான் செய்யும் கைம்மாறு யாதுளது' என்பது குறிப்பெச்சம். அதனைப் புலப்படுத்தற்கே மேற்போந்தவற்றை மீள அனுவதித்தார். வருவித்துரைத்தன இசையெச்சங்கள். 'விடுவித்தது' என்பதில் விவ்விகுதி தொகுத்தலாயிற்று. கூச, முதனிலைத் தொழிற் பெயர். 'முத்தி' என்பதன்பின், 'கூட்டுவித்தது' என்பது சொல் லெச்சமாய் எஞ்சிநின்றது. நேசம் - அன்பு. அன்பினால் விளை வதாகிய இன்பத்தை 'அன்பு' என உபசரித்துக் கூறினார். 'நேசத்துக் கண்' என ஏழாவது விரிக்க. இன்பத்திற் சேர்த்தது அருளேயாயினும் அது புலப்படினும் அனுபவம் நிகழாமைபற்றி அது தோன்றாது மறைந்து நின்றது என்க. அருள்நிலை துரியமேயாக, ஆனந்த நிலை துரியாதீதம் ஆதல் அறிக.
இதனால், திருவருள் பெற்றார் அத்திருவருளின் நன்றியை உணருமாறு கூறப்பட்டது.

பிறவா நெறிதந்த பேரரு ளாளன்
மறவா அருள்தந்த மாதவன் நந்தி
அறவாழி யந்தணன் ஆதி பராபரன்
உறவாகி வந்தென் உளம்புகுந் தானே. *#1773*

சிவபெருமான் எனக்கு இனிப் பிறவா நெறியை அளித்த பெருங்கருணையை உடையவன். அதன்பின்னும் தன்னை யான் மறவாதிருக்கும்படியும் அருள்புரிந்தான். தவக்கோலத்தைப் பூண்டவன். அறக்கடலாய் அழகிய தட்பத்தையும் உடையவன். தனக்கொரு முதல் இன்றித்தானே எல்லாவற்றிற்கும் முதலானவன். எல்லாவற்றிற்கும் மேலொடு கீழாய் விரிந்தவன் *l* அத்தகையோன் தானே எனது

உள்ளத்தைத் தகவு செய்து அதனுட் புகுந்தான்.

விளக்கவுரை

'எனவே, இப்பயனை விரும்புவோர் யாவரும் அவனையே உணர்தல் வேண்டும்' என்பது குறிப்பு. 'நந்தி', என்பதை முதலிற் கூட்டியுரைக்க. மறந்தவழிக் கன்மமும், மாயையும் அற்றம் பார்த்து வந்து அடுத்தல் மறவாதவாறு அருள் செய்வானாயினான்.

'மாதவன்' என்பதற்கு, 'மங்கை பங்காளன்' என்று உரைத்தலும் ஆம் 'பெண்ணாகிய பெருமான்'3 என்று அருளிச் செய்தது காண்க. 'இஃது அவன் பேரருளாளன் ஆதலைக் குறிக்கும் குறிப்பு' என்பது கருத்து.

'இறைவனாவான் அறவாழி அந்தணன்' 8 என்னும் மறை மொழிக்கு இலக்கியமாய் உள்ளவன் என்பதுணர்த்தற்கு அம் மொழியைக் கொண்டு கூறினார். இதன் பொருள் விளக்கம் இதன் உரையிற் காண்க.

பரன் - மேலே உள்ளவன்; அபரன் - கீழே உள்ளவன்.

இதனால், 'திருவருள்' எனப்படுவது சிவனது அருளே என்பது தெரித்துணர்த்தப்பட்டது. பிறரது அருளைத் திருவருளாக மயஹ்கி எய்த்திடாமை இதனது பயன் என்க.

அகம்புகுந் தான்அடி யேற்கரு ளாலே
அகம்புகுந் தும்தெரி யான்அரு ளில்லோர்க்(கு)
அகம்புகுந் தானந்த மாக்கிச் சிவமாய்
அகம்புகுந் தால்நந்தி ஆனந்தி யாமே. #1774

சிவன் உயிர்களது அறிவினுள்ளே அருளை நிறைவித்து, அதனால் இன்பத்தைப் பெருக்கி விளக்கமுற்று நின்றால் இன்பப் பொருளாய் அனுபவப்படுவான். அதனால் அடியேனுக்கு அவன் அங்ஙனம் அருளை வழங்கினமையால் கருவிகளின் வழியாக அன்றி, நேரே தலைப்பட்டுணரும் பொருளாயினான். ஆகவே, அருள் வழங்கப் பெறாதாரது அறிவினுள்ளும் இருப்பினும் அவர்கட்கு அவன் அங்ஙனம் உணரும் பொருளாதல் இல்லை.

விளக்கவுரை

'அருளில்லார்க்குத் தெரியான்' என்றமையால், 'அருள் பெற்ற எனக்குத் தெரிந்தான்' என்பது பெறப்பட்டது. அதனால் முதற்கண் 'புகுந்தான்' என்றதற்கு, 'புகுந்து தெரிந்தான்' என்பது பொருளாயிற்று.

'நந்தி அகம்புகுந்து ஆனந்தமாக்கிச் சிவமாய் அகம்புகுந்தால் ஆனந்தியாம்; அதனால் அடியேற்கு அருளால் அகம்புகுந்து அருளில்லோர்க்கு அகம்புகுந்தும் தெரியான்' எனக் கொண்டு கூட்டி யுரைக்க.

'சிவம்' என்பதற்குப் பல பொருள் உண்டு, இங்கு அது 'தூய தன்மை'

என்னும் பொருட்டாய், 'மறையாது விளங்கி நிற்பது' எனப் பொருள் தந்தது. எல்லா உயிர்களிலும் சிவன் கலந்திருப்பினும் உலகரது அறிவில் அவரவர் துணியும் பொருளாயும், சரியை முதலிய மூன்றில் நின்றார்க்கு உருவம், அருவுருவம், அருவம் என்னும் திரு மேனியனாயும், ஞானத்தில் கேள்வி முதலிய மூன்றில் நின்றார்க்கு ஆசிரியர் அறிவுறுத்த சொற்பொருள் அளவாயும் விளங்கி, நிட்டையில் நின்றார்க்கே தான் உண்மையாய் விளங்குவன். உண்மையாய் விளங்கும்பொழுதே இன்பமாய் விளைவான். அதனையே, 'நந்தி, அகம் புகுந்து ஆனந்தம் ஆக்கிச் சிவமாய் அகம் புந்தால் ஆனந்தியாம்' என்றார். ஆகவே முன்னர் அகம்புகுதல் தொடக்கமும், பின்னர் அகம் புகுதல் முடிவும் ஆயின. புகுதல் புது வதன்றாயினும் விளங்குதல் புதிதாதல் பற்றி. 'புகுந்து' எனவும், 'புகுந்தால்' எனவும் கூறினார், ஆனந்தி - இன்ப வடிவினன். 'முன்னை நிலை பெத்தம்' எனவும் 'பின்னை நிலை முத்தி' எனவும் உணர்க.

இதனால், திருவருட் பேற்றின் முடிநிலை இயல்பு விளக்கப் பட்டது.

ஆயும் அறிவோ டறியாத மாமாயை
ஆய கரணம் அடைக்கும்ஐம் பூதங்கள்
ஆய பலஇந் திரிய மவற்றுடன்
ஆய அனைத்துமாம் அவ்வரும் செய்கையே. *#1775*

'பெத்த நிலையில் உள்ள உயிர்களிடத்தும் திரு வருள் உளதாயினும் அது நேர்நிலை யன்று' என மேற்கூறிய இயை பானே, அஃது அத்திருகல் நிலையில் நின்று செய்வனவற்றை இங்கு நின்றும் விரிக்கின்றார்.

மாயா காரியங்களைக் கருவியாகக் கொண்டு ஆராய்ந்து அறிந்து வரும் அறிவும், அக்கருவிகளும், அக்கருவிகளின் வழிப் புலன்களை ஆன்ம அறிவை அடையச் செய்கின்ற ஐந்து பூதங்களும் அப்புலன்களை நேராகவும், பிறவற்றின் வழியாகவும் கவர்கின்ற புற, அகப் பொறிகளும் ஆகிய அனைத்தும் திருவருளின் செயலால் ஆவனவேயாம்.

விளக்கவுரை

'ஆயும் அறிவு' என்றே ஓதினாராயினும் 'அறிவு ஆராயும் ஆராய்ச்சியும்' என்பதே கருத்து. 'கருவிகள் தலைக்கூடிய வழியும் திருவருள் இன்றி ஆன்ம அறிவு தனித்து நின்று ஒன்றையும் அறியமாட்டாது' என்பதனைச் சிவஞானபோத ஐந்தாம் சூத்திரத்தால் அறிக. 'கருவிகள் சடம்' என்றற்கு அதனை அவற்றது முதல்மேல் வைத்து 'அறியாத மாமாயை' என்றார். இதனுள் 'மா' என்னும் அடை பிறிதின் இயைபு நீங்காது பொதுவில் இயைபின்மை மாத்திரை நீக்கி, மாயையின் வியாபகத்தை உணர்த்தி நின்றது. ஞானேந்திரிய விடயங்கள் பூதங்களின் குணமும்,

கன்மேந்திரிய விடயங்கள் அவற்றின் செயலும் ஆதல் பற்றி 'அடைக்குகம் ஐம்பூதங்கள்' என்றும் கூறினார். 'அனைத்தும் அவ்வருட் செய்கையே ஆம்' என மாற்றியுரைக்க. அவ்வருள் - மேற்கூறிய திருவருள்.

இதனால், திருவருள் திரோதனகரியாய் நின்றே அனைத்துலகையும் ஆக்கும் முறைமை கூறப்பட்டது.

அருளே சகலமும் ஆய பௌதிகம்
அருளே சராசரம் ஆய மலமே
இருளே வெளியே எனும்எங்கும் ஈசன்
அருளே சகளத்தன் அன்றிஇன் றாமே. ***#1776***

ஆன்மாக்கள் சகல நிலையை எய்துதற்குக் காரண மான பூதகாரியமாகிய சடப்பொருள்களும், சரமும் அசரமுமாய் உள்ள உயிர் வகைகளும் ஆகிய எல்லாம் திருவருளாலே ஆவனதாம். சிவனும் உயிர்களின் பொருட்டுத் திருமேனி கொள்ளுங்கால் திருவருளால் தான் அவற்றை உடையவன் ஆவான். இன்னும் அவன் ஆன்மாக்களுக்கு மயக்க உணர்வை உண்டாக்குதலும், பின்பு அதனை நீக்கி மெய்யுணர்வைத் தருதலும் திருவருளாலேதான். ஆகவே, திருவருள் இல்லையேல் ஒன்றும் இல்லையாம்.

விளக்கவுரை

'அங்ஙனம் ஆனபொழுது சிவனை வழிபட்டுப் பயன் பெறுதல் என்பது திருவருள் இன்றி எங்ஙனம் இயலும்' என்பது குறிப்பெச்சம்.

இக்குறிப்புப் பொருளை உணர்த்துதற் பொருட்டே இம்மந்திரத்திற் போந்த அனைத்தையும் அனுவதித்துக் கூறினார்.

இருள் - அஞ்ஞானம்; அதன் காரணம் மலம். வெளி - ஒளி; மெய்ஞ் ஞானம். 'ஈசன், எங்கும் மலமே, இருளே, வெளியே எனும்' என மாற்றி, 'சகளத்தன்' என்பதன் பின்னர்க் கூட்டியுரைக்க. இத் தொடரில் உள்ள ஏகாரங்கள் எண்ணிடைச் சொல். எனும் - என நிற்கும். சகளம் - உருவத்திருமேனி. 'இன்று' என்னும் பயனிலைக்கு 'ஒன்றும்' என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க.

முதல் அடியிலும், 'பவுதிகமாய சகலமும் அருளே' என மாற்றிக்கொள்க. சகலத்திற்குக் காரணமாவனவற்றை, 'சகலம்' என்றார். சகல நிலையில் வலுப்பெற்று நிற்பன பூதகாரியங்களே யாதலின் அவற்றையே சிறந்தெடுத்துக் கூறினார். 'சகளத்தன்' என்றது அந்நிலைமையை. நிட்களம், நிட்கள சகளம் ஆகியவையும் இங்கும் பொதுப்பட, 'சகளம்' எனப்பட்டன.

இதனால் திருவருள் இன்றி ஒன்றும் இயலாமை வலியுறுத்தப்பட்டது,

சிவமொடு சத்தி திகழ்நாதம் விந்து

தவமான ஐம்முகன் ஈசன் அரனும்
பவமுறு மாலும் பதுமத்தோன் ஈறா
நவமசை யாகி நடிப்பவன் தானே. *#1777*
சிவம் முதலாக உள்ள நவந்தரு பேதங்களாய் நிற்கும் சிவன் அங்ஙனம் நிற்றலும் திருவருளாலேதான்.

விளக்கவுரை

நவந்தரு பேதங்களாவன இவை என்பது மேல் 'சிவலிங்கம்' என்னும் அதிகாரத்தில் கூறப்பட்டது. அவ்விடத்தில் சிவலிங்கம் அனைத்துத் திருமேனிகளாயும் நிற்றலை விளக்குதற்கும், இங்குத் திருமேனி நிலைகள் அவை என்பதை விளக்குதற்கும் இவை கூறப்பட்டன. பின்னரும் ஓரோர்காரணம் பற்றி இவற்றை எடுத்துக் கூறுவார். இவை 'சொரூபமன்றித் தடத்தமே' என்றற்கு 'நடிப்பவன்' என்றார். சிவஞான சித்தியிலும் இவ்வாறே கூறப்படுதல் காண்க.
இதனால், சிவன் அருளாற் கொள்ளும் திருமேனிகளின் வகைகள் கூறப்பட்டன.

அருட்கண் ணிலாதார்க்*(கு)* அரும்பொருள் தோன்றா
அருட்கண் உளோர்க்கெதிர் தோன்றும் அரனே
இருட்கண்ணி னோர்க்கிங் கிரவியும் தோன்றா
தெருட்கண்ணி னோர்க்கெங்கும் சீரொளி யாமே. *#1778*
திருவருளாகிய கண் வாய்க்கப்பெறாதார்க்கு சிவமாகிய நுண்பொருளின் இருப்புத் தோன்றாது. உலகமாகிய பருப் பொருள்களின் விசித்திரங்களே தோன்றும். திருவருளாகிய கண் வாய்க்கப் பெற்றோர்க்கு, சிவனது இருப்பு மட்டுமன்றி அவனேயும் புலப்பட்டுத் தோன்றுவான். இவை எவைபோலும் எனின், ஒளி யில்லாத கண்ணை உடையவர்க்குப் பகலவனது ஒளிதானும் தோன்றாது இருள் மட்டுமே தோன்றுதலும், ஒளியுடைய கண் ணுடையார்க்கு அவனது ஒளிப்பரப்பேயன்றி அவனேயும் தோன்றுதல் போல்வனவாம்.

விளக்கவுரை

இஃது எடுத்துக்காட்டுவமை. 'இருப்புத் தானும் அறிய வாராது' என்றற்கு, 'அரும் பொருள்' என்றார். சிவனது இருப்பும், இரவியினது ஒளியும் அவை பற்றி நிற்கும் பொருள்களின் பன்மை பற்றிப் பன்மையாக ஓதப்பட்டன. அதனானே எண்பொருள், இருள் இவை மட்டுமே தோன்றுதல் பெறப்பட்டது. இருட்கண் - இருளை மட்டுமே உணரும் கண். 'இரவியும்' என்னும் உம்மை இழிவு சிறப் பாகலின், 'இரவி' என்றது ஆகுபெயராய் அதன் ஒளியைக் குறித்தது. தெருள் - ஒளி. எங்கும் உள்ள ஒளி முழுதும் தோன்றுதலால் அதனானே அவ்வொளிக்கு

முதலாகிய இரவியும் தோன்றுதல் பெறப்பட்டது.
இதனால், அருளில்லார்க்கு சிவம் தோன்றாது உலகமே தோன்றுதல் உவமையில் வைத்து விளக்கப்பட்டது.

தானே படைத்திடும் தானே அளித்திடும்
தானே துடைத்திடும் தானே மறைந்திடும்
தானே இவைசெய்து தான்முத்தி தந்திடும்
தானே வியாபித் தலைவனு மாமே. ***#1779***

சிவபெருமானே எங்கணும் வியாபகனாய், ஐந் தொழிலையும் செய்யும் முதல்வனாயினும் அவன் அவன் அத்தன்மையனாய் நிற்றற்குக் காரணமாயிருப்பது அருளாயும், எல்லையின்றி விரிவதாயும், அனைத்தும் வல்லதாயும் அவனிடத்து உள்ள ஆற்றலேயாம்.

விளக்கவுரை

இங்கு, 'தான்' எனப் பன்முறையானும் கூறியது இங்கு அதிகாரப்பட்டுள்ள அருளையேயாம். வியாபித்தலைவன் - வியாபி யாய தலைவன். படைத்தல் முதல் வியாபித்தல், தலைவனாதல் ஈறாக உள்ள அவை அனைத்திற்கும் ஏதுவாய் நிற்பதனை அவையாகவே உபசரித்துக் கூறினார். இதுவும் சொற்பொருட் பின் வருநிலையணி.
இதனால் 'திருவருளாவது' இங்குக் கூறிய அனைத்துத் தன்மைகளையும் உடைய சத்தியே, என்பது கூறப்பட்டது. 'அருள் உண்டாம் ஈசற்கு; அது சத்தி; அன்றே' என்பது சிவஞான போதமும்,* 'அருளது சத்தியாகும் அரன்றனக்கு' என்பது சிவஞான சித்தியும் சூ. *5. 9.* ஆகும்.

தலையான நான்கும் தனதரு வாகும்
அலையா அருவுரு வாகும் சதாசிவம்
நிலையான கீழ்நான்கும் நீடுரு வாகும்
தொலையா இவைமுற்று மாய்அல்ல தொன்றே. ***#1780***

(மேல், 'ஞான லிங்க' அதிகாரத்தில் 'நாலன கீழ' என்னும் மந்திரத்தில் சிவன்மேல் வைத்துக் கூறிய மூவகைத் தடத்தத் திருமேனிகளையும், அவற்றைக் கடந்த சொரூப நிலையையும் இம்மந்திரத்தில் திருவருளாகிய சத்திமேல் வைத்துக் கூறினார் என்க.)

விளக்கவுரை

'திருவருளாகிய சத்திதானே சிவன்' என்பதை உணர்த்துதல் இதற்குப் பயன் என்க. அங்கு, 'பரசிவன்' என உயர்திணை வாய்பாட்டானும், இங்கு, 'அல்லது ஒன்றே' என அஃறிணை வாய்பாட்டானும் வாய்பாடு வேறு படுத்து ஓதிய நுட்பம் ஓர்ந்துணரற்பாற்று.

ஒன்றது பாலே உலப்பிலி தான்ஆகி
நின்றது தன்போல் உயிர்க்குயி ராய்நிலை

துன்றி அவைஅல்ல தாகும் துணையென்ன
நின்றது தான்விளையாட்(டு) என்னுள் நேயமே. *#1781*
எனது உள்ளத்தில் என் அன்பேயாய் நிற்கின்ற சிவம் தன்போல்வது பிறிதுபொருள் இல்லாது தனி ஓர் அறிவுப் பொருளாய் இருத்தலால் அழிவற்று, என்றும் உள்ளதாகின்றது. அஃது அங்ஙனம் ஒன்றேயாயினும் தன்னைப்போல் அறிவுடையனவாயும், அழிவில்லன வாயும் உள்ள எண்ணற்ற உயிர்க்கும் உள்ளுயிராய் நிற்றலால் பலவாகவும் ஆகின்றது, அங்ஙனம் ஆயினும் அவ்வுயிரின் தன்மயைத் தான் அடையாமல் தான் வேறு பொருளாகவே உள்ளது. இனி, 'அதன் விளையாட்டு' எனப்படுவது, அஃது உயிர்களோடு பெத்தம், முத்தி இருநிலையிலும் உடனாய் நின்று, எஞ்ஞான்றும் அவற்றிற்கு அவ்வப்பொழுது ஆவனவற்றைச் செய்து உதுவுவதே யாகும்.

விளக்கவுரை

'தானே படைத்திடும்' என மேல் வந்த மந்திரத்தில் 'வியாபி' என்ற நிலையில் சுத்தி, 'சத்தி' என்றே பொதுவாகச் சொல்லப் படும் அது படைத்தல் முதலிய தொழில்களைச் செய்யும் பொழுது ஆரணி, செனனி, இரோதயத்திரி - முதலியனவாகச் சொல்லப்படும். அவற்றுள் 'உயிர்க்குயிராய் நிலைதுன்றி' என்றதனால், 'சத்தி' என்னும் பொதுநிலையையும் 'துணை என்ன நின்றது' என்றதனால் ஆரணி முதலாக நிற்கும், சிறப்பு நிலையையும் கூறினார். முதல்வன் செய்யும் தொழில்களை 'விளையாட்டு' எனக் கூறுதற்குப் பொருள் 'ஐங்கலப் பாரம் சுமத்தல் சாத்தனுக்கு விளை யாட்டு' என்பது போல, 'வருத்த மின்றி எளிதில் செய்தல்' என்பதே யன்றி, 'சிறியார் விளையாடும் விளையாட்டுப் போலக் குறிக்கோள் யாதும் இல்லது' என்பதன்று. 'முதற்பொருள், முதலில் ஒன்றாய் இருந்தது; பின்பு அஃது யான் பலவாக ஆவேனாக எனக் கருதியது' எனவரும் உபநிடதப் பொருளும் திருவருளைப் பற்றியதேயாதலை இங்கு இவற்றால் உணர்த்தியவாறு. இனி முதல்வன் செயலை 'விளையாட்டு' எனச் சில இடங்களில் கூறப்படுதலையும் இங்குக் குறித்தார் என்க.
அன்பே சிவமாதல் பற்றி அதனை, 'என்னுள் நேயம்' என்றார். 'என்னுள் நேயம்தான் உலப்பிலியாகி நின்றது; உயிர்க் குயிராய் நிலைதுன்றி, அவை யல்லதாகும்' எனவும், 'விளையாட்டுத் துணை என்ன நின்றதுதான்' எனவும் இருதொடராக இயைத்து முடிக்க. சடமாயும், பலவாயும் உள்ள பொருள்கள் யாவும் அழிவன ஆதலின் அத்தன்மைக்கு முழுதும் வேறுபட்டதென்றற்கு, 'ஒன்று அதுவாலே' என்றார் ஆகலின், அஃது அறிவாய் நிற்றலும், உடன் கொள்ளப் பட்டது. 'அதனாலே' என ஓதற்பாலதனை, 'அதுவாலே' என ஓதினார்; 'ஒன்றாய் நிற்கும்

அத்தன்மையினாலே' என்க.
'முதற்பொருள் இவ்வாறெல்லாம் சிறந்து நிற்றற்குக் காரணம் திருவருளாகிய அத்தன்மையினாலே' என்பது உணர்த்தியவாறு.

நேயத்தே நின்றிடும் நின்மலன் சத்தியோ*(டு)*
ஆய்அக் குடிலையுள் நாதம் அடைந்திட்டுப்
போய்அக் கலைபல வாகப் புணர்ந்திட்டு
வீயத் தகாவிந்து வாக விளையுமே. *#1782*

முழுதும் திருவருளிலே பொருந்தி நிற்கின்ற சுத்த சிவன் அந்தத் திருவருள் காரணமாகச் சத்தியோடு கூடிச் சத்தனாய் நின்று, பின்பு சுத்தமாயையுள் பொருந்தி முதற்கண் நாத தத்துவத்தைத் தோற்றுவித்து, அத்தத்துவம் பற்றுக்கோடாக சூக்குமை முதலிய நால்வகை வாக்குக்களையும், அந்த வாக்கு முதலிய அனைத்தையும் தம்முள் அடக்கி நிற்கும் சாந்தியதீதை முதலிய ஐந்து கலைகளையும் தோற்றுவித்துப் பின்பு விந்து தத்துவத்தைத் தோற்றுவித்த பின்னரே உலகம் முழுதும் முறைப்படி தோன்றும்.

விளக்கவுரை

'இங்ஙனமான அனைத்திற்கும் திருவருளே காரணம்' என்பது குறிப்பெச்சம். 'நேயம்' என்றது திருவருளை. 'சுத்த சிவன்' என்பார் 'நின்மலன்' என்றார். அவன் சொரூப சிவன். அவனே உலகத்தை நோக்க விரும்பும்பொழுது சத்தியாலே நோக்குவன் ஆதலின், 'சத்தியோடு ஆய்' என்றார். 'அடைந்திட்டு' எனவும் 'புணர்ந்திட்டு' எனவும் கூறினார். 'விந்து தத்துவம் காரியமே யாயினும் பிற எல்லாவற்றிற்கும் அது காரணம்' என்பார். 'வீயத்தகா விந்து' என்றார். வீதல் - அழிதல். விளைதலுக்கு 'உலகம்' என்னும் வினைமுதல் வருவித்துக்கொள்க. 'பல்வேறு வகைப்பட்ட உலகங் களின் பல்வேறு வகையான தோற்றமும், ஒடுக்கமும் திருவருள் காரணமாகவே நிகழும். என்றற்கு, உலகத் தோற்ற முறையைச் சிறிது வகுத்துக் கூறினார்.
இதனால், திருவருளின் பெருமை கூறப்பட்டது.

விளையும் பரவிந்து தானே வியாபி
விளையும் தனிமாயை மிக்கமா மாயை
கிளையொன்று தேவர் கிளர்மனு வேதம்
அளவொன் றிலாஅண்ட கோடிக ளாமே. *#1783*

எல்லாக் காரியங்களின் தோற்றத்திற்கும் முதலாய் நிற்கின்ற பரவிந்துவே, பிற எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கி வியாபகமாய் நிற்கும். அது மல கன்மங்களோடு விரவுதல் இன்றித் தூயதாயும் உள்ளது. அதனால் அது 'மகாமாயை' எனவும் படுகின்றது. அஃது அபர முத்தர்களாகிய மந்திர மகேசுரர், அணுசதா சிவர்

முதலியோருடைய தனு கரணங்களாகவும், சத்த கோடி மகா மந்திரங்களாகவும், வேத சிவாகமங்களாகவும் மேற்கூறியோருடன் மற்றும் விஞ்ஞான கலர்களும் வாழும் அளவற்ற அண்டங்களாயும் விளைந்து பயன்படும்.

விளக்கவுரை

'பரவிந்து என்பது, 'காரிய விந்துக்களுக்கு மேலாய் நிற்கும் விந்து' எனப் பொருள் தந்து காரணப் பெயராய்ச் சுத்த மாயையைக் குறித்தது. அதனையே சிவன் தான் நேரே தொழிற் படுத்துதலின் அதன் இயல்பை விரித்தார். 'அதனால் சத்தியது பெருமை விளங்கும்' என்பது பற்றி, சுத்த மாயைக்குக் கீழ் உள்ள அசுத்த மாயையைச் சிவன் தனது ஏவல் வழி நிற்கும் அனந்தேசுரரைக் கொண்டும், பிரகிருதி மாயையை அவரது ஏவல்வழிச் சீகண்ட ருத்திரரைக் கொண்டும் செயர்படுத்துவன்.
'தேவர்' என்றது ஏற்புழிக் கோடலால் மேற்கூயோரைக் குறித்து, ஆகுபெயராய் அவரது தனு கரணங்களை உணர்த்திற்று. சிவாகமமும் வேதம் எனப்படும்.
இதனால் சுத்த மாயையினது சிறப்புக் கூறும் முகத்தால் திருவருளது ஆற்றற் பெருமை கூறப்பட்டது.
முன் அதிகாரத்தில் திருவருளின் இயல்பினை அதனைப் பெற்றார் உணருமாறெல்லாம் கூறிய நாயனார், அதனுள் திருவருள் மறைத்தலைச் செய்து இருளாயும் நிற்றல் கூறப்பட்டமையால் அஃது அதற்குச் செயற்கையேயாக, அதன் இயல்பு ஒளியேயாதலை அச்சிறப்புப் பற்றி இவ்வதிகாரத்தில் வேறெடுத்து ஒன்பது மந்திரங்களால் உணர்த்துகின்றார்.

*9.10.10.*அருளொளி

அருளில் தலைநின் றறிந்தழுந் தாதார்
அருளில் தலைநில்லார் ஐம்பாசம் நீங்கார்
அருளின் பெருமை அறியார் செறியார்
அருளின் பிறந்திட்*(டு)* அறிந்தறி வாரே. *#1784*

திருவருளைப் பெற்று அதனானே அதன் இயல்பை உணர்ந்து அதிலே அழுந்தாதவர்கள் அத்திரு வருளோடு இயைந்து ஒழுகும் ஒழுக்கத்தில் நில்லார், அங்ஙனம் நில்லாமையால் அவர் ஐம் பாசங்களினின்றும் நீங்கதலும் இல்லை. பாசங்களின் நீங்காமையால் அவர் திருவருளின் பெருமையை அறிந்து அதனை அடைய முயல மாட்டார். திருவருளைப் பெற்றோர் தமது வினைப்பிறப்பே அருட் பிறப்பாகப் பெற்று, திருவருளின் பெருமை அறிந்து அதில் அழுந்துதலும் செய்வர்.

விளக்கவுரை

எனவே, திருவருள் ஒளியேயாதல் உடன்பாட்டு முகத்தாலும், எதிர்மறை முகத்தாலும் விளங்கும் என்பதாம்.
'அருளின் வேறு பிறப்பாகப் பிறந்திட்டு' என்க. இறைவன் குருவாய் நின்று திருவருளை வழங்கப் பெற்றோர் முன்னைப் பிறப்பை மாற்றி வேறு பிறப்பாய்ப் பிறந்தவர் எனச் சொல்லப் படுதல் பலரும் அறிந்தது. முன்னர் 'அறிந்து, என்றமையால் பின்னர் 'அறிவார்' என்றது அழுந்தியறிதலைக் குறித்தது.
இதனால், திருவருள் ஒளியேயாதல் எதிர்மறை முகத்தால் வலியுறுத்தப்பட்டது.

வாரா வழிதந்த மாநந்தி பேர்நந்தி
ஆரா அமுதளித் தானந்த பேர்நந்தி
பேரா யிரம்உடைப் பெம்மான்பேர் ஒன்றினில்
ஆரா அருட்கடல் ஆடுகென் றானே. ***#1785***

'நந்தி' என்னும் பெயரை உடைய சிவன், இனிப் பிறந்து உலகின்கண் வாராது என்றும் ஒருபடித்தாய் இருத்தற்குரிய வழியை எனக்குத் தந்தமையால் பெரியரிற் பெரியன் ஆகின்றான்; அந்நிலையில் அதுவெறும் வறுநிலையாய் இல்லாது உண்ண உண்ணத் தெவிட்டாத இனிக்கின்ற இன்பத்தை வழங்கினமையால் அவன் ஆனந்தமயன் ஆகின்றன். அவன் தனது அளவில்லாத பெருமை காரணமாக அளவற்ற பெயர்களை உடையன். அவற்றுள் எந்தப் பெயரையேனும் சொல்லி அதன் பொருளை உணரும் முகத்தால் அவனது திருவருளால் விளைகின் மேற்கூறிய இன்பக்கடலில் எஞ்ஞான்றும் மூழ்கியிருக்குமாறு எனக்கு அருள்செய்தான்.

விளக்கவுரை

'நந்தி' என்னும் பெயரை உடையவனை 'நந்தி' என்னும் பெயராகக் கூறியது ஆகுபெயர். அதனைப் பின்னும் கூறியது சொற் பொருட் பின்வருநிலை. 'தந்தான்; அதனால் மாநந்தி' எனக் கூறற்பால வற்றை இவ்வாறு கூறியது உடம்பொடு புணர்த்தல். 'பேர் நந்தி' என்னும் எழுவாய்கட்கு, 'மாநந்தி ஆனந்தி' என்பன பயனிலையாயின.
'ஆயிரம்' என்பது அளவின்மை குறித்தது. எல்லாப் பெயரும் அவனது திருவருளின் பெருமையையே உணர்த்தலின் 'எந்தப் பெயரினாலும் அருட்கடலில் ஆடலாம்' என்றார். அப் பெயர்கள் சிவன், சங்கரன், சம்பு, மயற்கரன், மயோபு, உருத்திரன் முதலியன. அவற்றது பொருள்களை அறிந்துகொள்க. 'பேர் ஒன்று' என்பது, தலைமை பற்றி, சிவன் - என்பதையே குறித்தது எனவும் உரைப்பர்.
இதனால், 'திருவருள் இருளாய்த் துன்பத்தைத் தருவதாகாது ஒளியாய், இருளை நீக்கி எல்லையில் இன்பத்தை வழங்குவதே' என்பது

தெளிவிக்கப்பட்டது.

ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும்
தேடியும் கண்டேன் சிவன்பெருந்தன்மையைக்
கூடிய வாறே குறியாக் குறிதந்தென்
ஊடுகின் றாள்அவன் தன்அருள் உற்றே. *#1786*

திருவருளை நிரம்பப் பெறாத நிலையில் யான் அவனது உண்மை நிலையை எனக்கு இயன்றவகையில் ஆடுதல், பாடுதல் முதலியன செய்து அறிய முயன்றேன். அதன் பயனாக அவனது அருளை நிரம்பப் பெற்றமையால், அவன் என் அறிவால் நோக்காது அவன் அருளால் நோக்கும் முறையை உணர்த்தி, அவ்வாறு நோக்கிய பொழுது அவன் என்னின் வேறாகாது என்னுள்ளே விளங்கினான்.

விளக்கவுரை

எனவே, 'உயிர் இறைவனைத் தன்னின் வேறாகப் புறத்தே காண முயலும் நிலையெல்லாம் திருவருளை முற்றப் பெறாத நிலை' என்பதும், 'முற்றப் பெற்ற நிலையில் அஃது இறைவனைத் தன்னுள்ளே கண்டு களிக்கும்' என்பதும் விளக்கியவாறு. காண முயன்ற முயற்சியைக் கண்டதாகக் கூறியது, 'அம்மி துணையாக ஆற்றைக் கடந்தான் மூழ்கினான்' என்பது போலக் காரணத்தைக் காரியமாக்கிக் கூறிய, உபசார வழக்கு. முதல் தொடரில் செயப்படு பொருளும் கருவியும் பயனிலைக்குப் பின்னே நின்றன. 'கூடிய வாற்றால்' என உருபு விரிக்க. உற்று - உற்றதனால். 'தன் அருளை உற்றதனால் அவன் வந்து நின்றான்' எனக் கூட்டி முடிக்க.
இதனால், திருவருள் முதற்கண் சிற்றொளியாய்த் தோன்றிப் பின் பேரொளியைத் திகழ்தல் கூறப்பட்டது.

உற்ற பிறப்பும் உறுமல மானதும்
பற்றிய மாயா படலம் எனப்பண்ணி
'அற்றனை நீ'என் றடிவைத்தான் பேர்நந்தி
கற்றன விட்டேன் கழல்பணிந் தேனே. *#1787*

'நந்தி' என்னும் பெயரை உடையவனாகிய சிவன், யான் தொன்று தொட்டு என்னைப் பொருந்தி வந்தனு கரண புவன போகங்களும், அவற்றிற்கு நிமித்தமாய் அநாதியே என்னைப் பற்றி நின்ற ஆணவமும் என்னோடு என்றும் இயற்கையாய் நீங்காது நிற்கும் குணங்களாகாது, ஒரு காலத்தில் விட்டு நீங்கும் குற்றத் தொகுதியே ஆதலை உணரச் செய்து, 'அக்குற்றங்கள் அனைத்தினின்றும் நீங்கி இது பொழுது நீ தூயையாய் நிற்றலையும் பார்' என்று காட்டினான். அதனால் நான் மாயா காரியங்களால் பெற்ற பாச அறிவை நீக்கினேன்; அவனது அருள் வழியிலே நின்றேன்.

விளக்கவுரை

'இங்ஙனம் ஆதலின், திருவருள் இருளாய்க் குற்றங்களின் வீழ்த்துவதாவது, ஒளியாய் அவற்றினின்றும் மீட்பதே என்பது தெளிவாகின்றதன்றோ' என்பது கருத்து. 'மாயை' என்பது இங்கு, நீடு நில்லாது விரைய மறைதலைக் குறித்தது. ஒரு பொருட்கு அதனை விட்டு என்றும் நீங்காததே 'அதன் குணம்' என்றும், ஒரு காலத்தில் அதனை விட்டு நீங்குவது 'அதற்குக் குற்றம்' என்றும் சொல்லப்படும். 'என' என்பது 'என்று உணர' என்றவாறு.

'என்று அடி வைத்தான், என்பதை, 'அடி வைத்து என்றான்' எனப் பின் முன்னாக மாற்றி வைத்து உரைக்க. அடியைச் சென்னி மேல் வைத்தல் அருளை வழங்குதற்கு அடையாளம். திருவடி அருளே யாதலின், அதனைப் பணிதலாவது அதன்வழி நிற்றலேயாம்.

இதனால், திருவருள் ஒளியேயாதல் வேறோராற்றால் வலியுறுத்தப்பட்டது.

விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னை வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்காவர் தாமே. ***#1788***

பாசஞான பசுஞானங்களாய்த் திரிபு கொள்கின்ற மருளில் பொருந்திய உயிரின் உணர்வாகிய திரியில் பதிஞானமாகிய திருவருள் என்னும் சுடரைக் கொளுத்தி அஃது எரிந்து வீசுகின்ற ஒளியினால் எல்லாப் பொருட்கும் இடம் தந்து வியாபகமாய் நிற்கின்ற ஆகாயம் போன்று எல்லையற்று நிற்கும் சிவத்தைத் தரிசியுங்கள். அப்பொழுது அந்தத் திருவருளின் ஒளியில் பாசம் காரணமாக முன்பு உளவாகிய துன்பங்கள் யாவும் முழுதுமாக அற்றொழியும். இவ்வாறு பசுஞானமாகிய அறிவைப் பதிஞானமாய் விளங்கச் செய்கின்ற திருவருளாகிய விளக்கைப் பெற்றவர்களே அந்த விளக்கினுள்ளே விளங்கும் மற்றொரு விளக்காய் விளங்குவார்கள்.

விளக்கவுரை

இம்மந்திரத்தின் பொருள்,

'உடம்பெனும் மனைய கத்துள் உள்ளமே தகளி யாக மடம்படும் உணர்நெய் அட்டி உயிர்எனும் திரிம யக்கி இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில் கடம்பர் காளை தாதை கழலடி காண லாமே'

- திருமுறை - *4-75-4.*

என்னும் அப்பர் திருமொழியில் அமைந்து விளங்குதல் காண்க. இதனுள்,

"விளக்கு' என்பனவும், "வெளி' என்பதும் உருவகங்கள். விளக்கில் விளங்கும் விளக்காவது, பெருவிளக்கின் ஒளியினுள் தனது ஒளிவேறு தோன்றாது அடங்கி விளங்க இருக்கும் சிறுவிளக்கு. இதனை, 'பகலில் ஏற்றி வைக்கப்பட்ட விளக்கு' எனவும் கூறலாம். தாம், ஏ அசைகள். இதனால், 'திருவருள் ஒளியாய் நின்று பயன் தருமாறெல்லாம் உணர்ந்து அதனாற் பயன்கொள்க' என்பது விதிக்கப்பட்டது.

ஒளியும் இருளும் ஒருகாலும் தீரா
ஒளியுளோர்க் கன்றோ ஒழியா தொளியும்
ஒளியிருள் கண்டகண் போல்வே றாய்உள்
ஒளியிருள் நீங்கி உயிர்சிவம் ஆமே. ***#1789***

'ஒளி, இருள்' என்றும் இரண்டில் எதுவும் எக் காலத்திலும் அழிந்தொழிவதில்லை. (ஒளி வரும் பொழுது இருள் அடங்கியிருக்குமேயன்றி அழிந்து போவதில்லை. அஃது ஒளி நீங்கியபொழுது மீட்டும் இருள் வருதலைக் கொண்டு அறிந்துக் கொள்ளப்படும். இந்நிலையில்,) நீங்காது நிற்கும் ஒளியோடு கூடிய கண்ணிற்கே ஒருஞான்றும் இருளோடு கூடும் நிலை வாராது ஒளி யாகவே விளங்கும் நிலை உளதாகும். ஆகவே, ஒளியோடு கூடும் பொழுது ஒளியாயும், இருளோடு கூடும்பொழுது இருளாயும் நிற்கின்ற கண்போல்வது ஆன்மா. அஃதாவது கண் ஒளிப் பொருளுமன்று; இருட்பொருளுமன்று; அவ்விரண்டினும் வேறு. ஆயினும் ஒளியோடு கூடியபொழுது ஒளியாயும், இருளோடு கூடி யிருளாயும் நிற்கும். அது போல ஆன்மாப் பதியும் அன்று; பாசமும் அன்று. அவ்விரண்டினும் வேறு. ஆயினும் பதியோடு கூடிய பொழுது பதியாயும், பாசத்தோடு கூடியபொழுது பாசமாயும் நிற்கும். ஒளிவந்தபொழுதும் இருள் அழிவ தில்லை. ஆயினும் ஒளியின்முன் இருள்தோன்றாது அடங்கியிருக்கும். ஒளிவருவதும், போவதுமாய் இருப்பின்கண் ஒளியாயும், இருளாயும் வேறு வேறு நிலைகளை அடையும். வந்த ஒளி பின் நீங்காது நிற்பின் கண் அவ்வொளியேயாய்ப் பின் இருளாக மாறாது. அதுபோல, மாயா கருவிகள் வந்து கூடுவனவும், பிரிவனவுமாகிய புற ஒளிகளாகும். அதனால் அவற்றோடு கூடிய உயர் அறிவாயும், அறியாமையாயும் மாறி மாறி நிற்கும். திருவருளாகிய ஒளிவந்த பின் நீங்காதே நிற்கும் அகவொளியாகும். அதனால் அதனோடு கூடிய உயிர் பின்பு ஒரு ஞான்றும் இருளாகாது ஒளியேயாய்ச் சிவமாய் விளங்கும்.

விளக்கவுரை

இம்மந்திரத்தின் முதல் இரண்டடிகள் ஒட்டணியாய் நிற்றலின், இதன் பொருள் இவ்வாறு விரித்துரைக்கப்பட்டது. 'ஒளியும் ஒழியாது' என இறந்து தழுவிய எச்ச உம்மை கொடுத்துக் கூறியதனால், இரண்டாம்

அடியின் முதலில் உள்ள ஒளி, 'ஒழியா ஒளி' என்பது பெறப்பட்டது. ஒழியா ஒளியாவது இயற்கைப் பேரொளி யாகிய ஞாயிற்றின் ஒளி. திருவருளின் இயல்பிற்கு அதனினும் சிறந்த உவமையின்மையால் அஃது அழியா ஒளியாக உபசரிக்கப் படுகின்றது. ஒழியும் ஒளி பல இல்லங்களிற் பலரால் ஏற்றியும், அணைத்தும் வைக்கும் விளக்கொளி. திருவருள் ஞாயிறு போன்றதும், மாயா கருவிகள் விளக்குப் போல்வனவுமாகும். மாயா கருவிகளால் பெறும் அறிவு பாச அறிவே ஆகையால், அது நீக்கத்தக்கதாயிற்று. 'அறியாமை அறிவகற்றி'1 என்னும் சித்தியாரிலும், 'செறி வற்றுலகோ டுரைசிந் தையுமற்று - அறிவற்று அறியா மையும் அற்றதுவே'3 என்னும் கந்தர் அனுபூதியிலும் 'அறிவு' என்றது, நீக்கத் தக்கதாகிய பாச அறிவையேயாகும். ஒளியில் நின்றோரது கண்ணின் இயல்பை அதனையுடையார் மேல் ஏற்றிக் கூறினார். 'உயிர்' என்பதை மூன்றாம் அடியின் முதலிற் கூட்டி, 'உள்' என்பதை ஒளியோடு இயைத்து, உயிர் ஒளி இருள் கண்ட கண்போல வேறாய், உள் ஒளியால் உள் இருள் நீங்கிச் சிவமாம்' என முடிக்க. திருவருளை 'உள் ஒளி' என்றதனால் கருவிகளாகி ஒளிவெளி ஒளியாயிற்று. வெளியாவது உயிருக்கு வேறாய் நிற்பது. இதனால், திருவருள் பாச ஒளிபோலப் புறமாய் நிலையாத தாகாது, அகமாய் நிலைபெற்று நிற்கும் சிறப்புடைய ஒளியாதல் கூறப்பட்டது. இம்மந்திரத்தின் முதலடிப் பொருள், 'ஒளிக்கும், இருளுக்கும் ஒன்றேயிடம்; ஒன்று மேலிடின் ஒன்று ஒளிக்கும்; எனினும் இருள் அடராது' * எனக் கொடிக்கவியிலும் கூறப்பட்டது.

புறமே திரிந்தேனைப் பொற்கழல் சூட்டி
நிறமே புகுந்தென்னை நின்மல னாக்கி
அறமே புகுந்தெனக்(கு) ஆரமு தீந்த
திறமேதென் றெண்ணித் திகைத்திருந் தேனே. #1790

சிவன் தனது திருவுளப் பாங்கிற்கு மாறான வழியில் சென்று உழன்று கொண்டிருந்த என்னை அதற்குக் காரணமான அறியாமையைத் தனது திருவடிகளை என் சென்னி மேல் சூட்டு மாற்றால் போக்கி ஆட்கொண்டு, அதனால் தூய்மை பெற்ற எனது உள்ளத்திலே அவன் நீங்காது புகுந்து நிற்குமாற்றால் யான் அவனது அருளேயாய் நிற்கச் செய்து, அதனால், எனது இயற்கையை எய்திய எனக்கு அவனது அரிய இன்பத்தை அவன் தந்தவாறு எவ்வாறு என எண்ணி யான் ஒன்றும் தோன்றாது நிற்கின்றேன்.

விளக்கவுரை

ஏகாரங்கள் மூன்றும் அவற்றுக்கு எதிரானவற்றி னின்றும் பிரித்து நிற்றலால் பிரிநிலைகள். 'சூட்டி' என்பதன் பின் 'ஆட்கொண்டு' என்பது

சொல்லெச்சமாய் எஞ்சி நின்றது. நிறம் - மார்பு; அஃது ஆகுபெயராய் நெஞ்சத்தைக் குறித்தது. அறிவை நெஞ்சமாக - உள்ளமாகக் கூறுதல் வழக்கு. 'நின்மலர்' என்றது அதன் பயனாகிய ஞானத்தை உணர்த்தி நின்றது. இயற்கையை 'தருமம்' என வழங்கும் வடமொழி வழக்கே பற்றி இவரும் 'அறம்' என்றார். தித்திப்பதாகிய பால் அதன் இயற்கைக்கு மாறாகக் கசப்பது, நாவில் சேர்ந்த 'பித்தம்' என்னும் செயற்கையாலேயாம். அந்தச் செயற்கை நீங்கிய பொழுது பால் இயற்கையான தித்திப்பையே உடையதாகும். அதுபோல உறவுப் பொருளாகிய திருவருள் பகைப்பொருளாக உயிருக்குத் தோன்றுதல், அவ்வுயிரை அனாதியே பற்றியுள்ள ஆணவ மலமாகிய செயற்கையாலேயாம். அச்செயற்கை நீங்கியபொழுது திருவருள் இயற்கையான உறவுப் பொருளாகவே தோன்றும் இதனை உமாபதி தேவர்,

'தித்திக்கும் பால்தானும் கைக்கும்; திருந்திடும்நாப்
பித்தத்தில் தான்தவிர்ந்த பின்'*

என விளக்கினார். அம்முறையிலே இங்கு நாயனார் 'அறமே புகுந்த எனக்கு' என்றார். 'புகுந்க' என்னும் பெயரெச்சத்து ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. பால் தித்தித்தலும், திருவருள் உறவுப் பொரு ளாதலும், செயற்கை காரணமாக முன்பு வேறுபட்டிருந்து, பின்பு விளங்குதலால் செயற்கைபோலச் சொல்லப்படுதல் பற்றி, 'புகுந்த என்னை' என்றார். இயற்கைத் தன்மையே 'குணம்' என்றும், செயற்கைத் தன்மை 'குற்றம்' என்றும் சொல்லப்படும். குற்றத்தை வடமொழியாளர், 'உபாதி' என்பர்.

திறம் - வகை. அது காரணத்தின்மேல் நின்றது. உயிர்களைச் சிவன் தானாகச் செய்தற்குக் காரணம் அவனுக்குள்ள அருளேயன்றிப் பிறிதின்மையை விளக்குவார், 'திறம் ஏது என்று எண்ணித் திகைத் திருந்தேன்' என்றார்.

இதனால், திருவருள் ஒளியாய் நின்று செய்வன எல்லாம் கூறப்பட்டன.

அருளது என்ற அகலிடம் ஒன்றும்
பொருளது என்ற புகலிடம் ஒன்றும்
மருளது நீங்க மனம்புகுந் தானைத்
தெருளுறும் பின்னைச் சிவகதி யாமே. ***#1791***

பக்குவம் எய்தியபொழுது ஆணவ மலம் நீங்கத் திருவருட் பதிவு உயிரினிடத்து நிகழும். அப்பொழுது தான் உயிர் தன்னையும், தலைவனையும் உணரும் நிலையைப் பெறும். அப்பேற்றால் அது திருவருளாகிய பரவெளியிற் சென்று, அதன்கண் விளங்குகின்ற சிவத்தைப் புகலாக அடையும். அவ்வாறு அடைந்து நிற்றலே

உயிர்பெறும் முடிநிலப் பேறாகும்.

விளக்கவுரை

மூன்றாம் அடிமுதலாகத் தொடங்கி உரைக்க. 'பின்னைச் சிவகதியாம்' என்பதை இறுதியில் வைக்க. மருள் - மயக்க உணர்வு. அஃது ஆணவ மலத்தால் நிகழ்வன. 'நீங்க' என்னும் செயவெனெச்சம் நிகழ்காலத்தில் வந்து உடனிலையாய் நின்றது. 'புகுந்தானை' என்ற அனுவாதத்தால் அவன் புகுந்தமை முன்பே பெறப்பட்டது. சிவன் தனது அருளி வழியே புகுவன் ஆகலின் அவன் புகுந்தமை கூறவே அவனது அருள் புகுந்தமைதானே பெறப்பட்டது. தன்னை உணர்ந்த வழியே தலைவனை உணர்தல் கூடுமாகலின் தலைவனை உணர்தல் கூறவே தன்னை உணர்தலும் பெறப்பட்டது. உறு, துணைவினை. 'தெருளும், ஒன்றும், ஒன்றும்' என்னும் பயனிலைகட்கு 'உயிர்' என்பது தோன்றா எழுவாயாய் நின்றது. ஒன்றுதல் - பொருந்துதல். செய்யுள் நோக்கி, 'பொருளது என்ற புகலிடம்' என்றாராயினும், 'புகலிடம் என்ற பொருள்' என்றலே கருத்தென்க. எல்லாம் பொருளேயாயினும் உண்மையில் 'பொருள்' எனப்படுவது மெய்ப்பொருளேயாதல் பற்றி அதனையே இங்கு, 'பொருள்' என்றார். 'அது' மூன்றும் பகுதிப் பொருள் விகுதிகள். 'அதுவே சிவகதி' என்றற்கு, 'பின்னைச் சிவகதியாம்' என்றார். இதனால், திருவருள் ஒளியாதல், அதனைப் பெற்றார் பெறும் பேறுபற்றி உணர்த்தப்பட்டது.

கூறுமின் நீர்முன் பிறந்திங்(கு) இறந்தைமை
வேறொரு தெய்வத்தின்மெய்ப்பொருள் நீக்கிடும்
பாறணி யும்உடல் வீழவிட்(டு) ஆயுயிர்
தேறணி யாம்இது செப்பவல் லீரே. *#1792*

உலகீர், திருவருளை உள்ளவாறு நீர் உணர்ந்தீ ராயின், சிவனை யொழித்து ஒழிந்த தெய்வங்களுள் எதுவாயினும் அது பல்கால் பிறந்து வாழ்ந்து இறந்தமையை வேதாகம புராணங்களைச் சான்று காட்டிப் பலர்க்கும் விளக்கிக் கூறுங்கள். அங்ஙனம் கூறுமாற்றால் அவர்கள் வேறு எந்தத் தெய்வத்தையும் அதனிடத்து மெய்ப்பொருள் தன்மையை ஏற்றி மயங்கும் மயக்கத்தை நீக்குங்கள். இவ்வாறு செய்தலே பருந்துகள் கூட்டமாகக் கூடி உண்ணத்தகும் இவ்வுடல் அங்ஙனம் ஆகும்படி கீழே வீழ்ந்த காலத்தில் அரிய உயிர்தான் தனது உண்மை நிலையைத் தெரிந்து உய்யும் வழியாகும். ஆயினும், இவ்வாறு செய்ய நீர் மாட்டுவீரோ?

விளக்கவுரை

'செய்ய மாட்டுதல் அரிது' என்றபடி,

'நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்;
ஆறு கோடிநா ராயணர் அங்ஙனே;
ஏறு கங்கை மணல்எண்ணில் இந்திரர்;
ஈறி லாலதவன் ஈசன் ஒருவனே' *
'எல்லார் பிறப்பும் இறப்பும்இயற் பாவலர்தம்
சொல்லால் தெளிந்தேம்; நம் சோணேசா - இல்லில்
பிறந்தகதை யும்கேளேம்; பேருலகில் வாழ்ந்து,(உ)ண்டு
இறந்தகதை யும்கேட் டிலேம்' *
'தாமோ தரன் முதலோர் சாதல்நூல் சாற்றுவதும்
பூமேலோர் பொன்றுவதும் கண்டோமே' 8
ஏனைய தேவர் பலரும் பிறத்தல், பின்பு உண்டு வளர்ந்து வாழ்தல், பின்பு இறத்தல் ஆகிய இவைகளை உடையவராதற்கு வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் ஆகியவை அனைத்தும் சான்றா இருக்கவும் அவரது அருள்களை, 'திருவருள்' என்றல் மயக்க உணர்வேயாம் என்பதும், உண்மையுணர்வைப் பெற்றார் தாம் 'சிவனது அருளே திருவருள்' என உணர்தலோடு பிறர்க்கும் அதனை உணர்த்தற்பாலர் என்பதும் கருத்து. இதனால் 'ஒளியாகிய திருவருளாவது சிவனது அருளே' என்பது முடித்துக் கூறப்பட்டது.

9.11.சிவ பூசை

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே. ***#1793***

ஞானம் முதிரப் பெற்றவர்க்கு இலிங்க பூசை செய்தற்கு அவர்களது இருதயமே அவ்விலிங்கம் எழுந்தருளியிருக்கும் கரு வறையாயும், ஊனால் அமைந்த உடம்பே அக்கருவறை உள்ளடக்கிச் சூழ்ந்துள்ள திருச்சுற்றுக்களாயும், வாயே அவ்விலிங்கத்தின் நேர் நோக்கு வாயிலாயும், உயிரே இலிங்கமாயும், கண் முதலிய ஐம்பொறி உணர்வுகளே ஒளிமிக்க இரத்தின தீபங்களாயும் அமையும்.

விளக்கவுரை

எனவே, 'அவர்க்கு இங்குக் கூறிய கருவறை முதலியன வேறு வேண்டா' என்பதாம் இங்ஙனமாகவே அவர் எஞ்ஞான்றும் இவற்றால் பூசை செய்து கொண்டேயிருப்பர் என்பதாம். வேறு கருவறை முதலியன புறத்தே நேரினும் அவற்றை அவர் இவ்வாறு பாவித்தே வழிபடுவர் என்பது உணர்க. "தெள்ளத் தெளிந்தார்க்கு" என்றதனால் இவ்வியல்பு ஞானியர்க்கு என்பது வெளிப்படை. பிறரெல்லாம் புறத்துக் காணப்படும்

கருவறை முதலியவற்றையே அகத்தில் கற்பித்துக் கொண்டு வழிபட்டுப் பின்பு புறத்தே வழிபடுவர் என்க. அகத்தும், புறத்தும் ஞானியர் செய்யும் சிவபூசை 'ஞான சை' என்றும், ஏனையோர் செய்யும் சிவபூசை 'கிரியா சை' என்றும் சொல்லப்படும்.
"ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்
ஞானத்தால் தொழுவேன்உனை நானலேன்" *
என்று அருளிச் செய்து இக்கருத்துப் பற்றியேயாகும்.
"வள்ளற் பிரானார்க்கு" என்றது 'வள்ளற் பிரானாரைப் பூசித்தற்கு' என்றபடி. "புலன்" என்றது புலன் உணர்வை, அஃது இயல் பிலே மயக்கத்தைச் செய்வதாதல் பற்றி, "கள்ளப் புலன்" எனவும், 'அஃது அங்ஙனமாயினும் ஞானியர்க்கு அது தெளிவையே தருவ தாகும்' என்றற்கு, "காளா மணிவிளக்கே" என்றும் கூறினார். 'கலா' என்பது 'களா' என்றாகிப் பின், "காளா" என நீண்டது. கலா - கதிர்.
இதனால், சிவபூசையின் ஞானப் பகுதியின் இயல்பு கூறப்பட்டது. இனி அடுத்து வருகின்ற மந்திரமும் இதனையே கூறும். சிறப்புப் பற்றி இதுவே முன்னர்க் கூறப்படுகின்றது.

வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்
காட்டவும் யாமிலம் காலையும் மாலையும்
ஊட்டவி யாவன உள்ளங் குளிர்விக்கும்
பாட்டவி காட்டுதும் பால்அவி யாமே. *#1794*

வேள்வித் தீயில் சிவனை வழிபடுவோர் அவனை நோக்கி அத்தீயில் இடும் உணவை அவன் உண்டு மகிழ்வதாகவே கருதுகின்றனர். ஆயினும் அவர் கருத்தை அவன் உடன் பட்டு நின்றே அவர்கட்கு அருள் புரிகின்றான். இனி இலிங்கத்தில் அவனை வழிபடுவோர் அவ்விலிங்கத்தின் முன் வைத்துக் கையை அசைத்துக் காட்டுகின்ற பொருளை அவன் காணும் அளவிலே மகிழ்வதாகக் கருதுகின்றனர். அவர்கட்கும் அவர் கருத்தை உடன்பட்டே அவன் அருள் புரிகின்றான். அம்முறையில் அவனை உள்ளத்தலே உயிராகிய இலிங்கத்தில் வழிபடுகின்ற நாம் புறத்திலே வழிபடுவாரைப்போலப் பூசாகாலங்கலில் காட்டுதற்கு அங்கு எதனையுடையோம்? ஒன்றையும் உடையேமல்லோம். அதனால் அங்கு அவனுக்குக் காட்டும் உணவாவன அவனது திருவுள்ளத்தை மகிழ்விக்கின்ற தோத்திரப் பாடல்களே யாகும். அதனால் அந்த உணவையே அங்கு நாம் காட்டுவோம். அஃது உண்மையில் சொல் வடிவாகவே யிருப்பினும் நமது கருத்து வகையால் அவனுக்கு அது பாலடி சிலேயாய் மகிழ்ச்சியைத் தரும்.

விளக்கவுரை

'ஊட்டி மகிழ்வித்தலும், காட்டி மகிழ்வித்தலும், எனச்சிவனுக்கு உணவைத் தரும் முறை இரண்டு என்றற்கும், அவ்விரண்டில் எந்த முறையையும் அவன் உணவைப் படைப்பார் கருத்து நோக்கி அதற்கிசைந்து அருள்புரிதலன்றி அவரது செயலால் தன் குறை நிரம்புதல் பற்றி அருள்புரிகின்றிலன் என்றற்கும் வேள்வி செய்வாரது செயலினையும் இங்கு உடன் குறிப்பித்தார். உண்பிப் பாரது கருத்தை உடன் படுதலையே "உண்ணும்" என உபசரித்துக் கூறினார். ஞான நெறியினது சிறப்புணரமாட்டாதார் புறத்தே பொருள்களைக் கொண்டு செய்யும் வழிபாட்டினையே சிறந்ததாகக் கருதுவர் என்பது தோன்றச் சிவபிரானை, "வேட்டவி உண்ணும் விரி சடை நந்தி" எனவும், 'அங்ஙனமாயினும் ஞானபூசையே சிறப் புடையது என்றற்கு, "காலையும், மாலையும் ஊட்டு அவியாவன பாட்டு" எனவும், 'அதுவே அவனுக்கு மிக விருப்பத்தைத் தருவது' என்றற்கு, "உள்ளம் குளிர்விக்கும் பாட்டு" எனவும் கூறினார்.

"பூசனை ஈச னார்க்குப் போற்றவிக் காட்டினோமே" *

என்று அருளிச் செய்ததும் காண்க.

"வேட்ட" என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'அவ்வவி காட்டுதும்' எனச் சுட்டு வருவித்து உரைக்க. "காலையும், மாலையும்" என்றதனால் காலை நேரம், மாலை நேரம் என்னும் இருநேரமாவது சிவபூசை செய்யத்தக்கது என்பது உணத்தப்பட்டது.

"காலையும் மாலையும் கைதொழு வார்மனம்
ஆலையம் ஆரூர் அரனெறி யார்க்கே,"*

என்று அருளிச் செய்தமை காண்க.

'நிவேதித்தல்' என்னும் வடசொற்குப் பொருள் 'நன்றாக அறிவித்தல்' என்பது. அதுவே தமிழில் 'காட்டுதல்' எனப்படுகின்றது

இதனால், ஞான பூசையின் இயல்பு மேற்கூறப்பட்டவற்றிற்கு மேல் இன்றியமையாது கூறற்பாலதொன்று கூறப்பட்டது.

பான்மொழி பாகன் பராபரன் றானாகும்
மான சதாசிவன் றன்னைஆ வாகித்து
மேன்முகம் ஈசான மாகவே கைக்கொண்டு
சீன்முகம் செய்யச் சிவனவன் ஆமே. ***#1795***

பெருமையுடைய சதாசிவ மூர்த்தி அருவுருவத் திருமேனியனாயினும் அவன் அருவருமுங் கடந்த பரசிவனே என்பது தேற்றம், ஆதலால் இலிங்க வழிபாட்டில் சதாசிவ மூர்த்தியையே முறைப்படி ஆவாகனம் முதலியன செய்து ஒருவன் வழிபடு வானாயின், அவன் சிவனாம் தன்மைப் பெரும் பயனைப் பெறுவான்.

விளக்கவுரை

'வடிவம் யாதும் இன்மையால் அசிந்திதனாய் உள்ள சிவன் ஆன்மாக்களின் பொருட்டு வடிவங்கொண்டே சிந்திதனாய் நிற்றலால் பரசிவனைச் சதாசிவனாகக் கொண்டே வழிபட்டுப் பயன்பெறுதலே முறை என்றற்கு, "பராபரன் ஆகும் சதாசிவன் றன்னை" என்றார். "ஆவாகித்து" என்றது உபலக்கணம் ஆதலின், 'ஆவாகணம் முதலியவற்றைச் செய்து' என்றதாம். ஆவாகனம் முதலியவாவன ஆவாகனம், ஸ்தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், நியாசம், அர்க்கியம், பாத்தியம், ஆசமனம், அபிடேகம், அலங்காரம், தூபம், தீபமம், நைவேத்தியம், ஆராத்திரிகம், பிரதட்சிணம், நமஸ்காரம், தோத்திரம், பிரார்த்தனை என்பன. இவற்றின் இயல்பெல்லாம் பத்ததிகளிலும், சிவபூசா விதி நூல்களிலும் அறிக; இங்கு விரிப்பின் பெருகும்.

"மேன்முகம் ஈசானமாகவே கைக்கொண்டு" என்றது, 'மேல் சதாசிவலிங்கத்தின் இயல்பாகக் கூறியவற்றை அவ்வாறே உணர்ந்து செய்க' என அவற்றை இங்கு மீள நினைவுறுத்தியவாறு. 'சீலம்' என்பது கடைக் குறைந்து, "சீல்" என நின்றது. சீலத்தை முகம் செய்தலாவது விதிமுறைகளை நடைமுறைப்படுத்தல்.

இம்மந்திரம் முதலாக வருவன எல்லாம் ஞானபூசை கிரியா பூசை இரண்டற்கும் பொதுவாவனவாம்.

நினைவதும் வாய்மை மொழிவது மல்லால்
கனைகழல் ஈசனைக் காண்பரி தாகும்
கனைகழல் ஈசனைக் காணவல் லார்கள்
புனைமலர் நீர்கொண்டு போற்றவல் லாரே. ***#1796***

சிவனை இலிங்கத்தின்கண் சதாசிவ வடிவில் வைத்து மேற்கூறியவாரெல்லாம் நினைதலும், அந்நினைவுகட்கு ஏற்ற மறை மொழிகளை அவ்வப்பொழுது முறையாகச் சொல்லுதலும், அவற்றோடு அவ்வவ்வுறுப்புக்களைப் பூவும், நீரும் கொண்டு போற்றுதலும் தவிர அவனைக் காண்பதற்கு வழி வேறில்லை. ஆகையால் அவனைக் காண வேண்டுவோர் பலரும் அவற்றையே செய்வர்.

விளக்கவுரை

'அதனால் நீவிரும் அவற்றையே செய்மின்' என்பது குறிப்பெச்சம். சொல் சுருங்க வேண்டி வேறு வேறாக ஓதினாரேனும் இவ்வாறு ஒன்றாக வைத்துரைத்தலே கருத்தென்க. 'இலிங்கத்தில்' என்பதும், 'சதாசிவவடிவில்' என்பதும் அதிகாரத்தால் வந்தியைந்தன. தாம் தம் பயனைத் தப்பாது தருதல் பற்றி மந்திரங்களை "வாய்மை" என்றார். நினைதல் முதலிய மூன்றும் முறையே மனம், மொழி, மெய் இவற்றின் செயலாதல் தெளிவு. எனவே முப்பொறிகளும் பூசையில் ஒருங்கு

இயைதல் வேண்டும் என்பது பெறப்பட்டது. ஞான பூசையில் மொழி மெய் இவற்றின் செயல்களும் அவ்வாறே பாவிக்கப்படும் என்க. இதனால், சிவபூசை முப்பொறிகளாலும் இயற்றற்பாலதாதல் கூறப்பட்டது. இடையே சிவபூசையின் சிறப்பும் உணர்த்தப்பட்டது.

மஞ்சனம் மாலை நிலாவிய வானவர்
நெஞ்சினுள் ஈசன் நிலைபெறு காரணம்
அஞ்சமுது ஆம்உப சாரம்எட் டெட்டொடும்
அஞ்சலி யோடும் கலந்தற்சித் தார்களே. *#1797*

தத்துவங்களில் ஒவ்வொன்றன் எல்லை காறும் அவற்றிற்குத் தலைவராக வைத்துப் பலராலும் திருமஞ்சனம் ஆட்டித் திருமாலை சூட்டி வழிபடப்படும் கடவுளர்களது உள்ளங்களில் சிவன் நிலைபெற்று நின்று அவ்வழிபாட்டின் பயன்களை அவரவர்க்கு வழங்கி நிற்றற்குக் காரணம் அவரெல்லாம் முன்பு சிவனைப் பஞ்சாமிர்தம் முதலியவற்றால் அபிடேகித்துப் பதினாறு வகையான உபசாரங்களைச் செய்து, கைகூப்பிக் கும்பிட்டு மனம் பொருந்தி வழிபட்டார்கள் என்பதே.

விளக்கவுரை

'என்பதே\' என்பது சொல்லெச்சமாய் எஞ்சி நின்றது. அங்ஙனம் வழிபடப்படுவார் பிரமன், விட்டுணு என்னும் காரணக் கடவுளரும், பிறரும் ஆவர்.

\"அயன்றனை யாதி யாக அரன்உரு என்ப தென்னை?
பயந்திடும் சத்தி யாதி பதிதலால்\"

என்னும் சிவஞான சித்தியை இங்கு உடன் நோக்குக. இங்குக் கூறப்பட்ட மஞ்னம், மாலை, அஞ்சமுது என்பன உபலக்கணம். அவற்றால் சிவபூசைக்கு வேண்டப்படும் பொருள்கள் குறிக்கப்பட்டன. இதனால், சிவபூசையால் பெறப்படும் பயன்களுள் சிறப்புடையது ஒன்று எடுத்துக்கூறப்பட்டது. அதனானே 'வழிபடப் படுபவன் சிவன் ஒருவனே \' என்பதும் 'ஏனையோர் யாவரும் அவனை வழிபடுபவரே\' என்பதும் உடன் உணர்த்தப்பட்டன. வேதம், சிவன் ஒருவனையே \"விசுவ சேவியன்\" என்றும், \"தேயப் பொருள்\" என்றும் கூறும்.

புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண் டருள்புரி யாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றார்களே *#1798*

'சிவனை அடைதற்குச் செயற்பாலதாகிய தவம் யாது' எனத் தேர்பவர்க்கு, பூவும், நீருமே சாதனங்களாகும். அவை எவவிடத்தும் எளிதிற் கிடைப்பனவே. அவை சாதனங்களாதல் எவ்வாறு எனின், நீரைச் சொரிந்து பூவைச் சாத்துதலாகிய அதைக் கண்டவுடனே சிவன்

அதனைச் செய்தவர்க்கு அருள்புரிகின்றான். அங்ஙனமாகவும், நல்லூழ் இல்லாத பலர் இதனைச் செய்யாது வாளா பொழுது போக்கிப் பிறப்பில் வீழ்கின்றனர்.

விளக்கவுரை

இஃது அவர் வினையிருந்தவாறு என்பது குறிப் பெச்சம். "உண்டு, உண்டு" என்றது, அவற்றின் எளிமையும், முட்டின்மையும் கூறியவாறு.
"கற்றுக் கொள்வன வாயுள; நாவுள;
இட்டுக் கொள்வன பூவுள; நீருள;
கற்றைச் செஞ்சடை யானுளன்; நாமுளோம்;
எற்றுக்கோ நமனால் முனிவுண்பதே"*l #*
என்றதிலும் 'எம் வினையே காரணம்' என்பதே குறிப்பு.
இதனால், சிவபூசை செயலால் எளிதாய்ப் பயனாற் பெரிதாயினும் அது நல்லூழ் உடையார்க்கன்றி ஆகாமை கூறப்பட்டது.

சீர்நந்தி கொண்டு திருமுக மாய்விட்ட
பேர்நந்தி என்னும் பிறங்கு சடையனை
நாநொந்து நொந்து வருமளவும் சொல்லப்
பேர்நந்தி யென்னும் பிதற்றொழி யேனே. ***#1799***

(இங்கு இருக்க வேண்டிய இப்பாடல் பதிப்புக் களில் 'மாகேசுர சை' என்னும் அதிகாரத்திலும் அங்கு இருக்க வேண்டிய பாடல் இங்குமாக மாறியுள்ளன.)

புகழ்மிக்க நந்தி பெருமானாகிய எம் ஆசிரியர் எம்மை ஆளாக ஏற்றுக் கொண்டுபோய்த் திருமுன்பு சேர்ந்த, 'நந்தி' என்பதையே தன் பெயராக உடைய சிவபெருமானை என்னால் ஆம் அளவும் துதிப்பதற்கு அந்த 'நந்தி' என்னும் பெயரையே எப்பொழுதும் சொல்வேன்.

விளக்கவுரை

'இஃது எம் ஆசிரியர் ஆணை' என்றபடி, சிவபெரு மானுக்கு அவனது மூலமந்திரத்தில் உள்ள 'சிவன்' என்பதே மெய்ப் பெயராயினும், அஃது அவனை வழிபடுவோர் யாவர்க்கும் பொதுவாய் நிற்க, அவரவரும் தம் தாம் தனித் தனிச் செய்யும் வழிபாட்டில் தம் பெருமானது மெய்ப்பெயராக ஒரு பெயரைக் கொள்ளுமாறு ஆசிரியர் பணிப்பர். அம்முறையில் நாயனார்க்கு அவர் வழிபடும் பெருமானது பெயராக 'நந்தி' என்பதையே நந்தி பெருமான் அருளிச் செய்தார் என்க. இதனை நாயனார் எடுத்துக் கூறியதனால் சிவனைச் சிறப்பு வகையில் தமக்கே உரிய பெருமானாகக் கொண்டு வழிபடும்பொழுது அவனுக்கென்று ஒரு பெயரை அவரவரும் கொண்டு வழிபடல் வேண்டும் என்பது பெறப்பட்டது.

"விட்ட" என்பது, 'அரசன் ஆக்கொடுத்த பார்ப்பான்' என்பதிற்போல, 'சடையன்' என்னும் கோடற் பொருட் பெயர் கொண்டது. வருமளவும், ஆமளவும், "நொந்து" எனச் சினைவினை முதல்மேல் நின்றது. 'வருந்தியேனும் செய்வேன்' என்றதாம். 'நந்தி யென்னும்பேர் பிதற்றொழியேன்' என்க.

இதனால், சிவபூசையில் இன்றியமையாது கொளற்பால தொன்று கூறப்பட்டது.

மறப்பதுற் றெவ்வழி மன்னிநின் றாலும்
சிறப்பொசு பூநீர் திருந்தமுன் ஏந்தி
மறப்பின்றி நின்னை வழிபடும் வண்ணம்
அறப்பெற வேண்டும் அமரர் பிரானே. ***#1800***

தேவர்கட்கெல்லாம் தேவனாகிய சிவபெருமானே! யான் இப்பிறப்பினின்று நீங்கி எப்பிறப்பை அடைந்து எங்கேயிருந்து எதனை மறந்து போனாலும் திருத்தமான பூ, நீர் முதலியவற்றைக் கொண்டு உன்னைச் சிறப்புடன் பூசிக்கின்ற இந்த வழக்கத்தை மட்டும் மறவாமல் கடைப்பிடித்து நிற்கும் வரத்தை அடியேன் முற்றாகப் பெறும்படி அருள் செய்யவேண்டும்.

விளக்கவுரை

'அஃது ஒன்றே யான் உன்பால் வேண்டுவது' என்பது குறிப்பெச்சம். தம் அன்பு மீதூர்வால் இவ்விண்ணப்பத்தினை நாயனார் சிவபிரானிடம் செய்து நின்றமையால், 'சிவபூசை செய்வார் அப்பூசையில் இதனையே அவன்பால் வேண்டுக எனக் கூறி, அதனானே, சிவபூசையை மேற்கொண்டவர் அதனை ஒரு ஞான்றும் கைவிடுதல் கூடாது' என்பதனையும் உணர்த்தியவாறு. சொற்கிடக்கை முறை வேறாயினும் கருத்து நோக்கி இதற்கு இவ்வாறுரைக்கப்பட்டது. 'நின்னை வழிபடும் வண்ணம் மறப்பின்மை பெறவேண்டும் என்க.

"புழுவாய்ப் பிறக்கீனும் புண்ணியா உன்னடி என்மனத்தே வழுவா திருக்க வரந்தர வேண்டும்"*l*

என வேண்டினமையை நினைக.

ஆரா தனையும் அமரர் குழாங்களும்
நீரார் கடலுள் நிலத்துள வாய்நிற்கும்
பேரா யிரமும் பிரான்திரு நாமமே
ஆராய் வுழியெங்கள் ஆதிப் பிரானே. ***#1801***

தெய்வ வழிபாடுகளும், வழிபடப்படும் தேவர் கூட்டங்களும் நீர் நிறைந்த கடல் சூழ்ந்த நிலத்தில் எங்கும் அளவின்றி உள்ளன. உண்மையாக ஆராய்ந்தால், அவ்வழிபாடுகளில் வேறு வேறாகச் சொல்லப்படுகின்ற அளவற்ற பெயர்களும் சிவன் பெயர்களே என்பதும்,

'அனைத்துத் தெய்வங்களும் சிவனே' என்பதும் விளங்கும்.

விளக்கவுரை

'அதனால், சிவனையே நேராகப் பெரியோர் வழிபடுவர்' என்பதாம்.
\"காண்பவன் சிவனே யானால் அவனடிக் கன்பு செய்கை
மாண்பறம்; அரன்றன் பாதம் மறந்துசெய் அறங்க ளெல்லாம்
வீண்செயல்\"
எனவும்,
\"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்;மற் றத்தெய்வங்கள்
வேதனைப் படும்; பிறக்கும்; இறக்கும்; மேல் வினையும் செய்யும்;
ஆதலால் அவையிலாதான் அறிந்தருள் செய்வனன்றே\"
எனவும்,
\"இங்குநாம் சிலர்க்குப் பூசை இயற்றினால் இவர்களோ வந்து
அங்குவான் தருவர்? அன்றேல், அத்தெய்வம் அத்தனைக்காண்\" 8
எனவும் விளக்குதல் காண்க. (தெய்வப் பெயராய் வரும்) \"எல்லாப் பெயரும் பரமசிவன் பெயர் என்பதே வேதநூல் துணிபு என்பது ஆண்டுக் (சுவேதாச் சுவத உபநிடதத்தில்) காண்க\" என்னும் சிவஞான மாபாடியமும் 3 இங்கு நினைக்கத் தக்கது.

இவ்வாறெல்லாம் கூறுதல், 'சிவபிரான் தவிர ஏனைத்தேவர் பலரும் பசு வருக்கத்தினரே' என்பதும், 'சிவபிரான் ஒருவனே பதி' என்பதும் விளங்குதற் பொருட்டாம். ஆகவே, 'பசு வருக்கத்தினரைப் பதியாகக் கருதிச் செய்தும் வழிபாடுகள் யாவும் நல்வினைகளாய்ப் பிறவியைத் தருதல் அன்றிப் பிறவியை நீக்கமாட்டா' எனவும், 'சிவபிரானைப் பதியாக உணர்ந்து செய்யும் வழிபாடே தவமாய் ஞானத்தைப் பயந்து, அது வழியாக வீட்டைத் தரும்' எனவும் உணர்ந்து கொள்க.

இம்மந்திரத்தல் பலவிடத்துப் பாடங்கள் திரிபெய்தன.

இதனால் சிவ பூசையின் தனிச் சிறப்புக் கூறப்பட்டது.

ஆன்ஐந்தும் ஆட்டி அமரர் கணந்தொழத்
தான்அந்த மில்லாத் தலைவன் அருளது
தேன்உந்து மாமலர் உள்ளே தெளிந்த**(து)**ஓர்
பான்ஐங் குணனும் படைத்துநின் றானே. ***#1802***

பசுவினின்றும் பெறப்படுகின்ற அரிய பொருள் ஐந்தினாலும் திருமுழுக்காட்டித் தேவர் கூட்டம் வழிபட, ஆதியும், அந்தமும் இல்லாதவனாகிய சிவனது திருவருள் அவர்கள் உள்ளங்களில் மலர்ந்த தாமரை மலரில் தோன்பேல வெளிப்பட்ட விளங்கிற்று. (அதனால் அவர்கள் பேரின்பம் பெற்றனர் என்றபடி.) இங்ஙனம் தன்னை வழிபட்டு உய்தற்காகவே ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து ஆகப்

பத்து இந்திரியங்களையும் அவை செயற்படுதற்கு ஆற்றலைத் தருகின்ற தன்மாத்திரைகள் ஐந்தினையும் சிவன் உயிர்கட்குப் படைத்துக் கொடுத்தான்.

விளக்கவுரை

'அதனை உணர்ந்து அக்கருவிகளைப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்' என்பதாம். பசுவினின்றும் பெறப்படும் அரும் பொருள் ஐந்தும், 'பஞ்ச கௌவியம்' எனப்படும். அவை பால், தயிர், நெய் கோசலம், கோமயம் என்பன. இவை ஐந்தும் ஒன்றாகக் கலந்த பொழுதே 'பஞ்ச கௌவியம்' எனப் பெயர்பெறும். அவற்றைக் கலத்தற்கு அளவுகள் உண்டு. கோசலம் - பசுவின் நீர். கோமயம் - சாணம். இவை தூய்மையின் பொருட்டு மிகச் சிறிதளவிலே சேர்க்கப் படும். இவற்றது சிறப்புணராது இக்காலத்துப் புத்தறிஞர் சிலர், இவற்றை நீக்கி, வெண்ணெய், மோர் இவற்றைக் கொள்ளல் வேண்டும்' என்பர். வெண்ணெய், நெய் இவற்றை வேறு வேறாகவும், தயிர், மோர் என்பவற்றை வேறு வேறாகவும் வைத்து எண்ணிக்கை காட்டும் இவரது செயல் வியப்பிற்குரியதே. இவர்க்குச் சாத்திரமும் வேண்டா; சம்பிரதாயமும் வேண்டா ஆகலின் இழரைத் தெருட்டல் அரிது.

"இன்று பசுவின் மலமன்றே இவ்வுலகில்
நின்ற மலம் அனைத்து நீக்குவது"*l*

என்பன முதலிய மெய்ம் மொழிகளை இவர்கட்குக் காட்டிப் பெருவதென்?

தனித்தனியாக ஆட்டும்பொழுது பால், தயிர், நெய் என்னும் மூன்றுமே ஆட்டப்படும். அவைகளை எவ்வளவும் ஆட்டலாம். அதனால் சிறிதளவே கொள்ளுதற்குரிய கோசல கோமயங்கள் தனித் தனியாக ஆட்டப்படா. "ஓர் பான் ஐங்குணனும்" என்பதை ஓர்பானும், ஐங்குணனும்' என்க. பூதங்களின் குணமாகிப் புலப்படுத்தல் பற்றித் தன்மாத்திரைகளை, 'குணம்' என்றார்.

இதனால், சிவபூசையில் கொள்ளத்தக்க ஒன்று கூறப்பட்டது. சிவபூசை செய்த மானுடப் பிறப்பின் பயன் என்பதை இடம் வாய்த்துழி உடன் கூறினார்.

"மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும் அரன்பணிக் காகஅன்றோ!
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனைஅற் சிப்பர்;
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ" *3*

என்றது காண்க. இச்செய்யுளிலும்.

"பாவமும் பழி பற்றற வேண்டுவீர்,
ஆவில் அஞ்சுகந் தாடும் அவன்கழல்

மேவ ராய்மிக வும்நினைந் துள்குமின்" *
என்னும் திருமொழியிலும் 'சிவன் ஆவிவ் அஞ்சினை உகந்து ஆடுபவன்' என்பது உணர்த்தப்பட்டது. அஃதே, "ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சு ஆடுதல்" * என்று அருளிச்செய்யப் பட்டது. "அரன் அஞ்சு ஆடுதல்" என்பதை, 'அரன் ஆடும் அஞ்சு' என மாற்றிப் பொருள் கொள்க.

உழைக்கொண்ட பூநீர் ஒருங்குடன் ஏந்தி
மழைக்கொண்ட மாமுகில் போற்சென்று வானோர்
தழைக்கொண்ட பாசம் தயங்கிநின் றேத்திப்
பிழைப்பின்றி எம்பெரு மான்அரு ளாமே. ***#1803***

'தேவர்' என்பார் யாவரும் ஒவ்வொரு பொருட்கு அதன் எல்லையளவும் உரிமை பூண்டு நிற்பவரே. அவ்வுரிமையை அவரெல்லாம் நல்ல இடத்திலிருந் எடுக்கப்பட்ட பூவையும், அவ்வாறே நல்ல இடத்திலிருந்து எடுக்கப்பட்ட நீரையும் கையில் ஏந்திக் கொண்டு நீரை முகந்து வரும் கரிய மேகங்கள் போல ஓரோர் தலத்தில் சென்று மிக்க அன்புடன் சிவபெருமானைப் பூசித்து அவன் பெரிதும் அருள் செய்யவே பெற்றனர்.

விளக்கவுரை

'அதனால் நற்பேறுகள் யாவும் சிவபூசையின் வழிப்பெறும் பயனேயாம் என்றபடி, 'முன் செய் பூசா பலம்' என்னும் வழக்கினை நினைக.
'வண்டுளரும் தண்டுழாய் மாயோன் இறுமாப்பும்,
புண்உரிகப் போதுறையும் புத்தேள் இறுமாப்பும்,
அண்டர்தொழ வாழ்உன் இறுமாப்பும் ஆலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால்' *
எனவும் ஆன்றோர் அருளினமை அறிக. இன்னும்,
'உலகா ளுறுவீர், தொழுமின்; விண் ஆள்வீர், பணிமின்; நித்தம்
பலகா முறுவீர், நினைமின்; பரமனோ டொன்ற லுற்றீர்,
நல்காமலரால் அருச்சிமின்; நாள் நரகத்து நிற்கும்
அல காமுறுவீர், அரனடி யரை அலைமின்களே' *3*
என்றற்றொடக்கத்தனவும் காணத் தக்கன. 'பிழைப் பின்றிப் பெற்ற பேரருள்' என்க. அருளால் பெற்றவற்றை 'அருள்' என்றே உபசரித்துக் கூறினார்.
இதனால், 'சிவபூசையே யாவராலும் செயற்பாலது' என்பது கூறப்பட்டது.

வெள்ளக் கடல்உள் விரிசடை நந்திக்கு
உள்ளக் கடற்புக்கு ஓர்சுமை பூக்கொண்டு
கள்ளக் கடல்விட்டுக் கைதொழ மாட்டாதார்
அள்ளற் கடலுள் அழுந்துகின் றாரே. ***#1804***

உள்ளே ஓட்டத்தையுடைய கடலாகிய கங்கை விரியப்பெறுகின்ற சடைமுடியை உடைய சிவபெருமான் பொருட்டு உள்ளத்திலே நிறைவதாகிய அன்பு என்னும் கடலுள் மூழ்கிப் பூவை நிறையப் பறித்துச் சுமந்துகொண்டு போய் போலியாகிய நற் குணங்களை ஒழித்து உண்மை நற்குணங்களை உடையவராய் வழிபட நினையாதவர்கள் துன்பமாகிய கடலுள் மூழ்குகின்றனர்.

விளக்கவுரை

இதனை மேற்காட்டிய 'கால் நகம் தேயத் திரிந்திரப் போர்' என்றது திருமொழிகளில் அறிக. 'வெள்ளம்' பெருக்கெடுத்து ஓடுதலைக் குறித்தது கடலுக்கு ஓட்டம் இன்மையால் ஓடுகின்ற கடல் கங்கா நதியாயிற்று. நீர்க்கடல் புறத்தே உளதாகலின், உள்ளக் கடல்' என்றது பேரன்பினையாயிற்று. 'ஓர்சுமை' என்றது மிகுதியைக் குறித்தது. கள்ளம் - பொய்மை. 'கள்ளக் கடல், அள்ளற் கடல்' என்பன உருவகங்கள், 'அல்லல்' என்பது எதுகை நோக்கித் திரிந்தது. இனி, 'அள்ளல், ஒருவகை நாகம்' என்றலும் ஆம்.

மேல் சிவபூசை செய்தார் எய்தும் பயன்களைக் கூறியதனால், இதனால் அது செய்யாதார் எய்தும் துன்பங்களைக் கூறியவாறு.

கழிப்படு தண்கடற் கௌவை உடைத்து
வழிப்படு வார்மலர் மொட்டறி யார்கள்
பழிப்படு வார்பலரும் பழி வீழ
வெளிப்படு வார்உச்சி மேவிநின் றானே. ***#1805***

'தம் பிறவியை கழிக்கின்றார்கள்' எனக் கூறப் படும் பழியைப் பொருட்படுத்தாது அதனுள் அகப்பட்டு நிற்கின்ற உலகர் பலரும், கழி பொருந்திய கடலின் ஆரவாரம் போலும் உலகியல் ஆரவாரங்களை ஒழித்துச் சிவனை வழிபடுகின்றவர்கள் இட்ட பூக்களும், போதுகளும் நிரம்பக் கிடத்தைப் பலகால் கண்டா ராயினும் அவை விளைக்கும் பயனை அறியமாட்டார்கள். ஆயினும், அப்பழி நீங்க அவரது கூட்டத்தினின்றும் வேறுபட்டு நின்று வழிபடுவோரைத்தான் சிவன் தனது திருவருள் வியாபகத்துள் வைத்துப் பாதுக்காக்கின்றான்.

விளக்கவுரை

'கடற் கௌவைபோலும் கௌவை' என்க. கௌவை - ஆரவாரம் உடைத்தல் - அழித்தல். வழிபடுவார்' என்பது எதுகை நோக்கி விரித்தல் பெற்றது 'வழிபடுவார்' என்புழி, 'சிவனை' என்பதும், 'மேவி நின்றான்' என்புழி, 'சிவன்' என்பதும் அதிகாரத்தால் வந்தன. வழிபடுவாரது மலரும் மொட்டும்' என ஆறன் உருபும், எண்ணும்மையும் விரித்துக் கொள்க பலரும் அறியார்கள்' என்க. இனி, 'பலரும் அறியார்களாய்ப்

பழிப்படுவார்' என முடிப்பினும் ஆம். வெளிப்படுதல் - விட்டு நீங்குதல் - தனது திருவடி வியாபகத்துள் அடக்குதலே 'உச்சி மேவுதல்' எனப்படுகின்றது.
இதனால், சிவபூசை செய்வாரது உயர்வு, செய்யாதாரது இழிவும் ஒருங்கு கூறப்பட்டன.

பயனறி வொன்றுண்டு பன்மலர் தூவிப்
பயனறி வார்க்கரன் தானே பயிலும்
நயனங்கள் மூன்றுடை யான்அடி சேர
வயனங்க ளால்என்றும் வந்துநின் றானே. ***#1806***

'பயனுடைய செயலாவது இது' என அறியும் அறிவு ஒன்றே ஒன்றுதான் இவ்வுலகில் உள்ளது. அஃது யாதெனின், பலவகை மலர்களைத் தூவி வழிபட்டு, அதனால் விளையும் பயனை அறிந்து அதனையே மேலும் மேலும் செய்பவர்க்குச் சிவன் தானே பலகாலும் வலியவந்து அருள் செய்தலை அறிதலேயாகும். ஆகையால் அவ்வறிவின்வழி ஒழுகுவார்க்குச் சிவன் அவர் சொல்லியவாறெல்லாம் என்றும் எளிவந்து அருளுவன்.

விளக்கவுரை

அவ்வாறு அருளுதலை, பொதிசோறு சுமந்து வந்தளித்தமை, இரந்துவந்து சோறிட்டமை, வற்கடம் வருத்தாது படிக்காசு தந்தமை, காசி வாசி தீர்த்து வழங்கினமை, துணைவிபால் தூது சென்று ஊடல் தீர்த்தமை முதலிய பலவற்றிலும் வைத்து உணர்க.
'பயனை அறியும் அறிவு' என்க பயன் தரும் செயலை, 'பயன் என்றார் இரண்டாம் அடியின் இறுதியில் 'அதனை யறிதல்' என்பது எஞ்சி நின்றது. 'அரன்' என முன்னர்க் கூறினமையால், 'நயனங்கள் மூன்றுடையான்' என்றது, 'அவன்' என்னும் சுட்டளவாய் நின்றது. 'வசனம்' என்பது 'வயனம்' எனத் திரிந்தது.
இதனால், சிவன் தன்னை வழிபடுவார்க்கு இம்மையிலும் இனிதருள் செய்தல் கூறப்பட்டது.
'வேதன் நாரணன் ஆரணம் அறியா விழுப்பொருள்
பேதைபால்
தூதனாய் இருகால் நடந்திடு தோழன்
வன்மைசெய் தொண்டனுக்*(கு)*
ஆதலால் அடியார்களுக் கெளியான்
அடிக் கமலங்கள் நீ
காதலால் அணை; ஈண்டன வேண்டின
இம்மையே தரும கண்டிடே' *l*
என அறிவுறுத்தினமை காண்க.

ஏத்துவர் மாமலர் தூவித் தொழுதுநின்
றார்த்தெம தீசன் அருட்சே வடிஎன்றன்
மூர்த்தியை மூவா முதல்உரு வாய்நின்ற
தீர்த்தனை யாரும் திதித்துண ராரே. ***#1807***

சிவனைக் காணலுறுவார் யாவரும் அவனது திருவருள் வடிவாகிய அவனது திருவடியின் கீழ்த்தம்மைத் தாமே கட்டி வைத்து, அவனை மிக்க மலர்களைத் தொழுது துதித்தலையே செய்வர். அங்ஙனமன்றி, எனக்கு எதிர் தோன்றிக் காட்சி வழங்கியவனும், என்றும் கெடுதல் இல்லாத முதற்பொருளாய் உள்ளவனும் ஆகிய அவனை யாரும் தாம் இருந்த நிலையிலேயிருந்து காணமாட்டார்கள்.

விளக்கவுரை

பின்னர், *'யாரும் உணரார்'* என்றதனால், முன்னர் ஏத்துதல் முதலியவற்றைச் செய்பவர் உணர்வோராதல் பெறப்பட்டது. ஆர்த்தல் - பிணித்தல். *'அருட் சேவடி'* என்பதன் பின் *'கீழ்'* என்னும் பொருள்பட வந்த கண்ணுரு இறுதிக்கண் தொக்கது. *'சேவடிக்கண் தம்மை ஆர்த்து'* என்றது, *'தொண்டு தொக்கது. 'சேவடிக்கண் தம்மை ஆர்த்து'* என்றது, *'தொண்டு பட்டு என்றபடி. துதித்தல் நிலை பெற்றிருத்தல்;* என்றது, ஆட்படாது தனிநிற்றலைக் குறித்தது.
'தொழுவார்க்கே யருளுவது சிவபெருமான்' 3
என்று அருளிச் செய்தமை காண்க.
இதனால், *'சிவனை இலிங்கத் திருமேனியில் மலர்தூவி வழிபடாதார் காணமாட்டார்'* என்பது கூறப்பட்டது.

தேவர்கள் ஓர்தீசை வந்துமண் ணோடுறும்
பூவோடு நீர்சுமந் தேத்திப் புனிதனை
மூவரிற் பன்மை முதல்வராய் நின்றருள்
நீர்மையை யாவர் நினைக்கவல் லாரே. ***#1808***

தேவர்கள் தத்தமக்கு வாய்ப்பான ஓரோர் இடத்தை அடைந்து நிலத்தல் நால்வகையாகத் தோன்றுகின்ற பூக்களையும், நீரையும் சுமந்து சென்று சிவனைத் திருவுருவங்களில் வழிபட்டு, அதனாலே மூவரில் ஓரோரொருவராயும், அவர் தவிர ஏனைத் தேவரில் ஒரொருவராயும் தலைமை பெற்ற அத்திருவருட் சிறப்பினை யறிந்து அவ்வாறு அவனை வழிபட வல்லார் யாவர்!

விளக்கவுரை

'அத்தன்மையோர் மிக அரியர்' என்றபடி, *'திசை'* என்பது *'இடம்'* என்னும் பொருட்டாய் நின்றது. நால்வகைப் பூக்களாவன - *'கோட்டுப் பூ, கொடிப்பூ, நீர்ப்பு, புதர்ப்பூ'* என்பன. இவை யாவும் நிலத்திலே

தோன்றுதலின் அவை யாவும் அடங்க, 'மண்ணோடுறும் பூ' என்றார். 'மூவரிலும் பன்மையிலும் முதல்வராய்' என்க. 'பலர்' எனற்பாலதனை, 'பன்மை' என எண்ணின்மேல் வைத்துக் கூறினார். 'நின்ற' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.
மேல், 'உழைக்கொண்ட பூநீர்' என்னும் மந்திரத்துள் 'எல்லா நலங்களும் சிவ பூசையின் பயனேயாதலை விளக்குதற்குக் கூறிய அதனை, அஃதுணர்ந்து பயன் பெறுபவர் உலகத்து அரியர்' என்ப துணர்த்துதற்கு இங்குக் கூறினார் என்க. இதன் ஈற்றடி எதுகை பெறாது வந்தது.

உழைக்கவல் லார்நடு நீர்மலர் ஏந்திப்
பிழைப்பின்றி ஈசன் பெருந்தவம் பேணி
இழைக்கொண்ட பாதத்(து) இனமலர் தூவி
மழைக்கொண்டல் போலவே மன்னிநில் லீரே. ***#1809***

நீரும், பூவும் சுமந்து சென்று நோற்க வல்லவர் நடுவிலே நீவிரும் அமர்ந்திருந்து அவரைப்போல நீவிரும் சிவனிடத்தும் பெரிய தவத்தைச் சிறிதும் குற்றமறச் செய்தலில் கருத்துடையீராய் அவனது திருவடிகளில் பலவகைப் பட்ட மலர்களைத் தூவி, அன்புக் கண்ணீரைப் பொழிதலால் மழையைப் பெய்யும் மேகத்திற்கு ஒப்பாகும்படி அச்செயலில் நிலைத்து நில்லுங்கள்.

விளக்கவுரை

'மலர் ஏந்தி, மலர் தூவி' என இருகாற் கூறினமையால் இதற்கு இவ்வாறுரைத்தலே கருத்தென்க. மெய்யன்பர் மெய்யன் பரையே ஏற்றுக்கொள்ளுதல் பற்றி, அவர் நடுவில் இருந்து பூசை செய்க' என்றார். அணிகலத்தை உணர்த்தும் 'இழை' என்பது இங்குச் சிலம்பினைக் குறித்து நின்றது.
இதனால் 'மெய்த் தொண்டரின் உடன்படும் பூசையே பூசையாம்' என்பது உணர்த்தப்பட்டது.

வென்று விரைந்து விரைபணி என்றனர்
நின்று பொருந்த நிறைபணி நேர்படத்
துன்று சலமலர் தூவித் தொழுதிடிற்
கொண்டிடும் நித்தனும் கூறிய தன்றே. ***#1810***

உலகியலை அது மயக்காதவாறு வென்று போக்கி, 'இனியாம் விரைந்து செய்யத்தக்க பணியாது' என எண்ணி நின்றவர் யவரும், என்றும் நல்லதொரு பணியில் நின்று சிவனை அடை வதற்கும், சிவனுக்கு மன நிறைவான பண தமக்குக் கிடைத்தற்கும் மிகுந்த நீலையும், பூவையும் கொண்டு ஆட்டியும், தூவியும் வழி பட்டால், சிவன் அதனை விரும்பி ஏற்றுக் கொள்வான். இது படைப்புக் காலத்திற்றானே அப்பெருமானால் சொல்லப்பட்டது.

விளக்கவுரை

'எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர், தாம்விரும்பும்
உண்மை யாவது பூசனை' *8*
என உரைத்தருளினமையை நோக்குக.
'என்றனர்' என்பது வினையாலணையும் பெயர். 'என்றனர் தொழுதிடில் நித்தனும் கொண்டிடும். இஃது அன்றே கூறியது' என முடிக்க மலருக்குரிய தூவுதல் கூறினமையின், சலத்திற்குரிய சுட்டுதல் வருவிக்கப்பட்டது. 'நித்தலும்' என்பது பாடமாயின் 'சிவன்' என்பது வருவிதது‌க் கொள்க. 'கூறியது' என்னும் பயனிலைக்கு 'அவன்' என்னும் எழுவாய் தோன்றாது கூறியது சிவாகமங்களில்' என்க.
இதனால், துறந்தார் சிவபூசையைக் குறவின்றி நிறைவாகச் செய்து சிறந்த பயனைப் பெறற் பாலர்' என்பது கூறப்பட்டது.

சாத்தியும் வைத்தும் சயம்புஎன் றேற்றியும்
ஏத்தியும் நாளும் இறையை அறிகிலார்
ஆத்தி மலரிட் டகத்தழுக் கற்றக்கால்
மாத்திக்கே செல்லும் வழிஅது வாமே. ***#1811***

சிவனை நாள்தோறும் இலிங்கதத்தில் வைத்து, 'சுயம்பு' முதலிய பெயர்களை மிகவும் சொல்லி மலர்களைச் சாத்தியும். திருப்பாடல்கள் பலவற்றால் மிகத் துதித்தும் நின்றால் காணுதல் கூடும். அஃது இயல்வதொன்றுறாய் இருக்கவும் அதனைச் செய்யாது புறக்கணித்துப் போவதால் உலகத்தார் சிவனைக் காண்கிலர். ஆயினும் இங்குக் கூறியவாறு ஆத்தி முதலிய மலர்களைத் தூவி அருச்சித்தலே அக அழுக்காகிய மும்மலங்களும் நீங்குதற்குரிய வழி. மும்மலங்களும் நீங்கினால் பெருந்திசையாகிய வீட்டு நிலையிற் செல்லுதல் எளிதாகும்.

விளக்கவுரை

'வைத்தும்' என்பதை முதலில் வைத்து உரைக்க. வைத்தல் - தாபித்தல். 'இலிங்கத்தில்' என்பது அதிகாரத்தால் வந்தது. ஏற்றுதல் - மிகுவித்தல். சிவனுக்கு ஆத்தியும், கொன்றையும் சிறப்பாக உரியன ஆதலின் அவற்றுள் ஒன்றை விதந்து கூறினார்.
இதனால், 'மலம் நீங்கி வீடு எய்துதற்கு வழி சிவ பூசையே' என்பதும்கூறப்பட்டது.

ஆவிக் கமலத்தின் அப்புறத் தின்புறம்
மேவித் திரியும் விரிசடை நந்தியைக்
கூவிக் கருதிக் கொடுபோய்ச் சிவத்திடைத்
தாவிக்கும் மந்திரம் தாம்அறி யாரே. ***#1812***

உடம்பில் கீழாக உள்ள மூலம் முதலிய ஆறும், அதற்குமேல் ஏழாவதாக

உச்சியில் உள்ளதும் ஆக ஏழு உறுப்புக்களும் தாமலை மலர் வடிவின அவை, 'ஆதாரங்கள்' எனப்படும். ஏழாம் தானத்திற்குமேல் பன்னிரண்டங்குல அளவு அருவமாய் நிற்றலால் அது 'நிராதாரம்' எனப்படும். அந்த நிராதாரத்தையே, 'ஆவிக் கமலத்தின் அப்புறம்' என்றார் இனி, அப்பன்னிரண்டங்குலத்திற்கு அப்பால் உள்ளது 'மீதானம்' எனப்படும். 'துவாதசாந்தம்' என்பதும் இதுவே. இதனையே, 'அப்புறத்தின் புறம்' 'மீதானமே பரமசிவனுக்கு இடமாவது' எனக் கூறப்படுதலால், அவ்விடத்தில், 'மேவித் திரியும் விரிசடை நந்தியை' என்றார்.

'ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல்க உந்தீபற;
விமலற் கிடமதென் றுந்தீபற' *3*

என்றது காண்க. கூவி - அழைத்து. ஆதாரங்களையும், நிராதாரங் களையும், அதற்கு மேலேயுள்ள மீதானத்துயம் கடந்து அப்பால் உள்ள பரமசிவனை அழைக்க வேண்டுதலால், அதன் பொருட்டடு மலர்களை இருகைகளையும் தாமரைப் போது வடிவமாகக் குவித்தலும், மலர்த்தலும் இன்றி இடைப்பட்ட வடிவமாக வைத்து அதனுட் கொண்டு, இருதயம் முதலாக மேலுள்ள ஆதாரங்களில் பிராசாத மந்திர உச்சாரணத்துடன் முறையே மீதானம் மட்டும் உயர்த்துவர். அதன்பின்பு அங்கு இருகைகளையும் மலர்த்தி அவற்றுள் பரமசிவன் அளவிடற்கரிய ஒளிவடிவாய் வந்ததாகக் கருதி, கைகளை உயர்த்திய முறையிலே மீள இறக்கிக் கொணர்ந்து சிவலிங்கத்தின் உச்சியில் அம் மலர்களைச் சொரிந்து முன்னமே சதாசிவ மூர்த்தமாகப் பாவித்து நிறுத்தப்பட்ட அம்மூர்த்தியின் இருதயத்தில் இருகைகளையும் கவிழ்த்து அமைக்கும் முறையால் இருக்கப் பண்ணுவர். அழைத்தல், அல்லது கொணர்தல் 'ஆவாகனம்' எனவும், இருத்துதல் 'தாபனம்' எனவும் சொல்லப் படும். அவற்றையே, 'கூவிக் கருதி' எனவும் 'கொடுபோய்ச் சிவத்திடைத் தாபித்தல்' எனவும் கூறினார்.

விளக்கவுரை

'தாவிக்கும் மந்திரம் தாம் அறியார்' என்றாரியினும், 'மந்திரத்தால் தாவித்தலை அறியார்' என்றலே கருத்தென்க. 'கூவிக் கருதிக் கொடுபோய்த் தாவித்தலை அறியார்' என்றதனால், 'இவற்றுள் ஒன்றையும் அறியார்' என்தாயிற்று. இனி, 'மந்திரத்தால் தாவித்தலை அறியார்' என்றதனால், 'சிலர் சிவ பூசை செய்யினும் முறைப்படி ஆசிரியரை அணுகி அவர் அருளிச்செய்தபடி செய்தலை அறியார்' என்றதும் ஆயிற்று. ஆவி - உயிர். அஃது ஆகுபெயராய் அஃது இருக்கும் இடமாகிய உடம்பைக் குறித்தது. 'ஆவி' குளமுமாம் ஆதலின், குளத்தின்

கண் உள்ள தாமரை' என வேறொரு பொருளையும் தோற்றுவித்தது. இதனால், சிவபூசை செய்யத்தக்கது' என்பதும், 'செய்யுங்கால் முறைப்படி செய்தலே சிறப்பு' என்பதும் கூறப்பட்டன. இம்மந்திரத்தின் பின் சில பிரதிகளில் காணப்படுகின்ற 'சாணகத் துள்ளே' என்னும் பாடல் சில பிரதிகளில் இல்லை. அது நாயனார் வாக்காகத் தெரியவில்லை.

சாணாகத் துள்ளே அழுந்திய மாணிக்கம்
காணு மளவும் கருத்தறிவா ரில்லை
பேணிப் பெருக்கிப் பெருக்கி நினைவோர்க்கு
மாணிக்க மாலை மனம்புகுந் தானே.

அதனை அடுத்துப் பதிப்புக்களில் காணப்படும் 'பெருந்தன்மை நந்தி' என்னும் மந்திரம் அடுத்த அதிகாரத்தில் இருத்தற்கு உரியது.

பெருந்தன்மை நந்தி பிணங்கிருள் நேமி
இருந்தன்மை யாலும்என் நெஞ்சிடங் கொள்ள
வருந்தன்மை யாளனை வானவர் தேவர்
தருந்தன்மை யாளனைத் தாங்கிநின் றோரே.

அதனை அடுத்துக் காணப்படும் 'சமைய மலசுத்தி' என்பது ஐந்தாம் தந்திரத்தில் 'சரியை' என்னும் அதிகாரத்தில் வந்தது.

சமைய மலசுத்தி தன்செயல் அற்றிடும்
அமையும் விசேடமும் ஆமந் திரசுத்தி
சமையுநிர் வாணம் கலாசுத்தி யாகும்
அமைமன்று ஞானமா னார்க்கபி டேகமே.

ஊழிதோ றூழி உணர்பவர்க் கல்லது
ஊழிவ் வுயிரை உணரவுந் தானொட்டா*(து)*
ஆழி அமரும் அரிஅயன் என்றுளோர்
ஊழி கடந்தும்ஓர் உச்சி யுளானே. ***#1813***

பாற்கடலில் பள்ளி கொள்பவனாகிய திருமாலும், மற்றும் பிரமனும் எத்துணையோ யுகங்கள் வாழ்பவராயினும் சிவபெருமான் அவர்கட்கு எட்டாதவனாகவே யிருக்கின்றான். அதனால், அளவற்ற பிறவிகளில் அளவற்ற யுகங்களில் சிவனைப் பொது நீக்கியுணர்ந்து வழிபடுபவர்கட்கல்லது ஏனையோர்க்கு அவரது வினை அவனை அடைய ஒட்டாது.

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கியுரைக்க. யாதொரு பிறப்பும் நிலையாததே ஆகையால், 'ஊழிதோறும் உணர்தல் வேறு வேறு பிறப்பை எடுத்து' என்பது வெளிப்படை. உணர்தற்குச் செயப்படு பொருளாகிய 'சிவனை' என்பது அதிகாரத்தால் வந்தது. அதனால், 'உணர்தல்' என்றது சிவனை உணர்தலேயாகையால், பொது நீக்கி உணர்தலாயிற்று. 'உணர்வும்' என்ற உம்மையால் பின்னின்ற உணர்தல், உணர்ந்து அடைதலைக் குறித்தது.

'பல்லூழி காலம் பயன்றரனை அற்சித்தால்
நல்லறிவு சற்றே நகும்'*

எனப் பிற்காலத்தவரும் கூறினார். இவ்வுயிர் - இவ்வுலகத்துயிர். இதனால், 'சிவனை உரை அடைதல் சிவஞானிகட்கே கூடும்' என்பதும், 'சிவஞானம் சிவபூசையாலன்றி வாராது' என்பதும் முடித்துக் கூறப்பட்டன.

*9.12.*குருபூசை

ஆகின்ற நந்தி யடித்தா மரைபற்றிப்
போகின் றுபதேசம் பூசிக்கும் பூசையும்
ஆகின்ற ஆதாரம் ஆறா(று) அதனின்மேற்
போகின்ற பொற்பையும் போற்றகின் றேனே. #*1814*

எனக்கு இனி வேறொரு துணையின்றாகத் தாம் ஒருவரே துணையாய் நிற்கின்ற நந்தி பெருமானது திருவடிகளைப் பற்றி நின்றே உயிர்கள் பற்றி ஒழுகுதற்குரிய இறைநூல், அவற்றின்வழி இறைவனை வழிபடும் வழிபாடு, அகக்கோயில்களாகிய ஆதாரங்கள், முப்பத்தாறு தத்துவங்கள், அத்தத்துவங்களைக் கடந்து அவையனைத் திற்கும் மேலே செல்கின்ற தூய்மை ஆகிய இவைகளை நான் கருத்தாக உணர்ந்து, உலகர்க்கும் உரைப்பேனாயினேன்.

விளக்கவுரை

'இது குருவருளால் கிடைத்த பேறு' என்பதாம். இறைவன் உயிர்களின் பொருட்டு அருளிச்செய்தன ஆதலான், அவனது நூலாகிய வேத சிவாகமங்களை 'உபதேசம்' என்றார். 'போதம்' இரண்டில், முன்னது நடத்தல்; அஃதாவது ஒழுகுதல். பின்னது, கடந்து செல்லுதல். வேதச் சிறப்பு. ஆகமச் சிறப்பு முதலி யவைகளை நாயனார் முதற்றொட்டுக் கூறிவருதல் வெளிப்படை. தமது வரலாற்றை உணர்த்துதற் பொருட்டுப் பாயிரத்துள், 'நந்தி யருளாலே நாதனார் பேர்பெற்றோம்' எனக் கூறிய அதனை இங்குக் குருவருளின் பெருமையை உணர்த்துதற் பொருட்டுக் கூறினார். குருவருளால் தாம்பெற்ற பேற்றினையும், குருவை மறவாமையும் கூறியதனால், 'நீவிரும் குருவை அடையின் இப்பேற்றினைப் பெறலாம். பெற்றபின் குருவருளை மறக்கலாகாது' என்பது குறிப் பாயிற்று, 'போகின்ற' இரண்டில் முன்னதில் ஈற்று அகரம் தொகுத்த லாயிற்று. தூய்மையை, 'பொற்பு' என்றார். வீட்டு நிலை, சுத்தநிலையாதலை அறிக.

இதனால், குருவருளின் சிறப்பும், அதனைப் பெற்றோர் அவரை நினைந்தே எதனையும் செயற்பாலர்' என்பதும் கூறப்பட்டன.

பெருந்தன்மை நந்தி பிணங்கிருள் நேமி
இருந்தன்மை யாலும்என் நெஞ்சிடங் கொள்ள
வருந்தன்மை யளனை வானவர் தேவர்
தருந்தன்மை யாளனைத் தாங்கநின் றாரே. #*1815*

சிவனது திருவருளை மிகப்பெற்ற நந்தி பெருமான், அப்பேறுடைமை பற்றியேயன்றிச் சிவனோடு மாறுபட்டுப் பகைச் செயலையே புரிகின்ற ஆணவ இருளுக்குப் பகலவனாய் இருத்தல் பற்றியும் அவரை

முனிவரும், தேவரும் தம் இதயத்திலே எப்பொழுதும் வைத்துத் தியானிக்கின்றனர்.

விளக்கவுரை

சிவனது திருவருளினும் பெரியது வேறொன்றின் மையால் அதனையே, 'பெருந்தன்மை' என்றார். 'பெருந்தன் மையை உடைய நந்தி' என்க. நேமி சக்கரம் ஆதலின் அது 'பரிதி' என்னும் பெயரைத் தோற்றுவித்துப் பகலவனை உணர்த்திற்று. 'நேமியாம் இருந்தன்மை' என்க.
இருந்தன்மை - சிறப்பு. உம்மை இறந்தது தழுவிற்றாகலின் அதற்கேற்ற பொருள் முன்பு வருவிக்கப் பட்டது. 'என் சித்தத்தே தன்னை வைத்தருளிய குருமூர்த்தி * 'என்னையிப் பவத்திற் சேராவகை' என்றபடி 'வானவர்' என்பதில், 'வான்' என்பது, 'உயர்வு' என்னும் பொருட்டாய் நிற்க. 'வானவர்' என்பது, 'உயர்ந்தோர்' எனப் பொருள் தந்தது. 'வானவர் தேவர்' உம்மைத்தொகை. இதனை, 'தாங்கி நின்றார்' என்பதற்கு முன்னே கூட்டியுரைக்க. 'தாங்குதல் அறிவினால்' ஆகலின், அதற்கு இவ்வாறு உரைக்கப்பட்டது.
இதனால் 'முனிவர், தேவர் என்பவரும் குருவின் வழியே ஞானம் பெறுகின்றனர்' எனக் குருவருளின் இன்றியமையாமை கூறப்பட்டது.

கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுறு மாமலர் இட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரஒண் ணாதே. ***#1816***

காட்டில் பொருந்தியுள்ள கோடிக் கணக்கான சந்தன மரங்களின் கட்டைகளைத் தேய்த்தெடுக்கப்பட்ட நறுமணம் கமழ்கின்ற சந்தனத்தையும், அதுபோலவே ஆகாயம் அளாவக் குவிக்கபப்ட்ட பெருமை மிக்க மலர்கலையும் பயன்படுத்திச் சிவனை வழிபட்டாலும் உடம்பைத் தம்மின் வேறாக உணர்ந்து அதன்கண் உள்ள பற்றை விடுத்துச் சிவனையே பற்றாக உணர்பவர்க்கல்லது ஏனையோர்க்கு அவனது, தேன் நிறைந்த செந்தாமரை மலர்போலும் திருவடியைச் சேர இயலாது.

விளக்கவுரை

'அவனை அவ்வாறு உணரும் உணர்வைக் குருவினால் அன்றி அடைய இயலாது' என்பது குறிப்பெச்சம்.
இதனால், 'மேற்கூறிய சிவபூசையும் குருவருள் பெற்றே செயற்பாலது ஆகலின், சிவபூசைக்கு முன்னே குருபூசை செய்தல் இன்றியமையாதது' என்பது உணர்த்தப்பட்டது.

மேவிய ஞானத்தின் மிக்கிடின் மெய்ப்பரன்

ஆவயின் ஞான நெறிநிற்றல் அற்சனை
ஓவற உட்பூ சனைசெய்யில் உத்தமம்
சேவடி சேரல் செயலறல் தானே. *#1817*

குருவருளால் கேள்வியாகப் பெற்ற ஞானத்தைப் பின் சிந்திதத்ல, தெளிதல் என்பவற்றின்பின் நிட்டையாக முதிரப் பெறின் அவ்விடத்தில் அந்த நிட்டையில் நிற்றலே பரசிவ பூசை யாகும். (ஆகவே அந்நிலையை அடைந்தவர்க்கு ஏனையோர்க்குக் கூறப்பட்ட சிவபூசைகள் வேண்டாவாம்) அந்நிலையை அடையாது கேள்வி முதலிய மூன்றில் நிற்போர்க்கு, 'உள்ளம் பெருங்கோயில்' என்னும் மந்திரத்துட் கூறியவாறு செய்யும் ஞான பூசையே சாதனமும், அப்பூசையின் பயனாகத் தற்போதம் கழன்றிருத்தலே பயனும் ஆகும்.

விளக்கவுரை

'ஞானம் குருவருளாயன்றி வாராது' என்பது மேற் கூறப்பட்டமையால், இங்கு 'மேவிய ஞானம்' என்றதற்கு இவ்வாறு உரைக்கப்பட்டது.
'மெய்ப்பரன்' என்பது 'உண்மைச் சிவன்' என்பதாய், பரவசிவனைக் குறித்தது. ஞானமாவது, அவனையறியும் அறிவேயாதல் அறிக.
'நிட்டையே ஞானத்தின் நிறை நிலை' என்றற்கு அதனை 'ஞானத்தில் ஞானம்' என்றும், ஏனைக்கேள்வி முதலிய மூன்றனையும், 'ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம்' என்றும் சிவாகமங்கள் கூறுதல் காண்க.
இனி நிட்டை நிலையை அடைந்தோரும் அந்நிலையிலே மீட்சியின்றி நிற்கமாட்டாது மீள்வாராயின் ஞானத்திற் சரியை முதலிய வற்றில் உள்ளோர்க்குக் கூறப்பட்ட நெறியிற்றானே நிற்பர். அப் பொழுது அவையெல்லாம் 'உபாயநிட்டைகள்' என, 'நிட்டை' என்றே சொல்லப்படும். ஏனையோர் செய்வன எல்லாம் எவ்வகையாலும் 'சரியை, கிரியை, யோகம்' என்றே சொல்லப்படும். நிட்டைக்குப் பயனே ஆனந்தமாக, உபாய நிட்டைக்குப் பயன் அருள்மயம் ஆதலே என்பதுபற்றி, 'செயலறல் தானே சேவடி சேரல்' என்றார்.
இதனால், 'நிட்டை நிலையை எய்தினோரும் அதனில் நிற்க மாட்டாது மீள்வாராயின் பின்னும் கிழ்நிலையை எய்தாமைப் பொருட்டு, குருபூசை சிவபூசைகளைச் செயற்பாலர்' என்பது கூறப்பட்டது.

உச்சியுங் காலையு மாலையும் ஈசனை
நச்சுமின் நச்சி 'நம' என்று நாமத்தை
விச்சுமின் விச்சி விரிசுடர் மூன்றினும்
நச்சுமின் பேர்நந்தி நாயக னாகுமே. *#1818*

உலகீர், 'காலை, நண்பகல், மாலை' - என்னும் மூன்று போதிலும் சிவனை வழிபட விரும்புங்கள். அவ்வழிபாட்டில் 'நம' என்பதை

இறுதியில் உடைய மந்திரம் சிறப்புடையனவாகும் ஆதலால் அவற்றையே மிகுதியாக உங்கட்குப் பயனை விளைக்கும் வித்துக்களாக விதையுங்கள். அவ்வாறு விதைப்பதற்குரிய நிலமாய் விளங்குவன 'கதிர், மதி, தீ' - என்னும் முச்சுடர்களுமாம். (ஆகவே, அவ்விடத்து அவற்றை விதையுங்கள்) அச்சிவன் 'நந்தி' என்னும் பெயருடைய குருமூர்த்தியாயும் விளங்குவன்.

விளக்கவுரை

தமக்கு நந்திபெருமான் குருவாயினமை பற்றி, 'நந்தி நாயகனாகும்' என்றருளிச் செய்தாரேனும், 'அவரவர்க்கு அருள் செய்த அவ்வக் குருமார்களாயும் அவன் விளங்குவான்' என்பதே கருத்தென்க. எனவே, 'இங்கு விதிக்கப்பட்ட முறையிலே குருவை வழிபடுக' என்றதாம். 'குருவருள் பெற்றோர்க்குக் குருவே சிவனாதல் பற்றி, முச்சுடர் முதலிய எவ்விடத்தும் அவர் குருவையே காண்பர்' என்பதாம். 'நாயகன்' என்பது இங்குக் குருவைக் குறித்தது.

செய்யுள் நோக்கி 'உச்சி' முதற்கண் வைக்கப்பட்டது. ஆன்மார்த்த வழிபாட்டிற்கு முப்போதே அமையும் ஆதலின் அவற்றையே கூறினார். காலையின் விரிவு விடியலும், மாலையின் விரிவு எற்பாடுமாக நள்ளிரவுங் கூட்டி ஆறுகாலம் பரார்த்த வழிபாட்டில் கொள்ளப்படுகின்றன. அவை முறையே உஷத்காலம், பிராதக் காலம், மாத்தியானிக காலம், சாயங்கால உபசந்தி (பிரதோஷகாலம்) சாயங்கால மகாசந்தி (இரண்டாம் காலம்) அர்த்த ஜாமம் எனப்படுகின்றன. மலர் தூவி அருச்சித்தல் முதலாகப் பெரும் பாலானவற்றிற்கு உரியவாகும் சிறப்புப் பற்றி, 'நம' என்னும் மந்திரங்களையே குறித்தார்.

இதனால், குருவழிபாடு முப்போதும் செய்தற்குரியதாதல் கூறப்பட்டது. இதனை அடுத்துப் பதிப்புக்களில் காணப்படும் 'புண்ணிய மண்டலம்' என்னும் மந்திரம் அடுத்த அதிகாரத்திற்கு உரியது.

இந்துவும் பானுவுமி யங்குந் தலந்திடை
வந்தித்த தெல்லாம் அசுரர்க்கு வாரியாம்
இந்துவும் பானுவுமி யங்காத் தலத்திடை
வந்தித்தல் நந்திக்கு மாபூசை யாமே. ***#1819***

'சந்திர கலை' எனவும், 'சூரிய கலை' எனவும் சொல்லப்படுகின்ற இடநாடி மூச்சும், வலநாடி மூச்சுக் காற்று இயங்கின் மனம் புறத்தே ஓடுதலல்லது அகத்தே அடங்கி நில்லாது. ஆகவே, அது பொழுது செய்யும் வழிபாடு குற்றம் உடைத்தாம் ஆதலின், 'அஃது அசுரர்க்கு வாரியாம்' என்றும், மூச்சுக்காற்று இயங்காது அடங்கின் மனமும் புறத்தே ஓடாது அகத்தே அடங்கி நிற்கும். ஆகவே, அதுபொழுது

செய்யும் வழிபாடு குற்றமில்லாதாம் ஆதலின், 'அது நந்திக்கு மாபூசையாம்' என்றும் கூறினார். சிவ பூசையே பெரிய பூசையாதல் பற்றி, 'மாபூசை' என்றார். மூச்சுக் காற்றை மேற்கூறிய இருவழிகளிலும் செல்லாது அடக்குதலே பிராணாயாமமாம். அம்முறையால் பிராணனை அடக்கியவழி கும்பகமாம். அப்பொழுது மூச்சுக் காற்று நடுநாடியிற் செல்லும். அங்ஙனம் செல்லும்பொழுது தியானங்கள் இனிது கைகூடும். 'எந்நிலையில் நிற்போரும் 'வழிபாடு' என்பதை மேற்கொள்ளும்பொழுது பிராணாயாமம் செய்து செய்க' என்றபடி. வாரி - வருவாய் அறவே விலக்குதற் பொருட்டு 'அசுரர்க்கு வாரியாம்' என்றாரேனும், 'பயன் அற்பமாம்' என்றலே கருத்து என்க.

விளக்கவுரை

இதனால், எவ்வகை வழிபாடும் பெரும்பயன் தருதற்கு ஆவதொரு வழி கூறப்பட்டது இதனை எந்த வழிபாடு கூறுமிடத்திலும் கூறலாமாயினும் குருவழிபாடு சிறந்தமை பற்றி இங்கே கூறினார்.

இந்துவும் பானுவு மென்றெழு கின்றதோர்
விந்துவும் நாதமு மாகிமீ தானத்தே
சிந்தனை சாக்கிரா தீதத்தே சென்றிட்டு
நந்தியைப் பூசிக்க நற்பூசை யாமே. ***#1820***

சந்திர கலையும், சூரிய கலையுமாகச் சொல்லப் படுகின்ற மூச்சுக்காற்று அடக்கப்பட்டபொழுது நடுநாடி வழியாக மேல் ஏறி விந்துத்தானமாகிய ஆஞ்ஞையையும், நாதத்தானமாகிய ஏழாந்தானத்தையும் கடந்து அதற்குமேல் பிரம ரந்திரம் வழியாகப் பன்னிரண்டங்குல அளவுள்ள நிராதாரத்தே செல்லின் அந்நிலை 'சாக்கிரத்தில் துரியம்' எனப்படும். அதனையும் கடந்திருப்பது மீதானம். அது சாக்கிரத்தில் அதீதத்தானம். அந்நிலையில் சிந்தனையைச் செலுத்திச் சிவனை வழிபடுதலே எல்லாவற்றிலும் மேலான வழிபாடாம்.

விளக்கவுரை

'ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல்க உந்தீபற;
விமலற் கிடமதென் றுந்தீபற' *
என்னும் திருவுந்தியார் இங்கு நோக்கத் தக்கது.

மீதானமே, 'துவாதசாந்தப் பெருவெளி' என்றும், துரியங் கடந்த பரநாத மூலத்தலம்' * என்றும் சொல்லப்படுகின்றது. 'சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் இந்நிலையினரே' எனச் சேக்கிழார் விளக்குதல் காண்க. *8*
என்று - எனப்பட்டு. எழுகின்றது - எழுகின்ற மூச்சுக் காற்று. ஓர் - சிந்திக்கின்ற; வினைத்தொகை. ஆகி - இடத்தால் அவையேயாய்.

'சென்றிட்டு' என்பதை 'மீதானத்தே' என்பதன் பின்னர்க் கூட்டுக. 'அதீதத்ததே' என்பது இடைக் குறைந்து 'அதீதத்தே' என நின்றது. இதனால், 'எல்லா வழிபாட்டிலும் மேலான வழிபாடு இது' என அதன் இயல்பு கூறப்பட்டது.

மனபவ னங்களை மூலத்தின் மாற்றி
அநித உடல்பூத மாக்கி யகற்றிப்
புனிதன் அருளினிற் புக்கிருந் தின்பத்
தனிஉறு பூசை சதாசிவற் காமே. *#1821*

மனத்தின் ஓட்டத்திற்குக் காரணமாயுள்ள இட ஓட்ட வல ஓட்ட மூச்சுக் காற்றுக்களை அவ்வழியே ஓட விடாது தடுத்து நடு நாடி வழியாக ஓடும்படி மாற்றி, பூத காரியமாய் நின்று அழிகின்ற உடலை அவ்வாறு அழியாது நிலைத்திருக்கின்ற உடலாகச் செய்தற் பொருட்டு அதன் காரணமாகிய பூதங்களில் ஒடுக்கி அவையாகச் செய்யுமாற்றால் போக்கி, மீண்டு அது திருவருளினின்றும் தோன்றச் செய்யுமாற்றால் திருவருள் உடம்பாக ஆக்கி அதனுள் தான் புகுந்து சிவமாகி அதனானே சிவானந்தம் மேலிட நின்ற வழிபடும் வழிபாடே ஒப்பற்ற வழிபாடாகும். அதனையே சதாசிவ மூர்த்தி ஏற்பர்.

விளக்கவுரை

'மூலம்' என்பது ஆகுபெயராய் அதற்கு மேலுள்ள சுவாதிட்டானத்தையும், பின் அங்குள்ள சுழுமுனை நாடியையும் குறித்தது. 'மூலத்தான்' என்பது பாடமாயின், 'மூலமாகிட அவ் விடத்து' என உரைக்க. 'அநித்தம்' என்பது, 'அநிதம்' என இடைக் குறைந்து நின்றது. 'புக்கு' என்றதனால் முன்பு வெளியே சென்றிருந் தமை பெறப் பட்டது. சிவபூசையைத் தொடங்குதற்கு முன்னே யோக பாவனையால் பூதசுத்தி செய்யுமாற்றால் பௌதிக உடலை அழித்துத் திருவருள் உடம்பை உண்டாக்கி அதில் தான் புகுந்து சிவோகம் பாவனையால் சிவமாகியே பூசையைத் தொடங்குதலும், அதன் பொருட்டு பூத சத்திக்கு முன்னே தன்னைப் பௌதிக உடம்பினின்றும் பிரித்துத் துவாத சாந்தமாகிய மீதானத்திலுள்ள சிவத்தின்பால் சேர்த்து நிறுத்திப் பின்பு மீட்டும் முன்போ் கொணர்ந்து திருவருள் உடம்பிற் சேர்த்துச் சிவமாகின்ற முறை இம்மந்திரத்தால் உணர்த்தப்பட்டது. இவ்வாறு செய்தலே உண்மைச் சிவபூசையாகலானும், இதனைக் குரு முகமாக அன்றி அறிதல் கூடாமையால் 'அவ்வாறு அறியாது தாம் தம் அறிந்தவாறே செய்யும் பூசைகள் எல்லாம் பொதுச் சிவ பூசைகளே' என்று சிவாகமங்கள் கூறுகின்றன. அதனையே இங்கு நாயனார் உணர்த்தினார் என்க.

இதனால், சிவபூசை உண்மைப் பூசையாக அமையுமாறு கூறப்பட்டது.

பகலு மிரவும் பயில்கின்ற பூசை
இயல்புடை யீசற் கிணைமல ராகா
பகலு மிரவும் பயிலாத பூசை
சகலமுந் தான்கொள்வன் தாழ்சடை யோனே. *#1822*

பகலும், இரவும் ஆகிய கால வேறுபாடுகள் தோன்றுகின்ற பூசைகள் காலத்தைக் கடந்தவனாகிய சிவனுக்கு முற்றிலும் நேர்படும் பூசைகள் ஆகா. மற்று, அவ்வேறுபாடு தோன்றாத பூசைகளையே சிவன் முழுமையாக ஏற்பான்.

விளக்கவுரை

'உலகியல் முற்றும் மறக்கப்படாத வரையில் பகலும், இரவுமாகிய காலவேறுபாடுகள் தோன்றாமற் போகமாட்டா. அதனால் அவை சிவன் ஒருவனையே நினைந்து செய்யும் பூசைகள் ஆதல் இல்லை. உலகியல் முற்றும் மறக்கப்பட்ட பொழுது மேற்கூறிய வேறுபாடுகள் தோன்றமாட்டா ஆதலால் அந்நிலையில் நின்று செய்யும் பூசைகளே சிவனேயன்றி வேறொன்றையும் நினையாத பூசையாம்' என்றபடி. சண்டேசுர நாயனார் சிவபூசை செய்து கொண்டிருக்கும் பொழுது அவர்தம் தந்தை வந்து அவரை வைததையும் தண்டால் பலமுறை முதுகிற் புடைத்ததையும் அவர் சிறிதேனும் அறியா திருந்ததையும், பின்பு அவன் சிவபூசைக்கு அழிவை உண்டாக்கியதை உடனே அறிந்ததையும் இங்கு நினைவு கூர்க. அதுபோலும் சிவபூசையே முழுமையான சிவபூசை யாகும்.

'கையொன்று செய்ய விழியொன்று நாடக்
கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப்
புலால்கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க
விரும்புமியான்
செய்கின்ற பூசைஎவ் வாறுகொள் வாய்வினை
தீர்த்தவனே'*l*

எனப் பிற்காலப் பெரியார் அருளிச் செய்தது இக்கருத்துப் பற்றியேயாம். மலரால் செய்யப்படுவதனை 'மலர்' என்று உபசரித்தார். சகலமும் - முற்றிலும்.

இதனால், சிவபூசை நிரம்பாவாறும், நிரம்புமாறு கூறப்பட்டன.

இராப்பக லற்ற இடத்தே யிருந்து
பராக்கற ஆனந்தத் தேறல் பருகி
இராப்பக லற்ற இறையடி யின்பத்*(து)*
இராப்பகல் மாயை இரண்டடித் தேனே. *#1823*

இரவும், பகலும் ஆகிய கால வேறுபாடுகள் தோன்றாத ஆழ்ந்த தியான நிலையேயிருந்து, அதனால் விளைகின்ற சிவானந்தமாகி தேனை வேறுநினைவின்றிப் பருகினமையால், இரவும், பகலும் ஆகிய கால வேறுபாடுகள் இல்லாத இறைவனது திருவடியின்பத்தில் திளைத்து, மேற்கூறிய வேறுபாடுகளையுடைய காலமாகிய மாயா காரியம் இரண்டினையும் யான் போக்கிவிட்டேன்.

விளக்கவுரை

'தேறல்' என்றது 'தேன் துளி' என்னும், பொருட்டாய்ச் சிவானந்தத்தை ஓரளவே சுவைத்ததையும், 'இன்பம்' என்றது 'இன்ப வெள்ளம்' என்னும் பொருட்டாய் அதில் மூழ்கித் திளைத்ததையும் குறித்தன.

யோகாவத்தையில் தியானம் துரியமும், சமாதி துரியாதீதமும் ஆதலை விளக்குதற்கு இவ்வாறு அருளிச் செய்தார்.

இதனால், சிவ பூசையைத் தாம் நிரம்பச் செய்து பெற்ற அனுபவத்தை விளக்கி முடித்தவாறு.

9.13.மாகேசுர பூசை

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயின்
நடமாடக் கோயில் நம்பற்கங் காகா
நடமாடக் கோயில் நம்பற்கொன் றீயின்
படமாடக் கோயிற் பகவற்க தாமே. ***#1824***

கொடித் துகில் ஆடுகின்ற இயங்காக் கோயிலினுள் எழுந்தருளியிருக்கும் சிவனுக்கு ஒரு பொருளை ஏற்பித்தால் அஃது எங்கும் இயங்குகின்ற உடம்பாகிய கோயிலினுள் எழுந்தருளி யிருக்கின்ற சிவனுக்குச் சேரமாட்டாது; அங்கேயே இருந்துவிடும். ஆனால், எங்கும் இயங்கும் உடம்பாகிய கோயிலினுள் எழுந்தருளி யிருக்கும் சிவனுக்கு ஒரு பொருளை ஏற்பித்தால் அஃது அந்தச் சிவனுக்கு ஆதலுடன், கொடித்துகில் ஆடுகின்ற இயங்காக் கோயிலினுள் எழுந்தருளியிருக்கின்ற சிவனுக்கும் போய்ச் சேர்வதாகும்.

விளக்கவுரை

'ஆகவே, இருவரையும் வழிபடல் வேண்டுமாயினும், இயங்கும் கோயிலினுள் இருக்கும் சிவனை வழிபடுதல் தவிரத் தக்கதன்று' என்றபடி.

படம் - சீலை. 'ஆடும்' என்றதனால், அது கொடிச் சீலையைக் குறித்தது. 'கட்டடமாக மக்களால் அமைக்கப்பட்ட கோயில்' என்பதை விளக்க. 'படம் ஆடு அக்கோயில்' எனவும், 'உள்ளம் பெருங்கோயில்; ஊனுடம்பு ஆலயம்' என்றபடி, 'உடம்பாகிய கோயில்' என்பதை விளக்க. 'நடமாடு அக்கோயில்' எனவும் கூறினார். நடமாடுதல் - உலாவுதல். நடம் ஆடுதல்'

என்பது, 'நடனம் ஆடுதல்' எனப் பொருள்தருமாயினும் உலகவழக்கில் 'உலாவுதல்' என்னும் அளவாய் நிற்றலின் அஃதேபற்றி 'நடமாடும் அக்கோயில்' என்றார்.
'திருக்கோயிலினுள் இருக்கும் திருமேனிகள் மந்திர சாந்நியத் தால் சிவனேயாய் விளங்குதல் போல, அடியார்களது ஆன்ம சைதன் னியமும் ஆழ்நிலைத் தியான சமாதிகளாலும், அருள்ஞான உணர் வாலும் சிவனேயாம் ஆதலின், இடவேறுபாடு பற்றி வேற்றுமை யில்லை' என்றற்கு இரண்டினையும், 'பகவன், நம்பன்' என்றே குறித் தருளினார். இதனால் 'மாகேசுரர் மகேசுரனே' என்பதைக் குறிப்பால் உணர்த்தியவாறு. 'ஒன்று' என்றது, 'எடுத்துக்காட்டிற்கு ஒன்று' என்றவாறு.
இதனால், 'இலிங்க பூசை இயலாதாயினும் சங்கமபூசை ஒழியாது செய்யத்தக்கது' என்பது கூறப்பட்டது.

தண்டறு சிந்தைத் தபோதனர் தாம்மகிழ்ந்து
உண்டது மூன்று புவனமும் உண்டது
கொண்டது மூன்று புவனமும் கொண்டதென்று
எண்டிசை நந்தி எடுத்துரைத் தானே. *#1825*

'சிவனிடத்தினின்று பிறிதொன்றால் நீக்கப்படாத உள்ளத்தினையுடைய மாகேசுரர்கள் மனமகிழ்ந்து உண்ட பொருள் மூன்றுலகங்களும் உண்ட பொருளாகும்; (அவற்றிற்கு அது பயனாகும்' என்பதாம்) அதுபோலவே அவர்கள் பெற்றுக்கொண்ட பொருளும் மூன்றுலகங்களும் பெற்றுக்கொண்ட பொருளாம், என்று நந்தி பெருமான் எங்கட்குச் சிறந்தெடுத்துக் கூறினார்.

விளக்கவுரை

'சிவன் இலிங்க பூசையை ஏற்று மகிழ்தலினும் தன் அடியவர் பூசையை ஏற்பதில் மிக்க மகிழ்ச்சி எய்துவன் ஆதலின், அம்மகிழ்ச்சியால் அவனை உயிராக உடைய உலகம் அனைத்தும் மகிழ்வெய்தும்' என்றபடி.
'அத்துணை மகிழ்ச்சிக்குக் காரணம் அவரது உணர்வின் சிறப்பு' என்பதை உணர்த்த, 'தண்டறு சிந்தைத் தபோதனர்' என்றார். தண்டல் - நீக்குதல். 'எண்டிசை' என்பதன் பின் 'புகழும்' என ஒரு சொல் வருவிக்க.
'மகிழ்ந்து உண்டது' என்றதனால், 'அவர் மகிழும்படி வழிபடல் வேண்டும்' என்றதாயிற்று. இனைத்துணைத் தென்பதொன்றில்லை; விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். -திருக்குறள், *97*
என்னும் பொதுமறையை இது முதலாக வருகின்ற மந்திரங்களோடு ஒப்பிட்டுணர்க.

மாத்திரை ஒன்றினில் மன்னி அமர்ந்துறை

ஆத்தனுக் கீந்த அரும்பொரு ளானது
மூர்த்திகள் மூவர்க்கும் மூவேழ் குரவர்க்கும்
தீர்த்தம தாம்அது தேர்ந்துகொள் வீரே. *#1826*

இப்பாடலின் பொருள் பின்வரும் குறிப்புரையால் இனிது விளங்கும்.

விளக்கவுரை

'சீவன்' என்னும் பெயரின் முதலெழுத்து இரு மாத்திரையுடையதும், 'சிவன்' என்னும் பெயரின் முதலெழுத்து ஒரு மாத்திரையுடையதும் ஆதல் பற்றி, 'சீவன்' என்னும் நிலையில் நில்லாது, சிவனிடத்தில் நிலைத்து நின்று அவனேயான அடியவனை. 'மாத்திரை யொன்றின் மன்னியமர்ந்துறை - ஆத்தன்' என்றார். சிவனடியார்கள் மாகேசுரன் எனப்படும் காரணத்தை விளக்கியவாறு. 'மகேசுரனுக்குள் அடங்கிநிற்பவன் மாகேசுரன்' என்றபடி. ஆத்தன் - நம்புதற்குரியவன். 'தன்னை நம்பினவர்க்கு உறுதியையே சொல்லுதலும், செய்தலும் உடையவன்' என்பதாம். எனவே, 'மாகேசுரர் அத்தகையினர்' என்பது பெறப்பட்டது. சிறப் புணர்த்த வேண்டிச் சாதியொருமையாற் கூறினார். 'இப்பெயர் ஆசாரி யனையே குறிக்கும், என்பாரும் உளர். அங்ஙனமாயின் இம்மந்திரம் 'குருபூசை' என்னும் அதிகாரத்தில் உளதாக வேண்டும் என்க.

மூர்த்திகள் மூவர் - அயன், அரி, அரன். குரவர் - முன்னோர். ஏழ்குரவர், தந்தை முதலாக முறையானே முன் முன் நோக்க வரும் எழுவர். மூவெழுவராவார், தந்தைவழி தாய் வழி மனைவி வழி என்னும் மூவழியிலும் உள்ள முன்னோர் ஓரோர் எழுவர். 'தீர்த்தம்' என்றது, 'நீர்' என்னும் பொருட்டாய் நின்றது. அஃது ஆகுபெயராய் நீர்வழியாகக் கொடுக்கும் பொருளை உணர்த்திற்று. முன்னோர்க்குப் பாவனையாற் கொடுப்பன யாவும் நீர் இறைக்குமாற்றால் கொடுக்கப் படுதலை நினைக. இதனைத் திருவள்ளுவர், 'தென்புலத்தார் கடன்' (திருக்குறள், 53) என்றார்.

மாகேசுர பூசை பெரும்பான்மையும் இல்லறத்தாராலே செய்யப்படும் ஆதலின், 'அவர்க்கே சிறப்பாக உரிய விருந் தோம்பலில் மாகேசுர பூசையே சிறப்புடையது' எனக் கூறுபவர், 'தென்புலத்தார் கடனும் அதுவே' என்பதை இதனாற் கூறினார். இனி, 'அவர்க்குத் தெய்வ வழிபாடாவதும் இதுவே என்பதை, 'மூர்த்திகள் மூவர்க்கும்' எனத் தேவருள் தலையாயினாரைக் கூறினார்.

'விருந்தோம்பல், தென்புலத்தாரை வழிபடல், தெய்வங்களை வழிபடல் என்பவற்றை அந்தணரை வழிபடுதலானே செய்தல் வேண்டும்' என்பது வைதிக நெறியே; அவைகளை மாகேசுரர் வழியாகச் செய்தலே சைவநெறி' என்பது இவ்வதிகாரத்துள் உணர்த்தப்படுதல் அறிக.

இதனானே, 'அந்தணர் பூசுரராயினும், மாகேசுரர் பூசிவர்' என்றதூஉமாயிற்று. இவர்களை, 'பராவுசிவர்' *(சிவஞான சித்தியார், சூ. 8. 35)* என்றார் அருணந்தி தேவர்.

அகர மாயிர மந்தணர்க் கீயிலென்
சிகர மாயிரஞ் செய்தே முடிக்கில்லென்
பகரு ஞானி பகலுண்பலத் துக்கு
நிகரிலை யென்பது நிச்சயந் தானே. ***#1827***

அந்தணர் வாழும் வீதிகள் பலவற்றை அவர்கட்குத் தானம் செய்தலும், அவ்வீதிகளில் அவர்கட்கு உயர்ந்த மாட மாளிகைகள் பல கட்டித் தருதலும் ஆகிய இவற்றால் விளையும் பயன்கள் யாவும் மாகேசுரன் ஒருவனை வழிபட அவன் உண்டதனால் விளையும் பயனளவிற்கு ஒவ்வாது குறைவனவே என்பது உறுதி.

விளக்கவுரை

'அகரம்' என்பது 'அக்கிரகாரம்' என்பதன் மரூஉ. 'முதற் சுற்று' என்பது அதன் பொருள். 'கோயிலைச் சூழ்ந்த முதற் சுற்று வீதிகளே அந்தணர் இருத்தற்குரிய இடம்' என்பது வைதிக முறைமையாதலின் அம்முறைமைபற்றி அவர்கள் வீதி எங்கிருப்பினும் அஃது 'அக்கிரகாரம்' எனப்பட்டது. 'அந்தணர்களை மாட மாளிகை களில்தான் வாழவைத்தல் வேண்டும், என்பதும் வைதிக நெறி யாகலின், அவர்கள் வாழும் முதற்சுற்று வீதி, 'மாடவீதி' எனப்பட்டது.

'திருக்கோயிலை நடுவாக வைத்து அதனைச் சூழ ஏழு சுற்று அமைய மதில்களை எழுப்ப அவைகளில் அமையும் வீதிகள் யாவும் மாடவீதிகள்' எனவும், 'அவ்வீதிகளில் பரத்தையர் தவிர மற்றையோர் யாவரும் கலந்தே வாழ்தல் வேண்டும்' எனவும், 'அந்த வீதிகளைச் சுற்றிக் கடைத் தெருக்கள் இருத்தல் வேண்டும்' எனவும், 'ஆக எல்லா வீதிகட்கும் புறத்திலே பரத்தையர் வீதி அமைதல் வேண்டும்' எனவும் சிவஞான யோகிகள் தமது காஞ்சிப் புராணத்தில் 'நகர வருணனை' வாயிலாகப் புலப்படுத்தியுள்ளார்.

பகரும் ஞானி - இவ்விடத்தில் சொல்லப்படும் ஞானி; மாகேசுரன். 'பகல்' என்றது 'ஒரு பகல்' என்றபடி. இம்மந்திரத்தில் பாடம் திரிபு பட்டுள்ளது. இதனால், அந்தணர்க்குச் செய்யும் தானங்களினும் மாகேசுரருக்குச் செய்யப்படும் தானம் பன்மடங்கு உயர்ந்ததாதல் கூறப்பட்டது.

ஆறிடு வேள்வி அருமறை சாலவர்
கூறிடு மந்தணர் கோடிபேர் உண்பதில்
நீறிடுந் தொண்டர் நினைவின் பயன்நிலை
பேறெனில் ஓர்பிடி பேறது வாகுமே. ***#1828***

ஆறு அங்கங்களால் தெளிய உணர்த்தப்படும் வேள்விகளைச்

செய்கின்றவரும், வேதமாகிய நூலை ஓதுகின்றவரும், முப்புரிநூல் அணிபவரும் ஆகிய அந்தணர்கள் கோடிபேர் உண்டு மகிழ் வதனால் உண்டாகின்ற பயனோடு திருநீற்றை யணிகின்ற சிவ னடியார் சிலர் உண்டு மகிழும் மகிழ்ச்சியால் விளைந்து நிலைக்கின்ற பயனை வைத்து எண்ணிப் பார்க்குமிடத்து, முன்னர்க் கூறிய பயன் பின்னர்க் கூறிய உணவில் ஒரு பிடியினால் விளையும் பயனளவேயாகும்.

விளக்கவுரை

'அருமறை கூறிடும் நூலவர்' என மொழி மாற்றி யுரைக்க. 'உண்பது' என்பது ஆகுபெயராய், அதனால் விளையும் பயனைக் குறித்தது.
'உண்பதில்' என்றது உருபு மயக்கம்.
இதனால், 'தானங்களில் தலையாயதாய அன்னதானமும் அந்தணர்க்குச் செய்தலினும் மாகேசுரர்க்குச் செய்தலே கோடானு கோடி மடங்கு மிக்க பயனைத் தரும்' என்பது கூறப்பட்டது.

ஏறுடை யாய்இறை வாஎம் பிரான்என்று
நீறிடு வார்அடியார் நிகழ் தேவர்கள்
ஆறணி செஞ்சடை யண்ணல் இவரென்று
வேறணி வார்க்கு வினையில்லை தானே.

அத்தன் நவதீர்த்தம் ஆடும் பரிசுகேள்
ஒத்தமெய்ஞ் ஞானத் துயர்ந்தார் பதத்தைச்
சுத்தம தாக விளங்கித் தெளிக்கவே
முத்தியாம் என்றுநம் மூலன் மொழிந்ததே. ***#1829***

'இடபத்தை ஊர்தியாகவும், கொடியாகவும் உடையவனே! இறைவா! எங்கள் பெருமானே' என்று சிவனை எப் பொழுதும் துதித்து அவனது அருள் வடிவாகிய திருநீற்றை அன்புடன் அணிகின்றவர்கள் அவனுக்கு அடியராவார்கள், அவர்களை 'இவர்களே நிலவுலகில் காணப்படுகின்ற தேவர்கள்' என்றும், 'சிவபெருமான்' என்றும் கருதி அவரை மக்களின் வேறாக வைத்து வழிபடுகின்றவர்கட்கு அவரால் முன்பு செய்யப்பட்டுக் குவிந்து கிடக்கின்ற வினைகள் கெட்டொழிதல் உறுதி.

விளக்கவுரை

தீவிர சத்தி நிபாதர்க்கன்றி ஏனையோர்க்குச் சிவனை யொழித்தொழிந்த தேவரை வழிபடாத நிலை உண்டாகாதாகலின் அவரை நோக்கி, 'இவரே தேவருமாவர்' என்றார். முன்பு 'மூர்த்திகள் மூவர்க்கும் ஆம்' என்றதும் அவரை நோக்கி. மந்த சத்தி நிபாதத்திற் செய்யும் வழிபாடு தீவிர சத்தி நிபாதத்தைத் தந்து அதன்வழி நிகழும் வழிபாட்டினால் வினையை ஒழிக்குமாதலின் 'அவருக்கும் வினையில்லையாம்' என்றார்.

'தேவர்கள், அண்ணல்' என்பன செவ்வெண்.
இதனால், மாகேசுர பூசையும் சிவபூசையேயாய்ப் பிறப்பையறுத்தல் கூறப்பட்டன.
இங்கு இருக்கவேண்டிய இப்பாடல் 'சிவபூசை' அதிகாரத்திலும், அங்கு இருக்கவேண்டிய பாடல் இவ்வதிகாரத் திலுமாகப் பதிப்புக்களில் மாறியுள்ளன. எனினும் இப்பாடல் நாயனார் வழிவந்த ஒருவரால் செய்யப்பட்டதாகவே தெரிகின்றது. சில பிரதிகளில் இது காணப்படவும் இல்லை.
மிகைப் பாடல் தெ-ரை: சிவன் உயிர்கள் பொருட்டாக உண்டாக்கிய நவ தீர்த்தங்களில் சென்று முழுகும் பயன்பற்றிச் சொல்லுவோம் கேள்; 'உயர்ந்தோர் யாவர்க்கும் ஒத்ததாகிய மெய்ஞ்ஞானத்தினாலே உயர்ந்து நிற்கின்ற மாகேசுரரது திருவடிகளைத் தூய்மையாக விளக்கி, அந்த நீரை உடல் முழுதும் படும்படி தெளித்துக் கொண்டாலே முத்தி கிடைக்கும் என்பது நமக்கெல்லாம் குருவாகிய திருமூலர் அருளிச் செய்தது.
கு-ரை: 'எனவே, அது நவதீர்த்தங்களில் மூழ்குதலாம்' என்றபடி.

அழிதக வில்லா அரன்அடி யாரைத்
தொழுதகை ஞாலத்துத் தூங்கிருள் நீங்கும்
பழுது படாவண்ணம் பண்பனை நாடித்
தொழுதெழ வையகத் தோரின்ப மாமே. *#1830*

இறைமைக் குணங்களையுடைய சிவபெரு மானை விரும்பி அவனை நாள்தோறும் தொழுது துயிலெழுதலை மட்டும் செய்தால், இவ்வுலகத்தில் உலகின்பத்தோடு சிறிது இறையின்பமும் உண்டாகும். ஆனால், தம் நிலையில் கெடுதல் இல்லாத மாகேசுரரை வழிபடுதலால், இவ்வுலகத்தில் நீங்குதற்கரிய அஞ்ஞானம் நீங்கி இறையின்பமே மிகக் கிடைக்கும்.

விளக்கவுரை

எனவே, 'மாகேசுர பூசையைப் புறக்கணிப்பார் செய்யும் மகேசுர பூசையும் சிறிதளவே பயன் தரும்' என்பதாம். 'அடியவர்க்கன் பில்லார் ஈசனுக்கன் பில்லார்' *(சிவஞான சித்தயார், சூ.12-2)* என்றார் அருணந்தி தேவரும். மாகேசுரபூசை செய்யாத வழி மகேசுர பூசை நிரம்பாமை நோக்கியன்றோ பெரியார் பலரும் அடியார்க்கடிமை செய்தலை ஆண்டவனை வேண்டியும் பெற்றனர். மூன்றாம் அடி முதலாகத் தொடங்கியுரைக்க. 'தொழுதைகையால்' என உருபு விரிக்க. பழுதுபடாமைக்கு 'நாள்' என்னும் வினைமுதல் வருவிக்க.
இதனால், 'எத்தகையோர்க்கும் மாகேசுர பூசை இன்றியமையாதது' என்பது கூறப்பட்டது.

பகவர்க்கே தாகிலும் பற்றில ராகிப்

புகுமத்த ராய்நின்று பூசனை செய்யும்
முகமத்தோ டொத்துநின் றூழிதோ றூழி
அகமத்த ராகிநின் றாய்ந்தொழிந் தாரே.

வித்தக மாகிய வேடத்தர் உண்டஊண்
அத்தன் அயன்மால் அருந்திய வண்ணமாம்
சித்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியாம் என்றுநம் மூலன் மொழிந்ததே. *#1831*
சிலர் மாகேசுரரிடத்துச் சிறிதளவும் அன்பில்லா தவராய்
மாகேசுரனிடத்துச் சரண் புகுகின்ற பித்துக் கொள்ளிகளாய் அவனை
மட்டும் பூசித்தலாகிய அந்த வழியிலே நெடுங்காலம் நின்று, அவனது
அருள் மிகக் கிடையாத காரணம் யாதென்று ஆராய்ந்து, முடிபு காணாது
இளைத்து விட்டார்கள்.

விளக்கவுரை

'முக்கோற் பகவர்' (அகப்பொருள் விளக்கம்) என்பது போல, 'பகவர்' என்பது மாகேசுரரைக் குறித்தது. பண்பு - அன்பு. 'பண்பு ஏதாகிலும் இலராகி' என்க. 'பூசனை' என்றது சிறப்புப் பற்றி சிவபூசையையே குறித்தலின், புகுதல் அவனிடத்தேயாயிற்று. மத்தர் - உன்மத்தர். உண்மையை உணராது செய்தலின் 'மத்தர்' என்றார். 'முகம்', 'வாயில்' எனப்பொருள் தந்தது. 'அதனோடு' என்பது, 'அத்தோடு' என மருவிநின்றது. 'ஆகமத்தர்' என்பது, 'அகமத்தர்' எனக் குறுகி நின்றது. 'ஒழிந்தார்' என்றதனால் முடிவு காணாமை பெறப்பட்டது.
இதனால், 'மகேசுரனை அடையவேண்டுவார் மாகேசுரரை வழிபடல் இன்றியமையாதது என்பதே ஆகமங்களின் கருத்து' என்பது கூறப்பட்டது.
இதனை அடுத்து நிற்கும் 'வித்தகமாகிய' என்னும் பாடலும் மேற்காட்டிய, 'அத்தன் நவதீர்த்தம்' என்னும் பாடல்போலப் பிற ரொருவரால் செய்யப்பட்டதாகவே தெரிகின்றது. இதுவும் ஒரு பிரதி யில் இல்லை. இதன் பொருள் வெளிப்படை. இது மாகேசுரர் உண்ட பின் எஞ்சிய சேடத்தை யுண்ணுதலின் சிறப்பை உணர்த்துகின்றது.

தாழ்விலர் பின்னும் முயல்வர் அருந்தவம்
ஆழ்வினை ஆழ அவர்க்கே அறம்செய்யும்
ஆழ்வினை நீக்கி அருவினை தன்னோடு
போழ்வினை தீர்க்கும்அப் பொன்னுல காமே. *#1832*
உலகீர், பின்னும், பின்னும் நீர் மிக அழுந்த வருகின்ற எதிர் வினைகள்
தோன்றாமல் ஆழ்ந்தே போகும்படி, பாசக் கட்டாகிய
இழிநிலையினின்றும் நீங்கி உயர்நிலையை எய்தினா ராயினும், மீட்டும்

அந்த இழிநிலையில் பாசங்கள் வந்து வீழ்த்தாதபடி முன்பு செய்துபோந்த அந்தச் சரியை முதலிய அரிய தவங்களைப் பின்னும் மாகேசுரர் விடாது செய்வர். அத்தகையோர்க்கே நீவிர் தானத்தையும், தருமத்தையும் செய்யுங்கள். அவ்வாறு செய்தால் அச்செயல்கள் உங்களுடைய எதிர்வினை, பழவினை, பயன்வினை என்னும் மூவகை வினைகளையும் அறவே அழிக்கும். அவ்வினைகள் அழியவே, மீளப் பந்த உலகில் வரும் பிறப்பு இன்றி, வீட்டுலகமே கிடைப்பதாகும்.

விளக்கவுரை

எதிர் வினை - ஆகாமியம். 'ஆழ்ந்தவினை' - எதிர் கால வினைத்தொகை. பழவினை - சஞ்சிதம். அதனை அழித்தல் அரிது ஆதலின் 'அருவினை' என்றார். போழ்தல் - இப்பொழுது வந்து தாக்குதல். அங்ஙனம் தாக்கும் வினை பிராரத்தமாம். 'பொன்னுலகம்' என்றது 'உயர்நிலை' என்னும் அளவாய் நின்றது. 'ஆழ்வினை ஆழ' என்பதை முதலிற் கூட்டியுரைக்க. இதனால், மாகேசுர பூசை வீடு பயத்தல் கூறி முடிக்கப்பட்டது.

*9.14.*அடியார் பெருமை

திகைக்குரி யான்ஒரு தேவனை நாடும்
வகைக்குரி யான்ஒரு வாதி யிருப்பின்
பகைக்குரி யாரில்லை பார்மழை பெய்யும்
அகக்குறை கேடில்லை அவ்வுல குக்கே. *#1833*

'இடம்' என்று சொல்லப்படுவன எவையாயினும் அவை எல்லாவற்றையும் தனது உடைமையாக உடைய ஒப்பற்ற ஒரு தனிமுதற் கடவுளை உணருமாறெல்லாம் உணர்ந்து, அவ்வுணர்வினை மயக்கத்தால் குறைத்துப் பேசுபவரது மயக்கத்தை தனது அனுபவ மொழிகளாற் போக்குகின்ற சீரடியான் ஒருவனே ஒரு நாட்டில் இருப்பினும் அந்த நாட்டின்மேல் பகைமை கொள்வார் எவரும் இலராவர். அங்குப் பருவமழை பொய்யாது பெய்யும். எந்த ஓர் இல்லத்திலும் செல்வம் குறைதலோ, அல்லது செல்வம் தீர்ந்து வறுமை உண்டாதலோ நிகழாது.

விளக்கவுரை

ஏனைத் தேவரெல்லாம் சில உலகத்தளவிலே அதிகாரம் உடையராக, 'எல்லா உலகமும் ஆனாய் நீயே' *(தி.6)* என்றருளிச் செய்தபடி அனைத்துலகங்களிலும் நிறைந்து அவற்றைத் தான் விரும்பியபடி இயக்குபவன் சிவன் ஒருவனே யாகலின், அவனை, 'திகைக்குரியான் ஒரு தேவன்' எனவும், காரண காரிய முறையில் உறுதிப்பட விளக்குதல் பற்றி 'வாதி' எனவும் கூறினார். திகை - திசை; இடம். ஒருவாதியே' என்னும் தேற்றேகாரம் தொகுத்த லாயிற்று. 'பார்' என்றது இங்கு விளைநிலத்தை. நாட்டினை 'உலகு' என்றார். 'அவ்வுலகுக்கு' என்பதை மூன்றாம் அடியின் முதலில் கூட்டியுரைக்க.
இதனால், 'சிவனடியார் உள்ள நாடு யாதொரு குறையும் இன்றி நலம் மிக்கதாகும்' என்பது கூறப்பட்டது.
(இதன் பின் பதிப்புக்களில் காணப்படும் 'அவ்வுலகத்தே' என்னும் பாடல், தந்திரம் 6இல், 'அருளுடைமையின் ஞானம் வருதல்' என்னும் அதிகாரத்தில் வந்தது.)

கொண்ட குழியும் குலவரை யுச்சியும்
அண்டரும் அண்டத் தமரரும் ஆதியும்
எண்டிசை யோரும்வந் தென்கைத் தலத்திலும்
உண்டெனில் யாம்இனி உய்ந்தொழிந் தோமே. *#1834*

நிலத்தைத் தன்னகத்துக் கொண்ட கடல்களும், நிலத்தை நிலைபெறுத்துகின்ற எட்டுக் குலமலைகளின் சிகரங்களும், வானுலகமும், வானுலகத்திலுள்ள தேவர்களும், அத்தேவர்களுக்கு

முதல்வனாகிய இந்திரனும் மற்றும் திசைக்காவலரும் ஆகிய அனைத்தும், அனைவரும் வந்து எனது கையிலும் அடங்கியுள்ளன, உள்ளனர் என்றால், இனி நாங்கள் எந்த இடர்ப்பாட்டிலும் அகப்படாமல் அவற்றினின்றும் தப்பிவிட்டோமன்றோ!

விளக்கவுரை

'கொண்ட குறி' என்பது பாடமன்று. கடலுக்கு 'ஆழி' என்னும் பெயருண்மை பற்றி, 'குழி' என்றார். 'நாங்கள்' என்றது அடியார் அனைவரையும். 'என் கைத்தலத்திலும்' என்ற உம்மை இழிவு சிறப்பு. 'அடியவருள் கடைப்பட்ட என்கையிலும் உள்ளன என்றால் பிற அடியவர் கையில் இருத்தல் சொல்ல வேண்டுமோ' என்பதாம். அவை எம் வசத்தன அல்லது, யாம் அவற்றது வசத்தினேம் அல்லேம்' என்றபடி. 'எல்லாப் பொருள்களும் சிவன் வசத்தின ஆதலின் அவை அவன் அடியார் வசத்தினவாம் என்றபடி.

தாமடங்க இந்தத் தலமடங்கும்; தாபதர்கள்
தாமுணரின் இந்தத் தலமுணரும் - தாமுனியின்
பூமடந்தை நில்லாள்; புகழ்மடந்தை போயகலும்
நாமடந்தை நில்லாள் நயந்து. -திருக்களிற்றுப்படியார், *68*

எனவும்,

அகில காரணர் தாள்பணி வார்கள்தாம்
அகில லோகம் ஆளற் குரியர். -தி.*12* திருக்கூட்டச்சிறப்பு, *3*

எனவும் அருளிச் செய்தல் காண்க.

இதனால், 'சிவனடியாரை உலகம் வாதியாமையே யன்றி அவர் வேண்டியவாறுமாம்' என்பது கூறப்பட்டது.

அண்டங்கள் ஏழும் அகண்டமும் ஆவியும்
கொண்ட சராசர முற்றும் குணங்களும்
பண்டை மறையும் படைப்பளிப் பாதியும்
கண்ட சிவனுமென் கண்ணன்றி யில்லையே. ***#1835***

இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

இதனால், 'மேற்சொல்லியவாறு எல்லாப் பொருள்களும் சிவனடியார் வசத்தன ஆதற்குக் காரணம் சிவன் அவர்கள் உள்ளத்தில் வீற்றிருத்தலேயாகும்' என மேலதற்குக் காரணம் கூறப்பட்டது.

'தம்பி ரானைத்தன் னுள்ளந் தழீஇயவன்
நம்பி யாரூரன்; நாம்தொழும் தன்மையான்'
-தி.*12* திருமலைச் சிறப்பு, *19*

என்றது காண்க. காரணங் கூறுவார் மேற்கூறிய காரியங்களையும்

அனுவதித்து உடன் கூறினார்.

பெண்ணல்லன் ஆணல்லன் பேடல்லன் மூடத்துள்
உண்ணின்ற சோதி ஒருவர்க் கறியொணாக்
கண்ணின்றிக் காணும் செவியின்றிக் கேட்டிடும்
அண்ணல் பெருமையை ஆய்ந்தது மூப்பே. ***#1836***

இயல்பாகவே அறியாமையில் மூழ்கி அதுவாய் நிற்கின்ற உயிர்களுள் ஒவ்வொன்றின் அறிவினுள்ளும் நிற்கின்ற அறி வாயுள்ளவனும், ஒருவராலும் அறிய இயலாதவனும் கண்ணில்லாமலே காண்கின்றவனும், செவியில்லாமலே கேட்பவனும் ஆகிய சிவன் உலகில் காணப்படும் 'ஆண், பெண், அலி' என்னும் மூவகைப் பொருள்களுள் ஒருவகையினுள்ளும் படாது அவற்றின் வேறாய்த் தனித்து நிற்பவன். ஒருவராலும் அறியப்படாத அவனது அப் பெருந்தன்மையை அறிந்த அறிவே பேரறிவாகும்.

விளக்கவுரை

'அத்தகைய பேரறிவை உடையவர்கள் சிவனடியார்கள்' என்றபடி. 'பெண்ணல்லன் ஆணல்லன் பேடல்லன்' என்பதை 'அண்ணல்' என்பதன் பின்னர்க்கூட்டி, 'அப்பெருமையை' எனச் சுட்டு வருவித்து உரைக்க. 'கண்ணின்றிக் காணும் செவியின்றிக் கேட்டிடும்' என்றது, 'விளக்கும் துணையுள்ள பொழுதன்றித் தானே விளங்கமாட்டாத உயிரினது அறிவு போலாது, தானே விளங்கி நிற்கும் அறிவை யுடையவன்' என்பதைக் குறித்தவாறு.

ஒருவராலும் அறியொணாதவனை அடியராயினார் மட்டும் அறிந்தது எவ்வாறெனின், 'ஒருவர்' என்றது, பதியாகிய அவனது ஞானத்தைப் பெறாது, பாசஞான பசுஞானங்களை மட்டுமே யுடையவருள் ஒருவரையே ஆதலானும், அவருள் ஒருவராய் நில்லாது பதி ஞானத்தைப் பெற்றவரே அடியவராகலானும் அவை தம்முள் முரணாகா என்க. மூடம் உடையதனை 'மூடம்' என்றது பான்மை வழக்கு. 'அறியொணா' என்னும் பெயரெச்ச மறையும், 'காணும்' 'கேட்டிடும்' என்னும் பெயரெச்சங்களும் அடுக்கி, 'அண்ணல்' என்னும் ஒருபெயர் கொண்டன. மூப்பு - முதிர்ச்சி; உயர்வு.

இதனால், 'உண்டு, பூசி, உடுக்குமாற்றால் அடியவர் உலகரோடு ஒத்தாராயினும், அவர் உலகரின் வேறாய உயர் நிலையினர்' என்பது கூறப்பட்டது.

இயங்கும் உலகினில் ஈசன் அடியார்
மயங்கா வழிச்செல்வர் வானுல காள்வர்
புயங்களும் எண்டிசை போதுபா தாளம்
மயங்காப் பகிரண்டம் மாமுடி தானே. ***#1837***

சிவனடியார்கள் பிறரைப் போலவே தாமும் மயக்க உலகத்தில் வாழ்வராயினும் அவ்வுலகம் மயக்குகின்ற மயக்கத்துட் படாது தெளிந்த உணர்வோடே வாழ்வர். உடம்பு நீங்கிய பின்னும் பிறரைப் போல மயக்க உலகங்களில் உழலாமல் சிவன் உலகத்தை அடைந்து அதன்கண் சில புவனங்கட்குத் தலைவராயும் விளங்குவர். அவையேயன்றித் தாமும் சிவனைப் போலவே எல்லா உலகங்களும் தம்முள் வியாப்பியமாய் அடங்கத் தாம் அவற்றைத் தம்முள் அடக்கி வியாபகமாயும் நிற்பர்.

விளக்கவுரை

'ஆகவே அவர்களை எளியராக எண்ணற்க' என்பதாம். 'இயங்கும்' என்பதனை, 'தாம் இயங்கும்' எனக் கொள்க. 'செல்வர்' என்றது 'வாழ்வர்' என்றபடி, 'வான்' இங்குச் சுத்த மாயா வெளியைக் குறித்தது. அவ்வெளியே தடத்த சிவனுக்கு இடமாதல் அறிக. பின்னிரண்டடிகள், 'சிவனது இயல்பாக நன்கறியப்பட்ட வற்றை இவர்களும் உடையர்' என்பதைக் குறித்தது. சிவனது இயல்பு.

'பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே'
-தி.*8* திருவெம்பாவை, *17*
எனவும்,
'கீதம் இனிய குயிலே, கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவிற் பாதளம் ஏழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லின் சொல்லிறந்து நின்ற தொன்மை'
-தி.*8* குயிற்பத்து, *1*
எனவும் விளங்கிக் கிடந்தமை காண்க. போது - திருவடி மலர். 'பகிரண்டம்' என்றது, 'அண்டங்கள் அனைத்திற்கும் வெளியே உள்ள இடம்' என்றபடி. அதுவெற்ற வெளியாகலின், 'மயங்காப் பகிரண்டம்' என்றார். மயங்குதல், பல பொருள்கள் ஒன்றோடொன்று விரவுதல். இதனால், சிவனடியாரை நம்மனோருள் சிலராக வைத்து எளியராக மதித்தல் குற்றமாதல் கூறப்பட்டது.

அகம்படி கின்றநம் ஐயனை ஓரும்
அகம்படி கண்டவர் அல்லலிற் சேரார்
அகம்படி யுட்புக் கறிகின்ற நெஞ்சம்
அகம்படி கண்டாம் அழிக்கலும் எட்டே. ***#1838***

புறநிலையிற் செல்லாது அகநிலையிற் சென்று அங்குள்ள இறைவனை அறிகின்ற அறிவு 'நான்' என்னும் முனைப்பு அடங்கி நிற்றலை அனுபவத்தில் யாம் கண்டோம். அதனால் அந்த அறிவு மாயா காரியங்கைள ஒழித்து அவற்றினின்றும் நீங்கித் தூய்மை யுறுகின்றது. ஆகவே, அகநிலையிலே நிற்கின்ற நம் பெருமானை அவ்விடத்திற்

காண்கின்ற அகநிலையறிவைப் பெற்றவர்கள் துன்பத்தை அடைய மாட்டார்கள்.

விளக்கவுரை

மூன்றாம்அடி முதலாகத் தொடங்கியுரைக்க. 'நெஞ்சம்' என்றது அறிவை. அறிவது அறிவேயன்றி நெஞ்சம் ஆகாமை யறிக. 'அகம்படி' மூன்றனுள் முதல் இரண்டும் 'அகநிலை' எனப் பொருள் தந்தன. முதற்கண் நின்ற 'அகம்' 'உள்' என்னும் பொருளையும், ஈற்றில் நின்ற 'அகம்', 'நான்' என்னும் பொருளையும் உடையன. முதற்கண் நின்ற 'படிதல்', பொருந்துதல். ஈற்றில் நின்ற 'படிதல்', ஆழ்தல். 'கண்டாம்' தன்மைப் பன்மை வினைமுற்று. 'கண்டவர்' என்றது 'அறிந்தவர்' என்றபடி. 'அழிக்கல்', இங்கு வெல்லுதல். அஃதாவது அவற்றின் நீங்குதல், அசுத்த மாயா காரியங்களை, 'பூதம், தன்மாத்திரை, ஞானேந்திரியம், கன்மேந்திரியம், அந்தக்கரணம், புருடன், கஞ்சுகம், மாயை' - என இங்ஙனம் தொகுத்தெண்ணி, எட்டாதல் அறிக. இனி 'எட்டுத் தத்துவங்களால் ஆகிய நுண்ணுடம்பு' எனவும் ஆம். இவற்றின் நீங்கினோரே முத்தராதல் அறிக. எனவே, 'இந்நிலை அடைந்தோர் பிறவித் துன்பத்தை எய்துமாறு இல்லையாகலின், சிவனடியாராவார் இத்தன்மையுடைய முத்தரே' எனக் கூறினார்.
இதனால், சிவனடியார் பெத்தருட் சிலராகாது, முத்தரேயாதல் கூறப்பட்டது.

கழிவும் முதலுமெங் காதற் றுணையும்
அழிவும தாய்நின்ற ஆதிப் பிரானைப்
பழியும் புகழும் படுபொருள் முற்றும்
ஒழியுமென் ஆவி உழவுகொண் டானே. ***#1839***

கடந்த காலத்தில் நிகழ்ந்துபோன அந்தச் செயல் களும், இப்பொழுது கடந்து கொண்டிருக்கின்ற காலத்தில் நிகழ்கின்ற இந்தச் செயல்களும், இவற்றைச் செய்விக்கின்ற முதல்வனும், அவன் செய்விக்கின்றபடி யான் செய்யும் பொழுது அதற்குத் துணையாய் உடன் நிற்கின்ற அன்புள்ள துணைவனும் ஆகிய எல்லாமாய் உள்ள முழுமுதற் கடவுளாகிய சிவனை நான் எனக்கு வருகின்ற பழியாயும், புகழாயும் விளைகின்ற அனைத்துப் பொருள்களுமாக உணர்கின்ற உணர்ச்சியோடே எனது உயிர் போய்க்கொண்டிருக்கின்றது. அதனால், எனது உடல் வழியாக நிகழும் முயற்சிகள் அனைத்தையும் அப்பெருமான் தனது முயற்சியாகவே ஏற்றுக் கொள்கின்றான்.

விளக்கவுரை

'அதனால் அறம் பாவங்கட்கு யான் யாதும் கடமைப் பட்டவனல்லேன்'

என்பதாம். 'கழிவு, அழிவு' என்னும் தொழிற் பெயர்கள் முறையே இறந்தகால நிகழ்கால நிகழ்ச்சிகளின் மேல் நின்றன. அந்நிகழ்ச்சிகள் அக்காலத்துப் பிறப்பின் வழியன என்பது வெளிப்படை. 'இனி அடுத்து வருவதொரு பிறவி தமக்கு இல்லை' என்பது நாயனாரது துணிபாகலின் எதிர்காலம் பற்றிக் கூறாராயினார், முதல்வனை 'முதல்' என்றது பான்மை வழக்கு. 'அழிவும்' என்பதனை, 'கழிவும்' என்பதன் பின் கூட்டியுரைக்க. 'அது' என்னும் பகுதிப்பொருள் விகுதியை, 'அழிவதுவும்' என மாற்றி வைத்து உரைக்க. 'புகழுமாய், முற்றுமாக' என்னும் ஆக்கச் சொற்கள் தொகுத்தலாயின, 'முற்றுமாகக் கொண்டு' 'எனது உழவு' என வருவித்துக் கொள்க. சீவன் முத்தராயினார் 'எல்லாம் அவனே' என்று எதனைச் செய்யினும் தம் செயலற்று அவன் செயலாகச் செய்வர் ஆதலின், அவர், 'பாதகத்தைச் செய்திடினும் சிவன் அதனைப் பணியாக்கி விடுவன்' (சிவஞானசித்தியார், சூ. 10-1) ஆதலின், 'உழவு கொண்டான்' என்றார். இத்தகைய சீவன் முத்தரே 'அடியார்' எனப்படுகின்றனர் என்க.

இதனால், அடியாரது சீவன் முத்திநிலை தம்மேல் வைத்து இனிது விளக்கப்பட்டது.

என்தாயொ டென்னப்பன் ஏழேழ் பிறவியும்
அன்றே சிவனுக் கெழுதிய ஆவணம்
ஒன்றா யுலகம் படைத்தான் எழுதினான்
நின்றான் முகில்வண்ணன் நேரெழுத் தாயே. **#1840**

எனக்குத் தாயாகியவளும், தந்தையாகியவனும் நான் பிறப்பதற்கு முன்பே தங்களைச் சிவனுக்கு அடிமை' என்று எழுதிக் கொடுத்த ஆளோலையை வைத்துத்தான் ஈரேழுலகங்களை யும் ஒக்கப் படைத்தவனாகிய பிரமதேவன் என்னைப் படைக்கும் பொழுது எனது தலையில், 'இவன் சிவனுக்கு அடிமை' என்று எழுதினான். 'அந்த எழுத்துப் பொய்யானதன்று, மெய்யானதே' என நிலை நாட்டுபவனாகவே காப்போனாகிய திருமால் அமைந்தான்.

விளக்கவுரை

'என் தாயொடு ஆவணம்' என்றது, 'யான் பிறந்த குடியில் யான் மட்டுமே சிவனடியானல்லேன்; என்தந்தை தாய் ஆகியோரே சிவனடியார்தாம்' என்றும், 'அதனால் யான் பிறப்பிலே சிவனடியான்' என்றும் கூறியவாறு. இவ்வாறான வாய்ப்புடையவர் களையே 'பழவடியார்' என்றும், தாம் மட்டுமே தொடக்கத்திலே யாதல், இடையிலேயாதல் அடியாராயினாரை, 'புத்தடியார்' என்றும் கூறுவர். நம்பியாரூரர் பழவடியாரேயாயினும் 'யான் ஆளல்லேன்' என வன்மை பேசினமை பற்றி அவரை ஏயர்கோன்கலிக்காமர்,

எம்பிரான் எந்தை தந்தை தந்தைஎன் கூட்ட மெல்லாம்
தம்பிரான் நீரே யென்று வழிவழிச் சார்ந்து வாழும்
இம்பரின் மிக்க வாழ்க்கை என்னைநின் றீருஞ்சூலை
வம்பென ஆண்டு கொண்டான் ஒருவனோ தீர்ப்பான் வந்து.
-தி.12 ஏயர்கோன். 392

எனப் புத்தடியாராகக் கூறினமை காண்க. வம்பு - புதுமை. நாயனார் தம் தாய் தந்தையரையே குறித்தாராயினும் 'இருமரபும் சிவனுக்கு ஏழேழ் பிறவியும் ஆட்பட்ட மரபு' என்பதைக் குறித்தமை காண்க. 'ஏழ் ஏழ் பிறவி' என்பது, 'எழுவகைப் பிறப்பில் வினைப்பயன் தொடரும் ஏழ்பிறப்பு' என்றவாறு,
புத்தடியாரினும் பழவடியார்க்கு ஒரு சிறப்புண்மையை இதனாற் குறித்தவாறு.

துணிந்தார் அகம்படி துன்னி உறையும்
பணிந்தார் அகம்படி பாற்பட் டொழுகும்
அணிந்தார் அகம்படி ஆதிப் பிரானைக்
கணிந்தார் ஒருவர்க்குக் கைவிட லாமே. ***#1841***

'சிவனே நமக்கு எல்லாப் பொருளும்' எனத் துணிந்தவரது உள்ளத்தில் ஒன்றி உறைபவனும், அங்ஙனம் துணிந்த படியே மனமொழி மெய்களால் தன்னை வழிபட்டு ஒழுகு வசத்தனாய் நின்று அருள்புரிகின்றவனும் ஆகிய, அழகிதாய் அருள் நிறைந்த திரு வுள்ளத்தினையுடைய முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானைப் பல் காலும் நினைக்கின்ற ஒருவர்க்கு அவனை விடுதல் கூடுமோ! (கூடாது)

விளக்கவுரை

'அகம் படி' என்பது 'அகத்துப் பொருந்துதல்' என்னும் பொருட்டாய் அகமாகிய இடத்தைக் குறித்தது. 'சிவன் தன் அடியவர் வசத்தனாய் அவர் வேண்டியவாறெல்லாம் அருளுதல் அருள் காரணமாக அன்றி வேறில்லை' என்றற்கு 'அணிந்து ஆர்அகம்படி ஆதிப்பிரான்' என்றார். 'உறையும், ஒழுகும்' என்னும் பெய ரெச்சங்கள், 'அணிந்தா ரகம்படி ஆதிப்பிரான்' என்னும் தொகைச் சொல்லில், 'ஆதிப்பிரான்' என்பதனோடு முடிந்தன. 'தேனை உண்டறியாதவர் அதனை உண்டு சுவை கண்டபின் விடாமைபோலச் சிவனது அருளின்பத்தை அறியாதார் அதனை அறிந்து நுகர்ந்தபின் விடமாட்டார்' என்பார், 'கணிந்தார் ஒருவர்க்குக் கைவிட லாமே' என்றார். 'கணித்தார்' என்பது எதுகை நோக்கி மெலிந்து நின்றது.
'மேவினார் பிரிய மாட்டா விமலனார்'
தி.12 கண்ணப்பர்., 174

என்ற திருத்தொண்டர் புராணத்தையும் காண்க. கணித்தல், பலகால்

நினைத்தல்.
இதனால், 'சிவனடியார் சிவானந்தத்தைத் தெவிட்டாது நுகர்ந்து திளைப்பவர்' என்பது கூறப்பட்டது.

தலைமிசை வானவர் தாழ்சடை நந்தி
மிலைமிசை வைத்தனன் மெய்ப்பணி செய்யப்
புலைமிசை நீங்கிய பொன்னுல காளும்
பலமிசை செய்யும் படர்சடை யோனே. *#1842*

தேவர்கள் தம் தலையால் தனது திருவடிமேல் வணங்குகின்ற, தாழ்ந்த சடையை உடைய சிவபெருமான் தனக்கு உண்மையான தொண்டினைச் சிலர் செய்ய அதற்குப் பயனாக அவரைத் தேவர்கள் தம் தலைமேல் வைத்துப் போற்றும்படி வைத்தான். அதற்குமேல் அவன் அவரை முக்குணங்களும், கன்மமும், ஆணவமும் இல்லாத ஒளிமயமான மேல் உலகத்தை ஆள்கின்ற பயனையும் கூட்டுவிப்பான்.

விளக்கவுரை

எனவே, 'சிவனடியார்கள் அத்துணை உயர்ந்தவர்கள்' என்பதாம். 'தலையால்' என உருபு விரித்து, 'சை' என்பதற்கு, 'திருவடி சை' என உரைக்க. 'மிலைய, இசைய' என்னும் செயவெனெச்ச ஈறுகள் தொகுத்தலாயின. 'மிலைய' எனவே, 'தலைமேல்' என்பது தானே விளங்கிற்று. 'மெய்ப் பணி செய்ய' என்பதை, 'நந்தி' என்பதன் பின்னர்க்கூட்டி யுரைக்க. புலை - கீழ்மை. அஃது அவற்றை உடையவற்றைக் குறித்தது. 'புலை நீங்கிய மிசையுலகு' என்க. 'பொன்' என்றது ஒளியென்றவாறு. மேலே உள்ள ஒளியுலகாவது சிவனுலகு. பலம் - பயன். வேறு தொடராய் நிற்றலின் மீட்டும் 'படர்சடையோன்' என்றார்.
இதனால், 'சிவனடியார்கள் தேவரால் வணங்கப்படுபவராய்ச் சிவலோகத்தை ஆளும் பெருமையுடையவர்' என்பது கூறப்பட்டது.

அறியாப் பருவத் தரனடி யாரைக்
குறியால் அறிந்தின்பங் கொண்ட தடிமை
குறியார் சடைமுடி கூட்டி நடப்பார்
மறியார் புனல்மூழ்க மாதவ மாமே. *#1843*

ஒன்றும் அறியாத இளமைப் பருவத்திற்றானே சிவனடியார்களை அவரது வேடத்தால் அறிந்து மகிழ்ச்சியுற்றதே சிவனுக்கு உண்மை அடிமைத் தன்மையாகும். அதன் பின் அவர்கள் செல்லும் செலவைத் தவிர்ந்த அவர்களது திருவடிகளை விளக்கிய நீரினைத் தலையில் தெளித்துக் கொள்ளுதலே அங்ஙனம் செய்வார்க்குப் பெரிய தவமாகும்.

விளக்கவுரை

இளமையிலே அடியார் பத்தி தோன்றுதல் முன்னைத் தவத்தினாலாம். காரைக்காலம்மையார் வண்டல் பயிலும் பொழுதே தொண்டர் வரின் தொழுதமையை (தி.12 காரைக்காலம்யார்., 5) நினைக. 'நடப்பார் மறிந்த புனல்' என்றதனால், 'திருவடிகளை விளக்கிய நீர்' என்பது விளங்கிற்று. மறி - மறிதல்; தவிர்தல். முதனிலைத் தொழிற் பெயர். 'மறிதலில் பொருந்திய நீர்' என்க.
இதனால், அடியவரை வழிபடுவாரது சிறப்புணர்த்து முகத்தால் அவரது பெருமை விளக்கப்பட்டது.

அவன்பால் அணுகியே அன்புசெய் வார்கள்
சிவன்பால் அணுகுதல் செய்யவும் வல்லர்
அவன்பால் அணுகியே நாடும் அடியார்
இவன்பாற் பெருமை இலயம தாமே. **#1844**

முன்னை மந்திரத்திற் கூறியவாறு இளமையிலே அடியார் பத்தியிற் சிறந்த ஒருவனை அடைந்து அன்பு செய்பவர்கள் சிவனையே அடையவும் வல்லாராவர். இன்னும் அவரிடத்தில் சிவனையே வழிபடும் ஒருவனது பெருமை அடங்கி விடுவதாகும்.

விளக்கவுரை

'சிவனுக்கு அடியாராயினாரும் அவன் அடியார்க்கு அடியாராகாவிடின் சிறந்தவராகார்' என்பதாம். அதனாலன்றோ, சிவனால் வலிந்து ஆட்கொள்ளப்பட்ட நம்பியாரூரர் பின்பு அடியாரது திருக்கூட்டத்தைக் கண்டு, 'இவர்க்கு யான் அடியேனாகப் - பண்ணு நாள் எந்நாள்' (தி.12 தடுத்தாட் கொண்டது., 189) என இறைவனை நினைத்து எண்ணினார். முன்னை மந் திரத்திற் கூறினமை பற்றி அடியார்க்கடியனை 'அவன்' என்றமையால், பின்னர் 'இவன்' என்றது, பின்னர்க் கூறிய சிவன் பால் அணுகுதல் செய்தவனைக் குறித்தது. 'நாடும் அடியார்கண்' என ஏழாவது விரிக்க.
இதனால், 'சிவனுக்கு அடியாராயினாரும் அவன் அடியார்க்கு அடியாராதல் இன்றியமையாதது' என்பது கூறப்பட்டது.
திருத்தொண்டத் தொகை அடியார்க்கு அடியாராதலையேயன்றி, அடியார்க்கு அடியாராதலையும் குறித்தமை காண்க.

முன்னிருந் தார்முழு தெண்கணத் தேவர்கள்
எண்ணிறந் தன்பால் வருவர் இருநிலத்து
எண்ணிரு நாலு திசைஅந் தரம்ஒக்கப்
பன்னிரு காதம் பதஞ்செய்யும் பாரே. **#1845**

பதினெண்கணங்களாக வகுத்துச் சொல்லப் படுகின்ற தேவ சாதியர் பலரும் முன்னே நல்வினைகள் பலவற்றைச் செய்து அந்நிலையை அடைந்தார்கள். அதன்பின்பு அந்நிலையில் இருக்க விரும்பாமல்

சிவன்பால் அன்பு செலுத்தியுய்தற்கு இந் நிலவுலகத்தில் வருவார்கள்.
அவ்வாறு வந்து அவர் சிவனை வழி படுகின்ற இடம் எட்டுத்
திசையிலும் பன்னிரு காதப் பரப்பிற்குச் சிவ லோகமாகும்படி
அவர்களது ஞானம் செய்யும்.

விளக்கவுரை

'பதினெண்கணம்' என்பதை முதற் குறையாக 'எண் கணம்' என்றார். 'பதினெண் கணங்களாவார் இவர்' என்பதைப் புற நானூற்றுக் கடவுள் வாழ்த்தின் பழைய உரையிற் காண்க. 'எண்கணங் களும் முன் இருந்தார்' என மாற்றியுரைக்க. 'இருந்தார்' என்றது அந் நிலையினராய் இருந்தார் என்றபடி. 'முன்' என்றதனால் 'பின்' என்பது பெறப்பட்டது. எண் - எண்ணம்; விருப்பம். இறந்து - நீங்கி, எனவே, 'சுவர்க்கலோக இன்பம் அபக்குவர்க்கே இனிக்கும் என்பதும், 'அவர்க்கும் பக்குவம் வந்தபொழுது உவர்த்துவிடும்' என்பதும் பெறப்படும். 'கொன்றைத் - தொங்கலா னடியார்க்குச் சுவர்க்கங்கள் பொரு ளலவே' *(தி.2 ப.41 பா.7)* என்றருளியமை காண்க. 'பன்னிரு காதம்' என்றது மிகுதி கூறியவாறு. சிவலோகமாகச் செய்தலாவது, மக்களைச் சிவபத்தியிற் சிறந்தவராக்கல். இதனால், தேவரியல்பு கூறும் முகத்தால் அடியாரது பெருமை உணர்த்தப்பட்டது. இதனானே, 'அடியாருள் முற்பிறப்பில் தேவராய் இருந்தோரும் உளர் என அறிக' என்றதுமாயிற்று.

சிவயோகி ஞானி செறிந்தஅத் தேசம்
அவயோக மின்றி அறிவோருண் டாகும்
நவயோகம் கைகூடும் நல்லியல் காணும்
பவயோக மின்றிப் பரகதி யாமே. ***#1846***
இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

'சிவம்' என்பதை ஞானிக்கும் கூட்டுக. யோகமாவது 'ஒன்றுதல்' ஆதலால், அவயோகம், பயனில் பொருளோடு ஒன்று தலாம். அறிவோர் - ஞானிகள். 'அறிவோர் வருகை உண்டாகும்' என ஒரு சொல் வருவித்துக் கொள்க. வருகை, அவதாரத்தையும் குறிக்கும். நவம் - புதுமை; அதிசயம். 'அதிசயங்களை நிகழ்த்துதல் பலர்க்குக் கூடும்' என்க. காணும் - காணப்படும். பவயோகம் - பிறப்பில் சேர்தல்.
இதனால் அடியாரது பெருமைகளுள் மிக்கன சில எடுத்துக் கூறப்பட்டன.

மேல்உண ரான்மிகு ஞாலம் படைத்தவன்
மேல்உண ரான்மிகு ஞாலம் கடந்தவன்
மேல்உண ரார்மிகு ஞாலத் தமரர்கள்

மேல்உணர் வார்சிவன் மெய்யடி யார்களே. *#1847*

பிரமன், விட்டுணு, பிறதேவர் ஆகியோ ரெல்லாம் தாம் தாம் செய்யும் அதிகாரத்தைத் தமது ஆற்றலால் அமைந் தனவாகவே கருதி மயங்குவாரல்லது, 'இவை பரம்பொருளாகிய சிவனது ஆணையின்வழி நமக்கு அமைந்தன, என்று உணர மாட்டார்கள் (அதனால் அவர்கள் மெய்யடியாராதல் இல்லை) அந் நிலையில், 'நமக்குக் கிடைத்த நலங்கள் யாவும் பரம்பொருளாகிய சிவனது அருளால் கிடைத்தன' எனச் சிவனுக்கு மெய்யடியா ராயினாரே உணர்வார்கள்.

விளக்கவுரை

முதல் மூன்று அடிகளில் 'உணர்வான், உணர்வார்' என்பன பாடம் ஆகாமை அறிந்துகொள்க. மேல் - மேலான பொருள், என்றது அதன் அருளை. மிகு ஞாலம் - வானுலகம். பிரமனாதியோர் சில வேளைகளில். 'எமக்கு உள்ள நலம் சிவனருளால் வந்தது எனக் கூறினாராயினும் அது முகமனுரையேயன்றி, மெய்யுரையன்று' என்க.

இதனால், அயன் மால் முதலியோரினும் அடியார் உயர்ந்தோராதல் கூறப்பட்டது.

*9.15.*போசன விதி

எட்டுத் திசையும் இறைவன் அடியவர்க்கு
அட்ட அடிசில் அமுதென் றெதிர் கொள்வர்
ஒட்டி ஒருநிலம் ஆள்பவர் அந்நிலம்
விட்டுக் கிடக்கில் விருப்பில்லை தானே. *#1848*

ஒரு வயலையே தங்களுடையதாகக் கொண்டிருப் பவர் அது தரிசாய்க் கிடந்தால் விளைவு ஒன்றையும் பெறமாட்டார். அது போலச் சிவனடியார்கள் 'அடியார்களுக்கு' என்று நினைத்துச் சமைத்த உணவையே, 'இஃது எட்டுத் திக்கினையும் நிறைவு செய்யும் அமுத மாகும்' என விரும்பி உண்பதன்றி, 'தமக்கும் தம் கேளிர் கிளைஞர் கட்குமே' என்று நினைத்துச் சமைத்த உணவை உண்ணமாட்டார்கள்.

விளக்கவுரை

அவ்வாறு சமைத்து அடியவர் வரின் மகிழ்வுடன் வரவேற்று உண்பிப்பவர் உலகில் மிகச் சிலரே யாகையால் அவரை ஒருவனுக்கு அமைந்த ஒரே வயலாகவும், அவரிடத்தன்றிப் பிறரிடத்துச் சென்று உண்ணார் சிவனடியார் ஆகலின் அவரை ஒரு வயலையே உடைய நிலக்கிழாராகவும் கூறினார். 'அந்த ஒரு சிலர் இல்லையேல் சிவனடியார்க்கு உணவில்லை' என்பது பின்னிரண் டடிகளில் ஒட்டணி வகையால் கூறினமையின் இங்கு இவ்வாறு உரை கூறப்பட்டது. 'இறைவன் அடியவர்க்கு (என்று) அட்ட அடிசிலை அவ்வடியார் எட்டுத்

திசையும் (விரும்பும்) அமுது என்று எதிர் கொள்வர்' என்க. அடியவரது இயல்பிற்கு ஏற்ப விளைவை ஆகு பெயரால் 'விருப்பு' என்றார். அன்பில்லாதார் அறஞ்செய்தலை விரும்பார் ஆகலின் அறவோர் அவர்பால் உண்ணார் என்க.
அதனால், 'சிவனடியார் தம்பால் அன்புடையாரிடத்தே யன்றிப் பிறரிடத்துச் சென்று உண்ணலாகாது' என்பது அவரது இயல்பின்மேல் வைத்துக் கூறப்பட்டது.

அச்சிவ னுள்நின் றருளை யறிபவர்
உச்சியம் போதாக உள்ளமர் கோஇற்குப்
பிச்சை பிடித்துண்டு பேதம் அறநினைந்து
இச்சைவிட் டேகாந்தத் தேறி யிருப்பரே. *#1849*

தம்முள் நிற்கின்ற சிவனுக்குள்ளே தாம் நின்று அவனது திருவருள் இயல்பை அநுபவமாக உணர்ந்த அடியார்கள் பசிமிகுந்த போது தம்முள்ளே அமர்ந்திருக்கின்ற தலைவனது இல்லமாகிய உடலில் உயிர் நின்றாங்கு நிற்றற் பொருட்டு, பிச்சையேற்று உண்டு சிவனைத் தம்மின் வேறாக நினையாது தாமேயாக நினைந்து உலகப் பற்று அற்று ஒன்றாகிய சிவ நிலையிலே உயர்ந்திருப்பார்கள்.

விளக்கவுரை

அகரச் சுட்டுப் பின்னர் வருகின்ற உள்நிற்குந் தன்மையைச் சுட்டிற்று. சிவனுள் தாம் நிற்றலாவது அவனது இச்சா ஞானக் கிரியையகளின் வியாபகத்தில் தமது இச்சா ஞானக் கிரியைகள் வியாப்பியமாய் அடங்கி நிற்க நிற்றல். ஏகாந்தத்தேயிருப்பவர்க்குக் கால வேறுபாடு இல்லையாகலின் 'உச்சியம் போதாக' என்பது பசி மிகுகின்ற காலத்தையே குறிக்கும். அவரினும் கீழ் நிற்பார் கால வேறுபாடுணர்ந்து உச்சியம் போதாகிய ஒருவேளை உண்டு. ஏகாந்தத்தில் ஏறியிருக்க முயல்வர். 'அவரினும் கீழ் நிற்பார் உச்சியம் போதுடன் இரவு ஒருவேளையும் உண்பர்' என்பது
'பரம னடியா ரானார்கள்
எல்லாம் எய்தி உண்க என இரண்டு பொழுதும்
பறை நிகழ்த்தி' *-தி.12 திருநாவுக்கரசர்., 259*
என்றமையான் அறியப்படும். 'தம்மை இறைவன் உடைமையாகக் கருதுவர்' என்றற்கு 'கோ இற்கு' என்றார். பிச்சை - தானம். அடியவர் தானம் ஏற்பரே யன்றித் தருமம் ஏலார். பிடித்தல் - ஏற்றல். 'பேதம் அற நினைந்து' என்பது முதலாகக் கூறியன, அவையெல்லாம் வாய்த்தற் பொருட்டே அடியவர் உணவை நாடுவர் என்றற்கு.
இதனால் முன் மந்திரத்திற் கூறியவாறு அடியவர் அன்புடையார்பால் சென்று அவர் அளிக்கும் உணவை ஏற்று உண்டலும், உயர்நிலைபெற்று

ஞானத்தையும் அதன் பயனையும், எய்துதற் பொருட்டு எனக்கருதி உண்ணல் வேண்டுமன்றி, வாளா, 'உடலோம்புதற் பொருட்டு' எனக்கருதி உண்ணலாகாது என்பது கூறப்பட்டது. முன்பு நாயனார், மூன்றாம் தந்திரத்தில்
'உடம்பை வளர்த்தேன்; உயிர்வளர்த் தேனே'
என்றருளிச் செய்ததும் இக்கருத்துப் பற்றியேயாகும்.

***9.16.*பிட்சா விதி**

விச்சுக் கலமுண்டு வேலிச்செய் ஒன்றுண்டு
உச்சிக்கு முன்னே உழவு சமைந்தது
அச்சங்கெட் டச்செய் அறுத்துண்ண மாட்டாதார்
இச்சைக்குப் பிச்சை இரக்கின்ற வாறே. ***#1850***

அடியவர்கட்கு உலக உழவரின் வேறான விதைக் கூடை உண்டு; வேலி நிலம் உண்டு. அதனால் அவர் பசிக்குமுன்பே அவரது உழவுத்தொழில் அவர்கட்குப் பயனைத் தந்து விடுகின்றது. ஆகவே, 'பசி வந்து வருத்துமோ' என்னும் அச்சம் இல்லாமல் அதற்கு முன்பே அவர்கள் அறுவடை செய்து பசியின்றி உண்கின்றார்கள். அது மாட்டாதவர்களே வயிறு வளர்க்கும் விருப்பத்தால் பலரிடம் சென்று இரந்து உயிர் வாழ்கின்றனர்.

விளக்கவுரை

ஆகவே, 'அவர் அன்பர் விரும்பியளிக்கும் தானத்தை யேற்று உண்ணுதல் சோம்பலால் மானங்கெடாது வாழமாட்டாது மானம் இழந்து பிறரிடம் சென்று இரப்பவரது இரவன்று' என்பதாம். உருவக வகையால் 'விதைக்கூடை' என்பது சுழுமுனை நாடியையும், 'வேலி நிலம்' என்பது சந்திர மண்டலத்தையும் அதில் உண்டாகும் விளைவு விந்துத்தானத்து அமிழ்தத்தையும் உணர்த்தின. விச்சுக் கலம் - விதைக் கூடை. 'உச்சிக்கு முன்னே' என்பது சிலேடை வகையால் 'பசிக்கும் முன்னே' என்றும், சந்திர மண்டலத்துக்கு முன்னே உள்ள விந்துத் தானமாகிய ஆஞ்ஞையையும் குறித்தன. 'மாட்டாதார்' என்றதால் அடியவர் மாட்டுவராதல் விளங்கிற்று. 'யோகத்தால் காயசித்தி பெற்று நெடுங்காலம் வாழ வல்லவர் அன்பர் செய்யும் வழிபாட்டினை ஏற்றலைச் சோம்பலால் வறுமை யுற்று இரப்பவர் செயலோடு ஒத்ததாக எண்ணுதல் அறியாமை' என்றபடி. இதனால், 'அடியவர் பிச்சை யேற்றல் இரத்தலன்று' என்பது காரணத்துடன் விளக்கப்பட்டது.

பிச்சைய தேற்றான் பிரமன் தலையினில்
பிச்சைய தேற்றான் பிரியா தறஞ்செய்யப்

பிச்சைய தேற்றான் பிரமன் சிரங்காட்டிப்
பிச்சைய தேற்றான் பிரான்பர மாகவே. *#1851*
சிவபெருமான் பிரமனது தலை ஓட்டினையே கலமாகக் கொண்டு
எங்கும் சென்று பிச்சையேற்றான். ஏன்? இயல்பாக அறம்
செய்யாதவரும் உயர்ந்தோர்க்குக் கொடுத்தலாகிய செயல் வாய்த்து
அறம் பெறுதற் பொருட்டு. இன்னும் அஃதேயன்றி, 'தானே
பரம்பொருள்' என்பதை விளக்குதற்கும்.

விளக்கவுரை

'எனவே, அவன் அடியார் பிச்சையேற்றலும் அத் தன்மைத்தேயாம்' என்பது குறிப்பெச்சம். தாருகாவன இருடிகள் கருமப்பிரம வாதிகளாய், 'கடவுள் இல்லை' என்னும் மயக்க உணர்வினராய்த் தம்மனைவியர்க்கும் அக்கொள்கையினையே போதித்துவர அவர்கட்கு அம்மயக்கத்தப் போக்கி, 'பரம்பொருள் ஒன்று உண்டு' என்பதையும், 'அப்பரம்பொருள் தானே' என்பதையும், அவர்கட்குத் தெளிவிக்கவே சிவபிரான் திருமாலை மோகினியாகச் செய்து இருடியர்பால் அனுப்பித் தான் பிச்சைப்பெருமானாய் இருடியர்தம் பத்தினிமார் முன் சென்றான். ஆகலின் அதனையே இம்மந்திரத்தின் பின்னிரண்டடிகளில் குறித்தார். பிச்சைப் பெருமானாய்ச் சென்றது, 'பரம் பொருள் ஒன்று உண்டு' என்பதை உணர்த்துதற்கும், பிரம கபாலத்தை ஏந்திச்சென்றது, 'அப்பரம் பொருள் தானே' என்பதை உணர்த்தற்கும் ஆதலின் 'பிரமன் சிரங்காட்டி' என மீளவும் அனுவதித்துக் கூறினார். முதற்கண் 'பிரமன் தலைதன்னில்' என்றது, 'தானை பரம்பொருள்' என அகங்கரித்துப் பேசிய பிரமன் தலையிழந்தான் என்பதை உணர்த்து முகத்தால், 'சீவர்கள் தாங்களே எல்லாவற்றுக்கும் தலைவர் என எண்ணுதல் பிழை என்பதைக் குறித்தற்கு. இரண்டாவது அடியை, 'பிரியாள் அறம் செய்ய' எனவும் பாடம் ஓதுவர். அது முன்னிரண்டடிகளை வெற்றெனத் தொடுத்தல் ஆக்குமாறு அறிக.

இதன்கண் சொற்பொருட் பின்வரு நிலையணி வந்தது. 'அது' நான்கும் பகுதிப் பொருள் விகுதி. 'பிரான்' என்பதை முன்னும் கூட்டுக. பிரிதல் - மேற்கொள்ளாதொழிதல்.

இதனால், சிவன் அடியார்கள் பிச்சை யேற்றல் சிவன் பிச்சையேற்றலை நினைப்பித்து, அதன் பயனை யெல்லாம் விளைத்தல் கூறப்பட்டது.

பரந்துல கேழும் படைத்த பிரானை
'இரந்துணி' என்பர் எற்றுக் கிரக்கும்
நிரந்தர மாக நினையும் அடியார்
இரந்துண்டு தன்கழல் எட்டச் செய்தானே. *#1852*

சிவபெருமானை உலக முதல்வனாக உணரா தவர்கள் அவன் இரத்தலை

மட்டுமே நோக்கி அது பற்றி இகழ்ந் தொழிவர். அவர்கள் போலன்றி அவனை உலக முதல்வனாக உணர் பவர், 'சிவன் ஏன் இரக்கவேண்டும்'என ஆழ்ந்து நோக்குவர். அங் ஙனம் நோக்குவார்க்கு, 'அவன் அடியவர் உலகியலில் ஈடுபடாது பசி நீங்குதல் மாத்திரைக்குத்தன் செயலைப் போலவே இரந்து உண்டு முடிவில் தனது திருவடியடையும் செயலைப் போலவே இரந்து உண்டு முடிவில் தனது திருவடியடையும் நோக்குத் தப்பாது நிறைவெய்துதற் பொருட்டாம்' என்பது விளங்கும்.

விளக்கவுரை

எனவே, 'சிவனடியார் இரத்தலைச் செய்தல் திருவருள் வழி நிகழ்வதாம்' என்றபடி.

வரஇருந் தான்வழி நின்றிடும் ஈசன்
தரஇருந் தான்தன்னை நல்லவர்க்கு இன்பம்
பொரஇருந் தான் புகலே புகலாக
அரவிருந் தால்'அறி யான்'என்பது ஆமே ***#1853***

அடியவர்களே! கருடனுக்கு அஞ்சிய பாம்புகளே சிவனையே அடைக்கலமாக அடைந்து அதனால், ஏன் கருடா சுகமா? என்று கேட்கும் அளவிற்கு அச்சமின்றி யிருக்கின்றன என்றால், 'சிவன் தன்னை அடைந்தவர்களது இன்னலை எண்ணுவ தில்லை' என்றல் கூடுமோ! கூடாது. உண்மையில் அவன் நல்லவர் கட்கு இன்பத்தை அலைவீசும் கடலைப்போல மிகத்தருவதற் காகவே இருக்கின்றான். இன்னும் அவர்கட்கு அவன் தன்னையே கொடுத்துவிடுவான். ஆகையால், அவன் ஒரு காலத்தில் தலையோட்டிலே எங்கும் சென்று இரந்தானாயினும், எப்பொழுதும் தேவரும், மூவரும், யாவரும் தன்பால் வந்து வணங்கி நலம்பெற இருத்தல்போலவே நீங்களும் பலரது இல்லங்களைத் தேடிச்சென்று இரவாது இருங்கள்.

விளக்கவுரை

'அவன் உங்களைத் தேடி உணவு வரும்படிச் செய்வான்' என்பது குறிப்பெச்சம். 'புகலே புகலாக' என்பது முதலியவற்றை ஈசன் என்பதற்கு முன்னர்க்கூட்டி, 'வர இருந்தான் வழிநின்றிடும்' என்பதனை இறுதியில் வைத்துரைக்க. 'இன்பம் அலைபொர என, பொருதற்கு வினைமுதல் வருவிக்க. அவ்வாறே 'வர' என்பதற்கும் வினைமுதல் வருவித்துக் கொள்க. 'வழி நின்றிடும்' என்றது, 'அவனைப் போலவே இரும்' என்றபடி.
இதனால், 'முன்மந்திரங்களிற் கூறியவாறு அடியவர் பிச்சையேற்றல் ஏற்புடைத்தாயினும், இருந்த இடத்திலிருந்தே ஏற்றல் சிறப்புடைத்து'

என்பது உணர்த்தியவாறு.

அங்கார் பசியும் அவாவும் வெகுளியும்
தங்கார் சிவனடி யார்சரீ ரத்திடைப்
பொங்கார் புவனத்தும் புண்ணிய லோகத்தும்
தங்கார் சிவனைத் தலைப்படு வாரே. *#1854*

சிவனடியார்கள் தாம் எடுத்த உடம்பிலே உள்ளா ராயினும் அதன்கண் இல்லாதவரேயாவர். அஃது எங்ஙனம் எனின் அவ்வுடம்பில் உளதாகின்ற பசி, அவா, சினம் என்பவை தம்மை வெல்லும் அளவிற்கு மிகார். ஆதலின், இன்னும் அவர்கள் இந்திரன், மால், பிரமன் முதலியோர் உலகத்திலும், சிவலோகத்திலுங்கூட அங்குள்ள போகங்களை நுகர்ந்து வாழார். மற்றுச் சிவனது திருவடி நிழலில் தலைக்கூடுதல் ஒன்றனையே செய்வார்கள்.

விளக்கவுரை

'அதனால் பிச்சை ஏற்றலையும் செய்யார்' என்பது குறிப்பெச்சம். 'சிவனடியார் சரீரத்திடைத் தங்கார்' என மாற்றி முதலில் வைத்துரைக்க. 'தங்கார்' என்றது, எதிர்மறை வினைப்பெயர். 'பொங்கார்', என்பதன்பின், 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. இதனால், 'சிவனடியார்கட்குப் பிச்சையும் மிகையேயாம்' என்பது கூறப்பட்டது.

மெய்யக ஞானம் மிகத்தெளிந் தார்களும்
கையகம் நீட்டார் கடைத்தலைக் கேசெல்லார்
ஐயம் புகாமல் இருந்த தவசியர்
வையக மெல்லாம் வரஇருந் தாரே. *#1855*

இருந்த இடத்திலேயிருக்கும் யோகிகள் வறியவர் இரக்கும் இரவிற்குத் தாம் செல்லாமல், உலகத்தில் உள்ளவர்கள் எல்லாம் தம்பால் வந்து தம்மை வழிபடும்படி இருப்பார்கள். அங்ஙனமாயின், 'ஞானத்தில் மிகுந்தவர் இரத்தலைச் செய்யார்' என்பது சொல்ல வேண்டுமோ!

விளக்கவுரை

'கையகம் நீண்டார் கடைத்தலைக்கே செல்வர்' என்பது பாடமன்று. மூன்றாம் அடிமுதலாகத் தொடங்கி உரைக்க. 'அகங்கை' எனப் பின் முன்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகையாய் வருவது இங்கு நேரே 'கையகம்' என்றே வந்தது. மௌனம் உடையாரை, 'வாய் திறவார்' என்றல்போல, இரவாத வரை. 'கையகம் நீட்டார்' என்றார், 'வாயிற்படி' எனப் பொருள் தரும், கடைத்தலை என்னும் பால்பகா அஃறிணைப் பெயர் இங்குப் பன்மையாய் நின்றது. ஐயம் வறியோர் இரவும், பிச்சை உயர்ந்தோர் ஏற்கும் தானமும் ஆதல் அறிக.

இதனால், சிவனடியார் எஞ்ஞான்றும் இரவார் என்பது கூறி முடிக்கப்பட்டது. இறுதி மூன்று மந்திரங்களும் சிவனடியாருள் அதிதீவிர நிலை உடையாரது செயலே கூறப்பட்டது.

9.17.முத்திரை பேதம்

நாலாறு மாறவே நண்ணிய முத்திரைப்
பாலான மோன மொழியில் பதிவித்து
மேலான நந்தி திருவடி மீதுய்க்கக்
கோலா கலங்கெட்டுக் கூடும்நன் முத்தியே. *#1856*

நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பும் நீங்குதற் பொருட்டு நல்லோர் தங்கள் உள்ளங்களை அவற்றிற்கு ஏற்பப் பொருந்திய முத்திரைகளாகிய பல வகைப்பட்ட மொழிகளிலே பொருத்தி, அவ்வாற்றால் பரம்பொருளாகிய சிவனடிமேல் செல்லும் படி செலுத்தினால், உலக ஆரவாரங்கள் அடங்கி, மேலான வீடுபேறு உண்டாகும்.

விளக்கவுரை

'நால், ஆறு' என்பன தொகைக் குறிப்பாய் அத்துணையான தோற்றங்களையும், பிறப்புக்களையும் குறித்தன. 'நாலாகிய ஏழ்' எனவும், 'முத்திரையாகிய மோன மொழி' எனவும் விரிக்க. முத்திரைகள் வாய்திறந்து பேசாமலே கருத்தை விளக்குதலால் அவற்றை 'மோன மொழி' என்றார். பதிவித்து உய்த்தற்கு, 'உள்ளம்' என்னும் செயப்படுபொருள் வருவிக்க. 'உள்ளம்' என்றது, அதன் கண் எழும் கருத்துக்களை. 'பதிவித்து' என்றது, 'வாய்திறவாமல்' எனவும், கருத்துக்கள் 'அவத்தின் பாலவாகாது, சிவத்தின் பாலவே ஆகல் வேண்டும்' எனவும் கூறியவாறு. மேலான வடு பரமுத்தி.
இதனால், முத்திரைகளது பயன் கூறுமுகத்தால் அவை அடியவர்க்கு வேண்டப்படுதல் கூறப்பட்டது. வாய்திறவாமையை வேண்டியது, 'அதனால் உலகியல் தொடர்பு குன்றுதல் பற்றி' என்பதனை, 'கோலாகலம் கெட்டு' என்பதனால் கூறினார்.

துரியங்கள் மூன்றும் சொருகிட னாகி,
அரிய உரைத்தாரம் அங்கே அடக்கி
மருவிய சாம்பவி, கேசரி உண்மை
பெருகிய ஞானம், பிறழ்முத்தி ரையே. *#1857*

அரிய சொற்களையே உரைப்பதாயினும் அதனையும் துரிய நிலையில் நிற்குங்கால் எழாமல் அடங்கியிருக்கச் செய்து நின்ற 'சாம்பவி, கேசரி' என்னும் இரண்டு முத்தரைகளே முத்துரியங்களும் செறிந்திருக்கும் இடமாய்' உலகியலினின்றும் நீங்குதற்கும், உண்மை ஞானம்

பெருகுதற்கும் ஏதுவாய முத்திரைகளாம்.

விளக்கவுரை

முத்துரியங்களை அடுத்த தந்திரத்தில் காண்க. அரிய உரை ... ... கேசரி' என்பதை முதலிற்கொண்டு உரைக்க. தாரம் - நாக்கு. 'அங்கே' என்றது முன்னர்ப்போந்த துரிய நிலையை. பிறழ்தல் - நீங்குதல் உலகியலினின்று.

இதனால், 'முத்திரைகள் பலவற்றுள் சிறப்புடையன இரண்டு' என அவை எடுத்துக் கூறப்பட்டன.

சாம்பவி நந்தி தன்னருட் பார்வையாம்
ஆம்பவ மில்லா அருட்பாணி முத்திரை***;***
ஓம்பயில் வோங்கிய உண்மைஅக் கேசரி***;***
நாம்பயில் நாதன்மெய்ஞ் ஞானமுத்தி ரையே. ***#1858***

சாம்பவி முத்திரையாவது தனது கண்களைச் சிவனது கண்களாகப் பாவித்துக்கொண்டு, நோக்குவன எவற்றையும் அந்தப் பாவனையோடே நோக்குதலாம். இதனால் உலகப் பொருள்கள் மாயையாகாது அருள்மயமாக, தனது ஞானேச்சாக் கிரியைகளும் சிவனது ஞானேச்சாக் கிரியைகளில் அடங்கி நிற்கும். இனித் தன்னைச் சிவனாகப் பாவித்து வணங்குவோரையும் அருளே தனுவாய் நின்று சிவமாகச் செய்யும். இனிக் கேசரி முத்திரையாவது, பிறப்பில்லாமைக்கு ஏது வாகிய சின்முத்திரைக் கையுடன் பிரணவ யோகத்தில் பயில்வதாகிய ஞானயோக நிலையாம். இவை இரண்டுமே நாம் நாள்தோறும் பயில்கின்ற சிவஞான முத்திரைகளாகும்.

விளக்கவுரை

பிறவியை அறுப்பது திருவடி ஞானமேயாகையால் அதனை, 'ஆம் பவம் இல்லா அருள்' என்றார். அருட்பாணி - அருளைக் குறிக்கின்ற கை. 'முத்திரையோடு' என உருபு விரிக்க. திருவடியுணர்வைக் குறிப்பது சின்முத்திரை ஒன்றேயாதல் அறிக.

இதனால், மேல் பெயர் கூறப்பட்ட இரு முத்திரைகளின் இயல்பு கூறப்பட்டது.

தானத்தி னுள்ளே சதாசிவ னாயிடும்***;***
ஞானத்தி னுள்ளே நற்சிவ மாதலால்
ஏனைச் சிவனாம் சொரூபம் அறைந்திட்ட
மோனத்து முத்திரை முத்தாந்த முத்தியே. ***#1859***

'ஆதாரம், நிராதாரம், மீதானம்' என்பன எல்லாம் வரையறைப்பட்ட இடங்களேயாதலின் அவ்விடங்களில் எல்லாம் விளங்குபவன் தடத்த சிவனே. (ஆகவே யோகம் முழுவதிலும் விளங்குபவன் தடத்த சிவனே.

அதனால் யோக முத்திரைகள் யாவும் பதமுத்தி அபரமுத்திகளையே தரும்.) ஞானத்தில் சொரூப சிவன் விளங்குதலால் தடத்த சிவனின் வேறாகிய சொரூப சிவனைக் குறிக்கின்ற சின்முத்திரையே முத்திகளிலெல்லாம் முடிந்த முத்தியாகிய பரமுத்தியைத் தரும் முத்திரையாகும்.

விளக்கவுரை

போக சிவனாகிய சதாசிவனுக்குமேல் இலய சிவ னாகிய அருவ சிவன் உளனாயினும், 'தடத்த சிவன்' என்பது இனிது விளங்குதற்பொருட்டுச் சதாசிவனையே குறித்தார். 'நற்சிவம்' என்றது, 'சொரூப சிவன்' என்றபடி. மோன முத்திரை - ஞான முத்திரை. அஃதாவது சின்முத்திரை. முத்த அந்த முத்தி - முத்திகளில் இறுதியான முத்தி, முத்தியைத் தருவதை 'முத்தி' எனப் பான்மை வழக்காற் கூறினார். யோகத்தில் கைச்செய்கையேயன்றி, உடல் அமைப்புக்களும், அஃதாவது ஆசன வகைகளும் முத்திரை எனப்படும்.

இதனால், 'யோகிகளினினும் சிறந்த ஞானிகளாகிய அடியவர் கொள்ளத் தக்கது சின்முத்திரையே' என்பது கூறப்பட்டது.

வாக்கும் மனமும் இரண்டும் மவுனம்ஆம்**;**
வாக்கு மவுனத்து வந்தாலும் மூங்கையாம்**;**
வாக்கும் மனமும் மவுனமாம் சுத்தமே
ஆக்கும்அச் சுத்தத்தை**;** யார்அறி வார்களே**. *#1860***

வாக்கு, மனம் என்னும் இரண்டும் வாளா இருத்தலே 'மௌனம்' என்பதற்குப் பொருளாகும். 'அதைவிடுத்து, மனம் எவ்வாறு செயற்பட்டாலும் வாக்கு மட்டும் செயற்படாது வாளா இருத்தல்தான் மௌனம்' எனக் கூறினால் உலகில் ஊமைகளாய் உள்ளார் யாவரும் மௌன விரதிகளாகி விடுவர். வாக்கு, மனம் என்னும் இரண்டும் அடங்கிய தூய நிலையே 'சுத்த நிலை' எனப் படுகின்ற அந்த வீடுபேற்றைத் தரும். அந்த உண்மையை அறிகின்றவர் யாவர்?

விளக்கவுரை

'அறிந்து வாக்கும், மனமும் மௌனமாய், மோன முத்திரையுடன் இருப்போர் அரியர்' என்பது குறிப்பெச்சம். 'இரண்டும்' என்றது, 'இரண்டன் மௌனமும்' என்றபடி.

இதனால், 'மோன முத்திரையுடையார் இன்ன நிலையின ராதல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

யோகத்தின் முத்திரை ஓரட்ட சித்தியாம்**;**
ஏகத்த ஞானத்து முத்திரை எண்ணுங்கால்
ஆகத் தகுவேத கேசரி சாம்பவி**;**

யோகத்துக் கேசரி யோகமுத்தி ரையே. *#1861*

யோகம் கைவந்தமைக்கு அடையாளம் அட்டமா சித்திகள் வாய்ந்தமையாகும். அதுபோல இறைவனின் வேறாகது ஒன்றாகிய அனுபவ ஞானம் கைவந்தமைக்கு அடையாளத்தை ஆராயுமிடத்து மிக்க தகுதி வாய்ந்ததான வேதத்திற் சொல்லப்பட்ட கேசரியாகிய சாம்பவி முத்தரை யோடு கூடிய கேசரி முத்திரையே யாகும். யோக நூலினும் கேசரி முத்திரை சொல்லப்பட்டதாயினும் அஃது யோக கேசரி முத்திரையாம் .

விளக்கவுரை

ஆக்கம், இங்கு மிகுதி குறித்து நின்றது 'மிக்க தகுதி யுடைய வேதம்' என்றது. ஞான காண்டமாகிய உபநிடதங்களை. அவற்றுட் கூறப்படும் கேசரி முத்திரை. 'சாம்பவி முத்திரையோடு கூடிய கேசரி முத்திரை' என்றும், 'யோக நாலுட் கூறப்படும் கேசரி முத்திரை தனியாகச் சொல்லப்படும் கேசரி முத்திரை' என்றும் உணர்த்தற் பொருட்டு முறையே 'கேசரி சாம்பவி' என்றும் 'கேசரி' என்றும் கூறினார். ஆகவே, 'சாம்பவி' என்றது, சாம்பவியோடு கூடியது' என்றதாம். யோக கேசரி மூன்றாம் தந்திரத்துள் கேசரி யோகம்' என்னும் அதிகாரத்தில் கூறப்பட்டதாம். இதனானே, 'உபநிடதங்களிற் கூறப்படும் யோகம் ஞானயோகமே' என்பதும் பெறப்படும்.
இதனால், கேசரி முத்திரை பற்றியதோர் ஐயம் அறுக்கப்பட்டது.

யோகிஎண் சித்தி அருளொளி வாதனை*;*
போகிதன் புத்தி புருடார்த்த நன்னெறி*;*
ஆகும்நன் சத்தியும் ஆதார சோதனை*;*
யோகத்துக் கேசரி யோகமுத்தி ரையே. *#1862*

யோகி பெறும் அட்டமா சித்திகள் தருவருளால் கிடைப்பனவாயினும் அதுவும் ஒருவகைப் பந்தமே இனிப் போகியாய் இருப்பவன். 'நல்ல புத்திமான்' என மதிக்கப்படுவானாயின் அவன் அறம் முதலிய மூன்று புருடார்த்தத்தைப் பெறும் நன்னெறியில் நிற் பவனேயாவான். ஆறு ஆதாரங்களையும் நன்கு தரிசித்தவன் திருவருள் நெறியைத் தலைப்பட்டவனாவன். ஆகவே ஞானி ஒருவனே ஒப்பற்ற முதற்பொருளை உணர்ந்து அதன்பால் உள்ள பேரின்பத்தவனைப் பெற்றவனாவன்.

விளக்கவுரை

'அத்தகையோனுக்கு உரியனவே சாம்பவியோடு, கூடிய கேசரி முத்திரை என்பது முன்மந்திரத்தினின்றும் வந்தியையும் ஞானியது பெருமையை விளக்குவார் ஏனையோர் நிலைகளை உடன் வைத்துக் கூறினார்.

இதனால், ஞானகேசரி முத்திரையின் சிறப்புப் பிற வற்றோடு ஒருங்கு வைத்து உணர்த்தப்பட்டது.

துவாதச மாக்கமென் சோடச மார்க்கமாம்;
அவாஅறும் ஈரை வகைஅங்கம் ஆறும்
தவாஅறு வேதாந்த சித்தாந்தத் தன்மை
நவாஅக மோடுன்னல் நற்சுத்த சைவமே. *#1863*

பன்னிரு கலைப் பிராசாதமே பதினாறு கலைப் பிராசாதமாய் விரியும். அதனால் அவை இரண்டும் தம்மில் வேறாவன அல்ல. விரிவில் பதினாறாகின்ற அந்தப் பிராசாத யோகமே உலகியலிற் செல்லும் அவாவை அடியோடு அறுக்கும். அதனால் அந்தப் பிராசாத யோகங்களே அவா முற்ற நீங்குதற்கு ஏதுவாகிய 'வேதாந்த யோகம்' சித்தாந்த யோகம்' என்றும் சொல்லப்படும். அவற்றை மிக விருப்பத் தோடு செய்தலே சைவத்துள்ளும் மேலான சைவ நெறியாம்.

விளக்கவுரை

இங்குக் கூறப்பட்ட பிராசாத வகைகள் மூன்றாம் தந்திரத்து, 'கலைநிலை' என்னும் அதிகார விளக்கத்தில்* விரித்து விளக்கப்பட்டிருத்தல் காண்க. 'என்', 'எனல்' என்னும் பொருட்டாய முதனிலைத் தொழிற்பெயர். 'அவா அறு வகை ஈரை ஆறு அங்கமும்' என மாற்றிவைத்து உரைக்க. 'தவாது' என்னும் எதிர்மறை வினை யெச்சத்தின் இறுதி எதுகை நோக்கித் தொகுக்கப்பட்டது. 'தன்மை' என்றது அதிகாரப்பட்டுவருகின்ற யோகத்தினைப் 'பிற யோகங்கள் எல்லாம் வேத யோகமாக இவை வேதாந்த யோகமாம்' எனவும், வேதாந்தத் தெளிவே சித்தாந்தம் ஆகையால், 'அதுவே சித்தாந்த யோகமாம்' எனவும் கூறினமை காண்க. 'நவ' என்பதன் இறுதி எதுகை நோக்கி நீட்டல் பெற்றது. நவம் புதுமை. அது புதுமை மேற் செல்லும் விருப்பத்தைக் குறித்தது. அவ்விடத்து 'அகம்' என்றது மனத்தை. இதனால், 'ஞான கேசரி முத்திரையைக் கொள்ளதற்கு உரியவர் ஞானயோகமாகிய பிராசாத யோகம் செய்பவரே' என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது.

மோனத்து முத்திரை முத்தர்க்கு முத்திரை;
ஞானத்து முத்திரை; நாதர்க்கு முத்திரை;
தேனிக்கும் முத்திரை; சித்தாந்த முத்திரை;
காணிக்கும் முத்திரை; கண்ட சமயமே. *#1864*

'மோன முத்திரை' எனப்படுவதாகிய ஞான கேசரி முத்திரையே உணர்வைச் சிவத்தில் நிறுத்தும் முத்திரையும், சிவா னந்தத்தைப் பெருகச் செய்யும் முத்திரையும் சித்தாந்த முத்திரையும், சிவன் சீவனைச் சதா நோக்கிக் கொண்டிருக்கும் முத்திரையும் ஆகும். அதனால் அதுவே

சீவன் முத்தர்க்கும், சீவன் முத்தராய் ஆசிரியத் தன்மையை உடையவர்க்கும் ஏற்புடைய முத்திரையாம். அதுபற்றிப் பல சைவங்களும் அதனையே சிறந்த முத்திரையாகக் கண்டன.

விளக்கவுரை

'முத்தர்க்கு முத்திரை, நாதர்க்கு முத்திரை' என்ப வற்றை, 'கண்ட சமயமே' என்பதற்கு முன்னே கூட்டி உரைக்க. 'முத்திரை' பலவற்றுள் முதற்கண் நின்றது எழுவாய்; ஏனைய பயனிலை. 'தேன்' என்னும் பெயர், 'இனிமை' என்னும் பொருட்டாக, அதனடியாக, 'தேனித்தல்' என்னும் வினைச்சொல் பிறந்தது. மேற் பார்வை பார்த்தலை, 'கண்காணித்தல்' என்பர். அதனை முதற் குறைத்து, 'காணிக்கும்' என்றார். அடியவரைக் கண்காணிப்பவன் சிவனேயாதல் வெளிப்படை. 'காணிக்கும்' என்து இன எதுகை யாயிற்று. 'கண்டன' என்னும் முற்றுச்சொல் 'அன்' பெறாது 'கண்ட' என நின்றது. 'சமயம்' என்றது தலைமை பற்றிச் சைவ சமயத்தையே குறித்தது. சைவத்தை நாயனாரே ஐந்தாம் தந்திரத்தில் பல வகையாகப் பிரித்துணர்த்தினமை அறிக.
இதனால், ஞான கேசரி முத்திரையே, முத்திரைகளுள் தலையாவது என்பது பலவற்றாலும் வலியுறுத்தி, ஒருவாறு முடித்துக் கூறப்பட்டது.

தூநெறி கண்ட சுவடு நடுஎழும்
பூநெறி கண்டது பொன்நக மாய்நிற்கும்**;**
மேனெறி கண்டது வெண்மதி மேதினி**,**
நீணெறி கண்டுளம் நின்மல னாகுமே**. *#1865***

தூய நெறியாகிய யோக முறை கைவந்து உண்மையைக் கண்ட அடையாளம், புருவ நடுவில் தோன்றுகின்ற முடி நிலை ஆதாரமாய்க் காணப்பட்டு, மேருமலையின் உச்சியை அடைந்தது போலத் தோன்றும். எனினும் அதுவே முடிநிலையாகாது, அதற்கு மேலேயுள்ள ஏழாந்தானத்திற் சென்றவர் கண்டது சந்திர மண்டலமாம். ஒருவன் அதற்குமேலும் செல்வானாயின், சத்தி சிவ நெறிகளைக் கண்டு மலம் நீங்கிய தூய உணர்வினனாவன்.

விளக்கவுரை

'அந்நிலையை அடைவிப்பது மேற்கூறிய பிராசாத யோக நெறியாகிய ஞான கேசரி முத்திரையேயாம்' என்பது குறிப்பெச்சம்.
'நெறி' நான்கனுள் ஈற்றில் உள்ளதில் இரண்டனுருபும், ஏனையவற்றில் மூன்றனுருபும் விரிக்க. பூ - பூமி; நிலம் - ஆதாரம். நகம் - மலை. ஆக்கம், உவமை குறித்து நின்றது. மேதினி - மண்டலம். நீள் நெறி - உயர் நெறி. 'நீணெறி' என்பது இன எதுகை.
இதனால், கேசரி முத்திரைபற்றிக் கூறப்பட்ட ஞான யோகத்தின்

சிறப்புணர்த்து முகத்தானே அம்முத்திரையினது சிறப்புணர்த்தி முடிக்கப்பட்டது.

9.18.பூரணக் குகைநெறிச் சமாதி

வளர்பிறை யில்தேவர் தம்பாலின் மன்னி
உளரொளிப் பானுவி னுள்ளே யொடுங்கித்
தளர்வில் பிதிர்பதம் தங்கிச் சசியுள்
உளதுறும் யோகி உடல் விட்டால் தானே. ***#1866***

இயன்ற அளவு யோக நெறியில் நின்ற யோகி அந்நிலையிலே தனது புற உடலை விட்டு நீங்கினால் நீங்கின காலம வளர்பிறைக் காலமாய் இருப்பின் முன்னர்த் தேவருலகை அடைந்து சில காலம் இருந்து, பின் சூரிய மண்டலத்தில் நுட்பமாய்ப் புகுந்து, அப்பால் பிதிரர்கள் உலகத்தில் தங்கி, இறுதியில் சந்திர மண்டலத்துள் தஹ்கி அங்குள்ள இன்பத்தை நுகர்வான்.

விளக்கவுரை

ஈற்றடியில் உள்ள 'யோகி உடல் விட்டால்' என்பதனை முதலிற்கொண்டு உரைக்க. தான், ஏ அசைகள். 'வளர் பிறையில்' என்றதனால், யோகி வளர்பிறையிற்றான் புற உடலை விட்டு நீங்குவான்' என்பது அமைந்து கிடந்தது. உளர் ஒளி - அசைகின்ற ஒளிக்கதிர். பிதிரராவார் மக்களுள் சிறந்தோரைத் தம்பால் வைத்துப் புரக்கும் கடவுளர். இவரே 'தென்புலத்தார்' *(திருக்குறள் - 43.)* ஆவர். இதனால், யோக நிலைமுற்றப் பெறாத யோகிகளது வாழ்வின் நிறைவிற்குப் பின் உளதாம் நிலை கூறப்பட்டது.

தானிவை யொக்கும் சமாதிகை கூடாது
போனவி யோகி புகலிடம் போந்துபின்
ஆனவை தீர நிரந்தர மாயோகம்
ஆனவை சேர்வர் அருளின்சார் வாகியே. ***#1867***

யோக நிலை முற்றப்பெறாது உடல்விட்ட யோகிக்கு மேற்சொல்லியன எல்லாம் பொருந்தும். அவன் அவ்வாறு மேற்சொல்லிய இடங்களிலெல்லாம் தங்கிப் பயன்களை நுகர்ந்தபின் அங்கு நின்றும் பூமியில் வந்து பிறந்து விட்ட குறையாகிய வினையைப் புசித்துத் தீர்ந்தபி திருவருளின் துணையைப் பெற்று இடைவிடாது யோகத்தின் முதிர்ந்த நிலைகளை எய்துவர்.

விளக்கவுரை

யோகத்தின் முடிநிலை சமாதி நிலையாகலின் யோகம் முற்றப் பெறாது உடல் விட்ட யோகியை, 'சமாதி கை கூடாது போன வியோகி' என்றார். முதற்கண் 'தான்' என்றது அவனையே யாகலின், அதனை, 'தனக்கு'

எனத் திரித்துக் கொள்க. 'புகலிடத்தினின்றும்' என ஐந்தாவது விரிக்க. இதனால், 'யோக நிலை முற்றப் பெறாது உடல் விட்ட யோகிகள், மீண்டும் பிறந்து அது முற்றப் பெறுவர்' என்பது கூறப்பட்டது.

தானிவ் வகையே புவியோர் நெறிதங்கி
ஆன சிவயோகத்தாம் ஆறாம் அவ்விந்து
தானதில் அந்தச் சிவயோகி யாகுமுன்
ஊனத்தோர் சித்திவந் தோர்காய மாகுமே. ***#1868***

மேற்கூறிய யோகி மேற்கூறியவாறு உலக மக்கள் நெறியிலே தானும் நின்று, அதற்கு இடையிலே யோகம் முதிரப் பெற்றுச் சிவயோகியாவான். அங்ஙனம் அவன் சிவயோகி ஆவதற்கு வழி பிராசாத மந்திரம். அந்த மந்தித்தில் நின்று சிவயோகி ஆவதற்கு முன்பு அவன் பொதுவான யோகப் பயிற்சியால் கிடைக்கும் காய சித்தியைப் பெறுதலும் உண்டு.

விளக்கவுரை

'விந்து' என்றது உபலக்கணமாய் ஏனைக் கலைகளோடு கூடிய பிராசாத மந்திரத்தைக் குறித்தது. 'இம்மந்திர வழிச் செய்யப்படும் யோகமே சிவயோகம்' என்பது இங்கு இனிது விளக்கப் பட்டது. எனவே, முன் மந்திரத்தில் 'மாயோகம்' என்றதும் இதுவேயாயிற்று. 'வந்த' என்னும் பெயரெச்சத்து அகரம் தொகுத்தலாயிற்று.
'காயமும்' என்னும் எதிர்மறை உம்மை தொகுத்தலாயிற்று.
இதனால், 'முன்மந்திரத்திற் கூறியவாறு மாயோகத்தைப் பெறுதற்குமுன் சிலர் காய சித்தியைப் பெற்று நெடுங்காலம் மண்ணிலே இருத்தலும் உண்டு' என்பது கூறப்பட்டது. காய சித்தியைக் கூறவே ஏனைச் சித்திகளையும் பெற்றிருத்தல் பெறப்பட்டது.
'தவமும் தவமுடையார்க் காகும்' * என்றபடி, யோகம் முதிரப் பெறுதலும், சிவயோகம் கூடலும் முற்பிறவியில் பழகினோர்க் கேயாம் என்பதும் இதனால் பெறப்படுமாறு அறிக.

சிவயோகி ஞானி சிதைந்துடல் விட்டால்
தவலோகம் சார்ந்து பின்தான்வந்து கூடிச்
சிவயோக ஞானத்தால் சேர்ந்தவர் நிற்பன்
புவலோகம் போற்றுநர் புண்ணியத் தோரே. ***#1869***

பிராசாத யோகமாகிய சிவயோகத்தில் நின்றவன் ஞானம் பெற்றவனோடு ஒத்தவனேயாவன். அவன் ஞானம் பெறுதற்கு முன் உடலை விட்டு நீங்கினானாயினி நேரே சிவலோகத்தையே அடைந்து அங்கு இன்பம் துய்த்தபின் மீளப் பிறந்து அந்தச் சிவ யோகத்தின் வழியே பெற்ற ஞானத்தால் மேன்மை எய்தி அத்தன்மை யாரோடே இருப்பன். அவ்வாறன்றிச் சிவலோகம் முதலியவற்றிற் செல்வோர் பசு

புண்ணியம் செய்தவரே யாகையால் சிவயோகி ஆங்கெல்லாம் புகான்.

விளக்கவுரை

சிவயோக ஞானம் - சிவயோகத்தால் பெற்ற ஞானம். 'பெற்ற ஞானம்' எனவே, பெறுதல் தானே பெறப்பட்டது. 'பெற்ற ஞானம்' எனவே பெறுதல் தானே பெறப்பட்டது. சேர்தற்குச் செயப்படுபொருள் வருவிக்க. 'நிற்பர்' என்பது பாடம் ஆகாமை அறிக. 'அவரொடு' என உருபு விரிக்க.

இதனால், மாயோகத்தைப் பெற்றவரது வாழ்வு நிறைவின் பின் நிகழ்வது கூறப்பட்டது.

ஊனமில் ஞானிநல் யோகி உடல்விட்டால்
தானற மோனச் சமாதியுள் தங்கியே
தானவ னாகும் பரகாயஞ் சாராதே
ஊனமில் முத்தனாய் 'மீளான் உணர்வுற்றே. ***#1870***

குறைவில்லாத ஞானத்தைப் பெற்றவன் 'குறை வற்ற யோகி' என்றும் சொல்லப்படுவான். (அதற்குக் காரணம், உடம்புள்ள வரையில் அவன் உடலை விட்டு நீங்கியபின் வேறோர் உடலை எடுத்தல் இன்றியே, உடம்பில் மோன சமாதி நிலையில் தான் வேறின்றி இருந்தவாறே உடனே தான் சிவமேயாவன் ஆகவே, அவன் பரமுத்த னாதலன்றி, உலகியல் உணர்வைப் பொருந்திப் பிறப்பில் மீளான்.

விளக்கவுரை

'தங்கி ஆகும்' என்பதில் செய்தெனெச்சம், 'ஓடி வந்தான்' என்பது போல முடிக்கும் சொற்கு அடையாய் நின்றது. 'பரகாயம் சாராதே' என்பதை முதலடியின் இறுதியில் கூட்டியுரைக்க. இவ்வேகாரம் பிரிநிலை 'முத்தராய்' எனவும், 'மீளார்' எனவும் பன்மைச் சொல்லாக ஓதுவன பாடம் ஆகாமையறிக. 'உணர்வுற்று மீளான்' என்க.

இதனால் ஞானம் முற்றப் பெற்றோர் தம் வாழ்வின் பின்னர் எய்தும் நிலை கூறப்பட்டது.

செத்தார் பெறும்பய னாவதி யாதெனில்
செத்துநீர் சேர்வது சித்தினைக் கூடிடில்
செத்தார் இருந்தார் செகத்தில் திரிமலம்
செத்தார் சிவமாய திண்சித்தர் தாமே. ***#1871***

'பிறந்தவர் இறத்தல் இயல்பு என்னும் அம் முறை யிலே இறந்தவர் என்ன பயனைப்பெறுவர்' என வினவில் அம்முறை யில் இறந்தவர் அடையும் பயன் அந்த இறப்பைத் தவிர வேறில்லை. (என்றதில், 'அவர் சிறப்பாக அடையும் பயன் வேறில்லை' என்றபடி) இனிப் பொதுவான யோகத்தைச் செய்து அதன் பயனாகச் சித்திகளைப் பெற்றவர்

இறந்தாரானால், அவரது புகழ் உலகில் இறவாதிருக்கும். ஆகவே, மும்மலங்களும் கெடப்பெற்றோரே வாழ்விலும், வாழ் விற்குப் பின்னரும் சிவமாய் நிற்கும் சிறந்த பேற்றை உடையராவர்.

விளக்கவுரை

'செத்தார்' என அமங்கலமாகவே கூறியதனால், அது பிறந்த பல உயிரும் இறக்கும் இறப்பினை எய்திநின்றோரையே குறித்தது. வினாவியவருக்கு இறுக்கப்படும் விடையை வெகுளியால் அவர்மீதே வைத்து, 'நீர்' என முன்னிலையாற் கூறினார். வெகுளி, வாளாதே பயன்பெற விழைதல் பற்றி எழுந்தது. சேர்வு+அது' என்க, சேரப்படும் பயனைச் சோர்வு என்றார். 'அதுவே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. சித்தி, 'சித்து' எனவும் படும். புகழுடம்பு நிலைத்து நிற்க இறத்தலை, 'உளதாகும் சாக்காடு'*l* என்ப ஆதலின், 'இருந்தார்' என்றார். 'இருந்தாரே' என்னும் தேற்றேகாரமும் தொகுத்தலாயிற்று. 'செகத்தில் இருந்தாரே' என்க. 'வாளா இறந்தார் பெறும் பயன் யாது' என வினாவினார்க்கு, 'பிறந்தோர் யாவரும் புகழோ, ஞானமோ இரண்டில் எதனையாவது எய்தல் வேண்டும்' என்றற்கு, யோகியரும், ஞானியரும் பெறும் பயனை உடன் எடுத்துக் கூறினார். சிறந்த சித்தியாவது முத்தியே யாதல் பற்றி, முத்தியும் சில விடத்து, 'சித்தி' எனப்படுதல் பற்றி, முத்தி எய்துவோரை, 'சித்தர்' எனக் கூறுகின்றவர் 'திண்சித்தர்' எனச் சிறப்பித்துக் கூறினார். இதனால், வாளா வாழ்ந்து நாள் கழிப்பவர் வாழ்வு முடிந்த பின்னர் யாதொரு பயனும் எய்தாமை கூறப்பட்டது.

உன்னக்கருவிட் டுரவோன் அரன்அருள்
பன்னப் பரனே அருட்குலம் பாலிப்பன்
என்னப் புதல்வர்க்கும் வேண்டியிடும் ஞானி
தன்னிச்சைக் கீசன் உருச்செய்யுந் தானே. ***#1872***

ஞானத்தைப் பெற விரும்பும் உறுதியுடையவன், 'சிவனையன்றி வேறொன்றையும் நினைத்தல் கூடாது' என்னும் எண்ணமாகிய விதையை முதலிலே தனது உள்ளமாகிய நிலத்தில் ஊன்றி, (அந்த எண்ணம் சத்திநிபாதத்தால் உண்டாகும்) அங்ஙனமே சிவனையே பலகாலும் நினைத்தும், போற்றியும் வருவானாயின், அந்தச் சிவனே அவனுக்கு ஞானியர் குழாத்தை அவனுக்கு அருள் புரியும் வண்ணம் கூட்டுவிப்பான். (சேரமான் பெருமாளுக்கு வன் றொண்டரைக் கூட்டுவித்ததுபோல.) அங்ஙனம் கூட்டுவிக்கப்பட்ட பின் அவன் தானும் அக்குழாத்து ஞானியர் போல உலகத்தார் அனைவரையும் தன் மக்கள் போலக் கருதி, 'அவர்களும் தான் பெற்ற பேற்றைப் பெற வேண்டும்' என விரும்புவான். அத்தகையோனுக்குச் சிவன் அவன் விரும்பியவாறெல்லாம் காட்சி தருவான்.

விளக்கவுரை

'அவ்வாறு நீவிரும் செய்து ஞானத்தோர் பெறும் பயனைப் பெறுவீராக' என்பது குறிப்பெச்சம். 'வாளா செத்தார் பெறும் பயன் யாது' என வானாவியவரை வெறுத்து, 'அவர் பெறும் பயன் யாதுமில்லை' எனவும், 'பயன்பெறும் வழிகள் இவை' எனவும் கூறிய நாயனார், 'அவற்றுள் சிறந்ததாகிய ஞானத்தைப் பெறுதல் எவ்வாறு' என அறிய விரும்புவார்க்கு அதனை இம்மந்திரத்தாற் கூறினார்.

'கரு' என்றது எண்ணத்தை. உரவோன் - திட்பம் உடையவன். குலம் - குழாம். 'என்ன புதல்வர்க்கும்' என வரற்பாலது எதுகை நோக்கி, 'என்னப் புதல்வர்க்கும்' என வந்தது. வேண்டுதல், தான்பெற்ற இன்பத்தை அவரும் பெறுதலை. 'ஞானி' என்றது முன்பு உரவோனாய் இருந்து பின்பு ஞானம் பெற்றவனை. 'இம்மையிலும் தான் வேண்டியவாறே ஈசனைப் பெற்று நிற்பான்' எனவே, உடல் விட்டபின் அவன் ஈசனைப் பெறுதல் சொல்லவேண்டாவாயிற்று.

இதனால், முன் மந்திரத்து வினாவியவர்க்குப் பயன்பெறும் வழி காட்டப்பட்டது.

எங்கும் சிவமாய் அருளாம் இதயத்துத்
தங்கும் சிவஞானிக்(கு) எங்குமாம் தற்பரம்
அங்கங் கெனநின் றகமுண்ட வான்தோய்தல்
இங்கே யிறந்தெங்கு மாய்நிற்கும் ஈசனே. *#1873*

ஓரோரிடத்தில் மட்டுமே உள்ளது போலக் கட்டடங் களுக்கு உள்ளதுபோலக் காணப்படுகின்ற ஆகாயம் உண்மையில் அவ்வாறின்றி எங்கும் நிறைந்திருத்தல் போல இறைவன் ஓரோ ரிடத்தில் மட்டும் இருப்பவன் போல அங்கங்குள்ள குருலிங்க சங்க மங்களிலே இருப்பினும் உண்மையில் அவன் அந்த இடங்களை யெல்லாம் கடந்து எங்கும் இருக்கின்றான். இந்த உண்மையைத் திருவருளால் உணர்ந்து அந்தத் திருவருள் வியாபகத்திலே நிற்பவனே சிவஞானியாவான். அவன் உடல் விட்டால் அவனுக்கு சிவன் தனது எங்கும நிறைந்த நிறைவு நிலையை அனுபவமாகச் செய்து எல்லை யில்லாத இன்பத்தையும் அருளுவான்.

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி உரைக்க. 'தோய்தல் போல' என உவம உருபு விரிக்க. 'சிவஞானிகளுக்குத் தற்பரம் எங்குமாய்' என்பதில் 'உடல் விட்டபின்' என்பது அதிகாரத்தால் வந்து இயைந்தது.

இதனால், இவ்வுலகிற்றானே சீவன் முத்தி நிலையைப் பெற்றவன் உடலை விட்டபின் பரமுத்தனாய் விளக்குதல் கூறிமுடிக்கப்பட்டது.

*9.19.*சமாதிக் கிரியை

அந்த மிலாஞானி தன் ஆகம் தீயினில்
வெந்திடில் நாடெலாம் வெந்திடும் தீயினில்
நொந்தது நாய்நரி நுங்கிடில் நுண்செரு
வந்துநாய்ந ரிக்குண வாம்வை யகமே. *#1874*
இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

அந்தம் இன்மை ஞானத்தைச் சிறப்பித்தது. வருகின்ற மந்திரத்தில் எண்ணின்மையும் அன்னது. நோதல் பசியினால். செரு - போர். செருச்செய்வாரது நுட்பமாகிய திறமை செருவின்மேல் ஏற்றப்பட்டது. 'வந்து' என்றதனில் 'வேற்று நாட்டிலிருந்து' என்பது பெறப்பட்டது. இவ்வெச்சம் காரணப்பொருட்டாய் நின்றது. தளை சிதைய ஓதப்படுவன பாடமல்ல.
இதனால் யோகியர் ஞானியரது உடலை எரியூட்டுதலும், வாளா விடுதலும் குற்றமாதல் கூறப்பட்டது. அடுத்து வரும் மந்திரமும் எரிப்படுத்தல் கூடாமையைக் கூறும்.

எண்ணிலா ஞானி யுடல்எரி தாவிடில்
அண்ணல்தன் கோயில் அழலிட்ட தாங்கொக்கும்
மண்ணில் மழைவிழா வையகம் பஞ்சமாம்
எண்ணரு மன்னர் இழப்பர் அரசே. *#1875*
இதன் பொருளும் வெளிப்படை.

விளக்கவுரை

அண்ணல் - இறைவன். 'ஆங்கு' அசை. இதனுள் ஞானியின் உடல் இறைவன் கோயிலுக்கு ஒப்பாதல் சொல்லப்பட்டது.

புண்ணிய மாம்அவர் தம்மைப் புதைப்பது
நண்ணி அனல்கோக்கில் நாட்டில் அழிவாகும்
மண்ணி லழியில் மலங்காரப் பஞ்சமாம்
மண்ணுல கெல்லா மயங்குமனல் மண்டியே. *#1876*
மலங்கு ஆர - மனங்கலங்குதல் மிகும்படி, மண்ணில் அழிதல் -
கேட்பாரின்றிக் கிடநத் அழிதல். ஏனையவை வெளிப்படை.

விளக்கவுரை

'பங்கமாம்' என்பது பாடம் அன்று. 'அவர்' என்றது ஆகுபெயர். இதனால் குகைக்குள் அடக்கும் புண்ணியத்தைப் பயத்தல் கூறப்பட்டது.

அந்தமில் ஞானி அருளை அடைந்தக்கால்
அந்த உடல்தான் குகைசெய் திருத்திடில்

சுந்தர மன்னரும் தொல்புவி யுள்ளோரும்
அந்தமில் இன்ப அருள்பெறு வாரே. *#1877*
இதன் பொருளும் வெளிப்படை.

விளக்கவுரை

இதனால் ஞானியின் உடலைச் சமாதி செய்தலின் பயன் கூறப்பட்டது.

நவமிகு சாணாலே நல்லாழம் செய்து
குவைமிகு சூழலைஞ் சாணாகக் கோட்டித்
தவமிகு முட்குகைமுக் கோணமுச் சாணாக்கிப்
பவமறு நற்குகை பத்மா சனமே. *#1878*

குகையை (நில அறையை) ஒன்பது சாண் ஆழமும் ஒரு பக்கத்திற்கு ஐந்து சாண் சதுரமும் ஆகச் செய்து அடியில் திருமேனி தவநிலையில் அமர்கின்ற ஆசனம் பக்கத்திற்கு மூன்றாக முக் கோணமாக அமைத்து, அதன் மேல் திருமேனியைப் பதுமாசனமாக இருத்துக.

விளக்கவுரை

மூன்றாம் அடியில் 'உட்குகை' என்னாது 'குகை' என்றே ஓதின் தளை சிதைதலை நோக்குக. உட்குகை - குகைக்கீழ். 'பத்மாசனமாக இருத்துக' என இறுதியில் ஆக்கத்துடன் ஒரு சொல் வருவித்து முடிக்க.
இதனால் நிலக்குகை அமைத்து அதன்கண் திருமேனியை இருத்துமாறு கூறப்பட்டது.

தன்மனை சாலை குளங்கரை யாற்றிடை
நன்மலர்ச் சோலை நகரில்நற் பூமி
உன்னருங் கானம் உயர்ந்த மலைச்சாரல்
இந்நிலந் தான்குகைக் கெய்தும் இடமே. *#1879*
இதன் பொருளும் வெளிப்படை.

விளக்கவுரை

'தன்' என்றது உடலை விட்டு நீங்கிய ஞானியை 'மனை' என்றது ஆச்சிரமத்தையும், தங்கியிருந்த இடத்தையும் பொது வாகக் குறிக்கின்றது. சாலை - பெருவழி. 'குளக்கரை, குளங்கரை' - விகற்பப் புணர்ச்சி. 'யாற்றிடைத்திடல்' என்க. நற்பூமி - புனிதமான நிலம்.
இதனால் நிலக்குகை அமைத்தற்குரிய இடங்கள் வரையறுத்துக் கூறப்பட்டன.

நற்குகை நால்வட்டம் பஞ்சாங்க பாதமாய்
நிற்கின்ற பாதம் நவபாதம் நேர்விழப்
பொற்பமர் ஓசமும் மூன்றுக்கு மூன்றணி
நிற்பவர் தாம்செய்யும் நேர்மைய தாமே. *#1880*

நில அறையின் மேலே அழகிய கோயில் ஐந்து அடிக்கு ஐந்து அடிச்

சதுரமாய், உயரம் ஒன்பதடியாக மும்மூன்று அடி உயரத்தில் ஒவ்வொரு நிலையாய் மூன்று நிலைகள் தோன்றும்படி அமைத்தல் முறையாகும்.

விளக்கவுரை

'குகை' என்பதன் பின், 'மேல்' என்னும் பொருட் டாகிய கண்ணுருபு விரிக்க. 'வட்டம்' என்றது. 'சுற்றுப் பக்கம்' என்ற படி. 'பாதம்' என்பது பலபொருள் தருமாதலின் 'அடிக்கால்' என்பது உணர்த்துதற்கு 'அங்கபாதம்' என்றார். அங்கம் - உடல் உறுப்பு. நில அறை இரண்டரை முழச் சதுரம் ஆதலின் அதன்மேல், 'ஐந்தடிச் சதுரம்' என்பது அந்த நில அறையை உள்ளடக்கியிருப்பதாகும். நிற்கின்ற பாதம் - நிலத்தினின்றும் எழுந்து நிற்கும் வடிவையுடையது. ஓசம் - ஒளி. அஃது பெயராய் யாவரும் காண விளங்கி நிற்கும் கோயிலைக் குறித்தது. 'அண்ணி என்பது இடைக் குறைந்து, 'அணி' என நின்றது. அண்ணி நிற்பவர், ஞானியை அடுத்திருப்பவர்; மாணாக்கர் முதலாயினோர். 'செய்யும்' என்னும் பெயரெச்சம் 'நேர்மை' என்பதனோடு முடிந்தது.
இதனால், நில அறையின்மேல் கட்டப்படும் சமாதி கோயிலின் அமைப்பு முறை கூறப்பட்டது. நில அறை அமைப்பு முறை கூறினமையின் அதனோடு இியையக் கோயில் அமைப்பு முறையும் கூறப்பட்டது.

பஞ்சலோ கங்கள் நவமணி பாரித்து
விஞ்சப் படுத்ததன் மேல்ஆ சனமிட்டு
முஞ்சி படுத்துவெண் ணீறிட் டதன்மேலே
பொன்செய்நற் சுண்ணம் பொதியலு மாமே. ***#1881***

நில அறையின் அடியில் ஐம்பொன்களும், ஒன்பான் மணிகளும் நிரம்ப இட்டு மூடி, அதன்மேல் மேற்கூறிய முக்கோண பீடத்தை அமைத்து, அதன்மேல் தருப்பையைப் பரப்பி, திருவெண்ணீற்றைத் திருமேனிக்கு அடியிலும், சுற்றிலும், மேலேயும் நிரம்ப இட்டு, அதன்மேல் பொன்னிறமாய் உள்ள நறுமணப் பொடியை மிகுதியாகத் தூவுதலும் சிறப்புடையதாகும்.

விளக்கவுரை

'ஐம்பொன்' என்றது பெரும்பான்மை பற்றியே யாகலின். கரும்பொன் ஒழிந்தனவே கொள்க. பொன் செய் - பொன்னினது ஒளியைத் தருகின்ற. இது முதல் நான்கு மந்திரங்களால் திருமேனியைப் பொதியுமாறே கூறப்படுகின்றது.

நள்குகைநால் வட்டம் படுத்ததன் மேற்காகக்
கள்ளவிழ் தாமம் களபம்கத் தூரியும்
தெள்ளிய சாந்து புழுகுபன் னீர்சேர்த்து
ஒள்ளிய தூபம் உவந்திடு வீரே. ***#1882***

நடுவில் நில அறை இருக்க, நாற்புறத்திலும் மேலே வரம்பு அமைத்தபின், அதற்கு மேற்கு பக்கத்தில் நிலத்தின்மேல் ஆசனத் தின்மேல் திருமேனியை எழுந்தருளப் பண்ணி, சந்தனத்தின் கருப்பூரம் முதலியவை கலந்த குழம்பு, தனியாக இழைத்த சந்தனம், புனுகு, பனிநீர் முதலியவை களால் திருமுழுக்குச் செய்வித்து, தேன் துளிக்க மலரும் பூவால் ஆகிய மாலையைச் சார்த்தி, தூப தீபம் காட்டுக.

விளக்கவுரை

'அதன்மேற்காக' என்றமையால், 'நிலத்தின் மேல்' என்பது பெறப்பட்டது. வழிபாடுகளை மிகச் சுருங்கக் கூறினாராயிலும் உபலக்கணத்தால் இங்குக் கூறாதனவும் கொள்ளப்படும்.

ஓதிடு வெண்ணீற்றால் உத்தூளம் குப்பாயம்
மீதினில் இட்டா சனத்தினின் மேல்வைத்துப்
போதுறு சுண்ணமும் நீறும் பொலிவித்து
மீதி லிருத்தி விரித்திடு வீரே. ***#1883***

தூப தீபம் காட்டுதல் முதலியவற்றைச் செய்தபின் திருநீற்றைத் திருமேனிமேல் குப்பாயம் போல மிகுதியாகப் பூசி, நில அறையில் அமைத்துள்ள பீடத்தின் மேல் மலர்கள், நறுமணப்பொடி, திருநீறு இவைகளை இட்டு, மேலே திருமேனியை எடுத்து இருத்திச் சுற்றிலும் ஆடையைச் சூழ வையுங்கள்.

விளக்கவுரை

'வைத்து' என்பதை, 'பொலிவித்து' என்பதற்கு முன்னே கூட்டுக. விரித்தலுக்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது.

விரித்தபின் நாற்சாரும் மேவுதல் செய்து
பொரித்த கறிபோ னகம்இள நீரும்
குருத்தலம் வைத்தோர் குழைமுகம் பார்வை
தரித்தபின் மேல்வட்டம் சாத்திடு வீரே. ***#1884***

குகையில் திருமேனியைச் சுற்றி ஆடையால் மூடியபின் குகையின் மேல நான்கு பக்கங்களிலும் பல வகையான படையற் பொருள்களை வாழைக் குருத்தின்மேல் மேல் இட்டு நிவேதித்த பின்பு திருமேனியைப் பரிவட்டத்தால் மூடிவிடுங்கள்.

விளக்கவுரை

படையற் பொருள்களை மேலே நிலத்தில் வாழைக் குருத்தின் மேல் நான்கு பக்கமும் இட்டு நிவேதித்தல் சூழ்ந்துள்ளோர் பலரும் கண்டு வணங்குதற்பொருட்டு. மற்றும் வானவரும் அப் பொழுது ஞானியை வணங்குவர் என்பது கருத்து. அலம் வைத்து - நிரம்ப இட்டு. குழை முகம் - அருள்புரிகின்ற ஞானியின் முகம். பார்வை தரித்தல் - நிவேதனங்களை

ஞானி தான் பார்வை செய்து ஏற்றல். பரிவட்டம், 'வட்டம்' என நின்றது.

மீது சொரிந்திடும் வெண்ணீறும் சுண்ணமும்
போது பலகொண்டு தர்ப்பைப்புல் வில்வமும்
பாத உதகத்தால் மஞ்சனம் செய்துபார்
மீதுமூன் றுக்குமூன் றணிநிலம் செய்யுமே. *#1885*

திருமேனியைப் பரிவட்டத்தால் மூடிய பின்பு திருவெண்ணீறு, மணப்பொடி, பலவகை மலர்கள், தருப்பைப்புல், வில்வ இலை முதலியவைகளை நிரம்பச் சொரியுங்கள்; பின் அருக்கியம் முதலியவைகளைக் கொடுத்துக் கோயில் எடுத்தற்குரிய தொடக்கத்தைச் செய்து விடுங்கள்.

விளக்கவுரை

'தொடக்கத்தைச் செய்யுங்கள்' என்றதனால், 'திரு மேனியை மண்ணால் மூடி மறையுங்கள்' என்பது தானே பெறப் பட்டது. இவ்விடத்தில் கூறுதற்கு உரிய கோயில் எடுத்தலை ஒரு காரணம் பற்றி, 'பொறப்பமர் ஓசம்' என முன்னே கூறினார் ஆகலின், 'அதனை இங்குக்கொள்க' என்றற்கு அங்குக் கூறியதனை இம்மந்திரத்து ஈற்றடியில் அனுவதித்துக் கூறினார். மீது 'சொரிந்திடும்' என்பதை 'வில்வமும்' என்பதன்பின் கூட்டுக. இங்கு மஞ்சனமாவது அருக்கியபாத்திய ஆசமனங்களைக் கொடுத்தல்.

ஆதன மீதில் அரசு சிவலிங்கம்
ஓதும் இரண்டினில் ஒன்றினைத் தாபித்து
மேதகு சந்நிதி மேவுத் தரம்பூர்வம்
காதலிற் கோடல் காண்உப சாரமே. *#1886*

இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

'குகையின் மேல் கோயில் எடுத்தபின் கருவறையில் ஒரு பீடத்தின்மேல் அரச மரமாயினும், இலிங்கமாயினும் இவற்றுள் ஒன்றை நிறுவி, நாள்தோறும் பதினாறு வகையான உபசாரங்களுடன் வழிபாடு செய்க' என்பதும், 'கோயிலை வடக்கு நோக்கியதாக வேனும், கிழக்கு நோக்கியதாகவேனும் அமைக்க' என்பதும் இதனால் கூறப்பட்டன. 'இன்னதை' நிறுவலாம்' என்பது குரு ஆணை பற்றியும், திருவருட் குறிப்பு நோக்கியும் அறியப்படும் எனக் கொள்க.
'வாயிலை வடக்கு நோக்கியேனும், கிழக்கு நோக்கியேனும் அமைக்க' என்றதனால். 'அதற்குமுன் திருமேனியும் அவ்வாறு இருத்தப் படும்' என்பதும், திருமேனி இருத்தப்பட்ட வகையிலே வாயிலும் அமைக்கப்படும்' என்பதும் உய்த்துணர்ந்து கொள்ளப்படும்.

கோயிலின் கருவறையிலே வில்வ மரம். பாத பீடிகை இவைகளை அமைத்தலும் மரபாக உள்ளது.
இங்ஙனம் இறுதியில் சமாதிக் கோயில்முறை சொல்லி முடிக்கப்பட்டது.

*9.20.*விந்துற்பனம்

உதயத்தில் விந்துவில் ஓம்முதற் குண்டலி
உதயக் குடிலில் வயிந்தவம் ஒன்பான்
விதியிற் பிரமாதி கள்மிகு சத்தி
கதியிற் கரணம் கலைவை கரியே. *#1887*

முழுப்படைப்புக் காலத்தில் முதற்கண் சுத்த மாயா காரியங்களே தோன்றும். அக்காரியம் வாக்குகளும், இறைவனது நவந்தரு பேதங்கட்கும் இடமாய் நிற்கும் சுத்த தத்துவங்களும் ஆகும். நவந்தரு பேதங்களை ஒடுக்க முறையில் வைத்து எண்ணினால் பிரமன் முதலியனவாக அமையும். புண்ணியம் காரணமாக இறைவனது அதிகார சத்தி பதிதலால் அப்பெயர் பெற்று நிற்கும் அணுபக்கத் தினரும் உளர். அது நிற்க. வேறு பிரமனாதியர்க்கும், மற்றும் நால்வகை வாக்கிற்கும், அனைத்துப் பொருள்கட்கும் இடமாய் நிற்பன பஞ்சகலைகள்.

விளக்கவுரை

'அந்தப் பஞ்ச கலைகளும் சுத்த மாயையினின்றே தோன்றும்' என்பது கருத்து. குண்டலியாவது எழுத்தோசையாகிய நாதமேயாம். குடிலையில்' என்பது, 'குடிலில் எனக் குறைந்து நின்றது. 'விந்து, குடிலை என்பன ஒருபொருட் சொற்கள் எனினும் சில இடங்களில் குடிலை என்பது ஆகுபெயராய் அதன் காரியமாகிய வாக்குகளை உணர்த்தும். கதி - காரிய நிகழ்ச்சி. அதிகரணம் என்பது 'கரணம்' எனக் குறைந்து நின்றது. அதிகரணம் - நிலைக்களம், குண்டலி' என்றது சூக்குமமாகிய காரண நிலையாகலின் பின்னர்த் தூல மாகிய வைகரியை வேறு கூறினார். 'வைகரி' என்றது உபலக்கணம் ஆதலின் ஏனை மத்திமை பைசந்திகளும் கொள்ளப்படும். 'கரணம் கலை' என்றதின் பின் 'அவற்றில் வைகரி முதலியன நிற்கும் என உரைக்க. இம்மந்திரத்தின் முதல் இரண்டடிகளில் தோன்றும்' என்னும் பயனிலை எஞ்சி நின்றது. சுத்த தத்துவங்கள் ஐந்து எனப்படினும் அவை அனைத்தும் சிவ சத்தி பேதங்கட்கு இடமாகு மாற்றானே ஐந்தாய் நிற்றலின் நவந்தரு பேதங்களுள் பரநாத பரவிந்துக்கள், 'அரன் அரி அயன்' என்பன ஆகிய பேதங்கட்கு உரிய அதிகரணங் களையும் வேறு வைத்து எண்ணி 'வயிந்தவம் ஒன்பான்' என்றார். வயிந்தவம் - விந்துவின் காரியம். 'அரன், அரி, அயன்' என்பவர் கட்குச் சுத்த வித்தையிலும், பரநாத பரவிந்துக்களுக்கு அபரநாத அபர விந்துக்களிலும் களம் உண்டு என்க. 'விதியிற் பிரமாதிகள் மிகு சத்தி'

என்றது பிராகிருதராய் நிற்கும் மூர்த்திகளை மேற்கூறப்பட்டவரோடு வைத்து மயங்காமைப் பொருட்டு, இடைப்பிறவரலாகக் கூறினார்.
'விதியின், மிகு சத்தியால் பிரமாதிகள் ஆவர்' என்க. விதி - புண்ணியம்.
'விரைக்கம லத்தோன் மாலும் ஏவலால் மேவி னோர்கள்,
புரைத்ததி கார சத்தி புண்ணியம் நண்ண லாலே'
எனவும்,
'அயன்றனை ஆதி யாக அரன்உரு என்ப தென்னை?
பயந்திடும் சத்தி யாதி பதிதலால்'
எனவும் சிவஞான சித்தி (சூத்திரம் *-2-34,60)* கூறுதல் காண்க.
நவந்தரு பேதங்கள் 'திருவருள் வைப்பு' என்னும் அதிகாரத்தில் கூறப்பட்டன.
இதனால் சுத்த மாயையாகிய விந்துவின் காரியங்கள் ஓராற்றல் தொகுத்துணர்த்தப்பட்டன.

செய்திடும் விந்துபே தத்திறம் ஐயைந்தும்
செய்திடும் நாதபே தத்திறன் நாலாறும்
செய்திடும் மற்றவை ஈரிரண் டின்திறம்
செய்திடும் ஆறாறு சேர்தத் துவங்களே. ***#1888***

நவந்தரு பேதங்களில் நாதங்களும், விந்துக்களும் முறையே சிவமும், சத்தியும் ஆதலால் சிவனது 'இலயம், போகம், அதிகாரம்' என்னும் மூற்று நிலைகளுள் அதிகார நிலையாகிய மகேசுரனது பேதங்கள் இருபத்தைந்தினையும் 'சத்தியின் காரியங்கள்' என்றும், நவந்தரு பேதங்களில் விந்து, சத்தி இவை யொழிந்த ஏழும், குணமூர்த்திகள் மூவரும் ஆகப் பதின்மரும் நாயக, நாயகி பாவத்தில் நாயகர்கள் ஆதலால் அவர்களையே, 'சிவ பேதங்கள்' என்றும் ஒருவாறு கூறலாம். இனி அந்தச் சத்தி சிவங்கள் 'சகுணம், சமலம், நின்மலம், ஆனந்தம்' என்னும் காரணத்தால் நான்காகின்ற மாயையின் வகை மூன்றினின்றும் முப்பத்தாறு தத்துவங்களையும் வகைப்படத் தோற்றுவிக்கும்.

விளக்கவுரை

'செய்திடும்' நான்கில் முதல் இரண்டையும் 'அங்ஙன மாகச் செய்யும்' என்னும் பொருளையுடைய முற்றாக்கி, திறன் என்னும் எழுவாய்கட்குப் பயனிலைகளாக்குக. மூன்றாவதனைப் பெயரெச்சமாக்கி, அதனை 'அவை' என்பதனோடு முடிக்க. மற்று - வினை மாற்று. 'அவை, ஈரிரண்டினின்றும் தத்துவங்களைத் திறம் செய்திடும்' என இயைக்க.
இதனால், சுத்த மாயையாகிய விந்துவில் நிற்கும் சத்தி சிவங்களின் செயல்கள் ஒருவாறு வகுத்துரைக்கப்பட்டன.

வந்திடு பேத மெலாம் பரவிந்து
தந்திடும் மாமாயை வாகீசி தற்பரை

உந்து குடிலையோடு ஓம்உறு குண்டலி
விந்துவில் இந்நான்கும் மேவா விளங்குமே. *#1889*

மாயா காரியங்களாய் உள்ள பலவற்றிற்கும் காரணமாய் நிற்பது 'பரவிந்து' என்னும் தத்துவம். அது சுத்த மாயையின் காரியமே எனினும் அதன்கண்ணே 'அபர வாகீசுவரி, பரவாகீசுவரி', அனைத்து மந்திரங்களையும் செலுத்துகின்ற பிரணவம், அதன வடிவமாகிய குண்டலி என்னும் நான்கும் பொருந்தி விளங்கும்.

விளக்கவுரை

பரவிந்து 'சிவம்' என்னும் தத்துவத்திற்கு மேலுள்ளது. அதற்குமேல் பரநாதம் இருக்கும். அஃது இங்குக் குறிப்பிடப்பட வில்லை. 'பரை' என்றது பரவாகீசுவரியை ஆகையால், வாளா, 'வாகீசி' என்றது அபர வாகீசுவரியையாயிற்று. 'பிரணவந்தானே குண்டலியாம்' என்றற்கு 'ஓமுறு குண்டலி' என்றார். அங்ஙன மாயினும் அஃது அப்பெயரால் யோகத்தில் சிறப்பாக உன்னப்படுதல் பற்றி அதனை வேறாகக் கூறினார். அபர வாகீசுவரியும், பிரணவமும் அபர விந்துவில் விளங்குமாயினும் அவையும் காரண நிலையில் சூக் குமமாய்ப் பரவிந்துவில் விளங்குதலை, 'மேவா விளங்கும்' என்றார். முன்னர், 'பரவிந்து' என்றதனால், பின்னர் 'விந்து' என்றதும் அதுவேயாயிற்று. ஆகவே பின்னர் 'விந்து' என்றது, 'அவ்விந்து' என்றதாயிற்று. இதனாலும் விந்துற்பனங்கள் சில கூறப்பட்டன.

விளங்கு நிவிர்த்தாதி மேவக ராதி
வளங்கொள் உகார மகாரத்துள் விந்து
களங்கமில் நாதாந்தம் கண்ணினுள் நண்ணி
உளங்கொள் மனாதி உளமந்த மாமே. *#1890*

நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்திய தீதை என்னும் பஞ்சகலைகளில் முறையே பொருந்தி நிற்கின்ற அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் - என்னும் சூக்கும பஞ்சாக்கரங்கள் முறையே மனம் முதலாகப் புருடன் ஈறாக உள்ள கருவிகளைச் செலுத்தி நிற்கும்.

விளக்கவுரை

'நிவிர்த்தாதி மேவு' என்பது ஏழாம் வேற்றுமைத் தொகை. 'அகராதி, நாதாந்தம்' என்பவற்றையும் அகரமாகிய ஆதியும், நாதமாகிய அந்தமும் எனச் செவ்வெண்ணாக்குக. உளம் - புருடன், அகாரம் முதலிய ஐந்தும் முறையே தூல வைகரி, சூக்கும வைகரி, மத்திமை, பைசந்தி, சூக்குமை என்னும் ஐவகை வாக்குக்களைக் குறிப்பன. அவை முறையே, அகங்காரம், புத்தி, மனம், சித்தம் என்னும் அந்தத் கரணங்கைளயும், புருடனையும் செலுத்தும் - என்பதையும், அதனாலேதான் உயிர்கட்குச்

சவிகற்ப உணர்வு உண்டா கின்றது - என்பதையும் சிவஞான போதத்து முதலதி கரணத்தில் காண்க. 'மனாதி' என்றது 'அந்தக் கரணம் எனப் பொதுப் பொருள் தந்தது. அவற்றைச் செலுத்துவனவற்றை அவையேயாக உபசரித்தார்.
பிரதிட்டையாதி கலைகளில் இயற்கையாய் நிற்கின்ற உகாரம் முதலிய நான்கும் உபாதி (கலப்பு) வசத்தால் கீழ்க்கீழ்க் கலைகளிலும் பொருந்தும் என்க.
அகரம் முதலிய ஐந்தும் பிரணவத்தின் கூறுகள் (கலைகள்) ஆகும்.
இதனால் சுத்தமாயை தனது காரியமாகிய நாதம் முதலியவை வாயிலாக உயிர்கட்குச் சவிகற்ப உணர்வைத் தருதல் கூறப்பட்டது.

அந்தமு மாதியு மாகிப் பராபரன்
வந்த வியாபி யெனலாகு மந்நெறி
கந்தம தாகிய காரண காரியம்
தந்தைங் கருமமுந் தான்செய்யும் வீயமே. ***#1891***

முதல்வன் உலகத்திற்கு முதலும், முடிவுமாகி, அதனுள் எங்கும் நிறைந்து நிற்கும் முறைமையால் பல தொகுதிகளாய் நிற்கும் காரண காரியப் பொருள்களைத் தோற்றுவித்து, அவன் ஐந் தொழில் செய்ய முதற்கருவியாய் நிற்பது விந்துவாகிய சுத்த மாயையே.

விளக்கவுரை

மாயையினின்றும் தோன்றும் தத்துவங்களில் சில தம்மினின்றும் பிற தத்துவ தாத்துவிகங்கள் தோன்றுதற்குக் காரண மாகவும், அவ்வாறன்றிக் காரியமேயாகவும் நிற்றல் பற்றி, 'கந்தம தாகிய காரண காரியம்' என்றார். கந்தம் - கூட்டம்; தொகுதி. மாயை காரியப் படுதல் முதல்வனது சந்நிதியின்றி அமையாமை பற்றி, 'வியா பியாய நெறியால் செய்யும் வீயம்' என்றார். 'நெறியால்' என உருபு விரிக்க.
முதற்கருவியாகும் சிறப்பு நோக்கி,'ஐங்கருமமும்தான் செய்யும்' என அதனையே வினைமுதல்போலக் கூறினார். வீயம், 'பீசம்' என்பதன் திரிபு. பீசம் - விதை; என்றது முதற்காரணத்தை.
இதனால் முதற்காரணமாகிய விந்து முதல்வனது சந்நிதி யானே காரியப்படுதல் கூறப்பட்டது.

வீயம தாகிய விந்துவின் சத்தியால்
ஆய அகண்டமும் அண்டமும் பாரிப்பக்
காயஐம் பூதமும் காரிய மாயையில்
ஆயிட விந்து அகம்புற மாகுமே. ***#1892***

அனைத்திற்கும் முதற் காரணமாகிய சுத்த மாயை யின் ஆற்றலால் அனைத்திற்கும் வியாபகமாகிய நிவிர்த்தி முதலிய கலைகளும், அவற்றுள் அடங்கி நிற்கும் புவனங்களும் விரிந்து நிற்க, காரிய

மாயையாகிய மூலப் பிரகிருதியினின்றும் பௌதிக சரீரத்திற்குக் காரணமாகிய ஐம்பூதங்களும் தோன்ற, சுத்தமாயை அவை அனைத்திலும் உள்ளும், புறம்புமாய் நிறைந்து நிற்கும்.

விளக்கவுரை

நிவிர்த்தி முதலிய கலைகள் பிறவற்றிற்கு வியாபக மாதலல்லது தாம் வேறொன்றில் வியாப்பியம் ஆகாமை பற்றி அவற்றை, 'அகண்டம்' என்றார். 'பாரிப்ப' என்பது இங்குத் தன் வினையாய் நின்றது. சாங்கியர், 'காரணம்' எனக்கூறும் மூலப் பிரகிருதி உண்மையில் 'கலை' என்னும் தத்துவத்தின் காரியமேயாதல் தோன்ற அதனை, 'காரிய மாயை' என்றார். பிரகிருதி காரியங்களில் சிறப்பாக அறியப்படுவன ஐம்பூதங்களேயாதல் பற்றி அவற்றையே எடுத்துக்கூறினார். இதனால், சுத்த மாயை அனைத்துலகங்களிலும் வியாபித்தல் கூறப்பட்டது.

புறமக மெங்கும் புகுந்தொளிர் விந்து
நிறமது வெண்மை நிகழ்நாதம் செம்மை
உறமகிழ் சத்தி சிவபாத மாய்உள்
திறனொடு வீடளிக் கும்செயல் கொண்டே. ***#1893***

பிண்டத்தில் கரு உற்பத்திக் காரணமாய் ஆண் உடலில் வெண்ணிறம் உடைமை பற்றி, 'சுக்கிலம்' எனப்படுகின்ற தாது 'விந்து' எனப்பெயர் பெற்றதனை அண்டத்தில் புறம், அகம் என்னும் வேறுபாடின்றி எவ்விடத்தும் வியாபகமாய் நிற்கும் காரணப் பொருளாகிய 'சுத்த மாயை' என்றே கொள்ளுதல் வேண்டும். (நாதத்தின் காரியத்தை 'விந்து' என்னும் தத்துவமாகக் கொள்ள லாகாது' - என்பதாம்.) இனப் பெண்ணுடலில் செந்நிறம் உடைமை பற்றி, சோணிதம்' எனப்படுகின்ற தாது, காரியப் பொருளாகிய நாதம்' எனத் தக்கதாகும். ஆகவே அவை முறையே முதல்வனாகிய சிவனது கூறும், அவனுக்குத் துணைவியாகிய சத்தியது கூறுமேயாகும், (அவ்வாறில்லை யேல் அவை உயிர்க்கு இன்றியமையாக் கருவிகளாகிய தனு கரணங் களைத் தோற்றுவித்தல் இயலாது என்பதாம்.) அவை அங்ஙனமாய்த் தனுகரணங்களைத் தோற்றுவித்து உயிர்கட்கு மன உறுதியுடன் செய்யும் ஞானச் செய்தி வாயிலாக வீட்டைத் தருவனவாம்.

விளக்கவுரை

சுக்கில சோணிதங்கள் காரண காரியங்கள் அல்ல வாயினும் முதல்நிலையும், வழிநிலையும் ஆதல்பற்றி அவ்வாறு கூறினார். 'பாதம்' என்றது, 'கூறு என்றபடி, 'பாகம்' எனப்பாடம் கொள்ளுதலும் பொருந்தும். 'வெண்மை நிறமது விந்து; செம்மை நாதம்' என

மாற்றிவைத்துரைக்க, நிறம், செம்மை இவை ஆகுபெயர்கள்.
இதனால், 'விந்து நாதங்கள் அண்டத்திற்கன்றிப் பிண்டத் திற்குக் காரணம் அல்ல என மயங்கற்க; சிவம் சத்திகளது கூறுகளின் தொடர்பால் அவை பிண்டத்திற்கும் காரணமாதல் தெளிவு' - என்பது கூறப்பட்டது.

கொண்ட இவ்விந்து பரமம் போற்கோதற
நின்ற படம்குடி லாய்நிலை நிற்றலின்
கண்ட கலாதியின் காரண காரியத்து
அண்டம் அனைத்துமாய் மாமாயை யாகுமே. ***#1894***

உயிர்களை மேற்கூறியவாறு அண்டத்தையே யன்றிப் பிண்டத்தையும் ஆட்கொள்கின்ற விந்து பரம்பொருளைப் போலவே மல கன்மங்களோடு விரவுதலின்றித் தூயதாய், ஆயினும் நூலும் மண்ணும், ஆடையும் குடமுமாய்க் காரியப்படுதல் போலக் காரியப்படுவதாய், காரண ரூபத்தில் என்றும் அழிவின்றி, கலை முதலிய தத்துவங்களின் காரியமாய் உள்ள அனைத்து அண்டங் களிலும் அவையேயாய்க் கலந்து பெருமாயையாய் உள்ளது.

விளக்கவுரை

பெருமையாவது அனைத்துப் பொருட்கும் வியாபகமாய் அவற்றைத் தன்னுள் அடக்கி நிற்றல், அதுபற்றியே சுத்த மாயை 'மகாமாயை' என்றும், 'ஊர்த்துவ மாயை' என்றும் சொல்லப்படுகின்றது என்பதாம்.
ஊர்த்துவம், மேல். அசுத்த மாயை 'அதோ மாயை' எனப்படும்.
'சுத்த மாயையின் காரியம் விருத்தியேயன்றிப் பரிணாம மன்று' என்பது, 'படம் குடிலாய் நிலை நிற்றலின்' என்பதனால் கூறப்பட்டது. 'செயல் பரிணாமமன்று; புகழ்ந்திடும் விருத்தியாகும், படம் குடிலானாற் போல' எனச் சிவஞான சித்தியிலும் (முதற் சூத்திரம், 24) சொல்லப்பட்டது.
இதன் இரண்டாம் அடியில் இன எதுகை வந்தது.
இதனால் சுத்த மாயையினது பெருமை விளக்கப்பட்டது.

அதுவித்தி லேநின்றங் கண்ணிக்கும் நந்தி
இதுவித்தி லேயுள வாற்றை உணரார்
மதுவித்தி லேமலர் அன்னம தாகிப்
பொதுவித்தி லேநின்ற புண்ணியந் தானே. ***#1895***

'அது' எனச் சேய்மையாதாகச் சுட்டிச் சொல்லப் படுகின்ற மகாமாயையாகிய அந்த விந்துவிலே நின்று, அதனை அடைந்தவர்க்கு இனிப்பவனாகிய சிவன், 'இது' என அண்மையாகச் சுட்டிச் சொல்லப்படுகின்ற சுக்கிலமாகிய இந்த விந்துவிலும் நின்று உயிர்களைப் பிறப்பித்துப் பின் வீடடையச் செய்தலை உணரும் உணர்வுடையார் உலகத்து அரியர், ஆயினும், மகாமாயையையே

தனக்கு உடமாகக் கொண்டு விளங்குகின்ற அந்தப்பெருமான், நீரால் உண்டாக்கின்ற உணவுப்பொருளில் தங்கிப் பின் கருவுற்பத்திக்கு யாவரிடத்தும் பொதுவாய் உள்ள காரணமாகின்ற விந்துவிலும் இருக்கும் புண்ணியன் ஆகின்றான்.

விளக்கவுரை

இதனுள் 'விந்து' என்றன 'முதற்காரணம்' என்றவாறு. 'தானே' என்பதை, 'உணரார்' என்பதற்குப் பின் எடுத்துக்கொண்டு உரைக்க. சுவையைச் சிறப்புக் குணமாக உடைமை பற்றி நீரை 'மது' என்றார். மலர்தல், விருத்திப்படுதல். சூக்கும தேகியாய் நிற்கும் உயிர் முதற்கண் பயிர்களில் தங்கியே பின்னர் உணவாய் ஆண் உடம்பிற் செல்லுதலைப் பஞ்சாகினி வித்தை பற்றி அறிக. தாவரங்களிலிருந்து உண்டாகும் உணவுப் பொருளால் ஆனதே தூலசரீரம். (பருவுடம்பு) அதனால் அஃது 'அன்னமய கோசம்' எனப்படுகின்றது. அதன் சிறப்பு, 'தைத்திரீயம்' என்னும் உபநிடதத்தில் சொல்லப்பட்டது. சிவனுக்கு இடமான சிவதத்துவங்கள் சுத்த மாயாகாரியம் ஆதல் பற்றியும், அதன்கண் உள்ள புவனங்கள் முத்தியுலகங்கள் ஆதல் பற்றியும் சிவனை, 'அதுவித்திலே நின்று அங்கு அண்ணிக்கும் நந்தி' என்றார்.

இதனால், பிண்டத்திற்குக் காரணமான விந்து அண்டத்திற்குக் காரணமாயுள்ள விந்துவோடொப்பதாய், சிவனுக்கு இடமாகும் சிறப்புக் கூறப்பட்டது.

வித்தினி லன்றி முளையில்லை அம்முளை
வித்தினி லன்றி வெளிப்படுமா றில்லை
வித்தும் முளையும் உடனன்றி வேறல்ல
அத்தன்மைத் தாகும் அரன்நெறி காணுமே. ***#1896***

முளை விதையில்தான் உள்ளது. என்றாலும் அது விதை தனியேயிருக்கும்பொழுது தோன்றாது. நிலத்தில் விதைத்தால் தான் தோன்றும். 'வித்தில் முளை உள்ளது' என்றால், அது 'குடத்தில் நீர் உள்ளது' என்பது போல்வதன்று. அஃதாவது இடமும், இடத்து நிற்கும் பொருளும் ஆகின்ற அவ்வளவினது அன்று. சிலந்தியின் உடம்பும், அதினின்றும் வெளிவருகின்ற நூலும் போலக் காரண காரிய இயைபுடையனவாம். அது போன்றதே சிவன் உலகத்தைத் தோற்றுவிக்கின்ற முறையும்.

விளக்கவுரை

'அதனை அறிந்துகொள்' என்பது குறிப்பெச்சம். எனவே, இம்மந்திரத்தை ஒட்டணியாகக் கொண்டு பொருளை உய்த் துணர்ந்து கொள்ளல் செயற்பாலதாம். அங்ஙனம் கொள்ளுமாறு:- 'மாயையில்தான் உலகம்

உள்ளது. என்றாலும் அந்த மாயை சிவனது சங்கற்பத்தில் பொருந்தினால் அதினின்றும் உலகம் தோன்றும். 'மாயையில் உலகம் உள்ளது' என்றால் அஃது இடமும் இடத்து நிற்கும் பொருளும் ஆகின்ற அவ்வளவினது அன்று. சிலந்தியினது உடம்பும், அதனுள்ளியிருந்து வெளிப்படுகின்ற நூலும் போலக் காரணகாரிய இயைபுடையனவாம்' என்பது. இங்ஙனம் கூறியதனால், சிலந்தியினது உடம்பினுள் நூல் உள்ளதாயினும் அவ்வுடம்பைத் தாங்கி நிற்கின்ற உயிர் அந்நூலை வெளிப்படுத்தினாலன்றி வெளிப்படாமை போல் மாயையைத் தாங்கி நிற்கின்ற சிவசத்தி அதினின்றும் உலகத்தைத் தோற்றுவித்தாலன்றித் தோன்றாது என்பது விளங்கும்.

'வித்துண்டா மூலம் முளைத்தவா தாரகமாம்
அத்தன்தாள் நிற்றல் அவர்வினையால் - வித்தகமாம்'

என்னும் சிவஞான போதமும் (சூத்திரம், *1* அதிகரணம், *2*) இங்கு நினைக்கத்தக்கது.

இரண்டாம் அடியில் உள்ள 'வித்தினில்' என்பது வேண்டா வழிப் பெற்ற இன்சாரியையுடன் வந்த, 'செயின்' என்னும் வினை யெச்சம். 'வித்தினில் முளை குடத்துள் நீர்போல நிற்பின் யாவரும் எளிதில் வெளிப்படுத்துதல் கூடும். இஃது அன்னதன்று ஆகலின் நிலத்தாலன்றி இயலாது' என உவமைக்கண் பொருளிலும் அவ்வாறு கொள்க. 'மாயையாகிய விந்துவிற்குச் சொல்லியது சுக்கிலமாகிய விந்துவிற்கும் பொருந்தும்' என்பது கருத்து.

இதனால், அண்டபிண்டங்களாகிய உலகம் சிவனது சங்கற்பத்தாலன்றி உற்பத்தி கூடாமை கூறப்பட்டது.

அருந்திய அன்ன மவைமூன்று கூறாம்
பொருந்தும் உடல்மனம் போம்மலம் என்ன
திருந்தும் உடல்மனம் ஆங்கது சேர்ந்திட்டு
இருந்தன முன்னாள் இரதம தாகுமே. ***#1897***

பலவகையாக உண்ணப்பட்ட உணவுகள் மூன்று கூறுபடும். ஒரு கூறு உடம்பாய்ப் பரிணமிக்கும். மற்றொரு கூறு மனத்தின் தன்மையாய் அமையும். இன்னொரு கூறு மலமாகிக் கழிந்தொழியும். உணவால் திருத்தம் உறுகின்ற உடம்பும், மனமும் சேர்ந்து முன்னாட்களில் காரண நிலையில் 'சாரம்' என்பதாய் இருக்கும்.

விளக்கவுரை

'உடம்பு' என்றது அதன்கண் உள்ள குருதி, முதலிய தாதுக்களையும், 'மனம்' என்றது அதனது நினைவையுமாகும். தாயின் முலைப்பாலுக்கு அவளது உடம்பில் உள்ள குருதி முதலி யனவும், குழவியிடத்துள்ள அன்பும் காரணமாதல் போல்வதே உடம்பில் உள்ள குருதி, ஊன், நிணம்

முதலிய தாதுக்கள் சாரமாதற்குக் காரணம் ஆதல்.
இதனால், மேல், 'மது வித்திலே மலர் அன்னமதாகி' என்றது இனிது விளக்கப்பட்டது.

இரதம் முதலான ஏழ்தாது மூன்றின்
உரிய தினத்தின் ஒருபுற் பனிபோல்
அரிய துளிவிந்து வாகும் ஏழ்மூன்றின்
மருவிய விந்து வளருங்கா யத்திலே. ***#1898***

மேல் சொல்லப்பட்ட 'சாரம்' என்பது உட்பட ஏழ் தாதுக்களில் மூன்றிலிருந்து சில நாட்களில் புல் நுனியிற் பனியளவான துளிகள் பல உருவாகும். அந்தத் துளிகளே பிண்ட உற்பத்திக்குக் காரணமான 'விந்து' எனக் குறிப்பிட்டுக் கூறப்படுகின்றன. அவை இருபத்தொரு நாள் வரையில் உடம்பினுள் அந்த நிலையிலே முதிர்ந்து வரும்.

விளக்கவுரை

தாது - மூலப்பொருள் 'ஏழ் தாதுக்களில்' - என ஏழாம் உருபு விரித்துரைக்க. உடம்பிற்கு மூலமான ஏழு பொருள்களாவன மேற்கூறிய சாரம், குருதி, என்பு, தோல், ஊன், நிணம், சுக்கிலம் - என்பன. இவற்றின் நிலைபேற்றிற்கு ஒன்றிற்கு மற்றொன்று காரண மாகவேயிருக்கும். காரண நிலையில் 'சுக்கிலம்' எனப்படுவதே காரிய நிலையில் 'விந்து' என வேறுபட்டு நிற்கும் என்பது இங்கு அறிதற் குரியது இருபத்தொரு நாட்களுக்குப் பின் விந்து வேறொன்றாய் மாறும் என்பதும் இங்கு உணரத்தக்கது.
இதனால், பிண்டத்திற்குக் காரணமான விந்து உண்டாகுமாறு கூறப்பட்டது.

காயத்தி லேழ்மூன்று நாளிற் கலந்திட்டுக்
காயத்து டன்மன மாகும் கலாவிந்து
நேயத்தே நின்றோர்க்கு நீங்கா விடாமையின்
மாயத்தே செல்வோர் மனத்தோ டழியுமே. ***#1899***

மேற்கூறியவாறு முன் இருபத்தொரு நாள் வரையில் முதிர்ந்து வந்த விந்துக்கள் பின் இருபத்தொரு நாட்கள் வரையில் மனத்தின் வழிப்பட்டு நிற்கும். 'சத்தி நிபாதரும், உலகரும்' எனமக்கள் இருதிறத்ததராதலின் அவருள் சத்திநிபாதர் மனம் சிவன் பஞ்சமூர்த்திகளாய் விளங்கி நிற்கின்ற நிவிர்த்தி முதலிய பஞ்ச கலா ரூபமாய் நிற்கும் சுத்த மாயையை நோக்கிச் செல்லுமாகலின் அவர் காம வசப்பட்டு விந்துவை வெளியே வீழ்ந்தொழிய விடாமையின் அவை அவரை விட்டு நீங்கா. (அவரது மனம் பஞ்ச கலைகளை நோக்கிச் செல்கின்ற செலவிற்கு அவை வலிமை தந்து நிற்கும் என்பதாம். அவரொழிந்த ஏனை உலகர் சிறிதுபோதிலே நிலையின்றி ஒழிவதாகிய காம இன்பத்திலே செல்பவர்

ஆதலின் அவர் மனம் அங்ஙனம் சென்ற பொழுது அவரது விந்துக்களும் அதனுடன் சென்று வெளியே வீழ்ந்து அழிந்தொழியும்.

விளக்கவுரை

'கலந்திட்டு ஆகும்' 'நீங்கா அழியும்' என்னும் பயனிலைகட்கு மேலை மந்திரத்தில் உள்ள 'மருவிய விந்து' என்பது எழுவாயாய் வந்து இயைந்தது. 'ஏழ் மூன்று நாளில்' என்பதைப் பின்னும் 'காயத்துடன்' என்பதோடும் கூட்டுக. 'கலா விந்து நேயம்' என்றதை, 'சிவ பத்தி, அடியார் பத்தி' என்பன போலக் கொள்க. 'விடாமையின்' என்பதற்குமுன் 'அவர்' என்பது வருவித்து 'விடாமையின்' என முடிக்க. மாயம், நிலையாமை. அஃது ஆகுபெயராய், அதனையுடைய இன்பத்தைக் குறித்தது. 'தலைவி தலைவனோடிறந்தாள்' என்பதிற்போல, 'மனத்தோடழியும்' என்பதில் ஓடுருபு உயர்பொருளொடு வந்தது. மனம் அழிதலாவது, தமது செலவால் விளையும் துன்பத்தால் வருந்ததுதல்.
இதனால், பிண்டத்திற்குக் காரணமாகிய விந்து அதனையுடைய மக்களது இயல்பிற்கேற்ப நிற்குமாறு கூறப்பட்டது.

அழிகின்ற விந்து அளவை யறியார்
கழிகின் றதனையுட் காக்கலும் ஓரார்
அழிகின்ற காயத் தழிந்தயர் வுற்றோர்
அழிகின்ற தன்மை யறிந்தொழி யாரே. ***#1900***

உலகர் தாம் செல்கின்ற போக நெறியால் அழிந் தொழிகின்ற விந்துவினது ஆற்றலை, 'இவ்வளவினது' என்று அறிய மாட்டார்கள். அதனால் கீழ்நோக்கி வீழும் இயல்புடைய அந்த விந்துவை அவ்வாறு வீழாது உள்ளே நிறுத்திக் காக்கும் வழியைப்பற்றி அவர்கள் எண்ணுவதும் இல்லை. அழிவைத் தனது இயல்பாக உடைய உடம்பினுள்ளே தங்கியிருந்து, அவ்வுடம்பால் உண்டாகின்ற பல இடுக்கண்களால் துன்பமுற்று மெலிகின்றவர்கள் தாம் பெற்றுள்ள பொருள்கள் அழியுந்தன்மை உடையவாதலை அறிந்து, அவ்வழியுந் தன்மையை நீக்கிக்கொள்ள மாட்டார்கள்.

விளக்கவுரை

எனவே, 'அதனை நீக்கிக் கொள்ள வழி உண்டு' என வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டதாம். 'அளவு' என்றது ஆற்றலின் அளவை. ஒரு துளிவிந்துவிற்குப் பல துளி சுக்கிலத்தின் ஆற்றலும் ஒரு துளிச் சுக்கிலத்திற்குப் பல துளிக் குருதியின் ஆற்றலும், ஒரு துளிக் குருதிக்குப் பல துளி இரதத்தின் (சாரத்தின்) ஆற்றலும் உள்ளன என்பர். அதனால் அத்துணை ஆற்றலையுடைய விந்துவை

இழப்பவர் தமது பேராற்றலை இழந்தவ ராகின்றனர். 'உயிர்கள் கீழ் நோக்கி வீழும் விந்துவை உடையன; இறைவன் அவ்வாறன்றி மேல் நோக்கிச் செல்லும் விந்துவை உடையன்; அதனால்தான் அவன் தனது நெற்றிக்கண் வழியாக முருகனைத் தரமுடிந்தது' என்றும், 'உயிர்களின் விந்துக்கள் நீர்த் தன்மையையுடையன; இறைவனது விந்து அவ்வாறன்றி நெருப்புத் தன்மையையுடையது; அதனால் தான் ஒருமுறை அவனது விந்துவை உண்ட தேவர்கள் ஆற்றமாட்டாத வெப்பு நோயை உடையராய் அலமந்தனர்' என்றும் கூறுவர்.

'ஊர்த்துவ ரேதம் விரூபாக்ஷம்',

ருதம் ஸத்யம் பரம் ப்ரஹ்மபுருஷம் க்ருஷ்ண பிங்கலம் *I*

ஊர்த்வ ரேதம் விரூபாக்ஷம் விச்வ ரூபாய வை நமோ நம: *II*

எனப் புருஷ சூக்தத்தில் வந்துள்ளது. சிவபிரானது விந்துவை உண்ட தேவர்கள் வெப்பு நோயால் வருந்தினமை காஞ்சிப் புராண சுரகரேசப் படலத்தில் சொல்லப்பட்டது. போகத்தை விட்டு யோகியராயினோரும் இந்நிலையை எய்துவர் என்பது யோக நூற் கொள்கை. இதனால் அவர்க்கு இளமையும், யாக்கையும் நிலையாமையின் நீங்கி நிலைபேறுடையனவாதலோடு, உடம்பு புதியதோர் ஒளியும், அழகும் பெற்று விளங்கும் என்பதும் அந்நூற் கொள்கை.

இவ்வாறு இவ்வதிகாரம் முடிக்கப்பட்டது.

*9.21.*விந்து சயம்

பார்க்கின்ற மாதரைப் பாரா தகன்றுபோய்
ஓர்க்கின்ற உள்ளம் உருக அழல் மூட்டிப்
பார்க்கின்ற கண்ணாசை பாழ்பட மூலத்தே
சேர்க்கின்ற யோகி சிவயோகி தானே. ***#1901***

தன்னைக் காதலோடு பார்க்கின்ற மகளிரைத் தான் அவர்க்கு இசைந்து பாராமல் விலகிச் சென்று யோகத்தில் நின்று புறப்பொருளைக் கண்ணால் பார்க்க எழுகின்ற ஆசையை மூலக் கனலை வளரப்பதில் சேர்த்து, மாதரைச் சிந்திக்கின்ற மனம் மாதேவனைச் சிந்தித்து உருகும்படி செய்கின்ற யோகியே சிவயோகியாதல் கூடும்.

விளக்கவுரை

'மனத்தில் எழுகின்ற மாதர் ஆசையை இங்ஙனம் யோக முயற்சியால் நீக்குதலே விந்து சயம் பெறுதற்குச் சிறந்த வழி யாகும்' என்பதாம். 'மூலத்தே சேர்க்கின்ற யோகி' என்றமையால், அழல் என்றது மூலாக்கினியாயிற்று. 'பொதுவான யோகத்தால் விந்து சயம் பெற்றவன் பின்பு சிவயோகியாய் விளங்குவன்' என்றபடி.

'மடவா ரோடும் - பொருந்தணைமேல் வரும் பயனைப் போக

மாற்றி ... ... தனை நினைய வல்லோர்க்கென்றும் பெருந்துணையை' *l*
என அப்பரும் அருளிச் செய்தார்.
இதனால், விந்துயத்திற்கான சிறப்புமுறை கூறப்பட்டது.

தானே அருளால் சிவயோகம் தங்காது
தானேஅக் காமாதி தங்குவோ னும்உட்கும்
தானே அதிகாரம் தங்கில் சடம்கெடும்
ஊனே அவத்துற் றுயிரோம்பா மாயுமே. *#1902*

தன்னியல்பால் திருவருள் வழியில் சென்று சிவயோகத்தில் நில்லாது காமம் முதலியவற்றிலே நிற்கின்ற கீழ் மகனும் அஞ்சும் அளவிற்கு 'யோகி' எனப்படுவன் காம நெறியில் மிக்குச் செல்வானாயின் விந்து மிக அழிந்தொழியும். உடம்பும் உயிரைக் காக்க மாட்டாது வீணே கெட்டொழியும்.

விளக்கவுரை

'தான்' மூன்றில் முதல் இரண்டும் நன்னெறியிற் செல்லாதவனையும், இறுதியொன்று அடயோகியையும் குறித்தன. காமம் முதலியனவாவன காமம், குரோதம் முதலிய அறு பகைகள். அதி காரம் - அதிகரித்தல்; மிகுதல். 'காமநெறியில்' என்பது அதிகாரத்தால் வந்தது. 'உட்கும் அதிகாரத்தில் தானே தங்கில்' என மாற்றியுரைக்க.
இதனால், விந்து சயம் பெறாத யோகியினது இயல்புகூறும் முகத்தால் மேற்கூறிய எதிர்மறை முகத்தால் வலியுறுத்தப் பட்டது.

மாயாள் வசத்தேசென் றாரிவர் வேண்டிடில்
ஓயா இருபக்கத் துள்வளர் பக்கத்துள்
ஏயாஎண் ணாளின்பம் ஏற்பன மூன்றிரண்*(*டு*)*
ஆயா அபரத்*(*து*)* ஆதிநாள் ஆகுமே. *#1903*

மாமை நிறத்தால் வசீகரிக்கின்ற பெண்ணின் வசப் பட்டோராகிய இவர் அவளொடு கூட வேண்டின், என்றும் ஒழியாது மாறி மாறி வருகின்ற பூர்வ பக்க அபர பக்கங்களில் வளர் பிறையாகிய பூர்வ பக்கத்தில் முதல் எட்டு நாட்கள் போகத்திற்குப் பொருந்தா. *(*'விந்து சயத்தை விரும்புவோர் அந்நாட்களில் அதனைப் பெருதல் அரிது' என்பதாம்.*)* சோதிட நூலோரால் சிறப்பித்துச் சொல்லப்படாத அபர பக்கத்தில் முதல் ஆறு நாட்கள் வளர்பிறையின் இறுதி ஆறு நாட்களோடு ஒப்பனவாம்.

விளக்கவுரை

இவ் 'வளர்பிறை, தேய்பிறை' என்பவற்றை மாதரது பூப்பிற்குப் பின்னர்ப் பதினைந்து நாளும், முன்னர்ப் பதினைந்து நாளுமாகக் கூறுதல் காம நூல் முறை. ஆகவே அம்முப்பது நாட்களில் இடைப்பட்ட பன்னிரண்டு நாட்கள் கலவிக் குரியனவாக அமைதல் காண்க. 'பூப்பின்

புறப்பாடு ஈராறு நாளும் - நீத்தகன்றுறையார் என்மனார் புலவர்'3 என்னும் தொல்காப்பியக் கட்டளையும் இதனோடு இயைந்து நிற்றல் காண்க.

இதனால், விந்து சயம் கைகூடும் காலம் கூறப்பட்டது.

ஆறைந்து பன்னொன்று மன்றிச் சகமார்க்கம்
வேறன்பு வேண்டுவார் பூவரின் பின்னைந்தோ*(டு)*
ஏறும் இருபத் தொருநா ளிடைத்தோங்கும்
ஆறின் மிகுத்தோங்கும் அக்காலம் செய்கவே. *#1904*

'பூப்பிற்குப் பின்னாட்களாகிய வளர்பிறையில் முதல் எட்டு நாட்கள் கூடதற்கு உரியன அல்ல' என மேல் விலக்கப்பட்டவற்றில் ஐந்தாம் நாளும், ஆறாம் நாளும் யோகியர்க்கு முற்றிலும் விலக்கத்தக்கன. (எனவே, 'ஏனையோர்க்கு அந்நாட்கள் ஒருகாற் பொருந்தினும் பொருந்தலாம்' என்பதாம். பதினொன்றாம் நாள் யோகியர் அல்லார்க்கு ஆம்.) சக மார்க்கம் - யோக நெறி. வேறன்பு - மகளிரை விரும்புதல். 'சகமார்க்கத்தினிடையே வேறு அன்பை ஐந்து, ஆறு பதினொன்று அல்லாத நாட்களில் வேண்டுவர் நல்லோர்' என்க. பூப்பிற்குப் பின் ஐந்து நாட்களில் அக்குற்றம் நீங்கியொழியும். (ஆயினும், 'மேலும் 'மூன்று நாட்கள் ஆகா' என முன் மந்திரத்தில் விலக்கப்பட்டன. அந்த ஐந்து நாட்களுக்கு மேல் இருபத்தொரு நாளில் பெண்மை சிறிது சிறிதாக மிகுந்து வரும் அந்த நாட்களில் இறுதி ஆறு நாட்களில் மிகவும் மிகுந்து நிற்கும். அதனால் இல்லறத்தில் நிற்கும் ஆடவர் அந்நாட்களில் கலவி செய்க.

விளக்கவுரை

இவ்வாற்றால் முப்பது நாட்களில் இறுதிமூன்று நாள் பெண்மையில்லா நாட்களாயின. இவையெல்லாம் நெறி பிறழா தோரை வைத்துக் கூறியனவாம். 'ஏறும், ஓங்கும்' என்னும் பயனிலை கட்கு, 'குற்றம், பெண்மை' என்னும் எழுவாய்கள் 'பூவரின்' என்ற குறிப்பாலும், அதிகார இயைபாலும் வந்தியைந்தன. இடைத்து = இடையதாய். 'ஐந்து' என்பது செய்யுள் நோக்கிப் பின் வைக்கப்பட்டது.

இதனால், யோகியர்க்கும், பிறர்க்கும் உரிய சில வரையறைகள் கூறப்பட்டன.

செய்யு மளவில் திருநான் முகூர்த்தமே
எய்யுங் கலைகாலம் இந்து பருதிகால்
நையு மிடத்தோடில் நன்காம நூல்நெறி
செய்க வலம்இடம் தீர்ந்து விடுக்கவே. *#1905*

கலவி செய்தற்குப் பொருந்திய காலம் இரவில் முதல் யாமமும், கடையாமமும் ஒழிந்த இடையிரு யாமமேயாம். அதனுள்ளும் காலத்தை,

'சூரியகலைக் காலம், சந்திரகலைக் காலம்' என வரையறுத்தற்கு ஏதுவாகிய பிராண வாயுவின் இயக்கம் சந்திர கலையாகின்ற இடநாடியின் நீங்கிச் சூரிய கலையாகின்ற வலநாடிவழியே இயங்கும்பொழுது காமநூல் முறைப்படி கலவி செய்த பின்பு சூரிய கலையும், சந்திர கலையும் அல்லாத அமுத கலையாகிய நடுநாடியில் பிராணவாயு செல்லுங்கால் விந்துவை விடுக்க.

விளக்கவுரை

'இவ்வாறு செய்யின் விந்து சயம் கூடும்' என்பதாம். 'திரு' என்றது 'சிறப்பு' சிறப்புடையதனை, 'சிறப்பு' என்றார். இரு முகூர்த்தம் ஓர் யாமமாகும். பகற்காலம் இயல்பாகவே விலக்கப் பட்டமையின், 'இருநான் முகூர்த்தம்' என்றது இராக் காலத்திலே யாயிற்று. 'கலை காலம்' என்பதில் ஒற்று மிகாமை வடநூல் முடிபு. 'காலத்துள்' என ஏழாவது விரிக்க. 'இந்து பருதி காலுள் நையுமிடத்து' என்க. 'கால்' என்பது 'இந்து' என்பதனோடும் கூட்டிக் கொள்ளப் படும். பிராண வாயு இங்குக் கூறிய முறையில் இயங்காவிடினும் யோகம் வல்லார் தாம் வேண்டுமாற்றால் அதனை இயக்கிக்கொள்வர். இனிப் பிராண வாயு நடுநாடி வழியிற் செல்லுதல் யோகத்தாலன்றிக் கூடாது.
இதனால், மேல் நாள் வரையறுத்த பின் அந்நாள்களில் காலம் வரையறுக்கப்பட்டது.

விடுங்காண் முனைந்திந் திரியங்களைப் போல்
நடுங்கா திருப்பானும் ஐயைந்தும் நண்ணப்
படுங்காதல் மாதின்பால் பற்றற விட்டுக்
கடுங்கால் கரணம் கருத்துறக் கொண்டே. ***#1906***

மண் முதல் புருடன்காறும் உள்ள இருபத்தைந்து கருவிகளும் தன்னை வந்து வாதிக்கும் பொழுது அவற்றால் சலனம் உறுதல் இன்றி இருக்கின்ற யோகியும் ஒரோ ஒருகால் பெண்ணின்பால் காதல் கொள்கின்றவனாவான் ஆயினும் அப்பொழுதும் அவன் அவள் மேல் பற்றுக்கொள்ளாது, போக காலத்தில் மிகுதியாய் இயங்குகின்ற பிராண வாயுவின் இயக்கத்தால் மெலிவடைகின்ற அந்தக் கரணங்களை அகமுகப் படுத்தி, முன் பஞ்சேந்திரியங்களைத் தன் வசப்படுத்தியது போலவே விந்துவையும் தன் வசப்படுத்தியே விடுவான்.

விளக்கவுரை

'தன் வசப்படுத்தியே விடுவான்' என்றதனால், 'விடாது நிறுத்தவும் செய்வான்' என்பது பெறப்பட்டது. விடுதல் மாதின் இன்ப நிறைவின் பொருட்டாம். பஞ்சேந்திரியங்களை வெல்லுதலாவது அவற்றைத் தன் வசப்படுத்தலேயாதல் போல, 'விந்து சயம்' என்பதும் அதனைத்தன்

விருப்பப்படி ஆளுதல் என்பதேயாம் என்றபடி. காண், முன்னிலையசை. 'ஐயைந்தும் நண்ண' என்பதை மூன்றாம் அடியின் முதற்கண் வைத்து அங்கு நின்றும் நேரே சென்றுரைக்க. மெய்வருந்தித் தொழில் செய்யுங் கால் மூச்சுப் பெருமூச்சாய் இயங்குதல் போலக் கலவிக் காலத்திலும் அவ்வாறியங்குதல் பற்றி, 'கடுங்கால்' - என்றார். உயிர்ப்பு நெட்டுயிர்ப்பாய காலத்தில் அந்தக்கரணங்கள் சோர்வடைதல் இயற்கை. அது பொழுது அவற்றை உலகர் செயலற்றனவாகவே இருக்கச் செய்வர். யோகியர் அது பொழுது அவற்றைத் தம் தியானப் பொருளிலே ஒடுங்கச் செய்தல் பற்றி, 'கடுங்கால் கரணம் கருத்துறக் கொண்டு' என்றார். 'காலால் என உருபு விரிக்க. கருத்து - தியானப்பொருள்.

இதனால், யோகிகள் விந்து சயம் பெறுமாறு கூறப்பட்டது.

கொண்ட குணனே நலனேநற் கோமளம்
பண்டை யுருவே பகர்வாய்ப் பவளமே
மிண்டு தனமே மிடைய விடும்போதில்
கண்ட கரணம்உட் செல்லக்கண் டேவிடே. ***#1907***

மாதர்பால் ஆடவரது மனத்தை ஈர்ப்பனவாய் உள்ளன அவருக்கு இயல்பாக அமைந்த நாணம், மடம், அச்சம், பயிப்பு' - என்னும் குணங்களும், மேனியழகும், இளமையும், வடிவமைப்பும், பேசுகின்ற வாயாகிய பவளமும், ஒன்றை ஒன்று நெருக்கும் வகையில் புடைபரந்து எழுகின்ற கொங்கைகளும் ஆகிய இவையாம். 'இவை நேற்றுக் கண்டனதாம் இன்று காணப்படுகின்றன' என்னும் வகையிலே இருப்பன அல்லது அவ்வப்பொழுது புதிது புதிதாய்த் தோன்றுவன அல்ல ஆயினும் அவை அவ்வாறிருந்தே ஆடவரை வசீகரித்தல் வியப்பு. அம்முறையில், மாணவகனே, அவை உன்னைப் பற்றி நெருங்கியிருக்கும் பொழுது நீ விந்து சயம் பெற வேண்டினால் யோகியர் போல அவைகளைப் பொறிகளாற் பற்றி, அப்பற்றுதலானே திரிபெய்துகின்ற அந்தக் கரணங்களை அகமார்க்கத்தில் செலுத்தி அதனால் விந்துவை உன் வசப்படுத்தி விடு.

விளக்கவுரை

'பண்டை உருவே' என உருவிற்குக் கூறப்பட்ட பழைமை ஏனையவற்றிற்கும் கொள்ளப்படுமாகலின் அதற்கு இவ்வாறு விரித்துரை கூறப்பட்டது. ஏகாரங்கள் எண்ணுப் பொருள. மிண்டுதல், மிடைதல், இவை 'நெருங்குதல்' எனப் பொருள்தரும்.

இதனால், 'விந்து சயத்திற் அந்தக்கரணங்களைத் தம் வசப்படுத்தல் இன்றியமையாதது' என்பது கூறப்பட்டது.

'வாசி யோகத்தால் பிராணன் வசப்படும்; பிராணன் வசப்பட்டால்

அந்தக்கரணம் வசப்படும்; அந்தக்கரணம் வசப்பட்டால் விந்து வசப்படும்,' என்பது யோக நூல் முடிவு.

விட்டபின் கற்பவுற் பத்தி விதியிலே
தொட்டுறுங் கால்கள் தோன்றக் கருதிய
கட்டிய வாழ்நாள்சா நாள்குணம் கீழ்மைசீர்ப்
பட்ட நெறியிதென்றெண்ணுயும் பார்க்கவே. *#1908*

ஆடவன் பெண்டினிடத்து விந்துவை விட்டபின் கலவிக் காலத்துச் சரவோட்டம் முதலியவை பற்றி அவ்விந்து கருவாகித் தோன்றும் முறையில் அதன் தொடக்கம் முதலியவை களையும், பின்பு அதன் வாழ்நாள் சாநாள்களையும், பின்பு அதன் இழி குணம், உயர்குணம் என்பவற்றையும் 'தனித்தனி இவ்வியல்பினது' என்று ஆராய்ந்தறிதலையும் செய்வானாக.

விளக்கவுரை

'அவை யாவும் நல்லனவாய் அமைதலும் ஒரு வகை விந்து சயமும் அவை தீயனவாதலும் ஒரு வகை விந்து அப செயமும் ஆம்' என்பது கருத்து. எனவே, யோகி தனது யோக வன்மையால் அவற்றையெல்லாம் நல்லனவாகச் செய்வான்' என்பதாம். 'காலங்கள்' என்றது கரு முற்றும் பத்துத் திங்களை. ஒவ்வொரு திங்களிலும் புறத்தே ஒவ்வொரு சடங்கு செய்தலும் கருமேற்கூறிய எல்லா வகையிலும் நன்மையை எய்துதற் பொருட்டேயாம். 'வாழ் நாள் சாநாள்' எனப் பட்டன, கரு வயிற்றிலிருக்குங் காலமாகிய பத்துத் திங்களுக் குள்ளேயும் அமைவனவாம். காலத்தில் நிகழ்வனவற்றை, 'காலங்கள்' என்றார். தோன்றுதல் - ஆராய்பவனுக்குப் புலனாதல். 'தோன்ற' என்னும் செயவெனச்சம். 'தோன்றியபின்' என இறந்த காலப் பொருட்டாய் நின்றது. 'கருதிய, கட்டிய' என்னும் பெயரெச்சங்கள் அடுக்கி, 'வாழ்நாள், சாநாள்' என்னும் பெயர்களைக் கொண்டு முடிந்தன. 'கருவிற்பட்ட உயிரினது வினையை நோக்கிக் கட்டிய' என்றவாறு. கட்டுதல் - நியமித்தல், கருவிற் பட்ட உயிருக்கு அக்கருவில் தானே அஃது அடைதற்குரிய அனைத்தும் அமைக்கப்படுதல் என்பதை,

'பேறிழ வின்ப மோடு பிணிமூப்புச் சாக்க டென்னும் ஆறும்முன் கருவுட் பட்டது'

-சிவஞான சித்தியார் - சூ. *2. 9.*

என்பதனானும் அறிக. கருதுதல், கட்டுதல் ஆகிய வினைகட்கு 'பால் வரை தெய்வம்' என்னும் வினைமுதல் வருவிக்க. 'எண்ணியும்' என்னும் உம்மை சிறப்பும்மை, அதனால் அஃது அங்ஙனம் எண்ணிப் பார்க்க வல்லாரை நோக்கிக் கூறியதாயிற்று. ஆகவே, 'சர ஓட்டம் முதலியவற்றை அறிய வல்லார்க்கு இங்குக் கூறியவெல்லாம் புலனாகும்'

என்பது விளங்கும்.
இதனால், கலவி செய்வோர் அக்காலத்து மேற்கொள்ளும் முறை முறையின்மையால் மக்கள் நல்லராயும், தீயராயும் - வாழ்நாள் மிக்கராயும், குறைந்தவராயும் தோன்றுதல் கூறப்பட்டது.

பார்த்திட்டு வையப் பரப்பற் றுருப்பெற்று
வார்ச்செற்ற கொங்கை மடந்தையை நீக்கியே
சேர்த்துற் றிருதிங்கள் சேரா தகலினும்
மூப்புற்ற பின்னாளில் எல்லாம்ஆம் உள்ளவே. ***#1909***

மேற்கூறியபடி கருவைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டியவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்து உலகத்தில் பொதுவாக நிகழும் புலன் அடக்கம் இன்மையைத் தந்தை, தாயர் தவிர்த்து இருத்தலால் கரு மக உருப் பெற்று வளர்ந்து முதிர்ந்து பின்பு விதி அம்மகவைத் தாயின் வயிற்றிலிருந்து நீக்கி நிலத்தைச் சேரும்படி சேர்த்து, (தாய் தந்தையர் குழவிமாட்டுள்ள அன்பால் ஊக்கம் மிகுந்து செய்விக்கும் தெய்வக் காப்புக்களால்) மேல் கருவுட் பட்டனவாகக் கூறிய அவ்வினைப் பயன்கள் குழவியை வந்து பற்றதொழியினும் அதன்பின் குழவி வளர்ந்து வரும் பிற்காலத்தில் அவையெல்லாம் வந்து பற்றுவனவேயாகும். ஆகையால், மேற் கூறியவற்றையெல்லாம் ஆடவன் எண்ணிப் பார்ப்பானாக.

விளக்கவுரை

'அகலினும்' - என்ற உம்மையால், *'அகலுதல் அரிது'* என்பதும், *'மிகச் செய்தவழி ஒருவாற்றால் நீங்கும்'* - என்பதும் பெறப் படும். *'பரப்பற'* என்பது *'பரப்பற்று'* எனவும், *'உருப்பெற்றபின்'* என்பது, *'உருப்பெற்று'* எனவும் திரிந்து நின்றன. *'சேர்த்தல், அகலுதல்'* என்னும் வினைகட்கு *'வினைப் பயன்'* என்னும் வினைமுதல் வருவிக்கப்பட்டது. இதன் ஈற்றடி இனவகையால் மூன்றாம் எழுத்து எதுகையாயிற்று.
இதனால், மேல், *'எண்ணியும் பார்க்க'* என்றது பயனில் செயலாகாமை விளக்கப்பட்டது.

வித்திடு வோர்க்கன்றி மேலோர் விளைவில்லை
வித்திடு வோர்க்கன்றி மிக்கோ ரறிவில்லை
வித்தின்இல் வித்தை விதற உணர்வோர்க்கு
மத்தில் இருந்ததோர் மாங்கனி ஆமே. ***#1910***

உலகில் விதையை நிலத்தில் விதைப்பவர்க் கல்லது விளைவு ஏதும் கிடைக்க மாட்டாது. விதையை நன்முறையில் விதைப்பவர்க்கல்லது சிறந்த ஓர் அறிவும் இல்லையாகும். (அதுபோல விந்துவாகிய வித்தினை நன்முறையில் இடாதார்கக்ம் நன்மகப் பேறாகிய விளைவும் கிடைக்கமாட்டாது; அவர்க்குச் சிறந்த ஓர் அறிவும் இல்லையாகும்.)

விந்துவாகிய வித்தினது இல்லற வித்தையை அமைந்து நோக்கி உணர்வாராயின், மரத்தில் தூங்கும் மாங்கனி போலும் பயன் கிடைப்பதாகும்.

விளக்கவுரை

முன்னிரண்டடிகள் ஒட்டணியாய் நின்றமையின் அவற்றிற்குரிய பொருள் வருவித்துரைக்கப்பட்டது. 'மிக்க' என்னும் பெயரெச்சத்து அகரம் தொகுத்தலாயிற்று. மூன்றாம் அடியில் வந்த 'வித்தை' என்பது 'கல்வி' என்றவாறு. இல்லறத்தை 'இல்' என்றார். விரைவினை உணர்த்தும் 'விதுப்பு' என்பது முதனிலையளவாய், 'விது' என நின்றது 'வேதின வெரிநின் ஓதிமுது போத்து' - என்பதில் 'ஓந்தி' என்பது 'ஓதி' என இடைக்குறைந்து நின்றது போல, 'மரத்தின்' என்பது எதுகை நோக்கி, 'மத்தின்' என இடைக் குறைந்து நின்றது. வாளா, 'மாங்கனி ஆம்' எனின் குறித்த பொருள் விளங்கா தாகலின், 'மரத்திலிருந்தோர் மாங்கனி ஆம்' என்றார். அதனால், வித்தினது விளைவே மாங்கனியாதல்போல், 'விந்துவின் விளைவாக நன்மகவு உண்டாகும்' என்பது பெறப்பட்டது. இதுவும் ஒட்டணியே.

மாதொருத்தியை மணந்தவர்க்கு உளவாகிய இல்லறக் கடமைகளில் குடிவழியை நற்றவம் செய்தாயினும் நன்முறையில் தொடரச் செய்தலும் ஒன்றாகலின், 'அது விந்து சயத்தால் கைகூடும்' என்றற்கு இவையெல்லாம் கூறினார்.

இதனால், விந்து சயத்தால் விளைவதோர் இம்மைப் பயன் கூறப்பட்டது.

கருத்தினில் அக்கரம் ஆயுவும் யாவும்
கருத்துளன் ஈசன் கருவுயி ரோடும்
கருதத்து வித்தாய்க் காரண காரியம்
கருத்துறு மாறிவை கற்பனை தானே. ***#1911***

இறைவன் கருவிற்பட்ட உயிரோடு அதன் அறிவுக் கறிவாய்க் கலந்து நிற்கின்றான். அதனால் அவ்வறிவிற்குப் பொருள்களை அறியும் ஆற்றலையும், ஆயுள் முதலானவற்றையும் அப்பொழுதே அமைக்கின்றான். அவன் அவ்வாறமைத்தற்கும் தந்தை தாயரது எண்ணமே காரணமாய் நிற்க, அவ்வமைப்பு அக்காரணத்தின் காரியமாகின்றது. ஆகவே, குழவியின் அறிவு, ஆயுள் முதலியவை தந்தை தாயரது எண்ணத்தினால் அமைவனவேயாம்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதலிற் கொண்டு, அதனுள்ளும் 'கருவுயிரோடும்' என்பதை முதலில் வைத்து உரைக்க. 'கருத்து' நான்கில் முதல் இரண்டு ஆகுபெயராய் அறிவைக் குறித்தன. பொரு ளுணர்வு அக்கர வடிவாதல்

பற்றி, அதனை 'அக்கரம்' என்றார். 'நாதம்' என்றபடி. 'வித்தாய்' என்றதனால், அவ்விடத்து, 'கருத்து' என்றது, கருவின் உற்பத்திக்கும், வளர்ச்சிக்கும் காரணமான தந்தை, தாயருடை யனவாயின. கற்பனை - நினைவு. இவையும் அவ்வாற்றால் அவருடை யவாயின.
'மனந்தூயார்க்கு எச்சம் நன்றாகும்' *(திருக்குறள் - 456.)* எனத் திருவள்ளுவரும் குழவியது அறிவு குணங்கட்குத் தந்தை தாயரது அறிவு குணங்கள் காரணமாதல் கூறினார்.
இதனால், 'கலவிக் காலத்து இருவரும் நற்கருத்துடையராதல் வேண்டும்' என்பது கூறப்பட்டது. 'அவ்வாற்றாதலும் ஒரு வகை விந்து சயமேயாம்' என்பது கருத்து.

ஒழியாத விந்து உடல்நிற்க நிற்கும்
அழியாப் பிராணன் அதிபலம் சத்தி
ஒழியாத புத்திதபம் செபம் மோனம்
அழியாத சித்திஉண் டாம்விந்து வற்றிலே. ***#1912***

யோக முயற்சியால் விந்து வீழ்தலின் நீங்கி உடற் குள்ளே நிற்குமாயின் பிராணனும், உடலின் மிக்க வலிமையும், அறிவின் ஆற்றலும் அழியாது நிலைபெறும். இனி விந்து மூலாக் கினியால் தன் இயல்பு வேறுபட்டு உடம்பினுள் ஒன்றாய்க் கலந்து விடுமாயின் இடைவிடாத ஞானம், தவம், செபம், மௌன நிலை, எட்டுச் சித்திகள் ஆகிய எல்லாம் உளவாகும்.

விளக்கவுரை

'அழியாது' என்பது ஈறு தொகுத்தலாயிற்று. 'பிராணன் முதலியவை அழியாது நிற்கும்' என முடிக்க. உடல் வலியிழந்து மெலியுமாயின் அறிவும் சோர்ந்து, பிராணனும் வலிமை குன்றி நீங்கும். பிராணன் நீங்கவே உடல் சிறிதுபோதும் நிலைக்கமாட்டாது நீங்கியொழியும். எனவே விந்து சயத்தால் வாழ்நாள் நீட்டிப்பு உளதாதல் கூறப்பட்டதாம். வாழ்நாள் நீட்டித்தலால் உயிர் தான் எடுத்த உடம்பினால் ஆகிய பயனைப் பெறுதல் கூடும் என்பது பின்னிரண்டடிகளால் சொல்லப்பட்டது. ஒழியாத ஞானமாவது, அறியாமையால் தவிர்க்கப்படாத மெய்யுணர்வு. 'அழியாத சித்தி' என்றது சித்தியின் பெருமை கூறியவாறு.
விந்துவின் வாளா வலிந்து நிறுத்தின் அஃது உபாதியாய், உடற்குத் தீங்கு தரும். யோக முயற்சியால் நிறுத்தின் அது, தன்னியல்பு வேறுபட்டு நிற்கும் ஆதலின் அதனால் உடல் வலிமை முதலிய நலன்கள் உண்டாகும். ஆகவே, யோக முயற்சியால் நிறுத்துதலே இங்குக் கூறப்பட்டது. இனி அவ்வாற்றானே அதனை மேலும் திரிவுபடச் செய்த வழி அஃது உடம்பினுட் சுவறியோக நெறிக்கு மேலும் உதவும் என்பது

பிற்பகுதியாற் கூறப்பட்டது.
இவ்வாறு இதனால் உண்மையான விந்து சயத்தால் விளையும் பயன்கள் கூறப்பட்டன.

வற்ற அனலைக் கொளுவி மறித்தேற்றித்
துற்ற சுழுனைச் சொருகிச் சுடருற்று
முற்று மதியத் தமுதை முறைமுறைச்
செற்றுண் பவரே சிவயோகி யாரே. *#1913*

விந்து வறளும்படி யோக முயற்சியால் மூல அனலை அதன்பால் சேர்த்து, அதனால் அது கீழ்நோக்கி வீழும் இயல்பை விட்டு மேல்நோக்கி ஏறும் இயல்பினதாகச் செய்து அவ்வாறு சுழுமுனை வழியாக மேல் ஏறி ஆஞ்ஞையை முட்டி அடையப் பண்ணி, அஃது அவ்விடத்துள்ள ஒளியோடு கலந்தபின்னர், மேலும் செல்கின்ற மூலக்கனலால் ஆஞ்ஞைக்கு மேல் உள்ள நிறைமதி மண்டலத்திலிருந்து ஊறி வழிகின்ற அமுதத்தை முறை முறையாகத் தமது பண்டை இயல்பு கெட உண்கின்றவர்களே சிவயோகியர் ஆவார்கள்.

விளக்கவுரை

'துற்ற அனலால் சுழியில் சொருகி' என்க. 'துற்ற சுழுமுனை' என்பதில் சுழுனை ஆகுபெயராய் அதன் எல்லையைக் குறித்தது. விந்து ஆஞ்ஞை வரையிற் சென்று அங்குள்ள ஒளியோடு கலத்தலால் தானும் ஒளியாகி உடல் எங்கும் பரவும் என்க. உற்றபின், என்பது, 'உற்று' எனத் திரிந்து நின்றது, பண்டையியல்பாவது, உலகருட் சிலராய் மனஞ்சென்றவாறே சென்று விந்துவை வீழ்ந்து அழிதல். மதிமண்டலத்து அமுது தச நாடிகளில் பாய்தலால் அதுவே உணவாயிட, வேறு உணவு வேண்டாமையை 'உண்ணுதல்' என்றார். அது பலமுறையாக நிகழும் ஆதலின், 'முறை முறை உண்டல்' என்றார்.
இதனால், உண்மை விந்து சயத்தின் மேல்நிலைப் பயனும், அதனை அடைவோரது சிறப்பும் கூறப்பட்டன.

யோகியும் ஞானியும் உத்தம சித்தனும்
போகியும் ஞான புரந்தர னாவோனும்
மோக முறினும் முறைஅமிர் துண்போனும்
ஆகிய விந்து அழியாத அண்ணலே. *#1914*

மாதர்மேல் மையலை உற்றபோதிலும் அதனால் உண்டாகிய விந்து அவர்பால் சென்று வீழாத நிலைமையை எய்திய பெரியோன், யோகியும், மேலான சித்திகளைப் பெற்றவனும், அதே நிலையில் போகத்தை இழக்காதவனும், ஞான வேந்தனாய் விளங்குபவனும், யோக முறையில் உண்ணும் மதி மண்டலத்து அமுதத்தைப் பெற்று உண்பவனுமாவான்.

விளக்கவுரை

'ஞானி' என்றது பொதுவும், 'ஞான புரந்தரன்' என்றது அதன்கண் உயர்ந்து நிற்கும் சிறப்பும் பற்றியாம். உம்மை பெற்றுவந்த பெயர்களை எல்லாம் வேறுவேறு எழுவாயாக வைத்து உரைப்பவர்க்கு அவை, 'அண்ணல்' என்னும் ஒருமைப் பயனிலை யோடு இயையாமை அறிக. இயைய வேண்டின், அப்பெயர்கள் யாவும் ஒருவனையே குறிப்பனவாகக் கொள்ளல் வேண்டும்.

கு-ரை: இதனால், விந்து சயத்தால் விளையும் பயன்கள் அதனைப் பெற்றவனது சிறப்பை வகுத்துக் கூறும் முகத்தால் விளக்கப்பட்டன.

அண்ணல் உடலாகி அவ்வனல் விந்துவும்
மண்ணிடை மாய்க்கும் பிராணனாம் விந்துவும்
கண்ணம் கனலிடைக் கட்டிக் கலந்தெரித்*(து)*
உண்ணில் அமிர்தாகி யோகிக் கறிவாமே. ***#1915***

சிவோகம் பாவனையால் உயிர் சிவனாதலால், அது நின்ற உடம்பும் சிவனது உடம்பாகியபின், அவ்யோகியது விந்தும் நீர்த்தன்மை நீங்கிச் சிவனது விந்துபோல நெருப்புத் தன்மை எய்த அதனையும், உலகில் நாள்தோறும் வெளிவிடுத்துச் சிறிது சிறிதாக அழிக்கப்படுகின்ற பிராணவாயுவாகிய மூலப்பொருளையும் ஒற்றுமைப்பட ஒன்றாகக் கலந்து மூலாக்கினியால் சமைத்து உண்ணும் முறையை ஓர் யோகி வல்லனாயின், அவனுத விந்து தேவாமிர்தமாய் உடல் நலங்கள் பலவற்றைத் தருதலுடன், ஞானமும் நன்கு சிறந்து பிரகாசிக்கச் செய்யும்.

விளக்கவுரை

அண்ணல் - தலைவன்; சிவபிரான். 'ஆகிய பின்' என்பது 'ஆகி' எனத் திரிந்து நின்றது. அனல் விந்து - அனல் தன்மைத் தாகிய விந்து. 'அவ்வனல் விந்து' என்னும் சுட்டு, 'அது சிவவிந்து வின் தன்மை' என்பதைச் சுட்டிற்று. ஒவ்வொரு மூச்சிலும் சிறிது சிறிது பிராண வாயு அழிந்தொழிதலை 'மாய்க்கும் பிராணன்' - என்றார். 'பிராணனாம் விந்து' என்பதில் 'விந்து' என்பது 'மூலப் பொருள்' எனப் பொருள் தந்தது. கட்புலனாகாது கருதியுணருமாறு அகத்தே நிற்றல் பற்றி மூலாக்கினியை, 'கண்ணும் கனல்' என்றார். கண்ணல், கருதல். 'எரித்து' என்றது, 'அவ்வாற்றால் பாகம் (பக்குவம்) செய்து' என்றபடி. 'உண்ணில்' என்பது அவ்வாறு செய்து உண்ணுதலின் அருமை தோற்றி நின்றது. இதனால், உண்மை விந்து சயம் பெறுமாறும், அதனால், உயர் ஞானமாகிய பயன் விளைதலும் கூறப்பட்டன.

அறியா தழிகின்ற ஆதலால் நாளும்
பொறிவாய் அழிந்து புலம்புகின் றார்கள்

அறிவாய் நனவில் அதீதம் புரியச்
செறிவாய் இருவிந்து சேரவே மாயுமே. *#1916*

உலக மாந்தரது விந்துக்கள் அவரது அறியாமை யாலேதான் வீழ்ந்
தொழிகின்றன ஆதலால், அவ்வீழ்ச்சிக்கண் நாள்தோறும்
அவர்ஐம்பொறி வழியில் அகப்பட்டுத்துயர் உறு கின்றனர். ஆகையால்,
பெரியோர் அறிவுடையராய்ச் சாக்கிரத்தில் தானே அதீத நிலையை
அடைந்திருக்க, பிண்டத்திற்கு முதலாயுள்ள விந்துவாகிய
சுக்கிலமேயன்றி, அண்டத்திற்கு முதலாயுள்ள விந்து வாகிய சுத்த
மாயையும் ஒரு சேர அவர்க்கு அடங்கித் தம்மியல்பு கெட்டு நிற்கும்.

விளக்கவுரை

அறிவாவது, இங்கு விந்து சயம் பெறும் முறையை அறிதல். அதீதமாவது, சித்தத்தை வேறிடத்தில் வையாது, சிவன்பாலே வைத்திருத்தல். அது ஞானியர்க்கு இயல்பிலும், யோகியர்க்கு யோகமுயற்சினாலும் வாய்ப்பதாகும். ஆகவே, ஏனையோர்க்கு அது கூடாமை யறிக. செறிவு - அடக்கம். அதனை 'செறிவறிந்து சீர்மை பயக்கும்'* என்பதனாலும் உணர்க. தம்மியல்பாவது பிண்ட விந்துவிற்கு விரைய வீழ்ந்தொழிதலும், அண்ட விந்துவிற்குச் சொல்வடிவாய் நின்று, தன்னின் நீங்கித் தனித்து நிற்கவொட்டாது தளைத்து நிற்றலுமாகும். இதனால், விந்து சயத்திற்குச் சாக்கிராதீதம் புரிதல் வழியாதல் கூறப்பட்டது.

மாதரை மாய வருங்கூற்றம் என்றுன்னக்
காதல தாகிய காமம் கழிந்திடும்
சாதலும் இல்லை சதகோடி யாண்டினும்
சோதியி னுள்ளே துரிசறும் காலமே. *#1917*

விந்து இழப்பிற்குக் காரணம் பால் உணர்ச்சியே யாகலின், அதனை
மகளிரை அந்தப் பாலினராகக் கருதாமல், அங்ஙனம் கருதுபவர்க்கு
அதனால் வரும் அழிவுபற்றி அவரைக் கொல்ல வரும் கூற்றுவனாகவே
கருதின் அவர்மேல் செல்கின்ற ஆசையும், அதனால் எழும் பால்
உணர்ச்சியும் நீங்கிவிடும். அவை நீங்கவே விந்து இழக்கப்
படாதாகலின், அதனால் மனித ஆயுள் அளவேயன்றி, மேலும்
பல்லாண்டு செல்லினும் இறப்பு வாராது. இனி அந்நாட்கள் எல்லாம்
பரம்பொருளின் உள்ளே குற்றமற்றிருக்கும் நாட்களாயும் அமையும்.

விளக்கவுரை

'மாய வரும்' என இயையாது, 'மாயக் கூற்றம்' என்றியைத்து, 'இஃது உண்மை வடிவில் வாராது, வேறொரு வஞ்ச வடிவில் வருகின்ற கூற்றம்' என்று உரைத்தலும் பொருந்தும். காதலது - காதலின்கண் உண்டாவது.

'காலமே' என்பதன்பின் 'உளதாகும்' என்னும் பயனிலை எஞ்சிநின்றது. இதனால், 'விந்து சயம் பெற விரும்புபவன் மாதர் ஆசையை வெறுத்தலே சிறப்பு' என்பது கூறப்பட்டது.

காலங் கடந்தவன் காண்விந்து செற்றவன்
காலங் கடந்தழிந் தான்விந்து செற்றவன்
காலங் களின்விந்து செற்றுற்ற காரிகை
காலின்கண் வந்த கலப்பறி யாரே. *#1918*

விந்து சயம்பெற்றவன் பல்லாண்டுகள் வாழ்தலால் காலத்தைக் கடந்து நிற்பவனாவன். விந்துவை அழித்துவிட்டவன் குறிப்பிட்ட சிலகாலம் வரையில் எவ்வகையிலோ வாழ்ந்து மறைந்தவனாவான். இவ்விருவரும் முறையே கலவிக் காலம் உட்பட எந்தக் காலத்திலும் விந்துவைத் தன் உடலில் வற்றியிருக்கச் செய்தவனும், மாதி னொடு பிராணாயாம முறையில் அமைந்த கலவியை அறியா தவனும் ஆவர்.

விளக்கவுரை

செறுதல் தடுத்தலும், அழித்தலும் ஆகிய இரு பொருளும் தருவதாகலின் அதனை இங்ஙனம் 'பொருட்பின் வருநிலையணி' என்னும் நயம் தோன்ற இவ்வாறு கூறினார். 'காலங்கள்' என்ற பன்மையால் எல்லாக் காலங்களும் கொள்ளப் பட்டன. 'காரிகையொடு' என ஒடு உருபு விரிக்க. ஐயுருபு விரிப்பினும் ஆம். 'காலின்கண் வந்த கலப்பு' என்றது 'யோக முறையில் செய்யும் கலவி' என்றது 'யோக முறையில் செய்யும் கலவி' என்றபடி.

இதனால், விந்து சயம் பெற்றாரது உயர்வும், பெறாதாரது இழிவும் ஒருங்கு தொகுத்தக் கூறப்பட்டன.

கலக்குநாள் முன்னாள் தன்னடைக் காதல்
நலத்தக வேண்டில் அந் நாளி உதரக்
கலத்தின் மலத்தைத்தண் சீதத்தைப் பித்தை
விலக்கு வனசெய்து மேல்அணை வீரே. *#1919*

மாதினொடு கூடுவீர், நீவிர் அக்காதல் வாழக்கை இருவரிடத்தும் நலமாக அமைய வேண்டின் மேலெல்லாம் கூறிவந்த முறையில் குறித்த நாட்கு முன்னாளே அவளது உடம்பில் மலமும், சலமும் ஆகிய உபாதிகளும், வாதம், பித்தம், ஐ என்னும் அவற்றின் மிகை குறைகளும் இல்லாதபடி நீக்குதற்கு உரியவற்றைச் செய்து அதன்பின்னர்க் கூடுவீராக.

விளக்கவுரை

'உடல் நலம் கெட்டிருப்பவளொடு கூடுதல் கேடு பயக்கும்' என்பதாம். 'மலம்' என்றதனால் சலமும், 'சீதம், பித்தம்' என்பவற்றைக் கூறியதனால்

ஏனை வாதமும் கொள்ளப்பட்டது. இரண்டாம் தந்திரத்தில், 'மாதா உதரம் மலம்மிகில்' என்னும் மந்திரம் கரு உற்பத்தி யின் வகையுணர்த்தற்குக் கூறினார்; இதனை விந்து சயம் பெறுவார்க்கு ஆவதுணர்த்தக் கூறினார் என்க. எனவே, இதன் கருத்து வகையும் பெறப்பட்டது.

மேலாம் நிலத்தெழும் விந்துவும் நாதமும்
கோலால் நடத்திக் குறிவழி யேசென்று
பாலாம் அமுதுண்டு பற்றறப் பற்றினால்
மாலா னதுமாள மாளுமவ் விந்துவே. ***#1920***

விந்து ஆறு ஆதாரங்களில் மேல் ஆதாரமாகிய ஆஞ்ஞையில் தோன்றும்; அதற்கு மூலமாகிய பொருள் ஏழாம் தானமாகிய மதி மண்டலத்தில் தோன்றும். ஆகையால், பிராண வாயுவையும், அதனால் எழும் மூலாக்கினியையும் சுழுமுனை வழியாகச் செலுத்தி ஒவ்வோர் ஆதாரமாகக் கடந்து மதி மண்டலத்தை அடைந்து அங்கே உண்டாகின்ற அமிர்தத்தை உண்டு கொண்டே மாதினை ஆசையின்றித் தழுவினால், மையல் உண்டாகாது. அஃது உண்டாகாதாகவே விந்துவும் வெளிப்படாது அகத்திலே நிற்கும்.

விளக்கவுரை

விந்துவிற்கு மூலமாதல் பற்றி அங்ஙனம் ஆகின்ற அப்பொருளை 'நாதம்' என்றார். சுழுமுனையை, 'தண்டு' என்னும் வழக்குப்பற்றி, 'கோல்' என்றார். நடத்துதற்குச் செயப்படுபொருள் மேலெல்லாம் கூறியவாற்றால் வந்தியைந்தன. பால் - இடம். 'உரிய இடத்தில்' என்றபடி. 'உண்டு' என்னும் வினையெச்சம் 'நோக்கிச் சென்றான்' என்பது போல உடன் நிகழ்ச்சிகண் வந்தது. பற்றுதற்குச் செயப்படுபொருள் முன்னை மந்திரத் தொடர்பால் வந்து இயைந்தது. இதனால், மேல், 'காலின்கண் வந்த கலப்பறியாரே' எனக்கூறிய கலப்பு இத்தன்மையது என்பது அறிவிக்கப்பட்டது.

விந்து விளையும் விளைவின் பயன்முற்றும்
அந்த வழியும் அடக்கத்தின் ஆக்கமும்
நந்திய நாசமும் நாசத்தால் பேதமும்
தந்துணர் வோர்க்குச் சயமாகும் விந்துவே. ***#1921***

விந்து உண்டாகும் முறையும், அஃது உண்டாகி முதிர்வதனால் விளைகின்ற பயனும், அதனை வீண்போகாது அடக்குதற்குரிய வழியும், அவ்வழிப்படி அதனை அடக்குதலால் வரும் ஆக்கங்களும், விந்து கெடுவதாகிய கேடும், அக்கேட்டினால் விளையும் விளைவுகளின் வகையும் ஆகிய இவற்றையெல்லாம் முறையாக மனத்திற் கொணர்ந்து, ஆய்ந்து உணர்பவர்க்கு விந்து சயம் உண்டாக வழி ஏற்படும்.

விளக்கவுரை

'அந்த' என்பது பின்வரும் அடக்கத்தைச் சுட்டிற்று. *'நாசத்தால்'* என்பதன்பின் *'விளையும்'* என ஒரு சொல் வருவிக்க. பேதம் உடையவற்றை, *'பேதம்'* என்றார். காரணம் உண்டாய விடத்துக் காரியம் நிகழ்தல் எளிதாதல் பற்றி, *'சயமாகும் விந்துவே'* என்றாராகலின், அதற்கு இதுவே பொருளாயிற்று.
விந்து உண்டாகும் முறை முதலிய பலவும் மேலெல்லாம் கூறப்பட்டமை காண்க.
இதனால், *'அறிவுடையோர், பிண்டத்திற்குக் காரணமான விந்துவைப் பற்றி அறியற்பாலனவற்றை எல்லாம் அறிதல் வேண்டும்'* என்பது கூறப்பட்டது.

விந்துவென் வீசத்தை மேவிய மூலத்து
நந்திய அங்கியி னாலே நயந்தெரிந்*(து)*
அந்தமில் பானு அதிகண்ட மேலேற்றிச்
சந்திரன் சார்புறத் தண்ணமு தாமே. ***#1922***

[இமந்திரத்திலும் மேல், 'அண்ணல் உடலாகி' என்னும் மந்திரத்துட் கூறப்பட்ட பொருளே, 'அண்ணல் உடலாதல்' ஆகிய அவ்வொன்றொழியக் கூறப்பட்டது.]

விளக்கவுரை

அது சிவயோகியர்க்கு ஆகும் சிறப்புமுறை. இது யோகியர் எல்லோர்க்கும் ஆகும் பொதுமுறை. அதனால் *'அறிவாதல்'* நீக்கி, *'அமுதாதல்'* மட்டும் கூறப்பட்டது. வீசம் - *(பீசம்)* வித்து. நந்திய - வளர்ந்த.
யோக முறையில் மூலாதாரம் முதல், கொப்பூழ் வரையுள்ள பகுதி அக்கினி கண்டமாகவும், கொப்பூழ் முதல் இருதயம் முதல் கண்டம் வரையுள்ள பகுதி சூரிய கண்டமாகவும், அதற்குமேல் உள்ள பகுதி சந்திர கண்டமாகவும் சொல்லப்படும். அதிகண்டர் - அக்கினி கண்டத்திற்கு மேல் உள்ள கண்டம். *'சந்திரன்'* என்றதும் சந்திர கண்டத்தை.

அமுதச் சசிவிந்து ஆம்விந்து மாள
அமுதப் புனலோடி அங்கியின் மாள
அமுதச் சிவபோகம் ஆதலால் சித்தி
அமுதப் பிலாவனம் ஆங்குறும் யோகிக்கே. ***#1923***

சந்திர மண்டலத்தில் ஊறுகின்ற அமுதமாகிய துளிகளில், யோகியினது உடம்பில் உண்டாகின்ற விந்து முன் மந்திரத்தில் கூறிய முறையில் சென்று ஒடுங்க, மற்று உடம்பைக் காக்கின்ற அமுதமாய் நீர்க்கூறுகள் விரையச் சுழன்று மூலாக்கினியால் வற்ற, அவ்வாற்றால் அமுதம்

போலும் இனிய சிவபோகம் விளையும் ஆதலால், அவ்யோகிக்கு அப்பொழுதுதான் அடைந்தபேறு அமுத மழை பொழிதல் போல அமையும்.

விளக்கவுரை

'சசி அமுத விந்து' என மாற்றி, 'உள்' என்னும் உருபு விரிக்க. 'அமுதப் புனல், அமுதச் சிவபோகம்' என்பன உவமத் தொகை. பிலாவனம் - ஒழுகுதல். அது மழைத்தாரை வீழ்தலைக் குறித்தது.
இதனால், 'மகளிர் இன்பமாகிய குளப்படி நீரை விடுத்து விந்து சயம் பெற்றார் சிவயோகியாராயின் சிவபோகமாகிய பெருவெள்ளத்தில் மூழ்கித் திளைப்பர்' என்பது கூறப்பட்டது.

யோகம்அவ் விந்து ஒழியா வகைபுணர்ந்*(து)*
ஆகம் இரண்டும் கலந்தாலும் ஆங்குறாப்
போகம் சிவபோகம் போகிநற் போகமாம்
மோகம் கெடமுயங் காரிமூடர் மாதர்க்கே. ***#1924***

மாதும், ஆடவனும் ஒருங்கு கூடி, இருவர் உடலும் 'ஓர் உடலே' எனும்படி இறுகப் புல்லிய விடத்தும் ஆடவனுக்கு அப்புல்லுதல் காரணமாக வெளிப்படுதற்குரிய விந்து வெளிப்படா திருக்கப் பெறுதலே உண்மை யோகமாகும். ஆயினும் அவ்விடத்து இன்ப நுகர்ச்சி இல்லா தொழியாது; உள்ளதேயாகும். அவ்வின்ப நுகர்ச்சி உடலின்ப நுகர்ச்சியாகாது சிவ இன்ப நுகர்ச்சியாகவே அமையும். அதுவே இன்ப நுகர்ச்சியை உடையவனுக்குத் தீங்கினை விளையாது, நன்மையையே விளைக்கும் இன்ப நுகர்ச்சியாம். இந்நுகர்ச்சியைப் பெறும் வகையில் மாதரைப் புணர அறியாதார் புணர்ச்சிக் காலத்தில் அவரை உடல் இன்ப மயக்கமின்றிப் புணர மாட்டார்.

விளக்கவுரை

'அம்மயக்கத்தில் மூழ்கிப் புணர்ந்து கெடுவர்' என்பதாம். 'புணர்ந்து ... ... கலந்தாலும் அவ்விந்து ஒழியா வகை யோகம்' எனக் கூட்டியுரைக்க. 'போகிக்கு' என நான்கண் உருபு விரிக்க. 'நற்போகமாம்' என்னும் பயனிலைக்கு, 'அதுவே' என்னும் எழுவாய் வருவிக்க. தீங்காவது, போகம் வினைப்போகமாய், மேலும் வினையைப் பெருக்குதல். நன்மையாவது இன்பப்பேற்றைப் பலவாகத் தருகின்ற திருவருளை நினைத்தலால் அதனிடத்து மேலும், மேலும் அன்பு மீதூர்தல்.
'மாழை ஒண்கண் பாவையைத் தந்து ஆண்டானை' எனவும், 'நொய்யேனைப் பொருட்படுத்துச் - சங்கிலியோடு எனைப்புணர்த்த தத்துவனை' (திருமுறை - *7. 51-10, 11.*)எனவும், 'மான் திகழும் சங்கிலியைத் தந்து வருபயன்களெலாம் - தோன்ற அருள்

செய்தளித்தாய்' *1* எனவும், 'பண்மயத்த மொழிப் பரவே சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெருமானே' *3* எனவும் நினைந்து, நினைந்து உருகியவாறும்,

'ஓர்ந்தனன், ஓர்ந்தனன் உள்ளத் துள்ளே உள்ள ஒண்பொருள்;
சேர்ந்தனன், சேர்ந்தனன்; சென்று திருவெற்றி யூர்புக்குச்
சார்ந்தனன், சார்ந்தனன் சங்கிலி மென்தோள்; தடமுலை
ஆர்ந்தனன்; ஆர்ந்தனன் ஆமாத்தூர் ஐயன் அருளதே' *8*

என அருளிச்செய்தவாறும் அறிக. 'மோகங் கெட' எனப் பொதுப்பட அருளினமையால் இவ் யோகம் வல்லார் தம்மால் கூடப்பெறும் மகளிரையும் மோகம் இலராகச் செய்வர் என்பதும் பெறப்படும். விந்து ஒழியா வகை புணரும் யோகம் வச்சிர 'குலியோகம�*%8*

மாத ரிடத்தே செலுத்தினால் அவ்விந்து
காதலி னால்விடார் யோகம் கலந்தவர்
மாதர் உயிராசை கைக்கொண்ட வாகுவார்
காதலர் போன்றங்ஙன் காதலாம் சாற்றிலே. ***#1925***

யோகத்தைப் பொருந்தியவர் மாதரிடத்தே அவர் விழைவு நோக்கி விந்துவை விடுத்தாராயினும் அவர்மேல் கொண்ட மோகத்தால் விடுத்தாரல்லர். ஏனெனின், அவர் மாதர்பால் காட்டுகின்ற மோகத்தைச் சொல்லுமிடத்து ஏனையோர் மோகம் போன்றதாயிருப்பினும் அது வேறேயாம். *('பொதுவாக யாவர்மீதும் உளதாகிய அருளேயாம்' என்பதாம்.)* இனி, யோகத்தில் பொருந்தாதவர் மாதர்மேல் தம் உயிர்மேல் வைத்திருக்கும் ஆசையைப்போலும் ஆசையை வைத்து அதனால் மெலிவெய்துவர்.

விளக்கவுரை

காதல், இங்கு மோகத்தைக் குறித்து நின்றது. 'யோகியர் மோகம் இன்மையால் அப்பொழுது விந்து சயம் பெறுதலும், பின்னரும் பல இன்னலுக்கு ஆளாகாது உய்தலும் உடையர்' என்பதும், 'ஏனையோர் அவற்றிற்கு மாறான நிலைலையுடையராவர்' என்பதும் கருத்து. மூன்றாம் அடியை இறுதிக்கண் வைத்து உரைக்க. 'யோகம் கலந்தவர்' என்றதனால். 'அதனைக் கலவாதவர்' என்பது பெறப்பட்டது. ஈற்றடி. 'அங்ஙனம் காதலைச் சாற்றில், காதலர் காதல் போன்றதாம் என மாற்றியும். ஒரு சொல் வருவித்தும் உரைத்தற்கு உரியது 'அங்ஙன்' என்றது, 'அவரிடத்து' என்றபடி.

இதனால், யோகம் வல்லவரும், அல்லவரும் இன்பம் நுகருமாறு கூறப்பட்டன.

சாற்றிய விந்து சயமாகும் சத்தியால்
ஏற்றிய மூலத் தழலை எழமூட்டி

நாற்றிசை ஓடா நடுநாடி நாதத்தோ(டு)
ஆற்றி அமுதம் அருந்தவிந் தாருமே. #1926
[இம்மந்திரத்திலும் மேல் 'வற்ற அனலை' என்னும் மந்திரத்தில்
சொல்லப்பட்ட முறையே 'சுழி அனல் சொருகிச் சுடருற்று'
என்பதொழியச் சொல்லப்பட்டது.]

விளக்கவுரை

விந்து ஆரும் - விந்து பெருகும், பின்பு, 'சத்தியால் சயமாகும்' என முதல் அடியை இறுதியில் கூட்டியுரைக்க. 'சத்தியால்' என்பது இரட்டுற மொழிதலாய், 'திருவருளாகிய சத்தியின் வழிச் செயற்படும் தனது சத்தியால்' எனப்பொருள் தந்தது. 'செய்பவர் செய்திப் பயன் விளைக்கும் செய்யே போத்வதாகிய திருவருள்'* யோக முயற்சியுடையார்க்கு அதற்கு ஏற்றவாறு அருள்செய்யும் என்பதற்கு. திருவருட் சத்தியும் உடன் கூறப்பட்டது. 'ஓடாது' என்பதன் ஈறு தொகுத்தலாயிற்று நாதம் ஆஞ்ஞைக்கு மேல் உள்ள இடத்தில் தோன்றுவது என்பது மேல் 'மேலாம் நிலத்து எழு' என்னும் மந்திரத்து உரையிலும் கூறப்பட்டது. இதனால், 'முன் மந்திரத்தில் கூறியபடி யோகியர்க்கு விந்து சயம் கூடுதல் திருவருட் குறிப்பால் என்பது கூறப்பட்டது.

விந்துவும் நாதமும் மேவக் கனல்மூலம்
அந்த அனல்மயிர்க் கால்தோறும் மன்னிடைச்
சிந்தனை மாறச் சிவம்அகம் ஆகவே
விந்துவும் மாளும்மெய்க் காயத்தில் வித்திலே. #1927

மேற்கூறியவாறு செய்யும் யோகத்தால் மூலாக் கினியால் விந்துவும், நாதமும் கலந்த ஒன்றாதலும், அவ்வக் கினியின் வெம்மை உடம்பின் மயிக்கால்தோறும் பரவி நிற்றலும் நிகழ, அவ் வாற்றால் உள்ளம் உலகை வெறுத்துச் சிவத்தினிடத்தே செல்ல, பின்பு, 'சிவம் நான்' என்பதாகிய சிவோகம் பாவனை உண்டாக, அதனால் விந்து அழியா உடம்பில் அதற்கு வித்தாய், அதனுள்ளே சுவறி நிற்கும்.

விளக்கவுரை

அகம் - நான். 'விந்து, உடம்பு அழியாமைக்கு வித்தாய் அதனுள்ளே மாளும்' எனக் கூறற்பாலதனை இங்ஙனம் கூறினார். 'வித்தில்' - வித்துப்போல.

இதனால், விந்து சயத்தின் பொருட்டுச் செய்யப்படும் யோகம் சிவ யோகத்தையும், காய சித்தியையும் உண்டாக்குதல் கூறப்பட்டது.

வித்தக்குற் றுண்பான் விளைவறி யாதவன்
வித்துக்குற் றாண்ணாமல் வித்தச்சுட் டுண்பவன்
வித்துக்குற் றுண்பானில் வேறலன் நீற்றவன்

வித்துக்குற் றாண்ணாமல் வித்துவிற் றானன்றே. *#1928*

விதைக்கு வைத்திருக்கும் நெல்லைக்குற்றி உண வாக்கிக் கொள்பவன் வித்தினால் விளையக் கூடிய பெரும்பயனை இழந்தவனாவன். இனி, விதை நெல்லைக்குற்றி உண்ணாமல், பொரி யாக வறுத்து உண்பவனும் முன் சொல்லப்பட்டவனைவிட அறிவுடை யவன் ஆகமாட்டான். (ஏனெனில், அவனும் விளைவை இழக்கின்றா னன்றோ!) ஆகையால் சிவயோகி விதையைக் குற்றி, அல்லது வறுத்து உண்ணாமலும், பலரும் செய்கிறபடி நிலத்தில் விதைத்தலைச் செய்யா மலும் பொன்னுக்கு விற்பவனைப் போன்றவன் ஆவான்.

விளக்கவுரை

நீற்றவன் - முழுநீறு பூசியவன். சிவயோகி இம்மந்திரம் ஒட்டணியாகச் செய்யப்பட்டமையால், இதன் பொருள் வருமாறு:-

'விந்துவை உபாதியாக்கிக் கொண்டு அதனை எவ்வாற்றா லேனும் போக்குபவன் அதனால் எந்தப் பயனையும் பெறாமல் இழப்பவனாவன். இனி யோகத்தால் விந்துவை உடம்பினுள் வற்றச் செய்பவனும் விந்துவால் பெறக்கூடிய பெரும்பயனைப் பெற்றவன் ஆகமாட்டான். ஆகையால் சிவயோகி இந்த இரண்டு வகையிலும் இல்லாமலும் பெரும்பாலோர்போல விந்துவை மாதர்பால் விடாமலும் விந்து சயத்தால் சிவோகம் பாவனையை அடைந்து நலம்பெறுவான்'

விதை நெல் மிக்க விலையுடையது. அதனைப் பொன்னுக்கு விற்றால், அந்த அளவு உணவு நெல்லை மலிவான விலைக்கு வாங்கி உண்ணவும் செய்யலாம்; பொன்னும் இலாபமாகும். அதனால், 'அதனை ஒப்பது சிவயோகியின் செயல்' என்றார்.

இதனால், 'விந்து சயத்தால் பெறத்தக்க சிறந்த பயன் சிவோகம் பாவனையே' என்பது கூறப்பட்டது.

அன்னத்தில் விந்து அடங்கும் படிகண்டு
மன்னப் பிராணனாம் விந்து மறித்திட்டு
மின்னொத்த விந்துநா தாந்தத்து விட்டிட
வன்னத் திருவிந்து மாயும்கா யத்திலே. *#1929*

உணவிலே விந்து காரண ரூபமாய் அடங்கி யிருத்தலை அறிந்து உணவை நன்முறையில் ஒழுங்காக உண்டு வருதலாலும், பின்பு பிராணனின் அவ்வாறுள்ள விந்துவை அந்தப் பிராணனை ஒழுங்கான முறை இயக்குதலால் ஒளிவடிவாக எழச் செய்து ஒலிவடிவாகிய விந்துநாதத் தானங்களில் ஏற்றி அதற்கு மேலும் செலுத்துதலாலும் அக்கர வடிவாய் நின்று அறிவைத் தோற்றுவிக்கின்ற பெரிய சுத்த மாயையும் உடம்பினுள்ளே அடங்கி நேரிதாம்.

விளக்கவுரை

'உணவையும், பிராண வாயுவையும் ஒழுங்கான முறையில் கொண்டிருக்கும் யோகிக்கு வாக்குகள் நேரியவாக, அதனால் மனம் தன்வழிப்பட்டுச் சிவ சிந்தனை உண்டாகும்' என்பது கருத்து. மறித்தல் - அடக்குதல். 'மறித்தலால் மின் ஒத்த விந்து' என் றதனால், விந்து மின்னல் போல ஒளிவடிவாதல் அனுவாத முகத்தால் பெறப்பட்டது. வன்னம் - சக்கரம். வன்னத்து இருவித்து' என்பது, 'கடிசூத்திரப் பொன்' என்பதுபோலக் கரும காரகத்தின்கண் வந்த ஆறாவதன் தொகை. நான்காவதன் தொகை' எனினுமாம்.

இதனால், விந்து சயத்தால் மேற்கூறியவாறு சிந்தனை மாறுதல் கூறப்பட்டது.

அன்னம் பிராணன்என்*(று)* ஆர்க்கும் இருவிந்து
தன்னை அறிந்துண்டு சாதிக்க வல்லார்க்குச்
சொன்னமு மாம் உருத்தோன்றும் எண்சித்தியாம்
அன்னவ ரெல்லாம் அழிவற நின்றதே. ***#1930***

ஆடவர் எல்லோர்க்கும் அன்ன விந்து, பிராண விந்து' என இரு விந்துக்கள் உள்ளன. அந்த உண்மையை உணர்ந்து, அன்னத்தையும், பிராணனையும் நெறிபடுத்தி நிற்க வல்லவர்க்கு மேனி பொன்போல விளங்கும். அட்டமா சித்திகள் கூடும். மேலும் அத்தன்மை யுள்ள யோகிகள் யாவரும் நீண்ட காலம் வாழ்ந்தமை வெளிப்படை.

விளக்கவுரை

பிராண விந்துவாவது பிராணன் நெறிப்பட்டு இயங்கு தலால் விந்து வலுப்படுதலும், நெறிப்பட்டு இயங்காமையால் விந்து மெலிவடைதலும் ஆகும். 'தன்னை' என்றது. அந்த உண்மையைச் சாதிக்க வல்லார் அடையும் பயன்களாக இங்குக் கூறப்பட்டவை மூன்றாந் தந்திரத்திலும் கூறப்பட்டன 'இரு விந்து' என்பதன் பின் 'உள' என்பதும், ஈற்றில் 'வெளிப்படை' என்பதும் எஞ்சி நின்றன. 'உருவும் சொன்னமாம்' என உம்மையை மாற்றி வைத்து உரைக்க.

இதனால், 'விந்து சயம் வேண்டினார் உணவையும், பிராணனையும் நெறிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

நின்ற சிகாரம் நினைக்கும் பிராணனாய்
ஒன்று மகாரம் ஒருமூன்றோ டொன்ற வை
சென்று பராசத்தி விந்துசயந் தன்னை
ஒன்ற உரைக்க உபதேசந் தானே. ***#1931***

(நீயே விந்து சயத்தைப் பெற்று விடலாம் என்று நினையாமல்) திருவருளும் அம்முயற்சியில் தலைப்பட்டு உடன் நிற்றற்பொருட்டுத்

திருவைந்தெழுத்தில் உயிராய் உள்ள சிகாரத்தின் பொருளாகிய சிவனை அகார உகார மகாரங்களோடு உடன் வைத்துத் தியானிக்க விந்து சய மார்க்கத்தைப் பிறருக்கு உபதேசிக்கும் பொழுதும் இவ்வாறே உபதேசிப்பாயாக.

விளக்கவுரை

'பிரணவ யோக முறையால் விந்து சயம் எளிதில் பெறலாம்' எனக்கூற வந்தவர் 'அதனைச் சிவத்தியானத்தோடு செய்யல் வேண்டும்' என்பதை இவ்வாற்றால் கூறினஆர். 'சிகாரம்' என்றது அதனால் குறிக்கப்படும் பொருளை. 'நினைக்கும்' என்றது 'நினைக்கப் படும்' என்றபடி. 'பிராணனாய் நினைக்கும்' என முடிந்து, அதன்பின் 'அதனை' என்பது வருவித்து 'ஒன்றவை' என முடிக்க. 'பராசத்தி சென்று விந்து சயந்தன்னை ஒன்ற' என முதலிற்கூட்டியும், உபதேசம் ஒன்று உரைக்க' என இறுதியில் மாற்றியும் பொருள் கொள்க.
இதனால், சிவத்தியானத்தோடு கூடிய பிரணவயோகம் விந்து சயத்தைத் தருதல் கூறப்பட்டது.

தானே உபதேசம் தானல்லா தொன்றில்லை
வானேய் உயர்விந்து வந்த பதினான்கு
மானேர் அடங்க அதன்பின்பு புத்தியும்
தானே சிவகதித் தன்மையு மாமே. ***#1932***

முன்மந்திரத்தில், 'அகாரம் முதலிய மூன்றோடு உடன் வைத்துத் தியானிக்க' எனக் கூறிய கூற்றில் சுட்டப்பட்ட சிவத்தை உபதேசிக்கும் உபதேசமே உண்மை உபதேசமாகும். ஏனெனில், சிவம் இன்றி யாதொரு பொருளும் இல்லை. இனி ஆகாயம் போல் எப்பொருட்கும் வியாபகமாய் உள்ள சுத்தமாயை யினின்றும் பிரணவ வடிவாய்த் தோன்றுகின்ற வாக்குக்கள் பதினாறு கலைகளாக வைத்துத் தியானிக்கப்படும்பொழுது ஆதார யோகத்தில் ஏழாம் தானத்துடன் உலகியல் உணர்வோடு நிகழும் முதற் பதினான்கு கலைகள் ஆதார சத்திகளோடு அடங்கிவிடும். உலகியல் நீங்க சிவ உணர்வோடே நிகழும் எஞ்சிய ஏனை இருகலைகள் நிராதார யோகத்தில் நிராதார சத்திகளோடு அடங்கிவிடும். அந்நிலையே சிவத்துவ நிலையாம்.

விளக்கவுரை

'பிராசாத யோகத்தால் விந்து சயம் பெறுவார்க்குச் சிவோகம் பாவனை கைவரும் வகையில் யோகம் சிவயோகமாய் நிகழும்' என மேல், 'விந்துவும் நாதமும் மேவக்கனல்மூலம்' என்னும் மந்திரத்திற் கூறியதை அஃது இவ்வாற்றால் நிகழும் என்பது இதனுட் கூறப்பட்டது. உபதேசப் பொருள், 'உபதேசம்' எனப்பட்டது.

'பிரணவத்தைப் பதினாறு கலைகளாக வைத்துத் தியானிக்கு மிடத்து அவை எவ்வாறு அமையும்' என்பது மூன்றாம் தந்திரத்தில், 'கலைநிலை' என்னும் அதிகாரத்தில் விரிவாக விளக்கப்பட்டது.
பூதாகாயம் ஏனை எல்லாப் பொருள்கட்கும் வியாபகமாய் நிற்றல் யாவராலும் அறியப்பட்டதாகலின் அதனைச் சுத்த மாயையின் வியாபகத்திற்கு உவமையாகக் கூறி விளக்கினார். 'வான் ஏய்' என்பதில் 'ஏய்' உவம உருபு. 'விந்துவின் வந்த' என ஐந்தன் உருபு விரிக்க. புத்தி - ஞானம்; சிவஞானம். இந்த ஞானம் சிவத்தைத் தன்னின் வேறாக உணரும் ஞானம். இது, நீங்கினால் ஆன்மாச் சிவத்தைத் தன்னுள்ளே உணர்ந்து சிவமாம் ஆகலின் அதனை, 'சிவகதித் தன்மை' என்றார். இதனால் விந்து சய உபாயங்களில் பிராசாத யோகம் சிறப்புடையதாதல் அது நிகழுமாறு கூறிய முகத்தால் விளக்கப்பட்டது.

விந்துவுள் நாதம் விளைய விளைந்தது
வந்தஇப் பல்லுயிர் மன்னுயி ருக்கெலாம்
அந்தமும் ஆதியும் ஆம்மந் திரங்களும்
விந்து அடங்க விளையும் சிவோகமே. ***#1933***

சுத்த மாயையினின்றும் தூலமாகவும், சூக்கும மாகவும் தோன்றுகின்ற வாக்குக்களால்தான் இங்குக் காணப்படுகின்ற பலவாகிய உயிர்களும் உளவாயின. அதனால், மந்திரங்களின் தோற்ற முடிவுகளே உயிர்களின் தோற்ற முடிவுகளாய் அமைகின்றன. ஆகவே அவ்வாக்குக்கள் பிராசாத யோகத்தால் தம் சத்திகள் அடங்கப் பெறுமாயின், சிவோகம் பாவனை உண்மையாய்ப் பயன் தரும்.

விளக்கவுரை

பயன் வகையில் இவ்வுலகத்தார்க்குத் தூலம் சிறந்த தாகலின் அதனை முன்னர்க் கூறினார். உடலினிடத்து உயிர் உளதாதல் அதன் உணர்வு பற்றியே அறியப்படுதலாலும், அவ்வுணர்வு வாக்குகளாலன்றி நிகழாமையாலும் 'அவற்றது தோற்றத்தினாலே உயிர்களின் தோற்றம் உளதாயிற்று' என்றார். தோற்றத்திற்கு உள்ளது முடிவிற்கும் ஒக்கும் ஆதலின் 'மந்திரங்களின் தோற்றமும் முடிவுமே உயிர்களின் தோற்றமும், முடிவுமாம்' என்பது பெறப்படும். மந்திர மொழியால் உண்டாகும் உணர்வே இறையுணர்வு ஆதலின் அதனது தோற்ற முடிவுகளையே உணர்வினது தோற்றமுடிவுகளாகக் கூறியது பொருந்துவதாயிற்று. இவற்றால் வாக்குக்களின் நீங்குதலே பந்தத்தின் நீங்குதலாம் ஆதலின், 'விந்து அடங்கச் சிவோகம் விளையும்' என்றார்.
'ஓவிட விந்து ஞானம் உதிப்பதோர் ஞானம உண்டேல்
சேவுயர் கொடியி னான்றன் சேவடி சேர லாமே' *l*
என்னும் சிவஞான சித்தி இங்கு நினைக்கத்தக்கது. எனவே வாக்குச்

சயமும் ஒரு வகை விந்து சயம் ஆயிற்று.
இதனால், சிறப்புடைய ஒரு விந்து சயம் கூறப்பட்டது.

வறுக்கின்ற வாறும் மனத்துலா வெற்றி
நிறுக்கின்ற வாறும்அந் நீள்வரை யெட்டில்
பொறிக்கின்ற வாறும்அப் பொல்லா வினையை
அறுக்கின்ற நாள்வரும் அத்தப் பழமே. *#1934*

விந்துவை வற்றச் செய்யும் முறையும், மனம் எங்கும் உலாவருவதில் அடைகின்ற வெற்றியைத் தடுத்து நிறுத்தும் முறையும், அந்த வெற்றியை எட்டுத் திக்கிலும் உயர்ந்து நிற்கின்ற மலைகளில் எழுதிப் புகழ் பெறுதலும் ஆகிய எல்லாம் உடம்பு வினைத் தொடர்பை அறுத்துக்கொள்கின்ற காலத்திலேதான் ஒருவனுக்குக் கைவரும்.

விளக்கவுரை

வறுத்தலுக்குச் செயப்படு பொருளாகிய 'விந்து' என்பது அதிகாரத்தால் வந்து இயைந்தது. மனோலயம் எய்தப் பெற்றாரது புகழ் எட்டுத்திக்கும் பரவுதல்.

'இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு' *3*

என்பதனாலும் விளங்கும். 'அஸ்தி' என்னும் வடசொல் தமிழில் 'அத்தி' எனத்திரிந்து வரும் ஆதலின் அதனை நாயனார் உடம்பைக் குறித்தற்குச் சிலேடை நயம்தோன்ற வழங்குவர். 'அத்திப் பழமும், அறைக்கீரை நல்வித்தும்' என்னும் மந்திரஉரை பார்க்க உடம்பை எடுத்து உழல்கின்ற உயிரினது செயலை உடம்பின்மேல் ஏற்றி, 'அத்திப்பழம் வினையை அறுக்கின்ற நாள்' என்றார்.
இதனால், முன் மந்திரத்திற் கூறிய விழுப் பயன் வினை நீங்கப் பெற்றார்க்கே கூடுவதாதல் கூறப்பட்டது.

விந்துவும் நாதமும் மேவி உடன்கூடிச்
சந்திர னோடே தலைப்படு மாயிடில்
அந்தர வானத் தமுதம்வந் தூறிடும்
அங்குதி மந்திரம் ஆகுதி யாகுமே.

மனத்தொடு சத்து மனஞ்செவி யென்ன
இனத்தெழு வார்கள் இசைந்தன நாடி
மனத்தில் எழுகின்ற வாக்கு வசனம்
கனத்த இரதம்அக் காமத்தை நாடிலே. *#1935*

மேல், 'மேலாம் நிலத்தெழும் விந்துவும்' என்னும் மந்திரத்திலும், 'விந்துவின் வீசத்தை' என்னும் மந்திரத்திலும் சொல்லப்பட்டபடி விந்துவும், நாதமும் ஒன்றாகிச் சந்திர மண்டலத்தை அடைந்த பொழுது

அங்கு நின்றும் அமுதம் ஒழுகும் காலத்தில் அதனுடன் கலக்கத்தக்க அவிசு 'நின்ற சிகாரம்' என்னும் மந்திரத்தில் சொல்லப்பட்ட பிரணவ மந்திரமேயாகும்.

விளக்கவுரை

என்றது, 'பிரணவ கலைகளை அவ்வவற்றிற்கு உரிய அதிதேவர்கள் ஏற்ற மகிழ்ந்து, அவற்றின் வலியை அடக்குவர்' என்றபடி.
மேற்குறிக்கப்பட்ட மந்திரங்களில் சொல்லியவற்றை மீட்டும் அனுவதித்தது வாக்குச் சயமாகிய விந்து சயம் இவ்வாற்றால் உளதாம் என்பதை உணர்த்துதற் பொருட்டு. இதனுள் ஈற்றடி இனவெதுகை.
இதனால், 'விந்துவுள் நாதம் விளைய விளைந்தது' என்னும் மந்திரத்துள் கூறப்பட்ட அவ்விந்து சயம் அமையுமாறு கூறப்பட்டது.
பதிப்புக்களில் இம்மந்திரத்தை அடுத்துக் காணப்படும், 'மனத்தொடு சத்து' என்னும் பாடல் அதனை அடுத்து வரும் மந்திரத் திற்கு முன்னோடி போன்றுள்ளது. ஆயினும் பொருளற்றதாய் உள்ளது. அதனால் அதனை, 'நாயனார் வாக்கு' எனக் கொள்ளுதற்கில்லை.

சத்தமும் சத்த மனமும் மனக்கருத்*(து)*
ஒத்தறி கின்ற இடமும் அறிகிலர்
மெய்த்தறி கின்ற இடம்அறி வாளர்க்கு
அத்தன் இருப்பிடம் அவ்விடந் தானே. ***#1936***

சூக்குமை முதலிய வாக்குக்களும், அவ்வாக்குக் களால் இயக்கப்படுகின்ற மனம் முதலிய அந்தக் கரணங்களும், அந்த அந்தக்கரணங்களால் உண்டாகின்ற உணர்வுகளும் ஆகிய இவை ஒருங்கு தொக்க நிலையாகிய அறிவின் நிலையை உலகர் அறிய மாட்டார். அதனை உள்ளவாறு அறிய வல்லவர் ஆசான்ம மூர்த்தியின் அருள் பெற்றவரே ஆவர். அவர்க்கு அந்த நிலையே சிவனது இருப்பிடமாதல் விளங்கும்.

விளக்கவுரை

இங்குக் கூறப்பட்ட மூன்றனுள் முதலாவதாகிய வாக்கும் இறைவன் இயக்கவே இயங்கும் ஆகவே இறைவன் வாக்கினை நேராகவும், அந்தக் கரணங்களை வாக்கு வழியாகவும் இயக்கவே உயிர்கட்கு உணர்வுகள் உண்டாகின்றன. ஆகவே, 'இவ்வுண்மை உணருமிடத்து வாக்கே இறைவனுக்கு இடம்' என்பது விளங்கும். வாக்குப் பிரணவ வடிவாகலின் பிரணவம் இறைவனுக்கு இடமாதல் விளங்கும். அது விளங்கவே விந்து சயம் பெறுதற் பொருட்டு, பிரணவ யோகத்தில் மனம் செல்லும் என்பதாம்.
'மனம்' என்றது உபலக்கணம் ஆதலின், ஏனைக்காரணங்களும்

கொள்ளப்படும்.
இதனால், 'சுத்தமாயை யாகிய விந்துவின் சயத்திற்குப் பிரணவ யோகத்தை விரும்பிச் செய்தல்வேண்டும்' என்பது கூறப்பட்டது.

உரவடி மேதினி உந்தியில் அப்பாம்
விரவிய நன்முலை மேவியகீழ் அங்கி
கருமுலை மீமிசைக் கைக்கீழிற் காலாம்
விரவிய கந்தர மேல்வெளி யாமே. *#1937*

மனித உடம்பில் எல்லாவற்றையும் தாங்கும் வலிமையுடைய கலில் *(இடைக்குக் கீழ் உள்ள பகுதியில்)* 'நிலம்' என்னும் பூதமும், அதற்கு மேல் கொப்பூழ்வரை உள்ள பகுதியில் 'நீர்' என்னும் பூதமும், கொப்பூழ் முதல் முலையிருக்கும் பரந்த இடமாகிய மார்பு பகுதியில் 'தீ' என்னும் பூதமும் *(இதனுள் முலையும் அடங்குதல் அறிக.)* மார்பிற்குமேல் கைகளுக்கு ஆதாரமாய்க் கழுத்து வரையில் உள்ள பகுதியில் 'வளி' என்னும் பூதமும், *(இதனுள் கைகளும் அடங்குதல் அறிக.)* கழுத்திற்கு மேல் உள்ள பகுதியில் 'வெளி' என்னும் பூதமும் நிற்கும்.

விளக்கவுரை

'இஃது அறிந்து, பிண்டமும் அண்டத்தோடு ஒத்தலை உணர்ந்து கொள்க' என்பது குறிப்பெச்சம். இவ்வாறு உணர்தல் விந்து சயம் முதலியவற்றைத் தரும் யோகத்திற்கு வேண்டப்படுதல் பற்றி இதனை இங்குக் கூறினார்.
இதனானே வருகின்ற அதிகாரத்திற்கும் இயைபு தோற்று விக்கப்பட்டது. ஏனையவற்றோடு ஒப்ப, 'அடியில் கீழில்' என உருபு விரிக்க. 'மிசையும் கீழும் ஆகிய இடத்தில் கால்ஆம்' என்க.
இவ்வதிகாரம் பெரும்பான்மை அந்தாதியாய் வந்தது.

<u>*9.22.*ஆதித்த நிலை - அண்டாதித்தன்</u>

செஞ்சுட ரோன்முத லாகிய தேவர்கள்
மஞ்சுடை மேரு வலம்வரு காரணம்
எஞ்சுடர் ஈசன் இறைவன் இணையடி
தஞ்சுட ராக வணங்கு தவமே. *#1938*

*(*சூரியன் முதலாகக் காணப்படுகின்ற அனைத்து ஒளிப் பொருள்களின் ஒளியும் சிவனது ஒளியேயன்றி, அவற்றினுடையன அல்ல. அஃது எங்ஙனம் எனின்,*)* சூரியன் நாள்தோறும் மகாமேரு மலையை வலம் வருதல் தெளிவு. ஏனைத் தேவர்கள் அவ்வாறு வலம் வருதலைப் பலர் அறியாராயினும் யோகியரும், ஞானியரும் அதனை நன்கறிவர். 'அவர் வலம்வருதல் எதன்பொருட்டு' எனின், எங்கட்கு விள்க்ககாகி நின்று பயன் தருகின்ற சிவனாகிய கடவுளின் திருவடி ஒளிகள் தங்களிடத்துப்

பொருந்தி விளங்குதற் பொருட்டேயாம். வேண்டிய வேண்டியாங்கு எய்துதல் தவத்தால்*l* ஆகலின் அவர் அதனைச் செய்கின்றனர்.

விளக்கவுரை

பொருள் இனிது விளங்குதற் பொருட்டு இதற்கு இவ்வாறு உரை கூறப்பட்டது. 'தேவர்' என்பதற்கு 'ஒளியுடம் புடையவர்' என்பதே பொருள். அது சூரியனிடத்தே இனிது விளங்கு தலால், 'அவன் முதலாக' என்றார். தேவர் அனைவரையும் கூறினமையால், திங்கள், வியாழன், வெள்ளி முதலிய கோள்களை யும், மற்றும் நாண்மீன் விண்மீன்களையும் வேறு வேறெடுத்துக் கூறல் வேண்டாதாயிற்று. மஞ்சு - மேகம். 'காரணம்', 'நிமித்தம்' என்னும் பொருட்டாய் நின்றது. 'எம் சுடர்' என்றது, நாயனார் தம்கூற்றாக் கூறியது. திருவடி சத்தியாகலின் அதனையே சிவன் ஒளியாகக் கூறினார். மகாமேருமலை சிவன் எழுந்தருளியிருக்கின்ற கயிலையைத் தன்னிடத்தில் உடையது. வணங்குதலையே 'தவம்' என்றமையால் பெயரெச்சம் வினைப்பெயர் கொண்டதாம், 'நின்முகம் காணும் மருந்தினேன்' என்பதிற்போல்,

'நாயகன் கண்ண யப்பால் நாயகி புதைப்ப எங்கும்
பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றிக்
தூயநேத் திரத்தி னாலே சுடரொளி கொடுத்த பண்பின்
தேயமார் ஒளிகள் எல்லாம் சிவன்உருத் தேசது' *

என்னும் சிவஞான சித்திச் செய்யுளை நோக்குக.
இதனால் ஆதித்தன் சிவனொளியைப் பெற்று விளங்குதல் கூறப்பட்டது.

பகலவன் மாலவன் பல்லுயிர்க் கெல்லாம்
புகல்வ னாய் நிற்கும் புண்ணிய நாதன்
இகலற ஏழுல கும்உற ஓங்கும்
பகலவன் பல்லுயிர்க் காதியு மாமே. *#1939*

ஆதித்தனாலே உலகுயிர்கள் இறைவாது வாழ்தலால், அவன் காத்தற் கடவுளாகிய மாயோனாக 'சூரிய நாராயணன்' என்று சொல்லப்படுகின்றான். அதனால் அவனே எல்லா உயிர்கட்கும் புகலிடமாகின்ற முதற்கடவுளும் ஆகின்றான். இன்னும் உயிர்கள் நால்வகை யோனிகளுள் கருவாகித் தோன்றுதலும் ஆதித்த னாலே யாகலின் அவனே அனைத்துயிர்கட்கும் முதலுமாவான்.

விளக்கவுரை

'ஏழுலகும் உற' என்றது, 'நால்வகை யோனியுட் பட்ட அனைத்துயிர்களும் தோன்ற' என்றபடி. ஏழுலகும் இகலற ஓங்குதலாவது, 'ஆதித்தனாலேதான் அனைத்து உயிர்களின் பிறப்பும், வாழ்வும் அமைகின்றன' என்பதை யாவரும் ஒருமுகமாக உடன்பட்டுப்

போற்றப்படுதல். ஆதித்தனை, 'பலர்புகழ் ஞாயிறு'*3* என ஆன்றோர் புகழ்ந்தவை அறிக. 'ஆதியும்' - என்னும் உம்மை உயர்வு சிறப்பும்மை. 'அனைத்துலகங்களிலும் ஆதித்தர் உளர்' என்பதை இங்கு நினைக்க. இதனால், ஆதித்தன் உயிர்கட்குத் தோற்றமும், நிலையுமாதல் கூறப்பட்டது.

ஆதித்தன் அன்பினொ டாயிர நாமமும்
சோதியி னுள்ளே சுடரொளி யாய்நிற்கும்
வேதியர் வேண்டினும் விண்ணவர் சொல்லினும்
ஆதியில் அன்பு பழுக்கின்ற வாறே. *#1940*

ஆதித்தனை ஆயிர நாமங்கள் விண்ணவர் சொல்லி வேண்டினாலும், வேதியர்சொல்லி வேண்டினாலும் அவையெல்லாம் சிவபிரானிடத்தில் அன்புதோன்றி முதிர்வதற்கு வழியாகவே அமையும். ஏனெனில், ஆதித்த மண்டலத்தின் ஒளிக்குள் ஒளியாய்ச் சிவபிரானே நிற்றலால்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை ஈற்றில் வைத்து உரைக்க. 'நிற்கும்' என்னும் பயனிலைக்கு, 'அவன்' என்னும் எழுவாய் வருவிக்க. அப்பயனிலையின் பின், 'ஆகலான்' என்பது எஞ்சி நின்றது. சிவபிரானது அட்ட மூர்த்தங்களில் ஆதித்தனும் ஒன்றாகலின் 'சோதியினுள்ளே சுடரொளியாய் நிற்கும்' என்றும், அதனை அறியாது ஆதித்தனையே வழிபடுபவர்க்கும்,

'யாதொரு தெய்வம் கண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்' *l*

என்றடி பயன் தருபவன் சிவபெருமானே யாகலின், 'அவன் அவர்க்குத் தன்னை உணரும் உணர்வைச் சிறிது சிறிதாக விளங்கச் செய்வன்' என்பது பற்றி, 'ஆதியில் அன்பு பழுக்கின்ற வாறே' என்றும் கூறினார்.

'அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்;
அருக்க னாவான் அரன்உரு அல்லனோ' *

என்று அருளிச் செய்ததை காண்க. சிவநெறியாளர் சூரியனை நேரே கண்டு வணங்கும்பொழுது அவனது ஒளிமண்டலத்தில் சதாசிவ மூர்த்தி எழுந்தருளி யிருத்தலை நினைன்தே வணங்குவர். சிவபிரானே ஆதித்தனாய் நின்றும் உலகிற்கு உதவுதல் பற்றியும், அவ்வுதவியின் முதன்மை பற்றியும் சிவபூசையில் முதற்கண் சூரியபூசை விதிக்கப் பட்டுள்ளது. அவ்விடத்துச் சூரியன் சிவ சூரியனாகவே பூசிக்கப் படுவான்.

'காண்பவன் சிவனே யானால்
அவனடிக் கன்பு செய்கை மாண்பறம்'*l*

என்றது காண்க. 'ஆதித்தனை' என்னும் இரண்டன் உருபு

தொகுத்தலாயிற்று. வேதியர் பூதராய்க் காட்சிப்படுதல் பற்றி முன்னர்க் கூறினார். 'நாமங்கள்' என்பதனோடு இனிதியைய, 'விண்ணவர் சொல்லினும்' என்பது முன்னர்க் கூட்டியுரைக்கப்பட்டது. 'வேண்டுதல், சொல்லுதல்' என்பவற்றை ஏனையோர்க்கும் கூட்டுக.
இதனால், ஆதித்த வழிபாடும் ஓராற்றால் சிவ வழிபாடாதல் கூறப்பட்டது.

தானே உலகுக்குத் தத்துவ னாய்நிற்கும்
தானே உலகுக்குத் தையலுமாய் நிற்கும்
தானே உலகுக்குச் சம்புவுமாய் நிற்கும்
தானே உலகுக்குத் தண்சுட ராகுமே. ***#1941***

ஆதித்தனே உலகிற்கு அப்பனாய் இருப்பன்; அம்மையாய் இருப்பன். சுகத்தைத் தருபவனாய் இருப்பன். இனிச் சந்திரனாய்க் குளிர்ந்த ஒளியைத் தருகின்றவனும் இவனே.

விளக்கவுரை

இதன்கண் சொற்பொருட் பின்வருநிலையணி வந்தது. இப்பனாய் நிற்றல் கதிரவனாய் நின்றும் என்க. இந்த இருநிலைகளும் சிவம் சத்தி நிலைகட்கு உவமையாகச் சொல்லப்படுமாறு உணர்க. தத்துவம் அடிநிலை உண்மையாதலின் அது தோற்றத்திற்கு முதலாகிய அப்பனைக் குறித்தது. அதனால், 'தையல்' என்றதும், 'அம்மை' என்றதாயிற்று. 'சம்பு' என்பது 'இன்பத்தைத் தோற்றுவிப்பவன்' எனக் காரணக் குறியாய் நின்றது. சூரியனது ஒளியையே சந்திரன் பெற்றுத் தண்சுடராய் நிற்குமாறு அறிக.
இதனால், அண்டாதித்தனது பெருமை பலபடியாக வகுத்துக் கூறப்பட்டது.

வலயம்முக் கோணம்வட் டம்அறு கோணம்
துலைஇரு வட்டம்துய் யவ்வித ழெட்டில்
அலையுற்ற வட்டத்தில் ஈரெட் டிதழா
மலைவற் றுதித்தனன் ஆதித்த னாமே. ***#1942***

சதுரம், வட்டம், முக்கோணம் அறுகோணம், துலாக் கோல், இருவட்டம் - என இவ்வாறு மூலாதாரம் முதலாக ஆறு ஆதாரங்களில் அமைந்த பீடங்களில் ஒவ்வொன்றின் மேலும் எட்டிதழ்த் தாமரையில் ஆதித்தன் அசையும் வட்டமாய் உள்ள பதினாறிதழ்களையுடைய தாமரை மலர்போல மாறுபாடின்றி விளங்கினான்.

விளக்கவுரை

'ஆகவே, அவனை அவ்விடங்களிலெல்லாம் அவ்வாறு கண்டு வழிபடுக' என்பது குறிப்பெச்சம். அசைதல் ஒளிவீசுதலைப் புலப்படுத்துக. 'வட்டம்'

எனப்பின்னர் வருதலால், முன்னர் 'வலயம்' என்றது சதுரமேயாயிற்று. செய்யுள் நோக்கி முக்கோணம் முன் வைக்கப்பட்டது. 'இரு வட்டம்' என்பதன்பின் 'இவற்றின் மேல்' என்பது வருவிக்க. வட்டத்தில் - வட்டம் போல, 'ஈரெட்டிதழாக' என்பதன் ஈறு தொகுத்தலாயிற்று. இவ்விதழ்கள் கதிர்வடிவினைக் காட்டும்.
இதனால், ஆதித்தனை அகத்தும், புறத்தும் வழிபடும் முறைகளுள் அகத்து வழிபடும் முறை கூறப்பட்டது.

ஆதித்தன் உள்ளினில் ஆனமுக் கோணத்தில்
சோதித் திலங்கும்நற் சூரியன் நாலாங்
கேத மறுங்கேணி சூரியன் எட்டில்
சோதிதன் ஈரெட்டில் சோடசந் தானே. *#1943*

ஆதித்தனுக்கு மிகச்சிறந்த இடமாகிய முக்கோண மண்டலத்தில் அவன் மிக்க ஒளியுடையவனாய் விளங்குவான். அவன் மூலாதாரத்தினின்றும் நான்காவதாகிய இருதயத்தை அளாவி ஓங்குவானாயின் முன் மந்திரத்தில் சொல்லப்பட்ட பதினாறு இதழ் வடிவம் அப்பால் விசுத்தியை அடைந்து அங்குள்ள பதினாறு இதழ்களில் ஒன்றி ஒளிர்வான்.

விளக்கவுரை

'அவன் அவ்வாறாகும் வரையில் அவனை வழிபடல் வேண்டும்' என்பது கருத்து. சோதித்து - ஒளியை உடைத்தாய பொருளாய், ஆக்கம் வருவிக்க. குணத்தை, 'கேணி' என்றார். 'தாமரை பூத்தற்கு இடமாகிய குளம் போல்வது' என்பதாம். பின்வந்த 'சூரியன்' என்பது சுட்டுப் பெயரளவாய் நின்றது; எட்டுதல் - அளாவுதல் 'தன்' என்றது முன்னர்க் கூறிய கேணியை, ஈரெட்டு, அங்குள்ள தாமரையிதழ். சோடகம் ஆதித்தனது கதிர்நிலை. தான், அசை. 'தன் ஈரெட்டில் சோடசம் சோதியே' என இயைத்துக்கொள்க.
இதனால், 'ஆதித்தனை அகத்தில் மிக வழிபடல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

ஆதித்த னோடே அவனி இருண்டது
பேதித்த நாலும் பிதற்றிக் கழிந்தது
சோதிக்குள் நின்று துடியிடை செய்கின்ற
வேதப் பொருளை விளங்ககி லீரே. *#1944*

ஆதித்தன் இருண்ட பொழுது அவனோடு உலகமும் இருண்டுவிட்டது. வேறுபட்ட நான்கு வேதங்களின் மொழிகளும் வெறும் பிதற்றலாய்ப் பயனற்றுப்போயின. அவ் வாறாகவும் 'ஆதித்தனுக்குள்ளே சிவசத்தி நின்றே உலகிற்கு ஒளியைத் தருகின்றாள்' எனக் கூறுகின்ற வேத மொழியின் பொருளை, நீவிர் உணரமாட்டீர்.

விளக்கவுரை

'ஆதித்தன் இருண்டது சத்தி சிவனது கண்ணைப் புதைத்த பொழுது' என்பது வெளிப்படையாகலின் அதனைக் கூறா தொழிந்தார். 'கழிந்தது' என்பது பன்மை யொருமை மயக்கம். வேதமொழி பயன்படாமை அதன்படியான செயல்கள் நிகழாமை யாலாம். 'சோதி' என்றது ஆதித்தனை.
இதனால், 'ஆதித்தனை வழிபடுதல் சிவ சத்தியை வழி படுதலேயாகும்' என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது.

பாருக்குக் கீழே பகலோன் வரும்வழி
யாருக்கும் காணஒண் ணாத அரும்பொருள்
நீருக்கும் தீக்கும் நடுவே உதிப்பவன்
ஆருக்கும் எட்டாத ஆதித்தன் தானே. ***#1945***

ஆதித்தன்மேல் எழுந்துவருகின்ற வழி நிலத்திற்குக் கீழே யாருக்கும் அறிய ஒண்ணாத அரும்பொருளாய் உள்ளது. (ஆதலின் அதனை அறிய முயல வேண்டுவதின்று.) இனிக் கண்ணிற்கு நன்கு புலனாயினும் யாராலும் அணுகிப் பற்ற இயலாத ஆதித்தன் புறப்பட்டுத் தோன்றுதல் நீருக்கும், தீக்கும் நடுவேயாகும்.

விளக்கவுரை

ஆதலின் அது முதலாக அவனைக் காண்க என்பதாம். இஃது ஆதித்தன் புறத்தும், அகத்தும் நிற்றலாகிய இரண்டிற்கும் பொருந்தக் கூறியதாம். மாலையில் மறைந்த ஆதித்தன் காலையில் புறப்படும்பொழுது நிலத்திற்குக் கீழ் நின்று புறப்படுதலால் அவ்விடம் நிலத்தின்கண் உள்ளவரால் அறிய இயலாதாம். இனி அவன் புறப்படும்பொழுது கடல் நீரைக் கிழித்துக்கொண்டு வடவா முகாக்கினி உள்ள இடத்திற்கு வேறான இடத்திற் புறப்படுவான். அப்பொழுதும் அவனை யாரும் கண்ணால் காணலாமன்றி, அருகில் சென்று கையால் பற்ற இயலாது. இஃது அவன் புறத்து நிற்கும் நிலை. இனி அகத்தில் 'பார்' என்றது, பூமியின் அடையாள வடிவமாகிய சதுரத்தைத் தனது வடிவமாக உடைய மூலாதாரத்தை. அதற்கும் கீழே ஆதித்தன் முக நுண்ணிலையில் நிற்றலால் அஃது யாராலும் அறியப் படாதாம். 'நீர்' என்றது சிறுநீர் தங்கும் இடமாகிய மணிபூரகத்தை. 'தீ' என்றது; பிராணவாயுவின் கும்பகத்தால் மூளத்தக்க அக்கினியை உடைய மூலாதாரத்தை - இவ்விரண்டிற்கும் நடுவாவது சுவாதிட் டானம். அங்கு நுண்ணியனாய்ப் புலப்படுதலின் அதனை அவன் உதிக்கும் இடமாகக் கூறினார் எனினும் அவனை நன்கு புலப்படக் காணுதல் மேல், 'ஆன முக்கோணத்தில்' எனக் கூறியது முதலிய இடங்களிலேயாம். 'இவ்விரு நிலையிலும்

ஆதித்தனைப் பிடிக்க முயலாமல் கண்ணால் கண்டு வணங்குங்கள்' என்றபடி.

இதனால், ஆதித்தனால் பயன்பெறும் முறை கூறப்பட்டது.

மண்ணை இடந்ததின் கீழ்ஓடும் ஆதித்தன்
விண்ணை இடந்து வெளிசெய்து நின்றிடும்
கண்ணை இடந்து களிசெய்த ஆனந்தம்
எண்ணும் கிழமைக் கிசைந்துநின் றானே. *#1946*

ஆதித்தன் நிலத்தைப் பிளந்து கொண்டு அதன் கீழேயும் ஓடுகின்றான். பின்பு மேலே வந்து ஆகாயத்தைப் பிளந்துகொண்டு எங்கும் ஒளிமயமாகவும் செய்கின்றான். மற்றும் உயிர்களின் கண்களைத் துளைத்து அவற்றுள்ளேயும் புகுந்து இருளை ஓட்டி மகிழ்ச்சியைத் தருகின்றான். அந்த இன்பத்தை நினைத்தல் கடமையாகலின் அக்கடமையில் வழுவாது நின்று அவனைத் தியானித்தற்கும் அவன் உடன்பட்டு நிற்கின்றான்.

விளக்கவுரை

'ஆகையால், அவனை வழிபடாதொழியின் அஃது உயிர்கட்குக் குற்றமாம்' என்பது கருத்து. 'ஆதித்தனது உதவியை முதலிற் பெற்றே பின்பு உயிர்கள் எந்தச் செயலையும் செய்ய இயலும் ஆதலின், அதுபற்றி அவனை வழிபடுதல் முதற்கண் செய்யத் தக்கது' என்றற்கு அவனது செயலை இங்ஙனம் வகுத்துக் கூறினார். இதுவும் ஆதித்தனது புறநிலை அகநிலை இரண்டிற்கும் பொருந்தக் கூறியதேயாம். அவற்றுள் புறநிலைப் பொருள் வெளிப்படை. அதனுள் 'விண்', வெட்டவெளி. அகநிலையில் மண், மேற்கூறிய வாறு மூலாதாரம். விண், அது முதலாக மேன்மேல் உள்ள ஆதாரங்கள். கண், மனக்கண். 'களி தந்த' என்றதனால், களி தருதல் அனுவாத முகத்தால் பெறப்பட்டது. 'ஆனந்தம் எண்ணும்' என்றது, அது பற்றி அவனை எண்ணும் காரியத்தை உணர்த்தி நின்றது.

இதனால், ஆதித்தனது உதவி இன்றியமையா முதல் உதவியாதல் கூறும் முகத்தால், அவனை முதற்கண் வழிபடுதல் கடப்பாடாதல் கூறப்பட்டது.

பாரை யிடந்து பகலோன் வரும்வழி
யாரு மறியார் அருங்கடை நூலவர்
தீரன் இருந்த திருமலை சூழ் என்று
ஊரை உணர்ந்தார் உணர்ந்திருந் தாரே. *#1947*

ஆதித்தன் நிலத்திற்குக் கீழிருந்து அதனைப் பிளந்து கொண்டு மேலே எழுவது போலத் தோற்றுகின்ற அந்த வழியின் உண்மையை, தாழ்ந்த நிலையில் உள்ளார்க்கு உரிய நூலை மட்டுமே உணர்ந்தவர்களில் ஒருவரும் அறியமாட்டார். (அதனை அவ்வாறே கொள்வர். உண்மையில்

அது புறநிலையில் நில உருண்டையின் சுழற்சியும், அகநிலையில் மேற்கூறியவாறு மூலா தாரத்திற்குக் கீழ் நின்றுமேல் எழுதலும் ஆகும்.) இனி அவ்வாதித்தின் விண்ணில் காணப்படும் பொழுது அவன் சிவபிரான் எழுந்தருளி யிருக்கின்ற மகாமேரு மலையை வலம் வருகின்றான் என்றே கொள்வர். (உண்மையில் அதுவும் புற நிலையில் நில உருண்டையின் சுழற்சியும், அகநிலையில் மேற்கூறியவாறு வீணாத் தண்டைச் சூழ்ந்து ஒளிர்வதுமேயாகும்.) கோள்களின் இயக்கம் பற்றியும், பிராணா யாமம் பற்றியும் இனிது விளங்கக் கூறும் நூல்களின் வழி அவற்றை உணர்ந்த ஒரு சிலரே மேற்கூறிய உண்மைகளை உணர்ந்திருந்தனர்.

விளக்கவுரை

தீரன் - உலகை ஆக்கவும், அழிக்கவும் வல்ல ஆற்ற லுடையவன்; சிவபிரான், ஊர் - ஊர்தல், முதனிலைத் தொழிற்பெயர். கிணற்றுத் தவளைபோல் இல்லாமல் வெளியே பல ஊர்களையும் சுற்றினவர்' என்பது நயம். கிணறு போல்வன பருப்பொருளைக் கூறும் நூல்கள். ஆதித்தனது புறநிலையையும் உண்மையாக ஒரு சில பேரறிவாளரே அறிந்திருந்தமை இம்மந்திரத்தால் விளங்குகின்றது.
இதனால், ஆதித்தனது நிலையின் அருமையை உணர்த்தும் முகத்தால் மேலது வலியுறுத்தப்பட்டது.

*9.23.*பிண்டாதித்தன்

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்
கன்றிய நந்தி கருத்துள் இருந்தனன்
கொன்று மலங்கள் குழல்வழி ஓடிட
வென்று விளங்கும் விரிசுடர் காணுமே. ***#1948***

உயிர்கள் உடம்போடு கூடிநிற்றல், இருத்தல், கிடத்தல், நடத்தல் முதலிய எத்தொழிலைச் செய்யினும் அவ் வுயிர்களில் அழுந்தப் பொருந்தியுள்ள சிவன் அவற்றின் உடம்பில் உள்ள ஆதாரங்களில் நீக்கமின்றி நிற்கின்றான். பிராணவாயு இடநாடி வல நாடிகளை ஒழித்து நடுநாடி வழியாக ஓடினால் அஃது ஆதித்தனைப் போல ஒளியுடையதாய்க் காணப்படும். அந்த ஒளியில் சிவன் மும்மலங்களை ஒழித்து, உயிர்களின் தற்போதத்தையும் அடக்கி, அவற்றின் அறிவுக்கறிவாய் விளங்குவான்.

விளக்கவுரை

'ஆகவே, நடு நாடி வழியே ஓடும் பிராணனே பிண்டாதித்தனாம்' - என்றபடி. 'வல நாடி வழியாக ஓடும் பிராணனைப் பொதுவாக 'ஆதித்தன்' என வழங்குதல் மரபாயினும் அஃது உண்மையில்

ஆதித்தனாய்ப் பயன் தருதல் நடுநாடி வழியே ஓடும் பொழுதுதான்' என்பது கருத்து. உலகப் பொருள் உள் புறத்தல் புலப்பட்டு விளங்குதல் அண்டாதித்தனால் ஆதல் போல, உயிர்ப்பொருளாகிய சிவம் அக்தில் புலப்பட்டு விளங்குதல் நடு நாடி வழியாக ஓடும் பிராணனால் ஆதலின் அது பிண்டாதித்தனாதல் விளங்கும்' என்றற்குச் சிவனது அகநிலையை இங்கு வகுத்துக் கூறினார். 'நின்றால்' முதலியன 'நின்று' முதலியவாகத் திரிந்தன. 'கருத்து' என்றது ஆதாரங்களை. மலங்கள் கொன்று வென்று விளங்கும்' என்பதை இறுதியிற் கூட்டி, அதற்கு 'அந்நந்தி' என்னும் எழுவாயையும், ஓடுதற்கு. 'பிராணன்' என்னும் வினைமுதலையும் வருவிக்க. 'சுடராய்' என்பதில் ஆக்கச் சொல் தொகுத்தலாயிற்று. 'காணும்' என்றது, 'காணப்படும்' என்றபடி.
இதனால், 'பிண்டாதித்தனாவது இது' என்பது உணர்த்தப் பட்டது.

ஆதித்தன் ஓடி அடங்கும் இடம்கண்டு
சாதிக்க வல்லவர் தம்மை உணர்ந்தவர்
பேதித் துலகம் பிதற்றும் பிதற்றெல்லாம்
ஆதித்த னோடே அடங்குகின் றாரே. ***#1949***

'பிண்டாதித்தன்' என மேற்கூறிய பிராணன் ஓடுமளவும் ஓடி ஒடுங்கி நிற்கும் இடத்தை 'இது' என உணர்ந்து அவ்விடத்திலே நின்று பயன்பெற வல்லவரே தம்மை அண்டாதித்தன் இயக்கத்திற்கு வேறாய்ப் பிண்டாதித்தன் இயக்கத்தின் வழிபட்டவராக உணர்ந்து அவ்வியக்கத்தால் நீண்டகாலம் இவ்வுலகில் வாழ்வர். உலகம் இவ்வியல்பின் வேறுபட்டுத் தான் அறிந்ததையே அறிவாக நாட்டித் தான் வல்ல வற்றை ஓயாது கூறும். அக்கூற்றினைத் தெளிந்தோர் எல்லாம் அந்த அண்ட ஆதித்தனது இயக்கத்திற்கு உட்பட்டு விரைவில் மாய்பவரேயாவர்.

விளக்கவுரை

முதல் ஆதித்தன் 'பிண்டாவதித்தன்' என்பது 'ஓடி யடங்கும்' என்றதனால் விளங்கிற்று. அடங்கும் இடம் ஆஞ்ஞை அவ் விடத்திலே நின்று சாதிக்கலாவது. மேல் சந்திர மண்டலத்தினின்றும் அமுதம் ஊற்றெழப்பண்ணுதல். 'உணர்ந்தவர்' என்றது அதன் காரியத்தைத் தோற்றுவித்து நின்றது. 'எல்லாம்' என்பதன்பின் 'கேட்கின்றவர்' என ஒரு சொல்லைச் சொல்லெச்சமாக வருவிக்க. முன்னை ஆதித்தன் 'பிண்டாதித்தன்' ஆயினமையின் பின்னது அண்டாதித்தன் ஆயிற்று. இதனால், பிண்டாதித்தனை உணர்ந்து சாதித்தலின் பயன் கூறப்பட்டது.

உருவிப் புறப்பட் டுலகை வலம்வந்து
சொருகிக் கிடக்கும் துறைஅறி வார்இல்லை

சொருகிக் கிடக்கும் துறைஅறி வாளர்க்*(கு)*
உருகிக் கிடக்கும்என் உள்ளன்பு தானே. ***#1950***

[இம் மந்திரம் அண்டாதித்தன், பிண்டாதித்தன் இருவர்க்கும் பொருந்தக் கூறியது.]

அண்டாதித்தன் கீழ் நின்றும் ஊடுருவி மேலே புறப்பட்டு உலகைச் சுற்றிச் சென்று, முடிவில் ஒடுங்கி நிற்பது உலக முதல்வ னாகிய சிவனிடத்திலாகும். அவ்வாறே பிண்டாதித்தனும் மூலா தாரத்திற்குக் கீழ் நின்றும் உருவி மூலாதாரத்திலே வெளிப்பட்டு மேலே ஏனை ஆதாரங்களையும் கடந்து, முடிவில் ஒடுங்கி நிற்பது ஆஞ்ஞை யில் உள்ள சதாசிவ மூர்த்தியினடத்தி லாகும். ஆகவே எவ்வகை யிலும் உயிர்கட்குப் புகலிடமாகின்றவன் சிவனேயாவன். ஆயினும் இவ்வுண்மையை அறிபவர் உலகில் இல்லை. அறிபவர் எவரேனும் இருப்பின், எனது உள்ளத்தில் உள்ள அன்பு அவரிடமே சென்று உருகி நிற்கும்.

விளக்கவுரை

'ஆதித்தன்' என்பது முதற்கண் அதிகாரத்தால் வந்து இயைந்தது. உருவிப் புறப்படுதல் மேல், 'பாரையிடந்து' என்னும் மந்திரத்திலும் சொல்லப்பட்டது.

இதனால், ஆதித்த ஞானத்தால் விளையும் பயன் கூறப்பட்டது.

*9.24.*மனவாதித்தன்

எரிகதிர் ஞாயிறும் இன்பனி சோரும்,
எறிகதிர் சோமன் எதிர்நின் றெறிப்ப;
விரிகதி ருள்ளே விளங்கும்என் ஆவி
ஒருகதி ராகில் உவாவது தானே. *#1951*

பூர்ணிமை நாளில் மிக விளங்குகின்ற சந்திரன், தெறும் இயல்பினையுடைய கதிர்களையுடைய சூரியனுக்கு எதிரே நின்று தன் கதிர்களை வீசும் இயல்பு அமைந்திருக்குமாயின், அந்தச் சூரியனும் குளிர்ந்த கதிர்களை வீசுவோன் ஆகிவிடுவான். (அந்த அமைப்புத்தான் இல்லையே!) பிண்டாதித்தனுக்குள்ளே விளங்கு கின்ற எனது மனம் அவனால் ஓர் ஆதித்தனாயின், அது பின்பு பிண்டத் துள்ளே விளங்கும் சந்திர மண்டல்தினது அமுத தாரையால் பூர்ணிமை நாளில் தோன்றுகின்ற சந்திரனாகிவிடும்.

விளக்கவுரை

'அப்பொழுது எனதுமனம் அந்தப் பிண்டாதித் தனையும் வென்றுவிடும்' என்பதாம். 'மனம் ஆதித்தனால் தூய்மை பெற்றதற்குப் பின் சந்திர மண்டலத்து அமுதத்தினாலும் தூய்மை பெறல் வேண்டும்; %E

சந்திரன் சூரியன் தான்வரின் பூசனை
முந்திய பானுவில் இந்துவந் தேய்முறை;
அந்த இரண்டும் உபய நிலத்தினில்,
சிந்தை தெளிந்தார்; சிவமாயி னாரே. *#1952*

'சந்திர கலை' எனப்படும் இட நாடியில், 'சூரிய கலை' எனப்படும் வல நாடிக் காற்று ஒடுங்கி இட நாடிக் காற்றே இயங்கினும் பின்னர் மாறி இயங்கும் காலமே சிவனைப் பூசித்தற்கு உரிய காலமும். ('ஆகவே, பூசை செய்வோர் அவ்வாறு செய்து கொள்க' என்பதாம்.) இனி அந்த இருவழியிலும் யோகம் ஆதலின், அவ்வாறு யோகம் செய்பவரே அந்தக்கரணம் தூய்மையாகப் பெற்றவர் ஆவர். அவரே பின்பு சிவயோகத்தால் சிவமாகி நிற்பர்.

விளக்கவுரை

பின்னர், 'பானுவில்' என்றதனால் முன்னர், 'சந்திரனில்' என அவ்விடத்தே ஏழாவது விரிக்கப்படும். 'வரினும்' என்னும் எதிர்மறை உம்மை தொகுத்தலாயிற்று. அவ்வும்மையால், 'சிவபூசையின்பொழுது பிராணன் அவ்வாறு இயங்குதல் கூடாது' என்பது பெறப்பட்டது. 'ஏய் முறையில் ஆகும்' என இரண்டாம் அடி இறுதியில் உருபும் பயனிலையும் விரிக்க, 'உபய நிலம்' என்றது, 'இரண்டற்கும் பொதுவான இடம்' என நடு நாடியைக் குறித்தது. வருதல் வினையை மூன்றாம்

அடியின் ஈற்றிலும் 'வரின்' எனக் கூட்டுக. 'சிந்தை' என்ற உபலக்கணம். இதனால், மனம் ஆதித்தன் ஆகும் முறை கூறப்பட்டது.

ஆகும் கலையோ(டு) அருக்கன் அனல்மதி
ஆகும் கலைஇடை; நான்கென லாம்என்பர்;
ஆகும் அருக்கன் அனல்மதி யோடொன்ற
ஆகும்அப் பூரணை யாம்என் றறியுமே. #1953

யோக முறையில், சூரியன், அக்கினி, சந்திரன்' எனச் சொல்லப்படுகின்ற கலைகளோடு, அக்கினி செல்லும் வழியாகிய நடு நாடியும் 'கலை' என்று சொல்லப்படும். ஆகவே, கலைகளாவன நான்காம். அவற்றுள் சூரிய கலை, நடு நாடி வழியாக மேற்செல்கின்ற அக்கினியோடு சேர்ந்து சந்திர மண்டலத்தை அடையின் அந்நிலையே யோகியர்க்கு, மேல், 'உவா' எனக்குறித்த பூரணையாகும் என்று அறிமின்கள்.

விளக்கவுரை

அருக்கன் அனல் மதி ஆகும் கலையோடு இடை ஆகும். ஆகவே, 'கலை நான்கு' எனலாம் என்பர்' என இயைத்துக் கொள்க. 'அனலோடு கூடி' என உருபும் பயனும் உடன் விரிக்க. 'மேற்கூறிய உலாவாம்' என்றதனால், 'அந்நிலையை அடைந்தோரது மனம் ஆதித்தனாய்ப் பிண்டாதித்தனை வெல்லும்' என்பதுதானே பெறப், பட்டது, 'அறியும்' என்பது முன்னிலைப் பன்மை ஏவல் வினை முற்று.
இதனால், மேல் 'உவா' எனப்பட்ட நிலை உளதாகுமாறு கூறப்பட்டது.

ஈரண்டத் தப்பால் இலங்கொளி அவ்வொளி
ஓரண்டத் தார்க்கும் உணரா உணர்வு; அது
பேரண்டத் துள்ளே பிறங்கொளி யாய்நின்ற
ஆரண்டத் தக்கார்? அறியத்தக் காரே. #1954

கீழ்ஏழ் உலகங்களை உள்ளடக்கியுள்ள அண்டமும், மேல் ஏழ் உலகங்களை உள்ளடக்கியுள்ள அண்டமும் ஆகிய இரண்டு அண்டங்களையும் கடந்து அவற்றிற்கு அப்பால் விளங்குகின்ற ஓர் ஒளி பரமசிவன். அவ்வொளி எந்த உலகத்தார்க்கும் உணர இயலாத உணர் வாய் இருப்பது. எனினும் அஃது எல்லா உலகங்களிலும் விளங்குகின்ற எல்லா வகையான ஒளிகளிலும் உள்ளொளியாய் நிற்றலை அறியத் தக்கவர் யார்? அணுகத்தக்கவர் யார்? ஒருவரும் இலர்.

விளக்கவுரை

'இலங்கொளியாகிய அவ்வொளி' என்க. இரண்டாம் அடியிறுதியில் உள்ள 'அது' என்பதை வேறுபிரித்து, 'நின்றது' என்னும் பயனிலைக்கு எழுவாயாக்குக. 'நின்றது' என்பது அத்தொழில்மேல் நின்றது. அண்டுதல் - அணுகுதல். முடிவில், மனம் ஆதித்தன் 'ஆகப் பெற்றவரே அறியத்

தக்கார்; அணுகத் தக்கார்' என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க.
'அண்டம் ஆரிரு ளூடு கலந்தும்பர்
உண்டு போலும் ஓர் ஒண்சுடர்; அச்சுடர்
கண்டிங் காரறிவார்' *l*
என அருளிச் செய்ததையும் இங்கு நினைவு கூர்க.
இதனால், பரமசிவனது அருமையும், மன ஆதித்தனுக்கு ஆகின்ற அவனது எளிமையும் உணர்த்து முகத்தால் மன ஆதித்தனது பெருமை கூறப்பட்டது.

ஒன்பதின் மேவி உலகம் அலம்வரும்**;**
ஒன்பதும் ஈசன் இயல்பறி வார்இல்லை**;**
முன்பதின் மேவி முதல்வன் அருள்இலார்
இன்பம் இலார்**;** இருள் சூழநின் றாரே**. *#1955***

உலகம் ஒன்பது கோள்களில் உளம்பொருந்தி, அதனால் அமை காணாது அலமருகின்றது. (*'*வேரண்டத் துள்ளே பிறங்கொளியாய் நின்றது*'* என மேற்கூறியபடி*) '*ஒன்பது கோள்களின் ஆற்றலும் சிவனது ஆற்றலே*'* என்னும் உண்மையை உணர்ந்து அவனையடைந்து அமைதிகாண்பவர் ஒருவரும் இல்லை. முதலில் அந்நிலையில் நிற்பினும் பின்பாவது அருளாளரது அருள் மொழிகளைக் கேட்டுச் சிவனது அருளைப் பெறாதவர் ஒரு ஞான்றும் இன்பம் இல்லாதவரேயாய்த் துன்பத்தையே உடையவராய் இருப்பர்.

விளக்கவுரை

*'*வலம் வரும்*'* - என்பது பாடமன்று. இருள், இங்குத் துன்பம். இதனுட் கூறப்பட்டாரெல்லாம் அண்டாதித் பிண்டாதித் தர்களால் மனம் ஆதித்தனாகப் பெறாதவர் என்க.
இதனால், மனம் ஆதித்தனாகப் பெறாதவர் எய்தும் குற்றம் கூறப்பட்டது.

9.25.ஞானாதித்தன்

விந்து அபரம் பரம்இரண் டாய்விரிந்**(**து**)**
அந்த அபர பரநாத மாகியே
வந்தன தம்மில் பரம்கலை யாதிவைத்**(**து**)**
உந்தும் அருணோ தயம்என்ன உள்ளத்தே**. *#1956***

சுத்த மாயையின் ஒருகூறு சிவனது சத்தியால் உலகத் தோற்றம் நிகழத்தற்குக் காரணமாகப் பக்குவப்படுத்தப்படும். அங்ஙனம் பக்குவப்படுத்தப்பட்ட பகுதி, *'*மேற்பகுதியும் கீழ்ப் பகுதியும்*'* என இரண்டு பகுதியாய் விரியும். அவை முறையே *'*பரவிந்து*'* என்றும், *'*அபரவிந்து*'* என்றும் பெயர் பெறும். அவற்றினின்றும் முறையே

சொல்லுலகத்தின் அதிசூக்கும நிலையாகிய பரநாதமும், சூக்கும நிலையாகிய அபர நாதமும் தோன்றும். (இவையே அதிசூக்குமை வாக்கும், சூக்குமை வாக்கும் ஆகும்.) பின்பு அவற்றினின்றும் வைகரி முதலிய வாக்கு வடிவமான சொல்லுலகத்தையும், 'கலை, தத்துவம், புவனம்' என்னும் அத்துவாக்களையும் சிவன் தோற்றுவித்து, அவை வழியாக ஆன்ம அறிவினிடத்தே அருணோதயம் போன்ற ஒளியை விளங்கச் செய்வான்.

விளக்கவுரை

கலை, 'சாந்திய தீதை, சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவிர்த்தி' என முறையே ஒன்றன்பின் ஒன்றாய் ஐந்தாகி விரியும். ஏனை ஐந்து அத்துவாக்களும் இந்த, 'கலை' என்னும் அத்துவாவில் அடங்கும். அவையாவன 'வன்னம், பதம், மந்திரம்' என்னும் சொல் வகையும். 'தத்துவம், புவனம்' என்னும் பொருள் வகையுமாம். பரம் - சிவன், 'பரம் கலையாதி வைத்து உள்ளத்து அருணோதயம் என உந்தும்' என முடிக்க. செய்யுள் நோக்கி அபரங்கள் முன்வைக்கப்பட்டன.
இதனால், உலகத்தோற்ற முறை ஒருவாறு தொகுத்துக் கூறப்பட்டது.

உள்ள அருணோ தயத்தெழும் ஓசைதான்
தெள்ளும் பரநாதத் தின்செயல் ஆதலால்
வள்ளல் பரவிந்து வைகரி யாதிவாக்*(*கு*)*
உள்ளன ஐங்கலைக் கொன்றும் உதயமே*. #1957*

ஆன்ம அறிவில் அருணோதயம் போலத் தோன்று வதாக முன் மந்திரத்திற் குறித்த விளக்கத்திற்குக் காரணமான எழுத் தோசை, 'பர நாதத்தின் காரியம்' என ஆகமங்களில் சொல்லப் படுதலால், அந்தப் பரநாதத்திற்குக் காரணமாக மேற்குறிக்கப்பட்ட அந்தப் பரவிந்துவிலிருந்தே வைகரி முதலியவாக்குக்களால் நிவிர்த்தி முதலிய ஐங்கலைகளிலும் அறிவு விளக்கம் சிவனால் உண்டாவதாகும்.

விளக்கவுரை

உள்ளம் - ஆன்ம அறிவு. 'அருணோதயத்திற்கு' என நான்காவது விரிக்க. 'வள்ளலால்' என மூன்றாவது விரித்து, அதனை 'ஒன்றும்' என்பதனோடு முடிக்க. 'பர விந்து வாக்கு' என்பது, பர விந்துவினின்றும் தோன்றும் வாக்கு' என ஐந்தாம் வேற்றுமைத் தொகை. இங்கும், 'வாக்கால்' என உருபு விரிக்க. 'ஐங்கலைக்கும் ஒன்றும் உதயம் உள்ளன' என மாறிக்கூட்டுக. உதயம் - ஒளித் தோற்றம். கலைகளின் பன்மைபற்றி உயத்தையும் பன்மையாகக் கூறினார். 'வைகரி யாதி' என்றது ஒடுக்கமுறை பற்றி. இவற்றிற்குப் பரவிந்து பரம்பரையால் காரணமாகும் என்க.

'தூல வைகரி' சூக்கும வைகரி, மத்திமை, பைசந்தி, சூக்குமை' என்னும் வாக்குக்கள் முறையே 'நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை' என்னும் கலைகளில் நின்று ஆங்காங்குள்ள உயிர்கட்கு உணர்வைப் பிறப்பிக்கும் என்பதை,
'நிகழ்ந்திடும் வாக்கு நான்கும் நிவிர்த்தாதி கலையைப் பற்றித்
திகழ்ந்திடும் அஞ்ச தாக' *
என்னும் சிவஞான சித்திச் செய்யுளானும் உணர்க.
இதனால், சொல்லுலகம் அனைத்திற்கும் 'விந்து' எனப்படும் சுத்த மாயையே காரணமாதல் கூறப்பட்டது.

தேவர் பிரான்திசை பத்துத யம்செய்யும்
மூவர் பிரான்என முன்னொரு காலத்து
நால்வர் பிரான் நடுவாய்உரை யாநிற்கும்
மேவு பிரான் என்பர் விண்ணவர் தாமே. ***#1958***

'தேவர்கள் தம் தம் பதவி விருப்பத்தால் விரும்பு கின்ற முழுமுதற் கடவுளாவான் பத்துத் திசைகளிலும் நின்று காவல் புரிகின்ற நூற்றெட்டு உருத்திரர்கட்கும் தலைவன்' என்றும், 'பொது வாக - மும்மூர்த்திகள் என்று யாவராலும் சொல்லப்படுகின்ற - அயன், அரி, அரன் - என்பவர்கட்குத் தலைவன்' என்றும் தொன்மையாக பலர் சொல்லிவர, 'முதற்கடவுள் அவ்வளவில் நில்லாது மேற்குறித்த மூவர்க்கும் மேலாய் நான்காமவனாய் உள்ள மகேசுரனை உள்ளிட்ட நால்வர்க்கும் தலைவனாவான்' எனச் சமயக் கணக்குக்களைக் கடந்து நிற்கின்ற உண்மை நூல்கள் உண்மையைச் சொல்லா நிற்கும் என உயர்ந்தோர் கூறுவர்.

விளக்கவுரை

இஃது, 'ஐந்தொழிற்கும் முதல்வனாகிய சதாசிவ மூர்த்தியே பரம்பொருள் எனக்கூறியது. 'பத்துத் திசை உதயம் செய்யும் தேவர்' என மாற்றி வைத்து உரைக்க. பத்துத் திசைகளிலும் நின்று காவல் புரிகின்ற உருத்திரர் இவர். இவர் என்பதைச் சிவஞான போதம் பேருரையிலும் காணலாம். *3* 'முன்னொரு காலத்து' என்றது பழைமை குறித்தவாறு. அப்பழைமையாவது சைவாகமங்களை உணராத உலகரது காலங்களாம். 'முன் ஒரு காலத்து என' என முன்னே கூட்டிமுடிக்க. 'நடு' என்றது அப்பாற்பட்ட நிலை அஃது ஆகு பெயராய் அந்நூல்களைக் குறித்தது; வாய் - உண்மை. 'விண்ணவர் மேவு பிரான்' என்பதை முதலில் எழுவாயாக வைத்து, அதனை, 'பிரான், பிரான்' என்னும் பயனிலைகளோடு முடிக்க.
இதனால், 'முன் மந்திரங்களில், 'பரம்' என்றும், 'வள்ளல்' என்றும் குறிக்கப்பட்ட முதற் கடவுளாவான் இவன்' என்பது உணர்த்தப்பட்டது.

பொய்யிலன் மெய்யன் புவனா பதிஎந்தை
மையிருள் நீக்கும் மதி அங்கி ஞாயிறு
செய்யிருள் நீக்கும் திருவுடை நந்திஎன்
கையிருள் நீக்கக் கலந்தெழுந் தானே. *#1959*

முன்மந்திரத்திற் கூறியவாறு சதாசிவ மூர்த்தியாய் நின்று ஐந்தொழில் நடாத்தும் முதல்வன் அவ்வாறு தொழில்புரிய நிற்பதற்கு முன்பே என்னை இயல்பாகவே பற்றி நிற்கின்ற, வெறுக்கத் தக்க அக இருளை நீக்குதற் பொருட்டு என் உயிருக்கு உயிராய்க் கலந்து நின்று, அதன் பின்பு தொழில் புரிய எழுந்தான்.

விளக்கவுரை

நந்தி - சிவபெருமான். 'பொய்யிலன்' முதலிய குறிப்பு வினைப் பெயர்கள் பலவும் அவனையே குறித்து நின்றன. பொய் - பொய்போலத் தோன்றுகின்ற அறியாமை. மெய். உள்ளதாய்த் தோன்றுகின்ற அறிவு. புவனங்கள் 'புவனா' எனப் பெண்பாலாகச் சொல்லப்பட்டன. மையிருள் - மை போல்வதாகிய இருள். கண்ணிற்குப் புலனாவது போலத் தோற்றுகின்ற இருள். இஃது உலகை மறைக்கும் புற இருள் மனமொழி மெய்களால் செய்யப்படும் இருள்; வினை இருளாகிய மலம் காரணமாக விளைவதனை 'இருள்' என்றார். 'இருள்சேர் இருவினை' * என்றது காண்க. 'இவ்விருளை நீக்கும் திருமுச்சுடர்கட்கு இல்லை' என்பதை நினைவூட்டுதற்கு அவற்றின் இயல்பை எடுத்துக் கூறினார். திரு - மேன்மை; சத்தி கைத்தல் - வெறுத்தல், பின்பு 'எழுந்தான்' எனக் கூறியதனால், 'கலந்தமை அதற்கு முன்னே' என்பது பெறப்பட்டது இந்நிலை, 'அனாதி' எனப்படும். 'என்' என நாயனார் தம் நிலையையே கூறினா ராயினும் அஃது அனைத்துயிர்களின் நிலையையும் பற்றியதேயாகும்.

இதனால், முதல்வன் அனாதியே உயிர்களில் உள்ளுயிராய்க் கலந்து நிற்றல் கூறப்பட்டது. அவ்வாறு கலந்து நிற்றலானே, 'அவை களின் இருளை நீக்குதல் வேண்டும்' என்னும் இரக்கமும், அது பற்றிச் செய்யப்படும் தொழில்களும் முதல்வனுக்கு உளவாயின என்க.

தனிச்சுடர் எற்றித்தாய் அங்கிருள் நீங்க
அனித்திடும் மேலை அருங்கனி யூறல்
கனிச்சுட ராய கயிலையில் ஈசன்
நனிச்சுடர் மேல்கொண்ட வண்ணமும் ஆமே. *#1960*

முன் மந்திரத்தில் கூறியபடி உயிர்களது இருளை நீக்கவேண்டி அவற்றினுள்ளே உள்ள சிவனது, 'திரு' எனப்பட்ட ஒப்பற்ற ஒளி தாக்கிப் பரவுதலால் அவ்விடத்துள்ள இருளாகிய மலம் நீங்கும். அது நீங்கினால் அந்த ஒளிக்கு மேலே உள்ள சிவமாகிய அரிய கனியின் சாறு

அக்கனியினின்று வெளிப்பட்டு ஒழுகி இனிக்கும் அப்பொழுது ஊழிக் காலத்தும் அழியாத ஒளியினதாய் விளங்கும் கயிலாய மலைமேல் சிவன் நண்ணிப் பேரொளியுடன் திருமேனி கொண்டு வீற்றிருக்கும் காரணமும் விளங்கும்.

விளக்கவுரை

எற்றுதல் - தாக்குதல். தாவுதல் - பரவுதல் 'தாய்' என்பது, 'தாவ' என்பதன் திரிபு. இவ்வாறன்றி, 'நீக்க', எனப் பாடம் கொள்ளுதலும் ஆம். 'அண்ணித்திடும்' என்பது திரிந்ததும், 'கன்னி' என்பது இடைக் குறைந்ததும் எதுகை நோக்கியாம். சிவத்தை, 'ஈசன் எனுங்கனி' * என அப்பர் அருளிச்செய்ததும் இங்கு நோக்கத்தக்கது. கன்னி - அழியாமை. 'ஊழிதோறூழி மற்றும் உயர் பொன்னொடித் தான் மலை'* என அருளினமை காண்க. வண்ணம் - வகை; காரணம் 'ஆம்' என்றது, 'விளங்கும்' என்றபடி. 'கயிலையில் ஈசன் உருவத் திருமேனியுடன் வீற்றிருத்தல் நிலவுலகத்து உயிர்களை உய்வித்தற் பொருட்டு என்னும் உண்மை அனுபவமாய்த் தோன்றும்' என்பதாம்.
இதனால், முதல்வன் உயிர்க்குயிராய்க் கலந்து நின்று செய்யும் பேருதவி விளக்கிக் கூறப்பட்டது.

நேரறி வாக நிரம்பிய பேரொளி
போரறி யாது புவனங்கள் போய்வரும்
தேரறி யாத திசைஒளி யாயிடும்
ஆரறி வார்அது நாயகம் ஆமே. ***#1961***

உயிர்களது அறிவினுள்ளே நுண்ணறிவாய் நிறைந்து நிற்கின்ற ஒரு பெரிய ஒளி, தடையின்றி எங்கும் போய் வருகின்ற பகலவனது தேர் செல்லாத இடத்தில் அங்குள்ள இருளை நீக்குகின்ற ஒளியாய் இருக்கும். இம்மறை பொருளை உணரும் அறிவுடையோர் யாவர்? எவரேனும் இருப்பாராயின் அவரது அறிவே தலைமை சான்ற அறிவாகும்.

விளக்கவுரை

நேர்மை - நுண்மை. 'அவர் நின்றதோர் நேர்மையும்' என்று அருளியது காண்க. திசை - இடம். பகலவன் தேர் செல்லாத இடம் உயிரினது அறிவு. மேலேயும், 'மையிருள் நீக்கும் மதி அங்கி ஞாயிறு' என்றது காண்க.
இதனால் முன் மந்திரங்களில் கூறப்பட்ட சிவனது நுண்ணிலை அறிதற்கரிதாதல் கூறப்பட்டது.

மண்டலத் துள்ளே மலர்ந்தெழும் ஆதித்தன்
கண்டிடத் துள்ளே கதிரொளி யாயிடும்
சென்றிடத் தெட்டுத் திசைதொறும் போய்வரும்

நின்றிடத் தேநிலை நேரறி வார்க்கே. *#1962*
அண்டத்தில் ஒரு வட்ட வடிவினனாய்க் காணப் படுகின்ற ஆதித்தன் உலகில் எட்டுத் திக்கிலும் சென்று அலமருவார்க்கு அவர் சென்ற இடத்தில் எல்லாம் காணப்பட்டு ஒளியை வழங்குவான். வெளியில் அங்ஙனம் அலமரும் நிலையை விட்டு முன் மந்திரத்தில் கூறிய நுண்ணிறிவை அறிந்து அகத்தே நோக்குபவர்க்கு அவன் உட்பினுள் காண்கின்ற பல இடத்திலும் விளங்கி ஒளிதருகின்றவன் ஆவான்.

விளக்கவுரை

'புறநோக்கு உடையவர்க்கு அண்ட ஆதித்தனே ஆதித்தன் ஆவதுபோல அகநோக்கு உடையவர்கட்குச் சிவனே ஆதித்தனாய்த் தோன்றுவான்' என்றபடி. 'என் தாய் என் சிற்றன்னை யாயினாள்' என்று ஒருவன் சொல்வானாயின் அச்சொல்லில் 'ஆயினாள்' என்பது 'தாய்க்கு உரிய இடத்தைச் சிற்றன்னை பற்றி நிற்கின்றாள்' என்பதே பொருள் ஆதல் போலவே 'ஆதித்தன் கதிரொளியான்' என்பதற்குப் பொருள் கொள்க. 'கண்ட இடம், சென்ற இடம், நின்ற இடம்' என்பவற்றில் பெயரெச்சத்து அகரங்கள் தொகுத் தலாயின. 'கண்ட இடம்' என்றது ஆறு ஆதாரங்களை. 'உள்ளே' என்பதன் பின் 'காணப்படும்' என ஒரு சொல் வருவிக்க. 'உள்ளே காணப்படும் கதிரொளி' என்றதுமுன் மந்திரத்திற் கூறப்பட்ட நேரறிவை, 'சென்றிடத்து' என்பதனை முதலிலும், 'நிலை' என் பதனை 'வரும்' என்பதன் பின்னும் கூட்டுக. 'மழை நின்றது' என்றல் போல 'நிற்றல்' இங்கு ஒழிதலைக் குறித்தது. 'நின்றிடத்துக் கதிரொளி யாயிடும்' என்றதனால், 'சென்ற இடத்தே மகிழ்ந்தெழுதல் நில்லா தவர்க்கு' என்பது பெறப்பட்டது. முதலடி இன எதுகை.
இதனால், அகநோக்குடையார்க்குச் சிவன் உள்ளொலியாய் விளங்குதல் கூறப்பட்டது.

நாவிகண் நாசி நயன நடுவினும்
தூவியோ டைந்தும் சுடர்விடு சோதியைத்
தேவர்கள் ஈசன் திருமால் பிரமனும்
மூவரு மாக உணர்ந்திருந் தாரே. *#1963*

கொப்பூழ், கண், மூக்கு, புருவநடு, தலைக்குப் பன்னிரண்டங்குலத்திற்கு மேல் என்னும் ஐந்திடங்களிலும் தோன்றி ஒளி வீசுகின்ற அந்த ஆதித்தனைத் தேவர்கள், 'உருத்திரன், மால், அயன்' என்னும் மும்மூர்த்திகளாக அறிந்து இன்புற்றிருக்கின்றனர்.

விளக்கவுரை

'சிவனே தனது திகார சத்தியால் மும்மூர்த்திகளைக் காரணக் கடவுளராகச் செய்து உலகை நடத்துவிக்கின்றான்' என்றபடி.

தொடக்கத்திலும்,
'அவனை யொழிய அமரரும் இல்லை,
... ... அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை'
என்று அருளிச்செய்தார். மூலாதார சுவாதிட்டானங்களில் ஒளி சிறிதாய் விளங்கலின் அவற்றிற்கு, மேற்பட்ட இடங்களையே கூறினார். எல்லாவற்றிற்கும் முதலான பிராணன் இயங்குவது மூக்கு வழியாக ஆதலின் அதனையும் கூறினார். 'நயனம்' என்றது ஆகு பெயராய்ப் புருவங்களை உணர்த்திற்று.
இதனால், சிவாதித் தனது சிறப்புணர்த்தி, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.
'இவ்வதிகாரத்தில் சொல்லப்பட்ட உண்மைகளை உணரும் உணர்வே ஞானித்தனாம்' என்பது கருத்து.

*9.26.*சிவாதித்தன்

அன்றிய பாச இருளும்அஞ் ஞானமும்
சென்றிடும் ஞானச் சிவப்பிர காசத்தால்
ஒன்றும் இராவ ரும்அரு ணோதயந்
துன்றிருள் நீங்குதல் போலத் தொலைந்ததே. *#1964*

உயிர் அடைந்த ஞான ஒளியினுள்ளே வந்து எழு கின்ற சிவத்தினது ஒளியால் அக ஒளியாகிய அறிவை மறைந் திருந்த அக இருளாகிய ஆணவ மலமும், அதனால் விளைந்த அறியாமையும் இராக்காலத்திலே பொருந்தி எழுகின்ற அருணோதயத்தால் அதற்கு முன் திணிந்திருந்த இருள் நீங்குதல் போல நீங்கியொழியும்.

விளக்கவுரை

'சென்றிடும்' என்பது பெயரெச்சம். 'ஞானத்துள் சென்றிடும் சிவத்தின் பிரகாசத்தால்' எனக் கூட்டியுரைக்க. 'அருணோ தயத்தால்' என உருபு விரிக்க. தெளிவு பற்றி எதிர்காலத்தை இறந்த காலமாக்கி, 'தொலைந்தது' என்றார். ஏகாரம் தேற்றம். பொருளில் 'அஞ்ஞானமும்' என்றதற்கு ஏற்ப உவமையிலும் 'குருட்டுத் தன்மையும்' என்பது வருவிக்க.
இதனால், அக இருளாகிய ஆணவ மலம் சிவாதித்தனது ஒளியாகிய அக ஒளியாலல்லது நீங்காமை கூறப்பட்டது.

கடங்கடந் தோறும் கதிரவன் தோன்றில்
அடங்கிட மூடில் அவற்றில் அடங்கான்
விடங்கொண்ட கண்டனும் மேவிய காயத்(து)
அடங்கிட நின்றதும் அப்பரி சாமே. *#1965*

நில உலகின்கண் நீர் நிரம்பிய குடங்களில் ஆதித்தனை நோக்கி

வாயைத் திறந்துள்ள குடங்களில் தான் ஆதித்தன் விளங்குவான். அவ்வாறின்றி ஆதித்தனை நோக்காதவாறு மூடி வைக்கப்பட்ட குடங்களில் யாதொன்றன் நீரிலும் ஆதித்தன் விளங் குதல் இல்லை. சிவன் உடல்தோறும் உள்ள உயிர்களில் விளங்குதலும் ஆதித்தன் குடத்து நீரில் விளங்குதல் போல்வதுதான்.

விளக்கவுரை

'அஃதாவது, 'சிவன், அவனை உணரும் பக்குவம் வாய்ந்த உயிர்களினுள்ளே விளங்குதல்லது, அவனை உணரமாட்டாது மூடமாய்க் கிடக்கின்ற அபக்குவமான உயிரினுள்ளே விளங்கான்' என்பதாம்.

ஆதித்தனது கதிரில் இருதன்மைகள் உள்ளன. ஒன்று வெம்மை; மற்றொன்று ஒண்மை. அதுபோல, சிவனது சத்தியிலும் இரு தன்மைகள் உள்ளன. ஒன்று மறைத்தல்; மற்றொன்று விளக்கல், இத்தன்மை பற்றி, சத்தி இரண்டாகச் சொல்லப்படும். ஒன்று திரோதான சத்தி; மற்றொன்று அருட்சத்தி. மூடி வைக்கப்பட்ட குடத்து நீரிலும் ஆதித்தனது வெம்மைச் சத்தி விளங்குவதேயாகும். ஆயினும் அந்நீரில் ஆதித்தனது ஒளிச்சத்தி விளங்காது. அதுபோலவே எல்லா உயிர்களிடத்தும் சிவனது திரோதான சத்தி விளங்கவே செய்யும், ஆயினும் அருட் சத்தி பக்குவம் வாய்ந்த உயிர்களில் மட்டுமே விளங்கும் என உணர்க.

இங்குக் கூறிய உவமையால் குடத்து நீருள் ஆதித்தன் தோன்றும்பொழுது அந்த ஆதித்தனுக்கும், வானத்தில் உள்ள ஆதித் தனுக்கும் இடையே தன்மை வேற்றுமை யாதும் இன்மையும், மூடி வைக்கப்பட்ட குடத்து நீருள் ஆதித்தன் சிறிதும் தோன்றாமையும் பெறப்படுதலால், பல வகையில் வேறுபட்ட தன்மையை உடைய உயிர்களையும் 'சிவனது கூறுகளே; அல்லது சிவனது பிரதி பிம்பங்களே' என்பாரது கூற்றுப் பொருந்தாமையும் இங்குக் குறிக்கப் பட்டதாம். அடுக்குப் பன்மை தோற்றி நின்றது.

இதனால், சிவாதித்தன் ஞானாதித்தனுள்ளே விளங்குதாதல் கூறப்பட்டது.

தானே விரிசுடர் மூன்றும்ஒன் றாய்நிற்கும்
தானே அயன்மால் எனநின்று தாபிக்கும்
தானே உடல்உயிர் வேறன்றி நின்றுளன்
தானே வெளிஒளி தான்இருட் டாகுமே. ***#1966***

இங்குக் கூறிவரும் சிவாதித்தன் தான் ஒருவனே யாயினும் சுடர்களை எங்கும் வீசுகின்ற ஞாயிறு, திங்கள், தீ என்னும் முச்சுடர்களும் ஒன்று கூடினாற் போன்ற பேரொளியாய் இருப்பான்; தன்னை அழிப்பவனாகப் பலர் கருதினானுலும் அயனாய் நின்று படைப்

பவனும், அரியாய் நின்று காப்பவனும் தானேயாகும். மேலும் அவன் உயிர்களில் மட்டுமன்றி, உடல்களிலும் வேற்றுமையின்றிக் கலந்து நிற்கின்றான். இன்னும் தான் ஒருவனே ஆகாயமாயும், அதன் கண் விளங்குகின்ற ஒளிகளாயும் நிற்றலேயன்றி இருளாகவும் ஆகின்றான்.

விளக்கவுரை

'இஃது அதிசயம்' என்பது குறிப்பெச்சம். 'சிவாதித்தன் உலகில் காணப்படுகின்ற ஒளிப்பொருள்களோடு ஒத்த ஒளியுடைய னல்லன்; அவற்றினும் பலமடங்கு மேம்பட்ட ஒளியினை உடையன்' என்பது கூறுமுகந்தான், 'அவன் உதயஞ் செய்யப்பெற்ற உயிர்க்கு வேறு வேண்டத்தக்க பயன் யாதுமில்லை' என்பது முதலடியில் குறிக்கப் பட்டது. தாபித்தல் - நிலை நிறுத்தல். 'நடாத்துதல்' என்றபடி. இதற்கு 'உலகத்தை' என்னும் செயப்படுபொருள் வருவிக்க. 'உடல் உயிரின்கண்' என உருபு விரிக்க. இருள் முக்குணங்களும் தாமத குணத்தின் காரியம் ஆகலின் அக்குணத்திலும் தாமத குணத்தின் காரியம் ஆகலின் அக்குணத்திலும் நிறைந்து நிற்றல் பற்றிச் சிவனை 'இருட்டுமாம்' - என்றார்.

இதனால், சிவாதித்தனது ஒப்புயர்வில்லாத அதிசய நிலை கூறப்பட்டது.

தெய்வச் சுடர்அங்கி ஞாயிறுந் திங்களும்
வையம் புனல்அனல் மாருதம் வானகம்
சைவப் பெரும்பதி தாங்கிய பல்லுயிர்
ஐவர்க் கிடம்மிடை ஆறங்க மாமே. ***#1967***

தெய்வச் சுடர் அங்கி, வேள்வித் தீ ஞாயிறுமுதல் வானகம் ஈறாயினவும் 'பல்லுயிர்' என்றதும் வெளிப்படை. ஐவர், பிரமன் முதல் சதாசிவன் ஈறானவர். அவர்க்கு இடம் ஆவன சுவாதிட்டானம் முதல் ஆஞ்ஞை ஈறாய் உள்ள ஐந்து ஆதாரங்கள். ஆறு அங்கம் ஆஞ்ஞையிலிருந்து கீழ்நோக்கி எண்ண ஆறாவதாகும் மூலாதாரம். சைவப் பெரும்பதி - இவை யாவும் சிவத் தலங்களாகும்.

விளக்கவுரை

'சைவப் பெரும்பதி' என்றதை 'ஆம்' என்பதற்கு முன்னர்க் கூட்டுக. 'இவை சிவத்தலங்கள்' என்றது, 'இவ்விடங்கள் சிவனைக் கண்டு வழிபடுதற்குரிய இடங்கள்' என்றபடி எனவே, இவ்விடங்களில் சிவனைக் கண்டு வழிபட அவன் ஆதித்தனாய் உயிரினுள் விளங்குவான்' என்பது கருத்து. மிடை ஆறு அங்கம் - அவ்வைந்தோடு சேர்ந்து ஆறாவதாகின்ற உறுப்பு.

இதனால், சிவாதித்தன் உதயம் செய்தற்கு வாயில் கூறப்பட்டது.

9.27.பசு லக்கணம் - பிராணன்

உன்னு மளவில் உணரும் ஒருவனைப்
பன்னு மறைகள் பயிலும் பரமனை
என்னுள் இருக்கும் இளையா விளக்கினை
அன்ன மயனென் றறிந்துகொண் டேனே. *#1968*

சிவன் தன்னை நினைப்பவரையே தான் நினைப் பான். பல பொருள்களையும் சொல்லுகின்ற வேதங்கள் பிறரைப்போல அல்லது தன்னைப் பலவிடத்தும் பெரும்பான்மை எடுத்துச் சொல்ல நிற்பவன். என் உள்ளே என்றும் ஒளிகுறையாத விளக்காய் உள்ளவன். 'அவன் உயிர்களிடத்து அன்னப் புள்ளாய் இருக்கின்றான்' என்னும் அரிய உண்மையினை நான் திருவருளால் அறியப்பெற்றேன்.

விளக்கவுரை

அன்னப் பறவைக்கு, 'அம்சம்' என்பதும் ஒரு பெயர் அதனால் அம்ச மந்திரத்தை 'அன்னம்' எனக் குழூஉக்குறியாக வழங்குதல் சித்தர் மரபு. அம்ச மந்திரமே பிராணனை இயக்குவது. அஃது 'அசபை எனப்படும். அதனை நாயனார் நான்காந் தந்திரத் தொடக்கத்திலே கூறினார். சிவனது சத்தியே அம்ச மந்திரத்தை இடமாகக் கொண்டிருந்து பிராணனை இயக்குகின்றது ஆதலின் அவ்வுண்மையைத் திருவருளால் உணர்ந்த நான் பிராணனோடு கூடிப் பிராணமயனாய் நிற்கும்பொழுதும் சிவனை மறக்கிலேன் என்றபடி,

'என்னில் ஆரும் எனக்கினி யார்இலை;
என்னி லும்இனி யான்ஒரு வன்உளன்;
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்*(கு)*
என்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே' *

என்றருளிச் செய்ததும் காண்க. புறம்போந்து பின் உட்புகுதல் பிராணனின் இயல்பாதலை நினைக்க. முதல் மூன்று அடிகளிற் கூறியன அவன் அன்னமயன் ஆதலை வலியுறுத்தும் குறிப்பின.

'அறிந்துகொண்டேனே' என்னும் சொல்லியல்பால், 'திருவருளால்' என்னும் இசையெச்சம் பெறப்பட்டது.

இதனால், பசு பிராணனாம் முறைமை கூறுங்கால் அந் நிலையும் சிவனருளால் உளதாதலை மறத்தல் கூடாமை கூறப்பட்டது.

அன்னம் இரண்டுள ஆற்றங் கரையினில்*;*
துன்னி இரண்டும் துணைப்பிரியா*;* தன்னந்
தன்னிலை அன்னம் தனிஒன்*(று);*அ தென்றக்கால்
பின்ன மடஅன்னம் பேறணு காதே. *#1969*

இங்கு 'ஆறு' என்றது பிராணன் இயங்கும் வழி யினை. 'அதன் கரையில் உள்ள இரு அன்னங்கள்' என்றது, அந்தப் பிராணனை ஒட்டி நிற்கின்ற 'சிவன், சீவன்' என்னும் இருவரையும். அவ்வன்னம் இரண்டும் என்றும்

இணைந்து நிற்றலி னின்றும் நீங்கித் தனித்தனியே பிரிதல் இல்லை. அவற்றுள் ஒன்று அறிவுமிக்கது. ஆதலின் அது தனியே பிரிந்து நிற்பினும் யாதொன் றினை இழத்தல் இன்றி, இனிது வாழும். மற்றொன்று அறிவு குறைந்தது ஆதலால் அது பிரிந்து தனி நிற்பின் எந்தப் பயனையும் பெறாது துன்பத்தில் ஆழும் என்றது சிவ சீவர்களது இயல்பினை விளக்கியதாம்.

விளக்கவுரை

'அழகிய சிறகையுடைய இரு பறவைகள் இணை பிரியாதவை; ஒரு மரத்தில் வாழ்கின்றன. அவற்றுள் ஒன்று அம் மரத்தின் பழத்தை உண்கின்றது. மற்றொன்று உண்ணாமல் பார்த்துக் கொண்டு மட்டும் இருக்கின்றது' என்னும் உபநிடதப் பொருள் இங்கு ஒப்பிடத்தக்கது. *l* மூன்றாம் அடியில், 'தனி நிலை' என்பது எதுகை நோக்கி, 'தன்னிலை' என விகாரமாயிற்று. 'தன்னந் தனிநிலை தனி ஒன்று' என்றதனை, 'தனி ஒன்று தன்னந் தனி நிலையையுடையது' என மாற்றிப் பயனிலை வருவித்து உரைக்க. 'உடையது' என்பது 'உடையதாதல் இயலும்' என்பதாம். 'பின்னர்' என்பது, 'மற்றொன்று' என்றபடி. மற்றொன்றாகிய மட அன்னம் அது என்றக்கால் பேறு அணுகாது' என இயைக்க. மடமை - அறியாமை; 'சிற்றறிவு' என்பதாம். அது என்றல் - வேறொன்றாகிய 'அந்த அன்னத்தைப் போல நானும் தனித்திருப்பேன்' என்று நினைத்தல். இதனால், பிராணனாய் நிற்கும் பசு தான் பதியை விட்டுத் தனிநிற்றல் ஆகாமை விளக்கப்பட்டது.

*9.28.*புருடன்

வைகரி யாதியும் மாய்ஆ மலாதியும்
பொய்கரி யான புருடாதி பேதமும்
மெய்கரி ஞானம் கிரியா விசேடத்தால்
செய்கரி ஈசன் அனாதியே செய்ததே. ***#1970***

தோன்றியழிகின்ற வைகரி முதலிய வாக்குக்களாகிய சொல்லுலகங்களையும். மற்றும் பொருளுலகங்களையும், அவைகளைப் பற்றி நின்று 'புருடன், உருத்திரன், சிவன்' என உயிர்கள் அடையும் நிலையற்ற வேறுபாடுகளையும் தனது உண்மைத் துணையாகிய ஞானம், கிரியை என்னும் வேறுபாடுகளையுடைய தனது சத்தியால் செய்கின்ற நிலையான முதல்வன் சிவபெருமானே. இவ்வமைப்பு அனாதியே அமைந்த அமைப்பாகும்.

விளக்கவுரை

'மாய், ஆ' என்னும் முதனிலைகள் அடுக்கி, 'மலம்' என்னும் பெயரோடு வினைத்தொகையாய்த் தொக்கன. அந்நிலைமை தாப்பிசைவாய்,

முன்னர் 'வைகரியாதி' என்பதனோடும் இயையும். மாய்ந்து ஆகின்ற மலங்களாவன மாயேயங்கள். 'ஆதி' என்றதனால் கன்மமும் தழுவப்பட்டது. கருவியின்றிக் கன்மம் நிகழாது ஆகையால் அக்கருவியைப் படைத்துக் கொடுத்தல் பற்றி, 'கன்மத்தைச் செய்பவனும் சிவனே' எனக் கூறினார்.
உயிர் முப்பத்தாறு தத்துவங்களையும் பற்றி நிற்கும்பொழுது 'புருடன்' என்னும் நிலையையும், ஆன்ம தத்துவத்தை ஒழித்து, ஏனைப் பன்னிரண்டு தத்துவத்தளவில் நிற்குமிடத்து 'உருத்திரன்' என்னும் நிலையையும், அவற்றுள்ளும் வித்தியா தத்துவங்களை ஒழித்து, ஏனைச் சிவ தத்துவத்தளவில் பற்றி நிற்கும் பொவுது 'சிவன்' என்னும் நிலையையும் அடையும். இவ்வாற்றானே 'மூவுலகம்' என்பன சிவநெறியில் புருடலோகம், உருத்திர லோகம், சிவலோகம்' என்பனவே யாகின்றன. அட்ட வித்தியேசுரர், சுத்த கோடி மகா மந்திரேசுரர். அணு சதாசிவர் என்போர் யாவரும் 'சிவர்' என்னும் வகையினரேயாவர்.
கரி - சான்று; இங்கு வினை முதலாந் தன்மையைக் குறித்தது. பொய் கரி - பொய்க்கும் கரி, மெய்கரி - மெய்க்கும் கரி, 'பொய், மெய்' என்பன நிலையாமை, நிலைத்தல் இவற்றைக் குறித்தன. நடுவண் நின்ற 'கரி' என்பது கருவியை வினைமுதல் போலக் கூறியது. விசேடம் - சிறப்பியல்பு. சிவனது சிறப்பியல்பு அவனது சத்தி. இங்கு அமைப்பாவது செய்வோனும், செய்யப்படுவனவுமாய் நின்ற இயல்பு 'செய்தது' என்பது, 'செய்யப்பட்டது' என்னும் பொருட்டாய்ச் செய்யாததைச் செய்ததுபோலக் கூறும் இலக்கணை வழக்காய் நின்றது.
இதனால், உயிர், 'தான் புருடனாய் நிற்றல் முதலிய நிலைமை களும் சிவனால் ஆவன்' என்பதை மறத்தல் கூடாமை கூறப்பட்டது.

அணுவில் அணுவினை ஆதிப் பிரானை
அணுவில் அணுவினை ஆயிரங் கூறிட்*(டு)*
அணுவில் அணுவை அணுகவல் லார்கட்*(கு)*
அணுவில் அணுவை அணுகலும் ஆமே. ***#1971***

ஆணவ பந்தத்தால் தனது வியாபக நிலையை இழந்து அணுத்தன்மை எய்த நிற்கின்ற உயிரை அணுவிலும் பல கூற்றில் ஒரு கூற்றளவினதாகப் பாவித்து, 'அணுவுக்கும் அணு' எனப்படுகின்ற நுண்ணியனாகிய சிவனை அணுக வல்லவர்கட்கே அவனை அடைதல் கூடும்.

விளக்கவுரை

இரண்டாம் அடி ஒழிந்த ஏனைய அடிகளில் உள்ள 'இல்' உறழ் பொருளின்கண் வந்த ஐந்தனுருபுகள். 'அணோ ரணியாந்' என்னும் கடோபநிடத வாக்கியம் இங்கு நினைக்கத்தக்கது. இவ்வடிகளில்

சொற்பொருட் பின்வரு நிலையணி வந்தது. இரண்டாம் அடியை 'அணுவை அணுவில் ஆயிரங் கூறிட்டு' என மாற்றி, முதலில் வைத்து உரைக்க. 'நுண் பொருளாய் உள்ள சிவனைத் தம்மை நுண் பொருளாகப் பாவிக்கும் பாவனையாலே தான் அடைய முடியும்' என்பது இங்குக் கூறப்பட்டது.

'கொண்ட தொருபொருளைக் கோடிபடக் கூறுசெயின் கொண்டவனும் அப்பரிசே கூறுபடும் - கொண்ட
இருபொருளு மன்றியே இன்னதிது என்னா(து)
ஒருபொருளே யாய்இருக்கும் உற்று'
- திருக்களிற்றுப்படியார் - *24*

என்பதிலும் இம்முறை கூறப்பட்டது அறிக.

இது முன் மந்திரத்து உரையிற் கூறிய எல்லா நிலைகட்கும் பொதுவாதலை அறிந்து கொள்க.

இதனால், மேற்கூறிய 'புருடன்' முதலிய அனைத்து நிலைகளிலும் உயிர் சிவனைப் பொருந்தி நிற்குமாறு கூறப்பட்டது.

படர்கொண்ட ஆலதின் வித்தது போலச்
சுடர்கொண் டணுவினைத் தூவழி செய்ய
இடர்கொண்ட பாச இருளற ஓட்டி
நடர்கொண்ட நல்வழி நாடலு மாமே. ***#1972***

சிவனது திருவருளாகிய ஒளியினை ஆன்மா, பல கிளைகளும் விழுதுகளுமாய் விரிவடையும் ஆற்றலைத் தன்னுள்ளே அடக்கியிருக்கும் ஆலம் விதைபோலத் தன்னுள் அடக்குமாற்றால் தன்னை அச்சிவத்திற்கு ஏற்ற தூய இடமாகச் செய்யுமானால், அந்தத் திருவருள் ஒளி துணையாக, துன்பத்தையே தனது இயல்பாகக் கொண்ட ஆணவமாகிய இருளை ஓட்டி, அம்பலத்தில் ஞான நடனத்தைச் செய்கின்ற அப்பெருமான் தரக் கருதும் நல்வழியைத் தான் உணரும் வாய்ப்பு உண்டாகும்.

விளக்கவுரை

படர் - படர்தல்; முதனிலைத் தொழிற்பெயர். அணு - ஆன்மா. 'அணுவினை' எனப்பின்னர்க் கூறினாராயினும், 'சுடரை அணு தன்னுட் கொண்டு தன்னைத் தூவழி செய்ய' எனக்கூறுதலே கருத்தாதல் உணர்க. 'ஓட்டி, நாடல்' என்னும் பயனிலைகட்கு, 'தான்' என்பது தோன்றா எழுவாயாய் நின்றது.

இதனால், மேற்கூறிய முறை உவமை காட்டி விளக்கப்பட்டது.

அணுவுள் அவனும் அவனுள் அணுவும்
கணுவற நின்ற கலப்ப துணரார்
இணையிலி ஈசன் அவன்எங்கு மாகித்

தணிவற நின்றனன் சராசரந் தானே. *#1973*

முன் மந்திரத்தில், 'உயிர் ஆலம் விதைபோலவும், சிவன் அவ்விதையில் அடங்கியுள்ள கிளை முதலியன போலவும் ஆதல் வேண்டும்' என்றது ஒருபுடை உவமையேயன்றி, முற்றுவமை யன்று. மற்று, உண்மை நிலையாது' எனின், 'உயிர் மேல்; சிவன் உள்' என்றாயினும், 'சிவன்மேல்; உயிர் உள்' என்றாயினும் ஒருபடித்தாக வரையறுத்தல் கூடாதபடி, புறவேற்றுமையே யன்றி, அகவேற்றுமை தானும் இன்றி ஒன்றி நிற்கின்ற கலப்பே உண்மை நிலையாகும். இவ்வுண்மையை உணர்வார் ஒருவரும் இல்லை. இனித் தன்னொப் பில்லாத் தனிப்பெரும் பொருளாகிய சிவன் எல்லாப்பொருளிலும் ஒரு படித்தாக நீக்கமின்றி நிறைந்து நிற்கின் இயங்குவனவும், நிற்பனவு மாய்க் காணப்படுகின்ற உயிர்கள் பலவும் அவனிடத்தில் தத்தமக்கு இயலும் முறையில் கலந்து நிற்கின்றன.

விளக்கவுரை

முதல் அடியின் ஈற்றில், 'போல' என்பது விரிக்க. கணு - மூங்கிற் கணுவும், கரும்புக் கணுவும். அவை அக வேற்றுமைக்கு உவமையாகக் கூறப்பட்டன. 'இணையிலி' என்றதனால் அவனது பெருநிலை குறிக்கப்பட்டது. 'ஈசன் இணையிலி' என வேறு தொடராக்கி, அதன்பின், 'அதனால்' என்பது வருவிக்க. தணிவு - நீக்கம். சிவனது பெருநிலை கூறியதனானே உயிர்களது சிறு நிலை பெறுவிக்கப்பட்டது. 'இல்லம் முறையில்' என்பது இசையெச்சமாய் நின்றது. தான் - சிவன். 'தான் ஆம்' - என்க.

இதனால், மேற்கூறிய உவமையால் நிகழ்வதோர் ஐயம் அறுக்கப்பட்டது.

9.29.சீவன்

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிர்ஒன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிர மாயினால்
ஆவியின் கூறது நூறா யிரத்தொன்றே. ***#1974***

உயிர் பருப்பொருளாகக் கருதிக்கொண்டு, 'அதன் அகல, நீர், கன அளவுகள் எத்துணையன' என வினாவுவார்க்கு விடை கூறின், 'பசுவின் மயிர்களில் ஒன்றை எடுத்து அதனைப் பல நூறாயிரங் கூறு செய்தால் அவற்றுள் ஒரு கூற்றின் அகல, நீள, கன அளவுகளே உயிரின் அகல, நீள, கன அளவுகள்' எனக் கூறலாம்.

விளக்கவுரை

இது, 'வன்பாற்கண் - வற்றல் மரம் தறித்தற்று' * என்பது போல, வடிவு கூறலாகாமையைக் குறித்து நின்றது. 'வடிவு' என்பது அகல நீள கனங்களையுடையதாகும். அது கண்ணில்லா தவராலும் தடவி அறிந்து கொள்ளப்படும். 'உருவம்' என்பது நிறம். அது கண்ணாலன்றி அறிய இயலாது. எனவே, உயிர்க்கு 'அணு' முதலாக வடிவு கூறுவோர் உயிரை, 'பருப் பொருள்', அஃதாவது, 'தூலப் பொருள்' என்போராவர். உயிர் பருப்பொருளாகாது 'நுண் பொருள்', அஃதாவது, 'சூக்குமப் பொருள்' என்றற்கே இவ்வாறு கூறினார். 'பிராணன்' என்றல், உபாதி பற்றிய செயற்கையாலாம். தத்துவங்கள் யாவும் உபாதியேயாகலின், உயிரை மேல், 'புருடன்' முதலாகக் கூறியதும் உபாதி பற்றியேயாம். மேவிய கூறு - கிடைத்த ஒரு கூறு 'ஆயினால்' என்பதன் பின், 'அதில்' என்பது வருவித்து 'அதில் நூறாயிரத்தொன்றே ஆவியின் கூறு' என்க. இதனால், 'உயிர், உண்மையில் சூக்குமப் பொருளே' என்பது கூறப்பட்டது.

ஏனோர் பெருமைய னாயினும் எம்மிறை
ஊனே சிறுமையி னுட்கலந் தங்குளன்
வானோ ரறியும் அளவல்லன் மாதேவன்
தானே அறியும் தவத்தின் அளவே. ***#1975***

கட்புலனாகாப் பொருள் சிவன் ஒருவனேயாக, பலவாகிய உயிர்களையும் அத்தகைய பொருளாகக் கூறுதல் கூடுமோஎனின், கூடும். ஏனெனில், சிவனது பெருமையை நோக்கு மிடத்து ஏனைத் தேவர் அனைவர் பெருமையினும் பெரிது. ஆயினும் பருப்பொருளாகிய உடம்புகளில் சூக்குமமாய் நிறைந் திருக்கின்ற உயிர்களினுள்ளே அவற்றினும் அதிசூக்குமமாய் அவன் நிறைந் திருக்கின்றான். (எனவே, உயிர் சூக்குமப் பொருளும், சிவன் அதி சூக்குமப் பொருளுமாம் ஆதலின்

அதுபற்றி ஐயமில்லை என்றபடி,) சிவன் இத்தகைய அதிசூக்குமப் பொருளாதலின் அவன் தேவர்களா லும் எளிதில் அறியத்தக்கவனல்லன். ஆயினும் அவனே அவரவரது தவத்தின் அளவை யறிந்து அவ்வளவிற்கு ஏற்ப விளங்கி நிற்பன்.

விளக்கவுரை

'ஏனோரினும்' - என ஐந்தாவது விரிக்க. 'ஊனே சிறுமை' என்பதற்கு, 'ஊனின்கண் உள்ள சூக்குமப் பொருள்' எனப் பொருள் கொள்க. அப்பொருள் உயிர்.

இதனால், முன் மந்திரத்திற் கூறிய பொருள் பற்றி நிகழ்வதோர் ஐயம் அறுக்கப்பட்டது.

உண்டு தெளிவன் றுரைக்க வியோகமே
கொண்டு பயிலும் குணமில்லை யாயினும்
பண்டு பயிலும் பயில்சீவ னார்பின்னைக்
கண்டு சிவன்உருக் கொள்வர் கருத்துளே. ***#1976***

உயிர்கட்கு முதற் காலத்திலே, 'சிவனை அறியும் வாயில் உண்டு' எனக் கூறுதற்கு அவனைத் தம்முன்னே கொண்டு யோகம் பயில்கின்ற குணம் இல்லவிட்டாலும் பின்பு அக்குணத்தை அடைந்து தம்முன்னே கொண்டு யோகம் பயிலும். ஆகவே, உயிர்கட்கு என்றாயினும் ஒருநாள் சிவனைத் தெளிவாக உணரும் உணர்வு உண்டாகவே செய்யும்.

விளக்கவுரை

'அவ்வுணர்வு முதற்கண் தோன்றாமைக்குக் காரணம் பக்குவம் வாயாமையும், பின்பு தோன்றுதற்குக் காரணம் பக்குவம் வாய்த்தலும் ஆம்' என்பது கருத்து. 'பக்குவம் சிவனது அருள் நோக்கத்தால் வாய்க்கும்' என்பது, 'பண்டு பயிலும் பயில் சீவனார்' என்பதனால் குறிக்கப்பட்டது. பயில் சீவனார் - பயில்வை உடைய சீவனார் பயிலுதல் - நீங்காது உடன் இருத்தல். உரைத்தற்கு, 'உணரும் வாயில் உண்டென' என்னும் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. ஏகாரத்தைப் பிரித்து, 'குணம்' என்பதனோடு கூட்டுக. 'யோகம்' என்பதன்முன் உள்ள இகரம் வடசொல் நோக்கி வந்தது. இவ்வேகாரம் தேற்றம். 'தெளிவு உண்டு' என மாற்றி யுரைக்க.

இதனால், முன் மந்திரத்தில், 'அறியும் அளவல்லன் மாதேவன்' என்பது பற்றி நிகழும் ஐயம் அறுக்கப்பட்டது.

மாயா உபாதி வசத்தாகும் சேதனத்*(து)*
ஆய குருஅரு ளாலே அதில் தூண்ட
ஓயும் உபாதியோ டொன்றின்ஒன் றாதுயிர்
ஆய துரியம் புகுந்தறி வாகவே. ***#1977***

மாயா காரியமாகிய கருவிக்கூட்டம் சடமாகலின், அது சித்தாகிய உயிருக்குக் கூடாப் பொருளாய்க் குற்றமாகும். ஆயினும் அவ்வுயிரின் உள்ளே என்றும் உள்ள சிவன் அதனது பக்குவம் அறிந்து அருள் காரணமாகக் குருவாகி எதிர் வந்து அதனை அக்குற்றத்தினின்றும் பிரிவிக்க, அஃது அங்ஙனமே பிரிந்து திருவருளில் புகுந்து, அதன் கண் பேருறக்கத்தை எய்தி அமைதியுற் றிருக்கும். அருள் உறக்கம், இருள் உறக்கம் அன்றாகலின் அந் நிலையில் உயிர் அறிவே வடிவாய் விளங்கும்.

விளக்கவுரை

உபாதி - செயற்கைப் பொருள்; மாசு, சேதனம் - அறிவுடைய பொருள். 'சேதனத்து ஆய குரு' என்றது, 'சிவம்' என்றபடி அதனால் சிவமேகுருவாய் வருதல் பெறப்பட்டது. 'குரு தூண்ட' என இயையும். தூண்டுதல் - விரிந்து செல்லும்படி அதற்குரிய உண்மையை உணர்த்துதல். அஃது ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தமையை* அறிவித்தலாம். 'அதினின்றும் தூண்ட' என்க. 'உயிர் உபாதி ஒன்றினோடும் ஒன்றாது துரியம் புகுந்து அறிவாகவே ஓயும்' என முடிக்க. துரியம் - பேருறக்கம். மலத்தின் உறங்குதல் கேவல துரியம். திருவருளில் உறங்குதல் சுத்த துரியம். இங்குக் குறிக்கப்பட்டது சுத்த துரியமே என்பது வெளிப்படை.

இதனால் உபாதி வசத்தால் மாசுபட்டுச் செயற்கை நிலையில் இருந்து உயிர் அம்மாசினின்றும் நீங்கித் தூயதாய்த் தனது இயற்கை நிலையை அடையுமாறு கூறப்பட்டது.

***9.30.*பசு**

கற்ற பசுக்கள் கதறித் திரியினும்
கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினும்
உற்ற பசுக்கள் ஒருகுடம் பால் போதும்;
மற்றைப் பசுக்கள் வறள்பசு தானே. *#1978*

கருவுறும் பருவம் வாயாத இளம் பசுக்கள் இனச் சார்பால் கதற மட்டும் தெரிந்து கொண்டு, கன்றை ஈன்ற பசுக்கள் தம் கன்றினை அழைக்கக் கதறுவதுபோலத் தாமும் கதறித் திரியும். கன்றை ஈனாது கருவுற்று மட்டும் உள்ள பசுக்கள் தமக்குரிய புல்லை விடுத்து மனிதர்க்கு உயிர பயிரில் சென்று மேயாதபடி அதன்தலைவன் புல்வெளியில் ஓரிடத்தில் முளையடித்து நீண்ட கயிற்றால் கட்டி வைக்க, அக்கயிற்றின் அளவிற்கு அவை கட்டில்லாதது போலத் தம் விருப்பப்படி சென்று புல்லை மேயும். எனினும் கன்றை ஈன்று தாய்மையை எய்திய பசுக்களே ஒன்று ஒரு குடம்போல நிரம்பப் பால் பொழியும் பசுக்களாகும். அவை தவிர

மேற்சொன்ன மற்ற இருவகைப் பசுக்களும் பயன்படாத பசுக்களாகவே இருக்கும்.

விளக்கவுரை

இம்மந்திரம் ஒட்டணி, 'கற்ற பசுக்கள்' என்பதனால், நூலை மட்டும் கற்றுப் பரிபாகம் இன்மையால் அந்நூலை மட்டும் இளஞ் சிறார் காதற் பாட்டுக்களைப் பாடி அவற்றிற்கேற்ப நடித்தல் போலப் படித்துப் பொருள் விரிக்கின்றவர் குறிக்கப்பட்டனர். 'கதறித் திரி யினும்' எனப்பின்னர் வருதலால், 'கற்ற' என்றது, கதறக் கற்றதனையே குறித்தது. பசுக்கள் வாயொலி செய்தலை, 'கதறல்' என்றல் மரபு. கொற்றம் - வெற்றி. பசுக்களுக்கு வெற்றியாவது மலட்டுத் தன்மையின்றிக் கருவுறுதல். 'கொற்றப் பசுக்கள்' என்னு சந்தி ஒற்று எதுகை நோக்கித் தொகுக்கப்பட்டது. குறி - முளை. கட்டி - கட்டப் பட்டு. 'குறியில் கட்டி' என உருபு விரிக்க. 'கருவுற்றுக் குறியில் கட்டப் பட்டு மேயும் பசுக்கள்' என்றதனால், ஆசிரியரது அருள்மொழியைக் கேட்டுச் சிந்திக்கும் நிலையில் உள்ளவர் குறிக்கப்பட்டனர். அவரைப் பொய்ந்நெறியில் சென்று இரண்டும் கெட்டவர் ஆகாதபடி ஆசிரியர் தம் ஆணைவழி நிற்பித்தலே, 'குறி கட்டி மேய்தல்' என்பதனஆல் குறிக்கப்பட்டது. எனவே 'கொற்றம்' என்றது ஆசிரியரால் ஆட்கொள்ளப் பட்டமையைக் குறித்ததாம்.

'உற்ற' என்பதற்கு, 'கன்றை' என்பது வருவித்து, 'கன்றை உற்ற பசுக்கள் என்க. 'தாய்மை எய்துதல்' என்பதனால், ஆசிரியரது அருள்மொழியைக் கேட்டுச் சிந்தித்த பின்பு தெளிதலையும், நிட்டை கூடுதலையும் உடையராதலைக் குறித்தது.

'பால்' என்றதனால், பரஞானம், அஃதாவது அனுபவஞானம் குறிக்கப்பட்டது. 'ஒருகுடம் பால்' என்றதனால் 'நிறைந்த ஞானம்' என்பது குறிக்கப்பட்டது.

போதுதல் - வெளிவருதல்; பொழிதல் எனவே தெளிவும், நிட்டையும் உடையவரது ஞான நிலை அயலார்க்கும் இனிது விளங்குதல் பெறப்பட்டது.

வறள் - வறட்சி; பால் சிறிதும் சுரவாமை. மலட்டுப் பசுக்களும் கதறித் திரிவனவற்றுள் அடங்கின.

இதனால், 'சீவர்கட்குப் பசுத்துவம் மலபரிபாகம் காரணமாக இருவினை யொப்புச் சத்தி நிபாதமும் வாய்க்கப்பெற்று, ஆசிரியரது அருள்மொழியைக் கேட்டுச் சிந்தித்தலேயன்றித் தெளிவும், நிட்டையும் எய்துதலானே நீங்கும்' என்பது கூறப்பட்டது.

கொல்லையில் மேயும் பசுக்களைச் செய்வதென்
எல்லை கடப்பித் திறைவ னடிகூட்டி

வல்லசெய்(து) ஆற்ற மதித்தபின் அல்லது
கொல்லைசெய் நெஞ்சம் குறிப்பறி யாதே. #*1979*
காப்பாருமின்றி, மேய்ப்பாருமின்றி, கறப்பாரு மின்றித் தம் விருப்பம்போல் காட்டில் மேய்ந்து கொண்டிருக்கும் காட்டுப் பசுப்போன்ற மக்களை எப்படித் திருத்த முடியும். (அவர் யாருக்கும் அடங்குபவரல்லர்.) அவர் தாமே தமது இழிநிலையை உணர்ந்து ஆசிரியரை அடைக்கலமாக அடைவாராயின் அவரை ஆசிரியர் கல்லில் நார் உரிப்பதுபோலவும், கல்லைப் பிசைந்து கனியாக்குதல் போலவும்* தமது திருவருள் திறத்தால் அவரது நிலையினின்றும் நீக்கிச் சீர்செய்து, அவர் சீர்ப்பட்டமையை நன்குணர்ந்து சிவமாக்கிய பின்பல்லது அதற்கு முன் காடும், மேடும், கல்லும், முள்ளுமாய்க் கிடக்கின்ற நிலம் போன்றுள்ள அவரது மனம் உணர வேண்டியவற்றை உணராது.

விளக்கவுரை

'மேயும்' என்றது 'தம் விருப்பப்படி சென்று மேயும்' என்றபடி. 'அவ்வாறு மேயும் பசுக்கள்' என்றதனால் 'அவை காட்டுப் பசுக்கள்' என்பது விளங்கிற்று. 'பசுக்கள்' என்றது உவமையாகு பெயராய், பசுக்கள்போல் உயிரைக் குறித்தது. இறுதியில் வைக்கற் பாலதாகிய 'இறைவனடி கூட்டி' என்பதைச் செய்யுள் நோக்கி இடை வைத்தார். 'செய்' என்பது உவம உருபு. 'குறிப்பு' என்பது ஆகு பெயராய்க் குறிக்கப்படும் பொருளை உணர்த்திற்று.

இதனால், முன் மந்திரத்தில் கூறிய பொருள் எதிர்மறை முகத்தால் வலியுறுத்தப்பட்டது.

9.31.போதன்

சீவன் எனச்சிவன் என்னவெவ் வேறில்லை
சீவ னார்சிவ னாரை யறிகிலர்
சீவ னார்சிவ னாரை அறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே. #*1980*

'சீவன்' எனவும், 'சிவன்' எனவும் வேறு வேறாய்த் தனித்து எக்காலத்தும் இல்லை, உடலும், உயிரும் போல என்றும் ஒன்றியே நிற்கும். அவ்வாறிருந்தும் சீவன் சிவனை அறிந்ததில்லை. ஏன்? பாசங்கள் சீவனது அறிவை மறைத்து நிற்கின்றன. (அம்மறைப்பு நீங்கிச்) சீவன் சிவனை அறியுமாயின் அது சீவனாய் இராது, சிவமாகவே இருக்கும்.

விளக்கவுரை

எனவே, 'சார்ந்ததன் வண்ணம் ஆதல் உயிரினது இயல்பு' என்பது பெறப்படுகின்றது. அநாதி முதலே பாசத்தைச் சார்ந்து பாசமாய் நிற்கின்ற உயிர், சிவத்தைச் சாருமாயின் சிவமாயே நிற்பதாகும்.

அந்நிலையில் அது 'போதன்' எனப்படும்.
'ஆவர்' என்னாது 'ஆயிட்டிருப்பர்' என்றதனால், 'அதுவே உயிர் அடையும் முடிநிலைப்பயன்' என்பது விளங்கிற்று. 'இத்தகைய பெருநிலைக்கு உரியதாகிய உயிர் அநாதியே இழிநிலையை எய்தியதும், பின்னரும் அந்நிலையை உணராது அதிலே இருத்தலும் வருந்தத் தக்கன' என அதன் இழிபு குறித்தற்கு இழித்தற் குறிப்பில் வரும் பன்மையால், 'சீவனார்' என்றார். 'அவருக்கு உண்மையிலே பெரியோனாகிய சிவனை அறிதல் எளிதன்று' என்றற்கு, 'சிவனார்' என்றார். 'இல்லை' என்பதன்பின் 'ஆயினும்' என்பது வருவிக்க.
சீவன் சிவனை அறிதல் தனது அறிவினுள்ளேயாகும். அது 'சிவன் நான்' எனப் பாவிக்கும் சிவோகம் பாவனையாம்.
'யாதொன்று பாவிக்க நான் அது ஆதலால்,
உன்னை 'நான்' என்று பாவிக்கின்
அத்துவித மார்க்கம் உறலாம்'
என அருளிய தாயுமான அடிகள் வாக்கும், *('எங்கும் நிறைகின்ற சிவம்')*
'... ... ... நற்கமலை
ஊரிற் குறுகினேன்; ஓர்மாத் திரைஅளவென்
பேரிற் குறுகினேன் பின்'
என்னும் குமரருபர அடிகள் வாக்கும். *(பண்டார மும்மணிக்கோவை, 24)*
இங்கு நினைவு கூரற்பாலன. இம்மந்திரம் சொற்பொருட் பின்வருநிலையணி கொண்டது.
இதனால், 'பசு' எனப்படுகின்ற சீவன் 'போதன்' ஆமாறு கூறப்பட்டது.

குணவிளக் காகிய கூத்தப் பிரானும்
மனவிளக் காகிய மன்னுயிர்க் கெல்லாம்
பணவிளக் காகிய பஃறலை நாகம்
கணவிளக் காகிய கண்காணி யாமே. **#1981**

எண்குணங்களையுடைய கூத்தப்பிரான், மனத்தை விளக்காகக் கொண்டு பொருள்களை அறிந்து வருகின்ற, நிலைபெற்ற உயிர்களுக்கெல்லாம், படந்தோறும் மணியாகிய விளக்கினையுடைய பலதலைப் பாம்புபோலவும், இரவிலும் பல விளக்குக்களை ஏற்றி வைத்துக் கொண்டு பொருள்களைக் காவல் செய்கின்ற கண்காணி போலவும் இருக்கின்றான்.

விளக்கவுரை

எனவே 'சீவனார் ஒரு பொழுதும் சிவனாரை அறியா விடினும், சிவனார் சீவனாரை எப்பொழுதும் அறிந்து கொண்டே யிருக்கின்றார்' என்பதாம். 'ஆகவே அவரை அறியச் சீவனார் ஆவன செய்தல் வேண்டும்' என்றபடி.
'சிவன் இயல்பாகவே பாசங்கள் இன்மை, இயற்கையுணர்வு,

முற்றுணர்வு என்னும் குணங்களை உடையன் ஆதலின் அவன் தனக்கு அறிவிக்கும் துணையை வேண்டாது தானே எல்லாவற்றையும் அறிவான்' என்றற்கு, 'குண விளக்காகிய கூத்தப்பிரான்' என்றும், வேறொரு விளக்கை வேண்டாது தனது மணிகளாகிய விளக்கினாலே விளக்கத்தைத் தரும் பல தலைப் பாம்பு போல உயிர்கட்குத் தான் அறிவைத் தருகின்றான்' என்றும், 'உயிர்களை இமைப்பொழுதும் நீங்காது காண்கின்ற கண் காணியாய் உள்ளான்' என்றும் கூறினார். 'மன்னுயிர்க்கு' என்னும் நான்கன் உருபு, 'கரும்பிற்கு வேலி' என்பது போல, அதற்கு வினை யுடைமைப் பொருளில் வந்தது. 'தான் தோன்றி' என்பது 'தானே தோன்றுதலையுடையவன்' எனப்பொருள் தருதல் போல, 'கண் காணி' என்பது 'கண் காணுதலையுடையவன்' எனப் பொருள் தந்தது. 'ஆகும்' என்பதை நாகத்திற்கும் கூட்டுக. ஆக்கம் உவமை குறித்து நின்றது. இரண்டாம் அடி இன எதுகை.
இதனால், சிவன் சீவனை எப்பொழுதும் அறிந்து கொண்டே யிருத்தலால் உரிய பொழுதில் அவன் சீவனுக்கு வெளிப்பட்டு அருளச் சீவன் என்பது போதனாம் என்பது கூறப்பட்டது.

அறிவாய் அறியாமை நீங்கி யவனே
பொறிவாய் ஒழிந்தெங்கும் தான்ஆன போதன்
அறிவாய் அவற்றினுள் தான்ஆய் அறிவன்
செறிவாகி நின்றஅச் சீவனும் ஆகுமே. ***#1982***

சிவன் அறியாமையோடு விரவாது அறிவாயே இருப்பவன். அவன் சீவன்களின் அறிவில் பொருந்திச் சீவர்கள் அறிவனவற்றையெல்லாம் தான் உடனாய்நின்று அறிவன். அதனால் அவன் சீவன்களாகியும் இருப்பான். ஆகையால் இந்நிலையை உணர்கின்ற சீவன் தானும் அச்சிவனேயாய் நிற்கும் ஆதலால், அத்தகைய சீவனே யாதும் அறியாத இருள் நிலையும், பொறிகளின் வழிப்பட்டு உலகை ஏகதேசமாய் அறிகின்ற மருள் நிலையும் ஆகிய இவற்றினின்றும் நீங்கிச் சிவனைப் போல எங்கும் வியாபகமாய் நின்று அறியும் நிலையை எய்தி, 'போதன்' எனப்படுவதாகும்.

விளக்கவுரை

மூன்றாம் அடிமுதலாகத் தொடங்கி உரைக்க. பின் இரண்டு அடிகளால் சீவன் வியாபக நிலையை எய்திப் போதனாவதற் குரிய இயைபு கூறப்பட்டது. அவற்றுள் 'அறிவாய் அறிவன், சீவனு மாகும்' என்னும் பயனிலைகட்கு, 'சிவன் என்னும் எழுவாய் வருவிக்க. 'சீவனும் ஆகும்' என்றதனால், 'அவ்வாறு ஆகின்றவன் சிவன்' என்பது தானே அமைந்தது. அலவன், கலுழன், கடுவன் முதலியன போல, 'சீவன்' என்பது அஃறிணைப் பெயர். அவைகளைச் சுட்டிய 'அவற்றினுள்'

என்பது செய்யுளாகலின் முன் வந்தது. வேறு தொடராய் நிற்றலால் 'நீங்கியவன், போதன்' என்பன திணை வழு ஆகாமை அறிக.
இதனால், சீவன் போதனாதற்குரிய இயையும், போதனார் நிலையது இயல்பும் கூறப்பட்டன.

ஆறாறின் தன்மை அறியா திருந்தேனுக்கு
ஆறாறின் தன்மை அறிவித்தான் பேர்நந்தி
ஆறாறின் தன்மை அருளால் அறிந்தபின்
ஆறாறுக் கப்புற மாகிநின் றானே. ***#1983***

'தத்துவங்கள் சடம்' என்று அறியாமல், அவை களையே யானாக மயங்கிக் கிடந்த எனக்குச் சிவபிரான் தனது அருளைப் பற்றி நின்று அவ்வுண்மையை நான் உணர்ந்தபின் அவ்வாறு உணர்த்திய அவன் தத்துவங்கட்கு அப்பாற்பட்டு நிற்றலையும் உணர்ந்தேன்.

விளக்கவுரை

அதற்கு முன்னே, 'நான் தத்துவங்களின் வேறானவன்' என்பதை உணர்ந்தமை சொல்லவேண்டாவாயிற்று. இவ்வாற்றால் 'பாசம், பசு, பதி' என்னும் முப்பொருளின் இயல்புகளை உணர்ந்தமை போந்தது.
'இவ்வாறு உணரும் பொழுதே சீவன் போதனாம்' என்பது குறிப்பு.
அருளால் அறிதல், அருள்வழியாக அறிதலாம். அருளே 'பதிஞானம்' எனப்படுகின்றது. பாசஞான பசுஞானங்களின் நீங்கிப் பதிஞானத்தைப் பெற்று அது வழியாக எல்லாவற்றையும் அறிந்த வழியே உண்மை இனிது விளங்குவதாகும்.

'அருளால் எவையும் பார் என்றான்; அதை
அறியாதே சுட்டி என் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லால், - கண்ட
என்னையும் கண்டிலன் என்னேடி தோழி'

என்றருளிய தாயுமான அடிகள் (ஆனந்தக் களிப்பு) வாக்கையும் நோக்குக.
'ஆறாறு' என்பது தொகைக் குறிப்பாய் அத்துணையான தத்துவங்களை உணர்த்திற்று. சொற்பொருட் பின் வருநிலையணி.
இதனால், 'போதமாவது இஃது' என்பது கூறப்பட்டது.

சிவமா கியஅருள் நின்றறிந் தோரார்
அவமாம் மலம்ஐந்தும் ஆவதறியார்
தவமான செய்து தலைப்பறி கின்றார்
நவமான தத்துவம் நாடகி லாரே. ***#1984***

பிற ஆகமங்களிலன்றிச் சைவாகமங்களில் சொல்லப்படுகின்ற தத்துவங்களின் உயர்வை உணர்ந்து அவற்றைத் தெளியமாட்டாதவர் சிவமுதற் பொருளையும், அதனது ஆற்றலின் சிறப்பையும் உணர்ந்து

அதிலே பழகியறியார். அதனால் அவர் உயிர் பஞ்ச மலங்களால் போதம் இழந்து நிற்றலையும் உணர மாட்டார். பிற பிற சமய நூல்களில் எல்லாம் சொல்லப்படுகின்ற தவங்களைச் செய்து, தாம் அடையவேண்டிய பயனை அடையாது இளைக்கின்றவ ராகின்றனர்.

விளக்கவுரை

'சிவமாகிய அருள்' என்றதனை இரட்டுற மொழிந்து, 'சிவம்தான் அதுவாகிய அருள்' என்றும், தான் சிவமே ஆகிய அருள்' என்றும் இரு பொருள் கொள்க. கொள்ளவே சிவமே அருளாயும், அருளே சிவமாயும் நிற்றல் பெறப்படும். 'அறிந்து ஓரார்' என்பதனை, 'ஓர்ந்து அறியார்' என மாற்றியுரைக்க. இந்நிலை சைவ தத்துவத்தை உணர்ந்தார்க்கல்லது. 'ஏனையோர்க்கு உணரவாராது' என்பதே முதல் அடியால் கூறப்பட்டது. ஆன்ம லாபத்தை அடையவொட்டாமல் ஆன்மாவைத் தடுப்பனவாகிய மலங்கள் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி - என ஐந்து உளவாதலையும் அவர் அறியமாட்டார். அதனால் அவற்றை நீக்குமாற்றினையும் அறிந்து அவ்வழியில் முயலார். பிற சமயங்களில் சொல்லப் பெறுகின்ற தவங்கள் சிவ ஞானத்தைப் பயவா ஆதலின் அவற்றைச் செய்வோர் சிவனது திருவருளை அடைதலாகிய தலையாகிய பயனை எய்தாது பிறவிக் குழியினின்றும் ஏறமாட்டாதவராவர் என்பதாம். 'தலைப்பறிகின்றார் என்றது தலைப்பறியை எய்துகின்றார் எந்றபடி. தலைப்பறி - தலைபோலும் முடிநிலைப் பயனை இழத்தல். நவம் - புதுமை. அது பிற நூல்களில் காணப்பபடாத சிறப்பினைக் குறித்தது. ஈற்றடியை முதலில் வைத்துப் பொருள் கொள்க.

இதனால், போதராகாதாரது இயல்பு கூறும் எதிர் மறை முகத்தால் போதன் ஆமாறும், அதன் உயர்வும் கூறப்பட்டன.

நாடொறும் ஈசன் நடத்து தொழில் உன்னார்
நாடொறும் ஈசன் நயந்தூட்டல் நாடிடார்
நாடொறும் ஈசன்நல் லோர்க்கருள் நல்கல்தான்
நாடொறும் நாடார்கள் நாள்வினை யாளரே. ***#1985***

நாளும் நாளும் தம்பால் நிகழ்வன யாவும் சிவ பெருமான் நிகழ்த்துவிக்க நிகழ்வனவே யாதலையும் ஊன்றியுணரார்; அங்ஙனம் அவன் நிகழ்த்துவித்தல் தாம் செய்த வினையின் பயன்களைத் தமக்குத் தனது அருள் காரணமாக ஊட்டுவித்தலே யாதலையும் கேட்டல் சிந்தித்தல்களின்வழி எண்ணிப்பாரார். சிவன் தனது அருளைத் தான் நேரே வழங்குதல் மேற்சொல்லிய உண்மைகளை ஆசிரியரது அருளால் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தவர் கட்கே என்பதையும் எண்ணமாட்டார். யார் எனில், நாள்தோறும் முன் மந்திரத்தில் கூறிய ஐம்பாசங்களின்

வழியே உழைத்து நாட்களைக் கழிக்கின்றவர் என்க.

விளக்கவுரை

'நல்லோர்' என்பதற்கு, 'கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர்' என மாதவச் சிவஞான யோகிகள் உரைத்ததனை (சிவஞான போதம், மங்கல வாழ்த்து) உன்னுக. சொற்பொருட் பின்வரு நிலையணி.
இதனுள், "வினை' என்றது ஐம்புல நுகர்ச்சிக்கு ஆவனவற்றைத் தேடலும், அவற்றை நுகர்தலுமே யாகலின் அதனை வெறுத்துக் கூறியதனால் வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டதாம்.

*9.32.*ஐந்திந்திரியம் அடக்கும் அருமை

ஆக மதத்தன ஐந்து களிறுகள்
ஆக மதத்தறி யோடணை கின்றில
பாகனும் எய்த்தவை தாமும் இளைத்தபின்
யோகு திருந்துதல் ஒன்றறி யோமே. *#1986*

இம்மந்திரம் ஒட்டணி. ஐந்து களிறுகள். ஐம்புலன் களின் மேல் செல்லும் ஐந்து அவாக்களையுடைய மனம் - மனம் ஒன்றாயினும் அவா வகையால் ஐந்தாயிற்று. ஆக மதத்தமை. மிகவும் மதம் கொண்டமை. அஃதாவது அவா மிக மிகுத்தமை. தறி - திருவருள். பாகன் - உயிர். அவன் எய்த்தமை - அந்த மனத்தை அவாக் கொள்ளாதவாறு தன் முயற்சியாலே தான் அடக்கி அடக்கிப் பார்த்து இயலாது இளைத்தமை. இனிக் களிறுகள் இளைத்தமை - மனம்தான் அவாவிய புலன்களை அடைந்து அடைந்து நிறைவுபெற விரும்பி, நிறைவு கூடாமையால் வெறுப்புற்றமை. இந்நிலையிலே அந்த மனம் திருந்தி நிறைவு பெறுதற்கு வழி சிவயோகத்தைத் தவிர வேறொன்றில்லாமை அறியப்பட்டது.

விளக்கவுரை

ஆதல் - மிகுதல். அஃது இங்கு அளவின் மிகுதலைக் குறித்தது. இரண்டாம் அடியில், 'மதத்தால்' எனவும், ஈற்றடியில் 'யோகினால்' எனவும் உருபு விரிக்க. 'யோகு' என்பது தமிழ் முறையில் முதனிலைத் தொழிற்பெயராய் வரும். யோகம், இங்குச் சிவயோகமேயாம். 'திருந்துதல்' என்பதன்பின் 'ஒழிய' என்பது சொல்லெச்சமாய் எஞ்சி நின்றது. 'ஒன்றையும்' என உருபும், இழிவு சிறப்பும்மையும் விரிக்க. 'ஐந்திந்திரியங்களை அடக்குதல் சிவ யோகியர் சிலராலல்லது ஏனையோரால் கூடாமையும், சிவயோகத்தை எய்துதல் பலர்க்குக் கூடாமையும் நோக்கின் ஐந்திந்திரியங்களை அடக்குதற்கண் உளதாய அருமை விளங்கும் என்பது கருத்து.

இதனால், இங்கு எடுத்துக் கொண்ட பொருள் முதற்கண் இனிது புலப்படுத்தப்பட்டது.

கருத்தின்நன் னூல்கற்றுக் கால்கொத்திப் பாகன்
திருத்தினும் பாய்மாத் திகைத்தன்றிப் பாயா(து)
எருத்துற ஏறி யிருக்கிலும் ஆங்கே
வருத்தினும் அம்மா வழிநட வாதே. *#1987*

இதுவும் ஒட்டணி. அடங்காமையை ஐம்பொறி மேல் வைத்துக் கூறினும் அடங்காது ஓடுவது மனமே. ஓட்டத்தின் விளைவு குறித்து மனம் குதிரையாக உருவகிக்கப்படும். பாய்மா - குதிரை. குதிரையைப் போரின்கண் செயற்படுத்தும் வீரன் அதன் முதுகின் மேல் அமர்ந்துகொண்டு கால்களால் குறிப்புத் தருவான். நல்ல குதிரைகள் அக்குறிப்பின் வழியே பாய்ந்து பாகனுக்கு வெற்றியை உண்டாக்கும். முருட்டுக் குதிரைகள் முரணி வேறுவழியிற் பாய்ந்து பாகனுக்கு வீழ்ச்சியைத்தரும். இங்கு 'பாய் மா' என்றதை, 'குறிப்பிட்ட ஒரு பாய்மா' எனக் கொள்க. அது மனம். அதனைப் பிராணாயாமத்தால் அடக்குதல் கூடும். ஆகவே 'கால்' என்றது சிலேடை வகையால் உவமையில் பாகனது கால்களையும், பொருளில் பிராண வாயுவையும் குறித்தது. கொத்துதல் - உட்செலுத்துதல். பாகன், ஆன்மா. அவன் யோகநூலைக் கருத்துடன் கற்று அதன்படி பிராணா யாமம் செய்து தாரணை நிலையில் நின்று அடக்கினாலும் அடங்காது ஓடுவதே மனத்தின் இயல்பு. உவமையில் 'நூல்' குதிரை செலுத்தும் நூல். 'எருத்தம்' என்பது ஈறு குறைந்து, 'எருத்து' என நின்றது. எருத்தம் - பிடரி; இங்கு அது முதுகைக் குறித்தது. 'முதுகு' என்றது தாரணை நிலையை. திருத்துதல் - பிராணாயாமத்தினாலும், வருத்துதல், அஃதாவது அடக்குதல். தாரணையினாலும் என்றற்கு அவற்றைத் தனித் தனிக் கூறினார். திகைத்தல் - வேறு வழியில் செல்லுதல். வழி, நேர்வழி. அம் மா - மேற் குறிப்பிட்ட அந்தக் குதிரை. 'திகைத்தன்றிப் பாயாது, வழி நடவாது' என்றவை, அடங்குதல் அரிதாதலையே குறித்தது.

விளக்கவுரை

இதனால், 'பொறி வழி ஓடும் மனத்தினை அடக்கி ஞான நெறியில் செலுத்துதல் யோகியர்க்கும் அரிது' என்பது கூறப்பட்டது.

புலம்ஐந்து புள்ஐந்து புள்சென்று மேயும்
நிலம்ஐந்து நீர்ஐந்து நீர்மையும் ஐந்து
குலம்ஒன்று கோல்கொண்டு மேய்ப்பான் ஒருவன்
உலமந்து போம்வழி ஒன்பது தானே. *#1988*

மேய்ப்புத் தொழில் செய்து பிழைக்கும் குலங்கள் ஆமேய்க்கும் குலம், எருமை மேய்க்கும் குலம், ஆடு மேய்க்கும் குலம், தாரா, கோழி முதலிய

பறவைகள் மேய்க்கும் குலம் எனப் பலவகை உண்டு. அவற்றுள் பறவை மேய்க்கும் குலத்தில் இரங்கத் தக்க ஒரு குலம் உண்டு. அந்தக் குலத்தில் ஒருவனுக்கு ஒரு குடில். அந்தக் குடிலில் ஐந்து கூடுகள். அந்தப் பறவைகள் வெளியே மேயும் இடங்களும் ஐந்து. அந்த இடத்தில் மேய்கின்ற உணவுகளும் வேறு பட்ட ஐந்து. அந்த உணவுகளின் குணங்களும் வேறுபட்ட ஐந்து. இந் நிலையில் அந்த மேய்ப்பான் ஒருவன் அந்தப் பறவைகளை ஒரு வழியிற் செலுத்தி மேய்க்க வேண்டும். இது மாற்ற முடியாத ஓர் அமைப்பு முறை - அதனால் இந்த மேய்ப்புத் தொழிலில் வெற்றி பெற மாட்டாதார் பலர் மேற்குறித்த ஒரு குடிலில் ஒன்பது வாயில்கள் இருப்பதால் அந்த வாயில்களில் எந்த ஒன்றின் வழியாகவாவது யாருக்கும் தெரியாமல் ஓடிவிடுகின்றார்கள்.

விளக்கவுரை

இம்மந்திரம் பிசிச் செய்யுள். கூடு இங்கு, 'புலம்' எனப்பட்டது. அவை தத்துவங்களில் ஞானேந்திரியங்களாம். அவை புறநோக்குடைய மனத்திற்கு இடமாதல்பற்றி, 'புலம்' எனப்பட்டன. ஞானேந்திரியங்கள் 'புலம்' எனவும் படுதல் வழக்காதல் அறிக. புள் - மனம். அஃது ஒன்றாயினும் மேற்குறித்த இடச்சார்பு பற்றி ஐந்தாகின்றது. நிலம் - மனம் பொறிவழியாகச் சென்று பற்றும் பொருள். 'ஐந்து' என்றது, 'ஐந்து வகை' என்றபடி. மேய்க்கப்படும் பறவைகள் நீரை விரும்புதல் பெரும்பான்மையாதல் பற்றி உணவு 'நீர்' எனப்பட்டது. அவை அப்பொருள்களில் பொறிவழியாகக் கவரப்படும் உரு, ஊறு, நாற்றம், சுவை, ஓசை என்பன. நீர்மை - குணம். அவை நுகர்வாரது தன்மைக்கு ஏற்பப் பெரிதும் சிறிதுமாக அவரது அறிவையழித்தல். 'கொண்டு' என்பதை, 'குலம் ஒன்று' என்பதனோடும் கூட்டுக. 'ஒருவன்' என்பதன்பின் 'இது நிலைமை' என்னும் இசையெச்சம் வருவிக்க. உலமருதல் - உழன்று எய்த்தல். 'உலமந்தவழி' என்பது 'உலமந்து' எனத் திரிந்து நின்றது. 'போம் வழி ஒன்பது' என் றதனால், 'எந்தவழியாலாவது புறப்பட்டுப் போதல் எளிது' என்றபடி, வழி - வாயில், வாயிலைக் கூறவே, 'அவை உள்ளது குடிலில்' என்பது தானே பெறப்பட்டது. 'அஃது உடம்பு' என்க. 'ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்' *(தி.6 ப.99)* என அப்பரும் அருளிச் செய்தார்.

இதனால், ஐந்திந்திரியங்கள் அடக்குதற்கு அரியனவாயுள்ள இயல்பினை விளக்கி, அதனால் அடக்க முயன்றோர் பலரது நிலையை எடுத்துக் கூறப்பட்டது.

அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன
அஞ்சும்போய் மேய்ந்துதம் அஞ்சக மேபுகும்
அஞ்சின் உகிரும் எயிறும் அறுத்திட்டால்

எஞ்சா திறைவனை எய்தலும் ஆமே. *#1989*

இம்மந்திரமும் பிசிச் செய்யுளே, முன் மந்திரங்களில் களிறுகளாகவும், குதிரைகளாகவும், பறவைகளாகவும் குறிக்கப்பட்ட புலனடக்கம் இல்லாத மனம் இம்மந்திரத்தில் அதனது அடங் காமையின் மிகுதி இனிது விளங்குமாறு சிங்கமாகக் குறிக்கப்பட்டது. அடவி - வேறுபட்ட பல பெருமரங்கள் செறிந்த காடு. அது 'நல்லன, தீயன' எனப் பெரும்பான்மையாக இருவகைப்பட்டு, அவற்றுள் எண்ணில வாய் விளையும் வினைகளைக் குறித்தது. நல்வினை, பயன்மரம், தீவினை, நச்சுமரம், வாய்ப்பு உள்ள பொழுது சென்று ஐம்புலன்களை நுகர்கின்ற மனம் வாய்ப்பு இல்லாதபொழுதும் அவற்றையே நாடுதல் பற்றி 'அஞ்சு அகமே புகும்' என்றார். அஞ்சு - பொறிகள். சிங்கங்கட்கு உகிர் (நகம்) உண்டற்குரிய விலங்குகளை இறுகப் பற்றுதற்கும், எயிறு (பல்) அவ்விலங்கின் தசைகளை உண்டு சுவைத்தற்கும் உதவுவன. எனவே, 'அவற்றை அறுத்தல்' என்பது மனத்திற்குப் பொருள்களின் மேல் உளதாய பற்றினையும், அவற்றை நுகர்தற்கண் உளதாய ஈடுபாட்டினையும் நீக்குதலாயிற்று. 'நீக்குதற்குக் கருவி சிவயோக சிவானங்கள் என்பது மேல் பல இடங்களில் கூறப்பட்டது. 'அறுத் திட்டால்' எனவே, 'அறுத்திடல் மிக அரிது' என்பது விளங்கிற்று. நகமும், பல்லும் போயபின் காட்டில் வாழும் சிங்கங்கள் அங்குச்சென்றோரை அப்பாற் போகவிடாமல் மறித்துக் கொன்றொழிக்க மாட்டா. அதனால் அவர் அக்காட்டைக் கடந்து இன்புறலாம் என்பது பற்றி, 'அறுத்திட்டால் - எஞ்சாது இறைவனை எய்தலும் ஆகும்' என்றார்.

விளக்கவுரை

இதனால், 'ஐந்திந்திரியங்களை அடக்குதல் செயற்கருஞ் செயல் என்பதும், 'ஆயினும் அதனைச் செய்தார் அடையும் பயன் பெரிது' என்பதும் கூறப்பட்டன.

ஐவர் அமைச்சருள் தொண்ணூற் றறுவர்கள்
ஐவர்உம் மைந்தரும் ஆளக் கருதுவர்
ஐவரும் ஐந்து சினத்தோடே நின்றிடில்
ஐவர்க் கிறையிறுத் தாற்றகி லோமே. *#1990*

அரசராகிய நம்மில் ஒவ்வொருவருக்கும் ஐவர் அமைச்சர் உள்ளிட்ட தொண்ணூற்றாறு பேர் வல்லுநர் பணியாளராய் உள்ளனர். அவர் நமக்கு அடங்கிப் பணி புரியாமல் ஒவ்வொருவரும் தனித்தனியே நம்மை ஆள விரும்புகின்றனர். எனினும் ஐவர் அமைச்சரே நம்மை ஆள்வதில் வெற்றி காண்கின்றனர். அந்த ஐவருக்குள்ளேயும் ஒற்றுமையில்லை. அதனால் அவரவரும் ஒவ்வொரு நோக்கத்தோடு நம்மை ஆள முயல்கின்றனர். அவர்கட்கு வரிசெலுத்தி நாம் எவ்வாறு நிறைவு செய்ய

இயலும்!

விளக்கவுரை

'இயலாது; ஆகவே அவர் அனைவரையும் அடக்கிப் பணிய வைத்தலே தக்கது' என்பது குறிப்பெச்சம். ஐவர் அமைச்சராவார் ஐம்பொறிகள். தொண்ணூற்றறுவர் அப்பொறிகள் உள்ளிட்ட தத்துவ தாத்துவிகங்கள். 'உள்ளிட்டு' என்பது, 'உள்' எனக் குறைந்து நின்றது. நோக்கம் நிறைவேறாதபொழுது சினம் உண்டாகும். ஆகையால் நோக்கத்தை, 'சினம்' என்றது காரிய ஆகுபெயர். இறை - வரி; என்றது, சுவை, மணம் முதலிய புலன்களாய் உள்ள பொருள்களை, 'அவற்றைப் பலகால் நுகரினும் நிரம்பாது மீள மீள அவாவே உண்டாதலின் நுகராது அடக்குதலே தக்கது' என்பது கருத்து.

அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை, விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு. -திருக்குறள், *343*

என்றே திருவள்ளுவரும் அருளினார்.

மைந்து வலிமையாதலின், 'மைந்தர்' என்றது, 'வலியர்' என்றபடி, அதனால் அவற்றை அடக்குதல் அருமை குறிக்கப்பட்டது. 'ஐவர் உம் மைந்தர்' என்பதில் உகரம் சுட்டெழுத்து.

இதனால், 'ஐந்திந்திரியங்களை வருந்தியாயினும் அடக்குதல் வேண்டுமன்றி, அடக்காது அவற்றின் வழிச் செல்லுதல் தகாது, என்பது கூறப்பட்டது.

சொல்லகில் லேன்சுடர்ச் சோதியை நாடொறும்
சொல்லகில் லேன்திரு மங்கையும் அங்குள
வெல்லகில் லேன்புலன் ஐந்துடன் தன்னையும்
கொல்லநின் றோடும் குதிரையொத் தேனே. ***#1991***

'துஞ்சும் போதும் சுடர்விடும் சோதியாய், *(தி.5 ப.93 பா.8)* உள்ள இறைவனையும், அவனோடே நீக்கமின்றி யிருக்கின்ற இறைவி யையும் நாள்தோறும் ஒழிவின்றி மந்திரமொழியாலும், தோத்திரப் பாடல்களாலும் சொல்லக் கடவேனாகிய யான் அங்ஙனம் செய்ய மாட்டாதவனாய் நிற்கின்றேன். அதனால் அங்ஙனம் மாட்டா தாரிடத்து வளர்வனவாகிய ஐம்புல ஆசைகளையும், அதனை உடைத்தாகின்ற மனத்தையும் அடக்கும் வலியிலேனாகின்றேன் அதனால், தன்மேல் இருப்பவனைக் குழியில் வீழ்த்திக் கொல்லவே நினைத்து வேகமாகப் பாய்ந்து ஓடுகின்ற குதிரையை அடக்க மாட்டாது விழிப்பவன்போலத் திகைக்கின்றேன்.

விளக்கவுரை

இரண்டாவது அடியில் வந்த 'சொல்லகில்லேன்' என்பது சொற்பொருட்

பின்வருநிலையணி. 'மங்கையையும்' என்னும் இரண்டன் உருபு தொகுத்தலாயிற்று. 'வெல்லகில்லேன்' என்பதை மூன்றாம் அடியின் இறுதியிற் கூட்டுக. 'தன்னை' என்றது மனத்தை. ஐம்புலன்களை வெல்லுதல் அவற்றின்மேல் அவாக்கொள்ளாதவாறு அடக்குதலும், மனத்தை அடக்குதலாவது அதனைப் புறத்துப்போக விடாது அகத்தே நிற்கச் செய்தலும் ஆகும். 'இவ்விரண்டும் கை கூடுதற்கு உபாயம் இறைவனை இறைவியோடு தியானித்துத் துதித்தலே' என்றற்கு' 'அவற்றை நான் செய்ய மாட்டாதவனாய் இருக்கின்றேன்' என்றார். மாட்டாமை பரிபாகம் இன்மையால் உளதாவது. 'இத்தகையோரிடத்து ஐம்புல ஆசை வளர்தல் இயல்பே, என்றற்கு, 'அங்குள புலன் ஐந்து' என்றார். 'குதிரையோடு' என ஒடு உருபு விரிக்க. 'ஒத்தேன்' என்றது, அதனை மாற்றிச் செலுத்த வகையறியாது, 'அதன் வழியிலே நிற்கின்றேன்' என்றதாம்.

இதனால், 'ஐம்புலனை அடக்கும் உபாயம் இது' என்பது அனுவாத முகத்தாற்கூறி, 'பரிபாகம் இல்லார்க்கு அவ்வுபாயத்தைச் செய்தல் அரிது' என்பது கூறப்பட்டது.

எண்ணிலி இல்லி யுடைத்தவ் விருட்டறை
எண்ணிலி இல்லியோ டேகிற் பிழைதரும்
எண்ணிலி இல்லியோ டேகாமை காக்குமேல்
எண்ணிலி இல்லத்தோர் இன்பம தாமே. ***#1992***

ஒரு தலைவன் எனக்கென ஓர் அறையை ஈந்துள்ளான். (தலைவன் - பிரமன். அறை - உடம்பு) அதில் உள்ள பொத்தல்களோ அளவில்லன. (மயிர்க்கால்கள்) ஆயினும் அந்த அறைக்குள்ளே சிறிதே ஒளிபுகாது இருட்டிக் கிடப்பது வியப்பைத் தருகின்றது. (ஞானம் உடம்பு வழியாக வாராமை தெளிவு,) இந்த இருட்டறையிலேதான் என்னுடைய காலமெல்லாம்போய் ஆக வேண்டும் என்றால், அஃது எத்துணைத் துன்பத்தைத் தரும் என்பது சொல்லவேண்டுவதில்லை. ஆயினும் இறைவன் என்னை அவ்வறை யிற்றானே யிருந்து காலந் தள்ளாமல் காக்கத் திருவுளம் பற்றுவா னாயின், உடனே எனக்கு அளவுட்படாத கலத்தையுடைய ஒரு பெரிய மாளிகையைத்தரின் ஒப்பற்ற பெரியதோர் இன்பம் கிடைத்துவிடும். (அம்மாளிகை வியாபகப் பொருளாகிய திருவருள். இன்பம், சிவானந்தம்.)

விளக்கவுரை

'திருவுளம் பற்றுவானா' என்பது குறிப்பெச்சம். 'அவ் விருட்டறை' எனச் சுட்டிக் கூறினமையால், 'அஃது ஒருவனால் தரப் பட்டது' என்பது பெறப்பட்டது. 'அறை' என்றார், எண்சாண் நீளமும் இருசாண் அகலமுமே உடைமையின். ஏகுதல் - செல்லுதல், காலம் போக்குதல்.

'பீழை' என்பது குறுகி நின்றது. மூன்றாம் அடியில் 'இல்லி' என்றது ஆகுபெயராய் அவற்றையுடைய அறையைக் குறித்தது. 'காத்தல்' என்பது அதன் காரணம் உணர நின்றது.
இதனால், 'ஐந்திந்திரியத்தை அடக்குதற்குத் திருவருள் துணை புரிய வேண்டும்' என்பது கூறி அத்துணை கிடைத்தல் அருமையாதலின் ஐந்திந்திரியங்களை அடக்குதலும் அருமையாதல் கூறப்பட்டது. திருவருள் துணைகிடைத்தலின் அருமை முன் மந்திரத்தில் கூறியவாற்றால் இனிது விளங்கும்.

விதியின் பெருவலி வேலைசூழ் வையம்
துதியின் பெருவலி தொல்வான் உலகம்
மதியின் பெருவலி மானுடர் வாழ்க்கை
நிதியின் பெருவலி நீர்வலி தானே. *#1993*

உலகில் அறத்திற்கும் இன்பத்திற்கும் காரணமாய் உள்ள பொருளின் வலிமைக்குக் காரணம் மழையின் வலிமையே யாகும். அதுபோல, கடல் சூழ்ந்த நிலவுலகில் உள்ள அனைத் துயிர்களின் வாழ்க்கை வலி அயன் விதித்த விதியின் வலிமையும், அவ்வுயிர்களுள் மக்கள் உயிர்களின் வாழ்க்கை வலிமைக்குக் காரணம் அவர்களது ஆறாவது அறிவின் வலிமையும், சுவர்க்க லோகத்தவரது வாழ்க்கையின் வலிமைக்குக் காரணம் அவர்கள் இந்நிலவுலகில் செய்த பல தெய்வ வழிபாடுகளின் வலிமையும், சிவலோகத்தவரது வாழ்க்கையின் வலிமைக்குக் காரணம் அவர்கள் இந்நிலவுலகில் செய்த சிவவழிபாட்டின் வலிமையுமாகும்.

விளக்கவுரை

ஆகவே, 'ஐந்திந்திரியங்களை அடக்கியொழுகி அதனால் சிவலோகத்தை அடைதற்கு வழி சிவ வழிபாடேயாம்' என்பது கருத்து. ஈற்றடி எடுத்துக்காட்டுவமை யாதலின் அதனை முதற்கண் கூட்டியுரைக்க. 'நீரின்று அமையாது உலகு எனின் அந்நீர் வான்இன்று அமையாதது' *(திருக்குறள், 20)* பற்றி, 'நீர்' என்பதற்கு 'மழை' எனப் பொருள் உரைக்கப்பட்டது. 'விதியை மதியால் வெல்லலாம்' என்பது உலக மொழியும் *(பழமொழி)* 'ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றித் தாழா துஞற்று பவர்' என்பது ஆசிரிய மொழியும் *(திருக்குறள், 620)* ஆகையால் 'மானுடர் வாழ்க்கைக்குக் காரணம் மதியின் பெருவலி' என்றார். 'வானுலகம்' என்பதை 'விண்ணுலகம்' எனவும், 'மேலான உலகம்' எனவும் இரட்டுற மொழிந்து கொள்க. ஐந்திந்திரியங்களை அடக்கிப் பெறும் பயன் கூறுவார், அவற்றை அடக்காதோர் பெறும் பயனையும் உடன் கூறினார். அடக்கிப் பெறும் பயனது சிறப்பு விளங்குதற்கு. 'துதி' என்றது உபலக்கணம். 'நதியின் பெருவலி நார்வலி தானே' எனப் பாடம் ஓதி, 'நாரம்' என்பது அம்முக்

குறைந்து நின்றது எனினும் ஆம்.
இதனால், முன் மந்திரத்தில் கூறிய பொருள் உவமை முதலியவற்றால் நன்கு வலியுறுத்தப்பட்டது.

*9.33.*ஐந்திந்திரியம் அடக்கும் முறைமை

குட்டம் ஒருமுழம் உள்ளது அரைமுழம்
வட்டம் அமைந்ததோர் வாவியுள் வாழ்வன
பட்டன மீன்கள் பரதன் வலைகொணர்ந்து
இட்டனன் யாம்இனி ஏதம் இலோமே. *#1994*

ஒவ்வொரு மனித உயிரையும் ஒவ்வொரு நீர்வாழ் உயிராகக் கருதினால் அவ்வுயிர் வாழ்வதற்கு உள்ள குளமும் ஒரு சாண் குறுக்களவுடைய வட்ட வடிவினதாய்த் தோன்றும். எனவே அதன் ஆழமும் ஒரு சாணளவே உள்ளதாக மதிக்கப்படும். ஆயினும் அவ்வாறின்றி ஒரு சாணுக்குமேல் கூடுதலாக ஒரு முழ ஆழம் உள்ளது. (குளம் - முகம். ஆழம் கழுத்திற்குக் கீழ் மூலாதாரம் வரை உள்ள இடம்.) மேற்குறித்த குளத்தில் ஐந்து கொடிய மீன்கள் உள்ளன. (அவை அந்நீர் வாழ் உயிரை அமைதியாக வாழ விடாமல் அலைக்கழிப்பன. மீன்கள், (ஐம்பொறிகள்) இந்த நிலைமை எமக்குந்தான் உள்ளது. இதனை அறிந்த ஓர் வலைஞன் எம்மிடத்தில் இரக்கங்கொண்டு வலையைக் கொணர்ந்து வீசினான். மீன்கள் தப்ப முடியாமல் அவ்வலையில் அகப்பட, வலைஞன் அவைகளைத் தான் எடுத்துக் கொண்டான். (சிவன் கருணை கூர்ந்து தனது சத்தியைச் செலுத்தி எமது ஐம்பொறிகளைத் தன்னையே பற்றியிருக்கச் செய்தான்.) அதனால் யாம் துயர் ஒழிந்தோம்.

விளக்கவுரை

எனவே, ஐந்திந்திரியங்களை அடக்குதற்கு இறைவனது திருவருளைப் பற்றி நிற்றலே வழி என்றதாயிற்று. 'வட்டம்' என்பதன் பின் 'ஆய்' என்பது வருவிக்க. ஐம்பொறிகளும் அமைந்த உறுப்பு முகம் ஆகையால் அதனையே மனித உயிர்க்கு இட மாகக் கூறினார். எனினும் ஏனைய பகுதிகளை, 'குட்டம்' என்பதனால் தழுவினார். குட்டம் - ஆழம். 'பரதவன்' என்பது இடைக் குறைந்து நின்றது. அவனது சிறப்புணர்த்தும் 'ஓர்' என்பது ஆற்றலால் வந்து இயைந்தது. 'இடுதல்' அதன் காரியம் தோன்ற நின்றது. ஏதம் - துன்பம்.
இதனால், 'ஐந்திரியங்களை அடக்கும் முறைகளுள் நேரிதாவது' இது என்பது கூறப்பட்டது.

கிடக்கும் உடலில் கிளர்இந் திரியம்
அடக்க லுறுமவன் றானே அமரன்
விடக்கிரண் டின்புற மேவுறு சிந்தை

நடக்கில் நடக்கும் நடக்கு மளவே. ***#1995***

நாம் நடத்தினால் நடந்து, கிடத்தினால் கிடப் பதாகிய உடம்பை நம் விருப்பத்தின் படியே நடத்திட ஒட்டாது, அதினின்றும் எழுகின்ற ஐந்து இந்திரியங்களும் கிளர்ச்சி செய் கின்றன. அக்கிளர்ச்சியை அடக்குபவனே மனிதருள் தேவனாவான். அவ்வாறின்றி, அக்கிளர்ச்சியின் வழிப்பட்டு நமது உடம்பாகிய ஒரு மாமிச பிண்டத்துடன் இன்னொரு மாமிச பிண்டத்தை அணைத்து இன்பம் அடைய விரும்புவனவாய் உள்ளன தமது மனங்கள். அந்த மனத்தின் வழியே நாம் நடந்து கொண்டிருந்தால் நமது உடம்புகள் அவற்றிற்கு வரையறுத்த நாள் வரையில் நடந்து பின்பு வீழ்ந்துவிடும்.

விளக்கவுரை

'பின்பு நாம் பெறுவது யாது' என்பது குறிப்பெச்சம். 'எனவே, உடம்பு நடக்கும் காலத்திலே மனத்தை அடக்கி அது வழியாக இந்திரியங்களையும் அடக்கிப் பயன் எய்துதல் வேண்டும்' என்பதாம். 'அப்பயன் அமரராதல்' என்பது கூறப்பட்டது. 'அடக்கம் அமரருள் உய்க்கும்' (திருக்குறள், *121)* என்று அருளினமை காண்க. உயிருள்ள உடம்பை 'விடக்கு' என்றார், அதனது இழிவு தோன்றுதற்கு எனவே, 'அதனால் வரும் இன்பம் அருவருப்புடையது' என்பதாம். விடக்கு, மாமிசம். மற்றொரு விடக்காவது ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணுமாம், கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலன்களையும் ஒருங்கேயுடைத்தாயது இணை விழைச்சு இன்பமாகலின், அதனையே விலக்கினார். விலக்கவே ஏனை இன்பங்கள் தாமே விலக்குண்டன. 'சிந்தை' என்பதற்குப் பின், 'பின்' என்பது வருவிக்க. 'நடக்கும்' என்னும் பயனிலையை இறுதியிற் கூட்டி, அதற்கு 'அவ்விடக்கு' என எழுவாய் வருவிக்க. 'நடக்கு மளவும்' என்பதற்கு உண்மைக் காரணமாகாத உயிர்ப்பினை எழுவாயாக இயைபின்றி வருவிப்பாரும் உளர்.

இதனால், 'உடம்புள்ள பொழுதே இந்திரியங்களை அடக்கி உயர்நிலை பெறல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை
அஞ்சும் அடக்கில் அசேதன மாம்என்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே. ***#1996***

'ஐம்பொறிகளையும் அடக்குதல்' என்பதற்கு, 'அவற்றைக் கெடுத்தல்' எனப்பொருள் செய்து, 'அவற்றை அடக்கு, அடக்கு' என மாணாக்கர்க்கு வலியுறுத்திக் கூறும் ஆசிரியர் உண்மை ஞானாசிரியர் ஆகார். ஏனெனில் அவ்வாறு அடக்கி உயர்நிலை பெற்றவர் வானுலகத்திலும்

இல்லை. அதற்குக் காரணம் ஐம் பொறிகளைக் கெடுத்தொழித்தால் அவற்றால் அறிந்துவருகின்ற ஆன்மா அறிவற்ற சடம்போல் ஆகிவிடும். அதனையறிந்து யான் அவற்றைக் கெடுத்திடாது செயற்பட வைத்தே பெறுகின்ற ஞானத்தை அறிந்தேன்.

விளக்கவுரை

அந்த ஞானமாவது அவற்றை மனம் சென்றவழிச் செல்லவிடாது, அருளாசிரியர் அறிவுறுத்திய வழியிற் செல்லச் செய்தலாம்.
அருளாசிரியர் அறிவுறுத்தல் பின்வருமாறு அமையும்.
'ஆமாத்தூர் அம்மானைக்
காணாத கண்ணெல்லாம் காணாத கண்களே'-*தி.2 ப,44 பா.4*
' ஆமாத்தூர் அம்மானைக்
கூறாத நாவெல்லாம் கூறாத நாக்களே' -*தி.2 ப,44 பா.7*
'ஆமாத்துர் அம்மானைக்
கேளாச்செவியெல்லாம் கேளாச் செவிகளே'-*தி.2 ப,44 பா.8*
'கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன் தன்னை' -*தி.4 ப,9 பா.2*
'செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான்திறம் எப்போதும்
செவிகாள் கேண்மின்களோ' -*தி.4 ப,9 பா.3*
'வாயே வாழ்த்து கண்டாய் - மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும் பிரான்தன்னை
வாயே வாழ்த்து கண்டாய்' -*தி.4 ப,9 பா.5*
இம்மந்திரம் சொற்பொருட் பின்வருநிலையணியாய் வந்தது.
இதனால், ஐந்திந்திரியங்களை அடக்குதல் பற்றிய தவறாம் முறைமையை விலக்கி, நேரிய முறைமை தெரித்துணர்த்தப்பட்டது.

முழக்கி எழுவன மும்மத வேழம்
அடக்க அறிவென்னும் தோட்டியை வைத்தேன்
பிழைத்தன ஓடிப் பெருங்கேடு மண்டிக்
கொழுத்தன வேழம் குலைக்கின்ற வாறே. ***#1997***

ஐந்திந்திரியங்களாகிய மத யானைகள் தறியில் கட்டுண்ணாது பிளிறிக்கொண்டு தாம் நினைத்தபடி செல்லும் இயல் புடையன. அதையறிந்து நான் அவைகளை அடக்கி நேரிய வழியில் செலுத்துதற் பொருட்டு ஞானமாகிய அங்குசத்தைப் பயன் படுத்தினேன். எனினும் அவைகள் அதையும் மீறித் தம் விருப்பப்படி ஓடித் தமக்கு விருப்பமான உணவை அளவு கடந்து உண்டு, அதனால் மேலும் மதம் மிகுந்து தீய

குணத்தை மிக அடைந்து என்னை நிலைகுலையச் செய்யுமாறு பெரிது.

விளக்கவுரை

'அந்நிலை சொல்லுக் கடங்காது' என்பது குறிப் பெச்சம். 'ஐந்திந்திரியமாகிய வேழம்' என்பது அதிகாரத்தால் வந்து இயைந்தது. இல்லையேல், 'வேழம் எனப்பட்டன யாவை' என்பது விளங்காமை யறிக. 'உரன் என்னும் தோட்டியால் ஓர் ஐந்தும் காப்பான்' *(திருக்குறள், 24)* என இவ்வாறு வருதலே மரபாகலின், அறிவென்னும் கோட்டையை வைத்தேன் என்பது பாடமாகாது. 'அறிவென்னும் தோட்டியை வைத்தேன்' என்பதே பாடம் என்க. அறிவு, ஞானாசிரியரால் அருளப் பட்ட அறிவென்க. அந்த அறிவு முதிர்ந்து முறுகாமையால் கூர்மை செய்யப் பெறாத தோட்டிபோல் ஆய்விட, யானைகள் அதற்கு அடங்காது ஓடின என்க. இவ் யானைகட்கு உணவாவன அவற்றிற்குரிய புலன்கள். அவற்றை உண்ணுந்தோறும் அவாவே மேன்மேல் எழுதலால் 'கொழுத்தன' என்றார். பின் வந்த 'வேழம்' என்பது, 'அவை' என்னும் சுட்டுப் பெயரளவாய் நின்றது. 'பெருங்கேடு மண்டி' என்பதைப் பின்வந்த 'வேழம்' என்பதன் பின்னர்க் கூட்டியுரைக்க. 'கேடு' என்றது கேடு பயக்கும் குணத்தை. பாட்டின் இறுதியில், 'பெரிது' என்பது சொல்லெச்சமாய் எஞ்சி நின்றது.
இதனால், 'அருளாசிரியர் அறிவுறுத்தவழியால் ஐந்திந் திரியங்களை அடக்க மாட்டாது புறக்கணிப்பாய் இருப்பின் அவற்றால் பெருங்கேடு விளையும்' என்பது கூறப்பட்டது.

ஐந்தில் ஒடுங்கில் அகலிட மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருந்தவ மாவது
ஐந்தில் ஒடுங்கில் அரன்பத மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருளுடை யாரே. ***#1998***

இந்திரியங்களாகிய யானைகள் ஐந்தும் மதம் பிடித்துத் திரியாமல் ஆன்ம அறிவாகிய கூடத்திற்குள்ளே அடங்கி யிருக்குமாயின் அதுவே அறம், தவம், இறையுலகப் பேறு, ஞானம் எல்லாமாம்.

விளக்கவுரை

'ஐந்து' என்பன தொகைக் குறிப்பு, அவை முன்னை மந்திரங்களின் தொடர்ச்சியால் 'யானை' எனப் பொருள் தந்து, உருவக வகையால் இந்திரியங்களை உணர்த்தின. 'அகலிடம்' என்றது ஆகுபெயரால், உலகியல் எனப் பொருள் தந்து அறத்தை உணர்த்திற்று. பின்னர் 'தவம்' என வருதலால் அறம் இல்லறமாயிற்று. பதம் - பதவி. அருள் - சிவஞானம். 'இவை யாவும் பொறியடக்கம் இல்லாத பொழுது விளையா' என்றற்கு, பொறியடக்கத்தையே இவையாக உபசரித்துக்

கூறினார். 'இல்லின்கண்' என ஏழாவது விரிக்க. முன்மந்திரத்தில் 'அறிவென்னும் தோட்டி' என்றதனால், இங்கு 'இல்' எனப்பட்டதும் அஃதேயாதல் விளங்கும். இங்கும் சொற்பொருட் பின்வருநிலையணி வந்தது.
இதனால், எல்லா நன்மைகட்கும் இந்திரிய அடக்கம் இன்றியமையாததாதல் கூறப்பட்டது.

பெருக்கப் பிதற்றிலென் பேய்த்தேர் நினைந்தென்
விரித்த பொருட்கெல்லாம் வித்தாவ துள்ளம்
பெருக்கிற் பெருக்கும் சுருக்கிற் சுருக்கும்
அருத்தமும் அத்தனை ஆய்ந்துகொள் வார்க்கே. ***#1999***

'உலகம் நிலையற்றது' என்பதைக் கூறும் நூல்களைப் பலவாக எடுத்துச் சொல்லி, அவற்றின் பொருளையும் பலவாறாக விளக்கிப் பேசினாலும், 'உலகம் கானல் போல்வது' என்பதைக் கல்வியளவிலும் கேள்வியளவிலும் உணர்ந்தாலும் அவை யெல்லாம் இந்திரிய அடக்கத்திற்கு நேர்க்கருவியாவன அல்ல. ஏனெனில், நிலையாதவற்றின்மேல் அவாக்கொண்டு ஓடி அவற்றுள் முன்னர் ஒன்றைப் பற்றிக் கிடந்து, பின்பு அதனை விட்டு மற் றொன்றின்மேல் தாவி அதனைப் பற்றிக்கிடந்து இவ்வாறு முடிவின்றிச் செல்வது மனமே. அதனால் அஃது அவ்வாறு முடிவின்றி ஓட விட்டால், அது புலனுணர்வை முடிவின்றித் தோற்றுவித்துக் கொண்டேயிருக்கும். மனத்தை ஓடவிடாது நிறுத்திவிட்டால், புலன் உணர்வின் தோற்றமும் இல்லையாய் விடும். ஆகையால் மனத்தை யடக்குதலே இந்திரிய அடக்கத்திற்கு நேர்க்கருவியாகும். 'இந்திரியங்களை அடக்குமாறு எவ்வாறு' என ஆராய்பவர்க்கு அறிய வேண்டிய பொருளாயிருப்பது அவ்வளவே.

விளக்கவுரை

பிதற்றுவது வாய் ஆதலின், அதற்கு ஏற்புடைய 'நூல்' என்பது கொள்ளப்பட்டது. நினைதல் அவற்றின் பொருளையேயாம். 'பேய்த்தேர்' என்பதன் பின் 'ஆதலை' என ஆக்கமும் உருபும் விரித்து முதற்கண்வைத்து உரைக்க. 'விரித்த பொருள்' எனப் பின்னர் வருதலின், 'பேய்த்தேராவனவும் அவையேயாதல் தெளிவு. 'பிரபஞ்சம்' என்பது 'விரிவுடையது' என்னும் பொருளதாதலின் அது பற்றி, 'விரித்தபொருள்' என்றார். 'பொருள்' என்றது அவைபற்றிய உணர்வை. ஏனெனில் பெருக்கில் பெருகுவதும், சுருக்கில் சுருங்குவதும் அதுவேயாகலின். இதனால், 'இந்திரிய அடக்கமாவது மன அடக்கமே' என அதன் உண்மை கூறப்பட்டது.

இளைக்கின்ற வாறறிந் தின்னுயிர் வைத்த

கிளைக்கொன்றும் ஈசனைக் கேடில் புகழோன்
அளைக்கொன்ற நாகம்அஞ் சாடல் ஒடுக்கின்
துளைக்கொண்ட தவ்வழி தூங்கும் படைத்தே. *#2000*
இன்பத்தை நுகர்ந்து இனிதே வாழ்தற்கு உரியன வாகிய உயிர்கள் அவ்வாறின்றித் துன்பத்திற் கிடந்து துயர் உறுதலை அறிந்து அவை அத்துன்பத்தினின்றும் நீங்குதற்குரிய வழியை அமைத்துக் கொடுத்து, அதனாலே உறவாதற்குப் பொருந்தியவன் தானேயாய் நிற்கின்ற இறைவனைப் புகழ்ந்து போற்றி அதனால் தானும் என்றும் அழியாப் புகழைப் பெறுகின்ற அறிவன், ஐம்பொறிக ளாகிய பாம்புகள் ஐந்தும் தாம் படம் எடுத்து ஆடுகின்ற ஆட்டத்தை விடுத்துத் தமது புற்றிலே சென்று அடங்கிக் கிடக்கும்படி அடக்கி விடுவானாயின், அதன்பின், அவனும் துளையை உடைய அந்தப் புற்றுவழியாகவே இன்பம் பெற்று அமைதியை அடைவான்.

விளக்கவுரை

உயிருக்கு, 'இன்னுயிர்' எனப் புணர்த்த அடை கருத்துடை அடை. அதனை முதற்கண்கூட்டி யுரைக்க. 'வழி' எனப் பின்னர் வருதலின் முன்னர் வாளா, 'வைத்த' என்றார் ஆகலின், அதனை முன்னரும் கூட்டி 'வழி வைத்த ஈசனை' என்க. 'ஈசனைப் புகழும் புகழோன்' என ஒருசொல் வருவித்து முடிக்க. கிளைக்கு ஒன்றுதல் - சுற்றம் ஆதற்குப் பொருந்துதல். 'அளைக்கு' என்பது, 'அளைக்கண்' என்பதன் மயக்கம். 'கேடில் புகழோன் நாகம் அஞ்சு அளைக்கண் ஒன்ற ஆடல் ஒடுக்கத் தூங்கும், எனக் கூட்டி முடிக்க. 'தூங்கும்' எனச் செய்யும் என் முற்று இங்கு ஆண்பாலில் வந்தது. 'வழி' என்றதும், 'அளை' என்றதும் சுழுமுனையை என்பது தோன்றுதற் பொருட்டு, 'துளைக்கொண்டது அவ்வழி' என்றார். 'அவ்வழியானே' என உருபும், தேற்றேகாரமும் விரிக்க. வினையொடு தொகும் மூன்றாவதன் தொகையிலும் சிறுபான்மை வல்லினம் மிகாது. இனி, 'அவ்வழித் தூங்கும்' எனப் பாடம் ஓதுதலும் பொருந்தும். படைத்தல் - உண்டாக்கிக் கொள்ளுதல். 'படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணும் - உடைப்பெருஞ் செல்வராயினும்'(புறநானுறு, *188)* என்றது காண்க. மேல், 'ஐந்திந்திரியங்கட்கு இடமாவது ஆன்ம அறிவு' எனக்கூறி, இங்கு, 'அவற்றிற்கும் இடம் சுழுமுனை நாடி' என்றது, 'நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே' (புறநானுறு, *186)* என்றதில், நெல் நீர்போல நேரே உணவாகாதாயினும், வழிமுறையால் உணவாதல் பற்றிப் பான்மை வழக்கமாகக் கூறியது போல, யோகப் பயிற்சியால் வழிமுறையில் இடமாதல் பற்றிக் கூறியதாகலின் முரணில்லை என்க. யோகி தூங்குதற்கு இடமும் அதுவாகக் கூறியதும் அன்னதே.
இதனால், வாசியோகமும் ஐந்திந்திரியமும் அடக்குதற்கு வழியாதல்

கூறப்பட்டது.

பாய்ந்தன பூதங்கள் ஐந்தும் படரொளி
சார்ந்திடு ஞானத் தறியினிற் பூட்டிட்டு
வாய்ந்துகொள் ஆனந்த மென்னும் அருள்செய்யில்
வேய்ந்துகொள் மேலை விதியது தானே. ***#2001***

பூத காரியங்களாகிய ஐம்புலப் பொருள்கள்மேல் மதங்கொண்டு செல்கின்ற ஐந்து இந்திரியங்களாகிய யானைகளை அவற்றின் வழியே செல்கின்ற உயிரினது அறிவு, தான் அடையத் தக்க தாகிய திருவடி ஞானமாகிய தறியை அடைந்து அதன்கண் கட்டிவிட, அதனைக் கண்டு, அறிவர் பலரும் அறிந்து அடைகின்ற அருளானந் தத்தை இறைவன் தருவானாயின், அதுவே, யாவரும் மேற்கொள்ளத் தக்க முதல் நூல் விதியின் பயனாகும்.

விளக்கவுரை

'பூதங்கள்' கருவியாகு பெயர். 'பூதங்களின் மேல் பாய்ந்தனவாகிய ஐந்தினையும் ஞானத் தறியினில் பூட்டிட்டு, அருள் செய்யில் அதுவே மேலை விதி' என இயைத்துப் பொருள் கொள்க. 'ஐந்து' என்பது தொகைக் குறிப்பாய் ஐந்து இந்திரியங்களைக் குறித்தது. படர்தல் - செல்லுதல். 'ஒளி' என்றது ஆன்ம அறிவை. சார்ந்திடும் - சாரத் தக்க. ஞானத்தை, 'தறி' என்றதற்கு ஏற்ப இந்திரியங்களை 'யானை' என்னாதது ஏகதேச உருவகம். 'ஒரு கம்பத்திலே இரண்டு யானைகள் கட்டப்படுதல் கூடாது' என்பது உலகியல். அதற்கு மாறாக 'ஒரு தறியில் ஐந்து யானைகளைக் கட்டல் வேண்டும்' என்றதனால், இத்தறி உலகத்தில் இல்லாததோர் அதிசயத் தறியாயிற்று. 'பூட்டியிட்டு' என்பது குறைந்து நின்றது. அதனை, 'பூட்டி யிட' எனத் திரித்துக் கொள்க. 'ஆய்தல்' என்னும் பயனிலைக்கு 'இறைவன்' என்னும் எழுவாயும் வருவிக்க. வேய்தல் - தலையிற் சூடிக் கொள்ளுதல். அஃது இங்கு மேற்கொள்ளுதலைக் குறித்தது. விதியின் பயனை, 'விதி' என்றது ஆகுபெயர். தான், அசைநிலை. ஏகாரம் தேற்றம்.

இதனால், ஐந்து இந்திரியங்களை அடக்கும் முறையும், அடக்கினால் விளையும் பயனும் வகுத்துக் கூறப்பட்டன.

நடக்கின்ற நந்தியை நாடொறு முன்னிப்
படர்க்கின்ற சிந்தையைப் பைய ஒடுக்கிக்
குறிக்கொண்ட சிந்தை குறிவழி நோக்கில்
வடக்கொடு தெற்கும் மனக்கோயி லாமே. ***#2002***

உயிர் செய்யும் செயல் யாவற்றிலும் தானும் உடனாய் நின்று செய்யும் சிவனை அறியாது அனைத்துச் செயல் களையும் தானே செய்வதாகக் கருதி மயங்குகின்ற உயிர் அம் மயக்கத்தினின்றும் நீங்கி அவனை

இடைவிடாது உணர்ந்து நிற்பின், ஐம்புலன்களை நாடி ஓடுகின்ற மனம் மெல்ல மெல்ல அதனை விடுத்து அவனிடத்தே சென்று ஒடுங்கும். அங்ஙனம் ஒடுங்கிய நிலை ஒருவர்க்கு வாய்க்குமாயின், உலகில் உள்ள அனைத்துக் கோயில் களும் அவரது மனமாகிய அந்தக் கோயிலாகவே அமைந்துவிடும்.

விளக்கவுரை

'படர்க்கின்ற' என்பதில் உள்ள ககர ஒற்று எதுகை நோக்கி விரிக்கப்பட்டது. 'சிந்தையைப் பைய ஒடுக்குமாறு எவ்வாறு' என்பதற்கு விடை மூன்றாம் அடியில் தரப்பட்டது. ஆகவே, 'சிந்தை குறிவழி நோக்கி ஒடுங்குமாறு பைய ஒடுக்கி ஆம்' என வினை முடிபு செய்தல் கருத்தாயிற்று. 'குறியல்லாததனைக் குறியாகக் கொண்ட சிந்தை உண்மையைக் குறியை நோக்கில்' என்பது மூன்றாம் அடியில் கூறப்பட்டபொருள். குறி- குறிக்கோள். உண்மைக் குறி, சிவன். 'கோயில்' எனப்பின்னர் வருதலின், 'வடக்கு, தெற்கு' என்பனவும் ஆகுபெயராய் அத்திசையில் உள்ள கோயில்களையே குறித்தன. 'வடக் கொடுதெற்கு' என்றது, 'நிலம் முழுதும்' என்றபடி. 'அனைத்துக் கோயில்களும் மனக்கோயிலாகவே அமையும்' என்றது, 'அவற்றில் எல்லாம் சென்று வழிபடுவார்க்கு அளிக்கும் பயன்களையெல்லாம் சிவன் இவர்க்கு இருந்த இடத்தில்தானே அளிப்பான்' என்றதாம்.

c

சென்றன நாழிகை நாள்கள் சிலபல
நின்றது நீள்பொருள் நீர்மேல் எழுத்தொத்து
வென்று புலன்கள் விரைந்து விடுமின்கள்
குன்று விழஅதில் தாங்கலும் ஆமே. ***#2003***

வாழ்நாளில் கழிவன சில நாழிகைகள் போலத் தோன்றுகின்றன. ஆயினும் அவை உண்மையில் சிலவும், பலவுமான நாட்களாய் விடுகின்றன. நெடுங்காலம் நிற்பதுபோலத் தோன்றுகின்ற உடம்பு நீர்மேல் எழுத்துப்போல விரைய மறைவதாகின்றது. இதனை உணர்ந்து, 'அறிவுடையேம்' என உங்களை நீங்களே மதித்துக் கொள் கின்ற உலகீர், இளமையிற்றானே ஐம்புல ஆசையை வென்று, அப்புலன்களுக்குச் சார்பாய் உள்ள பொருள்களைத் துறந்து விடுங்கள். இல்லையேல், அவ்வாசையால் விளையும் வினைகள் மலைபோல வந்துவிழும்; அவைகளைத் தாங்க இயலாது.

விளக்கவுரை

'சென்றன' என்பதைப் பின்னரும் கூட்டுக. பிற பொருள்களைப் பற்றுதற்குக் கருவி உடம்பாதலின் அதன் நிலை யாமையே முதற்கண்

உணரத்தக்கது ஆகலின், 'பொருள்' என்றது அதனையே குறித்தது.நீர்மேல் எழுத்து ஒத்து 'நின்றது' என்றது, 'என்றும் நிற்பதாக நினைக்கப்படுகின்ற உடம்பு. நிற்கும் நிலை நீர்மேல் எழுத்து நிற்பது போன்றதுதான் என்றபடி. எனவே, நிலையில்லாததனை, 'நின்றது' என இகழ்ச்சியாகக் கூறியதாம். 'குன்று' என்பது உவமையாகு பெயராய், அதுபோலும் வினைக்கூட்டத்தைக் குறித்தது. அதில் - அந்நேரத்தில். ஏகாரம், எதிர்மறை வினாவாய் வந்தது.
இதனால், 'அறிவுடையராயினார் ஐந்திந்திரியங்களை இளமைக் கண்ணே அடக்கி நலம்பெறல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

போற்றிசைத் துப்புனி தன்திரு மேனியைப்
போற்றிசெய் மீட்டுப் புலன்ஐந்தும் புத்தியால்
நாற்றிசைக் கும்பின்னை யாருக்கும் நாதனை
ஊற்றுகை உள்ளத் தொருங்கலு மாமே. ***#2004***

சிவனது திருமேனியைத் துதிக்குமாற்றால் பருப் பொருள்களாய் உள்ள அவைகளைச் சார்ந்துள்ள புலன்களை விரும்பிச் செல்கின்ற மனத்தை அச்செலவினின்றும், மீட்டு, மீண்டும் அதனையே துதி. அங்ஙனம் துதித்தால், அப்பெருமானை அவனது ஆனந்தத்தைப் பொழிகின்ற மனத்திலே ஒன்றியிருக்கச் செய்தலும் கூடும்.

விளக்கவுரை

'புனிதன் திருமேனியைப் போற்றிசைத்துப் புலன் ஐந்தும் புத்தியால் மீட்டுப் போற்றிசெய்' என்க. பருப்பொருள்மேல் செல்கின்ற மனத்தைப் பருப்பொருள் வழியாகவே மீட்டலும், நிலை நிறுத்தலும் வேண்டும் என்பது பற்றி, 'திருமேனியைப் போற்றி செய்து மீட்டுப் போற்றி செய்' என்றார். 'புத்தியால்' என்றது, 'இஃதே அறிவாம்' என்றபடி. ஊற்றுகை - ஊற்றுதல்; பொழிதல், தொழிற் பெயர். இதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. ஊற்றுகை உள்ளம் - ஊற்றுதற்கு இடமாய் உள்ள உள்ளம். உம்மை, சிறப்பும்மை.
இதனால், 'திருமேனி வழிபாடு இந்திரிய அடக்கத்தைத் தரும்' என்பது கூறப்பட்டது.

தரிக்கின்ற நெஞ்சம் சகளத்தி னுள்ளே
அரிக்கின்ற ஐவரை யாரும் உணரார்
சிரிக்கின்ற வாறு சிலபல பேசில்
வரிக்கின்ற மைசூழ் வரையது வாமே. ***#2005***

சிவபெருமானது உருவத் திருமேனியினுள்ளே படிந்து நிற்றற்குரிய மனத்தை அங்ஙனம் நிற்க ஒட்டாமல் நச்சரித்துப் பெயர்க்கின்ற ஐம்புலன்களாகிய குறும்பரது தீச்செயலை உலகவர் யாரும் உணர்வதில்லை. அதனால் அங்ஙனம் உணராத நிலையில் இருந்து

கொண்டே கவலையின்றி ஒருவரோடொருவர் நகையாடிச் சிலவும் பலவுமாகிய பேச்சுக்களைப் பேசி அவர் பொழுது போக்குவாரேயானால் அவரது செயல் தனது நிலையான இயற்கைப் பொலிவுடன் விளங்கத் தக்கதாகிய மலையை நிலையாது நீங்கும் அழகையுடைய மேகங்கள் வந்து சூழ்ந்து மறைத்தல் போல்வதாகும்.

விளக்கவுரை

தரித்தல் - நிலையாக நிற்றல். 'சகளத்தினுள்ளே தரிக்கின்ற நெஞ்சத்தை அரிக்கின்ற ஐவர்' 'பேசில்' - என்றது, 'பேசுகின்றனர்' என்பதை அனுவாத முகத்தாற் குறித்தது. வரி - அழகு. மேகத்தின் அழகு சிறிது பொழுதில் அழியக்கூடியது. 'அதனால் சூழப் பட்டது' என்றதனால், மலையினது அழகு நிலைத்து நிற்பதாதல் குறிக்கப்பட்டது. 'உயிர் சிவத்தில் அழுந்திப்பெறும் அழகு இயற்கை யானது; ஆதலின் அஃது அழியாது' என்பதையும், 'ஐம்புலன்களின் மேல் சென்று பெறும் அழகு செயற்கையாதலின் அது சிறிது பொழுதில் அழியும்' என்பதனையும் குறித்தவாறு. 'மைசூழ்வரை யாம்' என்றாரேனும், 'மை வரையைச் சூழ்தலாம்' என்றலே கருத்து என்க.

இதனால், சிவனது உருவத் திருமேனியை இடைவிடாது நினைத்தலே ஐந்திந்திரியங்களை அடக்கும் முறையாதல் கூறப்பட்டது.

கைவிட லாவதொன் றில்லை கருத்தினுள்
எய்தி யவனை இசையினால் ஏத்துமின்
ஐவ ருடைய அவாவினில் தோன்றிய
பொய்வ ருடைய புலன்களும் ஐந்தே. ***#2006***

'ஐந்திந்திரியங்களை அடக்குதல் நம்மால் ஆகிற காரியம் அன்று' என இளைத்து, அதனைக் கைவிடுதற்குக் காரணம் சிறிதும் இல்லை. ஏனெனில், ஐந்திந்திரியங்களின் அவாவிற்குக் காரணமான நிலையற்ற பொருள்களில் பொருந்தியுள்ள புலன்களும் ஐந்திற்குமேல் இல்லை. அந்த ஐந்தையும் அடக்குதற்குச் செய்யத் தக்க உபாயமும் ஒன்றே ஒன்றுதான். அஃது ஒருபொழுதும் நம்மை விட்டு நீங்கிச் சேய்மையில் இல்லாது, எப்பொழுதும் நம் உள்ளத்திலேயே வீற்றிருக்கின்ற சிவனை நல்ல இசைப் பாடல்களால் துதிப்பதுதான். ஆகவே, அதனைச் செய்து இந்திரியங்களை அடக்கி, இன்பம் எய்துங்கள்.

விளக்கவுரை

கைவிடுதற்குச் செயப்படுபொருள் அதிகாரத்தால் வந்து இயைந்தது. 'ஒன்று' என்றது 'சிறிது' என்னும் பொருட்டாய் அவ்வளவிற்றான காரணத்தைக் குறித்தது. 'துதித்தலுக்கு இயற்பாக்களிலும் இசைப் பாடல்களே சிறந்தன' என்றற்கு, 'இசையினால் ஏத்துமின்' என்றார்.

'அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகள்தாம் அருளுமாறே' என அப்பரும் அருளிச் செய்தார். *(தி.4 ப.77 பா.3)* ஒருவர் ஒரு செயல் அன்றிப் பல செயல் செய்தல் உலகியலாய் இருக்க, 'ஐவர் ஐந்து செயலே செய்பவராகின்றனர்' என அவரது மெலிவு உணர்தற்கு, 'ஐவருடைய அவாவினில் தோன்றிய புலன்களும் ஐந்தே' எனவும், 'அவரை வெல்லுதற்குரிய உபாயமும் ஒன்றே; அதுவும் எளிதானதே' என்றற்கு, 'கருத்தினுள் எய்தியவனை ஏத்துமின்' எனவும் அருளிச் செய்தார்.

கற்றுக் கொள்வன வாயுள; நாவுள;
இட்டுக் கொள்வன பூவுள நீர்உள;
கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம்
எற்றுக்கோ நமனால் முனிவுண்பதே.

எனப் பிற இடங்களிலும் இங்ஙனம் எளிமையை உணர்த்துதல் காண்க. ஐந்திந்திரியங்களை, 'ஐவர்' என்றதுபோலப் பொய்ப்பொருள்களை அஃதாவது நிலையாத பொருள்களை, 'பொய்வர்' என்றார். 'ஐவர்' என்பதிற்போல, 'பொய்வர்' என்பதிலும் வகரமெய் பெயர் இடை நிலையாய் வந்தது. 'உடைய' இரண்டும் குறிப்புப் பெயரெச்சங்கள். முன்னதனை, 'ஆறாவதன் சொல்லுருபு' என்றலுமாம்.

இதனால், ஐந்திந்திரியங்களை அடக்கும் முறை அதனது எளிமை கூறி, 'அதனால் அதனைத் தப்பாது செய்து பயன் பெறுங்கள்' என வலியுறுத்தி முடிக்கப்பட்டது.

9.34.அசற்குரு நெறி

உணர்வொன் றிலாமூடன் உண்மைஓ ராதோன்
கணுவின்றி வேதா கமநெறி காணான்
பணிவொன் றிலாதோன் பரநிந்தை செய்வோன்
அணுவின் குணத்தோன் அசற்குரு வாமே. ***#2007***
இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

'அசற்குருவாய்' என்னும் பயனிலையை 'மூடன்' முதலிய எல்லாவற்றோடும் தனித்தனி கூட்டுக. 'உணர்வு' என்றது நல்லுணர்வை. 'ஒன்று' இரண்டும் 'சிறிது' என்னும் பொருளன. 'ஒன்றும்' என்னும் இழிவு சிறப்பும்மைகள் தொகுக்கப்பட்டன. உண்மை - பொருள்களின் உண்மையியல்பு. 'தத்துவம்' எனப்படுவது இதுவே. கணு - எல்லை, என்றது ஏகதேசத்தை. எனவே, 'சற்குரவ ராவார் வேதாகமங்களை முற்ற உணர்ந்திருப்பர்' என்பது போந்தது. பரநிந்தை, புறங்கூறல். அணு - உயிர். அதற்கு இயற்கையாய் உள்ளது அறியாமை. அஃதாவது உணர்த்தினும் உணர மாட்டாமையாம். 'கொடிறும் பேதையும் கொண்டது விடா' (தி.*8* போற்றித் திருவகவல், *63)* என்று அருளிச் செய்தது காண்க. 'கூறப்பட்ட குற்றங்களுள் ஒன்றையே உடையராயினும் அவர் சற்குருவாகாது, அசற்குரு வேயாவர்' என்றற்கு 'அசற்குருவாமே' என்பதனைத் தனித்தனி கூட்டிக் கொள்ள வைத்தார். அசத்தை உணர்த்துவோன் அசற்குரு.
இதனால், 'அசற்குருவாவரிடத்துக் காணப்படும் குற்றங்கள் இவை' என்பது கூறி, அவர் 'இன்னார்' என்பது உணர்த்தப்பட்டது.

மந்திரம் தந்திரம் மாயோகம் ஞானமும்
பந்தமும் வீடும் தரிசித்துப் பார்ப்பவர்ச்
சிந்தனை செய்யாத் தெளிவியாது ஊண் பொருட்டு
அந்தகர் ஆவார் அசற்குரு வாமே. ***#2008***

சற்குரவராதற்கு உரியன பலவற்றை உடையோரும் தமது உபதேசத்தை உணரும் தகுதியில்லாதோர்க்கு அவர் வழியாகப் பெறப்படும் சில பயன் கருதி அவரை விலக்கமாட்டாராய் அவர்க்கு உபதேசம் செய்வாராயின், அவரும் அறியற்பாலனவற்றை அறியாத அறிவிலிகளாய், அசற்குரவராய் விடுவர்.

விளக்கவுரை

மந்திரம் முத்தி நெறிக்குரிய மந்திரங்கள். தந்திரம், வேதாகமங்களில் உள்ள ஞானப் பகுதிகள். மாயோகம் - சிவயோகம். ஞானம் - சிவஞானம். இவ்விடத்து உள்ள உம்மையை 'மந்திரம்'

முதலியவற்றோடும் கூட்டுக. 'பந்தம், வீடு' என்றது, உண்மைப் பந்தத்தையும், உண்மை வீட்டையுமேயாம். 'தரிசித்துத் தெளிவி யாதோர்' என இயைக்க. இவ்வினையெச்சம் எண்ணுப் பொருளில் வந்தது. 'தரிசித்தும்' எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். பார்ப்பவர் - அறியத்தக்கவர். 'பார்ப்பவரை' என்னும் இரண்டன் உருபு உயர்திணைக்கண் தொகுக்கப்பட்டது. செய்யா - செய்து. 'ஊண்' என்றது உபலக்கணம். 'அந்தகர்' என்றது அகநோக்குப் பற்றி.
இதனால், 'சற்குரவர்க்கு ஆகாததொன்றினை உடையராயின் சற்குரவரும், அசற்குரவராவர்' என்பது கூறப்பட்டது.

ஆமா றறியாதோன் மூடன் அதிமூடன்
காமாதி நீங்காக் கலதி கலதிகட்கு
ஆமாறச் சத்தறி விப்போன் அறிவிலோன்
கோமான் அலன்அசத் தாகுங் குரவனே. ***#2009***

'தக்கது இன்னது; தகாதது இன்னது' என உணரும் உணர்வில்லாதவன் மூடன்' என்பது உலகம் அறிந்தது. ஆயினும், அவ்வாறு அவற்றை அறிந்தும் காமம் முதலிய குற்றங்களின் நீங்கி, நல்லவற்றைப் பற்றியொழுகும் நல்லொழுக்கம் இல்லாதவன் அறிவுடையவன் ஆயினும் அதிமூடன் ஆவான். இனிக்குற்றங்களின் நீங்கி வல்லவற்றையே கடைப்பிடித்தொழுகும் நல்லொழுக்கம் உடையனாயினும் நல்லனவற்றை மதித்து உவந்து ஏற்கும் பண்பின்றி அவற்றை உணர்த்துவோரையும் இகழ்கின்ற கீழ்மக்கட்கு நல்லுபதேசத்தைச் செய்வானாயின் அவனும் அறிவிலியேயாவான். ஆகையால் அத்தகையோனும் சற்குருவாகாது, அசற்குருவாயாவன்.

விளக்கவுரை

கலதி - கீழ்மகன். 'ஆமாறு' என்றதனானே அதன் மறுதலைப் பொருளும் போந்தது. நல்லன தீயனவற்றை அறிய மாட்டாதவன் மூடனாதல் இயல்பாகவே நன்கறியப்பட்டதாயினும், அவற்றை அறிந்தவனினும் அறிந்தவாற்றில் நிற்கமாட்டாதவன் அவனிலும் பெருமூடன் ஆதலை வலியுறுத்தி ஓதுதற் பொருட்டே இயல்பாக அறியப்பட்டதனை அனுவாதமாக எடுத்தோதினார்.
ஓதி யுணர்ந்தும், பிறர்க்குரைத்தும் தான் அடங்காப்
பேதையிற் பேதையார் இல். -திருக்குறள், *834*
என அருளினமை காண்க.
'கலதிகட்கு ஆமாறு அறிவிப்பின் அது பயன்படாது ஆகலின், அஃது அரும்பொருளை அழிவு செய்ததாம்' என்பதை,
'அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால்'-திருக்குறள், *720*
எனவும், 'ஆகவே, அவ்வாறு அறிவிப்பவன் அறிவிலியாவான்'

என்பதை,
'காணாதாற் காட்டுவான் தான்காணான்' -திருக்குறள், *849* எனவும் அருளிச்செய்தார் திருவள்ளுவர். கோமான் - தலைவன். இங்கு, 'தலைவன்' என்றது ஞானத்திற்குத் தலைவனாகிய சற்குருவை. 'அசத்தாகுங் குரவனே' என்றது, 'அசற்குருவே' என்றபடி. சற்குருவினின்றும் பிரித்தலின் ஏகாரம் பிரிநிலை.
இதனால், மேலது பிற சிலவற்றோடு ஒருங்கு வைத்து வலியுறுத்தப்பட்டது.

கற்பாய கற்பங்கள் நீக்காமல் கற்பித்தால்
தற்பாவம் குன்றும் தனக்கே பகையாகும்
நற்பால் அரசுக்கும் நாட்டிற்கும் கேடாகும்
முற்பாலே நந்தி மொழிந்துவைத் தானே. ***#2010***

சற்குருவாவான் தன்னை அடைந்த மாணாக்க னிடத்தில் உள்ள குற்றங்களை முதலில் நல்லனவற்றைக் கூறும் முறையால் நீக்கி அதன் பின்பே ஞானத்தை உணர்த்துதல் வேண்டும். அவ்வாறு செய்யாமலே ஞானத்தை உணர்த்தினால் தனது ஆசிரியத் தன்மையுங் கெட்டுத் தனது செய்கையே தனக்குத் தீங்காய் முடியும். அதனால் நாட்டில் புல்லரே தலையெடுப்பர் ஆதலின் அரசு நல்லரசாய் இருப்பினும் அதற்கும் கேடு விளையும். நாடும் தீய நாடாகி விடும். இதனைப் படைப்புக் காலத்திற்றானே சிவன் தனது ஆகமங்களில் சொல்லி வைத்துள்ளான்.

விளக்கவுரை

கற்பு - கல்வி. அது பின்னர் அம்முப்பெற்று, 'கற்பம்' என நின்றது. 'கல்வியாகிய கல்வி' என்றது, ஆசிரியர் கற்பியாது அவர் தாமே கற்ற சொந்தக்கல்வி' எனக் குற்றங்களைக் குறித்துநின்றது. குணம்போலக் குற்றம் பிறர்கற்பிக்க வேண்டாதுதானே தோன்றி வளர்வதாதலை அறிக. பாவம் - தன்மை. தனக்குத் தீங்காதலாவது, உணர்த்தப்பெற்றோரால் நன்கு மதிக்கப்படாமையும், உலகரால் பழியும் அடைதல்.
இதனால், கலதிகட்கு ஆமாறு அறிவிப்போர் அடையும் குற்றம் கூறப்பட்டது.

குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லுங் குருடர்
மருளூற்றுப் பாழ்ங்குழி வீழ்வர்முன் பின்அக்
குருடரும் வீழ்வர்கள் முன்பின் அறவே
குருடரும் வீழ்வார் குருடரோ டாகிலே. ***#2011***

குருடர் சிலர், வேறு சில குருடருடனே சேர்ந்து வழிச் செல்வார்களாயின் எல்லோருமாக 'முன், பின்' என்பதின்றி ஒருங்கே குழியில் விழுவதைத் தவிர வேறு என்ன நிகழும்! ஆகையால், சில குருடர்கள் வேறுசில

குருடர்களுக்கு 'நாங்கள் உங்கட்கு வழிகாட்டு கின்றோம்' என்றுசொல்லி அவர்கள் கையில் கோலைக் கொடுத்துத் தாங்கள் அக்கோலைப் பற்றிக் கொண்டு முன்னே செல்வாராயின், முதலில் வழிகாட்டும் குருடர் பாழ்ங்குழியில் வீழ்வர். பின்பு அவர்களால் அழைத்துவரப்பட்ட அந்தக் குருடர்களும் அந்தக் குழியிலே வீழ்வார்கள், (அது தான் நிகழும்.)

விளக்கவுரை

'முன்பின் அறவே' என்பது முதலாக உள்ளவற்றை முதலில் கொண்டு உரைக்க.
இம்மந்திரம் ஒட்டணியாய் நின்றது.
'அஞ்ஞானிகள் சிலர் தங்களைப் போலவே அஞ் ஞானிகளாய் உள்ள சிலரைக் குரவராக மதித்து அடைவார்களாயின் இருவரும் பிறவிக் குழியில் விழுவதைத் தவிர வீடுபேறாகிய கரையை அடையார்; அவருள்ளும் குரவராய் நின்றவரே முதலில் பிறவிக் குழியில் வீழ்வர்' என்பது இதனால் குறிக்கப்பட்ட பொருள்.
ஆதல் - ஒன்றாதல். 'ஆகில்' எனப் பின்னர் வருதலின் நான்காம் அடியில் முதற்கண் நின்ற குருடர் 'ஆகிய குருடர்' என்பது விளங்கிற்று.
அதன்கண் வந்த உம்மை இறந்தது தழுவிய எச்சம். முன் தந்திரத்தில் போந்த 'குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்' என்னும் மந்திரத்தை இதனோடு ஒப்பிடுக.
இதனால், அசற்குரவராயினார் பிறரையும் கெடுத்தல் கூறப்பட்டது.

***9.35.*சற்குரு நெறி**

தாள்தந் தளிக்கும் தலைவனே சற்குரு
தாள்தந்து தன்னை அறியத் தரவல்லோன்
தாள்தந்து தத்துவா தீதத்துச் சார்சீவன்
தாள்தந்து பாசம் தணிக்கும் வசனத்தே. ***#2012***

சற்குருவே தன்னையடைந்த மாணாக்கர்க்குத் திரு வருளை வழங்கிக் காக்கும் பதியாவான். அவனையடைந்த மாணவனுக்கு அவன் தனது திருவடியைச் சென்னிமேல் சூட்டித் திருவடி ஞானத்தை அருளுமாற்றால் மாணவன் தனது உண்மை இயல்பை அறியும்படி செய்யவல்லான். அவன் தனது ஒரு வார்த்தை யாலும், திருவடி சூட்டலாலும் தன்னை யடைந்த மாணவனாகிய பசுவை மாயா கருவிகளினின்றும் விடுவித்து, ஆணவக் கட்டினையும் அவிழ்த்துவிடுவான்.

விளக்கவுரை

'அத்தன்மைகளால் அவனது சற்குருவாம் தன்மையைத் தெளிக' என்பது குறிப்பெச்சம். திருவருளை, 'திருவடி' என்றல் மரபு. தாள் முயற்சியும் ஆம்

ஆதலின் அது 'முயற்சி' என்னும் குறிப்பினையும் உடையது. திருவருள் எல்லாம் வல்லதாதலை நினைக. 'குருவே சிவன்' (தி.10 மந்.6) 'சற்குருவே தலைவன்' என மொழிமாற்றி யுரைக்க. தன்னை அறிந்தபின் தலைவனை அறியத் தடையில்லை ஆதலின் அதனையே கூறி யொழிந்தார். 'சீவன்' என்றது, 'பசு' என்றபடி, 'அவன் வசனத்தாலும், தாள் தந்தும் தத்துவாதீதத்துப் பாசம் தணிக்கும்' என்க. முதலடி ஒழிந்த ஏனை அடிகளில் 'தாள் தந்து' என வந்தது சொற்பொருட் பின்வருநிலையணி.

இதனால், 'சற்குருவினது பெருமை அவனது செயலால் விளங்கும்' என்பது கூறப்பட்டது.

தவிரவைத் தான்வினை தன்னடி யார்கோள்
தவிரவைத் தான்சிரத் தோடுதன் பாதம்
தவிரவைத் தான்நமன் தூதுவர் கூட்டம்
தவிரவைத் தான்பிற வித்துயர் தானே. ***#2013***

(சற்குரு) தன் அடியார் வினை நீங்கவும் ஒன்பான் கோள்களின் தீங்கு நீங்கவும் யம தூதரது கூட்டம் விலகி ஓடவும், முடிவாகப் பிறவித் துன்பம் நீங்கவும் தனது திருவடிகளை அவர்தம் தலையோடு பொருந்துமாறு வைத்தருளினான்.

விளக்கவுரை

இப்பொருட்கேற்ற கொண்டு கூட்டினை அறிந்து கொள்க. இதனுள்ளும் சொற்பொருட் பின்வருநிலையணி வந்தது. 'சற்குரு' என்பது அதிகாரத்தால் வந்து இயைந்தது. அஃது, 'ஒருபாற் கிளவி ஏனைப்பாற் கண்ணும் வரும்' (தொல். பொருள், பொருளியல்) முறைமையில் வந்ததாகலின் இம்மந்திரமும் சற்குருவினது பெருமை கூறியதாதல் அறிக.

இதனால், சற்குரு அருளால் வீடுபேறாகிய முடிநிலைப் பயனேயன்றி, இடைநிலைப் பயனாகிய இம்மைப் பயன்களும் உளவாதல் கூறப்பட்டது.

கறுத்த இரும்பே கனகம தானால்
மறித்திரும் பாகா வகையது போலக்
குறித்தஅப் போதே குருவருள் பெற்றான்
மறித்துப் பிறவியில் வந்தணு காளே. ***#2014***

இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

பொருளில், 'குருவருள் பெற்றான்' என்றதற்கு ஏற்ப உவமையில், 'இரத குளிகை சேரப்பட்டு' என்பதும் உவமையில் 'கனக மதனால்' என்றதற்கு

ஏற்ப, 'சிவமாகியவன்' என்பதும் வருவித்துக் கொள்க. 'குரு அருள் பெற்றான்' என்பதை மூன்றாம் அடியில் முதற் கண் கூட்டியுரைக்க. குறித்தல் - சற்குரு தன் மாணவனைச் சிவமாகப் பாவித்தல். 'குரு' என்றது, அதிகாரத்தால் சற்குரு மேலதாயிற்று.
இதனால், சற்குருவின் பெருமை மேலும் கூறப்பட்டது.

பாசத்தை நீக்கிப் பரனோடு தன்னையும்
நேசத்து நாடி மலம்அற நீக்குவோன்
ஆசற்ற சற்குரு ஆவோன் அறிவற்றுப்
பூசற் கிரங்குவோன் போதக் குருவன்றே. *#2015*

உலகப்பற்றை ஒழித்து வீடுபேற்றில் விருப்பம் கொண்டு தன்னையும், தலைவனாகிய சிவனையும் ஆசிரியர் அருள் மொழியைக் கேட்டுச் சிந்தித்துத் தெளியுமாற்றால் தனது அறி யாமையைப் போக்கித் தன்னை அடைந்தவரது அறியாமையையும் முற்றப்போக்க வல்லவனே குற்றம் அற்ற உண்மை ஞான குரு ஆவான். அவ்வாறன்றி, அனுபவ ஞானம் இன்றி, நூலறிவு மாத்திரையால் செய்யும் ஆரவாரத்தில் மயங்கித் தானும் அதனையே செய்பவன் உண்மை ஞான குரு ஆகான்.

விளக்கவுரை

'அறிவு' என்றது, அனுபவ ஞானத்தை. இதனுள் பன்மையாக ஓதுவன பாடம் ஆகாமை அறிக.
இதனாலும் சற்குருவின் இலக்கணம் உடன்பாட்டானும், எதிர்மறையானும் கூறப்பட்டது.

நேயத்தே நிற்கும் நிமலன் மலம்அற்ற
நேயத்தை நல்கவல் லான்நித்தன் சுத்தனே
ஆயத் தவர்தத் துவம்உணர்ந் தாங்கற்ற
நேயத் தளிப்பன்நன் நீடுங் குரவனே. *#2016*

நித்தியனாகிய சிவன் நின்மலன் ஆகலின், அவன் மலம் நீங்கித் தன்பால் மெய்யன்பு செலுத்துவோரது அறிவிலே விளங்கி நின்று அம்மெய்யன்பினை மேலும் மேலும் பெருக்க வல்லவ னாவன். ஆகையால், மலம் நீங்கிச் சுத்தான்மாவாய் நிற்கின்றவனே தன்னை அடைந்த மாணவக் கூட்டத்தாரது உண்மை நிலையை உணர்ந்து, அவர்களில் பாசப் பற்று அறும் பக்குவத்தை எய்தி னோர்க்கே ஞானத்தை உணர்த்துவன். ஆதலால் அவனே நிலைபெற்ற சற்குரு ஆவன்.

விளக்கவுரை

'சுத்தான்ம சைதன்னியத்திலே சிவன் தான் அதுவே யாய் ஆவேசித்து நிற்றல் பற்றியே குரு சிவனாகின்றான்' என்பதை உணர்த்தற் பொருட்டு

அவ்வியல்பை முதல் இரண்டு அடிகளில் கூறி, பின்பு, 'சுத்தன்' என எடுத்துக்கொண்டு, 'சுத்தனே நீடும் குரவன்' என்றார். 'நித்தன் நிமலன் ஆதலின் மலம் அற்ற நேயத்தே நிற்கும்; நேயத்தை நல்க வல்லோன்' எனக் கூட்டுக. அறும் பக்குவத்தை எய்திய நிலையைத் தெளிவு பற்றி, 'அற்ற' என இறந்த காலத்தாற் கூறினார். குரவரல்லா தாரைக் 'குரவர்' என மயங்கிய மாணாக்கர் பின்பு அவரின் நீங்கி உண்மைக் குரவரை யடைவர் ஆகலின் அவர் அங்ஙனம் ஆகாமைக்கு ஏதுவாய் நிற்பவனை 'நீடும் குரவனை' என்றார்.
இதனால், 'பெத்தத்தின் நீங்கிய சுத்தனே சிவமாய் நிற்கும் சற்குரு' என்னும் உண்மை எடுத்துக் கூறப்பட்டது.

பரிசன வேதி பரிசித்த எல்லாம்
வரிசை தரும்பொன் வகையாகு மாபோல்
குருபரி சித்த குவலயம் எல்லாம்
திரிமலம் தீர்ந்து சிவகதி ஆமே. ***#2017***
இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

வேதித்தல் பற்றி இரச குளிகை 'வேதி' எனப் பெயர் பெற்றது. வேதித்தல் - மாற்றுதல். பரிசனம் - பரிசித்தல்; தீண்டுதல். தீண்டிய மாத்திரத்தில் பொன்னாக மாற்றுவது பரிசன வேதி. வரிசை - மேன்மை. குவலயம் - நிலவட்டம். அஃது ஆகுபெயராய் அதன்மேல் வாழும் உயிர்களை உணர்த்திற்று. உயிர்களுள்ளும் சிறப்புப் பற்றி மக்கள் உயிரையே உணர்த்திற்று. 'குரு பரிசித்த எல்லாம்' எனப் பொதுப்படக் கூறினாராயினும், 'சிவோகம் பாவனையோடு பரிசித்த எல்லாம்' என்பதே கருத்து. 'தீர' என்பது. 'தீர்ந்து' எனத் திரிந்து நின்றது. ஆம் - உண்டாம்; கிடைக்கும்.
முன்பு, 'கறுத்த இரும்பே வகையதுபோல' என்றது மாணவன் அடையும் பேற்றின் சிறப்பை உணர்த்தற்கும், இங்கு 'பரிசன வேதி ... பொன்னாகுமாபோல்' என்றது சற்குருவினது திருவருள் ஆற்றலின் சிறப்பை உணர்த்தற்கும் கூறப்பட்டன ஆகலின் கூறியது கூறல் அன்றாம்.
இதனால் சற்குருவினது அருளாற்றலின் சிறப்பு உவமையில் வைத்து உணர்த்தப்பட்டது.

தானே எனநின்ற சற்குரு சந்நிதி
தானே எனநின்ற தன்மை வெளிப்படின்
தானே தனைப்பெற வேண்டும் சதுர்பெறல்
ஊனே எனநினைந் தோர்ந்துகொள் உன்னிலே. ***#2018***
'யான் சிவனே' என மாணாக்கற்கு அறிவுறுத்து கின்ற அந்தக் குருவின்

சந்நிதியில் அவன் சிவனே ஆன தன்மை எவ்வாற்றா லேனும் மாணாக்கனுக்கு இனிது புலப்படுமாயின், அவனது மனித உடம்பைச் சிவனது அருள் திருமேனியாகவே உணர்ந்து, தான் அவனால் சிவமாந் தன்மையைப் பெறல் வேண்டும். (பின்னர் வேறு நினைத்தல் கூடாது.) இதனை உன் உள்ளத்திற்குள்ளே ஆராய்ந்து கொள்க.

விளக்கவுரை

சிவமாம் தன்மை புலப்படுதல், அருணந்தி தேவர்க்கு மெய்கண்ட தேவர் நோக்கின மாத்திரத்தே மலச்செருக்கு முழுவதும் அற்றொழிய, உள்ளம் அனலிடை மெழுகு போல உருகப் பெற்றமை போல்வது. அதன் பின்னர் அவர் தம் ஆசிரியரை, 'கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்தருளி - மண்ணிடை' (இருபா இருபஃது - குருவணக்கம்) வந்த சிவனாகவே உணர்ந்தமை அறிக. அதன் பின்னரும் வேறு நினைவாராயின் அவர் உய்யும் வழி இல்லை என்றபடி. ஆசிரியனது தன்மையை மாணவன் வெளிப்பட ஆராய்தல் கூடாமையின். 'உன்னிலே தேர்ந்துகொள்' என்றார். இதனுள் 'குரு' எனப் பொதுப்படக் கூறாது 'சற்குரு' என்றது உணர்த்துவோனது சொற்பற்றி, சதுர்பெறல் - 'அருள்உரு' எனப்படும் பெருமையை அடைதல். 'ஊனே சதுர்பெறல் என நினைந்து தானே தனைப்பெறவேண்டும்' என்க.
இதனால், சற்குருவைத் தெளியுமாறு கூறப்பட்டது.

வரும்வழி போம்வழி மாயா வழியே
கருவழி கண்டவர் காணா வழியைப்
பெருவழி யாநந்தி பேசும் வழியைக்
குருவழி யேசென்று கூடலும் ஆமே. ***#2019***

பிறப்பும், இறப்பும் ஆகிய மாயையின் வேறு பாடுகளே 'பிறவி நெறி' எனப்படும். அதனையே கண்டு அவ்வழியே உழல்பவர் கண்டறியாத பெருவழியாக எங்கள் நந்தி பெருமான் தம்மை யடைந்தவர்க்குக் காட்டியருள்கின்ற வீட்டு நெறியை அவரைப்போலும் சற்குரு காட்டும் வழியிலே சென்று பிறரும் பெறுதல் கூடும்.

விளக்கவுரை

'அதனைக் கண்டவர்' என வேறு எடுத்துக் கொண்டு உரைக்க. உம்மை, உயர்வு சிறப்பு.
இதனால் 'உண்மைக் குரவர் வழியாக யாவரும் வீடுபெறுதல் கூடும்' என்பது கூறப்பட்டது.

குருஎன் பவன்வேத ஆகமம் கூறும்
பரஇன்ப னாகிச் சிவோகமே பாவித்
தொருசிந்தை யின்றி உயர்பாசம் நீக்கி

வருநல் லுயிர்பரன் பால்வைக்கும் மன்னனே. ***#2020***
'குரு' என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவன் வேதாகமங்களால் சொல்லப்படுகின்ற பேரின்பத்தை நுகர்பவனாய், சிவோகம் பாவனை தவிர வேறு பாவனை எதுவும் இன்றிப் பக்குவம் வாய்ந்த உயிரை மிகவாய் உள்ள பாசங்களினின்றும் நீக்கிச் சிவத்தில் சேர்க்கும் தலைவன் ஆவான்.

விளக்கவுரை

ஆகவே, அவன் வழியாகவே பக்குவிகள் சிவனை அடைதல் வேண்டும்' என்பது குறிப்பெச்சம்.
இதனால் குருவினாலன்றி ஞானம் எய்துதல் கூடாமையால் 'குருவினாலன்றி வீடடைதல் இயலாது' என்பது கூறப்பட்டது. சகல வருக்கத்தினருள் முன்னைத் தவமிகுதியால் பிரளயாகலர் விஞ்ஞான கலரோடு ஒப்போர் மிக அரியர் ஆதலின் பொதுநிலை இதுவாதலைக் கூறியவாறு.

சத்தும் அசத்தும் சதசத்தும் தான்காட்டிச்
சித்தும் அசித்தும் சிவபரத் தேசேர்த்துச்
சுத்தம் அசுத்தம் அறச்சுக மானசொல்
அத்தம் அருட்குரு வாம்அவன் கூறிலே. ***#2021***
சிவனது அருளே தன் வடிவாய் நிற்கின்ற உண்மைக் குருவாகிய அவன் தன் மாணாக்கர்க்கு ஒரு வார்த்தையைச் சொல்வானாயின் அந்த ஒரு வார்த்தை முப்பொருளின் இயல்பை உள்ளவாறு விளங்கச்செய்து, ஏனை எல்லாப் பொருளும் சிவ வியா பகத்தை விட்டு வேறு நில்லாமையைப் புலப்படுத்தி, சுத்தம், அசுத்தம் என்னும் இருவகைப் போகங்களும் அல்லாத வேறு ஒரு தனிப் போக மாகிய பரபோகத்தை விளைத்து நிற்கும் வார்த்தையாய் இருக்கும்.

விளக்கவுரை

'அதனால் அத்தகைய குருவை அடைந்த மாணாக்கர் ஞானத்தை எய்தி, வீடு பெறுதல் உறுதி' என்பது கருத்து. நான்காம் அடியை முதற்கண் வைத்து, கூறுதலுக்குச் செயப்படுபொருள் வருவித் துரைக்க.
'ஒருவார்த்தை, மகா வாக்கியம், பெரும்பெயர்' என்பன ஒரு பொருட் சொற்கள். 'மன்ன என்னை ஓர் வார்த்தையுட்படுத்துப் - பற்றினாய்' (*தி.8* செத்திலாப் பத்து, *2)* என்றதனால் அவ்வார்த்தை இத்தன்மைத்தாதல் விளங்கும். இது பற்றியே,
'சாத்திரத்தை யோதினர்க்குச் சற்குருவின் தன்வசன
மாத்திரத்தின் வாய்க்கும்நலம் வந்துறுமே'
-திருக்களிற்றுப்படியார், *6*

எனச் சொல்லப்பட்டது. சத்து பதி; அசத்து பாசம்; சதசத்து பசு. சித்து - சேதனப் பிரபஞ்சம்; உயிர்கள். அசித்து - அசேதனப் பிரபஞ்சம்; உயிரல்லன. ஆணவமும், கன்மமும் உயிரோடு, ஒற்றித்து நிற்பன. சேர்ந்து நிற்றலை விளக்குதலைச் சேர்த்தலாக. உபசரித்துக் கூறினார். 'சுத்தம், அசுத்தம்' என்பன ஆகுபெயர். சுத்த போகம் சுத்தப் பிர பஞ்சத்திலும், அசுத்த போகம் அசுத்தப் பிரபஞ்சத்திலும் உள்ளன வாம். சிவபோகம் இவற்றின் வேறாய், மேம்பட்டதாய், எல்லையின்றியிருத்தலை அறிக. சுகத்தை ஆக்கும் சொல்லை, 'சுகம் ஆனசொல்' என்றதும் உபசாரம். இதன்பின் 'ஆம்' என்னும் பயனிலை எஞ்சிநின்றது.

இதனால், குருவினால் ஞானம் எய்தி, வீடுபெறுமாறு கூறப்பட்டது.

உற்றிடும் ஐம்மலம் பாச உணர்வினால்
பற்றறும் நாதன் அடியில் பணிதலால்
சுற்றிய பேதம் துரியம்மூன் றால்வாட்டித்
தற்பரம் மேவுவோர் சாதக ராமே. ***#2022***

பக்குவம் இன்மையால் உயிர் பாச ஞானத்தையே உண்மை ஞானமாகக் கருதி நிற்றலால் அனாதியே அதனைப் பற்றிய ஐம்மலங்களும் அதனை விட்டு நீங்காது அதனைப் பற்றியே நிற்கும். பக்குவம் வந்தபொழுது பாச ஞானத்தை வெறுத்துப் பதியாகிய சிவனை நோக்கி நின்று அவனைப் பல முறையால் வணங்குதலால் முன் கூறிய ஐம்மலங்களும் அற்றொழியும். ஆகவே, தம்மைக் கட்டி யுள்ள பாசக் கூட்டத்தால் தாம் சிவனை விட்டு நீங்கியிருக்கும் நிலையை முத்துரிய நிலைகளால் முறையே போக்கிச் சிவனை அடைய முயல்பவரே சற்குருவின் அருள்வழி நிற்கும் சாதகர் ஆவார்.

விளக்கவுரை

'சற்குருவின் அருளைப் பெற்றும் அங்ஙனம் முய லாதவர் சாதகர் ஆகார்; அஃதாவது பயன்பெற்றவர் ஆகார்' என்பதாம். 'பாச உணர்வினால் ஐம்மலம் உற்றிடும் எனவும், 'நாதன் அடியில் பணிதலால் பற்றறும்' எனவும் கூட்டுக'. 'நாதன் அடியில் பணிதலாகிய செயலில் நிற்றலே சாதனையில் நிற்றலாம்' என்பது உணர்த்துதற்கு அதனையும், அதற்கு மறுதலையானதையும் முதற்கண் எடுத்துக் கூறினார். உறுதல், இங்கு நீங்காது நிற்றல். மூன்று துரியம் 'சீவ துரியம், சிவ துரியம், பர துரியம்' என்பன. இவை பற்றி அடுத்த தந்திரத்தில் காண்க.

இதனால், 'சற்குருவை அடைந்து அவனால் ஆட்கொள்ளப் பெற்றோர் செயற்பாலன இவை' என்பது கூறப்பட்டது.

எல்லாம் இறைவன் இறைவி யுடனின்பம்
வல்லார் புலனும் வருங்கால் உயிர் தோன்றிச்
சொல்லா மலம்ஐந் தடங்கியிட் டோங்கியே

செல்லாச் சிவகதி சேர்தல் விளையாட்டே. *#2023*
ஞானம் வரும்பொழுது ஆன்ம இயல்பு உள்ளவாறு விளங்கப்பெற்று, ஐந்து மலங்களும் சத்தியடங்கி நிற்க அவற்றைக் கடந்து மோனம் உடையராய் நிலைபெயராத வீட்டு நிலையை அடைதல் எளிதாகும். அந்நிலை சிவானந்தமே. ஞானியர் எல்லாரும் அதனைப் பெறவல்லவராவர்.

விளக்கவுரை

புலன் - ஞானம். அது முதலாகத் தொடங்கி, 'விளையாட்டே' என முடித்துப் பின், 'இறைவன் இறைவியுடன் இன்பம் எல்லாம் வல்லார்' என வேறு முடிபு செய்க. 'எல்லாம்' என்னும் பொதுப்பெயர் இங்கு உயர்திணையாய் நின்றது. இறைவன் மெய்ப் பொருளும், இறைவி அதனது ஆனந்தமும் ஆதலின், 'இறைவன் இறைவியுடன் ஆன இன்பம்' என்றார். 'ஆன' என்பது தொகுத்த லாயிற்று. 'சொல்லாது' என்பதன் ஈறு குன்றிற்று. 'இப்பயனுக்குரிய ஞானத்தை அருளுபவன் சற்குருவே' என்பது கருத்து.
இதனால், மேற்கூறிய சாதகர் எய்தும் பயன்கள் கூறப்பட்டன.

ஈனப் பிறவியில் இட்டது மீட்டூட்டித்
தானத்து ளிட்டுத் தனையூட்டித் தாழ்த்தலும்
ஞானத்தின் மீட்டலும் நாட்டலும் வீடுற்று
மோனத்துள் வைத்தலும் முத்தன்றன் செய்கையே. *#2024*

இழிவான பிறப்பு நிலையில் அதன் இழிவு தோன் றாதவாறு மறைத்து மீள மீள அதிலே நின்ற கருவிக் கூட்டத்தின் இயல்பை உணர்த்தி, அதனின்றும் பிரித்து உயிர் தனது இயல்பினைத் தான் உணருமாறு செய்து அவ்வுணர்விலே சிறிது காலம் நின்று தாமதிக்கச் செய்தலும், பின்பு இறைவன் இயல்பை உணர்த்தி உயிருணர்வினின்றும் பிரித்து இறை உணர்விலே நிலைத்திருக்கச் செய்தலும், பின் இறையின்பத்திலே தோய்ந்து பேச்சற்றிருக்கச் செய்தலும் ஆய இவையெல்லாம் முத்தான்மாவாய் நின்ற சற்குருவின் செய்கைகளாய் விளங்கும்.

விளக்கவுரை

'இட்டது' என்பது கருவிக் கூட்டத்தைக் குறித்த காரணப் பெயர். ஊட்டுதல், அறிவு புகட்டல். 'ஊட்டி மீட்டு' என மொழி மாற்றி, ஊட்டுதலுக்குச் செயப்படுபொருள் வருவித்துரைக்க. 'அத்தானத்து' எனச் சுட்டு வருவிக்க. 'தன்' என்றது, தனது இயல் பினைக் குறித்த ஆகுபெயர். 'கருவியுணர்வு' மெய்யுணர் வாகாமை எளிதில் விளங்குதல்போல, உயிருணர்வு மெய்யுணர் வாகாமை எளிதின் விளங்குவதன்றாகலின் 'அதனினின்றும் நீக்குதல் தாழ்த்து நிகழும்

என்றார். ஞானம் - மெய்யுணர்வு, இறையுணர்வே அது என்க. கருவியுணர்வு - பாச ஞானம். உயிருணர்வு - பசுஞானம். இறை யுணர்வு - பதி ஞானம்' கருவிக் கூட்டத்தை 'இது நானன்று' எனக் கழித் தவுடன் தோன்றுவது 'சித்தாகிய யானே முதற்பொருள்' என்னும் உயி ருணர்வாம் என்பதை, 'ஆன்மா இவை கீழ் நாடலாலே - காதலினால் நான் பிரமம் என்னும் ஞானம் கருது பசுஞானம்' என்பதனான் அறிக. 'மோனத்துள்' என்பதன்பின் 'இருக்க' என்பது சொல்லெச்சமாய் எஞ்சி நின்றது என்பதனால் அறிக. ஏகாரம் பிரிநிலை. அதனால் உணர்த்தப்பட்டது. 'இவை தன் செயலால் ஆவன அல்ல' என்பது. இதனால், சற்குருவின் அருளாற்றல் திறம் வகுத்துக் கூறப்பட்டது.

அத்தன் அருளின் விளையாட் டிடம்சடம்
சித்தொ டசித்துத் தெளிவித்தச் சீவனைச்
சுத்தனு மாக்கித் துடைத்து மலங்களைச்
சத்துடன் ஐங்கரு மத்திடுந் தன்மையே. ***#2025***

சிவன் தனது கருணை காரணமாகச் செய்யும் முத் தொழில்களாகிய விளையாட்டு நிகழும் இடம் சடமாய மாயை யினிடத்திலாம். ஆயினும் அவ்விளையாட்டிற்குப் பயன் அறிவுடைப் பொருளாகிய உயிரை, 'சித்து இவை, அசித்து இவை' என்பதை அறியச் செய்து மும்மலங்களைத் துடைத்துத் தூய்மையுறப் பண்ணி வேறு இரு தொழில்களால் மெய்ப்பொருளை அடையச் செய்தலேயாகும்.

விளக்கவுரை

முத்தொழிலுக்கு வேறாய இருதொழில்களாவன மறைத்தலும், அருளலும். எனவே முத்தொழில்களின் வழி முன்னர் மறைத்தலை அடையப் பண்ணிப் பின்பு அதன் பயனாகப் பக்குவத்தை வருவித்து அருளலை அடையப் பண்ணுதலே சடத்தின்மேல் செய்யும் முத்தொழிற்குப் பயனாதல் விளங்கும்' 'இடம் சடம்' என்றதனால் முதற்கண் 'விளையாட்டு' என்றது படைத்தல் முதலிய முத்தொழில் களையே குறித்தன. என்னை? ஏனை இரண்டிற்கும் இடம் சடம் ஆகாமையின். 'முத்தொழில்' என்பதை முதற்கண் வெளிப்படையாகக் கூறாமை பற்றி அவையும் அடங்க இறுதியில் 'ஐங்கருமம்' என்றா ராயினும் அதனால் குறிக்கப்பட்டன எஞ்சிய இரு தொழில்களேயாம். சத்தாகின்றவனும் அத்தனேயாயினும் அதனை வேறு போலக் கூறினார், 'முடிந்த பயனான பரமுத்தி நிலை அது' என்பது உணர்த்துதற்கு. இதனால், 'இறைவன் செய்யும் தொழில்களில் முடிவானது சற் குருவாய் வந்து ஞானத்தை அருளுதலே' என்பது கூறப்பட்டது.

ஈசத்து வம்கடந் தில்லையென் றப்புறம்
பாசத்து ளேயென்றும் பாவியும் அண்ணலை

நேசத்து ளேநின்ற நின்மலன் எம்மிறை
தேசத்தை யெல்லாம் தெளியவைத் தானே. *#2026*

உலகீர், எங்கள் சிவபெருமான் 'தனக்கு வேறாய் விலகி நிற்கும் பொருள் எதுவும் இல்லை' என்று அறிந்து தன்பால் செலுத் தப்படும் அன்பிலே விளங்கி நிற்பவன். அத்தகைய அன்பர்க்கு அவன் அனைத்துப் பொருளின் உண்மைகளையும் தெளிவாக உணரக் காட்டி னான். ஆதலால் நீங்கள் 'அவனது வியாபகத்தைக் கடந்து அவனின் வேறாக யாதொரு பொருளும் இல்லை' என உணர்ந்து உடம்பில் உள்ள பொழுதும் அவனை எவ்வகையிலேனும் உணர்ந்து போற்றுங்கள்.

விளக்கவுரை

'உங்கட்கும் அனைத்துப் பொருள்களின் உண்மை களையும் தெளிய உணர்த்துவான்' என்பது கருத்து. 'இல்லை' என்பதற்கு, 'எப்பொருளும்' என்னும் எழுவாய் வருவிக்க. 'அப்புறம் இல்லை' என்க. 'பாசத்துளேயும்' என்னும் எதிரது தழுவிய எச்ச உம்மை தொகுத்தலாயிற்று. 'பாசம்' என்றது உடம்பை. ஏன்? சீவன் முத்த நிலையில் கூறப்படுதலின். 'தேசம்' என்பது இட ஆகுபெயராய் அதன்கண் உள்ள பொருள்களைக் குறித்தது. இதனால், சற்குருவின் அருளால் பெற்ற அறிவிற்குப் பயன் இறைவனிடத்தில் அன்பு செய்தலே என்பது கூறப்பட்டது.

மாணிக்க மாலை மலர்ந்தெழு மண்டலம்
ஆணிப்பொன் னின்றங் கமுதம் விளைந்தது
பேணிக்கொண் டுண்டார் பிறப்பற் றிருந்தார்கள்
ஊணுக் கிருந்தார் உணராத மாக்களே. *#2027*

மாணிக்க மணிகளைக் கோத்த ஒரு வடத்தைத் தூங்கவிட்டது போல உடம்பினுள்ளே ஒன்றின்மேல் ஒன்றாய் அமைந்து ஒளிவிட்டு விளங்கும் ஏழு மண்டலங்கள் உள்ளன, அங் கெல்லாம் அவற்றுக்கு மேல் உள்ள மாற்றுயர்ந்த பொன் போல்வ தொரு நற்பொருளினின்றும் ஓர் அமுதம் ஊற்றெடுத்துப் பாய்கின்றது. அதனையறிந்து போற்றிக்கொண்டு உண்டவர்களே பிறப்பற்றிருக் கின்றார்கள். அதனை அறியாதவரெல்லாம் விலங்கொடொத்து உணவை உண்டு வயிறு வளர்ப்பதற்காகவே வாழ்கின்றனா.

விளக்கவுரை

'அவர் பிறவிக் கடலினின்றும் ஏறமாட்டார்' என்பது கருத்து. 'மலர்ந்தன' என அன்பெறாது 'மலர்ந்த' என நின்ற வினை முற்றின் இறுதிநிலை தொகுத்தலாயிற்று. 'மலர்ந்த' என்றது, 'மலர்ந்தன போன்றுள்ளன' என்னும் பொருளைத் தந்தது. ஏழு மண்டலமாவன மூலாதாரம் முதலாக உச்சி ஈறாக உள்ளவை. அவை தாமரை மலர் வடிவின ஆதல் பற்றி,

'மாணிக்க மாலை மலர்ந்தன போன்றுள்ளன', என்றார். ஏழாந் தானத்திற்கு மேல் நிராதாரமான பன்னிரண்டங்குலத்தைக் கடந்த மீதானத்தில் உள்ள செம்மேனி யனாகிய சிவனை 'ஆணிப் பொன்' என உவமையாகு பெயரால் கூறினார். ஏழாந்தானத்திற்றானே அமுதம் ஊறுவதாயினும் அஃது அருள் மயமாதல் சிவனாலேயாதல் பற்றி அவனிடத்தினின்றே அமுதம் ஊறுவதாகக் கூறினார்.

இதனால், 'சற்குரு அருளால் சிவஞானத்தைப் பெற்றோர் பின் இச்சிவயோக சாதனாத்தால் நிட்டை கூடல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

அசத்தொடு சத்தும் அசற்சத்து நீங்க
இசைத்திடு பாசப்பற்று ஈங்கறு மாறே
அசைத்திரு மாயை அணுத்தானும் ஆங்கே
இசைத்தானும் ஒன்றறி விப்போ னிறையே. ***#2028***

சத்தோடு கூடியவழிச் சத்தாம் தன்மையும், அசத்தோடு கூடியவழி அசத்தாம் தன்மையும் உடைத்தாதல் பற்றி, 'சதசத்து' எனப் பெயர் பெற்ற உயிரை அநாதியில் சத்தோடு சேராது நீங்கச் செய்து, அசத்தோடு சேர்த்த ஆணவ மலத்தொடர்பு இப்பெத்த காலத்தில் அற்றொழிதற் பொருட்டு, 'சுத்த மாயை, அசுத்த மாயை' என்னும் இருமாயைகளைச் செயற்படுத்தி, உயிரையும் அச்செயற் பாட்டிற்கு உள்ளாக்கியவனும், பின் என்றும் திரிபின்றி ஒருபடித்தாய் நிற்பதாகிய உண்மையை உணர்த்தி, அவ்வுயிரை உய்யக் கொள்கின்ற வனும் இறைவனேயன்றிப் பிறர் இல்லை.

விளக்கவுரை

'அசற்சத்து சத்தினின்றும் நீங்கச் செய்து அசத்தோடு இசைத்திடு பாசப்பற்று' என இயைத்துக் கொள்க. 'சதசத்து' என்பதே வழக்காயினும் செய்யுள் நோக்கி அதனை முன் பின்னாக மாற்றி 'அசற்சத்து' என்றார். 'நீங்க' என்பதன் பின், 'செய்து' என்பது சொல் லெச்சமாய் எஞ்சி நின்றது. 'ஈங்கு' இசைத்திட்டபின் உளதாகிய பெத்த நிலையை. 'அணு' என்பது இரண்டாவதன் பொருள்மேல் 'இசைத்தான்' என்றதனோடு தொக்கது. தான், அசை. உம்மை, மாயையை அசைத்ததேயன்றி என இறந்தது தழுவி நின்றது. அறிவித்தாய் அறிவிப்போனும் என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. அதன் காரியத்தையும் உடன் தோற்றி நின்றது. ஏகாரம், பிரிநிலை. எனவே, 'ஒன்றை அறிவித்த சற்குரு, இதற்கு முன்னுள்ளவற்றை யெல்லாம் செய்த இறைவனே' என்றபடி.

இதனால், சற்குரு சிவனே யாதல் அருளல் தொழில் அவனுடையதேயாதலை ஏனைத் தொழில்கள் நிகழுமாற்றின் வைத்து உணர்த்தும் முகத்தால் தெளிவிக்கப்பட்டது.

ஏறு நெறியே மலத்தை யிரித்தலால்
ஈறில் உரையால் இருளை அறுத்தலால்
மாறின் பசுபாசம் வாட்டலால் வீடுறக்
கூறு பரனே குருவாம் இயம்பிலே. *#2029*

சத்திநிபாதம் படிமுறையால் நாளும் நாளும் மிகுந்து வரும் வகையால் ஆணவத்தைச் சிறிது சிறிதாக முறையே நீக்கி வருதலாலும், முடிவில் என்றும் நீங்காது நிலைத்து நிற்கும் உப தேச மொழியால் அவ்வாணவங் காரணமாக இருந்து வந்த அறியாமையைப் போக்கி அறிவைத் தருதலாலும், பின்னும் பண்டை வாசனையால் பாச உணர்வு தோன்றுமாயின் அதனைத் தோன்றும் பொழுதே பசையின்றி உலர்ந்து கெடும்படி வாட்டி விடுதலாலும், ஆராய்ந்து சொல்லுமிடத்து எல்லா முதன்மையும் உடையவனாக உண்மை நூல்களில் கூறப்படுகின்ற இறைவனே உயிர்கட்கு வீடுபேறு கிடைக்கும்படி குருவாய் வருபவனாவான்.

விளக்கவுரை

இறைவன் தனது அருட்சத்தியால் உயிர்களைப் பற்றியுள்ள ஆணவ மலத்தைப் படிப்படியாய் நீக்குதலை,
மன்னும் இருளை மதிதுரந்த வாறன்பின்
மன்னும் அரனே மலம் துரந்து.
-சிவஞானபோதம், சூ. *11*. அதி.*2*
எனக் கூறியதானானும் உணர்க. மாறுதல் - ஞான நெறியினின்றும் விலகல். 'ஏறு நெறியால்' எனவும், 'ஈறில் உரையால்' எனவும் கூறியவற்றிற்கு ஏற்ப, 'தனது அருள் ஞானத் தீயால் வாட்டலால்' என ஏது வருவித்துக் கொள்க.
'தொல்லையின் வருதல் போலத் தோன்றிரு வினைய துண்டேல்
அல்லொளி புரையும் ஞானத் தழலுற அழிந்து போமே'
-சிவப்பிரகாசம், *9-8*
எனவும்
'... ... ... இடை ஏறுவினை
தோன்றில் அருளே சுடும்' -திருவருட்பயன் - *98*.
எனவும் பின்னோர் கூறுதல் காண்க. 'இங்குக் கூறப்பட்டன பிறரால் இயல்வன அன்மையின், இறுதிக்கண் கூறிய செயலும் சிவன் செய்யும் செயலேயாம்' என்பது கருத்து. 'வீடுறக் குருவாம்' என இயையும். இதனால், மேற்கூறிய பொருள் தக்கதோர் ஏதுக்களால் வலியுறுத்தி முடிக்கப்பட்டது.

9.36. கூடா ஒழுக்கம்

கண்காணி இல்லென்று கள்ளம் பல செய்வார்
கண்காணி இல்லா இடம்இல்லை காணுங்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கும் நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந் தாரே. **#2030**

அறிவில்லாதவர் 'தங்களை உடன் இருந்து காவல் புரிபவன் எவனும் இல்லை' என்று தவறாகக் கருதிக் கொண்டு தவறான செயல்கள் பலவற்றைச் செய்கின்றனர். உண்மையை உணர்ந்தால் யாவரையும் உடன் இருந்து காவல் புரிகின்ற ஒருவன் எங்கும் இருக்கின்றான். அவன் இல்லாத இடம் இல்லை. (எனவே தவறு செய்பவர் அவனால் ஒறுக்கப்படுதல் திண்ணம்) எவ்விடத்திலும் நிறைந்து காவல் புரிகின்ற அவனை அங்ஙனம் காவல் புரிபவனாக அறிந்தோர் யாவரும் தவற்றை ஒரு ஞான்றும் செய்யாது ஒழிந்திருக்கின்றனர்.

விளக்கவுரை

'அவரைப் பின்பற்றி ஒழுகுதலே அறிவுடைமை யாகும்' என்பது குறிப்பெச்சம். இம்மந்திரப் பொருளையே,

வஞ்சித் தொழுகும் மதியிலிகாள், யாவரையும்
வஞ்சித்தோம் என்றுமகிழன்மின் - வஞ்சித்த
எங்கும் உளன்ஒருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு. -நீதிநெறி விளக்கம் - *93.*

எனப் பின்வந்த பெரியார் ஞானப் பகுதியில் எடுத்தருளிச் செய்தார். மெய்கண்ட தேவரும்.

தன்னை யறிவித்துத் தான்தானாச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது. -சிவஞானபோதம் சூ. *12-* அதி, *4*

என ஞானியரை நோக்கியே அறிவுறுத்தமை காண்க. 'கண்காணி' என்பது நேரே நோக்கிக் காவல் புரிபவனைக் குறிக்கும் பெயர். 'ஆக' என்பதைப் பின்னரும் கூட்டுக.

இதனால், 'ஞானியர் தாம் அறிந்து மேற்கொள்ளும் கூடா ஒழுக்கத்தை இறைவன் பொறான்' என்பது கூறப்பட்டது.

செய்தான் அறியும் செழுங்கடல் வட்டத்துப்
பொய்தான் மிகவும் புலம்பும் மனிதர்கள்
மெய்தான் உரைக்கில்விண் ணோர்தொழச் செய்குவன்
மைதாழ்ந் திலங்கு மிடறுடை யோனே. **#2031**

'செழுங்கடல் வட்டத்து நிகழ்வனவற்றை அவற்றைச் செய்தான் அறியும்' எனக் கூட்டுக.

ஏனைய வெளிப்படை.

விளக்கவுரை

'நிகழ்வனவற்றை' என்பது சொல்லெச்சம். பொய்யினது இழிவைப் புலப்படுத்தற்கு, 'பேசும் மனிதர்கள்' என்னாது, 'புலம்பும் மனிதர்கள்' என்றார். 'செய்தான்' என்றது, 'எதன் பொருட்டுப் படைத்தானோ அதன் பொருட்டாகவே ஒழுகு வோரையும் அவ்வாறின்றி யொழுகுவோரையும் அவன் நோக்கி யிருந்து அவரவர்க்குத் தக்க பயனைத் தருவான்' என்னும் குறிப்பினது. பின்னர், 'மைதாழ்ந்திலங்கு மிடறுடையோன்' என்றமையால், முன்னர், 'செய்தான்' என்றதும் அவனையேயாயிற்று. 'நல் லொழுக்கத்தினாலே நற்பயன் பெறுதல் கூடுவதாய் இருக்க அதனை விடுத்துத் தீயொழுக்கத்தில் ஒழுகுதல் அறியாமை' என்பது கருத்து. மெய்யுரைப்பார்க்குச் சுவர்க்கத்தைத் தருதல் கூறுமுகத்தால் பொய்யுரைப்பார்க்கு நரகத்தைத் தருதல் உணர்த்தப்பட்டது. இதனால், 'ஞான நெறியில் நிற்பார்க்குப் பொய்யுரைத்தல் சிறிதும் ஆகாது' என்பது கூறப்பட்டது.

பத்திவிற் றுண்டு பகலைக் கழிவிடும்
மத்தகர்க் கன்றோ மறுபிறப் புள்ளது
வித்துக்குற் றுண்டு விளைபுலம் பாழ்செய்யும்
பித்தர்கட் கென்றும் பிறப்பில்லை தானே. ***#2032***

சற்குரு அருளால் ஞானம் பெற்றவர்கட்கும் மறு பிறப்பு உண்டு' எனக் கூறுதல் அதன் பின்பும் பத்திச் செய்கைகளைத் தமக்கு விருப்பமின்றி உலகத்தார் பாராட்டுதற் பொருட்டே செய்து அதனால் புகழும் பொருளும் பெற்றுக் காலத்தைக் கழிக்கின்ற அந்தப் பித்தர்களுக்கேயாம். அவ்வாறின்றிப் புகழ் பொருள் முதலியவற்றுள் ஒன்றையும் விரும்பாது பத்திச் செய்கைகளைத் தமது அன்பானே செய்து ஒழுகுமாற்றால் மறுபிறப்பாகிய பயிருக்கு வித்தாய் அமைகின்ற ஆகாமிய வினையை வித்தைக் குற்றியுண்பார்போல வலுத்து நில்லாதபடி அழித்து, மறுபிறப்பாகிய பயிர் விளைக்கின்ற நெறியைப் பாழாய்க் கிடக்கும்படி செய்கின்ற அந்தப் பித்தர்களுக்கு ஒருஞானறும் மறுபிறப்பு உண்டாதல் இல்லை.

விளக்கவுரை

'ஞானத்திற்கு உலகம் பேய்; உலகத்திற்கு ஞானம் பேய்' என்பது ஒரு பழமொழி. அதன்படிஞானிகளும், அஞ் ஞானிகளும் ஒருவரையொருவர் பேய் பிடியுண்டவர்களாக, அல்லது பித்தர்களாகக் கருதுதல் தெளிவு. அம்முறையில் இம்மந்திரத்தில் இருவகைப் பித்தர்களைக் குறிப்பிட்டு, ஒருவகைப் பித்தர்கட்கு மறு பிறப்பு உண்டாதலையும் மற்றொருவகைப் பித்தர்கட்கு மறுபிறப்பு உண்டாகாமையையும் வலியுறுத்தினார், 'பெரும்பித்தர் கூடிப் பிதற்றும் அடி' *(தி.6 ப.6 பா.4)*
எனமறுபிறப்பில்லாத பித்தரை, 'பெரும் பித்தர்' என அருளிச் செய்தமை

அறிக.
'தென்பாலுகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான்; பெரும்பித்தன் காணேடி'
-*தி.8 திருச்சாழல் 9*
எனப்பட்ட அந்தப் பெரும்பித்தனுக்கு ஆட்பட்டோர் தாமும் பெரும் பித்தர் ஆதலல்லது, வேறு என் ஆவர்? 'கழிய' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. மத்தகர் - மத்தச் செயலைச் செய்பவர். மத்தம் - உன்மத்தம்; பித்து. 'அன்றோ' என்றது தேற்றமாதல் குறித்தது. 'வித்துக்குற் றுண்டு விளைபுலம் பாழ்செய்யும்' என்றது ஒட்டணி. இதனால், 'ஞானம் பெற்றோர் அந்நெறியில் உறைத்து நின்று நிட்டை கூடாது, கூடாஒழுக்கம் உடையராயின் ஞானம் பெறாதவ ரோடு ஒத்தவரேயாவர்' என்பது கூறப்பட்டது.

வடக்கு வடக்கென்பர் வைத்ததொன் றில்லை
நடக்க உறுவரே ஞானம் இலாதார்
வடக்கில் அடங்கிய வையகம் எல்லாம்
அகத்தில் அடங்கும் அறிவுடை யோர்க்கே. ***#2033***

குருவருளைப் பெற்றபின்னும் இறைவனை எவ்விடத்தும் ஒருபெற்றியாகவே உணர்ந்து அவனது திருவருளில் மூழ்கி நிற்றலாகிய ஞானத்தில் ஞானமாம் அசைவிலா நிட்டை நிலையை எய்த மாட்டாதவரே அவனைக் காலம், இடம் முதலிய, சிறப்புக்கள் காரணமாக ஏகதேசமாக உணர்ந்து அவ்வாற்றான் வழிபடும் வழிபாடுகளை நிறைவேற்ற முயல்வர். மேற்கூறிய அந்த நிட்டை நிலையை எய்தினார்க்கு எவ்விடத்தும், எக்காலத்தும் இறை யருட் சிறப்பு அவரது ஞானத்தினுள்ளே இனிது விளங்கியே நிற்கும்.

விளக்கவுரை

தமிழ் மக்கள் பொருட்டுத் தமிழ்நூல் செய்கின்றார் ஆகலானும், அம்மக்கட்கு இடம் தென்றிசை ஆகலானும், 'அவர் வட திசையைச் சிவனது திருவருட்சிறப்பு இனிது விளங்கும் திசையாகக் கொண்டு முயன்று பயன்பெறும் மரபு நிலை அவருள் நிட்டை எய்தினோர்க்கு வேண்டா' என்றார். எனவே, 'நிட்டை கூடப் பெறாது, ஏனைச் சிந்தித்தல் தெளிதல்களில் நின்றோர் அதனை இகழலாகாது' என்பதும் கூறினாராயிற்று. 'வேண்டா' என்றது, 'அவர் அது செய்யாமை குற்றம் அன்று' என்றபடி. இஃது இம் மந்திரத்தின் கருத்துரை. இதன் சொற்பொருள் வெளிப்படை. 'ஞானம்' என்றது ஞானத்தில் ஞானத்தை. 'அறிவு' என்றதும் அதனையே. ஒன்று - ஒருசிறப்பு. 'ஒன்றும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. 'இல்லை' என்றது பொதுமை நோக்காது உண்மை நோக்கிக் கூறியது. வையகம் - புண்ணியத்

தலங்களும், தீர்த்தங்களும். 'அகத்தில்' என்றது, 'இருந்த இடத்தில்' என வேறொரு பொருளையும் தோற்றுவித்தது. ஈற்றடி உயிரெதுகையாயிற்று.
இதனால், 'ஆவன இவை, ஆகாதன இவை' என்னும் வரை யறை அவற்றை மேற்கொள்வாரது நிலை பற்றியதாதல் கூறப்பட்டது.
ஏதேனும் காலமுமாம், ஏதேனும் தேசமுமாம்;
ஏதேனும் திக்கா சனமுமாம் - ஏதேனும்
செய்வான் ஒருவனுமாம்; செய்யாச் செயலதனைச்
செய்யாமை செய்யும் பொழுது.
-திருக்களிற்றுப்படியார் - *60.*
எனவும்,
'தேசம் இடம் காலம்திக் *(கு)* ஆசனங்கள் இன்றிச்
செய்வதொன்று போற்செய்யாச் செயலதனைச் செய்து'
-சிவஞானசித்தியார், சுபக்கம், *285*
எனவும் வரும் சாத்திர மொழிகளையும் காண்க.

காயக் குழப்பனைக் காயநன் னாடனைக்
காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்து ளேஎங்கும் தேடித் திரிவார்கள்
காயத்துள் நின்ற கருத்தறி யாரே. ***#2034***

காயக் குழப்பன் - உயிர்களின் உடம்புகளை அவற்றின் வினைக்கேற்ப உழல் விப்பவன். காயநன்னாடன் - உயிர்க்கு உயிராய் நிற்றலால் உயிர்களின் உடம்புகளைத் தனது இடமாக உடையவன். காயத்தினுள்ளே கமழ்தல் - 'உற்ற ஆக்கையின் உறுபொருளாய் நறுமலர் எழுதரு நாற்றம்போல்' *(தி.8* அதிசயப்பத்து, *9)* உள்நோக்கி உணர்வார்க்கு நுண்ணிய இனிய பொருளாய் வெளிப்படுபவன். ஏனைய வெளிப்படை.

விளக்கவுரை

'கருத்து அறியார் தேடித் திரிவர்கள்' என்பதன் பின், அவர்க்கு அது வேண்டுவதே' என்னும் குறிப்பெச்சம் வரு வித்துரைக்க. அதனானே, 'கருத்தறிந்தார்க்கு அது வேண்டுவதின்று என்பது போந்தது போதரவே அவர் அங்ஙனம் திரியாமை அவர்க்குக் குற்றமாகாதாயிற்று. ஆகவே, அறியதார் அறிந்தார் போன்று ஒழுகுதல் கூடா ஒழுக்கம் ஆதல் அறிக.
இதனால், 'கீழ் நிலையில் உள்ளோர் மேல்நிலையில் சென்றோர் போல ஒழுகுதல் கூடாது' என விலக்கப்பட்டது.

கண்காணி யாகவே கையகத்தே எழும்
கண்காணி யாகக் கருத்துள் இருந்திடும்
கண்காணி யாகக் கலந்து வழிசெய்யும்

கண்காணி யாகிய காதலன் றானே. *#2035*

உயிர்களின் கண்ணைத் தன் இடமாகக் கொண்டு அவற்றிற்கு அக்கண்போலச் சிறந்து நிற்கின்ற இறைவன் ஞானிகட்கு அவர்தம் புறக் கண்ணிற்குப் புலனாகின்றவனாகியும் இனிது விளங்கு வான்.அகக்கண்ணிற்குப் புலனாகின்றவனாகியும் இனிது விளங்கு வான். ஆகையால் அவர்களது செயல்திறங்களை இடைவிடாது நோக்கி அவற்றிற்கு ஏற்ற பயனை அருளுதல் அவனுக்கு இயல்பாகும்.

விளக்கவுரை

'காணி' நான்கனுள் முன்னைய மூன்றும் பகுபதம்; இறுதி ஒன்றும் பகாப்பதம். பகுபதங்களில் வந்த இகர விகுதி மூன்றனுள் முன்னைய இரண்டிலும் செயப்படுபொருண்மையிலும், இறுதி ஒன்றும் வினைமுதற் பொருண்மையிலும் வந்தன. காணி - தனக்குரிய இடம். காணி உடையவனை, *'காணி'* என உபசரித்துக் கூறினார். *'உயிர் தனது வலக்கண்ணில் சிறந்து விளங்கும்'* என்றும் *'அவ்விளக்கத்தில் இறைவனும் சிறந்து விளங்குவான்'* என்றும் கூறும் உபநிடத வழக்குப் பற்றி(பிருகதாரணியம், அத்தியாயம் 5) இறைவனை, *'கண்காணியாகிய காதலன்'* என்றார். *'கண்ணே! கண்ணிற் கருமணியே! மணியாடுபாவாய்' (தி.6 ப.47 பா.1)* என்னும் திருத்தாண்டகமும் இங்கு நோக்கத் தக்கது. ஈற்றடியை முதலில் கூட்டியுரைக்க. புறத்து விளங்குதலை, *'கையகத்தே எழும்'* என்றும் அகத்து விளங்குதலை *'கருத்துள் இருந்திடும்'* என்றும் கூறினார். வழி - தீரும் வாயில். ஞானியர் தற்போதம் நிகழ்ந்து செய்யின் அவற்றை அவர் செயலாகவும், தற்போதம் இழந்து செய்யின் அவற்றைத் தன் செயலாகவும் கொண்டு அவற்றிற்கு ஏற்ற பயனைத் தருதலையே இங்கு, *'வழி செய்யும்'* என்றார்.

இதனால், *'ஞானியரும் தற்போதம் நீங்காநிலையில் அற நெறிபிழைப்பாராயின் அஃது அவர்க்கு ஏனையோர்க்குப் போலவே கூடா ஒழுக்கமாம்'* என்பது கூறப்பட்டது.

கன்னி ஒருசிறை கற்றோர் ஒருசிறை
மன்னிய மாதவம் செய்தோர் ஒருசிறை
தன்னியல் புன்னி யுணர்ந்தோர் ஒருசிறை
என்னிது ஈசன் இயல்பறி யாரே. *#2036*

திருவருட்சத்தி பதிவு எல்லோர்க்குமன்றி ஒரு சிலர்க்கே உண்டாவதால் உண்மை நூல்களை ஓதுதலை சிலர் செய்தும், மற்றும் சிலர் சிவனைக் கிரியா முறையில் வழிபடுதலைச் செய்தும், மற்றும் சிலர் யோகம் புரிதலைச் செய்தும் மற்றும் சிலர் சிவனது உண்மை நிலையைக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல்களால் உணர் தலைச் செய்தும் நிற்கின்றனர். ஆகவே, மிகப்பலர் இவற்றுள் ஒன்ற னையும் செய்யாது

சிவவேடத்தை மட்டும் புனைந்து கொண்டு திரி கின்றனர். இஃது என்ன முறைமை!

விளக்கவுரை

முதற்கண் 'ஒரு சிறையே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. அதன்பின், 'அதனால்' என்னும் சொல்லெச்சம் வருவித்துரைக்க. மூன்றாம் அடியிறுதியில் 'ஆகின்றனர்' என்னும் பயனிலை அவாய் நிலையான் வந்து இயைந்தது. எதிர்காலத்தாற் கூறாது. இறந்தகாலத்தாற் கூறியது அவர் அந்நிலையில் முற்றினமை குறித்தற்கு. 'என் இது' என்ற குறிப்பால், 'வேடத்தை மட்டும் புனைந்துகொண்டு திரிகின்றனர்' என்பது இசையெச்சமாய் வந் தியைந்தது. 'சத்திநிபாதம் தானும் ஒரு வகையாகாது பலவகையாய் நிகழ்தலின், சிவநெறியில் நிற்போரும் பலதிறத்தராயினர். அது முறைமையே, சத்திநிபாதம் வாயாதவரும் வாய்ந்தார்போல நடித்தல் என்னமுறை' என்றபடி. 'அது முறைமையன்றாகவே அதன் விளைவை அவர் பெறுவார்' என்பது கருத்தாயிற்று. அதிகாரம் சத்தி நிபாதர்களைப் பற்றியதாகவும் இடையே பிறரைப்பற்றியும் கூறினார், 'சத்திநிபாதரும் தற்போதத்தால் ஏலாத செய்யின் சத்தி நிபாதர் அல்லாதவரோடு ஒருங்கொத்தவராவர்' என்பது உணர்த்துதற்கு, இதுவே இம்மந்திரத்தின் திரண்ட கருத்து என்க.

காணா தவர்கண்ணில் படலமே கண்ணொளி
காணா தவர்கட்குக் காணாத தவ்வொளி
காணா தவர்கட்கும் கண்ணாம் பெருங்கண்ணைக்
காணாது கண்டார் களவொழிந் தாரே. ***#2037***

முகக்கண்கள் புறப்பொருளைக் காணுதல் இயல் பாயினும் சில கண்கள் அப்பொருள்களைக் காணமாட்டாதன ஆதற்குக் காரணம் அக்கண்ணில் ஒளிக்கு மாறாகப் படலம் இருப்பதே யாகும். இனி முகக்கண் உடையார்க்கே யன்றி அக்கண் இல்லா தவர்க்கும் அகக்கண்ணாகிய அறிவுக்கு அறிவாய் உள்ள பேரறிவாம் சிவ ஒளியைத் தற்போத வழியாற் காணாது அருள் வழியாகக் கண்டவரே கள்ளத்தனமாகச் செய்யும் செயல்களைச் செய்யாது ஒழிவர். அந்தச் சிவ ஒளி அகக்கண்ணாகிய ஞானக் கண் இல்லா தவர்க்குக் காணப்படாத ஒன்றேயாய் இருக்கும்.

விளக்கவுரை

'அதனால் அவர்கள் வினை விட்டொழியாது செய் பவரேயாவர்' என்பது குறிப்பெச்சம். 'வறியவர்கட்கு அடகுதான் சோறு' என்றல் போல, 'காணாத கண்ணில் படலமே கண்ணொளி' என்றார். அங்ஙனம் கூறியது, காணுதற்குரிய கண் காணாதொழிதற்குக் காரணங்

கூறியவாறு. புறக்கண் பற்றிய இக் கூற்று உவமையாய், அகக்கண்ணை மறைத்து நிற்கும் மலம் காரணமாச் சிவ ஒளியைக் காண்டல் இயலாமையை விளக்கிற்று. இரண்டாம் அடியில் 'காணாதவர்' என்றது அகக்கண்ணால் காணாதவரையேயாம். இரண்டாம் அடியை இறுதியில் கூட்டியுரைக்க.
இதனால், 'கூடா ஒழுக்கம் உடையார் ஞானியர் ஆகார்' என்பது கூறப்பட்டது.

பித்தன் மருந்தால் தெளிந்து பிரகிருதி
உய்த்தொன்று மாபோல் விழியுந்தன்கண்ணொளி
அத்தன்மை யாதல்போல் நந்தி அருள்தரச்
சித்தம் தெளிந்தேன் செயலொழிந் தேனே. ***#2038***

பித்துக் கொண்டவன் அதற்காக மருத்துவன் தரும் மருந்தால் பித்து நீங்கித் தெளிவுற்று உடம்பை முன்போலத் தறிகெட்ட நிலையில் செலுத்திக் கெடுக்காமல் இயற்கை நிலையில் செலுத்தி ஏனையோர் குழாத்தில் தானும் ஒருவனாய் ஒன்றுபடுதலைப் போலவும், படலத்தால் மறைக்கப்பட்ட கண்ணும் அவ்வாறே மருத்துவன் செய்யும் சிகிச்சையால் படலம் நீங்கித் தனது ஒளி கிடைக்கப் பெறும் அத்தன்மையைப் போலவும் அஞ்ஞானத்தால் அறிவு மயங்கி, 'யான், எனது' எனச் செருக்கித் திரிந்த யான் எம் ஆசிரியாராகிய நந்திபெருமான் ஞானத்தை அருளியதனால் அறிவு தெளிந்து செருக்கொழிந்து அருள் வழியில் ஒழுகி ஏனைய அருளாளரது குழாத்தில் சேர்ந்து அவர்களில் ஒருவன் ஆயினேன்.

விளக்கவுரை

'அதனால் யான்எனது என்னும் செருக்கால் கூடா ஒழுக்கத்தை மேற்கொள்ளுதலை இலன் ஆயினேன்' என்பது குறிப் பெச்சம். 'ஆகவே, இப்பேற்றினைப் பெறாதவர் கூடாவொழுக்கத்தை ஒழிதல் இயலாது' என்பது கருத்தாயிற்று, உவமையில், 'பிரகிருதி உய்த்து ஒன்றுமாபோல்' எனக் கூறினமையால், பொருளிலும் அதற்கு ஏற்புடையன கொள்ளப்பட்டன. 'பிரகிருதி' என்றது உடம்பை; சிவஞான போதத்திலும் *(சூ. 3 அதி.5)*, 'ஒடுங்கினவிடத்து இன்பத்துன்பம் சீவனம் பிரகிருதிக் கின்மையின்' என உடம்பு 'பிரகிருதி' என்றது காண்க.
இதனால், 'தற்போதத்தால் கூடா ஒழுக்கத்தைக் கொள்ளு தற்குக் காரணம் திருவருளின்மையே' என்பது கூறப்பட்டது.

பிரான்மய மாகப் பெயர்ந்தன எட்டும்
பராமய மென்றெண்ணிப் பள்ளி உணரார்
சுராமய முன்னிய சூழ்வினை யாளர்
நிராமய மாக நினைப் பொழிந் தாரே. ***#2039***

கள்ளை மிக உண்டலால் உடல் அக்கள்மயமே யாய் இருத்தலை
விரும்பும் வஞ்சமனத்தவர் ஞானிகட்குச் சிவமயமாகத் திகழ்கின்ற
உலகப் பகுதி எட்டினையும் அருள்மயமாக எண்ணி அடங்குதலாகிய
ஞானவிழிப்பைக் கொள்ளாது அஞ் ஞானத்தில் உறங்குவோராய்த் தாம்
குற்றம் சிறிதும் இல்லாத தூயராய் இருத்தல் வேண்டும் என்பதைச்
சிறிதும் நினையாதே கெடுகின்றனர்.

விளக்கவுரை

மூன்றாம் அடியை முதலில் வைத்துரைக்க. பெயர்தல் - விளங்குதல். உலகப் பகுதி ஐம்பெரும் பூதமும், 'ஞாயிறு திங்கள்' என்னும் இருசுடர்களும், உயிர்களும் எட்டுப் பகுதியுள்ளே அடங்குதலின், 'எட்டும்' என முற்றும்மை கொடுத்து ஓதினார். உடலை உயிர் இயக்குதல்போல் இவற்றை இறைவன் இயக்கி நிற்றலின் இந்த எட்டும் அவனுக்குத் திருமேனிகளாகச் சொல்லப் படுதல் பற்றி இவற்றை, 'பிரான் மயமாகப் பெயர்ந்தன' எனவும், அதனானே அவை அருள்மயம் ஆதல் பற்றி, 'பராமயம் என்றெண்ணி உணரார்' எனவும் கூறினார். பரா - பரை; சத்தி; அருள். 'உணரார்' என்பது முற்றெச்சம். நிராமயம் - நோய் இன்மை; அஃது இங்குக் குற்றம் இன்மையைக் குறித்தது. நிராமயம் ஆகும்படி நினைத்தலை ஒழிந்தனர்' என்க. இது ஞானிகட்கு ஆகாமைபற்றி இவ்வாறான நிலையில் நிற்பவர்கள் ஞானத்தில் விழியாது அஞ்ஞானத்தில் உறங்குபவராகவே கூறினார். கள்ளால் களிப்பெய்தினார் நன்று தீது அறியாது மயங்கிக் கெடுவர் ஆதலின், கள்ளுண்டல் மற்றும் பலகுற்றங்கள் விளைதற்கு வழியாகும் என்பது கருத்து.

இதனால், 'கள்ளுண்பார் ஞானியராகாது அஞ்ஞானியரே யாவர்' என்பது கூறப்பட்டது.

ஒன்றிரண் டாகிநின் றொன்றிஒன் றாயினோர்க்***(கு)***
ஒன்றும் இரண்டும் ஒருகாலும் கூடிடா
ஒன்றிரண் டென்றே உரைதரு வோர்க்கெலாம்
ஒன்றிரண் டாய்நிற்கும் ஒன்றோடொன் றானதே. ***#2040***

'பலவாய் உள்ள உயிர் ஒன்றாய் உள்ள சிவத்தோடு இரண்டறக் கலத்தலே முடிநிலைப் பயன்' என்பது எல்லோர்க்கும் உடன்பாடு. ஆயினும், ஒரு பொருளாய் உள்ள பிரமமே அவிச்சை யால் பலவாய் உள்ள உயிர்களாக மயங்கி அறியப்பட்டு, அவிச்சை நீங்கியவுடன் உயிர் முன்போல ஒரு பொருளாகிய பிரமத்தோடு ஒன்றாய்விடும் எனக் கூறுகின்றவர்கள் அவிச்சைக்குக் காரணம் கூறாமையால் உயிர் பிரமமேயான நிலைநிலைத்தல் இன்றிப் பிரமமும் உயிரும் வேறு வேறாய் நிற்கும் அவிச்சை நிலையே நிலைபெறுவ தாகும். ஆகவே

அவர்கட்கு இரண்டும் ஒன்றாகும் நிலை என்றும் கிட்டுவதின்றாம் இனி 'ஒன்றாகிய பரமனும், பலவாகிய உயிர்களும் என்றும் வேறு வேறாக இருத்தல் அன்றி, ஒன்றாதல் இல்லை' எனக் கூறுவார்க்கு அவ்வாறு நிற்றலே பயனாவதன்றி, முதற்கண் கூறிய முடிநிலைப் பயன்கிட்டாதாம்.

விளக்கவுரை

அதனால் 'அவ்வாறெல்லாம் கூறுவாருடன் எதிர்வாதம் செய்து பொழுதைப் போக்குதலும் ஞானியர்க்குக் கூடா ஒழுக்கம்' என்பது குறிப்பெச்சம். இரண்டாம் அடியில் 'ஒன்று, இரண்டு' என்றது, 'முதலாவது, இரண்டாவது' எனவும், ஏகாரம் தேற்றம். அது ஈற்றடியிலும் சென்று இயையும். ஆகவே, இரண்டிடத்தும் 'ஒன்றிரண்டு' என்பன பயனிலையாம் ஆகலின், அவற்றிற்கு எழுவாய் வருவித்து, 'ஒன்றும் இரண்டும் ஒன்றும் இரண்டுமே என்று உரைதருவார்க்கு எலாம் ஒன்றும் இரண்டும் ஒன்றும் இரண்டுமே (அவை ஒன்றாதல் இல்லை) என்க. 'ஒன்றோடொன்றானதே' என்பதில் முதற்கண் நின்ற ஒன்று சிவம். ஒன்றாதலுக்கு உயிர் என்னும் எழுவாயும், 'ஆனதே முடிநிலைப் பயன்' என்னும் சொல்லெச்சமும் வருவித்து முதலில் கூட்டியுரைக்க. இதனால், உண்மை ஞானியர்க்குப் பிற மதத்தவரோடு தருக்க வாதம் செய்து பொழுதை வீண்படுத்துதலும் குற்றமாதல் கூறப்பட்டது. சாத்திரங்களில் சொல்லப்படுகின்ற பிற மத மறுப்புக்கள், அம்மதம் பற்றி மயங்கும் மாணாக்கரை நோக்கி விளக்கம் தருவனவேயாகும்.

உயிரது நின்றால் உணர்வெங்கு மாகும்
அயரறி வில்லையால் ஆருடல் வீழும்
உயிரும் உடலும் ஒருங்கிக் கிடக்கும்
பயிரும் கிடந்துள்ளப் பாங்கறி யாரே. ***#2041***

உயிர் உடம்பில் இருப்பதனால்தான் அந்த உடம்பு முழுதிலும் அறியுந்தன்மை காணப்படுகின்றது. (அத் தன்மையால் உடல் வீழ்ந்தொழியாது வாழ்ந்து செயற்படுகின்றது) உயிர் உடலை விட்டு நீங்கினால் உடலைச் செயற்படுத்துகின்ற அந்த அறிவு இல்லையாய்விடும். அறிவு இல்லையானால், வேறு எல்லா அமைப்புக்களும் நிறைந்துள்ள உடம்பு அவ்வமைப்பால் பயனின்றி வீழ்ந்து அழியும். ஆகவே 'உயிர்' எனப்படுவது உடம்பிற்கு வேறாதல் தெளிவாகலின் அத்தகைய உயிரும் உடம்பும் ஒன்றி நிற்கும் பயப்பாடு வெள்ளிடை மலைபோல் விளங்கிக் கிடக்கவும் சிலர் உடம்பையே தாமாக மயங்கிக் கூடா ஒழுக்கத்தினை மேற்கொள்கின்றனர்.

விளக்கவுரை

'இஃது ஓர் அறியாமை' என்பது குறிப்பெச்சம். 'நின்றால்' என்றமையால், 'நில்லாவிடில்' என்பது வருவிக்கப் பட்டது. அயர்தல் - செயலாற்றுதல்; விருந்தயர்தல், விழா வயர்தல் முதலியன காண்க பயிர் - 'பயனைத் தருவது' என்னும் பொருட்டாய் நின்றது. 'கிடந்து' என்னும் எச்சத்தைத் திரித்து, உம்மையை மாறிக் கூட்டி, 'கிடக்கவும்' என உரைக்க. உள்ளம் - ஆன்மா. பாங்கு - அதன் தன்மை.
இதனால், 'குருவருளால் தம்மையும், தலைவனையும் உணர்ந் தாராயினும் கூடா ஒழுக்கத்தைக் கொள்ளின் உணராதவரேயாவர்' என்பது கூறப்பட்டது.

உயிரது வேறாய் உணர்வெங்கு மாகும்
உயிரை அறியின் உணர்வறி வாகும்
உயிரன் றுடலை விழுங்கும் உணர்வை
அயரும் பெரும்பொருள் ஆங்கறி யாரே. ***#2042***

உயிர் உடம்பு போல அன்றி அதனின் வேறாய் இருத்தலால்தான் அந்த உடம்பு முழுதும் அறிவுத் தன்மை காணப் படுகின்றது. இதனை ஆய்ந்தறியும் அறிவே மெய்யறிவாகும். உயிர் தான் உடம்போடு சேர்ந்த அன்று முதலாக உடம்பு முழுவதையும் தனது அறிவால் அகப்படுத்தி ஆண்டு வருகின்ற அந்தச் செயலை அவ் வுயிர்க்கு உயிராய் நின்று செய்து வருகின்ற ஒரு பெரும் பொருளை அறிபவர் உலகத்தில் ஒரு சிலரே.

விளக்கவுரை

'வேறாய்' என்பது, 'வேறாக' என்பதன் திரிபு. 'அன்று' என்பதன் பின் 'முதலாக' என்பது எஞ்சி நின்றது. உணர்வை அயர்தல், அறிவைச் செயற்படுத்துதல். ஆங்கு - அவ்வாற்றால் என்றது, 'அவ்வுண்மையை' என்றபடி. அறியாமை' சிறிதும் அறியாமையேயன்றி, முற்ற அறியாமையையும் குறித்தது; 'முற்ற அறியாதவரே கூடா ஒழுக்கத்தினை உடையராகின்றனர் என்பது கருத்து.
இதனால், முன்னை மந்திரத்திற் கூறிய பொருள் வேறோ ராற்றான் வலியுறுத்தப்பட்டது.

உலகாணி ஒண்சுடர் உத்தம சித்தன்
நில ஆணி ஐந்தனுள் நேருற நிற்கும்
சிலஆணி யாகிய தேவர் பிரானைத்
தலைவாணி செய்வது தன்னை யறிவதே. ***#2043***

அனைத்துலகங்களின் தொகுதியாகிய தேரினை நிலைபெறச் செய்கின்ற அச்சாணியாய் உள்ளவன் ஒளியாய் உள்ள அனாதி முத்தனாகிய சிவனே. அவன் நிவிர்த்தி முதலிய ஆதார கலைகள் ஐந்திலும் நுண்ணியனாய் நிறைந்து நிற்கின்றான். அவ் வைந்து கலைகளுக்கு

உட்பட்டுள்ள இடங்களில் சிற்சிலவற்றிற்குத் தலைவராய், 'தேவர்' எனப்பெயர் பெற்று விளங்கும் அனைவர்க்கும் தலைவனாய் உள்ள அந்தப் பெருமானையே ஒருவன் தன் தலைமேல் வைத்து ஒழுகுவானாயின், அவன் அவ்வாறு ஒழுகுதலே தனது இயல்பை உள்ளவாறு அறிந்துஒழுகும் ஒழுக்கமாகும்.

விளக்கவுரை

'சித்தன், முத்தன்' என்பன ஒருபொருட்சொற்கள். ஆதிமுத்தர் அனைவர்க்கும் முன்னே முத்தனாய் உண்மைபற்றி அவ்வானாதி முத்தனை, 'உத்தம சித்தன்' என்றார். நிலம் - ஆதாரம். அஃது ஏனை ஐந்து அத்துவாக்களுக்கும் ஆதாரமாய் உள்ள கலைகளைக் குறித்தது. நேர்மை - நுண்மை. 'அத்தேவர் பிரானை' எனச் சுட்டுவருவித்துக்கொள்க. வாணி, 'மொழி' எனப் பொருள்தரும் வடசொல். அது மொழிவடிவாய் விளங்கும் தியானத்தைக் குறித்தது. இவ்வாறு ஒழுகுவோர் கூடாவொழுக்கத்தைக் கொள்ளார் என்பதாம். இதனால், 'எந்நிலையிலும் கூடா ஒழுக்கம் திருவருள் நெறிக்கு ஏலாததே' என்பது உணர்த்தப்பட்டது.

தானந்த மாமென நின்ற தனிச் சுடர்
ஊனந்த மாய்உல காய்நின்ற ஒண்சுடர்
தேனந்த மாய்நின்ற சிற்றின்பம் நீஒழி
கோனந்த மில்லாக் குணத்தரு ளாமே. ***#2044***

மாணவகனே, நீ 'எல்லாவற்றையுங் கடந்துவிட்ட எனக்கு இனி அறம் பாவங்கள் எங்குள' எனச் செருக்கி, தேன் துளியால் வரும் இன்பம்போல மிகச்சிறியனவாய்ப் பெறப்படுகின்ற சிற்றின்பத்தைப் பெறும் செயலை அறவே ஒழி. அவ்வாறு ஒழித்தால்தான் சிவனது அளவில்லாத இன்பத்திற்கு ஏதுவாகிய அவனது அருள் முற்றக் கிடைக்கும்.

விளக்கவுரை

இது பின்னிரண்டடிகளால் சொல்லப்பட்ட பொருள், கோன் - தலைவன்; பதி; சிவன். முன்னிரண்டடிகளில் அவனது பெருமை சொல்லப்பட்டது. அஃதாவது, உலகம் அனைத்திற்கும் தானே முடிவிடம்' என வேதம் முதலிய பல உண்மை நூல்களாலும் சொல்லப்பட நின்ற விளக்காயும் எல்லாப் பொருட்கும் பின்னும் முன்னுமாய் விளங்கும் ஒளியை யுடைய விளக்காயும் உள்ளவன் என்பது. 'ஊன்' என்றதும் உடம்பு முதலாய உலகங்களையே, 'அவற்றிற்கு அந்தமாய்ப் பின் ஆதியாகி உலகமாயினான்' என்க. 'எஞ்ஞான்றும்தான் சுதந்திர அறிவனே யாவதல்லது பிறிதொன்று விளக்க விளங்கும் பரதந்திர அறிவினன் அல்லன்' என்றற்கு 'சுடர்' என்பதனை இருகாற் கூறினார். 'தேன் அந்தம்'

என்பதில் 'அந்தம்' என்றது, 'விரைய முடியும் துளி' என்றபடி. அவ்விடத்தும் ஆக்கம் உவமை குறித்து நின்றது. இங்கு 'குணம்' என்றது ஆனந்தத்தையே, 'உணர்ந்தார்க் குணர்வரியோன்தில்லைச் சிற்றம்பலத்தொருத்தன் - குணந்தான் வெளிப்பட்ட ... ... இக்கொடியுடை தோள்' *(தி.6 ப.1 பா.5)* என்பதில் 'குணம்' என்றது போல்,

இதனால், 'எஞ்ஞான்றும் சிற்றின்பத்தில் இச்சை செய்பவர் திருவருளை முற்றப் பெறார்' என்பது கூறப்பட்டது. 'வான்புலன்கள் அகத்தடக்கி மடவாரோடும் - பொருந்தணைமேல் வரும் பயனைப் போக மாற்றி' *(தி.8 திருக்கோவையார் , 9)* என்பதிலும் இக்கருத்தே அருளிச் செய்யப்பட்டது.

உன்முத லாகிய ஊன்உயிர் உண்டெனும்
கன்முதல் ஈசன் கருத்தறி வார்இல்லை
நன்முதல் ஏறிய நாமம் அறநின்றால்
தன்முத லாகிய தத்துவம் ஆமே. ***#2045***

'காட்சியால்' உணரப்படும் உடம்பேயன்றிக் கருதலால் உணரப்படும் உயிரும் உடம்பினுள்ளே உண்டு என்னும் உண்மையையும், 'அவ்வுயிருக்குத் தலைவராகச் சொல்லப் படுவோர் பலருள்ளும் கயிலைக் கடவுளாகிய சிவனே முழுமுதல் தலைவன்' என்னும் உண்மையையும் அறிகின்றவர் உலகத்து அரியர். இனி அவ் வுண்மையை உணர்ந்தவர்களும் அவற்றை உணர்வதற்குமுன் கொண்டிருந்த ஆசை வழிப்பட்ட செயல்களை முற்றவிடுத்தால்தான், ஓர் உயிரும் எஞ்சாதபடி ஒவ்வொன்றிற்கும் முதலாய் உள்ள மெய்ப் பொருளின் விளக்கம் நிரம்ப உண்டாகும்.

விளக்கவுரை

உயிரை, 'உன்னியுணரப்படும் முதல்' என்றமையால், 'ஊன் - உடம்பு - கண்டுணரப்படும் முதல்' என்றது பெறப்பட்டது. உன்முதல், வினைத்தொகை. கல் - மலை, 'எனும்' என்பதை 'ஈசன்' என்பதனோடும் கூட்டுக. படிமுறையால் உணர வேண்டுதல் பற்றி இரு தொடராக ஓதினார். ஏறிய - ஏறியன. அஃதாவது 'பழகிப்போன செயல்கள்' என்றபடி. 'நன்குஏறிய' என்க. 'நன்கு' என்பது கடைக் குறைந்து நின்றது. 'நாமமும்' என்னும் உம்மை தொகுத்த லாயிற்று. நாமம் - பெயர். இதனால், 'அறிதற்கரிய உண்மைகளை அறிந்தவராகிய மெய் அறிவாளரும் கூடா ஒழுக்கம் உடையாராயின் அவ்வறிவால் பயன் எய்தார்' என்பது கூறி முடிக்கப்பட்டது.

[இம்மந்திரத்திற்குப் பின் பதிப்புக்களில் காணப்படுகின்ற 'இந்தியம் அந்தக் கரணம் இவை' எனத் தொடங்கும் மந்திரம் அடுத்த தந்திரம் முதல் அதிகாரத்தில் இருந்ததாகும்.]

9.37.கேடுகண்டிரங்கல்

வித்துப் பொதிவார் விதைவிட்டு நாற்றுவார்
அற்றதம் வாழ்நாள் அறிகிலாப் பாவிகள்
உற்ற வினைத்துயர் ஒன்றும் அறிகிலார்
முற்றொளி ஈயல் முளிகின்ற வாறே. *#2046*

மக்கள் தமக்கு வரையறுக்கப்பட்டு அமைந்த வாழ் நாள் இத்துணையது என்று அறியமாட்டாதவராய் அன்றாடம் உண்டு வாழ்வதேயன்றி, அடுத்துவரும் ஆண்டிற்கும் உணவின் பொருட்டான முயற்சிகளை ஓயாமற் செய்வதிலேயே மனம் அமைதியுற்று விடுகின்றனர். இஃது அவர் பிரார்த்த வினைவிளைவாகிய துன்ப நிலையே என்பதையும் அவர் சிறிதும் அறிவதில்லை. இந்தப் பொய்யான இன்பத்திலே அவர் வீழ்ந்து கெடுதல் ஓங்கி எரியும் விளக்கை இனிய உணவென்று கருதிச்சென்று அதில் வீழ்ந்து மடிகின்ற விட்டிற் பூச்சியின் செயலோடு ஒப்பதாகும். அந்தோ? இஃது அவர் ஓர் அறியாமை இருந்தவாறு!.

விளக்கவுரை

ஈற்றில் வருவித்துரைத்தது குறிப்பெச்சம். நாற்றுதல் - நாற்றங்காலில் நாற்றுவிடுதல். ஒளி, ஆகுபெயர். விட்டிலை ஒப்புமைபற்றி, 'ஈயல்' என்றார். இதன் ஈற்றடியில் காணப்படும் பாட வேறுபாடுகள் சில. இஃது யாக்கை நிலையாமையை அறியாது உழலுதல் நோக்கி இரங்கியவாறு.

போது சடக்கெனப் போகின் றதுகண்டும்
வாதுசெய் தென்னோ மனிதர் பெறுவது
நீதியு ளேநின்று நின்மலன் தாள்பணிந்து
ஆதியை அன்பில் அறியகில் லார்களே. *#2047*

நாள்கள் மிக விரைவாக வந்து வந்து போவதை அறிந்திருந்தும் பலர் அந்நாள்களை வாது செய்வதிலே கழித்து விடு கின்றனர். ஒழுக்கத்தில் நில்லாமல் வாதுசெய்வதனால் அவர் என்ன பயனை அடையப் போகின்றனர்! ஒரு பயனும் இல்லை. ஒழுக்கத்தில் நின்றும், இறைவன் திருவடியை வணங்கியும் வருவராயின் நாளடைவில் இறையன்பு தோன்றி வளர அவனை அவர்நேரே அறிந்து இன்புறுவர். அதனை அவர் அறிகின்றாரில்லையே!

விளக்கவுரை

'வாது' எனப் பொதுப்படக் கூறினமையால் உலகியல் பற்றிய வாது, மெய்ந்நெறி பற்றிய வாது என்னும் இரண்டும் கொள்ளப் படும். அதுபின்னர் 'நீதியில் நின்று' எனவும், 'நின்மலன் தாள் பணிந்து' எனவும் கூறியதனாலும் விளங்கும். முன்னர் அவ் விரண்டையும்

கூறினமையால், பின்னர் 'ஆதியை' என எடுத் தோதினார். 'நின்றும், பணிந்தும்' என்னும் வினையெச்சங்கள், 'அறியகில்லார்கள்' என்பதில் உள்ள அறிதல் வினையோடு முடிந்தது. ஆகவே, 'அறியகில்லார்கள்' என்பது 'அறிதலைச் செய்ய கில்லார்' எனப் பொருள் தந்தது.
இது, மேற்கூறிய வினைத்துயரை அறிந்து அதனினின்றும் நீங்கும் வழியை எடுத்தோதி அதனை மனிதப் பிறப்பை எய்தியும் பெறாது கெடுகின்றவரது கேடு நோக்கி இரங்கியவாறு,
'பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்'
எனப் பின்னரும் இரங்குவார்.

கடன்கொண்டு நெற்குற்றுக் கையரை ஊட்டி
உடம்பினை யோம்பி உயிராய்த் திரிவார்
தடங்கொண்ட சாரல் தழல்முரு டேறி
இடங்கொண் டுடலார் கிடக்கின்ற வாறே. ***#2048***

நெல்லைக் கடனாகவேனும் வாங்கிக் குற்றி, குற்றிய அரிசியைக் கொண்டு ஒரு சாண் வயிற்றினுள் இருக்கும் சிறு கருவி களின் வேகத்தைத் தணிக்கும் முகத்தால் உடம்பைப் பாது காக்கின்றவர்களும் தங்களை 'உயிர்' என்று சொல்லிக்கொண்டு திரி கின்றார்கள். அவ்வாறு திரிகின்றவர் தம்மைப்போன்றோர் பலரது உடம்புகளும் முடிவில், மலைச்சாரலில் பற்றி எரிகின்ற தீப்போன்ற பெரிய தீயை உடைய முருட்டணையில் ஏறிப் பின் அதினின்றும் இறங் காமல் அதனையே இடமாகக்கொண்டு கிடந்து ஒழிந்துபோதலைப் பல முறை கண்டிருந்தும் அதனைச் சிறிதும் பொருட்படுத்துதல் இல்லை.

விளக்கவுரை

இவரை, 'உயிர்' என்று கூறுதல் எவ்வாறு பொருந்தும் என்பது குறிப்பெச்சம். 'உயிரா' என்பது பாடமாயின், 'உயிர்த்து', அஃதாவது 'மூச்சுவிட்டுச் சீவித்து' என உரைக்க. இறுதியில், 'அறியார்' என்பது சொல்லெச்சமாய் எஞ்சிநின்றது. கடனாகவும், என்னும் ஆக்கச் சொல்லும், உம்மையும் தொகுத்தலாயின. குற்று, 'குறு' என்பது அடியாக வந்த வினையெச்சம். அவ்வெச்சம் இக்காலத்தில் 'குற்றி' என வழங்குகின்றது. குறுதல் - உரலில் இட்டு உலக்கையால் குற்றுதல். குத்துதல் - கையை முட்டியாகப் பிடித்துக் குத்துதல். இவ் வேறுபாடு உணரத் தக்கது. கை - சிறுமை. கையர், உடலார் - என்பன இழிவு நோக்கி உயர்திணையாகக் கூறப்பட்டன.
இது 'நாடாமை, நாணின்மை, நாரின்மை, யாதொன்றும் பேணாமை' என்னும் பேதையார் தொழில்களில் நாடாமை நோக்கி இரங்கியவாறு.

விரைந்தன்று நால்வர்க்கு மெய்ப்பதி சூழ்ந்து

புரந்தகல் லால்நிழற் புண்ணியன் சொன்ன
பரந்தன்னை ஓராப் பழிமொழி யாளர்
உரந்தன்மை யாக ஒருங்கிநின் றார்களே. *#2049*

தனக்கு உண்மையிடமாகிய திருக்கயிலையின் பாங்கர் நிலவுலகத்து மக்கள் பொருட்டாகத்தான் நிலைநிறுத்திய கல்லால மர நிழலின்கண் இருந்து சிவன் படைப்புக் காலத்திலே முனிவர் நால்வர்க்கு அவர் விரும்பிய உடனே அருளிச் செய்த முதல் மொழிகள் அம்முனிவரிடமிருந்து நல்லோரால் வழிவழியாகப் பெறப் பட்டு உலகில் வழங்கா நிற்கவும் அவற்றைக் கேளாது பழித்து ஒதுக்கத் தக்கனவாகச் சிற்றறிவுடையரால் சொல்லப்பட்டு வழங்கும் மொழிகளைக் கேட்டு நிற்போர் அக்கேள்வியின் பயனாகத் தமது வன்மையையே மெய்ம்மையாகத் துணிந்து இடர்ப்படுகின்றார்களே!. இஃதென்ன அறியாமை!.

விளக்கவுரை

'மறைகள்' எனப்படும் முதல்நூல்கள் நான்கு - என்பதும், அவற்றைப் படைப்புக்காலத்தில் சிவபிரான் கல்லால மர நிழலின்கண் எழுந்தருளியிருந்து முனிவர் நால்வருக்கு அருளிச் செய்தான் - என்பதும், அந்நான்கு மறைகள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கினையும் உணர்த்துவன என்பதும் தேவார திருவாசகங்களாகிய திருமுறைகளில் பல இடங்களில் பரவலாகவே சொல்லப்படுகின்றன. அவற்றுள் சிவன் கல்லால மர நிழலில் எழுந்தருளியிருந்து நால்வர்க்கு முதல் மொழி யாகச் சிலவற்றை மொழிந்தது ஒன்று மட்டும் இம்மந்திரத்தில் சொல்லப் பட்டது. மேற் கூறிய மறைகள் பற்றிய செய்திகளுள் ஒன்றேனும் இன்று வழங்கும் இருக்கு முதலிய ஆரிய நால் வேதங்களுக்கு ஆரியத்துள் ஓரிடத்தும் சொல்லப் படாமையாலும் இவ்வேதங்கள் நான்கும் அறம் முதலிய நாற்பொருள் பற்றிக் கூறாமையாலும் திருமுறைகளில் சொல்லப்பட்ட அம்மறைகள் இருக்கு முதலிய ஆரிய வேதங்கள் அல்ல என்பது தெளிவாதலால் அம்மறைகள் தமிழால் ஆயவையாய், விளங்கியிருந்து பின்னர் மறைந்தனவாகும் என்பர் ஆராய்ச்சியாளர். நீதிநூல் செய்த, ஔவையார் 'தேவர்குறளும்' (நல்வழி) எனத் தொடங்கும் வெண் பாவில், 'திருநான்மறை' என்றது திருமுறை களில் மேற்காட்டிய வாறாகச் சொல்லப்படும் தமிழ் மறைகளையே - எனவும், அஃது அவ்வெண்பாவில் குறிப்பிடப்பட்ட நூல்கள் யாவும் தமிழ் நூலாகவே இருத்தல் பற்றியும் அறியப்படும் - எனவும் நிலை நாட்டியவரும் உண்டு. (திரு. கா. சுப்பிரமணியபிள்ளை, எம். ஏ., எம். எம். எல்., திருநான்மறை விளக்கம்). பரம் - மேன்மை. அது காலத்தால் அனைத்திற்கும் முன்னாக

வெளிப்பட்ட மொழிகளைக் குறித்தது. பிறமொழிகளை, 'பழி மொழி' என்றதனால், 'இம்முன் மொழிகள் புகழ்மொழி' என்பது, பெறப்பட்டது. இருக்கு முதலியஆரிய நால்வேதங்களை ஆன்றோர் முன்மொழிகளாகத் தழுவிக் கொண்டமையால், 'பழிமொழி' என்றது அவற்றிற்கு மாறாக எழுந்த நூல்களையேயாம். அவை உலகாயத சமண பௌத்த சமய நூல்களாம். அவை முற்றிலும் வேதத்திற்கு மாறாவன. வாமம், பாசுபதம், காளாமுகம் முதலிய சமயங்களின் நூல்கள் வேதத்திற்கு ஒருபுடை மாறா வனவாம். உண்மை நூல்கள், 'சிவனது ஆற்றலே மெய்ம்மை' எனக்கூற, ஏனைய நூல்கள் அவ்வாறு கூறாமையால், அவற்றின்வழி நிற்போர் உயிர்களாகிய தமது ஆற்றலையே மெய்ம்மையாகக் கருதுதல் பற்றி, 'உரம் தன்மையாக ஒருங்கிநின்றார்களே' என்றார். உயிர்களின் ஆற்றல் உலகியலிற்றானே சிலவற்றிற் செல்லமாட்டாமை கண் கூடாகவும் அவ் வாற்றலையே மெய்ம்மையாகக் கருதுதல் அறியாமை என்பது கருத்து. 'ஏனைய எவ்வாறாயினும், இத்தன்மையோர் பிறவித் துன்பத்தினின்றும் நீங்கார்' என்பதே இங்குக் கருதப்பட்டது.
இது, 'நெறியல்லா நெறிதன்னை நெறியாக'க் *(தி.8 அச்சோப்பதிகம்)* கொள்வாரை நோக்கி இரங்கியவாறு. இவர்
'முன்னெறியாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறிய சரண் ஆதல் திண்ணம்' -*தி.4 ப.11 பா.9*
என்பதை அறியார்.

நின்ற புகழும் நிறைதவத் துண்மையும்
என்றும்எம் ஈசன் அடியவர்க் கேநல்கும்
அன்றி உலகம் அதுஇது தேவென்று
குன்றுகை யாலே குறைப்பட்ட வாறே. ***#2050***

அனைத்திற்கும் முதல்வனாகிய எங்கள் சிவ பெருமான் உலகியலில் நிலைத்த புகழையும், நிரம்பிய மேலான தவத்தையும், அதன் பயனாகிய உண்மை ஞானத்தையும் தன்னை யடைந்த அடியார்களுக்கே அளித்தருள்வான் ஆகையால், உலகர் அவற்றை இழத்தற்குக் காரணம் அவ்வடியவரோடு மாறுபட்டு, 'அது கடவுள், இது கடவுள்' எனத் தத்தமக்கு எட்டிய பொருள்களைத் தனித்தனி கூறித் தம்முள் கலாய்த்துக்கொண்டு, ஞானம் குறை கையாலேயாம். இஃது இரங்கத்தக்கது.

விளக்கவுரை

'நிறைதவத் துண்மையும்' என்ற அனுவாதத் தானே நிறைதவத்தை நல்குதலும் பெறப்பட்டது. அன்றுதல் - மாறுபடுதல்; 'அன்றினார் புரமெரித்தார்க்கு' *(தி.12 பூசலார். பு.1)* என்றது காண்க. சிலர் நிலம், நீர், தீ முதலிய சடப் பொருள்களையே தெய்வமாகக் கூறுதல் பற்றி, 'அது,

இது' என அஃறிணையாற் கூறினார்.
இது, மேற்கூறிய பழிமொழியாளர் மெய்ப்பொருளை யுணராது தாம்தாம் கொண்டதே கொண்டு வாதிட்டு ஒழிதலை நோக்கி இரங்கியவாறு.
இவரை நோக்கியே யன்றோ,
'... ... ... மற்றோர் தேவர் எத்தேவர் என்ன
அருவரா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே' -தி.8 அச்சப்பத்து
என்று அருளிச் செய்தார். 'சலமிலன் சங்கரன்; சார்ந்தவர்க்கலால் நலமிலன்' (தி.4 ப.11 பா.6) என்று அருளிச் செய்ததும் காண்க.

இன்பத்து ளேபிறந் தின்பத்தி லேவளர்ந்
தின்பத்து ளேதிளைக் கின்ற திதுமறந்து
துன்பத்து ளேசிலர் சோறொடு கூறையென்
துன்பத்து ளேநின்று தூங்குகின் றார்களே. **#2051**

மக்கள் யாவரும் பிறக்கும்பொழுதே இன்பத்தில் பிறந்து, வளரும் பொழுதும் இன்பத்திலே வளர்ந்து இன்பத்திலே திளைக்கின்றவர்களே யாயினும் சிலர் இதனையறியாது தாங்கள் துன்பத்திலே மூழ்கியிருப்பதாகக் கருதிக்கொண்டு அத்துன்பத்தைப் போக்கிக் கொள்ளும் வழியாக, 'உணவு' என்றும், 'உடை' என்றும் அவாவி, அவற்றைப் பெறவேண்டி அல்லற்பட்டு, அவ்வல்லலை விட்டு நீங்க நினையாமல் அதிலேயே செயலற்றிருக்கின்றார்கள்; இஃது இரங்கத் தக்கது.

விளக்கவுரை

'வீடேயன்றிப் பந்தமும் இறைவனால் தரப்படுவதே யாகலின் அந்தப் பந்தம் பின் வீடு பெறுதற்கு வழியாகும் என்பதே உண்மையாதலின், அவ்வுண்மையை உணர்வார்க்குப் பந்தமும் இன்ப முடையதாயே அமைதல் பற்றி, 'இன்பத்துளே பிறந்து, இன்பத்திலே வளர்ந்து, இன்பத்துளே திளைத்து' எனவும், இவ்வுண்மையை உணராமையாலேதான் வாழ்க்கை துன்ப மயமாகின்றது என்பது பற்றி, 'சோறொடு கூறையென் துன்பத்துளே நின்று' எனவும், இவ் வறி யாமையுடையார்க்கு அவர் கருத்தாலும், செயலாலும் உண்டாக்கிக் கொள்கின்ற துன்பத்தினின்றும் நீங்கும் வாயில் இல்லாமைபற்றி, 'தூங்குகின்றார்களே' என்றும் கூறினார். 'அனைத்தும் திருவருட் செய லாதலின் அவை இன்பமயமேயாம். ஆயினும் அவற்றை அவ்வாறு உணராதார்க்கு அவை அனைத்தும் துன்பமேயாம்' என்பது கருத்து.
'பந்தமும் வீடும் படைப்போன் காண்க'
-தி.8 திருவண்டப் பகுதி, அடி, 52
என்பது முதலிய திருமொழிகளால், வீடேயன்றிப் பந்தமும் இறைவனால்

தரப்படுவதேயாதல் விளங்கும். மற்றும் இதுபற்றிய விளக்கங்கள் சாத்திரங்களில் பெறப்படும். இங்குக் கூறப்பட்ட இம்மக்களை நோக்கியே,

பால்ஆழி மீன் ஆளும் பான்மைத்*(து)* அருள் உயிர்கள்
மால்ஆழி ஆளும் மறித்து. -திருவருட்பயன், *34*

எனச் சாத்திரத்தில் கூறப்பட்டது. உண்மையுணர்வார்க்கு, 'பெற்றசிற் றின்பமே பேரின்பமாம்' *(திருவுந்தியார், 53)* என்றது அறிக.

துன்புறுவோர் பலராயினும் 'சிலர்' என்றது, அவர்தம் அறியாமையது சிறுமை பற்றி வந்த இழித்தற் குறிப்பு.

இதனால், உண்மையுணர மாட்டாத அறியாமை நோக்கி இரங்கியவாறு.

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே. ***#2052***

பெறுதற்கரிய பிராணிகள் ஞானத்தையும், அது வழியாக வீட்டையும் பெற இயலாத பிராணிகள். அவை மக்களை யொழித்து ஏனைய உயிர்கள். அவைகளால் பெறுதற்கரிய பேறு இறைவன் திருவடி. 'பெறார் பேறிழந்தார்' என்க, ஏனைய வெளிப்படை.

விளக்கவுரை

'அரிய' என்னும் பெயரெச்சக் குறிப்பு நான்கனுள் மூன்றாவது வினைமுதற்பெயர் கொண்டது. ஏனைய செயப்படு பொருட் பெயர் கொண்டன. இறைவன் திருவடிப் பேற்றை 'ஏனை உயிர்கள் பெற இயலாத பேறு' என்றமையால், 'மக்கட் பிறவியைப் பெற்றும் அப்பேற்றைப் பெற நினையாதவர்கள் மக்களாகாது, ஏனை உயிர்களேயாவர்' என்பது கருத்தாயிற்று.

இதனால், கிடைத்த சாதனத்தின் அருமையை அறியாது அதனை வீண்படுத்துகின்ற அறியாமை நோக்கி இரங்கியவாறு.

ஆர்வ மனமும் அளவில் இளமையும்
ஈரமும் நல்லஎன் றின்புறு காலத்துத்
தீர வருவதோர் காமத் தொழில்நின்று
மாதவன் இன்பம் மறந்தொழிந் தார்களே. ***#2053***

யாவரிடத்தும் நட்பையே பாராட்டும் மனமும், எச் செயலிலும் சோர்வடையாத ஊக்கமும், கிளைஞர் எல்லோரிடத்திலும் செல்லுகின்ற ஈரமும் குறைவின்றியிருத்தலால் தாமும், பிறரும் 'இது மிக நல்லதாகிய பருவம்' என மகிழ்ச்சியுறுவதாகிய இளமைப் பருவத்திலே அந்நல்லவற்றை யெல்லாம் உமையொருபாகனுக்குப் பணி செய்வதில்

பயன்படுத்தாது, அவனது இன்பத்தைப் பெறாமல் மறந்து, அந்நல்லனவெல்லாம் விரையக் கெடுதற்கு ஏதுவாகிய சிற்றின்பச் செயலிலே சிலர் ஈடுபட்டு ஒழிகின்றார்களே; ஈதென்ன அறியாமை!

விளக்கவுரை

'ஈதென்ன அறியாமை' என்பது குறிப்பெச்சம். 'இன்புறு காலம் இளமைக் காலமே' என்பது தோன்ற முன்னரே ஊக்கத்தினை, அதனைத் தருகின்ற இளமையாக உபசரித்துக் கூறினார். ஆர்வம் - பேரன்பு. 'அது நட்பைத் தரும்' என்பதனை,

அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. -திருக்குறள், *74*

என்பதனால் அறிக. 'மக்கள் மனம் அவரது இளமைக் காலத்திலே தூயதாகவே இருந்து, நாள் செல்லச் செல்ல உலகச் சூழலில் படிந்து படிந்து மாசேறிவிடுகின்றது' என்பது பொதுவான ஓர் உலக வழக்கு. அஃதே பற்றி இளமைப் பருவத்தை 'நல்ல என்று இன்புறுகாலம்' என்றார். ஈற்றடி முதலில், 'உமாதவன்' என வரற்பாலதாகிய உகரம் தொடைநோக்கி, மூன்றாம் அடியின் இறுதிக்கண் வகையுளியாய் நின்றது. 'நின்று மறந்தொழிந்தார்களே' என்றலே கருத்தென்க. ஈற்றடி உயிரெதுகை.

இதனால் கனியிருக்கக் காய் கவர்ந்து கெடுதல் போல்வதோர் மயக்கம் நோக்கி இறங்கியவாறு.

இப்பரி சேஇள ஞாயிறு போல் உரு
அப்பரி சங்கியின் உள்ளுறை அம்மானை
இப்பரி சேகம லத்துறை ஈசனை
மெய்ப்பரி சேவின வாதிருந் தோமே. ***#2054***

முன் மந்திரத்தில் கூறிய உமாதவனாகிய சிவன் தன் அடியவர் முன் புறத்தே தோன்றிக் காட்சி வழங்குமிடத்துக் காலையில் தோன்றுகின்ற இளஞாயிற்றைப் போலும் உருவுடையனாய் விளங்குவான். *[*அது 'காலையே போன்றிலங்கும் மேனி' *(*தி.*11)* என்பது முதலிய திருமொழிகளான் உணரப்படும்*]* இனி அவர்க்கு இவ்வாறு புறத்துத் தோன்றுதல் போலவே அகத்துத் தோன்றுங்கால் உள்ளக் கமலத்தை இடமாகக்கொண்டு என்றும் இருப்பவனாய் விளங்குவான். இவ்விரண்டும் இன்றிக் கரந்து நின்று அருள்புரியுமிடத்துச் சிறிதும், பெரிதுமாய தீப்பிழம்புகளின் உள்ளிருந்து அருள்புரிவான். *[*இவ் வுண்மைகள் எல்லாம் அவனை அறிந்து இன்புறும் பெரியோரை அடுத்துக் கேட்பின் விளங்கும்*]*. அவ்வாறு கேட்டுணராது நாளை வீணாகக் கழிக்கின்றோமே; இஃது அறியாமையன்றோ!

விளக்கவுரை

பரிசு - தன்மை. அண்மையிடத்தனாய் வெளிப்படும் நிலைகளை 'இப்பரிசு' எனவும், வெளிப்படாது சேயனாய் நிற்கும் நிலையை 'அப்பரிசு' எனவும் கூறினார். இவ்விடங்களில் 'பரிசின் கண்' என ஏழாவதும், 'மெய்ப்பரிசு' என்பதில் இரண்டாவதும் விரிக்க, பிறரது அறியாமையைப் புலப்படுத்தக் கருதினவன் அவர் உடன்படுமாற்றால் தம்மையும் அவரோடு உளப்படுத்திக் கூறினார்.

செய்தற் கரிய செயல்பலவும் செய்துசிலர்
எய்தற் கரியதனை எய்தினர்கள் - ஐயோநாம்
செய்யாமை செய்து செயலறுக்க லாயிருக்கச்
செய்யாமை செய்யாத வாறு. -திருக்களிற்றுப் படியார், *61*

எனப் பிறரிடத்தும் இவ்வாறு வருதல் காண்க. 'அம்மானை ஈசனை' என்பவற்றோடு இயைய, 'உரு' என்பதைனயும், 'உருவனை' என்க.
இதனால், ஞானம் இல்லாதார் அஃது உடையாரை அடைந்து அதனைப் பெற வாய்ப்பு உள்ளதாகவும் அவ்வாறு பெறாதிருக்கும் புறக்கணிப்பு நோக்கி இரங்கியவாறு.

கூடவல் லார்குரு வைத்த குறிகண்டு
நாடகில் லார் நயம் பேசித் திரிவர்கள்
பாடகில் லார்அவன் வைத்த பரிசறிந்து
ஆடவல் லார் அவர் பேறெது ஆமே. ***#2055***

சிலர் பெரியோரைக் குரவராக அடுத்து உண்மையைக் கேட்டுணர்ந்தாராயினும் அவர் தங்கட்கு ஒருதலைப் பட உணர்த்திய குறிக்கோளை அங்ஙனமே உணர்ந்து அடைய மாட்டார். 'அடைய வேண்டும்' என நினைக்கவும் மாட்டார். குரவர் தம்மை மலம் கழுவித் தூயராகச் செய்த செயலின் அருமையை அறிந்து, அவரைப் புகழ்ந்து பாடவும் மாட்டார். ஆயினும் பிறர் தம்மை மதிக்கும்வண்ணம் இனிமை உண்டாகப் பேசுவர். அப்பேச்சுக்கு ஏற்றவாறு நடிக்கவும் வல்லவராவர். அவர் அடையும் பயன்தான் எதுவோ!

விளக்கவுரை

'யாதொன்றும் இல்லை' என்றபடி, 'அவன்' என்றது ஆசிரியனை. 'செய்த பரிசறிந்து பாடகில்லார்' எனக் கூட்டுக. 'நயம் பேசித்திரிவர்கள்' 'ஆடவல்லார்' என்பதற்கு முன்னே கூட்டி யுரைக்க. ஆடுதல், இங்கு நாடக மாத்திரையால் நடித்தலின்மேற்று.
இதனால், பெற்றதனைப் பேணிப் பயன்கொள்ளாமையாகிய பேதைமை நோக்கி இரங்கியவாறு.

நெஞ்சு நிறைந்தங் கிருந்த நெடுஞ்சுடர்

நஞ்செம் பிரான்என்று நாதனை நாடொறும்
துஞ்சு மளவும் தொழுமின் தொழாவிடில்
அஞ்சற்று விட்டதோர் ஆனையும் ஆமே. *#2056*

சிவபெருமானை, 'ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிறைந்து அங்கு ஒளிவிட்டும் விளங்குகின்ற அணையா விளக்கு' என்றும், 'உயிர்கட்கெல்லாம் உண்மையான முதற் கடவுள்' என்றும் உணர்ந்து நாள்தோறும் வழிபடுங்கள். இறக்குமளவும் வழிபடுங்கள். அவனை அவ்வாறு வழிபடாது புறக்கணித் திருப்பின் உங்களுடைய ஐம்பொறிகளும் கட்டிய சங்கிலி அறுபட்டொழிந்த அத்தன்மையை உடைய யானைகளாய் விடும்.

விளக்கவுரை

அஃதாவது, 'அவை நும்வழிப்படாது தம் வழியிலே உங்களைக் கொண்டு சென்று அலைக்கழிக்கும்' என்பதாம். நெடுமை, காலம் பற்றி வந்தது. 'நாதனை' என்பதை முதலில் கூட்டியுரைக்க. 'நம்' என்றது உயிர்கள் அனைத்தையும் ஒரு பெற்றியவாகத் தம்மோடு உளப்படுத்தி எண்ணுதலை. 'நாதன்' என்றது சொல்லு வாரது குறிப்பால் சிவனை உணர்த்திற்று. செம்பிரான் நேர்க்கடவுள்; உண்மைக் கடவுள். 'தொழுமின்' என்பதை 'நாடொறும்' என்பத னோடும் கூட்டுக. 'அஞ்சும்' என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று. 'அஞ்சும்ஆம்' என இயையும். ஆக்கம் உவமை குறித்து நின்றது. 'ஓர்' என்றது தன்மையைக் குறித்தது. இதனால், ஐம்பொறியால் ஆட்டுண்டலின் நின்று நீங்கும் வழியறியாது அல்லலுறுவாரை நோக்கிஅவர் மேல் எழுந்த இரக்கத்தால் அவர்க்கு அவ்வல்லலின் நின்று நீங்கும் வழி கூறியவாறு.

மிருகம் மனிதர்கள் மிக்கோர் பறவை
ஒருவர் செய் தன்புவைத் துன்னாத தில்லை
பருகுவர் ஓடுவர் பார்ப்பயன் கொள்வர்
திருமரு மாதவம் சேர்ந்துணர்ந் தாரே. *#2057*

விலங்குகள், மக்கள், தேவர்கள், பறவைகள், மற்றும் இவர்கள்போல் உள்ள இனத்தவர் ஆகியோரில் ஓரினத்தவரும் சிவபிரானிடத்தில் அன்பு வைத்து, அதனை மேலும் மேலும் பெருக்கி வழிபடாமையில்லை. அதனை அறிந்தவர்கள் அப்பெருமானது திரு வருளைப் பெறுதற்குரிய பெரிய தவத்தைச் செய்து, அதன் பயனாக விளைந்த அன்பினால் சிவபெருமானைக் கண்டால் இனிய பாலைப் போலப் பருகிவிடுவார் போல்வார்; 'அவன் வெளிப்படும் இடம் எது' என்று தேடிப்பல திசைகளிலும் ஓடுவர். அதனால், தாம் மண்ணில் மக்களாய்ப் பிறந்த பயனை எய்துவர்.

விளக்கவுரை

'அறிவிலார் அங்ஙனமின்றி வாளாமாய்ந்து மண்ணாகிக் கழிவர்' (தி.5 ப.90 பா.3) என்பதாம். எழுவகைப் பிறவியுள் உயர்ந்தது, தெய்வப் பிறப்பு ஆதலின் அதனை எய்தினோரை, 'மிக்கோர்' என்றார். வானிடத் தவரும் மண்மேல் வந்து அரன்றனை அர்ச்சிப்பர்' (சிவஞான சித்தியார், சூ. 2,91) என்பது சாத்திரம். இவையெல்லாம் புராணங்களில் மிகவெளிப்படை. 'ஒருவர்' என்பதில் ஒன்று இனத்தைக் குறித்தது. 'ஒருவரும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. 'அன்பு வைத்துச் செய்து' என மாற்றி உரைக்க, 'உன்னாதது' என்றது எதிர்மறைத் தொழிற் பெயர். அதனை உணர்ந்தோர் மாதவம் செய்து பருகுதல் முதலியவற்றைச் செய்வர்' என்க. அன்பால் பிறரை இறுகத் தழுவிக் கொள்ளுதலே, பருகுதல் போல்வதாகக் கூறும் மரபினை, 'பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை - பெருகலிற் குன்றலினிது' (திருக்குறள், 811) என்னும் திருக்குறளாலும் அறிக. 'தேடி ஓடுதலும் அன்புடையாரது செயல்' என்பதனை,
'... ... வியந்து ஆங்கு அலறித்
தேடிற்றிலேன்; சிவன் னெவ்விடத்தான்,
எவர் கண்டனர் என்று
ஓடிற்றிலேன்' -தி.8 நீத்தல் விண்ணப்பம், 45
என்று அருளிச் செய்தவாற்றானும் அறிக.
இதனால், அறிவுடையாரது செயலை விதந்து கூறும் முகத்தால் அறிவிலாரது நிலைமை நோக்கி இரங்கியவாறு.

நீதி யிலோர்பெற்ற பொன்போல் இறைவனைச்
சோதியில் ஆரும் தொடர்ந்தறி வார்இல்லை
ஆதி அயனென் றமரர் பிரானென்று
நாதியே வைத்தது நாடுகின் றேனே **#2058**

அற உணர்வு இல்லாதார் பொன்னைப் பெற்றால் அதனது பயனை யறிந்து அப்பயனை எய்தாது பொன்னை வாளா வைத்திருந்தே இறந்தது போலச் சிலர் சிவனை அறிந்தும் அவனால் அடையத் தக்க பயனை அறிந்து அம்முறையில் அவனை வழிபட்டு அப்பயனைப் பெறுகின்றவர் யாரும் இல்லை. ஆயினும் யான் உலகத்தைச் செயற்படுத்துதற்கு, 'படைப்புக் கடவுளாகிய பிரமன்' என்றும், மற்றும் 'தேவேந்திரன்' என்றும் இப்படிப் பல தேவரைத் தக்க வாறு சிவன் நியமித்திருக்கின்ற பெருஞ்செயலை நினைந்து அவனால் அடையத்தக்க பயனை அடைகின்றேன்.

விளக்கவுரை

'பிற தேவரால் அடைவிக்க முடியாது சிவன் ஒருவனாலே அடைவிக்கப்படும் பிறவி நீக்கம். அஃது அயன் முதலிய தேவர் பலரையும் அவனே படைத்து அவரவர் அதிகாரத்தில் நியமித் திருத்தலால் விளங்கும்' என்பது பின்னிரண்டடிகளால் குறிப்பால் உணர்த்தப்பட்ட கருத்து. அப்பயனைப் பெறாதோர் சிவனை உணர்ந்தும் உணராதவரேயாதல் பற்றி அவரது செயலுக்கு நீதியிலார் பொன்பெற்ற செயலை உவமையாகக் கூறினார்.

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை யிரண்டும் ஒருங்கு. -திருக்குறள், *760*

என்பதனால் பொன் அறத்தையும், இன்பத்தையும் எளிதின் எய்துதற்கு வழியாதல் அறிக. 'பெற்ற பொன்போல்' எனப்பொருளுவமம் போலக் கூறினாராயினும், 'பொன் பெற்றது போல' எனத் தொழிலுவுமமாகக் கூறுதலே கருத்தென்க. 'சோதி' என்றது அறிவை. அதனால் தொடர்தலாவது அவனால் பெறும் பயனை அறிந்து அவனைப் பற்றுதல். அறிதல் அதன் காரியமாகிய வழிபடுதலையும், நாடுதல், அதன் காரியமாகிய உண்மை யுணர்தலையும் குறித்து நின்றன. 'நாடி' என்பது எதுகை நோக்கித் திரிந்து நின்றது.

இதனால், சிவனை உணர்ந்தவரும் அவன்பால் வீடு பேற்றினை வேண்டாது, உலகப்பயனை வேண்டி அவற்றை மட்டுமே அடைதல் இரங்கத் தக்கது என்பது கூறப்பட்டது

இருந்தேன் மலரளைந் தின்புற வண்டு
பெருந்தேன் இழைக்கின்ற பெற்றிமை ஓரார்
வருந்தேன் நுகராது வாய்புகு தேனை
அருந்தேனை யாரும் அறியகி லாரே. ***#2059***

வண்டுகள்தாம் இன்புற வேண்டும் என்றுதான் மிகுந்த தேன் உள்ள மலர்களை அறிந்து அவற்றினுட்புகுந்து கிண்டிச் சிறிது சிறிதாகக் கொணர்ந்து மிகுந்த தேனைச் சேர்க்கின்றன. ஆயினும் அத்தேனில் ஒருசிறிதையும் அவை பருகுவதில்லை. அதனை எண்ணிப் பாராதவர்களாய், அவற்றினும் கீழ்மையராக, தானாகவே வாயில் ஒழுகுவதும், எவ்வுலகத்திலும் கிடைத்தற்கரியதும் ஆகிய தேனை மக்களில் ஒருவரும் அறிந்து பருகுகின்றார்களில்லை. ஆயினும் யான் அவர்களைப்போல அத்தேனை நுகராமல் விட்டு வருந்தமாட்டேன்.

விளக்கவுரை

'வண்டுகளின் பெற்றிமையை எண்ணிப்பார்ப்பார் களாயின் தாமும் அவை செய்யும் தவற்றினைச் செய்யமாட்டார்கள்' என்பார், 'வண்டு பெருந்தேன் இழைக்கின்ற பெற்றிமை ஓரார்' என்றார். சிவம் தானே தனது கருணையால் உயிர்களுக்குத் தன் இன்பத்தை வழங்குதல் பற்றி,

'வாய்புகுதேன்' என்றும், அது வழங்கும் அவ்வின்பம்போலும் பிறிதின்பம் வேறின்மையின், 'அருந்தேன்' என்றும் கூறினார் 'நுகராது வருந்தேன்' என மாற்றிவைத் துரைக்க.

இதனால், சிவனால் தரப்படும் பேரின்பத்த சிறப்பைக் கூறி, அதனைப் பெறாது இழப்போரது அறியாமைக்கு இரங்கியவாறு.

கருத்தறி யாது கழிந்தன காலம்
அருத்தியுள் ளான்அம ராபதி நாதன்
ஒருத்தனுள் ளான்உல கத்துயிர்க் கெல்லாம்
வருத்திநில் லாது வழுக்குகின் றாரே. ***#2060***

தன்னிடத்துச் செலுத்துகின்ற அன்பு உடையாரது அன்பிலே விளங்கி நிற்பவனும், தேவர்கட்கும் தேவனுமாய் உள்ள ஒருவனே அனைத்துயிர்கட்கும் ஒப்பற்ற தலைவன். அடங்காது ஓடுகின்ற மனத்தை வருத்தியாயினும் அடக்கி அவனை நினைந்து நில்லாமையால் பலர் அவனைப் பெறத் தவறுகின்றார்கள். அதனால் அவர்களது காலங்கள் உண்மையை உணராமலே கழிந்தொழியும்.

விளக்கவுரை

'இஃது இரங்கத்தக்கது' என்பது குறிப்பெச்சம். முதலடியை ஈற்றில் வைத்துரைக்க. துணிவு பற்றி எதிர்காலம் 'கழிந்தன' என இறந்த காலமாகச் சொல்லப்பட்டது. அருத்தி - அன்பு. அமராபதி - தேவர் உலகம். அஃது ஆகுபெயராய்த் தேவரை உணர்த்தி நின்றது. 'உள்ளான்' என்னும் குறிப்பு வினைப்பெயர் எழுவாயாய் நின்றது.

'உயிர்க்கெல்லாம்' என்பதன் பின்னும் 'ஒருத்தன்' என்பதைக் கூட்டி மேற்குறித்த எழுவாய்க்குப் பயனிலையாக்கி முடிக்க.

இதனால், மனத்தால் அன்புசெயற்பால பொருளில் அன்பைச் செலுத்தாது, பிறபொருளில் அன்பு செலுத்தி நிற்கும் அறியாமை நோக்கி இரங்கியவாறு.

குதித்தோடிப் போகின்ற கூற்றமும் சார்வாய்
விதித்தன நாள்களும் வீழ்ந்து கழிந்த
அதிர்த்திருந் தென்செய்தீர் ஆறுதி ராயின்
கொதிக்கின்ற கூழில் துடுப்பிட லாமே. ***#2061***

உலகீர், உங்களுக்கு இவ்வுடம்போடு கூடி வாழ்தற்கு வரையறுத்த நாள்கள் யாவும் தவம் செய்யாமையால் அவமே கழிந்தொழிந்தன. ஆகவே, உங்களை இவ்வுடம்பினின்றும் பிரித்தெடுத்துக் கொண்டு துள்ளி ஓடுபவனாகிய கூற்றுவனும் வந்துவிட்டான். இப்போது நடுங்கி என்ன செய்யப்போகின்றீர்கள்? நீங்கள் அமைதியுற வேண்டின் கொதிக்கின்ற கூழில் கையை யிடாமல் அகப்பையை இட்டு அள்ளி ஆற்றி உண்பதுபோலும் செயலைச் செய்தலே தக்கது.

விளக்கவுரை

'சார்வாய்க் கழிந்த' என்றாராயினும், 'கழிந்து சார் வாயிற்று' என்றலே கருத்தென்க. கழிந்து, செயவெனெச்சத் திரிபு. தெளிவு பற்றி எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது. சார்வு - நெருங்குதல். 'துடுப்பிடல்' என்பது, அதுபோலும் செயலைச் செய்தலைக் குறித்தது. கொதிக்கின்ற கூழ், கூற்றுவனால் கணக்கிட்டுக் கொள்கின்ற நாட்கள். கையிடுதல், அதனையறியாது தம் வயத்தன வாகக் கருதிக்கொண்டு அவற்றைத் தவத்தில் அல்லாமல் அவத்தில் கழித்தல். துடுப்பிடுதல் - சில நாட்களையாயினும் தவத்தில் கழித்தல். ஆம் - பொருந்தும் - ஏகாரம் ஈற்றசை.

இதனால், கூற்றத்தைக் கடத்தற்குரிய செயலில் நாளைக் கழியாமல், கூற்றத்தால் அடர்த்தற்குரிய வகையில் கழித்தலை நோக்கி இரங்கியவாறு,

கரையரு காறாக் கழனி விளைந்தது
திரையரு காமுன்னம் சேர்ந்தின்பம் எய்தும்
வரையரு கூறிய மாதவம் நோக்கின்
நரையுரு வாச்செல்லும் நாள்இல வாமே. ***#2062***

ஆற்றங் கரையை அடுத்து ஒரு கழனி உண்டு. அதில் உண்டாகின்ற விளைவை உடையவன் பெறுதல் அரிது ஏனெனில், ஆற்றில் எப்பொழுது வேண்டுமானாலும் வெள்ளம் பெருகி வந்து விளைவை அழித்துவிடும். அதனை உணர்ந்து நீவிர் விழிப்பாய் இருந்து வெள்ளம் பெருகி வருவதற்கு முன்னே விளைவிற்குப் பாதுகாப்புச் செய்து விளைவின் பயனை எய்துங்கள். [இஃது ஒட்டணி. ஆறு - வினைவிளைவின் தொடர்ச்சி. ஆற்றங்கரை - அத்தொடர்ச்சியைச் சார்ந்திருக்கின்ற உடம்பு. கழனி - உடம்பில் உள்ள உயிர்; என்றது அதன் உணர்வை, அதில் விளைவது சிவபுண்ணியத்தின் பயனாக விளங்கிய சிவஞானம், அதனை எப்பொழுதும் வந்து அழிக்க இருப்பது உயிருணர்வை வேறுபடுத்தும் வினைவிளைவு. அருகாமுன்னம் - நெருங்குதற்குமுன்னே, இவற்றை இங்ஙனம் அணிவகையால் உணர்த்திய பின்பு அப்பயனைப் பெறுமாற்றைப் பின்னிரண்டடிகளால் நேராகவே உணர்த்தினார். அஃதாவது] மலைமுழை முதலிய தனியிடங்களில் இருந்து செய்வதனால் வளர்ந்து முதிர்கின்ற தவத்தில் உணர்வு செல்லுமாயின் நரை, திரை, மூப்பு இவற்றோடுகூடி வருகின்ற நாட்கள் உங்கட்கு இல்லையாகும்.

விளக்கவுரை

'ஆகையால் அத்தவத்தில் உணர்வைச் செலுத்தி உணர்வு திரியாது

நின்று சிவஞானத்தை முற்றப்பெற்றுப் பயன் அடையுங்கள்' என்பதாம். 'கரையருகு ஆறா' என்பதனை, 'ஆறுகரை அருகா' எனமாற்றி உரைக்க. இங்ஙனம் மாறி நின்றமையால், 'ஆறு' என்பது ஒற்று இரட்டுதலும் அம்முப் பெறுதலும் இல்லையாயிற்று. 'தவம்' என்றதும் சிவபுண்ணியத்தையே யாகலின், அது கேட்டற்குப் பின் விடாது நிகழும் சிந்தித்தல் தெளிதல்களாகிய ஞானத்திற் கிரியை ஞானத்தில் யோகம் இவற்றைக் குறித்து நின்றன. இந்நிலையுடையோர் சிவயோகத்தையும் உடையராவர் ஆதலின் அவர்க்கு நரை திரை மூப்புக்கள் இலவாதல் அறிக.

இதனால், ஞானத்தை எய்தினோரும் பார்க்காமல் அதனை இழத்தலை நோக்கி யிரங்கி அவர் அவ்வாறு அதனை இழவாதிருக்க அறிவுறுத்தியவாறு.

வரவறி வானை மயங்கிருள் ஞாலத்
திரவறி வானை எழுஞ்சுடர்ச் சோதியை
அரவறி வார்முன் ஒருதெய்வம் என்று
விரவறி யாமலே மேல்வைத்த வாறே.வரவறி ***#2063***

பகலும், இரவும்கலந்து நிற்கின்ற உலகத்தில் உயிர்கள் தோன்றுதல், மறைதல் ஆகியவற்றின் வழிமுறைகள் முழுவதையும் நன்குணர்ந்து அவைகளை ஏற்றபெற்றியால் செய்விக் கின்றவனும், முடிவில் அவ்வுயிர்கள் இராப்பகல் அற்ற இடத்தில் இருக்கும்படி வைத்து அவைகட்கு என்றும் விளக்கத்தைத் தந்தும் விளங்கியும் நிற்கின்ற, சுடர்விடுகின்ற பெருவிளக்காய் உள்ளவனும் ஆகிய சிவபெருமானை, 'நுண்ணறிவாளர் திரிபின்றி உணர்கின்ற ஒப்பற்ற முழுமுதற் கடவுள்' என்று உணர்ந்து அவனை அடைந்து உய்ய அறியாமையால் பலர்வேறு வேறு தெய்வங்களை முதற் கடவுளாகக் கருதி இடருள் அழுந்துதல் இரங்கத்தக்கது.

விளக்கவுரை

'மயங்கிருள் ஞாலத்து' என்பது தாப்பிசையாய் முன்னும், பின்னும் சென்றியைந்தது. மயங்குதல் - கலத்தல். 'இருள்' என்றதனால் 'ஒளி' என்பது போந்தது. மேல் உலகம் ஒளியுலகமும், கீழ் உலகம் இருள் உலகமும், இடையுலகமும் இரண்டையும் உடைய உலகமும் ஆதலின் 'மயங்கிருள் ஞாலம்' என்றது இடையுலகத்தை யாயிற்று ஏனை இரண்டும் போக பூமியும், இதுவே கரும பூமியும் ஆதலின் உயிர்கள் இவ்வுலகத்துத் தோன்றுதல் மறைதல்களையே குறித்தார். வரவு தோற்றமாதல் வெளிப்படை. இரவு, இருள் ஆதலின் அஃது அறிவைத் தரும் தேகத்தை விட்டு அறியாமையிற் செல்வதாகிய இறப்பைக் குறித்தது. 'எழும்' என்ற விதப்பு, எஞ்ஞான்றும் மறைதல் இன்றி

விளங்கியே நிற்றலைக் குறித்தது. அதுவே அருள்வெளி என்க. அர அறிவு - அரம் போலும் கூரிய அறிவு. 'அரம் போலும் கூர்மைய ரேனும்' *(திருக்குறள், 997)* என்றதும் காண்க. முன் தெய்வம் - நினைக்கின்ற கடவுள்; வினைத்தொகை. ஒரு தெய்வம் - ஒப்பற்ற தெய்வம். 'மேல்' என்றது 'வேறு' என்னும் பொருட்டு ஆக்கம் வருவிக்கப்படும். 'வைத்து' என்றது, அதனால் இடர்ப்படுதலாகிய தன் காரியம் தோற்றி நின்றது. 'இரங்கத்தக்கது' என்பது சொல்லெச்சம்.
இதனால், இன்றியமையாது அறியற்பாலதனை அறிந்து பயன்பெறாது மயங்கி இடர்ப்படுவாரது மயக்கம் நோக்கி இரங்குதலைச் செய்து, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாயும் செய்யப்பட்டது.

*9.38.*இதோபதேசம்

மறந்தொழி மண்மிசை மன்னாப் பிறவி
இறந்தொழி காலத்தும் ஈசனை உள்கும்
பறந்தல மந்து படுதுயர் தீர்ப்பான்
சிறந்த சிவநெறி சிந்தைசெய் யீரே. ***#2064***

மண்மேல் உள்ள பிறவிகள் நிலையின்றிச் சின்னாளில் அழிந்தொழிவனவேயாம். ஆதலின் அவற்றுள் சில பிறவிகளை உயர்ந்தனவாகக் கருதி அப்பிறவியில் பிறக்க வேண்டும் என விரும்புதலை விட்டுவிடுங்கள். அங்ஙனம் விட்டு வீடுபெற விரும்பும் பொழுது அதன் பொருட்டுப் பிற நெறிகளை நாடாது, நெறிகள் அனைத்திலும் மிக மேலானதாகிய சிவ நெறியை நாடுங்கள். நாடி அதனை அடைந்து இறக்குங் காலம் உட்பட எக்காலத்தும் சிவனை இடைவிடாது நினையுங்கள். அவ்வாறு நினைந்தால் அவன் நலனடைதற் பொருட்டு அதற்கான வழிகளைத் தேடி எவ்விடத்தும் விரைந்து ஓடி அலையும் நம் அலைவை நீக்கியருளுவான்.

விளக்கவுரை

புதியன புகுதல் முறையில் புகுந்த முன்னிலைப் பன்மை ஏவல் விகுதியாகிய 'உம்' என்பது 'மறந்தொழி' என்பதன் ஈற்றில் தொகுத்தலாயிற்று. உலகத்தில் அரசரும், அவரோடொத்த பெருஞ்செல்வருமாய்ப் பிறக்கும் பிறவி இனிதானது என ஏனையோர் விரும்புதல் உண்டு ஆதலின், 'அஃது ஒரு மயக்க உணர்வேயாதலின் அதனை விடுத்தல் வேண்டும்' எனவும், 'விடுத்தவழி வீடுபெறுதலே விரும்பப்படும் ஆதலின் அதன் பொருட்டுப் பிறவி நீங்கப் பெறாத பிறர் பலரை முதல்வராகக் கொண்ட நெறிகளை நாடாது பிறப்பில் பெருமானாகிய சிவனை முதல்வனாகக் கொண்ட சிவநெறியையே நாடுதல் வேண்டும். 'அதனை நாடி அடைந்தவழியும், அந்நெறியின்

முறைமைகளை இடைவிடாது கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும்' எனவும் அறிவுறுத்தபடி. ஈற்றடியை இரண்டாம் அடியாகக் கூட்டி யுரைக்க. 'சிறந்த' என்பது இயைபின்மை நீக்கிய விசேடணம். இனி பிறிதின் இயைபு நீக்கிய விசேடணமாகக் கொண்டு, 'சித்தாந்த சைவம்' என உரைத்தலுமாம். ஐந்தாம் தந்திரத்தில் நாயனார் சில சைவ வேறுபாடு குறித்தமையை நினைவுகூர்க.

இதனால், 'உய்திவேண்டுவார்க்கு உரிய நெறி இது' என்பது உணர்த்தப்பட்டது.

செல்லு மளவும் செலுத்துமின் சிந்தையை
வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை
இல்லை எனினும் பெரிதுளன் எம்மிறை
நல்ல அரன்நெறி நாடுமின் நீரே. *#2065*

நாங்கள், 'ஒருகாலத்திலும் பிறத்தலும், இறத்தலும் இல்லாதவன், எல்லாவற்றையும் அறிந்தவன், எல்லா உயிர்களிடத்தும் காரணம் இல்லாமலே இரங்குகின்ற பேரிரக்கம் உடையவன்\' என்பன போலச் சொல்கின்ற அப்படிப் பட்ட முதல்வன் ஒருவன் இல்லை; இருக்க இயலாது\' என்று சிலர் முரணிக் கூறுவராயினும் அப்படிப்பட்ட பேரதிசயமான தன்மைகளையுடைய சிவ முதல்வன் இருக்கவே செய்கின்றான். அதனை நம்பி அவனது நல்ல நெறியை நீங்கள்நாடி அடையுங்கள். அடைந்து எந்த அளவு உங்கள் மனம் சோர்வடையாது நினைக்க வல்லதாகின்றதோ அந்த அளவு அவனை நினையுங்கள். எந்த அளவு அவன் பொருள் சேர்ந்த புகழை உணர்ந்து உரைக்க இயலுமோ; அந்த அளவு உரையுங்கள்; பயனுண்டு.

விளக்கவுரை

'பயனுண்டு\' என்பது குறிப்பெச்சம். மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி உரைக்க.

எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். -திருக்குறள், *416*

என்றாற்போலும் முறை பற்றி, \"செல்லுமளவும் செலுத்துமின் சிந்தையை\" எனவும், \"வல்லபரிசால் உரைமின்கள் வாய்மையை\" எனவும் கூறினார்.

\"வாய்மை\" என்பது ஆகுபெயராய், அதனை யுடைய புகழைக்குறித்தது. \"பெரிதுளன்\" என்றது 'திண்ணமாக உளன்\" எனவும் , \"எம் இறை\" என்றது 'சிவன்\' எனவும் கூறியவாறு. \"நாடுமின்\" என்றது அதன்காரியம் தோன்ற நின்றது. இதனால், 'உண்மையை ஐயுறுதலை விடுத்து இயன்ற அளவு கடைப்பிடித்து ஒழுகுக\' என உணர்த்தப்பட்டது.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லை நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே. *#2066*

உலகத்தார் பல சாதிகளைக் கூறுவராயினும் உண்மையில் உள்ளது ஒரு சாதியே. அது சிவ சாதி. உலகத்தார் பல கடவுள்களைக் கூறிக் கொண்டாடுவராயினும் உண்மையில் உள்ள கடவுள் ஒருவனே. அவன் சிவன். இவற்றை நீவிர் முதலில் நன்றாக உணருங்கள். உணர்ந்தால், நமனும் உங்களை அணுகான்; வெட்கமின்றி முன்முன் பிறந்து இறந்த பிறப்புகளிலே மீண்டும் மீண்டும் பிறக்கும் நிலையும் உங்களுக்கு இல்லையாகும். அப்பால் மேற்கூறிய உண்மைகள் உங்கள் உள்ளத்தில் அசையாது நிலைபெற, அதன்வழிப் பின்னர்ச் சிவனை இடையறாது நினைந்து உய்தி பெறுங்கள்.

விளக்கவுரை

'ஒன்றே, ஒருவனே' என்னும் தேற்றேகாரங்களால் அவற்றிற்கு மாறாக அறியாதார் பல கூறுதல் பெறப் பட்டது. 'ஒன்று' எனப் பட்ட குலம் இது என்பதும். 'ஒருவன்' எனப்பட்ட தேவன் சிவன் என்பதும் முன் முன் மந்திரங்களின் வழிவரும் தொடர்பால் இனிது விளங்கின, 'சிவ சாதி' என்றது. சிவன், சத்தி இவரையே அப்பனும் அம்மையுமாய்க் கொண்டு பிறந்தவர்கள் என்றதாம், முதற்கண் 'நினை மின்' என்றது அதற்கு முன்கூறிய உண்மையைக் குறித்தும், பின்னர் 'நினைந்து' என்றது, அவ்வுண்மை உள்ளத்து நிலைபெற்றதன் பயனாக நினைக்கும் பொருளைக் குறித்தும் என்க. முன்னர் 'நமன் இல்லை' என்றதனால், பின்னர்க் கூறிய உய்தி துன்பம் நணுகாத எல்லையில் இன்பத்தை அடைதலாம். கதி - பிறப்பு.
இதனால், 'பொது மக்களது பொதுநெறியிற் செல்லாமல் விடுத்து, மேன்மக்களது மேல் நெறியிற் செல்க என உணர்த்தப் பட்டது.

போற்றிசெய் அந்தண் கயிலைப் பொருப்பனை.
நாற்றிசைக் கும்நடு வாய்நின்ற நம்பனைக்
காற்றிசைக் குங்கம ழாக்கையைக் கைக்கொண்டு
கூற்றுதைத் தான்றனைக் கூறிநின் றுய்மினே. *#2067*

இனி இங்கு நின்றும் இவ்வதிகாரத்தில் மேல் ' ஒருவனே தேவனும்' என ஒருதலைப் பட வலியுறுத்தி உணர்த்தி யருளிய, 'சிவபிரானுக்கு ஆட்செய்வதையே நும் கடமையாகக் கொண்டு ஒழுகிப் பயன் பெறுங்கள்' என்பதையே பல்லாற்றானும் பன்னிப் பன்னி அறிவுறுத்துகின்றார்.
இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

நடுவாதல் - தலைமையிடத்தனாதல். பலபொருட்கும் தலையாதலை 'நடுநாயகம்' என்பர். 'திசை' என்றது ஆகுபெயராய் அவற்றில் வாழும் உயிர்களை. 'நடுவாய் நின்றநம்பன்' என்றதனால், 'அவனே யாவராலும் வணங்கப்படுவோன்' என்பது குறிப்பு. காற்று, பிராணவாயு. அதுவே உடம்பின் உட்கூறுகள் பலவற்றையும் தக்கவாறு இயைவித்து இயங்கச் செய்தல் பற்றி. 'காற்றிசைக்கும் ஆக்கை' எனவும், அக்காற்று உள்ள பொழுது மெல்லவும், நீங்கியபின் மிகவும் புலால் நாற்றம் வீசுவது உடம்பு என அதன் இழிவு தோன்ற, 'கமழ் ஆக்கை' எனவும் கூறினார். நறுமணம் வீசுதலை, 'கமழ்தல்' என்றல் மரபாகலின், இங்கு தீ நாற்றம் வீசுதலை, 'கமழ்தல்' எனக் கூறியது இழித்தற் குறிப்பு. 'இசைக்கும் ஆக்கை, கமழ் ஆக்கை' எனத் தனித் தனி இயைக்க. 'கொண்டு' என்றது 'கருவியாகப் பற்றி' என்றபடி. 'அவனைத் துதித்தால் உய்தி பெறுதல் திண்ணம்' என்பதை நிறுவ, 'கூற்றுதைத்தான்றனைக் கூறிநின்று' என்றார்.

இக்காயம் நீக்கி இனியொரு காயத்தில்
புக்குப் பிறவாமல் போம்வழி நாடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்று
அக்காலம் உன்ன அருள்பெற லாமே. ***#2068***

'உயிராகிய நமக்கு உடல் எக்காலத்தில் வந்து பொருந்திற்று' என்று அக்காலத்தை ஆராய்ந்து உணரின், 'அதனை நமக்குப் படைத்துக் கொடுத்ததலைவன் இவன்' என்பது புலனாகும். அது புலனாகவே, அவன் மீது அன்பு செல்ல அவனது அருளைப் பெறுதல் உண்டாகும். அவ்வாற்றால் இவ்வுடம்பைக் கழித்துவிட்டு, இனி மற்றோர் உடம்பில் புகுந்து பிறத்தல் இன்றி உய்ந்துபோம் வழியை நாடுங்கள்.

விளக்கவுரை

அனைத்தும் அழிந்தொழிந்த காலத்தில் உயிர்கள் உடம்பின்றியே இருக்கப் பின்பு அவற்றிற்கு உடம்பைக் கொடுத்தவன் அனைத்தும் அழிப்பவனாகிய சிவனேயாதலின், நமக்கு உடல் வந்த காலத்தை அறிந்தால், உடல் கொடுத்த தலைவன் இவன்' என்பதும் அறியப்படும் 'ஆதலின் அக்காலத்தை ஆராய்ந்துணர்ந்து அருள் பெறுக' என்றும் அவ்வாறு அருள் பெறுதலே பிறவி நீங்கும் வழி யாகலின், 'பிறவாமல் போம் வழி நாடுமின்' என்றும் கூறினார். 'அந்தம் ஆதி என்மனார் புலவர்'*l* என்றார் மெய்கண்டதேவர். மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி உரைக்க.

போகின்ற வாறே புகுகின்ற அப்பொருள்

ஆகின்ற போதும் அரன்அறி வானுளன்
சாகின்ற போதும் தலைவனை நாடுமின்
ஆகின்ற அப்பொருள் அக்கரை யாகுமே. *#2069*
நீவிர் போகின்ற போக்கிலே உங்களைப் போக விட்டுத் தானும், அப்போக்கிற்குத் துணையாய் உடன் வருகின்ற முதற்பொருள் சிவனே. அவன் அவ்வாறு விடுதலும், உடன் புகுதலும் நீவிர் உண்மையை உணர்தற்கு உரிய காலம் வருவதை அறிதற்காகவே யாம். ஆகையால், வாழ்கின்ற பொழுது மட்டுமின்றிச் சாகின்ற பொழுதும் அவனை நினையுங்கள். ஏனெனில், அவனே பிறவியாகிய கடலுக்கு அப்பால் உள்ள கரையாவான்.

விளக்கவுரை

அரனை முன்னர், 'பொருள்' என்றமையால் மீட்டும் அவ்வாறே கூறினார். ஆகின்ற போது - தக்க காலம். அது, 'செவ்வி' என்றும், 'பருவம்' என்றும் 'போதும்' என்றும் உம்மை இறந்தது தழுவிய எச்சம். எனவே, போகின்றவாறே புகுதலும் அப்பொழுது உயிர்களின் நிலையை அறிதற் பொருட்டு என்பது போந்தது. அறிவான் - அறிதற் பொருட்டு. உளன் - உடன் இருக்கின்றான். 'அவனே பிறவியாகிய கடலுக்குக் கரையாகலானும், அந்தக் கரையை அடைதல் அதனை நினையும் நினைவானேயாகலானும் அவ்வழியை இடையறாது பற்றி நிற்க, அவன் எந்த நேரத்திலும் உங்களைக் கரைசேர்ப்பன்' என்பது பற்றி, 'சாகின்ற போதும் நாடுமின்' என்றார். 'தலைவன்' என்பது சுட்டுப் பெயரளவாய் நின்றது. ஆகின்ற அப்பொருள், மேற்கூறியவாறுள்ள அப்பொருள்.

பறக்கின்ற ஒன்று பயன்உற வேண்டின்
இறக்கின்ற காலத்தும் ஈசனை உள்கும்
சிறப்பொடு சேரும் சிவகதி பின்னைப்
பிறப்பொன் றிலாமையும் பேருல காமே. *#2070*
கூட்டில் சிறிது போது தங்கியிருந்து பின்பு இரையை நாடி அக்கூட்டைவிட்டுப் பறந்து போகின்ற பறவையைப் போல உடம்பில் சிறிது காலம் வாழ்ந்து பின்பு அவ்வாழ்வினும் வேறான பயனை நாடி அவ்வுடம்பை விட்டு ஓடுகின்ற உயிர், உண்மையாகவே தான் அடையத்தக்க பயனை அடைய வேண்டின் உடம்பை விட்டுப் பிரிகின்ற காலத்திலும் சிவனை மறவாமல் நினைக்கும். அவ்வாறு நினைத்தால் எல்லாச் சிறப்பினும் மேம்பட்ட சிறப்பாகிய, சிவ ஞானத்தின்வழி சிவகதியைச் சேரும் இனி அச்சிவகதிதான், ஏனையுலகங்கள் எல்லாவற்றையும் விடப் பெரியதாகிய உலகமும், அதனையும் கடந்த நிலைமையும் ஆகும்.

விளக்கவுரை

'பறக்கின்ற ஒன்று' என்பது அடையடுத்த உவம ஆகு பெயர். 'கூட்டைவிட்டுப் பறக்கின்ற' என்பது ஆற்றலால் கொள்ளக் கிடந்தது. 'வேண்டின்' என்றது 'உண்மையாக விரும்பினால்' என்றபடி, உண்மையாக விரும்புதலாவது தப்பாது பெறக் கருதுதல். தப்பாது பெறக்கருதினால் உள்கும்' என்றமையால், 'உள்கா தொழியின் பயனில்லை' என்றாயிற்று. 'பின்னைப் பிறப்பொன் றிலாமை, பேருலகு' என்பவற்றைப் பின்முன்னாக மாற்றிவைத்து உரைக்க. செய்யுள் பற்றி முறை பிறழ வைக்கப் பட்டன. சிவலோகம் சுத்தமாயாகாரியம் ஆதலின், அஃது அசுத்த மாயா காரியமாகிய ஏனை உலகங்களை வியாபகமாய் நிற்றல் பற்றி, 'பேருலகு' என்றார். 'பேருலகும்' எனத் தொக்கு நின்ற எண்ணும்மையை விரிக்க. முன்னர்ப் பதமுத்தி, அபர முத்திகளை அடைந்து, பின்னர்ப் பரமுத்தி அடையப்படும் ஆதலின் பேருலகும், பிறப்பிலாமையும் ஆம்' என்றார். ஆம் - வாய்க்கும்.

கூடியும் நின்றும் தொழுதெம் இறைவனைப்
பாடி உளேநின்று பாதம் பணிமின்கள்
ஆடி உளேநின் றறிவுசெய் வார்கட்கு
நீடிய ஈற்றுப் பசுவது வாமே. ***#2071***

எங்கள் சிவபெருமானை அவன் அடியவரோடு கூடியும், தனித்தும், பாடியும், ஆடியும் வணங்குவதுடன் உள்ளத்திலே யும் அவனது திருவடிகளை நினைந்து அடிபணியுங்கள். ஏனெனில், உள்ளத்திலே நினைந்து பணிபவர்கட்குக் கன்றையீன்ற பசு அக் கன்றைவிட்டுப் பிரியாதது போலக் கரவாது விளங்கி அருள் செய்வான்.

விளக்கவுரை

செய்யுளுக்கேற்ப 'ஆடி' என்பதனை வேறு வைத்து ஓதினாராயினும், முன்னர் கூறிய கூடுதல் முதலியவற்றுடன் ஒருங்கு வைத்து ஓதுதலே கருத்து என்க. நிற்றல் - தனித்து நிற்றல். உள்ளே நிற்றல் - ஒருங்கிய மனத்தோடு கூடி நிற்றல். பணிதல், அறிதல்களைச் சுருக்கம் கருதி வேறு வேறு வைத்தாராயினும் அவற்றையும் ஒருங்கு வைத்து இருமுறை ஓதுதலே கருத்தாம். அறிதல், இங்கு நினைத்தல், நீடுதல், பிரியாது உடன் இருத்தலைக் குறித்தது. அறிவு - அறிதல். அது பகுதிப் பொருள் விகுதி.

விடுகின்ற சிவனார் மேலெழும் போது
நடுநின்று நாடுமின் நாதன்றன் பாதம்
கெடுகின்ற வல்வினை கேடில் புகழோன்
இடுகின்றான் நும்மை இமையவ ரோடே. ***#2072***

எப்பொழுதாயினும் உடம்பை விட்டு நீங்குவதே யன்றி அதில் நிலைத்திராததாகிய உயிர் அவ்வாறு எப்பொழுதாயினும் உடம்பைக் கீழே வீழ்த்தி விட்டுத் தான்மேலே செல்கின்ற பொழுது வாழ்விற்கும், சாவிற்கும் இடைப்பட்ட நேரத்தில் சிவனது திருவடிகளை நினையுங்கள். நினைந்தால் உங்கள் வினைகள் கெட்டொழிவன. தான் மறைந்திருப்பினும் தனது செயல் எஞ்ஞான்றும் நிகழ்வதால் அதுபற்றி முடிவின்றி வருகின்ற புகழை உடையவனாகிய சிவன் உங்களைத் தேவர்களோடு தேவர்களாய்ச் சேர்ப்பான்.

விளக்கவுரை

'விடுகின்ற' என்றது அதன் இயல்பு கூறிய வாறு, 'சீவனார்' என்றது நிலைநில்லாமையைக் குறிக்கும் இழிவுக் குறிப்பு. உயிர் உடம்பை இயக்குதலும், இயக்காது விட்டு நீங்குதலும் இல்லாத நேரத்தை 'நடு' என்றார். நாதன்றன் பாதத்தை முன்பெல்லாம் துணை யாக நினைந்து வந்தவர்கட்கே அந்த நேரத்தில் அவற்றை நினைதல் கூடும் என்க. 'கெடுகின்ற' என்பது அன்பெறாது வந்த அஃறிணைப் பன்மை வினைமுற்று. தெளிவு பற்றி எதிர்காலம் 'கெடுகின்ற', 'இடுகின்றான்' என நிகழ்காலமாகச் சொல்லப்பட்டது. 'இமையவர்' என்றது அவரது தகுதிக் கேற்ப மால், அயன், இந்திரன் என்னும் இவர் உலகத்தவரையும், சிவலோகத்தவரையும் குறிக்கும். பதிப்புக்களில் இதன்பின் காணப்படும் 'ஏறுடையாய்' என்னும் மந்திரம் மேல் 'மாகேசுர பூசை' அதிகாரத்தில் சொல்லப்பட்டது.

இன்புறு வீர்அறிந் தேஎம் இறைவனை
அன்புசெய் வீர்தவம் செய்யும் மெய்ஞ்ஞானத்துப்
பண்புறு வீர் பிறவித்தொழி லேநின்று
துன்புறு பாசத் துழைத்தொழிந் தீரே. ***#2073***

மீண்டும் மீண்டும் பிறந்து பிறந்து உழல்வதாகிய அந்தத் தொழிலிற்றானே நின்று, அத்துன்பத்தை அடைதற்கு ஏதுவான வினைகளில் கிடந்து உழைத்துக் கெட்டவர்களே, கேளுங்கள். எம் இறைவனாகிய சிவன் எல்லா உயிர்கட்கும் என்றும் உறுதுணையாய் இருந்து உதவி வருதலை உணர்ந்து அவனிடத்திலே அன்பு செய்யுங்கள்; அதன் மேலும் தவத்தைச் செய்யுங்கள்; அப்பொழுது உண்மை ஞானத்தைப் பெற்ற சிறப்பை உடையவராவீர்கள். அச்சிறப்பால் நிலையான இன்பத்தை எய்துவீர்கள்.

விளக்கவுரை

'பிறவித் தொழிலே நின்று' என்பது தொடங்கி, 'இன்புறுவீர்' என்பதை இறுதியில் வைத்து உரைக்க. தவமாவன சரியை கிரியா யோகங்கள்.

அது சிவநெறி நூல்களால் இனிது விளங்கும்.

மேற்கொள்ள லாவதோர் மெய்த்தவம் ஒன்றுண்டு
மேற்கொள்ள லாவதோர் மெய்த்தாளும் ஒன்றுண்டு
மேற்கொள்ள லாவதோர் மெய்ந்நெறி ஒன்றுண்டு
மேற்கொள்ள லாம்வண்ணம் வேண்டிநின் றோர்க்கே. ***#2074***

'யாவரும் மேற்கொள்ளத்தக்க நல்ல முறை எது' என்று அறிந்து அதனை மேற்கொள்ள விரும்புபவர்க்கு அம்முறை குறிப்பிடுகின்ற ஒப்பற்ற உண்மையான தவமும், ஒப்பற்ற அரு ளாற்றாலும், ஒப்பற்ற வீட்டு நெறியும் உள்ளன.

விளக்கவுரை

'அவற்றை அறிந்து மேற்கொள்ளுதல் அறிஞர் கடனாகும்' என்பது குறிப்பெச்சம். 'அத்தவம் சிவபுண்ணியமும்' சிவன் அருளும், சிவநூல் கூறும் பொருள்களின் மெய்ம்மையுமாம். என்பதைக் குறிப்பால் உணர்த்தியவாறு, தாள் - முயற்சி. அஃது அதற்கு ஏதுவாகிய ஆற்றலைக் குறித்தது. ஈற்றடியை முதலில் வைத்து உரைக்க. இதன்கண் சொற்பொருட் பின்வருநிலையணி வந்தது.

சார்ந்தவர்க் கின்பங் கொடுக்கும் தழல்வண்ணன்
பேர்ந்தவர்க் கின்னாப் பிறவி கொடுத்திடும்
கூர்ந்தவர்க் கங்கே குரைகழல் காட்டிடும்
சேர்ந்தவர் தேவரைச் சென்றுணர் வாரே. ***#2075***

பொதுவாக, 'தேவரைச் சேர்தல்' என்பது தேவரை அவரை உணரும் நெறியிற் சென்று உணர்தலே யாகும். அம்முறையில் சிவபெருமான் தன்னைச் சார்ந்தவர்கட்கு இன்ப நிலையாகிய வீட்டையும், சாராது நீங்கினவர்கட்குத் துன்ப நிலையாகிய பிறப்பையும் கொடுப்பான். இதனை உணர்ந்து அவனிடத்தில் அன்பு மிகப் பெற்றவர்கட்கே அவன் தனது திருவடி நிழலைத் தருவான்.

விளக்கவுரை

'அதனைப்பெற முயலுங்கள்' என்பது கருத்து, முதல் இரண்டு அடிகளில் சிவனது இயல்பையும், மூன்றாம் அடியில், 'அவ் வியல்பினை மக்கள் உணர்தல் வேண்டும்' என்பதையும் கூறினார். ஆதலின், அது 'கூறியது கூறல்' ஆகாமை யறிக. 'சிவபெருமானைச் சார்தலாவது இது' என்று உணர்த்துவார் பொதுவாகத் தேவரைச் சாருமாறு கூறினார். அங்ஙனம் கூறிய ஈற்றடியை முதலிற் கூட்டியுரைக்க.

'சலம்இலன் சங்கரன்; சார்ந்த வர்க்கலால்
நலம்இலன்; நாடொறும் நல்குவான் நலன்' -தி.4 ப.11 பா.6

என்று அருளிச் செய்ததும் காண்க. பிறவியை 'இன்னாமை'

என்றமையால், இன்பமாவது வீடாயிற்று.

முத்தியை ஞானத்தை முத்தமிழ் ஓசையை
எத்தனைக் காலமும் ஏத்துமின் ஈசனை
நெய்த்தலைப் பால்போல் நிமலனும் அங்குளன்
அத்தகு சோதி யதுவிரும் பாரே. *#2076*

வீடாகிய முடிநிலைப் பயனாயும், அப்பயனுக்கு நேர்வாயிலாகிய ஞானமாயும், அந்த ஞானத்தை முதற்கண் கேள்வி யால் உணர்த்தும் முத்தமிழின் ஒலியாயும் உள்ள சிவபெருமானையே அறிஞர் எத்துணைக் காலமாயினும் ஒழியாது துதித்து நிற்பர். அங்ஙனம் துதிக்கின்ற துதியில் அவன் தன்னுள்ளே நெய்யைக் கொண்டிருத்தலால் தன்னைப் பருகுகின்றவர்கட்கு இனிக்கின்ற பால்போல அவன் இனிப்பான். ஆகவே அறிவில் இனிக்கின்ற அறிவாயுள்ள அவனை அறிவுடையோர் விரும்பாமல் இருப்பரோ?

விளக்கவுரை

'விரும்பவே செய்வர்' என்பதாம், 'ஈசனை' என்பதை முதலடியின் இறுதியிற் கூட்டுக. அங்ஙனம் கூட்டவே, முத்தி முதலிய மூன்றும் ஈசனையே குறித்தனவாம். தலை - இடம். இங்கு உள்ளிடம். பால் இனித்தலைக் குறித்தற்கு, 'நெய்த்தலைப் பால்' என விதந்தோதினார். 'அங்கு' என்றது துதியை. 'அது' பகுதிப் பொருள் விகுதி. ஏகாரம் வினாப் பொருட்டாய், அதன் எதிர்மறையைக் குறித்தது. விரும்புதலுக்கு 'அறிஞர்' என்பது தோன்றா எழுவாயாய் நின்றது. அறிஞர் விரும்பாதொழியார்' என்றதனால் 'நீவிரும் அதனையே செய்மின்கள்' என உலகர்க்கு அறிவுறுத்தவாறாயிற்று.

நியமத்த னாகிய நின்மலன் வைத்த
உகமெத் தனையென் றொருவருந் தேறார்
பவமத்தி லேநின்று பாய்கின்ற தல்லால்
சிவமத்தை ஒன்றும் தெளியகில் லாரே. *#2077*

'ஒவ்வொரு பொருளையும் அதனதன் தன்மையில் நிற்குமாறு நிறுத்தி நடத்துபவனாகிய சிவபெருமான் அனைத்து உயிர்களையும் வீடு பெறுவிக்க எத்தனை யுகங்களை வரையறுத் திருக்கின்றான்' என்பதை அறிய வல்லவர் ஒருவரும் இல்லை, இந்நிலையில் அவரவரும் அச்சிவபரம் பொருளை உள்ளவாறு உணரும் நெறியால் உணர்ந்து பிறவியினின்றும் நீங்குதலையே ஒவ்வொருவரும் செய்தலே தக்கதாய் இருக்க, ஒருவரும் அதனைச் சிறிதும் செய்யாது, பிறவிக் கடலிலே குதித்து அதன் கரையைக் காணாது அமிழ்கின்றனர்.

விளக்கவுரை

'அதனை அவர்கள் விட்டொழிதல் வேண்டும்' என்பது குறிப்பெச்சம். வலியுறுத்தற் பொருட்டுப் பின்னிரண்டு அடிகளில் எதிர் மறையாற் கூறப்பட்டது. தெளிவின் பொருட்டு உடன்பாட்டால் உரைக்கப்பட்டது. 'பாய்தல்' என்றது குறிப்புருவகம். 'பவமது, சிவமது' - என்ற 'அது' இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். 'பவ மதிலே, சிவமதை' என்பன இடையே ஒற்று விரித்தல் பெற்றன. இம் மந்திரம் உயிரெதுகை பெற்றது.

இங்கித்தை வாழ்வும் எனைத்தோ ரகிதமும்
துஞ்சொத்த காலத்துத் தூய்மணி வண்ணனை
விஞ்சத் துறையும் விகிர்தா எனநினை
நஞ்சற் றவர்க்கன்றி நாடாஒண் ணாதே. *#2078*

இவ்வுலகில் தமக்கு வருகின்ற நன்மை, தீமை இரண்டினையும் அவை ஒரு நிகரனவாக நிற்க வைக்கும் காலத்தில் மாணிக்க வண்ணனாகிய சிவபெருமானை, அவனது ஞானத்திலே விளங்கும் தனியொரு பொருளாக உணர்ந்து அவ்வாறான அவனது பெருமையைச் சொல்லி நினைக்கின்ற தூய மனம் உடையவர்க்கன்றி, அவனை உணர இயலாது.

விளக்கவுரை

இன்று சில இடங்களில் 'அங்கு, இங்கு' என்பன அங்கிட்டு, இங்கிட்டு, என வழங்குதல் போல் முற்காலத்தில்' இங்கு' என்பது' இங்கித்தை' எனச் சில இடங்களில் வழங்கிற்று என்பது, 'எங்கித்தைக் கன்மமெலாம் செய்தாலும்' என்னும் சிவஞான சித்தி *(சூ. 10.6)*ஆட்சியாலும் விளங்கும். பின்னர், 'அகிதம்' என வருதலால் 'வாழ்வு' என்றது இதத்தையாயிற்று. துஞ்சுதல் - தங்குதல். முதனிலைத் தொழிற் பெயர். 'ஒப்பத் தங்கிய காலத்து' என ஓதற்பாலதனை, 'தங்குதல் ஒத்த காலத்து' என்றார். நன்மையையும் தீமையையும், ஒருபடித்தாக நோக்குதல் இருவினையொப்பு வந்த காலத்தன்றிக் கூடாது. இருவினை ஒப்போடு உடன் நிகழ்வன மல பரிபாகமும் சத்திநிபாதமும். இம் மூன்றும் எய்தப் பெற்றவர் இறைவனைத் துதித்தலே உண்மையுணர்ந்து துதித்தலாக ஏனையோர் துதிப்பனவெல்லாம் 'ஊரா மிலைக்கக் குருட்டா, மிலைத்த' *(தி.8 திருச்சதகம், 87)*வாறாம் ஆதலின், இருவினையொப்பு வாய்த் தோர்க்கன்றித் தூய்மணி வண்ணனை 'நாட ஒண்ணாது' என்றார். எனவே, 'முன் மந்திரத்திற் கூறிவயாறு ஏனையோரைச் சொல்லி என்ன பயன் 'என்றதாயிற்று. 'என - என்று சொல்லி என்க. 'விஞ்ஞானத்து' என்பது, 'விஞ்சானத்து' என மருவிப் பின் எதுகைக் கேற்பத் திரிந்து நின்றது. விஞ்ஞானம் - மேலான ஞானம்; பதி ஞானம். விகிர்தன் - ஏனை எல்லாப் பொருளினும் வேறுபட்ட தன்மையுடைவன். அத்தன்மை

யாவது பாச, பசு, ஞானங்களால் பற்றவாராமை. 'நினை நஞ்சற்றவர்' என்பது வினைத்தொகை. நஞ்சு - தீமை. அஃது இங்கு மனக்குற்றத்தைக் குறித்தது. 'மணி' என்பது நீலமணியையேயன்றி மாணிக்கத்தையும் குறித்தல் வழக்காதல் அறிக. இதன் கண் இன எதுகை வந்தது. முதற்றொட்டு இதுகாறும் வந்த பதினைந்து மந்திரங்களாலும் யாவர்க்கும் பொதுவாகச் சிவவழிபாட்டினையே வலியுறுத் துணர்த்தினார். இனிவரும் நான்கு மந்திரங்களால் அச்சிவன் குருவாகி வந்து தன்னைக் காட்டப் பெற்றார்க்கு அவன் அக் குருவாய் நின்றே அருள்புரிவன் ஆதலின் அவரை நோக்கி, அக் குருவழிபாட்டினை வலியுறுத்துணர்த்துகின்றார். யாவருக்கும் சிவன் பொதுவாய்த் தாபர சங்கமங்களில் நின்று அருள்புரியினும் சிறப்பாக அவன் யார் யார்க்கு எவ்வெவ்வுருவில் நின்று அருள் புரிந்தானோ அவர்க்கு அவ்வுருவே சிவவடிவாம் என்பது உணர்க. ஆளுடைய பிள்ளையார் எங்கும் சென்று சிவனைக் கண்டு வழிபட்டாராயினும் திருக்கழுமலத் திருத்தோணி வீற்றிருந்தருளும் பெருமானையே தாம் சிறப்பாகக் கொண்டு வழிபட்டமை முதலியன இதற்குச் சான்றாகும். இவ்வாறான சிறப்பு வடிவங்களே அவரவர்க்கு ஆன்மார்த்த மூர்த்தி என்க.

பஞ்சமும் ஆம்புவி சற்குரு பால்மன்னி
வஞ்சக ரானவர் வைகில் அவர்தம்மை
அஞ்சுவன் நாதன் அருநர கத்திடும்
செஞ்சநிற் போரைத் தெரிசிக்கச் சித்தியே. ***#2079***

தமக்கு ஞானத்தை அளித்த நல்லருள் ஆசிரியரிடத்து அவரையும் ஏனைப் பலரொடு ஒப்ப நினைக்கும் நேர்மையில்லாத மனத்தையுடைய மாணாக்கர் நன்மாணாக்கருள் தாமும் ஒருவராய் இருந்து அவர்கள் போல ஒழுகிவருவாராயின் அவரது கரவொழுக்கத்தால் நாடு பஞ்சத்தை எய்தும். அவரை அணுகச் சிவனும் அஞ்சுவான். அதனால் அவரைப் பின்பு அவன் மீளுதற்கரிய நரகத்தில் இடுவான். நேர்மையான மாணாக்கரைக் கண்ணால் கண்டவர்கட்கும் நற்பேறு உண்டாம்.

விளக்கவுரை

'ஆம்புவி' என இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின் மேல் ஏற்றப்பட்டது. 'பஞ்சமும் ஆம்' என்பதனை, 'வைகில்' என்பதன் பின்னர்க் கூட்டுக. உம்மை, 'ஏனைத் தீங்குகளே யன்றி' என இறந்தது தழுவி நின்றது. ஈற்றடி, இதற்கு எதிராக, நன் மாணாக்கர் உள்ள நாடு நலம் பல எய்துதலை உணர்த்தியவாறு எனவே, இதனால் குருவை நம்மனோரில் ஒருவராக எண்ணுதலின் குற்றமே இனிதுணர்த்தப் பட்டதாம். 'செஞ்செவே நிற்போர், என்பது, 'செஞ்ச நிற்போர்' என மருவி நின்றது. செஞ்செவே நிற்றல், மிக நேர்மையாக நிற்றல்.

சிவனை வழிபட்டார் எண்ணிலாத் தேவர்
அவனை வழிபட்டங் காமாறொன் றில்லை
அவனை வழிபட்டங் காமாறு காட்டும்
குருவை வழிபடிற் கூடலும் ஆமே. ***#2080***

அளவற்ற தேவர்கள் சிவனையை நேராகச் சென்று கண்டு வழிபட்டனர். ஆயினும் அவர்கள் பின்பு துன்பம் இன்றி வாழ்ந்ததாக வரலாறில்லை. பின்பும் துன்பம் எய்தியதாகவே வரலாறுகள் உள்ளன. ஆகையால், என்றும் துன்பமில்லா வாழ்வைப் பெறும் வகையில் சிவனை வழிபடும் முறையைத் தெரிவிக்கின்ற குருவை வழிபட்டால், அவரது அருளால் அவ்வழிபாட்டில் நின்று துன்பம் இல்லாத நிலையை அடைதல் கூடும்.

விளக்கவுரை

'புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மே;இந்தப் பூமி
சிவன்உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
... ... திருமாலாம்
அவன்விருப் பெய்தவும், மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்த மெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்'
-*8* திருப்பள்ளியெழுச்சி, *10*
எனவும்,
'வானிடத்தவரும் மண்மேல் வந்தரன் றனைஅற் சிப்பர்'
-சிவஞானசித்தி. சூ. *2-92*
எனவும், பிறவாறும் போந்த திருமொழிகளால், 'தேவரும் நிலையான இன்ப வாழ்வை எய்துதற்கு மண்மேல் மானுடராய்ப் பிறந்து ஞான குருவால் ஆட்கொள்ளப்பெறல் வேண்டும்' என்பது தெளிவாதல் போலவே இந்நாயனாரும் தேவர், குருவை வழிபடாமல் சிவனை வழி பட்டுப் பெரும்பயன் எய்தாமையை எடுத்துக் காட்டிக் குரு வழிபாட்டினை வலியுறுத்தினார். 'குரு வழிபாடே ஞான வழிபாடாம்' என்பது கருத்து.
'அங்கு' இரண்டில் முன்னது 'அத்தேவர்பால்' எனவும், பின்னது, 'வழிபட்ட இடத்து' எனவும் கூறியபடி. ஆமாறு - பயனால் உயர்ந்த நிலை. ஒன்றில்லை - சிறிதும் இல்லை. பின்னர் வந்த 'ஆமாறு' என்பதற்கு, 'பயனால் உயரும் முறை' என உரைக்க. உம்மை உயர்வு சிறப்பு.

நரருஞ் சுரரும் பசுபாசம் நண்ணிக்
கருமங்க ளாலே கழிதலின் கண்டு
குருஎன்பவன் ஞானி கோதிலன் ஆனால்

பரம் என்றல் அன்றிப் பகர்வொன்று மின்றே. ***#2081***
மக்களே யாகுக; அவரினும் மேற்பட்ட தேவரே யாகுக; எல்லோரும் பாசத்துட்பட்ட பசுக்களேயாய் வினைவழிவந்து நீங்கிப் போதலின், 'குரு' எனப்படுபவன் அந்நிலையை உணர்ந்து பாசத்தின் நீங்கி நிற்றலால், 'ஞானி' என வேறுவைத்து எண்ணப் படுதலால், அவனை, 'பதி' எனவே கூறுதல் வேண்டுமன்றி, வேறு சொல்லுதற்கில்லை.

விளக்கவுரை

அஃதாவது, 'பசு' என்பதற்கில்லை என்பதாம். எழுவகைப் பிறப்புக்களுள் உயர்ந்தவை மக்கட்பிறப்பும், தெய்வப் பிறப்புமே யாகலின் அவற்றையே சிறந்தெடுத்துக் கூறினார். கூறவே, ஏனைப் பிறப்புக்களும் அவற்றுள் அடங்கின. எனவே, உயிர் வகைகளாக நாம் அறிவன யாவும் பசுக்களேயாதலால் அவை நிலை யான இன்பத்தைப் பெறவிரும்பும் தமது விருப்பம் நிறைவேறாமல் துன்பப்பட்டு உழலவே காண்கையாலும், 'குரு' எனப் படுபவன், அவ்வாறன்றி, 'நாம் ஆர்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம் ஏமாப்போம்; பிணியறியோம்; இன்பமே எந்நாளும், துன்பம் இல்லை' *(தி.6 ப.98 பா.1)* என்று சொல்லிச் செம்மாந்து இன்புற்றிருக்கக் காண்கையாலும், அவனை ஏனையோரில் ஒருவனாக வைத்து, 'பசு' எனல் கூடாமையும், அவ்வியல்பு பதிக்கன்றிப் பிறர்க்கு இன்மையால் 'பதி' என்றலே ஏற்புடையதாதலும் விளங்கும் என்றவாறு. 'கழிதலின் குரு என்பவன் (அவற்றைக்) கண்டு கோதிலன் ஆனால் ஞானியாதலின் பதி என்றல் அன்றிப்பகர்வு ஒன்றும் இன்றே' என இயைக்க, 'ஆனால்' என்பது தெளிவின்கண் வந்தது, நீ இப்படிச் செய்வதனால், நான் உன்னுடன் இருக்க இயலாது' என்பது போல. இதனால், 'குரு சிவனே' எனப்படுதற்குக் காரணத்தை விளக்கியவாறு, இதனானே 'குருவே சிவம்' என்றல் மலம் நீங்கித் தூயராய்ச் சிவன் அவரெனத் தானென வேறாகாது அவரே தானாய் அவரிடத்துத் தயிரில் நெய்போல விளங்கி நிற்கப் பெற்ற நிறைஞானியரை நோக்கியன்றி, வேடமாத்திரத்தால் 'குரு' என நிற்பாரை நோக்கியன்று என்பதும் இனிது விளங்கும்.

ஆட்கொண் டவர்தனி நாயகன் அன்புற
மேற்கொண் டவர்வினை போயற நாடொறும்
நீர்க்கின்ற செஞ்சடை நீள்தன் உருவத்து
மேற்கொண்ட வாறலை வீவித்து ளானே. ***#2082***

ஒப்பற்ற தலைவனாகிய சிவன் தான் குருவாகி வந்து ஆட்கொள்ளப் பெற்றவர்களுள் பின்னும் நாள்தோறும் அக்குரு வடிவின்கண் அன்பு மேலும், மேலும் மிகச் செய்கின்றவரது வினைகள் சேய்மைக்கண் விலகிக் கெடும்படி, தனது இயற்கை உருவத்தில் நீண்டசடையினிடத்தே

கங்கையை அடக்கி வைத்திருப்பது போல் அவற்றின் ஆற்றலை அடக்கி அவரிடத்தே விட்டு நீங்காதிருப்பான்.

விளக்கவுரை

'ஆட்கொண்டவர்' என்றது, 'ஆட்கொள்ளப் பட்டவர்' எனச் செயப்பாட்டு வினைப்பொருள் தந்து நின்றது. 'அங்கணர் ஒலை காட்டி ஆண்டவர் தமக்கு நாடு' *(தி.12 தடுத்தாட்கொண்ட பு.1)* என்பதிற் போல, 'ஆட்கொண்டவருள்' என 'உள்' என்னும் உருபு விரிக்க, 'தனிநாயகன்' என்பதை முதலிற் கொள்க, நாள்தொறும் உற மேற்கொண்டவர். நீர்போல நெகிழ்ந்துபோதலை, நீர்த்துப் போதல்' என்னும் வழக்குப் பற்றி, 'நீர்ததும்புகின்ற சடையை நீர்க்கின்ற செஞ்சடை' என்றார் 'ஆறு' என்பது உவம உருபாய் நின்றது. சிவனது உருவத்தை இங்கு 'நீர் உருவம்' என்றது, பகீரதன் பொருட்டு ஆகாயத்தினின்றும் குதித்த கங்கையை உடனே தாங்கி நின்ற கோலம் நோக்கியாம். உயிர்களைத் தாக்கி மெலியச் செய்கின்ற வினைகளது ஆற்றல் கரையை மோதிக் கரைக்கின்ற கடல் அலையோடு ஒத்தல் பற்றி அவையாக உருவகம் செய்தார். 'ஆகாய கங்கையைத் தனது சடைகளுள் ஒன்றின் உரோமத்தின் நுனியில் புல்நுனியில் நீர்போல நிற்குமாறு அடக்கிய பெருமானுக்கு வினையின் ஆற்றலை அடக்குதல் அரிதன்று' என்றற்கு 'நீள்தன் உருவத்தின் நீர்க்கின்ற செஞ்சடை மேற்கொண்டவாறு வீவித்துளான்' என்றார். வீதலுக்குப் பிற வினை வீவித்தல், வீவித்தான்' என்றே ஒழியாது 'வீவித்துளான்' என்றார் உடம்புள்ள துணையும் பிராரத்தம் விளைந்து கொண்டே விருத்தலின் அதனை மெல்வித்தற் பொருட்டு அவன் இமைப் பொழுதும் நீங்காது உடன் நிற்றல் பற்றி, சிவன் குருவாகி வந்து அருள்செய்யும் பொழுதே சஞ்சிதம் வறுத்த விதைபோலக் கெட்டொழியினும், பிராரத்தம் உடம்போடு ஒட்டி நிகழ அந்நிகழ்ச்சி உடல் ஊழாய் நிற்றல் அல்லது வரும் பிறவிக்கு வித்தாக ஆகாமியத்தைத் தோற்றுவியாது கழிதற் பொருட்டுத் தன்னால் ஆட்கொள்ளபட்டவருள் தொடர்ந்து அன்பு செய்பவரிடம் விளங்கி முன் நிற்பான் என்பது உணர்க. இங்ஙன மாகவே, சிவன் குருவாகி வந்து ஆட்கொள்ளப்பட்ட பின்பும் குருவையே சிவனாகக் கண்டு அன்புசெய்து வழிபடுவார்க்கன்றி ஏனையோர்க்கு முன்போல ஆகாமியவினை விளைந்து அது சஞ்சிதம் ஆக, மீட்டும் பிறவியே விளையும் என்பது விளங்கும். இதுபற்றியே,

தன்னை அறிவித்துத் தான்தானாச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது.

என்றார் மெய்கண்ட தேவரும் *(சிவஞானபோதம், இறுதி வெண்பா)*. பிழையலது - தப்பமுடியாத குற்றம்; உய்தியில் குற்றம். பிழைத்தல் -

தப்புதல் இதனால், 'குருவான் ஆட்கொள்ளப்பட்டார் அதன்பின் குருவையே சிவமாகத் தேறி வழிபட்டு வருதல் இன்றியமையாதது' என்பதும் 'அங்ஙனம் வழிபடாதவழிப் பழையே நிலையே ஆய்விடும்' என்பதும் கூறப்பட்டன.

'அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரனாகி அருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியாது அத்திசை
என்பு நைந் துருக, நெக்குநெக் கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள,
நன்புலன் ஒன்றி, 'நாத' என் றரற்றி

உரைதடு மாறி, உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித்து இருதயம் மலரக்,
கண்களி கூர, நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி'

-தி.*8* போற்றித் திருவகவல் - *75-87*

என்னும் திருமொழியும் இங்குக் கூறிய வழிபாட்டு அநுபவ வழி எழுந்தது என்க.

குருலிங்க சங்கமம்' என்னும் மூன்றன் வழிபாடு ஞானத்தைப் பெறுமுன்னர் அதற்குச் சாதனமாயும் பெற்றபின்னர் அதனைநிலை பெறுத்துவனவாயும் இருத்தலின் அவையே யாவராலும் செயற்பாலன என்பதை வலியுறுத்தியவர், அவற்றுள் குருவழிபாடு ஞானியர்க்குத் தலையாதலை எடுத்துக் கூறி, இத்தந்திரத்தை முடித்தார். இதனுள் இன எதுகையும், ஆசெதுகையும் வந்தன.

எட்டாம் தந்திரம்

***10.1.*உடலில் பஞ்ச பேதம்**

காயப்பை ஒன்று சரக்குப் பலஉள
மாயப்பை ஒன்றுண்டு மற்றுமோர் பைஉண்டு
காயப்பைக் குள்நின்ற கள்வன் புறப்பட்டால்
மாயப்பை மண்ணா மயங்கிய வாறே. *#2083*

ஒரு பையில் பல பண்டங்களை அடைத்து வைத்தல் போல, யாவராலும் நன்கு அறியப்படும் உடம்பாகிய ஒரு பை ஒவ்வோர் உயிர்க்கும் கிடைத்திருத்தல் கண்கூடாக, அதன்கண் அடைக்கப்பட்டுள்ள பண்டங்களோ பல உள்ளன. (அவற்றை ஆராய் கின்றார் ஒருவரும் இல்லை) இனி, அந்தப் பை மாயம்போலக் கட்புல னாகி, விரைவில் மறைவதாகும். என்றாலும், அந்தப் பைக்குள்ளே மற்றொரு பையும் உண்டு; (அதனை அறிந்தோர் சிலரே.) யாவரும் அறிந்த அந்தப் பைக்குள் அதற்கு வேறாகிய ஒன்று உள்ளதோ, இல்லதோ' என ஐயுறுமாறு ஒளிந்து நிற்கின்ற உயிர் அதனை விட்டு வெளியே போய்விடுமானால், தோன்றியழிவதாகிய அந்த உடம்பு மண்ணோடு மண்ணாய்ப்போக, அதனை நிலையானதாகக் கருதி, அதனைத் தமக்கு உறவாகத் தெளிந்திருந்தோர் திகைப்புற்று நிற்கும் நிலை இரங்கத்தக்கதாகும்.

விளக்கவுரை

'காயப்பை' என்றது உருவகம், சரக்காவன. என்பு, தசை, நரம்பு, குருதி, கோழை முதலியனவற்றை, 'சரக்கு' எனவே கூறியது சிறப்புருவகம். 'காயப்பை ஒன்று' என்பதன் பின்னும் 'உண்டு' என்பது எஞ்சி நின்று. ஈரிடத்தும் 'மாய் அப்பை' எனப் பிரிக்க மாய்தல் கூறவே, தோன்றுதல் தானே பெறப்பட்டது. 'மற்றும் ஓர் பை உண்டு' என்பதை உணர்த்தப்புக்கவர், 'முற்கூறிய அந்தப் பையே அன்றி' என்றற்கு 'மாய் அப்பை ஒன்றுண்டு' என அதனையே மீளச்சுட்டிக் கூறினார். முதற்கண் கூறிய பையை 'மாயும் பை' என்றதனால், மற்றும் ஒன்றாகக் குறிக்கப்பட்ட பை, 'மாயாப் பை' என்பது பெறப்பட்டது. மாயும் பை தூல உடம்பும், மாயாப் பை சூக்கும உடம்புமாம் என்க. உயிர்கட்கு அவ்வப்பொழுது வினைக்கீடாக விரைவில் மாறி மாறி வருவது தூலவுடம்பேயாதலும், நுண்ணுடம்பு அவ்வாறன்றி, உயிர் வீடுபெறும் வரையிலாவது, அல்லது உலகம் அழியும் வரையிலாவது உயிர்களோடு நீங்காது நிற்பது ஆதலும் அறிக. இங்ஙனமாகவே, பஞ்ச பேதங்களுள் 'தூலம, சூக்குமம்' என்னும் இரு பேதங்களைக் குறிப்பிட்டு அவற்றது

இயல்பு தொகுத்துக் கூறியவாறாயிற்று. என்பு, நரம்பு, குருதி முதலியவற்றின் கூட்டமே தூல தேகமாயினும், அவை அங்ஙனம் வெளித் தோன்றாது மறைந்து நிற்றல் பற்றித் தூல தேகத்தைப் பையாகவும், என்பு முதலியவற்றை அதனுள் அடைக்கப்பட்ட சரக்காவும் உருவகம் செய்தார். தூலதேகத்தைப் 'பை' என்றமையால் அதனோடு ஒப்ப ஏனைய தேகங்களையும் 'பை' என்றார். 'ஆக' என்பது ஈறு குறைந்து நின்றது. 'மற்றும் ஓர் பை உண்டு' என அறிவுறுத்தமையால், 'உடம்பாவது கண் கூடாய்த் தோன்றி யழிகின்ற அஃது ஒன்றுமே போலும்' எனவும், 'அது மாய்ந்தபொழுது உயிர் தனித்து நிற்பதுபோலும்' எனவும் மயங்காது, 'தூல உடம்பு நீங்கிய பொழுது உயிர் சூக்கும உடம்பளவாய் நிற்கும்' எனவும், தூல உடம்பு உள்ளபொழுது அதனை உயிர் சூக்கும உடம்பு வழியாக இயக்கும்' எனவும் உணர்க - என உணர்த்தினமை காண்க. . ஈற்றில், 'இரங்கத் தக்கது' என்பது அவாய் நிலையாய் நின்றது.

அத்தன் அமைத்த உடல்இரு கூற்றினில்
சுத்தம தாகிய சூக்குமம் சொல்லுங்கால்
சத்த பரிச ரூப ரசகந்தம்
புத்திமன்ஆங் காரம் புரியட்ட காயமே. ***#2084***

இறைவன் உயிர்கட்காக அமைத்துக் கொடுத்த, 'தூலம், சூக்குமம்' என்னும் இருவகை உடம்புகளுள் (தூலஉடம்பின் இயல்பு பற்றி மேலே கூறினோம்) இனி அதுபோலப் புலால் நாற்றம் நாறுதல் இன்றியே உயிர்க்குப் பயன்படுகின்ற சூக்கும தேகத்தைப் பற்றிக் கூறுமிடத்துச் சத்தம் முதலிய தன் மாத்திரைகள் ஐந்தும், அந்தக் கரண நான்கனுள் சித்தம் ஒழிந்த ஏனை மூன்றும் ஆக எட்டும் கூடிய தாகும். அதனால் அது, 'புரியட்டகாயம்' என்றும் சொல்லப்படும்.

விளக்கவுரை

ஐவகை உடம்புகளில் மேற்கூறிய இரண்டு உடம்பின் இயல்பினையே கூறப் புகுந்தமை பற்றி, 'அத்தன் அமைத்த உடல் இரு கூறினில்' என்றாரல்லது, 'ஏனை உடம்புகள் அத்தனால் அமைக்கப் பட்டன அல்ல' என்றிலர் ஆகலின், அனைதுடம்புகளும் அத்தனால் அமைக்கப்பட்டன ஆதற்குத் தடையின்மை அறிக. 'அனைத்தையும் ஆக்கி, அழிக்கும் அத்தன் ஒருவன் உளன்' என்பதை மேலெல்லாம் பல்லாற்றானும் தெளிவித்துப் போந்தமையால், இங்கு அதனை நினைப்பிக்கும் அளவில் 'அத்தன் அமைத்த உடல்' என அனு வாதமாகக் கூறினார். வகையை 'கூறு' என்றார். சத்தம் முதலிய ஐந்தும் சிறப்பு நிலை எய்தியவழியே செவி முதலிய பொறிகட்குப் புலனாகும். அப்பொழுது அவை 'புலன்' என்றும், 'விடயம்' என்றும் சொல்லப் பட்டு, ஆகாயம் முதலிய

பூதங்களின் குணமாய் நிற்கும். அப்பொழுது அவை, தாத்துவிகங்களாம். அவை சிறப்புநிலை எய்தாது பொதுமை யில் நிற்கும்பொழுது பொறிகட்குப் புலனாகாது, புலனாகாது, ஆகாயம் முதலிய பூதங்கள் தோன்றுதற்குக் காரணமாய் நிற்கும். அப்பொழுதே அவை 'தன்மாத்திரைகள்' எனப்படும். தன் மாத்திரைகள் தத்துவங்களாம். ஆகாயம் முதலிய பூதங்கட்குக் காரணம் ஆதல் பற்றித் தன்மாத்திரைகள் 'சூக்கும பூதம்' என்றும் சொல்லப்படும்.

அந்தக்கரணங்கள் நான்கனுள் மேல் நிற்பதாகிய சித்தம் பரசரீரப் பகுதியாதலின், ஏனை மூன்றுமே சூக்கும சரீரப் பகுதியாம் என்க. ஆகம பேதங்களின், 'தாத்துவிகங்களே தூலசரீரம்; தத்துவங்கள் யாவும் சூக்கும சரீரம்' என்னும் ஒரு கருத்து உள்ள தாயினும் இங்கு நாயனார், 'தன்மாத்திரை ஐந்தும், அந்தக்கரணம் மூன்றும் கூடியதே சூக்கும சரீரம்' எனத் தெளிவாகக் கூறினமையின், மேற்கூறிய ஒரு கருத்தை இங்கு நோக்க வேண்டுவதில்லை, 'இங்குக் கூறப்பட்ட கருத்தே காலோத்தரம் முதலிய ஆகமங்களில் சொல்லப் பட்டது. என்றார் சிவஞான போத மாபாடியம் உடையார். *l*

'மனம்' என்பது கடைக் குறைந்து 'மன்' என நின்றது,

இதனால், மேற்கூறிய இரு பேதங்களுள் 'சூக்குமம்' எனப்பட்ட உடலின் இயல்பு வேறெடுத்து வகுத்துக் கூறப்பட்டது.

எட்டினில் ஐந்தாகும் இந்திரி யங்களும்
கட்டிய மூன்றும் கரணம தாயிடும்
ஒட்டிய பாசம் உணர்வது வாகவே
கட்டி அவிழ்த்திடும் கண்ணுதல் காணுமே. ***#2085***

எட்டுக் கருவிகள் கூடியதனால் 'புரியட்ட காயம்' எனப்படும் உடம்பு - என மேற்கூறப்பட்ட சூக்கும சரீரத்திலிருந்தே மாபூதங்கள் ஐந்தும், இருவகை இந்திரியங்களும் தோன்றும். (எனவே, அப்பதினைந்தும் கூடியதே தூலசரீரமாம்.) இனித்தூல சரீரத்தில் உள்ள இருவகை இந்திரியங்களும், சூக்கும சரீரத்தில் உள்ள அந்தக்கரணங்கள் மூன்றும் 'சரீரம்' எனப்பட்டாலும், உண்மையில் அவை கரணங்களேயாம். அறிவுக்குத் துணையாதல்பற்றி ஆன்மாவோடு பெரிதும் ஒற்றுமைப் பட்டு நிற்கின்ற அவற்றைக் கொண்டே சிவன் ஆன்மாவின் அறிவைப் புலன்களில் அகப்படுத்தி வைத்துப் பின்பு அப்புலன்க ளினின்றும் பிரித்துவிடுவான்.

விளக்கவுரை

'ஐந்து' என்றது மாபூதங்களையாதல் தெளிவு ஆகும்' என்பதனை 'இந்திரியங்கள்' என்பதன் பின்னும் கூட்டுக. 'இந் திரியங்கள்' எனப் பொதுப்படக் கூறியதனால் ஞானேந்திரியம், கன் மேந்திரியம் இரண்டும்

கொள்ளப்படும். மாபூதங்கள் தன்மாத்திரை களிலிருந்தும், ஞானேந்திரியங்கள் அகங்காரத்தின் சாத்துவிகக் கூற்றி லிருந்தும், கன்மேந்திரியங்கள் அகங்காரத்தின் இராசதக் கூற்றி லிருந்தும் தோன்றுவனவாம். இங்ஙனம் தோன்றிய பதினைந்தனுள் மாபூதங்களே எலும்பு, தோல், தசை முதலியவனவாகப் பரிணமித்துத் தூலதேகமாக, இருவகை இந்திரியங்களும் பிறவாறு பரிணமியாது நிற்கும். ஆகவே, மாபூதங்களே உண்மையில் தேகம் ஆக, இருவகை இந்திரியங்கள் அத்தேகத்தின் நிற்றலால் ஒற்றுமை பற்றி, 'தனு' எனப்பட்டாலும் அவையும், அந்தக் கரணங்களும் அவ்வாறு சூக்கும தேகத்தில் நிற்றல் பற்றி, 'தனு' எனப்பட்டாலும் அவையும் உண்மையில் கரணங்களே என்பது உணர்த்தற்கு, 'இந்திரியங்களும்' மூன்றும் கரணமாதாயிடும்' என்றார். இவ்வாறு 'மூன்றும்' என்பத னோடு இயைதற் பொருட்டு, 'ஆகும்' என்பதனை மீண்டும் கூறாது விடுத்தார். ஆகவே, 'இந்திரியங்களும்' என்பதனை 'இந்திரியங்களும் ஆகும்' எனவும் 'இந்திரியங்களும் மூன்றும்' எனவும் இருமுறை ஓதி இயைத்துக் கொள்க. சூக்கும சரீரத்திலிருந்தே தூல சரீரம் தோன்றும் என்றற்கு, 'எட்டினில் ஐந்து ஆகும்; இந்திரியங்களும் ஆகும்' என்றும், 'தத்துவங்கள் யாவும் பொதுவாக, 'தனு' என்று கூறப்பட்டாலும், அவற்றுட் சில உண்மையில் கரணங்களே' என்றற்கு, 'இந்திரியங் களும் மூன்றும் கரணமதாகும்' என்றும், 'அவற்றுள் அறிவுக் கரணங்களே வலியபந்தங்கள்' என்றற்கு, 'ஒட்டியபாசத்து உணர்வது வாகவே கட்டிய' என்றும் கூறினார். கட்டிய - ஒன்று படுத்தப்பட்ட. காணும், முன்னிலை அசை. 'அறிமின்' என்றும் ஆம்.

இதனால், 'மேற்கூறிய என்பு முதலிய தாத்துவிகங்களே யன்றி, இருவகை இந்திரியங்களும், மாபூதங்களும் ஆகிய பதினைந்து தத்துவங்களும் தூலசரீரமாம்' என்பதும், 'அவற்றுட் சில உண்மையில் கரணங்களேயாம்' என்பதும் கூறப்பட்டன.

தனு, அல்லது தேகம் ஆன்மாவிற்கு நிலைக்களமும், கரணங்கள் ஆன்மாவிற்குக் கருவியுமாய் உதவும் என்க. இந்திரியங்கள் புறக்கருவிகளும், மனம் முதலியன உட்கருவிகளும் ஆதல் அறிக. 'உட்கருவிகள்' என்பனவே, 'அந்தக் கரணங்கள்' எனப்படுகின்றது. [பதிப்புக்களில் முன் தந்திரத்தில், 'கூடா ஒழுக்கம்' என்னும் அதிகாரத்து இறுதியில் காணப்படும் 'இந்தியம் அந்தக்கரணம் இவை உயிர்' என்னும் மந்திரம் இத்தந்திரத்தில் இம்மந்திரத்தை அடுத்து இருந்ததாகும்.]

இந்தியம் அந்தக் கரணம் இவை உயிர்
வந்தன சூக்க உடலன்று மானது
தந்திடும் ஐவிதத் தால்தற் புருடனும்

முந்துளம் மன்னும் மற்றாறும் முடிவிலே. ***#2086***

'மாபூதங்கள் மட்டுமே உயிர்க்குக் கரணம் ஆகா தொழிய, 'இருவகை இந்திரியங்களும் அந்தக்கரணம் போல உயிர்க்குக் கரணமாம்' என மேலே சொல்லப்பட்டமையால், 'மாபூதங்ளும் அவற்றின் காரியங்களுமே தூல தேகமாக இந்திரியங் களும் அந்தக்கரணம்போலச் சூக்கும தேகமாம் என்றலே பொருத்த முடைத்துப்போலும்' எனின், அங்ஙனம் கொள்ளுதல் பொருந்துவ தன்றாம். *(இந்திரியங்கள் தூலதேகத்தில் இருந்து புறப் பொருளை அறிதலும், பொருள்களை எடுத்தல், கொடுத்தல் முதலிய வற்றைச் செய்தலும் கண்கூடாதலின் அவை தூல தேகமேயாம் என்பது கருத்து.)* இனி மூலப்பிரகிருதியினின்றும் தோன்றுவனவாகிய பஞ்சக் கிலேசங்களால் அவற்றிற்கு முன்பே தோன்றிய பொதுப் புருட தத்துவத்தில் சிறப்புப் புருட தத்துவம் பொருந்தும். வித்தியா தத்துவம் ஏழில் 'புருடன்' தவிர மற்றை ஆறு தத்துவங்களும் புருட தத்துவத் திற்கு மேலே உள்ளனவாகும்.

விளக்கவுரை

'இந்திரியம்' என்பது இடைக் குறைந்து நின்றது. 'வந்தன என்பதன்பின், 'ஆயினும்' என்னும் சொல்லெச்சம் வருவித்து, 'இவை என்பு, தோல், இறைச்சி முதலியனபோலன்றி, உயிரின் அறிவு செயல்களுக்குக் காரணமாய் நிற்றலின் உயிர்போலவே தோன்று மாயினும்' என உரைக்க. இதனால், 'இருவகை இந்திரியங்கள் - சூக்கும தேகம் - என்றால் என்ன' என்னும் ஐயத்தை நீக்கியவாறு. 'உயிர் வந்தன' என்பது 'உயிர்போல வந்தன' என வினையுவமத் தொகை, 'உளத்தின்கண் மன்னும்' என ஏழன் உருபு விரிக்க.

தூல தேகம், சூக்கும தேகம் இவற்றைக் கூறியபின், 'பண் புடம்பு' எனப்படும் குண சரீரத்தின் இயல்பையும், அதற்கு மேல் உள்ள 'போர்ப்புடம்பு' எனப்படும் கஞ்சுக சரீரத்தின் இயல்பையும், அதற்கு மேல் உள்ள 'முதலுடம்பு' எனப்படும் காரண சரீரத்தின் இயல்பையும் கூறினார்.

மான் - மகத்து; மூலப் பிரகிருதி. அது முக்குணமயமானது. அக்குணங்கள் வெளிப்படாது சூக்குமமாய் நின்றநிலை அவ்வியத் தமும், தூலமாய் வெளிப்பட்டுச் சமமாய் நின்றநிலை வியத்தமும் ஆகும். அவ்வியத்தமே பிரகிருதி. வியத்தமே காரணநிலையாதலின் அதனால் உயிர்க்கு வருவது ஒன்றுமில்லை. வியத்தமே காரிய நிலையாதலின் அதனாலே உயிர் முக்குணமயமாய் விகாரம் எய்துகின்றது. ஆகவே இந்த வியத்தமே குணசரீரம் ஆதல் அறிக.

பஞ்சக் கிலேசமாவன, அவிச்சை, அகங்காரம், இச்சை, ஆசை, கோபம் -

என்பன. 'இவை பிரகிருதியினின்றும் தோன்றும்' என்பதும், 'இவற்றின் தொடர்பினாலே, இயற்கையில் விகாரம் இன்றியிருக்கும் உயிர் விகாரம் எய்தி, அகக் கரணம் புறக் கரணங்களால் புறத்து நிற்கும் பொருள்களைப் பற்றி, இன்பத் துன்பங்களை அடையும்' என்பதும் சாங்கிய மதக்கொள்கைகள். 'அக்கொள்கை ஆகமங்கள் சிலவற்றிலும் சொல்லப்பட்டுள்ளது' என்பது இம்மந்திரத்துள், 'மானது தந்திடும் ஐவிதத்தால் தற்புருடனும் முந்துளம் மன்னும்' என்பதனால் அறியக் கிடக்கின்றது. இந்தப் பஞ்சக் கிலேசத்தாலே உயிர் முக்குண உலகத்தோடு தொடர்பு பட்டு வினைகளை ஈட்டுவதும், நுகர்வதுமான நிலையை அடைதல் பற்றி இக் கிலேசத் தொகுதி 'பும்சூத்துவ மலம்' எனப்படும் என்றும், பும்சுத்துவ மலத்தை எய்திய உயிர் 'புருடன்' எனப்படும் என்றும் சிவஞான போத மாபாடியத்தில் சொல்லப்பட்டது. *3*
இனி, 'பிரகிருதிக்கு முன்பே புருடதத்துவம் உள்ளது' என்பது ஆகமங்களில் வெளிப்படை. அது பற்றி மாபாடியம் உடையார், 'முன்பு உள்ளது பொதுப் புருடதத்துவம்' என்றும், 'பின்பு பஞ்சக்கிலேசத்தால் ஆவது சிறப்புப் புருட தத்துவம்' என்றும் கூறிச் சிவஞான சித்தியாரின் 'நிச்சயம் புருடனாகிப் பொதுமையில் நிற்பனன்றே'*1* என்பதைத் தம் கொள்கைக்கு மேற் கோளாகக் காட்டினார். 'பொதுமையில் நிற்பன்' என்றது பொதுப் புருட தத்துவத்தைக் குறிக்குமாயின், பின்னர் பும்சுத்துவ மலத்தைக் குறிப்பிட்டு, அதனால் சிறப்புப் புருட தத்துவம் தோன்றும்' என்பதனையும் கூறியாக வேண்டும். அவ்வாறு பஞ்சக் கிலேசமோ, பும்சுத்தவ மலமோ, சிறப்புப் புருட தத்துவமோ எந்தச் சித்தாந்த மூல நூலிலும், எங்கும் சொல்லப்படவில்லை. எனினும், 'இம் மந்திரத்தில் அவை கூறப்படுதல் சில ஆகமங்களின் கூற்றுப் பற்றி' எனக் கொள்ள வேண்டியுள்ளது. பும்சுத்துவம் - புருடத் தன்மை.
சித்தாந்த நூல்களில், புருடத்தத்துவம் வித்தியா தத்துவம் ஏழனுள் தோற்ற முறையில் இறுதியானதாகச் சொல்லப்படுகின்றது அதனால் மூலப் பிரகிருதியை அடுத்து மேல் நிலையில் உள்ளதாகும். அதற்குமேல் ஏனை வித்தியா தத்துவங்களில், 'அராகம், வித்தை, கலை, நியதி, காலம்' என்பன முறையே ஒன்றன்மேல் ஒன்றாய் உள்ளன. இந்த ஐந்து தத்துவங்களையும் ஐந்து சட்டைகளாக உயிர் அணிந்து நின்ற நிலையில்தான் அது 'புருடன்' எனப் பெயர் பெறுகின்றது. அது பற்றி அந்நிலை ஒரு தத்துவமாகச் சொல்லப் படுகின்றது. காலம் முதலாக உள்ள ஐந்தும் ஐந்து சட்டை போல்வதால், அவற்றது தொகுதி 'கஞ்சுக சரீரம்' எனப்படுகின்றது. இந்த ஐந்து தத்துவங்களும் 'மாயை' என்னும் தத்துவத்தின் காரியமாய், அதனின்றும் நேரேயும், பின் ஒன்றின் ஒன்றாயும் தோன்றும். ஆதலால் அம் மாயா தத்துவம் ஏனை வித்தியா

தத்துவங்கட்குக் காரணமாதல் பற்றி, 'காரண சரீரம்' எனப்படுகின்றது. ஆகவே, வித்தியா தத்துவங்கள் ஏழனுள் புருடன் கீழே நிற்க, ஏனை ஆறும் அதற்கு மேல் உள்ளனவாதல் பற்றி, 'மற்றாறும் முடிவிலே' என்றார்.

தற்புருடன் - தானாகிய புருடன். அஃதாவது, சகலனாகிய புருடன். பிரளயாகலரினின்றும் சில உயிர்கள் 'சகலர்' எனப் பெயர் பெறுதற்குக் காரணம் அவை முக்குண வடிவாகிய பிரகிருகியாற் கட்டுண்பதே யாதலின், 'ஐவிதத்தால் தற்புருடன் மன்னும்' என்றார். முந்து உளம் - இப்புருடனுக்கு முன்னே உள்ள புருடன் அது, வித்தியா தத்துவங்களில் தோற்ற முறையில் இறுதியானது. அந்த அளவில் நிற்கும் உயிர்கள் பிரளயாகலராகும்.

வித்தியா தத்துவங்கள் அசுத்த மாயையின்காரியம். எனினும் அசுத்த மாயை பெரிதாய், வியாபகமாய் இருத்தலால், அது முற்றிலும் தத்துவங்களாய்ப் பரிணமித்துவிடுவதில்லை. அதனில் ஒரு சிறு கூறே தத்துவங்களாய்ப் பரிணமிக்கும். இது 'மண் குடமாயிற்று' என்றால், அளவின்றியுள்ள மண்முழுதும் குடமாய் விடாது அதில் ஒரு சிறு பகுதியே குடமாயது போல்வதாம்.

இனி, மண்குடமாவதற்கு முன் அங்ஙனம் ஆகுமாறு பிசைந்து பக்குவப்படுத்தப்படுதல் போல அசுத்த மாயையின் ஒரு கூறு தத்துவங்களாய்ப் பரிணமிக்குமாறு பக்குவப்படுத்தப்படும். அங்ஙனம் செய்யப்பட்ட அதுவே, 'மாயா தத்துவம்' என ஒரு தத்துவமாகச் சொல்லப்படுகின்றது. 'இவ்வாறு அசுத்த மாயையை அனந்த தேவர் தமது சத்தியால் பக்குவப்படுத்துவார்' என்பது ஆகமங்களின் கருத்து. இந்த மாயா தத்துவமே காரண சரீரம் என்க.

இதனால், பஞ்ச பேத உடல்களில் முன் சொல்லப்பட்ட இரு பேதங்கள் போக, எஞ்சிய மூன்று பேதங்கள் கூறப்பட்டன.

இரதம் உதிரம் இறைச்சி தோல் மேதை
மருவிய அத்தி வழும்பொடு மச்சை
பரவிய சுக்கிலம் பாழாம் உபாதி
உருவ மலால்உடல் ஒன்றென லாமே? #2087

நிலையாய் இராமல் நிலையழிந்து ஒழிந்து போவன வாகியகுருதி, இறைச்சி முதலிய அழுக்குப்பொருள்களாம் பருப் பொருள்களது தொகுதியைத் தவிரத் தூல உடம்பு வேறு ஏதுவாதல் கூடும்?

விளக்கவுரை

'கூடாது, அதனால், இருவகை இந்திரியங்களும் ஆற்றலேயாயினும் அவை செவி, தோல் முதலிய உறுப்புக்கள் இன்றிச் செயற்படுதல் கூடாமையால், அவை தூல உடம்பே யல்லது சூக்கும உடம்பாகா'

என்பதாம்.
இரதம் - இரசம்; அஃதாவது, உண்ணப்படும் உணவிலிருந்து ஊறிக் குருதி முதலியவாய்ப் பரிணமிப்பது அதுவே, குருதி முதலியன நிலைபெறுதற்குத் துணையாதல் பற்றி முதற்கண் கூறப்பட்டது. மேதை - நிணம். 'கொழுப்பு' என்பர். அத்தி - அஸ்தி; எலும்பு. வழும்பு - நிணத்தில் உள்ள பசை. இதனை நிணத்திற்கு வேறாக எண்ணுதல் இல்லை. மச்சை - பித்த நீர். இங்குக் கூறப்பட்டவற்றுள் இரதம் வழும்பு இவை தவிர ஏனைய ஏழும் 'தாதுக்கள்' எனப்படும். தாது - மூலப்பொருள். பாழாதல் - காணந்தோறும் பதனழிந்து, முடிவில் அழிந்து போதல். தாதுக்கள் யாவும் அத்தன்மையவே யாதல் பற்றி, 'பாழாம் உபாதி' எனவும், இவ்வுபாதிகள் யாவும் பருப் பொருள்களாய்க் கட்புலனாவனவே' என்றற்கு 'உருவம்' எனவும் கூறினார். உபாதி - மாசு. 'இரதம் முதலியவாகக் கூறப்பட்ட செவ் வெண்ணின் இறுதியில் தொகைச் சொல் தொக்கது. ஏகாரம் வினாப் பொருளாய், எதிர்மறைப் பொருள் தந்தது.
இதனால், மேல், 'சூக்கும உடலன்று' எனக் கூறப்பட்டவை தூலதேகமே யாதல் காரணம் கூறி வலியுறுத்தப்பட்டது.

ஆரே அறிவார் அடியின் பெருமையை
ஆரே அறிவார் அருந்தவம் நின்றது
ஆரே அறிவார் அறுபத்தெட் டாக்கையை
ஆரே அறிவார் அடிக்காவ லானாதே. ***#2088***

மேல், 'அத்தன் அமைத்த உடல்' என்றபடி உயிர்களின் தகுதியை அறிந்து அத்தகுதிக்கேற்பப் பல்வேறு வகையான உடம்புகளை அமைத்துத் தருகின்ற இறைவனது அருள் மிகுதியையும் ஆற்றலின் மிகுதியையும் அறிய வல்லுநர் யாவர்; அந்நிலையில் 'மக்களாய்ப் பிறந்தோர் அவ்வுடம்பைப் பெறுதற்குப் பல பிறவிகளில் தாம் செய்த நல்வினை இவை' என்பதை அறிய வல்லுநர் யாவர்; மக்களுடம்பு அசுத்த உலகத்து உளது ஆதலின் அஃது அவ்வுலகத்திற்கு மேல் உள்ள மிச்சிர உலகம், சுத்த உலகம் என்பவற்றில் உள்ளோரது உடம்புகளில் உள்ள கருவிகட்குமேல் அறுபத்தெட்டுக் கருவிகள் கூடியது என்பதை அறிபவர் யாவர்! மூவகை உலகத்து உயிர்கட்கும் திருவருளே முதற்காவலாய் உள்ளது என்பதை அறிகின்றவர் யாவர்! ஒருவரும் இல்லை.

விளக்கவுரை

முதற்கண் 'அடி' என்றது இறைவனது திருவடியை, அது திருவருளே. 'தத்துவம் தொண்ணூற்றாறு' என்பது வைதிகசமயம் அனைத்திற்கும் பொதுவான ஒரு கொள்கை. அத்தொண்ணூற்றாறும் தத்துவம், தாத்துவிகம்' என இரண்டாகவே பகுக்கப்படும். அவற்றுள் 'தத்துவம்

எத்தனை' என்பதில் சமயங்கள் வேறுபடுகின்றன. ஆகவே, 'தாத்துவிகங்கள் எவை, என்பதிலும் ஒருமித்த கருத்து இல்லை. கட்டளைகளிலும் தாத்துவிகங்கள் பல்வேறு வகையாகவே சொல்லப் படுகின்றன. சைவ சித்தாந்தத்தில் தத்துவம் முப்பத்தாறு ஆகலின், தாத்துவிகம் அறுபதேயாதல் வேண்டும். அந்த அறுபதையும் கட்டளை களை ஒட்டிப் பலர் பல வகையாகக் கூறுகின்றனர். அவைகள் சில காரணங்களால் பொருத்தமாகத் தோன்றவில்லை. மாதவச் சிவஞான யோகிகள் 'தாத்துவிகம் அறுபதும் ஐம்பெரும் பூதங்களின் கூறுகளே' என்கின்றார்.*8* அதுவே பொருத்தமானதாகத் தெரிகின்றது. எனினும், பூதங்களின் கூறுகளாக அவர் ஞானேந்திரிய விடயம் ஐந்து, கன்மேந்திரிய விடயம் ஐந்து, பிராணாதி வாயுக்கள் பத்து என்னும் இருபதை மட்டுமே கூறி 'மற்ற நாற்பது எவை' என்பதைக் கூறாது விடுத்தார் ஆயினும் நாடிகள் பத்தும் ஆகாயத்தில் கூறுகளாகும். ஆக முப்பது போக மற்றை முப்பதும் மேற்கூறிய என்பு, தோல், இறைச்சி முதலியனவாகவும், மற்றும் பூதக் கூறுகளாகக் கட்டளைகளில் கூறப் படுவனவற்றையும் கொள்ளுதல் வேண்டும். எனவே, தாத்துவிகம் அறுபதில் அவற்றிற்கு மூலமாகிய மாபூதம் ஐந்து, தன்மாத்திரை ஐந்து என்பவற்றையும், அந்தப் பூதமும், தன்மாத்திரையும் இன்றிச் செயற்படமாட்டாத இருவகைப் பத்து இந்திரியங்களையும் அடக்கி, தூல தேகக் கருவிகளை 'அறுபதே' என்றும், சூக்கும தேகக் கருவி 'மேற்கூறப்பட்ட எட்டே' என்றும் வைத்து, 'ஆகத் தூல சூக்கும தேகக் கருவிகள் அறுபத்தெட்டு' என, அறுபத்தெட்டாக்கை என்றார். எனவே 'ஆக்கை' என்றது, தூல சூக்கும தேகங்களை யாயிற்று. இந்த இருவகை உடம்பும் சகலருக்கல்லது, பிரளயாகலர் விஞ்ஞான கலருக்கு இல்லையாதல் அறியத்தக்கது.

இதனால், 'மக்களுக்குச் சிறப்பாக அமைந்த தூல சூக்கும தேகத்தின் இயல்பையும், அவற்றை அவ்வுயிர்கட்கு வழங்கிய இறைவனது அருளையும், ஆற்றலையும் அறிவுடையோர் ஆழ்ந்து நோக்க வேண்டும் என்பது கூறப்பட்டது.

எண்சாண் அளவாய் எடுத்த உடம்புக்குள்
கண்கால் உடலில் கரக்கின்ற கைகளில்
புண்கால் அறுபத்தெட் டாக்கை புணர்க்கின்ற
நண்பால் உடம்பு தன்னால்உடம் பாமே. ***#2089***

உடம்பை 'எண்சாண் உடம்பு' என்றல் யாவரும் அறிந்தது. 'அவரவர் கையால் எண்சாணேயாகும்' என்பது இதன் பொருள். 'எறும்பும் தன் கையால் எண்சாண்' (தனிப்பாடல் திரட்டு, என்றார் ஔவையார். இந்த அளவு யாவராலும் நன்கறியப்பட்ட தூல தேகத்தைப் பற்றியதே. அந்த

உடம்பிற்றானே கண் முதலிய ஞானேந்திரியங்களும், கால் முதலிய கன்மேந்திரியங்களும் ஆற்றல் வடிவாய்ச் சூக்குமமாய்த் தோன்றாது நிற்கின்றன. எவ்வாற்றா லேனும், எவ்விடத்திலேனும் ஊறு உண்டாகுமாயின் அவ்விடம் புண்ணாகிக் குருதியையும், சீழையும் ஒழுக விடுகின்ற தூல தேகத்தைத் தோற்றுவித்தற் பொருட்டு மேற்கூறிய அறுபத்தெட்டுக் கருவிகளைத் தக்கவாற்றால் திருவருள் ஒன்று சேர்க்கின்ற சேர்க்கையால் ஓர் உடம்பிலிருந்து மற்றோர் உடம்பு தோன்றுவதாகும்.

விளக்கவுரை

எடுத்த - ஆக்கப்பட்ட. 'உடலிற் கைகளில் எனக் கூட்டுக. 'கரக்கின்ற' என்றது. அன்பெறாதுவந்த அஃறிணைப் பன்மை வினைமுற்று. 'கை' என்றது 'ஒருபுடை' என்றபடி. 'அந்த இடம் ஊறுபட்ட இடம்' என்பது, 'புண்கால்' என்றதனால் விளங்கிற்று. காலுதற்குச் செயப்படுபொருள்கள் வருவிக்கப்பட்டன. 'புண் கால் ஆக்கை புணர்க்கின்ற அறுபத்தெட்டன் நண்பால், உடம்பால், உடம்பு ஆம்' என இயைக்க. 'புண் கால் ஆக்கை' என்றது, 'தூல உடம்பு' என்ற வாறு. 'அதனைத் தோற்றுவித்தற்காகவே அதற்குமுன் சூக்கும உடம்பு ஆக்கப்படுகின்றது' என்றற்கு, 'புண் கால் ஆக்கை புணர்க்கின்ற அறுபத்தெட்டு' என்றார். சேர்க்கை, 'நண்பு' எனப்பட்டது. அது பான்மை வழக்கு, 'உடம்பால் உடம்பு ஆம்' என்றதற்கு, சூக்கும 'உடம்பால் தூல உடம்பு தோன்றும்' எனவும், சில தூல உடம்புகளால், வேறு சில தூல உடம்புகளும் தோன்றும் எனவும் இருபொருள் கொள்க. தூல உடம்பால் தூல உடம்பு தோன்றுதலே இனப் பெருக்கமாம். தன், சாரியை.

இதனால், தூல சூக்கும உடம்புகள் ஒருவகையில் காரியங்களாயும், ஒருவகையில் காரணங்களாயும் நிற்குமாறு கூறப்பட்டது.

உடம்பிற்குள் நாலுக் குயிராய சீவன்
ஒடுங்கும் பரனோ(டு) ஒழியாப் பிரமம்
கடந்தொறும் நின்ற கணக்கது காட்டி
அடங்கியே அற்றதிங் காரறி வாரே. *#2090*

தூல உடம்புக்குள் சூக்கும உடம்பாய் நிற்கின்ற அந்தக்கரணங்கள் நான்கிற்கும், மேலும் நுண்ணிதான அதிசூக்கும உடம்பைக் கொண்டு இயக்கும் முதற்பொருளாய் உள்ள சீவான்மாத் தான் பரமான்மாவாகிய சிவத்தில் வியாப்பியமாய் நிற்கும். ஆகவே, எப்பொருளிலும் எஞ்சாது நிறைந்து நிற்கும் பிரமப் பொருளாகிய சிவம், தான் ஒன்றேயாயினும் பல சீவான்மாக்களிலும் வியாபித்து அதனதன் தன்மைக்கேற்ப ஏகதேசமாயும் நின்று, பின் சீவான்மா சீவத்துவம் (பசுத்துவம்) நீங்கிய பொழுது தன்னைப் போலவே வியாபகமாகிவிடுதலால் அவ்வேகதேசத்

தன்மை நீங்கி வியாபகமாகி விடுகின்ற தன்மை, ஞாயிறு ஒன்றேயாய் வியாபகமாயினும் பல குடங் களில் உள்ள நீரில் எல்லாம் அதனதன் அளவிற்கேற்ப வேறு வேறு அளவில் பலவாய்த் தோன்றி, அக்குடங்களில் நீர் நீங்கிய பொழுது முன்பு நின்ற சிறு நிலையின் நீங்கி வியாபகமாகிவிடுகின்ற தன்மையை ஒக்கும் என்னும் உண்மையை அறிந்தனர் எத்துணைப் பேர்!

விளக்கவுரை

'கணக்கு' என்றது, 'நிலைமை' என்றபடி. அஃது உவமம் குறித்து நின்றது. அது, பகுதிப்பொருள் விகுதி. 'கடம்' என்றது, 'நீர் உள்ள குடத்தையே என்பதும் 'நின்றது ஞாயிறு' என்பதும் ஆற்றலால் கொள்ளக் கிடந்தன. 'காட்டி' என்றது, 'ஒத்துநிற்றலைத் தெளிவாகப் புலப்படுத்தி' என்றவாறு. 'அடங்கி' என்றது, 'ஏக தேசமாய்த் தோன்றி' எனவும், 'அற்றது' என்றது, 'அவ்வேகதேசத்தின் நீங்கி வியாபகமானது' எனவும் கூறியவாறு. 'ஆர் அறிவார்' என்றது, 'ஒரு பிரமமே, ஞாயிறு ஒன்றாயினும் பல குடங்களில் பலவாய்த் தோன்றுதல் போல, பல உடம்புகளில் பல சீவராய்த் தோன்றும்' என மயங்கிக் கூறும் ஏகான்மவாதிகளை உட்கொண்டு கூறியது. ஞாயிறு குடங்களில் உள்ள நீரில் தோன்றினும் ஞாயிறேயாய் விளங்குத லன்றிப் பிற இயல்புகளைப் பெற்று வேறுபட்டுத் தோன்றுதல் இல்லை. சீவரோ பிரமப் பொருளின் தன்மையினின்றும் பெரிதும் வேறுபட்டுத் தோன்றுதல் தெளிவு. சிறப்பாகப் பிரமம் ஞானானந்த மயத்தது. சீவர் அஞ்ஞான துக்கமயத்தர். இதனை அறியாமையே யன்றி, உவமையில், 'குடம், நீர், ஞாயிறு' என மூன்று பொருள்கள் உளவாக, பொருளில் 'பிரமமும், உடம்பும்' என இரண்டையே கூறுதலால் அவரைக் கருதி, 'ஆர் அறிவார்' என்றார்.

ஆறந்த மாகி நடுவுடன் கூடினால்
தேறிய மூவாறும் சிக்கென் றிருந்திடும்
கூறுங் கலைகள் பதினெட்டுங் கூடியே
ஊறும் உடம்பை உயிருடம் பென்னுமே. ***#2091***

யோகமுறையால் ஆறு ஆதாரங்களும் கீழாகி யதனால், அவற்றிற்குமேல் உள்ள பிரமரந்திரத்தை அடைந்தால், அங்ஙனம் அடைந்தவருடைய தூல உடம்பு விரையில் அழிந் தொழியாது உறுதி பெற்று நெடுநாள் இருக்கும். அந்நிலையில் சூக்கும உடம்பும் அதற்கு சார்பாய் உறுதிப்பட்டு நின்று, அதனை என்றுமே உயிர் உள்ள உடம்பாகச் செய்யும்.

விளக்கவுரை

முன்னர், 'மூவாறு' என்றது தூல உடம்பின் கூறுக ளாகிய பூதம் ஐந்து,

ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, இவற்றிற்கு முதலாக அகங்கார வகை மூன்று ஆகிய பதினெட்டினை, பின்னர், 'கலைகள் பதினெட்டு' என்றது. புரியட்ட காயமாகிய சூக்கும உடம்பின் தத்துவம் எட்டும், பத்து வாயுக்களாகிய தாத்துவிகம் பத்தும் ஆகப் பதினெட்டினை. வாயுக்கள் தூல தேகத்தனவாயினும் அவற்றாலே சூக்கும உடம்பு செயற்படுதல் பற்றிச் சூக்கும தேகக் கூறுகளுடன் கூட்டி எண்ணினார். இக்கருத்தே பற்றிச் சூக்கும உடம்பு. 'பிராணமயகோசம், எனப்படுதலை நினைக. 'ஊறும் உடம்பு' என்றது மேல், 'புண் கால் ஆக்கை' என்றது போன்றது என்னும் - எனச் செய்யும். சிக்கென்றிருத்தல் - உறுதிபெற்றிருத்தல்.

இதனால், விரைவில் அழிதற்பாலதாகிய தூல உடம்பை அங்ஙனமாகாது நீடியிருக்கச் செய்யுமாறு கூறப்பட்டது. இது மேல் மூன்றாம் தந்திரத்துள் 'காய சித்தி' அதிகாரத்துள் விரிவாகக் கூறப்பட்டதாயினும். 'உடம்புகளைப் பற்றிக் கூறும் இவ்விடத்தில் நினைவூட்டுதல் நன்று' என்னும் கருத்தால் சுருங்கக் கூறப்பட்டது.

மெய்யினில் தூலம் மிகுத்த முகத்தையும்
பொய்யினில் சூக்கம் பொருந்தும் உடலையும்
கையினில் துல்லியம் காட்டும் உடலையும்
ஐயன் அடிக்குள் அடங்கும் உடம்பே. ***#2092***

'தூலம், சூக்குமம், பரம்' என்னும் மூன்றுடம்பு களையும் ஒருங்குசேர்த்து ஓர் உடம்பிற்கு உவமித்தால், தூல உடம்பு முகத்தையும், சூக்கும உடம்பு கழுத்திற்குக் கீழும், காலுக்கு மேலும் உள்ள உடலையும், பர உடம்பு கைகால்களையும் ஒத்து நிற்கும் அவ்வாறு அமைந்த அந்தப் பேருடம்பு சிவனது திருவருளில் அடங்கும்.

விளக்கவுரை

மெய்யினில் தூலம் - கண்கூடாக விளங்குதலால் ஐயத்திற்கு இடமின்றித் துணியப்படுகின்ற தூல உடம்பு. பொய்யினில் பொருந்தும் சூக்க உடல் - காட்சிப் புலனாகாமையால் உண்மை எளிதில் துணியப்படாது நுண்ணிதாய் உள்ள சூக்கும உடம்பு. 'தூலம், சூக்குமம்' என்பவற்றின்பின் 'ஆக' என்பது வருவிக்க. காட்டும் உடல் - உயிர்க்கு அறிவைத் தரும் பர உடம்பு. இங்கு 'உடலை' என்றதில் ஐ சாரியை; வேண்டாவழி வந்தது. முகத்தையும், உடலையும் என்பவற்றோடு இயைக்க 'கையினில்' என்பதையும் 'கையையும்' எனத்திரிக்க. இஃது உருபு மயக்கம். துல்லியம் - ஒப்பு. இதன்பின் 'என்க' என்னும் சொல்லெச்சம் வருவித்து, 'துல்லியம் என்க' என உரைக்க. ஈற்றில் நின்ற 'உடம்பு' என்பதற்கு, இவ்வாறான உடம்பு,' என உரைக்க.

இதனால், 'மூவகை உடம்புகளும் வேறுவேறு இயல்பின வாயினும்

செயற்பாட்டின்கண் ஒன்றுபோல இணங்கிச் செயற்படும்' என்பது கூறப்பட்டது. 'அதற்குச் சிறந்த காரணம் திருவருள்' என்றற்கு அஃதும் உடன் கூறப்பட்டது.

காயுங் கடும்பரி கால்வைத்து வாங்கல்போல்
சேய இடம் அண்மை செல்லவும் வல்லது
காயத் துகிற்போர்வை ஒன்றுவிட் டாங்கொன்றிட்
டேயு மவரென்ன ஏய்ந்திடுங் காயமே. *#2093*

பகைவரைச் சினக்கின்ற வேகம் பொருந்திய போர்க் குதிரை அண்மை, சேய்மை என்னும் இடங்கட்குத் தக்கபடி முன்கால்களை எட்டி வைத்துப் பின் கால்களை வாங்கிக்கொண்டு தடையின்றி ஓடுதல் போலச் சூக்கும உடல் அண்மை சேய்மைகளுக்கு ஏற்ப விரைந்து செல்ல வல்லது. அதனால், உயிர் அவ்வுடலைப் பற்றிக் கொண்டு, அத்தன்மையில்லாத தூல உடம்புகளுள் ஒன்றை விட்டு நீங்கி மற்றொன்றை எங்கு வேண்டுமானாலும் சென்று எடுத்துக் கொள்ளும். தூல சரீரம் சூக்கும சரீரத்தின் மேல் போர்வைபோலவே உள்ளதாகும். அதனால், உயிர் தூல உடம்பில் ஒன்றை நீக்கி விட்டு, மற்றொன்றை எடுத்துக் கொள்ளுதல் மக்கள் தமது போர்வை ஒன்றை நீக்கிவிட்டு மற்றொன்றை எடுத்துப் போர்த்துக் கொள்ளுதல் போல்வதே.

விளக்கவுரை

'வல்லது' என்னும் பயனிலைக்கு எழுவாய் முன் மந்திரத்தினின்றும் வந்தது. 'போர்வை ஒன்றை விட்டு ஒன்றை இட்டு ஏயும் அவர் என்ன உயிர் காயத்தை ஏயும்' என்க. காயம் - தூல தேகம். ஏயும் - பொருந்தும். 'உயிர்' என்பது ஆற்றலால் வந்து இயைந்தது. 'ஏயும் அவரென்ன' என்றாராயினும் 'அவர் ஏய்த்தல் என்ன' என்றலே கருத்து என்க. தாம் கூறிய சொற் கிடக்கைக்கு ஏற்ப 'அவர்' என்றார். ஆகவே கருத்திற்கு ஏற்ப அது 'மக்கள்' எனப்பட்டது.

இதனால், 'தூல தேகத்தை விட்டு உயிர் நீங்குதலே இறப்பு என்பதும், அது மற்றொரு தூல தேகத்திற் சேர்தலே பிறப்பு' என்பதும் கூறப்பட்டன. தூல தேகம் சூக்கும தேகத்தினின்றே தோன்றுவ தாயினும் அதனைக் கொண்டே சூக்கும தேகம் அறிதல் செய்தல்களை இயற்றலால் எடுத்துக் கொள்வதாகக் கூறப்பட்டது. இதனானே உயிர் பல பிறப்புக்களில் செல்லுமாறும் கூறப்பட்டதாம். பிறப்புக்களின் மாற்றம் வினை நிமித்தமாக நிகழ்வது.

நாகம் உடல்உரி போலும் நல் அண்டசம்
ஆகும் நனாவில் கனாமறந் தல்லது
போகலும் ஆகும் அரன்அரு ளாலே சென்*(று)*
ஏகும் இடம்சென்*(று)* இருபயன் உண்ணுமே. *#2094*

இவ்வுலகில் ஓர் உடம்பை விட்டு நீங்கிய உயிர் இறைவனது அருளாணையின்படி வேறோர் உடலில் சென்று, அவ் வுடலுக்குரிய இடத்தை அடைந்து, முன்பு இருந்து இடத்தில் அனுபவித்த அனுபவங்களை மறந்து அவ்விடத்து வரும் இன்பத் துன்பங்களை அனுபவிக்கும் அவை எவை போல எனின், பாம்பு முன்பிருந்த உடம்பாகிய தோலை நீக்கிவிட்டுப் புதிய உடம்பைப் பெறுதல் போல்வதும், முட்டையிற் பிறக்கும் உயிர்கள் முன்பு முட்டைக்குள் இருந்து பின்பு வெளிவந்து வேறு இடத்தை அடைதல் போல்வதும், கனவில், முன்பு நனவில் நிகழ்ந்தவற்றை மறத்தல் போல்வதுமாகும்.

விளக்கவுரை

'அரனருளாலே' என்பது முதலாகக் கொண்டு உரைக்க. முதற்கண் 'சென்று' என்பதற்கு மற்றோர் உடம்பில் சென்று என்பது பொருளாகும். இஃது இவ்வுலகிலே மறுபிறப்பு எடுப்பதையே குறித்தது. 'ஆகும்' என்றனவும், 'போலும்' என்றவாறேயாம். நனவு, கனவோடொப்ப, 'நனா' எனப்பட்டது. அல்லது - வேறு நிகழ்ச்சி. போகல் - நிகழ்தல். 'நனாவில் நிகழ்ந்தவற்றைக் கனாவில் மறந்து, அல்லது போகல் போல்வதுமாம்' என்க. பாம்பு தோல் உரித்தல் ஓர் உடலைவிட்டு வேறு உடலில் செல்லுதற்கும். அண்டசம் ஓர் இடம் விட்டு, வேறொர் இடத்தை அடைதற்கும், நனவில் நிகழ்ந்தவற்றைக் கனவில் மறத்தல் முன் பிறப்பில் நிகழ்ந்தவற்றை அடுத்த பிறப்பில் மறத்தற்கும் உவமையாகச் சொல்லப்பட்டன. 'பன்னகம் அண்டசங்கள்' என்னும் சிவஞான சித்திச் செய்யுளையும்,*l* அதன் உரையையும் இங்கு ஒப்பிட்டுக் காண்க. இதனால், மறுபிறப்பு உளதாதல் பற்றித் தூல தேகத்திற்கு வேறாய்ச் சூக்கும தேகம் முதலியன உளவாதல் தெளிவிக்கப்பட்டது.

உண்டு நரக சுவர்க்கத்தில் உள்ளன
கண்டு விடும் சூக்கம் காரண மாச்செலப்
பண்டு தொடரப் பரகாய யோகிபோல்
பிண்டம் எடுக்கும் பிறப்பிறப் பெய்தியே. ***#2095***

ஓர் உயிர் நிலத்தில் இறந்தபின் சூக்கும சரீரம் பற்றாகச் சென்று நரக சுவர்க்கங்களை அடைந்து அங்கு உள்ளவைகளைப் பார்த்து அவற்றால் வரும் துன்ப இன்பங்களை நுகர்ந்து, அந்த உலகங்களை விடுத்துத் தான் செய்த வினையில் மேற் கூறிய உலகங்களில் நுகரப்பட்டு எஞ்சி நிற்கின்ற வினைகள் தொடர்த லால், யோக சித்தர் ஓர் உடம்பை விட்டும் மற்றோர் உடம்பில் புகுதல் போல வேறு பிறப்பை அடைந்து மீண்டு நிலவுலகத்தில் அப்பிறப்பிற் குரிய உடம்பை எடுத்துக் கொள்ளும்.

விளக்கவுரை

'இறப்பு எய்திச் சூக்கம் காரணமாச்செல நரக சுவர்க்கத்தில் உள்ளன கண்டு உண்டு பண்டு தொடர (சூக்கம் காரணமாச் செல) பிறப்பு எய்திப் பிண்டம் எடுக்கும் எனக் கூட்டிப் பொருள் கொள்க. 'ஓர் உயிர்' - தோன்றா எழுவாய்.

'சூக்கம் காரணமாக' என்பதும், 'எய்தி' என்பதும் பின்னும் கூட்டுதற்கு உரியன. காரணம் - கருவி. புடைபெயர்தற்கு உரிய கருவி. செல - செல்லுதலால். 'நரக சுவர்க்கத்தில் உள்ளன கண்டு உண்டு' என்றது, 'வினையிருந்த வகைக்கு ஏற்ப முன்னும் பின்னுமாக அடைந்து கண்டு நுகர்ந்து' - என்றபடி. தூல உடம்பை விட்டுச் சூக்கும தேகத்தோடு இருத்தற்குப் பாம்பு தோல் உரித்தலும், மறுபிறப்பில் முன் பிறப்பில் நிகழ்ந்தவற்றை மறத்தலும் முன் மந்திரத்தில் உவமையாகக் கூறியபின், ஒருதூல தேகத்தை விட்டு மற்றொரு தூல தேகத்தை எடுத்தற்கு யோகிகள் பரகாயப் பிரவேசம் செய்தல் இம் மந்திரத்தில் உவமையாகக் கூறப்பட்டது.

இதனால், மேற்கூறியது உவமைகூறி வலியுறுத்தப்பட்ட துடன், சுவர்க்க நரக அனுபவங்களைக் கூறும் முகத்தாலும் சூக்கும தேகம் உண்மை நிறுவப்பட்டது. சுவர்க்க நரக லோகங்கட்கும் வேறு வேறு தூல உடம்பு உளவாயினும் நிலவுலகத் தூல உடம்பே இங்குச் சிறப்பாக எடுத்து, அதன் இயல்பு விளக்கப்பட்டது.

தானவ னாகிய தற்பரந் தாங்கினோன்
ஆனவை மாற்றிப் பரமத் தடைந்திடும்
ஏனை உயிர்வினைக் கெய்து மிடஞ்சென்றும்
வானும் நிலனும் புகுந்தும் வருந்துமே. ***#2096***

தான் சிவனேயாய் நிற்கின்ற சிவ யோகி, அது காறும் தான் அடைந்திருந்த நிலைகளை யெல்லாம் போக்கி, உடல் நீங்கினபின் அந்நிலைக்கு அப்பாற்பட்ட முடிநிலைப்பேற்றை அடைவான். அந்நிலையை அடையாது தாமேயாய் நிற்கின்ற மற்ற உயிர்கள் தாம் செய்த வினைக்கீடாகக் கிடைக்கின்ற இடங்களில் செல்வனவாய், விண்ணுலகிலும், மண்ணுலகிலும் புகுந்து துன்புறும்.

விளக்கவுரை

தற்பரம் - தனக்கு மேல் உள்ள பொருள். அதனைத் தான் தாங்குதலாவது அதன்கீழ் அடங்கியிருத்தல். அஃதாவது தனக்கென ஒன்றின்றி, எல்லாவற்றையும் அதனுடையதாகவே கண்டிருத்தல். 'தான் அவன் ஆதலாவது இதுவே என்றற்கு, 'தான் அவன் ஆகிய' என்றதனோடு அமையாது, 'தற்பரம் தாங்கினோன்' என்றார். இதுவே ஞான சிவ

யோகம். இந்நிலை 'அருள் நிலை' என்றும், 'சுத்த துரியநிலை' என்றும் சொல்லப்படும். அதனையும் கடந்தது ஆனந்த நிலையாகிய அதீத நிலை யாகலின் அதனை, 'பரமம்' என்றார். பரமம் - மேல் எல்லை. 'விண் மண், இரண்டுலகத்துள்ளும் உயர்வு தாழ்வான இடங்களில் உயிர் செல்லும்' என்றற்கு, அவற்றை வேறு போல வைத்து, 'எய்தும் இடம் சென்றும்' 'வானும் நிலனும் புகுந்தும்' வருந்தும் என்றார்.
இதனால், தூலதேகமே நிலையின்றி, மாறி மாறி வருவதாகச் சூக்கும தேகம் வீடுபெறுங்காறும், அல்லது ஊழி முடிவுகாறும் நிலைத்திருத்தல் கூறப்பட்டது.

ஞானிக்குக் காயம் சிவமேய் தனுவாம் அஞ்
ஞானிக்கூன் நிற்கு முடம்பே யதுவாகும்
மேனிற்கும் யோகிக்கு விந்துவும் நாதமும்
மோனிக்குக் காயம்முப் பாழ்கெட்ட முத்தியே. ***#2097***

மெய்ஞ்ஞானிக்கு உடம்பாவது சிவனது அரு ளாகிய உடம்பேயாம், அஞ்ஞானிக்கு உடம்பாவது புலாலால் ஆகிய அந்த உடம்பேயாம். அஞ்ஞானிக்குமேல் நிற்பவனாகிய யோகிக்குப் பைசந்தி வாக்கும் அதற்கு மேல் உள்ள சூக்குமை வாக்கும் தக்கபடி உடம்பாகும். ஞானத்தின் மேல் எல்லையாகிய மோன நிலையை எய்தியவன் முப்பாழையும் கடந்த முத்தி நிலையையே உடம்பாகக் கொண்டிருப்பான்.

விளக்கவுரை

சிவம் ஏய் தனு - சிவத்தைப் பொருந்தி உள்ள உடம்பு. அஃது அருளே. முதல் இரண்டடிகளில் முறையே மேல் நிற் பவனையும், கீழ் நிற்பவனையும் பற்றிக் கூறினமையின், மூன்றாம் அடியில் இடை நிற்பவனைப் பற்றிக் கூறினார். ஈற்றடி முடிநிலையை எய்தினோனைப் பற்றிக் கூறியது. எனவே, 'ஞானி' என்றது துரிய நிலையில் நின்றவனையேயாம். மோனி, அந்த நிலையை அடைந் தவன். சீவன் முத்தனாவான் அவனே. யோகிகளுள் சவிகற்ப சமாதியை அடைந்தவன் பைசந்தி வாக்கைக் கடக்கமாட்டாது அதனுட் பட்டும், நிருவிகற்ப சமாதியை அடைந்தோன் சூக்குமை வாக்கைக் கடக்க மாட்டாது அதனுட்பட்டும் நிற்பன் என்றபடி. 'உடம்பாகும்' என்பது மூன்றாம் அடி ஈற்றிலும் சென்றியையும். எனவே, மோனியைத் தவிர ஏனையோர் யாவரும் ஓரளவில் பந்தம் உடையவர்களேயாயினர். முப்பாழ் ஆவன பின்னர்க் கூறப்படும்.
இதனால், 'யோகியரும், ஞானியரும் தூலசூக்கும சரீரங்களோடு கூடி நிற்பாராயினும் அவர் அவற்றால் கட்டுண்ணாது, மந்திர வடிவராயும் நிற்பர்' என்பது கூறப்பட்டது.

விஞ்ஞானத் தார்க்கா ணவமே மிகுதனு
எய்ஞ்ஞானத் தார்க்குத் தனுமாயை தானென்ப
அஞ்ஞானத் தோருக்குக் கன்மம் தனுவாகும்
மெய்ஞ்ஞானத் தோர்க்குச் சிவதனு மேவுமே. ***#2098***
மூவகை ஆன்ம வர்க்கத்தினருள் விஞ்ஞானகலர் நிலையை ஆணவமே சூக்கும தேகமாய் நிற்கும். இனி அந்த விஞ்ஞானகலர்க்கு அடைய இருப்பவராகிய பிரளயாகலருக்கு அசுத்த மாயையே எல்லா உடம்புமாய் இருக்கும். 'ஞானம் இல்லாதவர்' எனப் படுகின்ற சகலர்க்குக் கன்மத்திற்கு ஈடாக வருகின்ற பிராகிருதங்களே உடம்பாகும். ஆகவே, அருள் உடம்பு மெய்ஞ்ஞானைத்தை எய்தினவர்கட்கே வாய்ப்பதாம்.

விளக்கவுரை

மிகு தனு - சூக்கும தேகம். இஃது ஒப்புமையாகக் கூறியது. 'நுண்ணிய பந்தம்' என்றபடி. 'ஏய்' என்பது 'எய்' எனக் குறுகிநின்றது. ஆகவே, அதனையடுத்து 'ஞானம்' என்றது முன் சொன்ன விஞ்ஞானத்தையாயிற்று. பிரளயாகலருள் நேரே முத்தி பெறுபவரன்றி, விஞ்ஞானகலராகி முத்தி பெறுபவரும் உளர் என்க. கன்மத்தால் வருவதை, 'கன்மம்' என்றார். அவ்வாற்றால் வரும் தனு பெரும்பான்மை பற்றிப் பிராகிருத சரீரத்தைக் குறித்தது. 'ஞானிக்குக் காயம் சிவமேய் தனுவாகும்' என்றதனால், 'ஏனையோர்க்கு அது வாயாது' என்பதனை வகுத்துக் காட்டி, இறுதியடியால் அதனை நிறுவினார்.
இதனால், மேற்கூறியவற்றுள் சிறப்புடையது ஒன்று இனிது விளக்கப்பட்டது.

மலமென் றுடம்பை மதியாத ஊமர்
தலமென்று வேறு தரித்தமை கண்டீர்
நலமென் றிதனையே நாடி யிருக்கின்
பலமுள்ள காயத்தில் பற்றும்இவ் வண்டத்தே. ***#2099***
அறிவுடையீர், தம் உடம்பை அருவருத்து நீக்கத் தக்கதாக அறிவும் அறிவையில்லாதவர் அதனையே தாம், என்றும் இருக்கும் இடமாகக் கருதி, அதன்கண் தனியான ஒருபற்று வைத்துப் போற்றிவருதலைக் கண்டீரன்றோ! அவர் நிலையை அடைந்திருக்கும் உயிர்கள் அதன் பயனாகப் பற்பல தூல தேகங்களை எடுத்து உலகங்களிலேயே உழலும்.

விளக்கவுரை

'வீடு பெறா' என்றபடி. 'இருக்கின், பற்றும்' - என்னும் பயனிலைகட்கு, 'அத்தகைய உயிர்கள்' என்பது தோன்றா எழுவாயாய் நின்றது. 'கண்டீர்; பற்றும்' எனக் கூறியவற்றால், 'நீவிரும் அவ்வாறு நிற்பின் அந்நிலையை

அடைவீர்கள்' எனக் குறித்தவாறு.
இதனால், 'உடம்புகள் யாவும் அழுக்குப்பொருளே' என்பதும், அஃதறிந்து அவற்றின் நீங்குதலே அறிவுடைமை' என்பதும் கூறப்பட்டன.

நல்ல வசனத்து வாக்கு மனாதிகள்
மெல்லவிளை யாடும் விமலன் அகத்திலே
அல்ல செவிசத்த மாதி மனத்தையும்
மெல்லத் தரித்தார் மிகுத்தார் பசித்தே. ***#2100***

நல்ல சொற்களையே பேசுகின்ற வாக்கிலும், நல்ல நினைவுகளையே நினைக்கின்ற மனம் முதலிய அகக்கருவிகளிலும் இறைவன் மெல்ல மெல்ல வெளிப்பட்டு விளையாடுவான். நல்லன அல்லாத சொற்களையே கேட்க விரும்புகின்ற செவியையும், அவ்வாறே, அறியத் தகாத தம் தம் புலன்களையே அறிய விரும்புகின்ற கண் முதலிய ஏனைப் பொறிகளையும், நல்லன அல்லாதவற்றையே நினைக்கின்ற உட்கருவிகளையும் உடைய மக்கள் இவ்வுலகில் வறுமையால் பசி மிக்கவராய் வருந்துவர்.

விளக்கவுரை

'அவர்மறுமையில் நற்பிறப்பையும், பிறப்பற்ற வீட்டையும் அடைதல் எங்ஙனம்' என்பது குறிப்பெச்சம். 'உடம்புகளை அருவருத்து நீக்கத் தக்கனவாக உணர்பவரே நல்ல வாக்கு. மனங்களையும், அங்ஙனம் உணராவதவர் தீயனவாகிய வாக்கு மனங்களையும் உடையவராய், அதுவதற்குத் தக்கபயனை அடைவார்கள் என்றபடி. ஆகவே, 'வாக்கு மனங்கள் நல்லன வாகும்படி செய்து' அதனால், உடம்புகளின் நீங்கப் பெறுதலே செயற் பாற்று' என்பதாம்.

*10.2.*உடல் விடல்

பண்ணாரும் காமம், பயிலும் வசனமும்,
விண்ணாம் பிராணன், விளங்கிய சத்தமும்,
புண்ணாம் உடலில் பொருந்து மனத்தையும்
அண்ணாந்து பார்க்க அழியும் உடம்பே. *#2101*

நன்கு அமைந்த உடலால் எழுகின்ற காமமும், பலவகையாகப் பேசுகின்ற பேச்சுக்களும், வெளிச்செல்லும் பொழுது விளங்கி நிற்கின்ற மூச்சும், அம்மூச்சுப் பெரிதாயவழி எழுகின்ற ஓசையும், புலால் வடிவாகிய உடம்பின் உள்ளே இருப்பதாகிய மனமும் ஆகிய இவைகளையெல்லாம் பிறர், 'எங்கே போயின' என்று திகைத்து அண்ணாந்து பார்க்கும்படி உடல் முதலில் நிலையழிந்து, பின்னர் உருவும் அழிந்தொழியும்.

விளக்கவுரை

ஆகவே, 'இதனை நிலையுடையதாக எண்ணிப் பற்றுச் செய்தல் நன்றன்று' என்பதாம். முதல் தந்திரத்தில் 'யாக்கை நிலை யாமை' கூறியது அறத்தை வலியுறுத்தல் பற்றி. எனினும் ஞானத்தை உணர்த்தும் இவ்விடத்திலும் அதனையுணர்தல் இன்றி யமையாமை பற்றி, வேறொரு கருத்துப் பற்றிக் கூறுகின்றார். 'பண்' என்னும் முதல் நிலை, பண்ணி அமைக்கப்பட்ட நல்ல நிலையை ஆகு பெயரால் உணர்த்தும். முறைப்படி அமைந்த இசை 'பண்' எனப்படுவதும் அவ் வாற்றாலேயாம். 'அந்நிலையில்தான் காமம் உளதாகும்' என்றற்கு, 'பண் ஆரும் காமம்' என்றார். 'மனத்தையும்' என்றதனோடு இயைய, ஏனை உம்மைகட்கு முன்பும் இரண்டன் உருபு விரிக்க. 'அண்ணாந்து பார்த்தல்' என்பது, எங்கும் காணாது திகைத்து நிற்றலைக் குறிக்கும் குறிப்பு. பார்க்க - பார்க்கும்படி.

இதனால், 'காமம் முதலிய சிறிய இன்பம் காரணமாக உடம்பை விரும்புதல் சிறப்புடையதாகாது' என்பது கூறப்பட்டது.

அழிகின்ற ஓர்உடம் பாகும் செவி,கண்,
கழிகின்ற கால்,அவ் இரதங்கள், தானம்,
மொழிகின்ற வாக்கு, முடிகின்ற நாடி;
ஒழிகின்ற ஊனுக் குறுதுணை யில்லையே. *#2102*

நிலையின்றி அழிவதாகிய உடம்பை இடமாகக் கொண்டிருப்பனவே செவி, கண் முதலிய அறிவுப் பொறிகளும், வாக்கு முதலிய செயற்பொறிகளும், அவற்றின்வழி வருகின்ற புல இன்பங்களும், அந்தக் கரணங்களுக்கு வலுவூட்டுகின்ற பிராண வாயு வும், ஒன்றையொன்றோடு முடிந்துவைத்துள்ள நாடிகளும், மற்றும் பல

ஆற்றல்களுக்கு உரிய இடங்களும். ஆகவே, உடம்பு அழிந்தால், அவையும் அதனோடே அழிந்தொழிதலால், அழிவதாகிய உடம்பிற்கு அதனை அழியாது நிலைபெறுத்துவதொருதுணை எதுவுமில்லை.

விளக்கவுரை

'உடம்பின்கண் ஆகும்' என ஏழாவது விரிக்க. 'ஆகும்' என்னும் செய்யுமென்னும் முற்றிற்குச் செவி, கண் முதலியபல பெயர்களும் முடிவாயின. செய்யுள் நோக்கி அப்பெயர்கள் முறை பிறழ வைக்கப்பட்டன. கால் - காற்று; பிராண வாயு. இரதம் - சுவை; என்றது இன்பத்தை.

இதனால், 'தூல தேகம் அழிவுடையதாகலின், அதன் இயல்பை மாற்றுமாறில்லை' என்பது கூறப்பட்டது.

இலையாம் இடையில் எழுகின்ற காமம்
உலைவாய நேசத்து மூழ்கும் உளத்துத்
தலையாய மின்னுடல் தாங்கித் திரியும்
சிலையாய சித்தம் சிவமுன் னிடைக்கே. *#2103*

மாதரது நுண்ணிய இடையின்மேல் எழுகின்ற காம உணர்ச்சி மக்கள் உள்ளங்களில் உலையிடத்தில் உள்ள நெருப்புப் போல மிகுகின்ற ஆசையாலே பெருகி மிகும். ஆயினும் அந்த ஆசையால் சிறிதும் கலங்காது கல்போல உறுதியுற்று நிற்கும் உள்ளம் உடையவர்கள், சிவனது திருமுன்பில் காமம், குரோதம் முதலிய குற்றங்களோடு கூடாது மேன்மையுற்று விளங்குகின்ற ஒளி உடம்பைப் பெற்று வாழ்வார்கள்.

விளக்கவுரை

இலையாம் இடை - 'இல்லை' என்றே சொல்லத்தகும் முறையில் அமைந்த இடை. 'இடை' என்றது இடக்கர் அடக்கல். உலை வாய - கொல்லனது உலையின்கண் உள்ளவை; நெருப்பு இடம் பற்றிப் பன்மையாகக் கூறப்பட்டது. 'உலைவாயன போலும் நேசம்' என அஃது உவமத் தொகையாய் வந்தது. 'மூழ்குவிக்கும்' என்பதில் பிற வினை விகுதி தொகுத்தலாயிற்று. அதற்கு 'அவற்றை' என்னும் செயப் படு பொருள் வருவிக்க. 'உளத்து' என்பதனை முதலிற் கூட்டியுரைக்க. 'மின்னுடல்' என்றது, 'ஒளியுடம்பு' என்றபடி. 'திவ்விய சரீரம்' என்பர். சித்தத்தை உடையவரது செயலை, 'சித்தம் திருமுன்னிடக்கே தாங்கித் திரியும்' எனச் சித்தத்தின் செயலாக உபசரித்துக் கூறினார். முன்னிடை - முன்னிடம். குவ்வுருபைக் கண்ணுருபாகத் திரித்துக் கொள்க. சிவலோகத்தையே, 'சிவ முன்னிடை' என்றார். 'சிவ முன்னிலைக்கே' எனப்பாடம் ஓதுதலுமாம்.

இதனால், 'நிலையில்லாத உடம்பினாலே சிவ புண்ணியங்களைச்

செய்து நிலையுடைய வீட்டைப் பெறுதல் தக்கது' என்பது, அவ்வாறு செய்யாதாரது செயலையும், செய்தாரது செயலையும் ஒப்பிட்டுக் கூறுமுகத்தால் உணர்த்தி முடிக்கப்பட்டது.

*10.3.*அவத்தை பேதம்

ஐயைந்து மத்திமை ஆனது சாக்கிரம்
கய்கண்ட பன்னான்கில் கண்டங் கனாஎன்பர்
பொய்கண் டிலாதபுரு டன்னித யஞ்சுழுனை
மெய்கண் டவனுந்தி ஆகும் துரியமே. ***#2104***

மேற்கூறிய அவத்தைகளில் மத்தியாலவத்தை ஐந்தும், கீழாலவத்தைச் சாக்கிரமும் நிகழும் இடம்புருவநடு, அவற்றுள் மத்தியா லவத்தைச் சாக்கிரமும் ஒன்றிலேதான் எல்லாக் கருவிகளும் குறை வின்றிச் செயற்படும். மற்றையவற்றில் சிற்சில கருவிகள் செயற்படாது நிற்கும். அவற்றைப் பிரிந்தும், கூடியும் வரும் கருவிகளாகக் கூறுவர். மத்தியாலவத்தையை விட்டு, ஆன்மாக் கீழாலவத்தையில் சாக்கிரத்தை அடைதற்குக் காரணம் ஆன்ம தத்துவங்களில் சிலவும், தாத்துவிகங் களில் சிலவும் குறைதலேயாகும். அந்நிலையில், கீழாலவத்தைச் சாக்கிரத்தில் செயற்படும் கருவிகள் முப்பத்தைந்து' என்று சொல்லப் படுகின்றது. 'சாக்கிரம் முப்பத்தைந்து நுதலினில்' என்பது சிவஞான சித்தியார்.*3* முப்பத்தைந்தில் தத்துவம் பதினைந்து; தாத்துவிகம் இருபது. ஞானேந்திரியம் ஐந்து, கன் மேந்திரியம் ஐந்து, அந்தக்கரணம் நான்கு, புருடன் ஒன்று. இவை தத்துவங்கள், ஞானேந்திரிய விடயம் ஐந்து, கன் மேந்திரிய விடயம் ஐந்து, பிராணாதி வாயுக்கள் பத்து. இவை தாத்து விகங்கள். 'முப்பத் தைந்து' எனத் தொகை கூறி வரையறுத்தது பிரிந்தும், கூடியும் வரும் நிலைமையுடைய கருவிகளை நோக்கியேயாம். ஆகவே, பிரிவின்றி எஞ்ஞான்றும் கூடியே நிற்கும் கருவிகள் இந்த அவத்தை பேதங்களில் நீங்குவன அல்ல. அவை வித்தியா தத்துவம் ஏழும், சிவ தத்துவம் ஐந்துமாம். 'புருடன்' என்பது ஒரு தத்துவம் அன்று. காலம், நியதி, கலை, வித்தை, அராகம் ஐந்தும் கூடிய நிலையேயாம். இவை ஐந்திற்குக் காரணம் 'மாயை' என்னும் தத்துவம். எனவே, புருடன்' என்றதனால், மேற்கூறியவற்றோடு சிவ தத்துவமும் பெறப்படும். ஆகையால் 'முப்பத்தைந்து' எனச் சுருக்கமாகக் கூறியபோதிலும் 'நாற்பத்தாறு' என்பதே உண்மையாம். எனவே, கீழாலவத்தை தொடங் குங்கால், தொண்ணூற்றாறு கருவிகளில், நீங்குவன ஐம்பதே' என்பது விளங்கும். ஐம்பதில் தத்துவம் பத்தும், தாத்துவிகம் நாற்பதும் ஆகும். தத்துவம் பத்தாவன மாபூதங்கள் ஐந்து; தன்மாத்திரை ஐந்து, தாத்துவிகம் நாற்பதவான. மேற்கூறிய சத்தாதி ஐந்து, வசனாதி ஐந்து,

பிராணாதி பத்து ஆகிய இருபது தவிர மற்றவையாம்.

விளக்கவுரை

இம்மந்திரத்தில், 'மத்திமை' என்றது புருவ நடுவை. 'சாக்கிரம் என்றது, அதிகாரத்தால் கீழாலவத்தைச் சாக்கிரமாயிற்று. 'ஐயைந்து' என்றது, பிராணாதி வாயுக்கள் பத்தினையும் விடுத்து, அஃது, ஒன்று இடைவிட்டு வரும் மந்திரத்தால் விளங்கும். 'ஐயைந்தால் என உருபு விரித்து மத்திமையில் ஐயைந்தால் சாக்கிரம் ஆனது' என இயைத்துக் கொள்க. இனி, இரண்டாம் அடியில், 'மேற்கூறிய ஐயைந்தில் விடயங் களாய் நிற்கும் கருவிகள் பதினான்கினால் கண்டத்தில் சொப்பனம் நிகழும் என்பர்' எனக் கூறினார் 'விடயங்களாய் நிற்கும் கருவிகள்' என்றதனால், 'அவ்விடயங்களை அறிகின்ற கருவிகள் சாக்கிரத் தோடே நின்றுவிடும்' என்பதாயிற்று. அவையாவன ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்துமாம், புருடன் கருவியாகாமை பற்றி அதனை நீக்கி, 'பன்னான்கு' என்றார். ஆகவே, சத்தாதி ஐந்து, வசனாதி ஐந்து, பிராணாதி பத்து, அந்தக் கரணம் நான்கு புருடன் ஒன்று என இருபத்தைந்து கருவிகளால் கண்டத்தானத்தில் சொப்பனம் நிகழும் என்றமை அறிக.
மூன்றாம் அடியில், 'இதயம்' என்பது இரட்டுறமொழிதலாய், முன்னர்ச் சித்தத்திற்குப் பரியாயப் பெயராயும், பின்னர் இருதயத் தானத்தைக் குறிப்பதாயும் இருபொருள் தந்து நின்றது. ஆகவே, 'புருடன், சித்தம்' என்னும் இருகருவிகளாலே இருதயத் தானத்தில் சுழுத்தி நிகழும்' எனக் கூறியது காண்க. சுழுத்தியைச் செய்யுள் நோக்கி, 'சுழுனை' என்றார். முதற்றொட்டே வாயுக்களைக் கூறாமை யால், இங்கும் கூறிற்றிலர் ஆதலின் 'பிராணன்' என்னும் ஒரு வாயு மட்டும் சுழுத்தியில் நிற்கும் என்பது அறிக. அவ்வாயுவைக் கூட்டக் கருவிகள் மூன்றாகும். 'பொய் கண்டிலாத' என்றது, 'விடயங்களை நன்கு உணர்ந்து வருகின்ற' என்றபடி. எனவே ஈற்றடியில் 'மெய்கண் டவன் என்றது அப்புருடனை ஆயிற்று. ஆகவே, அஃது ஒன்றினாலே உந்தித்தானத்தில் துரியம் நிகழும்' என்றதாயிற்று. இங்கும் பிராணன் உண்டு. ஆகவே, சுழுத்தியோடு நீங்கியது சித்தம் ஒன்றுமேயாயிற்று.
துரியத்தைக் கடந்த துரியாதீதத்தில் தத்துவம் பற்றிக் கூறற் பாலது இல்லாமையால் அதனைக் கூறாதொழிந்தார். ஆகவே, புருடன் ஒரு காலத்தும் நீங்குதல் கூடாது ஆகையால், 'அதீதம்' பிராணன் ஒன்றும் நீங்கப் புருடன் மட்டும் இருப்பதாயிற்று. அதற்கு இடம் மூலாதாரம் - என்பதும் கீழாலவத்தை இறுதியில் உந்தியைக் கூறியொழிந்ததனால் விளங்கும். 'மெய்கண்டவனால் உந்தியில் துரியம் ஆகும்' என்க. இதனால், கீழாலவத்தை ஐந்தன் இயல்பும் தொகுத்துக் கூறப்பட்டன.

முப்பதோ டாறின் முதல்நனா ஐந்தாகும்

செப்பதில் நான்காய்த் திகழ்ந்திரண் டொன்றாகி
அப்பதி யாகும் நியதி முதலாகச்
செப்பும் சிவம்ஈறாய்த் தேர்ந்துகொள் வீரே. *#2105*

முப்பத்தாறு தத்துவங்களாலும் (எனவே, தாத்து விகம் அறுபதும் உளவாம் ஆதலின் தொண்ணூற்றாறு கருவிகளாலும்) நிரம்பிய அறிவாய்க் கீழாலவத்தைக்கு முன்னே உள்ள மத்தியா லவத்தையில் சாக்கிரம் நிகழும். அதுபொழுது சிவதத்துவம் ஐந்து உள்ளனவாம். அதன் பின் மத்திய சொப்பனம், மத்திய சுழுத்தி, மத்திய துரியம், மத்திய துரியாதீதம் - என்பவை முறையே சிவ தத்துவங்களில் ஒன்று, இரண்டு, மூன்று. நான்கு குறைய நிற்கும் தத்துவங்கள் நான்கு, மூன்று, ஒன்று, ஆகுமாற்றால் நிகழும் நீங்குவன சுத்த வித்தை முதலாகவாம் ஆதலின், இறுதியில் நிற்பது 'சிவம்' என்பதொன்றுமே யாம். தத்துவங்கள் செலுத்துவனவும், கலை முதலிய ஐந்தும் செலுத்தப் படுவனவும் ஆதலின், செலுத்துவன நான்கும் நீங்கிய பொழுது செலுத்தப்படுவனவற்றிலும் நான்கும் நீங்கும். அவை, 'அராகம், வித்தை, கலை, நியதி - என்பன. எனவே, எப்பொழுதும் நீங்காது நிற்பன 'சிவம்' என்னும் தத்துவமும், அதனால், செலுத்தப்படுகின்ற காலமும் ஆம். ஆகவே, மத்திய துரியாதீதத்தில் நிற்பன அவை மட்டுமேயாம். இவற்றை ஆராய்ந்து உணர்ந்து கொள்ளுங்கள்.

விளக்கவுரை

'ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று' எனப்பட்டன சிவ தத்துவங்களின் எண்ணிக்கையே. வித்தியா தத்துவம் ஏழில் புருடன் தனித்தத்துவம் அன்று. மாயை காரணமாய் நிற்பதன்றிச் செயற் படாது. அவையொழிந்த ஐந்துமே செயற்படுவன ஆதலின் சிவ தத்துவம் ஐந்தும் அந்த ஐந்தையே செலுத்தி நிற்கும். செலுத்தும் முறை யாவது, சிவம் - காலம், சத்தி - நியதி. சாதாக்கியம் - கலை. ஈசுரம் - வித்தை. சுத்தவித்தை - அராகம் என்க. செலுத்துவனவற்றில் நீங்குவன சுத்தவித்தை முதலாகவும், அதற்கேற்பச் செலுத்தப்படுவன நீங்குதலும் அராகம் முதலாகவுமாய் நிகழும். தத்தவங்களை எண்ணுங்கால் தோற்ற முறை பற்றி எண்ணுதல் வழக்காதல் பற்றி 'நியதி முதலாக' என்றாராயினும் நீங்கும் முறை அராகம் முதலாகவே என்க. செலுத் துவன செலுத்தப்படுவனவற்றின் இயைபை வேறு கூறுவாரும் உளர். 'இரண்டொன்று' என்றது இரட்டுற மொழிதலாய், முன்னர் உம்மைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகையாய் 'மூன்று' எனவும், பின்னர் உம்மைத் தொகையாய் 'இரண்டும், ஒன்றும்' எனவும் இருபொருள் தந்தது. நியதி முதல் - நியதி முதலிய தத்துவங்கள். 'அவை ஆகும்படி சிவம் ஈறாய் அப்பதி ஆகும்' என்க. பதி - சிவ தத்துவம்.

கீழாலவத்தையில் நிகழும் சொப்பனம் முதலியவற்றை, 'இஃது இத்தன்மையது' என யாவரும் தாமும் உணரவும். பிறர்க்கு உணர்த்தவும் கூடிய முறையில் அவை இனிது விளங்கக் கால நீட்டிப் புடன் அன்றாட அனுபவமாய் நிகழும். மத்தியாலவத்தை அவ்வா றின்றி நன்கு விழித்திருக்கும்பொழுதே மிக விரைவில் நினைப்பும், மறப்புமாய் மாறி மாறி நிகழ்வன ஆதலின் அவற்றை யாவரும் தாமும் இனிதுணர்தல் அரிது; பிறர்க்கும் உணர்த்துதல் அரிது. இதன் வேகத்திற்குக் கறங்கோலையை (கற்றாடி ஓலையை) உவமையாகக் கூறுவர். அதபற்றி அருணந்தி சிவாசாரியரும்,

'அறிதரு முதல வத்தை அடைதரு மிடத்தே ஐந்தும்
செறிதரும்; கரணந் தன்னில் செயல்தொறும் கண்டுகொள்நீ'*

என்னும் அளவே கூறிச் சென்றார். ஆயினும் சிவாக்கிரர் முதலியோர் கைப்பொருளைத் தொலைத்துவிட்டவன் அத்துன்பமிகுதியாலும், மற்றும் புத்திர சோகம் முதலியவற்றாலும், மூர்ச்சை எய்துதலை 'மத்திய துரியாதீதம்' - என வைத்து, அதினின்றும் சிறிது சிறிதாகத் தெளி வடைந்து பழைய நிலையை எய்தும் வரையிலான நிகழ்ச்சிகளை மத்திய துரிய, மத்தி சுழுத்தி, மத்திய சொப்பன, மத்திய சாக்கிரா வத்தைகளாக வகுத்துக் காட்டுவர். ஆயினும், அவையெல்லாம் ஓரளவு தரும் விளக்கங்களேயன்றி, 'அவைதம் மத்தியாலவத்தை' எனக்கொண்டு விடுதல் கூடாது. மத்தியாலவத்தை விழிப்புநிலையில் நாம் பொருள் களை உணர்ந்து நிற்கும்பொழுதே நிகழ்வனவாம். அவற்றுள் நினைப்பு, 'சகலத்தில் சகலம் என்றும், மறப்பு, 'சகலத்தில் கேவலம்' என்றும் சொல்லப்படும். சகலம் 'பகல்' எனவும், கேவலம் 'இரவு' எனவும் உருவகித்து வழங்கப்படும். ஆகவே, நினைப்பும், மறப்பும் இல்லாத சுத்த நிலை 'இராப் பகல் அற்ற இடம்' எனக் கூறப் படுகின்றது.
இதனால், மத்தியாலவத்தைகளின் இயல்பு தொகுத்துக் கூறப்பட்டது.
'அவத்தைகளின் பொது இயல்புகள் முதற்கண் ஒருங்கு வைத்துக் காட்டப்படவேண்டும் என்னும் கருத்தினால் இவை இங்குக் கூறப்பட்டன.

இந்தியம் ஈரைந்தீ ரைந்துதன் மாத்திரை
மந்திர மாய்நின்ற மாருதம் ஈரைந்தும்
அந்தக் கரணம் ஒருநான்கும் ஆன்மாவும்
பந்தவச் சாக்கிரப் பாலது வாகுமே. *#2106*

கேவலம் வருமாறு செய்கின்ற அந்தச் சாக்கிரா வத்தையானது ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, அவற்றின் விடயங்கள் பத்து, வாயுக்கள் பத்து, அந்தக்கரணம் நான்கு, புருடன் ஒன்று - என்னும் முப்பத்தைந்து கருவிகளால் நிகழும்.

விளக்கவுரை

ஞானேந்திரிய விடயங்கள் முன்பு தன் மாத்திரை நிலையில் இருந்தமை பற்றி அவற்றை, 'தன்மாத்திரை' என்கின்றவர், அவற்றோடொத்த கன்மேந்திரிய விடயங்களையும் ஒருங்கு கூட்டி, 'தன்மாத்திரை' எனச் சுருங்கக் கூறினார். வாயுக்களில் பிராணனும், உதானனும் சொல்லொலியாயும் தோன்றுதல் பற்றி ஏனை வாயுக் களையும் 'மந்திரமாகும்' என்றார். 'பந்தம்' என்றது கேவல நிலையை. 'சக்கரப்பாலது' என்பது, யாதும் அறியாதவர் தாம் அறிந்தவாறே திரித்துக்கொண்ட பாடமாகும். பால் - பகுதி அது, பகுதிப் பொருள் விகுதி. 'ஆன்மாவும்' என்பதன் ஈற்றில், 'ஆகிய முப்பத்தைந்தும்' என்னும் தொகைச் சொல் விரித்து, 'முப்பத்தைந்தாலும் சாக்கிரப் பால் ஆகும்' எனமுடிக்க' 'சாக்கிரமாவது இங்கு எடுத்துக்கொண்ட கீழாலவத்தைச் சாக்கிரம்' என்பது விளங்குதற்பொருட்டு, 'பந்த அச்சாக்கிரம், என்றார். இதனால், முதற்கண், 'மத்திமை யானது சாக்கிரம்' எனக் கூறி யதன்கண் செயற்படும் கருவிகளாவன இவை - என்பது கூறப்பட்டது.

பாரது பொன்மைப் பசுமை யுடையது
நீரது வெண்மை செம்மை நெருப்பது
காரது மாருதம் கறுப்பை யுடையது
வானகம் தூமம் மறைந்துநின் றார்களே. ***#2107***

(அவத்தைக்குக் காரணமான கருவிகளுள் மிக எளிதில் விளங்குவனவாகிய ஐம்பெரும் பூதங்களில்) நிலம் பசும் பொன்னிறத்தையும், நீர் வெண்மை நிறத்தையும், நெருப்புச் சிவப்பு நிறத்தையும், காற்றுக் கருப்பு நிறத்தையும், வானம் புகை நிறத்தையும் உடையன. இவற்றின் அதிதேவர்கள் இவைபோலப் புலனாகாது மறைந்து நிற்பார்கள்.

விளக்கவுரை

'அதிதேவர்கள்' என்பது ஆற்றலால்கொள்ளக் கிடந்தது. தத்துவங்களினின்றும் விடுபடுதற்கு அவற்றை வழிபடுதலும் ஒரு முறையாகும். அதன்பொருட்டு அவற்றிற்கு வடிவம் நிறம் முதலியன ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன. அவ்வழிபாட்டிற்குப் பயன் தருபவர்கள் அவற்றின் அதிதேவர்களேயாதல்பற்றி அவர்களை இங்கு உடன் கூட்டி, 'மறைந்து நின்றார்களே' என்றார். அதனானே, 'இது வழிபாட்டு முறை' என்பது பெறப்படும். சித்தாந்த சாத்திரங்களில் நிறங்களோடு வடிவம் முதலியன கூறப்படுதல் காண்க. பசுமைப் பொன்மை' என மொழி மாற்றியுரைக்க. மூன்றாம் அடியில் தளை மயங்கி வந்தது. காரது மாருதம் - மேகங்களோடு சேர்ந்து வீசும் காற்று. ஈற்றடி உயிரெதுகை

பெற்றது.
இதனால் கருவிகளுள் சிலவற்றிற்குக் கூறற்பாலன
சிலகூறப்பட்டுள்ளன.

பூதங்கள் ஐந்தும் பொறியவை ஐயைந்தும்
ஏதம் படச்செய் திருந்த புறநிலை
ஓது மலம்குண மாகும்ஆ தாரமோ*(டு)*
ஆதி யவத்தைக் கருவிதொண் ணூற்றாறே. *#2108*

தத்துவம் முப்பத்தாறனுள் பூதம் ஐந்து, ஞானேந் திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து ஆகப்பதினைந்தும் புறக்குற்றங் களில் மூழ்கச் செய்கின்ற புறக்கருவிகளாம். ஆறு ஆதாரங்களும், ஒரு வகை மாயையாகச் சொல்லப்படுகின்ற பிரகிருதிகுணங்களும் அவத் தைக்கு ஏதுவாகும். அந்நிலையில் ஐந்தவத்தைகளுள் முதலாவதாகிய சாக்கிராவத்தையில் தொண்ணூற்றாறு கருவிகளும் தொழிற்படுவன வாம்.

விளக்கவுரை

எனவே, இது மத்தியசாக்கிராவத்தையாம் ஆறா தாரங்கள், முக்குணங்கள் இவையும் சில இடங்களில் தாத்துவிகமாகச் சொல்லப்படுகின்றன. 'மலம்' என்றது மாயா மலத்தை, 'கருவி தொண்ணூற்றாறு என்றது, எல்லாக் கருவிகளும் 'குறைவின்றிச் செயற்படும்' என்றபடி.
இதனால், மத்தியாலவத்தையின் இயல்பு கூறப்பட்டது.

இடவகை சொல்லில் இருபத்தஞ் சானை
படுபர சேனைகள் பாய்பரி ஐந்தும்
உடையவன் மத்திமை உள்ளூறு நால்வர்
அடைய நெடுங்கடை ஐந்தொடு நான்கே. *#2109*

மேற்கூறிய மத்தியலாவத்தையின் இயல்பைக் கூறுமிடத்து உயிரினது செயற்பாடு, அனைத்துச் சுற்றங்களும் சூழ அரசன் உலாவருதல் போன்றதாகும். யானை இருபத்தைந்து, *(*இவை ஆன்மதத்துவங்கள்*)* குதிரை ஐந்து, *(*இவை காமம், வெகுளி, உலோபம், யோகம், மதம், என்னும் உணர்ச்சிகள்*)* அமைச்சர் நால்வர். *(*இவை நால்வகை வாக்குக்கள்*)* புறஞ் சூழ்ந்து வரும் சேனைகள் காலாட்படைகள் *(*இவை வித்தியா தத்துவங்களும், சிவ தத்துவங்களும்*)* சென்று சென்று நிற்கும் வாயில்கள் ஒன்பது. *(*இவை நவத் துவாரங்கள்*)* இங்ஙனமாக அறிக.

விளக்கவுரை

சொல்லாது விடுத்த தாத்துவிகங்களையும் உபலக் கணத்தால் ஏவலர் முதலியவராகக் கொள்ளல் வேண்டும். ஞானா மிர்தத்திலும்*l* கருவிகள்

அரசச் சுற்றங்களாக உருவகித் திருத்தல் அறியத்தக்கது. இடம், அதன்கண் செயற்படும் கருவியைக் குறித்த ஆகுபெயர். படுதல் - பொருந்துதல். பரசேனை - வேறு நின்று சூழும் சேனை. 'மத்திமை' என்பதின்பின் 'ஆக' என்பது வருவித்து அதனை எண்களுடன் முடிக்க. இதனால், மேற்கூறிய மத்தியாலவத்தையின் இயல்பு இனிது விளங்குதற் பொருட்டு உருவகமாக்கிக் கூறப்பட்டது.

உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்
உடம்போ டுயிரிடை நட்பறி யாதார்
மடம்புகு நாய்போல் மயங்குகின் றாரே. *#2110*

அதிசூக்கும சரீரம் முதலில் சூக்கும சரீரத்தைப் பற்றிப் பின்பு அவ்விரண்டும் கூடித் தூல சரீரத்தைப் பற்றுதலினால் உயிர் அம்மூன்று சரீரத்தோடும் பொருந்தித் தனது செயலைச் செய்துவரும் நிலையைப் பலர் அறியாது, 'உடம்புதான் உயிர்' எனமயங்குகின்றனர். உடம்போடு உயிருக்குள்ள தொடர்பு, வினை காரணமாகச் சிறிது கால அளவினதே என அறியாதவர்கள் தூய திருமடங்களின் உள்ளே எவ்வாறோ புகுந்துவிட்ட நாய் 'இந்த இடம் நமக்கு நிலையாது' என்பதை உணராமல், நிலைத்த ஒன்றுபோல நினைத்து, அங்கு அமைக்கப்பட்டுள்ள உணவைத் தனக்கே உரியன வாக எண்ணிக் களிப்பதுபோலக் களித்திருக்கின்றார்கள்.

விளக்கவுரை

'இஃது அவர் அறியாமை இருந்தவாறு' என்பது குறிப் பெச்சம். 'தழுவி' என்னும் செய்தென் எச்சம் காரணப் பொருளில் வந்தது. இரண்டாம் அடியில் 'அவ்வுடம்பிடை' எனச்சுட்டு வருவிக்க. 'சாக்கிரம் முதலிய அவத்தைகளின் இயல்பை அறிவார்க்கு, உயிர் உடம்பின் வேறாதல் தெற்றென விளங்கும்' எனற்கு இம்மந்திரத்தை இங்கு அருளிச்செய்தார். 'கனவில் தூல உடம்பு செயலற்றுக் கிடை யாய்க் கிடக்கவும் உயிர் சூக்கும உடம்போடு கூடிச் செயற்படுதல் அனு பவம் ஆதலின், அவ்வாறே உயிர் ஏனை உடம்புகளின் வேறானது என்பது ஏனையவத்தைகளையும் உணரின் விளங்கும்' - என்பதாம். சிவஞான போதம் மூன்றாம் சூத்திரத்திலும் அவத்தைகளின் இயல்பு பற்றியே உயிர் உடம்பின் வேறாய் உண்மை நாட்டப் பட்டது. 'நின்ற உயிர்' என்றாரேனும் 'உயிர் நின்றமை' என்றலே கருத்து.

'குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு'

என்னும் குறளில் *8* 'நட்பு' என்றது நட்பு இன்மையைக் குறித்து நின்ற குறிப்பு மொழி என்பது அதன்கண் கூறப்பட்ட உவமையால் விளங்கும்.

அஃதே இங்கும் கூறப்பட்டது. மடத்திற்கும், நாய்க்கும் இயைபில்லையாயினும், ஏதோவொருவழியால் நாய் மடத்தினுள் புகுந்து விட்டதாயினும் அஃது அங்கு நிலையாது நீங்குதல்போல, சடமாகிய உடம்புகட்கும், சித்தாகிய உயிருக்கும் இயைபில்லை யாயினும், வினைகாரணமாக உயிர் உடம்போடு இயைந்து நின்றது ஆகலின், அவ்வியைபு நிலையாது நீங்குதல் இயல்பென்றவாறு. இங்ஙனம் உவமையை விரித்துரைத்துக்கொள்க.
இதனால், 'மேற்கூறிய உடலின் பஞ்ச பேதத்திற்கு அனுபவம் அவத்தை பேதங்கள்' என்பது கூறப்பட்டது.

இருக்கின்ற வாறொன் றறிகிலர் ஏழைகள்
முருக்கும் அசபையை மாற்றி முகந்து
கருக்கொண்டு காமாரி சார முகந்தேர்ந்
துருக்கொண்டு தொக்க உடல்அழி யாதே. *#2111*

அறிவில்லாதவர்கள், 'உலகத்தில் நாம் எவ் வாற்றால் உயிர் வாழ்கின்றோம்' என்பதைச் சிறிதும் உணர மாட்டார்கள். (உள்வாங்கியும், வெளிப்போக்கியும் பிராண வாயுவை ஓய்வின்றி இயக்குதலால்தான் அவர்கள் வாழ்கின்றனர். ஆகையால் அதனையறிந்து) பிறவியை அறுக்கின்ற அசபா மந்திரத்தால் பிராண வாயுவை மேற்சொல்லியவாறு இயக்கிப் பயின்று தூயராய்ப் பின் அவ்வாயுவை உள்ளே நிறுத்தி' அம்மந்திரத்தை, 'சிவன் நான்' எனப் பொருள்படும் வகையில் மாற்றி நினைந்து அவ்வாற்றால், காமனை அழித்தோனாகிய சிவன் தம்மிடத்தில் பதிந்து பின் நீங்காது விளங்கும் படி செய்தலாகிய இம்முறையை உணர்ந்து, அதனால் அவன் அருளே தமது உடம்பாகச் செய்து கொள்வார்க்கு, அங்ஙனம் அமைந்த உடம்பு அழிந்தொழியாது; நிலைத்திருக்கும்.

விளக்கவுரை

'சிவன் நான்' எனப்பொருள்படும் மந்திரம், 'சிவோகம்' என்பது. அம்ச மந்திரத்தை, 'சோகம்' என மாற்றிய வழியும் அதன் உண்மைப் பொருள் 'சிவோகம்' என்பதேயாதல் பற்றி, 'அசபையை மாற்றி' என்றார். முகத்தல் - பிராணவாயுவைக் கும்பித்தல். இங்குக் கூறியவற்றையெல்லாம் கல்வி கேள்விகளால் அறிந்திருந்தும் அவ்வாறு செய்யாதாரை நோக்கியே, 'ஏழைகள்' என்றும், 'அறிகிலர்' என்றும் கூறினார். 'அறிவினான் ஆகுவ துண்டோ'*l* எனத் திருவள்ளுவர் கூறியதனை இங்கு ஒப்பு நோக்குக. 'ஒன்றும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று.
இதனால் யாக்கை நிலையாதாயினும் அதனை நீட்டிக்கும் வழியை அறிந்தோர் அது செய்யாதிருத்தலின் குற்றம் கூறப்பட்டது.

ஒளித்திட் டிருக்கும் ஒருபதி னாறை

அளித்தனன் என்னுள்ளே ஆரியன் வந்து
அளிக்குங் கலைகளி னால்அறு பத்துள்
ஒளித்திட்டு வைத்தான் ஒடுங்கிய சித்தே. *#2112*

அறிவுப் பொருளேயாயினும் ஆணவ மறைப் பால் அவ்வறிவை இழந்து நின்ற உயிரை இறைவன் கருவிக் கூட்டத்துள் மறைந்து நிற்கும்படி செய்தான். (பின்பு அவ்வுயிர் பக்குவம் எய்திய காலத்தில்) குருவாகி வந்து எனக்கு உபதேசித்த நூல்கள் வழியாக என் உடம்பினுள்ளே மறைந்திருந்த பிராசாத கலைகள் பதினாறையும் விளக்கினான்.

விளக்கவுரை

'அதனால் நான் கருவிக் கூட்டத்தினின்றும் வெளி யேறினேன்' என்பது குறிப்பெச்சம்.

'ஆரியன் ஒடுங்கிய சித்தினை அறுபத்துள் ஒளித்திட்டு வைத்தான். (பின்பு அவனே) வந்து அளிக்கும் கலைகளினால் என்னுள்ளே ஒளித்திட்டிருக்கும் ஒரு பதினாறை அளித்தனன்' என இயைத்துக்கொள்க.

'ஆரியன்' என்பது இரட்டுற மொழிதலாய் முன்பு 'பெரி யோன்' எனவும், பின்பு, 'ஆசிரியன்' எனவும் இருபொருள் தந்தது. இரண்டாவது பொருட்கு 'ஆகி என ஆக்கச் சொல் விரித்துரைக்க.

'ஒரு பதினாலை' - என்பது பாடம் அன்று. ஒரு பதினாறு - பிராசாத கலைகள் பதினாறு. அவற்றை உபதேசமுறையான் அன்றி அறிதல் கூடாமையின், 'என்னுள்ளே ஒளித்திட்டிருக்கும் ஒரு பதினாறு' என்றும், அவற்றை அறிந்து அவ்யோகத்தை (பிராசாத யோகத்தை)ச் செய்யவே உடற்கூறுகள் அனைத்தும் இனிது விளங்கி, உயிரினது நிலையும் புலப்படுதல் பற்றி, 'ஆரியன் வந்து அளித்தனன்' - என அப்பேற்றினது சிறப்பையும் கூறினார்.

இதனால், யோகிகட்கு அவத்தை பேதங்கள் யாவும் இனிது விளங்குதல் கூறப்பட்டது.

மண்ணினில் ஒன்றும் மலர்நீர் மருங்காரும்
பொன்னினில் அங்கி புகழ்வளி ஆகாயம்
மன்னும் மனோபுத்தி ஆங்காரம் ஓரொன்றாய்
உன்னின் முடிந்த தொருபூ தசயமே. *#2113*

மண்ணிலிருந்து தோன்றிய பல மலர்களை உடைத் தாய் விளங்குகின்ற நீர், பொன்னிறத்தை உடைத்தாகிய தீயினின்றும் அதற்குப்பின் தோன்றியதாம். இனி அத்தீக் காற்றி லிருந்தும், காற்று ஆகாயத்திலிருந்தும் தோன்றினவாம். புத்தியினின்றும் தோன்றிய தாகிய அகங்காரத்திலிருந்து தோன்றியது மனம். இவ்வாறு தூல சூக்கும தேகங்களின் உற்பத்தியைப் பகுத்துப் பகுத்து உணர்ந்தால், அவற்றை

ஒடுக்கி, ஆன்மாத் தூய்மை அடைகின்ற நிலை கைகூடும்.

விளக்கவுரை

'நீரில் உள்ள மலர்கள் மண்ணில் தோன்றியன' என்றதனால், 'நீர் மண்ணில் தோன்றவில்லை; மண்ணே நீரில் தோன்றியது' என்பது குறிக்கப்பட்டது. யாப்புக்கு ஏற்பச் சொற் சுருங்கி வருதற்பொருட்டுத் தனித் தனியாகக் கூறாமல், தொடர்ப் படுத்திக் கூறினார். பொன், உவம ஆகுபெயராய்த் தீயைக் குறித்தது. 'மருங்கு' என்றது 'பின் என்னும் காலப்பகுதியைக் குறித்தது. 'மருங்கு' என்றது 'பின் என்னும் காலப் பகுதியைக் குறித்தது. 'வளியின், ஆகா யத்தின்' - என அவ்விடங்களில் தொகுக்கப்பட்ட நீக்கப் பொருளில் வந்த ஐந்தனுருபை விரித்து, 'வளி' - என்பதை இரண்டாம் முறையும் ஓதுக. 'புத்தி ஆங்காரம், என்பது, 'புத்தியினின்றும் தோன்றிய ஆங்காரம்' என ஐந்தாவதன் உருபும் பயனும் உடன் தொக்கதொகை. அதன்பின் இன்னுருபு விரித்து, 'மன்னும்' என்பதனைப் பின்னுங் கூட்டி, 'புத்தி ஆங்காரத்தின் மனம் மன்னும்' என்க. அனைத்தும் நான்கடிகளுள் அடங்கு மாறெல்லாம் கருதி இவ்வாறு அடக்கி ஓதினார்.
பூத சயம் - பூத காரியமாகிய உடம்பை வென்று மீளும் வெற்றி. 'பூத சயம் கூடும்' என்பதில் 'கூடும்' என்பது அவாய் நிலையாய் நின்றது. அகங்காரத்தினின்றும் மனத்திற்குப்பின் தோன்றிய ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் உளவாயினும் அவை ஓராற்றால் பூதங்களின் அடங்குதல் பற்றி ஓதாது விடுத்தார். 'ஒருபூ சயமே' என்பதை 'ஒருபூத தசயமே' - என வகையுளியாக்குக.

முன்னிக் கொருமகன் மூர்த்திக் கிருவர்
வன்னிக்கு மூவர் வதுவைக்கு நால்வர்
கன்னிக்குப் பிள்ளைகள் ஐவர்முன் நாள்இல்லை
கன்னியைக் கன்னியே காதலித் தானே. ***#2114***

ஐவர் சத்திகளில் முன்னவளாகிய மனோன் மணிக்கு மகன் ஒருவன்தான். அவளிடத்தினின்றும் தோன்றிய மகேசுரனுக்கு மக்கள் இருவர். நெருப்புப்போலும் உருவத்தையுடைய உருத்திரனுக்கு மக்கள் மூவர். மணமகள் போல அழகு மிக உடைய திருமகளுக்கு மக்கள் நால்வர். கணவனது இயல்பு நோக்கிக் கன்னி யாகச் சொல்லத்தக்க வாணிக்கு மக்கள் ஐவர். இவையெல்லாம் அநாதியில் யில்லை. ஆயினும் அநாதியாகிய சிவன் அவ்வாறாகிய தனது சத்தியை அநாதியே தாய்மை அடையுமாறு கருதினான்.

விளக்கவுரை

'அதனால் இவைகள் எல்லாம் உளவாயின' என்பது குறிப்பெச்சம்

'உலகம் சிவம் சத்திகளின் விளையாட்டே' என்பது பற்றிச் சிலவற்றைச் சத்தியின் மேலும், சிலவற்றைச் சிவத்தின்மேலும் வைத்துக் கூறினார். மகேசுவரன் அருவனும், அருவுருவனும் ஆகாது உருவன் ஆதலின், 'மூர்த்தி' - என்றார். ஆகாயம் முதலிய பூதங்கள் ஐந்திற்கும் சதாசிவன் முதலிய ஐவர் அதிதேவர் ஆதல் பற்றி, அவற்றில் உள்ள குணங்கள் அவர் ஈன்ற மக்களாக உவமித்து ஓதினார். ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் - என்பன ஆகாயம் முதலியவற்றில் ஒன்று தொடங்கி, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என இத்துணையவாகப் பொருந்தியிருத்தலை அறிந்துகொள்க. ஐம்பூதங்களை வழிபடுதற்கண் அவை அவற்றின் அதிதேவராலே செயற்படுதலை அறிந்து வழிபட்ட வழியே பயன் விளையும் ஆகலின், அவற்றை அவ்வாறறிதற் பொருட்டு இம்மந்திரத்தை ஓதினார். பஞ்ச பூதங்களின் முறைமையே பஞ்ச கலைகட்கும் ஆதலை உணர்க. வது - மணத்திற்கு உரிய பெண். விட்டுணு போகத்தையே தருதல் பற்றி, அவனது சத்தியைக் 'கன்னி' என்றுங் கூறினார். பின்னர் வந்த கன்னி, சத்தி உலகத்தை நோக்குதல் இன்றித் தன்னிலையில் நின்ற நிலைமையைக் குறிப்பால் உணர்த்திற்று. கன்னியின்கண்ணே காதலித்தான்' - என ஏழாவது விரிக்க காதலித்தல், இங்கு உலகத்தைத் தோற்றுவிக்க விரும்பி நின்றது. காதலித்தற்கு வினைமுதல் ஆற்றலால் கொள்ளக் கிடந்தது.
இதனால், மேற்கூறப்பட்ட பூத சயத்திற்கு அறியற்பாலன சில கூறப்பட்டன.

கண்டகன வைந்தும் கலந்தன தாம்ஐந்தும்
உண்டன நான்கும் ஒருங்கே உணர்ந்தபின்
பண்டைய னாகிப் பரந்த வச்சாக்கிரத்
தண்டமுந் தானாய் அமர்ந்துநின் றானே. ***#2115***

சுழுத்திக்குப் பின் கண்ட கனவிலே செயற்பட்ட ஓசை முதலிய புலன்கள் ஐந்தும், பின்னர்ச் சென்று கலந்த பொறிகள் ஐந்தோடும் கூடியிருக்கும் நிலையில் அப்பொறிகளின் வழியாகப் புறப்பொருள்களை அந்தக்கரணங்கள் நான்கும் உணர்வுறும் நிலைமையை ஒருங்கே அடைந்தபின் புருடன் முன்னை நிலையை அடைந்து, விரிந்த பரந்த சிறந்த சாக்கிராவத்தையையுடையனாய், உலகமே தானாயது போன்ற வியாபக நிலையைப் பெற்று, வினைகளை நுகர்தலும் ஈட்டலும் செய்திருப்பான்.

விளக்கவுரை

ஐந்து, ஐந்து, நான்கு என்னும் எண்கள் அவ்வவ்விடம் பற்றி அவ்வக் கருவிகளை உணர்த்தின. சிறப்புப் பற்றி ஞானேந்திரிய விடயங்களையே கூறினாராயினும் இனம் பற்றிக் கன்மேந்திரிய

விடயங்களும் அவற்றிற்குரிய கன்மேந்திரியங்களும், அவற்றிற்கு, வலிமை தருகின்ற வாயுக்கள் பத்தும் கொள்ளப்படும். படவே, 'எடுத்துக் கூறிய பதினைந்துடன் இவ்விருபதுங்கூட, அவத்தைக்கு ஏதுவாம் கருவிகள் முப்பத்தைந்து' என்பதும், 'அவற்றால் நிகழ்வது கேவல சாக்கிரம்' என்பதும் விளங்கும். 'அமர்ந்து நின்றான்' - என்னும் பயனிலைக்குத் தோன்றா எழுவாயாய் நின்றது 'புருடன்' என்பதே யாகலின், அதுவும் எடுத்துக் கூறப்பட்டதாயிற்று. மந்தமாய் நிகழினும் ஐம்புலனையும் உணர்தலிற் குறையாமைபற்றி. 'அண்டமும் தானாய் அமர்ந்து நின்றான்' என்றார்.
இதனால் அவத்தைக்கு ஏதுவாம் கருவிகள் கூறப்பட்டன.

நின்றவன் நிற்கப் பதினாலில் பத்துநீத்(து)
ஒன்றிய அந்தக் கரணங்கள் நான்குடன்
மன்று கலந்த மனைவாழ்க்கை வாதனை
கன்றிய கண்டத்தில் கண்டான் கனவதே. #2116

ஞானேந்திரியமும், கன்மேந்திரியமும், அந்தக் கரணங்களும் ஆகிய பதினான்கு கருவிகளோடு கூடிச் சாக்கிரா வத்தையில் நின்ற புருடன், அவ்வாறு நிற்கும் நிலையிற்றானே இரு வகை இந்திரியங்களாகிய பத்துக் கருவிகளை நீக்கிவிட்டு, எஞ்சிய நான்காகிய அந்தக்கரணங்களோடு மட்டும் அழுத்தமான கண்டத் தானத்தில் சென்று, முன்பு சாக்கிரத்தில் புருவ நடுவில் நின்று நுகர்ந்த உலக நுகர்ச்சிகளின் வாசனையைக் கனவாகக் காண்பான்.

விளக்கவுரை

அவத்தைக்கு ஏதுவாவனவாக மேற்கூறிய கருவிகள் முப்பத்தைந்தனுள் ஞானேந்திரிய விடயம் ஐந்தும், கன்மேந்திரிய விடயம் ஐந்தும், பிராணாதி வாயுக்கள் பத்தும் ஆக இருபதும் தாத்துவிகங்களாதல் பற்றி அவற்றை விடுத்து, தத்துவங்களாகிய பதினைந்து மட்டுமே இங்குக் கூறினார். கண்டத்தில் கனா நிகழும் பொழுது, 'அந்தக்கரணம், புருடன்' என்னும் ஐந்தோடு தாத்துவிகங் களாகிய இருபதும் கூட, இருபத்தைந்து கருவிகள் செயற்படும் என்பது அறிக. இதுவே சொப்பனமாம்.
'மன்று' - என்றது புருவ நடுவை. கன்றுதல் - இறுகப் பற்றுதல். விழிப்பினின்றும் நீங்கிய உயிரை அமைதியாக உறங்க ஒட்டாது கனாவில் பிணித்து வைத்தல் பற்றிக் கண்டத்தானத்தை, 'கன்றிய கண்டம்' - என்றார். 'வாதனையைக் கனவாகக் கண்டான்' என்க. அது, பகுதிப்பொருள் விகுதி. பல நாளும் நிகழ்வதை எதிர்காலத்தாற் கூறாது, ஒரு காலத்தின்மேல் வைத்து, இறந்த காலத்தாற் கூறினார். 'பதினாலிற் பத்து நீத்து' என்றதனானே, கேவல சாக்கிரம் முப்பத் தைந்து கருவிகளால் நிகழ்தல் பெறப்பட்டது.

இதனால், கேவல சாக்கிரம், கேவல சொப்பனம் ஆகிய அவத்தைகளின் இயல்பு கூறப்பட்டது. கேவல ஐந்தவத்தையே கீழாலவத்தையாதல் அறிக.

தானம் இழந்து தனிபுக் கிதயத்து
மானம் அழிந்து மதிகெட்டு மால்ஆகி
ஆன விரிவறி யாஅவ் வியத்தத்தின்
மேனி அழிந்து சுழுத்திய தாமே. *#2117*

மேற்கூறிய கண்டமாகிய தானத்தை *(இடத்தை)* விட்டுப்புருடன் கீழ் இறங்கி, அங்ஙனம் இறங்கும் நிலையில், முன்பு இருந்த அந்தக்கரணங்களுள் மானமாகிய அகங்காரத்தையும், மதியாகிய புத்தியையும் விடுத்து, யாதொன்றையும், பற்றிநினைக்க மாட்டாத நிலையையடைந்து, இருதயத்தில் தனியேசென்று, புலன் உணர்வையிழந்து இழப்பு நிலையில் உயிரினது சொரூபமே காணப் படாது கிடக்கும் நிலையே சுழுத்தியவத்தையாம்.

விளக்கவுரை

அகங்காரத்தையும், புத்தியையுமே இழந்ததாகக் கூறினமையால், சித்தம் விடப்படாதாயிற்று. நினைத்தல் மனத்தால் ஆகலின், 'நினைக்க மாட்டாது' என்றமையால் மனம் நீங்கினமையும் பெறப்பட்டது ஆகவே, பெரும்பான்மை பற்றி, 'தனி புக்கு' - என்றா ராயினும், 'சித்தத்துடன் புக்கு' என்பதே பொருளாயிற்று. புறப் பொருளைப் பற்றுவது மனமேயாகலின், அஃதில்லையாகவே, 'அதனால் பற்றப்படும் ஞானேந்திரிய விடயங்களும், கன்மேந்திரிய விடயங்களும் இலவாம்' என்பது தானே விளங்கிற்று. தாத்துவிகம் ஆதல்பற்றி, வாயுக்களை நாயனார் கூறாதே விடுத்தலால், பிராணாதி வாயுக்களில் பிராணன் தவிர ஏனை ஒன்பது வாயுக்களும் சொப்பனத் தானத்தோடே நின்று விடுதல் உரையிற் கொள்க. இதனால், சொப்பனத் தானத்தில் செயற்படுவனவாகக் கூறப்பட்ட இருபத்தைந்து கருவிகளில் சத்தாதி விடயங்கள் ஐந்து, வசனாதி விடயங்கள் ஐந்து, வாயுக்கள் ஒன்பது, மனம், புத்தி, அகங்காரம் ஆகிய அந்தக் கரணங்கள் மூன்று ஆக இருபத்திரண்டு கருவிகள் சொப்பனத் தானத்திலே நின்று விட, 'சித்தம், பிராணன், புருடன்' என்னும் மூன்று கருவிகளினாலே இருதயத்தில் சுழுத்தி நிகழும் என்க. சித்தம் செயற் படுதலால் 'சுழுத்தியில் ஆன்மாவிற்கு ஆழ்ந்த சிந்தனை உண்டு' என் பதும், ஆயினும் 'புத்தி' இல்லாமையால் விழித்தபின் 'முன்பு என்ன சிந்தித்தோம்' என்பதை ஆன்மா உணர்வதில்லை - என்பதும் உணர்க.
பிராண வாயுவை இயக்குவது அகங்கார தத்துவமே ஆகையால், 'பிராணன் உண்டு' எனவே, 'அதனை இயக்கும் அகங்கார தத்துவம்

உண்டு' என்பது பெறப்பட்டதாயினும், அஃது பிராணனை இயக்குவதைத்தவிர, 'நான்' என முனைப்புற்று எழுச்சி யாகிய தனது காரியத்தைச் செய்யமாட்டாமையால், நீங்கிய கருவி யாகவே எண்ணப்படும்.

இதனால், கேவல சுழுத்தியின் இயல்பு கூறப்பட்டது.

சுழுத்தியில் ஆன்மா அறியும் கருவிகள் இல்லாமையால் அறியாமையிற்பட்டு, முடமாய்க்கிடப்பதையே ஏகான்மவாதிகள், ஆன்மாச் சுழுத்தியின் பிரம்மானந்தத்தில் அழுந்தியிருப்பதாகக் கூறுவர். 'நிர்க்குணமாகிய சுத்தப்பிரமமே அவிச்சை வசத்தால் சகுணமாகிய பந்தத்தை எய்தும் எனக் கூறுகின்ற அவர்கட்கு, 'பிரம்மா னந்தத்தை அடைந்த சீவன் மீட்டும் அதைவிட்டு விடயானந்தத்திற்கு வந்துவிடும்; இந்நிலை அன்றாட நிகழ்ச்சியாகச் சீவனுக்கு மாறி மாறி நிகழும் எனக் கூறுதல் பொருந்தும். 'சிவனை அடைந்து, அவனது இன்பத்தை நுகர்ந்த உயிர், மீட்டும் ஐம்புல இன்பத்தை நோக்கி வருதல் இல்லை. அதனால், சிவன் தன் அடியார்களுக்கு மீண்டு வாரா வழியையே அருள்புரிவான்' எனக் கூறுகின்ற சித்தாந்திகட்கு அது பொருந்தாது - என்பதை விளக்கச் சுழுத்தி நிலையை, 'விரிவு - அறியா அவ்வியத்தம்' என்றார். விரிவு - அறியப்படுவனவாய் விரிந்து கிடக்கும் பொருள்கள். அவ்வியத்தம் - விளங்காமை. 'அவ்வியத்தம்' என்பது காரண இடுகுறியாய் மூலப் பிரகிருதியைக் குறிப்பதாயினும் இங்குக் காரணக்குறியால் ஒன்றும் விளங்காதநிலையைக் குறித்தது. உலக அனுபவத்தை இழந்துவிடுவதே சிவாநுபவத்தை, அல்லது பிரம்மாநுபவத்தைப் பெற்றுவிடுதல் ஆகிவிடாது. 'ஆகும்' எனின், கட் குடியில் மயங்குவோர், விடம் தலைக்கேறுதல் முதலிய காரணங் களால் மூர்ச்சையுற்றோர் முதலிய பலரும் யாதொரு ஞான ஒழுக்கமும் இல்லாமலே சிவாநுபூதியைப் பெற்றவர் ஆகி விடுவர். ஆகவே, 'சுத்தத்தில் அரிதில் நிகழும் சுழுத்தி, துரியம், துரியாதீதம்' என்பன வேறு; கேவலத்தில் எளிதில் அன்றாட நிகழ்ச்சியாய் நிகழும் சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன வேறு எனவும் தெரிந்துணர்ந்துகொள்க. மேனி - சொரூபம். ஆன்மாவின் சொரூபம் அறிவு.

இவ்விடத்தில் கூறப்பட்டுவருவன 'கீழாலவத்தை' எனப்படும் கேவல ஐந்தவத்தைகளேயாம்.

சுழுனையைச் சேர்ந்துள மூன்றுளதன் காட்சி
கெழுமிய சித்தம் பிராணன்தன் காட்சி
ஒழுகக் கமலத்தின் உள்ளே யிருந்து
விழும்அப் பொருளுடன் மேவிநின் றானே. ***#2118***

சுழுத்தியில் உள்ள மூன்று கருவிகளுள் புருடனுக்கு அறிவைத்

தருவதாகிய சித்தம் நீங்கிப்போக, உந்திக் கமலத்தின்கண் பிராணவாயு ஒன்று மட்டுமே அவனுக்கு அறிவைத் தருவதாய் அமைய அங்கு இருந்துகொண்டு, ஆன்ம தத்துவங்கள் யாவும் தன்கண்வந்து ஒடுங்கநிற்பதாகிய மூலப்பிரகிருதியைத் தான் சிறிது அறிதலை அவன் செய்துகொண்டிருப்பான்.

விளக்கவுரை

அதுவே கேவல துரியமாம். சுழுத்தியை, 'சுழுனை' என்றார். காட்சிக்குக் கருவியாவனவற்றை, 'காட்சி' என்றது ஆகு பெயர். 'பிராணன் தன்காட்சியாக' என ஆக்கம் விரித்து, அத்தொடரை ஈற்றடியில் முதலில் கூட்டுக. ஒழுகுதல் - ஒழுகிப்போதல்; நீங்குதல். 'சித்தம் ஒழுக' - என இயைக்க. 'கமலம்' என்பது இடத்திற்கு ஏற்ப உந்திக் கமலத்தைக் குறித்தது விழுதல் - வந்து ஒடுங்குதல்.

இதனால், புருடன், பிராணன்' என்னும் இரு கருவிகளே செயற்பட, ஆன்மா உந்தியில் நிற்றல் கேவல துரியம், அல்லது கீழாலவத்தைத் துரியம் - என்பது கூறப்பட்டது.

தானத் தெழுந்து தருந்துரி யத்தினின்
வானத் தெழுந்துபோய் வையம் பிறகிட்டுக்
கானத் தெழுந்த கருத்தின் தலையிலே
ஊனத்த வித்தைவிட் டூமன்நின் றானே. ***#2119***

உயர் தனக்குச் சிறப்பிடமாகிய இருதயத்தினின் றும் புறப்பட்டவழி அதற்குத் தரப்படும் துரியத்தானத்தில் நின்று பின்பு அதனையும் விட்டு அப்பாற் சென்று, உலகத்தைப் பின் தள்ளிவிட்டு, நாதத்தால் உணர்வு விளங்குமாறு நிற்கின்ற குண்டலினி சத்தியின் தலைபொருந்தியுள்ள மூலாதாரத்தை அடைந்து, அவ்விடத்தில் பொருள்களை மயங்கியறிதலாகிய அந்த அறிவும் இன்றி அறிவே யில்லாதது போலக் கிடக்கும்.

விளக்கவுரை

ஆறு ஆதாரங்களும் உயிர்க்கு இடமாயினும் அவற்றுள் இருதயமே சிறந்ததாதல் பற்றியே 'உயிருக்குத் தானம்' என்றார். 'தானத் தினின்றும்' என ஐந்தாவது விரிக்க. 'எழுந்தவழி' என்பது 'எழுந்து' எனத்திரிந்து நின்றது. வாயுவுக்குமேல் உள்ளது வானம் ஆதலின், 'வானத்தெழுந்து' என்றது, பிராண வாயு நீங்கிய நிலையைக் குறிக்கும் குறிப்பு மொழியாய் நின்றது. பிராணவாயுவின் இயக்கமும் இல்லாது போதலின் உயிர் உலக அனுபவத்தைச் சிறிதும் உடைத் தாகாமையை, 'வையம் பிறகிட்டு' என்றார், கானம் - நாதம், கருத்து - உணர்வு. அஃது அதனைத் தரும் குண்டலி சத்தியை உணர்த் திற்று. 'வித்தை' என்பதும் உணர்வே, 'அது

மயக்க உணர்வு' என்றற்கு 'ஊனத்த வித்தை' என்றார். ஊனம் - குறை. 'ஊனமாய் நின்றான்' என ஆக்கம் விரித்து, ஆக்கம் உவமை குறித்து நின்றதாக உரைக்க. ஊமனுக்கு உணர் விருப்பினும் அதனை வெளிப்படுத்த மாட்டுவான் அல்லன் ஆதலின், அவன் உணர் வுடையனாயினும் அது செயற்படாத நிலையை உடைய உயிருக்கு உவமையாயினான். காரியமாகிய உலகத்தை நுகராமையின் காரண மாகிய மூலப்பிரகிருதியே அவ்விடத்தில் உயிருக்கு நுகர்ச்சியாவதாம். இதனால், 'பிராணவாயுவின் இயக்கமும் இன்றிப் புருடன் மூலாதாரத்தில் மூலப்பிரகிருதியைப் பற்றிக்கொண்டு, வெறும் மூடமாய்க் கிடப்பதே கேவல துரியாதீதம்' என அதனது இயல்பு கூறப்பட்டது.

ஊமை யெழுத்தொடு பேசும் எழுத்துறின்
ஆமை யகத்தினில் அஞ்சும் அடங்கிடும்
ஓம்மயம் உற்றது உள்ளொளி பெற்றது
நாம்மயம் அற்றது நாம்அறி யோமே. *#2120*

*[*நால்வகை வாக்குக்களில் மிகவும் தூலமாகிய வைகரிவாக்குச் சகல ஐந்தவத்தையிலும் தூலமாகிய மத்திமை வாக்கு கேவல ஐந்தவத்தையிலும், சூக்குமமாகிய பைசந்தி வாக்கு யோகா லவத்தையிலும், மிகவும் சூக்குமமாகிய சூக்குமை வாக்கு சுத்த ஐந்த வத்தையிலும் செயற்படும். அதுபற்றித்தான் வாக்குக்கள் அவத்தைக்கு ஏதுவாம் கருவிகளாக எண்ணப்படவில்லை.*]*

மேற்கூறிய நால்வகை ஐந்தவத்தைகளில் மேற்கூறியவாறு நால்வகை வாக்குக்கள் செயற்படுங்கால், சாக்கிரம் முதலிய ஐந்திலும் முறையே, தூலதமம், தூலதரம், தூலம், சூக்குமம், அதிசூக்குமம்' என்னும் நிலையில் செயற்படும் அதிசூக்குமமே 'ஊமையெழுத்து' என்றும் ஏனையவை 'பேசும் எழுத்து' என்றும் மறைபொருட் கூற்றாகக் கூறப்பட்டன. அதிகாரம் கீழாலவத்தையாதலின் இங்குக் கூறப்பட்ட, 'பேசும் எழுத்து, ஊமையெழுத்து' - என்பன கீழாலவத் தையில் செயற்படுவ தாகிய மத்திமை வாக்கின் 'அதிசூக்குமம், சூக்குமம்' என்பவற்றை யாம். தூலதமம், தூலதரத்திலும், தூலதரம் தூலத்திலும், தூலம் சூக்குமத்திலும் ஒடுங்கிவிடப்பின்பு சூக்குமமும் அதிசூக்குமத்தில் ஒடுங்கிவிட்டால் பெத்தநிலையில் உள்ள உயிர் புறப்பொருள்களில் யாதொன்றையும் அறியமாட்டாது உணர்வை முற்றிலுமாக இழந்து, பிரகிருதிமயமாகியே கிடக்கும். இதுவே கீழாலவத்தையில் துரியா தீதத்தின் நிலைமை. இதனையே,

'ஊமை யெழுத்தொடு பேசும் எழுத்துறின்
ஆமை யகத்தினில் அஞ்சும் அடங்கிடும்'

என்றார். 'ஆமை' என்றது உயிரை. இஃது உருவகம். அஞ்சு - ஐம் புலன்கள்மேல் சென்று அவற்றைக் கவர்கின்ற உணர்வு. அவ்வுணர்வு சிறிதும் வெளிச்செல்லாது உயிரோடு உயிராய் ஒட்டிக் கிடத்தல், ஆமையின் ஐந்து உறுப்புக்கள் அதனது ஓட்டிற்குள்ளே அடங்கி வெளித் தோன்றாதிருத்தலோடு ஒத்திருத்தல் பற்றி, உயிர் ஆமையாக உருவகம் செய்யப்பட்டது. சுழுத்தி துரியங்களிலும் அஞ்சும் அடங்கி யிருப்பினும் சித்தமும், பிராணனும் செயற்படுதலால் 'அவற்றின் வாசனை சிறிதாயினும் இருக்கும்' என எண்ண இடம் உண்டு. உயிர்ப்பு அடங்கி விட்டமையால் அதீதத்தில் அவ்வாறு எண்ணச் சிறிதும் இடம் இல்லாமை பற்றி, இவ்விடத்திற்றானே 'அஞ்சும் அடங்கிடும்' எனக் கூறினார். 'தமோமாய்' (இருள்மயமாய்) நிற்கும் அதீத நிலையை சிவத்தில் அழுந்தி ஒளிமயமாய் நிற்கும் நிலையாகக் கூறுபவர் யாதும் அறியாதவர்' என்பதை உணர்த்துதற்குப் பின்னிரண்டடிகளைக் கூறினார். அவற்றுள் 'ஓம்' என்றது அதன் உண்மைப் பொருளாய் நிற்கும் சிவத்தை.

'சுத்த துரியாதீதத்தில் சிவத்தை அடைந்த சிவமயமான உயிர், இருள் முழுவதும் நீங்கி ஒளிமயமானதாகும். அதனால் அது 'நாம்' என்னும் சீவபோதமும் இல்லாததாகும். அந்த நிலையை நாம் அறிந்திலோம் என்பது பின்னிரண்டடிகளின் பொருள்.

விளக்கவுரை

கீழாலவத்தையைக் கூறிவருகின்றார் ஆகலின், அது பற்றித் தம்மை அந்த அவத்தையின் நின்று பேசுபவராக வைத்து, 'நாம் அறியோம்' என்றார். ஆகவே 'கீழாலவத்தையில் நிற்போர் சுத்த வத்தையின் அனுபவத்தை அறியார்' என்பது அதன் உண்மைப் பொருளாயிற்று. இதனால், 'கீழாலவத்தைத் துரியாதீதம் இருள் மயமானது, என்பது உடன்பாட்டு முகத்தாலும், எதிர்மறை முகத்தாலும் கூறப்பட்டது.

துரியம் இறுப்பது சாக்கிரத் துள்ள
நரிகள் பதினாலும் நஞ்சுண்டு செத்தன
பரிய புரவியும் பாறிப் பறந்தது
துரியம் இறந்திடம் சொல்லஒண் ணாதே. ***#2121***

சுழுத்தியைக் கடந்து உள்ள 'துரியம், துரியாதீதம்' - என்னும் இரண்டனுள் துரியம், 'எவ்வாறு இருந்தது' என வினாவு பவர்க்கு, 'இவ்வாறு இருந்தது' என விடையிறுக்கக் கூடியதாகும். துரியா தீதமோ எனில், அவ்வாறு வினாவுவார்க்கு இவ்வாறு இருந்தது' எனச் சொல்லவாராத நிலையாகும். ஏனெனில், சாக்கிராவத்தையில் அடக்கினும் அடங்காது, யாதானும் ஓர் ஆற்றால்தப்பிப் புறத்தே ஓடுதலால், 'நரிகள்' என்று சொல்லத்தக்கனவாகிய ஞானேந்திரியம்,

கன்மேந் திரியம், அந்தக்கரணம் என்னும் பதினான்கு பொறிகளும் (கரணங்களும்) பிரகிருதியின் தமோ குணமாகிய விடத்தை உண்டமையால் இறந்து போய்விட்டன. அப்பொறிகளின் வழிச் செல்லும் உணர்விற்கு ஊர்தியாகிய 'பிராணன்' என்னும் குதிரையும் தனது ஓட்டம் அடங்கி ஒழிந்தது.

விளக்கவுரை

எனவே, நரிகள் பதினான்கு இல்லையென்றாலும் பரி (குதிரை)யின் ஓட்டம் இருந்ததால் துரியநிலை 'இவ்வாறு இருந்தது' எனச் சொல்லத் தக்கதாயிற்று - என்பதாம். 'நான் சுகமாகத் துயின்றேன்' - எனப் பின்பு விழிப்பு நிலையில் கூறுவது, துரிய நிலையில் எய்திய அனுபவத்தையேயாம். அந்த அனுபவமும் அறியப்படாத நிலையே கீழாலவத்தைத் துரியாதீத நிலை என்க. 'இறந்த' என்னும் பெயரெச்சத்து ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.
இதனால், கீழாலவத்தைத் துரியாதீத நிலை உயிர் தன்னையும் மறந்திருக்கும் நிலை' - என்பது கூறப்பட்டது.

மாறா மலம்ஐந்தான் மன்னும் அவத்தையின்
வேறாய மாயா தனுகர ணாதிக்கிங்(கு)
ஈறாகா தேஎவ் வுயிரும் பிறந்திறந்(து)
ஆறாத வல்வினை யால்அடி யுண்ணுமே. #2122

முத்தி பெறுங்காறும் விட்டு நீங்காதிருக்கின்ற ஐந்து மலங்களால் நிலைபெறுவதாகிய சகலாவத்தையில் தனியொரு சிறப்பினையுடைய மாயேயமாகிய தனு, கரணம் முதலியவற்றிற்கு இந்தச் சகல நிலையில் முடிவேயில்லாமையால், எல்லாவகையான உயிர்களும் ஒரு பிறப்பின் பிறந்து, பின் அதனை விட்டு நீங்கி, வேறொரு பிறப்பை அடைந்து அலமரும். அதற்குக் காரணம் தனது ஆற்றல் குன்றப்பெறாத வினையே.

விளக்கவுரை

எனவே, 'அவத்தை பேதங்கள் பெரும்பான்மை யாகச் சகலாவத்தையிலே நிகழ்வன' என்பதும், 'அவற்றிற்குக் காரணம் வினையே' என்பதும் கூறியவாறாம். ஆகவே, 'கேவல ஐந்தவத்தை என்பன' - சகலத்திற் கேவல அவத்தைகள் என்றும் சகல ஐந்தவத் தைகள் - என்பன, - 'சகலத்திற் சகல ஐந்தவத்தைகள்' என்றும், 'சுத்த ஐந்தவத்தைகள் - என்பன, - சகலத்தில் சுத்த ஐந்தவத்தைகள்' என்றும் உணரற்பாலன - என்றதாயிற்று. சகலத்திற் சகலம் 'மகாசகலம்' - எனப்படும் இவற்றைக் கூட்டிக்கணக்கிடின் மூவைந்து பதினைந்தாதல் அறிக. இனி, 'யோகாலவத்தைகள் - என்பனவும் சகலத்தில் நிகழ் வனவேயாதலின் அவற்றைக்கூட்ட, சகலத்தில் நிகழும் அவத்தைகள்

இருபதாம், அவை நிற்க. தனியே கேவலத்தில் ஐந்தும், தனியே சுத்தத்தில் ஐந்தும் கூட்ட அவத்தைகள் முப்பதாம். 'இவற்றுள் சகலத்தில் நிகழும் அவத்தைகளே பெரும்பாலன' - என்றது உணர்த் துதற்கே' 'மாறா மலம் ஐந்தின் மன்னும் அவத்தையின்' என்றார். கேவலத்தில் மன்னும் மலம் ஆணவம் ஒன்றே சுத்தத்தில் யாதொரு மலமும் இல்லை. ஆகவே, 'மலம் ஐந்தால் மன்னும் அவத்தை' என்றது சகலாவத்தையாயிற்று. 'கேவலம், சகலம், சுத்தம்' எனக் காரண அவத்தைகள் மூன்று. அவை ஒவ்வொன்றிலும் நிகழும் சாக்கிரம் முதலிய ஐந்தும்காரிய அவத்தைகள். ஈறாகாது' என்னும் எதிர்மறை வினையெச்சம் காரணப் பொருட்டாய் நின்றது.
இதனால், இயைபுபற்றி, 'அவத்தை' என்பன பலவும் குறிப்பால் தொகுத்துணர்த்தப்பட்டன.

உண்ணுந்தன் னூடாடா(து) ஊட்டிடும் மாயையும்
அண்ணல் அருள்பெறல் முத்திய தாவது
நண்ணல் இலாஉயிர் ஞானத்தி னால்பிறந்(து)
எண்ணுறு ஞானத்தின் ஏர்முத்தி யெய்துமே. *#2123*

இன்ப துன்பங்களை வினைக்கு ஏற்றவாறு விளைவித்து நிற்கின்ற மாயேயமாகிய உலகம், அந்த இன்பத் துன்பங்கள் தன்கண் வாதியாதபடி புளியம் பழத்தின் ஓடுபோல ஒட்டற்றுக் கழிய, இறைவனது திருவருளில் தோய்ந்து நிற்றலே முத்தியாகும். (என்றது, சீவன் முத்தி நிலையை, அதுவே சகலத்தில் சுத்தம் - என்க. இந்நிலைமுற்றாகக் கைகூடுதற்கு முன் பிராரத்த மாயினும் நீங்கிவிடுமாயின் அந்த உயிர் மற்றொரு பிறப்பை அடையும்) அத்தகைய உயிர் மற்றொரு பிறப்பை அடையுமாயினும் முன்னை ஞானத்தோடே பிறந்து, அது வழியாக அப்பிறப்பில் அது சீவன் முத்திநிலை முற்றாகக் கைகூடப் பெற்றுப்பின் முடிநிலையாகிய பரமுத்தியை அடையும்.

விளக்கவுரை

'ஊட்டிடும் மாயை' என்றதனால் அவை மாயேய மாயின. எனவே, 'மாயேயத்தின் ஒட்டற்று நிற்கும் நிலையும், அதுவும் இன்றி நீங்கி வைந்தவத்தோடு நிற்கும் நிலையுமே சுத்தாவத்தை' என்பதும் கூறியவாகும்.
ஏர்முத்தி - எழுச்சியையுடைய முத்தி முடிநிலை முத்தி. 'ஊட்டிடும் மாயையும் உண்ணும் தன் ஊடாடாது அண்ணல் அருள் பெறல் முத்தியதாவது; அவனை நண்ணல் இலா உயிர்' என உரைக்க.
ஞானத்தினால் - ஞானத்தினோடு.

அதிமூட நித்திரை ஆணவம் நந்த

அதனால் உணர்வோன் அருங்கன்மம் முன்னி
இதமான கேவலம் இத்திறம் சென்று
பரமாக ஐயவத் தைப்படு வானே. ***#2124***

அறிவு சிறிதேனும் தொழிற்படாத, 'ஒரு பேருறக்கம்' எனச்சொல்லத்தக்கது, ஆன்மா ஆணவத்தோடு மட்டும் இருக்கின்ற நிலை (அஃது 'அநாதி கேவலம்' எனப்படும்). பின்பு அந்த ஆணவ மலத்தின் சத்தி மாயையினால் சிறிதே கெட, அந்த மாயை விளக்கும் அளவிற்கு அறிவு விளங்கப் பெற்ற உயிர், நீக்குதற்கரிய வினைக்கு ஈடான உணர்வையே உடையதாம் நிலையில் இன்பம் போல நிகழ்கின்ற அறியாமையில் செல்வதே சகலத்தில் கேவலம். இந்தக் கேவலத்தில்தான் ஆன்மாக் கீழாலவத்தை ஐந்தினையும் அடையும்.

விளக்கவுரை

ஆணவத்தின் சத்தி கெடுவது மாயையால் ஆதலின் அஃது ஆற்றலால் கொள்ளக் கிடந்தது. 'கன்மத்தால் முன்னி' என உருபு விரிக்க. 'கேவலம்' - என்பது 'அறியாமை' என்னும் பொருட்டாய் நின்றது. 'கேவலத்து' என்னும் அத்துச் சாரியை தொகுத்தலாயிற்று. பரம் - மேன்மை 'பரம் ஆக' - என்றது 'வேறு (கீழ்) ஆகின்ற' என்னும் பொருளைத் தந்தது. ஈற்றடி உயிரெதுகையாயிற்று.

இதனால், கீழால் அவத்தை' - எனப்படுவன சகலத்தில் நிகழும் கேவல ஐந்தவத்தைகளாம் - என்பது கூறப்பட்டது.

ஆசான்முன் னேதுயில் மாண வகரைத்
தேசாய தண்டால் எழுப்பும் செயல்போல்
நேசாய ஈசனும் நீடா ணவத்தரை
ஏசாத மாயாள்தன் னாலே எழுப்புமே. ***#2125***

அநாதியே பற்றி, இறுதியற்றிருக்கும் ஆணவ மலத்தால் அறிவிழந்து கிடக்கும் உயிர்களைக் கருணையே உருவாய் உள்ள இறைவன் எவ்வாறு அறிவை மறைத்தல் இன்றி, அதனை விளங்கச் செய்வதாகிய மாயையாகிய பணிப்பெண்ணை விட்டு ஆணவ உறக்கத்தினின்று தட்டி எழுப்பும்படி செய்வான். இது நல்லாசிரியன் ஒருவன் முன்னைநிலையில் சோம்பலால் உறங்கி விடுகின்ற சில மாணவர்களை அவ்வாசிரியன் மாணவர்களது அறிவை வளர்க்கத் தனது கையில் கொண்டுள்ள பிரம்பால் தட்டியெழுப்புதல் போல்வது.

விளக்கவுரை

'ஆசான்எழுப்பும்' என இயைக்க. 'தன்முன்னே துயில் மாணவகரை' என்க. உவமையில் சொல்லளவில் திணை மயங்கின எனினும், பொருளில் மயக்கம் இன்று. நேசம்' என்பது கடைக் குறைந்து நின்றது

'ஆணவத்தரை மாயையால் எழுப்பும்' என்றதனால், 'ஆணவம் சோம்பல்போல உறக்கத்தை விளைவிக்கும்' என்பதும், 'மாயை ஆசான் கைப்பிரம்புபோல உறக்கத்தினின்றும் விழிப்பிக்கும்' என்பதும் பெறப்பட்டன. இன்னும், மாயையை ஆசானது கையில் உள்ள பிரம்போடு உவமித்தமையால், 'அது சிவனுக்கும் பரிக்கிரக சத்தியேயன்றித் தாதான்மிய சத்தியன்று' என்பதும் விளங்கிற்று. இம்மந்திரப் பொருள் உமாபதி தேவரது சதரத்த சங்கிரகத்துள். *l*

'குருர் யதாக்ரதா; சஷ்யாந் ஸுப்தாந் தண்டேந போதயேத் *I* சவோபி
மோஹநீத்ரயாம் ஸுப்தாந் சத்தியா போதயேத் *II*

எனக்கூறப்பட்டது. அதனைத் துறைமங்கலம் சிவப்பிரகாசர் தமது சதமணி மாலையில்,

'குரவன் முன்துயில் கொள்ளும்மா ணாக்கனை
உரிய கோல்கொண் டுணர்த்துவன்; ஈசனும்
துரிய போகத் துயில்கொளு வான்றனை
அரிய சத்தியி னால்அறி விக்குமே' *8#*

என மொழிபெயர்த்தார்.

சதரத்ந சங்கிரகத்தின் மூலத்திலும், அதன் மொழிபெயர்ப்பிலும் 'சத்தி' எனப் பொதுவாகக் கூறப்பட்டதனை இம்மந்திரத்தில் 'மாயாள்' எனச் சிறப்பாக விளக்கினமை அறியத்தக்கது.

இதனால், 'கேவலாவத்தைக்கு காரணம் ஆணவ மலம்' என் பதும், 'சகலாவத்தைக்குக் காரணம் மாயை' என்பதும் கூறப்பட்டன.

'ஏசாத மாயை' என்றது, 'அறிவை மறைத்தலைச் செய்யாது, விளக்கத்தைச் செய்வது' என்னும் குறிப்புடையதேயாகும். அதுபற்றி, 'சுத்தமாயை' எனப் பொருள் கூறுதல், 'பிரளயாகலர், சகலர்' என்னும் இவர்கட்குப் பொருந்தமாட்டாது.

மஞ்சொடு மந்தா கினிகுடம் ஆம்'என
விஞ்சறி வில்லோன் விளம்பும் மிகுமதி
எஞ்சலில் ஒன்றேனும் ஆ*(று)* என இவ்வுடல்
அஞ்சுணும் மன்னன் அன்றேபோம் அறவே. ***#2126***

'காலம், இடம், கருவி, கரணம் ஆகிய இவற்றுள் எந்த ஒன்றினாலும் உட்படுத்தப்பட்டு, ஏகதேசப்படுதலை ஒரு ஞான்றும் எய்தாத பேரறிவாகிய அந்தப் பரப்பிரமந்தான் இந்த உயிர்' என ஏகான்மவாதி கூறும் அக்கூற்று, 'ஒரு குடத்துள் அடங்கியுள்ள நீரைச்சுட்டி, - மேகம் - என்பதும் இதுதான்; - தான் கங்கா நதி - என்பதும் இதுதான் எனக் கூறுகின்ற மிக்க அறிவில்லாதவன் மிக்க அறிவுடையான் போன்று கூறுகின்ற கூற்றோடு ஒப்பதாய்ப் போக, இந்த உடம்பிற்குத் தலைவனாகிய உயிர் இதைவிட்டு நீங்கும் நாள் வருகின்ற வரையில்

சாக்கிரம் முதலிய அஞ்சவத்தைகளை இந்த உடம்பின்கண் எய்தி, ஏகதேசப்பட்டுத் துன்பன் உறும்.

விளக்கவுரை

'எஞ்சலில் ஒன்றெனும் ஆறு' என்பதை முதலில் வைத்து உரைக்க. எஞ்சல் இல் ஒன்று, பரப்பிரமம். ஆறு - முறைமை. 'இவ்வுடற்கண்' என ஏழாவது விரிக்க. குடம், அதன்கண் உள்ள நீரைக்குறித்த ஆகுபெயர். 'மஞ்சு, மத்தாகினி' - என்பனவும் அன்ன.

அவத்தை இயல்பே கூறுகின்றாராயினும், 'இவ்வியல்பானே ஏகான்ம வாதம் பொருந்தாமையும் விளங்கும்' என அதனையும் இனிது விளங்குதற்பொருட்டு இடம் வாய்த்தமையின் கறினார்.

படியுடை மன்னவன் பாய்பரி ஏறி
வடிவுடை மாநகர் தான்வரும் போது
அடியுடை ஐவரும் அங்குறை வோரும்
துடியில்லம் பற்றித் துயின்றனர் தாமே. *#2127*

இம்மந்திரம் ஒட்டணியாய் நின்று பொருளைத் தருகின்றது. படி - நாடு; என்றது புற உலகத்தை. அதனை இறைவன் ஆணையால் தனதாகக் கொண்டு இன்பத்துன்பங்களை எய்திவரும் உயிரையே, 'உடை மன்னவன்' என்றார். வடிவு - பல உள்ளமைப் புக்கள். மாநகர் - கோநகர்; என்றது உடம்பை. வருதல் - உலாவருதல். என்றது, எல்லா இடங்களிலும் வியாபித்து, எல்லாப் புலன்களையும் உணர்ந்தும் அவற்றிற்கு ஏற்ற எல்லாச் செயல்களையும் செய்தும் வரும் சாக்கிராவத்தையை. அடியுடை ஐவர் - அணுக்கமாய் நிற்கும் அமைச்சர்கள். என்றது, ஞானேந்திரியங்கள் ஐந்தையும், அவற்றால் உணரப்படும் பொருள்கள் அந்தக்கரணங்களாலே தெளிவுபடும் ஆதலின், அந்த அந்தக்கரணங்களும் 'ஐவர்' என்றதிலே அடங்கின. அங்கு உறைவோர் - அமைச்சர்களுக்குக் கீழாய் அரசனது உலாவில் பலவகைப் பணிகளையும் செய்துநிற்கும் பல பணியாளர்கள் என்றது பிறகருவிகளை. இம்முறையை, 'கால்கொடுத்து இருகை மூட்டி' என்னும் ஞானாமிர்த அகவலிலும் காண்க. *(அகவல் - 9)* இச்சாக்கிர நிலை, 'படைகொடு பவனிபோதும் பார் மன்னன்' எனச் சித்தியாரிலும் கூறப்பட்டது. *(சுபக். சூ. 4)*

விளக்கவுரை

'மன்னன் உலா வரும்போது அங்கு உறைவோர் துயின்றனர்' என்றதனால், 'துயின்றது, அவன் அந்தப்புரத்தில் சென்றபொழுது' என்பது போந்தது. அந்தப்புரமாவது மூலாதாரம். அந்தப்புரத்தில் அரசன் தன் மனையாளைத் தழுவிக் கிடத்தல், உயிர் மூலப்பிர கிருதியைப் பற்றி

அதனை யொழித்துப் பிறிதொன்றையும் அறியாது கிடத்தல். இது சகலத்தில் கேவல துரியாதீத நிலையாகும். 'சகலத்தில் சகல சாக்கிரம் ஆன்மாவின் அறிவு முற்றாகவும், தீவிரமாகவும் செயற் படும் நிலை எனவும் சகலத்தின் கேவல துரியாதீதம் ஆன்மாவின் அறிவு சிறிதும் செயற்படாது மூடமாய்க் கிடக்கும் நிலை எனவும் உணர்க. முற்றாகவும் தீவிரமாகவும் செயற்படும் நிலைக்கு அரசன் குதிரைமீது ஏறி நகர்வலம் வருவதையும், சிறிதும் செயற்படாது மூடமாய்க் கிடக்கும் நிலைக்கு அரசன் அந்தப்புரத்தில் உறக்கத்தில் ஆழ்ந்து கிடத்தலையும் நூல்களில் உவமையாகக் கூறுதல் மரபாக உள்ளது. இல்லம் - அவரவருக்கு உரிய இடம். 'அவற்றை அடைதற்கு அவர்கள் துடிப்பர்' என்க. 'அரசன் உலாவரும்பொழுது அமைச்சர் முதல் அனைவரும் சுறுசுறுப்பாகச் செயற்படுதல்போலச் சகலத்தில் சகல சாக்கிரத்தில் அனைத்துக் கருவிகளும் நன்கு செயற்படும்' எனவும், 'அரசன் அந்தப்புரத்தில் சென்று உறங்கிவிட்டபொழுது தனி யொரு காவலாளியுங்கூட உறங்கிவிடுதல்போல, உயிருக்குக் காவ லாகிய பிராண வாயுவுங் கூட இயங்காது' எனவும் கொள்க. சாக்கிர நிலைக்கு, அரசன் கொலுமண்டபத்தில் அமர்ந்து அரசியலை ஆழ்ந்து நோக்குதலும் உவமையாகச் சொல்லப்படும். 'சாக்கிரத்திற்கு இடம் புருவ நடு' என்பது முன்பே சொல்லப்பட்டது. அதனால் அவ்விடம் அரசனது கொலுமண்டப மாகவும் கூறப்படும்.

இதனால், சகலத்தில் விளக்க நிலைகளில் உச்சகட்டமானதும், மூடநிலைகளிலும் உச்சகட்டமானதும் சொல்லப்பட்டன. இவற்றாலே இடையில் உள்ளவற்றின் இயல்புகள் தாமே விளங்கும் என்பது பற்றி.

நேரா மலத்தினை நீடைந் தவத்தையின்
நேரான வாறுன்னி நீடு நனவினில்
நேரா மலம்ஐந்தும் நேரே தரிசித்து
நேராம் பரத்துடன் நிற்பது நித்தமே. ***#2128***

சகலத்திற் கேவலமாகவும், சகலத்திற் சகலமாகவும் இயல்பாக நிகழ்ந்து வருகின்ற அஞ்சவத்தைகளிலே பாகம் (பக்குவம்) எய்தாத ஆணவமலத்தைச் சகலத்தில் சுத்தமாய் நிகழும் சாக்கிரா வத்தையில் பாகம் எய்தியதாக அறிந்து, அதனானே பஞ்ச மலங்களும் பாகமெய்தியவற்றையும் நன்கு கண்டு, எஞ்ஞான்றும் தனது செம்மை யினின்றும் திரிதல் இல்லாத மேலான பொருளோடுகூடி நிற்பதே உண்மைச் சுத்தாவத்தையாகும்.

விளக்கவுரை

நீடு ஐந்தவத்தை - நெடுங்காலமாக நிகழ்ந்து வருகின்ற ஐந்தவத்தை என்றதனால் அவை பந்த நிலையில் நிகழும் சகல ஐந்தவத்தைகளாயின.

இதனை முன்னர்க் கூட்டியுரைக்க. 'நீடு நனவு' என்னும் காலங்கந்த பெயரெச்சத் தொடர், 'நீடுதற்கு ஏதுவாகிய நனவு' எனப்பொருள் தந்து, சுத்தசாக்கிரத்தைக் குறித்தது. 'ஞானச்செய்தி' - எனப்படும் தச காரியத்துள் முதல் ஆறும் சுத்த சாக்கரமும், ஏனைய நான்கும் சுத்த சொப்பனம் முதலிய நான்குமாம். இவையே சகலத்தில் சுத்தமாம் ஐந்தவத்தைகள். இந்நிலையில் உயிர்தான் தன்னையும், தலைவனையும் அறிதலின் இதுகாறும் அங்ஙனம் அறியாதிருந்தது ஆணவ மலத்தாலே என்பதையும், இப்பொழுது அது நீங்கியதால்தான் இந்த அறிவு நிலை எய்தியதையும் வழியளவையானே தெளிவாக உணரும் ஆதலின் அதனையே, 'நேரா மலத்தை நடு நனவினில் நேரானவாறு உன்னி' என்றார். 'மூலமலத்தின் இயல்பு விளங்கவே, ஏனைய மலங்களின் இயல்புகள் தாமே விளங்க, எல்லா மலங்களின் இயல்பும் விளங்கினவாம்' என்றற்கு 'முன்பு நேராதிருந்த மலம் ஐந்தையும் இப்பொழுது நேரே தரிசித்து' என்றார்.

இந்நிலை துகளறு போதத்தில் 'பத்தாம் அவதாரமாகிய கேவலாதீதம்' - எனக் கூறப்பட்டது.

சகலத்தில் சுத்தம் நிலையில்லாது மாறி மாறி நிகழ்வதாக, உண்மைச் சுத்தமே நீங்காது நிற்பதாகலின் அதனை 'நித்தம்' என்றார்.

இதனால், 'சகலத்தில் நிகழும் ஐந்தவத்தைகளில் சுத்த ஐந்தவத்தைகளும் உள' என்பதும், 'ஆயினும் அவை நிலை யற்றனவாக, நிலையானவையாய்ச் சகலத்தோடு தொடர்பு சிறிதும் இல்லாத உண்மைச் சுத்தாவத்தைகளும் உள' என்பதும் கூறப்பட்டன.

<u>*10.4.*மத்திய சாக்கிராவத்தை</u>

சாக்கிர சாக்கிரந் தன்னில் திரோதாயி
சாக்கிர சொப்பனந் தன்னிடை மாயேயம்
சாக்கிரந் தன்னிற் சுழுத்திதற் காமியம்
சாக்கிரந் தன்னில் துரியத்து மாயையே. ***#2129***

மத்தியாலவத்தையாகிய சாக்கிர சாக்கிரத்தில் மட்டுமே திரோதானமலம் செயற்படும். (எனவே இந்நிலையில்தான் அனைத்துக் கருவிகளும் செயற்பட, ஆன்மா உலகினை நன்கு உணர்வதாகும்). சாக்கிர சொப்பனத் தளவிலேதான் - அஃதாவது, சாக்கிர சாக்கிரம், சொப்பனம் என்னும் இரண்டில் மட்டுமே ஆன்ம தத்துவம் செயற்படும். (அவற்றுள் சாக்கிரத்தில் மட்டுமே புறக் கருவிகள் செயற்படச் சொப்பனத்தில் அந்தக்கரண நிகழ்ச்சியாகிய சிந்தனை மட்டுமே உளதாகும்) சாக்கிர சுழுத்தியளவில்தான் - அஃதாவது சாக்கிர சாக்கிரம், சாக்கிர சொப்பனம், சாக்கிர சுழுத்தி என்னும் மூன்றளவிலேதான் கன்மங்கள் நிகழும்.

(எனவே, அந்த மூன்றளவிலேதான் ஆன்மாவிற்குச் சுக துக்கங்கள் விளங்கித் தோன்றும்). சாக்கிர துரியத்தளவில்தான் வித்தியா தத்துவங்கள் செயற்படும். (எனவே, அந்த நான்களவில்தான் ஆன்மாவிற்கு 'யான்' என்னும் தன்னுணர்வு உளதாகும்).

விளக்கவுரை

எனவே, சாக்கிர துரியாதீதத்தில் யாதொரு செயற் பாடும் இன்றி, மூச்சும் நின்றுவிட ஆன்மாத்தான் சாக்கிர சாக்கிரத்தில் அறிந்த சுகம், அல்லது துக்கத்திலே தன்னையும் மறந்து, 'அதுவேயாய் அழுந்தியிருக்கும்' என்பதுதானே விளங்கிற்று.

ஆன்மாவிற்கு 'யான்' என்னும் தன்னுணர்வு வித்தியா தத்துவத்தாலும், 'இஃது இன்னது' என்றும் இஃது எனது, பிறருடையது என்றும் நிகழ்வதாகிய பிறபொருள் உணர்வு ஆன்ம தத்துவத்தாலும் நிகழும். 'யான், எனது, பிறருடையது' - என்னும் உணர்வுகள் முழு அனுபவங்கள் ஆகா, அவை பொருள்களை உணரும் உணர்வுகளே யாம், அங்ஙனம் பொருள் உணர்வு நிகழ்ந்தபின், ஆன்மா அந்த உணர்வுகள் அனைத்தையும் இழந்து, உணர்ந்த பொருளில் அதுவாய் அழுந்துவதே முழு அனுபவமாகும். உலகப் பொருளிள் ஆன்மா அவ்வாறு அழுந்தி நிற்பதே உலகத்தைப் பற்றிய முழு அனுபவமாகும். அதுவே சாக்கிர துரியாதீதம். அதிற் சிறிது குறைந்தன எல்லாம் சாக்கிர துரியம் முதலிய நான்குமாம். இதுவே இம்மந்திரத்தால் கூறப்பட்டது.

வித்தியா தத்துவங்களைச் சிவ தத்துவங்கள் செயற்படுத்த, வித்தியா தத்துவங்கள் ஆன்ம தத்துவங்களைச் செயற்படுத்தும். ஆகவே, 'வித்தியா தத்துவங்கள் ஆன்ம தத்துவங்களில் சில பல வற்றைச் செயற்படுத்தாது நிற்கும் நிலைகளே கீழாலவத்தை' எனவும், 'சிவதத்துவங்கள் வித்தியா தத்துவங்களில் சில பலவற்றைச் செயற்படுத் தாது நிற்கும் நிலைகளே மத்தியா லவத்தை' எனவும் உணர்ந்து கொள்க.

சித்தாந்த சாத்திரங்களில் கூட, 'மாயேயம்' என இருக்க வேண்டிய பாடங்கள் 'மாமாயை' என்றே மாற்றப்பட்டிருத்தலைக் காணலாம். அவ்வாறே இம்மந்திரத்திலும் சில பிரதிகளில் பாடம் மாற்றப்பட்டுள்ளது.

'மாயேயம்' என்பது இங்கு பிரகிருதியின் காரியங்களையே குறித்தது. மூல கன்மமே 'கன்மம்' எனப்பட, அதினின்றும் தோன்றும் நல்வினை தீவினைகளாகிய காரிய கன்மம், 'கான்மியம்' எனப்பட்டுப் பின் 'காமியம்' என மருவி வழங்குகின்றது. ஈற்றடியில் 'மாயை' என்றது அசுத்த மாயையை. அஃது ஆகுபெயராய், அதன் காரிய மாகிய வித்தியா தத்துவங்களை உணர்த்திற்று.

நான்கடிகளிலும் 'செயற்படும்' என்னும் பயனிலைகள் எஞ்சி நின்றன.

இதனால், மத்தியாலவத்தை ஐந்தன் இயல்புகளும் தொகுத்துக் கூறப்பட்டன.

மாயை எழுப்பும் கலாதியை மற்றதின்
ஏய இராகாதி ஏய்ந்த துரியத்துத்
தோயும் சுழுனை கனா நனாவும் துன்னி
ஆயினன் அந்தச் சகலத் துளானே. *#2130*

சிவதத்துவம் அனைத்தும் செயற் படாமையால், வித்தியா தத்துவங்களும் செயற்படாது ஒடுங்கிய அதீத நிலையில் சிவதத்துவங்கள் தொழிற்படத் தொடங்கிய பொழுது வித்தியா தத்துவங்களில் மாயா தத்துவம் எழுந்து, கலை, காலம், நியதி என்னும் மூன்று தத்துவங்களை எழுப்பும். பின்பு கலையினால் வித்தையும், வித்தையால் அராகமும் எழுந்து தொழிற்படும். இவ்வாற்றால் மத்தியா லவத்தைகளில் துரியாதீதம் முதலிய ஐந்தும் நிகழும், அவை ஐந்தும் 'மகாசகலம்' எனப் பொதுப் பெயரைப்பெறும்.

விளக்கவுரை

'வித்தியா தத்துவங்களில் மாயை தவிர யாதொரு தத்துவமும் செயற்படாதநிலை சாக்கிரத்துரியாதீதமும் மாயையோடு காலம் மட்டும் தொழிற்படும் நிலை சாக்கிரத் துரியமும், அவற்றோடு கலை நியதி இவை தொழிற்படும் நிலை சாக்கிரச் சுழுத்தியும், அவ்றோடு வித்தை செயற்படும் நிலை சாக்கிர சொப்பனமும், அவற்றோடு அராகமுங் கூட, சிவதத்துவம், வித்தியா தத்துவம் அனைத்தும் செயற்படும் நிலை சாக்கிர சாக்கிரமும் ஆம்' - எனக் கூறியவாறு. சிவதத்துவங்களும் இவற்றிற்கு ஏற்பச் செயற்படும் என்க.
'மாயை எழுப்பும்' - என்றதனால், 'அது பிறிதொன்றையும் எழுப்பாது, தன்னளவில் செயற்பட்டிருந்த நிலை உண்டு என்பது பெறப்பட்டது.
முன்னை மந்திரத்தில், 'சாக்கிர சாக்கிரம் தன்னில் திரோதாயி' - என்றதனாலும், 'சாக்கிர சொப்பனந் தன்னிடை மாயேயம்' என்றதனாலும், 'அந்நிலைகளில் வித்தியா தத்துவங்கள்மேற்கூறிய முறையில் செயற்படும்' என்பது கொள்ளப்படும்.
வித்தியாதத்துவங்களைக் காலம் முதலாக வைத்து எண்ணுதல் முறையாயினும், கலை முதலாக வைத்து எண்ணுதலும் உண்டு' என்பதைச் சிவப்பிரகாசம் முதலியவற்றால் அறிக.
பின்னர் 'இராகாதி' என வருதலால், 'கலாதி' என்றதில் 'ஆதி' என்றது, நியதியை மட்டுமே தழுவி நின்றது.
வித்தை, அராகம் இவை யொழிந்த ஏனையவற்றை முன்னே வேறு பிரித்து ஓதினமையால், 'ஏய்' என்பதில் ஏயப்பட்டன, அவையேயாயின, வித்தியா தத்துவங்கள் பெரும்பாலும் ஒடுங்கினமையால், சாக்கிரத்தில்

அதீதத்தை எய்திய ஆன்மாப் பின்பு அதினின்றும் மீளுதல் வித்தியா தத்துவங்கள் செயற்படுதலாலே, என்பார் முன்னிரண்டடிகளில் சிலவற்றை வகுத்துக்கூறிப் பின்னிரண்டடி சிலவற்றைச் சுட்டியொழிந்தார். மாசகலத்தையே இங்கு, 'சகலம்' என்றார். 'இராகாதி ஏய்' என மாற்றி 'கனா, நனா' என்பதற்கு முன்னும் 'ஆயினன்' என்பதை இறுதியிலும் கூட்டுக. 'ஆன்மா ஆயினன்' எனத் தோன்றா எழுவாய் வருவித்துக் கொள்க.
இதனால், மத்தியாலவத்தைகளில் சிலவற்றினியல்பு வகுத்துக் கூறப்பட்டது.

மேவிய அந்தன் விழிகட் குருடனாம்
ஆவயின் முன்அடிக் காணும் அதுகண்டு
மேவும் தடிகொண்டு சொல்லும் விழிபெற
மூவயின் ஆன்மா முயலுங் கருமமே. *#2131*

பிறவிக் குருடன் கண்ணை விழித்து விழித்துப் பார்ப்பினும் யாதொன்றையும் காணமாட்டுவானல்லன். *(இது போன்றது சாக்கிர துரியாதீதநிலை அஃதாவது, உணர்வு சிறிதும் இன்றிக் கிடக்கும் நிலையாம்).*

ஒன்றும் காணப்படாத நிலையில் அக்குருடன் தன் காலில் கீழ்க் கிடப்பதைத் தடவித் தடவிப்பார்ப்பான். *(இதுபோன்றது சாக்கிர துரிய நிலை. அஃதாவது, உணரத் தக்கனவற்றைச் சிறப்பாக அன்றிப் பொதுவாக உணரும் நிலையாம்).*

தடவிப் பார்த்த குருடனுக்குக் கோல் ஒன்று கிடைத்ததாயின் அதனைத் துணையாகப் பற்றிச் சில இடங்களுக்குச் செல்வான். *(இது போன்றது சாக்கிரச் சுழுத்தி நிலை; உணரப்படும் பொருள்களைச் சிந்தனையால் உணரும் நிலையாம்).*

இதன் பிறகு அக்குருடன்தனக்குக் கண் தெரிவதற்கு வேண்டியவற்றைச் செய்வாரை அணுகி அவர்கட்கு உபசார வார்த் தைகளைச் சொல்வான். *(இதுபோன்றது சாக்கிரச் சொப்பனநிலை. உணரவேண்டுவனவற்றை உணர்தற்கு முனையும் நிலையாகும்).*

(இறுதியில் குருடன் கண்பெறுதலும் உண்டு. அதுபோன்றதே சாக்கிர சாக்கிரம்) சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் மூன்று நிலைகளில்தான் ஆன்மா செயற்பாடுடையதாம். ஏனை இரண்டும் செயலற்ற நிலைகளாம்*).*

விளக்கவுரை

மேவிய-பிறப்பிலே பொருந்திய. விழி கண், நிகழ் கால வினைத்தொகை. 'குருடன்' என்றது, 'பார்க்க இயலாதவன்' என்ற தாம். 'காணும்' என்றது, தடவிப் பார்த்தலை, 'தடிகொண்டு மேவும்' எனவும் 'விழிபெற ஆவன

கொல்லும்' எனவும் மாற்றியுரைக்க.
இங்குக் கூறிய இவ்வியல்புகள் பெரிதும் அதிர்ச்சியைத் தரத் தக்க செய்தியை அறிந்தவுடன் ஆன்மா மூர்ச்சித்துப் பின் தெளிவடை தலில் நன்கு விளங்கம். அது பற்றி அவற்றையே சிலர் உதாரணமாகக் காட்டினாலும் அவை மட்டுமே உதாரணங்கள் அல்ல. மிகச் சிறு சிறு செய்திகளிலும் விழிப்பில் இவைகள் இடையறாது நிகழ்வனவேயாம்.
இதன் முதல் மூன்று அடிகள் ஒட்டணியாய் அமைந்தன. ஆதலின், இதனால், மேற்கூறியவை உவமைகாட்டித் தெளிவிக்கப் பட்டனவாம்.

மத்திமம் ஒத்த சிலந்தி வலையத்துள்
ஒத்தங் கிருந்தங் குயிருண்ணு மாறுபோல்
அத்தனு ஐம்பொறி ஆடகத் துள்நின்று
சத்தம் முதல்ஐந்தும் தான்உண்ணு மாறே. *#2132*

ஐம்பொறிகளைக் கருவியாக உடைய அந்த உடம் பாகிய ஆடரங்கத்துள் நின்று சத்தம் முதலிய புலன்களை உயிர் நுகரும் முறை, சிலந்தியானது வலைக்குள் ஏற்புடைய இடத்தில் இருந்து கொண்டு, அங்குவந்த உயிர்களை உண்ணும் முறைபோல்வது. ஆதலின், அதற்கு ஏற்புடையன மத்தியாலவத்தைகளே.

விளக்கவுரை

'தான்' என்றது உயிரை. 'தான் சத்தம் முதல் ஐந்தும் உண்ணுமாறு, சிலந்தி உயிர் உண்ணும் மாறுபோலும்; ஆதலின் மத்திமம் ஒத்த' - எனக் கூட்டி முடிவு செய்க.
'ஐம்பொறி அத்தனுவாகிய ஆடு அகம்' என்க. உயிரின் செயற்பாட்டை ஆட்டமாக உருவகித்தார். 'அத்தனும்' - என்பதைப் பாடமாகக் கொண்டமையால், பலரும் இடர்ப்பட்டனர். 'வலையது' என்பதில் அது, பகுதிப்பொருள் விகுதி. 'சிலந்தி உயிர் உண்ணுதல் வலையின் மத்தியில் இருந்து' என்பது, பொருளில், 'மத்திமம் ஒத்த' என்றதனானே பெறப்பட்டது' 'மயில் போல ஆடினாள்' என்றால், மயில் ஆடுதல் தானே பெறப்படுதல் போல. 'ஒத்த' என்பது அன் பெறாத அஃறிணைப் பன்மை வினைமுற்று. ஒத்து - வலைக்கு ஏற்ப இயைந்து பின் வந்த 'அங்கு' என்பதன்பின், 'வந்து' என ஒரு சொல் வருவிக்க. 'போல்' என்னும் பகுதியே நின்று, 'போல்வது' என முற்றுப் பொருள் தந்தது. அதன்பின், ஆதலின் என்பது சொல் லெச்சமாய் நின்றது.
இதனால், மத்தியாலவத்தையே உயிர் உலகத்தை நன்கு அனுபவிக்கும் நிலையாதல் கூறப்பட்டது. அதுபற்றி இது, 'பிரேரகாவத்தை' - எனப்படும்.

வைச்சன அச்சு வகையிரு பத்தஞ்சோ*(டு)*
உச்ச முடன் அணை வான்ஒரு வன்னுளன்

பிச்சன் பெரியன் பிறப்பிலி என்றென்று
நச்சி அவனருள் நான்உய்ந்த வாறே. *#2133*

உயிர்களுக்கு உதவியாக அவைகளின் வசமாக வைக்கப்பட்ட கருவிகள் இருபத்தஞ்சு. எனினும், (அவைகளை வைத்துமட்டும் போதாமையால்) எல்லாவற்றையும் நடத்தும் தலைமைப்பாட்டோடு உடனாய், நீங்காது ஒருவன் இருக்கின்றான். அவனை எல்லா நூல்களும் ஒருமுகமாக, 'பித்தன்' என்றும் 'பெரியோன்' என்றும் 'பிறப்பிலி' என்றும் கூறுதலையறிந்து. அவனையே விரும்பி நான் உய்ந்தவாறு குறிக்கொளத்தக்கதாகும்.

விளக்கவுரை

இருபத்தஞ்சு கருவிகளாவன, ஆன்மதத்துவம் இருபத்து நான்கும், புருட தத்துவம் ஒன்றுமாம். வித்தியா தத்துவங்கள் அனைத்தும் 'புருடன்' என ஒன்றாக அடக்கப்பட்டன. ஆன்மாக் களுடன் இறைவன் கருவிகளைக் கூட்டினால் மட்டும் போதாது. செயல்தோறும் அவனும் உடன் இயங்கினால்தான் உயிர்கள் அக் கருவிகளால் அடையத் தக்க பயனை அடையும். அதுபற்றி இறைவன் அவ்வாறு உடன் நிற்றலையே இம்மந்திரத்தால் குறித்தார்.
இறைவன் இவ்வாறு உடனாய் நிற்கும் நிலைபெத்த காலத்தில் மத்தியாலவத்தையிலே சிறப்பாக நிகழ்தலால், அவ்வவத்தை 'உணர்த்து முறைமை' - எனப்படுகின்றது. ஆகவே அதனை இங்குக் குறித்தல் முறைமையாகின்றது. ஈற்றில் உரைக்கப்பட்டது சொல்லெச்சம்.
இறைவன் இங்ஙனம் உடனாய் நிற்கும் நிலை சிவஞான போதம் பதினொன்றாம் சூத்திரத்தில் 'காணும் உபகாரம்' என இனிது விளக்கப்பட்டது.
'இங்ஙனம் உடனாய் நிற்பவனைப் பிற தேவராக உணராது, சிவபெருமானாகவே உணர்தல் வேண்டும்' என்பதையே பின்னிரண் டடிகளால் கூறினார். 'பிச்சன், பிறப்பிலி, பேர் நந்தி' என அப்பரும் அருளிச் செய்தார்.*l* 'அவனருள் நச்சி' என மாற்றி யுரைக்க.
'இருபத்தஞ்சு' - என்றதை மாகேசுர மூர்த்தமாகக் கொள் ளுதற்கு, இங்கு யாதோர் இயைபும் இல்லாமை யறிக.
இதனால், மத்தியாலவத்தை பற்றி அறியத்தக்கதொரு சிறப்புப் பொருள் கூறப்பட்டது.

நாலா றுடன்புருடன் நற்றத் துவம்உடன்
வேறான ஐயைந்து மெய்ப்புரு டன்பரம்
கூறா வியோமமம் பரம்-எனக் கொண்டனன்
வேறான நாலேழு வேதாந்தி தத்வமே. *#2134*

'சாங்கியர் கூறும் நிலம் முதல் மூலப் பகுதி ஈறான இருபத்து நான்கு

தத்துவங்களுடன் அவர் இருபத்தைந்தாவதாகக் கூறு கின்ற புருடனையும் ஒரு தத்துவமாகக் கூட்ட, சாங்கியர் கொள்கை யினின்றும் வேறான இருபத்தைந்து தத்துவங்கள் உளவாகின்றன. அவற்றிற்கு மேல் உண்மையில் 'புருடன்' எனச்சொல்லத்தக்க ஈசுரனும் அவனுக்கும் மேலான, சொல்லுக்கு எட்டாத பராகாயமும், அதற்கு மேல் பரப்பிரமமும் ஆகத்தத்துவம் இருபத்தெட்டு' எனத் 'தத்துவ எண்ணிக் - கையை இவ்வாறு கொள்வதே சிறப்பு' என வேதாந்திகள் கூறுகின்றனர்.

விளக்கவுரை

'வேதாந்திகளது கொள்கையை உணர்ந்தாலன்றிச் சித்தாந்திகளது கொள்கையின் சிறப்பு விளங்கமாட்டாது' என்பது பற்றி அதனைக் கூறினார். சாங்கியர் முதலியோர் நிரீச்சுரவாதிகள் ஆயினமை பற்றி அவரது கொள்கைகளை நாயனார் கூறிற்றிலர். 'உடன்' இரண்டில் பின்னது 'தொகை' என்னும் பொருளது.

சாங்கியர் 'புருடன்' எனக் கூறுவதே சிவன் - என்பது வோதந்திகள் கருத்து. அதனினின்றும் பிரித்தற்கு ஈசுரனை 'மெய்ப் புருடன்' - என்றார். இதனையடுத்து, 'பரம்' - என்றது. 'மேல்' என்ற படி. 'வியோமம், ஆகாயம்' - என்பன ஒரு பொருட் சொற்களாயினும் பூதாகாயம் அல்லாது, எல்லாவற்றிற்கும் மேலே உள்ள பராகாயமே சிறப்பாக, 'வியோமம்' எனப்படும்.

சித்தாந்தத்தில் சிவனது சத்தியே பராகாயமாம். ஞானம யமாய் இருத்தல்பற்றி 'சிதாகாசம்' - எனப்படும். 'சிற்பர வியோமம்'* என்றார் சேக்கிழார்.

'எல்லாப் பொருள்கட்கும் இடங்கொடுத்து நிற்கும் பூதா காயம் போல, பிரகிருதி முதலாகிய அனைத்திற்கும் மேலாய் உள்ளது பரா காயம் 'என்பது வேதாந்திகள் கொள்கை. அதனை, அனிர்வ சனீயம்' - என அவர் கூறுதல் பற்றி அதனை, 'கூறா வியோமம்' என்றார். இதன் பின், பரம் என்றது, 'பரம்பொருள்' - என்றபடி. இறுதியில் 'வேறான' - என்றது, 'சிறப்பான' என்றதாம் 'வேறான தத்துவம் நாலேழு என வேதாநதி கொண்டனன்' - என்க. இம்மந்திரம் இருவிகற்பமாய் வந்தது. மத்தியாலவத்தையில் வைத்துத் தத்துவங்களைக் கூறுவார். வேதாந்திகள் கூறும் தத்துவ முறைமையை இதனாற் கூறினார்.

ஏலங்கொண் டாங்கே இடையொடு பிங்கலை
கோலங்கொண் டாங்கே குணத்தி னுடன்புக்கு
மூலங்கொண் டாங்கே முறுக்கிமுக் கோணிலும்
காலங்கொண் டானடி காணலு மாமே. ***#2135***

உயிர் (ஏலாத நிலைகளின் நீங்கி) ஏற்புடையதாகிய அழகிய நிலையைத் தலைப்பட்டபொழுது, இடைகலை, பிங்கலை நாடிகள் வழியாக

இயங்குகின்ற காற்றோடு பொருந்தி அவற்றின் வடிவாகி, அப்பொழுதே இராசத சத்துவ தாமத குணங்களிலும் பொருந்திக் (கீழ்நோக்கிச் சென்று) மூலாதாரத்தை யடைந்து, அங்கே உள்ள குண்டலி சத்தியின் கீழ் நோக்கு நிலையை மாற்றி மேல்நோக்கி எழச் செய்து, பின்பு பிருதிவிமண்டலம், அப்புமண்டலம், தேயு மண் டலம் ஆகிய மூன்று மண்டலங்களிலும் மேற்கூறிய முக்குண வடிவாய் உள்ளமும் மூர்த்திகளிடமாக இறைவனைத் தரிசித்தல் கூடும்.

விளக்கவுரை

ஏற்புடை நிலையே அழகிது ஆதலின் அதனை 'ஏல் அம்' என்றார். அம் - அழகு. அஃது ஆகுபெயராய், அழகிதாகிய நிலையைக் குறித்தது. அழகிய நிலையாவது யோகாவத்தை. அட்டாங்கத்தில் இயமம்முதலிய நான்கும் 'யோக சாக்கிரம்' என ஒன்றாய் அடங்கும். ஏனைய பிரத்தியாகாரம் முதலிய நான்கும் யோக சொப்பனம், யோக சுழுத்தி, யோக துரியம், யோக துரியாதீதம் என்பனவாய் அமையும். இவை ஐந்துமே சிறப்பாக, 'மேலாலவத்தை' எனப்படும்.

யோகநூலார் இவற்றையே 'மலம் நீங்கிய நின்மலாவத்தை' எனக் கூறுவராயினும்' ஒளியாலன்றி இருள் நீங்காதவாறு போல, ஞானத்தாலன்றி மலம் நீங்காது ஆதலின், ஞானவத்தைகளே நின்மலாவத்தையாம். இதனை,

'யோகில் தருவதோர் சமாதி தானும்
தாழ்ந்துபின் சன்னம் சாரும்'

எனச் சிவஞான சித்தி இனிது விளக்கிற்று.3 தாழ்தலாவது, கீழ் நிலையை அடைதல். இவை இங்ஙனமாயினும் நின்மலாவத்தையில் சேர்க்கும் ஆற்றலுடையன ஆகலின் 'ஏற்புடையஅழகிய நிலை' எனப்பட்டன. கீழாலவத்தையும், இத்தன்மை இலவாதல்அறிக.

உயிர் சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடையது ஆதலின் 'இடையொடு பிங்கலை கோலங் கொண்டு' என்றார். இடையும், பிங்கலையும் அவை வழியாக இயங்குகின்ற காற்றைக் குறித்தலால் ஆகுபெயர்கள். உடல் உள்ள அளவும் முக்குணங்கள் நீங்கா ஆதலின் ஆன்மா அவற்றினுட் புகவேண்டியதாயிறறு. முறுக்குதல் - திசை மாற்ற வைத்தல். 'கோண்' என்றது, 'மண்டலம்' என்றபடி. பிராசாத நிலையில் நிராதாரத்தை உட்கொண்டு முதலில் உள்ளது அக்கினி மண்டலமாகச் சொல்லப்படினும் ஆதார யோகத்தில் பிரமனை நோக்கி முதலில் உள்ளனப் பிருதிவி மண்டலமாகக் கூறினார். ஆதாரங்களின் காணப் படுபவர்கள் குணமூர்த்திகளேயாயினும் அவர்களை நிர்க்குண மூர்த்தி யாகிய சிவனது விபூதிகளாகவே உணர்தல் வேண்டும், என்றற்கு,

'காலம் கொண்டான் அடி காணலும் ஆமே'

என்றார். உம்மை சிறப்பு. அதனானே யோகாவத்தையில் சிறப்பு விளங்கும். காலம் கொண்டான் - காலத்திற்கு உட்படாமல் அதனைத் தன் செயலுக்குக் கருவியாகக் கொண்டவன் சிவன்.
'காலமும் கடவுள் ஏவலால் துணைக் காரணங்காண்'
என்றது சிவஞான சித்தி.*l*
'அவத்தை' எனப்படுவன மேற்கூறிய 'கீழாலவத்தை, மத்தியா லவத்தை' - என்பனவேயன்றி, மேலாலவத்தையாகிய யோகா வத்தையும் உண்டு - என்பதை இதனாற் கூறினார்.

நாடிகள் பத்தும் நலந்திகழ் வாயுவும்
ஓடிய காலின் ஒடுங்கி யிருந்திடும்
கூடிய காமம் குறிக்கும் இரதமும்
நாடிய நல்ல மனமும் உடலிலே. #2136

நாடிகள் பத்தும், நன்மை விளங்குகின்ற வாயுக்கள் பத்தும் நாடிகளில் சிறப்புடைய, 'இடை, பிங்கலை, என்னும் இரு நாடிகள் வழியாக இயங்குகின்ற 'பிராணன்' என்னும் வாயுவிற்குக் கீழ்ப்பட்டு, அவற்றின்வழி நிற்கும். ஆணும், பெண்ணும் கூடியதனால் விளைகின்ற இன்பத்தில் உயிர் மூழ்குதற்குக் காரணமான சுக்கில சோணிதங்களும், அவ்வின்பத்தை விரும்புவதாய் அன்பைச் செய்கின்ற மனமும் உடல் முழுவதுமாய் இருக்கும்.

விளக்கவுரை

நாடிகள் பத்தும் தூல உடம்பிற்கு உறுப்பாய் அமைவன. அவை, 'அத்தி, அலம்புடை, இடை, பிங்கலை, சுழு முனை, காந்தானி, குகுதை, சங்கிலி, சிகுவை, புருடன்' - என்பன.
'பத்தும்' - என்பது, 'வாயு' என்றதனோடும் சென்று இயைந்தது.
வாயுக்கள் பத்தாவன, 'பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன்' - என்பன. 'நாடிகளாலும், வாயுக்களாலும் உடல் உருப்பெற்று நிலைபெறுகின்றன' எனவும், 'உடலை மனம் பற்றி உலாவுதலால் இன்பம் விளைகின்றது' எனவும் கூறியதனால், தூலமும், சூக்குமமும், பரமும் ஆகிய உடம்பாய் உள்ள கருவிகளின் கூடுதல் குறைதல்களாலே அவத்தைகள் பலவாய் நிகழ்கின்றன' என்பது உணர்த்தியவாறு.
இதனால், அவத்தை பேதங்கட்குக் காரணம் குறிப்பால் உணர்த்தப்பட்டது. ஒடுங்கியிருந்திடும்' என்பதை இறுதியிலும் கொண்டு கூட்டுக.
(இரண்டாம் தந்திரத்து, 'பாத்திரம்' - என்னும் தலைப்பில் வந்துள்ள 'ஆவன ஆவ' என்னும் மந்திரம் (496) பதிப்புக்களில் இதனையடுத்தும காணப்படுகின்றது).

பத்தொடு பத்தும் ஓர் மூன்றும் பகுதியும்
உய்த்த துரியமும் உள்ளுணர் காலமும்
மெய்த்த வியோமமும் மேலைத் துரியமும்
தத்துவம் நாலேழ் எனஉன்னத் தக்கதே. *#2137*

('வேதாந்திகள் கொள்வன' - என மேற்கூறப்பட்ட) தத்துவங்கள் இருபத்தெட்டு என்னும் தொகை, தூலபூதம் ஐந்து, சூக்கும பூதம் *(தன்மாத்திரை)* ஐந்து, ஆகிய பூதங்கள் பத்தும், ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து ஆகிய இந்திரியங்கள் பத்தும், 'மனம், அகங்காரம், புத்தி' - என்னும் அந்தக் கரணங்கள் மூன்றும், மூலப்பகுதி ஒன்றும் ஆகிய சடங்கள் இருபத்து நான்கும், அவற்றிற்கு மேல் அபர துரியமாகிய புருடன், அல்லது சீவன் ஒன்றும், அதற்குமேல் காலத்தின் வாயிலாக எல்லாவற்றையும் இயக்குகின்ற ஈசுரன் ஒருவனும், அவனுக்கு மேலேயுள்ள மாயையாகிய பராகாசமும், அவனுக்கு மேல் பரதுரியமாகிய பரம்பொருள் ஒன்றும் எனக் கருதத் தக்கதாகும்.

விளக்கவுரை

சித்தம் மூலப்பகுதியுள் அடங்கிற்று. 'பராகாயம்' என்பதற்கு 'மேய்த்த வியோமம் என்றார். ஈசுரனை மாயைக்கு உட்பட்டவனாகவே வேதாந்திகள் கொள்வர்.

இதனால் மேல் எண்ணளவாகக் கூறிய வேதாந்தி தத்துவங்கள் இவை என்பது விளக்கப்பட்டது.

விளங்கிடும் முந்நூறு முப்ப தொருபான்
தளங்கொள் இரட்டிய*(து)* ஆறு நடந்தால்
வழங்கிடும் ஐம்மலம் வாயு எழுந்து
விளங்கிடும் அவ்வழித் தத்துவம் நின்றே. *#2138*

முந்நூறு, அதனுடன் முப்பதொருபான்; அஃதா வது முந்நூறு, இரண்டும் கூட அறுநூறு. தளம் - படி. இரட்டிய தாகிய ஆறு. ஆறாறு = முப்பத்தாறு, அறுநூற்றை முப்பத்தாறு படியாக உறழ வருவது இருபத்தோராயிரத்து அறுநூறு. இஃது ஒரு நாளைக்கு வெளிச்சென்றும், உட்புகுந்தும் நடக்கின்ற மூச்சின் எண்ணிக்கை யாகும். இவ்வாறு வாயு - பிராணன். எழுந்து நடந்தால், உயிரைப் பற்றி யுள்ள பஞ்சமலங்களும் தன் தன் வேலையைச் செய்யும். அப்பொழுது தான் மாயா காரியமாகிய தத்துவங்களின் செயல்களும் விளங்குவனவாம்.

விளக்கவுரை

'உடம்பில் உயிர் நிலை பெறுதற்குப் பிராண வாயு வினது இயக்கமே இன்றியமையாக் காரணமாய் இருத்தலின், அவ் வியக்கம் உள்ளதனால்தான் தத்துவங்கள் காரணமாக அவத்தைகள் நிகழ்கின்றன'

என்றவாறு. துரியாதீத நிலையில் உயிர்ப்பு அடங்கு தலால் மேற்கூறிய எண்ணிக்கையில் சில குறையலாம். உயிர்ப்பு அடங்கிய நிலையில் உயிர் கேவலத்திலே கிடக்கும். மூன்றாம் இடி இன எதுகை பெற்று வந்தது.

இதனால், 'அவத்தை பேதங்கட்கு உயிர்ப்பு ஓர் இன்றியமை -யாக்கருவி' என்பதும், அவ்வுயிர்ப்பின் நிலைகளும் கூறப் பட்டன.

நாலொரு கோடியே நாற்பத் தெண்ணாயிரம்
மேலும்ஓர் ஐந்நூறு வேறாய் அடங்கிடும்
பால்அவை தொண்ணூற்றோ டாறுட்படும் அவை
கோலிய ஐயைந்து ளாகும் குறிக்கிலே. *#2139*

'நாலுகோடியே நாற்பத்தொண்ணாயிரத்து ஐந்நூறு' என்பது முற்கூறிய எண்ணிக்கையில் உயிர்ப்பு இயங்கும் இயக்கத் தொகை. அத்தொகையளவு, சிறிதே ஏற்றம் உள்ள ஐந்தாண் டுகளாம். (எனவே, அந்த அளவு மூச்சு, உடல் வளர்வதற்குத்தவிர, உயிர்க்கு யாதும் பயன்தருவன அல்லவாம்). இனி, 'மூச்சு இயங்கும் காலத்தில் விளங்கிடும்' எனப்பட்ட தத்துவங்கள் தொண்ணூற்றா றாகும். எனினும், அவற்றை இருபத்தைந்தில் அடக்குவார் உளர்.

விளக்கவுரை

தத்துவங்களைப்பற்றிக் கூறிவரும் தொடர்ச்சிக்கு இடையில் அவற்றோடு இயைபுடைய உயிர்ப்பியல்கள் சிறிது இடம் பெற்றன. 'ஐயைந்துள் ஆகும்' என்றது பிறன் கோட் கூறல். கோலிய - வரையறுத்த. 'பால் அவை' என்றதில் 'அவை' என்றது மேற்கூறிய தத்துவங்களை.

ஆகின்ற தொண்ணூற்றோ டாறும் பொதுஎன்பர்
ஆகின்ற ஆறா(று) அருஞ்சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ்வே தாந்திக்கு வைணவர்க்(கு)
ஆகின்ற நாலா(று)ஐ யைந்துமாயா வாதிக்கே. *#2140*

இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

மாயா வாதியை வேறு கூறினமையால், 'வேதாந்தி' என்றது பிரம பரிணாம வாதியையாயிற்று. இதனானே மேல் 'வேதாந்தி' என்றதும் இவனையேயாதல் தெளிவாம். 'ஐயைந்து' என் பதில் அந்தக்கரணம் நான்காக, அவற்றிற்குமேல் பிரகிருதி உளதாம்.

இதனால், மதவாதிகளின் தத்துவக்கொள்கைகள் தொகுத்துக் கூறப்பட்டன.

தத்துவ மானவை தன்வழி நின்றிடில்

ளித்தக னாகி விளங்கி யிருக்கலாம்
பொய்த்தவ மானவை போயிடும் அவ்வழி
தத்துவ மாவ(து) அகார எழுத்தே. *#2141*

'மெய்' என்பன யாவும் ஒருவனது அறிவினுள்ளே அடங்கித் தோன்றுமாயின் அவன் ஏனையோர் பலரினும்திறம் மிக உடையனாய் விளங்கலாம். அப்பொழுது பயனில்லாத செயல்கள் யாவும் ஒழிந்து, பயனுள்ள செயல் கைவரும். அங்ஙனம் உணரப்படும் மெய்களில் நாதம் தலையாயது.

விளக்கவுரை

மெய்ம்மையை அறியும்பொழுதே பொய்மை பொய்மை யாதல் விளங்கும் ஆதலின், 'தத்துவமானவை தன்வழி நின்றிடில் பொய்த்தவமாம் அவை போயிடும்' என்றார் பயனில்லாத செயல்களை, 'தவம் என்றது இழித்தற் குறிப்பு. சொல்லும் பொருளு மாகிய இருவகைப் பொருள்களில் சொல்லைத் தனது அறிவினின்றும் வேறு பிரித்துக் காணுதல் அரிதாதல் பற்றி 'தத்துவமானது அதுவே' என்றார். தன்னைக்கண்டால் போக்கொடு வர இறப்பும் விகாரமும் புருடன் இன்றாம்' என்பது சிவஞானசித்தி.*l* நாதத்தை அகாரமாகக் கூறுதல் மரபு. இதனால், தத்துவ ஞானமே பந்தம் நீங்குதற்கு வழியாதல் கூறப்பட்டது. 'ஐந்தின் வகைதெரிவான் கட்டே யுலகு' என்றார் திருவள்ளுவரும்.*

அறிவொன் றிலாதன ஐயேழும் ஒன்றும்
அறிகின்ற என்னை அறியா திருந்தேன்
அறிகின்ற நீஎன் றருள்செய்தான் நந்தி**:**
அறிகின்ற நான்என் றறிந்துகொண் டேனே**.** *#2142*

'நான் எது' என்று தொடங்கி, முப்பத்தாறு தத் துவங்களையும் நிலம் முதல் நாதம் ஈறாக, ஒவ்வொன்றாக ஆராய்ந்து வந்தபொழுது, அவை அனைத்துமே சடமாய் இருத்தலால், 'யான்' என்றும், 'எனது' என்றும் உணரும் உணர்வுகளையுடைய நான் அவை களில் ஒன்றேனும் அல்லாமை புலப்பட்டது. ஆயினும் 'அவ்வுணர் வினையுடைய நான் எது' என உணர இயலாமலே திகைத்திருந்தேன். அப்பொழுது நந்தி பெருமான், 'முப்பத்தாறு தத்துவங்களும் சடம்' என்றும், 'நான் அவைகளில் ஒன்றேனும் அல்லேன்' என்றும் உணர்ந்தது எது? அதுதான் நீ என்று உணர்த்தினார். அதன் பின் நான் அவ்வாறே உணர்ந்து மெய்யுணர்வு உடையனாயினேன்.

விளக்கவுரை

ஆன்மாத் தன்னைப் பிற பொருள்களை உணர்தல் போலத் தன்னினும், பிறவற்றினும் வேறாகப் பிரித்து எதிர்ப்படுத்தி வைத்து உணர்தல்

இயலாது' என்பதும், பிற பொருள்களின் இயல்பை உணரும் முகத்தானே, 'அவ்வுணர்வையுடைய பொருளே நான்' என அனுமித்தே உணர்தல் வேண்டும் - என்பதும் கூறியவாறு. இஃது அறியாமையைப் பின்னர்த் தோன்றிய அறிவைக் கொண்டே அனுமித் துணர்தல் போல்வது. உலகில் ஒருவன் பிறரையும், பிற பொருளையும் எதிர்ப்படுத்திப் பார்த்தல் கூடும் ஆயினும், தன் முகத்தைக்தான் அவ்வாறு பார்க்க இயலாது, கண்ணாடி வழியாகவே பார்க்க இயலும். 'அது போல்வது இது' என்றும் கூறலாம்.

'என்முகம் எப்படியிருக்கிறது, எப்படியிருக்கிறது' என எண்ணி அலமருகின்ற ஒருவனும் அறிவுடையான் ஒருவன் கண்ணாடியைக் கொடுத்துக் காட்டிச் செய்வது போல, 'நான் எது' எனத் தேடி அலைகின்ற பக்குவான்மாவிற்குச் சிவன் குருவாகிவந்து, 'பிற பொருள்களை அறிந்து வருபவன் யாரோ, அவன்தான் நீ' என உணர்த்தி அருளுவான் - என்பதையே பின்னிரண்டடிகளால் கூறினார்.

'ஆன்மா - அருவுருவாய்த்
தோன்றிஉடன் நில்லாது; தோன்றாது நில்லாது;
தோன்றல்மலர்மணம்போல் தொக்கு'*l*
என மெய்கண்ட தேவரும் அருளிச்செய்தார்.

இதனால், 'பொருளியல்புகளை உணர்ந்துவரும் ஆன்மா தன்னை உணருமாறு இது' என்பது கூறப்பட்டது.

சாக்கிர சாக்கிர மாதிதனில் ஐந்தும்
ஆக்கு மாலவத்தை ஐந்தும் நனவாதி
போக்கிச் சிவத்தொடும் பொய்யான ஆறாறும்
நீக்கி நெறிநின்றோன் தானாகி நிற்குமே. ***#2143***

சகலத்தில் சகலமாகிய சகலசாக்கிரத்திற்றானே நிகழும் சாக்கிரம் முதலிய ஐந்தையும், ஆணவத்தாலே ஆக்கப் படுகின்ற கேவல சாக்கிரம் முதலிய ஐந்தையும் அவை நிகழாதபடி, முதலாவதாகச் சொல்லப்படுகின்ற சகல சாக்கிரத்தில் உறைத்து நிற்கு மாற்றானே போக்கிச் சிவத்தோடும் திருவருள் வழியில் நிற்பவன், சடம் ஆதலின் நிலையின்றித் தோன்றியழிவனவாகிய முப்பத்தாறு தத்துவங்களுட்பட்டு, தத்துவான்மாவாய் நில்லாது, அவற்றின் நீங்கிச் சுத்தான்மா ஆவான்.

விளக்கவுரை

'மாசு நீங்கிய வழி, ஞாயிற்றின் முன்னிலையில் நிற்கும் படிகத்தில் ஞாயிற்றின் ஒளி பிரதிபலிக்கப் படிகம் அந்த ஞாயிறாகியே நிற்றல்போல, தத்துவங்களின் நீங்கியவழி, என்றும் சிவத்தோடே கூடி நிற்கின்ற ஆன்மாவில் சிவத்துவம் பிரகாசிக்க, அந்த ஆன்மாச் சிவமே

யாய் நிற்கும்' - என்பது கருத்து.
ஆன்மாத் தத்துவங்களின் நீங்கிச் சிவத்தைத் திருவருளால் உணர்ந்து நிற்கும் நிலையே சகலத்தில் சுத்தாவத்தையாகும். 'அவையே தச காரியங்களாக வகுக்கப்பட்டன' என்பது மேலே கூறப் பட்டது. அந்தச் சுத்தாவத்தையும் சாக்கிரம் முதல் ஐந்தாக நிகழ்தல் பற்றி, 'நெறிநின்றோன்' என்றார். நெறிநிற்றல் - படி முறையாக ஏறி நிற்றல். 'நனவாதி' என்பதற்கு, 'நனவாகியமுதல் அவத்தையில் என உரைக்க. போக்கப்படுவன, முன்னர்க் கூறிய இருவகை ஐந்தவத்தை களாம். 'சிவத்தோடும் நெறிநின்றான்' என இயைக்க. 'இவற்றோடும்' - என்பது பாடம் அன்று.
'கீழாவத்தை மத்தியாலவத்தைகளில்வேறாய், யோகாவத்தை களும் உள' என மேற்கூறியதன் பின்8 'யோகாவத்தைகளின் மேலாக ஞானாவத்தைகளும் உள' - என்பது இதனால் கூறப்பட்டது.
தத்துவ ஞானத்தின் பயன் பந்தம் நீங்குதல் என மேற்கூறிய வாறுபோல,* பந்தம் நீங்கிய உயிர் சிவமாம் தன்மையை அடைதலே ஞானாவத்தைகளாகிய சகலத்தில் சுத்தாவத்தை என்பதும் இதனால் பெறப்பட்டதாம். 'இவைகளே நின்மலாவத்தையான அல்லது யோகாவத்தைகள் நின்மலாவத்தையாகா' என்பது யோகாலத்தை கூறியவிடத்துக் கூறப்பட்டது.

ஆணவ மாதிமலம் ஐந்*(து)* அலரோனுக்*(கு)*
ஆணவ மாதிநான் காம்மாற்*(கு)* அரனுக்கு
ஆணவ மாதிமூன்*(று)* ஈசர்க்*(கு):* இரண்டென்ப
ஆணவம் ஒன்றே சதாசிவர்க் கானதே. *#2144*

*(*பஞ்ச மலங்களும், 'ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி' என்னும் முறையில் வைத்துச் சொல்லப்படும். இவற்றுள் மறைத்தல் தொழிலைச் செய்வதில் தலைமை பெற்று நிற்பது திரோதாயியே. அதனால்*)*, பிரமன் சிவனைச் சிறிதும் உணராதவன் ஆகலின் அவனைப் பஞ்ச மலங்களையும் உடையவனாகவும், மாயோன் சிவனைச் சிறிது அறிந்தவன் ஆகலின் அவனை, திரோதாயி ஒழிந்த ஏனை நான்கு மலங்களை உடையவனாகவும், மாயோன் சிவனைச் சிறிது அறிந்தவன் ஆகலின் அவனை, திரோதாயி ஒழிந்த ஏனை நான்கு மலங்களை உடையவனாகவும், சீகண்ட ருத்திரன் பிரளயாகலன் ஆகலின் அவனைத் திரோதாயி, மாயேயம் - இவை யொழிந்த மூன்று மலங்களே உடையவனாகவும், வித்தியேசுரர் மந்திர மகேசுரர் முதலியோர் விஞ்ஞானகலர் ஆயினும் அதிகார மலம் நீங்கா மையால் ஆணவத்தோடு, கன்மமும்கூட, இரண்டு மலங்களை யுடையவர்களாகவும், அணு சதாசிவர்கள் அதிகார மலம் நீங்கினும்

போக மலம் நீங்காமையால் ஆணவம் நீங்கப் பெறாது அஃது ஒன்றனையே உடையவர்களாகவும் கூறலாம்.

விளக்கவுரை

'இதனுள் குறிக்கப்பட்ட கடவுளர் யாவரும் அணு பக்கத்தவர்களே' என்பது சொல்லாமே விளங்கும். 'இவர்களை இவ்வாறு பகுத்துக் கூறியதும் பொதுவகையில் இவரிடையே உள்ள தார தம்மியம் இனிது விளங்குதற் பொருட்டே' என்க. இவர்களை இங்ஙனம் பகுத்துக் காட்டியதனால், இவர்கட்கு உட்பட்டனவாகச் சொல்லப்படும் நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகளுட்பட்ட ஆன்மாக் களின் பந்த வேறுபாடுகளும், அவற்றிற்கு ஏற்ப அவற்றிற்கு நிகழும் அவ்தை பேதங்கலும் ஒருவாறு உணர்ந்து கொள்ளப்படும். 'அஃதே இந்த மந்திரத்திற்குப் பயன்' என்க. இரண்டாம் அடியீற்றில் குற்றிய லுகரம் கது நின்றது.

இதனால், 'பந்தம் முழுவதும் நீங்காது சிறிதாயினும் உடைய இயிர்கட்கு எந்த வகையிலாவது அவத்தை பேதங்கள் நிகழவே செய்யும்' - என்பது கூறப்பட்டது.

***10.5.*அத்துவாக்கள்**

தத்துவம் ஆறாறு தன்மனு ஆறைந்து
மெய்த்தகு வன்னம்ஐம் மானொன்று மேதினி
ஒத்திரு நூற்றிரு பான்நான்(கு) எண்பானொன்று
வைத்த பதம்கலை ஓரைந்தும் வந்தவே. *#2145*

ஆறத்துவாக்களில், 'தத்துவம் முப்பத்தாறு' என்பது முன்பே குறித்து, விளக்கம் தரப்பட்டது. (எனவே, அஃது இங்கு நினை வூட்டும் அளவே கூறப்பட்டதாம்.)

விளக்கவுரை

சொல்லுலகத்தில் முதலாவதாகிய மந்திரம் பதினொன்று, அவை 'ஈாசனம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தி யோசாதம் என்னும் பிரம மந்திரம் ஐந்தும், 'இருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம், அத்திரம்' - என்னும் அங்க மந்திரம் ஆறுமாம். தன் என்றது உயிரை. இவற்றை ஏற்க விரும்பாதவர்கள், 'ஏழ்கோடி' எனப் பாடத்தைத் திருத்தினர். கோடி' என்பது ஏனையவைபோல எண்ணுப் பெயர் ஆகாமையை நோக்குக.

செய்யுள் நோக்கி - 'எண்பான் ஒன்று வைத்த பதம்' என்பது பின் கூறப்பட்டது.

பதங்கள் எண்பத்தொன்று. 'அவை யிவை' என்பதைச் சிவநெறிப் பிரகாசச் செய்யுள் - *179,80,81* - இன் உரையிற் காண்க. இங்கு எடுத்துக் கூறின் விரியும்.

வன்னம் ஐம்பத்தொன்று. வன்னம் - எழுத்து. அவைகளை வடமொழி பற்றி யறிக. இவற்றுள் ஒன்று நீக்கி, ஐம்பது என்றலும் வழக்கு என்பதனை, 'ஐம்ப தெழுத்தே அனைத்து வேதங்களும்' என்னும் மந்திரத்தான் அறிக.

மேதினி - புவனம். புவனம் இருநூற்றிருபத்து நான்கு. தத்துவங்கள் தோறும் புவனங்கள் உள்ளன. அவற்றின் எண் ணிக்கையைச் சிவஞான மாபாடியம் இரண்டாம் சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்தில் காண்க.

கலை ஐந்து. 'அவை நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை' - என்பன. வந்த - ஆன்மாவிற்கு வழியாகக் கிடைத்தன.

இந்த அத்துவாக்கள் ஆறிலும் உயிர் வியாபித்திருத்தலால், அது செய்த வினைகள் சஞ்சிதமாய், இவ்வத்துவாக்களைப் பற்றிக் கிடக்கும். அவை உள்ள வரையில் உயிருக்கு உண்மை ஞானம் விளங்கமாட்டாது. அதனால் பக்குவம் எய்திய உயிர்கட்குச் சிவன் குருவாகி வந்து, 'அத்துவ சுத்தி' அல்லது 'கலா சோதனை' - எனப்படும் நிருவாணதீக்கையில் ஞானவதியாகவாவது, கிரியாவதி யாகவாவது செய்யும் ஆகுதிகளால்

சஞ்சிதத்தைத் துடைத்து, உபதேசத்தைச் செய்தருளுவான். அங்ஙனம் அவன் செய்த உபதேச மொழியை உயிர் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து பின் நிட்டை எய்தும்.

ஞானவதியாவது குண்டம், மண்டலம், வேதிகை முதலிய எல்லாவற்றையும் குரு தமது அகத்திலே கற்பித்துக் கொண்டு செய்வது. கிரியாவதியாவது, அவைகளை வெளியில் யாவரும் காண அமைத்துச் செய்வது.

இதனால், அத்துவாக்களின் தொகைகள் கூறப்பட்டன.

நாடிய மண்டலம் மூன்றும் நலம்தெரிந்*(து)*
ஓடும் அவரோ*(டு)* உள்இருபத் தைந்தும்
கூடினர் கூடிக் குறிவழி யேசென்று
தேடினர் தேடித் திகைத்திருந் தார்களே. ***#2146***

*(*அத்துவாக்களைத் தரிசிக்க, அஃதாவது உள்ளபடி நேரிலே காண விரும்பியவர்கள் பிராசாத நெறியில் நின்று*)* உடம்பிலே கீழிருந்து பாவிக்கப்படுகின்ற நெருப்பு மண்டலம், நீர் மண்டலம், நிலா மண்டலம் - என்னும் மூன்று மண்டலங்களை உள்ளே உணர்ந்து இடை கலை, பிங்கலை வழியாக ஓடுகின்ற அந்தத் துணைவரோடு தாமும் ஓடித் தூல சூக்கும தத்துவங்களாகிய இருபத்தைந்து தத்துவங்களைக் கண்டார்கள். அதன் பின்பு அந்தத் துணைவரால் ஆகாமையின், குரு காட்டிய அந்தக் குறியான வழியிலே சென்று பர தத்துவங்களைத் தேடினர். அவ்வாறு தேடியும் அவை தரிசனப்படாமையால், ஒன்றும் தோன்றாது திகைத்து நின்றுவிட்டார்கள்.

விளக்கவுரை

'ஓடும் அவர்' - என்றது உருவகம். ஆன்ம தத்துவம் இருபத்து நான்கு, புருட தத்துவம் ஒன்று இவை இருபத்தைந்து தத்துவம். வித்தியா தத்துவங்கள் 'புருடன்' என ஒன்றாய் அடக்கப் பட்டன. ஆன்ம தத்துவம் தூலமும், வித்தியா தத்துவம் சூக்குமமும் ஆகும். சிவ தத்துவம் பரம். அஃதாவது அதிசூக்குமம். தூல சூக்கும தத்துவங்கள் சகலர் பிரளயாகலர் கட்குச் சரீரமாய் அமைதலால், அவை யோகக் காட்சியில் காணப் படுவவாயின. 'உள் இருபத்தைந்து' - என்றதும் இதுபற்றி, சிவ தத்துவம் அவ்வான்ம வருக்கத்தினருக்கு வேறாய் நிற்றலின், அவை அங்ஙனம் காணப்படாவாயின.

சிவ தத்துவங்களையும் அனுபவமாக உணர்ந்த பின்பே ஆன்மாச் சிவத்தை அடைய இயலும். தத்துவம் முப்பத்தாறும் நிவிர்த்தி முதலிய ஐந்து கலைகளில் அடங்கியுள்ளன. ஏனை நான்கு அத்துவாக்களும் தத்துவத்தில் அடங்கிவிடும். ஆகவே, தத்துவங் களைக் கண்டுவிட்டால், கலைகளைக் காண்டலும் எளிதில் கூட, அத்துவாக்கள் அனைத்தும்

காணப்பட்டனவாய்விடும்.
இதனால், அத்துவாக்களில் சில பகுதிகளைக் காணுமாறும் கூறப்பட்டது.

சாக்கிர சாக்கிர மாதித் தலையாக்கி
ஆக்கிய தூலமள வாக்கிஅ தீதத்துத்
தாக்கிய அன்பான தாண்டவம் சார்ந்தது
தேக்கும் சிவமாதல் ஐந்தும் சிவாயமே. *#2147*

'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை (ஏனைக் கிரியா மந்திர யோக மந்திரங்களைப் போல எண்ணாமல், உண்மையை அனுபவமாக உணர்விக்கும் ஞான மந்திரமாகக் கொண்டு) சகலசாக்கிரத்தில் (சகலஐந்தவத்தைகள் நிகழாதவாறு தடுத்து,) ஞானவத்தைகளாகிய சுத்த சாக்கிரம் முதலியனவே நிகழுமாறு, அந்தச் சாக்கிரம் முதலிய ஐந்திலும் ஐந்து வகையாகச் சுத்த மானதம் ஆகிய அறிவினாலே கணித்து, ஆதாரங்கள் ஆறும், அவற்றிற்கு மேல் ஏழாவதாகிய நிராதாரமும் உடம்பளவினவாய் நீங்க, உடம்பைக் கடந்த துவாதசாந்தமாகிய மீதானத்தில் சென்று பொருந்திய அன்பே வடிவாய் நிகழும் திருக்கூத்தை உயிர் சென்று அடைவதே, எல்லையில் இன்பத்தைச் சிவம் பெருக்கி, அதற்கு வழங்குகின்ற சிவமாம் நிலையாகும்.

விளக்கவுரை

'நமசிவாய' என்பதை ஒரு பெயராக்குதற் பொருட்டு அதன் ஈற்றில் மகரமெய் புணர்க்கப்படுதலை, 'நமச்சிவாயம்சொல்ல வல்லோம்'3 என்னும், அப்பர் திருமொழியால் உணர்க. 'நமச் சிவாயம்' என்பதை 'சிவாயம்' என்றது முதற்குறை 'நமசிவாயம் ஐந்தும்' எனமாற்றி முதலிற் கூட்டி, 'ஐந்தினையும் சாக்கிர சாக்கிரம் ஆதியில் தலை முதலாக ஆக்கி' - என உரைக்க. தலை - முதல். முதலாவது. நமசிவாய இரண்டாவது, சிவாயநம. மூன்றா வது,சிவாய, நான்காவது,சிவ. ஐந்தாவது, சி. இவையே சுத்த சாக்கிரம் முதலிய ஐந்திலும் கணிக்கும் முறை. 'தூலம்' - என்றது உடம்பை 'அதீதம்', 'கடந்தது' என்னும் பொருளது.
இவ்வியல்பினை,

'ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல்க உந்தீபற;
விமலற் கிடமதென் றுந்தீபற'

என்னும் திருவுந்தியாரால் உணர்க. 'ஆதார நிராதாரயோகங்கள் பாவனை மாத்திரமே' என்பதை அந்நூல்.

'ஆக்கில் அங் கேஉண்டாய், அல்லதங் கில்லையாய்ப்
பார்க்கில் பரமதன் றுந்தீபற;
பாவனைக் கெய்தாதென் றுந்தீபற'

எனக் கூறிற்று.*1* இந்தப் பாவனாயோகங்கள் ஆன்மாத் தன் முனைப்பு அறுதற்குரிய சாதகங்களாம். அச்சாதகங்களால் அம்முனைப்பு அற்றால், ஆன்மா 'யான்' என்றும், 'எனது' என்றும் எழுந்து உலகத்தில் சென்றும் பற்றும் நிலை ஒழியும். அஃதொழிந்த பொழுது, மீதானத்தில் இறைவனது திருக்கூத்தின், சிலம்பொலி கேட்கும்' அது கேட்டவுடன் ஆன்மா இல்லார்க்குக் கிழியீடு நேர் பட்டாற் போலப் பேரார்வத்துடன் ஓடி அவனையே அடைந்து அவன் மீதே அன்பு செலுத்தி அவனது இன்பத்தில் அழுந்தியிருக்கும். அதனைத் திருக்களிற்றுப்படியார்,

'ஓசையெலாம் அற்றால் ஒலிக்கும் திருச்சிலம்பின்
ஓசை வழியேசென் றொத்தொடுங்கி - ஓசையின்
அந்தத்தா னத்தான் அரிவையுடன் அம்பலத்தில்
வந்தொத்தான் அத்தான் மகிழ்ந்து'.*3*

என விளக்கிற்று.

இவ்வெண்பாவில் கூறப்பட்ட அந்த நிலையே இங்கு அதீதம் எனப்பட்டது.

'எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம் மேவற் றாகும்'.

*(*தொல், பொருள் - பொருளியல்.*)* எனத் தொல்காப்பியரும், அவ்வாறே,

'இன்பில் இனிதென்றல் இன்றுண்டேல் இன்றுண்டாம்;
அன்பு நிலையே அது,' * *திருவருட்பயன் - *80.*

என உமாபதி தேவரும் கூறியவாறு. அன்பே இன்பத்திற்குக் காரணம் ஆதலின், ஆனந்த தாண்டவத்தை உயிரினது அன்பான தாண்டவம் என்றும், அந்நிலையில் அந்த ஆனந்தத்தை வழங்குகிற சிவத்தை. *(*இன்ப வெள்ளத்தைத்*)* தேக்கும் சிவம் என்றும் கூறினார். அன்பே சிவம். *(*முதல் தந்திரம் - அன்புடைமை*)* என்றதும் இங்குக் கூறிய அன்பையே என்பதையும் இதனானே உணர்க.

அன்பு நிலையே ஆனந்த நிலையாம் அன்றி வெறும், அறிவு நிலை ஆனந்த நிலை ஆகாமையை இங்கு உணர்ந்துகொள்க.

இதனால், 'அத்துவாக்களைக் கடக்குமாறும்' கடந்தவழி உளதாகும் பயனும் கூறப்பட்டன.

10.6.சுத்த நனவாதி பருவம்

நனவாதி தூலமே சூக்கப் பகுதி
அனவான ஐயைந்தும் விந்துவின் சத்தி
தனதாம் உயிர்விந்து தான்நின்று போந்து
கனவாம் நனவில் கலந்ததிவ் வாறே. **#*2148***

கீழாலவத்தையாய் யாவராலும் நன்கு உணர நிகழும் கேவல சாக்கிரம்

முதலிய ஐந்தையும் போல்வனவே, நுண்ணறி வுடையோரால் மட்டும் ஊன்றியுணரப் படுகின்ற மத்தியாலவத்தை யாகிய சகல சாக்கிரம் முதலிய ஐந்தும். அந்த ஈரைந்து அவத்தை களிலும் உள்ள இருபத்தைந்து தத்துவங்களும் சுத்த மாயையிலும் உள்ளன. (யோகாவத்தையில் அவை செயற்படும்) அவைகளி னின்றும் உயிர் தனது உணர்வு விடுபட்டுச் சென்று, திருவருளில் முன் பெல்லாம் தான் கண்டு வந்த கனவு போல உணரப்படுகின்ற காட்சியில் தோய்கின்ற நிலையே சுத்த சாக்கிரம் முதலிய சுத்தாவத்தைகளாம்.

விளக்கவுரை

'கேவல ஐந்தவத்தைகளை உவமையாகப் பற்றிச் சகல ஐந்தவத்தைகளின் உண்மையை உணர்தல் போல, அவ்விரண்டையும் உவமையாகப் பறஅறிச் சுத்த ஐத்தவத்தைகளின் உண்மையை உணர்ந்து கொள்ளல் வேண்டும்' - எனவும்,

பிரகிருதி மாயை, அசுத்த மாயை இவற்றின் தொடர்பு கீழாலவத்தை மத்தியாலவத்தைகளோடு ஒழிய, யோகாவத்தையில் சுத்த மாயையின் தொடர்பு மட்டுமே உளதாம்' - எனவும்,

'அந்தச் சுத்தமாயைத் தொடர்பும் நீங்கித் திருவருள் பற்றாக நிகழ்வனவே சுத்தாவத்தைகள்' - எனவும் கூறியவாறு. யோகாவத்தை களின் உண்மை யோக நூல்களால் விளங்கும்.

'இங்கு, 'சுத்தம்' எனப்படுவது உடம்போடு கூடி நிற்கும் பொழுதே திருவருள் வயப்பட்டு நிற்பது ஆகலின், இது சகலத்திற் சுத்தமே, 'தனியான சுத்தம் வேறு உண்டு' என்பது மேலேயும் குறிக்கப்பட்டது.

'அசுத்த மாயையில் உள்ள தத்துவங்களைப் போல சுத்த மாயையும் அவ்வகைத் தத்துவங்கள் உள்ளன என்பது சிவாகமங் களின் துணிபு' என்பதைச் சிவஞானமாபாடியம் முதலியவற்றால் உணர்க.

'அன்ன' - என்பது இடைக்குறைந்து நின்றது. 'அன்னவற்றில் ஆன' என உருபுவிரித்து, 'விந்து சத்தியில் உள்ளன' என முடிக்க. 'இன்' வேண்டாவழிச் சாரியை, 'உயிர்' என்றது அதன் உணர்வை, 'கலந்ததும் இவ்வாறே' - என, இறந்தது தழுவிய எச்ச உம்மை விரிக்க. 'இவ்வாறு' எனச் சுட்டியது, முன்னர், 'தூலம், சூக்கம்' என்றவற்றை.

இதனால், மேல், 'சாக்கிர சாக்கிர மாதிதனில் ஐந்தும் என்னும் மந்திரத்தில் பொதுவாகச் சுட்டிப்போந்த சுத்தாவத்தைகளின் உண்மை தெளிவிக்கப்பட்டது.

நனவில் அதீதம் பிறந்தார் கிடந்தார்
நனவில் துரியம் நிகழ்ந்தார் தவழ்ந்தார்
நனவில் சுழுத்தி நடந்தார் வளர்ந்தார்
நனவில் கனவோடல் நற்செய்தி யானதே. ***#2149***

'சாக்கிரத்தில், 'அதீதம்' என்னும் நிலை தோன்றப் பெற்றவர், தம்மால் உணரப்பட்ட பொருளையும் தம்மையும் வேறு வேறாக அறிதல் இன்றி அப்பொருளேயாய் அழுந்தித் தற்போதத்தை இழந்திருப்பர். அதனால் அவர், இடம் பெயரமாட்டாது கிடந்த கிடப்பில் கிடக்கும் பசுங்குழவி போல்பவாவர்.

சாக்கிரத்தில் 'துரியம்' - என்னும் நிலை தோன்றப் பெற்றவர், தம்மால் உணரப்படும் பொருளையும், தம்மையும் வேறு வேறாக அறிந்து, அந்த அளவில் அனுபவிக்கும் உணர்வு உடையவராவர், அதனால், அவர் இடம் பெயர்ந்து தவழ்ந்து செல்லும் குழவி போல்வர்.

சாக்கிரத்தில், 'சுழுத்தி' என்னும் நிலை தோன்றப் பெற்றவர் உணரப்படும் பொருளையும், உணரும் தம்மையும் வேறுவேறாகப் பகுத்து நன்குணர்வர். அதனால் அவர் வளர்ச்சியடைந்து நன்கு நடக்கும் சிறுபிள்ளைகள் போல்வர்.

சாக்கிரத்தில், 'சொப்பனம்' என்னும் நிலை தோன்றப் பெற்றவர், பொருளில் மேலும் மேலும் நாடும் நாட்டம் மிகுந்து இருப்பர். அதனால் அவர் நன்கு ஓடி ஆடும் பருவச் சிறுபிள்ளை களோடு ஒப்பர். (மகளிரில், 'பெதும்பைப் பருவத்தாரோடு ஒப்பர்' எனலாம்.)

சாக்கிரத்தில், 'சாக்கிரம்' என்னும் நிலை தோன்றப் பெற்றவர் வாழ்க்கையில் முழுமையாக ஈடுபடுவர். அதனால் அவரக்ள கட்டிளமையுடையவரோடு ஒப்பர். (எனினும், ஆடவர்களில் பிரமசாரிகளையும், பெண்டிரில் கன்னிகைகளையும் இங்கு உவமையாகக் கொள்க.)

விளக்கவுரை

இம் மந்திரம். 'சாக்கிரத்தில் சகல மாகிய மத்தியா லவத்தையின் இயல்பும், சாக்கிரத்தில் சுத்தமாகிய நின்மலா வத்தையின் இயல்பும், ஒரு தன்மையனவே' என உணருமாறு அவற்றின் இயல்புகளைப் பொதுமையில் வைத்து உடலினைச் சிலேடையாக உணர்த்திற்று.
மத்தியாலவத்தையில், உணரப்படும் பொருள் உலகமும், நின்மலாவத்தையில், உணரப்படும் பொருள் சிவமும் ஆகின்ற இவ்வளவே வேறுபாடு என்க. இதனை,
'ஆணவத்தோடு அத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோடு அத்துவிதம் சாருநாள் எந்நாளோ'
என்னும் தாயுமானவர் வாக்கும் ஓராற்றான் விளக்கும்.
முன்னர் நின்ற, 'பிறந்தார்' முதலிய மூன்றும் 'பிறக்கப் பெற்றார்' என வினையாலணையும் பெயராய எழுவாய்கள். பின்னர் நின்ற, 'கிடந்தார்' முதலிய மூன்றும் பயனிலைகள். கிடந்தார் முதலியவரோடு ஒப்பவரை, 'கிடந்தார்' முதலியோராகவே உபசரித்தார். 'கிடந்தார்' என்றது

முதலியன அப் பருவத்தினரையே. அதிகாரப் பெயருள் 'பருவம்' என்றதன் பொருள் இதனான் நன்கு விளங்குகின்றது.
ஈற்றடியில், 'நனவிற் கனவு ' என்பதன் பின் 'தோன்றப் பெற்றார்' என்பதும், 'ஓடல்' என்பதன் பின்' உடையார்' என்பதும் தொகுக்கப்பட்டன.
'நற்செய்தி' என்றது அதனை உடைய பருவத்தைக் குறித்தது. அப்பயனிலைக்கு, முன்னர்ப் போந்தவற்றுக்கு இயைய, 'நனவில் சாக்கிரம் தோன்றப் பெற்றார்' என்னும் எழுவாய் வருவித்ததுக் கொள்க.
இதனால் சாக்கிரத்தில் நிகழும் இருவகை ஐந்தவத்தைகளின் இயல்பு உண்மையில் வைத்து இனிது விளக்கப்பட்டது.

செறியுங் கிரியை சிவதத் துவமாம்
பிறிவில் சுகயோகம் பேரருள் கல்வி
குறிதற் றிருமேனி குணம்பல ஆகும்
அறிவில் சராசரம் அண்டத் தளவே. ***#2150***

சிவநெறி மார்க்கம் நான்கனுள் சற்புத்திர மார்க்க மாகிய கிரியையில் நிற்பின் சிவ தத்துவங்கள் ஐந்தும் காட்சிப்படுவன வாம். சிவத்தோடு தன்னை ஒன்றவைத்து உன்னும் சகமார்க்க மாகிய யோகத்தால் சிவனது திருவருளை நிரம்பப் பெறுதல் கூடும். சிவனது ஞானத்தை உணர்தலாகிய சன்மார்க்கத்தால் ஆன்மாவினது ஞானமும் சிவஞானமேயாய், அதுவே தற்சொரூபமாய் நிற்கும். அந் நிலையில் சிவனது எல்லாக் குணங்களும் ஆன்மாவுக்கு உளவாகும். அப்பொழுது ஆன்மாவும் சிவனைப் போலவே எங்கும் நிறைந்து விளங்கும்.

விளக்கவுரை

கல்வி - வித்தை; ஞானம், என்றது சிவ ஞானத்தை. குறி - குறித்தல்; உணர்தல்; முதனிலைத் தொழிற்பெயர். 'தன்' - என்றது ஆன்மாவை. சிவமாம் தன்மையை எய்தினமை தோன்ற, 'திரு மேனி' என்றார்.
'பலவும்' என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று. 'அந்த அறிவில்' எனச் சுட்டு வருவிக்க. 'அளவு' என்பது 'சராசரம்' என்றதனோடும் இயையும்.
சரியை, கிரியையிற் செலுத்துமுகத்தானே பயன்படுதலின், அஃதொழிந்தவற்றையே கூறினார். கிரியை, யோகம், கல்வி ஆகிய காரணங்கள் காரியங்கலாகவே உபசரிக்கப்பட்டன. மூன்றாம் அடி தளை மயங்கி வந்தது.
இதனால், ஆன்மா நின்மலாவத்தையை அடையும் முறை கூறப்பட்டது.

ஆதி பரம்சிவம் சத்தி சதாசிவம்
ஏதமில் ஈசன்நல் வித்தையாம் தத்துவம்
போதம் கலைகா லமேநியதி மாயையும்
நீதி அராகம் நிறுத்தினன் என்னே. ***#2151***

'சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், சுத்தவித்தை' என்னும் சிவ தத்துவங்களையும், அவற்றின் கீழ் உள்ள 'கலை, காலம், நியதி, வித்தை, அராகம், மாயை' என்னும் வித்தியா தத்துவங் களையும் அநாதி நிலையினின்றும் இறங்கி ஆதியாய் நிற்கின்ற சிவன் படைத்தருளினான் என்று உணர்க.

விளக்கவுரை

'ஆம் தத்துவம்' என்றது 'அராகம்' என்பதனோடும் சென்று இயையும். 'போதம்' என்றது 'வித்தை' என்னும் பொருட்டாய்ப் பொதுவாக 'வித்தியா தத்துவம்' எனவும், சிறப்பாக அவற்றுள் ஒன்றாகிய 'வித்தை' என்றும் இருபொருள் தந்து நின்றது. கலை முதலிய ஐந்தும் கூடிய நிலையிலே ஆன்மா 'புருடன்' எனப்படுவ தன்றி, புருட தத்துவம் தனித் தத்துவம் அன்றாதலின், அதனை இங்குக் கூறிற்றிலர்.
இதனால், அத்துவாக்களில், 'ஆறாறு' எனப்பட்ட தத்துவங் களில் சிவதத்துவம் ஆவனவும், வித்தியா தத்துவம் ஆவனவும் இவை என்பது கூறப்பட்டது.

தேசு திகழ்சிவம் சத்தி சதாசிவம்
ஈசன்நல் வித்தை - இராகம் கலை காலம்
மாசகல் வித்தை நியதி மகாமாயை
ஆசில் புருடாதி ஆன்மா - ஈ ராறே. *#2152*

(மேற்கூறிய இருவகைத் தத்துவங்களையும் கூட்டித் தொகை காணின்) 'சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், சுத்த வித்தை, கலை, காலம், நியதி, வித்தை, அராகம், புருடன், மாயை' - எனப் பன்னிரண்டாம். இவற்றுள் 'புருடன்' என்பது ஏனையபோல ஒரு தத்துவம் அன்று. கலை முதலிய ஐந்தனோடும் கூடி நிற்கும் ஆன்மாவே.

விளக்கவுரை

இங்ஙனம் தொகையை வேறு மந்திரத்தில் வைத்துக் கூறியதற்குப் பயன், 'புருடன்' என ஒரு தத்துவத்தைக் கூட்டியதும், அது பற்றிய விளக்கத்தைத் தந்ததும் ஆகும். ஆதி - முதல். என்றது, 'தத்துவம்' என்றபடி. செய்யுள் நோக்கி வித்தியாதத்துவங்கள் முறை பிறழ வைக்கப்பட்டன. சைவத்தின் சிறப்புத் தத்துவங்களை மட்டுமே கூறினார், ஆன்ம தத்துவங்கள் பிறராலும் கொள்ளப்பட்டு, விளங்கிக் கிடத்தல் பற்றி.
இதனால், மேற்கூறப்பட்ட தத்துவங்கட்குத் தொகை கூறப்பட்டது.

ஆணவம் மாயையும் கன்மமும் ஆம்மலம்
காணும் முளைஅத் தவிடுமி ஆன்மாவும்
தாணுவைப் போலாமல் தண்டுல மாய்நிற்கும்

பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே. **#2153**

'ஆணவம், மாயை, கன்மம்' - என மலங்கள் மூன்றாம். அவற்றை எதிர்நிரல் நிறையாக வைத்து, அரிசிக்கு முளை, தவிடு, உமி - இவைபோல்வனவாக உணர்க. ஆன்மாவும் சிவனைப் போலச் சித்துப் பொருளேயாயினும், அரிசி போன்ற ஒரு தன்மையை அஃது உடைமையால் அரிசிக்கு உமி முதலிய குற்றங்கள் அநாதியாக இருத்தல் போல, ஆணவம் முதலிய குற்றங்கள் அநாதியே உளவாக, அது சிவனைப் போலப் பதியாகாது, பசுவேயாய் நின்றது. உனது தன்மையை இங்ஙனம் நீ உள்ளவாறு உணர்ந்து, பாசங்களில் பற்றுக் கொள்ளாது விடுத்துப் பதியாகிய சிவனைப் பற்றி இன்புறுவாயாக.

விளக்கவுரை

'முளை அத்தவிடுமி போலக் காணும்' என மாற்றி உரைக்க. 'ஆன்மாவும்' என்னும் உம்மை இறந்தது தழுவிய எச்சம். தண்டுலம் - அரிசி. ஆக்கம், உவமை குறித்தது நின்றது, ஆணவத்தைப் பிற சமயிகள் கொள்ளாமையால், 'மலம் மூன்று' என்பதை எடுத்தோதி வலியுறுத்தினார்.

இதனால், அத்துவாக்கள் யாவும் மாயையேயாக, அவை பற்றி வேறும் இருமலங்கள் ஆன்மாவிற்கு உளவாதல் கூறப்பட்டது.

'மும்மலம் நெல்லி னுக்கு முளையொடு தவிடு மிப்போல்
மம்மர்செய் தணுவின் உண்மை வடிவினை மறைத்து நின்று
பொய்ம்மைசெய் போக பந்த போத்திருத் துவங்கள் பண்ணும்'
என்னும் சிவஞான சித்தியாரையும், அதற்கு மாதவச் சிவஞான யோகிகல் உரைத்த உரையையும் காண்க.

பசுக்கள் பலவண்ணம் பால்ஒரு வண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன்ஒருவண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன்கோல் போடின்
பசுக்கள் தலைவனைப் பற்றி யிடாவே. **#2154**

உலகில் பாலைத் தரும் பசுக்கள்யாவும் ஒரே நிறம் உடையன அல்ல; பல நிறம் உடையன. (அது போல, சீவர்களாகிய பசுக்களும், 'பசுத்துவம்' எனப்படும் பந்தத்தைத் ஒரே வகையாக உடையன அல்ல; ஒரே வகையை உடையனவாயின், பந்தத்தினின்றும் விடுபடுதலும் எல்லாப் பசுக்களுக்கும் ஒரு காலத்திலே நிகழ்தல் வேண்டும். அவ்வாறில்லாமையால், பந்த வேறுபாடு பலதிறப் பட்ட தாம்.) ஆயினும், பசுக்கள் தரும் பயனாகிய பால் ஒரு நிறமேயாம். (அது போல அவை அடையும் வீடுபேறு ஒருதன்மையுடையதே.) இனிப் பசுக்களை மேய்க்கின்ற ஆயன் ஒருவன். (ஆகவே, அவன் ஒரு தன்மையனேயன்றிப் பல தன்மை உடையவன் அல்லன். (அதுபோலச் சீவர்களை, 'பெத்தம்,

முத்தி' என்னும் இரு நிலைகளிலும் உடன்நின்று நடாத்தும் பதி ஒருவனே, ஆகையால் அவன் பதித்தன்மை ஒன்றே உடையனன்றிப் பசுக்கள் போலச் சார்த்ததன் வண்ணமாய்த் தன்மை வேறுபடுபவனல்லன்.)
ஆயன் பசுக்களை மேய்க்காமல் அவற்றின் இச்சைப்படி விட்டு விடுவானேயானால் இவை ஆயனைச் சென்று சேராமல், காட்டில் திரிந்து அல்லற்பட்டே ஒழியும். (அதுபோல, சிவன் சீவர்களைக் கண் ணெடுத்துப் பார்க்காமல் விட்டுவிடுவானேயானால், அவை அவனை அறிந்து இன்புற மாட்டா, பந்தத்தால் விளையும் துன்பத்தில் கிடக்கும்.
'மேய்ப்பாரும் உண்டாய், வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாய்ப் பொழியுமே'
எனப் பின்னரும் பசுக்களுக்கு மேய்ப்பான் இருத்தல் இன்றியமையாது எனக் கூறுவார்.)

விளக்கவுரை

இம்மந்திரம் ஒட்டணி பெற்று நின்றது. 'பசுக்கள் தலை வனைப் பற்றி விடாவே' எனப் பாடம் ஓதுபவர்கள்; 'சிவனது அருள் இன்றியே சீவர்கள் சிவனை அடைய இயலும் எனக் கூறுவோராவர்.
'பசுக்கள் கொட்டிலை அடைந்த பின்பும் ஆயன் அவைகளைப் புறக்கணித்துவிட்டு விட்டொழிவான் அல்லன்' என்பதையும் நோக்குக. இதனால், 'மேய்க்கும் கோல்' என்பது திரோதான சத்திமட்டும் அன்று; அருட்சத்தியுந்தான் - என்க.
பால் பிறர்க்கு மட்டுமே பயன் படுவன அல்ல. கன்றுகளின் நலத்தில் கருத்துடைமையால், அக்கன்றுகளை வளர்த்தல் பசுக்கள் அடைகின்ற பயனேயாம். மேலும் வறட்சுப் பசுக்கள் போற்றப் படாமல், மிக்க பாலைத் தரும் பசுக்களே போற்றப்படும். அதனால் பால் அதனைத் தரும்பசுக்கள் அடையும் பயனுமாகும். ஆகவே அது சீவன்கள் அடையும் வீடுபேற்றிற்கு உவமையாதற்கு இழுக்கில்லை.
இதனால், 'மேற்கூறப்பட்ட மலங்கள் உயிர்தோறும் வேறு வேறு வகையாய் உள்ளன' என்பது கூறப்பட்டது.

உடல் இந் தியம்மனம் ஒண்புத்தி சித்தம்
அடல்ஒன் றகந்தை அறியாமை மன்னிக்
கெடும்அவ் வுயிர்மயல் மேலும் கிளைத்தால்
அடைவது தான்ஏழ் நரகத்து ளாயே. ***#2155***

தாத்துவிகங்களாகிய உடம்பு, அதில் கரணங் களாய்ப் பொருந்தியுள்ள ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள், அந்தக் கரணங்கள் ஆகிய இவற்றின் இயல்பினை அறியாமையால் அவை களையே 'தான்' என மயங்கிக் கெடுகின்ற அந்த உயிர், (அந்த அறியா மையை நீக்கிக்

கொள்ள முயலாமல்) மேலும் மேலும் அந்த அறியா மையையே வளர்த்துக் கொண்டிருக்குமானால், அது அடைவது ஏழு நரகங்களிலும் சென்று வீழ்ந்து அங்குள்ள துன்பத்தைத்தான்.

விளக்கவுரை

'வீடு பெறுதல் இயலாது' - என்றபடி. 'உடல்' என்பது பெரும்பான்மையும் தூல உடம்பையே. இந்தியம், 'இந்திரியம்' என்பதன்மரூஉ. நல்வினைசெய்வார் அரியர் ஆகலின், அதன் பய னாகிய சுவர்க்கத்தை அடைதலைக் குறியாதொழிந்தார்' இந்நிலை யிலே நிற்கும் உயிர்கட்குச் சுத்த நனவாதிகள் நிகழா என்பது கருத்து. எனவே, தத்துவங்களின் இயல்பை உணருமுகத்தால் தம்மை அவற்றின் வேறாக உணர்ந்த உயிர்கட்கே திருவருள் கிடைக்கச் சுத்த நனவாதிகள் உளவாம். சிவஞானபோதத்திலும்,

'இவ்வான்மாத் தன்னை அவ்விந்திரியத்தின் வேறாவான் காணவே தமது முதல் சீபாதத்தை அணையும் '*

என்றது காண்க. இங்குக் கூறப்பட்ட தத்துவ தாத்துவிகங்கள் வைதிக சமயத்தார் பலர் கூறுவனவேயாதலின், அவற்றை எடுத்தோத்த தாகக்கூறாது, அனுவாதமாகக் கூறினார். சிவாகமங்கள் நரகங்களைப் பலவாகக் கூறினும் 'ஏழ் நரகம்' - என்பது ஒரு பொது வழக்கு. இதனால், தத்துவஞானத்தவரே சுத்தநனவாதி பருவங்களைத் தலைப்படுவாராதல் கூறப்பட்டது.

தற்றெரி யாத அதீதம்தன் ஆணவம்
சொற்றெரி கின்ற துரியம்சொற் காமியம்
பெற்ற சுழுத்தி பின்பேசுறும் காதலாம்
மற்றது உண்டி கனாநன வாதலே ***#2156***

'கேவலம், சகலம், சுத்தம்' - என்னும், காரண அவத்தை மூன்றனுள் கேவலத்தில் துரியாதீதம், உயிர், 'நான்' என் -கின்ற தன்னுணர்வும் இன்றி, ஆணவத்தில் அழுந்தி அதுவேயாய்க் கிடந்த நிலை 'யான்' என்னும் உணர்வு முகிழ்க்கின்ற கேவலத்தில் துரியம், மேற் குறித்த நிலையில் இறைவன் அவ்வுயிருக்கு மூலகன் மத்தைக் கூட்டு வித்த நிலை. கேவலத்தில் சுழுத்தி, மூலகன்மத்தோடு காரண சரீரமாகிய மாயா தத்துவத்தைக் கூட்டிய நிலை. இவைகளில் ஆன்மாவிற்கு வினையை ஈட்டுதல் நுகர்தல்கள் இல்லை, கேவலத்தில் சொப்பனம் கால நியதிகளைக் காட்டுவித்த நிலை. சாக்கிரம் கலை வித்தை அகாரகங் களைக் கூட்டிய நிலை. இந்தச் சொப்பன சாக்கிரங்களில் தான் உயிர் வினைகளை ஈட்டுதலும் நுகர்தலும் நிகழும்.

விளக்கவுரை

இவற்றுள் முதல் மூன்றினையும் முறையே 'அநாதி கேவலம், விஞ்ஞான கேவலம், பிரளயகேவலம்' - என்பர். 'காதல்' என்றது மயக்கத்தை. அஃது ஆகுபெயராய் மாயையைக் குறித்தது.
இதனால், மும்மலங்களைக் கூறிய இயைபு பற்றி, அவற் -றோடு தொடரும் கேவல ஐந்தவத்தையின் இயல்புகள் கூறப்பட்டன.

நனவிற் கனவில்லை ஐந்தும் நனவில்
கனவிலாச் சூக்குமம் காணும் சுழுத்தி
தனில்நுண் பகுதியே தற்கூட்டு மாயை
நனவில் துரியம் அதீதம் தலைவந்தே. *#2157*

நனவில் கனவு இல்லாமைபோலக் கனவிலும் நனவு இல்லையாதலின், சுழுத்தியில், சுழுத்தி முதலிய மூன்று நுட்ப அவத் -தைகள் மட்டுமே உள்ளனவாம். (அவைகளை 'சுழுத்தியிற் சுழுத்தி, சுழுத்தியில் துரியம், சுழுத்தியில் துரியா தீதம்' எனக் கூறிக் காண்க.)
இங்ஙனம் கூறியதனானே, சொப்பனத்தில் சாக்கிரம் ஒழிந்த நான்கும் உளவாதல் பெறப்பட்டது.
நனவில் சொல்லப்படும் துரியமும், துரியாதீதமும் தாமே தனித்து நிகழும் நிலையில் துரியத்தில் இரண்டும், துரியாதீதத்தில் அஃது ஒன்றுமாகவே நிகழும். (அவை, 'துரியத்தில் துரியம்' துரியத்தில் துரியாதீதம்' எனவும், 'துரியாதீதத்தில் துரியாதீதம், எனவும் சொல்லப்படும்.)
'ஐந்துசாக்கிரத்தில்; நான்கு கனவினில்' என்னும் சிவஞான சித்திச் செய்யுளுக்கு இதுவும் பொருளாமாறு அறிந்து கொள்க.

விளக்கவுரை

'இதனுட் கூறியன யாவும் கீழாலவத்தை' என்க.
பகுதி - மூலப்பகுதி. தற்கூட்டு மாயை - கீழாலவத்தையில் ஆன்மாவிற்குக் கூட்டப்படும் மாயை. 'அது மூலப்பகுதியே' என்ற படி. 'வந்தவழி' என்பது 'வந்து' எனத்திரிந்தது. வந்தவழித் தாமே உளவாம் என்க. மூன்றாம் அடியை இறுதியில் கூட்டியுரைக்க. முதற் கண் 'நனவிற் கனவில்லை' என்றது 'கனவில் நனவு இல்லை' என்பதனைத் தெளிவிக்கக் கூறிய உவமை.
இதனால், கீழாலவத்தை பற்றிய சில நுட்பங்கள் கூறப்பட்டன.

ஆறாறில் ஐயைந் தகலல் நனாநனா
ஆறாம் அவைவிட வாகும் நனாக்கனா
வேறான ஐந்தும் விடவே நனாவினில்
ஈறாம் சுழுத்தி இனிமாயை தானே. *#2158*

தத்துவம் முப்பத்தாறில் ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும், வித்தியா தத்துவத்தில் புருடன் ஒன்றும் ஆக இருபத்தைந்து தத்துவங்களை ஆன்மாத் தன்னின் வேறாகக் கண்டு நீங்குதலே சகலத்தில் சுத்த

சாக்கிரமாகும்.

பின்னர், வித்தியா தத்துவத்தில் எஞ்சியுள்ள ஆறு தத்துவங் களையும் அவ்வாறு கண்டு நீங்குதலே சகலத்தில் சுத்த சொப்பனமாகும்.

பின்னர், சிவ தத்துவம் ஐந்தனையும், 'இவை பிரளயாகலர் சகலர்கட்கு பிரேரக மாத்திரையாயும், விஞ்ஞானகலருக்குத் தனு கரண புவன போகங்களாயும் பயன்பட்டுத் தோற்றமும் அழிவும் உடைய அநித்தியப் பொருள்களேயன்றி, இவை தாமே சிவனது இலய போக அதிகாரத் திருமேனிகளாகிய நித்தியப் பொருள்கள் அல்ல; அத் திரு மேனிகள் இவற்றின் வேறாய்ச் சத்தி வடிவாவனவே' எனத் தெளிந்து, அவை பற்றியிருந்த மயக்கத்தின் நீங்குதலே சகலத்தில் சுத்த சுழுத்தி யாகும்.

இவற்றிற்குப் பின் எஞ்சி நிற்பது காரண நிலையில் உள்ள சுத்த மாயையே,

விளக்கவுரை

'சிவ தத்துவங்கள் பிரேரக காண்டம்' - என்பதை நோக்காதார், 'அவை யின்றியும் வித்தியா தத்துவங்கள் நீங்கிய வழியும் சிவதத்துவங்கள் தொழிற்படும்' எனவும் இம்மந்திரத்திற்குப் பொருள் உரைப்பர்.

மலாவத்தைகட்கே தத்துவங்களின் தொழிற்பாடும், அவை யின்மையும் காரணமாவதன்றி, நின்மலாவத்தைக்கு அவை காரணம் ஆகாமையையும், 'நின்மலாவத்தை திருவருளானே நிகழ்வன' என்பதையும் அவர் நோக்கிலர்.

சகலத்தில் சுத்த சாக்கிரம் முதலியனவும் சகலத்தில் சகல சாக்கிரம் முதலியனபோல இலாடத் தானத்தே நிகழ்தல் பற்றி இவற்றையும் 'சாக்கிர சாக்கிரம் முதலியனவாகக் கூறுவர். எனினும் இடம் நோக்கி 'அவை இவை' எனக் கொள்ளப்படும்.

இம் மந்திரத்துட் கூறப்பட்டன நின்மலாவத்தைகளே.

இதனால், 'நின்மலாவத்தைகளாவன இவை' - என்பதை வகுத்துக் கூறத் தொடங்கி, முதல் மூன்றின் இயல்புகள் கூறப்பட்டன.

மாயையில் வந்த புருடன் துரியத்தில்
ஆய முறைவிட் டதுவும்தான் அன்றாகிச்
சேய்கே வலம் விந்து வும் செலச் சென்றக்கால்
ஆய தனுவின் பயன்இல்லை யாமே. ***#2159***

(முன்னை மந்திரத்திற் கூறியவாறு) உயிர் மாயா காரியங்களையெல்லாம் கடந்து எஞ்சி நின்ற காரண நிலையில் உள்ள சுத்த மாயை தாரகமாகச் சிவத்தை உணர்ந்து நிற்றலே சகல சாக்கிரத்தில் சுத்த துரியமாகும்.

பின்னர் ஆன்மா அந்த நிலையிலும் நில்லாமல் விட்டு நீங்கி, அந்தக் காரணமாயையும் தொடர்பின்றி நிற்கச் சிவமே தாரகமாக அதனை

உணர்ந்து நிற்றல் சகல சாக்கிரத்தில் சுத்த துரியாதீதமாகும்.
இந்நிலையில் உடம்பு இருந்தும் இல்லாததேயாம்.

விளக்கவுரை

'உடம்பு வழியாக மலவாசனைகள் உயிரைத் தாக்கா' என்பதாம். 'மாயையில் வந்த புருடன் துரியத்தில் ஆய முறை' என்றாரேனும், 'புருடன் மாயையில் வந்ததே துரியத்தில் ஆயமுறை' என்றலே கருத்தென்க. சேய்மை, 'சேய்' எனமுதனிலை மாத்திரமாய் நின்றது. 'சேய்மை' என்றது 'அதீதம்' என்றவாறு. கேவலம் - தனிமை; கட்டற்ற நிலை. 'விந்துவும் தன்னைவிட்டுச் செல்ல, உயிர் தான் சிவத்தில் சென்றக்கால், சேய்மைத்தாகிய கேவலமாம்' என்க.
இதனால், முன்னை மந்திரத்திற் கூறியவைபோக, எஞ்சி நின்ற இரண்டன் இயல்புகள் கூறப்பட்டன. இவை ஐந்தும் தச காரியத்துள் முதல் மூன்றினை ஒன்று கூட்டிப் பகுத்தன என்க.

அதீதத் துரியத் ததீனாம் ஆன்மா
அதீதத் துரியத் ததனால் புரிந்தால்
அதீதத் தெழுந்தறி வாகிய மானன்
முதிய அனலின் துரியத்து முற்றுமே. *#2160*

நின்மல துரியாதீத நிலையில் சிவனையன்றிப் பிறி தொன்றையும் தாரகமாகக் கொள்ளாமையால், சடத்தன்மை சிறிதும் இன்றித் தூய அறிவேயாய் நிற்கின்ற ஆன்மா, அந்நிலையில், பழஞ் சுடராகிய சிவனது அவ்வருள் வழியே, தொடர்ந்து அவனையே உணர்ந்துநிற்குமாயின், அவ் வருளால் தனது தூய்மை கெடாது, என்றும் அந்நிலையிலே நிற்கும் நிலை கைகூடுவதாகும்.

விளக்கவுரை

'அவ்வாறு செய்யாவிடில், மீளக் கீழ்நிலையை அடையும்' என்பதாம். 'துரியாதீதம்' என்பது, 'அதீத துரியம்' எனப் பின் முன்னாகி நின்றது. 'முதிய அனல்' என்பதைச் சுட்டும் 'அது' என்னும் சுட்டுப் பெயர், செய்யுள் பற்றி முன் வந்தது. 'அனல்' என்றது, சுடர் என்னும் பொருளது ஆதலின் 'அதனால்' என்றது 'அருளால்' என்றதேயாம். முதலடியை மூன்றாம் அடியாகவும் அனு வத்தித்துக் கூறியது. 'இங்குக் கூறுமாறு நில்லாவிடின் ஆன்மாத்தான் அரிதில் அடைந்த நிலையை இழந்துவிடும்' என்பது உணர்த்தற்கு. இயமானன், 'யஜமானன்' - என்பதன் திரிபு. 'வேள்வித் தலைவன்' என்பது இதன் பொருள். யஜமானன்' என்பது உலகவழக்கில் பொதுவாகவழக்கினும், செய்யுள் வழக்கில் உயிரையே குறித்தல் அன்றிப் பிறவகையில் பொருள் தாராது. முதுமை, பழமையைக் குறித்தது. 'அநாதி' என்பதை, 'பழமை என்றல் தமிழ்

வழக்கு. இறுதியில் உள்ள 'துரியம்', 'கடப்பு' என்னும் பொருளதாய்ப் பாசங்களைக் கடந்ததை உணர்த்திற்று'.
இதனால், அரிதிற் பெற்றதொன்றைப் பேணுமாறு கூறப்பட்டது.

ஐயைந்து பத்துடன் ஆனது சாக்கிரம்
கைகண்ட ஐயைந்தில் கண்டம் கனாஎன்பர்
பொய்கண்ட மூவர் புருடன் சுழுனையில்
மெய்கண் டவன்உந்தி மேவில் துரியமே. ***#2161***

பிரிந்தும், கூடியும் வரும் கருவிகளில் முப்பத் தைந்து கருவிகள் மட்டுமே கூடிச் செயற்படுவது கேவல சாக்கிரம். (இதுவும் சகல சாக்கிரம்போலப் புருவநடுவில் நிகழும்' என்பது மேற் பல இடங்களில் கூறப்பட்டது.)
சிவ தத்துவம் ஐந்தும், வித்தியா தத்துவம் ஏழும் ஆகப் பன்னிரண்டு தத்துவங்களும் ஆன்மாவை எப்பொழுதும் விட்டுக் நீங்குவன அல்ல, அதனால், 'புருடன்' என ஒன்றுபோலக் கூறுமிடம் எல்லாம் அவத்தை பேதத்தில் இப்பன்னிரண்டு தத்துவங்களும் கொள்ளப்படும். 'அவற்றுள் முப்பத்தைந்து கருவிகள் மட்டுமே கேவல சாக்கிரத்தில் தொழிற்படும்' என்றமையாலும், அவற்றுள் 'புருடன்' என்பது, மற்றும் பதினொரு கருவிகள் கூடியது ஆகையாலும், நாற்பத்தாறு கருவிகள் கேவல சாக்கிரத்தில் தொழிற்படும்.
கேவலசாக்கிரத்தில் செயற்படும் நாற்பத்தாறு கருவிகளாவன; ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, ஞானேந்திரிய விடய மாகிய சத்தாதி ஐந்து, கன்மேந்திரிய விடயமாகிய வசனாதி ஐந்து, அந்தக் கரணம் நான்கு, புருடன் ஒன்று, பிரணாதி வாயுக்கள் பத்து என்பன, 'புருடன்' என்பது பன்னிரண்டு கருவிகளை அடக்கியது - என்பது மேலே கூறப்பட்டது.
ஆன்மா புருவ மத்தியிலே நிற்பினும் தொண்ணூற்றாறு கருவிகளும் செயற்படின் சகல சாக்கிரமும், அவற்றுள் ஐம்பது கருவிகள் நீங்க, கேவல சாக்கிரமும் நிகழும் என்க.
சகல சாக்கிரத்தில் ஆன்மா புலன்களை அறிவதில் தீவிரமாய், நன்குணர்ந்து நிற்கும். கேவல சாக்கிரத்தில் ஆன்மாப் புலன்களை அறிந்தும் அறியாதது போன்ற மந்த உணர்வு உடையதாய் இருக்கும். இவை அவ்விரு சாக்கிரத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடு.
முப்பத்தைந்து கருவிகளில் ஞானேந்திரியம் ஐந்தும், கன் மேந்திரியம் ஐந்தும் ஆகப் பத்துக் கருவிகள் நீங்க, ஏனை இருபத் -தைந்து கருவிகள் மட்டும் செயற்படுவது கேவல சொப்பனம். இந்நிலையில் ஆன்மாக் கண்டத் தானத்தில் நிற்கும். கைகண்ட - சாக்கிரத்தில் நன்கு துய்க்கப்பட்ட.
அவ்விருபத்தைந்தில் சித்தம், பிராணன், புருடன் - ஆகிய மூன்று

கருவிகள் மட்டுமே செயற்படுவது கேவல சுழுத்தி. (பொய் என்றது ஐம்புலன்களை. 'சுழுனையில் பொய்கண்ட மூவர் உளர்' என இயைத்துக் கொள்க. 'இவருள் புருடனும் ஒருவன்' என்பதாம்.) 'சுழுத்தி நிகழும் இடம் இருதயம்' என்க.

பொருள்களை உணரும் ஆற்றல் உடைய புருடன் இரு -தயத்தை விட்டு உந்தியை அடைந்தால் அந்நிலை கேவல துரியமாம். அப்பொழுது பிராணன் மட்டுமே உளதாக இருவரே இருப்பர். (இரு கருவிகள் மட்டுமே அவ்விடத்தில் செயற்படும்' என்றபடி.) இங்குப் புருட தத்துவத்தையே உயிராக உபசரித்தார். 'உந்தி மேவில்' என்றதனால் முன்பு இருதயத்தில் நின்றமை பெறப்பட்டது.

விளக்கவுரை

உந்திக்குகீழ் உள்ளது மூலாதாரமே. ஆதலால், 'புருடனோடு உடன் இருந்த ஒரு கருவியாகிய பிராணனும் நீங்க, புருடன் ஒருவனும் மூலாதாரத்தை அடைந்தால் கேவல துரியா தீதம் நிகழும் - என்பது குறிப்பால் விளங்கிற்று.

கீழாலவத்தைகளில் செயற்படும் கருவிகளை, 'தொகைக் குறிப்பு' - என்னும் குறிப்பு வகையால் மரபு பற்றி உணர்த்தினார். என்க. இதனால், 'கீழாலவத்தைகட்கு உரிய கருவிகள் இவை' என்பது கூறப்பட்டது.

புரியட் டகமே பொருந்தல் நனவு
புரியட் டகந்தன்னில் மூன்று கனவு
புரியட் டகத்தில் இரண்டு சுழுத்தி
புரியட் டகத்தொன்று புக்கால் துரியமே. ***#2162***

('புரியட்டக சரீரம்' - என்பது பெரும்பான்மையும் சூக்குமசரீரத்தையும், சிறுபான்மை பரசரீரத்தையும் குறிக்கும். இது சிவஞான போத இரண்டாம் சூத்திரத்து இரண்டாம் அதிகரண சிவஞான மாபாடியத்தாலும் விளங்கும்.)

தன்மாத்திரை ஐந்தும், அந்தக் கரணம் மூன்றும் ஆக எட்டும் கூடியது சூக்கும சரீரம். இவ்விடத்தில் சித்தம் பிரகிருதியில் அடங்கும். மூலப் பிரகிருதி ஒன்றும், வித்தியா தத்துவம் ஏழும் ஆக எட்டும் கூடியது பர சரீரம்.

எனவே, 'புரியட்டகம்' என்பது இவ்விரு சரீரங்கட்கும் பெயராதல் விளங்கும். (இவை இரண்டுமே இம் மந்திரத்திற் குறிக்கப்படுகின்றன.) இரு புரியட்டக சரீரங்களும் தூல சரீரத்தோடு பொருந்தி நிற்கும் நிலையே இருவகைச் சாக்கிராவத்தையாகும். (இருவகை சகலமும், கேவலமும், இவ்வாறு சுருங்கக் கூறினாராயினும் கேவல சாக்கிரத்திலும் கனவிற் போலவே புரியட்டக சரீரம் நிற்கும் என்க.) சத்தாதி ஐந்தும்,

வசனாதி ஐந்தும், பிராணாதி பத்தும் ஆக இருபதும் தாத்துவிகங்கள். ஆகையால் அவற்றை எண்ணாமல் விடுக்கச் சூக்கும சரீரத்தில் மூன்று அந்தக்கரணங்கள் மட்டுமே செயற்படும் நிலை கேவல சொப்பனமாம். கேவல சாக்கிரத்தல் இருவகை இந்திரியங்கள் செயற்படும். கேவல சொப்பனத்தில் அவை செயற்படா. *(இங்குப் பரசரீரம் கருத்தில் கொள்ளப்படவில்லை.)* பரசரீரத்தில் 'பிரகிருதி, புருடன்' என்னும் இரண்டு மட்டுமே தொழிற்படும் நிலை கேவல சுழுத்தியாம். *(இங்கும் பிராணன் எண்ணப்படவில்லை.)* பரசரீரத்தில் புருடன் ஒன்று மட்டுமே செயற்படும் நிலை கேவல துரியமாம். *(இங்கும் பிராணன் எண்ணப்பட வில்லை. ஒரு கருவியும் இன்றி ஆணவ மாத்திரம் இருத்தலே கேவல துரியாதீதம்' என்பது கருத்து.)*

விளக்கவுரை

கேவல துரியாதீதத்தில் பிரகிருதி சிறிதும் அறிவைப் பிறப்பியாது, இருளாயே இருக்கும் என்க.
இதனால், கீழாலவத்தைக் கருவிகள், வேறு வேறு சரீரங்களாதல் காட்டப்பட்டது.

நனவில் நனவு புலனில் வழக்கம்
நனவில் கனவு நினைத்தல் மறத்தல்
நனவில் சுழுத்திஉள் நாடல் இலாமை
நனவில் துரியம்அதீதத்தூண் நந்தியே. ***#2163***

சாக்கிரத்தில் சாக்கிரமாவது உயிர் பொறிகளின் வழியாகப் புறத்தே உலாவிப் புலன்களைப் புதிது புதிதாக உணரும் நிலை.
சாக்கிரத்தில் சொப்பனமாவது, புறத்துச் சென்று புதிய காட்சி -களைக் காணாது முன்பு கண்டவற்றைப் பற்றியே நினைந்திருத்தல்.
சாக்கிரத்தில் சுழுத்தியாவது, முன்பு கண்ட காட்சிகளை நினைதலையும் விடுத்துப் பொதுமையின் நிற்றல்.
சாக்கிரத்தில் துரியமாவது, புறப்பொருள்களால் விளைந்தது துன்பமாயின் அதனைப் போக்கவும், இன்பமாயின் அதனைக் காக்கவும் ஆன வழிகளைப் பலவாக எண்ணுதல்.
சாக்கிரத்தில் துரியாதீதமாவது, அவ்வாறு எண்ணுதல் இன்றி, துன்பம், அல்லது இன்பத்திலே மூழ்கித் தன்னை மறத்தல்.

விளக்கவுரை

இவையே *'சகலத்திற் சகலம்'* - என்றும், *'மகாசகலம்'* என்றும் சொல்லப்படுவன என்க. இவை இனிது விளங்குதற் பொருட்டு, அரிய பொருளை மறந்து கைவிட்டவன் நினைவு வந்த பொழுது அதுபற்றி மூர்ச்சித்தல், தெளிந்து புலம்பல், விட்ட இடத்தை நினைத்துப் பார்த்தல்

முதலியவற்றை அதீதம் முதலியனவாகக் கூறிக் காட்டுவர்.
'அதீதத்து ஊண் (அநுபவித்தலை) நந்தி (விடுத்து) உள்நாடல் இலாமையாம் என்க.
இதனால், சகலத்தில் சகல சாக்கிரம் முதலியவற்றின் இயல்புகள் அனுபவத்தில் வைத்து உணர்த்தப்பட்டன.

கனவில் நனவுபோல் காண்டல் நனவாம்
கனவினில் கண்டமறத்தல் கனவாம்
கனவில் சுழுத்தியும் காணாத காணல்
அனுமாதி தேய்தலில் ஆன துரியமே. ***#2164***

(மேல், 'நனவிற் கனவில்லை' என வந்த மந்திரத்தில் சித்தாந்தம் கூறிய நாயனார். இது முதல் மூன்று மந்திரங்களால் சில பூர்வ பக்கம் கூறுகின்றார்.)
கனவு நனவுபோல மிகத் தெளிவாக நிகழ்தல் சொப்பனத்தில் சாக்கிரம்.
(இதுவே, 'சொப்பனத்தில் சொப்பனம்' என்பது சித்தாந்தம்.)
கனவு தெளிவாக அன்றி, மந்தமாக நிகழ்தல் சொப்பனத்தில் சொப்பனம்.
(இது வேறன்று என்பது சித்தாந்தம்.)
கனவில் காட்சியாகக் காணாது, கருத்தாக மட்டும் சிலவற்றை உணர்தல் சொப்பனத்தில் சுழுத்தி. அந்த உணர்வும் இன்றி இருத்தல் சொப்பனத்தில் துரியம் *(இதனானே, 'உணர்வு கனவில் உண்டாகும் இன்பத்துன்பங்களிலே அது அதுவாக அழுந்துதலே சொப்பனத்தில் துரியாதீதம்' - என்பது பெறப்படும்.)*

விளக்கவுரை

'கனவில் நனவில்லை' என்பதே சித்தாந்தம். *'கண்ட, காணாத'* என்பன அஃறிணை பன்மை வினைப் பெயர்.

சுழுத்தி நனவொன்றும் தோன்றாமை தோன்றல்
சுழுத்திக் கனவுதன் உண்மை சுழுத்தியில்
சுழுத்தி அறிவறி வாலே அழிகை
சுழுத்தித் துரியமாம் சொல்லறும் பாழே. ***#2165***

சுழுத்தியில் ஒருகால், *'இது நல்ல உறக்கம்'* என அதனை உணர்தல் சுழுத்தியில் சாக்கிரம். சுழுத்தியில் *'நாம் நன்கு உறங்குகின்றோம்'* எனத் தன்னை உணர்தல் சுழுத்தியில் சொப்பனம். *(இவை இரண்டும் நிகழில் சுழுத்தி யில்லையாம் என்பது சித்தாந்தம்.)*

விளக்கவுரை

சுழுத்தியை உணர எழுகின்ற அறிவைச் சுழுத்தியில் தோய் கின்ற அறிவு அழிக்க, யாதும் தோன்றாதநிலை சுழுத்தியில் சுழுத்தி, அவ் எழுச்சியும், அழிப்பும், தோன்றாது அடங்கும் நிலை சுழுத்தியில் துரியம்.

(இதனானே, 'அவ்வடக்கத்தால் எழுகின்ற உறக்க இன்பத்தில் ஆழ்ந்துவிடுதல் சுழுத்தியில் துரியாதீத நிலை' என்பது பெறப்படும்).

துரிய நனவாம் இதம்உணர் போதம்
துரியக் கனவாம் அகம்உணர் போதம்
துரியச் சுழுத்தி வியோமம் துரியத்
துரியம் பரம் - எனத் தோன்றிடுந் தானே. *#2166*

துரியத்தில் பேருறக்கத்தில் விளைகின்ற மிக்க இன்பத்தினைக் காலத்தொடு ஒட்டி நெடிதுணர்தல் துரியத்தில் சாக்கிரம். அவ்வின்பத்தை உணராது தன்நிலையை உணர்தல் துரியத் தில் சொப்பனம். துரியத்தில் திருவருள் உணர்வு தோன்றல் துரியத்தில் சுழுத்தி. துரியத்தில் திருவருட்கு முதலாகிய சிவத்தை உணர்தல் துரியத் தில் துரியம். *(இதனால், சிவத்தில் ஒடுங்கல் துரியத்தில் துரியாதீத மாதல் கொள்ளப்படும்.)*

(இவற்றுள், 'முதற்கண் கூறிய நிலையே துரியத்தில் துரியம்' என்பதும், அவ்வின்பத்தில் தோய்ந்து, அதுவேயாய்க் கிடத்தலே துரியத்தில் துரியாதீதம்' என்பதும், 'பிறவெல்லாம் கீழாலவத்தைக் கண் நிகழா' என்பதுமே சித்தாந்தம்.)

ஏகான்ம வாதிகள், 'கீழாலவத்தையில் நிகழும் சுழுத்தியில் சீவன் பிரமமாய்விடும்' எனவும், 'அதனால் அங்கு நிகழ்வது பிரமானந்தமே' எனவும் கூறுவர். இம்மந்திரத்திற் கூறிய பூர்வ பக்கமும் அவர்களது கொள்கையோடு ஓராற்றான் ஒத்துள்ளன்.

இனி 'இங்குக் கூறப்பட்ட துரியம் பரதுரியமே' எனக் கொள்வாரும் உளர்.

துரியாதீத நிலை இங்குக் கூறப்படாமையால், அதில், 'சித் தாந்தத்திற்கு வேறாய்ச் சொல்லப்படுவன இல்லை' என்பதாகின்றது.

விளக்கவுரை

வியோமம் - பரவியோமமம். பூர்வ பக்கங்களையும் உணர்ந்து கழித்தாலன்றிச் சித்தாந்தத்தில் தெளிவு பிறவாது ஆகலான், அதுபற்றி இம்மூன்று மந்திரங்களாலும் கீழாலவத்தை பற்றிய பூர்வ பக்கங்கள் சில கூறப்பட்டன.

அறிவறி கின்ற அறிவு நனவாம்
அறிவறி யாமை அடையக் கனவாம்
அறிவறி யவ்வறி யாமை சுழுத்தி
அறிவறி வாயின தான துரியமே. *#2167*

ஆன்மாத் தத்துவங்களின் இயல்பை அறியுமுகத் தானே தன்னியல்பை அனுமித்தறியும் நிலை சகலத்தில் சுத்த சாக்கிரம். *(இதனை, 'ஆன்மரூபம்' என்க.)* தத்துவங்களின் இயல்பை உணரும் முகத்தால்

அவற்றால் தனக்கு உண்டாகும் பாச அறிவை நீக்கி நிற்கும் நிலை சகலத்தில் சுத்த சொப்பனம். *(இதனை, 'தத்துவ சுத்தி' என்க.)* பாச அறிவை நீக்கிய ஆன்மாப் பதியறிவை நாடி அது தோன்றாது நிற்கும் நிலை சகலத்தில் சுத்த சுழுத்தி. *(இதனை, 'ஆன்ம தரிசனம்' என்க. 'சிவரூபம்' இங்கு உடன் நிகழும்.)* பதியறிவை நாடி அதனை அறிந்த ஆன்மா, அந்த அறிவில் தனது அறிவு ஒடுங்கத் தான் தோன்றாது அது வேயாய் நிற்கும் நிலை சகலத்தில் சுத்த துரியமாம். *(இதுவே, ஆன்ம சுத்தியும், சிவதரிசனமும், சிவயோக மும் என்க.)* இதற்கு மேல் ஆன்மாத் தன்னால் பற்றப்பட்ட சிவம் விளைக்கின்ற ஆனந்தத்தில் மூழ்கிப் பிறிதொன்றையும் அறியாது நிற்றலே சகலத்தில் சுத்த துரியாதீதம் என்பது குறிப்பால் கொள்ளக்கிடந்தது. அதுவே 'ஆன்ம லாபம்' என்க.

விளக்கவுரை

ஆன்ம சுத்தி, சிவ தரிசனம், சிவயோகம் இவை உடன் நிகழ்ச்சியாய் நிகழ்தல் பற்றி அம்மூன்றையும் ஒன்று கூட்டிச் சுழுத்தி துரியங்களாகப் பகுத்துக் காட்டினார். இவற்றிற்கு முன் இரண்டை, 'சொப்பனம்' என ஒன்றாகக் காட்டினார்.

மேல், 'ஆறாறில் ஐயைந்து' எனவும், 'மாயையில் வந்த புருடன்' எனவும் போந்த மந்திரங்களை இங்கு உடன்வைத்துக் காண்க. மூன்றாம் அடியில் வகரமெய் விரித்தல் 'அறிவையறிதலால் வரும் அறியாமை சுழுத்தி' என்க.

இதனால், நின்மலாவத்தையில் சில உட்கூறுகள் கூறப்பட்டன.

தான்எங்கும் ஆயவன் ஐம்மலம் தான்விட்டு
ஞானம் தனதுரு வாகி நயந்து பின்
தான்எங்கு மாய்நெறி நின்(று) அது தான்விட்டு
மேல்நந்தச் சூக்கம் அவைவன்ன மேலீடே. ***#2168***

வியாபகப் பொருளாகிய ஆன்மா, அந்த வியா பகத்தைத் தடுத்து அணுத்தன்மைப் படுத்திய ஆணவாதி பாசம் ஐந்தி னின்றும் நீங்கித் தனது வியாபகத்தைத் தலைப்பட்ட நிலை உண்மைச் சுத்த சாக்கிரம். *(இதுவே சீவன் முத்தியாம்.)*

சீவன் முத்தியில் மாயையாகிய உடம்பு இருத்தலால், அது வழியாக ஏனைப் பாசங்களின் வாசனைகளும் உளவாம். அவ் வாசனைகள் பெரும்பான்மையும் நீங்கி, அதிகார மலவாசனை நின்ற விடத்து, அனந்தேசுராதி பதங்களில் விருப்பம் உண்டாகும். அவ் வாற்றால் அப்பதங்களில் இருத்தல் உண்மைச் சுத்த சொப்பனம் *(இஃது அதிகார முத்தியாம்.)*

பின்பு அதிகாரமலம் நீங்கிப்போக மல வாசனை நின்ற விடத்து நிவிர்த்தி முதலிய நான்கு கலைகளையும் உள்ளடக்கிப் பெரு வியாபகமாய்

நிற்கின்ற சாந்தி யதீத கலையில் சத்தி தத்துவத்தில் உள்ள புவனங்களில் உள்ள போகங்களை நுகர்வதில் விருப்பம் உண்டாகும். அவ்வாற்றால் அவற்றை அடைந்திருத்தல் உண்மைச் சுத்த சுழுத்தி. (இது போக முத்தியாம்.)

போக மல வாசனை நீங்கி, இலய மல வாசனை நின்றவிடத்து, அச்சாந்தியதீத கலையில் உள்ள சிவதத்துவ புவனங்களில் உள்ள போகங்களை நுகர்வதில் விருப்பம் உண்டாகும். அவ்வாற்றால் அவற்றை அடைந்திருத்தல் உண்மைச் சுத்த துரியம். (இஃது இலய முத்தியாகும்)

(சாந்தி கலையில் சாதாக்கிய தத்துவ புவனத்தை அடைந் தவர்களும், சாந்தியதீத கலையில் உள்ள புவனங்களை அடைந் தவர்களும், 'அணு சதாசிவர்கள்' எனப்படுவர். சுத்த வித்தை, ஈசுரம் ஆகிய தத்துவ புவனங்களை அடைந்தவர்கள் 'வித்தையேசுரர்கள்' என்றும், 'மந்திர மகேசுரர்கள்' என்றும் இருவகையினராய் இருப்பர்.)

(இலய முத்தி 'உண்மைச் சுத்த துரியம்' என்றதனானே, ஆன்மா அனைத்து மல வாசனைகளும் சிறிதும் இன்றி நீங்கப் பரம சிவனோடு இரண்டறக் கலக்கும் சாயுசச்ச நிலை உண்மைச் சுத்த துரியாதீதம் ஆதல் விளங்கும்.)

இவையெல்லாம் பராவத்தைகளாம்.)

விளக்கவுரை

இவ்வாற்றால், சீவன் முத்தி, அதிகார முத்தி, போக முத்தி, இலய முத்தி, பரமுத்தி - என்பன உண்மைச் சுத்தத்தில் நிகழும் சாக்கிர சொப்பன சுழுத்தி துரிய துரியாதீதங்களாதல் போந்தவாறு அறிக.

'விட்டு, நயந்து, நின்று' என்னும் செய்தென் எச்சங்கள் எண்ணுப் பொருளில் வந்து, 'சூக்கம்' என்பதன் பின் தொக்கு நின்ற 'ஆம்' என்பதனோடு முடிந்து, உண்மைச் சுத்த சாக்கிரம் முதலிய மூன்றனையும் முறையே குறிப்பால் உணர்த்தின. 'சூக்கம்' என்றது துரியத்தை.

பின்வந்த 'விட்டு' என்பது, 'விட்டவழி' என்பதன் திரிபு. அது 'நந்த' என்பதனோடு முடிந்தது. 'ஞானம்' என்பது 'வித்தை' என்னும் பெயர்க்குப் பரியாயமாய், 'வித்தைகள், வித்தையீசர்'* என்போரைக் குறித்தது. 'வன்னம்' என்றது அவத்தையை, 'மேலீடு' என்றது, 'பராவத்தை' என்றபடி. நந்துதல் - வளர்தல்.

இதனால், உண்மைச் சுத்தமாகிய பராவத்தைகளின் இயல்புகள் கூறப்பட்டன.

ஐயைந்தும் ஆறும்ஓர் ஐந்தும் நனாவினில்
எய்யும் நனவு கனவு சுழுத்திஆம்

எய்தும்பின் சூக்குமம் எய்பகுதி மாயை
ஐயமுந் தானவன் அத்துரி யத்தனே. *#2169*

சகலசாக்கிரத்தில் முப்பத்தாறு கருவிகளும் குறைவின்றிச் செயற்படும். அந்தச் சாக்கிரத்திற்குப் பின்னர் அதிலே, 'சொப்பனம், சுழுத்தி' என்பவையும் நிகழும். அவைகளில் இளைத்து மடங்கும் கருவிகள் அசுத்த மாயையின் காரியங்களாம். அவை காலம், நியதி முதலியன. அவை செயற்படுதல் சிவதத்துவங்கள் செலுத்துதலினாலேயாகலின், 'அவை செயற்படா. எனவே, சிவ தத்துவங்களும்செயற்படாமை பெறப்பட்டது. சிவதத்துவங்கள் ஐந்தில் சுத்த வித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி என்பவை முறையே ஒவ்வொன்றாகக் குறைந்து கொண்டே போவதால், சகலத்தில் சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பவை நிகழும் என்க.

'உளனோ, இலனோ' - என்னும் ஐயம் நிகழுமாறு உயிர்ப்பின்றிக் கிடப்பது, அதற்குமுன் துரியநிலையில் இருந்த அந்த ஆன்மாவேயாம். *(எனவே, விழிப்பு நிலையிலே உயிர்ப்பின்றி மூர்ச்சித்துக் கிடத்தலே சகலத்தில் துரியாதீத மாயிற்று.)*

விளக்கவுரை

இவையெல்லாம் மத்தியாலவத்தைகள், எய் பகுதி - வினைத்தொகை. எய்த்தல் - இளைத்தல். பகுதி - தொகுதியுள் சில கூறுகள். மாயை, அதன் காரியத்தைக் குறித்த ஆகுபெயர். 'முந்த ஆனவன்' என்பதில் பெயரெச்சத்து அகரம் தொகுத்தலாயிற்று. 'உந்த ஆனவன்' என்றலும் ஆம். இங்கும் துரியம் 'சூக்கம்' எனப்பட்டது.

இம்மந்திரத்திற்குச் சித்தாந்தத்துள் ஓரிடத்தும் பெறப்படாது அவரவர் கருதியவாறே உரைத்த உரைகள் உள.

இதனால், வித்தியா தத்துவ சிவ தத்துவங்களின் கூடுதல் குறைதல்களாலே மத்தியாலவத்தைகள் நிகழ்தல் கூறப்பட்டது.

ஈதென் றறிந்திலேன் இத்தனைக் காலமும்
ஈதென் றறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
ஈதென் றறியும் அறிவை யறிந்தபின்
ஈதென் றறியும் இயல்புடை யோனே. *#2170*

(சுருதியும், குரு மொழியும் 'ஒன்று அவன்தானே' என்றபடி, 'தன்னோடு ஒப்பவைத்து எண்ணுதற்கு மற்றொரு பொருள் இன்றித் தான்ஒன்றேயாய தனிமுதற் பொருள் ஒன்று உண்டு' என வலியுறுத்திக் கூறுகின்ற அப்பொருளை)* மத்தியாலவத்தை கீழா லவத்தைகளில் மட்டுமே அகப்பட்டு உழன்ற இவ்வளவு காலமும், 'இது' என்று நான் உணரவில்லை *(யோகாவத்தையை அடைந்த பொழுது அதனைச் சிறிதே உணர்ந்தேன்.)* நின்மலாவத்தையை அடைந்தபின் அதனைத்

தெளிவாக உணர்ந்தேன். அதனை அவ் வாறுணர்ந்த பின் பிறிதொன்றையும் அரிய முயல்கின்றிலேன். ('அதனையே அறிந்து நின்றேன்' என்பதாம்.) அவ்வாறு அதனை உணரும் உணர்வை எய்திய பின்புதான் நான் மெய்யுணர் வுடையேனாயினேன்.

விளக்கவுரை

அவத்தைகளே அதிகாரப்பட்டு வருதலால் 'இத்தனைக் காலமும்'- என்றது பயன்படாத அவத்தையிற் கிடந்த காலத்தையே குறித்தது. ஆகவே, அறிந்த காலம் பயன்படும் அவத்தை நிகழ்ந்த காலம் ஆயிற்று. 'அறிந்தபின்' - என்ற அனுவாதத்தால், அறிந்தமை தானே பெறப்பட்டது. அறியற்பாலதாய பொருளை அறிவதே அறிவாதலின், அங்ஙனம் அறியும் பொழுதே அறிவராந் தன்மையை மக்கள் பெறுதல் பற்றி, 'அறியும் இயல்புடையேன்' என்றார். 'உடையேன்' என்னும் ஆக்கவினைக்குறிப்பில் ஆக்கச் சொல் தொக்கு நின்றது. அடைதலே அறிவிற்குப் பயன் ஆதலின், 'அறிந்தபின்' என்றது, 'பெற்றபின்' என்றதேயாம்.

ஞாயிற்றின் ஒளியால் இருள்நீங்கிப் பொருள்களைக் காண் கின்ற கண் அவ்வொளியால் ஞாயிற்றையே நோக்கியவழி அதற்கு அந்த ஞாயிறன்றிப் பிறிதொரு பொருள் தோன்றாதவாறு போல, முதல்வனது அருளால் மலம் நீங்கிப் பொருளியல்புகளை உள்ளவாறு உணர்ந்துவரும் உணர்வு, அம்முதல்வனையே உணர்ந்தவழி அவ்வுணர்விற்குப் பிறிதொருபொருள் புலனாகாது' என்பதே, 'ஈதென்றறிந்தபின் ஏதும் அறிந்திலேன்' என்பதனால் கூறப்பட்டது. இதனால், அவத்தைகளின் பயன்கள் அனுபவ முறையால் கூறப்பட்டது.

உயிர்க்குயி ராகிஉருவாய் அருவாய்
அயர்புணர் வாகி அறிவாய்ச் செறிவாய்
நயப்புறு சத்தியும் நாதனுல காதி
இயற்பின்றேல் எல்லாம் இருள் மூடம் ஆமே. ***#2171***

உலகிற்கு முதல்வனாகிய இறைவன் அறிவுடைப் பொருளாகிய உயிர்களில் அவற்றுக்கு உயிராகியும், அறிவில்லாத உருவமும், அருவமும் ஆகிய பொருள்களில் அவையேயாகியும் இவ்வாறு கலப்பினால் ஒன்றாயும், பொருள் தன்மையால் அவை யனைத்தினும் தான் வேறாவதோர் திறம் உடையனாயும், உயிர்களின் அறிவு ஒன்றை அறியுமிடத்துத் தானும் அவ்வாறு அப்பொருளை அறிகின்ற அறிவாய் உடனாயும் 'சத்தியும், சிவமும்' என்னும் இரு திறத்தால் இயக்காவிடின் உயிர்கள் முழு மூடங்களாயும், உயிரல் பொருள்கள் சூனியமாயும் ஒழிவனவாம்.

விளக்கவுரை

எனவே, 'அவன் அவ்வாறு இயக்குதலானே மேற் கூறிய அவத்தைகள் பலவும் நிகழ்கின்றன.' என்றபடி. இதனானே, இறைவன் பெத்தம், முத்தி இரண்டிலும் உயிர்கட்கு அவ்வந் நிலைக்கேற்ற அறிவையும், அனுபவத்தையும் தந்துதவுதல் விளங்கும்.

'உலகிற்கு ஆதி' என உருபு விரித்து அதனை முதற்கண் கூட்டி, 'நாதனும் ஆய்' என உம்மையும், ஆக்கச் சொல்லும் வருவித்து உரைக்க. இயற்பு - 'நடத்துதல்' எனப் பிறவினை இது, 'நடத்தல்' எனத் தன்வினையாயின், 'இயல்பு' என நிற்கும். 'இருள்' என்றது, 'சூனியம்' என்றபடி. சூனியம், இங்கு, இருந்தும் இல்லாமை. 'இருள், மூடம்' - என்பவற்றை எதிர் நிரல் நிறையாகக் கொள்க.

இதனால், 'ஆன்மாவும், கருவிகளும் கூடிய துணையானே அவத்தைகள் நிகழமாட்டா; இறைவனது திருவருள் உடனாய் நின்று நிகழ்விக்கவே நிகழும்' என்பது கூறப்பட்டது.

சத்தி யிராகத்தில் தான்நல் உயிராகி
ஒத்துறு பாச மலம்ஐந்தோ(டு) ஆறாறு
தத்துவ பேதம் சமைத்துக் கருவியும்
வைத்தனன் ஈசன் மலம்அறு மாறே. *#2172*

சிவன், 'இச்சை, ஞானம், கிரியை' என்னும் தனது மூன்று சத்திகளில், 'உயிர்களை உய்விக்க வேண்டும்' என விரும்பும் இச்சா சத்தியினால் உயிர்களில் எல்லாம் தான் நல் உயிராய்க் கலந்து, அநாதியே உயிர்களில் தன்னைப் போலவே பொருந்தியுள்ள பாசம், 'அஃது ஒன்றே' யாகாது 'ஐந்து' என்னும் படி முதல் மலத்தொடு நான்கு மலங்களைக் கூட்டியதனானே அம்முதல் மலம் முற்றிலும் அற் றொழிதற் பொருட்டுத் தத்துவ வகை முப்பத்தாறினையும் உண்டாக்கி, அம்முப்பத்தாறின் கூறுகளாக மற்றும் அறுபத்தாறு கருவிகளையும் தோற்றுவித்து வைத்தான்.

விளக்கவுரை

'இவ்வாற்றால் உயிர்கள் முதல் மலம் முற்றிலும் நீங்கச் சிவனையடைந்து பேரின்பத்தை யடையும்' என்பதாம். 'ஈசன் இராக சத்தியின் தான் நல் உயிராகி, ஐந்தோடு, மலம் அறுமாறு பேதம், சமைத்து, கருவியும் வைத்தனன்' என இயைத்துக் கொள்க. இராகம் - இச்சை. 'பாசத்தோடு' என உருபு விரிக்க.

நன்மை, இயல்பாகவே பாசங்களின் நீங்கினமையால் அறிவேயாயும், இன்பமேயாயும் இருத்தல். 'மலம் ஐந்து ஆக்கிய -தோடு' என்க. இவ் ஒடு, எண் ஒடு முதல் மலம் ஆணவம்; பின்னர்க் கூட்டிய நான்கு

மலங்களாவன மாயை, கன்மம், மாயேயம், திரோ தாயி, மாயேயம், தத்துவ தாத்துவிகங்கள். எனவே, 'தத்துவ பேதம், கருவி' என்றது மாயேயங்களை விளக்கியதாம். 'கருவியும்' என்னும் உம்மை இறந்தது தழுவிய எச்சம்.
அவத்தை பேதங்கள் பெத்தமும், முத்தியுமாய் நிற்றலால், அவையிரண்டும் சிவன் செயலே யாதலை விளக்கியவாறு.
இம்மந்திரம் சைவ சித்தாந்தச் சுருக்கமாய் நிற்குமாற்றையும் உணர்ந்து கொள்க.
முன்னை மந்திரத்தில் தொகுத்துக கூறிய சிவனது செயல் இதனால், வகுத்துக் கூறப்பட்டது.

சாக்கிரா தீதத்தில் ஆணவம் தன்னுண்மை
சாக்கிரா தீதத் துரியத்தில் தான்உறல்
சாக்கிரா தீதத்தில் ஆணவந் தான்விடச்
சாக்கிரா தீதம் பரன்உண்மை தங்குமே. ***#2173***

சகல சாக்கிரத்தில் சாக்கிரம் முதலியன நிகழுங் கால் இறுதியில் நிகழும் துரியாதீதத்தில் ஆன்மாத் தன்னையும், பிறிதை -யும் உணர்தல் இன்றி, ஆணவத்தால் விளையும் பேரிடரிலே மூழ்கி யிருக்கும். இது 'தன்னுண்மை' எனப்படும். (இந்நிலை அநாதி கேவலத்தொடு ஒத்ததாகும்.)
நின்மல சாக்கிரத்தில் நிகழும் துரியாதீதத்தில் ஆணவம் இன்மையான், அதில் ஆன்மாச் சிவனால் தரப்படும் பேரின்பத்தில் மூழ்கித் தன்னையும் அறியா நிலையில் இருக்கும். (இஃது ஆன்மா இறுதியில் அடையும் சாயுச்ச நிலையோடு ஒத்ததாகும். இதுவே முன்பு ஆணவத்தோடு அத்துவிதமாய் நின்றதுபோலப் பின்பு மெய்ஞ்ஞானத் தாணுவினோடு அத்துவிதமாய் நிற்கும் நிலை.)
இங்குக் கூறிய இருவகைச் சாக்கிரத்திலும் துரியாதீதத்திற்கு முன்னாதல், பின்னாதல் நிகழும் துரியத்தில் ஆன்மாத் தனக்கு உளவாகும் இன்பத் துன்பங்களை அறிவதாய் இருக்கும்.

விளக்கவுரை

'முதல் அடியில் கூறிய சாக்கிரம் சகல சாக்கிரம்' என்பதும் 'இறுதியிரண்டடிகளில் கூறிய சாக்கிரம் நின்மலசாக்கிரம்' என்பதும், இரண்டாம் அடியில் கூறியசாக்கிரம் இரண்டனையும் குறித்த பொது சாக்கிரம் என்பதும் அவ்வவற்றில் காட்டப்பட்ட அனுபவம் பற்றி உணர்ந்து கொள்ளப்படும்.
இரண்டாம் அடியை இறுதியிற் கூட்டி, 'சாக்கிராதீதத்தின் பக்கத்ததாகிய துரியத்தில்' எனவும், 'தான் அனுபவத்தை உறல்' எனவும் உரைத்துக் கொள்க.

முதற்கண் உள்ள 'ஆணவம்' தன்காரியம் உணர்த்தி நின்றது. ஈற்றில், 'பரன் உண்மையில் தங்கும்' என உருபு விரித்துரைக்க.
இதனால், 'சகல சாக்கிரம், நின்மல சாக்கிரம்' என்பவற்றின் இயல்புகள் அவற்றை ஒப்பிட்டுக் காட்டி உணர்த்தப்பட்டன.

மலக்கலப் பாலே மறைந்தது ஞானம்
மலக்கலப் பாலே மறைந்தது சத்தி
மலக்கலப் பாலே மறைந்தனன் தாணு
மலக்கலப் பற்றால் மதிஒளி யாமே. *#2174*
(இதன் பொருள் வெளிப்படை.)

விளக்கவுரை

'மலம்' என அடைகொடாது கூறுமிடத்துப் பெரும் பான்மையும் 'ஆணவம்' என்றே பொருள்படும். இங்கும் அவ்வாறே கொள்க. கலப்பு செம்பிற் களிம்பின் கலப்புப் போல அநாதியே உள்ளது. அதனால் அந்த ஆணவத்தின் விளைவாக இங்குக் கூறியன யாவும் அநாதியே உள்ளனவாம். தாணு - சிவன். மதி - ஞானம். இஃது ஆன்மாவின் ஞானம். 'மலக் கலப்பால் இருளாய் இருந்த ஞானம், சிவக் கலப்பால் ஒளியாம்' என்றபடி. 'மலம் நீங்குமாறு இது' என்பது, ஒன்று இடையிட்டு மேல் உள்ள மந்திரத்தில் கூறப்பட்டது.
சத்தி, இங்கு அருட்சத்தி. 'ஞானம் அழிந்தது' எனக் கூறாமல், 'மறைந்தது' என்றே கூறினமையால், மலக் கலப்பு அற்றால் மதி ஒளியாதற்குத் தடையின்மையறிக.
இதனால், மலாவத்தைகட்குக் காரணம் ஆணவமும், நின்மலாவத்தைகட்குக் காரணம் அருட்சத்தியும ஆதல் கூறப்பட்டது.

திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று
நகைக்கின்ற நெஞ்சுள் நரிக்குட்டி நான்கு
அகைக்கின்ற நெஞ்சினுள் ஆனைக்கன் றைந்து
பகைக்கின்ற நெஞ்சுக்குப் பால்இரண் டாமே. *#2175*

கீழாலவத்தைச் சுழுத்தியில் காட்சி எதனையும் காணுதல் இன்றித் தெளிவில்லாதிருக்கின்ற ஆன்ம அறிவில், சிங்கங்கள் போன்ற கொடிய குணங்கள் மூன்று விளங்கி நிற்கும். (அவை, 'காமம், வெகுளி, மயக்கம்' - என்பன. 'இவற்றின் விரியே பஞ்சக்கிலேசம்' என்பர். பஞ்சக்கிலேசமாவன, 'அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, கோபம்' - என்பன. இவை, கொடுமை மிகுதி பற்றிச் சிங்கங்களோடு உவமிக்கப்பட்டன.)
அச் சுழுத்தியினின்றும் மேல் ஏறிச் சொப்பனத்தை அடைந்த ஆன்ம அறிவில் நான்கு நரிக்குட்டிகள் போன்ற சூழ்ச்சி வல்ல நான்கு கருவிகள் விளங்கி நிற்கும். (அவை, 'சித்தம், புத்தி, அகங்காரம், மனம்' என்பன,

இவை சூழ்ச்சிக் கருவிகள் ஆதலின், நரிக் குட்டிகளோடு உவமிக்கப்பட்டன. 'நரிகள் சூழ்ச்சி வல்ல பிராணிகள்' என்பர். அச்சொப்பனத்தினின்றும் மேல் ஏறிச்சாக்கிரத்தை அடைந்த ஆன்ம அறிவினுள் பின்பு மதங்கொள்ளும் ஐந்து ஆனைக்கன்றுகள் போன்ற ஐந்து கருவிகள் விளங்கி நிற்கும். (அவை, செவி முதலிய ஞானேந்திரியங்கள். மத்தியாலவத்தைச் சாக்கிரத்தில் இவை வளர்ந்து மதம் மிக்க யானைகள் போல் ஆய்விடும்.)

(கீழாலவத்தையை விட்டு, மத்தியாலவத்தையை அடைந்த ஆன்ம அறிவு, மேற்கூறிய யானைக் கன்றுகள் வளர்ந்து, மதம் மிக்கு, ஒன்றோடொன்று மாறுபட்டு நிற்றற்கு இடமாய், இரு நிலைகளை யுடையதாம்; ஒன்று, அவ் யானைகளால் ஈர்ப்புண்டல். மற்றொன்று, அவற்றை அடக்கி ஒடுக்குதல்.)

விளக்கவுரை

'சிந்தையைச் சீவன் என்றும், சீவனைச் சிந்தை என்றும்* கூறும் முறைமையால், ஆன்ம அறிவே, இங்கு, 'சிந்தை என்றும், 'நெஞ்சு' என்றும் கூறப்பட்டது. அங்ஙனம் கொள்ளாது நேர்ப் பொருள் கொள்ளின் பொருந்தாமை அறிக. திகைத்தல் மூடம் ஆகாது, அறிவு அலமரும் நிலையாதலின், அந்நிலை துரியாதீதமும், துரியமும் ஆகாது, சுழுத்தியே யாதல் அறிக. பிறவும் இங்குக் கூறியன ஆதலை ஓர்ந்துணர்க. 'பகைக்கின்ற நெஞ்சு' என்றது இடப்பெயரோடு முடிந்த பெயரெச்சத் தொடர். ஏனைய மூன்றும் வினைமுதற் பெயரோடு முடிந்த அத்தொடர்கள். நகைத்தல் - ஒளிவிடுதல். அகைத்தல் - பிளவுபடுதல். இதனால், கீழாலவத்தை சிலவற்றில் நிகழும் அனுபவங்கள் கூறப்பட்டன. மத்திய சாக்கிரத்தைக் கூறியது, ஐயம் அறுத்தற் பொருட்டு.

கதறிப் பதினெட்டுக் கண்களும் போகச்
சிதறி யெழுகின்ற சிந்தையை நீரும்
விதறு படாமூனம் மெய்வழி நின்றால்
அதிர வருவதோர் ஆனையும் ஆமே. ***#2176***

துன்பத்தால் அலறிக் கொண்டு, ஒரு வழிபடாது பதினெட்டு வழிகளில் போவதற்குப் பலமுகமாய் எழுகின்ற மனத்தை, நீவிர், நும் வாழ்நாள் முடிவதற்கு முன்னே மெய்ந்நெறியில் நிறுத்தினால், முன் மந்திரத்தில் கூறிய அந்த ஆனைகள் ஐந்தும் நடுங்கும்படி ஒப்பற்ற ஒரு பெரிய யானை உங்கள் அருகில் வந்து உங்களை எடுத்துச் செல்லும்.

விளக்கவுரை

அந்த யானையாவது சிவன். 'ஆனையும்' என்னும் உம்மை சிறப்பு

யானை, தன் பாகனைத் தானே எடுத்துச் சுமத்தல் போல, அடியார்களைத் தானே வந்து ஆட்கொண்டு அவர்களைத் தாங்கி நிற்றல் பற்றிச் சிவனை, 'ஆனை' என்பர் அருளாளர். திருக்கடவூர்த் திருக்குறுந்தொகை ஒரு திருப்பதிகம் முழுவதிலும் சிவபிரானை, 'ஆனை, ஆனை' எனப் பலகாலும் கூறினமை காண்க. 'எடுத்துச் சுமப்பான்'*l* என்றார் உமாபதிதேவர். இனி 'ஆனை' என்பதை 'ஆன் + ஐ' என இருமொழித் தொடராக்கி, 'பசுக்கட்குத் தலைவன்' எனப் பொருள் உரைப்பாரும் உளர்.

பதினெட்டு வழிகளாவன. புரியட்டக சரீரத்தில் உள்ள எட்டுக் கருவிகளும், ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும் ஆம். தூல பூதங்கள் தன்மாத்திரைகளில் அடங்கின. அடங்கவே அவற்றின் கூறாகிய தாத்துவிகம் அறுபதும் அவற்றோடு உடன் அடங்கின. எனவே, 'சூக்கும தூல சரீரங்களின் வழியே ஆன்மாப் புறத்துச் சென்று அலமரும்' எனக் கூறியவாறாம். கண் - புழை. 'கண்களிலும்' என ஏழாவது விரிக்க. அவ்வாறு அலமராது நிற்றற்கு உபாயம் சரியையாதி தவங்களே. அவைகளே இங்கு, 'மெய்வழி' எனப்பட்டன. 'நின்றால்' என்பது, பிவ்விகுதி தொகுக்கப்பட்ட பிறவினை. சிந்தையை மெய்வழி நிற்பித்தலே நின்மலாவத்தையாம்.

இதனால், 'கீழாலவத்தை மத்தியாலவத்தைகளில் நில்லாது' நின்மலாவத்தையில் செல்லல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

நனவகத் தேஒரு நாலைந்தும் வீடா
கனவகத் தேஉட் கரணங்க ளோடும்
உனவகத் தேநின் றுதறிஉட் புக்கு
நினைவகத் தின்றிச் சுழுத்திநின் றானே. *#2177*

*(*கனவிலும் பிராணாதி வாயுக்கள் பத்தும் செயற் படுதலால், அந்தக் கரணங்களும் செயற்படவே செய்யும் - அதனால்,*)* நனவிற்போலக் கனவிலும், மேல் 'ஆனைகள் ஐந்து' எனப்பட்ட ஞானேந்திரியப் புலனகள் ஐந்தோடு, கன்மேந்திரியப் புலன்கள் ஐந்தும், இன்னும் பிராணாதி வாயுக்கள் பத்தும் கூடி ஆன்மா அமைதி யுற்றிராதபடி தொல்லையுறவே செய்யும். இந்நிலையில் நிற்கும் ஆன்மா, ஒருமுகப்பட்ட சிந்தனையை விரும்புதலால், புலன்களை யெல்லாம் உதறித்தள்ளி, இருதயத்துட்புகுந்து சுழுத்தியில் நிற்கும்,

விளக்கவுரை

'கனவகத்தே, நனவகத்தே *(*நிற்கும்*)* உட்கரணங் களோடு, நால் ஐந்தும் வீடா' எனவும், 'அகத்தே நின்று உள்ள, உதறி, நினைவகத்தே உள்புக்கு, இன்று இச் சுழுத்தி நின்றான்' எனவும் இயைத்துப் பொருள் கொள்க. இப்பொருள் காணமாட்டாதார் சித்தாந்தத்தில் இல்லாத பொருளை

இயைபறவும் உரைப்பர்.
நினைவகம் - இருதயம். இது சுழுத்தித்தானம். இன்று - இப் பொழுது. அதாவது இருதயத்துட்புக்க பொழுது. 'இச் சுழுத்தி என்றது, 'நனவும், கனவும் போலப் புலன்களில் தொல்லையில்லாது, அமைதியாய் இருக்கும் சுழுத்தி' என்றபடி.
இதனால், 'பெத்த காலத்தில் புலன்களின் நீங்கி நிற்கும் நிலை சுழுத்தி நிலை' என்பதும் கூறப்பட்டது. படவே, துரிய துரியா தீதங்களில் அவை யில்லாமை கூறவேண்டாவாயிற்று.

நின்றவன் ஆசான் நிகழ்துரி யத்தனாய்
ஒன்றி உலகின் நியமா திகள்உற்றுச்
சென்று துரியாதீ தத்துச் சிலகாலம்
நின்று பரனாகி நின்மலன் ஆமே. ***#2178***

மேற்கூறிய சுழுத்தியில் அமைதியை உற்றுணர்ந் தவன், அஃது அறியாமையாகிய இருளால் விளையும் அமைதியே யாதலைத் தெரிந்து, அவ்விருள் நீங்கி, ஒளியில் விளையும் அமைதியை அடையவிரும்பி, ஆசானிடத்துச் சென்று அவன் உணர்த் தியவாறே, உலகியலிற்றானே இயம நியமாதிகளை மேற்கொள்ளும் யோகத்தில் பொருந்தி நின்று, அவ்யோகத்தில் துரியமாகிய தியானத் -தில் முதிர்ந்தவனாய், அதற்கு மேற்சென்று, அதன்கண் துரியாதீத மாகிய சமாதியில் சில காலம் நின்று, அதன் பின் பராவத்தையாகிய ஞானாவத்தைகளை அடைந்து, அதனால் பாசங்கள் முற்றிலும் நீங்கப் பெற்று முத்தனாவான்.

விளக்கவுரை

'நின்று, ஆகி' என்னும் செய்தென் எச்சங்கள் எண்ணுப் பொருளில் வந்தன. 'ஆசான்' என்பதன் பின், 'கீழ்' என்னும் பொருளில் வரும் கண்ணுருபு விரிக்க. 'உலகின் நியமாதிகளுற்று' என்பதனை மேலே 'நிகழ்' என்பதன்பின் கூட்டுக. 'ஒன்றி' என்றது, 'யோகத்தில் பயின்று' என்றபடி. நின்மலம், இங்குப் பரமுத்தி,
இதனால், 'கீழாலவத்தை மத்தியாலவத்தைகளில் அன்றாடம் இயல்பாகவே பயின்று வருவோர், ஆசான் அருள்வழியில் முயன்று, முன்னர் மேலாலவத்தையில் பயின்றால், பின்னர் நின்மலாவத் -தையால் வீடு பெறலாம்' என்பது கூறப்பட்டது.

ஆனஅவ் வீச னதீதத்தில் வித்தையாம்
தான்உல குண்டு சதாசிவ மாய்சத்தி
மேனிகள் ஐந்தும்போய் விட்டுச் சிவமாகி
மோன மடைந்தொலி மூலத்த னாமே. ***#2179***

பராவத்தை உண்மைச் சுத்தாவத்தையே யாயினும் துரியாதீதம், துரியம் ஒழிந்த மற்றை மூன்றாகிய சிவன் முத்தி, அதிகார முத்தி,

போகமுத்திகளில் ஆன்மாஉலகபோகத்தை நுகரும். ஏனெனில், சுழுத்தி சொப்பனங்களில், தோற்ற முறையில் சாதாக்கியம் முதல் ஐந்து தத்துவ உடம்புகள் இருத்தலாலும் சாக்கிரத்தில் மாயா உடம்பு இருத்தலாலும் அவ்வாறு அதுகாறும் போகத்தை நுகர்ந்த ஆன்மா, இலயமுத்தியல் சத்திதத்துவத்தைக் கடந்து, சிவதத்துவத்தில் தடத்த சிவமாய்ப் புறப் பொருளுணர்ச்சி யின்றிச் சிவ உணர்வே மிக்கிருக்கும். அந்நிலையில் சூக்கும வாக்கை அது பற்றி நிற்கும். ஆகவே, பர துரியாதீதத்தை அடைந்த பொழுதுதான் ஆன்மாச் சிவஞானம் ஒன்றையன்றிப் பிறிதொரு பற்றும் இல்லாமல், சிவத்தை முழுமையாக அனுபவிக்கும்.

விளக்கவுரை

ஈசன் அதீதம் - பராவத்தையில் நிகழும் அதீதம்' இம் முதலடியை இறுதியிற் கூட்டியுரைக்க. ஆன்மா 'தான் உலகு உண்டு' என்பதை, 'போய்' என்பதன் பின்னர்க் கூட்டுக. தான் 'சாதாசிவமாதி' என்பதில் 'ஆதி' என்பது தொகுக்கப்ட்டது. மாய் சத்தி - தோற்றமும் ஒடுக்கமும் உடைத்தாய் நிலையில்லாத சத்தி. இங்குச் சுத்த மாயா சத்தி. 'மாசத்தி' என்பதே பாடம் எனினும் 'மாமாயையின் சத்தி' என்றே கொள்ளப்படும். மேனிகள் ஐந்து அணு சதாசிவர், மந்திர மகேசுரர், வித்தியேசுர், சுத்த வித்தையில் நிற்கும் மால், அயன். 'ஐந்திலும் போய்' என உருபு விரிக்க. போதல் - புகுல். 'அடைந்து' என்பதன் பின் 'அவ்விடத்து' என்பது வருவிக்க. ஒலிமூலம் - மூலஒலி; நாதம். அதுவே சூக்குமைவாக்காம். இதனால், பராவத்தைகளில் அதீதம், அஃதொழிந்த பிற இவற்றின் உயர்வு, தாழ்வுகள் தெரித்துக் காட்டப்பட்டன.

மண்டல மூன்றினுள் மாயநன் னாடனைக்
கண்டுகண் டுள்ளே கருதிக் கழிகின்ற
விண்டலர் தாமரை மேலொன்றுங் கீழாகத்
தண்டமுந் தாமா யகத்தினுள் ளாமே. ***#2180***

அண்டத்தில் 'தீ, ஞாயிறு, திங்கள்' என்னும் மூன்று மண்டலங்களில் விளங்கும் முதல்வனைப் பிண்டத்திலே அம்மூன்று மண்டலங்களில் வைத்துக் கண்டு மேல் எழுதற்கு ஏதுவாய், உடம்பிற்குள்ளே மேல் ஒன்றும், கீழ் ஒன்றுமாக நாளத்தையும் உடையவாய், நன்கு மலர்ந்த தாமரை மலர்கள் உள்ளன.

விளக்கவுரை

'அவைகளில் அவனை அவ்வாறு கண்டு, மேற் போவதே யோகாவத்தை' என்பதாம். மாயம் - நிலையாமை; அஃது அதனையுடைய மாயா காரியத்தைக் குறித்தது. 'நாடன்' என்றதனால், அக்காரியம் அண்டமாதல் விளங்கிற்று. 'கழிகின்ற' என்னும் பெய ரெச்சத்தை, ஏதுப்

பொருட்டாகிய 'தாமரை' என்பதனோடு இயைக்க. 'ஒன்றும்' என்பது, 'கீழ்' என்பதனோடும் சென்று இயையும். 'மேல்' என்றது உச்சித் தலையை. 'கீழ்' என்றது மூலாதாரத்தை. 'மேல், கீழ்' என்றதனானே, இடையில் உள்ளனவும் பெறப்படும். யோக முறையில் மூலாதார முதல் மூன்று ஆதாரங்கள் அக்கினி மண்டல மாகவும், மற்றை மூன்று ஆதாரங்கள் ஞாயிற்று மண்டலமாகவும், ஏழாந்தானம் திங்கள் மண்டலமாகவும் கொள்ளப்படும். 'மூன்றினுள் உள்ள நாடன்' என்க. இதனால், 'யோகாவத்தைகள் அண்டத்தில் காணும் சிவக் காட்சியைப் பிண்டத்தில் காண்பனவாம்' என்பது கூறப்பட்டது.

போதறி யாது புலம்பின புள்ளினம்
மாதறி யாவகை நின்று மயங்கின
வேதறி யாவணம் நின்றனன் எம்மிறை
சூதறி வார்உச்சி சூடிநின் றானே. ***#2181***

விடியல் வாராத பொழுதும் வந்ததாகக் கருதி நள்ளிரவிலே ஆரவாரித்த சில பறவைகளைப் போன்ற உயிர்கள், திருவருள் தம்மை நோக்குதல் இல்லாத நிலையிலே நின்று, பொய்யை 'மெய்' எனக் கொண்டு மயங்குகின்றன. ஆதனால், எங்கள் இறைவனாகிய சிவனும் செம்பைப் பொன்னாக்கும் வித்தையை அறிந்தும் அறியாதவன் போல இருக்கின்றான். இச் சூழ்ச்சியை அறிந்த பெரியோர்கள், நீராதார யோகத்தாலும், சுத்த துரியத்தாலும் அவனது அருளில் தோய்ந்திருப்பர்.

விளக்கவுரை

நள்ளிரவில் ஆரவாரிக்கின்ற பறவை போல்வதாவது, சிவனையுணரும் பக்குவம் வாராத முன்பே வரப் பெற்ற வரைப்போல ஞான அனுபவங்களைக் கூறுதல். மாது, அருட்சத்தி, அது நோக்கா மையாவது ஆன்மாவிற் பதிய எண்ணாமை. எண்ணாத வகையில் நிற்றலாவது, பாசப் பற்றிலே கிடத்தல். வேது - வேதித்தல்; இரசவாதம் செய்தல், இங்குச் சீவனைச் சிவமாக்குதலாம். 'வண்ணம் - வண்ணத் -தனாய்' என்க.

இதனால், 'மலபரிபாகமும், சத்தி நிபாதமும் இல்லாதார் நூலறிவு பேசினாலும், யோகாவத்தையிற்றானும் செல்லாது, கீழாலவத்தை மத்தியா லவத்தைகளிலே கிடத்தல் கூறப்பட்டது.

கருத்தறிந் தொன்பது கண்டமு மாங்கே
பொருத்தறிந் தேன்புவ னாபதி நாடித்
திருத்தறிந் தேன்மிகு தேவர் பிரானை
வருத்தறிந்தேன் மனம் மன்னிநின் றானே. ***#2182***

(சுருதி உத்தி அனுபவங்களால்) அறிய வேண்டு -வதை அறிந்து, அதனால், 'உலக முதல்வன் யாவன்' என ஆராய்ந்து, 'அம்முதல்வன்

சிவபிரானே' என நான் நன்குணர்ந்தேன். பின்பு அவனை என்பால் வருவிக்கும் வழியறிந்து வருவித்தேன். அவன் அவ்வாறே வந்து என் மனத்தில் நிலையாக நின்றுவிட்டான்.

விளக்கவுரை

கருத்து - அறியத் தக்க பொருள். 'பாரத வருடம் ஒன்பது கண்டமாய் உள்ளது' என்பது ஆகமங்களில் சொல்லப் படுவது. 'பிண்டத்தில் நவகண்டமாவன, ஆறு ஆதாரங்களும் மூன்று மண்டலங் -களுமாம்' எனின் அவ்விருவகையினவும் ஒன்றை விட்டு மற்றொன்று இல்லாமையறிக. 'கண்டத்தையும்' என இரண்டாவது விரிக்க. பொருத்து, பொருத்துதல்; மூவினையுட் படுத்தல்; முதனிலை திரிந்த தொழிற் பெயர். இஃது ஆகுபெயராய்த் தனக்குக் காரணமாகிய முதனிலைமேல் நின்று, வினைமுதலை உணர்த்திற்று. எனவே, 'உலகிற்கு முதல்வன் ஒருவன் உண்டு' என்பதை அறிந்ததாயிற்று. நிலத்தை 'நிலமகள்' எனப் பெண்பாலாகக் கூறும் வழக்குப் பற்றிப் புவனத்தை, 'புவனா' என்றார். திருத்து - திருத்தம்; 'திருந்து' என்பதன் திரிபு. 'திருத்தமாக' (செம்மையாக) என ஆக்கம் வருவிக்க. 'மிகு தேவர் பிரான்' என்றது, 'சிவபிரான் என்றபடி, 'மிகு தேவர் பிரானைத் திருத்து அறிந்தே' என மாற்றியுரைக்க. 'வா' என்னும் பகுதி 'வரு' எனத் திரிந்து, 'து' என்னும் பிறவினை விகுதியோடு புணர்ந்து, 'வருத்து' என வருதல் உலக வழக்கில் உள்ளது. இதுவும் ஆகுபெயராய், இதற்குரிய உபாயத்தின் மேல் நின்றது. அது சரியை யாதி தவங்களுள் மேலானதாகிய யோகத்தையே உணர்த்திற்று. சிவன் மனத்தில் மன்னி நிற்றல் நின்மலாவத்தையிலாகும்.

இதனால், மல பரிபாகம் சத்தி நிபாதம் வரப் பெற்றோர் மேலாலவத்தை வழியாக நின்மலாவத்தை அடைதல் கூறப்பட்டது.

ஆன விளக்கொளி தூண்டு மவனென்னத்
தான விளக்கொளி யாம்மூல சாதனத்(து)
ஆன விதிமூலத் தான்அத்தில் அவ்விளக்(கு)
ஏனை மதிமண் டலங்கொண் டெரியுமே. ***#2183***

ஓரிடத்தில் ஏற்றி வைக்கப்பட்ட விளக்கு மற்றை யிடங்களிலும் வியாபித்து நிற்றல் போல, மூலாதாரமாகிய இடத்தில் உள்ள அந்த விளக்கினை அதனை ஏற்ற வேண்டிய முறையை யறிந்து அவ்விடத்திற்றானே மேலே நிலாமண்டலங்காறும் உள்ள இடங் -களில் வியாபிக்கும்படி, இடையே அணைந்துவிடாதபடி எரியுங்கள்.

விளக்கவுரை

'எரித்தால், சிவபிரான் உங்கள் மனத்திலே வந்து மன்னியிருக்கப்

பெறுவீர்கள்' என்பது குறிப்பெச்சம். ஆன விளக்கு - உலகில் ஓரிடத்தில் உள்ள விளக்கு. 'விளக்கினைத் தூண்டுபவன் போல மூலசாதனத்து அவ்விளக்கினை எரியும்' என முடிக்க தன் வினை, பிறவினை இரண்டிற்கும் பொதுவான 'எரி' என்னும்பகுதி, இங்குப் பிறவினையாய் நின்றது. 'எரியும்' உம் ஈற்று ஏவல் வினை முற்று. தானம் என்றது மூலாதாரம் ஒழிந்த மற்றை ஆதாரங்களை, சாதனம் - தொழில் முதல் நிலைகள் இங்கு அஃது இடத்தைக் குறித்தது. 'மூல சாதனத்து அவ்விளக்கு' என இயைக்க. 'அவ்விளக்கு' எனப் பண்டறி சுட்டாகச் சுட்டியது, 'அவ்விடத்து எழாது மடிந்து கிடக்கின்ற குண்டலிசத்தி' என்பது விளங்குதற் பொருட்டு. ஆன விதி - பொருந்திய விதிமுறை. அவை யோகநூல்களுட் கூறப்படுவன. மூலத்தான் - வழியால். 'அதனில்' என்பது 'அத்தில்' என மருவி வந்தது. 'ஏனை' என்பது இடையில் உள்ள ஆதாரங்களைத் தழுவிற்று. கொண்டு - அகப்படுத்து.
இதனால். 'முன் மந்திரத்தில் வருத்துதற்கு அறிந்த உபாயம் இது' என்பது சொல்லப்பட்டது.

உண்ணாடும் ஐவர் குமண்டை ஒதுங்கிய
விண்ஆட நின்ற வெளியை வினவுறில்
அண்ணாந்து பார்த் (து)ஐவர் கூடிய சந்தியின்
கண்நாடி காணும் கருத்ததென் றானே. ***#2184***

(கண் முதலியனபோல வெளியிலே கண்டறியப் படாமல்) 'உள்ளே கருதியறியப்படுகின்ற ஐம்புல ஆசைகளின் களியாட்டம் ஒழிதற் பொருட்டு யோகாவத்தையை நிகழ்த்துதற்குரிய இடங்கள் யாவை என ஆராயின், இருதயத்தினின்றும கீழே நோக்காமல், மேலே நோக்கினால், அந்த ஐம்புல ஆசைகளும் ஒருங்கு கூடி வந்து ஒடுங்கும் இடம் ஒன்று உண்டு. அந்த இடத்திலே நின்று, மேலும் ஆராய்க. அதுவே சிவனைப் புலப்படக் காணும் வழி' என்று எம் ஆசிரியர் நந்திபெருமான் எங்கட்கு அறிவுறுத்தார்.

விளக்கவுரை

'நாடும்' என்றது, 'நாடி உணரப்படும்' என்றபடி. குமண்டை - களியாட்டம். ஒதுங்கிய - ஒதுங்குதற்பொருட்டு. விண் - மேலிடம். மேலிடத்தில் ஆடுதலாவது, மேலாலவத்தையில். அஃதாவது யோகா வத்தையில் நிற்றல். 'வெளி' என்றது, 'இடம்' என்றபடி, ஐவர் கூடும் சந்தி, ஆஞ்ஞை, *(புருவ நடு)* 'நாடி' என்பது இகர ஈற்று ஏவல் வினைமுற்று. இது 'நாடுதி' எனத் தகரம் ஊர்ந்து வருதல் பெரும்பான்மை. சிறுபான்மை தகரம் ஊராதும் வரும். காணுதற்குச் செயப்படுபொருள் அதிகாரத்தால் வந்து இயைந்தது.
இதனால், முன் மந்திரத்திற் கூறிய உபாயத்தைப் பெறுமாறு

கூறப்பட்டது.

அறியாத வற்றை அறிவான் அறிவான்
அறிவான் அறியாதான் தன்னறி வாகான்
அறியாத வற்றை அறிவானைக் கூட்டி
அறியா தறிவானை யாரறி வாரே. *#2185*

அறிவில்லாத சடங்களாகிய பாசங்களை அப்பாச அறிவினால் அறிகின்ற ஆன்மா அந்தப் பாச அறிவைக் கொண்டு அறியவாராத பதி, அப்பாசங்களின் நீங்கியவழியும் பசு அறிவாலும் அறியவாரான். ஆகவே, அறிவில்லாத சடங்களாகிய பாசங்களையும், அறிவுடைய சித்தாகிய ஆன்மாவையும் ஒன்று கூட்டி அவற்றின் செயற்பாடுகளை அறியாதறிபவனாகிய பதியை அறியவல்லார் யாவர்? *(ஒருவரும் இல்லை.)*

விளக்கவுரை

'பாச ஞான பசு ஞானங்களின் நீங்கிப் பதி ஞானங் கண்ணாகக் காண்பவர்களே பதியை அறிவார்கள்; அத்தகையோர் உலகில் மிக அரியர்' என்பது கருத்து. 'தன்' என்றது 'பசுவை, 'தன்னறி விற்கும் ஆகான்' என உருபும் உம்மையும், அறியாதவற்றையும் அறிவானையும் கூட்டி என உம்மையும் விரிக்க. 'அறியாதறிதலாவது, சுட்டியறியாது, பொதுவாக அறிதல். 'கீழாலவத்தை மத்தியா லவத்தை களில் பாச அறிவும், மேலாலவத்தையில் பசு அறிவும் செயற்படுதலால் அவைகளில் பதி வெளிநில்லாது, நின்மலாவத்தையில் மட்டுமே வெளிநிற்பான்' என்பதையே இம் மந்திரத்தாற் கூறினார்.
இதனால், அவத்தைகளில் பதி நிற்குமாறு கூறப்பட்டது.

துரிய தரிசனம் சொற்றோம் வியோமம்
அரியன தூடணம். அந்நன வாதி
பெரியன கால பரம்பிற் றுரியம்
அரிய அதீதம் அதீதத்த தாமே. *#2186*

'பரவெளி' எனப்படுகின்ற திருவருள் வழி நிகழ் கின்ற நின்மலாவத்தைகளில், 'பேருறக்கம்' என்னும் நிலையை அடைதலையே சிறந்ததாகக் கூறினோம். அதற்குக் கீழ் உள்ள நனவு, கனவு, உறக்கம், என்பவைகளும் எல்லார்க்கும் எளியன அல்ல. எனினும் நின்மலாவத்தையும் காலத்தொடு பட்டு நிகழ்வனவாகலின் அவை கழித்தற்குரியனவே. காலத்தைக் கடந்து எல்லையற்று நிகழ்வன பராவத்தைகள். அவைகளில் ஈற்றில் உள்ளது துரியம். அரிதாகிய, துரியத்தையும் கடந்த நிலை துரியா தீத நிலையாகும்.

விளக்கவுரை

'வியோமத்தின்கண்' என்பதில் ஏழாவது இறுதிக்கண் தொக்கது. எனவே, அது முதலில் வைத்து உரைக்கப் படும். 'அந்நனவாதியும் அரியன; ஆயினும் தூடணம்' என்க. பரம் - மேல். அஃது ஆகுபெயராய், மேலனவாகிய நிலைகளைக் குறித்தன. 'பின்' என்றது, 'பின்னது' என்னும் பொருட்டு. 'அதீதம்' இரண்டில் முன்னது, 'கடந்தது' என்னும் பொருளது.
இதனால், 'பதி பசுவை உண்மையில் அடையும் நிலை பராவத்தையே' என்பது கூறப்பட்டது.

மாயையிற் சேதனம் மன்னும் பகுதியான்
மாயையின் மற்றது நீவுதல் மாயையாம்
கேவல மாகும் சகலமாய் யோனியுள்
தோயும் அநித்தம் துரியத்துள் சீவனே. *#2187*

அசுத்த மாயையால், ஆணவ மலம் காரணமாக முன்பு சடம் போலக் கிடந்த உயிர் சித்துத் தன்மையை உடையதாம். (அஃதாவது, 'செயற்படாதே கிடந்த, அறிவு இச்சை செயல்கள் செயற்படத் தொடங்கும்' - என்பதாம். இந்நிலை வித்தியா தத்துவங்களின் சேர்க்கையால் நிகழ்வது.)
பின்னர் மூலப் பிரகிருதியால், அந்தச் சித்துத் தன்மை நிலை பெற்று விளங்கும். (அஃதாவது, 'அறிவு இச்சை செயல்கள் நன்கு செயற்பட்டு விளங்கும்' என்பதாம். இந்நிலை ஆன்ம தத்துங்களால் நிகழ்வது.)
'மாயை' என்கின்ற மலத்தினாலே மற்றொரு மலமாகிய ஆணவத்தை இறைவன் கழுவியொழிக்கின்றான் என்பது வியப்பான செய்திதான். 'பொருளியல்புகள் அவ்வாறு அமைந்துள்ளன. 'மலம் மலத்தான் - கழுவுவன் என்று சொன்ன காரணம் என்னை, என ஐயம் எழுப்பி, 'செழுநவ அறுவை சாணி உவர் செறிவித்து அழுக்கை - முழுவதுங் கழிப்பன்'-என விளக்கம் தந்தார் அருணந்தி தேவரும்.*
மாயை சேராத பொழுது ஆன்மாத் தனிமையுடையதாகும்' மாயை சேர்ந்த பொழுது கலையோடு கூடியதாகும். அதுவே நிலையில்லாத பல்வேறு பிறப்புக்களில் புகும் பிறவிநிலை. இனி, 'மாயை, ஆணவம்' என்னும் இரண்டையும் கடந்து நிற்கும் நிலையும் உயிருக்கு உண்டு. (அதுவே சுத்தம்.)

விளக்கவுரை

'சீவன்' என்பதை முதலில் கூட்டுக. 'சேதனமாம்' என்னும் ஆக்கச் சொல் தொக்கது, 'பகுதியால் மன்னும்' - என மொழி மாற்றி, 'அது' என்னும் எழுவாய் வருவிக்க. 'மற்றையது' என்பது 'மற்றது' என மருவிற்று. ஈற்றில் உள்ள மாயை, 'வியப்பு' என்னும் பொருளது. கேவலம் - தனிமை. ஆணவம் சகசமாதலின் உயிர்க்கு ஆணவம் மாத்திரமே உள்ள நிலை

'கேவலம் எனப்படும். 'தன்னுண்மை' என்றும் சொல்லப் படும். கேவலாத்து விதிகள் முத்தி நிலையை, 'கேவலம்' என்பர். 'கலை' என்பது மாயையின் கூற்றையே குறித்தலால் மாயையின் காரியங்களாகிய தத்துவங்களோடு ஆன்மாக் கூடி நிற்கும் நிலை. 'சகலம்' எனப்படுகின்றது. 'சகலமாய், யோனியுள் அநித்தத்தில் தோயும்' என இயைக்க. கேவலத்தாகும், சகலத்தாய், எனக் கூறற்பாலன 'கேவலமாகும், சகலமாய்' எனக் கூறப்பட்டன. 'துரியத்துள்ளும்' எனச் சிறப்பும்மை விரித்து, 'தோயும்' என்பதனைப் பின்னுங் கூட்டி, 'துரியத்துள்ளும் தோயும்' எனஉரைக்க. துரியம் - கடப்பு. இஃது இடுகுறியாகாது, காரணத்தளவில் நின்றது.

இதனால், மேற்கூறிவந்த அவத்தைகளையெல்லாம் ஓராற்றால் தொகுத்துக் காட்டும் முகத்தால் வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

*10.7.*கேவல சகல சுத்தம்

தன்னை யறிசுத்தன் தற்கே வலன்றானும்
பின்ன முறநின்ற பேத சகலனும்
மன்னிய சத்தசத் துச்சத சத்துடன்
துன்னுவர் தத்தம் தொழிலள வாகவே. *#2188*

தத்துவங்களையும், அவற்றின் நீங்கியவழித் தன்னையும் அறிதலை விடுத்துச் சிவத்தை அறிகின்ற சுத்த நிலையை அடைந்தவனும், அவ்வாறின்றி, 'தத்துவம், சிவம்' என்ற இரண்டையும் அறியாது, ஆணவம் ஒன்றிலே மட்டும் அழுந்தி யிருக்கின்ற, தனது அநாதியியல்பை உடையவனும், இவ்விருவரின் வேறாய்த் தத்துவங் - களை அறிந்து நிற்பவனும் தம்தம் ஆற்றலுக்கு ஏற்ப முறையே, சத்து, அசத்து, சதசத்து ஆகிய பொருள்களில் பொருந்தியிருப்பர்.

விளக்கவுரை

இங்ஙனம் அநுவாத முகத்தால் கூறியதனானே, 'கேவலம், சகலம், சுத்தம்' என்பன காரண அவத்தைகள்' என்பதும், அவற்றின் இயல்புகளும் பெறப்பட்டன.

அவற்றின் இயல்புகளாவன, ஆன்மா அநாதியில் ஆணவ மலத்தோடு மட்டும் பொருந்தி, இருளில் மூழ்கியிருந்த நிலை கேவலம். எனவே, பிற்காலங்களிலும் கருவி கரணங்களின் நீங்கி, ஆணவ மலத்தோடு மட்டும் இருத்தலும் கேவல நிலையேயாதல் விளங்கும். கீழாலவத்தை மத்தியாலவத்தைகளிலும் இந்நிலை இடையிடையே வருவதாம்.

ஆன்மா மாயா காரியங்களாகிய தத்துவங்களோடு கூடியச் சிறிதே அறிவு பெற்று உலகத்தை அறிந்து நிற்கும் நிலை சகலம். யோகா வத்தையும் கருவிகரணங்களின் வழி நிகழ்வனவேயாகலின் சகலமேயாம்.

ஆன்மா மும்மலங்களினும் நீங்கிச் சிவத்தையே அறிந்து நிற்கும் நிலை சுத்தம் என்க. சகலத்திலும் இது நிகழ்வதாயினும் அது நிறைவுடையதன்று.

'தன்' என்பது முன்னர்ச் சிவத்தையும், பின்னர் ஆன்மாவையும் குறித்தன. 'சுத்தன்' என்பதிலும் எண்ணும்மை விரிக்க. 'சத்தாவது நிலைத்ததும், அசத்தாவது நிலையாததுமாம்' என்றற்கு, 'மன்னிய சத்து' என்றார். ஆணவம் முத்தியில் சத்தி கெட்டு நிற்றலால், 'அசத்து' என்றார். தத்துவங்களில் இங்குத் தனு கரணங்களையே 'சதசத்து' என்றார். சதசத்தாவது உயிரே ஆயினும், சகல நிலையில் தத்துவங்களையே உயிராக உணரும் நிலை உளதாதல் பற்றி அவ்வாறு கூறினார். 'தொழில்' என்றது, அதற்கு ஏதுவாய ஆற்றலை. 'தத்தம்

தொழிலளவாகவே துன்னுவர்' என்க.
இதனால், 'இங்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காரண அவத்தைகள் இவை' என்பதும், அவற்றின், இயல்புகளும் தொகுத்துக் கூறப்பட்டன.

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானேதான் செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனும் ஆமே. *#2189*
(இதன் பொருள் வெளிப்படை.)

விளக்கவுரை

'உயிர்களினது பக்குவ வகைகளே அவகைளின் அவத்தை வேறுபாடுகட்குக் காரணம்' என்பது இம்மந்திரத்தின் குறிப்புப் பொருள்.
'நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும், - நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்'*
என்னும் நாலடிச் செய்யுளும் ஒருவனது அறிவு அறியாமைகளால் உளவாய செயற்கை நிலைகளையே அவனது இயற்கை நிலைகளாக உபசரித்துக் கூறினமை இங்கு ஒப்பு நோக்கிக் கொளத் தக்கது. 'மறுமை, இம்மை' என்பன கால ஆகுபெயர்களாய், அக்காலங்களில் விளையும் பயன்களை உணர்த்தின.
இதனால், 'காரண அவத்தைகட்குக் காரணம் உயிர்களின் பக்குவாபக்குவங்கள்' என்பது கூறப்பட்டது.

ஆம்உயிர் கேவல மாம்மாயை யின்னிடைந்(து)
ஆம்உயிர் மாயை எறிப்ப அறிவுற்றுக்
காமிய மாயேய மும்கல வாநிற்பத்
தாமுறு பாசம் சகலத்த தாமே. *#2190*

உயிர் மாயை கன்மங்களோடு கூடாது ஆணவத்தோடு மட்டும் இருந்த நிலை கேவலாவத்தை. (இதுவே உயிர்களின் அநாதி நிலை). பின்பு இறைவன் மாயா காரியங்களைக் கூட்டுவிக்க, அவற்றால்சிறிது அறிவைப்பெற்று வினைகளை ஈட்டியும், நுகர்ந்தும் வரும் நிலை சகலாவத்தை.

விளக்கவுரை

எனவே, 'உயிர் மாயை கன்மங்களோடு கூடுதற் கியலாத தன்மை கேவலத்திற்கும், அவற்றோடு கூடுதற்கியன்ற நிலை சகலத்திற்கும் காரணம்' என்றதாயிற்று.
'உயிர் மாயையின் இடைந்து கேவலம் ஆம்' எனக் கூட்டுக. 'இடைதல்'

என்பது இயற்கையிலே விலகி நிற்றலைக் குறித்தது. 'இடைந்தவழி' என்பது 'இடைந்து' எனத் திரிந்து நின்றது. எறித்தல் - ஒளிவிடுதல். எனவே, மாயை விளக்காதல் பெறப்பட்டது. இஃது 'எறிப்ப' என்ற குறிப்பாற் பெறப்பட்டமையால், குறிப்புருவகம். 'மாயா தனுவிளக்கா'1 என்றார் மெய்கண்டதேவரும். 'கான்மியம்' 'காமியம்' என மருவிற்று. 'மூல கன்மம் காரணமாக உயிர்களால் செய்யப்பட்டது' என்பது இதன் பொருள். மாயேயம் - மாயையின் காரியங்கள். அவை தனு கரண புவன போகங்கள். இறைவனால் உறுவிக்கப்படுவனவற்றைத் தாமாக உறுவன போல வைத்து, 'தாம் உறு பாசம்' என்றார். அங்ஙனம் கூறினமையால், அவை ஆகந்துக மாகிய மாயை கன்மங்களைக் குறித்தன. 'அப்பாசம்' எனச் சுட்டு வருவித்து, 'அப்பாசங்களால்' என உருபு விரிக்க.

இதனால், முன்னை மந்திரத்தில் தொகுத்துக் கூறப்பட்ட காரண அவத்தை மூன்றனுள் முதல் இரண்டு அவத்தைகளின் இயல்புகள் வகுத்துக் கூறப்பட்டன.

சகல அவத்தையில் சார்ந்தோர் சகலர்
புகலும் மலம்மூ வகையும் புணர்ந்தோர்
நிகரில் மலரோன் மால் நீடுபஃ றேவர்கள்
இகழும் நரர்கீடம் அந்தமு மாமே. ***#2191***

ஆன்மதத்துவங்கள் கூடுதல் குறைதல்களால் நிகழும் அவத்தைகளே சகலாவத்தைகள் ஆதலின், அவைகளை அடைந்தோர் யாவரும் சகல வருக்கத்தினரே. ஏனெனில், அவர்களே முக்குண வடிவாகிய பிரகிருதியுட்பட்டு, மும்மலங்களை உடையவர் -களாய் இருத்தலின். எழுவகைப் பிறவியும் எய்தும் உயிர்கள் யாவும் சகல வருக்கத்தினவாதல் தெளிவு. இனி அவ் உயிர்களின் மேம்பட்டவர்களாக எண்ணப்படுகின்ற 'அயன் மால்' என்பவர்களும் பிரகிருதி புவனத்துள் பிறந்து இறந்தமை புராண இதிகாசங்களில் கேட்கப்படுதலால், அவர்களும் சகல வருக்கத்தினரே.

விளக்கவுரை

'நீல உருத்திரர்' என்பவர் ஆகமங்களில் அருகிச் சுட்டப்படுதலால், அவர் சகல வருக்கத்தினராதலை நாயனர் இங்குக் குறிக்கவில்லை. 'சகலரே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுக்கப் பட்டது. சகல வருக்கத்தினரே சிவனை அறியாது மயங்குபவர். அது 'தோன்றலர்தொத் துள்ளார் துணை'3 என்னும் திருவருட்பயனாலும் விளங்கும். அயன், மால் என்பவரும் ஒரோவழி அங்ஙனம் மயங்குபவராதலை நினைக்க. இரண்டாம் அடியின் இறுதியில், 'அவரேயாதலின்' என்னும் காரணச் சொல்தொக்கு நின்றது.

மாலோனைப் பிறவாதவனாகக் கூறின், நிலவுலகில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, மறைந்தமக்கள் சிலரைப் புராண இதிகாசங்கள் 'மாயோன் அவதாரம்' எனக் கூறுதலை 'உண்மை' என்னாது, உயர்த் - தற்பொருட்டுக் கூறிய உபசாரமொழிகளாகக் கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் கொள்ளின், மாயோன் சம்பு பக்கத்தவனே யாவன்.
நரர் - மக்கள். கீடம் - புழு. 'நரராதி கீடம் அந்தமாம்' என்க. உம்மை, 'அனைத்தும்' எனப் பொருள் தரும் முற்றும்மை.
இதனால், 'காரண அவத்தைகளை மூன்றாக எண்ணுதல் சகலரை நோக்கியே' என்பது கூறப்பட்டது.

தாவிய மாயையில் தங்கும் பிரளயர்
மேவிய மற்ற துடம்பாய்மிக் குள்ளனர்
ஓவலில் கன்மத்தர் ஒன்றிய சீகண்டர்
ஆவயின் நூற்றெட் டுருத்திரர் என்பவே. ***#2192***

மாயை ஒழிந்த ஏனை இரு மலங்களையுடைய 'பிரளயாகலர்' என்போர் பிரகிருதியைக் கடந்த மாயாதத்துவத்தில் இருப்பர். அதனால் இவர்களது தனு கரணாதிகள் பிராகிருதம் ஆகாது. மாயேயமேயாம். (எனவே, 'மாயையின் நீங்கினார்' என்பது, 'பிரகிருதியின் நீங்கினார்' என்பதேயாம். ஆகவே, இவர்கள் சகலரினும் மேம்பட்டவர்கள், சிவனை ஒரு போதும் அறியாது மயங்குவாரல்லர்.) மாயையின் நீங்கினாராயினும் கன்மம் நீங்கப் பெறாதவர்கள். (இவர்களுக்கு உள்ள கன்மம் சூக்கும கன்மமே.) அனந்த தேவர் வழிநின்று குணமூர்த்திகளை ஏவிப் பிரகிருதி மாயையில் காரியங்களைச் செய்விக்கும் சீகண்ட ருத்திரர், மற்றும் பிரகிருதி தத்துவத்தில் உள்ள நூற்றெட்டுப் புவன ருத்திரர்கள் ஆகியோர் இப்பிரளயாகலர் வருக்கத்தைச் சேர்ந்தவர்களே.

விளக்கவுரை

இவ்வுருத்திரர்களைப்பற்றிச் சிவஞானபோதம் சூத்திரம் இரண்டு, அதிகரணம் மூன்றின் மாபாடியத்தால் அறிக. தாவிய கடந்த, 'பிரளயர் மிக்குள்ளனர்' என இயைக்க. மேவிய மேவப்பட்ட. 'மாயையில் தங்கும் பிரளயர்' என்ற அனுவாதத்தானே. 'அவர் மாயையில் தங்குவர்' என்பது பெறப்பட்டது. மற்று, அசை. அது - முன்னர்க்கூறிய மாயை. 'உடம்பு' எனத்தனுவையே கூறினா ராயினும், இனம்பற்றிக் கரணம் முதலியனவும் கொள்ளப்படும். 'ஒன்றிய - கீழ் உள்ளாரோடு பொருந்திய' என உரைக்க. 'சீகண்ட உருத்திரரே சகலர்கட்குப் பரம்பொருளாய் எல்லாவற்றையும் அருளுபவர்' என்பது சிவாகாமங்களில் சொல்லப்படுவது. 'கைலாச பதியாய் உள்ளவர் இவரே' என்பதும் அத்தகையது. அதனால், இவர் பிரளயாகலருள் பக்குவராய்ச் சிவனருளைப் பெற்றவர் என்க. 'ஆவயின் உள்ளார்' என ஒரு

சொல்வருவித்து, அத் தொடரை, 'கன்மத்தர்' என்றதன் பின்னர்க் கூட்டுக. 'தாவிய மாயையில் தங்கும் பிரளயர்' என்றதனால், அவருக்குச் சகலாவத்தை உண்டாகாமை பெறப்பட்டது. கேவலாவத்தை சுத்தாவத்தைகள் எல்லார்க்கும் உள்ளது.
இதனால், சகலாவத்தை இல்லாதவருள் ஒருசாராரது இயல்பும், 'அன்னார் இவர்' என்பதும் கூறப்பட்டன.

ஆகின்ற கேவலத்*(து)* ஆணவத்*(து)* ஆனவர்
ஆகின்ற வித்தேச ராம்அனந் தாதியர்
ஆகின்ற எண்மர் எழுகோடி மந்திரர்
ஆகின்ற ஈசர் அநேகரு மாமே. *#2193*

எல்லார்க்கும் உரித்தாகின்ற கேவலாவத்தையைத் தாங்களும் உடையவர்களாய், ஆயினும் கன்மமும், மாயையும் இன்றி, ஆணவம் ஒன்றை மட்டும் உடையவர்களில் பக்குவம் பெற்றோர் அனந்தர் முதலிய அட்ட வித்தியேசுரர்களும், சத்த கோடி மகாமந்திரேசுரர்களும் ஆவர். அபக்குவரோஅநேகர்.

விளக்கவுரை

அபக்குவர்களையும் 'மந்திரேசுர்' என்பர். இவர்களைச் சிவஞான சித்தி.*8* 'வித்தைகள்' எனக்கூறிற்று. 'மந்திர மகேசுரர்' என்பதனை, 'ஈசர்' எனக் கூறினார். 'அநேகர்' என்ற குறிப்பானே, அபக்குவர் என்பது போந்தது. ஒரு மலம் உடையோர் 'விஞ்ஞான கலர்' எனப்படுவர்.
இதனால், 'சகலாவத்தை யில்லாதவருள் மற்றொரு சாரார் இவர்' என்பது கூறப்பட்டது.

ஆம்அவ ரில்சிவன் ஆரருள் பெற்றுளோர்
போம்மலந் தன்னால் புகல்விந்து நாதம்விட்*(டு)*
ஓம்மயம் ஆகி ஒடுங்கலின் நின்மலர்
தோம்அரு சுத்த அவத்தை தொழிலே. *#2194*

மேல், 'ஒருமலம் உடையார்' எனக் கூறப்பட்ட -வர்களில், பெறுதற்கரிய சிவனது திருவருளை நிரம்பப் பெற்ற சிலர் அதிகார மல வாசனை, போக மல வாசனை ஆகியவைகள் நீங்கப் பெற்று, இலய மல வாசனை மட்டுமே உடையவர் ஆவர். ஆகவே, அவர்கள் மலம் முற்றும் நீங்கிய முத்தர்களாகவே கருதப்படுவர். (அதனால் அவர்கட்குக் கேவல நிலை உள்ளதாகவும் கருதுதல் கூடாது. அவர்கள் வாழ்வது அபர விந்து அபர நாதங்களைக் கடந்த பரவிந்து பர நாதங்களிலாம். ஆகவே, அவர்கள் சூக்குமை வாக்கு ஒன்றை மட்டுமே உடையவர் ஆவர். அவ்வாற்றால் அவர்கள், சுத்தாவத்தை ஒன்றை மட்டுமே அடைபவராகக் கருதப்படுவர்.

விளக்கவுரை

'போம்மலந் தன்னால்' என்றது, 'மலம் போயதனால்' என்றபடி, மலம் இங்கு மல வாசனை. போயவை அதிகார மல வாசனை, போக மல வாசனைகளே. அஃது, 'ஓம் மயமாகி' என்றத னாலும், 'ஒடுங்கலின்' என்றதனாலும் விளங்கும். ஒடுங்கல். இலய நிலையில் நிற்றல். அதனுள்ளும் இங்கு கூறப்பட்டது சூக்கும இலய நிலையே. அதனால், 'விந்து, நாதம்' என்பன அபர 'விந்து, அபர நாதங்களே ஆயின. இங்ஙனமாகவே, 'அபர முத்தர்கள்' என்னும் பெயர் இந்நிலையில் நின்றோர்கட்கு பெரிதும் பொருந் துவதாம். 'அணு சதாசிவர்கள்' என்னும் பெயரும் போக மலம் உடையவர்கட்கே பொருந்துவது. அவர்கள் சாதாக்கிய தத்துவத்தில் போகங்களை நுகர்ந்து கொண்டிருப்பர். தோம் - குற்றம்; மலம். 'இவர் தொழில்' என ஒரு சொல் வருவித்து 'தோம் அறு சுத்தாவத்தையே' என ஏகாரத்தை மாறிக் கூட்டி முடிக்க. ஏகாரம் - பிரிநிலை.

இதனால், சுத்தாவத்தை ஒன்றை மட்டுமே அடைபவரது இயல்பு கூறப்பட்டது.

ஓரிருள் மூவகை நால்வகை யும்முள
தேரில் இவை கே வலம் மாயை சேர் இச்சை
சார்இயல் ஆயவை தாமே தணப்(பு) அவை
வாரிவைத்(து) ஈசன் மலம்அறுத் தானே. *#2195*

ஆன்மாத் தன் அறிவை யிழந்து நிற்பதாகிய கேவல நிலையுள் மூன்றுவகை உண்டு. அவை நாலாகவும் வகுத்துக் கூறப்படும். 'அவை யாவை' - என ஆராயின், ஆணவகேவலம், ஆணவத்தை நீக்குதற்குச் சிவன் விரும்பும் விருப்பக் கேவலம், தத்துவ சுத்திக்குப்பின் ஆன்ம தரிசனத் தொடக்கத்தில் உளதாகும் திகைப்புக் கேவலம்' என்பன. (இவை முறையே ஆன்மா அநாதியில் ஆணவத்தில் மூழ்கியிருந்த நிலையும், பின்பு இறைவன் ஆன்மாவை அந்நிலையினின்றும் விடுவிக்க மாயையைக் கூட்ட முனையும் நிலையும், பின்பு மாயா காரியங்களாகிய கருவி கரணங்களினின்றும் நீங்கிய நிலையுமாகும். இவை முறையே மருட்கேவலம், சகல கேவலம், அருட் கேவலம் - எனப் பெயர் பெறும். இறைவன் மாயையைக் கூட்டமுனைவது சூக்கும ஐந்தொழிலாகும். இந்நிலை சருவ சங்காரத்திற்குப் பின் மீளப் படைத்தற்கு முன்னேயும் உளதாகும். இவற்றைச் சிவஞானபோத ஆறாம் சூத்திரத்து அதிகரணத்தின் சிற்றுரையால் உணர்க. அருட் கேவலம் துகளறு போதத்திலும் சொல்லப்பட்டது.

இனிச் சகல கேவலத்தை, விஞ்ஞான கேவலம், பிரளய கேவலம் - என இரண்டாக்கி, 'கேவலம் நால் வகைத்து' என்றலும் உண்டு (இதனை

நாயனார் உய்த்துணர வைத்தார். சகல கேவலத் -தையும் வேறாக எண்ணி, 'கேவலம் ஐவகைத்து' என்றலும் உண்டு. அதனை நாயனார் குறித்திலர். மாயை, கன்மம் - இரண்டனோடும் கூடாது, அவை கூட்டப்படுதற்கு ஆவன செய்யப்படும் நிலை விஞ்ஞான கேவலம் - எனவும், கன்மம் கூட்டப்பட்டு, மாயை கூட்டப் படாத நிலை பிரளய கேவலம் - எனவும் உணர்க.*)*

இவ்வாறான பல வகை அவத்தைகளை வைத்துச் சிவன் ஆன்மாக்களின் பாசங்களைப் போக்குகின்றான்.

விளக்கவுரை

'ஆகவே அஃது அருட் செயலேயன்றி, வன்கண்மைச் செயலன்று' என்பது குறிப்பெச்சம். 'சேர் இசை' 'சேர்க்கும் இசை' எனப் பிறவினை வினைத்தொகை. சார் இயல் - சார்பு தன்மை. இயல் உடையவற்றை 'இயல்' என்றார். அவை மாயா காரியங்கள். 'தாம், ஏ' அசைகள். தணப்பு - நீக்கம். இஃது ஆகுபெயராய், அது நிகழும் நிலையைக் குறித்தது. வாரி வைத்தல் - அள்ளி வைத்தல்; 'மிகுதியாக வைத்து' என்றவாறு. இதனால், காரண அவத்தைகள் மூன்றனுள் ஒன்றன் உட்பகுதிகள் கூறப்பட்டன.

பொய்யான போதாந்தம் ஆறாறும்விட்டகன்*(*று*)*
எய்யாமை நீங்கவே எய்யவன் தானாகி
மெய்யாஞ் சராசர மாய்வெளி தன்னுட்புக்*(*கு*)*
எய்தாமல் எய்தும் சுத் தாவத்தை என்பதே*. #2196*

உண்மையான சுத்தாவத்தையாவது, விபரீத ஞானத்தையே தருகின்றவைகளாகிய கருவிகள் முப்பத்தாறினின்றும் விடுபட்டு அப்பாற்போய், அங்ஙனம் போயதனால் அறியா -மையையே தருவதாகிய ஆணவமலம் வந்து பற்றுதலாகிய அந் நிலையும் தோன்றாதொழிய, யாதொன்றனையும் உண்மையாகவே அறியும் அறிவை யுடையவனாய், அந்த அறிவால் சரம், அசரம் ஆகிய அனைத்தையும் ஒருகாலத்திலே ஒருங்கே உணரும் நிலையை உடையனாய், அத்தன்மைத்தாய் விளங்கும் பராகாயமாகிய அருள் வெளியுட் பகுந்து, அவ்வெளிக்குள் உள்ள சிவனை, அடையாமல் அடைந்திருப்பதாகும்.

விளக்கவுரை

போதம் - அறிவு. 'பொய்' என்றது விபரீதத்தை. போதம் தருவனவற்றை, 'போதம்' என்றார். எய்யாமை - அறியாமை. 'எய் யாமையே அறியா மையே' என்பது தொல்காப்பியம்.*1* எய்யாமைக்கு எதிராக 'எய்தல்' என்றோ, 'எய்த்தல்' என்றோ ஒரு சொல் அக்காலத்தில்

இல்லையாயினும் இங்கு நாயனார் 'அறிகின்ற அத்தன்மையுடையவன்' என்னும் பொருளில், 'எய்யவன்' என்றார். மெய் - பொருள். 'மெய்யாம் வெளி' என இயைத்தலும் ஆம். சராசரங்களும் தானாதல், அவற்றை ஒரு காலத்தே ஒருங்கே உணர்ந்து நிற்றல். எய்தாமல் எய்தல், புதுவதாய்ச் சென்று அடையாமல் அநாதியே பெற்றிருந்த பொருளை அஃது அன்ன தாதலை உணர்ந்து, வியத்தல். இதனானே, 'சுத்தாவத்தையே இயற்கை' என்பதும், 'கேவலமும், சகலமும் மலங்களாகிய உபாதியான் ஆக செயற்கைகள்' என்பதும் விளங்கும். இக்கருத்தே பற்றித் திரு வள்ளுவரும், வீட்டு நிலையை, 'பேரா இயற்கை'*3* என்றார். எய்துதற்குச் செயப்படு பொருள், 'வெளி' என்ற குறிப்பால் பெறப்பட்டது. 'எய்தும்' எனக் காலம் வினை முதல் போலக் கூறப்பட்டது.
இதனால், சுத்தாவத்தையின் இயல்பு உண்மையாற் கூறப்பட்டது.

அனாதி பசுவியாத் தியாகும் இவனை
அனாதிஇல் வந்த மலம்ஐந்தால் ஆட்டி
அனாதியில் கேவலன் அச்சக லத்திட்*(டு)*
அனாதி பிறப்பறச் சுத்தத்துள் ஆக்குமே. ***#2197***

அனாதியே பாசத்துட்பட்டுப் பசுத்தன்மை எய்தி நின்ற இந்த உயிரை, அனாதியாயும், ஆதியாயும் வந்த ஐந்து மலங்களால் ஆட்டிப் படைப்பவன் சிவன். அவன் அனாதியில் கேவல நிலையிலிருந்த உயிரை சகல நிலையில் கொணர்ந்துவைத்துப் பின்பு அனாதியாய பிறப்பு ஒழியும்படி சுத்தாவத்தையில் சேர்ப்பான்.

விளக்கவுரை

முதல் அடியில் 'அனாதியில்' என ஏழாவது விரிக்க. 'பசுவாய்' என்னும் ஆக்கச் சொல்தொக்கது. 'வியாத்தியாய்ப் பசுவாகும் இவனை' என மொழிமாற்றி உரைக்க. ஒன்றைத் தன்னுள் அடக்கியிருப்பது வியாபகப் பொருள்; ஒன்றில் தான் அடங்கி யிருப்பது வியாப்பியப் பொருள். அடங்குதலும், அடக்குதலும் இன்றிச் சமமாய் இருப்பது வியாத்தி (வியாப்தி) பொருள். 'அனாதி யாய், இல்லாய் வந்த' என இரண்டிலும் ஆக்கம் வருவித்து உரைக்க. அனாதியில்லாய் வருதலாவது, ஆதியாய் வருதல். அனாதியாய் வந்தது ஆணவம். ஆதியாய் வந்தவை மாயை, கன்மம், மாயேயம், திரோதாயி. 'ஆட்டி' என்பது பெயர். ஆட்டுமாறு பின்னிரண்டடிகளில் கூறப்பட்டது. 'ஆட்டி - இட்டு, ஆக்கும்' என முடிக்க. 'ஆகும்' என்பது பாடம் அன்று. 'கேவலனை' என்னும் இரண்டன் உருபு தொகுக்கப் பட்டது. 'வித்தினின்று' மரம், மரத்தி - னின்றும் வித்து என்பது போல, 'வினையால் பிறப்பு, பிறப்பால் வினை' என இவ்வாறு முதல் அறியப்பாடது தொடர்ந்து வருதலின் பிறப்பை 'அனாதி' என்றார்.

இதனால், 'கேவலம் ஆணவத்தின் செயல்' என்பதும், 'சலகமும், சுத்தமும் சிவன் செயல்' என்பதும் கூறப்பட்டன.

அந்தரஞ் சுத்தவத் தைகே வலத்தாறு
தந்தோர்தஞ் சுத்தகேவ லத்தற்ற தற்பரத்
தின்பால் துரியத் திடையே அறிவுறத்
தன்பால் தனையறி தத்துவந் தானே. *#2198*

எல்லாவற்றினும் மேலாய், நிறைவாய் உள்ள உண்மைச் சுத்த துரியாதீதமே, 'சுத்தாவத்தை' என்றற்குப் பெரிதும் ஏற்புடையது. அஃது 'அருட்கேவலம்' எனப்படும் தத்துவ சுத்திக்குப் பின் வாய்ப்பதாகும். அதனை அவ்வாற்றால் சிவனால் தரப்பட்டவர் தனித்த ஒரு சுத்தமாகிய அந்த அதீத நிலையில் யாதொரு பற்றும் இல்லாத சிவமேயாய் இருப்பர். (இதில், 'யான், எனது' என்னும் உணர்வு இல்லையாம்.) இனி அதற்குக் கீழ்நிலையில் உள்ள துரிய நிலையில் ஆன்ம அறிவு சிறிதே நிகழ்தலால், ஆன்மாச் சிவனை அறியும் முகத்தால் தன்னை அறிபவனாக உணரும் நிலை உள்ளதாம்.

விளக்கவுரை

'அந்தரம்' என்பது, 'ஆகாயம்' என்னும் பொருட்டாய், மிக மேலான நிலையைக் குறித்தது. அஃது உண்மைச் சுத்த துரியா தீதமாம். 'அதற்கு வழி' என்றதனால், 'கேவலம்' என்றது, அருட் கேவலம் ஆயிற்று. தந்தோர் - தரப்பட்டோர். 'அதனைத் தந்தோர்' என்க. 'சுத்த கேவலம்' என்றதில், 'கேவலம் கலப்பற்றது' எனப் பொருள் தந்தது. 'தற்பரத்தின்பால்' என்பதன் பின் 'உளர்' என்பது எஞ்சி நின்றது. 'இடை' - ஏழனுருபு. 'அறிவுற' என்னும் செயவெ னெச்சம் காரணப் பொருளில் வந்தது. தான், அசை. ஏகாரம், தேற்றம். இதன்பின்னும் 'உள்ளது' என்பது எஞ்சி நின்றது. 'தத்துவம் ஆமே' - எனப்பாடம் ஓதலும் ஆம். இதனால், சுத்தத்தில் சுத்தமாய் உள்ளவை சுத்த துரியமும் துரியாதீதமும் ஆதல் சொல்லப்பட்டது.

ஐயைந் தொடுங்குமவ் வான்மாவில் ஆன்மாவும்
மெய்கண்டு சுத்தஅவ் வித்தையில் வீடாகும்
துய்யஅவ் வித்தை முதல் மூன்றுந் தொல்சத்தி
ஐயை சிவம் சித்தி ஆம் தோற்றம் அவ்வாறே. *#2199*

நிலம் முதல் பிரகிருதி ஈறான இருபத்தைந்து தத்துவங்களும் சகல வருக்கத்து ஆன்மாக்கட்குப் பரமாய் உள்ள சீகண்ட உருத்திரரிடத்தில் ஒடுங்கும் (இது பற்றியே இவை, 'ஆன்ம தத்துவம்' எனப் பெயர் பெற்றன. ஒடுக்கம் கூறுதலால் காரணமாய் உள்ள பிரகிருதியையும் கூட்டி 'இருபத்தைந்து' என்றார்.)
அந்தச் சீகண்ட உருத்திரரும், 'தமக்கு' தனு கரணம் முதலியன வாய்

வருவன அசுத்த மாயையே' என்னும் உண்மையை உணர்ந்து அவற்றின் நீங்கிச் சுத்த வித்தையில் வீடு பெறுவார். (எனவே, 'அசுத்த மாயா காரியங்களாகிய வித்தியா தத்துவங்கள் அந்தச் சுத்த வித்தைக்குத் தலைவராகிய அனந்த தேவரிடத்தில் ஒடுங்கும்' என்பது தானே பெறப்பட்டது.)

இனி, அந்தச் சுத்த வித்தை முதலாக ஒடுக்க முறையில் நிற்கும் முதல் மூன்று தத்துவங்களும், 'சத்தி' எனப்பெயர் பெற்று நிற்கும் இலய சிவனிடத்தில் ஒடுங்கும். சிவ தத்துவம் ஐந்தில் எஞ்சிநின்ற 'சத்தி, சிவம்' என்னும் இருதத்துவங்களும் முடிநிலைப் பேறாய் உள்ள சுத்த சிவனிடத்தில் ஒடுங்கும். இவை யெல்லாம் மீளத் தோன்றுங்கால் இம்முறையானே தோன்றும்.

விளக்கவுரை

'ஆன்மா' என்பது, ஏற்புழிக் கோடலால், 'சகல வருக்கத்து ஆன்மா' எனப் பொருள் தந்தது. அவைகட்குப் பரமா யுள்ள கடவுளை அவ்வான்மாக்களாக உபசரித்துக் கூறினார். 'ஆன்மாவும்' - என்னும் உம்மை சிறப்பும்மை. சுத்த சிவன், 'இலயம், போகம், அதிகாரம்' - என்னும் நிலைகளில் நிற்குங்கால் முறையே, சத்தன், 'உத்தியுத்தன், பிரவிருத்தன்'-எனப் பெயர் பெறுதலை நினைக. சத்தன் - சத்தியை உடையவன். எனவே, சத்தியை உடை யவனை, 'சத்தி' - என ஆகுபெயரால் கூறியதாயிற்று. 'ஐயை - சத்தி. 'சித்தி' என்றது, 'முடிநிலைப் பேறு' என்னும் பொருட்டாய் நின்றது. இப்பொருளை, 'தத்துவம் எண்மூன்றும் சென்று ஆன்மா தத்துவத் தொடுங்கும்' என்னும் சிவஞான சித்திச் செய்யுட்கு8 மாதவச் சிவஞான யோகிகள் உரைத்த உரை பற்றித் தெளிக.

சீகண்ட உருத்திரருக்கு ஒடுக்கங் கூறிய அதனானே, சகல வருக்கத்தினரான 'அயன், மால்' என்பவரில், 'அயன் மாலிடத்திலும், மால் சீகண்ட உருத்த்திரரிடத்திலும் ஒடுங்குவர்' - என்பதும், 'வித் - தியேசுரர் மகேசுரனிடத்திலும் மகேசுரன் சதா சிவனிடத்திலும், சதா சிவன் 'சத்தி' என நிற்கும் இலயசிவனிடத்திலும், 'சத்தி' என்னும் சிவன், 'சிவன்' என்றே பெயர்பெற்று நிற்கும் சிவனிடத்திலும் அந்தச் சிவன் சுத்த சிவனிடத்திலும் ஒடுங்குவர் என்பதும் பெறப்படும். இவற்றால், 'சகலத்தில் நிகழும் சுத்த சாக்கிரம்' எனப்படும் தத்துவ சுத்தி ஒன்றே, 'நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகளின் அடங்கிய தத்துவங் -களினின்றும் முறையே நீங்குதலே, சாக்கிரத்தில் சாக்கிரம், சாக்கிரத் தில் சொப்பனம் முதலான பஞ்சாவத்தைகளாய் நிகழும்' என்பதும் உய்த்துணரவைத்தமை அறிந்துகொள்க.

இதனால், 'அவத்தைக்கு ஏதுவாவன தத்துவங்களே' என்பது பற்றி

அவற்றின் ஒடுக்கத் தோற்றமுறைகள் கூறப்பட்டன.

ஐயைந்தும் ஆன்மாவில் ஆறோ டடங்கிடும்
மெய்கண்ட மேல்மூன்றும் மேவும்மெய் யோகத்தில்
கைகண்ட சத்தி சிவபரத் தேகாண
எய்யும் படிஅடங் கும்நாலேழ் எய்தியே. *#2200*

*(*மேல், 'நாலாறுடன் புருடன்' - என்னும் மந்திரத்தில் 'வேதாந்தி தத்துவம்'-எனக் கூறப்பட்ட இருபத்தெட்டுத் தத்துவங்களில்*)* ஒடுக்க முறையில் முதல் இருபத்தைந்து தத்துவங்கள் சீவனில் அடங்கும். இருபத்தாறாம் தத்துவமாகிய ஈசுரன் உட்பட மற்றைய மூன்று தத்துவங்களும் மெயப்பொருளாகிய பரப்பிரமத்தில் சீவன் ஒன்றாகும் பொழுது அதில் அடங்கிவிடும். சுருக்கமாகச் சொல்வதென்றால், 'விவகாரத்திற்குக் காரண சத்தியாகிய மாயை, அதற்கு அதிட்டானமாம் பாரமார்த்திகப் பொருளாகிய பரப்பிரமம் என்னும் அவ்விரண்டிலே எல்லாம் தோன்றுதலால், எல்லாம் ஒடுங்குதலும் அவற்றிலேதான்' எனலாம்.

விளக்கவுரை

'இது வேதாந்தி கொள்கை' என்பதாம். 'ஐயைந்தும் ஆன்மாவில்' என்று, 'ஐயைந்தாவன ஆன்மா உட்பட' என்றபடி, 'அடங்கிடும்' என்பது 'ஆன்மாவில்' என்பதனோடும் சென்றியைந் -தது. 'மெய்யாகக் கண்ட' என ஆக்கம் வருவிக்க. 'மேவும் மெய் யோகத்தில்' என்றாரேனும் 'மெய் யோகம் மேவுகையில்' என்றலே கருத்து. மேவுதற்கு வினைமுதல் வருவிக்கப்பட்டது. காண - காணுதல். காணுதல் - தோன்றுதல். எய்யும்படி - அறியும்படி. 'எய்யும் படி காணுதலால் நாலேழ் அவற்றில் எய்தி அடங்கும்' எனக் கூட்டி முடிக்க. 'நாலேழும்' என்னும் முற்றும்மை தொகுக்கப்பட்டது. அவற்றில் அடங்கும் எனச் கூட்டியுரைக்க. இதனால், தத்துவங்களின் தோற்ற ஒடுக்க முறைகளை வேதாந்திகள் சித்தாந்தத்தின் வேறுபடக் கூறுமாறு உணர்த்தப்பட்டது.

ஆணவத் தார்ஒன் றறியாத கேவலர்
பேணிய மாயை பிரளயா கலர்க்காகும்
காணும் உருவினர் காணாமை காண்பவே
பூணும் சகலம் முப் பாசமும் புக்கோர்க்கே. *#2201*

ஆணவ மலம் ஒன்றையே உடையவராகிய விஞ்ஞானகலர் கேவலாவத்தையை அடையுமிடத்துக் காரிய தத்துவங்களுள் ஒன்றையும் அனுபவியாது, நாதமாத்திரையா யிருப்பர். இரு மலம் உடையவராகிய பிரளயாகலர் கேவலா வத்தையை அடையும் பொழுது வித்தியாதத்துவத்தின் முடிவாகிய மாயாதத்துவம் அவர்கட்கு அனுபவப்பொருளாகும். போக்கிய காண்டமாய்த் தூலமாய் உள்ள

பிரகிருதிக் காரியங்களை உடைய சகலர் கேவலாவத்தையை அடையும் பொழுது காரணமாகிய பிர கிருதியையே பற்றிக்கொண்டு, அதன் காரியப் பொருள்களில் ஒன்றையும் அனுபவித்தல் இன்றியிருப்பர், இனிச்சகலாவத்தை சகலர்கட்கே உளதாகும்.

விளக்கவுரை

'ஒன்றும்' - என்னும் இழிவு சிறப்பும்மை தொகுக்கப் பட்டது. இரண்டாம் அடியோடு இயைய, முதல் அடியின் ஈற்றிலும், 'ஆவர்' என்னும் ஆக்கம் வருவிக்க. விஞ்ஞானகலர்க்கும் சுத்த மாயை உளதாயினும் அதனால் செலுத்தப்படும் அசுத்த தத்துவங்கள் அவர் கட்கு இல்லாமையால், 'கேவலத்தில் அனுபவம் இல்லை' என்றும், ஏனையோர்க்குப் பிரேரக காண்டம், போசயித்திரு காண்டம்' -என்பவை இருத்தலால் அவர்கட்கு 'கேவலத்தில் அனுபவம் உண்டு' என்றும், 'சகலர்' என்பதில், 'கலை' எனப்படுவது பிரகிருதியே யாகையால், 'சகலர்க்கு மட்டுமே சகலாவத்தை உண்டு' என்றும் கூறினார். 'கேவலம்' என்பது பின்னும் சென்றியைந்தது. காணும் உருவம் - காணப்படுகின்ற தூலப்பொருள். 'காணாமை' என்பதில், காணுதல் - அனுபவித்தல். காணாமை, காணும் உருவத்தைக் காணாமை. பூணும் - பற்றாகும்.

இதனால், காரண அவத்தைகள் பொதுவாகச் சொல்லப் படினும் அவை அவ்வவ்வுயிர்களின் பந்த வேறுபாட்டிற்கு ஏற்ப வேறுபட்டு நிகழ்தல் கூறப்பட்டது.

ஆணவமா கும்விஞ் ஞானகலருக்குப்
பேணிய கன்மம் பிரளயா கலருக்கே
ஆணவம் கன்மமும் மாயையும் மூன்றுமே
காணும் சகலர்க்குக் காட்டும் மலங்களே. ***#2202***
(இம் மந்திரத்தில் பதிப்புக்களில் காணப்படும் பாடம் திரிவு செய்யப்பட்ட பாடம்.)

விஞ்ஞானகலர் - என்னும் இனத்தவர்க்கு உள்ள பாசபந்தம் ஆணவமலம் ஒன்றுமே. 'பிரளயாகலர்' என்னும் இனத்தவர்க்கு உள்ள பாசபந்தம் அந்த ஆணவத்துடன் கன்மமும் கூடிய இரண்டு மலங்கள். 'சகலர்' என்னும் இனத்தவர்க்கு உள்ள பாச பந்தமே. 'ஆணவம், கன்மம், மாயை' - என்னும் மும்மலங்களும்.

'பிரளயாகலர்' என்பதில், 'பி' என்னும் இகரம், வடசொல் பற்றிவந்த குற்றியலிகரமாய் அலகு பெறாதாயிற்று. பின்னும் இவ்வாறு ஆம் இடங்கள் உள.

விளக்கவுரை

மூன்றாம் அடியில் உள்ள 'ஆணவம்' என்பதன் பின் எண்ணும்மை

விரிக்க.
இதனால், மூவகை உயிர் இனங்களில் இலக்கணங்களும் கூறப் பட்டன.
இதனால், 'மாயை' எனப்பட்டது பிரகிருதியே - என்பதை மேலெல்லாம் கூறியவாற்றால் உணர்க.

கேவலந் தன்னில் கிளந்தவிஞ் ஞாகலர்
கேவலந் தன்னில் கிளர்விந்து சத்தியால்
ஆவயின் கேவலத் தச்சக லத்தையும்
மேவிய மந்திர மாமாயை மெய்ம்மையே. *#2203*

*(*ஒன்று இடையிட்டு முன்னை மந்திரத்தில் கூறிய கேவல வகைகளில்*)* தமக்குரிய கேவலநிலை அடைபவராகக் கூறப்பட்ட விஞ்ஞானகலர், அக்கேவல நிலையினின்றும் எழுச்சி பெறுதல் 'விந்து' எனப்படும் சத்தி தத்துவத்தினாலாம். *(*எனவே, கேவல நிலையில் அவர்கள்' நாதம்' எனப்படும் சிவதத்துவத்தைப் பற்றியிருந் -தமை பெறப்படும். *)* அந்த விந்து சத்தியோடு பிற சுத்த மாயா தத்துவங் -களைப் பற்றிச் செயற்படுதலே அவர்களது சகல நிலை யாகும். *(*ஆகவே சகலருக்குப் போலப் பிரகிருதி தத்துவங்களைப் பற்றும் சகல நிலை அவர்கட்கு இல்லையாம்.*)* அந்தச் சகல நிலையில் அவர்களுடைய தனு கரணங்கள், மந்திர வடிவாகிய சுத்த மாயையால் ஆயினவேயாம்.

விளக்கவுரை

'கிளர்ந்த' என்பது பாடமாயின், 'எழுச்சியுற்ற' என்பது பொருளதாகும். அப்பொழுது, பின்பு வந்த 'கிளர்' என்பது 'கிளர்ந்தமை' எனப்பொருள்தரும். 'விஞ்ஞான' என்பது 'கிளர்ந்தமை' எனப் பொருள் தரும். 'விஞ்ஞான' என்பது கடைக் குறைந்து நின்றது. கிளர், முதனிலைத் தொழிற்பெயர். 'இவரது சகல நிலை, சகலரது சகல நிலை போன்றதன்று' என்றற்கு, 'அச்சகலம்' எனச்சுட்டிக் கூறினார். எனவே, இங்கு, 'சகலம்' என்பது ஒப்பின் ஆய பெயராயிற்று. 'சகலத்தை' என்னும் இரண்டன் உருபை ஏழன் உருபாகத் திரித்துக் கொள்க. இரண்டன் உருபை ஏழன் இருபாகத் திரித்துக் கொள்க. உம்மை சிறப்பு.
'மெய்ம்மை, மந்திர மாமாயை மேவிய' - என மாறிக் கூட்டியுரைக்க. மெய் - உடம்பு. தனு வொன்றையே கூறினாராயினும் கரணமும் உடன் கொள்ளப்படும். மை, பண்புணர்த்தாது, பகுதிப் பொருள் விகுதியாய் நின்றது. 'மாமாயையாய்' - என ஆக்கம் வருவிக்க. 'மேவிய'-என்பது, 'மேவின' என முற்று.
இதனால், விஞ்ஞானகலர் தமது கேவலத்தில் நீங்கித் தமக்குரிய சகலத்தில் நிற்குமாறு கூறப்பட்டது. (இந்தச் சகலம் சகலரது சகலம் போலாமையால் இதுவும் 'கேவலம்' என்றே வழங்கப் படுகின்றது. எனினும், விஞ்ஞானகலரது கேவலம் இரு தன்மைப்பட்டு நிற்குமாற்றை

இம்மந்திரம் கூறிற்று என்க.)

மாயையின் மன்னும் பிரளயா கலர்வந்து
மாயையும் தோன்றா வகைநிற்க ஆணவம்
மாயச் சகலத்துக் காமியம் மாமாயை
ஏயமன் னூற்றெட் டுருத்திரர் என்பவே. #2204

வித்தியா தத்துவங்களில் மாயா தத்துவம் மட்டுமே செயற்பட்டு நிற்கும் நிலையில் பிரளயாகலர்பால் அந்த மாயா தத்துவ மும் மெத்தெனவே செயற்படுதலால் ஆணவம் மேற்பட்டு நிற்கும். (அஃதே அவர்க்குக் கேவல நிலையாகும்.) இனி, அவர்கட் குரிய சகலா வத்தைக்கண் சுத்த தத்துவங்கள் செயற்படுதலானே கன்ம மலங் காரியப் படுவதாகும். இந்நிலையில் நிற்பவர்கள், மேல், 'தாவிய மாயை'- என்னும் மந்திரத்தில் (2199) குறிப்பிடப்பட்ட நூற்றெட்டுருத்திரராவர்.

விளக்கவுரை

'பிரளயாகலர்பால்' - என ஏழாவது விரிக்க. 'ஆணவம்' என்பதின்பின் 'மிகும்' என்னும் பயனிலை எஞ்சி நின்றது. மாயம் - நிலையாமை. பிரளயாகலர்க்குரிய சகல நிலையாவது, வித்தியாதத்துவங்கள் செயற்பட அவற்றால் அறிவு விளங்கப்பெறும் நிலை. காமியம் - கான்மியம். அஃதாவது காரிய கன்மம். மாமாயை என்றது, அதன் காரியமாகிய சுத்த தத்துவங்களைக் குறித்த ஆகு பெயர். 'மாமாயையால் காமியம்' என உருபு விரித்து, மாறிக்கூட்டுக. 'சுத்த தத்துவங்கள் செயற்பட்டுநிற்கும்' என்றதனால், அவற்றால் வித்தியா தத்துவங்கள் செயற்படுதல் தானே பெறப்பட்டது.
'காமியம்' என்பதன்பின்னும், 'ஆம்' என்னும் பயனிலை எஞ்சிநின்றது. மன்னுதல் - நிற்றல். இது 'மன்' என முதனிலையளவாய் நின்று, மன்னுவாரைக் குறித்தது.
இதனால், இருமலம் உடையார்க்குக் கேவல சகலங்கள் நிகழுமாறு கூறப்பட்டது.

மும்மலம் ஐம்மலம் கூடி மயங்குவோர்
அம்மெய்ச் சகலத்தர் தேவர் அசுரர் நரர்
மெய்ம்மையில் வேதா விரிமால் கீ டாந்தத்தின்
அம்முறை யோனிபுக் கார்க்கும் சகலரே. #2205

'மும்மலம்' என்றும், ஐம்மலம்' என்றும் சொல்லப் படுகின்ற அனைத்து மலங்களையும் உடையவர்களாய், 'தமக்குமேல் ஒரு முதற் பொருள் உண்டு' என அறியாது மயங்குகின்றவர்களே உண்மையான சகலாவத்தையை அடைபவர்கள். தேவர்கள், அசுரர்கள், மக்கள், அடி முடி தேடிய காலத்தில் 'முடியைக் கண்டேன்' எனப் பொய் கூறிய பிரமன், வியாபகன்' என்னும் கருத்தால், 'விட்டுணு' என்று

அழைக்கப்படுகின்ற மாயோன் இவர்கள் யாவரும் தமக்குக் கீழ் புழுவரையில் உள்ள அனைத்து யோனிகளிலும் புகுந்து ஆரவாரிக்கின்ற சகல வருக்கத்தினரே.

விளக்கவுரை

'ஆகவே, இவர்கள் அனைவரும் மூன்றவத்தை -களையும் அடைவர்' என்பது குறிப்பெச்சம். மேல், விஞ்ஞான கலர் பிரளயாகலர்கட்கும் சிலவகையான சகலாவத்தைகள் உள என்பதுபோலக் கூறியமையால், 'மும்மலத்தவரே உண்மையில் சகலாவத்தையை அடைவர்' என்றற்கு, 'அம்மெய்ச்சகலத்தர்' என்றார். ஆர்த்தல் - ஆரவாரித்தல். இஃது உலக மயக்கத்தில் மயங்கிச் செருக்குதல். மேல், 'சகல அவத்தையில் சார்ந்தோர்' - என்னும் மந்திரத்திலும் *(2198)* இம்மந்திரப் பொருள் கூறப்பட்டதாயினும் அங்கு, 'சகல வருக்கத்தினராவார் இவர், என்பதை உணர்த்துதலும், இங்கு, 'உண்மைச் சகலாவத்தையை எய்துபவர்கள் இவர்' என்பதை உணர்த்துதலும் ஆகக்கருத்துக்கள் வேறுவேறு என்க. பின்னர்க் குறிக்கப்பட்ட கருத்தே இம்மந்திரத்தாற் கொள்ளப்பட்டது.

சுத்த அவத்தையில் தோய்ந்தவர் மும்மலச்
சத்தசத் தோடத் தனைத்தலைப் பாசமாம்
மத்த இருள்சிவ னானகதி ராலே
தொத்தற விட்டிடச் சுத்தரா வார்களே. ***#2206***

'கேவலம், சகலம், சுத்தம்' என்னும் மூன்றனுள் சுத்தவத்தையில் மூழ்கினவர்களே, 'ஆணவம், கன்மம், மாயை' என்னும் மும்மலங்களும் செயல் ஒழிந்து, உண்மை மாத்திரையாய் நிற்றலாலும், அம்மலங்களைச் செயற்படுத்தித் தனியாகி அவறறிற்குத் தலைமை பூண்டு நின்ற திரோதான சத்தியாகிய மலமும் சிவசூரியனது கிரணமாம் அருட் சத்தியால் சற்று விட்டு நீங்குதலாலும் உண்மையில், 'சுத்தர்' எனத் தக்கவர் ஆவர்.

விளக்கவுரை

சகலத்தில் சுத்தத்தை எய்தினோரை நீக்கி உண்மைச் சுத்தத்தை எய்தினோரைச் சுட்டுதற்கு, 'தோய்ந்தவர்' என்றார். சத்து - செயற்படுதல் இன்றி உண்மை மாத்திரையாய் நிற்றல். 'சத்து ஆதலாலும்'-என ஆக்கமும், உம்மையும் விரிக்க. செயற்படத்தக்க பொருள்கள் செயற்படாது, உண்மை மாத்திரையாய் நிற்றல், 'அவற்றின் காரண நிலை'-என்றும், செயற்பாடு, 'அவற்றின் காரிய நிலை' என்றும் சொல்லப்படும். மலங்கள் காரண நிலையில் நிற்கு மிடத்து உயிரைப் பந்திக்க மாட்டா; காரிய நிலையை அடையும் பொழுதுதான் உயிரைப் பந்திக்கும். மலங்கள் உயிர்களிடத்தில் காரியப்படுதலும், படாமையும்

அவற்றின் அபக்குவ பக்குவங்கட்கு ஏற்ப நிகழும். 'மும்மலங்கட்கும் காரியங்கள் உள' என்பதைச் சிவஞான போதம் இரண்டாம் சூத்திரத்து இரண்டாம் அதிகரண மாபாடியத்தாலும், இருபா இருபஃதாலும் அறிக. காரணங்கள் நிலையுடையவாதல் பற்றி அவற்றை, 'சத்து' என்றும், காரியங்கள் நிலையாமை பற்றி அவற்றை 'அசத்து' என்றும் கூறினார். மத்தம் - மயக்கம். 'மத்தமாகிய இருள்' என்க. எனவே, 'விபரீத ஞானம்' என்றதாம். விபரீத ஞானத்தைச் செய்வதை, விபரீத ஞான மாகவே உபசரித்துக் கூறினார். அருட் சத்தியை, 'கதிர்' என்றதனால், சிவன் கதிரவனாதல் பெறப்பட்டது. இது குறிப்புருவகம். சத்து ஆதலாலும், ஓடலாலும், விட்டிடலாலும் சுத்தராவார்கள்' என முடிக்க.
இதனால், உண்மைச் சுத்தாவத்தை நிகழும் முறைமையும், அதன் சிறப்பும் கூறப்பட்டன.

தற்கே வலம்முத்தி தானே தனிமையாம்
பிற்பால் சகலம் கலாதிப் பிறிவதாம்
சொற்பால் புரிசுத்த கேவலம் சாக்கிரம்
தற்பாற் புரிவது தற்சுத்த மாமே. *#2207*

உயிர் சிவத்தோடு மட்டுமே பொருந்தி நிற்கின்ற அந்தத் தனிநிலையே பரமுத்தி நிலையாகும். அதுவே உண்மையில் தூய்மை யாகும். *(இதனைச் 'சிவகேவலம்' என்றும். 'பர கேவலம்' என்றும் கூறலாம்.)* இதற்குக் கீழ்ப்பட்டன எல்லாம் சகலங்களே. *(அஃதாவது, மாசொடுபட்டனவே.)* அந்நிலையில், சகல வருக்கத்து ஆன்மாக்கள் கலை முதல் மண் ஈறாய் உள்ள தத்துவங்களின் நீங்கி நிற்றல். அவற்றிற்கு மெய்ந்நூல்களில்சொல்லப்படுகின்ற சுத்த கேவல மாகும். *(இஃது, 'அருட் கேவலம்' என்பதாகத் துகளறு போதத்தில் சொல்லப்பட்டது. வெண்பா-25)* புருவ நடுவிலே நிகழ்வதாகிய சாக்கிராவத்தையிலே புறப்பொருளில் தோய்தல் இன்றி, அறிவுக் கறிவாய் உள்ள சிவத்திலே தோய்ந்திருத்தல் சகலத்தில் சுத்தமாம். *(இதுவே, 'சாக்கிரத்தில் அதீதம்' - என்க.)*

விளக்கவுரை

முதற் பொருளை, 'தத்' எனக் குறிப்பிடுதல் உபநிடத வழக்கு. 'தான்' என்றது, முன்னர்க் கூறிய தற்கேவலத்தை. 'சகலம்' என்பது 'கலப்பு' என்னும் பொருட்டாய் நின்றது. இரண்டாம் அடியின் ஈற்றில் உள்ள 'ஆம்' என்பதை மூன்றாம் அடியில் உள்ள 'கேவலம்' என்பதன் பின்னர்க் கூட்டுக. 'சாக்கிரத்தில்' என ஏழாவது விரிக்க. ஈற்றடியிலும் 'சிவம்' தத்' என்றே சொல்லப்பட்டது. இரண்டிடத்திலும் 'தன்' என்றே பிரித்து, 'சிவத்தை இவ்வாறு கூறுதல் தமிழ் வழக்கு' என் -றலுமாம். 'தற் சுத்தம்' என்பதில் 'தன்' என்றது, மேற்கூறிய சகலத்தை.

இதனால், 'கேவலம்' என்னும் காரண அவத்தை பல வகையில் நிகழ்தலும், அவற்றின் இயல்புகளும் கூறப்பட்டன. மேல், 'ஓரிருள் மூவகை' என்னும் மந்திரத்தில்*8* கேவலம் மூன்றும், நான்குமாகக் கூறப்பட்டது.

அறிவின் றமூர்த்தன் அராகாதி சேரான்
குறியொன் றிலான் நித்தன் கூடான் கலாதி
செறியும் செயல்இலான் தினக்கற்றல் இல்லோன்
கிறியன் மலவியாபி கேவலத் தானே. ***#2208***

சிவஞான சித்தியாரில்,
'அறிவிலன்; அமூர்த்தன்; நித்தன்;
அராகாதி குணங்க ளோடும்
செறிவிலன்; கலாதி யோடும்
சேர்விலன்; செயல்க ளில்லான்;
குறியிலன்; கருத்தா அல்லன்;
போகத்திற் கொள்கை யில்லான்;
பிறிவிலன் மலத்தி னோடும்
வியாபி - கேவலத்தில் ஆன்மா'*1*
எனப் போந்த செய்யுளின் உரையை நோக்கி இம்மந்திரத்தின் பொருளை உணர்ந்து கொள்க.

விளக்கவுரை

இம்மந்திரத்து இறுதியில் உள்ள 'கேவலத்தான்' என்னும் எழுவாயை முதற்கண் வைத்து, 'அறிவின்று' என்பதன்பின் 'ஆக' என்பது வருவித்துப் பின் அனைத்துப் பயனிலைகளோடும் கூட்டி முடிக்க. அமூர்த்தன் - உடம்பில்லாதவன். அராகம் முதலியவை புத்தி குண பாவகங்கள். குறி - இச்சை. நித்தம் - பிறப்பு இறப்பு இன்மை. கலாதி - கலை முதலிய தத்துவங்கள். 'கலாதியைக் கூடான்' என்க. 'தின' என்பது, 'தின்ன' என்பதன் இடைக்குறை. 'போகம் புசிக்க' என்பது பொருள். கிறியன் - பொய்யன்; இருந்தும் இல்லாதவன். மல வியாபி - ஆணவ மலத்தையே முழுமையாகப் பற்றியிருப்பவன்.
இதனால், காரண அவத்தை மூன்றனுள் 'கேவலம்' என்னும் அவத்தையின் இயல்பு அதனை அடைந்த ஆன்மாவின்மேல் வைத்துக் கூறப்பட்டது.

விந்துவும் மாயையும் மேவும் கிரியையும்
சந்ததம் ஞான பரையும் தனுச்சத்தி
விந்துவின் மெய்ஞ்ஞானம் மேவும் பிரளயர்
வந்த சகலர்சுத் தரான்மாக்கள் வையத்தே. ***#2209***

பிரளயாகலர், சகலர், விஞ்ஞானகலர் ஆகிய மூவகை யினராய்

விளங்கும் ஆன்மாக்கட்கும் முறையே அசுத்த மாயை, பிரகிருதி மாயை, சுத்த மாயை என்பவற்றால் அவ்வப் புவனங்களில் தனு கரண போகங்கள் உளவாகும். எல்லா உயிர்கட்கும் சுத்த மாயை -யின் காரியமாகிய வாக்குக்களால்தான் சவிகற்ப உணர்வு உண்டாகும்.

விளக்கவுரை

'விந்து' இரண்டில் முன்னது பைசந்தி வாக்கைக் குறித்து, அதற்குக் பற்றுக்கோடாகிய அசுத்தமாயையை உணர்த்திற்று. அதனால், 'மாயை' என்பது பிரகிருதி மாயையைக் குறித்தது. பரையாவது சூக்குமை வாக்காகலின் அஃது அதன் வடிவாய் நின்ற சுத்த மாயையைக் குறித்தது. இம்மூன்றும் பின் வந்த பிரளயாகலர், சகலர், சுத்தர் என்பவரோடு முறையே இயைந்தன. இங்கு, 'சுத்தர்' என்றது ஏனை இரு திறத்தாரை நோக்கச் சுத்தராகிய விஞ்ஞான கலரைக் குறித்தது.

இம்மூத்திறத்தாரையும் செய்யுள் நோக்கி முறை பிறழ வைத்தார்.

'பிரளயர், சகலர், சுத்தர் ஆன்மாக்கட்கு வையத்தே தனுவும், சத்தியும், கிரியையும் விந்துவினாலும், மாயையினாலும், ஞான பரையினாலும் சந்ததம் (எப்போதும்) மேவும்; மெய்ஞ்ஞானம் விந்துவின் மேவும்' - என இயைத்துப் பொருள் கொள்க. சத்தி - ஆற்றல்; என்றது கரணத்தையும், 'மெய்ஞ்ஞானம்' என்றது சவிகற்ப ஞானத்தையும் ஆகும். 'மூவகை ஆன்மாக்களுக்கும் சவிகற்ப உணர்வு வாக்குக்களாலேதான் உண்டாகும்' என்பதை,

'மூவகை அணுக்க ளுக்கும் முறைமையால் விந்து ஞானம்
மேவின தில்லை யாகில் விளங்கிய ஞானம் இன்றாம்'*

என்னும் சிவஞான சித்தியாலும் அறியலாம். விளங்கிய ஞானம் - சவிகற்ப உணர்வு.

'கேவலத்தில் நின்ற ஆன்மாக்கள் தங்கள் தங்களுக்கு ஏற்ற தனு கரண புவன போகங்களால் சகல நிலையை அடையும்' என்பது கருத்து. இதனால், மூவகை ஆன்மாக்களுக்கும் சகலாவத்தை நிகழுமாறு கூறப்பட்டது.

கேவல மாதியில் பேதம் கிளக் குறின்
கேவலம் மூன்றும் கிளறும் சகலத்துள்
ஆவயின் மூன்றும் அதிசுத்தம் மூன்றுமா
ஓவலில்லாஒன்பான் உற்றுணர்வோர்கட்கே. ***#2210***

காரண அவத்தைகள் 'கேவலம்' முதல் மூன்றாகச் சொல்லப்பட்டாலும் அவற்றுள் ஒவ்வொன்றிலும் உட்பிரிவுகள் உண்டு. அவற்றை எடுத்துச் சொல்லுமிடத்து 'கேவலத்திற் கேவலம், கேவலத்திற் சகலம், கேவலத்திற் சுத்தம்' என்று மூன்றும், 'சகலத்திற் கேவலம், சகலத்திற் சகலம், சகலத்திற் சுத்தம்' என மூன்றும், 'சுத்தத்திற் கேவலம், சுத்தத்திற்

சகலம், சுத்தத்திற் சுத்தம்' என மூன்றும் ஆக ஒன்பதாம். இவ்வேறுபாடுகள் நுண்ணுணர்வுடையார்க்கே விளங்கும்.

விளக்கவுரை

இதனால், காரண அவத்தைகள் மூன்றிலும் உள்ள வேற்றுமை வகைகள் தொகுத்துணர்த்தப்பட்டன.

கேவலத் திற்கே வலம்அதீ தாதீதம்
கேவலத் திற்சக லங்கள் வயந்தவம்
கேவலத் திற்சுத்தங் கேடில்விஞ் ஞாகலர்
ஆவயின் நாதன் அருள்மூர்த்தி தானே. ***#2211***

உயிர்கட்கு ஆணவ மல மறைப்பைச் சிறிதே நீக்கிச் சிறிதே அறிவைத் தருவன மாயா கருவிகள். அதனால், அவை ஒடுங்கிய விடத்து ஆணவம் மேற்படுவதே கேவல நிலை. கீழா லவத்தை மத்தியாலவத்தைகளில் எல்லாக் கருவிகளும் நீங்காது, தலை யாய கருவிகள் நீங்கியதே 'அதீதம்' எனப்படுகின்றது. கீழா லவத்தையில் நிகழும் அதீதம் முக்குண வடிவான பிரகிருதி மேம் பட்ட நிலை. மத்தியாலவத்தையில் நிகழும் அதீதத்திலும் சிவ தத்துவமும், கால தத்துவமும் ஒடுங்காதே நிற்க, உயிருக்குப் புலன்கள் மிக்கு நிகழும். இதுவும் அதீதமேயாகும். இவ்விரண்டும் சகலாதீதமாகும்.

சருவ சங்கார காலத்தில் இறைவன் எல்லாக்கருவிகளையும் அழித்துவிட்டு, உயிர்களுக்கு முழு ஒய்வைத் தருதலால், அது பொழுது உயிர், உணர்வு சிறிதுமின்றி, முழுமூடமாய், ஆணவ இருளில் மூழ்கிக் கிடக்கும். இது கேவலாதீதமாகும். இதனையே 'விஞ்ஞான கேவலம்' என்பர். இந்நிலையில், ஒடுக்கிய உயிர்களை இறைவன் மீளத் தோற்றுவிக்க முயலும் நிலையும் கேவலந்தான். அதனையும் 'சகல கேவலம்' - என்றே கூறுவர். அதற்குக் காரணம் அந் நிலையில் இறைவன் சூக்கும ஐந்தொழில் செய்வான் என்பதே. இவை முதலான அவத்தைகள் பலவற்றுள் ஒன்றும் இல்லாது ஆன்மா ஆணவ இருளில் மூழ்கிக் கிடந்த நிலை அனாதி கேவலமாகும். இதனை, 'மருட் கேவலம்' - என்பர். இவற்றுள் இரு சகலாதீதத்திற்கும் அப்பாற்பட்ட விஞ்ஞான கேவலத்தையே, 'அதீதாதீதமாகிய கேவலத்தில் கேவலம்' என்றார். அதீதாதீதம் - அப்பாலைக்கு அப்பால்.

மேற்கூறியவாறு இறைவன் சூக்கும ஐந்தொழில் செய்யும் நிலையாகிய சகல கேவலமே கேவலத்தில் சகலமாம். சூக்கும ஐந் தொழிலாவது சூக்குமை முதலிய நால்வகை வாக்குக்களையும் தோற்று விக்கும் முகத்தால் உயிர்கட்கு உணர்வைப் பொதுவாக நிகழ்வித்தல். சிவதத்துவங்கள், வித்தியா தத்துவங்களைச் செலுத்தியவழியே உயிர் கட்கு அறிவு இச்சை செயல்கள் சிறப்பாக விளங்கும். அஃது இந்நிலை -

யில் இல்லாமையாலும், நால்வகை வாக்குக்களும் சுத்த மாயையில் காரியமேயாதலாலும், 'கேவலத்தில் சகலங்கள் வயிந் தவம்' என்றார். வயிந்தவம் (வைந்தவம்) - விந்துவின் காரியம். விந்து- சுத்த மாயை. வாக்குக்கள் பலவாதலால் அவற்றால் தோன்றும் உணர்வுகளும் பலவாதல் பற்றிச் 'சகலங்கள்' எனப் பன்மையாகக் கூறினார். சகலரும், பிரளயாகலரும், 'விஞ்ஞானகலர்' என்னும் நிலையை அடைதலே, கேவலத்தில் சுத்தமாகும். அஃதாவது' சகலர் மண் ணாதி கலையந்தம் முப்பத்தொரு தத்துவங்களைக் கடந்து சுத்த தத்துவ பந்தத்தை மட்டும் உடையர் ஆதலும், பிரளயாகலர் வித்தியா தத்துவங் - களைக் கடந்து, சுத்த தத்துவ பந்தத்தை மட்டும் உடையர் ஆதலுமாம். இந்நிலையை அடைந்த பிரளயாகலர் சகலர்கட்கும் இறைவன் இயற்கை விஞ்ஞானகலர்க்குப் பக்குவ காலத்தில் உள்நின்றே ஞானத்தை உணர்த்தி, வீடு தந்தருள்வது போலவே அருள்தருவான்.

விளக்கவுரை

'விஞ்ஞான' என்பது கடைக் குறைந்து நின்றது. 'விஞ் ஞானகலர் ஆதல்' எனவும், 'அருள் மூர்த்தி யாதல்' எனவும், 'தானேயாய்' எனவும் எஞ்சி நின்ற சொல்லெச்சங்கள் வருவித்துக் கொள்க. தானேயாதலாவது, செயற்கையால் முன்னிலையினும், படர்க்கையினும் தோன்றாமல், இயற்கையில் தன்மையிலே நிற்றல். 'அருள் மூர்த்தியாதலும்' என்னும் இறந்தது தழுவிய எச்ச உம்மையும், 'தானேயாயே' என்னும் தேற்றேகாரமும் அவ்விடங்களில் உடன் வருவிக்க.

இதனால், முன் மந்திரத்தில் ஒன்பதாகத் தொகுத்துக் கூறிய அவத்தைகளில் 'கேவலத்தில் மூன்று' என்ற அவத்தைகள் இவை என்பது கூறப்பட்டது.

சகலத்திற் கேவலம் சாக்கிரா தீதம்
சகல சகலமே சாக்கிரா தீதம்
சகலத்திற் சுத்தமே தற்பரா வத்தை
சகலத்தில் இம்மூன்று தன்மையும் ஆமே. **#2212**

மத்தியாலவத்தையில் நிகழும் அதீதமே சகலத்திற் கேவலமாகும். மத்தியாலவத்தையில் நிகழும் சாக்கிரமே சகலத்திற் சகலமாகும். சகலத்தில் சுத்தாவத்தையே சகலத்தில் சுத்தமாகும்.

விளக்கவுரை

மத்தியாலவத்தை, சகலத்தில் சுத்தாவத்தை இவை -களின் இயல்புகள் மேலே உணர்த்தப்பட்டன. முதற்கண் ஒன்பதாக வகுத்துக்காட்டி, இங்கு, 'சகலத்தில் இம்மூன்று தன்மையும் ஆம்' என்றது, 'கீழாலவத்தை, மத்தியாலவத்தை, மேலாலவத்தை இவையும் சகலத்திற் கேவலமும்,

சகலத்தில், சகலமும், சகலத்தில் சுத்தமும் ஆம்'-என்பது உணர்த்துதற்கு.
இதனால், முன் மந்திரத்தில் கூறியவற்றைத் தொடர்ந்து 'சகலத்தில் மூன்று' - எனப்பட்ட அவத்தைகள் இவை என்பது கூறப்பட்டது.

சுத்தத்திற் சுத்தமே தொல்சிவம் ஆகுதல்
சுத்தத்திற் கேவலம் தொல் உப சாந்தமாம்
சுத்த சகலம் துரிய விலாசமாம்
சுத்தத்தில் இம்மூன்றும் சொல்லலும் ஆமே. *#2213*

பரமசிவனோடு இரண்டறக் கலந்த நிலையே சுத்தத்தில் சுத்தம். சீவன் முத்தி நிலையில் பிராரத்தத்தால் விளையும் இன்பத் துன்பங்களில் விருப்பு வெறுப்பற்றிருக்கும் நிலையே சுத்தத்தில் கேவலம். சீவன் முத்தி நிலையில் உலகர்பால் இரக்கம் மிக்கு அவர்கட்கு உய்தியை வலிந்து சென்றும் உணர்வித்தலும், அதிகார முத்தி, போக முத்தி, இலய முத்தி இவைகளை அடைந்து அவ்வந் நிலையில் விளையும் சுத்த போகங்களை நுகர்தலும் சுத்தத்தில் சகலம்.

விளக்கவுரை

உபசாந்தம் - அமைதி; நடுவு நிலைமை. விலாசம் - விளையாட்டு; தமக்கு உவப்பான செயல்களில் ஈடுபடுதல். இங்கும், 'சுத்தத்தில் இம்மூன்றும் சொல்லலும் ஆமே' என்றது, 'சீவன் முத்தி ஒன்றிலேதானே இம்மூன்றும் சொல்லுதற்கும் உரியன என்பது உணர்த்துதற்கு.
இதனால், 'சுத்தத்தில் மூன்று' எனப்பட்ட அவத்தைகள் இவை என்பது கூறப்பட்டது.

சாக்கிர சாக்கிரந் தன்னிற் கனவொடு
சாக்கிரந் தன்னில் சுழுத்தி துரியமே
சாக்கிர தீதந் தனில்சகா னந்தமே
ஆக்கும் மறையாதி ஐம்மல பாசமே. *#2214*

மத்தியாலவத்தையில் நிகழும் சாக்கிரம் முதலிய ஐந்திலும் சொல்லுலகம் முதலாகச் சொல்லப்படுகின்ற ஐந்து மலங்க ளாகிய பாசங்களே உயிருக்கு உலக அனுபவங்களையே தந்து நிற்கும்.

விளக்கவுரை

எனவே, 'இவைகள் மலாவத்தைகளேயன்றிப் பரா வத்தைகள் அல்ல' என்பதாம். முதற்கண் நின்ற, 'சாக்கிரம்' என்பது மத்தியாலவத்தையைக் குறித்தது. இரண்டு, மூன்றாம் அடிகளில் வந்த 'சாக்கிரம்' என்பவனவும் சொற்பொருட் பின்வரு நிலையாய், அதனையே குறித்து நின்றது. ஒடு, எண் ஒடு. மறையாதி - வேதம் முதலியன. அவை சொல்லுலகம் ஆதலை நினைக. 'சாக்கிர சாக்கிரந் தன்னில் ... சாக்கிராதீதந்தனில், மறையாதி ஐம்மல பாசமே சகா னந்தமே ஆக்கும்' எனக் கூட்டி முடிக்க. ஏகாரம்

இரண்டும் பிரிநிலை. அவற்றுள் முன்னதனால் பிரிக்கப் பட்டது சிவானந்தமும், பின்னதனால் பிரிக்கப் பட்டது திருவருளும் ஆகும். எனவே, 'பராவத்தையில் உயிருக்குத் திருவருள் சிவானந்தத்தை ஆக்கும்' -என்பது போந்தது.
இதனால், 'சகலம், சுத்தம்' - என்னும் இரண்டிற்குக் காரணமும், பயனும் கூறப்பட்டன.

சாக்கிரா தீதத்தில் தான்அறும் ஆணவம்
சாக்கிரா தீதம் பராவத்தை தங்காது
ஆக்கும் பரோபாதி ஆம்உப சாந்தத்தை
நோக்கு மலம்குணம் நோக்குத லாமே. ***#2215***

('சாக்கிராதீதம்'-என்ற பெயர் சொல்லப்படுவன இரண்டு. ஒன்று ஆணவம் நீங்கிய சாக்கிராதீதம்; மற்றொன்று, ஆணவம் நீங்காத சாக்கிராதீதம்.*)* அவற்றுள் ஆணவம் நீங்கிய சாக்கிராதீதமும் பராவத்தையில் உயிர் சென்று தங்காதபடி பரோ பாதியை உண்டாக்கும் ஆகையால், பராவத்தையாகிய உபாதியற்ற நிலையை நோக்கியே செல். ஏனெனில், 'உபாதியாயினும் பரோபாதி தானே' என நினைப்பனவெல்லாம் பாசத்தோடு கூடியிருக்க நினைப்பனவேயாகும்.

விளக்கவுரை

'ஆணவம் அறும் சாக்கிராதீதம்' என எடுத்துக் கொண்டு உரைக்க. தான், அசை, பாடத்தை இவ்வாறே ஓதலும் ஆம். ஆணவம் அறாத சாக்கிராதீதம், மத்தியாலவத்தையில் நிகழும் அதீதம். ஆணவம் அற்ற சாக்கிராதீதம், நின்மலாவத்தையில் நிகழும் அதீதம். இவை யிரண்டும் சகலத்தில் சகலமும், சகலத்தில் சுத்தமும் ஆகும். இவற்றுள் நின்மலாவத்தைகள் தமக்குக் கீழ் உள்ளவற்றை நோக்கச் சுத்தமே யாயினும், உண்மைச் சுத்தமாகிய பராவத்தையில் செல்லு தற்குத் தடை யாதலும் உடையன. அவை அன்னவாதல் பரோபாதியை உடைமை யினாலாம். அது பற்றியே, 'பராவத்தை தங்காது பரோ பாதியை ஆக்கும்' என்றார். உபாதி - தடை. பரோபாதி - மேல் நிலைத் தடை. அஃது உலகம் எங்கும் சிவம் நிறைந்து நிற்றலை நினைந்து எப்பொருளிலும் சிவத்தையே கண்டிருத்தல். இது சிறப்புடையதே யாயினும், சிவத்தையே நேராகக் கண்டிருத்தலை நோக்கச் சிறப்பில தாதலை உணர்க. உபசாந்தம் - உபாதியற்றநிலை. அது பராவத்தையேயாதல் அறிக. 'உபசனுந்தத்தையே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுக்கப் பட்டது. 'குணம் நோக்குதல் மலம் நோக்குதலாகும்' - என மொழி மாற்றி, 'அதன் குணம்' என உரைக்க. எல்லாப் பொருளிலும் சிவத் தையே காணினும் அஃது உலகத்தை இடையிட்டுக் காண்பதேயாத -லின் அக்காட்சியின் சிறப்பை மட்டும் நோக்குதல், 'மலம் நோக்குதல் ஆகும்' என்றார்.

சிவத்தை 'உபாதி' என உரைத்தாரும்' உளர்.
இதனால், மேற்கூறிய அவத்தை பேதங்களில் 'சுத்தத்திற் சுத்தத்தையே குறிக்கொண்டு முயலல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

பெத்தமும் முத்தியும் பேணும் துரியமும்
சுத்த அதீதமும் தோன்றாமல் தான்உண்ணும்
'அத்தன் அருள்' என்*(று)* அருளால் அறிந்தபின்
சித்தமும் இல்லை செயல் இல்லை தானே. ***#2216***

'பெத்தம், முத்தி' - என்பவற்றையும், 'சாக்கிர சொப்பன சுழுத்திகளுக்கு அப்பாலும், குறைந்த கருவிகளே செயற் படுகின்ற துரியம், ஒரு கருவியும் செயற்படாத துரியாதீதம் ஆகிய அவத்தைகள் உள' என்பதையும் அறியாமலே உயிர், அவத்தைகளை அனுபவித்து வருகின்றது. ஆயினும், 'அவையெல்லாம் சிவனது திருவருளால் இன்ன இன்னவாறு நிகழ்கின்றன' என்பதை அவனது அருளாலே அறிந்த பின், உயிருக்குத் தற்போதம் இல்லை. அஃது இல்லையாகவே, அதற்குத் தனக்கென யாதொரு செயலும் இல்லை.

விளக்கவுரை

'சுத்தம்' என்றது கருவிகள் அனைத்தும் ஒடுங்கிய ஒடுக்கத்தைக் குறித்தது. துரியமும், அதீதமும் அறிதற்கு அரியனவாம். 'தோன்றாமல்' என்பது வழக்கு முறையால், 'தோன்றப் பெறாமல்' எனப் பொருள் தந்தது. 'தான்' என்றது உயிரை. உண்டல் - அனுபவித்தல். 'அறிந்த பின்' எனக் கூறிப் பின் நிகழ்ச்சியை உணர்த் -தினமையால், 'அதற்குமுன் கூறப்பட்டவை அறிதற்கு முற்பட்ட நிகழ்ச்சி' என்பது விளங்கிக் கிடந்தது. ஆகவே, 'அனுபவிக்கும்' எனக் கூறப்பட்ட அவத்தைகள் பெத்த அவத்தைகள் - என்பதும், 'அறிந்த பின் நிகழ்வன மத்தியவத்தைகள்' என்பதும் போந்தன. 'தான்' என்றது திரோதான சத்தியை - எனக் கொள்கின்றவர்கள், 'சுத்த துரியாதீதத்தையும் அது மறைக்கும், என உரைத்தல் வியப்பிற்குரியது.
இதனால், பலவாகக் கூறப்பட்ட அவத்தைகள் எல்லாம் பெத்த அவத்தை, முத்தி அவத்தை என இரண்டாய் அடங்குதலும் அவற்றுள் பெத்த அவத்தைகள் மலங்களாலும் அவத்தைகள் திருவருளாலும் நிகழ்தலும் கூறப்பட்டன.

எய்திய பெத்தமும் முத்தியும் என்பன
எய்தும் அரன்அரு ளே விளையாட்டோ*(டு)*
'எய்தி டுயிர்சுத்தத் திடும்நெறி' என்னவே
எய்தும் உயிர்இறை பால் அறி வாமே. ***#2217***

உயிர்கள் அனாதியே அடைந்துள்ள பெத்த நிலையும், பின்பு முடிவில் அடையும் முத்தி நிலையும் சிவன் தனக்கு ஒரு விளையாட்டைப் போல

மிக எளிதிற் செய்யும் அருட்செயலே யாகும். 'அச்செயல்களில் அகப்பட்டு வருகின்ற உயிர்கள், இறுதியில் மாசு நீங்கிய நிலையில் இடப்படும்' என்று சொல்லப்படுவதால், அந்நிலையில் அவை சிவனையே அடைந்திருக்கும். அப்பொழுது அவை அறிவே முடிவாய் இருக்கும்.

விளக்கவுரை

'விளையாட்டு' என்றது, விளையாட்டுப் போல் வதனைக் குறித்தது. ஒடுருபை ஆல் உருபாகத் திரித்து, 'எய்தும் அருள்' என முன்னே கூட்டி முடிக்க. அருளால் நிகழவனவற்றை அருளாகவே உபசரித்துக் கூறினார். 'எய்திடு உயிர் நெறியானே சுத்தத்து இடும் என்னவே' எனக் கூட்டுக. இடும் - இடப்படும். என்ன - என்று சொல்லப்படுதலால். 'அறிவாம்' என்றதனால், முன்பு அறியாமையாய் இருந்தமை பெறப்படும். இதனால், 'எல்லாம் சிவனது அருளேயாதலின் அவ்வருள், முடிவில் சிவனையே அடைவிக்கும்' என்பதும், 'அந்நிலை அறிவு நிலை' என்பதும் கூறப்பட்டன. 'அறிவு நிலை' என்றதனால் 'ஆனந்த நிலை' என்பது சொல்லாமலே அமைந்தது.

ஐம்மலத் தாரும் அதித்த சகலத்தர்
ஐம்மலத் தாரும் அருவினைப் பாசத்தர்
ஐம்மலத் தார்சுவர்க் கம்நர காள்பவர்
ஐம்மலத் தார்அர னார்க்கறி வோரே *#2218*

ஐந்து மலங்களையுடையவர்களாகச் சொல்லப் படுவோர் யாவரும் அதிகமான மாயைத் தொடக்கு உடையவர்கள். அவர்கள் அசுத்த வினையிலும் நீக்குதற்கரிய தூல வினைத் தொடக்குடையவர்கள். அத்தன்மைத்தான வினைத்தொடக்கால் சுவர்க்க நரகங்களை அடைந்து உழல்பவர்கள். ஆகையால், அவர்கள் சிவனை எளிதில் அறியும் அறிவுடையராவாரோ! 'ஆகார்'.

விளக்கவுரை

'அதனால், அவர்கட்குச் சிவன் தன்மையிலும், முன்னிலையிலும் தானே நேர்நின்று ஞானத்தை உணர்த்தாமல், படர்க்கையில் ஆசான் மூர்த்தியை அதிட்டித்து நின்று, பலநாள் உடன் கொண்டு, கேட்பித்தும், சிந்திப்பித்தும், தெளிவித்தும் ஞானத்தை உணர்த்துவன்' என்பது குறிப்பெச்சம். 'ஆகவே, இவர்கள் சுத்தாவத்தையை அரிதில் எய்துவர்' என்பதாம்.

முன் இரண்டடிகளில், 'ஐம்மலத்து ஆரும்' எனப் பிரித்து இரண்டாம் வேற்றுமைப் பெயர்த் தொகையாகக் கொள்க. 'அதிகரித்த' என்பது, 'அதித்த' எனக் குறைந்து நின்றது. 'சகலர்' என்பது, 'மாயையோடு

கூடினவர்' எனப் பொருள் தரும் ஆதலின், 'அதிகரித்த சகலர்' என்பது, பெரிதும் மயக்கத்தைத் தருகின்ற, முக்குண வடிவாகிய பிரகிருதி பந்தத்தை உடையவர் ஆதலைக் குறித்தது. 'அரனார்க்கு' என்றது, 'அரனாரை அறிவதற்கு' என்றபடி. ஏகார வினா, எதிர்மறைப் பொருளில் வந்தது.
இதனால், சுத்தாவத்தை பற்றியதொரு சிறப்புப் பொருள் கூறப்பட்டது.

கருவில் அதீதம் கலப்பிக்கும் மாயை
அரிய துரிய மதில் உண்ணும் ஆசையாம்
உரிய சுழுத்தி முதல்எட்டும் சூக்கத்*(து)*
அரிய கனா தூலம் அந்நன வாமே. *#2219*

(உயிர்கள் யாதானும் ஓர்யோனியிற்புக்குப் பிறந்த பின்பு தான் சாக்கிரம் முதலிய அவத்தைகளை அடையும்' எனக் கருத வேண்டா. அவ்வவ் யோனியிற் புக்கிருக்கும் நிலையிலு ஐந்தவத்தை -களை அடையும். அவை கருவளர் அவத்தைகளாம்.)

வித்தில் நின்ற உயிரை முளையாகிய உடம்போடு முதற்கண் கலக்கச் செய்வதாகிய 'காரண சரீரம்', அல்லது, 'ஆனந்தமயகோசம்' எனப்படுகின்ற மாயா தத்துவத்தோடு உயிர்தொடர்பு கொள்வதே கருவினில் துரியாதீதம். பின்பு 'கஞ்சுக சரீரம்' அல்லது, 'விஞ்ஞானமய கோசம்' - எனப்படுகின்ற, அராகம் முதலிய ஐந்து தத்துவங்களோடு உயிர் தொடர்பு கொள்வதே கருவினில் துரியம். பின்பு, 'குணசரீரம்', அல்லது, 'மனோமய கோசம்' எனப்படுகின்ற மூலப் பிரகிருதியோடு உயிர் தொடர்பு கொள்வதே கருவினில் சுழுத்தி. பின்பு, 'சூக்கும சரீரம்', அல்லது 'பிராணமய கோசம்' எனப்படுகின்ற சித்தம் ஒழிந்த அந்தக்கரணம் மூன்று, தன்மாத்திரை ஐந்து ஆக எட்டுத் தத்துவங் களோடு உயிர் தொடர்பு கொள்வதே கருவினில் சொப்பனம். *(சித்தம் பிரகிருதியில் அடங்கும்.)* பின்பு, 'தூல சரீரம்', அல்லது அன்னமய கோசம்' எனப்படுகின்ற ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, மாபூதம் ஐந்து ஆகப் பதினைந்து தத்துவங்களோடு உயிர் தொடர்பு கொள்வதே கருவினில் சாக்கிரம்.

விளக்கவுரை

இந்த ஐவகைச் சரீரங்கள் பற்றியே இத் தந்திரத்தின் தொடக்கத்தில் கூறப்பட்டது. உயிர்கள் கேவல நிலையிலிருந்து சகல நிலைக்கு வரும்பொழுது அதீத நிலையிலிருந்தே முறையாக வருதல் பற்றி, 'கருவளர்ச்சியும் அதீதத்திலிருந்தே முறையாக நிகழும்' என அறியுமாறு அவத்தைகளை அதீதத்திலிருந்து முறையாகக் கூறினார். ஆசை - அராகம். தோற்ற முறையில் இறுதிக்கண் உள்ள அராகத்தைக் கூறவே, அதற்கு முன்னுள்ள தத்துவங்களும் அடங்கின. முதல் - மூலம்; அது

மூலப் பிரகிருதி. எட்டுதல் - தீண்டுதல். 'சுழுத்தி, முதலை எட்டும்' என்க. சுழுத்தியில் நிற்கும் உயிரினது செயலைச் சுழுத்தியின் செயலாகக் கூறினார். 'சூக்கத்து' என்றாற்போலத் 'தூலம்' என்பதிலும் அத்துச் சாரியை விரித்து, 'ஆம்' என்பதைக் 'கனா' என்பதனோடும் கூட்டுக. இதனால், கருவிலும் அஞ்சவத்தைகள் நிகழ்தல் கூறப்பட்டது.

ஆணவம் ஆகும் அதீதம் மேல் மாயையாம்
பூணும் துரியம் சுழுத்திபொய்க் காமியம்
பேணுங் கனவுமா யேயம் திரோதாயி
காணும் நனவில் மலக்கலப் பாகுமே. ***#2220***

துரியாதீத நிலையில் உயிருக்கு ஆணவ மலம் மட்டுமே இருக்கும். அதற்குமேலே உள்ள தான துரிய நிலையில் அதனோடு வித்தியா தத்துவங்களில் தோற்ற முறையில் முதலிலே உள்ள மாயா தத்துவம் வந்து பற்றும். அடுத்து நிகழும் சுழுத்திய வத்தையில் நல்லனவும் தீயனவும் ஆகரிய காரிய கன்மங்கள் வந்து பற்றும். *(*இதனால், கால தத்துவமும், நியதி தத்துவமும் பற்றுதல் பெறப்படும்*)* அடுத்து நிகழும் சொப்பனத்தில் மேற்கூறிய கன்மங் களுக்கு ஏற்பமாயா காரியங்களான கலை முதல் நிலம் ஈறான ஏனை எல்லாத் தத்துவங்களும் வந்து பற்றும். *(*ஆகவே, சுத்த தத்துவங்கள் வந்து பற்றுதலும் தானே அமைந்தது.*)* இறுதியாக நிகழும் சாக்கிரத்தில், முன்பு நான்கு மலங்களும் பற்றிக்கொண்டதனால் அவை அனைத் -தையும் செலுத்துகின்ற திரோதான மலம் வந்து பற்றும். (என்றது, 'அனைத்தையும் முழுமையாக நடத்தும்' என்றபடி.*)* ஐந்தவத்தை -களிலும் ஐந்து மலங்கள் இம்முறையில் உயிரை வந்து பற்றுவனவாம்.

விளக்கவுரை

'அதீதம் ஆணவம் ஆகும்; மேல் பூணும் துரியம் மாயை ஆம்; சுழுத்தி பொய்க் காவியம் ஆம்; பேணுங்களவு மாயேயம் ஆம்; நனவில் திரோதாயி காணும்; மலக் கலப்பு இவ்வாறு ஆகும்' என இம்மந்திரத்தின் சொல்முறைமை கொள்க.
காரணம் நிலையுடைமையால் அது, 'மெய்' என்றும், காரியம் நிலையால் அது, 'பொய்' என்றும் சொல்லப்படும். கான்மியம், 'காமியம்' என மருவி வழங்கும். 'மாயேயம்' எனவரும் இடங்களில் எல்லாம் 'மாமாயை' எனப் பாடம் திரிக்கப்பட்டது என்பதை மேலேயும் கூறுவோம்.
இதனால், அவத்தைகளில் பாசங்கள் பற்றுமாறு கூறப்பட்டது.

அரன்முத லாக அறிவோர் அதீதத்தர்
அரன்முத லாமாயை தங்கிச் சுழுத்திக்
கருமம் உணர்ந்து மாயேயங்கைக் கொண்டோர்
அருளும் மறைவார் சகலத்துற் றாரே. ***#2221***

'ஆணவம் அதீதத்தில் பற்றும்' என முன் மந்திரத்தில் கூறினமையால், அந்நிலையை மட்டும் உடையராய் அதிலே நிற்பவர்கள், 'சிவபெருமான் முதல்வன்' என உணரும் உணர்வை இழவார். *(இவர்கள் விஞ்ஞான கலரே.)*

'மாயா தத்துவம் துரியத்தில் வந்து பற்றும்' என்றும், 'வித்தியா தத்துவங்களில் காலமும், நியதியும் வந்து பற்றும்' என்றும் முன் மந்திரத்தில் கூறினமையால், அந்த இரண்டில் நிற்பவர்களும் மேற் கூறப்பட்டவர்போல, 'சிவபெருமானே முதல்வன்' என்னும் உணர்வை இழத்தல் இல்லை. *(இவர்கள் இருதிறத்தினரும் தம்முட் சிறிது வேறுபாடுடைய பிரளயாகலரே. இவர்களில் பின்னவர் புருட தத்துவத்திற்குச் சிறப்பு ஏதுவாய் நிற்கும் கலை, வித்தை, அராகங்களைப் பொதுமையாக அன்றிச் சிறப்பாக உடையராகார் என்பது நாயனார் கருத்து - என்க. 'கருவில் அதீதம்' என்னும் மந்திரத்திற் கூறியவற்றிற்கும், அடுத்து முன் மந்திரத்திற் கூறிய வற்றிற்கும் சிறிது வேறுபாடு உண்டென்க.)*

'கலை முதலிய ஏனை எல்லாத் தத்துவங்களும் சொப்பனத்தில் வந்து பற்றும்' - என்று முன் மந்திரத்தில் கூறப் பட்டமையால், அவர்கள், 'தமக்கொரு தலைவன் உளன்' என்பதையே அறியார். இவர்கள் சகல வருக்கத்தினரே.

விளக்கவுரை

சொப்பன நிலைதானே இத்தன்மையதாகலின், சாக்கிரநிலை இத்தன்மையதாதல் சொல்லவேண்டாவாயிற்று.

இறுதியில் 'சகலத்துற்றார்' எனக் கூறியதனால், மேற் சொல்லப்பட்டவர்கள் விஞ்ஞானகலரும், பிரளயாகலருமாதல் விளங்கிற்று. அவத்தைகளைக் கூறியது பற்றி, அவற்றில் வந்து பற்றும் மலங்களையும், மலங்களைக் கூறியது பற்றி அவை வந்து பற்றும் அவத்தைகளையும் முன் மந்திரம் பற்றி உயத்துணர வைத்தார். 'அருளும்' என்ற உம்மை, முதல்வனைப் பொதுப்பட உணரும் உணர்வும் இலராதலைக் குறித்தது.

இம் மந்திரத்தில் பாடம் பலவிடத்துத் திரிவுபட்டுள்ளது.

இதனால், மூவகை உயிர்கள் அடையும் அவத்தைகளின் கூடுதல் குறைவுகள் கூறும் முகத்தால் அவற்றின் பாச நிலைகள் கூறப்பட்டன.

உருவுற்றுப் போகமே போக்கியத் துற்று
மருவுற்றுப் பூத மனாதியால் மன்னி
வரும்அச் செயல்பற்றி சத்தாதி வைகிக்
கருவுற் றிடுஞ்சீவன் காணும் சகலத்தே. ***#2222***

'கருவில் அதீதம்'*l* என்னும் மந்திரத்திற் கூறியபடி கருவிலேயே பல

அவத்தைகளை அடைந்த உயிர், பின்பு பலருங்காணப் பிறந்து, சகலாவத்தையில் பூதம் முதலிய புறக் கருவிகளாலும், மனம் முதலிய அகக் கருவிகளாலும் செய்தற் குரிய செயல்களை மேற்கொண்டு, பல போக்கியப் பொருள்களில் பொருந்தி, ஓசை முதலிய புலன்களில் மூழ்கிப் பலவகை அனுபவங்களை அனுபவிப்பதாய்க் காணப்படும்.

விளக்கவுரை

'கருவுற்றிடும் சீவன் உரு உற்றுச்சகலத்தே பூத மனாதியால் மன்னிவரும் செயல் பற்றிப் போகத்து உற்றும், சத்தாதி மன்னிப்போகம் மருவுற்றும் காணும்' எனக் கூட்டி முடிக்க. ஞானேந் திரியங்களின் புலன்களையே கூறியவாராயினும், இனம் பற்றிக் கன்மேந்திரியங்களின் புலன்களாகிய மொழிதல் முதலியனவும் கொள்ளப்படும். சூக்கும தூல பூதங்களே ஞானேந்திரிய கன்மேந் திரியங்கட்கு நிலைக்களன் ஆதல் பற்றி அவற்றை, 'பூதம்' எனப் பொதுப்படக் கூறினார். பூத மனாதி, 'பூதங்களும் மனாதிகளும்' என உம்மைத் தொகை.

இதனால், சகல வருக்கத்து உயிர்கள் சகல நிலையில் நிற்குமாறு இனிது விளக்கப்பட்டது.

இருவினை ஒத்திட இன்னருட் சக்தி
மருவிட ஞானத்தில் ஆதரம் மன்னிக்
குருவினைக் கொண்டருட் சத்திமுன் கூட்டிப்
பெருமலம் நீங்கிப் பிறவாமை சுத்தமே. ***#2223***

உயிர்கள் தமக்கு இருவினையொப்பு வாய்க்கப் பெற்ற பொழுது சிவனது சத்தி முன்பு பிறவித் துன்பத்தைத் தரும் திரோதான சத்தியாய் இருந்த நிலைமை மாறி, வீட்டின்பத்தைத் தரும் அருட்சத்தியாகித் தங்கள் அறிவில் பதியப் பெற்று, அதனானே மெய்யுணர்வு வேட்கை நிலைத்து நிற்க அவ்வேட்கை மிகுதியால் ஞான குருவை அடைந்து அவர் உபதேசித்த முறைப்படி தம்மைச் சிவனது அருட்சத்தியின் வழிப்படுத்திக் கொண்டு, அதனாலே எல்லா மலங்களும் நீங்கப் பெற்று, மீட்டும் பிறவா நிலையில் நிற்பதே சுத்தாவத்தையாம்.

விளக்கவுரை

கேவல நிலையில் இருந்த உயிர்கள் சகல நிலையை அடைந்த பின்பு அதன்கண் பல்வேறு பிறப்புக்களை எய்தி, வினைகளை ஈட்டியும், நுகர்ந்தும் வரும். அப்பொழுது நல்வினைப் பயன்களில் விருப்பமும், தீவினைப் பயன்களில் வெறுப்பும் கொண்டு, நல்வினைப் பயன்களை விரைவில் எய்தவும், எய்திய வழி நீங்காது நிறுத்திக் கொள்ளவும், தீவினைப் பயன்களை எய்தாது தடுக்கவும், எய்தியவழி விரைவில் அகற்றவும் முயலும், அம்முயற்சியே அவற்றிற்குப் பின்னைப் பிறவி

கட்குக் காரணமாய் அமையும். ஆகவே, 'நல்வினையும் தீவினை போலப் பிறப்பைத் தருவதே' என உணர்ந்து, 'விலங்கு பொன்னால் இயன்றதாயினும், இரும்பால் இயன்றதாயினும் விலங்கயேன்றி வேறன்று' என்பதுபோல, இருவகை வினைகளையும் தளைகளாகவே உணர்ந்து, விருப்பு வெறுப்பின்றி இரண்டையும் சமமாக நோக்கும் பக்குவ நிலையே இருவினை யொப்பாகும். அத்தகைய நோக்கு உண்டாயின், மேலும் மேலும் வினை ஏறுதல் நீங்கும். அந்நிலையில் என்றுமே உயிரினது அறிவில் ஒன்றி நிற்கின்ற சிவனது சத்தி, முன்பு திதோதான சத்தியாய் இருந்த நிலைமை மாறி, அருட்சத்தியாகிப் பதியும். அதுவே சத்தி நிபாதம். சத்தி நிபாதத்தால் 'வினைகளே பிறப்பிற்குக் காரணம்' - என்பதை உணர்ந்து, உயிர் வினைக்கு அஞ்சும். அவ்வஞ்சுதல், பிறவிக்கு அஞ்சுதலேயாகும். இங்ஙனம் பிறவிக்கு அஞ்சும் உயிர், பிறவி நீங்கும் வழியை உணர்த்துவாரையே நாடி ஓடும். அவ்வாறு ஓடுதலே ஞான வேட்கையாகும். இந்த ஞானவேட்கையே சத்தி நிபாதத்தின் பயன். அவ்வேட்கை நீங்காது நிலைக்கப் பெற்ற உயிர்களின் முன் சிவன், ஞானியராகிய ஆசான் மூர்த்திகளை அதிட்டித்து நின்று, ஞானத்தை உணர்த்துவன். அவ்வாறு உணர்த்த உணர்ந்த உயிர், அஞ்ஞானம் நீங்கப் பெற்றுச் சிவனை அடைந்து, அவனைப் போலவே பிறவாமை யுடையதாய் அவனது இன்பத்தில் திளைத்திருக்கும். அவ்வாறு திளைத்திருத்தலே சுத்தாவத்தை. இவையே இம்மந்திரத்தில் முறையாகக் கூறப்பட்டன.

அருட்சத்தியை, 'இன்னருட்சத்தி' என்றதனால், திரோதான சத்தி இன்னாமைச் சத்தியாதல் விளங்கிற்று. ஆதரம் - விருப்பம். சத்தி நிபாதம் வாயாத முன்பும் இடையிடையேயும் ஒரொரு கால் ஞானவேட்கை நிகழுமாயினும் அது, துயில் எழாதவன் துயிலின் இடையிலே சிறிது சிறிது விழிப்பை அடைதல்போல, நிலைத்தல் இன்றி விரைய நீங்குவதாக, சத்தி நிபாதத்தின் பின் உண்டாகும் ஞான வேட்கையே நிலையுடைய உண்மை ஞான வேட்கையாம்' என்பது உணர்த்துதற்கு, 'ஞான ஆதரம் மன்னி' என்றார். சக்தி நிபாதம் வாய்க்கப் பெறாதவரது ஞான வேட்கையையே திருவள்ளுவர், 'தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்' என்றார்.*3* 'கூட்டி என்றது, தானே தன்னை அருட்சத்தி வழியில் சேர்த்தி' என்றபடி.

இதனால், சுத்தாவத்தையின் இயல்பு முறைப்பட இனிது விளக்கப்பட்டது. இந்நிலை சிவஞான சித்தியிலும் இவ்வாறே,
'இருவினைச் செயல்கள் ஒப்பின் ஈசன்றன் சத்தி தோயக்
குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி முன்னைத்
திரிமலம் அறுத்துப் பண்டை சிற்றறி வொழிந்து ஞானம்

பெறுகிநா யகன்றன் பாதம் பெறுவது சுத்த மாமே'*
எனக் கூறப்படுதல் காண்க.

ஆறாறும் ஆ(று) அதின் ஐயைந் தவத்தையோ
டறாம் அதீதத் துரியத்(து) இவன்எய்தப்
பேறாகும் ஐவரும் போம்பிர காசத்தின்
ஈறார் பரசிவம் ஆதேய மாமே. #2224

முப்பத்தாறாகச் சொல்லப்படுகின்ற கருவிகளே அவத்தை வேறுபாடுகட்குக் காரணம். அந்தக் காரணத்தின்வழிக் காரியமாய் நிகழும் அவத்தைகள் இருபத்தைந்து. (கேவலம், சகலத்திற் கேவலம், சகலத்திற் சகலம், சகலத்தில் சுத்தம், நின்மலம் ஆகிய ஐந்தில் ஒவ்வொன்றிலும் சாக்கிரம் முதலிய ஐந்து.) அந்த இருபத்தைந்தில் முடிவாய் உள்ளது சுத்த துரியாதீதம். அதனை உயிர் அடைந்த பொழுது, ஐந்தொழில் தலைவர்களாகிய ஐவரும் அதனைத் தடை செய்யாது இருக்க, அவ்விடத்து மிக்கு விளங்கும் அருள் ஞான ஒளியினால், அனைத்துயிர்கட்கும் முடிவான புகலிடமாய் உள்ள பரசிவனது பேரின்பம் அதன் அறிவினுள்ளே பொங்கித் ததும்பும்.

விளக்கவுரை

முப்பத்தாறினையும் தொகுத்து 'ஆறு' என ஒன்றாகக் கூறினமையின் 'அதின்' என ஒருமையாற் கூறினார். ஆறு - வழி. 'ஓட' என்னும் செயவெனெச்சத்து அகரம் தொகுத்தலாயிற்று. ஓடுதல், தொடர்ச்சியாக நிகழ்தல். 'போம்' என்னும் பெயரெச்சம், 'போய தனால் உண்டாகும்' எனக் காரணப் பொருட்டாய் நின்றது. ஈறார் பரசிவம் - முடிநிலையில் பொருந்தி நிற்கும் பரசிவம். ஆதேயம் - இடத்து நிகழ்பொருள். 'ஆதேயம் ஆம்' என்றதனால, 'பரசிவம்' என்பது ஆகுபெயராய், அதனால் விளையும் இன்பத்தைக் குறித்தது. எந்நிலையிலும் சிவம் உயிருக்கு ஆதாரமேயன்றி, ஆதேயம் ஆகாது. எனினும் அதனால் தரப்படும் இன்பம் உயிரினது அறிவினுள்ளே ஊற் றெழவே உயிர் அதனை நுகர்வதாகும். அதுபற்றி அஃது 'ஆதேயம்' எனப்பட்டது. 'சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது'*l* என முன்னருங் கூறினார். 'உற்ற ஆக்கையின் உறுபொருள், நறுமலர் எழுதரு நாற்றம்போல் - பற்ற வாவதோர் நிலையிலாப் பரம்பொருள்'*1(*)* எனவும் 'ஊற்றிருந்துள்ளம் களிப்போன் போற்றி'*(*)2* எனவும் ஆளுடை அடிகள் அருளிச் செய்தார். இவை யெல்லாம் பற்றியே,

'ஓங்குணர்வி னுள்ளடங்கி, உள்ளத்துள் இன்பொடுங்கத்
தூங்குவர்'*(*)3*

என்றார் உமாபதிதேவர். 'ஐயைந்தாவன, சாக்கிரம் முதலிய ஐந்திலும் தனித்தனி நிழும் சாக்கிரம் முதலியன' என்பார்க்குக் காரண

அவத்தைகள் யாதேனும் ஒன்றேபெறப்படுதல் அன்றி, அனைத்தும் பெறப்படாமை அறிக.
இதனால், மேல் பெயரளவாகக் சுட்டப்பட்ட சுத்தாவத்தை -யின் இயல்பு தெரித்துக் கூறப்பட்டது.

தன்னை அறியா துடலைமுன் 'தான்' என்றான்
தன்னைமுன் கண்டான் துரியந் தனைக்கண்டான்
உண்ணும் துரியமுன் ஈசனோ டொன்றாக்கால்
பின்னையும் வந்து பிறந்திடுந் தானே. *#2225*

சகலாவத்தையில் தன்னை உடம்பின் வேறாக உணராமல், உடம்பையே 'தான்' என உணர்ந்து நின்றவன், சுத்தா வத்தையை ஓரளவேனும் அடைந்த பின்பே தன்னை உடம்பின் வேறு பட்ட பொருளாக உணர்ந்தான். பின்பு சுத்தத்தில் துரிய நிலையை அடைந்து, சிவனது அருளை உணர்ந்தான். ஆயினும் அதனையும் கடந்த சுத்த துரியாதீதத்தை அடைந்து சிவனை உணர்ந்து அவனோடு இரண்டறக் கலவாது, துரியத்திலேயே அவன் இருந்துவிடுவானாயின், உடம்பு நீங்கிய பின், மீளவேறோர் உடம்பை எடுத்தலும் கூடும்.

விளக்கவுரை

'தனைக்கண்டான்' என்பதில் 'தன்' என்றது சிவனை யாகலின், அங்கு, 'துரியம்' என்றது சுத்த துரியமேயாயிற்று. அஃது அங்ஙனமாகவே, 'முதல்' என்னும் பொருள்பட வந்த 'முன்' என்பது, சுத்தாவத்தையின் தொடக்கமாயிற்று. 'அதன்கண் தன்னைக் கண்டான்' என்றதனால், தன்னைக் காணாதிருந்தது சகலத்தில் ஆயிற்று. 'துரியத்தில்' என ஏழாவது விரிக்க. துரிய நிலை அருள் நிலையும், துரியாதீத நிலையே சிவ நிலையும் ஆதலால், சிவனது அருளே சீவனாக உபசரித்து, 'தனைக் கண்டான்' என்றமைதெளிவாம். 'துரியமுன்' என்பதில் 'முன்' இடமுன். அவ்விடத்து நிகழ்வது துரியா தீதம். 'பின்னையும்' என்ற உம்மை, உயர்வு சிறப்பும்மை. 'பிறந்திடும்' என்றது, 'பிறத்தல் கூடும்' என்றதேயன்றி, அஃது ஒருதலையன்று என்பதைச் சாத்திரங்களைக் கொண்டு தெளிக.
துரிய நிலையில் பிராரத்தவாசனை தாக்காதவாறு திருவருளில் உறைத்து நிற்றல், 'நள் அனல் வேவாத நற்றவரது செயலைப் போலவும்', 'பண் அமர மாச் செலுத்தும் பாகரது செயல் போலவும்'l பெரிதும் அரிதாகலின், அதனிற் சிறிதே சோர்வு உண்டாயின், அவ் அற்றம் பார்த்து, பிராரத்த வாசனை தாக்க, அதனால், ஆகாமியம் தோன்றி முதிர்ந்து, அடுத்த பிறப்பு வருதலும் கூடும். அது பற்றியே, 'ஈசனோ டொன்றாக்கால் - பின்னையும் வந்து பிறந்திடும்' என்றார். 'தான்' என்பதை ஈற்றடியில் முதலிற் கூட்டுக.

இதனால், 'சுத்த துரியாதீதமே பிறவா நிலை' என்பது உணர்த்தும் முகத்தால், அதனது இன்றியமையாச் சிறப்புக் கூறப்பட்டது.

சாக்கிரந் தன்னில் அதீதம் தலைப்படின்
ஆக்கிய வந்த வயிந்தவ மால்நந்த
நோக்கும் பிறப்பறும் நோன்முத்தி சித்தியாம்
வாக்கும் மனமும் மருவல்செய் யாவே. *#2226*

புருவ நடுவிற்றானே திருவருளால் சிவத்தைத் தலைப்படும் சாக்கிரம் முதலிய அவத்தைகளில் முடிவான அதீத நிலை கைகூடுமாயின், பாச ஞானத்தை உண்டாக்க வந்த வாக்காகிய மயக்கும் பொருள் கெடும். அது கெடவே, 'இனியும் வருங்கொல்' என எதிர்நோக்கி அஞ்சப் படுவதாகிய பிறப்பு, வாராதே ஒழியும். அதனால் பரமுத்தி நிலை கிடைக்கும். எவ்வாறெனில் அவ்விடத்தில் பாச ஞான பசு ஞானங்கள் தோன்ற மாட்டா ஆகையால்,

விளக்கவுரை

'ஆக்கிய' என்பது, 'செய்யிய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். வயிந்தவம் - விந்துவின் காரியம். அஜவ இங்கு வாக்குக்களே. மால் - மயக்கம். நந்த - கெட. 'நந்த' என்றமையால், நந்துதல் அனுவாத முகத்தால் பெறப்பட்டது. மயக்கம் தருவனவற்றை, 'மயக்கம்' என்றார். பெத்தர்களுக்கு வாக்குக்கள் தெளிவைத் தருவன வாயினும், முத்தர் கட்கு அவை சிவஞானம் நிகழ்தற்குத் தடையாய் உலகுணர்வைப் பயக்கும் ஆதலின் அவற்றை, 'மால்' என்றார். நோன்மை - வலிமை. ஏனை முத்திகளினும் வலியுடைத்தாய் நிலைத்து நிற்பது பரமுத்தி என்க. 'வாக்கு' என்பது பாச ஞானத்தையும், 'மனம்' என்பது பசுஞானத்தை உணர்த்துதலைச் சிவஞானபோதம் ஆறாம் சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்தால் உணர்க.
இதனால், 'சாக்கிரத்தில் சுத்தாவத்தையைத் தலைப்பட்டோர் அவற்றுள் துரியத்திலே நின்று விடாமல், துரியாதீதத்தை அடைதல் வேண்டும்' என மேற்கூறியது, அதன் பயன் கூறும் முகத்தால் வலியுறுத்தப்பட்டது.

அப்பும் அனலும் அகலத்து ளேவரும்
அப்பும் அனலும் அகலத்து ளேவாரா
அப்பும் அனலும் அகலத்துள் ஏதென்னில்
அப்பும் அனலும் கலந்த(து) அவ் ஆறே. *#2227*

'இன்பம், துன்பம்' என்னும் இரண்டும் உலக உணர்வே நிகழும் சகலாவத்தையில் நிலையின்றி, மாறி மாறித் தோன்றும். அகலாவத்தையாகிய சுத்தாவத்தையில் அவை தோன்றவேமாட்டா. 'சகலாவத்தையில் அவை தோன்றுதல் ஏன்' எனில், இன்பம், துன்பம் இரண்டும் கலந்ததுதான் சகலாவத்தை.

விளக்கவுரை

'பிரபஞ்சம்' என்னும் வடசொல்லுக்கு, 'விரிவுடையது' என்பது பொருளாகலின் அதனை 'அகலம்' எனத் தமிழாக்கி, முதலிலும், கடைசியிலும் சொற்பின்வரு நிலையணி தோன்றக் கூறினார். அஃது ஆகுபெயராய்ப் பிரபஞ்சத்தை உணர்ந்து நிற்கும் சகலாவத்தையைக் குறித்தது. இடையில் உள்ள 'அகலம்', 'சகலம்' என்னும் வடசொற்கு எதிராய வடசொல். 'சுத்தம்' என்னாது 'அகலம்' என்றது அவ்வணி தோன்றுதற் பொருட்டேயாம். 'அப்பும் அனலும்' என்றவை மறைபொருட் சொற்கள். அவையும் சொற்சுவை தோன்ற வந்தனவேயாம். அப்பு - நீர். அனல் - தீ. இவை அவற்றின் வெளிப் படைப் பொருள். அச்சொற்கள் நான்கடியிலும் வந்தது, சொற்பொருட் பின்வருநிலையணி. அவ் ஆறு - அந்த வழி. நிலையை 'வழி' என்றார். இதனால், சகலாவத்தை பந்தமும், சுத்தாவத்தை வீடும் ஆதல் கூறப்பட்டது.

அறுநான் கசுத்தம் அதின் சுத்தா சுத்தம்
உறும்ஏழும் மாயை உடன்ஐந்தே சுத்தம்
பெறுமா றிவைமூன்று காண்டத்தால் பேதித்*(து)*
உறுமால்மாமாயையின் ஆன்மாவினோடே. ***#2228***

முப்பத்தாறு தத்துவங்களில் கீழ் உள் ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் அசுத்த தத்துவங்களாகும். அவை அவ் வியத்தமாகிய மூலப்பிரகிருதியினின்றும் நோறி ஒடுங்கும். இடையில் உள்ள வித்தியா தத்துவம் ஏழும் மிச்சிர தத்துதவமாகும். அவை அசுத்த மாயையினின்றும் தோன்றி ஒடுங்கும். மேலே உள்ள சிவ தத்துவம் ஐந்தும் சுத்த தத்துவங்களாகும். அவை சுத்த மாயை யினின்றும் தோன்றி ஒடுங்கும். இம் மூவகைத் தத்துவங்களும் மூன்று காண்டங்களாய்ப் பிரிந்து ஆன்மாவோடு கூடி, அதற்கு அறிவிச்சை செயல்கள் நிகழக் கருவிகளாய் நிற்கும்.

விளக்கவுரை

மூன்று காண்டங்களாவன; 'போக்கிய காண்டம், போசயித்திரு காண்டம், பிரேரககாண்டம்' என்பன. இவற்றை ஆன்ம தத்துவம் முதலாக வைத்துப் பொருத்திக் கொள்க. போக்கியம் - புசிக்கப் படுவது. போசயித்திரு - புசிப்பவன். பிரேரகம் - செலுத்துதல். இவற்றை இவ்வாறே,

'ஐந்து சுத்தத்தின் கீழ், ஏழ் சுத்தாசுத்தம்; அசுத்தம்
தந்திடும் புமான்கீழ் எண்மூன் றாய தத்துவம்; சீவற்கு
வந்திடும்; பிரேரகாண்டம், மருவு போசயித்திரத்தோடு

அந்தமில் அணுக்களுக்குப் போக்கிய காண்ட மாமே'3
என சிவஞானசித்தியில் கூறப்பட்டமை காண்க.
'மாயேயம்' என்று உள்ள இடங்களில் எல்லாம் 'மாமாயை' என்றே பாடம் திரிக்கப்பட்டது போலவே, 'போசயித்திரு காண்டம்' என்று உள்ள இடங்களில் எல்லாம், 'போகசயித்திரு காண்டம்' என்றே பாடம் திரிக்கப்பட்டுள்ளது.
அவ்வியத்தமாகிய மூலப்பிரகிருதி பல சமயத்தாராலும் நன்கறியப்பட்டது ஆதலின் அதனை 'அதின்' எனப் பண்டறிசுட்டாற் கூறினார். 'உறும்' என்பதை 'அதின்' என்பதனோடும் கூட்டுக. உறுதல் - சூக்குமமாய்ப் பொருந்தியிருத்தல். எனவே அது, தோற்றத்திற்கு முன்னும், ஒடுக்கத்திற்குப் பின்னும் உளதாம் நிலையாதல் அறிக. 'ஏழ் சத்தா சுத்தம்; மாயையின் உறும்' என இயைக்க. 'உறுமால் மாமாயையின்' என்பதனையும் 'சுத்தம்' என்பதன் பின்னர்க் கூட்டி, 'உறும் ஆன்மாவினோடே' என்பதை மீட்டும் மூன்றாம் அடியின் இறுதியில் கூட்டி யுரைக்க. காண்டம் - பகுதி.
இதனால், தத்துவம் முப்பத்தாறும் பற்றிய சில சிறப்பியல்புகள் கூறப்பட்டது.

மாயைகைத் தாயாக மாமாயை ஈன்றிட
ஆய பரசிவன் தந்தையாய் நிற்கவே
ஏரும் உயிர்கே வலசகலத் தெய்திப்பின்
ஆய்தரு சுத்தமும் தான்வந் தடையுமே. ***#2229***

சிவனே எல்லாம் செய்பவன் ஆகையால், உலக மாகிய மகவிற்கு அவனை, 'தந்தை' எனலாம். உலகிற்கு முதற் காரணமான 'சுத்த மாயை, அசுத்த மாயை' என்னும் இரு மாயைகளுள் சுத்த மாயையையே சிவன் தான் நேரே பற்றிச் செயற்படுத்துதலால் அதனைச் சிவனோடு புணர்ந்து உலகமாகிய மகவை ஈன்ற, 'நற்றாய்' எனலாம்; அசுத்த மாயையைச் சிவன் தான் நேரே பற்றிச் செயற் படுத்தாமல், அனந்த தேவரைக் கொண்டும், அவர்வழியாகச் சீகண்ட உருத்திரரைக் கொண்டும் செயற்படுத்துதலால் அதனை, உலகமாகிய மகவை வளர்க்கும் 'செவிலித் தாய்' எனலாம். எனவே, சுத்த மாயை, அசுத்த மாயை என்னும் இரு முதற் காரணங்களாலும், சிவனாகிய கருத்தாவினாலும் உலகம் தோன்றி நிலை பெற, உயிர்கள் அவ் வுலகத்தைப் பற்றி நின்று, 'சகலம், கேவலம்' என்னும் இருநிலைகளில் மாறி மாறி உழன்று, முடிவில் சிவனது அருளாலே ஞானத்தைப் பெற்று, அவற்றினினின்றும் விடுதலை அடைந்து சுத்த நிலையை அடையும்.

விளக்கவுரை

செவிலி முதலியோரைச் செய்யுள் நோக்கி முறை பிறழ வைத்தார்.

உலகமாகிய மகவை எடுத்துக் கூறாமையால் அது. 'தந்தை, நற்றாய், செவிலி' என்பவற்றால் பெறப்பட்ட குறிப்புருவகமாகும். உயிரை, 'தான்' என்றது சாதி யொருமை. இங்ஙனம் மகவாக உருவகிக்கப்பட்டவை, 'சேதனம், அசேதனம்' என்னும் இருவகைப் பிரபஞ்சமுமாகும். சேதனப் பிரபஞ்சங்கள் அறிவைப் பெறுதலும், அசேதனப் பிரபஞ்சம் பல்வேறு வகையான தன்மைகளைப் பெறுதலும் இங்குக் குறிக்கப்பட்ட மூவராலுமாம் என்க. சுத்த மாயை சகலர் பிரளயாகலர்கட்குப் பிரேரகமாத்திரையாயும், நால்வகை வாக்குக்களாயும் பயன்படும். அஃது அவர்கட்குத் தனு கரண புவன போகங்களாய் வருதல் இல்லை. விஞ்ஞானகலர்க்கு மட்டுமே சுத்தமாயை தனு கரண புவன போகங்களாய் வந்து பயன்படும்.

சுத்தமாயை, 'விந்து' எனப்படுதலால், அதன் காரியங்கள் 'வைந்தவம்' எனறும், அசுத்த மாயையே, 'மாயை' எனப்படுதலால், அதன் காரியங்கள், 'மாயேயம்' என்றும், பிரகிருதியின் காரியங்கள் 'பிராகிருதம்' என்றும் சொல்லப்படும். எனினும், பிரகிருதியும் அசுத்த மாயையின் காரியம் ஆதல் பற்றி பிராகிருதங்களையும், 'மாயேயம்' என அடக்கிச் சொல்லுதல் உண்டு.

'வித்தைகள், வித்தை யீசர், சதாசிவர் என் றிவர்க்கு
வைத்துறும் பதங்கள், வன்னம், புவனங்கள், மந்திரங்கள்
தத்துவம், சரீரம், போகம், கரணங்கள் தாம் எலாமும்
உய்த்திடும் வைந்தவந்தான் உபாதான மாகி நின்றே'*

என்னும் சிவஞான சித்திச் செய்யுளை நோக்குக. இதனுள் 'விந்து' என்பதே பகுதிப் பொருட்டாகிய விகுதியைப் பெற்று, 'வைந்தவம்' என வந்தது. பகுதிப் பொருள் விகுதியை வட நூலார் 'சுவார்த்த பாவ தத்திதப் பிரத்தியயம்' என்பர்.

இதனால், உலகத்தின் தோற்ற ஒடுக்கங்கள் ஆமாற்றை விளக்கி, அதனாலே காரண அவத்தைகள் மூன்றும் நிகழ்தலைத் தெரிவித்து, அதிகாரம் முடிக்கப்பட்டது.

*10.8.*பராவத்தை

அஞ்சும் கடந்த அனாதிபரம் தெய்வம்
நெஞ்சமுந் தாய நிமலன் பிறப்பிலி
விஞ்சும் உடலுயிர் வேறு படுத்திட
வஞ்சத் திருந்த வகையறிந் தேனே. *#2230*

உருவம் இரண்டு, *(*வித்தை, ஈசுரன்*)* உருவாருவம் ஒன்று, *(*சதாசிவன்*)* அருவம் இரண்டு *(*சத்தி, சிவன்*)* ஆகமுத்திறத்து ஐந்துநிலைகளையும் கடந்து, தன்னியல்பில் நிற்கும் பரசிவனே சுத்த சிவன். *(*மேற்கூறிய ஐந்தும் அபர சிவங்களாம்.*)* பரசிவன் - மனத்தையும் கடந்தவன். இயல்பாகவே மலங்கள் இல்லாதவன். எனவே, மாயா சரீரங்களை எடாதவன். ஆகவே, அவன் *(*தனது திருவருள் காரணமாக*)* மலங்களுட் பட்டனவாயினும் உண்மையில் அவற்றினும் மேற்பட்ட உயிர்களை முன்னர் மாயாகாரியமாகிய உடலோடு ஒன்று படுத்திப் பின்பு அதனினின்றும் வேறுபடுத்தி உய்வித்தற் பொருட்டு அவ்வுயிர்கள் தன்னை அறியாதபடி அவற்றின் அறிவினுள்ளே கள்வன் போல ஒளித்திருந்தான். எனினும், அவனது கள்ளத்தை நான் அவன் அருளாலே அறிந்து கொண்டேன்.

விளக்கவுரை

'அதனால் பராவத்தையில் உள்ளேன்' என்பது குறிப் பெச்சம். 'நீவிரும் இதனை எய்தலாம்' என்பது கருத்து. 'அஞ்சு' என்றது ஐம்மலங்களை எனின், 'நின்மலன்' என்பது வெற்றெனத் தொடுத்தல் ஆதலும், 'தடத்த சிவத்தின் மேற்பட்ட சொரூப சிவமே பரசிவம்' என்பது பெறப்படாமையும் அறிக. 'அனாதி' என்றது, செயற்கையோடு கூடாத இயற்கையைக் குறித்தது. 'தெய்வம்' என்பது 'திவ்வியம்' என்னும் பொருட்டாய்த் தூய்மையை உணர்த்திற்று. 'நெஞ்சமும்' என்னும் உம்மை, 'நாவையேயன்றி' என, இறந்தது தழுவி நின்றது. 'மனம், வாக்கு' - என்பவற்றின் உண்மைப் பொருளை, 'சாக்கிரந்தன்னில் அதீதம் தலைப்படின்' என்னும் மந்திரத்தின்* உரையிற்காண்க. தாய - கடந்த, 'விஞ்சும் உயிர்' எனக் கொண்டு கூட்டுக. 'உயிருடல்' என்றே பாடம் ஓதுதலும் ஆம். வேறு படுத்துதல் கூறினமையால், முன்பு ஒன்றுபடுத்தினமை பெறப்பட்டது. 'திருவருளால்' என்பதும் 'அவன் அருளால்' என்பதும் ஆற்றலால் கொள்ளக் கிடந்தன.
இதனால், 'பராவத்தைக்கு நிலைக்களம் பரம்பொருள்' என்பதும், அதன் சிறப்பியல்புகளும் கூறப்பட்டன.

சத்தி பராற்பரம் சாந்தி தனில் ஆன
சத்தி பரானந்தம் தன்னில் சுடர்விந்து

சத்தி அம் மாயை தனுட்சக்தி ஐந்துடன்
சத்தி பெறும்உயிர்தான் அங்குற் றாறுமே. *#2231*

(குண குணிகட்குத் தம்முன் வேற்றுமை யின்மையால்,) 'சத்தியே சிவம்' என்று கூறலாம். எனினும், சத்தியை ஆள்வது பொருளேயாதலின், சிவத்தினின்றே சத்தி தோன்றுகின்றது. *(அஃதாவது செயற்படுகின்றது.)* அதனால் உயிர்கட்கு, அமைதியைத் தருவதும், மேலான ஆனந்தமாய் விளைவதும் பராசத்தியே. இனி அந்தச் சத்தியினால் தான் சுத்தமாயையாகிய சத்தி காரியப்படுகின்றது. அது காரியப்படும் நிலையில் சிவசத்தி, 'பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை' என ஐந்தாய் இருக்கும். அந்த ஐந்துடனும் கூடுவதனாலே தான் உயிர் ஆற்றலைப் பெறுகின்றது. ஆகவே, உயிர் அமைதியை அடைந்து, ஆனந்தத்தைப் பெறுவது பரையாகிய சத்தியிடத்தில்தான்.

விளக்கவுரை

'சத்தியேபராற்பரம்' என்னும் தேற்றேகாரம் தொகுத்தல் பெற்றது. பராற் பரம் - மேலானவற்றிற்கெல்லாம் மேலானது; 'தனில் ஆன சத்தி சாந்தி; பரானந்தம்' எனவும், 'தன்னில் விந்து சத்தி சுடர்' எனவும் கொண்டு கூட்டுக. விந்துவின் *(சுத்த மாயையின்)* சத்தி, மோகினியின் *(அசுத்த மாயையின்)* சத்திபோல மயக்குதலைச் செய்யாது, தெளிவைச் செய்தலின் அதன் சத்திகாரியப் படுதலை 'சுடர்தல்' என்றார். சுடர், முதனிலைத் தொழிற்பெயர். 'சுடர்தல் நிகழும்' எனப் பயனிலையும் 'உடன்' என்பதன்பின், 'கூடி' என்னும் சொல்லெச்சமும் 'உயிர்' என்பதன்பின் 'ஆகலின்' என்னும் சொல்லெச்சமும் வருவிக்க. ஆறும் - சாந்தி யடையும். ஆகவே, ஆனந்தத்தை அடைதல் சொல்ல வேண்டாவாயிற்று.

இதனால், 'பராவத்தையாவது உயிர்பராசத்தியைப் பொருந்தி நிற்றல்' என்பதும், 'அவ்விடத்து அதற்கு அமைதியும், அதன் வழியாக ஆனந்தத்தையும் பராசத்திதரும் என்பதும் தெரித்துக் கூறப்பட்டன.

ஆறாறுக் கப்பால் அறி(வு)ஆர் அறிபவர்
ஆறாறுக் கப்பால் அருள் ஆர் பெறுபவர்
ஆறாறுக் கப்பால் அறிவாம் அவர்கட்கே
ஆறாறுக் கப்பால் அரன்இனி தாமே. *#2232*

முப்பத்தாறு தத்துவங்களும் சடமேயாதலின் சித்தாகிய பரம்பொருள் அத்தத்துவங்கள் அனைத்திற்கும் அப்பாற் பட்டதாம். *(அந்தப் பரம் பொருளை யடைதலே பராவத்தை)* இந்தச் சடசித்துக்களைப் பகுத்து, சித்தின் இயல்பை அறிபவரும் அரியர். அந்தச் சித்துப் பொருளின் குணமே அருள் ஆதலின், அப்பொருளை அறிந்து அருளைப் பெறுபவரும் அரியர். உயிர் சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடையது.

ஆகலின், அறிவே வடிவான பரம் பொருளைச் சார்ந்து அறிவே வடிவாய்விட்ட அவர்கட்குத்தான் சிவன் அளவிலா இன்பப் பொருளாய் இன்புறுத்துவான்.

விளக்கவுரை

இம்மந்திரம் சொற்பொருட் பின்வருநிலையணி பெற்றது. இனிச் சொற்பின்வருநிலையணி பெற்றதாகக் கொண்டு. 'ஆறு' என்பவற்றிற்கு வேறு வேறு பொருள் உரைப்பாரும் உளர். 'இனிது' என்றது, 'இன்பப் பொருள்' என்றதாம். இனி இதனை வினையெச்சக் குறிப்பாகக் கொண்டு, 'நன்கு விளங்குவான்' என உரைப்பினும் ஆம்.
இதனால், 'பராவத்தை அறிவு, அருள், ஆனந்த மயமானது' என்பதும், 'அதனால், அதனை மடமை, வன்கண்மை, துக்கமயமாகி நிற்பவர் அடைதல் அரிது' என்பதும் கூறப்பட்டன.

அஞ்சொடு நான்கும் கடந்(து) அகமேபுக்குப்
பஞ்சணி காலத்துப் பள்ளி துயில்கின்ற
விஞ்சையர் வேந்தனும் மெல்லிய லாளொடு
நஞ்சற நாடின் நயஞ்செய்யு மாறே. ***#2233***

வித்தியா தத்துவங்கட்கு முதற் காரணமாய் உள்ள அசுத்த மாயையைக் கடந்து சிவத்துவத்தை அடைந்தமையால் 'வித்தியாதரர்கட்குத் தலைவன்' எனச் சொல்லுதற்குரியசாதகன், பிராசாதகலைகளில் ஒன்பதைக் கடத்தலால், சுத்த மாயாகாரியங் களையும் கடந்த ஒருநிலையைப் பெற்றுப் பத்தாம் கலையாகிய வியாபினி கலையில் நின்று, அருட் சத்தியை வஞ்சம் அற்ற நெஞ்சுடன் நாடுவானாயின் அஃது, ஒன்பது அடுக்குக்களுக்கு மேல் உள்ள பத்தாவது மாடியில், காலில் செம்பஞ்சு ஊட்டுதல் முதலிய ஒப்பனை களுடன் கட்டிலில் உறங்குகின்ற தலைவியைத் தலைவன் அடைந்து, அவளோடு இனிய சொற்களைக் கூறுவது போன்றதாகும்.

விளக்கவுரை

இங்கு, மெல்லியலாளுக்கு ஒப்பாகச் சொல்லப்பட்டது அருட்சத்தியேயாகலின், 'அஞ்சொடு நான்கும்' என்றது, பொதுப்பட 'ஒன்பது' என்னும் பொருட்டாய்ப் பிராசாத கலைகளில் கீழுள்ள ஒன்பதைக் குறித்தது. ஆகவே, 'அகம்' என்று பத்தாவதாகிய வியாபினிகலையாயிற்று.
'விஞ்சையர் வேந்தனும் அஞ்சொடு நான்கும் கடந்து, அகமே புக்கு, நஞ்சு அற நாடின்(அது) நயம் செய்யும் ஆறு' எனக் கூட்டிப் பொருள் கொள்க. 'அது' என்பது தோன்றா எழுவாய். 'பஞ்சு அணிகால் அத்தோடு துயில்கின்ற' என்னும் உருபு தொகுத்தலாயிற்று. அது, பகுதிப் பொருள்

விகுதி. அத் தோடு, 'அதனோடு' என்பதன் மரூஉ. காலில் செம்பஞ்சுக் குழம்பூட்டுதல், ஏனை ஒப்பனைகளுக்கு உபலக்கணம். 'செல்வர் இல்லத்து இளமகள் நலத்தை வேண்டினோன், பல மாடிகளைக் கடந்து மேல்மாடியில் சென்றவழியே அவனைத் தலைப்பெய்தல் கூடுவது போலச் சுத்த சிவனது அருட்சத்தியை அடைய வேண்டினோன் பிராசாத யோகத்தில் பல படிகளைக் கடந்து மேலே சென்றபொழுதே அந்தச் சத்தியை அடைதல் கூடும்' என்றபடி.

'கிடந்த கிழவியைக் கிள்ளி யெழுப்பி
உடந்தை யுடனே நில்'*1*

என்றார் திருவுந்தியார் ஆசிரியர். 'அவள் கிடக்கும் இடம் பத்தாம் தானம்' என்பதை இம்மந்திரத்தால் அறிகின்றோம். பத்தாம் தானத்தைக் கடந்து நான்கு தானங்கள் அந்தரமாய் நிற்க. அப்பால் உள்ள இரண்டு தானங்கள் சிவன் இருக்கும் ஆத்தானம் ஆகும். இன்ப வழியாதல் பற்றி, 'கிழவி' என்றும்' 'மெல்லியலாள்' என்றும் சொல்லப் படினும், 'தாயுடன் சென்றே பின் தாதையைக் கூடவேண்டும்'*3* என்பது பற்றி, 'சத்தியை முதற்கண் சார்தல் வேண்டும்' எனக் கூறினார்.

'சத்தி ஐந்துடன் - சத்தி பெறும் உயிர் தான் அங்குற்று ஆறுமே' என முன் மந்திரத்திற் கூறினார். அதனை ஞான நெறியாற் கூட இயலாபொழுது, பிராசாத யோக நெறியால் கூடுதல் கூடும்' என்பது இதனால் கூறப்பட்டது.

உரிய நனாத்துரி யத்தின் இவன்ஆம்
அரிய துரிய நனாவாதி மூன்றில்
பரிய பரதுரி யத்தில் பரன்ஆம்
திரிய வரும்துரி யத்தில் சிவமே. ***#2234***

எளிதில் இயல்பாக நிகழும் சகல சாக்கிர துரியம் போலவே, அரிதில் சாதித்து அடைவதாகிய நின்மல துரியத்திலும் ஆன்மா, ஆன்மாவாய்த்தான் இருக்கும். ஆயினும், வியாபகமாகிய பர துரியத்தில் அது மேல்நிலையை அடையும். அந்தத் துரியம் வேறுபட நிகழ்கின்ற பரதுரியாதீதத்தில் தான் ஆன்மாச் சிவமாம் தன்மையை அடையும்.

விளக்கவுரை

முன் மந்திரத்தில் 'விஞ்சையர் வேந்தன்' என ஒப்புமைப் பெயரால் குறிக்கப்பட்ட ஆன்மாவை இங்கு எழுவாயாக வருவிக்க. பின்னர் 'அரிய' என வருதலால், முன்னர், 'உரிய' என்றது எளிதில் இயல்பாக நிகழ்வதாயிற்று. நனாத் துரியம் - சகல சாக்கிரமாகிய மத்தியா லவத்தையில் நிகழும் துரியம். 'துரியத்தின்' என்பதில் உள்ள 'இன்' உருபு. ஒப்புப் பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமை உருபு. 'மூன்றில்' என்னும் ஏழாவதனை முடிப்பதாகிய 'இவன் ஆம்' என்பது

அவ்வேற்றுமைக்குப் பின்னர் வாராது, முன்னர் வந்தது. பருமை - வியாபகத்தைக் குறித்தது. எனவே, பராவத்தையில் தான் ஆன்மா உண்மையாக அணுத்தன்மை நீங்கி, விபுத்தன்மையை அடைதல் பெறப்பட்டது. 'பரன்' என்பது, பொதுப்பட, 'மேல் நிலையன்' எனப் பொருள் தந்தது. அது வியாபக நிலையன் ஆயினமையைக் குறித்ததேயாகும். திரிதல் - வேறுபடுதல். 'திரிய வரும் துரியம்' என்றது, துரியம் வேறுபட, அதன்பின் நிகழும் அதீதத்தைக் குறித்தது. 'ஆம்' என்றதை இறுதியிலும் கூட்டுக.

இதனால், பராவத்தை நின்மலாவத்தையினும் உயர்ந்ததாதல் இனிது விளக்கப்பட்டது.

பரமாம் ஆதீதமே பற்றறப் பற்றப்
பரமாம் ஆதீதம் பயிலப் பயிலப்
பரமாம் ஆதீதம் பயிலாத் தபோதனர்
பரமாகார் பாசமும் பற்றொன் றறாதே. ***#2235***

'பராவத்தையிலும் அதன் முடிநிலையாகிய அதீதத்தை அடைதல் வேண்டும்' எனக் கூறுதல், சிறிதே எஞ்சி நிற்கும் மலவாசனை நீங்குதற் பொருட்டாம். (வாசனை, 'இலய மலவாசனை' என்க.) இனி அந்த அதீதத்தைத் தலைப்பட்ட பின்பும் விடாது தொடர்ந்து அதிற்றானே பழகிப் பழகியிருந்தால்தான், ஆன்மாச் சிவமாம் தன்மையைப் பெறும். ஆகவே, அதில் அவ்வாறு தொடர்ந்து பழகா தவர்கள் எத்துணைச் சாதகங்களைச் செய்தவராயினும் அவர் சிவமாம் தன்மையை அடையார். அத்தன்மையை அடையாமையால், சிறிதளவு எஞ்சி நின்ற பாசமும் நீங்காமல் இருந்துக் கொண்டேயிருக்கும்.

விளக்கவுரை

'அவ் இருப்பு எல்லையில் இன்பத்திற்குத் தடையாகும்' என்பது கருத்து. 'பற்றறப் பற்ற' - என்பதற்குக் கருத்து நோக்கி இவ்வாறு உரை கூறப்பட்டது.

'பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'*1*

எனத் திருவள்ளுவரும்,

'பற்றை அறுப்பதோர் பற்றினைப் பற்றில், அப்
பற்றை அறுபர்என் றுந்தீபற'*3*

எனத் திருவுந்தியார் ஆசிரியரும் அருளிச் செய்தமை காண்க.

இன்னும் திருவுந்தியார் ஆசிரியர்,

'பழக்கந் தவிரப் பழகுவ தன்றி,
உழப்புவ தென்பெண்ணே, உந்திபற;
ஒருபொரு ளாலேயென் றுந்திபற'*

என்றமையும் அறியற்பாற்று. பாசம் - பாச வாசனை. ஒன்று - சிறிது, அஃது அவ்வளவிற்றாகிய பாச வாசனையைக் குறித்தது. 'ஒன்றும்' என உம்மை விரிப்பின், அது நின்மலாவத்தையைப் பயனிலதாகச் செய்தல் உணர்க. 'பற்று' என்றதை, 'குறிகளும் அடையாளமும் கோயிலும்'3 ஆக உரைததாரும் உளர்.
இதனால். பராவத்தையிலும் அதீதம் இன்றியமையாதாதல் கூறப்பட்டது.

ஆயும்பொய் மாயை அகம்புற மாய்நிற்கும்
வாயும் மனமும் கடந்த மயக்கறின்
தூய அறிவு சிவானந்த மாகிப் போய்
வேயும் பொருளாய் விளைந்தது தானே. **#2236**

பல சமயத்தாராலும், 'எத்தன்மைத்து' என ஆராயப் படுவதாய், அருவமாய் நிற்கும்மாயை, சிவத்திற்கு வேறும் ஆகாமல், ஒன்றும் ஆகாமல் இடைப்பட்டதாய் இருக்கும். அதனால், வாக்கு மனங்கள் நீங்கிய பின்பும் வாசனை யளவாய் நிற்கின்ற அந்த மாயை அறவே நீங்கினால், அறிவு முழுத் தூய்மை அடைந்து, அதனால் சிவானந்த மயமாகிப் பின்பு அந்தச் சிவானந்தத்தால் விழுங்கப்பட்ட பொருளாகிவிடும்.

விளக்கவுரை

'பொய்' என்றது கண்ணுக்குப் புலனாகாமையே. அகம் புறமாய் நிற்றல், சிவத்தில் வியாப்பியமாய உயிரில் வியாத்தியாய் நிற்றல், 'வாக்கு, மனம்' என்பவற்றின் உண்மைப் பொருளை, 'சாக்கிரந் தன்னில் அதீதம் தலைப்படின்' என்னும் மந்திரத்து8 உரையிற் காண்க. வேய்தல் - மூடுதல்; அகப் படுத்தல். 'விளைவது' என எதிர்காலத்தில் கூறற்பாலது, துணிவு பற்றி, 'விளைந்தது' என இறந்த காலமாகக் கூறப்பட்டது.
இதனால், பராவத்தையில் அதீதத்தில் செல்லவேண்டுதற்குக் காரணம் கூரப்பட்டது.

துரியப் பரியில் இருந்தஅச் சீவனைப்
பெரிய வியாக்கிரத் துள்ளே புகவிட்டு
நரிகளை ஓடத் துரத்திய நாதர்க்(கு)
உரிய வினைகள்நின்(று) ஓலமிட் டன்றே. **#2237**

பர துரியமாகிய குதிரைமேல் ஏறிய ஆன்மா, அதனை விடுத்து, அதற்குமேல் உள்ள அதீதமாகிய புலிக்குள் தன்னைப் புகவிடுமாயின், புலியால் கௌவிக் கொள்ளப்பட்ட ஆட்டினை நரிகள் பற்ற மாட்டாது அஞ்சி ஒடிவிடுதல் போல, அந்த ஆன்மாவை மாயாகாரியங்களாகிய தத்துவங்கள் அணுகமாட்டாது நீங்கிவிடும். (அஃதாவது, 'செயல் இழந்துவிடும்' என்பதாம்) மாயா கருவிகள் நீங்கினமையால் பிராரத்த

கன்மம் வந்து பற்றமாட்டாது ஒழியும்.

விளக்கவுரை

'விசாக்கிரம், வியாக்கிரம்' என்னும் சொல் ஒற்றுமைப் பற்றி பராவத்தையில் முடிவான அதீதத்தைப் புலியாக உருவகிக் கின்றவர், அதற்கேற்பத் தத்துவங்களை நரிகளாக உருவகித்தார். அத னானே ஆன்மா ஆடாக உருவகிக்கப்பட்டதும் விளங்கும். 'ஆட்டை உண்பன நரியும், புலியும் ஆயினும், புலிபற்றிக் கொண்ட ஆட்டினை நரி அணுகமாட்டாது. அதுபோல ஆன்மாவை உட் கொள்வன மாயா கருவிகளும், சிவமும். ஆயினும் சிவத்தால் பற்றிக் கொள்ளப்பட்ட ஆன்மாவை மாயா கருவிகள் அணுக மாட்டா' என்பது நயம்.
நாதர் - தலைவர். இங்கு, ஞானத்தலைவர். உரியவினை, முகந்து கொண்ட பிராரத்த வினை. ஓலமிடுதல் - அஞ்சி, தீங்கு செய்யாதிருக்கும்படி முறையிடுதல். 'ஓலமிட்டன்று' என்றது, 'ஈயென இரத்தல் இழிந்தன்று'* என்பது போல, 'ஓலமிட்டது' என்பதாம். இது பன்மை யொருமை மயக்கம்.
இதனால், பர துரியாதீதத்தை அடைந்த ஆன்மாவை மாயை கன்மங்கள் தொடராமை கூறப்பட்டது.

நின்ற இச் சாக்கரம் நீள்துரி யத்தினில்
மன்றறும் அங்கே மணம்செய்ய நின்றிடும்
மன்றன் மணஞ்செய்ய மாயை மறைந்திடும்
அன்றே இவனும் அவன்வடி வாமே. ***#2238***

இங்குச் சொல்லிவாராநின்ற இந்தச் சாக்கிரமுதலிய அவத்தைகளில் துரியத்தை அடைந்த போதிலும் சிவன் அனைத்தும் கடந்த வெற்ற வெளியான அதீத நிலையில் இருப்பவன் ஆதலால், அவ்விடத்திலே உயிரைக் கூட இருப்பான். (துரியத்தில் வந்துகூட மாட்டான்.) அவன் உயிரைக் கூடினால்தான் உயிர்க்கு உலக உணர்வு மறையும். அப்பொழுது அது சிவ உணர்வு ஒன்றேயுடையதாய்ச் சிவமாகும். (எனவே 'உயிர் அதீத நிலையை அடைதல் வேண்டும்' என்பதாம்.)

விளக்கவுரை

அதிகாரம் 'பராவத்தை' ஆதலின், பராவத்தையை 'நின்ற இச் சாக்கிரம்' என்றார். சாக்கிர நீள் துரியம் - சாக்கிரத்தினின்று நீண்டுசெல்ல உளதாகின்றதுரியம். மன்றல் - அம்பலவன். அம்பலம் - வெற்ற வெளி. அது அனைத்தும் கடந்த அதீத நிலையைக் குறித்தது. 'மாயை' என்பது காரிய ஆகுபெயராய் உலகத்தை உணர்த்தி, இருமடி யாகுபெயராய் உலக உணர்வை உணர்த்திற்று. கூடுதல், புணர்தல் முதலிய சொற்களாற் கூறாமல், 'மணம்' என்னும் சொல்லாற் கூறினமையால்,

அது, தலைவன் தலைவியை ஈருடல் ஒருடலாக முயங்குதல் போல இரண்டறக் கலத்தலைக் குறித்தது. எனவே, 'துரியம் முதலிய பிற நிலைகளில் சிவன் உயிரோடு, கேளிர், கிளைஞர் முதலியவரோடு தலைப்பெய்தல் போலத் தலைப்பெய்திருப் பானாயினும் இரண்டறக் கலத்தல் அதீதநிலையில்தான் என்றதாயிற்று.

'அவன் இவன் ஆனது அவன் அருளால் அன்றி,
இவன் அவன் ஆகான் என் றுந்தீபற'3

என்பர் ஆதலால், 'உயிரை வந்து மணப்பவன் சிவனே' எனக் கூறினார்.
அன்றே - அப்பொழுதே.

இதனால், 'சிவன் தன்னிலையில் நிற்பது சுத்த துரியாதீத நிலை' என்பது கூறும் முகத்தால், 'அதனை ஆன்மா அடைதலே அது பேறு பெறும் நிலையாகும்' என்பது கூறப்பட்டது.

விரிந்திடில் சாக்கிரம் மேவும் விளக்காய்
இருந்த இடத்திடை யீடான மாயை
பொருந்தும் துரியம் புரியில்தா னாகும்
தெரிந்த துரியத்துத் தீதல லாதே. *#2239*

சிவத்திற்கும், ஆன்மாவிற்கும் இடையே நிற்பதாகிய மாயை தனது நிலையினின்று விருத்திப் படுமாயின் ஆணவ இருளில் உள்ள உயிர்கட்கு விளக்குப் போல உதவும். அதனாலேயே மத்தியாலவத்தை நிகழும் துரியத்தில் ஆன்மாப் பாசத்தினின்றும் நீங்காது அழுந்திநிற்கும். (ஆதலின் அஃது ஆன்மா அடைதற்குரிய துரியம் அன்று.) அஃது அடைதற்குரிய துரியம் பரதுரியமே. அதனை அடைந்தால் அது பாசங்கள் நீங்கித் தூயதாம்.

விளக்கவுரை

'இடையீடான மாயை இருந்த இடத்து விரிந்திடின் விளக்காய்ச் சாக்கிரம் மேவும்' என மாற்றி இதன் பின் ஈற்றடியைக் கூட்டுக. 'ஆய்' என்பதை ஆக' எனத் திரிக்க. 'தெரிந்த துரியம்' என்பது, 'எல்லார்க்கும் அனுபவமாய் அறியப்பட்டதுரியம்' என மத்தியாலவத்தைத் துரியத்தைக் குறித்தது. 'தீது அகலாது' என்றதனால் அது பொருந்தி தாத் துரியம் ஆயினமையின், 'பொருந்துந் துரியம்' என்றது பரதுரியம் ஆயிற்று. தான் ஆதல், ஆன்மாப் பாசமாய் இருந்த நிலையின் நீங்கித் தானேயாய் இருத்தல்.

இதனால், 'துரியம்' என்பது உயர்வுடையது போலக் கூறப்பட்டாலும், உண்மையில் உயர்ந்த துரியம் பர துரியமே' என்பது கூறப்பட்டது.

உன்னை யறியா(து) உடலைமுன் நான்என்றாய்
உன்னை யறிந்து துரியத் துறநின்றாய்
தன்னை யறிந்தும் பிறவி தணவாதால்

அன்ன வியாத்தனம லன்னென் றறிதியே. *#2240*

மாணவனே, நீ கீழாலவத்தை மத்தியாலவத்தை -களில் நின்ற பொழுது உன்னையே நீ, 'யார்' என்று அறிந்து கொள்ளாது, உடம்பையே, 'நான்' என்று சொல்லிக் கொண்டிருந்தாய். பின்பு, நின்மலாவத்தையை அடைந்தபொழுது உன்னை நீ, 'சடமாகிய உடம்பின் வேறாகிய சித்துப் பொருள்' என அறிந்து, அதன்கண் துரிய நிலையிலே சிவன் உன்னையே தானாகக் கொண்டு நிற்கும்படி அவனது அருள் வழியில் நின்றாய், எனினும் ஆன்மாத் தன்னையும், தலைவனையும் அறிந்து அவனது அருள் வழியில் நின்ற அளவிலே அதற்குப் பிறவி நீங்கி விடாது. 'சிவன் எல்லாப் பொருளிலும் நீக்கமற நிறைந்து நின்றானாயினும், அவனது உண்மை நிலை பிறிதொன் றோடும் கூடாது அனைத்தினும் வேறாய் நிற்கு தூய்மையே' என்பதை அறிந்து, அவனை அந்நிலையிலே சென்று தலைப்படமுயல்.

விளக்கவுரை

'அம்முயற்சியாவது, நின்மலாவத்தையையும் கடந்து பராவத்தையை அடைய முயலுதல்' - என்பது குறிப்பு, ஈற்றில் தந்துரைத்தது இசையெச்சம். 'முள்' என்றது, 'ஞானவத்தைக்கு முன்' என்றது. ஆகையால் அது, கீழாலவத்தை மத்தியாலவத்தைகளையும், அறிதல் ஞானத்தினால் ஆதலின், 'அறிந்து' என்றது, ஞானாவத்தை யாகிய நின்மலாவத்தையையும் குறித்தன. உறுதற்கு வினை முதல் வரு வித்துக் கொள்க. 'அமலன்' என்றது, 'சகலாவத்தைக்கு அப்பால் நிற்பவன்' என்பதைக் குறிப்பினால் உணர்த்தியது. எனவே, சகலத்திற் சுத்தமாகிய நின்மலாவத்தையும் கடந்து, பராவத்தையில் செல்லுதல் வேணடும்' என்பது போந்தது. அன்ன வியாத்தன் - அத்தன்மை யாதான ஒரு நிறைவினையுடையவன்.

இதனால், நின்மலாவத்தையும் சகலத்தில் சுத்தமேயாக, பராவத்தையே உண்மைச் சுத்தம்' என்பது கூறப்பட்டது.

கருவரம பாகிய காயத் துரியம்
இருவரும் கண்டீர் பிறப்பிறப் புற்றார்
குருவரம் பெற்*(று)*அவர் கூடிய பின்னை
இருவரும் இன்றிஒன் றாகிநின் றாரே. *#2241*

கருவிற்கு உட்படுதலையுடைய உடம்பில் நிகழ் வதாகிய துரியத்தில் நீயும், சிவனும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டீர்கள். *(அது போதாது; ஏனெனில்,)* பிறப்பு இறப்புக்களிற் பட்டு உழல்கின்றவர்கள். ஞான குருவின் அருளைப் பெற்றுச் சிவனும், தாமும் வேறறக் கலந்த பின்பே தாம் சிவனின் வேறாய சீவராய் நில்லாது. சிவமாகி நிற்பர்.

விளக்கவுரை

'அங்ஙனம் நின்றவரே பிறப்பிறப்பு அற்றவராவர்' என்பது குறிப்பெச்சம். 'துரியத்தில்' - ஏழாவது விரிக்க. 'துரியத்து' எனப் பாடம் ஓதுதலும் ஆம். கூடுதலுக்குச் செயப்படுபொருளாகிய 'சிவனை' என்பது வருவிக்க. 'கண்டீர்' என்றதனால், அது சிவ தரிசனமும், 'கூடிய' என்றதனால் அது சிவயோகமும் ஆயின. சிவ தரிசனமும் குருவருளால் பெறற்பாலதே யாயினும் பிறப்பறுதியைத் தரும் சிறப்புப் பற்றிச் சிவயோகமே குருவருளால் பெறப்படுவது போலக் கூறப்பட்டது. சிவதரிசனத்தளவில் நின்றவர் பிறப்பெய்து தலை நோக்கிச் சிவயோகத்தில் நின்றவர் பிறப்பெய்துதல் சிறு பான்மையாதலின், அவர்களைப் பிறப்பறப்பு அற்றவராகக் கூறினார். அங்ஙனம் கொள்ளாக்கால் மேல், 'தன்னையறிந்தும் பிறவி தணவாது' என்றதனோடு முரணும் என்க. சிவயோகமே துரியமாக, சிவதரிசனம் சுழுத்தியே யாயினும் அது துரியத்தின் தோற்றுவாயாதல் பற்றி அதனையும் 'துரியம்' என்றார். 'நின்றார்' என்பது, துணிவு பற்றி எதிர்காலம் இறந்த காலமாக வந்த கால வழுவமைதி.

இதனால், 'தம்மை உணர்ந்து தலைவனை உணர்தலாகிய நின்மலாவத்தைய அடைதற்குக் குருவருள் வேண்டும்' என்பது கூறப்பட்டது. 'அவ்வாற்றால் நின்மலாவத்தையை அடைந்து பராவத்தையை எய்துதல் கூடும்' என்றற்கு.

அணுவின் துரியத்தில் ஆன நனவும்
அணுஅசை வின்கண் ஆன கனவும்
அணுஅசை விற்பரா தீதம். சுழுத்தி
பணியில் பாதுரி யம்பரம் ஆமே.

பரதுரி யத்து நனவும் பரந்து
விரிசகம் உண்ட கனவும்மெய்ச் சாந்தி
உருவுறு கின்ற சுழுத்தியும் ஓவத்
தெரியும் சிவதுரி யத்தனு மாமே. *#2242*

('மேலாலவத்தை' என்றும், சகலத்தில் 'சுத்தா வத்தை' என்றும் கீழ் உள்ளவைகளை நோக்கிச் சிறப்பித்துச் சொல்லப் படுகின்ற யோகாவத்தைகள் அது காரணம் பற்றியே 'துரியம்' எனப்படும். (துரியம் - மேற்பட்டது) ஆயினும், அதில் சீவத் தன்மை நீங்காமையால் அவை சீவதுரியமேயாம். அவையே இங்கு 'அணுவின் துரியம்' என்றும் 'அணுவசைவு' என்றும் சொல்லப்படுகின்றன.

சீவ துரியமாகிய யோகாவத்தையில் உள்ள, 'சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்' என்பன தாழ்வுடையனவே - என

அறியப்பட்டால், அதன் பின்பே பராவத்தை உளதாகும். அந்தப் பராவத்தையே அவத்தைகளில் எல்லாம் மேலான அவத்தை.

விளக்கவுரை

'ஆகவே - மேலாலவத்தை - எனக் கூறப்படுதலே பற்றி அவற்றையே 'பராவத்தை' - என மயங்கற்க' என்பதாம்.

'யோகில் - தருவதோர் சமாதி தானும்
தாழ்ந்து பின் சனனம் சாரும்'
-சுபக்கம் சூ.*5.34*.

என்னும் சிவஞான சித்தி மொழி மேலேயும் எடுத்துக்காட்டப் பட்டது. செய்யுள் நோக்கிச் சுழுத்தி இறுதியில் வைக்கப்பட்டது. பராதீதம் - பரமும் அதீதமும்; உம்மைத் தொகை. இதன் பின்னும், 'சுழுத்தி' என்பதன் பின்னும் எண்ணும்மை விரிக்க. 'பரம்' என்றது துரியத்தை. பணிதல் - தாழ்தல். அஃது இங்கு அறிபவனது அறிவில் அத்தன்மை யதாய் விளங்குதலைக் குறித்தது.

இதனால், பராவத்தை பற்றியதோர் ஐயம் அறுக்கப்பட்டது.

*(*இதன் பின் பதிப்புக்களில் காணப்படுகின்ற 'பரதுரியத்து நனவும்' என்னும் பாடல் மிகையாகத் தெரிகின்றது*)*

பரமாம் நனவின்பின் பாற்சகம் உண்ட
திரமார் கனவு சிறந்த சுழுத்தி
உரமாம் உபசாந்தம் முற்றல் துறவே
தரனாம்சிவதுரி யத்தனும் ஆமே. ***#2243***

பராவத்தையில் சாக்கிரம் சீவன் முத்தி அதில் உலக அனுபவம் சிவானுபவமாய் நிகழும், *(*அதுவே,
'பெற்றசிற் றின்பமே பேரின்பமாம்'*1*
எனக் கூறப்பட்டது.*)* அந்த அனுபவம் அதிகார முத்தியில் பழக்க வாசனையாய் நிகழும். அதுவே பர சொப்பனம். போக முத்தியில் அந்த வாசனையும் தாக்கமாட்டாது நீங்கும். அதுவே பர சுழுத்தி. *(*இதில் சுத்த தத்துவ போகத்தில் இச்சையுண்டாம்*)* அந்த இச்சையும், அதனால் வரும் அந்தப் போகமும் அடங்கி நிற்றலே 'உபசாந்தம்' எனப்படும். அது பர துரியம். அதை அடைந்தவன் மேல்நிலையை அடைந்தவனாவன். 'சிவ துரியம்' எனப்படுகின்ற நின்மலத் துரியத்தை அடைந்தவனும் இந்நிலையை அடைந்தே உயர்வு பெறுதற்குரியன்.

விளக்கவுரை

காயம் இருந்து நீங்கின பாத்திரத்தில் அதன் வாசனை பதித்திருத்தல் போன்ற பதிவை, 'திரம்' என்றார். திரம் - நிலைப்பு. 'கனவில் வாசனை உண்டாம்' என்றதனால், நனவில் அனுபவந் உண்மை பெறப்பட்டது.

வாசனை தாக்காத உறுதி. 'உறும்' எனப் பட்டது. 'உரம் சிறந்த சுழுத்தியாம்' என்க. முற்றல் - முதிர்தல். துறவு - கீழ் நிலைகளின் நீங்குதல்; அது துரியம். 'சிவ துரியத்தனும் ஆம்' என்பது 'ஒரு தலையாக ஆவன்' என்றதாம். உபசாந்தம் துரியம் ஆகவே, இன்பம் துரியாதீதம் ஆயிற்று. ஆகவே, 'முடிநிலை உயர்வு பராவத்தையே' என்பது பெறப்பட்டது.

இதனால், பராவத்தைகளின் இயல்பும், 'அவைகளே முடிநிலை உயர்வு' என்பதும் கூறப்பட்டன.

சீவன் துரியம் முதலாகச் சீராக
ஆவ சிவன்துரி யாந்தம் அவத்தைபத்(து)
ஓவும் பரானந்தி உண்மைக்குள் வைகியே
மேவிய நாலேழ் விடுத்துநின் றானே. *#2244*

'சிவதுரியம்' எனப்படுவது, யோகாவத்தையில் இமயம் முதலிய எட்டில் ஏழாவதாகிய 'தியானம்' என்பது. 'சிவ துரியம்' எனப்படுவது, தசகாரியத்துள் ஒன்பதாவதாகிய சிவயோகம். இவ்வொன்பதில் ஆன்ம சுத்தி சிவ தரிசன சிவயோகங்களில் அடங்கிவிடுதலால், எஞ்சிய எட்டோடு, யோகாவத்தையில் 'தியானம் சமாதி' - என்னும் இரண்டைக் கூட்ட, சீவதுரியம் முதலாகச் சிவ துரியம் ஈறாக உள்ள அவத்தைகள் பத்தாம். ஆகவே, இந்தப் பத்த வத்தைகளையும் கடந்து, சிவானந்தந் தருவதாகிய உண்மைச் சுத்தா வத்தை அடைந்தவனே, தான் முன்பு கட்டுண்டிருந்த அனைத்துத் தத்துவங்களினின்றும் நீங்கினவனாவன்.

விளக்கவுரை

'மேலாலவத்தை' எனப்படுதலால் யோகாவத்தையில் நிகழும் துரியம் சகலத்திற் சுத்தமே யாகையால், அது சீவ துரியமாம். எவ்வாறெனில், சகலத்தில் நிற்கும் உயிரே சிவன் ஆகலின். இனி- ஞானாவத்தையும் சகலத்தில் சுத்தமாயினும் அது ஞான குருவின் அருளால் ஞானத்தைப் பெற்றபின் அதனை முற்றுவிக்கும் நிலை யாதலின் அதன்கண் நிகழும் துரியம் சிவதுரியமாம். தசகாரியத் துள்ளும் 'சிவயோகம்' என்றே சொல்லப்படுதல் நினைக்கத் தக்கது. என்னும், உண்மைச் சுத்தாவத்தையாகிய முத்தி வகைகளே பரா வத்தை யாதலின், அதன்கண் நிகழும் துரியம் பர துரியமாம். அதன் பின் நிகழும் அதீதமே சாயுச்சிய முத்தியாகலின், அந்நிலையில் விளையும் ஆனந்தமே முடிநிலைப் பேரானந்தம் ஆதலின் அது பரானந்தமாகும். பரானந்தத்தை அடைந்தவன் பரானந்தி. உண்மைச் சுத்தத்தை, உண்மை' என்றும், 'அனைத்துத் தத்துவங்களும்' எனக் கூற வந்தவர் அதனை வேதாந்திகளும் உணரும் வகையில், 'மேவிய நாலேழ்விடுத்து நின்றான்' என்றும் கூறினார். 'அந்தம்' என்பதன் பின்னும் ஆக்கம் வருவித்து,

'சீவன் துரியம் முதலாகச் சிவன் துரியம் அந்தமாகச் சீராக ஆவ அவத்தை பத்து' என முடிக்க.
இதனால், யோகாவத்தை, தசகாரியம் இவற்றை வைத்து நோக்கின், சுத்தாவத்தைகள் பலவாதல் கூறப்பட்டது.

பரம்சீவன் மேலாம் பரமம் பரத்தின்
பரம்பரன் மேலாம் பரநன வாக
விரிந்த கனாஇடர் வீட்டும் சுழுனை
உரந்தகும் ஆனந்திஆம் உண்மை தானே. *#2245*

'பரம்' என்பது 'மேல்' என்னும் பொருளது ஆதலின், 'எங்கும் பரன் என்று சொல்லப்படுகின்ற சிவன், மேலானவன்' - என்பது போதரும். இனி, 'பரமம்' என்பது பரத்தினும் உயர்ந்த மேன்மையைக் குறிக்கும். ஆகவே, 'பரம்பரன்' என்று சொல்லப்படுகின்ற சிவனே மேலான சிவன். அவனைத் தலைப்படும சீவன் முத்திநிலையே பரசாக்கிரம். (அதில் பிராரத்தம் உயிரைத் தாக்காவிடினும் உடலூழாய் வந்து போகும்.) 'பர சொப்பனம்' எனப் படுகின்ற அதிகார முத்தியில் பிராரத்துவத் தொடர்பு உண்டாகாது. பர சுழுத்தியாகிய போக முத்தியிலும், பர துரியமாகிய இலய முத்தியிலும் ஞானம் முற்றி நிற்கும். பரதுரியாதீதமாகிய பரமுத்தியில் சிவானந்தப் பெருக்கு உளதாம். இவையே உண்மைச் சுத்தாவத்தைகளாம்.

விளக்கவுரை

'பரமம் பரத்தின் மேலாம்' என இயைக்க. 'பரன்' என்பதை 'சொரூப சிவன்' என்றும், 'சிவன்' என்பதை தடத்த சிவன் என்றும் நாயனார் கொள்கின்றார். 'பர நனவாக' என்பதோடும் 'இடர்' என்பதைக் கூட்டி. 'பரநனவில் (இடர்) ஆக விரிந்த கனா இடர் வீட்டும்' என முடிக்க. விரிந்த கனா பர சொப்பனம். எனவே, 'சுழுனை' என்றதும் பர சுழுத்தியே ஆயிற்று உயிர் ஆனந்தியாதல் பரா தீதத்தில் ஆதலின், அதற்கு முன்னேயுள்ள துரியமும், 'உரந்தகும்' என்றதிலே அடங்கிற்று. அனைத்தையும் 'உண்மை' என ஒன்றாய் அடக்கினமையின், 'தானே' என ஒருமை அசையே கூறினார்.
இதனால், பராவத்தைகளே உண்மைச் சுத்தாவத்தைகள் ஆமாறு காரண வகையாலும், பயன் வகையாலும் வலியுறுத்தப் பட்டது.

சார்வாம் பரசிவம் சத்தி பரநாதம்
மேலாய விந்து சதாசிவம் மிக்கோங்கிப்
பாலாய்ப் பிரமன் அரிஅமர் ஆபதித்
தேவாம் உருத்திரன் ஈசன்ஆம் காணிலே. *#2246*

தத்துவங்களை ஆராயுமிடத்து, எல்லா உயிர் களும் முடிவில் அடையும் இடமாய் உள்ள பரமசிவனும், பரா சத்தியும் முதற்கண் முறையே பர நாத

மூர்த்தியும் பரவிந்து சத்தியுமாய் நிற்க பின்பு பரவிந்து சத்தியினின்று அபர நாத மூர்த்தியும், அவனிடத் தினின்று அபரவிந்து சத்தியும் தோன்ற, அதன்பின் அபரவிந்து சத்தியினின்று சதாசிவன், மகேசுரன், உரூத்திரன், மால், அயன், என்போர் முறையே ஒருவரினின்று மற்றொருவர் தோன்றுவர்.

விளக்கவுரை

'இங்ஙனம் பரமசிவனும், பராசத்தியும் ஆகிய அவர்களே தடத்த நிலையில் பர நாத மூர்த்தி, பர விந்துசத்தி முதலாகிய ஒன்பது பேதங்களாய் நிற்பர்' என்றபடி இதனை,

'சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், திகழும் ஈசன்,
உவந்தருள் உருத்தி ரன்றான், மால், அயன் - ஒன்றின் ஒன்றாய்ப்
பவந்தரும்; அருவம் நால்; இங்கு உருவம் நால்; உபயம் ஒன்றாய்
நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் என்பர்'3

என்னும் சிவஞான சித்தியாலும் உணர்க. இச் செய்யுளில் பரநாத மூர்த்தியே 'சிவம்' என்றும், பர விந்து சத்தியே 'சத்தி' என்றும் சொல்லப் பட்டனர். எனவே, 'நாதம், விந்து' எனப் பட்டவை அபர நாதமு, அபர விந்துவும் ஆயின. இம் மந்திரத்துள் 'பரநாதம்' என்றதனானே அபர நாதமும், 'பரவிந்து' என்றதனானே அபர விந்துவும் பெறவைக்கப் பட்டன. 'காணில்' என்பதை முதலில் வைத்து, 'ஓங்கி' என்பதை 'ஓங்க' எனத்திரித்து, 'ஈசன் அவன்பால் ஆய், அரி, பிரமன், அமர் ஆபதித் தேவாம் உருத்திரன் ஆம்' என இயைத்து முடிக்க. செய்யுள் பற்றி இங்ஙனம் முறை பிறழவும், சொற் சுருங்கவும் ஓதினார். ஈசன் - மகேசுரன். 'ஆய்' என்பதனையும் 'ஆக' எனத் திரிக்க. 'மகேசுரன், சதா சிவன்பால் ஆவன்' என்றகுறிப்பானே, 'உருத்திரன் மகேசுரன்பால் ஆம்' என்பது பெறப்பட்டது 'அரி, பிரமன்' என்பது செவ்வெண். அதன்பின் தொக்கு நின்ற 'இவ்விருவரும்' என்னும் எழுவாய் 'ஆபதி' என்பதில் ஆதலாகிய பயனிலையோடு முடிந்தன. 'அமர்' என்னும் முதனிலையே 'அமர்ந்து' என எச்சப்பொருள். அமர்ந்து ஆதலாவது. ஒடுங்கியிருந்து தோன்றுதல். 'ஆ பதி' ஏதுப் பொருட்டாய வினைத்தொகை. பதி - தலைவன். பதித் தேவாம் உருத்திரன்' என்பது, 'பதியாகிய தேவனாகிய உருத்திரன்' எனப் பல்பெயர் ஒட்டுப் பண்புத் தொகை. இந்திரனுக்கு இங்கு இடம் இன்மையால் 'அமராபதி' என்பதை இந்திரனது நகரமாகக் கொள்ளுதற்கு யாதும் இயைபில்லை. 'அமர்ந்தாபதி' என்றே பாடம் ஓதுல் சிறக்கும்.

சிவனது இந்த ஒன்பது நிலைகளும் தடத்த நிலைகளேயாகும். இவை 'நவந்தரு பேதம்' - எனப்படுகின்றன. இவைகளை நாயனார் இங்குக் கூறியதற்குக் காரணம், 'முத்தி வகையாகிய பராவத்தையை

அடைந்தோர் படிமுறையானே கீழ் இருந்து மேல் உள்ள இந்நிலைகளை யெல்லாம் அடைவர்' என்பதும், 'அந்நிலையில் அவர்களும் இங்குக் கூறிய பெயர்களையெல்லாம் பெறுவர்' என்பது உணர்த்தற் பொருட்டாம். சிவனது நிலைகள் 'சம்பு பட்சம்' என்றும், பராவத்தையை எய்தினோரது நிலைகள் 'அணுபட்சம்' என்றும் சொல்லப்படும். மேற்காட்டிய சிவஞான சித்திச் செய்யுளில் கூறியபடி கீழ் உள்ளவை நான்கும் உருவம். மேல் உள்ளவை நான்கும் அருவம். இடையில் உள்ள ஒன்றும் அருவுருவம். அருவம் இலயம், அரு வுருவம் போகம். உருவம் அதிகாரம். இந்த மூன்றும் இறை யவத்தைகளாகும். மேல் எல்லாம் கூறியன உயிர் அவத்தைகள். அருவம், 'நிட்களம்' என்றும், உருவம், 'சகளம்' என்றும், அருவுருவம் 'நிட்களசகளம்' அல்லது 'சகள நிட்களம்' என்றும் சொல்லப்படும். இறையவத்தை மூன்று பற்றிய முத்திகளே, 'அதிகார முத்தி, போக முத்தி, இலயமுத்தி' எனக் கூறப்படுகின்றன. இம்மூன்றும் 'அபரமுத்தி' என்றும் சொல்லப்படும். இவையெல்லாம் இம்மந்திரத்தின் வழிப் பெறப்படும். இதனானே இது, மேல், 'சிவமாம் பரத்தினில் சத்தி'* என்றதற்குப்பின் 'கூறியது கூறல்' ஆகாமை உணர்க. இதனால், 'பராவத்தை சாக்கிரம் முதலியவற்றால் ஐந்தாதலே யன்றிப் பிறவாற்றால் பலவாதலும் உண்டு' என்பது கூறப்பட்டது.

கலப்பறி யார்கடல் சூழ்உல கேழும்
உலப்பறி யார்உடலோடுயிர் தன்னை
அறப்பறிந் திங்கர சாளகி லாதார்
குறிப்பது கோல கடலது வாமே. *#2247*

சிவன் தமது அறிவினுள் அறிவாய்க் கலந்திருத் தலையும், 'பூவுலகம் முழுதும் ஒரு காலத்தில் முற்று அழிந்தொழியும்' என்பதையும் அறியாதமடவோர், உடலோடு கலப்பினால் ஒன்றாய் இருக்கின்ற உயிர் பொருளால் வேறாதலை உணர்ந்து உடம்பையே தாமாகப் பற்றி நின்று, அதனால் இவ்வுலகத்திற்றானே அருளரசு ஆள மாட்டுவாரல்லர். அவர் அத்தகைய நிலையை அடைய வேண்டின், அவர்கள் குறிக்கொளத் தக்கது சிவனது தடத்தத் திருமேனிகளை எழுதி வைக்கும் உள்ளமாகிய கிழியேயாம்.

விளக்கவுரை

'உயிரா வணம் இருந்து உற்றுநோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி,
உயிரா வனஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோடு ஒட்டி வாழ்தி'*

என அப்பரும் அருளிச் செய்தார். அவ்வருள்மொழியால், அஃது யோகப் பயிற்சியானே கூடும்' என்பது விளங்கும்.

'கடல் சூழ் உலகு ஏழு' ஆவன, நாவலம் பொழில் முதலிய ஏழு பொழில்கள். தாம் உள்ள இடத்து உள்ளவர்களை உள்ளத்துட் கொண்டே ஓதுகின்றார் ஆதலின், பூவுலகத்தின் நிலையாமையையே எடுத்துக் கூறினார். பூவுலகமும் ஏழ்கடலும் ஏழ்பொழிலுமாய் விரிந்து கிடத்தலின், 'இவை முழுதும் எஞ்சாது அழிந்தொழிதலும் உளதாகுமோ' என மயங்குவர் என்றற்கு 'கடல் சூழ் உலகேழும் உலப் பறியாது' என்றார். பறிதல் - நீங்குதல். 'அலப்பறிந்து' என்பது பாடம் அன்று. 'அறப்பிரிந்து' என ஓதலும் ஆம். இதனுள் ஈரடி எதுகை வந்தது. இதனால், 'பராவத்தை நிலையை அடைதற்கு அந்நிலையில் நிற்கும் சிவனைச் சகலாவத்தையிற்றானே பாவனை முறையால் வழிபடுதல் வழியாகும்' என்பது கூறப்பட்டது.

பின்னை யறியும் பெருந்தவத் துண்மைசெய்
தன்னை யறியின் தயாபரன் எம்மிறை
முன்னை யறிவு முடிகின்ற ஞானமும்
என்னை யறியலுற் றின்புற்ற வாறே. ***#2248***

சிறு தவங்களையெல்லாம் செய்து அலுத்துவிட்ட பின்பு நல்லறிவு பிறந்து செய்கின்ற பெருந்தவந்தின் வழியாக உயிர்களைப் பராவத்தையில் சேர்க்கின்ற தனது இயல்பை ஒருவன் அறிந்து தன்னை அடைய விரும்பினால் எங்கள் இறைவனாகிய சிவன் உடனே அவன் முன் தோன்றுவான். ஏனெனில் அவன் பெருங் கருணையாளன். அம்முறையில் யான் எனது பழைய சிற்றறிவு முடியும் காலத்தையும் அறிந்தேன் அதனால் சிவனது பேரறிவாலே என்னையும் அறிந்தேன். யான் இது பொழுது இன்புற்றிருக்குமாறு இவ்வாறாம்.

விளக்கவுரை

பெருந்தவம், சரியை கிரியா யோகங்கள், இவற்றை பின்னையறிவனவாகக் கூறினமையால், முன்பு சிறு தவங்களைச் செய்தமை விளங்கிற்று. அவை உலகப் பயன்களை விரும்பிச் செய்தன வாகும். அப்பயன்கள் யாவும் சில காலமே யிருந்து அழிந்தொழிதலை உணர்ந்தமையால், அவற்றைத்தரும் தவங்களைச் செய்வதில் அலுப்பு உண்டாயிற்று. முன்மந்திரத்தில் சொல்லியபடி இப்பெருந்தவத்தால் சிவன் உயிர்களைப் பராவத்தையில் சேர்த்தல் பெறப்பட்டது. மோனை நயம் கெடுதலையும் நோக்காது, 'உண்மை செய்து அன்னை அறியின்' எனப் பிரித்து, 'சத்தி நிபோதம் வாய்க்கின்' எனப் பொருள் உரைப் பார்க்கு சத்தி நிபாதத்தின் பின்னர் நிகழ்வதாகிய பெருந்தவம் சத்தி நிபாதத்திற்கு முன் நிகழ்வதாய் முடிதலை நோக்குக. சிற்றறிவு - ஏக தேச ஞானம்; அஃதாவது சில பொருள்களையே அறிதல். அது முடியுங் காலம், அவ்வாறு அறிந்து வருதலில் உவர்ப்புத் தோன்றும் காலம். 'தன்னாலே

தந்தால் தன்னையும் தானே காணும்' என்பவாகலின், 'என்னையறியலுற்று' என்றது சிவ ஞானத்தினால் ஆயிற்று. இவ்வாற்றால் பராவத்தையைத் தலைப் பட்டமையால் இன்புற்றிருக்க இயன்றது.
இதனால், முன் மந்திரத்தில், 'குறிப்பது கோல மடலது வாமே' எனக் கூறிய அந்நெறியிலே நின்றவழி, முறையாக விளையும் பயன்களின் முடிநிலைப் பயனாகப் பராவத்தையும் அதன்கண் பரானந்தமும் உண்டாதல் கூறப்பட்டது.

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னில் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தன தன்கர ணங்கள்தாம்
தன்னில் மறைந்தன தன்கர ணங்களே. ***#2249***

பொன்னால் செய்யப்பட்ட அழகிய அணி கலன்கள் தம்மிடத்துப் பொன் உள்ளதாயினும் அதனை உரைச் செய்யாது மறைத்துத் தமது அழகினையே உணரப் பண்ணி மக்களை மயக்குகின்றது. ஆயினும் அந்த அணிகலன்களின் செயற்கை நலன்களை அழித்துவிட்டால், அணிகலனாய் இருந்த பொருள்கள் அழியாதிருப்பினும் அவை பொன்னாகி விட்ட அதனுள்ளே மறைந்து விடும். அவைபோல, சார்ந்ததன் வண்ணம் ஆகின்ற ஆன்மாவைப் பெத்தகாலத்தில் அதனுடைய தனு கரணங்கள் தம் வயப்படுத்தித் தம்மயம் ஆகச் செய்து, ஆன்மாத் தன்னைத் தான் அறியாதபடி மறைத்து அதனைத் தாமென்றே மயங்கிச் செய்துவிடுகின்றன. ஆயினும், ஆன்மாக் குருவருளால் ஞானத்தைப் பெற்ற முத்தி காலத்தில் உண்மை ஞானம் பொது ஞானத்தை அழித்துவிடுதலால், ஆன்மாவில் வியாப்பியமாய்த் தமக்கெனச் சுதந்திரமின்றி ஆன்மாவின் வழியே செயற்படுகின்ற தனு கரணங்கள் தாம் அழிந் தொழியாது ஆவ்வான்மாவின் வயப்பட்டு முன்போல மருள் வழியில் இயங்காமல், ஆன்மாவைப் போலவே அருள் வழியில் இயங்கும்.

விளக்கவுரை

இவையிரண்டிற்கும் காரணம், ஆன்மாவின் அபக்குவமும், பக்குவமுமேயாகும். 'ஆன்மா அபக்குவ காலத்தில் மாயை கன்மங்களின் வழிபட்டுச் சகலாவத்தையையும், பக்குவ காலத் -தில் அதனின் நீங்கி நின்மலாவத்தையையும், வீடுபெறும் காலத்தில் பராவத்தையையும் அடையும்' என்பது இதனால் ஆன்மாவின் மேல் வைத்துக் கூறப்பட்டது. இஃது எடுத்துக் காட்டுவமை.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை

பரத்தை மறைத்தன பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தன பார்முதல் பூதமே. *#2250*
மரத்தால் செய்யப்பட்ட பெரிய மதயானை உருவம் சிற்பியின் கைவண்ணத்தால் மரத்தை உணர ஒட்டாமல் மறைத்து, மக்களை மயக்குகின்றது. ஆயினும் சிற்பியினது வேலைப் பாடுகளை அழித்து விட்டால், அந்த மத யானையாய் இருந்த பொருள் அழியாதிருப்பினும் மரத்தினுள்ளே மறைந்துவிடும். அது போல, பரம்பொருளால் இயங்குகின்ற உலகம், ஆன்மாவின் பெத்த காலத்தில் தானே சுதந்திரமாய் இயங்குவனவாய் அதற்குக் காட்சியளிக்கும். ஆயினும் குருவருளால் ஞானத்தைப் பெற்ற முத்தி காலத்தில் உண்மை ஞானம் பொது ஞானத்தை அழித்துவிடுவதால், உலகம் சுதந்திரம் அற்றொழியப் பெரும் பொருளின் இயக்குதலே விளங்கி நிற்கும்.

விளக்கவுரை

இவற்றிற்கும் காரணமும், மேற்கூறிய அபக்குவ பக்குவங்களே என்பது வெளிப்படை.
இதனால், மேற்கூறிய அந்தப் பொருளே பரம் பொருளின் மேல் வைத்துக் கூறப்பட்டது. இதுவும் அவ்வுவமை.

ஆறா றகன்று நமவிட் டறிவாகி
வேறான தானே யகாரமாய் மிக்கோங்கி
ஈறார் பரையின் இருளற்ற தற்பரன்
பேறார் சிவாய அடங்கும் பின் முத்தியே. *#2251*

பெத்தம், முத்தி இரண்டும் சிவன் செயலே யாகலின் அது பற்றி அவையிரண்டும் முறையே, 'ஊனநடனம், ஞான நடனம்' எனப்படும். ஊன நடனத்தில் சிவனது சத்திதிரோதான சத்தியாயும், ஞானநடனத்தில் சிவனது சத்தி அருட்சத்தியாயும் செயற்படும். சிவசத்தி பொருளால் ஒன்றேயாயினும், செயல் பற்றி இவ்வாறு இரண்டாக வகுத்து விளக்கப்படுகின்றது. திரோதான சத்தி மறைத்தலையும், அருட் சத்தி அருளலையும் செய்யும்.
உமாபதி தேவர், திருவைந்தெழுத்தை 'நமசிவாய' எனத் தூலமாகக் கொண்டாலும், 'சிவாயநம' எனச் சூக்குமமாகக் கொண்டாலும்,
'ஊன நடனம் ஒருபால்; ஒருபால்ஆம்
ஞானநடம்; தான்நடுவே நாடு'*l*
என அருளிச் செய்தார். தான் - சீவன்; அல்லது ஆன்மா. 'அது நடுவே உள்ளது' எனக் கூறப்பட்டமையால், யகாரம் பசு வெழுத்தாயிற்று.
'உண்மை விளக்க' - நூல் திருவைந்தெழுத்தை, 'சிவாயநம' எனச் சூக்குமமாக எடுத்துக் கொண்டு,
'சிவன், அருள், ஆவி, திரோதம், மலம் ஐந்தும்

அவன் எழுத்து ஐந்தின் அடைவாம்'*
எனக் கூறிற்று. ஆகவே, 'சிகாரம் சிவன்; வகாரம் அருட்சத்தி, யகாரம் ஆன்மா, நகாரம் திரோதான சத்தி, மகாரம் ஆணவ மலம்' என்ற தாயிற்று. மாயை கன்மங்கள் ஆணவ மலம் போல உயிருக்கு இயற்கை யாகாது, திரோதான சத்தியாலே செயற்யைாகக் கூட்டப்பட்டு, ஆணவ மலத்தின் பரிபாகத்திற்குத் தக்கவாறு அந்தத் திரோதான சத்தியாலே செயற்படுத்தப்படுவதால், அவை வேறு நில்லாது, திரோதான சத்தியுள் அடங்குகின்றன. 'மாதவச் சிவஞான யோகி கட்கும் இதுவே கருத்து' என்பது அவரது உரைகளால் விளங்கும். இஃது அறியாதார், 'மகாரம் மாயையைக் குறிக்கும்' என்பர். 'அவ்வாறாயின் மூல மலமாகிய ஆணவத்தைக் குறிப்பது எது' என அவர் நோக்காமை யறிக.
உமாபதி தேவரும் ஆன்மாவை நடுவாக வைத்து,
'திருவெழுத் தஞ்சில் ஆன்மாத், திரோதம், மாசு, அருள், சிவம்'*l* என முதலில் முன் உள்ள எழுத்து பாச எழுத்து இரண்டையும், பின்பு பின் உள்ள பதியெழுத்து எழுத்து இரண்டையும் குறித்தார். 'முன், பின்' என்பவற்றைக் காலம் பற்றிக் கொள்ளாது. இடம் பற்றிக் கொள்க. இவற்றால், 'ந, ம' என்பன பாச எழுத்துக் களும், 'சி, வ' என்பன பதி எழுத்துக்களும் ஆயின. எனவே, முப்பொருள்களும் அஞ்செழுத்தில் அடங்குதலாலும், 'பலகலை ஆகமம், வேதம் யாவையினும் கருத்துப் பதி, பசு, பாசம் தெரித்தலே' யாகலானும்,
'அஞ்செழுத்தே ஆகமமும், அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுரா ணம்அனைத்தும்'*8*
என உண்மை விளக்கத்திலும்,
'அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் அஞ்சின்
பொருள்நூல் தெரியப் புகின்'*3*
எனத் திருவருட் பயனிலும் கூறப்பட்டன.
இவற்றால், 'நகார மகாரங்கள் ஊன நடனம்' என்பதும், 'சிகாரவகாரங்கள் ஞான நடனம்' என்பதும் விளங்கும்.
கீழாலவத்தை மத்தியாலவத்தை, மேலால் அவத்தைகளில் நிற்போர் தத்துவங்களின் நீங்காமையால் அவர்களில் பற்றுக்களை விட விரும்பாதவர் அஞ்செழுத்து மந்திரத்தைத் தூலமாக வைத்தும், பற்றுக்களை விட விரும்பினோர் அதனைச் சூக்குமமாக வைத்தும் கணித்தற்கு உரியர். அவற்றின் பயனாக ஞான குருவின் உப தேசத்தைப் பெற்றுப் பற்றுக்களை விட்டொழிக்க முயல்கின்றவர்கள் தத்துவங்களாகிய பாசங்கள் நீங்குதற்பொருட்டு அஞ்செழுத்துக்களில் பாச எழுத்துக்கள் இரண்டையும் நீக்கி, மற்றை மூன்றெழுத்தை மட்டுமே கணித்தற்கு உரியர். இதனை, 'அதிசூக்கும பஞ்சாக்கரம்' என்பர்.

இந்நிலையில் பிரணவத்தைச் சேர்த்தல் கூடாது. பிரணவம் இன்றிச் சிகாரம் முதலிய மூன்றெழுத்துக்களைத் திரும்பத் திரும்பக் கணிக்குங்கால், யகாரம்வகாரத்திற்கும், சிகாரத்திற்கும் இடைப்பட்ட தாகிவிடும். ஆகவே, ஆன்மாவை எவ்வகையிலும் பாசங்கள் பற்றுதற்கு வழியில்லை, யகாரத்தைத் தொடர்ந்து சிகார வகாரங்கள் வர,பின்பு வகரத்தைத் தொடர்ந்து யகாரம் வருதலால், 'அடியேன் நடுவுண் இருவீரும் இருப்பதனால் '* என்னும் திருவாசகத் தொடர் இதனையே குறிப்பதாகக் கூறுவர்.

சிவஞான போதஒன்பதாம் சூத்திரத்தில் மெய்கண்ட தேவர்.

'உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதி'

எனக் கூறி, அதனையடுத்து 'எண்ணும் அஞ்செழுத்தே' எனக் கூறியவர், அதனை வாளா கூறாது, 'விதி எண்ணும் அஞ்செழுத்தே, எனக் கூறியருளினார். வார்த்திகத்திலும்.

'இவ்விடத்துச் சீபஞ்சாக்கரத்தை
விதிப்படி யுச்சரிக்க'

என்றார். 'பாசம்ஒருவ' என முன்னே கூறினமையால், 'விதிப்படி' என்றது, 'பாச எழுத்துக்களை நீக்கிப் பிரணவமும் இல்லாமல் உச்சரித்தல் வேண்டும்' என்றதேயாகின்றது. வெளிப்படையாகவே அந்த மூன்றெழுத்து மந்திரத்தை அவர் எடுத்துக் கூறாமைக்குக் காரணம், 'அவ்வாறு கூறுதல் மரபன்று' என்பதும், இன்னோரன்னவை யெல்லாம் குருமுகமாகவே அறிதற்குரியன' என்பதுமேயாம். ஆயினும் காலப்போக்கில் அவரது பொருளை உணர்ந்து பயன் பெறு பவர்கள் அருகி மாறுபட்ட கருத்துக்கள் மலிந்து வருதலால், இவ் விடத்து எடுத்துக் காட்ட வேண்டி வருகின்றது. இதுபற்றியே மாதவச் சிவஞான யோகிகள்.

'இங்ஙனம் ஆசிரியர் மாட்டெறிந்ததூஉம்
உணராதார் ... ... சித்தாந்த வழக்கொடு
முரணிக் கூறுவர்'*8*

எனக் கூறினார்.

பஞ்சாக்கரத்தைத் தூலமாகக் கணித்தலை விடுத்துச் சூக்குமமாகக் கொண்டு கணிப்பினும் யகாரம் வகாரத்திற்கும், நகாரத்திற்கும் இடைப்பட்டே நிற்றலால் பாசம் நீங்காதது பற்றி,

'ஆசில் நவா நாப்பன் அடையாது, அருளினால்
வாசி யிடை நிற்கை வழக்கு' * *திருவருட்பயன் *89.*

என்றார் உமாபதி தேவர். அஞ்செழுத்தில் பாச எழுத்துக்களை நீக்கி உச்சரிக்கின், யகாரம் வகாரதிற்கும் சிகாரத்திற்கும் இடைப்பட்டு

நிற்றலை மேற்கூறியவாற்றால் அறிக. இதனையறியாதார், 'சிவாய சிவ' என்பதை ஓர் உருவாக வைத்துப் பல உருக்கள் கணிக்க வேண்டும் என்பர். அவ்வாறு கணிப்பின். சில உருக்களில் 'சிவா' என்பது 'வசி' என இயைந்து அவ்வுருக்கள் வாசியிடை நிற்றலாகிய சாதகத்தப் பயவாமை உணர்க.

சிவஞானபோத ஒன்பதாம் சூத்திரத்தில் சொல்லப்பட்ட சகலத்தில் சுத்த சுழுத்தியில் சிகாரம் முதலிய மூன்றெழுத்துக்களையே உச்சரித்தல் வேண்டும் எனக் கூறினமையால், 'பத்தாம் சூத்திரத்தில் சொல்லப்பட்ட 'அவனே தானே ஆகிய. அந்நெறி - ஏகனாகி' ஆன்மாத் தன்னை யிழந்து நிற்பதாகிய சகலத்தில் சுத்த சுழுத்தியில் யகாரத்தையும் நீக்கி, 'சிவ' என இரண்டெழுத்தாக உச்சரித்தல் வேண்டும்' என்பது போந்தது. 'இது காரண பஞ்சாக்கரம்' எனப்படும். இதனை நாயனார் அடுத்து வரும் தந்திரத்தில் 'சிவ சிவ என்றே தெளிகிலர் ஊமர்', 'சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்' என்பன முதலாக அருளிச் செய்வார்.

இங்ஙனமாகவே, சிவஞானபோதப் பதினொன்றாம் சூத்திரத்தில் அரன் கழலின்கீழ் ஆன்மா ஆனந்தத்தில் மூழ்குதலாகிய சகலத்தில் சுத்த துரியாதீதத்தில் அருள் எழுத்தாகிய வகாரமும் நீங்க. சிகாரம் ஒன்றுமே அசபா நலமாய் நிற்கும் என்பதும் பெறப்படும். இந்த ஓரெழுத்து மந்திரத்தை நாயனார் 'நாயோட்டு மந்திரம்' என மறைபொருட்கூற்றாக ஓதினார். அந்தமந்திரத்தை மிகையானதாகப் பிற்காலத்தார் கருதிவிட்டனர். நாயின் தன்மை குரைப்பது. நாயின் தன் மையையே, 'நாய்' என்றார். 'குரைத்தலை ஓட்டுவது' என்றது, 'பேச்சை ஒழித்து மௌனத்தை உண்டாக்குவது' என்றதாம். தருமை ஆதீன ஆதி பரமாசாரியராகிய குருஞான சம்பந்தரும்,

'கற்க இடர்ப்பட்டுமிகக் கற்றஎலாம் கற்றவர்பால்
தற்கமிட்டு நாய்போலச் சள்ளெனவோ'1

என, ஞான நெறியில் நில்லாது பேசும் பேச்சுக்களுக்கு நாயின் குரைப்பை உவமை கூறினார். 'பேசா அனுபூதி'2 'மோனம் என்பது ஞானவரம்பு3 என்பன போன்றவற்றை நோக்குக. இந்த ஓரெழுத்து மந்திரம், 'மாககாரண பஞ்சாக்கரம்' - எனப்படும். மந்திர நூல் வழக்கில், ஓர் எழுத்தான் ஆயதே சிறப்பாக 'மந்திரம்' எனப்படும். அந்த மந்திரத்தை நாயனார் தமது மந்திர மாலையில் கூறாது போவாரோ.

ஐந்தெழுத்தாய் இருந்த மந்திரம் பின்பு மூன்றெழுத்தாய்ப் பின்பு இரண்டெழுத்தாய், இறுதியில் ஓரெழுத்தே ஆகிவிடுகின்றது. இது,

'சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே'4

என அருளிச் செய்த அனுபவத்திற்கு ஒத்துள்ளது. இதனை உமாபதி

தேவர்,
'பதிபசு பாச முதிர்அறி வுகளுடன்
ஆறா முன்னர்க் கூறாப், பின்னர்
இருபொருள் நீத்துமற் றொருநால் வகையையும்,
ஈனமில் ஞாதுரு ஞானம் ஞேயம் என்று
இசைய மூன்றாய்ப் பசு பதி என்றவற்று
இரண்டாய், இரண்டும் ஒன்றின்ஒன் றாகத்
திரண்டாம் பயனெனும் திருவருள் தெளியில்
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
என்றிவற் றியற்கை இயம்புதல் தகுமே'*

எனக் கூறினார். இங்ஙனம் கூறிய இதனையே சிவஞான யோகிகள் பரம சித்தாந்தத்தை ஓதியதாக உரைத்தார்.* இங்ஙனம் ஓதப்பட்டதன் பொருளை உணரமாட்டாதவர், பூர்வ பட்சம் எது? என அறிந்து கொள்ளாமல் இதற்கு உரை செய்துள்ளனர்.

இம்மந்திரத்தின் பொருள் இனிது விளங்குதற் பொருட்டு இத்துணையும் கூற வேண்டியதாயிற்று.

(உரை): தச காரியங்களில் முதல் மூன்றின் முடிவில் உள்ள தத்துவ சுத்தி எய்திய பொழுது அது நிலை பெறுதற் பொருட்டுத் திரு வைந்தெழுத்தில் பாச எழுத்தாகிய நமக்கனை நீக்கி - மூன்றெழுத்தாகக் கணித்து, அதனாலே முன்பு தத்துவங்களாகிய சடத்தோடு கூடிச் சடமாய் இருந்த நிலை நீங்கிச் சித்தாகிய ஆன்மாத் தானேயாகி யகாரத்தோடே நின்று, (அஃதாவது நமக்களோடு சேராது நின்று - ஆன்ம ரூபம். ஆன்ம தரிசனம் இரண்டும் இவ்விடத்தே நிகழ்ந்துவிடும் இவையெல்லாம் சகலத்தில் சுத்த சாக்கிரம் சுத்த சொப்பன சுத்த சுழுத்திகளாய்விடும்) பாசங்களினின்று மிக மேன்மை யுற்றுப் பின் இறுதியில் உள்ள அருட் சத்தி வழியாக, (இது சகலத்தில் சுத்த துரியம்.) இயல்பாகவே பாசம் அற்று இருக்கின்ற சிவனைப் பெறும் பேற்றை அடை (இது சகத்தில் சுத்த துரியாதீதம்) அப்பொழுது முன்பு இருந்த யகாரம் வகாரத்திலே அடங்கும். பின்பு வகாரமும் சிகாரத்திலே அடங்கிவிடும் அதன் பிறகு உனக்குக் கிடைப்பது பரானந்தந்தான். (இதற்குமேல்) அடையத்தக்கது எதுவும் இல்லை என்பதாம்.

விளக்கவுரை

இதனைக் கீழ்க் காணும் பிற்காலத்து அடிகளது பாட்டு ஒன்று மிக நயம்படத் தெரிவிக்கின்றது.

'மாயநட் டோரையும், மாயா மலமெனும் மாதரையும்
வீயவிட் டோட்டிவெளியே புறப்பட்டு மெய்யருளாம்
தாயுடன் சென்றுபின் தாதையைக் கூடிப்பின் தாயை மறந்(து)

ஏயும் அதே நிட்டை யென்றான் எழிற்கச்சி ஏகம்பனே. '
நட்டோர் - நண்பர். திரோதான சத்தியும். அதனால் கூட்டிச் செயற் படுத்தப்படுகின்ற மாயை கன்மங்களும். இவை நகாரத்தால் குறிக்கப் படுகின்றன.
மாயா - என்றுமே அழியாது நிற்கின்ற, மலம் - ஆணவம். ஆணவத்தை ஒரு பெண்ணாகக் கூறும் வழக்கு உண்மையை,
'பலரைப் புணர்ந்தும்இருட் பாவைக்குன் டென்றும்
கணவற்கும் தோன்றாத கற்பு'3
என்னும் திருவருட் பயனாலும் அறிக. இம்மலம் மகாரத்தால் குறிக்கப்படுகின்றது.
வீயவிட்டு ஒட்டுதல், நகார மகாரங்களை நீக்குதல். மெய்யருளாம்தாய் வகாரம். அதனோடு கூடுதலாவது, முன்புபோல நகார மகாரங்களோடு கூடாது, வகாரத்தோடே இணைந்து நிற்றல்.
தாயுடன் செல்லுதல் யகாரத்தையும் நீக்கி, இரண்டெழுத்தாகக் கணித்தல்.
தாதையைக் கூடிப் பின் தாயை மறந்துவிடுதல், வகாரத்தையும் நீக்கிச் சிகாரத்தோடு மட்டும் இருந்துவிடுதல்.
'தானே' என்பது, முன்னிலைக்கண் படர்க்கை வந்த இட வழுவமைதி.
ஈறு ஆர் பரை - இறுதியில் உள்ள அருட் சத்தி, பரையின் - பரையினால், தற்பரன் பேறு - தற்பரனைப் பெறும் பேறு. நிலை மொழியின் ஈறுதிரியாமை சிறுபான்மை பொதுவிதியானே கொள்ளப் படும். பேறு ஆர், 'பேற்றினைப் பொருந்து' என முன்னிலை ஏவல். 'சிவாய அடங்கும்' 'சிய்யில் வவ்வும் யவ்வும் அடங்கும்' எனக் கொள்க. 'முத்தி' என்றது ஆனந்த நிலையை. ஏகாரம் தோற்றம்.
இவையெல்லாம் நின்மலாவத்தைக்கண் நிகழ்வனவே யாயினும், 'பராவத்தையிலும் அதீதம் ஒழிந்த ஏனை நான்கிலும் சூக்குமமாய் நிகழும்' என்பது உணர்த்துதற்கு இங்கு இதனைக் கூறினார்.
இதனால், 'அஞ்செழுத்தின்புணை' எல்லா அவத்தைகளிலும் ஏற்றபெற்றியில் பிறவிக் கடலைக் கடத்துதல் கூறப்பட்டது.

துரியத்துல் ஓரைந்தும் சொல்அகா ராதி
விரியப் பரையின் மிகுநாதம் மந்தம்
புரியப் பரையின் பராவத்தா போதம்
திரியப் பரமாமாம் துரியம் தெரியவே. #2252

சகலத்திற் சுத்தமாகிய நின்மலாவத்தை ஐந்திலும் வாக்குக்கண் அகாரம் முதலிய ஐந்து அக்கரங்களாய், (அ, உ, ம, விந்து, நாதம் - என்பனவாய்)த் தூலமாய் நிகழும். (எனவே, அவ்விடத்து உலக வாசனை இருக்கவே செய்யும் என்பதாம்.) நின்மலா வத்தைக்கு மேலான உண்மைச்

சுத்தாவத்தையில் அவ்வாக்குக்கள் சூக்குமமாய் நிகழும். (அதனால், உலக வாசனை தோன்றாவிடினும், 'யான்' எனது என்னும் உணர்வினால் ஞாதுரு ஞான ஞேய வேற்றுமை நிகழவே செய்யும்.) அந்த வேற்றுமையும் அறுவது பர துரியத்திலாம். (அவ்விடத்தில் ஆன்மா அருள்மயமாய் நிற்கும்.) அதன் பின்பு மேலானதாய அதீதம் தோன்றும். (அதில் ஆன்மா ஆனந்தமயமாய் இருக்கும்.)

விளக்கவுரை

'துரியம்' என்பது, 'மலாவத்தைகளைக் கடந்தது' என்னும் பொருட்டாய், நின்மலாவத்தையைக் குறித்தது. 'ஐந்திலும்' என உருபும், 'ஆதியாய், மந்தமாய்' என ஆக்கங்களும் விரிக்க. 'சொல், நாதம்' என்பன வாக்கைக் குறித்தன. 'விரிய, புரிய, தெரிய' என்ற அனுவாதத்தானே விரிதலும், புரிதலும், தெரிதலும் பெறப்பட்டன. விரிதல் - தூலமாய் நிகழ்தல். புரிதல் - இடையறாது நிகழ்தல். தெரிதல் - விளங்குதல். 'மந்தம்' என்றது சூக்குமத்தைக் குறித்தது. 'பரை' இரண்டில் முன்னது ஆகுபெயராய்ப் பராசத்தியால் நிகழும் பராவத்தையைக் குறித்தது. மூன்றாம் அடியில் அவை நேராகவே கூறப்பட்டன. பராவத்தா போதம் - பராவத்தையில் நிகழும் திரிபுடி ஞானம். இது வடமொழிச் சந்தி. திரிய - வேறுபட; நீங்க. 'திரிய' என்னும் எச்சம் 'தெரிய' என்னும் எச்சத்தோடும், அவ்வெச்சம் 'பரமம்' என்பதில் தொக்கு நின்ற 'ஆம்' என்பதனோடும் முடிந்தன. 'பராவத்தா போதம் திரியத் துரியம் தெரியப் பரமம்' என வினைமுடிக்க. பரம் - மேலான அதீதம்.

இதனால், 'பந்தம் சூக்குமமாய் நிற்கும் அவத்தைகளும் பின் அது முற்றும் அறும் அவத்தையும் இவை' என்பது சொல்லப்பட்டது.

ஐந்தும் சகலத்**(**து**)** அருளால் புரிவுற்றுப்
பந்திடும் சுத்த அவத்தைப் பதைப்பினில்
நந்தி பராவத்தை நாடச் சுடர்முனம்
அந்தி யிருள்போல ஐம்மலம் மாறுமே**. *#2253***

சாக்கிரம் முதலிய ஐந்தவத்தைகளையும் சகலத்தில் மாயா கருவிகளால் அடையாது, திருவருளால் அடைந்து, (எனவே, 'மேலா லவத்தையையும் கடந்து நின்மலாவத்தையை அடைந்து' என்றதாம்.) சகலத்திற் சுத்தமாகிய அந்த அவத்தைகளில் மேலே பாய்ந்தும், கீழே வீழ்ந்தும் பந்துபோல அலைகின்ற அலைவினால் அவ்வலைவு நீங்கப் பெறுகின்ற உண்மைச் சுத்தமாகிய பராவத்தையில் நாட்டம் உண்டாகுமானால், அந்த நாட்டத்தின் முன் ஐந்து மலங்களும் அந்திக் காலத்தில் விளக்கின்முன் இருள் நில்லாது நீங்குதல் போல நில்லாது நீங்கும்.

விளக்கவுரை

'சகலத்து' எனவும, 'அருளால்' எனவும் கூறிய வற்றால், புரியப்படுவன நின்மலாவத்தைகளாயின. தானே நிகழ்வன வற்றை ஆன்மாநிகழ்வித்துக் கொள்வது போலவைத்து, 'புரிவுற்று' என்றார். பந்து இடும் - பந்தினை வீசுவது போல நிகழும் நந்தி - சிவன். இதனால், 'ஆன்மாநின்மலாவத்தையையும் கடந்து, பரா வத்தையை எய்திய பொழுதே உண்மையில் தூயதாம்'என்பது கூறப் பட்டது.

ஐயைந்து மட்டுப் பகுதியும் மாயையாம்
பொய்கண்ட மாயேயந் தானும் புருடன்கண்**(**டு**)**
எய்யும் படியாய் எவற்றுமாய் அன்றாகி
உய்யும் பராவத்தை யுள்உறல் சுத்தமே. ***#2254***

'இருபத்தைந்து' எனத் தொகை பெற்று நிற்கின்ற தத்துவங்களாய் உள்ள மூலப் பிரகிருதியில் இயல்பையும், 'மாயேயம்' எனப்படுகின்ற வித்தியா தத்துவங்களாய் உள்ள அசுத்தமாயையின் இயல்பையும் சாதகன் உள்ளவாறு உணர்ந்து தத்துவ ஞானியாய், எல்லாப் பொருளிலும் கலப்பினால் ஒன்றாகியும், பொருள் தன்மையால் வேறாகியும் நிற்கின்ற சிவமாகிப் பிறவியினின்றும் நீங்கி நிற்கும் பராவத்தையை அடைதலே உண்மைச் சுத்தாவத்தையாகும்.

விளக்கவுரை

'பொய்கண்ட' என்பது தாப்பிசையாய் 'ஐயைந்து' என்றதனோடும் சென்றியைந்தது. பொய்கண்ட - நிலையாமை நன்கு உணரப்பட்ட. இங்கும் 'மாயேயம்' என்பது, 'மாமாயை' எனப்பாடம் திரிக்கப்பட்டுள்ளது. 'மாயையாம் மாயேயம்' என்றாராயினும், 'மாயேயமாம் மாயை' என மாறிக் கூட்டுக. தான், அசை, எய்தல் - அறிதல், படி - வகை. இஃது ஆகுபெயராய், 'படியன்' எனப் பொருள் தந்தது. 'சிவமாந் தன்மையைப் பெற்ற ஆன்மாவும் சிவம்போலவே வியாபகமாய் நிற்கும்' என்பார். 'எவற்றுமாய் அன்றாகி' என்றார். 'எவற்றுமாய்' என்றது, 'எவற்றிலும் அவையேயாய்' என்றபடி. இதனால், பராவத்தையை எய்துமாறும், 'பராவத்தையே பிறவாநிலை' என்பதும், 'அஃதே உண்மைச் சுத்தாவத்தை' என்பதும் கூறப்பட்டன.

நின்றான் அருளும் பரமும்முந் நேயமும்
ஒன்றாய் மருவும் உருவும் உபாதியும்
சென்றான் எனைவிடுத் தூங்கிற்செல் லாமையும்
நன்றான ஞானத்தின் நாதப் பிரானே. ***#2255***

பரம்பொருளை அறிய அவாவிநிற்கின்ற சுத்தான் மாவும், அதற்கு அதனை அறிதற்குத் துணைபுரிந்து அதன் அறிவுக்கு அறிவாய் நிற்கின்ற திருவருளும், அவ்வருளின் துணையால் அந்த ஆன்மாவால் அறியப்படுகின்ற பரம் பொருளும் ஆகிய மூன்று உயர் பொருள்களும்,

ஆன்மாவினிடத்து மூவகை உடம்புகளாய் நிற்கின்ற தத்துவங்களும்,
அவற்றைச் செலுத்துகின்ற திரோதான சத்தியும் நீங்கினவிடத்து
ஒன்றாய்ப் பொருந்திவிடும். அஃதன்றியும், சிவன் பின்னர் அந்த
ஆன்மாவைவிட்டுப் பிரியாத நிலைமையும் உண்டாகும்.

விளக்கவுரை

'நின்றான்' என்பதிலும் எண்ணும்மை விரிக்க 'முன்னேயமும்' என்பது பாடம் அன்று. நேயம் - அன்பு; விருப்பம், விருப்பத்திற்குரிய பொருளை 'விருப்பம்' என்றார். முந்நேயம் - திரிபுடி. அவை 'ஞாதுரி, ஞானம், ஞேயம்' என்பன. இவைமூன்றும் வேறு வேறாய்த் தோன்றுங்காறும் 'அனுபவம்' என்பது இல்லையாம். சிவத்தை உணர்தல் சிவஞானத்தாலன்றிக் கூடாமையால், பிற மதத்தினர் என்ன கூறினாலும் சித்தாந்தம் 'ஞானம்' என்பது சிவ ஞானத்தையே. அது திருவருளேயாதல் அறிக. உபாதிகளைச் செலுத்துதல் பற்றித் திரோதான சத்தியும், 'உபாதி' என உபசரித்துக் கூறப்படும். 'சென்ற' என்னும் பெயரெச்சத்து அகரம் தொகுத்த லாயிற்று. சென்ற ஆன் - நீங்கிய அவ்விடத்து. எங்கு - வேறிடம். 'சொல்லாமையும்' என்னும் உம்மை இறந்தது தழுவிய எச்சம். இதன் பின்னும் 'மருவும்' என்பதனைக் கூட்டுக. 'உருவும், உபாதியும் சென்ற ஆன், நின்றானும் ... ... ஒன்றாய் மருவும்; நன்றான ஞானத்தின் நாதப் பிரான் (ஞானத்தின் நாதன் - திருவருளுக்குத் தலைவன்) எனை விடுத்து ஊங்கிற் செல்லாமையும் மருவும்' எனக் கூட்டி முடிக்க 'ஊங்கிற் செல்லாமை' என்பதை, 'எங்கெழுந்தருளுவது இனியே*l* என்பது போலக் கொள்க. இதனால், பராவத்தை எய்துமாறும், அதன்கண் நிகழும் அனுபவமும் கூறும் முகத்தால் அதனது மேன்மை எடுத்தோதி முடிக்கப்பட்டது.

10.9.முக்குண நிர்க்குணங்கள்

சாத்திகம் எய்தும் நனவென்ப சாற்றுங்கால்
வாய்த்த இராசதம் மன்னும் கனவென்ப
ஓய்த்திடும் தாமதம் உற்ற சுழுத்தியாம்
மாய்த்திடும் நிற்குணம் மாசில் துரியமே. ***#2256***

சாக்கிரம் பொருள்களை நன்குணரும் நிலையாகலின் அது, 'சாத்துவிக குணத்தின் காரியம்' என்றும், சொப்பனம் பொருள்களைச் சாக்கிரத்தில் அனுபவித்த வாசனையளவாய் நிற்கும் நிலையாதலின் அது மெய்ம்மைக்கு எதிரான போலி அனுபவம் ஆதல் பற்றிச் சாத்துவிகத்திற்கு எதிரான, 'இராசதகுணத்தின்காரியம்' என்றும், சுழுத்தி, யாதும் உணராத நிலையாதலின் அஃது, இருள் மயமான 'தாமத குணத்தின் காரியம்' என்றும் சொல்லப்படும். துரியம் இம்மூன்றையும்

கடந்ததாகலின் அது 'நிர்க்குணமாய் நிகழ்வது' என்றும் சொல்லப்படும்.

விளக்கவுரை

'துரியம் நிர்க்குணம்' எனவே, அதனைக் கடந்த துரியாதீதம், நிர்க்குணம்' எனச்சொல்ல வேண்டாவாயிற்று. துரிய துரியாதீதங்களை 'நிர்க்குணம்' எனக்கூறியதனானே 'நிர்க்குணம்' என்னும் வழக்கு. மாயாகுணங்கள் இல்லாமையையே குறிக்குமன்றி, யாதொரு குணமும் இன்மையைக் குறியாது - என்பது பெறப்படும். இறைவனை 'நிர்க்குணன்' எனவும், 'குணாதீதன்' எனவும் கூறுதலும் இந்தக் கருத்திலே தானே யன்றி, 'யாதொரு குணமும் இல்லாதவன்' என்னும் கருத்தினாலன்று. இயல்பாகவே மாயையின் நீங்கி நிற்கும் இறைவன், குணங்கள் பலவற்றையுடையனாதலை நினைக.

முத்தொழில்களில், 'படைத்தல் இராசதத்தொழில்' என்றும், 'காத்தல் சாத்துவிகத் தொழில்' என்றும், 'அழித்தல் தாமதத் தொழில்' என்றும் சொல்லப்படும். அதனால் அவ்வத்தொழிலைச் செய்யும் மூர்த்திகளை அவ்வக்குணம் உடையவராகக் கூறுவர். ஆகவே மும் மூர்த்திகளும் 'குண மூர்த்திகள்' என்றும், மூவருக்கும் அப்பாற்பட்ட பரமசிவனை, 'நிர்க்குணன்' என்றும் 'குணாதீதன், என்றும் கூறுவர்.

மற்றும் மேற்கூறிய சாக்கிரம் முதலிய அவத்தைகள் முக்குணங்களின் காரியங்களாகச் சொல்லப்படுதல் பற்றித் திருமாலை, 'சாக்கிரமூர்த்தி' என்றும், பிரமனை, 'சொப்பனமூர்த்தி' என்றும், முக்குணங்களையும் கடந்து, நிர்க்குணனாய் உள்ள பரமசிவன் துரியமூர்த்தியாகின்றான். துரியம் நான்காவதாகலின், பரமசிவனை, 'மூவருக்கும் அப்பால் உள்ள நான்காமவன்' என்பர்.

இனி மும்மூர்த்திகளை முக்குணங்களில் ஓரோர் குணத்தை உடையவராகக் கூறுதலும் அவர் கொண்டுள்ள தொழில் பற்றியே யன்றி, அவரவருக்கு உள்ள குணம் பற்றியன்று. 'குணம் பற்றி' எனின், சொப்பன மூர்த்தியும், சுழுத்தி மூர்த்தியும் விழித்துக்கொண்டை யிருக்க, சாக்கிர மூர்த்தி துயில்கொள்பவனாய் இருத்தல் அமையாது. சாக்கிரம் முதலிய மூன்று பற்றியே கூறினாராயினும், சகலத்தில் கேவலம் தாமதத்தாலும், சகலத்தில் சகலம் இராசதத்தாலும் சகலத்தில் சுத்தத்தில் யோகம் சாத்து விகித்தாலும் நிகழும் என்க. ஆகவே, சுத்தம் நிர்க்குணமாம். முக்குணம் கூறுதல்பற்றி, நிர்க்குணமும் கூறவேண்டிய தாயிற்று. 'சாத்துவிகம்' என்பது 'சாத்திரம்' என மருவிற்று.

இதனால், சகலாவத்தையில் முக்குணங்கள் தொடருமாறு கூறப்பட்டது.

10.10.அண்டாதி பேதம்

பெறுவ பகிரண்டம் பேதித்த அண்டம்

எறிகடல் ஏழின் மணலள வாகப்
பொறியொளி பொன்னணி யென்ன விளங்கிச்
செறியும்அண் டாசனத் தேவர் பிரானே. *#2257*

அண்டங்களை ஆசனமாகக் கொண்டு, அவற்றிற்கு மேலே விளங்குகின்ற சிவபெருமான், உயிர்களால் பற்றப்பட்டுப் புறமும், அகமுமாய்ப் பல்வேறு வகையில் அமைந்துள்ள அண்டங்கள் எண்ணிலவாய் நிற்க, அவை அனைத்திலும், கட்பொறிக்குப் புலனாகின்ற மாற்றொளியையுடைய, பொன்னால் ஆகிய அணிகலன்போல அவற்றினுள் நிறைந்திருக்கின்றான்.

விளக்கவுரை

பெறுதற்கு வினைமுதல் வருவிக்கப்பட்டது. 'எறிகடல் ஏழின் மணலளவாக' என்றது, 'எண்ணிலவாக' என்றபடி, 'ஒளி' என்றதனால், பொறி, கட்பொறியும், 'பொன்' என்றதனஆல், ஒளி, பொன்னினது மாற்றொளியும் ஆயின. 'பொன்னால் செய்யப்பட்ட அணிகலன்கள் உள்ளனவாயினும் அவற்றது ஒளியையே மக்கள் நோக்குதல் போல, அண்டங்களிலே சிவபெருமான் நிறைந்திருப் பினும், அண்டங்களை மட்டுமே உயிர்களை உணர்கின்றன' என உவமையை, உணர்ப்படுதல் படாமை பற்றிய ஒரு புடை உவமையாகக் கொள்க.

'அண்டம் ஆரிரு ளூடுகலந் தும்பர்
உண்டு போலும் ஓர் ஒண்சுடர்; அச்சுடர்
கண்டிங் காரறிவார்! அறிவார் எலாம்
வெண்டிங்கட் கண்ணி வேதியன் என்பரே'*7*

எனவும்,

'அண்டங் கடந்தபொருள்; அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்'*8*

எனவும் ஓதினாற்போல இவரும், 'அண்டாசனத் தேவர்பிரான்' என ஓதினார். 'விளங்கி' என்பதை 'விளங்க' எனத்திரித்து, 'அண்டங்கள் விளங்கத்தான் அவற்றினுள் விளங்காது நிறைந்திருப்பான்' என்க. இதனால், 'தத்துவங்களின் காரியமாகிய அண்டங்கள் எண்ணிலவாம்' என்பது கூறப்பட்டது. 'தேவர்பிரான் செறியும்' என்றது, அவை அவனால் நிலைபெறுதலை உணர்த்தியவாறு.

ஆனந்த தத்துவம் அண்டா சனத்தின்மேல்
மேனி ஐந்தாக வியாத்தம்முப் பத்தாறாய்த்
தானந்த மில்லாத தத்துவ மானவை
ஈனமி லாஅண்டத் தெண்மடங் காமே. *#2258*

அண்டங்களாகிய ஆசனத்தின்மேல் ஆனந்தமாய் உள்ள மெய்ப்பொருள்தான் (வடிவமற்றதாயினும்) அருவம் இரண்டு,

அருவுருவம் ஒன்று, உருவம் இரண்டு ஆகிய ஐந்துவடிவங்களைக் கொண்டு விளங்குதலால், அதனால் வியாபிக்கப்பட்ட முப்பத்தாறு முதனிலைப் பொருள்கள் தோன்றி, அழிவின்றி நிற்பனவே 'தத்து வங்கள்' எனப்படுகின்றன. அவையே குறைவில்லாத அண்டங் களாய்க் காரியப்பட்டு, அளவிறந்து நிற்கின்றன.

விளக்கவுரை

ஐந்துவடிவங்கள் மேல், "சார்வாம் பரசிவம் சத்தி பரநாதம்' *3* என்னும் மந்திரத்தின் உரையில் சொல்லப்பட்ட 'சிவம், சத்தி, சதாசிவன், மகேசுரன்' என்பவற்றோடு 'வித்தை' என்பதுமாகும். ஆகி நின்று செயலாற்றுதலால். முப்பத்தாறு தத்துவங்களில்மேல் உள்ள ஐந்தையும் மெய்ப்பொருள்தானே நேரே செயற்படுத்துகின்றது. கீழ் உள்ள முப்பத்தொன்றினைப் பிறரைக்கொண்டு செயற்படுத்து கின்றது. 'தத்துவம்' எனப்படுவன முதற் காரணப் பொருளாய் ஊழி முடிவுகாறும் அழியாது நிற்பன ஆதல் பற்றி, "தான் அந்தம் இல்லாத தத்துமானவை' என்றார். "தான்' என்றது பன்மையொருமை மயக்கம். 'தத்துவமானவை அண்டமாய், எண்மடங்கு ஆம்' என்க. 'எண் மடங்கு' என்பது மிகுதியைக் குறிப்பதொரு வழக்கச்சொல். அண்டத்து - அண்டமாம் நிலையில். 'அண்டங்கள் குறைந்த எண்ணிக்கையையும், தத்துவங்கள் அவற்றினும் மிக்க எண்ணிக்கை யையும் உடையன' என உரைப்பார்க்கு, 'அவ்வாறான மேற்கோள் எங்குளது' எனத் தெரியவில்லை.

*10.11.*பதினொன்றாந்தானமும் 'அவத்தை' எனக்காணல்

அஞ்சில் அமுதம் ஓர் ஏழின்கண் ஆனந்தம்
முஞ்சில் ஓங்காரம்ஓர் ஒன்பான் பதினொன்றில்
வஞ்சக மேநின்று வைத்திடில் காயம் ஆம்
சிஞ்சுகச் செவ்வாய்க் கிளிமொழி கேளே. *#2259*

கெடுதல் இல்லாத ஓங்காரத்தின் கலைகள் பனி -ரண்டில் 'அ, உ, ம, விந்து' என்னும் நான்கிற்கு அப்பால் ஐந்தாவதாய் உள்ள அர்த்த சந்திர கலையை அடைந்தால் ஓர் அமுததாரை ஒழுகும் (அஃது உடல் எங்கும் உள்ள நாடிகளில் பாய்ந்து உடலை உறுதிப் படுத்தும். இந்த இடம் புருவநடுவிற்குச் சற்றுமேல், 'நெற்றி நடு' என்னலாம்) பின்பு நிரோதினியைத் தாண்டி ஏழாவதாய் உள்ள நாத கலையை அடைந்தால் அவ்விடத்து ஓர் ஆனந்தம் தோன்றும் (அந்த ஆனந்தம் சிறையில் உள்ளவனுக்கு, 'விடுதலை தோன்றி விட்டது' என்பது தெரிந்தவுடன் உண்டாகின்ற ஆனந்தம் போல்வதேயாகும். இந்த இடம் பிரமரந்திரத்திற்குப் பின்) அதனைக் கடந்து நாதாந் தத்தைத்தாண்டி, ஒன்பதாவதாய் உள்ள சத்திகலையிலும் அதனைக் கடந்து வியாபினி கலையைத் தாண்டிப் பதினொன்றாவதாய் உள்ள சமனா கலையிலும் சென்று உள்ளத்தை அசையாதிருக்கச் செய்தால், அத்தகையோர் இவ்வுலகத்திலே இருப்பினும் உமைகேள்வனாகிய சிவன், 'ஊனே, ஊனின் உள்ளமே, உள்ளத்தின் உள்ளே நின்ற கருவே' *3* என அருளிச்செய்தபடி அவர்கள் உடம்பிற்குள்ளே இனிது வெளிப்பட்டு நின்று, 'வாக்கிறந்த அமுதம் மயிர்க்கால்தோறும் - தேக்கிடச் செய்து'*8* (அஃதாவது பேரானந்தத்தை விளைத்து) நிற்பான்.

விளக்கவுரை

'மூஞ்சில் ஓங்காரம்' என்பதை முதலிற் கொள்க.
'ஓர் ஒன்பானில், பதினொன்றில் வைத்திடில், வஞ்ச அகமே நின்றும் கிளிமொழி கேள்காயம் ஆம்' எனக் கூட்டி முடிக்க.
வைத்தலுக்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது.
பிரபஞ்சம், 'வஞ்சம்' என வந்து, புணர்ச்சியில் வகரம் கெட்டபின் அகரம் தொகுத்தலாயிற்று. 'நின்றும்' என்னும் உம்மையும் தொகுக்கப் பட்டது.
கேள் - கேள்வன். ஈற்றடியை மகடூ முன்னிலை யாக்கினாரும் உளர். நாயனார் இந்நூலில் யாண்டும் மகடூ முன்னிலை வைக்கக் காண்கிலம்.
இதனால், பிராசாத யோகமும் கரணத்தோடு கூடிய மலாவத்தையேயன்றி, நின்மலாவத்தை ஆகாமை அதன் பயன்கள் சிலவற்றை உணர்த்து முகத்தால் கூறப்பட்டது.

மேல் மந்திரம் - *696* இன் உரையைக்கொண்டு இப் பொருளைத் தெளிக. மற்றும் பிராசாத நூல்களையும் காண்க.

புருட னுடனே பொருந்திய சித்தம்
அருவமொ டாறும் அதீதத் துரியம்
விரியும் சுழுத்தியின் மிக்குள்ள எட்டும்
அரிய பதினொன்றும் ஆம்அவ் வவத்தையே. *#2260*

[சகலத்தில் சுத்தமாகிய யோக வகைகளில் பிராசாத யோகத்தில் ஒருவகையான பராவத்தை நின்மலாவத்தைகள் சொல்லப் படுகின்றன. அவை மேற்கூறிய சுத்தத்தில் சுத்தாவத்தைகளாகிய பரா வத்தையும், இனிக்கூறப்படும் நின்மலாவத்தைகளும் அல்ல. அந்த அவத்தைகளில் தத்துவங்களின் நீக்கமும் சொல்லப்படுகின்றது. அவற்றுள் அமைந்த நின்மலாவத்தையை இம்மந்திரம் குறிப் பிடுகின்றது.]*

புருடதத்துவமும், அதற்குக்கீழேபொருந்தியுள்ள சித்தமும் சூக்குமமாகிய நாதவிந்து கலைகளிலே ஒடுங்கும். அவ்வொடுக் கங்கள் முறையே யோகத்தில் நின்மலாதீதமும், யோகத்தில் நின்மல துரியமும் ஆகும். சித்தத்திற்குக் கீழ் உள்ள புத்தி, அகங்காரம், மனம் ஆகிய மூன்று அந்தக்கரணங்களும், தன்மாத்திரைகள் ஐந்தும் ஆகிய எட்டும் யோகத்தில் நின்மல சுழுத்தி முதலியவற்றில் விரிந்துநிற்கும். இங்ஙனமாகவே ஞானவத்தைகளை நோக்க, மேற்கூறிய பதினொன்றாந் தானமாகிய சமனா கலையும் யோகாவத்தைத் தானமேயாம். *('ஏனெனில், அவ்விடத்தும் சுத்த மாயைத் தொடர்பு இருத்தலின்' என்பது கருத்து).*

விளக்கவுரை

ஆறும் - தணியும்; ஒடுங்கும் 'உடனே' என்பது எண்ணொடுவின் பொருட்டாய் நின்றது. 'அருவம்' என்றது, சூக்குமம் என்றபடி. அகார உகார மகாரங்களை நோக்க, விந்து நாதங்கள் சூக்குமம் ஆதலை உணர்க. 'அருவமொடு' என்றது, 'அருவத்தளவில்' என்றபடி. அதீதத்துரியம், உம்மைத் தொகை. 'துரியத்தில்' என ஏழாவது இறுதிக்கண் தொக்கது. 'மிக்குள்ள எட்டும் சுழுத்தியினின்றும் கீழ்க்கீழ் விரியும்' என்க. புத்திமட்டும் தோன்றுவது சுழுத்தியும் அதனுடன் அகங்காரமும் தோன்றுவது சொப்பனமும் அவற்றுடன் மனமும் தன்மாத்திரையும் தோன்றுவது சாக்கிரமும் ஆகும். இம்முறையில் நாதாந்தம் முடிய, 'துரியாதீதம்' எனச் சொல்லப் பட்டாலும் அதற்குமேலும் பரவிந்து பாநாதங்கள் இருத்தலால் பதி - னொன்றாந்தானமும் சகலத்தில் சுத்தாவத்தைத் தானமே - என்றபடி. இதனை, சிவமூல மந்திரங்களை நோக்கிப்பிரணவ கலைகள் பொதுவாக, 'சூக்கும பஞ்சாச்சரம்' எனச் சொல்லப்பட்டாலும் அகார

உகார மகாரங்கள் விந்து நாதங்களை நோக்கி, 'தூலம்' எனச் சொல்லப் படுதலைப்போலக் கொள்க. 'பதினொன்றும்' என்னும் உம்மை சிறப்பு. பிராசாத யோகத்தின் அவத்தைகளை எடுத்துக்காட்டியது.
அவற்றிடையேயுள்ள தாரதம்மியங்கள் போன்றனவே சுத்தத்திற் சுத்தாவத்தைகட்கும், சகலத்திற் சுத்தாவத்தைகட்கும் இடையேயுள்ள தாரதம்மியங்கள்' என்பது உணர்த்துவதற்கு அவத்தைத் தானத்தை 'அவத்தை' என உபசரித்தார்.
இதனால், முன் மந்திரத்தில் கூறப்பட்ட பொருள் காரணங்காட்டி வலியுறுத்தப்பட்டது.

காட்டும் பதினொன்றும் கைகலந் தால்உடல்
நாட்டி அழுத்திட நந்தியல் லால்இல்லை
ஆட்டம்செய் யாத அதுவிதி யேநினை
ஈட்டும் அதுதிடம் எண்ணலும் ஆமே. ***#2261***

முன் மந்திரத்தில் சொல்லப்பட்டபடி சிவாகமங்கள் கூறுகின்ற அந்தத்தானங்கள் பதினொன்றிலும் சென்று நின்றால் உடம்பு விரைவில் அழியாது நெடுங்காலத்திற்கு நிலைபெறும் வகையில் உறுதியடையும். அந்நிலையில் அவ்வுடலில் உள்ள உயிருக்குச் சிவனைத் தவிரத் துணையாவார் வேறு ஒருவரும் இலராவர். (அஃதாவது, 'அவ்வுண்மை அவ்வுயிருக்கு நன்கு விளங்கி நிற்கும்' என்பதாம்) அதனால் உனது மனம்போனபடி நீ போய் அலைந்துகொண்டிருந்த அலைவுகளையெல்லாம் விடுத்து அமைதியுற்றிருந்த அந்த அமைதியே வழியாகச் சிவன் தன் அடியார்களோடு கூட்டுதல் உறுதி. இந்த உறுதியும் உனக்கு அந்நிலையில் விளங்குவதாகும்.

விளக்கவுரை

கைகலத்தல், 'கலத்தல்' என்னும் பொருட்டாய ஒருசொல். நாட்டி அழுத்திட - நிலைப்படுத்தி உறுதிசெய்ய 'உறுதி செய்ய' என்ற அனுவாதத்தானே உறுசெய்தலும் பெறப்பட்டது. விதி - முறைமை.
இதனால், சகலத்திற் சுத்தம் மலாவத்தையேயாயினும் அது பயனுடைத்தாதல் கூறப்பட்டது.

10.12.கலவு செலவுகள்

கேவலந் தன்னில் கலவு சகலத்தின்
மேவும் செலவு விடாவிருள் நீக்கத்துப்
பாவும் தனைக்காண்டல் மூன்றும் படர்வற்ற
தீதறு சாக்கிரா தீதத்தில் சுத்தமே. ***#2262***

கேவலாவத்தைக்குப் பின்பு ஆன்மாச் சகலத்தை அடைதலே கலவு நிலையாகும். (கலத்தல்மலத்தோடேயாகையால், இக்கலப்பு

அசுத்தமேயாம். எனவே, கேவலத்திலிருந்த அசுத்தம் போய்விடவில்லையாம். முன்னை அசுத்தமே பின்னை அசுத்தத் திற்குக் காரணம் ஆகையால்) விடாது பற்றியுள்ள முதல் அசுத்தமாகிய இருள் நீங்கும் சமையத்தில் ஆன்மாச் சகல நிலையினின்றும் சிறிது சிறிதாக விலகி அப்பாற் செல்லுதலே செலவு நிலையாகும். (இது மலங்களினின்றும் நீங்கும் நிலையாகலின், 'நின்மலாவத்தை' எனப்படும்) இந்நிலையில் ஆன்மாத் தன்னைக் காணுதல், பின் திரு வருளைக் காணுதல், பின் திருவருளைக் காணுதல், பின் பராசத்தியைக் காணுதல் இவை மூன்றும் முறையே நிகழ்ந்து நீங்கினால் சாக்கிராதீதம் வாய்க்கும். அதன் பின்பே நின்மலாவத்தை முடிவுபெறும்.

விளக்கவுரை

தன்னைக் காணுதல் முதலிய மூன்றும் முறையே, 'சைதன்னிய தரிசனம், ஞான தரிசனம், பரை தரிசனம்' எனத் துகளறு போதத்தில்* கூறப்படுதல் காண்க. சாக்கிராதீதம், 'பரையில் அதீதம்' என்பதனோடு கூட்டி இரண்டாகவும், பரையில் அதீதத்தை யடுத்துச் சுத்தாவத்தையும் அந்நூலில்*l* கூறப்படுதலையும் காண்க. அந்நூலில் 'சுத்தாவத்தை' எனப்பட்டதும், இம்மந்திரத்தில் 'சுத்தம்' எனப் பட்டதும் நின்மலாவத்தையேயாம். 'மேவும், பாவும்' என்றாராயினும், 'கேவலந் தன்னில் சகலத்து மேவுதல் கலவு' எனவும், 'விடா இருள் நீக்கத்துப் பாவுதல் செலவு' எனவும் உரைத்தலே கருத்தென்க. பாவுதல் - பரவுதல்; முற்றும் பொருந்துதல்.

இதனால், சகலாவத்தை சுத்தாவத்தைகளின் இயல்பு ஒப்பிட்டு உணர்த்தப்பட்டன.

வெல்லும் அளவு விடுமின் வெகுளியைச்
செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளுடன் தூங்கினால்
கல்லும் பிளந்து கடுவெளி யாமே. ***#2263***

எந்தப் பொருள் மேலும் எழுகின்ற விருப்பத்தை வெல்லுங்கள்; வெறுப்பை ஒழியுங்கள்; உள்ளம் தூய்மையாகும். ஆனபின் அதனை இயன்ற அளவு திருவருளைப் பற்றியே இயங்கச் செய்யுங்கள். பின்பு அஃது அல்லும், பகலும் திருவருளையே சார்ந்து அமைதியுற்றிருக்கும். அப்பொழுது மலைக் குகையுள் அடைக்கப் பட்டவனுக்கு அந்தக் குகை வெடித்துப் பெரிய விடுதலை கிடைத்தது போன்ற ஒருநிலை உண்டாகும்.

விளக்கவுரை

'மலாவத்தைகள் நீங்கிப் பராவத்தை நிகழும்' என்றபடி. இதனானே

வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டதும் ஆயிற்று. இஃது ஒட்டணி.

அளவு - அளாவுதல்; கலத்தல். அது விரும்புதலைக் குறித்தது. வெகுளி, 'வெறுப்பு' என்னும் அளவாய் நின்றது. 'விருப்பம் நீக்குதற்கு அரியது' என்பதுபற்றி அதனை, 'வெல்லுமின்' என்றார். 'தூங்கினால்' என்றதனால், தூங்குதல் பெறப்பட்டது. 'வெல்லுதல், விடுதல், செலுத்துதல் எல்லாம் யோகத்தால் உளவாகும்' என்பதும், 'அவை உளவாகவே நின்மலாவத்தை பராவத்தைகளில் செல்லுதல் கூடும்' என்பதும் கருத்து.

இதனால், கலவு செலவுகளில் நிகழும் சுத்தாவத்தையின் இயல்பு கூறப்பட்டது.

*10.13.*நின்மலாவத்தை

ஊமைக் கிணற்றகத் துள்ளே உறைவதோர்
ஆமையின் உள்ளே அழுவைகள் ஐந்துள
வாய்மையி னுள்ளே வழுவா தொடுங்குமேல்
ஆமைமென் மேலும்ஓர் ஆயிரத் தாண்டே. *#2264*
[இம்மந்திரம் ஒட்டணி பெற்றது.]

ஊமைக் கிணறு - வாய் இல்லாத கிணறு. அஃதாவது, தோண்டப்படாமல் நிலத்தினுள்ளே கிடக்கின்ற நீர்நிலை. என்றது கேவல நிலையை. ஆமை, கேவலத்தில் கிடக்கும் ஆன்மா. அழுவை - அழுவம்; பள்ளம். பள்ளங்கள் ஐந்தாவன, கேவலம், சகலத்திற் கேவலம், சகலத்திற் சகலம், சகலத்தில் யோகம், சகலத்தில்ஞானம்' என்னும் காரண அவத்தைகள், அவற்றுள், 'வாய்மை' என்னும் பள்ளம் சகலத்தில் ஞானம். இதுவே நின்மலாவத்தை. இதனை அடைந்த ஆன்மா நித்தியமாம் தன்மையைப் பெறும்.

விளக்கவுரை

ஆன்மா எப்பொழுதும் நித்தியமேயாயினும் உடம்போடு கூடிப் பிறந்தும், இறந்தும் வருதலால் அநித்தியமாக எண்ணப்படுகின்றது. ஆகவே, 'மென்மேலும் ஓர் ஆயிரத்தாண்டு' என்றது. 'என்றும் இறவாமையை உடையதாம்' எனப்பொருள் தந்து, நித்தியம் ஆதலை உணர்த்திற்று.

இதனால், 'நின்மலாவத்தை பராவத்தைக்கு வாயிலாய் நிற்கும்' என அதனது சிறப்புக் கூறப்பட்டது.

கால் அங்கி நீர் பூக் கலந்தஆ காயமே
மால் அங்கி ஈசன் பிரமன் சதாசிவன்
மேல் அஞ்சும் ஓடி விரவவல் லார்கட்குக்

காலனும் இல்லை கருத்தில்லை தானே. *#2265*
'நிலம், நீர், தீ, காற்று, வானம்' என்னும் ஐம்பூதங் களும் முறையே பிரமன், மால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும் ஐவர்களாலேதான் தொழிற்படுகின்றன. ஆகவே அந்த ஐவரையும் ஆதார யோகத்தால் 'சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை' என்னும் ஆதாரங்களில் முறையாகக் கண்டு, பின்நிராதாரத்தை அடைய வல்லவர்கட்கு இறப்பும் இல்லை. வாழ்வில் உணர்வும் இல்லையாம்.

விளக்கவுரை

'எனவே, மேல் - வெல்லும் அளவு என்பது,* என்பது முதலாகக் கூறிய சாதனங்கள் ஆதாரயோகத்தாலே எளிதில் கைவரும்' - என்பதாம். 'நிலம் முதலிய ஐம்பூதங்கட்கும் பிரமன் முதலிய ஐவரும் அதிதேவர்கள்' என்பதை உண்மை விளக்கம், சிவஞான சித்திச் சுபக்கம் ஆகியவற்றால் அறிக. செய்யுள் நோக்கிப் பூதங்களையும், அதிதேவர்களையும் முறை பிறழவைத்தார். அங்கிக்கு அதிதேவ னாகிய உருத்திரனை 'அங்கி' என்றே கூறினார். மேல் அஞ்சு - மூலா தாரத்திற்கு மேலே உள்ள ஐந்து ஆதாரங்கள் ஓடி - முறையாக ஏறி விரவுதலுக்குச் செயப்படுபொருள் வருவிக்க.
இதனால், 'ஆதார யோகம் ஆயுளை வளர்த்து, உலகியல் உணர்வை நீக்கும் முகத்தால் நின்மலாவத்தைக்கு வாயிலாம்' என்பது கூறப்பட்டது.

ஆன்மாவே தன்மைந்த னாயினன் என்பது
தான்மா மறைஅறை தன்மை அறிகிலர்
ஆன்மாவே மைந்தன் அரனுக்(கு) இலனென்றால்
ஆன்மாவும் இல்லையால் ஐயைந்தும் இல்லையே. *#2266*

'உயிர்கள் அனைத்திற்கும் சிவன் தந்தை' என்பதும், 'சித்தி தாய்' என்பதும் வேதாகமங்களில் எங்கும் முழங்கும் முழக்க மாதலை அறியாது சிலர் ஆன்மாவை, 'தாயும் இலி; தந்தையிலி' என்கின்றார்கள். அஃது உண்மையாயின், சடப்பொருள்களாகிய தத்துவங்களும், அவற்றைக்கொண்டு ஆன்மாக்கள் உலகில் பிறந்து வினைகளை நுகர்ந்தும் ஈட்டியும், பின்பு இறந்தும் செல்லும்நிலை இல்லையாகவேண்டும்.

விளக்கவுரை

உயிர்களுக்குச் சிவனும், சத்தியும் தந்தையும், தாயும் ஆதலை, 'ஆலவாயில் அப்பனே' எனவும் 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை'l எனவும், மற்றும் பல இடங்களிலும் இவ்வாறு வருவனவற்றால் அறிக. சிவனுக்கும், சத்திக்கும் வேறு பாடின்மை

பற்றிச் சிவனையே. 'தொடர்ந்து நின்றேன் - தாயானை'3 'அம்மையே, அப்பா'8 என்றாற்போலவும் பல இடங்களில் அருளிச் செய்வர். எவ்வாறாயினும், 'பரம்பொருட்கு ஆன்மா மகன்' என்பதில் ஐயமில்லை. 'அறிகிலர்' என்பது, அறியாமையால் அதனை மறுத்துக் கூறுதலாகிய காரியத்தை உணர்த்திற்று. ஆன்மா அறிவுடை உலகமாயும், தத்துவ தாத்துவிகங்கள் அறிவிலா உலகமும் ஆதலின், 'ஆன்மாத் தோற்றம் உடையது ஆகாவிடின் உலகமே இல்லை' என்பார். 'ஆன்மாவும் இல்லையால்; ஐயைந்தும் இல்லையே' என்றார்.
வித்தியாதத்துவங்களைப் புருடதத்துவத்தில் அடக்கி 'ஐயைந்து' என்றார்.
இதனால், 'ஆன்மா யோக ஞானங்களால் உலகினின்றும் நீங்குதல் வேண்டும்' என்பது வலியுறுத்தப்பட்டது.

உதயம் மழுங்கல் ஒடுங்கல்இம் மூன்றின்
கதிசாக் கிரம்கன வாதி சுழுத்தி
பதிதரும் சேதனன் பற்றாத் துரியத்(து)
அதிசுப னாய்அனந் தானந்தி யாகுமே. **#2267**

அறிவு உதயசூரியன் போலத் தோன்றி விளங் குதலும், அவ்வாறின்றி மேகங்களால் மறைக்கப்பட்ட சூரியனைப் போல மழுங்கி நிற்றலும், அத்தமித்த சூரியன்போல ஒடுங்கி யிருத்தலும் ஆகிய இவையே பெத்தத்தில் நிகழும் சாக்கிர சொப்பன துரியங்களாகும். ஆகவே, 'அவற்றின்பின் நிகழும் துரியமும் அறிவுசெயற்படாது அடங்கிக் கிடக்கும் நிலை' என்பது சொல்ல வேண்டா. இந்தப் பெத்தநிலை அவத்தைகளை விடுத்துச் சுத்தநிலை அவத்தையை ஒருவன் எய்துவானாயின்' அவன் மிக நன்மையை அடைந்தவனாய், எல்லையில்லாத ஆனந்தத்தையுடையவனாவான்.

விளக்கவுரை

'உதயம்' எனக் கூறிய சொற்குறிப்பால் இவ்வாறு பொருள் கொள்ளக்கிடந்தது. 'மூன்றின்' என்பதில் 'இன்' வேண்டா வழிச் சாரியை கதி - நிலை. பதிதல் - அழுந்துதல். 'பற்றுக்களில் பதிதரும்' என்பது, பின்பு 'பற்றாத் துரியம்' என்றதனால் விளங்கும். பற்றாத் துரியமும் யோக துரியமும், ஞான துரியமுமாம். 'யோகா வத்தையை அடைந்தவன் ஞானாவத்தையையும், பின்பு பரா வத்தையையும் அடைதல் உறுதி' என்பது பற்றி 'அதிசுபனாய் அனந்தானந்தியாகும்' என்றார். சுபன் - நன்மையை அடைந்தவன். அனந்தம் - முடிவில்லாதது. அனந்த + ஆனந்தி = அனந்தானந்தி. இது வடமொழிப்புணர்ச்சி.
இதனால், மலாவத்தைகள் துன்பநிலையும், நின்மலாவத்தை இன்ப நிலையும் ஆதலைக் கூறும் முகத்தால், நின்மலாவத்தின்

இன்றியமையாமை கூறப்பட்டது.

எல்லாம்தன் னுட்புக யாவுளும் தானாகி
நல்லாம் துரியம் புரிந்தக்கால் நல்லுயிர்
பொல்லாத ஆறாறுட் போகாது போதமாய்ச்
செல்லாச் சிவகதி சென்றெய்து மன்றே. *#2268*

சட உலகங்கள் யாவும் தனக்குள் அடங்கியிருக்க, சிவஞானத்தால் எல்லாப் பொருளையும் ஒருங்கேயறியும் தன்மை யுடையவன் ஆகின்ற அத்தகைய நல்ல துரியத்திலே தங்கும் நிலையை ஓருயிர் அடைந்துவிட்டால் அது நல்ல உயிராகும், பின்பு அது பிறவி யாகிய தீமையை விளைவிக்கின்ற முப்பத்தாறு தத்துவங்களில் செல்லாது. முன்பெல்லாம் சடங்களாகிய அவற்றிற்சென்று அவையே யாய் இருந்ததுபோல் இல்லாமல் அவற்றின் நீங்கி அறிவுப் பொருளாய், செல்லாது செல்வதாகிய சிவகதியை அடையும்.

விளக்கவுரை

பெத்த காலத்தில் ஆன்மாப் பாசங்களின் வியாப்பி யமாய் இருந்து, முத்திகாலத்தில் அவைகளைக் கீழ்ப்படுத்தி நிற்றல் பற்றி, 'எல்லாம் தன்னுட் புக' என்றும், பெத்த காலத்தில் ஆன்மாத் தத்துவங் -களைப் பற்றி ஏகதேசமாய் இருந்து, முத்தி காலத்தில் சிவ ஞானத்தைப் பற்றி வியாபகமாய் நிற்றல் பற்றி, 'யாவுளும் தானாய்' என்றும் கூறினார். 'நன்று' என்பது இறுதிநிலை கெட்டு, 'நல்' என முதனிலை யளவாய் நின்றது. 'நல்லாந் துரியம், நல்லுயிர்' என்பவை, 'சுத்த துரியம், சுத்தான்மா' என்பதாம். 'புரிந்தக்கால்' என்பது, புரிதலின் அருமை தோற்றி நின்றது. 'ஆகிப்புரிந்தக்கால்' என்றாரேனும், 'புரிந்து ஆகியக்கால்' என்பது கருத்தென்க. செல்லாது செல்லுதலாவது, 'முன்பு வேறாய் இருந்து, பின்பு சென்று அடைதல்' என்பதின்றி, முன்பே உள்ளதனை உணர்தல் 'அன்றே' என்றது தேற்றம்.
இதனால், நின்மலாவத்தையின் இயல்பும், பயனும் கூறப் பட்டன.

காய்ந்த இரும்பு கனலை அகன்றாலும்
வாய்ந்த கனலென வாதனை நின்றாற்போல்
ஏய்ந்த கரணம் இறந்த துரியத்தும்
தோய்ந்த கருமத் துரிசக லாதே. *#2269*

நெருப்பில் காய்ந்து நெருப்பாகவே இருந்த இரும்பு நெருப்பை விட்டு நீங்கினால் நெருப்பாய் இராமல் இரும்பாகவே யிருக்கும். இருப்பின் நெருப்பின் சூடு விரைவில் ஆறிவிடாது; இருக்கவே செய்யும். அதுபோல நின்மல சாக்கிர சொப்பன சுழுத்தி -களோடு தத்துவங்களின்றும் ஆன்மா நீங்கியபோதிலும் துரியத்திலும் அவற்றில் முன்பு மூழ்கியிருந்த வாசனை இருக்கவே செய்யும்.

விளக்கவுரை

'அதனால் நின்மலதுரியாதீதத்தை அடைதல் வேண்டும்' என்பது குறிப்பெச்சம். கருமம் - தொழில். துரிசு - குற்றம். என்றது அதன் வாசனையை. தசகாரியங்களுள் தத்துவ ரூபம். தத்துவதரிசனம் இவ்விரண்டும் நின்மலசாக்கிரம். ஆன்ம ரூபம் தத்துவ தரிசனத்தில் உடன் நிகழும். ஆன்ம தரிசனம் நின்மல சொப்பனம். இதில் தத்துவ சுத்தி அடங்கும். சிவரூபம் உடன் நிகழும். ஆன்ம சுத்தி நின்மல சுழுத்தி, இதில் தரிசனம் நிகழ, ஆன்ம சுத்தி ஓரளவே நிகழும். சிவயோகம் நின்மல துரியம். இதில் ஆன்மசுத்தி முற்றுப்பெறும். எனினும் பண்டை வாசனை சிறிது இருக்கும். சிவபோகமே நின்மல துரியாதீதம். இதுவே ஆன்ம லாபம். இங்கு ஆன்மாப் பண்டை வாசனையும் இன்றிச் சிவமேயாய் நிற்கும். ஆகவே இதனை அடைதல் இன்றியமையாததாயிற்று. வாதனை - வாசனை.
இதனால், நின்மல துரிய துரியாதீதங்களின் இயல்புகள் கூறப்பட்டன.

ஆன மறையாதி யாம்உரு நந்திவந்து
தேனை யருள்செய் தெரிசனா வத்தையில்
ஆன வகையை விடும் அடைந் தாய்விட
ஆன மலாதீதம் அப்பரந் தானே. *#2270*

வேதம் முதலாகிய சொல்லுலகங்களையும், மற்றும் பொருள் உலகங்களையும் தனது வடிவமாகக் கொண்டுள்ள சிவன் புலப்பட்டு நின்று, தனது திருவருளாகிய தேனை வழங்குகின்ற நின்மலாவத்தையில் கடக்க வேண்டிய சாக்கிரம் முதல் நான்கையும் கடந்து முடிந்தபின் துரியாதீதமே பாரவத்தையாய் விளங்கும்.

விளக்கவுரை

என்றது, 'விரைவில் பராவத்தை கைகூடும்' என்றதாம். தெரிசனாவத்தை, பொருள்களின் இயல்பை உள்ளவாறுணரும் நிலை. அது ஞானாவத்தையாதல் அறிக. 'விடு' என்பது 'வீடு' எனத்திரியாது செய்யுள் நோக்கி, 'விடு' என்றே, நின்று, விடுதலாகிய தொழிலையே குறித்தது. உம்மை, சிறப்பும்மை. 'விடுத்திட வேண்டிய வகை' என்றதனால் அவைமுதல் நான்கு நிலைகளேயாயின. 'விட்டது' என்பதே துணிவுப் பொருளை உணர்த்துமாயினும், 'ஆய்விட்டது' என்றல் உலக வழக்கு. 'முடிந்துவிட்டது' என்பது அதன் பொருளாகும். அது பற்றி, 'அடைந்துவிட' என்பதை, 'அடைந்தாய்விட' என்றார். 'நின்மலம்' என்பதை 'மலம்' என்றது முதற்குறை. 'நிருவிகற்பம்' என்பது 'விகற்பம்' என்றதும், 'சன்மார்க்கம்' என்பது 'மார்க்கம்' எனவும் வந்த செய்யுட்களைக் காண்க.*l*

இதனால், 'நின்மல துரியாதீதமேபராவத்தைக்கு நேர்வாயில்' என்பது கூறப்பட்டது.

சுத்த அதீதம் சகலத்தில் தோய்வுறில்
அத்தன் அருள்நீங்கா(து) ஆங்கணில்தான் ஆகச்
சித்த சுகாவத்தை தீண்டாச் சமாதிசெய்
அத்தனொ டொன்றற் கருள்முத லாகுமே. *#2271*

மத்தியாலவத்தையிற்றானே நின்மல துரியாதீத நிலை (இதுவே 'சாக்கிரத்தில் அதீதம்' எனப்படுவது) தோன்ற, ஆன்மா அதிலே நிலைத்திருக்குமாயின், சிவனது திருவருள் அதனை விட்டு நீங்காது. அந்நிலையில் நீ பராவத்தையை அடைவதற்குச் சித்த சலனத்தால் பற்றக்கூடிய உலகியல் நிலை வந்து சிறிதும் தீண்டாதபடி சமாதி நிலையில் நில். அப்பொழுது முன் சொன்ன திருவருள் உன்னைச் சிவனோடு ஒன்றுபடுத்தும்.

விளக்கவுரை

'ஆங்கண்' என்பது பெயரால் நின்று உருபேற்றது. 'தான்' என்றது சிவனை. 'ஒன்ற முதலாகும்' என்றாராயினும், 'முதலாய் நின்று ஒன்றுவிக்கும்' என்பதே கருத்து.
இதனால், நின்மல துரியாதீதத்தில் சிவன் அருளுருவாய் நின்று, பராவத்தையில் ஆனந்த உருவாதல் கூறப்பட்டது.

வேறுசெய் தான்இரு பாதியின் மெய்த்தொகை
வேறுசெய் தான்என்னை எங்கணும் விட்டுய்த்தான்
வேறுசெய் யாஅருட் கேவலத் தேவிட்டு
வேறுசெய் யாஅத்தன் மேவிநின் றானே. *#2272*

எவ்வுயிரினின்றும் தன்னை வேறுபடுத்திக் கொள்ளாது, அதனோடு ஒன்றாகியே, அதற்கு அப்பனாகியும் இருக்கின்ற சிவன். எவ்வுலகிலும் உள்ள உடற்கூட்டத்தை 'ஆண், பெண்' என இருசமபாதிகளாகப் பிரித்து வைத்துள்ளான். என்னையும் தன்னினின்றும் வேறுபடுத்தி, அத்தகையனவாகிய உடம்புகள் உள்ள அனைத்திடங்களிலும் செல்லவிடுத்து, அந்த உடம்புகளுக்குள்ளே புகுத்தினான். பின்பு தன்னினின்றும் என்னை வேறுபடுத்தாது ஒன்றாக்கிக் கொள்கின்ற அருட்கேவலத்திலே செலுத்தி, என்னோடு பொருந்தி நிற்கின்றான்.

விளக்கவுரை

'வேறுசெய்யா அத்தன்' என்பதை முதலிற் கொள்க. இரண்டாம் அடியில் 'வேறு செய்தான்' என்பது முற்றெச்சம். 'என்னையும்' என்னும் இறந்தது தழுவிய எச்ச உம்மை தொகுத்த லாயிற்று. அருட்கேவலமாவது, ஆன்ம தரிசனத்தில் தத்துவ சுத்தி நிகழ்ந்த பின்னர் ஆன்ம சுத்திக்கு

இடைப்பட்ட நிலை. இதுவே துகளறு போதத்தில் * ஆம் அவதரமான கேவலம்' எனச் சொல்லப்பட்டது. இதைச் சிறப்பாகக் குறிப்பிடும் முகத்தால் நின்மலாவத்தை முழுதும் குறிக்கப்பட்டது. 'வேறுசெய்யா அருட்கேவலம்' என்றதனால், 'நின்மலாவத்தையே பதியைப் பசு பற்றும் நிலை' என்பது விளங்கும். இது சகலத்தில் சுத்தத்து ஞானாவத்தை. இதனால், 'வேறுசெய்தான் என்னை எங்கணும் விட்டுய்த்தான்' என்றது, சகலத்தில் கேவலம். சகலத்தில் சகலம், சகலத்தில் சுத்தமாகிய யோகம் - என்னும் இவைகளைக் குறித்ததாயிற்று.
'உடம்புகளை ஆண், பெண்' - என இருவகையாய்ப் பிரித்து வைத்ததைக் கூறியது, 'அவத்தைகள் யாவும் இருபாற்கும் பொதுவே' என்பது உணர்த்துதற்கு, 'மெய்த்தொகை வேறுசெய்தான்' என்றே கூறினமையால், உயிரில் - ஆண், பெண் - என்னும் வேறுபாடில்லை என்பதும், 'உயிராகிய பறவைக்குக் கூடாய் உள்ளனவே உடம்புகள்' என்பதும், 'அதனால், வினைக்கீடாக ஆண் உடம்பில் புகுந்திருந்த உயிர் அதனை விட்டுப் பறந்துபோய்ப் பெண் உடம்பில் புகுதலும், பெண் உடம்பில் இருந்த உயிர் அதனை விட்டுப் பறந்துபோய் ஆண் உடம்பில் புகுதலும் கூடும்' என்பது விளங்கும். விளங்கவே, இதனை உணராத மதங்கள், ஆணுக்கன்றிப் பெண்ணுக்கு வீடுபேறில்லை என்றும், 'ஆணைவிடப் பெண்ணுக்கு இறைதொடர்பு எளிதும் மிக்கதுமாம்' என்றும் கூறுவன எல்லாம் போலியாதல் பெறப்படும். இம்மந்திரம் சொற்பொருட்வருநிலையணி பெற்றது.
இதனால், 'பதியை அடைதற்குப் பசு - ஆண், பெண் - என்னும் வேறுபாடின்றி நின்மலாவத்தையை அடையமுயலல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

கறங்கோலை கொள்ளியின் வட்டம் கடலில்
நிறஞ்சேர் திரைதயிர் மத்தின் மலத்தே
அறம்காண் சுவர்க்கம் நரகம் புவிசேர்ந்*(து)*
இறங்கா உயிர்அரு ளால்இவை நீங்குமே. *#2273*

உயிர்கள் காற்றாடியில் உள்ள ஓலைகளைப் போலவும் கொள்ளியைச் சுழற்றுங்காலத்தில் தோன்றுகின்ற வட்ட வடிவுபோலவும், கடலில் அலைகள் போலவும், தயிரைக்கடையும் மத்தைப் போலவும் 'மேல், கீழ், நடு' என்னும் மூன்றுலகங்களிலும் விரையச் சென்று மீண்டு மீண்டு, ஆழ்குழிப்பட்டுத்துன்புற்று, சிவன் அருள்புரிந்தபொழுது அவ்வருளால் ஆழ்குழிகளாகிய இவற்றி னின்றும் மீண்டு கரையேறி, அவனை அடைந்து இன்புறும்.

விளக்கவுரை

உவமைகள் ஒரு நிலையில் நில்லாது பல நிலையில் மாறி மாறி விரையச்

சுழலுதலை விளக்க வந்தன. இச்சுழற்சிக்குக் காரணம் பாசங்களே.

'மலம் மாயை, கன்மம், மாயேயம், திரோதாயி மன்னிச்
சலமாரும் பிறப்பி றப்பில் தங்கி, இத் தரை, கீழ், மேலும்
நிலையாத கொள்ளி வட்டம், கறங்கென நிமிடத் தின்கன்
அலமாரும் இறைவ னாணை யால்உயிர் நடக்கு மன்றே'8

என்னும் சிவஞான சித்தியினைக் காண்க.

'மலங்கள் ஐந்தால் சுழல்வதன் தயிரில் பொருமத்துறவே'l

என்பது திருவாசகம்.

'ததியுறு மத்தின் சுழலும் என் ஆவி'3

என்றார் பிறரும், அறம் காண் - அறம் காரணமாகச் சென்று காண்கின்ற - கவர்க்கத்தை இத்தகையதாகக் கூறவே, நரகம் மறம் காரணாகச் சென்று காண்பதாயிற்று. புவி, அறம், மறம் இரண்டாலும் சென்று காண்பது. இறங்கா - வீழ்ந்து 'இறங்கா நீங்கும் என இயையும், எச்சம் எண்ணுப் பொருளில் வந்தது. இறங்குதல் சொல்லப்பட்டமையானே சுவர்க்க நரக புவிகள் ஆழ்குழியாயின. 'அக்குழிகளில் வீழ்வன எல்லாம் மலா வத்தைகள்' என்பது மேற்காட்டிய மேற்கோள்களாலே விளங்கும். ஆகவே, நின்மலாவத்தையே உயிரின் கரையேற்றம் ஆகின்றது. இதனால், சகலமாகிய மலாவத்தை பிறவி நிலையாய்ப் பெருந்துன்பம் விளைக்கும் இழிவைக் கூறுமுகத்தால், நின்மாலவத்தையினது உயர்வு உணர்த்தப்பட்டது.

தானே சிவமான தன்மை தலைப்பட
ஆன மலமும்அப் பாசபே தங்களும்
ஆன குணமும்ப ரான்மா உபாதியும்
பானுவின் முன்மதி போல்பட ராவே. ***#2274***

'ஆன்மாவே சிவம்' என்று சொல்லத்தக்க நிலையை ஆன்மா அடைந்தபின், அநாதியே பொருந்திய சகசமலமாகிய ஆணவமும், அதனை முன்னிட்டு வந்த, 'மாயை' கன்மம், மாயேயம், திரோதாயி, என்னும் பாசவேறுபாடுகளும் அவற்றிற்கு உரியவாய் ஆன்மாவினிடத்து விளங்கிய இழிகுணங் களும், இவை நீங்கினாலும் நீங்கப் பெற்ற சுத்தான்மா விடத்திலும் பின்னும் நிற்கின்ற இவற்றின் வாசனைகளும் சூரியன்முன் சந்திரன் போல அடங்கி ஒடுங்கிவிடும். *(வாதிக்கமாட்டா' என்றபடி).*

விளக்கவுரை

மலங்களின் இழிகுணங்களை இருபாஇருபஃது நான்காம் செய்யுளால் அறிக. ஆன்மாச் சிவமாம் தன்மையை அடைதல் நின்மலாவத்தையில் ஆதலின், 'அதனை அடைக' என்பார், இவ்வாறு அதன் பயனை விரித்தார். இதனானே 'நின்மலாவத்தை' என்னும் பெயர்க்காரணமும்

விளங்கிற்று.
இதனால், நின்மலாவத்தை அதன்பெயருக்கேற்ற பயனை உடைத்தாதல் கூறப்பட்டது.

நெருப்புண்டு நீருண்டு வாயுவும் உண்டங்*(கு)*
அருக்கனும் சோமனும் அங்கே அமரும்
திருத்தக்க மாலும் திசைமுகன் றானும்
உருத்திர சோதியும் உள்ளத் துளாரே. ***#2275***
[இதன்பொருள் வெளிப்படை]

விளக்கவுரை

'உள்ளம்', ஏற்புழிக்கோடலால், 'யோகியர் உள்ளம்' என்க. ஏனையோர்க்கு அப்பாவனையில்லாமையறிக. 'நினைப்பவர் மனம் கோயிலாக்கொண்டவன்* என்றாற்போல்வனவும் இக்கருத்தே பற்றி வரும் என்க. செய்யுளாகலின் உள்ளத்தைச் சுட்டும் 'அங்கு' என்பது முன்னே வந்தது.
'தத்துவ தாத்துவிகங்களும், அவற்றைச் செலுத்தும் கடவுளரும் யோகபாவனையால் கடக்கத்தக்கவர்கள்' என்பதை உணர்த்தும் முகத்தால் யோகத்தை விதித்தவாறு.
இதனால், நின்மலாவத்தைக்கு உரிய வாயிலின் சிறப்புக் கூறப்பட்டது.

ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவென்னும்
ஞானந் திரியில் கொளுவி அதனுட்புக்*(கு)*
ஊனை இருளற நோக்கும் ஒருவற்கு
வானகம் ஏற வழிஎளி தாகுமே. ***#2276***
(இதன் பொருளும் வெளிப்படை)

விளக்கவுரை

அறிவு என்னும் ஞானம் - அறிவுகளில் எல்லாம் மேலானமை பற்றி, 'அறிவு' என்றே சொல்லப்படுகின்ற மெய்யறிவு. நாயனாரது நோக்கில் அது சிவஞானமே. 'திரி' என்றது உயிர் அறிவை. 'உயிர் எனும் திரி மயக்கி' என்பதிலும் 'உயிர்' என்பது அப்பொருட்டு. ஞானத்தை - தீ - என்னாதது ஏகதேச உருவகம். உயிரை, 'திரி' என்றே கூறியது சிறப்புருவகம். 'அதனுட்புக்கு ஊனை நோக்கும்' என்றதை, 'ஊனுட்புக்கு அதனை நோக்கும்' எனக் கொள்க. இருளற நோக்கியவழி முன் புலப்படாதிருந்தவை புலப் படுதல் போல, ஊனை இருளற நீக்கினால் முன் மந்திரத்திற் கூறியன எல்லாம் விளங்கும் ஆகலின், 'வானகம் ஏற வழி எளிதாமே' என்றார். 'வானகம்' என்றது, யோகத்திற்கு அப்பாற்பட்ட நின்மலா வத்தையை,
'உடம்பெனும் மனைய கத்துள் உள்ளமே தகளி யாக,

மடம்படும் உணர்நெய் யட்டி உயிரெனுந் திரிம யக்கி, இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில், கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே'

-திருமுறை - *4.75.4.*

என்று அருளினமையை நோக்குக. மடம்படும் உணர் - பசு போதம். இதனால், 'மேல் குறிப்பால் உணர்த்திய யோகம் சிவயோகம் ஆதல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

ஆடிய காலின் அசைக்கின்ற வாயுவும்
தாடித் தெழுந்த தமருக ஓசையும்
பாடி யெழுகின்ற வேதா கமங்களும்
நாடியி னுள்ளாக நான்கண்ட வாறே. ***#2277***

நான் எனது விருப்பப்படியேவிட்டும், வாங்கியும் இயக்குகின்ற பிராணவாயுவையும், மிகுத்தெழுக்கின்றதமருக ஓசையையும், வல்லுநர்கள் பாடுதலால் எழுகின்ற வேதாகம ஒலிகளையும், நான் கண்ட முறை, சுழுமுனா நாடியினுள்ளாக, நடனத்தில் தூக்கிய காலின் கீழாம்.

விளக்கவுரை

'யோகத்திலே ஞானத்திற்குரிய எல்லாவற்றையும் சிவனது நடனத்தின் வழியே பெறலாம்' என்றபடி. 'தடித்து' என்பது செய்யுள் நோக்கி நீட்டல் பெற்றது.

இதனால், 'சிவயோகமே ஞானத்திற்கு வாயில்' என்பது உணர்த்தப்பட்டது.

முன்னை யறிவினில் செய்த முதுதவம்
பின்னை அறிவினைப் பெற்றால் அறியலாம்
தன்னை அறிவ(து) அறிவாம் அஃதன்றிப்
பின்னை அறிவது பேயறி வாகுமே. ***#2278***

முதலில் நிகழும் அறிவு பெரிய தவ அறிவாயும், பின்னர் நிகழும் அறிவு அந்தத்தவத்தால் வரும் மெய்யறிவாயும் நிகழ்தல் வேண்டும். பின்னை அறிவு மெய்யறிவாய் நிகழ்ந்தவழியே முன்னை அறிவு தவ அறிவாய் நிகழ்ந்தமை அறியப்படும், இல்லையேல், அது வெற்றறிவாக அறியப்படும். முதல் அறிவால் நிகழ்ந்த தவத்தால் பெறத்தக்க அறிவாவது, தன்னை உள்ளவாறு அறியும் அறிவே தன்னை உள்ளவாறு அறியாமல் பிறவற்றை அறியும் அறிவுகள் எல்லாம் மருள் அறிவுகளேயாம்.

விளக்கவுரை

முதுதவம் - பெருந்தவம். 'அறிவினில்' என்ற 'இன்' ஏதுப் பொருளில்வந்த

ஐந்தாம் உருபு. பின்னைப் பெற்றால்' என இயையும். 'அறிவினைப் பெற்றால்' என்பதில் 'அறிவு' எனப் பட்டது. பின் இரண்டடிகளால் உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் 'இன்னது' என விளக்கப்பட்டது. ஆன்மாத் தன்னை உள்ளவாறு அறிதலாவது, உலக வாழ்க்கையானே தனக்குச் சுதந்திரம் இன்மையை உணரும் முகத்தால், தனக்கு ஒரு தலைவன் உளன் ஆதலை அனுமானத்தால் உணர்தலும், பின்னர்த் தனது தவத்திற்கு ஏற்ப நிகழும் நிகழ்ச்சிகளால் அனுபவமாக உணர்தலுமாம். அனுமானத்தால் உணருமாற்றை ஔவையார்,

'ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட் டொன்றாகும்;
அன்றி அதுவரினும் வந்தெய்தும்; - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்;
எனை ஆளும் ஈசன் செயல்' *3*

என விளக்கினார். 'பின்னை' என்பது 'மற்று' என்னும் பொருளைத் தந்தது. பேயினது அறிவு நெறிப்படா அறிவு அஃது உவம ஆகு பெயராய் அதுபோன்ற அறிவைக் குறித்தது.

'பல பிறப்புக்களில் செய்த தவமுதிர்ச்சியால் பின்னர்ச் சில பிறப்புக்களில் ஞானம் நிகழும்' என்பதும், 'அந்த ஞானமாவது இது' என்பதும் உணர்த்தும் முகத்தால், 'ஞான நிகழ்ச்சியே நின்மலாவத்தை' என்பது இதனாற் கூறப்பட்டது. 'இவ்வான்மாக்களுக்கு முற்செய்தவத் தான் ஞானம் நிகழும்'*8* எனவும், 'தம்மை உணர்ந்து, தமை உடைய தன்னுணர்வார் எம்மையுடைமை' எனவும் மெய்கண்ட தேவரும் கூறினார்.

செயலற் றிருக்கச் சிவானந்த மாகும்
செயலற் றிருப்பார் சிவயோகம் தேடார்
செயலற் றிருப்பார் செகத்தோடுங் கூடார்
செயலற் றிருப்பார்க்கே செய்திஉண் டாகுமே. ***#2279***

நின்மல துரியத்தை அடைந்தவர்கட்கே, அதன் பின்னர் ஆனந்த நிலையாகிய அதீத நிலை வாய்க்கும். அதனால் அவர் அந்த அதீத நிலையை அடையமுயலுதலன்றி, முன் சொன்ன சிவ யோகத்தைப் புரிய எண்ணமாட்டார்கள். அவ்யோகத்தைப் புரியாமை -யால், அவர்கள் உலகப்பற்றில் வீழ்ந்துவிடமாட்டார்கள். ஆகவே, சிவானுபவமாகிய செயல் ஞான துரியாதீதத்தை அடைந்தவர்கட் கல்லது. ஏனைச் சிவயோகிகட்கு உண்டாகமாட்டாது.

விளக்கவுரை

ஆன்மா, 'தான்பணியைநீத்தல்'*1* நின்மல துரியத்திலேயாதலை அறிக. ஆன்மாச் செயலற்றிருத்தலாகிய இதனையே நாயனார் முதல் தந்திரத்து 'உபதேசப்' பகுதி *15.16,17* ஆம் மந்திரங்களில் நயம்பட விளக்கியிருத்தல்

காண்க.
இதனால், ஒன்று இடையிட்டு மேற்கூறிய சிவயோகம் நின்மலா வத்தைக்குச் சாதனமேயன்றிச் சாத்தியம் ஆகாமை உணர்த்தப் பட்டது.
ஆன்மா தன் செயல் அற்று, 'எல்லாம் சிவன் செயல்' என்று இருக்கும் நின்மல துரிய நிலையே
'கூட்டில் வாள் சாத்தி நிற்றல்' (திருவுந்தியார் - 30)
எனவும்
'செய்தற் கரிய செயல்பலவும் செய்துசிலர்
எய்தற் கரியதனை எய்தினர்கள் - ஐயோ! நாம்
செய்யாமை செய்து செயலறுக்க லாயிருக்கச்
செய்யாமை செய்யாத வாறு'1
எனவும் சாத்திரங்கள் கூறுகின்றன.

தான்அவ னாகும் சமாதிகை கூடினால்
ஆன மலம்அறும் அப்பசுத் தன்மைபோம்
ஈனமில் காயம் இருக்கும் இருநிலத்***(து)***
ஊனங்கள் எட்டும் ஒழித்தொன்று வோர்கட்கே. ***#2280***

[கீழாலவத்தை மத்தியாலவத்தைகளை நோக்க, மேலாலவத்தையாகிய யோகாவத்தை நிறைவுடையதேயாம். எனினும், ஞானாவத்தையை நோக்கின் அது குறைவுடையதேயாகும். ஆகையால்] இயமம், நியமம் முதலாக உள்ள அந்த எட்டுறுப்புக் களையும் (சமாதி உட்படக்) கடந்து, நின்மல துரிய நிலையில் 'அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி நிற்றலாகிய'8 அந்தச் சமாதி கைவந்தால்தான் அநாதி தொட்டே பற்றியுள்ள ஆணவமலம் வாசனையும் இன்றி நீங்கும். (அப்பொழுது பின் வந்த மாயை கன்மங் களாகிய பாசங்களும் அவ்வாறாம். ஆகவே, அப்பொழுதுதான்) ஆன்ம, 'பசு' என்கின்ற நிலைமை நீங்கப்பெற்று, 'சிவம்' எனப்படும் நிலையை எய்தும்.

விளக்கவுரை

ஒளி வந்தவழியல்லது இருள்போகாதது போல, ஞானம் வந்த வழியல்லது அஞ்ஞானத்தைச் செய்வதாகிய ஆணவ மலம் அறுமாறில்லை. 'அஞ்ஞானத்தால் உறுவதுதான் பந்தம்; உயர் மெய்ஞ்ஞானந்தான் - ஆனத்தால் அதுபோவது; அலர்கதிர்முன் இருள் போல்'3 என்பது சிவஞானசித்தி. இதனால் இங்கு 'சமாதி' என்றது ஞான சமாதியேயன்றி, யோக சமாதியன்று. 'தான் அவனாகும் சமாதி' என எடுத்தோதியதும் அது விளங்குதற் பொருட்டு. இந்த ஞான சமாதியையே திருக்களிற்றுப்படியார்,
'சார்பு கெடஒழுகின் நல்ல சமாதியும்; கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று'8

எனக்கூறிற்று. இங்குக்கூறிய சமாதியை 'யோக சமாதியே' எனக் கொள்கின்றவர்கள் 'எட்டு' என்னும் எண்ணிக்கைக்குத் தங்கள் தங்கட்குத் தோன்றிய பொருளைக் கூறுவர்.
ஈற்றடியை முதலிற் கூட்டி, 'ஈன்மில் காயம் இருநிலத் திருக்கும்' என முடிக்க. காயம் இருத்தலைக் கூறியது, 'ஞான சமாதியை அடைந்தோர் காயத்தை இருந்த வேண்டினும் இருக்கும்' என்பது உணர்த்துதற்கு, ஞானிகளது உயிரேயன்றி, உடம்பும் நின்மலமேயாதலைக் குறித்தற்கு, 'ஈனம் இல் காயம்' என்றார்.
இதனால், 'யோக துரியாதீதத்தைக் கடந்து நின்மலா வத்தையை அடைதல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

தொலையா அரனடி தோன்றும்ஐஞ் சத்தி
தொலையா இருள்ஒளி தோற்ற அணுவும்
தாலையாத் தொழில்ஞானம் தொன்மையில் நண்ணித்
தொலையாத பெத்தமுத் திக்கிடை தோயுமே. ***#2281***

(இருவினையொப்பு மலபரி பாகம்வந்த பொழுது ஆன்ம அறிவில் பதிகின்ற அருட்சத்தியை மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என அதன் தன்மை பற்றி வழங்கப்படுமாயினும் அவை 'நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை' என்னும் சக்தி களின் வகையாகவே சொல்லப்படுகின்றது.*1* அந்த ஐந்து சக்திகளும் சிவனது திருவடியேயாம். (அருளை 'அடி' எனக் கூறுதல் மரபு. அதனால், சத்தி நிபாதத்தில் உண்டாகின்ற ஞானமும் 'திருவடி ஞானம்' என்றே கூறப்படும்). அந்த ஞான ஒளி தோன்றியவுடன், அநாதி தொட்டு விடாது பற்றி நிற்கின்ற ஆணவ இருள் நீங்கும். அது நீங்கவே, ஆன்மாவிற்கு இயல்பாய் உள்ள இச்சாஞானக்கிரியா சத்திகள் (ஆணவத்தால் தடுக்கப்பட்டிருந்தனவேயன்றி, அழிக்கப் படாமையால்) விளக்கம் பெற்று ஆன்மாத் தனது இயற்கை நிலையை அடையும். அடைந்த பொழுது முதற்கண் முற்றும் நீங்காத பெத்தமும் அது முற்றும் நீங்கிய முத்தியும் என்னும் இரண்டற்கும் இடைநிலையில் ஆன்மா இருக்கும்.

விளக்கவுரை

அந்த நிலையே நின்மலாவத்தை என அறிக. 'தோன்றும் ஐஞ்சத்தி தொலையா அரனடி' எனவும், 'ஒளிதோற்ற தொலையா இருள் தொலையா' எனவும் கூட்டுக.
'ஒளிதோற்ற தொலையா இருள் தொலையா' எனப்பொதுப் பட ஓதினாராயினும் சொல்லுவாரது குறிப்புத்திருவடி ஞானத்தின் மேலதும், ஆணவ இருளின் மேலதும் ஆதலை அறிக. மூன்றாம் அடியில் நின்ற 'தொலையா' என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெய -ரெச்சம். மூன்றாம் அடியில் உள்ள 'தொலையா' என்பது 'செய்யா' என்னும் வாய்பாட்டு

வினையெச்சம். அதனை, 'தொலைய' எனச் செயவெனெச்சமாகத் திரித்துக்கொள்க. இங்ஙனமாகவே இம்மந்திரம் சொற்பின்வருநிலையணிபெற்றதாம்.
இதனால், ஞானாவத்தையே நின்மலாவத்தையாதலன்றி, யோகாவத்தை அன்னதாகாமை தெரித்துணர்த்தப்பட்டது.

தோன்றிய பெத்தமும் முத்தியும் சூழ்சத்தி
மான்றும் தெருண்டும் உயிர்பெறும் மற்றவை
தான்றரும் ஞானந்தன் சத்திக்குச் சத்தன்றான்
ஊன்றல்இல் லாஉள் ளொளிக்கொளி யாகுமே. ***#2282***

உயிர்கள் அவற்றைச் செலுத்துகின்ற சிவசத்தியின் தன்மைக்கு ஏற்ப மயக்க உணர்வைப் பெற்றுப் பெத்தத்தையும், மெய் உணர்வைப் பெற்று முத்தியையும் ஏனெனில், அந்த 'மயக்கம், மெய்' என்னும் இரண்டையும் உயிர்கட்குத் தருகின்ற ஞானமாகிய தன் சத்திக்குச் சத்தனாய் உள்ள சிவன், ஒரு பெற்றியில் நில்லாது இருவேறாய் நிற்கின்ற அந்தச் சத்திக்கு உயிராய் நின்று அதனைச் செலுத்துவன் ஆதலின்.

விளக்கவுரை

'உயிர், சத்தியால் மான்று பெத்தத்தையும், தெருண்டு முத்தியையும் பெறும்' என்க. இது முறை நிரல்நிறை. உயிர் பக்குவம் எய்தாத பொழுது மலங்கள் அதன் ஆற்றலை அடக்கித்தாமே மேற்பட்டு நிற்றலால் அப்பொழுது சிவனது அப்பாசங்களைச் செலுத்தி அவை வழியாக உயிருக்கு மயக்க உணர்வையும், உயிர் பக்குவம் எய்திய காலத்தில் அதன் ஆற்றலை மலங்கள் அடக்க மாட்டாது, அதற்குக் கீழ்ப்பட்டுப் போதலால், அப்பொழுது சிவனது சத்தி தான் நேர்நின்று உயிர்கட்கு மெய்யுணர்வையும் தரும். அதனால், 'மான்றும், தெருண்டும் பெறும்' என்றார். மான்று - மயங்கி. தெருண்டு - தெளிந்து. ஒன்றாகிய சத்தியே, பாசத்தின் வழிநின்று அறிவை மயக்கும் பொழுது 'திரோதான சத்தி' என்றும், மயக்காது விளக்கும் பொழுது 'அருட்சத்தி' என்றும் பெயர் பெறும். 'ஞானத்தன்' என்பது இன்னோசை நோக்கி மெலித்தல் பெற்றது. ஒன்றேயாயினும் இரண்டாய்ச் செயலாற்றுதல்பற்றிச் சத்தியை 'ஊன்றல் இல்லா ஒளி' என்றார். மற்று, தான் அசைகள். 'ஒளிக்கு ஒளி' என்றது, 'சிவன் செயற்படுத்திய வழியிலே சத்தி செயற்படும்' என்பது உணர்த்துதற்கு முன்பு, 'சத்திக்குச் சத்தன்' என்றதை இனிது விளக்கியவாறு.
இதனால், மேற்கூறிய பெத்தமும் முத்தியும் சிவனாலே ஆமாறு கூறப்பட்டது.

அறிகின் றிலாதன ஐயேழும் ஒன்றும்
அறிகின்ற என்னை அறியா திருந்தேன்

அறிகின்றாய் நீஎன் றருள்செய்தான் நந்தி
அறிகின்றேன் நான்என் றறிந்துகொண் டேனே. *#2283*

தத்துவங்கள் முப்பத்தாறினையும், அவை தாமே அறிந்தும், செய்தும் வருவனவாக மயங்கி, உண்மையில், 'அவற்றைக் கருவிகளாகக்கொண்டு அறிபவனும்' செய்பவனும் நான்தான்' என்பதையான் பெத்த காலத்தில் அறிந்து கொள்ளாமலே மயங்கி யிருந்தேன். பின்பு நந்திபெருமான், மேற்குறித்த உண்மையை எனக்கு அறிவுறுத்தருளினார். அந்த உண்மையை அங்ஙனமே அறிந்து கொண்டமையால், முத்தனாயினேன்.

விளக்கவுரை

'பெத்தம், முத்தி' என்பன ஆற்றலால் கொள்ளக் கிடந்தன. 'இவ்விரண்டிற்கும் காரணம் பக்குவம் எய்தாமையும், எய்தினமையும்' என்பது மேலே கூறப்பட்டது.

இதனால், 'மெய்யுணர்வு திரோதானசத்தி அருட்சத்தியாய் மாறின அளவில் பெறப்படாது. குருவினாலே பெறப்படும்' என்பது கூறப்பட்டது.

தான்அவன் ஆகியன் ஞானத் தலைவனை
வானவர் ஆதியை மாமணிச் சோதியை
ஈனமில் ஞானத்*(து)* இன்னருட் சத்தியை
ஊனம் இலாள்தன்னை ஊனிடைக் கண்டதே. *#2284*

தான் 'சீவன்' என்கின்ற நிலைமை நீங்கி, 'சிவன்' என்கின்ற நிலைமையை அடைந்த பெரியோன் சிவன் சத்தி இருவனாயும் நேரே கண்டது தன்னுடையே உடம்பிற்குள்ளேயாகும்.

விளக்கவுரை

'சகலத்தில் சுத்தத்து ஞானாவத்தையாகிய நின்மலா வத்தையிலாம்' என்றபடி 'அந்நிலையை அடைந்தவன் பின் பரா வத்தை அடைதல் உறுதி' என்பது கருத்து. முன் இரண்டு அடிகளில் சிவனும், பின் இரண்டு அடிகளில் சத்தியும் குறிக்கப்பட்டனர். அவ் வடிகளின் பொருள் வெளிப்படை 'கண்டது' என்னும் ஒருமை அத் தொழிலைக் குறித்தது. 'கண்டது ஊனிடை' என மாற்றியுரைக்க.

இதனால், 'சகலத்திலேயே நின்மலாவத்தையில் சிவ சத்திகளை அவர்களது ஞானமாகிய கண்ணால் காணுதல் கூடும்' என்பது கூறப்பட்டது.

ஒளியும் இருளும் பரையும் பரையுள்
அளிய தெனலாகும் ஆன்மாவை யன்றி
அளியும் அருளும் தெருளும் கடந்து

தெளிபவ ருள்ளே சிவானந்த மாமே. ***#2285***

ஆணவ இருளைச் சிறிதே நீக்குவனவாகிய மாயா காரியக் கருவிகளும் அவற்றால் சிறிதே நீக்கப்படுகின்ற ஆணவ இருளும், அதனை நீக்க உதவுகின்ற சிவசத்தியும் அச்சத்தியால் காப்பாற்றப்படும் ஆன்மாவும் ஆகிய இவைகளை முறையாக முன்னர் உணர்தல் வேண்டும். (அவ்வாறு உணர்தலே அரிது. ஆயினும்) அதன்பின் அவற்றோடு நில்லாது ஆன்மாவின் எளிய நிலையையும், அந்நிலையை உணர்ந்து சிவன் அதன்மேல் கொள்ளும் இரக்கத்தையும், அவ்விரக்கத்தால் ஆன்மாவிற்கு உண்டாகின்ற அனைத்துப் பொருள்களையும் பற்றிய உண்மையான உணர்வின் சிறப்பையும் உணர்ந்து, பின் பல பொருள் உணர்வை விடுத்துச் சிவன் ஒருவனையே உணர்கின்ற உணர்வு உண்டாகுமானால், அதன் பின்பே சிவனது பேரின்பம் ஆன்மாவிற்கு உளதாகும்.

விளக்கவுரை

பின்னர், 'பரை' எனத் திருவருள் குறிக்கப்படுதலால், முதற்கண் 'ஒளி' என்றது மாயையாகிய ஒளியையே குறித்தது. அளியது - அளிக்கத்தக்கது. அஃதாவது, இரங்கத்தக்கது.
துகளறுபோதத்தில், ஒளியை உணர்தல், முதல் ஏழு அவதாரங் களாகவும், இருளையுணர்தல், அடுத்துமூன்று அவதரங்களாகவும், ஆன்மாவை உணர்தல், அடுத்த 'தன்னுண்மை சைதன்னிய தரிசனம்' எனவும், இரக்கத்தை (திருவருளை) உணர்தல் 'ஞானதரிசனம்' எனவும் தெருளைஉணர்தல் அடுத்த எட்டு அவதரங்களாகவும் கூறப் பட்டன. இவற்றின் பின்னர்க் கூறப்பட்டன எல்லாம் சிவன் ஒருவனையே உணர்ந்து நிற்கும் நிலைகளாம். அந்நிலைகளே சிவானந்த விளைவுகளுமாம். 'பரை' என்பது பொதுவாக 'சத்தி' என்னும் பொருட்டாய் நின்றது.
இதனால், நின்மலாவத்தையின் உட்கூறுகள் ஒருவாறு விளக்கப்பட்டன.

ஆனந்த மாகும் அரன்அருட் சத்தியில்
தான்அந்த மாம்உயிர் தானே சமாதிசெய்***(து)***
ஊன்அந்த மாய்உணர் வாய்உள்ளுணர்வுறின்
கோன்அந்தம் வாய்க்கும் மகாவாகியம் ஆமே. ***#2286***

'சிவானந்தம்' என்பதும் சிவனது அருட் குணங்களில் ஒன்றேயாம். (வரம்பில் இன்பம்) ஆகவே, அச்சத்தி வழியாக ஞான நிலைகளில் முடிநிலையை அடைந்த உயிர் பின் சிவத்திலே அழுந்தி, ஐவகை உடம்புகளினின்றும் நீங்கி, அறிவே வடிவாய், அந்த அறிவுக்கு அறிவாய் உள்ள சிவத்திலேயே பிரிதல் இன்றி நிற்குமாயின் சிவனை முற்றும் பெறுதலாகிய மிகப்பெரிய பேறு உளதாகும்.

விளக்கவுரை

'தானே' என்பது, 'அந்த உயிரே' எனத் தேற்றப் பொருள் தந்தது. சமாதி - தான் அதுவாதல், கோபம் - கோவம், பாபம் - பாவம்' என வருதல்போல, 'மகாபாக்கியம், என்பது, 'மகா வாக்கியம்' என வந்தது. பாக்கியம் - பேறு இவ்வாறன்றி 'மகா வாக்கியம்' என்றே கொள்ளுதற்கு இங்கு ஏதும் இயைபில்லாமை அறிக.

இதனால், முன்மந்திரத்தில் குறிக்கப்பட்ட சிவானந்தம் வாய்க் குமாறும் 'அதுவே பெரும்பேறாகிய ஆன்மலாம்' என்பதும் கூறப் பட்டன. இப்பேறு கிடைத்தற்குக் கூறப்பட்டவழி நின்மலாவத்தையே யாதலை நோக்குக.

அறிவிக்க வேண்டா அறிவற் றவர்க்கும்
அறிவிக்க வேண்டா அறிவுற் றவர்க்கும்
அறிவுற்ற றறியாமை எய்திநிற் போர்க்கே
அறிவிக்க தம்அறி**(வு)** ஆர்அறி வாரே. ***#2287***

அறிவித்தாலும் அறியும் தன்மையில்லாத அபக்குவர்க்கும் குருவின் உபதேசம் ஏற்புடையதன்று; *(*பயன் இன்மையால்*)* முற்பிறவியிலே கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தும் நிட்டை கூடாது விட்டமையால் கருவிலே திருஉடையவராய்ப் பிறந்து, ஞானத்தின் திருவுருவாயே நிட்டையை வேண்டி நிற்பவர்க்கும் குருஉபதேசம் வேண்டுவதன்று. எனவே அறிவித்தால் அறியும் பக்குவம் உடையவராய் அறிவிப்பாரை நாடிநிற்கும் அவர்கட்கே ஞான குரவர் உபதேசத்தைச் செய்வராக. பக்குவம் வாய்ப்பினும் தம்மையும், தலைவனையும் குருஉபதேசத்தாலன்றித் தாமாகவே அறிபவர் உலகில் யார் இருக்கின்றார்கள்*? (*ஒருவரும் இல்லை*).*

விளக்கவுரை

அறிவித்தால் அறியும் ஆற்றலும், 'அறியவேண்டும்' என்னும் அவாவும் இல்லாதவர் 'பிராகிருதர்' என்றும் முற்பிறப்பிலே கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தவர். 'சாமுசித்தர்' என்றும், பரிபக்குவம் வாய்ந்து, ஞானகுருவைத் தேடுகின்றவர் 'வைநயிகர்' என்றும் சொல்லப்படுவர். இதனை, 'பண்டை நல்தவத்தால் தோன்றி'l என்னும் சிவஞானசித்திச் செய்யுளின் உரையால் உணர்க. இவர்களையே இங்கு நாயனார் 'அறிவற்றவர் அறிவுற்றவர், அறிவுற்று அறியாமை எய்தி நிற்பார்' என்றார். இம்மூன்று பெயர்களில் நடுவில் உள்ள ஒன்றில் உள்ள 'அறிவு' என்பது மட்டும், 'ஞானம்' என்றும், மற்றையிரண்டும் 'அறியும் ஆற்றல்' என்றும் பொருள் தந்தன. 'அறியாமை' என்பதில், 'மை'. வினையெச்ச விகுதி. எனவே, 'அறியாமல்' என்பது அதன்பொருள். அறியும் ஆற்றல்

இருந்தும் அறியாமல் நின்றதற்குக் காரணம், அறிவிப்பார் இன்மை. இறுதியில், 'தம் அறிவு ஆர் அறிவார்' என்றதும், 'அறியும் ஆற்றலைப் பெற்றவர்க்கும் அறிவிப்பார் இன்றி அறிதல் இயலாது' என்பதை விளக்குதற்கேயாம். உம்மை இரண்டும் எதிரதுதழுவியும், இறந்தது தழுவியும் நின்றன. முன்னிரண்டடிகளில் பாடம் திரிவுபட்டுள்ளது. 'அறிவிக்க' என்பது வியங்கோள் அதற்கு எழுவாய், ஆற்றலால் வந்து இயைந்தது.

இதனால், ஞான குரவராயினார்க்கு ஒரு கட்டளைபோல வைத்து பரிபக்குவம் இல்லார்க்கு ஞானாவத்தை நிகழாமையும், பரிபக்குவம் உடையார்க்கும் ஞானகுரு இன்றி அது நிகழாமையும் கூறப்பட்டன. ஞானம் ஞான குரு இன்றி நிகழாமை மேலே சில இடங்களில் கூறியிருக்கவும், இங்கும் அதனைக் கூறியது, 'பெற்றதன் பெயர்த்துரை நியமப்பொருட்டு' என்பவாகலின் நின்மலாவத்தை கூறும் இவ்விடத்திலும் அதனை வலியுறுத்தற்பொருட்டாம்.

சத்தும் அசத்தும் சதசத்தும் தாம்கூடிச்
சித்தும் அசித்தும் சிதசித்து மாய்நிற்கும்
சுத்தம் அசுத்தம் தொடக்காத் துரியத்துச்
சுத்தராய் மூன்றுடன் சொல்லற் றவர்கட்கே. ***#2288***

சகலத்தில் சுத்தமாகிய மேலாலவத்தையும், (யோகாவத்தையும்) சகலத்திற் சகலமாகிய மத்தியாலவத்தையும், சகலத்தில் கேவலமாகிய கீழாலவத்தையும் ஆகிய இவைகளின் தொடர்புகள் சிறிதும் இல்லாது நீங்கிய நின்மல துரியத்தில் நிற்றலால் சுத்தான்மாக்களாய், சொல் நிகழ்ச்சி அத்துரியத்திற்கு முற்பட்ட, 'சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி' என்னும் மூன்றோடே நீங்கப் பெற்றவர்கட்கு, சத்தாய் உள்ள சிவமும், அசத்தாய் உள்ள பாசங்களும், சதசத்தாய் உள்ள ஆன்மாவும் முறையே சித்தும், அசித்தும், சிதசித்தும் ஆதல் முற்ற அனுபவமாய் விளங்கும்.

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கியுரைக்க. அசுத்தம் போலத் தொடர்பற்றதாகக் கூறினமையால், 'சுத்தம்' என்றது சகலத்திற் சுத்தமேயாயிற்று. முப்பொருள்களின் இயல்பு சத்து, அசத்து, சதசத்து ஆதல் மட்டும் விளங்கல் நிரம்பாமையால், 'அவை முறையே சித்தும், அசித்தும், சிதசித்துமாதல் விளங்கும்' என்றார். சிவஞான போதத்துள்ளும் 'இருதிறன் அல்லது சத்தாம்' என்று ஒழியாது. 'சிவசித்தாம்' என அருளியதையும் *8* அதன் உரையையும் நோக்குக. 'சத்து' என்பது, 'உள்ளது' என்றும், 'அசத்து' என்பது இல்லது' என்றும், 'சதசத்து' என்பது, 'சத்தோடு கூடிச் சத்தாயும், அசத்தோடு கூடி அசத்தாயும் நிற்கும்' என்றும் பொருள் தரும். இன்றும் 'உள்ளது' என்பது,

'என்றும் ஒரு படித்தாய் உள்ளது' என்றே பொருள்தரும். அதனால் 'அசத்து' என்பது 'சிலகாலம் உள்ளதாய் இருந்து பின் இல்லதாகிவிடும்' என்றே பொருள் தரும். இம்முறையில் சத்தாய் உள்ளது சித்தாயும் இருக்கும்; அஃதாவது அறிவாய், ஒருஞான்றாமை அறியாமை உடையதாகாமல் இருக்கும். அசத்தாய் உள்ளது அசித்தாயும் இருக்கும். அஃதாவது எஞ்ஞான்றும் எவ்வாற்றானும் அறிவுடையதாகாது அறியாமையை உடையதாயே இருக்கும் 'சடம்' என்பது இதுவே சதசத்தாய் உள்ளது சிதசித்தாயும் இருக்கும். அஃதாவது சித்தோடு கூடிச் சத்தாயும் அஃதாவது அறிவுடையதாயும் அசித்தோடு கூடி அசத்தாயும் அஃதாவது அறியாமையுடையதாயும் இருக்கும். 'இவையெல்லாம் நூலறிவால் அறியப்பெறினும், அனுபவமாக விளங்குவது நின்மல துரியத்தில்' என்பது இம்மந்தரத்தில் கூறப்பட்டது 'கூடிநிற்கும்' என்றது அனைத்தும் விளங்கும்' என்றபடி ஏகாரம் பிரிநிலை.
இதனால், 'நின்மலாவத்தையில்தான் அனுபவ ஞானம் உண்டாகும்' என்பது கூறப்பட்டது.

தானே அறியான் அறிவிலோன் றானல்லன்
தானே அறிவான் அறிவு சதசத்தென்
றானால் இரண்டும் அரனரு ளாய்நிற்கத்
தானே யறிந்து சிவத்துடன் தங்குமே. ***#2289***

புருடன், (ஆன்மா) பிறிதொரு பொருள் அறிவியாமல் தானாகவே ஒன்றையும் அறியும் தன்மையுடைய னல்லன்; அதனால், அவன் அறிவில்லாத சடப்பொருளும் அல்லன். ('அறிவித்தால் அறிவான்' என்றபடி). இத்தன்மை உடைய இவன், பிறர் அறிவிக்க வேண்டாது, தானே எல்லாவற்றையும் அறிபவனாகிய சிவனது அறிவைக்கொண்டு தன்னை முன்மந்திரத்திற் கூறியவாறு, 'சதசத்து' என அறிவானாயின்' அப்பொழுது இவனும், இவனால் சாரப்பட்ட கருவித்தொகுதியும் சிவனது அருளாகியே நிற்கும். ('இவனும் சிவமாகி, இவனது கரணங்களும் சிவகரணமாய்விடும்' என்றபடி). அங்ஙனம் நிற்கவே, முன்பு அசித்தோடு கூடி அசித்தாய் இருந்த, அல்லது ஏகதேசமாய் அறியும் சிற்றறிவை உடையவனாய் இருந்த இவனே, எல்லாவற்றையும் அறியும் அறிவுடையவனாகிச் சிவத்தோடே கூடி இரண்டற்றிருப்பான்.

விளக்கவுரை

'தானே' மூன்றில் இறுதியில் உள்ளதில் ஏகாரம் தேற்றம். ஏனைய பிரிநிலை. ஆன்மா நின்மலாவத்தையை அடைதல் பற்றியே கூறி வருதலாலும், முன் மந்திரத்திலும் 'சுத்தராய்ச் சொல்லற்றவர்கட்கே' எனச் சீவர்களே குறிக்கப்பட்டமையாலும் அத்தொடர்ச்சி பற்றி இம்மந்திரத்திற்கு 'ஆன்மா' என்பது எழுவாயாய் வந்து இயைந்தது.

'தானே அறிவான் அறிவு' என்பதன் ஈற்றில் 'ஆன்' உருபு விரிக்க. 'ஆனால்' என்பதில் ஆக்கம் அறியாததனை அறிதலை உணர்த்திற்று. 'நிற்க' என்ற அனுவாதத்தால், 'நிற்கும்' என்பது தானே பெறப்பட்து. 'சதசத்து' என்றதில் அசத்தும் பெறப்பட்டமையால், 'இரண்டும்' என்றதில் அசத்துத் தொகுதியும் ஒன்றாயிற்று. 'தங்கும்' என்னும் 'செய்யும்' என்முற்று இங்கு ஆண்பாலில் வந்தது. ஆன்மா, வடமொழி வழக்குப் பற்றி ஆண்பாலாகச் சொல்லப்பட்டது.
இதனால், முன்மந்திரத்தில், 'ஆன்மாச் சிதசித்து' எனக்கூறிய வகையில், 'சித்தாதல் இவ்வாற்றால்' என்பது விளக்கப்பட்டது.

தத்துவ ஞானம் தலைப்பட் டவர்கட்கே
தத்துவ ஞானம் தலைப்பட லாய்நிற்கும்
தத்துவ ஞானத்துத் தான்அவன் ஆகவே
தத்துவ ஞானானந் தம்தான் தொடங்குமே. ***#2290***

மாயாகாரியங்களாகிய கருவிகளின் உண்மையை உணர்ந்தவர்கட்கே மெய்ப்பொருளாகிய சிவத்தை உணரும் உணர்வு கிடைக்கும். அந்த உணர்வானே ஆன்மாச் சிவமாம் தன்மையை அடையும். அதனை அடையவே, அந்தச் சிவஞானமே சிவபத்தி -யாய்ப் பரிணமிக்க, அந்தப் பத்தியால் சிவானந்தம் விளைவதாகும்.

விளக்கவுரை

'தத்துவம்' நான்கில் முதலது உபசார வழக்கால் 'தத்துவம்' எனப் பெயர்பெற்றது நிற்கும் மாயா கருவிகளைக் குறித்தது. ஏனையவை உண்மை வழக்கால் மெய்ப்பொருளைக் குறித்தன. 'தலைப்படல்' இரண்டனுள் முதலது ஆன்மாவின் செயலாயும், இரண்டாவது ஞானத்தின் செயலாயும் நின்றன. தான் - ஆன்மா. அவன் - சீவன். 'ஆகவே' என்ற அனுவாதத்தால், ஆதல் தானே பெறப்பட்டது. ஈற்றில் உள்ள தான், அசை.
இதனால், முன் மந்திரத்தில் 'ஆன்மாத் தன்னை யுணர்தல் சிவஞானத்தால்' என்றமை பற்றி, அந்தச் சிவஞானம் கிடைக்குமாறும், அது கிடைப்பின் விளையும் பெரும் பயன்களும் கூறப்பட்டன.

தன்னை யறிந்து சிவனுடன் தான்ஆக
மன்னும் மலக்குணம் மாளும் பிறப்பறும்
பின்அது நன்முத்தி சன்மார்க்கப் பேரொளி
நன்னர்த்து ஞானத்தின் முத்திரை நண்ணுமே. ***#2291***

ஆன்மாத் தனது இயல்பை உள்ளவாறறிந்தால் தான் பாசத்துடன் நில்லாது சிவத்துடனே நிற்கும். அவ்வாறு நிற்கும் பொழுதுதான் மலங்களின் சேட்டை ஒழியும். பாசங்களின் சேட்டை ஒழிவே பிறப்பின் ஒழிவாகும். எவ்வாற்றானும் மீண்டும் பிறவி எய்தாத நிலையே

முடிநிலைப் பரமுத்தியாகும். மற்றும் அதுவே நன்னெறியாகிய ஞானத்தால் அடையப்படும் பேரறிவுப் பொருளும் ஆகும். அது சின்முத்திரை வழியாகக் கிடைக்கும்.

விளக்கவுரை

சேட்டையை, 'குணம்' என்றார். 'பின்' என்பது, 'மற்று' என்னும் பொருளில் வந்தது. 'பின்னும்' என்னும் எதிரது தழுவிய எச்ச உம்மையும், 'அதுவே' என்னும் தேற்றேகாரமும் தொகுத்தலாயின. 'பின்னும் அதுவே' என்பதை, 'சன்முத்தி' என்பதன் பின்னர்க்கூட்டுக. 'நன்றது' என்பது எதுகை நோக்கி, 'நன்னது' என வந்தது. 'முத்திரையால் என உருபு விரிக்க. சின்முத்திரையைப் பெறுமாறு, வருகின்ற மந்திரத்தில் காண்க. இதனால், முன் மந்திரத்தில் கூறிய தத்துவ ஞானத்தால் ஆன்ம சுத்தி உண்டாக, அதன்பின் நிகழும் ஆன்ம லாபமும் அதன் சிறப்பும் கூறப்பட்டன.

ஞானம்தன் மேனி கிரியை நடுஅங்கம்
தானுறும் இச்சை உயிராகத் தற்பரன்
மேனிகொண்(டு) ஐங்கரு மத்துவித் தாதலால்
மோனிகள் ஞானத்து முத்திரைபெற் றார்களே. ***#2292***

(சிவனுக்கு வடிவமாய் அமைவது. அவனது சத்தியே. அதனை, 'காயமோமாயை அன்று; காண்பது சத்தி தன்னால்1 என்னும் சிவஞான சித்தியால் அறியலாம். 'அரிதரு கண்ணியாளை ஒருபாகமாக அருள் காரணத்தில் வருவார்'3 என அருளிச் செய்ததும் இதனையே. அவ்வாறு ஆகுமிடத்து.)

ஞானசத்தியே உடல். கிரியாசத்தியே உடலில் உள்ள பல உறுப்புக்கள். இச்சாசத்தியே 'உயிர்களை உய்விக்கவேண்டும்' என்னும் கருணையாய் உள்ளிருந்து உந்துவதாய் மேற்கூறியவைகளை இயக்கும் உயிராகும். இவைகளையெல்லாம் கொண்டு அவன் செய்யும் தொழில்கள் ஐந்து. (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்). இங்ஙனம் ஆகலின் அவ்வைந்தொழிலில் இறுதிக்கண்ணதாகிய அருளலை தற்போதம் அற்றிருந்தவர்கள் மட்டுமே பெற்றார்கள் ('பிறரெல்லாம் ஏனை நான்கையே பெறுகின்றனர்' என்பதாம்).

விளக்கவுரை

இறைவனுக்கு 'அருவம், அருவுருவம், உருவம்' என மூவகை வடிவங்கள் உள. அவற்றுள் அருவம் தவிர, ஏனைய இரண்டும் பற்றி இங்குக் கூறப்பட்டன. 'உருவ வடிவத்தில் உடலும் உறுப்பும் நம்மனோரது உடலும், உறுப்பும்போலவே இருப்பினும் அவை அன்ன அல்ல; இங்குக் கூறிய சத்திகளே' என அறிவுறுத்தபடி அருவுருவ வடிவம் மந்திர

வடிவம். அதனுள் சத்தியோசாத மந்திரம் உடலும், ஈசான மந்திரம் சென்னியும், தற்புருட மந்திரம் முகமும், அகோரமந்திரம் இருதயமும், வாமதேவமந்திரம் மறைவுறுப்பும் ஆக இவ்வாறு அமைகின்றன. இறைவன் சனகாதி நால்வர்க்குத் தென்முகக் கடவுளாய்க் கல்லால மர நீழலில் இருந்து சின்முத்திரையாலே ஞானத்தை உணர்த்தியதைக் கருத்தில்கொண்டே,

'மோனிகள் ஞானத்து முத்திரைபெற் றார்களே'

என்றார். *('ஆகவே, அவரைப் போன்றாரும் அவ்வாறு ஞானத்தைப் பெறுதல் கூடும்' என்பது குறிப்பெச்சம்.)*

அருவம் வடிவம், 'இலயம்' என்றும், அருவுருவ வடிவம் 'போகம்' என்றும், உருவம் வடிவம் 'அதிகாரம்' என்றும் சொல்லப் படும் நிலைகளையுடையனவாம். இனி ஞானகுரவருடைய திருமேனியும் சிவோகம்பாவனை காரணமாகச் சத்தி வடிவம். அல்லது அருட்டிருமேனியாம் ஆகலின், அவரால் சின்முத்திரை வழியாகப் பலரும் பெறுதல் கூடும் என்க. சின்முத்திரையின் இயல்பை முத்திராலட்சணங்களில் காண்க.

இதனால், முன்மந்திரத்தில் கூறிய ஞான முத்திரையின் உண்மையும், அதனைப் பெறுமாறும் கூறப்பட்டன.

உயிர்க்கறி வுண்மை உயிர்இச்சை மானம்
உயிர்க்குக் கிரியை உயர்மாயை சூக்கம்
உயிர்க்கிவை யூட்டுவோன் ஊட்டு மவனே
உயிர்ச்செய லன்றிஅவ் வுள்ளத் துளானே. ***#2293***

[முன்மந்திரத்தில் சிவனுக்கு உள்ளனவாகக் கூறிய ஞான சத்தி இச்சா சத்தி கிரியா சத்திகள் உயிர்கட்கும் உள்ளன, அஃது எவ்வாறு பெறப்படுகின்றது எனின்,], 'சடப்பொருள்கட்கு வேறாய் உயிர் உண்டு' என உணரவைப்பதே உயிரினது ஞான சத்திதான், *(அஃதாவது, எங்கே அறிவு நிகழ்கின்றதோ அங்கெல்லாம் 'உயிர் உள்ளது' என உணரப்படுகின்றது என்பதாம்)*. இனி, அந்த அறிவு 'யான்' எனத் தன்னைப் பற்றியும், 'எனதும்' எனப் பிற பொருளைப் பற்றியும் கொள்கின்ற பற்றும் இச்சாசத்தியின் செயலேயாகும், அந்தப் பற்றுக் காரணமாக உயிர் பலவான மாயா காரியப் பொருள்களைச் செயற்படுத்தி, அவற்றால் பயன் உறுவது கிரியா சத்தியின் செயற் பாடே. இவ்வாறு இவை நுட்பமாக ஓர்ந்துணரத்தக்கன. *(அங்ஙனம் உணராமல், 'உயிர்கட்கு இந்தச் சத்திகள் இல்லை' என்று கருதிவிடுதல் கூடாது)*. எனினும், உயிர்கட்கு அவற்றின் வினைப்பயன்களை ஊட்டுவிக்கின்ற சிவன் செயற்படுத்தவே இச்சத்திகள் செயற்படும். ஆகையால், உயிர்கள் செய்யும் செயல்கள் அவைகளே தனி நின்று

செய்யும் செயல்கள் ஆகாது, அவற்றுள் உயிர்க்கு உயிராய் நிறைந்து நிற்கும் சிவன் செயல்களே ஆகின்றன.

விளக்கவுரை

இவ்வாற்றால், 'ஒன்றேனும் நம் செயல் அன்று; எல்லாம் சிவன் செயலே' என்று உணரப்பெறுவதே தம்மையுணர்ந்து, பின் தலைவனை உணர்தலாகும்.

'சீவனும் இச்சா ஞானக்
கிரியையால் சிவனை ஒப்பன்
ஆவன்என் றிடின் அனாதி
மலம்இவற் றினை மறைக்கும்;
காவலன் இவன்செய் கன்மத்
தளவினில் கொடுப்பக் காண்பன்;
பாவியாம் புத்தி முத்திப்
பயன்கொளும் பண்பிற் றாமே'
-சுபக்கம் - சூ. *1 . 64.*

என்னும் சிவஞான சித்திச் செய்யுளைக் காண்க. 'உயிர்க்கு அறிவு' என்பதை, 'உயிருக்கு உள்ள அறிவு' என விரிக்க. 'உயிர்க்குக் கிரியை' என்பதும் அத்தகைத்து. உண்மையை உணர்த்துவதை 'உண்மை' என உபசரித்தார்.

அபிமானம், 'மானம்' எனப்பட்டது. 'பற்று' என்பதே பொருள். உயர்தல், எண்மிகுதல். மாயை, அதன் காரியத்தைக் குறித்த ஆகுபெயர். பின்னும் அஃது இருமடியாகுபெயராய், அவற்றைக் கொண்டு செய்யப்படும் செயல்களை உணர்த்திற்று. 'ஊட்டுதல்' இரண்டில் முன்னது, 'வலுப்படுத்துதல்' என்னும் பொருளது. பின்ன -தற்குச் செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது. 'உள்ளத்துளான்' என்பதன்பின், 'செயல்' என்பதுசொல்லெச்சமாய் எஞ்சி நின்றது.

இதனால், மேல், 'தன்னை யறிந்து சிவனுடன் தானாக' என்றது பற்றி, அங்ஙனம் ஆமாறு கூறப்பட்டது.

தொழில்இச்சை ஞானங்கள் தொல்சிவன்சீவர்
கழிவற்ற மாமாயை மாயையின் ஆகும்
பழியற்ற காரணம் காரியம் பாழ்விட்*(டு)*
அழிவற்ற சாந்தாதீ தன்சிவன் ஆமே. ***#2294***

'கிரியை, இச்சை, ஞானம்' என்பன சிவனுக்கு என்றும் இயல்பாகவே விளங்கி நிற்கின்றன. 'உயிர்கட்கோ' எனின், அவை அனாதியே ஆணவ மலத்தால் மறைக்கப்பட்டுப் பின்பு சிவனால் கூட்டப் பெறுகின்ற சுத்தமாயை அசுத்த மாயைகளின் காரியங்களில் அவை சிறிதே விளங்குகின்றன. சிவன் இந்த மாயைகள், அவற்றின் காரியங்கள்,

ஆணவம் ஆகிய அனைத்தையும் கடந்து, நிலைத்து நிற்பதாகிய துரியாதீத நிலையில் இருக்கின்றான்.

விளக்கவுரை

'தொன்மை' என்பது விகுதி கெட்டுப் பகுதி மாத்திரமாய் நின்றது. தொன்மையானவற்றைத், 'தொன்மை' என்றார். 'சீவர்க்கு' என்னும் நான்கன் உருபுதொகுத்தலாயிற்று. கழிவற்ற - அழிவில்லாத; என்றும் உள்ளகாரணம், மாயைகள் காரியம் அவற்றினின்றும் தோன்றிய கருவிகள் சுத்த மாயை விஞ்ஞான கலருக்கே கருவியாய்ப் பயன்படும் என்க. இருள் போலுதலின் ஆணவத்தைப், 'பாழ்' என்றார். சாந்த + அதீதம் = சாந்தாதீதம். சாந்தம் - அமைதி; என்றது துரிய நிலையை' பராவத்தையில் அதீதத்தை அடைந்தோர்க்கு மீட்சியில்லை ஆகையால் அதனை, 'அழிவற்றது' என்றார்.

இதனால், சிவ சீவர்களது இச்சா ஞானக் கிரியைகளின் வேறுபாடு உணர்த்தப்பட்டது. இதனானே அவற்றை உடையவர்களது வேறுபாடும் தானே பெறப்படும். முன்மந்திர உரையிற் காட்டிய சிவஞான சித்திச் செய்யுளில் அஃது இனிது விளக்கப்பட்டமை காண்க.

இல்லதும் உள்ளதும் யாவையும் தானாகி
இல்லதும் உள்ளது மாய்அன்றாம் அண்ணலைச்
சொல்லது சொல்லிடின் தூராதி தூரம்என்(று)
ஒல்லை உணர்ந்தால் உயிர்க்குயிர் ஆகுமே. *#2295*

உணருமாற்றால் உணராதவர்களால், 'இல்லை' என மறுத்துக் கூறப்படும் பொருளாய் உள்ளவனும், உணருமாற்றால் உணர்ந்தவர்களால், 'உண்டு' என நிறுவப்படும் பொருளாய் உள்ளவனும், உலகின்கண், 'சூக்குமம், தூலம்' என்னும் இருவகைப் பட்ட எல்லாப் பொருள்களிலும் 'அவையே தானாய்'க்* கலந்து நிற்பினும், அவற்றின் தன்மையைத் தான் எய்தாமையால் அவற்றின் வேறாய் உள்ளவனும் ஆகிய முதல்வனாம் சிவனை வாக்குக் குறிப்பிட முயலுமாயின் அதற்கு எட்டாத நெடுந்தொலைவில் உளன். இவ்வுண்மையை உயிர் எவ்வளவு விரைவாக அவ்வளவு விரைவில் அதன் உள்ளுயிராய் விளங்கி நிற்பான்.

விளக்கவுரை

'இல்லதும் உள்ளதுமாய்' - என்பதை முதலிற் கொள்க. முதல் அடியில் சொல்லப்பட்ட இன்மை உண்மைகள் புலனாகாமை புலனாதல்களைக் குறித்து நின்றன. 'உண்மையுமாய், இன்மையுமாய்'8 என்று அருளிச்செய்ததும் இவ்விரு பொருளும் பற்றி என்க. 'இல்லதும் உள்ளதும் ஆகிய யாவையும்' - என்க. 'ஆகியும்' என்னும் உம்மை

தொகுக்கப்பட்டது சொல்லால் சொல்லுதலை, 'சொல் சொல்லிடில்' எனக்கருவியே வினை முதல் போலக் கூறப்பட்டது. சொல், வாக்கு, அது நால்வகைத்தாதலை அறிக. வாக்குக்கள் சுத்த மாயாகாரியம் ஆதலின் அதற்கும் அப்பாற்பட்ட நிலையை 'தூர அதிதூரம்' என்றார். 'பாதாளம் ஏழினும் கீழ் சொள் கழிவு பாதமலர்'l 'சோதி மணிமுடி சொல்லின் சொல் இறந்து நின்ற தொன்மை'3 'சொற்பதச் சொற்பதமும் கடந்துநின்ற சொலற்கரிய சூழலாய் இது உன் தன்மை' * என்னும் திருமொழிகளை உணர்க. அது, பகுதிப்பொருள் விகுதி. 'உணர்தல், அவன் அருளால்' என்பது அறிக.

இதனால், முன் மந்திரத்தில் கூறியபடி சிவன் துரியா தீதனாயினும் எங்கும் நிறைந்து நிற்பவன் ஆதலின், அவனை உணரு மாற்றால் உணரின் உணரப்பட்டு நிற்பான் என்பது கூறப்பட்டது.

உயிர்இச்சை ஊட்டி ஒழித்தருள் சத்தி
உயிர்இச்சை வீட்டிமெய் உண்மையை நாட
உயிர்இச்சை கூட்டி உடன்உற லாலே
உயிர்இச்சை வாட்டி உயர்பதம் சேருமே. *#2296*

சிவனது சத்தி (உயிர்கள் பக்குவம் எய்தாத பொழுது) அவற்றுக்கு உலகின்மேல் ஆசையை உண்டாக்குதலும், (பக்குவம் எய்திய பொழுது) அவற்றுக்கு அவ்வாசையைப் போக்குதலும் ஆகிய இரு செயல்களைச் செய்யும். (முன்னை நிலையில் திரோதான சத்தியாயும், பின்னை நிலையில் அருட் சத்தியாயும் அது நிற்கும். திரோதானசத்தி, 'ஆதி சத்தி' என்றும் சொல்லப்படும்) உயிருக்கும் உலக ஆசை நீங்கிய பொழுது அருட் சத்தி உயிரை அசத்தை விடுத்து சத்தினை நாடுதலில் விருப்பம் உண்டாக்கி, இவ்வாறு அதனுடன் என்றும் உடனாய் நிற்றலால்தான் உயிர் உலகப் பற்றினை ஒழித்து, மேலான வீட்டினைச் சேர்வதாகின்றது.

விளக்கவுரை

இம்மந்திரத்தில் பாடவேறுபாடு மிகுதியாய் உள்ளது. 'அருள்சத்தி', வினைத்தொகை. மூன்றாம் அடியில் உள்ள 'உயிர்' என்பதன்பின் நான்காம் உருபு விரிக்க.

இதனால், 'பெத்த நிலையாகிய சகலாவத்தைகளும், முத்தி நிலையாகிய சுத்தாவத்தைகளும் சிவசத்தியாலே நிகழும்' என்பது கூறப்பட்டது.

சேருஞ் சிவம்ஆனார் ஐம்மலம் தீர்ந்தவர்
ஓரொன் றிலார்ஐம் மலஇருள் உற்றவர்
பாரின்கண் விண்நர கம்புகும் பான்மையர்
ஆரும்கண்(டு) ஓரார் அவைஅருள் அன்றே. *#2297*

'மலம்' எனப்படும் ஐந்தும் நீங்கப் பெற்றவர்களே சிவமாந்தன்மையைப்

பெற்றார்கள். அவற்றுள் ஒன்று ஒன்று நீங்கப் பெற்றவர்களும், ஒருமலமேனும் நீங்கப் பெறாதவர்களும் நிலத்திற் பிறந்து, பின் சுவர்க்கத்திலும், நரகத்திலும், புகும் பகுதியினரேயாவர். ஆயினும், 'இவ்விருவகை நிலைகளும் சிவனது கருணை காரணமாக அவனது சத்தியாலே நிகழ்வன' என்பதை அறிபவர் உலகத்தில் அரியர்.

விளக்கவுரை

ஒன்றிரண்டு மலங்கள் நீங்கப்பெறுதலாவது ஆணவம் தவிர ஏனைய மாயை கன்மங்கள் நீங்கப் பெறுதலாம். 'அவர்கள் இயற்கையாயுள்ள பிரளயாகலர், விஞ்ஞானகலரா தன்மையர் ஆதலல்லது, சிவமாம் தன்மையைப் பெறாமையால், ஆணவ வலியால் மீண்டும் சகலர் நிலையை அடைதல் கூடும்' என்பதாம். ஆயினும் 'இவ்இருவகையும் பக்குவ அபக்குவங்களை நோக்கிச் சிவனது அருட் சத்தியும், திரோதான சத்தியும் செய்யும் செயலேயாம்' என்பதும் 'திரோதான சத்தியின் செயலும் நோயாளிக்கு மருத்துவன் செய்யும் செயல்போலக் கருணை காரணமாக நிகழ்வதே' என்பதும் அறியத் தக்கன என்றபடி. சேரும் சிவம் - தம்மால் சேரப்பட்ட சிவம். சேர்தல் என்றபடி. சேரும் சிவம் - தம்மால் சேரப்பட்ட சிவம். சேர்தல் சிவத்தினது ஞானத்தாலே என்பது தோன்ற அடைபுணர்க்கப்பட்டது. ஆகவே, 'ஐம்மலம் தீர்ந்தவர் அந்த ஞானத்தைப் பெற்றுச் சிவம் ஆவர்' என்பதும், 'ஐம்மலத் தீராதவர் அந்த ஞானத்தைப் பெறார் ஆகலின் சிவத்தைச் சேர்ந்து சிவம் ஆக மாட்டாது பிறப்பை எய்துவர்' என்பதும் போந்தவாறு அறிக. 'பாரின்கண் பிறந்து' என ஒரு சொல் வருவிக்க.
இதனால், 'மலாவத்தை நீங்கப் பெறாதவர்க்குப் பிறப்பு அறாது' என்பதும், 'மலாவத்தை நீங்கி நின்மலாவத்தையை எய்தினோரே பிறப்பற்றவர் ஆவர்' என்பதும் ஒருங்கு வைத்து உணர்த்தப்பட்டன.

எய்தின செய்யும் இருமாயா சத்தியின்
எய்தின செய்யும் இருஞான சத்தியின்
எய்தின செய்யும் இருஞால சத்தியின்
எய்தின செய்யும் இறையருள் தானே. ***#2298***

ஏற்புடைய செயல்களை ஏற்குமாற்றால் செய்யும் இறைவனுடைய கருணை பரிக்கிரக சத்தியாகிய 'சுத்த மாயை, அசுத்த மாயை' என்னும் இரு மாயைகளின் ஆற்றலைக் கொண்டும், 'மந்தம, தீவிரம்' என்னும் இருவகை அருட் சத்தியைக் கொண்டும், கன்மத்தின் வழியாக, 'இன்பம், துன்பம்' என்னும் இரண்டை ஊட்டுகின்ற திரோ தான சத்தியைக் கொண்டும் அவ்வப்பொழுது ஏற்புடையவற்றைச் செய்யும்.

விளக்கவுரை

'எய்தினர்' என்பது பாடம் ஆகாமை அது பற்றி யெழுந்த உரைகளானேவிளங்கும். எய்தின - ஏற்புடையன. 'எய்தின செய்யும்' என்பது, சொற்பொருட் பின்வருநிலை அணியாய்ப் பலமுறை வந்தது. 'செய்யும்' நான்கில் ஈற்றில் உள்ளது எச்சம். ஏனையவை முற்று. இதனையும் முற்றாகக் கொள்ளின் இறையருள் எவ்வாற்றானும் ஏற்புடையனவே செய்யும்' என முடிக்க. இப் பொருட்டு 'இறையருள்' என்பது மட்டுமே முதலிற் கூட்டத்தக்கது. அருள்காரணமாக இறைவன் செய்வனவற்றை அருளே செய்வன போலக் கூறினார். 'பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை அணியுமாம் தன்னை வியந்து' என்றாற்போல. ஈற்றடியை முதலிற் கூட்டியுரைக்க. தான், அசைகள். ஞால சத்தி - ஞாலத்தை நடத்தும் சத்தி. ஞானசத்தி, ஞாலசத்தி இரண்டும் தாதான்மியமாய் உள்ள ஒரு சத்தியின் வகையேயாம். மந்ததரம் மந்தத்திலும், தீவிரதரம் தீவிதத்திலும் அடக்கி இரண்டாகக் கூறப்பட்டன.
இதனால், முன் மந்திரத்தில், 'ஆரும் கண்டு ஓரார் அவை அருள் என்றே' எனக் கூறியது இவ்வாற்றால் என விளக்கு முகத்தால் வலியுறுத்தப்பட்டது.

திருந்தினர் விட்டார் திருவில் நரகம்
திருந்தினர் விட்டார் திருவார் சுவர்க்கம்
திருந்தினர் விட்டார் செறிமலக் கூட்டம்
திருந்தினர் விட்டார் சிவமாய் அவமே. ***#2299***

ஆணவ மலத்தால் வளைக்கப்பட்ட கோணல் நீங்கி நேரான நிலையை அடைந்தோர் சிவமே ஆயினமையால், சுவர்க்கத்தை விரும்புதல், நரகத்திற்புகுதல், மாயை கன்மங்களின் குழாத்துள் இருத்தல், அவற்றால் பிறந்து இறந்தும், இறந்துபின் பிறந்து உழல்வதாகிய பயனில் செயல்களை உடையராதல் ஆகிய இவை அனைத்தையும் விட்டு நலம் பெற்றார்கள்.

விளக்கவுரை

'திருந்தனர்' என்பது எங்ஙனம் பாடம் ஆயிற்று என்பது தெரியவில்லை. 'திரு' என்றது இன்பத்தை - இன்பம் இன்மை, துன்பம் உண்மையைக் குறித்தது. 'திருந்தினர்' என்பவற்றோடெல்லாம், 'சிவமாய்' என்பதனைக் கூட்டி, 'விட்டார்' என முடிக்க. சொற்பொருட் பின்வரு நிலைஅணி. 'திருந்தியது முன் மந்திரத்திற் கூறிய ஞான சத்தியால்' என்க.
இதனால், மேற்கூறிய இறையருட் செயலால் உயிர்கள் அடையும் முடிநிலைப் பயன் கூறப்பட்டது.

அவமும் சிவமும் அறியார் அறியார்
அவமும் சிவமும் அறிவார் அறிவார்

அவமும் சிவமும் அருளால் அறிந்தால்
அவமும் சிவமும் அவன்அரு ளாமே. **#2300**

அவம் - பயன் இன்மை. பயனாவது நன்மையே, எனவே, 'அவம்' என்றது, 'நன்மை இன்மை' என்றபடி. அது தீமை உடையதாகவும் இருக்கலாம். சிவம் - நன்மை.

பகுத்தறிவில்லாதவர், 'இஃது அவம், இது சிவம்' எனப்பகுத் துணர மாட்டார். (ஆகவே, 'அவர் அவத்தைச் சிவமாக எண்ணி, அதனைப் பற்றிக்கொண்டு உழல்வர்' என்பதாம்). பகுத்தறி வுடையவர் அவற்றை நன்கு பகுத்துணர்வார். (ஆகவே 'அவர் அவத்தை விடுத்துச் சிவத்தைப் பற்றி நன்மையடைவர்' என்பதாம்). பகுத்தறிவு திருவருளால் வாய்ப்பது. அங்ஙனம் வாய்க்கப்பெற்று, அவத்தினையும், சிவத்தினையும் உள்ளவாறு உணர்ந்தால், பகுத்தறிவு இல்லாத பொழுது, 'உயிர் அவத்தில் உழன்றதும் சிவனது அருளால்தான் பின்பு அதனைவிடுத்துச் சிவத்தைப் பற்றியதும் சிவனது அருளால்தான் என்பது அனுபவமாய் விளங்கிவிடும்.

விளக்கவுரை

'அறிவு, அறிதல்' என்பன பகுத்தறிவையும் பகுத்தறிதலையுமே குறத்தமை, 'அவமும், சிவமும்' என்றதனால் விளங்கும். 'பகுத்தறிதற்கு அங்ஙனம் அறியும் அறிவு வாய்ப்பது திருவருளால்' என்றற்கு, 'அருளால்' என்றே கூறிப் போயினா ராயினும், 'அருளால் பெற்ற அறிவால்' என்பதே கருத்து. அவமும், சிவமும் அவன் அருளாதல் விளங்கும்பொழுது, 'முன்னையது பக்குவம் இன்மையின் அது வருதற்பொருட்டு இயற்றப்பட்டது' என்பதும் விலங்கும் என்பது கருத்து. அவம், மலாவத்தைகளும், சிவம், நின்மலாவத்தைகளும் ஆகும். இதனால், 'நின்மலாவத்தையே பயனுடையதாம்' என்பதும், 'அது திருவருளால் நிகழும்' என்பதும் கூறப்பட்டன.

அருளான சத்தி அனல்வெம்மை போலப்
பொருள்அவ னாகத்தான் போதம் புணரும்
இருள்ஒளி யாய்ஈண்டும் மும்மலம் ஆகும்
தருவரு ளாநந்தி செம்பொருள் ஆகுமே. **#2301**

['சிவன் அருள்' என்றும், 'சிவனது சத்தி' என்றும் சொல்லப்படுவது ஒருபொருளேயாகும். அதனால்,] அருளாகிய சத்தி, தீ பொருளாய் இருக்க, சூடு அதன் பண்பாய் அதன்கண் வேற்றுமையின்றியிருத்தல்போல, சிவம் பொருளாய் இருக்க, தான் அதன் பண்பாய் அதன்கண் வேற்றுமையின்றி யிருக்கும். அங்ஙனம் இருக்கும்பொழுது அறிவாகியேயிருக்கும். (இது சத்தியின் 'உண்மை' எனப்படும் சொரூபம்) அதுவே, 'ஆணவம், மாயை, கன்மம்' என்னும் மும்

மலங்களாயும் நின்று (உயிர்கள் சிவனை அறியாதபடி மறைக்கும். இந்நிலையில் அது, 'திரோதனகரி, திரோதாயி' - என்னும் பெயர்களைப் பெறும். இஃது அதன், 'பொது' எனப்படும் தடத்தம்) பின்பு அதுவே தனது உண்மையான அருளாகும்பொழுது, சிவன் உயிர்களுக்கு முன்போல மறைந்து நில்லாமல், இனிது விளங்கும் பொருளாய்த் திகழ்வான்.

விளக்கவுரை

'அருளது சத்தி யாகும் அரன்றனக்கு; அருளை யின்றித்
தெருள்சிவம் இல்லை; அந்தச் சிவம்இன்றிச் சத்தியில்லை'*1*
'ஏயும்மும் மலங்கள் தத்தம் தொழிலினைச் செய்ய ஏவும்
தூயவன் தனதோர் சத்தி திரோதான கரிய தென்றும்
ஆய்வர்'*8*
என்னும் சிவஞான சித்தியையும்,
'முயங்கி நின்று - (மலம்) பாகம் உற உதவு
திரோதாயி ஒன்று'
'நேராதல் மருவுங்கால், முன்
சினமருவு திரோதாயி கருணையாகித்
திருந்திய சத்தி நிபாதம் திகழும் அன்றே'*3*
என்னும் சிவப்பிரகாசத்தினையும் காண்க.
'போதமாய்' என ஆக்கம் விரிக்க. 'இருள் ஒளியாய் ஈண்டும் மும்மலம்' என்றது, 'இருளுக்கு ஒளிவந்து பொருந்துதலால், அதற்கு மேலும் கூடுகின்ற மும்மலங்களாய் நிற்கும்' என்றவாறு இருள் - ஆணவம். நான்காவது தொகுத்தலாயிற்று. 'இருளுக்கு ஒளி' என்பதைப் 'பிணிக்கு மருந்து'*3* என்றது போலக் கொள்க. 'ஒளியாவது மாயை' என்பது வெளிப்படை. ஆய் - ஆதலால். ஆதல் - பின்பு வந்து சேர்தல். ஈண்டுதல் - திரளுதல். எனவே, அவை கன்மம் ஆயின. மலங்களை ஏவுதலால், சத்தியமே மலமாக எண்ணப்பட்டது. 'திருவருள் ஆக' என்பது கடைக்குறைந்து நின்றது. 'திருவருளால்' என்பது பாடமாயின், 'அது திருவருள் ஆக, அதனால்' என உரைக்க. நந்தி - சிவன்.
'சத்தி புணரும்; முன் மந்திரத்தில் சுட்டப்பட்ட அருளின் நிலைமையெல்லாம் தெரித்துக் கூறப்பட்டன.

ஆதித்தன் தோன்ற அரும்பது மாதிகள்
பேதித்த தம்வினை யால்செயல் பேதிப்ப
ஆதித்தன் தன்கதி ரால்அவை சேட்டிப்பப்
பேதித்துப் பேதியா வா(று)அருட் பேதமே. ***#2302***

'படைக்கும் சத்தி, காக்கும் சத்தி, அழிக்கும் சத்தி' என இவ்வாறு சத்திகள் வேறு வேறாகச் சொல்லப்படினும், உண்மையில், அவை அனைத்துமா

ஒரு சத்தியின் பேதங்களே. அஃது எவ்வாறெனி ல் பூக்கள் அனைத்தும் ஒரு நிலையையே அடையாமல் பல நிலைகளை அடைகின்றன. (சில அரும்பாகவும், சில போதுக ளாகவும், சில மலர்களாகவும்,சில வாட்லகளாகவும் ஆகின்றன) அந்த வேறுபட்ட நிலைகள் அனைத்திற்கும் ஏற்பச் சூரியனது கதிர்கள்' என்னும் வகையில் ஒன்றேயாவது போல்வதாம்.

விளக்கவுரை

சிவசத்தியின் வேறுபாடு 'பிறவற்றை நோக்கிய வேறுபாடேயன்றித் தன்னிலே வேறுபட்ட வேறுபாடு அன்று' என்பதாம். 'அருட் பேதம்' என்பதை முதலில் வைத்து, 'பேதித்துப் பேதியாவாறு' என முடிக்க. 'தம்' என்பதனை, 'செயல்' என்பதனோடும் கூட்டுக. 'வினை' என்பது, அது நிகழ்தற்கு ஏதுவாகிய பக்குவத்தைக் குறித்த ஆகுபெயர். 'பேதிப்ப' என்பதில் உள்ள 'பேதித்தல்' என்னும் செயலின் வினை, செயலையுடைய பதுமாதிகள் மேல் ஏற்றப்பட்டது. சேட்டித்தல் - செயற்படுத்தல். 'ஆதித்தன்' இரண்டில் பின்னது 'அவன்' என்னும் சுட்டுப் பெயரளவாய் நின்றது. 'பேதித்துப் பேதியவாறு' என்னும் பயனிலைக்கு. 'அக்கதிர்கள்' என்னும் எழுவாய் வருவிக்க.
'அருட் பேதம், ஆதித்தன் தோன்றப் பது மாதிகள் செயல் பேதித்து நிகழும்படி அவனது கதிர்கள் செயற்படுத்துமிடத்து அக்கதிர்கள் பேதித்தும் பேதியாவாறு' என வினை முடிவு செய்க.
இதனால், முன் மந்திரத்தில் சத்தி பலவாதல்போலக் கூறப் பட்டமை பற்றி, 'சத்திகள் பலவோ' என எழும் ஐயம். 'சத்தி செயல் பற்றிப் பலவாகச் சொல்லப்படுகின்றதேயன்றி, உண்மையில் பலவன்று. 'ஒன்றே' எனஅபதை உவமையால் கூறித் தெளிவிக்கப்பட்டது.

பேதம் அபேதம் பிறழ்பேதா பேதமும்
போதம் அபோதம் புணர்போதா போதமும்
நாதம் அநாத முடன்நாதா நாதமும்
ஆதல் அருளின் அருளிச்சை யாமே. *#2303*

'சிவனது அருள்' எனப்படும் சத்தி, உலகுயிர் களோடு பொருள் தன்மையால் வேறாய் நின்று அவற்றை அறிவித்தும், இயக்கியும் நிற்றல், அவ்வாறு நிற்பினும் தான் அவற்றின் வேறாய்த் தோன்றாது ஒன்றேயாய் நிற்றல் என்னும் இவ்வகைகளால் ஒரு வகையில் பேதமாயும், பிறிதொரு வகையில் அபேதமாயும் இருத்தலும், மலங்களை நீக்குதலால் உயிர்களின் அறிவை விளக்கு தலால் அறிவாயும், மலங்களைச் செலுத்துதலால் அவற்றின் அறிவை மறைத்து அறியாமையாயும் இவ்வகைகளால் ஒருவகையில் அறிவாயும், பிறிதொரு வகையில் அறியாமையாயும், நாதத்தை எழுப்புதலால் நாத

மாயும், அதனை ஒடுக்குதலால் நாதம் இல்லதாயும் இவ் வகை களால் ஒரு வகையில் நாதமாயும், பிறிதொரு வகையில் நாதம் இல்ல தாயும் இவ்வாறெல்லாம் பேதப்பட்டு நிற்றல் அதன் இச்சையாலேயாம்.

விளக்கவுரை

இம்மந்திரத்துள் இரண்டாம் அடியில் பாடம் பெரிதும் திரிபு பட்டுள்ளது. மற்றும் திரிபுகள் உள. 'பேதா பேதம், போதா போதம், நாதாநாதம்' என்பன அன்மொழித் தொகையாய், 'இரண்டும் அல்லாத வேறொன்று' எனப்பொருளஅ தாராமல், உம்மைத் தொகையாய் இரண்டையும் குறித்துநின்றன. நாதம் - மொழி. 'அருள்' இரண்டில் பின்னதை முதலிற்கூட்டி, 'அருளின்' என்பதற்கு, 'அதன்' எனப் பொருள் உரைக்க. அருளையுடைய சிவனது இச்சையை ஒற்றுமை பற்றி அருளது இச்சையேயாகவும், இச்சைப்படி நிகழ்வனவற்றை இச்சையாகவும் உபசரித்துக் கூறினார்.

இதனால், 'சத்தியினது பேதங்கள் அது தானாகவே ஆக்கிக் கொள்வன அன்றிப் பிறிதொன்றால் ஆக்கப்படுவன அல்ல' என்பது கூறப்பட்டது. 'சத்திதான் பலவோ என்னில், தான் ஒன்றே. அனேகமாக வைத்திடும், காரியத்தால்' என்பது சிவஞான சித்தி.*l*

மேவிய பொய்க்கிரி ஆட்டும் வினையெனப்
பாவிய பூதங்கொண் டாட்டிப் படைப்பாதிப்
பூவியல் கூட்டத்தால் போதம் புரிந்தருள்
ஆவியை ஆட்டும் அரன்அரு ளாமே. ***#2304***

மனிதன் ஒருவன், யானைபோலப் பொய்யாகச் செய்யப்பட்ட பொறியினுட் புகுந்து மறைந்து கொண்டு, அதனை உயிருடையது போலப் பலவகையில் இயங்கச் செய்யும் செயல்போல, அருள் மாயையின் காரியமாய்ப் பரந்து விரிந்த உலகினுள் மறைந்து நின்று அதனைப் பலவகையாக இயங்கச்செய்து, அதனானே உயிரினது அறிவைப் படைத்தல் முதலிய தொழில்களால் பலவாறாக விளங்குவித்து, அவ் இயக்கத்துட்பட்டு அலமரச் செய்யும். 'அருள்' எனப்படுவது சிவனது அருளே.

விளக்கவுரை

கரி - யானை. அதனை ஆட்டுதல் வினைக்கு வினை முதல் ஆற்றலால் பெறப்பட்டது. 'பொய்யானையின் இயக்கத்தை அதனது இயக்கமாகவே எண்ணிச்சிறுபிள்ளைகள் பலவகை உணர்ச்சிகளை அடைதல்போல, உலகத்தின் இயக்கத்தை அதனது இயக்கமாகவே கருதி, அறிவில்லாதவர் பலவகை உணர்ச்சிகளை எய்துகின்றனர்' என்பது உவமையால் போந்த பொருள். அத்தகைய உணர்ச்சிகளைத்

தோற்றுவித்தலையே, 'போதம், புரிந்து' என்றார். 'அருள்' என்பதை முதலிற்கூட்டுக. 'பூதம்' என்பது உபலக் கணத்தால் 'பூதம் முதலியவை' எனவும், 'பூ' என்பது, மண் முதலியவை' எனவும் பொருள் தந்தன. 'படைப்பாதியால்' என உருபு விரிக்க. 'இயல் கூட்டத்தால்' என்றாரேனும், 'கூடிய இயலால்' என்பது கருத்து. இயல் - இயலல்; இயங்குதல். முதனிலைத் தொழிற்பெயர். 'அஃது அரன் அருளாமே' என, எழுவாய் வருவித்துரைக்க. இதனை எடுத்துக் கூறியது, 'பிறகடவுளரது அருள்கள் அல்ல' என்பது உணர்த்தி, 'அவர்களது செயல்களும் அரன் அருளே' என வலியுறுத்தற் பொருட்டு.
இதனால், 'எல்லாம் திருவருட்செயலே' என்பது விளங்காமை அறியாமையால் என்பகு கூறப்பட்டது.

ஆறா றகன்று தனைஅறிந் தான்அவன்
ஈறாகி யாவினும் யாவும் தனில்எய்த
வேறாய் வெளிபுக்கு வீடுற்றான் அம்மருள்
தேறாத் தெளிவுற்றுத் தீண்டாச் சிவம்ஆமே. ***#2305***

'தத்துவம் முப்பத்தாறினுள் ஒன்றேனும் தான் அல்லன்' எனத் தெளிந்து, அவைகளை, 'தான்' என மயங்கும் மயக்கத்தினுள் நீங்கினவன் எவனோ அவனே, அவற்றிற்கு வேறாகி, மேலே உள்ள பரவெளியை அடைந்து வீடு பெற்றவனாவன் அந் நிலையில் முன்பு இருந்த மயக்கம் நீங்கித் தெளிவு பெற்று, எளிதில் அணுக இயலாத சிவத்தை அடைந்து அதுவேயாவன், அதுவே அவன் அடையவேண்டிய இறுதி நிலையாகும். அந்நிலையில் சிவனைப்போல இவனும் வியாபகமாய், ஏனை எல்லாப் பொருள்களும் தன்னில் வியாப்பியமாய் நிற்க விளங்குவான்.

விளக்கவுரை

'ஆகி எய்த' என்றது, 'ஆகி எய்துதற் பொருட்டு' என்றது ஆகலின், அஃது இறுதியில் வைத்து உரை கூறப்பட்டது 'வீடு' என்றது, வீட்டின்பத்தை. தேறா - தேறி. மருள்தேறுதலாவது, மருளின்றும் நீங்கித் தெளிவையடைதல். பின்னும், 'தெளிவுற்று' என்றது, 'அத்தெளிவு நிலைபெறப் பெற்று' என்றபடி. தீண்டாச் சிவம் - பற்றுதற்கரிய சிவம். இதனால் மேல், 'திருவருள் செய்வனவாகச் சொல்லப்பட்ட செயல்களில் இறுதியாக உயிர் பயனடைதல், இவ்வாறான நின்மலாவத்தையில்' என்பது கூறப்பட்டது.

தீண்டற் கரிய திருவடி நேயத்தை
மீண்டுற் றருளால் விதிவழி யேசென்று
தூண்டிச் சிவஞான மாவினைத் தான்ஏறித்
தாண்டிச் சிவனுடன் சாரலும் ஆமே. ***#2306***

அடைதற்கரிய சிவபத்தியைப் பொதுவாகத்தான் அறிந்த முறையில்

அடைந்து ஒழுகிய ஒருவன் பின்பு கிரியா குருவின் அருளால் சிறப்பாக அதனை அடைந்து, அவர் அறிவுறுத்த முறை யிலே சிவதன்மத்தில் ஒழுகிச் சிவயோகத்திலும் பயின்று, அதன் பயனாகப் பின்பு சிவஞானமாகிய யானையின்மீது ஏறிச் செலுத்தி, மும்மாயை களையும் தாண்டிச் சென்று, அப்பால் உள்ள சிவனோடு கூடுதலும் கூடும்.

விளக்கவுரை

'மீண்டு உற்று' என்றதனால், முன்பு ஒரு முறை உற்றிருந்தமை பெறப்பட்டது. நூல்வழியாகவும், காட்சி வழியாகவும் அவரவர் தாம் தாம அறிந்தவாற்றால் சிவ பத்திகொண்டு சிவதன்மங் களில் ஒழுகுதலால் வரும் சிவபுண்ணியம், பொதுச் சிவபுண்ணியமும், குரு அருளால் அறிந்து அவற்றில் முறைப்படி ஒழுகுதலால் வரும் சிவ புண்ணியம் உண்மைச் சிவ புண்ணியமும் ஆகும். பொதுச் சிவ புண்ணியம் உண்மைச் சிவ புண்ணியத்தைத் தர உண்மைச் சிவ புண்ணியமே உண்மைச் சிவ ஞானத்தைத் தரும். உண்மைச் சிவ ஞானமே சிவமாம் தன்மையைப் பயக்கும். இம்முறையையே இம்மந்திரம் கூறுமாறு அறிக.
சரியை, கிரியை இரண்டும் 'சிவ தன்மம்' என ஒன்றாகவும் சொல்லப்படும் என்பதை,
'நல்லசிவ தன்மத்தால், நல்லசிவ யோகத்தால்,
நல்லசிவ ஞானத்தால் நான் அழிய - வல்லதனால்'*
என்னும் திருக்களிற்றுப்படியாரால் விளங்கும்.
'நேயத்தை அருளால் மீண்டு உற்றுச் சென்று ஏறித்தூண்டித் தாண்டிச் சாரலும் ஆம்' என வினைமுடிக்க. 'மா' என்பது காட்டு விலங்குகள் அனைத்திற்கும் பொதுவான பெயர். 'பாய்மா, பரிமா' என்பன குதிரையைக் குறிக்கும் சிறப்புப்பெயர். 'அரிமா' என்பன சிங்கத்தைக் குறிக்கும் சிறப்புப் பெயர். 'கைம்மா' என்பது யானையைக் குறிக்கும் சிறப்புப் பெயர். எனவே, இங்கு, 'மா' என்னும் பொதுப்பெயர், இடம் நோக்கிக் கைம்மாவைக் குறித்தது. அது, ஞானம், எவ்விடத்திலும் யானையாக உருவகப்படுத்துதலே மரபாதலால் விளங்கும். உம்மை, உயர்வு சிறப்பு.
இதனால், 'தவம், ஞானம்' என்னும் இரண்டுமே குரு வருளால் எய்தற்பானவாய், ஞான நிகழ்ச்சியே நின்மலாவத்தை யாதல் கூறப்பட்டது.

சார்ந்தவர் சாரணர் சித்தர் சமாதியர்
சார்ந்தவர் மெய்ஞ்ஞான தத்துவ சாத்தியர்
சார்ந்தவர் நேயம் தலைப்பட்ட ஆனந்தர்
சார்ந்தவர் சத்த அருள்தன்மை யாரே. ***#2307***

முன் மந்திரத்தில், 'சிவனுடன் சாரலும் ஆமே' எனக்கூறிய சார்ச்சி,

'சரியை, கிரியை, யோகம், ஞானம்' என நால்வகைப் படுதலால், அவ்வம்முறையால் சிவனைச் சார்ந்தவர் முறையே. 'சாரணர், சித்தர், சமாதியர், சாத்தியர்' என நிற்பர். எனினும் இறுதியில் சொல்லப்பட்ட சமாதியரே சிவானந்தத்தை அடைந்தவர். அவரே நிலையான அருள் தன்மையைப் பெற்றவரும் ஆவர்.

விளக்கவுரை

சாரணர் முதலிய மூவரும் சிவலோகத்தில் இருக்கும் நிலைபற்றி அப்பெயர்களால் கூறப்பட்டன. சாரணர் - எங்கும் சென்று உலாவி வருபவர். 'ஒருவர் இல்லத்தில் பணி புரியும் பணியாளர் அவ் இல்லத்தில் எங்கும் செல்லும் உரிமையுடையர் ஆதல்போலச் சிவ லோகத்தில் எங்கும் செல்வபர்' என்றபடி. இதுவே 'சாலோக பதவி' எனப்படுகின்றது. இப்பதவி இத்தகையதாதல் பற்றியே இதனைத் தரும் சரியைத் தொண்டு, 'தாச மார்க்கம்' அல்லது, 'தொண்டர் நெறி' எனப் பட்டது. சித்தர் - சிறப்புப் பயன் கிடைக்கப் பெற்றவர். 'சிவ லோகத்தில் சிவனுக்கு அணுக்கராய் இருக்கும் சிறப்புரிமை பெற்றவர்' என்றவாறு. இதுவே 'சாமீபபதவி' எனப்படுகின்றது. இப்பதவி இத்தகைத்தாதல் பற்றியே இதனைத் தரும் கிரியைத் தொண்டு, 'சற்புத் திரமாரக்கம்' அல்லது 'மகன்மை நெறி' எனப்பட்டது. சமாதியர் - சிவனுக்குச் சமமானவர். 'சிவலோகத்தில் சிவனது உருவத்தைப் போன்ற உருவத்தையே பெற்றிருப்பவர்' என்றபடி. இதுவே 'சாரூப பதவி' எனப் படுகின்றது. இப்பதிவி இத்தகையதாதல் பற்றியே இதனைத் தரும் யோகப் பயிற்சி, 'சகமார்க்கம்' அல்லது 'தோழமை நெறி' எனப்பட்டது. இவை மூன்றுமே பத முத்திகளாம். சாத்தியர் - சாத்தியத்தை, அஃதாவது தமது கிறிக்கோளை அடைந்துவிட்டவர். இவரை 'மெய்ஞ்ஞான தத்துவர்' என எடுத்துக்கூறியதனால், 'முன் சொல்லப்பட்ட மூவரும் மெய்ஞ்ஞானத்திற்குரிய படிகளில் நின்றவர்' என்பது பெறப்பட்டது. குறிக்கோள், சிவனோடு இரண்டறக் கலந்து, மீண்டுவாரா நிலைமையில் இருத்தல். அந்நிலையே ஆனந்த நிலையுமாம் ஆதலின், ஆனந்தத்தைப் பெறுதலும் குறிக்கோளாயிற்று. 'சத்த அருள்' என்பது, 'வெண்மைய ஆடை' என்பதுபோல வினைக் குறிப்பு பெயரெச்சத்தொடர் 'தத்துவம்' என்பதபல பொருட்கட்கு உரியதாகச் சொல்லப்படுதலால், இங்குச் சொல்லப்படும் தத்துவம், 'மெய்ஞ் ஞான தத்துவம்' என்றார். 'மெய்ஞ் ஞானமாகிய தத்துவம்' என்றபடி. 'முன் மந்திரத்திற் சொல்லிய சார்ச்சி வகையை உடையவர் நால்வகையினர்' என்றற்குச் 'சார்ந்தவர்' என்பதை எழுவாயாக வைத்துக் கூறினார். சொற்பொருட் பின்வரு நிலையணி வந்தது. இங்குக் கூறிய சமாதி, 'அநாதிக்குச் சமமாக எண்ணப்படும் ஆதி' என்க.

இதனால், 'சிவனைச் சாருமுறையும், அம்முறைகளால் அடையும் பயன்களும் நால்வகையினவாம்' என்பது உணர்த்தும் முகத்தால் 'இறுதியிற் கூறிய பயன்நின்மலாவத்தையாலே உளதாம்' என்பது கூறப்பட்டது.

தான்என் றவன்என் றிரண்டென்பர் தத்துவம்
தான்என் றவன்என் றிரண்டற்ற தன்மையால்
தான்என் றிரண்டுன்னார் கேவலத் தானவர்
தான்இன்றித் தானாகத் தத்துவ சுத்தமே. ***#2308***

(உண்மையுணர்ந்தோர்) 'அறிபவனும், அறியப் படுபவனும் - என உள்பொருள் இரண்டு' எனக்கூறுவர் ஆயினும் அவ்விரண்டு பொருளும் எஞ்ஞான்றும் வேறுநில்லாது உடலும், உயிரும் போல ஒன்றாகியேயிருத்தலால், பாசமாகிய அசுத்தத்தின் நீங்கினோர், அறியப்படுபவனை யறிதலோடு அறிபவனையும் அறிதலாகிய இரண்டறிவையுடையராகாது, அறியப்படுபவனை மட்டுமே அறிதலாகிய அந்த ஓர் அறிவை மட்டுமே உடையவராய் இருப்பர் அவ்வாறிருத்லே நிறைவான சுத்த நிலையாகும்.

விளக்கவுரை

உடலும், உயிரும் வேறு நில்லாமையே பற்றி, 'அவ்விரண்டனுள் ஒன்றே உள்ளது; மற்றொன்று இல்லை' எனக் கூறுதல் அறியாமையுடையாரது கூற்றாதல்போல, அறிவானும், அறியப்படுபவனும் வேறு நில்லாமையே பற்றி, 'அவ்விருவருள் ஒருவனே உளன்; மற்றொருவன் இல்லை' என்றல் அறியாமை யுடையவரது கூற்றாய்விடும் - என்பது உணர்த்துதற்கு. 'தான் என்று, அவன் என்று தத்துவம் இரண்டு என்பர்' எனவும், 'ஆயினும், அறிபவனது அறிவை அறியப் படுபவனிடத்தே நிலைத்து நில்லாத -வாறு அகற்றி, 'தான்' என்றும், இவ்வாறெல்லாம், 'யான், எனது - பிறர், பிறரது' என மயங்கி உழலச் செய்வது மல சத்தியேயாகலின் அச்சத்தி முழுவதுமாக நீங்கப் பெற்றவர் அங்ஙனம் பலதலைப்படும் அறிவுடையராகாது, 'அவனே' என அறியும் அந்த ஒருதலைப்பட்ட அறிவையே உடையராய் இருப்பர்' - என்பது உணர்த்துதற்கு 'கேவலத்து ஆனவர்தான் என்று இரண்டு உன்னார்' எனவும், அவ்வாற்றால், அறிபவன் அறியப்படுபவனேயாய் நிற்றலே மலம் முழுவதுமாக நீங்கிய நிறைவான சுத்த நிலை - என்பது உணர்த்துதற்கு, 'தான் இன்றித் தான் ஆகத்தத்துவ சுத்தமே' எனவும் கூறினார்.
ஈற்றடியில் உள்ள 'தான்' இரண்டில் முன்னது அறி -பவனையும், பின்னது அறியப்படுபவனையும் குறித்தன. தன்மையை என்பது பாடம் அன்று 'கேவலம்' என்றது. கலப்பின் நீங்கி நிற்றலைக் குறித்தது.

'தத்துவம்' இரண்டில் முன்னது, 'உள்ளது, என்றும், பின்னது 'உண்மை' என்றும் பொருள் பயந்தன. 'சுத்தம்' என்பதன் பின், 'ஆம்' என்பது எஞ்சி நின்றது. ஏகாரம் தேற்றம். உண்மைச் சுத்தத்தை அதைற்குச் சகலத்திற் சுத்தமாகிய நின்மலா வத்தையை அடைதல் வேண்டும்' என்பது கருத்து. அதனுள்ளும் சிவயோக நிலையே இங்கு வலியுறுத்தப்பட்டது.
மெய்கண்ட தேவரும் இவ்வாறே,
'நான் அவன்என்(று) எண்ணினர்க்கும் நாடும் உளம் [உண்டாதல்,
தான்எனஒன்(று) இன்றியே, தான் அதுவாய் - நான்என ஒன்(று)
இல்என்று தானே எனும்அவரைத் தன்அடிவைத்(து)
இல்என்று தான்ஆம் இறை' *l*
என அருளினமை காண்க.
இதனால், நின்மலாவத்தையின்றிப் பராவத்தையை எய்துதல் கூடாமை உணர்த்தப்பட்டது.

தன்னினில் தன்னை அறியும் தலைமகன்
தன்னினில் தன்னை அறியின் தலைப்படும்
தன்னினில் தன்னை அறிகில னாயிடில்
தன்னினில் தன்னையும் சார்தற் கரியனே. *#2309*

('என்னை உடையானாகிய தலைவன் எங்குளன்' எனப்புறத்தே பலவிடத்துத் 'தேடியும் தேடொணாத் தேவனாய்' உள்ள சிவனை, 'இனி என்னுள்ளேதான் நான்தேட வேண்டும்' என உணர்ந்து, அவ்வாறே) அவனைத் தன்னுள்ளே அறிய முயல்கின்ற பெருமகன் அம்முயற்சியில் உறைத்து நிற்பனாயின், அவனைத்தான் அடைந்துவிடுவான். அம்முறையில் அவன் தன்னுள்ளே தேட முயலாது, புறத்திற்றானே தேடிக் கொண்டிருப்பானாயின், அவன் சிவனைத் தன்னுள்ளேயும் அடைதற்கு அறியவனாகியேயிருப்பான்.

விளக்கவுரை

'சிவனைப் புறத்தே தேடாது தன்னுள்ளே தேடி அடைவதுதான் நின்மலாவத்தை' என்பது குறிப்பு.
'தேடிக் கண்டுகொண்டேன்;திர மாலொடு நான்முகனும் தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்'* என நாவரசர் அருளிச்செய்தமையை இங்கு உன்னி உணர்க. மற்றும் அவர் இத்திருமந்திரத்தை 'முன்னோர் மொழி பொருளேயன்றி, அவர்மொழியும் - பொன்னேபோல்போற்றும்' வகையில் (நன்னூற் பாயிர உரைமேற்கோள்) தமது 'சித்தத் தொகை'த் திருக்குறுந்தொகையில் எடுத்தருளிச் செய்தமையும் உணரற்பாற்று. இதனானே, உண்மைப் பாடங்களும் சில விளங்கும். யாப்புக்கேற்பன கொள்ளப்படும். எனவே முன்பு, 'தேடிக் கண்டுகொண்டேன்' என்னும்

திருப்பாடலும் இதனையே இனிது விளக்கியதாயிற்று. 'தன்னினில்' என்பவற்றில் இன்னுருவோடு ஒத்த இல்லுருபு இன் சாரியை பெறுதல் சிறுபான்மை இலேசினால் கொள்ளப்படும். *l* உம்மையை மாற்றிவைத்துரைக்க.

இதனால், நின்மலாவத்தையே சிவனை அடையும் வழியாதல் வயியுறுத்தப்பட்டது.

அறியகி லேன்என் றரற்றாதே நீயும்
நெறிவழி யேசென்று நேர்பட்ட பின்னை
இருசுட ராகிய இயற்றவல் லானும்
ஒருசுட ராய்வந்தென் உள்ளத்துள் ளானே. ***#2310***

மாணவகனே, குருவருள் பெறாத மற்றவர் -களைப்போல நீயும் இராக் கதிரிபோலச் சிறிதறிவைத் தருபவனாயும், பகற் கதிர்போலப் பேரறிவைத் தருபவனாயும் இருந்து எல்லா வற்றையும் செய்கின்ற சிவனைப் புறத்தெல்லாம் தேடி, 'ஐயோ!' சிவனைக் காணமுடியவில்லையே' என்று கதறி அழாதே. ஏன் எனில், அவனை அகத்தே அறிதலாகிய அந்த நெறியைப் பற்றி, அதிலே சென்ற பொழுது அவன் எனக்குக் கிடைத்தான். அதன்பின் அவன் முன்போல இருசுடராய் இல்லாமல் பகற் கதிராகிய ஒரு சுடரேபோலத் தோன்றி, அந்நிலையினின்றும் மாற்றம் சிறிதும் இன்றி, என் உள்ளத்துள் நீங்காதிருக்கின்றான்.

விளக்கவுரை

'நீயும் அந்நெறியிலே சென்றால் தவறாமல் அவனை அடைவாய்' என்பது குறிப்பெச்சம். 'அகத்தே அறியும் நெறியே நின்மலாவத்தை' என்பது மேலே குறிக்கப்பட்டது. 'வழியே' என்றது, 'பிறழாது பற்றி' என்றபடி. 'நேர்பட்ட பின்னை' என்ற அனுவாதத்தால், நேர்பட்டமை தானே பெறப்பட்டது. உம்மை சிறப்பு. சிறிதறிவைத் தருதல் திரோதான சத்தியால், பேரறிவைத் தருதல் அருட்சத்தியால். இவையே பெத்த முத்தி நிலைகளாம். ரகாரவகையால் எதுகை ஒன்றிற்று.

இதனால், நின்மலாவத்தையை எய்தாது வருந்தும் மாணாக்கன் மேல் இரக்கங்கொண்டு, அதனை அடையுமாறு அறிவுறுத்தப்பட்டது.

மண்ணொன்று தான்பல நற்கலன் ஆயிடும்
உண்ணின்ற யோனிகட் கெல்லாம் ஒருவனே
கண்ணொன்று தான்பல காணும் தனைக்காணா
அண்ணலும் அவ்வண்ண மாகிநின் றானே. ***#2311***

குடம், சால், சாடி முகலாகக்கலங்கள் பல வகையால் இருப்பினும் அவை அனைத்திலும் ஒருமண்ணே பொருந்தியிருத்தல் போலப் பிறப்பு வகையால் உயிர்களின் அறிவு பல்வேறு வகைப்பட்டிருப்பினும் ஒரு

பேரறிவாகிய சிவன் அவை அனைத்தின் அறிவினுள்ளும் இருக்கின்றான், அங்ஙனமாயினும், கண் எல்லாப் பொருளையும் பார்க்க. பார்க்கப்பட்ட பொருள்கள் கண்ணைப் பாராததுபோல, அறிவுக்கறிவாய் உள்ள சிவன் அனைத்துயிர்களையும அறியினும் அவ்வுயிர்களுள் ஒன்றேனும் அவனை அறிதல் இல்லை.

விளக்கவுரை

இதனுள் முதலிற்போந்த உவமை, ஒருவனே பலவற்றில் இருக்கும் அளவிற்குக் கூறிய ஒருபுடை எடுத்துக்காட்டு உவமை. மற்றுக் காரிய காரணங்களைப் பற்றியதன்று. 'பலவற்றை' என உருபு விரிக்க. 'குடம் முதலியனை கண்ணைக் காணாமை மட்டும் அன்று; தம்மையும் மட்டும் அன்று; தம்மையும் தாம் அறிவதில்லை' என்பதனையும் பின்னர்க் கூறிய உவமையால் உடன்கொள்க.

'காட்டிய கண்ணே தனைக்காணா, கண்ணுக்குக்
காட்டிய உள்ளத்தைக் கண்காணா - காட்டிய
உள்ளம் தனைக்காணா; உள்ளத்தின் கண்ணாய
கள்வன்தான்; உள்ளத்திற் காண்'*7*
'காணொணா கர ணங்களுக்குயிர்
கண்டி டாமையின் இன்றெனின்,
காணுமோ கடம் கண்ட கண்ணினைக்
கண்டு நிற்பதும் கண்ணதே'*8*
எனவும் போந்த சாத்தர மொழிகளைக் காண்க.

'ஒருவனே' என்பதன் பின் 'அறிவாய் உளன்' என்பது வருவிக்க. உள்நின்ற - உலகத்துள் நின்ற யோனிகள். ஆகுபெயர். வண்ணம் - நிலைமை. நிலைமையனை 'நிலைமை' என்றதும் ஆகுபெயர். 'அண்ணலும்' என்னும் உம்மை, உவமையைத் தழுவிநின்ற எச்ச உம்மை.

இதனால், 'மேற்கூறியவாறு ஒருவனே எல்லா உயிர்களின் அகத்திலும் நிற்றல் எங்ஙனம்' என்னும் ஐயம் தெளிவிக்கப்பட்டது.

ஓம்புகின் றான்உல கேழையும் உள்நின்று
கூம்புகின் றார்குணத் தின்னொடுங் கூடுவர்
தேம்புகின் றார்சிவம் சிந்தைசெய் யாதவர்
கூம்புகின் றார்வந்து கொள்ளலும் ஆமே. ***#2312***

ஏழுலகத்தில் உள்ள உயிர்களையும் சிவன் ஒப்ப நோக்கித்தான் அவற்றின் உள்நின்று காத்து வருகின்றான். (என்றாலும், சிலரே அதனை யுணர்ந்து, ஏனையவற்றைப் பற்றாது விடுத்து அவனிடத்திலே சென்று அடங்குகின்றனர். அங்ஙனம் அடங்கினவர்கள் சிவனது எண்குணங்களையும் தாங்களும் உடையவராவர். பலர் அவ்வாறு

உணர்ந்து சிவனை அடைதல் இல்லை. அங்ஙனம் அடையாதவர்கள் உலகியலில் சிக்கித் துன்புறுகின்றனர். சிவனை அடைந்து அடங்காதவர்கள் சிவனது குணத்தைப் பெறுதலும் கூடுமோ! (கூடாது).

விளக்கவுரை

'சிவம்' எனப்பின்னர் வருதலால் 'ஓம்புபவன் சிவன்' என்பதும் குணம் அவனுடையன என்பதும் போந்தன; ஓம்புதலை எடுத்துக் கூறினமையால், ஒப்ப நோக்குதல் பெறப்பட்டது. 'ஓம்புபவன் ஒப்ப நோக்கினும் ஓம்பப்படும் உயிர்கள் பக்குவ பேதத்தால் பயன் பெறுதலில் வேறுபடுகின்றன, என்பதாம். ஆகவே, 'அனைவரும் ஒருகாலத்திற்றானே நின்மலாவத்தை எய்தார்' என்பதாம் 'சென்று' எனற்பாலதனை, 'வந்து' என்றது இடவழுவமைதி 'அக்குணம் கொள்ளலும் ஆமே' என்க. உம்மை சிறப்பு. ஏகார வினா, எதிர்மறை உணர்த்தி நின்றது. சிவனது எண்குணங்களாவன; தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்ற லுடைமை, வரம்பிலின்ப முடைமை* இவைமுறையே சுதந்திரத்துவம், விசுத்ததேகம், நிராமயானமா' சருவஞ்ஞுத்துவம்,அநாதி முத்தத்தன்மை, அலுத்த சத்தி. அநந்த சத்தி, பூர்த்தி' என வடமொழியில் சொல்லப்படும்* அலுத்த சத்தி, 'குறைவில்லாற்றல் உடைமை' என்றும் சொல்லப்படும். பூர்த்தி, 'திருத்தி' என்றும் சொல்லப்படும். அநாதி முத்தத்தன்மை 'அநாதி போதம்' என்றும் சொல்லப்படும். சிவனைச் சேர்ந்தார். 'என் குணத்துளோமே'l எனக்கூறுமாறு காண்க.
இதனால், அனைவரும் பக்குவபேதத்தால் ஒருங்கே நின்மலாவத்தையை எய்தாமை கூறப்பட்டது.

குறியறி யார்கள் குறிகாண மாட்டார்
குறியறி யார்கடம் கூடல் பெரிது
குறியறி ஆவகை கூடுமின் கூடில்
அறிவறி வாய்இருந்*(து)* அன்னமும் ஆமே. *#2313*

'குறிக்கொளத் தக்கது இது' என அறியாதவர்கள் அதனை அடைதல் எங்ஙனம் கூடும்? (கூடாது) அவர் உடம்பிற் கட்டுண்டு நிற்குங் காலம் பெரிதாகும். ஆகையால், நீவிர், 'குறிக்கொள்ளத் தக்க பொருள் இது' என்பதை அறிந்து, பின்பு அதுவே யாகும்படி பொருந்தி நில்லுங்கள். நின்றால், உங்களுடைய அறிவு அறிவாய் இருக்கும். வீட்டின்பமும் சித்திக்கும்.

விளக்கவுரை

குறி - குறிக்கப்படும் பொருள். முதனிலைத் தொழிற் பெயர்

ஆகபெயராய்ச் செயப்படுபொருளை உணர்த்திற்று. காணுதல், இங்கு, 'அடைதல்' எனத்தன்காரியம் தோற்றி நின்றது. கூடல், அதற்குரிய காலத்தைக் குறித்த ஆகுபெயர். என் வினையெச்சப் பொருள் தந்தது. 'வரிப்புனை பந்து', என்பதிற்போல. 'ஆவகை', வினைத்தொகை. அன்னம் - சோறு. அது, 'பாதகமே சோறு பற்றினவா' என்பதிற்போல நின்றது உம்மை, சிறப்பு.

இதனால், 'உயிர் குறிக்கொளத் தக்க பொருள் சிவமே யாதலின், அதனை நின்மலாவத்தையால் அடைதல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

ஊனோ உயிரோ உறுகின்ற தேதின்பம்?
வானோர் தலைவி மயக்கத் துறநிற்க
யானோ பெரிதறி வேன்என்னும் மானுடன்
தானோ பிறப்போ டிறப்பறி யானே. *#2314*

உயிர் உடம்பொடு கூடி நிற்கும் நிலையில் வருகின்ற இன்பத் துன்பங்களை நுகர்வது உடம்பா? உயிரா? இதனை எண்ணிப் பார்த்து உண்மையை உணரமாட்டாமல் திரோதான சத்தியால் வரும் மயக்கத்திலே இருந்து கொண்டு, 'யான் உண்மையைநன்கறிவேன்' என்றுசொல்கின்ற மனிதன்தான் பிறந்ததாகிய 'பிறப்பு' என்பதும், பின்பு இறக்கப்போவதாகிய 'இறப்பு' என்பதையுமே 'இன்ன' என அறியமாட்டான்.

விளக்கவுரை

'மற்ற உண்மைகளை எங்ஙனம் அறிவான்' என்பது இசையெச்சம். 'இன்பம் உறுகின்றது ஏது? என மொழி மாற்றியுரைக்க. 'ஏது' என்பது, 'யாது' என்பதன் மரூஉ, சிறப்புப்பற்றி இன்பமே கூறப்பட்டதாயினும் துன்பமும் உடன்கொள்ளப்படும். 'யான் சுகிக்கின்றேன்; துதிக்கின்றேன்' என உணரும்பொழுது யான்' எனப்படுவது உடம்பின் வேறாகிய உயிரே; அவ்வுயிரே தான் என உணரமாட்டாது, திரோதான சத்தியால் வரும் மயக்கத்தால் உடம்பையே தானாக மதிக்கும் ஒவ்வொரு தனி மனிதனும் 'பிறப்பு, இறப்பு' என்பவற்றின் உண்மையையே 'இவை' என அறியமாட்டான் ஆதலின், அவன் தனது அறிவை 'அறிவு' எனக் கூறுவன எல்லாம் போலியே என்பதாம். 'பிறப்பு' என்பது உடம்பு தோன்றுதலும், 'இறப்பு' என்பது உடம்பு அழிதலுமே. ஆவன அல்லது, உயிர் தோன்றுதலும், அழிதலும் அல்ல. ஆயினும் மயக்கத்தால் மக்கள் உயிர் தோன்றுவதும், அழிவதுமாகக் கருதுகின்றனர் என்பது குறிப்பு. மயக்குதற்கு உரியவளாகக் கூறியதனால் 'வானோர் தலைவி' திரோதான சத்தியாயினார் 'திரோதான சத்தி உள்ள வரையில் மக்கள் மெய்யறிவைப் பெறமாட்டார்' என்பதனால், 'அருட்சத்தி தோன்றினால்

மெய்யறிவைப் பெறுவார்' என்பது பெறப்பட்டது. அதனானே வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாயும் பெறப்படுகின்றது. 'அருட்சத்தி' தோன்றியபொழுதே மெய்யறிவு தோன்ற, நின்மலாவத்தை நிகழும் என்றலின், இம்மந்திரம் இவ்வதிகாரத்திற்கு உரியதாயிற்று. இம்மந்திரத்துள் பன்மையொருமை முதலியன அறியாரால் பாடம் திரிக்கப்பட்டது. இது, வருகின்ற மந்திரத்தானும் விளங்கும். இதனால், 'நின்மலாவத்தைக்குக் காரணம் மெய்யறிவு' என்பது உணர்த்தி முடித்து, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாயும் செய்யப்பட்டது

10.14. அறிவுதயம்

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே. *#2315*

ஒருவன் பொருள் இயல்புகளை உள்ளவாறு அறியப் புகும்பொழுது தன்னுடைய இயல்பை முதற்கண் உள்ளவாறு அறிவானாயின், அதன்பின்பு அவனது அறிவு பொய்யறிவாகிக் கெடாது; தானும் எந்தக் கேட்டினையும் எய்தான். ஆகவே, மனிதன் முதலில் தன்னுடைய இயல்பை அறிய முயலாமல், பிற பொருள்களின் இயல்பை அறிய முற்படுவதால், அறிவுகெட்டு அலைகின்றான். அதனால், ஒருவன் முதலில் தனது இயல்பை உள்ளவாறு அறியும் அறிவைப் பெற்றுவிடுவானாயின், அவன் தன்னையே பிறர் வழிபடும் அளவிற்கு உயர்ந்து நிற்பான்.

விளக்கவுரை

இங்கு, அறிபவனையே 'தான்' என்றார், 'ஆன்மா' என்னும் வழக்குப் பற்றி 'அகம்' என்னும் தமிழ்ச் சொல்லாலும் குறிப்பது உண்டு. முதற்கண் தன்னை அறிதல் அனுமானத்தானும், பின்னர் அனுபவத்தானும் என்க. 'தானே' என்றது, 'பிறர் கெடுக்க வேண்டாது' என்றபடி. அறிவை அறிதல் - அறிவைப் பெறுதல். வழிபடுதல் சிவமாய தன்மை பற்றியாதலின், 'சிவமாகி இருப்பன்' என்றபடி.
இதனால், 'மெய்யறிவில் தன்னை அறிதல் முதற்படி' என்பது கூறப்பட்டது. 'தம்மை உணர்ந்து, தமை உடைய தன்னுணர்வார்' எனவும், 'தம்மை உணரார் உணரார்' எனவும் மெய்கண்ட தேவரும் அருளிச்செய்தார்.*l*

அங்கே அடற்பெருந் தேவரெல் லாந்தொழச்
சிங்கா தனத்தே சிவன்இருந் தான்என்று
சங்கார் வளையும் சிலம்பும் சலேல்எனப்
பொங்கார் குழலியும் போற்றிஎன் றாளே. *#2316*

'எந்த உயிருக்கு மல பரிபாகம் வந்ததோ, அந்த உயிரின் உள்ளத்திலே சிவபெருமான், வலிமையும், பெருமையும் உடைய அனைத்துத் தேவர்களும் தொழும்படி வீற்றிருக்கின்றான்' என்பதை உணர்தலால், அருட்சத்தியாகிய தேவியும் அங்கே மகிழ்ச்சியோடு விரைவில் சென்று அப்பெருமானை வணங்குவாள்.

விளக்கவுரை

என்றது, 'அவனது குறிப்பின்வழியே செயற்பட முற் படுவாள்' என்றபடி.

சத்தி சத்திமான் வழிபட்டவள் ஆதலை இவ்வாறு விளக்கினார். சிவன் அங்கே என்றும் இருப்பினும் கள்வன்போல ஒளித்திருந்து, பின் வெளிப்பட்டமை பற்றிப் புதியனாகச்சென்று இருந்தது போலக் கூறினார். 'அங்கே' எனப் பொதுப்படக் கூறியது. மெய்ந்நூல் வழக்கு. சிவபெருமானைக் கொலுவிருப்பவன் போலக் கூறியதும், அருட்சத்தியை மகிழ்பவள்போலக் கூறியதும் உயிர்கட்கு மல பரிபாகம் வருவித்தலே அவர்களது குறிக்கோள் என்பது தோன்றுதற்கு, சலேல், ஒலிக் குறிப்பு. இஃது, ஓடி வருதலைக் குறிப்பால் உணர்த்திற்று. 'சலேல் எனப் புகுந்து' என ஒருசொல் வருவிக்க. கூந்தலுக்குப் பொங்குதல் கற்றையாய் அடர்தல். 'பொங்குதல் நிறைந்த குழலை உடையவள்' என்க. சத்தியை வேறெடுத்துக் கூறியது, 'சத்தி நிபாதம் உளதாகும்' என்பது உணர்த்தற் பொருட்டு. ஆகவே, 'மலம் பரிபாகம் உற' அதனால் சத்தி நிபாதம் உண்டாகி, அறிவு உதயம் உளதாம்' என்றதாயிற்று. இதனால், அறிவுதயம் வருமாறு கூறப்பட்டது.

அறிவு வடிவென் றறியாத என்னை
அறிவு வடிவென் றருள்செய்தான் நந்தி
அறிவு வடிவென் றருளால் அறிந்தேன்
அறிவு வடிவென் றறிந்திருந் தேனே. *#2317*

மேற்3 கூறியவாறு, 'வானோர் தலைவி' தந்த மயக்கத்தால், 'எனது வடிவம் அறிவு' என்னும் உண்மையை அறியாது. 'உடம்பே' என்று மயங்கியிருந்த என்னை, நந்திபெருமான் தோன்றி அம்மயக்கத்தை நீக்கி, 'உனது வடிவம் உடம்பன்று; அறிவு' என அருளிச்செய்து உண்மையை உணரப் பண்ணினார். அவரது திருவுளக் கருணையால் அடியேனுக்கு அறிவு உதயமாயிற்று. அதனால், 'உடம்பு எனது வடிவம் அன்று' என உணர்ந்து அதனின் நீங்கியிருக்கின்றேன்.

விளக்கவுரை

'நந்தி பெருமான் எனக்குச் சொல்லியதைத் தான் நான் உனக்குச் சொல்கின்றேன்' என்பது குறிப்பெச்சம். முன்மந்திரத்தில், 'சிங்காதனத்தே சிவன் இருந்தான்' என்றும்; 'பொங்கார் குழலியும் போற்றியென்றாள்' என்றும் கூறிப் பின், 'அருள் செய்தான் நந்தி' என்றும், பின் 'அருளால் அறிந்தேன்' என்றும் கூறியதனால், மலபரிபாகத்தால் சத்தி நிபாதமும், சத்தி நிபாதத்தால் குருவருளும், குருவருளால் அறிவுதயமும் உளவாதலைக் குறிப்பான் உணர்த் தினமை காண்க. அறிவுதயம், 'ஞானோதயம்' என்றும் சொல்லப்படும். அருள்காரணமாக அருளிச் செய்த அறிவுரை 'அருளால்' என்று உபசரிக்கப்பட்டது.

இதனால், அறிவுதயம் குருவருளாலே உளதாதல் கூறப்பட்டது.

[ஆயு மலரின் அணிமலர் தன்மேலே
மாய இதழ்கள் பதினாறும் அங்குள
தூய அறிவே சிவானந்த மாகியே
போய அறிவாய்ப் புணர்ந்திருந் தானே.]

அறிவுக் கழிவில்லை ஆக்கமும் இல்லை
அறிவுக் கறிவல்ல(து) ஆதாரம் இல்லை
அறிவே அறிவை அறிகின்ற(து) என்றிட்(டு)
அறைகின் றனமறை ஈறுகள் தாமே. ***#2318***

தோற்றமும், கேடும் சடத்துக்கன்றிச் சித்துக்கில்லை. சித்துக்குப் பற்றுக்கோடு சித்தேயன்றிச் சடம் அன்று. அவ்வாறே சித்தை யறிவதும் சித்தன்றிச் சடம் அன்று. இவ்வாறு, 'வேத முடிபுகள்' எனப்படுகின்ற உபநிடதங்கள் யாவும் கூறுகின்றன.

விளக்கவுரை

இந்த முறைமையால், 'பிறப்பதும், இறப்பதும் உயிரன்று; உடம்பே உயிருக்கு உடம்பு பற்றுக்கோடன்று, சிவமே பற்றுக்கோடு - இனிச் சிவத்தை அறிவதும் உயிரேயன்றி, உடம்பன்று' என்பவற்றை உணர்த்தி, 'உதயமான அறிவைக் கொண்டு இவற்றை யெல்லாம் இவ்வாறு அறிதல் வேண்டு' என்பது உணர்த்தியவாறு. 'இட்டு', அசை நிலை.

இதனால், 'மெய்யறிவாவது இது' என்பது கூறப்பட்டது. *(இம் மந்திரத்தின் பின் பதிப்புக்களில் காணப்படுகின்ற, 'ஆயு மலரின்' என்னும் மந்திரம் முன் தந்திரத்து முதல் அதிகாரத்து இறுதியில் சொல்லப்பட்டது.)*

மன்னிநின் றாரிடை வந்தருள் மாயத்து
முன்னிநின் றானை மொழிந்தேன் முதல்வனும்
பொன்னின்வந் தானோர் புகழ்திரு மேனியைப்
பின்னிநின் றேன் 'நீ பெரியை' என் றானே. ***#2319***

'உலகத்தில் பலராய்க் குழுமி வாழ்கின்ற அனைத்து மக்களிடையே தானும் ஒரு மகன்போல வந்து அருள்செய்ய வேண்டும்' என்கின்ற சூழ்ச்சியைத் திருவுளத்து எண்ணி, அவ்வாறு வந்து என்முன் நின்ற சிவனை யான் 'சிவன்' என்று அறிந்துகொண்டு போற்றினேன். பின்னும் அங்ஙனம் அவன் வந்து நின்ற திருமேனியை விடாது பற்றிக்கொண்டு திரிந்தேன். அதைக் கண்டு அவனே வியந்து, 'அப்பா' நீ மிகப் பெரியை' என்று கூறினான்.

விளக்கவுரை

மன்னுதல், இங்குப் பலராதல் எனவே, அவர் உலக மக்கள் ஆயினர்.

மாயம், 'சூழ்ச்சி' என்னும் பொருட்டு, 'மாயத்தின் கண்' என உருபு விரித்து. 'சில முன்னி நின்றானை' என ஒருசொல் வருவித்து முடிக்க. 'அருள் மாயம்' வினைத்தொகை. போற்றுதல், 'கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்தருள்'* வந்தான் என்றும், 'பிறவா முதல்வன் பிறந்து'* வந்தான் என்றும் இன்னோரன்னவாகச் சொல்லித் துதித்தல். 'பொன்' என்று, 'நிதி போல வந்து' என்றது. 'இல்லார்க்குக் கிழியீடு நேர்பட்டாற்போல வந்து' என்றதாம். 'வந்து' என்பதை 'வா' எனத் திரித்துக்கொள்க. ஆனோர் - நாட்டோர்; உண்மையறிந்து வந்து மாணாக்கர் ஆயினோர். நட்டோரை 'ஆனவர்' எனவும், பகைவரை 'ஆகாதவர்' எனவும் கூறுதல் உலக வழக்கு. 'அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராகக் கொளல்'8 எனக் கூறிய செயற்கரிய செயலைச் செயதமை பற்றி, 'நீ ஏனையோரினும் வேறாய பெரியை' எனப் பாராட்டினார் என்பதாம். 'குரு ஏனை மக்கள் போலவேயிருப்பினும் அவரை, மக்களுள் ஒருவராக அறியாது, தம்மை ஆட்கொள்ள வந்த சிவனாகவே அறிதல், பக்குவிகட்கன்றி, அபக்குவி - கட்கு இயலாது' என்பதை உமாபதி தேவர்.

'அருளா வகையால் அருள்புரிய வந்த
பொருள் ஆர் அறிவார் புவி'

என்றும்,

'பார்வையென மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் காணா புவி' l

என்றும் கூறினார். இதனால், 'நாயனார் தம் குருவாகிய நந்தி பெருமானை நந்தி கணத் தலைவராக மட்டும் காணாது, சிவ பெருமானாகவே 'கண்டிருந்தார்' என்பதும், 'அது பற்றி இவரது சிறப்பை உணர்ந்து, அவரும் இவரைச் சிறப்பாகப்பாராட்டினார்' என்பதும் விளங்கும்.

இதனால், 'அறிவை உதிப்பித்த குரு சிவமேயாவர்' என்பது உணர்த்தும் முகத்தால், 'உண்மையறிவு சிவனால் அல்லது, பிறர் ஒருவராலும் தரப்படாது' என்பது கூறப்பட்டது.

அறிவறி வாக அறிந்தன்பு செய்மின்
அறிவறி வாக அறியும்அவ் வண்ணம்
அறிவறி வாக அணிமாதி சித்தி
அறிவறி வாக அறிந்தனன் நந்தியே. **#2320**

மெய்யறிவு வேண்டுவீர், உமது வேட்கை நிரம்ப வேண்டுமாயின் நீவிர் சிவனையே பொருளாக உணர்ந்து அவனிடம் அன்புசெய்யுங்கள் (பிறரைப் பொருளாக அறியும் அறிவுகள் எல்லாம் போலியறிவே.) யான் சிவனை உணர்ந்து பயன் பெற்றேன். ('நான் பெற்ற இன்பம் பெறுக

இவ்வையகம்') இவ்வாற்றால் உமது அறிவு உண்மை மெய்யறிவாயின், அதனைச் சிவனும் அறிந்து, பயன் தருவான். அதனால் அத்தகைய அறிவால் நிலையான வீடுபேறே யன்றி, இடையில் அணிமாதி சித்திகளும் தாமே வந்து வாய்க்கும்.

விளக்கவுரை

'அறிவு அறிவாக' என வந்த நான்கிற்கும், 'அறிவு மெய்யான அறிவாக' என்பதே பொருள். சொற்பொருட் பின்வரு நிலையணி. நந்தி சிவன். அது, 'அறிந்து' என்பதனோடும் இயையும். 'நந்தியை' என்னும் இரண்டன் உருபு தொகுக்கப்பட்டது. ஈற்றடியை முதலடியின் பின்னர்க் கூட்டுக. 'அறியும்' என்பதற்கும் வினைமுதல் 'நந்தி' என்பதே அவ்விடத்து அறிதல், பயன் தருதலாகிய தன் காரியம் உணர்த்தி நின்றது. இரண்டாம் அடியில் 'ஆக' என்பது 'ஆனபின்' என்னும் பொருளதாயும், மூன்றாம் அடியில், 'ஆக' என்பது, 'ஆதலால்' எனக் காரணப் பொருட்டாயும் நின்றன. 'அணிமாதி சித்திக்கு' 'ஆம்' என்னும் பயனிலை எஞ்சி நின்றது.

இதனால், 'மெய்ப்பொருளை அறியும் அறிவே மெய்யறிவு. எனப் பொதுவாகச் சொல்லப்படினும், சிவனை மெய்ப்பொருளாக அறியும் அறிவே உண்மை மெய்யறிவாம்' என்பது கூறப்பட்டது. 'பொருள் அல்லவற்றை பொருள் என்று உணர்தலை, மருள்' *3 3திருக்குறள் - 351.* என்றார் திருவள்ளுவர்.

அறிவறி வென்றங் கரற்றும் உலகம்
அறிவறி யாமையை யாரும் அறியார்
அறிவறி யாமை கடந்தறி வானால்
அறிவறி யாமை அழகிய வாறே. ***#2321***

உலகினர், 'எமக்கு அறிவு வேண்டும், அறிவு வேண்டும்' என்று கூப்பாடு போடுகின்றனர். 'ஆயினும், அங்ஙனம் கூப்பாடு போட்டுப் பெற்ற அறிவு அறியாமையாய் இருத்தலை ஒருவரும் அறியார், அங்ஙனம் ஒருவராலும் அறியப்படாதிருக்கின்ற அந்த அறியாமை நீங்கி, அறிவு அறிவாகுமானால், முன்பு 'அறிவு' என்று நினைக்கப்பட்டது அறியாமையாய் இருந்த அழுகு வெளிப்பட நகைப்பு உண்டாகும்.

விளக்கவுரை

'தன்னை உடையார் ஒருவருக்கும் தான் காணப் படாது, அறிவுபோலவே தோன்றுதலும், தான் நீங்கிய பின் விளங்கி நிற்கும் அறிவைக் கொண்டே தான் அனுமித்துணரப்படுதலுமே அறியாமையின் இயல்பு' என்பது உணர்த்தியவாறு. 'அறிதோறறி யாமை கண்டற்றால்' என்னும் திருக்குறளை*8* நோக்குக.

'சுடரால் இருள்தேடச் சொல்லார்கள் எந்தாய்!
சுடரால் இருள்தேடச் சொன்னாய்' *
என்றதும் இஃதே பற்றி. 'அறிவுபோல் அடரந்தெழும் அறியாமையின் வலியால்'* எனச் சிவஞான யோகிகளும் கூறினார். இத் தன்மையதான அறியாமையைச் செய்வது ஆணவ மலமே. அது பற்றி உமாபதிதேவர்.
'ஒருபொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்;
இருபொருளும் காட்டாது இது'
எனவும்,
'பலரைப் புணர்ந்தும் இருட் பாவைக்குண் டென்றும்
கணவற்கும் தோன்றாத கற்பு'*
எனவும் கூறினார்.
அழகிதல்லாததை, 'அழகிது' என்றது வஞ்சப் புகழ்ச்சி. 'அழகியவாறே' என்பதன்பின் 'தோன்றும்' என்பது எஞ்சி நின்றது.
இதனால், முன்மந்திரத்தில் கூறியபடி, 'அறிவு அறிவாக அறிந்து அன்பு செய்ய அறிவு உதயம் ஆவதற்குத் தடையாய் உள்ளது, பெரும்பான்மையோரால் நம்ப இயலாத ஆணவ மலம்' என்பது உணர்த்தும் முகத்தால், 'அது பரிபாகம் ஆதல் இன்றியமையாதது' என்பது கூறப்பட்டது.

அறிவறி யாமையை நீவி யவனே
பொறிவாய் ஒழிந்தெங்கும் தானான போது
அறிவாய வற்றினுள் தானாய் அறிவின்
செறிவாகி நின்றவன் சீவனும் ஆமே. *#2322*

அறிவு அறியாமையாய் இருந்த நிலையினின்றும் நீங்கி, அறிவேயாய் நிற்கப் பெற்றவனே, புற இந்திரியம் முதலிய கருவிகளில் அவையேதானாய் ஒன்றி, அவற்றின் அளவாய் நின்ற ஏகதேச நிலை நீங்கி, எங்கும் தானாம் வியாபக நிலையைப் பெறுவான். அந்நிலையைப் பெற்றபொழுதுதான். சடமேயாயினும் சித்துப் போலத்தோன்றிய கரணங்களில் அறிவாய் உள்ளவனும், அவற்றால் சீவனாய் இருந்தவனும் தானே ஆதல் அவனுக்கு விளங்கும்.

விளக்கவுரை

நீவுதல் - துடைத்தல். அறிவின் வினையை அதனை உடையான்மேல் ஏற்றி, 'நீவியவன்' என்றார். 'பொறி' என்றது உபலக்கணம். 'எங்கும் தானானபோது' என்ற அனுவாதத்தால், எங்கும் தானானமை தானே பெறப்பட்டது. 'அறிவாய' என்னும் அஃறிணைப் பன்மைப்பெயர், சாரியையும் உருபும் பெற்று, 'அறிவாயவற்றினுள்' என வந்தது. 'அறிவாய' என்றது, 'அறிவுடையனபோலத் தோன்றியன' என்னும் பொருட்டு. செறிவு - மிகுதி. உம்மையை 'நின்றவன்' என்பத -னோடும்

கூட்டுக. 'ஆம்' என்றது, 'ஆதல் விளங்கும்' என்றவாறு.
இதனால், அறியாமை நீக்கத்தின் இன்றியமையாமை அதன் பயன் கூறும் முகத்தால் விளக்கப்பட்டது.

அறிவுடை யார்நெஞ் சகலிட மாவ(து)
அறிவுடை யார்நெஞ் சருந்தவ மாவ(து)
அறிவுடை யார்நெஞ்சொ டாதிப் பிரானும்
அறிவுடை யார்நெஞ்சத் தாகிநின் றானே. #2323

மெய்யறிவை அடைந்தோரது உள்ளங்கள் அனைத்துலகங்களையும் உட்கொள்ளவல்லன; செய்தற்கரிய சரியை கிரியா யோகங்களில் பழகிப் பழுத்தன. அதனால், முதற்கடவுளாகிய சிவபிரானும் அவரது உள்ளங்களையே தானாகச் செய்து, அவற்றின் கண் நீங்காமலும் நிற்கின்றான்.

விளக்கவுரை

'ஆவது' இரண்டும் துவ்வீறுபெற்ற தொழிற் பெயர்கள். அவை ஆகுபெயராய், அவற்றையுடைய உள்ளங்களைக் குறித்தன. 'நெஞ்சொடு' என்பதன்பின் 'ஒன்றாகி' என்பது வருவிக்க. 'நெஞ்சு' என்பது பொதுப்பட அந்தக் கரணங்களைக் குறித்தன. அதனானே இனம் பற்றிப் புறக் கரணங்களும் கொள்ளப்படும். ஈற்றில் 'அறிவுடையார் நெஞ்சம்' என்றது, 'அது' (அதன்கண்) என்றும் சுட்டுப் பெயரளவாய் நின்றது.
இதனால், மெய்யறிவு பெற்றோரது கரணங்கள் நம்மனோரது கரணம்போலப் பசுகரணமாகாது, பதிகரணமாதல் கூறப்பட்டது.
'பாலை நெய்தல் பாடியதும், பாம்பொழியப் பாடியதும் காலனைஅன்
றேவிக் கராங்கொண்ட - பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நம்தம்
கரணம்போல் அல்லாமை காண்'
-திருக்களிற்றுப்படியார் - 2.
என்னும் சாத்திர மொழியை இங்கு ஒப்பு நோக்கி யுணர்க.

மாயனு மாகி மலரோன் இறையுமாய்க்
காயநன் னாட்டுக் கருமுத லானவன்
சேயன் அணியனாய்த் தித்திக்கும் தீங்கரும்
பாய் அமு தாகிநின் றண்ணிக்கின் றானே. #2324

உடம்பும், உலகமும் ஆகிய இவற்றின் அடிநிலைப் பொருளாகிய மாயைக்குத் தலைவனாய் உள்ள சிவன், உயிர்களின் பெத்த காலத்தில், 'அயன், மால், அரன்' என மூவராய் நின்று அவைகளை முத்தொழிலில் அகப்படுத்தி, அவைகளால் அணுகுதற்கு அரியனாய்ச் சேய்மையில் நின்றவன், முத்தி காலத்தில் அம்மூவர்க்கும் மேலாய மூர்த்தியாய்

வெளிப்பட்டு அருகில் விளங்கி கரும்பு போலவும், அமுதம் போலவும் இனிப்பவன் ஆகின்றான்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதலில் வைத்து உரைக்க. உலகத்தை 'நன்னாடு' என்றார். 'காய நன்னாடு' உம்மைத் தொகை. கரு - முதற் காரணம். முதல் - முதல்வன் தலைவன். சேயவன் - சேயவனாய் நின்றவன்' என இறந்த காலத்து வந்தது. 'ஆய்' என்பது 'அணியன்' என்பதனோடும் இயையும். 'கரும்பாய்' என்றதில் ஆக்கம், உவமை குறித்து நின்றது. 'பெத்தம், முத்தி' என்பன ஆற்றலால் கொள்ளக்கிடந்தன.

இதனால், முன் மந்திரத்தில், 'அறிவுடையார் நெஞ்சத்து ஆகி நின்றான்' எனக் கூறியதன் மேல், 'அவன் அங்ஙனம் ஆகி நின்று செய்வது இது' என்பது கூறப்பட்டது. இஃது இனிது விளங்குதற் பொருட்டு இதன் மறுதலை நிலையையும் உடன் கூறினார்.

என்னை யறிகிலேன் இத்தனை காலமும்
என்னை யறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
என்னை யறிந்திட் டிருத்தலும் கைவிடா*(து)*
என்னையிட் டென்னை உசாவுகின் றேனே. ***#2325***

இவ்வளவு காலமும் யான் என்னையறியாமல், என்னின் வேறாகிய பொருள்களையே யானாக எண்ணியிருந்தேன். *(*அதனால் அவற்றில் அழுந்தி, அவையேயாய் இருந்தேன்.*)* நந்தி பெருமானது அருளால் என்னை யான் அவற்றின் வேறான பொருளாக அறிந்தபின் அந்தநிலை சிறிதும் இல்லை. மேலும் யான் யானாகிய நிலையை நழுவ விடாமல் உறுதியாகப்பற்றி, என்னையே ஏதுவாகப் பற்றி, எனது இயல்பை யான் நன்கு ஆராய்ந்து வருகின்றேன்.

விளக்கவுரை

மாணாக்கன் நிலைமை இதுவாய் இருத்தல் பற்றி நாயனார் தமது நிலையையும் அதுவாகக் கூறினார். அவன் அந்நிலையினின்று தாழாமல் நிலைத்து, மேல் ஏறுதற்பொருட்டு. 'நந்திபெருமான் அருளால்' என்பது, மேலெல்லாம் நாயனார் கூறிவந்தவாற்றால் கொள்ளக் கிடந்தது.

இதனால், 'குருவருளால் அறிவு உதயமானபின் அதனை வளர்த்துக்கொள்ளுதல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

மாய விளக்கது நின்று மறைந்திடும்
தூய விளக்கது நின்று சுடர்விடும்
காய விளக்கது நின்று கனற்றிடும்
சேய விளக்கினைத் தேடுகின் றேனே. ***#2326***

நம் கையில் உள்ளது உடம்பாகிய ஒரு விளக்கு, அது நிலையற்றது; சிறிதுபோதுநின்று மறைந்து விடும் என்பது நம் போன்றவர்களை விட்டு அது மறைந்தமையால் அறிந்தேன். மேலும் இது முடைநாற்றம் வீசுவதாயும், பசி, நோய் முதலியவற்றால் வருத்துவதாயும் உள்ளது. இனித் திருவருளாகிய மற்றொரு விளக்கு மிகச் சேய்மையில் உள்ளதாகப் பெரியோர்கள் சொல்வதால் அறிகின்றேன். அந்த விளக்கு எப்பொழுதுமே நம்மை விட்டு நீங்காமல் ஒளிவீசிக் கொண்டே யிருக்குமாம். மேலும் அது தூய்மையானதாயும், தனி ஓர் இன்பத்தைத் தருவதாயும் இருக்குமாம். அதனை அடையத்தான் நான் அலைந்து கொண்டிருக்கின்றேன்.

விளக்கவுரை

இதுவும் முன் மந்திரம்போலவே மாணாக்கனது நிலை நோக்கிக் கூறியதாம். 'நீயும் இந்த விளக்கைவிட்டு, அந்த விளக்கைத் தேடி அடை' என்பது குறிப்பெச்சம். 'காய விளக்கது' என்பதை முதலில் கூட்டுக. இதில் உள்ள 'அது', பகுதிப்பொருள் விகுதி. மாயம் - நிலையாமை. உடம்பு மாயையின் காரியம் ஆதலாலும், ஆணவம் இருள்போல்வதாக, மாயை விளக்குப் போல்வது ஆதலாலும் 'காய விளக்கு' என்றும், திருவருள் அறிவுக்கறிவாய் நின்று அறிவித்து வருதலின் அதனையும் 'விளக்கு' என்றும் கூறினார். தூய்மையையும், கனற்றுதலையும் கூறவே அவற்றின் மறுதலைகள் பெறப்பட்டன. கனற்றுதல் - வெதுப்புதல்; துன்பந் தருதல்.

இதனால், 'உதயமான அறிவால் ஆன்மரூபத்தின் வழி தத்துவ தரிசனத்தைச் செய்து, திருவருளை நாடவேண்டும், என்பது கூறப்பட்டது. 'திருவருளே ஞானக்கண்' - என்க.

தேடுகின் றேன்திசை யெட்டோ டிரண்டிலும்
நாடுகின் றேன்நல மேயுடை யான்அடி
பாடுகின் றேன்பர மேதுணை யாம்எனக்
கூடுகின் றேன்குறை யாமனத் தாலே. *#2327*

'நன்றேயுடையனாயும், தீதேயில்லாதவனாயும் உள்ள சிவனது அருளே எல்லாவற்றினும் மேலான துணையாம்' என்று துணிந்து அதனையே பெற விரும்புகின்றேன். விரும்பி அதனை எல்லாத் திசைகளிலும் சென்று தேடுகின்றேன். அதனைத் துதிக்கின்றேன். இவ் வகையில் யான் அதனை நினைவளவில் பெற்றுவிட்டேன்.

விளக்கவுரை

'இனி அதனை அனுபவமாகப் பெறுவேன்' என்பதாம். ஆகவே, நீயும் நாடியும், தேடியும், பாடியும் நின்றால், அதனை அனுபவமாகப்

பெறுவாய்' என்பது குறிப்பு. இறந்த காலத்தில் நிகழ்ந்த -வற்றை மாணவன் பொருட்டு நிகழ்காலத்தில் நிகழ்வதாகக் கூறினார்.

'நலமே உடையான் அடியே பரம் துணையாம் என நாடுகின்றேன்; திசை எட்டோ டிரண்டிலும் தேடுகின்றேன்; பாடுகின்றேன்; குறையா மனத்தாலே கூடுகின்றேன்' எனக் கூட்டி முடிக்க. சிவனது அருளை, 'அவன் அடி' என்றல் மரபு. இதனால், 'அறிவு உதயமாகி, ஆன்மரூபத்தாலும், ஆன்ம தரிசனத்தாலும் தத்துவ தரிசனம் தத்துவ சுத்திகளைச் செய்தபின் சிவதரிசனத்தைப் பெற முயலல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

முன்னை முதல்விளை யாட்டத்து முன்வந்தோர்
பின்னைப் பெருமலம் வந்தவா பேர்த்திட்டுத்
தன்னைத் தெரிந்து தன் பண்டைத் தலைவன்தாள்
மன்னிச் சிவமாக வாரா பிறவியே. ***#2328***

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்*8* உள்ள முதல்வனாகிய சிவபெருமானது விளை -யாடலால் முதற்கண் இயல்பாய் உள்ள ஒரு மலமாகிய ஆணவமும், அது பற்றிப் பின் வந்து பெருகிய மலங்களாகிய மாயை கன்மங்களும் அவை வந்தவழியே ஒருவன் போகச் செய்து, அநாதியே அடியவ னாகிய தன்னையும், தனக்கு அநாதியே தலைவனாய் உள்ள அப்பெருமானையும் உணர்ந்து, பாசங்களை விட்டு அவனது திருவடியை அடைந்து அவனே ஆயினால், பின்பு அவனுக்குப் பிறவிகள் வாரா.

விளக்கவுரை

'ஆடல்', 'ஆட்டம்' என வருதல் போல, 'விளையாடல்' என்பது 'விளையாட்டம்' என வந்து, அத்துச் சாரியை பெற்றது. 'விளையாட்டத்தில்' என ஏழாவது விரிக்க. ஐந்தொழில் இறைவனுக்கு விளையாட்டுப் போல்வதாதல் பற்றி அவற்றை அவனது விளையாட்டம்' என்றார். 'வந்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'மலம்' என்பது 'ஓர்' என்பதனோடும் சென்று இயைந்தது. 'பெருகு' என்பது கடைக்குறைந்து நின்றது. மாயையும், கன்மமும் முறையே விரிதலும், தொடர்தலும் உடைமைபற்றி, 'பெருகு மலம்' எனப்பட்டன. மலங்கள் வந்தவாறு, உயிர்களின் அபக்குவம். 'அது நீங்கினால், அது வழியாக வந்த மலங்களும் நீங்கும்' என்பார், 'வந்தவா பேர்த்திட்டு' என்றார். 'ஆறு' என்பது கடைக் குறைந்து நின்றது 'பண்டை' என்பது, 'தன்னை' என்பதனோடும் இயையும் 'தலைவனாவான் சிவனே' என்றற்கு, 'சிவமாக' என்றாரேனும், 'அவனாக' என்றலே கருத்து.
இதனால், அறிவு உதயத்தின் பயன்கள் முறையானே

தொகுத்துணர்த்தப்பட்டன

*10.15.*ஆறந்தம்

வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்
நாதத்தின் அந்தமும் நற்போத அந்தமும்
ஓதத் தகும்எட் டியோகத்தின் அந்தமும்
ஆதிக் கலாந்தமும் ஆறந்த மாமே. *#2329*

அந்தங்கள், அவையாவன சமயநூல்களின் முடிவுகள் ஆறு. அவை, 'வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தம்' - என்பன.

விளக்கவுரை

'இவை இன்ன' என்பதனை நாயனார் பின்னர் அருளிச் செய்வார். இதனால் ஞானம் பற்றிச் சமய நூல்கள் கொண்டுள்ள முடிவுகள் ஆறு வகையில் அடங்குதல் கூறப்பட்டது.

அந்தம்ஓர் ஆறும் அறிவார் அதிசுத்தர்
அந்தம்ஓர் ஆறும் அறிவார் அமலத்தர்
அந்தம்ஓர் ஆறும் அறியா ரவர்தமக்*(*கு*)*
அந்தமொ டாதி அறியஒண் ணாதே. *#2330*

*(*ஒரு பொருளை உடன்பாட்டினும், எதிர் மறையினும் ஆய்ந்து உணர்பவரே உண்மை உணர்பவர் ஆதலால்*)*, மேற்கூறிய ஆறு அந்தங்களையும் அறிந்தவரே அறிவர் ஆவர். அவற்றை அறியாதவர் அறிவர் ஆகார்.

விளக்கவுரை

அதி சுத்தர் - மிகத் தூயர்; மலம் முழுதும் நீங்கப் பெற்றவர். அந்தம் ஆதிகள், ஞானத்தின் முடிவும், முதலும். செய்யுள் பற்றி அந்தம் முன் வந்தது. 'அறிய' என்னும் செயவெனெச்சம் தொழிற்பெயர்ப் பொருட்டாய் நின்றது.
இதனால், ஆறந்தங்களை உணர்தலின் இன்றியமையாமை கூறப்பட்டது.

தானான வேதாந்தம் தான்என்னும் சித்தாந்தம்
ஆனாத் துரியத்*(*து*)* அணுவன் தனைக்கண்டு
தேனார் பராபரம் சேரச் சிவோகமாய்
ஆனா மலம்அற் றருஞ்சித்தி ஆர்தலே. *#2331*

பிறிதொரு நூலால் அன்றித் தன்னாலேதான் பிரமாண மாகின்ற வேதத்தின் முடிவுதான் எக்காலத்தும் சிவாகமங் களின் முடிவு. அவ்விரண்டிலும் கூறப்படுவது, நின்மலாவத்தையில் நிகழும் சாக்கிரம் முதலிய ஐந்தவத்தைகளுள் சிவனின் நீங்கி நில்லாத துரியாவத்தையில்

ஆன்மா, தன்னை முதற்கண் உள்ளவாறுணர்ந்து, தேன்போல இனிக் - கின்ற பரம்பொருளை அடைதற்கு வழியாகிய சிவோகம் பாவனையில் நின்று, அதனானே அனாதிதொட்டு நீங்காது பற்றி வருகின்ற மலம் முற்றும் நீங்கப்பெற்று, பெறுதற்கரிய பேற்றைப் பெறுதலேயாம்.

விளக்கவுரை

'தான்' இரண்டில் முதற்கண்ணதில், 'தானே' என்னும் ஏகாரம் தொகுக்கப்பட்டது. ஓடு, எண்ணிடைச் சொல். பின்னது தேற்றப் பொருளில் வந்த இடைச்சொல். 'முடிந்த முடிபு' எனப் பொருள் தருவ தாகிய 'சித்தாந்தம்' என்பது சிறப்புப் பற்றிச் சிவாகமாந்தத்திற்கே காரண இடுகுறிப் பெயராய் வழங்குகின்றது. எனவே, மேல் இவ்வதிகாரத் தொடக்கத்தில் கூறிய 'சித்தாந்தம்' என்பதும் இதுவே யாதல் அறிக.
இனி, 'வேதாந்தம்' என்பதும் காரணப் பெயராய் உப நிடதங்களையும், காரண இடுகுறிப் பெயராய்ப் பிரமசூத்திரத்தையும் குறிக்கும். எனினும் சித்தாந்த சைவத்தில் எங்கும் 'வேதாந்தம்' என்பது உபநிடதங்களையன்றிப் பிரமசூத்திரத்தையன்று. 'பிரமசூத்திரம் ஏகான்ம வாதநூல்' - என்பதே சித்தாந்த சைவத்தின் முடிவு என்பதைச் சர்வான்ம சம்பு சிவாசாரியார் செய்த சித்தாந்தப் பிரகாசிகையாலும் சிவஞான மாபாடியத்தில் சிறப்புப் பாயிரத்து, 'சைவாகமப் பிராமணியம்' கூறும் பகுதியாலும், அவையடக்கத்தில் 'ஏகான்ம வாதம்' கூறும் பகுதியாலும் அறிக.
'வேதாந்தமே சித்தாந்தம்' - என்பதைப் பின்னரும் நாயனார் விளக்குதல் காண்க. 'அச்சிவோகம்' என்ற அகரச்சுட்டு. வேதாகமங் களில் சொல்லப்படுதலைச் சுட்டிற்று. இறுதியில், 'இவற்றின் முடிவு' என்பது இசையெச்சமாய் எஞ்சி நின்றது.
இதனால், 'வேதாந்தமும், சித்தாந்தமும் முடிவால் வேறல்ல' என்பது கூறப்பட்டது. 'அங்ஙனமாயின் இரண்டாகக் கூறுவானேன்' என்னும் வினாவிற்கு விடை, பின்வரும் 'வேதமோடாகமம்' என்னும் மந்திரத்திற் காணலாம்.

நித்தம் பரனோ டுயிர்உற்று நீள்மனம்
சத்தம் முதல்ஐந்து தத்துவம் தான்நீங்கிச்
சுத்தம் அசுத்தம் தொடரா வகைநினைந்*(து)*
அத்தன் பரன்பால் அடைதல்சித் தாந்தமே. ***#2332***

'பரனே யன்றிச் சீவனும் அவன் போலவே என்றும் உள்ள அனாதி நித்தப்பொருள்' என்னும் கொள்கையை முதலிற் கொண்டு, (சீவன் அனாதியே பந்தப்பட்டு நிற்றலாம்), அது சுத்த மாயை, அசுத்தமாயை இரண்டும் பின்னர் வந்து பற்றாதவாறு விலகுதற்குரிய வழியை அறிந்து, அவ்வழியால் பந்தத்தினின்றும் நீங்கி, தந்தையாகிய சிவனை

அடைதலே 'சித்தாந்தம்' என்னும் தத்துவமாகும்.

விளக்கவுரை

'வேதாந்தம்' என்னும் தத்துவமும் அதுதான் என்பது. முன் மந்திரத்திற் கூறியவாற்றால் அமைந்தது. 'பரனோடு உயிர் நித்தம் ஆதலை உற்று' என்க. 'சத்த முதல் ஐந்து' என்பது ஆகுபெயராய் அவற்றை அறியும் செவி முதலிய ஐந்து பொறிகளை குறித்தது. இதனானே உபலக்கணத்தால் அனைத்துக் கருவிகளும் கொள்ளப் படும். 'தத்துவம்' என்றது, 'கருவி' என்றவாறு. 'மாயை தொடரா வகை' என்றது. 'பிறவி தொடரா வகை' என்றதாம்.

இதனால், 'சக சீவ பரங்களில் முதல் இரண்டும் நித்தப் பொருள்களே' என்பதே சித்தாந்தம் எனக்கூறி, இக்கொள்கையே வேதாந்தம்' என்றமையால், 'பரம் ஒன்றே நித்தம்' என்பது வேதாந்தம் ஆகாமையும் கூறப்பட்டது. எனவே ஆறந்தங்களுள் இங்கு சித்தாந்தம் கூறப்பட்டதாம், வேதாந்தம் இதன்கண் அடங்கிற்று.

சகம் - பிரபஞ்சம். காரியப் பிரபஞ்சம் அநித்தம் ஆதலின், முதலிரண்டு மட்டுமே இங்கு 'நித்தம்' எனக் கூறப்பட்டன.

மேவும் பிரமனே விண்டு உருத்திரன்
மேவுமெய் யீசன் சதாசிவன் மிக்கப்பால்
மேவும் பரம்விந்து**.** நாதம் விட ஆறா***(று)***
ஓவும் பொழு***(து)***அணு ஒன்றுள தாமே**. *#2333***

பஞ்ச கலைகட்கு அதிதேவராகப் பொருந்துபவருள் பிரமனது அதிகாரத்திற்கு உட்பட்டது. நிவிர்த்தி கலை. இது 'பிருதிவி' என்னும் தத்துவத்தைத் தன்னுட் கொண்டது. இதற்குமேல் இதனை உள்ளடக்கிப் பரந்திருப்பது பிரதிட்டா கலை. இஃது அப்பு முதல் பிரகிருதி முடிவாக உள்ள இருபத்து மூன்று தத்துவங்களைத் தன்னுட் கொண்டது. இதற்கு மேல் இதனை உள்ளடக்கிப் பரந்திருப்பது வித்தியா கலை. இதற்கு அதிதேவன் மாயோன். இதற்குமேல் இதனை உள்ளடக்கிப் பரந்திருப்பது வித்தியா கலை. இது வித்தியா தத்துவம் ஏழினையும் தன்னுட்கொண்டது. இதற்கு அதிதேவன் உருத்திரன். இதற்கு மேல் இதனை உள்ளடக்கிப் பரந்திருப்பது சாந்தி கலை. இது சிவதத்துவங்களில் கீழ் உள்ள சுத்த வித்தை, ஈசுரம், சாதாக்கியம் என்னும் மூன்று தத்துவங்களைத் தன்னுட் கொண்டது. இதற்கு அதிதேவன் மகேசுரன். இதற்குமேல் இதனை உள்ளடக்கிப் பரந்திருப் - பது சாந்தி யதீத கலை. இது சிவதத்துவங்களுள் எஞ்சி நின்ற, 'சத்தி, சிவம்' என்னும் இரண்டு தத்துவங்களைத் தன்னுட் கொண்டது. இதற்கு அதிதேவன் சதாசிவன். இங்குக் கூறிவந்த தத்துவங்களில் இறுதியாக எல்லாவற்றிற்கும் மேலே உள்ளனவாகச் சொல்லப்பட்ட 'சத்தி, சிவம்' -

என்னும் தத்துவங்களே 'விந்து, நாதம்' என்றும் சொல்லப்படும். ஆகவே, இவைகளையும் கடந்தால்தான் முப்பத்தாறு தத்துவங் -களையும் கடந்ததாகும். அவ்வாறு கடந்தபொழுதுதான் கருவி கரணங்களின் வேறாய், 'ஆன்மா' என ஒன்று உளதாதல் விளங்கும்.

விளக்கவுரை

பஞ்ச கலைகளைப் பற்றி அறிய வேண்டுவன பல உள. அவையெல்லாம் சிவஞானமாபாடியம், பிராசாத யோக நூல்கள் முதலியவற்றில் சொல்லப்பட்டுள்ளன. அவையனைத்தையும் இங்குக் கூறுதல் கூடாமையின் அவைகளுள் தலையாய அதிதேவர்களை மட்டுமே கூறி, அவர்வழியாக அக்கலைகளையும், அவைகளில் அடங்கி நிற்பனவற்றையும் உணர வைத்தார். ஆகவே, பிரமன் முதலிய ஐந்தும் ஆகுபெயர்களாய், அவரால் செயற்படுத்தப்படும் கலை, தத்துவம் முதலியவற்றைக் குறித்தன. 'விந்துவும், நாதமும் மிக்கு அப்பால் மேவும் எனக்கூட்டுக. இதனை எடுத்துக் கூறியது 'இவை கடத்தற்கு அரியன' என்பதும், 'கடந்த இடமே நாதாந்தம்' என்பதும் விளங்குதற்பொருட்டு. 'பிரமன்' முதலியன செவ்வெண். இறுதியில், 'இவர்களில்' என்பது வருவிக்க.

இதனால், ஆறந்தங்களுள் நாதாந்தம் கூறப்பட்டதாம். தத்துவங்களைக் கொள்ளாதொழியினும் நாதத்தைப் பொதுப்பட உணர்ந்து 'அதன் அந்தத்தை அடைதலே முடிநிலை' என்பவர் பாசுபதர் முதலிய சில புறச்சமயிகள்.

உள்ள உயிர்ஆறா றாகும் உபாதியைத்
தெள்ளி அகன்றுநா தாந்தத்தைச் செற்றுமேல்
உள்ள இருள்நீங்க ஓர்உணர் வாகுமேல்
எள்ளல்இல் நாதாந்தத்(து) எய்திடும் போதமே. ***#2334***

முன் மந்திரத்தில் கூறியவாறு, தத்துவம் முப்பத் தாறனையும் கடந்த நிலையில் 'தான்' என ஒரு பொருள் அவற்றின் வேறாய் உளதாதலை உணர்ந்த ஆன்மா, தனக்கு உபாதியாய் (குற்றமாய்)ச் சேர்ந்த அவற்றினது சடத்தன்மையையும், தனது சித்துத் தன்மையையும் தெள்ளியவாக ஆராய்ந்து, அதனானே, அவற்றி -னின்றும் அறவே நீங்கி, அவ்விடத்தில் உள்ள தன்னை மறைக்கின்ற ஆணவ இருளும் சிவனது அருளால் நீங்க, அவனது உணர்வாகிய சிவஞானத்தோடு கூடி, அதுவாகி நிற்குமாயின், அவ்விடத்தில், 'போதம்' எனப்படுகின்ற ஞானம் உண்டாகும்.

விளக்கவுரை

ஆறாறு - ஆறாறன் தொகுதி. 'நாதாந்தம்' இரண்டனுள் முன்னது

அவ்விடத்து விளங்கும் ஆன்ம அறிவைக் குறித்தது. 'மேல் உள்ள' என்றது, 'மாயைக்கு மேல் உள்ள' என்றபடி. இருள் அருளாலன்றி நீங்காமை வெளிப்படை. ஓர் உணர்வு - தன்னோடு ஒப்பது வேறொன்றிலாத உணர்வு; சிவனது உணர்வு. உயிர் நாதாந்தத்தை அடைந்தமை முன்பே கூறப்பட்டமையால், ஈற்றில், 'நாதாந்தத்து' என்றது, 'அவ்விடத்து' என்னும் சுட்டளவாய் நின்றது. இங்கு, 'போதம் எய்திடும்' என்றதனால், 'போதம்' எனப்படுவது சிவபோதமே என்பது விளங்கும். விளங்கவே, போதாந்தமாவது, ஆன்மா, தான் சிவஞானத்தில் முற்றி நிற்கும் நிலையே போதாந்தம் என்பது போந்தது.
தத்துவம் முப்பத்தாறனையும் கடந்தவழி இருமாயை களையும் கடந்ததாம். மாயைகள் ஆணவத்தைப் போக்கவே இறைவனால் கூட்டப்பட்டன. ஆதலின், 'அவை நீங்கியவிடத்து ஆணவம் நிற்றல் இயல்பு' என்பது பற்றி, 'நாதாந்தத்தைச் சென்று மேல் உள்ள இருள்' என்றும்,
'ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்;
ஒன்று மேலிடின் ஒன்று
ஒளிக்கும்; எனினும் இருள் அடராது'*
என ஓதியபடி, நாதாந்தத்ததில் ஆணவமே யன்றிச் சிவமும் உளதாக, பக்குவம் இல்லாத பொழுது மேலிடுகின்ற ஆணவம், பக்குவம் வந்த பொழுது மேலிடமாட்டாதிருக்கச் சிவமே மேலிடும் ஆதலின் 'இருள் நீங்க' என்றும், சிவம் மேலிட்ட வழி ஆன்மா அதனைப் பற்றுதற்குத் தடை இன்மையால், 'ஓர் உணர்வு ஆகுமேல்' என்றும் கூறினார்.
இதனால், 'போதமாவது இது' எனவும், அதனை அடையு -மாறும் கூறும் முகத்தால், ஆறந்தங்களுள் போதாந்தம் கூறப்பட்டது. 'போதாந்தமே முடிநிலை' என்பவர் பாடாண வாத சைவர் முதலிய அகச் சமயிகள். இவர்களை, 'பூர்வ சைவர்' - என்பர் சிவாக்கிர யோகிகள்.

தேடும் இயம நியமாதி சென்றகன்*(று)*
ஊடும் சமாதியில் உற்றுப் பரசிவன்
பாடுறச் சீவன் பரமாகப் பற்றறக்
கூடும் உபசாந்தம் யோகாந்தக் கொள்கையே. ***#2335***

இயமம், நியமம் முதலிய எட்டுறுப்புக்களையும் மேற்கொள்ளப் புகுந்து, அவ்வாறே படிமுறையால் மேல் ஏறி, முடிவான 'சமாதி' என்னும் நிலையை எய்திச் சிவனுக்கு அணுக்கமாகி நிற்கச் சீவன் சிவனாய்விடும். அந்நிலையில் உலகத்தாக்கம் ஒழிய ஓர் அமைதி நிலை தோன்றும். அதுவே உயிர் பெறத்தக்க பேறு - என்னும் இதுவே யோக நூலின் முடிவான கொள்கை.

விளக்கவுரை

இயமம், நியமம் முதலிய எட்டுறுப்புக்களின் இயல்பை மூன்றாம் தந்திரத்தில் காண்க. 'இயமத்தில் தொடங்கி முறையே வளர்ந்து ஏழாவது உறுப்பாகிய தியானத்தை அடைதலே ஞானத்தின் முடிநிலை' என்பதும், 'அதன்பின் சமாதியை அடைதலே ஞானத்தின் பயன்' என்பதும், 'அதனை அடைந்தோர் உடம்பு நீங்கிய பின் பரம் பொருளோடு ஒன்றாகி விடுவர்' என்பதும் யோகநூற்கொள்கை என்றபடி. 'உடம்பு நீங்குதலின்ற, என்றும் நிலைத்திருக்கப் பெறுதலே முத்தி' என்னும் கொள்கையும் உண்டு.

ஊடுதல் - உட்புகுதல். 'ஊடுறும்' என்பது குறைந்து நின்றது என்றலும் ஆம். 'சிவனுக்கு அணியராதல் சமாதியின் தொடக்கநிலை' என்க. 'உபசாந்தம் கூடும்' எனமாற்றியுரைக்க.

இதனால், ஆறந்தங்களுள் யோகாந்தம் கூறப்பட்டது.

இக்கொள்கையுடையோர் யோகமதத்தினர். இவர் முதல் ஆசிரியர் பெயர்பற்றி, 'பாதஞ்சலர்' எனவும் கூறப்படுவர்.

கொள்கையி லான கலாந்தம் குறிக்கொள்ளில்
விள்கையி லான நிவிர்த்தி மேதாதாதிக்*(*கு*)*
உள்ளன ஆம்விந்து உள்ளே ஒடுங்கலும்
தெள்ளி அதனைத் தெளிதலும் ஆமே. ***#2336***

'ஆறந்தம்' எனப்படுகின்ற கொள்கைகளில் ஒன்றான, 'கலாந்தமாவது யாது' என அறிந்து கொள்ளப்புகின், உயிர் பாசங்களினின்றும் நீங்குதற்கண் துணையாய் உள்ள நிவிர்த்தி முதலிய சத்திகட்கு இடமாய் நிவிர்த்தி முதலிய கலைகளும், மற்றும் பிராசாத மந்திரத்தின் மேதா முதலிய கலைகளும் சுத்த மாயையிலே தோன்றிச் சுத்த மாயையிலே ஒடுங்குமாற்றை ஆராய்ந்து தெளிதலே கலாந்தமாம்.

விளக்கவுரை

நிவிர்த்தி முதலிய சத்திகளாவன, 'நிவிர்த்தி, பிர திட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை' என்னும் ஐந்துமாம். இச்சத்தி களுக்கு இடமாகின்ற சுத்த மாய விருத்திப் பகுதிகளும் இச்சத்திகளின் பெயர்களையே உடையன. 'உலகம் ஆறு அத்துவா மயமானது' எனக்கூறுமிடத்து, ஏனை ஐந்து அத்துவாக்களும் கலாத்துவாவிலே அடங்கும். அதனால் அத்துவ சுத்தி, 'கலாசுத்தி' என்றும், 'கலா சோதனை' என்றும் சொல்லப்படும். இந்தச் சுத்தி, அல்லது சோதனையே நிருவாண தீக்கையாதலின் 'தீக்கையே முத்தியாம்' எனக் கூறும் ஒருசார் சைவர்கள் 'கலாந்தத்தில் பஞ்ச கலாந்தம்' என்பர்.

இனிப் பிராசாத கலைகள் மூன்றாம் தந்திரத்து. 'கலை நிலை' என்னும் அதிகாரத்தில் காட்டப்பட்டன. 'அவைகளை முன்னர் ஆராய்ச்சியால் உணர்ந்து பின்னர் அனுபவத்திற்காணுதலே முடி நிலை' என்பவர்

'கலாந்தத்தில் பிராசாத கலாந்தர்' என்க. இவரை யோக சைவர்' அஃதாவது, 'பிராசாத யோகமே முத்தியைப் பயக்கும் - எனக் கூறும் சைவர் என்பதாம். இவரும் ஐக்கிய வாத சைவர் போல ஆணவ மலத்தை உணராதவர் ஆதலின், அவரோடு ஒப்பர் என்க.
ஈசானம் முதலிய பஞ்சப் பிரம மந்திர சத்திகளாகிய ஈசானி முதலிய ஐந்தும், அவைகளில் முறையே ஐந்தும், நான்கும், எட்டும், பதின்மூன்றும், எட்டும் - ஆக முப்பத்தெட்டாய் நிற்கும் சத்திகளும் 'கலை' எனப்படுதலால், அவற்றைத் தெளிதலும் கலாந்தமாம் என்பாரும் உளர். அவை மந்திர கலைகளாய் நாதாந்தத்தில் அடங்குத -லாலும், நாயனார் அவ்வாறு ஓதாமையாலும் அவைகளை இங்குக் கொள்ளல் வேண்டா என்க. 'ஆதிக்கு' என்பது கண்ணுருபின் பொருளில் வந்து உருபு மயக்கம். 'ஆம்' என்பதனை, 'ஒடுங்கலும்' என்பதன் பின்னர்க் கூட்டுக. உம்மை, தோன்றுதலைத் தழுவிய எச்சவும்மை.
இதனால், ஆறந்தங்களுள் கலாந்தம் கூறப்பட்டது. அஃது இருவகைத் தாதலும் உடன் உணர்த்தப்பட்டது.

தெளியும் இவையன்றித் தேர்ஐங் கலைவே*(று)*
ஒளியுள் அமைந்துள்ள ஓரவல் லார்கட்*(கு)*
அளிஅவ னாகிய மந்திரம் தந்திரம்
தெளிவு உபதேசம் ஞானத்தொ*(டு)* ஐந்தாமே. *#2337*

*(*முன் மந்திரத்தில் கூறப்பட்ட கலாந்தம் ஒழுக்கம் பற்றியது. இனி*)*, நூல் அறிவு பற்றி நோக்குங்கால் உள்ள கலாந்தம் வேறு ஐந்தாகும். அவை, 'மந்திர கலாந்தம், தந்திர கலாந்தம், தெளிவுக் கலாந்தம், ஞான கலாந்தம். உபதேச கலாந்தம்' என்பன. அவையும் ஞானப் பகுதிகளேயாம். அவை ஆராய்ச்சியில் வேட்கை உடையவர்கட்கு ஆவனவாம்.

விளக்கவுரை

'அவை இன்ன' என்பது வருகின்ற மந்திரத்தால் பெறப்படும். அவன் அளியன் ஆகிய - சிவன் அருள் மிக்கவனால் அளித்தருளிய *(*கலைகள்*)*.

ஆகும் அனாதி கலைஆ கமவேதம்
ஆகும்அத் தந்திரம் அந்நூல் வழிநிற்றல்
ஆகும் மனாதி உடல்அல்லா மந்திரம்
ஆகும் சிவபோ தகம்உப தேசமே. *#2338*

அநாதியே உள்ளவனால் செய்யப்பட்டமையின், 'அநாதி நூல்' எனப்படுகின்ற ஆகமங்களையும், வேதங்களையும் ஓதி, ஐயம் திரிபு அற உணர்தல் மந்திரகலாந்தம். ஏனைப் பாசுபதம் முதலிய தந்திரங்களை அவ்வாறு உணர்தல் தந்திர கலாந்தம். அவ்வாறு உணரப் பட்ட அந்நூல்களில் கண்டவாறு ஒழுகும் ஒழுக்கத்தில் மேம்படுதல் தெளிவுக் கலாந்தம். திருவைந்தெழுத்தைத் தத்தமக்கு உரியமுறையில் மனம்

முதலிய அந்தக் கரணங்களால் அன்றி, அறிவால் சுத்தமான -தாகப் பெரிய அளவில் கணித்தல் ஞான கலாந்தம். குரு உபதேசத்தை நன்கு சிந்தித்துத் தெரிந்தபின் நிட்டையில் நிற்றல் உபதேச கலாந்தமாம்.

விளக்கவுரை

உபதேசகலை மட்டிலே, 'குரு உபதேசம்' எனக் கூறினமை பற்றி, 'ஏனைய கலைகள் குரு இன்றியும் உணரப்படும்' எனக்கொள்ளலாகாது. ஏனெனில், 'உபதேசம்' என்றது ஞானோப -தேசத்தையேயாகலின், அவ்விடத்து, 'குரு' எனப்பட்டோரும் ஞான குருவே. ஞான குருவைக் கூறியது ஏனைக் குருமாரை விலக்கிய -தாகாது. பிறரெல்லாம் வித்தியா குரவரும், கிரியா குரவரும் ஆவர் என்க.

'அனாதி ஆகும் கலை' என மாறிக் கூட்டுக. ஆகும் அத்தந்திரம் - வேதாகமங்கட்குப் பின்னிலையினவாகிய அந்தத் தந்திரங்கள் ஆகும். மனாதி - மந்திரங்களைக் கணித்தற்குக் கருவி யாகும் மனம் முதலியன. உடல் - கருவி. ஈற்றில் உள்ள 'ஆகும்' என்பதை வேதம் முதலிய எல்லாவற்றோடும் கூட்டுக.

இவ்விரண்டு மந்திரங்களாலும் கலாந்தம் வேறுவகையால் அமைதல் கூறப்பட்டது. மந்திர கலாந்தம் கொண்டவர் தருக்க மதத்தவர். தந்திர கலாந்தம் கொண்டவர் அகப்புறச் சமயிகள். தெளிவுக் கலாந்தம் கொண்டவர் பௌராணிகர். ஞான கலாந்தம் கொண்டவர் அகச்சமயிகளில் ஒருசாரார். உபதேச கலாந்தம் கொண்டவரே சித்தாந்த சைவர்.

தேசார் சிவம்ஆகும் தன்ஞானத் தின்கலை
ஆசார நேயம் அறையும் கலாந்தத்துப்
பேசா உரையுணர் வற்ற பெருந்தகை
வாசா மகோசர மாநந்தி தானே. ***#2339***

ஞான கலாந்தத்தில் சிவம் வெளிப்படும். *(என்றாலும் அதன்கண் அன்பு செய்து அழுந்துதல் உபதேச கலாந் தத்தில் உண்டாகும்)*. தெளிவுக் கலாந்தம் இறைநெறி ஒழுக்கத்தையும், இறையன்பையும் வலுப்படுத்தும். *(என்றாலும் அவற்றை அஃது அறிவியல் முறையில் உணர்த்தாது. அவ்வாறு உணர்த்துவது உபதேச கலாந்தமே)*. வாய் வாளாமைபெற்று, பிறபொருள் உணர்வும், தன்னுணர்வும் அற்ற பெருந்தகையோன் வாக்கு மனங்களைக் கடந்த பரம சிவன் ஆவான்.

விளக்கவுரை

தன் ஞானம் - சிவ ஞானம். 'அதனை உணர்த்தும் கலை' என்க. அக்கலைகள் பலவும் திருவைந்தெழுத்தில் அடங்கும், 'கலை, கலாந்தத்து' என்பவற்றில் ஏழாவது இறுதிக்கண் தொக்கது. 'ஆசார

நேயம்', உம்மைத் தொகை. அறைதல் - வலியுறுத்தல். அறையும் - அறையப்படும். 'பேசாது' என்பது ஈறு குறைந்துநின்றது. உரை, சொல்லப்படுவது. உணர்வு - சொல்லவாராது உணர்வு மாத்திரையாய் நிற்பது, பெருந்தகை, ஆகுபெயர். இவ்வொருமை சாதி யொருமை. நந்தி - சிவன், மாநந்தி - பரமசிவன். 'மாநந்திதானே' எனத் தேற்றேகாரத்தால் 'வேற்றுமையில்லை' என வலியுறுத்தியது. அத்தன்மை குறைவின்றி நிரம்புதல் பற்றி இங்ஙனம் வலியுறுத் -ததனானே, 'அவன் பொருளால் வேறே' என்பது பெறப்பட்டது.

இதனால், மேற்கூறிய ஐந்து கலாந்தங்களுள் உபதேச கலாந்தத்தின் சிறப்புக் குறிப்பால் உணர்த்தப்பட்டது.

தானது வாகும் சமாதி தலைப்படில்
ஆன கலாந்தநா தாந்தயோ காந்தமும்
ஏனைய போதாந்தம் சித்தாந்த மானதும்
ஞான மெனஞேய ஞாதுரு வாகுமே. ***#2340***

*(*வேதாந்தம் சித்தாந்தத்துள் அடங்க ஆறந்தங்கள் ஐந்தந்தங்களாகும்*)*.
'ஞாதுரு, ஞானம், ஞேயம்' என்னும் மூன்று பொருள்கள் உள்ளன எனக் கூறுவதில் எந்த அந்தமும் வேறுபட வில்லை. *(*'ஞானம் ஒன்றே உள்ளது; ஏனையவை இல்லை' - எனக் கூறும் ஏகான்மவாதம் வேதாந்தம் அன்று - என்பது மேலேகூறப் பட்டது*)*, இவற்றுள் ஞாதுருவாகிய ஆன்மாவும், அதன் ஞானமும் சமாதிநிலையில் ஞேயத்திலன்றிப் பிறவற்றிற் செல்லாமையால், ஞாதுருவாகிய ஆன்மாவும் சிவமேயாய்நிற்கும்.

விளக்கவுரை

'அந்நிலை உபதேச கலாந்தமாகிய சித்தாந்தத்திலல்லது இல்லை' என்பது கருத்து. ஞானம் - அறிவு ஞேயம் - அறியப்படும் பொருள். ஞாதுரு - அறிபவன். இவை முறையே 'காட்சி, காணப்படு பொருள், காண்பான்' எனவும் கூறப்படும். இவை 'திரிபுடி' எனப்படும். 'மூன்று பொருள் இல்லை; ஞானம் ஒன்றே உள்ளது' என ஏகான்மவாதம் கூறும். 'மூன்று பொருள்கள் உள்ளன. ஆயினும் உணர்பவனது உணர்வில் அம்மூன்றும் மாறி மாறித் தோன்றும் நிலை சிவானுபவ நிலையாகாது. அவனது உணர்வில் ஞேயமாகிய சிவம் ஒன்றுமே தோன்றும் நிலையே சிவானுபவ நிலை. அதுவே பரமுத்தி' என்பது சித்தாந்தம். இவற்றுள் ஏகான்ம வாதக் கொள்கையை மறுத்துச் சித்தாந்தக் கொள்கையை வினா வெண்பா, பின்வருமாறு நயம்பட வலியுறுத்துகின்றது.

'காண்பானும், காட்டுவதும், காண்பதுவும் நீத்துண்மை
காண்பார்கள் நன்முத்தி காணார்கள் - காண்பானும்
காட்டுவதும் காண்பதுவும் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டுநெறி வாரா தவர்'*l*

இம்மந்திரத்தில் 'சமாதி' என்றது பாவனையளவாக நிகழும் யோகசமாதியன்று. ஞானசமாதி. இதுவே திருக்களிற்றுப்படியாரில் கூறப்பட்டது.
(இதனாலும் மேற்கூறிய கருத்தே வேறோராற்றால் வலியுறுத்தப்பட்டது.3

ஆறந்த மும்சென் றடங்கும்அஞ் ஞேயத்தே
ஆறந்தம் ஞேயம் அடங்கிடும் ஞாதுரு
கூறிய ஞானக் குறிஉடன் வீடவே
தேறிய மோனம் சிவானந்த உண்மையே. #2341

ஆறந்தங்களிலும், 'ஞாதுரு ஞானத்துடன் சென்று, ஞேயத்தில் அடங்குதலைத்தான் முடிநிலையாகக் கூறுகின்றன. ஆகவே, ஞாதுருவும், ஞானமும் ஞேயத்தில் சென்று அடங்குதல்தான் ஆறந்தங்களின் குறிக்கோளும். ஆயினும், 'ஞேயத்தில் அடங்குதல் மட்டுமன்றி, அவ்விடத்தில் எல்லையில்லாததோர் இன்பநுகர்ச்சியில் ஞாதுரு மூழ்கியிருத்தலே உண்மைப்பேறு' எனக் கூறுகின்ற சித்தாந் - தமே ஏனை அந்தங்களினும் வடித்தெடுத்த மோன நிலையாகும்.

விளக்கவுரை

இரண்டாம் அடியை முதலில் வைத்து, 'ஆறந்தமும், ஞாதுரு, ஞானக்குறி உடன்வீட, ஞேயம் அடங்கிடும்; *(ஆகலான்)* ஆறந்தமும் சென்று அஞ்ஞேயத்தே அடங்கிடும்; *(ஆயினும்)* சிவானந்த உண்மையே தேறிய மோனம்' எனக் கூட்டி முடிக்க.
அடங்கிடுதலைக் கூறும் அந்தங்களை, அவையே அடங்குவனவாக உபசரித்துக் கூறினார். 'அஞ்ஞேயம்' என்னும் சுட்டு, பின்னர்க் கூறப்படும் அடங்குதல் தொழிலையை உட் கொண்டது. 'ஆறந்தம்' இரண்டில் பின்னதிலும் உம்மை விரித்து, 'ஞேயத்தின்கண்' என உருபுவிரிக்க. 'ஞாதுருவும், ஞானமும் ஞேயத்தின்கண் அடங்கிவிடும் அளவே முத்தியாவது என, அவ் விடத்து, பெறுவானையும், பேற்றினையும் அழித்துச் சில அந்தங்கள் கூறும் ஆகலின், அதனை மறுத்துச் சித்தாந்தத்தை வலியுறுத்துதற்கு, 'தேறிய மோனம் சிவானந்த உண்மையே' என்றார்.
'முத்தியிலும் மூன்று முதலும் மொழியக்கேள்;
சுத்தஅனு போகத்தைத் துய்த்தலனு; - மெத்தவே
இன்பம் கொடுத்தலிறை; இத்தைவிளை வித்தல்மலம்;
அன்புடனே கண்டுகொளப் பா'*8*
என்பதே சித்தாந்தம் ஆதலை யறிக.
இதனாலும், சித்தாந்தத்தின் தலைமையே ஏதுக் காட்டி வலியுறுத்தப்பட்டது.

உண்மைக் கலைஆறொன் றைந்தின் அடங்கிடும்
உண்மைக் கலாந்தம் இரண்டைந்தோ டேழந்தம்
உண்மைக் கலைஒன்றில் ஈறாய நாதாந்தத்(து)
உண்மைக் கலைசொல்ல ஓர்அந்த மாமே. *#2342*

உண்மையை உணர்த்தும் கலைகள் பலவாகச் சொல்லப்படினும் அவை அனைத்தும் பன்னிரு கலைக்குள் அடங்குவனவாம். இனி, அனைத்துக் கலைகளையும் விடாது கடக்க வேண்டின், பதினாறைத்தாண்டி அப்பால் செல்லுதல் வேண்டும், 'நாதந்தம்' என்பது, இவ்வாறு கூறப்படுவனவற்றின் இடையே நிற்கின்ற ஒன்று. ஆகையால், அதையே 'உண்மை' என்று சொல்லின், அஃது ஏகதேசத்தையே 'முற்று' எனக் கருதுவதாகவே முடியும்.

விளக்கவுரை

'ஆறு, ஒன்று, ஐந்து' என்பன அவ்வெண்களையே குறித்தன. அதனால், ஏழன் உருபு பெறாது, மூன்றன் உருபு பெற்றது. பிராசாத கலைகள் பலவாவன பஞ்ச கலை, அட்ட கலை, தச கலை, சதுர்த்த கலை முதலியன. அவைகளையெல்லாம் பிராசாத நூல்களில் காண்க. அவை அங்ஙனமாயினும் துவாதச கலையும், சோடச கலையுமே சிறப்புடையனவாகப் பயிலப்படற்குரியன என்றற்கு, 'பன்னிரண்டில் அடங்கும்' என்றும், 'பதினேழாகிய அந்தம்' என்றும் கூறினார். கலைகட்கு அடக்கம் கூறினமையால் பன்னிரண்டு என்றும் மேற்போதல் கூறினமையால், 'பதினாறைக் கடந்த பதினேழ்' என்றும் கூறினார். இப்பிராசாதங்களைப் பற்றி இத்தந்திரத்திலும், மூன்றாம் தந்திரத்திலும் சிறிது விளங்கக் கூறினோம்.
'ஓர் அந்தம்' என்றது, 'ஏகதேச அந்தம்' என்றபடி.
இதனால், ஆறந்தங்களில் ஒன்றாகிய நாதாந்தத்தின் நிலை கூறப்பட்டது.

ஆவுடை யானை அரன்வந்து கொண்டபின்
தேவுடை யான்எங்கள் சீர்நந்தி தாள்தந்து
வீவற வேதாந்த சித்தாந்த மேன்மையைக்
கூவி அருளிய கோனைக் கருதுமே. *#2343*

தேவரையெல்லாம் தம் ஆளுகைக்கு உட்படுத்தி ஆட்சி புரிகின்ற, எங்களுடைய புகழ்மிக்க நந்திபெருமானே, நாங்கள் ('வேதாந்தமும், சித்தாந்தமும் வேறு வேறு' எனக் கூறிப்பிணங்குவார் பின் சென்று) கெடாதபடி எங்களை அறைகூவி அழைத்துத் திருவடி தீக்கை செய்து, 'அவ்விரண்டிலும் சொல்லப்படுகின்ற உண்மை ஒன்றே என்பதையும், அவ்வுண்மையின் உயர்வையும் இனிது விளங்க உபதேசித்தருளிய ஞான குருவாவார். பசுக்களாகிய அனைத்துயிர் களையும் அடிமையாக

உடைய சத்தி ஆதி சத்தியாய் நின்று ஆட்டிப் புடைக்கும் நிலையில், சிவனும் ஆதிசிவனாகவே அவளுடன் இருந்தவன், அந்நிலையை மாற்றித் தனது இயற்கை நிலையாகிய அநாதி சிவனாம் பரமசிவனாகி வந்து, அவளைத் தழுவிக்கொண்ட பின்பு, ஏனையோர்க்கும் எங்கட்கு அருளியவாறே அருளுமாறு அவன் அந்நந்தி பெருமானைத் திருவுள்ளத்தில் எண்ணுவான்.

விளக்கவுரை

'அப்பொழுது அவ்வுண்மை ஏனையோர்க்கும் இனிது விளக்கப்படும்' என்பது குறிப்பெச்சம். 'பசு' என்னும் வடசொற்கு நேரிய தமிழ்ச்சொல் 'ஆ' என்பதாதல் பற்றி அதனையே கூறினா ராயினும் அது 'பசு', அஃதாவது, 'பாசத்தில் கட்டுண்டது' என்னும் பொருளையே தருதலின், 'உடையாள்' என்றது ஆதிசத்தியை, அஃதாவது திரோதான சத்தியையேயாயிற்று. 'அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கையெல்லாம்' என்ற இடத்திலும் 'உலக வாழ்க்கையைத் தரும் அவள்' என்றது, திரோதான சத்தியையே யாதலை நினைக. 'அரன்' - என்பது, 'பாசங்களை அரிப்பன்' என்னும் பொருளது ஆதலின் அஃது, 'அநுக்கிரகத்தைச் செய்பவன்' என்னும் பொருட்டாய்ப் பரமசிவனைக் குறித்தது. உயிர்கட்கு இருவினை யொப்பு மலபரிபாகம் வரும் பொழுதே திரோதான சத்தி அருட் சத்தியாய் மாறி ஆன்மாவிற்பற்றி, அரன் அப்பொழுதுதான்வந்து மணப்பவன் போலக் கூறினார். இது, 'சத்தி நிபாதம் வந்த பின்பு' எனக் கூறியவாறேயாம். 'கோனை' என்பது, 'கோன் ஆவன்; அவனை' என இருசொல் தன்மைப்பட்டு நின்றது. 'கருதும்' என்னும் 'செய்யும்' என்முற்று, இங்கு ஆண்பால் படர்க்கையில் வந்தது. 'அரன் வந்து கொண்டபின் கோனைக் கருதும்' என முடிக்க. தமக்கு அருள்புரிந்த வகையைக் குறித்து 'நந்திபெருமானையே கருதுவன்' என்றா ராயினும், 'அவரவருக்கு ஏற்புடையாரைக் கருதுவன்' என்றலே கருத்தாம். முதல் அடியை, 'கோனை' என்பதன் பின்னர்க்கூட்டுக.

இதனால், 'ஆறந்தங்களில் வேதாந்த சித்தாந்தங்களே மேலானவை' என்பது குருவருள் பெற்றபின் விளங்குதல் கூறப்பட்டது.

கருது மவர்தம் கருத்தினுக் கொப்ப
அரன்உரை செய்தருள் ஆகமந் தன்னில்
வரும்சம யம்புறம் மாயைமா மாயை
உருவிய வேதாந்த சித்தாந்த உண்மையே. ***#2344***

கொள்வார் கொள்ளும் வன்மை மென்மைகட்கு ஏற்பச் சிவன் உலகில் பலவகைச் சமய நூல்களை ஆக்கி வைத்திருக் -கின்றான். (அவை ஒன்றோடொன்று முரணுதல் போலத் தோன்றுதல், அவற்றைக்

கொள்வாரது பக்குவத்திற்கு ஏற்ப அவை அமைந்ததனாலேதான். அதனால் அவற்றைக் கொள்வோர் தமக்கு விருப்பமானவற்றைக் கொண்டு அமைதல் வேண்டுமன்றிப் பிறருக்கு விருப்பமானவற்றைப் பழித்தல் கூடாது. ஏனெனில் எல்லா நூல்களும் இறைவன் அருளால் தோன்றியவையேயாகலின்) அந்நூல்களின் வழி அமைந்த சமயங்களில் சில, 'புறம்' எனப்படும். மாயை, மகாமாயை இவற்றைக் கொண்டுள்ள சமயங்கள் அகச்சமயங்களாம். அவற்றையும் கடந்து நிற்பன வேதாந்த சித்தாந்தத் தத்துவங்கள்.

விளக்கவுரை

'ஆகமங்களில் சிவாகமங்களே சித்தாந்தம், என்றல், அவை முற்றறிவுடைய சிவனால் செய்யப்பட்டமையாலேயாம். எந்தச் செயலும் சிவன் தான் நேரே செய்யவும், பிறரைக் கொண்டு செய்விக்கவும் நிகழ்வதேயன்றி, அவை தாமாக நிகழ்வன அல்ல ஆகலின், சமய நூல்கள் பலவும் காரணக் குறிபற்றிச் சிவாகமமேயாம்.

'துணை நன்மலர் தூய்த்தொழும் தொண்டர்காள், சொல்லீர்;
பணைமென்முலைப் பார்ப்பதி யோடுட னாகி
இணையில் இரும் பூளை யிடங்கொண்ட ஈசன்
அணைவில்சமண் சாக்கியம் ஆக்கிய வாறே'*

என்று அருளிச்செய்ததும் இப்பொருட்டே. இன்னும்,

'விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்தே
எரிவினால் சொன்னா ரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்'

என்றதும் கொள்பவரது பக்குவ வேறுபாடுகளை நோக்கியதேயாம். 'உயிர்கள் பக்குவம் எய்தியபொழுதே இறைவன் குருவாகி வருவான்' என்பதை, 'அரும்பருவம் அடைதலுமே ஆசானாகித் தோன்றி'7 என முன்னர்க்கூறிய சிவஞானசித்தி, பின்னர், 'அவ்வரும் பருவம் எப்பொழுது வரும் என வினாவுவார்க்கு,

'புறச்சமய நெறிநின்றும், அகச்சமயம் புக்கும்
புகல்மிருதி வழிஉழன்றும், புகலும் ஆச்சிரம
அறத்துறைகள் அவையடைந்தும், அருந்தவங்கள்புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும், ஆரணநூல் படித்தும்,
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால், சைவத்
திறத்தடைவர்'8

எனப் பின்னர்க் கூறிற்று. இதனால் அனைத்துச் சமயநூல்களையும் அவற்றைக் கொள்வாரது பக்குவத்தை நோக்கின் வேண்டத்தக்கனவே யாதல் அறிக.

'சாருவாகம் முதல் எல்லாச்சமயமும் பரமசிவனால் செய்யப்

பட்டமையின் பிரமாணமேயாயினும் ... ... சோபான முறையான் உபதேசித்தருளியது - என மாறுபாடின்மை உணர்ந்து கொள்ளப் படும்' (கிறப்புப்பாயிரம் - 'சைவாகமப்பிராமணியம்' எனச்சிவஞான மாபாடியத்தில் உரைக்கப்பட்டமையும் காண்க.
பக்குவம் நோக்கிச் செய்யப்பட்டமையால், 'உலகம் மாயை மகாமாயைகளினின்று பரமசிவனால் தோற்றி ஒடுக்கப்படும்' என்பதை உணரமாட்டாதார்க்கு அது சொல்லப்படவில்லை அதனால், சாருவாகர், (உலகாயதர்) 'பூதம் நான்கே; அவை கூடுதலும் பிரிதலும் இயற்கை. கூடுவதால், உலகமும், உடம்புகளும் தோன்றும்; பிரிவதால் அழியும். நான்கு பூதங்களும் கூடியபொழுது அறிவும் தோன்றும்; பிரியும்பொழுது அறிவும் அழியும்; ஆயினும், உடம்பு உள்ளவரையில் உலகில் நீதி கடைப்பிடிக்கப்படவேண்டும்; இல்லையேல் வாழ்வு நல்வாழ்வாக அமையாது' என்பர். ஆயினும் நீதியைக் கடைபிடிக்காத பொழுது அவர்கள் தங்கள் மதத்தைக் கைவிட்டவர் ஆகின்றனர்.
சமணரும், பௌத்தரும், 'உலகம் தானே தோன்றியழியும்' என்பர். அவருள் சமணர், 'அறம் - என்பது ஒன்று உண்டு, அதன் வழியிலேதான் உலகம் நடைபெற்று வருகின்றது' - என்பர். ஆகவே, அறத்தைக் கடைப்பிபிடிக்காது வழுவி விடும் பொழுது அவர்கள் தங்கள் மதத்தைக் கைவிட்டவர் ஆகின்றனர்;
பௌத்தர், 'மனிதர் பரதுக்க துக்கராய் வாழவேண்டும்; அஃதாவது, பிறர்க்காயினும், பிறஉயிருக்காயினும் துன்பம்வரின், அத்துன்பத்தைத் தமக்கு வந்த துன்பமாகக் கருதி அத்துன்பத்தைக் களையவும், துன்பம் வராமல் காக்கவும் வேண்டும்; இதுவே தவம். இத்தவத்தால் ஞானம் பிறக்கும்; ஞானத்தால் வீடு உளதாம்' என்பர். எனவே, இத்தவத்தினின்றும் வழுவும்பொழுது அவர்கள்தங்கள் மதத்தை அவர்கள் கைவிட்டவராகின்றனர்.
இவரெல்லாம் வேதசிவாகமங்களை இகழ்தலால் புறத்திலும் புறப்புறச்சமயிகள் ஆகின்றனர். வைதிகருள் மீமாஞ்சகரும், சாங்கியரும் நிரீச்சுரவாதிகள். அவருள் மீமாஞ்சகர், ஈசுரன் இல்லாவிடினும் இருப்பதாக வைத்து வேதத்தில் சொல்லப்படுகின்ற வேள்வி முதலிய கருமங்களைச் செய்தல் வேண்டும்; செய்தால் அந்தக் கருமங்களே பயனைக்கொடுக்கும். கருமங்களை விட்டவன் வழியை விட்டுக் குழியில் வீழ்ந்தவன் ஆவான்; அவனுக்கு உய்தியில்லை என்பர். எனவே, அவர் கருமங்களின் வழுவும்பொழுது தங்கள் மதத்தைக் கைவிட்டவர் ஆவர்.
சாங்கியர், 'உலகமே மயக்கத்தைத் தருவது, சாங்கிய நூலின் வழியே தத்துவ ஆராய்ச்சியில் முதிர்ந்து நிற்றல் வேண்டும். அவ்வாறு நின்றால் மயக்கம் நீங்கும்' என்பர். ஆகவே, அவர் தத்துவ ஆராய்ச்சி செய்யாது,

வாழ்க்கை நடத்தப் புகும்பொழுது தங்கள் மதத்தைக் கைவிட்டவராவர். நியாய வைசேடிகர்களும், 'ஈசுரன் ஒருவன் உண்டு' எனக் கூறினாராயினும், உய்யும் வழி கூறுவதில் சாங்கியரை ஒத்திருக் கின்றனர்.
யோக மதத்தினர், 'யோகத்தின் எட்டுறுப்புக்களாகிய இயமம், நியமம் முதலியவற்றை முற்றாகக் கடைப்பிடிக்க வேண்டும்' என்பர். முற்றாகக் கடைப்பிடித்தோர் எவரும் இலர்.
ஏகான்மவாதிகள், 'உலகம் கனவு போன்றதே; என்றாலும், அதைக்கனவாகக் கண்டு கழித்து, பரமார்த்தத்தின் விழிக்கின்ற வரையில் உலகில் உள்ள எல்லா நீதி அநீதிகளையும் உணர்ந்து, தீவழி நீக்கி, நல்வழியில் ஒழுகவேண்டும்' என்பர். எனவே, அவர் அவ்வாறு ஒழுகாதபொழுது தங்கள் மதத்தைக் கைவிட்டவர் ஆகின்றனர்.
'பாஞ்சராத்திரம்' எனப்படுகின்ற வைணவ மதத்தினர், பெரும்பான்மையும் சைவரோடு ஒத்திருப்பினும் சைவத்தின் உயிர்க் கொள்கையாகிய, 'பிறப்பு இறப்பு உடையன எல்லாம் உயிர்களே; எக்காரணத்தாலும் அவையில்லாதவனே கடவுள்' என்பதை மறுத்து, 'உயிர்களின் பொருட்டுக் கடவுள் பிறந்தும் வருகின்றான்' என்பர். பிறப்பாவது அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சார்யுசம் என்னும் நால்வகை யோனிகளுள் எந்த ஒன்றிலேனும் கருவாய் இருந்து தோன்றி, வளர்ந்து, சிலகாலம் வாழ்ந்து மறைதலாம். இதனை 'அவதாரம்' என்றல் உபசாரமே. உண்மையில் அவதார மாவது, கடவுள் எவையேனும் சில காரியங்களை முன்னிட்டு யாதானும் ஓர் உருவில் தோன்றிச் சில நொடிகளில் அக்காரியத்தை முடித்து மறைவதேயாகும். பிறப்பு எய்திய வர்களையே இவர்கள் கடவுளாகக் கூறினாலும், 'அவர்களையும், கடவுளையும் வழிபட்டு உய்யவேண்டும்' என்பர். மேலும், 'அற நெறியில் ஒழுகுதல் கடவுளுக்கு விருப்பத்தையும், அறநெறிக்கு எதிரான மறநெறியில் ஒழுகுதல் கடவுளுக்கு விருப்பத்தையும் தரும் ஆதலின் அற நெறியிலே ஒழுகவேண்டும்' என்றும் கூறுவர். இக் கொள்கை சைவத்திலும் உள்ளதே. 'உலகிற்கு அறநெறியை அருளியவன் கடவுளே' எனக் கொள்வதால் அறநெறியில் ஒழுகுவதும் கடவுள் வழி பாட்டின் ஒரு பகுதியேயாகின்றது. எனவே, வைணவரும், சைவரும் அறநெறியையும், இறைவழிபாட்டினையும் விடுவாராயின் தங்கள் மதத்தைக் கைவிட்டவராவர். மீமாஞ்சகர் முதல் பாஞ்சாரத்திரம் முடிய உள்ள மதத்தினர் வேதத்தை ஏற்றுக்கொண்ட போதிலும் வேத சாரமாகிய சைவாகமங்களை ஏற்றுக்கொள்ளாமல் இகழ்தலால் இவர்களுடைய சமயங்கள் 'புறச்சமயங்கள்' எனப்படுகின்றன.
இனிப் பாசுபதம் முதலிய தாந்திரிகர்கள், இறையுண்மை

கொண்டபோதிலும் வேதத்திற்கு மாறான ஒழுக்கங்களை 'நல்லொழுக்கம்' எனக்கொள்ளுதலாலும், 'ஆன்றோர் யாவரும் வேத ஒழுக்கமே நல்லொழுக்கம்; அவற்றிற்கு மாறானவை தீயொழுக்கம்' எனக்கொண்டமையாலும் இவர்களது சமயங்கள் 'அகப்புறச் சமயங்கள்' எனக்கூறப்படுகின்றன. சிவாகமங்களை இவர்கள் முழுமையாகக் கொள்ளாவிடினும் ஓரளவு தழுவுவர். அதனால் இவர்களது சமயம் அறவே, 'புறச்சமயம்' எனப்படவில்லை.

புறப்புறச் சமயிகள் 'மாயை' என்றை ஒன்றைக் கொள்வதே யில்லை. அதிலிருந்து அவர்களுடைய தத்துவங்கள் எவ்வளவு முரண் பட்டவை என்பது விளங்கும். புறச்சமயிகள் வைதிகர்களாயினும் மாயையை மட்டும் கொண்டு, மகாமாயையைக் கொள்வதில்லை. அதனால் அவர்களுடைய தத்துவங்களும் நிறைவுடையன ஆகாமை விளங்கும். இவைகளையெல்லாம் நோக்கும்பொழுது சமயவாதிகளது பக்குவநிலை விளங்கும். விளங்கவே இறைவன் எல்லாரிடத்தும் ஒப்பவே கருணையுடையவன் ஆகையால், சமயநூலை ஒன்றாகச் செய்யாது பலவாகச் செய்தும், செய்வித்தும் உள்ளான் என்பதை இம்மந்திரம் விளக்குகின்றது.

'ஆகமம்' எனத் தொகையால் ஒன்றாகிப் பின் வகை விரிகளால் பலவாதல் பற்றில் 'தன்னில்' என ஒருமையால் கூறப்பட்டது. 'புறம்' என்பதில் முக்கூற்றுப் புறங்களும் அடங்கின. 'வரும் சமயமே புறமும்' என ஏகாரமும், உம்மையும் விரிக்க. 'அதனால் அவை இகழற்பால அல்ல' என்பதாம். உருவிய உண்மை 'வேதாந்த சித்தாந்த உண்மை' என்க. 'உருவிய' என்பது அன்பெறாத அகர ஈற்றுப் பன்மை வினைப்பெயர்.

இதனால், 'ஆறந்தங்களில் மேற்பட்டவை வேதாந்தமும், சித்தாந்தமும்' என்பது பரந்த நோக்கத்தில் வைத்து விளக்கப்பட்டது.

வேதாந்த சித்தாந்தம் வேறிலா முத்திரை
போதாந்தம் ஞானம்யோ காந்தம் பொதுஞேயம்
நாதாந்தம் ஆனந்தம் சீருத யம்மாகும்
மூதாந்த முத்திரை மோனத்து மூழ்கலே. ***#2345***

ஆறந்தங்களில் வேதாந்தம், சித்தாந்தம் இரண்டும் ஒன்றே எனத்தெளிவான அடையாளங்களைப் பெற்றுள்ளன. 'போதந்தம்' என்பது உயிர் அஞ்ஞானம் நீங்கி, ஞானத்தைப் பெறும் நிலையாகும். 'யோகாந்தம்' என்பது, பொதுப்பட ஒரு பொருளைக் குறியாகக்கொண்டு அதனையே நோக்கிநிற்பது. நாதாந்தம் திரு வருளைத் தலைப்பட்டு, அதனாலே சிவானந்தம் தோன்றப் பெறுவது. இவற்றிற்கு மேலாக முதலிற்கூறிய வேதாந்த சித்தாந்தங்களே முடிந்த அடையாளமாகிய

பேசாநிலையைப் பெற்றுச் சிவானந்தத்தில் திளைத்திருக்கலாகும்.

விளக்கவுரை

'சீராக உதயம் ஆதல் ஆகும்' என்க.
இதனால், ஆறந்தங்களுள் கலாந்தம் ஒழிந்த ஏனை ஐந்து அந்தங்களின் பயன் கூறப்பட்டன. கலாந்தத்தின் பயன் மேற்கூறப்பட்டது.

வேதாந்தந் தன்னில் உபாதிமேல் ஏழ்விடல்
நாதாந்தம் பாசம் விடுநல்ல தொம்பதம்
மீதாந்தம் காரணோ பாதியேழ் மெய்ப்பரம்
போதந்தம் தற்பதம் போம்அசி என்பவே. ***#2346***

வேதாந்தத்தில் சொல்லப்படுவது, 'பிரகிருதியும் அதன் காரியமுமாகிய ஏழுவகைக் குற்றங்களினின்றும் நீங்க வேண்டும்' என்பதே. அவை *1.* பூதங்கள், *2.* ஞானேந்திரியங்கள், *3.* அவற்றின் விடயங்கள், *4.* கன்மேந்திரியங்கள், *5.* அவற்றின் விடயங்கள், *6.* அந்தக் கரணங்கள் என்பனவும், எல்லாவற்றிற்கும் மூலமாகிய *7.* பிரகிருதியும் ஆகியவையாம்.

வேதாந்தத்திற்கு மேலேயுள்ள கலாந்தமாகச் சொல்லப் படுவது பிரோக காண்டம் ஆதல் பற்றிக்காரண தத்துவங்களாகச் சொல்லப்படுகின்ற சுத்த தத்துவங்களால் செலுத்தப்படுகின்ற வித்தியா தத்துவங்கள் ஏழும் நீங்குதலாம். இத்தத்துவங்கள் தடத்த சிவனால் செலுத்தப்படுதல் பற்றி, 'பரோபாதி' என்றும் சொல்லப்படும்.

நாதாந்தமாகச் சொல்லப்படுவது, உயிர் உபாதிகள் அனைத்தும் நீங்கி நிற்கின்ற நிலையாம். 'தத்துவமசி' மகா வாக்கியத் -தில் ஆன்மாவைக் குறிப்பதாகிய 'துவம்' பதம் இந்நிலையில் நின்ற ஆன்மாவையே குறிப்பதாம்.

போதாந்தமாகச் சொல்லப்படுவது, உபாதிகளின் நீங்கிய ஆன்மா மல வாசனையால் 'யான், எனது' எனநிற்கின்ற நிலையை விடுத்துச் சிவமாகும் நிலையாம் 'தத்துவமசி' மகாவாக்கியத்தில் 'ஆசி' பதம் ஆன்மா இவ்வாறாகும் நிலையையே குறிப்பதாம். 'தத்' பதம் சிவத்தைக் குறிக்கும்.

விளக்கவுரை

'மேல்' என்றது பிரகிருதியைக் குறித்தது. இரண்டாவதாகக் கூறப்படவேண்டிய மீதாந்தம், வேறுபொருள் படாமைப் பொருட்டு மூன்றாவதாகக் கூறப்பட்டது. 'விடு' என்பது முதனிலைத் தொழிற்பெயர். இதனை காரணோபாதியோடும் கூட்டுக. காரணோபாதி காரணங்களால் வரும் உபாதி. 'தற்பதத்துப் போம் அசி' என்க.'தற்பதம்' என்பதில் 'தத்' என்பது அதன் பொருளைக் குறித்து நின்றது. போதல்

புகுதல். 'போதலையே அசி' என்றமையால், 'போம் அசி' என்பதில் பெயரெச்சம் வினைப்பெயர் கொண்டதாம்.
இதனால் ஆறந்தங்களுடன் மேற்கூறப்பட்ட ஐந்தில் உள்ள பாச நீக்க முறைகள் கூறப்பட்டன.

அண்டங்கள் ஏழுந் கடந்தகன் றப்பாலும்
உண்டென்ற பேரொளிக் குள்ளால் உளவொளி
பண்டுறு கின்ற பராசத்தி யென்னவே
கொண்டனன் அன்றிநின் றான்எங்கள் கோவே. **#2347**

'உலகங்கள் அனைத்தையும் கடந்தாலும் அவற்றிற்கு அப்பாலும் ஒருபேரொளி உள்ளது' என வேதாகமங்கள் கூறுகின்றன. அந்தப் பேரொளிக்குள்ளே உள்ள ஓர் ஒளிதான் எங்கள் சிவபெருமான். அவன் அந்தப்பேரொளியைத் தனக்கு இயல்பாய் உள்ள மேலான ஆற்றலாக உடையவன். எனினும் அந்த ஆற்றலை ஆட்சி செய்கின்ற ஒருவனாகவும் அவன் அதற்குள் இருக்கின்றான்.

விளக்கவுரை

அண்டம், இங்கு 'உலகம்' என்னும் பொருட்டாய் நின்றது. 'உலகங்கள் ஏழு' என்னும் மரபு பற்றி, 'ஏழு' எனப்பட்டது. 'கடந்தகன்று' என்பது ஒருபொருட்பன்மொழி. 'அப்பாலும்' என்னும் உம்மை, இறந்தது தழுவிய எச்சம் இதனால் அண்டங்களுக் -குள்ளேயும் அந்த ஒளி இருத்தல் பெறப்பட்டது. 'என்ற' என்னும் அனுவாதத்தால், என்றலும் பெறப்பட்டது. 'உள ஒளி' என்பது குறிப்பு வினைப்பெயரெச்சத் தொடர். 'பண்டு' என்றது 'அனாதி' என்றபடி. 'ஆற்றல் யாவும் பொருளைப்பற்றியே நிற்கும் ஆதலால், இந்த ஆற்றலுக்குப்பற்றுக்கோடாய் உள்ளவனே எங்கள் பெருமான்' என்றார். 'அன்றி நின்றான்' என்றது, 'அந்த ஆற்றலாகிய குணத்திற்கு வேறாய், அதனையுடைய குணியாய் நிற்கின்றான்' என்றதாம்.
'பரம்பொருள் அறிவு மட்டுமான குணமேயன்றி, அறிவையுடைய குணியன்று' என்பர் ஏகான்மவாதிகள். 'அது சித்தாந்தம் அன்று' என்பதை இம்மந்திரத்தால் கூறினார்.
'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்'*8*
என்றார் உமாபதி தேவர். சிவன் வெறும் சத்தியன்று; 'சத்தியையுடைய சத்திமான்' என்க. எந்த ஒரு சத்தியும் தன்னையுடைய பொருள் இன்றித் தனியேயிராது.
'... ... ... சத்திதான் சத்தனுக்கோர்
சத்தியாம்; சத்தன்வேண்டிற் றெல்லாமாம் சத்தி தானே'*1*
என்ற சிவஞான சித்தியைக் காண்க.

இதனால், ஆறந்தங்களுள் மேலானதாய சித்தாந்தத்தின் சிறப்புப்பொருள் ஒன்று எடுத்துக்கூறப்பட்டது.

'அண்டம் ஆரிருள் ஊடு கடந்தும்பர்
உண்டு போலும்ஓர் ஒண்சுடர்; அச்சுடர்
கண்டிங் காரறிவார்! அறிவா ரெலாம்
வெண்டிங்கட் கண்ணி வேதியன் என்பரே'3

என்னும் அப்பர் திருமொழியை இங்கு நினைவு கூர்க.

கோவுணர்த் தும்சத்தி யாலே குறிவைத்துத்
தேவுணர்த் தும்கரு மச்செய்தி செய்யவே
பாஅனைத் தும்படைத்(து) அற்சனை பாரிப்ப
ஓவனைத் துண்டொழி யாத ஒருவனே. *#2348*

சிவன் தனது சத்தியாலே உயிர்கட்கு அறிவிக்கும் முறையை உணர்ந்து, அந்த வழியிலே குரு உபதேசித்த பணிகளைச் செய் வதாலும், மற்றும் மந்திரங்களைச் சமர்ப்பித்து வழிபாடு செய்வதாலும் பாசங்கள் யாவும் நீங்கும். பின்பு என்றுமே உயிர்க் -குயிராய் நீங்கா -திருக்கின்ற சிவன் ஒருவனே உயிரினிடத்து உள்ள பொருளாவான்.

விளக்கவுரை

கோ - யாவர்க்கும் தலைவன்; சிவன். அவன் முன்னர்த் திரோதான சத்தியால் உலகத்தையே உணர்த்துவான். பின்பு அருட் சத்தியால் உலகத்தை மறைத்துத் தன்னை - உணர்த்துவான். அதுவே சத்திநிபாதமாம். அதுதான் மந்ததரம் - மந்தம் முதலாகப் பல வகைப் படுதலின் அதற்கேற்ப குரு முன்னர் 'சரியை, கிரியை, யோகம்' என்ப வற்றை உணர்த்தி, முடிவிலே ஞானத்தை உணர்த்துவார். அவற்றுள், 'கருமச் செய்தி' என்பது சரியையும், 'அற்சனை' என்பது கிரியா யோகங்களையும் குறித்தன. யோகமும் அருவத் திருமேனி அருச் சனையே. 'செய்ய, பார்ப்ப' என்பன வினையிடத்து வந்த செவ்வெண். தே - சிவனேயான குரு. பா - பாட்டாயினும் மந்திரமே. 'அற்சனை பாட்டேயாகும்'* என்றது காண்க. படைத்தல் - சமர்ப்பித்தல். பாரித்தல் - மிகுதியாகச் செய்தல். 'ஓ' என்னும் முதனிலையே. 'ஓவும்' என முற்றுப்பொருள் தந்தது. 'அனைத்தும்' என்னும் முற்றும்மை தொகுத்த -லாயிற்று. 'ஒழியாத ஒருவனே உண்டு' என மாற்றியுரைக்க. இதனால், 'ஞானத்திற்கு வழி சரியை கிரியா யோகங்கள்' என்பது சித்தாந்தம் ஆதல் கூறப்பட்டது.

ஒருவனை உன்னார் உயிரினை உன்னார்
இருவினை உன்னார் இருமாயை உன்னார்
ஒருவனு மேஉள் ளுணர்த்திநின் றூட்டி
அருவனு மாகிய ஆதரத் தானே *#2349*

சித்தாந்தம், 'மற்றாருந்தன்னொப்பாரில்லாத' l தலைவன் ஒருவன் இருக்கின்றான். எனக் கூறுவதையோ, 'அத் தலைவனுக்கு அடிமையாய் உள்ள உயிர்கள் பல உள்ளன' எனக் கூறுவதையோ, 'அவ்வுயிர்கட்கு நல்வினை; தீவினை யென்னும் இருவகை வினைகளும், சுத்த மாயை என்னும் மாயைகளும் ஆகிய கட்டுக்கள் உள்ளன' எனக் கூறுவதையோ சக்திநிபாதம் வாயாதவர் உணர வல்லவராகார். ஆகையால், எக்காலத்திலும் உயிர்களின் அறிவுக் கறிவாய் நின்று அவைகளுக்கு அறிவித்து, வினைப்பயனை நுகர்வித்து, அவற்றிற்கு அவை அறியாமலே ஆதாரமாயும் நிற்கின்ற அந்தத் தலைவனே இருவினை யொப்பு மல பரிபாகங்களின்போது அறி -வித்தால்தான் எவரும் இந்தச் சித்தாந்த உண்மைகளை உணர இயலும்.

விளக்கவுரை

வருவித்துரைத்தன குறிப்பெச்சங்கள். 'சக்திநிபாதம் வாயாதோர், வாய்த்தோர்' என்பன, முன் மந்திரத்தில், 'கோவுணர்த்தும் சத்தியாலே' என்றதனால் கொள்ளக் கிடந்தன. அருவம் - புலனாகாமை. 'ஆதாரம்' என்பது குறுகி நின்றது.
இதனால், முன் மந்திரத்தில் கூறப்பட்ட பொருள் எதிர்மறை முகத்தான் வலியுறுத்தப்பட்டது.

அரன்அன்பர் தானம தாகிச் சிவத்து
வரும்அவை சத்திகள் முன்னா வகுத்திட்(டு)
உரன்உறு சந்நிதி சேட்டிப்ப என்றும்
திரன்உறத் தோயாச் சிவாநந்தி யாமே. #2350

சிவன்பால் அன்புள்ளவர்களை இடமாகக் கொண்டு வெளியாகின்ற ஆற்றல்கள் எல்லாம் அவர்களுடைய ஆற்றல்கள் அல்ல; மற்று, சிவனிடத்தினின்றும் வெளியாகின்ற ஆற்றல்களே அந்த ஆற்றல்களின் முன்னிலையில் எல்லாப் பொருள் களையும் சிவன் நிற்க வைத்துச் செயற்படச் செய்தலால், உயிர் நிலையாகச் சிவானந்தத்தில் மூழ்கி, அவ்வானந்தமே மயமாம் நிலையை அடையும்.

விளக்கவுரை

'ஆகிவரும் அவை, சிவத்தினின்றும் வரும் சத்திகள்' எனவும் 'அவற்றின்முன் வகுத்திட்டு எனவும், மொழி மாற்றியும், வேண்டும் சொற்களை வருவித்தும் உரைக்க சிவனது சத்தி, செயலாற்றுகையில் 'அதிகாரசத்தி' எனப்பெயர் பெறும். அது சிவத்தினிடம் இருந்தே செயலாற்றாது, அவனுடைய அன்பர்களிட மிருந்தும் செயலாற்றும். அந்த அதிகாரத்து பதியப் பெறுதற்குப் புண்ணியம் வேண்டும் 'புரைத்ததி காரசத்தி புண்ணியம் நண்ணலாலே'l என்றது காண்க. செயல்கள் தாம்

பலவாகலின், அவற்றிற்கு ஏற்ப அதிகார சத்திகளும் பலவாம். 'இவை செயல் நோக்கியல்லது பொருள் நோக்கியல்ல' என்பதை,
'சத்திதான் பலவோ என்னில், தான்ஒன்றே; அனேகமாக வைத்திடும் காரியத்தான்; மந்திரி யாதிக் கெல்லாம்
உய்த்திடும் ஒருவன் சத்திபோல்;அர னுடையதாகிப்
புத்திமுத் திகளை யெல்லாம் புரிந்தவன் நினைந்தவாறாம்'*1*
என்பதனான் உணர்க.

அதிகார சக்திகள் பலவும் அவரவரது புண்ணியத்திற்குத் தக அவ்வவரிடம் பதிந்து ஏற்புடைய செயல்களைச் செய்யும் என்க. உரன் உறுதல், எல்லாவற்றையும் செய்தும் தான் நிலை திரியாது இருத்தல். 'முன்' என்றதும், 'சந்நிதி' என்றதும் வெறும் எதிர்முக மாத்திரை யன்று; 'இஃது இவ்வாறு ஆகுக' எனச் சங்கற்பித்தலையேயாம். இத்தகைய சங்கற்ப மாத்திரையானே சிவன் எல்லாவற்றையும் செய்கின்றான் என்பதை உணர்க. சேட்டித்தல் - செயற்படுதல். 'சேட்டிப்ப' என்னும் செயவெனெச்சம் காரணப்பொருளில் வந்தது. 'சிவாநந்தி' என்றது சாதியொருமை. இதற்கு, 'உயிர்' என்னும் தோன்றா எழுவாய் வருவிக்க. 'சிவத்தினின்றும் வரும் சத்திகள்' என்றதனால், 'அவற்றின் முன்னாக வகுத்தவன் சிவனே' என்பது பெறப்பட்டது. 'வகுத்திட்டு' என்னும் செய்தென் எச்சம். 'ஆசிரியன் சொல்லி, மாணாக்கன் அறிந்தான்' என்பதுபோலக் காரணப் பொருட்டாய் நின்றது. 'வகுத்திட்டுச் சேட்டிப்ப' என இயையும்.

இதனால், முன்மந்திரத்தில், 'ஒருவனே தலைவன்' என்றது பற்றி, 'தலைவர் பலராதலைக் கண்டும், கேட்டும் அறிகின்றோமே; அஃதென்' என்று எழும் ஐயம் தீர்க்கப்பட்டது.

வேதாந்தம் தொம்பதம் மேவும் பசுஎன்ப
நாதாந்தம் பாசம் விடநின்ற நன்பதி
போதாந்தம் தற்பதம் போய்இரண் டைக்கியம்
சாதா ரணம்சிவ சாயுச்சிய மாமே. ***#2351***

வேதாந்தப் பொருள் முழுவதையும் மிகச் சுருக்கமாகத் தொகுத்துணர்த்தும், 'ஒருமொழி அல்லது 'பெரும்பெயர்' எனப்படுகின்ற மகாவாக்கியங்கள் சிலவற்றுள், 'தத்துமசி' என்பதே சிறந் தெடுத்துச் சொல்லப்படுவது. (இது சாமவேதவாக்கியம்) இதனுள் 'தத்' என்பது பதியாகிய சிவத்தையும், 'துவம்' என்பது பசுவாகிய உயிரையும், 'அசி' என்பது, உயிரைச் சிவமாக்குகின்ற அருட் சத்தியையும் குறிக்கும். எனினும், 'இவற்றுள் பசுவாகிய உயிர் பஞ்ச பேதங்களை யுடைய (இத்தந்திரத்து முதல் அதிகாரம்) உடலளவில் ஏகதேசமாய உள்ளதன்று; வியாபகமானதே' என்பதை வலியுறுத்தி விளக்குவதே வேதாந்தமாகும்.

மண்முதல் நாதம் ஈறாகச் சொல்லப் படுகின்ற உபாதி களுள் ஒன்றும் இன்றி, நின்மலமாய் நிற்பது எதுவோ அதுவே பதிப் பொருள்' என வலியுறுத்தி விளக்குவது நாதந்தமாகும் ('உயிர் இவ்வு பாதிகளை உடைமையாலே - பசு - எனப்பட்டது' என்பதும் இதனானே விளங்கும்). இனி, துவம் பதப்பொருளாகிய உயிர் தத் பதப் பொருளாகிய சிவத்தில் சென்று 'பாலோ டளாயநீர பாலாகு மலலது நீராய் நிறந்தெரிந்து தோன்றாதவாறுபோல'3 சிவமேயாய் வேறு தோன்றாது ஒன்றிவிடுதலை வலியுறுத்தி விளக்குவதே போதாந்தமாகும். (போதம் - சீவபோதம். அந்தம் - அதன் ஒடுக்கம். அஃதாவது கதிரொளியில் விளக்கொளிபோலச் சிவபோதத்தில சீவ போதம் அடங்கியிருத்தல்). ['போதாந்தம் கூறும் நிலையை எய்தி, அவ்விடத்தில உயிர் பேரா இன்பப் பெருவெள்ளத்தில் அழுந்துதலை வலியுறுத்தி விளக்குவதே சித்தாந்தமாகும்' என்பது குறிப்பு.]

'சிவமும், சீவனும் பொருள் இரண்டாமாயின், அவை ஒன்றாதல் எங்ஙனம் கூடும்' எனின், அவ்விரண்டற்கும் இடையே உள்ள பொதுத்தன்மைதான் அவை அங்ஙனம் ஒன்றாதற்குக் காரணம் [அத்தன்மையாவது, இரண்டும் சித்தாய் இருத்தலாம். எனவே, சடத்திற்குச் சிவத்தோடு ஒன்றுதல் கூடாமை விளங்கும்].

விளக்கவுரை

பசு - பசுவின் இயல்பு; ஆகுபெயர். பசு இயல்பைக் கூறுவதை 'பசு' என்றே உபசரித்தார. இவை 'பதி' என்றதற்கும் ஒக்கும். 'தற்பத்துப் போய்' என்க. 'இரண்டும்' என்னும் முற்றும்மை தொகுத்தலா யிற்று. 'ஐக்கியம்' என்பதன்பின், 'ஆதல்' என்பது எஞ்சி நின்றது. ஆதலைக் கூறுவதை 'ஆதல்' என்றதும், சாயுச்சம் ஆதற்குக் காரணமாவதை, 'சாயுச்சியம்' என்றதும் உபசாரம். சாதாரணம் - பொதுத்தன்மை. இதனால், மேல், 'ஒருவனையுன்னார்; உயிரினை உன்னார்' என்பன முதலாக எதிர்மறை முகத்தாற் கூறியவற்றை நீக்கி, உடன்பாட்டு முகத்தால் உன்னுமாறு ஆறந்தங்களுள் பெறப்படுதல் கூறப்பட்டது.

சிவமாதல் வேதாந்த சித்தாந்த மாகும்
அவம அவமமாம் அவ்வீ ரிரண்டும்
சிவமாம் சதாசிவன் செய்ததொன் றானால்
நவமான வேதாந்த ஞானம்சித் தாந்தமே. **#2352**

ஆறந்தங்களுள், 'வேதாந்தம், சித்தாந்தம்' என்னும் இரண்டும், சீவன் சிவம் ஆதலைக் கூறுவதில் வேறுபட வில்லை. ஏனை, 'போதாந்தம், கலாந்தம், நாதாந்தம், யோகாந்தம்' என்னும் நான்கும் ஒன்றின் ஒன்று கீழ்ப்பட்ட நிலைகளையே விளக்கி நிற்கும். வேதமும், சித்தாந்தத்தைக்கூறும் சிவாகமும், உண்மையில் 'சிவம் எனப்படுகின்ற

அந்தப்பொருளே, தடத்தத்தில் 'சதாசிவன்' என்னும் பெயரையும்,
அதற்குரிய வடிவத்தையும் கொண்டு செய்த முதல்நூல் ஆகுமானால்,
அவற்றுக்கிடையே வேறுபாடிருத்தல் எங்ஙனம் கூடும். கூடாது.
ஆகவே, வேதாந்த ஞானம், சித்தாந்த ஞானமேயாம்.

விளக்கவுரை

ஆதலைக் கூறுவனவற்றை 'ஆதல்' என்றது உபசாரம். அவமம் - கீழ் (பரமம் ஞ அவமம்). 'செய்தது' எனவும், 'ஒன்று' எனவும் கூறியது. 'வடிவால் வேறாயினும், பொருளால் ஒன்றே' என வலியுறுத்தற்கு 'வேதம் ஒருவரால் செய்யப்பட்டதன்று; தானே உள்ளது' எனக் கூறுபவர்க்கே (மீமாஞ்சகர்) வேதம் ஆகமத்தின் வேறாகும். 'வேதமும் சிவனால் செய்யப்பட்டதே' என்பார்க்கு வேதமும் ஆகமந்தான் இது பற்றியே நீலகண்ட சிவாசாரியர், 'வேதமும் ஆகமமே' ('வேதோபி ஆகம்' சிவாத்துவித பாடியம் - பதியதிகரணம்) என்றார். வேதாகமங்கள் தோன்றிய வரலாற்றை முதல் தந்திர உரையிற் காண்க.
நவம் - புதுமை; முதலிலே உணரப்படுவது' என்பது கருத்து.
இதனால், மேற்கூறியவற்றுள் வேதாந்த சித்தாந்தங்களது உயர்வு கூறப்பட்டது.

சித்தாந்தத் தேசீவன் முத்திசித் தித்தலால்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தந்த வேதாந்தம் செம்பொருள் ஆதலால்
சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே. ***#2353***

ஆறந்தங்களுள் சித்தாந்தத்தில் நிற்கும் நிலையில் தான் சீவன் முத்தி (அஃதாவது, உடம்பு உள்ளபொழுதே அதில் தொடக்கற்று, வீட்டின்பத்தில் இருக்கும்நிலை) கிடைக்கும். ஆகையால், சித்தாந்த நிலையில் நிற்பவர் உலகர்போலவே காணப் படினும், அவர் உலகருள் ஒருவராகாது, வீடுபேற்றில் இருப்பவரே ஆவார். வேதாந்தத்தின் உட்கிடையும் சித்தாந்தமேயாதலால், அவ்வுட்கிடையை உணரவல்லவர்கட்கு வேதாந்தம், சித்தாந்தம் இரண்டும் சிவனையே பரமாகக் காட்டி நிற்றல் விளங்கும்.

விளக்கவுரை

'சித்தாந்தத் தேசிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
செனனம்ஒன்றி லேசீவன் முத்த ராக்கி
வைத்தாண்டு மலம்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை அறுத்து முத்தாந்தப்
பாதமலர்க் கீழ்வைப்பன் என்று
மொழிந்திடவும் உலகரெல்லாம் மூர்க்க ராகிப்

பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவர்; இது என்ன பிராந்தி!' -பக்கம் - சூ. *8 - 16.*
என்னும் சிவஞான சித்தி மொழியினை இங்கு ஒப்புநோக்கியுணர்க.
இதனால், ஆறந்தங்களுள் சித்தாந்தத்தின் தலைமை அதன் பயன்கூறும்
முகத்தால் இனிது விளக்கப்பட்டது.

சிவனைப் பரமனும் சீவனுட் காட்டும்
அவமற்ற வேதாந்தம் சித்தாந்தம் ஆனால்
நவமுற் றவத்தையில் ஞானம் சிவமாம்
தவமிக் குணர்ந்தவர் தத்துவத் தாரே. ***#2354***

சிவனை ஈசுரனிடத்திலும், சீவனிடத்திலும் வைத்துக் காட்டுவது வேதாந்தம். அதில் இருவகை உண்டு. ஒன்று பரிணாம வாதம்; மற்றொன்று ஆபாசவாதம். ஆபாசம் - போலி. விவர்த்தனம் ஆபாசத்துள் அடங்கும். விவர்த்தனம் - கயிறு பாம் பாதல் போலும் பொய்த்தோற்றம். 'நிர்க்குணமாகிய பரப்பிரமமே தன் இச்சையால், சத்துவகுணனாகிய ஈசுரனாகவும், இராசத குண னாகிய சீவனும், தாமத குணத்தவாகிய அந்தக் கரணம் முதலிய கருவி களுமாய்ப் பரிணமிக்கும்' என்பது பரிணாம வாதம். 'நிர்க் குணமாகிய பரப்பிரமத்திலே - இன்னது எனச்சொல்ல இயலாத - மாயை என்பது உண்டு. அது முக்குணங்களை யுடையது. மூன்றுநிறம் உடைய கண்ணாடியைப் போன்றது. அம்மூன்றுகூற்றிலும் கண்ணாடி -யில் நிழல் போலப் பரப்பிரமம் பிரதிபலிக்கும். அவற்றுள் சத்துவக் கூற்றின் பிரதி பலனம் ஈசுரனாயும், இராரசதக் கூற்றின் பிரதிபலனம் சீவனாயும், தாமதக் கூற்றின் பிரதி பலனம் அந்தக் கரணம் முதலிய கருவிகளாயும் நின்று செயற்படும்' என்பது ஆபாசவாதம். இந்த ஆபாசத்திற்கு அடிப்படை மாயையே யாகையால், ஆபாசவாதமே 'மாயாவாதம்' எனப்படுகின்றது எவ்வகை யிலேனும் இந்தவேதாந்தம் 'சகம், சிவன், பரம்' என்னும் முப் பொருளை உணர்த்துதலால், இதனை உணர்ந்த பின் ஆகமாந்தத்தை உணருங்கால், வேதாந்தக் கூற்று தூலாருந்ததி முறைமைத்தாதல் விளங்கும். தூலாருந்ததி முறைமை யாவது, 'அருந்ததி மீன் மிக நுண்ணி தாதலின், அதனைக் காட்டுதல் அரிது' என்று கருதி முதற்கண், அதற்கு அருகில் உள்ள ஒரு பெரு மீனைச் சுட்டி, 'அதுவே அருந்ததி' எனக் காட்டுதல் போன்ற முறை. முதலில் அப்பெருமீனைக் கண்டுணர்ந் தவனுக்குப் பின்பு, 'அஃதன்று அருந்ததி மீன்; அதனைச் சார்ந்து மிக நுண்ணியதாய் விளங்குகின்றதனைப் பார்; அதுவே அருந்ததி மீன்' எனக்காட்டினால், அவன் அருந்ததியைக் கண்டுகொள்வான். இம் முறையில் அருந்ததி யல்லாத மீனை அணுக்கம் பற்றி 'அருந்ததி' என்றல் போல்வது இங்குக் கூறிய வேதாந்தப் பொருள். அருந்ததி மீனையே

சுட்டி, 'அருந்ததி மீன்' எனக் காட்டுதல் போல்வது ஆகமாந்தப்பொருள். ஆகவே, தூலாருந்ததி முறைமை பற்றி நோக்கினால் இங்குக் கூறிய வேதாந்தமும் பயனில்லது ஆகா தாகலின், இந்த வேதாந்தமும் சித்தாந்தமேயாம். இவ்வாறு ஆகும் நிலைமையில் ஒருவனது ஞானம் அமையுமாயின், அந்த ஞானம் தசகாரியத்துள் ஒன்பதாம் நிலையாகிய 'சிவயோகம்' எனப்படுகின்ற சீவன் சிவனாய் நிற்கும் நிலைமையைத் தரும். 'சரியை, கிரியை, யோகம்' என்றும் தவங்களின் மிகுதியனாலே இத்தகைய ஞானத்தை எய்தினோரே, 'தத்துவ ஞானிகள்' எனப்படுகின்றார்கள்.

விளக்கவுரை

'பரப்பிரமத்தை' என்னாது, 'சிவனை' என்றது, 'சித்தாந்தத்தில் சொல்லப்படும் சிவனே, வேதாந்தத்தில் சொல்லப் படும் பரப்பிரமம்' என்றற்கு. இச்சிவன், சொரூப சிவன் என்க. இஃதே பற்றித் தடத்த சிவனை, 'வேதாந்திகள் கூறும் ஈசுரன்' என்றோ, 'சகுணப் பிரமம்' என்றோ மயங்கற்க. சித்தாந்தம் கூறும் தடத்த சிவனும் நிர்க்குணனே. பரமன் - வேதாந்திகள் கூறும் பரமன்; ஈசுரன். 'நவம்' என்றது, ஒன்பதாம் எண்ணுமுறைமையை. 'உற்ற' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. மிக்கு - மிகுந்ததனால். உணர்தற்கு, 'இதனை' என்னும் செயப்படுபொருள் வருவிக்க.
இதனால், 'சித்தாந்தமே வேதாந்தம்' என்னும் உண்மையை உணராதவர் வேதாந்த வாக்கியங்கட்குத் தாம் தாம் அறிந்தவாற்றால் கூறும் பொருள்களும் சித்தாந்தத்தை உணர்ந்தவர்கட்கு நேர் மாறானவை யாகாது, தூலாருந்ததி முறைமையவாம் என்பது கூறப்பட்டது.

தத்துவ மாகும் சகள அகளங்கள்
தத்துவ மாம்விந்து நாதம் சதாசிவம்
தத்துவ மாகும் சீவன்நல் தற்பரம்
தத்துவ மாம்சிவ சாயுச் சியமே. ***#2355***

சித்தாந்தத்தில் சொல்லப்படுகின்ற உருவம், அருவம் உருவாருவம் ஆகிய சிவவடிவங்களும், அவற்றிற்கு இடமாகின்ற விந்து, நாதம், சாதாக்கியம் ஆகிய நிலைக்களங்களும், சீவனும், அதனின் மேம்பட்ட சிவன், சத்தி, சதாசிவன் ஆகிய கருத்தாக் -களும் உண்மைகளேயன்றி, மேற்கூறிய வேதாந்தத்தில் சொல்லப் படுபவன போல, பரிணாமமோ, ஆபாசமோ அல்ல. ஆகவே, சீவன் சிவனோடு, கதிரவன் ஒளியில் விளக்கொளிபோல இரண்டறக் கலக்கும் சித்தாந்த முத்தியே உண்மை முத்தியாம்.

விளக்கவுரை

தத்துவம் - உண்மை. 'தத்துவமாகும்' என்னும் பயனிலை நான்கடிகளிலும் முதற்கண்ணே நின்றது. சகளம் - உருவம். அகளம் - அருவம். இவ்விரண்டைக் கூறியதனால் சகள நிட்களமாகிய உருவாருவமும் பெறப்பட்டது. தன்பரம் - தனக்கு மேலே உள்ளவர். அவர் சதாசிவர் முதலிய கடவுளர். இவரையும், சீவர்களையும், மற்றும் இவர்களது தனு கரண புவன போகங்களையும், 'கனவிற் காணப்படும் மயக்கக் காட்சிபோல வியாவகாரிக சத்தைகள்; பாரமார்த்திகத்தில் இவையெல்லாம் பொய்யாய் ஒழியும்' எனக் கூறுவர் மாயாவாதிகள். 'அது பொருளன்று' என வலியுறுத்தற்கு அடிதோறும் 'தத்துவம் ஆகும்' எனக்கூறினார்.
இதனால், மேற்கூறிய வேதாந்தப்பொருள் தூலாருந்ததி முறைமைத்தாதல் வலியுறுத்தப்பட்டது.

வேதமொ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுள்ளன
நாதன் உரைஅவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்னில் பெரியோர்க் கபேதமே. ***#2356***

இதன்பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

பொது, உண்மையை முற்ற உணர்த்தாது, ஓரளவாக உணர்த்துவது. சிறப்பு, உண்மையை முற்ற உணர்த்துவது, உலகர் உண்மையை ஓரளவே உணர்வார்; சத்தி நிபாதரே முற்ற உணர்வார். மேலும் உண்மையை முதற்கண் ஓரளவாக உணர்ந்தே பின்பு முற்ற உணர இயலும். அது பற்றியே உலகர்க்காவும், சத்திநிபாதர்க்காகவும் முறையே வேதமும், ஆகமமும் சிவனால் செய்யப்பட்டன. எனவே இவ்வுண்மையை உணராதவர், 'வேதாந்தம் வேறு சித்தாந்தம் வேறு' என்பர். இவ்வுண்மையை உணர்ந்தவர் ஓர் உண்மைதானே பொதுவும், சிறப்புமாம் வகையில் 'வேதாந்தம்' எனவும், 'சித்தாந்தம்' எனவும் நிற்கின்றது என்பர் என்றபடி.
'வேதநூல், சைவநூல் என்றிரண்டே நூல்கள்;
வேறும்உள நூல்இவற்றின் விரிந்த நூல்கள்;
ஆதிநூல் அனாதிஅம லன்தருநூல் இரண்டும்;
ஆரணநூல் பொது;சைவம் அருஞ்சிறப்பு நூலாம்; நீதியினால்
உலகர்க்கும் சத்தநிபா தர்க்கும்
நிகழ்த்தியது'
-சுபக்கம் சூத். *8 - 15.*
என்றது சிவஞானசித்தி.

இதனால், ஆறந்தங்களுள் வேதாந்த சித்தாந்தங்களது தலைமை அவற்றின் இயல்பு கூறும் முகத்தால் வலியுறுத்தப்பட்டது.

பரானந்தி மன்னும் சிவானந்த மெல்லாம்
பரானந்தி மேன்மூன்றும் பாழுறா னந்தம்
விராமுத்தி ரானந்தம் மெய்ந்நட னானந்தம்
பொராநின்ற உள்ளமே பூரிப்பி யாமே. **#2357**

வேதாந்தத் தெளிவாம் சித்தாந்த நெறியில் அடையப்படும் ஆனந்தம் சிவானந்தம். அதனை முற்றப்பெற்ற உயிரே மேலான ஆனந்தத்தைப் பெற்ற உயிராகும். இனி அந்த ஆனந்தம் முப் பாழுக்கு மேலே விளைவதாகும். அதனை இவ்வுலகிலே இறைவன் செய்யும் திருக்கூத்திலும் பெறலாம். திருக்கூத்தில் பெறும் 'முத்திரானந்தம், எனப்படும். அதனை எல்லாரும் பெறுதல் கூடும். சிவானந்தத்தை எந்த வகையிலேனும் பெறும் உயிரே இன்பத்தால் நிறைக்கப்பட்ட உயிராகும்.

விளக்கவுரை

பர + ஆனந்தம் = பரானந்தம். 'பரா + ஆனந்தம்' என்றலும் ஆம். ஆனந்தத்தை உடையது ஆனந்தி. 'பரானந்தி மன்னும் சிவானந்தம் எல்லாம்' என்றாரேனும், 'சிவானந்தம் எல்லாம் மன்னியது பரானந்தி' என்றலே கருத்து. எல்லாம் - முழுதும். 'முழுதிலும்' என்க. மன்னுதல் - நிலைத்திருத்தல். இரண்டாம் அடியில், 'அந்தப் பரானந்தம்' எனச்சுட்டியுரைக்க. 'மேல்மூன்றும் பாழ்உறு ஆனந்தம்' என்பதை, 'மூன்று பாழுக்கும் மேல் உறு ஆனந்தம்' என மாறிக்கூட்டுக. 'முப்பாழ்இவை' என்பதைப் பின்னர்க்காண்க. விரா ஆனந்தம், வினைத்தொகை. 'விரா' என்றது உடம்பொடு புணர்த்தது. எனவே, 'முத்திரானந்தம் (யாவராலும்) விராவப்படும்' என்பது கருத்தாயிற்று. கூத்தப்பெருமானது கூத்து, 'ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தலையே'l குறிப்பதாகலின், அந்த நடனத்தில் காணப்படும் முத்திரை (வீசியகரமும், எடுத்த திருவடியும்) 'ஆனந்த முத்திரை' யாகும். அதனால் அதை, 'முத்திரானந்தம்' என்றார். முத்திரானந்தம் - முத்திரையில் விளையும் ஆனந்தம்.

'இறைவன் இல்லை' எனப் பிணங்கிய தாருகாவன முனிவர்க்கு 'அவன் உளன்' என விளக்கினமையால், பிட்சாடனர் கையில் காணப்படுவது 'சன்முத்திரை' சன் + முத்திரை (சத் + முத்திரை) என்றும், சனகாதி நால்வர்க்கு ஞானத்தைத் தெளிவித் தமையால், தென்முகக் கடவுள் கையில்காணப்படுவது 'சின்முத்திரை' (சித் + முத்திரை) என்றம் சொல்லப்படும். எனவே இம்மூர்த்திகளின் முத்திரையும் கூடி, சச்சிதானந்த முத்திரையாதல் விளங்கும்.

'பொரு' என்னும் பகுதி நேரே, 'போர் செய்தல்' எனப்பொருள் தருமாயினும், உகரம் பெற்று, 'பொருவுதல்' என நின்று 'ஒத்தல்' என்றும் பொருளைத் தரும் ஆதலின் இங்கு, 'பொராநின்ற' என்பது, 'ஒத்திரா நின்ற' எனப்பொருள்தத்தது. ஒத்திருத்தல் - தகுதி பெற்றிருத்தல். உள்ளம் - ஆன்மா. பூரித்தல் - நிறைத்தல். பூரிப்பி - நிறைக்கப் பட்டது. இதனால், சித்தாந்தத்தில் பெறப்படும் பயன் ஒப்புயர் வற்றதாதல் கூறப்பட்டது.

ஆகும் கலாந்தம் இரண்டந்தம் நாதாந்தம்
ஆகும் பொழுதில் கலைஐந்தாம் ஆதலின்
ஆகும் அரனேபஞ் சாந்தக னாமென்ன
ஆகும் மறைஆ கமம்மொழிந் தானே ***#2358***

ஆறந்தங்களில், 'கலாந்தம், நாதாந்தம்' என இரண்டு கூறப்படினும், நாதாந்தம் கலாந்தத்துள் அடங்கும் ஆதலின், நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகளின் முடிவே முடிவாகும் ஆகவே, 'அந்தப் பஞ்சகலைகளையும் சுத்த மாயையுள் ஒடுக்கியும், மீள விரித்தும் நிற்பவன் சிவன்' எனக் கேட்கப்படுதலன்றிப் பிறர் ஒருவரும் அத்தன்மையராதல் கேட்கப்படாமையால், அவனே ஆறந்தங்கட்கும் மூலமாகிய வேதாகமங்களைச் செய்தருளினான்.

விளக்கவுரை

அன்றே, தேற்றம், 'பஞ்ச கலைகளையும் ஒடுக்கி, விரிப்பவனே முழுமுதல் தலைவன்' என்பதும், 'கீழ்க் கீழ் உள்ள சிலகலைகளை மட்டும் ஒடுக்கி, விரிப்பவர் முழுமுதல் தலைவராகாது, முழுமுதற்றலைவன் கீழ் ஒருபுடை நிற்கும் தலைவர் என்பதும் சித்தாந்தம். ஆதலின், உலகிற்கு இருவகை முதல் நூல்களைச செய்தளித்தவனும் அவனே என்றபடி. 'இரண்டந்தம்' என்பதை, 'நாதாந்தம்' என்பதன் பின்னர்க்கூட்டுக. என்ன - என்று சொல்லும்படி. பஞ்சாந்தகன் - ஐந்தையும் இறுதி செய்பவன். இறுதி செய்தலைக் கூறவே, தோற்றுவித்தலும் தானே பெறப்பட்டது. இதனால், மேல் 'நாதன் உரை அவை' எனப்பொது வகையால் சுட்டப்பட்ட தலைவன் இவன் என்பது சிறப்பு வகையால் இனிது விளக்கப்பட்டது.

அன்றாகும் என்னாதை ஐவகையந் தந்தம்மை
ஒன்றான வேதாந்தம் சித்தாந்தம் முன்னிட்டு
நின்றால் இயோகாந்தம் நேர்படும் நேர்பட்டால்
மன்றாடி பாதம் மருவலும் ஆமே. ***#2359***

வேதாந்தத்தைத் தவிர மற்றை ஐந்து அந்தங்களை, 'உண்மையல்ல; போலி என்று இகழாதே தலையாய வேதாந்தத்தைச் சித்தாந்தத்தின் வழியாக உள்ளவாறுணர்ந்து நின்றால், யோகாந்தம் செயல்முறையில்

வாய்க்கும். அது வாய்த்தால், மன்றாடியாகிய சிவனது திருவடிப்பேறும் கூடும்.

விளக்கவுரை

அன்று, பன்மையொருமை மயக்கம். 'என்னாதை' என்பது, எதிர்மறை ஒருமை ஏவல். இஃது, 'என்னாதே' என மருவி வழங்கும். 'அன்றாகும் என்னாதை' என்பதை முதல் அடியின் இறுதியிற் கூட்டுக. உணர்வு முறையில் சித்தாந்தம் முடிவானதாயினும், செயல் முறையில் அதற்கு முதற்படி யோகாந்தம் என்றபடி. அனைத்து அந்தங்களும் படிமுறையில் வேண்டுவன ஆதலின் அவற்றை, 'அன்றாகும் என்னாதை' என்றார். இதனால் ஆறந்தங்களும் படி வழியாதல் கூறப்பட்டது.

அனாதிசீ வன்னைம் மலமற்றப் பாலாம்
அனாதி அடக்கித் தனைக்கண் டரனாய்த்
தனாதி மலங்கெடத் தத்துவா தீதம்
வினாவும்நீர் பால்ஆதல் வேதாந்த உண்மையே. ***#2360***

பதியைப்போலவே பசுவாகிய சீவனும் அனாதி. அதற்கு அனாதியே ஒரு குற்றம் உண்டு. அந்தக்குற்றம் மேல் எழாமல் கீழாம்படி அடக்கினால் சீவன் தனது உண்மையைத் தான் உணரும். தன்னை உணர்ந்தால், பின் தலைவனை உணர்ந்து, அவனைச் சார்ந்து அவனாகி நிற்கும். அங்ஙனம் நிலையை அடைதற்பொருட்டுச் சீவன் அனாதிக்குப் பின் ஆதியாய் வந்த மலங்களும் நீங்கும்படி அவற்றைக் கடக்கும் முறையை ஞான குருவை அடைந்து வினாவும். பின் அவர் உபதேசித்தபடி நின்று, ஐந்து மலங்களும் நீங்கப் பெற்றுத் தூயதாய் உலகத்தைக் கடந்து நிற்கும். அந்நிலையில் அது சிவத்தைச் சேர்ந்து சிவம் ஆதல், நீர் பாலோடு சேர்ந்து பாலாதல் போல்வதாம். வேதாந்தத்தின் உண்மைப்பொருள் இதுதான்.

விளக்கவுரை

முன் மந்திரத்தில், 'வேதாந்தப் பொருளைச் சித்தாந் -தத்தின் வழியாக உணர்தல்வேண்டும்' என்றமையால், 'அதனை அவ்வாறு உணருங்கால் வேதாந்தப் பொருள் இவ்வாறாம்' என்றபடி.
ஐம்மலம் - ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி. இவற்றுள் ஆணவம் அனாதி; அன்றே உள்ளது. ஏனைய ஆதி; பின் வந்தவை. இரண்டாம் அடியில் 'அனாதி' என்றது. அனாதியாய மலத்தை. அனாதிக்கு அந்தம் இல்லை ஆதலின், 'அழித்து' என்னாது 'அடக்கி' என்றார். ஆணவம் தவிர ஏனை நான்கும் 'ஆதி மலம்' எனப் பட்டன. சம்பந்தம் ஆயினமை பற்றி, 'தத்துவாதீதம்' என மாயே யத்தையே கூறினாராயினும் இனம் பற்றி அனுபந்தமும், சார்பு பந்தமு -மாய் உள்ள

ஏனைய மலங்கட்கு அதீதம் ஆதலும் கொள்ளப்பட்டது. வினாவுதற்கு, வினாவப்படுவார் வருவிக்கப்பட்டார்.
சீவனை, 'ஆதி' என்பாரை மறுத்தற்கு, 'அனாதி சீவன்' என்றும், 'மலம் இரண்டே' என்பாரை மறுத்தற்கு, 'ஐம்மலம் அற்று' என்றும், ஆணவத்தைப் பலபட மயங்கிக் கூறுவாரை மறுத்தற்கு 'அனாதி மலம்' என்றும். 'சீவன் சிவனாதல் நீரும், நீரும் சேர்ந்து ஒன்றாதல் போல்வது' எனவும், 'குடம் உடைந்த வழிக் குடாகாயம் மகா காயத்தோடு சேர்ந்து ஒன்றாதல் போல்வது' எனவும், மற்றும் இன்ன பிற போல்வனவாகவும் கூறுவாரை யெல்லாம் மறுத்தற்கு, 'நீர் பாலாதல்' என்றும் கூறினார். 'ஐம்மலம் அற்று அப்பால் ஆம்' என்பதை 'வினாவும்' என்பதன் பின்னர்க் கூட்டி, 'அது நீர் பால் ஆதல் போல்வது' எனவும், 'இதுவே வேதாந்த உண்மை' என்று எழுவாய்கள் வருவித்து, தேற்றேகாரத்தை மாற்றிவைத்துரைக்க. அதீதம் ஆதற்குரிய முறையை 'அதீதம்' என்றார். இதனால், மேல் 'நாடில் இரண்டந்தம் பேதமதென்னில் பெரியோர்க் கபேதமே' என்றது தெளிவிக்கப்பட்டது.

உயிரைப் பரனை உயர்சிவன் றன்னை
அயர்வற்ற றறிதொந்தத் தசியெ னதனால்
செயலற் றறிவாகி யும்சென் றடங்கி
அயர்வற்ற வேதாந்தம் சித்தாந்தம் ஆமே. ***#2361***

'உயிர், பரன், திருவருள்' என்னும் முப்பொருளை யும், 'அவற்றுள் ஒன்றையும் விடாது முறையே உணர்த்துகின்ற, 'துவம், தத், அசி' என்னும் மூன்று பதங்களால் ஆகிய வேதாந்த மகா வாக்கியத்தை அனுபவமாக உணர்வதால், நீ சடமாகிய பாசங்கள் ஆகாது, சித்தாகி விடுவாய். ஆயினும், அதன்பின் 'யான் எதனையும் யானே அறியமாட்டாமையால், தூலசித்தாகின்ற எனக்கு எஞ் ஞான்றும் அறிவித்து வருகின்ற சூக்கும சித்து ஒன்று உண்டு என உணர்ந்து, எதனையும், 'யான் அறிகின்றேன், யான் செய்கின்றேன்' எனச் செருக்குதலை விடுத்து, அந்தச் சூக்கும சித்தின்கீழ்ப் போய் அடங்கியிரு. அப்பொழுதே வேதாந்தம் சித்தாந்தம் ஆகிவிடும்.

விளக்கவுரை

சிவன், அவனது அருளைக் குறித்த ஆகுபெயர். வாக்கியம், 'தத்துவமசி' என்று இருப்பினும் உண்மையில் அதன் சொற்கிடக்கை முறை, 'துவம் தத் அசி' என்பதே ஆதலை விளக்குவார். 'தொம் தத் அசி' என்றார். 'அசி' என்பது, 'ஆகின்றாய்' எனப் பயனிலை ஆதலாலும் அது முன்னிலையிடத்தது ஆதலாலும் 'துவம்' (நீ) என்னும் முன்னிலை எழுவாய் முதற்கண் நிற்றலே முறையாதல் அறிக. எனவே, 'தத்துவமசி' என்ற மகாவாக்கியத்தின் பொருள், 'நீ அது ஆகின்றாய்' என்பதே

ஆகின்றது.
ஒரு பொருள் மற்றொரு பொருளேயாதற்குக் காரணம் அவற்றிடையே யுள்ள இயைபு. அவ்வியைபுதான் பல. 'குடம் மண் ஆகின்றது' என்பதில் ஆதற்குக் காரணம் காரிய காரண இயைபு. அது போன்றதே 'நீ அது ஆகின்றாய்' என்பதில் ஆதற்குரிய காரணம் என்பர் பிரம பரிணாமவாதிகள்.
'வெண்மை தாமரை யாகின்றது', 'இலை பூ காய்கள் மரமாகின்றன' என்பவற்றில் ஆதற்குக் காரணம் குண குணி, இயைபும், அவயவ அவயவி இயைபும் ஆகும். இவைபோன்றதே 'நீ அது ஆகின்றாய்' என்பதில் ஆதற்குரிய காரணம் என்பர் விசிட்டாத்து விதிகள்.
'பாம்பு பழுதையாகின்றது', 'அரசன் ஆண்டியாகின்றான்' 'குடாகாயம் மகாகாயம் ஆகின்றது' என்பவற்றில் ஆதற்குக் காரணம் காட்சிவகையும், நிலைமை வகையும், பொருள் ஒருமை வகையும் ஆகும். இவைபோன்றதே, 'நீ அது ஆகின்றாய்' என்பதில் ஆதற்குரிய காரணமும் என்பர் கேவலாத்து விதிகள்.
இவரெல்லாம், 'வேதாந்தமும், சித்தாந்தமும் வேறு, வேறு' எனப் பேதம் கூறுபவரும், சித்தாந்தத்தை ஏனையோர் கூறும் வேதாந்தம் ஆக்குபவரும் ஆவர். அவர்களையெல்லாம் மறுத்து, 'நீ அது ஆகின்றாய்' என்பதில் ஆதற்குரிய காரணம், 'நான் இவள்ஆம் பகுதிப் பொற்பு'* என்று அருளிச்செய்தபடி, 'தலைவன் தலைவி ஆகின்றான்' என்பதில் ஆதற்குக் காரணம், தலைவனது உணர்வு தன்னை உணரும் உணர்வாகாது, தலைவி தன் நலத்தையே உணரும் உணர்வாதலாம் அது போன்றதே, 'நீ அது ஆகின்றாய்' என்பதில் ஆதற்குரிய காரணம் எனச் சித்தாந்தம் கூறுவார், 'அறிவாகியும் சென்று அடங்கி' என்றார்.
'தந்ததுன் றன்னைக் கொண்ட தென்றன்னை'* என்பதில், 'என் - றன்னை' என்றதும், 'என்னை விழுங்கி வெறுந் - தானாய் நிலை நின்றது தற்பரமே'*l* என்பதில் 'என்னை' என்றதும் உயிருணர்வையே -யாம். இவற்றில், 'கொண்டது' எனவும், 'விழுங்கி' எனவும் கூறப் பட்டதே இங்கு, 'அடங்கி' எனக்கூறப்பட்டது. 'அடங்குதி' என்னும் இகர ஈற்று ஏவல் வினை தகரம்பெறாது நின்றது, 'நன்றுமன் இது நீ நாடாய் கூறி'*8* என்பதிற்போல.
'அறி' என்பது, 'தொந்தத்தசி' என ஒரு சொல் நீர்மைத்தாய் நின்றதனோடு வினைத்தொகைபடத் தொக்கது. அயர்வு - அறியாமையால் கொள்ளாதொழிதல்.
இதனால், முன் மந்திரத்தில் கொள்வகையால் விளக்கிய உண்மை, சொற்பொருள் வகையால் விளக்கப்பட்டது.

மன்னிய சோகமாம் மாமறை யாளர்தம்

சென்னிய(து) ஆன சிவோகமாம் ஈதென்ன
அன்னது சித்தாந்த மாமறை ஆய்பொருள்
துன்னிய ஆகம நூல்எனத் தோன்றுமே. *#2362*

பொது மறையாகிய வேதத்தை மட்டுமே நூலாகக் கொண்டு, சிவாகமங்களை நூலாகக்கொள்ளாதவர்கட்குத் தலையான மகாவாக்கியமாய் உள்ளது, 'ஸோஹம் அஸ்மி' என்பது [இதன் பொருள், 'அது நான் ஆகின்றேன்' அல்லது, 'அவன் நான் ஆகின்றேன்' என்பது 'தத்துவமசி' மகாவாக்கியத்தில் முன்னிலையில் வைத்துச் சொல்லப்பட்ட பொருளே இதில், தன்மையில் வைத்துச் சொல்லப்பட்டது. ஆகையால் இவ்விரண்டிற்கும் இடையே உள்ளது வடிவு வேற்றுமையே யன்றிப் பொருள் வேற்றுமையில்லை. 'தத்துவமசி' மகாவாக்கியம், மாணவனுக்கு உபதேசிக்கும் ஆசிரியர் கூற்று. 'ஸோஹம் அஸ்மி' மகாவாக்கியம், ஆசிரியர் உபதேசித்த பொருளை அனுபவமாகக் காணும் மாணவன் கூற்று. இவற்றால் இவை முன்னிலையிடத்தும், தன்மையிடத்தும் ஆயின].

இனிப் பொதுமறையாகிய வேதத்தோடு, சிறப்பு மறையாகிய சிவாகமங்களையும் நூலாகக் கொள்வோர், வேதாந்தத்தில் 'ஸோக மஸ்மி' எனப் பொதுவாகக் கூறப்பட்டது, உண்மையில், 'சிவோஹ மஸ்மி' எனக்கொள்வர். (இதன் பொருள், 'சிவன் நான் ஆகின்றேன்' என்பது). அக்கொள்கையே சிறப்பு மறையாகிய சிவாகமங்கள் ஆராய்ந்து காட்டும் முடிநிலை முடிபாகும். அந்த முடிபைப் பல்லாற்றா - னும் வலியுறுத்த எழுந்த நூல்களே 'சிவாகமம்' எனப்பெயர் பெற்று விளங்குகின்றன.

விளக்கவுரை

'இருவகை நூல்களின் முடிவும் பொதுவும், சிறப்பும் ஆகின்ற அத்துணையேயல்லது, அவற்றிடையே பிறிது வேற்றுமை யில்லை' என்பது குறிப்பு.

'மாமறையாளர்தம் சென்னியது சோகம் ஆம்' எனவும், 'ஈது, ஆன சிவோகமாம் என்ன, அன்னது சித்தாந்த மாமறை ஆய்பொருள்' எனவும் இயைத்துக் கொள்க. 'தோன்றும்' என்னும் பயனிலைக்கு, 'அது' என்னும் தோன்றா எழுவாய் வருவிக்க.

'பண்டை மறைகளும் 'அது நான் ஆனேன்' என்று
பாவிக்கச் சொல்லுவது இப்பாவகத்தைத் தானே'*

என்னும் சிவஞானசித்தியில், 'இப்பாவகம்' என்றது, 'சிவன் நான் ஆனேன்' என்னும் சிறப்புப் பாவனையையேயாம்.

ஒருவனை, 'அவன்' எனப்பொதுவாகச் சுட்டிக் கூறுவத னாலும், ஒருபொருளை, 'அது எனப்பொதுவாகச் சுட்டிக் கூறுவத னாலும்

அக்கூற்றைக் கேட்டவனுக்கு என்ன பயன் உண்டாகும்? பொதுவாகச் சுட்டியவற்றைப் பின்பு சிறப்பாகச் சுட்டியவழியே, கேட்பவனுக்குப் பயன் உண்டாகும். எனவே, பொதுக்கூற்றுச் சிறப்பிற்கு முன்னோடியேயன்றி, அதுவே முடிநிலை முடிபு ஆகாமை உணர்க.

'அதுபழச் சுவையென, அமுதென, அறிதற்(கு)
அரிதென, எளிதென அமரரும் அறியார்;
இதுஅவன் திருஉரு; இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு'*

என்னும் அருள்மொழியால், 'பொதுவாக விளக்கமின்றியிருக்கும் மகாவாக்கியப்பொருளைச் சிறப்பாகத் தெளிய உணர்த்துவதே ஆசிரியர் வழங்கும் அருள் உபதேசமொழி' என்பது விளங்கும்.

'தத்துவமசி' என்னும் பொது வாக்கியமே, 'சிவத்துவமசி' எனச்சித்தாந்த ஆசிரியரால் சிறப்பாக உபதேசிக்கப்படுகின்றது. 'ஸோஹமஸ்மி' என்னும் பொது வாக்கியமே. 'சிவேஹமஸ்மி' எனச்சித்தாந்த மாணவனால் சிறப்பாகப் பாவிக்கப்படுகின்றது.

'சிவாய' எனநிருவாண தீக்கையில் உபதேசிக்கப்படுகின்ற முத்தி பஞ்சாக்கரத்தைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பதனால், 'ய, சி, வா' என அமையும் எழுத்துக்கள் முறையே 'துவம், தத், அசி' என்னும் பதங்களாய் அமைதல் விளங்கும். அதனால் உபதேசிக்கப்பட்ட அந்த மூன்றெழுத்துக்களை விந்துத்தானமாகிய புருவ நடுவில் வைத்துத் தியானிப்பதனால், சிவோஹம் பாவனை, அஃதாவது 'நான் சிவன் ஆகின்றேன்' என்னும் பாவனை அமைந்து விடுகின்றது.

'தத்துவமசி' என்பதேமகாவாக்கியம் ஆயினும், 'துவம்ததசி' என்பதே பொருளாதல் போல, 'சிவத்துவமசி' என்பதே மகா வாக்கியம் ஆயினும், 'துவம்சிவாசி' என்பதே பொருளாதலின், அப் பொருள் மேற்கூறிய மூன்றெழுத்துக்கணிப்பால் அமைதலை உணர்க.

இதனால், வேதாந்தமும் சித்தாந்தமும் ஒன்றாம் முறைமையும். அவற்றுள் சித்தாந்தமே சித்தாந்தம் ஆதலும் தெரித்துக் கூறப்பட்டன.

10.16. பதி பசு பாசம் வேறின்மை

அறிவறி வென்ற அறிவும் அனாதி
அறிவுக் கறிவாம் பதியும் அனாதி
அறிவினைக் கட்டிய பாசம் அனாதி
அறிவு பதியின் பிறப்பறுந் தானே. ***#2363***

உலகத்தாரால், 'அறிவு, அறிவு' என்று சொல்லப் படுவதாகிய உயிர்களும் அனாதியே உள்ளன. அவற்றின் அறிவுக்கு அறிவாய் உள்ள இறைவனும் அனாதியே உளன். அறிவாகிய உயிர்களைக் கட்டியுள்ள அறிவற்றனவாகிய பாசங்களும் அனாதியே உள்ளன. ஆயினும் அனாதியாகிய சிவனது ஞான சத்தி உயிரி -னிடத்துப் பதியுமாயின், உயிர் பிறவித்தொடர்ச்சி அறப்பெறும்.

விளக்கவுரை

'அனாதி' எனவே, ஆதியும், அந்தமும் இலவாயின. ஞானசத்தியே அருட்சத்தி என்க. அது பதிதலே சத்தி நிபாதம். 'சத்தி நிபாதம் வந்தால் பிறப்பு அறும்' என்றாரேனும், 'ஞானம் நிகழப் பிறப்பறும்' என்றலே கருத்தென்க.

இம்மந்திரத்தில் கூறப்பட்டன, மேல், 'பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்'8 என்னும் மந்திரத்துக் கூறப்பட்டனவே யாதலின், அவை நெடுஞ்சேயவாயினமைபற்றி, இங்கு இயைபு படுதற் பொருட்டு மறிதுணர்த்தியவாறு.

பசுப்பல கோடி பிரமன் முதலாப்
பசுக்களைக் கட்டிய பாசம்மூன் றுண்டு
பசுத்தன்மை நீங்கி அப் பாசம் அறுத்தால்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே. ***#2364***

முன் மந்திரத்தில், 'அனாதி' எனப்பட்ட பசுக்கள் பிரமதேவன் முதலாகக் கோடிக் கணக்கில் உள்ளன. ஆயினும், அவற்றைக் கட்டியுள்ள பாசங்கள் மூன்றே. (ஆணவம், மாயை, கன்மம்). பதி பசுக்களைக் கட்டியுள்ள பாசங்களை அறுத்துவிட்டால், பசுக்கள் பசுத்தன்மை நீங்கிப் பதியைப் பற்றிக்கொள்ளும். பின்பு அவை பதியை விட்டு நீங்கமாட்டா.

விளக்கவுரை

'பிரமன்' முதலிய பெயர்கள் பிறப்புப் பற்றி வருவனவாம். 'பிரமன் முதலா' என்றது, காரணக் கடவுளர்களைக் கீழ்த் தொடங்கிக் கூறியது. 'அறுப்பது பதி' என்பது பாரிசேடத்தால் அமைந்தது. 'பந்தம் அனாதியாய் இருக்கும் அதினின்றும் நீங்குதல் உளதாதல் போலப் பதியைப் பற்றிய பின்னும் அதினின்றும் நீங்குதல் உளதாகும்போலும்' என நிகழும் ஐயத்தை நீக்குதற்கு 'பசுக்கள் தலைவனைப் பற்றி

விடாவே' என்றார். பாசங்களின் சத்தி காலப் போக்கில் மெலிவடைவன அதனால் உயிர் அவற்றினின்றும் நீங்குதல் உளதாகின்றது; சிவசத்தி அத்தன்மைத்தன்றாய் என்றும் ஒருபெற்றித் தாம் ஆதலின் சிவத்தை அடைந்த உயிர்க்குப் பின் அதனினின்றும் நீங்கும் நீக்கம் இல்லை என்க.

'துறக்குமா சொலப்படாய் துருத்தியாய்'1

'மேவினார் பிரிய மாட்டா விமலனார்'3

என்னும் திருமொழிகளையும் நோக்குக. 'அறுத்தால் நீங்கிப் பற்றிவிடா' என்றதனால், 'பசுக்கள்தாமே பாசங்களை அறுத்துக் கொள்ள வல்லுன அல்ல' என்பது பெறப்பட்டது.

'கட்டிய நீயே அவிழ்க்கி னல்லது
எட்டுணை யாயினும் யான்அவிழ்க் கறியேன்'*

என்றது காண்க. 'தலைவனைப் பற்றி விடா' என ஒருமையும், பன்மையுமாகக் கூறியவற்றால், 'பதிப்பொருள் ஒன்றேயன்றி, இரண்டாவதில்லை' என்பது பெறப்பட்டது.

இதனால், 'முப்பொருளில் பதி ஒன்றே; பசுக்கள் எண்ணில; பாசம் மூன்று' என்பது கூறப்பட்டது.

கிடக்கின்ற வாறே கிளர்பயன் மூன்றும்
நடக்கின்ற ஞானத்தை நாள்தோறும் நோக்கித்
தொடக்கொன்று மின்றித் தொழுமின் தொழுதால்
குடக்குன்றில் இட்ட விளக்கது வாமே. *#2365*

உயிர்கள் அனாதியே கிடந்த பாசநிலையிலே கிடந்தாலும் அப்பொழுது அவைகட்கு உண்டாகின்ற பயன் மூன்று. அவை, 'அறம், பொருள், இன்பம்' என்பனவாம். நான்காவதாகிய வீடு அந்நிலையிலே கிட்டாது. அது கிடைக்க வேண்டுமாயின், அந்த மூன்றும் நீங்குதற்கு ஏதுவாகிய ஞானம் ஒன்றையே விரும்பிப் பதியை உலகப் பற்றுச்சிறிதும் இன்றி, நாள்தோறும் வழிபடுங்கள். வழிபட்டால் அந்தப் பதி, குடத்தில் இட்ட விளக்குப் போல மறைந்திருந்த நிலையினின்றும் நீங்கிக் குன்றில் இட்ட விளக்குப் போல வெளிப்பட்டு விளங்கும்.

விளக்கவுரை

'அது வெளிப்பட்டு விளங்கவே, முன் மந்திரத்திற் கூறியபடி பாசம் அறுக்கப்படப் பதியைப் பற்றிக் கொள்ளும் நிலை உளதாம்' என்பது குறிப்பெச்சம். 'கிடக்கின்ற ஆற்றிலே' என உருபு விரித்துக்கொள்க. பயன், உயிர்கள் அடையத்தக்க பயன் 'அவை அறம் முதலிய நான்கு' என்பது வெளிப்படை. நடத்தல், இங்கு நீங்குதல். 'இம்மூன்றும் - விட்டதே பேரின்ப வீடு' என்னும் ஔவையார் வாக்கையும் நினைக. நடக்கின்ற ஞானம் - நடத்தற்கு ஏது வாகிய ஞானம். அறம் முதலிய

மூன்றும் உலகியலாதலின் அவை பாச நிலையிற்றானே நிகழ்வவாயின. விளக்கால் அல்லது இருள் நீங்காதவாறுபோல, ஞானத்தால் அல்லது உலகியல் நீங்காமை பற்றி, 'மூன்றும் நடக்கின்ற ஞானம்' என்றும், பதியைத் தொழுதலே தவம் ஆதலாலும், அத்தவத்தை உலகப் பற்றுடன் செய்யின் உபாயத் தவமும், பற்றற்றுச் செய்யின் உண்மைத் தவமுமாம். ஆதலால், உண்மைத் தவத்தாற்றானே ஞானம் உண்டாம் ஆதலாலும், 'தொடக்கு ஒன்றும் இன்றித் தொழுமின்' என்றும், 'தொழுதல் நியமமாதல் வேண்டும்' என்பார். 'நாடோறும் தொழுமின்' என்றும் கூறினார். பதியைத் தொழுதலாகிய தவம், 'சரியை, கிரியை, யோகம்' என மூன்று என்பதும், 'அத்தவத்தானே பதிஞானம் உளதாம்' என்பதும் மேல் பல இடங்களில் கூறப்பட்டன. குடத்திட்ட விளக்கு, குன்றில் இட்ட விளக்கு' இருதொடராக்கி உரைக்க. 'அது' என்றது, உபநிடத வழக்கு. 'பதி' என்றவாறு. 'குடத்தில் இட்ட விளக்காயுள்ள அது, குன்றில் இட்ட விளக்காம்' என்க. சாதன சாத்தியங்கள் தம்முள் இயைபிலாவாதல் கூடாமையின், தொழுவதும் பதியையேயாயிற்று.
இதனால், 'பதியால் பாசம் அறுக்கப்படுதல் இவ்வாற்றால்' என்பது கூறப்பட்டது.

பாசம்செய் தானைப் படர்சடை நந்தியை
நேசம்செய் தாங்கே நினைப்பர் நினைத்தலும்
கூசம்செய் துன்னிக் குறிக்கொள்வ தெவ்வண்ணம்
வாசஞ்ச் பாசத்துள் வைக்கின்ற வாறே. ***#2366***

முற் பாசத்தை நீக்குதற்குப் பிற்பாசங்களைக் கூட்டிப் பிறப்பு இறப்புக்களில் சூழலவைத்து இவனை, 'அஃதும் கருணையே' என அறிந்து அவன் மாட்டு அன்பு செய்து அவனை நினைப்பவர். அவ்வாறு நினைத்தபின், அவன் பிறப்பு இறப்புக்களில் வைத்துள்ளமை பற்றி நாணம் உறுதலும், அந்நாணத்தால் அதனை வன் கண்மையாகக் கருதுதலும் எங்ஙனம் உளவாகும்? உளவாகா.

விளக்கவுரை

முற்பாசம், ஆணவம், பிற்பாசம், மாயை கன்மங்கள். பாசத்தால் பாசத்தை நீக்குதல் ஆடையின் அழுக்கினை உவர்மண் முதலிய அழுக்கினால் நீக்குதல் போல்வதாகும். இவ்வுண்மையை உணர்வார் பிற்பாசங்களைச் சேர்த்தமையை வன்கண்மையாகக் கருதார் என்பதாம். பிற்பாசங்களைச் சேர்த்தமையே மேற்காட்டியபடி 'கட்டிய நீ' எனப்பட்டது.*l* 'வைக்கின்றவாற்றை உன்னிக் குறிக்கொள்வது எவ்வண்ணம்' என்க.
இதனால், கட்டியவனே பதிதான்' என அவனை வெறாது அன்பு செய்து, முன்மந்திரத்திற் கூறியவாறு, 'நாள்தோறும் தொழுதல் வேண்டும்'

என்பது கூறப்பட்டது.

விட்ட விடம்ஏறா வாறுபோல் வேறாகி
விட்ட பசுபாசம் மெய்கண்டான் மேவுன்றான்
கட்டிய கேவலம் காணும் சகலத்தைச்
சுட்டு நனவில் அதீதத்தில் தோயுமே. *#2367*

ஒருவனுடைய உடலில் பற்றிய விடம், மணி மந்திர ஔடதங்களால் நீங்கிப் போனபின்பு மீண்டும் அஃது அவன் உடலில் ஏற இயைபில்லாததுபோல, மெய்ஞ்ஞானத்தை உணர்ந்தவன், அவ்வுணர்வினால் அவனோடு ஒன்றியிருந்த பாசங்கள் வேறாகி நீங்கிவிட்ட பின்பு, அவன் அப்பாசங்களோடு பொருந்துதற்கு இயைபில்லை. அதனால், அவன் தன்னைத் தடை செய்திருந்த கேவல சகல நிலைகளைப் போக்கி சாக்கிரத்தில் அதீதமாகிய நின்மல துரியாதீதத்தில் அழுந்திச் சீவன் முத்தனாகியே நிற்பான்.

விளக்கவுரை

கட்டிய கேவலம் - ஒன்றையும் அறியாத கேவலம். காணும் சகலம் - சிறிது அறிவு பெற்றுச் சிலவற்றை அறிகின்ற சகலம். சுடுதல் - போக்குதல். 'தோன்றும்' என்பது பாடம் அன்று. 'மெய்கண்டான்' என்பது நாயனாராலே கூறப்பட்டிருத்தலும் சிவஞான போதத்தில் அச்சொல் ஆளப்பட்டிருத்தலும் குறிக்கொளத் தக்கன.
இதனால், 'பசுக்கள் தலைவனைப் பற்றிய பின் விடா' என மேற்கூறியது, உவமையில் வைத்து வலியுறுத்தப்பட்டது.

நாடும் பதியுடன் நற்பசு பாசமும்
நீடுமா நித்த நிலையறி வார்இல்லை
நீடிய நித்தம் பசுபாச நீக்கமும்
நாடிய சைவர்க்கு நந்தி யளித்ததே. *#2368*

சத்தி நிபாதம் வரப்பெற்றமையால், 'நாம் உய்யும் வழியாவது யாது' என ஏக்கற்று ஆராயும் பக்குவிகள் அவ்வழியை உணர்தற் பொருட்டுச் சிவாகமங்கள் வழியாகச் சிவபெருமான் அருளிச் செய்தவை, பதியேயன்றிப் பசு பாசங்களின் அனாதி நித்தத் தன்மையும், அவற்றுள் பசுக்கள் பாசத்தினின்றும் நீங்கிப் பதியை அடையும் முறைமையும் ஆகும். ஆயினும் அவைகளை அறியும் பக்குவிகள் உலகத்து அரியர்.

விளக்கவுரை

ஈற்றடியை முதலில் கொண்டு, அதன்பின் மூன்றாம் அடியையும், அதன்பின் முதல் இரண்டு அடிகளையும் கூட்டியுரைக்க. முதல் இரண்டடிகளில் சித்தாந்தத்தின் அடி நிலைப் பொருள் சுருங்கக் கூறப்பட்டது.

இதனால், முப்பொருளியல்பை உள்ளவாறு உணரமாட்டா தாரது நிலைமையது இரங்கத்தக்க தன்மை கூறப்பட்டது.

ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடல்ஏ றெனநிற்கும்
ஆய பலிபீடம் ஆகும்நற் பாசம்ஆம்
ஆய அரன்நிலை ஆய்ந்துகொள் வார்கட்கே. *#2369*

சிவாலயங்களின் அமைப்பை உற்று நோக்கி உணரவல்லார்க்குக் கருவறையில் முதலிடத்தில் உள்ள இலிங்கமே பதியாயும், அவ்விலிங்கத்தின் திருமுன்பில் உள்ள இடபமே பசுவாயும், (உயிராயும்) இடபத்திற்குப் பின் உள்ள பலிபீடமே அடக்கிஒடுக்கப்பட்ட பாசமாயும் காட்சியளிக்கும்.

விளக்கவுரை

இடபம் இலிங்கத்தை நோக்கின் பலிபீடம் அதன் பின்னதாயும், இலிங்கத்தை நோக்காது வெளியை நோக்கின் இடபத்தின் முன்னதாயும் இருக்கும், இவை சிவத்தை நோக்கும் உயிர்கட்குப் பாசம் பிற்படுதலையும், சிவத்தை நோக்காது, உலகத்தை நோக்கும் உயிர்கட்குப் பாசம் முற்படுதலையும் உணர்த்தும்.
சிவத்தை நோக்கும் உயிரைப் பாசங்கள் அடரமாட்டாது, இருந்தும் இல்லதாயக் கிடத்தலின், பலியிடப்படும் பீடமே பாசமாகின்றது.
பாசத்தை, 'ஆகும் நற்பாசம்' என்றும் இது பற்றி, 'சன்மார்க்கமாகிய தத்துவப் பொருள்களே சிவாகமங்களில் சமய சங்கேதப் பொருள்களாகச் சொல்லப்பட்டுள்ளன' என்பது - இதனை
'சன்மார்க்க
சமய சங்கே தப்பொருளும் தான்ஒன் றாகப்
பன்மார்க்க நெறியினிலும் கண்ட தில்லை'
என வியந்து கூறினார் தாயுமான அடிகள்.
இதனால், 'முப்பொருள்களின் இயல்பை ஆகமங்களைப் பற்றி உணரமாட்டாதார், சிவாலயங்களின் அமைப்பை நோக்கி யேனும் உணரற்பாலர்' என்பது கூறப்பட்டது.

பதிபசு பாசம் பயில்வியா நிற்கப்
பதிபசு பாசம் பகர்வர்க்கா றாக்கிப்
பதிபசு பாசத்தைப் பற்றற நீக்கும்
பதிபசு பாசம் பயில்நில் லாவே. *#2370*

முப்பொருள் இயல்பை மாணாக்கர்க்கு முன்னர்க் கேட்பித்துப் பின்னர் மீள மீள அவற்றைச் சிந்திப்பித்தற்பொருட்டு அவற்றை உபதேசிக்கின்ற ஆசிரியன் மார்கட்கு உபதேச மொழியை ஆக்கி, அதுவழியாகச் சிவன் பசுக்களின் பாசங்களை அறிவே நீக்குவான். அம்முறையில் முப்பொருள்

இயல்பைச் சிந்தித்துத் தெளியின் பாசங்கள் தம்மியல்பில் நிற்கமாட்டா 'நிலைகெட்டு ஒடுங்கும்' என்பதாம்.

விளக்கவுரை

'பயில்வியாநித்தம்' என்பது பாடம் அன்று. ஆறு - வழி என்றது உபதேச மொழியை அம்மொழியாவது திருவைந்தெழுத்து மந்திரமேயாதல்.
'நானேயோ தவம்செய்தேன்! சிவாயநம எனப்பெற்றேன்'1
என்னும் அனுபவ மொழியால் விளங்கும். ஐந்தெழுத்தின் உட்பொருள் முப்பொருளே என்பது.
'சிவன், அருள், ஆவி, திரோதம், மலம் ஐந்தும்,
அவன் எழுத் தஞ்சின் அடைவாம்'8
என்பது முதலியவற்றில் விளக்கப்பட்டது. 'நில்லா' என்பதற்கு எழுவாய் வருவிக்கப்பட்டது.
இதனால், 'முப்பொருள் இயல்பைச் சிவாலயங்களை நோக்கி ஒருவாறுணர்ந்தார், பின்பு ஆசிரியரை அடைந்து அவர் உபதேசிக்கும் உபதேச மொழியைப் பெற்றுத் தெளிய உணர்ந்து உய்தல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

பதியும் பசுவொடு பாசமும் மேலைக்
கதியும் பசுபாச நீக்கமும் காட்டி
மதிதந்த ஆனந்த மாநந்தி காணும்
துதிதந்து வைத்தனன் சுத்தசை வத்திலே. **#2371**

சித்தாந்தத் தத்துவங்களைச் சிவாகம ஞான பாதத்தில் அருளிச்செய்த சிவபெருமான், அப்பொருளைப் பயக்கும் தோத்திரங்களையும் கிரியா பாதத்தில் சொல்லிவைத்திருக்கின்றான்.

விளக்கவுரை

'அத்தோத்திரங்களையும் அன்போடு பொருள் உணர்ந்து பாடித் தோத்திரித்து உய்தி பெறுக' என்பதாம். 'தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே'8 என அப்பாரும் அருளிச் செய்தமை காண்க. 'காணும்' என்பது கட்டுரைச் சுவைபட வந்தது. சுத்த சைவம் பூர்வபக்க ஞானங்களைப் போக்கிச சித்தாந்த ஞானத்தைத் தருகின்ற சிவாகமம்.
இதனால், 'சைவ சாத்திரங்களின் பொருளைச் சைவ தோத்திரங்களை நியமமாக ஓதும் முறையால் பயிலுக' என்பது கூறப்பட்டது.

அறிந்தணு மூன்றும்மெய் யாங்கணும் ஆகும்
அறிந்தணு மூன்றும்மெய் யாங்கணும் ஆக
அறிந்த அனாதி வியாத்தனும் ஆவன்
அறிந்த பதிபடைப் பான்அங் கவற்றையே. **#2372**

மூவகை ஆன்மாக்களும் தாம் தாம் பெற்ற தனு கரணத்தளவாக அறிவு

விளங்கப் பெறுதலின், அவை யாவும் 'அணு' எனப்படுகின்றன ஆயினும் அவற்றின் உண்மை நிலை பதியைப் போல வியாபகமே. பாசத் தடை நீங்கியபின் உயிர் தனது உண்மை நிலை யாகிய வியாபக நிலையை அடையும். ஆயினும், பதியினது வியாபகத்தில் அது வியாப்பியமேயாம். உயிர்களின் ஏகதேச நிலை, வியாபக நிலை ஆகிய இருநிலைகளும் என்றும் ஒரு பெற்றியனாய் உள்ள பதியே அவைகட்கு ஆவனவற்றைச் செய்துநிற்பான்.

விளக்கவுரை

பின் இரண்டடிகளிற்போல 'அறிந்த' என வர வேண்டிய பெயரெச்சம் ஈற்று அகரம் தொகுத்தல் பெற்று நின்றது. யாங்களும் ஆதல் வியாபகம் ஆதல். இரண்டாம் அடி அனுவாதம், அனாதி - அனாதியாய சிவன். 'அனாதியில்' என உருபுவிரிக்க. உம்மை, சிறப்பு. 'அனாதியில் வியாத்தனும் ஆவன்' என்றதனால், 'முப்பொருள்களும் அதிசூக்கும சூக்கும தூலமாம் முறையால் வியாபக வியாப்பிய வியாத்தியாய் இயைந்து நிற்கும்' என்பது உணர்த்தப்பட்டது. இதுவே 'பதிபசு பாசம் வேறின்மை' என்க. 'அவற்றையே' என்னும் பிரிநிலை ஏகாரத்தைப் பிரித்து, 'பதியே' எனக் கூட்டுக. 'முப்பொருள்களும் வியாபக வியாப்பிய முறையால் சமமாய் நிற்பினும் பதியே சுதந்திரமுடையதாய் ஏனையவற்றை இயக்கி நிற்கும்' என்றற்கு. 'பதியே அங்கு அவற்றைப் படைப்பான்' என்றார். அங்கு அவ்விருநிலைகளிலும். 'படைப்பான்' என்றது, 'எல்லாவற்றையும் செய்வான்' என்னும் குறிப்பு மொழி. இதனால், பதி பசு பாசம் வேரின்மையும், அவற்றுள் பதியே தலைமையது ஆதலும் கூறப்பட்டன.

முன்மந்திரத்தில், 'சுத்த சைவத்திலே நந்திமதி தந்து வைத்தனன்' எனக் கூறப்பட்டவற்றில் இவ்வதிகாரத்தில் எடுத்துக் கொண்ட சிறப்புப் பொருளை இதனுள் இவ்வாறு கூறிய நாயனார், இதன் தொடர்பாக மற்றும் சிலவற்றை இங்கும் கூறிகின்றார். அவை மேலே கூறப்பட்டன வாயினும், 'பெற்றதன் பெயர்த்துறை நியமப் பொருட்டு' என்னும் முறையால் இவ்வதிகாரத்தில் எடுத்துக்கொண்ட பொருளோடு அவற்றையும் உடன்கூறித் தெளிவிக்கின்றார்.

படைப்பாதி ஆவ பரசிவம் சித்தி
இடைப்பால் உயிர்கட் கடைத்திவை வாங்கல்
படைப்பாதி சூக்கத்தைத் தற்பரம் செய்யப்
படைப்பதி தூலம்அப் பாசத்து ளாமே. **#*2373***

படைப்பு முதலிய செயல்கள் நிகழ்தல் 'பரசிவம், பராசத்தி' என்னும் இருவராலேயாம். படைப்பு முதலிய ஐந்தொழில் களாவன, தனுகரண புவன போகங்கைள உயிர்களுக்குச் சேர்ப்பித் தலும், நீக்குதலுமேயாம்.

இவ்வைந்தொழில், 'சூக்குமம், தூலம்' என்னும் இருவகையில் நிகழும். சூக்கும ஐந்தொழிலைச் சிவன் சுத்தமாயையில் தான் நேரே செய்வான். தூல ஐந்தொழிலை அவன் அசுத்த மாயை பிர கிருதி மாயைகளில் அனந்ததேவர், சீகண்டர் வழியாகச் செய்விப்பான்.

விளக்கவுரை

'முதற் பொருள் பொருளால் ஒன்றாயினும் ஞாயிறு ஒன்றே 'கதிரவனும், கதிரும்' என இருதிறப்பட்டுத் தாதான்மியமாய் இயைந்து நிற்றல்போல, 'சிவம், சத்தி' என இருதிறப்பட்டுத் தாதான் மியமாய் இயைந்து நிற்கும்' என்பது உணர்த்துதற்கு, 'படைப்பாதி ஆவ, பரசிவம் சத்தி' என்றார். 'சத்தியால்' என உருபு விரிக்க. இடைப் பால் - 'கேவலம், சுத்தம்' என்னும் இரண்டற்கு இடையேயுள்ள சகலத்தில், படைத்து ஒடுக்கப்படுவன தனுகரணாதிகளேயாதலின், வாளாதே, 'இவை' எனச் சுட்டிப் போயினார். 'சூக்கப் படைப் பாதியை' எனவும், 'தூலப்படைப்பாதி' எனவும் பின் முன்னாக மாற்றிக் கொள்க. 'சூக்கத்தைத் தற்பரம் செய்ய' என்றதனால், தூலம் பிறரால் செய்யப்படுதல் விளங்கிற்று. அவற்றிற்கு ஏற்ப முதற்காரண வேறுபாடும் காட்டப்பட்டது. 'பாசம்' என்றது, இங்கு தூலம் அதிதூலமாகிய அசுத்தமாயை பிரகிருதி மாயைகளை. இதனால், முன் மந்திரத்தில், 'பதியே அங்கு அவற்றைப் படைப்பான்' எனக் கூறப்பட்டபொருள் அஃது ஆமாறு வகுத்துக் கூறப்பட்டது.

ஆகிய சூக்கத்தை அவ்விந்து நாதமும்
ஆகிய சத்தி சிவம்பரம் மேல்ஐந்தால்
ஆகிய சூக்கத்தில் ஐங்கருமம் செய்வோன்
ஆகிய தூலத்தீ சானனும் ஆமே. *#2374*

அபரவிந்து, அபரநாதம், பரவிந்து, பரநாதம், பராசத்தி என்னும் மேலான ஐந்து நிலைகளில் நின்று சூக்கும ஐந்தொழில் செய்பவன். அருவத்தையும் கடந்த பரம சிவன். தூல ஐந்தொழிலைச் செய்பவன் மகேசுரன்.

விளக்கவுரை

சத்தி ஞானம், கிரியை முதலிய பாகுபாடின்றி நிலையில் பராசத்தியாம். ஞானம், கிரியை முதலியனவாகப் பாகுபட்டுப் பொதுவகை ஞானமாய் நிற்கும் நிலையில் பரநாதமாம். பொதுவைக்கிரியையாய் நிற்கும் நிலையில் பரவிந்துவாம். சிறப்புவகை ஞானமாய் நிற்கும் நிலையில் அபரநாதமாம். சிறப்பு வகைக் கிரியையாய் நிற்கும் நிலையில் அபரவிந்துவாம். இங்ஙனம் இவ்வைந்தையும் காண்க. விந்துவை முதலிற்கூறியது கீழிருந்து எண்ணும்முறை பற்றியாம். 'பரம்' எனப் பின்னர்க் கூறினைமையின், 'சத்தி, சிவம்' என்று பரவிந்து

பரநாதங்களையாயிற்று. 'அவ்விந்து நாதமும்' என்று எடுத்துக் கொண்டு, சூக்கத்து ஐங்கருமம் செய்வோன் சூக்கத்து ஐ' என மேலே கூட்டி முடிக்க. சூக்கத்து ஐ - அருவத்தையும் கடந்தலைவன். இங்கு, 'ஈசானன்' என்று மகேசுரனை. என்னை? தூல ஐந்தொழிலைச் செய்தும், செய்வித்தும் நிற்பவன் அவனே யாகலின். அவன் தூல ஐந்தொழிலைச் செய்தும், செய்வித்தும் நிற்குமாறு வருகின்ற மந்திரத்தால் கூறப்படும். இதனால், முன் மந்திரத்தில் தொகுத்துக் கூறப்பட்ட சூக்கும தூல ஐந்தொழில் நிகழ்ச்சிகளில் சூக்கும ஐந்தொழில் நிகழுமாறு வகுத்துக் கூறப்பட்டது.

மேவும் பரசிவம் மேற்சத்தி நாதமும்
மேவும்ப ரின்விந்து ஐம்முகன் வேறீசன்
மேவும் உருத்திரன் மால் வேதா மேதினி
ஆகும் படிபடைப் போன்அரன் மே. *#2375*

(இம்மந்திரத்தில் கூறப்படும் பொருள் எழாம் தந்திரத்தில், 'சிவமொடு சத்தி நிகழ்நாதம் விந்து', 'தலையான நான்கும் தனதருவாகும்' என்னும் மந்திரங்களில் கூறப்பட்டதேயாம். ஆகையால், அவற்றில் கண்டு கொள்க.)

விளக்கவுரை

பரசிவம் - பரநாதம். மேற் சத்தி - பரவிந்து 'உம்பரின் மேவும் விந்து' என்க. உம்பர் - சதாசிவத்திற்குமேல். ஐம்முகன் - சதாசிவன். ஈசன் - மகேசுரன். மேதினி ஆகும்படி - உலகம் தோன்றும்படி. படைப்போன் அரனே ஆம் இந்த அனைவரையும் உண்டாக்குபவன் ஒரு சிவனே. எனவே, 'உலகம் இந்நவந்தரு பேதங்களால் நடைபெறுகின்றது' என்பதாம். ஈற்றடி உயிரெதுகை.

இதனால், சூக்குமம், தூலம் ஆகிய இருவகை ஐந்தொழில் களும் நடைபெறும் முறைமை கூறப்பட்டது.

படைப்பும் அளிப்பும் பயில்இலைப் பாற்றும்
துடைப்பும் மறைப்பும்முன் தோன்றும் அருளும்
சடத்தை விடுத்த அருளும் சகலத்*(*து*)*
அடைத்த அனாதியை ஐந்தென லாமே. *#2376*

'கேவலம், சகலம், சுத்தம்' என்னும் மூன்றனுள் சகலத்தில் படைத்தல், காத்தல், உயிர்களை இளைப்பாற்றுதற் பொருட்டு அழித்தல், சிற்றின்பத்தை அதன் இழிவு அறிந்து வெறாது விரும்பி நுகருமாறு மறைத்தல் ஆகிய முன்னர் நிகழும் அருட் செயல்களையும், சடமாகிய பாசங்களை விடுவித்துத் தன்னைக் காட்டி யருளும் அருளலாகிய பின்னர் நிகழும் அருட்செயலையும் உயிர்கள் பொருந்த வைத்த அனாதியாகிய பரமசிவனை, இத்தொழில்களை நோக்கி, 'ஐவர்' என்று

கூறலாம்.

விளக்கவுரை

'மறைத்தலும் அதன்வழி நிகழும் படைப்பு முதலியனவும் அருளே' என்றற்கு அவற்றை 'முற்றோன்றும் அருளும்' என வும், 'அழித்தல்கூட அருளோ' என்றும் ஐயத்தை நீக்குதற்கு அதனை 'இளைப்பாற்றும் துடைப்பும்' எனவும் கூறினார். தன்னிலையில் நிற்கும் சொரூப சிவன் 'அனாதிசிவன்' என்றும் உயிர் களின் பொருட்டாய் ஐந்தொழில் செய்யும் தடத்தசிவன் 'ஆதிசிவன்' என்றும் சொல்லப் படுவான். 'ஒருவனாகிய அனாதிசிவனே, ஐந்தொழில் பற்றி ஐவர் தடத்த சிவராய் நிற்பர்' என்பது உணர்த்துற்கு, 'அனாதியை ஐந் தெனலாமே' என்றார். ஐவர் - சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன். அவர் சம்பு பட்சத்தினர். சம்பு பட்ச அணுபட்ச விளக்கங்களை மேலே காண்க. நிலைநோக்கி, 'ஐந்து' என அஃறிணையாகக் கூறப்பட்டது. இதனால், 'முன் மந்திரத்தில் ஒன்பதாகச் சொல்லப்பட்ட பேதங்களில் தூல ஐந்தொழிற்கு உரியனவாய், யாவராலும் அறியப்படுவன ஐந்தே' என்பது கூறப்பட்டது.

ஆறாறு குண்டலி தன்னின் அகத்திட்டு
வேறாகும் மாயையில் முப்பால் முகுத்திட்டங்*(கு)*
ஈறாம் கருவி யிவற்றால் வகுத்திட்டு
வேறாம்பதி பசு பாசம்வீ டாகுமே. *#2377*

பதி, முப்பத்தாறு தத்துவங்களைச் சுத்த மாயையில் வியாப்பியமாகச் செய்து, அம்முப்பத்தாறு தத்துவங்கட்குக் காரணமாய் வேறுநிற்கும் மாயையை, சுத்த, சுத்தாசுத்தம், அசுத்தம்' என மூன்றாக வகுத்து, அந்த மாயை மாயேயங்களின் பின்னவாகிய 'தாத்துவிகம்' என்னும் காரிய பூதங்களையும் இந்தமாயை மாயேயங்களால் ஆக்கி, அனைத்துப் பொருள்கட்கும் வேறாய் நிற்கும். (எனவே, 'பசு, மாயை, மாயேயம், தாத்துவிகம் ஆகியவற்றில் கட்டுண்டு நிற்கும் என்பது பெறப்பட்டது. எனினும்) பாசங்கள் நீங்கியவழிப் பசு, பதியாகும்.

விளக்கவுரை

குண்டலி - சுத்த மாயை. 'தன்னின்' என்பதில் இன், சாரியை மேற்சாரியை, 'அவற்றினின்' முதலியன போல 'மாயையில் மிகுத்திட்டு' என இயையும். 'மூன்று' என்னாது, 'முப்பால்' என்றமையால், ஒருமாயைதானே மூன்றாகி நிற்றல் பெறப்படும். 'வீட' என்பது ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'பதி ஆகும்' என ஒரு சொல் வருவித்து முடிக்க. 'பசு, பதி ஆதல் எவ்வாறு' என்பது. மேல் 'உயிரைப் பரனை, உயர்சிவன் தன்னை' *[மந்திரம் - 2368.]* என்னும் மந்திரத்து உரையில்

காட்டப்பட்டது.
இதனால், 'அனைத்தையும் செய்தும் பதி அவற்றால் எய்துவ தொன்றின்றி நிற்க, பசுவே அவற்றால் பல நிலைகளை எய்தும்' என்பது கூறப்பட்டது.

வீட்கும் பதி பசு வைப்பாசம் மீதுற
ஆட்கும் இருவினை ஆங்கவற் றால்உணத்
தாட்கும் நரக சுவர்க்கத்தில் தான்இட்டு
நாட்குற நான்றங்கு நற்பாசம் நண்ணுமே. ***#2378***

பதி, பசுவை இயல்பாகவே உள்ள ஒரு பாசத்தின்மேல் மற்றொரு பாசம் பற்றும்படி அதனுள்ளே புகுத்தும். (இப்பாசம் மாயை, இயல்பாக உள்ளது ஆணவம்) அதன்பின், இருவினைகளாகிய குழியிலே ஆழச் செய்யும். அதன்பின், அந்த இருவினைகளுக்கு ஈடான துன்பத்தையும், இன்பத்தையும் பசு நுகர்தற்பொருட்டு அதனை நரகத்திலும். சுவர்க்கத்திலும் சேர்த்து, அங்கே சிலநாள் தங்க வைக்கும், இவையெல்லாம் இப்படித் தொடர்ச்சியாக நிகழ்தல் திரோதான சத்தியாலாம். அச்சத்தி இவ்வாறு செய்வித்தல், பசுக்கள் தம் பசுத்துவத்தின் நீங்கிப் பதியை அடையும் நாளைக் கிட்டுதற் பொருட்டாம்.

விளக்கவுரை

'வீழ்க்கும், ஆழ்க்கும், தாழ்க்கும்' என்பன திரிந்து நின்றன. தாழ்த்தல் - தங்கச் செய்தல். 'மீதுற' என்றதனால், முன்பே ஒரு பாசம் உள்ளமை விளங்கும். 'ஆழ்க்கும்' என்றது, குறிப்புருவகம். 'இருவினைக்கண்' என்னும் ஏழாவது இறுதிக்கண் தொக்கது. 'ஆங்கவை' என்பது ஒருசொல். 'அவற்றால்' என்பதன் பின், 'வரும் பயனை' என்பது, 'நாட்கு' என்பதன்பின், 'அணிமைக் கண்' என்பதும் வருவிக்க. முன்னர் 'வீழ்க்கும், ஆழ்க்கும், தாழ்க்கும்' என்றமையால், 'நாள்' என்றது, அவை நீங்கும் நாளாயிற்று. நாலுதல், நீளுதல், பாசங்களைச் செலுத்துதல் பற்றி இறைவனது சத்தியும், 'பாசம்' என உபசரித்துக் கூறப்படும். ஆயினும் அது நலங்கருதியே செலுத்துதலின், 'நற்பாசம்' என்றார். 'நற்பாசத்தால்' என உருபு விரித்து, 'இவையெலாம் நாட்கு உற, நற்பாசத்தால் நான்று அங்கு நண்ணும்' என முடிக்க.
இதனால், 'பதி, பசுக்கள் பாசத்தின் நீங்கித் தன்னை அடைதற் பொருட்டுத் திரோதான சத்தியால் அவைகட்கு மாயை கன்மங்களைச் சேர்த்து, அவை வழியாக ஐந்தொழில் புரியும்' என்பது கூறப்பட்டது.

நண்ணிய பாசத்தில் நான் எனல் ஆணவம்
பண்ணிய மாயையில் ஊட்டல் பரிந்தனன்
கண்ணிய சேதனன் கண்வந்த பேரருள்

அண்ண லடிசேர் உபாயம தாகுமே. *#2379*

உயிர்களைப் பற்றியுள்ள பாசங்களில், 'நான்' என்னும் முனைப்பை உண்டாக்குவது ஆணவமே. (இம் முனைப்பே, 'தற்போதம்') என்றும், 'சீவ போதம்' என்றும் சொல்லப்படும். மாயையைக் கருவியாகப் பற்றி உயிர்கள் செயற்படும்பொழுது, இந்த 'நான்' என்னும் முனைப்போடு செயற்படுவதால்தான் அவைகட்கு வினைகள் உண்டாகின்றன. 'நான் செய்கின்றேன்' என்னும் உணர் -வோடு செய்தலால், அச் செயல்களின் பயனைச் செய்த உயிரையே நுகரச் செய்ய இறைவன் திருவுளங் கொள்கிறான். அதற்குக் காரணமும் அவன் அவ்வுயிர்கள் மாட்டு வைத்த கருணையே யன்றிப் பிறிதில்லை. அதனால், வினைப் பயனை ஊட்டுவித்தலும் அவை அவனது திருவடியை அடைதற்கு உபாயமேயாகும்.

விளக்கவுரை

'மாயையில் பண்ணிய ஊட்டல்' என்க. பண்ணிய, அன்பெறா அகஈற்று அஃறிணைப் பன்மை வினைப் பெயர். பண்ணி - பண்ணப்பட்டவற்றை. 'ஊட்டற்குப் பரிந்தனன்' என்க. 'அதுவும் போருளே' என எழுவாய் வருவிக்க. 'போருள்' என்பதன்பின், 'ஆதலான்' என்பது சொல்லெச்சமாய் எஞ்சிநின்றது.
இதனால், இறைவன் உயிர்கள் செய்த வினைகளைத் தான் ஏற்றுக்கொண்டு, அவற்றின் பயனை அவைகளை நுகரச் செய்தற்குக் காரணம் கூறப்பட்டது.

ஆகும் உபாயமே யன்றி அழுக்கற்று
மோகம் அறச்சுத்தன் ஆதற்கு மூலமே
ஆகும் அறுவை அழுக்கேற்றி எற்றல்போல்
ஆகுவ எல்லாம் அருட்பாசம் ஆகுமே. *#2380*

இறைவன் உயிர்கட்கு ஆணவ பாசத்தின்மேல் மாயை கன்ம பாசங்களைச் சேர்த்தது பல உபாயங்களுள் ஓர் உபாயம் அன்று. உயிர்கள் ஆணவ மலத்தினின்றும் நீங்கித் தூய்மை பெறுதற்கு அவற்றைச் சேர்ப்பது தவிர வேறு வழியேயில்லை. அஃது எதுபோலும் எனின், புதிதாகத் தோன்றிய ஆடையில் இயல்பாய் உள்ள அழுக்கினை மேலும் பிற அழுக்கை ஏற்றித் துவைத்தும் போக்குதல் போல்வதாம். அதனால், இயற்கையாக அன்றி இறைவனால் சேர்க்கப்பட்ட பாசங்கள் யாவும் அருளால் சேர்க்கப்பட்ட பாசங்களே.

விளக்கவுரை

'மூலமே' என்னும் ஏகாரம். தேற்றம். 'அறுவையை எற்றல்போல்' என்க. எற்றல் - அடித்தல்; துவைத்தல். 'போல்' என்றும் முதனிலை, 'போலும்'

என முற்றுப் பொருள் தந்தது. அருட்பாசம் - அருளால் சேர்க்கப்பட்ட பாசம்.
இதனால், 'அண்ணலடிசேர் உபாயமதாகும்' எனப்பட்டது. உவமையில் வைத்து வலியுறுத்தப்பட்டது.

பாசம் பயில்உயிர் தானே பரம்முதல்
பாசம் பயில்உயிர் தானே பசுஎன்ப
பாசம் பயிலப் பதிபரம் ஆதலால்
பாசம் பயிலப் பதிபசு ஆகுமே. ***#2381***

பசு தன்னைக் கட்டியுள்ள பாசங்கள் குறும்பு செய்தலால், 'நானே பரம்' என்கின்றது. ஆயினும், அங்ஙனம் நினைப்பதும், சொல்வதும் என்றும் நிலைத்து நில்லாமல் பின் நீங்கிப் போவதால், உயிர்க்கு அந்நிலை செயற்கை நிலையாதல் விளங்கு தலின், 'உயிர் அனாதியே செயற்கையோடு கூடிப் பசுவேயாய் நிற்கின்று? என, அறிந்தோர் கூறுவர். ஆயினும், 'பதிதான் முதலிலே பாசத்தோடு கூடிப் பசுவாய் இருந்து பின் பாசத்தினின்றும் நீங்கிப் பதி யாகின்றது' எனச் சிலர் கூற முற்படுவாராயின், அங்ஙனம் கூறு வார்க்குப் பதியின் வேறாய்ப் பசு இல்லையாம் ஆகலானும், பாசங்கள் சடம் ஆகலின் தாமே செயற்படமாட்டா ஆகலானும் பதியே தன்னின் மிக இழிந்த பாசங்களை மேலிட்டுக்கொண்டு பசுவாதல் கூடுமோ?

விளக்கவுரை

'கூடாது ஆதலின், அங்ஙனம் கூறுதல் அடாததே' என்பது குறிப்பெச்சம். 'பயில்' இரண்டும் முதனிலைத் தொழிற் பெயர். இரண்டிடத்தும் 'பயிலுதலால்' என உருபு விரிக்க. முதல் அடியின் ஈற்றில் 'என்னும்' என்னும் பயனிலை எஞ்சி நின்றது, இரண்டாம் அடியில், 'தான்' அசை நிலை. 'உயிர் பசுவே என்ப' எனத் தேற்றேகாரத்தை மாற்றி வைத்து உரைக்க. 'பயில' இரண்டில் முன்னது, 'பயிலும் படி' எனவும், பின்னது 'பயிலுதலால்' எனவும் பொருள் தந்தன. பயிலுதல் - செயற்படுதல். பரம் - தலைமைப் பொருள். ஈற்றில் உள்ள ஏகாரம் வினாப் பொருட்டாய், எதிர்மறைப் பொருள் தந்தது.
இதனால், 'பசுவே ஐந்தொழில் செய்யும்' என்பாரையும், 'பதியே தனது விளையாட்டால் பசுவாகி ஐந்தொழிற்படும்' என்பாரையும் மறுத்துச் சித்தாந்தம் கூறப்பட்டது.

அத்தத்தில் உத்தரம் கேட்ட அருந்தவர்
அத்தத்தில் உத்தர மாகும் திருமேனி
அத்தத்தி னாலே அணையப் பிடித்தலும்
அத்தத்தில் தம்மை அடைந்திநின் றாரே. ***#2382***

வேதாகமங்களின் அர்த்தத்திலே தெளிவு பிறவாமல் ஐயுற்று வினாவிய

முனிவர்களை, அந்த வேதாமகப் பொருள்களில் முடிந்த பொருளாய் உள் அருட்டிரு மேனியானது தனது கையினாலே அணைத்துத் தழுவிக் கொள்ளுதலும், அவர்கள் அத்திருமேனியில் அமைந்த கைக்குறிப்பினாலே தம்மை உள்ளவாறு உணர்ந்துகொண்டார்கள்.

விளக்கவுரை

'அருந்தவரை' என்னும் இரண்டன் உருபு தொகுத்த லாயிற்று. 'உத்தரம்' இரண்டில் முன்னது விடை; பின்னது முடிநிலை. மேனி - தக்கிணா மூர்த்தி அணையப் பிடித்தல் - அவர்களது தலைமேற் கை வைத்துத் தானாகச் செய்தல். அத்திரு மேனியின் கைக் குறிப்பு, சின்முத்திரை, இம்முத்திரை.

'பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போறப்சு பாசம் அனாதி'

என்பதையும்,

'பதியினைச் சென்றணு காபசு பாசம்'*

என்பதையும்,

'பதியணு கில்பசு பாசம்நில் லாவே'

என்பதையும் உணர்த்தும் அதனால் அருந்தவர் 'ஐயத்தின் நீங்கித் தெளிந்தனர்'* என்க. 'தம்மை அடைந்து நின்றார்' என்றமையால், பின் தலைவனை அடைந்து நின்றமை சொல்ல வேண்டாவாயிற்று. இதனால், 'இவ்வதிகாரப் பொருளே முதல் ஆசிரியனாகிய தென்முகக் கடவுளால் முனிவர்க்கு உணர்த்தப்பட்டது' என்பது கூறிமுடிக்கப்பட்டது.

*10.17.*அடிதலை அறியும் திறங்கூறல்

காலும் தலையும் அறியார் கலதிகள்
கால்அந்தச் சத்தி அருள்என்பர் காரணம்
பால்ஒன்று ஞானமே பண்பார் தலைஉயிர்
கால்அந்த ஞானத்தைக் காட்டவீ டாகுமே. *#2383*

முற்செய் தவம் இன்மையால் இப்பிறப்பில் நல்லறி வின்றிப் புல்லறிவேயுடையார், தம்மை எல்லாம் அறிந்தவராக மதித்துக்கொண்டு, ஏவவும் செய்கலாது, தாமும் தேராது*l* பயனில வற்றைப் 'பயனிடைய' எனவும், பயனுடையவற்றை 'பயனில' எனவும் கொண்டு தாம் வேண்டியவாறே செல்பவர்களை, 'தலை கால் தெரியாது திரிபவர்' என்றல் வழக்கு. அதன் பொதுப் பொருள் வெளிப் படையாயினும், சிறப்புப் பொருள் குறிப்பாகவே உள்ளது. அஃது யாதெனின், 'கால்' என்பது சிவனது சத்தி. அஃதே திருவருள். அஃதே எல்லாவற்றிற்கும் வினை முதல் 'தலை' என்பது உயிர். 'உயிர்க்கு அறிவு உண்டாதல் தலையிலே' என்பது யாவரும் அறிந்தது. எனவே, ஞானம் உதயமாவது 'தலை' எனப்படுகின்ற உயிரினிடத்திலேதான். அந்த ஞானம் தானே உதயமாகாது. 'கால்' எனப்படுகின்ற சிவசத்தி உதிப்பிக்கவே உதயமாகும். (ஞானகுரு மாணாக்கனது தலையில் தமது காலை வைத்துத் தீக்கைசெய்தல் இந்த உண்மையை நன் குணர்த்தும். தாழ்ந்தோர் உயர்ந்தோர் காலில் தங்கள் தலைபடும் படிவணங்கும் மரபும் இது பற்றியது. 'பொல்லார் இணை மலர் நல்லார் புனைவரே'*8* என மெய்கண்டதேவர் அருளிச்செய்த குறிப்பும் உணரத்தக்கது.

'கோள் இல் பொறியிற் குணம் இலவே, எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை'*

என்றதும் இக்குறிப்பினதே.) காலாகிய சிவசத்தி உதிப்பிக்கின்ற ஞானத்தின் பயன் அந்த உயிர் வீடு பெறுதலாம்.

விளக்கவுரை

'கால்' என்பது, 'தாள்' எனவும்படும் தாள் - முயற்சி -யுமாம். முயற்சியே கிரியை. 'எத்திறம் ஞானம் உள்ளது அத்திறம் இச்சை செய்தி'* என்றபடி, இச்சையும் கிரியையும் ஞானத்தின் வேறு பாடேயாம். இச்சை எப்பொழுதும் ஒரு நிலையிலேயிருக்கும். ஏனை ஞானமும், கிரியையுமே செயற்படும் அதனால், இயங்கு கருவி யாகிய கால், (இறைவனது இருதிருவடிகளும் இறைவனது) ஞானமும், கிரியையுமேயாம். உயிர்கட்கு அறிவு தலையில் இருத்தலால், அவற்றின் இச்சை செயல்களும் தலையில் உள்ளனவாம். எனவே, 'காலின்கீழ் உள்ளது தலை' என்பது பொருள். இறைவனது ஞானேச்சாக் கிரியைகள்

வியாபகமாய் நிற்க. அவற்றில் உயிர்களின் ஞானேச்சாக் கிரியைகள் வியாப்பியமாய் நிற்றலைக் குறிப்பதாம். சிவமும், சீவனும் ஒன்றும் ஆகாமல் இரண்டும் ஆகாமல் நிற்பதே சித்தாந்தபரமுத்தியாகலின், அதனை விளக்குதற்கு எத்தனையோ தொகைச் சொற்கள் இருப்பினும் அவற்றையெல்லாம் விடுத்து, 'தாடலைபோல்' எனக் கூறுவதும் இது பற்றி.

'தாடலைபோற் கூடிஅவை தான்நிகழா வேற்றின்பக்
கூடலைநீ ஏகம்எனக் கொள்'*

என்பது காண்க. 'காறலைபோல்' எனக் கூறலும் உண்டு. 'என்பர்' என்பதை, 'காரணம்' என்பதன் பின்னர் கூட்டுக. 'கால்' என்பதைக் குறையெண்ணுப் பெயராகக் கூறுவோர், 'தலை' என்பதை அங்ஙனங் கூறமாட்டாமை அறிக.

இதனால், 'அடிதலை தெரிதல்' என்னும் வழக்கின் உண்மைப் பொருள் விளக்கப்பட்டது.

தலைஅடி யாவ தறியார்கா யத்தில்
தலைஅடி உச்சி உள்ளது மூலம்
தலைஅடி யான அறிவை அறிந்தோர்
தலைஅடி யாகவே தாம்இருந் தாரே. ***#2384***

(முன் மந்திரத்தில், 'காலந்த ஞானத்தைக் காட்ட வீடாகுமே' என்ற சிவஞானமாகிய பதி ஞானமாம்) உடம்பில் 'தலை, கால்' என்பன. வெளியுறுப்பாய் இருத்தல் யாவரும் அறிந்தது. ஆயினும் உடம்பிற்கு உள்ளே தலை கால்கள் உள்ளன; அவற்றைப் பலர் அறியார். அந்த 'தலை, கால்' என்பன முறையே தலை உச்சியும், மூலாதாரமும் ஆகும். (தலை உச்சி 'ஏழாம்தானம் எனப்படும்) அந்தத் தலையில் எல்லாருக்கும் இயல்பாக உண்டாகின்ற அறிவு உலகியல் அறிவாகும். அந்த அறிவு, மூலாதாரத்தில் உள்ள குண்டலி கீழ் மேலாகச் சுழன்று செய்யும் செயலால் யோகக்காட்சி அறிவாய் மாறி நிகழப்பெற்றவர், அந்த அறிவையே உடையராய் இருத்தலன்றி, உலகியல் அறிவை உடையவர் ஆகார்.

விளக்கவுரை

'தலையும், அடியும் முறையே உச்சியில் உள்ளது. மூலத்தில் உள்ளது' என நிரல்நிறையாக வைத்து உரைக்க. 'உள்ளது' என்பது, 'மூலம்' என்பதன் பின்னரும் சென்று இயையும். தலை அடியான அறிவு - தலை அறிவு அடி அறிவாக மாறிய அறிவு. 'தலை அடியாகவே இருந்தார்' என்க.

இதனால், 'அடி தலை யறிதல்' என்னும் வழக்குச் சிவஞான நிகழ்ச்சியைக் குறித்தலேயன்றி யோக ஞான நிகழ்ச்சியையும் குறிக்கும்

என்பது கூறப்பட்டது.

நின்றான் நிலமுழு(து) அண்டமும் மேல்உற
வன்றாள் அசுரர் அமரரும் உய்ந்திடப்
பின்றான் உலகம் படைத்தவன் பேர்நந்தி
தன்றா ளிணைஎன் தலைமிசை யானதே. *#2385*

'அடி தலை அறியும் திறம்' என்பது, 'இறைவனது அடி தலைகளை அறிதல்' எனவும் பொருள் தரும். அம்முறையில் பார்க்கும்பொழுது, 'அவனது அடி தலைகள் உயிர்களால் அறிய இயலாதவை' என்று அறிதலே மெய்யறிவாகும் அந்த உண்மையை அறிவிக்கவே அவன் மாலும், அயனும் போர் செய்தபொழுது அப்போரினால் மிக்க வலிமையையுடைய அசுரரும் - தேவருங்கூட அழியாது வாழ்தற்பொருட்டுத் தனது திருவடிகள் நிலம் முழுதும் கடந்து கீழாகவும், முடி அண்டங்களை யெல்லாம் கடந்து அவற்றிற்கு மேலாகவும் இருக்கும்படி நெடியதோர் உருவத்தோடு அவர்கட்கு இடையே தோன்றி நின்றான். (அவர்கள் அவனது அடியையும், முடியையும் தேடிக் காணாது இளைத்தனர். அங்ஙனமாகவே) உலகம் முழுவதையும் படைத்தல் முதலிய ஐந்தொழிலைச் செய்யும் முதல்வன் அவனே ஆகின்றான். அவன் 'நந்தி' என்பதைத் தனது பெயராக உடையவன். அவனது திருவடியிணை தான் தலைமேல் உள்ளது.

விளக்கவுரை

'அஃது அவனே இரங்கி வந்து எனக்கு அருளியது' என்பது குறிப்பு. இரண்டாம் அடி முதலாகத் தொடங்கி, 'நின்றான்' என்பதை முதலடியின் இறுதியில் வைத்து உரைக்க. 'முழுதும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. 'அண்டமும்' என்பதன்பின் எஞ்சி நின்ற 'கீழ்' என்பதை வருவித்து நிரல்நிறையாக்குக. 'பின்' என்பது தெளிவுப் பொருட்கண் வந்தது, 'நீயிர் பொய் கூறியபின், மெய் கூறுவார் யாவர்' என்பதிற் போல. 'தான்' என்பதில் பிரிநிலை ஏகாரம் விரித்து, 'உலகம் படைத்தவன் தானே' என்க. 'படைத்தவன்' என்றது உபலக்கணம். இதனால், 'அடிதலை அறிதலை இறைவனிடம் வைத்து நோக்குங்கால் - அவை நம்மால் அறிய இயலாதன - என அறிதல் வேண்டும்' என்பதும், 'அறிந்து அவனது அடியை அடைய முயல வேண்டும்' என்பதும் கூறப்பட்டன.

'நிலமுதற்கீழ் அண்டம்உற நின்றிலனேல் இருவரும்தம்
சலமுகத்தால் ஆங்காரம் தவிரார்காண் சாழலோ'3

என்றதும், 'அவன் அவ்வாறு நின்றிராவிடில் உலகம் அழிந்திருக்கும்' என்பதையே குறித்தது.

'பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்;

போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே' 8
'கீதம் இனிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக் கப்பால் ;
சோதி மணிமுடிசொல்லில், சொல்லிறந்து நின்ற தொன்மை'*

சிந்தையி னுள்ளுள(து) எந்தை திருவடி
சிந்தையும் எந்தை திருவடிக் கீழது
எந்தையும் என்னை அறியகி லா னாயின்
எந்தையை யானும் அறியகி லேனே. **#2386**

(முன் மந்திரத்தில் சொல்லியவாறு சிவனது திருவடி -யினை எனது தலைமேல் மட்டும் உள்ளதன்று எனது சித்தத்தி னுள்ளேயும் உள்ளது. இனி எனது சித்தத்தை உள்ளடக்கி, வெளியி -லேயும் உள்ளது. (இந்நிலை, அவன்தானே இரங்கி எனக்குச் செய்த அருட்செயலாகும். ஏனெனில்,) முதற் கண் அவன் என்னை நினையாதிருப்பின், நான் அவனை நினைப்பதற்கே வழியில்லை.

விளக்கவுரை

அந்தக்கரணம் நான்கனுள் சித்தம் ஒன்றை மீள மீள இடைவிடாது நினைந்து நினைந்து நிற்றலால்தான் ஆன்மா அப்பொருளில் அழுந்தி நின்று அதனை அனுபவிக்கின்றது. அது பற்றியே, 'திருவடி சிந்தையினுள்ளே' என்றார்.

'சிந்திப் பரியன;சிந்திப் பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன ... ... ஐயாறன் அடித்தலமே'3
'அளப்பருங் கரணங்கள் நான்கும் சிந்தையே யாக'*
என அருளிச் செய்தன காண்க.

'என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்;
தன்னை நானும்முன் ஏதும் அறிந்திலேன்;
என்னைத் தன்அடி யான்என் றறிதலும்,
தன்னை நானும் பிரான்என்றறிந்தேனே'1
எனவும்,
'எந்த மாதவம் செய்தானை நெஞ்சமே,
பந்தம் வீடவை யாய பராபரன்,
அந்தம் இல்புகழ் ஆரூர் அரனெறி
சிந்தை யுள்ளும், சிரத்துளும் தங்கவே'8
எனவும் போந்த அப்பர்திருமொழிகளை இங்கு உடன்வைத்துக் காண்க.
இதனால், முன் மந்திரத்திற் கூறப்பட்ட திருவடிப் பேற்றின் நிலை மேலும் வகுத்துக் கூறப்பட்டது.

பன்னாத பார் ஒளிக் கப்புறத்தப்பால்
என்னா யகனார் இசைந்தங் கிரிந்திடம்

உன்னா ஒளியும் உரை செயா மந்திரஞ்
சொன்னான் கழலிணை சூடிநின் றேனே. *#2387*

சொற்களால் சொல்லவராராத ஒரு நிலம்; அவ்வாறான ஓர் ஓளி; இவ்வாறெல்லாம் சொல்லப்படுகின்ற அதற்கு அப்புறத்தாகிய இடமே என்னுடையதலைவர் இருக்கும் இடம். அவர் அவ்வாறிருக்கவும் மனக் கண்ணிற்கும் காணப்படாத ஓர் ஒளியாயும், வாக்கிற்கு வாராத ஒரு மந்திரமாயும் உள்ள அதனது இயல்பையும், அதனை அடையும் வழியையும் ஒருவன் எனக்குச் சொன்னான். அந்த வழியிலே நின்றமையால், முன் தந்திரத்திற் கூறியவாறு என் தலைவனது திருவடியை யான் அடைந்தேன்.

விளக்கவுரை

'பன்னாத' என்பதை ஒளிக்கும் கொள்க. 'ஒரு நிலம்' என்றும், 'ஓர் ஒளி' என்றும் சொல்லப்பட்டது. 'பரவெளி' என்றும், 'சிதாகாசம்' என்றும் சொல்லப்படுகின்ற பராசத்தி அது தன் குணமாக, அக்குணத்தையுடைய குணியாதல் பற்றிப் பரமசிவனை, அதற்கும் அப்புறத்துள்ளவனாகக் கூறினார். 'அப்பால்' என்றது, 'அந்த இடம்' என்றபடி. 'அப்புறத்துள்ள அந்தப் பால்' என்க. 'இருந்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. உள்ளத்துள் ஒரு பொருளை நினைப்பது என்றாலும் யாதானும் ஒருவடிவில்தானே நினைத்தல் வேண்டும். அஃது இயலாமையால், 'உன்னா ஒளி' என்றார். உரை செயா மந்திரமாவது உரைசெய்யப்படும் மந்திரங்களையெல்லாம் வாயிலாகக் கொண்டு இயக்கி, அம்மந்திரங்கைளக் கணிப்பவர்க்கு அவற்றின் பயனைத் தந்து நிற்கும் அந்தப் பொருள். இங்ஙனம் இருவகையாகக் கூறிய இதுவும் திருவருளைக் குறித்ததேயாம். 'உரைசெயா மந்திரம்' என்பதிலும் எண்ணும்மை விரிக்க. ஒருவன் - குருமூர்த்தி. அவ்வெழுவாய் வருவிக்கப்பட்டது. குருமூர்த்தி அருளைச் சொன்னதாவது, 'உண் அறிவிற்கு அருளையே தாரகமாகக் கொண்டு, அறிந்தும், செய்தும்நில்' எனக் கூறியது. 'அவ்வழியில் நிற்கவே, தலைவனது திருவடிப்பேறு கிட்டிற்று' என்பதாம்.

இதனால், 'அடி, தலை' என்பவற்றுள் இறைவனது, திருவடிபின் சிறப்பும், அதனை அடையுமாறும் கூறப்பட்டன.

பதியது தோற்றும் பதமது வைம்மின்
மதியது செய்து மலர்ப்பதம் ஓதும்
நதிபொதி யுஞ்சடை நாரியோர் பாகன்
கதிசெயும் காலங்கள் கண்டுகொ ளீரே. *#2388*

பதியாகிய சிவன் உங்கட்குக் காட்டாவிடினும் அன்பர்கட்குக் காட்டிய திருவடிகளை பதி வரலாறு உணர்ந்து அவைகளைப் பாவனையால்

உங்கள் தலை மேல் வையுங்கள் மற்றும் மலர்போன்று அவைகளை உங்கள் உள்ளத்திலே வைத்துத் தியானிப்ப -துடன், வாயால் புகழ்ந்து பாடுங்கள். இவைகளையெல்லாம் இடை யறாது செய்யாவிடினும் இவற்றிற்குரிய காலங்களைத் தெரிந்து அக்காலங்களில் செய்யுங்கள்.

விளக்கவுரை

'செய்தா அவன் தனது திருவடிகளை உங்கட்கும்காட்டி உய்யக்கொள்வான்' என்பது குறிப்பெச்சம் 'தோற்றும்' என்றது இறந்த காலத்தில் நிகழ்காலம் பின்னர் 'மதி' என்றும் 'ஓதும்' என்றும் கூறுதலால், முன்னர்வைத்த தலைமேலாயிற்று.

'வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சுழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே'*1*

என்ற அப்பர் திருமொழியும் காண்க.

'இறைவனைத் தியானித்தற்குரிய சிறப்புக் காலங்கள் மூன்று' என்ப. அவை 'காலை நண்பகல் மாலை' என்பன

'தெரிகாலே மூன்று சந்தி தியானித்து வணங்க நின்று
திரிகாலங்கண்ட எந்தை திருச்செம்பொன் பள்ளியாரே'*8*

என ஓதியருளினமை காண்க. இவைகளை, 'சந்தியாகாலம்' என்பர். சம் தியா காலம் - நன்றாகத் தியானித்தற்குரிய காலம்.

இனி வழிபாட்டிற்குரிய காலங்களை 'முன் மூன்று, பின் மூன்று' என வைத்த ஆறு காலங்களும் சொல்லப்படும் 'வைகறை, காலை, நண்பகல்' - என்பன முன் மூன்று காலங்கள், 'எற்பாடு, மாலை, யாமம்' - என்பன பின்மூன்று காலங்கள். 'கதிசெயும்' என்பதில், செய்தல் - உண்டாக்குதல். இதனாலும் இறைவனது திருவடியை அடையும் முறையே வகுத்துச் சொல்லப்பட்டது.

தரித்துநின் றான் அடி தன்னுடை நெஞ்சில்
தரித்துநின் றான்அம ராபதி நாதன்
கரித்துநின் றான்கரு தாதவர் சிந்தை
பரித்துநின் றான்அப் பரிபாகத் தானே. ***#2389***

எல்லாப்பொருள் கட்கும் ஆதாரமாய் அவை -களைத் தாங்கிநிற்பவனாகிய சிவன் தன்னை எண்ணாதவர்களது உள்ளத்தை வெறுத்தும், அடைதற்கரிய அப்பரிபாகத்தை அடைந் தமை காரணமாக பரிபாகிகளது உள்ளத்தை விரும்பியும் நிற்கின்றான். ஆகவே, அவனது திருவடியைத் தனது உள்ளத்தில் தாங்கி நிற்பவன் இவ்வுலகத்திருப்பினும் சிவலோகத்தில் இருப்பவனேயாவான்.

விளக்கவுரை

'தரித்து நின்றான், கருதாதவர் சிந்தை கரித்து நின்றான்; அப்பரிபாகத்தானே பரித்துநின்றான்; அவன் அடி தன்னுடை நெஞ்சில் தரித்து நின்றான் அமராபதிநாதன்' என இயைத்துப் பொருள்கொள்க; 'பரித்து' என்பதை, 'பரிப்ப' எனத்திரிக்க. 'சிந்தை' என்பது பரித்த லோடும் இயையும். அகரச்சுட்டு அடைதற்கு அருமை தோன்றி நின்றது. 'அவன் அடி' எனச் சுட்டியுரைக்க. கரித்தல் - வெறுத்தல். 'கருதாமைக்குக் காரணம் பரிபாகம் இன்மை' என்பது தோன்றுதல் அறிக. 'அமரர்' என்பது தேவரையும், 'அமராபதி' என்பது தேவ ருலகத்தையும் குறித்தல் பொது வழக்காயினும், சிவநெறி வழக்கில் அவை சிவ சாலோக சாமீப சாரூப நிலைகளை அடைந்தவர்களையும், சிவலோகத்தையும் குறிக்கும். இதனால், சிவனது திருவடிப்பேற்றின் அருமையும், அப்பேறு பெற்றவர்களது சிறப்பும் கூறப்பட்டன.

ஒன்றுண்டு தாமரை ஒண்மலர் மூன்றுள
கன்றாத தாளும் இரண்டுள காயத்துள்
நன்றாகக் காய்ச்சிப் பதம்செய வல்லார்கட்*(கு)*
இன்றேசென் றீசனை எய்தலும் ஆமே. ***#2390***

மக்கள் உடம்பிற்குள் தாமரைக் கொடி ஒன்றே உள்ளது: அதில் மலர்கள் மூன்று உள்ளன. அந்த மூன்று மலர்களிலும் என்றும் அவற்றால் வருந்துதல் இல்லாத சிவனது திருவடியிணையும் உள்ளது. ஆயினும் அத்திருவடியிணையைக் காண்பதற்கு அந்த மூன்று மலர்களும் மலராக மலர்தல்வேண்டும். அவ்வாறு மலர்தற்கு அவை பக்குவப்படவேண்டும். அதற்கு உடம்பிற்றானே உள்ள நெருப்பை எழுப்பி வெதுப்பினால், அம்மலர்கள் பக்குவப்பட்டு மலரும் மலர்ந்தால், அங்ஙனம் மலர்விக்க வல்லவர்கட்குச் சிவனை அடைதல் இப்பொழுதே எளிதாகிவிடும்.

விளக்கவுரை

தாமரைக்கொடி, சுழுமுனைநாடி, மூன்று மலர்கள், அனாகதம், (இருதயம்) விசுத்தி, (அடித்தொண்டை) ஆஞ்ஞை (புருவநடு) ஆகிய ஆதாரங்கள். அனாகதத்திற்குக் கீழ் உள்ள ஆதாரங்கள் தாமரைக்கொடியின் அடிப்பாகமாகக் கருதப்படுகின்றன. வழிபாடு 'மந்திரம், கிரியை, பாவனை' என்னும் மூன்றுறுப்புக்களால் நிகழ்வது. அவை மூன்றும் முறையே மொழி, மெய் மனம் என்ப வற்றால் நிகழுங்கால், விசுத்தி, அனாகதம், ஆஞ்ஞை என்பவற்றில் நிகழ்தல்பற்றி அம்மூன்றையே கூறினார். இன்றே - இப்பிறப்பிலேயே.
இதனால், 'சிவனது திருவடியை அடைதற்கு மேற்கூறிய நினைத்தல் வாழ்த்தல் வணங்கலேயன்றிச் சிவயோகமும் சிறந்த சாதனமாம்' என்பது

கூறப்பட்டது.

கால்கொண்டென் சென்னியிற் கட்டறக் கட்டற
மால்கொண்ட நெஞ்சின் மயக்கில் துயக்கறப்
பால்கொண்ட என்னைப் பரன்கொள நாடினான்
மேல்கொண்டென் செம்மை விளம்பஒண் ணாதே. *#2391*

சிவபெருமான் பக்குவம் எய்திய என்னைத் தனது திருவடியாகிய மலர்கள் எனது தலையிலே எனது பாசக்கட்டு நீங்குமாறு மலரும்படி செய்யும் முகத்தால், மயக்கம் கொண்ட எனது மனத்தால் திகைத்து நிற்கின்ற திகைப்பை நீக்கி ஆட்கொள்ள நினைத்தான். அதனால் நான் கோணங்கள் எல்லாம் நீங்கி, நேர்மையை அடைந்தேன் அந்த நேர்மை இது' எனச் சொல்லவாராது.

விளக்கவுரை

'கால்கொண்டு' என்பது, இறுதியில் நின்ற 'கட்டற' என்பதனோடு இயைந்தது. அந்த 'கட்டற' என்றது, 'முறுக்கவிழ்ந்து மலர' என்றதாம். 'கால்கொண்டு கட்டற' என்றாரேனும், 'கால் கட்டறலைக் கொண்டு' என்றலே கருத்து. 'பரன், பால் கொண்ட என்னைக் கால் கட்டறல்கொண்டு துயக்கறக் கொள்ள நாடினான்' என இயைக்க. பால் - பான்மை' பக்குவம் மேல் - அதன்பின் மேல் கொண்ட' என்பதில் அகரம் தொகுத்தலாயிற்று. கோணங்கள் ஆணவ மலத்தால் எழும் செருக்கும், கன்ம மலத்தால் வரும் இன்பத் துன்பங்களும், மாயா மலத்தால் வரும் ஐம்புலத் தாக்குதலும் பிறவுமாம். நேர்மை, மெய்யுணர்வு, முதல்வனது இயல்பு பற்றி எழும் அன்பு, அதனால் விளையும் ஆனந்தம் முதலியனவாம்.

'பக்குவம் வந்தால் நீவிரும் இவையெல்லாம் பெறுவீர்' என்பது குறிப்பெச்சம்.

இதனால், 'திருவடிப் பேறே கோட்டம் நீக்கிச் செம்மை செய்வது' என்பது கூறப்பட்டது.

பெற்ற புதல்வர்பால் பேணிய நாற்றமும்
குற்றமும் கண்டும் குணங்குறை செய்ப ஓர்
பற்றைஅவ் வீசன் உயிரது பான்மைக்குச்
செற்ற மிலாச் செய்கைச் செய்தின செய்யுமே. *#2392*

தாம் பெற்ற புதல்வரிடத்தில் உள்ள தீ நாற்றத்தையும், அதற்குக் காரணமான அசுத்தப் பொருள்களையும் அனுபவித்த போதிலும் அப்புதல்வரிடத்தில், வெறுப்புக் கொள்ளாமலே பெற் றோர்கள் அவை நீங்குதற் பொருட்டுப் புதல்வர்க்கு வெறுப்பான செயல்கைளச் செய்வார். (அவை நெய்யிட்டு, நலங்கிட்டு முழுக் காட்டுதல், மருந்தூட்டுதல் முதலியனவாம்) அது போலவே, சிவனும் உயிர்கள் பக்குவம் எய்தற்

பொருட்டு உலகப் பற்றை அவைகட்கு உண்டாக்குதலால், அப்பற்றின் வழியவான செயல் -களைச் செய்வான் ஆகவே, அது கருணை காரணமானது அன்றி, வன்கண்மை காரணமானது அன்றாம்.

விளக்கவுரை

குற்றம் - இங்கு, அசுத்தம். இதனைக் கூறவே 'நாற்றம்' என்றது தீ நாற்றமாயிற்று. 'குணம் குறை' என்றது 'குணம் இல்லன்' என்றபடி. 'குணம் இல்லன' என்று புதல்வரது கருத்து நோக்கி 'பான்மை பக்குவம்' என்பதை முன் மந்திர உரையிலும் கூறினோம். பான்மைக்கு - பக்குவம் வருதற்கு, செற்றம் - பகை; வன்கண்மை 'இலாது' என்பது ஈறு குறைந்து நின்றது. செய்கைக்கு - செய்கையால்; உருபு மயக்கம். ஈசன் உயிரது பான்மைக்குச் செற்றம் இலாது ஓர் பற்றைச் செய்கையால், அதற்கு எய்தின செய்யும்' என்க. உலகப் பற்றிற்கு எய்தன பிறப்பு இறப்புக்களும், இன்பத்துன்ப நுகர்ச்சிகளுமாம்.
இதனால், 'பக்குவம் வாயாத உயிர்கட்கு இறைவன் செய்வதும் அருளேயன்றி, வன்கண்மையன்று' என்பது கூறும் முகத்தால், அவ்வுயிர்களும் திருவடிப்பேற்றை அடைவனவே என்பது கூறப்பட்டது.

10.18. முக்குற்றம்

மூன்றுள குற்றம் முழுதும் நலிவன
மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன
மூன்றினை நீங்கினர் நீக்கினர் நீங்காதார்
மூன்றினுட் பட்டு முடிகின்ற வாறே. ***#2393***

உயிர்களை எப்பொழுதும் வருத்துவனவாய் மூன்று குற்றங்கள் உள்ளன. அதனால் ஆணவத்தின் சத்தி முற்றும் மடங்காது செயற்பட, சில வேளைகளில் ஒன்றை மற்றொன்றாக உணர்ந்தும், சில வேளைகளில் எதனையும் அறியாதே கிடந்தும் உயிர்கள் துன்புறு கின்றன. ஆகவே அம்முக்குற்றம் நீங்கப்பெற்றவரே துன்பத்தை நீக்கினவர் ஆகின்றனர். நீங்கப் பெறாதவர் அக்குற்றங்களில் கிடந்து கெடும் முறைமையை உடையவர் ஆவர்.

விளக்கவுரை

'மூன்று குற்றங்கள் இவை' என்பது வருகின்ற மத்திரத்தால் கூறப்படும். 'மான்று' என்பதும் 'மயங்கி என்றதே யாயினும் அது திரிபுணர்வையும், மயங்கி என்பது யாதும் அறியாமை -யையும் குறித்தன. 'ஆறு' என்பதன்பின், 'உடையர்' என்பது சொல் லெச்சமாய் எஞ்சி நின்றது. இதனால், 'உயிர்களின் துன்பத்திற்குக்காரணம் முக்குற்றம்' என்பது கூறப்பட்டது.

காமம் வெகுளி மயக்கம் இவைகடிந்***(து)***

ஏமம் பிடித்திருந் தேனுக் கெறிமணி
ஓமெனும் ஓசையி னுள்ளே உறைவதோர்
தாமம் அதனைத் தலைப்பட்ட வாறே. *#2394*

'காமம், வெகுளி, மயக்கம்' என்னும் மூன்று குற்றங்களையும் நான் முற்றக்கடிந்து, எனக்குப் பாதுகாவலாய் உள்ள பொருளை நோக்கிக்கொண்டிருந்தேன். அப்பொழுது, அடிக்கப்பட்ட மணியினின்றும் எழும் ஓசை போல, 'ஓம்' என்னும் ஓர்ஓசை என் உடம்பினின்றும் எழுந்தது. அவ்வோசையை நுணுகி நோக்கியபோது அதனுள்ளே ஓர் அரியபொருள் வெளிப்பட அதனை நான் அடைந்தேன். இது வியப்பு.

விளக்கவுரை

காமம் - விருப்பம். வெகுளி - சினம்; வெறுப்பு. மயக்கம் - அறியாமை. 'வேட்கை' என்பதையும் காமம் ஆக்கியும், 'செருக்கு' என்பதையும் மயக்கம் ஆக்கியும் குற்றத்தை 'ஐந்து' என்றல் சாங்கிய நூல் முறைமை. அந்த ஐந்தையும் அந்நூலார் 'பஞ்சக்கிலேசம்' என்பர். அந்த ஐந்தையே திருவள்ளுவர். 'காமம், வெகுளி, மயக்கம்'* என மூன்றாக்கிக் கூறியதாகப் பரிமேலழகர் உரைத்தார். எனினும், தமிழ் நூலார் மூன்றாகக் கூறுவதையே சாங்கியர் ஐந்தாக விரித்தனராவர். பிடித்திருத்தல் - குறிக்கொண்டிருத்தல். 'எறிமணி போலும் சை' என்க. மணி, அதன் ஓசையைக் குறித்த ஆகுபெயர், மணியை அடிப்பது ஒரு கணமேயாயினும், அதினின்றும் எழும் ஓசை நெடிது போது தொடர்ந்து ஒலித்தல் போல, உந்தியினின்றும் எழுந்த 'ஓம்' என்னும் ஓசை இரண்டு மாத்திரையைக் கடந்து தொடர்ந்து ஒலித்தது' என்றற்கு 'எறி மணி ஓசை போல்' என்றார். 'இவ்வோசை யோகத்திற் கேட்கப்படும்' என்பது மூன்றாம் தந்திரத்தில் கூறப்பட்டது. 'ஓம்' என்பது ஒரு சொல்லாகலானும் சொல்லுக்குச் சார்பாய் உள்ளது பொருளாகலானும் பொருளை 'சார்பு' என்றார். தாமம் - சார்பு. இதன்பின், 'வெளிப்பட' என ஒருசொல் வருவிக்க. 'உள்ளே உறைவது' என்றதனால் அஃது அறிதற்கரியது என்பது பெறப்பட்டது. 'வியப்பு' என்பது சொல்லச்சம். இதனால், 'முக்குற்றங்கள் இவை' என்பதும், 'அவை யோக முயற்சியால் நீங்குதலும்' கூறப்பட்டன.

*10.19.*முப்பதம்

தோன்றிய தொம்பதம் தற்பதம் சூழ்தர
ஏன்ற அசிபதம் இம்மூன்றோ டெய்தினோன்
ஆன்ற பராபரம் ஆகும் பிறப்பற
ஏன்றன மாறச் சிவாமாய் இருக்குமே. *#2395*

'துவம்' என்பதே சித்தர் மரபில், 'தொம்' என மரூஉ மொழியாகக் கூறப்படுகின்றது.] 'துவம்' என்னும் பதம் முன்னே எழ, அதனை அடுத்து, 'தத்' என்னும் பதம் வந்து பற்ற. அதன்பின் 'அசி' என்னும் பதமும் வந்து சேர, இம் மூன்றும் கூடிய கூட்டமாய் அமைந்த வாக்கியத்தின் பொருளாக ஒருவன் ஆகிவிடுவானாயின், அவன் வியாபகப்பொருளாகிய பரம்பொருளேயாவன். பின் முன்பு தான் பொருந்தியிருந்த மும்மலங்களும் நீங்கச் சிவமாகியிருப்பான்.

விளக்கவுரை

வாக்கியம் 'தத்துவமசி' என்று இருப்பினும் பொருள், 'துவந்ததசி' என்பதேயாகலின் அவ்வாக்கியத்தை நாயனார் இவ்வாறே கூறுகின்றார். இதுபற்றி மேலே குறினோம்* எய்துதல் - பொருள் அனுபவமாகப் பெறுதல். வேதம், முதற் பொருளைப் பொதுவாக, 'பரம்' எனக் கூறும். ஆகவே, 'நீ அது ஆகின்றாய்' என்னும் வேதவாக்கியத்தால் பொது அனுபவம் உண்டாதலை 'பராபரம் ஆகும்' என்ற கூறிப் பின், சித்தாந்தம் 'துவம்சிவமசி' எனக் கூறுகின்ற சிறப்புப்பொருளை எய்திச் சிவமாய் இருக்கும் எனக் கூறினார். மற்றும் இது பற்றிய சில விளக்கங்கள் மேலே* கூறப்பட்ட வற்றைக் காண்க.

இதனால், 'முப்பதம் ஆவன இவை' என்பதும், அவற்றால் பெறப்படும் பயனும் கூறப்பட்டன.

போதந் தனைஉன்னி பூதாதி பேதமும்
ஓதும் கருவிதொண் ணூறுடன் ஓராறு
பேதமும் நாதாந்தம் பெற்றியிற் கைவிட்டு
வேதம்சொல் தொம்பத மாகுதல் மெய்ம்மையே. ***#2396***

'அறிவாவது சடத்தின் குணமாகாது, வேறேயாம்' என்பதை உணர்ந்து பூதம் முதலிய தத்துவ வகைகளையும், அவற்றின் கூறுகளாகிய தாத்துவிக வகைகளையும் ஆகத் தொண்ணூற்றாறு கருவிகளையும் நாதமுடிவாக அவற்றின் இயல்புகளை ஆராயும் முகத்தால், 'தான்' என மயங்காது விட்டொழித்து உண்மையாகவே, 'தத்துவமசி' என்னும் வேதாந்த மகாவாக்கியத்தில் உள்ள 'தொம்' பதப்பொருளாகி நிற்றலே ஆன்மாவின் உண்மை இயல்பாகும்.

விளக்கவுரை

'உண்மையாக அன்றி வெறும் வாய்மொழியாக அவ்வாக்கியத்தைச் சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை' என்பதாம். இதுவே. தசகாரியத்துள் 'தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி ஆன்மரூபம்' என நான்காக வகுத்துக் கூறப்படுகின்றது. சிவஞானபோதத்தில், 'இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேறாவான் காணவே'* எனப்

பட்டதும் இதுவே. தொண்ணூற்றாறு கருவிகள் மேலே கூறப்பட்டன. இதனால், முப்பாதங்களுள் ஆன்ம பதமாகிய தொம்பதப் பொருளை உண்மையாக உணருமாறு கூறப்பட்டது.

தற்பதம் என்றும் துவம்பதம் தான்என்றும்
நிற்ப(து) அசி அத்துள் நேரிழை யாள் பதம்
சொற்பதத் தாலும் தொடரஒண் ணாச்சிவன்
கற்பனை யின்றிக் கலந்துநின் றானே. *#2397*

முப்பதங்களுள், 'அசி' என்னும் பதமே தத் பதம் என்றும் 'துவம் பதம்' என்றும் சொல்லத்தக்கதாய் உள்ளது. (அஃதாவது, இரண்டையும் ஒன்றாகச் செய்கின்றது.) அந்தப்பதத்தில் தான் அருட்சத்தி இருக்கின்றாள். அதனால், வாக்குக்களால் எட்ட முடியாத சிவனும் அந்தப்பதத்திலேதான் கற்பனையாக அன்றி, உண்மையாகவே கலந்து நிற்கின்றான்.

விளக்கவுரை

தத் - அது. துவம் - நீ. அசி - ஆகிறாய். எனவே, 'அது நீ ஆகியாய்' என்கின்ற பொழுது இரண்டையும் ஒன்று படுத்துவது 'அசி' ஆதல் உணர்க. பெத்தகாலத்தில் சிவன் சீவனாய், 'தான்' என வேறு தோன்றாது நிற்றலும், முத்தி காலத்தில் சீவன் சிவனாய், 'தான்' என வேறு தோன்றாது நிற்றலும் சத்தியினாலேயாகலின், 'அசி' என்னும் பதத்திலே நேரிழையாள் உளள் - என்றார். திருவைந் தெழுத்தில் அசிபதமாய் நிற்பது வகாரமும், நகாரமும் ஆம்.

'அவன்இவ னானது அவன் அருளால் அல்லது,
இவன் அவன் ஆகான் என்று உந்தீபற'*

எனத் திருவுந்தியார் சீவன் ஒன்றும் மாட்டாமையை வலியுறுத்துகிறது. 'உளன்' என்னும் பயனிலை எஞ்சிநின்றது. 'அப்பதத்து' எனச் சுட்டு வருவித்து, 'சிவன் கலந்து நின்றான்' எனமுடிக்க.
இதனால், முப்பதத்துள் 'அசி' பதத்து உண்மை கூறப்பட்டது.

அணுவும் பரமும் அசிபதத் தேய்த்து
கணுவொன் றிலாத சிவமும் கலந்தால்
இணையறு பால் தேன் அமுதென இன்பத்
துணையது வாய்உரை யற்றிடத் தோன்றுமே. *#2398*

'துவம்' பதப்பொருளாகிய ஆன்மாவும் 'தத்' பதப் பொருளாகிய பரமும் 'அசி' பதத்தால் ஒன்றான பின்பு, அதில் சிவமும் கலந்துவிடுமாயின், அக்கலவை, பாலும் தேனும் கலந்த கலவையில் அமுதமும் கலந்தாற்போல இனிமையோடு, உறுதியையும் தந்து நிற்கும். அக்கலவையின் சிறப்புச் சொல்லற்ற நிலையாய்த் தோன்றும்.

விளக்கவுரை

பரம், சிவம் இரண்டும் ஒன்றாயினும் பொதுவும், சிறப்புமாகிய உணர்வு வேறுபாடு பற்றி வேறுவேறாகக் கூறினார். பரமாதல் வேதாந்த ஞானத்தாலும், சிவமாதல் சித்தாந்த ஞானத்தாலும் என்க. 'அசிபதத்தால்' என மூன்றாவது விரிக்க. 'ஏய்ந்து' என்னும் எச்சம் எண்ணின்கண் வந்தது. கணு - வேற்றுமை. ஒன்று - சிறிது. 'ஒன்றும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. இணை - ஒப்பு. பால், ஓரளவு இனிப்புடையது. தேன், மிக இனிப்புடையது. ஆகவே அவை முறையே ஆன்மாவிற்கும், பரத்திற்கும் உவமையாம். அமுது உறுதி பயப்பது. ஆகவே, அது சிவத்திற்கு உவமையாம். இன்பத் துணை - இனிய பொருள்களின் கலப்பு. அது, பகுதிப்பொருள் விகுதி.

இதனால், வேதாந்த சித்தாந்த மகாவாக்கியங்களின் அனுபவச் சிறப்புக் கூறப்பட்டது.

தொம்பதம் தற்பதம் தோன்றும் அசிபதம்
நம்பிய சீவன் பரன் சிவ னாய்நிற்கும்
அம்பத மேலைச் சொரூபமா வாக்கியம்
செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானே. ***#2399***

அழகிய சொற்களால் ஆகிய, பழமையான, மெய்ம்மை கூறும் மகாவாக்கியம் 'தொம், (துவம்) தத், அசி' என்னும் மூன்று சொற்களை யுடையது. அச்சொற்கள் முறையே புத்தி முத்திகளை விரும்புகின்ற சீவன், பரம்பொருள், அதன் சத்தி ஆகியவற்றைக் குறித்து நிற்கும். அவ்வாக்கியத்தைப் பன்முறையும் உணர்தலால் அடையப்படும் செவ்விய பொருள், குருவாகி வந்து ஆட்கொள்கின்ற சிவனே.

விளக்கவுரை

மூன்றாம் அடியை முதற்கண் கூட்டியுரைக்க.

'பத வாக்கியம்' என இயையும். வாக்கியம் சாதனம் ஆகலின், செம்பொருள், அதனால் அடையப்படும் பொருளாயிற்று. செம்மை, எஞ்ஞான்றும் திரிபின்றி ஒருதன்மைத்தாய் நிற்பது. இதுவே, வடமொழியில் 'சத்து' என்பதற்குப் பொருள் என்பது சித்தாந்தம்.

இதனால், 'முப்பத வாக்கியம் மெய்ப்பொருளை அடையும் வழி' என்பதும், அதனால், அடையப்படும் மெய்ப்பொருள் சிவனே என்பதும் கூறப்பட்டன. இரண்டாம் அடி அனுவாதமாய், மேலெல்லாம் கூறியதை வலியுறுத்திற்று.

ஐம்ப தறியா தவரும் அவர்சிலர்

உம்பனை நாடி உரைமுப் பதத்திடைச் செம்பர மாகிய வாசி

செலுத்திடத்
தம்பர யோகமாய்த் தான்அவன் ஆகுமே. *#2400*

எழுத்தறி கல்வியில் அறியவேண்டிய எழுத்துக்கள் ஐம்பது. அவற்றுள் ஒன்றையேனும் அறியாதவரும் உளர். அவரும் மக்களுட் சிலராகவே இருக்கின்றனர்: (அவர்கள் நற்கதி அடையு மாறில்லை. ஆகவே,) கல்வி கற்றவர் அக்கல்வியின் முடிநிலையாக முப்பதங்களைக் கொள்ளுதல் வேண்டும். கொண்டு, செம்மையான, உயர்ந்த வாசியோகத்தைச் செய்தல் வேண்டும். அவ்யோகம் 'ஹம்ஸ:' என்னும் மந்திரமாக அமைதலின், அதுவே தொம்பதமும், தத்பதமுமாய் நிற்கும். நிற்கவே, அது, 'யோஹம்' என்று ஆகி, சீவன் சிவனாகின்ற பயனைத் தகும்.

விளக்கவுரை

'கல்லா நெஞ்சில் - நில்லான் ஈசன்' ஆதலின், எழுத்தறியாதவரை இகழ்ந்தார்* 'அறியாதவரும்' என்பதன்பின், 'உளர்' என்பது வருவிக்க. 'அவரும்' என்னும் உண்மை தொகுத்த லாயிற்று. சிவனை நினையாது செய்யும் யோகம் வெறு ஹடயோக மாய் ஆன்மிகப் பயனைத்தாராது ஆதலின், 'உம்பனை நாடி முப்பதத் திடை வாசி செலுத்திட' என்றார். 'உம்பரன்' என்பது குறைந்து நின்றது. 'நாடிச் செலுத்திட' என இயையும். உரைபதம், வினைத் தொகை. செம்பரம் - செவ்விதும், மேலானதும் ஆகிய பொருள். அப் பொருளாம் தன்மையைக் குறிக்கின்ற பதத்தையே அதுவாக உப சரித்தார் 'ஹம்ஸ' மந்திரம் இயல்பாக இயங்கும் சுவாசத்தாலே அமைதலின் அதனை, 'அசபா மந்திரம்' என்பர். செபிக்கப்படாத மந்திரம்' என்பது இதன் பொருள். 'பேசாத மந்திரம்' என்றும் கூறுவர். 'தம் யோகம், பரயோகம்' எனத் தனித்தனி முடிக்க. தம் யோகம் - தம்மால் செய்யப்படும் யோகம் பரயோகம் - மேலான யோகம். 'ஆகும்' என்றது 'ஆதலாகிய பயனைத் தரும்' என்றபடி.
இதனால், 'முப்பத அனுபவத்தை வாசியோகத்தால் பெறலாம் என்பது கூறப்பட்டது.

நந்தி யறிவும் நடுவில் அதீதமாம்
இந்தியம்சத் தாதி விடசிவ னாகும் நால்
நந்திய மூன்றிரண் டொன்று நலவைந்தும்
நந்தில் நனவாதி மூட்டும் அனாதியே. *#2401*

ஆன்மாவிற்குச் சிவனை அறிகின்ற அறிவும் நழுவுவதே 'அதீதம்' எனப்படும் முடிவுநிலைவாய்க்கும். அஃதாவது, ஆன்மாச் சிவனை அறியும் பொழுது, 'யான் சிவனை யறிகின்றேன்' என அறிகின்ற அறிவும் அதைவிட்டு நழுவினால் அதன் பின்பே துரியாதீதநிலை வாய்க்கும்' என்பதாம். (ஆகவே அவ்வறிவு நழுவிய நிலை துரியமாதல் பெறப்பட்டது.) இனி அவ்வாறின்றி, ஞானேந்திரியம், கன்மேந்திரியம்

அவற்றின் விடயங்களாகிய சத்தாதி, வசனாதி முதலிய தத்துவ தாத்துவிகங்கள் நீங்கியபோதிலும், 'யான்' என்னும் உணர்வு நீங்காது. ஆகவே, அது நீங்குதல் நின்மல சாக்கிரம் முதலியவற்றிலாம். அவையும் நீங்கினால் பரசாக்கிரம், பரசொப்பனம் முதலியனவே இயற்கை நிலையாகிய முத்தியைக் கூட்டுவிக்கும்.

விளக்கவுரை

நந்தி யறிவு - நந்தியை அறிவும் அறிவு. விட - நீங்க. 'யான்' என்பது நீங்குவதாகிய நின்மலாவத்தையை. 'நின்மலாவத்தை' என ஒரு சொல்லாற் கூறிப்போகாது அனைத்தையும் முறையானே எடுத்தோதினார். அவற்றை அதீததம் முதலாகக் கீழ்நோக்கிக் கூறும் பொழுது 'யான்' என்னும் உணர்வு ஒன்றைவிட மற்றொன்றில் மிக்கிருக்கும் - என்பது உணர்த்துதற்கு துரியத்தில் பாசநீக்கமே உளதாகும். சிவப்பேறு அதீதத்திலே உண்டாகும். 'நல ஐந்தும்' என்றதனால் அவை நின்மலாவத்தையாயின. 'அவையும் நந்தில்' என்றதனால் 'நனவாதி' எனப்பட்டவை பராவத்தையாயின. நின்மலா வத்தை பராவத்தைகளின் இயல்பு மேற்போந்த அதிகாரங்களில் கூறப் பட்டன. அனாதி - இயற்கை. 'அனாதியை முட்டும்' என இயைக்க. இதனால், முப்பத அனுபவம் நின்மலாவத்தை பராவத்தைகளில் நிகழும்' என்பது கூறப்பட்டது.

பரதுரி யத்து நனவும் படிஉண்ட
விரிவில் கனவும் இதன்உப சாந்தத்*(து)*
உரிய சுழுனையும் ஓவும் சிவன்பால்
அரிய துரியம் அசிபதம் ஆமே. *#2402*

பரதுரியத்தில் உலகத்தை அனுபவித்தலாகிய கேவல சகல அஞ்சவத்தைகள் எஞ்ஞான்றும் நிகழாது அறவே நீங்கும். ஆயினும் நின்மல துரியத்தில் அவை ஒரோவொருகால் நிகழினும் நிகழும். ஆகவே, நின்மல துரிய 'அசி' பத அனுபவமாய் நிற்பதே. 'அதையும் கடந்த அனுபவம் ஆதல் இல்லை' என்பதாம்.)

விளக்கவுரை

'பரதுரியத்து ஓவும்' என இயையும் ஓவும் - நீங்கும். ஓவுவன நனவும், கனவும், சுழுனையும்' இவை கேவல சகல அவத்தைகள்' என்பது. 'படி உண்ட' என்றதனால் விளங்கிற்று. படி - உலகம். 'படி உண்ட' என்பதை, 'நனவு' என்பதற்கு முன்னர்க் கூட்டுக. விரிவு இல் கனவு - நனவுபோல விரிந்த அறிவு இல்லாத கனவு. சுழுத்தியில் அறிவு பெரிதும் ஒடுங்குதலால் அதனை, 'கனவும் ஒடுங்கிய உபசாந்தம்' என்றார். 'சிவன்பால்' என்பதன்பின், 'நிகழும்' என ஒரு சொல் வருவிக்க.

இதனால், 'நின்மலாவத்தை மகாவாக்கிய அனுபவமாக, பராவத்தை அதனையும் கடந்த அனுபவமாம்' என்பது கூறப்பட்டது.

*10.20.*முப்பரம்

தோன்றிஎன் னுள்ளே சுழன்றெழு கின்றதோர்
மூன்று படிமண் டலத்து முதல்வனை
ஏன்றெய்தி இன்புற் றிருந்த இளங்கொடி
நான்று நலஞ்செய் நலஞ்செயு மாறே. ***#2403***

எனது உடம்பினுள்ளே உற்பத்தியாகி, கீழ்மேலாய் உள்ளது. யோக முயற்சியால் மேல் கீழாய்ச் சுழல்வதற்கு இடமாகின்ற மூன்று மண்டலங்கள் உள. (அவை 'தீ, ஞாயிறு, திங்கள்' என்பன) அம்மண்டலங்கட்கு மேலேயுள்ள முதல்வனைப் பற்றியுள்ள ஓர் இளமையான கொடி, அவனைப் பற்றித் தொங்கிக்கொண்டு, உடல் நலத்தையும், உயிர் நலத்தையும் தருதல் அறியத் தக்கது.

விளக்கவுரை

எனதாகிய உடம்பை 'யான்' என்றே கூறினார். உடலில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம் என்னும் அளவில் உள்ள பகுதி தீ மண்டலமாகவும், அனாகதம், விசுத்தி உள்ள பகுதி ஞாயிற்று மண்டலமாகவும், ஆஞ்ஞை, அதற்குமேல் உள்ள ஏழாந்தானம் உள்ள பகுதி திங்கள் மண்டலமாகவும் கொள்ளப்படும். இம் மூன்று மண்டலங் களையும் கடந்து துவாதசாந்தத்தில் விளங்குகின்ற சிவனே மண்டல பரம். பரம் ஆகின்றவனை, 'முதல்வன்' என்றார். அவனைப் பற்றிக் கொண்டு மூலாதாரம் வரையில் தொங்கி, மூலா தாரத்தில், தலையை வைத்துத் தூங்குகின்ற பாம்பு வடிவாய் உள்ளது. குண்டலி சத்தி. அதனையே, 'ஏன்றெய்தி இன்புற்றிருந்த இளங்கொடி' என்றார். இன் புறுதல், சுகமாகத் துயிலுதல். 'நான்று' என்பதை, 'எய்தி' என்பதன் பின்னர்க் கூட்டுக. 'நலம் செய் ஆறு, நலம் தரும் ஆறு' எனத் தனித்தனிக் கூட்டுக. இருகாற் கூறியது உடல் நலத்தையும், உயிர் நலத்தையும் உணர்த்தற் பொருட்டு. யோக முயற்சியால் ஞானமே யன்றி, அதற்குமுன் உடல் நலமும் கூடுவது என்க. சுழல்கின்றது ஓர் மூன்று படி மண்டலம் - சுழலுகின்ற இடமாகிய ஒரு மூன்றடுக்கு மண்டலம். கீழ் மேலாகச் சுழல்வது, மேற்குறித்த குண்டலிசத்தி, யோக முயற்சியால் எழும் மூலாக் கினியால் விழித்தெழுந்து சுழலுதல், 'அஃது' இங்ஙனம் எழுந்து சுழன்றே நலந்தரும்' என்க. 'அறியத் தக்கது' சொல்லெச்சம். இதனால், முப்பரங்களுள் மண்டல பரம் பயன் தருமாறு கூறப்பட்டது.

மன்று நிறைந்தது மாபரம் ஆயது
நின்று நிறைந்தது நேர்தரு நந்தியும்

கன்றை நினைந்தெழு தாய்என வந்தபின்
குன்று நிறைந்த குணவிளக் காகுமே. *#2404*

மண்டல பரம் துவாதசாந்தத்தில் நிற்றலால் ஏனைய கடவுளர்க்கெல்லாம் மேலான கடவுளாயும், அங்கே திருநடனம் புரிவதால் மன்றில் நிறைந்ததாயும், தனது சத்தியால் உடம்பெங்கும் நிறைந்து விளங்குவதாயும், இன்னும் நேரே எழுந்தருளிவந்து அருள் புரியும் குருவடிவாயும் உள்ளது. அந்தப்பரம் உயிர்களைக் கன்றை நினைந்து ஓடிவரும் தாயைப் போல நினைந்து எதிர்வந்து அருள் புரிந்த பின்னர், குடத்துள் இருந்த விளக்குப்போல இருந்த அது, குன்றின் மேல் விளங்கும் விளக்குப் போல இனிது விளங்கி நிற்கும்.

விளக்கவுரை

'மாபரம் ஆயது' என்பதை முதலிற் கொள்க. ஏனைய கடவுளாவார் மூலாதாரம் முதலிய ஆதாரங்களில் விளங்குபவர்கள். 'நிராதாரம்' எனப்படுகின்ற ஏழாம் தானத்தில் விளங்கும் கீழாய் அடங் குவதே 'நந்தி' என்றது 'குரு' என்றவாறு 'நந்தியும்' என்னும் உம்மை சிறப்பு. இதன் பின் 'ஆம்' என்பது எஞ்சிநின்றது. 'வருதல், ஆதல்' என்பவற்றிற்கு 'அது' என்பது தோன்றா எழுவாயாய் நின்றது. நன்மையை, 'குணம்' என்றல் வழக்கு. நன்மை, இங்கு இனிது விளங்கி நிற்றல்.

'கன்றை நினைந்தெழு தாய்என வந்த கணக்கது ஆகாதே'*l*
என்னும் திருவாசகத்தையும் காண்க.

இதனால், மண்டல பரத்தின் பெருமையும், அஃது உயிர்கட்கு அருள் புரியுமாறும் கூறப்பட்டன.

ஆறாறு தத்துவத் தப்புறத் தப்பரம்
கூறா வுபதேசம் கூறில் சிவபரம்
வேறாய் வெளிப்பட்ட வேதப் பகவனார்
பேறாக ஆனந்தம் பேணும் பெருகவே. *#2405*

பரம்பொருள், 'முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டது' என உணரப்படும் பொழுது 'தத்துவ பரம்' எனப்படும். பொருளால் வேறாகாமை பற்றி முன்மந்திரத்தில், 'மண்டல பரமே குருவாய் வந்து உணர்த்துவது' எனக் கூறப்பட்டதாயினும் அவ்வாறு வந்து உணர்த்துவது தத்துவ பரமே. பரம் பொருள் குருவாகி வந்து உணர்த்தியது சைவ வரலாற்றில் அன்றிப் பிற சமய வரலாற்றில் காணப்படாமையால், குருவாகி வந்து உணர்த்தும் தத்துவ பரம் சிவபரமே என்பது தெளிவு. அது செய்த உபதேசமும் சொல்லமாற் சொன்ன உபதேசமே. அஃதாவது, சின் முத்திரையால் உணர்த்திய உபதேசமே. அந்த உபதேச பரத்திற்கு வேறாய்வெளிப்பட்ட, வேதாகமங்களை அருளிச்செய்த சதாசிவ நாயனார் வெளிப்பட்டது.

முற்கூறிய கூறா உபதேசம் இனிது தெளியப்பட்டு பயன் தருதற் பொருட்டாம். அவ்விரு மூர்த்திகளது செயலாலும் பயன்கொள்பவரால் அச்செயல்கள் மேலும் மேலும் இன்பம் பெருகும்படி நன்கு பேணப்படும்.

விளக்கவுரை

'ஆறாறு தத்துவம்' என முன்னர்க் கூறினமையால், 'அப்பரம்' என்று, தத்துவபரம் ஆயிற்று. 'கூறில்' என்னும் எச்சம், 'கூறிற்றாயின்' எனத் தெளிவின்கண் வந்தது. 'அது சிவபரமே' எனச் சுட்டு வருவித்து முடிக்க. 'தத்துவ பரம் குருவாகிவந்து உணர்த்து மாயின், சதாசிவநாயனார் வேதாகமங்களை அருளிச் செய்தல் எதற்கு' என்னும் ஐயத்தை நீக்குதற்கு, 'பேறாக' என்றார். பேறு பயன். ஆக - உண்டாதற் பொருட்டு. தென்முகக் கடவுள்பால் சென்று கேட்ட சனகாதி நால்வர் வேதாகமங்களை ஓதியுணர்ந்தபின், அவற்றின் பொருளைத் தெளிதற் பொருட்டுக் கேட்டாராயினும், பொதுவாக குரு உபதேசத்தைக் கேட்ட பின்பு அதனைத் தெளிதற்குப் பயன் படுவனவே வேதாகமங்கள் என்பது பற்றி, 'பேறாக' என்றார். எனவே, தென்முகக் கடவுள் வரலாற்றை எடுத்துக்காட்டியது, முன் மந்திரத்தில், 'நேர்தரு நந்தியும் ஆம்' என்றதற்கு அனுபவம் காட்டியதேயாம். வேதாகமங்களின் வழி மேலும் மேலும் சிந்தித்த பொழுதே குருவுபதேசம் நிலைபெற்றுப் பயன் தருவதாம். அதனையே, 'பேணும்' எனக் கூறினார். பேணும் - பேணப்படும். இதனால், முப்பரங்களில், 'தத்துவபரமாவது இது' என்பதும், அஃது உயிர்கட்கு அருள்புரியுமாறும் கூறப்பட்டன.

பற்றறப் பற்றில் பரம்பதி யாவது
பற்றறப் பற்றில் பரன்அறி வேபரம்
பற்றறப் பற்றினைப் பற்றவல் லோர்கட்கே
பற்றறப் பற்றில் பரம்பரம் ஆகுமே. ***#2406***

பரம்பொருள் உயிர்களைப் பாதுகாக்கும் பதியாகி நிற்றல், அவ்வுயிர்கள் வேறு பற்று எதுவும் இன்றி, அனைத்துப் பற்றுக்களையும் விடுத்து, அந்தப் பரம் பொருள் ஒன்றையே பற்றி நிற்கும் பொழுதுதான், (இப்பாதுகாவல், பிறவிக் கடலினின்றும் எடுத்துக் காக்கும் காவல்) பிற பற்றுக்களை யெல்லாம் விடுத்துப் பரம் பொருளையே பற்றுதல், குரு உபதேசத்தைச் சிந்தித்துத் தெளிதலால் உண்டாகும். அதனையே,

'ஓர்த்துள்ளம் உள்ள துணரின், ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு'
-திருக்குறள் - *357.*

எனத் திருவள்ளுவர் கூறினார்.

அங்ஙனம் வேறு பற்று அறப் பரம்பொருளையே பற்றும் பொழுது அந்தப் பரம்பொருளின் ஞானமே உயிரினது ஞானமாகிப் பின்பு,

அதுவே பரம் பொருளும் ஆகிவிடும். பரம்பொருளாகிய பற்றப்படும் பொருளை இவ்வாறு பற்ற வல்லவர்கட்கு அப்பற்றுதலின் கண் பரம் பொருள் பரம்பொருளாகவே வெளிப்படும்.

விளக்கவுரை

'பரம்பதியாவது' என்பதை முதலிற்கூட்டுக. மூன்றாம் அடியில் 'பற்று' என்பது, முதனிலைத் தொழிற்பெயராய், ஆகுபெயரால், பற்றப்படும் பொருளைக் குறித்தது. ஈற்றடியிலும் 'பற்று' என்பது முதனிலைத் தொழிற்பெயராய், ஏழாம் வேற்றுமை ஏற்றது. பரம் பரம் ஆதல் - உண்மையாக வெளிப்பட்டு விளங்குதல்.

இதனால், 'தத்துவ பரத்தை அதன் உபதேசத்தின் வழியே சென்று அடைதல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

பரம்பர மான பதி பாசம் பற்றாப்
பரம்பர மாகும் பரம் சிவம் மேவப்
பரம்பர மான பரசிவா னந்தம்
பரம்பர மாகப் படைப்ப தறிவே. ***#2407***

பாசங்களோடு சிறிதும் தொடர்பின்றி, மேலானதற்கும் மேலானதாய் நிற்கின் அதுவே மிகமேலான பரம்; பதி. (என்றது 'பசு பரம்' என்றபடி பாசங்களின் மேலானது பசு; அது பரம். அதற்கு மேலானது பதி; அது பரம்பரம் 'தற்பரம்' என்றும் சொல்லப் படும். தற்பரம் தனக்கு மேலானது. 'தன்' என்பது ஆன்மா தற்பரம், பரமான்மா 'தத்துவ பரம்' என்பது தத்துவங்களைக் கடந்த நிலையை மட்டும் குறிப்பது. 'பசு - பரம்' என்பது, கன்மம் திரோதாயி இவற்றிற்கு மேல் பசு இவற்றையும் கடந்தது பசுபரம்) இவ்வாறான 'பரம்' என்றும் 'சிவம்' என்றும் சொல்லப்படுகின்ற அந்தப் பொருளை உயிர், மாயா காரியப் பொருள்களில் எந்த ஒன்றினின்றும் அடையப்படாத பேரானந்தத்தையுடையதாகும். அந்த ஆனந்தத்தைப் பொருளாகக் கொண்டு முயன்று அடையும் அறிவே, 'அறிவு' என்று சொல்லப்படும்.

விளக்கவுரை

பாசம் பற்றாப் பரம்பரம், பரம்பரமான பதியாகும் என இயைக்க. 'பரசிவானந்தம்' என்பதன் பின்னர், 'ஆகும்' என்பது எஞ்சி நின்றது. இதன்பின், 'இதனை' என்பது வருவிக்க.

இதனால், முப்பரங்களில் 'பசுபரம்' என்பது இது - என்பதும் 'அது பாசத்தோடு தொடர்பின்றி ஆனந்த மயமாய் உள்ளது' என்பதும் கூறப்பட்டன.

நனவில் கலாதியாம் நால்ஒன் றகன்று
தனிஉற்ற கேவலந் தன்னில் தானாகி

நினைவுற் றகன்ற அதீதத்துள் ஞேயந்
தனையுற் றிடத்தானே தற்பரம் ஆமே. ***#2408***
சகலத்தில் புருவ நடுவிலே நிகழும் 'கேவல சாக்கிரம், சகல சாக்கிரம்' என்னும் இருவகைச் சாக்கிரத்துள், வித்தியா தத்துவங்களில் கலை முதலிய ஐந்து தத்துவங்களும் செயற்படாது ஒடுங்கிய நிலையில் ஆன்மா உயிர்ப்பும் இன்றித் தனித்துக் கிடக்கும் ஒருநிலையை அடையும் அந்நிலையும் ஒருவகைக் கேவலமே. அந் நிலையில் கருவிகள் இல்லாவிடினும், ஆணவம் உள்ளது. கருவிகள் ஒடுங்கிய நிலையில் இந்தக் கேவல நிலை உண்டாகாமல் நீங்கித் திருவருள் அறிவிக்க அறிதலாகிய அறிவினைப் பெற்று அறிகின்ற சாக்கிரம் முதலியவைகளை அடைந்து, முடிவாக அதீதத்தை எய்தி, அதன்கண் விளங்குகின்ற ஞேயத்தில் அழுந்தும் பொழுதே ஆன்மா, மேற்கூறிய பசு பரமாகிய தற்பரமாய் நிற்கும்.

விளக்கவுரை

நாலொன்று - ஐந்து. இரண்டாம் அடி, 'சகலத்தில் சகலம்' என்றும், 'மகா சகலம்' என்றும் சொல்லப்படுகின்ற மத்தியாவத்தையில் நிகழும் அதீதத்தின் இயல்பைக் கூறியது. 'நினைவுற்று அகன்று' என்பதை 'அகன்று நினைவுற்ற' என மாற்றிக் கொள்க. அகலுதல், மேற்கூறிய அதீதத்தை. நினைவுறுதல் - அறிவு பெறுதல். இவ்விடத்தில் அது திருவருளால் நிகழ்வதாகும். 'இதுவே நின்மலாவத்தை' என்பதை மேலெல்லாம் கூறியவாற்றான் அறிக. 'தான்' என்றது ஆன்மாவை. 'தற்பரமே பசுபரம்' என்பது முன்மந்திர உரையில் கூறப்பட்டது. இதனால், 'முன்மந்திரதிற் கூறப்பட்ட நிலையை ஆன்மா அடைதற்கு வழி நின்மலாவத்தை' என்பது கூறப்பட்டது.

தற்கண்ட தூயமும் தன்னில் விலாசமும்
பிற்காணும் தூடணந் தானும் பிறழ்வுற்றுத்
தற்பர கால பரமும் கலந்தற்ற
நற்பரா தீதமும் நாடக ராதியே. ***#2409***
ஆன்மா தன்னைத்தான் வேறு 'தத்துவங்கள் வேறு' என உணர்தல் ஆன்ம தரிசனமாம். அதன்பின், கருவிகள் நீங்கிய பின்பும் தனக்கு அறிவு நிகழக் காணுதலால் 'எஞ்ஞான்றும் தனக்கு அறிவைத் தருவது சிவமே' என உணர்ந்து சிவனது அறிவையே தனது அறிவிற்குப் பற்றுக் கோடாக உணர்ந்து, அவன் அறிவினாலே அவனை நோக்குதல் சிவதரிசனமாகும். இவ்விடத்தில் ஆன்மசுத்தியும் ஓரளவு உடன் நிகழும். பின்பு அங்ஙனம் உணரப்பட்ட சிவனிடத்தில் தான் அடங்கி அவனேயாய் நிற்றல் சிவயோகமாகும். இந்நிலையில் ஆன்ம சுத்தி நிறைவுறும். அதனால், பின்பு பிரபஞ்சம் காட்சிப்படினும் ஆன்மா

அதனைப் பற்றாது ஒதுக்கிவிடும். இம்மூன்று நிலைகளையும் தாண்டிய பொழுது, காலத்தைக் கடந்து நிற்றலால், 'கால பரம்' என்னும், ஆன்மாவைக் கடந்து நிற்றலால், 'தற்பரம்' என்றும் சொல்லப் படுகின்ற பசுபரம் தோன்றும். பின் அதனோடு ஒற்றுமைப் படுதல் நின்மல துரியாதீதமாகும். இஃது இம்மையில் அம்மையாம் ஆன்ம லாபமாகும். இவற்றிற்குப்பின் தேகம் நீங்கப் பரசிவத்தில் கலத்தல் பரதுரியாதீத மாகும். இவற்றை யெல்லாம் தெரிந்துணர்தல், அகரத்தை முதலாக உடைய எழுத்துக்களால் ஆகிய நூல்களினாலேயாம்.

விளக்கவுரை

தூயம் - தூய்மை. நன்மை, வன்மை, முதலிய சில பண்புப் பெயர்கள் மையீறு பெறாது, 'நலம், வலம்' என்றாற் போல அம்மீறு பெற்று வருதல் பற்றி. 'தூய்மை' என்பதை, 'தூயம்' என்றார். இது நாயனாருடைய தனித்ததோர் ஆட்சி. 'கண்டதூய்மை' என்பது 'கண்டதனால் வரும் தூய்மை' எனப்பொருள் தந்து நின்றது. ஆன்ம தரிசனத்தையே, 'தற்கண்ட'என்றும், ஆன்ம சுத்தியின் முதல் நிலையையே 'தூய்மை' என்றும், அதன் முடிநிலையை 'தன்னில் விலாசம்' என்றும், சுத்தி பெற்ற ஆன்மாப் பின்னர் பிரபஞ்சத்தால் தாக்குண்ணாமையே 'தூடணம்' என்றும் கூறினார். விலாசம் - விளக்கம். தன்னில் விலாசம் - சிவத்தில் வியாப்பியமாய் மாசுபற்றா திருக்கை பிறழ்தல் - மாறுதல். அஃது இங்கு நீங்குதல் மேற்று. 'ஆன்ம சுத்தியையும் கடந்தது? என்றமையால், பின்னிரண்டடிகளில் ஆன்ம லாபம் கூறப்பட்டதாம். 'பரம்' என்று அதன் தோற்றத்தை. 'கலந்து' என்றது, 'கலந்தபின்' என்றபடி. 'கலந்துபின்' என்றதனால், கலத்தலும் பெறப்பட்டது. 'கலந்த பின் உளதாம் பராதீதம்' என்க. இதனை 'அற்ற அதீதம்' என்றது, 'தேகம் நீங்கிய பின் நிகழும் அதீதம்' எனறபடி. நின் மலாவத்தையும், பராவத்தையும் அனுபவத்தில் சொல்லிறந்து நிற்பனவாயினும், அவற்றை முதற்கண் நூல்களால் உணர்ந்த வழியே முயற்சி கூடும் என்றற்கு 'நாடு அகராதி' என்றார். நாடு, முதனிலைத் தொழிற்பெயர். அகராதி, அடையடுத்த ஆகுபெயர். 'அகராதியால்' என உருபு விரிக்க.

இதனால், 'முப்புரங்களில் தற்பரமாகிய பசுபரத்தை நூல்கள் வழியாக நுண்ணிதின் உணர்ந்து அடைதல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

10.21.பர லக்கணம்

அதீதத்து ளாகி அகன்றவன் நந்தி
அதீதத்து ளாகி அறிவிலன் ஆன்மா
மதிபெற் றிருள் விட்ட மன்னுயிர் ஒன்றாம்
பதியிற் பதியும் பரவுயிர் தானே. ***#2410***

சிவன் நின்மல துரியாதீதத்தில் ஞேயமாய் வெளிப் பட்டுப் பின்பு அதனையும் நீங்கி நிற்பான். (அஃதாவது, 'போக்கியப் பொருளாகாது நிற்பான்' என்றபடி. அவன் போக்கியப் பொருளாதல் பராவத்தைகளிலாம்) அந்நிலையில் உயிர் தற்போதத்தை இழந்து நிற்கும். ஞானத்தைப் பெற்று, அஞ்ஞானத்தினின்றும் நீங்கிய உயிரே, ஒன்றாகிய பதிப்பொருளில் அழுந்தி அதுவாகும். அங்ஙனம் ஆய பொழுது அந்த உயிரே 'பரமான்மா' என்னும் பெயரைப் பெறும்.

விளக்கவுரை

'ஆகி அகன்றவன்' என்றமையால் அவ்வதீதம் நின்மலாதீதமாயிற்று. இரண்டாம் அடியில் 'அவ்வதீதத்துள்' என எடுத்துக்கொண்டுரைக்க. 'இருள்' என்றது வாதனை அளவாய் நிற்கும் ஆணவ மலத்தை அதுவும் நீங்குதல், தேகம் நீங்கிய பின்பாம். ஆகவே, 'இருள்விட்ட மன்னுயிர்' என்றது பராதீதத்தை அடைந்த வுயிரையாம். பரான்மாவை அடைந்த பொழுது சீவான்மாவும் 'பரமான்மா' எனப் பெயர்பெறும் - என்பது சர்வஞ்ஞானோத் தரத்திலும் கூறப்பட்டது. 'பர உயிர் தானே' என்பதை, 'தான் பர உயிரே' என மாற்றியுரைக்க.
இதனால், 'சகல கேவலங்களில் பாலில் நெய்போல் விளங்காமலும், சுத்தத்தில் நின்மலாவத்தையில் பாசி படுகுட்ட நீர் போல ஒருகால் விளங்கியும், மற்றொருகால் விளங்காதும், பரா வத்தையில் தயிரில் நெய்போல விளங்கியும் நிற்பது பரம் என்பது கூறப்பட்டது. அந்நிலைகளில் ஆன்மா எய்தும் பயனும் விளங்குதற் பொருட்டு உடன் கூறப்பட்டது.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பதி
சோதி பரஞ்சுடர் தோன்றித் தோன்றாமையின்
நீதிய தாய்நிற்கும் நீடிய அப்பர
போதம் உணர்ந்தவர் புண்ணியத் தோரே. ***#2411***

பதியாகிய பரம்பொருள் தோற்றமும் அழிவும் இல்லாதது. வியாபகமான பேரொளியாயும், அப்பொழுதே உயிர்க் குயிராய்க் கலந்து நிற்கும் மி நுண்ணிய விளக்காயும் உள்ளது. அஃது ஏனைப் பொருள்கள்போல எல்லார்க்கும் இனிது விளங்கித் தோன்றாது, ஒரு சிலர்க்கே விளங்கித் தோன்றுவதாய் நின்றே, கோட்டம் இன்றி, நடுவு நிலையதாயே உள்ளது. காலத்தைக் கடந்ததாகிய அந்தப் பரம் பொருளின் இயல்புகளை உணர்ந்தவர் தவம் செய்தவராவர்.

விளக்கவுரை

'ஆதியும் அந்தமும் இல்லாதது' என வேறு கூறற் பாலதனை ஒன்றாக உடம்பொடு புணர்த்துக் கூறினார். 'அரும்பதி' என்பதனை முதலிற்

கொள்க. 'பரஞ்சுடர்' என்பதில் பரம் - மிகு நுண்மை. பரபோதம் - பரத்தை உணரும் போதம். புண்ணியம், சிவபுண்ணியம். இதுவே தவம் ஆதல் அறிக.
இதனால், பரலக்கணம் மற்றும் சில கூறப்பட்டன.

துரியங் கடந்து துரியாதீ தத்தே
அரிய இயோகங்கொண் டம்பலத் தாடும்
பெரிய பிரானைப் பிரணவக் கூத்தே
தெரியவல் லார்க்குத் துரிசில்லை தானே. *#2412*

யோகாவத்தையில், அனாகதம், விசுத்தி ஆஞ்ஞை, பிரமரந்திரம், துவாதசாந்தம் என்பன முறையே சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் அவத்தைகட்குரிய தானங்க -ளாகும். அவற்றுள் துரியத்தானமாகிய பிரமரந்திரத்தையும் கடந்து, அதீதத் தானமாகிய துவாத சாந்தத்தில், அரிதாகிய அம்பலத்தில் பொருந்தி ஆடுபவன் பெரிய பெருமான்; மகாதேவன் அந் நடனத்தைக் காணுதல் பிரணவ கலைகளின் வழியாகவே கூடும் ஆகையால், அவ்வழியால் அக்கூத்தில் அவனைக் காணவல்லவர்க்கு மலக்குற்றங்கள் இல்லையாகும்.

விளக்கவுரை

துரியம், துரியாதீதம் என்பன அவற்றிற்குரிய இடங்களைக் குறித்தன. 'அம்பலத்து' என்பதை, 'அரிய' என்பதன் பின்னர்க் கூட்டுக. அரிய அம்பலம் - சிதாகாசம்; 'இயோகம்' என்பதில் இகரம் விரித்தல். யோகம் - கூடுதல். சேர்தல். பிரணவக் கூத்து - பிரணவத்தின் வழியாக அடையப்படும் கூத்து. 'கூபத்தே' என்பது பாடம் அன்று. ஏகாரம் பிரிநிலை அதனால் பிற வழிகளால் அடைதல் பிரிக்கப்பட்டது. 'கூத்தே' என்பதில் ஏழாவது விரிக்க.
இதனால், 'பரபோதத்தால் உண்மையாக அடையத்தக்க பரம்பொருள், பிரணவ யோகத்தால் பொதுவாக - ஒருவாறாக அடையப்படும்' என்பது கூறப்பட்டது. அடைந்தவர் பெறும் பயனும் உடன் கூறப்பட்டது.

செம்மைமுன் னிற்பச் சுவேதம் திரிதல்போல்
அம்மெய்ப் பரத்தோ(டு) அணுவன் உள்ளாயிடப்
பொய்ம்மைச் சகம்உண்ட போத வெறும் பாழில்
செம்மைச் சிவமேரு சேர்கொடி யாகுமே. *#2413*

மாணிக்க மணியின் செந்நிறம் முன் வந்து நின்ற போது, பளிங்கின் வெண்ணிறம் அந்தச் செந்நிறமாகவே திரிந்து காணப்படுதல் போல, வெளிப்பட்டு நின்ற அந்த நிலையான பரம் பொருள் முன்வந்து நின்றபொழுது ஆன்மாத் தன்வண்ணம் அப்பரம்பொருள் வண்ணமேயாக, அதனுள் அடங்கி நிற்கும் அப்பொழுது அதுகாறும்

நிலையற்ற பிரபஞ்சத்தை நுகர்ந்து வந்த ஆன்ம ஞானம் பாச ஞானமாய் இருந்த நிலை அற்றொழியும். அவ்வொழிவில் சிவம் மேருமலையாய் நிற்க. ஆன்மா அந்த மேருமலையை அடுத்த காக்கையாய் இருக்கும்.

விளக்கவுரை

'சிவமேயாய் நிற்கும்' என்றபடி. 'கனக மலையருகே - போயின காக்கையும் அன்றே படைத்தது பொன் வண்ணமே'*8* என்பதனால் இவ்வுவமப் பொருளை உணர்ந்து கொள்க. 'செம்மை, சுவேதம்' என வாளா கூறினாராயினும், 'மாணிக்கத்தினது செம்மை' என்பதும், 'பளிங்கினது வெண்மை' என்பதும் குறிப்பால் கொள்ளக் கிடந்தன. 'மெய், பொய்' என்பன நிலை நிலையாமைகளைக் குறித்தன. 'போதப் பாழ்' என இயையும். செம்மை - திரிபின்மை. சிவ மேரு, உருவகம். கொடி - காக்கை. 'ஆகும்' என்றும் உருவகத்தையே தோற்றி நின்றது. இதனால், 'பரம்பொருள் உயிர்களைத் தன்வண்ணம் ஆக்கும்' என்பது கூறப்பட்டது.

வைச்ச கலாதி வருதத் துவம்கெட
வெச்ச இருமாயை வேறாக வேரறுத்*(து)*
உச்ச பரசிவ மாம்உண்மை ஒன்றவே
அச்சம் அறுத்தென்னை ஆண்டனன் நந்தியே. ***#2414***

எனக்குக் குருவாகிய நந்திபெருமான் சிவபெருமானால் எனக்கென என்னோடு கூட்டி வைத்த கலை முதல் நிலம் ஈறாக வருகின்ற தத்துவங்கள் எல்லாம் தம்தன்மை கெட்டுச் சிவ கரணங்களாகும் படியும், பின்பு அத்தத்துவங்கட்கு முதலாகிய அசுத்தமாயை. அதன் காரியங்களைச் செலுத்தி நிற்கின்ற கருவிகட்கு முதலாகிய சுத்தமாயை ஆகிய துன்பத்தைத் தரும் இருமாயைகளும் என்னைப் பொறுத்த மட்டில் காரண மாதற்றன்மை அடியோடு கெடும்படியும் செய்து, அதனால், யான் தடத்தசிவத்திற்கு மேலேயுள்ள சொரூபசிவத்தைத் தலைப்படும்படி. 'இனியும் பிறவி வருமோ' என்னும் அச்சம் நிகழாதவாறு என்னை ஆட்கொண்டருளினார்.

விளக்கவுரை

ஏகாரம் தேற்றம். அதனால், 'சிவன் இவ்வாறு சுத்தான்ம சைதன்னியத்தில் அதுதானேயாகும்படி ஆவேசித்து நின்று. அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தைத் தந்து, அது வழியாக வீடுபேற்றைத் தரும்' என்பது தோற்றுவிக்கப்பட்டது சிவஞான போதத்திலும் இவ்வாறே.

'இவ்வான்மாக்க ளுக்குத் தமது
முதல்தானே குருவுமாய் உணர்த்தும்

என்றது,
அவன் அன்னிய மின்றிச் சைதன்னிய
சொரூபியாய் நிற்றலான்'*
எனக் கூறப்பட்டது வெச்ச - வெச்சென்ற; 'கொடிய' என்றபடி உச்சம் - மிக மேலேயுள்ள இடம்.
இதனால், பரம்பொருள் உயிர்கட்கு முடிநிலைப் பயனை அருளுமாறு கூறப்பட்டது.

என்னை யறிய இசைவித்த என்நந்தி
என்னை யறிவித்(து) அறி யாத இடத்துய்த்துப்
பின்னை ஒளியில் சொருபம் புறப்படத்
தன்னை யளித்தனன் தற்பர மாகவே. *#2415*

எனக்குக் குருவாகிய நந்திபெருமான், முதலில் என்னை யான் அறியுமாறு அறிவித்தருளினார். (கருவிக் கூட்டத்தி -னின்றும் என்னை வேறாக யான் உணரும்படி செய்தார்.) அதனால், என்னை யான் அறிந்தபின்பு, என்னையான் அறியாது நிற்கின்ற ஓர் இடத்திலே என்னைச் செலுத்தினார். (சிவபோத மிகுதியால் சீவ போதம் தோன்றாது நிற்கின்ற திருவருள் நிலையிலே செலுத்தினார்.) பின்னர் அங்ஙனம் நின்ற அந்த ஒளியினாலே அவ்வொளிக்கு முதலாகிய பொருள் புலப்பட்டது. புலப்பட்டபின் யான் அந்த மேலான பொருளே ஆகும்படி அதனை என் கைக்குள் வருமாறு அளித்தார்.

விளக்கவுரை

'என்னை அறிய இசைவித்தது', ஆன்ம தரிசனம்' என்றும், 'என்னை அறியாதவிடத்து உய்த்தது', 'ஆன்ம சுத்தி' என்றும், 'சொரூபம் புறப்படத் தன்னை அளித்தது', 'ஆன்ம லாபம்' என்றும் உணர்க. முன் மந்திரத்தில் கூறியன தத்துவ ரூபம் முதல் ஆன்ம ரூபம் முடிவாக உள்ளன ஆகையால், அவற்றிற்குமேலே எஞ்சியுள்ள பயன்களைப் பரம்பொருள் ஆசான் மூர்த்தியாய் வந்து அருளுதல் இதனால் கூறப்பட்டது.

பரந்தும் சுருங்கியும் பார் புனல் வாயு
நிரந்த வெளியொடு ஞாயிறு திங்கள்
அரந்தம் அரன்நெறி யாய் அவை யாகித்
தரந்த விசும்பொன்று தாங்கிநின் றானே. *#2416*

சிவன்,
'நிலம், நீர், நெருப்பு, உயிர், நீள் விசும்பு, நிலாப், பகலோன்,
புலனாய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்'3
எனவும்,
'இருநிலனாய்த், தீயாகி, நீரு மாகி,
இயமான னாய், எறியும் காற்றா மாகி,

அருநிலைய திங்களாய், ஞாயி றாகி,
ஆகாச மாய் அட்ட மூர்த்தி யாகி
... ... எம்மடிகள் நின்ற வாறே'l

எனவும் அருளிச் செய்தவாறு, ஐம்பெரும்பூதங்களும், 'ஞாயிறு' திங்கள், என்னும் இரு சுடர்களும், ஆன்மாவும் ஆகிய எட்டினையும் தனக்குத் திருமேனியாகும்படி அவைகளில் வேறின்றிக் கலந்து நிற்கின்றான்.

விளக்கவுரை

'அஃதறிந்து அவனைப் போற்றி உய்தல் வேண்டும்' என்பது குறிப்பெச்சம். 'பரந்தும் சுருங்கியும் நின்றான்' என இயையும். பரத்தல், பெரியதிற் பெரியனாய் அளவின்றி விரிந்து நிற்றல். சுருங்கல், சிறியதிற் சிறியனாய் நுணுகி எல்லாப் பொருளிலும் நிறைந்து நிற்றல்.
'அணோரணீயாந் ஹதோ மஹீயாந்'
என உபநிடதம் கூறும்.l செய்யுள் நோக்கி, எட்டுப்பொருள்களையும் முறை பிறழ வைத்தார். நிரந்த - எங்கும் நிறைந்த அரத்தம் - சிவப்பு. அது பண்பாகு பெயராய், அந்நிறத்தையுடைய தீயைக் குறித்தது. 'அரத்தம், தரத்த' என்பன எதுகை நோக்கி மெலிந்து நின்றன. தரம் - ஏனை ஏழிற்கும் மேலான வியாபகம். அங்ஙனமான தன்மையுடைமை பற்றி ஆன்மாவை உவமையாகுபெயரால் 'விசும்பு' என்றார். 'அரன்' என்பதை முதலிற் கொள்க. நெறியாய் - முறையாக. தாங்கி நிற்றல். அவற்றினுள் நிறைந்து அவற்றை நிலைத்திருக்கச் செய்தல், அரன், பார் முதலியவற்றுள் முறையாய் அவையாகி, விசும்பு ஒன்றைத் தாங்கி நின்றான்' எனவினை முடிக்க. சிவனுக்கு ஆன்மாவோடே நேர்த்தொடர்பு. பின்பு அதுவழியாகவே ஏனையவற்றோடு தொடர்பு. அது பற்றியே, விசும்பு ஒன்றையே சிவன் தாங்கி நிற்பதாகக் கூறினார். இதனால், பரம்பொருள் அட்ட மூர்த்தமாய் நிற்றல் கூறப்பட்டது.

சத்தின் நிலையினில் தானான சத்தியும்
தத்பரை யாய்நிற்கும் தான்ஆம் பரற்குடல்
உய்த்தகும் இச்சையில் ஞானாதி பேதமாய்
நித்தம் நடத்தும் நடிக்கும் மா நேயத்தே. ***#2417***

'தத்' பதப் பொருளாகிய சிவன், தனது உண்மை நிலையில் உள்ள பொழுது அவனின் வேறாகாது அவனோடு ஒன்றாகியே நிற்கும் சத்தியும், 'பரை' என நிற்கும். அஃதாவது யாதொன்றனையும் பற்றாது, தான் தனியே மேலானதாய் நிற்கும் என்பதாம். 'சத்தியும்' என்னும் உம்மையால், சத்தியையுடைய சத்திமானாகிய சிவனும் அப்பொழுது 'பரன்' என நிற்றல் பெறப்பட்டது. 'பரசிவனாய் நிற்பன்' என்க. அந்தச் சத்தியே சிவனுக்கு வடிவம். என்றது, 'சிவம் சத்தியே மயமானது' என்றபடி. இனி அந்தச் சத்தி, அருள் காரணமாக உயிர்களின் பொருட்டு

ஐந்தொழிலாகிய நாடகத்தை மேற்கொண்டு செய்யும் பொழுது, தன்னிச்சையாகவே இச்சை, ஞானம், கிரியை முதலிய வகைகளாய்ப் பலவாகி, அவ்வைந் தொழிலை இடையறாது நடத்தும்.

விளக்கவுரை

'தத்' என்பதை முதலிற் கொள்க. 'சத்து, உண்மை' என்பன ஒரு பொருட்சொற்கள். இதுவே, 'சொரூபம்' எனப்படும். 'பரம்பொருள் எவ்வாற்றானும் இருமையையுடையதன்று; முற்றிலும் ஒருமையையே உடையது' என்பர் மாயாவாதிகள். 'அவ்வாறன்றிப் பரம்பொருள் பொருளால் ஒன்றாயினும், குண குணித் தன்மையால் 'சிவம், சத்தி' எனத்தன்னுள் இருதிறப்பட்டுத் தாதான்மியமாய் இயைந்து நிற்கும்' என்பது சித்தாந்தம். இது, ஞாயிறு பொருளால் ஒன்றாயினும் குணகுணித் தன்மையால், 'கதிரவனும், கதிரும்' எனத் தன்னுள் இருதிறப்பட்டுத் தாதான்மியமாய் இயைந்து நிற்றல் போல்வதாகும். சிவன் உயிர்களையும், மாயையையும் ஒரு கருத்துப் பற்றிச் சிறப்பாக நோக்காது, பொதுவாக அறிந்து மட்டும் நிற்றலே அவனது 'தன்னியல்பு', அல்லது 'சொரூப லக்கணம்' எனப்படும். அந்நிலையில் அவன் 'பர சிவன்' அல்லது 'பரம சிவன்' எனப்படுவான். 'சுத்த சிவன்' என்றும் சொல்வதுண்டு. அப்பொழுது அவனது சத்தியும் 'பராசத்தி' எனப்படும். பரா - மேலானவள் அந்நிலையில் சத்தி செயலாற்றுதல் இல்லை. இதனையே, சத்தின் நிலையினில் தானான சத்தியும் - பரையாய் நிற்கும் என்றார். 'இன்' வேண்டாவழிச் சாரியை. 'தானான' என்றது 'தாதான்மியமான' என்றபடி. 'பரா' என நின்ற சத்தி உயிர்களின் பொருட்டு ஐந்தொழில் செய்ய விரும்பிமாயையைக் காரியப்படுத்த நினைக்கும் பொழுது அதில் ஒரு சிறிய கூறு, ('ஆயிரத்தில் ஒரு கூறு' என்பர்.) 'ஆதி சத்தி' எனப் பிரிந்து நிற்கும். இஃது உயிர்களை கன்மம் மாயைகளினுட் செலுத்தலால், 'திரோதான சத்தி' எனப்படும். திரோதானகரி, 'திரோதாயி' என்னும் பெயர்களாலும் குறிக்கப்படும். மலங்களின் வழி நிற்றல் பற்றி, இதனையும் 'ஒரு மலம்' என்று உபசரித்துக் கூறுவர். இவ்வாறு 'ஆதி' என நின்ற அது பின், 'ஞானம், இச்சை, கிரியை' என மூன்றாகிப் பின் பலவாகும். அதனையே, 'ஞானாதி பேதமாய்' என்றார். இவ்வாறு அது பலவாவது, தன்னிச்சை யாலன்றிப் பிறரால் அன்று. அதனையே, 'உய்த்தகும் இச்சையில்' என்றார். 'உய்த்தல்தகும்' என்பது, 'உய்த்தகும்' என நின்றது. 'இங்ஙனமாகி ஐந்தொழிலை அது நடத்துதற்கு முடிவில்லை' என்றற்கு, 'நித்தம் நடத்தும்' என்றும், 'இதனால் அது தன்னியல்பினின்று வேறுபடுதல் இல்லை' என்றற்கு, 'நடிக்கும்' என்றும், 'இவ்வாறு நடித்தற்குக் காரணம் உயிர்கள் மாட்டு வைத்த பெரிய கருணையே

யன்றிப் பிறிதில்லை' என்றற்கு 'மா நேயத்தே' என்றும் கூறினார். 'நேயத்தானே' என உருபு விரிக்க. சத்தி 'ஆதி சத்தி' முதலிய பெயர்களைப் பெற்றுச் செயலாற்றும் பொழுது, சிவனும் அந்நிலைகளில் எல்லாம் அவற்றிற்கு ஏற்ப 'ஆதி சிவன்' முதலாகப் பல பெயர்களைப் பெற்று நிற்பன். பரமசிவன், 'சொரூப சிவன்' எனவும், ஏனைய ஆதி சிவன் முதலியோர் 'தடத்த சிவர்' எனவும் அறிக. இவ்வனைத்துச் சிவமும், சத்தியும் பெயர், உருவம், தொழில் என்னும் இவற்றால் வேறு வேறாகச் சொல்லப் படுகின்றனவேயன்றிப் பொருளால் வேறுபாடு சிறிதும் இன்றி, ஒன்றேயாம்.

'சத்திதான் பலவோ என்னில்,
தான்ஒன்றே; அனேக மாக
வைத்திடும், காரியத்தால்'*
'சத்தன் வேண்டிற்று எல்லாமாம் சத்தி தானே'*

என்னும் சிவஞான சித்தியைக் காண்க.

இதனால், பரம்பொருளின் இயல்பு பற்றி மாயாவாதி முதலியோர் கூறும் கூற்றுக்களை மறுத்துச் சித்தாந்தம் உணர்த்தப்பட்டது.

'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்'l

எனத்திருவருட் பயனிலும் இவ்வியல்பு கூறப்பட்டது.

மேலொடுகீழ் பக்கம்மெய் வாய்கண்ணா நாசிகள்
பாலிய விந்து பரஉட் பரையாகக்
கோலிய நான்கவை ஞானம் கொணர்வித்துச்
சீலமி லாஅணுச் செய்திய தாகுமே. **#2418**

முன் மந்திரத்தில் கூறிய சத்தி மேல், கீழ், புடை என்னும் இடங்களையும், மெய், வாய், கண், நா, மூக்கு என்னும் ஐம் பொறிகளையும், விந்து, நாதம், பர நாதம் என்னும் வாக்குகளையும், அவைகட்குப் பற்றுக் கோடாய் நின்று அவற்றின் பெயர்களையே தாமும் பெற்று நிற்கின்ற சுத்த தத்துவங்களையும் இங்ஙனம் பாகுபட்ட பல பொருள்களை உண்டாக்கி அவற்றால் எல்லாம் சரியை முதலிய நான்கினாலும் ஞானத்தை வருவித்து, இவ்வாறெல்லாம் அஞ் ஞானத்திற் கிடக்கின்ற உயிர்களை ஈடேற்றுதலாகிய செயல்களை உடையதாய் நிற்கும்.

விளக்கவுரை

'ஆக்கப்படும் பொருள்கள் அளவில்லன' என்பது தோன்றுதற் பொருட்டுச் சிலவற்றை எடுத்து எண்ணிக் காட்டினாலே யன்றி, அனைத்தையும் எடுத்துக் கூறிற்றிலர். ஆகவே, அவற்றை உபலக்கணமாகக்கொண்டு, ஏனையவற்றையும் அறிதல் வேண்டும். பாலிய - பாகுபட்ட. கோலிய - வரம்பு செய்யப்பட்ட. 'அவை'

பகுதிப்பொருள் விகுதி. 'நான்கவற்றால்' என உருபு விரிக்க. சீலம் - தூய்மை. 'தூய்மை இலா' எனவே , மாசுடைமை பெறப்பட்டது. அணு - உயிர். அணுச்செய்தி - அணுவைப் பற்றிய செயல்.
இதனால், முன் மந்திரத்தில், 'நித்தம் நடத்தும்' எனத் தொகுத்துக் கூறப்பட்ட செயல்கள் ஒருவாறு வகுத்துக் கூறப்பட்டன.

வேறாம் அதன்தன்மை மேலும்இக் காயத்தில்
ஆறாம் உபாதி அனைத்தாகும் தத்துவம்
பேறாம் பரவொளி தூண்டும் பிரகாசமா
ஊறா உயிர்த்துண் டுறங்கிடும் மாயையே. ***#2419***

முன் மந்திரத்தில், 'அணு' எனக் கூறப்பட்ட உயிரின் தன்மை தனியானது. ஆகவே, காணப்படாது நிற்கின்ற அந்த உயிருக்குக் காணப்படுகின்ற இந்த உடம்பில் உள்ள ஆறு அத்துவாக் -களும் உபாதிகளேயாம். அஃதாவது, அதனை மாசுபடுத்துகின்ற வேற்றுப் பொருள்களேயாம். அதனால், முப்பத்தாறு தத்துவங்களும் உயிர் தான் பெறுதற்குரிய மேலான ஒளியை அடைதற்குத் தூண்டு கின்ற சிறிய ஒளியாய் உதவுவதால், மாயையாலே உயிர் உறுதல், உயிர்த்தல், உண்டல் முதலியவைகளைச் செய்து, பின் அதிலிருந்து நீங்கியும் நிற்கும்.

விளக்கவுரை

'அதன் தன்மை வேறாம்' எனவும், 'ஆறு உபாதியாம்' எனவும் மாறிக் கூட்டுக. 'ஆறும்' என்னும் முற்றும்மை தொகுத்த லாயிற்று. மேலும் - வேறாதல் மேலும், 'ஆறும் உபாதியாம்' என முடிக்க. ஆறத்துவாக்களில் தத்துவங்கள் சிறந்தமை பற்றி அவற்றையே வேறெடுத்துக் கூறினார். 'பரவொளிக்கு' என்னும் நான்கன் உருபு தொகுத்தலாயிற்று. அதனை, 'பர வொளியை அடைதற்கு' என விரிக்க. 'பிரகாசமாக' என்பதன் ஈறு குறைந்தது. 'உறா' என்பது நீட்டல் பெற்றது. 'உற்று, உயிர்த்து, உண்டு' என்றதனால், 'கண்டு, கேட்டு' என்பனவும் கொள்ளப்படும். 'மாயை - யாலே' என உருபு விரித்து 'உறா, உயிர்த்து, உண்டு உறங்கும்' என முடிக்க. கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம்புலனும் மாயா காரியங்களால் வருதலால், 'மாயையால் உயிர் இவைகளை நுகரும்' என்றார். உறங்குதல் - சுழுத்தி நிலையை அடைதல். 'உறா' முதலியவற்றிற்கும், உறங்குதலுக்கும், 'அஃது' என்னும் எழுவாய் வருவிக்க. 'மாயையும் உயிர்க்கு உபாதியேயாயினும், நோய்க்கு மருந்துபோல, அஃது உயிர்க்கு நலம் பயக்கும்' என்பது 'அனைத்தாகும் தத்துவம்' என்பது முதலாகக் கூறப்பட்ட பொருள்.
இதனால், முன் மந்திரத்தில் 'அணுச் செய்தி' எனக் கூறப்பட்ட பொருள் அன்னது ஆமாறு கூறப்பட்டது.

தற்பரம் மன்னும் தனிமுதற் பேரொளி
சிற்பரந் தானே செகம்உண்ணும் போதமும்
தொற்பதந் தீர்பாழில் சுந்தரச் சோதிபுக்*(கு)*
அப்புறம் அற்றதிங் கொப்பில்லை தானே. *#2420*

'தத்' பதப் பொருளாகிய பதி, தன்னிலையில், நிலையான ஒப்பற்ற, முதன்மை வாய்ந்த பேரறிவே எனினும், அதுவே உயிர்களை நோக்கி இயங்கும் பொதுநிலையில் உயிர்களை உலகத்தை நுகரும்படி செய்கின்ற பாச அறிவாய் நிற்கும். *('திரோதான சத்தியாய் நிற்கும்'* என்றாம். *)* அந்தப் பாச அறிவால் உயிர் உலகத்தை நுகர்ந்து வருங்காலத்தில் அந்தப் பாச அறிவும், அதன் அறிவாகிய பசு அறிவும் நீங்கப் பெற்ற பொழுது, முன்சொன்ன பேரொளியிற்கலந்து, அதற்கு அப்பாலும்போய், முன்னை நிலையெல்லாம் நீங்கப்பெற்று நிற்கும். அப்பொழுது அதற்கு ஒத்ததும், உயர்ந்ததும் இல்லாத ஓர் உயர்வை அஃது அடையும்.

விளக்கவுரை

'அச் சிற்பரம்' எனச் சுட்டு வருவிக்க. *'போதம்'* என்பதன்பின், *'ஆம்'* என்பது எஞ்சி நின்றது. *'தொல் பதம்'* என்பது, எதுகை நோக்கி, *'தொற்பதம்'* எனத் திரிந்து நின்று. பதம் - நிலைமை. தீர் பாழ் - தீர்ந்ததாகிய பாழ். இது பின்னர், *'போதப் பாழ்'* எனக் குறிக்கப்படும். *'அப்புறமாய்'* என ஆக்கமும், *'இங்கு'* என்பதன்பின், *'அதற்கு'* என்பதும் வருவிக்க.

இதனால், சிவசத்தி திரோதான சத்தியாய் நின்று செயற்படுதலால் வரும் பயன் கூறப்பட்டது.

பண்டை மறைகள் பரவான் உடல் என்னும்
துண்ட மதியோன் துரியாதீ தன் தன்னைக்
கண்ட பரனும்அக் காரணோ பாதிக்கே
மிண்டின் அவன்சுத்த னாகான் வினவிலே. *#2421*

முதல் நூல்களாகிய வேதாகமங்கள், சில இடங்களில் சுத்த மாயையை, *'சிவனுக்குத் திருமேனி'* எனக் கூறும். அஃது உபசாரமே.
['சுத்ததத் துவம் சிவன்றன் சுதந்திர வடிவ மாகும்;
*நித்தம்என் றுரைப்பர் காலம் நீங்கிய நிலைமை யாலே'**
என்னும் சிவஞான சித்தியையும், அதன் உரையையும் காண்க.*]*
ஏனெனில், சிவன் துரியத்தையும் கடந்து அதீதமூர்த்தி. *(*நின்மல துரியம் வரையிலே சுத்தமாயை உள்ளது*)* தத்துவசுத்தி, ஆன்மரூபம் ஆகியவற்றைக் கடந்து ஆன்ம தரிசனத்தைப் பெற்ற ஆன்மாவும் சிவ தரிசன சிவயோகங்களால் ஆன்ம சுத்தியை எய்தாது, காரணோபாதி யாகிய சுத்தமாயையில் இருப்பானாயின் அவனது நிலையை நன்கு

ஆராயுமிடத்து அவன் தூய்மை எய்தியவன் ஆகான்.

விளக்கவுரை

'காயமோ மாயையன்று காண்பது சத்தி தன்னால்8 என எதிர்மறை முகத்தானும், உடம்பாட்டு முகத்தானும் தெளிவுபடக் கூறுதலின் சிவனுக்குச் சத்தியே - அருளே திருமேனியாவதல்லது, மாயை திருமேனியாகாது.

'அரிதரு கண்ணி யானை ஒருபாக மாக
அருள்கா ரணத்தில் வருவார்'

என்பதே திருமுறை மொழி. இதனை,

'உருஅருள்; குணங்களோடும்,
உணர்வருள் உருவில் தோன்றும்
கருமமும் அருள் அரன்றன்
கரசர ணாதி சாங்கம்
தரும்அருள்; உபாங்க மெல்லாந்
தானருள்; தனக்கொன் றின்றி,
அருளுரு உயிருக் கென்றே
ஆக்கினன்; அசிந்த னன்றே'*

எனச் சாத்திரமும் பலபடியால் வலியுறுத்தி ஓதுதல் காண்க. இங்ஙனமாகவே, சிவன் அசுத்த மாயையைப் போலச் சுத்த மாயையை விலக்காமல் அதிட்டித்து (இடமாகக் கொண்டு) நிற்றல் பற்றிச் சில இடங்களில் அதனைச் சிவனுக்குத் திருமேனியாக உபசரித்துக் கூறும். ஆகவே, சிவனுக்கு உண்மையில் திருமேனியாய் அமைவது அவனது சத்தியே என்பதாம்.

'ஆகாச சரீரம் பிரஹ்ம'

என்னும் உபநிடத மொழியில் 'ஆகாசம்' என்பதும் சிதாகாசமாகிய சத்தி என்பதே சித்தாந்தம். 'பர வான்' என்றது இங்குச் சுத்த மாயையை. காரணோபாதியாவதும் அதுவே. 'பரன்' என்றது, தத்துவங்கடந்து தன்னைத்தான் கண்டமையால் பாசங்களின் நீங்கினவனாகிய ஆன்மாவை. 'பரனும்' என்னும் உம்மை சிறப்பு.

இதனால், முன் மந்திரத்தில், 'சுந்தரச் சோதிபுக்கு அப்புறமாய் அறுதல்' எனக் கூறியது பற்றி நிகழ்வதோர் ஐயம் அறுக்கப்பட்டது.

வெளி கால் கனல் அப்பு மேவுமண் நின்ற*(து)*
அளியா கியதற் பரங்காண் அவன்றான்
வெளி கால் கனல் அப்பு மேவுமண் நின்ற
வெளியாய சத்தி அவன்வடி வாமே. ***#2422***

'மாயா காரியமாகிய உலகப்பொருள் அனைத்திலுமே பரமசிவன் அருள் காரணமாக நிறைந்திருக்கின்றான்' என வேதாகமங்கள் கூறும்.

அவ்வாறு கூறுவதற்கும், 'அவனது சத்தியே அவ்வாறு நிறைந்துள்ளது' என்பதே கருத்து. பூதாகாயம் ஏனைப் பூதங்களில் எல்லாம் நிறைந்திருத்தல் போல அனைத்துலகங் களிலும் நிறைந்திருத்தல் பற்றி அச்சத்தி, 'பரவெளி - பராகாயம்' எனக் கூறப்படுகின்றது. அந்தச்சத்தியே, உண்மையில் பரமனுக்கு திருமேனியாகும்.

விளக்கவுரை

அனைவரும் ஆறந்த ஐம்பூதங்களைக் கூறும் முகத்தால் உலகப்பொருள் அனைத்தையும் கொள்ளவைத்தற்கு அவற்றைத் தோற்ற முறையில் வைத்து எண்ணிக் காட்டினார். 'நின்றது பரம்' என இயையும். 'அளியாகியபரம்' என்றது உடம்பொடு புணர்ந்தது. காண், முன்னிலையசை 'அவன்றான் சத்தி' என்றது, 'சத்தி அவனின் வேறானதன்று' என்றதாம். 'பரம் பொருள் தன்னிலையில் தான் நிற்கும் பொழுது சிவம் என்றும், உலகத்தோடு ஒன்றாய், வேறாய், உடனாய்த் தொடர்பு பட்டு நிற்கும் பொழுது சத்தி என்றும், ஐந்தொழில் செய்யும் பொழுது பதி என்றும் பெயர்பெறும்' என்னும் ஆகமப்பொருளை யுணர்த்துவார். 'வெளி, கால் ... ... நின்ற வெளியாய சத்தி' என்றார். இதனால், முன் மந்திரத்தில், 'பரவான் உடல் - என்றல் உபசாரமாயின், உண்மை யாது' என்றெழுந்த அவாய்நிலை நிரப்பப்பட்டது.

மேருவி னோடே விரிகதிர் மண்டிலம்
ஆர நினையும் அருந்தவ யோகிக்குச்
சீர்தவம் செய்யின் சிவனருள் தானாகும்
பேரவும் வேண்டா பிறிதில்லை தானே. *#2423*

இடைகலை பிங்கலைகளை, 'சந்திர சூரியர் வழி' எனக் கூறுதலால், அவ்வழியாக இயங்கும் பிராண வாயும் வலம் வரும் சுழுமுனை நாடியை, 'மகாமேரு' என்றலும், அந்தச் சுழுமுனை நாடியின் நடுப் பாகமாகிய அநாகத விசுத்தி ஆதாரங்களை, 'சூரிய மண்டலம்' என்றலும் யோக நூல் வழக்கு. அனாகதமாகிய இருதயம் பூசைத் தானமாகக் கொள்ளப்படும். அதனால், சுழுமுனை வழியாகச் சென்று இருதயத்தில் சிவபெருமானை நன்றாக நினைந்து வழிபடு பவனை, 'மேருவினோடே சென்று விரிகதிர் மண்டிலத்தில் (சிவனை) ஆரநினையும் அருந்தவயோகி' ('சென்று') என ஒரு சொல் வருவித்து, 'விரிகதிர் மண்டிலத்தில்' என உருபு விரித்து கொள்க.) 'செய்யின்' என்பது 'செய்வதனால்' எனப் பொருள்தந்து நின்றது. ஆகவே, 'அந்த அருந்தவ யோகிக்குச் சிவனருள் தானாகவே கிடைக்கும்' என்றும், 'அவன் கைக்கொள்ள வேண்டிய சாதனம் வேறொன்றும் இல்லை யாகையால் அந்நெறியைவிட்டு அவன் விலகுதல் வேண்டா' என்றும் கூறினார்.

விளக்கவுரை

இதனால், 'இங்குக் கூறப்பட்ட இலக்கணங்களையுடைய பரம்பொருளை அடைதற்கு யோகம் சிறந்த சாதனம்' எனக் கூறி முடிக்கப்பட்டது.

10.22.முத்துரியம்

நனவாதி மூன்றினில் சீவ துரியம்
தனதாதி மூன்றில் பரதுரி யந்தான்
நனவாதி மூன்றில் சிவதுரி யம்மாம்
இனவாகும் தொம்தத் அசிபதத் தீடே. ***#2424***

*[*ஆன்மா, *'*சீவன்*'* எனப்படுவது பாசநிலையில் ஆகலின்*,* முதற்கண் சொல்லப்பட்ட நனவு, சகலத்தில் கேவலமாய் நிகழும். கீழாலவத்தையிலும்*,* சகலத்தில் சகலமாய் நிகழும் மத்தியாலவத்தையிலும் நிகழும் நனவுகளாம்.*]* கீழாலவத்தையில் நிகழும் சாக்கிரம் முதலியவற்றில் நிகழும் துரியம் ஆணவ அனுபவம் மிகுவது ஆதலாலும், மத்தியாலத்தையில் நிகழும் சாக்கிரம் முதலிய வற்றில் நிகழும். துரியம் ஐம்புல அனுபவம் மிகுவது ஆதலாலும் அவையிரண்டும் சீவ துரியமாம். *(*இவை தொடக்கத்தில் நிகழ்வன. மேலாலவத்தையாகிய யோக துரியமும் சீவதுரியமே*)* இறுதியில் நிகழும் பராவத்தையில் நிகழும் சாக்கிரம் முதலியவற்றில் நிகழும் துரியத்தில் உயிர் பாசப்பற்று இன்றிப் பரம்பொருள் அனுபவமே மிகப் பெற்றிருத்தலால் அது பர துரியமாம். *('*இஃது இலய முத்திநிலை*'* என்பது மேலே குறிப்பிடப்பட்டது.*)* இடையில் மத்தியாலவத்தைக்கு மேல் நிகழும் மேலாலவத்தையாகிய யோகாவத்தையில் நிகழும் சாக்கிரம் முதலியவற்றில் நிகழும் துரியமும், நின்மல சாக்கிரம் முதலியவற்றில் நிகழும் துரியமும் உலகியல் உணர்வு முற்ற நீங்காத நிலையில் சிவானுபவம் மிகப் பெறுவன ஆதலின் அவை பரதுரியம் ஆகாது சிவதுரியமாம். இவற்றுள் சிவதுரியமும், பர துரியமுமே 'தத்துவமசி*'* மகா வாக்கிய அனுபவங்களாம்.

விளக்கவுரை

தனது - பரம் பொருளினது. இன - இன்ன 'இவை*'* என்றபடி 'இவை*'* என்பது அண்மைச் சுட்டாகலின், அது பின்னிரண்டு துரியங்களையே குறித்தது. பதத்து ஈடு - பத அனுபவத்தில் இடுவன.
இதனால், *'*முத்துரியங்களாவன இவை*'* எனச் சுட்டியும், விளக்கியும் கூறப்பட்டது.

தானாம் நனவில் துரியம் தன் தொம்பதம்
தானாம் துரிய நனவாதி தான்மூன்றில்
ஆனாப் பரபதம் அற்ற*(*து*)* அருநனா
வானான மூன்று துரியத் தணுகுமே. ***#2425***

சீவன் சீவனாகவே இருக்கின்ற மத்தியாலவத்தைச் சாக்கிரம் முதலியவற்றில் நிகழும் துரியத்தில் ஆன்மா, 'துவம்*'* பதப் பொருளாய்

இருக்கும். ஆன்மாச் சிவமாந்தன்மையைப் பெறுகின்ற நின்மல சாக்கிரம், பராசாக்கிரம் முதலியவற்றில் நிகழ்கின்ற துரியங்களில் ஆன்மா சிவமாகி, 'தத்' பொருளாய் இருக்கும். ஆகவே, இவ்விரு துரியங்களிலும் ஆன்மாப் பாசம் அற்றதாம். சகலத்தில் கேவலத்திற்கு மேலாக நிகழும் மூன்று துரியங்களிலும் ஆன்மா இவ்வாறான நிலைகளை அடையும்.

விளக்கவுரை

'தான்' மூன்றில் முன்னது சீவனையும் ஏனையவை பரத்தையும் உணர்த்தின. 'தான்மூன்றில்' என்பதை 'மூன்றில் தான்' என மாற்றியுரைக்க. 'அரு நனா' என்றது, எளிதில் இயல்பாக நிகழாது அரிய திருவருளால் நிகழ்வது என நின்மல சாக்கிர பரசக்கிரங்களைக் குறித்தன. 'அருநனாவான்' என்னும் மூன்றன் உருபை ஏழன் உருபாகத்திரித்துக் கொள்க. 'காலத்தினாற் செய்த நன்றி'l என்பதிற் போல,

இதனால், 'முத்துரியங்களுள் சீவ துரியம் பெத்த துரியமும் ஏனைய துரியங்கள் முத்திதுரியமும் ஆம்' என்பது கூறப்பட்டது.

அணுவின் துரியத்து நான்கும்அ தாகிப்
பணியும் பரதுரி யம்பயில் நான்கும்
தணிவில் பரமாகிச் சார் முத் துரியக்
கணுவிரு நான்கும் கலந்தஈ ரைந்தே. ***#2426***

பெத்த துரியம் அனைத்தையும் 'சீவ துரியம்' என ஒன்றாகவும் முத்தி துரியம் இரண்டையும் ஒன்றாகவும் ஆக்க. அவ்விரண்டிலும் துரியம் முதலாகக் கீழ் நோக்க உளவாம் அவத்தைகள் இருநான்கு; எட்டு. இனி இவ்விரண்டிலும் உள்ள துரியா தீதங்களைக் கூட்ட அவத்தைகள் பத்தாகும். இவைகளில் பெத்தா வத்தை ஐந்தில் ஆன்மாக்கீழ் நிலையதாயும், முத்தியவத்தை ஐந்தில் மேல்நிலையை எய்தியும் இருக்கும்.

விளக்கவுரை

'அது வாகி' என்பதில் முற்றியலுகரம் கெட்டு 'அதாகி' என நின்றது. பணிதல் - கீழ்போதல். தணிவு - தாழ்தல். பரமாதல் - மேற் போதல். சார், முதனிலைத் தொழிற் பெயர். 'பரமாகி' என்னும் எச்சம் இதனோடே முடிந்தது. கணு - சேர்க்கை. சேர்க்கையால் வருவதை, 'சேர்க்கை' என்றார். 'கணுவில்' என உருபு விரிக்க. 'சீவ துரிய பரதுரிய அவத்தைகளின் தொகை பத்து' எனச் சுருங்கக் கூறிப் போகாமல் இங்ஙனம் விரிவாகக் கூறியது, 'ஓர் ஐந்து தாழ்வுடையன; மற்றோர் ஐந்து உயர்வுடையன' என்பது உணர்த்துதற்கும்; அதீதத்தைக்

கூட்டாமல் துரியத்தோடே முடித்து. அவத்தைகளை 'நான்கு' எனவும், 'எட்டு' எனவும் தொகை கூறுதலும் உண்டு என்பது உணர்த் துதற்குமாம் என்க.
இதனால், முத்துரியங்களது தராதரங்கள் விளக்கப்பட்டன.

ஈரைந் தவத்தை யிசைமுத் துரியத்துள்
நேரந்த மாக நெறிவழி யேசென்று
பாரந்த மான பராபரத் தைக்கியத்**(து)**
ஓரந்த மாயீ ருபாதியைச் சேத்ந்திடே**. *#2427***

கீழாலவத்தை ஐந்து, மத்தியாலவத்தை ஐந்து, மேலாலவத்தை ஐந்து இம் மூவைந்து பதினைந்தவத்தைகளை 'சீவாவத்தை' என ஓரைந்தாகவும், நின்மலாவத்தை ஐந்து, பராவத்தை ஐந்து இவ்வீரைந்தையும் 'பராவத்தை ஐந்து' என ஓரைந்தாகவும் தொகுக்க அவத்தைகள் ஈரைந்தாகி, 'சீவ துரியம், சிவ துரியம், பர துரியம்' என்னும் முத்துரியங்களும் அவற்றுள்ளே அடங்கும். அவ் அவத்தைகளை மேலாலவத்தைச் சாக்கிரம் முதலாகத் தொடங்கிப் படி முறையாக மேலே மேலே ஏறிச்சென்று, முடிவில் எல்லாமாய் உள்ள பரம்பொருளில் ஒன்று பட்டு, முடிந்த பயனைப் பெற்று, அதற்கு முன்னே நிகழ்ந்த யோக துரியம், நின்மல துரியம் ஆகிய இரண்டு உபாதிகளையும் பயனுடைய அவத்தைகளாகும் படி ஆக்கிக்கொள்க.

விளக்கவுரை

பார் - உலகம். பார் அந்தமான அனைத்துலகங்கட்கும் அப்பாற்பட்ட. பராபரம் - மேல், கீழ் அனைத்துமாய் நிற்பது. நின்மலா வத்தையை நோக்க யோகாவத்தையும், பராவத்தையை நோக்க நின்மலா வத்தையும் இடர்தருவன வாதல் பற்றி அவற்றை 'உபாதி' என்றார்.
இதனால், 'முத்துரியங்களையும் முறையால் எய்தல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

தொட்டே யிருமின் துரிய நிலத்தினை
எட்டா தெனினும் நின் றெட்டும் இறைவனைப்
பட்டாங் கறிந்திடில் பல்நா உதடுகள்
தட்டா தொழிவதோர் தத்துவந் தானே**. *#2428***

இறைவனை அறியுமாற்றால் அறியின், பல், நா, உதடுகள் இவைகளில் அகப்படாத ஒரு மெய்ப்பொருள் யாராலும் அணுக முடியாதாயினும் அணுக முடியும். ஆகையால், மெய்ப் பொருளை அடைய முயல்கின்றவர்களே, நீவிர் அதனை அடைதற் பொருட்டு துரிய நிலத்திலிருந்து கீழ் இறங்கிவிடாமல் இருங்கள்.

விளக்கவுரை

'துரியத்திற்குக் கீழ் உள்ள அவத்தைகள் தாம் மெய்ப் பொருளோடு தொடர்பில்லாத நிலை' என்பதும், 'பல், நா, உதடுகளின் செயல்கள் துரியத்திற்குக் கீழ் உள்ள நிலைகளில்தான் நிகழும்' என்பதும் கருத்து. இங்குக் கூறிய துரியம் சிவ துரியம், ஏனெனில், சீவதுரியத்தில் மெய்ப்பொருள் தொடர்புறாது நிற்கும் ஆகலானும், பரதுரியத்திற்கு சென்றோர் மீளார் ஆகலானும் என்க. 'இறைவனை ... ... தத்துவந்தான எட்டாதெனினும்நின் ரெட்டும். *(ஆதலால்)* துரிய நிலத்தினைத் தொட்டே இருமின்' எனக் கூட்டி முடிக்க.

'துரியம் கடந்தஇத் தொண்டர்க்குச் சாக்கிரம்
துரியமாய் நின்றதென் றுந்தீபற;
துறந்தார் அவர்களென் றுந்தீபற'*
'துரியம் கடந்தசுடர்த் தோகையுடன் என்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான் - துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யும் தன்மைகளும்
ஆக்கியுடும் அன்பர்க் கவன்'*

என்பவற்றிலும், 'சிவதுரியத்திற்றான் சிவன் தொடர்புற்று நிற்பான்' எனக் கூறப்பட்டது. துரியத்திலே நிலையாக நின்றால், பிரபஞ்சம் தாக்கா தொழிதலுடன், மேல் அதீதத்திற்குச் செல்லும் ஆற்றலும் உளதாகும் என்க.

இறைவனை அறியுமாற்றால் அறிதலாவது, அவன் அருளாலே அறிதல். பல், நா, உதடுகளில் தட்டாமையாவது, சொல்லவாராமை.

'எட்டப்படாது, எட்டப்படும்' என்பன, 'எட்டாது' எனவும், 'எட்டும்' எனவும் வந்தன.

இதனால், 'முத்துரியத்துள் சிவ துரியமே முத்திக்கு வழி' என்பது கூறப்பட்டது.

அறிவாய் அசத்தென்னும் ஆறா றகன்று
செறிவாய மாயை சிதைத்*(து)* அரு ளாலே
பிறயாத பேரரு ளாயிடும் பெற்றி
நெறியான அன்பர் நிலையறிந் தாரே. ***#2429***

சடங்களாகிய முப்பத்தாறு தத்துவங்களையும் நீக்கும் முகத்தால், அடர்ந்துள்ள மாயையைப் போக்கிச்சித்தாய் நின்றுபின்னர் வெளிப்படுகின்ற திருவருளாலே அதுவேயாய் நிற்கின்ற தன்மையால் உயர் நெறியை அடைந்த அன்பர்களே சிவனது இயல்பை உண்மையாக உணர்ந்தோராவர்.

விளக்கவுரை

'அறிவாய்' என்பதை, 'சிதைத்து' என்பதன் பின்னர்க் கூட்டுக. 'அசத்து' எனவே, அசித்தாதலும் சடம் என்பதும் பெறப் பட்டது. 'அருளாலே

அருளாய்' என்றதனால், 'அருள் தானே வெளிப் பட, அதனாலே ஆன்மா அந்த அருளேயாய் நிற்கும்' என்பதும், 'ஆறா றகன்று அறிவாய் அருளாயிடும்' என்றனால், 'அருள் வெளிப்படல் ஆன்மா அறிவான பின்னர் ' என்பதும், 'ஆன்மா அறிவாதல் ஆறாறகன்றபின்னும்' என்பதும் பெறப்பட்டன. 'ஆறாறகன்று' என்பது தத்துவசுத்தி ஆன்ம ரூபங்களையும், 'அறிவாய்' என்றது ஆன்ம தரிசன சிவரூபங்களையும், 'அருளாலே அருளாயிடும்' என்றதனால், ஆன்ம சுத்தி, சிவதரிசன சிவயோகங் களையும் குறித்தமை காண்க. இவற்றுள் சிவயோகமே சிவதுரியமாம். 'பெற்றியால்' என உருபு விரிக்க.

இதனால், 'சீவ துரியத்திற்கு அப்பாற்பட்ட சிவதுரியமே சிவத்தோடு உண்மையில் தொடர்பு கொள்ளும் நிலை' என்பது கூறப்பட்டது.

நனவில் நனவாதி நாலாம் துரியம்
தனதுயிர் தொம்பதம் ஆமாறு போல
வினையறு சீவன் நனவாதி யாகத்
தனைய பரதுரி யம்தற் பதமே. ***#2430***

பிராரத்த வினை நீங்காமையால், கருவி கரணங்களோடு கூடிய உடம்பிற்றானே புருவ நடுவின் கண் நிகழும் சுத்த சாக்கிரம் தலிய சிவ ஐந்தவத்தைகளில் நாலாவதாகிய சிவ துரியத்தில் சீவன் ஆன்ம சுத்தியைப் பெற்று 'துவம்' பதப் பொருளாய் நிற்றல்போல, பிராரத்தவினை நீங்கினமையால், கருவி கரணங்களைக் கடந்து நிற்கின்ற நிலையில் நிகழும் பர சாக்கிரம், பர சொப்பனம் முதலாக நிகழும் பர அவத்தை ஐந்தில் நாலாவதாகிய பரதுரியத்தில் ஆன்மா, 'தத்' பதப் பொருளாய் நிற்கும். அஃதாவது, 'சிவமேயாய் நிற்கும்' என்பதாம்.

விளக்கவுரை

'பராவத்தைகளில் சீவன் முத்தி தவிர ஏனைய நான்கும் உண்மையில் உடம்பு நீங்கிய பின்னர் நிகழ்வனவாயினும் சீவன் முத்தி நிலையிலும் அவை பொதுவாக நிகழும்' என்பதும், 'இம்மையில் (உடம்பு உள்ளபொழுது) பராவத்தையில் முடிவான அதீத நிலையில் நின்றவர்களே அம்மையில் (உடம்பு நீங்கியபின்) பரமுத்தியை அடைவர்' என்பதும், 'ஏனையோர் தாம் தாம் இங்கு நின்ற நிலைக்கு ஏற்ப அங்குள்ள நிலைகளை அடைவர்' என்பதும் இம்மந்திரத்தால் அறிக. கேவலாத்துவிதிகளும் சீவன் முத்தரை, வரிட்டன், வரியான், முதலாக வகைப்படுத்துவர்.

முதலடியின் ஈற்றில் 'கண்' உருபு விரிக்க. 'தனதுயிர்' என்பதில் ஆறன் உருபு, 'இராகுவினது தலை' என்பதுபோல 'ஒற்றுமைக் கிழமைக்கண்' வந்தது. பின்னர் 'வினை அறு சீவன்' என்றதனால், முன்னது 'வினை உருசீவனது நிலை' என்பது பெறப்பட்டது. வினை, இங்குப் பிராரத்தம்.

'ஆமாறுபோல' என்ற அனுவாதத்தால், ஆமாறும்தானே பெறப்பட்டது.
'தன' என்பது இடை ஐகாரச் சாரியை பெற்றது.
இதனால், சீவ துரியத்திற்கு அப்பாற்பட்ட பர துரியத்தின் சிறப்பு அதனது பயன் உணர்த்தும் முகத்தால் உணர்த்தப்பட்டது.

தொம்பதம் தற்பதம் சொல்முத் துரியம்போல்
நம்பிய மூன்றாம் துரியத்து நற்பரம்
அம்புவி உன்னா அதிசூக்கம் அப்பாலைச்
செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானே. *#2431*

'துவம்' பதம், 'தத்' பதம் முதலிய சொற்களின் வழியாக நிகழும் 'சீவ துரியம், சிவ துரியம், பர துரியம்' என்னும் முத்துரிய அனுபவ நிகழ்ச்சிகளில், பெரிதும் விரும்பப்பட்ட மூன்றாவதாகிய பரதுரியத்தில் முதற்கண் சொல் நிகழ்ச்சி சிறிது உளதாயினும், முடிவில் சொல்லற்றதாகிய பேரொளியாம் பரசிவம் அனுபவப்பட்ட அந்நிலை, உலக வாசனை முழுதும் அற்றுச் சூக்குமத்திலும் சூக்குமமாய் விளங்க, 'அவ்விடத்தில் அனைத்துப் பொருட்கும் அப்பாற்பட்ட அந்தப் பரசிவமே தனது பேரருள் காரணமாகக் குறுமூர்த்தியாய் வந்து தனக்கு அருள் செய்தது' என்னும் உண்மையும் விளங்கும்.

விளக்கவுரை

'தற்பதம்' என்பதன்பின் 'முதலிய' என்பது வருவித்து, 'சொல்லால் நிகழும்' என உருபும், பயனும் விரிக்க. 'முத்துரியத்துள்' என 'உள்' என்பது விரிக்க. போல் அசை, 'பரம்' என்பதன் பின் 'வெளிப்பட', என்பதும், 'அதிசூக்கம்' என்பதன்பின் 'ஆக' என்பதும், ஈற்றில் 'ஆம்' என்பதும் வருவிக்க.
இதனால், முத்துரியத்துள் முடிநிலைத் துரியத்தின் உயர்வுகூறி முடிக்கப்பட்டது.

10.23.மும்முத்தி

சீவன்றன் முத்தி அதீதம் பரமுத்தி
ஓவுப சாந்தம் சிவமுத்தி ஆனந்தம்
மூவயின் முச்சொரூப முத்திமுப் பாலதாம்
ஓவுறு தாரத்தில் உள்ளும்நா தாந்தமே. *#2432*

மும்முத்திகளுள் முதலாவதாகிய சீவன் மும்முத்தி யாவது, உலகத்தில் இருப்பினும் உலகத்தைக் கடந்து நிற்கும் நிலையாம். எனவே, 'இஃது உடம்புள்ள பொழுதே நிகழ்வது' என்பது அறியப்படும். நின்மலாவத்தையில் சாக்கிரம் முதலியனவாம். மூன்றாவதாகிய பரமுத்தியாவது, உயிர் முன்பு இருந்த பாச நிலைகள் முற்றும் அற்று நிலையான அமைதியைப் பெறும் நிலையாகும். (ஆகவே, இஃது உடம்பு

நீங்கிய பின்னர்ப் பெறப்படுவதால் விளங்கும். பிறர், 'விதேக முத்தி' என்பர். இந்நிலையில், 'சிவானந்தத்தை நாம் அனுபவிக்கின்றோம்' என்னும் உணர்வும் இன்றி, அந்த ஆனந்தத்துள் மூழ்கியிருக்கும் நிலையாதல் பற்றி இதனை, 'ஆனந்தாதீதம்' என்றும் கூறுவர். ஆனந்தாதீதம் ஆனந்தத்தில் ஆதீதம். இவ்வாறன்றி, உலக இன்பத்தில் தோயாது, சிவானந்தத்திலே தோய்தல் சிவமுத்தியாம். (எனவே நின்மலாவத்தையில் துரியாதீத நிலையாம்.) இவ்வாறு மூன்று நிலைகளில், உயிர் மூன்று தன்மைகளை உடையதாக, முத்தி மூன்று வகையாய் இருக்கும். இவற்றுள் சொல்லிறந்த முத்தியாகிய பரமுத்தியே நாதாந்த முத்தியாகக் கருதப்படும்.

விளக்கவுரை

'அதீதம்' என்பது, 'கடந்தது' என்னும் பொருளது. ஆனந்த அனுபவத்தை, 'ஆனந்தம்' என்றார். 'தாரகத்தில்' என்பது இடைக்குறைந்து நின்றது. தாரகம் - பிரணவம். இது அனைத்துச் சொற்களும் ஆதல் அறிக. ஓவுறு தாரகம் - தாரகம் ஓவிய (நீங்கிய) நிலை. உள்ளும் - உள்ளப்படும். என மாறிக் கூட்டியுரைக்க.

இதனால், 'மும்முத்திகளாவன இவை' என்பதும் அவற்றின் இயல்புகளும் கூறப்பட்டன.

ஆவ தறியா உயிர்பிறப்பால் உறும்
ஆவ தறியும் உயிர்அருட் பால்உறும்
ஆவதொன் றில்லை அகப்புறத் தென்றகன்(று)
ஓவு சிவனுடன் ஒன்றுதல் முத்தியே. *#2433*

['அறிவுடையார் ஆவ தறிவார்;' அறிவிலார் - அஃதறிகல்லாதவர்'* என்றபடி, பின் வளைவதை முன் கூட்டிக் காரிய காரண இயைபு பற்றி உய்த்துணர்பவரே 'அறிவுடையார்' எனப் படுவார். அங்ஙனம் அறியமாட்டாதவர் அறிவிலார் ஆவர். அறிவால் இன்பம் வருதலும், அறியாமையால் துன்பம் வருதலும் நியதி. ஆகவே] பின் விளைவதை முன்கூட்டி அறிந்து வருமுன்னர்க் காத்துக் கொள்ளாத உயிர்கள் பிறப்பாகிய துன்பத்திலே வீழ்ந்திடும். பின் விளைவதை முன்கூட்டியே அறிந்து, 'வருமுன்னர்க் காத்துக் கொண்ட உயிர்கள் சிவனது திருவருளிலே சென்று பொருந்தும். 'சிவனாலன்றி உடம்பாலும், உலகத்தாலும் உயிர்கட்கு வருவதொன்றில்லை' என்பதை உணர்ந்து, அவனது அருளைப் பெற்று, அந்த அருளாலே அவனுடன் ஒன்றுபடுதலே முத்தியாகும்.

விளக்கவுரை

'எனவே, சிவனது அருளைப் பெற்றோர் முத்தியாகிய இன்பத்தை

அடைவர்' என்பதாம். 'பிற' என்னும் முதனிலையே, 'பிறப்பு' எனத் தொழிற் பெயர்ப் பொருளைத் தந்தமையின் முதனிலைத் தொழிற்பெயர்.
'ஞானத்தால் வீடு ... ... அஞ்ஞானத்தால்
உறுவதுதான் பந்தம்'*
என்பார், 'ஆவதறியா உயிர் பிறப்பால் உறும் - ஆவதறியும் உயிர் அருட்பால் உறும்' என்றார். அகன்று அகமாகிய உடம்பையும், புறமாகிய உலகத்தையும் அடிநிலைக்காரணமாக உணர்தலினின்றும் நீங்கி, ஓவு சிவன் - எல்லாவற்றையும் கடந்தவனாகிய சிவன். இதனால், முத்திகளின் பொது இலக்கணம் கூறப்பட்டது. இதனானே, 'சித்தாந்த முத்தி இது' என்பதும், 'ஏனைச் சமயவாதிகள் பிற பிறவாகக் கூறும் முத்திகள் எல்லாம் பூர்வ பக்க முத்திகளே' என்பதும் குறிப்பால் உணர்த்தப்பட்டன. அவர் கூறும் முத்தி வகைகளைச் சிவஞானசித்தி* சிவப்பிராகச* நூல்களிற் காண்க. முத்தியை இலக்கண வகையால் தெரிந்துணர்த்துபவர் 'அதனை அடைதல் ஞானம் ஒன்றானேயாம்' என்பதும் உடன் கூறினார்.

சிவமாகி மும்மலம் முக்குணஞ் செற்றுத்
தவமான மும்முத்தி தத்துவத் தைக்கியத்
துவமா கியநெறி சோகம்என் பார்க்குச்
சிவமாம் அமலன் சிறந்தனன் தானே. ***#2434***

சித்தாந்தம் கூறுகின்ற மும்மலங்களையும், ஏனைச் சமயத்தார் முடிவாகக் கூறுகின்ற முக்குணங்களையும் (சாத்துவிக ராசத தாமதங்கள்) போக்கிச் சிவமாம் தன்மையை எய்திச் சரியை முதலிய தங்களால் உண்டாகும் அந்த ஞானத்தின் பயனாகப் பெறுகின்ற மும்முத்திகளையே, 'தத்துவமசி' 'ஸோஹமஸ்மி' என்னும் மகா வாக்கியங்கள் கூறும் முத்தி நிலையாக உணர்ந்து, அந்த மகாவாக்கியப் பொருள்களை அனுபவமாக உணர வல்லவர்கட்கு நன்மையே நிறைந்து, தீமை சிறிதும் இல்லாதவனாகிய சிவன், பிற பொருள்களை யெல்லாம் விலக்கித் தான் ஒருவனே விளங்கி நிற்பான்.

விளக்கவுரை

சிவன் அவ்வாறு விளங்கி நிற்றல், ஞாயிறு பிற பொருள்களைக் காண்பவர்கட்கு அவற்றைக் காட்டித் தன்னைக் காட்டாது நின்று, தன்னைக் காண்பவர்கட்குப் பிற பொருளைக் காட்டாது, தன்னையே காட்டி நிற்றல் போல்வது. 'சிவன் இவ்வாறு தன்னையே காட்டி நிற்பதே முத்தி நிலை' எனவும், 'தன்னைக் காட்டாது பிறபொருள்களைக் காட்டி நிற்பதே பெத்தநிலை' எனவும் உணர்க. 'சிவம் ஆகி' என்பதை முதலடியின் இறுதியிற் கூட்டுக. 'தவம்' என்பது முன்னர் அதன் பயனாகிய ஞானத்தையும், பின்னர் ஞானத்தால் அடையும் பயனையும்

குறித்த இருமடி யாகுபெயர். 'ஐக்கியம்' என்றது, 'அசி' என்றபடி. மூன்றாம் அடியில் உள்ள 'துவம்' தன்மை. 'துவமாகிய நெறி' என்பதை, 'சேகம்' என்பதன் பின்னர்க் கூட்டி, 'தத்துவ மஸி, ஸோகமஸ்மி இவற்றின் தன்மையாய நெறி' என உரைக்க. மகாவாக்கியங்கள் இங்குத் தம்மை யுணர்த்தி யொழியாது, தம் பொருளை உணர்த்தி நிற்றலின் 'தன்மை' என்றது அவை பற்றிய அனுபவங்களையாம். நெறி - ஞான நெறி. இதுவும் ஆகுபெயரால் அதன்பயனையே குறித்தது. 'சிவமாம் அமலன்' என்று, 'நன்றுடையானைத் தீயதில்லானை'*8* எனஅறாற்போல்வது. இங்ஙனம் மறுதலைப் பொருளையும் உடன் கூறியது முத்திநிலையில் சிவன் உயிருக்குப் பிற பொருளைக் காட்டாமையை உணர்த்தற்கு. 'பொய்காட்டா மெய்யா'*1* என்றதும் காண்க.

இதனால், 'வேதாந்தமுத்தி சித்தாந்த முத்தியே' என உணர வல்லவர்களே வேதாந்த ஞானிகளாய், மும்முத்திப் பயன் பெறுவர் என்பது கூறப்பட்டது.

சித்தியும் முத்தியும் திண்சிவ மாகிய
சுத்தியும் முத்தித் தொலைக்கும் சுகானந்த
சத்தியும் மேலைச் சமாதியு மாயிடும்
பெத்தம் அறுத்த பெரும்பெரு மானே. ***#2435***

பக்குவான்மாக்கட்குப் பாசத்தை அறுத்துத் தன்னையே அளிப்பதாகிய சித்தாந்த முத்தியைத் தருகின்ற, பெரிய பெருமானாகிய (மகாதேவனாகிய) சிவனே ஏனையோர்கட்கு அவரவர்களது தகுதிக்கு ஏற்ப, பொது யோகிகள் விழைகின்ற அணிமாதி அட்ட மாசித்தியாகிய பயனையும், ஏனைச் சமயத்தார் தாம் தாம் 'முத்தி' எனக் கொண்டு விழைகின்ற பல்வேறு பயன்களையும், அகப்புற, அகச்சமயிகள் விழையும் பொதுநிலைச் சிவபதமாகிய பயனையும், இப்பயனுக்கு எதிராய் உள்ள 'தாபத் திரயம்' எனப்படும் மூவகைத் துன்பங்களைப் போக்கிக் கொள்கின்ற ஆற்றலையும், சிவயோகிகள் விரும்புகின்ற அந்தமேலான சமாதியாகிய சீவன் முத்தியையும் தருபவனாவான்.

விளக்கவுரை

'சிவன் முத்தி தரும் பெருமான்' என்பதே பற்றி, அவன் தன்னையளிப்பதாகிய அந்தப் பரமுத்தி ஒன்றைத் தான் தருவான் போலும்' என மயங்கி யுரைக்கும் பல்வேறான வழக்குரைகளால் மாணாக்கர் மயங்காமைப் பொருட்டு, 'அனைத்துப் பயன்களையும் தருபவன் சிவன் ஒருவனேயன்றிப் பிறர் ஒருவரும் இல்லை' என்பதை விளக்கினார். 'முத்தியைத் தரும் பெருமான், அதற்குக் கீழ்ப்பட்ட ஒன்றையும் தர வல்லனல்லன்' என்றல், தன்னைச் சார்ந்தவர்க்குக்

காணியும், மனையும், மாடமும், மாளிகையும், ஊரும், நாடும் வழங்கவல்ல அரசனுக்குப் பரிசிலர் வேண்டும் பொன்னும், பூடணமும், யானையும், குதிரையும், தேரும் போல்வனவற்றைத் தருதல் இயலாது' எனக்கூறுவாரது கூற்றோடு ஒக்கும் என்பதாம். 'சிவன்அ முத்தியைத் தருபவன்' என்பதற்கு, 'ஏனைப் பயன்களை ஏனைத் தேவரிடத்தும் சென்று பெறுதல் கூடும்; பிறவியற்ற பெருநிலையாகிய முத்திப் பயனைச் சிவன் ஒருவனிடத்தில் பெற முடியும்' என்பதே கருத்தாகலின், அஃதறியாது, சிவன் முத்தியைத் தவிர வேறு ஒன்றையும் தர மாட்டுவானல்லன் என்பார்க்கு நாம் என் கடவோம் என்பது கருத்து. 'சிவனலால் முத்தியில் சேர்த்துவார் இலை'* என்னும் காஞ்சிப்புராணத்தையும் காண்க.

'பிற சமயிகள் விழையும் முத்தி' என்றதனால் உலகாயதர் விழையும் அரிவையர் இன்பம் முதலிய இம்மைப் பயன்கள் பலவும் அரிவையர் இன்பம் முதலிய இம்மைப் பயன்கள் பலவும் அடங்கின. 'பிற பயன்களையும் தேவர் பிறர் அளித்தல் சிவனது ஆணையைப் பெற்றே' என்பது மேலேல்லாம் விளக்கப்பட்டது ஆதலின், பிறர்தேவர் தரும் பயன்களும் அவர்தாமே சுதந்திரராய் நின்ரு தருவன அல்ல என்பது விளங்கும்.

மூவகைத் துன்பங்களாவன 'ஆதியான்மிகம், ஆதி பௌதிகம், ஆதிதைவிகம் என்பன. இவை முறையே, தன்னாலே தனக்கு வருவது ('தான்' என்பது தன் உடம்பையும் சேர்த்தே), ஐம் பெரும் பூதங்களால் வருவது, பிற காரணங்களைக் கருதாது, ஊழே காரணமாகக் கருத வருவது என்பனவாம். இவ்வாறு ஞானா மிர்தத்தில்*l* சொல்லப்பட்டது. பரிமேலழகர், 'ஆதி பௌதிகம்' என்பதைப் பிற உயிர்களால் வருவனவாகக் கூறினார்.*8* 'சுத்தி' என்றது 'குற்றம் அற்றதாகிய முத்தி' என்றபடி. தரும் பெருமானைத் தரப்படும் பயனாகவே உபசரித்துக் கூறினார்.

<u>**10.24.**முச்சொரூபம்</u>

ஏறிய வாறே மலம்ஐந் திடைஅடைந்
தாறிய ஞானம் சிவோகம் அடைந்திட்டு
வேறுமென் மேல்முச் சொரூபத்து வீடுற்றங்*(*கு*)*
ஈறதில் பண்டைப் பரன்உண்மை எய்துமே. ***#2436***

பெத்தம் தடத்தமாக, முத்தியே சொரூபம் ஆதலின், முன் அதிகாரத்தில் கூறிய மும்முத்திகளையே இவ்வதிகாரத்தில் 'முச்சொரூபம்' என ஏழு மந்திரங்களால் வேறொரு வகையாக விளக்குகின்றார். 'பெத்தம் தடத்தமே, முத்தியே சொரூபம்' என உணர்தலே இவ்வதிகாரத்தின்

பயன். (தடத்தம் - செயற்கை, சொரூபம் - இயற்கை.)
'ஆணவம், திரோதாயி, மாயை, மாயேயம், கன்மம்' என இவ்வாறு ஐந்து மலங்களும் ஆன்மாவை வந்து பற்றி, ஒன்று, இரண்டு, மூன்று', என இவ்வாறு தொகை மிகுந்த முறையிலே அவற்றினின்றும் ஒவ்வொன்றாக நீங்கி, முழுதும் விடுபட்ட ஆன்ம ஞானம், பின் 'சிவோகமஸ்மி' என்னும் அனுபவத்தைப் பெற்று, அதற்குப் பின்னும் மேலே மேலே சென்று முச்சொரூபமாகிய மும்முத்திகளைப் பெற்று, முடிவில் அநாதியான சொரூப சிவனை அடைந்து நலம் பெறும்.

விளக்கவுரை

மலம் ஐந்தும் ஏறிய முறையே நீங்குதலாவது, பிராரத்த கன்மம் நீங்க, அதனால் வந்த மாயேயம் நீங்குதலும், காரியமாகிய மாயேயம் நீங்கவே காரணமாகிய மாயையும் நீங்குதலும், கன்மம், மாயேயம், மாயை இவைகளைச் செலுத்தி நிற்பதே திரோதாயி ஆதலின் இம்மூன்றும் நீங்க, திரோதாயியாய் அவற்றைச் செலுத்தி நின்ற சத்தியும் அந்நிலை மாறி அருட் சத்தியாய் ஆன்ம அறிவிற் பதிதலும், அஃது அவ்வாறு பதியவே, ஆணவம் நீங்குதலுமாம்.
'ஏறிய மலம் ஐந்திடை அடைந்தவாறே ஆறிய ஞானம்' என்க. ஆறுதல் - தணிதல்; நீங்குதல். ஞானம், இங்கு ஆன்ம ஞானம். முன் அதிகாரத்தில் கூறப்பட்ட, 'சீவன் முத்தி, சிவமுத்தி, பர முத்தி' என்பனவே இவ்வதிகாரத்தில் ஆன்ம சொரூபம், சிவ சொரூபம், பர சொரூபம், என மூச்சொரூபங்களாக வைத்து உணர்த்தப்படுகின்றன. அவற்றுள் ஆன்ம சொரூபம், 'ஆறிய ஞானம்' என்பதனாலும், சிவ சொரூபம் 'சிவோகம் அடைந்திட்டு' என்பதனாலும், பர சொரூபம், பண்டைப்பரன் உண்மை எய்தும், என்பதனாலும் இங்கு உணர்த்த ப்பட்டன. தச, காரியத்துள் தத்துவரூபம் முதல் ஆன்ம தரிசனம் ஈறாக உள்ளவை ஆன்ம சொரூபமாகவும், சிவயோக சிவ போகங்கள் சிவ சொரூபமாகவும், பரமுத்தி நிலை பர சொரூபமாகவும் வைத்து உணர்த்தப்படுதல் அறிக. சிவ ரூபம் ஆன்ம தரிசனத்துள்ளும், ஆன்ம சுத்தியும், சிவ தரிசனமும் சிவபோகத்துள்ளும் அடங்கும்.
பின்வரும், 'பரன் உண்மை எய்துதலையும் உடன் வைத்து, 'முச் சொரூபத்து வீடுற்று' என்றார். பண்டு - அனாதி.
இதனால், 'முச்சொரூபமாவன இவை' என்பதும், அவற்றின் இயல்பும் கூறப்பட்டன.

மூன்றுள மாளிகை மூவர் இருப்பிடம்
மூன்றினில் முப்பதோ ராறு முதிர்வுள
மூன்றினினி னுள்ளே முளைத்தெழும் சோதியைக்
காண்டலும் காயக் கணக்கற்ற வாறே. ***#2437***

'சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்' என்னும் மூவகை உயிர்களுக்கும் மூன்றுவகையான மாளிகை போன்ற, 'பிராகிருத சரீரம், மாயேய சரீரம், வைந்தவ சரீரம்' என்னும் மூன்று வகையான உடம்புகள் இருப்பிடமாய் உள்ளன. அந்த மூன்று வகை உடம்புகட்குள்ளேதான் தத்துவங்களும் உள்ளன. அவ்வுடம்புகளில் ஒவ்வொன்றிலுமே 'ஆன்மா,சிவம், பரம்' என்னும் மூன்று ஒளிப்பொருள்களும் வெளிப்படுகின்றன. அவ்வொளிகளை நேரே உணரும் வாய்ப்பு உளதாயின், அதன்பின் மேற்கூறிய உடம்புகளுக் குள்ளே உயிர் இருக்க வேண்டிய விதி இல்லையாய்விடும்.

விளக்கவுரை

'மாளிகை மூவர்' என்பன உருவகங்கள். 'மூவர் இருப்பிடமாக மாளிகை மூன்று உளர்' என இயைக்க. முதிர்பு - வலுவடைதல். அஃதாவது உடம்பு அழிந்தாலும் தாம் அழியா திருத்தல். அத்தன்மை யுடையனவே தத்துவங்களாம் 'மூன்றினின் என்பதில் இன், வேண்டாவழிச் சாரியை, சோதி - ஒளி; என்றது அறிவை. காண்டல் ஆன்ம, சிவ, பர தரிசனம் செய்தலாம். தடத்த சிவத்தையே 'சிவம்' என்றும், சொரூப சிவத்தைப், 'பரம்' என்றும் நாயனார் இவ்விடங்களில் குறித்தருளுகின்றார். 'மூன்றுஎன்பதைச் சோதிக்கும் கூட்டி, 'மூன்று சோதியை' என உரைக்க. பரம் உடம்பினுள்ளே முளைத்தெழுதலாவது, 'ஞான நிலையாகிய நின்மல நிலைக்குமேல் பர நிலையில் அடையப்படும் ஞேயப்பொருள் உண்டு என்னும் உணர்வு தோன்றுதல். கணக்கு - கட்டளை, விதி. காயக் கணக்கு அறுதல் பிறப்பு அறுதலாம். பயனை, 'ஆறு' என்றார், 'அறத்து ஆறு இது என வேண்டா'l என்பதிற்போல. 'ஆறு' என்பதன் பின், 'உண்டாம்' என்னும் பொருட்டாகிய, 'ஆம்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. ஈற்றடி இன எதுகை பெற்றது.

இதனால், முச்சொரூபங்களையும் மூவகை உயிர்களும் தம் தம் உடம்பிற்றானே உணர்ந்து அடைதற்குரியன என்பது கூறப்பட்டது.

உலகம் புடைபெயர்ந்(து) ஊழியும் போன
நிலவும் சுடரொளி மூன்றும்ஒன் றாய
பலவும் பரிசோடு பான்மையுள் ஈசன்
அளவும் பெருமையும் ஆர்அறி வாரே. ***#2438***

உலகங்கள் எல்லாம் ஒடுக்க நிலையை எய்தி விட்டன. அதனால், உலகம் உள்ளளவும் இருந்த அந்த ஊழியும் போய், அடுத்த ஊழி வரும் நிலைமை தோன்றி விட்டது, உலகம் உள்ள பொழுது விளங்கிக்கொண்டிருந்த, 'ஞாயிறு, திங்கள் தீ' என்னும் முச்சுடர்களும் காரண நிலையில் ஒன்றாகி விட்டன. இவை போல எல்லாப் பொருள்களும் தம் தம் காரண நிலைகளை எய்தி விட்டன. ஆயினும்

பரமசிவன் முன் இருந்தவாறே இருக்கின்றான் என்றால், அவனது நீளத்தின் எல்லையையும், அகலத்தின் எல்லையையும் யார் அறிய வல்லார்!

விளக்கவுரை

'பெயர்ந்து' என்னும் எச்சம் எண்ணுப் பொருளில் வந்தது. 'போயினது' என்பது, 'போன' எனக் குறைந்து நின்றது. ஆய - ஆயின. பரிசு - தன்மை. காரியத்தில் தூலமாய்க் காணப்படும் இயல்புகள் காரணத்தில் சூக்குமமாய்க் காணப்படாது நிற்கும் ஆதலின் அங்ஙனம் நிற்பவனவற்றை, 'தன்மை' என்றார். பான்மை - பகுதி; என்றது காரணப் பகுதிகளை, 'பான்மையுள்' என்பதன்பின், 'ஆயின' என என்னும் சொல்லெச்சம் வருவித்துக்கொள்க. நீள அகலங்கள் காலம் பற்றியும், இடம் பற்றியும் கொள்ளப்படும். பரம் பொருள், 'நித்தியம்' ஆதலின் கால அளவைக் கடந்ததும், எல்லாப் பொருளும் தன்னில் வியாப்பியமாய் நிற்க, தான் எல்லாவற்றிற்கும் வியாபகமாய் நிற்றலின் இடத்தைக் கடந்ததும் ஆயிற்று, அவற்றையே, 'அளவும், பெருமையும் ஆர் அறிவார்' என்றார். 'ஆர் அறிவார் அவ் அகலமும் நீளமும்'* என முன்னருங் கூறினார். 'நீள அகலம் உடையாய் போற்றி'* என்றதும், ஏனையெல்லாப் பொருட்கும் வியாபகமாய் நிற்றலையே குறித்தது. இதிலும் ஈற்றடி இன எதுகை பெற்றது.
இதனால் முச்சொரூபங்களுள் பர சொரூபத்தின் பெருமை விளக்கப்பட்டது.

பெருவாய் முதல் எண்ணும் பேதமே பேதித்*(து)*
அருவாய் உருவாய் அருவுரு வாகிக்
குருவாய் வரும்சத்தி கோன்உயிர்ப் பன்மை
உருவாய் உடன்இருந்*(து)* ஒன்றாய் அன் றாமே. ***#2439***

மகா மாயையை முதலாக வைத்து எண்ணுகின்ற காரணங்களையும், அவற்றின் காரியங்களையும் வேறு வேறு வகைபடத் தோற்றுவித்து, அவற்றை அங்ஙனம் செய்தற்கு ஏற்ற 'அருவம், உருவம், அருவுருவம்' என்னும் மூவகைத் திருமேனிகளைக் கொண்டு, மூவகை நிலையில் நின்று, முடிவில் குருவாகியும் வந்து ஆட்கொள்கின்ற அருளாளனாகிய சிவன், அளவில்லாத உயிர்களிலும் அவ்வவற் -றோடும் சேர்ந்து உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனாயும், கலப்பினால் ஒன்றாயும், பொருள் தன்மையால் வேறாயும் உள்ளான்.

விளக்கவுரை

'வாய்' என்பது 'வாயில்' என்னும் பொருட்டாய், 'காரணம்' எனப் பொருள் தந்தது. உலகத்திற்கு உரிய முதற் காரணங்களில், 'மகா மாயை'

எனப்படும் சுத்த மாயையே பெரிதாகலின் அதனைப் 'பெருவாய்' என்றார். 'முதலாக' என ஆக்கம் வருவித்துக் கொள்க. அதனை முதலாக வைத்து எண்ணுமாறு 'மகா மாயை, மாயை, பிரகிருதி' என இம்முறையால் எண்ணுதலாம். பேதம் வகை. காரணங்கள் இயல்பிலே வேறுபட்டிருப்பினும், அவ் வேற்றுமையை உயிர்களின் தகுதி வேறுபாடுகளுக்கு ஏற்பப் பொருத்துதலின், அங்ஙனம் பொருத்துதலையே காரணங்களையும் சிவனே பேதித்ததாகக் கூறினார். காரண வேறு பாட்டிற்கு ஏற்பக் காரியங்களை வேறு வேறாகச் செய்பவன் சிவனே யாதல் தெளிவு. செய்யுள் நோக்கி, அருவுருவம் இறுதியில் வைக்கப்பட்டது. அருவம் முதலிய மூவகைத் திருமேனிகளின் நிலை, 'இலயம், போகம், அதிகாரம்' என்பனவாம் என்பது மேலெல்லாம் சொல்லப்பட்டது. 'உடனாய், ஒன்றாய்,வேறாய் இருத்தலே அத்துவிதமாய் இருத்தலாம்' என்பது சித்தாந்தம் ஆதல் வெளிப்படை.

'உலகெலா மாகி வேறாய்
உடனுமாய்'*3*

என்பது சிவஞானசித்தி.

'ஈறாய், முதல் ஒன்றாய், இரு பெண் ஆண், குணம் மூன்றாய்,
மாறாமறை நான்காய், வரு பூதம் அவை ஐந்தாய்
ஆறார்சுவை, ஏழோசையொடு, எட்டுத்திசை தானாய்,
வேறாய், உடன் ஆனான் இடம் வீழிம்மிழ லையே'*1*

என்னும் திருமுறைத் திமொழியும்,

'ஈறாகி அங்கே, முதல்ஒன்றாய் ஈங்கிரண்டாய்,
மாறாத எண்வகையாய், மற்றிவற்றின் - வேறாய்
உடனாய் இருக்கும் உருவுடைமை யென்றும்
கடனாய் இருக்கின்றான் காண்'*8*

என அதனை எடுத்துக்காட்டி நிறுவிய சாத்திர யாப்பும் கண்டுணரற் பாலன. சத்தி கோன் சத்திக்குத் தலைவன். ஞானேச்சாக் கிரியா சத்திகளைக் கொண்டு செயலாற்றும் முதல்வன் 'பதி' எனப்படுபவன் இவனே. இந்நிலை தடத்தமேயாகலின் இவனை இங்கு, 'சிவன்' எனக் கொள்க. 'பன்மையில்' என உருபு விரிக்க. ஈற்றில் 'உருவாய்' என்றது, உயிர்தோறும் தனித்தனிப் 'பொருந்தும் பொருளாய்' என்றபடி. இதனால், முச்சொரூபத்துள் சிவ சொரூபத்தின் இயல்புகள் வகுத்துரைக்கப்பட்டன.

மணிஒளி சோபை இலக்கணம் வாய்த்து
அணியென லாய்நின்ற ஆறது போலத்
தணிமுச் சொருபாதி சத்தியால் சாரப்
பணிவித்த பேர்நந்தி பாதம்பற் றாயே. ***#2440***

இரத்தினங்கள் நிறம், ஒளி, வடிவம் என்பவற்றைப் பெற்றுப் பல அணிகலங்களாய் நிற்கும் முறைமை போலத் தான் 'பரம், சிவம், ஆன்மா' என்னும் முச்சொரூபத்தை யுடையதாகி அந் நிலைகளில் தனது சத்தியால் சீவனும் அடங்கித் தோன்றும்படி செய்த, 'நந்தி' என்னும் பெயரையுடைய அந்த முதல்வனது திருவடிகளையே பற்றாகப் பற்றி உய்வாயாக.

விளக்கவுரை

பரம் - சொரூப சிவம். அதன் வடிவம் அகண்டமாய் இருத்தல் பின்னர்க் கண்டமாய் உள்ள வடிவத்தைக் கூறுதலின் அதனோடு ஒப்ப அகண்டத்தையும் 'வடிவம்' என்றார். 'இலக்கணம்' என்றது வடிவத்தை. சிவம் - சதாசிவன், மகேசுரன் ஆகிய தடத்த சிவங்கள். இனிச் சிவமே ஆன்ம சொரூபமாய் நிற்றலாவது சீவனில் அதுவேயாய்க் கலந்து நிற்றல். 'பர சொரூபம் சிவ சொரூபமாயும் ஆன்ம சொரூபமாயும் நிற்றல் ஆதி சத்தியால் என்றபடி 'ஆதி சத்தியால்' என்பதன் பின், 'அவற்றில்' என்பது வருவிக்க.

இதனால், 'ஒரு பெரும் பொருளே தனது சத்தியால் முச்சொரூபமாய் நின்று உயிர்களை உய்விக்கின்றது' என்பது கூறப்பட்டது.

கல்லொளி மாநிறம் சோபைக் கதிர்தட்டல்
நல்ல மணிஒன்றில் நாடில்ஒண் முப்பதம்
சொல்லறு பாழில் சொல்லறு பேர்உரைத்*(து)*
அல்லறு முத்திராந் தத்தனு பூதியே. ***#2441***

பிற மணிகளில் 'ஒளி' என்றும், 'நிறம்' என்றும் 'சோபை' என்றும் இங்ஙனம் பல பெயர்களால் சொல்லப்பட்டு விளங்குகின்ற கதிர்கள் ஒரு படிக மணியிலே பொருந்த, அப்படிக மணிவேறு பல மணிகளாய்க் காட்சியளிப்பது போன்றதே 'தத்துமசி' மகாவாக்கியத்தால் உபதேசிக்கப்படும் பொருள். அஃதாவது, 'உயிர் சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடையது ஆதலின், பாசத்தைச் சார்ந்து பாசமாய் இருந்த நீ, அந்நிலை நீங்கிச் சிவத்தைச் சார்ந்து சிவம் ஆகிறாய்' என்பதாம். (சீவன் பாசமாய் இருந்த நிலை சொல்லால் சொல்லப்படும். அஃது அந்நிலையினின்றும் நீங்கிச் சிவமாகிய நிலை) சொல்லால் சொல்ல வாராது, முத்தி பஞ்சக்கரமும் மொழியாய் இராது அனுபவமான ஒளி நிலையாகும். இது முப்பாழும் கடந்த நிலையும், குரு பஞ்சாக்கரத்தை உபதேசித்து, சின்முத்திரையால் அஞ் ஞானத்தைப் போக்கி, மெய்ஞ்ஞானத்தை உணர்த்திய முடிந்த நிலையும் ஆகும்.

விளக்கவுரை

'நல்ல மணி' என்றது சார்ந்ததன் வண்ணமாம் இயல்பால் சாரப்பட்ட பல

மணிகளாய் விளங்கும் மணி: என்றது படிக மணியை. ஆகவே, 'கல்' என்றது பிற மணிகளையாயிற்று. கதிரின் இயல்பை இனிது விளக்குவார் அதனைப் பல பெயர்களால் குறித்தார். 'தட்ட' என்பதை 'ஒன்றின்' என்பதன் பின்னர்க் கூட்டுக, முப்பதம் - முப்பதப் பொருள். இது சொல்லாகுபெயர். இதன்பின், 'ஆம்' என்பது எஞ்சி நின்றது. அல் - இருள். அல் அறுத்ததைக் கூறவே, ஒளியை வழங்கியதும் தானே பெறப்பட்டது. அறு முத்திரை, 'அறுத்த முத்திரை' எனப் பிறவினை வினைத்தொகை. 'உரைத்த அறுத்த' என்பதற்கு. 'குரு' என்னும் எழுவாய் வருவித்துக்கொள்க.

இதனுள், 'முச்சொரூபத்துள் முடிவான பர சொரூபத்தை குரு உபதேசத்தின் வழி அடைதலே முடிநிலைப் பயன் என்பது கூறப்பட்டது.

உடந்தசெந் தாமரை யுள்ளூறு சோதி
நடந்தசெந் தாமரை நாதம் தகைந்தால்
அடைந்த பயோதரி அட்டி அடைத்த
இடந்தரு வாசலை மேல்திற வீரே. ***#2442***

வரிசையாய் அமைந்துள்ள செந்தாமரை மலர்களின் பல்வேறு வகையாய்க் காட்சியளிக்கின்ற இறைவனை மூலாதாரத்தி னின்றும் எழுந்து மேல்நோக்கி நடக்கின்ற அனல் நாதாந்தத்திலே நிறுத்திக்காட்ட, அதனால், அவ்விடத்தை அடைந்த பால் ஒழுகும் தனங்களையுடைய பெருமாட்டி அடைத்து வைத்திருக்கின்ற விசாலமான மேல் வாசலைத் திறக்கும் உபாயம் அறிந்து திறவுங்கள்.

விளக்கவுரை

'அப்பொழுது அவ்வத் தாமரை அளவில் அடங்கித் தோன்றிய இறைவன், எல்லையில் பேரொளியாய்க் காட்சி யளிப்பான்' என்பது குறிப்பெச்சம். 'அக்காட்சி சிவ சொரூபக் காட்சி யாகும்' என்பதும், அதனைக் கண்டால் பர சொரூபத்தைக் காணுதல் கூடும் என்பதும் இதன் உட்கருத்துக்களாகும்.

ஒன்றையொன்று சார்ந்திருப்பதை, உடந்தையாய் இருப்பது, என்றல் வழக்கு. 'உடந்தை' என்பது உடந்த' என நின்றது. ஒற்று மிகாமையும் இத்திரிபு நோக்கியேயாம் பின் வந்த 'செந்தாமரை' என்பது அது போலும் தீயைக் குறித்தது உடந்த செந்தாமரை ஆறு ஆதாரங்கள். தீ, மூலாக்கினி. 'நாதத்தில் தகைந்தால்' என்க. தகைதல் - தடுத்தல். 'தகைந்ததால்' என்பது குறைந்து நின்றது. 'சோதியைத் தகைந்ததால்' என இயைக்க. பயோதரி, குண்டலி, சத்தி, அட்டி அடைத்தல் இறுக மூடிவைத்தல் மேல் வாசல் துவாதாசாந்தத்திற் செல்லும் வழி. அஃது உச்சித் துளையாம். அதனைத் திறத்தலாவது, உணர்வு அதனைக் கடந்து செல்லும் இயல்பினை அடைதல் 'மேல் வாசலை' என மொழி மாற்றி

யுரைக்க.
இதனால், சிவசொரூப பர சொரூபங்களை அடைதற்கு உபாயம் கூறி முடிக்கப்பட்டது.

10.25. முக்கரணம்

இடன்ஒரு மூன்றில் இயைந்த ஒருவன்
கடன்உறும் அவ்வுறு வேறெனக் காணும்
திடமது போலச் சிவபர சீவர்
உடனுறை பேதமும் ஒன்றென லாமே. ***#2443***

உயிர் சகலாவத்தையில் தத்துவங்களோடு கூடி 'சீவான்மா' எனப் பெயர் பெற்று நிற்பினும் அது தத்துவங்களின் வேறாதல்போல்வதும், நின்மலாவத்தையில் தத்துவங்களின் நீங்கி வாக்குகளின் வடிவாய் நிற்குமிடத்து 'அந்தரான்மா' எனப்பெயர் பெற்று நிற்பினும் அது வாக்குகளின் வேறாதல் போல்வதும் பரா வத்தையில் பரத்தோடு கூடிப் பரான்மா எனப் பெயர் பெற்று நிற்பினும் அது பரத்தின் வேறாதல் போல்வதுந்தாம். பரம் பொருள் சீவான் மாவில் நிறைந்து 'சிவம்' என நிற்பினும் அது சிவனின் வேறாதலும், பரான்மாவில் நிறைந்து 'பரம்' என நிற்பினும் அது பரான்மாவின் வேறாதலும்.

விளக்கவுரை

எனவே, 'பராமான்மாவும், சீவான்மாவும் எவ்வாற் றானும் ஒன்றாதல் இல்லை' என்பதே இதனால் சொல்லப்பட்டதாம். அவத்தைகளே இங்கு 'இடம்' எனப்பட்டன. 'ஒருவன்' என்பது 'புருடன்' என்னும் பொருட்டாய், உயிரைக் குறித்தது. 'உரு' என்றது, தனக்கு வேறாய பொருள்' என்றவாறு அவற்றை உயிர், 'தன்னின் வேறு' எனக் காணுதல் ஞானத்தினாலாம். ஆகவே, அந்த ஞானத்தினாற்றானே உயிர் பரத்தையும் 'தன்னின் வேறு' என உணர்தல் வேண்டும் என்பதாம். அவ்வாறு உணரும் உணர்வே பதிஞானத்தைத் தரும். அவ்வாறின்றி, உயிர் தன்னையே பரமாகக் காணுதல் மல வாசனை பற்றி நிகழும் பசுஞானமாம். 'ஒன்று எனலாம்' என்றது, 'வேறாக உணரப் படுதலால் ஒரு தன்மையவாம்' என்றபடி. 'திடமது போலப் பேதமும் ஒன்றெனலாம்' என இயைக்க. அது பகுதிப் பொருள் விகுதி.
இதில் உணர்த்தப்பட்ட பொருள் முன்பே சொல்லப்பட்டது.

ஒளியை ஒளிசெய்து ஓம்என் றெழுப்பி
வளியை வளிசெய்து வாய்த்திட வாங்கி
வெளியை வெளிசெய்து மேல்எழ வைத்துத்
தெளியத் தெளியும் சிவபதந் தானே. ***#2444***

பொருள்களை மாறாக உணரும் மயக்கத்தை நீக்கி உள்ளவாறுணரும்

தெளிவைத் தருதலால் குண்டலி சத்தி ஒளியெனத் தக்கது. அதனை உலகர் இருளாக்கி வைத்துள்ளனர். அவ்வாறில்லாது அதனை ஒளியாகவே விளங்கும்படிச் செய்தல் வேண்டும். அது பிராணாயாமத்தால் மூலாக்கினியை எழுப்புதலால் உண்டாகும். அஃது உண்டாகும் பொழுதுதான் 'வெறுங் காற்று' எனப்படுகின்ற மூச்சு சூரிய சந்திர கலைகளாம் சிறப்பு வளியாகும். அதனை அவ்வாறு செய்து, பயன் கிட்டும்படி கும்பகத்தால் சேமித்து, அதனானே சுழு முனை வழி வழியாயில்லாமல் அடைத்தும், உச்சியில் அருள் ஞானம் விளங்குகின்ற இடம் இடமாய் இல்லாமல் பாழ்படுத்தியும் வைத்திருக்கின்ற நிலையை மாற்றி வழியாகவும், இடமாகவும் செய்து குண்டலியை 'ஓம்' என்று எழுப்பி மேற்போய் உலாவச் செய்து தெளி வுணர்வைப் பெற்றால், சிவ சீவர்களது உண்மை நிலை விளங்கும்.

விளக்கவுரை

'ஓம்' என்று எழுப்பி - என்றதனால், இவ்யோகம் பிரணவயோகமாதல் விளங்கும்.
இதனால், மேற்சொல்லப்பட்ட சிவ பர சீவர் பேதம் விளங்குதற்கு வழி கூறப்பட்டது.

முக்கா ரணங்களின் மூர்ச்சை தீர்த்(து) ஆவதக்
கைக்கா ரணமென்னத் தந்தனன் காண்நந்தி
மிக்க மனோன்மனி வேறே தனித்தேக
ஒக்கும்அ துன்மனி ஓதுட் சமாதியே. ***#2445***

ஆறாதாரங்களில் மணிபூரகம், அனாகதம் ஆஞ்ஞை என்னும் மூன்று ஆதாரங்கள் சிறப்புடையன. சுவாதிட்டத் தினின்றும் எழுகின்ற பிராணன் 'உதானன்' எனப் பெயர் பெற்று மேலோங்கி இவ்விடங்களில் சென்று ஆஞ்ஞையில் முடியும். அவ்வாறு முடியும்படி அதனை முடித்த பின்பு அவ்வாறு முடித்ததனால் உண்டாகும் பயனைக் கைம்மேற் பலனாக எமக்கு எம் ஆசிரியர் நந்தி பெருமான் அளித்தருளினார். அப்பயன் தான் யாதெனில், ஆஞ்ஞையில் விளங்கிய மனோன்மணி சத்தி அதற்கு மேலே வியாபினி சமனை உன்மனைகளாய்ச் செல்ல, உன்மனாந்தத்தில் சிவத்தோடு ஒன்றும் சமாதி நிலையாம்.

விளக்கவுரை

'காரணம்' இரண்டில் முன்னது இடத்தையும், பின்னது காரணத்தினால் விளைவதாகிய பயனையும் குறித்தன. தீர்த்தல் - முடித்தல். 'தீர்த்து, அதனால் ஆவதாகிய அப்பயனைத் தந்தனன் நந்தி' என்க. காண், முன்னிலையசை. ஏக ஒக்கும் அது - செல்லும் நிலையில் முடியும் நிலையாகின்ற அது, 'உன் மனியாம்' என்க. 'உள்' என்றது நுட்பத்தை.

இது, பொது யோக சமாதியாகாது, பிராசாத யோக சமாதி யாகலின், 'உட்சமாதி' என்றார்.
இதனால், முன் மந்திரத்தில், 'ஓம்' - என்று எழுப்பி மேல் எழ வைத்ததலால் பயன் விளைதல் இவ்வாறு என்பது கூறப்பட்டது.

*10.26.*முச்சூனிய தொந்தத்தசி

தற்பதம்தொம்பதம் தானாம் அசிபதம்
தொற்பதம் மூன்றும் துரியத்துத் தோற்றவே
நிற்பது உயிர்பரம் நிகழ்சிவ மும் மூன்றின்
சொற்பத மாகும் தொந்தத் தசியே. ***#2446***

துவம் தத், அசி, என்னும் மூன்று சொற்கள் தொன்மை -யான வேதத்தில் சொல்லப்பட்டனவாகும். இவை உலகியலில் தோன்றுதல் போலாது யோக துரியம். நின்மலதுரியம், பரதுரியம் ஆகிய முத்துரியங்களில் உணர்வின்கண் தோன்றும் பொழுது அவை முறையே சீவ அறுதியும், பர அறுதியும், சிவ அறுதியுமாய் நிற்கும்.

விளக்கவுரை

'சிவம்' என்பது அருளையும் 'பரம்' என்பது ஆனந்தத் -தையும் குறிக்கும் நிற்பது, தொழிற்பெயர். ஈற்றில் உள்ள பதம் நிலை, முடிநிலை. 'உயிர், பரம்' என்பவற்றிலும் எண்ணும்மை விரிக்க. ஈற்றில் உள்ள 'தொந்தத்தசி' என்பதை, 'மூன்றின்' என்பதற்கு முன்னே கூட்டி, 'ஆம்' அம்மூன்றின், எனச் சுட்டு வருவித்துரைக்க. சிறப்பு நோக்கி, 'அசி' என்பதை மட்டும் 'முன்னர், தான் ஆம் அசி' என்றார்.
இதனால், 'முச்சூனியம் ஆவன இவை' என்பதும், அவை தோன்றும் இடங்களும் கூறப்பட்டன.

தொந்தத் தசிமூன்றில் தொல்கா மியமாதி
தொந்தத் தசிமூன்றில் தொல்தா மதமாதி
வந்த மலம்குணம் மாளல் சிவம் தோன்ற
இந்துவின் முன்இருள் நீங்குதல் ஒக்குமே. ***#2447***

முன் மந்திரத்தில் கூறிய மூன்று அறுதிகளுள் தொம்பத அறுதியில் (சீவ அறுதியில்) மாயா - மலமும், தற்பத அறுதியில் பர அறுதியில்) ஆணவ மலமும், அசிபத அறுதியில் (சிவ அறுதியில்) கன்ம மலமும் நீங்கும். அவ்வாறே அம்மூன்று அறுதிகளிலும் முறையே இராசதம், சாத்துவீகம் தாமதம் என்னும் குறைகள் நீங்கும். இவ்வாறு மூவறுதியில் மும்மலங்களும், முக்குணங் களும் நீங்குதல் நிலாவின் முன் இருள் நீங்குதலை ஒக்கும்.

விளக்கவுரை

'மூன்றில்' என்பன இரண்டும், 'மூன்று அறுதிகளில்' என்றபடி. 'காமியம்

ஆதி' என்பதை, 'காமியம், ஆணவம், மாயை என்றவாறாகக் கொண்டு, அவற்றை எதிர் நிரல்நிறையாகப் பொருத்துக தாமதமாதி முக்குணங்களை ஏற்ற பெற்றியால் பொருத்திக் கொள்க. 'சிவம் தோன்ற' என்பதை 'மலம் குணம் மாளல்' என்பதற்கு முன்னே கூட்டுக. 'ஆதி' என்பதன் பின், 'நீங்கும்' என்பது வருவிக்க.

இதனால், முச்சூனியங்களில் நிகழ்வன சில கூறப்பட்டன.

தொந்தத் தசிய வாசியில் தோற்றியே
அந்த முறைஈரைந் தாக மதித்திட்டு
அந்த மிலாத அவத்தைஅவ் வாக்கியத்*(து)*
உந்து முறையில் சிவ முன்வைத் தோதிடே. *#2448*

'தொம், தத், அசி' என்னும் மூன்று பதங்களையும் முத்தி பஞ்சாக்கர மூன்றெழுத்துக்களில் முறையே யகார சிகார வகாரங் -களில் வைத்து அந்த முறையிற்றானே தூல பஞ்சாக்கரம் ஐந்தும், சூக்கும பஞ்சாக்கரம் ஐந்தும் அடங்கியிருப்பதாகக் கொண்டு அதனையே அழிவில்லாத யோகாவத்தை நின்மலாவத்தை பராவத்தைகளில் 'தொந்ததசி' வாக்கியமாகச் சிகார வகாரங்களை முன் வைத்து உச்சரி.

விளக்கவுரை

'அவத்தையில்' எனவும், 'அவ்வாக்கியத்தை' எனவும் அவ்வவ்வுருபினை விரிக்க. 'ஓதினால் முச்சூனியமும் விளையும்' என்பது குறிப்பெச்சம். இதனால், திருவைந்தெழுத்து மந்திரமே தத்துவமசி மகா வாக்கியமாய் முச்சூனியங்களைத் தருதல் கூறப்பட்டது.

வைத்துச் சிவத்தை மதிசொரூ பானந்தத்து
உய்த்துப் பிரணவ மாம்உப தேசத்தை
மெய்த்த இதயத்து விட்டிடு மெய்யுணர்ந்து
அத்தற் கடிமை அடைந்துநின் றாயே. *#2449*

முன் மந்திரத்திற் கூறியவாறு முத்தி பஞ்சாக்கரத்தை சிவ முன்னாக வைத்து உணர்வைப் பர சொரூபமாகிய ஆனந்த நிலையிற் செலுத்தி அதனோடே பிரணவமாகிய அந்த உபதேச மந்திரத் -தையும் அவ்வாறே உள்ளத்தில் சேர்ப்பி, சேர்ப்பித்தால், அப்பொழுதே நீ மெய்யுணர்வைப் பெற்றுச் சிவனுக்கு அடிமையாகி விடுவை.

விளக்கவுரை

முன்மந்திரத்தை அடுத்து அந்தாதியாக 'வைத்து' என்றனால், 'முன் வைத்து' என்றதாயிற்று. பிரணவத்தையும் அவ்வாறாகி வைக்கும் முறை பின்னர்க் கூறப்படும். தெளிவு பற்றி எதிர்காலம் இறந்த காலமாயிற்று. இதனால், பிரணவமும், தத்துவமசி, முத்திபஞ்சாக்கரம் இவை போல முச்சூனியத்தைத் தரும்' என்பது கூறப்பட்டது. 'சிவத்தை முன் வைத்து'

என்றது அனுவாதம்.

தொம்பதம் மாயையுள் தோன்றிடும் தற்பதம்
அம்பரை தன்னில் உதிக்கும் அசிபதம்
நம்புறு சாந்தியில் நண்ணும் அவ்வாக்கிய
உம்பர் உரைதொந்தத் தசி வா சியாவே. *#2450*

'தத்துவமசி' மகாவாக்கியத்தில் 'துவம்' பதப்பொரு ளாகிய சீவன் உயிர் தத்துவங்களையே 'தான்' என மயங்கும் மயக்கம் மாயையால் தோன்றுவதாகும். தற்பதப் பொருளாகிய பதி ஐந்தொழில் செய்தற் பொருட்டுப் பரா சத்தியினின்றும் சிவமாகித் தோன்றும் சீவன் சிவமாதலைத் தெரிவிப்பதாகிய 'அசி' பதப்பொருள் உயிர் அனைத்துப் பாசங்களினின்றும் நீங்கித் தூயதாய நிலையில் தோன்றும். இனி, 'தத்துவமசி' மகா வாக்கியத்தில் உள்ள 'அசி, தத், துவம்' என்னும் முப்பதங்களும் முத்தி பஞ்சாக்கரத்தில் முறையே 'வா,சி,ய' மூன்றெழுத்துக்களில் அடங்கும்.

விளக்கவுரை

எனவே, தத்துவமசி மகாவாக்கியப் பயிற்சியின் பயனாகிய முச்சூனியங்களை முத்தி பஞ்சாக்கரப் பயிற்சியே தரும்' என்பது குறிப்பெச்சம். 'பதம்' மூன்றும் அவற்றின் பொருளைக் குறித்த சொல்லாகு பெயர்களாம். நம்புதல், விரும்புதல் தூய்மையை, 'சாந்தி' என்றார். உம்பர் உரை, தொன்மை மொழி ஈற்றில் யகர உயிர்மெய் செய்யுள் நோக்கி நீட்டல் பெற்றது.

இதனால், முத்தி பஞ்சாக்கரம், 'தத்துவமசி' இவற்றின் பொருள் தோன்றுமாறு கூறப்பட்டது.

ஆகிய அச்சோயம் தேவதத் தின்இடத்து
ஆகி யவைவிட்டால் காயம் உபாதானம்
ஏகிய தொம் '*தத் தசி*' என்ப மெய்யறி
வாகிய சீவன் பரசிவ னாமே. *#2451*

'சோயம் தேவதத்தன்' என்பது 'தேவதத்தனாகிய அவனே இவன்' என்பது இதன் பொருள். ஒரு வடமொழி உதாரணம். இதன் விளக்கம் இல்லற நிலையில் அதற்குரிய கோலமும், உடையும், பெயருமுடையவனாய் இருந்த ஒருவன் அவற்றையெல்லாம் விடுத்துத் துறவியாகி, அதற்குரிய கோலம், தண்டு கமண்டலம், வேறு பெயர் ஆகியவற்றைக் கொண்டால், 'அவன்' எனப்பட்ட நிலையில் அவனிடம் இருந்த சேர்க்கைப் பொருள்களையெல்லாம் விடுத்து, அவற்றை உடையவனாய் இருந்த அவனை மட்டுமே கொண்டு, 'இவன்' எனச் சுட்டுதல் போல்வதே 'சீவன் சிவமாகிறது' என்றலும் - என்பது அஃதாவது பசுத்துவத்தால் 'சீவன்' எனப்படுகின்ற உயிர்

அப்பசுதுவத்தின் நீங்கித் தூயதாகிய நடுநிலையிலேதான் சிவனைச் சார்ந்து சிவமாகின்றது என்பதாம்.

விளக்கவுரை

ஆகிய - இயற்சொல்லாகாது, ஆக்கச் சொல்லாய் அமைந்த அகரச்சுட்டு 'சோயம் தேவத்தன்' என்னும் தொடர் முழு வதையும் சுட்டிற்று. 'இடத்து' என்பது ஏழாம் வேற்றுமை பொருட்டாய் நின்றது. ஆகியவை - சேர்க்கைப் பொருளாகச் சேர்ந்துள்ளவை. 'விட்டாற்போல' என உவம உருபு விரிக்க. 'காயம் முதலிய' என ஒரு சொல் வருவிக்க. ஏகிய - நீங்கிய. 'ஏகிய' 'தொம்' என்பதையே - தத் அசி - என்ப' என முடிக்க. இங்ஙனம் கூறிய வற்றின் விளக்கமாகேவே, 'மெய்யறிவாகிய சீவன் பரசிவன் ஆமே' என்பது கூறப்பட்டது. சீவனே என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுக்கப் பட்டது. 'மெய்யறிவாகிய சீவன்' என்றதனால், அது பொய்யறி வாகிய உடம்பு முதலியவற்றின் நீங்கினமை பெறப்பட்டது. இவ்வாறு பொருள் கொள்ளுதல் விட்டு விடாத 'லக்கணை' எனப்படும். இலக்கணை பின்பு விளக்கப்படும்.

'சோயம் தேவதத்தன்' என்னும் இவ்வுதாரணத்திற்கு ஏகான்ம வாதிகள் தரும் விளக்கம், 'இல்லறத்தானாய் இருந்தவன் எவனோ அவனேதான் துறவியானவனும்; வேறொருவனல்லன்; அதுபோலத் -தான் சீவனும், பிரமமும் வேறாகாததும்' என்பது. துறவிக்கும் இல்லறத்தானுக்குப் போலக் கோலமும், உடைமையும் ஒழுக்கமும் உள்ளன ஆகலின், அவற்றைப் பெற்றவனே துறவியாதல் நினைக்கத் தக்கது.

இதனால், முச்சூனிய நிலை உவமையில் வைத்து விளக்கப் பட்டது.

தாமத காமிய மாதி தகுகுணம்
ஆம்மலம் மூன்றும் அகரா உகாரத்தோடு
ஆம்அறும் அவ்வும்உவ்வும் மவ்வாய் உடல்மூன்றினில்
தாம்ஆம் துரியமும் தொம்தத் தசியதே. ***#2452***

முக்குணங்களும், மும்மலங்களும் 'அ, உ, ம' என்னும் பிரணவ கலைகள் செயற்படில் செயற்படும்; ஒடுங்கில் ஒடுங்கும். அச்செயற்பாடு ஒடுக்கங்களும் மூவகை உடம்பின் கண் நிகழும் 'தொம், தத், அசி' என்னும் முப்பதங்களின் சூனியங்களும் அவ்வாறேயாம். அஃதாவது 'முச்சூனியங்கள் நின்மல துரியத்தில் நிகழும்' என்பதாம்.

விளக்கவுரை

'தாமத மாதி குணம், காமியமாதி மலம்' எனக் கூட்டுக. 'மூன்றில்' என்பதன் பின் 'நிகழும்' என்பது வருவிக்க. உடல் மூன்று, இவ்வதிகாரத் தொடக்கத்தில் சொல்லப்பட்டன. தாம் ஆம் துரியம் - ஆன்மாச் சுத்தி பெற்ற நின்மல துரியம் 'தொம் தத், அசி' என்பன அவற்றின்

சூனியங்களைக் குறித்தன.
இதனால், முச்சூனியங்களின் இயல்புகள் தொகுத்துக்கூறி முடிக்கப்பட்டன. இவற்றால் இவை பிராசாத யோகத்தில் சொல்லப்படும் சூனியங்கள் ஆகாமை விளங்கும்.

***10.27.*முப்பாழ்**

காரியம் ஏழ்கண் டறும்மாயப் பாழ்விடக்
காரணம் ஏழ்கண் டறும்போதப் பாழ் விடக்
காரிய காரண வாதனை கண்டறும்
சீர் உப சாந்தம் முப் பாழ்விடத் தீருமே. ***#2453***

காரிய தத்துவங்களாகிய தூல உடம்பு, தூல பூதம், சூக்கும பூதம், ஞானேந்திரியம், கன்மேந்திரியம், அந்தக்கரணம், பிரகிருதி ஆகிய ஏழினையும் தன்னின் வேறாகக் கண்டு அவற்றின் நீங்கிய நிலை 'மாயப் பாழ்' எனப்படும். அதைக் கடந்து காரண தத்துவங்களாகிய வித்தியா தத்துவம் ஏழினையும் தன்னின் வேறாகக் கண்டு நீங்கிய நிலை 'போதப் பாழ்' எனப்படும். அதைக் கடந்து முன் நீங்கியவற்றின் வாசனை உளதாகிய சுத்த தத்துவங்களையும் வேறாகக் கண்டு கடந்த நிலை 'உபசாந்தம்' எனப்படும் இதனையும் கடந்த நிலையே பந்தம் முழுதும் நீங்கிய வீட்டு நிலையாம்.

விளக்கவுரை

போதப்பாழ், 'சீவப்பாழ்' என்றும், உபசாந்தம், வியோமப் பாழ்' என்றும் சொல்லப்படுதலை வருகின்ற மந்திரத்தில் காண்க. ஆன்ம தத்துவம் வித்தியா தத்துவத்தின் காரியம் ஆதல் பற்றி அவற்றைக் 'காரியம் ஏழ்' எனவும், அவை போல வித்தியா தத்துவம் வேறு தத்துவத்தின் காரியம் ஆகாது ஆன்ம தத்துவத்திற்குக் காரண மாகியே நிற்றல் பற்றி அவற்றை, 'காரணம் ஏழ்' என்றும், அதற்கு மேல் நீங்க வேண்டுவன இன்மையின் அந்நிலையை, 'உபசாந்தம்' என்றும் கூறினார். தீர்தற்கு, 'பந்தம்' என்னும் எழுவாய் வருவிக்க.
இதனால், 'முப்பாழாவன இவை' என்பதும், அவற்றின் இயல்புகளும் கூறப்பட்டன.

மாயப் பாழ் சீவன் வியோமப்பாழ் மன்பரன்
சேயமுப் பாழ்எனச் சிவசக்தி யில்சீவன்
ஆய வியாத்தம் எனும்முப்பாழ் ஆம் அந்தத்
தூய சொரூபத்தில் சொல்முடி வாகுமே. ***#2454***

மாயப் பாழ், சீவப் பாழ், வியோமப் பாழ் ஆகிய மூன்றும், 'நிலைபெற்ற பரம் பொருளைப்போல மிக மேம்பட்ட நிலை' என்று சொல்லப்பட மற்றும் அவையே, 'சீவன் சிவனது திருவருளில் அடங்கி நிற்கும்

முப்பாழ்' என்றும் சொல்லப்படும். மிகத் தூயதாகிய உண்மை நிலை, அப், 'பாழ்' என்னும் பெயரும் அற்ற இடமாகும்.

விளக்கவுரை

முன் மந்திரத்தில் 'போதப் பாழ்' எனக் கூறியதைச் 'சீவப் பாழ்' என்றும் 'உபசாந்தம்' எனக் கூறியதை 'வியோமப் பாழ்' என்றும் இம்மந்திரத்திற் கூறியவாறு காண்க.

இதனால், 'முப்பாழ்' என்பவற்றின் பெயர் வேறுபாடுகளும், உண்மை இயல்பும் கூறப்பட்டன.

எதிர்அற நாளும் எருதுவந் தேறும்
பதியெனும் நந்தி பதமது கூடக்
கதியெனும் பாழைக் கடந்துகற் பனையை
உதறிஅப் பாழில் ஒடுங்குகின் றேனே. ***#2455***

'என்றும் தன்னோடு ஒப்பார் இன்றி ஆனேற்றையே ஊர்தியாக உவந்து ஏறி உலாவுகின்ற சிவன் ஒருவனே பதி; ஏனையோர் யாவரும் பசுக்களே எனத் துணிந்து அவனது திருவடியை அடைய வேண்டி, முன்னர், 'இதுவே கதி', எனக் கருதிய மூன்று பாழ்களையும் கடந்து முன் கருதிய கருது கோள்களையெல்லாம் உதறித்தள்ளி, அவற்றையெல்லாம் கடந்த வேறொரு தனிப் பாழில் இப்பொழுது நான் அடங்கியிருக்கின்றேன்.

விளக்கவுரை

இதனால், 'பாழ்' என்பது, 'மாசாவன அனைத்தும் நீங்கிய தூய்மையே' என்பது விளங்கும். ஆகவே, மாயப் பாழாவது மான்' எனப்படும் பிரகிருதி நீக்கமும், 'போதப் பாழ்' என்பது, 'மோகினி' எனப்படும் அசுத்த மாயை நீக்கமும், 'வியோமப் பாழ்' என்பது, 'விந்து' எனப்படும் சுத்தமாயை நீக்கமும் ஆதல் பெறப் பட்டது. முப்பாழ்களுள் ஒன்றிரண்டையே முழுத் தூய்மையாகக் கருதுவார் கருத்துக்கள் திரிபுணர்வேயாதல் பற்றி அவற்றைக் 'கற்பனை' என்றார். முப்பாழையும் கடந்த அப்பாழே முன் மந்திரத்தில் 'தூய சொரூபம்' எனப்பட்டது. 'ஏறும் பதியெனும் நந்தி' என்பதை, 'ஏறும் நந்தியெனும் பதி' என மாற்றியுரைக்க. இந்தப் பதியினது பதமது கூட' என்றதனால் 'இம் முப்பாழ்த் தரிசனமும், அவற்றது சுத்தியும் சிவபெருமானைப் பொதுநீக்கித் தனக்குவமை யில்லாத தனிப்பெரும் பொருளாக உணரும் உணர்வைப் பெற்றவர் களுக்கே கூடும்' என்றதாயிற்று. 'எதிர் அற' என்றதும், இதனை வலியுறுத்தற்கேயாம்.

இதனால், 'முப்பாழுங் கடந்தவழியே முதற்பாழாகிய சொரூப நிலையை அடைதல் கூடும்' என்பதும், 'அது சிவஞானம் வழியாகவே கூடும்' என்பது கூறப்பட்டன.

துரியம் அடங்கிய சொல்லுறும் பாழை
அரிய பரம்பரம்' என்பர்கள் ஆதர்
அரிய பரம்பரம் அன்றே உதிக்கும்
அருநிலம் என்பதை ஆர் அறி வாரே. *#2456*

முப்பாழையும் கடந்த, சொல்லற்ற நிலையாம் சொரூபமாகிய உண்மையை, அறியாதார் சிலர், 'அஃது உயிர்களால் என்றும் அடையப்படாத மிக மேலேயுள்ள நிலை' எனக் கூறுவர். (உயிர்களால் என்றுமே அடையப்படாது எனின், 'அத்தன்மையதாகிய ஒருபொருள் உண்டு' என்பதே பெறப்படாது முயற்கோடு, ஆகாயத் தாமரை முதலியனபோல அதுவும் வெறும் கற்பனைப் பொருளாய் விடும். மிக மேலானதேயானும் ஆதலின்) அஃது என்றுமே உயிர்களால் அடையப்படாதது அன்று; செயற்கரிய சாதனைகளைச் செய்தவழிக் கிடைக்கின்ற ஓர் அரிய இடமேயாம். இவ்வுண்மையை அறிந்து, அவ்வாற்றால் அதனை அடைய முயல்பவர் எத்துணைப் பேர்? ஒரு சிலரேயாவர்.

விளக்கவுரை

'துரியம்' என்றது பாழை. அடங்குதல் - கீழ்ப்படுதல்; எனவே சொல்லறும் பாழ் அதீத நிலையாயிற்று. 'அரிய' என்பன, கிடைக்கப்படாத' என்னும் பொருளன. பரம், பரம் - மேலதற்கும் மேலானது. 'அன்றே' என்னும் தேற்றேகாரத்தைப் பிரித்து, 'நிலம்' என்பதனுடன் கூட்டுக. உதித்தல் - எதிர்ப்படுதல். 'அறிவார்' என்பதில் அறிதல். அதனுடன் காரியமாகிய முயலுதலையும் குறித்தது. 'முயலுதல் இல்லையேல், அறிந்ததனால் பயன் என்னை' என்க.

இதனால், 'முப்பாழும் கடந்த முதற்பாழ் உயிர்களால் முயன்று அடையற்பாலதோ, அன்றோ' என்னும் ஐயம் அறுக்கப்பட்டது. முன் மந்திரத்திரத்திலும், 'அப்பாழில் ஒடுங்குகின்றேன்' என அனுபவம் காட்டினார். 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'8 என்பது நாயனாரது திருவுளம் ஆதலின், அதுபற்றி எழும் ஐயத்தை இதனால் அறுத்தருள்வாராயினார்.

ஆறாறும் நீங்க நமவாய் அகன்றிட்டு
வேறா கியபரை யாஎன்றும் மெய்ப்பரன்
ஈறான வாசியிற் கூட்டும் அதுஅன்றோ
தேறாச் சிவாய நமஎனத் தேறிலே. *#2457*

'மெய்ப் பொருளை அருளாசிரியர் பக்குவம் வாய்ந்தவர்கட்கு உபதேசிக்கும் உபதேச மொழி, 'சிவாய நம' என்னும் மந்திரமே என்பதைச் சைவப் பெருமக்களன்றிப் பிறர் தெளிய மாட்டாராயினும் சைவப் பெருமக்கள் அதனைத் தெளிந்து அதன் உண்மையை

ஆராயுமிடத்து, முப்பத்தாறு தத்துவங்களும் தம்மின் வேறாகி நீங்கிய பொழுது அந்த ஐந்தெழுத்தில் பாசத்திற்கு வழியாகிய 'நம' என்பதை நீக்கி, முன்பு நகரத்தின் பொருளாய்த் திரோதானமாய் இருந்த சத்தி வேறுபட்டு அருட்சத்தியாய் வகாரத்தின் பொருளாகி, யகாரத்தின் பொருளாகிய ஆன்மாவை, யகாரம் நீங்கிய இரண் டெழுத்தில் ஈற்றெழுத்தாகிய வகாரம், முதலெழுத்தாகிய சிகாரத்தின் பொருளாகிய உண்மைச் சிவத்தில் பின் என்றும் நீங்காதவாறு சேர்ப்ப தாகவே யன்றோ உணரப்படும்! 'பிறிதாக ஒன்றும் உணரப்படாது' என்பதாம்.

விளக்கவுரை

'பக்குவிகளுக்கு ஆசிரியர் உபதேசிக்கும் உபதேச மொழி திருவைந்தெழுத்தே' என்பது,

'மன்ன என்னை ஒரு வார்த்தையுட் படுத்துப் பற்றினாய்'3

என்ற ஆசிரியர்,

'நானேயோ தவம் செய்தேன்; சிவாயநம எனப்பெற்றேன்'l என்று அருளிச் செய்தமையால் விளங்கும். அவர் எடுத்த எடுப்பிலே, 'நமச் சிவாய வாஅழ்க'* என எடுத்தருளிச் செய்தமையும் நினைக்கத் தக்கது.

'நன்னெறி யாவது நமச்சி வாயவே'*

'நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே'*

என்னும் திருமொழிகளும் ஓர்ந்துணரற்பாலன. நன்னெறி சன் மார்க்கம். ஞானநெறி. வாய் - வழி: பாசத்திற்கு வழி. ஈற்றடியை முதலில் வைத்து, 'நமவாகிய வாய் அகன்றிட்டு, வேறாகிய பரை, யவ்வை மெய்ப் பரன்பால் கூட்டும்; அஃதாவது வா சிய்யில் கூட்டும்' என இயைக்க. செய்யுள் பற்றி எழுத்தும், பொருளும் விரவி வரக் கூறினார். தேறாமை, 'சிவாயநம' என்பதன் பெருமையைத் தெளியாமை. எனவே, தேறுதலும் அதன் பெருமையேயாற்று. தேறுதல், அதன் காரியமாகிய ஆராய்தலையும் உடன் உணர்த்திற்று.

இதனால், 'முப்பாழையும் முறையே கடத்தற்கும் பின் முப்பாழையும் கடந்து அப்பாழை அடைதற்கும் நற்றுணையாவது திருவைந்தெழுத்தே' என்பது கூறப்பட்டது.

உள்ளம்உரு என்றும் உருவம் உளம்என்றும்
உள்ளப் பரிசறிந்*(து)* ஒருமவர்கட்குப்
பள்ளமும் இல்லை திடர் இல்லை பாழ்இல்லை
உள்ளமும் இல்லை உருவில்லை தானே. ***#2458***

'உயிர் உடம்பே; உடம்பே உயிர்' என இவ்வாறு உயிரின் இயல்பை மயங்கி உணர்ந்து, அந்நெறியிலே தங்கள் ஆராய்ச்சியைச் செலுத்தபவர்கட்கு உயிர் இல்பொருளேயாம். உயிர் இல்பொருளாயினமையின், உடம்பின் தன்மையை அவர் உணர்ந்ததும்

உணராமையேயாம். ஆகவே, அவர்கட்கு இங்குக் கூறி வந்த இருட்குழியாகிய தத்துவச் சிக்கலும் இல்லை; அக்குழியினின்றும் ஏறும் கரையாகிய முப்பாழும் இல்லை. அவற்றைக் கடந்த வேறு வெளியாகிய பரநிலையும் இல்லை.

விளக்கவுரை

'இவையெல்லாம் உயிர் உடம்பின் வேறு என்பதை உணர்ந்து, நிலையற்ற உடல் நலத்தைப் பெரிதாக நினைந்து, அதனை அடைய முயல்பவர்கட்கே உள்ளனவாம்' என்றபடி. 'இல்லை' என்றது, இருத்தலைப் பற்றிக் கவலை உண்டாதல் இல்லை' என்றதாம்.
இத்தன்மையை நோக்கியன்றோ தெய்வப் புலவர்,
'நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்;
நெஞ்சத் தவல மிலர்'l
என்று அருளிச் செய்தார். ஈற்றடியை அதன் அயலடிக்கு முன்னர்க் கூட்டுக. உள்ளம் - உயிர். உரு - உடம்பு.
இதனால், முடிநிலைப் பேறாகிய இவற்றைக் கூறுமிடத்து 'இன்னோரன்ன மெய்ந்நூற் பொருள்கள் எல்லாம் தக்கார்க்கே உரியன' எனத் தொகுத்துக் கூறி முடிக்கப்பட்டது.

***10.28.*காரிய காரண உபாதி**

செற்றிடும் சீவ உபாதித் திறன்ஏழும்
பற்றும் பரோபாதி ஏழும் பகர்உரை
உற்றிடும் காரணம் காரியத் தோடற
அற்றிட அச்சிவ மாகும் அணுவனே. ***#2459***

முன்அதிகாரத் தொடக்கத்தில்*l* 'காரிய தத்துவம்' எனக் கூறப்பட்டனவே இங்கு, சீவஉபாதி' என்றும், 'காரண தத்துவம்' எனக் கூறப்பட்டனவே இங்கு, 'பரோபாதி' என்றும் கூறப்பட்டன. இங்கு, 'பரம்' என்பது, பரம் பொருளைக் குறியாமல், 'சீவ உபாதிக்கு மேலே உள்ளவை' எனப் பொருள் தந்தது. 'இவ்விருவகை உபாதிகளும் நீங்கினால் காரியம் காரணத்தோடு அற்றுவிட்டதாகும். அங்ஙனம் அவை அற்று விட்டதால், 'அணு' எனப்பட்ட உயிர் அவ்வணுத்தன்மை நீங்கி, வியாபகப் பொருளாகிய சிவத்தை அடைந்து தனது வியாபக நிலையைப் பெற்று இன்புறும்' என்பது பின்னிரண்டடிகளின் பொருள்.

விளக்கவுரை

அற அறுதல் - முற்றும் நீங்குதல். இரண்டாம் அடியிலும் 'ஏழும்' என்பதன் பின்னும் 'அற' என்பது வருவிக்க. 'காரியம், காரணம்' என்பன நிரல் நிறையாய் மேற்கூறிய 'சீவ உபாதி, பரோ பாதி, என்பவற்றோடு இயைந்தன. பின்னர் 'அணு வருதலால், அச் சிவம்' என்னும் சுட்டு 'வியாபகச் சிவம்' என அதன் வியாபகத்தைச் சுட்டிற்றாம். 'அணு வியாபகம் ஆகும்' என்றதனால், 'அணுத்தன்மை உயிர்க்குச் செயற்கையால் வந்தது என்பதும், 'வியாபகமே அவனது இயற்கை' என்பதும் பெறப்பட்டன. செயற்கை, ஆணவ மலம்.

இதனால், உயிர் செயற்கையின் நீங்கி இயற்கையை எய்துதற்குத் தடையாய் உள்ளவை உபாதிகள்' என்பதும், அவை, 'காரிய உபாதி, காரண உபாதி' என இருவகையினவாம் என்பதும் கூறப்பட்டன.

*[*இதன்பின் பதிப்புக்களில் காணப்படும் 'அகராம் உயிரே; உகாரம் பரமே' என்னும் மந்திரம் மேல் நான்காம் தந்திரத்தில், 'திருவம் பலச் சக்கரம்' அதிகாரத்தில்* சிறிது வேறுபாட்டுடன் வந்ததேயாகும் இவ்வதிகாரத்தில் அதற்கு இயைபில்லை.*]*

ஆறாறு காரியோ பாதி அகன்றிட்டு
வேறாய் நினைவு மிகுத்த நனா கனா
ஆறா றகன்ற சுழுத்தி அதில் எய்தாப்
பேறாம் நிலத்துயிர் தொம்பதம் பேசிலே. ***#2460***

தத்துவங்களுக்குள்ளே சில காரியமும், சில காரணமும் ஆதல் பற்றி அவற்றை, 'காரியம், காரணம்' எனப் பிரித்துக் கூறினாலும் தத்துவங்கள்

அனைத்திற்கும் மாயையே காரணமாகத் தத்துவங்கள் அவற்றின் காரியம் ஆதல் பற்றி அவை அனைத்தையும் இங்கு 'காரியோபாதி' என்றார். 'நனவு' என்றது சகல சாக்கிரத்தை. அதன்கண் நிகழும் 'நனவு, கனவு, உறக்கம்' என்பவற்றில், இவற்றிற்கு முன் நிலைகளில் எல்லாம் கிடைக்கப்பெறாத பேறு கிடைக்கப் பெறுகின்ற துரிய நிலையை அடைந்த பொழுதுதான் உயிர் உண்மையில் 'துவம்' பதப் பொருளாகும்.

விளக்கவுரை

'நினைவு வேறாய்' என மாற்றியுரைக்க. நினைவு - உணர்வு. 'மிகுத்த' என்றதனால், நின்மலமாதல் குறிக்கப்பட்டது. எனவே, இங்குக் கூறப்பட்ட நனவு முதலியன நின்மல சாக்கிரம் முதலியவாயின ஆகவே, 'இங்குக் கூறப்பட்ட உபாதிகள் நின்மலாவத்தையில் நீங்கும்' என்றதாயிற்று. நிலம், துரியம், ஆதல் - கிடைத்தல். 'ஆம் நிலம்' என்க. உபாதி நீங்கிய நிலையே உயிர்க்குத் தூய்மையாதலின் 'அது தொம்பதப் பொருளாம்' என்றார். 'பதம்' என்பது சொல்லாகு பெயராய் அதன் பொருளைக் குறித்தது.

இதனால் உபாதிகள் நீங்கும் இடம் கூறப்பட்டது.

உயிர்க்குயி ராகி ஒழிவற் றழிவற்*(று)*
அயிர்ப்பறு காரணோ பாதிவெதி ரேசத்து
உயிர்ப்புறும் ஈசன் உபமித்தா லன்றி
வியர்ப்புறும் ஆணவம் வீடல்செய் யாதே. *#2461*

எல்லா உயிர்களிலும் அவற்றிற்கு உயிராய், ஒரு ஞான்றும் விட்டு நீங்காது, அழிவின்றியிருப்பினும் உயிர்கள் முன் மந்திரத்தில் கூறிய உபாதிகள் அனைத்தினின்றும் நீங்கிய பின்பே முன்பு பாலில் நெய்போல விளங்காதிருந்த நிலையினின்றும் நீங்கித் தயிரில் நெய்போல வெளிப்பட்டு விளங்குகின்ற சிவன் அவ்வாறு வெளிப்பட்டாலன்றி யாதோர் உயிர்க்கும் துன்பத்தைத் தருகின்ற ஆணவ மலம் நீங்குதல் உண்டாகாது.

விளக்கவுரை

'உயிர்கட்கு உள்ள உபாதிகளில் மூல உபாதி ஆணவ மலமே யாதலின், முன் மந்திரத்தில் மாயேயங்களாகிய ஆறாறும் நீங்கியபின் உயிர்தொம்பதமாம் - என்றது என்னை' என்னும் ஐயத்தை நீக்குதற்கு இது கூறினார். ஆணவத்தை நீக்க வேண்டியே மாயேயங்கள் சேர்க்கப்பட்டமையால். 'அவை நீங்க' என்றமையால், 'அவற்றிற்குக் காரணமான ஆணவம் நீங்கினமை தானே பெறப்படும் என்றபடி. அயிர்ப்பு - ஐயம். வெதிரேகம் - எதிர்மறை; அது முன்னை நிலைக்கு மாறாய் அமையும் நிலையைக் குறித்தது. உயிர்த்தல், இங்கு விளங்குதல்

உபமித்தல் - உடனாதல். இதுவும் அந்நிலை விளங்குதலையே குறித்தது. 'ஒளியாலல்லது இருள் நீங்காதவாறு போல், சிவம் பிரகாசித்தா லல்லது ஆணவ மலம் நீங்காது என்பதாம். 'மாயேயங்களாகிய உபாதிகள் நீங்கினவிடத்தே பிரகாசிப்பவன் சிவன்' என்றதனால், மாயேயங்கள் நீங்கினவிடத்துச் சிவம் பிரகாசித்தலால் ஆணவ மலம் நீங்கிற்றாம்' எனக் கூறற் பாலதனை வலியுறுத்தற் பொருட்டு 'உபமித்தாலன்றி ஆணவம் வீடல் செய்யாது' என எதிர்மறை முகத்தாற் கூறினார். இதனால், 'ஆதியாய உபாதி நீங்குங்கால், அநாதியாய உபாதி நீங்கியேவிடும்' என ஐயம் அறுக்கப்பட்டது.

காரியம் ஏழில் கரக்கும் கடும்பசு
காரணம் ஏழில் கரக்கும் பரசிவன்
காரிய காரணம் கற்பனை சொற்பதப்
பாரறு பாழில் பராற்பரந் தானே. ***#2462***

'காரிய உபாதி' எனமேற் கூறப்பட்ட உபாதிகள் உள்ள பொழுது, உயிர் தன்னையே அறியாது மயங்கும். காரிய உபாதிகள் நீங்கக் காரண உபாதிகள் நீங்காதிருக்குமாயின் உயிர் தன்னை ஒருவாறு அறியினும் தலைவனை அறியாது மயங்கும். இக்காரிய காரண உபாதிகள் உயிர்கட்கு ஆக்கி வைக்கப்பட்டவை. இன்னும் இவ்வுபாதிகள் பலவாகச் சொல்லப்படுகின்ற பதங்களாகிய உலகங்களைச் சார்ந்து நிற்பனவாம். இவையெல்லாம் அற்ற நிலையே 'வெறும் பாழ்' எனப்படுகின்றது. அவ்விடத்தில் தான் மேலானவற்றிற்கெல்லாம் மேலான பரம் பொருள் உள்ளது.

விளக்கவுரை

'உயிர் அந்த வெறும்பாழை அடைந்து தான் பரம் பொருளை அடைதல் வேண்டும்' என்பது கருத்து. 'கலக்கும்' என்பன பாடம் அல்ல. கடும்பசு - மலத்தால் மிக மூடப்பட்ட பசு; என்றது, சகலவருக்கத்து உயிரை - காரிய காரணம், உம்மைத் தொகை. 'கற்பனை' என்றது, ஆக்கப்பாட்டினை. பதம் - பதவி. பார் - உலகம். ஏகாரம், பிரிநிலை. அதனைப் பிரித்து, 'பாழ்' என்பதனோடு மாறிக்கூட்டி, 'பாழிலேதான் பராற்பரம்' என்க. தான் கட்டுரைச் சுவைபட வந்தது. 'உள்ளது' என்பது சொல்லெச்சம். இதனால், 'உபாதிகள் எல்லாம் நீங்கின இடமே உயிர் அடையத் தக்க இடம்' என்பது கூறி, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

10.29. உபசாந்தம்

முத்திக்கு வித்து முதல்வன்றன் ஞானமே
பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் பற்றலே

சித்திக்கு வித்துச் சிவபரம் தானாதல்
சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே. **#2463**

'பற்றுக பற்றற்றான்; பற்றினை; அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு'* என்றபடி, உலகப் பற்றை நீக்குதற்கு வழி சிவப்பற்றைக் கொள்ளுத - லாகும். அப்பற்று உண்டாதற்கு வழி, சிவனைக் குருலிங்க சங்கமங் - களை வழிபட்டு உறுதுணையாகப் பற்றுதலாகும். மனம் புலன்களின் வழி ஓடாது தன் வயப்படுதற்கு வழி யோகசமாதி. முத்திக்கு வழி சிவ ஞானம். அந்த ஞானம் வருதற்கு வழி உயிர் உபசாந்தத்தை அடைதலாம்.

விளக்கவுரை

'இங்கு எடுத்துக்கொண்ட பொருள் முத்தியே' என்பது தோன்றுதற் பொருட்டு, 'சிறப்புடைப் பொருளை முற்படக் கிளத்தல்' என்னும் முறைப்படி 'முத்திக்கு வித்து' என்பதையே முன்னர்க் கூறினா -ராயினும் ஈற்றடிக்கு முன்னே கூட்டியுரைத்தல் கருத்தென்க. 'சத்தி' என்றது ஞானத்தையே. 'முத்திக்கு வித்து, சக்திக்கு வித்து' என்பவற்றைக் கூறுதலே கருத்தாயினும் அவை வலியுறுதற் பொருட்டு வேறு இரண்டை உடன் கூறினார். இஃது ஒப்புமைக் கூட்ட அணி பணிந்துற்றப் பற்றுதலுக்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. மனத்தை அது சென்றவிடத்தால் செலவிடாது* அடக்கித் தன் வயப்படுத்துதலே பெறற் கரிய பேறாகலின் அதனையே 'சித்தி' என்றார். சிவபரம் - சிவமாகிய பரம் பொருள். தானாதல் - சமாதி. 'சிவம் பரம்' என்றதனால், சிவ யோகமே குறிக்கப்பட்டதாம். உபசாந்தமாவது மாயேயங்கள் எல்லாம் நீங்கிய நிலை' என்பது முன்பே கூறப்பட்டது. இதனால், 'உபசாந்தம் ஞானத்தைப் பயக்க, ஞானம் வீடு பேற்றைத் தரும்' என்பது கூறப்பட்டது.

காரியம் ஏழும் கரந்திடும் மாயையுள்
காரணம் ஏழும் கரக்கும் கடுவெளி
காரிய காரண வாதனைப் பற்றறப்
பாரண வும்உப சாந்தப் பரிசிதே. **#2464**

'காரிய தத்துவம்' எனப்பட்ட ஆன்ம தத்துவங்கள் பிரகிருதியில் ஒடுங்கினும், பிரகிருதி ஒடுங்காத பொழுது அவை மீளத் தோன்றும் நிலை உளதாகும். ஆகவே, பிரகிருதி ஒடுக்கமே காரிய தத்துவ ஒடுக்கம் ஆதலின், அஃது அசுத்த மாயையில் ஒடுங்குவதாம். இனி, 'காரண தத்துவம்' எனப்பட்ட வித்தியா தத்துவம் ஏழும் அசுத்த மாயையில் ஒடுங்க, அசுத்த மாயை கலக்குண்ணாது சுத்த மாயையில் வியாப்பியமாகி நிற்றலே காரணதத்துவ ஒடுக்கம் ஆதலின், அசுத்த மாயை சுத்த மாயையில் ஒடுங்குவதாகும். (இங்கு ஒடுக்கமாவது காரியப் படுதல் இன்றி வியாப்பிய மாத்திரம் ஆதல்) இவ்வாறு காரிய காரண

உபாதிகளின் வாசனையும் அற்றபொழுது ஆன்மா பர துரிய நிலையை அடையும். ('அப்பால் அதீத நிலை தானே வரும்' என்பது கருத்து) 'உபசாந்தம்' என்பதன் தன்மை ஆன்மா இவ்வாறு காரிய காரண உபாதிகளின் வாசனையும் அற்றுத் துரிய நிலையை அடைதலேயாகும்.

விளக்கவுரை

பார் - நிலம். என்றது, முன் அதிதகாரத்தில், 'எய்தாப் பேரும் நிலம்'3 எனப்பட்ட நிலம். அணவுதல் - அடைதல் இதற்கு, 'உயிர்' என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க.

இதனால், 'உபசாந்தமாவது இது' என்பதும், அதனை அடையுமாறும் கூறப்பட்டன.

அன்ன துரியமே ஆத்தும சுத்தியும்
முன்னிய சாக்கிரா தீதத் துறுபுரி
மன்னு பரம்காட்சி யாவ(து) உடன்உற்றுத்
தன்னின் வியாத்தி தனி உப சாந்தமே. **#2465**

முன் மந்திரத்தில், 'பார்' எனப்பட்ட அந்தப் பர துரியமே முற்றான ஆன்ம சுத்தி நிலையாகும். (எனினும், அதற்கு முன்னே 'சிவதுரியம்' எனச் சொல்லப்பட்ட நின்மல துரியமே ஆன்ம சுத்தியாகச் சொல்லப்படுகின்றதன்றோ எனின்' பராவத்தையில் இனிது வெளிப்படுகின்ற பர சிவம், நின்மலாவத்தையில் ஓரளவாக வெளிப்படுதல் பற்றி அங்ஙனம் கூறப்படுகின்றது. ஆயினும் ஆன்மா பர சிவத்தோடு இரண்டறக் கலந்து உடனாய், வியாபகமாய் நிற்றல் ஒப்பற்ற உபசாந்தமாகிய பராவத்தையிலே யாகலின், பர துரியமே முற்றான ஆன்ம சுத்தியாம் என்க.

விளக்கவுரை

இதனை மெய்கண்ட நூல்கள் 'ஆன்ம லாபம்' எனக் கூறும், 'சுத்தியும்' என்னும் உம்மை சிறப்பு. முன்னியே - முன்பே கருதப்பட்ட சாக்கிராதீதம், நின்மல துரியாதீதம். 'புரிவு' என்பது விகுதி குன்றி, முதனிலை மாத்திரமாய் நின்றது. புரிவு - செயல்; மேற்குறித்த ஆன்ம சுத்தி பரம் - பர சிவம் 'காட்சியாவதனால்' எனவும், 'உபசாந்தத்தில்' எனவும் ஏற்கும் உருபுகள் விரிக்க. தன்னில் - பரசிவத்தில், 'வியாத்தி' என்றது வியாப்பியத்தை.

இதனால் உபசாந்தமே முடிநிலைப் பேறாதல் கூறப்பட்டது.

ஆறா றமைந்தா றவத்தையுள் நீங்குதல்
பேறான தன்னை அறிதல் பின் தீர்சுத்தி
கூறாத சாக்கிரா தீதம் குருபரன்
பேறாம் வியாத்தம் பிறங்குப சாந்தமே. **#2466**

முப்பத்தாறு தத்துவங்களும் தன்னின் மேம்பட்டுத் தன்னை மயக்காதபடி அவைகளைக் கீழ்ப்படுத்தி, அவைகளால் வரும் மயக்கத்தினின்றும் நீங்குதலே தன்னைத் தான் பெறுதலாகிய ஆன்ம தரிசனமாகும். (சிவரூபம் இதில் உடன் நிகழும். 'தன் உயிர் தான் அறப் பெற்றானை ஏனைய மன்னுயிரெல்லாம் தொழும்'9 என்றார் திருவள்ளுவரும்) ஆன்ம தரிசனத்திற்குப்பின் நிகழ்வதாகிய ஆன்ம சுத்தியாவது, சொல் நிகழ்ச்சியில்லாத, மௌன நிலையாகிய நின்மல துரியாதீதமாகும். (இதில் சிவதரிசனமும், சிவயோகமும் உடன் நிகழும்) ஆன்ம சுத்திக்குப் பின் அடையற்பலாதாகிய ஆன்ம லாபமாகிய சிவப்பேறாவது, பர துரியா தீதமே.

விளக்கவுரை

ஆறுதல் - அடங்குதல்; கீழ்ப்படுதல். தீர்தல் - மும்மலங்களும் நீங்குதல். குருவாகிவந்து அருள்செய்யும் அருட் பெருக்குப் பற்றிச் சிவனை, 'குருபரன்' என்றார். குருபரம் - குருமார்களுக்கெல்லாம் மேலான குரு; ஞானகுரு. வியாத்தம் - வியாத்தி; சம நிறைவு. சமமாதல், சிவ வியாபகத்தோடாம். ஆன்மாச் சிவத்தில் வியாப்பிய மாயினும் பெத்தத்தில் ஏகதேசமாய் நின்ற நிலையினின்றும் நீங்கி வியாபகமாயினமை பற்றி 'வியாத்தி' என்றார்.

இதனால், உபசாந்தத்தை அதற்கு இனமாய் முன்னிகழ்வன வற்றோடு ஒப்பித்துக்காட்டி அதன் இயல்பு இனிது விளக்கப்பட்டது. இதனானே அவற்றது இயல்புகளும் தெளிவிக்கப்பட்டன.

வாய்ந்த உபசாந்தம் வாதனை உள்ளம் போய்
ஏய்ந்த சிவம்ஆதல் இன்சிவா னந்தத்துத்
தோய்ந்து அறல் மோனச் சுகானு பவத்தொடே
ஆய்ந்து அதில் தீர்கை ஆனதீ ரைந்துமே. *#2467*

உபசாந்தம் பத்து நிலைகளையுடையதாகச் சொல்லப்படும்.

1. கருவி கரணங்கள் உலகியல் வகையில் செயற்படாது, மெய்யுணர்வு நெறியில் செயற்படுதல். (இஃது யோகாவத்தை, இது முன்பு 'சீவ துரியம்' எனப்பட்டது. இது கருவிகளின் மாற்றுச் செயல் ஆதலின், இதனை, வாதனை' என்றார்).

2. ஆன்மாத் தன்னைக் கருவிகளின் வேறாக உணர்தல் (இஃது ஆன்ம தரிசனமாம். உள்ளம் - ஆன்மா; 'ஆன்மா' என்றது, 'ஆன்மாத் தான் ஆதல்' என்றபடி.)

3. ஆன்மாத் தன்னையிழத்தல். (அஃதாவது தற்போதம் நீங்குதலாம்.) 'போய்' என்றது, 'தான் போய்' என்றபடி.

4. தற்போதத்தை இழந்த ஆன்மாச் சிவனையே உணர்ந்து அவனேயாதல். (இதுவே தசகாரியத்துள் சொல்லப்படும் சிவயோகம்.

ஆன்ம தரிசனத்தில் சிவரூபம் உடன் நிகழும். ஆன்ம சுத்தி சிவதரிசனத்தில் தொடங்கி சிவயோகத்தில் முற்றுப்பெறும்.)

5. சிவானந்தம் உதயமாதல். (இது சிவயோகத்தில் முடிநிலையில் நிகழும்.)

6. உயிர் சிவானந்தத்தை அனுபவித்தல். (இஃது 'ஆனந்தானுபவம்' எனப்படும். இதில் உயிருக்கு, 'நாம் ஆனந்தத்தை அனுபவிக்கின்றோம்' என்னும் உணர்வு நிகழும்.)

7. உயிர் ஆனந்தத்தில் அழுந்துதல். (இதில் அந்த உணர்வும் இல்லாதொழியும்.) இஃது 'ஆனந்தாதீதம்' எனப்படும். (இரண்டு முதல் 5 முடிய உள்ள நான்கும் நின்மலாவத்தையில் சாக்கிர, சொப்பன, சுழுத்தி, துரிய அவத்தைகளாம். 6,7 நின்மல துரியாதீதமாம்.)

8. சகலரினின்று பிரளயாகலர்களாகப் பெற்ற உயிர்களும், பிரளயாகலரில் பக்குவம் பெற்ற உயிர்களும் பின் விஞ்ஞானகலராய் இறைவனால் திருவருள் செய்யப்பெற்றுச் சுத்த புவன போக்கியப் பொருள்களால் இன்புற்றிருத்தல்.

9. அதற்கு மேலும் சுத்த புவன அதிபதிகளாய் ஆட்சி புரிதல். (இவை 'அபர முத்தி' எனப்படும்).

10. இங்குக் கூறிய இவைகளில் ஒன்றும் இன்றிச் சிவனோடு இரண்டறக் கலந்து அவனது வியாபகத்தில் அடங்கி விடுதல் என்பன. (இறுதி மூன்றும் பராவத்தைகளாம். அவற்றுள் பத்தாவதே பரமுத்தியாம்.)

விளக்கவுரை

'இங்குக் கூறியன எல்லாம் உபசாந்தம்; எனப்படு மாயினும் பராவத்தையே உண்மை உபசாந்தம். என்பதும், அவற்றுள் பர முத்தியே முடிநிலை'- என்பதும் கருத்துக்கள் 'சிவானந்தத்து' என்றதனால் சிவானந்தம் உதயமாதல் பெறப்பட்டது. 'தோய்ந்து' என்றதனால், தோய்தலும் வேறொன்ற ாயிற்று. 'மோனம்' என்றது அமைதியை; அது துன்பம் இன்மையைக் குறித்தது. 'அனுபவத் தொடே' என்னும் ஒடு, எண் ஒடு. ஆய்தல் - இங்கு முற்றுணர்வுபெற்று எல்லாவற்றையும் அறிதல் ஆகவே, அஃது ஆட்சி செய்தலாயிற்று. 'உபசாந்தம் ஈரைந்துமே' என முடிக்க. ஏகாரம் தேற்றம்.

இதனால், ஞானச் செய்தியாவன பலவும் உபசாந்தத்தின் படிநிலைகளாகத் தொகுத்துணர்த்தப்பட்டன.

பரையின் பரஅப ரத்துடன் ஏகமாய்த்
திரையின்இன் றாகிய தெண்புனல் போலவுற்**(**று**)**
உரையுணர்ந்**(**து**)** ஆரமு தொக்க உணர்ந்துளோன்
கரைகண் டவன் உரை யற்ற கணக்கிலே. ***#2468***

பர சிவத்தின் சத்தியாகிய பராசத்தியின் தடத்த நிலை அதன் அபரமும்,

சொரூபநிலை அதன் பரமும் ஆகும். பெத்தத்தின் நீங்கிய உயிர் முதற்கண் நின்மலாவத்தையிலும், பராவத்தையில் அதீதத்திற்குக் கீழ்ப்பட்ட நான்கு நிலைகளிலும் பராசத்தியின் அபர நிலையைப் பொருந்தியும் அதீதத்தில் அதன் பர நிலையைப் பொருந்தியும் அலையற்றுள்ள கடல்நீர் போல யாதோர் அலைவுமின்றியிருக்கும். எனினும், அபர நிலையில் தேவாமுதத்தைப் பெற்று உண்பவன், அதனைத் தான் பெற்ற அருமை, அதன் சுவை மிகுதி, அதன் பயன் முதலியவற்றை உணர்ந்து நிற்பவன் போலவும், பர நிலையில் அவ்வாறு உணர்தல் இன்றி அந்த அமுதத்தின் சுவையிலே மூழ்கித் தன்னை மறந்து நிற்பவன் போலவும் இருப்பான். இவ்விருவரில் தன்னை மறந்து, உரையுணர்விறந்தவன் நிலையே முடிந்த நிலையாம்.

விளக்கவுரை

'உரையுணர் விறந்து நின்று உணர்வதோர் உணர்வே'*9* என்றும் அருளிச் செய்தமையும் காண்க. சத்தியின் நிலையே சிவத்தின் நிலையாயினும் உயிர் சத்தி வழியாகவே சிவத்தையடைதல் பற்றி அங்ஙனம் அடையப்படும் நிலைகளைச் சத்திநிலைகளில் வைத்துக் கூறினார். 'உரை உணர்ந்து' என்றது, 'உரையையும், உணர்வையும் வேறாக நன்குணரும் நிலையில் நின்று' என்றபடி. ஒக்க உணர்தல் - முற்ற உணர்தல்; என்றது நன்குணர்தலை 'உணர்ந்துளோன் உரையற்ற கணக்கில் கரை கண்டவன் ஆவான்' என முடிக்க. கணக்கு நிலை - கணக்கில் நிலையை அடைந்த பொழுது.
இதனால், ஞானச் செய்திகளின் முடிநிலை அனுபவங்கள் கூறி முடிக்கப்பட்டது.

10.30.புறங்கூறாமை

பிறையுட் கிடந்த முயலை எறிவான்
அறைமணி வாட்கொண் டவர்தமைப் போலக்
கறைமணி கண்டனைக் காண்குற மாட்டார்
'நிறையறி வோம்' என்பர் நெஞ்சிலர் தாமே. ***#2469***

'சந்திரனிடத்து உள்ள முயலையாம் வெட்டுவோம்' என்று சொல்லி, ஒலிக்கின்ற மணிகட்டியுள்ள வாளையெடுத்து உயர உயர வீசுபவர் போல, அறிவில்லாதவர் நீல மணிபோலும் கறுத்த கண்டத்தையுடைய சிவனை அடையும் நெறியை உணர மாட்டாமலே தாமே மெய்ப்பொருளை முற்ற அறிந்த நிரம்பிய ஞானிகள் போலத் தாம் அறிந்தன சிலவற்றைக் கூறி உண்மை ஞானியரை இகழ்வர்.

விளக்கவுரை

'முயல்' எனப்படுவது, உண்மையில் முயலாகாமை போல, ஞானியர்பால்

பிறர் குறையாகக் காண்பனவும் உண்மையில் ஆகாமையும் இவ்வுவமையால் கொள்ளத் தக்கது. 'ஞானமில்லாரது இகழ்ச்சிகள் ஞானியைச் சார மாட்டாமையே யன்றிச் சார்தற்கு யாதும் இயைபும் இல்லை' என்பது இவ்வுவமையால் கூறப்பட்டதாம்.

'எறிவான்' வான் ஈற்று வினையெச்சம். 'நெஞ்சு' என்றது அறிவை. 'அது குருவுபதேசத்தைக் கேட்டுச் சிந்தித்துத் தெளியும் அறிவு' என்க.

இதனால், 'உண்மையுணராதாரது இகழ்ச்சியால் உண்மை யுணர்ந்தார்க்கு வருவதோர் இழுக்கில்லை' என்பது கூறப்பட்டது.

கருந்தாட் கருடன் விசும்பூ டிறப்பக்
கருந்தாழ் கயத்தில் கரும்பாம்பு நீங்கப்
பெருந்தன்மை பேசுதி ஒழி நெஞ்சே
அருந்தா அலைகடல் ஆறுசென் றாறே. ***#2470***

மனமே, 'பெரிய முயற்சியையுடைய கருடன் தன்போக்கிலே தான் ஆகாயத்தில் பறக்கவும், கரிய நாகம் அஞ்சி ஓடி, மிக ஆழ்ந்த புற்றுள் ஒளிந்து கொள்ளுதல் போலவதே, மெய்யுணர் வுடையார் முன் மெய்யுணர்வில்லாதாரது நிலை என்பதைச் சில சான்று களால் நீ உணர்ந்திருந்தும் மெய்யுணர்வில்லாதாரது கூற்றுக்களைப் பெரிது படுத்திப் பேசுகின்றாய். இனி அவ்வாறு பேசுதலை விடு. ஏனெனில் உண்மை மெய்ந்நெறியாகிய பெருநெறியில் ஏனைச் சிறுநெறிகள் எல்லாம் பெரிய ஒரு கடலிலே சிறிய பல ஆறுகள் சென்று உருத்தெரியாது அடங்குதல் போல்வதே.

விளக்கவுரை

'கருமை' இரண்டும் பெருமை; ஏனையது நிறம் 'நீங்க' என்பது 'மறைய' என்றபடி, அது, 'மறைதல் போல்வதாக' பொருள் தந்தது. 'பெருந்தன்மை பட' என ஒருசொல் வருவிக்க. பெரிது படுத்திப் பேசுதலாவது, 'அவைகளும் ஏன் உண்மைகளாய் இருக்கக் கூடாது' என எண்ணி மயங்குதல். 'சென்ற' என்பதன் ஈற்றகரம் தொகுத்தலாயிற்று. 'சென்ற' என்றது சென்று அடங்குதலைக் குறித்தது. 'ஆறு' இரண்டில் முன்னது நதி. பின்னது உவம உருபு. 'ஆறாதலையுடையவே' என ஈற்றில் சொல்லெச்சம் வருவித்து முடிக்க. பிறர் நெஞ்சின் இயல்பினைத் தம் நெஞ்சின்மேல் ஏற்றியுரைத்தார்.

இதனால், 'புறங் கூற்று மொழிகள் மயக்கும் தன்மையுடைய வாயினும் குரு உபதேசத்தில் உறைத்து நின்று மயங்கலாகாது' என்பது கூறப்பட்டது. 'பிற நெறிகள் குற்றம் உடையன ஆகாது, குறை மட்டுமே உடையன' என்பது பின்னர்க் கூறிய உவமையால் பெறப்படுதல் காண்க.

கருதலர் மாளக் கருவாயில் நின்றே

பொருதலைச் செய்வது புல்லறி வாண்மை
மருவலர் செய்கின்ற மாதவம் ஒத்தால்
தருவலர் வேட்ட தனிஉம்பர் ஆமே. *#2471*

பகைவரைப் போர்க்களத்தில் எதிர்த்துப் போர் செய்யாது, அவர்தம் நகரத்தை முற்றுகையிட்டே காலத்தைப் போக்குதல் புல்லறிவாண்மையாகும். சிவநெறியைச் சாராதவர் செய்யும் பெரிய தவங்கள் எல்லாம் அப்புல்லறிவாண்மையை ஒக்குமேயானால், அவற்றால் தரப்படும் பயன்கள் எல்லாம் சுவர்க்க போக வாசிகளாய்ச் சில காலம் வாழ்ந்திருத்தலேயாகும்.

விளக்கவுரை

'முத்திப் பயனை அவை தரமாட்டா' என்பதாம். 'கறைமணி கண்டனைக் காண்குற மாட்டார்'* என மேலே கூறினமையால், 'மருவலர்' என்றது சிவனை மருதாவர்களை யாயிற்று. 'ஒத்தால்' என்னும் 'செயின்' என் எச்சம் தெளிவின் கண் வந்தது, 'நீரின்றமையா துலகெனின்'* என்பதிற் போல 'ஆமே' என்பது, 'ஆகும் அதுவே' எனப் பொருள்தந்தது.
'பசித்துண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்
இசைத்து வருவினையில் இன்பம்'
என்னும் சிவஞான போதத்தை* நோக்குக. 'பிறவிக்குக் காரணமான வினைகளை வெல்வதற்குப் பசு புண்ணியங்களைச் செய்தல்' என்பது இங்குக் கூறிய உவமையால் குறிக்கப்பட்ட பொருள்.
இதனால், பதி புண்ணியங்களை உணராது பசு புண்ணியங் களையே புகழ்வாரது நிலைமை கூறப்பட்டது.

பிணங்கவும் வேண்டா பெருநிலம் முற்றும்
இணங்கிஎம் ஈசனே ஈசன்என் றுன்னிக்
கணம்பதி னெட்டும் கழலடி காண
வணங்கெழும் நாடிஅங்(கு) அன்புறல் ஆமே. *#2472*

பெரிய நிலவுலகத்தவர் யாவரும், வானுலகத்துப் பதினெண் கணங்களும், எங்கள் இறைவனாகிய சிவனையே 'பரம் பொருள்' என உடன்பட்டு மனத்தால் நினைத்தும் பின்னர் அவன் திரு வடியைக் கண்டு வாக்கால் வாழ்த்தியும் தலையால் வணங்கியும் பயன் பெற முயல்கின்றனர். அதனை நன்கு சிந்தித்து அவனிடத்தில் அன்பு செய்தலே தக்கது. அதை விடுத்து பிற சமயிகளது சொற்களைக் கேட்டு மாறுபடாதீர்கள்.

விளக்கவுரை

'தட்டை யிடுக்கித் தலையைப் பறித்துச்
சமணே நின்றுண்ணும்

பிட்டர் சொல்லுக் கொள்ள வேண்டா;
பேணித் தொழுமின்கள்'9
என்றாற் போல ஞானம்பந்தரும் அருளிச் செய்வார். 'நிலம்' என்றும் 'கணம்' என்றும் கூறினமையால், 'எழும்' என்று அஃறிணை முடிபு தந்தார். 'பெருநிலம் முற்றும், கணம் பதினெட்டும் - எம் ஈசனே ஈசன் என்று இணங்கி, உன்னி, காண வணங்கி எழும்' என இயைந்து, 'காண வணங்கி' என்பவற்றில் விகுதி பிரித்துக்கூட்டி, 'கண்டு வணங்க எழும்' என முடிக்க. 'வணங்கி' என்பது ஈறு தொகுத்தலாயிற்று. 'பிறைநுதல் வண்ணமாகின்று; அப்பிறை பதினெண் கணனும் ஏத்தவும் படுமே'8 என்றதும் காண்க.

பதினெண் கணங்கள் இவை என்பதை,

'விரவுசா ரணரே, சித்தர்,
விஞ்சையர், பசாசர், பூதர்
கருடர், கின்னரர், இயக்கர்,
காந்தர்வர், சுரர், தைத்தியர்,
உரகர், ஆகாச வாசர்,
உத்தர குருவோர், யோகர்,
நிருதர், கிம் புருடர், விண்மீன்
நிறைகணம் 'மூவா றாமே'3

என்னும் நிகண்டினால் அறிக. விஞ்சையர் - வித்தியாதரர். இயக்கர் - யட்சர். காந்தர்வர் - கந்தருவர். சுரர் - தேவர். தைத்தியர் - அசுரர். உரகர் - நாகர் உத்த குருவோர் - போக பூமியர். யோகர் - முனிவர். நிருதர் - அரக்கர். விண்மீன் - நட்சத்திர மண்டலர்.

இதனால், 'உயர்ந்தோர் நெறி சிவநெறியே' என்பது வலியுறுத்தப்பட்டது.

என்னிலும் என்உயி ராய இறைவனை
பொன்னிலும் மாமணி யாய புனிதனை
மின்னிய வெவ்வுயி ராய விகிர்தனை
உன்னில் உம் உன்னும் உறும்வகை யாலே. **#2473**

என்னைத்தான் நான், 'என் உய ர்' என்று ஓற்றுமைக் கிழமை பற்றி எண்ணுவேன். ஆயினும், என் உயிரினுள் உயிராய் நின்று எனக்கு உறுதிசெதய்து வருபவன் எங்கள் இறைவனாகிய சிவன். ஆகவே, 'என் உயிர்' என்று யான் வலியுறுத்திக் கூறுதற்கு உண்மையில் உரியவன் அவனே. அவன் உண்மையில் பொன்னினும், மணியினும் சிறப்பாகக் கொண்டு போற்றத்தக்கவன். தூய்மையே வடிவானவன் உலகில் காணப்படும் பொருள்களில் எல்லாம் மேலான ஒளிப்பொருளாகிய. பகலவன் 'வெங்கதிர்' என்று சொல்லப்படுதல் போல, உயிரினுள்

உயிராய் இருந்து அங்குள்ள இருளை முற்றக் கடிதலால் அவனை 'வெவ்வுயிர்' என்றலும் பொருந்தும் ('வெம்மை' என்பதற்கு, 'விருப்பம்' என்பதும் பொருளாகலின், 'வெவ்வுயிர்' என்பது, 'விரும்பத் தக்க உயிர்' என்றும் பொருள் தரும்) அவன் உயிர்களின் குணங்கட்கு வேறான குணங்களையுடையவன். அவனை நீவிர் நினைப்பீராயின், உம்மையும் அவன் நினைப்பான். (அவனை நீவிர் அடைதல் கூடும்)

விளக்கவுரை

'என்னில் ஆரும் எனக்கினி யார் இலை
என்னி லும் இனி யான்ஒரு வன்உளன்;
என்னு ளே உயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்(கு)
என்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே'3
என்னும் அப்பர் திருமொழியையும் காண்க.
'என்னிலும் என் உயிராய இறைவன்' என்றது, 'என் உயிர்' என்று யான் சிறப்பித்துக் கூறுதற்கு என்னிலும் மிக உரிமையுடைய இறைவன், என்றபடி, 'மணியிலும்' எனப் பின்னரும் உருபு விரிக்க. ஆய - உயர்ந்த, மின்னிய - ஒளி விடுகின்ற. விகிர்தன் - வேறு பட்டவன். 'உம்மை உன்னும்' என்பதில் இரண்டன் உருபு தொகுத்த லாயிற்று. உறும் வகையாலே உன்னும்' என முன்னர்க் கூட்டி முடிக்க.
இதனால் முன் மந்திரத்தில், 'எம் ஈசனே ஈசன்' என்று உயர்ந்தோர் பலரும் உன்னி வந்து வணங்குவர் என்றதற்குக் காரணம் கூறப்பட்டது.

நின்றும் இருந்தும் கிடந்தும் நிமலனை
ஒன்றும் பொருள்கள் உரைப்பவ ராகிலும்
வென்றைம் புலனும் விரைந்து பிணக்கறுத்(து)
ஒன்றா உணரும் ஒருவனும் ஆமே. #2474

நூல்களில் சொல்லப்பட்ட பொருள்களைப் பிறர் அறிய நன்கு உரைப்பவராயினும், தாங்கள் ஐம்புலன்களை வென்று, 'இவன் பரமோ, அவன் பரமோ, எல்லாருமே பரமோ' என இங்ஙனம் பலவாறாக எண்ணி அலமரும் ஐயங்களை விரைவில் விடுத்து, 'இவன் ஒருவனே பரம்' என்று ஒருதலையாக உணரத்தக்கவன் ஒரு முதல்வனே. அத்தகைய முதல்வன் எங்கள் பரமாகிய சிவன் ஒருவனே ஆதலின், அவனையே நீவிர் நிற்றல், இருத்தல், கிடத்தல் முதலிய எத்தொழிலைச் செய்யினும் மனத்தால் ஒன்றியிருங்கள்; பயன் அடைவீர்கள்.

விளக்கவுரை

'பொருள்கள் உரைப்பவராயினும்' என்பது முதலாகத் தொடங்கி, ஈற்றில், 'ஆதலின்' என்பது வருவித்து. 'எம் நிமலனை நின்றும் ஒன்றும் என முடிக்க. மேல் 'எம் ஈசனை' என்றும், 'என் உயிர்' என்றும்

கூறினாற்போல, இங்கும் 'எம் நிமலனை' என்பதில் 'எம்' என்பது தொகுத்தலாயிற்று.
'ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும்'*
எனவும்,
'சிவனோ டொக்கும் தெய்வம் தேடினும் இல்லை:
அவனோடொப்பார் இங்கு யாவரும் இல்லை'*
எனவும் மேற்கூறியவற்றையே இங்கு வலியுறுத்து ஓதினார்.
இதனால், ஐயக் கொள்கை ஆகாமை கூறப்பட்டது.
'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து'*
எனத் திருவள்ளுவரும் கூறினார்.

நுண்ணறி வாய் உல காய் உல கேழுக்கும்
எண்ணறி வாய்நின்ற எந்தை பிரான்றன்னைப்
பண்ணறி வாளனைப் பாவித்த மாந்தரை
விண்ணறி வாளர் விரும்புகின் றாரே. *#2475*

உயிர்கள் தூல சித்தாதல் போல இல்லாமல் சூக்கும சித்தாய், சடவுலகத்தை இயக்கியும், அறிவுலகமாகிய உயிர்களின் அறிவுக்கறிவாய் நின்று அறிவித்தும் நிற்கின்ற, எங்கள் தந்தையாகிய சிவபெருமான், உயிர்களின் தனித் தன்மையை உணர்ந்து அவற்றைப் பக்குவப்படுத்தும் முறைகளில் பக்குவப்படுத்துவோனாவான். அவனை உணர்ந்த பெருமக்களையே உயர்ந்த அறிவினையுடையோர் சேரவிரும்புகின்றார்கள்.

விளக்கவுரை

பின் 'என் அறிவாய்' என்றமையால் முன்பு 'உலகு' என்றது சட உலகத்தையாயிற்று. பண்ணுதல் தகுதி யாக்கல். 'ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதி மாண்பும் கேட்பான் புகில் அளவில்லை'* என்பதனால், சிவன் பண்ணறிவாளன் ஆதலையறிக. 'விண்' என்பது உயர்வைக் குறித்தது. அறிவின் மிக்கோராதல் பற்றித் தேவர்கள், 'புலவர்' என்றும், 'விபுதர்' என்றும் சொல்லப்படுவார்கள். ஆதலின் அவர்களையே 'விண்ணறிவாளர்' எனக் கூறினார் எனவும், இனி 'விண்ணாவது சிவபோகம்; அறிவாளர் அங்குள்ள சிவஞானிகள் எனவும் கொள்ளலும் ஆகும். விண்ணறிவாளர் விரும்புதற்குக் காரணமானவற்றையே முதலில் உடம்பொடு புணர்த்தலாகக் கூறினார். 'விண்ணறிவாளர் விரும்புகின்றார்' என்றதனால், 'நீவிரும் அவ்வாறு விரும்புதலே தக்கது' என்பது குறிப்பாயிற்று.
இதனால், 'அறிவு வடிவான மெய்ப்பொருள் சிவனே' என்பது கூறப்பட்டது.

விண்ணவராலும் அறிவரி யான்றன்னைக்
கண்ணற உள்ளே கருதிடில் காலையே
எண்ணுற வாகும் முப் போதும் இயற்றிநீர்
பண்ணிடில் தன்மை பராபர னாகுமே. *#2476*

தேவர்களாலும், (உம்மையால் மூவர்களாலும்) அறிதற்கரியவனாகிய சிவனைச் சிறுதும் இடையீடின்றி உள்ளத்தால் பற்றுங்கள்; பற்றினால் பற்றிய அப்பொழுதே அவன் உங்களால் விரும்பப்படும் பொருளாய் வெளிப்பட்டு விளங்குவான். அதன் பின்பு எஞ்ஞான்றும் நீவிர் அவனை அகத்தும், புறத்தும் வழிபட்டால், உமது தன்மை சிவத்தன்மையாய்விடும்.

விளக்கவுரை

கண் - காலம் பற்றிய இடைவெளி. காலை - காலம் 'அக்காலையே' எனச் சுட்டு வருவித்து உரைக்க. இயற்றுதல், பண்ணுதல் என இருகாற் கூறியது அகம், புறம் நோக்கியாம். 'உம் தன்மை' என எடுத்துரைக்க. 'பராபரன்' என்பது, அவனது தன்மையைக் குறித்த ஆகுபெயர். இதனால், சிவன் சாராதார்க்கு அரியனாயினும் சார்ந்தார்க்கு எளியன் ஆதலை உணர்த்தி, 'அவனைச் சார்ந்து பயன் அடைக' என்பது கூறப்பட்டது.

ஒன்றாய் உலகுடன் ஏழும் பரந்தவன்
பின்றான் அருள்செய்த பேரரு ளாளவன்
கன்றா மனத்தார்தம் கல்வியுள் நல்லவன்
பொன்றாத போது புனைபுக ழானே. *#2477*

சிவன், தான் பொருளால் ஒன்றாயினும், எண்ணில்லாத பல பொருள்களிலும் நிறைந்திருப்பவன் (என்றது, 'அவ்வாறு வியாபிக்கும் சத்தியை உடையவன்' என்றபடி) ஆயினும் தன்னைச் சார்ந்தவர்க்குச் சார்ந்தபின்பே அருளும் பேரருளை யுடையவன். அன்பு செய்யும் மனத்தினர் தாம் அறிந்தவாறு செய்யும் செயல்களுக்கெல்லாம் இணங்குபவன். அன்பர்கள் பலவாய் நிறைந்த மலர்களைத் தூவிப் புகழும் கெடாத புகழினையுடையவன்.

விளக்கவுரை

'அவனை அணுக வேண்டினார்க்கு அணுகுதல் எளிதேயாம்' என்பது கருத்து. 'உலகு ஏழும் உடன் பரந்தவன்' என மாற்றியுரைக்க, எழுவாய் அதிகாரத்தால் வந்து இயைந்தது. உடன் - ஒருசேர. 'ஆளவன்' என்பதில் முதலில் நின்ற அகரம் விரித்தல். கன்றாமை - வெறாமை அது வெறுத்தலின் மறுதலையாகிய விரும் -புதலைக் குறித்தது, 'கல்வி' என்றது, கற்றுச் செய்யும் செயல்களை, 'அடியார் செய்த அநாசாரம்

பொறுத்தருளுபவன்' ஆதலை 'கன்றா மனத்தார்தம் கல்வியுள்நல்லவன்' என்றார். 'பொன்றாத' என்பதைப் புகழுக்கு அடையாக்குக.
இதனால், 'சிவனது இயல்பை உணரவல்லார்க்கு அவனை அடைதல் எளிது' என்பது கூறப்பட்டது.

போற்றி என்றேன் எந்தை பொன்னான சேவடி
ஏற்றியே யென்றும் எறிமணி தான்அகம்
காற்றின் விளக்கது காயம் மயக்குறல்
மாற்றலும் கேட்டது மன்றுகண் டேனே. *#2478*

எம் தந்தையாகிய சிவபெருமானது பொன் போலும் சிவந்த திருவடிகளில், அகத்தில் எனது மனத்தையும், புறத்தில் பூக்களையும் ஏற்றி, 'போற்றி போற்றி' என்று பலநாளும் துதித்தேன். அப்பொழுது, அடிக்கப்பட்ட மணியின் ஓசை போன்ற ஓர் ஓசை உள்ளத்திலே கேட்டது. உடனே, காற்றின் முன்னே உள்ள விளக்குப் போல்வதாகிய உடம்பு எந்த நேரத்திலும் நீங்குவதாயினும், அஃது என்றும் நீங்காமலே இருப்பது போலக் காட்டி மயக்குகின்ற மயக்கத்தை நீக்கும் உபாயமும் கேட்டது. பின்பு எல்லாவற்றையும் அடக்கி, மேலே வியாபித்துள்ள பரவெளியும் என் கண்முன் காணப்பட்டது.

விளக்கவுரை

'போற்றி என்றேன்' என்பதை, 'என்றும்' என்பதன் பின்னர்க் கூட்டுக. 'கேட்டது' என்பதை, முன்னரும், கூட்டி, 'அகம் எறிமணி கேட்டது, மாற்றலும் கேட்டது' என்க. மணி, அதன் ஓசையைக் குறித்த ஆகுபெயர். இவ்வோசை யோகத்திற் புலனாகும். ஓசை 'விள
க் -காகிய காயம்' என்க. அது பகுதிப் பொருள் விகுதி. 'மாற்றல்' என்பது ஆகுபெயராய் அதற்குரிய உபாயத்தைக் குறித்தது. உபாயம் கேட்டமை யாவது. அகத்தில் யோகத்தால் புலனாயினமையாம். 'கேட்டது' எனச் செயப்படுபொருள் வினை முதல் போலக் கூறப் பட்டது. பரவெளி யாவது, திருவருள் அது காணப்பட்டமையாவது தெளிவாக விளங் -கினமை அதனைக் கண்டமை கூறவே அதன்கண் உள்ள சிவத்தைக் கண்டமை கூறவேண்டாவாயிற்று. 'நீவிரும் ஏற்றிப் போற்றினால், கேட்டும், கண்டும் பயன் பெறலாம்' என்பது குறிப்பெச்சம்.
இதனால், 'சரியை கிரியா யோகங்களால் சிவனை அடைந்து, அஞ்ஞானம் நீங்கி, மெய்ஞ்ஞானிகள் ஆவீராக' என்பது கூறப்பட்டது.

நேடிக்கொண் டென்னுள்ளே நேர்தரு நந்தியை
ஊடுபுக் காரும் உணர்ந்தறி வார் இல்லை
கூடுபுக் கேறலுற் றேன் அவன் கோலம் கண்
மூடிக்கண்டேன் உல கேழும்கண் டேனே *#2479*

என்னைத் தானே தேடிக்கொண்டு வந்து என்னுள்ளேயிருக்க

ஒருப்பட்டுவிட்ட சிவனை என்னுள்ளே புகுந்து அறிகின்றவர் ஒருவரும் இல்லை. (ஆகவே, வேறிடத்தில் அவனை அறிதலும் இயலாமை வெளிப்படை) யான் வெளியே சென்ற அலையாமல் என் உடம்பினுள்ளே கீழ் இருந்து மேல் ஏறிச் சென்று பொழுது அவனது அழகைக் கண்டேன்; காணுங்கால் கண்ணைத் திறந்து பார்த்துக் காணாமல் கண்ணை மூடிக்கொண்டே கண்டேன். அப்பொழுது அவனை மட்டுமா கண்டேன்? ஏழுலகங்களையும் கண்டேன்.

விளக்கவுரை

'தானேவந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்'*

எனவும், 'தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்' எனவும் அருளிச் செய்தவாறு, பக்குவம் எய்திய ஆன்மாக்களை அவை பக்குவம் எய்தியது உணர்ந்து தானே சென்று அடைந்து அருளுபவன் சிவன் ஆதல் பற்றி, நேடிக்கொண்டென்னுள்ளே நேர்தரு நந்தியை' என்றார். 'கூடு புக்கு ஏறலுற்றேன்' என்றது மூலாதாரத்தினின்று ஆறு ஆதாரங்களையும் நிராதாரத்தில் யோக நெறியால் சென்றமையை, 'கண் மூடி' என்றது அந்நெறியைக் குறித்தற்கு. யோகக் காட்சியில் அவனைக் கண்டவர்கட்கு அவனது அருளால் எவ்விடத்திலும் எக்காலத்துப் பொருளும் இனிது விளங்குதலைக் குறிக்க, 'கோலம் கண்டேன் உலகேழும் கண்டேன்' என்றார். 'ஆரும் உணர்ந்தறிவார் இல்லை' என்றதற்கு, இறைவன் யோகியர் உள்ளத்தில் விளங்குதல் போலப் புற இடங்களில் விளங்குதல் இல்லை' என்பதே கருத்து. இக்கருத்தே பற்றி அம்மை திருவந்தாதியிலும்,

'ஆர்வல்லார் காண அரனவனை? அன்பென்னும்
போர்வை யதனாலே போர்த்தமைத்துச் - சீர்வல்ல
தாயத்தால் நாமும் தனிநெஞ்சி னுள்ளடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து'*l*

என்று அருளிச் செய்யப்பட்டது. இதில் அன்பர் உள்ளம் குறிக்கப்பட்டது.

'காலையும், மாலையும் கைதொழு வார்மனம்
ஆலையம், ஆரூர் அரனெறி யார்க்கே'*3*

என்ற அப்பர் திருமொழியும் இக்கருத்தே பற்றி எழுந்தது. இதனால், யோக முயற்சியும், அன்பும் சிவனை அடைதற்கு வழியாதல் கூறப்பட்டது.

ஆன புகழும் அமைந்ததோர் ஞானமும்
தேனும் உடைய சிறுவரை ஒன்றுகண்(டு)
ஊனம்ஒன் றின்றி உணர்தல்செய் வார்கட்கு

வானகம் செய்யும் மறவனும் ஆமே *#2480*

யோகக் காட்சி பற்றி, 'முக்காலமும் உணர்ந்தவர்' எனப் பலரும் கூறப்பட்டுக் குவியும் புகழாகிய உயர்வையும், அவ்யோகத்தாலே பிறர் ஒருவரால் அசைக்க ஒண்ணா அருள் உணர்வாகிய துளங்கா நிலையையும், அமுதமாகிய தேனையும் உடைய ஒரு சிறு குன்று மக்கள் எல்லாரது உடம்பிலும் உள்ளது. அதனை உணர்ந்து, ஏறும் வழியறிந்து ஏறி, அதனை உணர்வினால் அடைந்த தவத்தோரை, அவர் உடம்பு நீங்கிய பின்னர்த் தனது பேருலகில் ஏற்றுகின்ற ஆண்மையுடையவனாகவும் எங்கள் சிவன் இருக்கின்றான்.

விளக்கவுரை

யோக நெறியில் பருவ நடு 'மேரு' எனப்படுதல் பற்றி, அதனை 'வரை' என்கின்றவர், அஃது எண் சாண் உடம்பினுள் ஓரிடத்ததாதல் பற்றி 'சிறுவரை' என்றார். 'நுண்ணியதாகக் காணத்தக்கது' என்றலும் கருத்து. 'உடம்பினுள்' என்பது ஆற்றலால் கொள்ளக் கிடந்தது. அவ்விடத்துப் பருகி இன்புறுதற்கு ஏதுவாய் உள்ள அமுதத்தை, 'தேன்' எனச் சிறப்புருவகமாகக் கூறி, ஏனைய, 'புகழ், ஞானம்' என்பவற்றை உருவகம் செய்யாது வாளா கூறினமையின், இஃது ஏகதேச உருவகம். 'கண்டு' என்றது, காணுதற்கு அருமை குறித்தது. செய்தல் -தருதல். 'ஏனையோர் அது மாட்டார்' என்பது உணர்த்துதற்கு மாட்டுவானை, 'மறவன்' என்றார். மறவன் - வீரன் உம்மை சிறப்பு. இங்கும் எழுவாய் அதிகாரத்தால் வந்து இயைந்தது.

இதனால், சிவநெறி நின்று சிவயோகம் செய்யின், புகழும், ஞானமும், இன்பமும், வீடும் பெறலாம்' என்பது உணர்த்தப்பட்டது.

மாமதி ஆம்மதியாய் நின்ற மாதவர்
தூமதி யாகும் சுடர்பர மானந்தம்
தாமதி யாகச் சகம்உணச் சாந்திபுக்*(கு)*
ஆம்மலம் அற்றார் அமைதிபெற் றாரே. *#2481*

'மதி' என்பதற்கு, 'அறிவு' என்பதும் பொருள் ஆதலால் 'மதி' என்னும் பெயருக்கு வானத்துச் சந்திரனை விட மிக உரிமையுடைய உச்சிச் சந்திரனை அடைந்து, அதனால் உண்டாகும் அறிவையே அறிவாகப் பெற்ற யோகிகளுடைய தூய அறிவாய் விளங்கும் ஒளி, பேரின்பமே வடிவாக உடைய பரம்பொருளாம். அதனால், பிறரெல்லாம் தங்களுடைய நிலையற்ற அறிவையே அறிவாகப் பற்றி உலகத்தை நுகர்ந்துகொண்டிருக்க இவ்யோகிகள் 'உபசாந்தம்' என்னும் நிலையை அடைந்து, அநாதியே பற்றிய மலங்கள் நீங்கப்பெற்று, அமைதி நிலையை அடைகின்றனர்.

விளக்கவுரை

'மாதவரது தூய்மதி' என்க. பரமானந்த வடிவானதை, 'பரமானந்தம்' என்றார். தாமதி - தாவுகின்ற மதி. ஒன்றை விட்டு ஒன்றைப் பற்றும் நிலையில்லாத அறிவு. அற்றார். முற்றெச்சம். தெளிவு பற்றி நிகழ்காலம், இறந்த காலமாகச் சொல்லப்பட்டது.

இதனால், முன் மந்திரத்தில் கூறப்பட்ட யோகத்தின் சிறப்புடைப் பயன் கூறப்பட்டது.

பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்*(டு)*
இதமுற்ற பாச இருளைத் துரந்து
மதம்அற்*(று)* 'எனதியான்' மாற்றிவிட் டாங்கே
திதம்உற் றவர்கள் சிவசித்தர் தாமே ***#2482***

'சாலோகம், சாமீபம், சாரூபம்' மூன்றும் பத முத்திகளாம். சிலர் இவற்றையே வேறு வகையாகக் கூறி 'பரமுத்தி' எனச் சாதிப்பர். அவற்றில் எல்லாம் இருள்மலம் ஆகிய ஆணவம் பற்றறக் கழியாமையால் அதன் காரியமாகிய துன்பம் அவ்விடங்களில் சிறிது சிறிது உள்ளதேயாம். ஆகையால், 'அவை குறையுடையன' என்று அறிந்து, அவற்றோடு நிற்றலை விடுத்து. ஆணவம் பற்றற நீங்கினமையால், அதன் காரியமாகிய மயக்கமும், 'யான், எனது' செருக்கும் பற்றறக் கழிய, அப்பற்றுக்களை இயல்பிலே இல்லாதவ னாகிய பரம சிவனிடத்தில் அடங்கி நிலைத்திருப்பவர்களே உண்மை - யில் சிவனைப் பெற்றவராவர்.

விளக்கவுரை

'அயன், அரி, அரன்' என்னும் மூவர் பதவிகளைச் சிவநூல்கள் ஓரிடத்தும் 'முத்தி' என்றல் இல்லையாகலின் அவைகளை மூனறு 'பத முத்திகள்' என்றல் கூடாமையறிக. இதம் உற்ற பாசம் - பெத்த நிலையில் இன்பம்போலத் தோன்றிய பாசம். 'ஆங்கு' என்றது பண்டறி சுட்டு திதம் - நிலைபேறு 'இந்நிலையை அடைந்தவர்களே நிலை பெற்றவர்' என்றதனால், பதமுத்தியடைந்தவர்கட்கும் பின்னர்ப் பிறப்புவருதல் உண்டு என்பது,

'தவம் செய்தார் என்றும் தவலோகம் சார்ந்து
பவம் செய்து பற்றறுப்பா ராகத் - தவம் செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றாசூழ் சொல்லுமாம் கண்டு'

என்பது சிவஞான போதம்.* 'பரமுத்தி யொழிந்த ஏனைய முத்திகள் இன்பநிலை ஆகா' என்பதைச் சிவஞான சித்தி கீழ்க்காணுமாறு விளக்கும்.

'பினாதி அருள் பெற்றவர்கள் நித்தஉரு வத்தைப்
பெற்றிருக்கை முத்தியெனில், பெறும்பதமே இதுவும்;
இனாதுநிலை இதுதானும்; காயம் உண்டேல்,
இருங்கன்மம், மாயைமலம் எல்லாம் உண்டாம்.' *9*
சித்தி - பேறு. சித்தர் - பேறு பெற்றவர்.
இம்மந்திரம் அகச் சமயத்தார்க்கு அறிவுறுத்தியது.

சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்
சுத்தாசுத் தத்துடன் தோய்ந்தும்தோ யாதவர்
முத்தர முத்திக்கும் மூலத்தர் மூலத்துச்
சத்தர் சதாசிவத் தன்மையர் தாமே. ***#2483***

சிவஞானத்தால் சிவதரிசனத்தைப் பெற்றோர் யாவரும் சிவனைப் பெற்றவராகவே எண்ணப்படுவர். (அவர் பின்பு பதமுத்திக்கு மேலான அபர முத்தி பரமுத்திகளை அடைவர் ஆதலின்,)
'பரஞானத் தாற்பரனைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர்; பதார்த்தங்கள் பாரார்.' *l*
என்றபடி அவர்கள் 'சுத்தம், அசுத்தம்' என்னும் இருவகைப் பிரபஞ்சத்துள் எதில் இருப்பினும் அதில் பற்றற்றேயிருப்பர். அவர், 'பதமுத்தி, அபரமுத்தி, பரமுத்தி' என்னும் மும்முத்திகளையும் தம்மை அடைந்த மாணாக்கர்க்கு அளிக்க வல்ல ஆசிரியர்களும் ஆவர். இனி மூலாதாரத்தில் ஒடுங்கியிருக்கும் குண்டலி சத்தியை எழுப்பி அதன் பயனைப் பெற்ற யோகியரும் சதாசிவ மூர்த்திபோல அபர ஞானமாகிய கலைஞானங்களை வழங்கத் தக்கவராவர்.

விளக்கவுரை

'சீருடன் தோயாதவர்' என இயைக்க. சீர் - சிறப்பு திருவருள்.
'அதனுடனேயிருந்துகொண்டு, தோய்வின்றி இருப்பர்' என்க சத்தியைப் பெற்றவர் சத்தர். சதாசிவமூர்த்தி பரஞானத்தையும் தருவபர் ஆயினும், அவர் வேதாகமங்களை அருளிச்செய்து, பிறர்க்கு அறிவுறுத்தினமையே இங்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
இதனால், சிவஞானிகளும், சிவயோகிகளுமே ஆசிரியராவர் என்பது உணர்த்தும் முகத்தால், பிறரை ஆசிரியராகக் கொண்டு மயங்குதல் கூடாமை கூறி முடிக்கப்பட்டது.
முதல் தந்திரம் முதலாகச் சில இடங்களில் கூறியவற்றையே இங்குக் கூறினார். ஆயினும் அவை சுபக்கத்தாரை நோக்கி உண்மை யுணர்த்தலாகக் கூறப்பட்டன; இவை பரபக்கத்தாரை நோக்கி, அறிவுரையாகக் கூறப்பட்டன. இவ்வேற்றுமை உண்மையால், இவை கூறியது கூறல் ஆகாமை உணர்க. இங்ஙனமாகவே, இவ்வாறு உரையாதார்க்கு இவை கூறியது கூறல் ஆதலையும் உணர்க.

10.31.அட்ட தள கமல முக்குண அவத்தை

உதிக்கின்ற இந்திரன் அங்கி யமனும்
துதிக்கும் நிருதி வருணன் நல் வாயு
மதிக்கும் குபேரன் வடதிசை ஈசன்
நிதித்தெண் டிசையும் நிறைந்திநின் றாரே. ***#2484***

'அண்ட பிண்டம் அவை சமம்'* *கோயிற் புராணம் - பதஞ்சலி சருக்கம் - *70.* என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்தது ஆதலின், இதய கமலம் எட்டிதழ்களை உடையதாகக் கொள்ளப்படுதல் போலவே நில வுலகமும் எட்டிதழ்களையுடைய தாமரை மலர்களும், அவ்விதழ்களில் திசைக் காவலர்கள் இருப்பதாகவும் பாவித்து அவர்களை வழிபடல் வேண்டும் - என்பது வைதிகக் கொள்கை. அவரளவிற்கு அது வேண்டுவதே என்பதை முதற்கண் கூறுகின்றார். இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

உதிக்கின்ற சூரியனுடன் தோன்றுகின்ற இருளில் தோன்றாமை எல்லார்க்கும் உரியது ஆதலின். இதனை ஏனையோர்க்கும் கொள்க. இந்திரன் முதலிய எண்மரையும் கிழக்கு முதலாகத் தொடங்கி எட்டுத்திசையையும் வலமாக எண்ணிப் பொருத்திக் கொள்க. ஈசன் - ஈசானன். நிதித்தல் - நிதிமிகுதல்.

இதனால் *'திசை காக்கும் கடவுளர் எண்மராவார் இவர்'* என்பது கூறப்பட்டது. கிழக்கிலும், வடக்கிலும் இந்திரனையும், குபேரனையும் நீக்கி, முறையே *'ஞாயிறு, திங்கள்'* என்பவரைக் கூறுதலும் உண்டு. அவ்விடத்தில் திங்களை, *'சோமன்'* என்ப,

'ஞாயிறாய், நமனு மாகி,
வருணனாய்ச், சோம னாகித்
தீ, யறாநிருதி, வாயு,
திப்பிய சாந்த னாகி' - திருமுறை - 4,32.6.

என்னும் திருப்பாடலைக் காண்க. இனி, *'சோமன்'* என்பதும் குபேரன் பெயரே என்பாரும் உளர்,

ஒருங்கிய பூவும்ஓர் எட்டித ழாகும்
மருங்கியல் மாயா புரியத னுள்ளே
சுருங்கிய தண்டின் சுழுனையி னூடே
ஒருங்கிய சோதியை ஓர்ந்தெழும் உய்ந்தே. ***#2485***

உயிர்களோடு ஒன்றி இயங்குகின்ற மாயா நகரத்தில் ஒன்றை ஒன்று ஒத்துள்ள தாமரைமலர்கள் எட்டிதழ்களையுடையன வாகும். அவை உள்ளே நுணுகிய புழையை உடைய தண்டின்மேல் உள்ளன. அவற்றுள் ஒரு தண்டு *'சுழுமுனை'* எனப்படுகின்றது. அதனோடு உள்ள புழையால்

மலர்கின்ற தாமரையில் விளங்குகின்ற ஒளியையே யோகிகள் காண்கின்றனர் ஆதலின் மற்றொரு தாமரையிலும் அந்த ஒளியையே பாவித்து உய்தி பெறுங்கள்.

விளக்கவுரை

இம்மந்திரம் இரட்டுற மொழிந்தது. பூ - *1* மலர்; இதய கமலம் *2* பூமி. மாயாபுரி - *1* அண்டம். *2* பிண்டம், உடம்பு இதய கமலத்தை உடைய தண்டு சுழுமுனை நாடி. பூமியைத் தாங்குகின்ற தண்டு அனந்தன் - (ஆதிசேடன்) இதய கமலத்தில் விளங்குகின்ற ஒளி சிவன். அவனையே அண்டத்திலும் (பூமியிலும்) நடுநாயகனாக வைத்து, ஏனையோரைச் சுற்றுக் கடவுளராகக் கொண்டு வழிபட்டு உய்க என்பதமாம். இவ்வாறு செய்யும் வழிபாடு சிவாலயங்கள் அனைத்திலும் என்றும் நிகழ்ந்து வருதல் வெளிப்படை எனவே, 'முன் மந்திரத்துக் கூறப்பட்ட திசைக் காவலர்களைச் சிவனது ஆணையை நடத்தும் அதிகாரிகளாகக் கொண்டே வழிபடுதல் வேண்டும்' என்பது போந்தது. 'இதுவே சிவ நெறி' என்க.

இரண்டாம் அடியை முதலில் வைத்து உரைக்க எழுதல் - மேம்படுதல். இதனால், 'வைதிக கருமங்களைச் செய்யினும் சைவ முறையிலே செய்தலே ஆன்றோர் ஆசாரம்' என்பது கூறப்பட்டது.

மொட்டலர் தாமரை மூன்றுள மூன்றினும்
விட்டலர் கின்றனன் சோதி விரியிதழ்
எட்டல ருள்ளேர் பிரண்டல ருள்ளுறில்
பட்டலர் கின்றதோர் பண்டம் கனாவே ***#2486***

அரும்பாய் இருந்து அலர்த்த அலர்கின்ற தாமரை மலர்கள் உடலினுள்ளே ஒன்றல்ல; மூன்று உள்ளன. அந்த மூன்றிலுமே ஒளி வடிவான இறைவன் விளங்குகின்றான். எனினும், மேற்கூறிய எட்டிதழ்த் தாமரையிலே நின்றுவிடாமல் ஏறிச் சென்று இரண்டிதழ்த் தாமரையை அடைந்து அவனைத் தரிசித்தால், பிறந்து வளர்கின்ற உடம்பு கனவுக் காட்சியாய்விடும்.

விளக்கவுரை

'மொட்டு அலர்கின்ற' என்ற விதப்பால், அலர்த்த அலர்தல் பெறப்பட்டது. அலர்த்துதல் பிராணாயாமத்தால். மூன்று தாமரைகளாவன, மேல் ஆதாரங்களாகிய, 'அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை' என்பன எட்டிதழ்த் தாமரை அனாகதமே. கீழ் ஆதாரங்களில் வேறு கடவுளர் இருத்தலின் அவற்றைக் கூறாது, இம்மூன்று ஆதாரங்களை மட்டுமே கூறினார். இவற்றில் சிவன் 'உருத்திரன், மகேசுரன், சதாசிவன்' என இருப்பன். அதனால், 'உருத்திரனிடத்திலே

நின்று விடாமல், சதாசிவனை அடைக' என்றார். ஆதார யோகத்தின் பயன் விளைவது அவ்விடமேயாகும் அனாகதம் பூசைத்தானமாக ஆஞ்ஞையே தியானத் தானமாம். ஏற்பு - எழுந்து பண்டம் - உடம்பு. இது பின்னர் வருதலின், முன்னர் 'மூன்றுள' என்றது இதனுள்ளேயாயிற்று. கனவுக் காட்சியாதலாவது, 'கனவு போல நிலையாது' என்னும் உணர்வு மிகுதல்.
இதனால், 'ஆதார யோகம் யாவும் ஒரு பெற்றிப்பட்டன அல்ல; மேலையாதார யோகமே சிவ யோகமாய்ப் பயன் தரும்' என்பது கூறப்பட்டது.

ஆறே அருவி அகம் குளம் ஒன்றுண்டு
நூறே சிவகதி நுண்ணிது வண்ணமும்
கூறே குவிமுலைக் கொம்பனை யாளொடும்
வேறே யிருக்கும் விழுப்பொருள் தானே. *#2487*

உடம்பினுள், முன் அதிகாரத்தில் கூறியவாறு உள்ள சிறுமலையினின்றும் தோன்றுவது ஆறு அன்று; அருவியே அந்த அருவியின் நீரை ஏற்கின்ற குளம் (ஏரி) ஒன்று உண்டு. அதில் விளையும் விளைவுவகைகளோ பல. ஆயினும் அவ்வினைவினது இயல்பு அறிதற்கரிதாய மிக நுட்பமாய் உள்ளது. அதனை வெளிப் படக்கூறினால், மாதொரு கூறனாகிய பரம்பொருளேயாம்.

விளக்கவுரை

'அருவியே ஆறு' என ஏகாரத்தை மாற்றி யுரைக்க. 'அகம்' என்பதை முதலிற் கூட்டுக. 'அருவி' என்றதனால், அது தோன்றும் இடமாகிய மலையுண்மை தானே பெறப்பட்டது. 'மலையில் ஆறு உற்பத்தியாதல் இயல்பு; ஆயினும் இங்கு அஃதில்லை' என்றபடி. 'அஃது ஆஞ்ஞை' என்பது மேலே சொல்லப்பட்டது. அருவி - ஆஞ்ஞை யினின்றும் பெருகும் அமுத தாரை. குளம் - இருதயம். விளைவு பல வகையினதாதல் இறைவனது எண் குணங்கள் பற்றியாம். முதல் இரண்டடிகளிற் பொதுப்படக் கூறியவற்றை ஏனையோர் அறிவா ராயினும், அதனைச் சிறப்புவகையான் அறியாமை பற்றி, 'அதனை அவ்வாறு அறிதல் வேண்டும்' என்பதைப் பின்னிரண்டடிகளால் கூறினார். 'அங்ஙனம் உணராத பொழுது அவர் முயற்சி பெரும்பயன் தாராது' என்பதாம். வேறேயிருத்தல், தலைமையிடத் திருத்தல்.
இதனால், மேலையாதார யோகங்களையும் சிவ யோகமாகச் செய்யுமாறு கூறப்பட்டது.

திகையெட்டும் தேர்எட்டும் தேவதை யெட்டும்
அகையெட்டு மாய்நின்ற ஆதிப் பிரானை
வகையெட்டும் நான்கும்மற் றாங்கே நிறைந்து

முகையெட்டி னுள்நின் றுதிக்கின்ற வாறே. ***#2488***

தியானப் பொருள் பிராசாத கலைகள் பன்னிரண்டிலும் நிறைந்து, எட்டிதழ்த் தாமரையாகிய இதய கமலத்திலும் பொருந்தி வெளிப்படச் செய்கின்ற முறை, திசையெட்டும், அவற்றைக் காக்கின்ற தேவர் எண்மரும், அவர்தம் ஊர்தி முதலியனவும், ஐம்பெரும்பூதம், இருசுடர், உயிர் ஆகிய எட்டுப் பொருள்களும் ஆகிய அனைத்துமாய் உள்ள முதல்வனாகிய சிவபிரானை வெளிப்படச் செய்யும் முறையேயாம்.

விளக்கவுரை

'தியானப் பொருள் சிவனே' என்றபடி 'தேர் எட்டும்' என்பதை, 'தேவதை எட்டும்' என்பதன் பின்னர்க் கூட்டுக. 'தேர்' என்றது, படைக்கலம் முதலிய பிறவற்றையும் தழுவிய உபலக்கணம். 'திசைக் காவலர் அவ்வாறெல்லாம் வழிபடப்படுவர்' என்க. அகை - பிரிவு. மற்று, அசை. மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி, 'உதிப்பிக்கின்ற ஆறு, ஆதிப்பிரானை' என முடிக்க. 'ஆதிப் பிரானை உதிப்பிக்கின்ற ஆறாம்' என்றபடி. ஆறு - முறைமை. 'உதிப்பிக்கின்ற' என்பதில் பிறவினை விகுதி தொகுக்கப்பட்டது.

இதனால், 'யோகத்தின் எட்டுறுப்புக்களில் 'தியானம்' ஏதேனும் ஒன்றைத்தியானிப்பது அன்று; சிவனைத் தியானிப்பதே' என்பது கூறப்பட்டது. 'ஏதேனும் ஒன்றைத் தியானிக்கலாம்' என்பது யோக மதம்.

ஏழும் சகலம் இயம்பும் கடந்தெட்டில்
வாழும் பரம்ஒன்*(று)* அதுகடந் தொன்பதில்
ஊழி பராபரம் ஊங்கியை பத்தினில்
தாழ்வு அது ஆன தனித்தன்மை தானே. ***#2489***

வைதிக முறையில் வழிபடினும், இதய கமலத்தின் எட்டிதழ்களில் கிழக்கு முதலாகத் தொடங்கி வலமாக ஏழ் எண்ணி ஏழாவதாகிய வட இதழ் ஈறாக உள்ள இதழ்களில் உள்ளவர்களாக மேற்சொல்லப்பட்ட திசைக் காவலர்களைச் சகலவருக்கத்து ஆன்ம வர்க்கத்தவராகவும், அடுத்த வடகீழ் இதழில் உள்ள ஈசானனை அவரின் மேம்பட்ட பிரளயாகல உருத்திரனாவும், எட்டையும் கடந்து மேலாக ஓங்கி நிற்கும் உயர்புற இதழில் சீகண்ட உருத்திரரை வைத்துச் சிவனாகவும், கீழ்நோக்கித் தூங்கும் கீழ்ப்புற இதழில் ஆதார சத்தியை வைத்து அச்சத்தியாகவும் பாவித்து வழி படின் சிறப்புடைய சைவ வழிபாடாக அமையும்.

விளக்கவுரை

'ஏழ்' என்று ஏழ் இதழ்களின் உள்ள தேவதைகளைக் குறித்தது. 'சகலமாக இயம்பும்' என ஆக்கம் வருவிக்க. 'இயம்பும்' - இயம்பப்படும். 'வாழும் ஒன்று பரம்' என மாற்றிக்கொள்க. 'பரம்' என்பது, 'மேலானது' என்னும்

அளவாய் நின்றது. ஊழி பராபரம் அயன், மால் இவர்களது ஊழிலும் அழியாது நிற்கும் சீகண்ட உருத்திரர். தாழ்வு - கீழ் உள்ளது; ஆதார சத்தி. மேல், 'சுருங்கிய தண்டின் சுழுனையினூடே' என்றமையால் இம்முறைக்கு மூலா தாரத்தில் உள்ள குண்டலிசத்தியே தாமரையின் கிழங்காகும், இதய கமல வழிபாடு சைவாகமங்களில் சொல்லப்பட்ட சைவமுறை வேறாதலையறிக. தனித்தன்மை - சிறப்புத் தன்மை; அது சிவ வழிபாட்டுத் தன்மையாம்.

இதனால், வைதிகத்தில் சைவமாம் வகை சொல்லப்பட்டது. அனைத்துத்தேவர்களையும் ஒரு நிகராகப் பரமாகக் கருதுவது தனி வைதிகம் என உணர்க.

பல்லூழி பண்பிற் பகலோன் இறையவன்
நல்லூழி ஐந்தினுள் ளேநின்ற ஊழிகள்
செல்லூழி அண்டத்துச் சென்றவண் ஊழியுள்
அவ்வூழி உச்சியுள் ஒன்றின் பகவனே. ***#2490***

முதற்கடவுளாவான் உலகிற்குப் பலவகையான ஊழிகளைப் பகுத்து வைத்துத்தான் அவற்றில் அகப்படாது நிற்பவன். அங்ஙனம் பகுக்கப்பட்ட ஊழிகள் பெரும்பான்மையாக ஐந்தாகும். அவை நிவிர்த்திகலை யூழி முதலாக, சாந்தியதீதைகலை ஊழி ஈறானவையாம். அவற்றில் ஒன்றிலும் உள்ளாய் நிகழும் ஊழிகள் பல. ஒவ்வோர் ஊழியையும் கடந்து அனைத்து ஊழிகளும் முடிந்த பின்பும் அவற்றில் மாயையில் அனைத்து உலகங்களும் ஒடுங்கவும் தான் ஒடுங்காது மேல் நிற்பவன் எவனோ, அவனே முழுமுதற்கடவுள்.

விளக்கவுரை

'அத்தகையோன் பரம சிவனே' என்பது கருத்து. அதனால், 'ஏனையோர் பலரும் அவனால் தோற்றி ஒடுக்கப்படும் உயிர் வருக்கத்தினரே' என்பதும் அருத்தாபத்தியால் பெறப்பட்டது. பகல் - பகுதல்; பகுத்தல். பகலோன் - பகுத்தலை உடையவன். நின்ற - நின்றன. இரண்டாம் அடியீற்றில் 'பல' என்பது வருவிக்க. 'செல்லூழிதோறும் அண்டத்துச்சென்றவன்' என்க. 'அண்டம்' என்பது, 'அப்பால்' என்னும் பொருட்டு. 'உச்சியுள்' என்பதும் அது ஊழியுள் அவ்வூழி - எல்லா ஊழிகளிலும் முடிவான ஊழி. ஒன்றின் - பொருந்தியிருப்பின். 'அவன் பகவனாம்' என முடிக்க. ஈற்றடி இன எதுகை.

இதனால், இதய கலம வழிபாடு சைவ வழிபாடாக நிகழ்தலே சிறப்புடையதாதல், அதற்குக் காரணம் கூறும் முகத்தால் வலியுறுத்தப்பட்டது.

புரியும் உலகினைப் பூண்டஎட் டானை
திரியும் களிற்றொடு தேவர் குழாமும்

எரியும் மழையும் இயங்கும் வளியும்
பரியும்ஆ காசத்தில் பற்றது தானே. *#2491*

முதற் கடவுளால் ஆக்கி அளிக்கப்படும் உலகத்தின் திசைகள் எட்டாகப் பாகுபட்டு உள்ளன. 'அத்திசைகளில் எட்டு யானைகள் நின்று உலகத்தைத் தாங்குகின்றன' என்பதும், 'அந்த யானைகளைத்தங்கள் ஊர்திகளாகக் கொண்டு உலாவும் தலைவர்கள் உளர்' என்பதும் இருக்கட்டும். நெருப்பும், நீரும், ஓயாது இயங்கும் காற்றும் ஆகாசமாகிய வெளியைப் பற்றாகக் கொண்டுதான் இயங்குகின்றன. அதுபோல, அனைத்திற்கும் பற்றுக்கோடாய் உள்ளவன் அனைத்து ஊழிகளையும் கடந்து நிற்கின்ற அவனே.

விளக்கவுரை

'அதிசைக் காவலர்களே உலகிற்குப் பற்றுக் கோடல்லர்' என்பது கருத்து. அக்கருத்து உவமை காட்டித் தெளிவிக்கப்பட்டது. பூண்ட - பூண்டன; சுமக்கின்றன. எண்மரையும் சேர்த்து, 'குழாம்' என்றார். அவர்களை உலகிற்குப் போதியவராகக் கருதுபவரை உட்கொண்டு, ஏனைத் தேவரைச் சேர்த்திலர். 'குழாமும் திரியும்' என்க. உம்மை, இறந்தது தழுவிற்று. பரிதல் - இயங்குதல். ஆகாசத்தில் பரியும் எனவும், 'அதுவே பற்று' எனவும் மாற்றியுரைக்க. தான், அசை. 'அதுபோல அனைத்திற்கும் பற்று அவனே' என்பது குறிப்பெச்சம்.
இதனால், முன் மந்திரத்திற் கூறப்பட்ட பொருள் வலியுறுத்தி விளக்கப்பட்டது.

ஊறும் அருவி உயர்வரை உச்சிமேல்
ஆறின்றிப் பாயும் அருங்குளம் ஒன்றுண்டு
சேறின்றிப் பூத்த செழுங்கொடித் தாமரைப்
பூவன்றிச் சூடான் புரிசடை யோனே. *#2492*

சுரந்து பாய்கின்ற அருவியை உடைய, உயர்ந்த மலை உச்சிக்குமேலே, தனக்கு வருவாயாகும் நதி எதுவும் இல்லாமல் தானே நிறைந்து, தனது நீரைக் கீழ் நிலங்கட்குப் பாய விடுகின்ற ஓர் அதிசயக் குளம் உண்டு. அக்குளத்தில் சேறும், கிழங்கும், இல்லாமலே செழிப்பான ஒரு கொடியிற் பூத்த அதிசயத் தாமரையும் ஒன்று உண்டு. அந்தத் தாமரைப் பூவைத் தவிர வேறு பூக்களைச் சிவன் விரும்பிச் சூடுதல் இல்லை.

விளக்கவுரை

ஊறும் அருவி, விந்துத் தானத்தில் உண்டாகின்ற அமிர்ததாரை. அதனை உடைய உயர் வரை, ஆஞ்ஞை; புருவ நடு. அதற்கு மேலேயுள்ள அருங்குளம் உச்சி. அது 'சந்திர மண்டலம்' எனப்பட்டு, சந்திரன் தருகின்ற அமிர்தத்தைப்போல அமிர்தத்தைத் தருதலால், 'ஆறின்றிப்

பாயும் அருங்குளம்' எனப்பட்டது. 'உண்டு' என்பதன்பின், 'அதன்கண்' என்பது வருவிக்க. செழுங்கொடி, ஆஞ்ஞையினின்றும் மிடற்றினின்றும் உச்சிக்குச் சென்று பரவும் நாடிகள்; நரம்புகள் பூத்த தாமரை, உச்சியில் மலர்கின்ற ஆயிர இதழ்த் தாமரை. அதனையே சிவன் விரும்பிச் சூடுதல், அத்தாமரையினின்றும் தோன்றும் யோகக் காட்சிகளையே ஆஞ்ஞையில் தன்னைத் தியானிக்கும் யோகிகட்குத் தான் வழங்கும் பிரசாதமாகக் கொண்டிருத்தல் இம்மந்திரமும் மேற் போந்த சில மந்திரங்களை போலப் பிசிச்செய்யுள். ஈற்றடி மூன்றாம் எழுத்தெதுகை பெற்றது.
இதனால், அட்ட தள கமல வழிபாட்டிற்குமேல் யோக வழிபாடும் செய்யத் தக்க சைவ வழிபாடாதல் கூறப்பட்டது.

ஒன்றும் இரண்டும் ஒருங்கிய காலத்து
நின்றும் இருந்தும் நிலம்பல பேசினும்
வொன்றும் இருந்து விகிர்தனை நாடுவர்
சென்றும் இருந்தும் திருவுடை யோரே. *#2493*

மும்மலங்களும் இறைவனது திருவுள்ளத்தோடு ஒத்துப்போகும் காலத்தில், அவனது திருவருளைப்பெற்று நிற்கும் பெரியோர்கள் உலகத்தார் ஆங்காங்கே நின்று கொண்டும், இருந்து கொண்டும், தங்கள் வாய்க்கு வந்த எவற்றைப் பேசினாலும் அவற்றைப்பொருட்படுத்தாது, ஐம்புலன்களை வெல்லுதலும் செய்து, நடந்தாலும், இருந்தாலும் சிவனை உணர்ந்தேயிருப்பர்.

விளக்கவுரை

'அவருடைய உணர்வே உண்மை அட்டதள கமல வழிபாடாகும்' என்பது குறிப்பெச்சம். இறைவனுடைய திருவுள்ளம், 'உயிர் தன்னை உணர்தற்கு எந்தத் தடையும் இருத்தல் கூடாது' என்பது. ஆணவமலம் மறைத்தலைச் செய்யாது வாளா இருத்தலும், மாயை கன்மங்கள் உயிர்கள் திருவருள் நெறியில் ஒழுகுதற்குத் துணை செய்தலுமே மும்மலங்களும் இறைவனது திருவுள்ளத்தோடு ஒத்துப்போதலாம். 'அந்நிலை மலம் பரிபாகமான காலத்தில் உண்டாகும்' என்பது கருத்து. 'மால் இவன் என்ன மன நினைவில் - ஒத்தன சொல்லிட ஊரூர் திரிந்து எவரும் - தத்தம் மனத்தன பேச'3 என்னும் 'நிலையே, நிலம், நின்றும், இருந்தும் பல பேசினும் விகிர்தனை நாடுவர்' என்றார். 'வென்றும்' என்னும் உம்மை சிறப்பும்மை.
இதனால், சைவ வழிபாடு மலபரிபாகத்தில் உலகியலின் நீங்கினாரிடத்தில திரிபின்றி நிற்கும்' என்பது கூறப்பட்டது.

*10.32.*நவாவத்தை அபிமானி

தொற்பத விசுவன் தைசதன் பிராஞ்ஞன்
நற்பத விராட்டன் பொன் கற்பன் அவ் வியாகிருதன்
பிற்பதச் சொல்இத யன் பிர சாபதியன்
பொற் புவிச் சாந்தன் பொருந்தபி மானியே. *#2494*
வியாத்தன், தைசதன், பிராஞ்ஞன், விராட்டன், இரணிய கருப்பன், அவ்வியாகிருதன் இதயன், பிரசாபதி, சாந்தன் இம்முத்திறத்து ஒன்பது பெயர்களும் சீவ சாக்கிரம் முதலிய முத்திறத்து ஒன்பது அவத்தைகளிலும் சிவன் தான் காட்சிப்படும் முறையால் எய்தும் பெயர்களாம். ஆகவே, அவனை அத்தன்மையனாகக் காணும் காட்சியில் சீவனும் சார்ந்ததன் வண்ணமாம் தன் றன்மையால் அப்பெயர்களைப்பெற்று நிற்கும்.

விளக்கவுரை

விசுவன் - உலகுயில் வடிவினன். தைசதன் - (தேசசு) ஒளி வடிவினன். பிராஞ்ஞன் - பெருஞான வடிவினன். இம்மூன்று பெயர்களும் முறையே பிராணாயாம பிரத்தியாகாரங்களாகிய சீவ சாக்கிரத்திலும் ஆன்ம தரிசன சிவரூபங்களாகிய சிவ சாக்கிரத்திலும், சீவன் முத்தி அதிகார முத்திகளாகிய பரசாக்கிரத்திலும் எய்துவனவாம்.
விராட்டன் - விராட் புருடன்; சகல புவன வடிவினன். இரணிய கருப்பன் - பொன்வண்ணத்தன்; கவர்ச்சி தருபவன். அவ்வியாகிருதன் - பிரிவுபடாதவன்; அருவுருவன். இம்மூன்று பெயர்களும் முறையே தாரணையாகிய சீவ சொப்பனத்திலும், ஆன்ம சுத்தி சிவ தரிசனங்களாகிய சிவ சொப்பனத்திலும், இலய முத்தியாகிய பர சொப்பனத்திலும் எய்துவனவாம்.
இதயன் - இருதயத்தில் ஒளிர்கின்றவன்; பிரசாபதி - உயிர்களைப் பாதுகாப்பவன். இங்கு ஆகாமியம் நிகழாவாறு தடுத்துப் பிறப்பில் வீழாதபடி காத்தல் என்க. சீவனும் இவ்வாற்றால் தன்னைத் தற்காப்பதாகும். சாந்தன் - அமைதியுடையவன். பிறபொருள் அனைத்திலும் பற்றின்றியிருத்தலோடு ஒன்றன் வாசனையேனும் இல்லாது இன்ப வடிவாய் இருப்பவன். இம்மூன்று பெயர்களும் முறையே தியான சமாதிகளாகிய சீவ சுழுத்தியிலும், சிவயோக சிவபோகங்களாகிய சிவ சுழுத்தியிலும், இலய முத்தி பர முத்திகளாகிய பர சுழுத்தியிலும் எய்துவனவாம். 'பர சுழுத்தியில் காட்சிப்படுபவன் சொரூப சிவனாகிய பரம சிவனே' என்பது 'சாந்தன்' என்னும் பெயரால் அறியப்படுவது. மாண்டூக்கியோப நிடதத்து ஏழாவது மந்திரம், 'சிவம், சாந்தம், அத்வைதம், சதுர்த்தம்' எனக் கூறி மற்றும் பலவாறாக வருணித்தது சொரூப சிவத்தையேயாம்.
சதுர்த்தம் - நான்காவது பொருள். அஃதாவது, 'துரிய மூர்த்தி' என்பதாம்.

இங்குத் துரிய துரியாதீதங்களும், 'சுழுத்தி' என அடக்கப்பட்டமையால் மூன்றாவது மூர்த்தியாகச் சொல்லப்பட்டது. 'சிவன் நான்காமவன்' என்பதனால், அவன் மும்மூர்த்திகளுள் ஒருவன் ஆகாமை விளங்கும். மற்றும் அவ்வுபநிடதத்து நான்காம் மந்திரம் 'தைசசன்' என்பது சொப்பனாவத்தையில் எய்தும் பெயராகக் கூறிய சொப்பனத்தைச் சீவ சாக்கிரத்தை நோக்கச் சிவ சாக்கிரம் சொப்பனம் போலத் தோன்றுதல் பற்றிக் கூறியதாகக் கொள்ளல் வேண்டும்.

விசுவ ரூபியை முண்டகோபநிடதம் 'அந்தரான்மாவிற்கு அக்கினி தலை, சந்திர சூரியர் கண்கள், திக்குகள் காது, வேதங்கள் வாக்கு, வாயு மூச்சு, புவனங்கள் இருதயம்' என வருணித்து, 'அவனது பாதங்களிலிருந்தே அனைத்துலகங்களும் 'உண்டாயின' என்றது.*3*

'நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகமும் முகிழ்த்தன முறையே'

என்பது ஐங்குறுநூற்றுக் கடவுள் வாழ்த்து.

'தொல் பதம்' என்பது எதுகை நோக்கி, 'தொற் பதம்' எனத் திரிந்தது. இஃது உயிர்கட்கு அநாதியாய் உள்ள பசுத்துவத்தை ஒட்டி நிகழும் அவத்தையைக் குறித்தது. பதம் - அவத்தை. 'நற்பதம்' என்பது நின்மலாவத்தையையும், 'பிற்பதம்' என்பது அவற்றின்பின் நிகழும் பராவத்தையும் குறித்தன.

'அபிமானி' என்பதைச் சாதியொருமைப் பெயராகக் கொண்டு சிவன், சீவன் இருவரையுங் கொள்க.

இவ்வதிகாரத்து இம்முதல்மந்திரத்தால் நவாவத்தை அபிமானிகள் எய்தும் பெயர்கள் தொகுத்துக் கூறப்பட்டன.

நவமாம் அவத்தை நனவாதி பற்றின்
பவமாம் மலம் குணம் பற்றற்றுப் பற்றாத்
தவமான சத்திய ஞானப் பொதுவில்
துவம் ஆர் துரியம் சொரூபம் தாமே. ***#2495***

மேற்கூறிய முக்கூற்று ஒன்பான் அவத்தைகளில் முதற்கூறாகிய 'சீவ அவத்தை' எனப்படும் யோகாவத்தையில் நிற்பினும் பிறப்பு உண்டாகவே செய்யும். அதனால் குரு உபதேசத்தின் வழியாகச் சிவ அவத்தை ஆகிய நின்மலாவத்தையை அடைந்து, 'யான், எனது' என்னும் பற்றுக்களை விடுத்து, அப்பற்றுக்கள் சிறிதும் இல்லாத சிவயோகமாகிய உண்மை ஞான வெளியில் நீ அதுவாகி அடங்கி நில். அந்நிலையே சிவ துரியமாகும். அதன்பின் துரியாதீத நிலை எளிதில் கைவர, பரம சிவனை அடையும் உண்மை நிலை உண்டாகும்.

விளக்கவுரை

விதந்தோதாது பொதுப்பட ஓதியதனால் 'நனவாதி' என்றது முதற்கண் நிகழும் சீவ அவத்தையைக் குறித்தது. 'பற்றினும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. மலம் - ஆணவம். அதன் காரியமே யான்' என்னும் செருக்கு. குணம் - மாயை. அதன் காரியங்களே 'எனது' என்னும் செருக்கிற்கு நிமித்தம். 'இவற்றால் வரும் பற்று' என்க. 'அந்தப்பற்றுக்கள் வந்து பற்றாத தவம்' என்றதனால் அது சிவ யோகமாயிற்று. அந்நிலை அருள்நிலையே யாகலின் அது, 'சத்திய ஞானப் பொது' எனப்பட்டது. துவம் - தன்மை. ஆர் - பொருந்து. 'ஆம்' என்பதை முன்னரும் கூட்டி, 'அதுவே துரியம் ஆம்; பின்பு சொரூபம் ஆம்' என முடிக்க.

இதனால், மேற்கூறிய அபிமானப்பெயர்கள் ஒன்பதில் இதயனிலும் மேலான, 'பிரசாபதி, சாந்தன்' என்னும் பெயர்களைப் பெற முயல்வதே சிறப்பு என்பது கூறப்பட்டது.

சிவமான சிந்தையில் சீவன் சிதையப்
பவமான மும்மலம் பாறிப் பறிய
நவமான அந்தத்தின் நற்சிவ போதம்
தவமாம் அவையாகித் தானல்ல வாகுமே. ***#2496***

மேற்கூறிய சிவ துரியத்தில் சீவன் 'அவனே தானே ஆகிய அந்நெறி - ஏகனாகி' நிற்றலால் 'தான்' என்பதொரு முதல் இல்லையாய்விட, 'மல மாயை தன்னொடு வல்வினையின்றே '* என்றபடி. பிறப்பிற்குக் காரணமாய் நின்ற மும்மலங்களும் அடியோடு கெட்டொழியும். ஒழியவே சீவபோதம் பராவத்தையின் இறுதியில் நிகழும் சாந்த சிவ போதமேயாம். அதனால் அந்நிலையில் அந்த சாகிய சீவன் செய்யும் செயல்களும் பிறப்பிற்கு ஏதுவாம் ஆகாமிய வினையாகாது சிவ போதத்தை நினைப்பிக்கின்ற தவங்களேயாய், மற்றும் தான் செய்தன ஆகாது சிவன் செய்தனவேயாகி விடும்.

விளக்கவுரை

'ஆகும்' என்பதனைப் 'போதம்' என்பதனோடும் கூட்டி, 'அந்தத்தின் நிகழும் நற்சிவ போதம் ஆகும்' என்க. 'தவமாம் அவையாகி' என்றதனால், 'அவர் செய்யும் செயல்கள்' என்பது பெறப்பட்டது. தான் செய்யும் செயல்களைத் 'தான்' என்றார். 'தான் செய்வன அல்ல ஆகும், என்றதனால், 'சிவன் செய்வன ஆகும்' என்பது தானே பெறபட்டது'. சித்தம் சிவமாக்கிச் செய்தன வேதவமாக்கும் அத்தன்' *8* என்று அருளிச் செய்தது காண்க.

இதனால், மேற்கூறிய அபிமானப் பெயர்களுள் 'பிரசாபதி' என்னும் பெயரினனாதலும் சிறப்புடைத்தாதல் கூறப்பட்டது.

முன்சொன்ன ஒன்பானின் முன்னுறு தத்துவம்
தன்சொல்லின் எண்ணத் தகாஒன்பான் வேறுள

பின்சொல்ல லாகும்இவ் வீரொன்பான் பேர்த்திட்டுத்
தன் செய்த ஆண்டவன் தான்சிறந் தானே. *#2497*

இவ்வதிகாரத்து முதற்கண் சொல்லப்பட்ட ஒன்பது அவத்தைகளைப் போல அவற்றுக்கு முன்னே சீவன் தன் சொல்லால் சொல்லி எண்ணக் கூடாத ஒன்பது நிலைகள் உள்ளன. ஆகவே, அனைத்தையும் தொகுத்து நோக்கும்பொழுது பதினெட்டாகின்ற இவைகளினின்றும் சீவர்களைப் பிரித்துத் தானாகச் செய்துவரும் தலைவனாகிய சிவன் முத்தி நிலையில் தான் ஒருவனேயாகி விளங்கி நிற்கின்றான்.

விளக்கவுரை

இங்கு, 'தத்துவம்' என்றதைச் சித்தாந்த முறையில் சிறப்பாகவும், பிற மதங்கள் கூறும் முறையில் பொதுவாகவும் கொள்க. அங்ஙனம் கொள்ளவே, மாயாகாரியங்களோடு 'சிவன்' சிவன், பரன், என்பனவும் தத்துவங்களாம். ஆனபின், 'தத்துவம்' என்றது ஆகுபெயராய் அவை பற்றி நிகழும் அவத்தைகளைக் குறிக்கும். ஆகவே, இவ்வதிகாரத் தொடக்கத்தில் சொல்லப்பட்ட சீவன் முதலிய மூன்று பற்றிய ஒன்பது அவத்தைகளுடன், மாயா காரியங்களில் உணர்வுக் கருவிகளாகிய ஞானேந்திரியம் ஐந்து, அந்தக் கரணம் நான்கு ஆகிய ஒன்பது கருவிகளால் நிகழும் உணர்வு நிலைகளாகிய ஒன்பது அவத்தைகள் உளவாக, அனைத்தும் 'ஈரொன்பான்' ஆகும். 'இந்நிலைகள் அனைத்தையும் நீக்கிச் சீவனைத் தன்னைப் போலவே என்றும் ஒரு நிலையில் நிற்கச் செய்து சிவன் தான் மட்டுமே விளங்கி நிற்கின்றான். இதுவே உண்மை நிலையாகிய சொரூபநிலை' என்றபடி. 'பர துரியத்தையும் பேர்கின்றான்' என்றது, அபர முத்தியினின்றும் நீக்குதலை நோக்கி. 'ஒன்பானின்' என்பதில் இன் உவம உருபு. 'மாயா காரியங்கள்' என்பது விளங்குதற் பொருட்டு. 'எண்ணத்தகா' என்றார். 'பின்' என்று. 'முடிவில்' என்றபடி. 'தன்போலச் செய்த' என உவம உருபு விரிக்க. 'தற்செய்த' எனற்பாலது, எதுகை நோக்கி மெலிந்து நின்றது. 'செய்த' என இறந்த காலத்தாற் கூறினமையின் பண்டு தொட்டுச் செய்து வருதல் விளங்கிற்று. 'தானே சிறந்தான்' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று.

இதனால், அவத்தைகள் பலவற்றாலும் உயிரைச் சிவன் உய்வித்தல் கூறப்பட்டது.

உகந்தன ஒன்பதும் ஐந்தும் உலகம்
பகர்ந்த பிரான் என்னும் பண்பினை நாடி
அகைந்தெம்பி ரான்என்பன் அல்லும் பகலும்
இகந்தன வல்வினை ஈடறுத் தானே. *#2498*

'உயிர்களின் பொருட்டு அவற்றிற்கு ஏற்புடைய வித்தை

பதினான்கையும் செய்தருளிய முதல்வன்' என்று உயர்ந்தோர் யாவராலும் சொல்லப்படுகின்ற அத்தன்மையை உணர்ந்து நான் சிவனை ஏனைத் தேவரினின்றும் வேறு பிரித்து, 'அவனே எங்கள் கடவுள்' என்று இரவும், பகலும் ஓயாது சொல்லிக் கொண்டிருப்பேன். அதனால், வரும் பிறப்புக்களில் என்னை வந்து பற்ற நின்ற வலிய வினைகள் இல்லாதொழிந்தன. மற்றும் இப்பொழுது தோன்றும் வினைகளையும் அவன் அழித்துவிட்டான்.

விளக்கவுரை

'அதனால் இனி எனக்குப் பிறவி இல்லை', இசையெச்சம். 'உலகம்' என்பதை முதலிற் கொள்க. வித்தை பதினெட்டாயினும் அவற்றுள் உபவேதம் நான்கை நீக்கி, 'பதினான்கு' என்றலும் வழக்கு வித்தை பதினெட்டாவன, வேதம் நான்கு, உபவேதம் நான்கு, அங்கம் ஆறு, உபாங்கம் நான்கு.

'அட்டாதச வித்தைக்கும் சூலபாணியே
கர்த்தா என்று சுருதி கூறுகின்றது'
என்பது வாயு சங்கிதையில் சொல்லப்படுவது*
'ஈசாநஸ் ஸர்வ வித்யாநாம்'
என்பது மகாநாராயணோப நிடதம்.

அகைத்தல் - பிரித்தல். 'அகைத்து' என்பது எதுகை நோக்கி மெலிந்து நின்றது. ஈடு - முன் இடுதல். அது முன்பு, 'வல்வினை' என்றதனால், முன் இடப்படுவதாகிய வினையையே குறித்தது.

இதனால், 'அபிமானப் பெயர்கள் ஒன்பதனாலும் குறிக்கப்படுமாறு ஒன்பது அவத்தைகளிலும் விளங்குபவன் சிவனே' என உணர்ந்தவழியே பிறப்பு நீங்குதல் குறிப்பால் உணர்த்தப்பட்டது.

நலம்பல காலம் தொகுத்தன நீளம்
குலம்பல வண்ணம் குறிப்பொடு கூடும்
பலம்பல பன்னிரு காலம் நினையும்
நிலம்பல ஆறில்நன் னீர்மையன் தானே. ***#2499***

சிவன் உயிர்களுக்கான நல்லவழிகள் பலவற்றைச் சொல்லியருளிய காலம் எல்லையறியப்படாத பழமையுடையது. *('படைப்புக் காலம்' என்றபடி)* உயிர்த் தொகுதிகள் அவ்வழிகள் பலவற்றில் தம் கருத்திற்கு ஏற்புடையவற்றைப் பற்றி அவற்றிற்கு ஏற்ற பயன்களை அடைந்து வருகின்றன. பெரும் பொழுது ஆறும், சிறு பொழுது ஆறுமாகிய பன்னிரண்டு காலங்களிலும் சிவபெருமானை நினைவதால் விளையும் பயன்களும் பல அங்ஙனம் நினைத்தற்குரிய இடங்களும் பல என்றாலும் ஆறு இடங்களில் *(ஆறு ஆதாரங்களில்)* சிவன் இனிது விளங்குபவனாய் இருக்கின்றான்.

விளக்கவுரை

'அந்த ஆறு இடங்களில் அவனை நினைக்கப் பழகுங்கள்' என்பது குறிப்பெச்சம்.

'தான் நலம் பல தொகுத்தன காலம் நீளம்' எனவும், பன்னிரு காலம் நினையும் பலம் பல' எனவும் மாறிக் கூட்டுக. நினைத்தற்குச் செயப்படுபொருளும், 'தான்' எனப்பட்ட சிவனே என்பது எளிதின் விளங்கும். சிறுபொழுது ஆறும் பெரும்பொழுது ஆறின் வேறாவன அல்ல எனினும் 'எஞ்ஞான்றும் ஒழியாது நினைக' என்றற்கு அவற்றை வேறுபோல வைத்து 'பன்னிரு காலம்' என்பதை வினைத்தொகை யாக்கி, 'சொல்லப்படும் காலை, மாலை இருகாலமும்' எனவும் உரைப்பர்.

இதனால், 'வீடு பெற விரும்புவோர், ஒன்பான் அவத்தைகளில் சீவ அவத்தைகளாகிய யோகாவத்தையை முதற்கண் பற்றுதல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

ஆதி பராபரம் ஆகும் பராபரை
சோதி பரம் உயிர் சொல்லும்நல் தத்துவம்
ஓதும் கலை மாயை ஓரிரண்(டு) ஓர்முத்தி
நீதியாம் பேதம்ஒன் பானுடன் ஆதியே. **#2500**

எல்லாவற்றிற்கும் மேலான முதற்பொருள் தன்னியல்பில் 'சிவம்' என்றும், 'சத்தி' என்றும் இரு கூற்றை யுடையதாய் இருக்கும். அவற்றுள் சத்தி தனது ஒரு சிறு கூற்றில் 'ஆதி' என்னும் பெயருடையதாய் நின்று, 'அறிவு அருள், உயிர், தத்துவங்கள் வேதம் முதலிய நூல்கள், பஞ்சகலைகள், சுத்தமாயை, அசுத்த மாயை, பல சமயத்தாரும், ஆராய்ந்து கூறும் முத்திநிலைகள்' என்னும் ஒன்பது வகையாய் நிற்கும்.

விளக்கவுரை

இவற்றுள் அறிவே ஞானம். அருளே இச்சை, இவை இரண்டும் தன்னால் தான் அடையும் பேதங்கள். ஏனைய ஆறும் தான் அவையேயாய்க் கலந்து நிற்கும் கலப்பினால் அடையும் பேதங்கள். அங்ஙனம் கலந்து நின்று அவற்றை இயக்குதலே கிரியை ஆதலின் அதனை வேறு கூற வேண்டாவாயிற்று.

'ஆதி' இரண்டனுள் முதலது 'முதற்பொருள்' என்னும் பொருட்டு. ஈற்றது ஆதி சத்தி. இதுவே 'திரோதான சத்தி' எனப்படும். 'பராற் பரம், பராற் பரை' என்பன 'பராபரம், பராபரை' என மருவி வழங்கும்.

'மேலானவற்றிற்கும் மேலானது, மேலானவற்றிற்கும் மேலானவன்' என்பன இவற்றின் பொருள், 'பராபரம்' என அஃறிணையாற் கூறியது. 'சிவம்' எனக் கூறியவவாறு. தன்னிலையில் சிவம் 'பரமசிவம்' என்றும்,

அதனது சத்தி 'பராசத்தி' என்றும் சொல்லப்படும். அது வாளா இருப்பதன்றி, யாதொன்றையும் செய்வதன்று. செய்ய நினைக்குங்கால், ஒரு சிறு கூற்றானே 'ஆதி சத்தி' என வேறு நின்றே செய்யும். அதனால், பேதங்கள் எல்லாவற்றிலும் ஆதி சத்தி உடனாய் நிற்கும் என்க.

ஆதி சத்தி 'ஞானம்' என்னும் வகையில் அனைத்துயிர்களின் அறிவிலும் அறிவிற்கு அறிவாய் நின்று அவ்வறிவுப் பொருள்களை அறியச்செய்யும் 'கிரியை' என்னும் வகையில் உயிர்களையும், உயிரல் பொருள்களையும் இயக்கி நிற்கும் இவற்றிற்கெல்லாம் காரணம் தான் அருள்வடிவாய் இருத்தலே.

'கலை' என்பதனை இரட்டுற மொழிந்து கொள்க. 'தத்துவவம்' என்றது பொருட் பிரபஞ்சத்தையாகலின். சொற் பிரபஞ்சம் எஞ்சாமைப் பொருட்டு அதனை வேறு கூறினார். பஞ்ச கலைகளும் இரு மாயைகளுள் சுத்த மாயா காரியமேனும் அவை தத்துவங்களின் வேறாய் அனைத்தையும் தம்முள் அடக்கி நிற்றல்பற்றி வேறு கூறப்பட்டன. காரியங்களை முன்னர்க் கூறிக் காரணங்களை முடிவிற் கூறினார். ஓர் முத்தி, வினைத்தொகை. சித்தாந்த முத்தி அருட்சத்தியால் ஆவது ஆகலின், பிற சமயத்தார் கூறும் முத்திகளே திரோதான சத்தியால் ஆவன என்க.

'ஒன்பானுடனும்' என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று.

'ஒன்பானுடனும் ஆதி ஆம்' என முடிக்க.

ஒன்பது பேதங்களையும் 'நீதியாம் பேதம்' என்றது, 'உயிர்கள் பக்குவத்தை யடைதற்கு, இவை இன்றியமையாத முறைகளாம்' என்றற்கு.

இதனால், 'ஒருவனாகிய சிவன் தனது ஆதி சத்தியால் பல பேதங்களை அடைந்து நிற்றலால், நவாவத்தை அபிமானியும் ஆகின்றான்' என்பது குறிப்பால் விளக்கப்பட்டது.

தேறாத சிந்தை தெளியத் தெளிவித்து
வேறாம் நரகம் சுவர்க்கமும் மேதினி
ஆறாப் பிறப்பும் உயிர்க்கரு ளால்வைத்தான்
வேறாத் தெளியார் வினை உயிர் பெற்றதே. ***#2501***

அநாதியே பற்றிய மலத்தால் அறியாமையை யுடையதாய் நிற்கின்ற உயிர்களின் அறிவு அவ்வறியாமை நீங்கித் தெளிவடைதற் பொருட்டுத் தெளிவிற்கு வித்தாக, தம்முள் மாறுபட்ட நரகலோக சுவர்க்க லோகங்களிலும் பூலோகத்திலும் வினைக்கீடாகச் சென்று பிறக்கும் பிறப்புக்களையும் சிவன் உயிர்கட்கு அமைத்திருக் -கின்றான். அங்ஙனம் அமைத்தது அருள் காரணமாகவேயாம். அதனை வன்கண்மையாக நினைக்கும் தங்கள் நினைப்பை விட்டு, அருளாகத் தெளியமாட்டாதார்

தெளிதற்கு வாயிலான மானுடப் பிறப்பைப் பெற்றதும் வினையின் விளைவேயாம்.

விளக்கவுரை

'சிந்தையைச் சீவன் என்றும், சீவனைச் சிந்தை என்றும்'9 கூறும் முறையில் இங்கு உயிரிகளின் அறிவு 'சிந்தை' எனப்பட்டது. 'தெளிவித்து' என்றது வினைத்தொகை. 'வித்தாகி' என ஆக்கம் வருவிக்க. 'பிறப்பும்' என்னும் உம்மை, 'வீடேயன்றி' என எதிரது தழுவிய எச்சம். 'உயிர் பெற்றது' என்றது, 'பிறப்பை எடுத்தது' என்றபடி. 'உயிர் பெற்றது வினை' என மாறிக் கூட்டுக, வினையின் விளைவை 'வினை' என்றார். என்றது, 'முன்னைப் பிறவிகளின்றும் இப்பிறப்பிற்கு வேறு சிறப்பில்லை' என்றபடி. அஃதாவது, 'இப்பிறப்பிலும் முன்புபோல வினையை ஈட்டிக் கொள்ளுதலை மட்டுமே செய்வவர்; உய்யும் நெறியைத் தலைப்படார்' என்பதாம்.
இதனால், 'மானுடப் பிறப்பை எய்தினோர் சிவன் நவாவத்தை அபிமானியாதலை உணர்ந்து படிமுறையானே அவனை அடைதல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

ஒன்பான் அவத்தையுள் ஒன்பான் அபிமானி
நன்பாற் பயிலும் நவதத்துவம் ஆதி
ஒன்பானில் நிற்பதோர் முத்துரி யத்துறச்
செம்பாற் சிவம் ஆதல் சித்தாந்த சித்தியே. **#2502**

இங்குக் கூறிவரும் ஒன்பான் அவத்தைகளிலும் சிவன் அபிமானியாய் நிற்கும் நிலைகள், அவ் அவத்தைகளில் செயற்படும் தத்துவங்கள், மற்றும் சில இவற்றை உணர்ந்து அவ்வொன்பான் அவத்தைகளிலும் 'துரியம்' எனப்படும் நிலையிலே நிற்றற்கண் பர துரியத்தில் சீவன் செம்மைச் சிவனாகிவிடுவதே சித்தாந்த நெறியின் முடிநிலைப் பயனாகும்.

விளக்கவுரை

எனவே, 'பிற பிற சமயத்தார் கூறும் சித்திகள் எல்லாம் முடிநிலைச் சித்திகள் அல்ல' என்பதாம். நவாவத்தைகளில் செயற் படும் நவதத்துவங்களான, சீவ அவத்தையில் பிராணனை இயக்கும் அகங்காரம், தியானிக்கப்படும் பொருளை ஒருதலையாக உணரும் புத்தி, அதனையே சிந்திக்கும் சித்தம் என்பனவும், சிவ அவத்தையுள் குருமொழியைச் சிந்திக்கும் ஞானம், அடையப்படும் பொருளைத் தெளியும் ஞானம், தெளியப்பட்ட பொருளையே விரும்பி அதன்கண் அழுந்தும் ஞானம், என்பனவும், பராவத்தையில் சிவனது நேர் அதிகார சத்தி, போக சத்தி, இலயசத்தி என்பனவுமாம். இங்குப் பராசத்தியும்

வேற்றுமை மிக இன்மையால் இலய சத்தியாகக் கொள்ளப்பட்டது. செம்பால் - செம்மைப்பகுதி. என்றது சொரூப நிலையை. எனவே, 'சொரூப சிவம்' என்பதை நாயனார், 'செம்பாற் சிவம்' எனக் குறித்திருத்தல் குறிக்கொளத் தக்கது. செம்மை - உண்மை நிலையில் வேறுபடாது இருந்தவாறே இருத்தல். சித்தி - பேறு. என்றது, சிறப்புப் பற்றி முடிநிலைப் பேற்றையே குறித்தது.

இதனால் நவாவத்தைகளின் முடிநிலைப்பயனும் அதனை அடையுமாறும் கூறி முடிக்கப்பட்டது.

10.33.சுத்தா சுத்தம

நாசி நுனியினின் நான்மூ விரலிடை
ஈசன் இருப்பிடம் யாரும் அறிகிலர்
பேசி யிருக்கும் பெருமறை அம்மறை
கூசி யிருக்கும் குணம் அது வாமே. ***#2503***

மூன்றாம் தந்திரத்தில், நாசிக்கதோமுகம் பன்னிரண்டங்குலம்'8 என்னும் மந்திரத்திற் கூறியபடி, 'மூக்கின் நுனிக்குக் கீழே பன்னிரண்டங்குலத்தில் உள்ள இருதயம் சிவன் எழுந்தருளியிருக்கும் இடம்' என்பதை உங்களுள் ஒருவரும் அறியார். (அதனால் அவர்கள் புறத்தே உள்ள இடங்களில் சிவனைக் காணும் அளவிலே அமைந்து, அதனையே சிவக்காட்சியாகக் கொண்டு இருந்துவிடுகின்றனர்.) ஆயினும் பெரிய மறைநூல்கள் மேற்கூறிய ஈசன் இருப்பிடத்தைச் சொல்லியிருக்கின்றன. எனினும் அந்த மறை நூல் அந்த இடத்தை அணுக இயலாதவர்கட்கு அதனைக் கூற நாணம் உற்று, வெளிப்படையாக அன்றிக் குறிப்பாகவே கூறியமைந்தன. அது மறைநூல்கட்கு இயல்பு.

விளக்கவுரை

'அதனால், அப்பொருளை நல்லாசிரியரை வழிபட்டுக் கேட்டுணர்ந்து அணுகல் வேண்டும்' என்பது குறிப்பெச்சம். இங்கு, 'பெருமறை' என்றது, யோகம், தகர வித்தை முதலியவற்றைக் கூறும் உபநிடதங்களையும், சிவாகமங்களில் யோக பாதங்களையும். அவ்விடங்களில் குறிப்பு மொழிகள் உளவாதலை அறிக. நாயனாரும் 'சூனிய சம்பாடணை' முதலியவற்றால் குறிப்பு மொழிகள் பல வற்றைக் கூறினமை வெளிப்படை.

இதனால், 'புறத்தூய்மையோடு அமைந்துவிடாது அகத் தூய்மையை அடைதல் வேண்டும்' என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது புறத்தூய்மையையே சிறப்பாக வலியுறுத்துவன பிரம்மாணங்களும், மிருதிகளும்.

கருமங்கள் ஒன்று கருதும் கருமத்(து)
உரிமையும் கன்மமும் உன்னும் பிறவிக்
கருவினை யாவதும் கண்டகன்(று) அன்பிற்
புரிவன கன்மக் கயத்துட் புகுத்துமே. ***#2504***

உயிர்களால் செய்யப்படும் செயல்கள் யாதேனும் ஒரு பயனைக் கருதிச் செய்யும் செயல்களாகுமிடத்து 'அச்செயல்களைச் செய்தோன் அவனே' என்னும் உரிமை தோன்றுதலையும், செய்த செயல்களும், 'இனி வரும்' எனக் கருதப்படுகின்ற பிறவிக்கு வித்தாம் ஆகாமியம் ஆதலையும் உணர்ந்து, அச்செயல்களில் பற்று வையாது 'எச்செயலையும் செய்யும்

வாய்ப்பினை நமக்கு அளித்தவன் சிவன்' என்பதை யுணர்ந்து, அவனிடத்து அன்பு செய்து, எச்செயலையும் அவன் பணியாகச் செய்யின் அம்முறையில் அறிந்தோ, அறியாமலோ நிகழும் செயல்கள் யாவும் வினை நீக்கத்திற்கு வாயிலான தவமாகி, அவற்றைச் செய்தவனை வினை நீக்கத்தில் சேர்ப்பிக்கும்.

விளக்கவுரை

ஒன்று ஒரு பயன் 'கன்மமும் கருவினை ஆவதும்' என இயையும். 'ஆவது' என்பது தொழிற்பெயர். 'கன்மமும்' என்னும் உம்மை சிறப்பும்மை. உன்னும் - கருதப்படுகின்ற. கரு - முதல். கரு வினை. 'இச்செயலை யானே செய்கின்றேன்; இச்செயல்களும், இவற்றால் வரும் பயன்களும் என்னுடையனவே' என்னும் கருத்தே 'பற்று' எனப்படுகின்றது. இப்பற்றோடு செய்யும் கருமமே 'காமிய கருமம்' எனப்படுகின்றது. இனி, யாதொரு பயனையும் கருதாதவழிச் செயல் செய்வார் ஒருவரும் இலராவர். ஆகவே, 'செயல்களைச் செய்தற்கு வேண்டுவன பலவற்றையும் அளித்தவன் இறைவன் ஆகையால், உயிர்கள் செய்யும் செயல்கள் யாவும் 'ஈசன் இடும்பணி'* என உணர்ந்து, அவற்றில் - யான், எனது என்னும் பற்றின்றி, 'என்கடன் (அவன்) பணிசெய்து கிடப்பதே'* என்று அவனிடத்து அன்போடும் செய்வதே பயன் கருதாது செய்தலாம். அதனையே இங்கு நாயனார், 'அகன்று அன்பின் புரிவன' என்றார். இதுவே 'நிட்காமிய கருமம்' எனப்படுகின்றது. இந்நிலைமை கடவுட் கொள்கையில்லார்க்கு வாயாது. 'க்ஷயம்' என்னும் வடமொழி, தமிழில் 'கயம்' என வரும். ஆகவே, கருமக் கயம் - வினை நீக்கமாம். 'காமிய கன்ம நிட்காமிய கன்மங்களாவன இவை' என்பதும், அவற்றின் பயன் முறையே பிறப்பும் வீடுமாம்' என்பதும் இம்மந்திரத்துட் கூறப்பட்டமை காண்க.

'காமியம் செய்து காலம் கழியாதே
ஓமியம் செய்தங்கு உள்ளத் துணர்மினோ'*
எனப் அப்பரும் அருளிச்செய்தார்.

இதனால், வினை மாசே உண்மை மாசும், அதன் நீக்கமே உண்மைத் தூய்மையும் ஆதல் கூறப்பட்டது.

'புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும்'9
என அருளிச்செய்த திருவள்ளுவர்க்கும் புறத்தூய்மையினும் அகத்தூய்மையே சிறந்தது என்பது கருத்தாதல் தெளிவு, அவர்.

'மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர்'9
என அருளிச்செய்ததும் இங்கு நினைவுகூரற்பாலது.

மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள்
மாயை மறைய வெளிப்படும் அப்பொருள்
மாயை மறைய மறையவல் லார்கட்குக்
காயமும் இல்லைக் கருத்தில்லை தானே. *#2505*

வேதங்களால் முடிநிலைப் பொருளாகக் கொள்ளப் பட்ட முதற்பொருள் உயிர்கட்கு வேறாய் இன்றி அவைகளிடத் திற்றானே இருக்கின்றது. ஆயினும், மாயா காரியங்களாகிய கருவிக் கூட்டங்கள் உயிரினது அறிவைத் தம் வயப்படுத்தியே வைத்திருத்தலால் உயிர்கள் அம்முதற்பொருளை அறியாதிருக்கின்றன. அதனால் முதற்பொருள் மறைந்து நிற்கும் பொருளாக அறியப்படுகின்றது. மாயா காரியங்களாகிய கருவிக் கூட்டங்களின் வயப்படாது விடுபட்டவர்க்கு அக்கருவிக் கூட்டங்கள் மறைந்துவிட, முதற்பொருள் வெளிப்பட்டுத் தோன்றும். அதன் பின்பும் அக்கருவிக் கூட்டங்கள் தம்மை மயக்காதபடி அம்முதற் பொருளுக்குள்ளே அடங்கி நிற்க வல்லவர்கட்கு உடம்பு இருந்தும் இல்லையாம். அதனால் அவை பற்றி யெழுகின்ற, 'யான், எனது' என்னும் செருக்கும் இல்லையாம்.

விளக்கவுரை

ஆகவே, அவர்கள் உடம்பு நீங்கியபின் 'வானோர்க்கு உயர்ந்த உலகம் புகுதல்'* தெள்ளிது என்பதமாம்.

'முந்திவட் டத்திடைப் பட்டதெல்லாம்
முடிவேந்தர் தங்கள்
பந்திவட் டத்திடைப் பட்டலைப்
புண்பதற் கஞ்சிக் கொல்லோ!
நந்திவட் டம்நறு மாமலர்க்
கொன்றையும் நக்கசென்னி
அந்திவட் டத்தொளி யான்அடிச்
சேர்ந்ததென் ஆருயிரே'

என்பனபோல ஆரூயிர்த் திருவிருத்தம்*8* முழுவதும் அருளிச் செய்தமை காண்க. 'அப்பொருளின்கண்' என, 'உள்' எனப்பொருள் படும் ஏழாவது விரிக்க.

உலகியலில் வினை மாசே பெருமாசு ஆகலின் அது நீங்கு மாற்றை முன் மந்திரத்திற் கூறியபின், மாயை மாசு நீங்குமாறு இதனால் கூறப்பட்டது. 'இம்மாசு நீக்கமே உண்மைத் தூய்மையாம்' என்பதும் கருத்து.

மோழை அடைத்து முழைதிறந் துள்புக்குக்
கோழை அடைக்கின்ற(து) அண்ணற் குறிப்பினில்
ஆழ அடைத்தங் கனலிற் புறஞ்செய்து
தாழ அடைப்பது தன்வலி யாமே. *#2506*

ர் புறம் போய் வீணாவதற்கு உரிய, வயல்களின் சிறு புழை போல, விந்து வெளிச்சென்று வீணாகின்ற வழியாகிய குறியைச் செயற்படாமல் தடுத்து, பிராணனைச் சுழுமுனை வழியாகச் செலுத்தி அதனோடே மேல்நிலமாகிய ஆஞ்ஞையில் உணர்வினால் சென்று புகுந்து, அங்கு நிற்கின்ற நிலை சலித்தலை நீக்க முயலு மிடத்துச் சிவ நினைவால் அதனை அடியோடு நீக்கி, உடம்பையும் விரைவில் வீழ்ந் தொழியாதபடி யோகக் கனலால் கற்பஞ்செய்து தன்னைச் சிவத்திற்குள்ளே அடைத்து வைத்தலே ஒருவனுக்கு உண்மையான தன்வலிமையாகும்.

விளக்கவுரை

முழை. மலை முழை. சுழுமுனை நாடியை 'மேரு' என்பதால், அதன் உள்வெளியை 'மலைமுழை' என்றார். காயத்தைக் கற்பம் செய்தல் இப்பிறப்பிற்றானே சிவஞான முற்றுதற் பொருட்டேயாம்; என்னை? முற்றுப் பெறாதவழி மேலும் பிறப்பு வரும் ஆதலின் 'கோழை' என்பது இங்குக் கோழைமையாகிய தளர்ச்சியைக் குறித்தது. தாழ்தல் - தங்குதல் 'வினைவலியும், தன் வலியும், மாற்றான் வலியும் - துணை வலியும் தூக்கிச் செயல்'3 என்ற விடத்துக் கூறப்பட்ட வலிமைகளிலும் 'தன் வலி' என்றதே இன்றி யமையாதல் பற்றி 'இச்செயலே உயிருக்குத் தன்வலியாம்' என்றார்.

இதனால், மேற்கூறப்பட்ட இருவகை மாசுகளையும் கழுவுதற்கு ஒருவகைச் சாதனம் கூறப்பட்டது.

(இதன்பின் பதிப்புக்களில் காணப்படும், 'காயக் குழப்பனை' என்னும் மந்திரம் ஏழாம் தந்திரத்து, 'கூடா ஒழுக்கம்' என்னும் அதிகாரத்தில் வந்தது.)

ஆசூசம் ஆசூசம் என்பார் அறிவிலார்
ஆசூசம் ஆம்இடம் ஆரும் அறிகிலார்
ஆசூசம் ஆம்இடம் ஆரும் அறிந்தபின்
ஆசூசம் மானுடம் ஆசூசம் ஆமே. ***#2507***

அறிவில்லாதவர்கள் தங்கள் உடம்பு அசுத்தத்தைத் தீண்டிவிட்டதனால் 'தீட்டு உண்டாகிவிட்டது தீட்டு உண்டாகி விட்டது' என்று சொல்வார்கள். அவர்களில் ஒருவருமே, உண்மையில் தீட்டு எங்கு உண்டாகின்றது' என ஆராய்ந்தறியமாட்டார். யாராயினும் அதனை ஆராய்ந்து அறிவார்களோயானால் 'உயிர் மக்கள் வடிவாய் உள்ள உடம்பைத் தீண்டியதே தீட்டு' என்பது அவர்கட்கு நன்கு புலப்பட்டுவிடும்.

விளக்கவுரை

'அசுத்தத்தைத் தீண்டுவதனால் தீட்டு உண்டாதல் உண்மையே. அந்தத்

தீட்டு உடம்பிற்கு உண்டாவதைத் தங்களுக்கு உண்டானதாகவும், அதனைப் போக்கித் தூய்மை செய்வதால் தாங்கள் தூய்மை அடைந்துவிட்டதாகவும் கருதுதல் அறியாமை' என்பதாம். உண்மையை உணர்ந்தால், நாம் மானுட உடம்பைப் பற்றிக் கொண்டிருப் -பதே தீட்டு, என்பதும், 'அதனைப் போக்கி இறைவனை அடைதலே நமக்குத் தூய்மை' என்பதும், விளங்கும். அவற்றை விளங்கிக் கொண்டவர்களே அறிவுடையோர் என்பது கருத்து. மாணாக்கர் செயற் பாலது மானுட உடம்பை நீக்குதலேயாதல் பற்றி, 'மானுடம் ஆசூசம்' எனறாரேனும், 'உடம்பாவன பலவும் ஆசுசமே' என்றலே கருத்து.
மானுட உடம்பை,
'பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும்
பொழுகிய பொய்க்கூரை'3
என்றார்போலப் பலபடக் கூறுமாறு அறிக. 'மக்கள் தங்கள் உடல் தீட்டைப்போக்கி உடலைத் தூய்மையாக்கிக் கொள்வதனாலே தாங்கள் தூயோராய்விட்டதாகக் கருதிக்கொள்ளுதல் அறியாமை' என்றபடி. இதனானே, 'புறத்தூய்மை ஒன்றே உயிரை நற்கதி யடைவிக்கும்' எனக் கூறும் கூற்றுக்கள் போலியாதல் விளங்கும்.
இதனால், 'புறத்தூய்மையையே பெரிதாக வலியுறுத்தியமை யாது, அகத்தூய்மையையே பெரிதும் வலியுறுத்தல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

ஆசூசம் இல்லை அருநிய மத்தருக்*(கு)*
ஆசூசம் இல்லை அரனைஅற் சிப்பவர்க்*(கு)*
ஆசூசம் இல்லையாம் அங்கி வளர்ப்போருக்*(கு)*
ஆசூசம் இல்லை அருமறை ஞானிக்கே. ***#2508***

சிவனது முதன்மையை உணர்ந்து அவனைச் 'சரியை, கிரியை, யோகம், ஞானம்' என்னும் நால்நெறியில் எவ்வகையில் நின்று வழிபடுவார்க்கும் புறத்தூய்மை வாயாவிடினும் அகம் திருவருளில் படிந்திருத்தலால் அவர்கட்கு எந்த வகையான அசுசியும் இல்லையாம்.

விளக்கவுரை

இஃது அறியாது அவர் புறத் தூய்மை குறைந் திருத்தல் பற்றி அவரை, 'ஆசௌசம் உடையவர்' என இகழலாகாது என்பதாம். புறத் தூய்மை இல்லாமைக்குக் காரணம் அவர் அதனை இகழ்ந்து ஒதுக்குதல் அன்று; வாய்ப்புக் கூடாமையேயாம். கண்ணப்பர் முதலியோரது அருள் வரலாறுகள் இதற்குச் சான்றாகும்.
அரு நியமம் - கடைப்பிடித்தற்கரிய கடப்பாடான தொண்டு அருச்சனை அகத்தும், புறத்தும் செய்யும் வழிபாடு. யோகிகள் பிராணா யாமத்தால் மூலாக்கினியை வளர்ப்பர் ஆதலால், புறத்தே அழல் ஓம்பி

வழிபடுவாரும் யோகிகளாகச் சொல்லப்படுவர். இவருள் சிவவேள்வி செய்வாரையே இங்குக் கொள்க. ஞானசம்பந்தர்,

'சுடர்விட்டுளன் எங்கள் சோதி'*

என அருளிச்செய்தற்குச் சேக்கிழார்,

'ஆன்ற அங்கிப் புறத்தொளியாய், அன்பின்
ஊன்ற உள்ளெழும் சோதியாய் நின்றனன்'*

எனப் பொருள் விரித்தமை இங்கு நோக்கத் தக்கது.

அருமறை ஞானிகளாவார் வேதத்தின் 'பிரமகாண்டம்' எனப்படும் ஞானகாண்டப் பொருளை அதன் தெளிவாகிய சிவாகமங்களின் ஞானபாதத்தின் வழிச் சிந்திப்பவர்களும், சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடியிருப்பவர்களும் ஆவர். இவற்றிற்கெல்லாம் முற்பட்டது. 'குருவார்த்தை கேட்டல்'* 'அருமறை' என்பதனை இரட்டுற மொழிந்து, 'அரிய உபதேசம்' என்றும், 'அரிய பிரகாண்டம்' என்றும் இருபொருள் கொள்க.

இதனால், 'சிவநெறி நிற்றலே சிறப்புடைத் தூய்மை என்பது கூறப்பட்டது.

வழிபட்டு நின்று வணங்கு மவர்க்குச்
சுழிபட்டு நின்றதோர் தூய்மை தொடங்கும்
குழிபட்டு நின்றவர் கூடார் குறிகள்
கழிபட் டவர்க்கன்றிக் காணஒண் ணாதே. ***#2509***

முன்னர்ப் புறத்தொண்டுகளைச் செய்து, பின்பு அகத்தும், புறத்தும் சிவனை வழிபடுவார்க்குச் சுழித்தோடுகின்ற நீரில் மூழ்கினார்போலும் ஓர் உண்மைத் தூய்மை தொடங்குவதாகும். (பின்னர் அகத்தும், புறத்தும் அங்கி வளர்த்தலால் அத்தூய்மை முதிரும்.) இவைகளைச் செய்யாது புறத்தூய்மையை மட்டுமே வலியுறுத்திக் கூறு கின்ற நூல்களாகிய குழிகளில் வீழ்ந்தவர்கள் தூய்மையைப் பொருந்தார். இனி முற்கூறிய தூய்மையைப் பொருந்தியவர்களில்கூட, உருவம், அருவுருவம், அருவம் என்னும் குறிகளைக் கடந்து குறியிறந்து உணரும் உணர்வுடையார்க்கன்றிச் சிவனை நேர்படக் காணுதல் இயலாது.

விளக்கவுரை

'சிவனை நேர்படக்காணுதலே முழுத் தூய்மையாம்' என்றபடி கூடுதலுக்குச் செயப்படுபொருள் முன்னர்க் கூறிய தூய்மையேயாயிற்று. தொடங்குதல் கூறினமையால் முதிர்தலும் கொள்ளப்பட்டது.

இதனால், அகத்தூய்மை தொடங்கி, முதிர்ந்து, முற்றுமாறு கூறப்பட்டது.

தூய்மணி தூய்அனல் தூய ஒளிவிடும்
தூய்மணி தூய்அனல் தூர்அறி வார்இல்லை
தூய்மணி தூய்அனல் தூரறி வார்கட்குத்

தூய்மணி தூய்அனல் தூயவும் ஆமே. *#2510*

உலகத்தில், மாசு நீங்கக் கழவுவப்பட்ட இரத்தினமும், தூய பொருள்களாலே வளர்க்கப்பட்ட தீயும் தூய ஒளியையே தரும். 'அதுபோல உடம்பினுள் தூய ஒளிகளைத் தரும் தூய இரத்தினமும், தூய தீயும் எவை' என்பதை அறிபவர் உலகருள் எவரும் இல்லை அவற்றை அறிய வல்லவர்கட்கு அவை தாம் தூயவாய் இருத்தலேயன்றி உடம்பிற்குத் தூய்மையைத் தருவனவாய் அமையும்.

விளக்கவுரை

கழுவப்படுவதனால் தூய்மை அடைகின்ற மணி உயிர். இயல்பாகவே தூய்மையுற்றிருக்கின்ற தீ சிவம். 'சாதனங்களைச் செய்தவழி உயிர் தூய்மையுற்றும், சிவம் பிராகசித்தும் புலால் உடம்பை ஒளியுடம்பாகச் செய்யும்' என்பது கருத்து.

இதனால், 'ஆன்ம சுத்தியே உண்மைத் தூய்மையாம்' என்பது கூறப்பட்டது.

தூயது வாளாக வைத்தது தூநெறி
தூயது வாளாக நாதன் திருநாமம்
தூயது வாளாக அட்டமா சித்தியாம்
தூயது வாளாகத் தூய்அடிச் செல்லே. *#2511*

'முதல்வனாகிய முக்கண்ணன் முன்னெறியாகிய* தனது நெறியை உலகிற்கு வைத்தது உயிர் தூயதாதற் பொருட்டேயாம். அந்நெறியிற் செல்வார்க்கு உறுதுணையாக அவன் வைத்தது அவனது திருப்பெயராகிய திருவைந்தெழுத்து மந்திரம். அந்த மந்திரத்தைப் பல்காலும் ஓதி உயிர் தூய்மையுற்றால் அட்டமா சித்திகள் தாமே வந்து அதனை அடையும். ஆதலின் உயிர் தூய்மை அடைவதற்கு முன்பு அங்ஙனம் தூயராயினார் சென்ற அடிச்சுவட்டில் செல்.

விளக்கவுரை

'நான்கு அடிகளிலும், வாள் தூயதாக' என மாற்றிக் கொள்க. வாள் - ஒளி; அஃது இங்கு அறிவுப் பொருளாகிய உயிரைக் குறித்தது. 'ஆக' நான்கில் மூன்றாவது காரணப் பொருளிலும், ஏனைய காரியப் பொருளிலும் வந்தன. 'வைத்தது' என்பதை இரண்டாம் அடியிலும் கூட்டுக. தூயவரது அடிச்சுவடும் தூயதே ஆம் என்க.

இதனால், உண்மைத் தூய்மையை வேண்டுவோர் சிவ நெறியைப் பற்றிச் சிவமூல மந்திரத்தை எப்பொழுதும் ஓதுதல் வேண்டும் என்பது கூறப்பட்டது.

பொருளது வாய்நின்ற புண்ணியன் எந்தை
அருளது போற்றும் அடியவ ரன்றிச்

சுருளது வாய்நின்ற துன்பச் சுழியின்
மருளவர் சிந்தை மயங்குகின் றாரே. *#2512*

மெய்ப் பொருளாய், என்றும் ஒரு பெற்றியனாய் நிற்பவன் சிவபெருமானே. அவனே எங்கட்குத் தந்தை. அவனது திருவருளைப் போற்றுகின்ற அடியவர்களே சுருண்டு சுருண்டு வருகின்ற கடலின் அலைபோல முடிவின்றி வருகின்ற பிறப்பாகிய துன்பச்சூழலினின்றும் நீங்குவர். அவனது திருவருளைப் போற்றாது ஒழிகின்றவர் எல்லாம் அச்சூழலில் அகப்பட்டுத் திகைக்கின்றார் ஆதலின் அவர் அருளுடையாராகாது மருளுடையவரேயாவர்.

விளக்கவுரை

எனவே, 'திருவருட் செல்வராகிய சிவனடியாரே தூயவர் ; அச்செல்வத்தைப் பெறாதோரெல்லாம் மாசுடையவரே; அதனால் அச்செல்வத்தைப்பெற முயலுங்கள்' என்பது குறிப்பெச்சம். 'புண்ணியன்' என்பது, 'சிவன்' என்னும் பொருட்டாய் நின்றது. 'அது' மூன்றும் பகுதிப்பொருள் விகுதி. 'சுருளதுவாய்' என்பதில் ஆக்கம் உருவகம் குறித்து நின்றது. 'மருளவர்' என்பதை இறுதியிற் கூட்டுக. இதனால், உண்மைத் தூய்மையை உணராதவரது நிலைமை இரங்கத் தக்கதாதல் கூறப்பட்டது.

வினையால் அசத்து விளைவ துணரார்
வினைஞானந் தன்னிலே விடாதுந் தேரார்
வினைவீட வீடென்னும் பேதமும் ஓதார்
வினையாளர் மிக்க விளைவறி யாரே. *#2513*

'நிலையில்லனவாகிய பல வகை உடம்புகள் ஒன்றழிந்தபின் மற்றொன்று தோன்ற, அஃதழிந்தபின் வேறொன்று தோன்ற, இவ்வாறு முடிவின்றி வந்து உயிரை அலைக் கழிப்பது வினையே' என்பதையும், 'அந்த வினை பொருள்களை உற்றவா றுணரும் மெய்யுணர்வால் கெடும்' என்பதையும் ஆசான் அருள் பெறாதார் அறியமாட்டார். இனி, 'வினை நீக்கமே வீடுபேறாம்' எனக் கூறுகின்ற வேதத்தையும் அவர்கள் ஓதுவதில்லை ஆகவே, அவர்கள் வினையை ஆண்டு, அதிற்றானே மகிழ்கின்றவராவர். அவர் பின்னும் பின்னும் எல்லையின்றி வரும் துன்பவினை அறிய மாட்டார்.

விளக்கவுரை

அசத்து - நிலையில்லாதது. சத்து - நிலையுடையது இங்கு 'வினை' என்றது பிராரத்த வினை, ஆகாமிய வினைகளை. 'அவை ஆசிரியன் உணர்த்தியவாற்றானே நின்மலாவத்தையை அடைந்து அதன்கண் நிற்பவரை வாதியா' என்பதை,

'எத்தனுவில் நின்றும் இறைபணியார்க் கில்லைவினை;
முற்செய்வினை யும்தருவான் முன்'
என்றும் சிவான போதத்தால்3
'எப்பொழுது இவனுடைய இருதயத்தில்
நிறைந்துள்ள ஆசைகள் எல்லாம் ஒழிகின்றனவோ
அப்பொழுது, சாகும் தன்மையுடைய மனிதன்
சாகாதவனாகி விடுகின்றான்'
என்று கடோப நிடத ஆறாவது வல்லிப் பதினாறாவது மந்திரம் கூறுகின்றது. ஆசையால் விளைவனவே வினையாதலின் 'வினைவீட வீடு' என வேதம் கூறுதல் அறிக.
'அவாஎன்ப எல்லா உயிர்க்கும், எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து'8
'இன்பம் இடையறாது ஈண்டும், அவாஎன்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்'8
எனத் திருவள்ளுவர் வலியுறுத்தியதும் இதையே.
இதனால், 'வினைமாசு நீங்கலே உண்மைத்தூய்மை, அது நீங்காமையே உண்மை மாசு' என்பன கூறி முடிக்கப்பட்டது. (யாவரும் அறிந்தது இதுவேயாதல் பற்றி இவ்வாறு கூறினார், 'பின்பு ஆழ்ந்து உணர்வார்க்குக் காரணமாசாக ஆணவத்துண்மை புலனாகும்' என்பது கருதி.)

*10.34.*மோட்ச நிந்தை

பரகதி உண்டென்ன இல்லை என் போர்கள்
நரகதி செல்வது ஞாலம் அறியும்
இரகதி செய்திடு வார்கடை தோறும்
துரகதி உண்ணத் தொடங்குவர் தாமே. *#2514*

'பிறப்பிறப்பினின்றும் நீங்கிப் பரம்பொருளை அடைந்து இன்புற்றிருக்கும் நிலை உண்டு' என்று உண்மை நூல்களெல்லாம் கூறாநிற்கவும், 'அஃது இல்லை' எனப்பிணங்கி, மனஞ் சென்றவாறே செல்பவர்கள் நரகலோகத்தை அடைதல் உலகத்தில் உயர்ந்தோர் பலரும் நன்கறிந்தது நரகத்தின் நீங்கிப்பின்னும் அவர் மக்களாய்ப் பிறப்பின் கடைதொறும் சென்று இரக்கும் செயலையே உடையராவர். அங்ஙனம் இரக்குங்கால் வயிறு நிரம்பாமல் உணவு வேளை முடிவதற்குள் பலரிடம் சென்று இரக்க வேண்டி ஓடவும் தொடங்குவர்.

விளக்கவுரை

'நரக, துரக' என்பன கடைக் குறைந்து நின்றன. 'இர கதி' என்பது வினைத்தொகை. இதன்கண் 'கதி' என்பது நடை; தொழில். 'கடை

தோறும் இரகதி செய்திடுவார்; நிரம்ப உண்ணத் துரக கதி தொடங்குவர் என்க. தாம், ஏ - அசை. 'ஞாலம்' என்றது ஆகமப் பிரமாணத்தையுடைய உயர்ந்தோரை.
'பரகதி உண்டு' என்பவரே நோற்றலை மேற்கொள்வர். 'அஃது இல்லை' என்பார் நோற்றலைச் செய்யார். நோலாதவர் வறியராய்ப் பிறப்பர்' என்பது உண்மை நூல்களின் முடிவாதல்,
'இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்; பலர் நோலா தவர்'.9
'மேலைத் - தவத்தளவே யாகுமாம் தான் பெற்ற செல்வம்'*3* என்பன முதலியவற்றால் விளங்கும். வறுமையால் இரத்தல் உண்டாகும். இரந்த வழியும் மிக்க தீவினையால், உணவு கிடைத்தல் அரிதாகும்.
சித்தாந்த முத்தியை மறுத்து வேறு கூறி, அக் கூற்றிற்கு ஏற்ப ஒழுகுவார்க்கு இவ்வாறான தீங்குகள் உளவாகா ஆயினும், 'அவர்க்குப் பிறவி நீங்காது' என்க.
'உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்'*9*
என்னும் குறட்பாவும் இம்மந்திரத்திற் கூறிய பொருள் நோக்கம் உடைத்தென்க.
இதனால், 'முத்தி' என்பதொன்று இல்லை என்பார், தம்மாலே தாம் கெடுதல் கூறப்பட்டது.
இதன்பின் பதிப்புக்களில் காணப்படும். 'கூடகில்லார் குரு வைத்த நெறிகண்டு' என்னும் மந்திரம் முன்தந்திரத்தில் கேடுகண்டிரங்கல்' அதிகாரத்தில் வந்தது.

பறப்பட்டுப் போகும் புகுதும்என் நெஞ்சில்
திறப்பட்ட சிந்தையைத் தெய்வம்என் றெண்ணி
அறப்பட் டமரர் பதி யென் றழைத்தேன்
இறப்பற்றி னேன் இதிங் கென்னென்கின் றானே. **#2515**

பிராண வாயு வெளியே செல்லுங்கால் தானும் வெளிச்சென்றும், அஃது உள்ளே வருங்கால் தானும் உள்ளே வந்ததும் இவ்வாறு உழல்கின்ற எனது மனத்தின் அலைவுக்கிடையே அந்தப் பிராணனை அடக்கியதனால் நிலைபெற்ற சித்தத்தையே பரம் பொருளின் இருப்பிடமாகக் கருதி, அவ்விடத்தில் நின்றே, 'புண்ணியங்களின் பயனாய் எதிர்ப்படுகின்ற தேவதேவனே என்று அழைத்தேன் அங்ஙனம் ஒருமுறை யழைத்ததோடன்றித் தொடர்ந்து பன்முறை அழைத்து அவனை உள்ளத்தால் இறுகப் பற்றினேன் அதன்பின்பு அவன் தோன்றி, 'நீ இங்கு என்ன செய்கின்றாா்' என்று வினாவுகின்றான்.

விளக்கவுரை

ஆகவே, உடம்பு நீங்கியபின் நான் அடையத் தக்க கதி அவனே' என உணர்ந்தேன் என்பது கருத்து 'அதனால், பரகதி இல்லை என்பாரது கூற்று எனக்கு நகை விளைக்கின்றது' என்பதாம் போவதும், புகுவதுமாய் உள்ள நெஞ்சு நிற்றலைக் குறித்தமையால், அவ் விரண்டிற்கும் காரணம் வருவித்துரைக்கப்பட்டது. நெஞ்சு, விடாத ஆகுபெயர். மனம் அலையின் சித்தம் ஒன்றையும் சிந்தியாதாக, அது நிலைத்தவழியே சித்தம் ஒன்றை ஆழ்ந்து சிந்தித்தலின் 'திறப்பட்ட சிந்தை' என்றதற்கு ஏற்ப மனம் நிலைபெற்றமை பெறப்பட்டது. திறப்படுதல். வலியுடைத்தாதல். 'அடியார் சிந்தையுள் தேனூறி நின்று'* 'கருதுவார் இதயத்துக் கமலத்து ஊறும் - தேனவன்காண்'* என்றாற்போலும் சுருதிகளின் வழிநின்று, திறப்பட்ட சிந்தையைத் 'தெய்வம்' என்று எண்ணினார் என்க. அறப் பட்ட - அறத்தால். வெளிப்பட்ட. 'பட்ட' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'பட்ட' என்பது, 'பதி' என்பதனோடு முடிந்தது. சிந்தையில் இருப்பவனை அழைத்தல் சிந்தையாலேயாம். எனவே அவ்வாறு, பன்முறை பாவித்தலாயிற்று. 'ஒரு நாள் அழைத்துவிட்டு விடாமல், பல நாள் அழைத்தல் வேண்டும்' என்பது,

'பவன் எனும் நாமம் பிடித்துத் திரிந்து
பன்னாள் அழைத்தால்,
இவன்எனைப் பன்னாள் அழைப்பொழியான்
என்று எதிர்ப்படுமே'*3*

'அரங்கமாய்ப் பேய்க்காட்டில் ஆடுவான் வாளா
இரங்குமோ எவ்வுயிர்க்கும் ஏழாய்! - இரங்குமேல்
என்னாக வையான்! தான் எவ்வுலகம் ஈந்தளியான்!
பன்னாள் இரந்தாற் பணிந்து.'*9*

என்றாற்போலும் திருமொழிகளால் விளங்கும். அதனால், 'இறப்பற்றி' என்றால் 'இங்கு இது என் என்கின்றான்' என்றது, 'என்னோடு கலந்து உறவாடுகின்றான்' என்றபடி.

இதனால், 'பரகதி உண்டு' என்பது இவ்விடத்திற்றானே அனுபவமாய் விளங்கும் என்பது கூறப்பட்டது.

திடலிடை நில்லாத நீர்போல ஆங்கே
உடலிடை நில்லா உறுபொருள் காட்டிக்
கடலிடை நில்லாக் கலம்சேரு மாபோல்
அடல்எரி வண்ணனும் அங்குநின் றானே. ***#2516***

மேட்டு நிலத்தில் பொழியப்பட்ட மழைநீர் அங்கு நிலைத்து நில்லாது நீங்குவதுபோல, வினையால் உடம்பினிடத்துச் சேர்க்கப்பட்ட உயிர் அதன்கண் நிலைத்து நில்லாது நீங்குவதாகும். ஆயினும், தழல்

வண்ணனாகிய சிவனும் அவ்வுயிரோடு கூட அவ்வுடம்பின்கண் நிற்கின்றான். ஏனெனில், கடலிடத்தே நில்லாது கரையையே சேர்வதாகிய மரக்கலம் கடலிடை நின்றாருடன் தானும் நிற்பதுபோல, உயிரைப் பந்தத்தினின்றும் விடுவித்து வீட்டை அடைவித்தற் பொருட்டாம்.

விளக்கவுரை

கருத்து நோக்கிச் சொற்கிடக்கை முறையானன்றி இவ்வாறு உரை கூறப்பட்டது. உவமம் சுட்டிக் கூறா உவமமாய் நின்றமையால் அதனால் விளக்கப்படும் பொருள் இறுதியில் விரித்துரைக்கப்பட்டது. இடையில் நின்ற காட்டுதல் *(அறிவித்தல்)* வினை பொருட்கே உரியது ஈசன் உயிர்க்குக் காட்டிக் கண்டிடுவர்'*3* என்றது காண்க.

'கடலிடைப்பட்டவர் மரக்கலம், அல்லது புணையைப்பற்றி யின்றித்தாமே கரைசேர மாட்டாமைபோலப் பிறவியுட்பட்ட உயிர்கள் இறைவனைப் பற்றியன்றித் தாமே கரை சேரமாட்டா' என்பதும், 'அதனால் இறைவன் தனது கருணை காரணமாகப் பிறப்புடைய உயிர்களோடு உடனாய் நின்று அவற்றை வீடடைவிக்கின்றான்' என்பதும் இங்குக் கூறப்பட்ட பொருள்கள்.

'பிறவிப் பெரு கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவ னடிசேரா தார்'9

என்றார் திருவள்ளுவரும் 'மறு பிறப்பு இல்லை' என்பாரைத் தவிர, ஏனையோர் பலர்க்கும் 'உயிர்கள் பிறவியுட் பட்டன' என்பது உடன்பாடு. அதனால், அவர்கள் அனைவரும் இம்மந்திரத்திற்கூறிய உவமையை உடன்படுவர் மேற்காட்டிய திருக்குறளும் 'மறுபிறப்பு உண்டு' என்பார்க்குக் கூறுவதாய் எழுந்ததன்றி 'மறு பிறப்பு இல்லை' என்பார்க்குக் கூற எழவில்லை. ஆகவே, 'பக்தி' என்பது உண்டு என்பது உவமையாலும் விளக்கப்பட்டதாம்.

இதனால், பரகதி உண்மை உவமையில் வைத்து விளக்கப்பட்டது.

தாமரைநூல் போலவ தடுப்பார் பரத்தொடும்
போம்வ வேண்டிப் புறத்தே உதர்வர்
காண்வ காட்டக்கண் காணாக் கலதிகள்
தீந்நெறிச் சென்று திரிகின்ற வாறே. ***#2517***

தாமரைத் தண்டின் நூல்போல் அறிவுடையார் முன் எளிதில் அற்றுப்போகின்ற நூல்களால், உண்மை நூல்களின் வழிச் செல்வாரைத் தடுக்கின்றவர்கள் தாங்கள் மேல்நிலையை அடைய விரும்பி, அதற்கு மாறான வழிகளில் சென்று அலைவார்கள் அவர்களது செயல்கள், தெரிய வேண்டிய வழியைத் தெரிந்தவர் காட்டினாலும் அதனைக் கண் கொண்டு பாராத குருடர்கள் தாங்கள் அறிந்ததே வழியாகக் கொண்டு

துன்பம் தரும் வழிகளில் திரியும் செயல் போன்றனவேயாம்.

விளக்கவுரை

'நூல்' என்னும் பெயர் ஒற்றுமை பற்றித் தாமரை நூலை எடுத்துக்காட்டினார்.

'உன்நூலும் ஒருநூலா உரைப்ப தென்னே!
உலட்டு நூல், பருத்தி நூல், சிலம்பி நூல்கள்'*

என அருணந்தி தேவரும் கூறுதல் காண்க. 'போல்வவற்றால் தடுப்பார்' என உருபு விரிக்க. வினையொடு தொகுங்கால் மூன்றாவதன் தொகை விகற்பப் புணர்ச்சியைப் பெறும். 'வாள்போழ்ந் தட்ட நீள்கழல் மறவர்' என்றது காண்க. 'பரத்தொடும் - போம்வழி தேடிப் புறத்தே திரிதர்வர்' என்பதை, 'கனக வகை குறித்துக் போய்க் கடற்கே வீழ்வார்'* என்றது போலக் கொள்க. 'திரிகின்றவாறு' என்பதற்கு எழுவாய் வருவிக்கப்பட்டது.

இதனால், முத்தியைப் பல்வேறாகக் கூறும் சமய நூல்களின் பொருந்தாமை கூறப்பட்டது.

மூடுதல் இன்றி முடியும் மனிதர்கள்
கூடுவர் நந்தி யவனைக் குறித்துடன்
காடும் மலையும் கழனி கடல்தொறும்
ஊடும் உருவினை உன்னகி லாரே. *#2518*

பாசக் கூட்டம் மறைக்கின்ற மறைப்பு நீங்கி உடல் வீடும் மனிதர்கள் உடலில் இருக்கும்பொழுது, 'மாயோன் மேய காடுறை யுலகம்'3 என்பது முதலாக முறைப்படுத்துச் சொல்லப்பட்ட நால்வகை நிலங்கள் தோறும் உள்ளிடத்துச் சிவபெருமான் கொண்டிருக்கும் திருவுருவங்களைக் குறித்துச் சென்று வணங்கியிருந்து, உடல் நீங்கிய பொழுது பேரின்ப வடிவினனாகிய சிவபெருமானை அடைந்து அவனோடு இரண்டறக் கலப்பர். ஆயினும், பாசக் கூட்டத்தின் மறைப்பு நீங்கப்பெறாத மனிதர்கள் அத்திருவுருவங்கள் எங்கும் இருப்பினும் அவைகளைப் பற்றி யாதும் நினைக்க மாட்டார்கள்,

விளக்கவுரை

'மூடுதல் இன்றி முடியும் மனிதர்கள் காடும் ... ... உருவினைக் குறித்து நந்தியவனை (அடைந்து) உடன் கூடுவர்; (பிறர்) உன்னகிலார்' என இயைக்க. 'அவன்' பகுதிப் பொருள் விகுதி. 'குறிகளும் அடையாளமும் கோயிலும் - நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்'9 நிலமெங்கும் உள்ளனவாகவும் பாசத்தால் மூடப்பட்டுக் கிடக்கும் மனிதர்கள் அவற்றைச் சிறிதும் நோக்குதல் இல்லை. அதனால், அவர்கள் உடல்விட்ட பின்பு' அடையும் நிலை யாது எனக்கூறி இரங்கியவாறு,

'மூடுதல் இன்றி' என முன்னர்க் கூறப்பட்டமையால், பின்னர் அதன் மறுதலை வருவிக்கப்பட்டது. அவர்கட்கு மேற்கூறிய*l* 'நரகம், சுவர்க்கம், மேதினி' என்னும் மூன்று உலகங்களுள் யாதானும் ஒன்றிற்சென்று பிறத்தலே கதி என்பது குறிப்பெச்சம். 'பிறப்பதற்கே தொழிலாகி, இறக்கின்றாரே' *8* என்று அருளிச்செய்ததையும் நோக்குக.
இதனால், 'சிவநெறியை உணராதவர் மறுமையில் அடையும் நிலை இரக்கத்திற்கு உரியது என்பது கூறப்பட்டது.

ஆவது தெற்கும் வடக்கும் அமரர்கள்
போவர் குடக்கும் குணக்கும் குறிவ
நாவினில் மந்திரம் என்று நடுஅங்கி
வேவது செய்து விளங்கிடு வீரே. ***#2519***

(தலையில் வலக் கன்னத்தை, 'தெற்கு' என்றும், இடக் கன்னத்தை 'வடக்கு' என்றும், நெற்றியை, 'கிழக்கு' என்றும், பிடரிக்கு மேல் உள்ள பகுதியை 'மேற்கு' என்று குழூஉக் குறியாக வழங்குதல் சித்தர் மரபு. அம்முறையில்.)
தெற்கும், வடக்கும் உயர்வுடையன. அத்திசையிகளில் தேவர்கள் உலாவுவார்கள். (சூரிய கலை சந்திர கலைகளாகிய பிராணங்கள் வியாபிக்கும்.) மேற்கும், கிழக்கும் யோகி தன் தியானப் பொருளைக் குறித்துச் செல்லும் வழிகளாம். அங்ஙனம் செல்லும் பொழுது நாவால் உச்சரிக்கப் படுவன மந்திரங்கள். இவற்றை யெல்லாம் இவ்வாறு உணர்ந்து, மூலாக்கினியை எழுப்பி
நடுநாடி வழியாக ஓங்கச் செய்து, அதனால் அறிவு விளங்கப் பெறுவீர்களாக.

விளக்கவுரை

'அங்ஙனம் அறிவு விளங்கப்பெற்றால், சுவர்க்க நரகங்களும், அவற்றைக் கடந்துள்ள சுத்த புவனங்களும் விளங்கச் சித்தாந்த முத்தி நிலையும் விளங்கும்' என்பது குறிப்பெச்சம். ஆவது - உயர்ந்து நிற்பது, இதனை, தெற்கு, வடக்கு இரண்டனோடும் தனித்தனிக் கூட்டுக. மந்திரமாவன பிரணவமும், அம்சமும், திருவைந்தெழுத்துமாம். 'உணர்ந்து' என்பது சொல்லெச்சம்.
இதனால், 'உண்மை முத்தி நிலையை யோகக் காட்சியால் இவ்வுலகிலே உணர்தல் கூடும்' என்பது கூறப்பட்டது. அதனால், அதனை 'இல்லை' என்றல் குற்றமாதல் பெறப்பட்டது.

மயக்குற நோக்கினும் மாதவம் செய்வார்
தமக்குறப் பேசின தாரணை கொள்ளார்
சினக்குறப் பேசின தீவனை யாளர்
தமக்குற வல்வினை தாங்கிநின் றாரே. ***#2520***

சமயப் பூசலை மேற்கொண்டு, பிற சமயத்தவர் சினங்கொள்ளுமாறு கடுஞ்சொற்களைப் பேசின பாவத்தை யடைந்தவர் தாம் 'நெறியல்லா நெறி தன்னை நெறியாக மயங்கும் மயக்கம்* தம்மிடத்தில் பொருந்துதலால் நெறிகளைத் திரிய நோக்கினாராயினும், 'நாம் பெரிய தவத்தைச் செய்கின்றோம்' என்பது தான் அவர்கள் கருத்து அவர்கள் தங்களுக்கு உண்மை மனோலயம் வரும்படி சொல்லிய முறையைக் கைக்கொள்ளாமையால் அக் கருத்துப் போலியேயாய் உண்மையில் அவர்கள் தம்மை வந்து சார வேண்டிய வினைகள் வந்து சார்தலினாலே அவற்றைச் சுமந்து நிற்பவரேயாவர்.

விளக்கவுரை

'தவத்தினால் வினையை நீக்கிக்கொள்பவர் அல்லர்' என்பாம். 'மாதவம் செய்வார்' என்றது அவர்களது கருத்தை நோக்கி. தரணை - எண் வகையோக உறுப்புக்களில் மனம் ஒடுங்கி நிற்கும் நிலை. அஃது அதற்குரிய முறையைக் குறித்தது. 'சினக்க' என்னும் வினையெச்சம், குகரச் சாரியையும், 'உரு' என்னும் துணை வினையும் பெற்று, 'சினக்குற' என வந்தது. 'பேசின' என்னும் காரணப் பொருளில் வந்த பெயரெச்சத்தை, 'தீவினை' என்பதனோடே முடிக்க. 'அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை நாடி இனிய சொலின்'* என்பவாகலின் உறுதி கூறுமிடத்தும் இன்சொல்லால் கூறுதலே நன்றாகலின் 'சமயத்துறையில் தாம் பிறர்க்கு உறுதி கூறுவதாகக் கருதிக்கொண்டு, அவர்பால் கடுஞ்சொற்களை வழங்குதல் தீவினையாம்' என்றபடி. இத்தீவினையை நன்னெறி யாளர் ஒரோ ஒருகாற் செய்யினும் அவர் பிறர்க்கு உறுதி கூறிய நன்மையையேனும் பெறுவர். நெறியாளர் நெறியாளர் இதனைச் செய்யின் அவர்க்கு மிஞ்சுவத் கடுஞ்சொல் வழங்கினமையால் வரும் அத் தீவினைமட்டுமே என்பது கருத்து. இம்மந்திரம் மூன்றாம் எழுத்தெதுகை பெற்றது.
இதனால், சித்தாந்த முத்தியைப் பழிப்பார்க்குத் தீவினையும் உளதாதல் கூறப்பட்டது.

*10.35.*இலக்கணாத் திரயம்

விட்ட இலக்கணை தான்போம் வியோமத்து
தொட்டு விடாத*(*து*)* உபசாந்தத் தேதொகும்
விட்டும் விடாதது மேவும்சத் தாதியில்
சுட்டும் இலக்கணா தீதம் சொரூபமே. ***#2521***

ஆன்மாவின் சொரூப *(*இயற்கை*)* நிலையைக் குறித்து வரும் சொற்களெல்லாம் இலக்கணைச்சொல்லாகாது இலக்கணச் சொல்லேயாம். அஃதாவது நேர்ப்பொருளைத் தருவனவேயாம். அவை

'ஆன்மா நித்தியம், வியாபகம், சித்து' என்றல் போல்வன. ஆன்மாவின் சொரூப நிலையைக் கூறாது, தடத்த (செயற்கை) நிலையைக் குறித்து வரும் சொற்களே இலக்கணைச் சொல்லாய் நிற்கும். அஃதாவது நேரே பொருளை யுணர்த்தாமல், ஒன்றை இடையிட்டுப் பொருளுணர்த்தும். அது மூன்று வகைப்படும். (அவ்வகைகள் மேலே காட்டப்பட்டன.) 'ஆன்மா, மேல், கீழ், நடு உலகங்களில் பிறந்தும், இறந்தும் உழலும்' என்றால், ஆன்மா உண்மையில் வியாபகப் பொருள் ஆகையால், அதற்குப் போக்கு வரவு இல்லையாதலின், ஆன்மாவை விட்டு, 'அதன் சூக்கும, பரசரீரங்களே அவ்வாறு உழல்வன' எனக் கொள்கின்றோம். ஆகவே இது விட்ட இலக்கணை.

இனி, 'ஆன்மாச் சகலத்திற் கேவலம், சகலம், சுத்தம் என்னும் அவத்தைகளை அடைகின்றது' என்றால், அவ்வவத்தைகளில் உணர்வு வேறுபடுவது ஆன்மாவே ஆகையாலும், அதன் கருவிகளின் கூடுதல் பிரிதல்கள் என்பவற்றாலும், சீவ கரணங்கள் சிவ கரணங்களாய் வேறுபடுதலாலுமே அவத்தைகள் நிகழ்தலாலும் ஆன்மாவை விடாமலே அதன் கருவிகளின் கூடுதல் குறைதல் -களையே கொள்கின்றோம். அதனால் இது விடாத இலக்கணையாம்.

இனி, 'ஆன்மா புறத்தே உள்ள ஓசையைக் கேட்கின்றது, உருவத்தைக் காண்கின்றது' என்றால், கேட்டல் காண்டல்களைத் தான் நேரே செய்யாது, செவியும், கண்ணுமாகிய பொறிகளே அவற்றைச் செய்கின்றன என்றும், ஆயினும் அப்பொறிகள் அச்செயல்களைச் செய்யுமாறு ஆன்மா அவற்றை அதிட்டித்து (வாயிலாகப் பற்றி ஏவி) நிற்கின்றது என்றும் கொள்கின்றோம். இதனால், இது விட்டும் விடாத இலக்கணையாம்.

விளக்கவுரை

ஈற்றடியை முதலில் வைத்து உரைக்க. 'சொரூபம் இலக்கணாதீதம்' (இலக்கணைக்கு அப்பாற்பட்டது) எனக் கூறியதனால், 'இலக்கணைச் சொற்களாய் வருவன தடத்தத்தைப் பற்றி வருவனவே' என்பது பெறப்பட்டது.

'ஆன்மாவின் தடத்த இயல்புகளைக் கூறுமிடத்து ஆன்மா விற்குச் செயற்கையாயுள்ள மலங்கலின் இயல்பை வேறாகவும், ஆன்மாவின் தற்சொரூபம் வேறாகவும் உணர்தல் வேண்டும்' என்பது இம்மந்திரத்தின் திரண்ட கருத்து. ஆகவே, ஆன்மாவைப் போலச் சிவன் தனது தடத்த நிலையில் முன்னை நிலையை மறத்தலாகிய உணர்வு வேறு பாட்டை அடைதல் இல்லாமையால், 'அவனது தடத்த நிலைகளைக் குறிக்கவே இலக்கணைச் சொற்கள் பயன்படுகின்றன' எனக்கூறும் மாயாவாதிகள் கூற்றுப் பொருந்தாது என்பதும் இதனாலே குறிக்கப்பட்டதாம். இது

வருகின்ற மந்திரத்தில் வெளியாகும்.
வியோமம் - ஆகாயம் ; வானுலகம். அஃது உபலக்கணம். 'உபசாந்தம்' என்றது கருவிகளின் சேட்டை அடங்கிய நிலையை. சத்தாதி - ஓசை முதலிய புலன்கள். சுட்டும் - நேரே சுட்டுகின்ற.
இதனால், உபநிடதப் பொருள்களைச் செம்மையாக உணர்தற்கு உரிய ஒரு கருவியின் இயல்பு விளக்கப்பட்டது.

வில்லின் விசைநாணில் கோத்திலக் கெய்தபின்
சொல்லுங் களிறைந்தும் கொலொடே சாய்ந்தன
இல்லில் இருந்தெறி கூறும் ஒருவற்குக்
கல்கலன் என்னக் கதிர்எதி ராகுமே. *#2522*

[இம்மந்திரம் ஒட்டணியாய் நின்றது.]

வில்லினிடத்து விசையைத் தருகின்ற நாணை ஏற்றி, அதன்கண் அம்பைப்பூட்டி தொலைவில் உள்ள இலக்கை எய்ய வல்லார் அங்ஙனம் எய்வாராயின் அந்த இலக்கிற்குக் குறுக்கே நிற்கின்ற கொலையானைகள் ஐந்தும் அந்த அம்பாலே வீழ்ந்துவிடும். (அம்பு இலக்கைச் சென்று அடையும்.) இனி அவ்வாறு எய்யும் ஒருவன் தனக்கு வாய்ப்பான இடத்தில் இருந்து கொண்டு எய்யும் பொழுது அச்சாதனையால் இனியதோர் ஒளி மாணிக்கக்கலன் போல் வெளிப்பட்டு விளங்கும்.

விளக்கவுரை

இவ்வதிகாரத்தில் உபநிடத வாக்கியங்களுக்குப் பொருள் கொள்ளும் முறை பற்றிக் கூறுகின்றார். ஆதலின் 'முண்டகம்' என்னும் ஓர் உபநிடதத்தில் கூறப்பட்டவாறே இம்மந்திரத்தில் கூறினார். அதிற் கூறப்பட்டது வருமாறு.
1. 'சித்தம் அழகியோய், உபநிடத்தில் உள்ள பெரிய அத்திரத்தை (வில்லை) எடுத்து அதில், முன்பே உபாசனையால் கூர்மை பெற்றுள்ள அம்பைத் தொடுத்து, பிரம்ம பாவனையால் அதை இழுத்து, அட்சரப் பிரம்மமாகிய இலக்கில் பாயும்படி செலுத்து'3
2. 'பிரணவமே வில். ஆன்மாவே அம்பு. பிரம்மமே அதன் இலக்கு அது சிறிதும் மறதியற்ற நினைவுடன் எய்யப்படல் வேண்டும். (எய்யப்பட்டால்) ஒன்று பட்ட நிலை ஏற்படும்'.3
இவற்றால் இம்மந்திரத்தில் மறைத்துக் கூறப்பட்டபொருள் இனிது விளங்கும். உபாசனை, இங்கு மந்திரோபாசனை யாதலின், 'விசை நாண்' என்றது திருவைந்தெழுத்தாகக் கொள்ளப்படுகின்றது. இதனை மேற்காட்டிய உபநிடதம் வெளிப்படையாகக் கூறவில்லை. 'பிரணவ கலைகளே அஞ்செழுத்து' என்பது உபநிடதங்களின் கருத்து ஆதலால் அது 'வில்' என்பதில் அடக்கப்பட்டது என்பது இனிது விளங்க நாயனார்,

'விசை நாணின்' என வெளிப்பட ஓதினார்.
உபாசனையால் கூர்மை பெற்ற அம்பு, சமய விசேட நிருவாண தீக்கைகளால் பல முறைகளில் திருவைந்தெழுத்தை ஓதிப் பயின்று, திருவருள் உணர்வு மிகப்பெற்ற ஆன்ம உணர்வு, ஆன்மா எத்துணை முயற்சிகளைச் செய்தாலும் தனது இலட்சியத்தை அடைதற்கு, இடையே குறுக்கிடுவன ஐம்புலன்கள் ஆதலின், அவையும் இலட்சியத்தை நோக்கி உறுதியாகச் செல்லும் ஆன்மாவின் முன் வலியற்று வீழ்ந்துவிடும்' என்பதையும் நாயனாரே கூறினார்.
கோல் - அம்பு, ஒடு உருபை ஆன் உருபாகத் திரிக்க. ஏகாரம், 'அந்த அம்பைத்தவிர வேறொரு படைக்கலம் வேண்டா' என்பதைக் குறித்தது. தெளிவு பற்றி எதிர்காலம் இறந்த காலமாகச் சொல்லப்பட்டது.
உபநிடதத்தில் 'மறவா நினைவு' எனப்பட்டது யோகா வத்தையில் சமாதி நிலையும், நின்மலாவத்தையில் நின்மல துரியமும் ஆகும் இவற்றையே நாயனார் 'இல்' (இல்லம்) என்றார். எறி - எய்யப்படும் இலக்கு . கூரும் - அதனைக் கூர்த்து நோக்குகின்ற. கல் - மாணிக்கம். 'கற்கலன்' என்பது எதுகை நோக்கி, 'கல்கலன்' என இயல்பாய் நின்றது. கதிர் - கதிரவன்; ஆகுபெயர். சொரூப சிவம்.
இங்குக் கூறிய இவ்வுருவக முறையில் பரமான்மாவை, 'இலக்கு' என்றதனால், அஃது இருந்தபடியே என்றும் இருக்கின்றது என்பதும், 'கூர்மை பெற்ற அம்பு' என்றதனால், சீவான்மாவே பிரணவோபசனையாகிய சாதனத்தால் அவ்விலக்கினை அடைதல் வேண்டும்' என்பதும் உபநிடதத்தின் கருத்து என்பது போந்தது.
எய்பவனும், எய்யப்படும் பொருளும் ஒன்றாதல் ஒருபோதும் இல்லையாகலானும், 'உண்டு' எனின், 'தன்னைப் பற்றுதல்' (ஆன்மாச் சிரய தோடம் என்னும் குற்றம் படும் ஆகலானும், ஏகான்ம வாதம் கொண்டு இலக்கணைகளைப் பிரமப் பொருளின் தடத்த நிலைகளுக்கு ஆக்குதல் பொருந்தாமை தெள்ளிது என்றபடி. இங்ஙனம் இதனைத் தெளிவுபடுத்தவே நாயனார் இம்மந்திரத்தைக் கூறினார். அதனால் இம்மந்திரம் இவ்வதிகாரத்தில் இடம்பெற்றது.
'புள்ளுவர் ஐவர் கள்வர்
புனத்திடைப் புகுந்து நின்று,
துள்ளுவர்; சூறை கொள்வர்;
தூநெறி விளைய ஒட்டார்;
முள்ளுடை யவர்கள் தம்மை
முக்கணான் பாத நீழல்
உள்ளிடை மறைந்துநின்(று) அங்(கு)
உணர்வினால் எய்ய லாமே'9

என்னும் அப்பர் திருமொழியை இங்கு ஒப்பிட்டுக் காண்க. இதனால், இலக்கணை பயன்படும் முறை உபநிடதக் கூற்றால் விளக்கப்பட்டது.

10.36.'தத்துவமசி' மகாவாக்கியம்

சீவ துரியத்துத் தொம்பதம் சீவனார்
பாவு பரதுரி யத்தினில் தற்பதம்
மேவு சிவதுரி யத்(து)அசி மெய்ப்பதம்
ஓவி விடும்தத் துவமசி உண்மையே. #2523

('வேதாந்த மகாவாக்கியங்கள் சில உள' என்பதும், அவற்றின் இயல்பும் மேற்குறித்த அதிகாரங்களில் சொல்லப்பட்டன. அவ்வாக்கியங்களில் 'தத்துவமசி' என்னும் வாக்கியமே சிறப்பாகக் கூறப்படுதலால் அது பற்றியே இங்குக் கூறுகின்றார். வடமொழியில் 'தத்+த்வம்+அஸி' என்னும் மூன்று பதங்களின் சேர்க்கையே 'தத்துவமஸி' என்று ஆகின்றது. தத் - அது. த்வம் - நீ, அஸி - ஆகின்றாய். தத்துவமஸி - அது நீயாகின்றாய். இங்ஙனமாயினும் 'ஆகின்றாய்' என்பதனால், 'நீ அது ஆகின்றாய், என்பதே கருத்து, த்வம், 'துவம்' என வருகின்றது. 'தொம்' என மரூஉவாகவும் வரும். இங்குக் குறித்த கருத்துப் பற்றி நாயனார், 'தொந்தத்தசி என்றே கூறுவார்)

'தத்துவமசி' என்பதை, 'தொம், தத், அசி என வைத்து நோக்கினால் முதற்கண் உள்ள 'தொம்' என்பது, மேல் 'முத்துரியம்' என்பவற்றில் சீவ துரியமாகிய யோகாவத்தையாகிய சகலத்திற் சுத்தா வத்தை நிலையில் தியான சமாதிகளில் உள்ள சீவான்மாவைக் குறிக்கும். 'தத்' என்பது பர துரியமாகிய பர முத்தியில் அடையப்படும் சொரூப சிவத்தைக் குறிக்கும். 'அசி' என்பது, நின்மல துரியமாகிய சிவ யோகத்தில் சீவான்மா பரமான்மாவாகிய சிவனேயாய் அவனோடு ஏகமாகி விடுதலைக் குறிக்கும். இதுவே 'தத்துவமசி' மகாவாக்கியத்தின் உண்மைப் பொருள். இப்பொருளைச் சில மதங்கள் தள்ளிவிடுகின்றன.

விளக்கவுரை

'அதனைக் கொண்டு மயங்க வேண்டா' என்பது குறிப்பெச்சம். 'தத்துவ மசி உண்மை இது' என முடித்து ஓவிவிடும் என்பதை இறுதியில் கூட்டி, அதற்கு எழுவாய் வருவித்து முடிக்க. தள்ளிவிடுகின்ற மதங்கள் சிலவகை ஏகான்ம வாத மதங்கள். அவை 'சீவான்மா, பரமான்மா என இரண்டு ஆன்மாக்கள் இல்லை. பரமான்மா ஒன்றே பல சீவான்மாக்கள் ஆகின்றது' என்பதில் தம்முள் மாறுபடுதல் இல்லை.
ஒருவகை ஏகான்ம வாதம், 'பொன்னே பூடணம் ஆவது போல' பரப்பிரம்மே சீவர்களாகவும், உலகமாகவும் பரிணமிக்கின்றது என்று கூறும் அக்கூற்று. 'பரிணாம வாதம்' எனப்படுகின்றது.
'பரிணாம வாதம் பொருந்தாது' என விடுத்து, மற்றொருவகை ஏகான்ம வாதம். விவர்த்தனவாத ஆபாச வாதங்களைக் கூறும். விவர்த்தனம் -

மாறுபட்ட தோற்றம். ஆபாசம் - உண்மை போலவே தோன்றும் போலி. கயிறு பாம்பாகவும், இப்பி வெள்ளியாகவும், கானல் நீராகவும் தோன்றுதல் போலும் தோற்றமே விவர்த்தனம் இத்தோற்றத்திற்குக் காரணம் மயக்கமே. போலியும் மயக்கம் காரணமாக, 'உண்மை' என எண்ணப்படுகின்றது. 'அவை போலவே மயக்கத்தால் பர பிரம்மம் ஈசுரனாகவும், சீவர்களாகவும், உலகமாகவும் (சக சீவ பரங்களாகத்) தோன்றுகின்றது என்பது விவர்த்தனவாத ஆபாச வாதங்கள், 'மயக்கத்திற்குக் காரணம் மாயை எனப்படுகின்றது.

மாயை கண்ணாடிபோல்வது; அது 'சத்துவம், இராசதம், தாமதம் என்னும் மூன்று கூறுபாட்டினையுடையது. அக்கூறுகள் 'குணம்' எனப்படும். அம்மூன்றிலும், சுத்தமாய் ஒன்றாய் உள்ள பரப்பிரமம் கண்ணாடியில் நிழல்போலப் பலவாய்ப் பிரதிபலிக்கும் அவற்றுள் சத்துவ குணப்பிரதிபலனமே ஈசுரன். இராசத குணப்பிரதிபலனம் சீவர்கள். தாமத குணப் பிரதிபலனம் பலவகை உடம்புகளும், உலகங்களும் கண்ணாடியில் நிழற் போல' என்பதனால், இஃது ஆபாச வாதமாம். ஆகாயத்தில் உள்ள சந்திரனும், சூரியனும் பூமியில் உள்ள பல நீர்நிலைகளிலும், பாண்டங்களிலும் உள்ள நீரில் பிரதிபலித்தலையும் உவமையாகக் கூறுவர்.

விவர்த்தன வாதம், ஆபாச வாதம் இரண்டுமே மாயையை அடிப்படையாகக் கொள்வதால் அவை இரண்டுமே 'மாயா வாதம்' எனப்படுகின்றன.

இவ் வாதங்கள், 'தங்கள் வாதங்களுக்கு மாயையே அடிப்படை' என்று சொல்லிவிட்டு, 'அத்தகைய மாயை உள்பொருளா, இல்பொருளா' என்னும் ஆராய்ச்சியில், 'இரண்டும் அல்ல; அதனால் உள்ளது என்றோ, இல்லது என்றோ ஒருபடித்தாக வரையறுத்துச் சொல்லொணாதது. (அநிர்வசனீயம்) என்கின்றன. அங்ஙனம் இவை கூறுதற்குக் காரணம். 'பொருள்' என உள்ளது ஒன்றேயன்றி, இரண்டாவது இல்லை எனக் கொண்டதேயாகும். மாயையை 'உள்பொருள்' என்று ஒப்புக்கொண்டால், 'பொருள்கள் இரண்டு உள்ளன' என்று ஆகிவிடும்' என இவை அஞ்சுகின்றன.

'உள்ளது' என்றால், என்றும் உள்ளதாதல் வேண்டும். 'இல்லது' என்றால் முயற்கொம்பு, ஆகாயத் தாமரை முதலியன போல அதனால் விளைவு ஒன்றும் உண்டாகாது. மாயை மயக்கத்தைத் தருவதால் இல்லதாகாது 'உள்ளது' என்றால் என்றும் உள்ளதாதல் வேண்டும். அவ்வாறின்றி ஞானம் வந்தால் இல்லையாகி விடுகின்றது. அதனால் மாயையை, உள்ளது என்றோ, 'இல்லது' என்றோ சொல்லமுடியாது என்பது இவ்வாதங்களின் நெறிமுறை. இவ்வாறு அடிப்படையைப் பற்றிக்

குழப்பிவிட்டு. அதன்மேல் உயர உயரக் கட்டடங்கள் இவ்வாதத்தில் கட்டப்படுகின்றன.
ஏகான்ம வாதங்களில் மாயாவாதமே வலுப்பட்டு நிற்கின்றது.
சத்தப் பிரம வாதம், கிரீடாப் பிரம வாதம் என வேறு ஏகான்ம வாதங்களும் உள்ளன.
உபநிடதங்களுள் சிறந்த ஒன்றாகிய சாந்தோக்கியம் ஓர் உபதேசத்தில் 'சத்தே முதற்கண் ஒன்றேயாய். அத்விதீயமாய் இருந்தது' எனக் கூறியுள்ளது.*1* இதில் 'அத்வீதியம்' எனப்பட்ட 'அத்துவிதம்' என்னும் சொல்லே பெரிதும் விவாதத்திற்குள்ளாகி விட்டது. பிரம சூத்திரத்திற்குப் பாடியம் செய்தோர், 'அத்துவிதம்' என்பதற்கு 'இரண்டில்லாதது' என்றே பொருள் கொண்டு, 'இரண்டில் -லாதது ஒன்றே' என்றனர். அதனால் அவர்கள், 'எவ்வகையிலும் உளளது ஒரு பொருளே; இரண்டாவதாக எந்தப் பொருளும் இல்லை' எனக் கொள்வாராயினர். ஆயினும் சத்தினை 'ஒன்று' எனக் கூறும் உபநிடதம் வாளா 'ஒன்று' என்று மட்டும் கூறாமல், 'ஒன்றே' எனத் தேற்றேகாரம் கொடுத்துக் கூறியதிலேயே 'இரண்டாவது இல்லை' என்பது விளங்கி விடுகின்றது. ஆகவே, அதன்பின், 'இரண்டாவது இல்லை' எனக் கூறுதல் மிகையாகின்றது. ஆயினும், 'வலியுறுத்தற்கு அதுவும் வேண்டும்' என்கின்றனர் பாடியகாரர்கள். 'ஒருபொருளே உண்டு எனக் கொள்வதால் அவர்கள் ஒருமைக் கொள்கையினராதல் தெளிவு.
ஒருமை, 'முற்றொருமை, தொகை யொருமை, இறை யொருமை' என மூன்றாகச் சொல்லப்படுகின்றது. முற்றொருமை கேவ லாத்துவிதம். (கேவலம் - தனிமை) தொகையொருமை - விசிட்டாத்து விதம். (விசிட்டம் - அடையும், அடைகொளியும் ஒன்றாய்த் தொக்க தொகை. அடை - விசேடணம். அடைகொளி - விசேடியம். விசிட்டம் - இவையிரண்டும் கூடியது.) இறை யொருமை - சிவாத்துவிதம்.
மூன்று ஒருமையாளர்களுள் முற்றொருமையாளர் 'முதற் பொருள் (பரபிரம்மம்) எந்த வகையிலும் இருமை சிறிதும் இல்லாது, முற்றும் ஒன்றேயாய் உள்ளது' என்பர்.
இருமை, 'பேதம்' என்றும், ஒருமை, அபேதம் என்றும் சொல்லப்படும். பேதம் - வேற்றுமை. அபேதம் - வேற்றுமை இன்மை.
ஒரு பொருட்கு மூன்று வகை வேற்றுமைகள் உள்ளன. அவை, 'தன்னின வேற்றுமை, (சசாதிய பேதம்) வேற்றின வேற்றுமை (விசாதீய பேதம்) தன்னுள்ளே வேற்றுமை' (சுகத பேதம்) என்பன.
'மா மரம், புளியமரம்' என்றாற் போல்வனவற்றில் தன்னின வேற்றுமை உள்ளது. ஏனெனில், 'மா, புளி' என்பன 'மரம்' என்னும் ஓர் இனத்தில் உள்ள வேற்றுமையே, பரப்பிரமம் ஒன்றேயாதலின் அதற்குத் தன்னின

வேற்றுமையில்லை.
மரம், விலங்கு, புள் முதலியவற்றில் அவ்வப்பெயர்களே வேற்றின வேற்றுமையை உணர்த்துகின்றன. ஏனெனில் அப்பெயர்கள் அவ்வவ்வினத்திற்கு மற்றையினங்களோடுள்ள வேற்றுமையை உணர்த்தியே நிற்கின்றன. பரப்பிரம்மத்திற்கு வேறாய் எந்தப் பொருளும் இல்லையாகையால், அதற்கு வேற்றின வேற்றுமையும் இல்லை என்பர் முற்றொருமையாளர்.
'செந்தாமரை, வெண்டாமரை - முக்கண்ணன, செங் கண்ணன்' என்றாற் போல்வனவற்றில் தன்னுள்ளே வேற்றுமை உள்ளது. ஏனெனில், தாமரை வேற்றுமையின்றி நில்லாது 'செம்மை, வெண்மை' என்னும் வேறுபாடுகளைத் தன்னுள்ளே கொண்டுள்ளது. 'செஞ்ஞாயிறு வெண்ணிலவு' என்பவற்றிலும் செம்மையும், வெண்மையும் ஞாயிற்றிற்கும், நிலவிற்கும் வேறு வேறாகவே உணரப் படுகின்றன. கண்களும், அவற்றை உடையவர்களும் வேறு வேறாகவே உணரப்படுதலால், 'முக்கண்ணன் செங்கண்ணன்' என்ப வற்றிலும் தன்னுள்ளே வேற்றுமையுள்ளது. எனவே, 'குணம், குணி. (பண்பு, பண்பி) அவயவம், அவயவி (சினை, முதல்) என்னும் முறையில் உள்ள வேற்றுமைகள் தன்னுள்ளே வேற்றுமை' என்பது விளங்கும். 'இத்தகைய வேற்றுமையும் பரப்பிரம்மத்திற்கு இல்லை' என்பர் முற்றொருமையாளர். 'பரப்பிரம்மம் கேவலம் சின் மாத்திரமாய் உள்ளது'. அறிவு, அறிவை உடையது என்று அஃது இரண்டாய் இல்லை. அறிவு என்கின்ற ஒன்றேயாய் உள்ளது என்பது அவரது கொள்கை. 'கேவலம் ஒன்று' என்பதனால், அவர் கூறும் அத்துவிதம், 'கேவலாத்து விதம்' எனப்படுகின்றது.
'பரப்பிரம்மத்திற்குச் சசாதிய பேதம் இல்லை' என்பது மட்டுமே எல்லோர்க்கும் உடன்பாடு. 'மற்றைய பேதங்கள் இல்லை என்பது எல்லோர்க்கும் உடன்பாடில்லை.
'மேற்காட்டிய உபநிடதம், சத்தினை, (பரப்பிரம்மத்தை) 'ஒன்று' எனக் கூறியது. சசாதீய பேதத்தை நீக்குதற்கும், 'ஒன்றே' எனத்தேற்றேகாரம் புணர்த்தது, சுகத பேதத்தை நீக்குதற்கும், (அத்விதீயம்) என்றது விசாதீய பேதம் நீக்குதற்கும் ஆகலின், அவற்றுள் மிகை எதுவும் இல்லை' என முற்றொருமையாளர் திறம் படச் சாதிப்பர். ஆயினும், 'பரப்பிரம்மத்திற்கு விசாதீய பேதமும், சுகத பேதமும் இல்லை' என்றால், மேற்காட்டிய உபநிடத்திலும் மற்றும் உப நிடதங்களிலும் பரப்பிரம்மத்தை வருணிக்கும் பலவகை வருணணை களோடு பெரிதும் முரணும் ஆதலின், 'ஏகமேவாத் விதீயம்' என்னும் இந்த ஒரு வாக்கியத்தை வைத்து முற்றொருமை சாதித்தல் கூடாது என மற்றையோர் மறுப்பர்.

சீவர்கள், பிரபஞ்சம் இவைகளை உப நிடதங்கள் வேறு வேறாகவும் கூறுகின்றன. எனினும், முற்றொருமை வாதிகள், உபநிடதங்களில் வரும் பிரம்ம வருணனைகளில் அன்மைச் சொற்கட்கு மட்டுமின்றி, ஆக்கச் சொற்களுக்கும் பிரம்மத்தைப் பிற பொருள்களினின்றும் வேறுபடுத்துதலே பயன்' என்று கூறிப்போவர்.

'பரப்பிரம்மம்' சசாதீய பேதம் இன்றி, ஒன்றேயாயினும், பசு பாசங்களின் வேறாய் நிற்கும் விசாதிய பேதம். 'ஆனந்தம்' முதலிய குணங்களையுடைய குணியாய் நிற்கும் சுகதபேதம் இவைகளை யுடையதே' என்பர். மற்றையோராகிய அவர் அங்ஙனம் கூறுமிடத்து. (அரசனுக்குப் பரிவாரங்கள் அரசச் சுற்றம்) போல சீவர்களும், அவனது ஆற்றல் போல மாயையும் இருத்தலால் பசு பாசங்கள் பரப் பிரம்மத்தின் வேறாவன அல்ல' என்பதே அத்துவிதம் என்பதனால் பெறப்படுவது' என்பர் தொகை யொருமையாளர் (விசிட்டாத்து விதிகள்.) ஆற்றலும், பரிவாரமும் அரசனுக்கு அடைகள் (விசே டணங்கள்) அரசன் அடைகொளி. (விசேடியம்.) 'ஆற்றலும், பரி வாரமும் இல்லாவிடில் அரசனே இல்லை, அதுபோலப் பசுபாசங் களாகிய அடைகள் இல்லையேல், பதியாகிய பரப்பிரம்மமும் இல்லை' என்பது அவர் கொள்கை. மேலும், 'பரம்' என்பதற்கு 'மேலானது' என்பது பொருள், 'இரண்டாவது பொருள் இல்லை' என்றால், 'மேல், கீழ்' என்னும் வழக்கிற்கே வழியில்லை.

இனி முற்றொருமையாளர், 'பொய், மெய்' என்பவற்றிற்கு வேறாய்' 'மித்தை' (வெறுந்தோற்றம்) என ஒன்றைக்கூறி, 'மாயை, அஞ்ஞானம் அவித்தை' எனக் கூறப்படுவனவெல்லாம் 'மித்தை'; அஃதாவது, பொய்யும் அல்ல; மெய்யும் அல்ல. ஆகவே, மித்தையையும் மெய்யையும் வைத்தே கீழ்,மேல் சொல்லப்படுகின்றன என்பர்.

'மேற்காட்டிய கயிற்றில் அரவு முதலியனவும், கனாவும் மித்தை (வெறும் தோற்றம்) அஃதாவது, உள்ளனவும் அல்ல; இல்லனவும் அல்ல' என்பர். இக்கொள்கை பௌத்த மதக் கொள்கை யாகிய 'சூனியம்' என்பதைச் சிறிதே வேறுபடுத்திக்கூறுவதாகும். 'மெய்' என்பதை 'உள்ளது' என்றும், 'பொய்' என்பதை இல்லது' என்றும் கொண்டால், இவ்விரண்டிற்கும் வேறாய், அல்லது இரண்டுமாய் நிற்பதொரு பொருள் இருத்தல் இயலாது. ஆகவே, அஃது இயல்வது போல வைத்து, சூனியம், அநிர்வசனீயம் 'மித்தை சமுச்சயம்' முதலிய சொற்களைச் சொல்வன எல்லாம் வெறும் சொற்சாலங்களாய்ப் பொருளில் மொழிதலேயாம். கயிற்றில் அரவு இல்லையென்றாலும் அரவு வேறிடத்தில் உள்ளது. இப்பியில் வெள்ளி இல்லையென்றாலும் வெள்ளி வேறிடத்தில் உள்ளது. கானலில் நீர் இல்லையென்றாலும் நீர் வேறிடத்தில் உள்ளது.

ஆகவே, 'இல்லதற்குத் தோற்றம் இன்மையின்'3 என்றபடி, எங்கும், எப்பொழுதும் இல்லதேயான பொருள் ஓரிடத்தும், ஒருகாலத்தும், ஒருவாற்றானும் தோன்று மாறில்லை. ஆகையால் கயிற்றில் அரவு முதலியவற்றை உவமை கூறினால், 'பரப்பிரம்மத்தில் சக சீவ பரங்கள் இல்லையென்றாலும் அவை வேறிடத்து உள்ளன' என்று ஆகும். இனிக்கனவை, 'மெய்யன்றி' என்றலும் பொருந்ததாது. கனவிற்கும், நனவிற்கும் உள்ள வேற்றுமை, ஒரு பிறப்பிற்கும். அடுத்தப் பிறப்பிற்கும் உள்ள வேற்றுமை போன்றதாகவே சொல்லப் படுகின்றது. ஒரு பிறப்பில் உள்ள உறவினர், பகைவர் அடுத்த பிறப்பில் அவ்வாறாய் வாராமை பற்றி முற்பிறப்பைப் 'பொய்' என்பார் ஆத்திகருள் ஒருவரும் இலர். அதுபோல, கனவிற்கண்டது நனவிற் பயன்படாமை பற்றி அதனைப் 'பொய்' என்றல் சாலாது. ஒரு சிலருக்கு முற்பிறப்பு நிகழ்ச்சிகள் நினைவிற்கு வந்து, விருப்பு வெறுப்புக்கள் நிகழ்வது போல, கனவு நிகழச்சிகளில் ஓரிரு நிகழ்ச்சிகள் நனவிலும் தாக்குகின்றன 'நனவு தூலதேகத்தை மட்டுமை பற்றியது, கனவு சூக்கும தேகத்தை மட்டுமே பற்றியது' என்பது அனைவர்க்கும் உடன்பாடு. கனவில் நிகழும் மகளிர் இன்பம், பேரெச்சம், பெருந்துக்கம் முதலியன, சிலவேளைகளில் தூல உடம்பைத் தாக்குதலும் கண் கூடு. அவை பொய்யாயின் பொய்யானது பிறிதொன்றைத் தாக்குமாறில்லை. ஒழுங்கின்மை, நிலையாமை என்னும் அளவே கனவினிடத்து உள்ள குறைகளாகும். ஆகவே கனவு இல்லதன்று.

இன்னும் அவர், 'குளக்கரையில் நிற்பவனுக்குக் குளத்து நீரில் தான் தலைகீழாய்த் தோன்றுவது போல, சத்துச் சித்து ஆனந்தமாய் உள்ள பரப்பிரம்மம் மாயையால், நேர்மாறான அசத்துச் சட துக்க உலகமாய்த் தோன்றுகின்றது' என்பர்.

குளக்கரையில் நிற்பவன் நீரில் நிழலையே தானாக மயங்குதல் ஓரிடத்தும், ஒரு காலத்தும் நிகழாதது. ஒருவன் கண்ணாடியில் தோன்றும் நிழலையே தானாக மயங்குதலும் அத்தகையதே. அதனால் அவற்றை உபமானமாகக் கூறி, 'பரப்பிரமத்தின் பிரதி பிம்பங்களே சகசீவ பரங்கள்' என்றல் பொருந்துமாறில்லை.

அஃதன்றியும் கயிறு தானே தன்னைப் 'பாம்பு' என மயங்கிப் பின்பு 'இது பாம்பன்று, கயிறு' எனத் தெளியாது. அவ்வாறு முன்பு மயங்கப் பின்பு தெளிபவன் கயிற்றுக்கு வேறாய் உள்ளவனே. அதுபோலப் பரப்பிரமமே தன்னைத்தான் முன்பு சகசீவ பரங்களாக மயங்கிப்பின், இவையெல்லாம் அன்ன அல்ல, பரப்பிரம்மமே' எனத் தெளியாது. அங்ஙனம் முன்பு மயங்கிப் பின்பு தெளிபவன் பரப்பிரம்மத்தின் வேறாய் உள்ளவனே யாவன். ஆகவே, இத்தகைய உவமைகள்

முற்றொருமையைச் சாதிப்பவனாய் இல்லை.
இனிக்கயிறு பாம்பாகத் தோன்றுமேயல்லது. தேளாய் ஒருவருக்கும் தோன்றாது. காரணம் என்னை? பாம்பினுடைய தன்மை கயிற்றினிடத்தும் உள்ளது. தேளினுடைய தன்மை கயிற்றினிடத்தில் இல்லை கயிறு, பாம்பு இரண்டிலும் உள்ள தன்மை 'பொதுத் தன்மை' எனப்படும். எனவே, ஒரு பொருளைக் காண்கின்றவன் அதன் பொதுத் தன்மையைக் கண்டு. சிறப்புத் தன்மையைக் காணாமல், அப்பொதுத் தன்மையை உடைய மற்றொரு பொருளின் சிறப்புத் தன்மையையும் விரைவில் தனது நினவினால் எதிரில் காணப்படும் பொருளோடு சேர்த்து அதனை அதனோடு ஒப்புமையுடைய வேறொரு பொருளாகக் கருதி விடுகின்றான். அவ்வளவே பிழை 'கியாதி வாதம்' கூறுவார். கூற்றின் முறையில் வைத்து நோக்கினால் இதனைச் 'சாதிரு சயக்கியாதி' எனலாம். சாதிருசயம் - பொதுத்தன்மை.
'கயிற்றரவு' முதலிய உவமைகளைக் காட்டிலும் 'கண்ணாடியில் நிழல்' உவமை பெரிதும் பொருத்த மற்றதாகின்றது. ஏனெனில், கயிற்றிற்கும், அரவிற்கும் உள்ள ஒற்றுமை சிறிதளவே பிம்பத்திற்கும், கண்ணாடியில் தோன்றும் பிரதிபிம்பத்திற்கும் உள்ள ஒற்றுமை மிகப் பெரிது இரண்டும் ஏறக்குறைய ஒரு தன்மையனவேயாம். அதனால் உலகம் பரப்பிரம்மத்தின் பிரதிபிம்பம் என்றால், உலகத்தைப் பார்ப்பதே பரப்பிரம்மத்தைப் பார்ப்பதாக ஆகிவிடும் மேலும், பிரதிபிம்பத்தில் காணப்படும் மாறுதல்கள் பிம்பத்தில் இல்லாமல் உண்டாகமாட்டா அதனால் உலகத்தின் மாறுதல்களைக் காணும்பொழுது அவற்றைப் பரப்பிரம்மத்திலும் உள்ளன' எனக் கொள்ளல் வேண்டும்.
இனி, 'கண்ணாடியில் உள்ள அழுக்கினால் அதில் தோன்றும் பிரதிபிம்பம் பிம்பத்திற்கு மாறாக இருக்கலாம்' என்றால், அழுக்கினால் பிரதிபிம்பம் உண்டாகாது போனாலும் போகலாமே யன்றிப் பிரதிபிம்பம் உண்டாகும்பொழுது அது பிம்பத்திற்கு முற்றிலும் மாறானதாக உண்டாகமாட்டாது. இக்குற்றம் நீங்குதற் பொருட்டுப் பூமியில் உள்ள நீரில் தோன்றும் சந்திர சூரியர் நிழலை உவமையாகக் கூறி, 'நீரில் தோன்றும் சந்திர சூரியர் பலராய், நீரின் அலைவால் தாமும் அலைவை அடையினும் அவ்வேறுபாடுகள் எல்லாம் வானில் உள்ள சந்திர சூரியர்க்கு இல்லாமைபோல, மாயையில் தோன்றிய பரப்பிரமச் சாயைக்கு மாயையால் உள வாகின்ற வேறுபாடுகள் பரப்பிரமத்திற்கு உளவாதல் இல்லை' எனக் கூறினால், வானில் உள்ள சந்திர சூரியர் இருளுக்குப் பகைவராய் இருளை நீக்குதல் போலவே, நீரில் தோன்றும் சந்திர சூரியரும் இருளுக்குப் பகைவராய் இருளைப் போக்குதல்போல, மாயையில் பிரதிபலிக்கும் சீவேசுரர்களும் மாயைக்கும் அவித்தைக்கும்

பகைவராய் அவற்றை அவர் நீக்கிவிடுதல் வேண்டும். அஃது இன்மையால் இவ்வுவமையும் முற்றொருமையை நிறுவமாட்டாது. கயிற்றைப் 'பாம்பு' என மருண்டு, பின், 'பாம்பு அன்று, கயிறு' எனத் தெளிவது கயிறன்று; அதற்கு வேறான ஒருவனே, அதனால் இவ்வுபமானத்திலேயே பரப்பிரம்மத்திற்கு வேறாய் ஆன்மா ஒன்று உண்டு என்பது பெறப்படும் என்பதையே மெய்கண்ட தேவர்.

'அத்துவிதம் - என்ற சொல்லானே - ஏகம்
என்னில், - ஏகம் என்று சுட்டுவது உண்மையின்'9
எனக் கூறினார்.

மாயையைச் 'சடம்' என ஒப்புக்கொண்டு, 'அஃது அரசனது ஆற்றல் போலப் பரப்பிரம்மத்தின் குணமாய், அல்லது கூறாய் உள்ளது' எனத் தொகையொருமை விசிட்டாத்துவிதம்) கூறுவதும் பொருந்த வில்லை ஏனெனில் சித்தின் குணம் அல்லது கூறுசித்தாய் இருத்தல் வேண்டுமன்றி, அதற்கு நேர்மாறான சடமாய் இருத்தல் சாலாது. 'அரச சுற்றத்தார் அரசனில் வேறானவர்' என்பது வெளிப்படை.

இறையொருமைக் கொள்கையாளரும் (சிவாத்துவிதிகளும்) விசிட்டம் கூறுபவர்களே. 'மரம்' என்பது ஒன்றுதான். ஆயினும் அதில் அடிமரம், கிளை, வளார், இலை முதலிய அக வேறுபாடுகள் இருத்தல் போலப் பரப்பிரம்மம் ஒன்றுதான். ஆயினும் அதில் பசு பாசங்களாகிய அகவேற்றுமைகள் உள்ளன' என்பர் அவர். அங்ஙனமாயின் ஆபாச வாதிகட்கு உளவாகும் குற்றங்கள் ஓரளவில் இவர்க்கும் உளவாகும். எங்ஙனம் எனில்,

ஒவ்வொரு சாதி மதத்திலும் வேறு வேறு சாதியான இலைகள், பூக்கள், காய்கள் தோன்றுவதால், மரத்தின் சாதித்தன்மை அதில் உள்ள இலைகள், பூக்கள், காய்களிலும் இருத்தல் தெளிவு, ஆகவே, பரப்பிரம்மம் மரம்போலவும், பசு பாசங்கள் இலை, பூ, காய் போலவும் இருப்பின், பதியினது சாதித் தன்மையே பசு பாசங்கட்கும் இருத்தல் வேண்டும். அவ்வாறிருப்பின் பாசங்களைத் 'துக்கம்' என்றும், 'ஒழிக்கத் தக்கன' என்றும் கூறுவன் எல்லாம் பொருளற்றனவாய், பந்தமே முத்தியாய்விடும்.

இங்ஙனமாகவே, உபநிடதம் சத்தினை, 'ஒன்று' என்றதனோடு ஒழியாமல் 'ஒன்றே' எனத் தேற்றேகாரம் புணர்த்துக் கூறியபின் 'இரண்டில்லாதது' என்றல் வேண்டா கூறலேயாம். அதனால் 'அத்துவிதம்' என்பதற்கு, 'இரண்டில்லாதது' எனப்பொருள் கொள்ளாமல், 'இரண்டல்லாதது' என்றே பொருள் கொள்ளல் வேண்டும் என்கின்றார் மெய்கண்ட தேவர். 'இரண்டல்லாதது' என்றால், தனக்கு வேறான பொருள்கள் இருப்பினும் அவற்றை விட்டுத் தான் தனியே

இராது அவற்றோடு ஒன்றாய் எஞ்ஞான்றும் பிரிப்பில்லாமல் இருப்பதாம். இதுவே 'அத்துவிதம்' என்பதற்குப் பொருள் என்பதை உமாபதி தேவர், 'பிறிவரும் அத்துவிதம்'* என்றும், மெய்கண்ட தேவர் 'அந்நிய நாத்தி'* (வேறாதல் இன்மை) என்றும் கூறினார். இதனால், 'அத்து விதம்' என்னும் சொல் பொருள்களின் எண்ணிக்கையை வரையறுப்பதன்று பொருள்களின் இடையே உள்ள தொடர்பைக் குறிப்பதேயாம் என்பது விளங்கும்.

ஆகவே, உபநிடதம் 'சத்து ஒன்றே' என எண் வரையறுத்தபின், அதற்கும் ஏனைய பொருள்கட்கும் உள்ள சம்பந்தத்தை விளக்கவே, 'அத்துவிதம்' என்பதைக் கூறிற்று என்பதே நந்தி மரபின் சித்தாந்தம் அதனால் இந்நாயனாரும் அச்சித்தாந்தத்தையே வலியுறுத்துகின்றார்.

'சத்து, மெய், உள்ளது' என்பன ஒரு பொருட் சொற்களாயின், 'சத்து ஒன்றே' என்று ஆகிவிட்டபின்பு வேறு பொருள்கள் இருத்தல் எப்படிக் கூடும் எனின், 'சத்து' என்பதை 'உள்ளது' என்னும் அளவில் கொள்ளுதல் சித்தாந்தம் அன்று. ஏனெனில், 'இல்லது பொருளன்று ஆகையால், 'அசத்து' என்பதை 'இல்லாதது' என்றால், பொருள்களைச் 'சத்து, அசத்து' எனப் பிரித்தலே இயலாது. ஆகவே, 'சத்தாவது, என்றும் ஒருபடித்தாய் உள்ளது' என்பதும், அசத்தாவது நிலை மாறுதலை உடையது' என்பதுமே சித்தாந்தம். அசத்திற்கு நீரில் எழுத்தை* உவமையாகக் கூறுவர் மெய்கண்ட தேவர்.

'உண்டுபோல் இன்றாம் பண்பின்
உலகினை அசத்தும் என்பர்'1

என்பது அருணந்தி தேவர் கூறுவது. எனவே, 'சத்து' என்பதற்கு 'நிலை யுடைய பொருள்' என்பதும், 'அசத்து' என்பதற்கு 'நிலையில்லாப் பொருள்' என்பதுமே உண்மைப் பொருளாகும். ஆகவே உபநிடதம் 'சத்து ஒன்றே' எனக் கூறியது,

'நிலைப்பொருள் ஒன்றே'

எனக் கூறியதன்றி, 'பொருளே ஒன்றுதான்' எனக் கூறியதன்று,

'ஒன்று என்றது ஒன்றேகாண் ஒன்றே பதி'1

என்பதும் மெய்கண்ட தேவர் தரும் விளக்கம்.

'ஒன்றவன் றானே' என்பது இந்நாயனார் இத்திருமுறையுள் முதற்கண் கூறிய திருமொழி.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'9

எனப் பின்னரும் கூறினார்.

திருவள்ளுவரும்,

'நில்லாத வற்றை நிலையின் என்றுணரும்
புல்லறி வாண்மை கடை'3

என்றாரேயன்றி 'இல்லாத வற்றை உள்ளன என்றுணரும் புல்லறி வாண்மை கடை' எனக் கூறவில்லை.

முதல் வேதமாகிய இருக்கு வேத பாகமாகிய ஐதரேய உபநிடதத்தில் சொல்லப்பட்டது, 'பிரஜ்ஞானம் பிரஹ்மம்' என்னும் மகாவாக்கியம். 'அறிவு பிரமம்' என்து இதன் பொருள்.

இரண்டாம் வேதமாகிய எசுர்வேத பாகமாகிய பிருதாரணிய உபநிடதத்தில் சொல்லப்பட்டது, 'அஹம்பிரஹ்மாஸ்மி' என்னும் மகா வாக்கியம். 'நான் பிரம்மமாய் இருக்கின்றேன்' என்பது இதன் பொருள்.

மூன்றாவது வேதமாகிய சாமவேத பாகமாகிய சாந்தோக்கிய உபநிடதத்தில் சொல்லப்பட்டதே, 'தத்துவஸி' என்னும், மகா வாக்கியம். அது நீயாகின்றாய்' என்பது இதன்பொருள்

இறுதி வேதமாகிய அதர்வண வேத பாகமாகிய மாண்டூக்கிய உபநிடதத்தில் சொல்லப்பட்டது. 'அயமாத்மா பிரஹ்மம்' என்னும் மகாவாக்கியம். 'இந்த ஆன்மா பிரம்மம்' என்பது இதன் பொருள். இது 'சோயமஸ்தி' என்பதாகவும் சொல்லப்படுகின்றது 'அது இதுவாய் இருக்கின்றது' என்பது இதன் பொருள்.

இருக்கு வேத மகாவாக்கியம் (பிரஜ்ஞானம் பிரஹ்மம்) உண்மையைக் கூறுவதாய் உள்ளது. மற்றை மூன்று வேதங்களின் மகா வாக்கியங்களே சீவன் சிவனாவதற்குத் துணையாகின்றன. அஹம் பிரஹ் ாஸ்மி' யில் 'அஹம், நான்' என்பதும் 'தத்துவமசி' யில் 'துவம், நீ என்பதும், அயமாத்மா பிரஹ்மத்' தில் 'அயம் ஆத்மா இந்த ஆன்மா' என்பதும் ஒரு பொருளையே தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்களில் வைத்துக் கூறுகின்றன அவ்வாறே, 'தத் அது' என்பதும் மற்றைய வாக்கியங்களில் கூறிய 'பிரம்மம்' என்னும் அந்தப் பொருளையே குறிக்கின்றது. அங்ஙனமே 'அஸி ஆகின்றாய்', அஸ்மி ஆகின்றேன்,' 'அஸ்தி இருக்கின்றது' என்பனவும் முன்னிலையும், தன்மையும் படர்க்கையும் ஆகிய இடவேறுபாடன்றி, பொருள் வேறு பாடு உடையன அல்ல. எனவே மூன்று வாக்கியங்களும் ஒரு கருத் -ததையே குறிப்பவை யாகின்றன. 'ஆயின் மூன்று எதற்கு' என்றால், சீவனைச் சிவமாக்குதற் பொருட்டு ஆசிரியர் மாணவனது ஆன்மாவை, 'இந்த ஆன்மாப் பிரம்மம் (சிவம்)' எனத் தம்முள்ளே சிவபாவனை செய்து சிவமாக்கிப் பின்பு மாணவனை நோக்கி, 'நீ பிரம்மம்(சிவம்) ஆகின்றாய்' என உபதேசித்து, பின்பு அவனை, 'நான் பிரம்மமாய் (சிவமாய்), இருக்கின்றேன் என்று இடையறாது பாவித்து வரச் செய்கின்றார். எனவே, அயமாத்மா பிரம்மம்' என்பது ஞானாசிரியர் ஞானதீக்கையில் செய்யும் பாவனா தீக்கை வாக்கியமும், 'தத்துவமசி' என்பது அவர் வாசக தீக்கையில் செய்யும் உபதேச வாக்கியமும், அஹம் பிரம் மாஸ்மி'

என்பது உபதேசம் பெற்ற மாணவன் நாள் தோறும் இடை யறாது பாவித்துப் பயிலும் பயிற்சி வாக்கியமும் ஆகின்றன. 'பிரஜ் ஞானம் பிரம்மம்' என்பது, 'சீவனுக்குச் சிவமாம் தன்மை உண்டு' என்பதை அறிவிக்கின்றது. அத்தன்மை யாவது, சார்ந்ததன் வண்ணமாம் தன்மையேயாம். இது பற்றியே தாயுமானவர்,

'யாதொன்றும் பாவிக்க நான் அது ஆதலால்
உன்னை 'நான் என்று பாவிக்கின்
அத்துவித மார்க்கம் உறலாம்'8

என்றார். சீவன் முத்தியில் பாவனையாய் உள்ள இது, பரமுத்தியில் உண்மையாய் இருக்கும்.

மகாவாக்கியங்களின்படி, 'சீவன் சிவமாகின்றது' என்றால் 'ஒருபொருள் மற்றொரு பொருளாதல் எங்ஙனம்' என்னும் ஐயம் எழு கின்றது. அவ் ஐயத்தை நீக்கவே, 'அத்துவிதம்' என உபநிடதம் கூறிற்று என்பதும், 'எனவே, பலவகைச் சம்பந்தங்களில் 'அத்துவிதம்' என்பது ஒரு வகைச் சம்பந்தம் என்பதுமே சித்தாந்தம். அத்துவித சம்பந்தமாவது, இரண்டு பொருள்கள் என்றும் பிரிப்பின்று ஒன்றாய்க் கலந்து நிற்கும் சம்பந்தம். இது தமிழில் 'இருமையில் ஒருமை' எனப்படுகின்றது.

இனி, ஒருமையில் இருமையும் உண்டு. அது 'தாதான் மிய சம்பந்தம்' எனப்படும். அஃதாவது, பொருள் ஒன்றேயாயினும் இரண்டாகக் கருதப்படும் தன்மை. அது, குணியும் குணமும், (பண்பியும், பண்பும்) அவயவியும் அவயமும், (முதலும், சினையும்) சத்திமானும் சத்தியும் (பொருளும் அதன் ஆற்றலும்) போல்வன வற்றில் உள்ளது. சிவம், சத்தி என்பவைகட்கு இடையே உள்ள சம்பந்தம் இத்தாதான்மிய சம்பந்தமே.

இனி, 'பிரம்மத்திற்கு வேறாக வேறு பொருள் உளதாகக் கூறினால், பிரம்மத்திற்குப் பூரணத்துவம் பெறப்படாது. 'பிரம்மம் பூரணம்' என உபநிடதங்கள் கூறுதலால், பிரம்மத்தைத் தவிர வேறு பொருள் எதுவும் இல்லை என்பதுதான் வேத முடிவு' என்பதும் ஒருமை வாதிகள் கூறும் கூற்று. 'பூரணமாவது, வியாபகம் - நிறைவு. அது, கால எல்லை, இட எல்லை. பொருள் எல்லை ஆகிய எல்லை களில் எந்த எல்லையையும் உடைத்தாகாமையேயாம். அவற்றுள் பிரம்மத்திற்கு வேறாய் மற்றும் பொருள் இருப்பின், அப்பொருள் உள்ள இடத்தில் பிரம்மம் இருக்க இயலாது ஆகையால், பிரம்மம் அப்பொருளால் எல்லைப்படுத்தப்பட்டு விடும்; பூரணத்துவம் சிதையும்' என்பதும் அவர் கூறும் வழக்குரை. 'கால எல்லை, இட எல்லை' 'பொருள் எல்லை' என்பன வடமொழியில், 'கால பரிச்சேதம், தேச பரிச்சேதம், வத்து பரிச்சேதம்' எனப்படும்.

அவர் கூறும் வகையில் நோக்கினால், 'ஒரு பொருளுக்கு அதனின் வேறாய், மற்றொரு பொருள் இல்லாமை' என்பதுதான், 'பூரணம் -

வியாபகம்' என்பதன் பொருளாகின்றது. அவ்வாறிருப்பின் 'பூரணம்' என்னும் சொல் எழவே காரணம் இல்லை. ஏனெனில் ஏக தேசத்தை நோக்கியே 'பூரணம் - வியாபகம்' எனப்படுகின்றது. அவ்வாறு, 'ஏகதேசமாய் உள்ள பொருள் இல்லை' என்றால், 'பூரணம்' என வருணிக்க வேண்டியது ஏன்?

மேலும் பூரணமாவது, 'அங்கு, இங்கு' எனாதபடி எங்கும் இருத்தல் என்றே கூறப்படுகின்றது. அப்பொழுது 'இருப்பது' எனப்படும் பொருளுக்கு வேறாய், 'அங்கு, இங்கு, எங்கும்' என்னும் சொற்களால் அறியப்படுகின்ற பொருள்களும் உளவாதல் தானே பெறப்படுகின்றது. ஆகவே, 'பூரணம்', அல்லது 'வியாபகம்' என்பது, தன்னை நோக்க ஏகதேசமாய் உள்ள எல்லாப் பொருள்களிலும் தான் பொருந்து நின்று அவற்றின்கண் சில விளைவுகளை உண்டாக்குவதே யாம். அவ்வாறன்றி 'ஒரு பொருட்டு அதனின் வேறாய் ஒன்று, அல்லது பல இல்லாமையே வியாபகம்' என்றல் போலியேயாம்.

இவற்றால் மகாவாக்கியங்கள், பிறப்பிற்கு அஞ்சி வீடு பேற்றை விரும்பிச் சைவாசாரியரை அடைந்து முன்னர்ச் சமய தீக்கை பெற்றுச் சரியையில் நின்று, பின்பு விசேட தீக்கை பெற்றுக் கிரியையில் நின்று, பின் யோகத்தை அடைந்து அதில் சமாதி நிலையை உற்ற மாணாக்கன் பின்னும் பேரின்பம் விளையாமையால் ஞானாசாரியை அடைந்து அவர்பால் 'அடைக்கலம்' எனப் புகுந்தமையால் அவர் அவனது பக்குவநிலையை நோக்கி, 'நீ தியான சமாதிகளால் பாவிக்கும் பாவனைகள் எல்லாம் உனது கருவி கரணங்களின் துணை கொண்டேயாகும். அவற்றுக்குள் கருவி கரணங்களைக் கடந்த சிவம் எங்ஙனம் அகப்படும்?' எனச் சொல்லி நிருவாண தீக்கை அத்துவ சுத்தியால் அவனது சஞ்சித கன்மங்களைப் போக்கி, இனி நீ ஞானச் செய்திகளில் தலைப்பட்டுத் திருவருளைத் துணையாகக் கொண்டு, நின்மல சாக்கிரம் முதலிய மூன்று நிலைகளில் நின்று ஒவ்வொன் றையும் கடந்து நான்கு ஐந்தாம் நிலைகளாகிய துரியம், துரியா தீதங்களை அடைந்தால் உனது சீவத்தன்மை நீங்க, நீ சீவமாவாய்' என உபதேசிப்பார். (ஞானச் செய்திகள் - தச காரியம்). அவ் உப தேசத்தைக் கேட்டு, அதில் உறைந்து நின்று 'சிவோகம் பாவனையால் அவன் சிவமேயாவன்' என்பது இம்மந்திரத்தால் கூறப்பட்டதாம். ஆகவே தெளிவுரையில் கூறியபடி மகாவாக்கியங்களில் 'இது, நீ, நான்' என்னும் சொற்குப்பொருள் யோக சமாதியில் நிற்கும் மாணவ னாகிய சீவான்மாவும், 'பிரம்மம், அது' என்னும் சொற்கட்குப் பொருள் சொரூப சுவமாகிய பரமான்மாவும், 'ஆதல்' என்பதற்குப் பொருள். சீவன் நின்மலாவத்தையில் பாசத்தினின்றும் நீங்கிச் சிவத்தைத்

தலைப்பட்டமையால் சார்ந்ததன் வண்ணமாம் தன்மையால் சிவமாகியே நிற்றலும் ஆகின்றன.
எனினும் முற்றொருமையாளர், 'மாயையின் முக்கூற்றினுள் சாத்துவிகக் கூற்றில் முற்றறிவு. முடிவில் ஆற்றல், முதலிய குணங்கள் உள்ளன. நிர்க்குணப்பிரம்மம் அந்த சாத்துவிகக் கூற்றில் பிரதிபலித்து அதில் உள்ள அந்தக் குணங்களை உடைய 'ஈசுரன்' ஆகின்றது. மகா வாக்கியங்களில் 'பிரம்மம், அது' என்னும் சொற்களுக்கு அந்த ஈசுரனே நேர்ப் பொருள். ஈசுரனாவான் மாயை, அதில் உண்டாகும் பிரதிபலனம். பிரதிபலனத்துக்கு மூலமாகிய பிரம்மம் ஆகிய மூன்றின் சேர்க்கையே' 'அவ்வாறே மாயையின் இராசதக் கூற்றில் பிரதிபலித்த பரப் பிரம்மத்தின் பிரதிபலனம் 'சீவன்' ஆகி அதில் உள்ள சிற்றறிவு, சிறு தொழில் ஆற்றல் முதலிய குணங்களை உடையதாகின்றது. மகா வாக்கியங்களில் உள்ள 'இது, நீ, நான்' என்பவற்றிற்கு அந்தச் சீவனே நேர்ப் பொருள். ஈசுரனைப் போலவே சீவனும் அவித்தை, அதில் உண்டாகும் பிரதிபலனம் அதற்கு மூலமாகிய பிரம்மம் இம்மூன்றினது சேர்க்கையே. ஆகவே, 'ஆகின்றது, ஆகின்றாய், ஆகின்றேன்' என இரண்டையும் ஒன்றாகிக் கூறும் சொற்கள் சீவன், ஈசுரன் என்னும் இவர்கட்குப் பொருந்து மாறில்லை. ஏனெனில் மேற்காட்டிய இருவகைச் சேர்க்கைகளும் முற்றிலும் மாறானவை. ஆகையால் அவர்களுக்குள் ஒற்றுமை உண்டாகாது. எனினும் தூயதாய், ஒன்றாய் உள்ள பிரம்மத்தை அசுத்தமாய், இரண்டாய்த் தோன்றும்படி செய்தவை மாயையும் அவித்தையும் ஆகிய உபாதிகளேயாகையால் உபாதிகளைத் தள்ளிவிட்டுப் பார்த்தால், இருவரும் நிர்க்குணப் பிரம்மங்களே. ஆகவே, சீவனைக் குறிப்பனவாகவும், ஈசுரனைக் குறிப்பன வாகவும் சொல்லப்பட்ட மகாவாக்கிய பதங்களை மேற்கூறிய இலக்கணைகளில் பாகத்தியாக இலக்கணை' (விட்டும் விடாத இலக்கணை) முறையால் 'சோயம் தேவதத்தன்' என்பதிற்போல, ஈசுரன், சீவன் இருவரிடத்தும் உள்ள உபாதிகளை மட்டும் நீக்கி, அறிவை மட்டும் கொண்டால், அறிவாவது பிரம்மம் ஒன்றே ஆகையால் 'இது அது ஆகின்றது, நீ அது ஆகின்றாய், நான் அது ஆகின்றேன்' என்னும் மகாவாக்கியங்கள் உண்மையாகும்' என்பர். ஆகுபெயரும் இலக்கணையாதல் முன்பு கூறப்பட்டது.
இனித் தொகை யொருமையாளர், 'மகாவாக்கியங்களில் பிரம்மத்தை உணர்த்தும் சொற்களை இலக்கணையாகக் கொள்ளல் வேண்டா; ஏனெனில், 'நிர்க்குணப் பிரம்மம்' என்ற ஒன்று இல்லை பிரம்மம் சகுணமே. ஆயினும் சீவன், சிவன்' எனப்படுதல் அது தன்னை பிரம்மத்தின் விசேடணம்' (அடை என்று அறியாது பிரம்மத்தின் வேறாக

எண்ணுதலினாலேயாம் அவ் எண்ணம் உள்ள வரையில் அது பிரம்மம் ஆமாறு இல்லை. மகாவாக்கியங்களில் சீவான்மாவைக் குறிக்கும் பெயர்கள் அறியாமையால் சீவனாய் நிற்கும் ஆன்மாவையே குறித்தலால் அறியாமையை மட்டும் இலக்கணை முறையால் நீக்கிச் சீவனை மட்டும் கொண்டால் சீவன் பிரம்மமே ஆகும். ஆகையால், அவ்வாறு கொண்டால், 'அஸி' முதலிய ஆக்கப் பதங்கள் பொருந்துவன வாகும் என்பர். இது பற்றியே மாதவச் சிவஞான யோகிகள்,

'பண்டை மறைகளும் - அது நான் ஆனேன் - என்று
பாவிக்கச் சொல்லுவது இப்பாவகத்தைக் காணே'9

என்னும் சிவஞான சித்தி உரையில்,

'சுத்தாத்துவித உண்மை
உணராதார், ஒரு பொருள் மற்றொரு பொருளாதல்
யாண்டுமின்மையின், ஒருவார்த்தை (மகா
வாக்கியம்) பொருள்படுமாறு யாங்ஙன
மென் றாசங்கித்தார்க்கு, - ஒன்று கெட்டு
ஒன்றாம் - எனப் பரிணாமங் கூறுவாரும்,
அது, நான் - என்னும் இருபெயரும்
விட்டும் விடாத ஆகுபெயர் எனக்
கொண்டு கேவலாத்துவிதங் கூறுவாரும்,
அவற்றுல் ஒன்றனை மாத்திரம்
ஆகுபெயர் எனக் கொண்டு விசிட்டாத்
துவிதங் கூறுவாருமாய் இடர்ப்படுவர்'

என உரைத்தார். சைவ சித்தாந்தம் முப்பொருட் கொள்கையதாய், பதிக்கும், பசுவிற்கும் என்றும் பிரிவின்மையாகிய சுத்தாத்து விதம் கூறுவது ஆதலின், அதற்கு இத்தகைய இடர்ப்பாடு இன்றி, மகாவாக்கியங்கட்கு எளிதில் நேரே பொருள் கொள்ள இயல்கின்றது அப்பொருளைச் சிவஞான சித்தியார் கீழ்க்காணுமாறு மிகத் தெளிவாக விளக்குகின்றது.

'கண்டஇவை நான் அல்லேன் என்றகன்று, காணாக்
கழிபரமும் நான்அல்லேன் எனக்கருதிக் கசிந்த
தொண்டினோடும் உளத்து அவன்றான் நின்ற கலப்பாலே
'சோகம்' எனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி;
விண்டகலும் மலங்கள் எலாம் கருடதியா னத்தால்
விடம்அகலும் அதுபோல்; விமலதையும் அடையும்;
பண்டை மறைகளும் - அது நான் ஆனேன் - என்று
பாவிக்கச் சொல்லுவதுஇப் பாவத்தைக் காணே'

இதில் உளத்து அவன்றான் நின்ற கலப்பாலே - சோகம் எனப் பாவிக்க'

என்றது, 'சிவன் உயிரினிடத்து அத்துவிதமாய்க் கலந்து நிற்றலால் சிவோகம்பாவனை வெறும் பாவனை யாகாது, உண்மையைத் தலைப்படுதலே யாகின்றது' என்பதை உணர்த்தியவாறு.
சைவசித்தாந்தத்தின்படி, சீவன் சிவமாதலாவது, சார்ந்ததன் வண்ணமாம். இயல்புடைய படிக மணி நீல மணியைச் சார்ந்து நீல மணியாய் இருந்த நிலையினின்றும் நீங்க, மாணிக்க மணியைச் சார்ந்து மாணிக்க மணியாவது போல, சார்ந்ததன் வண்ணமாம், இயல்புடைய ஆன்மாப் பாசத்தோடு சேர்ந்து பாசமாய், அதனால், 'பசு' எனப்பட்டிருந்த நிலையினின்று நீங்கி, சிவத்தை அடைந்து சிவமாகி நிற்றலேயாம் ஒரு பொருள் மற்றொரு பொருள் ஆதல் அன்று.
சைவ சித்தாந்தச் சுத்தாத்துவத்தின்படி எந்நிலையிலும் சீவன், கலப்பினால் சிவமாகியே யிருத்தலால், மகாவாக்கியங்கட்கு இடர்ப் பாட்டின்றி நேரே பொருள் கொள்ள இயல்கின்றது. எனவே, 'தத்துவ மசி' என்னும் உபதேச வாக்கியத்தில் ஆசிரியர் மாணாக்கனுக்கு அவன் அறியாதிருக்கின்ற உண்மையை அறிவிப்பதும், 'அஹம்பிரம் மாஸ்மி' என்னும் பயிற்சி வாக்கியம் ஆசிரியர் அறிவுறுத்தியபடியே மாணாக்கன் அவ்வுண்மையை அறிவதும் ஆகின்றன. அவ்வளவே யன்றிப் பொருளில் வேறுபாடில்லை.
இதனால், மகாவாக்கியங்களின் பரபக்கப் பொருள்களை மறுத்துச் சுபக்கமாகிய சித்தாந்தப் பொருள் உணர்த்தப்பட்டது.

ஆறா றகன்ற அணுத்தொம் பதம் சுத்தம்
ஈறான தற்பதம் எய்துப சாந்தத்துப்
பேறா கியசீவன் நீங்கிப்பிர சாதத்து
வீறான தொந்தத் தசிதத்வ மசியே. ***#2524***

(சகலாவத்தையில் தொம்பதப்பொருளாய் நின்ற தத்துவ வன்ன ரூபியான ஆன்மாச்) சுத்தாவத்தையில் தத்துவம் அனைத் தினின்றும் நீங்கித் தூயதாய்த் தொம்பதப் பொருளாய் நிற்கும். தத்பதப் பொருளாகிய, எல்லாப் பொருட்கும் முடிவாய் உள்ள சொரூப சிவம் எப் பொழுதுமே பரதுரியத்தில் உள்ளது. அதனை அத்துரியத்தில் அடைந்த ஆன்மா அவ்வாறு குருவருளால் அசுத்தத்தின் நீங்கிச் சுத்தத்தை எய்தி, சிவமாய் நிற்கும் பேற்றினையளிக்கின்ற, 'தொம் தத்தசி' என்னும் பதத்தின் பொருளே 'தத்துவமசி' மகாவாக்கியத்தின் பொருளாகும்.

விளக்கவுரை

'சகலாவத்தையில் தத்துவ வன்னரூபியாயும், சுத்தா வத்தையில் தூயதாயும் நிற்கும் ஆன்மாச் சிவத்தின் வேறானதே யாதலால், அது சிவமாவது, 'சோயம் தேவதத்தன்' என்பதிற் போல, உபாதியுடன் நின்ற சிவம் அவ்வுபாதியின் நீங்கி அதுவாதல் அன்று; நீல மணியைச் சார்ந்து

நீல மணியாய் நின்ற படிகமணி, மாணிக்க மணியைச் சார்ந்து மாணிக்க மணியாய் நின்றது போல்வதேயாம்' என்றபடி.
'தத்துமசி' என்பது, 'சோயம் தேவதத்தன்' என்பதுபோல என்பவர், உபாதியுட்படுவதும் அதனின்றும் நீங்குவதும் ஆகிய அதனையே 'பிரம்மம்' என்கின்றமையால், 'அவர் பசுவையே பதியாகக் கருதுகின்றனர்' என்பது பெறப்படும் ஆகவே, அவரது பிரம்ம ஞானம் பசு ஞானமேயாகின்றது, இதனைச் சிவஞான சித்தியார்,
'நணுகி ஆன்மா இவை கீழ் நாடலாலே,
காதலினால் 'நான் பிரமம்' என்னும் ஞானம்
கருது பசு ஞானம்'9
எனக் கூறிற்று.
பதங்களின் பொருள்களைப் பதங்களாகவே உபசரித்துக் கூறினார். 'சுத்தத்து' என்னும் அத்துச்சாரியை தொகுத்தலாயிற்று. 'தற்பதம்' என்றதும் அதன் பொருளையே தற்பதம் பேறாகிய' என இயையும் பேறாதலாவது, பெறப்படும் பொருளாதல், 'ஆகிய' என்னும் பெயரெச்சம், 'அரசன் ஆகொடுத்த பார்ப்பான்' என்பது போல, 'சீவன்' என்னும் கோடற் பொருட்பெயர் கொண்டது. 'பிர சாதத்து நீங்கி' என மாறுக பிரசாதம், குருப் பிரசாதம் 'பிரசாதத்தால்' என உருபு விரிக்க. நீங்குதல், பாசத்தினின்று. வீறு - மேன்மை. 'ஆன' என்னும் பெயரெச்சம் 'தொந்தத்தசி' என்னும் ஏதுப் பெயர் கொண்டது.
இதனால், 'தத்துவமசி' மகாவாக்கியம் பாருள் படுமாறெல்லாம் இனிது விளக்கப்பட்டன.
[இதன் பின் பதிப்புக்களில் காணப்படும், 'ஆகிய அச்சோயம் தேவதத்தன்' என்னும் மந்திரம், மேல்' 'முச்சூனிய தொந்தத்தசி' அதிகாரத்தில் வந்தது.]

துவம்தத்தசியே தொந்தத் தசியும்
அவைமன்னா அந்நு வயத்(து) ஏகம்ஆன
தவவுறு தத்வ மசிவேதாந் தத்துச்
சிவமாம் அதுவும்சித் தாந்தவே தாந்தமே. **#2525**

'துவம் தத் அஸி' என்பதே தொந்தத்தசி என்பது மேலே சொல்லப்பட்டது. அவை இரண்டுமே நீக்கப்படாது நிலை பெற்று நின்று, பொருள்கோள் முறையில் ஒன்றாய் இயைகின்ற இயை பினால் ஒன்றேயாகின்றன. இனி, வேதாந்தத்தில் பெரிதும் பயின்று வருகின்ற 'தத்துவமசி' என்னும் மகாவாக்கியம் வேதாந்தம் சீவன் சிவமாதலையே குறிப்பது. ஆகிவே, அதனை, சித்தாந்த மகா வாக்கியம்' என்றும் சொல்லலாம், 'இல்லை, வேதாந்த மகாவாக்கியந் தான்' என்றும் சொல்லலாம்.

விளக்கவுரை

'எப்படிச் சொல்லினும் பொருள் ஒன்றே' என்து கருத்து முதல் அடி அனுவாதம். மன்னா - மன்னி, அந்நுவயம் - பொருள் கோள் முறை. தவ உறுதல் - பயின்று வருதல் 'அதுவும்' என்னும் உம்மை சிறப்பு. சித்தாந்த வேதாந்தம் உம்மைத்தொகை. சித்தாந்த மகாவாக்கியம், 'சிவத்துவமசி' என்பது, திருவைந்தெழுத்தேயும் இப்பொருளைப் பயக்கும். இதனால், 'மகாவாக்கியங்களில் சொல்வேற்றுமை பற்றி மலைதல் வேண்டா; அவையெல்லாம் பொருளால் ஒன்றே' என்பது கூறப்பட்டது.

துரியம் அடங்கிய சொல்லறும் பாழை
அரிய பரம்என்பர் ஆகார்இ தன்றென்னார்
உரிய பரம்பர மாம் ஒன் றுதிக்கும்
அருநிலம் என்பதை யார்அறி வாரே. ***#2526***

துரியத்தைக் கீழ்ப்படுத்தி நிற்கும். துரியாதீத நிலை, சுட்டுணர்வினால், உணரவும், சொல்லாற் சொல்லவும் வாராமையால் அந்நிலையை எய்தாதவர்க்கு அது வெறும் பாழ்போல்வதாகும். அதனால் அவர் அதில் விளங்கும் பொருளை, ஒருவராலும் அடைய இயலாத ஒரு தனிப் பொருள் என்று கூறுவர். அதனை வேறு சிலர், 'அஃது இன்னது ஆம் - என்றும், இன்னது அன்று' என்றும் அநிர்வச னீயமாகக் கூறுவர் ஆயினும், 'அந்தத் துரியாதீத நிலை அனுபவிக்கத் தக்க, மிக மேலான, ஒன்றேயான ஒப்பற்ற ஒரு பெரும் பொருள் விளங்குகின்ற நிலை' என்பதை அறிபவர் யார்!

விளக்கவுரை

அந்நிலையையடைந்து, அப்பொருளைத் தலைப்பட் டுணரும் ஒரு சிலரே அறிவார் என்பது கருத்து. பாழ்போல்வதாதலை, 'பாழ்' என்றார். 'ஆகார் அரிய பரம் என்பர்' என மாற்றிக் கூட்டுக. 'அவர் கூறுவது உண்மையாயின் அப்பொருளால் யாருக்கு, என்ன பயன்! ஒன்றுமில்லையாகையால் அவர் கூற்றுப் பிழையானது என்பது 'அங்கு விளங்கும் பொருள் அனுபவப்படுவதே' என்பதும் கருத்துக்கள். 'என்னார்' என்பதை முன்னும் கூட்டி, 'இது என்னார்; அன்று என்னார்' என்க. பரம் பரம் - மேலானதற்கும் மேலானது, உதித்தல் - விளங்குதல். இதனால், 'வேதாந்த மகாவாக்கியங்களின் அனுபவம், 'அறிவான், அறிவு, அறியப்படும் பொருள்' என்பன இல்லாது, வெறும் அறிவு மாத்திரையானதே' என்றல் பொருந்தாது. பெறுவான், பெறப்படும் பொருள் என்பன உள்ளதாய்ப் பேரின்பமாவதே என்பது கூறப்பட்டது.

தொம்பம் தத்பதம் சொல்லும் அசிபதம்
நம்பிய முத்துரி யத்தும்மேல் நாட ஏ

யும்பத மும்பத மாகும் 'உயுர்பரம்
செம்பொறா ளான சிவம்'என லாமே. #2527
மேற்கூறிய, சீவ துரியம், சிவ துரியம் பரதுரியம் என்னும் மூன்று
துரியத்திலுமே தொம்பதப் பொருளாகிய ஆன்மா, தத்பதப் பொருளாகிய
சிவத்தை, அசிபதத்தின் வழியாக, மேல் நோக்கு உணர்வினால்
உணருமாயின், பரதுரியத்திற்போலவே ஏனை, இரு துரியங்களிலும்
அது சிவமாகியே நிற்கும் (சீவனாகி நில்லாது' என்பதாம்.)

விளக்கவுரை

அங்ஙனம் நோக்கி நிற்றலே 'சாக்கிரத்தில் அதீதம்' எனப்படும்.
இதனையே,
'... ... ... எல்லாம் ஈச
னிடத்திலும், ஈசன்எல்லா இடத்தினிலும் நின்ற
அந்நிலைமை அறிந்(து) அந்தக் கரணங்கள் அடக்கி
அறிவதொரு குறிகுருவின் அருளினால் அறிந்து,
மன்னுசிவன் றனையடைந்து நின்(று) அவன்ற னாலே
மருவு பசு கரணங்கள் சிவகரண மாகத்
துன்னியசாக் கிரமதனில் துரிய தீதம்
தோன்றமுயல்; சிவானுபவம் சுவானுபூ திகமாம்'
எனவும்,
'சாக்கிரந்தே அதீதத்தைப் புரிந்தவர்கள், உலகில்
சருவசங்க நிவிர்த்தி வந்த தபோதனர்கள்; இவர்கள்
பாக்கியத்தைப் பகர்வதுஎன்! இம்மையிலே உயிரின்
பற்றறுத்துப் பரத்தைஅடை பராவுசிவர் அன்றோ!
'ஆக்கும்முடி கவித்(து) அரசாண்(டு) அவர்கள் அரிவையரோ(டு)
அனுபவித்தங்கு இருந்திடினும் அகப்பற்றற் றிருப்பர்'8
எனவும், சிவஞான சித்தி கூறிற்று.
'மும்மை தரும்வினைகள் மூளாவாம்; மூதுலகில்
அம்மையும் இம்மையே ஆம்'9
என்றதும் இந்நிலை நின்றாரை நோக்கியேயாம்
தொம்பதம் நாட' என இயையும் 'தத்பத்தை அதிபதத்தால்' என உருபுகள்
விரிக்க. 'ஏயும் பதமும் பதமாகும்' என்றது, 'எந்நிலையில் நின்றாலும்
அது பரதுரியநிலையேயாம்' என்றபடி, 'பரமும், செம்பொருளும் ஆன
சிவன்' என்க.
இதனால், 'மகாவாக்கியங்களில் ஊன்றி நிற்கின் எந்நிலை யிலும் சிவ
நிலை கூடும் என்பது கூறப்பட்டது.

வைத்த துரிய மதில்சொரூ பானந்தத்(து)
உய்த்த பிரணவ மாம்உப தேசத்தை

மெய்த்த இதயந்து விட்டிடும் மெய்யுணர்
வைத்த படியே அடைந்துநின் றானே. *#2528*

'தத்துவமசி' என்னும் உபதேசத்தையேயன்றிப் பிரணவ உபதேசத்தை ஒருவன் தனது நிலையான உள்ளத்தில் அழுத்தி வைப்பினும் அதனால் விளையும் மெய்யுணர்வினால் அவன் தன்னை ஆசிரியர் ஆக்கி வைத்த சிவநிலையை இழக்காது அடைந்து நிற்பவனாவான்.

விளக்கவுரை

'பிரணவம் மகாவாக்கியப் பயனைத் தரும்' என்றபடி. அது, மேல், 'வில்லின் விசை நாணில்'9என்னும் மந்திரத்தில் கூறப்பட்டது. பிரணவ கலைகளாகிய 'அ, உ, ம்' என்பன முறையே தத், த்வம், அசி பதங்களாய் நிற்கும் என்க. பிரணவம் இவ்வாறு நின்று உயிரைச் சிவமாகச் செய்தலால், 'எல்லாப் பிராணிகளையும் பரமான்மாவினிடம் வணங்கச் செய்வது பிரணவம்'8 என, 'பிரணவம்' என்னும் சொற்கு உறுப்புப் பொருள் கூறுவர்.

துரியம், முத்துரியம். 'அது' என்னும் பகுதிப் பொருள் விகுதி பன்மை யொருமை மயக்கமாய் வந்தது. சொரூபானந்தம் - சிவானந்தம். உய்த்த பிரணவம் - முத்துரியத்திலும் முன்பு பலரைச் சொரூபானந்தத்தில் செலுத்திய பிரணவம். 'இதயம்' என்றது ஆன்ம உணர்வை. 'தெளிந்த உணர்வு' என்றற்கு, 'மெய்த்த இதயம்' என்றார். விட்டிடல், மேல் ஏழாது அழுத்தி வைத்தல். 'விட்டிடும்' என்னும் பெயரெச்சம் காரணப் பொருட்டாய், 'மெய்யுணர்வு' என்னும் காரியப் பெயர் கொண்டது. வைத்தலுக்கு எழுவாய் வருவிக்க. தெளிவு பற்றி எதிர்காலம் 'நின்றான்' என இறந்த காலமாகச் சொல்லப்பட்டது.

இதனால், முன்னையதிகாரத்தில் சொல்லப்பட்ட பிரணவத் -தின் இயல்பு இவ்வதிகாரத்தால் இகந்துபடாமைக் காக்கப்பட்டது.

நனவாதி ஐந்தையும் நாதாதி வைத்துப்
பினமாம் மலத்தினைப் பின்வைத்துப் பின்சுத்தத்
தனதாம் சிவகதி சத்தாதி சாந்தி
மனவாச கங்கெட்ட மன்னனை நாடே. *#2529*

'அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம்' என்னும் பிரணவ கலைகள் ஐந்தையும் முறையே யோகாவத்தையில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் அவத்தைகளாகிய 'பிரணாயமம், பிரத்தியாகாரம், தாரணை: தியானம், சமாதி' என்னும் ஐந்திலும் பொருந்த வைத்துப் பயின்றால், உன்னின் வேறாகாது உடனாய் ஒன்றி நின்ற ஆணவ மல சத்தி உன்னின் வோறாய்ப் பிரியும். அங்ஙனம் அது பிரியுமிடத்து நின்மலாவத்தையில் சாக்கிரம் முதலிய ஐந்திலும் மேற்சொல்லியவாறே அகாரம் முதலிய கலைகளை வைத்துப் பாவிக்க,

ஆணவ சத்தி உன்னை மறைக்க மாட்டாது. கீழ்ப் பட்டு அடங்கும். அஃது அடங்கவே, ஆன்ம சுத்தி உண்டாகி, அதன் பின் ஆன்ம லாபமும் கிடைக்கும். இவ்வாறு சத்தாதி ஐம்புலன் களையும் உணரும் ஐம்பொறிகளையும், அவற்றின் வழி ஓடுகின்ற மனத்தையும், அதற்குமேல் வாக்கையும் கடந்த தலைவனாகிய சிவனை நீ உணர்வாயாக.

விளக்கவுரை

'நாதாதி' என்றது, எதிர் நிரல் நிறையாகக் கூறியது. 'வைத்து' என்பதன்பின், 'பாவிக்க' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. 'பின்னமாம்' என்பது இடைக்குறைந்து நின்றது. பின்ன மாதல், வேறாதல். 'பின்னமாம் மலத்தை' என்ற அனுவாதத்தால் பின்னமாதல் பெறப்பட்டது. 'பின்' என்றது முற்படாது அடங்கு -தலை. 'பின்னாக வைத்து' என்க. 'பின் சுத்தத்து ஆம்' என்றதனால், பின் சுத்தநிலை வாய்த்தல் பெறப்பட்டது. 'சிவகதி தனது ஆம்' என மாறுக. சத்தாதி' ஆகுபெயர். சாந்தி - அடங்குதல். 'கெட்ட' என்றது, 'கடந்த' என்றபடி. 'சாந்தியை உடைய, கெட்ட மன்னன்' என்க.

இதனால், பிரணவம் மேற்கூறியவாறு சொரூபானந்தத்தில் உய்க்குமாறு இது' என்பது கூறப்பட்டது.

பூரணி யாவது புறம்பொன் றிலாமையால்
பேர்அணி யாதது பேச்சொன் றிலாமையால்
ஓர்அணை யாதது ஒன்றும் இலாமையால்
காரணம் இன்றியே காட்டும் தகைமைத்தே. ***#2530***

(முன் மந்திரத்தில் 'மன்னன்' என ஆண்பாலாகச் சொல்லப்பட்ட சிவம்) தனக்குப் புறம்பாகயாதொரு பொருளும் இல்லாதபடி எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி நிற்றல் பற்றி, 'பூரணத்துவம் உடையது' என்று சொல்ல படுகின்றது. *(அஃதன்றி, 'அது தவிர வேறு பொருள் இல்லை' என்னும் கருத்தில் 'அது பூரணத்துவம் உடையது' என்று சொல்லப்படவில்லை.)*

'அகிலாண்ட கோடி யெல்லாம்
தன் அருள் வெளிக்குளே தங்கும்படிக்கு இச்சை வைத்து'
என்னும் தாயுமானவர் பாடல் இங்கு நோக்கத் தக்கது.

வாக்கைக் கடந்து நிற்றலால் அஃது எந்த ஒரு பெயராலும் திட்டமாகச் சொல்ல ஒண்ணாதது. குணங்குறி ஒன்றும் இன்மையால் உயிர்களால் அனுமித்து உணரப்படாதது. ஆயினும் பிற காரணங்களால் காட்டப்படாது, தன்னாலே தான் காட்டப் படுவதாம்.

விளக்கவுரை

'ஊரிலான் குணம் குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரிலான், ஒரு முன்னிலான், பின்னிலான், பிறிதோர்
சாரிலான், வரல், போக்கிலான், மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர்க் கடவுளாய் என்னுளே நின்றான்'9
என்னும் கந்த புராணச் செய்யுளையும்,
'ஒன்றும் குறியே குறிஆத லால், அதனுக்கு
ஒன்றும் குறிஒன் றிலாமையினால் - ஒனறோடு
உவமிக்க லாவதுவும் தானில்லை'8
'காண்பாரார் கண்ணுதலாய், காட்டாக் காலே'3
என்னும் சாத்திர தோத்திரங்களையும் காண்க. ஓர் - ஓர்தல்; முதனிலைத் தொழிற்பெயர். தன்னாலே தான் காட்டப்படுதலாவது, ஞாயிற்றைக் காணலுறுவார்க்கு அது பிறிதோர் ஒளியால் காட்டப்படாது, அது தனது ஒளியாலே தான் காட்டப்படுதல்போல, அதனது அருளாலே அது காட்டப்படுதலாம். பூரணி - பூரணத்துவம் உடையது. உபநிடதம் முதற் பொருளைப் 'பூர்ணம், பூர்ணம்' எனப் பலமுறை கூறும்.
இதனால், 'சீவன் சிவனாவது அவனது அருளாலே யன்றித் தன்னாலன்று' என்பது கூறப்பட்டது. இது பற்றியே 'அஸி' பதப் பொருள் திருவருள் ஆகின்றது.
'அவன் இவன் ஆனது அவன் அருளா லல்லது
இவன் அவன் ஆகான் என் றுந்தீபற;
என்றும் இவனே என் றுந்தீபற'1
என்பதனால், சீவன் சிவன் ஆம் முறைமையைத் தேர்ந்துகொள்க.

'நீஅது ஆனாய்' எனநின்ற பேருரை
ஆய்'அது ஆனேன்' என்னச் சமைந்(து) அறச்
சேய சிவமாக்கும் சீர்நந்தி பேரரு
ளாய்அது வாய்அனந் தானந்தி யாமே. **#2531**

'நீ அது ஆகிறாய்' என்னும் பொருளதாய் ஆசிரியர் மாணவனுக்கு உபதேசிக்கின்ற 'தொம்தத்தசி' (தத்துவமசி) என்னும் அந்த மகாவாக்கியமே, மாணாக்கன் பயில்கையில், 'நான் அது ஆனேன்' என்னும் பொருளதாகிய 'அஹம்பிஹ்மாஸ்மி' என்னும் மகாவாக்கிய - மாய் நின்று, சிவனை அதன் பாசங்கள் முற்றும் அற்றொழியப் பண்ணி, வாக்கு மனங்கட்கு அப்பாற்பட்ட சிவமாகச் செய்யும். அங்ஙனம் பயில்கின்ற சீவன் முதலில் சிவனது அருளே தானாய்ப் பின்பு சிவனேயாய், அவனது முடிவில்லாத ஆனந்தத்தை அனுபவிப்பதாகும்.

விளக்கவுரை

பேருரை - மகாவாக்கியம். ஆய் அது - ஆசிரியரது உபதேசப் பொருளை வேதாகமங்களின் வழியால் சிந்தித்துத் தெளியப்படுகின்ற சிவம்.

'அனந்தானந்தி' என்பது வடமொழித் தீர்க்க சந்தி முத்தியில் ஆன்மாச் சிவத்தோடு சேர்ந்து சிவமாய் விடுமேயல்லது, அதன்பின் அது சிவனது ஆனந்தத்தை அனுபவிக்கும் பொருளாய் இராது' எனச் சுத்த சைவர் கூறுவர், அதனை மறுத்ததற்கு 'ஆனந்தமாம்' என்னாது, ஆனந்தியாமே' என்றார்.

இதனால், 'மகாவாக்கியங்கள் 'படர்க்கை, முன்னிலை, தன்மை' என்னும் இட வேறுபாட்டால் வேறு வேறு போலத் தோன்றுகின்றனவே யன்றிப் பொருளால் வேறல்ல' என்பது உணர்த்தி, அதனால், உப தேசத்தால் பெற்ற வாக்கியப் பொருளைப் பயிற்சியில் வைத்துப் பயிலும் சீவன் சிவன் ஆம் முறைமையும் அதன் பயனும் கூறப்பட்டன.

உயிர்பரம் ஆக உயர்பர சீவன்
அரிய பரம்ஆக அச்சிவம் வேதத்
திரயிலும் சீராம் பராபரன் என்ன
உரிய உரையற்ற ஓம்மயம் ஆமே. *#2532*

முன் மந்திரத்திற் கூறிய முறையால் சீவன் சிவமான பொழுது, அது 'சீவான்மா' எனப்படாது, பரமான்மா' என்றே சொல்லப்படும். (இவ்வாறு சருவஞ்ஞானோத் தரத்தில் சொல்லப் பட்டது. என்பதைச் சிவஞான போத ஆறாம் சூத்திர மாபாடியத்தில் காண்க.) அங்ஙனம் சொல்லப்படுமாறு சீவன் சிவமேயாய் விட்ட பொழுது, அவ்வாறான அந்த ஆக்கச் சிவம், மூனறு வேதங்களிலும் பராபரம்' எனப் புகழ்தற்கு உரியது. சொல் இறந்ததும், பிரணவமே வடிவானதும் ஆன அந்தச் சிவமேயன்றி, வேறன்றாம்.

விளக்கவுரை

பர சீவன் - பரமான்மா. 'பர சீவனாய்' என ஆக்கம் வருவிக்க. 'அரிய சிவம் ஆக ஆம்' என இயைத்து முடிக்க. 'ஆக' என்னும் செயவெனெச்சம் காரணப் பொருட்டு. ஆக்கச்சிவத்தைக் குறிக்க, 'அச்சிவம்' எனச் சுட்டினார். பின்னர்க் கூறியன எல்லாம் இயற்கைச் சிவத்தைக் குறித்து, 'திரயத்திலும்' இடைக்குறைந்து நின்றது. திரயம் - மூன்று 'இறுதி, வேதமாகிய அதர்வணம் ஏனை மூன்று வேதங் களுள் அடங்கும்' என்னும் கருத்தால், 'வேதம் த்ரயீ' எனக் கூறும் வழக்கு உண்டு ஆதலின், 'வேதத்திரயத்தில்' என்றார். 'என்ன' என்பது, 'உரிய' என்பதனோடு முடிந்தது. 'உரிய, உரையற்ற' என்பன 'ஓம் மயம்' என்பதனோடு முடிந்தன, 'மயம்' என்றது, மயமான பொருளை. 'சிவம் ஓங்காரமே' என்றல் வேத வழக்கு. 'ஓம்மயம் ஆமே' எனறது உடம்போடு புணர்ந்தது. ஆகவே 'ஓம்மயம் ஆனதும் ஆகும்' என முன்னர்க் கூறியவற்றோடு கூட்டி யுரைத்தல் கருத்தாயிற்று. 'ஓம்மயமே ஆம்' எனப் பிரிநிலை ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டி உரைக்க. இவ்வாறு வலியுறுத்திக்

கூறியது, 'முத்தியில் சீவான்மாவிற்கும், பரமான் -மாவிற்கும் இடையே தூலமும், சூக்குமமும் ஆகிய வேறு பாடன்றிப் பிறிது வேற்றுமை யில்லை' என்பது உணர்த்துதற்கு, 'சிவம், சூக்குமம்' என்பது உணர்த்துதற்கு அது, 'பரம்' எனப் பட்டது. இம்மந்திரம் இரு விகற்ப எதுகையதாய் நின்றது.
இதனால், மகாவாக்கியங்களில் அனுபவ வாக்கியத்தால் உளதாகும் பயனது சிறப்புக் கூறப்பட்டது.

வாய்நாசி யேபுரு மத்தகம் உச்சியில்
ஆய்நாசி உச்சி முதலவை யாய்நிற்கும்'
தாய்நாடி யாதிவாக் காதி கலாதிகள்
சேய்நா டொளியாச் சிவகதி ஐந்துமே. *#2533*

மேல் வாயின்கண் உள்ள, நாசிக்குச் செல்லும் வழியிடம், (என்பது நாக்கின் அடிக்கு மேல் உள்ள இடம். இஃது 'அண்ணம்' எனப்படும்.) புருவ நடு, நடு நெற்றி, உச்சித் தலை என்னும் நான்கும் சுழுமுனை வழியாகச் செல்லும் பிராணன் செல்லும் வழிகளில் சிறப்பானவையாகும். அவற்றிலும் புருவ நடுவும், உச்சியும் சிறப்பிற் சிறப்பானவை. சுழுமுனை நாடிக்கும் முலதாய் உள்ள மூலா தாரத்தில் உறங்கிக் கிடக்கின்ற, நால்வகை வாக்கிற்கும் முதலாகிய குண்டலி சத்தி எழுந்தோங்கிப் பிராணனுடன் மேற்சொல்லிய இரண் -டிடங்களை அடைந்து, அவற்றிற்கு அப்பால் உள்ள பொருளைக் காணும் ஒளியாக அமையுமாயின் அப்பொழுது, 'கலை, காலம், நியதி, வித்தை, அராகம்' என்னும் ஐந்து தத்துவங்களும் சிவகதியை அடை வதற்குத் துணையாகிவிடும்.

விளக்கவுரை

என்றது, 'பசு கரணங்கள் பதி கரணங்களாகப் புருடன் சிவமாவான்' என்றபடி. 'நாசி இரண்டனுள் முன்னது நாசிக்குச் செல்லும் வழியையும், பின்னது நாசியின் அடிப்பாகத்தையும் உணர்த்தின. பிராசாத யோகத்தில், அகார உகார மகார விந்து நாத கலைகள் முறையே, 'மூலாதாரம் முதல் இருதயம் வரையிலும், அப்பால் கண்டம் வரையிலும், அப்பால் அடி அண்ணம் வரையிலும், அப்பால் புருவ நடு வரையிலும், அப்பால் எவ்விடத்திலும் பரவி நிற்கும்' எனப் பிராசாத நூல்கள் கூறும். ஆகவே, 'அகார உகார மகார கலைகளைக் கடந்த விந்து நாதங்களும் ஒருவனுக்கு இனிது விளங்குமாயின், அவன் துவாதசாந்தத்தில் விளங்கும் சிவனைத் தரிசித்துச் சிவம் ஆவான்' என்றற்கு இவ்வாறு கூறினார்.
தாய்நாடி - நடு நாடி; சுழுமுனை, 'அதன் ஆதி' எனவும் 'வாக்குகளின் ஆதி' எனவும் கொண்டு பொருள் உரைக்க. சேய் நாடு ஒளி -

தொலைவில் காணத் தக்க ஒளி. தொலைவு, துவாதசாந்தம். 'ஆக' என்பது கடைக் குறைந்து நின்று, 'சிவகதி' என்பதன் பின் தொக்கு நின்ற 'ஆம்' என்பதனோடு முடிந்தது. 'ஒளியென' என்பதே பாடமாயினும் 'ஒளி என்று ஆக' என்பதே பொருளாம். 'கலாதிகள்' என்பதை ஈற் றடியில் கூட்டி, 'கலாதிகள் ஐந்தும் சிவகதி ஆம்' என இயைத்து முடிக்க. இதனால், 'முன் மந்திரத்தில் கூறியவாறு சீவன் சிவன் ஆவதற்குப் பிராசாத யோகம் உறுதுணை யாகும்' என்பது கூறப்பட்டது.

அறிவறி யாமை இரண்டும் அகற்றிச்
செறிவறி வாய்எங்கும் நின்ற சிவனைப்
பிறிவறி யாத பிரான்' என்று பேணார்
குறியறி யாதவர் கொள்ளறி யாரே. **#2534**

கருவி கரணங்களால் வரும் அறிவைக் கொண்டு புறப் பொருள்களை அறிந்து வருகின்ற சிற்றறிவையும், கருவிகள் முடங்கியவழி ஆணவ மலத்தால் உண்டாகின்ற அறியாமையும் ஆகிய இரண்டையும், எங்கும் நிறைந்துள்ள சிவனது பேரறிவால் நீங்கும்படி நீக்கி, அந்த அறிவினாலே சிவனை, 'அவனே உயிர்களில் என்றும் நீக்க மின்றி நிறைந்திருக்கின்ற முதல்வன்' என உணர்ந்து அவனையே பற்றி நிற்கும் முறையை அறியாதவர்கள் (தாம் மெய்ப்பொருளை அறிந்து பற்றிவிட்டதாகக் கருதிக்கொள்ளினும்) அது மாட்டாதவரே ஆவர்.

விளக்கவுரை

மேற்சொல்லப்பட்ட சீவ துரியம் பிராசாத யோகம், சிவ துரியம் ஆகியனவே மெய்ப்பொருளை அடையும் நெறியாகலானும், அவை சைவ சித்தாந்தத்தில் மட்டும் சொல்லப்படுதலாலும் ஏனைச் சமயத்தார் அவற்றை அறிந்து அவற்றின் வழி மெய்ப்பொருளை அடையமாட்டார்' என்றபடி. சிவஞான சித்தியும் இவ்வாறு,

'சித்தாந்தத் தேசிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
செனனம் ஒன்றிலே சீவன் முத்தராக
வைத்தாண்டு மலம்கழுவி ஞான வாரி
மடுத்(து) ஆனந்தம் பொழிந்து, வரும் பிறப்பை அறுத்து, முத்தாந்தப்
பாதமலர்க் கீழ்வைப்பன் என்று
மொழிந்திடவும், உலகரெல்லாம் மூர்க்கராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவர் இது என்ன பிராந்தி'
-சுபக்கம் - சூ. *8. 16.*

என இரங்கிக் கூறுமாறு காண்க.

'செறி அறிவாய் எங்கும் நின்ற சிவன்' என்றது உடம்பொடு புணர்த்தது ஆதலின் அதற்கு இவ்வாறு உரைக்கப் பட்டது. குறி - குறிக்கோள்;

என்றது கொள்ளத்தக்க பொருளை. 'கொள்ள' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'கொள்ளவும்' என, இறந்தது தழுவிய எச்ச உம்மை விரிக்க. ஏகாரம், தேற்றம்.
இதனால், பிற சமயத்தார்தம் நிலைநோக்கி இரங்குதல் கூறப்பட்டது.

அறிவார் அறிவன அப்பும் அனலும்
அறிவார் அறிவன அப்பும் கலப்பும்
அறிவான் இருந்தங் கறிவிக்கி னல்லால்
அறிவான் அறிந்த அறிவறி யோமே. *#2535*

பொருள்களைத் தாமாக அறிபவர் யாவரும் அறியும் பொருள்கள் காட்சிப் பொருள்களே. அவையேயன்றிக் கருத்துப் பொருள்களும் உள ஆதலால், அவற்றை அறிவிப்பவன் ஒருவன் இருந்துகொண்டு அறிவித்தாலன்றி, அறிபவன் தானே அறிந்து பெற்ற அறிவாக நாம் எந்த அறிவையும் அறிகின்றிலம்.

விளக்கவுரை

'மெய்ப் பொருள் அறிவு ஆசிரியனையின்றி உண்டாகாது' என்றபடி. 'அறிவார்' என்றது, தாமாகவே அறிபவ -ராகத் தம்மைக் கொள்பவரை, அவரது மதம் பற்றிக் கூறியது. இவர் 'ஆசிரியன் வேண்டா' என இகழ்பவர். இரண்டாம் அடியில் 'அப் பூவும்' என்பது, 'அப்பும் எனத் திரிபெய்திநின்றது. அன்றேல், கூறியது கூறிற்றாம். 'வானிற் கலப்பு வைத்தோன்'*3* என்றாற் போலும் திரு மொழிகளை அவர் கொள்ளமை பற்றி, எங்கும் சென்று கலப்பதாகிய காற்றையே இங்குக் 'கலப்பு' என்றார். எனவே, 'காணாதான் - கண்டானாம் தான் கண்டவாறு'*9* என்னும் பொதுமறை மொழிக்கு இலக்கியமாய் உள்ளார் உடன்படுவனவாகிய நான்கு பூதங்களையே இங்குச் செய்யுட்கு ஏற்பச் சொற்சுருங்கி வர, ஏற்ற பெற்றியால் கூறினார் என்க. 'காட்சிப் பொருளன்றிக் கருத்துப் பொருள் இல்லை' என்பவரை, 'உலகாயதர்' என்றும், 'சாருவாகர்' என்றும் 'பூத வாதிகள்' என்றும் கூறுவர். 'அறிவான்' இரண்டில் முன்னது, 'முன்பே அறிந்துள்ளவன்' எனவும், பின்னது, 'இனி அறிபவன்' எனவும் பொருள் பயந்தன. தொடர் வேறாகலின் பின்னதில் பன்மை யொருமை மயக்கம் இன்மை அறிக. இனிப் பின்னரும், 'அறிவார்' என்றே பாடம் ஓதலும் ஆம். 'அறிவான்' என்பதை ஆன் உருபு ஏற்ற பெயராக உரைத்தல் பொருந்தாமையறிக. இனிக் காட்சிப் பொருள்களையும் முதற்கண் முதியோர் அறிவிக்கவே அறிதல் அனுபவம் ஆதலின், 'மெய்ப் பொருளை யாமே அறிவோம்' என்றல் பொருந்தாமை உணரப்படும். 'சித்தாந்த நெறி ஆசிரியன் அருளை வேண்டு நிற்பதே' என்பதை நாயனார், மேலெல்லாம் பலவிடத்தும்* கூறினார், மேலும் கூறுவார்.

'எமக்கென் எவனுக்கு எவைதெரியும், அவ்வத்
தமக்கவனை வேண்டத் தவிர்'
'ஞானம் இவன்ஒழிய நண்ணியிடும், நற்கல்அனல்
பானு ஒழியப் படின்'9
என்றாற்போலச் சாத்திரங்களும் குருவருளை வலியுறுத்தி ஓதுதல் காண்க.
இதனால், மேற்கூறிய ஞான நெறி, ஆசிரியன் அருளையின்றி அமையாது' என்பது, 'அது வேண்டா' என்பாரை நோக்கி வலியுறுத்தப்பட்டது.
(இதன்பின், 'அதீதத்துள் ளாகி அமர்ந்தவன் நந்தி' என்னும் மந்திரம் மேல், 'பரலட்சணம் என்னும் அதிகாரத்தில் வந்தது.)

அடிதொழ முன்னின் றமரர்கள் அத்தன்
முடிதொழ ஈசனும் முன்னின் றருளிப்
படிதொழ நீபண்டு பாவித்த எல்லாம்
கடிதெழக் காண்என்னும் கண்ணுத லானே. ***#2536***

சிவபெருமானைத் தேவர்கள் அவன் திருமுன் நின்று அவனது திருவடிகளைத் தலை வணங்கிப் பணிய, அவனும் அவர்கட்கு முன்னின்று அவர்கள் வேண்டுவனவற்றை அளித் தருளுவன். இனி, உலகமெல்லாம் 'ஞானி' என்று வணங்கும்படி நிற்கின்ற உனக்கு அவன், நீ முன்பு யோக பாவனையில் பாவனை யாகப் பாவித்தவைகளையெல்லாம் இப்பொழுது விரைவில் உண்மை -யாய் விளங்கக் கண்டு இன்புறுவாயாக' என்று அருள்புரிவான்.

விளக்கவுரை

'போகம், மோட்சம்' என்பவற்றில் வேண்டுவார் வேண்டுவதைத் தருபவன் சிவன், அவன்பால் நீ மோட்சத்தையே வேண்டுவாயாக என மாணாக்கனுக்கு அறிவுறுத்தவாறு. 'அத்தனை' என்னும் இரண்டன் உருபு தொகுக்கப்பட்டது. 'முடிதொழ' என்றது, முன்பு 'அடிதொழ' எனப் பொதுவாகக் கூறியதைச் சிறப்பாக விளக்கிக் கூறியவாறு. 'ஈசன் கண்ணுதலான்' என்பன சுட்டுப் பெயரளவாய் நின்றன. 'படிதொழப் பாவித்த' என இயையும். 'கடி தொழ' என்பது பாடமன்று.
இதனால், 'சிவன் மோட்சம் தருபவனல்லன்' எனவும் 'மோட்சமே தருவான்; போகம் தாரான்' எனவும் கூறிப் பிணங்கு வோரையெல்லாம் மறுத்து 'அனைத்தும் தருவான்' என்பதும், 'ஆயினும் உயர்ந்தோர் அவன்பால் மோட்சத்தையே வேண்டி மேற் கூறிய நெறியில் நிற்பார்' என்பதும் கூறப்பட்டன.

நின்மல மேனி நிமலன் பிறப்பிலி
என்னுளம் வந்(து) 'இவன் என் அடியான்' என்று

பொன்வளர் மேனி புகழ்கின்ற வானவன்
நின்மலன் ஆகென்று நீக்கவல் லானே. *#2537*

வேதங்களில், 'பொன்னிறம் விளங்க நிற்பவன்' (இரணிய கருப்பன்) எனப் புகழப்படுகின்ற சிவன், இயல்பாகவே மலம் இல்லாத தூயோன் ஆதலின் பிறப்பில்லாதவனாய் அருளே திருமேனியாகக் கொண்டு, 'இவன் என்னுடைய அடியவன்' என்று கருணைகூர்ந்து, என் உள்ளம் மகிழும்படி என் எதிர்வந்து இவனும் என்னைப் போல மலம் நீங்கித் தூயன் ஆகுக' எனக் கருதுதல் செய்து, அவ்வாறே நீங்குதற்கரிய எனது மலத்தை நீக்கவல்லவனாயினான்.

விளக்கவுரை

'இதற்கு யான் அவனுக்கு அடிமை பூண்டிருந்ததே காரணம்' என்பது இசையெச்சமும், 'எனவே, பிறரும் அவனுக்கு அடிமை பூண்பாராயின், அவன் அவ்வாறு வந்து அருள்புரிவன்' என்பது குறிப்பெச்சமும் ஆம். நின்மலன் ஆகுக எனக் கருதினான்' என்றது, 'அயமத்மா பிரஹ்மம்', அல்லது 'சோய மஸ்தி' என்னும் மகாவாக்கியத்தைப் பயன்படுத்தியதைக் குறித்ததாம். ஆகவே, 'வந்து' என்றது குருவாகி எதிர் வந்ததைக் குறித்தாயிற்று. அதனால், 'என் உளம்' என்பதன் பின் 'மகிழ' என்பது சொல்லெச்சமாய் எஞ்சிநின்றதாம். மூன்றாம் அடியை முதலிற் கூட்டுக. அன்றி, 'அஃதே பாடம்' என்றலுமாம். மேனி, மேனியனைக் குறித்த ஆகுபெயர். நின்மல மேனியன் ஆதற்குக் காரணம் பிறப்பின்மையும், பிறப்பின்மைக்குக் காரணம் மலம் இன்மையுமாம். 'மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோரர் வடிவமாகும்'8 என்பது சிவஞான சித்தி. 'பொன்வளர் மேனி என' என்று, 'என' என்து வருவிக்க. 'ஆக' என்னும் வியங்கோளின் இறுதிநிலை தொகுத்தலாயிற்று. 'வல்லான' என்பது இறந்த கால வினைக் குறிப்புப் பெயர். இதனால், மகாவாக்கியம் பற்றித் தமது அனுபவம் கூறப்பட்டது.

துறந்துபுக் குள்ளொளி சோதியைக் கண்டு
பறந்தஎன் உள்ளம் பணிந்து கிடந்தே
மறந்தறி யாஎன்னை வானவர் கோனும்
இறந்து பிறவாமல் ஈங்குவைத் தானே. *#2538*

நான் இவ்வுலகில் 'யான், எனது' என எனக்கு இருந்த பற்றை எனது புண்ணிய வசத்தால் துறந்து, வித்தியா குரு, கிரியா குரு இவர்களால் என் உள்ளே ஒளிந்து நிற்கும் ஒளியாகிய சிவனை ஓராற்றால் கண்டு, முன்பு அலையாய் அலைந்து கொண்டிருந்த எனது மனம் ஒருங்கி அவனிடத்தே அடங்கிக் கிடக்க, அதனால் அவனை மறவாதவனாகிய என்னை அவனும், இறத்தலும், பின்பு பிறத்தலும் ஆகிய இவைகளை அடையாதபடி செய்து, பின்னும் இவ்வுலகிலே இருக்க வைத்தான்.

விளக்கவுரை

'அதற்குக் காரணம் எனது பிராரத்தம்' என்பது குறிப் பெச்சம். இடையில் வருவித்துரைத்தன இசையெச்சங்கள். கிடந்து - கிடந்தாமையால், இறத்தல், தூல உடம்பு நீங்குதல், வீடு பெறுவார்க்குத் தூல உடம்போடே சூக்கும அதி சூக்கும உடம்புகளும் உடன் நீங்கும். அஃதன்றியும் தூல உடம்பும் வருத்தமின்றி நீங்குதலன்றி, நோயால் வருந்தி நீங்குவதன்றாம். 'அந்நிலையே தமக்கு வாய்க்கும்படி செய்தருளினான்' என்பதையே 'இறவாமல்' எனவும், சூக்கும அதிசூக்கும உடம்பு நீங்காதோர் மீண்டும் பிறிதொரு தூல உடம்பை எடுப்பர் ஆதலின், 'அந்நிலை தமக்கு எய்தாதபடி செய்தருளினான்' என்பதையே 'பிறவாமல்' எனவும் கூறினார். 'பிறவாமல்' என்பதன் பின், 'செய்து' என ஒரு சொல் வருவிக்க. இஃது அறியாதார் உடம்பு நீங்குவனவற்றையெல்லாம் 'இறப்பு' என ஒன்றாகவே கருதுவர். 'சாவா வரம்' என்பதும் தூல உடம்பு மட்டும் தனித்து நீங்காத நிலையைப் பெறுதலேயாம். 'ஞானிகள் பிராரத்தம் காரணமாக இவ்வுலகில் நின்றாராயினும் அவர்களது வாழ்வு உலகிற்கு உபகாரமாய் அமையும் என்பது தோன்ற 'ஈங்கு வைத்தான்' என்றார்.

இதனால், மகாவாக்கிய அனுபூதிமான்கள் சீவன் முத்தராய் உலகிற்கு நலம் புரிபவராதல் கூறப்பட்டது.

மெய்வாய்கண் மூக்குச் செவியெனும் மெய்தோற்றத்*(து)*
ஐவாய அந்தக் கரணம் அகிலமும்
எவ்வாய் உயிரும் இறைஆட்ட ஆடலால்
கைவாய் இலாநிறை எங்கும்மெய் கண்டதே. ***#2539***

'மெய், வாய், கண், மூக்கு, செவி' எனப் படுகின்ற ஐந்து புற அறிவுக் கருவிகளும், 'மனம், புத்தி, சித்தம், அகங்காரம்' எனப்படுகின்ற நான்கு அக அறிவுக் கருவிகளும், பிறவும் கூடிய உடம்புகளும், அறிவின்றி விரிந்து பரந்துள்ள பல உலகங்களும், அவற்றைச் சார்ந்து எவ்விடத்தும் அறிவையும் இன்பத்துன்ப நுகர்ச்சிகளையும் பெற்று வருகினற அளவற்ற உயிர்களும் ஆகிய அனைத்தும் சிவன் ஆட்டவே ஆடுகின்றன. இதனை, 'ஆட்டு வித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே'* என்னும் திருமுறையும், 'அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது' என்னும் முதுமொழியும் விளக்கி நிற்கின்றன. அதனால் சிவனது கை, வாய் முதலிய உறுப்புகளுள் யாதொன்றும் இல்லாத பெருநிறைவு எங்கும் உள்ளதாகிய அத்துவித உண்மை அருளாளரால் நன்குணரப்பட்டது.

விளக்கவுரை

சத்தினை உபநிடதம் 'அத்துவிதம்' எனக் கூறியது, 'அஃது அனைத்துப் பொருளிலும் உடலில் உயிர் போலக் கலப்பினால் ஒன்றாயும், கண்ணில் அருக்கன்போலப் பொருள் தன்மையால் வேறாயும், உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனாயும் இயைந்து நிற்கும் இயைபினைக் குறித்தது' என்பதை சித்தாந்தம் ஆகலின், 'அவ்வுண்மையை உணர்ந்தோரே மகாவாக்கியப் பொருளை அனுபவமாக உணர்வர்' என்றற்கு இங்ஙனம் வகுத்தோதி முடிக்கப்பட்டது. இதனானே வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்தவாறும் அறிக. மெய்த் தோற்றம் - புறத்துக் காணப்படுதல். 'ஐ வாயவும், அந்தக் கரணமும்' என அவற்றிலும் உம்மை விரிக்க. 'நிறை' என்பதற்கு, 'அவனது நிறை' என வருவித்துரைக்க. 'எங்கு ஆம் மெய்' என்க. கண்டது - காணப்பட்டது.

*10.37.*விசுவக் கிராசம்

அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக் காணின்
எழுகின்ற தீயிற்கர்ப் பூரத்தை யொக்கப்
பொழிகின்ற இவ்வுடல் போம்அப் பரத்தே. ***#2540***

விரையத் தோன்றி மறைகின்ற சாயா புருடனைப் போலவும், சிறிது நின்று கெடுகின்ற நீர்க்குமிழி போலவும், சிறிது நீட்டித்துக்கெடுகின்ற, தீயிடைப்பட்ட கருப்பூரத்தைப்போலவும், அசுத்தத்தைப்பொழிகின்ற தூலவுடம்பும் ஒரு காலத்தில் சிவத்தில் ஒடுங்குவதேயாம்.

விளக்கவுரை

தத்துவ முறைப்படி தத்துவங்களில் தோன்றும் உடம்புகள் தோன்றிய தத்துவங்களிலே மீள ஒடுங்கத் தத்துவங்கள் மாயையில் ஒடுங்கும் ஆகலின், அவை மாயைக்கு வியாபகமான சிவத்தில் ஒடுங்குவதேயாம்' என்றபடி.
'இவ்வுடம்பு' எனத் தூல உடம்பையே சுட்டினாராயினும், உபலக்கணத்தால் சூக்கும அதிசூக்கும உடம்புகளும் கொள்ளப்படும்.
சாயா புருடன், நின்மலமாகிய வானத்தை உற்று நோக்குங்கால் அதன்கண் உள்ள ஒளி மண்டலத்தின் ஒரு கூறு மனிதனைப் போலத் தோன்றும் வடிவம். இது மிக விரைவில் மறைதலால் விரையக் கெடும் உடம்பிற்கு உவமையாயிற்று.
சாயா - சாயை; நிழல். ஒளி மண்டலத்தின் ஒரு கூறே புருடன் வடிவற்றாய்த் தோனஅறுதலின், அஃது இல்லதன்று; உள்ளதே. அஃது ஒடுங்குதல் ஒளிமண்டலத்திலேயாம். காணின் - காணுதலைப் போல. 'இன்' உவம உருபு. நீர்க்குமிழி நீரில் தோன்றி நீரில் ஒடுங்குதல் வெளிப் -படை. கருப்பூரம் - பச்சைக்கருப்பூரம். அது கூட்டுப் பொருளாகலின்,

அதன் கூறுகள் ஆற்றலாய் மாறி அவ்வப் பொருள் ஆற்றலில் ஒடுங்கும். இங்ஙனமாகவே, 'உடம்புகளை இறைவன் ஓடுக்குதல் இல்லை' எனல் வேண்டா என்பது குறிப்பெச்சம். முதல் மூன்று அடிகளின் ஈற்றிலும் உம்மைகள் விரிக்க.
இதனால், உடம்புகள் ஒடுங்குமாறு உவம அளவையால் நிறுவப்பட்டது. 'தோற்றம், ஒடுக்கம்' என்பவற்றில் இங்கு வேண்டுவது ஒடுக்கமேயாதல் அறிக.

உடலும் உயிரும் ஒழிவற ஒன்றின்
படரும் சிவசத்தி தானே பரமாம்
உடலைவிட் டிந்த உயிர்எங்கு மாகிக்
கடையும் தலையும் கரக்கும் சிவத்தே. ***#2541***

உடம்பும், உயிரும் நீக்கமற ஒன்றியிருக்கும் பொழுது, உலகத்தை நோக்கிச் செல்லும் சிவ சக்தியே உயிருக்குத் தலைமையாய் நின்று நடத்தும். உடலை அறவே விட்டொழித்தவழி, உயிர் சிவனைப் போலப் போலவே எங்கும் இருப்பதாய், முடிவும், முதலுமாகிய எல்லைகளில் எதுவும் இன்றி வியாபகமாய்ச் சிவனது வியாபகத்தில் அடங்கிவிடும்.

விளக்கவுரை

ஆகவே, 'சிவன் உயிரை உண்கின்றான்' என்றல் பொருந்துமாறு அறிக என்பதாம். திருவாசகத்தில் 'உயிருண்ணிப் பத்து' என ஒரு பகுதியிருப்பதும், 'யானாகிய என்னை விழுங்கி வெறுந் - தானாய் நிலை நின்றது தற்பரமே'9 என்றதும் இங்கு நினைவு கூரத்தக்கன. 'விட்டவழி' என்பது, 'விட்டு' எனத் திரிந்து நின்றது.
'பெத்த காலத்தில் திரோதான சத்தி வழிப்பட்டு ஏதேசியாய்ப் போக்கு வரவு புரிகின்ற உயிர் முத்தி காலத்தில் ஏகதேசத் தன்மை நீங்கி வியாபகமாய்ச் சிவத்தில் அடங்கும்' என்பது இம்மந்திரத்தின் கருத்து.
'உடல்' என்ற பொதுமையால் மூவகை உடம்பும் கொள்க.
இதனால், 'உயிர் ஒடுங்குதல் இல்லை எனல் வேண்டா' என்பது கூறப்பட்டது.

செவி மெய் வாய் கண் மூக்குச் சேர்இந்திரியம்
அவியின் றியமன மாதிகள் ஐந்தும்
குவிவொன றிலாமல் விரிந்து குவிந்து
தவிர்வொன் றிலாத சராசரந் தாமே. ***#2542***

செவி முதலிய ஐந்து ஞானேந்திரியங்கள், மனம் முதலிய நான்கு அந்தக் கரணங்கள், பிரகிருதி ஆகப் பத்தினையும் பற்றி நின்று செலுத்துகின்ற உயிர்கள் அவற்றைப் பலதலைப் பட்டு விரிந்து செல்லவிடாது சிவம் ஒன்றையே நோக்கிக் குவிந்து செல்லுமாறு செலுத்துதல் வேண்டும். அங்ஙனம் செலுத்தாமையால் அவை பல வழியாக விரிந்து செல்லத்

தாமும் அவ்வாறே முதற்கண் உலகில் விரிந்து செல்கின்றன. ஆயினும் அவை முன் சொல்லிய வற்றுள் குவிந்த பொழுது, சராசரங்களாகிய அனைத்து உடம்புகளும் உயிர்களும் சிவத்தில் ஒடுங்கிச் சிறிதும் நீங்காதனவாய் இருக்கும்.

விளக்கவுரை

அவி இன்றிய - அடங்குதல் இல்லாத. 'ஐந்தும்' என்ற குறிப்பால் பிரகிருதி தழுவப்பட்டது. 'முன்பு விரிந்து, பின்பு குவிந்த வழி' என்க. 'சாராசதரந்தாமே தவிர்வொன்றிலாதவாம்' என்க. சரம் - இயங்கு திணை. அசரம் - நிலைத்திணை. 'தாம், ஏ' அசைகள்.
இதனால் உலகத்தின் விருவும், ஒடுக்கமும் ஆமாறு கூறப்பட்டது.

பரன் எங்கும் ஆரப் பரந்துற்று நிற்கும்
திரன் எங்கு மாகிச் செறிவெங்கும் எய்தும்
உரன்எங்கு மாய்உல குண்டு முமிழ்க்கும்
வரன்இங்ஙன் கண்டியான் வாழ்ந்துற்ற வாறே. ***#2543***

சிவன் வியாபகன்; மாற்றம் இல்லாதவன் எவ்விடத்திலும், எப்பொருளிலும் நிறைந்து அதனால், தனது ஆற்றலால் சுத்தமும், அசுத்தமும் ஆய இரு மாயா காரியங்களிலும் தனது ஆற்றலால் தங்கி அவற்றைத் தன்னுள் ஒடுக்கவும் செய்வான். பின்பு விரிக்கவும் செய்வான். நான் மேல்நிலை அடைந்து பேரின்ப வாழ்வில் வாழ்ந் திருத்தற்குக் காரணம் இந்த உண்மையை இவ்வாறு உணர்ந்ததே.

விளக்கவுரை

'அதனால் நீவிரும், இதனை, இவ்வாறே உணர்மின்; மேல்நிலையை அடைந்து பேரின்ப வாழ்வில் வாழ்ந்திருப்பீர்' என்பது குறிப்பெச்சம். 'எங்கும் ஆரப் பரந்து உற்று நிற்கும்' என்றது, 'வியாபகன்' என்றபடி. பின்னர் வந்த 'எங்கும்' என்பது, 'எப்பொருளிலும்' என்றதாம். உரன் - ஆற்றல். 'உரனால்' என உருபு விரிக்க. வரன் வரம்; மேன்மை. 'யான் வரனில் வாழ்ந்துற்றவாறு இங்ஙன் கண்டு' என முடிக்க. 'உமிழும்' என்பது இடைக்கண் வேண்டாவழிக் குகரச் சாரியையும்' சந்தியும் பெற்று, 'உமிழ்க்கும்' என வந்தது.
இதனால், 'மெய்யுணர்வோர், உலகத்தை இறைவன் ஒடுக்கியும், தோற்றுவித்தும் நிற்கின்றான் என உணர்தல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

அளந்த துரியத் தறிவினை வாங்கி
உளங்கொள் பரம்சகம் உண்டஃ தொழித்துக்
கிளர்ந்த பரம்சிவம் சேரக் கிடைத்தால்
விளங்கிய வெட்ட வெளியனும் ஆமே. ***#2544***

உயிரினது அறிவின் நிலைமையை அளந்து, அஃது நின்மல துரியத்தை அடைந்தவாற்றினைத் தெரிந்து, அதன்கண் உயிரினது அறிவினை வாங்கித் தன் அறிவினுள் அடக்கிக் கொண்ட நின்மல சிவம். அந்நிலையில் உயிரினது உடம்பும், உலகமும் இருப் பினும் அவையில்லாதது போலத் தனது அருளினுள் அடக்குமாற்றால், உயிரினது, 'யான், எனது' என்னும் பற்றை அறுத்துத் துரியத்திற்கு மேற் பட்ட பரசிவமாய்ப் பொருந்தக் கிடைத்தால், ஆன்மா அந்தப் பரசிவ - மாகிய பராகாயத்தில் அடங்கிவிடும் பேற்றினையும் பெற்றுவிடும்.

விளக்கவுரை

'உளம்' என்று அறிவினை. *'அஃது'* என்றதும் அதன்மேல் உள்ள பற்றினையே. வெளியன் ஆதற்கு வருவிக்கப் பட்டது. உம்மை சிறப்பும்மை.

இதனால், சிவன், உணர்வொடுக்கம் செய்யுமாற்றால் உயிர் ஒடுக்கம் செய்தல் கூறப்பட்டது.

இரும்புண்ட நீர்என என்னைஉள் வாங்கிப்
பரம்பர மான பரமது விட்டே
உரம்பெற முப்பாழ் ஒளியை விழுங்கி
யிருந்தனன் நந்தி இதயத்து ளானே. ***#2545***

உலையிற்பட்ட இரும்பு தன்மேல் வீழ்ந்த நீரை மீள வெளிப்படாதபடி தன்னுள் ஒடுக்கிக் கொள்வது போல, மேலானதற்கும் மேலான பொருளாகிய சிவன், யான் அஞ்ஞானத்தை விட்டு மெய்ஞ்ஞானத்தைப் பெற்றமையால் முப்பாழிலும் முறையானே எனது சீவ போதத்தைத் தான் விழுங்கித் தான் மட்டுமே எனக்கு மேலேயிருந்தான்; என் அறிவினுள்ளும் இருந்தான்.

விளக்கவுரை

ஈற்றில் நின்ற *'பரம்'* வாளா பெயராய் நின்றது. அது பகுதிப்பொருள் விகுதி. உரம் - மெய்ஞ்ஞானம். பெற்றது மெய்ஞ் ஞானமாகவே, விட்டது அஞ்ஞானமாயிற்று. முப்பாழ், மேலே கூறப் பட்டன. அப்பாழ்தோறும் உயிரினது அறிவு வேறுபடுதலை யறிக. ஒளி - அறிவு. *'விழுங்கி யிருந்தனன்'* என்றதனால் அவன் மட்டுமே தனித்திருந்தமை பெறப்பட்டது. *'அலைகடலில் சென்று அடங்கும் ஆறுபோல்' 9* சீவன் சிவத்துள் சென்று அடங்கச் சிவமே ஒளி வீசி நின்றது என்றபடி. பின்னர், *'இதயத்துளான்'* என்றதனால், முன்னர் *'மேலே உளான்'* என்றதாயிற்று. *'இரும்பிடை நீர் என'* என்றமையால் இது நிறைவொடுக் கமாகிய முடிநிலை முத்தியைக் கூறியதாயிற்று. *'மற்றீண்டு வாரா நெறி'.* பேரா இயற்கை* மீண்டு வாரா வழிஅருள் புரிபவன்'* என்றாற் போலும்

திருமொழிகளைக் காண்க.

கரிஉண் விளவின் கனிபோல் உயிரும்
உரிய பரமும்முன் ஓதும் சிவமும்
அரிய துரியத்*(*து*)* அகிலமும் எல்லாம்
திரிய விழுங்கும் சிவபெரு மானே. ***#2546***

'சீவ அவத்தை, சிவ அவத்தை, பர அவத்தை' என மேற்கூறிய மூன்று அவத்தைகளிலும் அரியனவாம் துரிய நிலையில் சிவபெருமான் அனைத்துலகங்களையும், அவற்றில் வாழும் உயிர் -களையும் அவற்றது முன்னை இழிநிலை மாறி, உயர்நிலையாகும்படி விழுங்கிவிடுவான்.

விளக்கவுரை

'யானை' என்பது விளம்பழத்திற்கு உண்டாகின்ற ஒரு நோய். அஃது அப்பழத்தின் ஓடு இருந்தபடியே இருக்க, உள்ளே உள்ளதை மட்டும் அழித்துவிடும். அதனால், வெளிப்பார்வைக்கு மட்டும் நன்றாய் இருப்பதுபோலக் காணப்பட்டு, உட்பகுதியில் ஒன்றும் இல்லையாய் விடுகின்ற பொருள்கட்கு, 'வேழம் உண்ட விளங்கனிபோல' என்னும் உவமை கூறப்படுகின்றது. அஃது இங்குத் தம் தன்மை திரிந்த மாயா காரியங்கட்கும், அவற்றைப் பற்றி நிற்கும் உயிர்கட்கும் உவமையாகக் கூறப்பட்டது. உயிர் - சீவன். 'சீவன், சிவம், பரம்' என்பன அவ்வவ் அவத்தைகளைக் குறித்து நின்றன. செய்யுள் நோக்கி, இறுதிக்கண் நிற்றற்பாலதாய பரம் இடைக்கண் வைக்கப் பட்டது. முன் ஓதும் - மேலே சொல்லப்பட்ட. 'உயிரும், சிவமும், பரமும் ஆன துரியத்து' என்க. 'அகிலம்' என்றது மாயா காரியங்களையும், எல்லாம்' என்றது உயிர்களையும், அங்ஙனம் கொள்ளாக்கால், 'எல்லாம்' என்றது கூறியது கூறலாம். திரிய - தம் நிலை மாறும்படி. விழுங்குதல், இங்குத் தன் தன்மைய ஆக்குதல். உயிர் பெத்தத்தில் நிற்கும்பொழுது அதற்குச் சார்பாய், உள்ள மாயா காரியங்கள் பசுகரணங்களாயும், முத்தியைப் பெற்ற பொழுது அவை பதி கரணங்களாயும் நிற்கும். இவ்வாறு ஆதலையே 'திரிய' என்றார்.

'மாயைமா யேயம், மாயா
வரும்இரு வினையின் வாய்மை
ஆய ஆ ருயிரின் மேவும்
மருள்எனில் இருளாய் நிற்கும்;
மாயைமா யேயம் மாயா
வரும்இரு வினையின் வாய்மை
ஆயஆ ருயிரின் மேவும்
அருள்எனில் ஒளியாய் நிற்கும்'.*1*

என்னும் சிவப்பிரகாசச் செய்யுளைக் காண்க. முத்தி, இங்குப் பரமுத்தி

தவிர ஏனைய. 'கரியுண் விளவின் கனி' என்ற உவமையால் இது விளங்கும். முன்னர் 'இரும்புண்ட நீர்' என வேறு உவமை கூறப்பட்டவாறு அறிக.
இதனால், சிவன் உலகத்தையும், உயிர்களையும் அவற்றின் தன்மைகளைத் திரித்துத் தன்வண்ணம் ஆக்குதல் கூறப்பட்டது.

அந்தமும் ஆதியும ஆகும் பராபரன்
தந்தம் பரம்பரன் தன்னில் பரமுடன்
நந்தமை உண்டுமெய்ஞ் ஞானஞே யாந்தத்தே
நந்தி யிருந்தனன் நாம்அறி யோமே. *#2547*

சிவபெருமான், அனைத்துப் பொருள்கட்கும் அந்தமும், ஆதியுமாய் உள்ள பெரும் பொருளாய் நின்று, பல உயிர்களும் அடையும் பலவேறு அவத்தைகளில் தடத்த சிவனாய் எல்லாம் அவற்றிற்குத் தலைவனாய்ப் படிமுறையால் அவைகளை உயர்த்தி, முடிவில் சொரூப சிவனாய் அவனது ஞானமே கண்ணாக உணரும் ஞானத்திற்கு ஞேயமாய் இருக்கின்றான். அவனது செயல்களை நாம் அறுதியிட்டு அறியமாட்டோம்.

விளக்கவுரை

'நந்தி' என்பதை முதலிற் கொள்க. 'இயற்கையில் அந்தமும், ஆதியும் ஆகும் பராபரனும், உயிர்களின் அவத்தை வேறுபாடுகளில் தத்தமக்குப் பராபரனும், முடிவில் தன்னில் தான் ஆன பரமும் ஆகி நம்மை உண்டு, அந்தத்து ஞானத்திற்கு ஞேயமாய் இருந்தனன். அவற்றை யெல்லாந் நாம் அறியோம்' என இயைத்து முடிக்க உண்ணுதல் மேற்கூறிய வேழம் உண்ட விளங்கனிபோல ஆகும்படி உண்ணுதல். 'ஆதலுடன் கூடி' என முன்னும் பின்னும் ஓரோர் சொல் வருவிக்க. ஆதல் - ஆதற்றன்மை.
இதனால், சிவன் உலகை உண்ணும் முறைகளையெல்லாம் தொகுத்துக்கூறி முடிக்கப்பட்டது.

10.38.வாய்மை

அற்ற துரைக்கில் அருளுப தேசங்கள்
குற்றம் அறுத்தபொன் போலக் கனலிடை
அற்றற வைத்திறை மாற்றற ஆற்றிடில்
செற்றம் அறுத்த செழுஞ்சுடர் ஆகுமே. *#2548*

உயிர்கள் அடையத் தகும் முடிவான பயனை கூறுமிடத்து, அது வேதாந்த சித்தாந்த மகாவாக்கியங்களின் ஒருமித்த பொருளேயாகும். அதுமேலே சொல்லப்பட்டது. அந்தப்பயன், இறைவன், உயிர்கள் பாச பந்தங்களினின்றும் முற்றாக நீங்கத் திருவுளம் பற்றி, தான் அந்தப் பந்தங்களை நீக்கும் செயல்களைக் குறைவின்றிச் செய்தால் தீயில்

இட்டு மாசுக்களை நீக்க நீங்கிய பொன்போல உயிர்கள் தன்னைச் சூழ்ந்துள்ள இருளை ஓட்டி ஒளிவிடுகின்ற விளக்குப்போல ஆகி, பந்தங்கள் அனைத்தையும் துரத்தி விளங்கும்.

விளக்கவுரை

அற்றது - முடிந்த பயன். இதன்பின், 'அது' என்னும் எழுவாய் வருவிக்க. 'கனலிடை' என்பதை அவ்வடியின் முதலிற் கூட்டி, அவ்வடியை ஈற்றுக்கு அயலிற் கூட்டுக'. 'இறை' என்பதையும் அவ்வடியின் முதலிற் கூட்டுக. 'அற்று அற' என்னும் ஒரு பொருட் பன்மொழி, 'முற்றாக' எனப்பொருள் தந்தது 'அற', என்றதும், 'முற்ற' என்றபடி. 'திருவுளம் வைத்து' என்க. மாற்று - மாற்றுச் செயல்; பரிகாரம் 'ஆகும்' என்பதற்கும், 'உயிர்' என்னும் எழுவாய் வருவிக்க. ஆக்கம், உவமை குறித்து நின்றது. இதனால், ஒருமொழி மகாவாக்கியங்களே உயிர்களைப் பிறவிக் கடலினின்றும் கரையேற்றுகின்ற புணையாகும்' என்பதும், (அம்மகா வாக்கியங்களில் தலையாயது திருவைந்தெழுத்து' என்பதே சித்தாந்தம். 'அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை' (திரு வாசகம் - திருச்சதகம் - 27) எனவும், 'இருவினைப்பாசம் மும்மலக் கல் ஆர்த்திட - வருபவக் கடலில் வீழ் மாக்கள் ஏறிட - அருளும்மெய் அஞ்செழுத்து' (பெரிய புராணம் - அப்பர் - 129.) எனவும் போந்த திருமொழிகளைக் காண்க). 'அதுவும் இறைவனது அருளால் உரிய காலத்தில் பெறத்தக்கது' என்பதும் கூறப்பட்டன.

எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டே
எல்லாம் அறிந்தும் இலாபம்அங்கில்லை
எல்லாம் அறியும் அறினை 'நான்' என்னில்
எல்லாம் அறிந்த இறையென லாமே. ***#2549***

உயிர்கள் இறைவனைத் தவிர மற்றை எல்லாப் பொருள்களையும் அறிதல் அவற்றிற்குப்பந்தமாகும், அதனைக் குருவருளால் நீங்கிச் சிவனைப்போல முற்றறிவைப் பெற்றபின்னும் இறைவனைத் தவிர வேறுபொருள்களை அறிவதில் பேறு ஒன்றும் இல்லை. (மாறாக, இன்ப இழப்பே உளதாகும், ஏனெனில், பிற எல்லாம் துன்பப் பொருள்களேயாதலின). ஆகவே 'சிவன் நான்' என்னும் அந்த ஒற்றுமை உணர்விலே நிலைத்து நிற்பின், உயிர் இறை நிலையினின்றும் பிறழாதிருக்கும்.

விளக்கவுரை

முதல் இரண்டடிகள் முறையே பாச நீக்கத்தையும், சிவப்பேற்றையும் குறித்தன. 'சிவப்பேறு பெற்றும் பயனில்லை' என்றதனால், அதற்குரிய காரணம், 'எல்லாம்' என்றதனால் குறிப்பால் பெறப்பட்டது. 'இறையே'

என்னும் தேற்றேகாரம் தொகுத்தலாயிற்று. 'திருவருளைப் பெற்றபின்னும் அது கண்ணாக இறைவனையே உணர்ந்து அவனிடத்து அடங்கி நில்லாது, தற்போதத்தால் பிறவற்றை யுணர்தல் மீட்டும் பந்தமாம்' என்பதனை,

'பொற்கொழுக் கொண்டு வரகுக் குழுவதென்?
அக்கொழு நீ அறிந் துந்தீபற;
அறிந்தறி யாவண்ணம் உந்தீபற' *

என்னும் திருவுந்தியாரால் அறிக. 'அறிந்து, அறியா வண்ணம்' திருவருளாலே யறிந்து, தற்போதம் தலை யெடாதபடி நில்.

'எல்லாம் அறியும் அறிவுறினும், ஈங்கிவர் ஒன்(று)
அல்லா தறியார் அற' *

என்றார் உமாபதிதேவர்.

இதனால், 'உபதேச நிலையினின்றும் பிறழாது உறைத்து நின்ற வழியே பயன் உளதாம்; இல்லையேல் அஃது இழக்கப்படும்' என்பது கூறப்பட்டது.

[இதன்பின் பதிப்புக்களில் காணப்படும் 'தலைநின்ற தாழ்வரை மீது தவம் செய்து' என்னும் மந்திரம் அடுத்த தந்திரத்து, 'சொரூப உதயம்' என்னும் அதிகாரத்தில் வருவது].

தானே உலகின் தலைவன் எனத்தகும்
தானே உலகுக்கோர் தத்துவ மாய்நிற்கும்
வானே பொழிமழை மாமறை கூர்ந்திடும்
ஊனே உருகிய உள்ளம்ஒன் றாகுமே. **#2550**

சிவபெருமான் ஒருவனே உலகங்கட்கெல்லாம் முழு முதல் தலைவனும், மெய்ப்பொருளும் ஆவன். அறம் முதலிய உறுதிப்பொருள்களை உணர்த்தும் மறைகளின் வழியே அவைகள் நிலைபெறற் பொருட்டு வானம் மழைபொழியவும் கருணை கூர்வன். இவற்றை உணர்ந்து ஊனும் உருகும்படி எந்த உள்ளம் அன்பினால் உருகுகின்றதோ அந்த உள்ளம் அவனோடு சேர்ந்து ஒன்றாகும்.

விளக்கவுரை

இங்கு, 'தான்' என்பன வடமொழி வழக்குப் பற்றிப் பொதுமையில் வாராது, தமிழ்வழக்கே பற்றி மேலெல்லாம் சிறப்பாக எடுத்து வலியுறுத்திப் போந்த சிவபெருமானை உணரச்சிறப்பாகவே வந்தது. 'அல்லாக்கால், இம்மந்திரம் நின்று வற்றும்' என்க. 'மாமறை வழி ஒழுக வானே மழை பொழியக் கூர்ந்திடும்' என ஒருசொல் வருவித்து இயைத்து முடிக்க. 'பொழி' என்னும் முதனிலையே, 'பொழிய' என வினையெச்சப் பொருள் தந்தது. 'வானே' என்னும் பிரிநிலை ஏகாரம், 'வானின்றமையா தொழுக்கு'3 என்பதை விளக்கி நின்றது. 'ஊனே' என்னும் தேற்றேகாரம்,

'உருகமாட்டாதது ஊன், அதுவும் உருகுதற்கு ஏதுவாய் நின்ற உள்ளம்' என்னும் பொருளைத்தோற்றுவித்தது. 'உருகிய' என்னும் பெயரெச்சம், 'உள்ளம்' என்னும் ஏதுப்பெயர் கொண்டது. அப்பெயர்விடாத ஆகுபெயராய் அதனையுடைய ஆன்மாவைக் குறித்தது. இனால், முன் மந்திரங்களில், 'இறை' என்றும் 'எல்லாம் அறிந்த அறிவன்' என்றும் கூறப்பட்ட முதல்வன் சிவபெருமானே என்பது கூறப்பட்டது.

அருள்பெற்ற காரணம் என்கொல் அமரில்
இருளற்ற சிந்தை இறைவனை நாடி
மருளுற்ற சிந்தையை மாற்றி அருமைப்
பொருளுற்ற சேவடி போற்றுவர் தாமே. *#2551*

'திருவருளைப் பெற்றவர் அதனைப் பெற்றது எதன்பொருட்டு' என்று அறிய விரும்பினால், அவர் அத்திருவருளால் மலம் நீங்கப்பெற்ற தமது அறிவுகள் அத்திருவருளே கண்ணாக அத்திருவருட்கு முதலாகிய சிவத்தை ஆராய்ந்து அவ்வாராய்ச்சியால் முன்பு நீங்கிப்போன மலத்தின் வாசனை தங்கியுள்ள தங்களது அறிவை அவ்வாசனையும் அற்ற தூய அறிவாய் நிற்கும்படி செய்து, இங்ஙனம் அரிதிலே பெறப்பட்ட பொருளாய் உள்ள இவனது திருவடியையே விடாது பற்றி, அவற்றின்கீழ் அடங்கியிருப்பர்.

விளக்கவுரை

'அவர் திருவருள் பெற்றது இந்நிலையை அடைதற் பொருட்டே; வேறொன்றின் பொருட்டன்று' என்பதாம்

'யாஅம் இரப்பவை,
பொருளும், பொன்னும், போகமும் அல்ல, நின்பால்
அருளும், அன்பும், அறனும் மூன்றும்
உருள்இணர்க் கடம்பின் ஒலிதா ரோயே'9

என்னும் சான்றோர் மொழியினை எண்ணுக. இம்மந்திரத்தின் பொருளைச் சிவஞான போத ஒன்பதாம் சூத்திரத்தாலும், அதன் உரையாலும் உணர்க. 'எனகொல் என அறிய' என ஒருசொல் வருவிக்க. அமர்தல் - விரும்புதல். சிந்தை, அறிவைக் குறித்த ஆகு பெயர். முன்னர், 'சிந்தையின் கண்' என ஏழாவது விரிக்க. 'அருமைப் பொருளாய்' என ஆக்கம் விரிக்க. தாம், அசை, ஏகாரம், தேற்றம்.

இதனால், மேல், 'எல்லாம் அறியும் அறிவுதனை விட்டே' என்னும் மந்திரத்திற் கூறியது வலியுறுத்தப்பட்டது.

மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்றன்னைப்
பொய்கலந் தார்முன் புகுதா ஒருவனை
உய்கலந்(து) ஊழித் தலைவனுமாய் நிற்கும்
மெய்கலந் தின்பம் விளைத்திடும் மெய்யர்க்கே. *#2552*

எவ்வகையிலும் வாய்மையையே பற்றி நிற்பாரோடே அளவளாவுபவன் சிவன். எவ்வகையிலும் பொய்யைப் பற்றி நிற்பவர்க்குத் தனது இருப்பையும் புலப்படுத்தாதவன் அவன். தாம் உய்தி பெறற்பொருட்டு பெறற்பொருட்டு அவனையே சார்தலால், அத்தகைய வாய்மையாளருக்கு அவன் பேரொடுக்கத்தைச் செய்பவனாக இருந்து, நிலையான இன்பத்தை எல்லையின்றி விளையுமாறு செய்வன்.

விளக்கவுரை

'மெய், பொய்' என்ற பொதுமைகள், உலகியல் அருளியல் இரண்டிலும் உள்ள வாய்மை பொய்மைகளை உணர்த்திநின்றன. அதனால் உலகியலிலும் பொய்யைப் பற்று கின்றவர்களைச் சிவன் வெறுத்தல் விளங்கிற்று. 'கரவாடும் வன் னெஞ்சர்க்கு அரியானை', *3* 'கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநர கங்கள் வைத்தார்' *l* 'வஞ்ச நெஞ்சத்தவர்க்கு வழிகொடார் - நஞ்சநெஞ்சர்க் கருளும் நள்ளாறரே' *9(*நஞ்ச - நைந்த; உருகிய*)* என அப்பர் கடிந்தோதியருளிய திருமொழிகளைக் காண்க. கரத்தல் - உள்ளதை 'இல்லை' என மறைத்துக் கூறுதல். அது பொய்ம்மையே யாதல் அறிக.

'நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்;
பொக்கம் மிக்கவர் பூவும் நீரும்கண்டு,
நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே'*

என அவர் அருளியல் பற்றிச் சிறப்பாக ஓதியருளினமையும்,

'யானே பொய்; என் நெஞ்சும் பொய்; என்
அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப்
பெறலாமே. *8*

என ஆளுடைய அடிகளும் அவ்வாறே அருளிச் செய்தமையும் உணரற்பாலன. மெய்கலந்தான் - நேரே விளங்கிக் கலந்தான். ஏனையோர்பால் விளங்காதே கலந்திருப்பான் என்க. இரண்டன் உருபுகள் 'உய்கலந்து' என்பதில் கலத்தலோடு முடிந்தன. உய்கலந்து - உய்யக்கலத்தலால். கலப்பவர் மெய்யர். கலத்தல், உணர்வால் ஒன்றுதல். 'மெய்யர்க்கே' என்பதை இதன்பின் கூட்டுக. 'மெய் கலந்த' என்பதில் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. மெய் - நிலைபேறு.

மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்மிகப்
பொய்கலந் தாருட் புகுதா ஒருவனைக்
கைகலந் தாவி எழும்பொழு தண்ணலைக்
கைகலந் தார்க்கே கருத்துற லாமே. **#2553**

முன் மந்திரத்திற்கூறிய அத்தகைமையனாகிய சிவனை, ஆவி உடலைவிட்டு நீங்கும் காலத்தில் நினைத்தல், அதற்கு முன்னெல்லாம் இடைவிடாது நினைந்தவர்கட்கே கூடும்.

விளக்கவுரை

'ஆதலின் அவ்வாறு இப்பொழுதே நினையுங்கள்' என்பது குறிப்பெச்சம்.
'உயிர்போங் காலத்து நினைத்தல் அரிது' என்பதை,
'... ... ... கடல்நாகைக்
காரோண, நின்
நாமம் பரவி, நமச்சிவா யவ்வெனும்
அஞ்செழுத்தைச்
சாம்அன் றுரைக்கத் தருதிகண்டாய்,
எங்கள் சங்கரனே' *9*
என்பதனாலும், 'அவ்வாறு நினைந்தவழியே அவனை யடைதல் கூடும்' என்பதை,
'உன்னை நினைந்தே கழியும் என் ஆவி' *3* என்பதனாலும் உணர்க.
இறக்குங் காலத்தில் வினையின்வழி எந்த நினைவு உயிருக்கு உண்டாகின்றதோ, 'அந்த நினைவின்படியே அஃது அடுத்த பிறப்பை அடையும்' என்பதை
'மரிக்கும்போ(து) உன்னும் வடிவமதை ஆவி
பரிக்கும் நினைவு பரித்து'
என்பதனாலும்,
'ஆதலினால் சுற்றத் தவரைநினை யா(து) அமலன்
பாதம் நினைக பரிந்து' *
என்பதனாலும் அறிக.
மூன்றாம் அடியில், 'கைகலந்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'ஆவி கலந்திருத்தலும், எழுந்து போதலும் உடலிடத்து' என்பது வெளிப்படை. 'கருத்துறல்' என்பதை 'எழும்போது' என்பதன் பின்னர்க் கூட்டுக. பின்வந்த, 'கைகலத்தல்' என்பது, எப்பொழுதும் இடைவிடாது கலத்தலைக் குறித்தது.
இதனால், உய்திவேண்டுவோர் தப்பாது செயற்பாலது இது' என்பது உணர்த்தப்பட்டது.

எய்திய காலத்(து) இருபொழு தும்சிவன்
மெய்செயின் மேலை விதிஅது வாய்நிற்கும்
பொய்யும் புலனும் புகல்என்றும் நீக்கிடில்
ஐயனும் அவ்வழி ஆகிநின்றானே. ***#2554***

ஒருவன் எய்தற்கரிய மானுடப் பிறவி தனக்கு எய்தி யிருப்பதையும், அதன் நிலையாமையையும் உணர்ந்து காலை, மாலை இருபொழுதும்

சிவன் வகுத்த உலகியல் அருளியல் இரண்டிலும் வாய்மையையே கடைப்பிடித்து ஒழுகுவானாயின்' அதுவே வருங்காலத்தில் அவன் பயனடைதற்கு ஏற்ற நெறி முறையாகும். சிவபெருமானும் அவ்வழியில்தான் புலப்பட்டு நிற்பான்.

விளக்கவுரை

'ஆகவே, எவ்வகையிலும் பொய்மையைப் பற்றாதொழிக' என்பதாம்.
'பொய்யாமை பொய்யாமை ஆற்றின், அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று' *
எனவும்,
'பொய்கடிந்(து) அறத்தின் வாவ்வார்;
புனற்சடை முடியார்க்கு அன்பின்
மெய்யடி யார்கட் கான
பணிசெயும் விருப்பில் நின்றார்' *8*
எனவும் அருளிச்செய்தமை காண்க. செய்தல், சொல்லாலும், செயலாலும் நிலைநிறுத்துதல். 'சிறிதளவு காலத்தையும் பொய்மையில் செலவழித்தல் கூடாது' என்பது, 'எய்திய காலத்து இருபொழுதும் சிவன் - மெய்செயின்' எனப்பட்டது.
இதனால், 'உய்தி வேண்டுவார்க்குப் பொய்மை கூடாது' என்பது வலியுறுத்தப்பட்டது. ஐம்புல விருப்பமே பொய்க்குக் காரணமாகும்' என்பதைக் குறிக்க அதுவும் உடன் விலக்கப்பட்டது.

எய்துவ(து) எய்தா தொழிவ(து) இதுஅருள்
உய்ய அருள்செய்தான் உத்தமன் நந்தி
பொய்செய் புலன்நெறி ஒன்பதும் தாழ்க்கொளின்
மெய்யென் புரவியை மேற்கொள்ள லாமே. **#2555**

யாதானும் ஒன்று கிடைப்பது அல்லது கிடையாது ஒழிவது ஆகிய இந்நிலையை திருவருளால் அமைவது. இதனை உத்தம குருவாகிய எங்கள் புகழ்மிக்க நந்திபெருமான் நாங்கள் உய் வடைதற் பொருட்டு எங்கட்கு அருளிச்செய்தார். ஆகவே, ஒன்றைப் பெற வேண்டியோ, அல்லது போக்க வேண்டியோ பொய்யை மேற் கொள்ளத் தேவையில்லை. ஆயினும் யோகியரே இந்நிலைமையைத் தெளிபவர்கள். அந்த யோகம் வாய்க்கவேண்டினால், பொய்ப் பொருளிலே பூசையை உண்டாக்குகின்ற நவத்துவாரங்களையும் அடைத்தலாகிய இமய நியமங்களைக் கைக்கொளல் வேண்டும். கைக்கொண்டால் உண்மையான வாசியோகம் எளிதாக அமையும்.

விளக்கவுரை

ஐம்பொறிகளில் மெய் தவிர ஏனைய நான்கும் ஏழு துளைகளாய்

உள்ளன. கன்மேந்திரியங்களில் எருவாய், கருவாய் இரண்டைக் கூட்ட ஒன்பது துவாரங்களாம் 'எருவாய்' வழியாக அபானனைத்தடுக்க வேண்டும்' என்பதும் யோக நூல் முறைமை, 'உலகத்தார் ஊர்வன பொய்க்குதிரை' என்றற்கு வாசி யோகத்தை 'மெய்யென் புரவி' என்றார். இதனால், 'வாய்மையை நன்கு கடைப்பிடித்தற்கு வழி யோகம்' என்பது கூறப்பட்டது.

கைகலந்தானைக் கருந்தினுள் நந்தியை
மெய்கலந் தான்றன்னை வேத முதல்வனைப்
பொய்கலந் தார்முன் புகுதானைப் புனிதப்
பொய்யொழிந்த தார்க்கே புகலிட மாமே. *#2556*

*(*இவ்வதிகாரத்துள் முன்பே இரு மந்திரங்களில் கூறியபடி*)*
வாய்மையாளரையே விரும்புதலும்' பொய்ம்மையாளரை வெறுத்தலும் உடையவனும், எல்லா உயிர் உள்ளங்களிலும் உள்ளவனும், வேத முதல்வனும் ஆகிய சிவபெருமானைப் பொய்யை யொழித்து, மெய்யாகப் பற்றினவர்க்கே அவன் புகலிடமாவான். *(*'மெய்யராகிப் பொய்யை நீக்கி வேதனையைத் துறந்து * செய்யரானார் சிந்தையானே தேவர் குலக்கொழுந்தே' என அருளிச்செய்தார் ஆளுடைய பிள்ளையாரும்*)*.

விளக்கவுரை

இரண்டன் உருபுகளை, 'ஒழிந்து பற்றினார்க்கே' என ஒருசொல் வருவித்து முடிக்க.
இதனால், பொய்யாமையானே முன் மந்திரத்திற் சொல்லிய திருவருள் கிடைத்தல் கூறப்பட்டது.

மெய்த்தாள் அகம்படி மேவிய நந்தியைக்
கைத்தாள் கொண்டாரும் திறந்தறி வாரில்லைப்
பொய்த்தாள் இடும்பையைப் பொய்யற நீவிட்டங்*(*கு*)*
அத்தாள் திறக்கில் அரும்பேற தாமே. *#2557*

உயிர்களின் உள்ளங்களாகிய கோயிலுக்கு உள்ளே சிவபெருமான் தனது நிலையான திருவடிகளை விரும்பி வைத்து விளங்குகின்றான் அக்கோயில் பூட்டப்பட்டுள்ளது. ஆயினும் அப்பூட்டைத் திறத்தற்குரிய திறவுகோல்கள் மக்கள் எல்லாரிடத்திலும் உள்ளது. இருந்து அந்தத் திறவுகோலைப் பயன்படுத்தி அந்தப் பூட்டைத்திறந்து சிவனைத் தரிசிப்பவர் யாரும் இல்லை. அதற்குக் காரணம், அருவருக்கத் தக்க பொருள்களைப் பொதித்து வைத்து மூடியுள்ள பைகளை அவர்கள் 'பொய்' என்கின்ற கயிற்றால் இறுகக் கட்டி, அவற்றைக் காவல் புரிந்து கொண்டிருப்பதாகும். மாணவகனே, நீயும் அவர்களைப்போல இருந்தும் விடாமல் அந்தப்பைக் காவலை உண்மையாகவே விட்டு, உன் கையில்

உள்ள அந்தத் திறவுகோலால் அந்தக் கோயிலைத் திறப்பாயாயின், கிடைத்தற்கரிய பேறு உனக்குக் கிடைக்கும்.

விளக்கவுரை

'தாள்மேவிய' எனச்சினைவினை முதல்மேல் நின்றது. கைத் தாழ் - இயல்பாகவே கையில் இருக்கின்ற திறவுகோல். என்றது, பிராணனை. பொய்த்தாழ் - பொய்ம்மையாகிய திறவுகோல். தாழ் இடுதல் - பூட்டுதல், பின்னர், 'பை' என வருதலால், இவை பையைக் கட்டுகின்ற கயிற்றையும், கட்டுதலையும் குறித்தன. பையாவது உடம்பு.

'இடும்பைக்(கு) இடும்பை இயல்உடம்பி தென்றே
இடுபொய்யை மெய்யென் றிராதே' 9

என ஔவையாரும் கூறினார். 'பைம்மறியாப் பார்க்கப்படும் 8என்பது நாலடி பின் இரு தாள்கள் 'தாழ்' என்பதன்மரூஉ. அது, பகுதிப்பொருள் விகுதி.

இதனால், 'வாசியோகத்தால் சிவனைத்தரிசித்தல் கூடும்' என்பது கூறப்பட்டது.

உய்யும் வகையால் உணர்வினால் ஏத்துமின்
மெய்யன் அரன்நெறி மேல்உண்டு திண்ணெனப்
பொய்யொன்று மின்றிப் புறம்பொலி வார்நடு
ஐயனும் அங்கே அமர்ந்துநின் றானே. **#2558**

பொய்ம்மையைச் சிறிதும் இல்லாது உறுதியாக அப்பாற்போக்கி, அகத்தில் மட்டுமன்றிப் புறத்திலும் வாய்மை விளங்க நிற்பாரது நடுவிலே சிவனும் விரும்பி எழுந்தருளி யிருக்கின்றான். ஆகையால், உய்தியின் பொருட்டு, அந்த நிலைமையை உணர்ந்து சிவனைத் துதியுங்கள் அப்பால், மெய்ம்மையின்கண் உள்ளவனாகிய சிவனை அடையும் வழிதானே கிடைப்பதாகும்.

விளக்கவுரை

'திண்ணென' என்பது தொடங்கி உரைக்க. ஒன்றும் - சிறிதும். புறத்திலும் வாய்மை பொலிதலாவது, கொள்ளும் கோலங்கள் அகத்தில் கொள்ளும் எண்ணங்களுக்கு ஏற்றவையாய் யிருத்தலும், நெஞ்சில் கரவு இன்மையால் முகம் மகிழ்ச்சியாற்பொலிதலும் போல்வன. நடு அங்கே - நடுவாகிய இடத்திலே. அமர்ந்து - விரும்பி. 'அடியார் நடுவுள் இருவீரும் இருப்பதானால்'1 என ஆளுடைய அடிகளும் அருளிச்செய்தார்.

இதனால், 'அகத்தும், புறத்தும் வாய்மையால் விளையும் தூய்மையே சிவநெறியும் ஆகும்' என்பது கூறப்பட்டது.

வம்பு பழுத்த மலர்ப்பழம் ஒன்றுண்டு
தன்பாற் பறவை புகந்துணத் தான்ஒட்டா(து)

அம்புகொண்(டு) எய்திட்(டு) அகலத் துரந்திடில்
செம்பொற் சிவகதி சென்றெய்த லாகுமே *#2559*

நறுமணம் மிக்க மலர்களினின்றும் காய்த்துப் பழுத்த நல்ல பழம் ஒன்று தோட்டத்தில் உள்ளது. அதனை தோட்டத்தில் விளைவித்தவன் உண்ணாதபடி ஒரு கொடிய பறவை வந்து கொத்தித் தின்கின்றது. அஃது அவ்வாறு செய்யாதபடி வில்லில் அம்பைத் தொடுத்து எய்து பறந்தோடும்படி ஓட்டினால் சிவந்த பொன்போலும் கிடைத்தற்கரிய சிவகதியைச் சென்று அடையலாம்.

விளக்கவுரை

முன் மூன்று அடிகள் ஒட்டணியாய் நின்றன. மலர்கள், ஆறு ஆதாரங்கள். மணம் - தெய்வமணம். பல மலர்கள் பூத்துப் பொலிய, அவற்றின் பயனாக ஒருகாயே காய்த்துப் பழுத்த அரிய பழம் சிவம் 'வம்பு மலரிற் பழுத்த பழம்' என மாற்றியுரைக்க தோட்டம் - உடம்பு. தோட்டத்தை உடையவனாய், அதில் பயிர் செய்பவன் யோகி. பறவை - பொய்ம்மை. சிவத்தை மறைத்து விடுவதால், அதனை அப்பழத்தை உண்ணும் பறவையாகக் கூறினார். எய்தற்குரிய 'வில், நாண், அம்பு' இவை என்பது மேலே கூறப்பட்டது. *3*

இதனால், பொய்மை அகலப்போக்குதற்குப் பிரணவயோகம் சிறந்ததாதல் கூறப்பட்டது.

மயக்கிய ஐம்புலப் பாசம் அறுத்துத்
துயக்கறுத் தானைத் தொடர்மின் தொடர்ந்தால்
தியக்கம் செய்யாதே சிவன்எம் பெருமான்
உயப்போ கெனமனம் ஒன்றுவித் தானே. *#2560*

தன் அடியார்களுடைய ஐம்புல ஆசையாகிய பாசங்களைப் போக்கி, அவர்கள் கலக்கத்தை நீக்கித் தெளிவைத் தருகின்றவன் சிவன் ஆதலின், அவனை அறிவினாலே பற்றுங்கள்; பற்றினால், அவன் சற்றும் தாழாது, உங்களை 'உய்யப் போக' எனத் திருவுளம்பற்றி, உங்களுடைய மனங்களை ஒருவழிப்படுத்துவான்.

விளக்கவுரை

துயக்கறுத்தமை தம்மை உள்ளிட்ட பலரது அனுபவம் பற்றிக் கூறினார். அறிவால் தொடர்தல், சரியை, கிரியை யோகங்களில் இயன்றவாற்றால் பற்றுதல். என்னை? தொடர்ந்து நிகழ்வன அவையேயாதலின். 'மனம் பல வழியிற் சென்று அலைதலானே அது பொய்ம்மையையும் ஏற்கின்றது; ஆகவே, மனம் ஒருவழிப்படின் பொய்ம்மையும் இல்லாதொழியும்' என்பதாம். 'போக' என்னும் வியங்கோளின் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. தெளிவுபற்றி எதிர்காலம் 'ஒன்று வித்தான்'

என இறந்த காலமாகச் சொல்லப்பட்டது.
இதனால், 'யோகம் இயலாதவர் சரியை கிரியைகளாலாயினும் பொய்ம்மையைப் போக்கற்பாலர்' என்பது கூறப்பட்டது.

மனமது தானே நினையவல் லாருக்*(கு)*
இனம்எனக் கூறும் இருங்காயம் ஏவல்
தனிவினில் நாதன்பால் தக்கன செய்யில்
புனிதன் செயலாகும் போதப் புவிக்கே. ***#2561***

ஒருங்கிய மனம் தானாகவே சிவனை நினைக்கும் நிலையுடையதாகும். அந்நிலைக்கு மனத்தைக் கொணர வல்லவர் கட்கு, அனைத்துயிர்க்கும் துணையாகின்ற முறையில் அவர்கட்கு அமைந் துள்ள தூல உடம்பும் அவர் ஏவியவற்றையே செய்யும் ஏவலாளியாய்க் கீழ்ப்படிந்து நிற்கும். அக்கீழ்ப்படிதலைக் கொண்டு சிவன்பால் ஏற்புடைய செயல்களைச் செய்தால், இப்பிறப்பிலேயே அவர் செய்யும் செயல்கள் எல்லாம் மிகவும் சிவன் செயலேயாய்விடும்.

விளக்கவுரை

'அவர்கட்குப் பந்தம் ஆகா' என்பதாம். 'நினைய' என்பதன்பின், 'செய்ய' என ஒரு சொல் வருவிக்க. ஏவல் தணிவு - ஏவலிற்படும் பணிவு. தக்கன சரியை கிரியா யோகங்கள். 'புவிக்கே போதப் புனிதன் செயல் ஆகும்' என இயைக்க. புவி - நில உலகம். இதனால், 'இப்பிறப்பு' என்பது குறிக்கப்பட்டது. 'புவிக்கு' என்பது உருபு மயக்கம். போத - மிகவும். இதனால், முன் மந்திரத்திற் கூறியவாறு மனம் ஒருமிக்கச் செய்தலின் பயன் கூறப்பட்டது. அதனானே வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்று வாயும் ஆயிற்று.

'மெய்ம்மையாம் உழவைச் செய்து,
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்பராகில்
சிவகதி விளையு மன்றே' *

என்னும் அப்பர் திருமொழியை இவ்வதிகாரத்துடன் கூட்டியுணர்க.

*10.39.*ஞானிகள் செயல்

முன்னை வினைவரின் முன்உண்டு நீங்குவர்
பின்னை வினைக்*(கு)*அணார் பேர்ந்*(து)*அறப் பார்ப்பர்கள்
தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
நன்மையில் ஐம்புலன் நாடலி னாலே. ***#2562***

தம்மை நன்குணர்ந்தபின் தலைவனையும் உள்ளவாறு அறிந்தவரே *(*சிவஞானபோதம் - அவையடக்கம்*)* உண்மைத் தத்துவஞானிகள். அவர்கள் பிராரத்த வினைதோன்றினால், 'இது நாம் முகந்துகொண்டு வந்தது, இதனை அனுபவித்துத்தான் ஆகவேண்டும்' என்று உணர்ந்து அதன் பயனாகிய இன்பத்தில் விருப்பமும், துன்பத்தில் வெறுப்பும் இல்லாமல் கடன்கழிப்பார்போலப் பற்றற்றே ஐம்புலன்களை நுகருமாற்றால் அவ்வினையினின்றும் நீங்குவர். *(*பற்றுச்செய்யா மையால் அவ்வினை அவர்தம் உணர்வைத் தாக்காமல். உடலையே தாக்கி ஒழியும்*)* விருப்பு வெறுப்பு இன்மையால் இன்பத்தை நிலை நிறுத்திக்கொள்ளவும், துன்பத்தை விரைவில் ஒழிக்கவும் அவர்கள் எண்ணமையால், அவர்கள் ஆகாமிய வினையில் வீழ்தல் இல்லை. அதன் தோற்றத்தை நிகழாதபடி தடுத்து விடுவார்கள்.

விளக்கவுரை

'அதனால், உடம்பு நீங்கியபின் அவர்கள் அடைவது வீடு பேறேயன்றிப் பிறவியன்று' என்பதாம். 'தன்' என்பதை, 'தலைவன்' என்னாவிடில், 'ஞானிகள்' என்னும் பன்மையோடு இயையாமை அறிக. ஈற்றடியை, 'முன்னை வினைவரின்' என்பதன் பின்னர்க் கூட்டுக. 'வினைக்கு' என்பது உருபு மயக்கம். அண்ணார் - சேரார்.
இதனால், ஞானிகள் பிறப்பை அறுத்துக்கொள்ளுமாறு கூறப்பட்டது.

தன்னை அறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த திருவரு ளாலே. ***#2563***

முன் மந்திரத்திற் கூறிய அந்த ஞானிகள், அம் மந்திரத்தில் கூறியபடி தாங்கள் வினையினின்று நீங்குதலோ டல்லாமல், தங்களைச் சிவமாகக் கருதி வந்து அடைந்தவர்களது வினைகளையும் சிவனது திருவருள் வியாபகத்தில் நின்று நீங்கியருள்வார்கள்.

விளக்கவுரை

இதனை மெய்கண்டதேவர், 'தம்மையுணர்ந்து தமையுடைய தன் உணர்வார் - எம்மை யுடைமை' *(*சிவஞான போதம் - அவையடக்கம்*)* எனவும்,

'சிவன் குருவாகி வந்து ஞானத்தை உணர்த்துவான்' என்றல் இத்தகைய ஞானிகளைச் சிவன் அவர் தானேயாக ஆவேசித்து வந்து அருள்புரிதலையே என்பதை, அவர்,9

'இவ்வான்மாக்களுக்குத் தமது
முதல்தானே குருவுமாய்
உணர்த்தும் என்றது,
அவன் அன்னியமின்றிச் சைதன்னிய
சொரூபியாய் நிற்றலான்'1

எனவும் அருளிச் செயதைமையால் உணர்க.

முன் மந்திரத்தில் 'வரின்' என்றதனால், 'முன்னைவினை' என்றது பிராரத்துவமும், இம்மந்திரத்தில், 'முடிச்சு' என்றதனால் 'முன்னை வினை' என்றது சஞ்சிதமும் ஆயின. வருவதற்கும், முடிச்சாய்க் கிடத்தற்கும் உரியன அவையேயாகலின், 'அவிழ்ப்பர்' என்றது, வினைகள் பின் நின்று விளையாது உருண்டோட வீழ்த்துவர் என்றதாம். முடிச்சு - மூடை. பின்னை வினை, ஆகாமியமே. அதனைப் பிடித்துப் பிசைதலாவது, அது தோன்றும் பொழுதே மாணாக்கரது உள்ளத்தில் தம்மையும், தமது உபதேச மொழியையும் நினைவு கூர்விக்கு மாற்றால் அவற்றின் கொடுமையையும் நினைந்து அஞ்சச்செய்து முற்றாதபடி போக்குதல். 'சென்னியில் வைத்த' என்றது, அது மேலாய் நிற்கத் தாம் அதன் கீழாய் அடங்கி நிற்றல். அதனால் அவரது செயல் சிவன் செயலேயாதல் உணர்த்தப்பட்டது, 'திருவருளாலே' என்றதனால் சிவசமவாதம் கூடாதியிற்று.

ஞானிகளாவார் குருவருள் பெற்றவர்களே. அவர்களது 'சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம்' - என்னும் மூவகை வினைகளுள் சஞ்சிதம் ஞான தீக்கையால் எரிசேர்ந்த வித்துப் போலக்கெட் டொழியும். பிராரத்தம் அனுபவத்தால் தீரும். எனினும் அஃது அவர்களது உணர்வைத் தாக்காது உடலளவாய் ஒழிதலால், ஆகாமியத்தை உண்டாக்காது. சோர்வு காரணமாக ஒரோவழி ஆகாமியம் தலை யெடுக்குமாயினும் அது உடனே அவர்களது குருலிங்க சஙகமங்களைப் பற்றிய மனமொழி மெய் வழிபாடுகளால் முறுகுதலின்றிக் கெடும். இவ்வாற்றால் ஞானிகள் தாம் வினையினின்று நீங்குதலேயன்றித் தம்மை யடைந்த பக்குவிகளுக்கு ஆசிரியராய், அவர்களது வினையையும் நீக்குவர். இஃதே இம்மந்திரத்தால் கூறப்பட்டது. இங்ஙனம் கொள்ளாக்கால், கூறியது கூறலாய், இதனாற் போந்த பொருள் ஒன்றும் இல்லையாம். 'சென்னியில் வைத்த திருவருளாலே' எல்லாம் செய்தல் மேற்பல விடத்தும் கூறப்பட்டமையால், அதனையே கூறுதற்கு இங்கொரு மந்திரம் வேண்டா.

மூன்று வகையான வினைகளும் நீங்கும் முறை மேற்கூறிய வாறே யாதலை,
'எல்லையில் பிறவி நல்கும்
இருவினை எரிசேர் வித்தின்
ஒல்லையின் அகலும்; ஏன்ற
உடல் பழ வினைய தூட்டும்;
தொல்லையின் வருதல் போலத்
தோன்றிரு வினைய துண்டேல்
அல்லொளி புரையும் ஞானத்(து)
அழல் உற அழிந்து போமே'l
என்னும் சிவப்பிரகாசத்தாலும்,
'ஏன்ற வினை உடலோடு எகும் இடை ஏறும்வினை
தோன்றில் அருளே சுடும்' -திருக்குறள் - 98.
என்னும் திருவருட்பயனாலும் அறிக. மற்றும்,
'உணக்கி லாததோர் வித்து மேல் விளையாமல்
என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம்
நீ வந்து காட்டினாய்'
-திருவாசகம் - திருக்கழுக்குன்றப் பதிகம் - 1.
சிவமேயான ஞானிகள் பக்குவிகளுக்குச் சிவமாகவே தோன்றுவர். அதனால் அவர்களைக் கண்டவுடன் பக்குவிகள் தம்மையிழந்து அவர்பால் அடைக்கலம் புகுவர். ஞானிகளும் அவர்களது பக்குவத்தை உணர்ந்து அவர்களைத் தங்கட்கு ஆளாகக் கொண்டு, அருளுதலைச் செய்வர். இவற்றையெல்லாம் ஆசிரியர் அருணநந்தி தேவர், உமாபதி தேவர் வரலாறுகளின் வைத்து அறிக.
இதனால், ஞானிகள் தாங்கள் நலம் பெறுதலேயன்றிப் பிறரையும் நலப்படுத்துதல் கூறப்பட்டது. இந்நாயனார்,
'நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்'
எனத் தொடக்கத்திற்றானே அருளிச்செய்தது நினைக்கற்பாலது.

மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்
மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னா
மனவாக்குக் கெட்டவன் வாதனை தன்னால்
தனைமாற்றி ஆற்றத் தகும்ஞானி தானே. **#2564**

உயிர்களின் மனமும், வாக்கும், காயமும் நேர்முறையில் செயற்படாது, கோடும் முறையில் செயற்பட்டால் உயிர்கட்கு, நீக்குதற்கரிய வலிய வினைகள் உளவாகும். அவை அவ்வாறின்றி, நேர்முறையில் செயற்பட்டால் அவ்வாறான நிலைமை ஏற்படாது. (எனினும்

அஞ்ஞானமுடையவர்களது மனோவாக்குக் காயங்கள் நேர்முறையிற் செயற்படமாட்டா). இனி ஒருவன் அஞ்ஞானத்தின் நீங்கிமெய்ஞ்ஞானத்தைப்பெற்று, மனோ வாக்குக் காயங்களின் பிடியில் அகப்படாது விடுபட்டானாயினும், பழைய வாசனை காரணமாக ஒரோவழி அவை தம்மியல்பில் வந்து அவனைத் தாக்குதல் கூடும். அப்பொழுது அவன் தற்போதத்தை நீக்கிச் சிவபோதத்தை உடையவனாய் அவற்றைச் செயற்படுத்தினால், அவன், 'ஞானி' என்னும் நிலையினின்று நீங்கான்.

விளக்கவுரை

ஞானிகள் அவ்வாறுதான் அவைகளைச் செயற்படுத்தி நிற்பார்கள்' என்பது குறிப்பெச்சம். மனோ வாக்குக் காயங்கள் நேர் முறையில் செயற்படுதலாவது, 'நாம் செயற்படுவது திருவருளால்' என்பதை மறவாமல் நினைந்து, தமது செயலை இறைவனது பணியாகக் கருதிச் செயற்படுதல். உடையானது நேர்மை, நேர்மை இன்மைகள் உடைமைகளின் மேல் ஏற்றிச்சொல்லப்பட்டன. 'தன்' என்றது தற்போதத்தை, தற்போதத்தால் நுகராது சிவபோதத்தால் நுகரின் சிற்றின்பமும் பேரின்பமேயாகும். இதனை,

'பெற்றிசிற் றின்பமே பேரின்ப மாம்அங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற,
முளையாது மாயையென் றுந்தீபற' -திருவுந்தியார் - *33.*

எனவும்,

'உடம்புடைய யோகிகள்தாம் உற்றசிற் றின்பம்
அடங்கத்தம் பேரின்பத்(து) ஆக்கில் - தொடங்கி
முளைப்பதுமொன் றில்லை, முடிவதுமொன் றில்லை;
இளைப்பதுமொன் றில்லை இவர்'
-திருக்களிற்றுப்படியார் - *76.*

எனவும் போந்த சாத்திரங்களாலும், மற்றும்,

'காணும் கரணங்க ளெல்லாம்பே ரின்பமெனப்
பேணும் அடியார் பிறப்பகலக் - காணும் பெரியான்' -திருவாசகம் - பண்டாய நான்மறை - *6.*

என்னும் திருமொழியாலும் உணர்க. வாதனை - வாசனை. தன், சாரியை. வாதனையால் விளைவன 'வாதனை' எனப்பட்டன. 'வாதனைதன்னால்' என்னும் மூன்றாம் உருபை, 'வாதனைதன்கண் என ஏழாம் உருபாகத் திரிக்க.

இதனால் ஞானிகள் பிராரத்தம் காரணமாகப் பழைய வாசனை தோன்றும்பொழுது அதனால் திரிபெய்தாது நிற்குமாறு கூறப்பட்டது.

10.40. அவா அறுத்தல்

வாசியும் மூசியும் பேசி வகையினால்
பேசி யிருந்து பிதற்றிப் பயனில்லை
ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்
ஈசன் இருந்த இடம்எளி தாகுமே. ***#2565***

வாசி யோகத்தின் பெருமையையும், அதிற் பயிலும் யோகியின் பெருமையையும் நூல்களால் உணர்ந்து அவற்றை வகை வகையாக விரித்துரைப்பவனைப் போல, ஞானிகளும் விரித் துரைத்துக் கொண்டு காலம் போக்குவதில் பயனில்லை. ஆகையால் நீவிர் உயிரல் பொருள்கள் மேல் செல்லும் ஆசையையும் உயிர்ப் பொருள்கள்மேல் செல்லும் அன்பினையும் அடியோடு நீக்குங்கள். நீக்கினால் நீவிர் இறை நிலையை அடைதல் எளிதாகும்.

விளக்கவுரை

'இல்லையேல், அரிதாகும்' என்பதாம். மூசுதல் - மூடுதல். மூசி - மூடியிருப்பவன். மூடப்படுவன கண்கள். பேசி - பேசுபவன். வீண் காலம் போக்குதலை, 'பிதற்றுதல் என்றார். அன்பு இல்லறத்தார்க்கே உயிரனவாய் நீங்க, ஞானிகட்கு அருளே உரித்தாதல் பற்றி, அன்பும் அறுக்கப்படவேண்டியதாயிற்று. 'இடம்' என்றது நிலையை, இதனால், 'சொல்லளவாய் நிற்கும் அவா அறுத்தல் ஞானி கட்கும் பயன் தருவதாகாது' என்பது கூறப்பட்டது. 'எனபோல் உடம்பெலாம் வாயாய்ப் பிதற்றுவர் ஆர்' எனத் தாயுமான அடிகளும் கூறினார்.

மாடத் துளான் அலன் மண்டபத் தான்அலன்
கூடத் துளான்அலன் கோயிலுள் ளான் அலன்
வேடத் துளான்அல்லன் வேட்கைவிட் டார்நெஞ்சில்
மூடத்து ளேநின்று முத்திதந் தானே. ***#2566***

சிவன், ஆசையால் மூடப்பட்டுள்ள அந்த மனங் களிலே வெளிப்படாது மறைந்து நின்று, ஆசையற்றவர்களது மனங் களிலே வெளிப்பட்டு விளங்கி, அவர்கட்கு முத்தியைத் தருகின்றான். ஆகையால் அவன், அவனை வைத்து வழிபடுகின்ற மாடம், மண்டபம், கூடம், கோயில், திருவேடம் ஆகிய இவ்விடங்களில் இல்லை.

விளக்கவுரை

மாடம் - இல்லங்களில் சுவர்களில் அமைக்கப்படும் சிறு நிலைகள். அடியார் வேடமும் சிவன் உரையும் இடமாகக் கொள்ளப்படுதல் தெளிவு. 'இவ்விடங்களில் சிவன் இல்லை' என்றது, ஆசையுற்ற மனங்களுடன் அவ்விடங்களில் அவனை வழிபடு வார்க்கு. 'மூடு அத்துளே நின்று' எனப்பிரித்து, அதனை, வேட்கை விட்டார் நெஞ்சில்

முத்தி தந்தான்' என்பதற்கு முன்னே கூட்டி முதற் கண் வைத்து உரைக்க. 'அதனுள்' என்பது, 'அத்துள்' என மருவிற்று. நின்று - மறைந்து நின்று. 'மூடு அத்துளே மறைந்து நின்று' என்றதனால், மூடுதல் இன்றி விளங்கிய நெஞ்சில் வெளிப்பட்டு நிற்றல் பெறப் பட்டது. முன் மந்திரத்து நின்ற 'ஈசன்' என்பதே இம்மந்திரத்திற்கு எழு வாயாய் வந்து இயைந்தது.இதனால், 'உள்ளத்தில் ஆசை அறா தவர்கள் வெளியில் தனியிடங்களில் சிவனை வைத்து வழிபடுதலால் பயனில்லை, என்பது கூறப்பட்டது.

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே. *#2567*

மேற்கூறிய உலக ஆசைகள் அனைத்தையும் நீவிர் கட்டாயமாக அறவே விட்டொழியுங்கள்; அவைகளை விட்டு நீவிர் சிவனை அடைந்தபின்பும் பழைய பழக்கத்தால் அந்த ஆசைகள் மீண்டும் உங்கள்பால் தோன்றுதல் கூடும். அப்பொழுதும் அதனை முளையிலேயே அறுத்தெறியுங்கள்; ஏனெனில் ஆசை மிகுந்து மிகுந்து வருவதால்தான் எந்நிலையிலும் துன்பங்கள் மிகுந்து மிகுந்து வருகின்றன. ஆசையை நீக்க நீக்க, இன்பங்களே மிகுந்து மிகுந்து வரும்.

விளக்கவுரை

அடுக்கு, வயியுறுத்தற்பொருட்டு, 'ஈசனிடத்தாயினும்' என ஏழனுருபுபுணர்ப்பினும் அமையுமாயினும் அவ்வாறு புணர்த்தோதாது, 'ஈசனோடாயினும்' என மூன்றுனுருபு புணர்த் தோதியதனையும் நோக்காது, 'ஈசனை விரும்புதலையும் விடுமின்' என உரைப்பாரும் உளர். அந்த விருப்பத்தையும் அறுத்தவர் அடைவது யாது? மீமாஞ்சகரும், தருக்க மதத்தவரும், பாடணவாத சைவரும் கூறும், யாதோர் உணர்வுமின்றிக் கல்லுப்போலக் கிடக்கும் நிலையேபோலும்! ஈசனிடத்திருந்தபொழுதும் உலக ஆசை துன்பந்தருதற்கு நம்பியாரூரர் வரலாறு நற்சான்று பகரும். பின்னிரண்டடிகளில் வந்த ஆக்கம் மிகுதி மேலன.
இதனால், அவா துன்பத்திற்கும், அவா இன்மை இன்பத்திற்கும் காரணம் ஆதல் கூறப்பட்டது.

அடுவன பூதங்கள் ஐந்தும் உடனே
படுவழி செய்கின்ற பற்றற வீசி
விடுவது வேட்கையை மெய்ந்நின்ற ஞானம்
தொடுவது தம்மைத் தொடர்தலும் ஆமே. *#2568*

கொல்வது போலும் துன்பத்தை ஒருங்குகூடிச் செய்வனவே

ஐம்பூதங்கள், அவற்றின்மேல் வைக்கின்ற பற்று மீண்டும் மீண்டும் சிக்குதற்கு வழி செய்வதே. அதனால், அந்தப் பற்றினைப் போக்கி, மீண்டும் அவற்றின்மேல் செல்ல எழுகின்ற ஆசையை எழாமல் தடுப்பதே நிலைத்து நிற்கின்ற ஞானமாகும். அந்தப் பூதங்களை மனத்தால் சிறிது தீண்டுதலும் அவை தொடர்தலுக்கு வழியேயாகும்.

விளக்கவுரை

அடுதல் - கொல்லுதல். இங்கு அதனோடொத்த துன்பத்தைக் குறித்தது, 'கொல்லப் பயன்படும் கீழ்'* என்பதிற்போல் ஐந்து பூதங்களும் துன்பம் செய்தலாவது, அவை உடம்பாகி நின்று, நோய், பசி முதலியவற்றைச் செய்தல், எனவே, 'பற்று' என்றதும் உடம்பிற் பற்றேயாயிற்று. உடம்பிற் பற்றே வேட்கை பலவற்றிற்கும் காரணம் ஆதலை அறிக. உடன் - ஒன்றுகூடி. உம்மை, இறந்தது தழுவிய எச்சம்.
இதனால், 'ஆசைகட்குக் காரணம் உடம்பின்மேல் பற்று' என்பது கூறப்பட்டது.

உவாக்கடல் ஒக்கின்ற ஊழியும் போன*(து)*
உவாக்கட லுட்படுத் துஞ்சினர் வானோர்
அவாக்கட லுட்பட்*(டு)* அழுந்தினர் மண்ணோர்
தவாக்கடல் ஈசன் தரித்துநின் றானே. ***#2569***

நிறை மதி நாளன்று பொங்குகின்ற கடலைப்போல ஊழிவெள்ளம் தோன்றி உலகை விழுங்கிவிட்டு மறைந்தது. என்றும் கெடாத இன்பக்கடலை இறைவன் தாங்கிக் கொண்டிருக்கின்றான். ஆயினும், வானோரும், மண்ணோரும் ஆசைக்கடலில் மூழ்கியிருந் தமையால் இறைவனது இன்பக்கடலை அடைய மாட்டாது, அந்த ஊழி வெள்ளத்தில் மூழ்கி அழிந்தனரேயன்றி பயன் ஏதும் பெற்றாரில்லை.

விளக்கவுரை

ஈற்றடியை முதலடியின் பின்னர்க்கூட்டி, வானோர், மண்ணோர் அவாக் கடலும் பட்டு அழுந்தினராய், உவாக் கடலுட் பட்டு துஞ்சினர்' என முடிக்க. பின் வந்த 'உவாக்கடல்', 'மேற்கூறிய அந்தக் கடல்' என்னும் பொருட்டாய் நின்றது. ஏனைப் பிறப்புக்கள் பலவற்றினும் சிறந்த பிறப்பினராகிய தேவரும், மக்களும்கூட ஆசையால் ஏனைப் பிறப்பினரே தேவரும், மக்களுங்கூட ஆசையால் ஏனைப் பிறப்பினரே ஆயினர்' என்றபடி. 'அழுந்தினர்' என்பது முற்றெச்சமாய் நின்றது. அவாக்கடலைத் துன்பக் கடலாக வருணித்தமையால், 'தவாக்கடல்' என்றது இன்பக் கடலாயிற்று.
இதனால், மக்கள், தேவர் பிறப்பினையும் ஆசை பயனில்லன ஆக்குதல் கூறப்பட்டது.

நின்ற வினையும் பிணியும் நெடுஞ்செயல்
துன்றுந் தொழில்அற்றுச் சுத்தம் தாகலும்
பின்றைங் கருமமும் பேர்த்தருள் நேர்பெற்றுத்
துன்றி அழுந்தலும் ஞானிகள் தூய்மையே. *#2570*

ஞானிகளாயினார் செய்யும் வீட்டு நெறிச் செயலாவன, (தீக்கையால் எரிக்கப்பட்டு ஒழிந்த சஞ்சித வினைபோக, முகந்து கொண்டு) எஞ்சி நின்ற பிராரத்த வினைத் தாக்கத்தையும், கருவி கரணங்களால் நிற்கும் மாயையின் தாக்கத்தையும் வாசனை யளவாய் நிற்கும் ஆணவத்தின் தாக்கத்தையும் முன்போல நீடியாது (சிவஞானபோதப் பன்னிரண்டாம் சூத்திரத்திற் கூறிய முறையால்) உடனே தடுத்துப் போக்கித் தூய்மையோடிருத்தலும், ஐந்தொழில் முதல்வர் செய்யும் ஐந்தொழிலின்றும் நீங்கிச் சிவனது திருவருளைப் பெற்று அவற்றால் அவனை நேரே கூடி அவனது இன்பத்தில் மூழ்குதலுமேயாகும்.

விளக்கவுரை

'பின்னும் பின்னும் ஆசையில் வீழ்ந்து அழிவதன்று' என்பதாம்.
'தலைப்பட்டார் தீரத் துறந்தார்; மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்'*
என்றருளினார் திருவள்ளுவர். பிணி - கட்டு; நோயுமாம். வினையை முன்னர்ப் பிரித்தமையால் பிணி ஏனையவாயின. 'பின்றை' என்பதன் ஈற்று ஐகாரமும் அதன்பின் உம்மையும் தொகுத்தலாயின. 'பின்றை' என்பது, 'மற்று' என்னும் பொருளதாயிற்று. பேர்த்தல் - நீக்குதல் அருள்பெற்று, நேர்த்துன்றி' என இயைக்க. அழுந்துதலுக்கு இடம் ஆற்றலால் பெறப்பட்டது. தூய்மை - வீடு. இஃது அதற்குரிய செயல்களைக் குறித்தது.
இதனால், 'ஆசை அற்றொழிதற் பொருட்டு ஞானிகள் செய்யும் செயல்கள் இவை' என்பது கூறப்பட்டது.

உண்மை உணர்ந்துற ஒண்சித்தி முத்தி ஆம்
பெண்மயல் கெட்டறப் பேறட்ட சித்தியாம்
திண்மையின் ஞானி சிவகாயம் கைவிட்டால்
அண்மை அருள்தான் அடைந்தன்பின் ஆறுமே. *#2571*

பொருளியல்புகளை உள்ளவாறு உணருமாற்றால் பொய்ப் பொருள்களில் ஆசையை அறத்தொலைத்து, மெய்ப் பொருளை உணர்ந்து நிற்றலால் அடையப்படும் வீடு பேறே ஒருவனுக்குச் சிறந்த பேறாகும். அவ்வாறன்றிப் பெண்ணாசையை மட்டும் தொலைத்துப் புகழ், பொருள் முதலியவற்றை அவாவி யோகத்தில் நிற்றலால் பெறும் பேறு அட்டமாசித்திகளாம். (அவை பிறப்பை நீக்காமையால் 'பேறு' எனப்படா) மற்று, மேற்கூறியவாறு மெய்யுணர்தலால், 'உரன் என்னும்

தோட்டியான் ஓர் ஐந்தும் காக்கும்'3 திறம் பெற்ற ஞானி தனுவோடு (உடம்போடு) இருப்பினும் அவனது தனு சிவதனுவேயாகும், பிராரத்தம் முடிந்தபின் அத்தனு நீங்கினால், அவன் சிவனை மிக அணியனாய் அணைதற்குரிய அருளைப் பெற்று அணைவான். அணைந்தபொழுது சிவனிடத்தே அன்பு மீதூர்ந்து அவன் சிவனது இன்பத்திலே அமைதியுடன் திளைத்திருப்பான்.

விளக்கவுரை

சிவ தனுவின் பெருமை திருவுருத்திரத்துள் பின்வருமாறு கூறப்பட்டது.

'மகாருத்திரரே, உலகியலாகிய பிணிக்கு
மருந்தாய் உள்ளதும், உம் அருளைப்பெற்றுள்ள
உருத்திரருடனும் இரண்டறக் கலந்து உயிர்க
ளுக்குத் துன்பத்தை நீக்கி, இன்பத்தைத் தருகின்ற
மருந்தாய் உள்ளது மான உமது, சத்திமய
மான நன்மை மிக்க எந்தத் தனு
(உடம்பு) உண்டோஅந்தத் தனுவினால்
எங்களை நல்வாழ்வு வாழ அருளும்'*

இன்னும் அதனுள் அதுபற்றி,

'உருத்திரரே, (கயிலை) மலையில் வீற்றிருந்து
உலகிற்கு இன்பம் ஊட்டுபவரே,
சாந்தமானதும், நன்மை மிக்கதும்,
வினையற்ற நிலையை (வீட்டினை)
விளக்கி நிற்பதுமாய் எந்தத் தனு
உள்ளதோ அந்த உம்முடைய தனுவால்
எங்களுக்கு உண்மை விளங்கும்படி
அருள்வீராக' 3

என்றும் கூறப்பட்டது. 'சிவ ஞானிதன் தனுவும் இத்தகையதாகிய சிவ தனுவே' என்றற்கு, 'சிவ காயம்' என்றார். 'உற' என்பதன் 'வரும்' என ஒரு சொல் வருவித்து 'வரும் முத்தியே ஒண் சித்தியாம்' என முடிக்க. பெண் மயல் கெடுதல் 'நியமம்' என்பதை உணர்த்திப் பின்யோகத்தையும் உணர்த்திற்று. 'கெட்டறல்', ஒருபொருட் பன்மொழி. பேறு - பெறப்படுவது. திண்மையின் ஞானி - திண்மையை (மன உறுதியை) உடைய ஞானி. 'அண்மையாய்' என ஆக்கம் வருவிக்க. அடைந்தபின் அன்பு மேன்மேற் பெருக, அதனானே இன்பம் மேன்மேல் எல்லையின்றி விளையும் என்க. 'அன்பே இன்பமாம்' என்பதை,

'இன்பில் இனிதென்றல் இன்றுண்டேல், இன்றுண்டாம்; அன்பு
நிலையே அது'1

என்னும் திருவருட் பயனால் அறிக. அறிந்தாலன்றி அன்பு உண்டாகாது,

ஆகவே, ஞானத்தின் பயனே பத்தியாம். இதனைச் சேக்கிழார்
'ஞானம் ஈசன்பால் அன்பே
என்றனர் ஞானம் உண்டார்'
என்று அருளியது காண்க. சில சமயிகள், 'ஞானமே முடிநிலையானது' எனக் கூறிப்பத்தியைப் படிநிலையாகக்கொள்வர். அவர்களை,
'வித்தினைத் தேடி முளையைக்கை விட்டவர்
பித்தேறி னார்களென் றுந்தீபற;
பெறுவதங் கென்பெணே உந்தீபற'3
எனவும், அவர்களது சமயங்களையும் சமய நூல்களையும்,
'சாவிபோம் மற்றைச் சமயங்கள் புக்குநின்(று)
ஆவி யறாதேஎன் றுந்தீபற;
அவ்வுறை கேளாதே உந்தீபற'l
எனவும் திருவுந்தியார் கூறிற்று, இது பற்றி,
'வித்தும் அதன் அங்குரமும் போன்றிருக்கும் மெய்ஞ்ஞானம்
வித்தும அதன் அங்குரமும் மெய்யுணரில் - வித்ததனில்
காணாமை யால் அதனைக் கைவிடுவர்; கண்டவர்கள்
பேணாமை யால் அற்றார் பேறு'9
எனக்கூறிய திருக்களிற்றுப்படியாரையும் நோக்காது' முளையைக் கைவிட்டவர்' என்பதற்குப் பிறிதுரை உரைத்தாரும் உளர். சாவி போதலாவது, விளைத்த பயிர் கதிர்விட்டு முற்றியும் நிரம்ப முற்றிப் பயன்படும் அளவிலே அங்ஙனமாகாது காய்ந்து பதராகி விடுதல். ஞானத்தைத் தந்தும், அதன் பயனாகிய அன்பைத் தராதுபோதற்கு இஃது உவமையாயிற்று. இனித் திருக்களிற்றுப்படியாருள், 'காணாமையால் அதனைக் கைவிடுவர்' என்றது பிற சமயத்தாரைக் கருதியும், 'கண்டவர்கள் - பேணாமையால் அற்றார் பேறு' என்றது சித்தாந்த சைவருள்ளும் நூலறிவு பெற்றும் நுழைவின்றிப் பத்தி செய்யாதாரைக் கருதியும் என்க.
'நாணாமை, நாடாமை, நாரின்மை, யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்'*
என்னும் திருக்குறள் இங்கு நெஞ்சிற்பதிக்கற்பாலது.
'நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக'* என அம்மையார் அருளிச்செய்தார். இவ்வாறான அருமை தோன்றுதற்பொருட்டே 'இறுதியில் அன்பின் ஆறும்' என்று அருளிச்செய்தார். ஆறும் - அமைதியுறும்.
இதனால், ஞானத்தால் இருவகைப் பற்றும் அற்ற மெய் யுணர்வால் அறுக்கப்படும் அவா அறுதியே சிறந்ததாதல் கூறப்பட்டது.
'அவன் இவன் ஈசன்' என்(று) அன்புற நாடிச்

'சிவன் இவன் ஈசன் என்(று) உண்மையைஓரார்
பவனிவன் பல்வகை யாம்இப் பிறவிப்
புவன் இவன் போவது பொய்கண்ட போதே. #2572
சிவபெருமான் ஒருவனையே முதற் கடவுளாக உணர்தலே, முன்
மந்திரத்திற் கூறியவாறு உண்மையை உணர்தலாகும். அவ்வாறின்றி,
பிற கடவுளரை, 'அவனே கடவுள், இவனே கடவுள்' என உணர்ந்து
அன்பு செய்வன எல்லாம் இறையன்புகள் ஆகா; உயிர் அன்புகளே.
தான் உண்மையை உணர்ந்துவிட்டதாகக் கருதிய ஒருவன் அதன்
பின்னும் வலிய பலவகைப் பிறவிகளாகிய தேரினை ஊர்ந்து,
பலவகைப் புவனங்களாகிய வீதிகள்தோறும் பவனி வருதல் அவன்
பொய்யை மெய்யாகத் திரிய உணர்ந்த பொழுதேயாம்.

விளக்கவுரை

'அன்புற நாடி' என்பதை, நாடி அன்புற்று' என மாற்றிக் கொள்க. 'வன் பல்வகையாம் இப்பிறவியில் புவனியில் இவன் பவனி போவது பொய்கண்டபோதே என இயைத்துக்கொள்க. 'வன்பிறவி, பல்வகையாம் பிறவி' எனத்தனித்தனி முடிக்க. பிறவியில் உழலுதலைப் பவனியாக உருவகித்து, ஏனையவற்றை உருவகம் செய்யாமை ஏகதேச உருவகம். தொடர் வேறாதலின், ஈற்றடியில் 'இவன்' என்றது பன்மையொருமை மயக்கம் ஆகாமை யறிக. 'இவன்' இரண்டில் முன்னது, 'சிவனாகிய இவன்' என இருபெயரொட்டாய் அண்மைச் சுட்டுப் பெயர். பின்னது, மேற்கூறிய உணராருள் ஒருவன். 'புவனி' என்பதன் ஈற்று இகரம் தொகுத்தலாயிற்று.
இதனால், சிவபத்தியாலன்றிப் பிற தேவர் பத்தியால் பதவி ஆசைகள் நீங்காமை கூறப்பட்டது.

கொதிக்கின்ற வாறும் குளிர்கின்ற வாறும்
பதிக்கின்ற வாறிந்தப் பாரகம் முற்றும்
விதிக்கின்ற ஐவரை வேண்டா துலகம்
நொதிக்கின்ற காயத்துள் நூல்ஒன்றல் ஆமே. #2573
துன்பத்தைக் காய்தலும், இன்பத்தை உவத்தலும் ஆகிய
இத்தன்மைகளையே உள்ளத்தில் உறுதியாகக் கொள்ளும்
முறைமையையுடையதே இவ்வுலகம் முழுதும், ஆயினும், அந்தத் துன்ப
இன்பங்கள் அவற்றிற்குக் காரணமான புலன்களைக் கொணர்ந்து
பொருத்துகின்றவர் ஐம்பொறிகளாகிய துட்டரேயாகலின், அவரை
உலகம் வெறுத்தொதுக்கி, அழியும் தன்மையுடைய இவ்வுடம்பில்
இருந்துகொண்டே சிவநூல்களின் வழி நிற்றலே தக்கது.

விளக்கவுரை

'நிற்பின் அவா முற்றும் அறும்' என்பது குறிப்பெச்சம். பதிக்கின்றவாற்றை உடையதனை, 'பதிக்கின்றவாறு' என்றார். 'பாரகம்' என்றதும், 'உலகம்' என்றதும் உயிர்களை விதித்தல், இங்கு தப்பாது பொருதுதல். 'நொடிகின்ற' என்பது, எதுகை நோக்கி திரிந்து வலிமிகுந்தும் நின்றது. நொடிதல் - அழிதல், அது 'நொடித்தான் மலை'9 என்றமையானே விளங்கும். 'நூல்' என்றது, இங்கு அதிகாரத்தால் சிவநூலையே குறித்துக் கருவியாகுபெயராய், அதனால் உணர்த்தப்படும் நெறியைக்குறித்தது. அந்நெறியில் சொல்லப்படுவனவற்றுள் பத்தியே தலையானவாதாகையால், 'ஒன்றல்' என்றது அதனை ஒன்றுதலாகவே கொள்க. சிவ பத்தி மிகின், உலக ஆசை தோன்றாமை அறிக.
இதனால், ஆசையை அறுத்தற்கு உண்மை வழி சிவ பத்தியாதல் கூறிமுடித்து, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாயும் செய்யப்பட்டது.
[இதற்குப்பின் பதிப்புக்களில் காணப்படுகின்ற, 'உய்ந்தனம் என்பீர்; உறுபொருள் காண்கிலீர்' என்னும் மந்திரம் ஐந்தாம் தந்திரத்தில் 'யோகம்' என்னும் அதிகாரத்தில் வந்தது]

***10.41.*பத்தியுடைமை**

முத்திசெய் ஞானமும் கேள்வியுமாய் நிற்கும்
அத்தனை மாயா அமரர் பிரானைச்
சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற சோதியைப்
பத்தன் பரசும் பசுபதி தான் என்றே. *#2574*

வீடுபேற்றைத் தருகின்ற ஞான நூலைக் கற்கின்ற கல்வியின் பயனாயும், அவற்றைப் பற்றிக் கேட்கின்ற கேள்வியின் பயனாயும் உள்ளவனும், உலகிற்குத் தந்தையும் தேவர்கட்குத் தேவனும், தான் இயல்பாகவே தூயனாய், உயிர்கள் தூய்மை அடைதற்குரிய வழியாய் நிற்பவனும், அறிவே வடிவாய் உள்ளவனும் ஆகிய சிவனையே, 'உயிர்கட்குத் தலைவன்' என்று உணர்ந்து இறையன் புடையோன் போற்றுவான்.

விளக்கவுரை

'பத்தன்' என்பது சாதி யொருமை. பாசப்படுதற்குக் காரணம் உடம்பொடு புணர்த்தலாகக் கூறப்பட்டது. 'ஞானமும் கேள்வியும்' என்றது ஆகுபெயராய், அவற்றின் பயனைக் குறித்தது.
இதனால், 'இறையன்பாவது இது' என உணர்ந்தார் பத்திசெய்யும் முறை கூறப்பட்டது.

அடியார் அடியார் அடியார் அடிமைக்*(கு)*
அடியனாய் நல்கிட்*(டு)* அடிமையும் பூண்டேன்

அடியார் அருளால் அவனடி கூட்ட
'அடியான் இவன்' என்று அடிமைக்கொண்டானே. **#2575**
சிவனுக்கு அடியராயினார்க்கு அடியர் ஆயினார் சிலர் அவர்கட்கு
அடியராயினார் சிலர். அவர்கட்கு அடியராயினார் மற்றும் சிலர்
அவர்கட்கே நான் அடியவன் ஆக என்னைக் கொடுத்து அடியவனாகி,
அடிமைகட்குரிய பணிகளைச் செய்வதையே எனது கடமையாகவும்
மேற்கொண்டேன். அதனால் என்னை ஆளாக ஏற்றுக் கொண்ட
அடியார்கள் என்மேல் கருணை வைத்து அந்தப் பெரு மானுடைய
திருவடிகளில் என்னைச் சேர்ப்பிக்க, அப்பெருமானும் என்னைத்
'தனக்கே அடியவன்' என்று சொல்லி, நேராகவே என்னை அடிமை
கொண்டான்.

விளக்கவுரை

அடியார்க்கு அடியாரைப் பலராகக் கூறியது, 'அன்று தொட்டு இன்று காறும் அடியவர் பரம்பரை தொடர்ந்து வருகின்றது' என்பதை உணர்த்தற்கு. 'அந்தப் பரம்பரையில் வந்த எந்த அடியவர்க்கு அடிமை பூண்டாலும், அவர்களைச் சிவன் நேரே தன் அடியவராக ஏற்றுக்கொள்வான்' என்பதே இங்கு உணர்த்தப்பட்டது.

'திருப்பா திரிப் புலியூர்
உடையான் அடியார் அடிஅடி யோங்கட்கு
அரியதுண்டே' -திருமுறை - 4.94-3.

'தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே'3 எனப்போந்த திரு மொழிகளுடன் திருத்தொண்டத்தொகைத் திருப்பதிகத்தையும்*l* உற்று நோக்குக. 'சீரணி குருசந்தானம்'* என்றதும் இக்கருத்தே பற்றி. முதலடியின் ஈற்றில், 'அடிமை' என்றதும் 'அடிமை' செய்யும் அடியரையே. 'நல்கியிட்டு' என்பது குறைந்து நின்றது. 'நல்கிட்டு அடியனாய்' என மாற்றுக.

இதனால், அடியார் அடியார், அடியடியார் பத்திகளே சிவபத்தி யாதல் கூறப்பட்டது.

'எனக்கன்பு நின்பொருட்டு எய்தாத தென்கொல்!
வெள் ளேறுடையான்
றனக்கன்பு செய்திருத் தாண்டக வேந்த, இத்
தாரணியில்
நினக்கன்பு செய்கின்ற அப்பூதியைச், சிவ
நேசம்உறும்
இனர்க்கன்பு செய் நம்பி யாரூரன் ஏத்தும்
இயல்பறிந்தே'
-நால்வர் நான்மணி மாலை - 6.

என்னும் சிவப்பிரகாச அடிகள் திருமொழியும் இங்கு உணரத்தக்கது.

நீரிற் குளிரும் நெருப்பினிற் சுட்டிடும்
ஆர்இக் கடன்நந்தி ஆமா றறிபவர்
பாரில் பயன்ஆரைப் பார்க்கிலும் நேரியன்
ஊரில் உமாபதி யாகிநின் றானே. *#2576*

சிவன் குளிர்ச்சியால் இருக்க வேண்டிய சமையத்தில் நீரைவிடக் குளிர்ச்சியாய் இருப்பான். சுடவேண்டிய சமையத்தில் நெருப்பை விடச் சூடாகச் சுடுவான். (இரண்டும் கருணையே). அவனது முறை இவ்வாறாதலை அறிய வல்லார் ஆர்! நிலவுலகில் உள்ளார்க்குப் புலனாகாமலே சூக்குமமாய் இருந்து, அவர்கட்குப் பயன் தருகின்ற தேவர் பலரையும்விடச் சிவன் அதிசூக்குமன் ஆயினும், அவன் உயிர்களின் பொருட்டு ஊர்கள் தோறும் உமாதேவிக்குக் கணவனாய், அவளோடும் எழுந்தருளிக் காட்சியளிக்கின்றான்.

விளக்கவுரை

'அஃதறிந்து அவ்விடங்களில் சென்று பத்தி செய்க' என்பது குறிப்பெச்சம். 'நந்தி' என்பதை முதலிற்கொள்க. இடையில் வருவித்துரைத்தன இசையெச்சங்கள். 'பயன்' என்பதன்பின் 'தரும்' என ஒருசொல் வருவிக்க. நேர்மை - சூக்குமம். இது பருமைக்கு எதிரானது. உமாபதியாகி நிற்றல், 'உலகனைத்திற்கும் அம்மையும், அப்பனும் தானே' என்பது தோன்றுதற்கு, 'அதனை யுணரின் பத்தி தானே பெருகும்' என்பது கருத்து.

இதனால், சிவன் உருப்பத்தி சிவ பத்தியேயாதல் கூறப்பட்டது.

ஒத்துல கேழும் அறியா ஒருவன்என்
றத்த னிருந்திடம் ஆர்அறி வார்செல்லப்
பத்தர்தம் பத்தியின் பாற்படி னல்லது
முத்தினை யார்சொல்ல முந்துகின் றாரே. *#2577*

அன்பரது அன்பில் சென்றாலல்லது, 'அனைத் துலகங்களாலும் அறிய இயலாத ஒருவன்' எனச்சொல்லப்படுகின்ற சிவன் இருக்கின்ற இடத்தை அறிந்து சென்றடைய வல்லார் யாவர்? அவ்வாறே, அன்பர்கள் தம் அன்பிற்கண்டு சொன்னாலல்லது, கிடைத்தற்கரிய முத்துப்போன்ற அவனைக் கண்டு சொல்ல முற்படுவார் யாவர்? ஒருவரும் இல்லை.

விளக்கவுரை

சிவனை அவன் அன்பர்களல்லது பிறர் காணவும், சொல்லவும் வல்லாரல்லர்' என்றபடி.

'சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க'3

என்றருளிச் செய்தமை யறிக. 'ஒருவன்' என்பது சிவனைக் குறிக்கும் ஒருபெயர்.
'ஒருவன் என்னும் ஒருவன் காண்க'9
'ஒருவன் என்று உலகம் ஏத்தும்
நளிர்மதிச் சடையன்'8
எனத் திருவாய்மொழியுள்ளும் வந்தது. 'என்ற, இருந்த' என்பவற்றின் ஈற்று அகரங்கள் தொகுத்தலாயின. 'ஆரறிவார் சொல்ல' என்பது பாட மன்று; அது பின்னர் வருதல் காண்க. 'பததர்தம் பத்தியின் பாற்படி னல்லது' என்பது தாப்பிசையாய் முன்னரும் சென்றியைந்தது. அங்ஙனம் இயையுங்கால் 'தம்' என்பது முன்னர்ச் சாரியையாயும், பின்னர்ப் பெயராயும் நின்றது.
இதனால், 'பத்தி யுடையாரே சிவனைக் காணவும், சொல்லவும் வல்லார்' என்பது கூறப்பட்டது.

ஆன்கன்று தேடி யழைக்கு மதுபோல
நான்கன்றாய் நாடி அழைத்தேன் என் நாதனை
வான்கன்றுக் கப்பாலாய் நின்ற மறைப்பொருள்
ஊன்கன்றான் நாடிவந் துள்புகுந் தானே. ***#2578***

தாயைப் பிரிந்த பசுக்கன்று தன் தாயை நாடி அழைப்பதுபோல, சிவன் ஆவாய் இருக்க, நான் அவனைப் பிரிந்து வாடும் கன்றாய் இருந்து, என் தலைவனாகிய அவனையே நாடி, 'அப்பாவோ! ஐயாவோ!' எனப் பன்முறை அழைத்தேன்; அவன் வானுலகத்திலுள்ள பசுக்கன்றுகள் போலும் தேவர்கட்கெல்லாம் அப்பால் நிற்கும் வேதப்பொருளாயினும் எனது கூக்குரலைச் செவிமடுத்து, உருவம் யாதும் கொள்ளாமலே என்னைத் தேடி வந்து, என் உள்ளத்துள்ளே புகுந்தான்.

விளக்கவுரை

'நான் மகிழ்ந்தேன்' என்பது இசையெச்சம். 'ஆனை' என இரண்டன் உருபு விரிக்க. 'கன்றாய்' என்னும் ஆக்கம் உவமை குறித்து நின்றது. தேவர்கள் பசுவர்க்கத்தினராகலின் 'பசு' என்றும், அவர்கள், 'தாம் கன்றுகள்' என்பதையும், 'சிவன் தாய்ப்பசு' என்பதையும் நினைந்து அவனை அழைத்தல் இன்றிச் சுக போகங்களில் ஆழ்ந்து கிடத்தலால் 'அவர்கட்கு அப்பாலாய்' என்றும், 'எனினும், மெய்யுணர்வார் அவனை அழைத்தே நிற்பர்' என்றற்கு, 'மறைப் பொருள்' என்றும் கூறினார். 'மறைப்பொருள் ஆமவன்' என்க. ஊன் - உடம்பு கன்றுதல் - விடாது பற்றுதல், 'ஊன் கன்றானாய் வந்து புகுந்தான்' என்க. இங்ஙனம் கூறியது, 'அவன் புறம் நின்று போதராமல், அகம் நின்ற நிலையையே விளக்கியருளினான்' என்றபடி.
இதனால், 'பத்தியுடையார் சிவனை யின்றியமையாது அலமருவர்'

என்பதுவும், 'அவர்கட்குச் சிவன் நேர்வந்து அருளுவன்' என்பதும் கூறப்பட்டன.

'உடையான் கழற்கு அன்பிலை;
... ... துணையிலி பிணநெஞ்சே!
தேடுகின்றிலை; தெருவுதோ றலறிலை;
செய்வதொன் றறியேனே'*

எனவும்,

'... ... வியந்து ஆங்கு அலறித்
தேடிற்றிலேன்; சிவன் எவ்விடத்தான்?
எவர் கண்டனர்? என்று
ஓடிற்றிலேன்; கிடந்து உள்ளுருகேன்;
நின்று உழைத்தனனே'9

எனவும், பிறவாறும் போந்த பத்தித் திருமொழிகளைக் காண்க.

'ஆனின் றழைக்கு மதுபோல்என் நந்தியை
நானின் றழைப்பது ஞானங் கருதியே'*

எனத்தொடக்கத்தேயும் இவர் கூறினார்.

பெத்தத்தும் தன்பணி இல்லை பிறத்தலால்
முத்தத்தும் தன்பணி இல்லை முறைமையால்
அத்தற் கிரண்டும் அருளால் அளித்தலால்
பத்திப்பட் டோர்க்குப் பணியொன்றும் இல்லையே. **#2579**

உயிர்களின் நிலை 'பெத்தம், முத்தி' என இரண்டு. பெத்தம், பாசங்களிற் கட்டுண்ட நிலை. முத்தி, அவற்றினின்றும் விடு பட்ட நிலை. இவ்விரண்டு நிலைகளிலும், 'உயிர்களின் செயல்' என்று ஒன்று இல்லை ஏனெனில், பெத்தத்தில் உயிர்கள் பல பிறவிகளில் சென்று உழல்கின்றன. அப்பிறப்புக்களைத் தருபவனும், வாழுங் காலத்து இன்பத் துன்ப நுகர்ச்சிகளை அவற்றிற்குரிய பொருள்களைத் தந்து ஊட்டுவிப்பவனும், பின்பு அந்தப் பிறவியை நீக்கிவிடுபவனும் எல்லாம் சிவனே. அதனால், பெத்தத்திலும் அவற்றிற்கென்று ஒரு செயல் இல்லை. இனி, முத்தியாவது சிவன் குருவாய் வந்து ஞான தீக்கை செய்து வினைக்கட்டினை அறுத்து அதினின்று விடுவிப்பது. அந்நிலையிலும் உயிர் அவன் காட்டிய வழியில் நடத்தற்குரியதே யன்றித் தானாக எவ்வழியிலும் செல்லாது. மேலும் ஞான தீக்கையில் உயிர் தனது, உடல், பொருள், ஆவி அனைத்தையும் சிவன் கையில் முழுமையாக ஒப்புவித்துவிடுகின்றது. இவ்வாற்றால், பெத்தம், முத்தி யிரண்டிலும் உண்மையில் உயிருக்கென்று ஒரு செயல் இல்லை. ஆயினும் மயக்கத்தால் உயிர்கள் பெத்தத்தில் நிகழும் செயல்களைத் தம் செயல்களாகவும், முத்தர்கள் செயலையும் அவரது செயல்க ளாகவும்

கருதி மயங்குகின்றன. ஞானம் கைவரப்பெற்று பத்தி மிகுந் தவர்க்கு அத்தகைய மயக்கம் இன்றி, உண்மையே விளங்கி நிற்றலால், தமக்கும் பணியாதும் இல்லையாகும் நிலை அவர்கட்கே உள்ளது.

விளக்கவுரை

'தன்' என்றது சாதியொருமை. 'பிறத்தலால்' என்றது, 'தம் வயம் இன்றிப் பிறத்தலால் என்றபடி. பிறத்தல் கூறவே, வாழ்தலும், இறத்தலும் பெறப்பட்டன 'முத்தி' என்பது எதுகை நோக்கி, 'முத்தம்' என இகரம் தொகுத்து அம் விரிக்கப்பட்டது. முறைமை - குரு கற்பித்த முறைமை. இரண்டு, பெத்த நிலை, முத்தி நிலை, அருளால் அருளின்படி. அளித்தது, அருளைத் தந்தவனுக்கு. 'தந்ததுன்றன்னைக் கொண்டதென் றன்னை' (திருவாசகம் - கோயில் திருப்பதிகம் - *10.)* என அருளினமை காண்க. இனி ஒருபோது அளித்தமையை எப்போதும் மறவாமைப் பொருட்டு அவர் எல்லாச் செயல்களையும் 'சிவனுக்கு ஆகுக, சிவனுக்காக' என அருள் வழி நின்று சொல்லி முடிப்பர். 'இவ்வாற்றால் பணிச் சுமை யாதும் இல்லாதார்க்குப், பத்தி மேலும் மேலும் பெருகி முதிரும்' என்பது கருத்து.

இதனால், பத்தி யுடையார்க்கு அப்பத்தி மேலும் மேலும் பெருகி முதிருமாறு கூறப்பட்டது.

பறவையிற் கர்ப்பமும் பாம்பும்மெய் யாகக்
குறவம் சிலம்பக் குளிர்வரை யேறி
நறவார் மலர்கொண்டு நந்தியை யல்லால்
இறைவன்என் றென்மனம் ஏத்தகி லாதே. ***#2580***

உபநிடதம் கூறுமாறு ஐந்து பறவைகள் போன்றுள்ள ஐந்து உடம்புகளுள்ளும் உள்ளீடாய் நிற்கின்ற ஆன்மாவும், அன்ன மயம், பிராணமயம் என்னும் உடம்பினுள் பாம்பு வடிவாய் உள்ள குண்டலினியும் பொதுமை நீங்கி, உண்மை நிலையை அடைந்திருக்க, அவ் வுடம்புகளுள்ளே மலையில் வாழும் குறவர்கள் இசைக்கும் இசைபோல எழுகின்ற நாதங்கள் ஒலிக்க, அமிர்தத்தால் குளிர்ந்திருக்கின்ற, விந்துத் தானமாகிய, 'மேரு' எனப்படும் ஆஞ்ஞையை அடைந்து அங்குக் கொல் - லாமை முதலிய எட்டையும் எட்டு மலர்களாகக் கொண்டு வழிபட்டுத் 'தியானம்' செய்யும்பொழுது, எங்கள் சிவபெருமானையன்றி, எனது மனம் வேறொருவனை 'இறைவன்' என்று கொண்டு தியானியாது.

விளக்கவுரை

தைத்திரீய உபநிடதம் ஆனந்த வல்லியில், ஐங்கோசங் -களையும் தனித்தனிப் பறவையாகவும் அவற்றின் உறுப்புக்களைத் தனித்தனி ஐந்தாக வைத்து, முகம் முதலிய உறுப்புக்களாகவும் உருவகம் செய்து

கூறிற்று. அதனை, மாதவச் சிவஞான யோகிகள்,
'ஆன்மா இத் தரை கீழ் மேலும்
கொள்ளி வட்டம் கறங்கென
நிமிடத்தின்கண் அலமரும் படி
கொண்டு திரிதல் பற்றி இவ்
வைங்கோசங்களை ஐந்து
பறவையாகவும், அவற்றுள் ஒரோ
ஒன்றை ஐவகைப் படுத்து முகம்
முதலிய உறுப்புக்களாகவும்
வேதத்துள் உருவகஞ் செய்
துணர்த்தியவாறு'

முண்டகோபநிடதம், மூன்றாம் முண்டகத்தில், ஆன்மாவையே பறவையாக உருவகம் செய்து, 'அஃது உலகமாகிய மரத்தில் அமர்ந்து, அதில் உள்ள போகமாகிய பழத்தைப் புசிகின்றது' என்றும், 'ஆயினும், அதனைவிட்டுப் பிரியாது இணைந்து உடன் இருக்கின்ற மற்றொரு பறவை அந்தப் பழத்தை உண்ணாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றது' என்றும் கூறிற்று. உண்ணாமல் பார்த்துக்கொண்டிருக்கின்ற பறவை சிவன்.

பறவை உடம்பை எடுத்த உயிரும் 'பறவை' என்றே சொல்லப் படுதல் பற்றி முண்டகோபநிடதம் ஆன்மாவையே (பறவை) என்றது. ஆயினும் உண்மையில் பறவையாவது, பறவை உடம்பே ஆகையால், தைத்திரியோபநிடதம் ஐவகை உடம்புகளையே ஐந்து பறவைகளாகக் கூறிற்று. இங்கு நாயனார், 'பறவை' என்றது உடம்பையே. கர்ப்பம் - சூல்; உள்ளீடு உடம்பின் உள்ளீடாவது ஆன்மா. குறவர் பாடும் இசையை, 'குறவம்' என்றார். ஆஞ்ஞையை 'மேரு' என்பதால், அதன் கீழ் ஒலிக்கின்ற நாதத்தை, 'குறவம்' என்றார். சிலம்புதல் - ஒலித்தல். இதனை, மேல், 'மணி கடல் யானை'*l* என்னும் மந்திரத்தும் குறித்தவாறு காண்க. கொல்லாமை முதலிய எட்டாவன, 'கொல்லாமை, ஐம்பொறியடக்கல் பொறுமை, இரக்கம், அறிவு, மெய், தவம், அன்பு' என்பன. *9* இவை எண்வகை யோக உறுப்புக்களில் இயம நியமங்களாய் வருதல் காண்க. ஏத்துதல், இங்குப் பொதுமையில் 'வழிபடுதல்' என்னும் பொருட்டாய்த் தியானத்தைக் குறித்தது, குளிர் வரை ஏறியபின் செயற்பாலது அதுவேயாகலின்.

இதனால், சிவ பத்தியே இறை பத்தியாவதன்றிப் பிற பத்திகள் இறை பத்தியாகாமை வலியுறுத்தப்பட்டது.

உறுதுணை நந்தியை உம்பர் பிரானைப்
பெறுதுணை செய்து பிறப்பறுத் துய்மின்

செறுதுணை செய்து சிவனடி சிந்தித்(து)
உறுதுணை யாய் அங்கி யாகிநின் றானே. #2581

சிவன், தன்னையே நெருங்கி நிற்கும் துணைவனாக உணர்ந்து, தனது திருவடிகளைச் சிந்தித்தவழிக் கிடைக்கும் துணைவனாயும், ஒளி விளக்காயும் உள்ளான். அவனையன்றிப் பெருந்துணைவரும், பெறத்தக்க துணைவரும் வேறிலர். (ஏனெனில், பேரருளால் உயிர்களின் பிறப்பை அறுப்பவன் அவனேயாகலின்) ஆகையால், உணர்வுடையீர், அதனை உணர்ந்து அவனையே துணையாகப் பற்றிப் பிறப்பையறுத்துப் பிழையுங்கள்.

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி, அதனுள்ளும் 'சிவன்' என்பதை முதலில் வைத்து உரைக்க. செய்தல், இங்குக் கருதுதலைக் குறித்தது. 'உறுதுணை' இரண்டில் முன்னது உரிச் சொற்றொடர்; பின்னது வினைத்தொகை. அங்கி- தீ. அஃது இங்கு விளக்கைக் குறித்து, அறிவை விளக்குதலைச் சுட்டிற்று. 'அறிவுத் துணையே துணையாவதன்றி, உடற்றுணை துணையாகாது என்றபடி.
இதனால், 'சிவன் ஒருவனே அறிவுத் துணையாகலானும், உற்றாரை உறுபவன் ஆகலானும் அவனையே துணையாகப் பற்றிப்பத்தி செய்து பயன்பெறல்வேண்டும்' என்பது கூறப்பட்டது.

வானவர் தம்மை வலிசெய் திருக்கின்ற
தானவர் முப்புரம் சென்ற தலைவனை
கானவன் என்றும் கருவரை யான்என்றும்
ஊனத னுள்நினைந் தொன்று படாரே. #2582

தேவர்களைத் துன்புறுத்திய அசுரர்களது மூன்று கோட்டைகளைத் தன் சிரிப்பினாலே ஒரு நொடியில் சாம்பலாக்கி அழித்த தலைவன் சிவன். அவனைச் சிலர், 'காட்டிலே ஆடுபவன்' என்றும், 'கரிய மலையில் வாழ்பவன்' என்றும் தங்கள் ஊன் உடம்பின் உள்ளுக்குள்ளாகவே இகழ்ந்து, அவனைக்கூடார் ஆயினார்.

விளக்கவுரை

'அஃதவர் வினையிருந்தவாறே என்பது குறிப்பெச்சம்.
'ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண்கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல்'3
என்பனபோலும் சான்றோர் மொழியினை உணராதார் பிணங்குவர் என்பது முதல் இரண்டடிகளில் குறிக்கப்பட்டது. 'ஒன்றுபட்டார்' என்பது

பாடமாயின், 'அவனது பெருமையை உணர்வினால் உணர்ந்து, அகமாகிய உள்ளத்துள் தியானித்துச் சமாதி நிலை கூடினர்' என உரைக்க. சிவன் இருப்பது வெள்ளிமலையாயினும், முகில்கள் தவழ்தலும், பசுமை படர்ந்திருத்தலும் பற்றி, 'கருவரையான்' என்றார். 'ஒன்றுபட்டார்' என்பதையே பாடமாகக்கொள்வார், 'கரு - பிறப்பை. வரையான் - ஏற்காதவன்' என உரைப்பர்.
இதனால், உண்மை உணராதார் பத்திசெய்து பயன் பெறும் இடம் அறியாமை கூறப்பட்டது.

நிலைபெற கேடென்று முன்னே படைத்த
தலைவனை நாடித் தயங்குமென் உள்ளம்
மலையுளும் வானகத் துள்ளும் புறத்தும்
உலையுளும் உள்ளத்தும் ஊழ்த்துநின் றானே. **#2583**

உலகனைத்தையும், 'இவை சிலகாலம் நிலைபெற்றிருந்து, பின் 'ஒடுங்குக' என்று சங்கற்பித்துப் படைத்த தலைவன் எங்கேயிருக்கின்றான்' என்று அவனைக் காணத்தேடி என் உள்ளம் திகைத்தது. பின்பு அவன் தேட வேண்டாது எங்கும் நிறைந்து, உயிர்களின் புறத்தும், அவனைத்தேடித் திகைக்கும் உள்ளத்தும் 'புறம், அகம்' என்னும் வேறுபாடின்றி விளங்குதலைக்கண்டு வியந்தேன்.

விளக்கவுரை

'கெட' என்னும் வியங்கோள்முற்று ஈறுதொக்கு, முதல் நீண்டு 'கேட்' என நின்றது. அது, 'கேடு' என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயரன்று. 'தயங்கும்' என்றது. இறந்த காலத்தில் நிகழ்கால முற்று. 'எவ்விடத்தும்' என்றற்கு மலையையும், வானத்தையும் உபலக்கணமாகக் கூறினார். உலைதல் - வருந்துதல். 'உள்ளும் உள்ளத்தும்' என்பது ஒரு சொல் நீர்மைத்தாய் நிற்க, 'உலை' என்பது அதனோடு தொக்கு வினைத்தொகையாயிற்று. ஊழ்த்து நிற்றல், காண்டற்குரிய செவ்வியோடேயிருத்தல். 'நின்றான்' என்றது, அதன் பயனாகிய வியப்பைக் குறித்து நின்றது.
இதனால், பத்தி செய்வார்க்குச் சிவன்தேட வேண்டாது, இருந்த இடத்தில் இருந்தே காணப்படுதல் கூறப்பட்டது.

10.42.முத்தியுடைமை

முத்தியில் அத்தன் முழுத்த அருள்பெற்றுத்
தத்துவ சுத்தி தலைப்பட்டுத் தன்பணி
மெய்த்தவம் செய்கை வினைவிட்ட மெய்யுண்மைப்
பத்தியில் உற்றோர் பரானந்தர் போதரே. **#2584**

முத்தி நிலையை அடைந்தவர் சிவனது திருவருளை முழுமையாகப்

பெறுவர். (எனவே, 'ஏனையோர் சிறிது சிறிது பெறுவர்' என்றதாம்). அதனால், அவரே கருவி கரணங்களின் கட்டற்றவராவர் (கருவி கரணங்களோடு கூடியிருப்பினும் அவற்றால் உலகியலில் செல்லார்' என்பதாம்). ஆகவே, அவர் தன் முனைப்புக் கொண்டு 'யான், எனது என்னும் வகையில்) உலகை நோக்கி ஒன்றைச் செய்தலும், அவ் வாறன்றிச் சிவனையே நோக்கி ஒன்றைச் செய்தலும் ஆகிய செயல்கள் எல்லாவற்றையும் விடுத்து, சொரூப சிவனிடத்து உண்மையான பத்தியில் மட்டுமே நிற்பர். அதனால், அவர் அடையும் ஆனந்தமே உண்மைப் பேரானந்தமாகும். உண்மை ஞானியரும் அவரே.

விளக்கவுரை

'தன்பணி' என்பது, பொதுவாகச் சீவபோதச் செயலை உணர்த்தும் ஒருசொல். 'தன்பணியையும், மெய்த்தவத்தையும் செய்கை யாகிய வினையை விட்ட பத்தி' என்க. மெய்த்தவம், சிவனை நோக்கிச் செய்யும் செயல்கள். உலகியற் செய்கையை நோக்க மெய்த்தவம் சிறந்ததாயினும் அதுவும் நான்' என்னும் போகத்தோடு செய்வதேயாகலின், அப்போதத்தை விட்டவர்க்கு அதுவும் வினையேயாம் என்றற்கு, 'மெய்த்தவம் செய்கை வினை' என்றார். இஃதே பற்றித் தாயுமானார், 'நான் பூசை செய்யல் முறையோ'3 என்றார் மெய், மெய்ப்பொருள், சொரூப சிவன் 'மெய்யின்கண் செய்யும் உண்மைப்பத்தி' என்க. உண்மைப்பத்தி, பிறிது பயன் விரும்பாது, அவனையே விரும்பிச் செய்யும் பத்தி இங்கும் பத்தியையே முடிநிலையாகக் கூறினமை உணரற்பாலது.

இதனால், முத்தி நிலையின் இயல்புகள் எல்லாம் சுருக்கிக் கூறப்பட்டன. இவையும், அடுத்து வரும் மந்திரத்தில் வருவனவும் ஆகிய இயல்பினை உடையோரே சீவன் முத்தராவர்.

வளங்கனி தேடிய வன்தாட் பறவை
உளங்கனி தேடி உழிதரும் போது
களங்கனி அங்கியிற் கைவிளக் கேற்றி
நலங்கொண்ட நால்வரும் நாடுகின் றாரே. **#2585**

(மேல், 'பறவையில் கர்ப்பமும்'9 என்னும் மந்திரத்தில் சொல்லியபடி) உலகமாகிய மரத்தில் தனக்கு இனிமையான பழத்தைத் தேடி அலைந்த சீவனாகிய பறவை, பின்பு அந்தப்பழம் தன்னுள்ளே யிருப்பதை அறிந்து அதனைத் தேடி அங்கு அலைந்துகொண்டிருக்கும் பொழுது, அதற்குக் கண்ணும், சிறகும்போல உதவுகின்ற அந்தக் கரணங்களாகிய நால்வரும் முன்புபோலத் தீயராய் இல்லாது நல்லவராய் விட்டமையால், அங்கே (உள்ளத்துள்ளே) மிக்கு விளங்குகின்ற பேரொளியிலிருந்து சிறு கைவிளக்கை ஏற்றிப் பிடித்து, அப் பறவைக்கு உதவி புரிகின்றனர்.

விளக்கவுரை

'பெத்த நிலையில் உலகியலில் ஈர்த்துச் சென்ற அந்தக் கரணங்கள், முத்தி நிலையில் சிவத்தை உணர்தற்குத் துணை புரிகின்றன' என்பதாம். 'விளக் கனி, உளக் கனி' என்பன எதுகை நோக்கி, ஒத்த வல்லெழுத்து மிகாது, இனமெல்லெழுத்து மிக்கு முடிந்தன. தாள் - முயற்சி. களம் - இடம். 'அக் களத்துக் கனிந்த அங்கி' என்க. கனிதல், இங்கே, மிகுதல், அங்கி - அக்கினி பேரொளி; பேரறிவு. 'மலம் நீங்கிய உயிரின் அந்தக் கரணங்கள் பதிஞானத்தை உடையனவாகும்' என்பது உணர்க.
இதனால், சீவன் முத்தரது அந்தக் கரணங்கள் பாசத்தளை யாகாமை கூறப்பட்டது.

*10.43.*சோதனை

பெம்மான் பெருநந்தி பேச்சற்ற பேரின்பத்*(து)*
அம்மான் அடிதந்*(து)* அருட்கடல் ஆடினோம்
எம்மாய மும்விடுத்*(து)* எம்மைக் கரந்திட்டுச்
சும்மா திருந்திடம் சோதனை ஆகுமே. ***#2586***

எல்லோரினும் பெரியவனும், பெருந்தலைவனும் சொல்ல வாராத பெரிய இன்பத்தைத் தன்னை அடைந்தவர்க்கு வழங்கி யருளும் அன்னதொரு பெருந்தகையை உடையவனும் ஆகிய சிவன் உம்முன் வந்து தனது திருவடிகளை எங்கள் தலைமேற் சூட்டினமையால் நாங்கள் அவனது திருவருளாகிய கடலில் மூழ்கினோம் அதனால், (நீருள் இருக்கும் மீனைச் சிச்சிலி கொத்தமாட்டாது ஓடி விடுதல்போல) பொய்யாகிய பாசங்கள் எல்லாம் எம்மைப் பற்றமாட்டாது நீங்கிவிட, நாங்கள் எங்களை அவனிடத்தில் ஒளித்து வைத்துச் சும்மா இருக்கின்றோம். இந்த நிலையில் எங்கட்குச் சோதனைகள் வருகின்றன.

விளக்கவுரை

அஃதாவது, 'பாசங்கள் எங்களுடைய சோர்வை, மீன் நீரை விட்டு மேலே வரும் வரவைப் பார்க்கின்ற சிச்சிலி போலப் பார்க்கின்றன' என்பதாம். ஆகவே, 'அப்பார்வை யினின்றும் நாங்கள் தப்புகின்றோம்' என்பது கருத்து. 'பெம்மான் அம்மான்' என்னும் பொதுச் சொற்கள் சிவனையே குறித்தற்கு 'நந்தி' என்னும் சிறப்புப் பெயரை இடையே பெய்தார். 'தந்து, விடுத்து' என்பவற்றிற்கு 'தந்தமையால், விடுத்தமையால்' என உரைக்க. 'சும்மாதிருத்தல், வாளாதிருத்தல்' என்பனவே இலக்கணச் சொற்கள். அவை, 'சும்மா, வாளா' என மருவி வழங்குகின்றன. 'இருந்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. ஆகும் - தோன்றும்.
இதனால், முத்தி நிலையை அடைந்தவற்றை யெல்லாம் வகுத்துக் கூறி, இவற்றிற்குப் பின் சோதனை உளவாதல் கூறப்பட்டது.

அறிவுடை யான்அரு மாமறை யுள்ளே
செறிவுடை யான்மிகு தேவர்க்கும் தேவன்
பொறியுடை யான்புலன் ஐந்துங் கடந்த
குறியுடை யானொடும் கூடுவன் நானே. **#2587**

அறியாமையோடு கூடுதல் சிறிதும் இன்மையால், 'அறிவுடையான்' எனப்படுதற்கு உரிமையுடையவனும், அரிய பெரிய வேதங்களில் எங்கும் பரவலாகப் போற்றப்படுபவனும், பெரிய தேவர்கட்கும் தேவனும், கண், செவி முதலிய பொறிகளையுடைய னாயினும் அவற்றால் அறியப்படுகின்ற ஐந்து புலன்களில் ஒருபோதும் தோய்வின்றித் தன்னிலையில் திரியாதிருப்பவனும், ஆகிய சிவனோடே யான் என்றும் கூடியிருப்பதன்றிப் பிரிதல் இல்லை.

விளக்கவுரை

இறைவனை, 'பொறிவாயில் ஐந்தவித்தான்'* என்றல் அவன் இயல்பாகவே பாசங்களின் நீங்கி நிற்கும் தன்மை யுடைமை பற்றியேயன்றி, ஒரு காலத்தில் பாசத்தையுடையனாயிருந்து பின் நீங்கினவனல்லன் என்பது தோன்ற, 'அறிவுடையான்' முதலிய மூன்றற்கும் பின்னர் இறுதியில் இதனைக் கூறினார். 'இயல்பாகவே பாசங்களின் நீங்கினவன் எவனும் இல்லை' என்பவர், இதனை 'ஒரு காலத்தில் புலனைக் கடந்தவனைக் குறிக்கின்றது' என்பர். இஃதே தொல்காப்பியத்துள் 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் - முனைவன்'*9* எனப்பட்டது. கூடுதல் பிரிவின்மையைக் குறிக்க வந்தது. 'இயல்பாகவே பாசங்களால் பற்றப்படாது இருப்பவனைச் சார்ந்திருத்தலால், எம்மைப் பாசங்கள் வந்து அணுகுமாறில்லை' என்பது கருத்து. மிகுதேவர், காரணக்கடவுளர் மூவர். உம்மைகள், சிறப்பு. 'பொறியுடையான்' என்பதன்பின், 'ஆயினும், என்னும் சொல்லெச்சம் வருவிக்க. குறி - தன்னியல்பு. இதனால் மேல்,

'பதியணுகின்பசு பாசம்நில் லாவே'*3*

என்று அருளிச்செய்தபடி, பதியைச் சார்ந்து நிற்கும் உயிரைப் பாசம் பற்ற மாட்டாமைக்குக் காரணம் கூறப்பட்டது.

'சதசத்தாம் மெய்கண்டான், சத்து அருளிற் காணின்
இதமித்தல் பாசத்தில் இன்றிக் - கதம்மிக்*(கு)*
எரிகதிரின் முன்இருள்போல் ஏலா அசத்தின்
அருகணையார்; சத்தணைவார் ஆங்கு'*8*

என்றதனை நோக்குக.

(இதன்பின் பதிப்புக்களில் காணப்படும் 'அறிவறிவென்றங் காற்று முகம்' என்னும் மந்திரம், மேல், 'அறிவுதயம்' என்னும் அதிகாரத்தில் வந்தது.3)

குறியாக் குறியினில் கூடாத கூட்டத்*(து)*

அறியா அறிவில் அவிழ்ந்தே சித்தமாய்
நெறியாம் பராநந்தி நீடருள் ஒன்றும்
செறியாச் செறிவே சிவம்என லாமே. **#2588**

குறியாக் குறி - தற்போதத்தால் தானே கொள்ளாது, குரு கொள்வித்தபடி கொண்ட இலட்சியம் கூடாத கூட்டம் - தற் போதத்தின் வழிச்சென்று புணராது, திருவருள் வழிச்சென்று புணர்ந்த புணர்ச்சி. அறியா அறிவு - தற்போதமாய் நின்று அறியாது, சிவ போதமாய் நின்று அறியும் அறிவு அவிழ்தல் பாசக்கட்டு நீங்குதல் எனவே, 'குறியா ... ... அவிழ்ந்து' என்றது 'தானே கொள்ளாது குருவுணர்த்திய இலட்சியமாகிய சிவத்தில், தற்போதத்தால் முயலாது, திருவருள் வழியாக முயன்று ஒன்றுபட்டுபின்னும் அந்தத் திருவருளாலே அஃதொன்றையே அறிந்து நிற்குமாற்றால் பாசங்கள் நீங்கப்பெற்று' என்றதாயிற்று. பாசக்கட்டு நீங்கினமையால், பலவாகிய பொய்ப்பொருட்பற்றுத் தொலைய, ஒன்றாகிய மெய்ப்பொருளிடத்தே அன்பு மீதூர நிற்றலால், நன்னெறியாகிய அருட்சத்தியின் முதலாகிய அச்சிவத்தில் அவ்வருளால் அழுந்துதலாகிய இயற்கை இயைபே உண்மைச் சிவ சம்பந்தமாம்.

விளக்கவுரை

செறியாச் செறிவு - புதுவதாய்ச் சென்று இயையாது, முன்பே இயல்பாய் இயைந்துள்ள இயைபு, 'சிவத்திற்கும், ஆன்மா விற்கும் இடையேயுள்ள அத்துவித சம்பந்தம், முன்பு இல்லாது பின்பு இடையே ஒரு காலத்தில் உண்டாகும் சம்பந்தம் அன்று: அஃது அனாதியேயுள்ள சம்பந்தம்' என்றபடி. எனவே, 'சைவம் சிவனுடன் சம்பந்தமாகுதல்'* என்றது, முன்பு உணராதிருந்த அச்சம்பந்தத்தை உணர்தல் என்றதேயாம். 'எல்லா உயிர்களிடத்தும் சிவனது அத்துவித சம்பந்தம் இயல்பாக உள்ளமை தோன்றவே, 'நின்றனவும், சரிப்பனவும் சைவமேயாம் நிலைமை அவர்க்கருள்செய்து' எனக் குறித்தருளினார் சேக்கிழார்.*

'சென்றிவன்றான் ஒன்றில், சிவபூ ரணம்சிதையும்;
அன்றவன்றான் ஒன்றுமெனில் அன்னியமாம் -இன்றிரண்டும்
அற்றநிலை ஏதென்னில், ஆதித்தன் அந்தன்விழிக்
குற்றமற நின்றதுபோற் கொள்'*

என்னும் உண்மை விளக்கமும், இதனையே விளக்கிற்று.

பராநந்தி - பரைக்கு முதல்வனாகிய சிவன். 'நந்தியின்கண்' எனவும், 'நீடு அருளால்' எனவும் ஏற்கும் உருபுகள் விரிக்க. 'சிவம்' என்றது, அதனோடு சம்பந்தம் ஆதலைக் குறித்தது. 'செறிவே' எனவும் எனலாமே எனவும் போந்த பிரிநிலையும், தேற்றமும் ஆகிய ஏகாரங்கள், எத்தகைய சோதனையிலும் இந்நிலையினின்றும் சிறிதும் வழுவலாகாமையை உணர்த்தி நின்றன.

இதனால், 'சோதனைகளால் சலியாது நிற்றற்குரிய நிலை இது' என்பது கூறப்பட்டது.

காலினில் ஊறும் கரும்பினிற் கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்
பூவினுள் நாற்றமும் போல் உளன் எம்மிறை
காவலன் எங்கும் கலந்துநின் றானே. ***#2589***

எல்லாப் பொருள்களிலும் தங்கியிருத்தல் பற்றி, 'இறை' என்றும், எல்லா உயிர்களையும் பாதுகாத்தல் பற்றி, 'பதி' என்றும் சொல்லப்படுபவனாகிய எங்கள் சிவபெருமான், காற்றில் பரிசமும், கரும்பில் வெல்லமும், பாலில் நெய்யும், பழத்தில் சுவையும், மலரில் மணமும் போல, உயிர்களின் உள்ளங்களில் எல்லாம் இரண்டறக் கலந்து நிற்கின்றான்.

விளக்கவுரை

'அக்கலப்பினை அறிந்து, 'சிவோஹமஸ்மி' எனப் பாவிக்கும் பாவனையில் உறைத்து நின்றால், சோதனைகளால் வரும் ஊறு யாதும் இல்லையாம்' என்பது கருத்து.
'கசிந்த - தொண்டினொடும், உளத்து அவன்றான் நின்ற [கலப்பாலே
'சோகம்' எனப்பாவிக்கத் தோன்றுவன் வேறின்றி'*
என்னும் சிவஞான சித்தியைக் காண்க. எனவே, 'அஹம்பிரஹ் மாஸ்மி' 'சோஹமஸ்மி' என்பன. இக்கலப்புப் பற்றிக் கூறப்படுத லல்லது, 'சோயம் தேவதத்தன்' என்பதுபோல, விட்டும் விடாத இலக்கணை வகையாற் கூறப்படுவன அல்ல' என்றவாறாம். உளம், உளன் - மகர னகர உறழ்ச்சி. 'உளன் எங்கும் கலந்து நின்றான்' என்க.
இதனால், சோதனைகளில் சலியாது நிற்றற்குரிய வழிவகை கூறப்பட்டது.

விருப்பொடு கூடி விகிர்தரை நாடில்
பொருப்பகஞ் சேர்தரு பொற்கொடி போல
இருப்பர் மனத்திடை எங்கள் பிரானார்
நெருப்புரு வாகி நிகழ்ந்து நிறைந்தே. ***#2590***

எங்கள் சிவனார், தம்மை அன்பினால் நோக்கின், தம்முடைய சத்திபோல வந்து, அங்ஙனம் நோக்கி நிற்பவரது உள்ளத்தில், பேரறிவாய், உயிர்க்குயிராய் நிறைந்து, நீங்காதிருப்பார்.

விளக்கவுரை

பொருப்பகம் சேர்தரு பொற்கொடி, உமை; 'சத்தி' எனற்பாலதை இவ்வாறு கூறினார். 'முன்னர்ச் சத்திநிபாதம்போல வந்து, பின்னர்த் தாம் விளங்கி நிற்பார்' என்றபடி, 'போல' என்பதன்பின், 'வந்து' என

ஒருசொல் வருவிக்க. 'நெருப்பு' என்பது, 'ஒளி' என்னும் பொருட்டாய், அறிவைக் குறித்து நின்றது. 'எங்கள் பிரானார்' என்பதை முதலில் வைத்து உரைக்க. 'விகிர்தர்' என்றது சுட்டளவாய் நின்றது. 'மனத்திடை, நெருப்புருவாகி நிகழ்ந்து நிறைந்து இருப்பர்' என இயைத்துக்கொள்க. இதனால், 'சோதனைக் காலத்திலும் அன்பு குறைதலாகாது' என்பது கூறப்பட்டது.

நந்தி பெருமான் நடுவுள் வியோமத்து
வந்தென் அகம்படி கோயில்கொண் டான் கொள்ள
'எந்தைவந் தான்'என்(று) எழுந்தேன் எழுதலும்
சிந்தையி னுள்ளே சிவன்இருந் தானே. #2591

'பர வியோமம்' எனப்படுகின்ற அருள்வெளியில் உள்ள சிவபெருமான், அங்கு நின்றும் போந்து என் உள்ளத்துள்ளே புகுந்து அதனையே தனது இடமாகக் கொண்டான். கொண்டது எவ்வா றெனில், அவன் எனது உள்ளத்தை நோக்கி வரும்பொழுது, 'வாராத என் தந்தை வருகின்றான்' என்று நான் பதைத்தெழுந்து எதிர்கொண்டேன். அதனால்தான் அவன் என் உள்ளத்தையே தனது இடமாகக் கொண்டுவிட்டான்.

விளக்கவுரை

'வியோமத்து நடுவுள் நின்றும் வந்து' என்க. வியோமம், பரவியோமம். கொள்ள - கொள்ளுமாறு. எழுதல், அதன் காரியத்தைக் குறித்து நின்றது. இருந்தான் - நீங்காது, இருந்தே விட்டான். 'தன்னை வரவேற்கும் உள்ளப்பான்மை உள்ளவர்களை நோக்கியே அவன் வருவான்' எனவும், 'அங்ஙனம் வந்த பின், அவன் மீண்டு நீங்கிப்போதல் இல்லை' எனவும் கூறியவாறு. 'வருதல் கோயில் கொள்ளல்' என்பவற்றின் உண்மைப்பொருள், மேல், 'செறியாச் செறிவு'8. என்பதுபற்றிக் கூறியதனால் விளங்கும். 'உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்; எங்கெழுந்தருளுவ தினியே'3 என்பதனானும் இம் மந்திரப் பொருளை உணர்க. 'சிந்தையுட் சிவம தானார் திருச்செம்பொன்பள்ளி யாரே'1 என அப்பரும் அருளிச் செய்தார்.
இதனால், 'சிவனது அருமை பெருமைகளை எந்நிலையிலும் அயராது உணர்ந்திருத்தல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

நன்மைவல் லோனை நடுவுறை நந்தியைப்
புன்மைபொய் யாதே புனிதனை நாடுமின்
பன்மையில் யாதென நும்மைப் பரிசுசெய்
தொன்மையின் உண்மை தொடர்ந்து நின்றானே #2592

உயிர்களுக்கு ஆகும் நன்மைகளை யெல்லாம் செய்ய வல்லவனும், அனைத்துயிர்களையும் ஒப்ப நோக்கும் நடுவு நிலையாளனும் இயல்பாகவே பாசங்கள் இல்லாத தூயவனும் ஆகிய சிவபெருமானை

நீவிர் புன்மை உண்டாகும்படி பொய்த்தல் இன்றி, உண்மையாக விரும்புங்கள்; விரும்பினால், பல உயிர்களுள்ளும் உம்மை, 'இவ்வுயிர் யாது' எனச் சிறப்பாக நோக்கி, நும் செயற்கையை நீக்கி, இயற்கையாகச் செய்து அத்தொன்னிலையில் பின்னும் தொடர்ந்தே நிற்பான்.

விளக்கவுரை

'வேறுபடான்' என்பதாம். 'புன்மையாக' என ஆக்கம் வருவிக்க. பொய்யாது நாடுதலாவது, வேறுபயன் கருதாது அன்பே காரணமாக விரும்புதல். செயற்கை, பாசத்தோடு கூடிநின்ற நிலை. இயற்கை, பாசத்தின் நீங்கிச் சிவத்தோடு நிற்கும் நிலை இஃதே தொன்னிலை; அனாதி நிலை; உண்மையியல்பு. அதில் தொடர்ந்து நிற்றலாவது, அதினின்றும் மாறுபடாதிருத்தல்.

இம்மந்திரம் பதிப்புக்களில் பாடம் பெரிதும் வேறாய்க் காணப்படுகின்றது.

[தன்மைவல் லோனைத் தவத்துள் நலத்தினை
நன்மைவல் லோனை நடுவுறை நந்தியைப்
புன்மைசெய் யாதே புனிதனை நாடுமின்;
பன்மையில் உம்மைப் பரிசுசெய் வானே.]

அடுத்து வரும் மந்திரம், 'தொடர்ந்து நின்றான்' எனத் தொடங்குதலால், இப்பாடமே கொள்ளப்பட்டது.

இதனால், 'மெய்யன்பு சோதனையால் திரியமாட்டாது' என்பது கூறப்பட்டது.

தொடர்ந்துநின் றான்என்னைச் சோதிக்கும் போது
தொடர்ந்துநின் றான்நல்ல நாதனும் அங்கே
படர்ந்துநின்(று) ஆதிப் பராபரன் எந்தை
கடந்துநின் றவ்வழி காட்டுகின் றானே. **#*2593***

சிவபெருமான் சற்குருவாய் வந்து எனது ஆறு அத்துவாக்களையும் அவற்றில் உள்ள சஞ்சித கன்மங்களை நீக்கித் தூய்மை செய்யும் பொழுது, அந்தச் செயலிலே தொடர்ந்து நின்றான். பின்பு தூய்மையாகிவிட்ட அந்த அத்துவாக்களிலே அவனே தொடர்ந்து நின்றான். அதன் பின்பு எல்லாப் பொருளிலும் கலப்பினால் ஒன்றா - கியும், பொருள்தன்மையால் வேறாகியும் நிற்கின்ற அந்த நிலைகளை எனக்கு அறிவித்துக் கொண்டே யிருக்கின்றான்.

விளக்கவுரை

'அவன் அவ்வாறிருக்கும் நிலையை மறவாதிருத்தலே நான் செய்யத்தக்கது' என்பது இசையெச்சம். 'அதனைச் செய்தால் சோதனை எதுவும் என்னை ஒன்றும் செய்யாது' என்பது கருத்து. சோதித்தலுக்குச்

செயப்படு பொருள் அத்துவாக்களேயாதலின் அவை வருவிக்கப்பட்டன. ஆகவே, பின் தொடர்ந்து நிற்றற்கு அவையே இட மாயின ஆதலின், 'அங்கே' எனச் சுட்டினார். அதில் உள்ள ஏகாரம் பிற இடங்களினின்றும் பிரித்த பிரிநிலை. நல்லநாதன் - சற்குரு. 'சற்குரு வாவான் சிவனே' என்பதைப் பின்னர், 'ஆதிப் பராபரன் எந்தை' என் பதனால் சுட்டினார். படர்தல் - எங்கும் நிறைதல். 'படர்ந்து நின்றும், கடந்து நின்றும் அவ்வழி காட்டுகின்றான்' என்க. ஏகாரம், ஈற்றசை.
இதனால், 'இறைவன் உயிர்க்குயிராய் நின்று அறிவித்தலை மறவாமையே சோதனைகளினின்றும் நீங்கும் வழியாகும்' என்பது கூறப்பட்டது.

அவ்வழி காட்டும் அமரர்க் கரும்பொருள்
இவ்வழி தந்தை தாய் கேளிரே ஒக்கும்
செவ்வழி சேர்சிவ லோகத் திருத்திடும்
இவ்வழி நந்தி யியல்பது தானே. *#2594*

விண்ணுலகத்தில் விண்ணவர்கட்கும் அவர்கள் அவ்வுலகத்தில் பற்றற்றுச் செல்ல வேண்டிய அந்த வழியைக் காட்டும் அரிய பொருளாய் இருப்பான். மண்ணுலகத்தில் மக்களுக்குத் தந்தை போலவும், தாய்போலவும், உறவினர் போலவும் இம்மைக்கு வேண்டுவன பலவும் செய்து, அம்மைக்கு ஆகும் நல்வழியையும் கற்பித்துத் தனது உலகத்தில் இருக்கச் செய்வான். இஃது எங்கள் சிவபெருமானது இயல்பு.

விளக்கவுரை

'அமரர்க்கு' என்பதை முதலிற் கொள்க. இவ்வழி - இவ்விடம்; மண்ணுலகம். தேவர்கள் இம்மை நலம் பெற்றுச் சிவனை ஓரளவு அணுகியவர் ஆகலின், அவர்க்கு வேண்டுவது அம்மை வழியேயாயிற்று. ஈற்றில், 'வழி' என்பது, 'இயல்பு' என்னும் பொருட்டு.
'தன்னடியார்களைச் சிவன் தன் உலகத்து இருத்துவோன் ஆதலின் சோதனைகளில் அவர்களை நழுவ விடான்' என்பது கருத்து.
'சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன்ஆதல்,
சார்ந்தாரைக் காத்தும் சலம்இலனாய்'3
எனவும்,
' ... ... என்றுந்தான்,
தீதுறுவ னானால், சிவபதிதான் கைவிடுமோ!
மாதொருகூ றல்லனோ மற்று'9
எனவும் போந்த சாத்திர மொழிகளைக் காண்க.
இதனால், சிவன் தன் அடியார்களைச் சோதனைகளில் காத்தல் கூறப்பட்டது.

எறிவது ஞானத்*(து)* உறைவாள் உருவி

அறிவத னோடே அவ் ஆண்டகை யானைச்
செறிவது தேவர்க்கும் தேவர் பிரானைப்
பறிவது பல்கணம் பற்றுவிட் டாரே. *#2595*

உலகப் பற்றை விடுத்துச் சிவப்பற்றைப் பற்றினோர், அந்நிலைக்கண் தமக்கு யாதேனும் இடையூறுவரின் அவர்கள் அவற்றைப் போழ்வது, ஞானமாகிய வாளைத் திரு வருளாகிய உறையினின்றும் உருவியாம். அங்ஙனம் இடையூற்றைப் போக்கி முன்போல அவர்கள் அறிந்து நிற்பது, தம் இயல்பையும், தலைவன் இயல்பையுமாம். (ஆகவே அடிமை நிலையினின்றும் பிறழார் என்பதாம்) அங்ஙனம் அறிந்து அடிமை செய்து நிற்றலால் அவர்கள் இரண்டறக் கலப்பது சிவபெருமானையே. அவர்கள் அறவே விட்டு விலகுவது, வேற்றியல்புடைய பல குழுக்களையாம்.

விளக்கவுரை

'ஞான வாள் ஏந்தும்; ... வான ஊர் கொள்வோம் நாம் மாயப்படை வாராமே'* என்று அருளிச்செய்தது காண்க. 'ஞானத்து' என்பதில் அத்து, வேண்டாவழிச் சாரியை. ஞானிகட்கு இடை யூறுகளாவன, ஐம்புலக் குறும்புகள். அறிவ, அன் பெறாத அகர ஈற்று அஃறிணைப் பன்மை வினைப்பெயர். அஃது அறிதலாகிய அத்தொழில்மேல் நின்றது. 'தன்னோடு' என்பது இடைக்குறைந்து, பன்மை யொருமை மயக்கமாய் வந்தது. தேவர்க்கும் தேவர், மூவர். 'எறிவது, செறிவது, பறிவது' என்பனவும் தொழில்மேல் நின்றனவே. 'பற்றுவிடார்' என்பது பாடம் அன்று.

இதனால், சோதனைக் காலத்திலும் ஞானிகள் செய்யும் செயல்கள் கூறப்பட்டன.

ஆதிப் பிரான்தந்த வாள்அங்கைக் கொண்டபின்
வேதித்திங் கென்னை விலக்கவல் லார்இல்லை
சோதிப்பன் அங்கே சுவடும் படாவண்ணம்
ஆதிக்கண் தெய்வம் அவன்இவன் ஆமே. *#2596*

யான் தொடக்கத்தில் தேவனாய் இருந்து, இப்பொழுது சிவனே ஆகிவிட்டேன். அஃது முழுமுதற் கடவுளாகிய சிவன் தனது ஞானமாகிய வாளை எனக்கு ஈந்தருள, இதனை யான் விடாது பற்றிக்கொண்டமையால். என்னை இனி அவனை அடைய ஒட்டாமல் வேறுபடுத்தி விலக்க வல்லவர் எங்கும், எவரும் இல்லை. அவ்வா றன்றி எங்கேனும், யாரேனும் என்னை வேறுபடுத்தி விலக்க வருவார்களேயாயின் அவர்கள் வந்து சென்ற சுவடும் தோன்றாதபடி அவர்களது வலிமையைச் சோதித்து ஓட்டிவிடுவேன்.

விளக்கவுரை

'நாம் ஆர்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்', 'தென்றிசைக்கோன்றானே வந்து - கோவாடிக் குற்றேவல் செய் கென்றாலும் குணமாகக் கொள்ளோம்'* 'யாம் ஆர்க்கும் குடியல்லோம்; யாதும் அஞ்சோம்' எனப் போந்த திட்பத் திரு மொழிகளைக் காண்க. வேதித்தல் - பேதித்தல். 'வேதித்து' என்னும் குற்றியலுகரம் கெடாது நின்றது. அங்கே - அப்பொழுதே. தெய்வம் ஆதல், மக்களினும் மேம்படுதல். அது ஞானத்தைக் கேள்வியளவில் உணர்ந்த நிலை. சிவமாதல் நிட்டை கூடியபின். வீரன் ஒருவன் தன்னையே சுட்டி, 'இவன்முன்யாரும், எதுவும் செய்ய இயலாது' என்றவிடத்து, வீரம் காரணமாகப் படர்க்கைச் சொல் தன்மைப் பொருள் தருதல் போலவே, இங்கு 'இவன்' என்பது தன்மைப் பொருள் தந்தது. இவன் ஆதிக்கண் தெய்வம், இப்போது 'அவனே' என மாற்றி, முதலிற் கூட்டியுரைக்க. இதனால், சோதனைகளில் ஞானிகளது துணிவு நிலை உணர்த்தப்பட்டது.

அந்தக் கருவை அருவை வினைசெய்தற்
பந்தப் பனிஅச்சம் பல்பிறப் பும்வாட்டிச்
சிந்தை திருத்தலும் சேர்ந்தார்அச் சோதனை
*சந்திக்கத் தற்பர மாகும் சதுரர்க்கே. **#2597***

எல்லா அனத்தங்கட்கும் மூலமாய் உள்ள ஆணவம், சத்தி சமூகம் ஆதலின் அருவமாய் உள்ள மாயை, அதனைக் கொண்டு சில செயல்களைச் செய்வதாகிய கன்மம் ஆகிய இப் பந்தங்களால் உளவாகின்ற, நடுங்கத் தக்க அச்சத்தைத் தரும், எண்ணிறந்தனவாகிய பிறப்புக்கள் அனைத்தையும் போக்கி, ஞானாசிரியர் ஆன்ம அறிவைத் தூயதாக்க, அதனால் சிவத்தைச் சேர்ந்து சிவமாயினோர், அதன்பின்பும் வரும் சோதனைகளை உறுதியோடு சந்தித்து வென்றால், அங்ஙனம் வென்ற திறமையாளர்க்கு அந்தச் சிவப்பேறு நிலைத்திருக்கும்.

விளக்கவுரை

'இல்லையேல் நழுவிடும்' என்றபடி. சேர்தற்குச் செயப்படுப்பொருள் வருவிக்கப்பட்டது. 'அந்தக் கரு, அச்சோதனை' என்பன பண்டறி சுட்டு சந்தித்தல், புறங்கொடாமையைக் குறித்தது. 'தற்பரம்' என்றது, பெறப்பட்ட பொருளைக் குறித்தபடி. ஆதல், என்றும் உளதாதல். இதனால், ஞானத்தை முறையாக எய்தினோர், அதன் பின்வரும் சோதனைகளால் கலங்காது நின்று சாதித்தல் வேண்டும் என்பது கூறப்பட்டது.

உரையற்ற தொன்றை உரைத்தான் எனக்குக்

கரையற் றெழுந்த கலைவேட் பறுத்துத்
திரையற்ற என்னுடல் நீங்கா திருத்திப்
புரையற்ற என்னுட் புகும்தற் பரனே. *#2598*
முதுமை காரணமாக வருகின்ற திரையில்லா (இளமையாகவே
யிருக்கின்ற) என்னுடைய உடம்பை அவ்வாறே என்றும்
அழியாதிருக்கும்படி வைத்து, 'காமம், வெகுளி, மயக்கம்' என்னும்
குற்றங்கள் அற்ற என்னுடைய உள்ளத்தில் புகுந்த சிவன், எனக்கு,
அளவின்றிக் கிடக்கின்ற நூல்களின்மேல் செல்கின்ற அவாவை
அறுத்து, சொல்லுக்கு எட்டாத ஓர் அரும்பொருளை எனக்கு
உபதேசித்தான்.

விளக்கவுரை

'அதனையே யான் இத்தந்திரத்தில் கூறினேன்' என்றபடி. பின்னிரண்டடிகளை முதலில் வைத்து, முதல் அடியை இறுதியில் கூட்டியுரைக்க. உரையற்றது ஒன்று - சிவானுபவம். 'நூலறிவை மட்டுமே கொண்டு நான் இத்தந்திரத்தைக் கூறவில்லை' என்பதாம். 'அரன் அடி சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே'*1* எனப் பாயிரத்துட் கூறினாராகலின், இது கூற வேண்டியதாயிற்று. 'சரியை முதலிய நான்கனுள் முதல் மூன்றும் நூலறிவானே கூறினும் கூடும்; ஞானம் அத்தகையது அன்று' என்பதாம். 'உடலை நீங்கா திருக்கச் செய்தான்' என்றது நெடுநாள் இருக்கச் செய்தான் என்றபடி. இதனால், 'இத்தந்திரத்துள் ஞானம் இவ்வாற்றால் கூறி முடிக்கப்பட்டது' என முடிவுரை கூறினார்.

ஒன்பதாம் தந்திரம்

11.1.குருமட தரிசனம்

பலியும் அவியும் பரந்து புகையும்
ஒலியுய்எம் ஈசன் றனக்கென்றே உள்கிக்
குவியும் குருமடம் கண்டவர் தாம்போய்த்
தளிரும் மலரடி சார்ந்துநின் றாரே. ***#2599***

'வித்தியா குரு, கிரியா குரு, ஞான குரு எனக் குருமார் முத்திறப்படுவர். அவருள் வித்தியாகுருமார் இருக்குமிடம், 'குருகுலம்' எனப்படும். குலம் - இல்லம். ஏனை இருதிறத்தார் இருக்குமிடம் 'மடாலயம்' எனப்படும். அஃது இங்குச்சுருக்கமாக, 'மடம்' எனப்பட்டது. அவருள்ளும் இங்கு, 'குரு' என்றது, சிறப்பாக ஞான குருவையே.

வித்தியா குரவராவார் இல்லறத்தவரே. வானப்பிரத்தராயும் இருப்பர். ஏனையிருவரும் 'கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம்' என்னும் மூன்று ஆச்சிரமங்களில் தங்கட்கு ஏற்புடையதில் இருப்பர். இம்மூவரது இருப்பிடங்களுமே 'மடம்' எனப்படும். எனினும், கிருகத்தர் தவிர ஏனையிருவரது இருப்பிடங்களையே வழக்கத்தில் 'மடம்' என்பது குறிக்கின்றது.

'தாவில் சீர் முருகனார் திருமனைக் கெய்தி'

என முருக நாயனாரது இல்லத்தை, 'திருமனை' என ஓரிடத்தில் அருளிச் செய்த சேக்கிழார் தாமே, அதனை வேறிடங்களில்

'திக்கு நிறைசீர் முருகர் முன்பு
செல்ல, அவர்மடம் சென்று புக்கார்'3

'முருகனார் திருமடத்தின் மேவுங் காலை'

'ஓங்குபுகழ் முருகனார் திருமடத்தில் உடனாக'3

என, 'மடம்' என்றும், 'திருமடம்' என்றும் அருளிச் செய்தார். ஆதலின், சிவனுக்கு அடியவராய்ச் சிவப்பணி செய்வார் யாவ ராயினும் அவரது இல்லங்கள், 'திருமடம்' எனக் குறிக்கப்படுதற்கு உரியவாதல் விளங்கும். இன்னும் அவர், (சேக்கிழார்) அப்பரும், சம்பந்தரும் திருவீழிமிழலையில் சிலநாட்கள் எழுந்தருளியிருந்த இடங்களையே, 'அக்காலங்களில் அந்த இடங்கள் திருமடங்களாய் விளங்கின' என்னும் கருத்தால்,

'ஈறி லாத பொருளுடைய
இருவர் தங்கள் திருமடமும்'1

'நாவினுக்கு வேந்தர் 'திருமடத்தில்'*

'பிள்ளையார்தம் திருமடத்தில்'

எனத், 'திருமடம்' எனக் குறித்தருளினார். இன்னும் திருஞான சம்பநத்ர் திருமணத்தின் பொருட்டுச் சென்று, அதற்குமுன் சிறிதுபோது

எழுந்தருளியிருந்த இடத்தையே, அவர் எழுந்தருளியிருந்தமை
காரணமாகச் சேக்கிழார்,
'பூதநா யகர்தம் கோயிற்
புறத்தொரு மாமடத்திற் புக்கார்'*
என, 'மடம்' என்று அருளிச்செய்தார்.
இனித் திருநாவுக்கரசு நாயனார், திருப்பூந்துருத்தியில்,
'திங்களும் ஞாயிறும் தோயும்
திருமடம் ஆங்கொன்று செய்தார்'
எனப்பட்டது, ஆசிரியன்மார்களும், அடியார்களும் எழுந்தருளி யிருக்கத்
தக்கதாக, நிலையாக அமைந்த திருமடமாகும்.
'நான்காம் வருணத்தாறருள் நைட்டிகருக்கல்லது
ஆசாரியத் தன்மையில் அதிகாரம் இல்லை'
என்றும்,
'ஆதிதசைவராயின் கிருகத்தருக்கும் ஆசாரியத்
தன்மையில் அதிகாரமும் உண்டு'
என்னும் சிவஞான யோகிகள் தமது சிவஞான போத மாபாசியத்துச்
சிறப்புப் பாயிரப் பாடியத்துள், 'ஆசாரியத் தன்மையின் அதிகாரம்'
என்னும் தலைப்பின்கீழ்ப் பலவகைத் தடைவிடைகளால் நிறுவினார்.
அதுபற்றிச், 'சைவ சமய நெறி' நூலின்,
'சூத்திரனும் தேசிகனா வான்மரணாந் தம்துறவி,
சாத்திரத்தின் மூன்றும்உணர்ந் தால்'8
என்னும் திருக்குறளின் உரையில் யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர்
பின்வருமாறு கூறியுள்ளதை இங்கு அறிதல் இன்றியமையாதது.
(மூன்றும் - முப்பொருள்களின் இயல்பும்.)
'சூத்திரருள் நைட்டிகப் பிரமசாரிகட்கே
குருத்துவம்; கிருகத்தர்களுக்குச் சமயி,
புத்திர, சாதகத்துவம் மாத்திரம்; குருத்துவம்
இல்லை - என்று காமிகாகமத்தில் கூறப்படுதல்
பற்றி இவ்வாறுரைத்தார்.
- சூத்திரருட் கிருகத்தருக்கும் குருத்துவம்
உண்டு - என்று வேறுசில ஆகமங்களில்
விதிக்கப்பட்டது.
முன்னை விதி, நைட்டிகப் பிரமசரியம் வழுவாது
அநுட்டிப்போர் பலருளராகப் பெற்ற முனை
யுகங்களிலும், பின்னை விதி, நைட்டிகப்
பிரமசரியம் வழுவாது அநுட்டிப்போர்
மிக அரியராகப் பெற்ற இக்கலியுகத்திலும்

கொள்ளற்பாலன வாதலின், விரோதமின்மை
தெளிக.'

இதனால், 'ஆகமங்களில் சூத்திரர்களில் கிருகத்தருக்கும் ஆசாரியத் தன்மையில் அதிகாரம் உண்டு' எனக் கூறப்பட்டிருப்பதை அறிகின்றோம். வழக்கத்திலும் அவ்வாறு உள்ள ஆசாரியர்கள், 'தேசிகர்கள்' எனப் பெயர் பெற்று விளங்கக் காண்கின்றோம். அவர்களைச் சிவஞான யோகிகள் 'ஆசாரியர்கள்' என்று ஒப்புக் கொள்ளவில்லை. ஆயினும், தீக்கையைப் பற்றி விரிவாகவும், சுருக்க மாகவும் கூறுகின்ற, சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் என்னும் நூல்களிலும, சாதியை வைத்துத் தீக்கை வேறுபாடு கூறவில்லை. அவ்வாறே சாதி பற்றிக் கூறப்படும் சைவ பேதங்களையும் அந்நூல்கள் குறிப்பிடவில்லை. இந்நாயனாரும் குருமார்களைப் பற்றிப் பேசும் இடங்களில் இவ்வாறெல்லாம் கூறவில்லை.

'ஞான தீக்கையால், உயிரே சீவனாய் இருந்தது, சிவமாகி விடுகின்றது' என்றால், அதன்பின் அதற்குக் கருவியாய் அமைந்து, அது வேண்டியவாறே பயன்படுகின்ற உடம்பைப் பற்றிய சாதி, தீக்கை யினாலும், மாறுதல் இல்லை' என்பதை உடன்பட முடியவில்லை. சிவப்பிரகாச நூலில் உமாபதி தேவர், 'பெத்தான்மாவின் உடம்பே பாசம்; முத்தான்மாவின் உடம்பு திருவருளே' என்கின்றார்.*3*

இந்நாயனாரும்,

'திண்மையின் ஞானி சிவகாயம்'*1*

என்பதனால், 'சிறந்த ஞானியின் உடம்பு சிவனது திருமேனியே' என முன் தந்திரத்தில் கூறியிருத்தலைப் பார்த்தோம். துறவிகள் உடம்பிற்குச் சமாதிக் கிரியை விதித்ததும் இது பற்றியே. திருநாவுக்கரசு நாயனார்,

'எவரேனும் தாம்ஆக; இலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி,
உவராதே அவரவரைக் கண்டபோது
உகந்தடிமைத் திறம்நினைந்து அங்கு உவந்து நோக்கி,
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டாது ஒழிந்து ஈசன் திறமே பேணிக்
கவராதே தொழும் அடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.'*9*

எனப் பொதுவான திருவேடமுடையாரைப் பற்றியே இவ்வாறு அருளிச் செய்தார். அங்ஙனமாக, 'சிறந்த ஞானாசிரியரால் பலவகைத் தீக்கைகளையும் செய்து, ஔத்திரி தீக்கையால் அத்துவ சோதனையும் செய்யப்பட்டபின்னும் அந்த அத்துவாக்களையுடைய உடம்பு, தாய் வயிற்றினின்றும் பிறந்தது பிறந்தபடியேதான் உள்ளது. சிறிதும் மாற்ற

மில்லை' எனக் கூறுதல், 'சமயத்திலும் சாதியே வலுவுடையது; அது பிறப்பு மாறினாலன்றி, மாறாது' எனக் கறும் மிகுதி நூல்களையே தலை யாய பிராமாணங்களாகக் கொள்கின்ற சுமார்த்த சமயத்தின் தாக்கமே யாகும். 'சைவத்தில் அஃதல்லை' என்பது திருத்தொண்டர் புராணத்தில் மிக மகி வெளிப்படை. 'தீக்கையால் உயிரினது நிலை மட்டுமே மாறும்; உடலது நிலையில் மாற்றம் உண்டாகாது' எனக் கூறினால், 'துறவிகளது உடம்பிற்குச் சமாதி விதித்தலால் பயன் என்னை, என்க. 'அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்' என்போர்' நிருவாண தீக்கைபெற்றுச் சைவ சந்நியாசமும் பெற்ற பின்னரும், 'முன்பு இருந்த அந்தணன் அந்தணன்தான்; வேளாளன் வேளாளன் தான்' எனக் கூறுதல் எவ்வளவு தொலைவு உண்மையோடு ஒட்டு கின்றது என்று பார்த்தல் வேண்டும். எனவே, இங்கு, 'குரு' என்றது, எவ்வாற்றாலேனும் ஆசிரியத்தன்மை பெற்றோரையேயாம். எனினும் சந்நியாச ஆச்சிரமத்தில் உள்ள குருமார் இருப்பிடத்தற்கே 'மடம்' என்னும் பெயர் சிறப்பாக உரியது. வானப்பிரத்த, கிருகத்த ஆசாரியர்கள் இருப்பிடத்திற்கு அது பொதுவாக உரியதே.

இனி, 'சந்நியாசிகட்கு ஆசாரியத் தன்மை இல்லை' என்னும் ஓர் வாதமும் உண்டு.*

அது தபசுவி - என்னும் சந்நியாசியைக் குறித்து மட்டுமே கூறியது' எனச் சிவஞான யோகிகளே மேற்குறித்த இடத்தில் விளக்கினார். இங்கு வானப்பிரத்தர் 'தபசுவி' அல்லாத சந்நியா சிகளுள் அடங்குவர்

'அப்பாஇம் முத்திக்(கு) அழியாத காரணந்தான்
செப்பாய், அருளாலே; செப்பக்கேள் - ஒப்பில்
குருலிங்க வேடம்எனக் கூறில்இவை கொண்டர்,
கருஒன்றி நில்லார்கள் காண்'

'கற்றா மனம்போல் கசிந்துகசிந் தேஉருகி
உற்றாசான் லிங்கம் உயர்வேடம் - பற்றாக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோகிக்கும்
பத்திதனில் நின்றிடுவார் பார்'9 என்றபடி, சித்தாந்த முத்திக்குத் துணையான, குரு லிங்க சங்கமங்களே யாதல் பற்றி அவைகளை, மேல் இடம் வாய்த்துழிக் கூறிய நாயனார், இங்கு முதற்கண் குரு இடமாகிய திருமடத் தரிசனத்தின் சிறப்பைக் கூறுகின்றார். இவ்வதிகாரம் ஆறு மந்திரங்களையுடையது.

'சிவபெருமான் ஒருவனுக்கே உரியன' எனக் கருதிக் கொண்டு, தனியாகப் படைக்கப்படுகின்ற படையல்களும், நெருப் பிடமாக இடப்படுகின்ற அவிசுகளும், தூபம், வேள்வி, குருலிங்க சங்கமங்கட்காக அடுகின்ற அட்டில் இவற்றினின்றும் எழுகின்ற புகைகளும்,

வழிபாடுகளில் மெல்ல ஓதுகின்ற மந்திர ஒலிகளும், இசையுடன் உரக்க ஓதுகின்ற வேதம், திருமுறை இவற்றின் ஓசைகளும் வந்து வந்து பரவிக் குவிகின்ற இடம் குருமடம், இதைக் கண்ணால் கண்டவர்களும் சிவலோகத்திலே சிவனது திருவடியைச் சார்வார்கள்.

விளக்கவுரை

'கண்டவர்கட்கு உலக ஆசைகள் நீங்க, சிவபத்தி தோன்றி முதிரும்' என்பதாம். 'நல்லாரைக் காண்பதுவும் நன்றே'8 என்றதும் இது பற்றி, 'ஈசன்றனக் கென்றே உள்கி' என்பதை முதலிற்கொள்க, கருதுதலைச் 'சங்கற்பம் செய்து கொள்ளல் என்பர். 'அங்ஙனம் செய்து கொண்டு செய்வனவற்றிற்குப் பயன் மிகுதி என்பது ஆகமங்களின் துணிபு. 'ஈசன்' என முன்னர்ப் போந்தாமையால், 'மலரடி' என்றதும் அவனது திருவடியே யாயிற்று. 'ஈசன்' என்பது சிவ பெருமானுக்கே உரிய சிறப்புப் பெயர். 'உள்கி' என்பதன்பின், 'செய்ய' என ஒரு சொல் வருவித்து 'பரந்து' என்பதைக் 'குவியும்' என்பதற்கு முன்னர்க் கூட்டுக. தெளிவு நோக்கி எதிர்காலம் 'சார்ந்து நின்றார்' என இறந்த காலம் ஆயிற்று. பின்னிரண்டடிகள் உயிரெதுகை பெற்றன.
இதனால், குருமட தரிசனம் பத்தியைத் தருதல் கூறப்பட்டது.

இவன்இல்லம் அல்ல(து) அவனுக்கங் கில்லை
அவனுக்கு வேறில்லம் உண்டா அறியின்
அவனுக்கு இவன்இல்லம் என்றென் றறிந்தும்
அவனைப் புறம்பென்(று) அரற்றுகின் றாரே. *#2600*

'சிவனுக்கென்று சுத்த தத்துவங்களில் உலகங்கள் உள்ளன' எனக் கூறப்படுவன, அவனுக்காக அமைக்கப்பட்டன அல்ல இந்தச் சிவகுருவுக்காக அமைக்கப்பட்டனவே. (ஏனெனில், சிவனுக்கு இருக்க ஓர் இடம் தேவையில்லை. சிவகுருவுக்கு, மாசுடம்பு நீங்கிய வுடன் இருக்க ஒரு தூய இடம் வேண்டும்.) 'சுத்த தத்துவ உலகம் தவிர, அவற்றின் வேறாகச் சிவனுக்கென்றே இடம் இருக்கின்றது' என்று சொன்னால் அந்த இடம் இந்தச் சிவகுருதான். இதை உண்மை நூல்கள் பலவற்றால் அறிந்தும் சிலர், 'குருமடம் வேறு; சிவனது உலகம் வேறு' எனக் கூப்பாடு செய்கின்றனர்.

விளக்கவுரை

'குருமடம் சிவலோகமே' என்றபடி. 'இல்லம்' என்பதை 'அங்கு' என்பதன் பின்னும் கூட்டுக. மூன்றாம் அடியில், 'சிவனே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுக்கப்பட்டது. (அவனுக்கு இல்லம் இவனே' என மாற்றிக்கொள்க. 'என்று என்று' என்னும் அடுக்கு, பலமுறை கற்றும், கேட்டும் அறிதலைக் குறித்தது' 'அவனைப் புறம்பென்று' என்பதற்குக்

கருத்து நோக்கி, இவ்வாறு உரைக்கப்பட்டது.
இதனால், 'குருமட தரிசனம், சிவலோக தரிசனமே' என அதனது சிறப்புக் கூறப்பட்டது. 'அவ்விடம் திருவருள் விளக்கம் நிரம்பியுள்ள இடம்' என்பது கருத்து.

நாடும் பெருந்துறை நான்கண்டு கொண்டபின்
கூடும் சிவனது கொய்மலர்ச் சேவடி
தேட அரிய சிறப்பில்லி எம்மிறை
ஓடும் உலகுயி ராகிநின் றானே. *#2601*

ஞானமாகிய கடலில் மூழ்குதற்கு உரிய பெரிய துறையாகிய குருமடத்தைச் சென்று நான் தரிசித்தபின்பு, எல்லா உயிர்களும் சென்று சேரும் இடமாகிய சிவனது, அப்பொழுது கொய்த தாமரை மலர்போலும் சிவந்த திருவடிகள் தேடிக் காண்பதற்கு அரியனவாகவே இருக்க, திருமடத்தைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டுள்ள சிவகுருவே எங்கட்குச் சிவனாய் இயங்குகின்ற உலகம், உயிர் எங்கும் நிறைந்து நிற்கின்றான்.

விளக்கவுரை

'பெருந்துறை' என்றது, குறிப்புருவகம். 'பெரிதாகிய கடலில் சென்று ஆடுதல், அதற்குரிய துறைவழியாக அன்றி இயலாத வாறு போல, அகண்ட ஞானத்தைப் பெறுதல் அதற்குரிய குருமடத்தில் சென்றன்றி இயலாது' என்பது தோன்ற இவ்வாறு உருவகித்தார். 'பெருந்துறை' என்னும் சொற் குறிப்பால், 'இந்நாயனார் ஆளுடைய அடிகள் காலத்திற்குப் பின் இதனை அருளிச்செய்தார்' எனக் கருதலாம்.
'பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன்'*3*
என அடிகளைச் சிவப்பிரகாசர் போற்றினார். 'ஞானத்தைப் பெற்றவர்களுக்கு அதனை அளித்தருளிய ஞானகுருவே சிவன்' என்பதை, 'குருவே சிவம் எனக்கூறினன் நந்தி'*88?* என நாயனார் முதற்கண் கூறியதுபோலவே, அருணந்தி தேவரும்,
'பரம்பிரமம் இவன்என்றும், பரசிவன்றான் என்றும்,
பரஞானம் இவன்என்றும், பராபரன்றான் என்றும்,
அரன்தரும்சீர் நிலையெல்லாம் இவனே யென்றும்
அருட்குருவை வழிபட'*9*
எனக் கூறினமை அறியற்பாலது. இவ்வாற்றால், 'சிவனது சேவடி தேடி அடைய அரியன அரியனவாகவே இருக்க, நாங்கள் குருமடத்தில் குருவினது சேவடியையே சிவனடியாக அடைந்து விட்டோம்' என்றார். சிறப்பு இல் - ஞானம் நிலையம். இகர ஈறு, அதனையுடைய குருமூர்த்தியை உணர்த்திற்று. 'கைகூடும் சிவனது ... ... தேட அரிய'

என்பதை இடைப் பிறவரலாக்கி, இம் மந்திரத்தை வினை முடிபு செய்க. 'அரிய ஆக' என ஆக்கமும், 'எம்மிறையும், உலகுயிராகியும்' என எண்ணும்மைகளும் விரிக்க.
இதனால் ஞானிகட்குக் குருமடம் புகலிடமாதல் கூறப்பட்டது.

இயம்புவன் ஆசனத் தோடு மலையும்
இயம்புவன் சித்தக் குகையும் மடமும்
இயம்புவன் ஆதாரத் தோடு வனமும்
இயம்புவன் ஈரா றிருநிலத் தோர்க்கே. ***#2602***

'சிவன் எழுந்தருளியிருக்கின்ற இருக்கை, கயிலாய மலை, ஞானிகளது உள்ளம் என்பன. முறையே திருமடத்தில் உள்ள பீடமும், மடலாயமும், திருநந்தவனமுமே' என்று நான், பன்னிரு பகுதியாகிய, பெரிய தமிழ்நாட்டு மக்கட்கு உறுதியாகக் கூறுவேன்.

விளக்கவுரை

'சிவனுடைய' என்பது முன் மந்திரத்தினின்றும் வந்து இயைந்தது. 'இயம்புவன்' என்பது மீள மீள வந்தது சொற்பொருட் பின்வருநிலையணி. மடம் முதலிய மூன்றினையும் ஆசனம் முதலிய மூன்றதனோடும் நிரல் நிறையாக இயைக்க. 'ஆதாரம்' எனப்பின்னர் வருதலால், 'படம்' என்பது பீடத்தைக் குறித்தது. தானியாகு பெயராக, மடத்தையே 'பீடம்' என வழங்குதல் உண்மையையும் இங்கு நோக்குக. நந்தவனம் மலர்பொதுளி விளங்குதலால், அது ஞானிகளது உள்ளமாயிற்று. அதன் மணம், ஞான மணமாம். ஈராறு நிலம் - தமிழ்ப் பன்னிரு நாடுகள்.
'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தினும்'8
என்றமையால், தொல்காப்பியர்க்கு, இவைகளைக் கொடுந்தமிழ் நாடாகக் கூறுதல் கருத்தாகாமை விளங்கும்.
'என்னைநன் றாக இறைவன் படைத்தனன்,
தன்னைநன் றாகத் தமிழ்ச்செய்யு மாறே'3
என நாயனாரே பாயிரத்துட் கூறியவாறு தமிழ் மக்கட்கே தாம் நூல் செய்கின்றார் ஆகலானும், 'தமிழ் மண்டலம் ஐந்து' எனத் தமிழ்நாடு முழுதையும் நோக்கினார் ஆகலானும் தமிழ் மக்களையே குறித்தார். இனி, 'ஈராறும், இரண்டும் ஆகிய நிலம்' என வைத்து,'பதினான்கு உலகங்களில் உள்ளார்க்கும் இயம்புவன்' என்றும் உரைப்பர். 'அஃது எத்துணைப் பொருத்தம் உடையது' என அறிந்துகொள்க.
இதனால், 'குருமடத்தில் உள்ள பீடம் முதலியன சிவனது பீடம் முதலியனவேயாம் சிறப்புடையன' என்பது கூறப்பட்டது.

முகம்பீட மாம்மட முன்னிய தேகம்
அகம்பர வர்க்கமே ஆசில்செய் ஆட்சி

அகம்பர மாதனம் எண்ணெண் கிரியை
சிதம்பரம் தற்குகை ஆதாரந் தானே. *#2603*

குருமடத்தில் முதன்மையாக அமைந்துள்ள பீடம், சிவபெருமானுடைய முகம். மடாலயம் உயிர்களால் நினைக்கப் படுகின்ற சிவனுடைய திருமேனி. திருமடத்தில் உள்ள பல உயிர்ப் பொருட்கள், உயிரல் பொருட்கள், சிவனுடைய வியாபகத்துள் அடங்கியுள்ள உயிர்களும், உயிர் அல்லாதனவும் ஆகிய உலகங்கள். குருமூர்த்தியின் ஆட்சி, சிவபெருமான் உயிர்களின் பாசத்தைப் போக்குதற்குச் செய்கின்ற செயல்கள். குருமூர்த்தியினுடைய உள்ளம், சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் மேலான இருக்கை. குருமூர்த்தி தாம் இருப்பதாகக் கொண்டுள்ள குகை, சிவனுடைய இடமாகிய சிதாகாசம். ஆகவே, குருமூர்த்திக்கு அவர்தம் மாணவர் செய்யும் பதினாறு வகை முகமன்களோடுகூடிய வழிபாட்டுச் செயல்கள். உலகில் சிவபெருமானுக்கு அந்தணர் முதலியோர் அவ்வாறு செய்யும் வழிபாட்டுச் செயல்களே.

விளக்கவுரை

'அகம்' இரண்டில் முன்னது இடவாகு பெயராய், அதில் உள்ள பொருட்களைக் குறித்தது பரவர்க்கம் - ஏனைப் பொருட்கள். செய் - செயல்; முதனிலைத் தொழிற்பெயர். 'ஆசு இன்மைக்கு ஏதுவான செயல்' என்க. 'தேயம், காட்சி' என்பன பாடம் அல்ல. பரம் + ஆதனம் = பரமாதனம். எண் எண் - எட்டும் எட்டும்; பதினாறு. இஃது எண்ணாகு பெயராய் அத்துணை வழிபாட்டுச் செயல்களைக் குறித்தது எழுவாயாய் நின்று 'கிரியை' என்னும் பயனிலையைக் கொண்டது. 'குகையாகிய ஆதாரம்' என்க. குகையை 'ஒடுக்கம்' என்பர்.

'பீடம் முகமாம்; பரவர்க்கம் அகம்; ஆட்சி செயல்; தற்குகை ஆதாரம் சிதம்பரம்; ஆகவே, எண்எண் முகமன் கிரியை' என இயைத்துக் கொள்க. ஈற்றடி மூன்றாம் எழுத்தெதுகை பெற்றது. உயிர் எதுகையுமாம். இதனால் குருமடமே சிவசொரூபமாதல் கூறப்பட்டது.

அகமுக மாம்பீடம் ஆதாரம் ஆகும்
சகமுக மாம் சத்தி ஆதனம் ஆகும்
செகமுக மாம் தெய்வ மேசிவம் ஆகும்
அகமுகம் ஆய்ந்த அறிவுடை யோர்க்கே. *#2604*

புற ஆரவாரங்களை விடுத்து, அகநோக்குக் கொண்டு நோக்குகின்ற ஞான குரவர்கட்கு, அனைத்திற்கும் அடி நிலையாகிய அந்த அக நோக்கு உணர்வே சிவன் எழுந்தருளி யிருக்கும் ஆசனமாகும். அந்த அகநோக்கு உணர்வு. நிலை திரியாதே மாணாக்கர்பொருட்டு உலகை நோக்குகின்ற அதுவே சிவன் கொள்கின்ற திருவுருவமாகும். அங்ஙனம் நோக்கி

மாணாக்கர்க்குச் செய்யும் அருட் செயல்களே அத்திருவுருவத்தில் உள்ள சிவபெருமானாகும்.

விளக்கவுரை

வழிபாடு, 'ஆசனம், மூர்த்தி, மூர்த்திமான்' என்னும் மூன்றும் அமையச் செய்யப்படும் ஆகலின் அம்மூன்றும் குரு மூர்த்திகளது அருட்செயலில் அமைதல் காட்டியபடி. 'ஞானகுரு தம் மாணாக்கர்க்கு அருள்புரியுமிடடத்துத் தமது நிலையை இவ்வாறு பாவித்து நின்றே புரிதலால், அவர் செயல் அவருக்குச் சிவப் பணியாயும், ஏனையோர்க்குத் திருவருட் செயலாயும் அமைந்து பயன் தருகின்றன' என்பதாம்.
'அகமுமாம் ஆதாரம் பீடம் ஆம்' என்க.
ஆதனம் - ஆசனம். என்றது, இங்கு, உறையும் இடமாகிய உருவத்தைக் குறித்தது. சிவனுக்குச் சத்தியே திருமேனியாதல் அறிக வழிபாட்டிற்கு உரிய வகையில் கட்புலனாகியிருக்கும் நனி நுண்ணுடம்பு சிவன் அவ்வுடம்புகளின் உள்ளிருக்கும் உயிர் ஆதலின், நனி நுண்ணுடம்பையே இங்குக் கூறினார். சத்தி வெளிப்படும்பொழுது சிவமும் உடன் வெளிப்பட்டு நிற்கும் ஆதலின் 'சகமுமாம் சத்தி' என்றும், 'தெய்வம்' என்றது, திவ்வியமாகிய செயல்களை.
இதனால், ஞானகுருவினது பாவனை முதிர்ச்சியால் அவர் சிவமாய் நிற்றலின் அவரது மடம் சிவசொரூபமாயிற்று' என்பது விளக்கப்பட்டது.
ஆறு, ஏழாந் தந்திரங்களில் குருவைப் பற்றிக் கூறினா ராயினும் அங்குக் குருமடத்தின் சிறப்புப் பற்றிக் கூற இயைபில் லாமையால், அவற்றின் ஒழிபாக இதனைக் இங்குக் கூறினார். இது முன்னைத் தந்திரத்து இறுதிக்கண் நின்ற 'பத்தி யுடைமை' அதிகாரத்தோடு இயைந்து நிற்றலும் காண்க.

11.2.ஞானகுரு தரிசனம்

மாயை இரண்டு மறைக்க மறைவுறும்
காயம்ஓ ரைந்தும் கழியத்தா மாகியே
தூய பரஞ்சுடர் தோன்றச் சொரூபத்துள்
ஆயவர் ஞானாதி மோனத்த ராவரே. ***#2605***

'அசுத்த மாயை, பிரகிருதி மாயை' என்னும் இரு மாயைகள் தம்முள் ஒடுக்க ஒடுங்குகின்ற ஐந்து உடல்களையும் அவற்றது இயல்பை உள்ளவாறு உணர்ந்து, 'அவை நாம் அல்ல' என்று கழிக்கக் கழிதலால், மூன்னர்த் தாம் சடமாகிய அவையாகாது, சித்தாகி நின்று, அங்ஙனம் நின்ற அந்நிலையில், இயற்கையிலே அசுத்தமாய் நின்ற பாசஞானமும், செயற்கையால் அசுத்தமாகிய பசு ஞானமும் போலாது, இயல்பாகவே தூய்தாகிய பதிஞானம், தோன்ற, அதனானே அந்த ஞானத்திற்கு

முதலாய் உள்ள சிவத்தை அறிந்து, அதனுள் அடங்கியிருப்பவர்'
மோனிகட்கு மேலாகிய மோனிகளாவார்.

விளக்கவுரை

'அத்தகையோரே ஞானக் குரவர்' என்பது குறிப்பெச்சம். சுத்தமாயை சகலர்க்கு உடம்பாய் வருதல் இன்மையானும், இங்குக் கூறுவது சகலரையே ஆகலானும் 'மாயை இரண்டு' என்பதற்கு, 'சுத்த மாயை, அசுத்த மாயை' என உரைத்தல் கூடாமையறிக. சிவசத்தியால் செய்யும் மாயைகளை அவையே செய்வனபோலக் கூறினார் ஐந்து உடம்புகள் எட்டாம் தந்திரத் தொடக்கத்தில் கூறப்பட்டன. ஞான அதிமோனர் - ஞான முதிர்ச்சியால் முற்றிய மௌன நிலையை அடைந்தவர்.
ஞானகுரு தரிசனச் சிறப்பைக் கூறுதற்கு முதற்கண் ஞானகுருவின் இயல்பு விளக்கப்பட்டது.

ஆறொடு முப்பதும் அங்கே அடங்கிடல்
கூறக் குருபரன் கும்பிடு தந்திடும்
வேறே சிவபதம் மேலா அளித்திடும்
பேறாக ஆனந்தம் பேணும் பெருகியே. ***#2606***

உயிர்க்குச் சிவத்தைக் காட்டாது தம்மையே காட்டி நிற்கின்ற முப்பத்தாறு கருவிகளின் சேட்டைகளும் அடங்கும் முறையை மேலான குரு உபதேசம் செய்யும் பேற்றினை அக்குருவைத் தரிசித்து வணங்குவதாகிய வணக்கமே தரும். அவ்வுபதேச வாயிலாக அது மேலும் சிறப்பாகச் சிவனது திருவடியைத் தரும் பின்பு முடிநிலைப் பேறாக அவனது ஆனந்தத்தைத் தந்து, அஃது எல்லை யின்றிப் பெருகி வருமாறு பேணியும் நிற்கும்.

விளக்கவுரை

'ஆகவே, உபதேசத்திற்கு முன்னும், அதன் பின் சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்னும் நிலைகளிலும் குரு வழிபாட்டினைத் தவிரற்க' என்பது குறிப்பெச்சம்.

'தன்னை யறிவித்துத் தான்தானாச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது - முன்னவனே
தானேதா னாச் செய்தும், தைவமென்றுந் தைவமே;
மானே தொழுகை வலி'*3*

என்றார் மெய்கண்ட தேவரும்.
அங்கே - அப்பொழுதே. 'அடங்கிடல்' என்றது, அதற்குரிய வழியைக் குறித்தது. 'குருபரன் கூற, அவனைக் கும்பிடுதல் தந்திடும்' என இயைக்க. கும்பிடு, முதனிலைத் தொழிற்பெயர். 'தத்துவம் முப்பத்தாறனுள் மேலே உள்ள சிவதத்துவம் ஐந்தும் செலுத்துதல்

அளவாய் நிற்க, ஏனை முப்பத்தொரு தத்துவங்களே சகலர்க்கு மேற்கூறிய ஐந்துடம்புகளாய் வந்து பொருந்தும்' என்க.
இதனால், ஞான குரு தரிசனம் அடைதற்கரிய பேறுகளை யெல்லாம் அளித்தல் கூறப்பட்டது.

துரியங்கள் மூன்றும் கடந்தொளிர் சோதி
அரிய பரசிவம் யாவையு மாகி
விரிவு குவிவற விட்ட நிலத்தே
பெரிய குருபதம் பேசஒண் ணாதே. *#2607*

தம்மை அடைந்தவரை, முத்துரியங்கட்கும் அப்பாற்பட்டு ஒளிரும் பேரொளிப் பிழம்பாகிய, அணுகுதற்கரிய பரசிவப் பொருளேயாய், அதனைப்போலவே எங்கும் வியாபகமாய், அறிவு மாயாகாரியங்களின்மேல் படர்ந்து செல்லுதலும், அதனை விட்டு ஒன்றும் அறியாது அறியாமையுள் மூழ்கிக்கிடத்தலும் ஆகிய 'சகலம், கேவலம்' என்னும் இரண்டும் அற்ற இடமாகிய சுத்த நிலையிலே தங்கும்படி கொண்டுபோய்ச் சேர்க்கின்ற பெருஞான குருவின் திருவடி தரிசனச் சிறப்பை அளவிட்டுச் சொல்ல இயலாது.

விளக்கவுரை

முத்துரியங்களை முன் தந்திரத்தில் சொல்லப்பட்டன. 'ஆகி' என்பதை, 'பரசிவம்' என்பதனோடும் கூட்டுக. விரிவு, சகலம். குவிவு, கேவலம். 'விரிவு குவிகு அற' என்றதனஆல், 'அவை அற்ற நிலத்தே விட்ட பெரிய குரு' என்க. விடுதல் - சேர்த்தல். அதிகாரம் 'தரிசனம்' ஆதலின், 'பதம்' என்பதும், பாத தரிசனத்தையே என்க. பாதம் பயன் தருதலும் தரிசனத்தினாலே யென்பதும் உணரற்பாற்று.
இதனால், முன் மந்திரத்தில் 'வேறே சிவபதம் மேலா அளித்திடும்' எனக் கூறப்பட்ட பயனின் பெருமை உணர்த்தப்பட்டது.

ஆயன நந்தி அடிக்கென் தலைபெற்றேன்
வாயன நந்தியை வாழ்த்தஎன் வாய்பெற்றேன்
காயன நந்தியைக் காணஎன் கண்பெற்றேன்
சேயன நந்திக்கென் சிந்தைபெற் றேனே. *#2608*

என் ஞானகுரு நந்தி பெருமான்; அவர் தாயைப் போலும் கருணையுடையவர்; உயிர்க்கு உறுதி பயக்கும் சொல்லை யுடையவர்; கட்புலனாகின்ற திருமேனியை உடையவர். எனினும் பாவிகட்கு எட்டாதவர். யான் தலையைப் பெற்றது அவரது திருவடிகளில் படும்படி வணங்குதற்காகவே; மற்றும் அவற்றைச் சூட்டுதற்காகவுமாம். நான் வாய்பெற்றது அவரை வாழ்த்துதற்காகவே. நான் கண்பெற்றது அவரைத் தரிசித்தற்காகவே, நான் மனத்தைப் பெற்றது அவரை நினைத்தற்காகவே.

விளக்கவுரை

'ஞானத்தை விரும்புவோர் பலரும் எந்த ஞான குருவையேனும் அடைந்து, அவருக்கு ஆட்படுதலையே தங்கள் பிறவிப் பயனாக உணர்தல் வேண்டும்; இல்லையேல், ஞானம் கிடையாது; கிடைப்பினும் நிலைத்து நின்று பயன் தாராது' என்பதாம். ஆயன் - ஆய் தாய் போன்றவன். வாய் - வாய்மை. 'காயத்தன்' என்பதில் அத்துச் சாரியை தொகுத்தலாயிற்று. 'அந்நந்தி' என்பது, நான்கடிகளிலும் சந்தி நகர ஒற்று தொகுக்கப்பட்டு நின்றது. 'அடிக்கு, நந்திக்கு' என்னும் நான்கன் உருபுகள் 'அடியை வணங்குதற்கு, நந்தியைச் சிந்தித்தற்கு' என வினை பற்றி நின்றன. 'பூவினைச் சென்றான், கடைக்குச் சென்றான்' என்பனபோல.

இதனால், ஞான குரு தரிசனமே மானுடப் பிறப்பின் பயனாதல் கூறப்பட்டது.

கருடன் உருவம் கருதும் அளவில்
பருவிடந் தீர்த்து பயங்கேடு மாபோல்
குருவின் உருவம் குறித்த அப்போதே
திரிமலம் தீர்ந்து சிவன்அவன் ஆமே. ***#2609***
(இதன் பொருள் வெளிப்படை.)

விளக்கவுரை

'கருடோகம் பாவனையால் விடம் நீங்குவது போல்ச சிவோகம் பாவனையால் மும்மலங்களும் நீங்கும்' என்பது இதன் திரண்ட பொருள். சிவோகம் பற்றி முன் தந்திரத்தில் சொல்லப்பட்டது. கருடோகம் பாவனை, சிவஞான போத ஒன்பதாம் சூத்திர பாடியத்துள் இனிது விளக்கப்பட்டிருத்தல் காண்க. இதனானே, 'பாவனை பொய்யன்று' என்பதும் நிறுவப்பட்டதாம். 'கருட தியானத்தால் விடம் அகலும் அதுபோல'8 எனச் சிவஞான சித்தியிலும் சொல்லப்பட்டது. 'அவன்' என்பதை மூன்றாம் அடியின் முதலிற் கூட்டுக. 'அவன்' என்றது பாவிப்பவனை.

இதனால், குருத்தியானமே சிவோகம் பாவனையாதல் கூறப்பட்டது. *[இதன்பின் பதிப்புக்களில் காணப்படும் அண்ணல் இருப்பிடம் ஆரும் அறிகிலர்' என்னும் மந்திரம், மூன்றாம் தந்திரத்து, 'கால சக்கரம்' அதிகாரத்தில் வந்தது.]*

தோன்ற அறிதலும் தோன்றல்தோன் றாமையும்
மான்ற அறிவும் மறிநன வாதிகள்
மூன்றவை நீங்கும் துரியங்கள் மூன்(று)அற
ஊன்றிய நந்தி உயர்மோனத் தானே. ***#2610***

தோன்ற அறிதல் - பொருள்களை இனிது விளங்கத் தெளிய உணர்தல். தோன்றல் தோன்றாமை - விளங்கவும் விளங்காமலும் ஐயமாக உணர்தல். மான்ற அறிவு - யாதும் அறியாது அறிவு மூடமாதல். இவையே மறித்து மறித்து வரும் நனவு கனவு உறக்கங்களாம். இம்மூன்றும் நீங்கிய நான்காம் நிலை துரியம் அது மூன்று வகையாய் நிகழும். (அவை முன் தந்திரத்தில், 'முத்துரியம்' என்பதில் காட்டப்பட்டன. அம்மூன்று துரியங்களும் நீங்க, ஐந்தாவதாகிய அதீதத்தில் ஞான குருவை உணர்பவன் (மேற்கூறியவாறு கருடோகம் பாவனை செய்பவன் கருடனே யாதல் போலக்) குருவேயாகிவிடுவான்.

விளக்கவுரை

'மலம் நீங்கிய முத்தனாய் விடுவான்' என்பதாம். நந்தி நிலையை யடைந்தவனையே 'நந்தி' என்றார். 'உயர் மோனந்தான்' என்றது 'ஞானகுரு' என்னும் பொருட்டாய் நின்றது.
இதனால், 'துரிய பாவனை முதிர, அதீதபாவனையால் பாவகன் பாவிக்கப்படும் பொருளாகிவிடுவான்' என, மேல், 'சிவன் அவன் ஆம்' எனக் கூறியது மெய்ம்மையாதல் விளக்கப்பட்டது.

சந்திர பூமிக்குள் தன்புரு வத்திடைக்
கந்த மலரில் இரண்டிதழ்க் கன்னியும்
பந்தம் அறுத்த பளிங்கின் உருவினர்
பந்தம் அறுத்த பரம்குரு பற்று. ***#2611***

புருடனது உடம்பில் சந்திர மண்டலம் எனக் குறிக்கப்படுகின்ற அந்த எல்லைக்குள்ளேயிருக்கின்ற புருவ நடுவில், நறுமணம் பொருந்திய ஈரிதழ்த் தாமரை மலரில் அருட்சத்தி, பிறிதொரு நிறத்தொடு கூடாது தூய்மையாய் உள்ள படிகம்போன்றிருக்கின்றார். உனது பாச பந்தங்களை முற்ற அறுத்த ஞான குருவை நீ அவ்விடத்திலே தியானி.

விளக்கவுரை

'தியானித்தால் அவர் உன்னைச் சிவனாக்கி விடுவார்' என்பது குறிப்பெச்சம். ஞான பூசைக்கு ஓமத் தானம், பூசைத் தானம், தியானத் தானம் முறையே உந்தி, இதயம், புருவநடு ஆதலின், 'தியானத்தைப் புருவ நடுவிலே செய்க' என்றார். புருவ நடுவே 'ஆஞ்ஞை' எனப்படும். ஆஞ்ஞை, சிவனது ஆணை. அது சத்தியேயாதலை உணர்க.
'இரண்டிதழ்க் கந்த மலரில்' என மாற்று. 'கன்னியும்' என்னும் உம்மை சிறப்பு. பரம் குரு - மேலான குரு.
இதனால், கருடோகம் பாவனைபோலக் குருவைப் பாவகன் தானாகப் பாவித்தலைச் செய்யும் இடம் கூறப்பட்டது.

மனம்புகு தான்உல கேழும் மகிழ

நிலம்புகுந் தான்நெடு வான்நிலம் தாங்க
சினம்புகுந் தான்திசை எட்டும் நடுங்க
வனம்புகுந் தான்ஊர் வடக்கென்ப தாமே *#2612*
'ஏழுலகங்களிலும் உள்ள உயிர்கள் மகிழும்படி அவைகளின் மனத்தினுள் இருப்பவனும், நீண்ட வானுலகத் தேவரையும், மண்ணுலக மக்களையும் அருள்புரிந்து காக்க வேண்டிப் பல தலங்களில் எழுந்தருளியிருப்பவனும். பாவத்திற்கு அஞ்சாது உலகிற்குக் கொடுமையை விளைப்பவர் யாராயினும் அவர்கள் அஞ்சி நடுங்கும்படி சினம் கொள்கின்றவனும், காட்டை இடமாகக் கொண்டு ஆடல் புரிகின்றவனும் ஆகிய ஒருவனது இருப்பிடம் இப்பெரு நிலத்திற்கு வடக்கெல்லையாகிய இடத்தில் உள்ளது' என்று அறிந்தோர் சொல்லுவர்.

விளக்கவுரை

கயிலை மலையை இவ்வாறு குறிப்பாற் சுட்டினார் 'நகர்' என்பது இறைவன் இடத்தைக் குறிப்பதுபோலவே, 'ஊர்' என்பதும் அவனது இடத்தைக் குறிக்கும்.
'பணியியர் அத்தைநின் குடையே, முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே'
என்னும் புறப்பாட்டில், இறைவனது இடம் 'நகர்' எனச் சொல்லப் பட்டது. 'இறைவனாவான் சிவன் ஆதலின், 'ஊர்' என்பது அவன் இயல்பாக இருக்கும் இடமாகிய கயிலாய மலையைக் குறிக்கும்' என்னும் கருத்தினால், 'ஊர்க் கோட்டம்'*9* எனச் சிலப்பதிகாரம் கூறியதற்கு அரும்பத உரையாசிரியர், 'ஷ்ரீ கைலாயம் நிற்கும் கோயில்' என்றும், பொருள் உரைத்தமை இங்கு அறியற்பாலது. ஞான குரு தரிசனத்தில் இதனைக் கூறியது 'கயிலை மலையில் தென்முகக் கடவுளாய் இருந்து நால்வர் முனிவர்க்கு ஞானத்தை நால்வர் முனிவர்க்கு ஞானத்தை அளித்த முதலாசிரியன் சிவனே' எனவும், 'ஆகவே, உலகில் ஞானத்தை அருளும் ஞானாசிரியர் யாவரும் அவனாகவே கொள்ளற்பாலர்' எனவும் உணர்த்தற் பொருட்டாம்.
'யோகியார் யோக முத்தி உதவுத லதுவும் ஓரார்'*1* என்னும் சிவஞான சித்தியும் தென்முகக் கடவுள் வடிவத்தையேயாதல் அறிக. இரண்டு மூன்றாம் அடிகளில் அநுக்கிரக நிக்கிரகங்களைச் செய்வோன் ஆதலையும், முதலடியில் அவற்றை அவன் உயிர்களோடு அத்துவிதமாய் நின்று செய்தலையும் குறித்தார். 'உலகு' என்றது உயிர்களை மகிழ்தற்குரியன அவையேயாகலின்,
'வானிடத் தவரும் மண்மேல் வந்து
அரன்றனை அற்சிப்பர்'*8*

ஆகலின் நிலவுலகத் தலங்கள் அவர்களது நன்மைக்காகவும் இருத்தலையறிக. இரண்டாம் அடி மூன்றாம் எழுத்தெதுகை பெற்றது. உயிரெதுகை பெற்றதுமாம்.
இதனால், இவ்வுலகத்து ஞான குரவரெல்லாம் தென்முகக் கடவுளாதலைக் கூறுமாற்றான், அவரது தரிசனத்தின் சிறப்புக் கூறப்பட்டது.

தான்ஆன வண்ணம்ஐங் கோசமும் சார்தரும்
தான்ஆம் பறவை வனம்எனத் தக்கன
தான்ஆன சோடச மார்க்கம்தான் நின்றிடில்
தான்ஆம் தசாங்கமும் வேறுள்ள தாமே. *#2613*

சார்ந்ததன் வண்ணமாம் தனது இயல்பினால் ஐந்து உடம்புகளைச் சார்ந்து அவையேதானாய் நிற்கின்ற பறவையாகிய உயிர் அது சென்ற திரியும் காடாகிய சொல்லுலகத்தில் 'பதினாறு பாகளை உடைய ஒரு நல்ல வழியைக் கண்டு நடக்குமாயின், அது சிவமாம் தன்மையை அடையும், இனி, அஃதேயன்றி, அப்பறவை சிவமாதற்குப் பத்து படிகளையுடைய வேறொரு வழியும் உண்டு.

விளக்கவுரை

ஐந்து உடம்புகள் எட்டாம் தந்திரத் தொடக்கத்தே காட்டப் பட்டன. அவை பறவைகளின் உடம்பாகவும், அவற்றில் உள்ள உயிர் பறவையாகவும் உபநிடதங்களில் உருவகிக்கப் படுதலும் மேலே கூறப் பட்டன* சொல்லுலகமாவது மொழி மொழி வாயிலாகவே உயிர் உலகத்துப் பொருள்கள் பலவற்றையும் மிக விரைவாக, மாறி மாறி உணர் கின்றது. அதனால், மொழியை உயிராகிய பறவை பறந்து திரியும் காடாக உருவகித்தார். ஆயினும் உயிருக்கு உறுதி பயக்கின்ற மந்திரங்களும் அந்தச் சொல்லுல கிலேதான் உள்ளது. ஆதலின் அவற்றை அந்தக் காட்டில் கிடைக்கும் வழியாக வைத்து, அவற்றுட் சிறந்த சோடச கலாப் பிராசாத மந்திரத்தைப் பதினாறு படிகளையுடைய நல்ல வழியாகக் கூறினார். 'தசாங்கம்' என்றது தச காரியத்தை. பிராசாத யோகம் யோகமாய் நிற்க, தச காரியம் ஞானம் ஆதல் பற்றி அவற்றின் வரிசையை 'வேறுள்ளது' என்றார். இனி, 'சோடச மார்க்கம்' என்பதை, 'சரியை -யிற் சரியை, சரியையிற் கிரியை முதலிய பதினாறு' என்பாரும் உளர். இங்கு விளக்கப்படுவது ஞானம் ஒன்றேயாகையாலும், பிரிசாத யோகம் ஞானயோகமே ஆதலாலும் அவர் கூறும் பொருள் சிறவாமை அறிக.
பிராசாதயோகம், தச காரியம் - இவற்றை அவ்வந் நூல்களிற் காண்க. 'தான்' நான்கில் முன்னிரண்டும்' ஆன்மாவால் சாரப்படும் பொருள். பின்னிரண்டும் சிவம். 'வண்ணத்தோடும்' என உருபு விரிக்க. 'சார்தரும்'

என்பது, 'சார்தந்து' என வினையெச்சப் பொருள் தந்தது. 'வனம் எனத் தக்கனவற்றில்' என ஏழாவது விரிக்க. 'சோடசத்தையுடைய மார்க்கம்' என்க. மூன்றாம் அடியில் உள்ள 'ஆன' என்னும் பெயரெச்சம், 'மார்க்கம்' என்னும் ஏதுப் பெயர் கொண்டது. 'ஆன்' என்னும் இரண்டு இறந்த காலங்களும் முன்னை நிகழ்ச்சி வாயிலாக முக்கால நிகழ்ச்சியையும் குறித்தவாறு.
இதனால், 'ஞான குரு தரிசனத்தால் உயிர் உய்யும் வழியை உணரும்' என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது.

மருவிற் பிரவறி யான்எங்கள் நந்தி
உருவம் நினைக்கின்நின் றுள்ளே உருக்கும்
கருவிற் கலந்துள்ளம் காணவல் லார்க்*(*கு*)* இங்*(*கு*)*
அருவினை சோரும் அழிவார் அகத்தே*. #2614*

ஒருவரை அணுகிவிட்டால், பின்பு அவரை விட்டு ஒருபோதும் நீங்குதல் இல்லாதவர் எங்கள் நந்தி பெருமான். அந்நிலையில் அவரது திருவுருவத்தை உள்ளே நினைத்தால், நினைக்கின்ற உள்ளங்களை அஃது உருக்கிவிடும். அதனால், அங்ஙனம் உருகிய உள்ளம் உடையவர்கள் அவரிடத்தே ஒடுங்கி, அவரது அருள் கண்ணாகவே எதனையும் காண்பர். அங்ஙனம் காண வல்லார் முன்பு அவரது பிராரத்த வினை இவ்வுலகத்தில் மிகவும் மெலிந்து விடும். (உயிரைத் தாக்காது, உடல் ஊழாய்க் கழியும்' என்பதாம்.) அதனால், அவர் தியானித்த அந்த உருவத்திலே அடங்கித் தற்போதம் அற்றிருப்பர்.

விளக்கவுரை

'அதனால், அவர்க்குப் பின்னை வினையாகிய ஆகாமியமும் உண்டாகாது' என்பதாம் கரு - முதற்பொருள் தாக்க வரும் வினை தாக்க மாட்டாது மெலிதல் பற்றி, 'வல்லார்க்குச் சேரும்' என தாக்கப்படுவோர்க்கு நான்கன் உருபு கொடுத்துக் கூறினார்; அவனை 'அவனுக்கு இவன் இளைத்தான்' என்பது போலக் கொள்க. அரு - சூக்குமம். பிராரத்தம் யாரும் அறியாதபடி வருதாதல் அறிக. 'அருவிகண் சோரும்' என்பதும் பாடம்.
இதனால், 'ஞான குருவாய் வந்து ஞானத்தைத் தந்த சிவன் பின்பு நீங்கான் ஆதலின், ஞானியரும் அவனை விடாது பற்றி வினை திரப்பெறுவர்' என்பது கூறப்பட்டது.

தலைப்பட லாம்எங்கள் தத்துவன் றன்னை
அலைப்படு பாசம் அறுத்தறுத் திட்டு
நிலைப்பட நாடி நினைப்பற உள்கின்
தலைப்பட லாகும் தருமமுந் தானே*. #2615*

எங்களது மெய்ப்பொருளாகிய சிவனைப் பலரும் அடையலாம்.

ஆயினும், அதன்பின்பும் அலைகள் போல வந்து வந்து தாக்குகின்ற பாசங்களை அவ்வப்பொழுது அவை தாக்காதபடி அறுத்தறுத்துப் போக்கி, அடைந்த அடைவு நிலைப்பில் நிற்கமாற்றை ஆராய்ந்து, தற்போதம் தலையெடாதபடி குறிக்கொண்டிருந்தால், அடைந்தது அடைந்ததாகவேயிருக்கும். அதுவே சிவனை அடைந்தவர்க்குரிய தருமமும் ஆகும்.

விளக்கவுரை

'அவ்வாறு செய்து நிலைத்திருத்தல் அரிது' என்பதாம். இது பற்றியே ஞானம் பெற்றோர் தம் ஞானாசிரியரது அடி நிழலைப் பிரியாது உறைவர் என்க. அதிதீவிர நிலையை உடையவர்க்கு இவ்வாறான இடர்ப்பாடு தோன்றாது. ஏனையோர்க்கு இவை தோன்றும். அதனையே அருணந்தி தேவர்

'நேசமொடும் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கும்
நிலையுடையோர் நின்றிடுவார் நிலையதுவே ஆகி;
ஆசையுடன் அங்கும் இங்கும் ஆகி அலமருவோர்
அரும்பாசம் அறுக்கும்வகை அருளின்வழி உரைப்பாம்.3

என்றார். மெய்ப்பொருளைத் தலைப்பட்டும் அதிலே நிற்கமாட்டாது மீளப்பிறவியிற் செல்வோரைக் கருதியே திருவள்ளுவர், 'தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்'9 என்றார். பின்னர் நிற்கும் நிலை, கழைக் கூத்தர் கரணம் இடுதலும் கயிற்றின்மேல் நடத்தலும், குடநீரைத் தலையிற்கொண்டவன் கையிரண்டையும் வீசி நடத்தலும் போலும் அருஞ்செயலாதல் பற்றி முதற்கண், 'தலைப்படலாம் எங்கள் தத்துவன்றன்னை' என எளிது போலக் கூறினாராயினும் அதுவும் எளி தன்று என்பது வெளிப்படை. தருமம் கடமை. 'அவர்க்குத் தருமமும் ஆகும்' என ஒரு சொல் வருவித்து முடிக்க. அது செய்யாவழித் தீங்கு வருதல் பற்றி, 'தருமம்' என்றார். உம்மை, இறந்தது தழுவிய எச்சம். இதனால், ஞானத்தைப் பெற்றுவிட்டவர்க்கும் ஞானகுரு தரிசனம் இன்றியமையாததால் கூறப்பட்டது.

நினைக்கின் நினைக்கும் நினைப்பவர் தம்மைச்
சுனைக்குள் விளைமலர்ச் சோதியி னானைத்
தினைப்பிளந் தன்ன சிறுமைய ரேனும்
கனத்த மனத்தடைந் தார்உயர்ந் தாரே. ***#2616***

சிவபெருமான், தன்னை நினைத்தால், நினைப்பவரைத் தானும் நினைப்பான். (நினைத்து, அவரை மேன்மேல் உயரச் செய்வான்) அதனால், சுனைக்குள்ளே மலர்ந்த ஒரு தாமரை மலரின்மேல் எழுகின்ற சோதிபோல இருதய கமலத்திலே ஒளிவடிவாய் விளங்கும் அப்பெருமானை 'அடைதல்' என்பது மனத்தால் அடைதலேயாதலின்

அவ்வாறு அவனை முதிர்ந்த அன்பால் அடைந்தவர், உலகியலில் எத்துணைச் சிறுமையராய் இருப்பினும், உயர்ந்தோரினும் உயர்ந்தோரேயாவர்.

விளக்கவுரை

'அஃதறிந்து அவரை அடைந்தோரும் உயர்ந்தவரே' அவரை அடைந்து பயன் பெறுதலே அறிவுடைமையும், அங்ஙனம் செய்யாது, உலகியல் பற்றி அவரைப் புறக்கணித்தல் அறியாமையும் ஆம்' என்பது கருத்து. 'கொப்பூழ் அடியாகத் தோன்றிட தண்டின்மேல் மலரும் மலர் இருதயம்' எனச் சொல்லப்படுவதால், அதனை, 'சுனையின் விளைந்த மலர்' என்றார். அச்சோதியினை' எனச் சுட்டு வருவித்துக்கொள்க. 'தினை, பனை என்பன சிறுமை பெருமைகட்குக் காட்டப்படும் சில அளவைகள்9 பரிமேலழகர் உரை. ஆதலின், சிறுமையை, 'தினைப்பிளந்தன்ன சிறுமையர்' எனக் குறித்தார். பகர ஒற்று எதுகை நோக்கி விரிக்கப்பட்டது களத்தல் முதிர்தல். அஃது இங்கு அன்பு முதிர்தலைக் குறித்தது.

இதனால், 'உயர்ந்தோரினும் உயர்ந்தோராவர் ஞான குரவரே' என்பது கூறும் முகத்தால், அவரது தரிசனத்தின் உயர்வு கூறப்பட்டது.

தலைப்படுங் காலத்துத் தத்துவன் றன்னை
விலக்குறின் 'மேலே விதி'என்று கொள்க
அனைத்துல காய்நின்ற ஆதிப் பிரானை
நினைப்புறு வார்பத்தி நேடிக்கொள் வாரே. ***#2617***

சிவனை மனத்தால் அடைந்து நிற்கும் பொழுது இடையே அதனை நீக்குகின்ற ஊறு ஏதேனும் தோன்றுமாயின், அதனை, 'இது நாம் முன்பு செய்த வினையினின்றும் முகந்து கொண்டு வந்த பிராரத்தத்தின் விளைவு' என அறிக. அங்ஙனம் அறியுமிடத்து, 'அந்தப் பிராரத்தம் தானே வரும் சுதந்திரம் உடைத்தன்று; சிவனே அதனைக் கூட்டுவிக்கின்றான்' என உணரவல்லவர், அதனாலும் சிவபத்தி செய்பவராயே விளங்குவர்.

விளக்கவுரை

வினையை நுகர்வோர் ஆகார்; அதனால், அந்தப் பிராரத்தம் கட்டாயமாக விளைத்துச் செல்லும் ஆகாமியத்தையும் விளைக்கமாட்டாது உடல் ஊழாய் ஒழியும்' என்பதாம்.

'நின்னைஎப் போதும் நினையலொட்டாய் நீ;
நினையப்புகின்,
பின்னைஅப் போதே மறப்பித்துப் பேர்த்தொன்று
நாடுவித்தி'9

எனப் பிராரத்த விளைவிலும் சிவனையே நினைந்தவாற்றை உணர்க. 'தத்துவன் றன்னைத் தலைப்படும் காலத்து' என மாற்றியுரைக்க. விதி - பிராரத்தம் விதியை விளைவை, 'விதி' என்றும், அயர்வொழிந்து நிற்றலை, 'நேடி' (தேடி) என்றும் கூறினார். இம்மந்திரம் ஈரடி எதுகை பெற்று வந்தது.
இதனால், ஞானியர் பிராரத்தத்தால் தாக்குண்ணாது நிற்குமாறு கூறப்பட்டது. இவ்வாறு நிற்பவர் ஞானகுரு என்பதாம்.

நகழ்வொழிந் தார்அவர் நாதனை உள்கி
நிகழ்வொழிந் தார்எம் பிரானொடுங் கூடித்
திகழ்வொழிந் தார்தங்கள் சிந்தியனுள்ளே
புகழ்வழி காட்டிப் புகுந்துநின் றானே. ***#2618***

'யான், எனது' தன்முனைப்புக் கொண்டு தருக்குதலை ஒழிந்து, 'எல்லாம் அவனே' என்று அடங்கி யிருப்பவர்களது அறிவினுள்ளே சிவன் நின்று எல்லாக்கலைகளாலும் புகழப்படுகின்ற தனது திருவருள் நெறியையே விளக்கி நிற்பான். அதனால், அவர்கள் அவனையே அறிந்து நிற்றலால் அத்திருவருள் நெறியைவிட்டு அப்பால் நகர்தல் இல்லை. மற்றும் அவனிடத்திலே அழுந்தி நிற்றலால் பிறவிக்குரிய நெறியில் சென்று பிறப்பதில்லை.

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கியுரைக்க. நகழ்வு - நகர்வு. திகழ்வொழிந்தாரைச் சுட்டுவதாகிய 'அவர்' என்னும் சுட்டுப் பெயர் செய்யுளாகலின் முன் வந்தது. 'நாதனை உள்கி நகழ் வொழிந்தார்; எம்பிரானொடுங் கூடி நிகழ்வொழிந்தார்' என்க. 'உள்கி, கூடி' என்னும்' செய்திகள் எச்சங்கள் காரணப் பொருளாவாய் நின்றன. (கற்றுப் பெரியன் ஆயினாள் என்பதிற் போல'. 'காட்டிப் புகுந்து நின்றான்' என்பதை, 'புகுந்து காட்டி நின்றான்' எனப் பின்முன்னாக வைத்துரைக்க. இதனால், 'ஞான குரவர் ஏனையோர் போலவாரல்லர்' என்பது கூறப்பட்டது.

வந்த மரகத மாணிக்க ரேகைபோய்ச்
சந்தித் திடும்மொழி சற்குரு சன்மார்க்கம்
இந்த ரேகை இரேகை இலாடத்தின் மூலத்தே
சுந்தரச் சோதியுட் சோதியும் ஆமே. ***#2619***

ஞான குரு காட்டும் ஞானநெறி, அன்று அயன் மால் தேடும்படி வந்த, மரகது மணியொளிவும் மாணிக்க மணி யொளியும் சேர்ந்த ஓர் ஒளிவடிவை அடையும் உபதேச மொழியே யாம். அந்தமொழியின் பொருளே மூக்கின் அடி இடமாகிய புருவ நடுவில், ஆன்மாவின் அறிவினுள் அறிவாகத் தியானிக்கப்படும் ஒளியுமாகும்.

விளக்கவுரை

'மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்'3
என்பதனால், அயன், மால் இவர்கட்டுமுன் ஒளிவடிவம் பச்சை நிறமும், செம்மை நிறமும் விரவிய ஒளியாய் இருந்தமை அறியப்படும் முதற்பொருள் 'சத்தி, சிவம்' என இருதிறப்பட்டு இயைந்து நிற்றலை இந்நிறங்கள் குறிக்கும்.

'அழகாயும், மெய்ம்மையாயும் உள்ளவனும்,
பரப்பிரம்மம் - என்று பேசப்படுபவனும்,
உயிரினுள் இருப்பவனும், கருமை நிறமும்,
பொன்னிறமும் கலந்த உருவத்தை உடையவனும்,
மேல்நோக்கி பாயும் வீரியத்தை உடையவனும்,
மாறுபட்ட கண்களை யுடையவனும்,
உலகத்தைத் தன் வடிவமாகக் கொண்டவனும்
ஆகிய அவனுக்கு வணக்கம்! வணக்கம்!!*

என வேதமும் கூறிற்று. இரேகை - ஒளி. 'எல்லாத் தொகையும் ஒரு சொல் நடைய'* என்பது பற்றித் தொகைச் சொல் இடையில் ரகர லகர முதல் ஆரியச் சொற்கள் முதற்கண் அகர இகர உகரங்களில் யாதும் பெறாது வருதலைக் 'குற்றம்' என்றல் இல்லை. அதனால் 'மாணிக்க ரேகை' என்றே வந்தது. 'மரகத மாணிக்க ரேகை' என்னும் மும்மொழித் தொகைச் சொல் முதல் இருமொழிகள் உம்மைத் தொகையாய்ப் பின்பு 'ரேகை' என்பதனோடு ஆறாம் வேற்றுமைத் தொகையாய்த் தொக்குப் பின்பு விடாத ஆகுபெயராய், அவற்றையுடைய ஓர் ஒளியைக் குறித்தது' 'வந்த' என்பது, அயன், மால் இவர்முன் வந்த' என ஆற்றலாற் பொருள் தந்தது. 'ரகையைச் சந்தித்திடும்' என இயையும். இவ்விரேகையை, 'சிவ' என்னும் மந்திரம் உணர்த்து -மாறும், அதுவே உபதேசம் ஆமாறும் உணர்க. 'மூலம்' என்றதை, 'நாசியின் மூலம்' எனக் கொள்க. சுத்தான்ம அறிவை, 'சுந்தரச் சோதி' என்றார்.

இதனால், ஞான குரு உபதேசம் பரசிவத் தியானத்தை உணர்த்திப் பயன் பெறச் செய்தல் கூறும் முகத்தால், அவரது தரிசனச் சிறப்பு உணர்த்தப்பட்டது.

உண்ணும் வாயும் உடலும் உயிருமாய்க்
கண்ணும்மா யோகக் கடவுள் இருப்பது
மண்ணும் நீர் அனல் காலொடு வானும் மாய்
விண்ணும்பின் னின்றி வெளியானோர் மேனியே. ***#2620***

நிலம் முதலிய பூதங்கள் ஐந்தையுமேயன்றி, அவை தோன்றியொடுங்கும்

இடமாகிய மூலப் பகுதியையும் கடந்து அறிவேயான ஞானியரது உடம்பில், யோகத்தால் கருதியுணரப் படுகின்ற கடவுள் இருப்பது, உணவை உண்கின்ற வாய் முதலிய உறுப்புக்கள் அவற்றையுடைய, உடம்பு அதனுள்ளிருக்கும் உயிர் ஆகிய அனைத்திலும் ஒன்றாய்க் கலந்தேயாம்.

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி, முதல் அடியை ஈற்றில் வைத்து உரைக்க. அருவமாதல் பற்றி மூலப் பகுதியை 'விண்' என்றார். இங்குக் குறிப்பது சகலரையேயாதலின் அவருக்குரிய மூலப் பகுதியை மட்டுமே கூறினார். எனினும், உபலக்கணத்தால் அசுத்த மாயையும் கொள்ளப்படும். வெளியாதல் - விடுபடுதல். மாயையினின்றும் விடுபடுதலாவது, அவற்றின் காரியங்களைத் தாமாக மயங்காது, தம்மை அவற்றின் வேறாக உணர்வில் நிலைபெற்றிருத்தல் அத்தகையோர் மாசுடையாராகாது தூயராகலின், அவரது உடம்பும் தூயதாக, அதன் கண்ணும் சிவன் விளங்குவான்' என்க. இது பற்றியே,

'... ... நிலாவாத புலால் உடம்பே புகுந்துநின்ற
கற்பகமே'3

எனவும்,

'எந்தையே! ஈசா! உடல்இடம் கொண்டாய்;
யான் இதற் கிலன்ஓர்கைம் மாறே'1

எனவும் திருமொழிகள் எழுந்தன என்க. 'மேனியில்' என ஏழாவது விரிக்க. உடம்பு நிலைபெறுதற்கு உணவு இன்றியமையாதாதல் பற்றி அதனை உண்ணும் உறுப்புச் சிறந்தெடுத்துக் கூறப்பட்டது. கண்ணல் - கருதல்.

'இருப்பது' என்ற வினைப்பெயர் அத்தொழில் மேல் நின்றது ஆதலின், அவ்வெழுவாய்க்கு, 'ஆய்' என்ற வினையெச்சம் பயனிலையாயிற்று. 'ஒருவன் உயர்வது உழைத்து' என்பதிற்போல.

'மாயோகக் கடவுள்' என்றது, தென்முகக் கடவுளையே என்பர். இதனால், ஞானிகளது திருமேனியைச் சிவன் தனதாகக் கொள்ளுதல் கூறும் முகத்தால், குரு தரிசனம் சிவ தரிசனமேயாதல் கூறப்பட்டது.

பரசு பதியென்று பார்முழு தெல்லாம்
பரசிவன் ஆணை நடக்கும்மப் பாதியால்
பெரிய பதிசெய்துபின்ஆம் அடியார்க்*(கு)*
உரிய பதியும்பார் ஆக்கிநின் றானே. ***#2621***

வேதாகமங்களால், 'பதி' என்று போற்றப்படுகின்ற பரமசிவனது திருவாணை எவ்வுலகிலும் தடையின்றிச் செல்லும். அதில் ஒரு கூற்றினால் முன்னுள்ள அடியார்களை அவன் தானாகச் செய்து,

மற்றொரு கூற்றினால் பின்னுள்ள அடியார்களுக்காகப் பலவகையான உலகங்களைப் படைத்து வைத்துள்ளான்.

விளக்கவுரை

பரசுதல் - துதித்தல். அதற்கு வினைமுதல் வருவிக்கப் பட்டது. 'பதியென்று பரசு பரசிவன் ஆணை பார்முழுதெல்லாம் நடக்கும்' என இயைக்க. 'பாதி' என்றது கூறு' என்னும் பொருட்டாய் நின்றது. ஆணை - சத்தி. அதன் ஒரு கூறு' திரோதான சத்தியாய் நின்று உலகைச் செயற்படுத்தும் மற்றொரு கூறு அருட் சத்தியாய் நின்று உயிர்களைச் சிவத்தோடு சேர்த்துச் சிவமாக்கும். இதனையே இம் மந்திரத்தாற் கூறினார். இரண்டையும் புடைபடவைத்துக் கூறியது இவ் விடத்திலேயாகும். எண்ணுப் பெயர்கள் இரட்டிக்குமிடத்து, ஒவ் வொன்று. இவ்விரண்டு, மும்மூன்று என்பன முதலாக வருதல் போல, 'பாதி பாதி' என்பது 'பப்பாதி' என வந்தது. அதனுள் ஒவ்வொன்று, 'பதி செய்தல், பார் ஆக்கல்' என்பவற்றோடு வேறு வேறு சென்றியைந்தது. பின் ஆம் அடியார் - பின்பு தான் ஆதற்கு உரிய அடியார். எனவே, 'முன் ஆம் அடியார்' என்பது தானே பெறப்பட்டது. பின் வந்த 'பதி, வாழும் இடம். 'பதியாகிய பாரினை ஆக்கியும் நின்றான்' என உம்மையை மாற்றியுரைக்க.
இதனால், 'ஞானகுரு, பர சிவனால் பதியாக்கப்பட்டவர்' என்பது கூறப்பட்டது.

அம்பர நாதன் அகலிட நீள்பொழில்
தன்பர மல்லது தாம் 'அறியோம்' என்பர்
உம்பருள் வானவர் தானவர் கண்டிலர்
எம்பெரு மான்அருள் பெற்றிருந் தாரே. ***#2622***

மக்கள் நிலவுலகத்துள்ளாராயினும் அவர்கள் எங்கள் சிவபெருமானது திருவருளைப் பெற்றிருக்கின்றார்கள் ஆகையால், அவர்கள், 'அகன்ற இடத்தையுடைய அனைத் துலகங்களும் சிதம்பர நாதன் ஆகிய அவனது ஆணைவழியல்லது பிறவாற்றால் நடத்தலைத் தாங்கள் அறியவில்லை' என்று கூறுகின் றார்கள். அஃதாவது, 'அவன் அன்றி ஓர் அணுவும் அசைதலைக் காணவில்லை' என்கின்றார்கள். தேவரும் மக்களுக்கு மேலிடத்துள் ளாராயினும் இந்த உண்மையை அவர்கள் உணர்ந்திலர்.

விளக்கவுரை

'காரணம், அவர்கள் எம்பெருமான் அருள் பெறாமை' என்பதாம்.
'கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி!
நனவிலும் நாயேற் கருளினை போற்றி!'
'தேவர் கனாவிலும் கண்டறியாச்

செம்மலர்ப் பாதங்கள்'
'புவனியில் போய்ப்பிற வாமையின் நாள்நாளும்
போக்குகின் றோம் அவமே; இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கி ... ... [திருமாலாம்
அவன்விருப் பெய்தவும், மலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்தமெய்க் கருணையும், நீயும்
அவனியிற் புகுந்து எமை ஆட்கொள்ள வல்லாய்'3
என்னும் திருமொழிகளும் இக்கருத்தே பற்றி எழுந்தன.
மக்கள், 'யாம் மானுடர்; சிவன் கடவுளர். ஆகவே அவன் நமக்கு அருள்புரிதல் வேண்டும்' என்னும் எண்ணத்தைப் பொதுவாக உடையவர். அதனால், அவர்களில் முயற்சியுடையோர் அவனது அருளைப் பெறுகின்றனர். தேவர், 'நாமும் தேவர், சிவனும் தேவர்' என்னும் எண்ணத்தைப் பொதுவாக உடையர். அதனால் அவர்களுள் அவன் அருள் பெறுபவர் அரியர் ஆகின்றனர். சிலர் பெற நினைப்பினும் தாழ்வெனும் தன்மை வருதற்பொருட்டு மண்ணுலகில் வந்து வழிபட்டே சிவன் அருளைப் பெறுகின்றனர்.
'வானிடத் தவரும் மண்மேல்
வந்து அரன்றனை அற்சிப்பர்;
ஊனெடுத் துழலும் ஊமர்
ஒன்றையும் உணரார் அந்தோ'9
என்னும் சாத்திர மொழியைக் காண்க.
'அகலிடநீள் பொழில்' என்பதை முதலிற்கொள்க. அம்பரம் சிறப்புப் பற்றி, சிதம்பரத்தைக் குறித்தது. 'தாம் என்பர்' என இயையும். உம்பர் - மேலிடம். 'உம்பர்' என்றதனால், 'இம்பர்' என்பது பெறப்பட்டது. மூன்றாம் அடியை இறுதியிற் கூட்டுக. இரண்டாம் அடி இன எதுகை. இதனால், 'சிவன் அருள் பெறாதார் சிவனது மேற்கூறிய இயல்பை உணர்தல் இயலாது' என்பது கூறப்பட்டது. 'அதனாலே ஞான குருவின் பெருமையையும் அவர்கள் அறியார்' என்பதாம்.

கோவணங் கும்படி கோவண மாகிப்பின்
நாவணங் கும்படி நந்தி அருள்செய்தான்
தேவணங் கோம்இனிச் சித்தம் தெளிந்தனம்
போய்வணங் கும்பொரு ளாயிருந் தோமே. **#2623**

எங்கள் ஞான குருவாகிய நந்தி பெருமான் எங்களுடைய நாங்கள் எங்களையே புகழ்ந்து கொள்ளும் இயல்புடையனவாய் இருந்த நிலையை மாற்றித் தமக்கு வணக்கங் கூறுவன ஆகும்படி அருள்புரிந்தார். அதனால், பின்பு எங்கள் அறிவுகள் தெளிவுடையன ஆகப் பெற்றோம். ஆகி, தேவர்கோவும் மக்கட் கோக்கள் பலரும்

வணங்கும்படி 'கோவணமும் மிகையே' என்னும் மனப்பான்மையுடன் துறவுக் கோலத்தை உடையர் ஆயினோம். யாவரும் பல அரிய சாதனங்களின் வழியே சென்று அடையப்படும் பொருளாகிய சிவமேயாய் இருக்கின்றோம். ஆகவே இனிப் 'பிறிதொரு தெய்வத்தை வணங்குதல்' என்பது எங்கள்பால் நிகழாது.

விளக்கவுரை

'நந்தி, நா வணங்கும்படி அருள் செய்தான்; பின் சித்தம் தெளிந்தனம்; கோ வணங்கும்படி கோவணம் ஆகிப் போய் வணங்கும் பொருளாகி யிருந்தோம்; இனித்தே வணங்கோம்' என இயைத்துக் கொள்க.
நா வணங்குதல் கூறவே, ஏனைத் தலையும், உள்ளமும் வணங்குதலும் உடன் கொள்ளப்படும். ஈற்றடி ஆசிடை எதுகை.
இதனால் ஞான குரு தரிசனத்தால் விளையும் பயன் தம் அனுபவ்தில் வைத்துக் காட்டி முடிக்கப்பட்டது.

***11.3.*பிரணவ சமாதி**

தூலப் பிரணவம் சொரூபானந்தப் பேருரை
பாவித்த சூக்குமம் மேலைச் சொரூபப் பெண்
ஆலித்த முத்திரை ஆங்கதிற் காரணம்
மேலைப் பிரணவம் வேதாந்த வீதியே. *#2624*

வேதங்களில் உயர்த்துச் சொல்லப்படுகின்ற பிரணவ மந்திரம் மெய்ப்பொருள் இன்பத்தைப் பொதுவாக விளக்கும் தூல மந்திரமேயாம். (அஃது அகாரம் முதலிய ஐந்து அக்கரங்களாகவே சொல்லப்படுகின்றது. அக்கரங்கட்கும் அத்தியான்மிக சத்திகள் உண்டு. எனினும் அவை வேத வேதாந்தங்களில் சொல்லப் படவில்லை. ஆகவே அத்தியான்மிக சத்திகளையுடையனவாகச் சொல்லப்படுகின்ற சீபஞ்சாக்கரமே (திருவைந்தெழுத்தே) சூக்கும மூல மந்திரமாகும். (இது பிரணவத்தை நோக்கி, 'சூக்குமம்' எனப்பட்டது) இனித் திருவைந்தெழுத்திலும் மிகச் சூக்குமமானது ஞான குரு தமது கையால் காட்டுகின்ற சின்முத்திரை. இவற்றுள் முதற்கண் சொல்லப்பட்ட பிரணவ யோகம் வேதாந்த முறையாம்.

விளக்கவுரை

எனவே, சீபஞாசாக்கர யோகமும், அதன் பொருளைச் சின் முத்திரையால் உணர்வதும் சித்தாந்த முறை' என்பது அருத்தா பத்தியால் பெறப்பட்டது. பஞ்சாக்கர யோகமாவது பஞ்சாக்கரத்தைச் சுத்தமானதாக அறிவாற் கணித்தலாம். சின்முத்திரையை உணர்தல் அனுபவமாம். 'பிரணவம்' என்பதை முதலிற் கூட்டுக. சொரூபம் - மெய்ப்பொருள். 'தூலப் பேருரை' என இயையும். மூல மந்திரம், 'பேருரை' எனப்பட்டது. திருவைந்தெழுத்தைப் பிரணவத்தோடு கூட்டிச் சொல்லுதல் 'ஆறெழுத்து மந்திரம்' எனப்படும். ஆறெழுத்தைச் சிகாரம் முதலாக வைத்து நோக்கி, பிரணவத்தை, 'பரன்' என்றும், சிகாரம் முதலிய ஐந்தையும் முறையே 'ஈசானம் முதலிய பஞ்சப் பிரமங்களின் சத்தி' என்றும் சிவாகமங்கள் கூறும். ஈசானம் முதலிய ஐந்தின் சத்திகள் முறையே 'ஈசானி பூரணி, ஆர்த்தி வாமை, மூர்த்தி' எனப் பெயர் பெறும். இச்சத்திகள் ஐந்தும் முறையே ஐந்தும், நான்கும், எட்டும், பதின்மூன்றும், எட்டுமாகிய கலைகளை (கூறுகளை) உடையன. இந்த முப்பத்தெட்டுக் கலைகளின் வடிவமாகவே சதாசிவ மூர்த்தி எழுந்தருளியுள்ளார். இவையெல்லாம் சிவாகமங்களிலும், சைவ பத்ததிகளிலும் காணத்தக்கவை. இந்தப் பஞ்ச சத்திகளையே நாயனார் இங்கு, 'மேலைச் சொரூபப் பெண்' என்றார். எனவே, 'அக்கரங்களாகச் சொல்லும் வேதாந்தத்திலும், சிவசத்திகளாகச் சொல்லும் சித்தாந்தம் நுட்பமானது'

என்பதை, 'பாவித்த சூக்குமம்' என்றார். பாவித்த - மறைபொருளாக வைத்துக் காக்கப்பட்ட. சின்முத்திரையில் பெருவிரல் 'சிவ' என்பதையும், சுட்டு விரல் 'ய' என்பதையும், நடுவிரல் 'ம' என்பதையும் ஏனை ஆழிவிரல் சிறுவிரல்கள் கன்மம் மாயைகளாய் 'ந' என்பதையும் குறிப்பனவாம். ஆலித்தல் - உருப்படுதல். விரைவில் கரைவதாகிய பனிக்கட்டி (கல்மழை) அவ்வாறு கரைவதற்குமுன் 'ஆலி' எனப் பெயர்பெற்று நிற்கும். 'காரணம்' என்றது, 'அதி சூக்குமம்' என்றபடி. இதனால், ஞான குரு தரிசனத்தால் கிடைக்கும் பிரணவ யோகம், தூலம், சூக்குமம், அதிசூக்குமம் என மூன்றாதல் கூறப்பட்டது.

ஓம்எனும் ஓங்காரத் துள்ளே ஒருமொழி
ஓம்எனும் ஓங்காரத் துள்ளே உருஅரு
ஓம்எனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓம்எனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே. ***#2625***

வேதாந்த சித்தாந்த ஞான குரவர்கள் ஒரு வார்த்தையாகச் சொல்லுகின்ற உபதேச மொழிகளும், சிவன் கொள்ளு கின்ற உருவம், அருவம். அருவருவம் என்கின்ற மூவகைத் திருமேனி களும், பலவகை மொழிகளும் ஆகிய எல்லாம் 'ஓம்' என்பதாகிய பிரணவத்தில் உள்ளனவேயாம். அதனால் பிரணவயோகத்தால் சித்தி முத்திகள் யாவும் கிடைக்கும்.

விளக்கவுரை

'சொல்லுலகங்கள் யாவும் பிரணவத்தின் காரியமே' என்பதாம். ஓங்காரம் நான்கும் 'பிரணவம்' என்னும் அளவில் வாளாபெயராய் நின்றன. ஒருமொழியே மகாவாக்கியமாம். மகாவாக்கியங்கள் முன் தந்திரத்துள் கூறப்பட்டன. 'ஒருமொழி' என்னும் பால்பகா அஃறிணைப் பெயர் இங்குப்பன்மை குறித்து நின்றது. முதல் மூன்று அடிகளின் ஈற்றிலும் 'உள்ளன' என்னும் பயனிலைகள் எஞ்சி நின்றன. உருவும், அருவும் கூறவே இனம் பற்றி உருவருவும் கொள்ளப்பட்டது. வருகின்ற மந்திரத்துள் 'சராசரம்' என வருதலால், இங்குக் கூறப்பட்ட உருவம் முதலியன இறைவனுடைய திருமேனிகளாயின. 'திருமேனிகள் ஓங்காரத்தில் உள்ளன' என்றது அவற்றது மந்திரங்களை நோக்கி இறைவனை 'மந்திரத்தால் உருக் கோலி'9 எனக் கருதுதல் கிரியா மார்க்க முறை. அருவத் திருமேனியை மந்திரமாகவே உள்குதல் (தியானித்தல்) யோகமுறை 'இம் முறைகளால் பிரணவம் சித்தியையும், முத்தியையும் தரும்' என்பதாம். சிறப்பு பற்றி முத்தி முன்னர்க் கூறப்பட்டது. முத்தியையும், சித்தியையும் தருவதை அவையேயாக உபசரித்துக் கூறினார்.

இதனால், பிரணவத்தினது இயல்பும், அதன் வழித்தான யோகத்தின்

பயனும் கூறப்பட்டன.

ஓங்காரத் துள்ளே உதித்தஐம் பூதமும்
ஓங்காரத் துள்ளே உதித்த சராசரம்
ஓங்காரா தீதத்(து) உயிர்மூன்றும் உற்றன
ஓங்கார சீவன் பரசிவ னாகுமே. #2626

பஞ்ச பூதம் முதலிய தத்துவங்களும் அவற்றின் காரியங்களாகிய பலவகை உடம்புகளும் பிரணவத்திலிருந்தே தோன்றின. பிரணவமாகிய அதற்கு அப்பால் உள்ளன மூவகை உயிர்கள், ஆகவே பிரணவமே வடிவான உயிரை, 'பரசிவன்' என்றே சொல்லலாம்.

விளக்கவுரை

'உள்' இரண்டிலும் 'நின்று' என்பது வருவிக்க சொல்லாலன்றிப் பொருள்கள் பற்றி 'விளங்கிய ஞானம்'3 உண்டாதல் கூடாமை பற்றிச் சொற்களையே பொருளாகக் கூறும் முறை பற்றி அச்சொற்கள் அனைத்திற்கும் மூலமான பிரணவத்தினின்றே பொருள்கள் பலவும் தோன்றினவக்கா கூறினார். எனினும் சித்தாகிய உயிர்கள் ஓங்காரத்திற்கு வேறாதல் பற்றி 'அவை ஓங்காரத்திற்கு அப்பால் உற்றன' என்றும், பிரணவத்தைச் செலுத்தி நிற்பது சிவ சத்தியேயாகலின் 'பிரணவ வடிவான உயிரை, சிவன் என்றல் கூடும்' என்றும் கூறினார்.

'மூவகை அணுக்களுக்கும் முறைமையால் விந்து ஞானம்
மேவின தில்லை யாகில் விளங்கிய ஞானம் இன்றாம்,
ஓவிட விந்து ஞானம் உதிப்பதோர் ஞானம் உண்டேல்,
சேவுயர் கொடியி னான்றன் சேவடி சேர லாமே'.

என்னும் சிவஞான சித்தயைக் காண்க.9 இதனால் உயிர் தன்னை உணர்தல் பிரணவ யோகத்தின் வழியாதல் விளங்கும்.

இதனால் பிரணவத்தின் சிறப்பும், 'அதன்வழித்தான யோகத்தால் உயிர் தன்னை உணர்ந்து, தலைவனையும் உணரும்' என்பதும் கூறப்பட்டன.

வருக்கம் சுகமாம் பிரமமு மாகும்
அருக்கச் சராசரம் ஆகும் உலகில்
தருக்கிய ஆதார மெல்லாந்தன் மேனி
சுருக்கமில் ஞானம் தொகுத்துணர்ந் தோர்க்கே. #2627

'ஓம்' எனச் சமட்டியாகச் சொல்லப்படுவது 'பிரணவம்' எனவும் அதனை 'அகாரம், உகாரம், மகாரம், விந்து. நாதம் எனப் பெரும்பான்மை ஐந்தாகவும், மற்றும் பலவாகவும் பிரித்து வியட்டியாகச் சொல்லப்படுகின்றவற்றை, 'பிரணவத்திற்கு' இனம் எனவும் கூறுவர். அவ் இனங்களை மேல், 'கலைநிலை' என்னும் அதிகாரத்தில் காணலாம். * அந்த இனங்கள் ஞான வடிவான பல சத்திகளாகும். சத்திக்கும்

சிவத்திற்கும் வேற்றுமையின்மையால் அவைகளை, 'ஆனந்த மயமான சிவம்' என்றும் சொல்லலாம். அச்சத்திகள் அண்டத்தில் சரம், அசரம் ஆகிய அனைத்துப் பொருள்களிலும் வியாபித்து நிற்கும். மற்றும் பிண்டமாகிய உடம்பில் ஆறாதாரங்கள் முதலான பல இடங்களிலும் நிற்கும். இத்தன்மைகள் எல்லாவற்றையும் உணர்ந்தவர்கட்கே விரிந்த ஞானம் உளதாகும்.

விளக்கவுரை

இனத்தை, 'வருக்கம்' என்றார். 'சுகமாம் பிரமம்' என்பது பெயரெச்சத் தொடர் உம்மை இறந்தது தழுவியதனோடு, சிறப்பு. அதனால் சத்தியாதல் பெறப்பட்டது. ஞாயிற்றைக் குறிக்கும் 'அருக்கம்' ஒன்பது 'ஒளி' (விளக்கம்) என்னும் பொருட்டாய் நின்றது. மேனி - வடிவம். அது தியான வடிவம். 'மேனி உளதாம்' எனவும், 'ஞானம் உளதாம்' எனவும் எச்சங்கள் வருவித்து முடிக்க.

இதனால் பிரணவ யோகத்தில் பிரணவ பல கலைகளாய்ப் பிரிந்து நின்று பயன் தருதல் கூறப்பட்டது. அக்கலைகள் சராசரங்கள் அனைத்துமாய் நிற்றலைப் பிராசாத நூல்களில் காண்க.

இனி, இம்மந்திரத்திற்கு வைதிக முறையில் பொருள் கூறுவோர், 'வருக்கமாவன' ஐம், க்லீம், ஸௌம், ஹ்ரீம், ச்ரீம்' எனவும், 'அவை மூலாதாரம் முதலிய இடங்களில் நிற்கும்' எனவும் கூறுவர். அம்முறை சிறப்புச் சிவயோகமாகிய பிரணவ பிராசாத யோக முறையாகாது, பொதுயோக முறையேயாம். இதனையடுத்து வரும் 'சோடச மார்க்கமும், ஈராறின் அந்தமும்' என்பவற்றாலும் அறியலாம்.

மலையுமனோ பாவம் மருள்வன வாவ
நிலையின் தரிசனம் தீப நெறியாம்
தலமும் குலமும் தவம் சித்த மாகும்
நலமும் சன் மார்க்கத் துபதேசந் தானே. ***#2628***

தன்னறிவாலே தனக்குள் தோன்றும் மலைவுகள் எல்லாம் தெளிவைத் தாராது. மேலும், மேலும் மயக்கத்தையே தரும், இருள் நெறிகளேயாகும். ஆகையால், ஞான குருவின் தரிசனமே நிலையான உணர்வைத் தருகின்ற ஒளி நெறியாம். ஆகவே, தவத்திற் குரிய புண்ணியத் தலங்களும், அங்குள்ள தவத்தோர் கூட்டங்களும், அவரோடு கூடி ஒழுகுகின்ற தவ ஒழுக்கமாகிய நன்மையும் எல்லாம் நன்னெறியை உணர்த்துகின்ற நல்லாசிரியரது உபதேசமே.

விளக்கவுரை

உபதேசத்தின் வழிபட்டனவற்றை 'உபதேசம்' என உபசரித்துக் கூறினார். நல்லாசிரியர்தம் உபதேச வழிபட்ட பொழுதே புண்ணியத்

தலம் முதலியன உண்மைப் புண்ணியத் தலம் முதலியனவாம்' என்றபடி. 'அவற்றைத் தன்னறிவளவிலே தான் அறிந்து கைக்கொள்ளுதல் பயனுடைத் தாகாது' என்பதாம். இங்ஙனம் கூறுமுகத்தானே, 'பிரணவ யோகமும் உபதேச முறையான் உணர்ந்து மேற்கொள்ளற்பாலது' என்பது உணர்த்திய வாறு, 'சித்தம் தவம் ஆகும் நலம்' என மாற்றிக் கொள்க. தவம் - தவ விருப்பம்.
இதனால், 'உண்மைப் பிரணவ யோகம் இன்னது' என்பது கூறப்பட்டது.

சோடச மார்க்கமும் சொல்லும்சன் மார்க்கிகட்*(கு)*
ஆடிய ஈராறின் அந்தமும் ஈரேழில்
கூடிய அந்தமும் கோதண்ட மும்கடந்*(து)*
ஏறிய ஞானஞே யாந்தத் திருக்கவே. ***#2629***

ஞானத்தை அடைதற்குரிய வழியை அடைய விரும்புவோர்கட்கு, அவர்கள் ஆதாரயோகத்தின் முடிநிலையாகிய புருவ நடுவையும் கடந்து மேல் ஏறி ஏழாந்தானத்தை அடைந்து உணர்ந்த ஞானத்தினால் நிராதாரத்தையும் கடந்துள்ள ஞேயமாகிய சிவத்திற் சென்று அடங்கியிருத்தற்பொருட்டு, 'பன்னிருகலை, பதினாறுகலை' என்று பிராசாத யோகங்களைப் பதினான்கு வித்தைகளின் முடிவாகிய பிராசாத நூல்கள் கூறும்.

விளக்கவுரை

'சன்மார்ககிகட்கு. கோதண்டமும் கடந்த ஏறிய ஞானத்தால் ஞேயமாகிய அந்தத்து இருக்க, சோடசத்தையும், ஈராறையும் ஈரேழில் கூடிய அந்தமும் சொல்லும்' என இயைத்துக் முடிக்க. ஆடிய - முன்னோர் பயின்ற இது தாப்பிசையாய். 'சோடச மார்க்கம்' என்பதனோடும் சென்றியைந்தது. புருவநடு ஆதார யோகத்தின் முடிநிலை இடமாகலின் 'கோதண்டமும்' என்னும் உம்மை சிறப்பு ஏறிய ஞானம் - ஏறியதனால் விளைந்த ஞானம். 'ஞானத்தால்' என உருபு விரிக்க. ஞேய அந்தம் - ஞேயமாகிய அந்தம். இதுவே பிராசாத யோக முடிநிலை இடமாதலின் 'அந்தம்' எனப்பட்டது. பதினான்கு வித்தைகளாவன வேதம் நான்கு, வேதாங்கம் ஆறு, உபாங்கம் நான்கு இவற்றுடன் உபவேதம் நான்கு கூட்டி, 'பதினெண் வித்தை' என்றலும், உபவேதம் நீக்கி, 'பதினான்கு வித்தை' என்றலும் ஆக இரு வழக்குக்கள் உள்ளன. அவற்றுள் பின்னதை இங்குக் கூறினார்.
'ஈரேழிற் கூடிய அந்தமும்' என்னும் உம்மை முற்றும்மை. அந்தத்தின் பொருளை 'அந்தம்' என்றது ஆகுபெயர். பின்னர் அப்பொருளைக் கூறும் நூலை 'அந்தம்' என்றது இருமடியாகு பெயர். ஈற்றடி உயிரெதுகை பெற்றது.
இதனால், 'ஞானத்தைப் பெறவேண்டினார்க்குச் சிறந்த வழியாவது

பிரணவ யோகமே' என்பது கூறி முடிக்கப்பட்டது.

*11.4.*ஒளிவகை

ஒளியை அறியில் உருவும் ஒளியும்
ஒளியும் அருவம் அறியில் அருவாம்
ஒளியின் உருவம் அறியில் ஒளியே
ஒளியும் உருக உடன்இருந் தானே. ***#2630***

உலகத்தில் கண்வழியாகக் காட்சி நிகழுங்கால் அக்காட்சி காணப்படும் பொருள், அதுவும் அதனைக் காணும் கண்ணொளியும் விளங்குதற்கு இன்றியமையாத் துணையாகிய ஒளி, அவ்வொளியால் விளங்கி உருவத்தைக் காண்பதாகிய கண்ணொளி ஆகிய மூன்றன் கூட்டத்திலே நிகழ்வதாகும். ஆயினும் கண்ணால் உருவத்தைக் காண்கின்றவன் அம்மூன்றனையும் ஒருங்கே அறிதல் இயலாது*)* மற்று காணப்படும் உருவத்தையும், காண்பதாகிய கண்ணொளியையும் விளக்கி நிற்கின்ற அந்த ஒளியை அறிவானாயின் அப்பொழுது ஏனை யிரண்டும் அறியப்படாமல் மறைந்து நிற்கும். இனிக் காணப்படும் உருவத்தை அறிவானாயின் அப்பொழுது ஏனையிரண்டும் மறைந்து நிற்கும், இனிக் கண்ணொளியின் இயல்பை அறியின் அப்பொழுது ஏனையிரண்டும் அறியப்படாமல் மறைந்து நிற்கும். இம்முறையில் தான் சிவன்தான் ஆன்ம ஒளி மறைந்தவிடத்து அவன் அவ்வான்மாவினோடு உயிர்க்குயிராய் என்று உடனாகியிருத்தல் விளங்கும்.

விளக்கவுரை

'ஆகவே, அவ்வாற்றால் அவனை அறிந்து நிற்றலே அறிவுடைமையாம்' என்பது குறிப்பெச்சம். தத்துவத்துறையில் 'பதி, பசு, பாசம்' என்னும் முப்பொருள்களுக்கிடையே உள்ள உறவு எத்தகைய உறவு, என்னும் ஆராய்ச்சியல் 'அவ்வுறவு த்துவித உறவு' என்னும் சிவாகநூல் துணிவினை முன்னைத் தந்திரத்தில், 'பதி, பசு, பாசம் வேறின்மை' என்னுக. அதிகாரத்தில் ஓராற்றால் விளங்கிய நாயனார், அவ்வுறவு பிரசாத யோகத்தில் நிகழும் ஒளிக் காட்சியில் வைத்து அறியின் இனிது விளங்குதல் பற்றி அதனை இங்கு இவ்வாறு நுண்ணிதாக விளக்கினார். மெய்கண்ட தேவரும்,

'காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்'*3*

என அருளிச் செய்ய, அதனையே அருணந்தி வேதர்,
'... ... காட்டக் கண்டிடும் தன்மை உடைய கண்ணிற்கு
ஏயும் உயிர் காட்டிக்கண் டிடுமா போல

ஈசன் உயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன்'9

எனவும், உமாபதி தேவர்,
'அறிவொளிபோல் பிறிவரும் அத்துவிதமாய்'l எனவும் கூறினர்.
'அறிவொளி' என்றதில் அறிவு, ஆன்ம அறிவு. ஒளி, கண்ணொளி.
முதற்கண் உள்ள 'ஒளி', காட்டும் ஒளி அது விளக்கொளி ஞாயிற்றின் ஒளிகளில் ஒன்றாகலாம். இரண்டாவதாய் உள்ள 'ஒளி', காணும் ஒளியாகிய கண்ணொளி இரண்டாம் அடியில் உள்ள 'ஒளியும்' என்பது 'செய்யும்' என் முற்று. 'மறையும்' என்பது அதன் பொருள். அஃது, 'உருவும், ஒளியும்' என்னும் எழுவாய்கட்கும் பயனிலையாய் நின்றது. ஒளிதல் தன்வினை; ஒளித்தல் பிறவினை. அவை 'செய்யும்' என் முற்றாகுமிடத்து முறையே 'ஒளியும்' எனவும், 'ஒளிக்கும்' எனவும் வரும் 'ஒன்று மேலிடில் ஒன்று ஒளிக்கும்'8 என்பதில் 'ஒளிக்கும்' என்பது தன்வினையால் நின்றது இரண்டாம் அடிப்பகுதியை, 'உருவகத்தை அறியில் உருவேயாம்' என விரித்துக்கொள்க. 'ஏனையிரண்டும் தோன்றா' என்பது கருத்து. மூன்றாம் அடியில் உள்ள ஒளிகள், கண்ணொலியாம். அவ்விடத்து 'உருவம்' என்றது அதன் இயல்பை. இங்கும் 'ஒளியே' என்றது, 'அவ்வொளியே தோன்றும்; ஏனையவை தோன்றா' என்றதாம். மூன்றடிகளாலும் உவமையே கூறப்பட்டது. ஈற்றடியில் உள்ள ஒளி, ஆன்ம அறிவு. அஃது உருகுதலாவது, நிலையழிதல் உம்மை, 'பாச அறிவேயன்றி' என இறந்தது தழுவிற்று. 'உருக' என்னும் செயவெனெச்சம் காரணப் பொருட்டாய் நின்றது. 'இருப்பான்' என்னும் எதிர்காலம், விரைவு பற்றி 'இருந்தான்' என இறந்த காலமாயிற்று. இருத்தல் இருக்கும் அது விளங்குதல் இருத்தலுக்கு 'சிவன்' என்னும் எழுவாய் வருவிக்க.
உவமையில், 'மூன்றில் ஒன்றை யறியுமிடத்து ஏனையவவை மறைந்து விடும்' என ஒரு தொடராற் சுருங்க ஓதாது, மூன்று தொடரால் விரியக் கூறினார். 'மூன்று யாவை' என்பதை முன்னர்த் தொகுத்து கூறாமையின் அவை விளங்கா என்பது பற்றி. பொருளில், காட்டுவது சிவனருளும், காண்பது ஆன்ம அறிவும், காணப்படும் பொருள் பதி, பசு, பாசங்களுமாகக் கொள்க. கண் உருவங்களைக் காணும்பொழுது காட்டுவதாகிய ஒளியையும், காண்பதாகிய தன்னையும் மறந்து, உருவங்களை மட்டுமே காண்பதுபோல, ஆன்ம அறிவு பெத்த காலத்தில், அறிவிப்பதாகிய திருவருளையும், அறிவதாகிய தன்னையும் அறியாது அறியப்படுவதாகிய உலகத்தை மட்டுமே அறிந்து வருதலால் அது பொழுது அது தன்னையும், தலைவனையும் அறியாது மயங்கு கின்றது. ஆசிரியர் அருளுரையைக் கேட்டு அதன்வழி நின்று அதுதான்

அறியும் முறைமையை உற்றுணருமாயின் மயக்கம் நீங்கி மெய் யுணர்வைப் பெறும்' என்பதும் 'மெய்யுணர்வாவது முப்பொருளும் பிரித்தறியுமாறு வேறு வேறு நில்லாது அத்துவிதமாய் இருத்தலின். அந்நிலையை அறிதல் ஆசிரியரது அருளாலன்றிக் கூடாது' என்பதும் கூறியவாறு. இம்மந்திரம் சொற்பின்வரு நிலையணி பெற்றது, இதனால் 'உலகில் காட்டுவதும், காண்பதும், காணப்படுவதும் ஆகிய மூவகை ஒலிகளின் முறைமையில் வைத்து பிரணவ யோகத்தில் வெளிப்படும் ஒளிகளின் இயல்பு உணரற்பாலன' என்பது கூறப்பட்டது.

புகல்எளி தாகும் புவனங்கள் எட்டும்
அகல்ஒளி தாய்இருள் ஆசற வீசும்
பகல்ஒளி செய்ததும் அத்தா மரையில்
இகல்ஒளி செய்தெம் பிரான் இருந்தானே. ***#2631***

நிவிர்த்தி கலையில் 'நூற்றியெட்டு' என்றும், பிரதிட்டா கலையில் 'குய்யாட்டகம், அதிகுய்யாட்டகம், குய்யதராட்டகம்' என்று இன்ன பலவாகவும் எட்டு எட்டாகச் சொல்லப்படுகின்ற, சகல வருக்கத்தினராலும் எளிதில் அடையப்படும் புவனங்களிலும் ஞான ஒளியைப் பரப்பி அறியாமையாகிய இருளைப் போக்குகின்ற சிவனாகிய ஞாயிறு வெளிப்பட்டு விளங்குவதும் உள்ளதுமாகிய தாமரையிலேயாம். அத்தாமரையில் அந்த ஞாயிறாகிய சிவன் ஒன்றோடு ஒன்று மாறுபட்ட இரு நிற ஒளியுடையனாய் விளங்குகின்றான்.

விளக்கவுரை

'அதனை அறிவுடையார் உணர்தல் வேண்டும்' என்பது குறிப்பெச்சம். மாறுபட்ட இருநிற ஒளிகளாவன சிவப்பும், நீலமும். இவை முறையே சிவமும், சத்தியும் ஆகும். நிவிர்த்தி பிரதிட்டா கலைகளில் உள்ள புவனங்கள் எட்டு எட்டாகச் சொல்லப்படுதலைச் சிவாகமங்களிலும் சிவஞான போத மாபாடியம் முதலியவற்றிலும் காண்க. அவை சகல வருக்கத்தினர்க்கு இடமாதல் பற்றி, 'புகல் எளிதாகும்' என்றார். திருவருள் அண்டத்திலும் ஞானிகட்கு விளங்குதல் பற்றி 'அகல் ஒளி செய்து இருள் ஆசற வீசும் பகல்' என்றார். அகல் ஒளி - விரிந்த ஒளி. தாய் - தாவ; பாவ. ஆகமலம் இருள் மலம் ஆணவம். வீசுதல் - அகற்றுதல். பகல் - பகலவன் 'இருள் மலம் அகற்றும் பகலவன்' என்றதனால் அது சிவனாகி ஞாயிறாயிற்று. ஒளி செய்தல் ஒளியைத் தருதல். 'செய்ததும்' என்னும் உம்மை இருத்தலாகிய எதிர் வருவதனைத் தழுவிற்று 'சிவ ஒளி அண்டம், பிண்டம் இரண்டிலும் விளங்கி அறியாமையாகிய இருளைப் போக்கும் என்றபடி.

இதனால், மேற்கூறிய ஒளிகளில் ஆன்ம அறிவிற்குக் காட்டாகி நிற்கும்

சிவ ஒளியின் இயல்பு வகுத்துக் கூறப்பட்டது.

விளங்கொளி அங்கி விரிகதிர் சோமன்
துளங்கொளி பெற்றன சோதி அருள
வளங்கொளி பெற்றது பேரொளி வேறு
களங்கொளி செய்து கலந்துநின் றானே. *#2632*

[முன் மந்திர்ததிற் கூறியவாறு, 'சிவனே அண்டத்திலும், பிண்டத்திலும் ஒளியைத் தருகின்றான்' என்றால், 'இங்குக் கண்கூடாகக் காணப்படும் - தீ ஞாயிறு, திங்கள் - என்பவை ஒளியைத் தருகின்றன' எனக் கருதுதல் பிழையோ எனில், அன்று; மற்று.]

ஆங்காங்கு அவ்வப்பொழுது காலவரையறை ஏதும் இன்றி வெளிப்பட்டு மறைகின்ற தீயும், சில கால வரையறைகளின்படி தோன்றி நின்று ஒளியைத் தந்துவிட்டு மறைகின்ற ஞாயிறும், திங்களும் ஆகிய அவையும் அவ்வாற்றால் ஏற்ற பெற்றியால் ஒளியைத் தந்து விளங்குதலு, ஒளியைத் தாராது மறைந்து போதலும் ஆகிய நிலைமையை உடையனவாகச் சிவன் அருள் செய்தனாலேயே அவை ஒரளவில் உலகிற்கு ஏற்ற பெற்றியால் ஒளியைத் தரும் செயற்கைச் சிற்றொளிப் பொருள்களாய் உள்ளன. என்றும் வற்றா வளம் கொண்டவனாகிய சிவன் கொண்டுள்ள ஒளியே முற்றும் நீக்க மாட்டாது சிறிது சிறிது நீக்குகின்ற அந்தச் சிற்றொளிப் பொருள்களை உலகிற்குப் படைத்துத் தந்து தான் அவற்றோடு இரண்டறக் கலந்து அவற்றை நிலைபெறுத்தியும் நிற்கின்றான்.

விளக்கவுரை

துளங்குதல் - அலைதல்; நிலையில்லாது நீங்கியும், தோன்றியும் வருதல். 'அங்கி, கதிர், சோமன் ஆகியவை துளங்கு ஒளியையே பெற்றன; சொதி அருளப் பெற்றன' என்க. வளம் கொளி - வளத்தைக் கொண்டிருப்பவன்; இயற்கையாகவே கொண்டிருப் பவன். 'பெற்றது' என்றதும், 'இயற்கையில் பெற்றிருப்பது' என்றதேயாம். பேரொளி - கால வரையறையும், இட வரையறையும் இல்லாத ஒளி - இஃது, 'அளவில் பேரொளி' எனப்படும் 'களங்கம்' என்பது ஈற்று அம்முக் குறைந்து நின்றது களங்கமாவது இருள். அதனை அறவே நீக்காது அதனுடன் இருக்கின்ற ஒளிகள் களங்கொளிகளாம். வேறு களங்கொளி - களங்கம் இல்லாத தனது பேரொளிக்கு வேறான களங்க ஒளி. செய்தல் படைத்தல். கலந்து நிற்றல் அவற்றை நிலைபெறுத்தற் பொருட்டு ஆதலின் அது வருவித் துரைக்கப்பட்டது. 'செய்து நின்றான்' என்னும் பயனிலைக்கு, 'அவன்' என்னும் எழுவாய் வருவிக்க.

இதனால், 'உலகில் காணப்படும் முச்சுடர்களாகிய ஒளிகளும், சிவனது திருவருட் பேரொளி தந்த ஒளிகளே; சுதந்திர ஒளிகள் அல்ல; அவை

அளவில்லனவும் அல்ல' என்பது கூறப்பட்டது. இவ் வுண்மையை விளக்குவதே உமை சிவனது கண்களைப் பொத்திய போது, உலகம் ஒளியையிழந்து இருளடைந்ததைக் கூறும் வரலாறு.

இளங்கொளி ஈசன் பிறப்பொன்றும் இல்லி
துளங்கொளி ஞாயிறும் திங்களும் கண்கள்
வளங்கொளி அங்கியும் மற்றைக்கண் நெற்றி
விளங்கொளி செய்கின்ற மெய்காயம் ஆமே. ***#2633***

சிவன் என்றும், எவ்விடத்தும் பிறத்தலை இல்லாதவன் ஆதலால், அவனே இயற்கையாய் விளங்கம் ஒளி. அவனொழிந்த பிற பொருள்கள் எல்லாம் தோற்றம் உடையனவே யாதலால் அவற்றுள் சிலவாகிய முச்சுடர்களும் அவன் ஆக்கிய செயற்கை ஒளிகளே. முச்சுடர்களுள் ஞாயிறும், திங்களும் அவனது வல இடக் கண்களாகவும், தீ பிறருக்கில்லாத மூன்றாவதான நெற்றிக் கண்ணாகவும் உயர்ந்தோரால் சொல்லப்படுகின்றன. இனி அவனது திருமேனியே ஒளிமயமாகலின், ஒளியுடன் விளங்குகின்ற ஆகாயம் அவனது திருமேனியாகச் சொல்லப்படுகின்றது.

விளக்கவுரை

'இலங்கு' என்பது எதுகை நோக்கி 'இளங்கு' எனத் திரிந்தது. இயற்கையாகவே இலங்குகின்ற ஒளி என்க. இதனை முதல் அடியின் ஈற்றிற் கூட்டி. அதற்கு முன் 'ஆதலால்' என்பது வருவித் துரைக்க. ஏனையோரெல்லாம் பிறந்திறந்தமை பலவிடத்தும் கேட்கப் படுகின்றது. துளங்குதல், செயற்கையை உணர்த்திற்று. 'மற்றை நெற்றிக்கண்' என மாற்றியுரைக்க. இதனை வேறு வைத்துக் கூறினமையால், இஃது ஏனையோர்க்கு இல்லாமை விளங்கிற்று. முச்சுடர்களும் இறைவனது உறுப்பாதலைக் கூறுகின்றவர், அவற்றிற்கு இடமாகிய ஆகாயம் அவனது உடம்பாதலையும் உடன் கூறினார்.
'ஆகாய வண்ணம் உடையாய் போற்றி'9
என அப்பர் அருளிச் செய்தார். 'ஆகாச சரீரம் பிரம்ம' எனத் தைத்திரீய உபநிடதம் கூறிற்று. மற்றை உபநிடதங்களிலும் இவ்வாறு கூறப் படுகின்றது. முன் மந்திரத்தில் இயற்கையிற் பெற்றுள்ளதைக் குறித்த 'வளங்கொளி' என்பது இம்மந்திரத்தில் சிவனிடமிருந்து பெற்றதைக் குறித்தது. காயம் - ஆகாயம் - 'காயம் மெய் ஆம்' என இயைக்க. இதனால், 'சுதந்திரமான ஒளியையுடையவன் சிவன் ஒருவனே' என்பது வலியுறுத்தி உணர்த்தப்பட்டது.

மேலொளிக் கீழதின் மேவிய மாருதம்
பார்ஒளி அங்கி பரந்தொளி ஆகாசம்
நீர்ஒளி செய்து நெடுவிசும் பொன்றினும்

ஓர் ஒளி ஐந்தும் ஒருங்கொளி யாமே. ***#2634***

எல்லா ஒளிகளினும் மேலான ஒளியாகிய திருவருள் ஒளியின்கீழ் அதினின்றும் தோன்றியனவை, விரிந்து பரந்த ஒளியை யுடைய ஆகாயம், காற்று, ஒளிப்பொருளாகிய தீ, நீர், நிலம் ஆகியவை. இவை ஐந்தும் உயிர்கட்கு அறிவைத் தந்து, ஆகாயம் ஒன்றிற்குள்ளே ஏனை நான்கும் அடங்கியிருப்பினும், இவை ஐந்தும் ஒடுங்கும் இடம் திருவருள் ஒளிதான்.

விளக்கவுரை

மேவிய - மேவின. செய்யுள் நோக்கிப் பூதங்கள் முறை பிறழ வைக்கப்பட்டன. செவ்வெண்ணாகச் சொல்லப்பட்ட இவற்றின் இறுதியில் 'ஐந்தும்' என்னும் தொகை வருவித்து, 'மேவிய' என்பதற்கு முடிபாக்கிப் பின், 'ஐந்தும் ஒளி செய்து விசும்பின் ஒன்றினும் ஒருங்கு ஒளி ஓரொளியாம் என இயைத்து முடிக்க. முதலடி இன எதுகை. 'பரந்த' என்பதன் ஈற்றகரம் தொகுத்தலாயிற்று. ஐம்பூதங்களும் தூல சரீரமாகி, ஒளி செய்வனவாகக் (அறிவைத் தருவனவாக) கூறினார். ஒருங்குதல் - ஒருசேர அடைதல். 'ஒடுங்கொளி' என்றே பாடம் ஓதுதலுமாம். 'மாயா காரியங்கள் ஆன்மாவிற்கு விளக்காய் அமையினும் அவை திருவருளால் விளக்கம் பெருவனவே, என்பது கூறியவாறு.

இதனாலும் 'அனைத்து ஒளிகட்கும் மூல ஒளி அருள் ஒளியே' என்பது வலியுறுத்தப்பட்டது.

மின்னியல் தூவொளி மேதக்க செவ்வொளி
பன்னிய ஞானம் பரந்த பரத்தொளி
துன்னிய ஆறொளி தூய்மொழி நாடொறும்
உன்னிய ஆறொளி ஒத்தது தானே. ***#2635***

['ஒளி' என்பதனை 'மின்னியல்' ஞானம் என்பவற்றோடும் கூட்டுக.]

சிவனது சத்தி, பரை, ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி என முன்னர் ஆறாகி நின்று அருள்புரிவனவாம். (ஈசானி முதலிய ஐந்துமே 'ஈசானம்' முதலிய பஞ்சப் பிரம மந்திரங்களாம்) அந்த ஆறின் வடிவாகவே நாள்தோறும் பிரணவத்துடன் கூட்டிச் சிகாரம் முதலாக வைத்து எண்ணப்படும் திருவைந்தெழுத்துக் கொள்ளப்படும்.

விளக்கவுரை

'அதனை உணர்ந்து அம்மந்திரத்தைக் கணிக்கவே சிவஞானம் உளதாம்' என்பது கருத்து.

பராசத்தி ஏனைச் சத்திகளாய் வெளிப்படுதலல்லது நேரே வெளிப்படாமையின் அதனை 'மின்னியல் ஒளி' என்றும், 'ஈசாளி பளிங்குபோன்றது, என்பதனால் அதனை, 'தூவொளி' என்றும், பூரணி

கன்ம சாதாக்கியமாய் நின்று எல்லாவற்றையும் செவ்வனே ஏற்றல் பற்றியும் அதனை, மேதக்க செவ்வொளி' என்றும், ஆர்த்தி பற்றியும் அதனை, மேதக்க செவ்வொளி' என்றும் ஆர்த்தி அஞ்ஞானத்தை அழித்தல் பற்றி அதனை' 'பள்ளிய ஞானம்' என்றும், (பன்னிய - வேதாகமங்கள் சொல்லிய) வாமை உலகுயிர்கள் அனைத்தையும் வினைவழி நடத்துதலின் 'பரந்த பரவொளி' என்றும், ('பரத்து' என்பதில் அத்து வேண்டாவழிச் சாரியை) மூர்த்தி உயிர்களைப் பலபேதப்படத் தோற்றுவிக்குமாற்றால் சிவனை அடைய வழிவகுத்தல் பற்றி அதனை, 'துன்னிய ஆறொளி' என்றும், (ஆறு - வழி நகரம் இரட்டியாமை செய்யுள் விகாரம்.) என்றும் கூறினார். இவ்வாறு நுண்பொருள்களை மறை பொருட் கூற்றுக்களால் உய்த்துணரக் கூறுதல் நாயனாரது நெறி என்பது பலவிடத்தும் நன்கறியப்பட்டது. 'துன்னிய ஆறொளி' என்பதன்பின் 'இந்த ஆறு ஒளியும்' என்பது வருவித்து. 'நாடொறும் உன்னிய ஆறு ஒளி ஒத்தது' என முடிக்க. 'ஒத்தது' என்பது பன்மை யொருமை மயக்கம். தான், ஏ அசைகள்) தூமொழி - தூய்மையைத் தரும் மொழி, திருவைந்தெழுத்து.
இனித் திருவைந்தெழுத்திற்கு ஈடாகப் பிரணவ கலைகளாகிய 'அ, உ, ம், விந்து, நாதம்' என்பவற்றைக் கொள்ளுதல் பொது நெறியாம்.
இதனால், மூல மந்திரம் சிவசத்தி வடிவாய் நின்று ஒளியை (ஞானத்தை)த் தருதல் கூறும் முகத்தால் திருவருள் பேரொளியாமாறு விளக்கப்பட்டது.

விளங்கொளி மின்னொளி யாகிக் கரந்து
துளங்கொளி ஈசனைச் சொல்லும்எப் போதும்
உளங்கொளி ஊனிடை நின்றுயிர்க் கின்ற
வளங்கொளி எங்கும் மருவிநின் றானே. ***#2636***

சிவன் எல்லா ஒளிகளிலும் மேலாய் மிக விளங்கு கின்ற ஒளியாய் இருப்பினும் தன்னை நினைக்கின்றவனது உள்ளத்தில் மட்டுமே விளங்கி நின்று, உடலிலும் உயிர்ப்பாய் இயங்குகின்ற வண்மையுடையவனாயும், மற்றை எல்லாப் பொருள்களிலும் மேகத்தில் ஒரே ஒரு காலத்தில் மட்டுமே சிறிது விளங்கி விரைவில் மறையும் மின்னல்போல மறைந்துள்ளவனாயும் இருக்கின்றான். ஆகையால் அவனை ஈங்கள் இடைவிடாது துதியுங்கள்.

விளக்கவுரை

'துதித்தால் உங்கள் உள்ளத்தில் விளங்கி, உடலில் உயிப்பாயும் இயங்குவான்' என்பது குறிப்பெச்சம். 'துலங்கொளி' என்பது எதுகை நோக்கி, 'துளங்கொளி' எனத் திரிந்து நின்றது. 'ஈசன், உளங்கொளி ஊனிடை நின்று உயிர்க்கின்ற வளங்கொளியாய், எங்கும் விளங்கொளி

மின்னொளியாகிக் கரந்து மருவி நின்றான். (அவனை) எப்போதும் சொல்லும் என இயைத்து முடிக்க. முதல் அடியில் உள்ள ஆக்கம் உவமை குறித்து நின்றது. 'உளம் கொளி' என்பது, சாதியொருமை. இதனால், பேரொளியாகிய சிவன் தன்னை நினைப்பவரது நெஞ்சில் மட்டுமே விளங்கி நிற்றல் கூறப்பட்டது.

விளங்கொளி அவ்வொளி அவ்விருள் மன்னும்
துளங்கொளி யான்தொழு வார்க்கும் ஒளியான்
அளங்கொளி யார்அமு தாரநஞ் சாரும்
களங்கொளி ஈசன் கருதது மாமே. *#2637*

சிவன் எல்லா ஒளிகளிலும் மேலாய் விளங்குகின்ற தனது ஒளியை, எல்லா இருளிலும் மேலானதாய் மிக மறைக்கின்ற ஆணவ இருளின் வலிகெடுதற்கு ஏதுவான ஒளியாக உடையவன். அவ்வொளியை அவன் எவ்வுயிரிடத்தும் மறைத்தல் இல்லை. ஏனெனில், விளங்கும் ஒளியுடம்பினராகிய தேவர்கள் அமுதம் உண்டற்பொருட்டு நஞ்சம் நிறைந்த கண்டத்தையுடைய அவனது திருவுள்ளம் அத்தகையது.

விளக்கவுரை

'ஈசன்' என்பதே முதலிற் கொள்க. 'விளங்கொளி யாகிய அவ்வொளியைத் துளங்கொளியாக உடையான்' என்க. அவ்விருள் - ஒளிகளின் மேலான ஒளிபோல, இருள்களின் மேலான அந்த இருள். அஃது ஆணவ மலம்.

'ஒரு பொருளும் காட்டாது இருள்உருவம் காட்டும்;
இருபொருளும் காட்டாது இது'*9*

என ஆணவ இருளின் கொடுமை மிகுதி கூறப்படுதல் காண்க.

துளங்குதல் - பெரிதும் மெலிதல். ஆணவம் அநாதியாதலின் அழியாது சத்தி மெலிந்தே நிற்பதாதல் பற்றி, 'துளங்குதல்' என்றார். அலங்குதல், 'அளங்குதல்' என மருவி வந்தது. தொழுவார்க்கும் என்ற உம்மையால், 'தொழாதார்க்கும்' என்பது கொள்ளப்பட்டது. ஒளியான் - கரவான். அது - அத்தன்மையது. அஃதாவது உயிர்கள் ஒளியைப் பெறத் தான் இருளைத் தாக்கி அடக்கும் தன்மை.

'சிற்றுயிர்க் கிரங்கிக் - காய்சின ஆலம் உண்டாய்
அமுதுண்ண'*3*

'விண்ணாள்வார் அமுதுண்ண மிக்கபெரு
விடம் உண்ட
கண்ணாளா'

என்பனபோலும் திருமொழிகளைக் காண்க.

இதனால், பிற ஒளிகளால் நீங்காத கொடிய திணியிருளை நீக்குகின்ற செவ்விய நுண்ணொளியாதல் கூறப்பட்டது.

இலங்கிய தெவ்வொளி அவ்வொளி ஈசன்
துளங்கொளி போல்வது தூங்கருட் சத்தி
விளங்கொளி மூன்றே விரிசுடர் தோன்றி
உளங்கொளி யுள்ளே ஒருங்குகின் றானே. *#2638*

பிறிதொரு பொருள் விளக்க வேண்டாது தானே விளங்கும் ஒளி எந்த ஒளியோ அந்த 'ஒளியே சிவன்' எனப்படும் பொருள். (எனவே, விளக்கினால் விளக்கும் ஒளி எந்த ஒளியே சீவன்' எனப்படும் பொருள் என்பது தானே விளங்கிற்று.) இனி, ஞாயிறு, பிறரால் காணப்படுதற்கு ஏதுவாய் அதனினின்றும் வியாபிக்கின்ற அதன் கதிர்போன்றது சிவனது சத்தி. ஆக, விளக்கம் உடைய ஒளிகள் மூன்றாகும். அவற்றுள் பேரொளியாகிய சிவன் தன்னை நினைக்கின்ற உயிரினது நெஞ்சத்தில் வெளிப்பட்டு அதனது ஒளியைத் தனது ஒளிக்குள் அடக்கி விளங்குவான்.

விளக்கவுரை

'இலங்கியது' என்றது, 'தானே இலங்கியது' என்றபடி. தூங்குதல், நீக்கமின்றியிருத்தல். இதனுள் இன வெதுகை வந்தது.
இதனால், சிவ ஒளி சீவ ஒளிக்கு உதவும் ஒளியாதல் கூறப்பட்டது.

உளங்கொளி யாவதென்? உள்நின்ற சீவன்
வளங்கொளி யாய்நின்ற மாமணிச் சோதி
விளங்கொளி யாய்மின்னி விண்ணில் ஒடுங்கி
அளங்கொளி ஆயத்து ளாகிநின் றானே. *#2639*

பிறிதோர் ஒளியைத் தன்னுட் கொண்டிருக்கும் ஒளியாவது எந்த ஒளி? உடலினுள்ளே ஒளியாய் நிற்கும் சீவ ஒளியாம் அந்த ஒளிக்குள் ஒளியாகி நிற்கும் வன்மையை உடைய பெரிய மாணிக்க ஒளியாகிய சிவனஅ, தன்னைக் காணும் பக்குவம் எய்தினார் கண்முன் முதற்கண் திடீரென விளங்குகின்ற மின்னல் ஒளிபோல மின்னிப் பின்பு பரவெளியிலே ஒன்றி அதுவாகி, பேரொளியைப் பெற்ற திருக்கூட்டத்துள் நீங்காது நிற்பான்.

விளக்கவுரை

'உளம் கொளி' என்பதில் கொள்வதும், கொள்ளப்படுவதும் ஒளிகளாதல் அதிகாரத்தால் பெறப்பட்டது. அதனால் 'மாமணிச் சோதி' என்பதும் 'விளங்கொளியாய் மின்னி' என்பதும் பொருந்துவவாயின. வளம், ஒளிக்கு ஒளியாய் நிற்கும் செழுமை. இங்கும் அலங்கொளி அளங்கொளியாயிற்று.
இதனால், சிவ ஒளி பக்குவம் எய்தினார்க்கு வெளிப்பட்டு விளங்கிப்பின் மறையாது நிற்றல் கூறப்பட்டது.

விளங்கொளி யான விகிர்தன் இருந்த
துளங்கொளிப் பாசத்துள் தூங்கிருள் சேரா
கலங்கொளி நட்டமே கண்ணுதல் ஆடி
உளங்கொளி உன்மனத் தோன்றிநின் றானே. *#2640*

தானே விளங்கும் ஒளியாகிய சிவன் விளங்கி நின்ற மெலியப்பெற்ற சீவ ஒளியின் உடல் பொறி காரணங்களில் முன்பு சேர்ந்திருந்த ஆணவ இருள் சேரமாட்டாது ஒதுங்கியிருக்கும். அவ்வாறு அந்த இருள் மெலிதற்குரிய அதிசூக்கும நடனத்தைச் செய்து கொண்டு தன்னை நினைக்கின்ற உயிரின் நுண்ணுடம்பில் முடிநிலைத் தானமாகிய உன்மனாந்தத்திலே இருப்பான்.

விளக்கவுரை

விகிர்தன் - உயிர்களின் இயல்பிற்கு வேறுபட்ட இயல்பினை உடையவன். 'பாசம்' என்றது இங்கு மாயேயத்தை, அதனானே அதனைப் பற்றுக் கோடாகக் கொள்ளும் வினையும் பெறப் பட்டது. 'இருள் கலங்கு நட்டம்' என மாற்றியுரைக்க. அது ஞான நடனம். உன்மனை பற்றிக் 'கலைநிலையில்' காண்க.*l* உயிரை ஆணவம் பற்றியுள்ள பொழுதே அதனை 'மாயை, மாயேயம், வினை' என்பவற்றையும் இருள் பற்றி உயிரை ஆணவம் பற்றாது நீங்கிய பொழுது அதன் மாயை முதலியவற்றையும் ஆணவம் பற்றாது; அதற்குக் காரணம் திருவருள் விளக்கமே என்பதை,

'மாயைமா யேயம் மாயா
வரும்இரு வினையின் வாய்மை
ஆயஆ ருயிரின் மேவும்
மருள்எனில் இருளாய் நிற்கும்,
மாயைமா யேயம் மாயா
வரும்இரு வினையின் வாய்மை
ஆயஆ ருயிரின் மேவும்
அருள்எனில் ஒளியாய் நிற்கும்'* என்னும் சிவப்பிரகாசச் செய்யுளால் அறிக. மூன்றாம் அடி இன எதுகை. 'சேராது' என்பது ஈறு குறைந்து நின்றது. 'உன் மனாந்தத்து' என்பது 'உன் மனத்து' என இடைக் குறைந்து நின்றது.

இதனால் சிவ ஒளியால் சீவ ஒளி உடம்பொடு நலம் பெறுதல் கூறப்பட்டது.

போது கருங்குழல் போல்நவர் தூதிடை
ஆதி பரத்தை அமரர் பிரானொடும்
சோதியும் அண்டத்தப் பால் உற்ற தூவொளி
நீதியின் அல்லிருள் நீக்கிய வாறே. *#2641*

ஆன்மாக்கள் சிவனுக்குத் தலைவனுக்குப் புதுமணம் செய்துகொண்ட மனைவியர் போன்றவர்கள். சிவனோ, புதுமணம் செய்து கொள்ளப்பட்ட மனைவியர் எளிதில் செல் லொணாத காவற் கட்டடத்தில் உள்ள தலைவன்போல் உள்ளான். இவர் இருதிறத் தாரிடையே தூதாகின்றவள் தலைவனுக்குக் காதற் பரத்தைபோன்ற ஆதி சத்தி. (திரோதான சத்தி) அவளது தூதின் பயனாகச் சிவன் இரங்கி வந்து ஆன்மாக்களது திணிந்த இருளை நீக்கியது வியப்பு.

விளக்கவுரை

போது - பேரரும்பு. 'அதனை அணிந்த கருங்குழல்' என்றது, அக்குழலையுடைய புதுமண மனைவியை போல்நவர் - அவளோ டொத்த புதியர். பந்தத்தில் பழையவராயினும் வீட்டிற்குப் புதியரே. உவமையில் பன்மையில் ஒருமை மயங்கிற்று. அருட் சத்தியும், திரோதான சத்தியும் வேறு வேறல்லவாயினும் திரோப வித்தல் சிவனுக்குக் கருத்தன்றாகலின், அதனைச் செய்கின்ற செயல் பற்றித் தனது அறத்திற்கு ஒத்த அருட்சத்தியாகிய தேவியின் வேறான, தனது அறத்திற்கு ஒவ்வாத பரத்தையாக உருவகம் செய்தார். 'பரத்தை' என்பது சொல் நயத்தால் பிறிது பொருள் தந்ததாயினும், அது, தொழு பவனை 'தொழுத்தை' என்பது போல, 'பரத்தின்பால் உள்ளவள்' என்றே பொருள் தரும். சிவனையடைந்து இன்புறுதற்கு உரியவாதல் பற்றித் தலைவனை அடைந்து இன்புறுதற்குரிய சீவான்மாக்கள் பெண்டிரோடு ஒப்பிக்கப்படுதலை,

'இருவர் மடந்தையருக்கு என்னபயன் உண்டு? உண்டாம்,
ஒருவன் ஒருத்தி யுறின்'8

என்பதிலும் காண்க. 'இஃது உவமை மாத்திரையேயன்றிப் பொருளன்று' என்பது உணராதார். 'உயிர்கள் எல்லாம் பெண்டிர்' எனவும் 'இறைவன் ஒருவனே ஆடவன்' எனவும் கூறி மகிழ்வர். அவர், ஆடவர், பெண்டிர்' என்னும் வேற்றுமை மாயாகாரியப் பொருளான உடம்பின் கண்ணதன்றி அறிவேயான நுண் பொருளிடத்து எங்ஙனம் விளங்கக் கண்டனரோ!.

எண் ஒடு ஓரிடத்தில் நின்றே ஏனையிடத்தும் சென்று இயையுமாயின் இங்கு 'ஒடு' 'போல்நவர்' என்பதனோடும் சென்றியைந்தது. உம்மை அசை. 'போது கருங்குழல்போல் நவரோடும், அமரர் பிரானோடும் இடை தூது ஆதி பரத்தை, எனக் கூட்டுக.

இதனால், அனைத்தையும் கடந்து நிற்கும் பேரொளியாகிய சிவன், அனைத்துப் பொருளிலும் கலந்து நின்று இயக்கும் சிற்றொளியாகிய திரோதான சத்தயுடன் நின்று ஆன்மாக்களது ஆணவ இருளை நீக்குதல் கூறப்பட்டது.

'உண்டில்லை' என்னும் உலகத் தியல்பிது
பண்டில்லை என்னும் பரங்கதி உண்டுகொல்
கண்டில்லை மானுடர் கண்ட கருத்துறின்
விண்டில்லை உள்ளே விளக்கொளி யாமே. *#2642*

உலகம், சிலர் சிலவற்றை 'உண்டு' எனக் கூறினால், உடனே அவற்றை 'இல்லை' என மறுத்துக் கூறும் இஃது உலகத்தின் இயல்பு ஆதலை எளிதில் காணுதல் கூடும். காலத்திற்கும், இடத்திற்கும் உட்பட்டு, எளிதில் அகப்படுகின்ற பொருள் பற்றியே இவ்வா றாதலின், 'காலம், இடம் இவற்றைக் கடந்த, 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருள் உண்டு'*8* என அறிந்தோர் கூறுவதை, உலகம் 'இல்லை' எனக் கூறிப் பிணங்குகின்றது இவ்வுலகத்திற்கு 'மேற்கதி' என்பது உண்டாகுமோ! உண்டாகாது. அந்த முன்னைப் பழம்பொருளை மக்கள் கண்டதில்லை. ஒரு சிலர் கண்டனரேனும், அவர் 'அதன் இயல்பு இது' என விளக்கிச் சொல்லியதில்லை. 'மற்று அதன் இயல்புதான் யாது' எனின், புறக்காட்சியை விடுத்து அறிவிற்குள்ளே ஒற்றித்துக்காணும் அகக்காட்சியில் விளங்குகின்ற ஓர் அதிசய விளக்கொளியாகும் அது.

விளக்கவுரை

'பண்டு' என்பது இடைச் சொல்லாயினும் பெயர்த் தன்மைப் பட்டு ஆகுபெயராய்ப் பண்டையதைக் குறித்தது. 'கண்டது, விண்டது' என அவ்வத்தொழில் மேல் நிற்கும் வினைப் பெயர்களில் அகரச் சாரியையும், துவ்விகுதியும் தொகுத்தலாயின. 'கண்டவர் விண்டில, விண்டவர் கண்டிலர்' என்பது ஒரு பழமொழி. விள்ளுதல் - விளக்கிச் சொல்லுதல். 'உண்மை மாத்திரையாற் சுட்டப்படுமே யன்றி, இலக்கண வகையால் விளக்கிச் சொல்லுதல் இயலாது, அநுபவித்து அறியத் தக்கது' என்பதாம். இதனை,

'மகட்குத் தாய் தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லெனின் சொல்லுமா றெங்கனே'

எனப் பின்னர் நாயனாரும்,

'இங்ஙனம் இருந்ததென் றெவ்வண்ணம் சொல்லுகேன்;
அங்ஙனம் இருந்ததென் றுந்தீபற;
அறியும் அறிவதன் றுந்தீபற'*9*

எனவும்,

'அன்றுமுதல் ஆரேனும் ஆளாய், உடனாகிச்
சென்றவர்க்கும் இன்னதெனச் சென்றதில்லை - இன்றிதனை
இவ்வா றிருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்!
அவ்வா றிருந்த தது'*1* எனவும்,

'மருவி இருவரும் புணர வந்த இன்பம்

வாயினாற் பேசரிது; மணந்தவர்தாம் உணர்வர்'3
எனவும் பின்னை ஆசிரியன்மாரும் கூறுமாற்றால் உணர்க. இங்ஙன மாதலின், 'முன்னைப் பழம்பொருள்' என்பது சூனியம் போலும் என மலையாமைப் பொருட்டு, 'உள்ளே விளக்கொளியாமே' என்றார்.
இதனால் 'சிவ ஒளி பேரொளியாதலுடன் உள்ளொளி நுண்ணொளி' என்பது கூறப்பட்டது.

சுடருற ஓங்கிய துள்ளொளி ஆங்கே
படருறு காட்சிப் பகலவன் ஈசன்
அடருறு மாயையின் ஆரிருள் வீசி
உடலுறு ஞானத் துறவிய னாமே. ***#2643***

உலகத்தில், விளக்கு முதலாய் நிற்க, அதினின்றும் வியாபிக்கின்ற ஒளி இருந்தும் இல்லையாய்ப் போகும்படி தோன்றி விளங்குகின்ற ஞாயிறு போன்றவன் சிவன். ஆகவே, உடல், பொறி, உலகு நுகர் பொருள்களாய்ப் பல்வேறு வகைப்பட்டு நெருங்கி யிருக்கின்ற மாயா கருவிகள் செய்யும் மயக்கத்தை அடக்கி, அதற்கு மாறான ஞானத்தினால் உயிர்களோடு உறவுகொள்பவன் அவன்.

விளக்கவுரை

'அஃதறிந்து, கருவி ஞானத்தை நீக்கி, அவனது ஞானத்தை நாடிப்பெறுக' என்பது குறிப்பெச்சம். 'ஆங்கு' என்றது, 'அங்து நின்றும்' என்றபடி. படர்தல், இங்கு நீங்குதல். படர் உறு காட்சிப் பகலவன் படர்தற்கு ஏதுவாய் உறுகின்ற காட்சியையுடைய பகலவன். 'மாயை' என்றது, மாயையின் காரியத்தை. இன், சாரியை மயக்கத்தை 'இருள்' என்றார். மயக்கத்திற்கு ஏது அதுவாகலின். வீசுதல் - போக்குதல். உடலுல் - மாறுபடுதல். 'உறவியன்' என்பதில் அன் ஆடூவை அறிவித்தற்கு வந்த விகுதிமேல் விகுதி.
இதனால், 'மேற்கூறிய அக விளக்கைக் காணுதல் அதன் ஒளியாலல்லது, பிற ஒளிகளால் ஆகாது' என்பது கூறப்பட்டது.

ஒளிபவ ளத்திரு மேனிவெண் ணீற்றன்
அளிபவ ளச்செம்பொன் ஆதிப்பிரானும்
களிபவ ளத்தினன் காரிருள் நீக்கி
ஒளிபவ ளத்தென்னோ(டு) ஈசன்நின் றானே. ***#2644***

சிவபெருமான் தனது திருமேனி பவளமும், செம்பொன்னும் போல்வதற்கு ஏற்ப அருமையாலும் அன்பினால் பிறர்க்கு அளிக்கப்படுகின்ற பவளமும், பொன்னும் போல்பவன் அவன், உலகிற்கு மகிழ்ச்சியைத் தருகின்ற பகலவன், உலகத்துத் திணிந்த இருளைப் போக்குதல் போல எனது உள்ளத்தில் திணிந்த இருளைப் போக்கி, 'என் அறிவினுள்ளே இருக்கும் பவளம்' என்று சொல்லும்படி

என்னும் இருக்கின்றான்.

விளக்கவுரை

'ஆதிப்பிரானும்' என்பதை முதலிற் கொள்க. உம்மை சிறப்பு. ஆதிப்பிரானும்' என்பதுடன் முதல் அடியும் கூடிய தொடர் 'சிவபெருமான்' என்னும் பொருட்டாய் நின்றது. 'வெண்ணீற்றில் ஒளிந்த - மறைந்த பவளத் திருமேனியன்' என்க. 'பவளச் செம் பொன்' என்னும் உம்மைத் தொகை ஒரு சொல் நீர்மைப்பட்டு நிற்க, அதனோடு 'அளி' என்பது வினைத்தொகை நிலைப்படத் தொக்கது. அளி - அளிக்கப்படுகின்ற. அன்பினால் ஒருவர் பிறர்க்கு அளிக்கும் பரிசுப் பொருள்களில் பவளமும், பொன்னும் சில அரும்பொருள் களாம். அவ்அருமை பற்றியே அவை இங்குச் சிவபெருமானுக்கு உவமையாகச் சொல்லப்பட்டன.

'வைப்பர் - பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து'* என்பதிலும் பொன் பொதிந்து வைத்துப் போற்றப்படும் அருமை பற்றியே பொறுத்தார்க்கு உவமையாகக் கூறப்பட்டது. இன்னும் 'முன்னோர் மொழிபொருளேயன்றி அவர் மொழியும் - பொன்னே போற் போற்றுவம்'* என்பதிலும் பொன் அருமை பற்றியே உவமை யாயிற்று. 'பவளத்தையும் பொன்னையும்போலச் சிவபெருமான் உள்ளத்துப் பொதிந்து வைத்தப் போற்றுதற்குரியவன்' என்பது, 'அளி பவளச் செம்பொன்' என்பதனால் குறிக்கப்பட்டது. 'பவளச் செம்பொன்' என்னும் உம்மைத் தொகை உவம ஆகுபெயர் இனன் - பகலவன் பவளத்து இனன் - பவளம் போலும் நிறத்தையுடைய இனன். களி இனன் - உலகம் களிப்புறுதற்கு ஏதுவாகிய இனன். திணிந்த இருள்' என்றற்குக் 'காரிருள்' என்றார். 'இனன்போல' எனவும் 'பவளத்தைப் போல' எனவும் உவம உருபு விரிக்க. ஒளி பவளம் உள்ளத்தில் மறைந்து நிற்கும் பவளம். 'ஈசன்' என்பது 'அவன்' என்னும் சுட்டுப் பெயரளவாய் நின்றது. அதனை மூன்றாம் அடியின் முதலிற் கூட்டுக.

இதனால், சிவன் உயிர்களின் உள்ளொளியாய் நின்று உளளிருளை நீக்கும் அருமை அறியற்பாலதாதல் கூறப்பட்டது.

ஈசன்நின் றான்இமை யோர்கள்நின் றார்நின்ற
தேசம்ஒன் றின்றித் திகைத்தழைக் கின்றனர்
பாசம்ஒன் றாகப் பழவினைப் பற்றுற
வாசம்ஒன் றாமலர் போன்றது தானே. **#2645**

உள்ளத்துள்ளே உள்ளொளியாகிய சிவனும் இருக்கின்றான். கண் இமைக்காது பார்த்துக் கொண்டிருக்கின்ற தேவர்களும் இருக்கின்றார்களும். இருப்பினும், அவர்கள் ஒளி தம்மிடத்தில் சிறிதும் இல்லாததுபோல, 'ஒளி எங்கே உள்ளது' எனத் தேடித் திகைத்து,

'சிவனே! சிவனே' என ஓலமிடுகின்றனர். அதற்குக் காரணம், ஆணவமாகிய ஒரு பாசம் முதலிலே பற்றியிருக்க, அது காரணமாக வகையால் இரண்டாய், விரியால் அளவிறந்தனவாகிய வினைகள் வந்து பற்றியிருப்பதேயாம். ஆகவே, அவர்களது செயல், மலர் இருந்தும் மணம் கமழாதது போன்றதாகும்.

விளக்கவுரை

'தேசு' என்பது, 'தேசம்' என அம்முப்பெற்று வந்தது. தேசு - ஒளி. இன்றி - இல்லாதது போல. 'பற்றற' என்பது பாடம் அன்று. 'வாசம், ஒன்றாமலர் போன்றது' என்றலே கருத்தென்க. 'மலர் உயிரும், மணம் சிவமும்' என்க.

'பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்,
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது'3

என முன்னரும் கூறினார். இதனை,

'உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர்
எழுதரு நாற்றம்போல்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள்'3

என ஆளுடைய அடிகளும் அருளிச் செய்தார். உயர் பிறப்பினராகிய தேவர்களைக் கூறவே மக்கள் நிலை சொல்ல வேண்டாவாயிற்று. இதனால், 'சிவன் உள்ளொளியாய் இருந்தும் பாசப்பற்றால் விளங்கிலன்' என்பது கூறப்பட்டது. ஆகவே, பாசம் பற்று அற்றால் விளங்குவன' என்பது சொல்லாமே அமைந்தது.

தானே இருக்கும் அவற்றின் தலைவனும்
தானே இருக்கும் அவன்என நண்ணிடும்
வானாய் இருக்கும்இம் மாயிரு ஞாலத்துப்
பானாய் இருக்கப் பாவலும் ஆமே. **#2646**

வேதமாய் இருப்பவனும் சிவனே. வேதத்தைச் செய்தவனும் சிவனே. இனி வேதமும் இயல்பாகவே அவனையே, 'முடிநிலைப் பொருள்' எனக் கூறி முடியும். ஆகவே, ஆகாயத்திற்குள் அடங்கியிருக்கும் உலகம் அனைத்தினுள்ளும், 'ஞான சூரியனாய் உள்ளவன் சிவன் ஒருவனே' எனப் புகழ்ந்து பாடி அவனை அடைதலே தக்கது.

விளக்கவுரை

முதலில் உள்ள, 'தான்' சிவன் என்பது, அதிகாரத்தால் விளங்கிற்று. 'இருக்கு' என்பது பொதுப்பட அனைத்து வேதங் களையும் குறிக்கும் பெயராயும் வரும். இரண்டாம் அடியில் 'இருக்கும்' என்னும் உம்மை சிறப்பு. அவ்விடத்து, 'தானே' என்றது 'இயல்பாகவே' என்றபடி. 'அவன்' என்பதன்பின் 'முடிநிலைப் பொருள்' என்பது எஞ்சி நின்றது. வேதத்தைக் கூறவே ஆகமமும் அடங்கிற்று. 'வானின் உள்ளாய்

இருக்கும்' என உருபு விரிக்க. 'சான்றோராவார் வேதாகமங்களின் வழி நிற்பவர் ஆகலான், எவ் விடத்தும் சிவனையே ஞான மயமான மெய்ப்பொருளாகப் போற்றி வணங்குதலே சான்றோராயினார்க்கு உரிய இயல்பு' என்றபடி. 'பானுவாய்' என்பதில் ஈற்று உகரம் குறைந்து, 'பானாய்' என வந்தது.

இதனால், 'வேதாகம வழக்காகிய சான்றோர் சென்ற நெறிப்படி உயிர்களுக்குள்ளே ஒளி வளர் விளக்காய் ஒளிர்பவன் சிவனே' என உணர்ந்து அவனைக் கண்டு இன்புறல் வேண்டும்' என்பது கூறிமுடிக்கப்பட்டது.

***11.5.*பஞ்சாக்கரம் - தூலம்**

ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவது
நன்றுகண் டீர்இனி நமச்சிவா யப்பழம்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே. *#2647*

அனைத்துலகங்களுக்கும் முதற்பொருளாய் நிற்கும் கடவுட் பொருள் ஒன்றே. அனைத்து உயிர்கட்கும் உயிராய் உள்ளதும் அதுவே. அதனை உணர்த்தும் 'நமச்சிவாய' என்னும் ஐந்தெழுத்து மறைமொழியே ஞானத்தைத் தரும் மறைமொழியாம். அம்மறைமொழியாகிய பழத்தை நான் தின்றே பார்த்தேன். அது தித்தித்த முறையை உலகில் எந்தத் தித்திப்போடு நான் உங்கட்கு உவமித்து உணர்த்துவேன்.?

விளக்கவுரை

ஈற்றில் வருவித்து உரைத்தது 'உணர்த்தரிது' என எஞ்சி நின்ற சொல்லெச்சம் பற்றி. 'கண்டீர்' மூன்று தொடர்ப் பொருளை வலியுறுத்தி நின்ற முன்னிலையசைகள். 'உலகு' இரண்டில் பின்னது உயிர்த்தொகுதி. நன்றாவது ஞானம். அதனைத் தருவதனை 'நன்று' என உபசரித்துக் கூறினார். இனித் தின்று கண்டேன் என இயையும். இனி - இப்பொழுது. இதனால், 'ஞானத்தைத் தருதல் பற்றி மந்திரங்களுள் தலையாயது ஐந்தெழுத்து மந்திரம் 'என்பதும், அது நகாரம் முதலாக அமையின் தூல பஞ்சாக்கரமாம்' என்பதும் சொல்லப்பட்டன. இதனைப் பிரணவத்தோடு கூட்டிக் கூறின தூல சடாக்கரமாம்.

வடமொழி 'ம' என விசர்க்க ஈறாய் நின்று முப்பதாம் மெய்யோடு புணருங்கால், விசர்க்கம் அம்முப்பதாம் மெய்யாகத் திரிந்து வருதல் பற்றித் தமிழில் நமச்சிவாய' எனச் சொல்லப்படும். அவ்வாறாயினும் வடமொழியிலாயினும், தென்மொழியிலாயினும் மெய்யெழுத்து எண்ணப்படாமையின், எழுத்து ஐந்தேயாம். 'நமசிவாய' என்றல் யந்திர முறையாகிய கிரியா மார்க்கமாம். திருமுறைகளில் எல்லாம்

ஞானமார்க்க முறையாகிய 'நமச்சிவாய' என்றே சொல்லப்படும். திருமுறைகளில் பெரும்பான்மையாக இத்தூல பஞ்சாக்கரமே எடுத்தோதப்படுதல் வெளிப்படை.

அகாரம் முதலாக ஐம்பத்தொன் றாகி
உகாரம் முதலாக ஓங்கி உதித்து
மகார இறுதியாய் மாய்ந்துமாய்ந் தேறி
நகார முதலாகும் நந்திதன் நாமமே. ***#2648***

சிவன், 'சொல் இறந்து நின்ற தொன்மையன்' ஆயினும் சொல்லாலன்றி உயிர்கள் அவனை உணர்தல் கூடாமை பற்றி அவன் சொல்வடிவான பல பெயர்களையும் உடையவன் ஆகின்றான். எல்லாப் பொருள்களும் பெயராலே அறியப்படுதலாலும் எல்லாப் பொருள்களிலும் சிவன் அவையேயாய்க் கலந்து நிற்றலாலும் ஒரு வகையில், எல்லாப் பெயர்களும் சிவன் பெயர்களேயாகின்றன. பெயர்கள் யாவும் எழுத்துக்களால் ஆனவை. 'அவ் எழுத்துக்கள் ஐம்பத்தொன்று' எனப்படுகின்றன. அந்த எழுத்துக்கள் பிரணவ கலைகளாகிய அகார உகார மகாரங்களால் முறையே 'தோற்றம், நிலை, இறுதி' என்பவற்றை அடைவனவாகச் சொல்லப்படுகின்றன. ஆகவே, அனைத்துப் பெயர்களும் தோன்றி அழிவன ஆகின்றன. இந்நிலையில் தோற்றமும் அழிவும் இல்லாத சிவ நாமம், நகாரத்தை முதலாக உடைய ஐந்தெழுத்தாதல் ஆவதாம்.

விளக்கவுரை

எனவே, இந்த ஐந்தெழுத்துக்கள் ஐம்பத்தோர் அக்கரங்களுள் அடங்கி நிற்கின்ற அந்த எழுத்துக்கள் ஆகாது, வேறு எழுத்து என்பதாம். இது பற்றி, 'ஐந்து கலையில் அகராதி தன்னிலே' என்ற மந்திரத்தை நோக்குக. மற்றும்,

'அஞ்செழுத்தீ தாகில் அழியும் எழுத் தாய்விடுமோ!
தஞ்ச அருடகுருவே சாற்று'

என்னும் உண்மை விளக்க அடிகளில் அமைந்த குறிப்பையும் உன்னுக.
ஆதல் - தோன்றுதல். ஓங்கி உதித்தல் - நிலைத்து நிற்றல்.
'மாய்ந்து மாய்ந்து ஏறி' என்றது, 'பலவாய்த் தோன்றி மறைந்து பெயர்களாய் எண்ணிக்கை மிகுந்து' என்றபடி. இங்ஙனம் கூறியது பெயராயின பலவற்றையும் 'ஏறி' என்பதன் பின் 'முடிவாக' என்பது வருவிக்க. 'முதலது' என்பதில் இறுதி நிலை தொகுத்தலாயிற்று. இதனால், சிவ நாமமாகிய ஐந்தெழுத்துக்கள் ஏனை எழுத்துக்கள் பலவற்றில் சில ஆவன அல்ல' என்பது கூறப்பட்டது.

அகாராதி யீரெட் டலர்ந்த பரையாம்
உகராதி சத்தி உள்ளொளி ஈசன்

சிகாராதி தான்சிவம் ஏதமே கோணம்
நகாராதி தான்மூல மந்திரம் நண்ணுமே. ***#2649***
'ஐம்பது' அல்லது, 'ஐம்பத்தொன்று' எனப்படும் அகரம் முதலாகிய எழுத்துக்களில் பதினாறு வகையாய்ப் பராசத்தி நிறைந்து நிற்கும். (பதினாறாவன சயை, விசயை, அசிதை, பராசிதை, நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, இந்திகை, தீபிகை, இரோசிகை, மோசிகை, வியோம ரூபை, அனந்தை, அனாதை, அனாசிருதை' என்பன. அந்தச் சத்தியைக் குறிக்கும் பெயர் உகாரத்தை முதலாக உடையது 'உமா, என்பது (இஃது உ, ம், அ என்பது கூட்டாக இருத்தலால், 'சத்தி பிரணவம்' எனப்படும்.) சத்தி ஒளியாய் நிற்க. அதற்குப் பற்றுக் கோடான சுடராய் உள்ளார்ந்து நிற்பவன் சிவன் முன் மந்திரத்திற் கூறிய ஐந்தெழுத்து மந்திரத்தைச் சிகாரம் முதலாகக் கொண்டு நோக்கினால் அம்மந்திரம் மூன்று கூறாய், 'பதி, பசு, பாசம்' என்னும் மூன்றையும் உணர்த்தும், ஆகவே, முன் மந்திரத்திற் கூறியவாறு நகாரத்தை முதலாகக் கொண்ட ஐந்தெழுத்தாலாகிய அந்த மந்திரமே அனைத்து மந்திரங்கட்கும் மூல மந்திரமாம் தகைமையை உடையதாகும்.

விளக்கவுரை

அகாராதி - அகரம் முதலாகிய எழுத்துக்கள். 'அகாராதியில்' என உருபு விரிக்க. 'பரையாம் தன் சத்தி உகராதி' உகாராதி - உகரத்தை முதலாக உடைய மந்திரம் என மாற்றியுரைக்க. 'உள்ஒளி' என்பது, 'ஒளி உள்' என்பது பின் முன்னாக மாறி நின்ற ஆறாவதன் தொகை. 'உள்' என்பது ஆகுபெயராய் உள்ளார்ந்து நிற்கும் பொருளைக் குறித்தது. ஐந்தெழுத்து மந்திரத்தில், 'சிவா' என்பது பதியையும் 'ய' என்பது பசுவையும், நம என்பது பாசத்தையும் குறிக்கும். அவற்றுள்ளும் சிகாரம் சிவனையும், வகர ஆகாரம் அவனது அருட் சத்தியையும் குறிக்கும். 'நம' என்பதிலும் மகாரம் ஆணவத்தையும், நகாரம் திரோதான சத்தியையும் குறிக்கும். மாயை கன்மங்கள் திரோதான சத்திக்குக் கருவியாய் அதனுள் அடங்கும். இவற்றையெல்லாம், உண்மை விளக்கம், சிவப்பிரகாசம் முதலிய நூல்களில் காண்க. ஏதம் - குற்றம்; பாசம். கோணம் - வளைவு. இரு பக்கமும் வளைந்து சென்று பாசத்தோடும், பதியோடும் பற்றும் தன்மையுடையது பசு, மந்திரம்' என்றது, மூல மந்திரமாம் தன்மையை. இதனால், முன் மந்திரத்தில் 'நந்திதன் நாமம்' எனக் கூறிய நகாராதி ஐந்தெழுத்தால் ஆகிய மந்திரம் ஏனை மந்திரங்கள் அனைத்திற்கும் மூலமாதற்குக் காரணம் விளக்கிக் கூறப்பட்டது. அதனோடே அக்கரங்கள் எல்லாம் சத்திமயம் ஆதலும் உடன் இணைத்துக் கூறப்பட்டது.

வாயொடு கண்டம் இதயம் மருவுந்தி

ஆய இலிங்கம் அவற்றின்மே லேஅவ்வாய்த்
தூயதோர் துண்டம் இருமத் தகம்செல்லல்
ஆயதீ ரும்ஐந்தோ டாம்எழுத் தஞ்சுமே. *#2650*
நந்தி நாமமாகிய நகாராதி ஐந்தெழுத்தாலாகிய மந்திரத்தின் நிலையை நுணுகி நுணுகி நோக்கினால், அடி அண்ணம், கண்டம், (மிடறு, இருதயம், உந்தி, மூலம் என்பவற்றில் முறையாகப் போய், முதல் நிலையாய் நிற்கும். அந்நிலையே 'நாதம்' என்பர். அதனை 'அகரம்' எனவும் வழங்குவர். இனி அது தியானிக்கப்படும் நிலையில் புருவநடு, நெற்றி, உச்சி அதற்கு மேலும் செல்வனவாகிய நிராதாரம், மீதானம் ஈறாகிய ஐந்திடத்திலும் பொருந்தும்.

விளக்கவுரை

எல்லாச் சொற்களுமே ஒருவன் தன் செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்கும்படி சொல்லும்பொழுது பல், இதழ், நா, அண்ணம் முதலியவற்றின் முயற்சியால் பிராண வாயுவோடு கூடிப் பருமையாய் வெளிப்பட்டு வைகரி வாக்காய் நிகழும். இவ்வாறாக மந்திரங்களை உச்சரித்தல் 'வாசகம்' எனப்படும். தன் செவிக்குக்கூடக் கேட்காதபடி மெல்ல உச்சரிக்கும் பொழுது 'அடி, அண்ணம், கண்டம்' என்னும் இடங்களில் மத்திமை வாக்காய் நிகழும். இவ்வாறாக மந்திரங்களை உச்சரித்தல் 'உபாஞ்சு' எனப்படும். இவ்வாறு உச்சரித்தலே இல்லாமல் பொருள்கள் கருத்தளவாய் நிற்கும்பொழுது இருதயத்திலும், கருத்தளவாய் உருவாக நிற்கும்பொழுது உந்தியிலும் பைசந்தி வாக்காய் நிற்கும். கருத்தளவாய் நிற்க மந்திரங்களை எண்ணுதல் 'மானதம் எனப்படும். இவற்றிலும் நுண்ணிதாய்க் காரண நிலையில் நிற்கும் பொழுது மூலாதாரத்தில் சூக்குமை வாக்காய் நிற்கும். அந்நிலையே சிறப்பாக, 'குண்டலி சத்தி' எனப்படுகின்றது. இந்நிலைதான் ஐந்தெழுத்து மந்திரத்திற்கும் உள்ளது. ஆயினும், புருவ நடுமுதல் மீதானம் ஈறாகத் தியானப் பொருளாய் வியாபித்து நிற்றல் ஐந்தெழுத்து மந்திரத்திற்கன்றிப் பிற சொற்களுக்கில்லை. இச்சிறப்பை விளக்குதற் பொருட்டே முதற்கண் அனைத்துச் சொற்களும் நால்வகை வாக்காய் நிகழுமாற்றை எடுத்துக் கூறினார். ஆகவே அது ஞாபக மாத்திரையேயாம். புருவ நடு முதலாக மேற்செல்லுதல் எல்லாம் தியானமே யாதலின் அதனைக் கூறிற்றிலர். இலிங்கம், அதனை அடுத்துள்ள மூலத்தைக் குறித்தது. 'அவ்வாய்' ஆம், என முடிக்க. துண்டம் - மூக்கு. அஃது அதன் அடியாகிய புருவ நடுவைக் குறித்தது. மத்தகம் - தலை நெற்றியையும் சுட்டுதற்கு, 'இருமத்தகம்' என்றார். செல்லல் - அதற்குமேற் பெயராய்ச் செல்லும் இடங்களைக் குறித்தது. இதனால், ஐந்தெழுத்து மந்திரம் பிற சொற்களின் வேறுபட்டதாதல்

விளக்கப்பட்டது.

கிரணங்கள் ஏழும் கிளர்ந்தெரி பொங்கிக்
கரணங்கள் விட்டுயிர் தான்எழும் போதும்
மரணங்கை வந்துயிர் மாற்றிடும் போதும்
அரணங்கை கூட்டுவ தஞ்செழுத்தாமே. ***#2651***

'தோற்றம் உண்டேல் மரணம் உண்டு.*(திருமுறை - 7-7-2)* என்றபடி பிறந்த உயிர்கள் அனைத்திற்கும் உள்ள இயற்கை நியதியின்படி இறப்பை எய்திய மக்களின் உடம்பை உறவினரும், ஊராரும் முறைப்படி எரியூட்டுவார்கள். அவ் எரி, ஏழுவகையான கதிர்கள் மிக்குத் தோன்றும் வகையில் ஓங்கி எரியும். அப்பொழுதுதான் பருவுடம்பில் எஞ்சி நின்ற 'தனஞ்சயன்' என்னும் காற்று முதலிய சில கருவிகள் அவ்வுடம்பை விட்டு நீங்குவனவாகும். அவையும் நீங்க உயிர் நுண்ணுடலோடு வினைக்கீடாகத் தான் செல்ல வேண்டிய இடம் நோக்கிச் செல்லும். இவ்வாறான இயற்கை இறப்புவரினும், உயிர் செய்த பெருந்தீவினை காரணமாக இடையே திடீர் செயற்கை இறப்பு வரினும் எப்பொழுதும் உயிருக்குப் பாதுகாவலைத் தருவது திருவைந்தெழுத்து மந்திரமே.

விளக்கவுரை

'நெருப்பிலும், ஞாயிற்றிலும் ஏழுவகையான ஒளிக் கதிர்கள் உள்ளன' எனவும், 'அந்த ஏழு கதிர்களே பகலவன் தேரில் ஏழு குதிரைகளாக உருவகிக்கப்பட்டன' எனவும் இக்கால அறிவியலார் கூறி விளக்குவர். அதனை நாயனார் முன்பே, 'கிரணங்கள் ஏழும் கிளர்ந்தெரி பொங்கி' எனக் கூறினார். கரணங்கள் - கருவிகள். 'விட்டு' என்னும் செய்தென் எச்சம் எண்ணின்கண் வந்தது. 'எரி பொங்கி' என்றதனால் 'இயற்கை மரணம்' என்பது போந்தமையின், பின்பு 'மரணம்' என்றது, அகால மரணத்தையாயிற்று. இரு நிலைகளிலும் அஞ்செழுத்துப் பாதுகாவலைத் தருதலாவது, உயிர், சுவர்க்க நரகங்களில் புகாது, சிவலோகத்தை அடைவித்தல். சிவலோகத்தை அடைந்த உயிர் ஏனை உயிர்கள்போல மீள இவ்வுலகத்தில் வந்து பிறத்தல் நியதியன்று. பிறக்கினும் ஞானத்திற்கு உரியதாகவே பிறக்கும். 'அந்நிலையைத் தருவது ஐந்தெழுத்து' என்றபடி.

இதனால், பிறப்பை நீக்குவது ஐந்தெழுத்து மந்திரம் ஆதல் கூறப்பட்டது.

ஞாயிறு திங்கள் நவின்றெழு காலத்தில்
ஆயுறு மந்திரம் ஆரும் அறிகிலர்
சேயுறு கண்ணி திருவெழுத் தஞ்சையும்
வாயுற ஓதி வழுத்தலும் ஆமே. ***#2652***

'ஞாயிறும், திங்களும் எழுகின்ற காலை, மாலை என்னும் வேளைகளில்

சிறப்பாகக் கணிக்கத் தக்க மந்திரம் இது' என்பதை அக்காலங்களில் மந்திரக் கணிப்புச் செய்வோரில் பெரும்பாலோர் அறிந்திலர். (ஆகவே அவர்கள் காயத்திரி மந்திரத்தையே அவ்வேளைகளில் கணிக்கின்றனர். ஆகவே) 'சந்தியா தேவதை' எனப்படும் சத்திக்கு மிகவும் விருப்பத்தைத் தருவது திருவைந்தெழுத்து மந்திரமே என்பதை அறிந்து அதனை அக்காலங்களில் வாசகம் முதலிய மூவகையானும் ஓதுதலாகிய சிறப்பு அவர்கட்குக் கூடுமோ!.

விளக்கவுரை

'கூடாது' என்பதாம். நவிலுதல் - முறைப்படி அமைதல். ஞாயிறு எழும் காலம் காலை வேளையாதல் வெளிப்படை. 'திங்கள் எழும் காலம் ஞாயிறு மறையும் நேரம்' என்றே கொள்ளப்படும் இவையிரண்டும் கூறவே, இனம் பற்றி நண்பகலும் கொள்ளப்படும். இவையே முப்போதுகளாம் 'சந்தியா காலம் எனப்படும் ஆசாரியராயினார் நள்ளிரவிலும் வழிபடுவர். அது சிறுபான்மை.

'செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்(கு)
அந்திஉள் மந்திரம் அஞ்செ ழுத்துமே'9

என்னும் ஞானசம்பந்தர் திருமொழியை இங்கு உடன் வைத்து உணர்க. ஆய் - ஆய்வு; முதனிலைத் தொழிற்பெயர். சேயுற் கண் - செவ்வரி பொருந்திய கண். மந்திரங்களைக் கணிக்கும் முறை 'வாசகம், உபாஞ்சு மானதம்' என மூன்று என்பதை மேல், 'வாயொடு கண்டம்' எனப் போந்த மந்திர உரையிற் காண்க. 'வழுத்தலும்' என்னும் உம்மை சிறப்பு, ஈற்றில் உள்ள ஏகாரம் எதிர்மறை வினாப்பொருட்டு.

'ஞாயிறு, திங்கள்' என்பவற்றை வல இட உயிர்ப்புக்களாகக் கொண்டு, 'அவற்றை முறையாக இயக்கித் திருவைந்தெழுத்தைக் கணிப்பினும், அம்ச மந்திரத்தைக் கணித்தலோடொப்பதே' என உரைத்து, 'ஊனில் உயிர்ப்பை' எனத் தொடங்கும் ஞானசம்பந்தர் திருப்பாடலை மேறகோளாகக் காட்டுவர்.

இவ்விருபொருளையும் இம்மந்திரத்திற்குப் பொருளாகக் கொள்க.

[இதனை அடுத்துச் சில பதிப்புக்களில் காணப்படும் 'தெள்ளமு தூறச் சிவாய நம என்று' என்னும் மந்திரம் அடுத்த அதிகாரத்தில் இருத்தற்குரியது.]

குருவழி யாய குணங்களில் நின்று
கருவழி யாய கணக்கை அறுக்க
வருவழி மாள மறுக்கவல் லார்கட்
கருள்வழி காட்டுவ தஞ்செழுத் தாமே. ***#2653***

சிவகுரு உபதேசித்த மொழி வழியில் நின்று, பிறப்பிற்கு ஏதுவான வழியையே கூறும் சமய நூல்களைக் கைவிடவும், மற்றும் பிறவி வரும்

வழிகெட்டுப் போகும்படி அதனைப் போக்கவும் வன்மை பெற வேண்டுவார்க்கு அவ்வன்மையைத் தருவதாகிய திருவருளாகிய வழியைக் காட்டுவது திருவைந்தெழுத்து மந்திரமே யாகும்.

விளக்கவுரை

குரு வழி - குரு காட்டிய வழி. அஃது உபதேச வடிவின தாம். குணம் - நற்பண்பு; என்றது நல்லொழுக்கத்தை. குணத்ததைத் தருவதனை, 'குணம்' என்றார். 'நின்று அறுக்கவும், மறுக்கவும் வல்லார்' என்க. கணக்கு - நூல். 'வல்லார்' என்றது, 'வன்மையை வேண்டுவார்' என அக்காரணத்தின்மேல் நின்றது. அருள் வழி - அருளாகிய வழி. 'அதனைக் காட்டுவது அஞ்செழுத்து' எனவே, பிறவெல்லாம் அருள் அல்லாத மருள் வழியையே காட்டுதல் பெறப்படும்.

இதனால், 'திருவருளைப் பற்றச்செய்வது திருவைந் தெழுத்தே' என்பது கூறப்பட்டது.

வெறிக்க வினைத்துயர் வந்திடும் போது
செறிக்கின்ற நந்தி திருவெழுத் தோதும்
குறிப்பது உன்னில் குரைகழல் கூட்டும்
குறிப்பறி வான்தவம் கோன்உரு வாமே. ***#2654***

செயலற்று நிற்கும்படி வினையின் பயனாகிய துன்பங்கள் வந்து விளையும்பொழுது, அவற்றால் சோர்வுறாதபடி உறுதியைத் தருகின்ற திருவைந்தெழுத்தை ஓதும் கருத்தைக் கொண்டால் அக்கருத்து அதனை உடையவனைச் சிவனது திருவடியில் சேர்க்கும். மேலும் அக்கருத்துடையவன் செய்யும் செயல்கள் சிவனது உருவேயாகும்.

விளக்கவுரை

வெறித்தல் - வெறிச்சோடிப் போதல், செறிதல், அடங்குதல் ஆதலின், செறித்தல் அடக்குதல். அஃதாவது, துயரத்தை வெளிக்காட்டு இருத்தல். குறிப்பு - கருத்து.

நெஞ்சு நினைந்து தம் வாயாற் பிரான்என்று
துஞ்சும் பொழுதுன் துணைத்தாள் சரண்என்று
மஞ்சு தவழும் வடவரை மீதுறை
அஞ்சில் இறைவன் அருள்பெற லாமே. ***#2655***

மேகங்கள் தவழும் வெள்ளி மலையில் வீற்றிருகின்ற இறைவனை திருவைந்தெழுத்து வழியாக நெஞ்சால் நினைதலும், வாயால், 'தலைவனே' என்று சொல்லி வாழ்த்துதலும், இறக்கும்பொழுது, 'உனது திருவடியே புகல்' என்று சொல்லியும் நின்றால் அவ்விறைவனது அருளை எளிதில் பெறலாம்.

விளக்கவுரை

'அஞ்சில்' என்பதில், இல், ஏதுப் பொருள்கள் வந்த ஐந்தாம் உருபு. இதனை முதலிற் கொள்க. இதற்குப் பிறவாக உரைப்பன இவ்விடத்திற்கு இயையா. 'வாயால்' என்பதனோடு இயைய, 'நெஞ்சால்' என உருபு விரிக்க. 'என்று' இரண்டின் பின்னும் வருவிக்கப்பட்ட சொல்லெச்சங்கள் காரணப் பொருளவாய், 'பெறலாம்' என்பதனோடு முடித்தன.
இதனால், திருவைந்தெழுத்தான் சிவனது திருவருளைப் பெறுதல் எளிதாதல் கூறப்பட்டது.

பிரான் வைத்தஐந்தின் பெருமை உணராது
இராமாற்றம் செய்வார்கொல் ஏழை மனிதர்
பராமுற்றும் கீழொடு பல்வகை யாலும்
அராமுற்றும் சூழ்ந்த அகலிடம் தானே. *#2656*

இறைவன் உயிர்கள் உய்தியின் பொருட்டு உண்டாக்கி வைத்துள்ள சாதனம் திருவைந்தெழுத்து மந்திரம். அதுவே அவனது பேராற்றலாகிய பொருட் சத்தியும், குண்டலினியாதல் பற்றி, 'பாம்பு' என உருவகித்துக் கூறப்படும் சுத்த மாயையால் பலவகையாலும் வியாபிக்கப்பட்டு விளங்கும் அசுத்த மாயையும் பல புவனங்களும் ஆகும். ஆகவே, அதன் பெருமையை உணரமாட்டாத எளிய மக்கள் தங்கள் அஞ்ஞானமாகிய இருளைப் போக்கிக் கொள்ள வல்லவராவரோ!.

விளக்கவுரை

'ஆகார்' என்பதாம். குண்டலினி - வளைந்திருப்பது; அஃதாவது, அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டு அவற்றைச் சூழ்ந்திருப்பது. அது சுத்த மாயையே அது நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகளாய் விரிந்து அனைத்தையும் உள்ளடக்கி நிற்பதைக் குறிக்கவே சிவாலயங்களில் சிவலிங்கத்தின் மேல் பாம்பு ஒன்று ஐந்து தலைகளுடன் படம் எடுத்துக் கவிந்திருப்பதாக வைக்கப்படுகின்றது. இனிப் பூமியை அதன் அடியில் 'ஆதிசேடன்' என்னும் பாம்பு தாங்குவ தாகக் கூறப்படுவதும், சுத்த மாயை எங்கும் வியாபித்துள்ளதைக் குறிப்பதே. திருமால் பாம்பணையிற்பள்ளி கொண்டிருப்பதாகக் கூறுவதும் பழமையாக இந்தக் கருத்து இந்நாட்டில் பலர்க்கும் பொதுவாய் இருந்ததைக் காட்டும். ஆயினும் பிற்காலத்தில் மாயோன் சமயம் சைவ தத்துவத்தை விட்டுச் சாங்கிய தத்துவத்தை ஏற்றுக் கொண்டது. இங்குப், 'பல்வகையாலும்' என்றது, சுத்த மாயை நால்வகை வாக்குகளாயும், சிவம், சத்தி முதலிய சுத்த தத்துவங்களாயும், நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகளாயும் விரிந்து நிற்றலை. இவற்றுள் நால்வகை வாக்குக்களே சிறப்புடையனவும் ஆதலின், 'மந்திரங்களில் தலையானதாகிய திருவைந்தெழுத்து மந்திரமே அனைத்துமாய் உள்ளது' என்றும், இதனை

உணராதார்க்கு ஞானம் உதியாது ஆதலின், 'அவர் அஞ்ஞானத்தைப் போக்கிக் கொள்ள வல்லவராவரோ' என்றும் கூறினார். இரா - இரவு; இருள். பரா - பரா சத்தி. கீழ் - கீழது; அதோ மாயை; அசுத்த மாயை, பரா முற்றும், கீழொடு, அராப் பல்வகையாலும் சூழ்ந்த அகலிடம் முற்றும் தானே' என இயைக்க. தானே - அத்திருவைந்தெழுத்தே.
இவ்வாறு திருவைந்தெழுத்தின் பெருமையை பொதுப்படக் கூறி, தூல நிலை முடிக்கப்பட்டது.

11.6. பஞ்சாக்கரம் - சூக்குமம்

எளிய வாதுசெய் வார்எங்கள் ஈசனை
ஒளியை உன்னி உருகும் மனத்தராய்த்
தெளியவே ஓதின் சிவாயநம என்னும்
குளிகையை இட்டுப்பொன் னாக்குவான் கூட்டையே. ***#2657***

எவராலும் மறுக்க ஒண்ணாத உண்மையை எளிய மக்கள் மிக எளிதாக உடன்படாது மறுத்து வாதிடுவர். அவர் அவ்வாதத்தினை விட்டு அஞ்ஞான இருளை அகற்றும் ஞான ஒளியாகிய எங்கள் சிவபெருமானை நினைந்து உருகுகின்ற மனத்தை உடையவராய்க் கணிப்பார்களாயின. அப்பெருமான் அந்த, 'சிவாயநம' என்னும் குளிகையினால் அவர்களது உயிரை மட்டுமன்று; உடம்பாகிய செம்பையே பொன்னாக்கி விடுவான்.

விளக்கவுரை

'அப்பேற்றினை அவர்கள் பெறுகின்றிலர்' என்பது குறிப்பெச்சம். குளிகை பிற உலோகங்களைப் பொன்னாக்கும் இரச மணி. இதனைச் செய்யும் முறையை அக்காலத்தில் சித்தர்கள் அறிந் திருந்தனர். பிற உலோகங்களைப் புடம் இட்டு உருக்கிப்பதம் அறிந்து இக்குளிகையைச் சேர்த்தால், அந்த உலோகங்களில் உள்ள வேற்றுப் பொருட்கள் நீங்கி அவை பொன்னாய் ஒளிரும். கூடு - உடம்பு. 'கூட்டையே' என்னும் தேற்றேகாரத்தால் உயிரை அதற்கு முன்பே பொன்னாக்குதல் பெறப்பட்டது. உயிர் ஆணவத்தால் அறிவையிழந்து களிம்பினால் ஒளியிழந்து நிற்கின்ற செம்புபோல் உள்ளது. திருவைந்தெழுத்துக் கணிப்பினால் ஆணவம் நீங்கி விட்டால், இரச குளிகையால் களிம்பு நீங்கிச்செம்பு பொன்னாய் ஒளிர்வது போல உயிர் சிவமாய் விளங்கும். உயிர் சிவமாயின், அதன் உடம்பும் சிவகாயமேயாம். இதனை மேலேயும் சில இடங்களில் கூறினார்.*8*
மேல், 'நகார முதலாகும்'*9*என்றதனை, 'ஆகி உதித்து, ஏறி ஆகும்' என்றமையால் நகாரம் முதலாக அமைவது 'தூலபஞ்சாக்கரம்' என்பதும், இங்கு, 'உன்னி உருகும் மனதீதராய்த் தெளியவே ஓதின் கூட்டையே

பொன்னாக்குவன்' என்றதனஆல், சிகாரம் முதலாக அமைவது 'சூக்கும பஞ்சாக்கரம்' என்பது போந்தன.
இதனால் சூக்கும பஞ்சாக்கரத்தின் சிறப்புக் கூறப்பட்டது.
'சித்தம் ஒருக்கிச் சிவாய நம என்
றிருக்கினல்லால் ... ...
அத்தன் அருள்பெற லாமோ, அறிவிலாப்
பேதை நெஞ்சை'
'உனதருளால் - திருவாய்ப் பொலியச்
சிவாய நம என்று நீறணிந்தேன்,
தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலியூர் அரனே'3
'நானேயோதவம் செய்தேன், சிவாயநம எனப்பெற்றேன்'l
எனத் திருமுறைகளில் இச்சூக்கும பஞ்சாக்கரம் சிறுபான்மையாகச் சில இடங்களில் எடுத்தோதப்படுதல் காண்க.

தெள்ளமு தூறச் சிவாய நமவென்*(று)*
உள்ளமு தூற ஒருகால் உரைத்திடும்
வெள்ளமு தூறல் விரும்பிஉண் ணாதவர்
துள்ளிய நீர்போற் சூழல்கின்ற வாறே. ***#2658***

புறத்தில் தெளிவான அமுதமான கண்ணீர் கரந்து பாயவும், அகத்தில் அன்பு பெருகவும் சிவாயநம' என்று ஒருமுறை சொல்வதால் உண்டாகும் இன்பமாகிய அமுத வெள்ளத்தை உண்ண விரும்பாதவர்கள் பெருங்காற்றில் அகப்பட்ட மழைத்துளிபோல அடையும் இடம் அறியாது அலமருதல் இரங்கத்தக்கது.

விளக்கவுரை

'உள் அமுது' என்றது அன்பினை 'அமுது ஊற' என்பதையும் 'தெள்ளமுதூற' என்பதனோடு இயைக்க. உரைத்திடும் அமுது - உரைத்தலால் விளையும் அமுதம் 'வெள்ள அமுது' என்பதில் அகரம் தொகுத்தலாயிற்று. 'விரும்பி உண்ணாதவர்' என்றாராயினும் 'உண்ண விரும்பாதவர்' என்றலே கருத்தென்க. 'துள்ளிய நீர்' என்பதற்கு ஆற்றல் பற்றி இவ்வாறு உரைக்கப்பட்டது, இறுதியில் 'இரங்கத் தக்கது' என்னும் சொல்லெச்சம் வருவிக்கப்பட்டது.
இதனால், பஞ்சாக்கரத்தைச் சூக்குமமாக வைத்து ஓதுவார் சிறந்த பயனை அடைதல் எதிர்மறை முகத்தால் கூறப்பட்டது.

சிவன் சத்தி சீவன் செறுமலம் மாயை
அவம் சேர்த்த பாசம் மலம்ஐந் தகலச்
சிவன்சத்தி தன்னுடன் சீவனார் சேர
அவம் சேர்த்த பாசம் அணுககி லாவே. ***#2659***

சூக்கும பஞ்சாக்கரத்தில் சிகாரம் முதலிய ஐந்தெழுத்துக்களும் முறையே

சிவம், அருட் சத்தி, உயிர், திரோதான சத்தி, ஆணவ மலம்' என்னும் ஐந்தையும் குறிக்கும். (மாயேயம் மாயையில் அடங்க, மாயை கன்மங்கள் திரோதாயி வழிபட்டு அதனுள் அடங்க, திரோதாயியைக் குறிக்கு நகாரம் ஆணவம் ஒழிந்த மற்றை நான்கு மலங்களையும் குறிக்கும்.) ஆகச் சீவன் ஐந்து மலங்களிலும் நீங்கிச் சிவம் சத்திகளோடே சேர்ந்திருக்குமாயின், பயனில்லாத செயல்களில் செலுத்துகின்ற பாசங்கள் சிவனைச் சாராமாட்டா.

விளக்கவுரை

திரோதான சத்தி மலங்களைச் செயற்படுத்துதல் பற்றி அதுவும் 'ஒரு மலம்' என்று உபசரித்துக் கூறப்படும். மலத்தைக் கெடுத்தலே அதன் குறிக்கோள் ஆதல் பற்றி அதனை, 'செறு மலம்' ஒன்றார். 'மலத்தைக் கெடுக்கின்ற மலம்' என்பது அதன் பொருள். மாயையாகிய அவத்தினைச் சேர்த்த பாசம் ஆணவம். உண்மை விளக்கம். சிவப்பிரகாசம் ஆகிய நூல்களிலும் இவ்வாறே,

'சிவன், அருள், ஆவி, திரோதம், மலம் ஐந்தும்
*அவன்எழுத் தஞ்சின் அடைவாம்'**

எனவும்

'திருவெழுத் தஞ்சில் ஆன்மாத்
திரோதம், மாசு, அருள், சிவம்-சூழ்
தர, நடு நின்றது.3

எனவும் கூறப்படுதல் காண்க. சிவப்பிரகாசச் செய்யுளில், ஆன்மா நடு நின்றமை கூறப்பட்டது, முதற்கண் 'பாசம்' என்பதன்பின் 'இவற்றில்' என்பது வருவிக்க. இவற்றைக் குறிப்பன சிகாரம் முதலிய எழுத்துக்கள்' என்பது, மேல் அவற்றைக் கூறியதனானே அமைந்தது. *'சீவனார்'* என உயர்த்துக் கூறியது, பாசத்துள் அகப்பட்டுத் துன்புறுதலைக் குறிக்கும் இழித்தற் குறிப்பு. சீவனார் மலம் ஐந்து அகல, சிவம் சத்தி தன்னுடன் சேர' என்றது அதிசூக்கும பஞ்சாக்கரதத்திற் செல்லல் வேண்டும் குறிப்பின் உட்கொண்டது. 'உடன்' என்பதைச் சிவனுடனும் கூட்டுக. 'பதி அணுகின் பசு பாசம் நில்லாவே'*9* என முதலிலேயும் கூறினார்.

திருவைந்தெழுத்தை நகராம் முதலாகச் சொல்லுமிடத்து ஒரு தொடர்மொழியாய் நின்று, 'சிவனுக்கு வணக்கம்' என்னும் ஒரு பொதுப் பொருளையே தந்து நிற்றலால் 'தூல பஞ்சாக்கரம்' எனச் சொல்லப்பட, சிகாரம் முதலாகச் சொல்லுமிடத்து ஒவ்வோர் எழுத்தும் ஒவ்வோர் நுண்பொருளைக் குறிக்க. உயிர் பாசங்களின் நீங்கித் திருவருள் வழியகச் சிவத்தை அடைதல் வேண்டும் என்னும் சிறப்புப் பொருளைக் குறித்தலால் 'சூக்கும பஞ்சாக்கரம்' எனப்படுகின்றது என்க.

தூல பஞ்சாக்கரம் சமய தீக்கையிலும், சுக்கும பஞ்சாக்கரம் விசேட தீக்கையிலும் உபதேசிக்கப்படும். விசேட தீக்கை வேண்டுவோர் உலகியலில் ஓரளவேனும் பற்றுவிட்டவராய் இருத்தல் வேண்டும். 'அந்தியும் நண்பகலும் அஞ்சு பதம் சொல்லி'8 என்னும் திருமுறைத் திருமொழியுள் அஞ்செழுத்தை, 'அஞ்சு பதம்' என்றது, சூக்கும நிலைபற்றி எனக் கொள்ளுதல் உண்டு.
இதனால் சூக்கும பஞ்சாக்கரத்தின் உட்கிடைப் பொருள் உணர்த்தப்பட்டது.

சிவனரு ளாய சிவன்திரு நாமம்
சிவன் அருள் ஆன்மாத் திரோதம் மலமாய்ச்
சிவன்முத லாகச் சிறந்து நிரோதம்
பவம தகன்று பரசிவ னாமே. **#2660**

(சிவனுடையனவாகச் சொல்லப்படுகின்ற பொருள்கள் அனைத்தும் அவனது அருளேயாகலின்) அவனது திருப் பெயராகிய திருவைந்தெழுத்தும் அவனது அருளேயாகும். அதில் சிகாரம் முதலிய எழுத்துக்கள் மேற்கூறியவாறு, 'சிவன், அருட்சத்தி, சீவான்மா, திரோதான சத்தி, ஆணவ மலம்' எனஅபவற்றைக் குறித்து நிற்குமிடத்து அவ்வெழுத்துக்கள் சிகாரம் முதலாக நின்று முத்திக்கு வழி யாகும். (ஆகவே 'நகாரம் முதலாக நிற்பின் அஃது அத்தன்மையது ஆகாது' என்றதாயிற்று) அதனால், சிகாரம் முதலாகக் கொண்டு கணிக் -கின், அவ்வாறு கணிப்பவன் பிறவியினின்றும் நீங்கிச் சிவனாவான்.

விளக்கவுரை

முன் இரண்டடிகளால், முன் மந்திரத்தில் கூறியதனையே அனுவதித்துக் கூறினார். அது முத்தி நெறி ஆதலைக் கூறுதற் பயன் நோக்கி, உண்மை விளக்கத்திலும்,
'நம்முதலா ஓங்கிஅருள் நாடாது, நாடும்அருள்
சிம்முதலா ஓதுநீ சென்று'2
'அண்ணல் முதலா அழகார் எழுத்தைந்தும்
எண்ணில், இராப்பகல்அற் றின்பத்தே - நண்ணி
அருளா னதுசிவத்தே ஆக்கும் அணுவை,
இருளா னதுதீர இன்று'
ஆதி, மலம்இரண்டும் ஆதியா ஓதினாவ்
சேதியா மும்மலமும் தீர்வாகா'3
என்றும், (ஆதி, திரோதான சத்தி) சிவப்பிரகாசத்தில்,
'ஆசுறு திரோதம் மேவா(து)
அகலுமா சிவம்முன் னாக
ஓசைகொள்அதனில் நம்மேல்

ஒழித்(து) அருள் ஓங்கும்'*
என்றும்,
திருவருட் பயனில்,
'மாலார் திரோதம் மலம் முதலாய் மாறுமோ,
மேலாசி மீளா விடின்'
'சிவம் முதலே ஆமாறு சேருமேல் தீரும்
பவம்; இதுநீ ஓதும் படி'*
என்றும் எல்லா இடத்திலும் இவ்வாறே கூறப்பட்டன.
'சிறந்த' என்னும் செய்தென் எச்சம் காணப் பொருளில் வந்தது. நிரோதம் - நீக்கம்; பாச நீக்கம். நிரோதம் ஆம்' எனப் பயனிலை வருவித்து முடிக்க. 'அகன்று ஆம்' என்பதற்கு சீவன் என்னும் எழுவாய் வருவிக்க.
இதனால் சுக்கும பஞ்சாக்கரம் முத்தி நெறியாதல் கூறப்பட்டது.

நமாதி நனாதி திரோதாயி யாகித்
தமாதிய தாய்நிற்கத் தாள்அந்தத் துற்றுச்
சமாதித் துரியந் தமதாகம் ஆக
நமாதி சமாதி சிவஆதல் எண்ணவே. ***#2661***

நமாதி - 'நம' என்பதை முதலாக உடைய தூல பஞ்சாக்கரம். திரோதாயி ஆகி நனவாதி - திரோதான சத்தி வசப்பட்டதாய்ச் சகல கேவலங்களில் நிகழும் சாக்கிரம் முதலிய அவத்தைகளை உண்டாக்கும். (இனி) சமாதித் துரியம் தமது அகம் ஆக-நின்மலாவத்தையே சீவர்களுக்கு உடம்பதாற் பொருட்டு தம் ஆதியாய் நிற்க - அப்பாஞ்சாக்கரம் சிவன் சத்திகளது வசமாதற் பொருட்டு தான் அந்தத்து உற்று முன் சொன்ன 'நம' என்பது ஈற்றில் பொருந்த நம ஆதி சமம் சிவ ஆகி ஆதல் எண்ண - 'நம' முதலுக்கு ஈடாகச் 'சிவ' முதல் ஆவலைக் கருதுக.

விளக்கவுரை

'நனவாதி' என்பது அகரம் தொக 'நனாதி' என்று ஆயிற்று. திரோதாயி ஆதல் திரோதாயி வசம் ஆதல். அஃதாவது, பந்தத்தைத் தருவது ஆதலாம். நின்மலாவத்தை 'சமாதித் துரியம்' எனப் பின்னர் வருதலால், முதற்கண் உள்ள நனவாதிகள் சகலத்திலும் கேவலத்திலும் நிகழ்வனவாம் 'நனவாதியைத் தரும்' என ஒரு சொல் வருவித்து முடிக்க. 'தமாதியது' என்பதலி 'தம்' என்றது சிவனையும், சத்தியையும் அங்கு 'ஆதியது' என்றது, முதன்மையையுடையது வசப்பட்டது என்றவாறு. 'நிற்க' என்பது, 'ஆக' என்பதனோடு முடிய, 'ஆக' என்பது 'ஆதல்' என்பதனோடு முடிந்தது 'நிற்க' என்பதற்கு நமாதியைச் சுட்டும் 'அத' என்பது வருவிக்க 'தான்' என்றது, முதற்கண் கூறிய நம ஆதியதைதான் 'அந்தம் உற்று' என்பதில், 'உற்று' என்பதை 'உற' எனத் திரித்து, அத்தொடரை ஈற்றடியின் முதலிற் கூட்டுக. தமது - சீவர்களது. ஆகம் -

உடம்பு. சமாதி - பரம்பொருளோடு ஒன்றுதல், அஃது அத்தன்மையதாகிய நின்மலாவத்தையைக் குறித்தது. அந்நிலையில் திருவருளாய் நிற்றலால் 'தமது ஆகம் சமாதித் துரியம் ஆக' என்றார் 'சிவ ஆதி, நம ஆதி சமம் ஆதல் எண்ண' என மாற்றியுரைக்க. 'சமம்' என்பது ஈற்று அம்முத் தொகநின்றது. சமம் ஆதல், ஈடாதல். 'எண்ண' என்பது அகர ஈற்று வியங்கோள் 'எண்ணுக' என்றது 'ஆய்ந்தறிக' என்றதாம். அவத்தை வேறுபாடுகளை முன் மந்திரத்தில் காண்க.

இதனால், தூல பஞ்சாக்கரம் சகல கேவலங்களாய் , நிற்க, சூக்கும பஞ்சாக்கரம் சுத்தத்திற்கு ஏதுவாதல் கூறிமுடிக்கப்பட்டது.

*11.7.*அதி சூக்கும பஞ்சாக்கரம்

ஓதிய நம்மலம் எல்லாம் ஒழிந்தட்*(டு)*அவ்
ஆதி தனைவிட் டிறைவன் அருட்சத்தி
தீதில் சிவஞான யோகமே சித்தக்கும்
ஓதும் சிவாய மலம்அற்ற உண்மையே. *#2662*

மேல் எல்லாம் சொல்லப்பட்டு வந்த தூலமும், சூக்குமமும் ஆகிய ஐந்தெவுத்துக்களுள் திரோதாயியைக் குறிக்கும் நகாரமும், ஆணவத்தைக் குறஇக்கும் மகாரமும் ஆகிய இவ் இரண்டெழுத்துக்களையும் முற்ற நீக்கி, அதனாலே சிவனது 'ஆதி' என்னும் சத்தி அருட் சத்தியாக மாறுவதால் முன்னர்க் குற்றம் அற்ற சிவஞானமும் பின்னர்ச் சிவயோகமும் கிடைக்கும். ஆனால் அவ்வாறு ஓதப்படும், 'சிவாய' என்னும் மூன்றெழுத்தே பாசம் நீங்கிய முத்தி பஞ்சாக்கரம் ஆகும்.

விளக்கவுரை

'இதுவே அதிசூக்கும பஞ்சாக்கரம்' என்பது குறிப்பெச்சம். 'ஆதி' என்றது, ஆதியாய் நிற்கும் தன்மையை. 'விட்ட' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'அருட் சத்தியால்' என உருபு விரிக்க. சிவஞானமாவது, சிவனது அறிவு; திருவருள். 'பதிஞானம்' எனப்படுவது இதுவே, பாச எழுத்துக்களை. விடாது ஓதுவதால் பாச ஞானமும், பசுஞானமும் உளவாகும். அவற்றுள்ளும் நகாரத்தை முன் வைத்து ஓதுவதால் பாச ஞானமும், சிகாரத்தை முன் வைத்து ஓதுவதால் பசு ஞானமும் உளவாம்.

பாச ஞானமாவது கருவி கரணங்களால் தரப்படும் அறிவு. சிவனையே நினைத்தும், வாழ்த்தியும், வணங்கியும் நிற்பினும் அவை யெல்லாம் கருவி கரணங்களின் வழிபட்டனவேயாகலின் பாச ஞானங் களேயாம். சரியையிலும், கிரியையிலும் இந்நிலையே உளதாகும்.

இனி யோகத்தால் கருவி கரணங்கள் அடங்க யோகி தனது அறிவாலே தான் சிவனை அறியுமிடத்து அறிவே முற்பட்டு நிற்றலால், அச்செயல் பசு ஞானத்தின் வழிப்பட்டதாம். இந்நிலையில் நிற்பவனுக்கு 'எனது' என்னும் புறப்பற்று ஓரளவு நீங்கினாலும், 'யான்' என்னும் அகப்பற்று நீங்குவதில்லை. திருவைந்தெழுத்தைச் சரியையாளன் நகாரம் முதலாகக் கணிப்பான்; கிரியையாளனும், யோகியும் சிகாரம் முதலாகக் கணிப்பர். யோகத்தால் 'யான்' என்னும் அகப்பற்றும் மெலிவடைந்த பின் ஞான குருவைத் தேடியடைந்து, அவர் ஞான தீக்கை செய்து ஐந்தெழுத்தை இங்குக் கூறியவாறு மூன்றெழுத்தாக வைத்து உபதேசிக்க, பாச ஞான பசு ஞானங்கள் நீங்கிப் பதிஞானம் தோன்ற அதனால் உயிர் பதியைக்

கண்டு இன்புறும். இதனையே இங்கு நாயனார் 'சிவஞானம் சித்திக்கும்' என்றார் இதனானே பின்னர்த் தசகாரியத்துள் ஒன்பதாவதாகிய சிவயோகம் கூடும் ஆதலின், அதற்குத் தோற்றுவாயாகவே இங்கு 'யோகமே சிந்திக்கும்' என்றார். இவ்யோகம் கிரியையின் பின் நிகழ்வதாகிய யோகம் அன்று. தசகாரியத்துள் ஒன்பதாவதாகிய யோகமாம்.

மெய்கண்ட தேவரும் இவ்வாறே சிவஞான போதத்தில எட்டாம் சூத்திரத்தில் முத்தி பஞ்சாக்கர உபதேசத்தை, 'தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த' என்றும், ஒன்பதாம் சூத்திரத்தில் 'பாசம் ஒருவப் பதி தண்ணிழலாம்' என்றும், 'விதி எண்ணும் அஞ்செழுத்தே' என்றும் கூறி, ஒன்பதாம் சூத்திரவார்த்திகத்தில், 'இனி இவ்விடத்தில் சீ பஞ்சாக்கரத்தை
விதிப்படி உச்சரிக்க'
என்றும் கூறினார். முரணிக் கூறுவனவாவன, முத்தி பஞ்சாக்கரத்தை வேறுவேறாகக் கூறுவன. திருவருட் பயனிலும்

'ஆசின் நவா நாப்பண் அடையாது அருளினால்
வாசி இடைநிற்கை வழக்கு'.*

என்றே கூறப்பட்டது. சிகாரம் முதலாக ஓதும் பொழுது ஆன்ம எழுத்தாகிய யகாரம் நகாரத்திற்கும், வகர ஆகாரத்திற்கும் இடை நிற்கின்றது. 'அது வேண்டா' என விலக்கப்பட்டது. யகாரத்தை, 'வா,சி' இவற்றின் இடையே நிற்க வைத்து உச்சரித்தல் வழக்கம் எனக் கூறப்பட்டது. அதனால் 'சிவாயசிவ' என்பதே முத்தி பஞ்சாக்கரம் எனக் கொண்ட கொள்கையும் உள்ளது. ஆயினும் மந்திரங்களில் அது வே எழுத்தாக எண்ணப்படுதல் இல்லை. 'சிவாயசிவ' என்பது பார்ப்பதற்கு ஐந்தெழுத்துப் போலத் தோன்றினஆலும், பின் வந்த 'சிவ' என்பது முன்பு வந்ததே மீண்டும் வந்தது ஆகலானும் 'முன்பு வந்த எழுத்துக்களின் பொருள்வேறு, பின்பு வந்த எழுத்துக்களின் பொருள் வேறு' என்றல் கூடாமையானும் அம்மந்திரம் உண்மையில் மூன்றெழுத்து மந்திரமேயாகும். ஆகையால் நகார மகாரங்கள் நீங்க நிற்கும் 'சிவாய' என்னும் மூன்றெழுத்தே முத்தி பஞ்சாக்கரம் ஆகும். அதனை ஓர் உருக்கணித்து, அடுத்த உருத்தொடங்குகையலி யகாரம் வகர ஆகாரத்திற்கும், சிகாரத்திற்கும் இடைநிற்பதாக ஆகின்றது. இதனையே உமாபதிதேவர் 'வா சி இடைநிற்கை' என்றார்.

வேடிக்கைக் கதை ஒன்று உண்டு. 'பல சரக்குக்கடை வாணிகர் ஒருவர் தம் காலத்தையெல்லாம் வாணிகத்திலே கழித்தவர். இறக்கும் சமயத்திலும் தாம் விற்ற சரக்குக்களில் முதலில் விற்பது அரிசி என்பதையும், கடைசியில் கொடுப்படு வசம்பு என்பதையும் நினைத்து

இரண்டையும் சேர்த்து 'அரிசிவசம்பு அரிசிவசம்பு' என்று பலமுறை பிதற்றினார். ஆயினும் அஃது அவரது அவர், 'அரி, சிவ, சம்பு' என விட்டுணு நாமத்தையும், சிவ நாமத்தையும் சொன்னதாக ஆக, அவர் முன்னே வைகுந்தம் சென்று, பின்பு சிவலோகம் சென்றார் என்பது அக்கதை.

'வால்மீகி முனிவர் முதலில் 'ராம' எனச் சொல்லவாராமல் 'மரா' மரத்தை நினைத்து, 'மரா, மரா' என்று சொல்லிக் கொண்டிருந் -தாராம். அது ராம நாமத்தைச் சொன்னதாக ஆகிச் சிறந்த முனிவர் ஆகி விட்டார்' என்று வைணவத்தில் ஒரு கதை உண்டு. இவை போன்றது தான் முத்தி பஞ்சாக்கரத்தைக் கணிக்கும் பொழுது யகாரம் வாசி இடை நிற்றல்.

இனித் திருவைந்தெழுத்தில் சிகாரம் வேதாந்த மகா வாக்கியத்தில் 'தத்' பதப் பொருளுடையதும், வகாரம் 'அசி பதப்பொருளுடையதும் யகாரம் துவம், பதப்பொருளுடையதுமாதல் முன் தந்திரத்தில் சொல்லப்பட்டது. அந்நிலை உண்மையாய்ப் பயன் தருதற்குச் சிகார வகார யகாரங்கட்கு மேலும் எழுத்துக்களைக் கூட்டுதல் பொருந்தாமையும் நோக்கத்தக்கது. 'தத்துவமசி' வாக்கியத்தின் பொருள் 'அது நீ ஆகிறாய்' என்பதாகலின், அவ்வாக்கியத்தில் 'நீ' என்பது எழுவாயும், 'ஆகிறாய்' என்பது பயனிலையும், 'அது' என்பது பயனிலைக்கு அடைமொழி யுமாம் அள்ள நிலைமை எப்பொழுது மாறுவதில்லையாகலின், 'முதல், இடை, கடை' என்னும் மூன்றிடங்களில் அவற்றுள் எந்தச் சொல் எந்த இடத்தில் நிற்பினும் பொருள் மாறுபடுதற்கில்லை. அதனால், முத்தி பஞ்சாக்கரத்தில் வகாரம் இடைநிற்றலால் தவறில்லை. இனி, 'யகாரம் வா, சி இடை நிற்க ஓதுதலால், வா சிய்யை அருளி, யவ்வை வாழ்விக்கும் நிலை உண்டாகின்றது என்றார் உமாபதி தேவர்.*

சிவஞானபோத எட்டாம் சூத்திரத்தில் முத்தி பஞ்சாக் கரத்தைக் குரு உபதேசிக்கக் கேட்டல் மட்டுமே கூறப்பட்டமையால், அந்த அளவில் ஆன்ம தரிசனமும் சிவரூபமும் நிகழும். பின்பு ஒன்பதாம் சூத்திரத்தில் முத்தி பஞ்சாக்கரத்தைச் சிந்தித்தல் கூறப் பட்டமையால், அந்நிலையில் சிவ தரிசனம் தோன்றி ஆன்ம சுத்தி நிகழும். அது பின்பு, சிவ தரிசனத்தின்பின் நிகழ்வதாகிய சிவயோகம் தோன்றுதற்கு ஏதுவாகும். சிவஞான சித்தி சுபக்கம் ஒன்பதாம் சூத்திரத்தில் 'சோகம் எனப் பாவிக்க.'8 என்றது, பொருள் பற்றி ஓதியதன்றிச் சொற்பற்றி ஓதியதன்று. 'சொற்பற்றி ஓதியதே' என வாதிப்போர் வாதிக்க; அதனால் நமக்கு வருவதொரு குறையில்லை. பொருள் பற்றி ஓதவே, அருணந்தி தேவரும் சிவஞான போத ஒன்பதாம் சூத்திரத்தில் மெய்கண்ட தேவர் கூறிய பஞ்சாக்கரத்தைத்தான் கூறினாராதல் விளங்கும்.

'விண்ணி னார்பணிந்தேத்த வியப்புறும்

மண்ணி னார்மற வாது சிவாய என்று
எண்ணி னார்க்கிட மாஎழில் வானகம்
பண்ணி னாரவர் பாலைத் துறையரே'*
என்று திருமுறையில் இவ்வதி சூக்கும பஞ்சாக்கரம் மிக அருமையாக எடுத்தோதியிருத்தல் அறிக.
இதனால், 'அதிசூக்கும பஞ்சாக்கரமாவது இது' என்பதும், 'இது முத்தி பஞ்சாக்கரம்' என்பதும் சொல்லப்பட்டன.

அருள்தரும் ஆயமும் அத்தனும் தம்மில்
ஒருவனை ஈன்றவர் உள்ளுறை மாயை
திரிமலம் நீங்கச் 'சிவாய' என்(று)ஓதும்
அருவினை தீர்ப்பதுவும் அவ்வெழுந் தாமே. ***#2663***

சீவான்மாவாகிய ஒருவனைத் தாயும், தந்தையுமாய்த் தம்மிற் கூடி ஈன்றவர்கள் மறமும், ஆம் இருவகையில் தோன்றும் அருளைத் தருகின்ற மகளிரும் சிவனும் ஆவர். மகளிருள் பிற நிலை யுடைய தாய்க்குத் தோழியாய் நின்றவள் மாயை. (அவளைச் சார்ந்து கன்ம மகளும், அவ்விருவர்க்கும் தலைவியாக ஆணவப் பெண்டும் உள்ளனர். ஆகவே அம்மூவரும் நீக்கத் தக்கவர்களே. அங்ஙனம் அவர்களை நீக்கவல்லது, பாச எழுத்துக்களை நீக்கி 'சிவாய' என்று ஓதப்படும் அதிசூக்கும பஞ்சாக்கரமேயாகும்.

விளக்கவுரை

ஆயம் - மகளிர் கூட்டம், திரோதான சத்தி செயல் வகையால் அளவிறந்து நிற்ப, அவற்றோடெல்லாம் அவற்றிற்கு ஏற்ற வகையால் சிவன் கூடி நிற்றலாலும், சீவான்மா முதலில் திரோதான சத்தியாம் பாச அறிவு, பசு அறிவுகளைப் பெற்றுத் தோன்றி வளர்ந்து, முடிவில் அருட் சத்தியால் பதியறிவு விளங்கப்பெற்றுச் சிவசமம் ஆதலின் அச்சத்தி பேதங்களை எல்லாம் ஆயமாக உருவகித்து, 'தம்மிற் கூடி ஒருவனை ஈற்றவர் ஆலயமும், அத்தனும்' என்றார். 'கூடி' என ஒரு சொல் வருவிக்க. 'ஒருவன்' என்றது சாதியொருமை ஈனல் கூறவே புறந் தருதலும் கொள்ளப்படும் இங்கு ஈனலும், புறந்தருதலும் அறிவைத் தோற்றுவித்து வளர்த்தலாம். 'ஈன்று புறந்தரப்பட்டோர் அளவிறந் தோராயினும் அவரெல்லாம், 'சீவர்' எனச் சாதியால் ஒருவரே என்றற்கு 'ஒருவனை ஈன்றவர்' என்றார். உள்ளுறை அகம்படித் தொண்டு செய்யும் அடித்தோழி உள்ள உறைபவனை, 'உள் உறை' என்றார். 'திரிமலம் தீர்ந்து' எனவும், 'அரு வினை தீர்ப்பதும்' எனவும் பின்னர் வருதலால் மாயையோடு ஏனை ஆணவ கன்மங்களும் திரோதான சத்தியின்கீழ் இருந்தமை பெறப் பட்டது. 'தீர்ப்பதும்' உம்மை சிறப்பு. ஆணவ மலம் பரிபாகம் ஆய வழியே வினை நீங்குதலும், வினை நீங்கவே, மாயையும்

உடன் நீங்குதலும் நிகழ்தல் பற்றி வினை நீங்கவே, மாயையும் உடனஅ நீங்குதலும் நிகழ்தல் பற்றி வினை தீர்த்தலையே சிறப்பாக எடுத்துக் கூறினார்.
இதனால், திருவைந்தெழுத்தில் பாச எழுத்துக்கள் நீக்கற்பாலனவாதல் கூறப்பட்டது.

நமஎன்னும் நாமத்தை நாவில் ஒடுக்கிச்
சிவஎன்னும் நாமத்தைச் சிந்தையுள் ஏற்றப்
பவமது தீரும் பரிசும்அ தற்றால்
அவமதி தீருமு அறும்பிறப் பன்றே. ***#2664***

'சிவாய நம' என்னும் ஐந்தெழுத்தில், 'நம, என்னும் உறுப்பினை நா அளவில் கொண்டு, அதனையும் சொல்லாமல் அடக்கி, ஏனை மூன்றெழுத்தை மட்டும் மந்திரமாகக் கொண்டு அறிவாற் கணித்தலாகிய சுத்த மானதமாக உணர்ந்துணர்ந்து நிற்க வினை நீங்கும். வினை நீங்கவே பதிஞானம் இனிது விளங்க ஏனைப் பசுபாச ஞானங்கள் யாவும் அகற்றுவிடும். அவை அற்றுவிடவே பிறவியறுதல் நிண்ணமாம்.

விளக்கவுரை

'மூன்றெழுத்துக்களில் பிறவி நீக்கத்திற்குக் காரணமாதற் சிறப்பு நோக்கி முதல் இரண்டெழுத்தையே கூறினார். அதனானே வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாயும் ஆயிற்று. பரிசு அது - அப்பரிசு; வினையாகிய பாசம், பாசம் உம்மை, 'ஆணவமே யன்றி' என இறந்தது தழுவிற்று அவ மதி - பயன் இல்லாத ஞானம். அவை பாச ஞானமும், பசு ஞானமும் இவற்றை 'அவம்' என்றது பெருந்துன்பமாகிய பிறவியை உண்டாக்குதல் நோக்கி, முதலடி உயிரெதுகை.
இதனால், அதிசூக்கும பஞ்சாக்கரத்தின் சிறப்பு தொகுத்துக் கூறி முடிக்கப்பட்டது.

<u>*11.8.*காரண பஞ்சாக்கரம்</u>

சிவசிவ என்றே தெளிகிலர் ஊமர்
சிவசிவ வாயுவும் தேர்ந்துள் ளடங்கச்
சிவசிவ ஆய தெளிவின்உள் ளார்கள்
சிவசிவ மாகும் திருவரு ளாமே. ***#2665***

முன் அதிகாரத்திற் கூறிய மூன்றெழுத்துக்களுள் ஈற்றில் உள்ள ஆன்ம எழுத்தாகிய யகாரத்தையும் நீக்கி, எஞ்சிய இரண்டெழுத்துக்களை மட்டுமே மந்திரமாகக் கொண்டு தொடர்ந்து இடைவிடாது கணித்தல் சிறப்புடைத்து' என்பதைத் தெளிய மாட்டாதவர் அவ்வாறு கணியாமையால், பேசும் வன்மையிருந்தும் அஃது இல்லாத ஊமரேயாவர். அம்மந்திரத்தைக் கணிக்கும் தெளிவினுள் நிற்பவர்கள்

அதனால் அடங்க, ஆன்ம போதமும் அடங்கச் சிவம் ஆதற்குரிய
திருவருள் நிலை வாய்க்கப் பெறுவார்கள்.

விளக்கவுரை

இது மேற்கூறிய அதிசூக்குமத்தினும் சூக்குமம் ஆதலின் காரண பஞ்சாக்கரமாம். 'சிவ சிவ' என்றது இரண்டெழுத்து மந்திரத்தைத் தொடர்ந்து சொல்லும் முறையைக் கூறியது; நான் கெழுத்தைக் கூறியதன்று. இதன்பின் 'சிறப்புடைத்து' என்பது வருவிக்க. 'இம்மந்திரக் கணிப்பால் வாயு (பிராணவாயு) அடங்கும்' என்றதனால் இவ்விரண்டெழுத்தும் முறையே இரேசக பூரக எழுத்துக்களாய் அசபா மந்திரமாய்ப் பயன்படுதல் குறிக்கப்பட்டது. மூன்றாம் அடியை முதல் அடியின் பின்னர்க் கூட்டுக. சிவ சிவ ஆய தெளிவு - 'சிவ சிவ' என்றலே உறுதி பயக்கும் எனத் தெளிந்த தெளிவு. இரண்டாம் அடியில் 'சிவசிவவாய்' எனவும் ஈற்றடியில் 'சிவவாய்' எனவும் மூன்றாம் உருபு விரிக்க. ஆகும் திருவருள் ஆம் - ஆதற்கு ஏதுவாகிய திருவருள் உண்டாகும்.

இதனால், அதி சூக்குமத்தினும் சுக்குமமாகிய காரண பஞ்சாக்கரம் இது' என்பதும், அதன் சிறப்பும் கூறப்பட்டன.

'சிவ' என்பதைத் தொடர்ந்து உச்சரித்தால் 'வசி' என வருதல் பற்றி, 'வசி' என்பதே காரண பஞ்சாக்கரம் எனக் கூறுவாரும் உளர். அவர்,

'கலந்தருள் பெற்றது மாவசியே;
காழி அரனடி மாவசியே'3

என்னும் திருமுறையை எடுத்துக்காட்டி,

'நாலாய பூதமும், நாதமும் ஒன்றிடின்
நாலாம் நிலையாம் என் றுந்தீபற'9

என்னும் திருவுந்தியார் 'வசி' என்பதையே காண பஞ்சாக்கரமாகக் கூறிற்று என்பர். நாலாய பூதம் ஆகாயத்திலிருந்து எண்ண நான்காவது வாயு. அதன் பீசம் வகாரம். நாதம் சிவதத்துவ மூர்த்தி சிவன். அவனைக் குறிப்பது 'சி' என்னும் எழுத்து. நாலாம் நிலை நின்மல துரியம், அல்லது சாயுச்சியம் என்பர்.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. **#2666**
(இதன் பொருள் வெளிப்படை)

விளக்கவுரை

'தேவர்' என்றது அபரமுத்தரை. உம்மை சிறப்பு. அதனால் பத முத்தர்

ஆதல் தானே பெறப்பட்டது. சிவகதி - சிவமாம் நிலை. இது சீவன் முத்தி நிலை, பரமுத்தி நிலை இரண்டையும் குறிக்கும். தான், அசை. ஏகாரம் தேற்றம். இதனால் சிவகதியின் அருமை விளங்கும்.
இதனால், 'காரண பஞ்சாக்கரம் முத்தியை எய்தும் நிலையுடையவர்கட்கே கூடும்' என்பது கூறப்பட்டது.

செஞ்சுடர் ண்டலத் தூடுசென் றப்புறம்
மஞ்சண வும்முறை ஏறி வழிக்கொண்டு
துஞ்சு மவன்சொன்ன காலத் திறைவனை
நெஞ்சென நீங்கா நிலைபெற லாகுமே. ***#2667***

இறக்கும் நிலையை அடைந்த ஒருவன் அப்பொழுது இந்தக் காரண பஞ்சாக்காரத்தை இரண்டு முறையேனும் சொல்வா னாயின், அவன் சூரிய மண்டலத்தைப் பிளந்துகொண்டு, அப்பால் மின்னல் உலகத்தையடைந்து, பின்பு அதனையும் கடந்து சிவனையே தனக்கு உயிராகக் கொண்டிருக்கும் நிலையைப் பெறுவான்.

விளக்கவுரை

'அபர முத்தியைப் பெறுவான்' என்பதாம். 'ஞானிகள் தாம் நின்ற உடலை விட்டு நீங்குங்கால் இங்குக் கூறியவாறு ஒளி வழியிற் சென்று இறைவனை அடைவார்கள்; ஞானம் இல்லாதவர்கள் பிறவழிகளில் சென்று தேவர் உலகம், அல்லது மானுடர் உலகம் இவற்றிற் செல்வார்கள்' என்பது உபநிடதங்களின் கருத்தாதல் சாந்தோக்கியம் பிருகதாரணியம் முதலிய உபநிடதங்களாலும், உத்தர மீமாஞ்சை நூலாலும் அறியப்படுவன. அவற்றுள், 'ஒளிவழியில் சென்று இறைவனை அடையும் வீட்டு நிலை இக்காரண பஞ்சாக்கரக் கணிப்பினால் உண்டாகும்' என்பது இங்குக் கூறப்பட்டது.
'துஞ்சும் அவன் சொன்ன காலத்து' என்பதனை முதலிற் கூட்டி, சொல்லுதலுக்குச் 'சிவசிவ' என்னும் செயப்படுபொருளை அதிகாரத்தால் வருவித்து உரைக்க. 'நெஞ்சு' என்றது உயிரை. 'இறைவனையே உயிராகக் கொண்டிருத்தலாவது, அவனோடு பிரிவின்றி ஒன்றி, அவன் வழிப்பட்டு நிற்றல்' என்பதை நாயனாரே, 'நீங்கா நிலைபெற லாகுமே' என விளங்க ஓதினார்.
இதனால், காரண பஞ்சாக்கரத்தால் பயன் எய்தும் முறை வகுத்துக் கூறப்பட்டது.
'கடல் நாகைக் காரோணா, நின்
நாமம் பரவி நமச்சிவா யவ்வென்னும் அஞ்செழுத்தும்
சாம் அன்றுரைக்கத் தகுதிகண் டாய்எங்கள் சங்கரனே'*
என்னும் அப்பர் திருமொழியை இங்கு நினைவு கூர்க.

11.9.மகா காரண பஞ்சாக்கரம்

அங்கமும் ஆகம வேதமும் ஓதினும்
எங்கள் பிரான்எழுத் தொன்றில் இருப்பது
சங்கைகெட்*(டு)* அவ்வெழுத் தொன்றையும் சாதித்தால்
அங்கரை சேர்ந்த அருங்கலம் ஆமே. ***#2668***

வேதம், வேதாங்கம், வேதாந்தம் முதலாக உள்ள அனைத்து நூல்களையும் ஒருவன் ஓதி உணர்ந்தாலும் ஏனெனில், சிவன் இருப்பது ஓர் எழுத்திற்குள்ளே. (அஃதாவது, 'சி' என்னும் எழுத்தின் உள்ளேயாம். எனவே, 'அதன் உண்மையை உணராமல், மற்றை எத்தனை நூல்களை ஓதி உணர்ந்தாலும் அவனை உணர்தல் இயலாது' என்பதாம்.) இது கேட்பதற்கு முக வியப்பாய் இருக்கும் ஆகையால், 'இஃது உண்மையாய் இருக்க முடியுமா' என எழும் ஐயம் நீங்குதல் அரிது. முன்னைத் தவத்தாலும், குருவருளாலும் அந்த ஐயம் நீங்கப் பெற்று அதனை உறுதியுடன் சாதித்தால் அங்ஙனம் சாதிக்கின்ற ஆன்மாத் தான் என்று அடைந்தறியாத அழகிய கரையை அடைந்த மரக்கலத்திற்கு ஒப்பாகும்.

விளக்கவுரை

அஃதாவது; 'பிறவியாகிய கடலைக் கடந்து, வீடுபேறாகிய கரையை அடையும்' என்பதாம். வருவித்துரைத்தன இசையெச்சங்கள். 'ஓர் எழுத்து' என்றது முன் அதிகாரத்தில் கூறப்பட்ட இரண்டெழுத்தில் வகாரம் நீங்க நின்ற சிகாரத்தினை ஆதல் எளிதின் விளங்கும்.

'தூலம், சூக்குமம், அதிசூக்குமம், காரணம், மகா காரணம்' என ஐந்து வகையாகக் கூறப்படுகின்ற பஞ்சாக்கரத்துள் சமய தீக்கைப் பேற்றால் தூல பஞ்சாக்கரத்தை ஓதிச் சரியையிலும், விசேட தீக்கைப் பேற்றால் சூக்கும பஞ்சாக்கரத்தை ஓதி முன்னர்க் கிரியையிலும், பின்னர் யோகத்திலும் நின்று, நிருவாண தீக்கைப் பேற்றால் அதி சூக்கும பஞ்சாக்கரத்தைக் கேட்டுப் பொதுப்பட உணருமாற்றால் தத்துவ சுத்தி ஆன்ம தரிசன சிவரூப நிலைகளையடைந்து, பின், அதனை நன்கு சிந்தித்துச் சிறப்பாக உணருமாற்றால் ஆன்ம சுத்தி சிவ தரிசன நிலைகளையடைந்து, பின் அதனை நன்கு தெளியுமாற்றால் காரண பஞ்சாக்கரத்தை ஓதிச் சிவயோக நிலைமை அடைந்து, பின் நிட்டை கூடுமாற்றால் மகாகாரண பஞ்சாக்கரத்தை ஓதிச் சிவபோக நிலையைப் பக்குவான்மா அடையும் என்க.

'சிவ யோகம்' என இங்குக் கூறப்படுவது, ஆன்மாத் தன்னை உணர்தல் இன்றிச் சிவனை மட்டுமே உணர்ந்து நிற்கும் நிலை. இதனால் இங்கு ஆன்ம எழுத்தாகிய யகாரம் நீக்கப்படுகின்றது. ஆன்மாத் தற்போதத்தை இழத்தலும் சிவபோதமே போதமாக நிற்றலும் திருவருளேயாகலின்

இங்கு அருள் எழுத்தாகிய வகாரம் இருத்தல்
இன்றியமையாததாகின்றது.
இந்தச் சிவயோக நிலை அருள்நிலையேயன்றி, ஆனந்த நிலையன்று.
சிவபோதம், மேலிட மேலிட சிவானந்த வெள்ளம் பொங்கித் ததும்பிப்
பூரணமாய் நிற்க அதனுள் ஆன்மா மூழ்குதலே ஆனந்த நிலை. அதுவே
நிட்டை நிலை. அங்கு ஆன்மா அருளையும் நினையாது மது உண்ட
வண்டுபோல் அந்த ஆனந்தமாயே நிற்றலால் அவ்விடத்து அருள்
எழுத்தாகிய வகாரமும் நீங்குவதாயிற்று.
'மாயநட் டோரையும் மாயா மலம் எனும் மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு, மெய்யருளாம்
தாயுடன் சென்று,பின் தாதையைக் கூடிப்,பின் தாயை மறந்(து)
ஏயும் அதே நிட்டை யென்றான் எழிற்கச்சி ஏகம்பனே' என்னும்
பிற்காலப் பட்டினத்தடிகள் பாடலும் அதிசூக்கும, காரண, மகா காரண
பஞ்சாக்கரங்களையே குறிப்பால் உணர்த்துதலை ஓர்ந்துணர்க.
தூல சூக்கும பஞ்சாக்கரங்களை ஓதுதல் சகல நிலையாய் முடிய,
அதிசூக்குமம் முதலாக ஓதுவனவே சுத்த நிலையாகும். அதனுள் கேட்டல்
சுத்த சாக்கிரம். சிந்தித்தல் சுத்த சொப்பன சுழுத்திகள். தெளிதல் சுத்த
துரியம் நிட்டை சுத்த துரியாதீதம்.
ஆன்ம சுத்திக்குப்பின் ஆன்மா அடையும் ஆன்ம லாபம் இரண்டு. ஒன்று
பாச நீக்கம். இதுவே அருள்நிலை மற்றொன்று சிவப்பேறு. இதுவே
ஆனந்த நிலை, சிவஞான போத சூத்திரங்களுள் எட்டாவது முதலாக
நான்கு சூத்தரங்களாலும் முறையே கேட்டல் முதலிய நான்கும்
கூறப்பட்டன. பன்னிரண்டாம் சூத்திரம் அணைந்தோர் தன்மை
கூறுவது.
உமாபதி தேவர் தாம் அருளிச் செய்த எட்டு நூல்களுள் இறுதி நூலாகிய
சங்கற்ப நிராகரணத்து இறுதியில் இப்பஞ்சாக்கரங்களின் உண்மையே
ஒருவாறு விளங்கும்படி பரம சித்தாந்தமாக ஓதியருளினார். அப்பகுதி
வருமாறு:-
'பதிபசு பாச முதிர் அறி வுகளுடன்
ஆறா முன்னர்க் கூறாப், பின்னர்
இருபொருள் நீத்துமற் றொருநால் வகையையும்,
ஈனம்இல் ஞாதுரு, ஞானம், ஞேயம் என்(று)
இசைய மூன்றாய், பசு, பதி என்(று) அவற்(று)
இரண்டாய், இரண்டும் ஒன்றின்ஒன் றாகத்
திரண்டாம் பயன்எனும் திருவருள் தெளியில்
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
என்றிறை யியற்கை இயம்புதல் தகுமே'

சிவப்பிரகாசத்து, 'ஆசுறு திரோதம் மேவாது' என்னும் செய்யுளின் பொருளை வல்லார்வாய்க் கேட்டுணர்க. 'அதிசூக்கும' முதலிய பஞ்சாக்கரங்கள் உலகப்பற்று 'அற்று' ஞான வேட்கை கொண்டு, ஞானாசிரியரை அடைந்து ஞானோபதேசத்தைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடுவார்க்கே உரியன. மற்றையோர்க்குத் தூலமும், சூக்குமமும் ஆகிய பஞ்சாக்கரங்களே உரியன.
தூலமும், சூக்குமமும் ஆகிய இருபஞ்சாக்கரங்களும் பிரணவத் தோடு கூட்டியும், கூட்டாதும் ஆசிரியர் உபதேசித்தபடி ஓதப்படும். அதி சூக்குமம் முதலிய மூன்றுவகைப் பஞ்சாக்கரங்களும் பிரணவம் இன்றியே ஓதப்படும்.
'எல்லா உணவிற்கும் உப்பு இன்றியமையாதது. ஆயினும் சிறந்த உணவாகிய பாலுக்கு உப்புக் கூடாது. அதுபோல எல்லா மந்திரங் கட்கும் பிரணவம் இன்றியமையாதது. ஆயினும் மிகச்சிறந்த சிவமூல மந்திரமாகிய பஞ்சாக்கரத்திற்குப் பிரணவம் தேவையில்லை' என்கின்ற ஒரு மரபு உண்டு. அது அதிசூக்குமம் முதலிய பஞ்சாக்கரங்களை நோக்கி எழுந்ததேயாகும்.
பிற மந்திரங்கள் கூட நிர் பீச தீக்கையில் பிரணவம் இன்றியே சொல்லப்படும்.
இனி, உமாபதி தேவர், தமது, 'கொடிக்கவி' நூலில் 'எட்டெழுத்து, நாலெழுத்து'*l* எனக் கூறியவை 'பிராசாத பஞ்சாக்கரம், தார பஞ்சாக்கரம்' எனக் கூறப்படுமேயன்றி அதிசூக்கும பஞ்சாக்கரம் என கூறப்படாது. அவையும் யோகிகட்கே உரியன. எட்டெழுத்து, நாலெழுத்து முதலியவற்றை அச்செய்யுளின் உரையிற் காண்க.
ஆகம வேதங்களைக் கூறவே இனம் பற்றி வேதாந்தமும் கொள்ளப்பட்டது. 'ஓதினும்' என்னும் உம்மை சிறப்பு. அதனால் 'அறிதல் இயலாது' என்னும் சொல்லெச்சம் வருவிக்கப்பட்டது. 'ஒன்றையும்' என்னும் உம்மை முற்று. அதனால் அதனது ஆற்றல் மிகுதி உணர்த்தப்பட்டது.
அதிகாரத்தை வேறுபடுத்தி விரிவு கூறாவிடினும் இம்மந்திரத்திற்குப் பிறகும் இப்பொருளையே கூறினமை காண்க.
இதனால், 'மகா காரண பஞ்சாக்கரமாவது இது' என்பது குறிப்பால் உணர்த்தி, அதனது ஆற்றல் மிகுதி தெளிவாக்கப்பட்டது.

நாயோட்டு மந்திரம் நான்மறை நால்வேதம்
நாயோட்டு மந்திரம் நாதன் இருப்பிடம்
நாயோட்டு மந்திரம் நாதாந்த மாம்சோதி
நாயோட்டு மந்திரம் நாமறி யோமே. ***#2669***

மகா காரண பஞ்சாக்கரமாகிய 'சி' என்னும் ஓர் எழுத்தே நான்கு வேதப்

பொருள்களாய் விரிந்தது. அதுவே கடவுளது இருப்பிடம் எனவே, தத்துவாதீதமான ஒளிப்பொருளும் அதுவேயாம். ஆகவே, சித்தர்கள் 'நாய் ஓட்டும் மந்திரம்' என நகை விளைக்குமாறு மறைத்துக் கூறுகின்ற அம்மந்திரத்தைப் பிறர் 'இன்னது' என அறிதல் இயலாது.

விளக்கவுரை

சித்தர் மரபில் உயர்ந்த பொருள்களைப் பிறர் அறியாவண்ணம் இழிந்தனபோல மறைத்தக் கூறுதல் வழக்கம். அம்முறையில் இஃது அவர்களால் 'நாய் ஓட்டும் மந்திரம்' எனக் குறிக்கப்படுதலை இங்குக் கொண்டு கூறினார். 'கிடந்த கிழவியைக் கிள்ளி யெழுப்பி'*8* முதலியனவும் காண்க. நாயை ஓட்டுமிடத்தச் சொல்லப்படுவது. *'சீ'* என நெட்டெழுத்தாய் இருப்பினும், அதுவே அதனைக் குறிக்கும் தொடராகாமல், குறிப்பால் பொருளையுணர்த் தலின், *'சி'* எனக் குற்றெழுத்தையே குறித்ததாயிற்று. நால் வேதங்களும் சிவபிரானது பெருமையை விரித்தலால், 'இதுவே நால் வேதங்கள்' என்றும், சிவனே இதன் பொருளாதல் பற்றி 'நாதன் இருப்பிடம்' என்றும், 'நாதந்த சோதி' என்றும் சிவன் பொது மக்களால் அறிதற்கரியன ஆதலின் தம்மைப் பிறர் போல வைத்து, 'இம் மந்திரத்தை நாம் அறியோம்' என்றும் தமிழ், ஆரியம் இரண்டாலும் கூறி வலியுறுத்துவார், 'நான்மறை நால்வேதம்' என்றும் கூறினார்.

இதனால் மகாகாரண பஞ்சாக்கரமே எல்லாமாய் இருத்தல் கூறப்பட்டது.

சிவாய நம'எனச் சித்த ஒருக்கி
அவாய*3*ம் அறவே அடிமைய தாகிச்
சிவாய சிவசிவ என்றென்றே சிந்தை
அவாயம் கெடநிற்க ஆனந்தம் ஆமே. ***#2670***

சூக்கும பஞ்சாக்கரக் கணிப்பினால் உள்ளம் உலகியலின் நீங்கிச் சிவன்பாற் செல்லும். அதனால் ஆன்மாத் தான் சிவனுக்கு ஆளாகி வினையாகிய தீங்கினின்றும் நீக்கும். அப்பால் அதி சூக்கும பஞ்சாக்கரக் கணிப்பினால் ஆன்ம அறிவு பாசஞானமாகிய தீங்கில்லதாம். அப்பால் காரண பஞ்சாக்கரக் கணிப்பினால் ஆன்மாப் பசு போதம் நீங்கிச் சிவபோதம் பெற்றுப் பிறப்பாகிய தீங்கினின்றும் நீங்கும். அப்பால் மகாகாரண பஞ்சாக்கரக் கணிப்பினால் ஆன்மாச் சிவானந்தத்தில் மூழ்கியிருக்கும் 'என்று என்று' என்னும் அடுக்கினுள் முன்னதைச் 'சிவாய' என்பதனோடு கூட்டி, 'அவாயம் அறநிற்க' என ஒருமுறையும் பின்னர் நிற்கும் 'என்று' என்பதனை 'அவாயம்கெட' என்பதனோடு மற்றொரு முறையும் முடிக்க. 'அவாயம்' என்பது ஏற்ற பெற்றியால் பொருள் தந்தது. 'நிற்க' என்பதன்பின், 'பின்னர்' என ஒரு சொல்

வருவிக்க. அதனால், 'ஆனந்தம் ஆதல் ஓரெழுத்து மந்திரத்தால்' விளங்கிற்று. 'ஆம்' என்றது 'விளையும்' என்றபடி.

விளக்கவுரை

இதனால், உலகியலைத் தரும் தூல பஞ்சாக்கர் நீங்க, மற்றைய நால்வகைப் பஞ்சாக்கரத்தின் பயனும் ஒருங்கு தொகுத்துக்கூறப்பட்டன.

பழுத்தன ஐந்தும் பழமறை யுள்ளே
விழித்தங் குறங்கும் வினையறி வார் இல்லை
எழுத்தறி வோம்என் றுரைப்பார்கள் ஏதர்
எழுத்தை அழுத்தும் எழுத்தறி யாரே. ***#2671***

பஞ்சாக்கரம் பழமையான வேதமாகிய மரத்தில் அரும்பாய் அரும்பி, போதாய் முதிர்ந்து, பிஞ்சாய் உருப்பட்டு, காயாய்க் காய்த்து, பழமாய்ப் பழுத்து, உண்ண வல்லவர்க்கு இனித்துப் பயன்படுகின்றது. அதனை உண்டு, அல்லல் அறு அமைதியுடன் அறிதுயில் கொள்ளும் பயிற்சியை அறிபவர் உலகில் இல்லை. ஆயினும் பள்ளியில் எழுத்தறி கல்வியை மட்டும் கற்றவரகள் கூட, 'இந்த ஐந்தெழுத்துக்களை நாங்கள் அறிவோம்' எனக் கூறுகின்றனர். ஆயினும் வேதம் முதலிய அனைத்தையும் கற்றவர்கள் கூட ஐந்தெழுத்து ஊழை நீக்கும் எழுத்தாதலை அறிய மாட்டார்கள்.

விளக்கவுரை

ஐந்து வகையான பஞ்சாக்கரங்களும் நிலையால் வேறு பட்டன அன்றிப் பொருளால் வேறுபட்டன அல்ல ஆதலை. 'பழுத்தன' என்னும் குறிப்பால் உணர்த்தினார். அது பற்றியே அதற்கு இவ்வாறு உரைக்கப்பட்டது. 'பழுத்தன' என்றது குறிப்புருவகம். 'அங்கு' என்றது, 'விழித்திருக்கும் போதே' என்றபடி. விழித்தல் அறிவு அறியாமையுட் படாது விளங்கியிருத்தல் உறங்குதல் - உலக வாதனை யின்றியிருத்தல். எனவே, சிவத்தை மறவாது உணர்ந்திருத்தலாயிற்று. இந்நிலை ஆனந்த நிலையாதல் பற்றி, உலகத்தில் உறங்குவார் அல்லல் இன்றி இருத்தலோடு உவமித்து இந்நிலையில் நிற்பவரை, 'தூங்குபவர்' என்றும், செயலற்றிருத்தல் பற்றி, 'சோம்பர்' என்றும் நயம்படக் கூறுவர். 'தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம்முள்ளே' 'சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே'* என்னும் மந்திரங்களைக் காண்க.

'ஓங்குணர்வி னுள்ளடங்கி, உள்ளத்துள் இன்பொடுங்கத்
தூங்குவர்;மற் றேதுண்டு சொல்'8

என்றார் உமாபதி தேவரும் இதனை, 'தூங்காமல் தூங்குதல்' என்றும் கூறுவர். ஏதர் - குற்றம் உடையவர். ஏதம் - குற்றம்; அறியாமை. ஈற்றடியின் முதலில் உள்ள எழுத்து ஊழ். அதனை 'அயன் எழுத்து'

என்றும், 'தலையெழுத்து' என்றும் கூறும் வழக்குண்மை யறிக.
அழுத்துதல் - அடங்குதல். ஊழ் வினை ஊட்டியல்லது ஒழியாமை பற்றி 'ஒழிக்கும்' என்னாது, 'அழுத்தும்' என்றார். 'உயிரைத் தாக்காது உடல் ஊழாய் வந்து போகும்' என்பதாம்.

'திருவாஞ்சியத் துறையும்
ஒருவனார் அடியாரை ஊழ்வினை
நலிய ஒட்டாரே'*

என்று அருளிச்செய்ததும் இப்பொருட்டு. திருவைந்தெழுத்தை ஓதுவாரை ஊழ்வினை நலியா என்பதனை,

'பந்தமா னவை யறுத்துப்
பௌதிகம் உழலும் எல்லைச்
சந்தியா தொழியா தங்குத்
தன்மைபோல் வினையும் சாரும்;
அந்தம்ஆ திகள் இலாத
அஞ்செழுத் தருளி னாலே
வந்தவா றுரைசெய் வாரை
வாதியா பேதி யாவே'*

என்பதனான் அறிக.

'சிவாய நமஎன்று சிந்தித் திருப்போர்க்(கு)
அபாயம் ஒருநாளும் இல்லை;- உபாயம்
இதுவே; மதிஆகும்; அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்'* என்னும் ஔவையார் திருமொழியும் காண்க.

இறுதியில் உள்ள 'எழுத்து' எழுத்தாம் தன்மை. இசை வல்லுநர்கள், 'ச ரி க ம ப த நி' என்னும் எழுத்துக்களைச் சொல்லக் கேட்ட ஒருவன் 'இந்த எழுத்துக்களை நான் அறியேனா' என்று சொல்வது போல்வதுதான், 'ஐந்தெழுத்துக்களை நாம் அறிவோம்' என்றல் என்றபடி.
இதனால், இதுகாறும் பலவாறாகக் கூறிவந்த அஞ்செழுத்தின் சிறப்பனைத்தும் ஒருவார்த்தையாகத் தொகுத்துணர்த்தி முடிக்கப் பட்டது.

*11.10.*திருக்கூத்து

எங்கும் திருமேனி எங்கும் சிவசத்தி
எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்
எங்கும் சிவமாய் இருத்தலால் எங்கெங்கும்
தங்கும் சிவன்அருள் தன்விளை யாட்டதே. *#2672*

சிவனது சத்தி 'அங்கு, இங்கு' எனாதபடி எங்கும் நிறைந்திருத்தலால், 'சத்தியே அவனது திருமேனி' என்பது பற்றி எங்கும் அவனது திருமேனி

உள்ளதாம். 'சத்தியே அவனது இருப்பிடமாகிய பர வெளி, அல்லது சிதாகாசம்' என்பது பற்றி, எங்கும் அவன் இருக்கும் சிதாகாரம் உள்ளதாம்; 'அவனது சத்தி, அல்லது திருவருளே அவனது செயல்கள்' என்பது பற்றி, அவனது திருக்கூத்து எங்கும் நிகழ்வதாம். இவ்வாற்றால் எங்கும் எல்லாம் சிவமயமாய் இருத்தலால், எங்கு நிகழும் எந்தச் செயலும் அவனது திருவருள் திருவிளையாட்டேயாம்.

விளக்கவுரை

'எங்கும் சிவ சத்தி ஆதலால் எங்கும் திருமேனி ... ... இருத்தலால், சிவனது அருள் விளையாட்டே எங்கெங்கும் தங்கும்' என இயைத்து முடிக்க. 'அது' பகுதிப் பொருள் விகுதி.
இதனால், 'எங்கும் நிகழும் எல்லாச் செயல்களும் அவனது திருவிளையாட்டாம் ஆதலின் அவ்விளையாட்டாகிய அவனது திருக்கூத்துக்கள் தாம் பலவாம்' என அவை தொகுத்துக் கூறப்பட்டன.

சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனை
சொற்பத மாய்அந்தச் சுந்தரக் கூத்தனை
பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யார்அறி வாரே. *#2673*

அறிவே வடிவாதல் பற்றி, பரஞ்சோதியாய் மேலான ஒளியாய் - விளங்குகின்ற சிவனது அருள் விளையாட்டாக முன் மந்திரத்தில் கூறப்பட்ட அத்திருக்கூத்துத் தான் பலவாயினும் அவை, 'சிவானந்தத்க் கூதது, சுந்தரக் கூத்து பொற்பதிக் கூத்து, பொற்றில்லைக் கூத்து, அற்புதக் கூத்து' என ஓராற்றால் ஐந்து வகையாகின்றன. அவற்றின் மேலும் பலவாகின்ற கூத்தினை இயற்றுகின்ற அவனது ஆற்றலை யாரே அளவிட்டறிவார்!

விளக்கவுரை

இவைகளை ஒரோ ஒன்றாக நாயனார் பின்வரும் அதிகாரங்களில் விளங்கக் கூறுவார்.
இதனால் திருக்கூத்து வகைகள் தொகுத்துப் பெயரளவில் கட்டப்பட்டன.

<u>*11.11.*சிவானந்தக் கூத்து</u>

தானந்தம் இல்லாச் சதானந்த சத்திமேல்
தேனுந்தும் ஆனந்த மாநடம் கண்டீர்
ஞானம் கடந்த நடம்செய்யும் நம்பிக்*(*கு*)* அங்*(*கு*)*
ஆனந்தக் கூத்தாட ஆடரங் கானதே. *#2674*

மேற்கூறிய ஐவகைக் கூத்துக்களுள் சிவானந்தக் கூத்தாவது, என்றும் அழிதல் இல்லாமையால் சத்தாய், அதனோடே சித்தாய், ஆனந்தமாய்

உள்ள சத்தியிடமாக நின்று ஆனந்தத்தை முடிவின்றிப் பொழியும் கூத்தாகும் ஆகவே, ஆன்ம அறிவைக் கடந்து அந்தக் கூத்தினை இயற்றும் சிவனுக்கு அவ்விடத்தில் அந்த நடனத்தைச் செய்தற்கு அரங்காய் நிற்பது மேற்கூறிய அந்தச் சத்தியே.

விளக்கவுரை

'பரா சத்தி' என்பது உணர்த்துதற்கு, 'சத்தாயும், ஆனந்தமாயும் உள்ளது' என்றார். அதனானே சித்தாதலும் தழுவப்பட்டது. 'சத்தாவது உள்ளது' என்று மட்டும் கூறுவாரை மறுத்துச் சித்தாந்தம் கூறுதற்பொருட்டு, தோற்றக் கேடுகள் இன்றி உள்ளது' என்பார். 'தான் அந்தம் இல்லாச் சத்தி' என்றார். அந்தம் இன்மை கூறவே, ஆதியின்மையும் பெறப்பட்டது. 'ஆன்ம அறிவைக் கடந்து தன்னியல்பில் நிற்கும் சத்தியே பராசத்தி' என்றற்கு 'ஞானம் கடந்து' என்றார். 'அவ்வானத்தக் கூத்து' எனச்சுட்டு வருவிக்க. 'ஆடரங்கு' என்பதில் ஆடுதல் வாளா பெயராகி நின்றது. 'ஆனது அந்தச் சத்தியே' எனப்பயனிலை வருவித்து முடிக்க. 'ஆனந்த மாநடம்' என்பதை முதலிற் கூட்டுக. கண்டீர், முன்னிலையசை. 'சத்திமேல் நிகழ்ந்து' என ஒருசொல் வருவிக்க. 'உந்தும்' என்பது கூறப்பட்டது.

எனவே, இது பரமுத்தியை அடைந்த ஆன்மாக்கட்கு அந்நிலையில் பராசத்தி வழியாகப் பேரானந்தத்தை இடையறாது தந்து கொண்டிருக்கும் கூத்தாதல் விளங்கும்.

'மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தானந்த மானிடத்தே தங்கியிடும் - ஆனந்தம்
மொண்டருந்தி நின்றாடல் காணும், அருள் மூர்த்தியாக்
கொண்டதிரு அம்பலத்தான் கூத்து'
'பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்
உரைஉணர்வுக் கெட்டா ஒருவன் - வரைமகள்தான்
காணும் படியே கருணைஉருக் கொண்டாடல்
பேணுவர்க் குண்டோ பிறப்பு' என்பவற்றால் அறிக.

ஆனந்தம் ஆடரங்(கு) ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்இயம் ஆனந்த வாச்சியம்
ஆனந்தம் ஆக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்தகந் தானுக்கே. *#2675*

'ஆனந்தம்' என்னும் சொல் வழியாக உணரப் படுகின்ற அந்தப் பொருள், ஆருயிர்களுக்கு அனுபவப் பொருளாதற் பொருட்டு ஆனந்தக் கூத்தை விரும்பிச் செய்யும் சிவனுக்கு அந்நிலையில், 'மன்னன் எப்படி, மன்னுயிர் அப்படி' என்பதுபோல, உடன் நிகழும் அரங்கமும் ஆனந்தமாய்; பாட்டுக்களும் ஆனந்தமாய்; பலவகை

வாத்தியங்களும் ஆனந்தமயம்; இயங்கு திணை நிலைத்
திணைகளாகிய அனைத்துப் பொருள்களும் ஆனந்தமயம்.

விளக்கவுரை

வாச்சியம் - சொற்பொருள். 'ஆனந்த வாச்சியம் ஆனந்தமாக, ஆனந்தக் கூத்து உகந்தானுக்கு என்பவற்றை முதலில் கூட்டியுரைக்க. 'ஆனந்தம் ஆக' என்றது, 'உண்மையில் ஆனந்த மாகும்படி' என்றதாம். உண்மையாவது, அனுபவம் அகத்தல், தன் காரியத்தைத் தோற்றுவித்து நின்றது. ஆனந்தத்தை விளைப்ப வற்றையும், பெறுபவற்றையும் ஆகுபெயரால் 'ஆனந்தம்' என்றார். 'சராசரம்' என்றது அப்பிறப்பினை எடுத்த உயிர்களை. 'சராசரம்' என்ற அப்பிறப்பினை எடுத்த உயிர்களை. 'எஞ்ஞான்றும் எல்லாப் பொருள்களும் முதல்வன் வழியாவனவற்றி வேறாவன அல்ல' என்பதாம். 'பூவோடு சேர்ந்த நாரும் மணங் கமழும்' என்பது போல, 'ஆனந்தக் கூத்தோடு இயைந்த அனைத்தும் ஆனந்தமாம்' என்பது கருத்து. பராகாசத்துள் நிகழும் ஆனந்தக் கூத்தின் இயல்பு இது வாகலின், அதுதானே இவ்வுலகில் நிகழுமிடத்தும் இவ்வியல்பினதேயாம்.

'உணர்வின் நேர்பெற வரும்சிவ போகத்தை
ஒழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி யளவினும் எளிவர
அருளினை எனப்போற்றி'

என்ற ஆளுடைய பிள்ளையாரது அனுபவ நிலையை இங்கு நினைவு கூர்க.

இதனால், சிவானந்தக் கூத்தினால் எல்லாப் பொருளும் ஆனந்தமாய் விளங்குதற் பயன் கூறப்பட்டது.

ஒளியாம் பரமும் உளதாம் பரமும்
அளியார் சிவகாமி யாகும் சமயக்
களியார் பரமும் கருத்துறை அந்தத்
தெளிவாம் சிவானந்த நட்டத்தின் சித்தியே. *#2676*

'உள்ளது' என வழங்கபப்டும் சத்தாதல் தன்மையும், 'ஒளி' என வழங்கப்படும் சித்தாதல் தன்மையும், சமய நிலையில் 'சிவகாமி' என வைத்து வணங்கப்படும் அருள் வடிவான ஆனந்த மாதல் தன்மையும் ஆகிய இம்மூன்று தன்மைகளையும் உயிர்கள் பெறுதல், சிவன் செய்யும் ஆனந்த நடனத்தை உள்ளத்தில் தெளிவாகக் கண்டு தியானிக்கும் தியானத்தினாலாம்.

விளக்கவுரை

'பரம்' மூன்றும் பரமாதல் தன்மை மேல் நின்றன. பரமாதல் தன்மையை உபநிடதங்கள், 'சத்து சித்து, ஆனந்தம்' என மூன்றாகக் கூறும் வழக்குப்பற்றி அவற்றையே எடுத்துக் கூறினார். செய்யுள் நோக்கிச் சித்து முதற்கண் கூறப்பட்டது. 'சிவகாமி' என்பது பொதுவாக, 'சிவனை விரும்புவள், விரும்பச் செய்பவள்' எனப் பொருள் தரினும் உண்மையில் 'காமம்' என்பது இன்பத்தைக் குறிப்பதாக 'சிவகாம வல்லி' என்பதை, தன் ஆனந்தக் கொடி'l எனக் கூறுமாற்றால் அறிக. தெளிவு, இங்கு, தியானம். 'தெளிவாம் நட்டத்தின்' என்றது, 'நட்டமாம் தெளிவானதின் சத்தி' எனப் பொருள் தந்து நின்றது.
இதனால் சிவானந்தக் கூத்துப் பரமுத்தி ஆனந்தத்தைத் தருதல் கூறப்பட்டது.

ஆன நடமைந்(து) அகள சகளத்தன்
ஆன நடம்ஆடி ஐங்கரு மத்தாகம்
ஆன தொழில் அருளால் ஐந்தொழில் செய்தே
தேன்மொழி பாகன் திருநடம் ஆகுமே. *#2677*

அருவம், உருவம் அருவுருவம் என்னும் மூவகைத் திருமேனிகளை உயிர்களின் பொருட்டுக் கொள்கின்ற சிவன் படைத்தல் முதலிய ஐந்தொழிக்கு ஏற்ப ஐந்து வகை வடிவங்களையும், அவற்றிற் குரிய பெயர்களையும் கொண்டு செய்தலை நாடகமாக உடையவன். ஆகையால் அவன் செய்யும் தொழில்கள் யாவும் அருள் காரணமாகச் செய்வனவே அந்நிலையில் அத்தொழிலை அவள் ஐந்தாக வகுத்து அம்மையோடு உடனாய் நின்று திருக் கூத்தாடுகின்றான். அக்கூத்தும் ஐந்தாகும்.

விளக்கவுரை

அகளம் - உருவம். சகளம் - உருவம். இற்றைக் கூறவே, இனம் பற்றி அருவுருவமும் கொள்ளப்பட்டது. 'ஆடி' என்பது பெயர். 'நடம் ஐந்து' என்றது, பொன், வெள்ளி, செம்பு, இரத்தினம், பல்வகைக் கூட்டு, என்பவற்றாலாகிய மன்றங்களில் செய்யும் நடனத்தை எனவே, மன்றம் ஐந்தாதல் பற்றி நடனம் 'ஐந்து' எனப்பட்டதாம். பொன் மன்றம் முதலியன முறையே 'தில்லை' கூடல்' திருநெல்வேலி, திருவாலங்காடு, திருக்குற்றாலம்' என்னும் தலங்களில் உள்ளவை. ஆகம் - திருமேனி ஐந்தொழிலுக்கு ஏற்ற ஐந்து திருமேனிகளாவன யன், மால், அரன், மகேசுரன் சதாசிவன் ஆகிய திருமேனியின் அயன் முதலிய மூவரையும் இங்கு, 'சம்பு பக்கத்தினர்' என்க. ஆன தொழில், தான்என்று கொண்டு தொழில், அருளால் ஆவன' என ஒருசொல் வருவிக்க.

'அகள சகளத்தன் ஐங்கருமத்து ஆகம் ஆன நடம் ஆடி' எனத் தொடங்கி, 'பாகனாய்' என ஆக்கம் வருவித்து, 'ஆன நடம் ஐந்து' என முடிக்க. 'ஐந்தொழில் செய்து' என்பதைத் 'தொழில் ஐந்து செய்து' என மாற்றிக் கொள்க.
இதனால் முடிநிலைக் கூத்தாகிய ஆனந்தக் கூத்திற்குமுன் அதற்கு ஏதுவான வேறு கூத்தக்களையும் சிவன் செய்தருளுகின்றான் என்பது கூறப்பட்டது.

பூதாண்டம் பேதாண்டம் போகாண்டம் யோகாண்டம்
மூதாண்ட முத்தாண்டம் மோகாண்ட தேகாண்ட
தாகாண்டம் ஐங்கரு மத்தாண்ட தற்பரத்(து)
ஏகாந்த மாம்பிர மாண்டத்த தென்பவே. #2678

'நிலையற்ற இன்பத்தில் மோகத்தை உண்டாக்குவ தாகிய சுவர்க்கம், மக்கள் விலங்கு முதலிய வேறுபட்ட பல உடம்புகளையுடையதாகிய பூமி, துன்பத்தையே தருவதாகிய நரகம்' என்றும் மூவகை உலகங்களில் உயிர்களைச் செலுத்தி ஐந்தொழில் செய்து அவைகளை ஆட்கொள்கின்ற, மேலான பரம்பொருளும் அனைத்துப் பொருட்கட்கும் இடமாதல் பற்றி, 'பிரமம்' எனக் குறிக்கப்படுவதும் ஆகிய அந்த ஒரு பொருளில் அடங்கியுள்ள அண்டங்களோ பல கோடி என்றாலும் அவை ஐந்து தொகுப்புக்களில் அடங்குகின்றன. அவை, 'பூதாண்டம், பேதாண்டம், போகாண்டம் இவை அனைத்திலும் பழைதான முத்தாண்டம்' என்பன.

விளக்கவுரை

இவை முறையே, 'நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை' என்னும் கலைகளில் அடங்கியுள்ளனவாம்.
'மோகாண்டம்' என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. 'மோகாண்டம்' என்பது முதலிய மூன்றிலும் 'அண்டம்' என்றது உலகத்தை உலகத்தை. 'தாகாண்டத்து' என்பதில் அத்துத் தொகுத்த லாயிற்று.
'ஐங்கருமத்தால்' என உருபு விரிக்க. ஆண்டதற்குச் செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது. 'ஏக அந்தமாம் பிரமமாகிய அண்டத்தன பூதாண்டம் ... ... முத்தாண்டம்' என முடிக்க. 'பிரமத்தை அண்டம்' என்றது இடமாதல் பற்றி.
'பூதாண்டம்' என்பதில் 'பூதம்' என்றது யாவரும் நன்கறிந்த பிருதிவியை. 'பேதம்' என்றது அதற்குமேல் அப்பு முதல் பிருகிருதி முடிய உள்ளவற்றை. 'போகம்' என்பது போக்தா. (நுகர்வோன் மேலதாய்ப் புருட தத்துவத்தையும் அதற்குக் காரணமான மற்றை வித்தியா தத்துவங்களையும் குறித்தது.) யோகாண்டம், தவத்தோர் அடையக் கூடிய வித்தியேசுர புவனங்கள். அவை 'சுத்த வித்தை ஈசுரம்,

சாதாக்கியம்' என்னும் தத்துவங்களில் உள்ளன. முத்தாண்டம், அபர முத்தித் தானங்களாகிய சிவதத்துவ, சித்தி தத்துவ புவனங்களை தோற்ற முறையில் இவை முற்பட்டனவாதல் பற்றி 'மூதாண்டம்' எனப்பட்டன. 'மூதாண்டம்' என்பது, ஏனைய வற்றோடு இயைந்து இன்னோசை தர வேண்டி, 'மூதாண்டம்' என நீட்டல் பெற்றது.
'மோகாண்ட தேகாண்ட தாகாண்டம்', உம்மைத் தொகை தற்பரத்து - தற்பரமாம் தன்மையையுடைய. அத்தன்மை யாவது உயிர்கள் அனைத்திற்கும் மேலானதாதல்.
'இவ் ஐங்கலைகளிலும் சிவனது ஆனந்தக் கூத்து நிகழ்கின்றது' என்பது கருத்து. பின்னிரண்டடிகள் உயிரெதுகை.
இதனால் ஆனந்தக் கூத்தின் வியாபகம் கூறப்பட்டது.

வேதங்க ளாட மிகும்ஆ கமமாடக்
கீதங்க ளாடக் கிளாண்டம் ஏழாடப்
பூதங்க ளாடப் புவனம் முழுதாட
நாதன்கொண் டாடினான் ஞானானந் தக்கூத்தே. *#2679*

('அவனன்றி ஓரணுவும் அசையாது' என்னும் பழமொழி. 'அவன் அசையவில்லையாயின் எதுவும் அசையாது' என்பதையும் தெரிவிப்பதுடன் 'அவன் அசைந்தால் அனைத்தும் அசையும்' என்பதையும் தெரிவிக்கின்றது. ஆகவே, 'அனைத்தும் அசைய வேண்டி அவர் அசைகின்றான்' என்பது விளங்குகின்றது. அசைதல், அது அது தன் தன் இயல்பிற்கு ஏற்பச் செயற்படுதல், 'அவனது திருக்கூதினாலே அனைத்தும் செயற்படுகின்றன' என்பதையே இம்மந்திரம் உணர்த்துகின்றது.*)*

இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

'சொல்லும், பொருளும்' என அனைத்தப் பொருளும் இருவகைப்படும். சொல் 'வழக்குச் சொல், செய்யுட் சொல்' என இருவகைத்து. செய்யுட்களும் முதல் நூல்களே தலையாயவை. ஆகவே அவற்றை வேதங்கள் ஆட, மிகும் ஆகமம் ஆட' என எடுத்தோதவே, ஏனைய சொல்வகைகள் ஆடுதல் தானே அமைந்தது. சொற்கள் அசைதலாவது வழக்கிலும், செய்யுளிலும் நின்று பொருளுணர்த்தி வருதல். செய்யுட்கண் தம்மியல்பில் நிற்குங்கால் இயற்செய்யுளாயே நிற்கும். இசையோடு பொருந்தினால் இசைச் செய்யுளாய் முன்னையினும் இனிமையைத் தரும். அதனால், 'கீதங்கள் ஆட' என அவற்றை வேறெடுத்தோதினார். அண்டம் - உலகம். உலகங்களை 'ஏழ்' என்றல் வழக்கு. 'பூதங்கள்' என்றது உபலக்கணத்தால் தத்துவம் அனைத்தையும் தழுவி நின்றது. புவனங்கள், உலகங்களை ஆட்சி

புரியும் அதிகார தேவர்களுக்கு உரிய இடங்கள், 'அவை இருநூற்று இருபத்து நான்கு என்பது சைவ சித்தாந்தம். நாதன் ஞானானந்தக் கூத்தினைக் கொண்டு ஆடினான்' என இயைக்க. கொள்ளல், மேற்கொள்ளல், ஞானத்தைக் கூறவே, அதனோடு உடன் நிற்பதாய உண்மையையும் கொள்ளப்படும். உண்மை அறிவு இன்பக்கூத்தே ஆனந்தக் கூத்து ஆதல் விளங்கும்.
இதனால் சிவனது உண்மையறிவின்பக் கூத்தே அனைத்துப் பொருள்களும் நிலைத்துத் தத்தம் இயல்பிற்கேற்பச் செயற்பட்டு பயன் விளைக்கச் செய்வது' என்பது கூறப்பட்டது.

பூதங்கள் ஐந்தில் பொறியில் புலன்ஐந்தில்
வேதங்கள் ஐந்தில் மிகும்ஆ கமம்ஐந்தில்
ஓதும் கலை காலம் ஊழியுடன் அண்டப்
போதங்கள் ஐந்தில் புணர்ந்தாடும் ஈசனே. *#2680*

*(*முன் மந்திரத்தில், 'அளைத்துப் பொருள்களின் இயக்கங்கட்கும் காரணமாய் நிகழ்வது சிவன் கூத்து' என்பது கூறப் பட்டது. இம்மந்திரத்தில், அவை இயங்குங்கால், அக்கூத்து அவற்றோடு உடனாயும் இயங்கி திகழ்கின்றது' என்பது கூறப் படுகின்றது. இவையே இவ்விரண்டிற்கும் இடையேயுள்ள வேற்றுமை. எனவே மேற்கூறிய மந்திரத்தின் பொருளே இம்மந்திரத்திற்கும் ஆகின்றது.*)*
இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

பாரதத்தை அதன் சிறப்புப் பற்றி, 'ஐந்தாம் வேதம்' என்றல்போல வேதத்தின் பொருளை உபவிருங்கணம் செய்யும் புராண இதிகாசங்களை உபசாரத்தால் 'வேதம்' என வைத்து, 'வேதங்கள் ஐந்து' என்றார். துணை நூல்களாய் நின்று முதல் நூலின் பொருளை விரித்து விளக்குதல் ஓதும் - நூல்களில் சொல்லப்படுகின்ற கலை, காலம் இவை வித்தியா தத்துவங்களில் தலையாயவை. ஊழி, உலகத்தின் நிலைப்புக் காலம். 'அண்டம் ஐந்தில் போதம்' என மாற்றியுரைக்க. அண்டம் ஐந்து, நிவிர்த்தி முதலிய கலைகளில் உள்ள அண்டத்தின் வகை ஐந்து, போதம் - அறிவு. இஃது உயிர்களின் அறிவு, என்றது அதன் நிகழ்ச்சியை. புணர்தல் - உடனாய் நிற்றல்.

தேவர் அசுரர்நரர் சித்தர்வித் யாதரர்
மூவர்கள் ஆதியின் முப்பத்து மூவர்கள்
தாபதர் சாத்தர் சமயம் சராசரம்
யாவையும் ஆடிடும் எம்இறை ஆடவே. *#2681*

முன் இரு மந்திரங்களில் அஃறிணையாக வைத்துக் கூறிய பொருளை இம்மந்திரம் உயர்திணையாக வைத்துக் கூறுகின்றது.

இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

'ஆதியின் மூவர்கள்' என மாற்றிக் கொள்க. ஆதி உலகத் தோற்றக் காலம். சாத்தர் - சாத்தியர். 'சாத்தியர்' என்னும் ஒருசாராரும் தேவர் கூட்டத்துள் சொல்லப்படுகின்றனர்.
சிவனது திருக்கூத்து உலகத்தின் செயற்பாடு எல்லாவற்றிற்கும் காரணம் ஆதல் தொகுத்துக்கூறி முடிக்கப்பட்டது.

11.12.சுந்தரக் கூத்து

அண்டங்கள் ஏழினுக்*(கு)* அப்புறத்*(து)* அப்பால்
உண்டென்ற சத்தி சதாசிவத் துச்சிமேல்
கண்டங் கரியான் கருணைத் திருவுருக்
கொண்டங் குமைகாணக் கூத்துகந் தானே. *#2682*

பிரகிருதி உலகங்களுக்கு அப்பால் உள்ளவை அசுத்த மாயா உலகங்கள். அவற்றிற்கு அப்பால் சுத்த வித்தை, ஈசுரம், சாதாக்கியம் என்னும் தத்துவ புவனங்கட்கு அப்பால் உள்ளவை சத்தி தத்துவ புவனமும், சிவ தத்துவ புவனமும், அவைகளில் முறையே 'சத்தி' என்றும், 'சிவன்' என்றும் இருதிறப்பட்டு நின்று ஐந்தொழில் புரிகின்ற சிவன், அத்தொழிலின் பொருட்டு அருளே திருமேனியாகக் கொண்டு சத்தி காணத்தான் ஆடலை விரும்பி ஆடுகின்றான்.

விளக்கவுரை

எனவே, அங்ஙனம் ஆடுகின்ற கூத்தே சுந்தரக் கூத்தாம்' என்பது போந்தது. சுந்தரம் - அழகு. எனவே, அது வடிவைக் குறிக் -கின்றது. வடிவுதான் 'அருவம், அருவுருவம், உருவம் என மூவகைப் படுதல் பலவிடத்தும் சொல்லப்பட்டது. அவற்றுள் உருவத்திருமேனி கொண்டு செய்யும் கூத்தையே நாம் கூத்தாகக் காணினும், அதனோடு ஒப்ப ஐந்தொழில் இயற்றும் மற்றைத் திருமேனிகளின் செயலும் சுந்தரக் கூத்து' என்றே இங்குக் கூறப்படுகின்றன. 'சூக்கும நடனம், அதிசூக்கும நடனம்' எனச் சாத்திரங்களில் கூறப்படுவனவற்றை இங்கு நினைவு கூர்க. இதனால் மேல் தொகுத்துக் கூறிய கூத்து ஐந்தனுள் முதலாவதாகிய சிவானந்தக் கூத்து ஒன்றும் சொரூப நிலைக் கூத்தம், ஏனைய நான்கும் தடத்தநிலைக் கூத்தும் ஆதல் அறிக. 'அண்டங்கள் ஏழ்' என்றது, பிரகிருதி அண்டங்களை யாதலின், பின்னர்க் கூறப்பட்டவை அசுத்த மாயை, சுத்தமாயா அண்டங்களாதல் விளங்கிற்று. சிவன் இன்றிச் சத்தியில்லையாதலின், சத்தியைக் கூறவே, சிவன் தானே பெறப்பட்டான். 'சத்தி, சிவன்' என்பன அவரையும், அவர்க்கு இடமாய தத்துவங்களையும் குறித்து நின்றன.

'உச்சிமேல் உள்ளது' என ஒருசொல் வருவித்து முடிக்க. 'கண்டம் கரியான்' என்பது, 'சிவன்' என்னும் அளவாய் நின்றது. சிவன் செய்யும் கூத்தினை உமை காணுதலாவது, சிவனது செயலை உயிர்கட்குச் சேர்ப்பித்தலாம். உகத்தல் தன் காரியம் தோற்றி நின்றது.
இதனால், 'சுந்தரக் கூத்தாவது ஐந்தொழில் பற்றிய கூத்து' என்பது கூறப்பட்டது.
(பதிப்புக்களில் இதனை அடுத்துள்ள 'கொடுகொட்டி பாண்டரம்' என்னும் மந்திரம் அடுத்த அதிகாரத்தில் இருத்தற்குரியது.)

பரமாண்டத் துள்ளே பராசத்தி பாதம்
பரமாண்டத் துள்ளே படரொளி ஈசன்
பரமாண்டத் துள்ளே படர்தரு நாதம்
பரமாண்டத் துள்ளே பரன்நட மாடுமே. *#2683*

எல்லாவற்றையும் வியாபித்து நிற்றலால் சுத்த மாயை யின் வியாபகம் பரமாண்டம் ஆகும். அதற்குள்ளே உள்ள அனைத்து இடங்களிலும் பராசத்தியின் கூறாகிய ஆதி சத்தி பரவியுள்ளது. ஆகவே அந்தச் சத்தயைத் தனது விரிந்த ஒளியாகக் கொண்ட தடத்த சிவன், அவ்விடங்களில் எல்லாம் உளன். அவையேயன்றிச் சுத்தமாயையின் காரியமாகிய வாக்குக்களும் 'அதிசூக்குமம், சூக்குமம், தூலம்' என்னும் வகையில் அந்த எல்லா இடங்களிலும் உள்ளன. ஆகவே, அந்த எல்லா இடங்களிலும் சிவன் தனது சுந்தரக் கூத்தினைச் செய்கின்றான்.

விளக்கவுரை

முதல் மூன்று அடிகளின் ஈற்றிலும் உள்ளது, உளன், உள்ளன' என்னும் பயனிலைகள் எஞ்சி நின்றன. மூன்றாம் அடியின் ஈற்றில், 'ஆகலான்' என்பதும் உடன் எஞ்சி நின்றது. நாதம் இல்லையேல் பொருள் விளங்காமை பற்றி அதன் இருப்பையும் உடன் கூறினார். நடம், அதிகாரத்தால் இங்கு நடைபெறுமாறு கூறப்பட்டடது.

'அங்குசம்' என்ன எழுமார்க்கப் போதத்தில்
தங்கிய 'தொம்தி' எனுந்தாள ஒத்தினில்
சங்கரன் மூலநா டிக்குள் தரித்தாடல்
பொங்கிய காலம் புகும்போதல் இல்லையே. *#2684*

('அம்சம்' என்பதை இடையே குகரச் சாரியைக் கூட்டி, 'அங்குசம்' என ஒரு கருவியின் பெயர்போல ஆக்கி மறை பொருட் கூற்றாக வழங்குதல் சித்தர் மரபு. எனவே,) அங்குசம் என்ன எழும் மார்க்கம்' என்பது, 'அம்சம்' என எழுகின்ற வழி என்பதாம். இம்மந்திரம் இரேசக பூரகமாய் நிகழும் வாயு இயக்கத்தால் இயல்பாக நிகழ்தலின் 'அசபா மந்திரம்' எனப்படும். அம்மந்திரவழி இயங்கும் உயிர்ப்பினாலே அறிவு நிகழ்தலி அவ்வாற்றால் அறிவை விளக்கு கின்ற இறைவனது செயல்

'அசபா நடனம்' எனப்படுகின்றது. அந்த நடனத்திற்கு, 'அம், சம்' என்பனவே, 'தொம், தி' என ஒலிக்கின்ற தாளங்களாம். அந்தத் தாள ஒற்றுக்கு இயையச் சிவன் சுழுமுனை நாடிக்குள் நின்று சுந்தரக் கூத்து ஆடுதலை அறிவு விளங்கிய காலத்தில் தொடங்குகின்றான். ஆயினும் அக்கூத்தினை அவன் முடித்துவிட்டு அப்பாற்போதல் இல்லை.

விளக்கவுரை

போதம் - அறிவு. மூல நாடி, சுழுமுனை நாடி. தரித்தல் - தங்குதல். அறிவு விளங்குதல், குரு உபதேசத்தால் அசபா நடனத்தை அறியப் பெறுதல்'. 'புகுதல்' எனப் புதிதுபோலக் கூறியது, அறிவுக்குப் புலனாகும் காலம் பற்றி. விளங்கிய அறிவு பின் விளக்கம் அற்று மறவாமை பற்றி, 'போதல் இல்லை' என்றார். அசபா நடனத்தால் இங்ஙனம் அறிவு விளங்கச் செயதல் ஐந்தொழில் நடனத்தில் 'அதிசூக்கும நடனம்' எனப்படும். எனவே, இதுவும் சுந்தரக் கூத்தின் வகையாயிற்று.

இதனால், சுந்தரக் கூத்த வகைகளுள் ஒன்றன் இயல்பு கூறப்பட்டது.

ஆளத்தி ஆடிப் பின்நவக் கூத்தாடிக்
காலத்தீ ஆடிக் கருத்தில் தரித்தாடி
மூலச் சுழுனையுள் ஆடி முடிவில்லா
ஞாலத்துள் ஆடி முடித்தான்என் நாதனே. *#2685*

எனக்குத் தலைவனாகிய சிவபெருமான் முதலில் சுந்தரக் கூத்திற்கு ஆயத்தங்களைச் செய்தும், பின் அதனை, 'அருவம் நான்கு அருஉருவம் ஒன்று, உருவம் நான்கு' என்னும் முறையில் திருமேனி கொண்டு மும்மாயைகளின் மேலும் நிகழ்த்திப்பின் முற் றொடுக்கத்தைச் செய்தும், அக்காலங்களில் உயிர்களின் அறிவின்கண் நின்று அதனை விளக்கியும், தோற்றம் நிலை, இறுதி மூன்றனுள் இடையதாகிய நிலைப்புக் காலத்தில் முன் மந்திர்ததில் கூறியவாறு சுழுமுனை நாடியில் நின்று உயிர்ப்பு வழியாகப் புலன் உணர்வைத் தந்து; இறுதியாக, என்றும் அழிதல் இல்லாத பெருநிலவுமாகிய முத்தி நிலத்தில் பேரானந்தத்தைத் தரும் நடனத்தைச் செய்தும் நிற்பதாக அக்கூத்தினை இங்ஙனம் வரையறை செய்துகொண்டான்.

விளக்கவுரை

ஆளத்தியாவது, பண் அமைதற்கு ஏழிசை முறையால் அதனை ஏற்றிழிவு வகைகளில் முன்னர் அமைத்துக் காண்பது. அஃது இங்குச் சுந்தரக் கூத்தினை இயற்றுவதற்கு ஆவனவற்றைச் செய்தலைக் குறித்தது. காலம் - ஊழி; பேரூழி; முற்றழிப்புக் காலம். 'கருத்து' என்றது அறிவை, 'ஆடி' என வந்த செய்தென் எச்சங்கள் ஆறும்

எண்ணுப் பொருளவாய் முறையே 'ஆயத்தம், தூலம், சூக்குமம், கேவலம், சகலம், சுத்தம்' என்னும் அறுவகைக் கூத்தினையும் குறித்தன. சிவன் ஆயத்த நிலையில் பரநாத பரவிந்துக்களாயும், தூல நிலையில் அபநாத அபவிந்து சதாசிவன் முதலிய ஐவராயும் நிற்பன் 'நவந்தரூ பேதம்' என்னும் மரபில் மலைபு வாராமைப் பொருட்டு. 'நவக்கூத்தாடி' என ஒன்பது பேதம் கூறினாராயினும், அவற்றுள் முதலில் உள்ள பரநாத பரவிந்துக்கள் ஒழிந்த ஏழனையே அங்குக் கொள்க. இனி 'நவக் கூத்தாடி' என்றே போயினால், ஆயத்த நிலை தோன்றாமை பற்றி அதனை வேறு வைத்தும் முற்றழிப்புத் தனிச் சிறப்புடைமையின் அதனைப் பின்னரும் எடுத்தோதியும் வலியுறுத்தினார். சுத்த நிலைக் கூத்து முன் அதிகாரத்திற்குரிய ஆனந்தக் கூத்தேயாயினும் அதுவும் கூத்தினுள் ஒன்றாதல் தோன்றுதற் பொருட்டு, 'முடிவிலா ஞானத்துள் ஆடி' எனத் தொகுத்தோதினார். 'முடித்தான்' என்றது, 'இவ்வாறு முடித்தான்' என வரையறை செய்தமையைக் குறித்தது. இனிச் சுத்தம் ஒழிந்த கேவல சகலக் கூத்துக்களும் நவக் கூத்தில் அடங்குவனவே என்க. முதல் அடி இன எதுகை.

இதனால் சுந்தரக் கூத்தின் வகைகள் பலவும் வகுத்துக் கூறப் பட்டன. ஆனந்தக் கூத்தைக் கூறியது எய்தியது இகந்து படாமைக் காத்தது.

சத்திகள் ஐந்தும் சிவபேதந் தாம்ஐந்தும்
முத்திகள் எட்டும் முதலாம் பதம்எட்டும்
சித்திகள் எட்டும் சிவபதம் தாம்எட்டும்
சுத்திகள் எட்டீசன் தொல்நட மாடுமே. ***#2686***

சத்தி பேதங்கள் ஐந்து, அவை, 'பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை' என்பன. இவற்றோடு இயைந்த சிவபேதமும் ஐந்து, அவை, 'பரம், சிவன், சிவன், கருணாகரன், நாதமூர்த்தி, விந்துமூர்த்தி' என்பன. திருவருள் பெற்றோர் அடையும் முத்திகள் எட்டு. அவை, காலோக்கியம், சாமீப்பியம், சாரூப்பியம், சிவன் முத்தி, அதிகாரமுத்தி, போகமுத்தி, இலயமுத்தி, பரமுத்தி அல்லது சாயுச்சியம்' என்பன. முதன்மைப்பதவிகள் எட்டு. அவை, 'கணபதி, குமாரன்' நந்தி, சண்டி, அரன், அரி, அயன், இந்திரன்' என்போரது பதவிகள். சித்திகள் எட்டு. அவை அணிமாதிகள். சிவபதம் - சிவனது நிலை. அவை எட்டாதல் அட்டமூர்த்தியாய் நிற்றலால். அட்ட மூர்த்தமாவன 'ஐம்பூதம், ஞாயிறு, திங்கள், உயிர்' என்பன. இவற்றில் நிற்குமிடத்தே 'பவன், சர்வன்' முதலிய எட்டுப் பெயர்களைச் சிவன் உடையவன் ஆகின்றான். சுத்திகள் எட்டு, வழிபாட்டில் செய்யப் படுவன. 'நிரீக்கணம், புரோக்கணம், தாடனம், அப்பியுக்கரணம்' என்பன. இவை முறையே

'பார்த்தல், தெளித்தல், தட்டுதல், மூடுதல் மும்முறை கை கொட்டல், திசைக்காப்புச் செய்தல், சுற்றுதல், அமுதமய மாக்கல்' என்பனவாம். இவை முதலாக அனைத்தும் நிகழும்படி சிவன் தொன்று தொட்டுச் சுந்தரக்கூத்தினை நிகழ்த்தி வருகின்றான்.

விளக்கவுரை

'பேதம்' என்பதைச் 'சத்தி' என்பதனோடும் கூட்டுக. 'எட்டீசன்' என்பதில், 'எட்டும் நிகழ' என ஏனையவற்றோடு இயைய எண்ணும்மை விரித்து, அவற்றிற்கு முடிக்கும் சொல் ஒன்றும் வருவிக்க.
இதனால், சுந்தரக் கூத்தின் பயன்கள் பலவும் விரித்தோதப் பட்டன.

மேகங்கள் ஏழும் விரிகடல் தீவேழும்
தேகங்கள் ஏழும் சிவபாற் கரன்ஏழும்
தாகங்கள் ஏழும் சாந்திகள் தாம்ஏழும்
ஆகின்ற நந்தியடிக்கீழ் அடங்குமே. *#2687*

மேகங்கள் ஏழு:- பிங்கல நிகண்டிலும், சூடாமணி நிகண்டிலும்' சிறிது சிறிது வேறுபடச் சொல்லப்பட்டன. நீர்மழையை அளவாகவும், மிகையாகவும், சிறிதாகவும் பொழிவன, மண்மழை, கல் மழை, பொன் மழை, மணி மழை என்பவற்றைப் பொழிவன இவைகள். கடல் ஏழு:- உப்பு, பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன், நன்னீர் - என்பவற்றை உடையன. தீவு ஏழு:- அந்த ஏழு கடல்களாலும் சூழப்பட்டுத் தனித்தனியே ஏழு நிலப்பகுதிகள். அவை:- சம்பு, சாகம், குசை, கிரௌஞ்சம், சான்மலி கோமேதகம், புட்கரம் என்னும் காரணப் பெயர்களையுடையன. சம்புத்தீவு, நாவலந் தீவு. இதுவே நாம் வாழும் நிலம். தேகங்கள் ஏழு:- 'தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்' என்னும் எழுபிறப்புக்கள். பாற்கரன் - சூரியன். சிவ பாற்கரன் - சிவ சூரியன். சிவன் உள்ளிருந்து அறியாமை இருளைப் போக்கி அறிவைப் பிறப்பித்தற்குக் கருவியாய் அவனால் அமைக்கப்பட்டவை. அவை ஏழாவன:- ஐம்பொறிகளும், மனமும் புத்தியும் ஆய அந்தக் கரணங்களுமாம். இன்னும் 'ஏழ்' என்றதனானே வித்தியா தத்துவம் ஏழினையும் கொள்க. தாகம் - வெப்பம்; அஃது அதனையுடைய தீயைக் குறித்தது. 'தீக்கு நாக்கு ஏழ் உள' என்பர். அது பற்றி அஃது ஏழ் எனப்பட்டது. சாந்தி என்றது சுத்தத்தை அஃது ஏழாதல் கலா சுத்தி ஐந்தும், கன்ம சுத்தி ஒன்றும், ஆணவ சுத்தி ஒன்றுமாம். இந்த ஏழ் சுத்தியாலும் ஆன்ம சுத்தி உளதாகும்.

விளக்கவுரை

இதனால், வகை வகையாகச் சொல்லப்படுகின்ற அனைத்துப்

பொருள்களும் சுந்தரக் கூத்துள் அடங்குதல் தொகுத்துக் கூறி முடிக்கப்பட்டது.

11.13.பொற்பதிக் கூத்து

கொடுகொட்டி பாண்டரம் கோடுசங் காரம்
நடம்எட்டோ(டு) ஐந்(து) ஆறு நாடியுள் நாடும்
திடம்உ ற்றெழும் தேவ தாருவனத் தில்லை
வடம்உற்ற மாவன மன்னவன் தானே. #2688

தேவதாரு வனம், தில்லை வனம், திருஆலவனம் (திருவாலங்காடு என்பவற்றில் எழுந்தருளியுள்ள தலைவன் கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம், ஆகிய சங்காரக் கூத்தக்களையும் அட்ட மூர்த்தத்தில் நின்று அவற்றை இயக்கி ஆடும் எட்டுக் கூத்தினையும், ஐந்தொழிற் கான ஐந்து கூத்தினையும், சுழுமுனை நாடியில் அறியப்படும் ஆறு ஆதாரங்களில் ஆறு கூத்தினையும் உறுதியாகக்கொண்டு ஆடுகின்றான்.

விளக்கவுரை

எனவே, 'எங்கும் அகண்டாகாரமாய், அருவால் நின்று ஆடுதலேயன்றி, சில உயர் இடங்களில் அவற்றைத் தன்னுடையனவாக வரையறை செய்து கொண்டு அங்கு உருவத்திருமேனி கொண்டு ஆடுவதே பொற்பதிக்கூத்து' என்றதாயிற்று. 'பொன்' என்றது தெய்வத்தன்மையை. பொற்பதி - தெய்வத் தன்மையுடைய தலங்கள்.

'கொடுகொட்டி, பாண்டரங்கம்' என்னும் கூத்துக்களை அசுரரை அழித்த காலத்தில் சிவபெருமான் ஆடினவாகச் சிலப்பதிகார உரை கூறிற்று.9 கலித்தொகைக் கடவுள் வாழ்த்தில், 'சிவன் கொடு கொட்டி, பாண்டரங்கம், காபாலம் - என்னும் கூத்துக்களை ஆடும் பொழுது அக்கூத்திற்கு உமையம்மையே தாளம் தருவான்' எனக் கூறியதற்கு, ஆண்டுப் பிறர் இல்லையே' என்ற நச்சினஆர்க்கினயரது விளக்கத்தால் அக்கூத்துக்கள் சங்காரத்தின் முடிவில் செய்யப்படுவன வாதல் விளங்கும். இனி, பிரம கபாலத்தை ஏந்தி ஆரும் கூத்தே காபாலக் கூத்து ஆதலின் அதுவே தாருகாவனத்தில் அம்முனிவர்தம் பத்தினியர் முன்பும், முனிவர் முன்பும் ஆடிய கூத்தாகும். இவை போன்ற எல்லா வகைக் கூத்துக்களையும் சிவன், மேல், ஆன நடம் ஐந்து'3 எனக் குறிக்கப்பட்ட ஐந்து மன்றங்களில் ஆடல் திருமேனி ஆடுகின்றான் என்பது, 'தாருவனத் தில்லை (வன), வடமாவன மன்னவன்' என்றதனால் விளங்கிற்று. தாருகாவனம் ஒரு தலமாக விளங்கவில்லை. தில்லை வளமும், திருஆலவனமும் தலங்களாய்

விளங்குதல் வெளிப்படை. இவற்றைக் கூறவே சிறப்பாக ஏனை மூன்றும், பிறவும் கொள்ளப்படும். கோடு, கிளை' என்னும் பொருட்டால், முதல் உறுப்பாய தலையைக் குறித்தது. 'பாண்டரங்கம்' என்பது ஈறு குறைந்து, 'பாண்டரம்' என நின்றது. 'கோடு' என்பதன் பின் 'ஆகிய சங்காரங்கள்' என மாற்றிக்கொள்க. 'இவற்றைத் திடமாகக் கொண்டு எழும் மன்னவன்' என வினைமுடிபு செய்க. எழுதல் - முயலுதல்; அது நிகழ்த்துதலைக் குறித்தது.
இதனால், அனைத்து வகையான கூத்துக்களையும் சிவன் உருவத் திருமேனி கொண்டு தலங்களில் ஆடுவதே பொற்பதிக் கூத்தாம்' என்பது கூறப்பட்டது.

தெற்கு வடக்குக் கிழக்குமேற் குச்சியில்
அற்புத மானஓர் அஞ்சு முகத்திலும்
ஒப்பில்பே ரின்பத் துபய உபயத்துள்
தற்பரன் நின்று தனிநடம் செய்யுமே. ***#2689***

சிவன் 'உருவம்; அருவுருவம்' என்னும் இருவகை வடிவில் தலங்களில் எழுந்தருளியிருக்குங்கால் எங்கும் கிழக்கு நோக்கியே எழுந்தருளியிருப்பான். கோயில் வாயில் எத்திசையை நோக்கியிருப்பினும் அது கிழக்குத் திசையாகவே பாவிக்கப்படும். அந்நிலையில் உச்சி, கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்னும் ஐந்து பக்கங்களிலும் முறையே ஈசானம், தற்புருடம், அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் முகங்கள் உள்ளனவாம். கோயிலின் வாயில் திசை மாறியிருப்பின் தற்புருட முகம் அந்தத் திசையில் வர அந்தத் திசையின் முகம் தற்புருட முகத்தில் சென்றுவிடும். சிவனது இந்த முகங்கள் ஏனை யோரது முகங்கட்கு இல்லாத பல அதிசய ஆற்றல்களை உடையன. அந்த முகங்களின் ஆற்றலால் சிவன் உயிர்களை நிகரற்ற பேரின்ப நிலையில் செலுத்துதற்கு மேற்கூறிய இருவகைத் திருமேனிகளிலும் இருந்து ஒப்பற்ற திருக்கூத்துக்களைச் செய்கின்றான்.

விளக்கவுரை

செய்யுள் நோக்கி உச்சி, கிழக்கு முதலிய பக்கங்கள் முன் பின்னாகக் கூறப்பட்டன. இந்த ஐந்து முகங்களும் முன் தந்திரத்தில், 'நடுவு கிழக்குத் தெற்குத் தரம்மேற்கு' என்பது முதலிய மந்திரங்களிலும் கூறப்பட்டமை காண்க. இங்குக் கூறிய குறிப்புக்களால் சிவனது, 'ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியேசாதம்' என்னும் முகங்கள் ஐந்தும் சிவனது 'உச்சி, முன்பக்கம், வலத்தோள், இடத்தோள், முதுகு' என்பவற்றின்மேல் உளவாகச் சிவன் எங்கும் கிழக்கு நோக்கியே அமர்ந்திருப்பவனாதல் விளங்கும்.
பக்கங்கள் பலவற்றிலும் முன்பக்கமே கொள்ளத்தக்கது ஆதலின்,

வழிபாடுகள் பலவும் தற்புருட முகத்திலே செய்யப் படுகின்றன. 'தற்புருட முகத்தில் செய்யப்படுவது எதுவும் எல்லா முகத்திலும் செய்ததேயாம்' என்பது சிவாகமங்களில் சொல்லப்படுவது. ஐந்து முகங்களும் ஐந்து சாதாக்கியங்களாகச் சொல்லப்படும். சத்தியோசாதம் அமூர்த்தி சாதாக்கியம், வாமதேவம் மூர்த்தி சாதாக்கியம். அகோரம் கர்த்திரு சாதாக்கியம். தற்புருடம் கரும சாதாக்கியம் முதலாக ஒவ்வொன்றும் அடுத்த சாதாக்கியத்தை முறையே சார்ந்து நிற்க, முடிவில் நான்கு சாதாக்கியமும் சிவ சாதாக்கியத்தைச் சார்ந்து நிற்கும் என்க.

1. 'உச்சிமுகம் ஈசானம்*;* ஒளிதெளிஅப் பளிங்கே*;*
உத்தரபூ ருவத்திசையை நோக்கிஉறும் உகந்தே.
2. நிச்சயித்த முகத்தின்கீழ்ப் பூர்வதிசை நோக்கி
நிகழும்முகம் தற்புருடம்*;* கோங்கலர்போல் நிறமே.
3. அச்சுறுத்தும் அகோரமுகம் அறக்கரிது*;* கராளம்
அவிழ்தாடி*;* வலத்தோளில் தென்னோக்கி அமரும்.
4. செச்சைநிறத் தெரிவைமுகம்*;* இடத்தோள்மேல் வாமம்.
5. சிறுபுறத்தின் முகம் சத்தி யோசாதம் நிகழ்வால்.

என்னும் சிவதருமோத்தரச் செய்யுளாள் மேற்கூறியவை விளங்குதல் காண்க. உத்தர பூருவம் - வட கிழக்கு. பூர்வதிசை கிழக்குத் திசை. அறக் கரிது - மிகவும் கறுப்பானது.

அகோரமுகம் தோற்றத்தால் அச்சுறுத்தும் கோர வடிவாய் இருப்பினும் அது கோரத்திற்குக் கோரமாய்க்கொடிய வினைகளை அழித்தொழித்தலால் உண்மையில் அகோரமே - கோரம் இல்லாத - சாந்தமே. 'கொன்றது வினையைக் கொன்று நின்றஅக் குணம்என் றோரார்'*9* என்னும் சிவஞான சித்தியை நோக்குக. இதனானே அகோர மந்திரம் பிராயச்சித்த மந்திரமாய் உள்ளது. 'ஒப்பில் பேரின்பத்து' என்பதனை, 'தனி நடம் செய்யும்' என்பதற்கு முன்னே கூட்டி யுரைக்க. பேரின்பத்து நடம், பேரின்பத்துக்கு ஏதுவாய நடம். 'உபயம்' இரண்டில் முன்னது, 'இரண்டாவதான உருவம்' என்றும், பின்னது, 'அருவம், இருவம் இரண்டுமான அருவுருவம்' என்றும் பொருள் பயந்தன. மூன்றாம் அடி இனவெதுகை.

இதனால், ஐந்து முக மூர்த்தியாகிய சதாசிவ மூர்த்தியே நிலவுலகத் தலங்களில் உருவத் திருமேனி கொண்டு நடம் செய்தல் கூறப்பட்டது. சிவாலயங்களில் கருவறையில் உள்ள இலிங்கம் சதாசிவ மூர்த்தமே. ஏனை உருவத் திருமேனிகள் மகேசுர மூர்த்தங்களாம்.

அடியார் அரன்அடி ஆனந்தங் கண்டோர்
அடியா ரவர்அர னத்தனரு ளுற்றோர்

அடிஆர் பவரே அடியவ ராவர்
அடியார்பொன் னம்பலத் தாடல்கண் டாரே. #2690

பொன்னம்பலம் முதலிய ஐந்து அம்பலங்களிலும், மற்றும் பல இடங்களிலும் ஆடற் பெருமானைக் கண்டு வணங்கினவரே 'அடியார்' எனப்படுவர். அவரே சிவானந்தத்தை அடைந்தவர்; சிவன் அருளைப் பெற்றனர்; சிவனது திருவடியைச் சேர்ந்தவர்.

விளக்கவுரை

'பொன்னம்பலத்தாடல் கண்டோர்' என்பதை முதலிற் கூட்டியுரைக்க. தலைமைபற்றிய இதனைக் கூறவே, மற்றவை தழுவப் பட்டன. மூன்றாம் அடியொழிந்த மற்றை மூன்றடிகளிலும் 'அடியார்' என வந்தனவும், மூன்றாம் அடியில் 'அடியில்' என்றதும் சொற்பொருட் பின்வருநிலையனி. 'அரன் அத்தன்' என்றது இருபெயர் ஒட்டு. இதனால், சிவாலய தரிசனத்தில் ஆடற்பெருமானது தரிசனத்தினஅ இன்றியாமையாச் சிறப்புக் கூறப்பட்டது.

அடங்காத என்னை அடக்கி அடிவைத்(து)
இடங்காண் பரானந்தத் தேஎன்னை இட்டு
நடந்தான் செயும்நந்தி தன்ஞானக் கூத்தன்
படந்தான்செய் உள்ளுட் படிந்திருந் தானே. #2691

பலவகையான நடனங்களையும் செய்பவன் சிவன். அவன் மிக மேலான ஞான டனத்தையும் செய்ய வல்லவன். அந்த ஞான நடனத்தினால், அடங்காத எனது தற்போதத்தைத் தனது வலது தாளால் மிதித்து அடக்கி, இடப்பக்கத்தில் காணப்படுவதாய, எடுத்த பாதத்தை எனது தலைமேல் வைத்து, என்னைப் பேரின்பக் கடலுள் ஆழ்த்தினான். இனி 'உள்ளக் கிழியின் உருவெழிதிப்'* பார்க்கும் யோகிகட்கு அக்கிழி யுருவில் ஒன்றி விளங்குகின்றான்.

விளக்கவுரை

'என்னை' இரண்டில் முன்னது, 'எனது போதத்தை' என்றபடி. 'அடங்காத என்னை அடக்கி' என்பதனோடு, 'மலம் சாய அமுக்கி'* என்பதையும், 'இடம் காண் அடி வைத்து என்னைப் பரானந்தத்து இட்டு' என்பதனோடு, 'அருள்தான் எடுத்து - நேயத்தால் - ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல்' என்பதையும் ஒப்பீடுக. மூன்றாம் அடியை முதலிற் கூட்டி உரைக்க. 'நடந்தான்' என்பதில் 'தான்', அசை. ஞானக்கூத்தை வகுத்தரைப்பதே 'மாயை தனை உதறி'* எனத் தொடங்கும், ஞானக்கூத்து ஞானியர் பொருட்டச் செய்வதாகலின், ஈற்றடியிற்கூறியது யோகியர்க்காயிற்று. ஞானியரும், யோகியரும் அல்லாத பிறர்க்கெல்லாம் சிவன் ஊன

நடனத்தைச் செய்வான் என்க. அது, 'தோற்றம் துடியதனில்'* என்னும் வெண்பாவில் சொல்லப்பட்டது.
இதனால், பொற்பதிக் கூத்துள் ஞான நடனம் உயிர்கட்குத் தரும் பயன் கூறும் முகத்தால், அதன் தரிசனச் சிறப்பு உணர்த்தப்பட்டது.

உம்பரில் கூத்தனை உத்தமக் கூத்தனை
செம்பொற் றிருமன்றுட் சேவகக் கூத்தனை
சம்பந்தக் கூத்தனைத் தற்பரக் கூத்தனை
இன்புறு நாடிஎன் அன்பில்வைத் தேனே. *#2692*

நான், பிறவியாகிய துன்பத்தினின்று நீங்கி, வீடாகிய இன்பத்தை அடைதற்குரிய வழி யாது' என்று ஆராய்ந்து கூத்தப் பெருமானை என்னுடைய அன்பிற்குள் அகப்படும்படி வைத்தேன். தேவருள் அஅவனே கூத்தாட வல்ல பெருமான். அவனது கூத்து எல்லார் கூத்தினும் மேலாய கூத்து; செம்பொன் அம்பலத்தில் வெற்றியுடன் விளங்குதல் கூத்து; அனைத்துப் பொருள்காவல் இயகத்தோடு மிக நெருக்கமான தொடர்புடைய கூத்து. உபநிடதங்கள், 'தத்' என்னும் சொல்லால் சுட்டுகின்ற பரம் பொருளின் கூத்து.

விளக்கவுரை

ஈற்றடியை முதலில் வைத்து உரைக்க. 'கூத்தன்' என வந்தன பலவும் ஒருபொருள்மேல் வந்த பல பெயர். கூத்தின் சிறப்பை அதனை உடையானோடு பலவகையில் சேர்த்துக் கூறினார்.
'கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்கு
அருளிய திருமுகத்து அழகுறு சிறுநகை
இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்'*8*
என்பதனால், காளியோடு ஆடி, 'அவளை வென்ற அந்த நடனமே தில்லையில் செய்யப்படுகின்றது' என ஆளுடைய அடிகள் அருளிச் செய்தவாறே இவரும் பொன்மன்றுட் கூத்தினைச் 'சேவகக்கூத்து' என்றார். சேவகம் - வீரம், வெற்றி. கோயிற் புராணமும் இவ்வாறே கூறுதல் காண்க.
'சம்பந்தம்' என்றது, இங்கு அத்துவித சம்பந்தத்தை. அதனைச் சித்தாந்த நூல்கள் இனிது விளக்கும்.
'நாடி வைத்தேன்' என்றதனால், அதன் பயன் எண்ணியது எண்ணியவாறே கிடைத்தமை பெறப்பட்டது. அதனை இங்குக் கூறியதனால், 'நீவிரும் அதனை அவ்வாறு வைத்தால் இன்புறுவீர்கள்' என்பது குறிப்பெச்சமாயிற்று.
'சித்தமும் செல்லாச் சேட்சியன காண்க!
பத்தி வலையில் படுவோன் காண்க!'*J*

'ஆர்காண வல்லார் அரனவனை? அன்பென்னும்
போர்வை யதனாலே போர்த்தமைத்துச் சீர்வல்ல
தாயத்தால் நாமும் தனிநெஞ்சி னுள்ளடைத்து
மாயத்தால் வைத்தோர் மறைத்து'1
'அழலார் வண்ணத்து அம்மானை
அன்பில் அணைத்து வைத்தேனே'3
எனப் பிற திருமுறைகளிலும் வந்தவாறு இங்கும் நாயனார், 'அன்பில் வைத்தேன்' என்று அருளிச்செய்தார். அதனால், வேதங்களாலும் அறியவாராது 'அது' எனச் சேய்மைச் சுட்டாகப் பொதுவிலே சுட்டப் படுகின்ற பரம்பொருள் அன்பர்தம் அன்பிற்குள்ளே வந்து அகப் படுதல் தெளிவாகும். பொற்பதிப் கூத்துப் பல வகைக் கூத்தும் ஆதல் தோன்றுதற்கு. இடையே 'சொம்பொன் திருமன்றுட் கூத்து' என்றார். இதனால், பொற்பதிக் கூத்தின் தரிசனம் பலவகைக் கூத்தின் தரிசனமுமாய் வீடு பயத்தல் கூறப்பட்டது.

மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுட் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப்பொற் கூத்தனை யாரறி வாரே. #2693

சிவன் தனது கூத்தினை மாணிக்கச் சபையில் மாணிக்கக் கூத்தாக இயற்றுவான். தில்லை பொற்சபையில் பொற் கூத்தாக இயற்றுவான். மற்றும் வெள்ளி முதலிய சபைகளில் அது அதற்குத் தக்க கூத்தாக இயற்றுவான். அனைத்தையும் கடந்த தனது இயற்கைப் பரஞ்சோதி வெளியில் சிவானந்தக் கூத்தாக இயற்றுவான். (அது முதலிலே சொல்லப்பட்டது.) ஆகவே, ஒருவகையாய் இல்லாமல் பலவேறு வகையாக இயற்றுகின்ற ஆணிப்பொற் கூத்தனது கூத்து வகைகளையெல்லாம் யார் வரையறை செய்து கூறவல்லவர்!.

விளக்கவுரை

'ஒருவரும் இல்லை' என்பதாம். பூணுதல் - வெள்ளி முதலியவற்றைத் தாமதமாகக் கொள்ளும். 'சடைக் கூத்து' என்பதைச் 'சடைபோலும் கூத்து' என உவமத் தொகையாக்கி, 'சிவனது சடை ஒன்றாய் இல்லாது பலவாய் விரிதல் போலப் பலவாய் விரியும் கூத்து' எனத் தொழிலுமாம் ஆக்குக. ஆணிப்பொன் - பிற பொன்னின் மாற்றுக்களையெல்லாம் அளந்து காட்டித் தான் வேறொன்றால் அளக்கப்படாத பொன். இதனை 'உரையாணி' என்பர். ஆணிப்பொன் போலும் கூத்து, பிற கூத்தின் தகுதிகளைத் தான் அளந்து, பிறிதொரு கூத்தினால் தன் தன்மை அளக்கப்படாத கூத்து.
'யார் அறிவாரே' என்றது, 'பொற்பதிகளில் சென்று காணின்

அக்கூத்துக்களின் வகையை ஒருவாறு உணர்ந்துரைத்தல் கூடும்' என்றபடி.
இதனால், பொற்பதிக் கூத்து அவனது கூத்து வகை பலவற்றையும் காட்டுதல் கூறப்பட்டது.

விம்மும் வெருவும் விழும் எழும் மெய்சோரும்
தம்மையும் தாம்அறி யார்கள் சதுர்கெடும்
செம்மை சிறந்த திருஅம் பலக்கூத்துள்
அம்மலர்ப் பொற்பாதத்(து) அன்புவைப் பார்கட்கே. *#2694*

பொற்பதிகளுள் உள்ள நேர்மை மிகுந்த அம்பலங்களில் நிகழும் திருக்கூத்தில் அழகிய மலரும் பொன்னும் போலும் எடுத்த திருவடியில் தம் அன்பை வைப்பவர்கட்கு அவ்வன்பினால் உடம்பு அழுகையில் விம்மும்; 'அதிருவடி எங்கே மறைந்து விடுமோ' என அஞ்சி நடுங்கும்; தந்து அடைக்கல நெறியையும், பிழைபொறுக்க வேண்டுதலையும் இனிது புலப்படுத்த வேண்டி நிலத்தின்மேல் நெடுங்கிடையாய் விழும்; பின்பு திருக்கூத்தினைக் காண வேண்டி எழும்; தளர்ச்சியடையும்; முடிவாக அவர்கள் தம்மையே தாம் மறந்துவிடுவார்கள் என்றால் 'தற்பெருமை' என்பது அவர்கட்கு எங்கேயிருக்கப் போகின்றது? அஃது எங்கும் இல்லாது, அறவே கெட்டொழியும்.

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கிப் பின், 'மெய்' என்பதை 'விம்மும்' என்பதற்கு முன்னே கூட்டி உரைக்க. 'தம்மையும்' என்னும் உம்மை சிறப்பு. சதுர் - பெருமை. திருக்கூத்தை அன்போடு தரிசிப்பவர்க்கு இம்மெய்ப்பாடுகள் உளவாதலைத் திருநாவுக்கரசரது வரலாற்றில் சேக்கிழார்,

'கையும் தலைமிசை புனைஅஞ் சலியன;
கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யும் தகையன; கரணங் களும்உடன்
உருகும் பரிவின; பேறெய்தும்
மெய்யும் தரைமிசை விழும்;முன் பெழுதரும்;
மின்றாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடும்அவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்'

எனக் கூறியவாற்றானும் அறிக.
இன்னும்,

'விம்மா வெருவா விழியாத் தெழியா வெருட்டுவார்;
தம்மாண் பிலராய்த் தரியார்; தலையால் முட்டுவார்;
எம்மான், ஈசன், எந்தை, என் அப்பன் என்பார்கட்கு

அம்மான் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்'
என்றதையும் காண்க. நேர்மை - மலக்கோண் நீங்கிய திருவருள் நேர்மை.
இதனால், பொற்பதிக் கூத்தினைத் தரிசிப்பார்க்கு உண்டாகும் அனுபவம் கூறப்பட்டது.

தேட்டறும் சிந்தை திகைப்பறும் பிண்டத்துள்
வாட்டறும் கால்புந்தி யாகி வரும்புலன்
ஓட்டறும் ஆசை அறும் உளத் தானந்த
நாட்டம் முறுக்குறு நாடகம் காணவே. *#2695*

காண்பவரது உள்ளங்களில் சிவானந்த நாட்டத்தையே முறுகி வளரச் செய்கின்ற பொற்பதிக் கூத்துக் கண்டவுடன் கண்டவர்களது சித்தம் வேறு எதனையும் சிந்தியாது; அந்தத் திருக்கூத்து ஒன்றை மட்டுமே சிந்திக்கும். உயிர்ப்பினால் பொறிகள் வழியாகப் புலன்களின்மேல் செல்வனவாய ஏனைய அந்தக் கரணங்களும் அவ்வாறு செல்லமாட்டா. ('அளப்பருங் கரணங்கள் நான்கும் சிந்தையே ஆக'* என்ற அனுபவத்தை நினைவு கூர்க.) அங்ஙனமாகவே, உலக ஆசைகள் பலவும் அற்றொழி வனவாம். அவை ஒழியவே உலகப் பொருள்களைத்தேடி, அவை கிடையாமையால் மனம் திகைத்தலும், தேடுதலாலும், திகைத்தலாலும் உடல் இளைத்தலும் நிகழா.

விளக்கவுரை

'ஆனந்த நாட்டம்' என்பது முதலாகத் தொடங்கி, 'சிந்தை தேட்டறும்' என மாற்றி, 'திகைப்பறும், பிண்டத்துள் வாட்டறும்' என்பதை இறுதியில் வைத்து உரைக்க. தேடுதல் - ஆராய்தல். தேடு, தேட்டு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். 'காலால், புந்தியாகி வரும் புலன்மேல் (மனம்) ஓட்டறும்; திகைப்பறும்' என உருபு விரித்து, 'மனம்' என்பது வருவிக்க. மனம் பொறிவழிச் சென்று கவர்கின்ற புலன்கள் முடிவில் புத்தியின்கண் வந்து முடிதலின், 'புந்தியாகி வரும் புலன்' என்றார். 'புலன்மேல்' என, 'மேல்' என்பது விரிக்க. பிண்டம் - உடல். 'வாட்டம்' என்பதில் அம்முக் குறைந்து நின்றது.
இதனால், பொற்பதிக் கூத்துக் காண்பவர்க்கு அக்கட்சியே முத்திப் பேரின்பமாதற் சிறப்புக் கூறப்பட்டது.

காளியோ டாடிக் கனகா சலத்தாடிக்
கூளியோ டாடிக் குவலயத் தேஆடி
நீடிய நீர்த்தீக்கால் நீள்வானத் தேயாடி
நாளுற அம்பலத் தேஆடும் நாதனே. *#2696*

சிவன், படைப்புக் காலத்தில் உயிர்களைக் காளியின் பிடியிலிருந்து விடுவித்தற்கு அவளோடு நடனப் போட்டி யிடும் முறையில் நடனம்

ஆடி அவளை வெள்கச் செய்து வென்றான். பின்பு தேவர்கள் கண்டு தனது முதன்மையை உணர்ந்து உய்தற் பொருட்டு அவர்கள் முன் மேரு மலையில் நடனம் ஆடினான். பின் நில உலகில் சுடலைகளில் பேய்களோடு கூடி நடனம் ஆடினான். பஞ்ச பூதங்களில் எப்பொழுதும் ஒருவரும் அறியாதபடி நடனம் ஆடிக் கொண்டிருக்கின்றான். அவன் பொற்பதிகளில் உள்ள அம்பலங்களில் யாவரும் காண, எந்நாளும் ஆடிக்கொண்டிருக்கின்றான்.

விளக்கவுரை

'அவ்வருமை யறிந்து அப்பதிகளில் சென்று அந்த நடனத்தை வணங்குதல் மானிடர்க்குக் கடன்' என்பது குறிப்பெச்சம்.
'காளி, தாருகன்' என்னும் அசுரனை அழித்து அவனது குருதியைக் குடித்த காரணத்தால், அவனைப் போலவே உலகை அழிக்கத் தொடங்கியபொழுது சிவன் அவளோடு நடனப்போர் செய்து அவளது சினத்தை அடக்கினான்' என்பது புராண வரலாறு.
'நீடுயர் மண்ணும் விண்ணும் நெடுவேலை குன்றொடு
உலகேழும் எங்கும் நலியச்
சூடிய கையராகி இமையோர் கணங்கள்
துதிஓதி நின்று தொழலும் ஓடிய தாருகன்றன் உடலம் பிளந்தும்
ஒழியாத கோபம் ஒழிய
ஆடிய மாநடத்து எம் அனலாடி பாதம்
அவையாம் நமக்கொர் சரணே' என்னும் அப்பர் திருமொழிக் குறிப்பைக் காண்க. தாருகன் - ஆணவ மலம். அவனை அழித்த காளி - மாயை. சிவன் அவனது கோபத்தை அடக்கியது. மாயையின் மயக்கத்தை நீக்கியது. எனவே, உயிர்களைக் கேவல சகலங்களின் நீக்கிச் சுத்தத்தை அடையச் செய்தலே சிவன் செய்யும் திருக்கூத்து' என்பது விளங்கும். காளியோடு நடனம் ஆடிய ஐதிகத்தைக் குறிப்பதே திருவாலங்காட்டுத் தலம். எனவே, அவ்விடத்து நடனமே பழைய நடனம் ஆதல் விளங்கும்.
தேவர்கள் காண மேருமலையில் ஆடியதை இம்மந்திரத்தால் அறிகின்றோம்.
சிவன் சருவ சங்காரத்தின் பின் உடல்அற்ற உயிர்களோடு கூடி நடனம் ஆடுதல் அறியாதார் உலகத்தில் பேய்களோடு கூடிச் சுடுகாட்டில் ஆடுவதாக எண்ணுவர். அவர்தம் மனப்பான்மை பற்றி அதனையும் சிவன் உடன்பட்டுக் கொள்கின்றான். 'குவலயத்தக் கூளியோடு ஆடி' என ஒரு தொடராக ஓதற்பாலதனை இரண்டு தொடராகப் பிரித்து ஓதினார். சிவனது செயல்கள் எல்லாம் அவனது திருக்கூத்தாகவே கூறப்படுதல் பற்றி. அவன் பஞ்ச பூதங்களைச்

செயற்படுத்தி நிற்றலையும் அவனது திருக்கூத்தாகக் கூறினார். 'எத்துணைப் பெரியோன் எத்துனை எளியனாய் வந்து பொற்பதிகளில் ஆடுகின்றான்' என்பதை விளக்குதற்கு அவனது பெருநடனங்கள் பலவற்றையும் எடுத்தோதினார். மூன்றாம் அடி உயிரெதுகை பெற்றது.
இதனால், பொற்பதிக் கூத்தின் அருமை உணர்த்தப்பட்டது.

மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூரும்இவ் வானின் இலங்கை குறிஉறும்
சாரும் திலைவனம் தண்மா மலயத்தூ
டேறும் சுழுமுனை இவைசிவ பூமியே. *#2697*

('சிவன் அண்டம், பிண்டம்' இரண்டிலும் நடம் புரிகின்றான்' என்பதனாலும், 'பிண்டத்துள் இருதயத்திலே நடம் புரிகின்றான்' என்பதனாலும் அண்டமும், பிண்டமும் சமம் ஆகின்றன. அம்முறையில் நோக்கும் பொழுது) பிண்டத்தில் நடு நாடியாகிய சுழுமுனா நாடியே மேரு மலையும், இடைநாடியே இலங்கையும், பிங்கலை நாடியே மேருவிற்கு அப்பால் உள்ள நில உருண்டையின் வடமுனையும் ஆகும். 'இனி, 'மேரு' எனப்படும் நடுநாடி மேல் நோக்கிச் செல்கின்ற மணிபூரகம் பொதிய மலையும். இருதயம் தில்லைவனமும் ஆகும். ஆகவே மேரு முதலியவற்றை உடைய நிலம் சிவனது திருவருள் மிக்கு விளங்குகின்ற சிவநிலம் ஆதல்போல், சுழுமுனை முதலியவற்றை உடைய பிண்டமும் சிவநிலமேயாம்.

விளக்கவுரை

'நடு நாடி மேரு வாய் உறும்; இடை இலங்கையாய் உறும், பிங்கலை குறியாய் உறும்; மலயத்தூடு ஏறும் சுழுனை தில்லை வனத்துச் சாரும் ஆகவே, இவைகளையுடைய பிண்டம் வெளியே இனிது விளங்குகின்ற நிலம் போல சிவபூமி என இயைத்துக் கொள்க.
குறி - எல்லை. அது வட எல்லையைக் குறித்தது. முன்னர்க் கூறிய உருவக முறையால், 'மலயம், தில்லைவனம்' என்பன மணி பூரகத்தையும் இருதயத்தையும் குறிப்பவாயின. 'வான்' என்றது அதன்கண் அடங்கி விளங்கும் நிலத்தை. இன், உவம உருபு. 'இலங்கை, குறி' என்பவற்றை, இடைபிங்கலைகளோடு நிரல் நிறையாக இயைக்க. 'ஆய் உறும்' என ஆக்கம் விரித்து எல்லா வற்றோடும் கூட்டுக. 'மிக்க' என்பதன் ஈற்று அகரம் தொகுத்த லாயிற்று. 'இவை' என்பது தானியாகு பெயராய் இவைகளையுடைய உடம்பைக் குறித்தது.
இதனால், அண்டத்தில் பொற்பதிகள் இருத்தல் போலப் பிண்டத்திலும் பொற்பதிகள் இருத்தல் கூறப்பட்டது.

பூதல மேருப் புறத்தான தெக்கணம்
ஓதும் இடைபிங் கலைஒண் சுழுனையாம்
பாதி மதியோன் பயில்திரு அம்பலம்
ஏதமில் பூதாண்டத் தெல்லையின் ஈறே. #2698

[முன் மந்திரத்தில் பிண்டம் அண்டத்தோடு ஒப்ப வைத்து நோக்கும் முறை கூறியது போல, அண்டத்தைப் பிண்டத்தோடு ஒப்ப வைத்து நோக்கினால்,]
மேருவிற்கு அப்பால் உள்ள நில உருண்டையின் வடமுனை நிலமகட்குப் பிங்கலை நாடியும், தெற்கேயுள்ள இலங்கை இடைநாடியும், சிவன் நடனம் புரிகின்ற தலங்களுள் தலையாயதாகிய தில்லை நடுநாடியும் ஆகும். பூதகாரியமாகிய அண்டம், பிண்டம் இரண்டனுள் அண்டம் பிண்டத்தோடு ஒப்ப இவ்வாறு வரையறை செய்து உணரப்படும்.

விளக்கவுரை

'அண்டம், பிண்டம் என்பவற்றுள் பிண்டத்தை அண்டத்தோடு ஒப்பித்தலே மரபு போலும்' என மலையாமைப் பொருட்டு, 'அண்டத்தைப் பிண்டத்தோடு ஒப்பித்தலும் மரபே' என்றற்கு இது கூறினார். இதனால், அண்டம் பிண்டம் இரண்டும் தம்முட் சமம் ஆதல் விளங்கிற்று. கோயிற் புராணத்திலும்,

'அலைந்திடும் பிண்டம், அண்டம்
அவைசமம் ஆத லாலே,
இலங்கைநேர் இடைபோம்; மற்றை
இலங்குபின் கலையாம் நாடி
நலங்கிளர் இமய நேர்போம்;
நடுவுபோம் சுழுனை நாடி'

என்றும்,

'நாடரு நடுவின் நாடி
நலங்கிளர் தில்லை நேர்போய்க்
கூடும்'*

என்றும் இவ்வாறே கூறப்பட்டது.

'புறத்து ஆனது' என்பதன் ஈறு தொகுத்தலாயிற்று. 'இடை பிங்கலை' என்பவற்றை முன் மந்திரத்திற்கு இணங்க, 'புறத்து ஆனது, தெக்கணம்' என்பவற்றோடு எதிர்நிரல் நிறையாக இயைக்க. 'தெக்கணம்' என்றது. தென் கோடியாகிய இலங்கையை, 'நட்டம் பயில்' எனப் பயிலுதலுக்குச் செயப்படுபொருள் வருவித்துக் கொள்க. நில உருண்டைதான் பல பகுதிகளை உடைத்தாயினும், அவற்றுட் சிறந்தது, 'சுரும பூமி' எனப்படுகின்ற பரத கண்டமே இவ்வாறான பல

சிறப்புக்களை உடையது என்க.
இதனால், பிண்டத்தைப் போல அண்டமும் நாடி முதலியவற்றை உடைத்தாதல் கூறப்பட்டது.
'அண்டம், பிண்டம் இரண்டும் சிவன் நடம்புரியும் பொற்பதிகளை உடையன' என்றற்கு இவ்விரு மந்திரங்களும் இவ்வதிகரத்தில் அருளிச்செய்யப்பட்டன.

*11.14.*பொற்றில்லைக் கூத்து

அண்டங்கள் ஓரேழும் அம்பொற் பதியாகப்
பண்டைஆ காசங்கள் ஐந்தும் பதியாகத்
தெண்டினிற் சத்தி திருவம் பலமாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே. *#2699*

பொன் வகைகளில் சிறந்தமை பற்றி, 'அம்பொன்' எனப்படும் செம்பொன் நகரமாகிய தில்லைப் பதியே அனைத்து அண்டங்களாகவும், அப்பதியில் உள்ள ஆலயத்தின் ஐந்து ஆவரணங்களே பூதங்களில் ஒன்றாகிய ஆகாயம் போலாது, அதற்கு மிக முன்னே சுத்த மாயையில் தோன்றி, அனைத்துப் பொருள் களையும் தம்முள் அடக்கி நிற்கின்ற நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைக ளாகவும், அவ் ஆலயத்தின் முதல் ஆவரணத்துள் உள்ள திரு வம்பலமே ஐந்தொழில் செய்யும் சத்தியாகவும் அமையும்படி நின்று, அனைத்தையும் கடந்து நிற்கும் மேலான ஒளியாகிய சிவன் நடனத்தை விரும்பிச் செய்கின்றான்.

விளக்கவுரை

அண்டப் பகுதிகளை எடுத்துக் கூறவே, முன் அதிகாரத்தில் அண்டத்தோடு ஒப்பிக்கப்பட்ட ஒப்புமை பற்றிப் பிண்ட வகைகளும் அடங்கின. அதனால், 'பொற்றில்லைக் கூத்துத் தானே அண்டபிண்டம் அனைத்தையும் இயக்குகின்ற கூத்தாம்' எனக் கூறியவாறாயிற்று.
இன்னும் 'பரஞ்சோதி' என்றதனால், ஒரு நாமம், ஓருருவம், ஒன்றும் இல்லாத அந்தப் பரமசிவன்தானே பொற்றில்லையுள் உருவும், பெயரும், தொழிலும் கொண்டு ஆடுகின்றான்' என்பது தோற்றுவிக்கப்பட்டது.
தண்டு, 'தெண்டு' என மருவிற்று. தண்டு - செங்கோல்' நீதி. அஃது உயிர்களை வினை நெறிக்கு உட்படுத்தி ஆளும் ஆளுகையைக் குறித்தது. 'தெண்டினினின்' என இன்னுருபின் மேல் இன்சாரியை வந்தது சிறுபான்மை வழக்கு உகத்தல் - விரும்புதல். அது தன் காரியந்தோன்ற நின்றது.
கோயிலை, 'நகர்' என்றல் பற்றி, 'பதி' என்றார். அதனை ஐந்து

ஆகாசமாகக் கூறினமையின், அஃது ஐந்து ஆவரணங்களை உடைத்தாதல் விளங்கிற்று. அனைத்தையும் அடக்கி நிற்றல் பற்றிக் கலைகள் 'ஆகாசம்' எனப்பட்டன.
இதனால், 'தில்லைத் திருக்கோயிலின்கண் உள்ள திருவம்பலத்தில் செய்யப்படும் திருக்கூத்தே பொற்றில்லைக் கூத்தாம்' என்பதும், அதன் சிறப்பும் கூறப்பட்டன.

குரானந்த ரேகையாய்க் கூர்ந்த குணமாம்
சிரானந்தம் பூரித்துத் தென்றிசை சேர்ந்து
புரானந்த போகனாய்ப் பூவையும் தானும்
நிரானந்த மாக நிருத்தஞ்செய் தானே. *#2700*

குரு உணர்த்தியருள்கின்ற இன்பக் கதிராய்ப் பின் பெருகி விளைகின்ற தலையாய இன்பத்தைத் தன்னுள் நிரம்பக் கொண்டு சிவன் தென்னாட்டில் தில்லையை அடைந்து மங்கையோடு உடனாம் இன்பப் போக வடிவினனாய், நிலையான இன்பத்தைத் தரும் நடனத்தைச் செய்கின்றான்.

விளக்கவுரை

'அதனைத் தவறாது சென்று கண்டு தொழுதல் வேண்டும்' என்பது குறிப்பெச்சம்.
குரு + ஆனந்தம் = குரானந்தம். 'ரேகை', ஒளியின் சிறு கூறு. குரு உபதேசத்தில் சிவானந்தம் கேள்வியளவில் சிறிதே புலப் படுதலால் அதனை 'ரேகை' என்றும், பின்னர்ச் சிந்தித்தல், தெளிதலால் பெருகி வருதலால் 'கூர்ந்த' என்றும், அங்ஙனம் பெருகி எல்லையின்றி விளைகின்ற இன்பம் சிவனுக்கு 'வரம்பில் இன்பம்' என்னும் குணமாய் இருத்தலின் 'குணமாம் சிரானந்தம்' என்றும், அஃது அவனது நடனத்தில் பொங்கி வழிதலால் 'பூரித்து' என்றும் கூறினார். 'தென்சை' என்றது இங்குத் தில்லையை ஆதலின், அதற்கு இவ்வாறு உரைக்கப்பட்டது. தில்லையை அவன் தேர்ந்து கொண்டது, 'அதன் சிறப்பு நோக்கி' என்றே கொள்ளப்படும். 'மாதவம் செய்த தென்சை'*9* எனச் சேக்கிழாரும் குறித்தருளினார். புரம் - திருமேனி; வடிவம். 'பூவையும் தானுமாம் ஆனந்த போக புரனாய்' என்க. ஆனந்தம், சிவானந்தம். போகம் - உலக இன்பம். அவன் போக வடிவினனாய் இருந்து தரும் போகம் சிவானந்தத்திற்குத் தடையாகாமை பற்றி, 'ஆனந்த போகம்' என்றார், மொழியின் இனிமை பற்றி மகளிரைக் 'கிளி, பூவை' என உவம ஆகுபெயராற் கூறுதல் இலக்கிய வழக்கு. 'நிர்' என்னும் உபசர்க்கம் நிலை பேற்றையும் உணர்த்தும், நிர்த்தாரணம் நிர்ணயம்' முதலியவற்றிற் போல. இம்மந்திரத்திற்குப் 'பரஞ்சோதி' என்னும் எழுவாயை முன் மந்திரத்திலிருந்து கொள்க.

இதனால், தில்லைக் கூத்தினைச் சிவன் மேற்கொண்ட வகை -யும், அது போகம், மோட்சம் இரண்டையும் தருதலும் கூறப்பட்டன.

ஆதி பரன்ஆட அங்கை அனலாட
ஓதும் சடையாட உன்மத்தம் உற்றாடப்
பாதி மதியாடப் பாராண்டம் மீதாட
நாதமொ டாடினான் நாதாந்த நட்டமே. *#2701*

சிவன் தான் ஆடும்பொழுது, அவனோடு உடன் ஆடுவன பல. அவ்வாறு அனைத்தும் ஆடும்படி அவன் தான் நாதாந்தத்தைக் கடந்து செய்யும் நடனத்தைத் தில்லையில் நாதத்தோடு கூடியே ஆடுகின்றான்.

விளக்கவுரை

'இஃது அதிசயம்' என்பதாம். 'ஆதிபரம்' என்பதன் பின் 'தான்' என்பது வருவிக்க. கை முதல் மதியீறாகச் சொல்லப் பட்டன எல்லாம் அவனுடையனவே. ஓதும் சடை, பிறருக்கு உரித் தாகாது அவனுக்கு உரித்தாகச் சொல்லப்படுகின்ற சடை. எனவே, 'முதல் இருடியாவான் சிவனே' என்பது விளங்கும். 'விஸ் வாதிகோ ருத்ரோ மகரிஷி;' என வேதமும், 'முன்னியாய் நின்ற முதல்வா போற்றி'* எனத் திருமுறையும் கூறும். உன்மத்தம் சடையில் அணிந்த ஊமத்தை மலர். அனல், வினையைப் போக்குதலையும், சடை ஞானத்தைத் தருதலையும், ஊமத்தை ஆனந்தம் விளைத்தலையும், பிறை அருள் வழங்குதலையும், குறிப்பால் உணர்த்துவன. 'பாரும், மீது அண்டமும் ஆட' என்க. இது அவன் ஆட, அனைத்தும் ஆடுதலைக் குறிக்கும். 'நாதமொடு' என்பதில் நாதம் சிலம்பொலி. கந்திருவர் யாழொலி முதலிய இன்னொலிகள். நாதாந்தம் - முடிவில் உள்ள நாத தத்துவத்திற்கு அப்பால். 'அங்குச் செய்யப்படுவதே ஆனந்த நடனம்' என்பது மேற் கூறப்பட்டது.*8* 'அந்த நடனத்தைச் சிவன் இந்நிலையில் செய்கின்றான்' என்றார்.

கும்பிட அம்பலத் தாடிய கோநடம்
அம்பரன் ஆடும் அகிலாண்ட நட்டமாம்
செம்பொரு ளாகும் சிவபோகம் சேர்ந்துற்றால்
உம்பர மோனஞா னாந்தத்தின் உண்மையே. *#2702*

அழகிய திருமேனியுடன் பெருமான் தில்லை யம்பலத்தில் ஆடுகின்ற தலைமை வாய்ந்த அந்த நடனம் அகில உலகங்களுக்குமான நடனமாகும், அதனை வணங்க வேண்டி அவ்வம்பலத்தை அடைந்தால், அவ்அடைவே மேலான ஞானத்தின் முடிநிலையாகிய மௌன நிலைப்பேறாகும்.

விளக்கவுரை

'அம்பரன்' என்பதை முதலிலும், 'கும்பிட' என்பதை இரண்டாம் அடியின் இறுதியிலும் கூட்டி உரைக்க. அம்பலம், அதிகாரத்தால் இங்குத் தில்லையம்பலம் ஆயிற்று. கோ - தலைமை. 'அகிலாண்டத்திற்கும் ஆடும் நட்டமாம்' என்க. செம்பொருள், கண்கூடாக அறியப்படும் பொருள். ஈண்டுள்ளாரால் அங்ஙனம் அறியப் படும் சிவலோகம் தில்லையம்பலம்' என்க. 'கும்பிடச் சேர்ந்துற்றால்' என்றது, 'கும்பிடுதற்கு முன்பே பயன் விளையும்' என விளைவு கூறிய வாறு. உம்பர்அம் எனப் பிரிக்க. உம்பர் - மேன்மை. அம் - அழகு; சிறப்பு' என்றபடி 'மோனமாகிய அந்தம்' என இயையும், மௌன மாவது, தற்போதம் அற்ற நிலை. 'மோனம் என்பது ஞான வரம்பு'*என ஔவையாரும் அருளிச் செய்தார். ஞான அந்தத்தின் உண்மை - ஞானத் -தின் முடிநிலையால் விளையும் மெய்யான பேறு; பரமுத்தி. தில்லைத் திருநடம், கண்டு வணங்கினஆர்க்கு வீடுபேற்றைத் தரும்' என்றபடி.

இதனால் தில்லைக் கூத்தின் தலைமையும், பயனும் கூறப்பட்டன.

மேதினி மூவேழ் மிகும்அண்டம் மூவேழு
சாதக மாகும் சமயங்கள் நூற்றெட்டு
நாதமொடு அந்தம் நடனாந்தம் நாற்பதம்
பாதியோ டாடும் பரன்இரு பாதமே. *#2703*

நில அண்டத்தின் பகுதி மூவேழும், அவற்றிற்கு மேல், 'நீர் முதலிய பூதம் நான்கு, அகங்காரம், புத்தி, பிரகிருதி' என்னும் தத்துவ அண்டங்கள் ஏழும் உண்மை வீட்டிற்கு வழியாகின்ற உபநிடத நூல்கள் நூற்றெட்டும், இன்னும் அராகம் முதல் நாதம் முடிவாய் உள்ள தத்துவ புவனங்களும் ஆகிய அனைத்தும் சிவனது திருக்கூத்தின் எல்லையையே எல்லையாக உடையன. இனி உயிர்கள் அடையும் சாலோக, சாமீப, சாரூப, சாயுச்ய முத்திகளும் மாதுடன் ஆடும் சிவனது திருவடி நிலைகளேயாகும்.

விளக்கவுரை

நில அண்டப் பகுதி மூவேழாவன, கீழுலகம் ஏழு, நிலப்பரப்பின் தீவுகள் ஏழு, மேலுலகம் ஏழு, புவனங்களை நோக்கும் பொழுது தன்மாத்திரை, கன்மேந்திரியம், ஞானேந்திரியம், மனம். இவை அகங்காரத்தில் அடங்குதலைச் சிவஞான யோகிகளது இரண்டாம் சூத்திர மாபாடியத்துப் பிரதிட்டாகலை விளக்கத்தில் காண்க. வேதாந்த சித்தாந்த நூல்களே உண்மை ஞான நூல்களாதல் பற்றி அவைகளையே 'சாதகம்' எனக்கொண்டு, அவற்றுள் வேதாந்த நூல்களையே சமய நூல்களாகச் சுட்டினார். 'சமயம்' என்றது சமய நூல்களை. ஒடு, எண் ஒடு. அதன் இயல்பு ஓரிடத்தில் நின்றே

ஏனையிடத்தும் இயைதல் ஆதலை அறிக. அந்தம், இங்கு எல்லை. முன் நின்ற அந்தம் மேதினி முதலிய பிறவற்றோடும் சென்றியையும். 'மேதினி யந்தமொடு, மூவேழ் அந்தமொடு' என இவ்வாறு எண்ணி, 'நடனாந்தம்' என்பதனோடு முடிக்க. 'பதம்' என்றது முத்தியை, 'பாதி' என்றது பாதியாய் இருப்பவனை.
இதனால், அனைத்தும் திருக்கூத்துள் அடங்குதல் பொது வகையால் கூறப்பட்டதாயினும், கருத்து வகையால் தில்லைக் கூத்துள் அடங்குதலே கூறப்பட்டதாம்.

இடைபிங் கலைஇம வானோ டிலங்கை
நடுநின்ற மேரு நடுவாம் சுழுனை
கடவும் திலைவனம் கைகண்ட மூலம்
படர்வொன்றி யெண்ணும் பரமாம் பரமே. *#2704*

பிண்டத்தில் இடைகலை பிங்கலை நாடிகள் அண்டத்தில் உள்ள இலங்கையும், இமயமுமாகவும் நடு நாடியாகிய சுழுமுனை இரேசக பூரக வாயுக்களால் சூழப்படுதலால் சூரிய சந்திரர்களால் வலம் வரப்படுகின்ற மேருவாகவும் மதிக்கப்படும். அந்நிலையில் தில்லை நடுநாடியாக மதிக்கப்படுதலால், அங்கு நடனம் புரிகின்ற பெருமானே யோகியர் தம் மனம் ஒன்றி உள்கும் முதற் பொருளாவான்.

விளக்கவுரை

அஃதாவது, 'உலகம் முழுவதையும்' இயக்குபவ னாவான்' என்பதாம். 'கடவும் மூலம், கைகண்ட மூலம்' எனத் தனித்தனியாக இயைக்க. கடவுதல், யோகியர் பிராணனைச் செலுத்துதல். 'கடவும்' என்னும் பெயரெச்சம், 'மூலம்' என்னும் இடப்பெயர் கொண்டது. கைகண்ட - அனுபவம் பெற்ற. இஃது ஏதுப் பெயர் கொண்டு முடிந்தது. 'அனுபவம் பெற்றோர் யோகியர்' என்க. 'மூலம்' என்றது நடு நாடியை. படர்வு - நினைவு. 'பரம்' என்றது, 'முதற்பொருள்' என்றபடி. 'அங்கு (தில்லையில்) நடிகும் பரமே பரமாம்' என முடிக்க.
இதனால், தில்லைத் திருத்தலத்தின் முதன்மை கூறும் முகத்தால், அதன்கண் திருக்கூத்து நிகழ்த்தும் இறைவனது முதன்மை கூறப்பட்டது.

ஈறான கன்னி குமரியே காவிரி
வேறாம் நவதீர்த்தம் மிக்குள்ள வெற்பேழும்
பேறான வேதா கமமே பிறங்கலால்
மாறான தென்திசை வையகம் சுத்தமே. *#2705*

பரத கண்டத்தின் தென்னெல்லையாகிய, 'கன்னி துறை' எனப்படும் குமரித் துறையும், காவிரியும், பிற நவ தீர்த்தங்களும், 'ஆனை மலை, பசுமலை, நாகமலை சிராமலை, அண்ணாமலை, மறைமலை,

காளத்திமலை' என்னும் ஏழு மலைகளும், வேத ஆகம ஒழுக்கங்களுள் சிறந்து விளங்குதலால், அக்கண்டத்தில் நிலைதிரியாததாகிய தென்பகுதியே நிலவுலகத்தில் முத்தி நிலமாகும்.

விளக்கவுரை

காவிரியோடு உடன் வைத்து எண்ணத்தகும் வேறு ஒன்பது யாறுகள் 'பொருநை, (தாமிரவருணி) வையை, மணிமுத்தம், நிலா, (வெள்ளாறு), கெடிலம், தென்பெண்ணை, பாலி, கம்பை, பொன் முகலி' என்பன. மிக்குள்ள ஏனைய வெற்புக்களினும் மேம்பட்டுள்ளன. 'பிறத்தலால் என்பது பாடம் அன்று.

பரத கண்டத்தின் வடபகுதி யவனர்கள், முகமதியர்கள் முதலியோரால் பேரிடர்ப்பட்டுத் தனது நிலை திரிந்தது போலத் தென்பகுதி என்றும் நிலை திரிதல் இல்லாமை தோன்ற, 'மாறாத தென்திசை' என்றார். 'அசோக மன்னனும் பாலாற்றைக் கடந்து அப்பால் தெற்கே செல்ல இயலாமல் திரும்பி விட்டான்' என்பர்.

கங்கை, யமுனை, சரசுவதி, கோதாவரி முதலிய நதிகளாலும், இமயத் தொடராலும், காசி, கேதாரம் முதலிய தலங்களாலும் வடபகுதி இயற்கையில் சிறந்து நிற்பினும் அயலவர் நுழைவால் நிலை திரிந்தமை அறிக.

'வேதாகமங்கள் வடபகுதியில் தோன்றினவாகச் சொல்லப் படினும் அவைகளின் ஒழுக்கம் சிறந்து விளங்குதல் தென்பகுதியில் தான்' என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை 'சுத்தம்' என்றது முத்தி நிலையை. சுத்தத்தைத் தருவதனை, 'சுத்தம்' என்றார்.

சேக்கிழார் நாயனாரும் இவ்வாறே, 'மாதவம் செய்த திசை தென்திசையே' எனக் கூறி, அதற்குக் காரணம் யாது' என முனிவர்கள் வினாவ, உபமன்னியர், 'தில்லை, திருஆரூர், காஞ்சி, திருஐயாறு, சீகாழி முதலிய இறை தலங்களை மிகப்பெற்றிருத்தலே' என விடை யிறுத்து, பேசில் அத்திசை ஒவ்வா பிறதிசை' என வலியுறுத்திக் கூறினார் என அருளிச் செய்தார்.*1* இன்னும் அவர்,

'திசையனைத்தின் பெருமையெலாம் தென்திசையே வென்றேற'

எனவும்,

'அசைவில்செழுந் தமிழ்வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல'*3*

எனவும் அருளிச்செய்தார்.இந்நாயனார்,

'என்னைநன் றாக இறைவன் படைத்தனன்,
தன்னைநன் றாகத் தமிழ்ச் செய்யு மாறே,'

'தங்கி மிகாமைவைத் தான்தமிழ் வேதம் ... ...
உதாசனி யாதுட னேஉணர்ந் தோமால்,'*9*

என்பவற்றால் தமிழ் மொழியின் சிறப்பை உணர்த்தி, இங்குத் தமிழ்

நிலத்தின் சிறப்பை உணர்த்தினஆர். இவற்றால் எல்லாம் தமிழ் மொழியும், தமிழ் நிலமுமே சிவனருள் பெறுதற்குச் சிறந்த வாயிலாதல் விளக்கியவாறாம்.
இதனால், தென்திசையே சுத்தமாகத் தில்லை சுத்தத்தில் சுத்தமாய் உள்ளது' என்பது கூறப்பட்டது.

நாதத் தினில் ஆடி நாற்பதத் தேஆடி
வேதத் தினில் ஆடித் தழல்அந்தம் மீதாடிப்
போதத் தினில் ஆடிப் புவனம் முழுதாடும்
தீதற்ற தேவாதி தேவர் பிரானே. *#2706*

சொல்லுலகத்திற்கு முதலாகிய நாதத்திலும் அதன் காரியமாகிய நால்வகை வாக்குக்களிலும், அவ்வாக்குகளாய் வெளிப் படுகின்ற வேதாகமங்களிலும், அவற்றின்வழி வேட்கப்படுகின்ற வைதிகாக்கினி, சிவாக்கினி என்பவற்றின் கொழுந்திலும், உயிர்களின் அறிவிலும், எல்லா அண்டங்களிலும் ஆடுபவனாகிய சிவபிரான்,

விளக்கவுரை

*(*இதனை அடுத்துவரும் மந்திரத்தோடு கூட்டி முடிக்க.*)*

தேவரொ டாடித் திருவம் பலத்தாடி
மூவரொ டாடி முனிகணத் தோடாடிப் பாவினுள் ஆடிப் பராசத் தியில்ஆடிக்
கோவிலுள் ளாடிடும் கூத்தப் பிரானே. *#2707*

கூத்துக் கோலம் உடையனாய், 'கோயில்' எனப் -படும் தில்லையில் திருச்சிற்றம்பலத்தில் தேவர்களும், மூவர்களும், முனிவர்களும் வேதமும், தமிழும் பாட, உமையம்மைதன் கண்முன் ஆடுகின்றான்.

விளக்கவுரை

'ஆடி' என வந்த செய்தென் எச்சங்கள் பலவும் எண்ணின்கண் வந்தன. வேதத்தைக் கூறவே ஆகமமும் அடங்கிற்று. 'நாதத்தில் ஆடி' என்னும் மந்திரத்துள் 'சிவன் உலகரால் அறியப் படாத பல இடங்களில் ஆடுபவன் என்பதைக் கூறி, 'தேவரொடாடி' என்னும் மந்திரத்தில் 'அத்தகையோன் நம்மனோரும் எளிதிற் கண்டு உய்யும்படி தில்லையில் உருவத் திருமேனி கொண்டு ஆடுகின்றான்' என்பதைக் கூறினார். 'நாதம் முதலியவற்றில் ஆடுபவன் தில்லையில் தேவர் முதலியோர் சூழ அம்மைமுன் ஆடுகின்றான்' என ஒரு தொடரால் சுருங்கக் கூறிப் போகாமல், 'ஆடி, ஆடி, ஆடி ... ... ஆடுகின்றான்' என பல தொடரால் விரியக் கூறினார் தில்லைக் கூத்தின் அருமையை வலியுறுத்தற்கு. யாண்டும் மந்திரங்களைக் குனகமாகச் செய்தார். இக்கூத்தின் பெருமை ஒரு செய்யுளில் அடங்காமை காட்டிச்

சொல்லில் அடங்காமை தோற்றுவித்தற்குப் 'பராசத்தியில்' என்பது 'பரா சத்தி யிடத்தில்' என்னும் பொருட்டாய், 'பரா சத்தி முன் னிலையில்' எனப் பொருள் தந்தது. 'கோவிலுள் கூத்தப் பிரானாய்' என ஆக்கம் வருவித்து, ஆடிடும்' என முன்னே கூட்டி முடிக்க. இவ் இருமந்திரங்களாலும், 'தில்லைக் கூத்தின் பெருமை சொல்லில் அடங்காதது' என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது.

ஆறு முகத்தின் அதிபதி தான்' என்றும்
கூறு சமயக் குருபரன் தான் 'என்றும்
தேறினர் தேறுத் திருவம் பலத்துள்ளே
வேறின்றி அண்ணல் விளங்கிநின் றானே'. *#2708*

கூத்தப் பிரான் ஒரு திருமுகத்தையே கொண்டு, ஒருவனேயாய் இருப்பினும் 'ஆறு திருமுகங்களையுடைய முழுமுதற் கடவுளும் தானே' எனவும், அனைத்துச் சமய முதல்வனும் தானே' எனவும் தனது திருநடனக் குறிப்பை உணர வல்லவர்கள் உணர்ந்து கொள்ளும்படி தில்லைத் திருவம்பலத்துள் எஞ்ஞான்றும் விளங்கி நிற்கின்றான்.

விளக்கவுரை

'உச்சியில் ஒன்றும், நான்கு திசைகளிலும் நான்கும் ஆக ஐந்து முகங்களையே உடையவனாய்ச் சிவபிரான் உலகத்தை ஐந்தொழிற்படுத்து நடத்துகின்றான் என்றே வேதாகமங்கள் கூறியபோதிலும், 'அந்த ஐந்து திருமுகங்கள் வெளிப்படையாய் விளங்குவன' என்பதும், 'கீழ்நோக்கிய ஒருமுகம் ஞானியரே உணரும் வண்ணம் மறைந்துள்ளது' என்பதும் வேதாகமத் துணிபுகள் என்பதை நாயனார் இரண்டாம் தந்திரத்து 'அதோமுக தரிசனம்' என்னும் அதிகாரத்துள் குறிப்பால் உணர்த்தினமை காண்க. ஐந்து முகங்களும் பொதுவாக ஐந்தொழிலை இயற்றினும், அவரவர் விரும்பும் விருப்பத்தை நிறைவேற்றும் சிறப்புத் தொழில்களை அதோமுகம் செய்யும் என்க. அது தேவர் வேண்டுகோளுக்கு இரங்கி முருகனை அளித்த வரலாற்றால் நன்கு விளங்கும்.
'தோற்றம் துடியதனில்' என்னும் உண்மை விளக்க வெண்பாவால் கூத்தப்பிரான் ஐம்முகம் செய்யும் ஐந்தொழில்களைச் செய்தல் விளங்கும். 'வரைமகள்தான் காண்படியே' எனவும், 'மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம் பலத்தே ஆதியும் நடுவும் இல்லா அற்புதத் தனிக்கூத்தாடும் - நாதனார்' எனவும் பிற இடங்களிலும் 'பரா சத்தியில் ஆடி' என முன் மந்திரத்திலும் கூறிய வாறு தேவியை உடன் கொண்டு, அவள் காண ஆடுதலே அதோமுகம் செய்யும் செயலைக் குறிக்கும். சமயங்கள் யாவும் அவற்றின் முதலாசிரியர்களாலே தோற்றுவிக்கப்படினும் அவர்களை அவ்வாறு தோற்றுவிக்கச்

செய்தவனும் சிவனே யாதல் பற்றி, 'கூறு சமயக் குருபரன் தான்' என்றார். அதுவும் அதோமுகச் செயல்களில் ஒன்றே என்க. வேறின்மை - நீங்குதல் இன்மை.
இதனால், தில்லைக் கூத்தபிரானே எல்லா மூர்த்திகலுமாய் நிற்றல் கூறப்பட்டது.

அம்பலம் ஆடரங் காக அதன்மீதே
எம்பரன் ஆடும் இருதாளின் ஈரொலி
உம்பர மாம் நாதத்து ரேகையுள்
தம்பத மாய்நின்று தான்வந் தருளுமே. *#2709*

எம் இறைவனாகிய சிவன், தில்லைத் திருவம் பலத்திலே ஆடும் அரங்கமாகக் கொண்டு அதன்கண் ஓய்வின்றி ஆடுவான். அவனது வலம், இடம் ஆகிய இரண்டு திருவடி களினின்றும் எழும் கழல் சிலம்பின் ஓசைகள் முறையே நாதமும், விந்துவுமாய் நிற்கும். அவை பரநாத பர விந்துக்களாம். அவையே அவற்றின் கதிர்களாகிய 'அபர நாதம், அபர விந்து, சாதாக்கீயம், ஈசுரம், சுத்தை வித்தை' என்னும் ஐந்து தத்துவங்களில் அவற்றின் நிலைமையவாய் நிற்க, சிவனும் அம்முறையால் உயிர்களிடத்துப் பொருந்தி அவற்றிற்கு அறிவைத் தருவான்.

விளக்கவுரை

'உப்பாம்' என்பது எதுகை நோக்கி மெலிந்து நின்றது. உகரச் சுட்டு மேலிடத்தை உணர்த்திற்று. 'பரமாம் என்பதன்பின், 'அவை' என்னும் சுட்டு வருவித்து, 'நின்று' என்பதனை, 'நிற்க' எனத் திரிக்க.
'இவ்வாற்றால் யாது சொல்லப்பட்டது' எனின், தில்லைப் பெருமான் திருக்கூத்தினின்றே பரநாத பர விந்துக்கள் தோன்றி, சிவம், சத்தி முதலிய சிவதத்துவம் ஐந்திலும் அவற்றிற்கு ஏற்ற வகையில் பொருந்தி நின்று உயிர்களுக்கு அறிவை உண்டாக்குகின்றன' என்பது சொல்லப்பட்டதாம். இவ்வாறு அறிவைத் தருகின்ற நடனம், 'அதி சூக்கும நடனம்' என்றும், 'பர நடனம்' என்றும், 'அது புருவ நடுவில் நிகழும்' என்றும் சொல்லப்படுகின்றது.
'நாதத்து ரேகை' என்பதில் நாதம், பரநாதம், அதனைக் கூறவே பரவிந்துவும் உடன் கொள்ளப்பட்டது. ரேகை - கதிர், என்றது கூற்றினை. சிவ தத்துவங்கள் வித்தியா தத்துவங்களைச் செலுத்த, உயிர்களுக்கு அறிவு பொதுவகையான் நிகழும். பின்பு வித்தியா தத்துவங்கள் அந்தக் கரணங்களைச் செலுத்த அறிவு அவ்வப் பொருள்கள் மேல் சிறப்பு வகையால் நிகழும் 'இவ்வாற்றால் இறைவன் உயிர்களுக்கு அறிவைப் பிறப்பிக்கின்றான்' என்பதும், 'அவ்வாறு பிறப்பித்தலே அவனது பர நடனம்' என்பதும் சைவ

தத்துவங்களாதலை நாயனார் இம்மந்திரத்தால் உணர்த்தியருளினார். இதனால், தில்லைத் திருக்கூத்தே உயிர்களுக்கு அறிவைப் பிறப்பிக்கும் கூத்தாதல் கூறப்பட்டது.

ஆடிய காலும் அதிற்சிலம் போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமும்
கூடிய கோலம் குருபரன் கொண்டாடத்
தேடிஉள் ளேகண்டு தீர்ந்தற்ற வாறே. *#2710*

ஞான குருவாய் நின்று ஞானத்தைத் தருகின்ற சிவன், அவ்வாறன்றி, ஊன்றியும் தூக்கியும் ஆடும் கால்களும் அவற்றில் கழலும் சிலமும் ஆகியவற்றின் ஓசைகளும், அருகில் உள்ளவர்கள் பாடுகின்ற பாட்டுக்களும், பலவகையான கரணங்களும் கூடிய கூத்துக் கோலத்தைக் கொண்டு ஆடுதலை அறியாமல், அவனை எங்கெங்கோ தேடியலைந்து, பின்பு என் உள்ளத்திலே அந்தக் கூத்துக் கோலத்தைக் கண்டேன். அக் காட்சியே யான் பிறவிக் கடலினின்றும் நீங்கிக் கரையேறிய நெறியாகும்.

விளக்கவுரை

'குரு பரன்' என்பதை முதலில் வைத்து உரைக்க. 'குருபரனாய் வந்து செய்கின்ற அருளையே கூத்தனாய் நின்று செய் கின்றான்' என்பது இம்மந்திரத்தின் திரண்ட கருத்து. கூத்தனாய் என ஒரு சொல்லாற் சொல்லியொழியாது, அக்கோலத்தை வகுத்துக் கூறினார், அதனை உள்ளத்தே கண்டவாறெல்லாம் இனிது விளங்குதற்கு. கண்டது, 'உள்ளே' என்றதனால், தேடியது 'வேளியே' என்பது போந்தது. 'பிறவி யறுதலை எண்ணாதவர் திருக்கூத்தினைப் புறத்தே மட்டும் ஒருகாற் கண்டு ஒழிவர்' என்பதும், 'பிறவியற வேண்டுபவர் அதனை எஞ் - ஞான்றும் உள்ளத்தே கண்டு கொண்டிருப்பர்' என்பதும் கூறியவாறு. கண்டமைக்கும், அற்றமைக்கும் 'யான்' என்னும் எழுவாயும், 'அற்றவாறு அறியத்தக்கது' எனச் சொல்லெச்சம் வருவித்து முடிக்க. கூத்தப் பிரான் ஒருகாலிற் சிலம்பும், ஒரு காலிற் கழலும் அணிந்திருத்தல் அவற்றுள் ஒன்றைக் கூறவே மற்றொன்றும் பெறப்பட்டது.

இதனால், 'கூத்துக்கோலம், போகியர்க்கு போகவடிவாதலே யன்றி, யோகியர்க்கு யோக வடிவுமாம்' என்பது கூறப்பட்டது.

இருதயந் தன்னில் எழுந்த பிராணன்
கரசர ணாதி கலக்கும் படியே
அரதன மன்றினில் மாணிக்கக் கூத்தன்
குரவனாய் எங்கணும் கூத்துகந் தானே. *#2711*

('பிற உலோகங்களை நோக்கப் பொன் உயர்ந்தது' என்பதில் ஐயம்

இல்லை. ஆயினும், 'பொன்னிலும் மாணிக்கம் உயர்ந்தது' என்பது தெளிவு ஆதலால்) ஐவகை மன்றினுள்ளும் மணிமன்றினுள் ஆடும் ஆடற்பிரானே யோகியர்க்கு யோகமும், போகியர்க்குப் போகமும் ஆகின்ற அருட் கூத்தினை எல்லா இடங்களிலும் சென்று ஆடுகின்றான். 'அஃது எதுபோலும்' எனின், இருதயத்திலே நிறைகின்ற பிராண வாயுவும் அவ்விடத்தினின்றும் குருதியோடு ஓடி உடம்பெங்கும் நிறைதல் போலும்.

விளக்கவுரை

'இச்சிறப்புப் பற்றியே அந்த மன்று மணிமன்றாய் உள்ளது' என்க. அது திருஆலங்காட்டு மன்றமாம். அவ்விடத்துக் கூத்து, காலை உயர்த்தி ஆடும் கூத்து (ஊர்த்துவ நடனம்) ஆதலும், 'எண்டோள் வீசிநின்று ஆடும் ஆடல்'33திருமுறை - 4.9.2. ஆதலும் எண்ணத் தக்கன.

'இன்னும் வேண்டும், நான் மகிழ்ந்து பாடி
அறவா, நீ ஆடும்போது 'உன் அடியின்கீழ் இருக்க'*
என வேண்டிய அம்மைக்கு. இறைவன் ஆலங்காட்டு நடனத்திலே அவ்வாறு இருக்க அருள்புரிந்தமையும் கருதத் தக்கது. முன் அதிகாரத்தில் நாயனார் சிவன் ஆடும் இடங்களை எல்லாம் கட்டியதில், கனகா சலத்தில் ஆடுதலுக்கும் முன்னே காயோடு ஆடிய ஆலங்காட்டு நடனத்தையே முதலாவதாகக் குறித்தார். இது உலகம் காளியால் அழிந்தொழியாதவாறு காத்த நடனமாகச் சொல்லப்படுதலும் நோக்கத்தக்கது.

'தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெலாம்
ஊன்புக்க வேற்காளிக்(கு) ஊட்டாங்காண் சாழலே'*

*11.15.*அற்புதக் கூத்து

குருஉரு அன்றிக் குனிக்கும் உருவம்
அருஉரு ஆவதும் அந்த உருவே
திரிபுரை யாகித் திகழ்தரு வாளும்
உருவரு வாளும் உமையவள் தானே. *#2712*

சிவபிரானது கூத்த வடிவமே சகல வருக்கத் -தினருக்குக் குருவாகி வந்து ஞானத்தை உணர்த்தும் வடிவமும், திருக் கோயில்களில் மூலத் தானத்தில் எழுந்தருளியிருந்து வழிபாட்டினை ஏற்று அருள்புரியும் இலிங்க வடிவமும் ஆகும். இனி அவ்வடிவத்தின் பக்கத்தில் பெண்ணுருவாய் நிற்பவளும், மற்றும் சிவனுக்கு மூவகைத் திருமேனியாய் விளங்குபவளும் கூத்தப் பெருமானது சத்தியே.

விளக்கவுரை

'குனிக்கும் உருவமே குரு உரு; அன்றி, அரு உரு ஆவதும் அந்த உருவே' என இயைத்துக் கொள்க. புரம் - திருமேனி. புரை - திருமேனியாய் உள்ளவள். 'உருவாய் வருவாளும்' என ஆக்கம் விரிக்க. 'உமையவள்' என்றது, 'சத்தி' என்னும் பொருட்டாய் நின்றது. இவ்வாறெல்லாம் கூறியது, கூத்தப் பெருமானை வணங்கும் வணக்கத்தின் பயனை நோக்கியாம்.

இதனால், 'கூத்தப் பெருமான் வணக்கமே அனைத்துத் திருமேனிகளின் வணக்கமாம்' என அவனது சமட்டி நிலை அற்புதம் கூறப்பட்டது.

திருவழி யாவது சிற்றம் பலத்தே
குருவடி வுள்ளாக் குனிக்கும் உருவமே
உருஅரு ஆவதும் உற்றுணர்ந் தோர்க்கு
அருள்வழி யாவதும் அவ்வழி தானே. *#2713*

ஒருவனுக்கு வீட்டு நெறியாவது, அவனது உள்ளத்தில் அவனுக்குக் குருவாய் வந்து அருள் புரிந்தவர் நீங்காதிருக்க, வெளியில் சிற்றம்பலத்தில் அம்பலவாணர் ஆடுதலேயாகும். (உள்ளத்தில் குருவைத் தியானித்தலும், வெளியில் திருக்கூத்தைக் காணுதலுமேயாகும்' என்பதாம்.) உண்மையை ஊன்று உணர்ந் தோர்க்கு மூவகைத் திருமேனிகளும் ஞான நெறியும் அவையேயாம்.

விளக்கவுரை

'திரு' என்பது வீடாதலை, 'போகமும், திருவும் புணர்ப்பானை'*3* என்பதனால் அறிக. 'உன் குருவடிவு ஆக' என மாற்றி, 'திருவழியாவது' என்பதன் பின்னர்க் கூட்டுக. 'குணக்கும் உருவே' என்றாராயினும் 'உருவாய்க் குனித்தலே' என்றலே கருத்தென்க.

'குனித்தல்' என்றதும் அதனைக் காணுதலையே. உற்று உணர்ந்தோர்க்கு, உருவாவதும், அருவாவதும், அருள்வழி யாவதும் அவ்வழியே என இயைத்து முடிக்க. தான், அசை, வழி-வாயில். 'உரு, அரு' என்பவற்றைக் கூறவே, உருவாருவமும் கொள்ளப்படும். தியானிக்கப்படுவதும் குனிப்பதும் உருவம் முதலியன ஆவனவும் வேறுவேறாய் இருக்க, அவற்றை, 'குனிக்கும் உருவே' என, அஃது ஒன்றேயாகக் கூறியதுதான் இங்குக் குறிப்பிட்ட அற்புதம்.

'சிறைவான் புனல் தில்லைச் சிற்றம் பலத்தும் என் சிந்தை
யுள்ளுக உறைவான்'

என்றவிடத்தும் இவ்வற்புதம் குறிக்கப்பட்டமை காண்க. இதனால், மேற்கூறிய சமட்டி நிலையில் உள்ளவைகளில் தலையாயதாகிய ஞான நிலை, சிறப்புப் பற்றி வேறெடுத்துக் கூறப்பட்டது.

'மைம்மரு பூங்குழற் கற்றை துற்ற
வாணுதல் மான்விழி மங்கை யோடும்
பொய்ம் மொழி யாமறை யோர்கள் ஏத்தப்
புகலி நிலாவிய புண்ணியனே!
'எம்மிறையே' இமை யாத முக்கண்
ஈச!என் நேச!இ தென்கொல் சொல்லாய்;
மெய்ம்மொழி நான்மறை யோர் மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே'

'அங்கமும் வேதமும் ஓதும் நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ,
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வம் மல்கு
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள
கங்குல் விளங்கெரி யேந்தியாடும்
கணபதி யீச்சரங் காமுறவே'1

'பாடக மெல்லடிப் பாவையோடும்
படுபிணக் காடிடம் பற்றி நின்று
நாடகம் ஆடும்நள் ளாறுடைய
நம்பெரு மான்!இது என்கொல் சொல்லாய்
சூடக முன்கை மடந்தை மார்கள்
துணைவ ரொடுந்தொழு தேத்தி வாழ்த்த
ஆடக மாடம் நெருங்கு கூடல்
ஆலவ யின்கண் அமர்ந்தவாறே'

'பருமதில் மதுரைமன் அவையெதிரே
பதிகம் தெழுதிலை யவை யெதிரே
வருநதி யிடைமிசை வருகரனே'2
'... ... ... பேணு பெருந்துறையுட் கண்ணார் கழல்காட்டி நாயேனை
ஆட்கொண்ட அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்'3
என்றாற்போல ஏனை ஆசிரியர்களும் ஏகதேசியாய்க் காணப்
படுபவன் எங்குமாய் நின்று அருள்புரிதலை வியந்தருளிச் செய்தல்
காணத்தக்கது.

நீடும் சிரசிடைப் பன்னிரண் டங்குலம்
ஓடும் உயிர்எழுந் தோங்கி உதித்திட
நாடுமின் நாதாந்த நம்பெரு மான்உகந்(து)
ஆடும் இடம்திரு அம்பலத் தானே. #2714

உள்ளே புகுந்து, வெளியே ஓடும் இயல்புடைய பிராணன் மூலாதாரத்திலினின்றும் எழுந்து சுழுமுனை வழியாக மேலே செல்லுங்கால், புருவ நடுவையும் கடந்து உச்சியை அடைந்து, அதற்கு மேலேயும் பன்னிரண்டங்குலம் சென்றால் பின்பு கிடைப்பது மேல் நிலைத் தத்துவமாகிய நாதத்தையும் கடந்து நிற்கின்ற நம் பெருமானாகிய சிவன் மிகவும் விரும்பி ஆடும் இடமாகிய திரு வம்பலமே. அதனை நீங்கள் உணருங்கள்.

விளக்கவுரை

'நாடுமின்' என எடுத்தோதியது, பொற்பதிக் கூத்து, பொற்றிலைக் கூத்து ஆகியவற்றில் காணப்படும் அம்பலங்களை இம்மீதான அம்பலமாக உணர்ந்து வணங்குதல் சிறப்பு' என்பது உணத்துதற் பொருட்டாம்.

ஆறு ஆதாரங்களில் மேல் உள்ளதாகிய ஆஞ்ஞைக்கு அப்பால் உச்சி வரை ஏழாந்தானம். அதற்கு மேல் பன்னிரண்டங்குலம் நிராதாரம்; அதைக் கடந்த பெருவெளி மீதானம். அதுவே பரவெளி. 'துவாதசாந்தம்' என்று சொல்லப்படுவது.

பிராணன் ஏழாம் தானத்திற்கு அப்பால் செல்லுதல் இல்லை. வலிந்து செலுத்தினால் பின் திரும்பாதாக, உடம்பு வீழ்ந்துவிடும். ஆயினும் பிராசாத கலைகளால் பிராணன் நிராதாரத்தளவு செல் வதாகப் பாவித்து நிற்றல் பற்றி 'பன்னிரண்டங்குலம் உதித்திட' என்றார். உதத்தல், இங்கு, செல்லுதல். 'உதித்திட அப்பால் அம்பலந் தான்' என ஒருசொல் வருவித்து முடிக்க. தான் என்பது தேற்றப் பொருள் தந்து நின்றது.

'ஓடும் உயிரெழுந்து ஓங்கி' என்பதை முதலிலும், 'நாடுமின்' என்பதை ஈற்றிலும் வைத்துரைக்க.

இதனால், புற அம்பலங்கள் அக அம்பலங்களாகச் சிறந்து நிற்கும் அற்புதம் கூறப்பட்டது.

வளிமேகம் மின் வில்லு வாகை ஓசை
தெளிய விசும்பில் திகழ்தரு மாறுபோல்
களிஒளி ஆறும் கலந்துடன் வேறாய்
ஒளியுரு வாகி ஒளிந்துநின் றானே. #2715

[அம்பலங்கள் பலவற்றையும் உகந்து ஆடும் நம்பெருமான் வானத்தில் அடங்கியுள்ள காற்று, மேகம், மின்னல், வில், இடி, ஓசை என்பவைபோல,] நிவிர்த்தி முதலிய கலைகளில் அடங்கியுள்ள 'தத்துவம், புவனம், வன்னம், பதம், மந்திரம்' என்னும் ஐந்தோடும், கலையையும் கூட்ட ஆறோடும் ஒன்றாய், வேறாய், உடனாய்க்கலந்து அறிவு வடிவாய் அவற்றினின்றும் பிரித்துக்காண வாராமல் மறைந்தே நிற்கின்றான்.

விளக்கவுரை

'அம்பலங்கள் பலவற்றிலும் காணப்படுகின்ற இவன், மேல் நுண்ணியவாய் மிகப்பெரிய அளவில் விரிந்து கிடக்கின்ற அவை அனைத்திலும் ஒளிந்து நிற்றல் வியப்பு' என்பதாம். இம்மந்திரத்திற்கு எழுவாய் முன் மந்திரத்திலிருந்து என்பதாம். இம்மந்திரத்திற்கு எழுவாய் முன் மந்திரத்திலிருந்து வந்து இயைந்தது. காற்று வடிவம் உடைத் தாயினும், உருவம் இல்லது ஆகலின் அது காரண ரூபமான தத்துவங் கட்கும், மேகம் பல்வேறு வடிவங்களாய் வியப்புறத் தோன்றுவது ஆகலின் அது விசித்திரமான பல புவனங்கட்கும், மின்னல் விரையத் தோன்றி, விரையமறைவது ஆகலின், அது விரையத் தோன்றி விரைய மறையும் வன்னங்கட்கும், (எழுத்துக்களுக்கும்) வானவில் பல நிறங்களையுடையதாய், அழகிதாய் உள்ளத்தைக் கவர்தலின் அது பொருளுணர்ச்சியைத் தரும் பதங்கட்கும் இடியோசை பெருமுழக்கம் ஆதலின் அது நன்கு உச்சரிக்கப்படுகின்ற பாட்டாகிய மந்திரத்திற்கும், வானம் இவை எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி நிற்றலின் அஃது அத்து வாக்கள் ஆறில் ஏனை ஐந்தையும் தன்னுள் அடக்கி நிற்கும் கலைக்கும் உண்மையாயின. இனி, 'சை' என்பதை, 'ஆகாயத்தின் குணமாகிய சை' எனக் கொள்ளலும் ஆம். பிற ஓசைகளை நீக்குதற்கு 'வானக சை' என்றார். களிஒளி - களிப்பைத் தருகின்ற ஒளி. 'ஒளி' என்றது அறிவை. அறிவைத் தருவனவற்றை 'அறிவு' என்றார். 'அறிவைத் தருகின்ற ஆறு' எனவே, அவை அத்துவா ஆதல் விளங்கிற்று. 'கலந்து - ஒன்றாய்க் கலந்து' என்க.

இதனால், பொற்பதிகளிலும், பொற்றில்லையிலும் ஆடும் பெருமான்

அகண்ட வியாபகனாய் நிற்கும் அற்புதம் கூறப்பட்டது.

தீமுதல் ஐந்தும் திசைஎட்டும் கீழ்மேலும்
ஆயும் அறிவினுக் கப்புற ஆனந்தம்
மாயைமா மாயை கடந்துநின் றார்காண
நாயகன் நின்று நடம்செய்யு மாறே. *#2716*

இருளை ஓட்டுதலால் முதன்மை பெற்ற தீ முதலிய ஐம்பெரும் பூதங்களும், கிழக்கு முதலிய எட்டுத் திசைகளும், மற்றும் அவற்றோடு உடன் எண்ணப்படுகின்ற 'கீழ், மேல்' என்னும் பக்கங்களும், இவற்றையெல்லாம் பற்றி ஆராய்ந்தறிவதாகிய உயிர்களின் அறிவும் ஆகிய இவையெல்லாவற்றிற்கும் அப்பால் உள்ளது உண்மையான இன்பம், அதனை அசுத்த மாயை, சுத்த மாயை ஆகிய இருமாயைகளையும் கடந்தவரே பெறுவர். அவர் அங்ஙனம் அதனைப் பெறுதற் பொருட்டே சிவன் நிலவுலகில் நின்று பொற்பதிக் கூத்து, பொற்றில்லைக் கூத்து இவற்றைச் செய்கின்றான்.

விளக்கவுரை

'நாயகன் நின்று நடம் செய்யும் ஆறு, தீ முதல் அப்புற ஆனந்தம் கடந்து நின்றார் காண' என இயைத்து முடிக்க. 'அறி வினுக்கு' 'அறிவும் ஆகிய இவற்றுக்கு' என விரிக்க இகர. உயிரும், யகர மெய்யும் மொழியீற்றின் உறழ்ந்து வரும் இயல்புடைமையால்*9* ஈகாரம் ஒன்றே யகர எதுகையை நிரப்பிற்று*?* என்க.
இதனால், நிலவுலகக் கூத்து பரானந்தத்தைத் தருகின்ற அற்புதம் கூறப்பட்டது.

கூத்தன் கலந்திடும் கோல்வளை யாளொடும்
கூத்தன் கலந்திடும் கோதிலா ஆனந்தம்
கூத்தன் கலந்திடும் கோதிலா ஞானத்துக்
கூத்தனும் கூத்தியும் கூத்ததின் மேலே. *#2717*

கூத்தப் பெருமான், தான் மட்டும் தனியே நின்று ஆடாமல், உமை ஒருபால் நிற்கக் கொண்டு, அவள் காணவே ஆடுதல் வெளிப்படை. அதனாலேதான் அவனது கூத்து ஆனந்தமயமாயும், ஞானமயமாயும் உள்ளது. ஒரு கூத்திலே இருவர் பங்கும் உள்ளனவேயன்றி, இருவரும் இருகூத்து இயற்றிலர்.

விளக்கவுரை

'ஞானமும், ஆனந்தமும் இறைவனுக்குக் குணங்கள் ஆதலின் அவை அவனது சத்தியேயாம்' என்பதும், 'சத்தியின்றிப் பொருள் இல்லை ஆதலால், அவள் இன்றி அவன் ஆடுதல் இல்லை' என்பதும், 'பொருளும், சத்தியும் வேறு வேறு ஆகாமையின், இருவரும் ஒரு

கூத்தினையே உடையர்' என்பதும் கூறியவாறு. 'வேறொரு கூத்தை ஆடியவன் காளி' என்க.
'கூத்ததின்மேலே' என்பதற்கு, 'ஒரு கூத்ததின்மேலே' என உரைக்க. அது பகுதிப் பொருள் விகுதி. 'மேலே உள்ளனர்' என ஒரு சொல் வருவித்து முடிக்க. கோது - துன்பமும், அறியாமையும். இம்மந்திரம் சொற்பொருட் பின்வருநிலையணி பெற்றது.
இதனால், ஒரு நடனத்தை இருவர் இயற்றுதலும், அதனால் பிறவற்றில் பெறப்படாத பயன் விளைதலும் ஆகிய அற்புதங்கள் கூறப்பட்டன.

இடங்கொண்ட சத்தியும் எந்தை பிரானும்
நடங்கொண்டு நின்றமை நானும் அறிந்தேன்
படங்கொண்டு நின்றஇப் பல்லுயிர்க் கெல்லாம்
அடங்கலும் தாமாய்நின் றாடுகின் றாரே. *#2718*

'எம் தந்தையாகிய சிவனது இடப் பாகத்தைக் கவர்ந்து கொண்ட, எம் தாயாகிய சத்தியும் அவளுக்குத் தனது இடப் பாகத்தைத் தந்த சிவனும் என ஒருவரே இருவராய் நின்று கூத்தியற்று கின்றார்கள்' என்பதை நானும் கருதலளவையால் உணர்ந்து கொண்டேன். ஆகவே, துணியால் பொதியப்பட்ட மூடைபோல ஆணவ மலத்தால் மறைக்கப் பட்டுள்ள அனைத்துயிர்களின் பொருட்டாகவே அவ்விருவரும், மாயா காரியங்கள் அனைத்திலும் நிறைந்து நின்று, அவைகளை இயக்கித் தாம் ஆடுகின்றனர்' எனப் பிறர்க்கும் உணர்த்துகின்றேன்.

விளக்கவுரை

'சத்தி' என்றதனால், 'சிவன்' என்பதும், 'எந்தை' என்றதனால், 'எம்தாய்' என்பதும் பெறப்பட்டன. 'கருதல் அளவையால்' என்பது, ஆற்றலால் வந்தது. கருதலளவையால் அதனை யறிந்தவாறாவது,
'சத்தியும் சிவமும் ஆய தன்மை இவ்வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும், பெண்ணும், உயர்குண குணியுமாகி'*9*
நிற்றலைக் கொண்டு அறிவதாம்.
'இடம்' என்றது உடம்பின் இடப்பாகத்தை யாதலின், 'ஒருவரே இருவராய் நிற்றல்' பெறப்பட்டது. 'ஓர் உடம்பு இருவராகி'*8* என அப்பர் அருளிச்செய்தமை காண்க. 'இவர்கள் நடனம் ஆடுதல் உயிர்களின் பொருட்டே' என்பதை ஞான சம்பந்தரும்,
'ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும் ... ...
நாடும் திறந்தார்க்கு அருளல்லது நாட்டலாமே'*9*
என அருளிச் செய்தமை காண்க.
இதனால், ஒருவரே இருவராய் நின்று ஆடுதலும் அவ் விடத்து, அடங்கலும் தாமாய் நின்று ஆடுதலும், தம் பொருட்டன்றிப் பிறர்

பொருட்டாகவே ஆடுதலும் ஆகிய அற்புதங்கள் கூறப்பட்டன.

சத்தி வடிவு சகலஆ னந்தமும்
ஒத்தஆ னந்தம் உமையவள் மேனியாம்
சத்தி வடிவு சகளத் தெழுந்திரண்*(*டு*)*
ஒத்தஆ னந்தம் ஒருநடம் ஆமே. *#2719*

எல்லா உயிர்கட்கும் ஏற்புடையதாகிய 'இன்பம்' என்பது 'சத்தி' என்னும் கூறே. அதனால், எந்த இன்பப் பொருளிலும் உள்ள எந்த இன்பமும் 'சத்தி' என்னும் கூறே. *(*பொருள், 'சிவம்' என்னும் கூறாம்*)* இனி எல்லாத் திருமேனி வகைகளும் சத்தியே. அந்நிலையில் பெருமானது சத்தியால் தோன்றி நிகழ்கின்ற ஒப்பற்ற நடனம், முத்தியின்பமாகிய பேரின்ப நடனமாகும்.

விளக்கவுரை

'திருக்கூத்துச் சத்தியால் உண்டாகி, ஆனந்தத்தைப் பொழியும்' என்றபடி. சகலம் - எல்லாம். உம்மை, முற்று. இனி, 'சகலம் சகலநிலை' எனவும் உரைப்பர். அவர் உம்மையை இழிவு சிறப்பாகக் கொள்வர். இரண்டாம் அடியை முதலிற் கூட்டி உரைக்க. ஒத்தல் - உள்ளத்திற்கு ஒத்தல் - உள்ளத்திற்கு ஒத்தல். 'சகளத்து' என்பதில் 'அத்து' அல்வழிக்கண் வந்த சாரியை. 'சகளமாய் எழும்' என ஆக்கம் வருவிக்க. 'சகளம்' என்பது, பொதுவாகத் 'திருமேனி' என்னும் அளவாய் நின்றது. 'எழுந்து ஒத்த ஒரு நடம் ஆனந்த நடனமாம்' எனக் கூட்டுக. இரண்டு - இருவினை 'இரண்டும்' என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று. 'இரு வினை யொப்பு' என்பது உபலக்கணத்தால் மலபரி பாகம், சத்திநிபாதம், ஞான முதிர்ச்சி இவைகளைத் தழுவி 'முத்தி' என்னும் பொருட்டாய் நின்றது. ஒத்த காலத்தில் நிகழ்வதை 'ஒத்த' என்றே உபசரித்துக் கூறினார்.

இதனால், திருக்கூத்து ஆனந்தக் கூத்தாதலாகிய அற்புதத்திற்குக் காரணம் கூறப்பட்டது.

நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம்
சிற்றம் பலம்என்று தேர்ந்துகொண் டேனே. *#2720*

நெற்றிக்குக் கீழே, இரு புருவங்கட்கு இடையே யுள்ள வெற்றிடம் தன்னை உற்று உற்றுப் பார்க்க, பார்க்குந்தோறும், பார்க்குந்தோறும் பார்ப்பவர்க்கு ஒளியை மிக மிக வீசுகின்ற ஓர் இல்லமாய் விளங்கும். 'அந்த இல்லமே' சிவன் யாவரும் பற்றுதற்குரிய பற்றாய் இருக்குமிடம். அஃதாவது 'ஞானாகாசம் என நான் திருவருளால் ஆராய்ந்து அடைந்தேன்.

விளக்கவுரை

உற்று உற்றுப் பார்த்தலாவது, உளம் ஒருங்கித் தியானித்தல். எனவே, அது தியானித்திற்குரிய இடமாதல் பெறப் பட்டது. ஒளி - ஞானம். மந்திரம் - இருப்பிடம். மேல் துவாத சாந்தத்தை 'அம்பலம்' என்றும், இருதயத்தை 'அம்பலம்' என்றும் கூறி, இங்கும் புருவ நடுவை 'அம்பலம்' என்றது என்னையெனின், அண்டத்தில் அம்பலங்கள் பலவாதல்போலப் பிண்டத்திலும் அம்பலங்கள் பலவாதல் பற்றியாம். இருதய அம்பலம் வழிபட்டுத் தவம் பெறுதற்கு உரியது, புருவ நடு அம்பலம் வழிபட்டுத் தவம் பெறுதற்குரியது, புருவ நடு அம்பலம் தியானித்து ஞானம் பெறுதற்குரியது. துவாதசாந்த அம்பலம் அமைதியுற்று ஆனந்தம் எய்துதற்கு உரியது என்க. அண்டத்து அம்பலங்களும் வெள்ளி, பொன், மணி என வகைப்பட்டு நிற்றல் போலப் பிண்டத்து அம்பலங்களும் இவ்வாறு வகைப்பட்டு நிற்கும். 'மந்திரம்' என்பதனை, 'பஞ்சாக்கர மந்திரம்' என்பாரும் உளர். அஃது இவ்விடத்திற்கு இயைபில்லதாம் என்க. 'இருந்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.

இதனால் ஓர் அம்பலம் உற்று உற்றுப் பார்க்க ஒளிவிடும் அம்பலமாய் உள்ள அற்புதம் கூறப்பட்டது.

அண்டங்கள் தத்துவம் ஆதி சதாசிவம்
தண்டினில் சாத்தவி சாமபி ஆதனம்
தெண்டினில் ஏழும் சிவாசன மாகவே'
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே. *#2721*

உலகங்கள் ஏழு, சாதாக்கியம் முதலாகக் கீழ் நோக்கியும், மேல் நோக்கியும் எண்ண வருகின்ற தத்துவங்கள் ஏழு, 'தண்டு' எனப்படுகின்ற சுழுமுனை நாடியில் உள்ள, 'சத்தம்' எனப்படுகின்ற வாக்கிற்கு முதல்வியாதல் பற்றி சாத்தவியாம் குண்டலி சத்திக்குரிய ஆதாரங்கள் ஏழு, அவற்றிற்குமேல் 'வியாபினி, வியோம ரூபை, அனந்தை, அனாதை, அனாசிருதை, சமனை, உன்மனை என்னும் சிவசத்திகளது இடங்கள் ஏழு, யாழ், குழல் முதலிய வற்றினின்றும் எழுகின்ற இசைகள் ஏழு ஆகியவற்றை எல்லாம் தனது இடமாகக் கொண்டு சிவன் நடம் புரிகின்றான்.

விளக்கவுரை

'இஃது அற்புதம்' என்பது குறிப்பெச்சம். 'ஏழும்' என்பது இறுதி நிலை விளக்காய், ஏனை எல்லாவற்றோடும் சென் றியைந்தது. 'சதாசிவம் ஆதி தத்துவம்' என இயைக்க. 'சிவ தத்துவம் ஐந்து' என்பதே பெரும்பான்மையாக எங்கும் சொல்லப்படினும் பரநாத

பரவிந்துக்களைக் கூட்டி, 'ஏழு' என்றும் சிறுபான்மை சில ஆகமங்களில் சொல்லப்பட்டது. 'ஆதனம்' என்பதைச் 'சாத்தவி' என்பதனோடும் கூட்டுக. 'தண்டு' என்பது, 'தெண்டு' என மருவி வந்தது. தண்டு - யாழ். உபலக்கணத்தால் குழலும் கொள்ளப்பட்டது. இறைவன் சொல்லும், பொருளும் ஆதலேயன்றி ஏழிசையாய், இசைப்பயனுமாய்8 நிற்றலும் நன்கறியப்பட்டது. 'சிவாசனம்' என்பதில் 'சிவன்' என்பது 'தன்' என்னும் பொருட்டாய் நின்றது அன்றி, 'மங்கலப் பொருட்டாய் நின்றது' என்றலும் ஆம். இதனால், திருக்கூத்தின் வியாபக அற்புதம் கூறப்பட்டது.

மன்று நிறைந்த விளக்கொளி மாமலர்
நன்றிது தான்இதழ் நாலொடு நூறவை
சென்றது தான்இரு பத்திரு நூறுள
நின்றது தான்நெடு மண்டல மாகுமே. *#2722*

முன் மந்திரத்திற் கூறியவாற்றால் அம்பலங்கள் தாம் அளவிலவாதல் பெறப்பட்டமையால், அவைகளில் விளக்கொளி போல விளங்கி ஆடும் மூர்த்திகளும் எண்ணிலர். இனி அந்த அம்பலங்கள் மலராக விளங்க, இருநூற்றிருபத்து நான்கு புவனங்கள் அவற்றின் இதழாக, நிலையின்றித் தோன்றியழிவன. ஆகவே, என்றும் நிலையாயுள்ள சத்தியே அவனுக்கு என்றும் உள்ளதாகிய அம்பலமாம். ஆகவே, இதுவே அவனுக்கு நன்றாய அம்பலமாகும்.

விளக்கவுரை

'மன்று நிறைந்த விளக்கொளி நூறு; அவை மாமலராக, இதழ் தான் நாலொடு இருபத்து இருநூறு உள; சென்றது; நின்றதுதான் நெடு மண்டலம்; இதுதான் நன்று' என இயைத்துப் பொருள் கொள்க. இதனுள் 'நூறு' என்றது அளவின்மையைக் குறித்தது. 'மலராக' என உவமம் குறித்த ஆக்கச்சொல் வருவிக்க. 'சென்றது' என்றது பன்மையொருமை மயக்கம். 'செல்வது' என எதிர்காலத்தாற் கூறற்பாலது, விரைவு பற்றி 'சென்றது' என இறந்த காலமாகச் சொல்லப்பட்டது. 'நிற்பது' என்பதும் தெளிவு பற்றி 'நின்றது' எனப்பட்டது. காலத்தின் நெடுமை அதில் உள்ள மண்டலத்தின்மேல் ஏற்றப்பட்டது. அம்பலத்தை, 'மண்டலம்' என்றார்.
இதனால், அம்பலங்கள் பலவாயினும் உண்மை அம்பலம் சத்தியேயாதல் கூறப்பட்டது.

அண்டம் எழுகோடி பிண்டம் எழுகோடி
தெண்டிரை சூழ்ந்த திசைகள் எழுகோடி
எண்டிசை சூழ்ந்த இலிங்கம் எழுகோடி
அண்டன் நடம்செயும் ஆலயந் தானே. *#2723*

அளவின்றி உள்ள அண்டங்கள், பிண்டங்கள், (உடல்கள்) பிருதிவி அண்டங்கள் தோறும் உள்ள அளவற்ற எழுவகைக் கடல்கள், அவைகளால் சூழப்பட்ட எழுவகைத் தீவுகள், எல்லாத் திசைகளிலும் நிறைந்துள்ள அளவற்ற மூர்த்தங்கள் இவை அனைத்தும் சிதாகாச வெளியில் உள்ள சிவன் நடனம் புரியும் இடங்களாம்.

விளக்கவுரை

'எழுகோடி' என்றது அளவின்மையைக் குறித்தபடி. 'சை' என்பது 'இடம்' என்னும் பொருட்டாய்த் தீவுகளைக் குறித்தது.
இதனால், அளவிலா, எல்லா இடங்களிலும் திருக்கூத்து நிகழும் அற்புதம் கூறப்பட்டது.

ஆகாச மாம் உடல் ஆங்கார் முயலகன்
ஏகாச மாம்திசை எட்டும் திருக்கைகள்
மோகாய முக்கண்கள் மூன்றொளி தானாக
மாகாய மன்றுள் நடம்செய்கின் றானே. *#2724*

ஆகாயம் ஒன்றேயாய் எங்கும் வியாபித்துள்ளது. ஆயினும் செயற்கையால் வரையறுக்கப்பட்டு, 'மடாகாயம், கோயில் ஆகாயம், மன்ற ஆகாயம்' முதலாகப் பலவாறு வழங்கப்படுகின்றன. அவையெல்லாம் சிறு ஆகாயங்களாக, இயற்கை ஆகாயம் 'மகாகாயம்' எனப்படும். சிறு ஆகாயங்களில் பல உருவங்களில் நடனம் செய்கின்ற சிவன் மகாகாயத்தையே அம்பலமாக ஒன்றேயான விசுவ ரூபத்தை உடையவனாயும் நடனம் புரிகின்றான். அந்நிலையில் அவனுக்கு ஆகாயமே உடல்; உயிர்களின் ஆணவ மலமே முயலகன்; போர்வை போலச் சுற்றியுள்ள எட்டுத் திசைகளே எட்டுக் கைகள்; சூரியன், சந்தரன், அக்கினி என்னும் முச்சுடர்களே விரும்பத்தக்க மூன்று கண்கள் என இவ்வாறு அமையும்.

விளக்கவுரை

'ஆங்காரம்' என்பது ஈற்று அம்முக் குறைந்து, 'ஆங்கார்' என நின்றது. அஃது அதற்குக் காரணம் ஆணவ மலத்தைக் குறித்தது. 'மோகமார்' என்பதும், அவ்வாறு, 'மோகார்' என நின்றது. மோகம் - விருப்பம். 'மாகாயம்' என்பதில் காயம் - ஆகாயம்.
இதனால் அகண்டமாய் உள்ள விசுவரூப நடன அற்புதம் கூறப்பட்டது.

அம்பல மாவ அகில சராசரம்
அம்பல மாவன ஆதிப் பிரானடி
அம்பல மாவன அப்புத்தீ மண்டலம்
அம்பல மாவன அஞ்செழுத் தாமே. *#2725*

சிவபெருமான் திருக்கூத்தியற்றுதற்குரிய அம்பலமாய் நிற்பன, நீர், தீ (இனம் பற்றி, நிலம், வளி, வான்) இவற்றின் அண்டங்களும், அனைத்து இயங்கு திணை நிலைத்திணை உயிர்களும், திருவைந்தெழுத்தும், அவனது வட இடத்திருவடிகளும் ஆகும்.

விளக்கவுரை

இவை தூல சூக்கும வகையில் ஒன்றைவிட ஒன்று சூக்கும மாகிய அம்பலம் இவை செய்யுள் பற்றி ஏற்ற பெற்றியில் கூறப் பட்டன. அஞ்செழுத்து அருட்சத்தி, திரோதான சத்தி, உயிர் என்பவை களாய் நிற்றலின் அவையும், பிரானது வலத்திருவடி திரோதான சத்தியும், இடத்திருவடி அருட்சத்தியும் ஆதலின் அவையும் அம்பலமாயின. இதனால், திருக்கூத்து அனைத்த தூல சூக்கும அதிசூக்கும அம்பலங்களில் நடைபெறும் அற்புதம் கூறப்பட்டது.

கூடிய திண்முழ வம்குழல் 'ஓம்'என்ன
ஆடிய மானுடர் ஆதிப் பிரான்என்ன
நாடிய நற்கணம் ஆரும்பல் பூதங்கள்
பாடிய வாறொரு பாண்டரங் காமே. *#2726*

சிவனது பலவகைக் கூத்தில் 'பாண்டரங்கம்' என்னும் கூத்து (திரிபுரத்தை எரித்த காலத்தில் நிகழ்த்தப்பட்ட ஆதலின்,) ஒன்றோடு ஒன்று இயைந்து ஒலிக்கும் மத்தளமும், குழலும் 'ஓம்' என்று ஒலிக்கவும், அந்நடனத்தின் குறிப்பை ஆராய்ந்து நோக்கிய பதினெண் கணங்களும் நிறைந்த பூதப்படைகளும் பல பாடல்களைப் பாடவும், அவர்களோடு மக்களும் கண்டு, 'இவனே முதற்கடவுள்' என உணர்ந்து களி நடம்புரியவும் நிகழ்ந்தது.

விளக்கவுரை

'பூதங்கள் பாடியவாறு' - என்றாராயினும், 'பூதங்கள் பாட மானுடர் ... ... ஆடியவாறு' எனக் கூட்டி, 'நிகழ்ந்தது' என ஒரு சொல் வருவித்து முடிக்க. இதில், மானுடர் கண்டு தெரிந்து ஆடினமை சிறப்பாகக் குறிக்கப்பட்டது.

'தேர்முன் நின்ற திசைமுகன் காணப்
பாரதி யாடிய வியன்பாண்ட ரங்கமும்'*3*

என்பதற்கு,

'வானோராகிய தேரில், நான்மறைக் கடும்பரி பூட்டி நெடும் புறம் மறைத்து, வார்துகில் முடித்துக் கூர்முட்பிடித்துத் தேர்முன்னின்ற திசைமுகன் காணும்படி பாரதி வடிவாய இறைவன் வெண்ணீற்றை அணிந்தாடிய பாண்டரங்கக் கூத்தும்'

என்ற அடியார்க்கு நல்லார் உரையைக் காண்க. 'பாண்டரங்கம்'

என்பது கடைக் குறைந்து நின்றது.
இதனால், திருக்கூத்து வகைகளில் ஒன்றன் அற்புதம் எடுத்தோதி விளக்கப்பட்டது.

அண்டத்தில் தேவர்கள் அப்பாலைத் தேவர்கள்
தெண்டிரை சூழ்புவிக் குள்ளுள்ள தேவர்கள்
புண்பரி கப்பதப் பொன்னம் பலக்கூத்துக்
கண்டுசே வித்துக் கதிபெறு வார்களே. *#2727*

வானம் அண்டங்களுக்கு உள்ளேயும் உள்ளது; வெளியேயும் உள்ளது. அதுபோல, நிலத்திற்கு அண்மையிலேயும் உள்ளது. சேய்மையிலேயும் உள்ளது. அதனால் அந்த இடங்களில் எல்லாம், வானவராகிய தேவர்களும் இந்த இடங்களில் உள்ளனர். அவர்கள் அனைவரும் தில்லைப் பொன்னம்பலத்தில் கூத்தப் பெருமான் தாமரை மலர்போலும் திருவடிகளைப் பெயர்த்து ஆடும் திருக்கூத்தினைக் கண்டு வணங்கி நற்கதியை அடைகின்றார்கள்.

விளக்கவுரை

'தேவர்களைக் கூறவே, மக்களைக் கூறவேண்டா' என்பது கருத்து.
இதனால், மண்ணுலகத் திருக்கூத்தினை விண்ணவர்களும் கண்டு வணங்கி நற்கதிபெறும் அற்புதம் கூறப்பட்டது.

புளிக்கண் டவர்க்குப் புனல்ஊறு மாபோல்
களிக்கும் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
துளிக்கும் அருட்கண்ணீர் சோர்நெஞ் சுருக்கும்
ஒளிக்குள்ஆ னந்தத் தமுதூறும் உள்ளத்தே.
#2728

புளியை நாவில் இட்டுச் சுவையாவிடினும் அதனைப் பார்த்தபோதே பார்த்தவர்கட்கு அதனைச் சுவைத்தாற் போல நாவில் நீர் ஊறுதல் அனைவரும் அறிந்தது. அதுபோல, கூத்தப் பெருமானது ஆனந்தக் கூத்தினைக் கண்டவர்கட்கு அக்கூத்தில் காணப்படும் குறிப்பின் பொருளைப் பெறாவிடினும் பெற்றுவிட்டது போன்ற இன்பம் உள்ளத்தில் ஊற்றெடுக்க உடலிலும் அதற்குரிய மெய்ப்பாடுகள் தோன்றும்.

விளக்கவுரை

அம்மெய்ப்பாடுகள் கண்ணீரரும்புதல் ஒன்றை மட்டும் தோற்றுவாயாகச் சுட்டினார். மயிர் சிலிர்த்தல், உடல் கம்பித்தல், நாத்தழுதழுத்தல் முதலியன பிறவாம். களிக்கும் திருக்கூத்து - களித்தற்கு ஏதுவாய திருக்கூத்து. 'துளிக்கும் கண்ணீர் சோரா' என்றது, 'முன்பு அரும்பிப் பின்பு தாரையாய் ஒழுக' என்றபடி. 'அக்கூத்து

நெஞ்சை உருக்கும்' என்க. ஒளி - சிவம். அதனுள் ஆனந்தமாவது, அதில் தோய்ந்து பெறும் ஆனந்தம்.
'பெறத் தக்க பொருள்களைப் பெற்ற வழியே இன்பம் உண்டாதல் எங்ஙனம்' என்னும் ஐயத்தை உவம வாயிலாக நீக்கினார்.
'உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம் போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று'*
எனக் கூறிய அவ்வின்பத் தன்மை இவ்வின்பத்திற்கும் உண்டென்க. காமத்திற்கு உரியரல்லார்க்கு மேற்கூறிய காமத்திற்கு ஏதுவான காட்சி மகிழ்செய்யாதவாறு போல, இறையின்பத்திற்கு உரியர் அல்லார்க்குப் பொன்னம்பலக் கூத்துக்காட்சி இன்பம் செய்யாதாகலின், அவர், யாம், அக்கூத்தினைக் கண்டபொழுது எமக்கு அத்தகைய இன்பம் தோன்றவில்லையே ஏன்? என நாயனாரைக் கடாவலாகாமையறிக.
'புளிக் கண்டவர்க்கு' என்பதில் சகர ஒற்று எதுகை நோக்கி விரிந்தது. புளி சுவைக்கப்பட்டு பொருளாகலின், 'நாவில்' என்பது கூற வேண்டாவாயிற்று. 'சோர' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தல். 'ஆனந்தக்கூத்து' என்பதில் அது, அல்வழிக்கண் வந்த சாரியை. இதனால், திருக்கூத்துக் கண்ட அளவிலே ஆனந்தம் விளைக்கும் அற்புதம் கூறப்பட்டது.

திண்டாடி வீழ்கை சிவானந்த மாவது
உண்டார்க்(கு) உண(வு) உண்டால் உன்மத்தம் சித்திக்கும்
கொண்டாடும் மன்றுள் குனிக்கும் திருக்கூத்துக்
கண்டார் வருங்குணம் கேட்டார்க்கும் ஒக்குமே. *#2729*

சிவானந்தத்தை அடைந்தவர்கட்கு உளவாகும் மெய்ப்பாடுகள் உடல் நிற்கலாற்றாது தள்ளாடி வீழ்தல் முதலியன வாம். (இந்நிலை எய்தினாரை, 'ஆவேசம் வரப்பெற்றவர்' என்பார்.) இனிய உணவுகளால் விளையும் மகிழ்ச்சி அவற்றை உண்டபின்பே உண்டவர்க்கு உளவாகும். ஆயினும் யாவராலும் புகழப்பெறும் திரு வம்பலத்தில் சிவன் செய்யும் கூத்துக் கண்டவுடனே கண்டவர்க்குப் பெருமகிழ்வை உண்டாக்கும். (எனவே, திண்டாடி வீழ்தல் முதலியன கண்டார்க்கும் உண்டாவனவாம்.) இனி அதனைக் கண்டார்க்கே யன்றிக் கண்டவர் அக்கூத்தின் இயல்பைச் சொல்ல, அதனைக் கேட்டவர்க்கும் அத்தகைய மகிழ்வை அக்கூத்து உண்டாக்கும்.

விளக்கவுரை

'திண்டாடுதல்' என்பது நிலையாகாமல் தளர்ந்து வீழ்தலைக் குறிக்கும் நாட்டுப்புற வழக்கு. 'சிவானந்தம்' என்பது அதனால் உண்டாகும் மெய்ப்பாட்டினைக் குறித்த ஆகுபெயர். பின் மூன்று அடிகள் வேற்றுமையணி பெற்றன. 'இன்பம் பயத்தலால் இனிய உணவும்,

திருக்கூத்தும் ஒக்குமாயினும், இனிய உணவினும், திருக்கூத்துத் தனித்ததொரு சிறப்புடையது' என்பதாம். மேற்காட்டிய, 'உண்டார்கண் அல்லது' என்னும் திருக்குறளும் அவ்வணியை உடையதே - 'மகிழ்ச்சி கண்டவர்க்கு மட்டுமன்று; கேட்டவர்க்கும் உளதாம்' என்பதை இம்மந்திரம் கூறிற்று. 'கண்டார்க்கு' என்னும் நான்கன் உருபு தொகுக்கப்பட்டது. 'குணம்' என்றது நிகழ்ச்சிகளை. இதனால், மேற்கூறிய அற்புதத்தினும் அற்புதம் ஒன்று கூறப்பட்டது.

அங்கி தமருகம் அக்கமாலை பாசம்
அங்குசம் சூலம் கபால முடன் ஞானம்
தங்கு பயமுன் தருநீல மும்முடன்
மங்கையோர் பாகமாய் மாநடம் ஆடுமே. *#2730*

சிவபெருமான் திருக்கூத்து நிகழ்த்துங்கால், நான்கு கைகளோடே நிகழ்த்துதலும் உண்டு. எட்டுக் கைகளோடு நிகழ்த்துதலும் உண்டு. எட்டுக் கைகளோடு நிகழ்த்துங்கால் அவற்றில்,) தீயகல், உடுக்கை, உருத்திராக்க வடம், பாசம், அங்குசம், சூலம், பிரம கபாலம் என்பவற்றுடன் ஞானத்தின் பயனாகிய அஞ்ஞானத்தை நீக்குதலைக் குறிக்கும் நீல மலரையும் ஏந்தி, உமையம்மை ஒருபால் நிற்க ஆடுவான்.

விளக்கவுரை

நீல மலர் கரிய நிறத்தை உடையதாய் இரவில் முகிழ்த் திருந்து, கதிரவன் தோன்ற மலர்வது ஆதலின், அஃது ஆணவத்தில் அறியாமை எய்திக்கிடந்து, திருவருள் தோன்ற அது நீங்கி அறிவு நிகழ்தலைக் குறிப்பால் உணர்த்தும். இதனை நாயனார் எடுத் தோதவே, ஏனையவை பற்றிய குறிப்புக்களும் உணரப்படும். அவை நெருப்பு அழித்தல் தொழிலையும், வினையை எரித்தல் தொழிலையும், உடுக்கை ஒலியைப் பிறப்பித்துப் படைத்தல் தொழிலையும், மாயையை உதறித் தள்ளுதலையும், அக்கமாலை ஞானோபதேசம் செய்தலாகிய அருளல் தொழிலையும், குலம் இச்சா ஞானக்கிரியா சத்திகளுடன் கூடி அனைத்தையும் நடத்துதலையும், பிரம கபாலம் தனது நித்தியத் தன்மையையும் குறிக்கும். தேவி திருவருளைக் குறித்தல் வெளிப்படை. பயம் - பயன். 'சிவன்' என்னும் தோன்றா எழுவாய் வருவித்துக்கொள்க. கலித்தொகைக் கடவுள் வாழ்த்திலும் கூத்துக்கோல வருணிப்பில்,

'ஆறறி யந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்து
கூறாமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
மாறாப்போர் மணிமிடற்று எண்கையாய், கேளினி'

என எட்டுக் கையே கூறப்பட்டது.
இதனால், ஒருவகை நடனக்கோலம் வகுத்துணர்த்தப்பட்டது.

ஆடல் பதினொன் றுறுப்பும் அடைவாகக்
கூடிய பாதச் சிலம்புகைக் கொள்துடி
நீடிய நாதம் பராற்பர தேயத்தே
ஆடிய நந்தி புறம்அகத் தானே. *#2731*

கூத்துப் பதினொன்றின் உறுப்புக்கள் எல்லாம் முறையாகக் கூடிய பாதத்தில் அணியப்பட்டுள்ள சிலம்பும், கையில் கொண்டுள்ள உடுக்கையும் ஒலியை எப்பொழுதும் எழுப்பிக் கொண்டிருக்கின்றன. அவ்வாறாக, மேலானவற்றிற்கெல்லாம் மேலான இடத்தில் ஆடுபவனாகிய சிவன் எல்லா உலகிலும் உள்ள உயிர்களின் அகத்தும், புறத்தும் ஆடுகின்றான்.

விளக்கவுரை

ஆடல் பதினொன்றாவன, 'அல்லியம், கொடுகொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல்' என்னும் நின்றாடல் ஆறும், 'துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை' என்னும் வீழ்ந்தாடல் ஐந்துமாம். இவற்றிற்கு உரிய உறுப்புக்கள் முறையே ஆறு, நான்கு, நான்கு, ஐந்து, ஆறு, ஐந்து, ஐந்து, ஆறு, நான்கு, நான்கு, நான்கு, இரண்டு. இவற்றின் இயல்பெல்லாம் ஆடல் நூலுள் (பரத சாத்திரத்தில்) சொல்லப்படும். சிலப்பதிகாரத்து அரங்கேற்றுக்காதை உரைகளில் சிறிது காண்க. 'எல்லா ஆடலும் எல்லாரும் வல்லராகார்; சிலர் சிலர் சில சிலவே வல்லவராவர்; சிவன் எல்லா ஆடலும் வல்லன்' என்பதும் 'ஆயினும் அவ்வாடல்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவன் ஆவன்' என்பது கூறியவாறு 'நாதம் நீடிய' என மாறுக. நீடிய - நீடின. நேயம் - விருப்பம். அது விரும்பப்படும் இடத்தைக் குறித்தது.
இதனால், 'சிவன் ஒருவனே ஆடல் வல்லான்' ஆகும் அற்புதம் கூறப்பட்டது.

ஒன்பதும் ஆட ஒருபதி னாறாட
அன்புறு மார்க்கங்கள் ஆறும் உடன்ஆட
இன்புறும் ஏழினும் ஏழ் ஐம்பத் தாறாட
அன்பனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே. *#2732*

சிவவேதங்கள் ஒன்பதும், பிராசாத கலைகள் பதினாறும், சமயங்கள் ஆறும் ஒருங்கு ஆடும்படியும், உயிர்கள் இன் புறும் இடமாகிய ஏழ்அண்டத்துள் சிறப்பாக நிலவுலகில் ஏழு தீவுகளும், அவற்றினும் சிறப்பிற் சிறப்பாக பரத கண்டத்து ஐம்பத்தாறு நாடுகளும் ஆடும்படியும் உயிர்கள் மாட்டு அருள் உடையோனாகிய சிவன் ஆனந்தத்தை விளைக்கும் திருக்கூத்தைத் தில்லையில் ஆடுகின்றான்.

விளக்கவுரை

நில உலகத்தைச் சிறப்பாகக் கூறினமையால், கூத்து முன் அதிகாரத்திற்போந்த தில்லைக் கூத்தாயிற்று. சிவ பேதங்கள் ஒன்பதாவன, நவந்தரு பேதங்கள். அவை ஆடுதலாவன, தாம் கருதி யவற்றை நிகழ்த்துதல், 'பிராசாத கலைகள்' என்றது அவற்றின் அதி தேவர்களையும் 'சமயங்கள்' என்றது அவற்றை மேற்கொண்டவர்களை -யுமாம். ஒன்பது முதலிய மூன்றும் ஞான வாயிலாதல் பற்றி அவற்றை முன்னர்க் கூறினார். 'அன்பனும்' என்னும் உம்மை, சிறப்பு.

இதனால், தில்லையில் உள்ள ஒருவன் ஆட, அனைத்தும் ஆடுதலாகிய அற்புதம் கூறப்பட்டது.

ஏழினில் ஏழாய் இயைந்தெழுத் தேழாதாய்
ஏழினில் ஒன்றாய் இழிந்தமைந் தொன்றாய
ஏழினில் சன்மார்க்கம் எங்கள் பரஞ்சோதி
ஏழினை நாடகத் தேஇசைந் தானே. *#2733*

ஏழ் நரம்புகளில் ஏழு வகையாய்த் தோன்றி, அவற்றிற்குப் பொருந்திய ஏழ் எழுத்துக்களால் குறிக்கப்பட்டு, அந்த ஏழ் எழுத்துக்களில் ஒன்றே ஏற்றத்தின் தொடக்கமும், இறக்கத்தின் முடிவுமாய் நிற்க அமையும் ஏழு பண்களினாலும் பாடப்படுகின்ற நன்னெறியை எங்கள் சிவபெருமான் ஏழிசைகளோடு கூடிய தனது கூத்திலே பொருந்தி ஆடுகின்றான்.

விளக்கவுரை

ஏவு வகைகளாவன, 'குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்' என்பன. இவற்றிற்குப் பொருந்திய எழுத்துக்களாவன முறையே 'ஆ' முதல், 'ஔ' ஈறான நெட்டெழுத்து ஏழுமாம். இவற்றை,

'களையறு குரலே துத்தம்,
கைக்கிளை உழையி னோடே,
இளியொடு, விளரி, தாரம்
என்ப ஏழிசையின் நாமம்'. 'ஆங்குள ஆ,ஈ ஊ,ஏ,
ஐ,ஓ,ஔ என்னும் ஏழும்
தீங்கிலா அக்க ரங்கள்
செப்பும்ஏ ழிசைக்குந் தானே'9 என்னும் சூடாமணி நிகண்டாலும் உணர்க. முற்காலத்தில் இருந்த யாழின் முன்னேற்றமாக வீணை தோன்றினாற்போல, முற்காலத்தில் இருந்த இசையின் பெயர்கள், இசையின் எழுத்துக்களின் முன்னேற் -றமே, 'சட்சம் இடபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம், நீடாதம்' என்னும்

பெயர்களும், 'ச,ரி,க,ம,ப,த,நி' என்னும் எழுத்துக் களும் என்க. எழுத்துக்களில் முதலாவதினின்று இசை மெல்ல மெல்ல உயர்ந்து உச்சத்தை அடையும்பொழுது அந்த எழுத்தே சொல்லப் பட்டு, மீண்டும் அதினின்றும் மெல்ல மெல்ல இறங்கி முடிவடையும் பொழுதும் அந்த எழுத்தே சொல்லப்படுதல் பற்றி, 'ஏழினில் ஒன்று ஆய், இழிந்தமைந்து ஒன்றாய்' என்றார். ஆதல் - மேன்மேல் உயர்தல். பண்கள் ஏழாவன, கோடிப்பாலை, செம்பாலை, படுமலைப் பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, மேற்செம்பாலை, விளரிப்பாலை' என்னும் ஆதாரப் பண்கள். 'இவற்றினின்றும் பிறக்கும் பிறவிப் பண்கள் நூற்று மூன்று' எனவும் 'மற்றும் திறங்கள்' எனவும், 'திறத்திறம்' எனவும் கூறுவர். இவையெல்லாம் இசைத் தமிழ் நூல்களில் சொல்லப்பட்டன. அந்நூல்கள் பலவும் இறந்து போயின. சிலப்பதிகார உரைகளில் சிறிது காணப்படுகின்றன.
நமது சிவநெறிப்பொருள்கள் இயற்றமிழ்ச் செய்யுட் -களிலன்றியும், இசைத்தமிழ்ப் பாட்டுக்களிலும் இனிமை பெறச் சொல்லப்பட்டமையை, 'ஏழினிற் சன்மார்க்கம்' என்றும், அப் பொருள்களெல்லாம் பெருமான் தனது கூத்தில் குறிப்பினால் தோன்ற ஆடுதலை, 'ஏழிசை நாடகத்தே இசைந்தானே' என்றும் கூறினார். 'இயைந்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'ஏழது' என்பதில் 'அது' பகுதிப்பொருள் விகுதி. அவ்விடத்து, 'எழுத்து' என்றது சாதியொருமை. கூத்தின் வினையாகிய இசைதல் அதனைச் செய்வான் மேல் ஏற்றப்பட்டது.
இதனால், இசைத்தமிழ்ப் பாடல்களால் இனிமை பெற விளக்கப்படும் பொருள்கள் எல்லாம் திருக்கூத்தில் விளங்குதலாகிய அற்புதம் கூறப்பட்டது.

மூன்றினில் அஞ்சாகி முந்நூற் றறுபதாய்
மூன்றினில் ஆறாய் முதற்பன்னீர் மூலமாய்
மூன்றினில் அக்கம் முடிவாக முந்தியே
மூன்றினில் ஆடினான் மோகாந்தக் கூத்தே. *#2734*

(காலம், கதிர், மதி, சேய், மால், பொன், வெள்ளி காரி' என்னும் ஏழு கோள்களின் இயக்கம் பற்றிப் பலவகையாகப் பகுக்கப்படும். அவற்றுள் கதிரியக்க அளவில் அதற்கும், மதிக்கும் இடையேயுள்ள வழியளவு பதினைந்தாகப் பகுக்கப்பட்டு அவற்றுள் ஒவ்வொரு பகுதியும் 'திதி' (ஸ்திதி-நிலை) எனப்படுகின்றது. மதி கதிருக்கு முன்னாக அகன்று செல்லும் நிலை பதினைந்தும் 'முற்பக்கம் பூர்வ பட்சம் - மதியது ஒளி மிகுந்து வருதலால் சுக்கில பட்சம்' என்றும், மதி கதிரை அணுகிப் பின்னாக வருதலால் 'அபர பட்சம்' என்றும், மதியது

ஒளி குறைந்து வருதலால் கிருட்டினபட்சம் என்றும் சொல்லப்படுகின்றன. ஒவ்வொரு பட்சத்திலும் உள்ள திதிகள் மூன்று வட்டங்களாக வகுக்கப்பட்டு, ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள ஐந்து திதிகளும் முறையே 'நந்தை, பத்திரை, சயை, இரித்தை, பூரணை' எனப்பெயர் சொல்லப்படும். எனவே, ஒன்று, ஆறு, பதினொன்றாம் திதிகள் நந்தையும் இரண்டு, ஏழு, பன்னிரண்டாம் திதிகள் பத்திரையும், மூன்று, எட்டு, பதின்மூன்றாந் திதிகள் சயையும் நான்கு, ஒன்பது, பதினான்காம் திதிகள், இரித்தையும், ஐந்து, பத்து, பதினைந்தாம் திதிகள் பூரணையும் ஆகின்றன. இவ்வாறு.) பதினைந்து திதிகளும் ஐந்தாகத் தொக்கு நின்று பயன் தருதலையே 'மூன்றினில் அஞ்சாதி' என்றார். மூன்று - மூன்று. வட்டம். அஞ்சு - நந்தை முதலிய ஐந்து சிறப்பு நிலை. இவையெல்லாம் கணி நூல்களில் (சோதிட சாத்திரங்களில்) காணப்படும்.

விளக்கவுரை

முந்நூற்றறுபது - ஓர் ஆண்டில் உள்ள நாள்கள். ஒரு திங்களுக்கு முப்பது நாள்களாகப் பன்னிரண்டு திங்களுக்கு ***30X12=360.*** (சிறிதே ஏறிப் பெரும்பான்மையாக நாள்கள் முந்நூற் -றறுபத்தைந்தும் ஒரோவோர் ஆண்டில் முந்நூற்று அறுபத்தாறும் ஆகின்ற அவற்றைக் கணக்கில் கொள்ளாமல் ஆண்டிற்கு முந்நூற் றறுபது நாள்' என்றல் பொது வழக்கு.) இந்த நாள்கள் முந்நூற்றறுபதும் பன்னிரண்டு அடிநிலைப் பகுதிகளாய்த் தொக்கு நிற்கும். அவையே பன்னிரு திங்கள்களாம். அவற்றையே 'முதற் பன்னீர் மூலமாய்' என்றார். முதல் - 'முந்நூற்று அறுபது' என் எண் பெறுதற்கு முன்பு. 'மூலம் பன்னிரண்டாய்' என மாற்றிக் கொள்க.

பன்னிரு திங்களும் 'கார், பனி, வேனில்' எனப் பெரும் பான்மை மூன்றாகிப் பின் அவற்றுள் ஒவ்வொன்று இரண்டாகப் பருவங்கள் ஆறாகும். அவற்றையே 'மூன்றினில் ஆறாய்' என்றார். இவற்றை ஆவணி முதலாக நந்நான்காகக் கொள்க. கார்ப்பருவத்தின் பின் இரு திங்களும் 'கூதிர்ப் பருவம்' (பெருமழையின்றிச் சிறு தூற்றலும், துளியும் மிகுந்து தொல்லை தரும் பருவம்.) பனிப் பருவத்தின் முன் இருதிங்கள் முன்பனிப் பருவமும், பின் இரு திங்களும் பின்பனிப் பருவமும் ஆகும். முன் பனியில் குளிர் மிகுந்தும், பின்பனியில் குளிர் குறைந்தும் இருக்கும். 'முன்பனி, பின்பனி' என்பன, பின்முன்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகைகள். வேனிற் பருவத்தின் முன் இரு திங்களும் 'இளவேனில் (வேனில் இளமையுடைத்தாய் வெப்பத்தை மிகத் தரும் பருவம்) எனவும், பின் இருதிங்கள் 'முதுவேனில்' (வேனில் முதுமையை எய்தி வெப்பத்தை மிகத்

தரமாட்டாத பருவம்) எனவும் சொல்லப்படும்.
அக்கம் - கண்; சிவனது கண்கள் மூன்று 'கதிர், மதி, தீ' என்னும் முச்சுடர்கள். 'மூன்று, அக்கத்தில் முடிய' என மாற்றுக. முடிதல் - அடங்குதல். பெரும்பாலும் முச்சுடர்களாலே காலம் பல வகை நிலையை அடைந்து பல விளைவுகளை உண்டாக்குதலை அறிக.
மூன்றிலும் ஆடினான் - ஏதேனும் ஒருகாலத்தில் உள்ளார்க்கு அக்காலத்தோடு, அதற்கு முன்னும், பின்னும் ஆகிய காலங்களிலும் ஆடினான். எதிர்காலம் பற்றி நோக்குங்கால் 'ஆடினான்' என்பதைத் தெளிவு பற்றி வந்த வழுவமைதியாகக் கொள்க.
மோகம் மயக்கம்; திரிபுணர்ச்சி. இஃது ஆணவ மலத்தின் காரியம்.
அந்தக் கூத்து - அந்தத்தை உண்டாக்கும் கூத்து. எனவே, 'உயிர்களின் ஆணவ மலத்தை நீக்குதற்கே இவ்வாறு சிவன் அனவரத தாண்டவத்தைச் செய்கின்றான்' என்பதாம். 'ஆகி, ஆய், ஆய், ஆய், ஆக' என்பவற்றிற்கு, 'காலம்' என்னும் எழுவாயும், 'ஆடினால்' என்பதற்கு, 'சிவன்' என்னும் எழுவாயும் வருவிக்க. முந்தியே - அனாதி தொட்டே.
மேல் இட வரையின்றி எங்கும் ஆடும் அற்புதம் கூறப்பட்டாற்போல, இதனால், கால வரையின்றி என்றும், எப்பொழுதும் ஆடும் அற்புதம் கூறப்பட்டது.

தாமுடி வானவர் தம்முடி மேல்உறை
மாமணி ஈசன் மலரடித் தாளிணை
யாமணி யன்புடை யார்மனத் துள்ளெழும்
காமணி ஞாலம் கடந்துநின் றானே. *#2735*

கற்பக மலர் மாலையை அணிந்த முடியை உடைய தேவர்களது தலைமேல் இருப்பனவாகிய, மாணிக்கம்போலும் சிவபெருமானது இருபாதங்களும், தகுதி வாய்ந்த அணியாகிய அன்பை உடையவர்களது உள்ளத்திலே விளங்கும் கற்பகத் தருவும், சிந்தாமணியும் ஆகும். ஆயினஉம் அவன் உலகத்தைக் கடந்தே யிருக்கின்றான்.

விளக்கவுரை

'கற்பகத்தரு இரந்தவற்றைக் கொடுக்கும்; சிந்தாமணி பெற நினைத்தவற்றைக் கொடுக்கும். உலகத்தைக் கடந்து நிற்கின்றவன் அன்பர்கள் உள்ளத்தில் கற்பகத் தருவும், சிந்தாமணியும் போல இருத்தல் கருணையினாலேயாகலின், அவன் மேற்கூறியவாறு எங்கும், எஞ்ஞான்றும் ஆடுதல் கருணையினாலே' என்பதைக் குறிப்பால் உணர்த்தியவாறு.
'தாமமுடி' என்பது, 'தாமுடி' எனக் குறைந்து நின்றது. அதனால்

தேவர்களது தலையினது உயர்வு குறிக்கப்பட்டது. 'உறை தாளிணை' என இயையும். 'உறை மாமணி' என இயைத்தலும் ஆம். 'தாள்' என்பது, கால் முழுவதையும் குறிக்க 'அடித் தாள்' என்பது பின் முன்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகையாய், பாதத்தைத் குறித்தது.

இங்கு 'அணி' என்றதை, 'ஒருபாற் கோடாமை சான்றோர்க்கு அணி'* என்பதிற்போலக் கொள்க. 'கடந்து நின்றான்' என்பதற்கு, 'அவன்' என்னும் சுட்டு வருவிக்க.

இதனால், ஞானம் கடந்து நின்றவன் சிலரது உள்ளங்களிலே விளங்கி, எண்ணியவற்றை எண்ணியாங்கு முடிக்கும் அற்புதம் கூறும் முகத்தால் அவனது கூத்து அற்புதமும் உணர்த்தப்பட்டது.

புரிந்தவன் ஆடில் புவனங்கள் ஆடும்
தெரிந்தவன் ஆடு மளவெங்கள் சிந்தை
பரிந்தவன் ஆடிற்பல் பூதங்கள் ஆடும்
எரிந்தவன் ஆடல்கண் டின்புற்ற வாறே. *#2736*

அனைத்தையும் படைத்தவனாகிய சிவன் அடி பெயர்த்து ஆடினால், அவனால் படைக்கப்பட்ட அகலிடங்கள் அனைத்தும் தாமாகவே ஆடும். (இயங்கும் 'அவன் ஆடாவிடில் அவையும் ஆடா; இயங்கா' என்பது கருத்து.) இதை அறிந்த சிவன் அவை ஆடும் பொருட்டுத் தான் ஆடுமளவும் எங்கள் அறிவுகள் அறிதலைச் செய்யும். ('அவன்' ஆடாவிடில் எங்கள் அறிவுகளும் அறிதலைச் செய்யா' என்பது கருத்து.) இது பற்றி அவன் கருணை கூர்ந்து எங்கும், எப்பொழுதும் ஆடுகின்றான். அப்பொழுது அவனது சுற்றமாகிய பல பூதங்களும் களிப்பினால் ஆடுகின்றான். நாங்கள் இன்பம் அடைந்ததும் அவன் சோதியாய் விளங்கி நின்று ஆடுதலைக் கண்டேயாம்.

விளக்கவுரை

'புரிந்தவன், தெரிந்தவன்' என்பன வினை யாலணையும் பெயர்கள். 'அவன் புரிந்து ஆடில்' எனவும், 'அவன் எரிந்து ஆடல்' எனவும் மாற்றி வைத்துரைக்க. 'சிந்தையும்' ஆடும் என, இறந்தது தழுவிய எச்ச உம்மையும் அதனை முடிக்கும் சொல்லும் வருவிக்க. எரிதல் - ஒளி வீசுதல். 'யாம் இன்புற்றவாறு ஆடல் கண்டு' என எடுத்து முடிக்க. 'இன்புற்றவாறு' என்பதிலும் இறந்தது தழுவிய எச்ச உம்மை தொகுத்தலாயிற்று.

இதனால் திருக்கூத்தினால் அறிவில் பொருள், அறிவுடைப் பொருள் அனைத்தும் செயற்படும் அற்புதம் கூறப்பட்டது.

ஆதி நடம்செய்தான் என்பர்கள் ஆதர்கள்
ஆதி நடம்செய்கை ஆரும் அறிந்திலர்

ஆதி நடம்ஆடல் ஆரும் அறிந்தபின்
ஆதி நடம்ஆடல் ஆம்அருட் சத்தியே. #2737

எப்பொருட்கும் முதல்வனாகிய சிவன் கூத்தனாய் நிற்றலைக்கண்டு, அதன் உண்மையை அறியும் அறிவு இல்லாதவர்கள், அக்கூத்தினை அவன் எவையோ சில பயன்களைப் பெற வேண்டி ஆடுகின்றான்' எனப் பிதற்றுவார்கள். ('எப்பொருட்கும் முதல்வ னாகியவனுக்குப் பிறர்பால் பெற வேண்டியது யாதுளது' என்பது கருத்து.) அவன் நடம் செய்தபின் உண்மை யாவராலும் அறிதற்கு அரிதேயாம். யாரேனும் அவ்வுண்மையை அரிவார் களாயின், 'அவனுக்கு இயல்பாய் உள்ள கருணையின் விளைவே அவனது கூத்து' என்பதே அவ்வுண்மையாய் முடியும்.

விளக்கவுரை

'ஆராயினும்' என்பது, 'ஆரும்' எனத் தொகுத்தல் பெற்று நின்றது. 'அறிந்தால்' என்பது, 'அறிந்த பின்' எனத்திரிந்து நின்றது. குணத்தை, 'சத்தி' என்றார். 'அருட் சத்தி ஆம்' என முன்னே கூட்டி முடிக்க. செய்கையின் உண்மையை, 'செய்கை' என்றும் சத்தியின் விளைவ 'சத்தி' என்றும் உபசரித்தார். இம்மந்திரம் சொற்பொருட் பின்வருநிலையணி பெற்றது.
இதனால், சிவனது திருக்கூத்துச் சிறிதும் தன்பொருட்டாகாது, பிறர் பொருட்டேயாகின்ற அற்புதம் கூறப்பட்டது.

ஒன்பதொ டொன்பதாம் உற்ற அசிபதத்(து)
அன்புறு கோணம் அசிபதத்(து) ஆடிடத்
துன்புறு சத்தியுள் தோன்றிநின் றாடிட
அன்புறும் எந்தைநின்(று) ஆடலுற் றானே. #2738

தனித்தனி ஒன்பது, ஒன்பது பகுதிகளையுடை யனவும், 'தத், துவம்' என்னும் இரு சொற்களால் குறிக்கப் படுவனவும் ஆகிய, 'பதி, பசு' என்னும் இரண்டும் 'அசி' என்னும் சொல்லில் இணையும்படியும், அதற்கு முன்னே பசு துன்பத்தைச் செய்கின்ற திரோதான சத்தியின் வசப்பட்டு எங்கும் பிறந்தும், வாழ்ந்தும் சுழலும் படியும் பசுக்களின் கருணையுடையவனாகிய எம்தந்தை சிவன் ஆடல் தொழிலைப் பொருந்தி நிற்கின்றான்.

விளக்கவுரை

என்றது, 'உயிர்கட்கு 'பிறப்பு, வீடு' என்னும் இருநிலைகளையும் 'தருதற்காக ஆடுகின்றான்' என்றபடி. வீடு சிறந்தமை பற்றி முற்கூறப்பட்டது. வீட்டைத் தருவது ஞான நடனம். பிறப்பைத் தருவது ஊன நடனம். 'ஒன்பதும் ஒன்பதும் ஆம் கோணம்' எனவும், 'இருபதத்து

உற்ற கோணம்' எனவும் தனித்தனி இயைக்க. அவற்றுள் முன்னையது பதியையும், பசுவையும் தனித்தனி நவகோண சக்கரமாக உருவகம் செய்ததாம். பதியின் ஒன்பது பகுதிகள் நவந்தரு பேதம். பசுவின் ஒன்பது பகுதிகள் 'கேவலம், சகலம், சுத்தம்' என்னும் மூன்றில் ஒவ்வொன்றிலும் 'கேவலம், சகலம், சுத்தம்' என்னும் மும்மூன்று உட்பிரிவுகளாம். அவையெல்லாம் முன் தந்திரத்தில் விளக்கப்பட்டன. அன்புறுதல், ஒன்றையொன்று நேசித்தல். 'அசி' பதம் சீவன் சிவன் ஆதலைக் குறிப்பது என்பதும் முன் தந்திரத்தில் சொல்லப்பட்டது. 'ஒன்பதொ டொன்பது' என்பதில் உள்ள ஒடு எண் ஒடு. 'ஆடிட, ஆட' என்னும் எச்சங்களும் எண்ணின்கண் வந்தன.
இதனால், உயிர்களின் பல நிலைகளும் நிகழ்தற்பொருட்டுச் சிவனும் பல நிலைகளில் நின்று ஆடுதல் கூறப்பட்டது.

தத்துவம் ஆடச் சதாசிவன் தான்ஆடச்
சித்தமும் ஆடச் சிவசத்தி தான்ஆட
வைத்த சராசரம் ஆட மறைஆட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே. *#2739*

முன் மந்திரத்தில் கூறியபடி பசு பல நிலைகளில் செயற்படும்படி சத்தி ஆடுதலால், சிவனும் அதற்கு இயையப் பல நிலைகளில் நின்று ஆடுகின்றான்.

விளக்கவுரை

ஐந்தொழிற்கும் முதல்வன் சதாசிவன் ஆதல்பற்றி அவனை வேறு பிரித்துக் கூறினார். சித்தம் - உயிர்களின் அறிவு. சராசரம் - பிறப்பு வகைகள். 'சிவசத்தி தான் ஆட' என்பதை மூன்றாம் அடியின் ஈற்றில் வைத்து, 'அவள் ஆட, அத்தனும் ஆனந்தக்கூத்து ஆடினான்' என முடிக்க. காரியப்பொருளில் வந்த ஏனை, 'ஆட' என்னும் எச்சங்கள். 'சிவசத்தி தான் ஆட' என்பதனோடு முடிந்தன. 'தான்' இரண்டும் அசைகள். சத்தி, இங்கு ஆதி சத்தி.
இதனால், திருக்கூத்துக்கள் யாவும் சத்தியின் நிலைகட்கு ஏற்ப நிகழ்த்தப்படுதல் கூறப்பட்டது.

இருவரும் காண எழில்அம் பலத்தே
உருவோ டருவோ டுருவரு ரூபமாய்த்
திருவருட் சத்திக்குள் சித்தன் ஆனந்தன்
அருளுரு வாகநின் றாடலுற் றானே. *#2740*

உண்மையில் அருட்சத்திக்கு உள்ளே சென்று அடையப்படுபவனாய் ஆனந்தத்தைப் பொழியும் சிவன் இவ்வுலகில் 'பதஞ்சலி, வியாக்கிரபாதர்' என்னும் முனிவர் இருவர் எப்பொழுதும் கண்டு களிக்கும்படி, உருவம் 'அருவம், உருஅருவம்' என்னும் மூன்று

திருமேனிகளில், அத்திருமேனிகள் அருளேயாய் நிற்க நின்று ஆடுதலை மேற்கொண்டுள்ளான்.

விளக்கவுரை

'இருவரும் காண்' என்றதனால், இங்குக் கூறிய அம்பல தில்லை அம்பலம் ஆயிற்று. அங்கு உருவம், கூத்துக் கோலம். அருவம், ஆகாசத்தைச் சுட்டும் இரகசியம். உருஅருவம், 'திருச்சிற்றம்பலம் உடையார்' என்னும் இலிங்கத் திருமேனி. சித்தன் - அடையப்படுபவன். மூன்றாம் அடியை முதலில் வைத்து உரைக்க. இதனால் தில்லைம்பலக் கூத்தின் அற்புதம் கூறப்பட்டது.

சிவம்ஆடச் சத்தியும் ஆடச் சகத்தின்
அவம் ஆட ஆடாத அம்பர ஆட
நவமான தத்துவம் நாதாந்தம் ஆடச்
சிவம்ஆடும் வேதாந்த சித்தாந்தத் துள்ளே. *#2741*

சிவ முதற்பொருள், தான் செய்வோனாய் நின்று சங்கற்பிக்க, அச்சங்கற்பந்தானே சத்தியாகிப் பலவகையில் நிற்க, அதனால் உலகத்தில் தீயனயாயும் நிலைகெட்டு நீங்கும் நிலையை எய்த, உலகில் அசைவற்றதாக எண்ணப்படுகின்ற ஆகாயமும் ஒலி அலைகளைத் தோற்றுவித்துச் செயற்பட, புதிது புதிதாய்த் தோன்றி யமைகின்ற தத்துவங்கள் நிலம் முதல் நாதம் ஈறாக நின்று செயற்பட எப்பொழுதும் ஆடும் இவ்வுண்மை வேதாந்தத்திலும், சித்தாந்தத் திலுமே காணப்படும்.

விளக்கவுரை

'பிறவற்றில் காணப்படாது' என்றதாம். அஃதாவது, 'புறச் சமயிகள் இதனை உணரார்' என்றதாம். ஈற்றில் உள்ள 'சிவம்' என்பதை முதலில் வைத்து உரைக்க. முதற்கண் உள்ள 'சிவம் என்பது செய்வோன்' என்னும் பொருட்டாய் நின்றது. அதன்கண், 'சிவமாய்' என ஆக்கம் வருவிக்க. 'சிவம் ஆட' என்பதில் ஆடுதல், சங்கற் பித்தல், 'நாதாந்தம்' என அந்தம் கூறவே, நிலமாகிய ஆதியும் பெறப் பட்டது. 'வேதாந்த சித்தாந்தம்' என்பது உம்மைத் தொகை. 'உள்ளது' என்பதில் இறுதிநிலை தொகுக்கப்பட்டு, 'உள்' என நின்றது.
இதனால், திருக்கூத்தின் அற்புத நிலை வேதாந்த சித்தாந்தங்களிலே விளங்குதல் கூறப்பட்டது.

நாதத்தின் அந்தமும் நற்போத அந்தமும்
வேதத்தின் அந்தமும் மெய்ச்சிவ அந்தமும்
தாதற்ற நல்ல சதாசிவ அந்தமும்
நாதப் பிரம சிவநட மாமே. *#2742*

உயிர் தத்துவங்கள் அனைத்தையும் 'தான் அல்ல' என்று கண்டு கழித்துத் தன்னை அவற்றிற்கு வேறான சித்துப் பொருளாக உணர்தலும், பின்பு, 'தான், அறிவித்தால் அறியும் தூல சித்தாவதல்லது, தானே அறியும் சூக்கும சித்தன்று' எனத் தனது உண்மையை உணர்ந்து, அதனானே, 'தானே அறிந்தும், உயிர்கட்கு அறிவித்தும் நிற்கும் சூக்கும சித்துத் தலைவனாம் சிவன்' என அறிதலும், இவ்வறிவு வேதாகமங்களாகிய அபர ஞானங்களாய் இல்லாது, அவற்றைக் கடந்த அனுபவமாம் பரஞானமாகப் பெறுதலும் ஆகிய இவையெல்லாம் தனக்கு ஒரு மூலம் இல்லாது தானே மூலமாய் நிற்கும் சதாசிவ மூர்த்திக்கு மேலே நாதமாய் நின்று 'நாதப்பிரமம்' எனப்படுகின்ற ஆதி சிவனது நடனத்தின் பயனேயாகும்.

விளக்கவுரை

'அந்தம்' என்பன கடந்த நிலையைக் குறித்தன. தாது - மூலம். ஐந்தொழில்களில் இறுதியான அருளலைச் செய்வோன் சதா சிவன் ஆதலை நினைக. 'மெய்ச் சிவம்' என்பதில் சிவம், சிவத்தைத் தரும் சிவாகமம். சத்தப் பிரம வாதிகள் சடமாகிய நாதத்தையே 'நாதப் பிரமம்' என்பர். அது பொருந்தாது; நாதத்தை அதிட்டித்து நிற்கும் சிவனே நாதப்பிரமம் என்பார் 'நாதப் பிரம சிவன்' என்றார். இந்தச் சிவன் அநாதி சிவனாகிய பரம் சிவத்தினின்றும் தோன்றிய ஆதி சிவன் ஆதலையறிக. நடத்தின் பயனை, 'நடம்' என உபசரித்தார். இதனால், சுத்தாவத்தை பராவத்தைகள் யாவும் திருக்கூத்தின் விளைவாதல் கூறப்பட்டது. இவ் அவத்தைகள் முன் தந்திரத்தில் விளக்கப்பட்டன.

சிவமாதி ஐவர்திண் டாட்டமும் தீரத்
தவமார் பசுபாசம் ஆங்கே தனித்துத்
தவமாம் புரன்எங்குந் தானாகி ஆடும்
தவமாம் சிவானந்தத் தோர் ஞானக் கூத்தே. *#2743*

சரியை முதலிய இறப்பில் தவங்களை நிரம்பச் செய்த உயிரைப் பாசங்கள் அப்பொழுதே விட்டு நீங்குதலால், அவ்வுயிர் சிவன் முதலிய ஐவரால் உண்டாகும் அலமரல் நீங்கும்படி, தவத்தின் வடிவாய் விளங்கும் சிவன் எங்கும் தானாய்த் திருக்கூத் தியற்றுவன். அக்கூத்துத் தவத்தால் விளைந்த ஞானத்தின் பயனாக அதற்கு உரியோர் பொருட்டுச் செய்யப்படுவதாகும்.

விளக்கவுரை

மூன்றாம் அடியை முதலில் வைத்து 'பசுவினின்றும்' என உருபு விரிக்க தனித்து. தனித்தலால், எங்கும் தான் ஆக-தனது வியாபக நிலை

தோன்றும்படி. அஃதாவது, 'எங்கும் சிவமாய்த் தோன்றும்படி' என்பதாம். 'அது ஞானக் கூத்து' எனச் சுட்டு வருவித்து தவமாம் சிவானந்தத்தோர்க்கு' என உருபு விரித்து முடிக்க.
சிவமாதி ஐவர், சிவ தத்துவம் முதலிய சுத்த தத்துவம் ஐந்திலும் நிற்கும் முதல்வர்கள். இவர்கள் பந்தத்தில் உள்ள உயிர்களை அவற்றி னின்றும் நீங்குதற்கு ஆவன செய்வாராயினும், அச்செயல் நோயாளிக்கு மருத்துவன் செய்யும் செயல் அப்பொழுது துன்பமாய் தோன்றுதல்போல அலமரலை விளைக்குமாகலின், அந்நோய் நீக்கத்தை, அவரால் விளையும் திண்டாட்டம் நீங்குதலாகக் கூறினார். 'திண்டாட்டம்' என்னும் நாட்டுப்புற வழக்கு, *2736* ஆம் மந்திரத்திலும் வந்தது.
இதனால், திருக்கூத்து வகைகளுள் ஞானக்கூத்தின் சிறப்புக் கூறப்பட்டது.

கூட நின்றான் ஒரு காலத்துத் தேவர்கள்
வீட நின்றான் விகிர் தாளன்னும் நாமத்துத்
தேட நின்றான்திக ழும்சுடர் மூன்றொளி
ஆட நின்றான் என்னை ஆட்கொண்ட வாறே. *#2744*

'தேவர் என்பார் அனைவரும் தனது முன்னிலையில் ஒருங்கு கூடி வணங்க இருப்பவனும் அவர் அனைவருமே அழிந்து இல்லையாகிய காலத்திலும் தான் அழியாது ஒருவனாய்த் தனித்திருப் பவனும், உள்ள காலத்திலும் உயிர் வருக்கத்துட் பட்டார் யாவரும் 'எம்மில் வேறாம் தன்மையுடையவனே', (தலைவனே) என அந்தப் பெயரைச் சொல்லித் தேட நிற்பவனும் தனது முக்கண்கள் சுழலுதலால், உலகத்தார் முன் விளங்குகின்ற, 'ஞாயிறு, திங்கள், தீ' என்னும் முச்சுடர்களும் சுழலும் படி ஆடகின்றவனும் ஆகிய அவன் என்னை ஆட்கொண்டவாறு வியப்பிற்குரியது.

விளக்கவுரை

கூடுதல், தன் பயனைத் தோற்றுகின்றது. 'தேவர்கள்' என்பதை, 'கூட' என்பதனோடும் கூட்டுக. 'வீடவும்' என்னும் சிற்பபும்மை தொகுத்தலாயிற்று. விகிர்தன் - வேறுபட்டவன். மூன்றொளிகள் ஆடுதல் கூறினமையால் அவன் ஆடுதல் பெறப்பட்டது. 'வியப்பிற்குரியது' என்பது சொல்லெச்சம்.
இதனால் ஆடல் வல்லானது அற்புத நிலை கூறப்பட்டது.

நாதத் துவங்கடந் தாதி மறைநம்பி
பூதத் துவத்தே பொலிந்தின்பம் எய்தினர்
நேதத் துவமும் அவற்றொடு நீதியும்
பேதப் படாவண்ணம் பின்னிநின் றானே. *#2745*

வேதாந்தத்திலே விளங்குகின்ற நம் சிவன், நாத தத்துவத்தையும் கடந்த முதல்வன். அவனை இந்தப் பூமியிலே இங் குள்ளவர்கள் தெளிவாகக் கண்டு ஆனந்தத்தை அடைகின்றார்கள். அது பற்றி அவன் அவர்களிடத்து வைத்த கருணையும், நடுவு நிலைமையும் முரணாகிவிடவில்லை; நேரொன்றியே நிற்கின்றன. அவ்வாறு உள்ளது அவன் இப்பூமியில் இயைந்து நிற்கின்ற நிலை.

விளக்கவுரை

'நாத தத்துவம்' என்பது கடைக்குறைந்து 'நாதத்துவம்' என நின்றது. இனி 'நாதத்தின்மை' எனக்கொண்டு 'சுத்த மாயை' எனினும் ஆம். சிறப்பும்மையும்; 'கடந்த' என்பதன் ஈற்று அகரமும் தொகுத்தலாயின. 'மறை' என்றது அதன் முடிவை. 'மறை நம்பி நாதத்துவமும் கடந்த ஆதி' என்க. இதனை அனுவதித்து ஓதினார், அவன் மிகக் கீழ்த் தத்துவத்தின்கண் விளங்கிநிற்கும் எளிமை யுணர்த்தற்கு. பூ - பூமி. 'பூத் தத்துவம்' என ஒற்று மிகாமை வடநூல் முடிவு. பொலிந்து, 'பொலிய' என்பதன் திரிபு. இன்பம் எய்துதற்கு வினைமுதல் வருவிக்கப்பட்டது. 'நேசத்துவம்' என்பது, எதுகை நோக்கித் திரிந்தது. நேசம் இறைவனுடையது இன்பம் எய்துவார் பலராகலின், அவர்மேல் வைத்த நேசமும் பலவாகச் சொல்லப்பட்டது. நீதி, 'மோகம் அறுத்தவர்க்கே முத்தி கொடுப்பம்' எனச் சொல்லி வைத்த நீதி. அது பேதப்பட்டாமை, அவனது காட்சியாலே மோகம் அற்றமையினாலாம். ஆகவே, அவரது நிலைமை அவ்வாறாகும்படி அவன் இவ்வுலகில் இயைந்து நிற்கின்றான்' என்பதாம். இனி, 'நேதியும்' என்பதே பாடமாகக் கொண்டு ஏற்குமாறு உரைப்பர்.

'பின்னி நின்றான்' எனப் பொதுப்படக் கூறினாரேனும் இங்குச் சிறப்பாகக் கூத்தனாய் நிற்றலைக் கூறுதலே கருத்தென்க. இன்பம் எய்துதல் அதனானே சிறக்க நிகழ்தலின்.

இதனால், திருக்கூத்தினால் சிவநெறி உண்மை அற்புதமாக விளைதல் கூறப்பட்டது.

ஆனந்தம் ஆனந்தம்' என்பர் அறிவிலார்
ஆனந்தம் மாநடம் ஆரும் அறிகிலர்
ஆனந்தம் மாநடம் ஆரும் அறிந்தபின்
ஆனந்தம் அற்றிட ஆனந்தம் ஆமே. *#2746*

'பேரின்பத்தை அடைய வேண்டும், அடைய வேண்டும் என்று, அஃது இருக்குமிடத்தை அறியாத பலர் அதனைத் தேடி அலைகின்றனர், ஆயினும் பேரின்பம் இவ்வுலகில் சிவன் செய்யும் திருக்கூத்திலே இருத்தலை யாரும் அறிதல் இல்லை. அறிவார்களாயின், அக்கூத்து, உலக இன்பம் அனைத்தும் கெடும்படி பேரின்பமாய் நிகழும்.

விளக்கவுரை

'ஆனந்தம்' பலவற்றில் ஈற்றடியின் முதலில் நின்ற ஒன்று தவிர ஏனைய யாவும் சிறப்புப் பற்றிப் பேரின்பத்தையே குறித்தன. அடுக்கு, இடைவிடாமை பற்றி வந்தது. 'வேண்டும்' என்பது சொல்லெச்சம். ஆனந்தத்தைத் தருதல் பற்றி நடனத்தையே 'ஆனந்தம்' என உபசரித்துக் கூறினார். 'அறுதல் விடயானந்தம் - ஐம்புல இன்பம்' என்க.

இதனால், முன் மந்திரத்திற் கூறிய அற்புதத்தை அறிய மாட்டாதாரது நிலை இரக்கத்திற்குரியதாதல் கூறப்பட்டது.

திருந்தநற் 'சீ' என் றுதறிய கையும்
அருந்தவ 'வா' என் றணைத்தபொற் கையும்
பொருந்தில் அமைப்பில் இயஎன்பொற் கையும்
திருந்தத் தீ ஆகும் திருநிலை மவ்வே. *#2747*

சிவனது திருக்கூத்தினைக் காணுங்கால். அதில் உதறிய கையை, மாயையை, 'சீ' என்று உதறும் கையாகவும், வீசி அணைத்த கையை, அடியவனை, 'வா' என்று அழைத்து அருள் வழங்கும் கையாகவும், சார்ந்தவிடத்து, 'அஞ்சற்க' என அமைந்த கையை, 'இனிதிருக்க' எனத்தேற்றம் தரும் கையாகவும், தீ ஏந்திய கையை, வினைகள் கெடத் திருவருள் வழி நிற்கச் செய்யும் கையாகவும், ஊன்றிய திருவடியை மலத்தை மிதித்து நிற்கும் திருவடியாகவும் காணுதல் வேண்டும்.

விளக்கவுரை

திருவைந்தெழுத்தில் உள்ள எழுத்துக்களின் சிலேடை தோன்ற உண்மை யுணர்த்தியவாறு. உதறுதலுக்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. இங்குக் கூறியவற்றில் அமைந்துள்ள எழுத்துக்களை வருகின்ற மந்திரத்துள் 'உதறிய கை, அணைத்த கை, 'இய' என்ற கை' - என உடம்பொடு புணர்த்து ஓதப்பட்ட பொருள்கள் இனிது விளங்க வெளிப்படையாக உரைக்கப்பட்டன. 'தீ, நிலை' என்பன ஆகுபெயர்களால் அவற்றையுடைய கையையும், அடியையும் குறித்தன. 'ம்' என்றது, மலத்தை அதன் முதலெழுத்துக் குறிப்பாற் கூறினார். 'மவ்வை மிதித்தல்' என ஒரு சொல் வருவிக்க. வேண்டும் இடங்களில் எல்லாம் 'ஆக' என்பது வருவித்து, அவற்றை 'ஆகும்' என்பதனோடு முடிக்க. 'திருந்து அத் தீ ஆகும்' என்பதை, 'அத் தீ திருந்து ஆகும்' என மாற்றி உரைக்க. திருந்து - திருந்துதல்; அஃதாவது, தற்போதத்தால் வினைகளைச் செய்யாது திருவருள் வழி நிற்றல். முதனிலைத் தொழிற்பெயர் 'இய' என்றது, 'இயல்' என ஏவியதனைக் குறித்தது. 'ஆகும்' என்பதைப் பின்னரும் கூட்டுக.

இதனால், திருக்கூத்தினை உண்மையில் தரிசிக்கும் முறைகளுள் ஒரு வகை முறை கூறப்பட்டது.

'மாயை தனைஉதறி, வல்வினையைச் சுட்டு, மலம்
சாய அமுக்கி,அருள் தான்எடுத்து - நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான்அழுத்தல்
தான்எந்தை யார்பரதந் தான்'.* என்னும் உண்மை விளக்க வெண்பாவை இங்கு ஒப்பு நோக்கி உணர்க.

மருவும் துடியுடன் மன்னிய வீச்சு
மருவு மமைப்பு அனலுடைக் கையும்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமஎன ஓதே. *#2748*

கூத்தப் பிரான் திருவுருவத்தில் உடுக்கை வீச்சு, அமைப்பு, நெருப்பு இவைகளையுடைய நான்கு கைகளையும், ஊன்றிய திருவடியையும் முறையே 'சி, வா, ய, ந, ம' என்னும் எழுத்துக்களாகக் கண்டு துதித்து வணங்குக.

விளக்கவுரை

'சேர்க்கும் துடிசிகரம்; சிக்கெனவா வீசுகரம்;
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கில் இறைக்கு
அங்கி நகரம்; அடிக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான்'* என்னும் உண்மை விளக்க வெண்பாவினைக் காண்க. திருவைந் தெழுத்து இவ்வாறு சிகாரம் முதலாக அமைவது சூக்கும பஞ்சாக்கரம் ஆகும் என்பதனை நினைவூட்டுதற் பொருட்டு, 'உரு இல் சிவாயநம' என்றார். உரு இன்மை அருவம்; சூக்குமம். இனி நகாரம் முதலாக அமையும் தூல பஞ்சாக்கர வடிவத்தை அந்நூல்,
'ஆடும் படிகேள்; நல் அம்பலத்தான்; ஐயனே,
நாடும் திருவடியி லேநகரம் - கூடும்
மகரம் உதரம்; வளர்தோள் சிகரம்;
பகருமுகம் வா;முடிய; பார்'9
என்பதனால் விளக்கிற்று. அதனை நாயனார் இங்குக் குறித்திலர். அஃது உலகப் பயனையே விளைத்தலின். கரு, ஆகுபெயராய் உடம்பைக் குறித்தது. உடம்பு, முயலகனது. அன்றி, அம்மந்திரம் கிடைத்திலது என்றலும் ஆம். 'கருவின்கண்' என 'மேல்' என்னும் பொருட்டாகிய ஏழாவது விரிக்க.

இதனால், முன் மந்திரத்தில் சிலேடை வகையான் குறித்த சூக் கும பஞ்சாக்கர முறை வெளிப்படையாக இனிது விளங்கக் கூறப்பட்டது.

அரன்துடி தோற்றம் அமைத்தல் திதிஆம்
அரன்அங்கி தன்னில் அறையின் சங் காரம்

அரன்ஊற் றணைப்பில் அமருந்திரோ தாயி
அரன்அடி என்றும் அனுக்கிரகம் என்னே. #2749
கூத்தப் பிரானது திருவுருவில் தோன்றும் குறிப்பைக் கூறுமிடத்து, உடுக்கையால் ஒலியை உண்டாக்கல் படைத்தல் தொழிலை யும், நெருப்பை ஏந்தியிருத்தல் அழித்தல் தொழிலையும், மேல் எடாமல் உறுதியாக முயலகன்மேல் ஒருகாலை ஊன்றியிருத்தல் மறைத்தல் தொழிலையும், மற்றொரு காலை உயரத் தூக்கியிருத்தல் அருளல் தொழிலையும் இவ்வாறாக ஐந்தொழிலையும் உணர்த்தும் என்க.

விளக்கவுரை

மேல், 'திருந்த நற் 'சீ' என்றுதறிய கையும்' என்றதில் உணர்த்தப்பட்ட குறிப்பு முத்தர்கட்கான ஞான நடனக் குறிப்பு' எனவும், இது, பெத்தர்கட்கான 'ஊன நடனக் குறிப்பு' எனவும் உணர்க. இதனையும், 'தோற்றம் துடியதனில்; தோயும் திதி அமைப்பில்;
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்; - ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தே உற்ற திரோதம்; முத்தி
நான்ற மலர்ப்பதத்தே; நாடு'3 என உண்மை விளக்க நூல் கூறுதல் காண்க. 'ஊன்று' என்னும் முதனிலை வலித்தல் பெற்று, ஈற்றில் 'அம்' ஏற்று, 'ஊற்றம்' என வந்தது. ஊற்றமா - உறுதியாக. இஃது இம்மந்திரத்தில் ஆக்கம் இன்றி வந்தது. அணைத்தல் - (முயலகன் முதுகில்) சேர்த்தல். 'அரன்' என்றது. இங்குக் கூத்தப் பெருமானையே. அப்பெயர் சொற்பொருட் பின்வருநிலையாய்ப் பின்னரும் வந்தது. 'ஊற்ற அணைப்பு' என ஊன்றிய திருவடியைக் கூறினமையால், பின் வந்த 'அடி' தூக்கிய திருவடியாயிற்று.
இது பெத்தர்க்கான குறிப்பாயினும், ஐந்தொழில் செய்தல் முதல்வனுக்கு இலக்கணமாதல் சிறப்பு நோக்கியும், இறுதியில் அருளல் அமைந்திருத்தலாலும் இதனையும் இங்கு நாயனார் கூறினார் என்க. 'அறையின்' என்பதை முதலிற் கொள்க.
இதனால், கூத்தப் பெருமானது வேறொரு வகைக் கூத்தின் குறிப்பு உணர்த்தப்பட்டது.

நீத்திரட் சோதி திகழொளி யுள்ஒளிக்
கூத்தனைக் கண்டஅக் கோமளக் கண்ணினன்
மூர்த்திகள் மூவர் முதல்வ னிடைச் செல்லப்
பார்த்தனள் வேதங்கள் பாடினள் தானே. #2750
அக்கரங்கள் ஐம்பதைக் குறிக்கும் சுடர்கள் மேல் எல்லாம் விளங்குகின்ற, முதல் ஒளியாகிய ஓங்காரமாம் திருவாசியுள், அவ்வோங்காரத்தின் உள்ளொளியாய் விளங்கும் கூத்தப் பெருமானது கூத்தினை எப்பொழுதும் காண்கின்ற அழகிய கண்களை யுடைய

சிவகாமியம்மை அந்தக் கண்களினாலே மூவர் மூர்த்திகளும் பெருமானது மூன்று கண்களினின்றும் தோன்றும் வண்ணம் பார்த்தாள். (உடனே அவர்கள் தோன்றினார். பின்பு அவர்களுக்கு வழிகாட்டுதற் பொருட்டுப்) பல வேதங்களையும் பாடி உணர்த்தினாள்.

விளக்கவுரை

'அதனால் உலகம் நடைபெற்று வருகின்றது' என்பது குறிப்பெச்சம்.
'ஓங்கார மேநல் திருவாசி; ஆங்கதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம்'9
என்னும் உண்மை விளக்கப் பகுதியை இங்கு ஒப்பிடுக. 'படைப்புக் காலத்தில் சிவன் தன்னிடத்தினின்றும் சத்தியை, 'இலலிதா' என்னும் பெயருடன் தோற்றுவிக்க, அவள் தனது மூன்று கண்களினின்றும் மும்மூர்த்திகளைத் தோற்றுவித்து, அவர்களை முத்தொழில் புரியுமாறு அருளினாள்' என்பது படைப்பு முறைகள் பலவற்றில் ஒருமுறையாகச் சொல்லப்படுகின்றது.8 அம்முறை இங்கு ஒருவாறு குறிக்கப்பட்டது.
கூத்தப் பெருமான் உலகத்தை நடத்தும் முறையைக் கூறியவாறு.
'உள்ளொளியாகிய கூத்தன்' என்க. 'இடை' என்பதைப் பெயராக வைத்து, முதல்வனிடையினின்றும் செல்லப் பார்த்தனன்' என்க.
செல்லுதல் - தோன்றிச் செயல்புரிதல்.
இதனால், 'மும்மூர்த்திகளும் கூத்தப் பெருமான் தனது சத்தியால் தோற்றுவித்து நிறுத்தி, ஒடுக்கப்படுபவர்களே' என்பது கூறப்பட்டது.

நந்தியை எந்தையை ஞானத் தலைவனை
மந்திரம் ஒன்றுள் மருவி அதுகடந்(து)
அந்தர வானத்தின் அப்புரத் தப்பர
சுந்தரக் கூத்தனை என்சொல்லு மாறே. *#2751*

மேல், 'சுந்தரக் கூத்து' எனக் கூறப்பட்ட கூத்தினைச் செய்யும் சிவன் இங்குள்ளவர்களுக்கு 'ஓம்' என்னும் அந்த ஒரு மந்திரத்திலும், அதற்கு மேலாய திருவைந்தெழுத்து மந்திரத்திலும் நிறைந்து நின்று அருள்புரிகின்றான் என்றாலும், உண்மையில் அவன் அவற்றைக் கடந்து, எல்லா அண்டங்களுக்கும் அப்பாற்பட்டே யிருக்கின்றான். ஆகையால், 'அவன் இன்ன தன்மையன்தான்' என்று யார் வரை செய்து கூற இயலும்!.

விளக்கவுரை

'நந்தி' என்பது சிவன் பெயர்கள் பலவற்றில் ஒன்று. அது முதலாக வந்த மூன்றும் சுந்தரக் கூத்தனையே குறித்தமை வெளிப் படை. மந்திரம் ஒன்று, பொது நோக்கில் பிரணவமும், சிறப்பு நோக்கில் திருவைந்தெழுத்துமாம். கூத்தப் பெருமான் அவற்றின் வடிவாய்

நிற்றல் இங்கு விளக்கப்பட்டது. 'மருவியும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. 'ஓர் ஊரன் அல்லன் ... ... இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் என்று எழுதிக் காட்டொ ணாத னாகிய'9 அவன், இங்கு மந்திரவடிவாய் நின்று ஆடல் புரியும் அருட் பெருமையை அறிந்து, அன்பு செய்து உய்தல் மக்கட்குக் கடன் என்பது கருத்து.

இதனால் திருக்கூத்தின் அருமை அறிந்து பயன்பெறுமாறு அறிவுறுத்தல் செய்யப்பட்டது.

சீய குருநந்தி திருவம் பலத்திலே
ஆயுறு மேனி யாரும் அறிகிலர்
தீயுறு செம்மை வெளுப்போடும் அத்தன்மை
ஆயுறு மேனி அணைபுக லாமே. #2752

ஆசிரியராய் உள்ளார் அனைவர்க்கும் அவ் ஆசிரியத் தலைமையை அருளிய இயற்கை ஆசிரியத் தலைவன் சிவபெருமானே. அவனே திருவம்பலத்தில் கூத்துக் கோலமும் கொண்டு ஆடுகின்றான். அதனால் அவனது திருமேனியின் தன்மை ஆய்ந்துணரத்தக்கது. அதனை அவ்வாறு ஆய்ந்துணர்ந்தவர் யாரும் இல்லை அதன் தன்மையாவது, நெருப்புப் பார்வைக்குச் சிவப்பு நிறத்தையும், உண்மையில் வெளுப்பு நிறத்தையும் உடையதுபோல இருதன்மைப்பட்டது. அதனை உணர்ந்தால் அவனைச் சார்ந்து அவனுள்ளே இரண்டறக் கலந்துவிடலாம்.

விளக்கவுரை

சீயம் - சிங்கம். இது தலைமை பற்றி வந்த உவமை. நந்தி ஆய் உறு மேனி என்க. ஆதல் - பொருந்துதல். மீட்டும் வந்த 'ஆய் உறு மேனி' என்பது 'அது' என்னும் சுட்டுப் பெயர் அளவாய் நின்று, ஆகுபெயரால் அதன் தன்மையைக் குறித்தது. 'ஆரும் அறிகிலர்' என்றதனால், ஆய்ந்துணரற்பாலதாதல் பெறப்பட்டது. 'தீ வெளுப்போடு செம்மை உறும் அத்தன்மை' என இயைக்க. தீயைப் பார்ப்போர் அனைவரும்' அது சிவப்பானது' என்றும் கருதுகின்றனர். 'ஆயினும் தீ உண்மையில் வெளுப்பானதே' என நியாய நூலார் நிலை நாட்டுவர். இன்றைய அறிவியலாரும் 'ஏழு நிறங்களின் சேர்க்கையே வெண்மை' என்பர். கூத்தப் பெருமானது சத்தி, 'திரோதான சத்தி, அருட் சத்தி' என இரண்டாதல் பற்றி 'சத்தி வடிவான அவனது மேனி இரு தன்மையுடையது' எனஅறார். திரோதான சத்தியால் பெத்தத்தையும், அருட்சத்தியால் முத்தியையும் உயிர்கட்கு அவன் அருளுகின்றான்; அவ்வருட்செயல் திருக்கூத்தினால் நிகழ்கின்றது என்க. 'ஆய், அணை' என்னும் முதனிலைகள் 'ஆய்ந்து' அணைந்து 'ஆய், அணை' என்னும்

முதனிலைகள் 'ஆய்ந்து' அணைந்து' என எச்சப்பொருள் தந்தன. இதனால் திருக்கூத்து இரு சத்திகளால் இருவேறாகச் செய்யப் பட்டு, இருவகைப் பயனை விளைத்தல் கூறப்பட்டது.

தானான சத்தியும் தற்பரமாய் நிற்கும்
தானாம் பரற்கும் உயிருக்கும் தரும் இச்சை
ஞானாதி பேதம் நடத்தும் நடித்தருள்
ஆனால் அரனடி நேயத்த தாமே. *#2753*

சத்தி சிவனின் வேறன்று ஆதலால், சிவன் உயிர்களைக் கடந்து 'நிற்றல் போலவே சத்தியும் உயிர்களைக் கடந்து நிற்கும் ('இந்நிலையில் சிவன், 'பரமசிவன்' என்றும், சத்தி, 'பராசத்தி' என்றும் சொல்லப்படுவர். எனினும் அந்தச் சத்தி) பரமசிவனுக்கும், அவனுக்குக் கீழே உள்ள உயிர்கட்கும் முறையே ஐந்தொழில் செய்தலிலும், போக மோட்சங்களை அடைதலிலும் இச்சையையும், அவற்றிற்கு ஆவனவற்றை அறியும் அறிவையும், அறிந்தவாறே ஆற்றும் செயலையும் தந்து, உலகத்தை நடத்தும். நடத்துமிடத்து அஃது 'ஆதி சத்தி' எனப் பெயர் பெறும். ('திரோதான சத்தி' எனப்படுவதும் இதுவே.) இவ்வாறு உயிர்களை நடத்துதலே திருக்கூத்து இயற்றுதல் ஆதலின் அக்கூத்தின் பயனாக உயிர்கள் திருவருளைப் பெறும் தன்மையை எய்துமாயின், அந்த ஆதி சத்தியே அருட்சத்தியாய் அவைகட்கு இறைவனுடைய திருவடியில் அன்பைப் பெருக்கும்.

விளக்கவுரை

எனவே, 'இதுவே திருக்கூத்தின் முடிந்த பயன்' என்ற தாயிற்று. 'தான்' இரண்டும் சிவன். இரண்டாவதில், 'தானே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. தானேயாதலாவது பிறி தொன்றையும் பற்றாது தனித்து நிற்றல். தற் பரை - தனக்கு மேலாய் நிற்பவள். 'தன்' என்றது உயிரை. இச்சை ஞானங்களைக் கூறவே, இனம் பற்றிச் செயலும் கொள்ளப்பட்டது. 'ஞான இசை' என்னும் உம்மைத் தொகை செய்யுள் நோக்கி பின்முன்னாய் நின்றது. 'ஆதியாய்ப் பேதங்களை நடத்தும், அங்ஙனம் நடத்துதலாகிய நாடகத்தை நடித்து நேயத்தது ஆம்' என முடிக்க. தனது உண்மை யியல்பில் மாற்றம் எய்தாமையைக் குறிக்க இவற்றை, 'நாடகம்' என்றார். நேயத்தது - நேயத்தைப் பெருக்குவது. உயிர்களது உள்ளத்தின் செயலை அவற்றின்மேல் வைத்து, 'அருள் ஆனால்' என்றார்.
இதனால், திருக்கூத்தின் செயல் வகைகளையும், பயன் வகைகளையும் தொகுத்துக் கூறி முடிக்கப்பட்டது.

*11.16.*ஆகாசப் பேறு

உள்ளத்துள் ஓம்எனும் ஈசன் ஒருவனை
உள்ளத்து ளேஅங்கி யாய ஒருவனை
உள்ளத்து ளேநீதி யாய ஒருவனை
உள்ளத்து ளேஉறல் ஆகாய மாமே. #2754

உயிர்களின் அறிவிலே சிவன் 'ஓம்' என்னும் பிரணவ வடிவாயும், அதனால் உண்டாக்கப்படுகின்ற உணர்வு வடிவாயும், அவ்வுணர்வில் தோன்றுகின்ற அற வடிவாயும் விளங்குகின்றான். அவனை அங்கு அம்முறையானே சென்று தலைப்படும் இடம் அருள் வெளியேயாம்.

விளக்கவுரை

ஒருவன் - ஒப்பற்றவன். 'அங்கி' என்றது ஒளியை. அஃது உணர்வேயாம். உணர்வுகள் நாதத்தானே உளவாதல் மேலெல்லாம் சொல்லப்பட்டது. 'நீதி' என்றது அறத்தை. 'அது தானும் அற உணர்வை' என்க. 'நாதம், பொருள் உணர்வு, அவற்றுள் அற உணர்வு, திருவருட் பேறு இவை காரண காரியமாய் முறையானே நிகழும்' என்பதும், 'அவற்றுள் திருவருட் பேறே முடி நிலை' என்பதும் கூறியவாறு. ஆகவே, 'திருக்கூத்தினைக் கண்டு, இம்முறையானே திருவருளைப் பெறுக' என்பது குறிப்பெச்சமாயிற்று. 'உறல்' என்னும் தொழிற்பெயர் ஆகுபெயராய், உறும் இடத்தைக் குறித்தது. 'உடல்' என்பது பாடம் அன்று.

இதனால், ஆகாசப் பேறே முடிநிலைப் பேறாதலும், அதற்குமுன் உள்ள படிநிலைப் பேறுகளும் கூறப்பட்டன.

பெருநில மாய்அண்ட மாய்அண்டத் தப்பால்
குருநில மாய்நின்ற கொள்கையன் ஈசன்
பெருநில மாய்நின்று தாங்கிய தாளோன்
அருநில மாய்நின்ற ஆதிப் பிரானே. #2755

சிவன் (உடலில் உயிர்போல எப்பொருளிலும் கலந்து நிற்கும் கலப்பினால்) பெரிய பூமியாயும், அப்பூமிபோன்ற பல உலகங்களையும் அடக்கி நிற்கும் அண்டங்களாயும் இருப்பினும் அவை அனைத்தையும் கடந்த திண்ணிலமாகிய அருள் வெளியிலே விளங்குபவனாய்த்தான் இருக்கின்றான். அதனாற்றான் அவன் எல்லாவற்றையும் தாங்கும் பெரிய பூமிபோல. எல்லாவற்றையும் தாங்கும் ஆற்றலையும் ஒருவராலும் சென்று அணுகுதற்கரிய இடத்தையும் உடைய முதற்கடவுளாய் இருக்கின்றான்.

விளக்கவுரை

'ஆகையால், அவனை அவ்வருள்வெளியில் சென்று தலைப்படவே முயலவேண்டும்' என்பது குறிப்பெச்சம், 'கொள்கை' என்றது

உண்மையை. தாள் - ஆற்றல். 'அரு நிலமாய் நின்ற ஆதிப்பிரான்' என்றது உடம்பொடு புணர்த்தல் ஆதலின் அதற்கு இவ்வாறு உரைக்கப்பட்டது. குருநிலம், அருநிலம் இரண்டும் ஆகுபெயராய், அதன்கண் உள்ளவனைக் குறித்தன. குரு - திண்மை; பேராற்றல். இதனால், அருள் வெளியது சிறப்புக் கூறப்பட்டது.

அண்ட ஒளியும் அகண்ட ஒளியுடன்
பிண்ட ஒளியால் பிதற்றும் பெருமையை
உண்ட வெளிக்குள் ஒளிக்குள் ஒளித்தது
கொண்ட குறியைக் குலைத்தது தானே. *#2756*

அகண்ட ஒளியாகிய சிவ சொரூபத்தையும் தான் கண்ணாற் காணும் போல ஞாயிறு, திங்கள், பிறகோள்கள், விண்மீன் ஆகிய ஒளிகளைப் போலவே உடன் வைத்து எளிதில் கண்டு விட்டதாக, உடம்பாற் பெற்ற சிற்றறிவு கொண்டு பிதற்றுலாகிய சிறுமையை, அதனை விழுங்கி நிற்கின்ற அருள் வெளிக்குள்ளே ஒளியாகிய சிவ ஒளிக்குள் மறைந்து நிற்கச் செய்வதே, சீவன் தான் பெற்றுள்ள 'சீவன்' என்னும் அப்பெயரைப் போக்கும் செயலாகும்.

விளக்கவுரை

அஃதாவது, 'சிவமாகின்ற செயலாம் என்றபடி. 'அண்ட ஒளியையும்' என உருபு விரிக்க. உம்மை, இழிவு சிறப்பு. பிதற்றுதல், அறிந்தோர் நகைக்கும்படி, அறிந்ததாக எங்கும் சென்று கூறுதல். பிதற்றுதலாகிய சிறுமையை 'பெருமை' என்றது எள்ளற் குறிப்பு. அனைத்தையும் விழுங்கியுள்ள (அடக்கியுள்ள) வெளி அருள்வெளி. 'ஒளித்தது, குலைத்தது' என்பன தொழிற் பெயர்கள். 'ஒளிக்குள் ஒளித்தலைச் செய்யாமல் வேறுநின்று கூறுவன எல்லாம் வெறும் பிதற்றல்களே என்பதாம்.

இதனால் ஆகாசப் பேறல்லன எல்லாம் பேறாகாகமை கூறப்பட்டது.

பயனுறு கன்னியர் போகத்தின் உள்ளே
பயனுறும் ஆதி பரஞ்சுடர்ச் சோதி
அயனொடு மால்அறி யாவகை நின்றிட்(டு)
உயர்நெறி யாய்வெளி ஒன்றது வாமே. *#2757*

உயிர்கட்குப் புறத்தே பெறப்படும் பயனாகிய மகளிரது இன்பத்தைப்போல, அகத்தே பெறப்படும் பயனாய் விளையும் இன்பமாய் நிற்பது, எல்லாவற்றிற்கும் முதலாயும், மேலாயும் உள்ள பேரொளிப் பொருள். அஃது அயன், மால் முதலியோர்க்கும் அறிய வாரா நிலைமையதாயும், மேலாய நெறியின் பயனாயும் பரவொளியின்கணுள்ள ஒரு பொருளாகும்.

விளக்கவுரை

ஈரிடத்தும், 'பயனாய்' என ஆக்கம் விரிக்க. பின்னர் 'உள்ளே' என்றமையால், முன்னர், 'புறத்தே' என்பது பெறப்பட்டது. இன், உவம உருபு. 'உறும்' என்பது முற்று. ஈற்றில் உள்ள 'அது' என்பதை, 'சோதி' என்பதன் பின்னர்க் கூட்டுக. நெறியின் பயனை, 'நெறி' என்றார். இதனால், ஆகாசப் பேறே பேரின்பப் பேறாதல் கூறப்பட்டது.

அறிவுக் கறிவாம் அகண்ட ஒளியும்
பிறியா வலத்தினிற் பேரொளி மூன்றும்
அறியா தடங்கிடில் அத்தன் அடிக்குள்
பிறியா திருக்கிற் பெருங்காலம் ஆமே. *#2758*

உயிர்களின் அறிவுக்கறிவாய் நிற்கின்ற, 'சிவம்' என்னும் ஒளியுடைப் பொருளையும், அதனை விட்டு நீங்காது தாதான்மியமாய் நிற்கும் ஆற்றலாய் எங்கும் பரவி நிற்கும் 'இச்சை, ஞானம், கிரியை' என்னும் முச்சுடர்களையும் ஒருவன் தன்னின் வேறாக வைத்துச் சுட்டி உணராமல் அவற்றினுள்ளே அடங்கி ஒன்றாகி, அந்நிலையினின்றும் நீங்காதிருப்பானாயின், அவன் காலத்திற்குக் காலமாய் விளங்குவான்.

விளக்கவுரை

'காலத்தைக் கடந்து நிற்பான்' என்பதாம். காலத்தைக் கடந்து நிற்றல் கூறவே, இடத்தைக் கடந்து நிற்றலும் தானே பெறப்பட்டது. 'ஒளி' இரண்டனுள் முன்னது, ஒளியை உடையதனைக் குறித்தது. வலம் - வல்லமை; ஆற்றல், வலத்தினில் - 'வல்லமை' என்னும் நிலைமையில் உள்ள. 'பெயரொளி' என்பது 'பேரொளி' என மருவி வந்தது. பெயர்தல் - பரவுதல். 'வலத்திற் பெயரொளி மூன்றும்' எனப்பாடம் ஓதுதல் சிறக்கும். 'அத்தன் அடிக்குள் அடங்கிடில்' என முன்னே கூட்டுக. இதனால், 'பரவெளி காலத்தைக் கடந்தது' என்பதும், அஃது அதுவேயாய் அடையத்தக்கது' என்பதும் கூறப்பட்டன.

ஆகாச வண்ணன் அமரர் குலக்கொழுந்*(து)*
ஏகாச மாசுணம் இட்டடங் கிருந்தவன்
ஆகாச வண்ணம் அமர்ந்துநின் றப்புறம்
ஆகாச மாய்அங்கி வண்ணனு மாமே. *#2759*

ஐந்து தத்துவங்களாய் நிற்கும் சுத்த மாயை யினையே ஐந்து தலைகளையுடைய பாம்பாக ஆடைபோல் அணிந்து, அந்தத் தத்துவங்களிலே நிற்கின்ற சிவன் அவையாகிய சுத்த மாயை யிடத்தவனாய், 'அமரர்' என்னும் பெயருக்கு, முகமனாக அன்றி, உண்மையாகவே உரிய சிவலோகத்தார்க்குத் தலைவனாவான். இன்னும் அவன் அத்தத்துவங்கட்கு அப்பாற்பட்ட பர வெளியில்

நிற்றலையே விரும்பி நிற்பினும் இங்குள்ளார் பொருட்டு இப்பூதா காசமாகியும், அதன்கண் விளங்குகின்ற ஒளியாகியும் இருக்கின்றான்.

விளக்கவுரை

ஏகாசம் - மேலாடை; உத்தரீயம். மேலாடையே, ஆடி அசைதல் பற்றி, 'ஆடை' எனவும், இடையில் இறுக உடுத்தப்படுவது, 'உடை, உடுக்கை' எனவும் சொல்லப்படும். இரண்டாம் அடியை முதலில் கூட்டி உரைக்க. முதற்கண் உள்ள 'ஆகாசம்' சுத்த மாயை. வண்ணம் - வடிவம். அதிட்டானம் 'வடிவம்' எனப்படுதலை, 'சுத்த தத்துவம் சிவன்றன் சுதந்திர வடிவமாகும்'*3* என்னும் சிவஞான சித்தியாலும் உணர்க. அமரர் - மரியாதவர்; இறவாதவர். இது தேவர்கட்கு முகமனாகிய பெயரே என்பதை,

'அச்சுதன், அயன், அமரர் ஆகிய பெயர் அவர்க்கு
நிச்சம் படு முகமனே யானபோல்'*1*

என்னும் கந்த புராணச் செய்யளாலும் அறிக. குலம் - கூட்டம். கொழுந்து தலைவன். இதன்பின் 'அப்புறம்' என்பதை இயைக்க. 'ஆகாசம்' மூன்றும் முறையே சுத்தமாயை, பரவெளி, பூதாகாசம் இவற்றைக் குறித்தன. இவையெல்லாம் ஒருங்குதோன்ற அப்பர், 'ஆகாய வண்ணம் உடையாய் போற்றி'*9* என்று அருளிச் செய்தார். 'ஆகாச சரீரம் பிரஹ்ம'*8* என்பது உபநிடதம். அமர்தல் - விரும்புதல். 'அங்கி' என்றது ஒளியை. காசம் - ஒளி, அது, 'ப்ர' என்னும் இடைச்சொல்லை முதலிற் பெற்று, 'ப்ரகாசம்' எனவழங்கும். ஒளிக்கு இடமாதல் பற்றியே, 'ஆகாசம்' எனப் பெயர் பெற்றது. இதனால், ஆகாசங்களது சிறப்புணர்த்தும் முகத்தால் பராகாசத்தினது சிறப்புணர்த்தப்பட்டது.

உயிர்க்கின்ற வாறும் உலகமும் ஒக்க
உயிர்க்கின்ற உள்ளொளி சேர்கின்ற போது
குயிற்கொண்ட பேதை குலாவி உலாவி
வெயிற்கொண்டென் உள்ளம் வெளியது வாமே. *#2760*

'சேதனம், அசேதனம்' என்னும் இருவகை உலகங்களும் இயங்குமாறு உளங்கொள்கின்ற உள்ளொளியாகிய சிவன் தன்னைச் செலுத்தியபோது, குயில்போலும் குரலையுடைய அருட்சத்தி அவனோடே குலாவி உலாவுதலால், எனது உள்ளம் அவனது ஒளியைப் பெற்று, இருள் நீங்கிப் பிரகாசிக்கின்றது.

விளக்கவுரை

உயிர்த்தல், உயிர்த்தன்மை பெற்று உணர்தல். எனவே, அதனைச்செய்வது சேதனமாயிற்று. ஆகவே, பின்னர் 'உலகம்'

என்றது அசேதனத்தையாயிற்று. பின் வந்த உயிர்த்தல், திருவுளங் கொள்ளுதல். 'உயிர்க்கின்றவாற்றையும், உலகத்தையும் ஒக்க உயிர்க் கின்ற உள்ளொளி' என்க. சேர்தல். தன் காரியம் தோற்றி நின்றது. உலாவி - உலாவுதலால். 'பரவெளியாவது அருட்சத்தியேயாதலின் உயிர் உடம்பொடு கூடியிருக்கும் பொழுதும் அஃது அந்தப் பரவெளியைச் சேர்தலாற்றான் ஒளியுடையதாய்த் திகழ்கின்றது' என்பது உணர்த்தியவாறு.

இதனால், சீவன் முத்தியும் பர வெளியிருப்பேயாதல் கூறப்பட்டது.

நணுகில் அகல்கிலன் நாதன் உலகத்*(து)*
அணுகில் அகன்ற பெரும்பதி நந்தி
நணுகிய மின்னொளி சோதி வெளியைப்
பணியின் அமுதம் பருகலும் ஆமே. *#2761*

சிவன் தன்னைச் சாராமல் உலகத்தைச் சாரின் அவர்களை விட்டு மிகச் சேயனாய் நீங்கி நிற்பன். உலகத்தைச் சாராது தன்னைச் சாரின், அவர்களை விட்டு எப்பொழுதும் நீங்கான். முதற்கண் மின்னல் ஒளி போலத் தோன்றிப் பின்னர்ப் பேரொளியாகி விளங்கு கின்ற பரவெளியாம் அவனை வணங்கினால் அவன் கூறியவாறு நீங்காது நின்று அமுதத்தைப் பொழிவான். அதனை உண்டு தேக்கி மகிழலாம்.

விளக்கவுரை

'சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன்'* என்னும் முறைமையால், 'சிவன் பொதுவாகவே யாவர்க்கும் தலைவனாயினும் அவன் சிறப்பாகத் தலைவனாய் நிற்றல் தன்னைச் சார்ந்தவர்க்கே' என்பதை முன்னிரண்டடிகளில் உணர்த்தி 'அவனைச் சார்ந்து பயன் பெறுக' எனப் பின் இரண்டடிகளில் அறிவுறுத்துகின்றவ், 'அவனைச் சார்தல் பர வெளியிலாம்' என விளக்கினார். 'ஒளியும், சோதியும் ஆம் வெளி' என்க. வெளியில் உள்ளவனை 'வெளி' என்றார். 'நந்தி' என்பதை முதலில் கூட்டியுரைக்க. அகல்கிலனாகிய நாதன்' என்க. 'நாதன், பதி' என்பன பொருட் பின்வரு நிலையணி.

இதனால், 'உண்மைச் சிவப்பேறு பர வெளிப்பேறே' என்பதும், அதன் சிறப்பும் கூறப்பட்டது.

மிக்கார் அமுதுண்ண நஞ்சுண்ட மேலவன்
தக்கார் உரைத்த தவநெறி யேசென்று
புக்கால் அருளும் பொன்னுரை ஞானத்தை
நக்கார்க் கழல்வழி நாடுமின் நீரே. *#2762*

*(*பதிப்புக்களில் வருகின்ற அதிகாரத்தில் மூன்றாவதாய்க் காணப்படும் இம்மந்திரம் இங்கிருத்தற்குரியது.*)*

எழுவகைப் பிறப்புக்களில் மேற்பிறப்பை எய்தினவராகிய தேவர்கள்

அமுதுண்ண வேண்டித் தான் அதற்கு முன்னே தோன்றிய விடத்தை உண்டதனானே, 'எல்லாரினும் மேலானவன் சிவன்' என்பது இனிது விளங்கும். இன்னும்,

'அப்புறுத்த கடல்நஞ்சம் உண்டான் தன்னை,
அமுதுண்டார் உலந்தாலும் உலவா தானை'*

என்று அருளிச்செய்தபடி, அமுதத்தை உண்டவர் சாவவும், தான் நஞ்சுண்டும் என்றும் 'சாவா மூவாச் சிங்கமாய்' இருத்தலாலும் அவனது மேன்மை தெளிவாகும். அறிவும், ஆற்றலும் உடையாரினும் அருளுடையாரே மேலானவர் ஆதலாலும், அவ்வருட் பெருக்கம் தன்னையடைந்தார் அமுதுண்ண வேண்டித் தான் நஞ்சத்தை உண்டமையானே தெற்றென விளங்குதலாலும் 'மிக்கார் அமுதுண்ணத் தான் நஞ்சுண்டவன் மேலவன்'* ஆகின்றான். அவனைத் தக்கார் உரைத்த தவநெறியில் சென்று அடைந்தால் அங்ஙனம் அடைந் தவர்களைத் தானாம் வண்ணம் அருளுவான். ஆகையால் அவரது பொன்போலும் மொழியால் விளக்கப்படும் ஞானத்தை 'இதுவோ ஞானம்' என இகழ்கின்றவர்களை விட்டு விலகும் உபாயத்தை நீங்கள் ஆராய்ந்து அறிவீர்களாக.

விளக்கவுரை

'பணியின் அமுதம் பருகலும் ஆமே' என மேற் கூறியதனை அனுபவமாக நிறுவியவாறு. 'இம் மேலவனை (பராகாசத் தவனை) இகழ்வாரை நீங்குமாற்றையறிதலே ஞானோதயத்தின் முதல் நிலையாகும் என இதனானே வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

புறத்துள்ஆ காசம் புவனம் உலகம்
அகத்துள்ஆ காசம்எம் ஆதி அறிவு
சிவத்துள்ஆ காசம் செழுஞ்சுடர்ச் சோதி
சகத்துள்ஆ காசந் தான்அம் சமாதியே. *#2763*

('ஆகாசமாவது யாது' என்பார்க்கு, 'ஆகாசமாவது ஏனை யெல்லாப் பொருள்கட்கும் இடம் தருவது' என்பது விடையாயின், பிற பொருளுக்கு இடம் தருவன யாவும் ஆகாசமாம். அந்நிலையில் பூதங்களில் ஒன்றை மட்டும் 'ஆகாசம்' என்றல் இடுகுறியாம். அவ்வாறன்றிக்) காரண வகையால் நோக்கின் 'புவனங்கள்' என்றும், 'உலகங்கள்' என்றும் சொல்லப்படுவன புற ஆகாசங்களாம். எல்லாப் பொருள்களும் அறிவினுள் அகப்பட்டுத் தோன்றுதலால் நம் அறிவுகள் அக ஆகாசங்களாம். நமது அறிவுகளையும் அகப்படுத்தி நிற்பது சிவனது அறிவு ஆதலின் அஃது உள்ளுக்குள் ஆகாசமாம். அதனை அகப்படுத்தி நிற்பது வேறொன்றில்லை ஆகலின் அதுவே

பரமாகாசமாம். அந்த ஆகாசத்தை இந்த உலகிலே பெறுதல் அழகிய 'சமாதி' என்னும் நிலையாகும்.

விளக்கவுரை

'அதனைப் பெறவே முயலுங்கள்' என்பது குறிப்பெச்சம். புவனங்களாவன அவ்வவ் அண்டங்களைப் புரக்கும் கடவுளரது இடங்களாம். அவர்களது காப்பிற்கு உட்பட்ட அண்டங்களில் உலகங்கள் உள்ளன. ஆதி அறிவு - முதல் அறிவு. அது கருவிகளால் உண்டாகும் பாச அறிவாம். 'அறிவு' என்பதை, 'சிவத்து' என்பதற்கும் கூட்டுக. 'அதற்கு மேலானது ஒன்று இல்லை' என்பதே 'செஞ்சுடர்ச் சோதி' என்பதனால் குறிக்கப்பட்டது. இதற்கு 'அது' என்னும் எழுவாய் வருவிக்க. ஈற்றில் நின்ற ஆகாசம், அதனைப் பெறும் பேற்றினைக் குறித்தது. தான், அசை. அழகு, இங்கு நிரம்பிய இயல்பைக் குறித்தது. சமாதி, 'யோக சமாதியும் ஞான சமாதியும்' என இருவகைத்து. ஞான சமாதியே ஞான நிட்டையாகும்.

இதனால், ஆகாசப் பேறுகள் பலவற்றுள் முடிநிலையான ஆகாசப் பேறே பேறாதல் கூறி முடிக்கப்பட்டது.

11.17.ஞானோதயம்

மன சந்தியில் கண்ட மன்நன வாகும்
கனவுற ஆனந்தங் காண்டல் அதனை
வினவுற ஆனந்தம் மீதொழி வென்ப
இனமுறா னந்திஆ னந்தம் இரண்டே. #2764

மனம் புறக் கருவிகளோடு கூடிப் புறப்பொருளைப் பற்றும் நனவு நிலை (அவ்விடத்து இன்பமும் சிறிது உளதாயினும்) பொதுவாகத் துன்ப நிலையேயாதலும், அந்த மனம் புறத்திற் செல்லாது அகத்தே அடங்கிய கனவு, உறக்கம் முதலிய நிலைகள் இன்ப நிலையாலும் அனுபவமாக அறியப்படுவன. அந்த முறையை ஆராய்ந்து பார்த்தால், 'இன்பமாவது, கருவி கரணங்களின் மேற் செல்லுதலை ஒழிதலே' என்பது விளங்கும். அவ்வொழிவினை எய்தியவன் அடையும் இன்பங்கள் இரண்டு. (உலகின்பம், வீட்டின்பம் என்பன.)

விளக்கவுரை

'கனவுற ஆனந்தம்' எனப் பின்னர்க் கூறினமையால் முன்னர் 'நனவு துன்பமாகும்' என்பது பெறப்பட்டது. வினவுதல் - ஆராய்தல். மீது - கருவி கரணங்களின் மீது. 'மீது செல்லுதல்' என ஒருசொல் வருவிக்க. ஒழிவு - ஒழிதலையுடைய நிலை. பெத்த நிலையில் உளதாகும் இம்முறைமையை உவமையாகக் கொண்டு உணரும் உவம உணர்வால் 'முத்தி நிலையின் இயல்பையும் உணரலாகும்' என்பார். 'இனம் உற்ற ஆனந்தி ஆனந்தம் இரண்டு' என்றார். இனம், 'ஆனந்தம்' என்னும் சாதி, ஆனந்தி ஆனந்தத்தை எய்தும் உயிர். 'அஃது எய்தும் ஆனந்தம் இரண்டு என்க. முன்னர்க் கூறியவாற்றால் 'அவ்விரண்டு இவை' என்பது விளங்கலின், வாளா, 'இரண்டு' என்று போயினார். வீட்டிற்கு நேர் வாயிலாகிய 'ஞானம் தோன்றுதல் கருவி கரணங்களினின்று நீங்குதல்' என்றபடி. உலகில் விழிப்புத் துன்பமாகவும், கனவும், உறக்கமும் இன்பமாகவும் உணரப்படுதல் வெளிப்படை. இது பற்றி ஏகான்ம வாதிகள் சகல சுழுத்தியையே, 'பிரமானந்த நிலை' என்பர்.
இதனால், ஞானோதயத்தின் முதற்படி கூறப்பட்டது.

கரியட்ட கையன் கபாலம்கை ஏந்தி

எரியும் இளம்பிறை சூடும்எம் மானை
அரியன் பெரியன்என்(று) ஆட்பட்ட தல்லால்
கரியன்கொள் சேயன்கொல் காண்கின்றிலேனே. #2765

சிவபெருமானை, மந்திரம் 337-இல் கூறியவாறு, 'பிரமன் தலையைக்

கிள்ளிக் கையில் ஏந்தியவன்' எனவும் மந்திரம் *340*-இல் கூறியவாறு 'யானையை உரித்தவன்' எனவும், 'தக்கனுடைய சாபத்திற்கு அஞ்சி வந்து அடைக்கலம் புகுந்த சந்திரனைத் தலையில் அணிந்து காத்தவன்' எனவும் மற்றும் இவ்வாறு வரும் வரலாறுகள் பலவற்றால் உயர்ந்தோர் புகழ்ந்து கூறிய சொற்களால் அவனையே, 'அரியவன்' என்றும், பெரியவன் என்றும் துணிந்து யான் அவனுக்கு ஆட்பட்டதல்லது, அவனை யான் நேரில் 'கறுப்பன்' என்றோ, 'சிவப்பன்' என்றே பார்த்து உணர்ந்ததில்லை.

விளக்கவுரை

இது, நாயனாரது தொடக்க நிலையைக் கூறியது. ஏனெனில், சிவனை நிருவிகற்பமாக உணர்ந்ததையே கூறிற்று ஆதலின்,
'அன்றும திருஉருவம் காணாதே ஆட்பட்டேன்!
இன்றும் திருஉருவம் காண்கிலேன்-என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்,
எவ்வுருவோ நின்னுருவம் ஏது'*3* என்ற அம்மை திருவாக்கு, 'சிவன் உருவிலன்' என்பதை உணர்ந்திற்றாதலின் அஃது இதனின் வேறு என்க.

இதனால், 'அனுபூதிமான்கள் அருளிச்செய்த திருமொழியை ஐயுறாது பற்றுதலே ஞானத் தோற்றத்தின் முதல் நிலை' என்பது கூறப்பட்டது.
ஞான சம்பந்தரும்,
'ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர்விட்டுளன் எங்கள் சோதி,
மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்;
சாதுக்கள் மிக்கீர், இறையே வந்து சார்மின்களே'*1*

விளக்கைப் பிளந்து விளக்கினை ஏற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்கவல் லார்க்கு
விளக்குடை யான்கழல் மேவலும் ஆமே. *#2766*

ஆணவ இருளால் அறிவை இழந்த நின்ற உயிருக்கு அந்த ஆணவ இருளைச் சிறிதே நீக்கும் விளக்குப் போல்வன மாயா காரியங்களாகிய தூல, சூக்கும, அதிசூக்கும உடம்புகள். அறிவை விளக்கி நிற்கும் கருவிகளாகிய அவைகளையே 'அறிவாகிய தான்' என உயிர் மயங்குகின்றது. அம்மயக்கம் நீங்கி, அவ்வுடம்புகளைத் தனக்கு வேறாக நீக்கி, அறிவு விளக்காம் தன்னைத் தான் உணர்ந்து, பின் தன் அறிவிற்குள்ளே அறிவாய் விளங்கும் திருவருளை விளங்கச் செய்து, பின் அந்தத் திருவருளாகிய விளக்கினுள் தானாகிய விளக்கினை, வெயிலின்முன் உள்ள பகல் விளக்குப்போல அடங்கி விளங்கச்

செய்யவல்லவர்க்கு அந்தத் திருவருளாகிய ஒளியை உடையவனாகிய சிவனது இன்பக்கடலைப் பெறுதல் கூடும்.

விளக்கவுரை

'விளக்கு'ப் பலவற்றுள் முதலாவது, மாயா காரியமாகிய உடம்புகள். இரண்டாவதும், மூன்றாவதும், ஆறாவதும் உயிரினது அறிவு. ஏனையவை திருவருள். கழல் - திருவடி, அஃதே சத்தி; அஃது அறிவாயும் இன்பமாயும் இருக்கும். அறிவாய் இருத்தல் முன்பு 'விளக்க' எனக் கூறப்பட்டமையால், இங்கு, 'கழல்' என்றது இன்பத்தையாம்.

இதனால், ஆசிரியரது அருள்மொழி வழியே தத்துவ சுத்தி, ஆன்ம தரிசனம், சிவ தரிசனம், சிவ யோகம் என்பன முறையாக நிகழ்தலே ஞானோதயத்தின் வளர்ச்சியாதல் கூறப்பட்டது.

தத்துவம் எங்குண்டு தத்துவன் அங்குண்டு
தத்துவம் எங்கில்லை தத்துவன் அங்கில்லை
தத்துவ ஞானத்தின் தன்மை யறிந்தபின்
தத்துவன் அங்கே தலைப்படுந் தானே. *#2767*

பொருள்களின் பொதுமையை மட்டும் உணர்ந் தொழியாது, அவற்றின் மெய்ம்மையை உணர்ந்தவரிடத்தில்தான் மெய்ப்பொருளாய் உள்ள சிவனும் விளங்கியிருப்பான். மெய்ம்மையை உணராதவரிடத்தில் அவன் விளங்குதல் இல்லை. ஆகவே, மெய்யுணர்வி சிறப்பினை உணர்ந்து அதனை ஒருவன் பெற்றுவிட்டால், உடனே சிவன் அவனிடம் வந்து விளங்குவான்.

விளக்கவுரை

'தத்துவம்' என்றது மெய்ம்மையை; பொருள்களின் பொதுமையை மட்டும் உணர்தலாவது. வானவில் தோன்றினஆல், 'இது மிக அழகிதுய பல நிறங்களைக் கொண்டு விளங்குகின்றது இஃது எங்கிருந்து வந்தது? அதிசயம்! அதிசயம்! என்று இவ்வளவில் உணர்தல் போல்வது. மெய்ம்மையை உணர்தலாவது, வானவில்லைக் கண்டபொழுது, இஃது ஓர் உண்மையான வில் அன்று.

பெருவட்டமாகிய சூரியனது வடிவில் ஒரு பாதியின் பிரதிபலனம். நமக்குப் பின்னால் ஓரிடத்தில் மழை பெய்கின்றது. அதற்கு அப்பால் சூரியன் பிரகாசிக்கின்றான். அவனிடத்தில் உள்ள பல நிறக் கதிர்களும் மழைத்துளிகளின் இடையே ஊடுருவி, நமக்கு முன்னால் பிரதிபலித்தலால் இந்தப் பலநிற அரைவட்டம் நமக்கு வில்போலத் தோன்றுகின்றது. இஃது உண்மையில் வில் அன்று. பின்னால் பெய்கினஅற மழை நின்றால் இந்தப் பிரதிபலனமும் மறைந்து விடும்

என இவ்வாறு அதன் உண்மையை உணர்தல் போல்வது. இந்த உண்மை உணர்வே மெய்யுணர்வே - தத்துவ ஞானம். பொது உணர்வும், ஐய உணர்வும், திரிபுணர்வும் 'ஞானம்' எனப்படா. 'அஞ்ஞானம்' என்றே சொல்லப்படும். ஆகவே, அந்த அஞ்ஞானம் உள்ள இடத்தில் சிவன் விளங்கமாட்டான். 'கல்லா நெஞ்சின் - நில்லான் ஈசன்'* என்னும் ஞானசம்பந்தர் திருமொழியில், 'கல்லா நெஞ்சு' என்பது, 'ஞானத்தைக் கல்லாத நெஞ்சு' என்றும், 'கற்றாலும் கல்லுப்போல நின்று உருகாத (கல் ஆம் நெஞ்சு) நெஞ்சு' என்றும் இருபொருளையும் தருவது. 'கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை'* என்னும் திருவாசகத் தொடரில் 'கல்லா மனம்' என்பதும் அத்தகையது. மூன்றாம் அடியில் வந்த 'அறிதல்,' அதன் காரியத்தை உணர்த்தி நின்றது. தத்துவத்தை உணரும் முறையே முன் மந்திரத்தில் சொல்லப்பட்டது.

இதனால், ஞானமாவது 'தத்துவ ஞானமே' என்பதும், அதன் இன்றியமையாச் சிறப்பும் கூறப்பட்டன.

விசும்பொன்றத் தாங்கிய மெய்ஞ்ஞானத்துள்ளே
அசும்பினின் நூறும் ஆரமு தாகும்
பசும்பொன் திகழும் படர்சடை மீதே
குசும்ப மலர்க்கந்தம் கூடிநின் றானே. *#2768*

பசிய பொன்போல விளங்கும் தனது விரிந்த சடையின்கண் குசும்ப மலரின் வாசனை கமழ நிற்கின்ற சிவன் ஆகாயத்தைப்போல எல்லாப் பொருளையும் தன்னுள் அடங்கக் கொண்டிருக்கின்ற உண்மை ஞானத்திலிருந்து கசிந்து ஊறுகின்ற அரிய அமுதமாவான்.

விளக்கவுரை

என்றது, 'உதயமான ஞானம் பின் முறுகி வளரச் சிவானந்தம் பெருகும்' என்றவாறு. மூன்றாம் அடி முதலாகத் தொடங்கியுரைக்க. 'ஒன்ற' என்பது உவம உருபு. 'சிவஞானம் ஆகாசம் போன்றது' என்பது முன் அதிகாரத்தில் விளக்கப்பட்டது. அசும்பின் - அசும்பாக. அசும்பு - கசிவு. குசும்ப மலர். 'செந்துருக்க மலர்' என்பர்.

இதனால், தத்துவ ஞானத்தின் சிறப்பும் பயனும் கூறப்பட்டன.

முத்தின் வயிரத்தின் முந்நீர்ப் பவளத்தின்
தொத்துப் பசும்பொன்னின் தூவொளி மாணிக்கம்
ஒத்துயர் அண்டத்தி னுள்ளமார் சோதியை
எத்தன்மை வேறென்று கூறுசெய் வீரே. *#2769*

முத்து, வைரம், பவளம், கட்டியான பசும்பொன், மாணிக்கம் ஆகியவற்றில் உள்ள ஒளிகளைப் போல அண்டங்களால் வேறறக் கலந்து நிற்கின்ற ஞான ஒளியை நீவிர் அவற்றினின்றும்

வேறுபடுத்திப் பெறுவீர்? சொல்லுமின்.

விளக்கவுரை

'அதனை அவ்வாறு அவ்அண்டங்களில் வைத் துணர்தலே அதனைப் பெறுதலாகும்' என்றபடி. அவ்வாறு உணர்தலைச் 'சுத்த பராயோகம்' எனத் துகளறு போதம் கூறும்.*8* இவ்வுணர்வின் நிலையையே, 'மரத்தை மறைத்தது மாமத யானை' என்னும் மந்திரத்தில், 'மரத்தில் மறைந்தது மாமத யானை' என்றும், 'பரத்தில் மறைந்தன பார்முதல் பூதம்' என்றும் கூறினார். கட்டியை, 'தொத்து' என்றார்.
'மாணிக்கத்தின் தூவொளி ஒத்து' என மாறிக் கூட்டுக.
இதனால், ஞானக் காட்சியின் இயல்பு கூறப்பட்டது.

நானென்றும் தானென்றும் நாடினேன் நாடலும்
நானென்று தானென் றிரண்டில்லை என்பது
நானென்ற ஞான முதல்வனே நல்கினான்
நானென்று நானும் நினைப்பொழிந் தேனே. *#2770*

('நான்' என்று உணர்கின்ற என்னையன்றி, எனக்கு வேறாய், 'தான்' என்று ஒருவன் இல்லை என்று இறுமாந்திருந்த எனக்கு, 'தான் என்று ஒருவன் இருக்கின்றான்' என்று ஞான குரு உணர்த்த, அவர் உணர்த்திய முறையில்,*)* 'நான்' என்கின்ற எனக்கு வேறாய், 'தான்' என்று ஒருவன் இருத்தலை முறையான ஆய்வினால் ஆராய்ந்து உணர்ந்தேன். அங்ஙனம் அவனது இருப்பை, மட்டும் உணர்ந்த யான், எனது இயல் பிற்கு வேறாக அவன்தான் கொண்டிருக்கின்ற இயல்பு யாது' என ஆராயும் பொழுது அவன் என்னின் வேறாய் இல்லாது, என்னில் யானாகவே கலந்து நிற்றலையும், முதற்கண், 'நான் அன்றித் 'தான்' என்று ஒருவன் இல்லை' என யான் உணர்ந்திருந்த அந்த உணர்வையும், பின்னர், 'என்னின் வேறாய், 'தான்' என்று ஒருவன் இருக்கின்றான்' என்று உணர்ந்த உணர்வையும், இது பொழுது 'என் இயல்பு யாது, அவன் இயல்பு யாது' என ஆராயும் ஆராய்ச்சி உணர்வையும், அந்த ஆராய்ச் சியில், 'அவன் வேறாய் இல்லாமல், யானாகவே என்னிற் கலந்து நிற் கின்றான்' என உணர்ந்த உணர்வையும், அந்த ஆராய்ச்சியில், 'அவன் வேறாய் இல்லாமல், யானாகவே என்னிற் கலந்து நிற்கின்றான்' என உணர்ந்த உணர்வையும் 'தந்தவன் அவனே' என்னும் உணர்வையும் அவனே அருளினான். அதனஆல், நான், 'நான்' என என்னை உணர்தலை அறவே ஒழித்து, அவனை மட்டுமே உணர்ந்து நிற்கின்றேன்.

விளக்கவுரை

தூல, சூக்கும, அதிசூக்கும உடம்புகளையே 'நான்' என உணர்தல் பாச

ஞானம். அஃது இங்குக் குறிக்கப்படவில்லை. பின்னர், 'அவ்வுடம்புகள் அனைத்தும் சடம் ஆதலின் அவை சித்தாகிய நானல்ல' எனத் தன்னை உணரும்பொழுது, பாசத்தினும் மேம்பட்ட தனது மேம்பாடு விளங்குகின்ற நிலையில், 'நானே பரம்பொருள்; எனக்கு மேலாய் ஒரு பரம்பொருள் இல்லை' என உணர்தல் பசு ஞானம். 'அதுவும் அஞ்ஞானமே' எனவும், 'உன்னின் வேறாய், உனக்கு மேலாய், இதற்குமுன் உனக்கு உண்டான பாச ஞானத்தையும், இப்பொழுது உண்டாகிய பசு ஞானத்தையும் உள் உணர்வினுள் உணர்வாய் இருந்து நல்கியவன் அவனே' என ஞானகுரு உணர்த்த, அதனால், பாசங் களையோ, எனது உணர்வையோ கண்ணாகக் கொள்ளாமல், அவனது உணர்வையே எனது உணர்விற்குக் கண்ணாகக் கொண்டு நோக்கிய பொழுது 'நான்' என என்னை உணர்கின்ற உணர்வு தலைக்காட்டாமல், 'அவன்' என்னும் உணர்வே மேலோங்கி நிற்பது பதிஞானம். அந்தப் பதிஞானத்தையே இங்கு உணர்த்தும் முக்கதால் பசுஞானம் விலகும் முறையும் உணர்த்தப்பட்டது. நாடுதல் - ஆராய்தல்.

'ஞான முதல்வன்' என்பதில் ஞானம்,உயிரினது உணர்வு. அவ்வுணர்விற்கு முதல்வனாதலாவது, உயிரின் உணர்வு கேவலப் பட்டு மூடமாய்க் கிடந்ததனை முதற்கண் கருவி கரணங்களோடு கூடி பாச ஞானமாய் நிகழச் செய்து, பின்பு ஆராய்ச்சியால் அதனைப் பசு ஞானமாய் நிகழப் பண்ணி, முடிவில் பதி ஞானமாய் நிகழச் செய்தல். இவற்றுள் முன்னை இரண்டும் பெத்த நிலையும். பின்னது முத்தி நிலையுமாகும். பெத்த நிலையைத் திரோதான சத்தியாலும், முத்தி நிலையை அருட்சத்தியாலும், சிவன் செய்கின்றான். 'நானும் நானென்று நினைத்தலை ஒழிந்தேன் என மாற்றியுரைக்க.

பாச ஞானம் உள்ளபொழுது அதற்குப் பசுவும், பதியும் புலன் ஆதல் இல்லை. பசுஞானம் உள்ளபொழுது பாசமும் பசுவும் புலன் ஆதல் இல்லை. பதிஞானம் வந்தபின் பாசமும், பசுவும் புலன் ஆதல் இல்லை. ஒவ்வொரு நிலையில் சிற்சில பொருள்கள் புலனாகாமை பற்றி, 'அவைகள் அறவே இல்லை என வாதிடுதல் அறியாமையின் பாலதாம். ஆகவே, பாரமார்க்கத்தில் (உண்மை நிலையில்) பசு பாசங்கள் புலனாகாமை பற்றி, 'பதி ஒன்றே உளது; ஏனைய இரண்டும் இல்லை. அவை பொய்' என்றல் உண்மையாமாறில்லை.

'வேதசாத் திரம்,மிருதி, புராணகலை ஞானம்,
விரும்பசபை வைகரியா தித்திறங்கள் மேலாம்
நாதமுடி வானஎலாம் பாச ஞானம்;
நணுகி ஆன்மா இவை கீழ் நாட லாலே

காதலினால் 'நான் பிரமம்' என்னும் ஞானம்
கருது பசுஞானம்'
-சுபக்கம், சூ-9,2.
என்னும் சிவஞான சித்திச் செய்யுளால் இவ்வியல்புகளையெல்லாம் தெற்றென உணர்க.
இதனால், ஞானங்களின் வகைகளை உணர்த்தும் முகத்தால், 'உண்மை ஞானம் இது' என்பது உணர்த்தப்பட்டது.

ஞானத்தின் நன்னெறி நாதந்த நன்னெறி
ஞானத்தின் நன்னெறி நான்அறி வென்றோர்தல்
ஞானத்தின் நல்யோகம் நன்னிலை யேநிற்றல்
ஞானத்தின் நன்மோனம் நாதாந்த வேதமே. #2771

ஞானமாகிய உயர்நெறியில் முதற் கண்ணதாகிய ஞானத்திற் கிரியையாவது, நிலம் முதல் நாதம் ஈறாய்ச்சுட்டி அறியப் படுகின்ற அனைத்தையும் 'சடம்' எனவும், அவற்றில் அவையேயாய்க் கலந்து ஒன்றி நிற்கின்ற உயிரை, 'சித்து' (அறிவு) எனவும் இவ்வாறு இரண்டன் தன்மைகளும் வேறு வேறாதலை ஆராய்ச்சியால் உணர்ந்து, அங்ஙனம் உணர்கின்ற உயிர் அவை யனைத்தையும் தள்ளித் தன்னை அவற்றின் வேறாக உணர்தலாம்.அப்பால் ஞானத்தில் யோகமாவது, தான் சடத்தின் வேறாதலை யுணர்ந்தபின் மீட்டும் அவற் றின்கண் வீழ்ந்து தன்னை அவையாக மயங்காமல், உயர்நிலையில் நிற்றலாம். (உயிர் எப்பொழுதும் தனித்து நில்லாது ஆகையால் தனக்குத் தாரகமாகிய திருவருளில் நிற்றலே சடத்தில் வீழாது நன்னிலைக்கண் நிற்றலாகும் என்பது கருத்து. 'நன்மை' என்றது திரு வருளையேயாம்.) இனி ஞானத்தில் ஞானமாகிய முடிநிலையாவது, நாதத்தின் துணையில்லாமலே பொருள்களை நன்குணரும் நிலையாம்.

விளக்கவுரை

இங்குச் சரியை கிரியையுள் அடக்கப்பட்டது. 'சரியையே யன்றி யோகமும் சில இடங்களில் கிரியையில் அடக்கப் -படும்' என்பது, 'கிரியையென மருவும் அவையாவும் ஞானம் கிடைத் -தற்கு நிமித்தம்'8 என்னும் சிவப்பிரகாசச் செய்யுளால் அறியலாம்.
'கேட்டலுடன், சிந்தித்தல், தெளிதல், நிட்டை
கிளத்தல் என ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்'3
யோகம், ஞானத்தில் ஞானம்' எனப்படும். இங்கு 'மோனம்' என்பதும் ஞானத்தோடு ஒருபொருட் சொல்லாய் வந்தது. கேட்கவும், சிந்திக்கவும், தெளியவும் படுவது குருமொழி. 'அந்தம்' இரண்டில், முன்னது 'முடிவு' என்றும், பின்னது நீங்கிய நிலை' என்றும் பொருள்

தந்தன. 'நான் அறிவு என்று ஓர்தல்' என மாற்றியுரைக்க. 'பின்னர் அறிவு என்று ஓர்தல்' என்றதனால், முன்னர், 'நாதாந்தம் சடம் என்னும் நன்னெறி' என்பது பெறப்பட்டது. ஓர்தல் - ஆராய்தல்; சிந்தித்தல். சரியையைக் கிரியையுள் அடக்கினாராகலின், அதற்கேற்பக் கேட்டலைச் சிந்திதலுள் அடக்கி, ஓர்தலையே கூறினார்.
கேட்டல் முதலிய நான்குமே 'தசகாரியம்' எனப் பத்தாக விரித்துணர்த்தப்படும். 'எத்தகையோர்க்கும் நாதம் இல்லையேல் பொருளுணர்வு திட்டவட்டமாக உண்டாகாது' என்பதை 'நாதம் இல்லாமலே பொருளுணர்வு திட்டவட்டமாக உண்டாகுமாயின் அதுவே முத்தி நிலையாம்' என்பதையும்,
'மூவகை அணுக்க ளுக்கும்
முறைமையால் விந்து ஞானம்
மேவின தில்லை யாகில்
விளங்கிய ஞானம் இன்றாம்;
ஓவிட விந்து ஞானம்
உதிப்பதோர் ஞானம் உண்டேல்,
சேவுயர் கொடியி னான்றன்
சேவடி சேர லாமே' -சுபக்கம் - சூ, *1.26.*
என்னும் சிவஞான சித்தியால் அறிக. நன்னெறிக்கு வாயிலாதல் பற்றி கிரியையே இங்கு 'நன்னெறி' எனப்பட்டது. 'அறிதற் கருவி' என்னும் பொருளதாகிய 'வேதம்' என்பது, இங்கு 'அறிவு' என்றே பொருள் தந்தது.
இதனால், ஞானத்தின் படிநிலைகள் உணர்த்தப்பட்டன.

உய்யவல் லார்கட் குயிர்சிவ ஞானமே
உய்யவல் லார்கட் குயிர்சிவ தெய்வமே
உய்யவல் லார்கட் கொடுக்கும் பிரணவம்
உய்யவல் லார்உள் ளறிவறி வாரே. *#2772*

பிறவித் துன்பத்தினின்றும் தப்ப வல்லவர்கட்கு அவர்தம் உயிர்போலச் சிறந்த நிற்பன சிவஞானமும், அதனால் அறியப்படுகின்ற சிவமாகிய கடவுளுமாம். அவர்கள் புறத்தே பரந்து சென்று அலையாமல் அகத்தே ஒடுங்கி அமைதியுறுதற்குத் துணை யாவது பிரணவ மந்திரம். அம்மந்திரத்தின் வழியாக அவர் அகத்தே ஒடுங்கி, அறிவினுள் அறிவாய் நிற்கும் சிவத்தை அடைவார்கள்.

விளக்கவுரை

பிரணவ யோகத்தாலே அறிவு, அறிவினுள் அறிவை அறிந்து அடங்குதல், மேல் 'பிரணவ சமாதி' முதலிய அதிகாரங்கலில் விளக்கப்பட்டது. அங்ஙனம் அடங்கினவர்களே சிவஞானமாகிய

கண்ணைப் பெற்றுச் சிவனை நேரே கண்டு அடைவார்கள். 'சிவன் பிறப்பிலியாதலின், அவனையடைந்தோரும் பிறவியிலராவர்' என்பது கருத்து. 'முக்குணங்கள்வாய் மூடா ஊடா நாலந்தக் கரணமும் ஒருநெறியாச் சித்திக்கே உய்த்திட்டுத் திகழ்ந்த மெய்ப் பரம்பொருள் - சேர்வார் தாமே தானாகச் செயுமவன்'9 என்பதனாலும் இதனை அறியலாம். 'ஒடுக்கம்' என்பது அதற்காம் கருவியை உணர்த்திற்று. இதனால், சிவஞானமே ஞானமும், சிவமே பரமும் ஆதலை வலியுறுத்தி, 'உய்தி வேண்டுவார் அந்த ஞானத்தால், அந்தப் பொருளை அடைதல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

காணவல் லார்க்கவன் கண்ணின் மணியொக்கும்
காணவல் லார்க்குக் கடலின் னமுதொக்கும்
பேணவல் லார்க்குப் பிழைப்பிலன் பேர்நந்தி
ஆணம்வல் லார்க்கே அவன்துணை யாமே. #2773

(பிறபொருள்களை அறிதல்போல அறிவால் அறியாது, அறிவிறந்தே அவனை அறிதல் வேண்டும்.) அவ்வாறு அறிவார்க்கு அவன் அவர்தம் அறிவினுள் அறிவாய் விளங்கி, தேவர்கள் கடலைக் கடைந்து வருந்திப்பெற்ற அமுதம்போல வருந்தாது பெறப்பட்ட அமுதமாய்ப் பேரின்பத்தை விளைப்பான். அங்ஙனமாயின், (பெற்றதைச் சிறிதாயும், பெறாததைப் பெரிதாயும் கருதும் பழைய பழக்கத்தின்படி அவனைப் பேணாதொழிவார்க்கு அவன் முன்போல அயலவனாய் விடுவான். ஆதலால், அவ்வாறின்றிப்) பின்னும், பின்னும் பேணி ஒழுகுவாரை விட்டு அவன் நீங்குதல் இல்லை. ஆனந்த வடிவினன் ஆதல் பற்றி, 'நந்தி' எனப்பெயர் சொல்லப்படுகின்ற அவன் அன்புடையார்க்கே அவ்வாறு உடனாய் நிற்பன்.

விளக்கவுரை

காணுதல், இங்கு அறிதல். ஆகவே, 'கண்ணின் மணி' என்றதும், அறிவினுள் அறிவாயிற்று.

'நாணாமை, நாடாமை, நாரின்மை, யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்'3

என்றபடி, பெற்றதைப் பேணாதிழத்தல் பேதையார் செயலாதலின் 'பேண வல்லார்க்குப் பிழைப்பிலன்' என்றார். பிழைத்தல் - தவறுதல். ஆணம் - ஆன்பு. 'ஆணம் இல் நெஞ்சத் தணிநீலக் கண்ணார்க்குக் - காண மிலாதார் கடுவணையர்'1 என்றது காண்க.

'ஆணம் பெய்ய' என ஒரு சொல் வருவிக்க.

இதனால், தலைப்படுதலேயன்றிப் பேணுதலும், அன்பு செய்தலும் ஞானத்தினஅ பயனாதல் கூறப்பட்டது.

ஓமெனும் ஓரெழுத் துள்நின்ற ஓசைபோல்

மேனின்ற தேவர் விரும்பும் விழுப்பொருள்
சேய்நின்ற செஞ்சுடர் எம்பெரு மான்அடி
ஆய்நின்ற தேவர் அகம்படி யாமே. #2774

'ஓம்' என்று எழும் இசையோசையின் உள்ளீடாய் நிற்கும் எழுத்தோசையாகிய நாதம் போல, சுத்த மாயா உலகத்தில் வாழும் ஞான ஒளியினர் உயிர்க்குயிரான பரம்பொருளாக என்றும் விரும்பப்படுபவன் எங்கள் சிவபெருமான். அவனது அருள் சத்தி நிபாதர் அல்லார்க்கு ஞானம் இல்லாமையால் சேயனவாயினும் சத்திநிபாதராய் ஞானத்தைப் பெற்றவர்க்கு அவர்தம் அகத்தே விளங்குவனவாம்.

விளக்கவுரை

'மேல் நின்ற தேவர்' என விதந்தோதினமையால் அதற்கு இதுவே பொருளாகும். 'விழுப்பொருளாகிய எம்பெருமான் அடி' என இயைக்க.
ஆய்நின்ற - ஆய்வின்கண் நின்ற ஆய்வு, இங்கு ஞானம்.
முன்னிரண்டடிகள் இன எதுகையும் பின்னிரண்டடிகள் ஆசெதுகையும் பெற்றன.
இதனால், 'ஞானியரே சிவனை இம்மையிலும் பெற்று விளங்குவர்' என்பது உடன்பாட்டிலும், எதிர்மறையிலும் வைத்துக் கூறி முடிக்கப்பட்டது.

<u>*11.18.*சத்திய ஞானானந்தம்</u>

எப்பாழும் பாழாம் யாவுமாய் அன்றாகி
முப்பாழும் கீழுள முப்பாழும் முன்னியே
இப்பாழும் இன்னவா றென்ப திலாஇன்பத்
தற்பரஞா னானந்தத் தான்அது வாகுமே. #2775

(காரியங்கள் ஒடுங்குதற்கு இடமாதல் பற்றிக் காரணங்கள் 'பாழ்' எனப்படும். அதனால்,) 'எப்பாழும் பாழாம் யாவுமாய்' என்றது, எக்காரணங்களும் ஒடுங்குதற்குக் காரணமாய் உள்ள பரம காரணங்கள் எல்லாமாகி' என்றதாம். உலகிற்குக் காரணம் தத்துவங்கள். அவை தோன்றி ஒடுங்குதற்கு இடமான பரம காரணங்கள் சுத்த மாயையும், அசுத்த மாயையும். ஓராற்றால் பிரகிருதி மாயையும் பரம காரணமாகக் கொள்ளப்படும். கலப்பினால் மெய்ப்பொருள் அம்மும்மாயையாகியும் நிற்கும். ஆயினும் மாயைகளின் தன்மே வேறு; மெய்ப்பொருளின் தன்மை வேறு ஆதலின் பொருள் தன்மையால் மெய்ப்பொருள் அம்மாயைகளின் வேறாகியும் நிற்கும்.

விளக்கவுரை

இனி இரண்டாம் அடியிற் கூறப்பட்ட பாழ்கள் பரம காரணத்தைக் குறியாது, அவற்றினின்றும் தோன்றிப் பிறவற்றிற்கும் காரணமாகின்ற இடைநிலைக் காரணங்களாம் தத்துவங்களைக் குறித்தன. மேல் உள்ள மூன்று தத்துவங்களாவன, 'இலய தத்துவம், போக தத்துவம், அதிகார தத்துவம்' என்பன. அவை முறையே இரண்டும், ஒன்றும், இரண்டும் ஆக ஐந்தாம் முதல் இரண்டும் சிவம், சத்தி. இடை ஒன்று சாதாக்கியம். இறுதி இரண்டு ஈசுரம், சுத்தவித்தை. கீழ் உள்ள மூன்று தத்துவங்களாவன, 'காரண தத்துவம், கஞ்சுக தத்துவம், குணதத்துவம்' என்பன. காரண தத்துவம், மாயா தத்துவம், கஞ்சுக தத்துவம், காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், இவ்வைந்தில் அடங்கும் குண தத்துவம் சித்தம் முதலிய இருபத்து நான்கு. முன்னுதல் - நினைத்தல்; சங்கற்பித்தல். அஃதாவது மும்மாயைகளினின்றும் இம் மூவகைத் தத்துவங்களும், பின் அவற்றின் காரியங்களும் 'இவ்விவ்வாறு தோன்றுக' எனவும் 'இத்துணைக் காலம் நிலைபெற்றுச் செயலாற்றுக' எனவும், 'இனி இப்பொழுது ஒடுங்குக' எனவும் சங்கற் பித்தல். இதனானே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத் தொழில்களும், அவற்றிற்குக் காரணமாம் மறைத்தல் தொழிலும் அவற்றின் காரியமாய் அருளல் தொழிலும் நடைபெறும். 'இப்பாழும்' என்றதனோடு இயைய இன்னவாறும்' எனவந்த எண்ணும்மை தொகுத் தலாயிற்று. 'இங்குக் கூறிய காரணங்களில் ஒன்று' என்றோ, அவையல்ல வாயின் 'வேறு இன்ன தன்மையது' என்றோ ஒன்றதனோடு சார்த்திச் சொல்ல ஒண்ணாத இயல்பினது, பொதுவாக, 'அது' எனச் சுட்டிச் சொல்லப்படும் மெய்ப் பொருள். ஆயினும் அதனைப் பற்றி உணர் வார்க்கு அது பேரின்பப் பொருளாய், உயிரினது அறிவுக்கு மேலான அறிவாய், ஆனந்தமாய் உள்ளது. 'சத்திய ஞானம்' என்றது, 'சத்துச் சித்து' என்றபடி. எனவே, மெய்ப் பொருளின் உண்மை இயல்பு, 'சத்துச் சித்து ஆனந்தம்' என்றதாயிற்று. சத்து என்றும் ஒருபடித்தாய்த் திரிபின்றியிருத்தல். சித்து - அறியாமை சிறிதும் இன்றி அறிவேயாய் இருத்தல். ஆகவே, அறிவிக்க. வேண்டாது தானேயறிதலும், ஒரு காலத்து ஓரிடத்து ஒன்றை மட்டும் அறிதல் என்பதின்றி, எக்காலத்தும், எவ்விடத்தும் எல்லாப் பொருளையும் அறியும் அறிவாதலும் தானே பெறப்பட்டது. ஆனந்தம் - துன்பக் கலப்பு இன்மையால் எஞ்ஞான்றும் வரம்பின்றி விளையும் இன்பமாதல். தற்பரம் - தனக்கு (உயிர்கட்கு) மேல், தன், சாதியொருமை. 'தான்' என்பது தேற்றப்பொருளில் வந்தது. 'அது' என்பதை முதலில் வைத்து உரைக்க. 'ஆகும்' என்றது, இயற்கையைச் செயற்கைபோலக் கூறும் இலக்கணையாய்

உளதாதலைக் குறித்தது.
'காரணப்பொருள்கள் அனைத்திலும் தான் அவையேயாய்க் கலந்தும், பொருள் தன்மையால் வேறாகியும் நின்று தனது சங்கற்ப மாத்திரையானே ஐந்தொழிலை நடாத்துவதாயினும் மெய்ப்பொருள் பிறிதொரு பொருளோடு சார்த்தி, 'இன்ன தன்மையது' எனச் சொல்ல ஒண்ணாத இயல்பினையுடையது. சத்தாய்ச் சித்தாய், ஆனந்தமாய் இருத்தலே அதன் உண்மையியல்பு' என்பது இம்மந்திரத்தின் திரண்டபொருள். பின்பு 'கீழுள முப்பாழ்' என்றதனால் முற்கூறிய முப்பாழ் 'மேல் உள' என்பது பெறப்பட்டது.
'ஒன்றும் குறியே குறியாத லால் அதனுக்கு
ஒன்றும் குறியொன் றிலாமையினால் - ஒன்றோடு
உவமிக்க லாவதுவுந் தான்இல்லை; ஒவ்வாத்
தவமிக்கா ரே இதற்குச் சான்று'8 என்னும் திருக்களிற்றுப்படியாரைக் காண்க.
இதனால், மெய்ப்பொருளின் பொதுவியல்பு சிறப்பியல்புகள் தொகுத்துக் கூறப்பட்டன.
பதிப்புக்களில் இதன்பின் காணப்படும் 'தொம்பதம் தற்பதம்' என்னும் மந்திரம் முன் தந்திரத்தில் 'முத்துரிய' அதிகாரத்தில் வந்தது.

மன்சத்தி ஆதி மணிஒளி மாசோபை
அன்னதோ டொப்ப மிடல்ஒன்றா மாறது
இன்னியல் உற்பலம் ஒண்சீர் நிறம் மணம் பன்னிய சோபை பகர்
ஆறும் ஆனதே. #2776

சிவனது சத்தி 'பரா சத்தி' என்றும், 'ஆதி சத்தி' என்றும் இரண்டாய் இருக்கும். (பராசத்தியே அருட் சத்தியும், ஆதி சத்தியே திரோதான சத்தியும் ஆகும்.) அவையிரண்டும் வேறு வேறல்ல. அஃது எது போல்வது எனின், மணியின்கண் (இரத்தினங் களில்) அதனிடத்தே நின்று அதனையே விளக்கி நிற்பதும், வேறிடத் திலும் சென்று பிற பொருள்களைப் பற்றுவதும் ஆகிய ஒளி செய்கையால் இரண்டாதல் அல்லது பொருளால் இரண்டாகாமை போல்வது. மணியொளி மணியையே விளக்கி நிற்குமிடத்து 'பிரகாசம்' என்றும், பிற பொருள்மேல் பாயுமிடத்து 'காந்தி' என்றும் சொல்லப்படும். (காந்தியே சோபை) இனி ஆதிசத்தியும் 'இச்சை, ஞானம், கிரியை' என மூன்றாம். ஆதி சத்தி இவற்றின் வேறல்ல வாயினும் அதனையும், பரை ஆதியின் வேறல்ல வாயினும் அதனை -யும் வேறு வேறாக வைத்து எண்ணினால், 'பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை' எனச் சத்திகள் ஐந்தாகும். அதுவும் எதுபோலும் எனின், குவளை மலரின் குணம் ஒன்றேயாயினும் அதனை, பொலிவு, சிறப்பு, நிறம், மணம்,அழகு' என

இவ்வாறு வேறுவேறாக உணர்வது போலும். சத்தி குணமும், சிவன் குணியும் ஆகலின், குணமாகிய சத்தி வேறுபாடு ஐந்தனோடு குணியாகிய சிவம் ஒன்றையும் கூட்டி எண்ண மெய்ப்பொருள் ஆறு கூற்றதாம்.

விளக்கவுரை

மன் சத்தி - நிலையாய் உள்ள சத்தி; மூல சத்தி. அது பரா சத்தி. இது காலத்தைக் கடந்தது. அதனால் அநாதி. இதினின்றும் ஒரு காலத்தில் தோன்றுவது ஆதி. மணியினது 'ஒளி, சோபை' என்பவற்றை 'மன் சத்தி, ஆதி' என்பவற்றோடு நிரல் நிறையாக இயைக்க. 'சத்தி' என்பதை ஆதிக்கும் கூட்டுக. ஒளியாகிய 'அன்னதோடு, சோபையாகிய அன்னதோடு' எனத் தனித் தனி இயைக்க. 'ஒப்ப' என முற்று. மிடல் - சத்தி 'ஒன்றா மாறாது' என்பதில் அது, பகுதிப்பொருள் விகுதி. 'மிடல் ஒன்றாமாறு, உற்பலம் ஒண்மை முதலியன ஆமாறுபோலும்' என முடிக்க. உற்பலம் - குவளை. அது முன்னர் பொருளாகு பெயராய் அதன் மலரையும், பின்னரும் அவ்வாகுபெயராய், அதன் குணத்தையும் குறித்த இருமடியாகுபெயர். ஒண் - ஒண்மை. சீர் - சிறப்பு. அது மலர்களுள் மேலானதாகப் புகழப் படுதற்றன்மை. 'சோபை' என்பதன்பின், 'ஆனவாறு' என்பது எஞ்சி நின்றது. 'ஆறும் ஆனது' என்னும் உம்மை, 'ஒன்றானதேயன்றி' என இறந்தது தழுவிற்று. 'ஆனது' என்னும் பயனிலைக்கு, 'மெய்ப்பொருள்' என்னும் எழுவாய் அதிகாரத்தால் வந்தியைந்தது.
இதனால், மெய்ப்பொருள் 'தானும், தன் சத்தியும்' என இரு கூற்றாகப் பின் சத்தி காரணமாகப் பல கூற்றதாதல் கூறப்பட்டது.

சத்தி சிவம்பர ஞானமும் சாற்றுங்கால்
உய்த்த அனந்தம் சிவம்உயர் ஆனந்தம்
வைத்த சொரூபத்த சத்தி வருகுரு
உய்த்த உடல் இவை உற்பலம் போலுமே. #2777

சத்தி, சிவம் இவற்றது இயல்பைச் சொல்லுமிடத்து முறையே பர ஞானமும், அதனால் தரப்படுகின்ற முடிவில் பொருளும் ஆகும். இனிச் சிவம் பிறிதொன்றிலும் இல்லாத, தனி ஒரு பேரானந்தப் பொருளுமாம். அந்தச் சிவத்தின் மேனிலைச் சத்தியே பக்குவான் மாக்களை ஆட்கொள்ளுதற்கு இந்நிலவுலகில் வந்து உலாவச் செய்கின்ற குரு வடிவும் ஆகும். இங்குக் கூறிய பரஞானம், முடிவின்மை, ஆனந்தம், ஆன்மாக்களை ஏற்ற பெற்றியால் ஆட்கொள்ளும் பேரருள் என்பனவற்றுக்கு முன் மந்திரத்திற்கூறிய குவளை மலரே உவமையாம்.

விளக்கவுரை

'சாற்றுங்கால்' என்பதனை, 'சிவம்' என்பதன் பின்னர்க் கூட்டுக. உய்த்தல் - தரப்படுதல். 'அனந்தம்' என்பதிலும் எண்ணும்மை விரித்து, எஞ்சிநின்ற 'ஆம்' என்னும் பயனிலையை வருவிக்க. அனந்தம் - முடிவின்மை. முடிவு காலம். இடம் இரண்டு பற்றியது. காலம் பற்றிய முடிவின்மை' நித்தியத்துவத்தையும், இடம் பற்றிய முடிவின்மை பூரணத்துவத்தையும் விளக்கும். நித்தியத்துவமே மெய்ம்மையும், பூரணத்துவமே பெருநிறைவும் ஆகும். மெய்ப் பொருள் 'மெய்யாயும், அறிவாயும், முடிவிலதாயும் உள்ளது' என்பதை தைத்திரீய உபநிடதம், 'சத்யம் ஜ்ஞாநம் அநந்தம் பிரஹ்ம'8 எனக் கூறிற்று. சத்தி தன்னிலையில் நிற்குங்கால் 'சொரூப சத்தி' என்றும், பிறவற்றோடு தொடர்புற்று நிற்குங்கால் 'தடத்த சத்தி' என்றும் சொல்லப்படும். 'அவற்றுள் சொரூப சத்தியே அருளுருவாய் வந்து ஆட்கொள்ளும்' என்பது பின் இரண்டடிகளில் கூறப்பட்டது. முன் மந்திரத்திற்கூறிய உற்பல உவமையை, 'பூவண்ணம், பூவின் நிறம் போல மெய்ப்போத இன்ப மாவண்ண மெய்கொண்டவன்'3 என்னும் பரஞ்சோதி திருவிளையாடலாலும் அறிக.

இதனால், 'மேற்குறித்த சத்தி சிவங்களாவன இவை' என்பது கூறப்பட்டது.

உருஉற் பலம்நிறம் ஒண்மணம் சோபை
தரம்நிற்ப போல்உயிர் தற்பரந் தன்னில்
மருவச் சிவமென்ற மாமுப் பதத்தின்
சொரூபத்தன் சத்தியாதி தோன்ற நின்றானே. #2778

மேல் உவமையாகக் கூறிய குவளை மலரின் நிறம், பொலிவு, மணம், அழகு என்பன அம்மலரின் வேறாகாததுபோல உயிர் சிவனிடத்தில் வேற்றுமையின்றி ஒன்று பட்டு நின்றால், 'சிவாய' எனவும், 'சிவத்துவமசி' எனவும் சொல்லப்படும் மகாவாக்கியங் களின் பொருளாய் உள்ள சிவனது அனந்த சத்தி, அலுத்த சத்தி முதலிய எண்குணங்களும் உயிரினிடத்து விளங்கி நிற்க, உயிர் சிவனாகியே நிற்கும்.

விளக்கவுரை

உரு - அழகு. 'உற்பலத்தில்' என ஏழாவது விரிக்க. 'தரமாய்' என ஆக்கம் விரிக்க. மருவுதல், அறிந்து நிற்றல். முப்பதங் களில் இரண்டொன்றையே முதற்குறிப்பாகக் கூறி, மகா வாக்கியங் -களை நினைப்பித்தார். சொரூபம், இங்குப் பொருள். சிவனது எண் குணங்களில் இரு குணம் 'சத்தி, என்னும் பெயராற் சொல்லப்

படுதலின். அவை முதலிய குணங்களைச் 'சத்தியாதி' என்றார். முன்னர் 'உயிர்' என்றதனைப் பின்னர் 'நின்றான்' என ஆடூவறி சொல்லாற் கூறியது வடமொழி மதம் பற்றி. சிவத்திற்கும், உயிருக்கும் இடையே உள்ள தொடர்பு குணிக்கும், குணத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு போன்றது அன்றாயினும் வேற்றுமையின்றி நிற்றல் மாத்திரைக்கு அத்தொடர்பினை உவமையாகக் கூறினார்.

இதனால், உயிர் ஞானத்தால் மெய்ப்பொருளாகிய சிவமாம் நிலையை எய்துதல் கூறப்பட்டது. அந்நிலையை எய்திய வழி உயிரும் மெய்ப்பொருளாதல் பற்றி இஃது இவ்வதிகாரத்தில் கூறப்பட்டது.

நினையும் அளவில் நெகிழ வணங்கிப்
புனையில் அவனைப் பொதியலும் ஆகும்
எனையும்எங் கோன்நந்தி தன்னருள் கூட்டி
நினையும் அளவில் நினைப்பித் தனனே. *#2779*

சிவனை அன்பால் நினைதற்குப் பக்குவம் வேண்டும். அது வாய்க்கப் பெற்று, அவனை அன்பினஆல் நினைந்தும், வணங்கியும், புகழ்ந்து பாடியும் நின்றால் ஒன்றிலும் அகப் படாத அவனை நம்முள்ளே அகப்படுத்திக் கொள்ளலாம். எங்கள் ஆசிரியராகிய நந்தி பெருமானும் எனக்கும் பக்குவம் வாய்த்தமையை அறிந்தே தமது அருளை வழங்கிச் சிவனை நினைக்கச் செய்தார்.

விளக்கவுரை

என்றது, 'நினைத்து வணங்கவும், புகழ்ந்து பாடவும் செய்தாரா' எனவும், 'அதனால், நான் சிவனை இப்பொழுது என்னுள்ளே அகப்படுத்தியுள்ளேன்' எனவும் கூறியவாறு. நெகிழ்வது மனம். வணங்குவது உடம்பு. புனைதல், 'பூமாலை புனைந்து ஏத்துதலையும், புகழ்ந்து பாடுதலையும்'*1* ஒருங்கே குறித்து நின்றது. புகழ்ந்து பாடுதல், ஆசிரியன்மார் அருளிச் செய்த பாடல்களையும்,தாமே பாடும் பாடல் களையும், அவை அவன் அருள்வழியே அமையும். 'நாயனார் இந் நூலால் அவனைப் புகழ்ந்து பாடினார்' என்க,

'ஆர்வல்லார் காண அரனவனை? அன்பென்னும்
போர்வை யதனாலே போர்த்தமைத்துச் - சீர்வல்ல
தாயத்தால் நாமும் தனிநெஞ்சி னுள்ளடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து'*3*

எனவும்,

'இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்கெழுந் தருளுவ தினியே'*1*

எனவும்,

'அழலார் வண்ணத் தம்மானை

அன்பில் அணைத்து வைத்தேனே'2
எனவும் இவ்வாறு அருளிச்செய்ப ஆதலின், அவனைப் பொதியலும் ஆகும்' என்றமை பொருந்துவதாதல் காண்க. உம்மை சிறப்பு. நந்தி பெருமான் தம் அருளை வழங்கியது, நினைவிற்கு எட்டாதவனை நினைக்குமாற்றையும், வணங்குமாற்றையும், பூப்புனையுமாற்றையும், புகழ்ந்து பாடுமாற்றையும் விளக்கியருளியது. 'அவர் அவற்றை அருளிச் செய்யாராயின், யான் எதனை அறிவேன்' என்பது கருத்து. இதனால், 'மெய்ப்பொருளை யுணர்தலும், அடைதலும் பக்குவ காலத்தில் குருவருள் வாய்க்கப் பெறுதலாலே' என்பது கூறப்பட்டது.

பாலொடு தேனும் பழத்துள் இரதமும்
வாலிய பேரமு தாகும் மதுரமும்
போலும் துரியம் பொடிபட உள்புகச்
சீலம் மயிர்க்கால் தொறும்தேக் கிடுமே. #2780

முன் தந்திரத்திற் கூறிய முத்துரியத்துள் நிலையிற் புக்கபொழுது, பாலுந்தேனும் கலந்த கலப்பின்கண் உள்ளதும், கனிந்த பழத்தின் சாற்றில் உள்ளதும், மிகத் தூயதாகிய தேவரது அமுதத்தில் உள்ளதுமாகிய இனிமைகள் போன்ற ஓர் இனிமை அவ்வுயிரினது உடம்பில் உள்ள மயிர்க்கால்கள்தோறும் தேங்கி நிற்கும்.

விளக்கவுரை

'பாலொடு தேன் ஆகும் மதுரமும், பழத்துள் இரதம் ஆகும் மதுரமும்' என 'ஆகும் மதுரம்' என்பதை ஏனையவற்றிற்கும் கூட்டுக. வாலிய - தூய. பேரமுது, தேவர் அமுது, 'துரியம் பொடிபட உள்புக' என்பதை முதலிற் கூட்டி உரைக்க. பொடிபடல் - விலகுதல். சீலம் - தன்மை, என்றது இங்கு இனிமையை மயிர்க்கால் தோறும் தேக்குதலை.
'வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன்'*
என்னும் திருவாசகத்தாலும் அறிக.
இதனால், இங்கு எடுத்துக்கொண்ட ஆனந்தத்தின் இயல்பு விளக்கப்பட்டது.

அமரத் துவங்கடந் தண்டங் கடந்து
தமரத்து நின்ற தனிமையன் ஈசன்
பவளத்து முத்துப் பனிமொழி மாதர்
துவளற்ற சோதி தொடர்ந்துநின் றானே. #2781

சிவன், 'இறவா நிலை' எனப்படும் அபர முத்தி நிலையையும், அந்நிலைக்கு ஏற்புடைய சுத்தமாயா புவனங்களையும் கடந்து, அவ்விடத்தை அடைந்த தன் அடியார்களோடே கூடி, அவர்கட்கு

ஒப்பற்ற தலைவனாய் இருப்பவன். (எனவே, 'நிரதிசய சுத்த போகத்தையே தருபவன்' என்றதாம்.) ஆயினும் அவன், பவழம் போன்ற இதழையும், அதற்குள்ளே அரும்பும் முத்துப்போன்ற நகையினையும், அதற்குள்ளே மெல்ல மிழற்றுகின்ற இனிய சொல்லையும் உடைய மாதராளாகிய, கெடுதல் இல்லாத ஞான சொரூபியைத் துணையாகப் பற்றி நிற்கின்றான்.

விளக்கவுரை

'அதனால், பலவகைப்பட்ட மாயா போகங்களை வேண்டுவார்க்கு அவற்றையும் தருகின்றான்' என்பதாம். தமர் - அடியார். 'விண்வத்துக் கொட்டும் வண்ணத் தமரர்' என்றாற்போல மகர ஈறொழிந்த ஏனையீறுகளின் முன்னும் சிறுபான்மை அத்துச் சாரியை வருதல் அறிக. 'தமரிடத்து நின்ற' என ஏழாவதன் பொருள் பட விரிக்க. 'அண்டம் கடந்து நிற்பவன், ஆயினும் தமரிடத்து நிற்பவன்' என்க. 'தனியைமன்' என்றது, 'சிவன்' என்னும் நிலையையும் , 'சோதி தொடர்ந்து நின்றான்' என்றது, 'சத்தன்' என்னும் நிலையும் குறித்தனவாம். இதனால், மெய்ப்பொருளின் இரு நிலைகள் விளங்கும். இம்மந்திரம் ஈரடி எதுகை பெற்றது.
இதனால், 'ஞான ஆனந்தமேயன்றி ஊன ஆனந்தமும் மெய்ப்பொருளால் ஆவதே' என்பது உணர்த்தப்பட்டது.

மத்திமம் ஆறாறும் மாற்றி மலம்நீக்கிச்
சுத்தம தாகும் துரியத் துரிசற்றுப்
பெத்த மறச்சிவ மாகிப் பிறழ்வுற்றுச்
சத்திய ஞானானந் தஞ்சார்ந்தான் ஞானியே. *#2782*

'மத்தியாலவத்தை' எனப்படும் சகலத்திற் சகலமாகிய மாசகலத்திலே முப்பத்தாறு கருவிகளுள் யாதொன்றும் ஒடுங்காது எழுச்சியுற்றிருப்பினும் தான் அவற்றின் வசப்படாது, அவற்றை வேறு நிறுத்தி, அங்ஙனம் நிறுத்தியதனால் கேவலாவத்தை வந்துவிடாதபடி அதனையும் நீக்கிச் சகலத்திற் சுத்தமாகிய நின்மலாவத்தையை அடைந்து, பின் 'அதுவும் சீவச் செயலேயாம். என அதனை நீக்கிப் பரா வத்தையை எய்தியவழியே பந்தம் முற்றும் நீங்கிய நிலையாகும். அந் நிலையை அடைந்து, 'சீவன்' என்னும் நிலைமை மாறி, 'சிவம்' என்னும் நிலைமையை அடைந்து, அதனால் சத்திய ஞானானந்தத்தை அடைந்தவனே நிறைவான ஞானத்தை அடைந்தவனாவான்.

விளக்கவுரை

'மத்திமம்' என்றது மத்தியாலவத்தையை. 'மத்திமத் தின்கண்' என ஏழாவது விரிக்க. 'மாற்றி' என்றதும் 'நீக்கி' என்றதே. 'பிறழ்வுற்றுச்

சிவமாகி' என மாறிக்கூட்டுக. 'சார்ந்தான்' என்பது வினையாலணையும் பெயர். 'சார்ந்தானே ஞானி' என ஏகாரத்தை மாற்றி வைத்துரைக்க.
இதனால், சத்திய ஞானானந்தமே நிறைஞானத்தின் பயனாதல் கூறப்பட்டது.

சிவமாய் அவமான மும்மலம் தீர்ந்து
பவமான முப்பாழைப் பற்றறப் பற்றத்
தவமான சத்திய ஞானனந் தத்தே
துவமார் துரியம் சொரூபம தாமே. *#2783*

பயன் இலதாம் பிறவியிற் செலுத்துகின்ற மும்மலங்களும் நீங்கி உயிர் சிவமாதற்பொருட்டு உண்மையான மூன்று துரிய நிலைகளைப்பிற பற்றுக்கள் நீங்குதற் பொருட்டுப் பற்றினால், தவத்தின் பயனான சத்திய ஞானானந்தம் கிடைக்கும். அந்நிலையில் அந்த ஆனந்தத்தையுடைய பொருளும் காட்சிப்படும்.

விளக்கவுரை

'சிவமாம் மும்மலந்தீர' என்பதனைப் பின்முன்னாக நிறுத்தி, 'மும்மலந்தீர்ந்து சிவமாக' விகுதி பிரித்துக் கூட்டியுரைக்க. பவம் - உண்மை. துரியம், 'பாழ்' எனப்பட்டது. 'துரிய நிலையில் ஆனந்தம் தோன்ற, அதனானே அதனையுடைய பொருள் உண்மை தோன்றும்' என்றபடி. சொரூபம், 'வந்து' (பொருள்) எனவும் பொருள் தரும். ஆனந்தம் தோன்ற, அஃதே பற்றி அதனையுடைய பொருளை உணர்தல், அருணோதயம் உண்டாக, அஃதே பற்றி ஞாயிற்றை உணர்தல் போலும்.
இதனால், துரியத்தை எய்தி, அதில் ஞானானந்தத்தை உணர்ந்து, அதனானே பொருளை உணர்க' என்பது கூறப்பட்டது. இதனானே வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாயும் செய்யப்பட்டது.

11.19.சொரூப உதயம்

பரம குரவன் பரம்எங்கும் ஆகி
திரம்உற எங்கணும் சேர்ந்தொழி வற்று
நிரவு சொரூபத்துள் நீடும் சொரூபம்
அரிய துரியத் தணைந்துநின் றானே. #2784

'குருமார்களில் எல்லாம் மேலான குருவாகிய ஞான குருவே எங்கும் நிறைந்த பரம்பொருளாவான்' என்பது நன்கறியப் பட்டது. அதற்கேற்ப அவன் தன் மாணாக்கனை விட்டு நீங்காது, அவன் செல்லுமிடமெல்லாம் சென்று நிலையாகப் பொருந்தி, கண்ட பொருள்களில் எல்லாம் அது அதுவாகும் இயல்புடைய அவனது ஆன்ம சொரூபத்தினுள் அஃது அவ்வாறாகாமல் நிலைபெற்று விளங்கும் அறிவின்பப் பொருளாய், அடைதற்கரிய துரிய நிலையில் கிடைத்திருப்பான்.

விளக்கவுரை

என இவ்வாறு குருவின்மேல் வைத்துக் கூறினா ராயினும், ஞான குருவின்பால் ஞானத்தைப் பெற்ற நன்மாணாக்கர் எங்கும், எப்பொழுதும், எவ்வாற்றானும் அக்குருவை மறவாது அவனைச் சிவமாகவே அறிவினுள் கண்டு ஆனந்திப்பர்' என்பதே கருத்து. 'அக்காட்சி வெறும் கருதுகோள் காட்சியன்று; உண்மைக் காட்சியாய்ப் பயன் தரும் காட்சியே' என்பதைத் தெளிவித்தற் பொருட்டே இம்மந்திரத்தைக் குருவின்மேல் வைத்து இவ்வாறு அருளிச்செய்தார். 'எங்கும் ஆம் பரமாகி' என்க. 'ஆகி' என்பது பெயர். ஒழிவு - விட்டு நீங்குதல். 'எங்கணும் ஒழிவற்று திரம் உறச் சேர்ந்து' என மாற்றிக் கொள்க. நிரவுதல் - அது அதுவாய் வசப்பட்டு நிற்றல். 'நீடும் சொரூபமாய்' என ஆக்கம் வருவிக்க. 'துரியத்து நின்றான்' என்றதனஆல், 'ஞானிகள் துரியத்தினின்றும் கீழ் இறங்கார்' என்க. துரியம் முதலிய அவத்தைகளின் இயல்பு முன் தந்திரத்தில் கூறப்பட்டது.
இதனால், 'அடையத் தக்க பொருள் ஞான குரு உருவமே' என்பது கூறப்பட்டது.

குலைக்கின்ற நீரிற் குவலயம் நீரும்
அலைக்கின்ற காற்றும் அனலொடா காசம்
நிலத்திடை வானிடை நீண்டகன் றானை
வரைத்து வலஞ்செயு மாறறி யேனே. #2785

மண் தன்னை அழிக்கும் தன்மையுடைய நீரினுள் அழியும், அவ்வாறே நீரும், காற்றும் முறையே நெருப்பினுள்ளும் ஆகாயத்தினுள்ளும்

அழியும். எனவே, இப்பொருள்களுள் அடங்கியிருப்பவர் அல்லன் சிவன். அவன் பூமியையும் கடந்து மேற்போகியும் அளவின்றியிருப்பவன். ('பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாத மலர் - போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே'* அவனை ஒரு சிறுகுடிலுள் அடக்கி வைத்துக் கண்ணாற் கண்டு, காலால் வலம் வந்து, வாயால் வாழ்த்தி, மெய்யால் வணங்கி இன்புறுதல் எளிதாயிருக்க, அம்முறையை யறியாமல் யான் அல்லல் உறுகின்றேன்.

விளக்கவுரை

என்றது, அறிவிலாதார் செயலைத் தம்மேல் வைத்து அருளிச் செய்து இரங்கியவாறு. 'குவலயம் குலைக்கின்ற நீரில்' என மாற்றி, அதன்பின்னும், 'ஆகாசம்' என்பதன் பின்னும் 'அழியும்' என்பன வருவிக்க. வரைத்தல் - அளவுட்படுத்தல். 'படுத்தப்படுவது குருவுருவம்' என்க. என்றாற்போலும் திருமொழிகளால் ஞான குருவின் அருமையில் எளிமையை ஆய்ந்துணர்க. வலம் செய்தல் கூறவே, இனம் பற்றி ஏனையவும் கொள்க.

இதனால், அடைதற்கரிய பொருளை எளிதில் அடையும் முறை கூறப்பட்டது.

அங்குநின் றான்அயன் மால்முதல் தேவர்கள்
எங்குநின் றாரும் இறைவனென் றேத்துவர்
தங்கிநின் றான்தனி நாயகன் எம்மிறை
பொங்கிநின் றான்புவ னாபதி தானே. *#2786*

அயன், மால் முதலிய தேவர்கள் முதலாக எங்குள் ளவர்களும் இறைவனை, 'அவன் பரமாகாசத்தில் இருக்கின்றான், ஆயினும் ஏத்துவார்க்கு அருள்புரிகின்றான் என அவனைக் காணாமலே கருதிநின்று ஏத்துவார்கள். ஆயினும் எங்கட்கு அவன் குருஉருவாகி எதிர் வந்து எங்களோடு நீங்காது உறைகின்றான்.

விளக்கவுரை

'அதனால் நாங்கள் அவனை நேரிற்கண்டு வலம் வந்து வணங்கி, ஆடிப்பாடி, அளவளாவி மகிழ்கின்றோம்' என்பது குறிப் பெச்சம். 'அங்கு நின்றான்' என்பதனை, 'இறைவன்' என்பதற்கு முன்னர்க் கூட்டுக. 'தேவர்கள் முதலாக' என ஒரு சொல் வருவிக்க. 'தனி நாயகன், புவனாபதி' என்னும் பெயர்கள் இரண்டன் உருபு ஏற்று, 'ஏத்துவர்' என்பதனோடு முடிதற்கு உரியன; செய்யுள் நோக்கி வேறுபட்டு நின்றன. 'எம் இறை' என்றது, குருவாகி வந்து அருள் புரிந்த உரிமை பற்றி. பொங்குதல், கூர்தலாகிய உள்ளது சிறத்தலே யாகலின் அதனை இங்கு, 'பொங்கி' என்றார். 'பொங்கி நின்றான்'

எனப் பண்பின் வினைப் பண்பின்மேல் ஏற்றப்பட்டது. கூர்ந்தது அருள். 'அது கூர்ந்து, குருவுருவாய் வந்தது' என்பதாம். புவனங்களை 'புவனா' என பெண்பாலற் கூறினார். அன்னதொரு வழக்குப் பற்றி, இதனால், அருட் குருவின் சிறப்பு உணர்த்தப்பட்டது.

சமையச் சுவடும் தனைஅறி யாமல்
கமையற்ற காமாதி காரணம் எட்டும்
திமிரச் செயலும் தெளியுடன் நின்றோர்
அமரர்க் கதிபதி யாகிநிற் பாரே. *#2787*

ஒவ்வோர் உயிரும் தன்னைத் தான் அறியக் கடமைப் பட்டவை. அவற்றை அவ்வாறு அறியச் செய்யாமல் மயங்கச் செய்வன, புறச் சமய நூல்களும், அடக்கம் இன்றி, வேண்டியவாறே ஒழுகத் தூண்டும் காமம் முதலிய குற்றம் எட்டும், அவற்றுக்குக் காரணமான ஆணவ மலமும் ஆகும். அவை முற்றாக நீங்குமாறு ஞான குருவைப் பிரியாது அவரது நிழல்போல உடன் இருப்பவர் வானவர்க்கும் தலைவராவர்.

விளக்கவுரை

சுவடு - எழுத்தின் வரிவடிவம். அவற்றை உடையது சுவடி. எனவே சுவடிகளில் உள்ள எழுத்துக்களை, 'சுவடு' என்றார். 'தனை அறியாமற் செய்யும்' என ஒரு சொல் வருவித்து, அதனை முதலிற் கூட்டுக. கமை - பொறுமை. அஃது அடக்கத்தைக் குறித்தது. 'ஆணவ மலத்தின் காரமயம் எட்டு' என்பதை,

'... ... ... விகற்பம், கற்பம்,
குரோதம், மோகம், கொலை, அஞர், மதம், நகை'*3*

என்னும் இருபா இருபஃதால் அறிக. இவற்றுள் 'மோகம்' என்பதனையே தலையாயதாக எடுத்து, 'காமம்' என்றார். இனி, காமம் முதலிய அறுபகைகளோடு, 'மண், பொன் இரண்டு கூட்டி, 'எட்டு' என்பாரும், 'இடும்பை, அசூயை, இரண்டு கூட்டி 'எட்டு' என்பாரும் உளர். திமிரம் - இருள்; அணவ மலம். 'செயல்' என்றது எட்டொழிந்த பிறவற்றை அவை மறைப்பு. திரிப்பு முதலியன. 'தெளிய' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'குருவுடன்' என்பது அதிகாரத்தால் வந்தது. தலைவராதல், மேல் நிலையில் நிற்றல்.

இதனால், சொரூப உதயத்தாலே உயிர் தூய்மை பெறுதல் கூறப்பட்டது.

மூவகைத் தெய்வத் தொருவன் முதல்உரு
ஆயது வேறாம் அதுபோல் அணுப்பரன்
சேய சிவமுத் துரியத்துச் சீர்பெற
ஏயும் நெறியென் றிறைநூல் இயம்புமே. *#2788*

'முக்குணங்களால், 'அயன், அரி, அரன்' எனச் சொல்லப்படும் மூவருள்,

'தனி ஒருவன்' எனச் சுட்டப்படும் அரன், குணம் பற்றி ஏனையிருவரோடு ஒத்தவனாகச் சொல்லப்படினும் ஏனையிருவர்போலச் சகலனாகாது, பிரளயாகலருள் பக்குவம் உற்ற வனாய், சிவனை மறந்து, 'தானே முதல்வன்' என மயங்கும் மயக்கம் இன்றிச் சிவனையே முதல்வனாகத் தெளிந்து அவன் பணியையே ஆற்றுபவன் ஆதலின் வேற்றியல்புடையனாதல் போல முத் துரியத்திலும் சீவனும், சிவனும் ஒரு பெற்றியராய் நின்ற போதிலும் பல வகையில் சிவன் சீவனின் வேறு பட்டவன்' என்று சிவநூல்கள் செப்பும்.

விளக்கவுரை

முதல் உரு - காரணமூர்த்தி. தனது வலப்பாகத்தினின்று அயனையும், இடப்பாகத்தினின்று அரியையும் தோற்றுவித்தலால் அரன் காரண மூர்த்தியாயினன். இவனே சீகண்ட உருத்திரன். 'முதல் உரு ஆயதனால்' என உருபு விரிக்க. அணு - உயிர். 'அணுப் பரன்,' சேய - சேய்மையில் உள்ள. 'சிவம்' என்பது, 'சுத்தம்' என்னும் பொருளதாய் நின்றது. கேவல சகலங்களைக் கடந்து நிற்றலின் சுத்தாவத்தைகள் சேய வாயின. 'முத்துரியம்' முன் தந்திரத்தில் சொல்லப்பட்டன. 'ஒரு சீர் பெற ஏயும் நெறி' என்க. ஏய்தல் - பொருந்துதல்.
'அணுவும், பரனும் ஏயும் நெறி, மூவகைத் தெய்வத்து ஒருவன் வேறாயது' என இயைத்து முடிக்க. முதல் அடி இன எதுகை பெற்று வந்தது.
இதனால், 'சொரூப உதயத்துச் சிவ சீவர்கள் அருள் நிலையால் சமமாயினும், பொருள் நிலையால் வேறானவர்களே' என்பது கூறப்பட்டது.

உருவன்றி யேநின் றுருவம் புணர்க்கும்
கருவன்றி யேநின்று தான்கரு வாகும்
மருவன்றி யேநின்ற மாயப் பிரானைக்
குருவன்றி யாவர்க்கும் கூடஒண் ணாதே. *#2789*

சிவன் தான், தனக்கு ஓர் உடம்பில்லாமலே பல உயிர்கட்கும் பல்வேறு வகையான உடம்புகளைப் படைத்துக் கொடுக்கின்றான். தனக்கு ஒரு காரணம் இன்றித் தானே அனைத் திற்கும் காரணமாய் உள்ளான். எந்தப் பொருளின் தன்மையும் தன்னைப் பற்றாது தான் அனைத்துப் பொருளிலும் தாமரை இலையில் தண்ணீர் போலப் பொருந்தி நிற்கின்றான். ஆகவே, அவனது நிலை யாவராலும் அறிய ஒண்ணாத பெருமறையாய் இருத்தலின், அம்மறையை அறிந்த நல்லா சிரியன் வழியாக அன்றித் தாமே நேராக அவனை அடைதல் யாவர்க்கும் இயலாது.

விளக்கவுரை

'கரு' என்றது காரணத்தை. மருவுதல் பற்றுறப் பற்றல். மாயம், இங்கு மறைவைக் குறித்தது, அதனையுடைய தன்மையை உணர்த்திற்று.

'கருவினா லன்றியே கருவெலாம் ஆயவன்
உருவினா லன்றியே உருவுசெய்தான்' *(திருமுறை - 3.35.3.)* என்னும் ஆளுடைய பிள்ளையார் அருள்மொழியை இம் மந்திரத்தோடு ஒப்பிட்டுக் காண்க.

இதனால், 'உண்மைச் சொரூபமாம் சிவனது தோற்றத்திற்கு முற்பட்ட நிலை குருவினது தோற்றம்' என்பது கூறப்பட்டது.

உருவம் நினைப்பவர்க்*(கு)* உள்ளூறும் சோதி
உருவம் நினைப்பவர் ஊழியும் காண்பர்
உருவம் நினைப்பவர் உம்பரும் ஆவர்
உருவம் நினைப்பார் உலகத்தில் யாரே. *#2790*

குருவின் உருவத்தை உள்ளத்தில் உள்கியிருப்பவர் கட்கு அங்குச் சிவ சோதியே பிரகாசிக்கும். அவர்கள் ஊழிக் காலம் நிலவுலகில் வாழ்வர்; பின்பு சிவலோக வாழ்வினரும் ஆவர். அங்ஙன மாகவும் குரு உருவத்தின் சிறப்பை அறிந்து அதனை உள்ளத்தில் உள்குவோர் உலகத்தில் எத்துணைப் பேர்!

விளக்கவுரை

உருவம், அதிகாரத்தால் குரு உருவேயாயிற்று. 'மணி மந்திர ஔடதங்களாலும், மற்றும் அடயோகம் முதலிய உழைப்புக் களாலும் அடையும் பயனை ஞான குருவால் அடையலாம்; ஆனால் ஞான குருவால் அடையும் பயனை வேறு வழியால் அடைய இயலாது' என்பது உணர்த்துதற்கு இவ்வாறு கூறினார்.

'மந்திரத்தால், மருந்துகளால், வாய்த்தஇயோ கத்தால்,
மணியிரத குளிகையினால், மற்றும் மற்றும்
தந்திரத்தே சொன்னைமுறை செய்ய, வேத
சகலகலை ஞானங்கள், திரிகால ஞானம்,
அந்தமிலா அணிமாதி ஞானங்கள் எல்லாம்
அடைந்திடும்; ஆசான் அருளால் அடிசேர் ஞானம்
வந்திடும்; மற்றொன்றாலும் வாரா தாகும்;
மற்றவையும் அவன்அருளால் மருவு மன்றே'*
என்னும் சிவஞான சித்தியைக் காண்க. இதன்கண் சொற்பொருட் பின்வருநிலையணி வந்தது.

இதனால், சொரூபத்தியானத்தின் சிறப்பு உணர்த்தப்பட்டது.

பரஞ்சோதி யாகும் பதியினைப் பற்றப்

பரஞ்சோதி என்னுட் படிந்ததன் பின்னைப்
பரஞ்சோதி யுள்நான் படியப் படியப்
பரஞ்சோதி தன்னைப் பறையக்கண் டேனே. *#2791*
முன் மந்திரத்தில், 'உள்ளூறும் சோதி' எனப்பட்ட அந்த மேலான ஒளி என் உள்ளத்துள்ளே தோன்றியவுடன் நான் அதனைச் சிக்கெனப் பிடித்தேன். பிடித்தபொழுது முதற்கண் அஃது என்னுள்ளே அடங்கப் பின்பு நான் அதனுள்ளே தோய்ந்தேன். தோயத் தோய, அஃது எல்லையின்றி விரியக் கண்டேன்.

விளக்கவுரை

'பதியாகும் பரஞ்சோதியை' என மாறிக் கூட்டி உரைக்க. உதயம் உள்ளத்துள் ஆதலின், 'முதற்கண் அஃது என்னுள் படிந்தது' என்றும், விறகினின்றும் தோன்றிய தீ பின் அவ்விறகைக் கதுவுமாறுபோல, ஆன்ம அறிவில் தோன்றிய சிவஒளி பின்பு அவ்வறிவை விழுங்கி நிற்றல் பற்றி, 'பின்பு நான் அதனுட் படிந்தேன்' என்றும், முன்பு சுட்டுணர்வாய் நின்ற ஆன்ம அறிவு பின்பு வியாபக அறிவாய் விரியுந்தோறும் சிவஒளி அவ்வறிவிற்கு வியாபகமாயே விளங்குதல் பற்றி, 'அதனைப் பறையக் கண்டேன்' என்றும் கூறினார். பறைதல் - பறத்தல். அஃது இங்கு வியாபித்தலைக் குறித்தது. இனி, 'பறைதல், சொல்லுதல்' எனக் கொண்டு, அஃதாவது, தன்னியல்பை அறிவித்தல்' என்பாரும் உளர். தன், சாரியை. 'பறைய' என்னும் செயவென் எச்சம், 'பறையும்பொழுதில்' எனக்காலம் உணர்த்தி நின்றது. இதனுள்ளும் முன் மந்திரத்திற் போந்த அணியே வந்தது.
இதனால், சொரூப உதயத்தின் படிநிலைகள் கூறப்பட்டன.

சொரூபம் உருவம் குணம்தொல் விழுங்கி
அரியன உற்பலம் ஆமாறு போல
மருவிய சத்தியாதி நான்கும் மதித்த
சொரூபக் குரவன் சுகோயத் தானே. *#2792*
கவர்ச்சியான வடிவம், நிறம், மணம் முதலிய பிற பண்புகள் ஆகியவற்றை இயல்பாகவே கொண்டிருத்தலாலே குவளை மலர்கள் பிற மலர்களினும் கிடைத்தற்கரிய சிறந்த மலர்களாகக் கருதப்படுகின்றன. அதுபோலவே, 'சத்தியம், ஞானம், அனந்தம், ஆனந்தம் என்னும் மெய்ப்பொருள் இயல்புகளைத் தனது ஞானமாக அடைந்த உண்மைக் குருவே வீட்டின்பத்தைத் தர வல்லவனாவான்.

விளக்கவுரை

குவளை மலரையே எல்லா மலர்களினும் சிறந்த மலராக நாயனார் கூறிவருதலை மேலேயும் சில மந்திரங்களிற் கண்டோம். அதற்குக்

காரணம், அது தீக்கைக் காலத்தில் அணியப் படுதல் பற்றிப்போலும்! 'சொரூபம்' இரண்டில் முன்னது வடிவம். பின்னது உண்மை. உருவம் - நிறம். 'தொன்மை' என்பதில் விகுதி தொகுக்கப்பட்டது. 'தொல்லாக' என ஆக்கம் வருவிக்க. இயல்பை, 'தொன்மை' என்றார். விழுங்குதல், கொண்டிருத்தல். 'விழுங்கி' என்னும் எச்சம் காரணப் பொருளில் வந்தது. 'உற்பலம் அரியன ஆமாறு போல' என மாற்றிக் கொள்க. சத்தியம் முதலிய நான்கு மெய்ப்பொருளின் இயல்பாதல் மேலேயும் கூறப்பட்டது.
இதனால், 'சிவனைப் போல, 'சொரூபம்' எனச் சொல்லத் தக்கவன் உண்மையான ஞான குருவே' என்பது கூறப்பட்டது.

உரையற்ற ஆனந்த மோனசொரூ பத்தன்
கரையற்ற சத்திஆதி காணில் அகாரம்
மருவுற் றுகாரம் மகாரம தாகி
உரையற்ற தாரத்தில் உள்ளொளி யாமே. *#2793*

('சொரூபம்' என்பதைப் பொதுப்பட இயல்பு' - என வைத்துக் காணும்பொழுது அது, 'மேனிலைச் சொரூபம், கீழ்நிலைச் சொரூபம்' என இரண்டாகும். அவற்றுள்) சிவனது மேனிலைச் சொரூபம் சொல்லைக் கடந்தது; இன்ப உருவானது. அநாதி; சிவமாவது கீழ்நிலைச் சொரூபம். 'அகார உகார மகாரம்' என்னும் பகுதிகளாயும், அங்ஙனம் பகுக்கப்படாத தொகுதியாயும் உள்ள தாரக மந்திரத்தின் உள்ளொளியாகும். ஆதி; சத்தியாவது.

விளக்கவுரை

'உரையற்ற' எனப் போந்த இரண்டில் முன்னது 'மோனம்' என்பதனை விளக்கியது. பின்னது 'வெளிப்படச் சொல்ல வாராதது' என்னும் பொருட்டாய் ஓங்காரத்தைக் குறித்தது. உள் ஒளி - அதனால் சுட்டப்படும் பொருள். 'தாரகம்' என்பது இடைக்குறைந்து நின்றது, 'கீழ் நிலைச் சொரூபமும் அளவுட் படாதது' என்றற்கு, 'கரை -யற்ற' என்றார். 'மருவுற்ற' என்பதில் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. சொல்லைக் கடந்ததாய், இன்பமாய் அநாதியாய், 'சிவம்' என நிற்பவனே, ஆராயுமிடத்து, அகார உகார மகாரங்களின் பொருளாயும், அவை ஒருங்கு தொக்க 'ஓம்' என்பதன் பொருளாயும், ஆதியாயும் 'சத்தி என நிற்பான்' என்பது இம்மந்திரத்தின் பொருள். சிவம் மேல்நிலைச் சொரூபம். சத்தி கீழ்நிலைச் சொரூபம். இவ் விரண்டையும் அனுபவமாக உணர்ந்தவனே ஞானகுரு. அவனே 'சொரூபம்' எனப்படுவான். கீழ்நிலைச் சொரூபத்தை மட்டும் உணர்ந்தவன் கிரியா குரு. அவனும் ஓராற்றால் 'சொரூபம்' எனப் படுவான் என்றற்கு இது கூறினார். கூறவே, கீழ்நிலைச் சொரூபத்தைத் தானும் உணராதவன்

குருவாகாமை விளங்கும்.
இதனால், மேல்நிலைச் சொரூப உதயமே சொரூப உதயமாதல் அன்றிக் கீழ்நிலைச் சொருப உதயமும் ஓராற்றால் சொரூப உதயமாதல் கூறப்பட்டது.
இதனையடுத்துப் பதிப்புக்களில், 'தலைநின்ற தாழ்வரைமீது தவம் செய்து' என்னும் மந்திரம் முன் தந்திரத்து 'வாய்மை' அதிகாரத்தில் வந்தது.

ஆமா றறிந்தேன் அகத்தின் அரும்பொருள்
போமா றறிந்தேன் புகுமாறும் ஈதென்றே
ஏமாப்ப தில்லை இனிஓர் இடமில்லை
நாமாம் முதல்வனும் நாமென லாமே. ***#2794***

பாச ஞான பசு ஞானங்களால் எளிதில் அறியப் படும் பொருள்கள் யாவும் நமக்குப் புறத்தே நிற்பனவாக, அந்த ஞானங்களால் அறிதற்கரிய பொருள் நம்மின் வேறாகாது நம் உள்ளே யிருத்தலை நான் அறிந்தேன். மேலும், அந்தப் பொருள் நம்மை விட்டு நீங்குதற் காரணத்தையும் நான் 'இது' என அறிந்தேன்; நீங்கிப் போன அது மீட்டும் வந்து புகுதற் காரணத்தையும் 'இது' என அறிந்தேன். இனி நான் 'யான், எனது' எனச்செருக்கு மாட்டேன்; அந்தப் பொருளை யன்றி வேறொரு புகலிடமும் எனக்கு இல்லை. இந்நிலைமை, 'முன்பு தானாய் இராது நாமாகவேயிருந்த முதல்வனும் நாமே' எனத் தக்கதாய் உள்ளது.

விளக்கவுரை

'அரும்பொருள் அகத்தின் ஆமாறு அறிந்தேன்' எனவே, எளிய பொருள்கள் புறத்தேயிருத்தல் பெறப்பட்டது. போதல் - நீங்குதல். அது விளங்காது மறைந்திருந்தைம அதற்குக் காரணம். ஆன்ம அறிவு 'யான் எனது' எனச் செருக்கினமை. புகுதல், மறைவின்றி வெளிப்பட்டு விளங்குதல். அதற்குக் காரணம் அச்செருக்குக்கள் இன்றி, அடங்கி ஒடுங்கினமை. முன்பு செய்த குற்றங்களை இனிச் செய்யமாட்டேன்' என்பார். 'ஏமாப்பதில்லை. இனி ஓர் இடமில்லை' என்றார். பெத்த காலத்தில் முதல்வன் வேறு விளங்காது, உயிர்களாயே நின்றதனை, 'நாம் ஆம் முதல்வன்' என்றும், முத்தி காலத்தில் உயிர் வேறு விளங்காது முதல்வனாயே நிற்றலின், 'முதல்வனும் நாம் எனலாம்' என்றும் கூறினார். இதனை மெய்கண்ட தேவர்,
'அவனே தானே யாகிய அந்நெறி
ஏக னாகி'*8*
என்றார். தம்மோடு தம் மாணாக்கரையும் உளப்படுத்த, 'நாம்' என்றார். இதனால், சொரூப உதயத்தின் முடிநிலை இயல்பு கூறி

முடிக்கப்பட்டது.

*11.20.*ஊழ்

செத்தில்என் சீவில்என் செஞ்சாந் தணியில்என்
மத்தகத் தேஉளி நாட்டி மறிக்கில் என்
வித்தக நந்தி விதிவழி யல்லது
தத்துவ ஞானிகள் தன்மைகுன் றாரே. *#2795*

தங்கள் உடம்பைப் பிறர் செத்தினால் தான் என்ன? சீவினால்தான் என்ன? உச்சந் தலையிலே உளியை நாட்டி அடித்தால்தான் என்ன? இவ்வாறன்றி சிவந்த சந்தனத்தைக் குளிர்ச்சியாகப் பூசினால்தான் என்ன? மெய்யுணர்வு எய்தினோர் ஞானகுரு உபதேசித்த உபதேச வழியில் நிற்றல் அல்லது, அதனினின்றும் பிறழார்.

விளக்கவுரை

செத்துதல் - ஆழப் போழ்தல். சீவுதல் - மேற்போக்காப் போழ்தல். இவ்விரண்டிற்கும் வினைமுதலும் செயப்படுபொருளும் வருவிக்கப்பட்டன. மறித்தல் - அசையாதபடி தடுத்தல்; அஃது அறைதலைக் குறித்தது. மிகக் கொடிய துன்பங்கள் சிலவற்றைக் கூறும் முகத்தால் பல துன்பங்களையும் குறித்தவாறு. வித்தகம் - சதுரப்பாடு; அது ஞானம். தம் குருவாகிய நந்தி பெருமானைச் சுட்டினாராயினும், பொதுப்பட, 'குரு' என்றலே கருத்து. விதி - நெறிமுறை. 'நந்தி சொல்லிய நெறிமுறை' என்க. அஃது, 'உனக்கு இப்பொழுது வரும் துன்ப இன்பங்கள் எல்லாம் நீ முன்பு எர் உடலில் நின்று செய்த வினை இவ்வுடலை வந்து பற்றுவனவே. ஆதலின் அவை பற்றி நீ கவலுதலோ' மகிழ்தலோ கூடாது' என்பது. இவ்விடத்தில்,

'ஆனாச் செல்வத்து வானோர் இன்பம்
அதுவே எய்தினும் எய்துக; ... ...
வரையில் தண்டத்து மாறாக் கடுந்துயர்
நிரயம் சேரினும் சேர்க; உரையிடை
ஏனோர் என்னை ஆனாது விரும்பி,
'நல்லன்' எனினும் என்க; அவரே
'அல்லன்' எனினும் என்க; நில்லாத்
திருவொடு திளைத்துப் பெருவளம் சிதையாது
இன்பத் தழுந்தினும் அழுந்துக; அல்லாத்
துன்பம் துதையினும் துதைக; ... ... ஒன்றினும்
வேண்டலும் இலனே; வெறுத்தலும் இலனே,
ஆண்டகைக் குரிசல்நின் அடியரொடு குழுமித்

தெய்வக் கூத்தும், நின் செய்யப்பொற் பாதமும்
அடையவும், அணுகவும் பெற்ற
கிடையாச் செல்வம் கிடைத்த லானே'3
என்னும் அனுபவ மொழியையும்,
'கேடும், ஆக்கமும் கெட்ட திருவினார்;
ஓடும், செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்'9
என அவ்வனுபவம் உடையாரது இயல்பை எடுத்து விளக்கிய திருமொழியையும் ஒப்பு நோக்கி உணர்க.

தான்முன்னம் செய்த விதிவழி தான் அல்லால்
வான்முன்னம் செய்தங்கு வைத்ததோர் மாட்டில்லை
கோன்முன்னம் சென்னி குறிவழி யேசென்று
நான்முன்னம் செய்ததே நன்னிலம் ஆயதே. #2796

ஒவ்வோர் உயிரும் தான் தான் முற்பிறப்பில் செய்த வினையின் பயனைத்தான் இப்பிறப்பில் அனுபவிக்கின்றதே தவிர, இப்பிறப்பில் சிலர் அவ்வுயிர்கட்கு நன்மை தீமைகளைப் புதியன வாகக் கொண்டுவந்து சேர்ப்பிக்கின்றார்கள் இல்லை. (ஆகவே, அவைகளைப் பிறர் கொண்டு வந்து சேர்ப்பிப்பதாகக் கருதி அவர்களை விரும்புதலோ, வெறுத்தலோ செய்தால் அச்செயல்களே அடுத்த பிறப்பிற்குக் காரணமான ஆகாமிய வினையாய்விடும். இதை உணர்ந்த நான் எனது முன் வினையின் பயனைக் கூட்டுகின்ற முதல்வன் என் தலையில் எழுதிய எழுத்துப்படியே இன்பத் துன்பங்களை அனுபவிக்கும் பொழுதெல்லாம் அவைகளை அவனது அருளாகவே கருதி அனுபவித்ததல்லது இன்பத்தில் மகிழ்ச்சியோ, துன்பத்தில் வாட்டமோ கொண்டதில்லை. அவ்வாறு செய்த எனது செயல் எனது நன்மைக்குச் சிறந்ததொரு காரணமாயிற்று.

விளக்கவுரை

'எனது நன்மை' என்றது, வினைத் தொடர்ச்சி அறுபட்டதை, 'தான்' என்றது உயிர்களைப் பொதுப்படச் சுட்டியது. விதி - வினை. 'வழி' என்றது பயனை. 'அனுபவித்தல் அல்லால்' என ஒரு சொல் வருவிக்க. 'வான்' என்பது 'வெளி' என்னும் பொருட்டாய்ப் புறத்துள்ளாரைக் குறித்தது. மாட்டு - தொடர்பு. 'சென்னியில் குறித்த வழியே' என்க. சென்று - செல்லாநின்று; என்பது, 'செல்லும் பொழுது' என்றபடி 'செய்தது' எனப் பொதுப் படக் கூறினாராயினும், 'கோன் முன்னம் குறித்த வழியே சென்றேன்' என்றதனால் அது அவன் அருள் வழி நின்றதையே குறித்தது. நிலம் - நிலைக்களம். அது, 'சிறந்த காரணம்' எனப் பொருள் தந்தது. நாயனார் சாத்தனூரில் பாதுகாப்பில் வைத்த தம் மூலன் உடம்பு காணாமற் போனதையும், தாம் மூலன் உடம்பிலே

இருக்க நேர்ந்ததையும் சிவன் அருளாகவே கருதி ஏற்றமை நினைக்கத்தக்கது.
இதனால், ஊழின் பயனை அனுபவிக்கும்பொழுது அதனை, அவன் அருள்' என்று அனுபவிக்கின் அஃது உடல் ஊழாய்க் கழிதலோடு, ஆகாமியமும் விளையாது' என்பது கூறப்பட்டது.
'சிவாய நமஎன்று சிந்தி திருப்பார்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லைனா;- உபாயம்
இதுவே மதியாகும்; அல்லாத எல்லாம்
விதியாய் மதிய்யா விடும்'*
என்ற ஔவையார் வாக்கு இங்கு நினைவு கூரத்தக்கது.
இவ்வெண்பாவில் 'அபாயம்' என்றது ஊழின் தாக்குதலும், அதனால் விளையும் ஆகாயமியமுமாம். 'விதியை மதியால் வெல்லலாம்' என்னும் பழமொழியில் 'மதி' எனப்பட்டது 'சிவாயநம' எனச் சிந்திதிருப்பதே எனவும், அஃது அல்லாத வழியெல்லாம் அந்த ஊழ் உண்டாக்கும் மதியே' எனவும் ஔவையார் விளக்கியிருத்தல் அறியத்தக்கது. ஊழ்வினை நன்மையாகவோ, தீமையாகவோ வந்து விளையும்பொழுதெல்லாம் அதனைச் 'சிவாயநம' என்று சொல்லி ஏற்க வேண்டும் என்கின்றார் ஔவையார்.

ஆறிட்ட நுண்மணல் ஆறே சுமவாதே
கூறிட்டுக் கொண்டு சுமந்தழி வாரில்லை
நீறிட்ட மேனி நிமிர்சடை நந்தியை
பேறிட்டென் உள்ளம் பிரயகி லாதே. *#2797*

(ஆற்றில் மணல் சமப்பரப்பாய்ப் பரந்திருப்பின் அஃது அதற்கு ஒரு சுமையாய் இராது. ஆனால் ஆறு சமமாய் இல்லாமையால், அதில் வெள்ளம் வரும்பொழுது பள்ளம் மேடுகள் மாறி மாறி அமைய சில இடங்கள் பெரிய மேடுகள் ஆகிவிடுகின்றன.) அந்த மேடுகளை அந்த ஆறு தான் சுமக்க வேண்டுமேயன்றி, அவைகளைப் பங்கு செய்து எடுத்துக் கொண்டு போய்ச் சுமப்பார் ஒருவரும் இல்லை. (அதுபோல, அவரவர் செய்த வினையின் பயனை அவரவரே அனுபவிக்க வேண்டுமன்றி அனுபவிப்பவர் வேறுயாரும் இலர். இதனை நன்குணர்ந்த எனது உள்ளம்) சிவனைப் பெறற்கரிய பேறாக உணர்ந்து அவனைத் தவிர வேறொன்றைப் பற்றுதலை ஒழிந்தது;

விளக்கவுரை

'அதனால், ஊழும் என்னைத் தாக்கவில்லை. அத் தாக்குதலால் தோன்றக் கூடிய ஆகாமியமும் தோன்றவில்லை' என்பது குறிப்பெச்சம். 'நீறிட்ட மேனி' என்றது, 'அவன் தன் அடியார்களது வினையைப் பொடியாக்குபவன்' என்னும் குறிப்பையும், 'நிமிர் சடை'

என்றது, உலகப் பற்றறநீக்கு பவன்' என்னும் குறிப்பையும் உடையன. பேறிட்டு - பேறாதலையிட்டு. 'இட்டு' என்பது காரணத்தை உணர்த்தி வருதல் நாட்டு வழக்கு. முன் இரண்டடிகள் ஒட்டணியாய் நின்றமையால், அதற்குரிய பொருள் வருவித்துரைக்கப்பட்டது. ஆறு - உயிர். அது சமம் இன்மை உயிர் சமபுத்தி உடையதாகாமை. வெள்ளம் - ஊழ். மேடு பள்ளங்கள் - ஊழால் விளையும் ஆகாமிய வினைகள். 'சமவாதே' என்னும் ஏகாரம், அசை.
இதனால், அவரவர் வினை அவரவருக்கே பயனாதல் உவமை முகத்தால் விளக்கப்பட்டது. சித்திற்குச் சட்டம் உவமை யாதலும் உவமத்திற்கு ஏற்புடையதே. அதிகாரப் பொருளை வலியுறுத் -தற்கு அதனை வெல்லுமாறும் உடன் கூறப்பட்டது.

வானின் றிடிக்கில்என் மாகடல் பொங்கில்என்
கானின்ற செந்தீக் கலந்துடன் வேகில்என்
தானொன்றி மாருதம் சண்டம் அடிக்கில்என்
நானொன்றி நாதனை நாடுவன் நானே. #2798

இவ் இருமந்திரங்களின் பொருளும் வெளிப்படை.

விளக்கவுரை

'இயற்கைச் சீற்றங்கள்' என உலகத்தார் வழங்குவன வாகிய பெருங்கேட்டுச் செயல்கள் தேவர் முதலியோர்க்கும் பேரச்சம் விளைப்பயனவாயினும் சிவனடியார் உள்ளங்கள் சிறிதும் அஞ்சமாட்டா' என்பது முன் மந்திரத்திலும், 'கொடு விலங்குகளாலும், பகைவராலும் வரும் கேடுகட்கும் அவர்களது உள்ளம் நடுங்கா' என்பது பின் மந்திரத்திலும் சொல்லப்பட்டன.
'ஒருவர் தமர் நாம்;
அஞ்சுவது யாதொன்றும் இல்லை;
அஞ்ச வருவதும் இல்லை;
'வானம் துளங்கி என்? மண்கம்பம் ஆகில் என்?
மால்வரையும்
தானம் துளங்கித் தலைதடு மாறில் என்?
தண்கடலும்
மீனம் படில் என்? விரிசுடர் வீழில் என்?
வேலை நஞ்சுண்டு
ஊனம்ஒன் றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட
உத்தமர்க்கே'
'மண்பா தலம்புக்கு, மால்கடல் மூடி,மற்
றேழுலகும்
விண்பால் திசைகெட்டு, இருசுடர் வீழினும்

அஞ்சல் நெஞ்சே!
தின்பால் நமக்கொன்று கண்டோம்;
திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான்
கழலிணையே'
'மலையே வந்து விழினும், மனிதர்காள்'
நிலையி னின்று கலங்கப் பெறுதிரே?
தலைவ னாகிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே? *
என்னும் திருமொழிகளை இம்மந்திரங்களோடு ஒப்பிடுக.
கான், கானம் - காடு. மாருதல் - காற்று. சண்டம் - வேகம். 'சண்டமாய்' என ஆக்கம் விரிக்க. 'நான்' இரண்டில் முன்னது 'நான்' என்னும் போதம். உழுவை - புலி. ஏனைப் பதி - உயிர்கள் வாழும் ஊர் அல்லாத வேறோர் ஊர். அஃது அவன் வாழ்வது; திருவருள். 'என்னையும்' 'அதில் கொண்டு போய் வைத்தான். அங்கே நான் ஞானத் தொழிலைச் செய்து கொண்டிருக்கின்றேன். அதனால், இடி வீழ்தல் முதலிய அழிவு நிகழ்ச்சிகளைக் கண்டு என் உள்ளம் துணுக்குறாது' என்பதாம். ஞானத் தொழில் - ஞானச் செய்தி. அவை தசகாரியம். ஆகவே, இதனால் வருகின்ற அதிகாரத்திற்கும் தோற்றுவாய் செய்யப்பட்டதாம். 'உழுவேன்' என்றது 'செய்வேன்' என்னும் அளவாய் நின்றது. இதனால், ஞானிகள் தமக்கு வரும் ஊழாலேயன்றி உலகிற்கு வரும் ஊழாலும் உள்ளம் கலங்காமை கூறப்பட்டது.

ஆனை துரத்தில்என் அம்பூ டறுக்கில்என்
கானத் துழுவை கலந்து வளைக்கில்என்
ஏனைப் பதியினில் எம்பெரு மான்வைத்த
ஞானத் துழவினை நான்உழு வேனே. #2799

இவ் இருமந்திரங்களின் பொருளும் வெளிப்படை.

விளக்கவுரை

'இயற்கைச் சீற்றங்கள்' என உலகத்தார் வழங்குவன வாகிய பெருங்கேட்டுச் செயல்கள் தேவர் முதலியோர்க்கும் பேரச்சம் விளைப்பயனவாயினும் சிவனடியார் உள்ளங்கள் சிறிதும் அஞ்சமாட்டா' என்பது முன் மந்திரத்திலும், 'கொடு விலங்குகளாலும், பகைவராலும் வரும் கேடுகட்கும் அவர்களது உள்ளம் நடுங்கா' என்பது பின் மந்திரத்திலும் சொல்லப்பட்டன.
'ஒருவர் தமர் நாம்;
அஞ்சுவது யாதொன்றும் இல்லை;
அஞ்ச வருவதும் இல்லை;

'வானம் துளங்கி என்? மண்கம்பம் ஆகில் என்?
மால்வரையும்
தானம் துளங்கித் தலைதடு மாறில் என்?
தண்கடலும்
மீனம் படில் என்? விரிசுடர் வீழில் என்?
வேலை நஞ்சுண்டு
ஊனம்ஒன் றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட
உத்தமர்க்கே'
'மண்பா தலம்புக்கு, மால்கடல் மூடி,மற்
றேழுலகும்
விண்பால் திசைகெட்டு, இருசுடர் வீழினும்
அஞ்சல் நெஞ்சே!
தின்பால் நமக்கொன்று கண்டோம்;
திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான்
கழலிணையே'
'மலையே வந்து விழினும், மனிதர்காள்'
நிலையி னின்று கலங்கப் பெறுதிரே?
தலைவ னாகிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே? *
என்னும் திருமொழிகளை இம்மந்திரங்களோடு ஒப்பிடுக.
கான், கானம் - காடு. மாருதல் - காற்று. சண்டம் - வேகம். 'சண்டமாய்'
என ஆக்கம் விரிக்க. 'நான்' இரண்டில் முன்னது 'நான்' என்னும்
போதம். உழுவை - புலி. ஏனைப் பதி - உயிர்கள் வாழும் ஊர் அல்லாத
வேறோர் ஊர். அஃது அவன் வாழ்வது; திருவருள். 'என்னையும்'
'அதில் கொண்டு போய் வைத்ததான். அங்கே நான் ஞானத் தொழிலைச்
செய்து கொண்டிருக்கின்றேன். அதனால், இடி வீழ்தல் முதலிய அழிவு
நிகழ்ச்சிகளைக் கண்டு என் உள்ளம் துணக்குறாது' என்பதாம். ஞானத்
தொழில் - ஞானச் செய்தி. அவை தசகாரியம். ஆகவே, இதனால்
வருகின்ற அதிகாரத்திற்கும் தோற்றுவாய் செய்யப்பட்டதாம்.
'உழுவேன்' என்றது 'செய்வேன்' என்னும் அளவாய் நின்றது.
இதனால், ஞானிகள் தமக்கு வரும் ஊழாலேயன்றி உலகிற்கு வரும்
ஊழாலும் உள்ளம் கலங்காமை கூறப்பட்டது.

கூடு கெடின்மற்றோர் கூடுசெய் வான்உளன்
நாடு கெடினும் நமர்கெடு வாரில்லை
வீடு கெடின்மற்றோர் வீடுபுக் காலொக்கும்
பாடது நந்தி பரிசறி வார்கட்கே. #2800

குருவருள் வாய்க்கப்ப பெற்றவர்கட்கு, 'ஓர் உயிரின் உடம்பு அழிந்துவிட்டால், மற்றோர் உடம்பை அவைகட்குப் படைத்துக் கொடுக்க ஒருவன் இருக்கின்றான்' என்பது தெளிவாம். ஆதலால், 'இறப்பு' என்பது அவர்கள் உள்ளத்திற்கு. 'உயிர்கள் அழிந்துபோவதன்று; மற்று, ஒருநாடு எவையேனும் காரணத்தால் அழிவுறுமாயின், அதில் உள்ளவர்கள் வேறு நாட்டில் சென்று வாழ்தல் போல்வதும், ஓர் இல்லம் இடிந்து பாழாயின், அதில் வாழ்ந்தவர்கள் வேறோர் இல்லத்தில் குடிபுகுதல் போல்வதுமேயாகும்.

விளக்கவுரை

ஆகவே அவர்கள், உயிர்கள் எடுத்த பிறப்பில் அனுபவிக்கும் இன்பத் துன்பங்கள் அவை முற்பிறப்புக்களில் செய்த வினையின் பயனே' எனத் தெளிந்து, அனைத்துயிர்கட்கும் அவற்றின் வினைப் பயனை ஊட்டுவிக்கின்ற முதல்வன் திருவருளை உணர்ந்து நிற்குமாற்றால் தங்கள் ஊழினை வென்றிருப்பார்கள் என்பது கருத்து. 'நந்தி பரிசறிவார்க்கு' என்பதை முதலிற் கூட்டி, 'உளன்' என்பதன்பின் 'ஆம்' என்னும் சொல்லெச்சம் வருவித்து, 'ஒக்கும்' என்பதை, 'இல்லை' என்பதனோடும் இயைத்து, 'பாடு இல்லை ஒக்கும்' என முடிக்க. 'இல்லை' என்பது பண்பு; முற்றன்று. பாடு - இறப்பு. அது, பகுதிப்பொருள் விகுதி.
இதனால், 'முன் மந்திரத்தில் ஊழை வெல்லுதற்குத் தாம் செய்யும் செயலையே ஞானிகள் செய்து ஊழை வெல்வர்' என்பது குறிப்பால் உணர்த்தி முடிக்கப்பட்டது. ஆகவே மேற்கூறியபடி வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாயும் இதன்கண் அமைந்ததாம்.

***11.21.*சிவ ரூபம்**

சிந்தைய தென்னச் சிவன்என்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படும்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையி னுள்ளே சிவன்இருந் தானே. *#2801*

அறிவுப்பொருளாகிய உயிரும், அறிவுக்கறிவாய் உள்ள சிவனும் பொருளால் வேறேயாயினும், உடல் உயிர் போல ஒன்று பட்டு நிற்கும் கலப்பினால் வேறு நிற்பவர் அல்லர். ஆகவே, உயிரினது அறிவினுள்ளே, விறகில் தீயும், பாலில் நெய்யும் போலத் தோன்றாது மறைந்து நிற்கும் சிவன் அவ்விடத்தில் தோன்றவும் வாய்ப்பு உண்டு. அதனால், தங்கள் அறிவு மாசற்று விளங்கும்படி அவ்வுண்மை உணர்வில் உறைத்து நிற்க வல்லவர்கட்கு, கடைய வல்லவர்க்கு விறகில் தீயும், பாலில் நெய்யும் வெளிப்படுதல் ஒருதலையாதல் போல

அவர்களது அறிவில் சிவன் வெளிப்பட்டு விளங்குதல் ஒருதலை.

விளக்கவுரை

'விறகில் தீயினன், நன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்;
உறவு கோல்நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே'3 என்னும் அப்பர் அருள்மொழியை நெஞ்சினுள் ஆழப்பதித்துக் கொள்க. தெளிதல் இரண்டில் முன்னது மாசு நீங்கி, விளக்கம் பெறுதலையும், உறுதிப்பட உணர்தலையும் குறித்தன. அவை ஈரிடத்தும் செயவென் எச்சமாய் நின்றவற்றில் முன்னது காரியப் பொருட்டாய வினை யெச்சமாயே நின்றது; பின்னது தொழிற் பெயர்ப்பொருள் தந்தது. 'இருந்தான்' என்னும் இறந்த கால வினை தெளிவை விளக்கி நின்றது. ஏகாரம், தேற்றம். எனவே, 'மெய்யுணர்ந்தோர் ஒருஞான்றும் தங்கள் சிந்தையில் சிவன் இருத்தலை மறவார்; அதனால், அவர் மீள ஒரு ஞான்றும் பந்தத்தில் வீழார்' என்பது குறிப்பெச்சமாயிற்று.
இதனால் ஞானிகள் சிவரூப நிலையினின்றும் வழுவாமை கூறப்பட்டது.

வாக்கும் மனமும் மறைந்த மறைப்பொருள்
நோக்குமின் நோக்கப் படும்பொருள் நுண்ணிது
போக்கொன்றும் இல்லை வரவில்லை கேடில்லை
ஆக்கமும் அத்தனை ஆய்ந்துகொள் வார்க்கே. *#2802*

*(*முன் மந்திரத்தில் சிந்தையினுள்ளே இருப்பதாகச் சொல்லி சிவன்*)* வாக்கும், மனமும் அடங்கி ஒடுங்கி நிற்கும் நிலையில் உள்ள ஓர் உள்ளீடான பொருள். ஆகவே, அவனை நேக்கும் முறை யறிந்து நோக்குங்கள். அங்ஙனம் நோக்கும்பொழுது அந்நோக்கிற்கு அவன் மிக நுண்ணிதாய்ப் புலனாகும் பொருளாவான். புலனாகியபின் அவன் போதல் இல்லை புலனாகும் பொழுதும் புதியனாய் அப்பொழுது தான் வந்து புகுதலும் இல்லை *(*முன்பே உள்ளவன் என்பதாம்.*)* அவனுக்கு என்றும் அழிவில்லை. 'அழிவில்லை' எனவே தோற்றமும் இல்லையாம். நன்மையாவன பலவும் அவனை அவ்வாற்றால் நுணுகி நோக்கி அடைவார்க்கே உளவாம்.

விளக்கவுரை

மறைந்தவிடத்துத் தோன்றும் பொருளை மறைந் ததனால் தோன்றும் பொருளாக உபசரித்தார் ஆதலின், மறைந்த பொருள் என்பதில் பெயரெச்சம் காரியப்பெயர் கொண்டதாம். மறை பொருள் - மறைவை உடைய பொருள். 'மறைப்பொருள்' என்பது முன் மந்திரத்தினின்றும்

வந்த 'சிவன்' என்னும் எழுவாய்க்குப் பய னிலையாய் நின்றது. பொருளை 'வாக்கு மனம் மறைந்தது' என்றும், 'மறைவுடையது' என்றும் கூறிப்பின், 'நோக்குமின்' என்றதனால், 'நோக்குமாற்றால்' என்பது போந்தது. நோக்குமாறாவது பிற ஒளிகள் அடங்கியொடுங்க நிற்கும் ஞாயிற்றைப் பிற ஒளி கொண்டு நோக்காது அதன் ஒளியையே கொண்டு நோக்குதல் போல அதன் ஒளியையே கொண்டு நோக்குதல். 'அவ்வொளி அருள் ஒளி என்க. அது, நோக்கப் படும் பொருளாய், நுண்ணிதாம் என்க. நன்மைகளாவன ஆசை யறுதலும், அதனால் துன்பம் நீங்கலும், அன்பு வளர்தலும், இன்பம் மிகுதலுமாம். இறுதியில், 'உளவாம்' என்னும் பயனிலை வருவிக்க. 'முன்னர் அஃறிணையாகக் கூறியனயாவும் 'சிவனே' என்றற்கு ஈற்றில், 'அத்தன்' என உயர்திணையாகக் கூறினார்.

இதனால், அருள் ஒளியாலே சிவரூபம் தோன்றுதல் கூறும் முகத்தால், ஞானிகள் அருளாலல்லது எதனையும் நோக்காமை கூறப்பட்டது.

'அருளே உலகெல்லாம் ஆள்விப்ப(து); ஈசன்
அருளே பிறப்பறுப்ப தானால் - அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்; எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ தெனக்கு'*

என்னும் அம்மை திருமொழியையும்,

'அருளால் எவையும்பார் என்றான்; - அத்தை
அறியாதே, சுட்டிஎன் னறிவாலே பார்த்தேன்;
இருளான பொருள்கண்ட தல்லால், - கண்ட
என்னையும் கண்டிலன்; என்னேடி தோழி'3

என்னும் தாயுமானவர் வாக்கையும் நினைக.

பரனாய்ப் பராபர னாகிஅப் பாற்சென்(று)
உரனாய் வழக்கற ஒண்சுடர் தானாய்தர்
தரனாய்த் தனாதென ஆறறி வொண்ணா
அரனாய் உலகில் அருள்புரிந் தானே. #2803

(இங்குத் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகின்ற சிவன்) உலகங்கள் பலவற்றிலும் மேல் உள்ள உலகில் உள்ளான். இனிமேல் உள்ள பொருளுக்கும் மேலாய் அவற்றைக் கடந்தும் இருக் கின்றான். ஆயினும் தனக்குக் கீழே உள்ள எல்லா உலகங்களிலும் நிறைந்து நின்று உயிர்களின் பிறவித் தொடர்ச்சி அறுபட அருள் புரிகின்றான். அஃது எங்ஙனம் எனின், பிறிதொரு பொருளால் வெல்லப்படாத ஆற்றலையும், பிறர் அறிவிக்க வேண்டாது தானே எல்லாவற்றையும் ஒருங்கே அறியும் அறிவினையும் உடையனாயும், அனைத்துப் பொருளையும் ஆதாரமாய் நின்று தாங்குபவனாயும், பாசங்களை

அறித்தல் தெரியாமலே அரிப்பவனாயும் இருந்து.

விளக்கவுரை

பரன் - மேலானவன். இங்கு இஃது இடம் பற்றி வந்தது. அவ்விடமாவது நாத தத்துவன். 'பராற் பரன்' என்பது 'பராபரன்' என மருவி வந்தது. 'அப்பாற் சென்றும்' என்னும் சிறப்பும்மை தொகுத்த லாயிற்று. 'சென்றும் உலகில் அருள் புரிந்தான்' என இயைத்து முடிக்க. 'ஆகவே, அவனை வாக்கு மனங்களைக் கடந்தவன்' எண்ணிச் சோர்ந் தொழியாது, மேற்கூறியவாறு நோக்குமாற்றால் நோக்கிக் காணுதல் கூடும்' என்பதும், 'ஞானிகள் அவனை அங்ஙனம் கண்டிருப்பர்' என்பதும் கருத்துக்களாம். உரம் - அறிவு. 'வழக்கு' எனினும், 'தொடர்ச்சி' எனினும் ஒக்கும். அது பிறவித் தொடர்ச்சியையே குறித்தது. 'சுடர்' என்றது அறிவை. தான், அசை. தான் - தாங்குபவன். ஆறு - வழி. தனாதென ஆறு அறிவொண்ணா - தான் கையாளும் வழி இது என அறிய ஒண்ணாமல், 'ஒண்ணாது' என்பது ஈறு குறைந்து நின்றது. அரன் - பாசத்தை அறிப்புன். 'உரனாய் ... ... அரனாய்' என்றது, சிவன் உலகில் நிற்கும் நிலையில் கொண்டிருக்கும் இயல்புகளை விரித்தது. அதனால், அவை அவன் அருள் புரிதற்குக் காரணமாக, அதற்குப் பின் வைத்து உரைக்கப்பட்டது.
இதனால், சிவன் பொருள் நிலையில் வாக்கு மனங்களைக் கடந்தவனாயினும், அருள் நிலையில் உலகில் எங்கணும் நிறைந்து நிற்றலால் இங்குள்ளார் அவன் உண்மை உணர்தல் கூடும் என்பது கூறப்பட்டது.)

11.22.சிவ தரிசனம்

ஓதின் மயிர்க்கால் தொறும்அமு தூறிய
பேதம் அபேதம் பிறழாத ஆனந்தம்
ஆதி சொரூபங்கள் மூன்றகன் றப்பாலை
வேதம தோதும் சொரூபிதன் மேன்மையே. *#2804*

ஐந்தொழில் செய்யக் கருதிய காலத்துக் கொள்ளப்படுகின்ற 'உருவம், அருவுருவம், அருவம் என்னும் மூவகை வடிவங்களும் இன்றி, அவற்றைக் கடந்துள்ள, உண்மை நூல்களால் கூறப்படுகின்ற சொரூப சிவனது மேலான இயல்பாவது, அவனைத் தன்னின் வேறாக வாயினும், ஒன்றாகவாயினும் உணரும்பொழுது அவ்வாறு உணரும் உயிரினது மயிர்கால்தோறும் தவறாது ஊறித்ததும்பகின்ற அமுதம்போலும் பேரின்பமேயாம்.

விளக்கவுரை

ஆதி - குறிப்பிட்ட ஒருகாலம். அக்காலத்தில் வடிவம், பெயர். தொழில்

இவைகளைக் கொண்டு நிற்கின்ற சிவன். 'தடத்த சிவன்' எனப்படுவான். அவைகளுள் ஒன்றும் இன்றித் தன்னியல்பில் நிற்கின்ற சிவன் 'சொரூப சிவன்' எனப்படுவான். அவன் அநாதி. மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி, உரைக்க. 'சொரூபங்கள்' என்றது வடிவங்களை. மூன்றும் என்னும் முற்றும்மை தொக்கது. ஓதுதல், இங்கு உணர்தலாகிய தன் காரியம் உணர்த்தி நின்றது. 'ஓதும்' என்பது பாடம் அன்று. அமுது ஊறிய - 'அமுதம்போல ஊறிய' என உவமத் தொகை. பேதம், வேறாக உணர்தல். அபேதம், ஒன்றாக உணர்தல், முன்னது முதல்நிலை. பின்னது முடிநிலை. இவற்றின் பின், 'இரண்டிலும்' என்னும் தொகைச் சொல் வருவிக்க இரண்டிலும் உளதாகும் ஆனந்தம் முறையே காதலன் காதலியைக் களவுக் காலத்து இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர் இடந்தலைப்பாடு முதலிய காலங்களிலும், கற்புக் காலத்துப் பிரிந்து மீண்ட பின்னும் காணும் பொழுதும், கூடிய பொழுதும் உளவாகும் இன்பங்களை ஒக்கும். அவற்றிடையே வேற்றுமை உளதாயினும் இன்பம் ஆதலில் வேற்றுமையின்மை பற்றி, 'பிறழாத ஆனந்தம்' என்றார். 'சிந்தையுள்ளே நிற்கும் சிவனை ஞானிகள் சுகோதயனாகவும், சுக வாரியாகவும் உணர்ந்து இன்புறுவர்' என்பதாம்.

இதனால், சிந்தையில் உள்ள சிவனது இன்ப நிலையை உணர்தல் கூறப்பட்டது.

உணர்வும் அவனே உயிரும் அவனே
புணர்வும் அவனே புலவி அவனே
இணரும் அவன் தன்னை எண்ணலும் ஆகான்
துணரின் மலர்க்கந்தம் துன்னிநின் றானே. *#2805*

பொருள்களை உணர்தற் கருவியாகிய உணர்வும், அவ்வுணர்வினால் பொருள்களை உணர்கின்ற உயிரும், உணரப்பட்ட பொருள்களை விரும்பும் விருப்பமும், வெறுக்கின்ற வெறுப்பும் எல்லாம் சிவன் ஒருவனே. அனைத்துப் பொருள்களையும் தக்கவாற்றால் இயைத்துச் செயற்படுத்துகின்ற அவன் பிறர் ஒருவராலும் தனியே நினைக்கவும் வாரான். ஆயினும் கொத்தாய் உள்ள மலர்களினின்றும் மணம் கமழ்வது போல அனைத்துப் பொருளின் செயற்பாட்டில் அவன் விளங்குகின்றான்.

விளக்கவுரை

'அவனை அத்தன்மையனாக உணர்தல் வேண்டும்; ஞானிகள் அவ்வாறு உணர்ந்திருப்பர்' என்பதாம்.

'எல்லாம் அவனே' என்றல் அவன் அவற்றில் நீக்கமற நிறைந்து நிற்றல் பற்றியாம். 'அவன்' என்பது பண்டறி சுட்டு. 'புணர்வு' என்பது,

விடாது பற்றுதல். அஃது அதற்கு ஏதுவாய விருப்பத்தைக் குறித்தது. 'இணரும்' என்பது பெயரடியாகப் பிறந்த பெயரெச்ச வினை. 'இணராக்கும்' என்றபடி. இணராக்கல் - கொத்தாக்கல். துணர் - பூங்கொத்து. 'கந்தம் போல' என உவம உருபு விரிக்க.
இதனால், 'அனைத்துப் பொருள்களின் செயற்பாட்டினையும் அவனது செயலாக உணர்தல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.
'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு'
-திருக்குறள் - *355.*
என்றார் திருவள்ளுவரும்.

துன்னிநின் றான்தன்னை உன்னிமுன் னாஇரு
முன்னி யவர்தம் குறையை முடித்திடும்
மன்னிய கேள்வி மறையவன் மாதவன்
சென்னியுள் நின்றதோர் தேற்றத்த னாமே. *#2806*

முன் மந்திரத்திற் கூறியவாறு மலர்க் கந்தம்போலத் துள்ளி நிற்கின்ற சிவன் தன்னை நினைந்திருப்பவர் குறையை முடிப்பவன். வேதத்தை ஓதும் அயன், மற்றும் மால் முதலியோருடைய தலைக்குள் இருந்து அறிவைப் பிறப்பிப்பவனும் ஆவன். ஆகையால் அவனையே நினைத்து அவன் திருமுன்பில் இரு.

விளக்கவுரை

'இருப்பின் உனக்குக் குறை உண்டாகாது' என்பதாம். இரண்டாம் அடி முதலாகத் தொடங்கியுரைக்க. 'கேள்வி' என்றது 'சுருதி' என்றபடி. சிவனது திருமுன்பிலே (சந்நிதியிலே) இருத்த லானது புற உலகை நோக்கும்பொழுதும் அவற்றின் இயல்பினைச் சிவனது அருளாகவே கண்டிருத்தலாம். 'மறையவன், மாதவன்' என்றது உபலக்கணம்.
இதனால், சிவனைச் சேர்ந்திருப்பவர் செம்மையராய் விளங்குதல் கூறப்பட்டது.

மின்னுற்ற சிந்தை விழித்தேன் விழித்தலும்
தன்னுற்ற சோதித் தலைவன் இணையிலி
பொன்னுற்ற மேனிப் புரிசடை நந்தியும்
என்னுற் றறிவானான் என்விழித் தானே. *#2807*

மின்னல் மின்னினாற்போலத் திடீரெனத் தோன்றி மறைந்த ஓர் ஒளியால் மூடிக்கிடந்த எனது அறிவாகிய கண்ணைத் திறந்தேன். திறந்தவுடன் சிவன் அக்கண்ணில் என் அறிவினுள்ளே அறிவாய் விளங்கினான்.

விளக்கவுரை

இடையிரண்டு அடிகள் சிவனது இயல்பைக் குறித்து நின்றன. எனவே, 'தலைவன், இணையிலி, நந்தி' என்பன ஒரு பொருள்மேற் பல பெயராய் வந்தனவாம். தன் உற்ற சோதி - தன்னை இயல்பாகவே பற்றியுள்ள ஒளி; அஃது அறிவேயாம். அந்த அறிவாகிய ஒளியே மின்னல்போலத் தோன்றி மறைந்தது. அஃதாவது, 'சத்தி நிபாதம். முதற்கண் ஆன்ம அறிவில் ஓர் அதிர்ச்சி உண்டாகும் படி தோன்றிப் பின் மெல்ல முதிர்ந்தது' என்பதும், 'அதனால் எனது அறிவு சிவத்தை அறியும் நிலையைப்பெற்றது' என்பதும், அதனைப் பெற்றபின் சிவன் அறிவினுள் அறிவாய் விளங்கினான்' என்பதும் கருத்து. அறிவினுள் அறிவே சிவஞானம். 'விழிக்கண்' என ஏழாவது விரிக்க. அறிவு, 'சிந்தை' எனப்பட்டது. 'சிந்தையை விழித்தேன்' என்க. 'விழித்தேன்' என்றது குறிப்புருவகம்.

இதனால், சத்தி நிபாதத்தில் திருவருள் மிக்கு விளங்க, அதனாலே பெற்ற சிவ தரிசனத்தை எய்துதல் கூறப்பட்டது.

சத்திய ஞானத் தனிப்பொருள் ஆனந்தம்
சித்தத்தில் நில்லாச் சிவானந்தப் பேரொளி
சுத்தப் பிரம துரியம் துரியத்துள்
உய்த்தல் துரியத் துறுபே ரொளியே. ***#2808***

உண்மையாயும், ஞானமாயும், உள்ள ஒப்பற்ற பரம்பொருள் அனுபவத்தில் ஆனந்தமாய் இருக்கும். அந்த ஆனந்தம் ஆன்ம அறிவு இருந்துகொண்டிருக்கும் பொழுது இராது. (எனவே, ஆன்ம அறிவு தோன்றாத நிலையே அனுபவமாம்.) ஆயினும் ஆன்ம அறிவு உள்ளபொழுது மேற்கூறிய ஆனந்தத்தைக் காட்டுகின்ற அருள் ஒளி உளதாகும். (அந்த அருள் ஒளியால் சிவத்தை உணர்தல் சிவ தரிசனமாகும்.) அதன் பின் அருள் ஒளி ஆன்ம அறிவை விழுங்கி நிற்கும் நிலை நின்மல சிவ துரியமாகும். (இதுவே சிவயோகமாம்.) இத்துரியத்துள் விளங்குகின்ற அருள் ஒளியே ஆனந்த அனுபவமாகிய பர துரியத்துள் ஆன்மாவைச் செலுத்து.

விளக்கவுரை

'நில்லா' என்னும் எதிர்மறைப் பெயரெச்சம், 'சிவானந்தம்' என்பதனோடு முடிந்தது, சிவானந்தப் பேரொளி - சிவானந்தத்தைக் காட்டும் பேரொளி. சுத்தம் - நின்மலம். அஃதாவது மலம் நீங்கினும் அதன் வாசனை நீங்காமையால் ஆன்ம அறிவு 'யான், எனது' என முனைந்து நிற்றல் இன்மை எனவே, இம்முனைப்பின்றி பேரொளியாம் நிற்றலே சுத்தப் பிரம துரியம் ஆதல் அறிக. சிவத்தை, 'பிரமம்' என்றார். 'துரியம்' என்றதன்பின், 'துரியத்துள்' என்றது. 'அதனினும் மேலான துரியத்துள்' என்றதாம். 'உய்த்தல்' என்னும் தொழிற்பெயர்

உய்ப்பதாகிய வினைமுதலைக் குறித்தது. இதன்பின் 'துரியம்' என்றது, முற்கூறிய பிரம துரியத்தை.
இதனால், 'ஆனந்த அனுபவமே சிவபோக நிலை' என்பதையும் அருள் அனுபவம் 'சிவ யோக நிலை' என்பதையும் விளக்கும் முகத்தால், அவற்றிற்கு முன் நிற்கும் சிவ தரிசன நிலை உயிர் சிவஞானம் கண்ணாகச் சிவத்தை உணரும் நிலை என்பது கூறப்பட்டது.

பரனல்லன் நீடும் பராபரன் அல்லன்
உரனல்லன் மீதுணர் ஒண்சுடர் அல்லன்
தரனல்லன் தான்அவை யாய்அல்ல ஆகும்
அரனல்லன் ஆனந்தத் தப்புறத் தானே. *#2809*

'பரனாய்ப் பராபரன் ஆகி'*9* என்னும் மந்திரத்திற் கூறியபடி சிவ ரூபத்தில் 'பரன்' முதலிய இயல்பினனாய் வேறு தோன்றுகின்ற சிவன், சிவ தரிசனத்திலும் அத் தன்மையனாய், அவற்றிற்கு மேற்பட்ட சிவயோக சிவ போகங்களில் அவ்வாறு காணப்படாது அவற்றைக் கடந்து ஆன்மாவைத் தன்னுள் அடக்கி அருளையும், ஆனந்தமாயும் விளங்குவன்.

விளக்கவுரை

இது, 'பரனாய்ப் பராபர னாகி' என்னும் மந்திரத்துட் கூறியவற்றை எதிர்மறுத்துக் கூறுமாற்றால், சிவரூப சிவதரிசனங்கட்கு மேற்பட்ட நிலைகள் உளவாதலைக் குறித்தது. 'அதனால் அவற்றை அடைந்தார் புறப் பொருள்களை நோக்குமிடத்து சிவயோக நிலையில் நின்றே நோக்குதல் வேண்டும் என்பது கூறப்பட்டதாம்.

முத்தியும் சித்தியும் முற்றிய ஞானத்தோன்
பத்தியுள் நின்று பரந்தன்னுள் நின்றுமா
சத்தியுள் நின்(று) ஓர்க்கும் தத்துவம் கூடலால்
சுத்தி அகன்றோர் சுகானந்த போதரே. *#2810*

'வீடு பேறு' என்பதில் வீடு - விடுதல். பேறு - பெறுதல். விடுதல் பாசத்தை; பெறுதல் பதியை. வீடும், பேறுமே இங்கு 'முத்தியும், சித்தியும்' என ஓதப்பட்டன. முற்றிய ஞானத்தோன் - இவ்விரண்டன் இயல்புகளையும் முற்றும் உணர்ந்தவனே நிறை ஞானி -யாவான். 'இருமை வகைதெரிந்து ஈண்டும் அறம் பூண்டார்'*3* என்றார் திருவள்ளுவரும். இத்தகையோன் தனது ஞாநத்தின் பயனாகச் சிவனிடத்தில் பேரன்பு செய்து, அதனானே அவனது பெருங்குணமாகிய பேரானந்தத்தில் திளைத்து, அவ்வாற்றால் சிவத்துள் அடங்கி, அதனானே அறிவர் யாவரும் ஆராய்கின்ற மெய்ப்பொருளைத் 'தலைப்படுதலால், சகலத்தில் சுத்தாவத்தை யாகிய சிவானந்தத்தை அடைந்த ஞானியர் ஆவர்.

விளக்கவுரை

'மா சத்தியுள் நின்று' என்பதை, பரந்தன்னுள் நின்று' என்பதற்கு முன்னே கூட்டுக. ஓர்த்தல் - ஆராய்தல். தத்துவம் - மெய்ப் பொருள். 'சுத்தி' என்றது சகலத்திற் சுத்தத்தை. 'அகன்றோர் போதர்' என்பது வேறு முடிபாகலின், ஒருமை பன்மை மயக்கம் இன்று.

இதனால், நின்மலாவத்தையைக் கடந்து பராவத்தையை எய்தினோர் அந்நிலையினின்றும் ஒரோ ஒருகால் இறங்கினும் சிவயோக நிலையினின்றும் தாழார்' என்பது கூறப்பட்டது.

துரிய அதீதமும் சொல்லறும் பாழாம்
அரிய துரியம் அதீதம் புரியில்
விரியும் குவியும் விள் ளாமிளி ரும்தன்
உருவும் திரியும் உரைப்பதெவ் வாறே. *#2811*

எவ்வகை அவத்தையிலும் 'துரியாதீதம்' என்பது உயிர் தன்னை மறந்திருக்கும் நிலையாகும். ஆகவே, நின்மலா வத்தைத் துரிய துரியாதீதங்களே யாயினும் அந்நிலைகளை அடைந்த ஆன்மா புறத்துச் செல்லுதல், அகத்தில் மீளுதல், பொருள்களை நோக்கி ஓடுதல் என்பனவாகிய தனது இயல்பு அனைத்தினும் நீங்கி நிற்கும் என்றால், அவ்வான்மாவை முன்னது போல வைத்து, 'சீவன்' என்று சொல்வது எங்ஙனம்?

விளக்கவுரை

'கூடாது' சிவம் என்றே சொல்லுதல் வேண்டும்' என்பதாம். முன் மந்திரத்தில் 'சுத்தி' நின்மலாவத்தை இடம் பெற்றமையால் இங்கு, 'துரிய அதீதம், துரியம்' எனப்பட்ட நின்மலாவத்தைய ஆயின. புரிதலுக்கு, 'ஆன்மா' என்னும் எழுவாய் வருவிக்க. விள்ளா - விள்ளாது; இடைவிடாமல் மிளிர்தல். இங்கு அறிவு செல்லுதல். 'விரியும்' என்பது முதலிய 'செய்யும்' என்னும் எச்சங்கள் மூன்றும் அடுக்கி, 'உரு' என்னும் ஒரு பெயர் கொண்டன. 'உரு' என்றது இயல்பை. திரிதல் - வேறுபடுதல்; நீங்குதல். 'உரைப்பது' என்பது தொழிற்பெயர். 'முன்னது போல' என்பது சொல்லெச்சமாய் எஞ்சி நின்றது.

பராவத்தையை எய்தினோர் சீவத் தன்மை எய்தாமைக்கு நின்மல துரியாதீதங்களை எடுத்துக் காட்டினார்.

இதனால், சொரூப சிவனை எய்தினோர் சீவத் தன்மை எய்தாமை உவமை முகத்தால் வலியுறுத்தி முடிக்கப்பட்டது.

11.23.முத்தி பேதம் கரும நிருவாணம்

ஓதிய முத்தி அடைவே உயிர்ப்பர
பேதமி லாச் சிவம் எய்தும் துரியம்அ
நாதி சொரூபம் சொரூபத்த தாகவே
ஏத மிலாநிரு வாணம் பிறந்ததே. #2812

நூல்களில் சொல்லப்பட்ட முத்தி, வரிசைப்பட்ட 'துரியம், துரியாதீதம்' என இரண்டாகும். அவற்றுள் துரிய முத்தியாவது, ஆதியாய், ஆயினும் பரத்தோடு வேற்றுமையில்லாத சிவத்தை அடைந்து நிற்றலும், துரியாதீத முத்தியாவது, அநாதியாகிய பரத்தை அடைந்து நிற்றலும் ஆம் பரத்தை அடைந்த உயிர் பின் எவ்வாற்றானும் மீளா நிலையே அனைத்தும் நீங்கிய முடிநிலை முத்தியாகும்.

விளக்கவுரை

அடைவு - வரிசை. 'அடைவே' எனக் கூறியதனால் துரியம் முன்னதும், துரியாதீதம் பின்னதும் ஆதல் விளங்கிற்று. 'பரம், சிவம்' என்பன ஒன்றேயாயினும் தடத்த சிவத்தை, 'சிவம்' என்றும், சொரூப சிவத்தை, 'பரம்' என்றும் நாயனார் தொடர்ந்து குறிப்பிட்டு வருகின்றார். அதனானே சகலத்திற் சுத்தாவத்தயை, 'சிவாவத்தை' என வைத்து தனிச் சுத்தாவத்தையை, 'பராவத்தை' என்றார். பரத்தை 'அநாதி' என்றமையால், சிவம் ஆதியாதல் விளங்கிற்று.
'பரம், சிவம் வேறல்ல' என்றற்கு 'பரத்தொடு பேதம் இலாச் சிவம்' 'பரத்தொடு' எனவும் 'சிவத்தை' எனவும் ஏற்கும் உருபுகள் விரிக்க. 'சிவத்தை எய்தும் துரியம்' என உடம்பொடு புணர்த்துக் கூறினமையால், 'துரியமாவது சிவத்தை எய்துதல்' என்பது பெறப் பட்டது. சிவ நிலையிலும் அதீத நிலை உளதாயினும், அது நிலை பெறாது துரியமே மேற்பட்டு நிகழ்தலால், சிவ நிலையை, 'துரியம்' என்றே கூறினார். இந்நிலை 'சீவன் முத்தி' என்னும் முதல் முத்தியாம்.
'சொரூபம்' என்றது, சொரூபத்தை அடைந்த நிலையைக் குறித்தது. 'ஏதம் இலா நிருவாணம்' என்றதனால், சொரூபத்தை அடைந்த நிலையை அனைத்துக் குற்றங்களும் பற்றற நீங்கிய 'முழுத் தூய நிலை' என்றதாயிற்று. இது பரமுத்தி - முடிநிலை முத்தி. இதனை அடைந்த பின் மீட்சியில்லை. நிருவாணம் - முழு நீக்கம். 'கரும நிருவாணம்' எனப்பட்டதும் அது.
'பராவத்தையிலும் சாக்கிரம் முதலிய ஐந்தவத்தைகள் உள' என்பது மேற்காட்டப்பட்டமையின் அதனுள்ளும் அதீத நிலையை எய்தினோர்க்கே மீட்சியில்லை ஏனையோர்க்குச் சிவனது சங்கற்பத்தால் சிறுபான்மை மீட்சி உண்டாதலும் உண்டு.

இதனால், 'முத்தி பேதம் இரு வகைத்து' என்பதும் 'அவற்றுட் பின்னதே முடிநிலை' என்பதும் கூறப்பட்டன.

பற்றற் றவர்பற்றி நின்ற பரம்பொருள்
கற்றவர் கற்றுக் கருதிய கண்ணுதல்
சுற்றற் றவர் சுற்றி நின்றஎன் சோதியைப்
பெற்றுதற் றவர்கள் பிதற்றொழிந் தாரே. *#2813*

பரத்தை எய்துதலாகிய அதீத நிலையை அடைந் தவர்களே உலகர் செய்யும் செயல்களினின்றும் முற்றும் நீங்கினவராவர்.

விளக்கவுரை

எனவே, 'ஏனையோர் பயிற்சி வயத்தால் ஒரோ ஒருகால் அச்செயல்களைத் தம் இழப்பில் நின்று செய்யினும் செய்வர்' என்பதாம். 'அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை'*3* என அப்பர் குறிப்பு மொழி -யால் அருளிச்செய்தது பரத்தை எய்தினோர் நிலையையே ஆகும்.
பரத்தின் சிறப்பை இதனுட் பலவாறாக எடுத்தோதினார். பரத்தை, 'பரம்பொருள்' என்றார், 'கண்ணுதல், சோதி' எனக் குறித்ததும் அதனையே. இவை பொருட் பின்வருநிலையணி. கற்றல், இங்கு ஆசிரியர்பாற் கேட்டல். கருதுதல், சிந்தித்தல். 'சுற்றம் அற்றவர்' என்பதில் 'சுற்றம்' என்பது அம்முக்குறைந்து நின்றது. அவர் முற்றத் துறந்தோராவர் இங்ஙனம் கூறியது தெளிவெய்தினோரை. ஈற்றில் நின்ற பிரிநிலை ஏகாரத்தைப் பிரித்து, 'உற்றவர்கள்' என்பதனோடு கூட்டியுரைக்க.
இதனால், பரமுத்தியின் சிறப்பு வகுத்தோதி முடிக்கப்பட்டது.

*11.24.*சூனிய சம்பாடணை

காயம் பலகை கவறைந்து கண்மூன்று
ஆயம் பொருவ(து)ஓர் ஐம்பத்தோ ரக்கரம்
ஏய பெருமான் இருந்து பொருகின்ற
மாயக் கவற்றின் மறைப்பறி யேனே. *#2814*

சிவன் கொடுத்த பொருளை அஃது அன்னதாதலை அறியாது தம்முடையனவாகக் கருதிச் சிவனுக்கும், சிவனடியார் களுக்கும் கொடுக்க மறுத்தவர்களது பொருளை மூர்க்க நாயனார் சூதாடிப் பறித்ததுபோல தம்மையுணருமுகத்தால் தமையுடைய தன்னை உணரற்பால வாகிய உயிர்கள் அதனைச் செய்யாது, தம் கருவி கரணங்களைத் தாம் விரும்பும் வகையிற் செலுத்தி அல்ல லுறுதலை அறிந்த சிவபெருமான் அவைகள் அறியாமல் அவை களோடு கூடியிருந்தே அக்கருவி கரணங்களின் வழித் தன் வழியில் அவைகளைத் திருப்புதலாகிய சூதாட்டத்தினைச் செய்வதாகக் குறிப்பிட்டு, ஆயினும், சூதாடுவோர் பிறர் தமக்கு எதிர் இருந்து தம் பொருளைக் கவர முயலுதலை நன்கு அறிதல் போல உயிர்கள் சிவனை அறிந்து கொள்ளவில்லை' எனக் கூறுகின்றார்.

நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்துச் சம்பாதித்த பொருளாயினும் அப்பொருளை கட்குடிக்கும், கவறொடுதலுக்கும் ஒருவன் பயன்படுத்துவானாயின் அஃது அவனுக்குப் பாவமேயாதல் போல, மூர்க்க நாயனார் சூதாடிப் பொருள் ஈட்டினாராயினும் அதனை அவர் சிவனுக்கும், சிவன் அடியார்களுக்குமின்றி, வேறுவகையில் செலவிடாமையால், அஃது அவர்க்குச் சிவ புண்ணியமேயாயிற்று. வாதவூரடிகள் பாண்டியன் பணத்தைச் செலவிட்டது இத்தகையதோ. சிவன் மறைந்து நின்று செய்யும் செயலும் இப்படிப்பட்டதே. உயிர்களை நன்னெறியில் செல்ல ஏவிய சிவபெருமான், அதன் பொருட்டு அவைகட்கு வேண்டும் துணைப்பொருள்களை நிரம்பக் கொடுத்திருந்தபோதிலும் அவைகள் அவற்றை மாற்று வழியிற் செலுத்துதலால், அச்செயலை அவன் மறைந்து நின்று மாற்று கின்றான். அஃது ஒரு சூதாடியின் செயல் போன்றுள்ளது. ஆகவே சிவபெருமா -னாகிய சூதாடிக்கு உயிர்கட்கு அவனால் தரப்பட்ட உடம்புகளே சூதாடும் பலகைகள். சாக்கிரம் முதலிய மூன்றவத்தை இடமாகிய புருவ நடு, கண்டம், இருதயம் ஆகியவையே சூதாடு களம். உடம்பின் புறத்தும், அகத்தும் உள்ள கருவிகளே உருட்டியோ, குலுக்கியோ பந்தயம் பெறும் கருவிகள். எழுத்தும், சொல்லும், சொற்றொடருமாய் உணர்வைத் தரும் மொழிகளே. அக்கருவிகளின்

வழிப்பெற்ற பந்தயத்தின் படி காய்களை இடம் பெயர்த்து வைத்து, வெற்றி தோல்வியைத் துணிகின்ற வரைகோடுகள் அல்லது கட்டங்கள், இவை -களில் பலகை, களம், உருள் கட்டம் ஆகியவற்றை எல்லாவற்றையும் அறிகின்ற உயிர்கள் அவற்றின் வழித் தம்மை வஞ்சிக்கின்ற சிவன் ஒருவனை அவன் தம்முடன் கூடவேயிருந்தும் அறியவில்லை.

விளக்கவுரை

'இஃதொரு பெருவியப்பு' என்பது குறிப்பெச்சம். 'ஐந்து' என்றது உபலக்கணம் ஆதலின் தொண்ணூற்றாறையும் கொள்க. கண் - இடம்; களம். ஆயம் - தாயம். அது பத்து, பன்னிரண்டு முதலாகக் கொள்ளப்படும். 'ஆயத்தால்' என்னும் உருபு தொகுத்தலாயிற்று. பொருவது - பொருது, வெற்றி தோல்வி அறியும் கூட்டம்; வரைகோடுகள். அக்கரத்தையே கூறினாராயினும் அவற்றால் ஆகும் 'பதம், வாக்கியம்' என்பனவும் கொள்ளப்படும். ஏயஏவிய 'உடன் இருந்து' என்க. 'உலகர் ஆடும் சூதுபோல்வதன்று; வியப்பைத் தரும் சூது' என்றற்கு 'மாயக்கவறு' என்றார் தோன்றாது மறைந்து நிற்றல் பற்றிச் சிவனைக் 'கள்ளர்' எனக் கூறிற்றுத் திருவுந்தியார்.*8* குமர குருபர அடிகளும் 'வஞ்சித்த எங்கும் உளன் ஒருவன்' என்றார். *9* மறைப்பு - மறைத்தல் தொழில். அறிதல், அதன் இயல்பினை முற்ற உணர்தல்.

இதனால், சிவன் தனது மறைத்தற் சத்தியை (திரோதான சத்தியை)க் கொண்டு உயிர்களின் ஆணவ மலத்தை அவையறியாமல் நின்று பக்குவப்படுத்தி வருதல் உள்ளுறையாக உணர்த்தப்பட்டது.

தூறு படர்ந்து கிடந்தது தூநெறி
மாறிக் கிடக்கும் வகையறி வார் இல்லை
மாறிக் கிடக்கும் வகையறி வாளருக்*(*கு*)*
ஊறிக் கிடக்கும் என் உள்ளன்பு தானே. *#2815*

அனைவரும் சிறிதும் துன்பம் இன்றி மிக இன்பத்துடன் நடந்து செல்லத் தக்க நல்ல வழி ஒன்று இருக்கின்றது. ஆயினும் முட்புதர்கள் பல அதனை மூடிக்கிடக்கின்றன. அதைத் தெரிந்து அப்புதர்களை நீக்கி நல்வழியைக் கண்டு நடப்பவர் மிகச் சிலராகவேயிருக்கின்றனர். அந்தச் சிலர்மேல்தான் எனது உள்ளத்தில் உள்ள அன்பு கரந்து பாய்கின்றது.

விளக்கவுரை

'நல்ல வழி' என்றது, நாயனார், 'சிவனொடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை; அவனொடொப்பார் இங்கும் யாவரும் இல்லை' எனவும்,

'சேயினும் நல்லன், அணியன் நல்ல அன்பர்க்குத் - தாயினும் நல்லன் தாள்சடையானே'3 எனவும் முதற்கண் கூறி அவனை அவ்வாறுணர்ந்து நிற்கும் நெறியை.
தூறுகளாவன, அச்சிவனை, 'அவன் தாமச குணத்தன், பித்தன்; சாம்பலைப் பூசிக்கொண்டு, எலும்பு மாலைகளையும், தலைமாலைகளையும் அணிந்துகொண்டு சுடுகாட்டில் ஆடுபவன்' என்பனபோல் இகழ்ந்து கூறும் உரைகள்.
'இவரைப் பொருளுணர மாட்டாதா ரெல்லாம்
இவரை யிகழ்வதே கண்டீர்'1
என்னும் அம்மை திருமொழியையும் நோக்குக. அதனுள், 'பொருள்' என்றது, 'உண்மை' என்றபடி. ஈற்றடி, 'நல்லார்கண் நல்லான் அன்பு செய்வர்' என்பதை உணர்த்தி நின்றது.
இதனால், 'சிவநெறியாகிய நன்னெறியை இகழ்ந்து கூறும் புன்னெறிகள் உள; அவற்றை அறிந்து விலக்கி அந்நன்னெறிக் கண் செல்ல வல்லார் மிகச் சிலரே' என்பது உள்ளுறையாக உணர்த்தப் பட்டது. 'சைவ சித்தாந்தத் - தேனமு தருந்தினர் சிலரே'1 எனக் குரம குருபர அடிகளும் குறித்தருளினார். எனக் குமர குருபர அடிகளும் குறித்தருளினார்.

ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியில்
சாறு படுவன நான்கு பனைஉள
ஏறற் கரியதோர் ஏணியிட்(டு) அப்பனை
ஏறலுற் றேன் கடல் ஏழுகணஅ டேனே. #2816

ஆறு தெருக்கள் - அறிவினால் மிக்க அறு சமயங்கள். அவை அனைத்தும் சந்திக்கின்ற சந்தியிடம் - பக்குவான்மா. அதற்கு வீடு பேறாகிய சாற்றைத் தருவனவாய் முறைப்பட மேட்டு நிலத்தில் உயர்ந்து உயர்ந்து நிற்கும் நான்கு பனை மரங்கள் - சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆறு தெருவில் செல்பவர்களில் யாரும் அந்தப் பனை மரங்களில் ஒன்றிலேனும் ஏற இயலாது. அவற்றை விடுத்துச் சிவ குருவினை அருளால் சிவ நெறியை அடைந்தோரே அவற்றில் ஏற இயலும் ஆகையால், அந்தச் சிவநெறியே அந்தப் பனைமரங்களில் ஏறுதற்கு அரிதல் கிடைக்கும் ஏணி. அந்த ஏணி வழியாக நான் அவற்றில் முறையாக ஏறினேன். ஏறியவுடன் எழுவகைப் பிறவியாகிய கடல்கள் ஏழினது கரையையும் கண்டுகொண்டேன்.

விளக்கவுரை

'நாட்டில் வாழ்பவர்கள் கடற்கரையை அங்கிருந்தே காண வேண்டுமாயின் உயர்ந்த பனைமரத்தின்மேல் ஏறிக் காண வேண்டும். அதுபோலப் பிறவிக் கடலின் கரையை உலகியலில் நின்றே

காணவேண்டுமாயின் மிக மேட்டு நிலத்தில் உள்ள ஞானமாகிய பனை மரத்தின்மேல் ஏறிக் காணவேண்டும். அதை அந்த மேட்டு நிலத்தில் சென்று அடைவதற்கு அதற்குக் கீழே கீழே 'யோகம், கிரியை, சரியை' என்னும் மூன்று பனை மரங்கள் உள்ளன. அவற்றில் முதலில் உள்ள 'சரியை' என்னும் பனை மரம் முதலாக முறையே ஏறிச் சென்று, ஞானமாகிய பனை மரத்தை அடைந்து அதில் ஏறி நான் பிறவியாகிய ஏழு கடல்களை நான் கண்டுவிட்டேன்' என்கின்றார் நாயனார்.

'ஆறு தெருக்கள் சந்திக்கின்ற சந்திப்பை அடைந்த ஒருவன். தான் குறித்த மேலிடத்தை அடைதற்கு எந்தத் தெரு வழியாகச் செல்வது என்று திகைப்பான். அப்பொழுது அருளும், அறிவும் உடையான் ஒருவன், 'இவைகளில் எதன் வழியாகவும் செல்லாமல், இதோ தெரிகின்ற இந்த பனைமரங்கள் வழியாக முறையே ஏறிச் சென்று அடைக' எனக் கூறி உதவி செய்தாற்போல ஆறு சமயங்களைக் கண்டு திகைத்த எனக்கு எங்கள் நந்தி பெருமான் வழிகாட்டினார் என்றபடி.

பனைமரத்தில் ஏறி இளைத்தவர்கட்கு ஓர் ஆறுதலாகக் கிடைப்பது அம்மரத்தின் சாறு. அதனை, 'பத நீ' என்பர். அது போலச் சரியை முதலிய மூன்றின் இடைநிலைப் பயன் சாலோக சாமீப சாரூபங்களாகிய பத முத்திகளும் ஞானத்தில் சரியை முதலிய மூன்றின் இடைநிலைப் பயன்கள் அதிகார முத்தி, போக முத்தி, இலய முத்தி' - என்னும் அபர முத்திகளுமாம் ஆதலின் அவற்றைக் குறித்தற்கு, 'சாறு படுவன நான்கு பனை' என்றார்.

இதனால், 'ஒன்றோடொன்றொவ்வாத சமயங்களின் வழிச்செல்லாது, சித்தாந்த சைவ நெறியைச் சிவ குருவழியாக அறிந்து, அதில் சரியை, கிரியை, யோகங்களில் வழி ஞானத்தை அடைந்து, அது வழியாகச் சிவப்பேற்றினைப் பெறுதல் வேண்டும்' என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுது கொண் டோடினார் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே. *#2817*

என்னுடைய தோட்டத்தை ஒருசிலர் தங்களுடைய தாக ஆக்கிக்கொண்டு அவர்கள் விருப்பம்போல அதனைப் பயன் படுத்தி வந்தனர். இருப்பினும் அவர்களுக்கிடையே நான் ஒட்டி ஒன்றிச் சிறிது இடத்தைத் தோண்டிக் குழிசெய்து, எனக்குப் பழக்க -மான உணவாகிய கத்தரிக்காயைப் பெறவேண்டி அதன் விதையை ஊன்றினேன், ஆயினும் அந்த விதையினின்று பாகற் கொடி முளைத்துப் படர்ந்தது. படர்ந்த அக்கொடியோ பூசணிப் பூவைப்

பூத்தது. அந்தப் பூவோ வாழைக் காயைக் காய்த்தது. அந்தக் காய் பழுத்ததைப் பார்த்துவிட்டு, முன்பு வலிசெய்து குடியிருந்த அந்த அற்பர்கள், 'ஐயா, உங்கள் தோட்டம் மிகப்பெரிய புதுமைகள் விளைகின்ற தோட்டமாய் உள்ளது; உங்களுக்கு ஒரு கும்பிடு' என்று சொல்லிக் கும்பிட்டு விட்டு ஓடிவிட்டார்கள்.

விளக்கவுரை

'காய்களில் கத்தரிக்காயையே உண்டு களித்து வந்த நான் கனிகளில் சிறந்த வாழைக்கனி தானாகக் கிடைத்ததை உண்டு, அந்தக் கத்தரிக்காயை வெறுத்துவிட்டுப் பேரானந்தம் அடைந்தேன்' என்பது குறிப்பெச்சம்.

தோடம் - ஆன்ம அறிவு. அதில் குடியிருந்த அற்பர்கள் காமம், வெகுளி, மயக்கம் முதலிய மும்மலங்களின் காரியங்கள். தோண்டிய குழி குருவை அடைந்து வழிபட்டது. அதில் கத்தரி விதைத்தது, 'குருவும் இவ்வுலகில் நல்வாழ்வை அடைய வழிசொல்வார்' என்று நினைத்து அவர உபதேசத்தைக் கேட்டது. கத்தரி விதையினின்றும் பாகற்கொடி முளைத்தது. குருவினுடைய உபதேசம் காதில் விழுந்தவுடன் உலகத்தின்மேல் வெறுப்புத் தோன்றியது. இது, 'கடல் வாணிபம் செய்து பெரும் பொருள் ஈட்டுவான்' என்று கருதித் திருவெண்காடர் வளர்த்த மகன் அவருக்குக் காதற்ற ஊசியை வைத்து விட்டு மறைந்தது போல்வது. சிலருக்கு இவ்வாறு ஞானம் எதிர்பாராத வகையில் கிடைப்பதுண்டு. திருவாதவூரடிகள் ஞானம் பெற்ற வரலாற்றையும் இங்குக் குறிக்கலாம். இறைவன் சுந்தரரைத் திருமுது குன்றத்திற்கு அழைத்துச் செல்வதாகச் சொல்லிக் கூடலையாற்றூரில் கொண்டு விட்டதைக் கூறலாம். பாகற்கொடி பூசணிப் பூவைப் பூத்தது, உலகத்தை வெறுத்த வெறுப்புணர்ச்சியிலிருந்து வீடுபேற்றில் விருப்பம் பிறந்தது. அவ்விருப்பம் ஆன்மாத் தான் கொள்ளத்தக்க விருப்பமாய் அதற்கு அழகு செய்தல் பற்றி, அதனை 'பூசு அணி' எனச் சிலேடைப் பொருள்படக் கூறினார். பூசு பூசப்படும் பொருள். அணி - அணியப்படும் பொருள். 'வாழை' என்பதும் அவ்வாறு 'வாழ் ஐ' எனப் பிரிந்து சிலேடைப் பொருள் உணர்த்திற்று. வாழ் - வாழ்வு. ஐ - வியப்பு; அதிசயம் அதிசயமான வாழ்வு, பேரின்ப வாழ்வு. இதனை, 'நீடு வாழ்தல்'3 என்பார் திருவள்ளுவர். 'ஞானம் வந்தபின் மும்மல காரியங்கள் ஓடிவிட்டன' என்றார். 'வழுதலை, வழுதுணை' என்பன ஒரு பொருட் சொற்கள். 'புழுதியைத் தோண்டினேன்' என்பதை முதலிலும் ஈற்றடியை இரண்டாம் அடியின் பின்னும் கூட்டுக. இதனால், 'ஆசாரியராய் உள்ளவரை அடைந்து வழிபட்டால் நம்மையறியாமலும் நமக்கு ஞானம் பிறக்கும்' என்பது

உள்ளுறையாகக் கூறப்பட்டது.

ஐயென்னும் வித்தினில் ஆனை விளைப்பதோர்
செய்யுண்டு செய்யின் தெளிவறி வார்இல்லை
மையணி கண்டன் மனம்பெறின் அந்நிலம்
பொய்யொன் றுமின்றிப் புகல்எளி தாமே. *#2818*

'ஐ' என்று வியக்கத்தக்க மிகச் சிறிய பொருளையே (கடுகு, மிளகு, கொத்துமல்லி போன்ற பொருள்களையே) விளைக்கக் கூடிய விதைகளை இட்டால், அவற்றிலிருந்தே ஆனைபோன்ற மிகப்பெரிய (மாங்காய், தேங்காய், பலாக்காய் போன்ற) பொருள் -களையே விளைவிக்கின்ற அதிசய நிலம் ஒன்று உண்டு. அஃது அத்தன்மைத்தாதலை அறிந்து அதில் விதை விதைக்கின்றவர்கள் உலகத்தில் பலர் இல்லை. அந்த நிலம் சிவன் மனம் வைத்தால், தவறாமல் எளிதில் அடையப்பெறுவதாகும்.

விளக்கவுரை

'ஐ' என்பது வியப்புப் பொருட்டாய், வியப்பிற்குக் காரணமான, *'புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம்'* என்னும் நான்கனுள் சிறுமை பற்றி வந்தது. ஆனை, உவமையாகுபெயராய் அதுபோலும் பொருளை உணர்த்திற்று. *'தெளிவு'* என்பது தெளியப்படும் தன்மை குறித்து நின்றது. *'மனம்'* என்றது. மனத்தின் உவகையை, *'நிலம், சிவனது திருமேனி வகைகள்'* எனவும், விதைகள் அவற்றிற் செய்யும் சரியை, கிரியை, யோகம் என்னும் வழிபாட்டு வகைகள் எனவும் கொள்க. சிலந்தி ஒன்று வெண்ணாவற் கீழ் உள்ள இலிங்கத்திற்கு வாய் நூலால் பந்தலிட்டுச் சோழ மன்னன் ஆயினமையும், எலியொன்று, திருக்கோயில் உள்ள விளக்கைத் தூண்டி, மூவுலகங்களையும், அடிப்படுத்து ஆண்டமகாபலிச் சக்கரவர்த்தியாயும் ஆயினமை போன்றவற்றை வைத்து இவ்வாறு கூறினார். முதல் இரண்டு அடிகளில், பெரியோர்க்குச் செய்த உபகாரம் பொருளால் சிறிதாயினும் பயனால் பெரிதாதல் அறநூல்கட்கெல்லாம் உடன்பாடாதலின் தேவர்க்கெல்லாம் தேவனாம் பெரியோனுக்குச் செய்யும் வழிபாடு பொருளால் மிகச் சிறிதாயினும், பயனால் மிகப் பெரிதாம்*'* எனச் சிவபுண்ணியத்தின் சிறப்பை உள்ளுறை வகையால் உணர்த்தி அதனைச் செய்யாதார் நிலைக்கு இரங்கியவாறு. *'அச்செயின்'* எனச் சுட்டு வருவிக்க. *'தவமும் தவம் உடையார்க்கு ஆகும்'8* என்றபடி. *'சிவபுண்ணியத்தில் மனம் செல்லுதற்கும் சிவ புண்ணியம் வேண்டும்'* என்பது குறிக்கப்பட்டது.

பள்ளச்செய் ஒன்றுண்டு பாழ்ச்செய் இரண்டுள
கள்ளச்செய் அங்கே கலந்து கிடந்தது

உள்ளச்செய் அங்கே உழவுசெய் வார்கட்கு
வெள்ளச்செய் யாகி விளைந்தது தானே. #2819

மக்களில் ஒவ்வொருவருக்கும் உள்ளது ஒரு நிலந்தான். அந்த நிலத்தில் மூன்றில் ஒரு பகுதி மட்டுமே நீர் எளிதில் பாய்ந்து விளைவைத்தரக் கூடியதாய் உள்ளது மற்றை இரண்டு பகுதிகள் நீர் செல்லாது, முரம்பாய்க் கிடக்கின்றன. மூன்றிலும் உழமுடியாதபடி கருங்கற்கள் உள்ளன. இவற்றைச் சமப்படுத்தி உழ வல்லவர்கட்கு அந்த ஒரு நிலமே வேண்டுமளவு நீர் தேங்கி நிற்கின்ற நிலமாய், நல்ல விளைவைத் தருகின்றது.

விளக்கவுரை

ஒரு நிலம் - ஆன்ம அறிவு. மூன்று பகுதிகள் 'கேவலம், சகலம், சுத்தம்' என்னும் மூன்று அவத்தைகள் (இம்மூன்றையும் சகலத்தின் பகுதியாகவே கொள்க.) பள்ள நிலம், அஃதாவது, நன்செய் - சுத்தாவத்தை. 'நின்மலாவத்தை' எனப்படுவதும் இதுவே. இதில் திருவருளின் வழிச்சிவம் பிரகாசித்து நிற்றலால், நீர் நன்கு பாயும், 'பள்ளச் செய்' எனப்பட்டது. ஏனைக் கேவல சகலங்கள் திருவருள் விளக்கம் இன்றி இருத்தலால், 'பாழ்ச் செய்' எனப்பட்டன. 'கல்ல செய்' என்பது, எதுகை நோக்கித் திரிந்தும், ஒற்றுமிக்கும் நின்றது. கல்ல செய் - கற்களை உடைய நிலம். இங்ஙனம் கொள்ளாது, 'கள்ளம்' என்றே கொள்ளின், கள்ளத்திற்கும், செய்க்கும் இயைபு யாதும் இன்மை அறிக. 'கல்லச் செய்' என்றே பாடம் ஓதி 'ஒற்று மிக்கது விகாரம்' என உரைப்பினும் ஆம். 'உள்ளச் செய்' என்பதிலும் சகர ஒற்று, விரித்தல் 'இள்ள செய்யாகிய அங்கே' என்க. 'உள்ள செய்' என்றதனால் வேறு செய் இன்மை பெறப்பட்டது. 'உழவு செய்வார்' என்றது, சொல்லுவாரது குறிப்பால், 'செய்ய வல்லார்க்கு' எனப் பொருள் தந்தது. பாழ்ச் செய்யிலும், கற் செய்யிலும் உழ வல்லவர் அரியராதலை அறிக. நிலம் ஒன்றையே தொல்காப்பிடனார் பகுதி பற்றி 'காடுறையுலகம், மைவரையுலகம்' என்பன முதலாய்ப் பலபோலக் கூறினாற்போல, இவரும் ஒரு செய்யினையே பகுதி பற்றி, 'பள்ளச் செய், பாழ்ச் செய்' எனப் பல செய்கள்போலக் கூறினார். இம்மூன்றிலும் நிறைந்துள்ள கற்களாவன ஆணவ மலத்தின் சத்திகள். ஆகவே, இங்கு, சுத்தம் ஆவதும் சகலத்திற் சுத்தமே. மூன்றையும் சமப்படுத்தி உழுதலாவது, குருவுபதேசத்தை நனவிலே மட்டுமன்றிக் கனவிலும் மறவாது உணர்தலாம்.

'துஞ்சலும், துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாடொறும்'3
'துஞ்சும் போதும் சுடர்விடு சோதியை'9

என்றாற்போல ஆசிரியன்மார் அருளிச் செய்தலை அறிக. வெள்ளம் - நீர்த் தேக்கம். 'வெள்ளச் செய்யாகி' என்றது, முதற்கண் கூறிய, 'பள்ளச் செய்' போலவே ஆகி - என்றதாம்.
இதனால், 'குரு உபதேசத்தை எந்நிலையிலும் மறவாது உணர்வார் உலகில் உலாவினும் முத்தராய் விளங்குவர்' என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

மூவணை ஏரும் உழுவது முக்காணி
தாம்அணை கோலின் தறியுறப் பாய்ந்திடும்
நாவணை கோலி நடுவிற் செறுஉழார்
காலணை கோலிக் களர்உழு வார்களே. *#2820*

மூன்றாகப் பொருந்தியுள்ள ஏர்கள் மக்கள் ஒவ்வொருவருக்கும் உள்ளன. (அவை, 'இடை, பிங்கலை, சுழுமுனை' என்னும் மூன்றும் நாடிகள் வழியாகச் செல்லும் பிராண வாயுக்கள், வழி பற்றி இவை மூன்றாயின.) அந்த ஏர்கள் அனைத்தும் உழுதுகொண்டிருப்பது முக்காணி (முக்கால் மா) அளவான சிறிய நிலத்தையே, (ஒரு மாவில் நான்கில் ஒரு பங்கு 'காணி' என்னும் பெயரை உடையது. ஆறு ஆதாரங்களில் முதலாவதாகிய மூலாதாரம் முக்கோண வடிவினது ஆதலின், அதனை 'முக்காணி' என்றார். சுவாசம் இயல்பாக மூலாதாரத்தினின்று எழுந்து இயங்கிக் கொண்டிருக்கின்றது) அந்த ஏர்களைத் தடை செய்து செலுத்தினால் அவை குறித்த வழியில் இயங்கிப் பயன் தர வல்லன அவ்வாறு அவற்றைக் குறித்த வழியில் செலுத்திச் சில சொற்களால் அதட்டி அடக்கி, நடுவில் உள்ள நல்ல நிலத்தை உழுதால் நல்ல பலன் கிடைக்கும். மக்கள் அவ்வாறு அந்த நல்ல நிலத்தை உழாமல், வடிகாலை மட்டும் பெரிதாக்கிக் களர் நிலத்தை உழுது கொண்டிருக்கின்றார்கள்.

விளக்கவுரை

'இஃது இரங்கத் தக்கது' என்பது குறிப்பெச்சம். 'மூ அணை ஏரும்' என்பதில், 'மூன்றாய் அணைந்த ஏர்களும்' என ஆக்கம் வருவிக்க. முற்றும்மை கொடுத்தமையால் 'உள்ள ஏர்கள் மூன்றே' என்பது பெறப்பட்டது. 'தாம்' என்றது உழுபவரை. அவர் அணைகோலலாவது, உழும் பகடுகளைத் தம் வழிப்படுத்தி ஓட்டுதல். குறித்த வழியை, குறிக்கோளாதல் பற்றி, 'தறி' என்றார். 'பாய்ந்திடும்' என்பது, பாய்ந்து பயன் விளைக்கும்' எனத் தன் காரியம் தோற்றி நின்றது. யோகம் செய்வார் மூலாதாரத்தினின்றும் எழுத்து இயங்கும் வாயுவைத் தடுத்துச் சுழுமுனையில் செலுத்தி, அது பிரமரந்திரத்தில் சென்றபொழுது நா அடியால் மேல் துளையை அடைந்து நிறுத்துவர். அதனையே, 'நா அணை கோலி' என்றார். எனினும் சூனிய

சம்பாடணையாகக் கூறலால், 'நா' என்பது ஆகுபெயராய் அதனுள் எழும் சொல்லைக் குறித்து, ஏர் உழுபவர் அதட்டும் மொழிகளைக் குறித்தது. 'நடுவில் செறு' என்பதற்கு 'நடுவில் உள்ள நல்ல நிலம்' என்பது வெளிப்பொருள். 'புருவ நடுவில் வில்லைபபோன்ற வடிவத்தை உடைய ஆஞ்ஞை என்னும் ஆதாரம்' என்பது உள்ளுறைப் பொருள். 'பிராண வாயுவை நடுநாடியில் பிரமரந்திரம் வகையில் செலுத்துதலால், மூலாதாரத்தில் அடங்கிக் கிடக்கின்ற குண்டலி சத்தி எழுந்து ஆஞ்ஞையை அடையும். அஃது அவ்வாறு அடைந்தால், உண்டாகும் விளக்க உணர்வுகளும், காயசித்தி முதலிய சித்திகளும் பலவாம். ஆகவே, மக்கள் அதனைச் செய்ய மாட்டாது. பிராண வாயுவை அது போன வழியிலே போக விட்டு, விரைவில் மக்கட் பிறப்பை இழக்கின்றனர்' என்பதாம். கால் - வடிகால்;
வெளிப்பொருள். பிராண வாயுவின் இயற்கை இயக்கம்; உள்ளுறைப் பொருள். நிலத்திற்கு வடிகால் இன்றி, வடிகால் மட்டும் இருப்பின் காய்ந்து, கமர் வெடித்துக் கெடும். கனர் - எதுவும் விளையாத நிலம். அவை இடை பிங்கலை நாடிகள். இரண்டு, நான்காம் அடிகள் உயிரெதுகை பெற்றன.
இதனால், 'யோகம் பயின்று பயனடைதற்குரிய மக்கள் அதனைச் செய்யாது, காலத்தை வீணடித்துக் கெடுகின்றனர்' என்பது கூறப்பட்டது.

ஏத்தம் இரண்டுள ஏழு துரவுள
மூத்தோன் இறைக்க இளையோன் படுத்தநீர்
பத்தியிற் பாயாது பாழ்ப்பாய்ந்து போயிடின்
கூத்தி வளர்த்ததோர் கோழிப்பு ள்ளாமே. *#2821*

('ஏத்தம்' என்பதுதான் நீர் இறைக்கும் ஏத்தத்தின் பெயர். அஃது அறியாதார் 'ஏற்றம்' என்பர்.) ஏத்தம் இரண்டு - இடை நாடி, பிங்கல நாடி. ஏழு தூவு - ஆறு ஆதாரங்களும், சகஸ்ராரமும், (துரவு - கிணறு) மூத்தோன் - 'அகங்காரம்' என்னும் அந்தக் கரணம். இதுவே பிராணவாயுவை இயக்குவது. இளையான் - 'மனம்' என்னும் அந்தக் கரணம். (பிராண வாயு இயங்குதலாலே உயிர் அறிவு பெற்று விளங்குகின்றது. அந்த அறிவை நீராகவும், அந்த அறிவு நிற்கும் இடங்களைத் துரவாகவும் பிராண வாயுவின் இயக்கத்தால் உயிரின் அறிவு பிரவர்த்திக்கச் செய்யும் செயலை நீரைப் பயன்படுத்த இறைப்ப தாகவும், அறிவு மனத்தின் வழியே சென்று பயன் விளைத்தலின் மனத்தை நீரை வேண்டும் இடத்திற்குக் கொண்டுபோய்ப் பாய்ச்சுபவ னாகவும் கூறினார். உயிர்க்கு அறிவை உண்டாக்கும் கருவியை நீர் இறைக்கும் மூத்த சகோதரனாகவும், அறிவைக் கொண்டு போய்ப்

பயன் படுத்தும் கருவையை, நீரை வேண்டுமிடத்தில் பாய்ச்சும் இளைய சகோதரனாகவும் கூறினார்.) பிராண வாயு நடு நாடியாகிய சுழுமுனையில் சென்றால், ஞானமாகிய பயன் விளையும். அதனால் அதனை, 'பாத்தி' என்றார். பிராண வாயுவை மனம் சுழுமுனையிற் செலுத்தாது வெளியில் செலுத்தி, அஞ்ஞானமே விளையப் பண்ணுதலால் மூத்தோன் ஓர் ஏத்தத்தின் வழியாக (இடைகலை வழியாக) நீரைத் துரவுக்குத் தந்து மற்றோர் ஏத்தத்தின் வழியாக (பிங்கலை வழியாக) வெளியேற்ற, 'அந்நீர் பாத்தியிற் பாயாது, பாழ் நிலத்தில் பாய்கின்றது' என்றார்.

விளக்கவுரை

'பழியுடை ஆக்கை தன்னில், பாழுக்கே நீர் இறைத்து'*
என அப்பர் பெருமானும்,
'ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ கால மெலாம்
பாழுக் கிறைத்தேன்'8
என மாணிக்க வாசகரும் அருளிச் செய்தனர்.
கூத்தாடும் ஆடவன் 'கூத்தன்' எனப்படுதல்போல கூத்தாடும் மகள் 'கூத்தி' எனப்படுகின்றாள். இங்குக் குறிக்கப்பெறுகின்ற இக்கூத்து, அவிநயக் கூத்து. இதனைப் பழங்காலத்தில் விறலியர் (பாணத்திகள்) ஆடியபோதிலும், பிற்காலத்தில் இது விலைமாதர்க்கே உரியதாய் விட்டது. கோழியைப் பெரிதாக வளர்த்தற்கு மிகத் தொல்லை உண்டு. கூத்தி அத்தொல்லைகளுக்கு உள்ளாகிக் கோழியை வளர்ப்பது, பெரும் -பாலும் தனக்காக அன்றித் தனக்கு விலை கொடுத்துத் தன்னிடம் வருகின்ற விடர்கள் மகிழ்ச்சியடைய அவர்கட்கு ஆக்குதற் பொருட்டேயாம். ஆகவே, கூத்தி வளர்க்கும் கோழிகள் அவளையும், அவள் வாயிலாகப் பலரையும் தீநெறியிற் செல்ல ஊக்குவிப்பனவே யாகும். அது பற்றி உலகியலிலே ஊக்கம் பிறப்பிக்கின்ற பிராண வாயுவை, 'கூத்தி வளர்த்த கோழிப்புள்' என்றார்.
இதனால், 'மக்களத் தமது மூச்சினை வாயியோகமாக்கினால் பயன் மிகவிளையும்; அதைச் செய்யாது வீணடிக்கின்றனர் என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

பட்டிப் பசுக்கள் இருபத்து நால்உள
குட்டிப் பசுக்கள்ஓர் ஏழ்உள ஐந்துள
குட்டிப் பசுக்கள் குடப்பால் சொரியினும்
பட்டிப் பசுவே பனவதற்கு வாய்த்தவே. #2822

பட்டி - தொழுவம். 'பட்டியில்' என ஏழாம் வேற்றுமை உருபு விரிக்க. பட்டி, தூல, சூக்கும பர தேகங்களும், திரோதான சத்தியும். கன்றை, 'குட்டி' என்றது மரபு வழுவமைதி. குட்டிப் பசுக்கள் - கன்றையுடைய

பசுக்கள். பின்னால், 'குட்டிப் பசுக்கள்' எனக் கூறி, முன்னே வாளா, 'பசுக்கள்' என்றமையால், அவை தன்றை ஈனாத மலட்டுப் பசுக்களாயின. கன்றையீனாத பசுக்குள் துளிப் பாலும் தாராமையும் கன்றை யீன்ற' பசுக்கள் குடம் குடமாகப் பாலைத் தருதலும் வெளிப்படை. அவ்வாறிருந்தும் அனைத்தையும் பட்டிக்குள் வைத்துள்ள பார்ப்பானுக்கு மலட்டுப் பசுக்கள்தாம் தெரிந்தன; கன்றையுடைய பசுக்கள் தெரியவில்லை. இதற்கு அவன் கண்ணில் உள்ள கோளாறு காரணம்.

விளக்கவுரை

இருபத்து நான்கு, ஆன்ம தத்துவம். ஏழு, வித்தியா தத்துவம், ஐந்து, சிவதத்துவம். ஆக முப்பத்தாறு தத்துவங்கள் உள்ளன.
ஆன்ம தத்துவங்கள் போக்கிய கண்டமாய் ஆன்மாவால் நுகரப்படுவனவேயன்றிப் போசயித்திருகாண்டமாய், ஆன்மாவை நுகர்வோன் (போக்தா) ஆகவும், செய்வோன் (கர்த்தா) ஆகவும் ஆக்க மாட்டா. அதனால் போக்கிய காண்டமாகிய ஆன்ம தத்துவங்களை 'மலட்டுப் பசுக்கள்' என்றும், போசயித்திரு காண்ட மாகிய வித்தியா தத்துவங்களை, 'கறவைப் பசுக்கள்' என்றும் கூறினார். வித்தியா தத்துவங்கள் பிரேரக காண்டமாகிய சிவ தத்துவங் களாலே செயற்படுதல் பற்றி அவற்றையும் கறவைப் பசுக்கள் என்றார். பனவன் - பார்ப்பான், 'வாய்த்ததே' என்று இரங்கிக் கூறினமையால், பார்ப்பான், கண் பார்வை குறைந்த பார்ப்பான் ஆகின்றான். பார்ப்பான், சமய வாதிகள். இது சாதியொருமை. 'புறப்புறம், புறம்' என்னும் சமயத்தைச் சார்ந்தவர்கள் ஆன்ம தத்துவங்களை மட்டுமே மறைமுகமாகவோ, நேராகவோ அறிந்து வித்தியா தத்துவம் சிவ தத்துவங்களை அறியாமையால், 'கண் பார்வை குறைந்த பார்ப்பான்' என்றது அவர்களையே. கண் பார்வையாவது, சமய ஞானம். இதனால், 'தத்துவ உணர்வு வேண்டுவோர் சித்தாந்த சைவத் தத்துவங்களை உணராவிடில் பயனில்லை' என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

ஈற்றுப் பசுக்கள் இருபத்து நால்உள
ஊற்றுப் பசுக்கள் ஒருகுடம் பால்போதும்
காற்றுப் பசுக்கள் கறந்துண்ணும் காலத்தில்
மாற்றுப் பசுக்கள் வரவறி யோமே. *#2823*

ஈற்றுப் பசுக்கள் - ஈன்றணிய. அஃதாவது, கன்றை யீன்று ஒன்றிரண்டு நாட்களேயான பசுக்கள். இவைகளின் பாலும் பூசைக்கோ, வேள்விக்கோ பயன்படாது. மக்களுக்கு உணவாக்கூட ஆகாது. பயன்படாமை பற்றி மேல், 'மலட்டுப் பசுக்கள்' எனக்

கூறியவற்றையே, 'ஈற்றுப் பசுக்கள்' எனக் கூறினும் இழுக்கில்லை என்னும் கருத்தால் இங்கு இவ்வாறு கூறினார். எனவே, முன் மந்திரத்திற் கூறிய அந்த இருபத்து நான்கே இங்குக் கூறிய இருபத்து நான்கும் ஆகின்றன. முன் மந்திரத்தில், 'குட்டிப் பசுக்கள்' எனக் கூறியவைகளை இங்கு 'ஊற்றுப் பசுக்கள்' என்றார். 'பாலைச் சுரந்து பொழியும் பசுக்கள்' என்றபடி. 'தனித் தனி ஒவ்வொரு குடம்' என்க. 'குடமாக' ஆக்கம் விரிக்க. 'புகுதும்' என்பது. 'போதும்' என்றபடி 'காற்று' என்பது பகாப் பதமாய்ப் பிராணனையும், 'கால்+று' எனப் பகுபதமாய், கறக்கும்படி துன்புறுத்தப்படும் பசுக்களையும் சிலேடை வகையால் குறித்து நின்றது. காலுதல் - கக்குதல். அஃது இங்குப் பாலைப் பொழிதலைக் குறித்தது. காணுதல், தன்வினை. காற்றுதல், பிறவினை. காற்றுதல், இங்குப் பாலைக் கொடுக்கப்பண்ணுதல். சில பொல்லாத பசுக்கள் கன்றை யீன்றாலும், கன்றுக்கும் பால்கொடாது உதைத்துத் தள்ளும். யாரையும் கறக்கவிடா அப்படிப்பட்ட பசுக்களை அடித்துத் துன்புறுத்தியும், மடியில் மருந்து பூசியும் வலியுறுத்திப்பால் கொடுக்கப் பண்ணுவர்.

விளக்கவுரை

'சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்'9
என்றார் திருவள்ளுவர்.

இவ்வாறு வருத்திக் கறக்கக் கறக்கும் பசுக்கள்போல இடை கலை பிங்கலைக் காற்றுக்கள் யோக முறையால் அடக்கி இயக்கப் பயன்தருதல் பற்றி அவைகளை, காற்றுப் பசுக்கள்' எனச் சிலேடையாகக் கூறினார். மாற்றுப் பசுக்கள், காற்றுப் பசுக்களுக்கு வேறான பசுக்கள். என்றது, முதலிற் கூறிய ஈற்றுப் பசுக்களையே. வாசியோகம் பயிலுமிடத்து ஞானேந்திரிய கன்மேந்திரியங்களின் செயல் வந்து தடைசெய்ய மாட்டாமையால்,

'காற்றுப் பசுக்கள் கறந்துண்ணும் காலத்து
மாற்றுப் பசுக்கள் வரவறி யோமே'
என்றார். 'காற்றுப் பசுக்களை' என இரண்டன் உருபு விரிக்க. வரவு அறியோம் - வருதலைக் காணோம்.

இதனால், 'பிற சமயிகளும் ஹடயோகம் செய்யாது, தியான யோகம் செய்யின், அவரவர் சமய முத்தியை அடைவர்' என்பதும் 'சித்தாந்தம் தத்துவ ஞானம் உண்டாயின், சிவஞானம் கைவந்து, சித்தாந்த முத்தி எளிதில் கிடைத்துப் பெரும்பயன் தரும்' என்பதும் உள்ளுறையாகக் கூறப்பட்டன.

தட்டான் அகத்தில் தலையான மச்சின்மேல்

மொட்டாய் எழுந்தது செம்பாய் மலர்ந்தது
வட்டம் படவேண்டி வாய்மை மறைத்திட்டுத்
தட்டான் அதனைத் தகைந்துகொண் டானே. #2824

தட்டான் ஒருவனது இல்லத்தின் மச்சுமேல், அவன் நண்பன் ஒருவன் தட்டானிடம் இருந்த நம்பகத்தால், 'மொட்டு' என்னும் அளவில் பொன்னை வைத்திருந்தான். அது பின்பு அதிசய மாகச் 'செம்பு' அளவாக விரிவடைந்தது. அதன் பயன் அனைத்தையும் தட்டான் தனதாக்கிக் கொள்ள எண்ணி உண்மையை மறைத்து, முழுவதையும் கவர்ந்து கொண்டான். (நண்பன் ஏமாற்றப்பட்டான்.)

விளக்கவுரை

தட்டான் - தூல சூக்கும அதிசூக்கும சரீரங்களைத் துருவித் தேடினாலும் அகப்படாதவன்; ஆன்மா. அகம் - உடம்பு. மச்சு - உச்சந்தலை. 'குழை, தோடு' என்னும் இயற்கைப் பொருள்களைப் பொன்னால் செயற்கையாகச் செய்து ஆடவரும், மகளிரும் காதில் அணிதல் போல, 'மொட்டு' (அரும்பு) என்னும் இயற்கைப் பொருளையும் பொன்னாற் செய்து, ஆடவர் கால் விரலில் அணிவர். 'மொட்டு' என்பது தவறு எனக் கருதிச் சிலர் அதனை, 'மெட்டு' என்பர். 'எழுந்தது' என்றது, 'காணப்பட்டது' என்றபடி காணப்பட்டமைக்குக், காரணம் குறிப்பாற் கொள்ளக்கிடந்தது. இப் பொன்னாவது, ஏழாம் தானத்தில் உள்ள சகஸ்ராரமே, அது குழவிப் பருவத்தில் மொட்டாயே இருக்கும். ஆகவே, 'மொட்டு' என்றது சிலேடையாயிற்று. குழந்தை களின் வளர்ச்சி நம் கண்ணிற்குப் புலப்படுவதில்லையாகையால், 'அதிசயமாக மலர்ந்தது' என்றார். செம்பு, நீர் முகக்கும் சிறு கலும். 'சிறிய மொட்டாய் எழுந்தது, செம்பு அளவு பெரிதாய் விரிந்தது' என்றபடி. வட்டம் - வாசி, என்றது இலாபத்தை. இலாபம் - ஆன்ம லாபம். உச்சந் தலையில் சகஸ்ராரமாகிய பொன்னை மொட்டாக வைத்தவன் பிரம தேவன். அவன் தட்டா னிடத்தில் கொண்ட நம்பிக்கையாவது, 'வினையை நுகர்தலாகிய தன் குறிக்கோளை நிறைவேற்றுவான்' என நம்பியது. ஆயினும் ஆன்மாத் தனது பக்குவ முதிர்ச்சியால் அதனை யோகக் காட்சிக்குப் பயன் படுத்திக் கொண்டதே, தட்டான் உண்மையை மறைத்துப் பொன்னைக் கவர்ந்து கொண்டதாகும்.

இதனால், முன் மந்திரத்தில் கூறிய, காற்றுப் பசுக்களைக் கறந்துண்ணுதலாகிய பயன் இது' என்பது கூறப்பட்டது.

அரிக்கின்ற நாற்றங்கால் அல்லற் கழனித்
திரிக்கின்ற ஓட்டம் சிக்கெனக் கட்டி
வரிக்கின்ற நல் ஆன் கறவையைப் பூட்டினேன்

விரிக்கின்ற வெள்ளரி வித்தும்வித் தாமே. #2825

நெற்கதிரை அரி அரியாகக் கொள்ளும்படி மிக விளையக்கூடிய நல்ல வயலைப் புல்லும், பூடுகளும் ஆகிய களையைத் தந்து துன்பம் விளைக்கின்ற கழனியாக மாற்றுகின்ற ஒழுக்கலை உறுதியாக அடைத்து, உழும்பொழுதே பாலைப் பொழிந்து கொண்டு போகின்ற வலிய பசுக்களைப் பூட்டி உழுதலா, படர்ந்து செல்கின்ற வெள்ளரி விதையும் செந்நெல் விதையாய்ச் சிறந்த பயனைத் தரும்.

விளக்கவுரை

அரித்தல் - அரி அரியாகச் சேர்த்தல். நாற்று உள்ள இடமே 'நாற்றங்கால்' எனப்படுமாயினும், 'அரிக்கின்ற' என்னும் அடைமொழியால் அது நாற்றுக்களை நட்ட வயலைக் குறித்தது. நெல் வயலில் நீர் நீர் எப்பொழுதும் நிரம்பி நின்றால்தான் நெற்பயிர் வளர்ந்து பயன் தரும். அத்தகைய நீர் தேங்கி நில்லாமல், உழுபவனும் காணாதபடி வரம்புகளுக்குள்ளே சிறு துளைகளால் வெளியேறி விடுவதுண்டு. அத்துளைகளை 'மோழை' என்பர். நீர் தங்காது போய் விட்டால், பயிர் வளராது; களைகள் வளர்ந்து விடும். நீரை இங்கு 'ஓட்டம்' என்றார். 'நாற்றங்கால்' என்றும், 'கழனி' என்றும் கூறப்பட்டது உடம்பு. 'கழனியாக' என ஆக்கம் விரிக்க. நீர், உடல் வலிமை. உடல் வலிமையுடன் நலம் பெற்றிருந்தால்தான், கற்பன கற்றுக் கேட்டுச் சிந்தித்து அறிவு பெறுதல் இயலும். இல்லையேல் பிணி பல நலிய, மூப்பும் விரைவில் வரும். இயல்பான மூச்சுக்காற்று வெளிச் செல்லும்பொழுது பன்னிரண்டங் குலம் வெளியேறப் பின்பு எட்டங்குலமே உட்புகுகின்றது. இவ்வாற்றால் உடல் வலிமை கணந்தோறும் இழக்கப்படுகின்றது. அதனைத் தடுத்து நிறுத்தினால் உடல் வலிமை பெற்றுத் திகழும். அதனையே, 'சிக்கெனக் கட்டி' என்றார். வரித்தல் - விரும்பிக் கொள்ளுதல். நன்மை, இங்கு உடல் நலத்தைக் குறித்தது. 'மேல் காற்றுப் பசுக்கள்' என்றற்கு ஏற்ப. இங்கு 'ஆன் கறவை' என்றார். விரித்தல் - படரும் கொடிகளைத் தருதல். வெள்ளரி வித்து, சுக்கிலம். உம்மை இழிவு சிறப்பு. அதனால், பின் வந்த விந்து நெல்வித்தாயிற்று. யோகிகட்கு விந்து சயம் வந்து பயன் தருதல் முன் மந்திரத்தில் சொல்லப்பட்டது.

இதனால், 'மக்கள் வீணே மாய்ந்தொழியாது. யோகம் பயின்று பயன் பெறவேண்டும்' என்பது கூறப்பட்டது.

இடாக்கொண்டு தூவி எருகிட்டு வித்திக்
கிடாய்க்கொண்டு பூட்டிக் கிளறி முளையை
மிடாக் கொண்டு சோறட்டு மெள்ள விழுங்கார்
அடர்க்கொண்டு செந்நெல் அறுக்கின்ற வாறே. #2826

இங்கு, 'சோறு' எனப்பட்டது வீடுபேறாதல் தெளிவாகலின், அதுபற்றி ஏனையவும் அதற்கு ஏற்பனவாக உய்த்துணர்ந்து கொள்ளப்படும்.

விளக்கவுரை

இடா - கூடை. இஃது எருவைக் கொண்டுபோய் நிலத்தில் இடுதற்குப் பயன்படும்; விதையை நிரப்பி எடுத்து விதைக்கவும் பயன்படும். எரு ஓரிடத்திலே சேர்ந்துவிடாமல் தூவுதல் வேண்டும். எனவே, 'எருவை இடாக் கொண்டு தூவி இட்டு' என மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். எரு, ஞானத்தில் வேட்கை. இது, விதை, முளை, பயிர் எல்லா வற்றையும் செழிக்கச் செய்யும். விதை - ஞானம். முளை - அன்பு; பக்தி. 'வித்தினைத் தேடி முளையைக் கை விட்டவர்'3 என்றார் திருவுந்தியாரில். கிடாய் - ஆட்டுக் கிடாய். இஃது இளம் பயிரைக் கறித்துப் பாழாக்கிவிடும். 'கடா' என்பது எருமைக் கடாவையும், 'கிடாய்' என்பது ஆட்டுக்கிடாயையும் குறித்து வரும் பெயர்களாகும். கிடாயை உபலக்கணமாகக் கொண்டு வரும் பெயர்களாகும். கிடாயை உபலக்கணமாகக் கொண்டு பயிரை அழிக்க வரும் மற்றை விலங்கு முதலியவற்றையும் கொள்க. 'சுற்றம்' என்னும் தொல்பசுக் குழாங்கள்l 'கொண்டு பூட்டி' என்றது, 'பிடித்து ஓரிடத்திலே நிற்கும்படி கட்டிவிட்டு' என்றபடி. முளையைக் கிளறுத லாவது தடையிற்றி முளைத்தற்கும், பின் நன்கு வளர்வதற்கும் ஆவன செய்தல். அவை முளை நீர் வடித்தலும், முளைநீர் பாய்ச்சுதலும் போல்வன. அவை இங்குக் குருலிங்க சங்கமங்களைச் சிவனெனவே கண்டு வழிபடுதலைக் குறித்தன. மிடா, இங்குச் சோறு சமைக்கும் பானை. சிவபோகத்தை ஏற்கின்ற ஆன்ம உணர்வைக் குறித்தது. 'மெள்ள' என்றது 'சுவைத்து' என்றதாம். விழுங்கார் - உண்ண மாட்டாதவர். 'இவை மாட்டாதவர் செந்நெல்லை அறுப்பதாகக் கூறிக்கொள்ளுதல் எவ்வாறு பொருந்தும்' என்பதாம். அடர் - அடர்த்தல்; அறுத்தல். அஃது ஆகுபெயராய் அதற்குரிய கருவையைக் குறித்தது. அதன் உள்ளுறைப் பொருள் ஆன்மாவின் கிரியா சத்தி. ஈற்றில், 'எங்ஙனம்' என்பது சொல்லெச்சமாய் எஞ்சி நின்றது.

இதனால், 'ஞான வேட்கையும், அதன் வழியவாகிய ஞானம், பத்தி, பற்றறுதி என்பனவும் இல்லாதார் வீட்டு நெறியில் நிற்பதாகக் கூறிக்கொள்ளுதல் போலியே' என்பது கூறப்பட்டது.

விளைந்து கிடந்தது மேலைக்கு வித்து
விளைந்து கிடந்தது மேலைக்குக் காதம்
விளைந்து விளைந்து விளைந்தகொள் வார்க்கு
விளைந்து கிடந்தது மேவுக் காதமே. #2827

உயிர்களாகிய உழவர்களுக்கு இம்மைக் காலம் முடிவதற்குள்ளே

மறுமை தோன்றுதற்கு விதை விளைந்து கிடக்கின்றது. அஃது 'ஆகாமியம்' என்னும் வினையாம். பிராரத்தத்தின் பயன் விளையும் பொழுது அதுபற்றி மகிழ்ச்சியோ, வருத்தமோ கொள்ளாது ஒட்டின்றிருப்போருக்கு ஆகாமியம் தோன்றாது. மகிழ்ச்சி வருத்தங்களால் அதில் அழுந்துகின்றவர்கட்கு அவை பற்றி நிகழும் முயற்சிகள் ஆகாமியமாய்த் தோன்றிச் சஞ்சிதமாய் நிலைபெறும்.) இம்மை முடிவெய்தப் பெற்ற உயிர் மறுமையில் செல்லும் இடம் இந்நிலம். சுவர்க்க லோகம், நரக லோகம் என்பன ஆதலாலும், அவற்றிடையே உள்ள தொலைவு வேறுபட்டன ஆதலாலும் 'இந்த உயிர் இன்ன இடத்தில் செல்லும்' என்னும் வரையறையும் அஃது இங்குச் செய்த வினையால் வரையறுக்கப் படுதலை, 'மேலைக்குக் காதம் விளைந்து கிடந்தது' என்றார். காதம் - வழியளவு. இப்படி, 'முன் விளைந்ததிலிருந்து பின் விளைவு; பின்பு அதிலிருந்து பின் விளைவு என்று விளைவு இடைவிடாது தொடர்ந்து கொண்டே போவதால். அந்த வினையின் பயனைக் கொள்கின்ற உயிர்களுக்கு அவை மாறி மாறிச் செல்லும் மூன்று உலகங்களும் 'இது' என்பது முன்னதாகவே வரையறுக்கப்படுகின்றன.

விளக்கவுரை

'ஆகையால் அலைவு நீங்கி, அமைதியுற வேண்டுவார் பின் விளைவு தோன்றாதபடி பார்த்துக் கொள்க' என்பது குறிப் பெச்சம். பின் விளைவு தோன்றாமைக்கு வழி மேற்குறிக்கப்பட்டது. அடுக்கு, இடைவிடாமை குறித்து நின்றது. முக் காதம் - மூன்று வழிகளின் அளவு. சொற் பொருட் பின்வரு நிலையண் வந்தது.

இதனால், 'பிறவிக்கு வித்தாகிய ஆகாமியத்திற்குக் காரணமான விருப்பு வெறுப்புக்களை விடுதல் வேண்டும்' என்பது குறிப்பால் அறிவுறுத்தப்பட்டது.

களர்உழு வார்கள் கருத்தை அறியோம்
களர்உழு வார்கள் கருதலும் இல்லை
களர்உழு வார்கள் களரின் முளைத்த
வளர்இள வஞ்சியி மாய்தலும் ஆமே. *#2828*

வினை நிலம் இருக்கப் புல்லும் முளையாத களர் நிலத்தை உழுகின்றவர்கள் அதில் தப்பித் தவறி முளைத்த வஞ்சிக் கொடியின் பொலிவினைக் கண்டு, 'அஃது உணவாகும்' என்று மயங்கிப் பின் அஃது அவ்வாறு ஆகாமையால். பட்டினியால் இறத்தலும் கூடுவதே. இவ்வாறு களர் நிலத்தை உழுகின்றவர்கள் 'நாம் ஏன் இதனை உழுகின்றோம்' என்றும் எண்ணுவதில்லை. ஆகவே, அவர்களது குறிக்கோளாக நாம் ஒன்றையும் அறியவில்லை.

விளக்கவுரை

'அவர்களது செயலுக்கு அவர்களது முன்னை வினைதான் காரணம்' என்பது குறிப்பெச்சம். விளைநிலம், சிவநெறி; தவநெறி. களர் நிலம், உலகர் நெறி. அதில் தப்பித் தவறி முளைக்கும் வஞ்சிக் கொடியாவது மகளிர் இனம். 'குறிக்கோளிலாது கெட்டேன்'* என்றார் அப்பர் பெருமானும். இம்மந்திரத்தின் அடிகளை *3,4,2,1* என்னும் முறையிற் கூட்டிக் காண்க.

இதனால், 'உலகர் வழிபட்டுக் குறிக்கோள் இலாது நாளைக் கழித்தல் பிழை' என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

களர்உழு வார்கள் கருத்தை அறியோம்
களர்உழு வார்கள் கருதலும் இல்லை
களர்உழு வார்கள் களரின் முளைத்த
வளர்இள வஞ்சியி மாய்தலும் ஆமே. *#2829*

கூப்பிடு - கூப்பிடுதல்ஓ உரக்கக் கத்தி வெருட்டுதல். முதனிலைத் தொழிற்பெயர். அதனைச் சிறிதும் மதியாத குறுநரிகள் *(*குள்ள நரிகள்*)* ஐம்பொறிகள். அவைகட்கு இடமாய் உள்ள கொட்டகாரம் உடம்பு. யாப்பிடல், கட்டுதல். அஃது 'ஆப்பிடு' என வந்தது. பாசம் - கயிறு. 'ஆப்பிடு பாசம்' இறந்த கால வினைத் தொகை. கயிறு, வினை, அதில் உயிராகிய மகன் எப்படியோ அகப் பட்டுக் கொண்டான். அவன் அவ்விடத்திலேயே நெருப்பை உண்டாக்கி *(*சில புண்ணியங்களைச் செய்து*)* கயிற்றை எரித்துவிட்டுச் சிலநாள் உலாவியிருந்தான். அதை அறிந்து நன்றே அங்குப் புகுந்த மகள் ஒருத்தியின் துணை கிடைத்தமையால் *(*திரோதான சத்தி அருட்சத்தியாய்ப் பதிந்ததனால்*)* அந்தக் கொட்டகையை விட்டு வெளியேறி *(*உடம்பை விட்டு நீங்கி*)* நல்லதோர் இல்லத்தை *(*சிவத்தை*)* அடைந்து இன்பத்துடன் இருக்கின்றான்.

விளக்கவுரை

அவனைப்போல் மற்றவர்களும் ஏன் சிவ புண்ணியத்தைச் செய்து உய்த பெறுதல் கூடாது' என்பது குறிப் பெச்சம். 'நலமாக' என ஆக்கம் வருவிக்க. 'புகுந்த' என்னும் பெயரெச்சத்து அகரம் தொகுத்தலாயிற்று. தோன்றா எழுவாய் வருவிக்கப்பட்டது. பின்னிரண்டடிகள் இன எதுகை பெற்றன.

இதனால், 'வினைத்தொகையை நீங்கிச் சத்திநிபாதம் வருவித்துச் சிவனை அடைவிப்பன சிவபுண்ணியங்கனே' என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

மலைமேல் மழைபெய்ய மான்கன்று துள்ளக்

குலைமேல் இருந்த கொழுங்கிளி வீழ
உலைமேல் இருந்த உறுப்பெனக் கொல்லன்
முலைமேல் அமிர்தம் பொழியவைத் தானே. #2830

(மலைமேல் மழை பெய்தால், அங்கு வாழும் மான்கன்று வெப்பம் நீங்கிக் குளிர்ச்சியெய்தித் துள்ளத்தானே செய்யு?) யோகிகள் சுழுமுனா நாடியை 'மேரு' என்பர் ஆகலான். இங்கு 'மலை' என்றது அதனையே. மான் கன்று, அதில் உள்ள ஆதாரங்களைச் சார்ந்து நினைக்கும் அந்தக் கரணங்களை. துள்ளுதல், மகிழ்ச்சியெய்தல். கொல்லன் - கருமான்; இரும்புத் தொழில் செய்பவன். இங்கு 'கொல்லன்' என்றது யோகியை. உலை, கொல்லன் உலை. என்றது மூலாதாரத்தை. அதில் அக்கினியிருத்தலால் 'உலை' எனப்பட்டது. மூலாக்கினியை ஓங்கி எரியச் செய்தலின் யோகி 'கொல்லன்' எனப் பட்டான். கொல்லனது உலைமேல் உறுப்பாவது இரும்பு. 'என' என்றது உவம உருபு. 'அமிர்தம் பொழிய வைத்தான்' என்றது. 'அமிர்தத்தைப் பொழியும்படி செய்து விட்டான்', அஃதாவது, உலைமேல் உறுப்பை வெதுப்புவதுபோல வெதுப்பிவிட்டான்' என்றதாம் 'முலைமேல் அமிர்தம்' என்னும் குறிப்பால்' 'ஒருத்தியை' என்னும் சொல்லெச்சம் வந்து இயைந்தது. ஒருத்தி, குண்டலினி சத்தி. 'மூலாக்கினி வெதுப் பிய தால், குண்டலினி சத்தி விழித்தெழுந்து, தனது அமிர்தத்தைப் பொழிவா ளாயினாள்' என்றபடி. 'தனது முலைமேல் அமிர்தத்தை' என்க. 'மேல்' என்றது, 'ததும்பி வழிகின்ற' என்னும் குறிப்பினது. 'குலைமேல் இருந்த கொழுங்கனி' அருட் சத்தி. வீழ்தல், நிபாதமாதல். அந்தக் கனி சுவை மிகுதற்குக் குண்டலி சத்தியின் அமுதமும் வேண்டப்பட்டது.

விளக்கவுரை

இதனால், சிவயோகத்தால் தியான சமாதிகள் கைகூட, சத்தி நிபாதம் வந்து, அது முதிர்ச்சியடைதல் உள்ளுறையாகக் கூறப்பட்டது.

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரு மின்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாய்ப் பொழியுமே. #2831

பார்ப்பான், கடவுளைத்திரு உருவிலாயினும், தீயிலாயினும் வைத்து வழிபடுவன், அவனுக்குப் பாற்பசுக்கள் இன்றி யமையாதன. அத்தகைய பசுக்கள் ஐந்து உள்ளன. ஆயினும் பார்ப்பான் பசுமேய்க்க மாட்டான். மேய்ப்பவர் வேண்டும். அவர் யாரும் அவனுக்குக் கிடைக்கவில்லை. அதனால் அவன் அவிழ்த்து ஓட்டிய அப் பசுக்கள் தம் மனம்போன போக்கிலே போய்க் கொட்டிலுக்கு வாராமலே

உள்ளன. மேய்ப்பவர் கிடைத்தால், அவை வழிப்பட்டு வந்து வேண்டிய அளவு பாலைக் கொடுக்கும். (மேய்ப்பவர் கிடைக்கவில்லையே!)

விளக்கவுரை

பார்ப்பான், ஆன்மா. அகம், உடம்பு, பாற் பசு ஐந்து, இறைவனைக் கண்டும், அவன் புகழைக் கேட்டும், அவன் புகழ் பாடுதலிலே சுவைகண்டும், அவன் வழிபாட்டில் மணம் கண்டும் கைகளால் அவனுக்குரிய பொருள்களைத் தீண்டியும் உவகையடைந்து ஆன்மாவுக்கு உதவக் கூடிய 'கண், காது, நா, மூக்கு, மெய்' என்னும் ஐம்பொறிகள். மேய்ப்பர், குருவின் அறிவுரைகள். அவை அப் பொறிகளை அதற்கு உதவும் வகையில் நடத்தும். அவ்வுரைகள் இல்லாமையால் ஆன்மா ஐம்பொறிகளால் வரும் பயனை அடைய இயலாமல் அலமருகின்றது' என்பதாம்.
பாற்பசு - கறவைப் பசு. 'உண்டாய், அடங்கினால்' என்றமையால், 'உண்டாயின் அடங்கும்' என்பது பெறப்பட்டது. 'பாலாய்' என்பதில் உள்ள ஆக்கம் மிகுதி குறித்தது. 'சோறு கல்லும், மண்ணுமாய் உள்ளது' என்பதிற்போல.
இதனால், குரு உபதேசம் பெறாதார், நன்னெறியை அடைய மாட்டாது அல்லல் உறுவர்' என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

ஆமாக்கள் ஐந்தும் அரிஒன்றும் முப்பதும்
தேமா இரண்டொடு தீப்புலி ஒன்பதும்
தாமாக் குரம்கொளின் தம்மனத் துள்ளன
மூவாக் கடாவிடின் மூட்டுகின் றாரே. *#2832*

ஒரு காட்டிலே ஐந்து காட்டுப் பசுக்கள். முப்பத் தொரு சிங்கங்கள், தெய்வத் தன்மை வாய்ந்த இரண்டு குதிரைகள், ஒன்பது கொடிய புலிகள், காட்டெருமைக் கடாக்கள் வாழ்கின்றன. அங்குச் செல்வோர் அவைகளில் இரண்டு குதிரைகளை மட்டும் தம் வசப்படுத்தி, அவற்றின்மேல் தக்கபடி ஏறிச் செல்வாராயின், மேற் கூறிய கொடுவிலங்குகள் யாவும் அவர் விருப்பப்படி அடங்கி நடக்கும். மாறாக, குதிரைமேல் ஏறாது, கட்டுடல் வாய்ந்த அந்தக் கடாக்களின் மேல் ஏறுவாராயின், மேற்சொல்லிய கொடுவிலங்கு களையும் வெறியேற்றித் தாமே தமக்குத் துன்பத்தை வருவித்துக் கொள்பவராவார்.

விளக்கவுரை

ஆமா - காட்டுப் பசு. அவை ஐந்தாவன சிவ தத்துவங்கள். 'காட்டுப் பசு, மக்களுக்கு இதம் செய்வது போல, நாவால் நக்கி நக்கியே

கொன்றுவிடும்' என்பர். சிவ தத்துவங்கள் வித்தியா தத்துவங்களைச் செலுத்தி, உலக இன்பத்தில் அழுத்திப் பிறப்பை உண்டாக்குதல் பற்றி அவைகள் காட்டுப் பசுக்களாகச் சொல்லப்பட்டன. பக்குவம் வாயாத ஆன்மாக்களுக்கு இறைவனது சத்தி திரோதான சத்தியாய்ப் பிறவித் துன்பத்தை பயத்தலால், அந்தச் சத்தியின் வேறுபாட்டால் உண்டாகிய சிவ தத்துவங்களே அவ்வாறு உருவகித்தார். ஆன்மாப் பக்குவம் எய்தியவுடன் திரோதான சத்தி அருட் சத்தியாக மாறினால் சிவதத்துவங்கள் மட்டுமல்ல; எல்லாத் தத்துவங்களுமே நல்லனவாக மாறிவிடும். அதுவரையில் அவை யாவும் பிறவித் துன்பத்தையே தரும். அரி - சிங்கம். முப்பத்தொரு சிங்கங்களாவன. சிவ தத்துவம் ஐந்து தவிர, மற்றைய தத்துவங்கள். புலியை நோக்கச் சிங்கங்கள் அத்துணைக் கொடியன அல்ல. ஏனெனில் 'சிங்கம் பசித்து, உணவை நாடும்பொழுது தான் பிற விலங்குகளைக் கொல்லும்' என்றும், 'மற்றை வேளைகளில் எதனையும் கொல்லாது' என்றும் கூறுவர். அம்முறையில் வீடுபேற்றினை நோக்கத் தத்துவங்கள் தடையாயினும், உலகியலை நோக்க, வை உறுதுணைகளேயாம். அது பற்றி அவற்றை 'அரிகள்' என்றார். தே - தெய்வத்தன்மை. மா - குதிரை. இப்பல பொருள் ஒருசொல், விலங்குகளின் இடை வைத்து எண்ணப்பட்டதனால், குறித்த பொருளை உணர்த்திற்று. இரண்டு குதிரைகளாவன இடநாடி, வலநாடி மூச்சுக்கள். ஒன்பது புலிகளாவன தூல உடம்பில் உள்ள நவத் துவாரங்கள். இவை எஞ்ஞான்றும் தம் செயலைச் செய்யத் தவறுவதில்லை. அதனால் அடக்கப் படாமை பற்றி அவைகளை, 'தீப் புலி' என்றார்.

'எண்ணென்றா, உறழ் என்றா ஆயிரண்டும் இனன் ஒன்றல் வேண்டும்' என்ப.3 ஆகலின், 'ஆமாக்கள், தாமாக்கள், கடாக்கள்' என்பவற்றோடு, திப்பிலியை உடன்வைத்துக் கூறுதல் பொருந்தா மையின், 'திப்பிலி' எனப்பாடம் ஓதுதலும் 'தேமா' என்பதற்கு 'மா மரம்' எனப் பொருள் உரைத்தலும் பொருந்தாமையறிக. 'அறியேறு முப்பதும்' எனப்பாடம் ஓதி, 'முப்பது, என்பதற்கு, 'மூன்றும், பத்தும்' எனப் பொருளுரைத்து, சிலவற்றை இடர்ப்பட்டுக் கொணர்ந்து, 'பதின் மூன்று' எனக் காட்டுதலும் வேண்டாதனவேயாதல் அறிந்துகொள்க.

தாமா - தாவுகின்ற குதிரை. 'தாவுகின்ற' அடையானே, 'மா' என்பது பாய்மா ஆயிற்று. குரம் - குதிரையின் குளம்பு. இதனை ஊன்றி நடத்தல் பற்றியே குதிரையை வடமொழியாளர் 'குரகதம்' என்றனர். 'குரங்கொளின்' என்பது, 'நடக்குமாயின்' என்பதைக் குறிக்கும் குறிப்பு மொழியாய்ப் பின்னும் ஏறிச் செலுத்துதலைக் குறித்தது. 'தம்மனத்து உள்ளன்' என்பதற்கு, 'தங்கள் மனத்தின்படி உள்ளன வாம்' என்க.

ஆமா முதலியவற்றைக் கூறினமையால் 'காடு' என்பது போந்தமையின், குதிரையை ஏறுவாரும், 'தம்மனம்' என்பது அவர்மனமும் ஆதல் விளங்கிற்று. மூவாமை, தன் எதிர் மறையாகிய இளமையைக் குறித்தது. 'முட்டுகின்றாரே ஆவர்' என ஒரு சொல் வருவித்து முடிக்க. குதிரையை ஏறிச் செலுத்துதலாவது, வாசியோகம் செய்தலாம். யோகம் வல்லார்க்கு மூச்சுக் காற்று அவர் வழிப்படுதலின், அந்நிலையில் அதனைக் குதிரையாகவும், ஏனையோர்க்கு அதுதான் சென்ற வழியே செல்லுதலின் அந்நிலையில் அதனைக் கடாகவும் உருவகித்தார். ஒரு பொருளே நிலை வேறுபாடு பற்றிப் பல பொருளோடு உவமிக்கப் படுதலை, 'நட்டார்க்கு அமிழ்தொத்து, நள்ளார்க்கு நஞ்சொக்கும் இவன்' என்னும் வழக்கத்தாலும்,

'கார்; அணி கற்பகம்; கற்றவர் நற்றுணை;
பாணர் ஒக்கல்;
சீரணி சிந்தா மணி; அணி தில்லைச்சிற்
றம்பலவன்
தாரணி கொன்றையன்; தக்கோர்தம் சங்கநிதி;
விதி; சேர்
ஊருணி உற்றவர்க்கு; ஊரன், மற்றியாவர்க்கும்
ஊதியமே'l
என்னும் செய்யுளாலும் அறியலாம்.

இதனால், யோகம் பயில்வார்க்கு அவரது கருவி கரணங்கள் அவர் வழிப்பட்டனவாய் வீடு பயத்தலும், அது பயிலாதார்க்கு அவை தம்மியல்பிற் சென்று அதனைப் பயவாமையும் உள்ளுறையாகக் கூறப் பட்டன. முன் தந்திரத்தில் ஐம்பொறிகளை மட்டும் கூறினார்; இம் மந்திரத்தில் அனைத்துக் கருவிகளையும் கூறினார். ஈற்றடி உயிரெதுகை.

எழுதாத புத்தகத்(து) ஏட்டின் பொருளைத்
தெருளாத கன்னி தெளிந்திருந் தோத
மலராத பூவின் மணத்தின் மதுவைப்
பிறவாத வண்டு மணம்உண்ட வாறே. #2833

எழுத்துக்கள் எழுதப்படாத ஏடு ஒன்று உள்ளது; அதை, 'புத்தகம்' என்கின்றனர். அந்தப் புத்தக்கத்தைப் பார்க்காமலே ஒரு பெண் அதில் உள்ள பொருளைத் தானே உணர்ந்து, பிறருக்கும் உணர்த்துகின்றாள். (இது நிற்க. மற்றொரு செய்தி.) மலராத மலர் ஒன்று உள்ளது; அதில் தேனை, பிறவாத வண்டு ஒன்று அதன் மணத்தின் வழியாக அறிந்து சென்று உண்கின்றது. (இவைகளை யெல்லாம் 'நம்ப முடியாது' என்றாலும், உண்மையான அதிசய நிகழ்ச்சிகளாய் உள்ளன.)

விளக்கவுரை

எழுதாத ஏடு, இறைவனது ஞான சத்தி. எல்லாப் பொருள்களும் முதலில் அதன்கண் இயல்பாகத் தோன்றுகின்றன. கன்னி, அவனது கிரியா சத்தி அது ஞான சத்தியின் வேறன்மையால், ஞான சத்தியில் தோன்றியவற்றை அப்படியே உயிர்களை அறிவித்தும், செய்வித்தும் நடாத்துகின்றது. இது முதற்கண் கூறப்பட்ட பொருள்.

இனி, மலராத பூ, அரும்பாய்த் தோன்றிப் போதாய் முதிர்ந்து மலராத, அதனால், பின்பு வாடாத பூ, சிவம் என்றும் ஒருபடித்தான இன்பமாய் உள்ளது. பிறக்கும் பொழுது புழுவாய்ப் பிறந்து பின்பு வண்டாக மாறுகின்ற வண்டுகள் போலாது, பிறக்கும்பொழுதே வண்டாய்ப் பிறந்த வண்டு, முற்பிறவிகளிற்றானே 'புறச்சமய நெறி நின்றும், அகச்சமயம் புக்கும், புகல் மிருதி வழி உழன்றும் ... ...'3 வருதலாகிய படிகளையெல்லாம் கடந்து, பிறக்கும்பொழுதே சித்தாந்த சைவ மரபில் பிறந்த ஆன்மா. மணம், அருள்ஒளி. தேன், சிவானந்தம். 'சித்தாந்தத்தே சிவன் தன் திருக்கடைக்கண் சேரத்திச் - செனனம் ஒன்றிலே சீவன் முத்தராக வைத்து ஆண்டு, மலம் கழுவி, ஞானவாரி மடுத்து ஆனந்தம் பொழிவன்'* ஆதலின் பிறக்கும்பொழுதே சித்தாந்த சைவ மரபிற் பிறந்த ஆன்மாவை, 'பிறவாத வண்டு' என்றார்.

'ஓத' என்னும் செயவெனெச்சம் நிகழ் காலத்ததாய் நிற்க, 'உண்டவாறு வியப்பு' எனச் சொல்லெச்சத்தோடு முடிந்தமையால் 'இரண்டும் வியப்பு' என்றதாயிற்று. 'மணத்தால் உண்ட' என ஆல் உருபு விரிக்க. ஈரடி உயிரெதுகை வந்தது.

இதனால், உயிர்கட்கு ஞானம் நிகழுமாறும், பிறக்கும் பொழுதே ஞானத்திற்கு உரியவராய்ப் பிறந்தோரது சிறப்பும் கூறப்பட்டன.

போகின்ற பொய்யும் புகுகின்ற பொய்வித்தும்
கூகின்ற நாவலின் தருங்கனி
ஆகின்ற பைங்கூழ் அவையுண்ணும் ஐவரும்
வேகின்ற கூரை விருத்திபெற் றாரே. #2834

பறவைகள் தங்கிக் கூவுகின்ற நாவல் மரத்தி னின்றும் உணவாய் அமைகின்ற கனிகள் சில பயன்படாத இடத்தில் உதிர்வனவாயும், சில, மரத்திற்கு அடியில் உதிர்ந்தும் புதர் முதலிய வற்றால் பயன்படாதனவாயும் போய்விட, அந்த நாவல் மரத்தை உள்ளடக்கியுள்ள குடிலில் வாழ்கின்ற ஐவர், வேறிடத்தில் வளர்ந்த பயிர் தருகின்ற நெல்லை உண்டு வாழ்கின்றனர். அந்தக் குடிலோ சில நாட்களில் வெந்தொழிவதாய் உள்ளது.

விளக்கவுரை

நாவல் மரம், சுவாச கோசம். அதினின்றும் உணவாகக் கிடைக்கும் கனி உடலை நிலைபெறுத்துகின்ற சுவாசம். போகின்ற கனி, வெளிச்செல்லும் காற்று. புகுகின்ற கனி, உள்ளே வரும் காற்று. புகுகின்ற காற்றை வெளிவிடாது தடுத்தால் பயன் விளைதல் பற்றி அதனை 'வித்து' என்றார். 'எனினும், அதனைத் தடுப்பார் இன்மையால் வெளிச்சென்றே வீணாகின்றது' என்றற்கு இரண்டையும் 'பொய்' என்றே கூறினார். பறவைகள் சுவாச கோசத்தில் உள்ள நரம்பு முதலியன. 'கூவுகின்ற' என்பது குறைந்து நின்றது. ஆகின்ற - வளர்கின்ற. பைங்கூழ் - பயிர், அது கருவியாகு பெயராய், அதன் விளைவைக் குறித்தது. பயிராவது, முற்பிறவியில் ஆக்கிய வினை. அதன் விளைவாவது, பிராரத்த விளைவு. அதனை உண்ணும் ஐவர், ஐம்பொறிகள். உண்பது உயிரேயாயினும் அது தன்னை 'வேறு' என உணராது அவையாய் நின்று உண்ணுதலின் அவற்றையே உண்போராகக் கூறினார். உயிர் தன்னை, 'அவற்றின் வேறு' என உணர்ந்து நீங்கியிருப்பின், பிராரத்த விளைவு உணவாகாது' என்பது கருத்து. விரைவு பற்றி, 'வேகின்ற' என, எதிர்காலம் நிகழ்கால மாயிற்று. கூரை - குடில். வேவதாய குடிலாவது. தூல உடம்பு. 'கூரையில்' என ஏழாவது விரிக்க. விருத்தி - பிழைப்பு. 'நாவலின்' என்னும் 'இன்', நீக்கப் பொருளில் வந்த ஐந்தனுருபு. கூழ் - உணவு. கனியே உணவாயினும் உணவாம் தன்மையை நோக்கி அதனை வேறு போல வைத்து, 'கூழைத் தரும் கனி' என்றார். சுவாசத்தை நாவற் கனியாகக் கூறியது, அக்கனி பெரும் பாலும் சாலையோரங்களில் நிற்கும் மரங்களினின்று சாலை நடுவில் உதிர்ந்து கிடப்பினும் வாழை, மா, பலா இவற்றின் கனிகளைப்போல மக்கள் ஆர்வமுடன் கொள்ளாமை பற்றி. 'சுவாசமும் இயற்கையாய் அமைந்து, அருமையறியப்படாததாய் உள்ளது' என்பதாம். இரண்டாம் அடியை முதலிற் கூட்டி, முதல் அடியின் ஈற்றில் 'ஆக' என்பது வருவிக்க. 'பைங்கூழ்' எனப்பட்ட பிராரத்த விளைவையே, 'போகின்ற பொய்' என்பதற்கும் பொருளாக வைத்து, 'புகுகின்ற வித்தாவது ஆகாமியம்' என்றவர், அதற்கு இயைபு காட்டிற்றிலர்.
இதனால், 'சுவாசத்தை யோக நெறியில் பயன்படுத்திக் கொள்ளாதவர், பிராரத்தை அனுபவித்து மறைகின்றவரே யாவர்' என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

மூங்கில் முளையில் எழுந்ததோர் வேம்புண்டு
வேம்பினைச் சார்ந்து கிடந்த பனையில்ஓர்
பாம்புண்டு பாம்பைத் துரத்தித்தின் பாரின்றி
வேம்பு கிடந்து வெடிக்கின்ற வாறே. *#2835*

முளை, நிலத்தளவில் நிற்பதாகலின், அது அடி நிலத்தில் உள்ள மூலாதாரத்தைக் குறித்தது. சுவாசம் எழுதற்கு வழியை உடைத்தாய் இருத்தலின் அம்முளை உள்துளையை உடைய 'மூங்கில்' எனப்பட்டது. வேம்பு, நல்லதொரு மருந்து ஆதலின், காய சித்தியைத் தருவதாகிய சுவாசமே 'வேம்பு' எனப்பட்டது. அந்த வேம்பு மேற்கூறிய மூங்கில் முளையினின்றும் எழுவதாதலை அறிக. பனை, சுழுமுனா நாடி. அதனையே சுவாசம் சார்ந்திருப்பினும், ஒற்றுமைபற்றிச் சுழுமுனை சுவாசத்தைச் சார்ந்திருப்பதாக வைத்து, 'வேம்பினைச் சார்ந்து கிடந்த பனை' என்றார். கிடந்த பனை என்ற அனுவாதத்தால், 'வேம்பினைச் சார்ந்து பனை கிடந்தது' என்பதும் பெறப்பட்டது. குண்டலி சத்தி சுழுமுனையைப் பற்றியிருப்பது ஆகலின் அதனை, 'வேம்பினைச் சார்ந்து கிடந்த பனையில் ஓர் பாம்புண்டு' என்றார். அந்த பாம்பு நன்கு துயின்று கொண் டிருப்பதால், அதனோடு பனையைப் பற்றியிருக்கின்ற வேம்பினைத் தின்றல் கூடாததாய் உள்ளது. அந்தப் பாம்பினை எழுப்பி விலகச் செய்தால் வேம்பினைத் தின்ன முடியும். அதனைச் செய்ய வல்லவர் இல்லை. அதனால் வேம்பு வீணே வற்றி வெடித்துப் போகின்றது.

விளக்கவுரை

'குண்டலி சத்தி துயில்வதால், நல்லுணர்வு உண்டாகவில்லை. ஆகவே, அதனை எழுப்பினால், நல்லுணர்வு உண்டாகும்; யோகம் பயில முடியும். அவ்வாறு செய்வார் இல்லாமையால், சுவாசம் வீணாய் அழிகின்றது' என்பதாம். துரத்துதல், இங்கு எழுப்பி இயங்கச் செய்தலைக் குறித்தது. 'வெடிக்கின்றவாறு இரங்கத்தக்கது' எனச் சொல்லெச்சம் வருவித்து முடிக்க.
இதனால் யோகத்தைப் பற்றாத உலகர் நிலைக்கு இரங்குதல் உள்ளுறையாக உணர்த்தப்பட்டது.

பத்துப் பரும்புலி யானை பதினைந்து
வித்தகர் ஐவர் வினோதகர் ஈரெண்மர்
அத்தகு மூவர் அறுவர் மருத்துவர்
அத்தலை ஐவர் அமர்ந்துநின் றாரே. *#2836*

(சித்தாந்தத்தில், 'கருவிகள் தொண்ணூற்றாறு' என்பவற்றில் 'தத்துவம் முப்பத்தாறு, தாத்துவிகம் அறுபது' எனச் சொல்லப்படுகின்றன. படைப்புக் காலந்தொட்டு, அழிப்புக் காலம் வரையில் நிலைத்து நிற்கும் கருவிகள் தத்துவம். அவற்றின் காரியங்களாய், இடையே தோன்றியழிவன தாத்துவிகம். ஆகவே, தாத்துவிகங்கள் யாவும் தூல உடம்பில் உள்ளனவாம். அது பற்றி அத்தாத்துவிகங்களை மட்டுமே இம் மந்திரத்தில் குறிக்கின்றார்.)

விளக்கவுரை

புலி, பாயும் தன்மை உடையது ஆகலின், 'பிராணன், உதானன், அபானன், சமானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன்' எனப் பெயர்பெற்று இயங்கும் வாயுக்கள் பத்தினையும் 'பத்துப் பரும்புலி' என்றார். பருமை புலியின் உடலின் கண்ணது, இவை பத்தும், 'வாயு' என்னும் ஒரு பூதத்தின் கூறுகளே. யானை பதினைந்தாவன, பிருதிவி, அப்பு, தேயு, என்னும் மூன்று பூதங்களின் மூவைந்து பதினைந்து கூறுகளாகிய தாத்து விகங்கள். அவற்றுள்,

பிருதிவியின் கூறுகள்:

மயிர், தோல், நரம்பு, எலும்பு, தசை.

அப்புவின் கூறுகள்:

இரத்தம், வெயர்வை, சிறுநீர், நிணம், சுக்கிலம்.

தேயுவின் கூறுகள்:

பசி, தாகம், உடல் வெப்பம், சோம்பல், பித்து. இவைகளைத் தூல உடம்புடைய யானைகள்' என்றார்.

வித்தகர் - திறமையாளர். 'ஓசை ஊறு, ஒளி, சுவை, நாற்றம்' என்னும் புலன்கள் ஐந்தும் எல்லோரையும் தம்பால் ஈர்த்து நிற்றலின் இவைகளை 'வித்தகர்' என்றார். இவ்வைந்தும் முறையே ஆகாயம் முதலிய ஐந்து பூதங்கட்கும் சிறப்புக் குணமும் ஆகும்.

வினோதகர் - பொழுது போக்கிற்கு வேடிக்கை செய்வோர். 'இடை கலை, பிங்கலை, சுழுமுனை, அத்தி, அலம் புடை, காந்தாரி, குகு, சிகுவை, புருடன்' என்னும் நாடிகள் பத்தும் உடம்பை வாழச் செய்வதலாம், 'காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்' என்னும் குற்றம் ஆறும் உடலில் வாழும் உயிர் தன் வாழ்நாளைக் கழித்தற்கு ஏதுவாய் நிற்றலாலும் இவைகளை 'வினோதகர்' என்றார்.

நாடிகள் பத்தும் 'ஆகாயம்' என்னும் ஒரு பூதத்தின் கூறுகளே.

'மூவரோடு அறவர்' என உருபு விரித்து, 'ஒன்பதின்மர்' என உரைக்க. இவ்வொன்பதின்மர் ஆவார். தூல உடம்பில் உள்ள நவத் துவாரங்கள், இவைகள் 'ஒன்பது வாயில்கள்' என்றும் சொல்லப்படும். கண் இரண்டு, காது இரண்டு. மூக்கு இரண்டு, வாய், எருவாய், கருவாய் இவை ஒவ்வொன்று. இவைகளில் இறுதி மூன்றும் உடல் நிலைப்பிற்கு இன்றியமையாதனவாய் இருத்தலின் இவைகளை 'மூவரோடு' என வேறு பிரித்து ஓதினார் இவ்வொன்பதும் உடல் நிலைப்பிற்குக் காரணம் ஆதல் பற்றி உடல் நலத்தைச் செய்கின்ற மருத்துவர்களாகக் கூறினார்.

ஈற்றில் உள்ள 'ஐவர்' என்பதற்கு, 'மற்றும் ஓர் ஐவர்' என உரைக்க. 'வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம், என்னும் கன்மேந்திரிய விடயங்கள் ஐந்தையே 'மற்றும் ஓர் ஐவர்' என்றார். இவைகளும் ஆகாயம் முதலிய பூதங்களில் ஒவ்வொன்றின் சிறப்புக் குணமாகும். ஆகத் தாத்துவிகம் அறுபதினையும் கூறியவாறு காண்க.
ஈற்றில் உள்ள 'ஐவர்' என்பதை, 'அத்தலை' என்பதற்கு முன்னே கூட்டி, 'ஆகிய இவர்கள் அத்தலை அமர்ந்து நின்றார்' என முடிக்க. திணை விராய் எண்ணிய வழிச் சிறுபான்மை அஃறிணையால் முடியாது, உயர்திணையால் முடிதல், 'பலவயினானும்'* என்ற இலே - சினாற் பெறப்படும். தலை - இடம். சூனிய சம்பாடணையாதல் பற்றி, 'அத்தலை' என மறை பொருளாகக் கூறினார். அது தூல தேகமே என்க.
இதனால், 'தத்துவ ஆராய்ச்சி செய்வோர் தூல தேகத்தின் இயல்பினை இவ்வாறு ஊன்றி உணர்தல் வேண்டும்' என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

இரண்டு கடாக்களுண் டிவ்வூரி னுள்ளே
இரண்டு கடாக்கட் கொருவன் தொழும்பன்
இரண்டு கடாவும் இருத்திப் பிடிக்கின்
இரண்டு கடாவும் ஒருகடா ஆமே. *#2837*

(மேல், 'ஆமாக்கள் ஐந்து' என்னும் மந்திரத்தில்,* 'பிராண வாயுத் தன்னை அடக்குவார்க்குக் குதிரையாயும், அல்லாதார்க்குக் கடாவாயும் நிற்கும்' எனக் கூறியதனை இங்கு வேறோராற்றான் வலியுறுத்துகின்றார்.
இரண்டு கடாக்கள், இடநாடி வலநாடிகள் வழியாக இயங்குல் பிராணன். அஃது ஒன்றேயாயினும் இயக்க வகையால் இரண்டாகின்றது. இவ்வூர், இந்தத் தூல தேகம். தொழும்பன் - அடியான். ஆண்டான் சொற்படி அக்கடாக்களை மேய்ப்பவன். அஃது அகங்கார தத்துவம். ஆன்மாவாகிய ஆண்டான் அந்தக் கடாக்களை அந்த அடிமையினிடம் விடாமல் தானே தன்னிடத்தில் கெட்டியாகப் பிடித்து வைப்பானேயானால், அந்த இரண்டு கடாக்களும் ஒரு கடாவாய் விடும். அஃதாவது, 'இடை நாடி பிங்கலை நாடி வழியாக இயங்காமல், சுழுமுனை நாடியில் நின்றுவிடும்' என்பதாம்.

விளக்கவுரை

இடை நாடியால் பெரியோர் ஆதலின், ஒன்றே தொழும்பன்' என்பது பாடமன்று.
'ஊர் பெரிது; அதற்கு உழைக்க இரண்டு கடாக்களே இருத்தல் அதிசயம். பின்னும் அவை இரண்டும் ஒன்றாகி விடுதல்

அதிசயத்தினும் அதிசயம்' என்றவாறு.

ஒத்த மணற்கொல்லை யுள்ளே சமன்கூட்டிப்
பத்தி வலையில் பருத்தி நிறுத்தலால்
முத்தம் கவறாக மூவர்கள் ஊரினுள்
நித்தம் பொருது நிரம்பிநின் றார்களே. #2838

பயிரிடுதற்கு ஏற்புடைய ஒரு கொல்லையை, அதனுட்கிடக்கும் மேடு பள்ளங்களைச் சமன் செய்து, வரம்பு கோலி, வரிசை வரிசையாக வேலியைக்கட்டிப் பருத்தியை நான் பயிரிட் -டதனால், எங்கள் ஊரில் உள்ளவர்களில் மூவர் யான் கொண்டிருந்த உள்ள நட்பையே சூதாடு கருவியாகக் கொண்டு இடைவிடாது என்னுடன் சூத பொருது, இப்பொழுது அதை விட்டுவிட்டார்கள்.

விளக்கவுரை

'உழைத்துப் பொருள் தேட விரும்பாதவரே சூதாடு களத்தில் சென்று சேர்வார்கள். நான் பயிர் செய்ய முனைந்து விட்டமையால், அங்கு செல்லவில்லை. அவர்களும் என்னை அங்கு அழைக்கவில்லை' என்பதாம். ஒத்தல், கொல்லைக்கு ஆகுங்கால், பயிருக்கு ஏற்புடைய தன்மையும், மனத்திற்கு ஆகுங்கால் தவத்திற்கு இயையும் பான்மையையும் குறிக்கும். 'மணல்' என்பதை 'மண்+நல்' எனப் பிரித்து, 'மண்' என்றதன் உள்ளுறை 'மனத்தின் இயல்பு' என்பதாக் கொள்க. கொல்லை, மனம். மேடு - பள்ளம், வெறுப்பு, விருப்பு. 'பத்தி - வசை' என்பது வெளிப்பொருள். 'வலை' என்பதற்கு 'வேலி' என வெளிப்பொருள் கொள்ளாவிடில் மறை பொருட் கூற்றாகாது. 'பருத்தி' என்பதை உள்ளுறைப் பொருட்டு, 'தீ' என்பது குறுகி நின்றதாகக் கொண்டு பெரிய தீ, மூலாக்கினி' என உரைக்க. நிறுத்தல், நிலைப்படுத்துதல். 'முத்தம்' என்பது முத்தங் கொடுத்தல் போன்ற மிக நெருங்கிய நட்பைக் குறிப்பதாய், வேற்றுமை யின்றி ஒன்றி இயைபை உணர்த்திற்று. மூவர், முக்குணம். நிரம்புதல் - தம் அளவில் தாம் நிற்றல்.

இதனால், 'வேண்டுதல், வேண்டாமையை விட்டு, சிவ பத்தியுடன் சிவயோகம் செய்தால், முக்குண விகாரங்கள் நீங்கும்' என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

கூகையும் பாம்பும் கிளியொடு பூஞையும்
நாகையும் பூழும் நடுவில் உறைவன
நாகையைக் கூகை நணுக லுறுதலும்
கூகையைக் கண்டெலி கூப்பிடு மாறே. #2839

கருடனைப் போலக் கூகையும் பாம்பைக் கண்டவுடன் கொல்லும். அதனால் கூகையும், பாம்பும் தம்முட் பகையாவன. கிளியும் பூனையும்

தம்முட் பகையினவாதல் தெளிவு. நாகை - நாகணவாய்ப் புள். இதுவும் கிளியைப்போலப் பேசும் தன்மையுடையது; குறும்பூழ் (காடை) அத்தன்மையைப் பெறாமையால் அவையும் ஒன்றுவன அல்ல. இவை அனைத்தும் வாழ்கின்ற ஒரு காட்டில் எலிகளும் வாழ்கின்றன. 'கிள்ளை பாடுவ; கேட்பன பூவைகள்'3 என்றதனால், 'பேசும் தன்மையோடு, கேட்கும் தன்மையுடையது நாகணவாய்ப்புள்' என்பது விளங்கும்.

விளக்கவுரை

கூகை, மற்றைப் பறவைகள் போல வெளியே விருப்பப்படி பறந்து காணப்படாது. இருக்கும் இடம் தெரியாமல் ஒளிந்து கிடக்கும். பாம்பு மிகக் கொடியது. கிளி யாவராலும் மிக விரும்பப்படுவது. பூனை வெளிக்கு நல்லதுபோல இருந்து பாயும் நாகணவாய்ப்புள், கிளியோடு ஓரளவு சமமாக மதிக்கப்படுவது. குறும்பூழ், ஒன்றிலும் சேராதது. 'சிறு துரும்பும் பல்லுக்குதவும்' என்பதுபோல, ஓரோர் காலத்தில் சகுனத்தை அது தரும். இவற்றின் நடுவில் உறைவன எலிகள். 'இவற்றின்' என்பது எஞ்சி நின்றது.

இவைகளைப் போல, உலகத்தில் பல திறப்பட்ட மக்கள் வாழும் நிலையில், அவர்களுக்குள்ளேயும் ஒற்றுமையின்றி இகலி வாழ்கின்றார்கள். இங்குக் குறஇக்கப்படும் இகல், சமயப் பூசல்.

எலி, ஓர் எளிய பிராணி. மக்களுக்கு அதுவும் பகைதான். ஆயினும் இங்கு மக்களை நாம் கருத வேண்டியதில்லை. மேற்கூறிய, அனைத்தும் சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ எலிக்குப் பகையாவனதாம். அது போல, எத்திற மக்களும் ஏழைக்கு உதவுபவர் அல்லர். மாறாக, நலிவும் செய்வர்.

தத்துவத் துறையில் ஏழையராவார். சற்குரு கிடைக்கப் பெறாதவர். அவர்கள், 'நமக்கு யார் வழிகாட்டுவார்கள்' என்று அலமந்திருக்கும் பொழுது, கூகை போல வெளியுலகத்தில் தொடர்பு கொள்ளாத சிலர் சில அறிவுரைகளை வேண்டி, நாகணவாய்ப் புள் போன்றவர்களிடம் அறிவுரை கேட்கச் செல்லும்பொழுது, செல்பவரது நிலை தெரியாமல் அவரைக் குருவைத் தேடுபவர் குருவாக அடைந்தால் என்ன ஆகும்?

'குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழு மாறே'*

என இவரே முன்பு அருளிச் செய்தபடி, இருவரவுங் கெடுவது தவிர, வேறு எதுவும் விளையாது. இதனையே இங்கு,

'நாகையைக் கூகை நணுக லுறுதலும்
கையைக் கண்டு எலி கூப்பிடுமாறு'

என்றார். கூப்பிடுதல் - தன்பால் வரவழைத்தல். ஆறு - நெறிமுறை.

'ஆறு உள்ளது' என ஒரு சொல் வருவித்து முடிக்க. பிற்பகுதிப் பொருள் இனிது விளங்குதற் பொருட்டு, முற்பகுதியில் பல பொருள்களைக் கூறினார்.
இதனுள் உய்த்துணர வைத்த காடாவது உலகம்.
இதனால், சற்குருவைச் சாராது அசற்குருவைச் சார்தலின் குற்றம் உள்ளுறையாக உணர்த்தப்பட்டது.

குலைக்கின்ற நன்னகை யான்கொங் குழக்கின்
நிலைக்கின்ற வெள்ளெலி மூன்று கொணர்ந்தான்
உலைக்குப் புறம்எனில் ஓடும் இருக்கும்
புலைக்குப் பிறந்தவை போகின்ற வாறே. *#2840*

(சிலர் இனிய நகை முகங்காட்டித் தீங்கு விளைவித்தல் உண்டு; சிலர் அவ்வாறன்றிக் கோபச் சிரிப்புச் சிரித்துத் தீமையை ஒழித்தல் உண்டு.)
அவர்களில் பின்னர்க் கூறிய வகையைச் சார்ந்தவன் ஒருவன் கொங்கு நாட்டு உழக்கில் அடைத்து மூன்று வெள் ளெலிகளைக் கொணர்ந்தான். அவைகள் கொல்லனது உலை போல எரிகின்ற எரிக்கு அப்பால் இருப்பின், ஓடும்; இருக்கும்; இன்னும் பிற வற்றை யெல்லாம் செய்யும். ஆகவே, அவைகளை எரியில் இட்டால், இட்டவனுக்கு உணவாய் விடும். தொல்லை நீங்கும். எனவே, இழிந்த இனத்தவாகிய அவைகளை ஒழிப்பதற்கு வழி அதுவே.

விளக்கவுரை

கோபச் சிரிப்புச் சிரித்துத் தீமையை ஒழித்தவன் சிவன். தீமை, திரிபுரத்தவர். விளைத்தவை குலைத்தற்கு, 'தீமை' என்னும் செயப்படுபொருள் வருவிக்க. நிலைத்தல், வாழ்தல். 'வெள்ளெலி' என்பதில் வெண்மை நிறம் குறித்ததன்று; வெற்ற வெளியைக் குறித்து இவைகளை 'நாட்டெலி' என்றும், வீடுகளில் உள்ளவற்றை, 'வீட்டெலி' என்றும் கூறுவர். நாட்டெலியே விளைவுச் சேதத்தை உண்டாக்குவன. 'வெள்ளெலி மூன்று' என்றது. 'புத்தி, அகங்காரம், மனம் என்னும் அந்தக் கரணங்களை. அவையே புறப் புலன்களைப் பற்றிப் பல்வேறு விவகாரங்களை எய்துவன ஆகலின், அவற்றை, 'வெள்ளெலி' என்றார். இனி, 'மூன்றெலி முக்குணம்' என்பாரும் உளர். முக்குணங்கள் இங்ஙனம் காரியமாய்ப் பரிணமித்தன்றிச் செயற்படாமை யறிக. மாயையினின்றும் கருவி கரணங்கள் யாவும் சிவனது சங்கற்பத்தாலே தோன்றுதலின், அவன் இவ்வெலிகளைக் கொணர்ந்ததாகக் கூறினார். உழக்கு, ஒரு முகத்தலளவைக் கருவி. இங்கு அஃது உடம்பைக் குறித்தது. இன்னும் அதன் சிறுமையைக் குறித்தற்கு, 'கொங்குழக்கு' என்றார். 'கொங்கு நாட்டு அளவை அளவிற் குறைந்தன' என்பர். 'உலை' என்றது, மூலாதாரத்தைக்

குறித்துப் பின்னும் அதிலுள்ள அக்கினி எழுந்தோங்கிச் செல்லும் சுழுமுனா நாடியைக் குறித்தது. பிராண வாயு சுழுமுனா நாடியிற் செல்லாது, இடைகலை, பிங்கலை வழியிற் செல்லும், அந்தக் கரணங்களும் அவ்வுயிர்ப்போடு பொருந்திப் புறத்தே உலாவுதலை, 'உலைப்புறம் செல்லின் ஓடும்; இருக்கும் என்றார். அதினின்றே, 'உலையகத்து அடங்கின் அடங்கி ஒடுங்கும், என்பது பெறப்பட்டது. புலை - கீழ்மை. கீழ்மையுடைய பொருளை, 'கீழ்மை' என்றது உபசாரம். 'கீழ்மையுடையது' என்றது, மூலப்பிரகிருதியை. அது தானே குணதத்துவமாகிச் சித்தமாய் நிற்றலால், சித்தம் இங்கு வேறு கூறப்படவில்லை. போதல் - அழிதல் 'போகின்றவாறு இது' என ஒரு சொல் வருவித்து முடிக்க' வெள்ளெலியை உண்பவர் நெருப்பில் இட்டு உண்டல் பற்றி, 'அவை போகின்றவாறு உலையில் இடுதலே' எனக் கூறினார்.
இதனால், 'அந்தக் கரணங்களில் அடங்கி ஒடுங்கிப் பயன் தருதல் வாசியோகத்தாலே' என்பது கூறப்பட்டது.

காடுபுக் கார்இனிக் காணார் கடுவெளி
கூடுபுக் கானது ஐந்து குதிரையும்
மூடுபுக் கானது ஆறுள ஒட்டகம்
மூடு புகாவிடின் மூவணை யாமே. *#2841*

இருள் செறிந்த காட்டிற்குள்ளே அகப்பட்டுக் கொண்டவர்கள், அதினின்றும் நீங்கி, ஒளி விளங்கும் வெளி யிடத்தைக் காணுதல் அரிதேயாம். இனி, நாம் குறிப்பிடும் காட்டிற் குள்ளே காட்டுக் குதிரைகள் ஐந்தும், எப்பொழுதுமே நற்குணத்தை அடையாத ஒட்டகங்கள் ஆறும் உள்ளன. (என்றால், இதர்குள் புகுந்துவிட்டவர்களது நிலைமை என்ன!) அந்தக் காட்டிற்குள் புகாமல் இருந்தால், வெளியில் மூன்று நல்லரசுகள் உள்ளன. அவைகளின் கீழ் நல்வாழ்வு வாழலாம்.

விளக்கவுரை

காடு, இருவினைப் புதர்கள். 'கூடு, மூடு' என்பனவும் காட்டையே குறித்து நின்றன. 'ஆனது' இரண்டும் பன்மையொருமை மயக்கம். 'புகாவிடின்' என்றது வெளியே இருப்பின்' எனப் புகுதலின் மறுதலைப் பொருளைத் தந்தது. அணை, அரியணை. குதிரைகள் ஐந்து, பஞ்சேந்திரியங்கள். ஒட்டகம் ஆறு, 'காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்' என்னும் அகப் பகை ஆறு. 'மூவணை' முத்துரியங்கள். முத்துரியங்கள் முன் தந்திரத்தில் சொல்லப்பட்டன. முதல் அடிவேற்றுப் பொருள் வைப்பணியாய் வந்தது. கடுமை, மிகுதி குறித்தது.

இதனால், 'இருவினைகள் வெட்ட வெட்டத் தளிர்க்கும் காடுபோல் உள்ளன; அவற்றிற்குள்ளே அகப்பட்டு அடங்காது நிற்கின்றன பஞ்சேந்திரியங்கள்; அந்நிலையில் மேலும் காமம் முதலிய அறுபகைகள் துன்பம் விளைக்கின்றன. இவற்றிலிருந்து நீங்கினாலே இன்பம் உளதாகும்' என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

கூறையும் சோறும் குழாயகத் தெண்ணெயும்
காறையும் நாணும் வளையலும் கண்டவர்
பாறையின் உற்றுப் பறக்கின்ற சீலைபோல்
ஆறைக் குழியில் அழுந்துகின் றாரே. *#2842*

பரத்தையர் உடுத்துகின்ற ஆடை, அவர் நல்லுணவு உண்டு வளர்த்துக்கொள்ளும் தசை, குழாய்களில் வைக்கப்பட்டுள்ள எண்ணெய்போல வெளியே தோன்றாது உள்ளே ஓடுகின்ற இரத்தத்தால் விளங்கும் மேனியழகு, கழுத்தில் அணிகின்ற காறையும், மார்பில் அணிகின்ற பொன் வடமும், கைகளில் அணிகின்ற வளையலும் முதலான அணிகலன்கள் ஆகியவற்றைக் கண்டவர்கள் அவவைகளிலே மயங்கி, பாறைமேல் உலர்த்தப்பட்ட சீலை விரைவில் ஈரத்தை இழந்து காற்றில் பறப்பதுபோலப் பறந்துபோய், அவர்களது உந்திக் குழியில் வீழ்கின்றனர்.

விளக்கவுரை

'அவர்களை மீட்குமாறில்லை' என்பது குறிப்பெச்சம்.
இம்மந்திரம் பரத்தையர் கூட்டத்தை விலக்கியதன்று. என்னை யெனின், இது சூனிய சம்பாடணையாகிய குறிப்புப் பொருளை உடையதன்றி, வெளிப்பபைபொருளதன்று ஆகலானும், அதனை விலக்குதற்கு இங்கு ஓர் இயைபின்மையானும் என்க. மற்று, பரத்தையர் மயக்கத்திற்பட்டாரைத் தெளிவித்தல் அரிதாதலாகிய உலகியலை வைத்து, 'மாயையின் மயக்கத்திற்பட்டாரைத் தெளிவித்தல் அரிது' என்பதையே உணர்த்திற்றாம். ஆகவே, உடம்பு மாயையேயாகலின் அதுவே பரத்தை. திருவருளால் தோன்றும் சிவஞானமே இல்லக் கிழத்தி. அவளோடே கூடியிருப்பின், நாற் பயனும் நன்கு விளையும். இவளது மயக்கிலே வீழ்ந்தால், அனைத்துப் பயனும் கெடும்.
இப்பரத்தை உடுத்தியுள்ள அழகான சீலை தோல். தசை தசைகளே. எண்ணெய் - உதிரம். இஃது உலகியற் பொருளில் ஆகு பெயராய் மேனியழகைக் குறித்தது. காறை, எலுமப். நாண் - கயிறு; நரம்புகள். வளையல், நேர்நில்லாது வளைகின்ற மயிர்கள். ஆறு, ஆற்று நீர். ஐக்குழி - அழகிய குழி; என்றது அதன் சுழியை. அஃது இங்கு உவமையாகுபெயராய், உவமையில் உந்தியையும், பொருளில்

கருப்பையையும் உணர்த்திற்று. 'ஆற்றைக் குழி' என்னும் றகர ஒற்று, எதுகை நோக்கித் தொகுக்கப்பட்டது. மங்கையர் முயக்கில் மயங்கு - வாரை அவர்தம் உந்தியாகிய மடுவில் வீழ்பவராகக் கூறுதல் வழக்கு.

'மன்றலங் கொந்துமிசை தெந்தனந் தேந்தெனென்
வண்டினம் கண்டுதொடர் குழல்மாதர்
... ... உந்திஎன் கின்றமடு விழுவேனை
உன் ... ... அடி சேராய்'

என்னும் திருப்புகழைக் காண்க.

'சீலைபோல்' என வாளா கூறாது, பாறையில் உற்ற சீலைபோல்' என்றமையால் அச்சீலை விரைவில் ஈரம் இழத்தல் போல, அறிவையிழத்தல் குறிக்கப்பட்டது.

இதில், 'பரத்தையர்' என்னும் முதற்பொருள் ஆற்றலால் கொள்ளக் கிடந்தது.

இதனால், உலகியலில் பரத்தையர் மோகம் நோயும், வறுமையும் போலும் பெருந்துன்பங்களைப் பயத்தல் போல, மெய்ந் நெறியில் உடல் மோகம் பிறவித் துன்பத்தைப் பயக்கும் என்பது உள்ளுறையாக உணர்த்தப்பட்டது.

துருத்தியுள் அக்கரை தோன்றும் மலைமேல்
விருத்திகண் காணிக்கப் போவார்முப் போதும்
வருத்திஉள் நின்ற மலையைத் தவிர்ப்பான்
ஒருத்திஉள் ளாள்அவள் ஊரறி யோமே. *#2843*

ஆற்றிடைக் குறை ஒன்று உள்ளது; அந்த ஆற்றின் அக்கரையில் மலை ஒன்று இருக்கின்றது. அந்த மலைமேல் நின்று தமது செயல்களைக் கண்காணிக்க நாள்தோறும், 'காலை, மாலை, இரவு' என்பவற்றில் எப்பொழுது வேண்டுமானாலும் ஒருவர் போகின்றார்'; திரும்பி வருகின்றார். அவரது கண்காணிப்பை முதலில் சிறிது சிறிதாகவும், பின்பு முழுமையாகவும் தன்பால் ஈர்த்து, அவரை அந்த மலைக்குச் செல்லாதபடி தடுக்கின்ற ஒருத்தி அவரோடு கூடவே இருக்கின்றாள். அவள் எந்த ஊரைச் சேர்ந்தவள் என்பதை நாம் அறியமாட்டோம்.

விளக்கவுரை

'துருத்தி' என்பது ஆற்றிடைக்குறை. கொல்லன் துருத்தி இரண்டையும் குறிக்கும் பலபொருள் ஒரு சொல்லாகலின், அது வெளிப்படைப் பொருளில் ஆற்றிடைக் குறையையும், குறிப்புப்பொருளில் கொல்லன் உலைத்துருத்தியையும் குறித்தது. கொல்லன் உலைத்துருத்தியாவது சுவாசத்தை வாங்கியும், விட்டும் நின்ற சுவாச கோசம். எனினும் அஃது, அதற்கு இடமாய் உள்ள உடல் முழுவதையும் குறித்தது. 'உடல்' என்பது தலைக்குக்கீழ் உள்ள பகுதிக்கெல்லாம் பெயராய், மூலாதாரம்,

உந்தி, இருதயம், கண்டம் ஆகியவற்றைக் குறித்தது. எனவே, அக்கரையில் உள்ள மலையாவது புருவ நடு. அதுவே ஆன்மாவின் சாக்கிரத்தானம் ஆதலின் உயிர் தன் கருவி கரணங்களின் வாய்ப்பிற்கு ஏற்ப மூலாதாரத்தினின்று படிப்படியாக மேல் ஏறி வந்து தன் செயலைக் கண்காணிக்கும் இடமாயிற்று. ஆகவே, 'போவார் ஆவார் உயிர்' என்பது விளங்கும். 'போவார்' எனவே, 'வருவார்' என்பதும் அமைந்தது. போதல் மேல் ஏறுதலையும், வருதல் கீழ் இறங்குதலையும் குறித்தன. இவை முறையே மேலாலவத்தை, கீழாலவத்தை எனப்படும். இவற்றின் இயல்பெல்லாம் முன் தந்திரத்தில் விளக்கப்பட்டன.
இனி மறதியை உண்டாக்குவது ஆணவ மலமேயாதலின், 'மலையைத் தவிர்ப்பாள் ஒருத்தி' என்றது ஆணவ மலத்தையேயாம். ஆணவ மலம் வந்தவாறு அறியப்படாமையால், 'அவன் ஊரறி யோமே' என்றார்.
விருத்தி - தொழில். வருத்தி - வருவித்து; தன்பால் ஈர்த்து.
இதனால், முன் தந்திரத்தில் வெளிப்படையாகச் சொல்லப்பட்ட மேலாலவத்தை கீழாலவத்தையின் இயல்புகள் உள்ளுறையாக உணர்த்தப்பட்டன.

பருந்துங் கிளியும் படுபறைக் கொட்டத்
திருந்திய மாதர் திருமணப் பட்டார்
பெருந்தவப் பூதம் பெறல்உரு ஆகும்
இருந்திய பேற்றினில் இன்புறு வாரே. *#2844*

கானக மக்களில் மங்கைப் பருவம் எய்திய மகளிர், உண்மை வாச்சியங்களில் ஏதும் இன்றிப் பருந்தும் பறவையும், ஓசை வேறுபட்டபோதிலும் அடிநிலையிசை ஒன்றேயாக முழக்குகின்ற ஓசைகளையே வாச்சியமாகக் கொண்டே எப்பொழுதும் திருமணம் செய்து கொள்ளப்படுகின்றார்கள். அவர்கட்குப் பிறக்கின்ற பிள்ளை களும் பேயும், பூதமுமாகவே பிறக்கின்றன. ஆயினும் அவர்களில் யாரும் இதைப் பற்றி வருந்துவதாகத் தெரியவில்லை. மகிழ்ச்சி யுடனேயே வாழ்கின்றார்கள்.

விளக்கவுரை

'இது வியப்பு' என்பது குறிப்பெச்சம். உண்மை வாச்சியம் அருள் நாதம். பருந்து தீவினை. கிளி நல்வினை. இவை பறை கொட்டல், ஆரவாரத்தைத் தோற்றுவித்தல். அடிநிலையிசை. ஆணவ மலம். கானக மகளிர், கருவி கரணங்கள். அவர்கள் பருவம் அடைதல், ஒடுங்காது எழுச்சியுற்று நிற்றல். இவர்கட்குக் கணவராகும் கானவர், பெத்தான்மாக்கள். அதீதம் முதலாகச் சாக்கிரம் ஈறாக உள்ள கீழாலவத்தைகள். பிறக்கின்ற பிள்ளைகள், இவ்வவத்தைகளில் நிகழும் அனுபவங்கள். இவைகள் திருவருளை நினைய ஒட்டாது,

மீட்டும் மீட்டும் வினைப்பயன்களையே நினைப்பித்தலால் அவை, 'பேய் பூதம்' என இகழப்பட்டன. ஆயினும் அவைகளின் உண்மை உணராது மகிழ்ந்து வாழும் உயிர்களை, 'இன்புறுவாரே' என்றார். ஏகாரம், தேற்றம்.
'பருந்தும், கிளியும் படுபறை கொட்ட' என்ற குறிப்பினால், மணம் கானவர் மணமாதல் அறியப்பட்டது. 'பெறல் உரு, தவப் பெரும் பூதம் ஆகும்' என மாற்றிக்கொள்க. 'ஆகும், இன்புறுவார்' என்பன போலவே, 'படுவார்' என எதிர்காலமாக ஓதற்பாலதனையே வேறோ ராற்றால், 'பட்டார்' என இறந்த காலமாக மயக்கிக் கூறினார். 'இருந்த' என்னும் பெயரெச்சம் இடையே ஓர் இகரம் பெய்து விரிக்கப்பட்டது. இதனால், முத்திறத்து ஐந்தவத்தைகளுள் சகல ஐந்தவத்தையும் கேவல ஐந்தவத்தையும் பயனிலவாதலை உணர்ந்து சுத்தாவத்தையிற் செல்லமாட்டாதவாறு இழிவு உள்ளுறையாக உணர்த்தப் பட்டது.

கூடு பறவை இரைகொத்தி மற்றதன்
ஊடுபுக் குண்டி யறுக்குறில் என்னாக்கும்
சூடெறி நெய்யுண்டு மைகான றிடுகின்ற
பாடறி வார்க்குப் பயன்எளி தாமே. *#2845*

கூட்டில் வாழும் பறவை இரையைத் தேடித் தின்று விட்டுக் கூட்டிற்குள் புகுந்து பின் அதனைச் சீரணிக்கப் பண்ணிக் கொண்டுமட்டும் இருந்தால், அந்தப் பறவை தனக்கு என்ன உறுதிப் பயனைச் செய்துகொள்ளும்? (ஒன்றையும் செய்து கொள்ளாது. ஆகலின் தம் உயிர்க்கு உறுதி செய்துகொள்ள விரும்புவோர் அந்தப் பறவையின் செயலைக் கைக்கொள்ளாமல் விடுத்து,) நெய்யை உணவாக உண்டு அதனாலே ஓங்கி எரிகின்ற நெருப்புப் பின் நறுமணமும், குளிர்மையும், அழகையும் உடைய சாந்தத் தருகின்ற அந்த மேலான செயலை நோக்கி, அதனைக் கடைப்பிடிக்க.

விளக்கவுரை

'கூட்டுப் பறவை' என்னும் பகர ஒற்று, எதுகை நோக்கித் தொக்கப்பட்டது. 'மற்று', வினைமாற்றின் கண் வந்தது. அறுதல் - சீரணித்தல். 'அற்றால் அளவறிந்துண்க'8 என்பது காண்க. அறுத்தல் - சீரணிக்கப்பண்ணுதல். சீரணித்தல் இயல்பிலே நிகழ்வ தாயினும் அது தவிரப் பிறிது செய்யாமையைக் குறித்தற்கு, அதனைப் பரவையால் செய்யப்படுவதுபோலக் கூறினார். உணவை உண்டு அதனைச் சீரணித்துக் கொள்வதனோடு அமைகின்ற உயிர்கள் பல உள ஆயினும் கூட்டில் வாழும் பறவையையே கூறினார், அஃது உடம்பில் வாழும் உயிரைக் குறித்தற்கு, 'கூடு' என்பது உடம்பிற்கும் பெயர். அதனை, 'கூடு விட்டிங்கு ஆவிதான் போயின பின்பு ஆரே அனுப

விப்பார் - பாவிகாள் அந்தப் பணம்'9என்பதனானும் அறிக. 'சுடு' என்பது எதுகை நோக்கி நீண்டமையால் ஈற்றுகரம் குற்றுகரமாய் உயிர் வரக்கெட்டது. 'சுடு எரி' முக்கால வினைத்தொகை. நெய்யை உண்டு, மையைக்காலும் எரி, விளக்கெரியும், ஓம குணடத்து எரியும். பாடு - உயர்வு; மேன்மை. 'அறிவார்க்குப் பன் எளிதாமே' என்றாராயினும் 'பயன் வேண்டுவார் அறிந்து கடைப்பிடிக்க' என்பதே கருத்து.

இதனால், 'மக்கள் உணவைத்தேடி உண்டு உடம்பை வளர்ப் பதால் மட்டும் எந்தப் பயனும் இல்லை; அவ்வளர்ச்சிக்கு ஏற்ப மெய் யறிவையும் வளர்த்து, அதற்கேற்ற செயல்களையும் உடையராதல் வேண்டும்' என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

இலையில்லை பூவுண்(டு) இனவண்டிங் கில்லை
தலையில்லை வேர்உண்டு தாள்இல்லை பூவின்
குலையில்லை கொய்யும் மலர்உண்டு சூடும்
தலையில்லை தாழ்ந்த கிளைபுல ராதே. *#2846*

எல்லாச் சமயங்கட்கும் வேர்போன்றது திருவருள். அஃதாவது, 'திருவருட் குறிப்பின்றி, எந்தச் சமயமும் உலகில் இருக்கவில்லை' என்பதாம். அத்திருவருளே உணர்ந்த சமயங்கள் வேரின்மேல் வளர்ந்து தழைத்த மரங்களாகும். திருவருளை உணராத சமயங்கள் வளராது முடம்பட்ட மரங்களாம். அவைகளையே, 'வேர் உண்டு; தலையில்லை' என்றார்.

விளக்கவுரை

பிறர்க்கு உறுதிப்பொருள்களை நன்கு விரித்துரைப்பாரது விரிவுரைகள், நல்லாசிரியரது உபதேசத்தின் வழி அமைந்தனவாயின், அவை பசுமையோடு தழைத்த இலைகளின் நடுவிலே பூத்த பூக்களாய், 'பயன்' என்னும் தேன் உள்ளூறப்பெற்று நுகர்ந்து மகிழத் தக்கனவாய் இருக்கும். தான்றோன்றிகளாய் உள்ளாரது விரிவுரைகள் அத்தன்மை உடையன ஆகா. அவைகளையே, 'இலை இல்லை; பூ உண்டு; இன வண்டிங்கில்லை' என்றார். இவையும் மேற்குறித்த சமயங்களின் பிரச்சாரங்களையேயாம்.

பிற சில கொள்கைகளில் வேறுபாடு உளவாயினும் கடவுட் கொள்கையுடைய சமயங்களிடையே 'திருவருள் என்னும் ஓர் ஒற்றுமை உண்டு. அதனால் அவை ஒரு கொத்திலே பூத்த பூக்கள் போல விளங்கும் கடவுட் கொள்கையில்லாத சமயங்களிடையே அத்தகைய ஒற்றுமையில்லாமையால், அவை ஒன்றோடொன்று சேராத தனிப் பூக்கள் போலும். (தனிப் பூவிலும், கொத்தாய் உள்ள பூக்கள் சிறந்து நிற்றல் தெளிவு. இத்தன்மை பற்றிக் கடவுட்

கொள்கையில்லாத சமயங்களை, '(பூவுண்டு; ஆயினும்) பூவின் குலையில்லை; (அதற்குக் காரணம்) தாள் இல்லை' என்றார். குலை - கொத்து. தாள் - காம்பு.
கடவுட் கொள்கை இல்லாவிடினும், 'நல்லதன் நலனும், தீயதன் தீமையும் இல்லன அல்ல; அங்ஙனமே அவற்றிற்கு ஏற்ற மறுபிறப்புக்களும இல்லன அல்ல'எனக் கொள்ளும் சமயங்கள் உள. 'அவை பலரால் எளிதில் பின்பற்றப் படுதலால், எளிதில் பறிக்க வரும் மலர்போல்வனவாம். ஆயினும் கடவுட் கொள்கை இல்லாமையால், நாற்றம் இல்லாத மலர் போலும். அதனால் அவை சூடப் பெறும் தலைகளை இல்லனவாம் - என்பதனை, 'கொய்யும் மலர் உண்டு; சூடும் தலையில்லை' என்றார்.
இனி, மலர்கள் எளிதில் கொய்ய வருவதற்குக் காரணம், அவை பொருந்தியுள்ள கிளை தாழ்ந்திருத்தலேயாம். 'அதுபோல நாற்றம் இல்லாத மலர்கள்போலும் அந்தச் சமயங்கட்கு அடி நிலை யாகிய, கடவுட் கொள்கையற்ற வெற்றறம் உலகில் நிலை பெற்றுத்தான் உள்ளது' என்பதை, 'தாழ்ந்த கிளைபுலராதே' என்றார். புலர்தல் - உலர்தல்; வற்றுதல். கிளை வாடாமைக்குக்; காரணம், வேர் பசுமையாய் இருத்தல். 'சமயங்களின் வேர் திருவருட் குறிப்பு' என நாயனார் முதற்கண் கூறியதை நினைக.
இரண்டாம் அடியின் முற்பகுதியை, 'வேர் உண்டு இலையில்லை' என மாற்றி முதலிற் கூட்டியும், அதன் பின்னர், 'பூவின் குலையில், (காரணம்) தாள் இல்லை' என மாற்றியும் பொருள் கொள்க. 'பூவின் குலையில்லை' என்று மட்டுமே கூறியதால், 'பூ உண்டு' என்பது பெறப்பட்டது.
இதனால், 'புறப்புறம், புறம்' என்னும் இரு கூற்றுப் புறச் சமயங்களின் இழிபுகள் 'மருட்கை' என்னும் மெய்ப்பாடு தோன்ற, உள்ளுறையாகக் கூறப்பட்டன.

அக்கரை நின்றதோர் ஆல மரங்கண்டு
நக்கரை வாழ்த்தி நடுவே பயன்கொள்வர்
மிக்கவர் அஞ்சு துயரமும் கண்டுபோய்த்
தக்கவர் தாழ்ந்து கிடக்கின்ற வாறே. #2847

மக்கள் யாவரும் வினைத் தொடர்ச்சியாகிய ஆற்று வெள்ளத்தில் போய்க்கொண்டிருப்பவரே. ஆயினும் அவருள் ஒரு சிலர் மட்டும் ஆற்றின் அக்கரையில் ஓர் ஆலமரத்தையும், அதன் கீழே உடையின்றியிருக்கும் ஓர் அந்தணரையும் கண்டு வாழ்த்து கின்றார்கள். அதனால் அவ்வந்தணரால் தாம் கடலிற் சென்று விழுவதற்கு முன்னே கரைசேர்க்கவும் பெறுகின்றார்கள். மற்றவர்

களும் அவ்வாறே கரை சேரலாம். ஆயினும் அவ்வாறு செய்யாமல் ஐந்து வகையான துன்பங்களை அனுபவித்துக் கொண்டு வெள்ளத்திலே மிதந்து போய்க் கொண்டிருக்கின்றார்கள்.

விளக்கவுரை

'வெள்ளம் கடலிற் கொண்டுபோய் விடுதல் உறுதி' என்பது கருத்து.

'ஆல நீழல் உகந்த திருக்கையே;
ஆன பாடல் உகந்த திருக்கையே'3

என்பது முதலாக வரும் பல அருட்டிரு மொழிகளால் ஆலமர நிழல் சிவபிரானது இருக்கையாதல் தெளிவு. சங்க இலக்கியங்கலிலும் இது பெறப்படும். ஆகவே, 'நக்கர்' என்றது சிவபிரானையே என்பதில் ஐயமில்லை. நடுவே - கடலில் சென்று வீழ்வதற்கு முன்பே ஆல மரத்தை அக்கரைக்கண் நிற்பதாகக் கூறியது, சிவன் வினைத் தொடர்ச்சியோடும், பிறவிப் பெருங்கடலோடும் யாதொரு தொடர்புமின்றி அகல நிற்றலைக் குறித்தற்கு. ஆற்று வெள்ளத்திற் போவாரைக் கரைக்கண் நிற்பார் கரை சேர்த்தல் கூடுமன்றி, போவாருள் ஒருவர்க்கு அது கூடாமை சொல்ல வேண்டா.

ஆற்று வெள்ளத்திற் போவாரைக் கரைக்கண் நிற்பவர் கண்டால், எவரும் தாமே சென்று மீட்பர். அதற்கு மேல், அதற்கு மேல், வெள்ளத்திற் செல்வார் அவர்களை அழைத்து வாழ்த்தினால், அந்தணர் ஒருவர் மீட்கா தொழிவாரோ? ஒழியார். ஆதலின் 'வாழ்த்திப் பயன் கொள்வர்' என்றார்.

ஆல மரம் விரிந்து படரக் கூடியது; அதன் விழுதுகள் எத்துணைத் தூரமும் எட்டக் கூடியன. ஆகவே, ஆலமரத்தின் கீழ் உள்ள அந்தணர் அந்த விழுதுகளில் ஒன்றன் வழியாக செல்வாரை எளிதில் மீட்பார். ஆயினும் அந்தணர் வீசும் ஆலம் விழுதை ஆற்றிற் செல்பவர்கள் பற்ற வேண்டுமன்றோ! 'அது செய்யாமல் ஆற்றிற் செல்பவர்கள் பற்ற வேண்டுமன்றோ! 'அது செய்யாமல் பலர் ஆற்றோடே போகின்றனர்' என்பதை, 'தக்கவர் தாழ்ந்து கிடக்கின்றவாறே' என்றார். தாழ்தல், ஆற்றில் வீழ்தல்.

ஆல மரம், வேதம். அதன் விழுதுகள், அதன் வழி நூல் சார்பு நூல்கள். ஆல மரமே பண்டு தொட்டு அருள் வடிவான மரமாகக் கொள்ளப்பட்டு வர, அதனை மாற்றி, அசோக மரத்தையும், அரச மரத்தையும் கொண்டவர்களையும், அவருள் ஒரு சாரார், 'நக்கன்' என்பது, 'திசைகள் தவிர வேறு ஆடை இலன் என்பதாகப் பொருள் தந்து, விபாயக நிலையை உணர்த்தி நிற்க, அதனை யறியாது, உலகியலுக்கு மாறாய், 'ஆடையின்றி யிருப்பவன்' எனப் பொருள் கொண்டவர்களையும் குறிப்பிற் குறிப்பாய் உணர்த்தற்குச் சிவனை வேறோராற்றால் சுட்டாது, 'நக்கன்' எனச் சுட்டினார்.

அசோகும், அரசும் ஆற்றிற் செல்வாரை மீட்கலாகாமை -யையும் நோக்குதல் வேண்டும்.

மிக்கவர் - எஞ்சினோர் 'அஞ்சு துயரம்' என்பது வெளிப்படைப் பொருளில், 'பல துயரம்' என்றும்' உள்ளுறைப் பொருளில் பஞ்சேந் திரியங்களின் துயரம் என்றும் பொருள் தரும். கிடக்கின்றவாறு இரங்கத் தக்கது' என எஞ்சி நின்ற சொல்லெச்சத்தோடு முடிக்க. இதனால், முன் மந்திரத்தில் பொதுப்படக் கூறிய சமயங்களுல் ஒரு சாரனவற்று இரங்கத் தக்க நிலை வகுத்துக் கூறப்பட்டது. இதனால், காலத்திற்றானே களப்பிரர் ஆட்சி முதலிய காரணங்களால் தமிழ்நாட்டில் சிவனடியார்கட்கு இடுக்கண் தோன்றினமையை உணர்தல் கூடும்.

கூப்பிடும் ஆற்றிலே வன்கா(டு) இருகாதம்
காப்பிடு கள்ளர் கலந்துநின் றார்உளர்
காப்பிடு கள்ளரை வெள்ளர் தொடர்ந்திட்டுக்
கூப்பிடும் ஈண்டதோர் கூரைகொண் டாரே. *#2848*

கூப்பிடு தூரத்தளவேயான குறு வழி ஒன்று உள்ளது. அதற்குள்ளே கடுமையான இரண்டு காடுகள் தனித்தனி ஒவ்வொரு காதம்போல உள்ளன. அந்தக் காடுகளில் வழிச் செல்வாரே மறித்துக் கொண்டுபோய் சிற்றறையில் அடைத்து வைக்கின்ற கள்வர்கள் வாழ்கின்றார்கள். ஒன்றும் அறியாத வழிப்போக்கர்கள் அந்தக் கள்வரை வழிகாட்டுபவராகக் கருதி அவரைப் பின் பற்றிச் சென்று, தமக்கு உதவுபவரை அழைக்க வேண்டிய நிலைமையராய் இச்சிறுவழியில் சிறு குடில் ஒன்றே புகலிடமாக அடைகின்றனர்.

விளக்கவுரை

ஓரிடத்தில் நின்று அழைத்தல், வேறோர் இடத்தில் உள்ளவர் காதில் விழுகின்ற அளவு தூரத்தை, கூப்பிடுதூரம்' என்பர். நெடுவழியின்றிக் குறுவழி' என்றற்கு, 'கூப்பிடும் ஆறு' என்றார். ஆறு - வழி. இந்தக் குறுவழியாவது, எண்சாண் உடம்பேயாம். இதிற் செல்லும் வழிப்போக்கர், உடம்பில்வாழும் உயிர்கள். 'வன்காடு இரண்டு' என்பது, சொல்வாரது குறிப்பால் விளங்கிற்று. அவை 'கீழாலவத்தை, மேலாலவத்தை' என்பன. அந்தக் காட்டிலே வாழும் கள்வர் கருவிகள். (தத்துவ தாத்து விகங்கள்) இவைகள் மிகுதியாக உயிரைமேல் ஏற்றினால், புருவ நடுவிற்கு மேற் செல்லவிடாது அவ் விடத்தே தடுத்து நிறுத்தலால் 'காப்பிடு கள்வர்' என்றார். இதனால் இக்கள்வர்கள் எய்தும் பயன் மெய்யறிவாக பொருளைக் கவர்ந்து கொள்ளுதலாம். (கருவிகள் சடமாயினும் உருவக நயம் பற்றிப் பயன் எய்துவனபோலக் கூறினார்.) எண்சாண் உடம்பில் புருவநடு ஓரங்குலமே யாதலாலும் அதற்குள்ளே உயிர் நிற்றலாலும் 'இந்தக் குறுவழிக்குள்ளே ஒரு சிறுகுடிலில் அடைபட்டுக் கிடக்கின்றார்கள்' என்பார், 'ஈண்டதோர்

கூரை கொண்டாரே' என்றார். 'ஈண்டு' என்றது, முன்னர்க் கூறிய கூப்பிடு தூரத்தை. கூரையாவது குடில்.

'சிறு குடில்' எனப்பட்டது புருவ நடுவாகவே, அதன்கண் அடைபட்டிருத்தல், கேவல சாக்கிரமும், மாசகலமும் ஆயிற்று. அவற்றில் கிடைப்பன. பெரிய அளவாகக் கூறின், ஐம்புல இன்பங்களுக்குமேல் இல்லை. அவையும் கண்டதையே கண்டும், உண்டதையே உண்டும், பிறவும் இவ்வாறானவேயாம். அந்நுகர்ச்சி களும் கருவிகளின் சேட்டையால் நிலையின்றி, 'சொப்பனம், சுழுத்தி' என்று இப்படியான நிலைகளால் இழக்கப்படுவனவேயாம். இவற்றை யெல்லாம் அடைபட்டிருப்பர் எண்ணி இன்னலுறுவாராயின் இந்தச் சிறுகுடிலினின்றும் தம்மை மீட்டு உதவுபவரை அழைக்கவே செய்வர். அதனால் அக்குடில், 'கூப்பிடு கூரை' எனப்பட்டது. உதவுவது திருவருளேயாதலான் அதனை அவர்கள் அழைத்தே ஆக வேண்டும். அழைத்தவாற்றை,

'தரிக்கிலேன் காய வாழ்க்கை;
சங்கரா போற்றி! போற்றி!!'3
'தினைத்துணை யேனும் பொறேன் துயர் ஆக்கையின்
திண்வலையே'l

என்பன முதலியவாற்றான் அறிக.

திருவருளாள் உயிர் புருவ நடுவற்கும் மேலே செலுத்தப் படுமாயின் துவாதசாந்தப் பெருவெளியை அடைதலாகிய யோகா வத்தையையும் அதனையும் கடந்து அகண்டாகாரமாய் நிகழும் ஞானா வத்தையையும் எய்தும். 'அவ்வாய்ப்பினைப் பெறாத உயிர்கள் சகல கேவலங்களில் நின்று புருவ நடுவை மட்டுமே மேல் நிலையாகக் கொண்டு, இருட்டறையில் கிடக்கின்றன' என்பதே இம்மந்திரத்தால் உள்ளுறையாக உணர்த்தப்பட்டது.

கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திடை
எட்டியும் வேம்பும் இனியதோர் வாழையும்
கட்டியும் தேனும் கலந்துண்ண மாட்டாதார்
எட்டிப் பழத்துக் கிளைக்கின்ற வாறே. *#2849*

குளம் ஒன்றில், பொருட்படுத்தி எண்ணலாகாத கொட்டியும், சிறந்தனவாகிய வெல்ளாம்பல் செவ்வாம்பல்களும் பூத்துள்ளன. அதுபோலவே, பார்வைக்கு அழகாய் உண்டால் கொல்லும் எட்டிப் பழமும், அழகும் இன்றி, இனிமையும் இன்றி, உண்டால் நோயைத் தீர்க்கும் வேப்பம் பழமும் அழகும், இனிமையும் உடையதாய், உண்டால் பசியைத் தீர்த்து, உடல் நலத்தை நல்குவ தாகிய வாழைப் பழமும் அந்தக் குளக்கரையில் பழுத்திருக்கின்றன. வாழையே மேலும்

சுவைப்படுத்தி உண்ண வேண்டுமாயின், கட்டியும், தேனும் மக்கட்குக் கிடையாதன அல்ல; எங்கு கிடைப்பனவே. ஆகவே, வாழப்பழத்தைப் பறித்துக் கட்டியும், தேனும் கலந்து உண்டு, நாவிற்கு நறுஞ்சுவை பெற்றுப் பசி தீர்ந்து, உடல் நலத்தையும் எய்துமளவிற்கு அறிவில்லாத மக்கள், பார்வைக்குக் கவர்ச்சியாய் உள்ள எட்டிப் பழத்தையே பெவேண்டி, 'அதனை அம்மரத்தில் ஏறிப் பறிப்பது எவ்வாறு' என்று எண்ணுவதிலேயே காலம் கழித்து இளைக்கின்றார்கள். இஃது இரங்கத் தக்கது.

விளக்கவுரை

'உலகம் சிறுமையும், பெருமையும் கலந்தது' என்பதை முதல் அடி விளக்கிற்று. கொட்டிப்பூ, சிறியனவற்றையும், ஆம்பற் பூ, பெரியனவற்றையும் குறித்தன. இரண்டாம் அடி இறுதியில், 'பழுத்துள்ளன' எனச் சொல்லெச்சம் வருவிக்க. 'குளத்திடை பழுத் - துள்ளன' என்றாரேனும், 'அதன் கரையில் பழுத்துள்ளன' என்பதே கருத்து. 'குளம்' என்றதும், 'குளக்கரை' என்றதும் உலகத்தையே. எட்டிப் பழமாவது, 'முற்பயக்கும் சின்னீர இன்பத்திற் பிற்பயக்கும் பீழை பெரிதாம்'* காம இன்பம். வேப்பம் பழமாவது, கவர்ச்சியும், தன்னலமும் இல்லாது, செய்தால், முன்பு உள்ள பாவத்தைப் போக்கும் பசு புண்ணியங்கள். வாழைப் பழம், பத்தியுடைய உள்ளங்கட்கு விருந்தாய், என்றும் நிலைத்து நின்று, ஞானத்தைத் தரும் சிவபுண்ணியங்கள்.

கட்டியும் தேனும் சிவபுண்ணியங்களைச் சிறப்பித்துக் கூறும் சிவ தோத்திர சாத்திர நூல்கள்.

'இளைக்கின்றவாறு இரங்கத் தக்கது' எனச் சொல்லெச்சம் வருவித்து முடிக்க.

இதனால், 'நன்மையும், தீமையும் கலந்துள்ள இவ் வுலகத்தில் அறிவுடையோர் தீமையை விலக்கி, நன்மையைப் பொருந்தி இன்புறுவர்' என்பதும், 'அறிவிலார், நன்மையை விலக்கித் தீமையைப் பொருந்தித் துன்புறுவர்' என்பதும் உள்ளுறையாகக் கூறப்பட்டன.

பெடைவண்டும் ஆண்வண்டும் பீடிகை வண்ணக்
குடைகொண்ட பாசத்துக் கோலம்உண் டானும்
கடைவண்டு தான்உண்ணும் கண்கலந் திட்ட
பெடைவண்டு தான்பெற்ற தின்பமு மாமே. *#2850*

வண்டினங்களில் 'அரசவண்டு' (கோத்தும்பி) எனச் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற அந்த இனத்தில் பெண் வண்டும், ஆண் வண்டும் உயர்ந்த தாமரை மலர்களையே நாடிச் சென்று தேன் நுகர்தலுடன், அவற்றை அரியணையாகவும், வெண்கொற்றக் குடையாகவும்

கொண்டு அன்புடன் கலந்து அரசு வீற்றிருக்கும். சிற்றின வண்டுகளும் இனத்தால் அவற்றோடு ஒப்பனவாயினும் அவை அத்தன்மையின்றிச் சிறு பூக்களையும் நாடி ஒடுலுடன், மற்றும் தம் கண் சென்று கலந்த பொருள்களின் மேல் எல்லாம் ஓடிச்சென்று விழும். ஆகவே, அவ்வினத்துப் பெண்வண்டு அதன் ஆண் வண்டினால் இன்பம் பெற்றதாயினும் அந்த இன்பம் அரசப் பெண் வண்டு, அரச ஆண் வண்டினால் பெற்ற இன்பம் ஆகுமோ! ஆகாது.

விளக்கவுரை

'உடையான், அடியார்' என்னும் முறைமையில் சிவனும் சிவன் அடியார்களும், ஏனைத் தேவரும் அவன் அடியார் களும் ஒரு தன்மைப்பட்டவர் போலக் கருதப்பட்டாலும், சுத்த போகத்தையன்றித் தராமையும் நாடாமையும், மற்றும் அனைத்துலகங்களையும் ஆட்சி செய்யும் உரிமையும், 'இருநிலத்தல் எமக்கெதிரா வாருமில்லை'*\'20'தென்றிசைக்கோன் தானே வந்து - கோவாடிக் குற்றேவல் செய்கென்றாலும் குணமாகக் கொள்ளோம்' என இருக்கும் பெருமிதமும், இவ்வாறன்றிச் சில விடத்தளவில் சிலவற்றை மட்டுமே தரும் உரிமையும், காமம், வெகுளி, மாற்சரியம் காரணமாகத் தலைப்படும் செயல்களில் வெற்றியைத் தருதலும் விரும்புதலும், அவற்றுள்ளும் தம்மின் வலியாரைக் காணின் அஞ்சு தலும், மூவகைத் துன்பங்களில் ஆதி தெய்விகமாய் வருவனவற்றைக் கடப்பிக்கவும், கடக்கவும் மாட்டாமையும் போல்வனவற்றை நோக்கின், அவ் இரு திறத்தவர்க்கும் இடையேயுள்ள வேறுபாடு, மலைக்கும் மடுவுக்கும் இடையேயுள்ள வேற்றுமை போல்வதாம். ஆகவே, ஏனைத் தேவரையடைந்து அவன் அடியார் பெறும் இன்பம், சிவனை யடைந்து, அவன் அடியார் பெறும் இன்பம் ஆகாது என்பதைப் 'பிறிது மொழிதல்' என்னும் அணிவகையால் தோற்றுவித்தது இம்மந்திரம். சிவானந்தத்தைத் 'தேன்' என்றல் மரபாகலின், அதனை நுகரும் அடியார்களை வண்டாக உருவகிப்பார், அதற்கேற்ப ஏனையவற்றையும் ஒருபுடை ஒப்பாக வைத்து உருவகித்தார். 'கடைவண்டு' எனப் பின்னர் வருதலால், முன்னர்க் கூறப் பட்டவை அரச வண்டாயின. அரச வண்டிற்கு ஏற்புடைமை பற்றி, 'பீடிகையும், குடையும் ஆவன தாமரை மலர்கள்' என்பது அறியப்படும். கொண்ட பாசம், கொள்வதற்கு ஏதுவாய் நின்ற பாசம். கோலம் - உருவம். 'பாசத்தையுடைய உருவம்' என்க. 'உண்டாயினும்' என்பது, 'உண்டானும்' என மருவி நின்றது. 'எனைத்தானும் நல்லவை கேட்க'9 என்பதிற்போல. 'கலந்திட்ட வற்றை' என இரண்டாவது இறுதிக்கண் தொக்கது. ஈற்றில் நின்ற பெடை வண்டு, கடை வண்டு இனத்தைச்

சார்ந்தது. ஏகாரம், எதிர்மறைப் பொருட்டாய் வினா.
இதனால், 'சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை' என முதற்கண் கூறப்பட்ட பொருள் உள்ளுறையாக வலியுறுத்தப் பட்டது.
(இதன் பின் பதிப்புக்களில் காணப்படும் 'கொல்லையில் மேயும் பசுக்கள்' என்னும் மந்திரம் ஏழாந் தந்திரத்தில் வந்தது.)

தட்டத்து நீரிலே தாமரை பூத்தது
குட்டத்து நீரில் குவளை எழுந்தது
விட்டத்தி னுள்ளே விளங்கவல் லார்கட்குக்
குட்டத்தில் இட்டதோர் கொம்மட்டி யாமே. *#2851*

தட்டம் - ஆழம் இன்றிப் பரவலாகத் தேங்கியுள்ள நீர். குட்டம் - ஆழமாய்ச் சிறிது இடத்தில் நிற்கும் நீர்; குளத்து நீர் போல்வது முன்னதில் குவளையும், பின்னதில் தாமரையும் பூத்தல் இயல்பு. ஆயினும் இங்கு அவை மாறிக் காணப்படுகின்றன. ஆகவே, இவற்றை விரைந்து சென்று பறியாமல், பக்கத்தில் இருக்கும் மரக்கிளையில் சிறிது நேரம் யாரேனும் காத்திருப்பார்களாயின், இந்த முரண்பாட்டு நிலை நீங்குதல் தெரியவரும்.

விளக்கவுரை

தட்டத்து நீர் விரைவிற் காய்ந்து மறைந்து விடும். குட்டத்து நீர் நீடு நின்று பயன் தரும். ஆகவே, அவை முறையே உலகின்பத்தையும், வீட்டின்பத்தையும் குறித்தன.
தாமரை பெரு விருப்பினையும் குவளை சிறுவிருப்பினையும் குறித்தன. நிலையானதில் பெருவிருப்பும், நிலையாததில் சிறு விருப்பும் உண்டாதல் முறைமை. மெய்ப்பொருள் இயலில் இவை மாறி நிகழ்தலை முன் இரண்டடிகள் குறித்தன. இவை இயற்கைக்கு மாறாகலின் செயற்கையே. செயற்கை காரணம் உடைத்து. அஃது இங்கு ஆணவம். செயற்கை நிலையாதாகலின் ஆணவம் நீங்க இந்நிலை மாறித் தன்னியல்பு நிகழும். அதற்குச் சிறிது காலம் வேண்டும். அதனையே பன்னிரண்டடிகள் குறித்தன. பறித்தல், இங்கு அதனையே நிலையானதாகக் கருதுதல். விட்டமாவது, அதுபோலும் மரக்கிளை. விளங்குதல், அப்பால் செல்லாமல் காத்திருத்தல். கொம்மட்டி, ஒருவகைக்கொடி. அது நிலத்திற் படரும். ஆகவே, அதனை நீரில் இட்டால், அழுகிக் கெடும் ஆதலின், அது நிலையாமைக்கு உவமையாயிற்று. ஆக்கம் உவமை குறித்து நின்றது. 'ஆம்' என்னும் பயனிலைக்கு, 'அத்தன்மை' என்னும் தோன்றா எழுவாய் வருவிக்க.
இதனால், உயிர்கட்குச் சிவானந்த வேட்கையே இயற்கையும், விடயானந்த வேட்கை செயற்கையும் ஆதல் உள்ளுறையாக

உணர்த்தப்பட்டது.

ஆறு பறவைகள் ஐந்தத் துள்ளன
நூறு பறவை நுனிக்கொம்பின் மேலன
ஏறு பெரும்பதி ஏழும் கடந்தபின்
மாறுத லின்றி மனைபுக லாமே. *#2852*

ஐந்து இல்லங்கள் உள்ளன. அந்த ஐந்திலும் ஆறு வாவல்கள் வாழ்கின்றன. ஐந்து இல்லங்களில் ஒன்றில் உள்ள ஒரு மரத்தின் நுனிக் கிளையில் நூறு வாவல்கள் வாழ்கின்றன. (இந்த இல்லங்களில் எப்படி நாம் குடியிருக்க முடியும்?) வாவல் முதலிய எந்த இடையூறும் இல்லாத வேறோர் இல்லம் உள்ளது. அது போகப் போக உயரமாய் உள்ள இடத்தில் உள்ளது. அந்த ஏறு நிலை முறையில் ஏழு பெரிய ஊர்களைக் கடந்தால், அந்த இல்லத்துட் புகலாம்.

விளக்கவுரை

ஆறு வாவல்கள், காமக் குரோத லோப மோக மத மாற்சரியங்கள். ஐந்து அகம், பஞ்ச கோசங்கள். அவை முன் தந்திரத் தொடக்கத்தில் காட்டப்பட்டன. மரம், பிராணமய கோசம், அதன் நுனிக்கிளை, புத்தி தத்துவம். நூறு வாவல்கள், புத்தி தத்துவத்தின் அளவிலாப் பாவங்கள். நூறு, அளவின்மையைக் குறித்தது. பெரும் பதி ஏழு, ஆதாரம் ஆறும், 'நிராதாரம்' எனப்படும் சகச்சிராரமாகிய ஏழாம் தானமும். மனை, 'மீதானம்' எனப்படும் துவாதசாந்தம். பிரணவ யோகத்தால் அதனையடைந்தோர் சிவனைச் சார்வர். மாறுதல், பின் விட்டு நீங்குதல். இது பிறப்பு எய்துதலைக் குறித்தது.

' 'பறவை' எனப்பட்டன ஏற்புழிக் கோடலால் வாவலாயின. வாவல், இனத்தால் பறவையன்றாயினும், பறத்தல் பற்றி, 'பறவை' எனப்படும். இதனால், 'ஆதார யோக நிராதார யோகங்களில் நிற்பின், காமம் முதலிய அகப் பகைகளும், புத்தி குண பாவங்களும் நீங்கிச் சிவனைத் தலைப்படுதல் கூடும்' என்பது உள்ளுறையாக உணர்த்தப்பட்டது.

கொட்டனம்- செய்து குளிக்கின்ற கூவலுள்
வட்டனப் பூமி மருவிவந் தூறிடும்
கட்டனம் செய்து கயிற்றால் தொழுமியுள்
ஒட்டனம் செய்தெளி யாவர்க்கு மாமே. *#2853*

*['*அனம்' என்பது 'வட்டனம்' என்பதில் பண்புப் பெயர் விகுதியாகவும், ஏனைய மூன்றிலும் தொழிற்பெயர் விகுதியாகவும் வந்துள்ளது. 'கட்டு' என்பது அடியாக. 'கட்டணம், கட்டடம்' என்னும் சொற்கள் இக்காலத்தில் வழங்கக் காண்கின்றோம். இங்கும் 'அனம்' என்பதற்கு ஈடாக, 'அணம்' என்ற பாட வேறுபாடும் காணப்படுகின்றது. கூலிக் நெற்குற்றுதலை, 'கொட்டணம் குற்றுதல்' என்பர். எனவே,

இம்மந்திரத்தின் முதற்சீர் நான்கும் முறையே, 'கொட்டுதல், வட்டம், கட்டுதல், ஒட்டுதல்' என்னும் பொருளவாம். கொட்டுதல் - நிலத்தைத் தோண்டுதல்.]

நிலத்தைத் தோண்டி, மண் அல்லது மணலை அப்பால் குவிக்கின்ற கிணற்றில், அல்லது ஊற்றுக்குழியில் நீரோடு, சுற்றிலும் மண், அல்லது மணலும் உடன் சேர்ந்துவரும். அந்நீர் கலங்கல் நீராய் இருக்கும். மரத்தாலான வட்டத்தின் மேல் சுடுமட் பலகைகளால் ஓரளவு சுவர் எழுப்பி, அதனைக் கயிற்றால் இறுகக் கட்டிப் புறஞ்சுவரோடு ஒட்டிவைத்தால், மண், அல்லது மணல் வாராது, நீர் மட்டுமே ஊறி வந்து தெளிந்து எல்லார்க்கும் பயன்படும்.

விளக்கவுரை

கிணறு தோண்டி, அதனை இடிந்து வீழாமல் நிலைக்கச் செய்தற்கும் இன்றும் இவ்வாறு செய்யப்படுதலைக் காணலாம். இஃது இங்கு நிலத்தை அகழ்ந்து, அதன் அடியில் உள்ள நீரைபபெற்று இன்புறுவார்க்குச் சுற்றிலும் உள்ள மண், அல்லது மணல் ஆகிய கலங்கல் வந்து சேர்வதுபோல, ஞான சாதனைகளால் அஞ்ஞானத்தை அகழ்ந்தெறிந்து தோன்றாத் துணையாய் நின்று சிவத்தைத் தலைப் பட்டு இன்புறுபவர்கட்குச் சிவானந்தத்துடன், பிராரத்த வாசனையும் வந்து தாக்கும். அதனைத் திருவருளாகிய பாதுகாவலைப் பத்தியால் உறுதிப்படச் செய்யின் சிவானந்தமே மேலிட்டு யாவர்க்கும் பயன்தரும், என்பதைக் குறித்து நின்றது.
'தொழுமி' என்பதும், 'கட்டி' என்னும் பொருட்டாய் நின்றது இவையெல்லாம் சில நாட்டு வழக்குப்போலும்!.
(இதனை அடுத்துப் பதிப்புக்களில் காணப்படும் இரு மந்திரங்கள் வெளிப்படைப் பொருள் ஆகலின், பின் அதிகாரத்தில் இருத்தற்குரியன.)

கொட்டுக் குந்தாலி இரண்டே இரண்டுக்கும்
கொட்டுக்குந் தாலிக்கும் பாரை வலிதென்பர்
கொட்டுக்குந் தாலிக்கும் பாரைக்கும் மூன்றுக்கும்
இட்டம் வலிதென்பர் ஈசன் அருளே. #2854

கொட்டு - மண்வெட்டி. குந்தாலி - கோடலி. 'இந்த இரண்டே உள்ளன' என்க. 'உள்ளன' என்பது சொல்லெச்சம்.

விளக்கவுரை

'இரண்டுக்கும்' என்பதை இரண்டாம் அடியில், 'குந்தாலிக்கும்' என்பதன் பின்னர்க் கூட்டுக. இரண்டாம் அடியில் 'கோட்டுக் குந்தாலி' என்பது உம்மைத் தொகையாய் நின்றது. அதன் ஈற்றில் நான்கனுருபு.

உறழ்பொருளாகிய ஐந்தாவதின் பொருளில் வந்தது. ஈற்றில் உள்ள உம்மை சிறப்பு.
பாரை - கடப்பாரை. 'பாரைக்கு நெக்குவிடாப் பாறை, பசுமரத்தின் - வேருக்கு நெக்குவிடும்'l என்னும் ஔவையார் வாக்கைக் காண்க.
மண்வெட்டி ஈர மண்ணைத்தான் பறிக்கும். கோடாலி மரத்தை மேலோடு வெட்டும். பாரை வலிய நிலைத்தையும் அகழும். மரத்தை வேரேடும் சாய்க்கும். ஆகவே, மண்வெட்டி, கோடாலி இரண்டையும் விடப் பாரை வலியது. 'இரண்டே உள; பாரை வலியது' என்றதனால், பாரை கிடைத்தற்கரிதாதல் கூறப்பட்டது.
மண்வெட்டி இடைகலை நாடி, இது பூரிப்பால் நோயைப் போக்கும். கோடலி, பிங்கலை நாடி, இஃது இரேசகத்தால் மாசு நீக்கும். பாரை, சுழுமுனை நாடி. இது கும்பகத்தால் இறப்பு நீக்கல், அறியாமையைப் போக்கல் ஆகியவைகளைச் செய்யும். எனவே, முன்னிரண்டடிகளால் வாசி யோகத்தின் சிறப்புணர்த்தப்பட்டதாம்.
இட்டம் - வெளிப்படை பொருளில், 'இட்ட+அம்' எனப் பிரித்து, மேகம் பெய்த மழையையும். (அம்-நீர்) உள்ளுறைப் பொருளில் அன்பையும் குறித்தது. அன்பு, சிவ பத்தி.
மழை நீர் நிலத்தையும் எளிதில் அகழும்; மரங்களையும் எளிதில் வேரோடு கல்லிவிடும். ஆகவே அது, மண்வெட்டி, கோடாலி, பாரை மூன்றையும் விட வலியதாம்.
'வாசியோகத்தைவிடப் பத்தி வலிது' என்றபடி,
'ஈசன் அருள் நிலை இவ்வாறு உள்ளது' என்க.
'ஆறு பார்ப்பானுக்கு இரண்டே கண்கள்;
மாறுகோள் இல்லை; மதியுள்ளோர் சொல்லுங்கள்'
என்றால், பின்னடி முன்னடியைச் சார்ந்து வந்ததேயன்றி, உள்ளுறைப் பொருளதாகாது. (ஆறு - வழி, அல்லது யாறு. பார்ப்பான் - பார்ப்பவன்.) அஃதே போல், இங்கு, 'ஈசன் அருள்' என்பது உள்ளுறைப் பொருள் இன்றி, முற்கூறிய பொருளைச் சார்ந்து நின்றது.

கயலொன்று கண்டவர் கண்டே யிருப்பர்
முயலொன்று கண்டவர் மூவரும் உய்வர்
பறையொன்று பூசல் பிடிப்பான் ஒருவன்
மறையொன்று கண்ட துருவம்பொன னாமே. *#2855*

குளத்தில் கயல் மீன்களில் ஒவ்வொன்றை அதன் துள்ளல், பிறழ்ச்சி முதலியவற்றின் கவர்ச்சியால் கண்டு மயங்கினோர் அதைக் கண்டுகொண்டிருப்பதோடே ஒழிவர். (இஃது, 'உலகத்தில் மாயையின் விசித்திரத்தில் மயங்கினோர் அம்மயங்குதலோடே ஒழிவர்' என்பதைக் குறித்தது.)

கரையில் முயல் ஒன்றைக் கண்டவர் அதனைப் பிடிக்க அஃது ஓடும் வழியே ஓடி, இறுதியில் பெரும் பயனைப் பெறுவர். (அஃது எங்ஙனமெனில்,) அவ்வழியின் முடிவில் மறைவில் ஒரு பொருள் உள்ளது; அது பொன். ('அதனைப் பெறுவர்' என்றபடி.) ('முயல்' என்பது சிலேடை வகையால் 'முயற்சி' எனப் பொருள் தந்து, சரியை, கிரியை, யோகம் ஆகிய தவங்களைக் குறித்தது. முயல் ஓடி அடையும் புதரில் சில வேளைகளில் புதையல்கள் இருப்பதுண்டு. அஃது இங்குச் சிவஞானத்தைக் குறித்தது,

'மறை' என்பது சிலேடையாய், காட்டுப் புதர் மறைவையும், வேதத்தையும் குறித்தது.

'மறை ஒன்று கண்டது' என்னும் தொடரை, வெளிப்படைப் பொருட்டு, 'மறைவில் ஒரு பொருள் காணப்பட்டது' எனவும், உள்ளுறைப் பொருட்டு, 'வேதம் முடிவாக ஒரு பொருளைக் கண்டது' எனவும் விரித்துக் கொள்க.

உருவம் - பொருள். 'அவ்வுருவம்' எனச் சுட்டு வருவிக்க.

'பொன்' என்பது, பொன்னையும், பொன்னோடொக்கும் சிவத்தையும் குறித்தது. சிவம் பொன்னாகவும், உயிர் செம்பாகவும் சித்தாந்தத்தில் சொல்லப்படுதல் வெளிப்படை.

கயலைக் காண்போரும், முயலைக் காண்போரும் ஆகிய அவ்விருத் திறத்தாருமன்றித் தனியே நின்று. 'நான் கயலைப் பிடிப்பேன், முயலைப் பிடிப்பேன்' என்று வாய்ப்பறை சாற்றுதலையே உறுதிப் பொருளாகக் கொண்ட ஒருவன் யாதொரு பயனையும் பெறாமல், வாய்ப்பறை சாற்றுதலோடே நிற்பன். (இஃது அறம் முதலிய பொருள் நூல்களை ஓதுதல் - பிறருக்கு உரைத்தல்களை மட்டுமே செய்து, தாம் அவற்றின் வழி நில்லாதாரைக் குறித்தது.)

கரையில் முயல் ஒன்றைக் கண்டவர் அதனைப் பிடிக்க அஃது ஓடும் வழியே ஓடி, இறுதியில் பெரும் பயனைப் பெறுவர். (அஃது எங்ஙனமெனில்,) அவ்வழியின் முடிவில் மறைவில் ஒரு பொருள் உள்ளது; அது பொன். ('அதனைப் பெறுவர்' என்றபடி.) ('முயல்' என்பது சிலேடை வகையால் 'முயற்சி' எனப் பொருள் தந்து, சரியை, கிரியை, யோகம் ஆகிய தவங்களைக் குறித்தது. முயல் ஓடி அடையும் புதரில் சில வேளைகளில் புதையல்கள் இருப்பதுண்டு. அஃது இங்குச் சிவஞானத்தைக் குறித்தது.

'மறை ஒன்று கண்டது' என்னும் தொடரை, வெளிப்படைப் பொருட்டு, 'மறைவில் ஒரு பொருள் காணப்பட்டது' எனவும், உள்ளுறைப் பொருட்டு, 'வேதம் முடிவாக ஒரு பொருளைக் கண்டது' எனவும் விரித்துக் கொள்க.

உருவம் - பொருள் 'அவ்வுருவம்' எனச் சுட்டு வருவிக்க.
'பொன்' என்பது, பொன்னையும், பொன்னோடொக்கும் சிவத்தையும் குறித்தது. சிவம் பொன்னாகவும், உயிர் செம்பாகவும் சித்தாந்தத்தில் சொல்லப்படுதல் வெளிப்படை.
கயலைக் காண்போரும், முயலைக் காண்போரும் ஆகிய அவ்விருத் திறத்தாருமன்றித் தனியே நின்று. 'நான் கயலைப் பிடிப்பேன், முயலைப் பிடிப்பேன்' என்று வாய்ப்பறை சாற்றுதலையே உறுதிப் பொருளாகக் கொண்ட ஒருவன் யாதொரு பயனையும் பெறாமல், வாய்ப்பறை சாற்றுதலோடே நிற்பன். (இஃது அறம் முதலிய பொருள் நூல்களை ஓதுதல் - பிறருக்கு உரைத்தல்களை மட்டுமே செய்து, தாம் அவற்றின்வழி நில்லாதாரைக் குறித்தது.

'பிறருக்குப் பயன்படத் தாம்கற்ற விற்பார்,
தமக்குப் பயன்வே றுடையார்; ... ...
... ... தென்புலத்தார்
கோவினை வேலை கொளல்' *

என்றார் குமரகுருபரரும். பூசல் - ஆரவாரம்.

விளக்கவுரை

'ஓதி யுணர்ந்து, பிறர்க்குரைத்தும் தான் அடங்காப் - பேதையிற் பேதையார் இல்'l என்றபடியுள்ள வாய்ப்பறை சாற்று வானது இழிவு நோக்கி ஒருமையாற் கூறினார். அம்மூன்றாம் அடியை இறுதிக்கண் கூட்டியுரைக்க. உலக நெறி பிறவி நெறியாகலின் அதனைக் குளமாகவும், தவநெறி வீட்டு நெறியாகலின் அதனை நிலமாகவும் கூறினார். இதில் ஈரடி எதுகை வந்தது.
இதனால் உலக நெறியில் நிற்பார் உலக இன்பத்தையும், தவநெறியில் நிற்பார் வீட்டின்பத்தையும் பெறுதலும், யாதொரு நெறியிலும் நில்லாது வாய்ப்பறை சாற்றுவார் யாதும் எய்தாமையும் உடன் கூறப்பட்டன.

கோரை யெழுந்து கிடந்த குளத்தினில்
ஆரை படர்ந்து தொடர்ந்து கிடந்தது
நாரை படிகின்றாற் போல்நல்ல நாதனார்
பாரைக் கிடக்கப் படிகின்ற வாறே. *#2856*

இயல்பாகவே வலிய கோரைப் புற்கள் முளைத்துப் படர்ந்து கிடக்கின்ற ஒரு குளத்தில், அதற்கு மேல் மெல்லிய ஆரைக் கொடிகளும் தொடர்ந்து படர்ந்துவிட்டன. இந்நிலையில் அந்தக் குளத்தை உடைய நல்ல தலைவர் ஒருவர், அதில் நாரைகள் மூழ்குவதுபோலத் தரையளவும் செல்ல மூழ்குவது எங்ஙனம்?

விளக்கவுரை

'இயலாததாய் உள்ளது' என்பதாம். குளம், சீவான்மா, அதன் அறிவு அக்குளத்தின் நீர், வலிய கோரை ஆணவ மலம். அதன் மேல் தொடர்ந்து படர்ந்த ஆரைக் கொடிகள் மாயையும், கன்மமும், குளத்தை உடைய நாதனார், பரமான்வாகிய சிவன். நாதனார் குளத்து நீரில் தரையளவும் செல்ல முழுகுதல், சிவன் சீவான்மாவின் அறிவு முழுதும் பற்றி விளங்குதல். இஃது இயற்கையாயினும் ஆணவ மலம் காரணமாகச் செயற்கையாய்ப் புதிதாக விளங்குதல்போலக் கூறப்பட்டது. 'நாரைபோல்' என்பது இடைக்கண் போந்த உவமை. 'நாரை' என்றது நீர்மூழ்கும் பறவைகளைக் குறித்த குறிப்பு மொழி. 'பாரை' என்னும் இரண்டன் உருபை 'பார்க்கண்' என ஏழாவதாகத் திரித்துக் கொள்க. படிதல் - மூழ்குதல் 'படிகின்றவாறு எங்ஙனம்' என ஒரு சொல் வருவித்து முடிக்க.

இதனால், 'வலிய மூல மலமாகிய ஆணவ பந்தமும், அதற்கு மேல் ஆகந்துக மலங்கலாகிய மாயா கன்ம பந்தங்களும் உள்ள வரையில் சிவ விளக்கம் சீவ போதத்தில் முழுமையாக உண்டாதல் இயலாது' என்பது உள்ளுறையாக உணர்த்தப்பட்டது.

கொல்லைமுக் காதமும் காடரைக் காதமும்
எல்லை மயங்கிக் கிடந்த இருநெறி
எல்லை மயங்கா தியங்கவல் லார்களுக்(கு)
ஒல்லை கடந்துசென்(று) ஊர்புக லாமே. #2857

இரண்டு வழிகள் தனித்தனியே பிரிந்து விளங்காமல் ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கின்றன. ஒரு வழி மூன்று காத தூரம் உள்ளது. அதிற் சென்றால், விளைவுள்ள கொல்லையை அடைந்து இன்புறலாம்.
மற்றொரு வழி அரைக்காத தொலைவே உள்ளது. அது கருதி அதிற் சென்றால் அஃது இருள் அடர்ந்த காட்டில் கொண்டுபோய்ச் சேர்க்கும். ஆகவே, அவ்வழிகளில் முக்காத வழியை ஊன்றியுணர்ந்து கண்டு நடக்க வல்லவர் உளரானால், அவர் மேற்குறித்த கொல்லையை யேயன்றி, அதைக் கடந்துள்ள நல்லதோர் ஊரையும் விரைவில் அடையலாம்.

விளக்கவுரை

முக்காத வழி தவ நெறி அதனைக் கடைபோகச் செல்லுதல் அரிதாதல் பற்றி, முக்காவதம் என்றார். கொல்லை, சிவலோகம், அதைக் கடந்த ஊர் பரமுத்தி நிலை.

அரைக் காதவழி வினைவழி. அஃது எளிதாதல் பற்றி, 'அரைக் காதம்'

என்றார். எனவே, 'இதிற்றான் பெரும்பாலோர் செல்வர்' என்பது விளங்கும்.

'செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்'
- திருக்குறள் - *26.*

என்னும் திருக்குறளை இங்கு நினைவு கூர்க. காடு - பிறவிச் சூழல். முதல் அடியின் ஈற்றில் 'ஆக' என்பது வருவிக்க.

இதனால், உலகர் அவநெறி சென்று பிறவியை அடைய, பெரியோர் தவநெறி சென்று வீடு பெறுதல் உள்ளுறையாகக் கூறப்பட்டது.

உழவொன்று வித்து ஒருங்கிய காலத்(து)
எழுமழை பெய்யா(து) இருநிலம் செவ்வி
தழுவி வினைசென்று தான்பய வாது
வழுவாது போவன் வளர்சடை யானே. *#2858*

வெள்ளிதாய் எழுந்த மேகம் மழை பெய்தல் இல்லை. அப்பொழுது உழவுக்கு வேண்டுவதாகிய விதைகள் சேமித்து வைக்கப்பட்ட இடத்திலே கிடக்க, நிலமும் பதப்படாது, உழவுத் தொழிலும் நிகழ்ந்து பயன் தாராது.

(இதனானே, 'கரிதாய் எழுந்த மேகம் மழைபொழிந்த காலத்து, மேற்கூறியன மேற்கூறியவற்றிற்கு மறுதலையாய் நிகழும்' என்பதும் பெறப்படும்.) ஆகவே, மழையைப் பெய்விப்போனாகிய சிவன் பெய்வியாது ஒழிதல் இல்லை.

விளக்கவுரை

'மழை' (மேகம்) என்றது, சிவனது அருளை. அதனைப் போககாமிகளை நோக்கி, மறக் கருணையாகிய திரோதான சத்தியாகவும், மோட்ச காமிகளை நோக்கி, அறக் கருணையாகிய அருட் சத்தியாகவும் கொள்க.

இனி, 'உழவு, வித்து' என்பனவும் போகத்திற்கு ஆகாமியம் ஏறுதலும், சஞ்சிதம் கிடத்தலுமாகவும், மோட்சத்திற்குத் தவம் மிகுதலும், ஞானம் முதிர்தலுமாகவும் கொள்க. நிலம், இரண்டிற்கும் ஆன்ம உணர்வேயாம்.

'எழு மழை பெய்யாது' என்பதனை முதலிற்கூட்டிப் பொருள் கொள்க. பெய்யாது - பெய்யாமையால், வினை. உழவுத் தொழில். மழையின் இன்றியமையாமையையே உடன்பாட்டு முகத்தாலும், எதிர்மறை முகத்தாலும் வலியுறுத்தினார்.

இதனால் 'போகமாயினும், மோட்சமாயினும் சிவனருள் இன்றி ஆகாது; அவன் அன்றி ஓரணுவும் அசையாது' என்பது உள்ளுறை வகையால் வலியுறுத்தப்பட்டது.

'கண்ணுதல் யோகிருப்பக்
காமன் நின்றிட வேட்கைக்கு
விண்ணுறு தேவ ராதி
மெலிந்தமை ஓரார்; மால்தான்
எண்ணிவேள் மதனை ஏவ,
எரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப்
பேரின்பம் அளித்த தோரார்'
என்பது சிவஞான சித்தி.* இதனை ஒட்டி,
'எல்லா உயிர்க்கும் உயிர் அருணேசர்;
இவர் அசைவி
னல்லாது அணுவும் அசையாது என்பது
அறிந்தனமே;
வில்லாடன் மாரன் இருக்கவும் யோகம்
விளைத்த அந்நாள்
புல்லா திருந்தன எல்லா உயிருந்தம்
போகத்தையே'*
எனப் பிற்காலத்தவரும் கூறினார். இதன் ஈற்றடி, முதல் மூன்று அடிகளின் சார்பு பொருளாக வந்தது.

பதுங்கினும் பாய்புலி பன்னிரு காதம்
ஒதுங்கிய தண்கடல் ஓதம் உலவ
அதுங்கிய ஆர்கலி ஆரமு தூறப்
பொதுங்கிய ஐவரைப் போய்வளைத் தானே. ***#2859***

காட்டிலே வாழ்கின்ற ஒருவன் அங்குள்ள ஒரு புலிக்கு அஞ்சி எங்கே பதுங்கியிருந்தாலும் அந்தப் புலி பன்னிரண்டு காதம் வரையிலும் பாய்கின்றது. அதனால் அவன் அந்தக் காட்டை விட்டு ஒரு கடற்கரையை அடைந்தான். அங்கே புலிப் பாய்ச்சல் இன்றிக் குளிர்ச்சியான அலைகள் அழகாக வந்து வந்து சென்றன. பின் அவன் பெற ஒட்டாமல் ஐவர் வந்து கூர்மையான கருவியாற் குற்றினர். ஆயினும் அவன் அவர்களை வளைத்துக் கொண்டு அடித்துத் துரத்தினான். (பின்பு அவன் அமிர்தத்தை உண்டு மகிழ்ந்தான் என்பதைச் சொல்ல வேண்டுமோ*!*.*)*

விளக்கவுரை

காடு, தூல உடம்பு. அதில் உள்ள பிராண வாயு பன்னிரண்டங்குலம் வெளியேறி வாழ்நாளைச் சிறிது சிறிதாக உண்டு வருதலால் அதனைப் பன்னிரண்டு காதம் பாய்ந்து தாக்கும் புலியாகக் கூறினார். 'பன்னிரு காதம் பாயும்' என ஒரு சொல் வருவித்து முடிக்க.

உடம்பையே உடம்பாகக்கொண்டு செயற்படுதலை விடுத்து, அருளையே உடம்பாகக் கொள்ளுதலைக் கடற்கரையை அடைந்ததாகக் கூறினார். கடற்கரை இனிய இடமாதல் தெளிவு. அருளை உடம்பாகக் கொண்டோர்க்கு நிகழ்வன யாவும் அருட் செயலாகத் தோன்றுதலைக் கடல் அலைகள் வந்து உலவுவதாகக் கூறினார்.
அமிர்தம், சிவானந்தம். அதனைப் பற்ற ஒட்டாமல் வந்து தாக்கும் ஐவர் ஐம்பொறிகள். அருள்வழி நிற்பார்க்கு ஐம்பொறிகளை வெல்லும் எளிதாதல்பற்றி, 'ஐவரைப் போய் வளைத்தான்' என்றார்.
அதுக்குதல், பொதுக்குதல் என்பன எதுகை நோக்கி மெலிந்து நின்றன. அதுக்குதல் வாயில் இட்டுச் சுவைத்தல். பொதுக்குதல், உடம்பில் தைத்தலும், தைக்கச் செய்தலும்.
'ஆர்கலி அதுக்கிய ஆரமுது ஊற' என்க.
'பாய்புலி' என்றதனால், 'பதுங்குதல் காட்டில்' என்பது பெறப்பட, அதனால் 'ஒருவன்' என்னும் எழுவாய் பெறப்பட்டது. ஒருவன் உயிர். பெத்த நிலையில் நிற்பார்க்கு மாயா உடம்பே உடம்பாகவும் முத்தி நிலையில் நிற்பார்க்கு அருளே உடம்பாகவும் நிற்றலும், முறையே அவற்றால் விளையும் துன்ப இன்பங்களும் இதனால் உள்ளுறையாகக் கூறப்பட்டன.

தோணிஒன் றேறித் தொடர்ந்து கடல்புக்கு
வாணிபம் செய்து வழங்கி வளர்மகன்
நீலிக் கிறைக்குமேல் நெஞ்சின் நிலைதளர்ந்*(து)*
ஆலிப் பழம்போல் அளிகின்ற அப்பே. *#2860*

கடலில் தோணி ஒன்றில் ஏறிப் புகுந்து சென்றும், மீண்டும் தொடர்ந்து வாணிபத்தைச் செய்தும் ஆக்கம் பெற்று வருகின்ற ஒருவன் தனது ஆக்கத்தை மனைவியர்க்குக் கொடுத்து வாழ்க்கை நடத்தச் சொல்லாமல் பரத்தைக்கு வழங்குவானாயின், நாளடைவில் அவன் கவலை மீதூர, ஆலங்கட்டி பழம்போலத் தோன்றிச் சாற்றைத் தாராமல் நீரையே தருதல் போலும் நிலையை அடைவான்.

விளக்கவுரை

'உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும்'*3* என்பது போல அவன் வாழ்க்கை கெடும் என்றபடி.
தோணி, மனம். 'மனம் எனும் தோணி பற்றி'*1* என அப்பரும் அருளிச்செய்தார். அந்தக் கரணம் அனைத்தும், 'மனம்' எனத்தொகுத்து வழங்கப்படும். அந்தக் கரணமே சூக்கும தேகம். அது முத்தியடையுங்காறும் நீங்காதிருக்கும். 'உயிர்கள் செய்த புண்ணிய பாவங்கள் புத்தி தத்துவத்தைப் பற்றிக் கிடந்து பயன் தரும்' என்பது

சைவ சித்தாந்தம் அதனால், அதனைப் பிறவியாகிய கடலில் பயணம் செய்தற்குரிய தோணியாக உருவகித்தார். வழங்குதல் - பயணம் செய்தல்.
உயிர் உடம்பை பற்றி நின்று பிற உயிர்களிடத்து நல்லன தீயனவற்றைச் செய்தல், வாணிபத்தில் விலை கொடுப்பதனோடும், அதனால் செய்த உயிர் தான் அடைகின்ற அறம் பாவங்கள் பண்டத்தைக் கொள்வதனோடும் ஒக்கும். ஆதலின் இச்செயலை 'வாணிபம்' என்றும், 'அதனை உயிர் தொடர்ந்து நடத்துகின்றது' என்றும் கூறினார்.
அற உணர்வும் இறையுணர்வும் மனைவியர். கொண்ட பண்டங்களாகிய அறம் பாவங்களை இவ்விருவகை உணர்வுகளும் முதிர்வதற்குப் பயன்படுத்தினால் நலன் விளையும். அது பற்றி இவ்வுணர்வுகளை மனைவியராகக் கூறினார்.
பொய்க் கண்ணீர் வடிக்கின்றவளை 'நீலி' என்றல் வழக்கு. அது பற்றிப் பொய்யாக பரிவு காட்டும் பரத்தையை, 'நீலி' என்றார். பரத்தை, பல பொருள்கள் மேலும் செல்லும் ஆசை. ஒருவன் தனது அறிவால் மேலும் மேலும் ஆசையை வளர்த்தால் அவன் கெடுவானன்றோ! அது பற்றி, 'நெஞ்சின் நிலைதளர்ந்து ... ... அன்பே' என்றார். அளிதல், மெலிந்து கரைதல். 'அப்பே ஆம்' என முடிக்க. இம்மந்திரம் ஈரடி எதுகை பெற்றது.
இதனால், 'அறிவால் அற உணர்வையும், இறையுணர்வையும் பெருக்கிக் கொள்ளாமல், ஆசையை வளர்ப்பார் கெடுவர்' என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

முக்காத ஆற்றிலே மூன்றுள வாழைகள்
செக்குப் பழுத்த திரிமலம் காய்த்தன
பக்குவம் மிக்கார் படங்கினார் கன்னியர்
நக்குமல ருண்டு நடுவுநின் றாரே. *#2861*

முக்காத ஆறு - தனித்தனி ஒவ்வொரு காதத் தொலைவுள்ள மூன்று ஆறுகள். அவை, 'உலகியல் ஒழுக்கம், மெய்நெறி ஒழுக்கம், மெய்யுணர்வு' என்பனவாம்.
அந்த ஆறுகளில் தனித்தனி ஒன்றாக, மூன்று வாழை மரங்கள் உள்ளன. அவை அவற்றால் விளையும், அறமும், அருளும், வீடு பேறுமாம்.

விளக்கவுரை

'செகு' என்னும் பகுதி ஒற்றிரட்டி, 'செய்து' என்னும் இறந்த கால வினையெச்சமாய் நின்றது. இது, 'செகுத்து' எனவும் வரும். செகுத்தல் - அழித்தல். பழுத்த - முற்றிய. 'காய்த்தன' என்பது, 'ஒழித்தன' என்னும்

குறிப்பு. அதனால் ஏற்புடையன கொள்ளப் பட்டன.
'மலம்' என்பது இங்கு, 'அழுக்கைக் குறித்து, அதனால் விளையும் நோயைக் குறித்தது. மூன்று வாழைகளும் முறையே பூ, காய், பழம் என்பவற்றால் ஒவ்வொரு நோயைப் போக்கும் நிலையில் உள்ளன. பக்குவம் மிக்கவர்கள் பழத்தை உண்டு எல்லா நோய்களும் நீங்கப்பெற்று அமைதியுற்றார்கள். ('பக்குவான்மாக்களாய் உள்ளவர்கள் மெய்யுணர்வாகிய பழத்தை உண்டு வீட்டை அடைந்து இன்புற்றார்கள்' என்பதாம்.)
'பக்குவனார்' என்பது, 'பக்கனார்' எனக்குறைந்து நின்றது. 'மிக்கு ஆர்பு அடங்கினார்' எனப்பிரிக்க. ஆர்பு - உண்டு; 'செய்பு' என்னும் வினையெச்சம்.
பக்குவம் வாயாத சிறு மகளிரைப் போலப் பக்குவம் எய்தாது, அபக்குவராய் உள்ளோர் பூவையும். காயையுமே மகிழ்ந்து உண்டு, 'நோயுற்றோர், நோயற்றோர்' என்னும் இருதிறத்தார்க்கும் நடுப்பட்ட வர்களாய் நின்றார்கள். பழத்தின் அருமையறிந்து அதனைப்பறித்து உண்பதற்கும் அறிவு வேண்டும் என்க.
[பக்குவம் முதிராது அபக்குவராய் உள்ளவர்கள், மெய் யுணர்வைப் பெறாது, இருவகை ஒழுக்கங்களை மட்டுமே உடையராய், 'அறம், அருள்' என்பவற்றை மட்டும் பெறுதலோடு, உலகர்க்கும், அறிவர்க்கும் இடைப்பட்டவராய் உள்ளனர்' என்பதாம்.]
உடலில் உண்டாகும் மூன்று நோய்களாவன 'தோல் நோய்' வயிற்று நோய் குருதி நோய்' என்பன. இவை முறையே, 'மாயை, கன்மம், ஆணவம்' என்னும் மலங்கலைக் குறித்தன. இவைகளில் வாழைப் பூத் தோல் நோயையும், காய், தோல் நோயோடு வயிற்று நோயையும், பழம் எல்லா நோயையும் போக்கும். அது போல அறம் மாயையாகிய உலகியல் துன்பத்தைப் போக்கும். அருள் இருவினை யொப்பு வருவிக்கும் முகத்தால் கன்ம மலத்தைப் போக்கி, உலகியல் துன்பமும் உயிரைத் தாக்காதவாறு செய்யும். அருளாகிய சத்தி நிபாதத்தில் உண்டாகும் மெய்யுணர்வு, முன்பே பாகம் எய்திய ஆணவ மலத்தை அடியோடு போக்கி, மெய்ப் பொருளைக் காட்டி, வீடு அடைவிக்கும், ஆணவம் நீங்கவே, ஏனை மலங்களுக்கும் தொடர்பு யாதும் இன்றி, அகன்றொழியும். ஆகவே, வீடெய்தினார்க்குத் துன்பம் யாதும் இல்லையாம்.
'திரிமலம்' என்பது, உள்ளுறைப் பொருளில் மும்மலங்களைக் குறித்தது.
நகுதல் - மகிழ்தல். 'மலர் உண்டு' என்றாரேனும், 'மலரையும், காயையும் உண்டு' என்றல் கருத்தென்க.

இதனால், அபக்குவ பக்குவிகளது இயல்பும், அவர் செய்யும் சாதனைகளும், அவற்றின் பயன்களும் உள்ளுறையாகக் கூறப்பட்டன.

அடியும் முடியும் அமைந்ததோர் அத்தி
முடியும் நுனியின்கண் முத்தலை மூங்கில்
கொடியும் படையுங் கொளும்சார்பை யைந்து
மடியும் வலம்புரி வாய்த்தவ் வாறே. #2862

வேரும், கிளையும் அமைய வேண்டிய முறையிலே அமைந்த அத்தி மரம் ஒன்று உள்ளது (அத்தி - எலும்பு. அது சிலேடையாய், உள்ளுறையில் உடம்பைக் குறித்தது. உடம்பிற்கு வேர் வித்தியா தத்துவத்தில் உள்ள மாயா தத்துவம். கிளை, பிருதிவி தத்துவம்.)

விளக்கவுரை

முடியும் நுனி - கிளைக்கும் மேல் உள்ள இடம். மூங்கில், சுத்த தத்துவம். முத்தலையாவன அதிகார போக, லய தத்துவங்கள்.
கொடியும், படையும் தாத்துவிகங்கள். கொடி, படர்க்கொடி. படை, இலை தளிர் பூ முதலியவற்றின் கூட்டம். கொள் சார்பு - கொடி கட்கும், படைகட்கும் பற்றாய் உள்ளவை. 'ஐயைந்து' உம்மைத் தொகைப் பத்து. அவை ஞானேந்திரியம் ஐந்தும், கண்மேந்திரியம் ஐந்தும். இவைகளாலேயே உயிர்க்கு எல்லா அறிவும், செயலும் நிகழும். அத்திப்பழம் உணவாகவும், மூங்கில் பலவற்றுக்குக் கருவி யாகவும் நமக்கு உதவுவனபோலத் தோன்றினாலும் இவையெல்லாம் பேருதவிகள் அல்ல. இவற்றின் வேறாய் இனியதொரு சோலை உண்டு; அதனை அடைந்தால், அல்லல்கள் அற்று, அமைதியுடன் வாழலாம். ஆயினும் அந்தச் சோலையை இந்த அத்தி மரத்தின் வழியாகவே அடைய வேண்டியுள்ளது. அதனால் இந்த அத்தி மரத்தையும் புறக்கணித்தற்கு இல்லை.
வலம்புரி - நந்தியாவட்ட மலர். அது நல்லதொரு சோலையைக் குறித்த குறிப்பு மொழி. மடிதல், இங்கு, அல்லலற்று அமைதியுடன் இருத்தல். 'சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே'3 என முதற்கட் கூறியதையும் நினைக.
சோலை, முத்தி நிலை. 'அதனை அடைதற்குச் சாதனமாகவே இவ்வுடம்பு அமைந்துள்ளது' என்பதை, 'வலம்புரி வாய்த்தது அவ் ஆறே' என்றார். ஆறு - வழி. 'ஆற்றால்' என உருபு விரிக்க. ஏகாரம், பிரிநிலை.
இதனால், முன்பு, 'உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே' என வெளிப்படையாகக் கூறப்பட்ட பொருள் உள்ளுறையாகக் கூறி வலியுறுத்தப்பட்டது.

பன்றியும் பாம்பும்பசு முசு வானரம்
தென்றிக் கிடந்த சிறுநரிக் கூட்டத்துள்
குன்றாமைக் கூட்டித் தராசின் நிறுத்த பின்
குன்றி நிறையைக் குறைக்கின்ற வாறே. *#2863*
ஒரு குறு நரிக் கூட்டத்திற்குள்ளே, பன்றி, பாம்பு, பசு, குரங்கு இவைகளும் நிறைந்துள்ளன. அவைகளின் இயல்பை முற்றவும், துலாக்கோலில் இட்டு நிறுப்பது போல நுட்பமாக ஆராய்ந்து உணர்ந்தால் அவற்றால் விளையும் துன்பங்களைச் சிறிது சிறிதாகக் குறைக்கும் நிலை உண்டாகும்.

விளக்கவுரை

குறுநரிகள், சகல வருக்கத்து ஆன்மாக்கள். பிரளயாகலர் விஞ்ஞான கலர்கள் பெரு நரிகள். நரி தந்திரம் உடையது ஆதலின் அது அறிவுடைய - சிற்றறிவுடைய ஆன்மாக்கட்கு உவமையாயிற்று. பன்றி, பாம்பு, பசு இவை முறையே தாமத, இராசத, சாத்துவிக குணங்கள். குரங்கு, மனம், முசு, வானரம், இரு பெயர் ஒட்டு. தராசில் இட்டு நிறுத்தல் தத்துவ ஆராய்ச்சியை நுண்ணிதாகச் செய்தல். 'குன்றியளவாக' என ஆக்கம் வருவித்து, 'குன்றி குன்றியாக' என உரைக்க. குன்றி - குன்றிமணி. நிறை, பன்றி முதலியவற்றின் வலிமை. 'குறைக்கின்ற ஆறு உளதாம்' என ஒரு சொல் வருவித்து முடிக்க. 'தெற்றி' என்பது மெலிந்து நின்றது. கிடந்த - கிடந்தன. தெற்றிக் கிடத்தல் - நெருங்கிக் கிடத்தல்.
இதனால், தத்துவ ஆராய்ச்சியே பந்த நீக்கத்திற்கு வழியாதல் உள்ளுறையாகக் கூறப்பட்டது.

மொட்டித் தெழுந்ததோர் மொட்டுண்டு மொட்டினைக்
கட்டுவிட் டோடின் மலர்தலும் காணலாம்
பற்றுவிட் டம்மனை பாழ்பட நோக்கினால்
கட்டுவிட் டாலன்றிக் காணஒண் ணாதே. *#2864*
ஓர் இல்லத்திற்குள்ளே சிறிதளவே அரும்பிய அரும்பு ஒன்று உள்ளது. அது மலராமைக்குக் காரணம் அதனை இறுக்கியுள்ள பொருள்கள். ஆகவே, இறுக்கிய பொருள்கள் நீங்கினால், அந்த அரும்பை மலர் நிலையிலும் வைத்துக் காண முடியும். (ஆனால், அரும்பு இல்லத்திற்குள் இருப்பதால், கதிரவன் ஒளி, காற்று முதலியன புக முடியாமையினால், இறுக்கியுள்ள பொருள்கள் நீங்குமாறில்லை.) உடையவள் அந்த இல்லத்தின்மேல் உள்ள பற்றைவிட்டு, அதனை வெற்ற வெளியாகச் செய்தால், இறுக்கிய பொருள்களும் நிங்கும்; அரும்பும் மலரும். ஆகவே, அந்த நிலையை அந்த இல்லம் வெளியானாலன்றிக் காண இயலாது.

விளக்கவுரை

மொட்டித்தல் - அரும்புதல். மொட்டு - அரும்பு. ஓர் மொட்டு, சாதியொருமை. அஃது பக்குவம் அடையாத உயிர்களைக் குறித்தது. பக்குவம் வாராதபடி தடுப்பது சூழ்நிலை. அஃது இங்கு மும்மலங்களைக் குறித்தது. இல்லம், அறிவர் இனம் இல்லாத, உலகர் இனம், 'அவ்வினத்தை விட்டு அறிவர் இனத்தை ஒருவன் அடைந்தால், கட்டு நீங்குதற்குரிய நிலைமை உண்டாகி அறிவு முதிரப் பெற்று வீடு பெறலாம்; இல்லையேல் இயலாது' என்றபடி.

மூன்றாம் அடியை இரண்டாம் அடிக்கு முன்னர்க் கூட்டியுரைக்க. 'அம்மனை' எனச்சுட்டிக் கூறினமையால், அரும்பு மனைக்குள்ளே இருத்தல் பெறப்பட்டது. அரும்பு, உயிருணர்வு. 'கட்டு விட்டு ஓடின்' என்ற அனுவாதத்தால் கட்டு விட்டோடுதல் பெறப்பட்டது. 'மலர்தல் நிலையில் காணலாம்' என்க. உம்மை சிறப்பு. ஈற்றடி, எதிர்மறை முகத்தலால் வலியுறுத்தியது.

நீரின்றிப் பாயும் நிலத்தினில் பச்சையாம்
யாருமிங் கென்றும் அறியவல் லாரில்லை
கூரும் மழைபொழி யாது பொழிபுனல்
தேரின்இந் நீர்மை திடரின்நில் லாதே. *#2865*

வயல்கள் யாவும் மேல் நீர் வந்து பாயவே பயிர்களை யுடையவாகும். ஆயினும் ஒரு வயல், மேல் நீர் வந்து பாயாமல் உள்ளிருந்தே ஊறும் நீரை உடையதாய்ப் பயிரை உடைய தாகும். அந்த வயலை அறிபவர் ஒருவரும் இல்லை. (அதனால் அவர்கள் வானத்தை நோக்கியிருந்து, 'பஞ்சம், பஞ்சம்' என்கின் றார்கள்.) மேற் குறித்த வயலில் வானம் எதுவும், எப்பொழுதும் பொழிதல் இல்லை. இனி மழை நீரில் தன்மையை ஆராயுமிடத்து, அது 'மேட்டில் ஏறாது' என்பது தெளிவு. (அதனால் பெய்கின்ற மழை நீரும் அந்த வயலில் ஏறிப் பாய்வதில்லை. ஆகவே, 'மழையால் விளையும், மழையின்மையால் பஞ்சமும், என்கின்ற நிலை அந்த வயலிடத்தில் இல்லை.)

விளக்கவுரை

அந்த அதிசய வயலாவது சிவம். அதில் விளைவன எல்லாம் அதன் அருளாலே. ஆகவே, அந்த அருள் உள்ளிருந்தே ஊறும் நீராயிற்று. மற்றை வயல்கள் உயிர்கள். அந்த வயல்களுக்கு ஆணவ மாகிய வானத்தில், மாயையாகிய மேகம் தோன்றி, கன்மமாகிய மழையைப் பொழியவே நன்செய்ப் பயிர்களும், புன்செய்ப் பயிர்களும் உளவாகும். இந்த மழை நீர் மேற்குறித்த அந்த மேட்டு வயலில் ஏறமாட்டாது. ஆகவே, இந்த மழை வளம்படுதலாலோ, வறட்சியடைதலாலோ அந்த

வயலுக்கு வருவதொன்றில்லை.
'இந்த அரிய செய்தியை அறிந்து கொண்டு அந்த வயலை அடைந்து வாழ அரியாதவர்களாய், உலகர் அல்லல் உறுகின்றார்கள்' என்பதாம்.
பாய்தல் - இங்கு, மேல் எழுந்து பாய்தல்; ஊறுதல். நிலம் - வயல்.
'பசை', ஆகுபெயராய்ப் பயிர்களைக் குறித்தது. இங்கு முத்தான்மாக்காளைக் கொள்க.
படர்தல் - உள்ளது சிறத்தல். அஃது ஆவி மேகமாய், மேகம் மழையாதலால். 'அங்குப் பொழியாது' என ஒருசொல் வருவிக்க.
புனல், அதன் தன்மையைக் குறித்த ஆகுபெயர். இந்நீர்மை - இந்த நீரின் தன்மை. திடரில் நில்லாமையைக் கிளந்து கூறியது. 'இந்நீர் அவ்வயிலில் செல்லாது' என்பதைப் பெறுவித்தற்கு.
இதனால், 'பாசங்களால் விளையும் பயன்களை விரும்பாது விடுத்து, பதியால் விளையும் பயன்களை விரும்பி, அதனையடைய முயலல் வேண்டும்' என்பது உள்ளுறையாக உணர்த்தப்பட்டது.

கூகைக் குருந்தம தேறிக் குணம் பயில்
மோகம் உலகுக் குணர்கின்ற காலத்து
நாகமும் ஒன்று நடுவுரை செய்திடும்
பாகனும் ஆகின்ற பண்பனும் ஆமே. *#2866*

கூகை, கதிரவன் விளங்கி நிற்கவும் கண் தெரியாது அலமரும் பறவை. அது, சிவம் வில்கி நிற்கவும் அதனை அறிய மாட்டாது அல்லர் உறும் பெத்தான்மாவைக் குறித்தது.
கூகை பகற் குருடாயினும் அதற்கு நல்லதொரு குருந்த மரம் கிடைத்து, அதில் வாழ்கின்றது. அஃதாவது, வேதாகம வழக்கும், ஆன்றோர் ஒழுக்கமும் மிக்க கரும பூமி.
இருப்பினும், அந்தக் கூகை தன் குருடாதல் தன்மையால், அம்மரத்தில் பற்றுவன விடுவனவற்றையும் விலக்குவன கொள்வன ஆகியனவற்றையும் பிரித்தறிய மாட்டாது, தடுமாறிக் கொண்டிருக்கும் பொழுது அத்தடுமாற்றத்தின் நடுவே தெய்வம் ஒன்று திடீரென அதற்குக் கண்கொடுத்தது. ஆகவே, அந்தத் தெய்வந்தான் அந்தக் கூகைகளை வழிநடத்தும் பாகனும், உற்றுழியுதவும் நண்பனும் ஆகும்.

விளக்கவுரை

'குணத்தால் பயில் மோகத்தை உணர்கின்ற காலத்து' என்க. குணம் - கூகையின் குணம்; குருட்டுத் தன்மை. மோகம் - திரிபுணர்வு.
'உலகுக்கு' என்னும் நான்கன் உருபு, 'நாணற் கிழங்கு மணற்கீன்ற முளை'*8* என்பது போல் ஏழாவதன் மயக்கமாய் வந்தது. நாகம் - விண்ணுலகம். ந + அகம் = நாகம். 'பாவம் இல்லாத உலகம்' என்பது இதன் பொருள். அஃது ஆகுபெயராய், அங்கு வாழும் தெய்வத்தைக்

குறித்தது. தெய்வம் கண் தந்ததாவது, சத்தி நிபாதம் வந்து ஞானத்தை உணரச் செய்தமை. அப்பால் அந்த சத்தியே (திருவருளே) ஆன்மாவுக்கு எல்லாமாய் உதவும்.
திணை மயக்கம், உருவக உவமைகளில் 'வழு' எனக் கடியப் படாது ஆகலின், 'நாகம் பாகனும், பண்பனும் ஆம்' என்றது திணை வழுவாகமையறிக.
'நாகமும்' என்னும் உம்மை சிறப்பு, உரைசெய்தது, (கண் தெரிய) வரம் கொடுத்தது. வெளிப்படை பொருள் இறந்த காலம் ஆகற்பாற்றாயினும் உவமைகளில் சிறந்தது நோக்கி, முக்காலத்திற்கும் பொதுவாகக் கூறினார். ஆகின்ற பண்பன் உறுதுணை யாகின்ற பண்பினை யுடையவன்; நண்பன்.
இதனால், 'சத்தி நிபாதத்தாலே அஞ்ஞானம் அகன்று பிரகாசிக்கும்' என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

வாழையும் சூரையும் வந்திடங் கொண்டன
வாழைக்குச் சூரை வலிது வலிதென்பர்
வாழையும் சூரையும் வன்துண்டம் செய்திட்டு
வாழை இடங்கொண்டு வாழ்கின்ற வாறே. *#2867*

ஒருவன் வாழும் இல்லத்தில் வாழைச் செடியும், முள் மிகுந்த பிரப்பங் கொடியும் வளர்ந்து, அதில் உள்ள இடம் முழுவதையும் கவர்ந்து கொண்டன, இந்நிலையில், அதில் வாழவேண்டிய தலைவன் எவ்வாறு வாழ்வது?
வாழையை அழிப்பதைவிடப் பிரப்பங்கொடியை வேரோடு அறுத்தெறிவது 'கடினம்; கடினம்' என்கின்றார்கள். இருப்பினும் வாழை நல்லது போலத் தோன்றினாலும் வாழ இடம் இல்லாமல் செய்வதால் அதையும், பிரப்பங் கொடியையும் ஒருங்கே அறுத்தெறிந்துதான் வாழ வேண்டும்.

விளக்கவுரை

வாழை, இன்பம். சூரை - துன்பம் இவவைகளால் கவர்ந்து கொள்ளப்பட்ட இடம் புத்தி தத்துவம்.
ஈற்றடியில் உள்ள 'வாழை' என்பதை, 'வாழ்+ஐ' எனப்பிரித்து, 'வாழ வேண்டிய தலைவன்' என உரைக்க.
தலைவன், ஆன்மா. வாழ்தல், பசுகரணத்தைச் சிவகரணம் ஆக்கிச் சிவானந்தம் எய்துதல். 'வாழ்கின்றவாறு, வன்துண்டம் செய்திட்டு' என மாறிக்கூட்டி முடிக்க. இரண்டையும் துண்டம் செய்தலாவது, அவற்றில் அழுந்தாது விடுதல்.
அடுக்கு, வலியுறுத்தற் பொருட்டு, 'இன்பத்தில் அழுந்தாமல் இருத்தல் கூடும்; துன்பத்தில் அழுந்தாமல் இருப்பது அரிது' என்பதை,

'வாழைக்குச் சூரை வலிது வலிது என்பர்' என்றார்.
இதனால், 'ஓடும், செம்பொன்னும் ஒக்கவே நோக்கும்'
இருவினையொப்பு வந்தாலன்றிச் சிவானந்த வாழ்வு வாழ இயலாது'
என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

நிலத்தைப் பிளந்து நெடுங்கடல் ஓட்டிப்
புனத்துக் குறவன் புணர்த்த கொழுமீன்
விலக்குமீன் யாவர்க்கும் வேண்டின் குறையா
அருத்தமும் இன்றி அடுவதும் ஆமே. *#2868*

குறிஞ்சி நிலத்தவனாகிய குறவன் ஒருவன் அவ் விடத்துத் தன்தொழிலை விடுத்து, அதே நிலத்தை அடைந்து நிலத்தை உழுதான். பின்பு அத்தொழிலையும் முற்ற முடியாமல் இடையே உள்ள கொழுத்த மீனைப் பிடித்துக் கொணர்ந்தான். ('இவன் இந்தத் தொழிலையேதான் தொடர்ந்து செய்து நிலைபெறுவான்' என்பது என்ன நிச்சயம்!) ஆகவே, இவனைப்போல நிலையின்றி வாழ்தலைத் தவிருங்கள். தவிராது வேண்டின் நிற்பின், என்றும் நிலைத்து ஊதியத்தைத் தரக்கூடிய முதலைப் பெறுதலும் இன்றி, கொல்வது போலும் நிச்சல் நிரப்பு'3 (வறுமை) வந்து பற்றிக் கொள்ளுதலும் கூடும்.

விளக்கவுரை

'எந்தத் தொழிலையும் நிலையாகச் செய்யாது, தாவித் தாவிச் செல்பவன் நிலைபேறு எய்தான்' என்பதை நினைவூட்டி, 'அது போல எந்த ஒரு சமயத்திலும் (மதத்திலும்) நிலைத்து நில்லாதவன் எந்தப் பயனையும் அடையமாட்டான்', என்பதை உள்ளுறையாக உணர்த்தினார். 'நிலையாகச் செய்தல்' என்பது, அந்தச் சமயத்தின் வழி நிற்றலை.

'உயிர் இயல்பாகவே ஐம்பு வேடருட்பட்டது' என்பதனால் அதனை, 'குறவன்' என்றார். குறவர் பண்பாடில்லாத வாழ்க்கையர் ஆதலின் அவர் இதனால் அவைதிக மதங்களைக் குறித்தது அவற்றில் உள்ள நவநிலையாகவும் பற்றாது விடுத்தலே, 'அம்மதங்களை விடுத்தல்' எந்த நிலையாக ஓட்டுதலுக்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. மருத நிலத்தவர் பண்பாடுடைய வாழ்க்கையர் ஆதலின் அவர் இனம் வைதிக சமயங்களைக் குறித்தது.

நெய்தல் நில மக்கள் கொலை, களவு செய்யாது வாழ்தலால் குறவரினும் மேம்பட்டவராயினும், இழிதொழில் செய்பவர் ஆதலின் அவர் இனம் வாம மார்க்கங்களைக் குறித்தது. வாம மார்க்கத்தவர் கடவுட் கொள்கையினராதல் நினைவு கூரத்தக்கது.

'மீன்பிடி தொழிலின் இழிவினை உணர்ந்த காலத்தில் அதனையும் விட வேண்டி வரும்' என்பது குறிப்பு. தம்முள் வேறுபாடுடைய

குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நிலங்கள், உயிர் வருக்கத்தவரால் தோற்றுவிக்கப்பட்டுத் தம்முள் மாறுபாடும் சமயங்கள் ஆகவே, இறைவனால் தோற்றுவிக்கப்பட்டு, 'இது ஆகும்; அது அல்லது எனும் பிணக்கில்லாது'*9* அனைத்தையும் தன்னுள் அடங்கக் கொண்ட சித்தாந்த சைவம், 'தெண்கடல் வளாகம் பொதுமையின்றி - வெண் குடை நிழற்றும் ஒருமையரசன்,*8* வாழ்வு போன்ற, என்றும் மாறாது நின்று நிலவும் வாழ்வாம்' என்றதாயிற்று. 'புனத்துக் குறவன்' என்பதை முதலில் வருவிக்க. 'மீன் விலக்குமின்' என்றாராயினும், 'அதுபோன்ற செயலையும்' கருத்தையும் நீக்குதல் என்றலே கருத்து. 'வேண்டின், யாவர்க்கும் அருத்தமும் இன்றி, அடுவதும் ஆம்' எனக் கூட்டி யுரைக்க. அருத்தம் - முதல். அது திருவருள். வறுமை - வினை. இதனுள் மூன்றாம் எழுத்தெதுகை வந்தது.
இதனால், 'சித்தாந்த சைவமே 'பேரா இயற்கை'*3* யாகிய வீடுபேற்றினைத் தரும்' என்பது உள்ளுறையாக உணர்த்தப்பட்டது.

தளிர்க்கும் ஒருபிள்ளை தட்டான் அகத்தில்
விளிப்பதோர் சங்குண்டு வேந்தனை நாடிக்
களிக்கும் குசவர்க்கும் காவிதி யார்க்கும்
அளிக்கும் பதத்தொன்றாம் ஆய்ந்துகொள் வார்க்கே. *#2869*

தட்டான் - எதிலும் அகப்படாதவன். ஆறு அத்துவாக்களையும் துருவித் துருவி ஆராய்ந்தாலும் அறியப்படாதது ஆன்மா. அதன் அகம், தூல உடம்பு. அதில் வளர்கின்ற பிள்ளை மூச்சுக்காற்று. தளிர்த்தல் - வளர்தல். விளித்தல் - அழைத்தல். சங்கு குறிக்கப்பட்டால் குழந்தைகள் அதனை நோக்கி ஓடுதல் இயல்பு. சங்கு, இங்கு 'ஹம்ஸம்' என்னும் அசபா மந்திரம். அதுவே மூச்சினை விட்டும், வாங்கியும் இயக்குதலால், அதனை அக்குழந்தையை அழைக்கும் சங்காகக் கூறினார். அம்மந்திரத்தின் பயனை ஆராய்ந்து உணர் பவர்கட்கு அஃது, அரசனைச் சார்ந்த குயவர் முதலிய சிறு தொழிலா ளர்க்கும், காவிதிகள் முதலிய பெருமையுடைய தொழிலாளர்க்கும் அரசன் இடும் கட்டளையாக முடியும். அக்கட்டளைகளாவன 'போ, வா' என்பன. சிறுதொழிலாளர்களை அரசன் அகன்று செல்லும்படியும், பெருந்தொழிலாளர்களை அணுகி வரும்படியும் கூறுவான். 'போ' என்பது இரேசித்தலையும், 'வா' என்பது பூரித்தலையும் குறித்தன. காவிதிகள், வரி தண்டுவோர். பதம் - சொல். 'தனித்தனி ஒன்றாம்' என்க. 'அச்சங்கு' எனத்தோன்றா எழுவாய் வருவித்து, 'பதத்து ஒன்றாம்' என முடிக்க. 'குசவர' என்றது உபலக்கணம்.

விளக்கவுரை

இதனால், 'யோகத்தை அசபா மந்திரத்தை உணர்ந்து செய்யும்

பிரணவ யோகமாகச் செய்தல் வேண்டும்' என்பது, உள்ளுறையாக உணர்த்தப்பட்டது.

குடைவிட்டுப் போந்தது கோயில் எருமை
படைகண்டு மீண்டது பாதி வழியில்
உடையவன் மந்திரி உள்ளலும் ஊரார்
அடையார் நெடுங்கடை ஐந்தொடு நான்கே. *#2870*

தலைவன் ஒருவனது இல்லத்தில் கொட்டிலில் இருந்த எருமை அதைவிட்டுப் புறப்பட்டு மேயப் போந்தது. ஆயினும் உயிர்களைத் துன்புறுத்தும் படைகள் எதிரே வருதலைக் கண்டு அந்த எருமை பாதி வழியிலே திரும்பிவிட்டது. அதையறிந்து அந்தத் தலைவ -னுடைய அமைச்சன் அந்தப் படைகளை விலக்க, அந்த இல்லத்திற்கு உள்ள ஒன்பது வாயில்களுள் ஒன்றையும் ஒருவரும் அடைக்கவில்லை.

விளக்கவுரை

'அதனால் அந்த எருமை தன் விருப்பம் போலச் சென்று மேய்ந்து பாலைச் சொரிந்து வருகின்றது' என்பது குறிப்பெச்சம்.
கோ - தலைவன்; உயிர், அதனது இல்லம், தூல உடம்பு. எருமை, பிராண வாயு. இதுவே உயிர்க்கு வலு ஊட்டுவதாய்க் கட்டுப்படுத்தி நடத்தினால் பெரும் பயனைத் தருவதாய் இருத்தல் பற்றி இதனை, வலியையும், மிகுந்த பாலைப் பொழிதலையும் உடைய எருமையாக உருவகித்தார்.
குடை, குடைபோல் அமைந்த கொட்டில். அது மூலாதாரம். மூச்சு அதனினின்றும் போதல் வெளியேபோய் வலுப்பெற்று மீறாதற்கு. படைகள் பிராரத்ததத்தால் வரும் நோய்கள். இந்நோய்கள் உடம்பின் வாயில்கள் ஒன்பதையும் அடைத்து, அகால மரணத்தை உண்டு பண்ணும். இவைகளால் மூச்சும் தடைப்படும். ஆகவே, 'படை கண்டு மீண்டது பாதி வழியில்' என்றார்.
உயிர்க்கு அமைச்சன் சித்தம். அஃது அனைத்தையும் சிந்தித்து, உயிர்ப்பாகிய எருமையைத் தன் விருப்பப்படி நடத்திச் செல்ல, அந்த எருமையைத் தடுத்து நிறுத்தற்கு, உடம்பாகிய இல்லத்தின் வாயிலை அடைக்க ஒருவரும் முன்வரவில்லை. எனவே, எருமை தொடர்ந்து நன்கு மேய்ந்து பாலைச் சொரிந்து வருகின்றது. அஃதாவது உடம்பை எந்த நோய் முதலியனவும் அழிக்க எழவில்லை. அதனால், 'வாழ்நாள் எல்லையின்றி நீட்டிக்கின்றது' என்பதாம்.
'ஊரார்' என்றதும், படைகளையே. உள்ள, அதன் காரியமாகிய நெறிப்படுத்தி நடத்துதலைக் குறித்தது. நெடுங்கடை - பெரிய வாயில். ஐந்தொடு நான்கு - ஒன்பது.
இதனால், 'வாசியோகம் புரியின், உடல், நரை, திரை மூப்புப் பிணிகள்

இன்றி வலிதாக, வாழ்நாள் நீட்டிக்கும்' என்பது உள்ளுறையாக உணர்த்தப்பட்டது.

போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்
ஆகப் படைத்தன ஒன்பது வாய்தலும்
நாகமும் எட்டொடு நாலு புரவியும்
பாகன் விடாவிடிற் பன்றியும் ஆமே. *#2871*

வீரன் ஒருவன் ஓர் யானையையும், பன்னிரண்டு குதிரைகளையும் முறையாக வெளியே ஓட்டி நடத்தி, உள்ளே கொணர்ந்து கட்டிப் பணிபுரிதற்கு ஏற்புடைத்தாக அரசன் வெளிச் செல்லும் பொருள் எட்டும், உள்ள வந்து சேரும் பொருள் பதினெட்டுமாக, ஒன்பது வாயில்களையுடைய ஒரு கூடத்தைக் கட்டிக் கொடுத்தான். வீரன் அதில் முறையாக அந்த யானையையும், குதிரை -யையும் வைத்து நடத்தாவிடில், அவை பன்றிபோல யாவராலும் இகழப் படுவனவாய், அந்தக் கூடத்தையும அருவருக்கத் தக்கதாகிவிடும்.

விளக்கவுரை

நாகம் - யானை. இது மனத்தைக் குறித்தது. 'தொண்டர் அஞ்சு களிறும் அடக்கி'*8* என்பது போல, ஐம்பொறிகளையே யானை யாகக் கூறுதல் பெருவழக்காயினும், உண்மையில் யானைபோல அடங்காது புலன்களின்மேல் செல்வது மனமே. 'மனத்தொடு கூடாத வழி, இந்திரியங்கள் விடயங்களைக் கவரமாட்டா' என்பது தருக்க மதம். இஃதே பற்றி, 'பொறிவாயில் ஐந்தவித்தான்'*1* என்னும் குறள் உரையில், 'ஐந்து அவா' எனப் பொருள் உரைத்த பரிமேலழகர், 'அவா ஒன்றுதானே; ஐந்து எப்படியாகும்' என்னும் தடையைக் கருத்துட் கொண்டு, 'புலன்கள் ஐந்தாகலான் அவற்றின்கட் செல்கின்ற அவாவும் ஐந்தாயிற்று' என உரைத்தார். எனவே, 'ஐந்து' என்றல் சார்பு பற்றியேயாகலான், 'ஒன்று' என்பதே உண்மையாம். ஆகவே, 'அஞ்சு களிறு' என்றல் சார்பு பற்றியேயாக, களிறு ஒன்றேயாதல் அறியப்படும். அடங்காது புலன்கள்மேற் செல்வது' மனமேயாகலான்' அதனை 'யானை' என்றற்குத் தடையின்மை யறிக.

குதிரை பன்னிரண்டாவன, வெளிச்செல்லும் பன்னிரண் -டங்குல மூச்சு. பாகன் - நடாத்தும் வீரன். அவன் ஆன்மா விடுதல் - அடக்கிச் செலுத்துதல்.

ஒன்பது வாயிலையுடைய கூடம் தூல உடம்பு. அதில் வெளிச்செல்லும் பொருள்கள், 'வெயர்வை, கோழை, பீளை, சளி, குறும்பி, மலம், சிறுநீர், சுக்கிலம்' என்பன.

உள்வந்து சேரும் பொருள் பதினெட்டாவன, ஞானேந்திரிய விடயங்கள் ஐந்தும், கன்மேந்திரிய விடயங்கள் ஐந்தும், காமம்,

வெகுளி, மயக்கம் ஆகிய குற்றம் மூன்றும், ஆதியான்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் ஆகிய துன்பம் மூன்றும், இவற்றால் ஏறும் நன்றும் தீதுமாய வினையிரண்டுமாம். முக்குற்றங்கள் அகத்து நிகழ்வன வாயினும் புறப்பொருள் ஏதுவாக அன்றி நிகழாமையறிக. வாயில்களையே கூறினாராயினும் அத்துணை வாயில்களையுடைய கூடத்தைக் குறித்தலே கருத்து.

முதற்கண் கூடத்தையே சிந்தெடுத்துக் கூறினமையால், 'பன்றியுமாம்' என்றதன்பின், கூடம் பாழ்படுதலையுணர்த்துதல் கருத்தாயிற்று. 'பன்றியும்' என்னும் உம்மை இழிவு சிறப்பு.

இதனால், 'வாசி யோகம் செய்து, மனத்தை அடக்காவிடில் எடுத்த பிறப்பு வாளா மாயும்' என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

பாசி படர்ந்து கிடந்த குளத்திடைக்
கூசி யிருக்கும் குருகிரை தேர்ந்துண்ணும்
தூசி மறவன் துணைவழி எய்திடப்
பாசி கிடந்து பதைக்கின்ற வாறே. *#2872*

பாசி படர்ந்த குளம், மலத்தால் மறைக்கப்பட்ட ஆன்ம அறிவு. குளத்தில் இரைதேர்ந்து வாழும் குருகு, (பறவை) அவ்வறிவால் பயன்பெற்று வரும் ஆன்மா. பாசி படர்ந்து கிடத்தலால் குருகு தனக்குரிய இரையை எளிதில் காண இயலவில்லை. வருந்தி வருந்திச் சிறிது காண்கின்றது. அஃதாவது ஆன்மாத் தனக்குரிய சிவத்தை எப்பொழுதாவது, எவையோ சிலமுறையில் அறிகின்றது.

கூசியிருத்தல் - உயிரற்றது போல ஒடுங்கியிருத்தல்.

விளக்கவுரை

தூசி மறவன் - படைகளில் முன்னணியிற் செல்லும் வீரன். அவன் குரு மூர்த்தியை அதிட்டித்து நிற்கும் சிவன். படை வீரன் தன் போக்கிலே போய்க்கொண்டிருக்கும் பொழுது குளத்தை அடுத்துச் செல்லும் வழியை அடைவானாயின், நீர் பருக வேண்டிக் குளத்தை அடைவான்; அவனால் பாசிகள் அப்புறப்படுத்தப்படும். அப்பொழுது குருகு, தனக்கு வேண்டிய இரையை வேண்டிய மட்டும் உண்டு மகிழும். 'அதுபோலக் குருமூர்த்தி தம் இயல்பில் இருப்பினும், ஒருவனது சத்திநிபாத நிலையைக் காணின், 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'*9* என்னும் வேட்கையால் அவனை ஏற்று அவனது பாசத்தைப் போக்குவார். அப்பொழுது அவன் 'சிவத்தை நன்குணர்ந்து, சிவானந்தத்தில் மூழ்கித் திளைப்பான்' என்பதாம்.

ஆறு - முறைமை; நிலைமை. 'மறவன் எய்திடப் பாசி பதைக்கின்ற நிலைமை உண்டாகும்' என ஒரு சொல் வருவித்து முடிக்க. துணை வழி, அருகில் சார்ந்து செல்லும் வழி.

இதனால், குருவருள் கிடைத்த வழியே பாச நீக்கமும், சிவப்பேறும் உளவாம்' என்பது உள்ளுறையாக உணர்த்தப்பட்டது.

கும்ப மலைமேல் எழுந்ததோர் கொம்புண்டு
கொம்புக்கும் அப்பால் அடிப்பதோர் காற்றுண்டு
வம்பாய் மலர்ந்ததோர் பூஉண்(டு)அப் பூவுக்குள்
வண்டாக் கிடந்து மணங்கொள்வன் ஈசனே. *#2873*

கும்பம் - குடம். இதனைக் கவிழ்த்து வைத்த குடமாகக் கொள்க. கவிழ்த்து வைத்த குடம் கீழே குறுகியும், மேலே விரிந்தும் இருக்கும். அதுபோலப் பிருதிவியிலிருந்து பிரகிருதி முடியப் போகப் போக விரிந்துள்ளன ஆன்ம தத்துவங்கள். ஆகவே அவற்றின் தொகுதியை, 'கும்பமலை' என்றார். கும்பமலை - கும்பம் போன்ற மலை.

விளக்கவுரை

'கொம்பு' என்றது தறி. மலையின் உச்சியில் தறி ஒன்று மலையுள்ளே அடிவரையில் ஊடுருவ அடிக்கப்பட்டு, மேலேயும் உயர்ந்து நிற்பதாகக் கொள்ளவேண்டும். ஏனெனில், இவையெல்லாம் அதிசயப்பொருள்களாகவே கூறப்படுதலின், இத்தறி, இத்தறி ஆன்ம தத்துவத்தை வியாபித்து, அவற்றிற்கு மேலேயுள்ள, அராகம் முதல், மாயை முடிய உள்ள வித்தியா தத்துவங்களின், தொகுதி. இவை ஆன்ம தத்துவங்களை நிலைபெறுத்தித் தாமும் நிலைபெற்றிருத்தலால் இவ்வாறு கூறப்பட்டன.
கொம்புக்கும் அப்பால் அடிப்பதோர் காற்று சுத்த தத்துவங்கள். அவை சூக்குமமாயும், காற்றுப்போல வீசிப்பிற தத்துவங்களைத் தூய்மை செய்து, முற்றிலும் வியாபித்திருத்தலாலும் இவ்வாறு உருவகிக்கப்பட்டது.
வம்பு - புதுமை. புதுமையாய் மலர்ந்ததோர் பூ, தத்துவ ஆராய்ச்சியால் தத்துவ ரூபம், தத்துவ தரிசனம். தத்துவ சுத்தி இவைகளைச் செய்து இவற்றின் நீங்கி, அவற்றின் மேலாய் விளங்குகின்ற சுத்தான்மா. இது வரையில் உருவக முறையால் தாம் கருதிய பொருளை உள்ளுறைப் பொருளாக உணர்த்திய நாயனார், 'ஆன்மாக்களின் இருதய கமலத்தில் விளங்குபவன் சிவன்' என்னும் முறைமை பற்றி, அவன் தயிரில் நெய்போல இனிது விளங்குவது சுத்தான்ம சைதன்னியத்தில் தான்' என்பதை, 'சிவன் இந்தப் புதுமலரில்தான் வண்டாக் கிடந்து மணங்கொள்வன்' எனச் சிறிது வெளிப்படை யாகவே கூறிவிட்டார். 'மலர் ஆன்மா' எனவே, மணம், அதன் போதம் ஆயிற்று. ஆகவே, 'இந்தப் புதுமலரில் ஈசன் வண்டாய்க் கிடந்து மணங் கொள்ளுதல்' என்பது, சீவபோதத்தைத்தான் உண்டு, சிவபோதம் வாயிலாகச் சிவானந்தத்தை வழங்குதல் ஆயிற்று. இதன் ஈற்றடி இன எதுகை

பெற்றது.
இதனால், 'தத்துவங்களின் நீங்கித் தூய்தாய் நின்ற சுத்தான்ம சைதன்னியத்தில் தான் சிவன் விளங்கி நிற்பான்' என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

வீணையும் தண்டும் வரிவி இசைமுரல்
தாணுவும் மேவித் தருதலைப் பெய்தது
வாணிபம் சிக்கென் றதுஅடை யாமுனம்
காணியும் அங்கே கலக்கின்ற வாறே. *#2874*

வீணை, நாதத்தைத் தரும் நரம்புகள். அது கன்ம மலத்தைக் குறித்தது. தண்டு, நரம்புகள் கட்டப்பட்டுள்ள கோல். அது மாயா மலத்தைக் குறித்தது. கோல் பற்றுக்கோடாக நின்று நரம்புகள் நாதத்தைத் தருதல் போல, மாயை பற்றுக்கோடாக நின்று நரம்புகள் கன்மம் விளைவுகள் பலவற்றையும் தருவதாதலை அறிக. இசை முரல் தாணு, வீணை வல்லான். அவன் மாயை கன்மங்களைக் கூட்டிச் செயற் படுத்துகின்ற சிவன். வீணை வல்லான் தன் இசை வன்மையைக் கொடுத்து, அரங்கில் உள்ளவர்களது உள்ளங்களைக் கவர்கின்றான். இஃது அவன் செய்யும் ஒரு வாணிபம் ஆகும். இங்கு அவ்வாணிபம், மாயை கன்மங்களைச் செயற்படுத்தும் முறையால், முன்பு தன்னை நோக்காது பிறவற்றை நோக்கியிருந்த உயிர்களைத் தன்னை நோக்கும் படியாகச் செய்தலைக் குறித்தது. சிக்கென்றது - பயனளித்துவிட்டது. அதனையே முன்பு 'தருதலைப்பெய்தது' என்றார். தகு - தகுதி; உயிர்களின் பக்குவம்; முதனிலைத் தொழிற்பெயர். அடைத்தல், கடையை அடைத்தல்; அஃதாவது, 'வாணிபத்தை விட்டுவிடுதல். அது சிவன் தனது ஐந்தொழிலை நிறுத்திவிடுதல். முத்தி பெற்ற உயிர் களிடத்தில் அவன் ஐந்தொழில் நடாத்துதல் இல்லை. எனவே, கடையை அடைப்பதற்கு முன் வாணிபம் தேவைப்படாத, நிலையான காணி யுரிமை வாய்த்துவிட்டது. அஃதாவது, 'முத்தி நிலை வாய்த்துவிட்டது' என்பதாம்.

விளக்கவுரை

கலக்கின்றவாறு வியப்பு' என ஒரு சொல் வருவித்து முடிக்க. மேனி - மேவியதனால்.
இதனால், 'இறைவன் மாயை கன்மங்களைக் கூட்டி ஐந்தொழில் செய்தலாலே உயிர்கள் பக்குவம் எய்திய வீடு பெறுகின்றன' என்பது உள்ளுறையாக உணர்த்தப்பட்டது. ஆகவே, 'இறைவன் ஐந்தொழில் செய்தல் உயிர்களை உய்வித்தற் பொருட்டே' என்பதை உணர்த்தியதாயிற்று.

கொங்குபுக் காரொடு வாணிபம் செய்தஅஃ(து)

அங்குபுக் காலன்றி ஆய்ந்தறி வார்இல்லை
திங்கள்புக் கால்இரு ளாவ தறிந்திலர்
தங்குபுக் கார்சிலர் தாபதர் தாமே. *#2875*

பரத கண்டத்திற்கு வெளியே உள்ள யவனர் பரத கண்டத்தில் வந்து இறங்குவது கொங்கு நாட்டிலே. அஃதாவது சேரநாட்டிலே. அவர்களோடு பரத கண்டத்தவர் வாணிபம் செய்து நல்ல அருங்கலம் முதலியவைகளைப் பெறுதலைப் பரத கண்டத்தில் உள்ளவர்கள் அந்தக் கொங்கு நாட்டில் சென்று பார்த்தால் தான் அறிந்துகொள்ள முடியும். அங்குச் செல்லாமல் தொண்டைநாடு. சோழ நாடு, பாண்டி நாடு இவைகளில் இருந்து கொண்டே அறிய முடியாது.

சந்திரன் உதயமானால் இருளைப் பார்க்கமுடியாது. (அது போலக் கொங்கு நாட்டை அடைந்தால் மேற்குறித்த அறியாமை நீங்கிவிடும்.) ஆயினும் நல்லூழ் உள்ள ஒரு சிலரே கொங்கு நாட்டையடைந்து வாணிபத்தில் நற்பயன் எய்தி வாழ்கின்றார்கள். (ஏனையோர்க்கு அஃது இயலவில்லை.)

விளக்கவுரை

பரத கண்டத்தின் நடுவில் வடக்குத் தெற்கு நீளத்தில் போதிய இடைவெளி விட்டு இமயம் முதல் குமரி வரை பிரித்தால், பரத கண்டம் கீழைக்கரை, நடுப்பகுதி, மேலைக்கரை' என மூன்று பிரி வினதாய் நிற்கும். அவற்றுள் மேலைக் கரைப்பகுதியையே 'கொங்கு நாடு' எனறார். கீழைக்கரை முதலிய மூன்று பகுதிகளும், உடம்பில் யோக முறையில் கீழ் நின்றும் மேல் நோக்கிச் சொல்லப்படுகின்ற, அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திரமண்டலம்' என்பவற்றைக் குறித்தன.

இவற்றுள் அக்கினி மண்டலம் கீழாலவத்தைக்கும், சூரிய மண்டலம் மத்தியாலவத்தைக்கும், சந்திர மண்டலம் யோகாவத்தை யாகிய மேலாலவத்தைக்கும் இடமாகக் குறிக்கப்பட்டன. கீழாலவத்தை மத்தியாலவத்தைகளில் துவாத சாந்தத்தில் உள்ள சிவம் தோன்றா - மையால், கீழைக் கரைப் பகுதியும், நடுப்பகுதியும் மேலை நாட்டவர் தொடர்பு கொள்ளாத இடமாகவும், யோகாவத்தையில் சிவம் புலனாதல் பற்றி மேலைக்கரையை மேலே நாட்டவர் வந்து புகும் இடமாகவும் கூறினார். எனவே, பரத கண்டத்தவர் மேலை நாட்டவரோடு வாணிபம் செய்தலாவது, கீழாலவத்தை மத்தியா லவத்தைகளில் உழல்கின்ற உயிர், யோகாவத்தையாகிய மேலாலவத்தையை எய்தி, 'தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா ஆர்கொலோ சதுரர்'9 என்றபடி சிவனுடன் கொண்டும், கொடுத்தும் ஊடாடுதலையேயாயிற்று.

மேலாலவத்தையை எய்தினோர்க்கு அஞ்ஞான இருள் நீங்குதலையே மூன்றாம் அடி குறித்தது.
'தாபதர்' என்றது, வெளிப்படைப் பொருளில் பசு புண்ணியம் செய்தாரையும், உள்ளுறைப் பொருளில் சிவ புண்ணியம் செய்தாரையும் குறித்து நின்றது. இச்சிவபுண்ணியம் 'சரியை கிரியைகள்' என்க.
கொங்கு புக்கார், மேலை நாட்டவர். தங்கு - அவர் வந்து தங்குமிடம்; கொங்கு நாடு. தங்கு, தொழிலாகு பெயராய், தங்கும் இடத்தைக் குறித்தது. 'அங்குப் புக்கால்' என்னும் பகர ஒற்று செய்யுள் நோக்கித் தொகுத்தலாயிற்று. பிற ஏழாவதன் தொகையில் ஒற்று மிகாமை இலேசினாற் கொள்க. இனி ஒற்று மிகுத்தே பாடம் ஓதினும் ஆம். அப்பொழுது, 'திங்கட் புக்கால்' என, ஒற்றுத் திரிந்து நிற்கும். இதனால், 'யோக நிலையை எய்தினோர் சிவத்தைத் தலைப்படுவார்' என்பது உள்ளுறையாகக் கூறப்பட்டது.

போதும் புலர்ந்தது பொன்னிறம் கொண்டது
தாதவிழ் புன்னை தயங்கும் இருகரை
ஏதம்இல் ஈசன் இயங்கும் நெறிஇது
மாதர் இருந்ததோர் மண்டலந் தானே. *#2876*

பொழுது விடிந்துவிட்டது. அதனால், மலர்களை யுடைய புன்னைமரம் விளங்குகின்ற, கடலின் இக்கரை, அக்கரையாகிய இருகரைகளும் பொன்னிறம் பெற்று விளங்குவன வாயின் ஆகவே, அந்தக் கரைகள் சிவனும், சத்தியும் எழுந்தருளி யிருக்கும் இடமாகவும் ஆகிவிட்டன.

விளக்கவுரை

பொழுது விடிதலாவது, ஆணவ மலம் நீங்குதல். 'தாதவிழ் புன்னை' என்னும் அஃறிணை யியற்பெயர். இங்குப் பன்மையில் வந்து, பல உயிர்களைக் குறித்தது. புன்னை அரும்பு ஆன்ம பூதம். அவ்வரும்பு மகரந்தத்தோடு மலர்தலாவது, திருவருள் உணர் உடையதாய் விரிவடைதல் பொழுது புலர்ந்தால் புன்னை மகரந்தத்தோடு மலர்தல் போல, ஆணவம் நீங்கியதால் ஆன்மாக் களின் அறிவு சிவகணமாகிய திருவருள் உணர்வைப் பெற்று விரி வடைந்தது. இரு கரை, பெத்த முத்திகள். முத்தியில் ஆன்ம உணர்வு சிவணம் பெற்றுத் திகழ்தல் நன்கறியப்பட்டது. பெத்த நிலையிலும் அவ்வுணர்வு அன்ன தாதல் சீவன் முத்தி நிலையிலாம் ஆகவே, 'இருகரையும் பொன்னிறம் கொண்டது' என்றது. ஆணவ மலம் நீங்கினால், ஆன்மா இவ்வுடம்போ -டிருக்கும் பொழுதே முத்தியை அடைந்து நிற்கும்' என்பது உணர்த்திய வாறு. 'பொன்னிறங் கொண்டது' என்பது அழகு பெற்று விளங் -குதலைக் குறித்தது. புன்னை மலரின் மகரந்தம்

பொன்னிறம் உடையது. தயங்குதல் - விளங்குதல்.
பிறவி 'கடல்' என்றும், முத்தி 'அக்கரை' என்றும் சொல்லப் படுதலால், பெத்தத்தை 'இக்கரை' என்றார். 'இருகரையும்' என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று. 'இருகரையும் பொன்னிறம் கொண்டது' என்றது. பன்மையொருமை மயக்கம். 'போதும்' என்னும் உம்மைச் சிறப்பு. 'மாதர், சத்தி, சிவமும், சத்தியும் இருக்கும் இடம்' என ஒருங்கு கூறற்பாலதனை வலியுறுத்தற் பொருட்டுத் தனித்தனியே கூறினார். இதனால், 'ஆணவ இருள் நீங்கினால், 'அம்மை' என்பதின்றி இம்மையே முத்தியாம்' என்பது உள்ளுறையாக உணர்த்தப்பட்டது.

கோமுற் றமரும் குடிகளும் தம்முளே
காமுற்ற கத்தி யிடுவர் கடைதொறும்
வீவற்ற எல்லை விடாது வழிகாட்டி
யாமுற்ற தட்டினால் ஐந்துண்ண லாமே. #2877

செங்கோல் அரசன் உண்மையாகவே மிகவும் அன்பு செலுத்தினாலும் அவனது தன்மையை அறியாத குடிகள் வெளிப்படையாக இன்றி, மறைவாகத் தங்களுக்குள்ளே வாய்ப்பு நேரும்பொழுதெல்லாம் அவ்வரசனைப் பற்றிப் பல தூற்றுதல் மொழிகளைக் கூறிக்கொள்வார். ஆயினும் கால வரையறையின்றிக் குடிகளுக்கு அவை வாழ வழிவகுத்து வரும் அரசன் தன் கடமையி னின்று தவறுவானேயானால், நாம் உணவு முதலியவற்றைப் பெற்று வாழ இயலுமோ! (இயலாது.)

விளக்கவுரை

அமர்தல் - விரும்புதல். உம்மை, சிறப்பு. குடிகளை உண்மையாகவே மிகவும் விரும்பும் செங்கோல் அரசன், ஆன்மாக் களின்மேல் உண்மையான அறக்கருணையை உடைய சிவன். அவன் அத்தகைய கருணையாளனாய் உயிர்கட்கு, 'பெத்தம், முத்தி' இரு நிலைகளிலும் உபகரித்துவரினும், அறிவற்ற உயிர்கள், 'சிவன் இல்லை' என்றும், 'இருப்பினும் அவனுக்குக் கண் இல்லை' என்றும் இன்னோரன்னவாகத் தம் வாய்க்கு வந்ததைத் தங்களுக்குள் கூறிக் கொள்வர். அதனையே, 'கடைதொறும், காமுற்ற கத்தியிடுவர்' என்றார். கடை - இடம்; வாய்ப்பு. காமுற்ற - விரும்பிய சொற்கள். வீதல் - முடிதல் எல்லை, கால எல்லை. அரசன் ஒருவனேயன்றிப் பலர் வரினும் அரசு நீடு செல்வதேயாகலின் அதனைச் சிவன் செயலுக்கு உவமையாகக் கூறினார். 'வழிகாட்டி' என்பது பெயர். 'யாம் உற்றவற்றைத் தட்டினால்' என்க. தட்டுதல் - தவறுதல். ஐந்து, ஐம்புல நுகர்ச்சி.
அரசு கால வரையறையின்றிக் குடிகளை ஓம்பன், சிவன் பெத்தம்,

முத்தி இரண்டிலும் உயிர்கட்கு உபகரித்தலைக் குறித்தது. பலவற்றைச் சொல்லுமிடத்துப் படர்க்கையில் வைத்துக் கூறிய பொருள் நமக்கும் பொருந்தவதாயின், அதனைப் பின்பு ஓரிடத்தில் நம்மேல் வைத்துக் கூறுதலும் பொருந்துவதே. அதனை, 'நீர் இன்றி யமையாது உலகம் என்றால், மழையின்றி நாம் எங்ஙனம் அமைவேம்' என்பதுபோலக் கூறிக் காண்க. இம்முறையில், 'தம்மிலே கத்தி யிடுவர்' எனக் கூறிப் பின்பு, 'உற்ற தட்டினால் யாம் உண்ணலாமே' என்றார். ஏகாரம் எதிர்மறை குறித்த வினா, 'ஐம்புல நுகர்ச்சி' என்பது வெளிப்படைப் பொருளில் உடல் ஓம்புதலையும். உள்ளுறைப் பொருளில் வினை நுகர்ச்சியையும் குறித்து நின்றது. இதனுள், மூன்றாம் அடி மூன்றாம் எழுத்தெதுகை பெற்றது.

'பெத்த நிலையிலும் சிவன் உடனாய் நின்று உபகரியாகிவிடின், உயிர்கள் வினையை ஈட்டுதல் நுகர்தல்களைச் செய்தல் இயலாது' என்றபடி.

தோட்டத்தில் மாம்பழம் தொண்டி விழந்தக்கால்
நாட்டின் புறத்தில் நரிஅழைத் தென்செயும்
மூட்டிக் கொடுத்த முதல்வனை முன்னிட்டுக்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே. *#2878*

தோட்டம் - வேதம், ஆகமம், திருமுறை ஆகிய முதல் நூல்களின் தொகுதி. அதில் பழுத்த மாம்பழம், திருவைந்தெழுத்து. 'வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சி வாயவே'*3* என்னும் அருட்டிரு மொழியைக் காண்க.

தொண்டி விடுதல் - பழுத்து விழுதல். பழமையைக் குறிக்கும் 'தொண்டு' என்னும் பெயரடியாகப் பிறந்த வினை. பழுத்த முதியோனை. 'தொண்டு கிழவன்' என்பர். 'தொந்தி சரிய, மயிரே வெளிற, நிரை தந்தம் அலைய' எனத் தொடங்கும் திருப்புகழைக் காண்க. திருவைந்தெழுத்துப் பழுத்து விழுதலாவது, சமயாசாரியர்கள் போன்ற பெயியோர்கள் கருணை மீதூர்ந்து அதனை உலகறிய எடுத்தக் கூறி வலியுறுத்துதல். நாயனார் காலத்திலும் அத்தகைய பெரியோர்கள் இருந்திருக்கலாம்.

'நமச்சி வாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க'*9*
என்றும்,
'தலையாய ஐந்தினையும் சாதித்துத் தாழ்ந்து
தலையா யினஉணர்ந்தோர் காண்பர் - தலையாய
அண்டத்தான், ஆதிரையான், ஆலாலம் உண்டிருண்ட
கண்டத்தான்' செம்பொற் கழல்'*1*
என்றும்,

'வாயிலே வைக்கு மளவின் மருந்தாகித்
தீய பிறவிநோய் தீர்க்குமே - தூயஏ
கம்பெருமான், தேவியொடு மன்னு கயிலாயத்(து)
எம்பெருமான் ஓரஞ் செழுத்து'
'அஞ்செழுத்துங் கண்டீர் அருமறைக ளாவனவும்,
அஞ்செழுத்துங் கற்க அணித்தாகும், - நஞ்சவித்த
காளத் தியில்யார்க்கும் கண்டற் கரிதாய்போய்,
நீளத்தே நின்ற நெறி'3

என்றும் அருளிச்செய்த ஆளுடைய அடிகள், காரைக்காலம்மையார், நக்கீர தேவ நாயனார் முதலிய பெரியோர்களை இங்கு நினைவு கூர்தல் நன்று.

நரி - நரிக்கூட்டம் அதனை, 'நாட்டின் புறத்தன' என்றமையால், ஒரு கூட்டம் வேதத்திற்குப் புறம்பான. மற்றொரு கூட்டம் வேதத்திற்குள் இருப்பினும் சிவாகமத்திற்குப் புறம்பானது. 'இவை எவை' என்பதை அறிந்துகொள்க. இந்த நரிக்கூட்டங்கட்கும், மேற்குறித்த மாம்பழத்திற்கும் என்ன தொடர்பு உண்டாகும். யாதும் தொடர்பு உண்டாகாது. அதனையே, 'நாட்டின் புறத்த நரிஅழைத் தென்செயும்' என்றார். அழைத்தல் - கூப்பிடுதல்.

இனி, அகப்புறச் சமய நூல்களிலும், அகச்சமய உரைகளிலும் திருவைந்தெழுத்தின் சிறப்புக் குறிக்கப்பட்ட தாயினும், அவர் அதனைத் தெளியமாட்டாது புறக்கணித்துவிடுவர். அத்தனையே, 'காட்டிக் கொடுத்தவர் கைவிட்டவாறு' என்றார். கொடுக்கப்பட்டவர் கொடுத்தவர் அந்நூல்களின் ஆசிரியர்களும், உரையில் ஆசிரியர்களும். 'மாம்பழத்தைக் கனவிலும் கருதாது கூப்பிட்டுக் கொண்டிருக்கின்ற நரிக் கூட்டங்கள் போக, ஒரு சில மக்கட் கூட்டமும் அப்பழத்தைக் காட்டுவார் காட்டிக் கொடுக்கவும் எடுத்து உண்டு பயன்பெற்றில என்பதாம்.

மூட்டிக் கொடுத்த முதல்வன், தோட்டத்தை உண்டாக்கி வளர்த்த தலைவன். அவன் சிவன். தோட்டத்தையுடையான் கருணை காரணமாக, பசித்தவர்க்கு இதன் பழத்தைக் கொடுக்க' என்று தன் ஏவலாளர்க்குச் சொல்லியுள்ளான். அஃதே அவன் ஆணை. எனவே, 'பிறவிப் பிணியால் துன்புறுவார்க்குத் திருவைந்தெழுத்தின் சிறப்பினை உணர்ந்தோர் உணர்த்துக' என்பதே சிவனது சங்கற்பம் என்பதும், அவ்வாற்றால் உணர்ந்தோர் உணர்த்தினும் மக்கள் அவரவர் பக்குவ பேதங்கட்கு ஏற்ப அதனைச் செவிமடாதோரும், செவிமடுப்பினும் பேணாதோரும், பேணினும் உட்கிடைப் பொருளை முற்ற உணர்ந்து முழுப் பயனைப் பெறாதோருமாய் உளர்' என்பதும்

கூறியவாறு.

விளக்கவுரை

'முதல்வன்', என்பது ஆகுபெயராய் அவனது ஆணையைக் குறித்தது.
'கொடுத்தவரும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று.
'கைவிட்டவாறு இரங்கத் தக்கது' என ஒரு சொல் வருவித்து முடிக்க.
இதனால் சமயிகள் பலரும் திருவைந்தெழுத்திகள் உண்மை அடியோடே அல்லது முற்றவோ உணராதவர்களாய்ப் பிறப்பின் பயனை இழத்தல் உள்ளுறையாக உணர்த்தப்பட்டது.

புலர்ந்தது போதென்று புட்கள் சிலம்பப்
புலர்ந்தது போதென்று பூங்கொடி புல்லிப்
புலம்பி னவளோடும் போகம் நுகரும்
புலம்பனுக் கென்றும் புலர்ந்தின்று போதே. *#2879*

தலைவன் தலைவியர் இன்பமாகக் கூடியிருத்தற் குரிய காலம் இராக்காலம். பொழுது விடிந்துவிட்டால், தலைவன் துயிலை விட்டு வெளியே அறம், பொருள் ஆகியவற்றின் செயல்களில் செல்லுதற்கு உரியன். பொழுது விடிதலைத் தலைவன் தானே உணராவிடினும் அதனை அவனுக்கு, 'கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்'*3* என்றபடி சிறப்பாகக் கோழி கூவ, அதனுடன் மற்றைப் பறவைகளும் ஒலித்து அறிவிக்கின்றன. அதனால் பொழுது விடிந்ததை நன்குணர்ந்தும் தலைவர் சிலர் விரைந்தெழுந்து வெளிச் செல்வதில்லை. அது நிற்கத் தலைவியருள்ளும் ஒரு சிலர் தலைவனை எழ விடாது புலம்புவர். இவ்வகையில் எவ்வகையிலோ, புட்கள் ஒலித்தும் எழுந்து வெளிச்சொல்லாதவர்கட்குப் புட்கள் ஒலித்தாலும், மற்றும் என்ன நிகழ்ந்தாலும் எப்பொழுது பொழுது விடிவதேயில்லை. (பகலாயினும் இரவேயாய் இருக்கும்.)

விளக்கவுரை

மக்கள் வாழ்க்கையில்,
'முப்பதாம் ஆண்டளவில் மூன்றற் றொருபொருளைத்
தப்பாமல் தன்னுட் பெறானாயின் - செப்பும்
கலையளவே யாகுமாம்; காரிகையார் தங்கள்
முலையளவே யாகுமாம் மூப்பு'
என்ற ஔவையார் வாக்கின்படி, கற்பன கற்று, அறிவன அறிந்து அறத்திற்குரியராம் தன்மை பெறுதற்குரிய காலம் முதல் முப்பது ஆண்டுகளாகும்.
பின்பு இல்லாளோடு கூடி இன்பம் நுகர்ந்து, அறத்தையும் தேடிக்கொள்ளுதற்குரிய காலம் அடுத்த முப்பதாண்டுகளாகும்.

அஃதாவது அறுபதாம் ஆண்டு முடியவாம். பின்பு உலகப்பற்றை விடுத்துத் துறவு பூணுதல் வேண்டும். இதுபொதுவான ஒரு முறை. சிறப்பாக இல்லறத்திற் செல்லாமலே உள்ளத்தில் பற்றில்லையாயின் துறவை மேற்கொள்ளுதல் சிறப்புடையதே.
தமிழாசிரியர் கூறும் துறவு, 'நாட்டை விடுத்துக் காட்டிலே தான் வாழவேண்டும்' என்பதன்று. 'பற்றற்று இருத்தல் வேண்டும்' என்பதே. பற்றில்லாதவர் உடல் நிலைமையைப் பொறுத்து எங்கிருப்பினும் துறவரே. 'நாட்டை விடக் கூடாது' என்பதில்லை. விடுதல் விடாமை அவரவரது உடல் நிலையைப் பொறுத்தது.
துறவற இயலில் துறவு நிலையைப் பலவகையாக விளக்கிய திருவள்ளுவர் 'நாடு, காடு' என்னும் இரு வாழ்விடங்களில் எதனையும் வரையறுக்கவில்லை.
அறுபதாண்டு வரையில் இன்பம் நுகரும் காலமாக வகுக்கப் பட்டமையால், அந்தக் காலத்தை 'இராக் காலம்' என்றும், அறுபதாண்டு கடந்ததை, 'பொழுது விடிந்துவிட்ட காலம்' என்றும் நாயனார் கூறியருளினார்.
அறுபதாண்டு கடந்து விட்டதை ஒவ்வொரு தன் மகனும் அறிவான். ஆயினும், உலகப் பற்று அறது அதனையே அவன் பற்றிக் கிடப்பதற்கு, அவனுடைய மனநிலை அல்லது குடும்பச் சூழ்நிலை இரண்டில் எந்த ஒன்றும் காரணமாகலாம். அதனையே நாயனார் பொழுது விடிந்தும் படுக்கையை விட்டு வெளிவாராதவனது தன்மையாகக் கூறினார்.
'பூங்கொடி' என்பது உருவகம். ஆகவே, அஃது அஃறிணைப் பெயராய், பூங்கொடி புல்லி' என்பது, 'பூங்கொடியைப் புல்லி' என இரண்டாவதன் தொகையாகவும், 'பூங்கொடியாற் புல்லப்பட்டு' என மூன்றாவதன் தொகையாகவும், 'புலி கொன்ற யானை' என்பது போலத் 'தடுமாறு தொழிற் பெயராய்'* நின்றதாம். புலம்பினவள் - தனிமையைப் பொறாதவள். அஃது இங்குக் குடும்பச் சூழ்நிலையைக் குறித்தது.
புலம்பன், நெய்தல் நிலத்தலைவன். நிலத்திற்கு உரியது இரங்கல். எனவே, 'இத்தகைய தலைவன் இரக்கத்திற்கு உரியவன்' என்பது குறிப்பு.
கோழி கூவுதல், நாள் நிலைச் சுவடிகள் ஒருவனது ஆண்டளவைத் திட்டவட்டமாகக் காட்டுதல். பிற புட்கள் ஒலித்தல், உடம்பில் நரையும், திரையும் முதலானவை தோன்றுதல் 'மனத்திட்பம் இல்லாதவனுக்கு எவை நிகழ்ந்தும் என்ன பயன்' என்றற்கு. 'புலம்பனுக்கென்றும் புலர்ந்தின்று போதே' என்றார்.

இதனால், அறநூல் முறைப்படி வாழாதவர் மக்கட் பிறப்பின் பயனை எய்தாமை உள்ளுறையாகக் கூறப்பட்டது.

தோணிஒன் றுண்டு துறையில் விடுவது
ஆணி மிதித்துநின்(று) ஐவர்கோல் ஊன்றலும்
வாணிபம் செய்வார் வழியிடை யாற்றிடை
ஆணி கலங்கின் அதுஇது ஆமே. #2880

அடித் தட்டினைத் தக்கபடி மிதித்து, குறிப்பிட்ட ஐந்துபேர் ஓட்டினால், சென்று சேர வேண்டிய துறையில் கொண்டு போய் விடுகின்ற தோணி ஒன்று உள்ளது. (அது திருவைந்தெழுத்து மந்திரமாகும். 'அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை'3 என ஆளுடைய அடிகளும் அருளிச் செய்தார். 'ஆணி' என்றது அடித்தட்டினை. அதனைத் தக்கபடி மிதித்தலாவது பளு சமமாக இருக்கும்படி வைத்தல். படகின் அடித்தட்டுப் பளுவைத் தாங்கி நிற்பது. பளு சமமாய் இல்லாவிடில் தோணி புரண்டுவிடும். 'தோணி' என்றது ஒரு மரத்தோணியன்று படகேயாம். பளுவைச் சமமாக வைதத்ல் அது வல்லார்க்கே கூடுவது. அதனால் இங்கு அது திருவைந்தெழுத்தின் மேலோட்டமான பொருளாகாது, உள்ளீடான பொருளாய் நிற்றலாம். அஃது உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன் எனும் நூல்களில் ஐந்தெழுத்திற்கும் சொல்லப்பட்ட ஐந்து பொருள்கள்.) அவைகளையே இங்கு 'ஐவர்' என்றார். அவர்கள் கோல் ஊன்றி ஓட்டுதலாவது, திருவைந்தெழுத்தை, 'தூலம், சூக்குமம், அதிசூக்குமம், காரணம், மகாகாரணம்' என்பனவாகப் படிப்படியாக நுணுகி நுணுகி வர உணர்த்துதல்த. 'அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி'1 என, ஐந்தையும், 'ஐந்து பதம்' என அருளிச் செய்தமையும் உணரற்பாற்று.

விளக்கவுரை

தோணியில் சென்று வாணிபம் செய்வார், திருவைந்தெழுத்தின் உட்பொருளை ஆசிரியர் உபதேசிக்கக் கேட்டு, அதனை மேற்கூறியபடி முறையில் ஓதி, மேன்மேல் உயரும் உயிர்கள். தோணியை ஓட்டுவார் அதனைச் செவ்வனே ஓட்டுதற்கு, அதில் ஏறியிருப்பவர்களும் ஒத்துழைத்தல் வேண்டும். அவ்வாறின்று முரண்விளைப்பார்களாயின் தோணி கவிழ்ந்துவிடும். தோணி கவிழ்தலையே, 'ஆணி கலங்கின்' 'அது இது ஆம்' என்றது, 'மேலது கீழாகியும், கீழது மேலாகியும் புரளும்' என்றபடி. 'அது இது ஆம்' என்றதனானே, இது அது ஆம் என்பதும் கொள்க. 'வழியிடை யாற்றிடை' என்றதில் வழி, செல்லும் வழியையும், யாறு, 'அவ்வழியாவது இது' என்பதையும் குறித்துச் சிறப்பும், பொதுவுமாய் நின்றன. இரண்டாம் அடியை முதலில் வைத்து, 'துறையில்' விடுவது

தோணி ஒன்று உண்டு' என மாற்றியுரைக்க.
இங்குக் குறித்த வாணிபத்தின் இயல்பை, மேல் 'கொங்கு புக்காரொடு வாணிபம் செய்தது'3 என்றதில் காண்க.
இதனால், பலதிறப் பொருள்களை மறைத்துரையாடலாகக் கூறிவந்து, இறுதியில் அந்த அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்து முடிக்கப்பட்டது.

*11.25.*மோன சமாதி

ஏழு வளைகடல் எட்டுக் குலவரை
ஆழும் விசும்பினில் அங்கி மழை வளி
தாழும் இருநிலத் தன்மை யதுகண்டு
வாழ நினைக்கில் அஃ*(*து*)* ஆலயம் ஆமே. *#2881*

புற உலகத்தை நோக்குமிடத்து நிலமும், வானமும் ஆகிய இரண்டிடங்களில் நிலத்தில் அதனைச் சூழ்ந்துள்ள ஏழு கடல்களும், நிலத்தைத் தாங்குகின்ற எட்டு உயர் மலைகளுமாகியும், வானத்தில் நெருப்பு மயமாய் உள்ள ஞாயிறும், பிற மீன்களும், மேகமும், காற்றும் ஆகியும் வியப்பூட்டுவதாய் என்றும் அழியாது நிலைத்திருப்பது போலக் காணப்படுகின்றது. இப்படியிருத்தலைக் கண்டு இந்த மண்ணுலகத்தைப் பொருளாகக் கருதி இல்லை நீடு வாழ நினைத்தால், உண்மையில் இதன் தன்மையோ, இவ்விரிவுகள் எல்லாம் ஒன்றும் இன்றி அடங்கி ஒடுங்கிப் போவதாய் உள்ளது.

விளக்கவுரை

'ஆகவே, அறிவுடையோர் இதில் வாழ நினையாது, நிலைத்த வேறொரு நிலையில் வாழவே முயல்வர்' என்பது குறிப் பெச்சம். நிலைத்த நிலை, வீட்டு நிலை தாழ்தல் - தங்குதல். அது, பகுதிப் பொருள் விகுதி. லயம் - ஒடுக்கம். ஆலயம் - ஒடுக்கத்தை அடைவது. இதனால், மோன சமாதிக்கு வாயிலாக உலகத்தின் நிலையாமை உணர்த்தப்பட்டது.

ஆலிங் கனம்செய்*(*து*)* அகம்சுடச் சூலத்துச்
சாலிங் கமைத்துத் தலைமை தவிர்த்தனர்
கோலிங் கமைந்தபின் கூபப் பறவைகள்
மாலிங்கு வைத்தது முன்பின் வழியே. *#2882*

உலகத்தில் ஒருவனும், ஒருத்தியும் ஒருவரை ஒருவர் இறுகத் தழுவுமாற்றால் 'அவளது வயிற்றிற்றானே அங்குள்ள தீயால் வெந்து உருவாகி நிலைப்பதாகிய மண் பாண்டத்தைக் கருவிலே அமைத்து, அதற்கு எந்தத் தன்னுரிமையும் இல்லாமற் செய்து விடுகின்றார்கள். பின்பு அது வெளியில் வந்த பிறகு அதற்கு வளர்ச்சி முறை அமைகின்றது. அப்பொழுது கிணற்றுப் பறவைகள் போல் வெளியுலகைப் பற்றி யாதும் அறியாத மக்கள் அந்தப் பாண்டத்திற்கு அமைத்து வைக்கும் நெறி, முன்பே பலமுறை அமைந்துகிடந்த மயக்க நெறியே யன்றிப் புதிய தெளிவு நெறி யாதுமன்று.

விளக்கவுரை

அந்நெறியாவது, உருவாவதும், உடைந்து போவதும் - பின்னும்

உருவாவதும், உடைந்து போவதுந்தான். 'செய்து, அமைத்து, கவிர்த்தனர்' என்பவற்றிற்கு எழுவாய் வருவிக்கப்பட்டது. 'அகம்' என்றது வயிற்றை. 'சுட' என்றதனால் அதற்குரிய 'தீ' என்பது வருவிக்கப்பட்டது. அஃதாவது உடல் வெப்பம். சூல் - கருப்பம். அத்து, வேண்டா வழிச் சாரியையாய் வந்து, ஏழாவதன் பொருளைத் தோற்றுவித்தது. சால் - மண் பாண்டம்; என்றது உடம்பையேயாதல் வெளிப்படை. உடம்பை மண்பாண்டமாக வருணித்தல் சித்தர் பாடல்களில் பல இடங்களில் காணலாம். உடம்பில் உயிர் உள்ளதேனும் அது தன்னியல்பை இழந்து, உடம்பின் இயல்பாயே நிற்றலின் அதனைக் குறியாது உடம்பையே குறித்தார். தலைமை தன்னுரிமை. அஃதாவது, உள்ளே முடங்கிக் கிடவாது வெளி வர விரும்பினும் அது மாட்டாமை. 'தலைமை தவிர்த்தனர்' என்பது 'அடைத்து வைத்தார்கள்' என்றவாறு. கோல், ஒழுங்கு. வெளியுலகம், வீட்டு நெறி. மால் மயக்கம், 'மால் வழியே' என இயையும். 'முன்பின்' என்பதில், 'இன்', சாரியை. 'முன்பு உள்ள நெறியே' என்க. அது பிறந்தும், இறந்தும் மீளப் பிறந்தும், இறந்து வருதலாம். எனவே, முன் மந்திரத்திற் கூறியவாறு. 'இவ்வுலகிற்றானே நீடு வாழ நினைவாரது நிலைமையெல்லாம் இவ்வாறே முடியும்' என்பதாம்.
இதனால், முன் மந்திரத்தில், 'ஆலயம் ஆமே' எனப் பொதுவாகச் சுட்டிய நிலையாமை இனிது விளங்க உணர்த்தப்பட்டது. ஆகவே, இவ்விரு மந்திரங்கலாலும், 'உலக வாழ்க்கையை விடுத்து, மோன சமாதியையே பெரியோர் அடைவர்' என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டதாம்.

நின்றார் இருந்தார் கிடந்தார் எனல்இல்லாச்
சென்றார்தம் சித்தமே மோன சமாதியாம்
மன்றேயும் அங்கே மறைபொருள் ஒன்றுண்டு
சென்றாங் கணைந்தவர் சேர்கின்ற வாறே. *#2883*

உலகில் பலர் மறைகின்ற காலத்தில், 'நின்றான்; இருந்தான்; கிடந்தான்; தன் கேள் அலறச் சென்றான்'8 என்னும் சொல் நிகழும்படியாக, காளையராய்ப்பின் மூத்து ஒடுங்கிப் பின் பிணியுற்று கிடந்தே மறைகின்றனர். அவ்வாறின்றி, ஊர்ப் பயணம் புறப்படுவது போல இவ்வுலகை விட்டு நல்ல உணர்வோடு மறைகின்றவர்களது உணர்வு உற்றிருந்த நிலைமையே 'மோன சமாதி' எனப்படுகின்றது. அந்த நிலை பலரும் சென்று அடையத்தக்க மன்றம் போன்றதுதான். மன்றம் ஆயினும் அங்கு மறைந்து நிற்கும் பொருள். அஃதாவது, அறி - வினுள் அறிவாய் நிற்கும் பொருள் ஒன்று உண்டு. அதை அடைந்தவர் அடைந்த முறையே முறை. 'பிற எல்லாம் முறையல்ல' என்பதாம்.

விளக்கவுரை

'இல்லா' என்பது, துவ்வீறு கெட்ட எதிர்மறை வினை யெச்சக் குறிப்பு. 'சித்தம்' என்றது உணர்வை. அஃது ஆகுபெயராய், அதன் நிலைமையைக் குறித்தது. 'அதனை அடைதற்கு எவர்க்கும் தடையில்லை' என்பது உணர்த்துதற்கு, அதனை, 'மன்றுபோல்வது' என்றார். ஏயும், உவம உருபு. 'ஆங்குச் சென்று அணைந்தவர்' என மாறிக் கூட்டுக. 'சேர்கின்ற ஆறே ஆறு' என ஒரு சொல் வருவித்து முடிக்க. ஆறு - முறைமை.

இதனால், மோன சமாதியாவது இன்னது' என்பது உணர்த்தப்பட்டது.

காட்டும் குறியும் கடந்தஅக் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்
கூட்டும் குருநந்தி கூட்டிடி னல்லதை
யாட்டின் கழுத்தில் அதர்கிடந் தற்றே. *#2884*

காட்டு - எடுத்துக்காட்டு. குறி - ஏது. நேரே காண வாராத பொருளை அதனை விட்டு நீங்காததாய்க் காணப்படும் ஏதுவாலும், அதனோடொத்த உவமத்தாலும் கருதியுணரலாம். 'ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் - சோதிக்க வேண்டா'*9* என்று அருளிச் செய்தபடி, முன் மந்திரத்தில் 'மறைபொருள்' எனப் பட்ட அந்த மெய்ப்பொருளை விட்டு நீங்காது அதனை அறிவிக்கும் ஏதுவாய் நமக்குக் காணப்படுவதும் ஒன்றில்லை. இனி, தனக்குவமை யில்லாதான்'*3* என்றபடி, அப்பொருளோடு ஒத்ததாய், அதற்கு உவமையாவதும் ஒன்றில்லை. அது பற்றி அப்பொருளை, 'காட்டும் குறியும் கடந்த அக்காரணம்' என்றார். அப்பொருளே எல்லா வற்றிற்கும் முதலாய் நிற்றலின், 'காரணம்' எனப்பட்டது. 'காரணம், முதல்' என்பன ஒரு பொருட் சொற்கள். இங்ஙனம் காட்சி கருதல்கட்கு எய்தாத அப்பொருளை உணர்த்துவன உரைத்திட்சிகளேயாம். ஆயினும் அவ்வுரைப் பொருள்களை அனுபவமாகப் பயிலாது, உரைகளை ஏட்டின் புறத்திலே எழுதி வைத்தால், அதனால் என்ன பயன் விளையும்? ஒரு பயனும் விளையாது. இனி அப்பொருளை அனுபவமாகப் பற்ற அதனோடு சேர்ப்பிக்கின்றவர் சிவ குருவே. அவர் சேர்ப்பித்தால் மேற்குறித்த உரைப் பொருள்கள் எல்லாம் அனுபவமாகப் பயன்படும். இல்லாவிடில் ஏட்டில் எழுதி வைத்தன எல்லாம் ஆட்டின் கழுத்தில் மடிக் காம்புபோல்வன தூங்குகின்ற அத்தன்மையனவேயாம்.

விளக்கவுரை

'எழுதி மட்டும் படிப்பின், தமக்கும், பிறர்க்கும் அவை யாதொரு

பயனையும் செய்யா' என்பதாம். இஃதே பற்றி, 'நூலறிவு பேசி நுழைவி லாதார் திரிக'* அம்மைத் திருவந்தாதி - 33.என்னும் அனுபவ மொழியும்,

'ஒன்றும் குறியே குறியாத லால்அதனுக்கு
ஒன்றும் குறிஒன் றிலாமையினால், ஒன்றோடு
உவமிக்க லாவதுவும் தானில்லை; ஒவ்வாத்
தவமிக்கோ ரேஇதற்குச் சான்று'9

என்னும் சாத்திரத் திருமொழியும் எழுந்தன.

கு-ரை: 'காரணம்' என்றது, காரணமாய் உள்ள இயல்பையும், அதனை அடையும் வழியையும் கூறும் உரைகளைக் குறித்தது என்னை? எழுதப்படுவன உரைகளேயாதலால், 'நந்தி' என்றது, 'சிவ குரு' என்னும் குறிப்பினது. 'அவர் கூட்டினல்லது' என எடுத்துக் கொண்டுரைக்க. 'அல்லதை' என்பது ஐயிற்றிடைக் குற்றுகரம். இதனால், 'ஒரோ ஒருகால் பிற கல்விகள் எல்லாம் ஆசிரியன் இன்றியும் பயன்படும்; மோன சமாதியைப் பற்றிய கல்வி, ஆசிரியன் இன்றிப் பயன்படாது' என்பது வலியுறுத்தி உணர்த்தப்பட்டது. (இதன் பின் பதிப்புக்களில் காணப்படும், 'உணர்வுடையார்கட்கு உலகமும் தோன்றும்' என்னும் மந்திரம் ஏழாம் தந்திரத்து, 'சம்பிரதாயம்' அதிகாரத்தில் வந்தது.

மறப்பது வாய்நின்ற மாயநன் நாடன்
பிறப்பினை நீக்கிய பேரரு ளாளன்
சிறப்புடை யான்திரு மங்கையும் தானும்
உறக்கமில் போகத்(து) உறங்கிடுந் தானே. #2885

தன்னை மறப்பதையே தனது தொழிலாகக் கொண்ட, வஞ்சக நாட்டில் வாழும் ஒருவன் (பெத்தான்மா) அம் மறதியால் அடைவது பிறவித் துன்பமே. அத்துன்பத்தை, அவன் தன்னை என்றும் மறவா நிலையை அடைவிக்கும் முகத்தால் நீங்கி யருளிய பெருங்கருணையாளன், எவ்வாற்றானும் பிறப்பை எய்தாத சிறப்புடையவன். (சிவன்) அவன், பிறவித் துன்பத்தின் நீங்கிய அவன் (முத்தான்மா) முன்போலத் தன்னை மறப்பதாகிய அந்த உறக்கம் அல்லாத வேறு உறக்க இன்பத்தில் இருக்கும்பொழுது, தானும் தன் தேவியுடன் அந்த உறக்கத்தில் பங்கு பற்றியிருப்பான்.

விளக்கவுரை

'கேவலம், சகலம், சுத்தம்' என்னும் மூன்று நிலைகளில் கேவல நிலையே மறப்பும். சகலம் நினைப்புமாயினும் அந்நினைப்பு நிலையிலும் சிவனை நினைத்தல் இல்லையாகலின், பெத்தான்மாவை 'மறப்பே வடிவமாய் நின்றவன்' என்றார். அது, பகுதிப் பொருள்

விகுதி.
'நின்னை எப்போதும் நினைய லொட்டாய் நீ;
நினையப்புகின்
பின்னை அப்போதே மறப்பித்துப்
பேர்த்தொன்று நாடுவித்தி;
உன்னை எப்போதும் மறந்திட்டு
உனக்கு இனிதாய் இருக்கும்
என்னை ஒப்பார் உளரோ? சொல்லு
வாழி இறைவனே'3
என்னும் அப்பர் திருமொழி இங்கு நினைக்கத்தக்கது. மாயம் - வஞ்சனையும், நிலையாமையும். அவற்றை உடைய மாயா காரியங்களாகிய தத்துவங்கள். மறதியைத் தருதல் பற்றி வஞ்சனையையே இங்குப் பொருளாகக் கொள்க. அவை உயிர்க்கு இடமாதல் பற்றி, 'நாடு' என்றும், கேவலத்தை நீக்குதல் பற்றி 'நன்று' என்றுங் கூறினார். சுத்த நிலையே சிவனை மறவா நிலையும், அதனால் பிறவியற்றிருக்கும் நிலையுமாகும். 'நாடனது' என ஆறாவது விரிக்க. சிவபோக நிலை, சிவனை மறந்து துயிலும் கேவல சகல அதீதங்கள் போலாது சிவனை நினைந்தே துயிலும் சுத்த அதீதம் ஆகலின் அதனை, 'உறக்கம் இல் போகம்' என்றும், 'அந்நிலையிலும் சிவனது திருவருள் உதவி ஆன்மாவிற்கு இன்றியமையாதது' என்றற்கு. 'திருமங்கையும் தானுமாய் (அப்போகத்தில்) தான் உறங்கிடும்' என்றும் கூறினார். 'சிவ போக நிலையிலும் சிவனது திருவருள் உதவி ஆன்மாவிற்கு இன்றியமையாதது' என்பதைச் சிவஞான போதப் பதினொன்றாம் சூத்திரத்து நுண்பொருள் பற்றி உணர்க.
ஈற்றில் நின்ற 'தான்' என்பதை, 'சிறப்புடையான்' என்பதன் பின்னர்க்கூட்டி, 'மங்கையும், தானுமாய்' என ஆக்கம் விரித்துரைக்க. இதனால், 'சுத்த துரியாதீதமே மோன சமாதி நிலை' என்பதும், 'அந்நிலையும் சிவனது அருளாலே பயன்படும்' என்பதும் உணர்த்தப்பட்டன.

துரியங்கள் மூன்றும் கடந்தொளிர் சோதி
அரிய துரியம் அதன்மீது மூன்றாய்
விரிவு குவிவு விழுங்கி உமிழ்ந்தே
உரைஇல் அனுபூ திகத்தில்உள் ளானே. #2886

சிவன், 'கேவல துரியம், சகல துரியம், யோக துரியம்' என்னும் இம்மூன்று துரியங்களையும் கடந்து நிற்கும் ஒளியாய் உள்ளவர். (இத்துரியங்கள் முன் தந்திரத்தில் விளக்கப் பட்டன. இம்மூன்றையும்

கடந்தது அரிய துரியம். அது நின்மல துரியம். (இதுவும் முன் தந்திரத்தில் விளக்கப்பட்டது.) அதன்கண் உள்ள மூன்றாவன, ஞாதிரு, ஞானம், ஞேயம் (அறிபவன் அறிவு, அறியப்படும் பொருள்.) 'இவை தோன்றி நிற்றல் விரிவு' எனவும், தோன்றாது மறைதல் குவிவு' எனவும் உணர்க. துரிய நிலையில் விரிவும், அதனையும் கடந்த அதீத நிலையில் குவிவும் உண்டாகும். ஆகவே, 'விரிவை விழுங்கிக் குவிவை உமிழ்ந்தது' என நிரல் நிறையாகக் கொள்க. குவிந்த நிலையே பேசா அனுபூதி, அல்லது, மோன சமாதி ஆதலின், 'உரைஇல் அனுபூதிகத்து உள்ளான்' என்றார். 'சோதி, விழுங்கி, உமிழ்ந்து உள்ளான்' என முடிக்க. 'மீது' என்பது ஏழன் உருபாயும், 'மேல்' என்னும் பொருட்டாயும் நின்றது. 'ஆய்' என்னும் வினையெச்சம், 'விரிவு' என்னும் தொழிற்பெயர் கொண்டது.

விளக்கவுரை

இதனால், மோன சமாதி முத்துரியங்களையும் கடந்த அதீத நிலையாதல் வலியுறுத்தி உணர்த்தப்பட்டது.

உருவிலி ஊன்இலி ஊனம்ஒன் றில்லி
திருவிலி தீதிலி தேவர்க்கும் தேவன்
பொருவிலி பூதப் படையுடை யாளி
மருவிலி வந்தென் மனம்புகுந் தானே. #2887

(இம்மந்திரம் சிவனது தனிச் சிறப்பான இயல்புகளையே விரிக்கின்றது.)

விளக்கவுரை

உரு இலி - தன் இயல்பில் உருவம் இல்லாதவன். ஈன் இலி - பிறர் பொருட்டாக உருவம் கொள்ளுமிடத்தும் அவ்வுருவில் புலால் இல்லாதவன்; ('மாயா சரீரியல்லன்; சத்தி சரீரி' என்றபடி. 'அரிதரு கண்ணியாளை ஒருபாகமாக அருள் காரணத்தின் வருவார்'3 என்னும் திருமுறையையும், காயமோ மாயையன்று; காண்பது சத்தி தன்னால்'1 சாத்திரத்தையும் ஊன்றி யுணர்தல் வேண்டும்.)
ஊனம் - குறை. தனக்கு இயல்பாய் உள்ள ஆற்றல் குறைவு படுதற்குரிய காரணம். அது பாசம். அதனை இயல்பாகவே இல்லாதவன். பாசங்கள் பல ஆதலின், 'அவற்றுள் ஒன்றும் இல்லாதவன்' என்க. 'ஒன்றும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று.
திருஇலி - திருவை இல்லாளாக உடையவன். திரு - அருள். இல்லாள் - தேவி.
'தீதிலி' என்றதே பற்றி, 'நன்றிலி' என்பதும் கொண்டு, 'உலகில் வரும்

தீமை நன்மைகளில் ஒன்றினாலும் தாக்குண்ணாதவன்' என்க.
மருவு இலி - புதிதாக வந்து பொருந்துதல் இன்றி, அனாதியே அத்துவிதமாய்க் கலந்து நிற்பவன். அத்தகையோனைப் 'புகுந்தான்' என்றது, புதியோன்போல விளங்கி நின்றமை பற்றி, 'மனம்' என்றது அறிவை.
ஏனைய வெளி. பல பெயர்களும் ஒரு பொருள் மேலவாய், 'வந்து என் உளம் புகுந்தான்' என்பதனோடு முடிக்க.
இதனால், 'எத்துணையும் அரியன் மோன சமாதியில் எளியனாய் நிற்றல் உணர்த்தப்பட்டது.

கண்டறி வார் இல்லைக் க யத்தின் நந்தியை
எண்டிசை யோரும் 'இறைவன்'என் றேத்துவர்
அண்டங் கடந்த அளவிலா ஆனந்தம்
தொண்டர் முகந்த துறைஅறி யோமே. *#2888*

சிவபெருமானை அறிஞர் பலரும் 'முதற் கடவுள்' என்று உணர்ந்து போற்றுகின்றனர். ஆயினும் அவன் அவரவர் உடலிற் குள்ளேயிருந்து அருள் புரிதலைப் பலர் அறிந்திலர், (புறத்திலேதான் வைத்துப் போற்றுகின்றனர் என்றபடி) ஆகவே, அதனை அறிந்த ஒரு சிலரே அவனுடைய மெய்த்தொண்டர் ஆகின்றனர். அவர்கள் உலகங்களைக் கடந்து 'கரையிலாக் கருணை மாகடலாயும்'*3* அதனானே கரையிலா இன்ப மாகடலாயும் உள்ள சிவனிடத்தில் அந்த ஆனந்தத்தைத் தம்மால் ஆமளவும் முகந்து உண்கின்ற துறையை நாமெல்லாம் அறியாதவர்களாகவே இருக்கின்றோம்.

விளக்கவுரை

'நந்தியை' என்பது முதலாகத் தொடங்கி, 'காயத்தில் கண்டறிவார் இல்லை' என மாற்றி; அதனை இரண்டாம் அடியின் இறுதியில் கூட்டியுரைக்க.
காயம் - தூய உடம்பு. அதன் உள்ளிடமாகச் சொல்லப்படுவது இருதயம். அதனைப் பூசாத்தானமாகக் கொண்டு செய்யும் அகப் பூசையே சிறப்புடைப் பூசையாகும். இஃது 'அந்தரி யாகம்' எனப்படும். 'அந்தரியா கந்தன்னை முத்தி சாதனமாய் அறைந்திடுவர்; அதுதானும் ஆன்ம சுத்தி யாகும்'*1* என்றது சிவஞான சித்தி. இது கிரியா பூசை. ஞான நிலையில், 'சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம்' என்னும் முறையில் அறிவுக்கறிவாய் அறிவினுள்ளே வைத்துச் சிவன் உணர்ந்து வழிபடப்படுவான். அது ஞான பூசை. இவை ஒன்றின் ஒன்று மேம்பட்டன. இந்த மூவகை நிலையும், 'காயத்தின் உள்' என்பதாகக் கொள்ளப்படுதலின், இவற்றுட் செல்லாது புறத்தில் மட்டும் வைத்து வழிபடுவாரை நாயனார், 'நந்தியைக் காயத்தின் உள்ளே கண்டறிவார்

இல்லை' என்றார். காயத்தின் உள்ளே என்பதில் சாரியை நிற்க, உருபு மறைந்தது.

'எந்தையே ஈசா, உடல்இடம் கொண்டாய்;
யான்இதற் கிலன் ஓர்கைம் மாறே'*
'நிலாவாத புலால் உடம்பே புகுந்து நின்ற
கற்பகமே, யான் உன்னை விடுவே னல்லேன்'*
என்றாற்போல வரும் திருமொழிகளும் இவற்றையே குறிக்குமாற்றை ஓர்ந்துணர்ந்துகொள்க. இனி இவற்றிற்கெல்லாம் இவ்வுண்மைப் பொருளைக் கொள்ளாது, தூல உடம்பில் தரிக்கப்படும் சின்னங்களையே இவை குறிப்பனவாகக் கொண்டமை வாரும் உளர்.

'அண்டம் கடந்த பொருள்
அளவில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்'8
'... ... பேரா, ஒழியாப், பிரிவில்லா,
மறவா நினையா, அளவிலா,
மாளா இன்ப மாகடலே'9
என்னும் திருமொழிகளை இதன் மூன்றாம் அடியோடு ஒப்பிட்டு உணர்க. நுகரும் பகுதியை முகக்கும் துறையாக உருவகித்தவர். முழு நிலையையும் கடலாக உருவகம் செய்யாமையால் இஃது ஏகதேச உருவகம்.

இதனால், சிவனை அகத்தில் வழிபடுதலே மோன சமாதியைப் பயத்தல் வலியுறுத்தி உணர்த்தப்பட்டது.

தற்பர மல்லன் சதாசிவன் றானல்லன்
நிட்கள மல்லன் சகள நிலையல்லன்
அற்புத மாகி அனுபவக் காமம்போல்
கற்பனை யின்றிக் கலந்துநின் றானே. #2889

(இம்மந்திரத்திற்கு முன் மந்திரத்திற் போந்த, 'நந்தி' என்பதை எழுவாயாக வருவிக்க.)

சிவன், மோன சமாதியை அடைந்தவர்கட்கு, அதற்கு முன் பெல்லாம் அவர்கள் பாவித்த பாவனைகளில் தோன்றியது போலத் தோன்றாமல், அவர்களது பாவனைகளில் ஒன்றற்கும் உட்படாத வேறோர் அதிசயப் பொருளாய், அநுபவப் பொருளாய் விளங்கி நிற்கின்றான்.

விளக்கவுரை

'சிவன் ஒருவன் உளன்' என, வேதாகமங்கல் பற்றுக் கோடாகப் பொதுவகையான் உணர்ந்த நிலையில் அவன்,
'தேவராயும், அசுர ராயும், சித்தர், செழுமறையோர்
நாவராயும், நண்ணு பாரும், விண், எரி, கால், நீரும்
மேவ ராய விரைமலரோன், செங்கண்மால் ஈசன் என்னும்

மூவ ராயும்'3
இங்ஙனம் பல திறப்பட்டுக் காணப்படுகின்ற உயிர் வகைகளையும், ஐம்பூதம் முதலிய உயிரல்பொருள் வகைகளையும் வைத்து, 'சிவன் இவை அனைத்திற்கும் மேலாய் உளன்' என்று உணர்ந்த அளவில், அவன் உண்மை மாத்திரையாக நிருவிகற்பமாகவே தோன்றினான். தற்பரம் - தனக்கு மேலானது. தான் உயிர். உயிர்களாகிய அறிவுடை உலகத்தைக் கூறவே, இனம்பற்றி, உயிரல்லாத அறிவிலா உலகமும் கொள்ளப்படும். இந்த நிருவிகற்ப உணர்வும் பாவனையே யாதல் அறிக. இவ்வாறும் அவன் இப்பொழுது இல்லை.
இனி, 'உளன்' எனப் பொதுவாக உணரப்பட்ட சிவன் ஏழ்வியல்பினன்? என ஆராயுமிடத்து, 'அவன் தன் பொருட்டாக யாதொரு தொழிலையும் வேண்டாதவனாயினும், உயிர்களின் பொருட்டாக ஐந்தொழில்களைச் செய்கின்றான்' என ஆசிரியர், வேதாகமங்களின்வழி அறிவிக்குமிடத்து, 'அவ்வைந்தொழில் - அதி சூக்குமம், சூக்குமம், தூலம் என மூவகைப்படும்' எனவும், அதி சூக்கும ஐந்தொழிலை அருவத் திருமேனியை யுடையனாயும், சூக்கும ஐந்தொழிலை அருவுருவத் திருமேனியை யுடையனாயும், தூல ஐந்தொழிலை உருவத் திரமேனியை யுடையனாயும் நின்று செய்வன்' எனவும் அறிவிக்க. அவ்வாறே அறியுமிடத்து, அத்திருமேனிகள் ஏனைப் பொருள்கள்போலக் கட்புலனாகாமையால் ஆசிரியர் அறிவித்தவாறே பாவித்து வழிபடும் வழிபாட்டுப் பொருள்களாயின. அவற்றுள் உருவம் சரியை நிலையிலும், அருவுருவம் கிரியை நிலை யிலும், அருவம் யோக நிலையிலும் வழிபடும் பொருள்களாயின. அந்தப் பாவனைப் பொருள்களாகவும் அவன் இப்பொழுது இல்லை.
இங்ஙனம் இவை எல்லாம் அல்லவாம் நிலைகளையே முதல் இரண்டடிகளில் எடுத்தோதினார். சதாசிவன் - அருவுருவத் திரு மேனியன். நிட்களம் - அருவத்திருமேனி. அது, 'சிவம், சத்தி' என இருவகைத்து. சகளம் - உருவத் திருமேனி. இது, 'மகேசுரன், வித்தை' என இருவகைத்து.
இவையெல்லாம் ஐந்தொழில் செய்தற்பொருட்டுக் கொள்ளப் பட்ட தடத்த வடிவங்களே யாதலாலும், தடத்தம் பெத்தான்மாக்களுக்கே உரியதாக, முத்தான்மாக்களுக்கு அவையனைத்தினும் வேறாய், வாக்கு மனோதீதமாய் உள்ள சொரூப நிலையே உரித்தாகலும் மோன சமாதியை அடைந்தோராகிய முத்தர்களுக்கு சிவன் 'சதாசிவன்' முதலாகச் சொல்லப்படும் நிலையினன் அல்லன் என்றார்.
இந்நிலையைத் திருஞான சம்பந்தரும், 'கறையணி வேலிலர் போலும்'* எனத் தொடங்கும் திருப்பதிகம் முழுவதிலும் பலவாக விரித்தருளிச்

செய்தார்.

தடத்த மெல்லாம் பாவனை யளவினவாய் நிற்றலாலும், சொரூபம் எவ்வகையும் பாவிக்க வாராது பாவனையால் கண்டு வந்த அவற்றினும் வேறாய் அநுபவத்தில் உணரப்படுவது ஆகலானும், 'அற்புதமாய்க் கற்பனையின்றி, அனுபோகக் காமம்போல் கலந்து நின்றான்' என்றார்.

காம இன்பமும், 'கற்பனை இன்பமும், அனுபவ இன்பமும்' என இருவகைத்து. காதலனும், காதலியும் மெய்யுறு புணர்ச்சியின்றி, உள்ளப் புணர்ச்சி மட்டுமே வாய்த்த நிலையில் அவர்களது உள்ளத்தில் தோன்றுகின்ற இன்பம் கற்பனை இன்பம். மெய்யுறு புணர்ச்சி வாய்த்த காலத்தில் அவர்கள் அடையும் இன்பம் அனுபவ இன்பம். 'அவ்வாறே குரு உபதேசத்தைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல்களால் விளையும் சிவானந்தம் கற்பனை ஆனந்தமாக, நிட்டையாகிய மோன சமாதியில் விளையும் சிவானந்தமே அனுபவ ஆனந்தமாய்' என்றற்கு, 'கற்பனையின்றி அனுபவக் காமம்போல் கலந்து நின்றான்' என்றார். 'மருவி யிருவரும் புணர வந்த இன்பம் வாயினாற் பேசரிது; மணந்தவர்தாம் உணர்வர்;* என்றது போல இதுவே மோன சமாதி அனுபூதி என்க. இதனுள் இரண்டாம் அடி இன எதுகை பெற்றது.

இதனால், சொரூப அனுபவமே மோன சமாதியாதல் கூறப்பட்டது.

முகத்தினிற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்தினிற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத்தன் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தினைச் சொல்லெனில் சொல்லுமா றெங்ஙனே. *#2890*

இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

பின்னிரண்டடிகளை முதற்கண் கூட்டி, ஈற்றில் தொக்கு நின்ற 'அச்சுகம், மகள் தன் மணாளனோடு ஆடிக் காணத்தக்கதே' என்னும் இசையெச்சத்தை விரித்து, 'ஆனந்தம் சுகத்தில் கண்கொண்டு காண்பதே' என மாற்றியுரைத்து முடிக்க. முதல் அடி, இடைப்பிற வரலாய் வந்தது. இஃது எடுத்துக்காட்டுவமை.

காண்பதே - காணப்படுவதே. ஆனந்தம், ஏற்புழிக் கோடலால் இங்குச் சிவானந்தமே யாதல் தெளிவு. முகத்தினிற் கண்ணை 'ஊனக் கண்' என்றும், அகத்தினிற் கண்ணை, 'ஞானக் கண்' என்றும் வழங்குப. 'தசையைக் குறிப்பதாகிய 'ஊ' என்னும் பெயர், புணர்ச்சிக்கண் னகரச் சாரியை பெற்று, ஊன என வரும்' என்பது தொல்காப்பியம்.*8*
பிற்காலத்தி அஃது, 'ஊன்' என னகர ஈறேயாய்ச் சில இடங்களில்

அகரச் சாரியை பெற்று வருவதாயிற்று. அகக் கண்ணால் காண வேண்டுவதை முகக் கண்ணால் காண முயலுதலும், அகக்கண்ணிற்கு அஃது அகப்படாமை பற்றி, 'அஃது இல்லை' என முரணி நிற்றலும் உடைமை பற்றி அத்தன்மையுடையாரை 'மூடர்காள்' என விளித்தருளினால். இம்மந்திரத்துட் கூறப் பட்ட பொருளையே திருவுந்தியார்,

'இங்ஙன் இருந்ததென் றெவ்வண்ணம் சொல்லுகேன்?
அங்ஙனம் இருந்ததென் றுந்தீபற;
அறியும் அறிவதன் றுந்தீபற'3

என்றும், திருக்களிற்றுப்படியார்,

'அன்று முதல் ஆரேனும் ஆளாய் உடனாகிச்
சென்றவர்க்கும் இன்னதெனச் சென்றதில்லை - இன்றிதனை,
இவ்வா றிருந்ததென் றெவ்வண்ணம் சொல்லுகேன்?
அவ்வா றிருந்த தது'1

என்றும் கூறின.

இதனால், சிவானந்த அனுபவம் மோன (மௌன) சமாதி நிலையேயன்றி, மனோ வாக்குக்களின் செயற்பாட்டு நிலையன்று' என்பது வலியுறுத்திக் கூறப்பட்டது.

அப்பினில் உப்பென அத்தன் அணைந்திட்டுச்
செப்பு பராபரம் சேரபர மும்விட்டுக்
கப்புறு சொற்பதம் மாளக் கலந்தமை
எப்படி அப்படி என்னும்அவ் வாறே. #2891

செப்பு பராபரம் - குரு மொழியும், வேதாகமங் -களும் சொல்லுகின்ற மெய்ப்பொருள். 'பராற் பரம்' என்பது, 'பராபரம்' என மருவிற்று. 'மேலானதற்கும் மேலானது' என்பது அதன் பொருள்.

விளக்கவுரை

சேர்பரம் - முன்பு பரமாய் இல்லாது பராபரத்தைச் சேர்ந்ததனால் 'பரம்' எனச் சொல்லப்படுவது. அஃது ஆன்மா.

இவ்விரண்டையும் விடுதலாவது, சீவான்மா இது, பரமான்மா இது' எனப் பகுத்துக்காணும் நிலையை விடுவது. அஃதாவது, ஆன்மா 'யான், எனது' என்னும் பகுத்துணர்வின், நீங்கியநிலை. 'கப்புறுதல்' எனப்பட்டதும் அதுவே. கப்புறுதல் - கவர்த்தல்; இரண்டு படுதல். கப்பு உறு சொல் பதம் மாள - பகுத்துச் சொல்லும் சொல் நிலை நீங்க. கலந்தமை - சீவான்மா பரமான்மாவோடு ஒன்றுபட்ட நிலை. 'அப்பினில் உப்பென, அத்தென ஆன்மா அணைந்திட்டுக் கலந்தமை' என்க. 'கலந்த நிலை எப்படி எனில்; அஃது இப்படி - என இலக்கண வகையாற் கூறு வாராது - அப்படி எனப் பொதுவகையால் சுட்டும்

தன்மையினதேயாம்' என்பது ஈற்றடியின் பொருள். இதன் முதல் மூன்றடிகளில் கூறப்பட்ட பொருளே சிவஞான போதத்துள்,
'நசித்து மலம் - அப்பணைந்த உப்பின் உளம் அணைந்து சேடமாம்;
கப்பின்றாம் ஈசன் கழல்'9
எனக் கூறப்பட்டமை காண்க.
இதனுள் பாடம் பெரிதும் திரிபுற்றது.
இதனால், 'மோன சமாதியின்பம் அனுபவத்தால் அறியப் படுமன்றி, அயலவர் உரையால் அறிய வாராது' என்பது உணர்த்தப் பட்டது.

கண்டார்க் கழகிது காஞ்சிரத் தின்பழம்
தின்றார்க் கறியலாம் அப்பழத் தின்சுவை
பெண்டான் நிரம்பி மடவிய ளானால்
கொண்டான் அறிவன் குணம்பல தானே. #2892

எட்டி மரத்தின் பழம் பார்ப்பவர்கண்கட்கு மிக அழகிதாய்த் தோன்றும். ஆயினும் அதனைத் தின்றாலோ, சுவை கைப்பாதலுடன், தின்றவரையும் கொல்லும் தன்மையுடையது. (அதனால், அறிவுடையோர் ஒருபோதும் அப்பழத்தைத் தின்னார்.)
இனிப் பெண்ணொருத்தி பெண்மை நிரம்பி, 'பெண்டு' என்பதற்குத் தகுதியடைந்த பின்பே அவளைக் கொண்டவன் அவளோடு தனிமையிற் பழகி, அவளுடைய குணங்கள் பல வற்றையும் உள்ளவாறு உணர்ந்து அவளது குணங்கட்கு ஏற்ப ஒழுகி இன்புறுத்துவான். (அவள் பெண்மை நிரம்பாதபொழுது கொண்டவன் அவ்வாறு செய்யான்.)

விளக்கவுரை

மோன சமாதி அல்லாதவற்றை மோன சமாதியாகச் சொல்லிச் சொற்சாலம் செய்யும் நூல்களும், உரைகளும் உள. ஆயினும் அவற்றின்வழி நின்றோர் அவற்றால் ஏமாற்றமே எய்தி, வாழ்நாள் வீணாளாயினமை அறிந்து இரங்குவர்.
'இருபிறப்பும் வெறுவியராய் இருந்தார் சொற்கேட்டு
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே'*
என்னும் அப்பர் திருமொழியே இதற்குப் போதிய சான்று.
சிவன் எல்லா உயிர்கட்கும் உய்யும் நெறி காட்டி உய்விப்பவனே யாயினும் பக்குவம் எய்திய உயிர்கட்கே அவன் முன் வந்து அதனைச் செய்வான். (பக்குவம் எய்தாத உயிர்கட்கு அவன் அதனைச் செய்யான்.)
இவ்விரு பொருள்களையே இம்மந்திரம் முன், பின் இரு பகுதிகளாலும் உணர்த்தி நிற்றலின், இது பிறிதுமொழிதல் அணியைப் பெற்றதாம்.
பேதை, பெதுமைப் பருவத்திலேயும் மகளிரை மணம் செய்து

கொடுத்தல் அக்காலத்து வழக்காதலைப் பற்றி இதன் பிற்பகுதியிற் போந்த உவமை வந்தது. 'மடவியள் ஆனாலே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. அறிதல், அறிந்து ஒழுகுதலாகிய தன் காரியம் தோன்ற நின்றது. இதன் இரண்டாம் அடி இன எதுகை பெற்றது.

இதனால், சற்குரவன் கிடையாமை பற்றிப் பொறுமையிழந்து, அசற்குரவரை அடைந்து அல்லல் உறல் கூடாது' என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது.

'இரைதேர் கொக்கொத்து இரவு பகல்
ஏசற் றிருந்தே வேசற்றேன்'

எனவும்,

'நல்கா தொழியான் நமக்கென்று உன்
நாமம் பரவி, நயனம் நீர்
மல்கா, வாழ்த்தா, வாய் குழறா,
வணங்கா, மனத்தால் நினைந் துருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப் பரவி'*

எனவும் அருளிச் செய்தவாறு 'அடங்கியிருத்தல் வேண்டும்' என்பதாம்.

நந்தி யிருந்தான் நடுவுத் தெருவிலே
சந்தி சமாதிகள் தாமே ஒழிந்தன
உந்தியி னுள்ளே உதித்தெழும் சோதியைப்
புந்தி னாலே புணர்ந்துகொண் டேனே. *#2893*

சிவன் நடுத் தெருவிலே வெளிப்படையாகத்தான் இருக்கின்றான். (ஆயினும், இருள் மூடியிருப்பதால் அவனைக் காண இயலவில்லை.) பின்பு அந்த நடுத் தெருவின் முதலில் எரிகின்ற ஒரு விளக்கை எனது அறிவுக் கூர்மையாற் கண்டு பற்றிச் சென்றேன்; சிவனைக் கண்டு கொண்டேன். அப்பொழுது மேற்குறித்த அந்த விளக் -கின்றிச் செய்யும் சந்தியானுட்டானங்களும், அவ்வனுட்டானத்தில் செய்யப்படும் தியானங்களும் என்னையறியாமலேயே நீங்கிவிட்டன.

விளக்கவுரை

நடுவுத் தெரு, ஆறு ஆதாரங்களுள் மேலதான ஆஞ்ஞை. அங்குச் சிவன் தியானப் பொருளாய் விளங்கியே நிற்றலால், 'நந்தி யிருந்தான் நடுவுத் தெருவிலே' என்றார்.

யோகக் காட்சியைத் தருவது குண்டலினி சத்தியே. ஆகவே, குண்டலினி யோகத்தை மேற்கொள்ளாத நிலையை இருள் நிலையாக வைத்து, குண்டலினியை, 'சோதி' என்கின்றவர், அது மூலாதாரத்தில் உள்ளபொழுது எழாது துயில் கொள்வதாய், மூலாக்கினியால் எழுப்பப்பட்ட பொழுது எழுந்து சுவாதிட்டானத்தைக் கடந்து, மணி

பூரகத்தை அடைந்த பொழுதே விளக்கத்தைத் தருதலால் அவ் விடத்தில் விளங்குவதாக, 'உந்தியி னுள்ளே உதித்தெழும் சோதியை' என்றார். சோதி, இங்கு விளக்கு. அந்த விளக்குப் புறத்தே உள்ள கையால் பற்றப்பட்டது. அகத்தே அறிவால் பற்றப்படுவது ஆதலின், 'புந்தியினுள்ளே புணர்ந்து' என்றும், விளக்குக் கிடைத்தலின் வெளியில் உள்ள பொருளை அடைதற்குத் தடையில்லாமை பற்றி, 'கொண்டேன்' என்றார். கொள்ளுதல், கைப்பற்றுதல்.
யோகத் தியான சமாதிகளில் இருப்பவர்பால் கிரியானுட் டானங்களும், தியானங்களும் நிகழாதுபோதல் இயல்பேயன்றோ? அதனையே, 'சத்தி சமாதிகள் தாமே ஒழிந்தன' என்றார். இதனுள் 'நான் ஒழிந்தேன்' என்னாது, 'தாமே ஒழிந்தன' என அருளிச் செய்ததை ஊன்றி உணர்தல் வேண்டும். யோக சித்தர்களும், 'நட்ட கல்லை தெய்வம் என்று' என்னும் பாடல்போன்ற பல பாடல்களில் கிரியைகளை விலக்குதல் போலக் கூறியனயாவும், 'கிரியையோடே நில்லாது யோகத்திற் செல்க' என அறிவுறுத்தியனவேயாம். அஃது அறியாதார், 'கிரியைகள் பயன் இல் செயல்கள்' எனச் சித்தர்கள் கடிந்தொத்தினார்கள்' எனத்தாம் அறிந்தவாறே கூறித் தாமும் பயனை இழந்து, பிறரையும், இழப்பிப்பர்.
இதனால், 'யோகத்தில் குண்டலினி யோகம் சிவனை விளக்கி நிற்கும், என்பது கூறப்பட்டது. அது 'பிரணவ யோகம்' அல்லது 'பிராசாத யோகம்' ஆம். ஹடயோகம் அதனைச் செய்யாது' என்பது கருத்து. எனவே, மோன சமாதிக்கு வாயிலாகிய யோகம் குண்டலினி யோகம்' என்னும் கருத்தினால் இம்மந்திரம் இவ்வதிகாரத்ததாயிற்று.

விதறு படாவண்ணம் வேறிருந் தாயந்து
பதறு படாதே பழமறை பார்த்துக்
கதறிய பாழைக் கடந்தந்தக் கற்பனை
உதறிய பாழில் ஒடுங்குகின் றேனே. *#2894*

விதறு படுதல் - சோர்வு உண்டாதல். 'வேறு ஆய்ந்து, இருந்து ஆய்ந்து' எனத் தனித்தனி இயையும். வேறு - முன் மந்திரத்திற்கூறிய அதற்கு வேறாக. இருந்து - மனம் ஒதுங்கியிருந்து. பதறு படுதல் - பதற்றம் உண்டாதல். 'பதறு படாதே' என்றதும் 'இருந்து' என்றதை வலியுறுத்தியதேயாம். மறை - மந்திரம். 'பழ மறை' என்றது, 'முதல் மந்திரம்' என்றபடி. அது திருவைந்தெழுத்தே.

விளக்கவுரை

'ஆதி மந்திரம் அஞ்செழுத்து'*8*
எனச் சேக்கிழாரும் அருளிச்செய்தார். பார்த்தல் - பொருளை ஊன்றி உணர்தல். பார்த்து - பார்த்தலால். 'பார்த்தலால், கடந்து ஒடுங்கு

கின்றேன்' என்க. 'பாழ்' என்பது, 'பயனற்றது' என்னும் பொருட்டாய், உலகியலைக் குறித்தது. கதறுதல் - துன்புறுதல் கூடாததனைக் கூடுவதுபோல் மனத்தாற் கருதிக்கொள்ளும் இன்பம் இல்லாத உலகியலை, 'இதில் இன்பம் விளையும், விளையும்' என்று கருதி, விடாது பற்றி நிற்றல் பற்றி, அதனை, 'அந்தக் கற்பனை' எனச் சுட்டிக் கூறினார். உலகியலை உதறிய பாழாவது, மாயையின் தொடர்பு சிறிதும் திருவருள் வியாபகம். 'அதில் நான் முன்பு போல இன்றி ஒடுங்குகின்றேன்' என்க.

இதனால், குண்டலி யோகத்தால் பக்குவம் எய்திய உணர்வினால் திருவைந்தெழுத்தின் பொருளை உணர உணரத் திருவருள் வியாபகத்தில் ஒடுங்கியிருக்கும் மோன சமாதி கூடும்' என்பது வலியுறுத்தி உணர்த்தப்பட்டது. 'மேற் கூறியது யோக நிலை' எனவும், 'இது ஞான நிலை' எனவும் உணர்க.

வாடா மலர்புனை சேவடி வானவர்
கூடார் அறநெறி நாடொறும் இன்புறச்
சேடார் கமலச் செழுஞ்சுட ருட்சென்று
நாடா அமுதுற நாடார் அமுதமே. *#2895*

தேவர்கள் இருவினைகளும் நல்வினையால் விளைந்த இன்பத்திலே மூழ்கிக் கிடத்தலால் அவர்கள் சிவனது திருவடியின்பத்தை நாடுதல் இல்லை. அவ்வாறே பெருமை நிறைந்த உள்ளக் கமலத்தில் ஒளிரும் ஒளி விளக்காகிய சிவனை அடைந்து, அவன் அருளால் தானே விளையும் அமுதத்தை உண்ணவும் அவர்கள் விரும்புதல் இல்லை. (ஆயினும் தாங்கள் அமுதத்தை உண்டு வாழ்வதாகவே அவர்கள் கருதுகின்றார்கள்.) அவர்கள் உண்ணும் அமுதம் அமுதமாகமோ? (ஆகாது.)

விளக்கவுரை

'அமிர்தம்' என்பதற்கு 'மிருத்யுவை (மரணத்தை) ஒழிப்பது' என்பது பொருள். அதனால் அமிர்தத்தை உண்பவர்கள் 'அமரர்' ('மரித்தல் இல்லாதவர்') எனப்படுகின்றனர். ஆயினும் அவர்கள் என்றுமே இறப்பதில்லையோ? தங்கள் நல்வினை முடிந்த வுடன் மாறி, வேறு பிறப்பை அடைவர். ஆதலால், அவர்கள் உண்ணும் உணவை 'அமிர்தம்' என்றலும், அதனை உண்ணும் அவர்களை 'அமரர்' என்றலும் உபசார வார்த்தைகளேயன்றி உண்மையாவன அல்ல. இதனை,

'அச்சுதன், அயன், அமரர் ஆகிய பெயர் அவர்க்கு
நிச்சயம்படு முகமனே யானபோல்'3

என்னும் கந்த புராணச் செய்யுளாலும் அறியலாம். இக்கருத்து பற்றியே' 'தேவர் உண்ணும் அமுதம் அமுதமோ' என்றார். 'அமுதமே' என்னும் ஏகாரம், எதிர்மறைப் பொருட்டாகிய வினாப்பொருட்டு. 'அவர் உண்ணும் அமுதம்' என்னும் இசையும்.

சிவனை அடைந்தோரே இறப்பின் நீங்கினோர் ஆவர் ஆதலால், அவனது திருவடியின்பமே உண்மை அமுதமாகும். அஃது உள்ளத்துள்ளே இயல்பாக என்றும் உள்ளதேயாதல் பற்றி அதனை 'நாடா (தேட வேண்டாத) என்றார். 'சென்று உற நாடார்' என இயைக்க. உறுதல் - பொருந்துதல். சேடு - பெருமை.

கற்பக மலர்க்கு வாட்டம் இன்மையால், 'வாடா மலர் புனை வானவர்' என்றார். 'இத்தகைய மலரைச் சூடுதல் பற்றியும் அவர்க்கு ஒரு செருக்கு உள்ளது' என்பதைக் குறித்தபடி. 'சேவடி' என்பதை, இரண்டாம் அடியின் முதற்கண் வைத்து, 'வானவர், அறப் பயனாம் இன்பம் நாள்தோறும் உறுதலால் சேவடி நாடார்' என்க. 'நெறி' என்றது முன்னர் அதனின் நின்ற ஒழுக்கத்தையும், பின்பு அதன் பயனையும் குறித்து நின்றது. 'அறப் பயன் இன்பம் சுவர்க்க இன்பமே' என்பதும், 'அது நிலையற்றதாகலின் இன்பம் ஆகாது என்பதும்' கூறியவாறு. 'கொன்றைத் தொங்கலான் அடியவர்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே'*1* என்றார் ஆளுடைய பிள்ளையார்,

'பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கும்
இசைத்து வருவினையில் இன்பம்'*2*

என்பது சிவஞான போதம், 'சுவர்க்க இன்ப மயக்கத்தால் தேவர் சிவனை நாடுதல் இல்லை' என்றருளிச்செய்த இக்கருத்தே, பற்றி

'தேவர் கனாவிலும் கண்டறியாச்செம்மலர்ப் பாதங்கள்'*3*

என ஆளுடைய அடிகளும் அருளிச் செய்தார்.

தேவர்களது செருக்கைக் கூறிய இதனால், மக்கள் செருக்குச் சிவனை நாட ஒட்டாகையை உணர்த்தி, 'உலகியல் மயக்கம் அற்றோர்க்கே மோன சமாதி கூடும்' என்பது உணர்த்தப்பட்டது.

அதுக்கென் றிருவர் அமர்ந்தசொற் கேட்டும்
பொதுக்கெனக் காமம் புலப்படு மாபோல்
சதுக்கென்று வேறு சமைந்தாரக் காணின்
மதுக்கொன்றைத் தாரான் வளந்தரும் அன்றே. *#2896*

காமக் கலவிக்கு உரியராய் அமைந்த இருவர் (ஒருவனும் ஒருத்தியும்) அது பற்றித் தம்முட் குறிப்புச் சொற்களால் உரையாடுதலை எதிர்பாராத வகையில் கேள்வியளவிற் கேட்டாலும் அவரோடு ஒத்த பருவத்தினர்க்கு அடங்கியிருந்த காமக்குறிப்புச் சடக்கென அவர் உள்ளத்தில் எழுந்து அவரைத் தன் வயப்படுத்துதல் போல, மோன

சமாதிக்கு உரியராய் உலகரோடு சேராது தனித் திருக்கும் ஞானியரை எதிர்பாராத வகையில் கண்ணாற் கண்டாலும் அவரோடு ஒத்த ஞானியர்க்கு, அடங்கியிருந்த மோன சமாதி அப்பொழுதே சடக்கெனமிக்கெழுந்து, அவரைத் தன்வயப் படுத்தும்.

விளக்கவுரை

'அதுக்கு' 'அதற்கு' என்பதன் மரூஉ. பின்வரும் 'காமம்' என்பதைச் சுட்டுகின்ற அது என்னும் சுட்டுப் பெயர், செய்யுளாகலின் முன்னர் வந்தது. 'என்ற' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. என்ற - என்று அமைந்த. அமர்தல் - விரும்புதல். 'கேட்டும்' என்னும் உம்மை இழிவு சிறப்பு. உவமையில் வந்த இவ் வும்மைக்கு ஏற்புடைபபொருளிலும் 'காணவும்' என உம்மை விரித் துரைக்க. சதுர் - பொதுக்கு, என்பது விரைவுக் குறிப்பாய நாட்டு வழக்கு இடைச்சொல். இது, 'பொசுக்கு' என்றும் வழங்கும். பெருமை அஃது இங்கு அதிகாரத்தால் மோன சமாதியைக் குறித்தது. 'மதுக் கொன்றைத் தாரானது வளம்' என ஆறாவது விரிக்க. அவ்வளமாவது, அவனது ஆனந்தம். அந்த ஆனந்த நிலையே மோன சமாதியாதலை அறிக. அன்றே - அப்பொழுதே' 'காணினும் அக்காட்சி வளம் தரும்' என்க.

இதனால், 'மோன சமாதி எய்தினார், உலகியலின் தாக்குதலால் அஃது இழக்கப்படாமைப் பொருட்டு அதில் உறைத்து நின்றாரொடு கூடியிருக்க' என்பது கூறப்பட்டது.

தானும் அழிந்து தனமும் அழிந்து
ஊனும் அழிந்து உயிரும் அழிந்துடன்
வானும் அழிந்து மனமும் அழிந்தபின்
நானும் அழிந்தமை நானறி யேனே. *#2897*

நான் மோன சமாதியில் மூழ்கிவிட்டபொழுது, எனக்கு அந்த நிலையை வருவித்த குருவும் தோன்றவில்லை. அவர் அளித்தருளிய செல்வமாகிய ஞானமும் தோன்றவில்லை. அவரால் தூய்மை செய்யப்பட்ட உடம்பும் தோன்றவில்லை. அந்த உடம்பை ஆட்டிப் படைத்த உயிரும் தோன்றவில்லை. அந்த உடம்போடு கூடி நான் இருந்த இடமும் தோன்றவில்லை. உடம்பிற்கு உள்ளும், வெளியுமாய் அலைந்து கொண்டிருந்த மனமும் தோன்றவில்லை. அந்த மனத்திற்குமேல் அதன் செயலை ஆராய்ந்து நின்ற அகங்காரம் புத்தி சித்தங்களும் தோன்றவில்லை. கடைசியாக, 'நான், நான்' என்று என்னால் 'சொல்லப்பட்டும் உணரப்பட்டும் வந்த அந்த ஆன்மாவும் தோன்றவில்லை. இவையனைத்தும் தோன்றாமல் எப்படி எங்கே மறைந்துவிட்டன என்பது தனக்குத் தெரியவில்லை.

விளக்கவுரை

'அழிந்தன' என்றது, புலனாகாமை பற்றியேயாம். ஏனெனில், அந்தச் சமாதி நிலையினின்றும் பிரிந்த வழி இவ்வாறு சொல்லும் சொற்கள் நிகழ்தலானும், அழிந்தவை மீள இவ்வாறு நின்று சொல் நிகழ்த்தா ஆகலானும் என்க.

'இவையெல்லாம் முன்னர்த் தோன்றினமை வெறும் கற்பனையே யாகலின், கற்பனை கழியவே அவையும் தோன்றுதல் இலவாயின. ஆகவே, 'அழிந்தன' என்றது 'அழிந்தன' என்று கூறியதேயாம்' என்பாரும் உளர்.

'பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி'

எனவும்,

'அண்டங்கள் ஏழும் கடந்தகன் றப்பாலும்
உண்டென்ற பேரொளிக் குள்ளே உளஒளி'

எனவும், மற்றும் இன்னோரன்னவாக மேலெல்லாம் கூறிவந்த நாயனார்க்கும் அது கருத்தாகாமை யறிக.

'உயிர்' என்றது, உடம்பை இயக்கிநிற்கும் நிலையை. 'வான்' என்பது இடத்தைக் குறித்தது. மனத்தைக் கூறவே, இனம் பற்றி ஏனை அந்தக் கரணங்களும் கொள்ளப்பட்டன. 'நான்' என்றது ஆன்மாத் தன்னைப் பதி பாசங்களின் வேறாக அறிந்து நின்ற நிலையை. 'நான்' என்பது அழிந்தபின் பிற அழிந்தவாற்றை அந்த 'நான்' எனப்பட்டது எங்ஙனம் அறிதல் கூடும்? கூடாமையின், 'நான் அறியேன்' என்றார். 'அழிந்து' என்னும் எச்சங்கள் எண்ணின்கண் வந்தன. உம்மைகள் எண்ணும்மைகள்.

இதனால், 'மோன சமாதி எய்தினோர் மது உண்ட வண்டு, அந்த மது மயக்கத்திலே தன்னையும் அறியாது கிடத்தல்போல சிவா னந்தத்தை நுகர்ந்து அந்த நுகர்ச்சியில் தம்மையும் மறந்திருப்பார்கள்' என்பது கூறப்பட்டது.

'ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டென் உள்ளமும்போய்,
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ'*8*

என்னும் திருவாசகத்தை இங்கு ஒப்பு நோக்குக.

நிற்றல் இருத்தல் கிடத்தல் நடைஓடல்
பெற்றுஅக் காலும் திருவருள் பேராமல்
சற்றியல் ஞானம்தந்*(து)* ஆனந்தம் தங்கவே
உற்ற பிறப்பற்*(று)* ஒளிர்ஞான நிட்டையே. *#2898*

('இம்மந்திரம் அதிகப்படியாக உள்ளது' எனப் பதிப்புக்களில் குறிக்கப்பட்டபோதிலும் இங்கு இருத்தற்குரியதே.*)*

மோன சமாதியை அடைந்தோர் பின்பு உலகத்தில் ஒன்றோ டொன்று மாறுபட்ட செயல்களைச் செய்தபோதிலும் திருவருள் உணர்வு சலியாது நிற்றலால் சிவஞானம் திரிபெய்தல் இன்மையால் சிவானந்தா -னுபவமும் குறையாது. அவர்கட்கு இனிப் பிறப்பும் இறப்பும் இல்லை இஃதே நிருவிகற்ப சமாதியாகிய நிட்டை நிலையாம்.

விளக்கவுரை

'சற்று' என்பதன்பின் 'சற்றும்' என உம்மை விரித்து, 'பேராமல்' என்பதற்கு முன்னே கூட்டுக. 'தங்குதலால் பிறப்பற்றது' என்க. ஒளிர்தல், மாசற்று விளங்குதல். 'நிட்டை' என்பதன்பின், 'ஆம்' என்பது வருவித்து முடிக்க.

இதனால், மோன சமாதியை முற்றப்பெற்று நின்றோர் உலகியல் தாக்குதலால் சலித்தல் இல்லை' என்பது கூறப்பட்டது.

இருளும் வெளியும் இரண்டையும் மாற்றிப்
பொருளிற் பொருளாய்ப் பொருந்தஉள் ளாகி
அருளால் அழிந்திடும் அத்தன் அடிக்கே
உருளாத கல்மனம் உற்றுநின் றேனே. *#2899*

'கேவலம் சகலம்' என்னும் இரு நிலைகளையும் கடந்து சுத்த நிலையை எய்தி, அதில் மேற்பொருள் மேற்பொருளே யாயும், கீழ்ப்பொருள் கீழ்ப்பொருளேயாயும் விளங்க, அந்த மேற் பொருளுக்குள்ளே அடங்கியதனால், இடையிட்ட முன் மந்திரத்திற் கூறியபடி அனைத்தும் திருவருளால், தோன்றாது மறைவதாகிய சிவனது திருவடி நிழலில், சிறிதும் நகர்ந்து அப்பாற் செல்லாத கல்போன்ற உணர்வை நான் இப்பொழுது பொருந்தி நிற்கின்றேன்.

விளக்கவுரை

கேவல நிலையில் யாதும் தோன்றிற்றிலது. சகல நிலையில் மேற்பொருள் கீழ்ப்பொருளாயும், கீழ்ப்பொருள், மேற்பொருளாயும் மாறித்தோன்றின. அவ்விரண்டும் குற்றம் ஆகலின், 'சுத்தத்தில் அவை உள்ளவாறு விளங்கின' என்பார், 'பொருளிற் பொருளாய்ப் பொருந்த உள்ளாகி என்றார். 'ஆகி' என்றது, ஆகினமையால்' எனக் காரணப்பொருட்டாய் நின்றது. 'அத்தன் அடி' என்பது திருவருள் வியாபகமே. 'அடிக்கு' என்பது, ஏழாவதன் பொருளில் நான்காவது வந்த உருபு மயக்கம். 'மனம்' என்றது உணர்வை. சிறிதும் சலியாமை பற்றி, 'கல்போன்றது' என்றார். அவ்வாறு நிற்றலே உறைத்து நிற்றலாம்.

இதனால், முன் மந்திரத்திற் கூறிய சலியா நிலை உவமை முகத்தால்

வலியுறுத்தி உணர்த்தப்பட்டது.

ஒன்றிநின் றுள்ளே உணர்ந்தேன் பராபரம்
ஒன்றிநின் றுள்ளே உணர்ந்தேன் சிவகதி
ஒன்றிநின் றுள்ளே உணர்ந்தேன் உணர்வினை
ஒன்றிநின் றேபல ஊழிகண் டேனே.

#2900

நான் வெளியே எங்கெங்கு ஓடி ஓடி அலைந்ததை விட்டு, எங்கும் செல்லாது என்னளவுக்கு நின்று, என்னிடத்திலே என் அறிவை ஒன்ற வைத்து என்னுள் தானே நோக்கினேன். அப்பொழுது பரம்பொருள் காட்சிப்பட்டு பின் அதனை அடைந்து இன்புறும் வழியும் தோன்றிற்று. அவ்வழியாவது என் அறிவுக்கறிவாய் இருந்து பெத்தம், முத்தி இரண்டிலும் அறிவித்து வரும் திருவருளை அறிவாற் பற்றுதல். ஆயினும் இவைகளை நான் உணர்தற்கு எனக்குப் பல ஊழி சென்று விட்டன.

விளக்கவுரை

'சிவம்' என்பது, இங்கு, 'பேரின்பம்' எனப்பொருள் தந்தது. 'கதி, மார்க்கம், வழி' என்பன ஒரு பொருட் சொற்கள். 'பேரின்ப வழி' என முன்னர்ப் பொதுவாகச் சுட்டிப் பின்னர் அதனை 'உணர்வு' என விளக்கியருளினார். உணர்வு - உணர்வுக்கு உணர்வு; திருவருள். 'தம் உணர்வின் தமி அருள்'*1* என்றார் சிவஞான போதத்திலும், 'திருவருளின் இடையறா உதவியை அறிந்து, அதன்கண் இடையறாப் பேரன்பு செய்தலே பேரின்ப வழி' என்பதை, 'அயரா அன்பின் அரன்கழ் செலுமே'*9*என்னும் சிவஞான போதத்தாலும் அறிக.

'தேடிக் கண்டு கொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்'*3*

என அப்பர் பெருமானும் தாம் சிவனைக் கண்டுகொண்ட முறையை இங்ஙனமே அருளிச் செய்தவாறு அறிக.

'பல்லூழி காலம் பயின்றானை அர்ச்சித்தால்
நல்லறிவு சற்றே நகும்'

என்ப ஆகலான் இந்நிலை வாய்த்தற்கு ஒரு பிறப்பில் செய்யும் தவம் போதாது; பல பிறப்புக்களில் தவம் செய்தல் வேண்டும் ஆகலின், 'ஒன்றி நின்றேன் பல ஊழிகண்டேனே' என்று அருளியதன் உண்மையை உணர்க. இதில் சொற்பொருட் பின்வருநிலையணி வந்தது.

இதனால், மோன சமாதியை அடையும் வழியும், அதனை உணர்தல்

பற்றல்களின் அருமையும் கூறி முடிக்கப்பட்டது.

*11.26.*வரையுரை மாட்சி

தான்வரை வற்றபின் ஆரை வரைவது
தான்அவன் ஆனபின் ஆரை நினைவது
காமனை வென்றகண் ஆரை உகப்பது
தூமொழி வாசகம் சொல்லுமின் நீரே. *#2901*

தூய்மையாகிய சுத்தாவத்தையைப் பயக்கும் முத்தி பஞ்சாக்கரக் கணிப்பினால் ஓர் ஆன்மா தனது ஏகதேச உணர்வாகிய சுட்டுணர்வு கழியப்பெற்ற பின் அஃது யாரை வரைந்து சுட்டியுணரப் போகின்றது? இனி அது தான் சிவமாகி விட்டபின்பு யாரைத் தியானப் பொருளாக வரைந்து கொண்டு தியானிக்கும்? அவாவின் வேரையே அஃது அறுத்து விட்டபின்பு அஃது யாரை விரும்பும்? மாணவர்களே, நீங்களே சொல்லுங்கள்.

விளக்கவுரை

'இவற்றிற்கெல்லாம் சிறிதும் இடம் இல்லை' என்பது கருத்து. வினாக்கள் யாவும் இன்மையைக் குறிப்பால் உணர்த்தி நின்றன. 'உலகத்தை உணர்வது சுட்டுணர்வினாலும், விருப்பு, வெறுப்புக்கள் தோன்றுதல் அச்சுடணர் வினை பயனாலும் ஆகலின் சுட்டுணர்வு நீங்கவே அவையெல்லாம் இயைபின்றி நீங்கும்' என்பதும் கருத்து. காமன் - மன்மதன். அவன் அவாவின் வேருக்கு ஓர் உருவகம். 'அவன் சிவனது நெற்றிக்கண் முன் நில்லான் ஆகலின், சிவ ஞானியர் கண்முன்னும் நில்லான்' என்னும் நயம் தோன்றச் சிவ ஞானியரது அறிவை, காமனை வென்ற கண்' என்றார். 'சுட்டுணர்வு நீங்கவே, சிவத்தையும் ஆன்மாத் தன்னின் வேறாக வைத்துச் சுட்டியுணர்தல் இன்றித் தன்னுள்ளே அறிவுக்கறிவாக அநந்நியமாய் நின்று உணரும்' என்பது, 'ஆரை' நினைவது என்பதனால் குறிக்கப் பட்டது. ஆன்மாச் செயற்கையாய் எய்திய சுட்டுணர்வு நீங்குதல் பாச நீக்கத்தாலும், இயற்கையாகிய வியாபக உணர்வைப் பெறுதல் சிவத்தைத் தலைப்படுதலாலும் ஆதல் பற்றி, வியாபக உணர்வு எய்தினமையை, 'தான் அவன் ஆதல்' என்றார். இம்மந்திரம் ஈரடி எதுகை பெற்றது. இதனால், முத்தி பஞ்சாக்கரமாகிய வரையுரை சீவனைச் சிவமாக்கியருளும் மாட்சிமை கூறப்பட்டது.

உரையற்ற தொன்றை உரைசெயும் ஊமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போலச் சிந்தைதெளி வார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே. *#2902*

'கடலுக்கு கரை யில்லை' என்பது தெளிவு. ('கரை' எனப்படுவன எல்லாம் தீவுகளே) அங்ஙனமாகவும் அதற்குக் கரை யிருப்பதாகக் கருதிக்கொண்டு, அந்தக் கரையைச் சென்று காண முயலுதல் அறிவுடைமையாகுமோ? ஆகாது. அதுபோலச் சிவம் வியாபகப் பொருள்; சொல்லிற்குள்ளும் அடங்குவதன்று. அவ்வா றிருக்கவும், மாணவர்களே, நீங்கள், 'சிவத்தை யாம் சொல்லாற் சொல்லி உணர்த்திவிடுவோம்' என்று உணர்த்த முயல்வீர்களேயானால், ஊமன் தனது கருத்தைப் பிறர்க்குத் தெளிவாக உணர்த்த முயலுங்கால் அடையும் இடர்ப்பாடுகளைத் தான் அடைவீர்கள் அடைந்தாலும் உங்கள் கருத்து நிறைவுறாது. உண்மையென்ன வெனில், 'அலை யில்லாத கடல் ஒன்று இருக்குமேயானால் அதனோடு ஒத்துச் சிறிதும் சலனம் அற்றுத் தெளிந்த விரிந்த அறிவினை யுடையாரது அறிவில் சிவன் வரம்பில் பொருளாய் ஒளிர்கின்றான்' என்பதே.

விளக்கவுரை

'பஞ்சாக்கரத்தை அறியும் முறையில் அறிந்து, ஓதும் முறையில் ஓதினால், அஃது இந்தத் தெளிந்த அறிவைத் தந்துவிடும்' என்பது கருத்து. முன்னிரண்டடிகளில் வேற்றுப் பொருள் வைப்பணி வந்தது. 'நீர்' என்றது கரையற்ற நீரை ஆதலால், அது கடல் நீரேயாயிற்று. 'திரையற்ற நீர்போல்' என்றது இல்பொருளுவமை. புரை - சிற்றிடம் அஃது' 'ஏகதேசம்' ஒரு புடை) என்பதைக் குறித்தது. 'உரையற்ற தொன்று' என்றதனால், முத்தி பஞ்சாக்கரத்தையும் சுத்தமானதம் ஆக அறிவாற் கணித்தலே இங்கு விதிக்கப்பட்டதாம்.
இதனால், முத்தி பஞ்சாக்கரத்தை அறியும் முறை ஓதும் முறைகளின் மாட்சிமை உணர்த்தப்பட்டது.

மனமாயை மாயைஇம் மாயை மயக்க
மனமாயை தான்மாய மற்றொன்றும் இல்லை
பினைமாய்வ தில்லை பிதற்றவும் வேண்டா
தனைஆய்ந் திருப்பது தத்துவந் தானே. *#2903*

மாயையின் உண்மை யாதாயினும் பொதுவாக 'மாயை, மாயை' எனச் சொல்லிப் பலரும் முறை செய்வன எல்லாம் மாயா காரியங்களுள் ஒன்றாகிய மனத்தைக் குறித்தேயாம். ('மனம் எனவும் ஒரு மாயை எங்கேயிருந்து வரும்' என்றார் தாயுமான வரும்.) இந்த மனமாகிய மாயை, 'பிறரை மயக்குவது' என்பது இல்லாமல் அது மயங்கும்படி செய்க. அஃதாவது, 'அதன் கொட்டம் அடங்கும்படி செய்க' என்பதாம். மனம் அடங்கிவிட்டால், ஆன்மாவை அலைப்பது வேறு எதுவும் இல்லை. ஆகவே, அப்பால் அடங்க வேண்டுவதாகவும் எதுவும் இல்லை. மனத்தின் வழிப்பட்டு உள்ளத்தில் தோன்றியவற்றைத்

தோன்றியவாறே பலபடப் பேசும் பேச்சுக்களும் அற்றொழியும். அப்பால் புறப்பொருள்களைத் துருவித் துருவி ஆராய்வதை விடுத்து, 'நான் ஆர், என் உள்ளம் ஆர், ஞானங்கள் ஆர்'3 என்பன போல உள்நோக்கி ஆன்மாத் தன்னையும், தலைவனையும் ஆராய்ந்து உணர்வதே மெய்ப் பொருளைக் கூட்டுவிக்கும் மெய்யுணர்வாகும்.

விளக்கவுரை

மனமாயை, 'மனமாகிய மாயை' என இருபெயர் ஒட்டு. இதில் 'மாயை' என்பது அதன் காரியத்தைக் குறித்தது. 'இம்மாயையை' என இரண்டாவது விரிக்க. 'மயக்க' என்பது அகர ஈற்று வியங்கோள். பின்வந்த 'மன மாயை', 'இது' என்னும் சுட்டுப் பெயரளவாய் நின்றது. தான், அசை. 'வேண்டா' என்பது. வேண்டப் படாதாய் அற்றொழிதலைக் குறித்தது. 'தன்னை' என்பது இடைக் குறைந்து, 'தனை' என நின்றது. தன்னை ஆய்தல் கூறவே, அதனோடு உடன் நிகழ்வதாகிய தலைவனை ஆய்தலும் கொள்ளப்பட்டது. பிறவற்றை ஆராயாது, தன்னையும், தலைவனையும் ஆராய்தலை மட்டுமே கூறினமையாயினும், இந்த ஆராய்ச்சி அருள்வழி நிகழ்வதே யாகலானும் 'திருவைந்தெழுத்தில் பாச எழுத்துக்கள் இரண்டை நீக்கி ஏனை மூன்றெழுத்தையே கொண்டு உணர்க' என மறைபொருளாக உணர்த்தியதாயிற்று. 'முத்தி பஞ்சாக்கரமாவது இதுவே' என்பது, மேல்' ஐந்தெழுத்து' அதிகாரத்தில் சொல்லப்பட்டது. 'இதனைக் கணித்தல்' என்பதும் சுத்தமானதாக அறிவாற் கணித்தலேயாதல், முன் மந்திரத்தில் 'திரையற்ற நீர்போல்' என உவமையாற் கூறப்பட்டது. இங்கு 'மன மாயைதான் மாய' என்றதனால் நேரே கூறப்பட்டது. இதனால், 'பஞ்சாக்கரத்தை முத்தி பஞ்சாக்கரமாகக் கொண்டு, அதனையும் 'வாசகம், உபாஞ்சு, மானதம்' முறைகளுக்கு அப்பாற்பட்ட சுத்த மானத முறையிலே கணிப்பின் முத்திப் பயன் உளதாகும்' என அதன் மாட்சிமை உணர்த்தப்பட்டது.

11.27.அணைந்தோர் தன்மை

மலமில்லைமாசில்லை மானாபி மானம்
குலமில்லை கொள்ளும் குணங்களு மில்லை
நலமில்லை நந்தியை ஞானத்தி னாலே
பலம்மன்னி அன்பில் பதித்துவைப் பார்க்கே. *#2904*
ஞானத்தைப் பெற்று' அதன் பயனாகச் சிவத்தில் புறம் போகாது,
அன்பினால் தம்மை ஆழ்த்திவைத்திருப்பவர்கட்குப் புறத்தோற்றம்
உலகத்தாரது தோற்றத்தோரடு ஒத்துத் தோன்றினும், உண்மையில்
அவை இல்லையாம்.

விளக்கவுரை

மலம், ஆணவம், அஃது இங்கு ஆகுபெயராய் 'யான், எனது' என்னும் செருக்கினைக் குறித்தது. உலகத்தார்போல இவர்களும், 'யான் செய்தேன்; பிறர் செய்தார்' என வழங்கற்பாடு பற்றிக் கூறினாராயினும் அவர் உணர்வு, 'எல்லாம் சிவன் செய்தது' என்றே உணர்ந்திருக்கும். மாசு - குற்றம். அஃது அவர் செய்த பிறவியைத் தருதலின் குற்றமேயாதல் அறிக. பாம்பு கடித்து இறந்த வணிகன் ஒருவனையும், அப்பூதியடிகள் மகனையும் உயிர்பெற்றெழச் செய்தும், முதலை வாயில் அகப்பட்டு இறந்த அந்தணச் சிறுவனை அவனது வளர்ச்சியோடு மீட்டும் வணிக்கன்னி யொருத்தி, அப்பூதி யடிகளும், அவர்தம் துணைவியாரும், அந்தணப் பெற்றோரும் ஆகியோர்கசு யாதொரு கைம்மாறும் வேண்டாமல் பெருநலம் தந்து உதவிய சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகி. மூவர் முதலிகட்கும் அவற்றால் யாதொரு புண்ணியமும் விளையாமையையும், தாதையைத் தாள் அற வீசிய சண்டேசரருக்கு அதனால் யாதொரு பாவமும் விளையாமையையும் அறிக. இவர்கட்குப் புண்ணியமும், பாவமும் விளைந்திருப்பின் இந்திராதி தேவர்கள் வாழும் சுவர்க்கத்திலும், பாதகன் சென்றடையும் நரகத்திலும் சென்றிருத்தல் வேண்டும். அவை அவர்க்கு இல்லாது போயினமை வெளிப்படை.

மானமாவது, தம்மைப் பிறர் இழிவு படுத்துதலைப் பொறுக்க மாட்டாமை, அப்பரைச் சமணர்கள்,

'தவ்வை சைவத்து நிற்றலின், தருமசேனரும் தாம் பொய்வகுத்ததோர் சூலைதீர்ந்திலதெனப் போயினார்'

என அரசனிடத்திற் கட்டிக் கூறி,

'தலைநெறியாகிய சமயந் தன்னைஅழித்து; உன்னுடைய நிலைநின்ற தொல்வரம்பின் நெறியழித்த பொறியிலி' *

எனப் பலர்முன் இகழ்ந்தபோதும் வாளா இருந்ததை எண்ணுக.

அபிமானம் - பற்று. அஃதாவது, உடம்பும், தாய் தந்தையார், மனைவி, பிறர் ஆகிய சுற்றமும், பொன், பொருள், மக்கள், மாட மாளிகை, காணி முதலிய செல்வமும் ஆகியவற்றைத் துறக்க விரும் பாமல், அவை தாமே நீங்கும் நிலைமை எய்தியவழி உயிர் போவது போலக் கையற வெய்துதல். இந்நிலை நாயன்மாரிடத்து இல்லாமை தெளிவு.
குலம் இல்லாமை திருநீல நக்க நாயனார் திருநீல கண்டப் பாணருக்கு அவர் தம் துணைவியாரோடும் இரவுப் பொழுதைக் கழிக்க வேள்வி அறையை அளித்ததில் இனிது விளங்கிற்று.
'கொள்ளும் குணங்களும் இல்லை' என்றதனால், 'தள்ளும் குற்றங்களும் இல்லை' என்பது போந்தது. அவை, 'நியமம்' என யோக உறுப்புக்களுள் ஒன்றாக வைத்துச் சொல்லப்படும் விதி முறைகள். குற்றங்கள், அவற்றிற்கு எதிரவாயுள்ள விலக்குமுறைகள். அவற்றை விலக்கியொழுகல், 'இயமம்' எனப்படும். மோன சமாதியில் நிற்போர் உலகை மறந்திருத்தலால், 'இவைகள் அவர்பால் கட்டாயமாக நிகழும்' என்பது இல்லை.
நலமாவது இன்பம். இதனானே தீங்கும் பெறப்பட்டது. 'நலத்தில் விரும்பும், தீங்கில் வெறுப்பும் அவர்பால் நிகழா' என்பதாம். 'ஓடும்' செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்' என அருளிச் செய்தமை காண்க. 'நலத்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்'* என்றதனையும் நோக்குக.
'இவற்றையெல்லாம் இவர்கள் தாமே வலிந்து நீங்காது, உறங்கினோன் கையிலிருந்த பொருள் அவனையறியாது தானே வீழ்ந்துவிடுதல்போல, மோன சமாதியை அடைந்த இவர்களிடத்தி லிருந்து தாமே நீங்குவன' என்பதை,

'உறங்கி னோன்கை வெறும்பாக் கெனவும்
தானே தவிரா தானால், புரியாது
ஒழித்திடில் நிரயத் தழுந்துதல் திடமே' *

என்னும் சங்கற்ப நிராகரணத்தால் அறிக.

'ஞாலமதில் ஞான நிட்டை யுடையோ ருக்கு
நன்மையோடு தீமையிலை; நாடுவதொன் றில்லை;
சீலமிலை; தவமில்லை; விரதமொடாச் சிரமச்
செயலில்லை; தியானமிலை; சித்தமல மில்லை;
கோலமிலை; புலனில்லை; கரண மில்லை;
குணமில்லை; குறியில்லை; குலமுமில்லை;
பாலருடன் உன்மத்தர் பிசாசர்குணம் மருவிப்
பாடலினோ டாடல்இவை பயின்றிடினும் பயில்வர்'9

என்ற சிவஞான சித்திக்கும் இதுவே கருத்தென்க.

ஞானத்தினாலே நந்தியைப் பலம் மன்னி அன்பில் பதித்து வைப்பார்க்கு' என்பதை முதலிற் கூட்டியுரைக்க. பலம் - பயன். 'பலமாக' என ஆக்கம் விரிக்க.
இதனால், சிவனை அனுபவமாக அணைந்தோர், தோற்றத்தில் உலகர்போலவே காணப்படினும் அவரது நிலை முற்றிலும் வேறாதல் கூறப்பட்டது. இத்தன்மை யுடையாரே 'சீவன் முத்தர்' எனப்படுவர்.

ஒழிந்தேன் பிறவி உறவெனும் பாசம்
கழிந்தேன் கடவுளும் நானும்ஒன் றானேன்
அழிந்தாங் கினிவரும் ஆக்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக்கண் டேனே. *#2905*

நல்லதொரு வளமான சார்பாய் உள்ள சிவனை நான் சார்ந்துவிட்டேன். அதனால், முன்பு எனக்குச் சார்பு போலத் தோன்றி என்னைப் பிறவிக் கடலிலே அலைய வைத்த பாசங்களினின்றும் நீங்கிவிட்டேன். இப்பொழுது நான் அப்பாசங்கட்கு மேலே போய்விட்டேன். 'பரம்பொருள் வேறு நான்வேறு' என்பதன்றி, 'ஒன்றே' எனப்படும் நிலையை 'எய்தினேன்? ஆகவே, இறப்பதும், பின் பிறப்பதும் இனி எனக்குத் தவிர்க்க முடியாத சூழல் இல்லை.

விளக்கவுரை

ஈற்றடியை முதற்கண் கூட்டி உரைக்க. 'கழிந்தேன்' என்பது அவற்றின் நீங்கி உயர்ந்தேன்' எனப் பொருள் தந்தது. 'ஒன்று ஆனேன' என்பது 'ஒன்று எனச் சொல்லப்படும் நிலையினன் ஆயினேன்' என்றபடி. ஆக்கம் - பிறப்பு. தம் குறிப்பின்றியும் வருவனவற்றைக் குறிப்பொடு கூடி வருவன போல, 'வேண்டேன்' எனக் கூறியது இலக்கணை வழக்கு.
இதனால், மோன சமாதியை அடைந்தவர்கக்கு ஏனை யோர்க்கு உளவாகும் துன்பங்களுள் யாதும் இல்லாமை கூறப்பட்டது. 'இன்பமே எந்த நாளும்; துன்பம் இல்லை;3 என அருளிச் செய்ததையும் நோக்குக.

ஆலைக் கரும்பும் அமுதும் அக் காரமும்
சோலைத்தண் ணீரும் உடைத்தெங்கள் நாட்டிடைப்
பீலிக்கண் ணன்ன வடிவுசெய் வாளொரு
கோலப்பெண் ணாட்குக் குறையொன்று மில்லை. *#2906*

ஆலையில் இடப்பட்ட கரும்பும், சோறும், வெல்லக் கட்டியும், சோலையின் நடுவில் உள்ள பொய்கை நீரும் ஆகியவற்றை உடையது எங்கள் நாடு. அதில் அழகிய சாலம் வல்ல பெண்ணொருத்தி யுள்ளாள். அவள் மயிலின் தோகையில் காணப்படும் வியத்தகு 'புள்ளிகளைப்போல் பல பொருள்களை விளக்கத்தக்க வகையில் தோற்றுவிப்பாள். அதனால் பலர்க்குப்பல பயன்கள் விளைதலால்

அவட்குப்புகழ் உளதேயன்றிச் சிறிதும் இகழ்வில்லை.

விளக்கவுரை

இம்மந்திரமும் மறைபொருட் கூற்றாகவே செய்யப் பட்டது. நாடு - நின்மலாவத்தை, ஆலைக்கரும்பு - உழைத்துப் பயன் பெறல் வேண்டும். அது நின்மல சாக்கிரம். சோறு, வாளா எடுத்து விழுங்கப்படும். அது நின்மல சொப்பனம். வெறும் சோறு சுவை யில்லாதது போல இதில் சிவானந்தம் இனிது விளையாது, அதன் உண்மை மட்டும் விளங்கும. வெல்லக்கட்டி வாயில் இட்டவுடன் இனிக்கும். இது நின்மல சுழுத்தி. துரியமும் உடன் நிகழும். இவற்றில் சிவானந்தத் தோற்றம் உளதாகும். சோலைத் தண்ணீர், குளிர்ச்சி யுடையதாய் உடல் வெப்பம் தணித்து, உண்ணீர் வேட்கையையும் தணித்து, நீந்தி விளையாடவும் இடமாம், இது நின்மல துரியாதீதம். இதில் சிவானந்த மேலீடு உளதாம். இவற்றையெல்லாம் தந்து நிற்பது அருட்டத்தி. அதுவே கோலப்பெண். இது திரோதான சத்தியைப்போல இடரை விளவியாது, இன்பத்தையே விளைத்தலால், இதனை உபசாரமாகக் கூட, 'மலம்' என ஒருவரும் குறைத்துக் கூறார். ஆகவே, 'இவட்குக் குறை ஒன்றும் இல்லையே' என்றார். ஏகாரம், தேற்றம். மோன சமாதியை அடைந்தோர் உடல் உள்ள அளவும் ஒரோ ஒரு கால் அதனின்றும் நீங்கிப் புறமோக்குடையராதலும் உண்டு. அந் நிலையிலும் அவர் பண்டை நிலை வந்து பற்றாதபடி நின்மலா வத்தையில் நிற்றல் அல்லது, அதற்குக் கீழ்ப்பட்ட மேலாலவத்தை மத்தியாலவத்தை கீழாலவத்தைகளில் வாரார் என்பதும் கூறியவாறு. அணைந்தோருள் தம்மையும் உளப்படுத்திக் கூறினார் என்க. 'உடைத் தாகிய எங்கள் நாட்டிடையுள்ள பெண்ணாட்குக் குறையொன்றும இல்லையே' என்க.

இதனால், மோன சமாதி யுற்றருள் ஒரோர்கால்மீட்சி உறுவாரதுசெயல் கூறப்பட்டது.

'நேசமொடுத் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கும்
நீனைவுடையோர் நின்றிடுவர் நிலையதுவே யாகி
ஆசையொடும் அங்கும இங்கும் ஆகி அலருவோர்
அரும்பாசம் அறுக்கும் வகை அருலின் வழியே [உரைப்போம்.l
என்றார் சிவஞான சித்தியிலும்.

ஆராலும் என்னை அமட்டஒண் ணாதினிச்
சீரார் பிரன்வந்தென் சிந்தை புகுந்தனன்
சீராடி அங்கே திரிவதல் லா(து)இனி
யார்பாடுஞ் சாரா அறிவறிந் தேனே. *#2907*

முதலடியை இறுதியில் கூட்டி, 'இனிஎன்னை ஆராலும் அமட்ட

ஒண்ணாது' என மாற்றியுரைக்க. அமட்டுதல் - அசைத்தல்; நிலைகலங்கச் செய்தல். சீர் - சிறப்பு. பிறர் ஒருவருக்கும் இல்லாத அருட்குணம். 'சிந்தை' என்றது அறிவை, 'அச்சீராடி எனச் சுட்டு வருவிக்க. ஆடுதல் - பயிலுதல் ஊடாடுதல்' என்னும் வழக்கையும் நோக்குக. அங்கு அவனிடத்தே. திரிதல் - உலாவுதல்; செயற்படுதல்.

விளக்கவுரை

பாடு - பக்கம். சாரா அறிவு, சாராமைக்கு ஏதுவாய அறிவு. 'தான் சுதந்திரனாய் உள்ளவனைச் சார்ந்தால், நாமும் சுதந்திரமாய் வாழலாம்' என்னும் அறிவு.

'தாம் ஆர்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன் ... ...
கோமற்கே நாம் என்றும் மீள் ஆளாய்க்
கொய்ம்மலராச் சேவடியிணையே குறுகி னோமே'

என அருளிச் செய்தமையும் காண்க.

'அறிவு அறிந்தேன்' என்றது, 'அறிவைப் பெற்றேன் என்றவாறு. இதன் பொருள் வெளிப்படை.

இதனால், 'சிவனை, பெறும் பொருளாகப் பெற்றார். எவ் வாற்றானும் பிறர்க்கு, அல்லது பிறவற்றில் அடிமையாகாது, வேண்டிய வேண்டியாங்கு எய்தி இன்புறுதல் கூறப்பட்டது. 'ஒன்றாலும் குறை வில்லை' (திருமுறை - *6.98.1.*) என்ற அருள் மொழிமையயும் காண்க.

பிரிந்தேன் பிரமன் பிணித்ததோர் பாசம்
தெரிந்தேன் சிவகதி செல்லும் நிலையை
அரிந்தேன் வினையை அயில்மன வாளால்
முரிந்தேன் புரத்தினை முந்துகின் றேனே. *#2908*

நான் இப்பொழுது, முன்பு பிரமன் என் தலையில் எழுதி நியமித்த கட்டினின்றும் நீங்கிவிட்டேன். 'ஊழ்வினைகள் வந்து என்னை ஒன்றும் செய்யா' என்பதாம்.) சிவனை அடையும் வழியைத் தெரிந்து கொண்டேன். இப்பொழுது நான்செய்யும் செயல்களால் நான் பின்பு நுகரக் கடவனவாகப் புண்ணியமோ, அல்லது பாவமோ எதுவும் முளைக்காதபடி 'ஞானம்' என்னும் கூரிய வாளால் அவைகளை அறுத்தெறிந்தேன்ய ('எனக்கு ஆகாமியம் இல்லை' என்றபடி.) என்னை வெளியில் செல்லாதபடி தடுத்து வைத்துள்ள உடம்பாகிய சிறைக் கூடம் இடிந்த பாழாய்விடப் பெற்றேன். ஆகவே, நான் எங்கும் செல்கின்றேன். (கருவிகளின் வயப்பட்ட ஏக தேச நிலை நீங்கி, வியாபகமாகப் பெற்றேன்' என்பதாம்.)

விளக்கவுரை

'நிலை' என்றது வழியை. கதி - புகலிடம்.
'தொல்லையில் வருதல் போலத்
தோன்றிரு வினைய துண்டேல்,
அல்லொளி புரையும் ஞானத்
தழலுற அழிந்து போமே'*
எனவும்
'ஏன்ற வினை உடலோ டேகும்;இடை யேறும்
தோன்றில், அருளே சுடும்'*
எனவும் கூறுபவ ஆகலான், 'மனம்' என்று ஞானமேயாதல் அறிக.
'ஞான வாள் ஏந்தும்; ஐயர் நாதப் பறை அறைமின்' * என்னும்
திருவாசகத்தையும் காண்க.
'தண்டா யுதமும்,திரிசூ லமும் விழத்
தாக்கி உன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்;செந்தில்
வேலனுக்குத்
தொண்டா கியஎன் அவிரோத ஞானச்
சுடர்வடிவாள்
கண்டா யடா அந்த காவந்து பார்சற்றென்
கைக்கெட்டவே,'
'பட்டிக் கடாவில் வரும் அந்த கா! உனைப்
பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாது விடேன்; வெய்ய
சூரனைப் போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெருமான்
திருமுன்பு நின்றேன்;
கட்டிப் புறப்படடா! சத்தி வாள் என்றன்
கையது வே'
என எவ்விடத்தும் ஞானமே வாளாக உருவகிக்கப்படுதலை அறிக.
('சத்தி' என்பது சிலேடை வகையால், 'சத்தி' என்னும் ஆயுதத்தையும்,
ஞானத்தையும் ஒருங்கே குறித்து நின்றது. சத்தி, முருகனது
படைக்கலங்களுள் சிறந்த ஒன்றாதல் தெளிவு.)
புரம் - உடம்பு. முரிந்தேன் - முரிந்ததாகப் பெற்றேன்.
இதனால், மோன சமாதியை எய்தினவர்க்குப பிராரத்தமும்
ஆகாமியமும் இலலையாதலும், அதனானே தனு கரண புவன
போகங்களாகிய மாயையின் மயக்கம் நிகழாமையும் கூறப்பட்டன.
இக்கருத்தினை நாயனார் முன் தந்திரத்தில்.
'தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்;

முன்னை வினையும் முடிச்சை அவிழ்ப்பர்கள்;
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த திருவரு ளாலே'
எனக் கூறியருளினார். சஞ்சித சுன்மம் குருவின் திருக்கண்
நோக்கத்தால் எரிசேர்ந்த வித்தபுபோல அப்பொழுதே
கெட்டொழிந்தது. சஞ்சித கன்மம் நீங்காத வரையில் ஞானம் பிறவாது.
ஆகவே, ஞானியர்க்குச் சஞ்சித கன்மம் இல்லை.

ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண்டீர்உல குக்குயி ராவதும்
நன்றுகண் டீர்இன் னமச்சிவா யப்பழம்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே. *#2909*

'கடவுள்' என்பதும், 'தெய்வம்' என்பதும் வேறு வேறு. இரண்டும் ஒன்றல்ல. தெய்வம் எழுவகைப் பிறப்புக்களில் ஒரு பிறப்பு வகையைச் சேர்ந்தது. அது தமிழில் 'புத்தேள், அணங்கு' முதலிய பெயர்களால் குறிக்கப்படும்' கடவுள் பிறப்பில்லாது, அனைத்தையும் கடந்த நிற்கும் தனிமுதற் பொருள். கடவும் ஒன்றே; தெய்வங்கள் பல. மக்கள் அவர்தம் மரபுபடியும் விருப்பப்படியும் வேறு வேறு தெய்வங்களை வழிபடுவர். கற்புடை மகளிர் யாவர்க்கும் தெய்வம் கணவனே. கணவன் ஒரு தெய்வத்தை வழிபடுவானாயின் அவனோடு இசைந்த நின்று மனைவியும் அத்தெய்வத்தை வழிபடுவாள் ஆயினும், மனைவிக்கத் தெய்வம் கணவன் தான். இதனையே திருவள்ளுவர் 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்' எனக் கூறினார். ஆகவே, மகளிர் கணவன் தொழாத தெய்வத்தைத் தாம் விரும்பி வழிபடுதல் குற்றமே யல்லது, கடவுளை வழிபடுதல் குற்றம் அன்றாம். ஏனெனில், கடவுள் யாவராலும் தெழத்தக்கவர்.

'மனைவி தன் கணவனைத் தவிரத் தான் ஒரு தெய்வத்தை வழிபடுதல் குற்றம்' என்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்தது. இந் நிலையில், 'மனைவி கடவுளைத் தொழலாமா, தொழக்கூடாதா என்னும் வினா, சமண பௌத்த மதங்களில் இல்லை. ஏனெனில் அவை 'கடவுள் உண்டு' எனக் கொள்ளவில்லை. கடவுளைக் கொள்ளாத அம்மதங்கள், 'தெய்வங்கள் உள' என நம்புகின்றன். ஆகவே, 'மனைவி கணவனைத் தவிரப் பிற தெய்வங்களைத் தொழ லாகாது' என மறுப்பதோடு அவை நின்றுவிடுகின்றன. 'மனைவி கடவுளைத் தொழுதால் என்ன' என்று வினவினால், 'அத்தொழுகை பயனற்ற செயல்' என்பது அம்மதங்களின் முடிவு. 'கடவுள் உண்டு' எனக் கொள்கின்ற மதங்கள், 'கடவுள் ஒன்றே' என்றும், 'அஃது யாவராலும் தொழத் தக்கது' என்றுமே கூறும். தெய்வங்களும் கடவுள் அருளால் சில ஆற்றல்களைப்

பெற்று விளங்குதலால் இவ் இடங்களில் 'கடவுள்' என உபசரித்துக் கூறப்படும். கடவுள்பொது மக்களால் 'தெய்வம்' என்றே' கருதி வழிபடப்பட்டு அவ்வழிபாட்டினை ஏற்று அவர்விருமிபிய பயனைத் தருதல் பற்றி, தெய்வம்' என உபசரித்துக் கூறப்படும். இம்மந்திரத்தில், 'உலகுக்கு ஒரு தெய்வம்' என்றமையால், கடவுளே 'தெய்வம்' எனப்பட்டாமை தெளிவாம்.)

'ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வம்' என்றது, 'கடவுள் பல இல்லை' ஒன்றே' என்பதைத் தெளிவித்தது. தெய்வங்களை யெல்லாம் 'கடவுள்' எனக் கூறி, 'அவற்றிடையே உயர்வு தாழ்வுகள் இல்லை' எனக் கொள்வோர், அநேகேசுர வாதிகள்' எனப்படுவர். 'கடவுளே இல்லை' என்போர் நிரீச்சுரவாதிகள். அவருள் அநேகேசுர வாதிகள் கொள்கையை மறுத்ததே இதன் முதல் அடி.

அக்கடவுள் உலகுக்கு உயிர்', அஃதாவது, 'எல்லாப் பொருளிலும் எள்ளினுள் எண்ணெய்போல் நிறைந்து அவ்வப் பொருள்களின் தன்மை பயன்படச் செய்வது' என்பதாம். ஒன்றாய கடவுள். இவ்வாறு அனைத்துப் பொருள்களிலும் அது அதுவாய் நிற்றலையே மாணிக்க வாசகர்.

'ஏகன், அநேகன் இறைவனடி வாழ்க' 8 என அருளிச் செய்தார். இந்நிலை 'அந்தரியாமித்துவம்' எனப்படும்.

ஒன்றாய், உலகுக்கு உயிராய் உள்ள கடவுள் மந்திரம் 'நமச் சிவாய' என்பதே உண்மை. அதன் உண்மைப்பொருளை உணர்ந்து பயில்கின்றவர்கள் கடவுள் இன்பம் கரையின்றி விளைதலைக் காண்பர். ஒரு பழத்தின் இனிமையை அதனைத் தின்று பார்த்தவர் அறிவாரேயன்றி, வாளா காண்பவர் அறியார். அதுபோல, யான் அதனைப் பயின்று அதனால் விளைந்த அதுபோல, யான் அதனைப் பயின்று அதனால் விளைந்த இன்பத்தைக் கண்டேன். (பயிலாதவர் அதனை அறிதல் அரிது) ஆகையால், அம்மந்திரத்தை உருவகமாகக் கூறினால், 'கிடைத்தற்கரிய தனி ஓர் இனியகனி' என்று கூறலாம். [இம்மந்திரம் முடிவான பொருளைக் கூறுதலாலும் அப் பொருளை உள்ளவாறுணர்தல் அரிதாய் இருத்தலாலும் உரை இங்ஙனம் விரித்தெழுதப்பட்டது.]

விளக்கவுரை

'கண்டீர்' முன்றும் முன்னிலையசைகள். 'நன்று' என்றது, 'பிழையற்றது'; உண்மை என்றபடி 'நமச்சிவாய' என்பது ஒரு மந்திரம் - என்பதும், 'மந்திரங்கள் எல்லாம் தெய்வங்களைப் பொருளாக உடையன் என்பதும் தெளிவாகலின், 'நமச்சிவாயப் பழம் நன்று' என்பது இப்பொருட்டாயிற்று. 'இன்மைச்சிவாய' என்பதை

இன்னகை' என்பது போலக் கொண்டு சந்தி பிரித்துக் காள்க.
'நமச்சிவாய இன்பழம்' என மாற்றிக்கொள்.
இதனால், 'சிவானந்தப் பேற்றை எய்தினோர் அது நீங்காமைப் பொருட்டுத் திருவைந்தெழுத்து மந்திரத்தைத் தமக்குரிய முறை யறிந்து ஓதியிருப்பர்' என்பது கூறப்பட்டது.

சந்திரன் பாம்பொடுஞ் சூடும் சடாதரன்
வந்தென்னை ஆண்ட மணிவிளக் கானவன்
அந்தமும் ஆதியும் இல்லா அரும்பொருள்
சிந்தையின் மேவித் தியக்கறுத் தானே. *#2910*

இதன் பொருள் வெளிப்படை.

விளக்கவுரை

'சந்திரனும், பாம்பும் பகைப் பொருள்கள்' என்பது புராணக் கொள்கை, அவை யிரண்டையும் சிவன் ஒருங்கே தனது முடியில் அணிந்துள்ளான். இது, 'சிவன் உயிர்களை நடுவு நிலையில் நின்றே நோக்கியிருளுவன்' என்னும் குறிப்பையும், 'உயிர்கல் அவை சார்ந்துள்ள உடம்பு காரணமாகப் பகைகொள்வனன்றி, இயற்கையில் அவற்றிடைப் பகையேதும் இல்லை என்னும் குறிப்பையும் உடைய தாகும். ஆகவே 'பாம்பும், மதியும் புனலும் தம்மிற் - பகை தீர்த்துடன் வைத்த பண்பா போற்றி'*9* என்றது காண்க. இத்தகைய நடுவு நிலைமையும், பேரருளும், ஆதியந்தம் அற்ற நித்தியத் தன்மையும் உடைய சிவன் இனிது விளங்கப் பெற்ற நல்லறிவையுடைய பெரி யோர்க்குத் தியக்கம் (கலக்கம்) தோன்றுமாறில்லை என்பது குறிப்பு.
இதனால், 'மோன சமாதி யுற்றார்க்கு நிலைகலங்கும் தன்மை யில்லை' என்பது ஏதுவுடன் குறிப்பால் உணர்த்தப்பட்டது.

பண்டெங்கள் ஈசன் நெடுமால் பிரமனைக்
கண்டங் கிருக்கும் கருக்கும் கருத்தறி வார்இல்லை
விண்டங்கே தோன்றி வெறுமன மாடியின்
துண்டங் கிருந்ததோர் தூறது வாமே. *#2911*

'படைப்புக்காலத்தில் எங்கள் கடவுளாகிய சிவன் அரியை முன்படைத்து, அவன் வழியாக அயனைத் தோற்றுவித்து, படைத்தல், காத்தல்களைச் செய்வித்த, அவர்கள் செயலைக் கண் காணித்துக் கொண்டிருக்கின்றான்' என்று வேதாகமங்கள் கூறுகின்றன. இஃது உண்மையாமாற்றை அறிய மாட்டாதவர் 'அரி, அயன்' என்போருள் ஒருவனையே 'முதல்வர்' என்றும், 'அவர் உள்ளிட்ட பலர் முதல்வர்' என்றும் கூறிப் பிணங்குகின்றனர். தோற்றம் உடையவர்களாய்ச் சிவனின் வேறாகத் தோன்றிச் செயலாற்றுவோர், 'நமது தோற்றமும், செயல்களும் சிவனது சங்கற்பத்தால் நிகழ்வன' என்பதை எண்ணாத

வேறு நிலை உடையவர்களாய் இருப்பராயின், அவரது நிலைமை, ஒரு முப்பொருளில் ஒரு பகுதி துண்டாகிப் பிரிந்தவழி உளதாகும் பாழ் நிலையையே எய்தும்.

விளக்கவுரை

'காணப்படுகின்ற இவ்வுலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் இவைகளைச் செய்யும் கடவுளர், அதிகார மூர்தத்களேயன்றி, முதற்கடவுள் அல்லர்' என்பது கடவுட் கொள்கையுடைய வேத மதங்கள் அனைத்திற்கும் ஒத்த முடிவு. 'இவர்கள் முதற்கடவுள் அல்லர்' எனவே, 'உயிர் வகுக்கதினர்' என்பதும், 'மூவகை உயிர்களையும் மும்மலங்களுள் முதல்மலமாகிய ஆணவ மலம் பற்றியே உள்ளது' என்பதும், ஆயினும் அது மிக வன்மையாகப் பற்றியுள்ள உயிர்கள் அது காரணமாக முக்குண வடிவான பிரகிருதி வயப்பட்டு, முதல்வனை உணராமல் மயங்குகின்றன, அதனால் அவை சகல வருக்கத்தின' என்பதும், ஏனை இருவகை உயிர்களையும் ஆணவ மலம் மெய்மையாகவும் மிக மென்மையாகவும் பற்றியிருத்தலால் அவை பிரகிருதி வயப்படாதும், அதனானே முதல்வனை மறவாதும் உள்ளன; அதனால், அவை சகல வருக்கத்தின' என்பதும் சித்தாந்தம். 'அரி, அயன்' என்போர்களில் அரி இவ்வுலகில் பல பிறப்புக்களை எடுத்து உண்டு வளர்ந்து இன்பத் துன்பங்களை மயங்கினமையும் புராண இதிகாசங்களில் பரக்கக் கேட்கப் படுதலால் அவனை, 'சகல வருக்கத்தினன்' எனக் கொள்ளுதலே பொருந்தும். அவன் சகலரே யாதல் சொல்ல வேண்டா. சிவன் இவ்வுலகில் பிறந்தமை ஓரிடத்தும் சொல்லப்படாமையேயன்றி சிவன் பிறப்பிலி' என்பது பலவிடத்து பேசப்படுகின்றது. ஆகவே, அவன் உயிர் வருக்கத்தினன் ஆகாது முதற்கடவுள் ஆகின்றான். நடுவுநின்று ஆராய்வார் இவ்வுண்மையை நன்கு உணரவே செய்வர், ஆயினும் பலர் நடுவு நில்லாது மாறுபடப் பேசுதல் பற்றி, 'எங்கள் ஈசன் கண்டு அங்கு இருக்கும் கருத்து அரிவார் இல்லை' என்றார். கருத்து - உண்மை. 'எங்கள்' எனத் தம்மோடு உளப்படுத்தியது, பிறப்பின்மையே முதற் கடவுட்கு அடையாளம்' என்பதையும், 'சிவன் பிறப்பிலி' என்பதையும் உடன்படுகின்ற பலரையும்.

'மூன்றுதிறத் துள்ளாரும் மூலமலத் துள்ளார்கள்;
தென்றலர்தொத் துள்ளார் துணை'
-திருவருட்பயன் - *13.*
என்றது காண்க.

'தன்பொருட் டில்லையாயினும் உயிர்கள் பொருட்டாக இப்பரகிருதி உலகத்தில் பிறப்பெடுத்தலும் கடவுளது இயல்பு' எனக் குறின், அது,

'முன்னே கடவுளின் இயல்புகள் யாவை' என ஆராய்ந்து வரையறுத்துக்கொண்டு, பின்னே, இவ்வுலகில் சிலரை, 'இவர் கடவுளா, உயிர் வருக்கத்தவரா' என ஆராய்ந்து வரையரை செய்யாது, முன்னே சிலரை, 'கடவுள்' என முடிவு செய்துகொண்டு, பின்னே 'அவரது இயல்பே கடவுளின் இயல்பு' என மாறிக் கூறுவதாக்ம். இது 'தலைக்கு ஏற்ப அமைவது தலை' என்பது போலத் தலைகீழபா பாடமாய்விடும். அன்றியும், எவையோ சில காரணங்களால், 'பிறத்தலும் கடவுட்கு இயல்பு' எனக் கூறினால், 'பிறப்பு இல்லாமையே கடவுள் தன்மை' என்பது நிலையாத ஒன்றாகி, 'பிறவாமை' இழிவுடையதாகியும் விடும். அதனால், 'எது உயிர்? எது கடவுள்? என ஐயுறுவார்க்கு, அவைகளை அடையாளம் காட்டித் தெளிவுபடுத்தலும் இயலாது. இத்துணை இடர்ப் பாடுகளும் பிறப்புடையாரை, 'கடவுள்' என நிறுவ முயல்வதால் உளவாவனவாம். அதனால், உலகில் உயர்ந்தோர் சிலரை. 'இவர் தமது தூய தன்மையால் கடவுள் தன்மையை எய்திய பெரியோராவர்' எனக் கூறியமைதலே பொருந்துவது.

மும்மூர்த்திகளில் ஒருவனாகிய உருத்திரன், அம்மூவருள் ஒருவனாயினும் அவன் சிவனை மறந்து செருக்குற்றதாக வரலாறு இல்லை. அதனால், அவன் சகல வருக்கதினனாகச் சொல்லப் படுகின்றான்.

இருமலம் உடையவனர் பிரளயாகலர். ஒருமலம் உடையவர் விஞ்ஞானகலர். இவர்களிலும் அதிகார மூர்த்திகளாய் அமைப்பவர் உளர். அவருள் 'உருத்திரர்' எனப்படுவோர் பிரளயாகலர் வருக்கத் தினர். 'வித்தியேசுரர்' என்றும், 'மந்திரேசுரர்' என்றும் சொல்லப்படுபவர் விஞ்ஞான கலர் வருக்கத்தினர். விஞ்ஞானகலருள் 'அணு சதாசிவர்' என நிற்பாரும் உளர் இவ்வாறான அதிகாரமூர்த்திகள் பலர் உளராயினும் சைவ நூல்களுள் அயன், மால் இருவரை மட்டுமே பெரும்பான்மையாக எடுத்துக் கூறுதற்குக் காரணம் அவர்கள் சகல வருக்கத்தினராய் இருத்தலாலேயாம்.

சகல வருக்கத்து ஆன்மாக்களும் அவை செய்த சிவபுண்ணியக் குறைவு மிகுதிகளால், இங்குக் காட்டிய எந்த அதிகார மூர்த்திகளாகவும் ஆதல் கூடும்.

'விறைக்கம லத்தோன் மாலும்
ஏவலால் மேவி னோர்கள்,
புரைத்ததி கார சத்தி
புண்ணியம் நண்ண லாலே'9
'வித்தைகள், வித்தை யீசர்,

சதாசிவர் என்றி வர்க்கு,
வைத்திடும் பதங்கள், வன்னம்,
புவனங்கள், மந்தி ரங்கள்,
தத்துவம்,சரீரம், போகம்,
கரணங்கள் தாம்எ லாமும்
உய்த்திடும் வயிந்த வந்தான்
உபாதான மாகி நின்றே' 3
என்பன சிவஞான சித்தி.
காண்டல் - உண்டாக்கல். 'அங்கு இருந்ததோர் துண்டின் தூறு ஆண்' என்க. பின் வந்த 'அங்கு' இரண்டும், பொதுப்படக் குறித்த ஓர் இடத்தில்' எனப் பொருள் தந்தன. 'தூறு, பாழ்' என்பன ஒரு பொருட் சொற்கள் ஈற்றில் நின்ற 'அது' மேற்போந்த வெறுமனம் ஆதலைச் சுட்டு வந்தது.
இதனால், முன் மந்திரத்தில், 'என்னை மோன சமாதியில் வைத்தவன் சந்திரன் பாம்பொடுஞ் சூடும் சடாதரனேயன்றிப் பிறர் அல்லர்' எனக் கூறியது வலியுறுத்தி நிறுவப்பட்டது.

அன்னையும் அத்தனும் அன்புற்ற தல்லது
அன்னையும் அத்தனும் ஆர்அறி வார்என்னை?
அன்னையும்அத்தனும் யானும் உடன் இருந்(து)
அன்னையும் அத்தனும் யான்புரந் தேனே. #2912

இவ்வுலகில் எனக்குத் தாயாகவும், தந்தையாகவும், எல்லோராலும் அறியப்பட்ட அவ்விருவரும் 'யான் பிறக்க வேண்டும்' என்று விரும்பித் தம்முட் கூடியதும், அதனால் யான் பிறந்ததும் உண்மை. ஆயினும் தங்களால் பிறந்த என்னை 'யார்' என்று அவர்களில் ஒருவ ரேனும் அறிவாரோ? அறியார். அப்பால் வாழும் நிலை ஏற்பட்டது. அப்பொழுது முன்பு அவர்கள் என்னைக் காப்பாற்றியதுபோக அவர்களை யான் காப்பாற்றும் நிலை உண்டாயிற்று.

விளக்கவுரை

'ஆகவே, அவர்கள் எப்பொழுதுமே என்னைக் காப்பவர் ஆவரோ? சிலகாலமே அன்னராவர். என்றுமே என்னைக் காக்கும் அன்னையும், அத்தனும் வேறுனர்' என்பது குறிப்பெச்சம். 'அந்த அன்னையும், அத்தனும் யாவர்' என்னும் வினாவிற்கு விடையும் பின்னிரண்டடிகளில் குறிப்பாய் அமைய அவற்றை இரட்டுற மொழிந்தார்.
முத்தி பஞ்சாக்கரத்துள் வகாரம் அன்னை; சிகாரம் அத்தன்; யகாரம் யான்; மூவரும் உடன் இருப்பது முத்து பஞ்சாக்கரம். புரத்தல் - பேணுதல், அது முத்தி பஞ்சாக்கரத்தை அயராது கணித்து அதன்

பொருளை உணர்த்திருத்தல். 'இதனால் யான் மோன சமாதியில் நிலைத்துள்ளேன்' என்பது கருத்து.
அன்புற்றது, அதன் காரியமும் உடன் தோன்ற நின்றது.
இரண்டாம் அடியில் 'அத்தனும்' என்பதன்பின் 'அவருள்' என்பது வருவிக்க. ஈற்றடியில், 'அன்னையையும்' என உருபும், 'அத்தனையும்' என உருபும் உம்மையும் விரிக்க.
இதனால், 'உடம்பைப் பயந்த தாய் தந்தையார்க்கு மக்கள் கடமைப்பட்டவராயினும், உயிர்க்கு அறிவைப்பயந்து வரும் தாய் தந்தையாரை மறவாது போற்றுதல் அதனினும் பெரியதொரு கட்டுப்பாடு; அதனை மோன சமாதி அடைந்தோரே நிரம்பச் செய்வர்' என்பது கூறப்பட்டது.

கொண்ட சுழியும் குலவரை உச்சியும்
அண்டரும் அண்டத் தலைவரும் ஆதியும்
எண்டிசை யோரும்வந் தென்கைத் தலத்துளே
உண்டனர் நான்இனஇ உய்ந்தொழிந் தேனே. *#2913*

இம்மந்திரம் சிவனது அருளைப் பெற்றுச் சிவனைச் சார்ந்து நிற்கும் மோன சமாதியினர்க்கு உலகு அனைத்தும் தமது வியாபகத்துள்ளே அடங்கித் தோன்றுதலைச் சில வகைகளால் விளக்கிற்று.

விளக்கவுரை

சுழி - சுழல், இதன்கண் தொகுக்கப்பட்ட துவ் விகுதியை, 'சுழல் கொண்டது' என மாற்றி வைத்து உரைக்க. பல சுழல்களைக் கொண்டது கடல். குல வரை - உயர்ந்த மலை. இதனையும், உச்சிக் குலவரை' என மாற்றியுரைக்க. உச்சி - சிகரம், அண்டர் - வானுலகத் தவர். அவர்கட்குத்தலைவர் அண்டத்தலைவர் எண்டிசையோர், திசைக்காவலர், ஆதி - பிரமன். இவரைக் கூறியது உபலக்கணம் ஆதலின் எஞ்சியோரும் எஞ்சிய பொருள்களும் கொள்ளப்படும்.
சீவத்தன்மை நீங்கிச் சிவமாம் தன்மையடைந்தார்க்கு உலகம் தம்முள் அடங்கித் தோன்றிதற்குச் சான்று, உபநிடங்களில் வாம தேவர் முதலிய முனிவர்கள். 'யானே மனுவாய் இருந்தேன், சூரியனாய் இருந்தேன்'*9* என்றாற்போலக் கூறியதாக உள்ள வாக்கியங்களும் சருவஞ்ஞானத் தரத்தில், 'யானே எல்லாமாய் நின்றேனும், எல்லாவற்றையும் கடந்து நின்றேனும்' என்பனபோல் உள்ள வாக்கியங்களுமாகும். 'கொள்' என்பது அடியாகக் 'கொண்டனர்' எனவும் 'விள்' என்பது அடியாக 'விண்டனர்' எனவும் வருதல்போல் 'உள்' என்பது வினைப் பகுதியாகாது, பண்புப் பகுதியாகலானும் 'மாண்' என்னும் பண்படியாக 'மாண்டது' என வருதல்போல, 'உள்' என்பது அடியாக ஓரிடத்தும் 'உண்டது' என வாராமை யாலும்

இஃதோர் அரிய ஆட்சி. 'உளராயினர்' என்பது இதன் பொருள். உய்ந்தேன் - பிறவியினின்றும் தப்பினேன். 'ஒழி' துணிவுப் பொருள் விகுதி. பின் அதுவும் சேர்ந்து பகுதியாயிற்று.
மோன சமாதி என்றது மீளப் பிறவாமையை, 'வீட்டையடைந்திடுவர் நிட்டை மேவினோர்கள்; மேவாது தப்பினவர் ... ... இந்தப் பார்மேல் நாட்டிய நற் குலத்தினில்வந் தவதரித்துக் குருவால் ஞானநிட்டை அடைந்தடைவர் நாதன் தாளே'3 என்னும் சிவஞான சித்தியால் அறிக.
[இதன்பின் பதிப்புக்களின் காணப்படும்' தானே திசையொடு தேவருமாய் நிற்கும்' என்னும் மந்திரம் இரண்டாம் தந்திரத்தில் 'திதி' என்னும் அதிகாரத்தில் வந்தது.]

நமன்வருன் ஞானவாள் கொண்டே எறிவன்
சிவன்வரின் நான்உடன் போவது திண்ணம்
பவம்வரும் வல்வினை பண்டே அறுத்தேன்
தவம்வரும் சிந்தைக்குத் தான்எதி ராமே. *#2914*

ஞான நிட்டையில் நிற்கும் அறிவையுடையார்க்கு அவர்தம் உடல் நீங்கும் காலத்து அதனை நீங்கச் செய்து சிவனே முன் வந்தருளுவான். (ஏனையோர்க்கு யமதூதுவர் வந்து உடலை நீக்கி, உயிர்முன் நிற்றல்போல நில்லார்.) யான் தவத்தால் முன்பே பிறப்பிற்குக் காரணமான வினைகளை யெல்லாம் அருத்தொழித்துச் சிவனை மறவாமையாகிய நிட்டையில் நின்றேன். (ஆகவே, யம தூதுவர் என் முன்வாரார்.) 'வந்தாலும், சிவனை உணரும் உணர் வாகிய வாளால் அவர்களை எறிய இயலும்' என்னும் உறுதி யுடையேன். முற்கூறியவாறு சிவன் தான் என்முன் வருவான். வந்தால் அவனுடன் நான் மகிழ்ச்சியோடு செல்வது திண்ணம்.

விளக்கவுரை

ஈற்றடியை மூன்றாம் அடிக்கு முன்னர்க் கூட்டிப் பின் அவற்றை முதலில் வைத்து உரைக்க. 'தானே எதிராம்' எனப் பிரிநிலை ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டுக. 'எதிராரே' என்பது பாடமாயின், 'தாம் எதிராரே' என வருதல் வேண்டும். 'அதுவும் அவ்வாறு ஆம் 'எனில், 'நிட்டையுடையார்க்கு மாறாய் முன்னிற்பவர் இலர்; அதனால் அவர்முன் நமன் தூதர் செல்லார்' என உரைக்க. 'நமன் வரின்' என்பதில் 'வரின்' என்பது, 'வருதல் இல்லை' என்பதையும், சிவன் வரின்' என்பதில் 'வரின்' என்பது, வருதல் உறுதி' என்பதையும் குறித்து நின்றன. ஞானம் வாளாதல் மேலேயும் சொல்லப்பட்டது. *9*
'சிவன்வரின் நான் உடன் போவது' என்பதில் வருதல் போதல்கள் இடையீடகல ஒன்றுதலைக் குறித்தது.
பவம் - பிறப்பு. முகந்து வந்த பிராரத்த வினை முடிந்தால், எடுத்த

உடம்பு வீழ்ந்துவிடும். அவ்வீழ்ச்சி, மேலும் வினை யுடையார்க்கு 'இறப்பு' என்றும், வினையில்லாதார்க்கு 'வீடு பேறு' என்றும் சொல்லப்படும். 'இறவா நிலை' என்பது முதற்கண் கூறிய வகையில் உடம்பு நீங்காமையாம். 'நமனை அஞ்சோம்' 3 என்ற அப்பர் திருமொழியும் காண்க. முதல் அடி உயிர் எதுகை பெற்றது. இதனால் 'மோன சமாதியடைந்தார்க்கு உடலை விழ்த்துவது திருவருளேயன்றி, வினைப் பயனை அடைவிக்கின்ற கூற்றுவன் அல்லன்' என்பது கூறப்பட்டது. இது பற்றியே, 'ஞானிகளது' உடலை எரிப்படுத்தல் கூடாது' என ஏழாம் தந்திரத்தில் 'சமாதிக் கிரியை' அதிகாரத்தில் சொல்லப்பட்டது.

சித்தம் சிவமாய் மலம்மூன்றும் செற்றவர்
சுத்த சிவமாவர் தோயார் மலபந்தம்
கத்தும் சிலுகும் கலகமும் கைகாணார்
சத்தம் பரவிந்து தானாம்என் றெண்ணியே. *#2915*

மும்மலங்களையும் நீக்கித் தமது அறிவு சிவனது அறிவே யோகப் பெற்ற ஞானிகள், சீவராகாது, இயல்பாகவே பாசம் இன்மையால் தூயனாய் உள்ள சிவனேயாவர், ஆகையால் அவர்கள் மாயா மலமாகிய உடம்போடு கூடி, உலகில் உலவினாராயினும் அவற்றால் அவர் கட்டுறார். 'சிவன் இல்லை' என அழித்துப் பேசுவாரது அழிப்புரையும், சிவனை அடைதற்கு இத்துணை விரைவு ஏன்' என மயக்க உரை கூறுவாரத் ஆரவார உரையும் 'இவர்களது உரைகள் யாவும் பாசங்களுள் ஒன்றாகிய சுத்த மாயை அளிவினவே என எண்ணித்தம்பால் அணுகக் காணாதவராவர்.

விளக்கவுரை

முதலடி அவ்வாறு கூறப்பட்தாயினும், அதனை 'மலம் மூன்றுஞ் செற்றுச் சித்தம் சிவம் ஆயவர்' என்றதாகவே கொள். 'சித்தம்' என்றது அறிவை. சிலுகு - புன்மொழி. அவை நாத்திகர் பேசும் நாத்திக உரை. கலகம், 'ஆத்தம் ஆனார் அயலார் கூடி நாத்திகமாகப் பேசும்' மயக்க உரை. சொற்கள் யாவும் சுத்தமாயா காரியமேயாயின் பாசத்திள் நின்று கூறுவாரது சொல் அந்த மாயா நாதமே யாக, திருவருளில் நின்றாரது சொல் அருள் நாதமாம். 'அவற்றுள் இங்குக் குறிக்கப்பட்டவர் சொல் மாய நாதமே' என்பதை, 'சத்தம் பரவிந்து மாயை. 'சத்தம்' என்னும் வடசொல், 'சொல்' என்றே பொருள் தருமாயினும், இங்கு, 'வெற்றாரவாரம்' என்னும் நயத்தையும் தோற்றுவித்தது. பின்னிரண்டடிகளில் வரும்பொருளை நிறுவுதற்கு முன்னிரண்டடிகள் அநுவாதமாய் வந்தன.

இதனால், மோன சமாதி எய்தினோர் அதன் சிறப்பை உணர

மாட்டாதார் கூறுவனவற்றிற்குச் செவி கொடார்' என்பது கூறப்பட்டது.

நினைப்பும் மறப்பும் இலாதவர் நெஞ்சம்
வினைப்பற் றறுக்கும் விமலன் இருக்கும்
வினைப்பற் றறுக்கும் விமலனைத் தேடி
நினைக்கப் பெறில்அவன் நீளியன் ஆமே. *#2916*

நினைப்பு, மனம் முதலிய கருவிகள் செயற் படுதலால் நிகழ்வது. மறப்பு, கருவிகள் செயற்படாது ஒடுங்குதலால் நிகழ்வது. கருவிகள் இல்லாத பொழுது அறிவு நிகாழமை ஆணவ மல மறைப்பினாலாம், ஆகவே, ஆணவ மலம் நீங்கினால் கருவிகளால் ஆவதொன்றில்லை. ஆன்ம அறிவு எப்பொழுதும் அறிவாயே இருக்கும்; அறியாமையாகாது. இவை ஒளி குறைந்த கண்ணிற்குக் கண்ணாடி வேண்டாது, எப்பொழுதும் பார்வை நிகழ்வதும் போல்வன வாகும். ஆணவ மலத்தால் மறைக்கப்பட்ட அறிவு ஒளி குறையாத கண் போல்வது. பெத்தான்மாக்களது அறிவு ஆணவ மலத்தால் மறைக்கப் பட்டிருத்தலால் அவ்வறிவு மேற்குறித்த நினைப்பும், மறப்புமாய் நிலைமாறிக் கொண்டேயிருக்கும். முத்தான்மாக்களின் அறிவு ஆணவ மலம் நீங்கப் பெற்றமையால் மாற்றம் இன்றி, அறிவாயே விளங்கும். அதனால் அவைகட்குச் சிவம் மறைதல் இன்றி, விளங்கியே நிறுகும்.

விளக்கவுரை

நினைப்பே சகலம்; மறப்பே கேவலம் இவைகளை, 'பகல், இரவு' எனச் சாத்திரங்கள் குறியீட்டுச் சொல்லாற் கூறும். நினைப்பும், மறப்பும் இன்றி அறிவு ஒரே நிலையில் நிற்புது இரவு பகல் அற்ற இடமாகக் கூறப்படும்.

'இரவு பகலில்லா இன்பவெளி யூடே
விரவி விரவிநின் றுந்தீபற;
விரைய விரையநின் றுந்தீபற'*9*
என்றது திருவுந்தியார்.

இவ்வாற்றால், 'வினைப்பற்றறுக்கும் விமலன், நினைப்பும் மறப்பும் இலாதவர் நெஞ்சத்து இருக்கும்' எனவு நினைப்பும் உள்ளவர் நினைப்பினாலே அவனைப்பற்ற முயன்றால் அவன் கிட்டான் ஆதலின், 'அவவைத் தேடி நினைக்கப் பெறில் நீளியன் ஆம்' என்றும் கூறினார். நீளியன் - சேய்மையன். 'தேடி நினைக்கப் பெறில்' என்றே கூறஇனாராயினும், 'நினைத்துத் தேடப் பெறில்' என்றலே கருத்தென்க. விமலன் - பரிசுத்தன். என்னே, அவன் ஆவண மலத்தில் அகப்பட்டான்' என்பதைக் குறிப்பால் உணர்த்தினார் என்க. இனி, 'அவன் ஆணவத்தில் அகப்படா னாயினும் வளர்பிறை மதி இருளைச்

சிறிது சிறிதாக ஓட்டி வருதல்போல அவன் உயிர்களில் மறைந்து நின்று ஆணவத்தை நீக்கியே வருகின்றான் என்பதை 'வினைப் பற்று அறுக்கும்' என்பதனால் குறித்தார். 'நெஞ்சத்து' என்னும் அத்துச் சாரியை தொகுக்கப்பட்டது.
இதனால், மோன சமாதி யுற்றார்குச் சிவன் கரவின்றி விளங்குதல் எதுக் காட்டி விளக்கப்பட்டது.

சிவபெரு மானென்று நானழைத் தேத்தத்
தவபெரு மானென்று தான்வந்து நின்றான்
அவபெரு மான்' என்னை ஆளுடை நாதன்
பவபெரு மானைப் பணிந்துநின் றேனே. *#2917*

நான் சிவபெருமானைச் சிவபெருமானாகவே அறிந்து, அப்பெயரையே சொல்லி 'சிவனே, சிவனை என்று ஓலம் இட்டுத் துதிக்க. 'அந்த மெய்த்தவத்திற்கும் தலைவனே நான்' என்பான் போல அப்பெருமான் என்முன்னே வந்து நின்றான். இவ்வாறுதன் பெயரைச் சொல்லுவாரிடத்தெல்லாம் உடனே தோன்றுகின்ற அப்பெருமானை, 'யார், யார் எவ்வெப்பெயரால் அழைக்கின்றாரோ, அவர் முன்னெல்லாம் அவர் கருதும் பெருமானார்களாய்த் தோன்றும் அருளாளன்' எனவும் அறிந்து நான் பணிபவனாயினேன்.

விளக்கவுரை

சிவபெருமானை, 'சிவபெருமான்' என்று சொல்பவ ரெல்லாம் அப்பெயரின் பொருளை உணர்ந்து சொல்லாமல், பொதுவாக ஓர் இடுகுறியாகவே நினைத்துச் சொல்கின்றனர். ஆயினும் அப்பெயர், 'அமங்கலம்(பிறப்பிறப்பு) ஒருபோதும் இல்லாத நிறைந்த மங்கல குணத்தை யுடையவன்'*3* எனவும், பேரின்பத்துக்குக் காரணன்' எனவும், 'முற்றுணர்வினன்' எனவும், தூய தன்மையன்' எனவும் *l* பொருள் தருதலால் 'அவ்வெல்லாத் தன்மைகளையுடையவனே அவன்' என உணர்ந்ததையே 'சிவபெருமான் என்று' என்றார். இதில் 'உணர்தல்' என்பது சொல்லெச்சம். தவம், 'பொதுத் தவம்' என்றும், 'மெய்த் தவம்' என்றும் இருவகைப்படும். பொதுத் தவம் பசு புண்ணியங்கள். மெய்த்தவம் சிவபுண்ணியம், இது சிவஞான போதத்துள், 'இறப்பில் தவம்' எனப்பட்டது. இவற்றுள் இங்கு, 'தவம்' என்றது மெய்த் தவத்தை. பின்மூன்று அடிகளிலும் சந்திப் பகர ஒற்று எதுகை நோக்கித் தொகுக்கப் பட்டது. மூன்றாம் அடியில் அதனுடன், அகரத்தையடுத்து வந்த சந்திரவகர ஒற்றும் தொகுக்கப்பட்டது. 'அவ்வப்பெருமான்' என்றது, அவரவர் கருதும் பெருமானார்களாய்த் தோன்றும் பெருமான் என்றபடி இக்கருத்தே, 'யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வ மாகி ஆங்கே மாதொரு பாகனார்தாம்

வருவர்'3 எனக் கூறப்பட்டது. சிவனைச் சிறப்பாகக் குறிக்கும் மற்றைப் பெயர்களுள் 'பவன்' என்னும் பெயர் சிறந்ததாகச் சொல்லப்படுகின்றது. 'பவன்' எனும் நாமம் பிடித்துத் திரிந்து பன்னாள் அழைத்தால் இவன் எனைப் பன்னாள் அழைப்பொழியான் என்று எதிர்ப்படுமே'9 என அப்பரும் அருளிச் செய்தார். 'பவன்' என்பதற்குப் பொருள், 'நினைத்த இடத்தில் நினைத்த உடன் தோன்றுபவன்' என்பது ஆகலின், அப்பெயரையே சொல்லி அழைப்பவன்முன் அவன் எதிர்படுதல் உறுதி' என அப்பர் அருளிச்செய்தார். அந்தக் குறிப்பே இங்கு, சிவபெருமானைப் பணிந்து நின்றேன்' என்பதில் அமைந்திருத்தலை உணர்க. 'நின்றேன்' என்றது, 'இனி நான் வேறொன்றை நினையேன்' என்றவாறுஎனவே இதுவே மோன சமாதியாதலை உணர்க.

இதனால், சிவபெருமானை உள்ளவாறுணர்ந்த அடையவரே மோன சமாதியில் நிற்பர்' என்பது கூறப்பட்டது.

பணிந்துநின் றேன்பர மாதி பதியைத்
துணிந்துநின் றேன்இனி மற்றொன்றும் வேண்டடன்
அணிந்துநின் றேன்உடல் ஆதிப் பிரானைத்
தணிந்துநின் றேன்சிவன் தன்மைகண் டேனே. #2918

முதல்வகட்கெல்லாம் முதல்வனாய் முடிநிலை முதல்வனாயுள்ள சிவனையே நான் முதல்வனாகத் துணிந்தேன். அதனால் அவனையே நான் வணங்கினேன். இனி அவனை வணங்குதலைத் தவிர பிறிதொன்றையும் அவாவ மாட்டேன். அவனையே என்உள்ளத்தில் இருத்தினேன். அதனால், எனது முனைப்பு நீங்கப் பெற்றேன். அவனது உண்மை யியல்புகள் எல்லாம் எனக்கு அனுபவமாயின.

விளக்கவுரை

மோன சமாதி வாய்க்கப் பெறும் வழியையும் அது வாய்க்கப் பெற்றாரது இயல்பையும் தம் அனுபவத்தின்மேல் இட்டுக் கூறியவாறு. பரம் +அதிபதி =பரமாதிபதி; வடமொழித் தீர்க்க சந்தி அதிபதி - முதல்வன். 'பரமாதிபதியைத் துணிந்து நின்றேன்' என்பதை முதலிற் கூட்டியும், 'ஆதிப் பிரானை உடல் அணிந்து நின்றேன்' என மாற்றி வைத்தும் உரைக்க. அணிதல் - தரித்தல். உள்ளத்தை 'உடல்' என நாயனார் குறித்தலை மேலேயும் கண்டோம்.* 'உடலில்' என ஏழாவது விரிக்க. காண்டல், அனுபவமாக உணர்தல்.

என்நெஞ்சம் ஈசன் இணையடி தான்சேர்ந்து
முன்னஞ்செய் தேத்த முழுதும் பிறப்பறும்
தன்னெஞ்சம் இல்லாத் தலைவன் தலைவிதி
பின்னஞ்செய்(து) என்னைபக் பிணக்கறுத் தானே. #2919

எனது நெஞ்சம் சிவனது இரண்டு திருவடிகளையே சார்ந்து, அவற்றையே நினைத்து, அவற்றையே துதித்தலால், எனது பிறவித்தொடர் முடிவடைந்து அற்றொழியும்; இது திண்ணம். இனித் தனக்கு மனம் முதலிய மாயா கருவிகள் ஒன்றும் இல்லாதவனாகிய அவன், இப்பிறப்பிலும் நான் முகந்து கொண்டு வந்த ஊழ்வினையை எனக்கு ஆகாதபடி பிரித்து, எனது உடலுக்கே ஆகும்படி செய் தமையால், எனக்கு இன்பத்தில் மகிழ்ச்சியும், துன்பத்தில் வாட்டமும் ஆகிய முரண்பட்ட நிலைமைகள் இல்லாதபடி அறவே நீக்கிவிட்டான்.

விளக்கவுரை

முன்னம் செய்தல் - நினைத்தல். ஏத்த - ஏத்தலால். ஏத்துதல் வாயின் தொழிலாயினும் அது மனத்தின் வழி இயங்குதல் பற்றி நெஞ்சமே ஏத்துவதாகக் கூறினார். தலைவிதி - ஊழ்; பிராரத்தம். பின்னம் செய்தல் - வேறுபடுத்தல். உடம்பை 'யான்' என மயங்குதலும். அதனைப்பற்றிய பொருள்களை 'எனது' என மயங்கும் சிவனையே நினைப்பார்க்கு இல்லாமையால் உடலை வந்து பற்றுவ தாகிய ஊழ் அவரைப் பற்றுதலும், அதனால் அவர் மகிழ்ச்சியும், வாட்டமும் அடைதலும் இல்லையாம். இந்நிலையே, 'ஞானியர்க்கும் அவர்தம் பிராரத்த வினை உடல் ஊழாய்க் கழியும்' என்று சொல்லப் படுகின்றது. எனவே, இதனால் அணைந்தோரது இத்தன்மைகள் கூறப்பட்டமை காண்க.
'என்னைப் பிணக்கறுத்தான்' என்பதை, 'யானையை அரட்டடக்கினான்' என்பது போலக் கொள்க.

பிணக்கறுத் தான்பிணி மூப்பறுத் தெண்ணும்
கணக்கறுத் தாண்டனன் காண்நந்தி என்னைப்
பிணக்கறுத் தென்னுடன் முன்வந்த துன்பம்
வணக்கலுற் றேன்சிவம் வந்தது தானே. *#2920*

எங்கள் நந்தி பெருமான் என்னுடைய அறியாமையைப் போக்கினார். ஆகவே, என் உடம்பு நோய் உறு தலையும், முதுமை எய்தித் தளர்வுறுதலையும் போக்கி 'அவை வரும் என்று எண்ணும் எண்ணங்களையும், அஃதாவது கவலையையும் போக்கி, என்னைத் தமக்கு ஆளாகக் கொண்டவராயினார். யானும் தொன்று தொட்டு என்னோடு கூடவே தொடர்ந்து வந்து கொண்டிருந்த வெறுப்பு விருப்புக்களைப் போக்கி, அவரையே சிவமாகக் கண்டு வழிபட்டேன். அதனால் சிவமே என்முன் வந்து நின்றது.

விளக்கவுரை

'நந்தி' என்பதை முதலிற் கொள்க. 'பிணக்கறுத் தான்' என்பதன்பின்

'அதனால்' என்பது வருவிக்க கணக்கு - எண்; எண்ணம். காண், முன்னிலையசை, 'என்னை ஆண்டனன்' என முன்னே கூட்டி முடிக்க. 'முன்' என்பது 'முற்றொட்டு' எனப்பொருள் தந்தது. 'துன்பம்' என்றதனால், 'இன்பம்' என்பதும் கொள்ளப்பட்டு, 'என்னும்' என ஒரு சொல் வருவித்து, 'துன்பம் இன்பம் என்னும் பிணக்கு' என உரைக்கப் பட்டது. 'வணங்கல்' என்பது எதுகை நோக்கி வலிந்து நின்றது. தான், அசை, 'தானே வந்தது' என்றலும் ஆம்,

இதனால், குருவருளாலே சிவப்பேறு முறையானே வந்து வாய்த்தல் கூறப்பட்டது.

சிவன்வந்து தேவர் குழாமுடன் கூடப்
பவம்வந் திடநின்ற பாசம் அறுத்திட்(டு)
அவன்எந்தை ஆண்டருள் ஆதிப் பெருமான்
அவன்வந்தென் உள்ளே அகப்பட்ட வாறே. *#2921*

சிவன் ஒருவனே எனக்குத் தந்தை; குருவாகி வந்து ஆட்கொள்ளும் முதற்கடவுள். அத்தகையோன் முன்பெல்லாம் எனக்கு அகப்படாதிருந்து, இப்பொழுது வந்து என் உள்ளத்திலே அகப்பட்டமை தேவர் கூட்டமும் உடன் வர அவன் பற்றி நின்ற பாசத்தை அரித்தமையாலேயாம்.

விளக்கவுரை

பின்னிரண்டடிகளை முன் வைத்து உரைக்க. உரைக்கவே, முன்னின்ற 'அவன்' என்னும் சுட்டுப் பெயர் 'சிவன்' என்னும் சிறப்புப் பெயராயும் , 'சிவன்' என்னும் சிறப்புப் பெயர், அவன் என்னும் சுட்டுப்பெயராயும் நிற்கும். இதனால் சிவன் நந்தி பெருமானாய் நின்று நாயனாரை ஆட்கொண்டதேயன்றி தன் இயற்கை வடிவிலும் காட்சியளித்து அருள்புரிந்தமை பெறப்படுகின்றது. 'ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும் ஆதி மாண்பும் கேட்பான் புகின் அளவில்லை'*1* ஆதலின், 'குருவாகி நின்று அருள் செய்தபின்பும் இவர்க்கு இவ்வாறு தோன்றி அருள்புரிவான் ஏன்' என்றும், 'இங்ஙனமாயின் ஏனை யோர்க்கும் இவ்வாறு ஏன் அருள் புரிதல் கூடாது' என்றும் அவனை வினாவ நாம் யார்?

'சிவன், தேவர் உடன் கூட வந்து' என மாற்றியுரைக்க, 'அகப் பட்ட ஆறு' என்பதில் அகப்பட்டதையே 'ஆறு' எனக் கூறினமையின் பெயரெச்சம் தொழிற் பெயரொடு முடிந்ததாம், 'நின்முகம் காணும் மருந்தினேன்' என்பது போல, 'இவன் வாழ்தல், அவனைச் சார்ந்து' என்பது போலத் தொழிற்பெயர் எழுவாய்கள் வினையெச்சப் பயனிலைகளைக் கொண்டு முடிதல் உள ஆகலின், 'அகப்பட்ட ஆறு பாசம் அறுத்திட்டு' என முடிந்தது.

இதனால், இயைபு பற்றி நாயனார் தமது தனி அனுபவம் ஒன்றை அருளிச் செய்தார். இதனானே பிறர்க்கும் இது கூடலாம் என்பது உணர்தல் வேண்டி.

கரும்பும்செந் தேனும் கலந்ததோர் காயத்தில்
அரும்பும் அக் கந்தமும் ஆகிய ஆனந்தம்
விரும்பியே உள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்பும்முன் கைத்தது தேனும் புளித்ததே. *#2922*

கருப்பஞ் சாற்றையும், தேனையும் கலந்து உண்டவழி, 'அதன் இனிப்பு இத்தகையது' என வரையறுத்துச் சொல்ல வாராமைபோல, 'இன்னது' என வரையறுத்துச் சொல்ல வாராத ஓர் இன்பம் இவ்வுடம்பிற்றானே உண்டாகின்றது. (அஃது அரிவையர் இன்பம். அதனால் அதனை மக்கள் பின்னும் வெறாதே விரும்பு கின்றனர்.) ஆயினும், மலரில் மணம் போல அறிவினுள் அறிவாய் எழுகின்றஓர் ஆனந்தம் உண்டு. (அது சிவானந்தம்) அதனை அடையவே உயர்ந்தோர்கள் விரும்புகின்றார்கள். அவர்கள் விரும்பியபடி அந்த ஆனந்தம் அவர்களது முயற்சியால் அவர்கள் அறிவிலே வெளிப்பட, அதனை அவர்கள் நுகர்ந்த பின் அவர்கட்கு மேலே, குறிப்பிட்ட கருப்பஞ்சாறு போன்ற இன்பங்களும் கசந்து விடுகின்றன; ஏதன் போன்ற இன்பங்களும் புளித்துவிடுகின்றன.

விளக்கவுரை

எனவே, 'அவை யிரண்டும் கலந்தது போன்ற இன்பமும் அவர் கடுகக் கசப்பும், புளிப்பும் ஆகின்றதேயன்றி, இனிப்பதால் இல்லை' என்பது இசையெச்சம். 'இங்ஙனமாகவே அவ்வின்பம் அவர்களால் வெறுக்கப்படுவதாதலைச் சொல்ல வேண்டா' என்பதாம்.

'பெரும்பைம் புனத்தினில் சிற்றேனல் காக்கின்ற பேதைகொங்கை
விரும்பும் குமரனை மெய்யன்பி னால்,மெல்ல மெல்லஉள்ள
அரும்பும் தனிப்பர மானந்தம் தித்தித் தறிந்தஅன்றே
கரும்பும் துவர்த்துச்செந் தேனும் புளித்து(து)றக் கைத்ததுவே, *3*
என்னும் அனுபவ மொழியை இங்கு எண்ணுக

'கொவ்வைச் செவ்வாய் இக்கொடியிடை தோள்
புணர்ந்தால், புணருந்தொறும் பெரும் போகம் பின்னும் புதிதாய்,
மணந்தாழ் புரிகுழலாள் அல்குல்போல வளர்கின்றதே'*l*

என அருளிச் செய்த திருப்பாட்டிற்கும் உலகத்தாரது பேதைமையைப் புலப்படுக்கு முகத்தால், சிவபோகமே நுகருந் தொறும் நுகருந்தொறும் புதிது புதிதாய் எல்லையின்றி வினைவதாகிய பெரும் போகம் என்னும் உண்மையை உணர்த்தலே கருத்து' என்பதைச் சிவஞான போதத்துப் பதினொன்றாம் சூத்திரத்துச் சிற்றுரையால் அறிக.

'பாலொடு தேன்கலந் தற்றே, பணிமொழி
வாலெயி றூறிய நீர்'9
என்னும் திருவள்ளுவப் பயனும் அன்னது.
இதனுள் பாடம்மிக வேறு பட்டதுய 'ஓர் காயத்தில்' என்பதை முதளிற் கூட்டுக. 'ஓர் காயம்' என்றாரேனும், இன்பத்தை 'ஓர் இன்பம்' என்றலே கருத்து, கலந்தது - கலந்தது போன்றது.
இதன்பின் 'உண்டு ஆயினும்' என்னும் சொல்லெச்சங்கள் வருவிக்க.
'ஆகிய என்னும் ஆக்கச்சொல் உவமை குறித்து நின்றது விரும்புதற்கு எழுவாயும், கைத்தல் புளித்தல்களுக்குக் கோடற் பொருளும் வருவிக்கப்பட்டன.
இதனால், சிவானந்தத்தை நுகர்வார்க்கு ஐம்புல இன்பம் இன்பம் ஆகாது, உவர்ப்பேயாதல் கூறப்பட்டது.

உள்ளம் சரியாதி ஒட்டியே மீட்டென்பால்
வள்ளல் அருத்தியே வைத்த வளம்பாடிச்
செய்வன எல்லாம் சிவமாகக் காண்டலால்
கைவளமின்றிக் கருக்கடந் தேனே. *#2923*

வள்ளலாகிய சிசிவபெருமான் முதலில் 'சரியை, கிரியை, யோகம்' என்னும் தவ நிலையில் என் உள்ளத்தில் உள்ளப் படும் பொருளாய்ப் பொருந்தி, பின்பு ஞான நிலையில் தனது அருளை வைத்த அந்தப் பயனையே நினைந்து நான் போற்றிக்கொண்டு, என்னால் நிகழ்த்தப்படும் செயல்களையெல்லாம் என் செயலாகக் காணாது அவன் செயலாகவே நான் கண்டுவருதலால், எனக்கெனச் செயலின்றி பிறவியைக் கடந்து நிற்கின்றேன்.

விளக்கவுரை

'உள்ளம் ஒட்டியே' என இயைக்க. ஒட்டுதல், உண்மை மாத்திரையால் விளங்குதல், ஆகவே, 'சரியாதி' என்பதும் சரியை முதலிய மூன்றையே குறித்தன. 'அன்பு' எனப் பொருள் தரும் 'அருத்தி' என்பது இங்கு 'அருள்' எனப் பொருள் தந்தது. சிவன் சீவர்களிடத்தில் தான் அவை என்னாது ஒன்றி நிற்றல் அருள் வடி வாயேயாகலின் தம்மிடம் சிவன் அவ்வாறு நின்றமையை, 'அருத்தி வைத்து' என்றார். அதனானே 'அந்நிலை ஞான நிலை' என்பது போந்தது. 'சிவன் தவநிலை அந்நியமாயும், ஞான நிலை அந்நிய மாயும் நின்றான்' என அருளியவாறு 'மீட்டு' என்பது, வினைமாற் றாய 'மற்று' என்பதன் பொருட்டாய் நின்றது. 'வள்ளல்' என்பதை முதலிற் கூட்டுக. 'அருத்தி வைத்த வளமே பாடி' எனப் பிரிநிலை ஏகாரத்தை மாற்றிவைத்துரைக்க. நினைவு தோன்றாத வழிப் பாடுதல் தோன்றாமையால் 'பாடி' எனவே, 'நினைந்து' என்பதும் தானே

பெறப்பட்டது. 'துருத்தியாய், திருந்தடி உளங்குளிர்ந்த போதெலாம் உகந்துகந் துரைப்பனே'l என ஆளுடைய பிள்ளையாரும் அருளிச்செய்தார். 'மனம், மொழி, மெய்' என்பவற்றுள் மெய்யால் ஆவனவற்றை, கையால் ஆவனவாகவே கூறும் வழக்குப் பற்றி அவற்றை, 'கை வளம்' என்றும், முப்பொறிகளாலும் வினை வரு மாயினும், வினை பெரும்பான்மை காய்த்தால் வருவனவாகவே கருதப் படுதலால் வினைவாராமையை, 'கைவளம் இன்றி' எனவும் கூறினார். 'இன்றி' எனப் பண்பின் நிலை பண்பின்மேல் ஏற்றப் பட்டது. அன்றி, 'இன்றாக' எனத் திரிப்பினும் ஆம். இஃது ஈரடி எதுகை பெற்றது. 'குறிலை யடுத்த யகர மெய் அசைக்கு ஐகாரம் எதுகையாய் வரும் என்க.

இதனால், மோன சமாதியுற்றார்க்கு அவரது நினைப்பின் தன்மையால் வினை இன்றாமாறும் அதனால் பிறப்பின்றாமாறும் கூறப்பட்டன.

மீண்டார் கமலத்துள் அங்கி மிகச்சென்று
தூண்டா விளக்கின் தகளிநெய் சோர்தலும்
பூண்டாள் ஒருத்தி புவனசூ டாமணி
மாண்டான் ஒருவன்கை வந்தது தானே. *#2924*

உலகியலிற் செல்லும் செலவிலிருந்து மீண்டவரது உள்ளக் கமலமாகிய தகளியில் ஞானமாகிய விளக்கு அணையாது எரியும் படி, தூண்டா விளக்கின் தகளியில் நெய்யையே, உலகத் தலைவியாகிய ஒப்பற்ற ஒருத்தி எடுத்துவார்க்கும் செயலை முன்சென்று மேற்கொண்டாள், அதனால், அவ்விளக்கின் ஒளி விளக்கத்தில், அனைவரிலும் மாட்சி மிக்கோள் ஒருவனது கை வன்மை இனிது நிகழ்ந்தது.

விளக்கவுரை

'இது குறிப்பிடத்தக்க ஒன்று' என்பது குறிப்பெச்சம். 'அங்கி' என்றது சுடரை. இது ஞானமே மிக - மிகும்படி, 'சோர்வித்தல்' என்னும் பிறவினைத் தொழிற்பெயரில் விவ்விகுதி தொகுக்கப்பட்டது. சோர்வித்தல் - சொரிதல்; வார்த்தல். 'சோர் வித்தலும்' என்னும் உம்மை சிறப்பு. தூண்டா விளக்காவது மணி விளக்கு. அஃது மாணிக்க மணியே விளக்காக வைக்கப்பட்டு ஒளி தருவது. 'நொந்தா ஒணசுடர்' என்பேது இதனையே, இதில் மணியே தகளியாகவும், அதன் தன்மையே நெய்யாகவும், அதன் ஒளியே சுடராகவும் இங்குக் கொள்ளப்படுதலின், சிவத்தை அவற்றினுள் தகளியாகவும், அதன் தன்மையாகிய அறிவு அல்லது ஞானத்தை நெய்யாகவும், அருட் சத்தியை உள்ளத் தகழியில் ஞானச் சுடர் அணைந்து விடாதபடி அந்நெய்யை வார்க்கும் பெண்ணாகவும் உருவகித்தார். 'புவன

சூடாமணி யாகிய ஒருத்தி' என்க. ஞானச் சுடர் ஒளிவிட்டு விளங்கவே, அவ்விளக்கத்தில் சிவத்தின் செயற்பாடு தடையின்றி நிகழ்ந்தது என்பதாம்,
ஞானம் முதலியவற்றைச் சுடர் முதலியவாக உருவகித்து, உள்ள கமலத்தைத் தகளியாக உருலவகம் செய்யாமையால், இஃது ஏகதேச உருவகம். 'அங்கு, தூண்டா விளக்கு, தகளி, நெய்' என்பன சிறப்புருவங்கள் யாவரினும் மாட்சிமையுடைய ஒருவன் சிவன். 'கை' என்பது அதன் செயலைக் குறித்த ஆகுபெயர்.
இதனால், முத்தரது அறிவில் அருட்சத்தி மேன்மேற் பதிந்து ஞானத்தை மிகுவித்தலால், அவர்களது அறிவில் சிவ விளக்கம் மிகுந்து, சிவானந்தம் மேன்மேல் விளைவதாதல் கூறப்பட்டது.

அன்புள் ளுருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்
என்பொன் மணியை இறைவனை ஈசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் நானே. *#2925*

'தன்பால் காதல் மிக்க பெண்டினிடம் காதல் மிக்க ஆடவன் அவளது நலத்தை எவ்வாறு கண்டு, கேட்டு உண்டு, உயிர்த்து, உற்று அனுபவிப்பானோ அது போல என்பால் அருள்மிக்க சிவனிடத்தில் நான் அன்பு மிகுந்த அவனது ஆனந்தத்தைப் பல்லாற்றானும் அனுபவிக்கின்றேன் என்பது இம் மந்திரத்தின் திரண்ட பொருள். (திருத்துதல் - தனக்கு ஏற்ற வகையில் கொள்ளுதல். 'தானே' என்பது பாடமன்று)

விளக்கவுரை

'அன்பால்' என உருபு விரித்து, 'அன்பால் உள் உருகி, என்பும் உருக. அழுவன்;அரற்றுவன் எனவும் 'என் பொன் மணியை இறைவனை, ஈசனை இராப் பகல் ஏத்தி, தின்பன் ... நானே எனவும் இயைக்க.
'அன்பே இன்பாவதன்றி, வேறில்லை' என்பதை,
'ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்து
இன்பமே! என்னுடை அன்பே'8
எனவும் 'யான் அனுபவிக்கும் இன்பமாவது என்னுடைய அன்பே' என அருளிச் செய்த திருவாசகத்தாலும்,
'இன்பில் இனிதென்றல் இன்றிண்டேல் இன்றுண்டாம்;
அன்பு நிலையை அது' *
என்னும் திருவருட் பயனாலும் அறிக.
'அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே'*
என இந்நாயனாரும் மேலே கூறினார்.

'எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்'*
என்றார் தொல்காப்பியனாரும், எனவே அன்பு நிலைதான் இன்ப நிலையேயன்றி, அனபில்லாத நிலை ஒரு வறட்டு நிலையேயாகும். இதனைத் திருவள்ளுவர்,
'அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு
என்புதேதால் போர்த்த உடம்பு' *
என வேறொரு வகையால் விளக்கினார். இஃதே பற்றி மெய்கண்ட தேவரும், 'அயரா அன்பின் அரன்கழல் செலுமே'3 என்றார். ஞானமாவது, பொருளியல்புகளை உள்ளவாறு உணர்தல், அது, துன்பப் பொருளின் நீங்கி, இன்பப் பொருளைப் பற்றுதற்கு ஏதுவாம், ஆயினும் அதனாலே இன்பப் பொருளை உணர்ந்து பற்றினவன் அதனை மேலும் மேலும் விரும்பிதலாற்றான் அதனது இன்பத்தை அனுபவித்தல் கூடும். அந்த விருப்பமே அன்பு, அது முடிவின்றி வளர்தலாற்றான் இன்பமும் முடிவின்றி வளர்கின்றது. இதனையே 'பெருமபோகம் பின்னும் புதிதாய் ... ... வளர்கின்றதே' என்னும் திருக்கோவையார் விளக்கிற்று.
'அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்,
செறிதொறும் சேயிழை மாட்டு'3
என்றதும் இதனையே. ஆகவே, 'ஞானத்தால் அடையத்தக்கது அன்பே' என்பதும், 'அந்த அன்பே இன்பத்தை விளைக்கும்' என்பதும் போதரும். இதனையே சேக்கிழார்.
'ஞானம் ஈசன்பால் அன்பே
என்றனர் ஞானம் உண்டார்' l
என அருளிச்செய்தார். இவ்வாற்றால், ஞானம் வித்தாக, அன்பே விளைவதால் விளங்கும். வித்தை வேண்டுவது, விளைவின் பொருட்டேயன்றோ! ஆகவே, ஞானத்தை மட்டும் வேண்டு, அன்பை வேண்டாதவர், வித்தை வேண்டி, விளைவை வேண்டாதவர் ஆகின்றனர். இதனைத் திருவிந்தியார்.
'வித்தினைத் தேடி, முளையைக்கை விட்டவர்
பித்தேறி னார்களென் றுந்தீபற;
பெறுவந் கென்பெணே!உந்தீபற'8
எனக் கூறிற்று. இன்னும் ஞானத்தை வேண்டி, அன்பை வேண்டாத சமயங்களைச் சுட்டி அந்நூல்,
'சாவிபோம் மற்றைச் சமயங்கள் புக்குநின்(று)
ஆவியறாதேயென் றுந்தீபற;
அவ்வுரை கேளாதே; உந்தீபற'8

என்றும் கூறிற்று. இவ்வுந்திகளின் கருத்தைத் திருக்களிற்றுப் படியார்.
'வித்துமதன் அங்குரமும் போன்றிருக்கும் மெய்ஞ்ஞானம்;
வித்துமதன் அங்குரமும் மெய்யுணரில், - வித்ததனில்
காணாமை யால்அதனைக் கைவிடுவர்; கண்டவர்கள்
பேணாமை யால்அற்றார் பேறு' *
என விளக்கிற்று.
'விறகில் தீயின், நன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்;
உறவு கோல்நட்(டு) உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே' 3
என்னும் அப்பர் திருமொழியில், 'உறவு' என்றது, சிவன் சீவர்களோடு அருள் காரணமாகக் கொண்டுள்ள ஆண்டான் அடிமைத் தொடர்பினை அறியும் அறிவையும், 'உணர்வு' என்றது, அத்தொடர்பினை அறிந்து, அவனையே விரும்பி, அவனிடத்திற் செலுத்தும் அன்பையும் குறிப்பன. அவற்றுள், அறிவைக் கோலாகவும் அன்பைக் கயிறாகவும் உருவகித்தமையால், 'கயிற்றில் வழிக்கோல் இருந்து கடைதல் கூடாமையால் விறகில் தீயும், பாலில் நெய்யும் வெளிப்படாதவாறுபோல, அறிவாகிய ஞானம் இருந்தும் அன்பு இல்லாவிடில் சிவனிடத்தில் தோய்தல் கூடாமையால், மறைய நின்றிள்ள அவன் முன்னிற்றல் இயலாது' என்பது போவ்தவாறு அறிக. எனவே, இன்ப நிலைக்கு முடிநிலை ஏது அன்பேயாயிற்று. இதனையே இம்மந்திரத்தால் அனுபவமாகக் கூறிமுடித்து, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாயும் செய்யப்பட்டது.
[இதன்பின் பதிப்புக்களில் காணப்படும்,
'மனம்வி ரிந்து குவிந்தது! மாதவ
மனம்வி ரிந்து குவிந்தது வாயு;
மனம்வி ரிந்து குவிந்தது மன்னுயிர்;
மனம்வி ரிந்துரை மாண்டது முத்தியே'
என்பது யாப்பு, முற்றிலும் வேறுபட்டதுடன், பொருள் சிறப்பிலதாயும். இவ்விடத்திற்கு இயைபில்லாதாயும் இருத்தலின் நாயனாரது வாக்காகத் தோன்றவில்லை.]

11.28.தோத்திரம்

மாயனை நாடி மனநெடுந் தேர்ஏறிப்
போயின நாடறி யாதே புலம்புவர்
தேயமும் நாடும் திரிந்தெங்கள் நாதனைக்
காயமின் நாட்டிடைக் கண்டுகொண் டேனே. *#2926*

எத்துணையோ பேர் எத்துணையோ வகையில் காண முயன்றும் காணப்படாது ஒளிந்து நிற்கும் கள்வனாகிய சிவனை, 'எப்படியும் கண்டுவிட வேண்டும்' என்று பலர் அவன் ஒளிந்திருக்கும் இடத்தையறியாமல், மனமாகிய நெடுந்தூரம் செல்லத்தக்க தேர்மேல் ஏறிக்கொண்டுச் சென்று வருந்துகின்றார்கள். நானும் அவர்களைப் போலத்தான் எங்கெங்கோ அவனைத் தேடி வருந்தினேன். ஆயினும் நான் 'அவன் ஒளிந்திருக்கும் இடம் எனது உடம்பாகிய ஒளியிடந்தான்' என்று தெரிந்து அங்குச் சென்று அவனைக் கண்டு விட்டேன்.

விளக்கவுரை

மாயம் - வஞ்சனை; கள்ளத்தனம். அதனையுடையவன் மாயன். சிவன், பல்லாற்றானும் தேடிய பல்லோர்க்கும் அகப்படாத கள்வன் ஆதலை மாணிக்க வாசகர் தமது திருஅண்டப் பகுதியுள் நூற் றிருபத்து நான்கு முதல் நூற்று நாற்பத்தைந்து முடிய உள்ள அடிகளால் விரித்தமை காண்க. தேடுவார் தேடும் பொருளாயிமை பற்றி. 'போயின்' என்றாரேனும், 'இருந்த' என்றலே கருத்தென்க. 'நாடு' மூன்றனுள் நடுவணது ஒன்றே தன் பொருளைத் தந்தது; ஏனை இரண்டும் 'இடம்' என்னும் பொருளவாய் நின்றன. 'தேயம் பெருநாடும், நாடு உள்நாடும் ஆம்' என்க. 'காய நாடு, மின் நாடு' எனத் தனித் தனி முடிக்க. மின் - ஒளி. 'ஞானியரது உடம்பு ஊனுடம்பாகாமல் ஒளியுடம்பாம்' என்பது கொள்கை. ஆகவே, 'அஞ்ஞானியரது உடம்பன்றி, ஞானியரது உடம்பே சிவன் இருக்கும் இடம்' என்றற்கு, 'மின் என்றும், 'கண்டறி வார் இல்லை காயத்தில் நந்தியை' என்று முன்னருங் கூறினார்.*1* இதனால், 'இத்தோத்திரம் புறக்காட்சித் தோத்திரம் அன்று; அகக் காட்சித் தோத்திரம்' என்பது கூறப்பட்டது.

மன்னும் மலைபோல் மதவா ரணத்தின்மேல்
இன்னிசை பாட இருந்தவர் யாரெனின்
முன்னியல் காலம் முதல்வனார் நாமத்தைப்
பன்னினர் என்றேதம் பாடறி வீரே. *#2927*

நிலைபெற்ற மலைபோலும் தோற்றத்தை உடையதாய், ஆயினும் மதத்தால் அடங்காது நடக்கும் யானையின் மேல் பலர் இனிய

இசைபாடிச் சூழ்ந்து வர இப்பொழுது உலாவரும் அரசர்கள் யாவரெனின், 'முற்பிறப்பில் சிவனது ஆயிரம் நாமங்களை எடுத்தோதித் திரித்தவர்' என்றே அவரது பெருமையின் காரணத்தை உணர்ந்துகொள்ளுங்கள்.

விளக்கவுரை

முன் இயல் காலம் - முற்பிறப்பு. 'என்றே' என்னும் கோரம் தேற்றம்.

'வானகம் ஆண்டு,மந் தாகினி ஆடி,
நந்தாவனஞ் சூழ்
தேனக மாமலர் சூடிச்செல் வோரும்,
சிதவல் சுற்றிக்
கால்நகம் தேயத்திரிந் நிரப்பாரும்
கனக வண்ணப்
பால்நிற நீற்றற்கு அடியரும், அல்லாப்
படிறருமே'

'உலகா ளுறுவீர், தொழுமின்; விண்ணாள்வீர்,
பணிமின்; நித்தம்
பலகா முறுவீர், நினைமின்; பரமனொடு
ஒன்றலுற்றீர்,
நலகா மலரால் அருச்சிமின்; நாள்
நரகத்து நிற்கு
அலகா முறுவீர் அரனடி யாரை
அலைமின்களே'*1*

என்னும் பொன்வண்ணத் தந்தாதியை இங்கு ஒப்பிட்டுக் காண்க.

'மத வாரணம்' என்றது, ஐராவதத்தையும் குறிக்கும் குறிப்பினது.

'வண்டுளருந் தண்டுழாய் மாயோன் இறுமாப்பும்,
புண்டரிகப் போதுறையும் புத்தேள் இறுமாப்பும்,
அண்டர்தொழ வாழ்உன் (இந்திரன்) இறுமாப்பும் ஆலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால்'*2*

'வானம் ஏத்த யான் (மாயோன்) வைகுந்த வாழ்வுபெற்றதுவும்,
ஞான நான்முகன் சத்திய உலகம்நண் ணியதும்,
ஏனை விண்ணவர் தத்தம வாழ்க்கை எய்தியதும்
ஆனுயர்த்தவர் அருட்குறி அருச்சனைப் பயனால்'*3*

எனக் காஞ்சிப் புராணத்திலும் சொல்லப்பட்டன. நல்வாழ்வு வாழ் வோரைக் கண்டால், 'அஃது அவர் பூசா பலம்' என்றல் இன்றும் வழக்கில் உள்ளது. 'பாடறிவீரே என்றது, பன்னுவீராயின் நீவிரும் பெருவாழ்வு வாழலாம்' என்றபடி.

இதனால், தோத்திரத்தின் பயன் உணர்த்தும் முகத்தால் அதன் சிறப்புக்

கூறப்பட்டது.

முத்தினில் முத்தை முகிழிள ஞாயிற்றை
எத்தனை வானோரும் ஏத்தும் இறைவனை
அத்தனைக் காணா(து) அரற்றுகின் றேனை ஓர்
பித்தன் இவன்என்று பேசுகின் றாரே. *#2928*

பொன்னின் தராதரத்தை அளத்தற்கு உதவுகின்ற பொன் 'ஆணிப் பொன்' எனப்படும். அஃது ஏனை எல்லாப் பொன்னினும் உயர்ந்தது. அதுபோல முத்துக்களின் தராதரத்தை அளக்க உதவுகின்ற முழுதும் 'ஆணி முத்து' எனப்படும். அஃது ஏனை எல்லா முத்துக்களினும் உயர்ந்தது. அதுபோலச் சிவன் ஏனைத் தேவர் பலரினும் உயர்ந்தவன். பின் அவன், திருமேனி அழகால் காலையில் தோன்றும் ஞாயிற்றை ஒப்பான்,

'காலையே போன்றிலங்கும் மேனி; கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு - மாலையின்
தாங்குருவே போலும் சடைக்கற்றை; மற்றவற்கு
வீங்கிருளே போலும் மிடறு'*1*

என அம்மையாரும் அருளிச்செய்தார். தேவர் என்று எத்துணைப் பேர் உளரோ அத்துணைப் பேராலும் 'இறைவன்' என்று ஏத்தப் படுபவன் அவன்; கருவுற்ற நாள்முதல் இன்றுகாறும் அவன் என்னைப் புரந்து வருதலால் எனக்குத் தந்தை. ஆகவே, அரைக்கணமேனும் அவனை நான் காணமல் எப்படியிருத்தல் கூடும்?

'பாணியில் வீணை பயின்றவர் வீரட்டம்
காணி லல்லதென் கண்துயில் கொள்ளுமே'*2*

என அப்பரும் அருளிச்செய்தார். அதனால் இவ்வுலக நிலை அவனை இடையறாது காணும் தன்மையுடைத்தாகாமையால் யான் 'ஓ' என்று அழைத்து அரற்றிக் கதறுகின்றேன். எனது நிலைமையை அறிந்து கொள்ளாத உலகர், 'துன்பத்திற்கு ஏதும் காரணம் இல்லாதிருக்கவும் இப்படி இவன் எப்பொழுது அழுது கொண்டிருக்கின்றான்; இவன் பித்துக் கொள்ளியல்லது வேறு யார்? என்று தங்களுக்குள் பேசிக்கொள்கின்றார்கள்.

விளக்கவுரை

'அதற்கு நான் என் கடவேன்' என்பது குறிப்பெச்சம். 'சகம் 'பேய்' என்று தம்மைச் சிரிப்ப'*3*

'உத்தமன், அத்தன், உடையான் அடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு 'மால்இவன்' என்ன மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட ஊரூர் திரிந்தெவரும்
தத்தம் மனத்தன பேசஎஞ் ஞான்றுகொல் சாவதுவே'*4*

என்றார் மாணிக்க வாசகரும்.
இதனால், உடம்பில் நிற்குங்காறும் சிவனது தலைப்பாடு இடையிடும் பொழுதெல்லாம் ஞானிகள் ஆற்றாமையால் அழைத்தும், அலறியும் நிற்றல் கூறப்பட்டது. அழைத்தலே தோத்திரம் ஆதல் அறிக.

புகுந்துநின் றான்எங்கள் புண்ணிய மூர்த்தி
புகுந்துநின் றான்எங்கள் போதறி வாளன்
புகுந்துநின் றான்அடி யார்தங்கள் நெஞ்சம்
புகுந்துநின் றானையே போற்றுகின் றேனே. *#2929*

பல்வேறு வகைப்பட்ட அறங்களையெல்லாம் தனது வடிவாகக் கொண்டிருத்தலால் 'அற ஆழி' எனப்படுபவனும், எல்லா வற்றையும் ஒருங்கேயறிதலால், பேரறிவாளன் - முற்றுணர்வினன்' எனப்படுபவனும், எல்லாப் பொருள்களிலும் தான் நீக்கம் அற நிறைந் திருப்பினும் அங்கெல்லாம் பாலல் நெய்போல விளங்காது நின்று, தன் அடியவர் உள்ளங்களில் தயிரில் நெய்போல விளங்கி நிற்பவனுமாய் இருப்பவன் எங்கள் சிவபெருமான். அவன் என் உள்ளத்திலும் புகுந்துவிட்டமையால் அவனையே தோத்திரித்து நிற்கின்றேன்.

விளக்கவுரை

ஈற்றில் வந்த 'புகுந்து நின்றான்' என்பது, 'புகுந்து நின்ற அவன்' எனப்பொருள் தந்தது. புண்ணிய மூர்த்தி - அற வடிவினன். போது அறிவு - நிரம்பிய அறிவு. புகுதல், விளங் -குதலையே குறித்தது. இதனால், 'சிவன் இத்தன்மையன் ஆகலின் அவனே தோத்திரிக்கப்படுதற்கு உரியவன்' என்பது கூறப்பட்டது.

பூதக்கண் ணாடி புகுந்திலன் போதுளன்
வேதக்கண் ணாடியில் வேறே வெளிப்படும்
நீதிக்கண் நாடி நினைவார் மனத்துளன்
கீதக்கண் ணாடியிற் கேட்டுநின் றேனே. *#2930*

பூதக் கண் ஆடி - பூத காரியமாகிய 'கண்' என்னும் ஆடி. இஃது உருவகம். இது முகத்தில் உள்ள கண்ணைக் குறித்தது. இக் கண்ணிற்கு அகப்படாதவன் சிவன். ஆயினும், போது - அடியார் களுடைய உள்ளக் கமலத்தில் என்றும் விளங்கியே நிற்கின்றான். வேதக் கண்ணாடி - வேதமாகிய கண்ணாடி. இதுவும் உருவகம். பொருள்களைத் தெளிவுற விளக்குதல் பற்றி வேதத்தைக் கண்ணாடியாக உருவகம் செய்தார். இஃது ஆகமத்தையும் உள்ளடக்கியதே. வேதாகமங்களை உணர்வார்க்குச் சிவன் அந்நூல்களின் பொருளாய், உணர்பவர்க்கு வேறாய் நின்று விளங்குகின்றான். இனி, நீதிக்கண் நாடி நினைவார் மனத்து - 'சிவன் - நீதி பலவும் தன்ன உருவாம் என மிகுத்த தவன்'1 என உணர்ந்து அந்த உணர்வு வடிவாகத் தமது அறிவினுட் காண்பவர்

கட்கு அவன் அவர்தம் அறிவுக்கறிவாய், ஒன்றாகியே விளங்கு கின்றான். அத்தகையோனை நான் பலர் பாடும் தோத்திரப் பாடல் - களில் கேட்டுக் கண்ணாடி நிழலைத் தெளிவாக உணர்தல் போல உணர்ந்து நின்றேன். இங்குள்ள கண்ணாடி அதன் நிழலைக் குறித்த ஆகுபெயர். அந்நிழல், தெளிவாக உணரப் படுதற்கு உவமையாயிற்று.

விளக்கவுரை

'அதனால், நானும் அவனைத் தோத்திரித்தலையே மேற்கொண்டேன்' என்பது கருத்து. முதல் மூன்று அடிகள் அவன் தோத்திரிக்கப்படுவதற்கு உரியன ஆதலையும் ஈற்றடி தோத்திரங்களில் அவன் இனிது விளங்கி நிற்றலையும் குறிப்பால் உணர்த்தின. இவையே இம்மந்திரத்தால் உணர்த்தப்பட்டன என்க.

நாமமொ ராயிரம் ஓதுமின் நாதனை
ஏமமொ ராயிரத் துள்ளே யிசைவீர்கள்
ஓமமொ ராயிரம் ஓதவல் லாரவர்
காமமோ ராயிரங் கண்டொழிந் தாரே. *#2931*

'அளவற்ற மந்திரங்களை ஓத வல்லேம்' என்று சொல்லி, வேத வேள்விகளை அளவின்றிச் செய்தோர் யாவரும் அவற்றின் பயனாகிய போகங்களை அனுபவித்தலோடு போய் விட்டார்கள். ஆகவே, சிவனை அவனது அளவற்ற திருப்பெயர்களைச் சொல்லித் தோத்திரியுங்கள்; அளவற்ற இன்பத்தில் பொருந்துவீர்கள்.

விளக்கவுரை

'ஓமம் செய்தவர்கள் பெற்றது காமம்' எனவே, 'நாமம் ஓதுவார் பெறுவது மோட்சம்' என்பது பெறப்பட்டது. 'காமம், ஏமம்' எனவும், 'ஒழிந்தார், இசைவீர்' எனவும் கூறிய சொற்குறிப்புக்களால், ஓமத்தை விலக்குதற்கண்ணதே நாயனாரது கருத்தாதல் விளங்கும். 'பசித்துண்டு பின்னும் பசிப்பானையொக்கும் - இசைத்து வருவினையில் இன்பம்'*2* என மெய்கண்ட தேவரும் அதனை விலக்குதலையே மேற்கொண்டார்.
'அவிசொரிந் தாயிரம் வேட்டலின், ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று'*2*
என்னும் திருக்குறளும் இக்குறிப்புடைத்து. 'ஆயிரம்' என்றவை அளவின்மை குறித்து நின்றன.
இதனால், வேள்வி மந்திரங்களை ஓதுதலைவிட, வழி பாட்டுத் தோத்திரம் பயனுடைத்தாதல் கூறப்பட்டது.
[இதன் பதிப்புக்களில் காணப்படும், 'போற்றுகின்றேன் புகழ்ந்தும் புகழ் ஞானத்தை' என்னும் மந்திரம் நான்காம் தந்திரத்தின் தொடக்கமாய் வந்தது.]1

நானா விதஞ்செய்து நாடுமின் நந்தியை
ஊனார் கமலத்தி னூடுசென் றப்புறம்
வானோர் உலகம் வழிபட மீண்டவன்
தேனார உண்டு தெவிட்டலும் ஆமே. #2932

தேவருலகமும் உங்களை வழிபடுமாறு, நீவிர் உங்கள் உடம்பில் உள்ள ஆதார கமலங்களில் மந்திர ரூபமாய் நுணுகிச் சென்று, அவற்றிற்கு அப்பால் நிராதாரம், அதற்கப்பால் மீதானம் ஆகிய இடங்களை அடைந்து அங்கே நின்றுகொண்டு சிவனைப் பல்லாற்றானும் நினையுங்கள். அவ்வாறு நினைகின்றவர்களில் எவனாயினும் ஒருவன் மீண்டு கீழே வருவானாயின், அவன் மயக்கம் தருகின்ற மதுவை நிரம்ப உண்டு, அதன் கீழ்மையை உணர்ந்து வெறுப்படையும் நிலை உண்டாதலும் கூடும்.

விளக்கவுரை

'வானோர் உலகம் வழிபட' என்பதை இரண்டாம் அடியின் முன்னர்க் கூட்டிப் பின் இரண்டாம் அடியோடு முதலிற் கூட்டி யுரைக்க. நானாவிதம் செய்தல் - பலவகைப்படுத்துதல். அஃதாவது, சிவன், (ஹடயோகம், மந்திரயோகம், ஆதாரயோகம், நிராதார யோகம் முதலியவற்றில் நின்று அருளுமாற்றையெல்லாம் நினைத்து துதித்தல். மீளுதல் யோக நிலையினின்றும் நீங்கி உலகமுகப்படுதல். 'தேன்' என்றது, மதுவை. 'தண்ணீர்' என, நகை தோன்றக் கூறுதல்போலக் கூறிய வஞ்சப்புகழ்ச்சி. 'மீண்டவன் தேன் ஆர உண்டு தெவிட்டலும் ஆம்' என்றது, 'உலக மாயையில் வீழ்ந்து அல்லற்பட்டுப் பின் வெறுத்தலும் கூடும்' என்னும் பொருளைத் தோற்றுவித்தலின், பிறிது மொழிகல். 'நிராதார மீதானங்களினின்று மீளுதல் கூடாது' என்பதை இங்ஙனம் கூறினார். 'மீட்சியைத் தோத்திரம் விலக்கும்' என்பது இங்குள்ள குறிப்பாகக் கொள்க.
இதனால் தோத்திரம் மீதானத்தில் சென்றோர்க்கும் உரித்தாதல் கூறப்பட்டது.

வந்துநின் றான்அடி யார்கட் கரும்பொருள்
இந்திர னாதி இமையவர் வேண்டினும்
சுந்தர மாதர்த துழனிஒன் றல்லது
அந்தர வானத்தின் அப்புற மாமே. #2933

('தோத்திரம்' என்னும் அதிகாரத்தை முதலில் 'தோத்திரத்தின் சிறப்புணர்த்துவது' என்னும் பொருளதாக வைத்து, முன் மந்திரம் வரையில் அதனையே கூறிவந்த நாயனார் தோத்திரத்தைக் கூறுவது' என்னும் பொருளதாக வைத்து, இது முதலாக வரும் மந்திரங்களில் தோத்திரமே செய்கின்றார். 'இவ்வாற்றால் பிறரும் தோத்திரம்

செய்யப் பயன்படும்' என்பது பற்றி திருவள்ளுவ நாயனாரும், 'பெரியாரைப் பிழையாமை' என்ற ஓர் அதிகாரத்தை இரண்டு பொருளதாக வைத்துக் கூறியதைக் காணலாம்.) இவ்வுலகில் சிறந்தெடுத்துப் பேசப்படுகின்ற இன்ப ஆரவாரமே யல்லது பிறிதொரு சிறப்பும் இல்லாத விண்ணுலகச் சிற்றின்பத்தை, நூறு பரிமேதங்களை வேதம் நுவன்றவாற்றானே சிறிதும் குறையின்றி வருந்திச் செய்து இந்திர பதவி எய்துவோர் முதலாகப் பலர் மயக்கத்தால் விரும்பினாராயினும் தன் அடியவர்களால் மட்டுமே பெறப்படுகின்ற சிவன் தரும் இன்பமே அவ்விண்ணுலக இன்பங்கட் கெல்லாம் அப்பாற்பட்ட அரிய பெரிய இன்பமாகும்.

விளக்கவுரை

'அந்தம்' 'வெளி' என்னும் பொருட்டாய், யாதும் இன்மையைக் குறித்தது. 'வானம்' என்பது ஆகுபெயராய், அவ்விடத்து விளையும் இன்பத்தைக் குறித்தது. இதனை முன்னர், வேண்டுதலுக்குச் செயப்படுபொருளாக்கிப் பின்னர், 'அரும்பொருள் அதனின் அப்புறம் ஆம்' என இயைத்துரைக்க. எல்லாம், 'பொருள்' எனப்படுதலின், இங்கு இன்பம் 'பொருள்' எனப்பட்டது. 'அடியார்கட்கு வந்து நின்றானது பொருள்' என இயைக்க. வந்து நிற்றல், கிடைத்தல்.

இதனால், சிவன் பிறவிடத்தில்லாத பேரின்பத்தைத் தருதல் எடுத்தோதிப் புகழப்பட்டது.

'செங்க ணவன்பால், திசைமுகன்பால், தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம்பாலதா'*1*
என்ற திருவாசகத்தைக் காண்க.

மண்ணிற் கலங்கிய நீர்போல் மனிதர்கள்
எண்ணிற் கலங்கி 'இறைவன் இவன்' என்னார்
உண்ணிற் குளத்தின் முகந்தொரு பால்வைத்துத்
தெண்ணிற் படுத்தச் சிவன்அவன் ஆமே. *#2934*

வானில் தெளிவாய் இருந்த நீர் மண்ணில் வீழ்ந்த வுடன் அம்மண்ணின் தன்மையைப் பெற்றுத் தன் தன்மை திரிந்தது போல, மக்களும் அநாதியே மும்மலச் சார்பினால் அறிவு கலங்கி, வேதாகமங்கள், 'சிவனொடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை; அவனொடொப்பார் இங்கு யாவரும் இல்லை' என அறுதி யிட்டுரைக்கவும் அதனைத் தெளிய மாட்டாராய், 'அதேவர் தேவர் அவர் தேவர் என்றிங்ஙன் - பொய்த்தேவு பேசிப் புலம்புவார்' ஆயினர். ஆயினும், பருகுதற்கு உரிய நீராக ஒருவன் குளத்தினின்றும் சிறிது நீரை எடுத்து இல்லத்தில் ஒரு பக்கத்தில் தேற்றாங் கொட்டை யிட்டுத் தெளிய வைப்பதுபோல நல்லாசிரியன் ஓரிடத்திலிருந்து, பல சொல்லி ஆரவாரியாது ஒரு

சொல் உறுதியாற் சொல்லித் தெளிவித்த வழி. அங்ஙனம் தெளிவிக்கப்பட்டவன், 'சிவனே தெய்வம்' என்று தெளிந்து சிவனை அடைந்து, சிவனே ஆய்விடுவான்.

விளக்கவுரை

எண் - எண்ணம்; என்றது அறிவை. 'இவன்' எனச் சுட்டுப் பெயர், செய்யுளாகலின் முன்வந்தது. 'உண்ணில்' என்பது, 'உண்ண வேண்டின்' என்னும் பொருட்டாய், 'படுத்த' என்பதனோடு முடிந்தது. 'தெண்மையின்' என்பதில் மையீறு தொகுத்தலாயிற்று. தெண்மை - தெளிவு. இன், உவம உருபு. 'படுத்த' என்பது, 'ஆக்க' என்னுப் பொருட்டாகிய செயவெனெச்சம்.

'குருவே சிவம்'2 என்றாராகலின், 'சிவன் குருவாய் வந்து பாசத்தை நீக்கி, உண்மையை உணர்த்தாதவழிச் சீவன் சிவனாமாறு இல்லை' என்பதை வலியுறுத்தி முகத்தான் 'சிவன் யாண்டும் உள்நின்று உணர்த்தி வருதலே யன்றி முடிவில் குருவாகி வந்து பாசத்தை நீக்கிச் சீவனைத் தானாக்கியும் வைக்கும் கருணையாளன்' என அவனது கைம்மாறு கருதாத கருணையுள்ளத்தை இதனால் புகழ்ந்தார் என்க.

'சித்திக்கே உய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
சேர்வார் தாமே தானாகச் செயுமவன்'1

என்னும் திருமுறையால், சிவன் சீவரைத் தானாகச் செய்யும் கருணையையும்,

'சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன
மாத்திரத்தின் வாய்க்கும்வளம் வந்துறுமே - ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாய் இதனைச் செப்பு'2

என்னும் சாத்திரத்தால் குருவினாலன்றி மெய்யுணர்வு பிறவாமையையும் உணர்க.

மெய்த்தவத் தானை விரும்பும் ஒருவர்க்குக்
கைத்தலஞ் சேர்தரு நெல்லிக் கனியொக்கும்
சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற தேவர்கள்
அத்தனை நாடி அமைந்தொழிந் தேனே. #2935

சிவன், மெய்த்தவத்தாலன்றிப் பொய்த்தவத்தால் அணுகப்படாதவன்; பிறிதொன்றை விரும்பாது தன்னையே விரும்பு -பவர்கட்கு அங்கை நெல்லிக் கனியென விளங்கி அதனோடேதானும் தூயனாய், அவரையும் தூய்மை செய்து இன்பப் பொருளாயும் இலங்குபவன். ஆகவே, நானும் அவனையே நாடிய காரணத்தால், 'அலையிலாத சாகரம் போலவும், அநிலம் இல்லா விளக்குப் போலவும்' அலையின்றி அமைதியுற்றேன்.

விளக்கவுரை

சிவ நெறியில் 'தவம்' எனப்படுவன சரியை கிரியா யோகங்களே. அவை பயன் கருதிச் செய்யுமிடத்து 'உபாயச் சிவ புண்ணியம்' எனப்பட்டு, நேரே ஞானத்திற்குச் சாதனமாகாது, உண்மைச் சிவ புண்ணியம் வழியாகவே ஞானத்திற்குச் சாதனமாம். பயன் கருதாது செய்யப்படும் சரியை முதலியனவே 'உண்மைச் சிவ புண்ணியம்' எனப்பட்டு ஞானம் வாயிலாகச் சிவனைக் கூட்டுவிக்கும். அது பற்றியே சிவனை, 'மெய்த்தவத்தாலே அடையப் படுவன்' என்றார். பயன் கருதாது செய்யும் சிவ புண்ணியம் மெய்த்தவம். ஆகவே, பயன் கருதிச் செய்யும் சிவ புண்ணியம் பொய்த்தவம் ஆயிற்று.

'கள்ளனேன்' கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கவித்துப் போக்கி'1
'காமியம் செய்து காலங் கழியாதே'2
'யானே பொய்;என் நெஞ்சும் பொய்; என்
அன்பும் பொய்'3

என்றாற்போல, 'கள்ளம், பொய்' என வருவன எல்லாம் பயன் கருதிச் செய்யும் சிவத் தொண்டையும்,

'மெய்கலந்த அன்பர்அன்பு எனக்கும ஆக வேண்டுமே' 4
'மெய்த்தொண்டர் செல்லும் நெறியறியேன்'5

என்றாற்போல, 'மெய்யன்பு, மெய்த்தொண்டு' என வருவன எல்லாம் பயன் கருதாது அன்பே காரணமாகச் செய்யும் சிவத் தொண்டையும் குறிப்பனவாம். பொய்த் தொண்டர்கட்குச் சிவன் அகப்படாமையை மாணிக்க வாசகர் தமது திருவண்டப்பகுதி நூற்றிருபத்தாறு முதல், நூற்று நாற்பத்தைந்து முடிய உள்ள அடிகளால் விரித்துக் கூறி, மெய்த்தொண்டர்களுக்கு அங்கை நெல்லிக்கனிபோல் விளங்குதலை, 'தடக்கையின் நெல்லிக் கனி எனக்கு ஆயினன்' என நூற்றறுபத் - தாறாம் அடியில் விளங்கக் கூறினார்.

நெல்லிக்கனி தூய்மைக்கும் இனிமைக்கும் உவமை. இன்னும் அருநெல்லிக்கனி சாவா மருந்தாதல் அதியமான், ஔவையார் வரலாற்றால் அறியப்படும். கனிந்த நெல்லிக்கனி, தன் உள்ளே யிருக்கும் விதையை 'அடுத்தது காட்டும் பளிங்குபோல்'6 இனிது விளக்குதல் பற்றி அஃது இனிது விளங்குதற்கு உவமையாகச் சொல்லப்படும். அக்கனி அகங்கையில் இருந்துவிட்டால், தெளிவு இன்னும் மிகுதியாம். இஃது அதன் தூய்மையாலே நிகழ்வதாம். நெல்லிக்காயைத் தின்றபின் குடிக்கும் தண்ணீரும் இனித்தல் சங்க இலக்கியங்களில் சொல்லப்பட்டது. அத்தன் - தந்தை. 'தேவர்கள் அத்தன்' என்பது, 'சிவன்' என்றவாறாய், 'நின்ற' என்னும் பெயரெச்சத்திற்கு முடிவாயிற்று. 'நின்ற' என்னும் பெயரெச்சத்திற்கு

முடிவாயிற்று. இங்குச் சிவனது பெருமைகளை எடுத்துக் கூறியது, அவனை நாடியபின் பிறரை நாட வேண்டாமையைக் குறிப்பால் உணர்த்தற்கு. 'ஒழி' துணிவுப் பொருண்மை விகுதி.
இதனால், சிவபெருமான் தன்னை அடைந்தவர்க்குக் குறைவிலா இன்பமும், தூய்மையும் உளவாக விளங்கி நிற்கும் தகைமையனாதல் கூறப்புகழ்தல் செய்யப்பட்டது.

அமைந்தொழிந் தேன் அள வில்புகழ் ஞானம்
சமைந்தொழிந் தேன் தடு மாற்றம்ஒன் றில்லை
புகைந்தெழும் பூதலம் புண்ணியன் நண்ணி
வகைந்து கொடுக்கின்ற வள்ளலு மாமே. *#2936*

இம் மண்ணுலகம் தீக்குணங்கள் பலவும் மூண்டு எரியும் இடம். புண்ணியமே வடிவான சிவன் இதன்கண் தன் திருவடி தோயும்படி எழுந்தருளி வந்து மெய்ந்நெறிப் பொருளை வகை வகையாக வகுத்துத் தெளிவிக்கின்ற குருமூர்த்தியும் ஆவான். அத்தகைய குருவருளால் நான் அளவற்ற புகழையுடைய ஞானத்தைப் பெற்றுவிட்டேன். அதன் கண் எனக்குத் தடுமாற்றம் யாதும் இல்லை. எனவே, யான் அலைவு ஒன்றும் இன்றி, முழு அமைதியை உடையவனாயினேன்.

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி, 'அமைந் தொழிந்தேன்' என்பதை இறுதியில் வைத்து உரைக்க. 'வள்ளலும் ஆம்' என்றது சிவன் பலர்க்கு அருள்வதைப் பொதுவாக எடுத்துக் கூறியது. உம்மை, சிறப்பு.
வகைந்து - வகை செய்து. தாம் குருவருள் பெற்றவாற்றை மேல் பல இடங்களில் கூறினார் ஆகலான் இங்கு அதனைக் கூறாது பயனை மட்டுமே கூறினார். இம்மந்திரம் ஈரடி எதுகை பெற்றது.
இதனால், சிவன் குருவாகியும் வந்து அருளும் கருணைத் திறம் புகழ்ந்து கூறப்பட்டது.

வள்ளல் தலைவனை வானநன் னாடனை
வெள்ளப் புனற்சடை வேத முதல்வனைக்
கள்ளப் பெருமக்கள் காண்பர் கொலோ என்றென்*(று)*
உள்ளத்தி னுள்ளே ஒளித்திருந் தாளுமே. *#2937*

*[*தலைவனை, நாடனை, முதல்வனை என வந்த வற்றிற்கு, 'இத்தன்மையேனாகிய என்னை' என்பதே கருத்தாகலான், இவை தன்மைக்கண் படர்க்கை வந்த இட வழுவமைதி.*]*

'ஒப்புயர்வற்ற தலைமையையும், சிற்பர வியோமத்தில் இருக்கும் இருப்பையும், வேதத்தைச் செய்த முதலாசிரியத் தன்மையும் உடையேனாகின்ற என்னை, எனது உண்மையை உணராது, தாங்களையே தலைவர்களாகக் கருதிக் கொண்டு செயற்படுகின்ற

மாக்கள் என்று உணர்வார்களோ' என்னும் அருள் நோக்குடன் சிவபெருமான் உயிர்களின் உள்ளத்துள்ளே தோன்றாத் துணையாய் இழிந்து, காலம் வந்தபொழுது தோன்றி ஆட்கொள்கின்றான்.

விளக்கவுரை

கள்ளம் உடையரை, 'பெருமக்கள்' என்றது வஞ்சப் புகழ்ச்சி. 'உடம்போ டுயிரிடை நட்பு'*1* என்றது போல. கொல், அசை 'வள்ளல் தலைவன்' என்பது முதலிய குறிப்பினால், 'ஒளிந்திருந் தானாம்' என்னும் பயனிலைக்கு. 'அவன்' என்பது தோன்றா எழு வாயாய் நின்றது. என்று இரண்டில் முன்னதை, என்று காண்பர் கொலோ' என மாற்றிவைத்துரைக்க. ஓர் என்றே பாடமாக ஓதுதல் பாடமன்று. இதனால், சிவன் காலம் வாராத முன்னெல்லாம் தோன்றாத் துணையாயும், காலம் வந்தபொழுது தோன்றி ஆறாம் துணைவனாயும் நிற்கும் கருணைத்திறம் புகழ்ந்து கூறப்பட்டது.

ஆளும் மலர்ப்பதம் தந்த கடவுளை
நாளும் வழிபடும் நன்மையுள் நின்றவர்
கோளும் வினையும் அறுக்கும் குரிசிலின்
வாளும் மனத்தொடு வைத்தொழிந் தேனே. *#2938*

[இங்கும் 'கடவுளை' என வேறுபோலக் கூறப்பட்டதை, 'கடவுளாகிய தன்னை' என ஒன்றுபடுத்தி உரைக்க.]

விளக்கவுரை

நாளும் - நாள்தோறும். நன்மை - நன்றிச்செயல். 'தன்னை யறிவித்துத் தான்தானாச் செய்தானைப் - பின்னை மறத்தல் பிழையலது'*1* என்றார் மெய்கண்ட தேவர். 'நின்றவரது, குரிசிலினது' என ஆறாவது விரிக்க. கோள் - கிரக சாரம். 'கோட்பாலனவும், வினையும் குறுகாமை'*2* என்றார் ஞானசம்பந்தரும். குரிசில் - சிவபிரான். அவன் தந்த வாள், ஞானம். 'நமன் வரின் ஞானவாள் கொண்டே எறிவன்'*3* என முன்னருங் கூறினார் உம்மை, சிறப்பு 'மனத்தொடு பொருந்த' என ஒருசொல் வருவிக்க.

இதனால், ஞானம் பெற்றபின்னும் தன்னை வழிபடுவாரைச் சிவன் கைவிடாது காக்கும் கருணை புகழ்ந்து கூறப்பட்டது. 'துறக்குமா சொலப்படாய், துருத்தியாய்'*4* என்பதும் ஞானசம்பந்தர் வாக்கு.

விரும்பில் அவனடி வீர சுவர்க்கம்
பொருந்தில் அவனடி புண்ணிய லோகம்
திருந்தில் அவனடி தீர்த்தமு மாகும்
வருந்தி அவனடி வாழ்த்த வல்லார்க்கே. *#2939*

'கோழை மிடறாக, கவி கோளும் இலவான'*5* நிலைமையை

யுடையோரும் முயன்று, 'இசை கூடும் வகையால்'6 சிவனது திருவடிகளை வாழ்த்துபவர்கட்கு அவர்கள், 'வீர சுவர்க்க இன்பம் எவ்வாறு உள்ளது' எனக் காண ஒரு கால் விரும்புவாராயின் அத்திருவடிகளே அதுவாய் நின்று அவர்கட்கு அதனைக் காட்டும். அங்கு அவர்கள் செல்ல வேண்டுவதில்லை.

இனிப் பொதுவான சுவர்க்க இன்பத்தைக் காண அவர்கள் அவ்வாற்றான் விரும்புவராயின் அதுவாயும் அத்திருவடிகள் நின்று இனிப்பிக்கும்.

தீர்த்தங்கள் பலவற்றில் சென்று மூழ்க அவர்கள் விரும்பு வராயின் அவையாயும் அத்திருவடிகள் அவர்கட்கு நின்று அவர்கள் விருப்பத்தை நிறைவு செய்யும்.

விளக்கவுரை

'இத்துணை ஆற்றல்களையுடையது சிவனது திருவடிகள்' என்றபடி. இதற்கு எடுத்துக்காட்டாக ஞானசம்பந்தர் திருவீழிமிழலையினின்றும் சீகாழிக்குச்செல்ல நினைத்தபொழுது திருவீழிமிழலைக் கோயிலேக் கோயிலாகிக் காட்சியளித்தமை, திருமருகல் கோயிலும் அவ்வாறே திருச்செங்காட்டங்குடிக் கோயிலாகிக் காட்சியளித்தமை, நாவுக்கரசர்க்குத் திருவையாற்றுக் கோயிலே திருக்கயிலையாகிக் காட்சியளித்தமை முதலியனவாம்.

'பொருந்தில்' என்றதும், 'மனம் பொருந்தில்' என்றதேயாம். திருந்துதல் - செந்நெறியிற் செல்லுதல். அதுவும் செல்ல விரும்பு தலையே குறித்தது. 'விரும்பில்' முதலிய மூன்றும் பெரும்பான்மை விரும்பாமையைக் குறித்து நின்றது. 'வருந்தியும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. அவன் 'பண்டறி சுட்டு'.

இதனால், சிவனது திருவடிகளைத் தோத்திரிப்பார்க்கு அவை அவர் வேண்டும் பொருள் அனைத்துமாகிப் பயன் தரும் சிறப்புப் புகழ்ந்து கூறப்பட்டது.

வானகம் ஊடறுத் தான் இவ் வுலகினில்
தானகம் இல்லாத் தனியாகும் போதகன்
கானக வாழைக் கனிநுகர்ந் துள்ளுறும்
பானகச் சோதியைப் பற்றிநின் றேனே. #2940

ஞானாசிரியன் தனது ஞானத்தால் அண்டங் கடந்த பொருளாய் உள்ளான். அவன் இவ்வுலகத்தில் இருப்பினும் ஏனையோர் போல 'யான், எனது' என்னும் பற்றுடையவன் ஆகாது, பற்றற்றுத் தூயனாய் இருக்கின்றான். அவன் தந்த மலைவாழைக் கனியை நுகர்ந் - தமையால், நான் என்னுள்ளே ஊறுகின்ற அமுதமாயும், ஒளியாயும் உள்ள அம்மெய்ப் பொருளைப் பற்றி அசைவின்றி நிற்கின்றேன்.

விளக்கவுரை

'போதகன்' என்பதை முதலிற் கொள்க. போதகன், இங்கு ஞான போதகன், கானக வாழைக் கனி, இனிமைக்கு ஒன்றனை எடுத்துக் கூறியவாறு. பானகம் - இனிப்புடைய நீர்ப் பொருள். அஃது இங்கு அமுதத்தைக் குறித்தது. தனி - தனிமை. அஃது ஆகுபெயராய், அதனை உடையானைக் குறித்தது.

இதனால், சிவன் அவன் தானாகும்படி ஆவேசித்து அருளும் ஆன்ம சைதன்னியததின் சிறப்புக் கூறும் முகத்தால், அத்தன்மைத்தாகிய சைதன்னியத்திலன்றி ஆவேசியாத அவனது மாண்பு புகழ்ந்து கூறப்பட்டது.

'நம்செய லற்று,இந்த நாம்அற்றபின் நாதன்
தன்செயல் தானேயென் றுந்தீபற;
தன்னையே தந்தான்என் றுந்தீபற'*1*
என்னும் திருவுந்தியாரையும் காண்க.

விதியது மேலை யமரர் உறையும்
பதியது பாய்புனற் கங்கையும் உண்டு
துதியது தொல்வினைப் பற்றறு விக்கும்
மதியது வவ்விட்ட(து) அந்தமும் ஆமே. *#2941*

ஓர் அறிவு எனது அறிவைத் தன்னுள் விட்டது. அஃது எல்லாப் பொருள்கட்கும் அதுவது இயங்குதற்குரிய நெறி முறைகளை வகுப்பது. சுவர்க்க லோகத்தில் வாழும் அமரர்கட்கு மேலான அமரர்கள் வாழ்கின்ற அந்த உலகத்தில் அஃது உள்ளது. அதன் சடை முடியில் வேகமாகப் பரந்து பாய்கின்ற வெள்ள நீர் அடங்கிக் கிடக்கின்றது. யார் யார் எந்த எந்த பெயரைச் சொல்லிப் புகழ்ந்தாலும் அந்தப் புகழ்ச்சிகளையெல்லாம் உண்மையில் தன்னுடையனவாகவே உடையது. அது பழவினையாகிய கட்டினை ஆசானைக் கொண்டு அறுப்பிக்கும். கடைசியாக எல்லாப் பொருட்கும் அதுவே புகலிடமாய் உள்ளது.

விளக்கவுரை

'மதியது வவ்விட்டது' என்பதை முதலிற் கொள்க. 'மதியது' என்பதில் அது, பகுதிப்பொருள் விகுதி. 'வவ்வியது' என்பது, 'வவ்வியிட்டது' என, 'இடு' என்னும் அசைச்சொல்லோடு வந்து, இகரம் தொகுக்கப்பெற்றது. 'வவ்வியிட்டது' என்னும் வினைப் பெயரே மேல் வந்த பயனிலைகளுக்கெல்லாம் எழுவா யாயிற்று. 'மதியை வவ்வியது' என்றதனால் அதுவும் மதியாதல் பெறப் பட்டது. 'விதியது' என்றது, 'விதியை வகுக்கும் ஆற்றலுடையது' என்றவாறு. மேலை அமரர் சுத்த

மாயா புவனங்களில் வாழ்வோர். பாய்புனற் கங்கையை உடைமை கூறியது. இங்குச் சொல்லப்பட்ட பெருமைகளையெல்லாம் உடைய அந்தப் பெரும்பொருள் இவ்வுலகத்தில் வெளிப்படும்பொழுது இவ்வுருவுடையதாய்த்தான் வெளிப்படும்' என்பது உணர்த்தற்கு.

'அண்டம் ஆரிரு ளூடுகடந் தும்பர்
உண்டு போலுமோர் ஒண்சுடர்; அச்சுடர்
கண்டிங் காரறிவார்? அறி வாரெலாம்
வெண்டிங்கட் கண்ணி வேதியன் என்பரே'*1*

என்னும் அப்பர் திருமொழியைக் காண்க. உம்மை, 'பதயதேயன்றி' என இறந்தது தழுவிநின்றது. 'யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே - மாதொரு பாகனார்தாம் வருவர்' என்னும் முறைமையால் துதிப்பார் துதிக்கும் துதிகள் யாவும் சிவனுடைய துதிகளேயாதல் அறிக.

'எல்லாப் பெயரும் பரமசிவன் பெயர்
என்பதே வேதநூல் துணிபு'

என்பது சிவஞான மாபாடியம்.*2*

மேலது வானவர் கீழது மாதவர்
தானிடர் மானுடர் கீழது மாதனம்
கானது கூவிள மாலை கமழ்சடை
ஆனது செய்யும் எம் ஆருயிர் தானே. *#2942*

மேலே உள்ள வானத்தில் வாழ்பவரும் கீழே உள்ள நிலத்தில் வாழும் பெருந்தவத்தோரும் தவம் இன்மையால் துன்புறுகின்ற உலகரும் ஆகிய அனைவர்க்கும் வெளித்தோன்றாது புதைந்துள்ளது ஒரு பெருநிதி. அது வில்வமாலை மணக்கும் சடையை உடையது. எங்கட்கு ஆவனவற்றையெல்லாம் அது தானாகவே செய்யும். அதுவே எங்கட்கு அரிய உயிர்.

விளக்கவுரை

'மேலது' என்பது 'வான்' என்பதனோடே முடிந்தது. முதற்கண் நின்ற 'கீழது' என்பது கீழ் உள்ளதாகிய நிலத்தைக் குறித்தது. கீழ்தன்கண் உள்ள மாதவர், மானுடர்' என்க. தான், அசை, 'வானவர், மாதவர், மானுடர்' என்னும் செவ்வெண்ணிற்குரிய தொகைப் பொருட்டாகிய 'யாவரும்' என்பதனோடு, 'யாவர்க்கும் என உருபும் விரிக்க. பின் வந்த 'கீழது' என்பது 'மறைந்துள்ளது' என்னும் பொருட்டு. கான் - மணம். இதன்பின் வந்த 'அது' என்பது பகுதிப்பொருள் விகுதி. கூவிள மாலை கான கமழ் சடை' என மாற்றியுரைக்க. 'சடைத்து என்னும் துவ்விகுதி தொகுக்கப்பட்டது. இவ்வாறன்றி, 'சடையொடு' என உருபு விரித்து, அவனை, 'செய்யும்' என்பதனோடு முடிப்பினும் ஆம். மூன்றாம்

அடிக்கு, முன் மந்திரத்தில் இரண்டாம் அடிக்கு உரைத்தது. 'ஆனது தானே' செய்யும்' என இயைக்க. முதலடி 'எதுகை யின்றி, முரண் தொடை நயமே பெற்று வந்தது.
இதனால், சிவன் தன் அடியார்க்கே 'எய்ப்பினில் வைப்பாய்'*1* அவர்க்கு ஆவனவற்றைத் தானே செய்து, அவர்கட்கு உயிர்போலச் சிறந்து சிறப்புப் புகழ்ந்து கூறப்பட்டது.

சூழுங் கருங்கடல் நஞ்சுண்ட கண்டனை
ஏழின் இரண்டிலும் ஈசன் பிறப்பிலி
ஆழும் சுனையும் அடவியும் அங்குளன்
வாழும் எழுத்தைந்தின் மன்னனு மாமே. *#2943*

'நஞ்சத்தை உண்டமையால் கருமை நிறம் பெற்ற கண்டத்தை உடையவன்' எனச் சொல்லப்படுகின்ற அந்தச் சிவனையே கருமை நிறம் பொருந்திய கடல் சூழ்ந்து நிற்கின்றது என்றது, 'நில உலகச் சிவன் கறைமிடற்றண்ணல்' என்றபடி. இவன், 'சீகண்ட பரம சிவன்' எனப்படுவான். 'பிரமாண்டம்' எனப் பெயர் பெற்ற இந்த அண்டத்தில் உள்ள, கீழ் ஏழ், மேல் ஏழ் ஆகிய பதினான்கு உலகங்கட்கும் இவனே மகேசுரன்; பிறப்பிறப்பில்லாத பரமசிவன். ஆழ்ந்த சுனைகளையும், காடுகளையும் உடைய கயிலாய மலையில் இவன் எழுந்தருளியிருக்கின்றான். மேலும் இவ்வுலகில் உள்ளார் ஓதும் திருவைந்தெழுத்து மந்திரத்திற்கு முதல்வனும் இவனே.

விளக்கவுரை

சிவாகமங்களில் சொல்லப்படுகின்ற ஒரு தலையாய பொருளை நாயனார் 'தோத்திரம்' என்னும் இவ்வதிகாரத்தில் இம் மந்திரத்திற் கூறினார். அஃதாவது, 'சுத்தம் மிச்சிரம், அசுத்தம்' என்னும் மூவகை உலகங்கள் முறையே 'விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர்' என்னும் மூவகை உயிர்கட்கு உரியனவாய் உள்ளன. அவற்றுள் சுத்த உலகத்திற்குச் சிவனே நேராய்த் தலைவனாய் இருக்கின்றான். அவ்விடத்து அவன் 'அருவம், அருஉருவம், உருவம்' என்னும் திருமேனிகளைக் கொண்டிருக்கின்றான். அருவத்திருமேனியில் 'சிவன்' என்றும், அருஉருவத் திருமேனியில் 'சதாசிவன்' என்றும், உருவத்திருமேனியில் 'மகேசுரன்' என்றும் பெயர் பெறுகின்றான். இம்மூவகைப் பேதங்களும், 'சம்பு பட்சம்' எனப்படும். மிச்சிர உலகத்திற்கு, விஞ்ஞானகலருள் பக்குவன் பெற்றுச் சுத்த வித்தையில் சிவனது அருளைப் பெற்று வைகும் அட்ட வித்தியேசுரர்களில் முதல்வ ராகிய அனந்த தேவரே தலைவராய் உள்ளார். அசுத்த உலகத்திற்குப் பிரளயாகலருட் பக்குவம் பெற்றுக் குண தத்துவத்தில் சிவனது அருளைப் பெற்று வைகும் சீகண்ட உருத்திரரே தலைவராய் உள்ளார்

என்பது, இவ்விருவரும் உருவம் ஒன்றையே உடையர். 'அணு பட்சத்தினர்' எனப்படுவர். சிவனது அருளால் மலம் நீங்கப் பெற்று ஞானத்தை அடைந்திருத்தலால், இவர்கள் அவனது முற்றுணர்வு முதலிய எண்குணங்களைப் பெற்று நிற்கின்றனர்.
இதனால், சிவன் உயிர்கட்குப் பெத்தம், முத்தி அனைத்தையும் செய்பவனாகின்ற மாட்சிமை புகழ்ந்து கூறப்பட்டது.
சீகண்டர் குண தத்துவத்தில் இருப்பவராயினும் அவரது வியாபகம் ஆன்ம தத்துவம் முழுவதிலும் இருத்தலால், கீழ்த் தத்துவமாகிய பிருதிவி உலகத்தில் இங்குள்ள உயிர்களின் பொருட்டுக் கயிலாய மலையில் எழுந்தருளியிருக்கின்றார். இஃது பற்றி இவருக்குரிய குண தத்துவம் 'மகா கயிலாசம்' எனப்படுகின்றது. 'பிருதிவி தத்துவ உலகத்திற்கு இவரே சிவனாய் உள்ளார்' என்பதையே நாயனார் இம்மந்திரத்து இரண்டாம் அடியால் வலியுறுத்தினார். இவர் அணுபட்சத்தினராயினும் இவர் செய்வன வற்றை எல்லாம் தற்போதத்தின்வழிச் செய்யாது, சிவபோதத்தின் வழியே செய்தலால் அச்செயல்கள் அனைத்தும் சிவன் செயலே ஆகின்றன. இதனைச் சிவஞான சித்தியார், வேதத்துள் சிவனைப் பற்றிச் சொல்லப்பட்ட, 'விசுவாதிகள், விசுவ காரணன், விசுவத்திற்கு அந்தரியாமி, விசுவரூபி' என்னும் பெயர்கள் ஆதலை நிறுவும் சான்று களாக இந்நில உலகத்தில் சீகண்ட உருத்திரர் பால் நிகழ்ந்த செயல் களையே எடுத்துக் காட்டிற்று. *[சுபக்கம் - சூ - 1]*. அது பற்றிச் சிவஞான யோகிகள் இவ்விடத்தில்,
'சீகண்ட ருத்திரர்க்குரிய வடிவங்களும்,
பெயர்களும், தொழில்களும் முதல்வனுக்கும்
ஒப்ப உள - என்பது வாயுசங்கிதையுட்
கூறப்படுதலின், ஈண்டுக் கூறியன
எல்லாம் முதல்வனுக்கு உரியனவேயாம்
எனக் கொள்க'
எனவும்,
'அற்றாகலின்றே ஈண்டுக் கூறிய
வடிவங்க ளெல்லாம் மாகேசுரமூர்த்தம்
இருபத்தைந்தனுள் வைத்தெண்ணப்பட்டன
என்பது'
எனவும் உரைத்தார். எனினும் சிவன் சருவ வியாபியாதலானும் அவன் எதனுள் நிற்பினும் அதன் தன்மை தனக்கு எய்தான் ஆகலானும் 'அவன் இவ்வுலகத் தொடர்புடையன் அல்லன்' என்றோ, 'ஈண்டுள்ளார்க்கு' அவன் காட்சி வழங்குதல் இல்லை' என்றோ

கொள்ளுதல் கூடாதாம்.
உலகப் பயன் வேண்டிச் சிவனை நோக்கித் தவம் செய்பவர்கட்கெல்லாம் சீகண்ட உருத்திரரே தோன்றிப் பயன் கொடுத்தலைக் கந்தபுராணம் முதலிய பல புராணங்களாலும், இதிகாசங்களாலும் உணரலாம். ஞானத்தைச் சிவன் சீகண்டர் வழியாகவும் அருளலாம்; தான் நேர் நின்றும் அருளலாம். இதனை, 'சகல வருக்கத்தினர்க் கெல்லாம் ஞானத்தைச் சிவன் குரு மூர்த்திகளை ஆவேசித்து நின்று அருளுவான்' என்பதே பெரும்பான்மை பற்றிய விதியாய் இருப்பினும், வாதவூரடிகட்குச் சிவன், தானே குருவாகி வந்து ஞானத்தை வழங்கினமை கொண்டு அறிக. சீவன் தானை குருவாகி வந்து அருள்செய்த அந்த அருமையைத்தான் வாதவூரடிகள் பல விடத்திலும் பெரிதும் போற்றிப் புகழ்கின்றார்.
'அவனியிற் புகுந்து எமை ஆட்கொள்ள வல்லாய்'1
'கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி!
நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி!2
'பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க;
கண்ணால் யானும கண்டேன் காண்க'3
'புவனியிற் சேவடி தீண்டினன் காண்க;
சிவன்என யானும் தேறினன் காண்க;
அவன்எனை ஆட்கொண்டருளினன் காண்க'4
என்னும் திருவாக்குக்களைக் காண்க.
'அங்ஙனமாயின், வாதவூரடிகட்கு அருள்புரிந்த குரு சிவனே' என்பது தெளியப்படுதல் எவ்வாறு' எனின்' அடிகட்கு அருள்புரிந்த குரு நெடுநாள் இங்கில்லாமல் உடன் வந்த அடியவர்களோடும் விரைந்து திருவுருத் தோன்றாமல் மறைந்தமையால் தெற்றென விளங்கும் பலரை மாணாக்கராகக் கொண்டு ஞானத்தை அருளிய குருமூர்த்திகள் பலர் எங்கே, எப்பொழுது, எந்தப் பெற்றோருக்குப் புதல்வராய்த் தோன்றினர்? எப்படி வளர்ந்தார்? எப்படி ஞானம் பெற்றார்? என்பன பற்றிய வரலாறுகள் உள. அத்தகைய வரலாறு மாணிக்கவாசகருக்கு அருள்புரிந்த குருவுக்கு இல்லை. மற்றவர்களெல்லம் மாணாக்கர்க்கு ஞானத்தை உபதேசிப்பது மட்டுமன்று; பல காலம் உடன் இருந்து சிந்திப்பித்து தெளிவித்து, நிட்டை கூடுவித்து, பின்னும் அதிலே நிற்குமாறு நிறுத்தி இவ்வாறெல்லாம் அருள்புரிந்து, உடன் இருப்பர். உடம்பினால் அவரெல்லாம் நம்மனோருட் சிலரே. ஞானத்தினாலும் சிவனது திருவருளாலுமே அவர்கள் சிவமாகின்றனர். மாணிக்க - வாசகருக்கு அருள்புரிந்த குரு அவ்வாறெல்லாம் இல்லாது விரைய மறைந்தமையால் அவர் சிவனே யன்றி வேறல்லராதல் தெளிவு.

'... ... உன்தா ளிணை அன்பு
பேரா உலகம் புக்கார் அடியார்;
புறமே போந்தேன் யான்'
'சிவமா நகர் குறுகப் - போனார் அடியார்;
யானும் பொய்யும் புறமே போந்தோமே'1
'உடையானே! நின்றனை உள்கி
உள்ளம் உருகும் பெருங்காதல்
உடையார், உடையாய் நின்பாதம்
சேரக்கண்டு இங்கு ஊர்நாயிற்
கடையானேன், நெஞ்சு உருகாதேன்
கல்லாம் மனத்தேன், கசியாதேன்,
முடையார் புழுக்கூடு இத காத்து,
இங்கு இருப்பதாக முடித்தாயே'2
என்றாற்போல் அடிகள் அருளிச்செய்த குறிப்புக்கள் பலவும் அவரை ஆட்கொண்ட குருமூர்த்தி அவருடன் பலநாள் இல்லாது விரைய மறைந்தமையைத் தெரிவிக்கின்றன. ஆகவே அவரை சிவனே' எனக்கொள்ளுதற்கு ஐயுறவு யாது மில்லையாம்.
மூவர் முதலிகளுள் சுந்தரரையே சேக்கிழார் கயிலாயம் சென்றதாகக் கூறினார்.
'மன்னும் வன்றொண்டர் ஆலால சுந்தரராகித்
தாம் வழுவாத
முன்னை நல்வினைத் தொழிற்றலை நின்றனர்'1
என்னும் அடிகளால் 'அவர்' முன்பு விட்டு வந்த பதவியிலே மீண்டும் சென்று அமர்ந்தார் என்றார். அப்பரும், சம்பந்தரும் சாயுச்சிய பரமுத்தியையே அடைந்ததாகவே கூறினார். இத்தகைய ஞானச் செய்திகள் எல்லாம்,
'ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும், ஆதிமாண்பும்
கேட்பான் புகின் அளவில்லை; கிளக்கவேண்டா;
... ... எந்தை தாட்பால் வணங்கித் தலைநின்றினை கேட்க, தக்கார்'2
என அருளிச் செய்ததில் சேர்வனவாம்.
சீகண்ட உருத்திரரை நஞ்சுண்ட கண்டராகக் கூறுதல், 'அசுத்த உலகத்தில் தங்கு தருவனவாய் உள்ளவற்றையும் நன்மை தருவன வாக்கும் ஆற்றலுடையார்' என்பதைக் குறிப்பால் உணர்த்தற் பொருட்டேயாம். உருத்திரருள், 'சீகண்ட உருத்திரர்' என இவர் விசேடித்துச் சொல்லப்படுதற்கும் இதுவே காரணம். இங்ஙனமாகவும் மகேசுரருக்கும் கறைக் கண்டம், அல்லது நீல கண்டம் சொல்லப் படுதல். இவருடைய செயல்கள் எல்லாம் அவருடைய செயல்களே'

என ஒற்றுமை யுணர்த்தற் பொருட்டாம்.
'நஞ்சுண்ட கண்டனைக் கருங்கடல் சூழும் என மாற்றியுரைக்க. இது, 'மண்ணுலகம் இவரையே முதல்வராகக் கொண்டுள்ளது' என்னும் குறிப்பினதாம். 'சுனையையும், அடவியையும் உடைய அங்கு' என்க. இதனால், இவ்வுலகத்தார் சொல்லும் தோத்திரங்களின் உண்மைப் பொருள் உணர்த்தப்பட்டது.

உலகம தொத்துமண் ஒத்(து) உயர் காற்றை
அலகதிர் அங்கிஒத்(து) ஆதிப் பிரானும்
நில(வு) இயல் மாமுகில் நீர்ஓத்தும் ஈண்டல்
செலவொத்(து) அமர்திகைத் தேவர் பிரானே. *#2944*

எல்லாப் பொருள்கட்கும் முதலாயுள்ள சிவன் நிலம், நீர், தீ, காற்று, வானம், ஞாயிறு, திங்கள் என்னும் பொருள்களாக அவற்றுடன் ஒன்றாய்க் கலந்திருத்தலால், எல்லா உயிர்களும் அவனேயாய், அவை செல்லும் நெறிகளிலும் அவற்றோடு உடனாய் உதவி புரிந்து எண்திசைக் காவலர்கட்கும் தலைவனாய், உலக முதல்வன் ஆயினான்.

விளக்கவுரை

செய்யுள் நோக்கி நிலம் முதலியன முறையின்றி, ஏற்ற பெற்றியில் வைக்கப்பட்டன. கதிர் முதலிய பிறவற்றிலும் இரண்டன் உருபு விரிக்க. நிலவு - சந்திரன். முகில், இங்கு ஆகுபெயராய், வானத்தை உணர்த்திற்று. 'உலகம்' என்றது உயிர்த் தொகுதியை. அது, பகுதிப்பொருள் விகுதி. ஒத்தல், அவற்றோடு ஒன்றாய் இயைந்து நிற்றல். 'அமர் தேவர்' என இயையும். 'ஆதிப் பிரான் ஒத்து, ஒத்துப் பிரான் ஆயினான்' என வினை முடிக்க. 'உலகு' நிலம் முதலிய எட்டுக் கூறுகளாய் அடங்குதலாலும், அவ் எட்டுக் கூறுகளிலும் நிறைந்து அவற்றை இயக்குதலாலும் சிவன் உலக முதல்வனாயினான்' என அவனது பெருமையை விளக்கியவாறு. 'ஆதிப்பிரானும்' என்னும் உம்மை. அசைநிலை. இறுதியில் 'ஆயினான்' என்னும் சொல்லெச்சம் வருவித்து முடிக்க. எண் திசைக் காவலர்களுக்குப் பிரான் ஆயினமை கூறும் முகத்தால் உலக முதல்வன் ஆயினமை குறித்தவாறு. இதனால், சீவன் அட்ட மூர்த்தியாம் சிறப்பினால் உலக முதல்வன் ஆயினமை புகழ்ந்து கூறப்பட்டது.

பரிசறிந் தங்குளன் அங்கி அருக்கன்
பரிசறித் தங்குளன் மாருதத் தீசன்
பரிசறிந் தங்குளன் மாமதி ஞானப்
பரிசறிந் தன்னிலம் பாரிக்கு மாறே. *#2945*

தீக்குத் தலைவனாகிய தீக் கடவுள், கதிர்க்குத் தலைவனாகிய கதிர்க் கடவுள். மதிக்குத் தலைவனாகிய மதிக்கடவுள், மற்றும் காற்றிற்குத்

தலைவனாகிய காற்றுக் கடவுள் ஆகியோரும், நிலத்திற்குத் தலைவியாகிய நிலமகள், 'எல்லாப் பொருள்களையும் தாங்கும் திண்மையை எனக்கு அருளியவன் சிவன்' என்னும் உண்மை யுணர்வோடே எல்லாவற்றையும் தாங்குதல் போலவே' தாம் தாம் தீ முதலாக மேற்கூறியவற்றிற்குத் தலைவராய் இருந்து, அவற்றின் செயல்களைச் செய்வித்து வருகின்றனர்.

விளக்கவுரை

'எல்லாக் கடவுளரும் சிவனது முதன்மையை உணரும் உண்மை ஞானத்தாலே தம் தம் அதிகாரத்தை நடத்தி வருகின்றனர்' என்பதை உடம்பொடு புணர்த்தலாக நிலமகள் மேல் வைத்து, வேறு எடுத்துக் கூறினார். அட்ட மூர்த்தத்தில் இயமானன் தவிர ஏனை ஏழும் சடப்பொருள்கள். அவற்றுள், 'நிலம், நீர், வானம்' என்னும் மூன்றிற்கும், 'நிலமகள், நீர் மகள், வான் மகள்' எனப் பெண்மையர் முதல்வராகவும், 'முச்சுடர், காற்று' என்னும் ஏனை நான்கிற்கும் ஆண்மையர் முதல்வராகவும் கூறப்படுதலின் அவருள் பெண்மையர்களில் நிலமகளை எடுத்துக் கூறி, ஏனை இருவரையும் உபலக்கணத்தால் தழுவினார்.

முச்சுடர்களை முதலிற் கூறுதல் கருத்தாகலின் பரிசறிந் தங்குளன் மாமதி என்பதை, 'அருக்கன் உளன்' என்பதன் பின்னர்க் கூட்டுக. முதற்கண் உள்ள, 'பரிசறிந்தங்குளன்' என்பதை 'அருக்கன்' என்பதற்கு முன்னும் கூட்டுக. 'அருக்கன் ஈசன்' என்பவற்றோடு இயைய, 'அங்கி, மதி' என்றவற்றையும் 'அங்கியன், மதியன்' என ஆடுவறி சொற்களாக்குக. அல் நிலம் - இவர்கள் அல்லாத நிலம். 'நிலம்' என்றது நிலமகளையே. 'பரித்தல்' என்பது முதல் நீண்டு வந்தது. பரித்தல் - தாங்குதல். 'அல் நிலம், ஞானப் பரிசு அறிந்து பரிக்குமாறே, ஏனை அங்கியன் முதலியோரும் அங்கங்கு உளர் என்பது இம்மந்திரத்தின் சொற்சுருக்கம். அங்கு என்றது, 'அவற்றை இயக்கி நிற்கின்றனர், என்றபடி. சிவனே எல்லாப் பொருள் கட்கும் அதுவதற்குரிய ஆற்றலைத் தந்தருளினானஅ' என்பதை,

'அருக்கனில் சோதி அமைத்தோன், திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன், பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன், மேதகு
காலின் ஊக்கம் கண்டோன், நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன், வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன் - என்றென்று
எனைப்பல கோடி எனைப்பல பிறவும்
அனைத்தனைத்து அவ்வயின் அடைத்தோன்' -திருவண்டப் பகுதி, *20-*

என்னும் திருவாசகத்தால் உணர்க. இதன்கண் சொற்பொருட் பின்வரு நிலையணி வந்தது.

இதனால், 'தேவர் யாவரும் சிவனது ஆணையால் சிற்சில அதி காரங்களைப் பெற்று அவற்றை அவனை நினைந்தே நடத்தி வருகின்றர்' என்ற அவனது முழுமுதற்றன்மை புகழ்ந்து கூறப்பட்டது. இதனானே, சிவனுக்கு, 'தேவ தேவன்' எனவும், 'மகா தேவன்' எனவும் சொல்லப் படும் பெயர்கள் பொருள் பொதிந்த பெயர்களாதல் விளங்கும். 'பிறரெல்லாம் சிவனது ஆணையை நினைந்தே தம் அதிகாரத்தைச் செலுத்துபவர் - என்பது, சிவனை மறந்து தம் மனம் சென்றவாறே அதிகாரத்தைச் செலுத்த முற்படும்பொழுது இவர்க்கு ஒறுப்புண்டாயினமையால் அறியப்படும்' என்பதைச் சிவஞான யோகிகள்.

'அரன் நினைந்தவாறன்றி ஆகாமை,
தக்கன் வேள்வி, மார்க்கண்டி வாழ்நாள்,
ஆலாலத் தோற்றரவு முதலியவற்றால்
இனிது விளங்கக் கிடத்தலின்'

என விளக்கினார்.*1* கூற்றுவனுக்குச் சிவன் இட்ட ஆணை 'நம் அடியவர்க்கு வாழ்நாள் முடிந்தால், நாம் அவர்களை அழைத்துக் கொள்வோம் நீ அவர்களிடம் செல்ல வேண்டா' என்பது. அதனை மறந்து அவன் மார்க்கண்டேயரிடத்துச் சென்றமையால் ஒறுக்கப் பட்டான். அவ்வினையை இனிமேலாயினும் மறவாது செய லாற்றுங்கள் என அறிவுறுத்தும் முறையில்தான் அப்பர் கால பாசத் திருக்குறுந்தொகையை அருளிச்செய்தார்.*2*

தேவர்கள் சிவபெருமானை வேண்டி இசைவு பெறாதே தாமும் அவனைப் போல என்றும் இறவாதிருக்க அமுதம் பெற வேண்டிப் பாற் கடலைக் கடைந்தனர். அதனால் அவர்கள் பெற்ற பயன் என்றும் இறவா நிலையை வேண்டியவற்கு மாறாக, அன்றே இறக்கும்படி வந்த ஆலகால விடந்தான். பின்பு அவர்கள் சிவபெருமானை அடைந்தே நலம் பெற்றனர். இவைகளையே சிவஞானயோகிகள் குறித்தார்.

இவற்றால் எல்லாம் நாம் அறிய வேண்டிய முடிநிலைப் பொருள், 'சிவபெருமானது சங்கற்பமே சங்கற்பமாக நின்று முற்றுப்பெறும் அன்றி ஏனையோர் சங்கற்பங்களெல்லாம் முற்றாப்பெரா என்பதே. இதனால் சிவனது சங்கற்பம் வேதங்களில் 'சத்திய சங்கற்பம்' எனப்படுகின்றது.

அந்தம் கடந்தும் அதுவது வாய்நிற்கும்
பெந்த உலகினிற் கீழோர் பெரும் பொருள்

தந்த உலகெங்குந் தானே பராபரன்
வந்து படைக்கின்ற மாண்பது வாமே. *#2946*

தான் படைத்த உலகத்திற்குத் தானே முன்னைப் பழம் பொருளும், பின்னைப் புதுப் பொருளுமாய்,*1* நிற்கும் சிவன், தான் தன் மேல்நிலையினின்றும் இறங்கி வந்து உலகத்தைப் படைக்கின்ற முறை அதுவாகும் (அஃதாவது, 'உலகத்திற்கு அது தோன்றும் இடமும், பின் ஒடுங்கும் இடமும் தானேயன்றிப் பிறரில்லாத தனியொரு முதல்வன்' என்பதாம்.) அவன் உலகத்திற்கு வித்தாகிய மாயையின் வியாபகத்தைக் கடந்து அப்பால் உள்ளவ -னாயினும் அசுத்த உலகமாகிய இந்தப் பிரகிருதி புவனத்தில் உள்ளவர்கட்கும் அவனே முதல்வன்.

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி உரைக்க. 'பரம், உபரம்' என்பன, 'முன், பின்' என்னும் பொருளைத் தந்தன. 'கடலினின்றும் தோன்றும் அலை, நுரை, திவலை முதலியவற்றிற்குக் கடலே முன்னைப் பொருளும், பின்னைப் பொருளுமாய் இருத்தல் போல இறைவன் உலகிற்கு முன்னைப் பொருளுமாய் இருத்தல் போல இறைவன் உலகிற்கு முன்னைப் பொருளும் தானேயாய் இருக்கின்றான்' என்பதை,

'நுரையும் திரையும், நொப்புறு கொட்பும் வரையில் சீகர வாரியும் குரைகடற்
பெருத்தும், சிறுத்தும் பிறங்கு தோன்றி
எண்ணில வாகி யிருங்கட லடங்கும்
தன்மை போலச் சராசரம் அனைத்தும்
நின்னிடைத் தோன்றி, நின்னிடை அடங்கும்; நீ
ஒன்றினும் தோன்றாய்; ஒன்றினும் அடங்காய்'*2*

என்னும் பட்டினத்தடிகள் திருவாக்கால் உணர்க. உபநிடதமும், 'எல்லாம் பிரமத்தினின்றும் தோன்றி அதிலே அடங்குகின்றன. இடையிலும் அதிலேதான் நிலைத்திருக்கின்றன'*1* எனக் கூறிற்று. சிவன் தான் படைத்த உலகத்திற்கு வெளியிலே வியாபித்த லன்றியும் எல்லாப் பொருள்களினுள்ளும் எள்ளினுள் எண்ணெய் போல நிறைந்தும் நிற்றலால், 'பெந்த உலகினிற் கீழோர் பெரும் பொருள்' என்றார். பெந்தம் - பெத்தம். என்றது இங்கு, முக்குண வடிவாய் அறிவை மாறி மாறி மயக்குகின்ற மூலப் பிரகிருதியை. 'இதன் காரிய புவனங்களில் வாழ்பவர் மூவகை ஆன்மாக்களுள் கீழ்ப் பட்ட சகலர்' என்பதை 'கீழோர்' என்பதனால் குறித்தார். 'கீழோர்க்கும்' எனத் தொகுக்கப்பட்ட உருபையும், உம்மையையும் விரிக்க. 'அதிகார

மூர்த்திகள் பலரும் சிவனது ஏவல் வழி நிற்பவரே யன்றிச் சுதந்திரர் அல்லர்' என்பது முன் மந்திரத்தில் இனிது விளக்கப்பட்டமையால் ஈண்டுள்ளார்க்கும் சிவனே முதல்வன் ஆதற்கு இழுக்கின்மை அறிக. இதனால், முன் மந்திரத்திற் கூறிய பொருள் வலியுறுத்தி உணர்த்தப்பட்டது.

முத்தண்ட ஈரண்ட மேமுடி யாயினும்
அத்தன் உருவம் உலகே ழெனப்படும்
அத்தன்பா தாள அளவுள்ள சேவடி
மத்தர் அதனை மகிழ்ந்துண ராரே. *#2947*

மூன்றும், இரண்டும் ஆக ஐந்தாய உலகங்களே அனைத்துலகங்கட்கும் முடியாய், 'சிவனுக்கு உரியன' என்று சொல்லப்பட்டாலும், எல்லா உலகங்களுமே அவனுக்கு உருவமாகும். அப்படிப் பார்க்கின்றபொழுது, பிருதிவி அண்டத்தில் அதன் கீழ்ப் பகுதியாகச் சொல்லப்படுகின்ற பாதாள உலகங்களே அவனுக்குத் திருவடியாம். (சிவ தத்துவ உலகமே முடியாதல் முதலடியிற் கூறியதனானே பெறப்பட்டது.) அறியாமையுடையவர்கள் இந்த உண்மையை அறிந்து மகிழ்வெய்தும் நிலையில்லாதவராவர்.

விளக்கவுரை

இதுவும் முன் மந்திரத்தில், 'பெந்த உலகினிற் கீழோர் பெரும்பொருள்' என்றதனை விளக்கியவாறு. 'முத்தண்ட ஈர் அண்டம்' என்றதனை 'மு இரு தண்ட அண்டம்' என மாற்றிக்கொள்க. 'மூ இ' என்பது, 'மூன்றும் இரண்டும்' என உம்மைத் தொகை. 'ஐந்து' என்பது, தத்துவங்களைக் குறித்த தொகைக் குறிப்பு. முடியாவது, பிறவற்றிற்கெல்லாம் மேல் நிற்பது. 'உரு, பெயர், தொழில் ஒன்றும் இல்லாத சிவன் அவைகளை உடையனாய பொழுதும், சுத்த தத்துவத்திலன்றி, ஏனைத் தத்துவங்களில் இருத்தல் இல்லை' என்னும் தத்துவக் கோட்பாடு பற்றி, 'அவன் அத்தத்துவங்கட்குக் கீழ்ப்பட்ட தத்துவ உலகங்கட்கு முதல்வனாதல் எவ்வாறு' என மலைவெய்து வார்க்கு அம்மலையை நீக்குதற்கு இவ்வாறு கூறினார் என்க. 'திரு மேனி கொண்டு விளங்குதல் சுத்த தத்துவத்திலாயினும், எள்ளினுள் எண்ணெய்போல எல்லாப் பொருளிலும் அவன் நிறைந்திருக் கின்றான் ஆதலின், அவன் அனைத்துலகங்கட்கும் முதல்வனாதல் கூடுவதாம்' என விடுத்தவாறு. இந்நிறைவு நிலை பற்றியே அவனை, 'விசுவ ரூபி' என்றும், 'அட்ட மூர்த்தமாய் நிற்பவன்' என்றும் உண்மை நூல்கள் கூறுகின்றன என்க. இதனானே எவ்வுலகத்தார் செய்யும் வழி பாட்டினையும் அவன் ஏற்றுப் பயனளித்தல் கூடுவதாதலையும் அறிக.
தண்டம் - கோல். இஃது ஒரு நீட்டலளவை. சுத்த தத்துவங்கள் ஐந்தின்

அண்டங்களையும் தனித் தனி ஒரு கோல் அளவினதாகக் கூறியது, பொதுப்பட அவையும் அளவுட்பட்டனவே தொகுத்த லாயிற்று. 'உலகேழும் அத்தன் உருவம் எனப்படும்' எனவும், 'அத்தன் சேவடி பாதள அளவுள்ள' எனவும், உணர்ந்து மகிழார் எனவும் மாற்றிக் கொள்க. பாதாள அளவு - பாதாளமாகிய அவ்வளவினதாகிய இடம் 'சேவடியாய் உள்ளது என்க. இத்துவ்விகுதி தொகுக்கப்பட்டது.

ஆதிப் பிரான்நம் பிரான் இவ்வகலிடச்
சோதிப் பிரான்சுடர் மூன்றொளி யாய்நிற்கும்
ஆதிப் பிரான்அண்டத் தப்பும் கீழவன்
ஆதிப் பிரான்நடு வாகிநின் றானே. *#2948*

அனைத்துலகங்களும் ஒடுங்கிய பின்னும் தான் ஒடுங்காது, ஒடுங்கிய உலகம் மீளத் தோன்றுதற்கு முதல்வனாய் உள்ளவன் எவனோ அவனே நமக்குப் பெருமான். அவன், விரிந்த இடத்தையுடைய இந்த உலகத்திற்கு விளக்காய் உள்ள 'கதிர், மதி, தீ' என்னும் மூன்றிற்கும் ஒளியைத் தரும் பேரொளிப் பெருமான்; முன் மந்திரத்திற் கூறியவாறு விசுவ ரூபியாய் நிற்றலேயன்றி, விசுவாதி கனாய், அனைத்துலகங்களையும் கடந்து அவற்றிற்குமேலும், கீழும் இருக்கின்றான். இனி மேற்கூறியவாறு அவற்றினுள்ளும் விசுவ ரூபியாயும் இருக்கின்றான்.

விளக்கவுரை

'அவனது பெருமையை அறிய வல்லார் யார்' என்பது குறிப்பெச்சம். 'ஆதிப் பிரான்' என்பது மீள மீள வந்தது சொற் பொருட் பின்வருநிலையணி. 'ஆதிப் பிரான்' என்று இதனையே மெய்கண்ட தேவர் 'ஆதிப் பிரான்' புலவர்'*1* என்றார். 'அகலிடச் சுடர் மூன்றின் ஒளியாய் நிற்கும் சோதிப் பிரான்' என இயைக்க. 'அப்புறம்' என்பதிலும் 'அப்புறத்தவன்' என்னும் விகுதி தொகுத்த லாயிற்று. சிவன் அண்டத்து அப்புறத்தவனும், கீழவனும் ஆதலை,

'பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்;
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே'
'கீதம் இனிய குயிலே, கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக் கப்பால்;
சோதி மணிமுடி சொல்லின் சொல்லிறந்து நின்ற தொன்மை'*2*
என்னும் திருவாசகத்தால் அறிக.

இதனால், சிவபிரானது நித்தியத் தன்மையும், அளவில் ஆற்றலும் புகழ்ந்து கூறப்பட்டன. 'எல்லாம் ஒடுங்கும் பொழுது ஒருவன் மட்டும் எங்ஙனம் ஒடுங்காது நிற்பான்' என்பனபோலும் ஐயங்கள், 'திருவருள் கிடைக்கப் பெற்றார்க்கன்றி நீங்கா' என்பதை அப்பர்,

'கூவல் ஆமை குரைகடல் ஆமையைக்
கூவலோ டொக்கு மோகடல்? என்றல்போல்,
பாவ காரிகள் பார்ப்பரி தென்பரால்,
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே'3
என அருளிச் செய்தமை காண்க.

அண்டங் கடந்துயர்ந் தோங்கும் பெருமையன்
பிண்டங் கடந்த பிறவிச் சிறுமையன்
கண்டர் கடந்த கனைகழல் காண்டொறும்
தொண்டர்கள் தூய்நெறி தூங்கிநின் றாரே. #2949

அண்டங்கள் அனைத்தையும் கடந்து எல்லையற்று விளங்கும் அகண்டப் பொருளாய் இருப்பினும் பிறவாய் பிறவியாகிய திருமேனிகள் பலவற்றைக் கொண்டு கண்டப் பொருளாயும் விளங்குகின்ற சிவனது, தீயோர் அணுகாத திருவடிகளைக் காணுந் தோறும் அவன் அடியார்கள் சுத்தாவத்தையில் அழுந்துகின்றார்கள்.

விளக்கவுரை

'ஆகவே, யாவரும் அவனது திருவடிகளைக் காணுதல் வேண்டும்' என்பது குறிப்பெச்சம். 'பெருமை, சிறுமை' என்பன 'அகண்டம், கண்டம்' என்னும் பொருளவாய் நின்றன. 'பெருமையன்' என்பதன் பின் 'ஆயினும்' என்பது வருவிக்க. பிண்டம் - தசை. நிணம் முதலிய தாதுக்களின் திரட்சி. எனவே, அது, தாய் தந்தையரது உடற் கூற்றால் தோன்றி வளர்ந்து, பின்னும் உணவால் பெருக்கின்ற புலால் உடம்பைக் குறிக்கும். 'அவ்வா றில்லாத பிறவி' என்றது அருட்டிரு மேனியை. சிவனை, 'பிறவா யாக்கைப் பெரியோன்'1 எனப் பிறருங் கூறினார். அஃதாவது, 'சிவனுக்கு யாக்கை உண்டு; ஆயினும் அது மேற்கூறியவாறு தாய் தந்தையரால் பிறந்து, அவரால் வளர்க்கப்பட்டது அன்று' என்றதால் 'சிறுமை' 'பிறப்பிப்பதுதான் கடவுட்குப் பெருமை' எனக் கூறுவாரை நோக்கி, 'அத்தகைய பெருமையில்லாத சிறுமையன் எங்கள் சிவன்' என நகை தோன்றக் கூறிய, பழிப்பது போலப் புகழ் புலப் படுத்திய வஞ்சப் புகழ்ச்சியாக உரைப்பாரும் உளர். 'சிறுமை யானது' என ஆறாவது விரிக்க. கண்டர் - கண்டகர்; தீயோர். 'இவர்கள் கடந்த கழல்' என்றது 'அணுகாது விலகிச் சென்ற கழல்' என்றதாம். கனை கழல் அடையடுத்த ஆகுபெயர். 'தொண்டர் நடந்த கனைகழல், என்பது பாட மன்று. 'நெறி' என்றது அவத்தையை. சுத்தாவத்தையின் இயல்பு முன் தந்திரத்தில் விளக்கப்பட்டது.

இதனால், சிவன் அகண்டப் பொருளாயினும் உயிர்களின் பொருட்டுக் கண்டப் பொருளாய்த் தோன்றியருளும் அருட்சிறப்புப் புகழ்ந்து

கூறப்பட்டது. 'இதுபற்றி அவன் பிறத்தல் இல்லை' என்னும் உண்மையும் உடன் கூறப்பட்டது.

உலவுசெய் யோக்கப் பெருங்கடல் சூழ்ந்த
நிலமுழு தெல்லாம் நிறைந்தனன் ஈசன்
பலம்முழு தெல்லாம் படைத்தனன் முன்னே
புலம்உழு பொன்னிற மாகிநின் றானே. #2950

சீவன் ஓவாது வீசுகின்ற அலைகளையுடைய கடலால் சூழப்பட்ட இவ்வுலகம் முழுதும் நிறைந்து நிற்கின்றான். நின்று, இதன்கண் உளவாகின்ற அனைத்துப் பயன்களையும் தோற்று -விக்கின்றான். இவையல்லாமலும் உயிர்களின் பட்பொறி சென்று பற்றும்படி பொன்னார் மேனியாய் முன் வந்து காட்சியும் தருகின்றான்.

விளக்கவுரை

'வேறு என்ன வேண்டும்' என்பது குறிப்பெச்சம். உலவு, உலவுதல்; முதனிலைத் தொழிற்பெயர். 'ஓங்கு' என்னும் முதனிலை 'அம்' என்னும் தொழிற்பெயர் விகுதி பெற்று, வலித்தல் பெற்று, 'ஓக்கம்' என வரும். தேங்கு, தேக்கம்; அடங்கு, அடக்கம்; விளங்கு, விளக்கம் முதலியவற்றைக் காண்க. இஃது இங்கு ஆகு பெயராய், ஓங்கியெழுகின்ற அலைகளைக் குறித்தது. இவ்வாறன்றி, 'நோக்கம்' என்னும் பாடத்திற்கு இங்கு இயைபு யாதும் இன்மை அறிக. பலம் - பயன். 'முழுதெல்லாம்' என்பது ஒரு பொருட் பன்மொழி. 'முன்னே' என்பதை, 'நின்றான்' என்பதற்கு முன்னர்க் கூட்டுக. 'புலம்' என்பது பொறியின் மேலதாய், இங்குக் கண்ணைக் குறித்தது. கண் உழுதலாவது, பற்றிக் காணுதல். 'பொன்னிறம்' என்பது பண்பாகு பெயராய், அதனையுடைய திருமேனியைக் குறித்தது. 'சிவன் திருமேனி கொள்ளுங் காலத்தில், பொன்மயமான திருமேனியையே கொள்ள விரும்புகின்றான்' என்பதாம்.

இதனால், சிவனது மற்றும் பல அருட் சிறப்பே புகழ்ந்து கூறப்பட்டன.

பராபர னாகிப்பல் லூழிகள் தோறும்
பராபர னாய்இவ் வகலிடம் தாங்கித்
தராபர னாய்நின்ற தன்மை யுணரார்
நிராபர னாகி நிறைந்துநின் றானே. #2951

சிவன், மேலான பொருள்கட்கெல்லாம் மேலான பெரும்பொருளாய் நிற்பினும் ஊழிகள் தோறும் அவற்றின் தொடக்க மாயும், முடிவாயும் நிற்கின்ற அளவினனும் ஆய், நாம் கண்டும், கேட்டும் உணர்கின்ற அனைத்துலகங்களையும் நிலம் போலத்தாங்கி நிற்கும் தன்மையுடையனாதலை உலகர் உணர்தல் இல்லை. ஆயினும், அவன் அதனால் கீழ்மை ஒன்றும் இலனாய், எல்லாப் பொருள்களிலும்

நிறைந்து அவற்றை இயக்கியே நிற்கின்றான்.

விளக்கவுரை

'சிவன்' என்னும் எழுவாய் அதிகாரத்தால் வந்தது. *'பராபரன்'* இரண்டில் முன்னது, *'பராற்பரன்'* என்பதன் மரூஉ. பின்னது, *'பரனாயும் அபரனாயும் நிற்பவன்'* என்றதாம். பரம் - மேல், அபரம் - கீழ். *'பராபரன்'* என்பதை, *'மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க'1* என்னும் திருவாசகத்திலும் காண்க. இந்த, *'பரம், அபரம்'* என்பன இங்கும், *'அந்தம் கடந்தும்' 2* என்னும் மந்திரத்திற் போலவே, *'முன்,* எனப் பொருள் தந்தன. *'தராபரன்'* என்னும் வட சொல் தொகை மொழி உவமத் தொகை. பரன் - தன்மையுடையவன். *'உணரார்'* என்பதன்பின், *'ஆயினும்'* என்பது வருவிக்க. *'அபரன்'* என்பது முதல் நீண்டு, *'நிர்'* என்பதனோடு புணர்ந்து' *'நிராபரன்'* என வந்து, *'கீழ்மை யில்லாதவன்'* எனப் பொருள் தந்தது.

'தரையை யுணராது தாமே திரிவார்;
புரையை உணரா புவி'3

என்றாற்போல், நிலம் யார் தன்னைப் போற்றினும், போற்றா தொழியினும் தாங்குதலாகிய தன் கடமையை அஃது ஆற்றி வருகின்றது. அதுபோலத்தான் சிவன் தன் செயலைச் செய்து நிற்கின்றான் - என்பதையே *'தராபரனாய் நின்ற தன்மை என்றார்.* இதனையே அப்பர் பெருமான், *'தன்கடன் அடியேனையும் தாங்குதல்'* அஃது யார் போற்றிடினும் நிகழ்ந்து கொண்டே யிருக்கின்றது. ஆயினும், *'என்கடன் பணி செய்து கிடப்பதே'4* என்பதை நான் உணர்ந்தேனா என்னும் ஐயம் எழுகின்றது என்று அருளிச் செய்தார். சிவன் இவ்வகலிடத்தைத் தாங்குதலை நாயனார் சில இடங்களில் நினைவு கூர்கின்றார். அப்பரும் சிவனை, *'பொய்யாத பொழில் ஏழும் தாங்கி நின்ற - கற்றூண்காண்'5* எனக் குறித்தருளினார் உலகனைத்தையும் தாங்கும் சிவனது சத்தி, *'ஆதார சத்தி'* எனச் சிவாகமங்களில் சொல்லப்படுகின்றது. *'நின்றான்'* என்பது, நின்று செய்தலாகிய தன் காரியம் தோன்ற நின்றது.

இதனாலும், சிவனது சில திருவருட் சிறப்புக்களே புகழ்ந்து கூறப்பட்டன.

போற்றும் பெருந்தெய்வம் தானே பிறிதில்லை
ஊற்றமும் ஓசையும் ஓசை ஒடுக்கமும்
வேற்றுடல் தான்என் றதுபெருந் தெய்வம்
காற்றது ஈசன் கலந்துநின் றானே. *#2952*

பொருள்களும், சொற்களும், சொற்கள் ஒடுங்குகின்ற இடமும் தனக்கு வேறாயினும் அவை தனக்கு உடலாய் நிற்க, அவற்றிற்கு உயிராய்

நிற்பது எதுவோ, அது பெருந்தெய்வம். (முதற் கடவுள்.) அத்தகைய பெருந்தெய்வம் சிவனன்றிப் பிறிதில்லை. அஃது எங்ஙனம் எனின், சிவனே எல்லா உயிர்களிடத்தும் அவற்றின் உயிராகிக் கலந்து நின்று அவற்றைப் புரந்து வருகின்றான்.

விளக்கவுரை

ஊற்றம் - பிறிதொன்றைத் தாங்கும் திட்பம். அஃது அதனையுடைய பொருளைக் குறித்தது. சொல் ஒடுங்குமிடம் நாதம். எனவே, 'சொல்லும், பொருளுமாகிய இருவகை உலகங்களும் தனக்கு உடலாகத் தான் அவற்றுக்கு உயிராக் அவற்றைப் புரந்து வருவதே பெருந்தெய்வம்' எனப் பெருந்தெய்வத்தின் இலக்கணம் கூறப்பட்டதாம். 'உடல் நிலை பெறுவது உயிரால்' என்பது வெளிப்படையாதலின், 'இருவகை உலகங்கட்கும் உயிராவது பெருந் தெய்வம் எனவே, 'உயிர்போல அவற்றை நிலைப்பிப்பது பெருந்தெய்வம்' என்றதாயிற்று. 'அந்த இலக்கணத்திற்கு இலக்கியம் சிவபெருமானே' என்பதை நிறுவுதற்கு, 'காற்றது ஈசன் கலந்து நின்றானே' என்றார். சிவன் உயிர்களின் உயிர்ப்பாய் நிற்றலை, நான்காம் தந்திரத் தொடக்கத்தில் அசபா மந்திரத்தால் நாயனார் விளக்கினார். அப்பரும், 'என்னுளே உயிப்பாய்ப் புறம் போந்து புக்கு என்னுளே நிற்கும் இன்னம்ப ரீசனே'6 என்று அருளிச் செய்தார். 'காற்றது' என்பதில் 'அது' பகுதிப் பொருள் விகுதி. 'காற்றதன்கண்' ஏழனுருபு விரிக்க. 'மர வகைகளும் உயிர்க்கின்றன' என இக்கால அறிவியலார் கூறுவர். முதல் அடியை இரண்டாம் அடியின் பின்னர்க் கூட்டி, அதன்பின் 'என்னையெனின்' என்பதும், இறுதியில் 'ஆகலின்' என்பதும் வருவித்து முடிக்க. இடையிலும் 'உடலாக, உயிர்' என வேண்டும் சொற்கள் வருவிக்க. இதனுள், 'ஈசன்' என்றது 'சிவன்' என்றதேயாதல் வெளிப்படை. 'சிவனோ டொக்கும் தெய்வம் தேடினு மில்லை'7 என முதற்கணே கூறினார்.

இதனால், முதற்கண்கூறிய சிவனது முதன்மை வலியுறுத்திப்புகழப்பட்டது.

திகைஅனைத் தும்சிவ னே அவன் ஆகின்
மிகைஅனைத் தும்சொல்ல வேண்டா மனிதரே
புகைஅனைத் தும்புறம் அங்கியிற் கூடும்
முகைஅனைத் தும்எங்கள் ஆதிப் பிரானே. #2953

மனம் உடைமையால், 'மனிதர்' எனப் பெயர் பெற்றவர்களே! (அந்த மனம் திருந்தியதாய் இல்லையே.) ('மனிதர்காள்! இங்கே வம்மொன்று சொல்லுகேன்'1 என்பதிலும் இக்குறிப்பு உள்ளது.) உலகனைத்தும் சிவமயமே. அனைத்தும் அவனானபின்பு சொல்ல வேண்டியது

என்ன இருக்கின்றது? ஆகவே, வீண் வாதங்களைக் கிளப்ப வேண்டா. ஏனெனில், சில இடங்களில் வெளியே காணப்படுகின்ற புகை உள்ளே மறைந்திருக்கின்ற நெருப்பினின்றும் வந்ததுதான். பின்பு அஃது அடங்குவதும் நெருப்பில்தான் அது போலத் -தான் காணப்படுகின்ற பொருள்கள் அனைத்தும் சிவனிடத்திலிருந்து வந்தவைதாம். ஆகவே, அவை ஒடுங்குவதும் அவனிடத்தில்தான்.

விளக்கவுரை

இவ்வாறு கூறுவன ஆணை மொழிகளாம். அஃதாவது உபதேச மொழிகளாம். ஆசிரியர் மாணாக்கனை 'இவ்வாறு நில்' என்றால் மாணாக்கன் அவ்வாறு நிற்க வேண்டியவனே தவிர, 'ஏன், ஐயா, இவ்வாறு நிற்கச் சொல்கின்றீர்' என வினாவுதற்கு உரியன் அல்லன். அத்தகையவான மொழிகள் ஆணை மொழிகளாம். 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த'*2* எனத் தொல்காப்பியர் கூறியதும் இவ்வாறான மொழிகளை நோக்கியே. இவ்வாறான நல்லாசிரியரை, தொல்லாணை நல்லாசிரியர்'*3* எனச் சங்க இலக்கியங்கள் கூறும். ஞானசம்பந்தரது பாடல்களில் பல இத்தகையினவாய் இருத்தல் காணலாம். 'புறம்' என்பதற்கு, 'புறத்து உள்ளன' எனவும் 'பின் அங்கியிற் கூடும்' எனவும் உரைக்க. இஃது எடுத்துக் காட்டுவமை. முகை - அரும்பு. அரும்புதல் தோன்றுதல் ஆகலின் அது தோன்றிய பொருள்களைக் குறித்தது. ஆதிப் பிரான் - ஆதி சத்தியை உடைய கடவுள். 'எல்லாம் சிவன் என்ன நின்றாய் போர்றி'*4* என்ற அப்பர் திருமொழியை, 'திகை அனைத்தும் சிவம்' என்பதனோடு ஒப்பிட்டுக் காண்க.

இதனால், சிவன் எல்லாப் பொருளுமாய் நிற்கும் பெருமை புகழ்ந்து கூறப்பட்டது.

அகன்றான் அகலிடம் ஏழும்ஒன் றாகி
இவன் 'தான்' எனநின்(று) எளியனும் அல்லன்
சிவன்றான் பலபல சீவனு மாகி
நவின்றா உலகுறு நம்பனு மாமே. *#2954*

சிவன், ஏழுலகங்களும் ஒன்றாக ஓர் உருவாய்க் கலந்து, அப்பொழுதே தான் அவற்றுள் ஒன்றும் ஆகாது தனியனாய் நிற்பினும், தனிமையானோர் பலர் பிறர்க்கு எளியராதல்போல எளியனல்லன்; அரியனே, இனி இவன் அளவற்ற உயிர்களோடு அவையேயாய்க் கலந்து அவற்றின் செயல்களில் எல்லாம் தானும் உடன் பயின்று, அனைத்துயிர்கட்கும் ஆத்தனும் ஆகின்றான்.

விளக்கவுரை

செய்யுளாகலின், 'இவன்' என்னும் சுட்டுப் பெயர் முன் வந்தது. 'தான் என நின்றும் எளிய னல்லன்' என உம்மையை மாற்றிவைத் துரைக்க. நவிலுதல் - பயிலுதல். நம்பன் - நம்பத் தக்கவன். இதுவே வடமொழியில் 'ஆத்தன்' எனப்படுகின்றது. இதனுள் சிவன் எல்லாப் பொருளிலும் ஒன்றாய்' வேறாய் உடனாய் நின்று உயிர்கட்கு உறுதுணையாதல் கூறல் பட்டவாறு அறிக. இரு பொருள் ஒன்றாய், வேறாய், உடனாய் இயைந்து நிற்பதொரு சம்பந்த விசேடமே சைவ சித்தாந்தத்துள் கூறப்படும் சுத்தாத்துவிதம் ஆதலை நினைக. சிவன் இவ்வத்துவிதப் பொருளாம் முறைமை இங்குப் புகழ்ந்து கூறப்பட்டது. இம்மந்திரம் பதிப்புக்களில் இரண்டாம் தந்திரத்தில் 'அனுக்கிரகம்' என்னும் அதிகாரத்திலும் காண்பபடுகின்றது.

கலையொரு மூன்றும் கடந்தப்பால் நின்ற
தலைவனை நாடுமின் தத்துவ நாதன்
விலையில்லை விண்ணவ ரோடும் உரைப்ப
உரையில்லை உள்ளூறும் உள்அவன் தானே. *#2955*

நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகளில் முதல் மூன்றைக் கடந்து, மேலேயுள்ள 'சாந்தி, சாந்தியதீதை' என்னும் கலைகளில் விளங்குவோனாய் உள்ளவன் சிவனேயன்றிப் பிறரல்லர். (பிறர் எல்லாரும் மேற்கூறிய மூன்று கலைக்குள் இருப்பவரே' என்றபடி.) ஆகவே அவனே யாவர்க்கும் தலைவன் எல்லாத் தத்துவங் கட்கும் முதல்வன். உயிர்கட்கெல்லாம் உயிராய் அவைகளின் அறிவினுள் உள்ளவனும் அவனே. ஆதலின், ஏனைத் தேவர்களோடு அவனையும் ஒப்ப வைத்துக் கூறும் கூற்றுக்கே இடமில்லை. இனி அவன், எவராயினும் தம்மை அவனுக்குக் கொடுத்துப் பெறத் தக்கவனேயன்றி, வேறு பொன், பொருள் முதலியவற்றைப் பண்ட மாற்றாகக் கொடுத்துப் பெறத்தக்கவன் அல்லன். இவற்றையெல்லாம் அறிந்து அவனை நினைமின்கள்.

விளக்கவுரை

'கலையொரு மூன்று' என்பவற்றை 'இடைகலை, பிங்கலை, சுழுமுனை' எனவும், 'தந்திர கலை, மந்திர கலை, உபதேச கலை' எனவும், 'அருள் நூலும், ஆரணமும் அல்லாதும்'*1* எனவும் உரைப்பாரும் உளர், சிவனை ஏனை விண்ணவரின் வேறு வைத்துக் கூறுதற்குக் காரணம் கூறுகின்றார் ஆகலின், அவற்றிற்கு இங்கு இயைபின்மையறிக. சிவனை 'பரம்பொருள்' எனக் கொள்பவர் தவிர ஏனையோரெல்லாம் போக்கிய காண்ட தத்துவங்கட்குமேல் (ஆன்ம தத்துவங்கட்குமேல்) உள்ள தத்துவங்களையும், போசயித்திரு காண்ட தத்துவங்கட்குமேல் (வித்தியா தத்துவங்கட்குமேல்) உள்ள

தத்துவங்களையும் உணராமையால் அவரால் கொள்ளப்படும் கடவுளர்கள் யாவரும் 'நிவிர்த்தி பிரதிட்டை, வித்தை' என்னும் மூன்று கலைகட்குள்ளே நிற்பவராவர். ஆன்ம தத்துவங்களில் கீழ் உள்ளதாகிய பிருதிவி தத்துவத்தளவில் நிற்பவன் பிரமதேவன். ஆகவே இந்திரன் முதலிய பலரும் அவனுக்குக் கீழ்நிற்போரேயாவர். அவரெல்லாம் நிவிர்த்திக் கலைக்கு உட்பட்டவர்கள்.
பிருதிவிக்குமேல் பிரகிருதியானவும் சென்று நிற்பவன் மாயோன். ஆகவே, அவனும், அவனைச் சார்ந்த அதிகாரிகளும், அடியவர்களும் எல்லாம் பிரதிட்டா கலைக்கு உட்பட்டவர்கள். ஆயினும் பௌத்தரும், சமணரும் 'உயிரும், வினையும் உண்டு' என நம்புபவர்கள். வினை, புத்தி தத்துவத்தையே பற்றிக் கிடத்தலாலும் அவர்கள் 'அறிவு, அல்லது, உயிர்' என்பன எல்லாம் புத்தி தத்துவத்தையேயாகலானும் அவர்கள் புத்தி த்ததுவத்தளவில் செல்லுதற்கு உரியர். 'புத்தி தத்துவம் பிரதிட்டா கலைக்கு உட்பட்டது' என்பது மேலே பெறப்பட்டது.
புறச் சமயிகளில் மீமாஞ்சகரும், சாங்கியரும் கடவுட் கொள்கை இல்லாதவர்கள். ஆயினும் உயிரும், அதற்குக் கருவியாகிய உடம்பு முதலியனவும், வினையும் உள்ளன' என நம்புபவர்கள். அவருள் சாங்கியர் கூறும் தத்துவமே மீமாஞ்சகர், ஏகான்ம வாதிகள் ஆகியோருக்கும் ஆகையால் அவரெல்லாம் பிரகிருதிக்குமேல் உள்ள புருட தத்துவத்தளவில் செல்லுதற்குரியர். புருட தத்துவம் வித்தியா கலையின் கீழ் எல்லையாகலின், இவர்களை பிரதிட்டாகலைக்குள் நிற்பவர்களாகவே கருதலாம். இவருள் ஏகான்ம வாதிகள் 'கடவுள் இல்லை' எனக் கூறாவிடினும் 'கடவுள் வியாவகாரிக சத்தைய வதன்றிப் பார மார்த்திக சத்தை அன்று' எனவும், 'பாமார்த்திகப் பொருள் பரப்பிரம்பம்; அது நாமேயன்றி வேறில்லை' எனக் கூறுதலால் அவர்கட்கு எல்லையும் புருட தத்துவமே யாகின்றது.
அகப்புறச் சமயிகளாகிய பாசுபதர், மாவிரதர், காபாலிகர் வைரவ மதத்தினர் முதலியோர், 'சிவன், சிவன்' எனக் கூறினாலும், அவர் கருதுவன எல்லாம் உருத்திர வகையினரையே. வாம மதத்தவர் 'சத்தி' என்பதும் உருத்திராணிகளில் ஒருத்தியையே. சுத்த சாத்த மதத்தினர் இவரின் வேறுபட்டவர்கள். அவர்கள் அகச் சமயிகளுள் வைத்து எண்ணத் தக்கவர்கள். ஆகவே அகப்புறச் சமயிகளது கடவுளரும் வித்தியா கலைக்கு உட்பட்டவர்களே.
அகச் சமயிகளாகிய பாடாண வாத சைவர் முதலியோர் 'இலய சிவன், போக சிவன், அதிகார சிவன்' எனப் பகுதிப்பட்டு, முறையே உருவம், அருவுருவம், அருவம் என்னும் திருமேனிகளைத் தாங்கித் தூல, சூக்கும, அதிசூக்கும ஐந்தொழில்களைச் செய்யும் தடத்த

சிவபேதங்களுள் ஒரோ ஒருவனையே பரம சிவனாகக் கொள்வர். அதனால் அவர்களது கடவுளர், வித்தியா கலைக்கு மேல் உள்ள சாந்தி, சாந்தியதீதை கலையில் உள்ளவராவர். இம்மந்திரத்தில் ஐந்தொழில் இயற்றுதல் இன்றிச் சித்தாந்த சைவர்க்கே உரியவனாய்த் தன்னளவில் நிற்கும் சொரூப சிவனைக் கூறாமல், ஐந்தொழில் இயற்றி, 'பதி' எனப் பெயர்பெற்றுத் தலைவனாய் அகச் சமயத்தார்க்கு உரிய தடத்த சிவனையே கூறினார் ஆதலின், 'கலை ஐந்தும் கடந்து' என்னாது, 'கலையொரு மூன்றும் கடந்து அப்பால் நின்ற தலைவன்' என்றார். ஒரு பொருளைப் பெறுதற்கு அதற்கு நிகரான மற்றொரு பொருளைக் கொடுக்குமிடத்து, அவ்வாறு கொடுக்கப்படும் பொருளே 'விலை' எனப்படுவதல்லது, தன்னையே தான் கொடுப்பது விலை யெனப்படாது, ஏனெனில் விலையைக் கொடுப்பவன் பின்பு அவ் வலைக்கீடாகத் தான் வாங்கும் பொருளைப் பின் சுதந்திரமாய் நின்று அனுபவித்தற்கு உரியன். தன்னையே கொடுத்தவன் தன்னை வாங்கி - னவனுக்கு அடிமையேயல்லது, சுதந்திரமிலன். இவ்வகையில் உயிர்கள் தம்மையே கொடுத்துப் பெறத் தக்கவன் சிவன் ஆதலின், 'அவனுக்கு விலையில்லை' என்றார். 'உள்ளுறும் உள்' என்றதில் பின்னுள்ள 'உள்' என்பது ஆகுபெயராய், அவ்விடத்துள்ள பொருளைக் குறித்தது. உம்மை சிறப்பும்மை. இதனால் பிறரோடு ஒப்ப வைத்துக் கூறுதல் கூடாமை சொல்லவேண்டாவாயிற்று. 'விண்ணவரோடும் ஒப்பித்து உரைப்ப' என ஒரு சொல் வருவிக்க. உரைப்ப உரை. உரைக்கப்படுவன -வாகிய உரைகள். ஈற்றடி இன எதுகை பெற்றது. இதனால், சிவனது முதன்மை தத்துவங்களில் வைத்து இனிது விளங்கக் கூறிய புகழ்ந்துரைக்கப்பட்டது.

படிகாற் பிரமன்செய் பாசம் அறுத்து
நெடியோன் குறுமைசெய் நேசம் அறுத்து
செடியார் தவ்ததினில் செய்தொழில் நீக்கி
அடியேனை உய்யவைத்(து) அன்புகொண் டானே. *#2956*

மேற்கூறிய தலைவன், மேற்கூறிய கலைகளும் கீழதாகிய நிவிர்த்தி கலையில் இருக்கும் பிரம தேவன் செய்கின்ற படைத்தலையும் நீக்கி, அவனுக்குமேல் இருபத்து மூன்று தத்துவங் -கட்குத் தலைவன் ஆதலின், 'நெடியோன்' எனப்படுகின்ற மாயோன் செய்கின்ற சின்னாள் நிலைப்பதாகிய காத்தலையும் நீக்கி, அவனுக்கு மேல் உள்ள உருத்திரன் அறியாமையிற்படுத்துத் துன்பக்கிடையில் கிடத்துகின்ற அழித்தலையும் நீக்கி அடியேனை உய்ய வைத்து, என்மீது அருள்மிக உடையன் ஆயினான்.

விளக்கவுரை

'அவனது பெருமை அத்தகையது' என்பது குறிப் பெச்சம். கால் - அடிநிலை. இதனை, 'கடைக்கால்' என்பர். பாசம், பிணிப்பது. 'பிரமன் செய் குறுமை நேசம்' என மொழி மாற்றுக் கொள்க. நேசம் - கருணை. கருணையால் செய்யப்படுவதனை, 'கருணை' என உபசரித்துக் கூறினார். முத்தொழில்களுள் காத்தல் தொழிலையே கருணைத் தொழிலாக மக்கள் கருதுதல் பற்றி அதனை, 'குறுமை நேசம்' - என நகையாடிக் கூறினார். செடி - கீழ்மை. அஃது இங்கு அறியாமையைக் குறித்தது. ஊழியை முடிப்பவன் உருத்திரன். அது முடிந்தபொழுது கருவிகளுள் யாதும் இன்மையால், உயிர்கள் ஆணவத்துள் அழுந்தி, யாதும் அறியாது கிடக்கும் சிலவகைக் கேவலங்களுள் இது 'சகல கேவலம்' எனப்படும். 'தவம்' என்பது, 'தாபம் - வெப்பம்' என்பதினின்றே வருதலால் இக்கேவல நிலையையும் 'தவம்' என்கின்றவர் 'செடியார் தவம்' என வேறு படுத்திக் கூறினார். 'சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம் - சுடச்சுட நோற்கிற் பவர்க்கு'*1* என்னும் திருக்குறளும் 'தவம்' என்னும் சொல்லியல்பை விளக்குவதாய் உள்ளது. இவ்வாற்றால் அழித்தலைக் குறிக்கவே, அதனைச் செய்வோனை எடுத்தோதல் வேண்டா வாயிற்று. இங்கு, செய்தல், சேர்த்தலாம். முத்தியாவது விடுதலை யாகலின், 'அவ்விடுதலை யாது' என்பார்க்கு, 'படைத்தல் முதலிய தொழில்களைச் செய்யும் காரணக் கடவுளர்களது செயல்களினின்றும் விடுபடும் விடுதலை' என்பதே விடையாகக் கூறப்படுகின்றது. அதனையே நாயனார் இம்மந்திரத்தில் இவ்வாற்றாற் கூறினார். இதனால், முன் மந்திரத்தில் 'நாடுமின்' எனக் கூறிய அத் தலைவன் உயிர்களிடத்துக் கொண்டுள்ள அருள்நிலை புகழ்ந்து கூறப்பட்டது.

ஈசன்என் றெட்டுத் திசையும் இயங்கின
ஓசையி னின்றெழு சத்தம் உலப்பிலி
தோசம் ஒன்*(று)* ஆங்கே செழுங்கண்டம் ஒன்பதும்
வாச மலர்போல் மருவிநின் றானே. *#2957*

சிவன், 'நாதம்' எனப்படும் சூக்குமை வாக்கினின்றும் தோன்றிய அனைத்து மொழிகளுமாகிய சொற் பிர பஞ்சத்திலும் நீங்காது நிறைந்து நிற்கின்றான். 'தேசம், என்று சொல்லப் படும் பூமி ஒன்றுதான் ஆயினும் அஃது ஒன்பது கண்டங்களாகப் பிரிந்து நிற்கின்றது. அப் பிரிவுகளாகிய பொருட் பிரபஞ்சத்திலும் அவன் மலரில் மணம்போல் மருவி நிற்கின்றான். அதனால் அனைத்துலகங்களும், சிவனாகிய முதலையே முதலாகக் கொண்டு இயங்குகின்றன.

விளக்கவுரை

'ஆகலான் அவனைத் தோத்திரித்தல் உயிர்கட்குக் கடன்' என்பது குறிப்பெச்சம். இரண்டாம் அடி முதலாகத் தொடங்கி யுரைக்க. 'சத்தத்தும்' என அத்தும், உம்மையும் விரிக்க. 'இமயம், குமரி இவற்றின் இடைப்பட்ட நிலம், 'பாரத வருடம்' என ஒன்றாகவும், அதுதானே குமரி முதலிய ஒன்பது கண்டங்களாகவும் சொல்லப்பட்டது' என்பதைச் சிவஞான மாபாடியத்து இரண்டாம் சூத்திரத்து, மூன்றாம் அதிகரணப் பகுதியில் காண்க. 'அனைத் துலகங்களும்' என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகப் பாரத வருடம் முழுவதையும் கூறினார். 'வாச மரல்போல்' என்பதை, 'மலர் வாசம் போல்' என மாற்றியுரைக்க. ஈசன் - சிவன். 'சிவன் என்று' என்றது, 'சிவனே முதல் என்று கொண்டு' எனக் கூறியவாறு. இங்ஙனம் கூறியதனால், 'உலப்பிலி' எனவும், 'மருவி நின்றான்' எனவும் போந்த பயனிலைகட்கு, 'சிவன்' என்பதே எழுவாயாயிற்று.
இதனால், சிவன் தோத்திரிக்கப்படும் பொருளாதல் காரணங் கூறி விளக்கப்பட்டது.

இல்லனு மல்லன் உளனல்லன் எம்மிறை
கல்லது நெஞ்சம் பிளந்திடுங் காட்சியன்
தொல்லையன் தூயன் துளக்கிலன் தூய்மணி
சொல்லருஞ் சோதி தொடர்ந்துநின் றானே. *#2958*

எங்கள் சிவபெருமான், உலகர் எத்தனை கூறினாலும், அவனை உணர்ந்தோர். 'என் புந்தி வட்டத்திடைப் புக்கு நின்றானையும் பொய்யென்பனோ'*1* எனவும், 'ஏதுக்களாலும், எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா; சுடர்விட்டுளன் எங்கள் சோதி'*2* எனவும் உறுதிப்பட உரைத்தலால், இல்லாதவனும் அல்லன். அவர் எத்தனை சொல்லினும் உலகர், 'காணாதான் கண்டானாம் தான் கண்டவாறு'*3* என்றபடி. தாம் கூறுவதையே கூறி, 'சிவன் இல்லை' எனப் பிணங்குதலின், உள்ளவனும் அல்லன். 'இல்லை' என்பவரது கல் போன்ற நெஞ்சங்களிலும் ஒரு காலத்தில் அந்நெஞ்சைப் பிளந்து கொண்டு வெளித்தோன்றுவான்; ஏனெனில், அவன் பழமையாகவே எங்கும் இருப்பவன்; இயல்பிலே மாசற்றவன் ஆதலின் மாசிலாமணிபோல ஒளிவிடுந் தன்மையன்; தோன்றியபின் தோன்றிய இடத்தினின்றும் பெயர்தல் இல்லாதவன்; சொல்லைக் கடந்த அறிவு வடிவினன். என்றாலும் அனைத்துயிர்களையும் தொடர்ந்து நிற்கின்றான்.

விளக்கவுரை

'உண்மையுமாய், இன்மையுமாய்'*4* என்னும் திருவாசகத்தையும் காண்க. 'உளதன் றிலதன்று'*5* எனப் பிற்காலத்தவரும் கூறினார்.

'தூய்மணி' என்பதை, 'தூயவன்' என்பதன் பின்னர்க் கூட்டி, 'தூயன் ஆகலின் தூய்மணிபோல்பவன்' என ஒரு சொல் வருவித்துரைக்க. இதனால், சிவனது பெருமைகளே புகழ்ந்து கூறப்பட்டன.

மாறெதிர் வானவர் தானவர் நாடொறும்
கூறுதல் செய்து குரைகழல் நாடுவர்
ஊறுவார் உள்ளத் தகத்தும் புறத்தும்
வேறுசெய் தாங்கே விளக்கொளி யாமே. *#2959*

எப்பொழுதும் பகையாய் ஒருவரை ஒருவர் எதிர்ப்பவராகிய தேவரும், அசுரரும் தாம் தாம் தனித் தனியே வந்து நாள்தோறும் சிவபெருமானைத் துதித்து அவன் திருவடியை நினைப்பர். துதிப்பவர்க்கு அருளும் முறையில் அவர் வேண்டிய வற்றை அவர்க்கு அவன் அளித்து நிற்பான். (அவற்றால் விளையும் விளைவுகட்கு அவன் பொறுப்பாதல் இல்லை. மனிதருள்ளும் இத்தகையோர் உளர். அவர்களிடத்தும் சிவபெருமான் அத்தகையோ -னாகியே நிற்பன். ஆயினும், உள்ளத்தில் அன்பு மிகத் துதிக்கின்ற வர்களுக்கு அவன் அகமாகிய உயிரைப் பற்றியும், புறமாகிய பொருள், சுற்றம் பற்றியும் அவர் வேண்டுவனவற்றை வேண்டிய வாறே தாராது, ஆவனவற்றைத் தந்து, ஆகாதனவற்றை விலக்கி, அவர்களது அறிவையும் திருத்துவான்.

விளக்கவுரை

இதனை அப்பர் பெருமான் கயிலையை அடைய முயன்று அணுகியும் அடையச் செய்யாது மீள்வித்தமையும், வாதவூரடிகள் ஏனையடியார் போலத் தம்மையும் உடனழைத்துச் செல்ல வேண்டியும் அழையாது இருத்தினமையும் போல்வனவற்றால் உணரலாம்.
'வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்; மனம் நின்பால் தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மை எல்லாம்தொழ வேண்டி'*1* என்னும் திருவாசகத்தை இங்கு நினைவு கூர்க. 'மாறாய் எதிர்' என ஆக்கம் வருவிக்க. 'உள்ளத் ஊறுவார்' என மாற்றியுரைக்க. 'அகம், புறம்' என்பன முதற்கண் அவ்விடத்துப் பொருள்களைக் குறித்துப் பின் அவை பற்றிய பற்றுக்களைக் குறித்தன. 'அப்பற்றுக்களில் அவர் வேண்டியவாறன்றி வேறு செய்தும்' என்க. 'செய்தும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. 'விளக்கொளியாதல் அறிவிற்கு' என்க. ஊறுவார் உள்ளத்திற்கு அருளும் முறை கூறியதனால், அவரின் வேறானவர்க்கு அருளும் முறை பெறப்பட்டது.
இதனால், சிவன் தன் அடியார்க்குச் சிறந்த வகையில் அருள்புரிதல் புகழ்ந்து கூறப்பட்டது.

விண்ணினுள் வந்த வெளியினன் மேனியன்

கண்ணினுள் வந்த புலனல்லன் காட்சியன்
பண்ணினுள் வந்த பயனல்லன் பான்மையன்
எண்ணில்ஆ னந்தமும் எங்கள் பிரானே. #2960

எங்கள் சிவபெருமான், ஆகாயத்திற்கு உள்ள அருவத்தன்மையன், ஆயினும் உருவம் உடையவனே. கண்ணாற் காணப்படும் பொருளல்லன். ஆயினும் கண்ணாற் காணப்படுபவனே. ஒன்றை ஆக்கும் செயலின் பலனாய்த் தோன்றுவது பலத் தோன்றியவன் அல்லன்; ஆயினும் அத்தன்மை உடையவனே. ஆகவே அவன் எல்லையுட்படாத இன்பமும் ஆவான்.

விளக்கவுரை

முதல் மூன்று அடிகளிலும் முன்னர்ச் சிவனது சொரூபத் தன்மையும், பின்னர்த் தடத்தத் தன்மையும் கூறப்பட்டன. 'தடத்தத் தன்மையால் அளவுபட்ட இன்பத்தையும் தருவன்' என்றபடி. பண் - பண்ணுதல்; முதனிலைத் தொழிற்பெயர். 'எண்' இங்கு அளவைக் குறித்தது. உம்மையால் எண்ணுடை ஆனந்தமும் பெறப்பட்டது. ஆனந்தம் இரண்டில் எண்ணில் ஆனந்தம் அவனே. எண்ணுடை ஆனந்தத்தைத் தருதல் பற்றி அதனையும் அவனேயாக உபசரித்தார். இதன்கண் பாடங்கள் வேறுபட்டன.

உத்தமன் எங்கும் முகக்கும் பெருங்கடல்
நித்திலச் சோதியன் நீலக் கருமையன்
எத்தனைக் காலமும் எண்ணுவர் ஈசனைச்
சித்தர் அமரர்கள் தேர்ந்தறி யாரே. #2961

சிவன் ஏனை யாவரினும் மேலானவன்; எந்த இடத்திலும் முகந்துகொள்ளக் கூடிய பேரானந்தப் பெருங்கடலாய் உள்ளவன்; முத்துப்போலும் வெண்மை நிறம் உடையவன். அப்பொழுதே நீலமணிபோலும் கருமை நிறத்தையும் உடையவன். அத்தகையோனைச் சித்தர்களும், தேவர்களும் எத்துணையோ காலமாக பொதுவாக எண்ணுகின்றார்கள். ஆயினும் இன்னும் உண்மையாக அறிந்திலர்.

விளக்கவுரை

சிவபெருமான், 'பொங்கழல் உருவன்'1 ஆயினும் பளிங்குபோன்றவன் என்பதை, 'தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே'2 என்பதனான் அறிக. வெண்ணிறம் அப்பன், கருநிறம் அம்மை. 'எவரும் தாம் தாம் இடத்தில் இருந்தே முகந்து கொள்ளக் கூடியகடல் எதுவும் இன்மையால் சிவன் அத்தகைய கடலாய் இருத்தலாலும், ஒருபாதி உடம்பு ஒரு நிறமும், மற்றொரு பாதி உடம்பு வேறொரு நிறமும்

உள்ளார் எவரும் இன்மையால் சிவன் அத்தகைய உருவம் உடையவனாக இருத்தலாலும் இந்த அதிசயங்களைச் சித்தரும், அமரரும் எண்ணி வியக்கின்றார்களேயன்றி, 'எவ்வாற்றால் இவன் இப்படியிருக்கின்றான்' அறிந்தாரில்லை' என்பதாம். 'ஓருடம் பிருவாரகி'3 என வேறிடத்தும் வியந்தோதுதல் காணத்தக்கது. 'ஈசன்' எனப்பின் வருவதனை வைத்து, அவ்விடத்தில், 'அவனை' எனச் சுட்டியுரைக்க.
இதனால், சிவனது, யாவராலும் அறுதியிட்டறியப்படாத அதிசயத் தன்மை புகழ்ந்து கூறப்பட்டது.

நிறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் ஈசன்
அறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் இன்பம்
மறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் பாவம்
புறம்பல காணினும் போற்றகி லாரே. #2962

உயிர்களுக்குச் சிவனது அறக்கருணை எந்த அள வினதாகக் கிடைக்கின்றதோ அந்த அளவினதாக வீட்டின்பம் உள தாகும். அவனது மறக்கருணை எந்த அளவினதாகக் கிடைக்கின்றதோ அந்த அளவினதாகப் பிறவித் துன்பம் உளதாகும். இவையறிந்து, உலகில் எத்தனை வண்ணங்களும், வடிவங்களும் உள்ளனவோ அத்தனை வண்ணங்களுடனும், வடிவங்களுடனும் சிவன் உலகில் விளங்குதலைக் கண்டும் மக்கள் அவனைத் துதிக்க மாட்டா தவர்களாய் உள்ளனர்.

விளக்கவுரை

முதலடியை இரண்டாம் அடிக்குப் பின்னர்க் கூட்டி யுரைக்க. 'அவ்வண்ணம் ஈசன்' என்பதில் 'வண்ணம்' என்று ஆகு பெயராய், 'வண்ணத்தன்' எனப்பொருள் தந்தது. வண்ணம் கூறவே, வடிவமும் பெறப்பட்டது. யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வமாகி யாங்கே - மாதொரு பாகனார்தாம் வருவர்'1 என்பது சித்தாந்தமாகலின் தெய்வத் திருவுருவங்கள் எல்லாம் சிவன் வடிவே யாதல் பற்றி, 'எல்லா வண்ணங்களுடனும், வடிவங்களுடனும் சிவன் உலகில் விளங்குகின்றான் என்றார். 'சிவன்' என்னும் வண்ணம் இன்றியே தெய்வங்களை வழிபடினும் அவ்வழிபாடு பின்பு சிவ நெறியிற் சேர்த்தல் பற்றி, 'போற்றகிலாரே' என்றார். புறச்சமய நெறி நின்றும் அகச் சமயம் புக்கும் ... ... சென்றால் சைவத் திறத்தடைவர்' என்னும் சிவஞான சித்தியால் பிற தெய்வ வழிபாடுகள் சிவநெறி அடைதற்கு வழியாதல் விளங்கும் 'ஈசன்' என்றதன் சார்பால் 'அறம், மறம்' என்பன அத்தன்மையவான அவனது கருணை வகைகளைக் குறித்தன. அறக்கருணை அருட் சத்தியும், மறக்கருணை திரோதான

சத்தியும் ஆகும். பவம் - பிறப்பு. அது, 'பாவம்' என நீட்டப்பெற்றது. 'இன்பம், பவம்' என்பன ஒன்றால் ஒன்று விளங்க வைத்தன ஆதலின், பவத்துன்பம், வீட்டின்பம்' என உரைத்துக் கொள்க. 'புறம் பல' என்பதில் பல, பல தெய்வ வடிவங்கள்.

இதனால், 'மக்கள் எவ்வளவாயினும் தோத்திரம் செய்தல் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

'எப்பரி சாயினும் ஏத்துமின்; ஏத்தினால்,
அப்பரிசு ஈசன் அருள்பெற லாமே'*1*

என முன்னருங் கூறினார்.

இங்குநின் றான் அங்கு நின்றனன் எங்குளன்
பொங்கிநின் றான் புவ னாபதி புண்ணியன்
கங்குல்நின் றான்கதிர் மாமதி ஞாயிறாய்
எங்கும்நின் றான்மழை போல்இறை தானே. *#2963*

சிவன் இங்கிருக்கின்றான்; அங்கிருக்கின்றான்; எங்கும் இருக்கின்றான். எல்லாப் பொருள்கட்கும் மேலே யிருக்கின்றான்; உலகிற்குத் தலைவன்; அற வடிவினன்; இரவில் தண்கதிர் மதியாய் நிற்கின்றான்; பகலில வெங்கதிர் ஞாயிறாய் நிற்கின்றான்; மேகத்தைப்போலக் கைம்மாறு கருதாது எவ்வுயிர் கட்கும் தனது அருளைப் பொழிகின்றான்.

விளக்கவுரை

'அத்தகையோனை மக்களுயிர்கள் தோத்திரிக்க வேண்டாவோ' என்பது குறிப்பெச்சம். 'இங்கு, அங்கு' என்பன இவ்வுலகத்தையும், பிற உலகங்களையும் குறித்தன. 'எங்கும் உளன்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. இது முடிந்தது முடித்தல். பொங்குதல் - மேல் எழுதல். உலகங்களை, 'புவனா' எனப் பெண்பாலாகக் கூறினார். 'கங்குலில் கதிர் மதியாய் நின்றான்' என மாற்றி ஆக்கம் வருவித்துரைக்க. இதனானே 'ஞாயிறாய்' என்பதில், 'பகலில் நின்றான்' என்க. 'இறைதான்' என்பதில் 'தான்' எழுவாய்ப் பொருள்படவந்த அசை நிலை.

இதனால், மக்கட்குச் சிவனைத் தோத்திரித்தல் கடமையாதல் கூறப்பட்டது.

உணர்வது வாயுமே உத்தம மாயும்
உணர்வது நுண்ணற(வு) எம்பெரு மானைப்
புணர்வது வாயும் புல்லிய தாயும்
உணர்வுடல் அண்டமும் ஆகிநின் றானே. *#2964*

எங்கள் பெருமானாகிய சிவன், சார்ந்ததன் வண்ண மாவதும், ஒருகாலத்து ஒன்றனை மட்டுமே உணர்தலின் சிறிதாயும் உள்ள

அறிவினையுடைய உயிர்களாயும் அவ்வுயிர்கட்கு நிலைக் களமாகிய உடல்களாயும் அவ்வுடல்களுக்கு இடமாகிய அண்டங் களாயும் உள்ளான். அவனை, உயிர்களின் அறிவுக்கறிவாகவும், உயிர்க்குணங்கலின் மாறுபட்ட குணங்களையுடையவனாகவும் உணரும் அறிவே நுண்ணறிவாகும்.

விளக்கவுரை

'புணர்வது' என்பது 'அழுந்துவது' என்னும் பொருட்டு. 'புணர்வதாயும், புல்லிதாயும் உள்ள உணர்வு' என்க. 'எம்பெருமான்' என எடுத்துக்கொண்டு, மூன்றாம் அடி முதலாகத் தொடங்கியுரைக்க. 'உணர்வு, உடல்' என்பவற்றிலும் உள்ள எண்ணும்மைகள் தொகுக்கப்பட்டன. 'எம்பெருமானை' என்பதை 'அவனை' என்றவாறாகக் கொள்க. முதற்கண் உள்ள, 'உணர்வது' என்பதில் அது, பகுதிப் பொருள் விகுதி. முதலடியில் உள்ள, 'ஆயும்' என்றவற்றை, 'ஆகவும்' எனத் திரிக்க. ஏகாரங்கள் அசை.
இதனால், மக்கட்குச் சிவனைத் தோத்திரித்தல் கடமையாதல் கூறப்பட்டது.

தன்வலி யால்உல கேழும் தரித்தவன்
தன்வலி யாலே அணுவினுந் தான்நொய்யன்
தன்வலி யால்மலை எட்டினும் சார்பவன்
தன்வலி யாலே தடங்கட லாமே. *#2965*

சிவன் தனது ஆற்றலால் தானே உலகத்தை யெல்லாம் தாங்குகின்றான்; அதனால் அவன் மிகப்பெரிய பொருள் போலத் தோன்றினும் தனது ஆற்றலாலே அணுவினுள் அணுவாய் நிற்கும் நுண்ணியனும் ஆகின்றான்; எட்டுப் பெருமலைகளிலும் நின்று நிலத்தை நிலைபெறுவிக்கின்றான்; நிலம் முழுவதையும் தன்னுள் அடக்கியுள்ள பெரிய கடலாயும் விரிந்து நிற்கின்றான்.

விளக்கவுரை

'அவனது ஆற்றல் எத்தகையது? எவ்வளவினது? என அறிதல் அரிது' என்பது குறிப்பெச்சம். 'சாரான்' என்பது பாடமன்று. சொற்பொருட் பின்வருநிலையணி வந்தது.
இதனால், சிவனது ஆற்றல் திறம் புகழ்ந்து கூறப்பட்டது.

ஏனோர் பெருமைய னாகிலும் எம்மிறை
தானே சிறுமையுள் உட்கலந் தங்குளன்
வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்
தானே அறியும் தவத்தின் அளவே. *#2966*

எங்கள் சிவபெருமான் ஏனைத் தேவரினும் பார்க்க மிகப்

பெரியோனாயினும், உயிர்களின் சிற்றுடம்பினுள் அவற்றினும் சிறியவாய இருதயத்துட் சிறியனாய்க் கலந்து, அங்குச் சுடர்வடிவாய் விளங்குகின்றான். ஆகவே, அப்பெரியோன் ஏனைத் தேவரால் அளவிட்டறியப்படும் அளவினன் அல்லன். இங்ஙனமாகவே உயிர்கள் செய்யும் தவங்களை அளவிட்டறிபவன் அவனே.

விளக்கவுரை

'தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற் றரற்றுகின் றாரையும்,
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்ப ரீசனே'*1*

என அப்பர் பெருமானும் அருளிச் செய்தார். 'சிறுமை' என்பது ஆகுபெயராய்ச் சிறியவாகிய உடல்களைக் குறித்தது. சிவன் உயிர்களின் இதயங்களில் சுவர் வடிவாய் நிற்றலைச் சாந்தோக்கிய உபநிடதம் தகர வித்தை கூறுமிடத்தில் கூறிற்று. 'அம்மாதேவன்' எனச் சுட்டு வருவித்துரைக்க.

இதனால், சிவன் பெரியவற்றிற்கெல்லாம் பெரியவனாய்ச் சிறியவற்றிற்கெல்லாம் சிறியவனாய் நிற்கும் திறம் புகழ்ந்து கூறப்பட்டது.

பிண்டாலம் வித்தில் எழுந்த பெருமுளை
குண்டாலங் காய்த்துக் குதிரை பழுத்தது

உண்டார்கள் உண்டார் உணர்விலா மூடர்கள் பிண்டத்துட் பட்டுப் பிணங்குகின் றார்களே. ***#2967***

ஆல் மரத்தினின்றும் பாகுபட்ட பழத்தின் விதையி லிருந்து முளைத்த சிறு முனை, பெரிய மரமாகி, உருண்ட வடிவான ஆலங்காயே காய்த்தது. ஆயினும், அந்தக் காய் மாம்பழமாகப் பழுத்தது. இந்த அதிசயப் பழத்தை உண்டவர்கள் பிறவித் துன்பத்தி னின்றும் நீங்கிக் களித்தார்கள். உண்ணும் உணர்வு இல்லாத பேதை -யர்கள், பிறவித் துன்பத்தில் அகப்பட்டு முரணியே நிற்கின்றார்கள்.

விளக்கவுரை

இம்மந்திரமும் மறைந்துரையாடலாகவே அமைந்தது. ஆலமரம் - உடம்பு. உடம்பை அலமரமாகச் சிவாகமங்களின் கிரியா பாதங்கள் வருணிக்கும் பிண்ட - பாகுபட்ட. ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. ஆல் - ஆலம் பழம்; ஆகுபெயர். அது முன் மந்திரத்திற் கூறிய இருதயம் முளை, இருதயத்தில் சுடர்விடும் சிவன். மரம், தியானம் - தியானிக்கப்படும் பொருட்டும் தியானத்திற்கும்

வேற்றுமையின்மையாலும் வளர்வதாதலின் தியானமே 'மரம்' எனப்பட்டது. பெருமுளை - பின் பெரிதாதற்குரிய முளை. காய், தியானத்தில் வரும் திருவருள். உருண்டைக்கு, கீழ், மேல், வலம் இடம் ஆகிய பக்க வேறுபாடுகள் இன்மை பற்றி யாவர்மாட்டும் ஒப்பச் செல்லும் திருவருட்கு உருண்டை வடிவம் கற்பிக்கப்பட்டது. 'மா' எனக் கூறி, ஒருவகை மரத்தை உணர்த்தற்பாலதனை, 'மா' என்னும் பெயருடைமையே பற்றி, 'குதிரை' எனக் கூறியது. அதிசயத்தின் மேலும், மற்றும் ஓர் அதிசயம் தோற்றுவித்தற்பொருட்டு. இவ்வாறு எழுத்தொப்புமையால் ஒன்றாகின்ற சொற்களால் அவற்றின் பொருளல்லாத பிற பொருளைக் கூறுதலையும் ஒட்டணி வகையிற் சேர்ப்பர். கந்தபுராண ஆசிரியர், 'சூரபதுமன் மாமரமாய் நின்றான்' எனக் கூறுமிடத்தில், 'அத்தி, அரசு, வாகை, வன்னி, வீரை, இருப்பை' என்னும் மரப்பெயர்களை உடன் வைத்து, இந்திரன், அக்கினி முதலிய பிறபொருள்கள் தோன்றக் கூறியது முதலியன இதற்கு எடுத்துக்காட்டாகும். சீவக சிந்தாமணி ஆசிரியரும், 'புத்திசேனன்' என்னும் பெயருடையவனை. 'திங்கள் விரவிய பெயரினான்'1 என்றார். அதற்கு நச்சினார்க்கினியர், 'திங்கள் - மதி. 'மதி எனவே புத்திசேனரும்' என உரைத்து, தீத்தீண்டு கையார்' என்றது வேங்கையை உணர்த்தினாற்போல - எனத் திணைமாலை நூற்றைம்பதின் தொடரை மேற்கோளாகக் காட்டினார். 'வேங்கை' என்பது ஒரு சொல்லாயினும் அது, 'வேம் கை' என்னும் புணர் மொழிபோல வைத்து, 'வேகின்ற கை - தீத்தீண்டு கை' எனப் பட்டது பிற்காலத்தில் காளமேகப் புலவரும்,

'கரிக்காய் பொரித்தாள்; கன் னிக்காயைத் தீய்த்தாள்;
பரிக்காயைப் பச்சடியாய்ப் பண்ணாள்; - உருக்கமுடன்
அப்பைக்காய் நெய்த்துவட்ட வாக்கினாள், - அத்தைமகள்;
உப்புக்காண் சீசீ உமி'2

எனப் பாடினார். கரி - யானை; அத்தி. கரிக் காய் - அத்திக் காய் கன்னி - அரம்பை. அரம்பை - வாழை. கன்னிக் காய் - வாழைக் காய். பரி - குதிரை; மா. பரிக்காய் - மாங்காய். பை - பாம்பின் படம் அது. 'படத்தையுடைய பாம்பு' என்று ஆயிற்று. பாம்பில் ஓர் இளம் கத்தரி. அப்பைக் காய் - கத்தரிக் காய். இவை போல்வன எல்லாம் சொற்சுவை பட வருவனவாகும். மாம்பழம், சிவானந்தம், பிண்டம் - உடல், முதற்கண் உள்ள 'பிண்ட' என்பதனையும் இப்பொருட்டாகவே உரைப்பர். அது மறைபொருட் கூற்றிற்கு ஒவ்வாமை அறிக. 'அம்முச் சாரியை இடையினம் வருமிடத்துக் கெடும்' எனத் தொல்காப்பியர் கூறினாராயினும், பிற்காலத்தில் கெடாதே வழங்கும்

வழக்கம் உண்டாயிற்று. 'உறக்கும் துணையதோர் ஆலம் வித்து'3 என்னும் நாலடி வெண்பாவைக் காண்க.
'பிணங்குகின்றார்கள்' என்றது சமய வாதிகளை.
இதனால், தோத்திரத்தால் சிவானந்தப் பேறு உளதாதலைக் கூறி, அது செய்யாதாருக்கு இரக்கம் காட்டி முடிக்கப்படுகின்றது. எனினும், சமய வாதிகளைக் கூறிய இயைபே கொண்டு சமயங்களைப் பற்றி மூன்று மந்திரங்கள் கூறி முடிக்கின்றார். அவை பதிப்புக்களில் 'அதிகப் பாடலகள்' எனக்காட்டப்படுகின்றன.

முதல்ஒன்றாம் ஆனை முதுகுடன் வாலும்
திதமுறு கொம்பு செவி துதிக் கை கால்
மதியுடன் அந்தர் வகைவகை பார்த்தே
அதுகூற லொக்குமவ் வாறு சமயமே. #2968

'ஒன்றே பொருள் என்னின், வேறென்ப; வேறென்னின் - அன்றென்ப ஆறு சமயத்தார்.1 என்றாற்போலச் சமய வாதிகள் ஒருவர் கொள்கையை மற்றவர் மறுத்து வாதம் புரிதலை யானை கண்ட குருடர் கதையில் வைத்து உணர்த்திற்று இம்மந்திரம்.

விளக்கவுரை

'சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்'2

என ஆளுடைய அடிகளும் அருளிச்செய்தார். 'ஒன்றதே பேரூர்; வழி ஆறதற்குள'3 3மந்திரம் - 15,38. என்னும் மந்திரத்திற்கு இங்கும் கூறி முடிக்கின்றார்.
இதன் பொருள் வெளிப்படை. ஆனையாகிய முதல் ஒன்றேயாம்; ஆயினும் அந்தகர் அதன் உறுப்புக்களை வேறு வேறு முதல்களாகக் கூறிக் கலாம் விளைத்தல் போலவே, மெய்ப்பொருள் ஒன்றேயாயினும் அதன் இயல்புகளை வேறு வேறு பொருள்களாகக் கருதிச் சமய வாதிகள் ஒருவரை ஒருவர் மறுக்கின்றனர்' என்பது இம்மந்திரத்தின் திரண்ட கருத்து. சிவஞான போத அவையடக்கத்தில்,

'தம்மை - உணரார்; உணரார் உடங்கியைந்து தம்மில்
புணராமை'

என்றதன் உரையிலும் மாதவச் சிவஞான யோகிகள் இக்கதையையே உவமையாகக் காட்டினார்.
அகரம், பண்டறி சுட்டு அன்றி, 'ஆறு ஆறாகச் சொல்லப் படுகின்ற சமயம்' எனினுமாம். 'ஒருபுடையுணர்வே முரண்பாட்டிற்குக் காரணம் ஆதலின், முழுதுணர்வார்க்கு முரண் ஏதுமில்லை' என்பதாம்.

ஆறு சமயம் முதலாம் சமயங்கள்
ஊற தெனவும் உணர்க உணர்பவர்

வேற தறஉணர் வார்மெய்க் குருநந்தி
ஆற தமைபவர்க் கண்ணிக்குந் தானே. #2969
சமயங்களுட் சிறந்தனவாகச் சொல்லப்படுகின்ற ஆறு சமயம் முதலாக அனைத்துச் சமயங்களிலும் ஒரோ ஒன்றே 'நன்று' என உணர்பவர் உணரட்டும் (அஃது அவர் விருப்பம்) சமய வேற்றுமை பாராட்டாது, 'அனைத்துச் சமயங்களையும் அதனதனளவில் நன்றே' என உணர்பவர்க்கு உண்மைக் குரு நந்தி பெருமானேயாவார். அவரது மரபு நெறியே சான்றோர்க்கு இனிதாய் இனிக்கும்.

விளக்கவுரை

அதனதன் அளவில் நன்றாதலாவது, ஓரோர் பக்குவம் உடையார்க்கு அவர்க்கேற்ற நன்மையைத் தருவதாதல் 'எச்சமயத் தோர்செல்லும் - தீதொழிய நன்மை செயல்'1 1நல்வழி. என ஔவையார் கூறியதும், எல்லாச் சமயங்களும் ஓரோர் நன்மை கருதியே எழுந்தனவாதல் பற்றியே. அங்ஙனமாயின் பிற மதங்களை நூல்கள் மறுத்தல் ஏன் எனின், மறுப்பு, அதில் உள்ள நன்மையைப் பற்றி எழுதல் இல்லை; அவ்வச்சமயத்திற்கு மேம்பட்ட சமயத்தில் உள்ள நன்மையை மறுப்பதைப் பற்றித்தான் எழும் என்க.
உறுவது - நன்றாவது, 'உணர்வார் குரு' என்னும் கிழமைப பொருள் தொகையில், 'குரு' உயர்திணையாகலின் 'உணர்வாரது குரு' என ஆறாவது விரியாது, 'உணர்வார்க்குக் குரு' என நான்காவது விரிக்க. 'அவரது ஆறு' எனச்சுட்டு வருவிக்க. 'அது' இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். அமைபவர் - சான்றோர். சான்றோர் முழு துணர்ந்தவர். எனவே, 'உணர்வார் உணர்க என்றது ஒருபுடை உணர்ந்தாரை நோக்கியாம்.
சமயங்களுட் சிறந்த சமயங்களாகச் சொல்லப்படும் ஆறாவன ஆறு தரிசன மதங்கள். அவை 'வைசேடிகம், நையாயிகம், பூர்வ மீமாஞ்சை, உத்தர மீமாஞ்சை, சாங்கியம், யோகம்' என்பன. இவை வேதத்தின் தத்துவத்தை ஆராயும் நூல்களாகச் சொல்லப்படுதலின் சிறந்தனவாகச் சொல்லப்படுகின்றன. 'அறிவினால் மிக்க அறுவகைச் சமயத்து'1 எனச் சுந்தரர் அருளிச் செய்ததும், வாதவூரடிகள் 'இருமுச் சமயம்'2 என்றதும் இவற்றையே. 'அறுவகைச் சமயத்து அறுவகை யோர்க்கும்'3 என அவர் அருளிச் செய்தது, காணாபத்தியம் கௌமாரம் முதலிய அறுவகைச் சமயங்களை. அவற்றிடையே கொள்கைப் பூசல் பெரும்பான்மையாக இல்லை.
இதனால், பிற சமயங்களெல்லாம் ஒருபுடை உண்மையை உடையனவாக, சைவம் முழுதுண்மை உடையதாதல் கூறப்பட்டது.
ஒத்த சமயங்கள் ஓராறு வைத்திடும்

அத்தன் ஒருவனாம் என்ப தறிந்திலர்
அத்தன் ஒருவனாம் என்ப தறிந்திடின்
முத்தி விளைக்கும் முதல்வனு மாமே. *#2970*

'புறப்புறம், புறம் அகப்புறம், அகம்' எனப் பாகுபட்ட சமயங்கள் பலவற்றுள் பெரும்பான்மை ஒத்த கொள்கை யுடையவாய்ச் சிறுபான்மையே வேறுபட்ட சமயங்கள் அகச் சமயங்களாகும். அவையாவும் சைவமே. அவை ஆறு வகைப்பட்டன. அந்த ஆறும், 'தம்மை ஆக்கினவன் சிவனே' எனக் கருதுகின்றன. அதனைப் பிற சமயிகள் மறுக்கின்றனர். அம்மறுப்புக்களைக் கேளாமல், 'அகச் சமயங்கள் ஆறும் சிவனையே முதல்வனாக உடையன' என்பதை ஒருவன் அறிந்து, அவற்றுள் எந்த ஒன்றனையேனும் தெளிந்து அதில் நிற்பானாயின், அவன் சிவஞானியாய்த் தானும் முத்திக்கு உரியவனாய்ப் பிறரையும் முத்திக்கு உரியவராகச் செய்ய வல்ல ஆசிரியனும் ஆவான்.

விளக்கவுரை

'சமயங்கள்' என்னாது, ஒத்த சமயங்கள் என்றதனால், அவை அகச் சமயங்களாயின. எனவே, அவை தம்முள் ஒத்தனவாதல் பற்றியே 'ஒன்றதே பேரூர்; வழி ஆறதற்குள்' எனவும், அவற்றுள் ஒன்றை இகழ்வோரையும், 'குன்று குரைத்தெழு நாயைஒத் தாரே' எனவும் முன்பு*4* கூறினார். அவ்வகச் சமயங்கள் 'பாடாண வாத சைவம்' முதலிய ஆறுமாம். அவற்றைச் சங்கற்ப நிராகரண நூலுட்காண்க. அந்நூலுள் இறுதியில் அடைமொழியின்றி, 'சைவம்' என்றே கூறப்பட்டது சுத்த சைவம். அதற்கும், சித்தாந்த சைவத்திற்கும் இடையேயுள்ள வேற்றுமை மிகமிகச் சிறிதே. 'குரு' என்பது பொது வாயினும், சைவத்துள் 'சிவாச்சாரியார்' 'சைவாச்சாரியர்' என்றும் குறிக்கப்படுவோரே 'சிவகுரு' எனப்படுவர். சிறுசிறு வேறுபாட்டால் அவருள் தாரதம்மியமும், சித்தாந்த சைவாசாரியரை நோக்க ஆசிரியத்தன்மை முற்றப்பெறாமையும் உடையரேனும், அவரெல்லாம் சிவப்பேறாகிய முத்தியை வழிமுறையில் அடைவிப்பவரேயாவர் அதனால், 'சிவப் பேற்றை விரும்புவர் அவருள் எவரையேனும் ஆசிரியராகத் தெளியின் பழுதடையார்' என்பதாம்.
இதனால், 'சித்தாந்த சைவமும் பொதுவாக, 'சமயம்' என வழங்கப்படினும், அது சமயங் கடந்த நெறியேயாம்' என்பதை அதற்கு அணியவாகிய அகச் சமயங்களது சிறப்புக் கூறும் முக்கததால் சமயங்களைப் பற்றிய கூற்றுக்களில் இறுதியாக முடித்துக் கூறினார்.

*11.29.*சருவ வியாபகம்

ஏயும் சிவபோகம் ஈதன்றி ஓர் ஒளி
ஆயும் அறிவையும் மாயா உபாதியால்
ஏய பரிய புரியுந் தனைஎய்தும்
சாயும் தனது வியாபகந் தானே. *#2971*

ஆன்மா, பரமுத்தி நிலையில் விளைகின்ற சிவபோகத்தை நுகர்தலாகிய இஃது ஒன்றைத்தவிர, அந்தப் போகத்தைத் தருகின்ற சிவத்தைத் தனக்கு வேறாக வைத்து ஆராய்கின்ற அறிவையும், மாயா மலத்தின் காரியமாய்ப் பொருந்திய அதிசூக்கும, சூக்கும, தூல உடம்புகளைப்பற்றி, புறஞ்செல்லுதலையும் உடையதாகின்ற வரையில் அதனது இயற்கைத் தன்மையைத் தலைப்பட்ட வியாபக நிலை அதற்கு நிலைக்கமாட்டாது.

விளக்கவுரை

'சிவனைப்போல எங்குமாம் வியாபகமே ஆன்மாவின் இயற்கைத் தன்மை. ஆயினும் சிவனைப்போல ஆன்மாச்சூக்கும சித்தாகாது. தூல சித்தாய் இருத்தலின், அதனை அநாதியே ஆணவ மலம் பற்றி, அணுத்தன்மை அடையச் செய்தது. எனவே, ஆன்மாவின் இயற்கைத்தன்மை அடையச் செய்தது. எனவே, ஆன்மாவின் இயற்கைத்தன்மை வியாபகமும், ஆணவ மலம் காரணமாக அடைந்த செயற்கைத் தன்மையே அணுத்தன்மையும் ஆதலால், ஆணவம் நீங்கிய பொழுது, ஆன்மாத் தனது இயற்கையாகிய வியாபகத் தன்மையை எய்தும். ஆணவ மலம் காரணமாகவே ஆன்மாவை மாயையும், கன்மமும் வந்து பற்றின ஆகலான், ஆணவ மலம் நீங்கினாலும் அதன் வாசனை நீங்காத வரையில் ஆன்மாவிற்கு அது அடைந்த இயற்கைத் தன்மையாகிய வியாபகத்தன்மை அதற்கு நிலையாதாக, மாயை கன்மங்களைப் பற்றித் தனது முன்னைச் செயற்கைத் தன்மையாகிய அணுத்தன்மை உடையதாகும்' என்பதே இம்மந்திரத்தால் கூறப்பட்ட பொருளாகும். ஆணவ மலத்தின் வாசனையே ஆன்மாவைச் சிவபோகத்தை நுகர்தலினின்றும் நீங்கிச் சிவனைத் தனக்கு வேறாக வைத்து ஆராயத்தூண்டும். அதனாலே ஆன்மா மாயா கருவிகளையும், அவற்றின செயற்பாட்டிற்கு ஏதுவான கன்மத்தையும் உடையதாகும் என்க. ஏய்தல் - பொருந்துதல். ஓர் ஒளி - சிவம். 'ஒளியை' என உருபு விரிக்க. உபாதி - செயற்கை; குற்றம். 'பரிய' என்பதில் 'பரியவற்றை' என இரண்டாவது விரிக்க. 'பரியவற்றைப்பற்றி' என ஒருசொல் வருவிக்க. 'சாயும்' என்பதை இறுதியிற்கூட்டி முடிக்க. சாய்தல் - மெலிதல்; நீங்குதல். தான், ஏ

அசைகள்.

நானறிந் தப்பொருள் நாட இடமில்லை
வானறிந் தங்கே வழியுற விம்மிடும்
ஊனறிந் துள்ளே உயிர்க்கின்ற ஒண்சுடர்
தானறிந் தெங்குந் தலைப்பட லாமே. #2972

மெய்ப்பொருளை நம்மின் வேறாகத் தேடி அடையும் இடம், நான் அறிந்தவரையில் எதுவும் இல்லை. அதனை நாம் நம்மிலே அறிதல் எவ்வாறு' எனின், 'பரவியோமம்' எனப்படும் திருவருளை முன்னே அறிந்து. நம் வழியை நாம் விட்டு, அதன் வழியில் நின்றால், மெய்ப்பொருள் விறகைக் கடைந்தவழித் தோன்றும் தீ, பின் அந்த விறகைத் தானி அழிப்பதுபோல. நம் அறிவிலே விளங்கிப் பின் 'நாம்' என வேறு முனைத்து நிற்கும் தற்போதத்தை அழித்து, நம்மைத் தானாக்கிக் கொள்ளும். ஆகவே, கருவிக் கூட்டங்களை 'நாம் அல்ல' என்று கண்டு கழித்து நாம் தனித்து நின்றவழி, முன்னெல்லாம் உயிர்ப்பு வடிவில் இருந்த அந்த ஒளி விளக்கு இப்பொழுது தானேயாய் விளங்கும். ஆகவே இம்முறையில் ஒருவன் அதனை அறிவானே ஆயின், அவன் அதனோடு ஒற்றித்துத் தனது செயற்கைத் தன்மையாகிய அணுத் தன்மையின் நீங்கித் தனது இயற்கைத் தன்மையாகிய வியாபக நிலைப்படுதல் கூடும்.

விளக்கவுரை

'அறிந்து' நான்கில் முதலு. அறிந்த அளவு என அறியப்பட்ட இடத்தைக் குறித்தது. ஏனைய மூன்றும், 'அறிந்தவழி' என்பன திரிந்து நின்றவை, 'உற விம்மிடும்' என்பதில் செயவெ னெச்சம், 'மழை பெய்யக் குளம் நிறையும்' என்பது போலக் காரணப் பொருளில் வந்தது, விம்முதல் - பெருகுதல். ஆன்மாவைத் தன்னுள் அடக்கித் தாம் மேம்பட்டு நிற்றல். 'ஊன்' என்பது, பலவகை உடம்புகளால் நிற்கும் கருவிகளைக் குறித்தது. கருவிகளில் ஒவ்வொன்றையும் 'இது' எனச் சுட்டி, நான் அன்று எனக் கழித்தல் 'நேதி வாக்கியம்' எனப்படும். (நேதி = ந + இதி இவ்வாறான தன்று) 'நாஹம்' (நான் அது) எனப் பாவிக்க வேண்டும். 'நாஹம்' என்னும் உணர்வால் பாச நீக்கமும், 'சோஹம்' என்னும் உணர்வால் 'சிவப்பேறும், உளவாம் என்பர். சிவன் உயிர்களின் உயிர்ப்பாய் நிற்றலை'

'என்னுளே உயிர்ப்பாய் புறம் போந்து புக்(கு)
என்னுளே நிற்கும் இன்னம்ப ரீசனே'1

என்னும் அப்பர் திருமொழியாலும் உணர்க. 'அம்' எனப் புறம் போந்து 'சம்' என உட்புகுந்து அசபா மந்திரம் வடிவாய் நிற்பன் என்பதை, 'ஊனங் கத்துரு வாய்உல கெல்லாம் ஓங்கா ரத்துரு வாகிநின் றானை'1

என்னும் சுந்தரர் திருமொழியால் உணர்க.
இதனால் ஆன்மா ஆணவ மலத்தால் தான் இழந்த வியாபக நிலையைத் தலைப்படுமாறு கூறப்பட்டது.

கடலிடை வாழ்கின்ற கௌவை யுலகத்(து)
உடலிடை வாழ்வுகண் டுள்ளொளி நாடின்
உடலிடை வைகின்ற உள்ளுறு தேனைக்
கடலின் மலிதிரைக் காணலு மாமே. *#2973*

ஆரவாரம் மிக்க கடலாற் சூழப்பட்ட உலகத்தில் உடலில் தங்கி வாழ்கின்ற ஆரவார வாழ்வின் உண்மையை ஆராய்ந்துணர்ந்தால், அந்த உடலிற்றானே தன்னோடு உடன் உறைகின்ற சிவானந்தத் தேனை கடலிடை நிரம்பப் புதிது புதிதாக எல்லையின்ற எழுந்து வருகின்ற அலைபோல்வதாகக் காண முடியும்.

விளக்கவுரை

'கௌவை' என்பதைக் கடலுக்கும் கூட்டுக. கடல் கௌவையுடைத்தாதல் போல, அதனால் சூழப்பட்ட உலகத்தில் வாழும் வாழ்க்கையும் ஆரவாரம் மிக்கதாய் உள்ளது - என ஒரு நயம் தோற்றுவித்தவாறு, 'கடலின் ஆரவாரம் முற்றுப் பெறாமையும், பயனின்மையும் உடைத்தாதல்போல, உலக வாழ்வின் ஆரவாரவும் முற்றுப் பெறாமையும், பயனின்மையும் உடைத்து' என்பது குறிப்பு. உடலிடை வாழ்வின் உண்மையாவது சில காலமே உளதாய்ப் பின் இல்லாதொழிவது. உள்ளொளி, சிவம். அதனை நாடும் முறை மேற் கூறப்பட்டது. 'மலிதிரையின்' என, ஒப்புப்பொருளதாகிய ஐந்தன் உருபு விரிக்க. தேன் தான் உள்ள இடத்தில் சிறிதளவினதாகவே இருக்கும். 'இந்தத் தேன் கடல்போல எல்லை யற்றதாம்' என அதிசயம் உணர்தியவாறு. 'காணலும்' என்னும் உம்மை சிறப்பு.
இதனால், 'ஆன்மாத் தனது இயற்கைத் தன்மையாகிய வியாபக நிலையை அடைந்தவழி வியாபகமாகிய சிவத்தினது, கால, இட எல்லைகளில் ஒன்றும் இன்றிப் பெருகுகின்ற இன்ப வெள்ளத்தில் திளைக்கும்' என்பது கூறப்பட்டது.

பெருஞ்சுடர் மூன்றினும் உள்ளொளி யாகித்
தெரிந்துட லாய்நிற்குந் தேவர் பிரானும்
இருஞ்சுடர் விட்டிட் டிகலிட மெல்லாம்
பரிந்துடன் போகின்ற பல்குரை யாமே. *#2974*

'கதிர், மதி, தீ' என்னும் பெருஞ்சுடர் மூன்றையும் அவை உலகிற்குப் பயன்படுவ ஆதலைத்தெரிந்து, தனக்கு உடம்பாகக்கொண்டு அந்த ஒளிப்பொருட்கட்கு ஒளியைத் தருகின்ற உள்ளொளியாய் அவற்றில் நிறைந்து நிற்கின்ற சிவனும் வியாபகப் பொருளாகிய ஆன்மாக்கள்

ஒன்றுக்கொன்று மாறுபட அடையும் நிலைகளில் எல்லாம் தான் அருள் கூர்ந்து அவற்றின் அறிவுக்கு அறிவாய், அவற்றோடு உடனாய்ப் பலவாகின்றான்.

விளக்கவுரை

தெரிந்து உள்ளொளியாகி எனவும், 'இகலிடம் எல்லாம் பரிந்து, இருஞ்சுடர் விட்டு உடன்போகின்ற பல்குரையாமே' எனவும் இயைக்க. இகல் இடம் பெத்தமும் முத்தியும். 'பிரானும்' என்னும் உம்மை எதிர்வருகின்ற 'உயிர்' என்னும் பொருளைத் தழுவிநின்றது. பல உயிர்களிலும் நிறைந்து நிற்றல் பற்றி இறைவன், 'அநேகன்'*1* எனப்படுதல் காண்க.

'பல்கு உரை' என்பதில், 'சொல்' எனப் பொருள் தரும் 'உரை' என்பது அதனால் குறிக்கப்படும் பொருளைக் குறித்தது. பொருள், இங்கு உயிர். இனி, 'பல் + குரை' என்றே பிரித்து, 'குரை அசைநிலை இடைச்சொல்' என்றலுமாம். 'அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே'*2* என்பது போலும் சங்க இலக்கியங்களில் மட்டுமன்றி, 'நல்குர வென்னும் நசையின்மை பல்குரைத் துன்பங்கள் சென்று படும்'*3* எனத் திருக்குறளிலும் 'குரை' என்னும் இடைச்சொல் ஆளப்பட்டமை காண்க. 'பல் கோரை என்றே பாடம் ஓதித் தாம் தாம் வேண்டுமாறேயும் உரைப்பர்.

இதனால், சிவன் தனது சருவ வியாபகத்தால் பல உயிர்களோடும் உடனாய் நிற்றல் கூறப்பட்டது.

உறுதியி னுள்வந்த உன்வினைப் பட்டும்
இறுதியின் வீழ்ந்தார் இரணம தாகும்
சிறுதியின் உள்ளொளி திப்பிய மூர்த்தி
பெறுதியின் மேலோர் பெருஞ்சுடர் ராமே. *#2975*

முன் மந்திரத்தில் கூறியபடி சிவன் எல்லா உயிர் களோடும் உடனாய் நிற்பினும், மாயா காரியங்களில் வைத்துள்ள உறுதியான நம்பிக்கையால் உளவாகின்ற வினைகளில் அகப்பட்டு உழன்ற போதிலும் முடிவில் தன் அடியில் வந்து, 'அடைக்கலம்' என அடைந்தவர்க்கே பொன்போலப் பயன்படுவான். சிறியதிலும் சிறியதாய் விளங்குகின்ற ஒளிவடிவாகிய அவன், தன்னைப் பெற்றதனால் மேன்மை பெற்றவர்கட்கே எல்லையில்லா ஒளியாய், எங்கும் நிறைந்து விளங்குவான்.

விளக்கவுரை

'உறுதியினுள்' என்பதில் 'உள்' என்பது மூன்றாவதன் பொருளில் வந்த வேற்றுமை மயக்கம். உள் வினை - உளவாம் வினை. 'இரணியம்'

என்னும் வடசொல். 'இரணம்' எனத் திரிந்து நின்றது. 'அறுதி, பெறுதி' என்பனபோல, 'சிறுதி' என்பது திவ்விகுதி பெற்ற தொழிற் பெயர். 'சிறுத்தல்' என்பது அதன் பொருள். அஃது ஆகு பெயராய், அதனையுடைய பொருளைக் குறித்தது. 'ஒளி மூர்த்தி' என்பது, 'ஒளித்த மூர்த்தி' என வினைத்தொகை. 'மேலோர்க்கு' என்னும் நான்கன் உருபு தொகுக்கப்பட்டது.

இதனால், சிவன் சருவ வியாபியாயினும் மலம் நீங்கப்பெற்றார்க்கே அவன் வியாபகன் ஆதல் கூறப்பட்டது.

பற்றினுள் ளேபர மாய பரஞ்சுடர்
முற்றினும் முற்றி முளைக்கின்ற மூன்றொளி
நெற்றியி னுள்ளே நினைவாய் நிலைதரும்
மற்றவ னாய்நின்ற மாதவன் தானே. *#2976*

பற்றப்படும் பொருள்களில் எல்லாம் மேலான பொருளாய், மேலான ஒளியாயும் உள்ள சிவன் அண்டம் முழுதும் நிறைந்து, 'கதிர், மதி, தீ' என்னும் முச்சுடர்களாய்ப் புலப்படுவான். பிண்டத்தில் புருவ நடுவிலே தியானிக்கப்படும் பொருளாய் நிலைத் திருப்பான். பின்னும் அவ்வாறு தியானிப்போனும் தானேயாகின்ற தவ வடிவினனும் ஆவான்.

விளக்கவுரை

முதற்கண், 'பற்று' என்றது, பற்றப்படும் பொருளை. பற்றப்படும் பொருள் நற்பொருளும், விடப்படும் பொருள் தீப் பொருளும் ஆதலை நினைக. 'அத்தைகய பொருள்களுள் மேலானவன்' எனவே, அவனின் மிக்க நன்றாம் பொருள் இல்லை யாயிற்று. நன்மையே, வடமொழியில் 'சிவம்' எனப்படுகின்றது. நன்மையை உடையது' என்பது அதன் பொருள். சுடர் - ஒளி. அஃது ஆகுபெயராய், அதனை உடையானைக் குறித்தது. 'முளைக்கின்ற மூன்றொளி' என்றதனால், 'முற்றும்' என்றது அண்டத்தைப் பற்றியதாயிற்று. உம்மை முற்றும்மை. முற்றுதல் - நிறைதல். நெற்றி - ஆஞ்ஞை. இதுவே தியானத்தானம் ஆதலை யறிக. நினைவு - தியானம்; என்றது தியானிக்கப்படும் பொருளை. மூன்று ஒளியாய்ப் புலப்படும் நிலை மாறி மாறி நிகழ்வது. தியானிக்கப்படும் பொருளாதல் ஒன்றேயாகலின், 'நிலைதரும்' எனவும், 'தியானமும் அவன் உடனாகாத விடத்து நிகழாது' என்றற்கு 'அவனாய் நின்ற' என்றும், அவன் தியானமுமாய்க் கலந்து நிற்றல் பற்றி 'மாதவன்' என்றும் கூறினார். தான்ஏ அசைகள்.

இதனால் சிவன் அண்டத்திலும், பிண்டத்திலும் வியாபியாய், ஏற்ற பெற்றியில் அருள்புரியுமாறு கூறப்பட்டது.

தேவனு மாகுந் திசைதிசை பத்துளும்
ஏவனு மாய்விரி நீருல கேழையும்

ஆவனு மாம் அமர்ந் தெங்கும் உலகினும்
நாவனு மாகி நவிற்றுகின் றானே. *#2977*

இன்னும், முன் மந்திரத்திற்கூறிய பரஞ்சுடராகிய சிவன், எல்லாத் திசைகளிலும் அதுவதற்குத் தலைவனாய் நிற்கின்றான். அவைகள் உள்ள எல்லாப் பொருள்களுமாய் இருக்கின்றான்; ஏழு கடல்களால் சூழப்பட்ட ஏழு தீவுகளையும் ஆக்குபவனுமாகி, அவை அனைத்திலும் நிறைந்து அவற்றை நிலைக்கச் செய்பவனுமாய், அங்குள்ளாரது நாவில் அவையாய்க் கலந்து சொற்களைச் சொல்கின்றான்.

விளக்கவுரை

அடுக்கு, 'அதுவது' எனத் தனித்தனியைச் சுட்ட வந்தது. 'ஒவ்வொரு திசையையும் காக்கும் காப்பாளர் வேறு வேறாகச் சொல்லப்படினும் அவரிடத்தும் சிவனே வியாபியாய் நின்று காவல் புரிவிக்கிறான்' என்பது கருத்து. சிவாகமங்கள் பத்துத் திசைகளிலும் ஒவ்வொன்றிலும் பத்துப் பத்து உருத்திரர் இருந்து திசை காப்பாளரைச் செலுத்துகின்றனர்' என்று கூறுதலோடு, அவர்களின் பெயர்ப் பட்டியலையும் தருதற்கு இதுவே கருத்து என்க. 'எவன்' என்னும் வினாப் பெயர் முதல் நீண்டு நின்றது. 'விரிநீர் உலகு' என்றதனால், 'உலகு' என்றது நிலவுலகத்தையாயிற்று. காட்சிப் பொருளாய நில வுலகத்தின் பகுதிகளை வகுத்துக் கூறியதனால், உரைப்பொருளாய பிற உலகங்களை ஆக்குதலும் தானே பெறப்பட்டது. 'ஆக்குவன்' என்பது இடைக்குறைந்து நின்றது. அமர்தல் - தங்குதல். இதன் பயன் அப்பொருள்கள் நிலைபெறுதலாம். 'எங்குமாம் உலகினும்' என ஆக்கம் விரிக்க. 'எங்கும்' என்றது ஆகாயத்தை உணர்த்திற்று. நாவன் - நாவே வடிவானவன். 'நவிற்றுதல்' என்பது பிறவினை வாய்பாடாய்த் தன்வினையையும் குறிப்பதொன்று. 'நம்பு வார்அமர் நாவின் நவிற்றினால் வம்பு நாண்மலர் வார்மது ஒப்பது'*1* என்பதிலும் இவ்வாறு வந்தமை காண்க. 'நட்பாடல் தேற்றாதவர்' *2* என்றார் போல்வன காண்க. நாவாய் நின்று நவிற்றுதல், பொதுப்பட எல்லார் மொழியையும் குறித்தலுடன் அருளாளர்களது நாவில் இனிது விளங்கி நின்று அருளிச்செய்யும் உறுதிச் சொல்லைச் சிறப்பாகக் குறிப்பதாம். 'எனதுரை தனதுரையாக'*3* என்னும் அருள் மொழியை ஓர்ந்துணர்க. இதுவும் சிவனது சருவ வியாபகத்தையே கூறியது.

நோக்கும் கருடன் நொடிஏ ழுலகையும்
காக்கும் அவனித் தலைவனும் அங்குள
நீக்கும் வினைஎன் நிமலன் பிறப்பிலி
போக்கும் வரவும் புரணவல் லானே. *#2978*

(ஆகாயத்தில் இருந்து அனைத்துப் பொருளையும் காணும் கருடன்

நம்மால் அறியப்பட்டது.) அதுபோலப் பரம வியோம மாகிய சிதாகாசத்தில் இருந்து கொண்டு ஏனை எல்லாப் பொருளையும் அறிந்தாங்கறியும் கருடன் சிவன் பின்பு அழிக்கப்படுவனவாகிய ஏழுலகங்களையும் இதுபொழுது அவனே காக்கின்றான். ஆகவே உலக முதல்வன் அவனே. ஆதலின், அவ்வுலகங்களில் உள்ள வினைகளையெல்லாம் நீக்குகின்ற, இயல்பாகவே பாசம் இல்லாத, எஞ்ஞான்றும், எவ்வாற்றானும் பிறப்பினுட்படாத கடவுளும் அவனே. பிறப்பு இறப்பு இன்மையால், போக்கும், வரவும் இவன் ஆகிலும், உயிர்களில் அவையேயாய்க் கலந்து நிற்றலால், அவற்றது போக்கு வரவுகளில் நீங்காது நிற்கவும் அவன் வல்லவனாவான்.

விளக்கவுரை

'கருடன்' என்றது, உவமையாகு பெயர். கருடன் மேற்கூறிய இயல்பினது ஆதல் பற்றியும், புள்ளரசு ஆதல் பற்றியும் இறைவனுக்கு அஃது உவமையாயிற்று. வேதத்தில் கருடனுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. அது பற்றி, அங்கு, 'கருடன்' என்பதைச் சிவனாகக் கொள்க என்றற்கும் இது கூறினார். 'நோக்குதல்' என்பது பெரும்பான்மையும் காத்தல் தொழிலையே குறித்தலால், காத்தற் கடவுளாகிய மாயோனுக்குக் கருடன் ஊர்தி சொல்லப்பட்டது. 'அங்குள வினை' என மாறிக் கூட்டுக. 'வினையே நீக்குதற்கு உரியவன், வினையும், அதனால் வரும் பிறவியும் இல்லாதவனே என்றற்கு, 'அங்குள வினையை நீக்கும் நிமலன்; பிறப்பிலி' என்றார். 'புணரவும்' என்னும் எதிர்மைறையும்மை தொகுத்தலாயிற்று. நொடித்தல் - அழித்தல். 'நொடி உலகு, என் நிமலன்' - இவை வினைத் தொகைகள். அவை செயப்படு பொருள்மேல் தொக்கன. 'காக்கும்' என்பது முற்று - எச்சமாகக் கொள்ளினும் ஆம். 'தலைவனும் ஆவன்' எனச் சொல்லெச்சம் வருவித்து முடிக்க.

இதனால், சிவன் எல்லாப் பொருள்களையும் கடந்து நிற்பினும் எல்லாப் பொருளிலும் வியாபியாய் நின்று செயலாற்றுதல் கூறப்பட்டது.

செழுந்சடை யன்செம்பொ னேஒக்கும் மேனி
ஒழிந்தன ஆயும் ஒருங்குடன் கூடும்
கழிந்திலன் எங்கும் பிறப்பிலன் ஈசன்
ஒழிந்தில கேழினும் ஒத்துநின் றானே. *#2979*

சிவன் திருமேனி கொள்ளும்பொழுது சிவந்த சடை, சொம்பொன்போலும் நிறம் இவைகளையுடையனவாகவே கொள்வான். ஏனைப் பொருள்களில் ஒன்றன் வடிவிலேயும் அவன் தோன்றானாகிலும் அவை அனைத்திலும் உடன் நிறைந்து

நீங்காமலே நிற்கின்றான். ஆயினும் அவை பிறப்பதுபோல அவன் பிறப்பதில்லை. அவன் ஒடுங்கல் தோன்றல்கள் இல்லாதவனாயினும் அவைகளை யுடைய உலகத்தோடு ஒட்டி நிற்கின்றான்.

விளக்கவுரை

'ஈசன்' என்பதை முதலிற் கொள்க. 'அவன் மேனி செம்பொனே ஒக்கும்' என்க. 'எங்கும் கழிந்திலன்' என மாறிக் கூட்டுக. 'எங்கும்' என்பது, 'அப்பால் எங்கும்' எனப் பொருள் தந்தது. உலகத்தின் இயல்பாகிய ஒடுங்குதல் இலகுதல்களைப் பின்னர் கூறுகின்றார் ஆதலின். 'சிவனுக்கு அவையில்லை' என்றற்கு 'பிறப்பிலன்' என்பதை முன்னே கூறினார். இலகுதல் - தோன்றுதல்.
பிற வகையான தெய்வ வடிவங்களையே சிவன் வடிவாகக் கொண்டு வழிபடின் குற்றம் என்னை? என்னும் ஐயத்தை நீக்குதற்கு இது கூறினார். இது பற்றியே இத்தகைய வடிவங்கள், 'சிவனது இயற்கை வடிவங்கள்' எனப்படுகின்றன. இவ்வாறன்றி, நாயன்மார் சிலரிடம் சிவ யோகியாகவும், பிரமசாரியாகவும், சிவனடியாராகவும் வந்து சில திருவிளையாடல்களைச் செய்த வடிவங்கள் யாவும் சிவனுக்கு நிலையானவாய் இல்லாது, அவ்வப்பொழுது ஏற்ற பெற்றியாற் கொள்ளும் செயற்கை வடிவங்கள் என்க.
'அண்டம் ஆர்இரு ளூடு கடந்தும்பர்
உண்டு போலும்ஓர் ஒண்சுடர், அச்சுடர்
கண்டிங் கார்அறிவார்? அறிவா ரெலாம்
வெண்டிங்கட் கண்ணி வேதியன் என்பரே'
என அப்பர் பெருமான் அருளிச்செய்ததும் இக்கருத்தை விளக்கவேயாம்.
இதனால், 'சருவ வியாபியாய் அகண்டனாய் நிற்கும் சிவன் கண்டனாய்த் தோன்றுமாறு இது' என்பது கூறப்பட்டது. இதன் பின் பதிப்புக்களில் காணப்படும் உணர்வும் அவனே உயிரும் அவனே' என்னும் மந்திரம் மேல், 'சிவ தரிசனம்' என்னும் அதிகாரத்தில் வந்தது.

புலமையில் நாற்றம் இல் புண்ணியன் எந்தை
நலமையில் ஞான வழக்கமும் ஆகும்
விலமையில் வைத்துள வேதியர் கூறும்
பலமையில் எங்கும் பரந்துநின் றானே. *#2980*

எங்கள் தந்தையாகிய சிவபெருமான், வெறும் நூலறிவில் மட்டும் தோன்றுபவன் அல்லன்; தவத்தில் தோற்றஞ் செய்பவன். அப்பால் அத்தவத்தின் பயனாகப் பெறப்படுகின்ற நன்மையுடைய ஞானத்தில் இடையறாது தொடர்ந்து விளங்குபவனும் ஆவான். இனி, 'இன்ன செயலுக்கு இன்ன பயன்' எனப் பண்ட மாற்றுப் போலக் கொண்டு

வேதியர்கள் கூறுகின்ற காமிய கன்மங்களிலும் எங்கும் நிறைந்து வேதியர்கள் அவர்கட்குப் பயனளித்து வருகின்றான்.

விளக்கவுரை

நாற்றம் - தோற்றம். நாறுதல் - முளைத்தல். 'நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க'*1* என்னும் திருவாசகத்தை இங்கு நினைவு கூர்க. 'நன்மை' என்பது எதுகை நோக்கி இடையே அகரம் பெற்று, 'நன்மை' என வந்தது. 'நன்மையின்' எனச் சாரியை நிற்க இரண்டன் உருபு, தொக்கது. 'நன்மையைப் பயனாக உடைய ஞானம்' என்க. நன்மை, இங்கு வீடுபேறு வழக்கம் - தொடர்ச்சி, 'விலைமை, என்பது, எதுகை நோக்கி, 'வில்மை' என நின்றது. 'பண்ட மாற்றுத் தன்மை, என்பது பொருள். பலம் - பயன். பலமை - பலன் தரும் தன்மை. அஃது ஆகுபெயராய், அதனையுடைய கன்மங்களைக் குறித்தது.

இதனான், சிவன் சருவ வியாபியாய் நிற்பினும் அவரவருக்கு ஏற்ற பெற்றியால் அருள்புரியுமாறு கூறப்பட்டது.

விண்ணவ னாய்உல கேழுக்கும் மேல்உளன்
மண்ணவ னாய் வலம் சூழ்கடல் ஏழுக்கும்
தண்ணவ னாய் அதன் தண்மையில் நிற்பதோர்
கண்ணவ னாகிக் கலந்துநின் றானே. *#2981*

சிவன், பராகாயத்தில் அனைத்துலகங்கட்கும் மேலேயும் இருக்கின்றான். அப்பொழுதே மிகக் கீழே உள்ள மண்ணில் திண்மையாய் உள்ளவனாயும், அதனைச் சூழ்ந்துள்ள நீரில் தண்மையாய் உள்ளவனாயும், இவ்வாறு எல்லாவற்றிலும் அதனதன் தன்மையாய் நிற்பதுடன், உயிர்களுக் கெல்லாம் வேறோர் அறிவாயும் எல்லாவற்றிலும் கலந்து நிற்கின்றான்.

விளக்கவுரை

'தன்மை' என்பது எதுகை நோக்கி இறுதி நிலை தொகுத்த லாயிற்று. 'அதனதன்' என்னும் அடுக்கும் தொகுத்தலை பெற்றது, கண் - அறிவு. 'நிற்பதோர் கண்' என்பது உடம்பொடு புணர்த்ததாகலின் நிற்றலையும், கண் ஆதலையும் வேறு வேறாகக் கொள்க. 'தண்ணவன், கண்ணவன்' என்பவற்றில், 'அவன்' என்பன பகுதிப் பொருள் விகுதிகள். எழுவாய் முன் மந்திரத்தி -னின்றும் வந்தது.

இதனால், சிவன் தனது வியாபகத் தன்மையால் மேலான வற்றிற்கெல்லாம் மேலாயும், கீழானவற்றிற்கெல்லாம் கீழாயும் நிற்றல் கூறப்பட்டது. 'மேலோடு கீழாய் விரிந்தோன் காண்க'*1* என்னும் திருவாசகத்தையும் காண்க.

நின்றனன் மாலொடு நான்முகன் தானாகி

நின்றனன் தான்நிலம் கீழொடு மேல்என
நின்றனன் தான்நெடு மால்வரை ஏழ்கடல்
நின்றனன் தானே வளங்கனி யாமே. #2982

சிவன், முன் மந்திரத்திற் கூறியபடி உலகத்தைக் கடந்து அப்பால் மேலும், கீழுமாய், உலகத்தில் எல்லாப் பொருளுமாய் வியாபித்து நிற்றலால் 'மால், அயன்' என்னும் காரணக் கடவுளர்களை அதிட்டித்துக் காத்தல் படைத்தல்களைச் செய்பவனும் அவனே. அதனால், எல்லாப்பொருள்களின் முழுத்தன்மையும் அவனே.

விளக்கவுரை

'தான் நிலம்' என்பது தொடங்கி, ஈற்றடியில் 'நின்றனன்' என்பது காறும் சென்று, பின், 'அதனால், என்பது வருவித்து மாலோடு நான்முகன் தானாகி நின்றனன்; தானே வளங்கனியாம்' என முடிக்க. 'என' என்பதை 'வரை, கடல்' என்பவற்றோடும் கூட்டுக. கனி, கனிவு; முதிர்ச்சி முதனிலைத் தொழிற்பெயர். சொற்பொருட் பின்வருநிலையணி வந்தது. இதன் கண்ணும் எழுவாய் முன் மந்திரத்திற்போல வந்தது.

முன் மந்திரத்தில் 'சிவனே எல்லாப் பொருளுமாய் நிற்பினும் மாலும், அயனுமாகிய காரணக் கடவுளரும் அவனேயோ' என ஐயுறுவார்க்கு அவ்வையத்தை நீக்குவார் முன் மந்திரத்திற்கூறிய பொருள்களையே மீண்டும் இம்மந்திரத்தில் அனுவதித்துக் கூறினார். இங்ஙனம் உரையாதார்க்கு இவை கூறியது கூறலாம். 'நாரணங்கான்; நான்முகன்காண்; நால்வேதன்காண்'2 என்னும் திருத் தாண்டகத்தையும் காண்க.

புவனா பதி மிகு புண்ணியன் எந்தை
அவனேய உலகின் அடற்பெரும் பாகன்
அவனே அரும்பல சீவனும் ஆகும்
அவனே இறைஎன மாலுற்ற வாறே. #2983

பெரியோர்கள் சிவனிடத்திலேயே காதல் மிக்கவர்களாய் அவனையே நோக்கி நிற்றற்குக் காரணம், 'எல்லாப் புவனங்கட்கும் அதிபதி அவனே; புண்ணியத்தின் பயனாய்க் கிடைப்பவனும் அவனே, யாவர்க்கும் தந்தையும் இவனே; உலகத்தை வலிமை வாய்ந்த தலைமையோடு நடத்துவோனாகி அதனை நடத்துபவனும் அவனே; எண்ணித்தொகை கூறுதற்கு இயலாத அனைத்துயிர்களும் அவனே; ஆகலின் அவன் ஒருவனே கடவுள்' என உணரும் மெய்யுணர்வேயாகும்.

விளக்கவுரை

'சிவன்பால்' என்பதும், 'பெரியோர்கள்' என்னும் தோன்றா எழுவாயும் வருவித்து, 'மால் உற்ற ஆறு' என்பது தொடங்கி உரைக்க. புவனங்களை, 'புவனா' எனப் பெண்பாலாகக் கூறினார். நிலத்தைப் பெண்ணாகக் கூறும் வழக்குப் பற்றி. 'புவனா' என்பாள் ஒரு சத்தி என்றலுமாம். மிகுதி, பன்மை குறித்து நின்றது. 'என' என்னும் செயவெனெச்சம், 'என்பதனால்' என்னும் பொருட்டாய், 'மாலுற்ற ஆறு' என்னும் எழுவாய்க்குப் பயனிலையாயிற்று. 'பெரியோர்கள் சிவனிடத்துச் செலுத்தும் அளவிலா அன்பு, தலைவி ஒருத்தி தன் தலைவனை அவனை யின்றித் தான் அமையாளாய்க் காதலிப்பதனோடு ஒத்தது' என்றற்கு அதனை, 'அன்பு, காதல்' என்பவற்றுள் ஒரு சொல்லாற் கூறாது. 'மால்' என்னும் சொல்லாற் கூறினார். மால் - மயக்கம், மோகம்.
இதனால், மெய்யுணர்ந்தோர், சிவனே சருவ வியாபகனும், சருவேசுரனும் ஆதலையறிந்து அவன்பால் கரை கடந்த காதலை யுடையாராதல் கூறப்பட்டது.

உண்ணின் றொளிரும் உலவாப் பிராணனும்
விண்ணின் றியங்கும் விரிகதிர்ச் செல்வனும்
மண்ணின் றியங்கிடும் வாயுவு மாய்நிற்கும்
கண்ணின் றிலங்கும் கருத்தன் தானே. *#2984*

உயிர்களின் உடம்புள்ளிருந்து ஓவாது இயங்கி, உயிரை நிலைப்பிக்கின்ற பிராணனும், வானத்தில் இயங்கி உலகிற்குப் பல நலங்களை விளைவிக்கின்ற, அளவற்ற கதிர்களையுடைய பகலவனும், மண்ணில் ஒரு சிற்றிடமும் விலக்கின்றி எங்கும் இயங்கி வாழ்விக்கும் காற்றும், மற்றும் அனைத்துப் பொருள்களுமாய் நிற்பவன் சிவன்' என்றால், உயிர்களின் அறிவினுள் விளங்கி, அவ்வறிவை அறியச் செய்பவனும் அவன்தானே? வேறுயாராய் இருக்கமுடியும்?

விளக்கவுரை

'ஒளிரும்' என்பது 'ஒளிர்விக்கும்' எனப் பிறவினைப் பொருட்டாய், நிலைப்பித்தலைக் குறித்தது. உலவா - உலவி; சஞ்சரித்து. 'உலவா ஒளிரும்' என மாறிக் கூட்டுக. உம்மை கொடுத்து எண்ணியது, உபலக்கணத்தால் அனைத்தையும் எண்ணிக்கொள்ளுதற்கு, 'நிற்கும்' என்பதன் பின் 'எனின்' என்பது வருவிக்க. அல்லாக்கால், மேல், 'நின்றனன்' என்னும் மந்திர உரையிற் கூறியவாறு. 'கூறியது கூறல்' என்பது படும். 'நிற்கும்' என வேறு தொடராக்கி முடிந்தமையையும் நோக்குக. கண் - அறிவு. கருத்து அதில் தோன்றும் புலன் கருத்திற்கு ஏதுவாவதனை, 'கருத்து' என்றது உபசார வழக்கு. 'தான்' என்பது

கட்டுரைச் சுவைபட வந்தது. ஏகாரம், உடன்படுவித்தற்பொருட்டாகிய வினா.
இதனால், சிவன் தனது சருவ வியாபகத் தன்மையால் அனைத்துப் பொருளையும் நிலைப்பித்து, உயிர்களின் அறிவையும் அறியச் செய்தல் கூறப்பட்டது.

எண்ணும் எழுத்தும் இனஞ்செயல் அவ்வழிப்
பண்ணும் திறனும் படைத்த பரமனைக்
கண்ணில் கவரும் கருத்தில் அதுஇது
உண்ணின் றுருக்கி ஓர் ஆயமும் ஆமே. #2985

என் அறிவையும், எழுத்து அவ்வறிவின் வழி இன்பத்தையும் உண்டாக்குதல், அவையிரண்டும் இயற்றமிழில் அறிஞரால் ஓர் இனப்படுத்தி எண்ணப்பட்டன. ('எண் என்ப, ஏனை - எழுத்தென்ப'1 'எண்ணெழுத் திகழேல்'2 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'3 என்பவற்றைக் காண்க.) இசைத்தமிழில் பண், திறம், (இன்னும் - திறத்திறம்) என்பனவும் அவ்வாறு ஓரினப்படுத்தி எண்ணப்படுவனவாம் இன்னோரன்ன பலவற்றை இனம், இனமாகப் படைத்த சிவபெருமானைக் கண்ணிலும், பொருள்களை உணரும் கருத்திலும் 'அது' என்றும், 'இது' என்றும் சேய்மைப் பொருளாகவும் அண்மைப் பொருளாகவும் தம்மின் வேறு வைத்து உணர்வார்க்கு அவன் அங்ஙனம் உணரும் உணர்வை, அவ்வுணர்வின் வழியே சென்று உணர்விற்கு உணர்வாய்த் தோன்றி அழித்து, 'அவனே தாம் எண்ணும்படி ஒன்றாகியே நின்று, ஒப்பற்ற ஓர் ஊதியமும் ஆவான்.

விளக்கவுரை

'செயல்' என்னும் தொழிற்பெயர் ஆகுபெயராய்ச் செயப்படு பொருளை உணர்த்திற்று. 'பண்ணும் திறனும் அவ்வழியவே' எனச் செயப்படு பொருள் வருவித்துரைக்க 'கண்ணிலும் கருத்திலும்' என எண்ணும்மை விரிக்க. 'அது இது' என்பது அவ்வாறு உணரும் உணர்வைக் குறித்தது. அஃது உம்மைத் தொகை. 'அது இதுவை உருக்கி' என இயைக்க. ஆயம் - 'பொருளாயம்'1 'ஆயும்' என்னும் உம்மை சிறப்பு.
இதனால், சிவன் எங்கும் சருவ வியாபியாய் நின்று, தன்னை உணர்வார்க்கு முன்னர் அவரின் வேறாகியும், பின்னர் அவரேயாகியும் பெரும்பேறாய் நிற்றல் கூறப்பட்டது.

இருக்கின்ற எண்டிசை அண்டம் பா தாளம்
உருக்கொடு தன்நடு ஓங்க இவ் வண்ணம்
கருக்கொடே எங்கும் கலந்துநின் றானே
திருக்கொன்றை வைத்த செழுஞ்சடை யானே. #2986

'தோன்றல், நிற்றல், ஒடுங்கல்' என்னும் முத்தொழில்களில்

நடுவணதாகிய நிற்றல் தொழிலுடையவாய் உள்ள உலகங்கள் அனைத்தும் தனது உருவத்திற்குள்ளே 'இவ்வாறு அடங்கியிருக்க' எனச் சங்கற்பித்துச் சிவன் அவற்றில் நிறைந்து நிற்கின்றான்.

விளக்கவுரை

'இவ்வண்ணம் ஓங்கக் கருக்கொடு' என மாற்றியுரைக்க. ஓங்குதல் - நிலைத்து நிற்றல். கருக்கொள்ளுதல், திருவுளத்திற்குள் சங்கற்பித்தல். ஈற்றடி 'சிவன்' என்னுந் துணையாய் நின்றது. 'ஓங்கக் கருக்கொடே எங்கும் கலந்திருந்தான்' என்றதனால், 'அவனது சங்கற்பத்தானே உலகம் நிலை பெற்றுள்ளது' என்பதும், 'பிறவாறு சங்கற்பிக்கின் அவ்வாறே ஆம்' என்பதும் 'பிறர்போலக் கரணத்தாலன்றிச் சங்கற்பத்தாலே எல்லாம் செய்வன்' என்பதும் போந்தன. 'தன்' என்றது தனது உருவத்தை. அவனது உருவம் சத்தியேயாதலை நினைக. இதனால், சிவனது சருவ வியாபகச் சிறப்புடன், இயைபு பற்றி அவன் செயலாற்றும் முறையும் கூறப்பட்டது.

அதுஅறி வானவன் ஆதி புராணன்
எதுஅறி யாவகை நின்றவன் ஈசன்
பொதுஅது வான புவனங்கள் எட்டும்
இதுஅறி வான் நந்தி எங்கள் பிரானே. *#2987*

சிவனது பெருமை, உபநிடதங்களில் 'அது' எனப் பொதுவாகச் சுட்டியும், 'சித்து' என வரையறுத்தலும் கூறப்படுதலும், எல்லாப் பொருட்கும் ஆதியாயினும், தான் அநாதீயேயாதலும், எந்த அளவையினாலும் அளந்தறியப் படாமையும், உயிர்கள் பல வற்றிற்கும் பொதுப்பட இடமாய் விரிந்து உலகம் முழுதிலும் வியாபகம் ஆதலும் ஆகும். இன்னும் அவனது பெருமையை எல்லாம் எங்களுக்குக் குருவாகிய நந்தி பெருமான்தான் அறிவார்.

விளக்கவுரை

'பொதுவது' என்பதில் அது, பகுதிப்பொருள் விகுதி. எட்டும் - வியாபிக்கும். பெருமைகள் பலவாயினும் பொதுப்பட, 'பெருமை' என்னும் அளவில் 'இது' என்றார். 'ஈசன்' என்பதை முதலில் கொள்க. இதனால் முடிவில் முதற்கண் குரு வணக்கம் கூறப்பட்டது.

நீரும் நிலனும் விசும்பு அங்கி மாருதம்
தூரும் உடம்புறு சோதியுமாய் உளன்
பேரும் பராபரன் பிஞ்ஞகன் எம்இறை
ஊரும் சகலன் உலப்பிலி தானே. *#2988*

எங்கள் சிவன் ஐம்பூதங்களுடன், 'ஒளி' எனத் தக்க மற்றும் முப்பொருள்கள் கூட எடடுப் பொருள்களாகிய வடிவினை

உடையவன், 'பராபரன் பிஞ்ஞகன்' என்பன போன்ற பெயர்களால் புகழப்படுபவன், எல்லா இடங்களும் அவனுக்கு இடங்களே எல்லாவற்றிற்கும் இறுதியாயினும் தனக்கு இறுதியில்லாதவன். அவனை யான் வாழ்த்துகின்றேன்.

விளக்கவுரை

இறுதியிற்கூறியது குறிப்பெச்சம். சோதி - ஒளி. ஞாயிறும், திங்களும் ஒளிப் பொருள்களாதல் வெளிப்படை. இனி அறிவும் ஒளியாதலின் அவ்வாற்றால் 'ஒளி' என்பது ஆன்மாவையும் குறித்தது. ஆக அட்ட மூர்த்தமும் சொல்லப்பட்டமை காண்க. பராபரன் - மேலோடு கீழாய் விரிந்தவன். பிஞ்ஞகன் - தலைக் கோலத்தை உடையவன். தலையில் உலகம் அழியாதபடி கங்கையைத் தாங்கினவன்; பாம்பையும், நிலவையும் பகையின்றி ஒன்றி வாழ அணிந்தவன்; தலைமாலைகளை அணிந்து தனது நித்தியத்தை உணர்த் துபவன்; பிரணவத்தைக் குறிக்கும் கொன்றை மலர் மாலையைத் திருஅடையாளமாலையாக அணிந்தவன். குரண்டாசுரனை அழித்துக் கொண்ட கொக்கிறகை அணிந்து, கொடியோரை ஒறுத்தலை உணர்த் துபவன்; இன்னோரன்ன பல புகழ்கள் 'பிஞ்ஞகன்' என்பதனால் பெறப்படுதல் அறிக. தூரும் உடம்பு - சோற்றால் தூர்க்கப்படும் உடம்பு; அதனுள் சோதி உயிர். 'சோதியும்' என்னும் உம்மையால் ஏனை ஒளியும் தழுவப்பட்டன. 'பேரும்' என்னும் உம்மை சிறப்பு. ஊர் - இடம். சகலன் - எல்லாம் ஆனவன். ஈற்றடி, கால இட வரையறைகள் இன்மையைக் குறித்தது.

இது நூற்பொருள் கூறியதன்று. நூற்கும், தமக்கும் முதல்வனாகிய இறைவனை வாழ்த்தியது. 'வாழ்த்து, வணக்கம்' என்பவற்றுடன் பொருளியல்புரைத்தலும் வாழ்த்தாதலை உணர்க.

தானே கடல்மலை ஆதியு மாய்நிற்கும்
தானே திசையொடு தேவருமாய் நிற்கும்
தானே உடல்உயிர் தத்துவ மாய்நிற்கும்
தானே உலகில் தலைவனும் ஆமே. *#2989*

இதன் பொருள் வெளிப்படை. நூலைச் சிவனது முதன்மையோடு தொடங்கிய நாயனார் முடிவையும் அவனது முதன்மையோடு முடித்தமை நினைந்து இன்புறத் தக்கது.

விளக்கவுரை

****

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூலன்உரைசெய்த முந்நூறு மந்திரம்

மூலன் உரைசெய் முப்ப துபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும்ஒன் றாமே. #2990
இது நூல் சிதையாமைப் பொருட்டு இதன் அளவை நூற்குள்ளே வரையறை செய்தது.

விளக்கவுரை

'தமிழ்' என்பது தமிழால் ஆகிய பாடலைக் குறித்தது. இந்நூலின் பாடல் தொகை மூவாயிரம்' என்பதாம்.
'இந்நூற் பாடல்கள் அனைத்துமே 'மந்திரம்' எனப் பெயரிடப்பட்ட போதிலும், சிறப்பாக மந்திரமாகவே அமைந்த பாடல்கள் முந்நூறு' என்றபடி. அவை நான்காம் தந்திரத்தில் எண்ணிக் கொள்ளற்பாலன. 'எந்திரம்' எனப்படும் சக்கரங்களும் 'மந்திரம்' என்றதனானே பெறப்பட்டன. அவை மிகச்சில ஆதலின், தொகை சொல்லப்படவில்லை. இங்ஙனமாயினும், 'முந்நூறு மந்திரம்' என்றே ஒரு தனி நூலும் வெளி வந்துள்ளது.*1*
'உபதேசம்' என்பது ஓர் அதிகாரம். முப்பது பாடல்களுடன் முதல் தந்திரத்தில் இருத்தல் நன்கறியப்பட்டது. முந்நூறு மந்திரத்தை வேறு கண்டவர்க்கு, முப்பது உபதேசம் வேறு கிடைக்கவில்லை போலும்!. ஈற்றடியில் 'மூன்றும் ஒன்றாமே' என முடிபு கூறியது, 'மந்திரம் உபதேசம்' - எனக் கூறியவற்றை மூவாயிரம் வேறு என மலையற்க - என மலைவு தீர்த்தது. 'செய்த' 'செய்தன' என அன் பெறா அகர ஈற்றுப் பன்மை வினைப் பெயர். இவை செயப்படு வினையாய் நின்றன. இதிலும் சொற்பொருட் பின்வருநிலையணி வந்தது.
இங்ஙனம் நாயனார் பாதுகாப்புச் செய்தும், பிரதிகள் நன்கு போற்றாமையால் பாடங்கள் மிகத் திரிக்கப்பட்டும், பாடல்கள் இடம் மாற்றப்பட்டும் சொற்கள் இருமுறை, மூன்றுமுறை சேர்க்கப்பட்டும், சில பாடல்களை விடுத்தும், சில பாடல்களை. இடைச் செருகல்களாக மிகுத்தும் செய்யப்பட்டமை பாதுகாத்தவர்களது. ஊக்கக் குறைவால் நேர்ந்துள்ளதை உணர்ந்து கொள்ளுதல் அறிஞர்க்குக் கடனாய் உள்ளது.

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலம்அறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலம்இலான் பாதமே. #2991
இது இறுதியில் வாழ்த்துக் கூறி நூலை முடிவு செய்தது. 'என் நந்தி' என்றதனானே இது நாயனாரின் திருமொழியாதல் விளங்கும்.

விளக்கவுரை

இவ்வாழ்த்து இரட்டுற மொழிதலாகக் குருவையும், சிவனையும் ஒருங்கே வாழ்த்தியது. மலர் அறுத்தது நாயனார்க்கும் அவரோடு உபதேசம் பெற்றவர்கட்கும் என்க.
முதற்கண், 'சிவ பரத்துவம்' எடுத்துக் கொடுத்து இடையிலேயும், அதனையே பல்லாற்றானும் வலியுறுத்தித் தம் குருவையும், பல இடங்களில் நினைவு கூர்ந்து, ஈற்றிலும் சிவன் பெயரையே கூறிச் சிவன் திருவடியையன்றி, மறந்தும் பிறிதொன்றை நினையாது அவனது நெறியை விளக்கிய நாயனாரது திருமொழியின் அமைப்பையும், 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற அவரது திருவுள்ளத்தையும் நினைந்து நினைந்து பயன் பெறுதல் அறிஞர் கடனாகும்.
ஒன்பதாம் தந்திரம் முற்றுப் பெற்றது.
பத்தாந் திருமுறையாகிய திருமூலர் அருளிய திருமந்திரம் மூலமும் தெளிவுரையும் இம்மூன்றாம் தொகுதியுடன் முற்றும் பெற்றன.
வாழ்க திருமந்திரம்! வளர்க சிவஞானம்!
திருமூல தேவநாயனார் திருவடிகள் வாழ்க! வாழ்க!

பத்தாம் திருமுறை - திருமந்திரம் முற்றும்

பன்னிருதிருமுறை

பல அருளாளர்கள் அருளிய
பதினொன்றாம் திருமுறை

தொகுப்பு: சங்கர்

சித்திரை 2017 வெளியீடு

பன்னிருதிருமுறை

பதினொன்றாம் திருமுறை

பல சிவனடியார்கள் அருளியது

பதினொன்றாம் திருமுறை 40 பதிகங்கள், 1385 பாடல்கள்



பன்னிருதிருமுறை

பல அருளாளர்கள் அருளிய
பதினொன்றாம் திருமுறை

தொகுப்பு: சங்கர்

சித்திரை *2017* வெளியீடு

திருவாலவாயுடையார் - திருமுகப்பாசுரம்

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்

கொருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பாற்

காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே. **#1**

ஓலையைத் `திருமுகம்` என்றல் அதனை விடுத்தோரது உயர்வு பற்றி. பாசுரம் - மிகுத்துரை பாட்டு. மதி - சந்திரன். மலிதல் - மகிழ்தல். முதனிலைத் தொழிற்பெயர். இது மகிழ்ந்து தவழ்தலாகிய தன் காரணம் தோற்றி நின்றது. இனி `மலி மதி` என மொழிமாற்றி, `நிறைந்த திங்கள்` என உரைப்பினும் ஆம். ``மாடக் கூடல்`` என்பதற்குப் பொதுப் பொருள் கொள்ளாது, திருவிளையாடற் புராணத்தின் வழி, `நான்மாடக் கூடல்` எனப் பொருள் கொள்ளுதல் சிறப்பு. `கூடற் பதிமிசை நிலவு ஆலவாய்` என இயைக்க. மிசை, ஏழனுருபு. கூடல், தலப்பெயர். ஆலவாய், அத்தலத்தில் உள்ள கோயிலின் பெயர். `அருட்டுறை, பூங்கோயில்` என்பன போலச் சில தலங்களில் கோயிலுக்குத் தனிப்பெயர் இருத்தல் அறியத் தக்கது. `பால் நிறச் சிறகு, வரிச் சிறகு` எனத் தனித்தனி முடிக்க. பால் நிறம் - பாலினது நிறம் போலும் பால், அதன் நிறத்தை உணர்த்தலின் ஆகு பெயராய் திருமுகத்தில் எழுதப்பட்ட வரிவடிவங்களைக் குறித்தது. பருவம் - உரிய காலம்; கார் காலம். கொண்மூ - மேகம். படி - ஒப்பு. ஒருமையின் உரிமையின் - `உதவுதல் தனக்குக் கடன் என ஒருப்பட்ட மனத்தினாலே கொண்ட உரிமையினால்`. குரு - நிறம்; அழகு. மா மதி- பெரிய சந்திரன்; பூரணச் சந்திரன். `புரை குடை; குலவிய குடை` எனத் தனித் தனி இயைக்க. புரை - ஒத்த. குலவிய - விளங்குகின்ற. `குடைக் கீழ்ச் சேரலன்` எனவும், `உகைக்கும் சேரலன்` எனவும் தனித்தனிச் சென்று இயையும். செரு மா - போர்க்கு ஏற்ற நடைகளைக் கற்ற குதிரை. உகைத்தல் - ஏறிச்

செல்லுதல். பண்பால் - யாழ் இசைக்கும் தன்மை நிறைந்த நிலைமையினால். தன் போல் - தன்னை (அந்தச் சேரலனை)ப் போலவே, போந்தனன் -தன்பால் புகுந்தனன். மாண் பொருள் - மிகுந்த பொருள். வர விடுப்பது - மீண்டு வர விடை கொடுத்து அனுப்புதல்.

விளக்கவுரை

`கூடற் பதிமிசை நிலவு ஆலவாயில் மன்னிய சிவன் யான் மொழிதரும் மாற்றம் சேரலன் காண்க, அம்மாற்ற மாவன, - பாணபத்திரன் தன்னைப் போலவே என்பால் அன்பன் என்பதும், அவன் தன்னைக் காணுதலைக் கருதித் தன்பாற் புகுந்தனன் என்பதும், அவனுக்கு மிகுந்த பொருளைக் கொடுத்து மீண்டு வரும்படி விடை கொடுத்து அனுப்புதல் என்பதுமாகும் என வினை முடிக்க.

முதல் அடி தலச் சிறப்புக் கூறியது. அடுத்த இரண்டடிகள் அத் தலத்தில் உள்ள கோயிற் சிறப்புக் கூறியன. ஐந்து, ஆறாம் அடிகள் சேரலனது கொடைச் சிறப்புக் கூறியன. ஏழு, எட்டாம் அடிகள் அவனது வெற்றிச் சிறப்புக் கூறியன. ஒன்பது, பத்தாம் அடிகள் பாண பத்திரனது அன்புடைமை கூறியன. இறுதி இரண்டடிகள் ஆணை கூறியன.

`இப் பாசுரத்தில் குறிக்கப்பட்ட சேரலன் யாவன்` என்னும் ஆராய்ச்சியில் கருத்து வேறுபாடுகள் உள. பரஞ்சோதி முனிவர் தமது திருவிளையாடற் புராணத்துள் இப் பாசுரத்திற் குறிக்கப்பட்ட பாண பத்திரரை வரகுண பாண்டியன் காலத்தவராகக் கூறினார். `சுந்தரர் காலத்துப் பாண்டியன் வரகுணன்` என்பதற்கு நூற்சான்றோ, வரலாற்றுச் சான்றோ எதுவும் இல்லை.

பரஞ்சோதி முனிவர்க்கு ஏறக்குறைய நான்கு நூற்றாண்டு கட்கு முற்பட்டவராகிய சேக்கிழார், `இப்பாசுரத்தில் குறிக்கப் பட்ட சேரலன் சேரமான் பெருமாள் நாயனாரே` எனத் திட்டமாக வரையறுத்து, இத்திருமுகப் பாசுரத்தைக் கண்டு, சேரர் பெருமான் பாண பத்திரரைப் பெரும் பத்தியோடும், சிறப்போடும் வரவேற்று வழிபட்டுப் பெரும் பொருள் கொடுத்துப் பாசுரத்தில் - வரவிடுப் பதுவே - என்று இருத்தலால் பத்திரரைத் தம்மிடத்தே இருத்திக் கொள்ள மாட்டாது விடை கொடுத்து விடுத்தார்` என இப்பாசுர வரலாற்றினைக் கழறிற்றறிவார் புராணத்துள் பன்னிரண்டு பாடல்களால் விரித்துரைத்தார். `சேரமான் பெருமாள் நாயனார்` சுந்தரர்க்குத் தோழர் என்பது நன்கறியப்பட்டது.

மறைமலை அடிகளார் தமது, `மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்` என்னும் நூலில், மாணிக்கவாசகர் மூவர்க்கு முற்பட்டவர்` என்னும் தமது வாதத்தை நிலை நிறுத்தற் பொருட்டுப் `பெரிய புராணத்துள் திருமுகங் கொடுத்த வரலாற்றைக் கூறும் பாடல்கள் இடைச் செருகல்; சேக்கிழார்

பாடியன அல்ல` என்றார்.
திருமுகங் கொடுத்த வரலாற்றைக் `கல்லாடம்` என்னும் இலக்கியம் குறிப்பிடுகின்றது. ஆயினும் ஞானசம்பந்தர் முதலிய மூவரில் ஒருவரைப் பற்றிய குறிப்பும் அவ் இலக்கியத்தில் இல்லை. `ஆகவே, அவ் இலக்கியம் மூவர் காலத்திற்கு முற்பட்டது` என்றும், அது மாணிக்கவாசகரைக் குறிப்பிட்டு விட்டு மூவரைக் குறியாமை யால் மாணிக்கவாசகரது காலம் மூவர் காலத்திற்கு முற்பட்டது என அடிகளார் முதலில் கூறினார். பெரிய புராணத்துள் திருமுகங் கொடுத்த வரலாறு சேரமான் பெருமாள் நாயனார் காலத்தில் நிகழ்ந்ததாகச் சொல்லப்படுதல் அடிகளார் முதலில் கூறிய கூற்றை மாற்றுவதா கின்றது. அது பற்றி அவ்வரலாறு கூறும் பெயரிய புராணப் பாடல்களை `இடைச் செருகல்` என்றார். ஆயினும் அதனை நாம் அவ்வாறு கொள்ளுதற்கில்லை.
இத்திருமுகப் பாசுரத்தில் சேரலனைப் ``பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு - ஒருமையின் உரிமையின் உதவுபவன்` என அவனது கொடையை ஆலவாய்ப் பெருமான் சிறப்பித்தருளினமை காணப்படுகின்றது. பெருமான் அருளியவாறே பாண பத்திரர்க்குச் சேரர்பிரான் மிகப் பெரும் பொருள் வழங்கியதைச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். பெருமான் திருமுகம் விடுக்கும் அளவிற்குத் திருவருள் பெற்று விளங்கிய சேரன் எவனும் சேரமான் பெருமாள் நாயனாருக்கு முன் இருந்ததாகத் தெரியவில்லை.
சுந்தரர், தனது திருத்தொண்டத் தொகையில் சேரமான் பெருமாளைக் குறிப்பிடுகையில்,
`கார்கொண்ட கொடைக் கழறிற் றறிவார்` *(தி.7 ப.39 பா.6)*
எனக் குறிப்பிட்டார். `கார்கொண்ட கொடை` என்பது திருமுகப் பாசுரத்தில், `பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு - ஒருமையின் உரிமையின் உதவி`` எனக் கூறப்பட்டதனை அப்படியே எடுத்து மொழிந்ததாய் உள்ளது. அதை வைத்துத்தான், சேக்கிழார் சேரமான் பெருமாள் நாயனார் வரலாற்றில் திருமுகம் கொடுத்த வரலாற்றை விரித்துக் கூறினார். அதை, `இடைச் செருகல்` என்று தள்ளிவிடப் பார்ப்பது முறையாகத் தோன்றவில்லை. சேரமான் பெருமாள் நாயனார் தில்லைத் தரிசனம் செய்த சிறப்பைக் கூறுமிடத்தில் சேக்கிழார்.
`சீரார் வண்ணப் பொன்வண்ணத்
திருவந்தாதி திருப்படிக்கீழ்ப்
பாரா தரிக்க எடுத்தேத்திப்
பணிந்தார், பருவ மழை பொழியும்
காரால் நிகர்க்க அரியகொடைக்

கையார் கழறிற் றறிவார்தாம்` *(தி.12 கழறிற். பா.56)*
எனக் கூறினார். இதில் நாயனாரது கொடைச் சிறப்பைக் கூறிய தொடர், `திருமுகப் பாசுரத்தில் உள்ள தொடரே` என்பது தெற்றென விளங்குகின்றதன்றோ! பின்னும், `சேரர் பிரான் திருவாரூர் சென்று சுந்தரரைக் கண்டு வணங்கிய பொழுது அவர் பெரிதும் மகிழ்ந்து சேரமானது கையைப்பற்றினார்` எனக் கூறும்பொழுது, `பருவ மழைச் செங்கை பற்றிக் கொண்டு` *(தி.12 கழறிற். பா.67)* எனக் கூறினார். இதவும் முன்னர்க் கூறியதையே பின்னரும் வலியுறுத்தி மொழிந்ததாகின்றது.
பின்பு சுந்தரர் சேரர்பிரானை அழைத்துக் கொண்டு பாண்டி நாட்டு யாத்திரை செய்ய விரும்பிச் சேரரை அழைத்ததைக் குறிப்பிடும் பொழுது,
`சேரர் பிரானும் ஆரூரர்
தம்மைப் பிரியாச் சிறப்பாலும்
ஆர்வம் பெருகத் தமக்கு அன்று
மதுரை ஆலவாய் அமர்ந்த
வீரர் அளித்த திருமுகத்தால்
விரும்பும் அன்பின் வணங்குதற்குச்
சேர எழுந்த குறிப்பாலும்
தாமும் உடனே செலத்துணிந்தார்``
(தி.12 கழறிற். பா.81)
எனக் கூறினார். இதிலும் திருமுகங் கொடுத்த வரலாற்றைச் சேக்கிழார் தெளிவாகக் குறிப்பிட்டமை காணப்படுகின்றது. பின்பு மதுரையில் சென்று தரிசித்ததைக் குறிப்பிடும் பொழுதும்,
``படியேறு புகழ்சேரர் பெருமானும் பார்மிசை வீழ்ந்து
அடியேனைப் பொருளாக அளித்த திருமுகக் கருணை
முடிவேதென் றறிந்திலேன் என மொழிகள் தடுமாற``
(தி.12 கழறிற். பா.94)
என்றார். எனவே `திருமுகங் கொடுத்த வரலாற்றைச் சேக்கிழார் ஏதோ ஓரிடத்தில் போகிற போக்கில் ஒருவாறு கூறிப் போயினார்` என்னாது, `சேரமான் பெருமாள் நாயனாரது வரலாற்றில் அஃதொரு முதன்மை யான பகுதியாகக் கருதி வலியுறுத்தினார் என்றே கூற வேண்டியுள்ளது. அதனால் தான் சுந்தரர் சேரமான் பெருமாளைக் குறிப்பிடுமிடத்து அந்தக் கொடைச் சிறப்பையே எடுத்தோதிக் குறித்தார். ஆகவே, பெரிய புராணத்துள் ஒரு சில பாடல்களை, `இடைச் செருகல்` என்று சொல்லி நீக்கிவிட முயன்றால், அம்முயற்சி பின் பல இடங்களில் தடைப்பட்டு வெற்றி பெறாது மறையும். எனவே திருமுகங் கொடுத்த வரலாறு பெரிய

புராணத்துட் கூறப்பட்ட வாறே கொள்ளத்தக்கது. பரஞ்சோதி முனிவர் கூற்றில் உள்ள காலக் கணக்கை நாம் அப்படே கொள்ளுதற்கில்லை. இனி, ``ஆல நீழல் உகந்த திருக்கையேஎத் தொடங்கும் திருஞானசம்பந்தரது திருவாலவாய்த் திருப்பதிகத்தில்,

(தி.3 பதி.115)

`தாரம் உய்த்தது பாணற் கருளொடே` *(தி.3 பதி.115 பா.6)*

என்று ஒரு தொடர் வந்துள்ளது. ``தாரம் பல் பண்டம்`` என்பது நிகண்டு ஆதலின், அத்தொடர் சேரமானால் பாணற்குப் பல் பண்டம் வரச் செய்த திருவிளையாடலைக் குறித்ததாகலாம் - எனச் சிலர் கருதுவர். `தாரம்` என்பது ஏழிசைகளுள் சிறந்த தொன்று, அதனை இனிது இசைக்கப் பாணற்கு ஆலவாய்ப் பெருமான் அருளியதையே அத் தொடர் குறிப்பதாகக் கொண்டு சேக்கிழார். திருநீலகண்டப் பலகை யிட்டருளிய செயலைக் கூறினார். அதனையும் பரஞ்சோதி முனிவர் பத்திரர் பொருட்டுச் செய்த திருவிளையாடலாகவே கூறினார். பரஞ்சோதி முனிவர் பல கலை வல்லவராயினும் தமது புராணத்தை `ஆலாசிய மான்மியம்` என்னும் வடநூலைத் தழுவியே செய்ததாக அவர் கூறியிருத்தலையும் நாம் இங்கு நினைத்தல் வேண்டும். ஆலவாய்ப் பெருமானடிகள் அருளிச் செய்ய, நம்பி யாண்டார் நம்பிகள் பதினொன்றாந் திருமுறையில் முதல் திருப் பாடலாக அதனைக் கோத்து வைத்ததினூல் அத்திருப்பாடல் இத்துணை ஆராய்ச்சிக்கு இடமாயிற்று. திருமுகப் பாசுரம் முற்றிற்று

காரைக்காலம்மையார் - மூத்த திருப்பதிகம்

கொங்கை திரங்கி நரம்பெ ழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவ யிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் வெண்பேய்
தங்கி யலறி யுலறு காட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும் வீசி
அங்கங் குளிர்ந்தன லாடும் எங்கள்
அப்ப னிடந்திரு ஆலங் காடே.

#2

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திரங்கி - வற்றி. குண்டு - ஆழம். குழி வயிறு - ஒட்டிய வயிறு. பங்கி - தலை மயிர். பரடு - புறங்கால். உலறுதல் - பசியால் உடல்மெலிதல். சில வேளைகளில் மற்றைப் பேய்கள் எங்கேனும் போய்விட ஒரு பெண் பேய் தனித்து நின்று அலறுதலும் உண்டு என்க. அங்கம் - திருமேனி. அனல் ஆடுதல் - சுற்றிலும் நெருப்பு எரிய நடுவே நின்று ஆடுதல். `இவ்வாறு ஆடுபவன் அங்கம் குளிர்ந்திருத்தல் வியப்பு` என்றபடி.

கள்ளிக் கவட்டிடைக் காலை நீட்டிக்
கடைக்கொள்ளி வாங்கி மசித்து மையை
விள்ள எழுதி வெடுவெ டென்ன
நக்கு வெருண்டு விலங்கு பார்த்துத்
துள்ளிச் சுடலைச் சுடுபி ணத்தீச்
சுட்டிய முற்றும் சுளிந்து பூழ்தி
அள்ளி அவிக்கநின் றாடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங்காடே.

#3

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கள்ளிக் கவடு - கள்ளி மரத்தின் கிளைகள். கடைக்கொள்ளி - எரிந்து முடிந்த கொள்ளிக் கட்டை. வாங்குதல் - எடுத்தல். மசித்தல் - மசிய அரைத்தல். `பேய்கள் கண்ணில் எழுதுகின்ற மை கரியே` என்றபடி. எனவே, `இவ்வாறு செய்வனவும் பெண் பேய்களே` என்பது விளங்கும். விள்ள - கண்ணினின்றும் வேறு தோன்ற. `வெடு, வெடு` என்பது சினக் குறிப்பு. எனவே, நகுதல் கோபச் சிரிப்பாயிற்று. (வெருளுதல், தம்மை வெருட்டும் பேய்கள் கடுந்தெய்வங்கள் முதலினவற்றை நினைத்து.)

`விளக்காக` என ஆக்கம் வருவிக்க. விலங்காகப் பார்த்தல், நேரே பாராமல் வலமாகவும், இடமாகவும் திரும்பித் திரும்பிப் பார்த்தல். `பிணஞ்சுடு தீச் சுட்டிட` என்றபடி. சுளித்தல் - கோபித்தல். பூழ்தி - புழுதி. இது `பூழி` என்றும் வரும். அவித்தல், தன்னைச் சுட்ட தீயை.

வாகை விரிந்துவெள் நெற்றொ லிப்ப
மயங்கிருள் கூர்நடு நாளை ஆங்கே
கூகையொ டாண்டலை பாட ஆந்தை
கோடதன் மேற்குதித் தோட வீசி
ஈகை படர்தொடர் கள்ளி நீழல்
ஈமம் இடுசுடு காட்ட கத்தே
ஆகம் குளிர்ந்தன லாடும் எங்கள்
அப்ப னிடம் திரு ஆலங் காடே.

#4

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வகை - காட்டு வாகை மரம். விரிந்து (விரிய) - தழைத்திருக்க. நெற்று வெண்மையாயது காய்ந்து போனமையால். மயங்கு இருள் - மாலைக் காலத்தில். பகலோடு வந்து பொருந்திய இருள். அது பின் மிகுதலின், `கூர்` என்றார். நடு நாள் - நள்ளிரவு. `நடு நாள் யாமத்தும் பகலும் துஞ்சான்`* எனப் புறப்பாட்டிலும் வந்தது. ஐ, சாரியை, ஆண்டலை, மனிதன் தலைபோலும் தலையை யுடைய ஒருவகைப் பறவை. கோடு - மரக்கிளை. கூகையும், ஆண்டலையும் கூவக் கேட்டு ஆந்தை மரக் கிளையின் மேல் இடம் பெயர்ந்து ஓடுகின்றது. வீசுதல் - எழுச்சியுறுதல். ஈகை - இண்டங் கொடி - `ஈகை வீசிப் படர்கின்ற, தொடர் கள்ளியின் நீழலையுடைய சுடுகாடு` என்க. மற்றும், `ஈமம் இடு சுடுகாடு` என்வும் கொள்க. ஈமம்- பிணஞ்சுடும் விறகு. `கூகை முதலிய பறவைகளின் செயல் ஒருபாலாக, ஈமம் ஒருபால் இடப்படுகின்றது` எனக் கொள்க. `ஆகம் குளிரந்து` என்பதற்கு, மேல், `அரங்கம் குளிர்ந்து` என்றதற்கு உரைத்தது உரைக்க. ஆகம் - உடம்பு. `நடு நாள் சுடுகாட்டகத்தே, பாட, ஓட ஆடும் எங்கள் அப்பன்` என இயைத்துக் கொள்க.

குண்டில்ஓ மக்குழிச் சோற்றை வாங்கிக்
குறுநரி தின்ன அதனை முன்னே
கண்டிலோம் என்று கனன்று பேய்கள்
கையடித் தொ டிடு காட ரங்கா
மண்டலம் நின்றங் குளாளம் இட்டு,
வாதித்து, வீசி எடுத்த பாதம்
அண்டம் உறநிமிர்ந் தாடும் எங்கள்

அப்ப னிடம்திரு ஆலங் காடே.
#5
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குண்டில் ஓமக் குழி - ஆழத்தை உடைய ஓம குண்டம். இது சுடுகாட்டில் இறுதிக் கடனுக்காகச் செய்யப்படுவது. `வாங்கி` என்றது, `யாவரும் போகட விட்டுப் போனபின்பு எடுத்து` என்றதாம். முன்பு கண்டிலோம் - முன்பே பார்க்கவில்லையே. (பார்த்திருந்தால் நரிகளை வெருட்டித் தின்றிருக்கலாமே என்று) மண்டபம் - வட்டமாகச் சென்று ஆடுதல். உள்ளாலம், `ஆளத்தி` எனப்படும். அஃதாவது குரலால் இசை கூட்டுதல். வாதித்து - காளியோடும் வாதம் புரிந்து `எடுத்த பாதம்` என்க. எடுத்த பாதத்தை அண்டம் உற நிமிர்த்து ஆடினமையால், காளி நாணம் அடைந்து தோற்றாள். `நிமிர்ந்து` என்பதும் பாடம்.

விழுது நிணத்தை விழுங்கி யிட்டு,
வெண்தலை மாலை விரவப் பூட்டிக்
கழுதுதன் பிள்ளையைக் காளி யென்று
பேரிட்டுச் சீருடைத் தாவளர்த்துப்
புழதி துடைத்து, முலைகொ டுத்துப்
போயின தாயை வரவு காணா
தழுதுறங் கும்புறங் காட்டில் ஆடும்
அப்ப னிடம்திரு ஆலங் கா டே #6
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கழுது - பேய். விழுது நிணம் - திரட்டி எடுத்த உருண்டையாகிய கொழுப்பு. `கழுது தன் பிள்ளையை, நிணத்தை விழுங்க நிணம் - திரட்டி எடுத்து உருண்டையாகிய கொழுப்பு.
`கழுது தன் பிள்ளையை, நிறத்தை விழுங்க இட்டு, வெண் தலை மாலை பூட்டி, புழதி துடைத்து, முலைகொடுத்து, - காளி - என்று பேர் இட்டுச் சீருடைத்தா வளர்த்து, (சிறிது நேரம் விட்டுப்) போயினதாக, அத்தாயை வரவிற் காணாது, பிள்ளைப் பேய் அழுது, பின் உறங்கும் புறங் காடு` என இயைத்துக்கொள்க. `போயினதாக` எனவும், `அத்தாய்` எனச் சுட்டும் வருவித்துக்கொள்க. `விழுங்கியிட்டு` என்பது பாடம் அன்று.

பட்டடி நெட்டுகிர்ப் பாறு காற்பேய்
பருந்தொடு, கூகை, பகண்டை , ஆந்தை
குட்டி யிட, முட்டை, கூகைப் பேய்கள்
குறுநரி சென்றணங் காடு காட்டில்

பிட்டடித் துப்புறங் காட்டில் இட்ட
பிணத்தினைப் பேரப் புரட்டி ஆங்கே
அட்டமே பாயநின் றாடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங் காடே.
#7
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`அணங்கு ஆடு காட்டில் கூகைப் பேய்களும், குறு நரிகளும், குட்டியை ஈன, பருந்தும், கூகையும், பகண்டையும், ஆந்தையும் முட்டையிட, பாறுகாற் பேய்கள் சென்று அவைகளைப் பிட்டு வீசிப் பின் புறங்காட்டில் இடப்பட்ட பிணத்தைப் புரளப் புரட்டி, நெடுக்கும், குறுக்குமாகப் பாயமந்து ஓட ஆடும் எங்கள் அப்பன்` என இயைக்க. பட்ட அடி - பரந்துபட்ட பாதம். அகரம் தொகுத்தல். நெட்டுகிர் - நீண்ட நகம். பாறுதல் - வற்றுதல். பகண்டை ஒருவகைப் பறவை. கூகைப் பேய்கள், பேய்களில் கூகையாய் உள்ள பேய்கள் அணங்கு, தாக்கணங்குகள் (தீத்தெய்வங்கள்) அட்டம் - குறுக்கு.

கழலும் அழல்விழிக் கொள்ளி வாய்ப்பேய்
சூழ்ந்து துணங்கையிட் டோடி, ஆடித்
தழலுள் எரியும் பிணத்தை வாங்கித்
தான் தடி தின்றணங் காடு காட்டில்
கழலொலி, ஓசைச் சிலம்பொ லிப்பக்
காலுயர் வட்டணை யிட்டு நட்டம்
அழலுமிழ்ந் தோரி கதிக்க ஆடும்
அப்ப னிடம்திரு ஆலங் காடே.
#8
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

துணங்கை - இரு கைகளையும் மடக்கி இரு விலாக்களிலும் அடித்துக் கொண்டு ஆடும் கூத்து. இது பெரு மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்ற ஒன்று. தடி - தசை. அணங்கு ஆடுதல் - தெய்வம் வந்ததுபோல ஆடுதல். `காட்டில், ஓரி கதிக்க, கால் வட்டணையிட்டு நட்டம் ஆடும் அப்பன்` என்க. ஓரி - நரி. கதிக்க - குதிக்க (நட்டம்) அழல் உமிழ்தல், வெப்பத்தை வீசுதல். `உமிழ்ந்து` என்பதை, `உமிழ` எனத் திரித்துக் கொள்க.

நாடும், நகரும் திரிந்து சென்று,
நன்னெறி நாடி நயந்தவரை
மூடி முதுபிணத் திட்ட மாடே,

முன்னிய பேய்க்கணம் சூழச் சூழக்
காடும், கடலும், மலையும், மண்ணும்,
விண்ணும் சுழல அனல்கையேந்தி
ஆடும் அரவப் புயங்கன் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங் காடே.

#9

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நயத்தல் - விரும்புதல். `பிணம்` என்றது, பிணமான நிலையை, `பிணத்து மூடி` என மாற்றி, `பிணமாய்விட்ட நிலையில் அவர்களைத் துணியால் மூடி மறைத்து` என உரைக்க. மாடு - பக்கம்; இடம் `பிணத்தை இட்ட இடம்` என்றதனால் அது, `முதுகாடு` என்றதாயிற்று. `இட்ட மாடே ஆடும் `புயங்கன்` என இயைக்க, முன்னிய - பலவற்றைக் கருதிய. அரவப் புயங்கன் - பாம்பையணிந்த கூத்தன். `புயங்கம்` என்பது ஒருவகைக் கூத்தா யினும், அஃது இங்குப் பொதுப் பொருளே தந்தது; என்னை? இறைவன் காட்டில் ஆடுவது எல்லா நடனங்களையும் ஆதலின், `காடு, கடல், மலை, மண்` என்பன, `முல்லை, நெய்தல், குறிஞ்சி, மருதம்` என்பவற்றைச் சுட்டியவாறு `நன்னெறி நாடி நயந்த வரை இட்டம் இடம்` என்றது, `தீயோர் மட்டுமன்று; நல்லோருந்தாம் அடையும் இடம் அது` என்றபடி. எனவே, `எங்கள் அப்பன் ஆடும் இடத்தை அடையாதார் எவரும் இல்லை` என்பது உணர்த்தும் முகத்தால், `அவனே அனைத்துயிர்க்கும் புகலிடம் என்பதைக் குறிப்பால் உணர்த்தியதாம். தொல்காப்பியரும், `பலர் செலச் செல்லாக் காடு` -* என்பதனான் இப்பொருளை இங்ஙனமே குறிப்பாற் சுட்டினார்.

துத்தம், கைக்கிள்ளை, விளரி, தாரம்,
உழை, இளி ஓசைபண் கெழுமப் பாடிச்
சச்சரி, கொக்கரை, தக்கை யோடு,
தகுணிதம் துந்துபி தாளம் வீணை
மத்தளம் கரடிகை வன்கை மென்தோல்
தமருகம், குடமுழா, மொந்தை வாசித்
தத்தனை விரவினோ டாடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங் காடே.

#10

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஓசை` என்றதனை, `குரல்` எனக் கூறியதாகக் கொண்டு, `துத்தம்`

முதலிய ஏழும் ஏழிசைகளின் பெயர் என உணர். இந்த ஏழிசைகளையும் தக்கபடி கூட்டுமாற்றால் பண்கள் பிறக்கும் ஆதலின், இவைகளை, `பண் கெழுமப் பாடி` என்றார். கெழும - பொருந்த. சச்சரி முதல் மொந்தை ஈறாகக் கூறப்பட்டவை வாத்திய வகைகள். `கைக்கிளை` என்பது விரித்தல் விகாரம் பெற்றது.
வன் கை மென்தோல் தமருகம் - வலிய இரு பக்கங்களிலும் மெல்லிய தோலையுடைய உடுக்கை. அத்தனை விரவினோடு, `அத்தனை வாத்தியங்களின் ஒத்திசையோடு ஒத்து நிகழ ஆடும் எங்கள் அப்பன்` என்க. `சச்சரி` இன எதுகை `வாசித்து` என்பதனை, `வாசிக்க` எனத்திரிக்க. இதன்கண் அம்மையார் இசைக் கலையின் சிறப்புக்களைப் புலப்படுத்தினமை காண்க. `புயங்கன்` முதலிய சொற்களால் பரதக் கலையைப் புலப்படுத்தி, `அனைத்துப் பரதங்களை யும் ஆடும் பெருமானே வல்லவன்` என்பதனைப் புலப்படுத்தலும் அம்மையாரது திருவுள்ளம் என்க.

புந்தி கலங்கி, மதிம யங்கி
இறந்தவ ரைப்புறங் காட்டில் இட்டுச்
சந்தியில் வைத்துக் கடமை செய்து
தக்கவர் இட்டசெந் தீவி ளக்கா
முந்தி அமரர் முழவி னோசை
திசைகது வச்சிலம் பார்க்க ஆர்க்க,
அந்தியின் மாநடம் ஆடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங் காடே.

#11

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

புந்தி - புத்தி, மதி - அறிவு. `கலங்கி, மயங்கி` என்றது, இறப்பு வருங்காலத்து நிகழ்வனவற்றைக் கூறியவாறு. சந்தி, உறவினர் நண்பர்களது கூட்டம். கடமை, ஈமக் கடன், தக்கவர், செய்ய உரிமையுடையவர்; புதல்வர் முதலானோர். தீ, பிணத்திற்கு இட்ட தீ. `அதுவே விறகாய் இருக்க ஆடுகின்றான்` என்க. அவ்வாட்டத்தை மக்கள் காணார் ஆகலான், அதற்கு அமரர்களே வாத்தியம் வாசிப்பா ராவர். முழவு - மத்தளம், திசை கதுவ - திசைகளை உள்ளடக்கி நிகழ. அந்தி, மாலைக் காலம், மா நடம், நெடிது நிகழும் நடனம்.

ஒப்பினை யில்லவன் பேய்கள் கூடி,
ஒன்றினை ஒன்றடித் தொக்க லித்து,
பப்பினை யிட்டுப் பகண்டை பாட,
பாடிருந் தந்நரி யாழ மைப்ப,

அப்பனை அணிதிரு ஆலங் காட்டெம்
அடிகளைச் செடிதலைக் காரைக் காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
சிவகதி சேர்ந்தின்பம் எய்து வாரே.

#12

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஒப்பினை` என்பதில் ஐ, இரண்டாம் வேற்றுமை யுருபு.
`இல்லாதனவாகிய வலி பேய்கள்` என்க. `ஒக்கக் கலித்து` என்பது, `ஒக்கலித்து` எனக் குறைந்து நின்றது. ஒரு சேரக் கூச்சலிட்டு` என்பதாம். `பகண்டை` மேலேயும் *(பாட்டு -6)* கூறப்பட்டது. பாடு - பக்கம். `அந்நரி` என்பதில் அகரம் பண்டறி சுட்டு. `காரைக்காலில் தோன்றியதாகிய இந்தப் பேய், மற்றைப் பேய்கள் ஒன்றை ஒன்று அடித்துக் கொண்டு ஆரவாரிக்கின்ற ஆரவாரத்தின் இடையே, நரியின் குரலையே யாழிசையாகக் கொண்டு பகண்டைகள் பாட, அந்தப் பாட்டோடு ஆலங்காட்டுள் அடிகளைச் செப்பிய செந்தமிழ்ப் பாடல்கள் பத்தினையும் முறையாகப் பாட வல்லவர்கள் சிவகதி சேர்ந்து இன்பம் எய்துவார்` என முடிக்க.
அம்மையார் தாம் உலக வாழ்வில் வாழ்ந்த காலத்திலும், `சிவபெருமானே யாவர்க்கும் உண்மை அப்பன்` என்று உணர்ந்து, `அப்பா! அப்பா!` என்று சொல்லி வந்து, கயிலையிலும் பெருமான் `அம்மையே` என்று அழைக்க, தாம், `அப்பா` என்று அழைத்தபடியே, இத்திருப்பதிகத்திலும், \\"எங்கள் அப்பன், எங்கள் அப்பன்\\" எனப் பலமுறை சொல்லி இன்புற்றமையைக் காணலாம்.
உலக மக்கள் எளிதில் உணரத் தக்கதாக, `சிவன் இங்குள்ள சுடுகாடுகளிலே அங்குள்ள பேய்கள் சூழ அனலிடை. ஆடுகின்றான்` எனப் பெரியோர் பலரும் ஒரு படித்தாகக் கூறிவந்த போதிலும் அதன் உண்மைப் பொருள், ஊழியிறுதிக்கண் உலகெலாம் ஓடுங்கியுள்ள பொழுது, உடம்பும், கருவிகரணங்களும் ஆகியவற்றுள் ஒன்றும் இன்றி இருளிற் கிடக்கும் உயிர்களை மீள உடம்போடும், கருவி கரணங்களோடும் கூடப் படைத்துக் காக்க வேண்டி யவற்றிற்கு ஆவன வற்றைச் செய்தலாகிய சூக்கும நடனத்தைச் செய்கின்றான்` என்பதே யாகலின், `அந்த உண்மையை உணர்ந்து இப்பதிகத்தினைப் பாட வல்லவர்கள் சிவகதி சேர்ந்து இன்பம் எய்துவார்கள்` என்பதாம். இவ் வுண்மையை உணராதவர்கள் எல்லாம், `சிவன் சுடுகாட்டில் ஆடுபவன்` எனச் சொல்லி இகழ்வார்கள் என்பதை அம்மையார் தமது அற்புதத்

திருவந்தாதியில்,
`இவரைப் பொருளுணர மாட்டாதா ரெல்லாம்
இவரை யிகழ்வதே கண்டீர்`*
என அருளிச் செய்வார். பதிகந்தோறும் திருக்கடைக்காப்புச் செய்யும் ஞானசம்பந்தர்க்கு முன்பே அம்மையார் அது செய்தமையை அவரது திருமொழிகள் பலவற்றிலும் காணலாம்.
b

எட்டி இலவம் ஈகை
சூரை காரை படர்ந்தெங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த
கள்ளி சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த
காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி
பாடக் குழகன் ஆடுமே.

#13

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

எட்டியும், இலவமும் மர வகைகள். ஈகையும் சூரையும் கொடி வகைகள். காரை, செடி. `படர்ந்து` என்றது இரட்டுற மொழிதலாய், `பரவி` என்னும் பொருளையும் தந்தது. சுட்ட - பிணங்களைச் சுட்ட. `சுட்ட சுடலை எங்கும் எட்டி முதலியன பரவி, சூழ்ந்த கள்ளிகள் கழுகு முதலியவற்றின் வாயினின்றும் வீழ்ந்த குடர்களைப் பற்றி நிற்கும்படி கிடந்த பிணங்கள்` என்க. பறைபோல் விழி - அகன்ற கண்கள். `காட்டில் பேய் முழவங் கொட்ட, கூளி பாடக் குழகன் ஆடும்` என வினை முடிக்க. கூளி - பூதம். குழகன் - அழகன்.

நிணந்தான் உருகி நிலந்தான்
நனைப்ப நெடும்பற் குழிகட்பேய்
துணங்கை யெறிந்து சூழும்
நோக்கிச்சுடலை நவிழ்த் தெங்கும்
கணங்கள் கூடிப் பிணங்கள்
மாந்திக் களித்த மனத்தவாய்
அணங்கு காட்டில் அனல்கை
யேந்தி அழகன் ஆடுமே.

#14

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நிணம், துணங்கை இவை மேலே கூறப்பட்டன.* நிணம் உருகுதல் பிணம்சுடு தீயால், சூழும் நோக்கி - சுற்றிலும் பார்த்து. நவிழ்த்து - விரும்பி. கணங்கள் - பேய்க் கூட்டம். மாந்தி - உண்டு. களித்தல் - மயங்குதல். அணங்கு - துன்பம் தருகின்ற. `தான் இரண்டும் அசைகள்.

புட்கள் பொதுத்த புலால்வெண்
தலையைப் புறமே நரிகவ்வ
அட்கென் றழைப்ப ஆந்தை
வீச அருகே சிறுகூகை
உட்க விழிக்க ஊமன்
வெருட்ட ஓரி கதித்தெங்கும்
பிட்க நட்டம் பேணும்
இறைவன் பெயரும் பெருங்காடே.

#15

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

புட்கள் - பின்னர்க் கூறப்படுவன தவிர ஏனைய காக்கை, பருந்து முதலியன. பொதுக்கல் - குத்துதல். `அட்கு` என்பது ஒலிக்குறிப்பாதலை, அதனை அடுக்கிக் கூறியறிக. அழைத்தல், தன் இனத்தை. `சிறகை வீசை` என ஒரு சொல் வருவிக்க.

உட்க - அஞ்சும் படி. ஊமன் - பெரிய கூகை. ஓரி, நரி வகைகளில் ஒன்று. கதித்தல் - ஓடுதல். பிட்க - பிளவு செய்ய. `நட்டம் பெயரும்` என இயைக்க. பேணும் - யாவராலும் வழிபடப்படும். இறைவன் - சிவன். பெயர்தல், அடி பெயர்த்து ஆடுதல். `பெயரும் பெருங்காட்டில்` என ஏழனுருபு இறுதிக்கண் தொக்கது. `வெண் தலையை நரி கௌவுதற் பொருட்டுத் தன் இனத்தை `அட்கு` என்று கூச்சல் இட்டு அழைக்கக் கண்டு, ஆந்தை சிறிய சிறகை வீச கூகை, அச்சம் உண்டாகும்படி கண்களை விழித்துப் பார்க்க, பெரிய கூகை தனது குரலால் வெருட்ட, இந்நிலையிலும் ஓரிகள் ஓடித் தசையைப் பிட்டுத் தின்னல் நிகழுகையில் இறைவன் பெருங்காட்டில் ஆடுகின்றான்` என்றபடி.

செத்த பிணத்தைத் தெளியா
தொருபேய் சென்று விரல்சுட்டிக்
கத்தி உறுமிக் கனல்விட்
டெறிந்து கடக்கப் பாய்ந்துபோய்ப்
பத்தல் வயிற்றைப் பதைக்க
மோதிப் பலபேய் இரிந்தோடப்

பித்த வேடங் கொண்டு
நட்டம் பெருமான் ஆடுமே.
#16
உயிர் நீங்கியதனால் பிணமாம் நிலையை அடைந்த உடம்பை அதன் உண்மையை அறியாமல் `படுத்துக் கிடக்கின்ற ஆள்` என்று நினைத்து ஒரு பேய் அதன் அருகிற் சென்று தனது சுட்டுவிரலைக் காட்டி, உரக்கக்கத்தி, உறுமி, கொள்ளி ஒன்றை எடுத்து வீசி அப்பாற் செல்ல, அதன் கருத்தையே `மெய்` என்று நினைத்து மற்றைப் பேய்களும் அந்த ஆளுக்கு அஞ்சித் தங்கள் பெரிய வயிற்றில் அடித்துக் கொண்டு அவ்விடத்தைவிட்டு ஓட, (இத் தன்மையதாய் இருக்கின்ற காட்டில்) பெருமான்தானும் ஒரு பித்தன் போல வேடம் பூண்டு நடனம் ஆடுகின்றான்.
`பிணம்` என்றது, `உடம்பு` என்னும் அளவாய் நின்றது. விரலைக் காட்டிக் கத்தி உறுமியது கிடக்கின்ற ஆளை அச்சுறுத்தற்கு, பத்தல், வீணைத் தண்டு பொருத்தப்பட்டுள்ள குண்டுப் பகுதி `அது போலும் வயிறு` என்க. `ஒரு பேய், தெரியாது சென்று, சுட்டி, கத்தி, உறுமி, எறிந்து கடக்க, பல பேய் பாய்ந்து போய் வயிற்றை மோதி இரிந்து ஓட பெருமான் ஆடும்` என வினை முடிக்க.

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

முள்ளி தீந்து முளரி
கருகி மூளை சொரிந்துக்குக்
கள்ளி வற்றி வெள்ளில்
பிறங்கு கடுவெங் காட்டுள்ளே
புள்ளி உழைமான் தோலொன்
றுடுத்துப் புலித்தோல் பியற்கிட்டுப்
பள்ளி யிடமும் அதுவே
ஆகப் பரமன் ஆடுமே.
#17
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முள்ளி - முள்ளையுடைய செடிகள். முளரி - தீ. அஃது இங்கு அதனையுடைய விறகைக் குறித்தது. வெள்ளில் - விளா மரம். பிறங்குதல் - விளங்குதல். முள்ளிகள் தீந்து போயதும், கள்ளி பால் வற்றியதும் பிணங்களைச் சுடுகின்ற தீயால். எரிகின்ற விறகு கரிந்து போயது, பிணங்களின் முளை சொரிதலால். உகுதல் - சிந்துதல். விளா மரம்

மட்டுமே விளங்கியிருந்தது` என்க. உழை, ஒருவகை மான். உழை மான், இருபெயர் ஒட்டு.
பியல் - தோள். பியற்கு. பியலின்கண்; உருபு, மயக்கம். பள்ளி இடம் - நிலையாக இருக்கும் இடம். அதுவே - அந்தக் காடே. உம்மை, சிறப்பு. எண்ணின் கண் வந்த செய்தென் எச்சங்கள், `பிறங்கு` என்னும் ஒருவினை கொண்டு முடிந்தன.

வாளைக் கிளர வளைவாள்
எயிற்று வண்ணச் சிறுகூகை
மூளைத் தலையும் பிணமும்
விழுங்கி முரலும் முதுகாட்டில்
தாளிப் பனையின் இலைபோல்
மயிர்க்கட் டழல்வாய் அழல்கட்பேய்
கூளிக் கணங்கள் குழலோ
டியம்பக் குழகன் ஆடுமே.

#18

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வாளை` என்பதில் ஐ - சாரியை. வாள், அதன் வடிவைக் குறித்தது. கிளர்தல் - விளங்குதல். `எயிறு` என்றது அலகினை. வளை - வளைந்த. வாள் - ஒளி. வாளின் வடிவு விளங்கு கின்ற, வளைந்த, ஒளி பொருந்திய அலகு` என்க. முரலுதல் - மூக்கால் ஒலித்தல். தாளிப்பனை, விரிந்த மடல்களையுடைய ஒருவகைப் பனை. ஓலையை, `இலை` என்றது மரபு வழுவமைதி. கட்டு அழல் மிகுந்த நெருப்பு. அழல் வாய்ப் பேய் - கொள்ளி வாய்ப் பேய். அழல் கண் பேய் - கொள்ளிக் கண் பேய். கூளி - பூதம். குழலோடு இயம்புதல் - குழலை ஊதித் தாமும் இசைத்தல். `குழகன்` மேலே சொல்லப்பட்டது.*

நொந்திக் கிடந்த சுடலை
தடவி நுகரும் புழுக்கின்றிச்
சிந்தித் திருந்தங் குறங்குஞ்
சிறுபேய் சிரமப் படுகாட்டின்
முந்தி அமரர் முழவின்
ஓசை முறைமை வழுவாமே
அந்தி நிருத்தம் அனல்கை
யேந்தி அழகன் ஆடுமே.

#19

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நொந்திக் கிடந்த - சில நாள் ஏமம் இன்றிக் கிடந்த. தடவி - துழாவி. புழுக்கு - புழுக்கல்; சோறு. சிந்தித்து - கவலை யடைந்து. சிரமம் - துன்பம். `அந்தியில்` என ஏழாவது விரிக்க.

வேய்கள் ஓங்கி வெண்முத்
துதிர வெடிகொள் சுடலையுள்
ஒயும் உருவில் உலறு
கூந்தல் அலறு பகுவாய
பேய்கள் கூடிப் பிணங்கள்
மாந்தி அணங்கும் பெருங்காட்டில்
மாயன் ஆட மலையான்
மகளும் மருண்டு நோக்குமே.

#20

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வேய்கள் - மூங்கில்கள். `ஓங்கி வெடிகொள், உதிர வெடிகொள் சுடலை` என்க. ஓய்தல் - இளைத்தல். உலறுதல் - காய்தல். பகுவாய் - பிளந்த வாய் அணங்கும் - வருந்தும் `பேய்களின் வாழ்க்கை துன்ப வாழ்க்கை` என்றபடி. மாயம் - கள்ளத் தன்மை; வேட மாத்திரத்தில் பல பெற்றியனாகத் தோன்றுதல். அப்பன் நடனத்தை அம்மை காணுதலை இத்திருப்பாட்டில் குறித்தருளினார். மருட்சி - வியப்பு.

கடுவன் உகளுங் கழைசூழ்
பொதும்பிற் கழுகும் பேயுமாய்
இடுவெண் டலையும் ஈமப்
புகையும் எழுந்த பெருங்காட்டில்
கொடுவெண் மழுவும் பிறையுந்
ததும்பக் கொள்ளென் றிசைபாடப்
படுவெண் துடியும் பறையுங்
கறங்கப் பரமன் ஆடுமே.

#21

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கடுவன் - ஆண் குரங்கு. உகளும் - கிளைகளில் பாய்கின்ற. கழை - மூங்கில், பொதும்பு - புதர். இடுதல் - புதைத்தல். `புதைத்ததனால் உண்டான வெண்டலை` என்க. ஈமம் - பிணஞ் சுடும் விறகு. வெண்டலையை `எழுந்த` என்றது, `குழியினின்றும் வெளிப் போந்த`

என்றபடி. மழுவுக்கு வெண்மை கூர்மையாலும், துடிக்கு வெண்மை அதன் தோலினாலும் ஆகும். ததும்ப - ஒளிவீச. கொள்ளெனல், ஒலிக் குறிப்பு. எனவே, `அங்ஙனம் பாடுவன பூதங்கள்` என்பது பெறப்பட்டது. படுதல் - ஒலித்தல். துடி - உடுக்கை. கறங்குதல் - ஒலித்தல். தடி, இறைவனது. பறை, தேவர்களது.

குண்டை வயிற்றுக் குறிய
சிறிய நெடிய பிறங்கற்பேய்
இண்டு படர்ந்த இருள்சூழ்
மயானத் தெரிவாய் எயிற்றுப்பேய்
கொண்டு குழவி தடவி
வெருட்டிக் கொள்ளென் றிசைபாட
மிண்டி மிளிர்ந்த சடைகள்
தாழ விமலன் ஆடுமே.

#22

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குண்டு - ஆழம், ஐ, சாரியை. `குறியனவாயும், சிறியனவாயும், நெடியனவாயும் பிறங்குதலையுடைய பேய்` என்க. பிறங்குதல் - விளங்குதல். இண்டு இண்டை; இண்டங் கொடி. வெருட்டுதல் - அச்சுறுத்தல். `பேய்` இரண்டையும் பன்மையாகக் கொள்க. பிள்ளைப் பேய்களைத் தாய்ப் பேய்கள் இருட்காலத்தில் தடவிக் கொடுத்து, ஆயினும் அச்சுறுத்தி, அவை குறும்பு அடங்கி அமைதியுற்றிருக்க இசை பாடின என்க. முதலில் உள்ள `பேய்` என்பதில் இரண்டன் உருபு விரிக்க.

எரிவாய்ப் பேய் - கொள்ளி வாய்ப் பேய். கொள்ளென்று இசைபாடுதல் முன் பாட்டிலும் வந்தது. `குழவியாக` என ஆக்கம் வருவிக்க. மிண்டுதல் - நெருங்குதல்.

சூடும் மதியம் சடைமேல்
உடையார் சுழல்வார் திருநட்டம்
ஆடும் அரவம் அரையில்
ஆர்த்த அடிகள் அருளாலே
காடு மலிந்த கனல்வாய்
எயிற்றுக் காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடி
யாடப் பாவம் நாசமே.

#23

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`திருநட்டமாகச் சுழல்வார்` என ஆக்கம் விரித்து, மாறிக் கூட்டுக. `அருளாலே பாடிய` என ஒரு சொல் வருவிக்க. இதனால் அம்மையார் பாடல்கள் அருள்வழி நின்று அருளிச் செய்தனவாதல் அறிந்துகொள்ளப்படும். காடு மலிந்த - காட்டை மகிழ்ந்து அங்கு வாழ்கின்ற. அம்மையார் தமது பணிவு தோன்ற மற்றைப் பேய்களைப் போலவே தம்மை வருணித்துக் கொண்டார். ஆடுதல், பாடற் பொருள் விளங்கச் செய்கை காட்டி நடித்தல்.

காரைக்காலம்மையார் - திருஇரட்டைமணிமாலை

கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும்
போதஞ்சி நெஞ்சமென்பாய்த்
தளர்ந்திங் கிருத்தல் தவிர்திகண்
டாய்தள ராதுவந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத்
திடைவளர் கோட்டுவெள்ளை
இளந்திங் களும்எருக் கும்இருக்
குஞ்சென்னி ஈசனுக்கே.

#24

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நெஞ்சமே ஈசனுக்கே வந்தி; வெந்துயர் வந்து அடும்போது அஞ்சி, என்பாய் இங்குத் தளர்ந்திருத்தலைத் தவிர்தி` என இயைத்துக் கொள்க. வெந்துயர் கிளர்ந்து, வந்து அடும் போது - கொடிய துன்பம் மிகுந்து வந்து வருத்தும்போது, என்பாய்த் தளர்ந்திருத்தல் - உடம்பு எலும்பாய் இளைத்துப் போகும்படி மெலிந்திருத்தல்.

வளர்ந்து உந்து கங்கை - பெருகி மோதுகின்ற கங்கை. கோட்டுத் திங்கள் - வளைவையுடைய சந்திரன். `ஈசனுக்கு` என்பதை, `ஈசனை` எனத் திரிக்க. தளராது வந்தி - மனம் சலியாது வணங்கு.

`சிவனை மனம் சலியாது வணங்குவாரைத் துயர்வந்து அணுகாது` என்றதாம்.

ஈசன் அவனல்லாது இல்லை எனநினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து - பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்
பிறவாமை காக்கும் பிரான்.

#25

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈசன் - ஐசுவரியம் உயையவன்; அஃதாவது, உயிர்களாகிய அறிவுடைப் பொருள்களை அடிமைகளாகவும், ஏனை அறிவிலாப் பொருள்களை உடைமைகளாகவும் உடையவன். எனவே, `முழுமுதல் தலைவன்` என்பதாயிற்று `அவன்` என்பது, முன்னைப் பாட்டிற் போந்த அந்த ஈசனைச் சுட்டிற்று. நினைதல். இங்குத் துணிதலைக் குறித்தது. கூசுதல் - தம்மையும் ஏனையோரை யும் தலைவர்களாக எண்ண நாணுதல். `அவனையே மனத்தகத்துக் கொண்டிருந்து` என்க. `கொண்டிருந்தும்,

பேசியும்` என எண்ணும்மை விரிக்க. `பிரான்` என்றது, `அவன்` என்னும் சுட்டளவாய் நின்றது. பிறவாமை, எதிர்மறை வினையெச்சம். `சிவனைப் பொது நீக்கியுணர்ந்து, மறவாது நினைவாரை அவன் பிறவாமற் காப்பான்` என்றவாறு.

பிரானென்று தன்னைப்பன் னாள்பர
வித்தொழு வார்இடர்கண்
டிரான்என நிற்கின்ற ஈசன்கண்
டீர்இன வண்டுகிண்டிப்
பொராநின்ற கொன்றை பொதும்பர்க்
கிடந்துபொம் மென்துறைவாய்
அராநின் றிரைக்குஞ் சடைச்செம்பொன்
நீள்முடி அந்தணனே.

#26

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`அந்தணன், தன்னைப் பன்னாள் பரவித் தொழுவாரது இடரைக் கண்டு *(வாளா)* இரான் என நிற்கின்ற ஈசன்` என இயைக்க. `பிரான்` என்றது சொல்லுவாரது குறிப்பால், `முழுமுதல் தலைவன்` என்னும் பொருட்டாய் நின்றது. `தன்னையே பிரான் என்று` எனப் பிரிநிலை ஏகாரம் விரித்து, முன்னே கூட்டுக. பரவுதல் - துதித்தல். `ஈசன்` என்பது இங்கு, `இறைவன்` என முன்னர்ப் பொதுமையில் நின்று, பின்னர் `இரான் என நிற்கின்ற` என்னும் அடைபெற்று, சிவனது சிறப்புணர்த்தி நின்றது. `தொழுவாரவர் துயராயின தீர்த்தல் உன தொழிலே` *(தி.7 ப.1 பா.9)* என நம்பியாரூரரும் அருளிச் செய்தார். கிண்டுதல் - கிளறுதல். பொருதல் - போர் செய்தல். பொதும்பர் - சோலை. பூக்களால் நிரம்பியிருத்தல் பற்றித் திரு முடியை, `சோலை` என்றார். பொம் மெனல், ஒலிக் குறிப்பு. `துறை` எனவே, `கங்கை` என்பது தானே பெறப்பட்டது. `சடையாகிய செம் பொன் முடி` என்க. `சடை, நிறத்தால் பொன்போல்கின்றது` என்பதாம். `பிற முடிதனை விரும்பாதவன்` என்பது குறிப்பு. அந்தணன் - அழகிய தட்பத்தினை *(கருணையை)* உடையவன்; காரணப் பெயர். கண்டீர், முன்னிலையசை. `தன்னைப் பொது நீக்கி நினைந்து, பன்னாள் பரவித் தொழுவாரது இடரை நீக்குபவன் சிவன்` என்பதாம்.

அந்தணனைத் தஞ்சம்என் றாட்பட்டார் ஆழாமே
வந்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன் - கொந்தணைந்த
பொன்கண்டால் பூணாதே கோள்அரவம் பூண்டானே
என்கண்டாய் நெஞ்சே இனி.

#27

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`முன்னைப் பாடலிற் கூறிய அவ்வந்தணன் அத்தன்மையன் ஆதலின், நெஞ்சே, இனியேனும் அவனது பெருமையைச் சொல்லி அவனைப் புகழ்` என்பது இப்பாட்டின் திரண்ட பொருள். இதன் முதல் இரண்டடிகள் முன்னைப் பாட்டிற் கூறியவற்றை மீட்டும் அநுவதித்துக் கூறியன. `துயரில் ஆழாமே` எனச் சொல்லெச்சம் வருவித்துரைக்க. கொந்து - கொத்து; என்றது தீக் கொழுந்தை. `இணர் எரி` * என்றல் வழக்கு. `கொந்தில் அணைந்த பொன்` என்க. நெருப்பில் காய்ச்சி ஓட விட்ட பொன், மாசு நீங்கி ஒளி மிக்கதாகும். பொன் ஆகுபெயராய், அதனால் ஆகிய அணி கலங்களைக் குறித்தது. கோள்- கொடுமை. `இனி` என்பதன் பின், `ஆயினும்` என்பது சொல்லெச்சமாய் எஞ்சி நின்றது. `அந்தணன்` என்றது, `அவ்வந்தணன்` என்னும் பொருட்டாகலின் முதற்கண், `அந்தணன்` என்றே வைத்து, பின், `அவனை என்` எனக் கூட்டி முடிக்க. கண்டாய், முன்னிலையசை. `கோள் அரவம் பூண்டமையே அவன் `தஞ்சம்` என்று அடைந்தாரை ஆழாமாற் காத்தலைத் தெரிவிக்கும்` என்பது குறிப்பு.
`அறியாது` கழிந்த நாள்கள் போக, அறிந்த பின்னராயினும் தாழாது சிவனைத் துதித்தல் வேண்டும்` என்பதாம்.

இனிவார் சடையினில் கங்கையென்
பாளைஅங் கத்திருந்த
கனிவாய் மலைமங்கை காணில்என்
செய்திகையிற் சிலையால்
முனிவார் திரிபுரம் மூன்றும்வெந்
தன்றுசெந் தீயின்மூழ்கத்
தனிவார் கணையொன்றி னால்மிகக்
கோத்தஎம் சங்கரனே.

#28

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முனிவார் - கோபிப்பவர்; திரிபுரம், (வானத்தில்) திரிந்தபுரம். என வினைத்தொகை. பகைவர், `வெந்து மூழ்க` என்பதனை, `மூழ்கி வேவ` என மாற்றிவைத் துரைக்க. சிலை - வில். `சிலையால்` என்றது, `விற் போரினால்` என்றபடி. வார்கணை- நீண்ட அம்பு. `கணை ஒன்றினால்` என்பதை, `கணை ஒன்றினை` எனத் திரித்துக் கொள்க. அங்கம் -

உடம்பு. `காணின் என் செய்தி` என்றது, `நாணித் தலை குனிவை போலும்` என்றபடி. எனினும், `உயிர்களின் நன்மைக்காகவன்றிப் பிறிதொன்றையும் செய்யாதவன்நீ` என்பதை அவன் அறிவான் ஆகலின், `இதுவும் ஒரு நன்மைக்கே` என்பது உணர்ந்து அவனும் முனியப் போவதில்லை; நீயும் நாணுதற்குக் காரணம் இல்லை` என்பது இப்பாட்டின் உள்ளுறைச் சிறப்பு இதனை வட நூலார் `நிந்தாத் துதி` என்றும், அதனைத் தமிழில் பெயர்த்துக் கூறுவார், `பழிப்பது போலப் புகழ்தல்`* என்றும் கூறுவர். பின்னும் இவ்வாறு வருவனவற்றை உணர்ந்து கொள்க.

சங்கரனைத் தாழ்ந்த சடையானை அச்சடைமேற்
பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை - அங்கொருநாள்
ஆவாஎன்று ஆழாமைக் காப்பானை எப்பொழுதும்
ஒவாது நெஞ்சே உரை.

#29

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சங்கரன் - இன்பத்தைச் செய்பவன். தாழ்ந்த சடை - நீண்டு தொங்குகின்ற சடை. பொங்கு - சினம் மிகுகின்ற. `அங்கொருநாள்` என்றது, கூற்றுவன் வரும் நாளினை. ஆ! ஆ!, இரக்கக் குறிப்பு இடைச்சொல். என்று - என்று இரங்கி. `ஆழாமைக் காப்பான்` என்பது மேலேயும் வந்தது.* ஓவாது - ஒழியாமல். உரை - சொல்லு; துதி. எப்பொழுதும் ஓவாது துதித்தால்தான் காப்பான்` என்பது குறிப்பு. `அன்று துதித்தல் இயலாது` என்பதாம், `சாங்காலம் சங்கரா! சங்கரா என வருமோ` என்பது பழமொழி.

உரைக்கப் படுவதும் ஒன்றுண்டு
கேட்கின்செவ் வான்தொடைமேல்
இரைக்கின்ற பாம்பினை என்றுந்
தொடேல்இழிந் தோட்டத்தெங்கும்
திரைக்கின்ற கங்கையுந் தேன்நின்ற
கொன்றையுஞ் செஞ்சடைமேல்
விரைக்கின்ற வன்னியுஞ் சென்னித்
தலைவைத்த வேதியனே.

#30

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உம்மை, சிறப்பு. செவ்வான் தொடை - செவ்விய உயர்ந்த மலர்மாலை;

கொன்றை மாலை. இரைக்கின்ற - சீறிக்கொண்டிருக்கின்ற. தொடேல் - தொடாதே. என்றது, அது, `பிறைச் சந்திரன் வளரும்` என்று பசியோடு காத்திருக்கின்றது; அதனால் சினம் மிகுந்து கடித்துவிடலாம் - என்றபடி. இதனால், `தம்முட் பகையுடையவனவாகிய பாம்பையும், மதியையும் ஓரிடத்தில் சேர்த்து வைத்திருக்கின்றா யல்லையோ` எனக் குறிப்பாற் புகழ்ந்தவாறு. இழிந்து ஓட்டத்து - கீழே வீழ்ந்து ஓடும்பொழுது. திரைக்கின்ற - அலை வீசுகின்ற. விரைக்கின்ற - `வாசனை வீசுகின்ற கொன்றை` என இயைக்க. வன்னி - வன்னியிலை. தலை, ஏழாம் வேற்றுமையுருபு. வேதியன் - வேதம் ஓதுபவன். `சிவன் சாம வேதத்தை ஓதுபவன்` என்பர். ஓதுதல் பிறர் அறியவாம்.

வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்
காதியனை ஆதிரைநன் னாளானைச் - சோதிப்பான்
வல்லேன மாய்ப்புக்கு மாலவனும் மாட்டாது
கில்லேன மாஎன்றான் கீழ்.

#31

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வேதத்தை ஓதுபவனும், வேதத்திற்குப் பொருளாய் உள்ளவனும், வேதத்தைச் செய்தவனும் ஆகிய ஆதிரை நன்னாளானை` என்க. `சோதித்தற்கு மாலவனும் வல் ஏனமாய்க் கீழ்ப் புக்கு, மாட்டா- கில்லேன் அமா - என்றான்` என வினை முடிக்க. சோதித்தல்- அளந்தறிதல். ஏனம் - பன்றி. கில்லேன் - மாட்டேன். `அம்மா` என்னும் வியப்பிடைச்சொல் இடைக்குறைந்து நின்றது. `மாலவனும்- கில்லேன் - என்றான்` என்றதனால், `ஏனையோர் மாட்டாமை சொல்ல வேண்டுவதோ` என்பது கருத்து.

கீழா யினதுன்ப வெள்ளக்
கடல்தள்ளி உள்ளுறப்போய்
வீழா திருந்தின்பம் வேண்டுமென் பீர்
விர வார்புரங்கள்
பாழா யிடக்கண்ட கண்டன் எண்
தோளன்பைம் பொற்கழலே
தாழா திறைஞ்சிப் பணிந்துபன்
னாளுந் தலைநின்மினே.

#32

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`இழிந்த துன்பமாகிய பெரிய கடலிலே தள்ளப்பட்டு, அதன் உள்ளே அழுந்தாமல் வேறிருந்து நுகர்கின்ற இன்பம் வேண்டும்` என்று விரும்புகின்றவர்களே - என்று எடுத்து, `தலைநின்மின்` என முடிக்க. நின்றால், `அத்தகைய இன்பம் கிடைக்கும்` என்பது குறிப்பெச்சம். தள்ளுதலுக்கு `வினையால்` என்னும் வினைமுதல் வருவிக்க. `இருந்து நுகர்கின்ற` என ஒரு சொல் வருவிக்க. `துன்பக் கலப்பு இல்லாத இன்பம்` என்றபடி. அது வீட்டின்பமேயாம். விரவார் - கலவாதவர்; பகைவர். `கண்ட` என்றது `செய்த` என்றபடி. கண்டன் - வன்கண்மையுடையவன். `வன்கண்மை குற்றத்தின் மேலது` என்பது கருத்து.

தாழாது - தாமதியாமல். இறைஞ்சுதல் - தலை வணங்குதல். பணிதல் - அடியில் வீழ்தல். தலை, இடைச் சொல்லாதலின், `தலைநின் மின்` என்றது ஒருசொல் நீர்மைத்து. `அச்செயலிலே நின்மின்` என்றதாம்.

தலையாய ஐந்தினையுஞ் சாதித்துத் தாழ்ந்து
தலையா யினவுணர்ந்தோர் காண்பர் **-** தலையாய
அண்டத்தான் ஆதிரையான் ஆலாலம் உண்டிருண்ட
கண்டத்தான் செம்பொற் கழல்**.**

#33

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தலையாய ஐந்து - மந்திரங்களுள் தலையாய ஐந்தெழுத்து, சாதித்தல் - கடை போகப் பற்றி முயலுதல். அஃது இங்குக் கணித்தலைக் குறித்தது. தாழ்தல் - வணங்குதல். தலையாயின - மேலான நூல்கள் `அருள் நூலும், ஆரணமும், அல்லாதும், அஞ்சின்- பொருள் நூல்களே` * ஆதலின் அவற்றை உணர்ந்தோர் திருவைந் தெழுத்தையே பற்றிச் சாதிப்பர் - என்றபடி. தலையாய அண்டம் - சிவலோகம். `தலையாயின உணர்ந்தோர் சாதித்துத் தாழ்ந்து கழல் காண்பர்` என வினை முடிக்க, இதனுள் சொற்பொருள் பின்வரு நிலையணி வந்தது.

கழற்கொண்ட சேவடி காணலுற்
றார்தம்மைப் பேணலுற்றார்
நிழற்கண்ட போழ்தத்தும் நில்லா
வினைநிகர் ஏதுமின்றித்
தழற்கொண்ட சோதிச்செம் மேனியெம்
மானைக்கைம் மாமலர்தூய்த்
தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி
நம்அடுந் தொல்வினையே**.**

#34

விளக்கவுரை

`நிகர் ஏதுமின்றித் தழற்கொண்ட சோதிச் செம் மேனி எம்மான்` - சிவன். அவன் தனக்குவமையில்லாதவன்; நெருப்பினிடத்துள்ள ஒளிபோலும், சிவந்த மேனியை உடையவன். `அவனது கழலழணிந்த, சிவந்த பாதங்களைக் கண்டவர்களை வணங்குபவர்களது நிழலைக் கண்டாலே வினைகள் ஓடிவிடும் என்றால், அப்பெருமானை நாம் நமது கைகளால் மலர் தூவித் தொழுவதைப் பார்த்த பிறகு நம்மை வருத்துகின்ற நமது பழைய வினைகள் நம்மை நெருங்கி நிற்குமோ` என்க. `சிவன் அடியார்களையும், அடியார்க்கு அடியார்களையும் கண்டால் வினைகள் நிற்க மாட்டாது ஓடி விடும்` என்றபடி. `கழல், நிழல், தழல்` என்பவற்றின் ஈறு திரிந்தது செய்யுள் நோக்கி. உம்மை இரண்டனுள் முன்னது இழிவு சிறப்பு; பின்னது உயர்வு சிறப்பு. `போழ்தத்து` என்பதில் அத்து, வேண்டாவழிச் சாரியை. `வினை துன்னி நிற்குமோ` என மாறிக் கூட்டுக.

தொல்லை வினைவந்து சூழாமுன் தாழாமே
ஒல்லை வணங்கி உமையென்னும் - மெல்லியலோர்
கூற்றானைக் கூற்றுருவங்காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்றானை நெஞ்சே நினை.

#35

விளக்கவுரை

தொல்லை - பழமை. தாழாமே - தாமதி யாமலே. ஒல்லை - விரைவாக. கூற்று - யமன். காய்தல். உதைத்த லாகிய தன் காரியம் தோற்றிநின்றது. வாய்ந்து - (திருமேனியில்) பொருந்தி. `வணங்கி நினை` என்பதை `நினைந்து வணங்கு` என முன் பின்னாக நிறுத்தி, விகுதி பிரித்துக் கூட்டியுரைக்க.

நினையா தொழிதிகண் டாய்நெஞ்ச
மேஇங்கொர் தஞ்சமென்று
மனையா ளையும்மக்கள் தம்மையுந்
தேறிஓர் ஆறுபுக்கு
நனையாச் சடைமுடி நம்பன் நந்
தாதைநொந் தாதசெந்தீ
அனையான் அமரர் பிரான்அண்ட
வாணன் அடித்தலமே.

#36

விளக்கவுரை

`நெஞ்சமே, மனையாளையும் மக்கள் தம்மை யும், `இங்கு ஓர் தஞ்சம்`

என்று தேறி, அண்ட வாணன் அடித்தலம் நினையாது ஒழிதியோ` என இயைத்துக்கொள்க. மனையாளும், மக்களும் அம்மையார்க்கு இல்லையாதலின், `அவர்களைத் தேறி` என்றது, `அவர்களைத் தேறும் பிறரது மனங்களைப்போலவே நீயும் ஆகி` என்றது என்க. `சிவனதாள் சிந்தியாப் பேதைமார் போல நீ வெள்கினாயே... நெஞ்சமே`*1* என அருளிச்செய்தார் ஞான சம்பந்தரும். `ஒழிதியோ` என்பதில் வினாப் பொருட்டாய ஓகாரம் தொகுத்தலாயிற்று, `கடையவ னேனைக் கருணையினாற்கலந் தாண்டு கொண்ட - விடையவனே விட்டிடுதி கண்டாய்` *2* என்பதிற்போல. அவ்வோகாரத்தால், `அங்ஙனம் செய்தியாயின் கெடுவை` என்னும் குறிப்புப் போந்தது. கண்டாய், முன்னிலையசை. இங்கு - இவ்வுலகில். தஞ்சம் - புகலிடம். தேறுதல் - தெளிதல். ஓர் ஆறு, கங்கை. கங்கை யாறு புக்கது; ஆயினும் சடை நனைய வில்லை` என்றது சடைக்கு அதுபோதவில்லை என்றபடி. நொந்தாத- மிகுக்க வேண்டாத. `மிக எரிகின்ற` என்றபடி. அனையான் - போன்றவன். அண்டவாணன் - சிவலோகத்தில் வாழ்பவன். அடித்தலம் - திருவடியாகிய புகலிடம், `புகலிடம் ஆகாததை, ஆகும் என்று மயங்கிப் புகலிடம் ஆவதை விட்டொழியாதே` என அறிவுறுத்தவாறு.

அடித்தலத்தின் அன்றரக்கன் ஐந்நான்கு தோளும்
முடித்தலமும் நீமுரித்த வாறென் - முடித்தலத்தின்
ஆறாடி ஆறாஅனலாடி அவ்வனலின்
நீறாடி நெய்யாடி நீ.

#37

விளக்கவுரை

`அடித்தலத்தின் நெரித்தவாறு` என இயையும். இன், ஐந்தாம் உருபு. அரக்கன், இராவணன். `முரித்தவாறு என்` - என்றது, `பிழை நோக்கி ஓறுத்தல் வேண்டியோ` என்றபடி. ஒறுத்தபின் இசைபாடித் துதிக்க அருள்செய்தமையும் கேட்கப்படுவதால், `பிழை செய்தவரும் அஃது உணர்ந்து பணிந்தால், பிழையை நோக்காது அருள் செய்பவன் நீ` என்பதும் குறிக்கப்பட்டதாம். `ஆடி` நான்கும் பெயர்கள். அவற்றுள் முதற்கண் உள்ளதில் இகர விகுதி செயப்படு பொருட்டாயும் ஏனையவற்றில் அது வினைமுதற் பொருட்டாயும் நின்றது. ஆறு - கங்கை. `அனலோ` என்றாயினும். `அனலின்கண்` என்றாயினும் ஏற்கும் உருபு விரித்துக்கொள்க. `நீற்றின் கண்` என ஏழாவது விரிக்க. `நீ ஆடுபவன்; நீ அரக்கனது தோளையும் முடியையும் முரிக்கக் காரணம் என்ன? என வினை முடிக்க. `தலம்` மூன்றும், `இடம்` என்னும் பொருளன. `அடிகளாகிய தலம், முடியாகிய தலம்` என்க.

நீநின்று தானவர் மாமதில்

மூன்றும் நிரந்துடனே
தீநின்று வேவச் சிலைதொட்ட
வாறென் திரங்குவல்வாய்ப்
பேய்நின்று பாடப் பெருங்கா
டரங்காப் பெயர்ந்துநட்டம்
போய்நின்று பூதந் தொழச்செய்யும்
மொய்கழற் புண்ணியனே.
#38

விளக்கவுரை

தானவர் - அசுரர். நிரந்து - ஒருங்கே. உடனே- விரைவில். `தீயின்கண் நின்று` என உருபுவிரிக்க. சிலை - வில். தொடுதல் - வளைத்தல். இது, அம்பெய்தலாகிய தன் காரியம் தோற்றி நின்றது. திரங்கு - தசை மெலிந்து தொங்கிய. வல் வாய் - பிணத்தைத் தின்னும் வாய். பெயர்ந்து - புடை பெயர்ந்து. `நட்டம் செய்யும்` என இயைக்க. `பூதம் போய் நின்று தொழ` என மாறிக் கூட்டுக. `வந்து` என்பதனை, `போய்` என்றது இடவழுவமைதி. எனவே, `நின்பால் வந்து தொழ` என்றவாறாம். மொய் கழல் - பாதத்தைச் சூழ்ந்த கழல். புண்ணியன் - அற வடிவினன். `மதில் மூன்றும் வேவச் சிலைதொட்ட வாறு என்` என்றதற்கு முன்பாட்டில் `நீ முரித்தவாறு என்` என்றதற்கு உரைத்தவாறே உரைக்க.
பின்னிரண்டடிகள் ஆசெதுகை பெற்றன.

புண்ணியங்கள் செய்தனவும் பொய்ந்நெறிக்கட் சாராமே
எண்ணியோ ரைந்தும் இசைந்தனவால் - திண்ணிய
கைம்மாவின் ஈருரிவை மூவுருவும் போர்த்துகந்த
அம்மானுக் காட்பட்ட அன்பு.
#39

விளக்கவுரை

`(யாம்) பொய்ந்நெறிகளில் சேராமல் விலகிய துடன், செய்த செயல்களும் புண்ணியங்களே. அஃது (எவ்வாற்றால் எனின்) எண்ணப்பட்ட ஐம்பொறிகளும் அம்மானுக்கு ஆட்பட்ட அன்பிற்கு இசைந்தவாயின` என இயைத்துப் பொருள் கொள்க. உம்மை, இறந்தது தழுவிய எச்சம். எண்ணிய - `ஐந்து` என்று எண்ணப் பட்ட. ஈற்று அகரம் தொகுத்தல். ஆல், அசை. கைம்மா - யானை. `ஈர் உரிவை`, வினைத் தொகை `உரித்த தோல்` என்பது பொருள். மூவுருவம் - மும்மூர்த்தி உருவம். `அன்பிற்கு` என நான்காம் உருபு விரித்து, `அன்பு செய்தற்கு` என உரைக்க. `ஐம்பொறிகள் அன்பு செய்தற்கு இசைந்தன` என்றமையால், `இசையாது மாறிச் செல்லுதலே அவற்றின் இயல்பு`

என்பதும், `அவற்றை அவ்வாறு இசையச் செய்தல் வேண்டும்` என்பதும் குறிப்பால் உணர்த்தப்பட்டன. `ஈருரிவை, மூவுருவம்` என்பது எண்ணலங்காரநயம் தோற்றி நின்றது.

அன்பால் அடைவதெவ் வாறுகொல்
மேலதோ ராடரவம்
தன்பால் ஒருவரைச் சாரவொட்
டா ததுவேயுமன்றி
முன்பா யினதலை யோடுகள்
கோத்தவை ஆர்த்துவெள்ளை
என்பா யினவும் அணிந்தங்கோர்
ஏறுகந் தேறுவதே.
#40

விளக்கவுரை

`கொல், ஐய இடைச்சொல். அதனால், அடையு மாற்றை நீரே அருளுதல் வேண்டும்` என்பது குறிப்பெச்சமாயிற்று. `ஐயரே, நும் மேலது` என முன்னிலையை வருவித்து, `நும்மைப் பிறர் அன்பால் அடைவது எவ்வாறு கொல்` என முடிக்க. ஓர் அரவு, முடி மேல் உள்ளது. ஆடு அரவு - படமெடுத்து ஆடுகின்ற பாம்பு. `ஆகவே அது சீறுகின்றது` என்றதாம். `முன்பு ஆயின` எனப் பிரித்து, `தலை ஓடுகள்` என முடித்து, `அவை கோத்து` என வேறெடுத்துக் கொண்டு உரைக்க. `கோத்து ஆர்த்து, அணிந்து, உகந்து ஏறுவது ஏர் ஏறு` என்க. ஏறு - இடப. `அது பாய்வதால் அச்சம் உண்டாதலுடன், யானை மீதும், குதிரை மீதும் ஏறாமல், இடபத்தின்மேல் ஏறுவதால், நன்கு மதிக்கவும் இயலவில்லை` என்பதாம்.

`கடகரியும் பரிமாவும் தேரும்உகந் தேறாதே
இடபம்உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ`*1*
என்றது காண்க. உகத்தல் - விரும்புதல். `பாம்பும், இடபமும் பகையா யினாரைச் சீறுதலும், பாய்தலும் செய்யுமேயல்லது, அன்பரை ஒன்றும் செய்யா` என்பதும், `யானை குதிரைகளின் மேல் ஏறியும், மணி மாலைகளை அணிந்து யாம் பெருமை பெற வேண்டுவதில்லை` என்பதும், `எவ்வாறு கொல்` என்னும் ஐயத்தை நீக்கும் விடைகள் என்பது கருத்து. `பூணாணாவதோர் அரவங்கண் டஞ்சேன்` *2* என்று அருளிச் செய்தமை காண்க.

ஏறலால் ஏறமற் றில்லையே எம்பெருமான்
ஆறெலாம் பாயும் அவிர்சடையார் - வேறோர்
படங்குலவு நாகமுமிழ் பண்டமரர்ச் சூழ்ந்த
தடங்கடல்நஞ் சுண்டார் தமக்கு.

#41

விளக்கவுரை

`எம்பெருமானும், அவிர் சடையாரும் ஆகிய நஞ்சுண்டார் தமக்கு ஏற, ஏறலால் மற்று இல்லையே` என முடிக்க. `பெருமான்` என்பது ஒருமையாயினும் உயர்த்துக் கூறும் சொல்லாதலின் பன்மையோடு மயங்கிற்று. `இல்லையே` என்னும் ஏகாரம் வினாப் பொருட்டாய், `உறவாகவும் விரும்பிலர்` என்னும் குறிப்பினதாய் நின்றது. `ஆறு` என்றது ஆகுபெயராய் அதன் நீரைக் குறித்தது. வேறோர் நாகம், உயர்ந்த பாம்பு, அது `வாசுகி` என்பது. `உமிழ்ந்த நஞ்சு, சூழ்ந்த நஞ்சு` எனத் தனித்தனி இயைக்க. `அமரரை` என்னும் இரண்டாம் உருபு தொகுத்தலாயிற்று. `அமரர் சூழ்ந்த` என்பது பாடம் அன்று, முன்னைப் பாட்டில் கூறியவாறு, `ஏற்றையே உகந்து ஏறுவது இல்லாமையாலன்று; விரும்பாமையால்` என்பது இங்குக் கங்கையைத் தாங்கி மண்ணுலகினரைக்காத்தமை, நஞ்சை உண்டு விண்ணோரைக் காத்தமை இவற்றைக் குறித்த குறிப்பால் உணர்த்தப்பட்டது.

தமக்கென்றும் இன்பணி செய்திருப்
பேமுக்குத் தாமொருநாள்
எமக்கென்று சொன்னால் அருளுங்கொ
லாமிணை யாதுமின்றிச்
சுமக்கின்ற பிள்ளைவெல் ளேறொப்ப
தொன்றுதொண் டைக்கனிவாய்
உமைக்கென்று தேடிப் பொறாதுட
னேகொண்ட உத்தமரே.

#42

விளக்கவுரை

`இணை யாதும் இன்றி` என்றது, `காளைகளைப் பயன்படுத்துகின்றவர்கள் இரண்டை இணைத்தே பயன்படுத்துவர் ஆகலின் அவ்வாறு இணைத்தற்கு ஒன்று கிடையாமையால் ஒரு காளையையே உடையவராய் இருக்கின்றார்` என்றபடி.
`இனி ஒற்றைக் காளையையே பயன்படுத்துவதாயினும் உமாதேவி ஊர்வதற்கு மற்றொரு காளை இன்றியமையாது வேண்டும்; அஃது இல்லாமையால், அவளையும் தமது ஒரு காளையின்மேலே உடன் ஏற்றிக் கொண்டு வருகின்றார்` என மேலும் குறிகூறியபடி. `இத்தகைய இலம்பாடு (வறுமை) உடையவர், அவருக்கென்றே நாம் என்றும் பணிசெய்திருப்பினும், `எமக்கு என்று என்று ஒன்று இரந்தால், அதனை ஈய வல்லவராவரோ` - என ஐயுறுகின்றோம்` என்பது இப்பாட்டிற்

கூறப்பட்ட பொருள். இதவும் நிந்தாத் துதி. `ஒருநாள் அருளுங்கொல்` என்றமையால், `எந்நாளும் அருள மாட்டாது வாளாதே இருப்பரோ` என்பதும் போந்தது. ஆம், அசை. `எமக்கு என்று` என்பதன் பின், `ஒன்று` என்பது வருவிக்க. `சொன்னால்`` என்றது, `வேண்டினால்` என்றபடி. `பிள்ளை` என்றது, இளமையைக் குறித்தது. `இணை யாதும் இன்றி` என்பது, `தனியே சுமக்கின்றது` என்பதைக் குறித்தற்கும் `வேறு ஒப்பதுஒன்று பெறாது` என்பது இணைத்தற்கு இல்லை? என்பதைக் குறித்தற்கும் கூறியன ஆகலின், கூறியது கூறல் ஆகாமை யறிக. தொண்டைக் கனி - கொவ்வைக் கனி. உத்தமர் - எல்லாரினும் மேலானவர். என்றது, `மற்றொரு காளையை இவர் கொள்ளாமைக்குக் காரணம் வறுமையன்று; உமையாளையும் ஒரு காளைமேல் உடன் கொண்டு செல்ல விரும்புதலேயாம்` என்பதை உணர்த்தி, `ஆகவே, `இவர் எம்மைத் தம் அடிமையென்று கருதியிரங்கி, வேண்டியவற்றை ஈபவரே எனவும் குறித்தவாறு. நம்பியாரூரரும் இவ்வாறே, முன்னர், `ஊர்வது ஒன்று (ஏ) உடையான்`* எனக் கூறிப் பின்னர், `உம்பர் கோன்` என அவனது பெருமையுணர்த்தியவாறு அறிக.

உத்தமராய் வாழ்வார் உலந்தக்கால் உற்றார்கள்
செத்த மரமடுக்கித் தீயாமுன் - உத்தமனாய்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்திறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து.

#43

விளக்கவுரை

உத்தமராய் - கல்வி, செல்வம், அதிகாரம், முதலியவற்றில் ஒன்றாலேனும், பலவற்றாலேனும் உயர்ந்தவர்களாய். `வாழ்வாரும்` என்னும் உயர்வு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. உலந்தக்கால் - இறந்துவிட்டால். `உயர்ந்தவர்களாய் வாழ்ந்தவர் களாயிற்றே` என்று எண்ணுதல் இன்றி, எல்லாரோடும் ஒப்பச் செத்த மரத்தையே (காய்ந்த விறகையே) அடுக்கி, அவற்றோடு ஒன்றாகச் சேர்த்து! உறவினர்கள் தீத்து (எரித்து) விடுவார்கள் `இவ்வளவே இவ்வுலக வாழ்வு` என்றபடி. `ஆகையால் இந்த வாழ்விலே ஆழ்தலை யுடைய நெஞ்சே, உன்னையும் அவ்வாறு செய்தற்கு முன், சிவனது புகழை அறிந்தோர் சொல்லக் கேள்` என்க. `கேட்டால், `நிலையான வாழ்வைப் பெறுவாய்` என்பது குறிப்பெச்சம். `உத்தமன்` என்பதற்கு, முன்னைப்பாட்டில் `உத்தமர்` என்றதற்கு உரைத்தவாறே உரைக்க. `ஆழி` இரண்டில் முன்னது, `கடல்` என்னும் பொருட்டாயும், பின்னது `ஆழ்தல் உடையது` என்னும் பொருட்டாயும் நின்றன. `கிளர்ந்து கேள்` என முன்னே கூட்டி, `ஊக்கம் கொண்டு கேள்` என உரைக்க. இங்ஙனம் உரைக்கவே, `ஊக்கம்

இன்றிக் கேட்டல் பயனுடைத்தாகாது` என்பது பெறப்பட்டது.
`இரட்டை மணி மாலை இருபது பாட்டுக்களால் அமைதல் வேண்டும்` என்பதனால் திருக்கடைக் காப்புக் கூறிற்றிலர். இப்பிரபந்தம் முழுவதும் அந்தாதியாய் வந்து மண்டலித்தவாறு காண்க.

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

#44

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பயின்ற - பயின்று நன்கு உணர்ந்த. பின் - பிற்பட்ட காலம். என்றது, \`சிறு காலையே\` என்றபடி. சேர்ந்தேன் - துணையாக அடைந்தேன். என்றது, தமது ஞானத்தின் இயல்பைக் குறித்தவாறு. இதனையே சேக்கிழார்,

\`வண்டல்பயில் வனவெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை
அண்டர்பிரான் திருவார்த்தை அணையவரு வனபயின்று\`*

என அருளிச் செய்தார். நிறம் - அழகு. \`மணிகண்டம்\` எனப்படுதல் அறிக. மை ஞான்ற - கருமை நிறம் ஓரளவில் (கண்டத்தளவில்) ஒட்டி நின்ற. இடர் - துன்பம்; பிறவித் துன்பம். \`எஞ்ஞான்று தீர்ப்பது\` என்றது, \`அதனை யறிந்திலேன்\` என்னும் குறிப்பினது, அதாவது, \`இப்பிறப்பிலோ, இனி வரும் பிறப்பிலோ\` என்பதாம்.

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு.

#45

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

படரும் நெறி - செல்லும் கதி என்றது, நற் கதியை. பணித்தல் - உரிமை செய்தல். உம்மைகள், \`அவற்றை அவர் செய்யாதொழியார்\` என்பதைக் குறித்தலின், எதிர்மறை. சுடர் உரு - ஒளி வீசுகின்ற உருவம். \`கோலத்தோடு\` என உருபு விரிக்க. \`அவர்க்கு\` என்பதன் பின், \`ஆயினமையால்\` என ஒரு சொல் வருவிக்க. \`அன்பை அறுத்துவிடாது\` என்றேனும், \`அன்பு அறப் பெறாது\` என்றேனும் உரைக்க.

அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும்
அவர்க்கேநாம் அன்பாவ தல்லால் - பவர்ச்சடைமேற்
பாகாப்போழ் சூடும் அவர்க்கல்லால் மற்றொருவர்க்
காகாப்போம் எஞ்ஞான்றும் ஆள்.

#46

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதற்கண், `அல்லால்` என்றது, அன்பாதலைக் குறித்தும், பின்னர், `அல்லால்` என்றது, போழ் சூடும் அவரைக் குறித்துமாம். அன்புடையேமை, `அன்பு` என்றது உபசாரவழக்கு. பவர் - கொடி. `பவர் போலும் சடை` என்க. பாகு - ஒரு பகுதி. பாகு ஆக - ஒரு பகுதியில் பொருந்தும்படி போழ் - பிளவு. திங்களின் பிளவு. ஆள் - ஆளாம் தன்மை. `அவர்க்கு அல்லால், எம் ஆளாம் தன்மை. எஞ்ஞான்றும் மற்றொருவர்க்கு ஆகாதே போம்` என இயைத்துக்கொள்க. `ஆகாது` என்பதில் துவ்வீறும், பின்னர்த் தேற்றேகாரமும் தொகுத்தலாயின.

ஆளானோம் அல்லல் அறிய முறையிட்டாற்
கேளாத தென்கொலோ கேள்ஆமை **-** நீள்ஆகம்
செம்மையான் ஆகித் திருமிடறு மற்றொன்றாம்
எம்மையாட் கொண்ட இறை**. #47**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கேள் ஆமை யாக` என ஆக்கம் வருவிக்க. கேள் - உறவு. ஆமை, ஆமை ஓடு. அதனை அணியத் தகும் பொருளாக அணிந்த. ஆகம் - மார்பு. மார்பைக் கூறவே, உடல் முழுவதையும் கூறியதாயிற்று. `ஆகம் செம்மையான்` என, சினையினது பண்பு முதல்மேல் ஏற்றப்பட்டது. செம்மையைச் சுட்டிப் பின், `மற்றொன்று` என்றமையால், `கருமை` என்றதாயிற்று. `ஆம் இறை, ஆட்கொண்ட இறை` எனத் தனித்தனி இயைக்க. `கேளாதது என்கொலோ` என்றது, `இன்னும் முறையிடல் வேண்டும் போலும்` என்பதாம்.

இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே ஈண்டிறக்கஞ் செய்வான் **-** இறைவனே
எந்தாய் என இரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தால் அதுமாற்று வான்**.**

#48

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இறக்கம் - நீக்குதல்; அழித்தல். `இறைவன்` என்றது, `சிவன்` என்றபடி. `இறைசிவன், கடன்வேந் தன்கையிறை, யிறுப்பு. இறை சிறந்தோன்` * என்னும் நிகண்டினால், `இறைவன்` என்பது சிவனுக்கே உரிய சிறப்புப் பெயராதல் விளங்கும். `உலகம் முழுவதையும் ஆக்கி அழிப்பவனும்,

உயிர்களுக்குத் துன்பத்தை நீக்கி இன்பத்தை அளிப்பவனும் சிவனே` என்பது உணர்த்தியவாறு.

வானத்தான் என்பாரும் என்கமற் றும்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாமென்க - ஞானத்தான்
முன்நஞ்சத் தாலிருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான்
என்நெஞ்சத் தானென்பன் யான்.

#49

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வானம் - சிவலோகம். `உம்பர்கோன்` என்றது சீகண்ட உருத்திரரை- அவரது தானம் (இடம்) கயிலாயம். இருண்ட - இருள்மயமான. மொய்யொளி - செறிந்த ஒளி. `என்பாரும், என்பாரும்` என்க. யான் `ஞானத்தானும், என் நெஞ்சத்தானும்` என்பன்` என இயைத்து முடிக்க. சிவலோகத்திலும், கயிலாயத்திலும் இருத்தல் தடத்த நிலையால், ஆகலின், சிவஞானம் பெற்ற சீவன் முத்தர்களது உள்ளத்தில் இருப்பவனாக உணர்தலே அவனது உண்மை நிலையை உணர்தலாம்` என்றபடி. மூன்றாம் அடியை முதலிற் கூட்டி, அதன் இறுதியில் இரண்டாம் உருபு விரித்து, பின் வந்த `என்க` என்பதன்பின் `அவன்` எனச் சுட்டியுரைக்க.

யானே தவமுடையேன் என்னெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன் - யானே அக்
கைம்மா வுரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக் காளாயி னேன்.

#50

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரண்டாம் அடி ஈற்றில் உள்ள, `யானே` என்பது முதலாகத் தொடங்கி, ஈற்றடியின் முடிவில், `ஆதலின்` என்பது வருவித்து உரைக்க. நீற்ற - நீற்றையணிந்த, ஏகாரங்கள் ஏனையோரினின்றும் பிரித்தலின் பிரிநிலை. இவற்றால், `பிறர் தம்மை இவ்வாறு கூறிக்கொள்வன எல்லாம் மயக்க உரைகளாம்` என்றபடி. சிவனுக்கு ஆளாதலின் அருமையையும், பயனையும் குறித்தவாறு. `என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து - முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை... வலஞ்சுழி வாணனை வாயாரப் - பன்னி, ஆதரித்து ஏத்தியும், பாடியும் வழிபடும் அதனாலே` *1* எனவும், `எந்த மாதவம் செய்தனை நெஞ்சமே - பந்தம் வீடவையாய பராபரன்...

சிந்தையுள்ளும் சிரத்துளும் தங்கவே`, `என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே - மின்னு வார்சடை வேத விழுப்பொருள்.... செந்நெறி - மன்னுசோதி நம் பால் வந்து வைகவே`2 எனவும் போந்தவற்றையும் உணர்க.

ஆயினேன் ஆள்வானுக் கன்றே பெறற்கரியன்
ஆயினேன் அஃதன்றே ஆமாறு - தூய
புனற்கங்கை ஏற்றானோர் பொன்வரையே போல்வான்
அனற்கங்கை ஏற்றான் அருள்.

#51

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஆள்வானுக்கு (ஆள் ஆயினேன்; அன்றே பெறற்கரியன் ஆயினேன்; அஃதன்றே அவன் அருள் ஆமாறு` என இயைத்து முடிக்க. ஆள்வான் - உண்மையா ஆள்வான்; சிவன் `ஆள்வான்` என்றதனால், `ஆயினேன்` என்றது, `ஆள் ஆயினேன்` என்ற தாயிற்று. `பெறற்கு அரியன்` என்றது, `சிவன்` என்றபடி. `சிவனுக்கு ஆளாயினேன்; அன்றே யானும் சிவனா யினேன்; தன் அடியவரைத் தானாகச் செய்தலேயன்றோ சிவனது திருவருளின் சிறப்பு` என்றபடி. `திகழ்ந்த மெய்ப்பரம் பொருள் - சேர்வார் தாமே தானாகச் செயுமவன்`3 என்றது காண்க. `தூய... போல்வான்` என்றது `சிவன்` என்றபடி. `புனலாகிய கங்கை` என்க. `அனற்கு அங்கை` என்பதை, `அங்கைக்கு அனல்` எனப் பின் முன்னாக நிறுத்தி, உருபு பிரித்துக் கூட்டி, நான்காம் உருபை ஏழாம் உருபாகத் திரித்துக் கொள்க.

அருளே உலகெலாம் ஆள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப தானால் - அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ தெனக்கு.

#52

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஈசன் அருளே உலகெலாம் ஆள்விப்பது, பிறப்பு அறுப்பது ஆனால், அவன் அருளாலே (யான்) மெய்ப் பொருளையும் நோக்கும் விதியுடையேன்; ஆதலின், எனக்கு எஞ்ஞான்றும் எப்பொருளும் ஆவது அவன் அருளே` என இயைத்து முடிக்க. ஈசன் - சிவன். `ஆனால்` என்பது தெளிவின்கண் வந்தது, `காண்பவன் சிவனே யானால்`1 என்பதிற் போல. `மெய்ப்பொருளை யும்` என்னும் சிறப்பும், இறந்தது தழுவியதும்

ஆகிய உம்மை தொகுத்தலாயிற்று. நோக்குதல் - ஆராய்தல் .
அறிவிப்பதொரு துணையின்றித்தானே அறியமாட்டாத இயல்பையுடையது உயிரினது அறிவு. அத்தன்மைத்தாகிய அவ்வறிவு, குறைபாடுடைய கருவி களைத் துணையாகக் கொண்டு அறியுமிடத்து அறியப்படும் பொருள் களது இயல்பு பொதுவாக விளங்குதலன்றி, உண்மையாக விளங்காது. அதனால், குறைவிலா நிறைவாகிய இறைவனது அருளைத் துணையாகக் கொண்டு அறியுமாயின், அப்பொழுது பொருள்களின் இயல்பு உண்மையாக விளங்கும்.
இனிப் பிறபொருளைக் காட்டுகின்ற கதிரவனது ஒளியே தன்னையும் காட்டுவதாகும் அல்லது, அவனைப் பிறிதோர் ஒளி காட்டமாட்டாது. ஆகையால், கதிரவன் ஒளியைக் கொண்டே கதிரவனைக் காணுதல் போல, இறைவனது அருளால் எல்லாப் பொருள்களையும் அறிதலுடன், அவனையும் அவன் அருளாலேதான் அறிதல் வேண்டும். அது பற்றியே `அவன் அருளாலே அவன் தாள் வணங்கி` *2* என்னும் திருமொழி எழுந்தது. அதனையே இங்கு அம்மையார், `அருளாலே மெய்ப்பொருளையும் நோக்கும் விதியுடையேன்` என்றார். விதி - முறைமை. இங்ஙனம் எப்பொருளையும் அருளாலே நோக்காது, கருவிகளாலும், நூல்களாலும் விளங்கும் தம் அறிவு கொண்டே பொருள்களை நோக்குவார்க்கு மெய்யுணர்வு தோன்றாது, திரிபுணர்வே தோன்றும் என்க.
இதனையே,
இப்படியால் இதுவன்றித் தம்மிசைவு கொண்டியலும்,
துப்புரவில் லார்துணிவு துகளாகச் சூழ்ந்தார்.*1*
என்று அருளிச் செய்தார் சேக்கிழார்.
அருளால் எவையும் பார்என்றான்:- அத்தை
அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்;
இருளான பொருள்கண்ட தல்லால், - கண்ட
என்னையும் கண்டிலன் என்னேடி, தோழி *2*
எனத் தாயுமான அடிகளும் கூறினார். `மெய்ப்பொருளாவது யாது` என முதற்கண் ஆராய்தல், இறைவன் உள் நின்று உணர்த்தும் முறையை நோக்கும் நோக்கினாலும், அவன் ஆசான் மூர்த்தியாய் வந்து அறிவுறுக்கும் அருள்மொழியாலுமாம் என்க. அவ்வாற்றான் நோக்குவார்க்கே உண்மை புலனாவதன்றிப் பிறவாற்றான் நோக்கு வார்க்கே உண்மை புலனாகாது என்பதை,
சாத்திரத்தை யோதினர்க்குச் சற்குருவின் தன்வசன
மாத்திரத்தே வாய்த்தவளம் வந்துறுமே - ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ

தெண்ணீர்மை யாய்இதனைச் செப்பு
எனத் திருக்களிற்றுப்படியார் *3* வலியுறுத்தி ஓதிற்று.

எனக்கினிய எம்மானை ஈசனையான் என்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன் - எனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே இன்புற்றேன்
உண்டே எனக்கரிய தொன்று.

#53

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஈசன் - சிவன்` என்பது முன்னைப் பாட்டின் உரையிலும் கூறப்பட்டது. `மனத்துக்கு` என்பதில் அத்துச் சாரியை தொகுக்கப்பட்டது. வைப்பு - சேம நிதி. `அவனையே பிரானாகக் கொண்டேன்` என ஏகாரம் விரித்து, மாறிக் கூட்டுக. பிரான் - தலைவன்; ஆண்டான். `கொள்வது` என்பது பொதுப்பட அத் தொழிலை உணர்த்திநின்றது. உம்மை, வினையெச்ச விகுதி. எனக்கு அரியது ஒன்று உண்டே` என்க. ஏகாரம், எதிர்மறைப் பொருட்டாய வினா.

ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேயென் உள்ளத்தின் உள்ளடைத்தேன் - ஒன்றேகாண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளாம் அது.

#54

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நினைதல் - ஆராய்தல். துணிதல் - நிச்சயித்தல். `ஓழி`, துணிவுப் பொருண்மை விகுதி. உள்ளடைத்தல் - எப்போதும் மறவாது நினைதல். இறுதியில் `அவ்வொன்றே` எனச் சுட்டு வருவிக்க. ஏகாரம், எடுத்தோத்துப் பொருட்டாய், எழுவாய்த் தன்மை உணர்த்தி நின்றது. காண், முன்னிலையசை. `அவ்வொன்றே ஆளாம் அது` என முடிக்க. ஒளி - தீ; ஆகுபெயர்.

அதுவே பிரான்ஆமா றாட்கொள்ளு மாறும்
அதுவே யினியறிந்தோ மானால் - அதுவே
பனிக்கணங்கு கண்ணியார் ஒண்ணுதலின் மேலோர்
தனிக்கணங்கு வைத்தார் தகவு.

#55

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதற்கண் `அதுவே` என்றது, மேல், `உலகெலாம் ஆள்விப்பது` என்றதையும், இடைக்கண், `அதுவே` என்றது `பிறப்பறுப்பது` என்றதனையும் ஏற்புழிக் கோடாலால் சுட்டி நின்றன. இனி - இப்பொழுது. `அதுவே என அறிந்தோமானால்` என்க. `அதுவே தகவு` என முடிக்க. தகவு - தகுதி; தன்மை, பனிக்கு - பனிக்காலத்திற்கு ஆற்றாமல். அணங்குகின்ற - வாடுகின்ற. கண்ணி - முடிமாலை. `பனிக் காலத்திற்கு ஆற்றாது வாடுகின்ற` என்றது, கொன்றை மலரைக் குறித்தவாறு. அது கார்காலத்தில் மட்டுமே பூப்பது. `கண்ணி கார்நறுங் கொன்றை` * என்ற பழம் பாடலைக் காண்க. நுதல் - நெற்றி. தனிக்கண் - ஒற்றைக் கண். `அங்கும்` என, இறந்தது தழுவிய எச்ச உம்மை விரிக்க. அல்லாக்கால், `அங்கு` என்பது நின்று வற்றும். இது சிவனது தகைமையைப் புகழ்ந்தவாறு.

தகவுடையார் தாமுளரேல் தாரகலஞ் சாரப்
புகவிடுதல் பொல்லாது கண்டீர் - மிகவடர
ஊர்ந்திடுமா நாகம் ஒருநாள் மலைமகளைச்
சார்ந்திடுமே லே பாவந் தான்.

#56

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தகவு - தகுதி; நடுவு; நடுவு நிலைமை. அஃதாவது, பிறர்க்கு வரும் துன்பத்தையும் தமக்கு வரும் துன்பம் போன்றதாகவே உணரும் தன்மை. `தாம்` என்றது, `யாரேனும்` என்றபடி. தார் - கொன்றைத்தார். அகலம் - மார்பு. எனவே `சிவனது மார்பு` என்றதாயிற்று. `அதனை மலைமகளைச் சாரத் தனிமையில் புகவிடுதல் பொல்லாது` என்க. பொல்லாது - தீங்கு. தீங்கிற்கு ஏதுவா வதனைத் `தீங்கு` என்றது உபசார வழக்கு. கண்டீர், முன்னிலையசை. `தீங்கிற்கு ஏதுவாவது யாது` எனின், `அவனது மார்பில் மிகத் தீங்கு செய்ய ஊர்ந்து கொண்டிருக்கின்ற பெரிய பாம்பு அவள் மேலே என்றாவது ஒரு நாள் தாவியே விடும். அதனால், தகவுடையோர்க்கு அது பெண் பாவமாய் முடியும்` என்பதாம். அடர்தல் - தீங்கு செய்தல். தான். அசை.

எல்லாம் அறிந்திருந்தும் அம்மையார் பெருமானை நகையாடிப் புகழ்தற் பொருட்டு ஒன்றும் அறியாதார்போல் நின்று இங்ஙனம் கூறினார்; பத்தி பரவசத்தால். `பாம்பு முதலியவற்றுள் எதுவும் அவனையும் ஒன்றும் செய்யாது; அவளையும் ஒன்றும் செய்யாது; அவ்விருவரது தன்மையும் உலகர் தன்மையின் முற்றிலும் வேறானதே` என்பது கருத்து. இதவும் நிந்தாத் துதி

வாள்வரி யதளதாடை; வரிகோ வணத்தர்;

மடவாள்த னோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி, உழுவையோடு, கொலையானை, கேழல்
கொடுநாக மோடு, கரடி,
ஆளரி நல்ல நல்ல; அவைநல்ல; நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.*
என அருளிச்செய்த மெய்ம்மைத் திருமொழியைக் காண்க.

தானே தனிநெஞ்சந் தன்னையுயக் கொள்வான்,
தானே பெருஞ்சேமஞ் செய்யுமால் - தானேயோர்
பூணாகத் தாற்பொலிந்து, பொங்கழல்சேர் நஞ்சுமிழும்
நீணாகத் தானை நினைந்து.
#57

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நீள் நாகத்தானை நினைந்தமையால், தனி நெஞ்சம் தானே தன்னைக் கடைத்தேற்றிக் கொள்ளுதற் பொருட்டுத் தானே தனக்குப் பெருஞ்சேமத்தைச் செய்து கொள்கின்றது` என்க. `அவனை நினைப்பது ஒன்றே உயிர்க்குப் பாதுகாப்பாவது` என்பதும், `எம் நெஞ்சம் அதனைத் தானே தெரிந்து கொண்டு நினைக்கின்றது` என்பதும் கூறியவாறு. தனி நெஞ்சம் - துணையற்ற நெஞ்சம். சேமம் - பாதுகாவல். ஆல், அசை. `ஆகம் பூணாற் பொலியாநிற்க` என்க. ஆகம் - மார்பு. பூண் - அணிகலம். `பொலியாநிற்க நீள் நாகத்தை உடையான்` என்றது, `நீள் நாகமே பூணாக ஆம் பொலிய` என்றபடி.

நினைந்திருந்து வானவர்கள் நீள்மலராற் பாதம்
புனைந்தும் அடிபொருந்த மாட்டார் - நினைந்திருந்து
மின்செய்வான் செஞ்சடையாய் வேதியனே என்கின்றேற்
கென்செய்வான் கொல்லோ இனி. **#58**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நீள் மலர் - மிக்க மலர். புனைந்தும் - அலங்கரித் தும். `செய்`, உவம உருபு. வான் - உயர்ந்த. இனி - இப்பொழுது, `என் செய்வான்` என்பதில், `செய்தல்` என்னும் பொது வினை, `தருதல்` என்னும் சிறப்பு வினைப் பொருட்டாய் நின்றது. கொல், அசை.

இனியோநாம் உய்ந்தோம் இறைவன் அருள்சேர்ந்தோம்
இனியோர் இடரில்லோம், நெஞ்சே - இனியோர்

வினைக்கடலை யாக்குவிக்கும் மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோம் காண். #59
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`இறைவன் சிவன்` என்பது மேலேயும்* கூறப்பட்டது. `இறைவன் அருள் சேர்ந்தோம்` என்பதை முதலில் வைத்து, அதன்பின், `ஆதலால்` என்பது வருவிக்க. இனி - இப்பொழுது. ஓகாரம், சிறப்பு. `ஓர் கடல்` என இயையும். வினைக் கடல் உருவகம். வினை, இங்கு ஆகாமியம். கனைத்தல் - ஒலித்தல். கனைக்கடல் - கனைத்தலையுடைய கடல். இனிக் ககர ஒற்றை `விரித்தல்` எனக் கொண்டு, `கனை கடல் என வினைத்தொகை யாகவே உரைத்தலும் ஆம். கனைகடல், இனஅடை. காண், முன்னிலையசை. இதனால் சிவன் அவரவர் தன்மைக்கு ஏற்ப நின்று அருள்புரிதல் கூறப்பட்டது.

காண்பார்க்குங் காணலாந் தன்மையனே கைதொழுது
காண்பார்க்குங் காணலாங் காதலாற் - காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்
காதியாய் நின்ற அரன். #60
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`தொல் உலகுக்கு ஆதியாய் நின்ற அரன்` என்பதை முதலிற் கொள்க. ஆதி - முதல்; முதல்வன். முதலில் உள்ள `காண்பார்` என்பது, `உலகிற்கு முதல்வன் எவனும் இல்லை` என முரணிக் கூறுவாரை. அவர்க்குக் காணலாம் தன்மையாவது, அவரவர் `மெய்` எனக் கொண்ட பொருள்களாய் நின்று அவர்க்குப் பயன் தரும் தன்மை. `அவனின்றியாதும் இல்லை` என்பது கருத்து. பின்னர், `தொழுது காண்பார்` என்றதனால், முன்னர் `காண்பார்` என்றது, தொழாதே காண்பாரையாயிற்று. கை தொழுது காண்பார், தெய்வம் உண்டு ` எனப் பொதுப்பட உணர்ந்து யாதேனும் ஓர் உருவத்தில் கண்டு வழிபடுவார். அவர்க்குக் காண்டல் கூடுவதாவது, அவரவர் வணங்கும் உருவத்தில் நின்று, அவர்க்குப் பயன்தருதல். காதலால் காண்பார், `உலகிற்கு முதல்வன் உளன்; அம்முதல்வனாம் தன்மையை உடையவன் `சிவனே` என உணர்ந்து, அதனானே அவன்பால் அன்பு மீதூரப் பெற்றுக் காண விரும்புவோர். `அவர்கட்குப் புறத்தும் அகத்தும் ஒளியாய் வெளிப்பட்டு நின்று அருளுவான்` என்க. `சிந்தையுளே` என்றே போயினாராயினும், `சோதியாய்` என்றதனால் `புறத்தும்` என்பதும் பெறப்பட்டது. `சுடர் விட்டுளன் எங்கள் சோதி`*1* என்ற தற்கு, `ஆன்ற அங்கிப்

புறத்தொளியாய், அன்பில் - ஊன்ற உள்ளெழும் சோதியாய் நின்றனன்` 2 எனப்பொருள் கூறியமை காண்க. தோன்றும் - தோன்றுவான். ஏகாரம் தேற்றம். அரன் - பாசத்தை அரிப்பவன்.

அரனென்கோ நான்முகன் என்கோ அரிய
பரனென்கோ பண்புணர மாட்டேன் - முரண் அழியத்
தானவனைப் பாதத் தனிவிரலாற் செற்றானை
யானவனை எம்மானை இன்று. **#61**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அரன் - உருத்திரன். என்கோ - என்பேனோ. பரன் - பரமபதத்தில் (வைகுந்தத்தில்) இருப்பவன்; மாயோன். `அரியாம் பரன்` எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். அப்பாடத்திற்கு, `பரன் - மேலானவன்` என்க. `அவன் பண்பு` எனச் சுட்டுப் பெயர். முரண் - வலிமை. தானவன், இராவணன். யான் அவன் - யானாய் நிற்கும் அவன். `முரண் அழிய` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. ஒருவனாய் நில்லாது, மூவராய் நிற்பவனை `ஒரு நாமம், ஓருருவம், ஒன்றும் இன்றி` *மெய்யறிவின்பமே உருவாய் இருத்தலாம். எனவே, சிவனது தன்னியல்பும், பொதுவியல்பும் கூறியவாறாம். பொதுவியல்பு கருணை காரணமாகக் கொள்ளப்படுவது.

இன்று நமக்கெளிதே மாலுக்கும் நான்முகற்கும்
அன்றும் அளப்பரியன் ஆனானை - என்றும்ஓர்
மூவா மதியானை மூவே ழுலகங்கள்
ஆவானைக் காணும் அறிவு. **#62**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`இன்று நமக்கு எளிதே` என்பதை இறுதியிற் கூட்டி, `எளிதே - எளிதோ` என உரைக்க. அன்றும் - முயன்று தேடிய அன்றும். எனவே, `இன்று அளப்பரியனாதல் சொல்ல வேண்டா` என்பதாம். `என்றும் மூவா ஓர் மதியான்` என்க. மூத்தல் - வளர்தல். `ஓர் மதி` என்றது, அதிசயத் திங்கள் என்றபடி, மூத்த ஏழ் உலகங்கள் என்க. மூத்த உலகு என்பதை, `தொல்லுலகம்` என்றவாறாகக் கொள்க `நமக்கு` என்றது `எளியராகிய நமக்கு` என்றவாறாதலைப் படுத்தல் ஓசையாற் கூறிக் காண்க. `சிவனை உள்ளவாறுணரும் அறிவையடைதல் எளிதன்று` என்றபடி.

அறிவானுந் தானே; அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர் பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன். **#63**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`அவன்` என்பதை முதலில் வைத்து, `அவனது இயல்பைக் கூறுமிடத்து` எனப் பொருள் விரிக்க. அறிவான்- உயிர்கட்குச் செய்வது காட்டும் உபகாரம் மட்டும் அன்று; காணும் உபகாரமுங்கூட` என்பதை விளக்கச் சிவஞான போதத்துப் பதினொன்றாம் சூத்திரச் சிற்றுரையில் இவ்வடிகள் எடுத்துக்காட்டப் பட்டமை காண்க. அறிகின்ற - அறியப்படுகின்ற. விரி சுடர், கதிரும், மதியும், தீயும். `அப்பொருள்` என்றது, `மெய்ப்பொருள் அல்லாது வேறு பொருள்` என்றதாம். `அவன்` என்றது, பண்டறி சுட்டாய்ச் சிவனைக் குறித்தது.

அவனே இருசுடர் தீ ஆகாசம் ஆவான்
அவனே புவிபுனல் காற் றாவான் **-** அவனே
இயமான னாய்அட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து**. #64**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரு சுடர் கதிரும், மதியும். புவி - பிருதிவி; மண். புனல் - நீர். இயமானன் - எசமானன்; உயிர். அட்ட மூர்த்தி, எட்டுரு உடையவன். உம்மை எதிரது தழுவிய எச்சம். இஃது அவனது பொது நிலை. ஞானமயன் - அறிவே வடிவாய் உள்ளவன். இஃதே அவனது உண்மை நிலை. `உலகுயிர்கட்கு அட்டமூர்த்தியுமாய், வீட்டுயிர்கட்கு ஞானமயனாகி வந்து நின்றானும் ஆவன்` என்க. `ஆவன்` என்பது சொல்லெச்சம். சிவனது பொது நிலை, உண்மை நிலை இரண்டையும் கூறியவாறு.

வந்திதனைக் கொள்வதே யொக்குமிவ் வாளரவின்
சிந்தை யதுதெரிந்து காண்மினோ **-** வந்தோர்
இராநீர் இருண்டனைய கண்டத்தீர் எங்கள்
பிரானீர்உம் சென்னிப் பிறை**. #65**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வந்தோர்` என்பது முதலாகத் தொடங்கி, `பிறைக்கண்` என ஏழாவது விரித்து உரைக்க. `வந்த` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. நீர் - நீர்மை; தன்மை. கொள்வது உட் கொள்வது; விழுங்குவது. `ஒக்கும் சிந்தை` என இயையும். சிந்தை - எண்ணம். அது. பகுதிப் பொருள் விகுதி. காண்மின் - குறிக்கொண்டு நோக்குமின். ஓகாரம், சிறப்பு. `அடைக்கலமாக வந்து அடைந்த திங்களை நினையாது விட்டு விடாதீர்` என்றபடி.

சார்ந்தாரைக் காக்கும் சிவனது இயல்பை அறியாதார் போன்று அறிவித்தவாறு.

பிறையும் புனலும் அனலரவுஞ் சூடும்
இறைவர் எமக்கிரங்கா ரேனுங் - கறைமிடற்ற
எந்தையார்க் காட்பட்டேம் என்றென் றிருக்குமே
எந்தையா உள்ள மிது. #66

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அனல் அரவு - அனலுகின்ற; சீறுகின்ற பாம்பு. பிறை முதலிய அடையாளங்களைக் கூறியது. `இறைவர் சிவபிரான்` என்பது உணர்த்துதற்கு. இனி, அவை அவரது கைம்மாறு கருதாத கருணைக்கும் அடையாளங்கள் ஆதலை உணர்க. அவற்றால், `அவர்` எமக்கு இரங்காதொழியார்` என்னும் குறிப்பும் தோன்றிற்று. `இரங்காரேனும்` என்பதற்கு, மேல் `இடர்களையாரேனும்` என்புழி உரைத்தாங் குரைக்க. `கறை மிடற்ற எந்தையார்` என்றது, `அவர்` என்னும் சுட்டளவாய் நின்றதேனும், அதனாலும் அவரது கருணை மிகுதி குறிக்கப்பட்டதாம். அடுக்குப் பலகாலும் நினைத்தலைக் குறித்தது. இருக்கும் - அமைதியுற்றிருக்கும். `துள்ளித் துடியாது` என்றபடி. ...... `உன் அருள்நோக்கி,

இரைதேர் கொக்கொத்து இரவு பகல்
ஏசற்றிருந்தே வேசற்றேன்`
`இரங்கும் நமக்கு அம்பலக் கூத்தன்
என்றென்று ஏமாந் திருப்பேனை.`
`நல்கா தொழியான் நமக்கென்று உன்
நாமம் பிதற்றி`*

என்னும் திருமொழிகளைக் காண்க. `தயா` என்பதில் அகரத்திற்கு ஐகாரம் போலியாய் வந்து, `தையா` என நின்றது. தயா உள்ளம் - தயவை - அருளை விரும்புகின்ற உள்ளம். `இது` என்றது, எடுத்தல் ஓசையால், `பித்துக் கொண்டதாகிய இது` எனப்பொருள் தந்தது. `உள்ளமாகிய இது, - ஆட்பட்டு விட்டோம்; இனி அவர் செய்வது `செய்க` - என்று என்று அமைதியுற்றே யிருக்கின்றது என்க.

இதுவன்றே ஈசன் திருவுருவம் ஆமா
றிதுவன்றே என்றனக்கோர் சேமம் - இதுவன்றே
மின்னுஞ் சுடருருவாய் மீண்டாயென் சிந்தனைக்கே
இன்னுஞ் சுழல்கின்ற திங்கு. #67

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மீண்டு` என்பதை அடுக்கிக் கூறி, `மீண்டும் மீண்டும்` ஆய்கின்ற என் சிந்தனையில் மின்னும் சுடர் உருவாய் (ப் புகுந்து) இன்னும் சுழல்கின்றதாகிய இது அன்றே ஈசன் இங்குச் செய்வது! அவன் திருவுருவத்தின் இயல்பும் இதுவன்றே! என்றனக்கு ஓர் சேமம் ஆவதும் இது வன்றே!` என இயைத்துரைத்துக் கொள்க.

இடைவிடாது நினைப்பவர் உள்ளத்தையே சிவன் தனக்குக் கோயிலாகப் புகுந்து, ஒளியுருவாய் விளங்குவான்; அங்ஙனம் அவன் விளங்கப் பெறுதலே உயிர்க்கு ஆக்கமாவது` என்பதாம். `சிந்தனைக்கு` என்பது உருபு மயக்கம்.

இங்கிருந்து சொல்லுவதென் எம்பெருமான் எண்ணாதே
எங்கும் பலிதிரியும் எத்திறமும் - பொங்கிரவில்
ஈமவனத் தாடுவதும் என்னுக்கென் றாராய்வோம்
நாமவனைக் காணலுற்ற ஞான்று. **#68**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`எங்கள் பெருமான், எங்கும் சென்று பிச்சை யேற்பதையும், இரவிலே சுடுகாட்டில் ஆடுவதையும், `இவை இழி வல்லவோ` என்று சிறிதும் எண்ணிப் பாராமலே செய்தற்குரிய காரணத்தை நாம் இங்கேயிருந்து கொண்டு என்ன என்று சொல்ல முடியும்? முடியாது. ஆகவே, நாம் அவனை நேரிற் காணமுடிந்த பொழுது அவனிடமே, `இவை எதற்கு` என்ற கேட்டுத் தெரிவோம். (அது வரையில் சும்மா இருப்போம்) என்பது இப்பாட்டின் பொருள். `இறைவனது செயலின் இரகசியங்களை உயிர்கள் அறிதல் அரிது. அதனால் சிலர் அவனை அவை பற்றி இகழவே செய்வர். அவர்களோடு நாம் சேர்ந்து விடுதல் கூடாது; தனியே அமைந் திருத்தலே தக்கது` என்பது குறிப்பு. பொங்குதல் - மிகுதல். அதற்கு `இருள்` என்னும் வினைமுதல் வருவிக்க. ஈமம் - பிணஞ் சுடும் விறகு. `பலி திரிதல், உலகத்தைப் பற்றி நிற்கும் உயிர்கள் அப்பற்றினை விடுதற் பொருட்டு என்பதும், `ஈம வனமாவது உலகம் முற்றும் ஒடுங்கிய நிலை` என்பதும், `அங்கு இரவில் ஆடுதல்` என்பது, `யாதொன்றும் இல்லாது மறைந்த அந்தக் காலத்தில், உலகத்தை மீளத் தோற்றுவதற்கு ஆவனவற்றைச் செய்தலாகிய சூக்கும நடனம்` என்ப தும் ஆகிய உண்மைகளை அறிந்தோர் அறிவர் என்பதும் கருத்து.

ஞான்ற குழற்சடைகள் பொன்வரைபோல் மின்னுவன
போன்ற கறைமிடற்றான் பொன்மார்பின் - ஞான்றெங்கும்
மிக்கயலே தோன்ற விளங்கி மிளிருமே

அக்கயலே வைத்த அரவு. **#69**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கறை மிடற்றான்` என்பதை முதலிற் கொள்க. ஞான்ற - நான்ற; தொங்கிய. குழல் - குழல்போலப் புரிசெய்த. வரை - கீற்று; என்றது கம்பியை. போல், அசை. போன்ற - போன்றன. `பொன் மார்பு` என்பதில் பொன் - அழகு. அக்கு - எலும்பு மாலை, `அதன் அயலிலே வைத்த அரவு (பாம்பு) அயல் (புறத்தில்) ஏனை எல்லா வற்றிலும் மிக்குத் தோன்றும் முறையில் எங்கும் ஞான்று விளங்கி மிளிரும்` என்க. விளங்கி மிளிர்தல், ஒரு பொருட் பன்மொழி. இது பெருமானது திருவுருவத்தைப் புகழ்ந்தவாறு.

அரவமொன் றாகத்து நீநயந்து பூணேல்
பரவித் தொழுதிரந்தோம் பன்னாள் - முரணழிய
ஒன்னாதார் மூவெயிலும் ஒரம்பால் எய்தானே
பொன்னாரம் மற்றொன்று பூண். **#70**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஆகம் - உடம்பு. `ஒன்றும்` என முற்றும்மை விரித்து, `எதனைப் பூண்டாலும் பாம்பு ஒன்றை மட்டும் பூணாதே` என்க. `பாம்பொடு பழகேல்` * என்பார் பெரியோர் ஆதலின், அஃது என்றாயினும் தீமையாகவே முடியும் என்று இரக்கின்றோம் என்பதாம், `ஒன்று` என்பது இனங்குறித்து நின்றது. நயந்து - விரும்பி. என்றதனால், `சிவன் பாம்பை விரும்புகின்றான்` என்பது பெறப்படும். பரவுதல் - துதித்தல். முரண் - வலிமை. ஒன்னாதார் - பகைவர். `மற்றொன்று` என்பதும் மற்றோர் இனத்தையே குறித்தது. `பொன்னாரம்` என்பது, ஒருபொருள் குறித்த வேறு பெயராய் வந்தது. இஃது அன்பே காரணமாக, இறைவனது ஆற்றலை மறந்து, அவனுக்கு வரும் தீங்கிற்கு அஞ்சிக் கூறிய கூற்றாய் அமைந்தது. எனினும், `மூவெயிலும் ஓர் அம்பால் எய்தான்` என அவனது அளவிலாற்றல் குறிக்கப்பட்டது.

பூணாக வொன்று புனைந்தொன்று பொங்கதளின்
நாணாக மேல்மிளிர நன்கமைத்துக் - கோள்நாகம்
பொன்முடிமேற் சூடுவது மெல்லாம் பொறியிலியேற்
கென்முடிவ தாக, இவர். **#71**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`இவர்` என்றது இறைவரை அண்மையில் வைத்துச் சுட்டியது. இதன்

பின், `கோள் நாகம்` என்பதைக் கூட்டி, இரண்டையும் முதலில் வைத்து, `ஒன்று பூண் ஆகப் புனைந்து, ஒன்று அதளின்மேல் மிளிர நாண் ஆக நன்கு அமைத்து, (ஒன்று) முடிமேல் சூடுவதும் ஆகிய இவையெல்லாம் பொறியிலியேற்கு என முடிவதாக` என இயைத்துப் பொருள் கொள்க. கோள் - கொடுமை. பூண் - அணிகலம். பொங்கு - அழகு மிகுந்த. அதள் - புலித்தோல்; இஃது உடுக்கையாக உடுத்தப்பட்டது. நாண், அரைநாண். `பொறியிலியேற்கு` எனத் தம்மையே குறித்தாராயினும், `தம் போலியர்க்கு` என்றலே கருத்து என்க. பொன் முடி - பொன் போலும் முடி; சடைமுடி. பொறி - அறிவு. என் - என்ன பொருள். முடிவதாக - முடிதற் பொருட்டு. `ஒன்று` என்பதை, பொன்முடிக்கும் கூட்டுக. அஃதாவது, `விளங்குதற் பொருட்டு` என்றதாம். `யான் அன்புடை யேன்; ஆயினும் அறிவிலேன்; ஆகவே, இவர் செய்வன எல்லாம் என் போலியர்க்கு என்ன விளங்குதற்பொருட்டு` என்றவாறு. எனவே, `ஆன்றமைந் தடங்கிய அறிவர்க்கே இவர் செய்வன விளங்கும். இவ்வாறு அம்மையார் கூறுவன எல்லாம் நம்மனோரை முன்னிட்டுக் கொண்டேயாம்.

இவரைப் பொருளுணர மாட்டாதார் எல்லாம்
இவரை யிகழ்வதே கண்டீர் - இவர்தமது
பூக்கோல மேனிப் பொடிபூசி என்பணிந்த
பேய்க்கோலங் கண்டார் பிறர். #72
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பொருள் - மெய்ப்பொருள். `பொருளாக` என ஆக்கம் விரிக்க. `இகழ்வதையே செய்வர்` என ஒருசொல் வருவித்து முடிக்க. கண்டீர், முன்னிலையசை. `இதுவே முறையாதலின், இவரது பேய்க் கோலத்தைக் கண்டு இகழ்பவர் எல்லாம், புறக்கோலத்தை மட்டுமே கண்டு, உண்மையை உணராத பிறரேயாவர்` என்க. முற் பகுதி பொது முறைமையாயும், பிற்பகுதி சிறப்பு முறைமையாயும் நின்றன. பூக்கோல மேனி - பொலிவு வாய்ந்த அழகிய மேனி. `மேனி மேல்` என ஏழாவது விரிக்க. பொடி - சாம்பல். `பூக் கோல மேனிமேல் சாம்பலைப் பூசுகின்றார்` என்பதாம். என்பு - எலும்பு. பேய்க் கோலம் பேய்போலும் கோலம், `கோலம் கண்டார்` என்பது, `கோலத்தை மட்டுமே கண்டவர்` என்னும் பொருளது. `பிறர்` என்றது, `உண்மை யுணராதவர்` என்றபடி. கண்டார், எழுவாய்; பிறர், பயனிலை.

பிறரறிய லாகாப் பெருமையருந் தாமே
பிறரறியும் பேருணர்வுந் தாமே - பிறருடைய
என்பே அணிந்திரவில் தீயாடும் எம்மானார்

வன்பேயும் தாமும் மகிழ்ந்து. #73
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பிறருடைய என்பே அணிந்து; இரவில் பேயும் தாமுமாய் மகிழ்ந்து தீயாடும் எம்மானார்` என எடுத்துக் கொண்டு உரைக்க. பிறர், முன்னைப் பாட்டிற் கூறிய பிறர். பேருணர்வு - மெய்யுணர்வு என்றது, `அவர் மெய்யை உணர்ந்ததாக உணரும் உணர்வு` என்றபடி. `தாமே` என்பன, `பிறர் ஒருவரும் இல்லை` என்னும் பொருளவாய் நின்றன.

மகிழ்தி மடநெஞ்சே மானுடரில் நீயும்
திகழ்தி பெருஞ்சேமஞ் சேர்ந்தாய் - இகழாதே
யாரென்பே யேனும் அணிந்துழல்வார்க் காட்பட்ட
பேரன்பே இன்னும் பெருக்கு. #74
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மடம் - அறியாமை. மடநெஞ்சே, யார் என்பே யேனும் இகழாதே அணிந்து உழல்வார்க்கு ஆட்பட்டமையால்` என முதலில் எடுத்துக் கொண்டு, பின்பு `அங்ஙனம் ஆட்பட்ட பேரன்பையே இன்னும் பெருக்கு` என முடிக்க. `பெருக்கினால் இன்னும் பெருநலம் பெறுவாய்` என்பது குறிப்பெச்சம். மகிழ்தி - மகிழ்கின்றாய்; மானுடரில் நீயும் ஒருவனாய்த் திகழ்கின்றாய். சேமம், பாதுகாவல். `என்பே அணிந்து உழல்வார்` என்றதும் நிந்தாத் துதி. அவர்க்கு ஆட்படுதலே மானுடப் பிறப்பின் பயன்` என்றபடி.

பெருகொளிய செஞ்சடைமேற் பிள்ளைப் பிறையின்
ஒருகதிரே போந்தொழுகிற் றொக்கும் - தெரியின்
முதற்கண்ணான் முப்புரங்கள் அன்றெரித்தான் மூவா
நுதற்கண்ணான் தன்மார்பின் நூல். #75
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தெரியின் முதற்கண்ணான் - அறிவு வாய்க்கப் பெற்று ஆராய்ந்தால் முதலிடத்தில் வைத்துப் போற்றுதற்கு உரியவன்; `இல்லையேல் இகழப்படுவான்` என்பதாம. இது முதலாகத் தொடங்கி யுரைக்க. `நுதற் கண்ணான்` என்பது, `சிவன்` என்னும் பெயரளவாய் நின்றது. மூவா - கெடாத; இஃது இனம் இல் அடை. ஒளிய - ஒளியை யுடைய. கதிர் - கலை.

நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக
நீல மணிமிடற்றான் நீர்மையே - மேலுலந்த

தெக்கோலத் தெவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே ஆம். #76
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நீர்மையே` என்னும் தேற்றேகாரத்தைப் பிரித்து, `ஆம்` என்பதனுடன் கூட்டி, இரண்டாம் அடி முதலாகத் தொடங்கியுரைக்க. `உலந்த` என்பது பாடம் அன்று. உலந்தது - விரும்பியது; `எக்கோலத்தையுடைய எவ்வுருவினிடத்து` என்க. வாய், ஏழுனுருபு. கோலம் ஆடை அணி முதலியன. உருவு - வடிவும். `அவ்வுருவை நோக்கி` என இசை யெச்சம் வருவிக்க. `ஆமே என்னும் முற்று, சொல்லுவார் குறிப்பால், `ஆதலே` என்னும் தொழிற்பெயர்ப் பொருட்டாய் நின்றது. இதன்பின் `நுழைவு இலாதார்` - என்பதைக் கூட்டி இதனை அறிந்து இவனை அடைய மாட்டாதார் திரிக என முடிக்க. நூல், தாம் தாம் அறிந்த நூல். அவை இரணிய கருப்பம், பாஞ்சராத்திரம் முதலியன. அறிவு - அறிந்த பொருள். `தனக்கென ஓர் வடிவம் இல்லாது, கருதுவார் கருதும் வடிவமாய் நின்று அவர்கட்டு அருளுதலே இவனது இயல்பு` என்பதை யறியாதார், `பொடி பூசி, எலும்பணிந்து, சுடலையாடுதலையே இவனது உண்மை யியல்பாக மயங்கித் தாம் தாம் அறிந்தவாறு பேசுவர்; அது பற்றி எமக்கு வருவ தோர் இழுக்கில்லை` என்றபடி.

ஆர்உருவ உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்.
சுருதிவா னவனாம்; திருநெடு மாலாம்;
சுந்தர விசும்பில்இந் திரனாம்;
பருதிவா னவனாம்; படர்சடை முக்கட்
பகவனாம்; அகவுயிர்க் கமுதாம்;
எருதுவா கனனாம்; எயில்கள்மூன் றெரித்த
ஏறுசே வகனுமாம்; பின்னும்
கருதுவார் கருதும் பொருளுமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.
என்னும் திருமொழிகளைக் காண்க.

ஆமா றறியாவே வல்வினைகள் அந்தரத்தே
நாம் ஆளென் றேத்தார் நகர்மூன்றும் - வேமா
றொருகணையாற் செற்றானை உள்ளத்தால் உள்ளி
அருகணையா தாரை யடும். #77
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வல்வினைகள், அணையாதாரை அடும்; (அணைந்தார்பால்) ஆமாற்றை யறியா` என இயைத்து முடிக்க. `அணைந்தார்பால்` என்பது சொல்லெச்சம். `பிறவிப் பெருங்கடல் நீந்துவர்` *3* என்பதில், `சேர்ந்தார்` என்பது போல. அந்தரம் - ஆகாயம். `அந்தரத்தே வேமாறு` என இயையும். செற்றான் - அழித்தான். `அருகாக` என ஆக்கம் வருவிக்க. அடும் - வருத்தும்.

அடுங்கண்டாய் வெண்மதியென் றஞ்சி இருள்போந்
திடங்கொண் டிருக்கின்ற தொக்கும் **-** படங்கொள்
அணிமிடற்ற பேழ்வாய் அரவசைத்தான் கோல
மணிமிடற்றின் உள்ள மறு**. #78**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மறு, இருள், மதி அடும்` என்று அஞ்சிப் போந்து இடம் கொண்டு இருக்கின்றதை ஒக்கும்` என இயைத்துக் கொள்க. `கண்டாய்` முன்னிலை யசை. அடும் - கொல்லும். `படங் கொள் அரவு, அணி மிடற்ற அரவு, பேழ்வாய் அரவு` எனத் தனித்தனி இயைக்க. பாம்பு படம் எடுத்து ஆடும் பொழுது அதன் கழுத்து அழகாய் இருத்தல் பற்றி. `அணிமிடற்ற அரவு` எனப்பட்டது. பேழ்வாய் - பெரிய வாய்; எலிகளை விழுங்கும் வாய். அசைத்தான் - இறுகக் கட்டினவன். கோலம் - அழகு. மணி மிடறு - நீல மணிபோலும் கழுத்து. மறு - கறை. இருளுக்கு வந்து இடம் கொள்ளுதல் இன்மையால் இல்பொருள் உவமையும், வந்தமைக்கு ஒரு காரணம் கற்பித்தமையால் தற்குறிப்பேற்றமும் கூடி வந்தமையின் இது தற்குறிப்பேற்ற உவமையணி. இதனால் இறைவனது கண்டத்தைப் புகழ்ந்தவாறு.

மறுவுடைய கண்டத்தீர் வார்சடைமேல் நாகம்
தெறுமென்று தேய்ந்துழலும் ஆஆ **-** உறுவான்
தளரமீ தோடுமேல் தான்அதனை அஞ்சி
வளருமோ பிள்ளை மதி**. #79**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நாகம், வானத்திலும் தளர மீது ஓடுமேல், `வார்சடைமேல் தெறும்` என்று அஞ்சி பிள்ளை மதி வளருமோ*!* அதனால்தான், ஆ*!*,ஆ*!* தேய்ந்து உழலும்` என இயைத்துப் பொருள் கொள்க. `நாகம் வானத்தில் மதியை விழுங்குதல் யாவரும் அறிந்தது` என்பது கருத்து. `நிறைவு பெற்றால், பெரிய வானத்திலே விழுங்கு கின்ற பாம்பு, சிறிய சடைக் குள்ளே விழுங்குதல் எளிதன்றோ` என்ப தாம். `வான்` என்பதில் ஏழனுருபும்,

உயர்வு சிறப்பும்மையும் விரிக்க, `அஞ்சி` என்பது ஓகாரத்தால் பெறப்பட்ட எதிர்மறையுடன் முடிந்தது. `பிள்ளை மதி நும் ஆணையால் வளராதிருக்கவில்லை; பாம்பிற்கு அஞ்சியே வளராதிருக்கின்றது` என மறுத்தவாறு. ஆ! ஆ!- வியப்பிடைச் சொல் அடுக்கு. இதுவும் பாம்பையும், மதியையும் பகை தீர்த்து உடன் வைத்திருப்பதைப் பழிப்பது போலப் புகழ்ந்தது.

மதியா அடலவுணர் மாமதில்மூன் றட்ட
மதியார் வளர்சடையி னானை - மதியாலே
என்பாக்கை யாலிகழா தேத்துவரேல் இவ்வுலகில்
என்பாக்கை யாய்ப்பிறவார் ஈண்டு. #80

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மதியா அவுணர்` என்க. அடல் - வலிமை, மதி இரண்டில் முன்னது திங்கள்; பின்னது அறிவு. இகழாது, மதியால் ஏத்துவரேல்` என இயைக்க. என்பு ஆக்கையால் - எலும்பை அணிந்துள்ள மேனியைப் பற்றி (இகழாது). ஆதல் - அதுவாய்க் கலத்தல். `இவ்வுலகில்` என்றது, `என்பு ஆக்கைகளாய்ப் பிறப் பதற்கே இடமாய் உள்ள இவ்வுலகு` என இதன் இழிவு கூறியவாறு.

ஈண்டொளிசேர் வானத் தெழுமதியை வாளரவந்
தீண்டச் சிறுகியதே போலாதே - பூண்டதோர்
தாரேறு பாம்புடையான் மார்பில் தழைந்திலங்கு
கூரேறு காரேனக் கொம்பு. #81

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பூண்டது ஓர்` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. `கொம்பு, போலாதே` என முடியும். ஏகாரம், எதிர்மறை வினாப் பொருட்டாய் உடன்பாட்டுப் பொருளைத் தந்தது. தார் - மார்பில் அணியும் மாலை, `தாராக ஏறிய பாம்பு` என்க. கூர் ஏறு - கூர்மை பொருந்திய. ஏனம் - பன்றி, திருமால் கொண்ட வராகாவதா ரத்தின் இறுதியில் அதனை அழித்து, அதன் கொம்பைச் சிவபிரான் மாலையில் கோத்தணிந்தமை புராணங்களில் கூறப்படுவது. `முற்றல் ஆமை, இளநாகமோடு, ஏன முளைக் கொம்பு அவை பூண்டு`* என்றமையும் காண்க. இறைவன் மார்பு வானத்திற்கும், அதில் அணியப்பட்ட பாம்பு இராகுவிற்கும், ஏனக் கொம்பு திங்களுக்கும் உவமையாகக் கூறப்பட்டன. திங்கள் சிறுகியதற்குக் காரணம் கற்பித்தது தற்குறிப்பேற்றம். எனவே, இது தற்குறிப்பேற்ற உவமையணியாதல் அறிக. இங்ஙனம் இறைவனது.

மார்பணியைப் புகழ்ந்தவாறு.

கொம்பினையோர் பாகத்துக் கொண்ட குழகன்தன்
அம்பவள மேனி அதுமுன்னஞ் - செம்பொன்
அணிவரையே போலும் பொடி அணிந்தால் வெள்ளி
மணிவரையே போலும் மறித்து. **#82**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கொம்பு, பூங்கொம்பு. அஃது உவம ஆகு பெயராய், உமாதேவியைக் குறித்தது. குழகன் - அழகன். தன், சாரியை. அம், அணி, மணி இவை அழகைக் குறிக்கும் பெயர்கள். பவள மேனி, உவமத் தொகை, அது, பகுதிப் பொருள் விகுதி. வரை - மலை, பொடி- நீறு, மறித்து - மீள, `மேனி, முன்னம் செம்பொன் வரையேபோலும்; பின்பு வெள்ளி வரையே போலும்` என்க. `இஃதோர் அதிசயம்` என்பது குறிப்பெச்சம். இறைவனது திருமேனியின் இயற்கையழகையும், செயற்கை யழகையும் புகழ்ந்தவாறு.

மறித்து மடநெஞ்சே வாயாலுஞ் சொல்லிக்
குறித்துத் தொழுந்தொண்டர் பாதங் - குறித்தொருவர்
கொள்ளாத திங்கட் குறுங்கண்ணி கொண்டார்மாட்
டுள்ளாதார் கூட்டம் ஒருவு. **#83**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நெஞ்சே, தொண்டர் பாதத்தைச் சேர்; அல்லாதார் கூட்டத்தை நீக்கு` என்க. `முன்னே நெஞ்சால் நினைத்து, மீள வாயாலும் வாழ்த்திப் பின் மெய்யாலும் வணங்குகின்ற தொண்டர்` - என்க. `முப்பொறிகளாலும் தொண்டு செய்பவர்` என்றபடி. உம்மை, இறந்ததையும், எதிரதையும் தழுவிநின்றது. `குறித்து` என்பது, முன்னர்க் காணுதலாகிய காரியத்தையும், பின்னர்ச் சேர்தலாகிய காரியத்தையும் குறித்தது. ஒருவர் கொள்ளாத திங்கள் - சிறிதாதலால் யாரும் விரும்பாத பிறை. `எவரும் விரும்பாதன எவையோ, அவையே எங்கள் பெருமானால் விரும்பப்படுவன` என்பதாம். `இதனால், இவன் ஏனையோரினின்றும் வேறுபட்டவன்; ஆகவே `இவனை, உலகம் - பித்தன் - என்று இகழ்தல் இயற்கை! என்றபடி.

`பித்தரே என்றும்மைப் பேசுவர் பிறரெல்லாம்`* என்று அருளிச் செய்தமையுங் காண்க. `ஒருவரும்` என்னும் உம்மை தொகுத்தலாயிற்று.

ஒருபால் உலகளந்த மாலவனாம்; மற்றை
ஒருபால் உமையவளாம் என்றால் - இருபாலும்

நின்னுருவ மாக நிறந்தெரிய மாட்டோமால்
நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து. #84
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உலகு அளந்த மாலாதல் இடப்பாதியும், உமையவளாதல் வலப்பாதியும் என்க. `சிவன் எல்லாவற்றையும் சத்தி வழியாகவே தோற்றுவிப்பன்` என்பது முடிவாதலால் `மாயோனை இடப்பாகத்தினின்றும் தோற்றுவிக்கும் நிலைமையில் வலப்பாகம் சத்தி பாகமாய் நிற்கும். என்பது பற்றி, `ஒருபால் மாலவனாம், மற்றை ஒரு பால் உமைய வளாம்` என்றும், இந்நிலைமையில் `சிவம்` என்பதே இல்லாதது போலத் தோன்றுதலால், இருபாலில் ஒரு பாலையும் நின்னுருவமாகத் தெரிய மாட்டேம்` என்றும், இங்ஙனமாகவே, சிவமேதான் சத்தியோ? `சிவம்` என்பது வேறு இல்லையோ? என வினாவும் முறையில், `நின்னுருவே மின்னுருவுதானோ` என்றும் அருளிச்செய்தார். மின் - பெண்; உமை. சிவமும், சத்தியும் இரு பொருள்கள் அல்ல` என்பது விளங்குதற்கு இங்ஙனம் நகைச்சுவை தோன்றக் கூறினார். நிறம், `உரு` என்னும் பொருட்டாய், வடிவத்தைக் குறித்தது. `இந்நிறத்தை இரு பாலிலும் நின் உருவமாகத் தெரிய மாட்டேம்` என இயைக்க. ஒகாரம் இரண்டில் முன்னது சிறப்பு; பின்னது வினா, `நின் உருவமாக நேர்ந்து தெரிய மாட்டோம்` எனக் கூட்டுக. `நேர்ந்து தெரியமாட்டோம்` என்றாராயினும், `தெரிந்து நேரமாட்டோம்` எனப்பின்முன்னாக நிறுத்தி, விகுதி பிரித்துக் கூட்டி யுரைக்க. நேர்தல் - உடன் படுதல். சிவம் சத்திகளது இயல்பை விளக்கியவாறு.

நேர்ந்தரவங் கொள்ளச் சிறுகிற்றோ நீயதனை
ஈர்ந்தளவே கொண்டிசைய வைத்தாயோ - பேர்ந்து
வளங்குழவித் தாய்வளர மாட்டாதோ என்னோ,
இளங்குழவித் திங்கள் இது #85
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அங்கு - வானத்தில். `அங்கு அரவம் நேர்ந்து *(எதிர்ப்பட்டுக்)* கொள்ள *(விழுங்க, அதனால்)* சிறுகிற்றோ? இசைய *(உனக்குப் பொருந்த)* அளவே ஈர்ந்து, *(அளவாகப் பிளந்து எடுத்து)* வைத்தாயோ? பேர்ந்து காலத்திற்கு ஏற்ப மாறி) வளர மாட்டாதோ? *(மாட்டாத தன்மையை உடையதோ?)* இளங் குழவித் திங்கள் இது *(என்றுமே பசுங்குழவியாய் இருக்கின்ற திங்களாகிய இதன் தன்மை)* என்னோ?` என இயைத்துக் கொள்க. `வளக் குழவி` என்பது மெலிந்து நின்றது. குழவித்தாய் குழவித்

தன்மையுடையதாய், இளங்குழவி - பசுங்குழவி. இறைவன் அணிந்துள்ள பிறை என்றும் ஒரு பெற்றித்தாய் இருத்தலைப் புகழ்ந்தவாறு.

திங்கள் இதுசூடிச் சில்பலிக்கென்று ஊர்திரியேல்
எங்கள் பெருமானே என்றிரந்து - பொங்கொளிய
வானோர் விலக்காரேல் யாம்விலக்க வல்லமே
தானே யறிவான் தனக்கு. #86
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`எங்கள் பெருமானே` என்பதை முதலில் வைத்து உரைக்க. `இது` என்பது, எடுத்தல் ஓசையால், `இத் தன்மைத்து` எனப்பொருள் தந்து நின்றது, `இவன் எவ்வாறு அவனை வெல்ல முடியும்` எனக் கூறினால் அதில், `இவன், அவன் என்பன ஓசை வேறுபாட்டால், `இத்தன்மையன், அத்தன்மையன்` எனப் பொருள் தருதல்போல. `சிறிதாய்ப் பயன் தாராதது` என்றதாம். `பிச்சை யேற்பவன் வேடத்தாற் பொலிவுடையனாயின் அது பற்றியேனும் பிச்சையிடுவர்; அது தானும் செய்கின்றிலையே `என்றபடி. சில் பலி `இன்னதுதான் ஏற்பது` என்பதின்றி இடுவார் இடுவனவாகிய எல்லாப் பிச்சையும், `ஊர்` என்பதன்பின், `தொறும்` என்பது தொகுக்கப்பட்டது. பொங்கொளிய - மிக்க ஒளியான உடம்பை யுடைய. `தேவர்` என்பது ஒளியுடம்பினர்` என்னும் பொருளதாதல் பற்றி, `பொங்கு ஒளிய வானோர்` என்றார். `வானோரே` என்னும் சிறப்புணர்த்தும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. `விலக்காரேல்` என்றது, விலக்க வல்லரல்லராயின்` என்றபடி. `வல்லமே` என்னும் ஏகாரம் எதிர்மறை வினாவாய் நின்று, மாட்டாமையைக் குறித்தது. ஈற்றடியைத் தனித் தொடராக வைத்து, முதற்கண், `இனி` என்பது வருவிக்க. இறுதியில் `ஆவதை` என்பது சொல்லெச்சமாய் எஞ்சி நின்றது. ஈற்றடியால், `எம் பெருமான் தனக்கு ஆவதைப் பிறர் அறிவிக்க வேண்டாது தானே அறிவான் ஆதலின், அவன் இவ்வாறு `பலிக்கு` என்று ஊர் திரிவதில் ஒரு கருத்திருத்தல் வேண்டும்` என்றபடி. அக்கருத்தாவது, உயிர்களின் வினையை நீக்குதலாம்.

தனக்கே அடியனாய்த் தன்னடைந்து வாழும்
எனக்கே அருளாவாறு என்கொல் - மனக்கினிய
சீராளன் கங்கை மணவாளன் செம்மேனிப்
பேராளன் வானோர் பிரான். #87
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`அடியன்` என்பது தன்மையொருமைப் பெயர். `தன்னை` என்னும் இரண்டனுருபு தொகுத்தலாயிற்று. பிரிநிலை ஏகாரத்தை இதனுடனும் கூட்டுக. `எனக்கே` என்னும் பிரிநிலை ஏகாரம். பிறர்க்கெல்லாம் அருளினமையைக் குறித்தது. `அருளாவாறு` என்பதை நிகழ் காலத்ததாகவும், `கொல்` என்பதை ஐய இடைச் சொல்லாகவும் கொண்டு உரைப்பதும், அவற்றை முறையே எதிர்காலத்ததாகவும், அசை நிலை இடைச் சொல்லாகவும், மற்றும் `என்` என்பதை இன்மை குறித்து வந்த வினாவினைக் குறிப்புச் சொல்லாகவும் கொண்டு உரைப்பதும் ஆகிய இரு பொருளையும் கொள்க. அங்ஙனம் கொள்ளவே, பின்னர் உரைக்கும் உரையின் படி, `எனக்கு அருளாதொழியக் காரணம் இல்லை` என்னும் துணிவுப் பொருளே வலியுடைத்தாய் நிலை பெறும். பின்னை உரைக்கு `எனக்கே` என்னும் ஏகாரம் தேற்றப் பொருட்டாம். `மனத்துக்கு` என்பதில் அத்துச் சாரியை தொகுத்தலாயிற்று. சீர் - புகழ். பேராளன் பெருமையுடையவன். இனி, `செம்மேனி உடையனாதலைக் குறிக்கும் பெயரையுடையவன்; அப்பெயர் - சிவன் - என்பது` என உரைப்பினும் ஆம்; `சிவன் எனும் நாமம் தனக்கேயுடைய. செம்மேனி எம்மான்` *1* என்னும் திருமொழியையும் காண்க.

பிரானவனை நோக்கும் பெருநெறியே பேணிப்
பிரானவன்தன் பேரருளே வேண்டிப் **-** பிரானவனை
எங்குற்றான் என்பீர்கள் என்போல்வார் சிந்தையினும்
இங்குற்றான் காண்பார்க் கெளிது**. #88**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பேணி, வேண்டி, என்று நீவிர் தேடுகிறீர்கள்; இங்கே என்போல்வார் சிந்தையினும் உற்றான்; (அஃதறிந்து) காண் பார்க்கு (க் காண்டல்) எளிது` என்க. `அவனையே` என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. பெருநெறி - மேலான நெறி. நோக்கு தலையே `பெருநெறி` என்றார் ஆகலின், பெயரெச்சம் வினைப் பெயர் கொண்டதாம். `நின்முகம் காணும் மருந்தினேன்` *2* என்பதிற் போல. பேணுதல் போற்றிக் காத்தல். வேண்டுதல் - விரும்புதல். `பெருநெறி, ேபரருள்` என அடை புணர்த்தமை. `ஏனை நெறிகள் எல்லாம் ஒரு நெறி யல்ல` என்பதும், `ஏனையோர் அருளெல்லாம் பேரருள் அல்ல` என்பதும் தோன்றுதற் பொருட்டு, `பெருநெறி` எனப்படாமை, பிறப்பைக் கடத்தலாகிய பெரும் பயனைத் தாராமை பற்றியும், `பேரருள்` எனப்படாமை, சிலர்க்குச் சில சிறு பயன்களைத் தந்த அளவிலே அற்று விடுதல் பற்றியுமாம். `என்பீர்கள்` என்பது. `என்று தேடுகின்றீர்கள்` என்னும் பொருட்டாய் நிற்றலின், `பிரான் அவனை` என்னும்

இரண்டாவதற்கு முடிபாயிற்று. `என் போல்வார் சிந்தையினும் உற்றான்` என்பது, `உலகியல் வகையில் எளியனாயினும் அன்புடையார் உள்ளத்தில் இருப்பவன் அவன் என்பதை விளக்கிற்று. `இங்கு` என்பது, `இங்கே` என அண்மை குறிக்க வந்தது. `அஃது அறிந்து` என்பதும், `காண்டல்` என்பதும் சொல்லெச்சமாய் எஞ்சி நின்றன. இவ்வாறன்றி, `எளி தாக` என ஆக்கம் வருவித்து, `எளிதாக உற்றான்` என முடிப்பினும் ஆம்.

எளிய திதுஅன்றே ஏழைகாள் யாதும்
அளியீர் அறிவிலீர் ஆஆ - ஒளிகொள்மிடற்
றெந்தையராப் பூண்டுழலும் எம்மானை உள்நினைந்த
சிந்தையராய் வாழுந் திறம். **#89**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஒளிகொள் மிடற்று` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. `இது எளியது அன்றே! ஏழை காள், யாதும் அறிவிலீர்; ஆஆ அளியீர்! என முடிக்க. அளியீர் - இரங்கத்தக்க நிலையை உடையீர். ஆ! ஆ!, இரக்க இடைச் சொல் அடுக்கு. ஒளி, நீல ஒளி, `அறிகிலீர்` எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். தனிச்சீரில் ளகர ஒற்றை நீக்கி அலகிடுக.

திறத்தால் மடநெஞ்சே சென்றடைவ தல்லால்
பெறத்தானும் ஆதியோ பேதாய் - நிறத்த
இருவடிக்கண் ஏழைக் கொருபாகம் ஈந்தான்
திருவடிக்கட் சேருந் திரு. **#90**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நெஞ்சே, திருவை, (அடையும்) திறத்தால் அடைவதல்லால், பிறவகையில் பெறவும் ஆதியோ` (உரியை ஆவையோ? ஆகாய்) என இயைத்து முடிக்க. (பிற வகையில் பெற நினைக்கும்) பேதையே, (அந்த நினைவை விடு) என்க. `அடையும்` என்பதும், `பிறவகையில்` என்பதும் `விடு` என்பதும் சொல் லெச்சங்கள். அடையும் திறமாவது, அன்பு செய்தல்.

அழுமலர்க் கண்ணிணை அடியவர்க் கல்லால்,
அறிவரிது அவன்திரு வடியிணை யிரண்டும்.*

என்றது காண்க. நிறம் - அழகு. வடிக் கண் - மாவடுவின் விளவு போலும்கண். ஏழை - பெண்.

திருமார்பில் ஏனச் செழுமருப்பைப் பார்க்கும்
பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கும் - ஒருநாள்

இதுமதியென் றொன்றாக இன்றளவுந் தேரா
தது மதியொன் றில்லா அரா. #91
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திரு - அழகு. ஏன மருப்பு - பன்றிக் கொம்பு. `பெருமான்` என்பது தாப்பிசையாய், முன்னும் சென்று, இயைந்தது. `ஒரு நாளும் ஒன்றும் என்னும் இழிவு சிறப்பும்மைகள் தொகுத்த லாயின. `மதி` இரண்டில் முன்னது திங்கள். பின்னது அறிவு. ஒன்றாக- ஒருதலையாக; நிச்சயமாக. தேராது - அறியாது. `அது யாது` எனின், மதி (அறிவு) ஒன்று இல்லா (சிறிதும் இல்லாத) அரா. இது மயக்க அணி. `மதி ஒன்று இல்லா` என்றதனால், எள்ளல் பற்றிய நகை பிறந்தது.

அராவி வளைத்தனைய அங்குழவித் திங்கள்
விராவு கதிர்விரிய ஓடி - விராவுதலால்
பொன்னோடு வெள்ளிப் புரிபுரிந்தாற் போலாவே
தன்னோடே ஒப்பான் சடை. #92
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அராவி - அரத்தால் தேய்த்து, அம் - அழகு. விராவு கதிர் - திங்களிலே பொருந்தியுள்ள கதிர்கள். `விரிய ஓடி` - எங்கும் பரவ ஓடி. விராவுதலால் - இடை இடை செறிதலால். புரி - முறுக்கு. புரிந்தாற்போலாவே - முறுக்குண்டாற்போல இல்லையோ. ஏகாரம் எதிர் மறை வினாப் பொருட்டாய், `போல்கின்றன` எனப் பொருள் தந்தது. `தன்னோடே ஒப்பான் - தனக்குத் தானே ஒப்பானவன்.

சடைமேல்அக் கொன்றை தருகனிகள் போந்து
புடைமேவித் தாழ்ந்தனவே போலும் - முடிமேல்
வலப்பால்அக் கோலமதி வைத்தான் தன்பங்கின்
குலப்பாவை நீலக் குழல். #93
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`முடிமேல்` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. கோல மதி - அழகிய திங்கள். பங்கு - இடப் பாகம், `பங்கின் உள்ள பாவை` என்க. குலப் பாவை - உயர் குல மடந்தை, `அவன் சடைமேல் அணிந்த` எனச் சுட்டுப் பெயரும், ஒரு வினைக் குறிப்புச் சொல்லும் வருவிக்க, கொன்றை - கொன்றைப் பூ. பூக்கள் பின்னர்க் காய்த்துப் பழத்தைத் தருதல் இயல்பாகலின், சுவை தருகனிகள்` என்றார் கூந்தலுக்குக் கொன்றைக் கனி உவமையாகச் சொல்லப்படும். புடைமேவி - சடையின் மற்றொரு

பக்கத்தில் பொருந்தி. சடை வலப் பால் உள்ளது. `வலப் பக்கம் சடையும், இடப் பக்கம் கூந்தலுமாய் இரு தன்மைப்பட்டுத் தோன்றாது, சடையில் உள்ள கொன்றையின் கனியே இடப்பக்கம் உள்ளது போலும் என ஒருமை கற்பித்தவாறு. இஃது இடத்திற்கு ஏற்ற உவமை.

குழலார் சிறுபுறத்துக் கோல்வளையைப் பாகத்து
எழிலாக வைத்தேக வேண்டா - கழலார்ப்பப்
பேரிரவில் ஈமப் பெருங்காட்டிற் பேயோடும்
ஆரழல்வாய் நீயாடும் அங்கு. #94

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குழல் ஆர் சிறு புறத்து - கூந்தல் புரளுகின்ற சிறிய முதுகையுடைய. கோல் வளை - திரண்ட வளை. இஃது இதனை அணிந்தவளைக் குறித்தது. எழில் - அழகு. `அழகுக்காக அவளை நீ ஆடும் அங்குக் கொண்டு செல்ல வேண்டா` என்க. இப்பாட்டிற்குப் `பெருமானே` என்னும் முன்னிலை வருவிக்க. கழல் - வீரர்கள் காலில் அணியும் அணி. ஆர்த்தல் - ஒலித்தல், ஆரழல் - அணுகுதற்கரிய நெருப்பு.

அங்கண் முழுமதியஞ் செக்கர் அகல்வானத்
தெங்கும் இனிதெழுந்தால் ஒவ்வாதே - செங்கண்
திருமாலைப் பங்குடையான் செஞ்சடைமேல் வைத்த
சிரமாலை தோன்றுவதோர் சீர். #95

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`செங்கண்` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. `பங்கில்` என ஏழாவது விரிக்க. ஒவ்வாதே - போலாதே. ஏகாரத்தை வினாவாகவும், தேற்றமாகவும் கொண்டு, `ஒக்கும்` என உடன்பாட்டுப் பொருளும், `ஒவ்வாது` என எதிர்மறைப் பொருளும் இரண்டும் கொள்க. சிர மாலை - தலை மாலை. `பெருமானது சடாடவி செவ்வானம்போல விளங்க, அதில் அணியப்பட்ட வெண்டலை மாலையில் உள்ள தலைகள் பல, பல சந்திரர் செவ்வானம் எங்கும் தோன்றியது போல விளங்குகின்றன` என்பதாம். தலை மாலை அவனது நித்தியத்துவத்தை விளக்குவதாகலின் அதனைப் புகழ்ந்த வாறு. சீர் - அழகு.

சீரார்ந்த கொன்றை மலர்தழைப்பச் சேணுலவி
நீரார்ந்த பேர்யாறு நீத்தமாய்ப் - போரார்ந்த
நாண்பாம்பு கொண்டசைத்த நம்மீசன் பொன்முடிதான்
காண்பார்க்குச் செவ்வேயோர் கார். #96

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`போரார்ந்த பாம்பு கொண்டு நாண் அசைத்த நம் ஈசன் பொன்முடி` என்று எடுத்து, முதற்றொட்டு உரைக்க, அசை, நாண் - அரை நாண். அசைத்த இறுகக் கட்டிய. பொன் - அழகு. தழைப்ப - மிகுந்திருக்க. சேண் - வானுலகம். `அங்கு உலவி நீர் மிகுந்திருந்த யாறு` என்க. நீத்தம் - வெள்ளம். `ஆய்` என்பது, `ஆயதனால்` எனக் காரணப் பொருள் தந்தது. செவ் ஏய் ஓர் கார் - செம்மை நிறம் பொருந்திய ஒரு மேகம் போலும் கொன்றை, கார் காலத்தில் பூப்பது. `கண்ணி கார் நறுங் கொன்றை` என்றது காண்க.* எனவே, `கொன்றை மலரும், நீத்தமும் மேகத்தால் விளைந்தன போலத் தோன்றுகின்றன என்றபடி. மேகம் கரிதாயினும் இஃதோர் அதிசய மேகம் என்பதாம்.

காருருவக் கண்டத்தெங் கண்ணுதலே எங்கொளித்தாய்
ஓருருவாய் நின்னோடு உழிதருவான் **-** நீருருவ
மேகத்தாற் செய்தனைய மேனியான் நின்னுடைய
பாகத்தான் காணாமே பண்டு**. #97**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மாயோன், நின்னுடைய பாகத்தானாய் நின்னோடு ஓருருவாய் உழிதருவானாகவும், அவன் பண்டொருகால் காணாதபடி நீ எங்குச் சென்று ஒளித்தாய்` என்க. `பாகத்தான்` என்றது, ஓருருவாய் நின்றவாற்றை விளக்கியது. `எங்கு ஒளித்தாய்` என்றது, `அவனுக்கு இடம் அளித்து நின்றே ஒளிக்கவும் வல்லாய்` என்றபடி.

பண்டமரர் அஞ்சப் படுகடலின் நஞ்சுண்டு
கண்டங் கறுத்ததுவும் அன்றியே **-** உண்டு
பணியுறுவார் செஞ்சடைமேற் பால்மதியின் உள்ளே
மணிமறுவாய்த் தோன்றும் வடு**. #98**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

படுகடல் - ஒலிக்கின்ற கடல். உண்டு - `உண்டமையால்` என்க. பணி உறுவார் - பாம்பை அணிகலமாகப் பொருந்தியவர். `அவர் கறுத்தமையால்` எனச் சினைவினை முதல் மேல் ஏற்றப்பட்டது. மணி மறுவாய் நீல நிறமான களங்கமாய் த் தோன்றும் வடுவும் உண்டாகும் - என உம்மையும் ஆக்கமும் விரித்து முடிக்க `யாம் களங்கமிலேம்` என்று அவர் சொல்லினும், கண்டம் கறுத்ததையேனும், `ஓர் உபகாரம் பற்றி` எனலாம்; `காரணம் இன்றி, மதியினிடத்துத் தோன்ற இருக்கும் வடுவும் ஒன்று உண்டு` என்க. `இவர் களங்கமிலாராவது எங்ஙனம்` என்றபடி.

இதனை,
வார மாகித் திருவடிக்குப் பணிசெய் தொண்டர்
பெறுவ தென்னே?
ஆரம் பாம்பு; வாழ்வ தாரூர்; ஒற்றி யூரேல்
உம்ம தன்று;
....
ஊருங் காடு; உடையும் தோலே
ஓண காந்தன் தளியு ளீரே.*
என்றதுபோல உரிமை பற்றிச் சொல்மாத்திரையால் பழித்தவாறாகக் கொள்க. நிறை மதிக்கன்றிப் பிறைக்குக் களங்கம் இன்மையால், `தோன்றும்` என்பதை எதிர்கால முற்றாகக் கொண்டு, `இப்பொழுது இல்லையேனும் பின்பு உண்டாக இருக்கின்றது` என்றவாறாகக் கொள்க.

வடுவன் றெனக்கருதி நீமதித்தி யாயின்
சுடுவெண் பொடிநிறத்தாய் சொல்லாய் - படுவெண்
புலால்தலையின் உள்ளூண் புறம்பேசக் கேட்டோம்
நிலாத்தலையிற் சூடுவாய் நீ. #99

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சுடு வெண்பொடி நிறத்தாய், படு வெண் புலால் தலையினுள் ஊண் (பற்றிப் பிறர்) புறம் பேசக் கேட்டோம்; (அதனை) - வடு அன்று - எனக் கருதி நீ மதித்தியாயின், (வடு வாகாமைக்குரிய காரணத்தைச்) சொல்லாய்; நீ நிலாவைத் தலையிற் சூடுபவன்` எனக் கூட்டி முடிக்க. நிறம் - மார்பு. படு - இறந்த. ஊண் - உண்டல், புறம் பேசுதல், `பழித்தல்` என்னும் பொருட்டாகலின் அது, `ஊண்` என்பதில் தொக்கு நின்ற இரண்டவதற்கு முடிபாயிற்று. வடு - குற்றம். நிலாக் கலைகட்கு அடையாளம் ஆதலின், அதனைத் தலையில் சூடுதல், `எல்லாக் கலையும் வல்லவன்` என்பதைக் காட்டும். ஆகவே, `நீ வடுவாவன செய்யாய்` என்பது குறிப்பு.

நீயுலக மெல்லாம் இரப்பினும் நின்னுடைய
தீய அரவொழியச் செல்கண்டாய் - தூய
மடவரலார் வந்து பலியிடார் அஞ்சி
விடவரவம் மேல்ஆட மிக்கு. #100

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`எல்லாம்` என்பதன் பின், `சென்று` என்பதும், `கண்டாய்`

என்பதன்பின், `ஏன்எனில்` என்பதும் வருவிக்க. கண்டாய், முன்னிலையசை. விடம் - நஞ்சு. `விட அரவம் மிக்கு மேல் ஆடுதலால், மடவார் அஞ்சி, வந்து பலி இடார்` என்க. `எம் அன்பினால் உன்னை, அறியாதார் போல நினைத்துச் சொல்கின்றேம்` என்பதாம்.

மிக்க முழங்கெரியும் வீங்கிய பொங்கிருளும்
ஒக்க உடனிருந்தால் ஒவ்வாதே - செக்கர்போல்
ஆகத்தான் செஞ்சடையும் ஆங்கவன்தன் பொன்னுருவில்
பாகத்தாள் பூங்குழலும் பண்பு. #101

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மிக்க எரி - அளவில் மிகுந்த தீ. எரியின் முழக்கம். `தமதம` என்பது. வீங்கிய பொங்கு இருள் - பெருகிய, மிகுந்த இருள். ஒக்க உடன் இருத்தல் - சமமாக ஒருங்கிருத்தல், `ஒவ்வாதே` என்றதற்கு, மேல், `போலாதே` என்றதற்கு *1* உரைத்தவாறு உரைக்க. செக்கர் - செவ்வானம். ஆகம் - உடம்பு. பண்பு - நிறம், `பண்பினால்` என்னும் மூன்றனுருபு தொகுத்தலாயிற்று. `சடையும், குழலும் பண்பி னால் எரியும், இருளும் உடன் இருந்தால் ஒக்கும்` என்க. ஓருடம்பு இருவராய கோலத்தைப் புகழ்ந்தவாறு.

பண்புணர மாட்டேன்நான் நீயே பணித்துக்காண்
கண்புணரும் நெற்றிக் கறைக்கண்டா - பெண்புணரும்
அவ்வுருவோ மாலுருவோ ஆனேற்றாய் நீறணிவ
தெவ்வுருவோ நின்னுருவம் மேல். #102

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கண்புணரும்` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. `மேல்` என்பதை, மேலே, `பண்பு` என்பதை, மேலே, `பண்பு` என்பதேனாடு இயைத்து, `மேல் பண்பு - மேலே உள்ள தன்மை` என உரைக்க. பணி - சொல்லியருள். `பணி` என்னும் ஏவல் முற்றினைப் பார்த்துக் காண்` என்றது ஒரு நாட்டு வழக்கு. ஏவல் முற்றுக்கள் அந்த வழக்கில் இவ்வாறு வரும் என்க. இதில் கூறப்பட்ட பொருளின் விளக்கத்தை, மேல், `ஒருபால் உலகளந்த` என்னும் வெண்பாக் *2* குறிப்பிற் காண்க. `நீறணிவ தாகிய நின்னுருவம் எவ் வுருவோ` என்க. `இரண்டு உருவத்திலும் நீறு காணப்படுதலால், உன் உருவம் அறியப்பட வில்லை` என்பது கருத்து.

மேலாய மேகங்கள் கூடியோர் பொன்விலங்கல்
போலாம் ஒளிபுதைத்தால் ஒவ்வாதே - மாலாய

கைம்மா மதக்களிற்றுக் காருரிவை போர்த்தபோ
தம்மான் திருமேனி அன்று. #103
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மாலாய` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. மால் - மத மயக்கம். மா - காட்டு விலங்கு `கையையுடைய மாவாகிய களிறு` என்க. கார் உரிவை - கரிய தோல். அன்று, உரித்துப் போர்த்த அன்று. விலங்கல் - மலை. `ஒவ்வாதே` என்பது, மேலேயும் வந்தது. *1* யானைத் தோற் போர்வையைப் புகழ்ந்தவாறு.

அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட்கு என்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது #104
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அன்று - ஆட்படாது உலகியலில் இருந்த அன்று. இன்று - உலகியலின் நீங்கி ஆட்பட்ட பின்னதாகிய இன்று. இரு நிலைகளிலும் உன் உருவத்தை நான் காணவில்லையென்றால் எப் பொழுதுதான் நான் அதனைக் காண்பது*?* நீ சிவனுக்கு ஆள் என்கின் றாயே*;* அவன் உருவம் எத்தகையது என வினவுவார்க்கு நான் என்ன விடை சொல்லுவேன்` என்றபடி. `எவ்வுருவோ நும்பிரான்` என்பதில், உரு உடையவனை, `உரு` என்றது உபசார வழக்கு. `எவ் வுருவோ` என்னும் ஓகாரத்தை, `ஏது` என்பதனோடும் கூட்டுக. ஏது- எத்தகையது. ஆட்படாதபொழுது எந்த உருவத்தையும் காணவில்லை. ஆட்பட்ட பின் உருவத்தை ஒன்றாகக் காணவில்லை*;* கயிலையில் கண்டது ஓர் உருவம்*;* ஆலங்காட்டிற் கண்டது ஓர் உருவம்*;* அவரவர் கள் சொல்லக் கேட்பன பல உருவங்கள்*;* அவை கருதுவார் கருதும் உருவங்கள்*;* ஒருபால் உலகளந்த மாலும், ஒருபால் உமையவளும் ஆகும் உருவம்*;* அரியும், அயனும் ஆய உருவம் முதலியன. *2* `உருவ சிவன் தடத்த சிவனேயன்றிச் சொரூப சிவன் அல்லன்` என்பதும் `தடத்த சிவனே கண்ணுக்குப் புலனாவன்*;* சொரூப சிவன் உணர்வுக்கு மட்டுமே புலனாவன்` என்பதும் இதன் கருத்துக்களாகும்.

அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவும் உடையான் உளன்.

என்றது காண்க. `என்றுந்தான் எவ்வுரு` என்றது, நிலையான உரு எது` என்று வினாவி அஃது இல்லை, என்றபடி.

ஏதொக்கும் ஏதொவ்வா தேதாகும் ஏதாகா
தேதொக்கும் என்பதனை யாரறிவார் - பூதப்பால்
வில்வேட னாகி விசயனோ டேற்றநாள்
வல்வேட னான வடிவு. #105
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

\`பூதப்பால்\` என்பது முதலாகத் தொடங்கி உரைக்க. \`பூதம்\` என்றது மண்ணை; எனவே, \`பூதப்பால்\` என்றது, \`மண்ணுலகில்\` என்றவாறு \`வேடன்\` இரண்டில் முன்னது, \`வேடம் பூண்டவன்\` என்றும், பின்னது, \`வேட சாதியினன்\` என்றும் பொருள் தந்தன. விசயன் - அருச்சுனன். \`போர் ஏற்ற நாள்\` என ஒரு சொல் வருவிக்க. ஒக்கும் இரண்டில் முன்னது \`நிகர்க்கும்\` என்றும், பின்னது, \`பொருந்தும்\` என்றும் பொருள் தந்தன. \`ஏது\` ஐந்தில் முன்னிரண்டும் வினாப் பெயர்; அடுத்த இரண்டும் \`எத்தன்மையது\` என வினைக் குறிப்பு. ஈற்றில் உள்ளதும் வினாப் பெயரே. பின் வந்த \`ஏதொக்கும்\` என்பது, \`எந்த விடை பொருந்தும்\` என்பதாம். வினாக்கள் முதல் அடியில் வந்தன. வல்வேடனாய்த் தோன்றினும் தேவ வடிவாய் இருந்ததோ, வேட வடிவாயே இருந்ததோ? அதனை அறிந்தவர் ஆர் என்றபடி.

வடிவுடைய செங்கதிர்க்கு மாறாய்ப் பகலே
நெடிதுலவி நின்றெறிக்குங் கொல்லோ - கடியுலவு
சொன்முடிவொன் றில்லாத சோதியாய் சொல்லாயால்
நின்முடிமேல் திங்கள் நிலா. #106
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

\`கடி உலவு.... சோதியாய்\` என்றது விளி. அது, \`சொல்லாய்\` என்பதனோடு முடிந்தது. ஆல், அசை. கடி உலவு சொல் - விளக்கம் அமைந்த சொல். அத்தகைய சொல் ஒன்றை முடிவாக இல்லாத சோதி. அஃதாவது, சொல்லால் அளவிட்டுச் சொல்ல முடியாத ஒளி \`அலகில் சோதியன்\` * என்றது காண்க. சோதி யாய் - ஒளியை உடையவனே. \`நின் முடிமேல் திங்கள், பகலே நிலா எறிக்குங் கொல்லோ\` என இயைக்க. வடிவு - வட்டம் என்றது. \`நின் முடிமேல் திங்கள் குறையுடையது\` எனக் குறிப்பால் நகை தோற்றியவாறு. செங்கதிர் - ஞாயிறு. நெடிது உலவி நின்று - பகல் முழுதும் மறையாது உலவி நின்று. \`எறிக்குங் கொல்\` என்றது, சொல்லால் ஐயம் போலக் கூறினும், பொருளால் துணிவு உணர்த்தியதேயாம். ஓகாரம், சிறப்பு, \`நீ அணிந்துள்ள திங்கள் உலகத் திங்களன்று; அருளுருவத் திங்களாம்\`

என்றபடி. `கனக மலை அருகே, போயின காக்கையும் அன்றே படைத்தது பொன் வண்ணமே` *1* என்றாற் போல, `சிவனை அடைந்த பொருள்கள் யாவும் சிவமேயாதலல்லது வேறாகா` என்பதனைக் குறிப்பால் உணர்த்தியதாம்.

நிலாவிலங்கு வெண்மதியை நேடிக்கொள் வான்போல்
உலாவி உழிதருமா கொல்லோ - நிலாஇருந்த
செக்கரவ் வானமே ஒக்குந் திருமுடிக்கே
புக்கரவங் காலையே போன்று. **#107**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நிலா இருந்த` என்பது தொடங்கிச் சென்று, `நிலா இலங்கு வெண்மதியை நேடிக் கொள்வான்` என்பதை, `அரவம்` என்பதன் பின்னரும். `போல்` என்பதை, `கொல்லோ` என்பதன் பின்னரும் வைத்து உரைக்க. `போல்` என்பது `போலும்` என முற்றுப் பொருள் தந்தது. `பெறுவது - கொள்வாரும் கள்வரும் நேர்` என்பதில், `நேர்` *2* என்பது போல, இனி `போன்ம்` என்பதே பாடம் எனலுமாம். கொல், அசை, ஏகாரம், சிறப்பு. கொள்வான், வான் ஈற்று வினையெச்சம். செக்கர் அவ்வானம் - செம்மை நிறம் உடைய அந்தவானம். `புக்க` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. திருமுடிக்கே - திருமுடிக்கண்ணே; உருபு மயக்கம் `காலை` என்பதில் ஐ இரண்டாம் வேற்றுமை யுருபு. கால் - காற்று. `காற்றையே போன்று உலாவி உழிதரும்` என இயையும். `அரவம் சடை முடியில் மிக விரைவாக ஊர்ந்து உழலுதல், அங்குள்ள நிலாவை, `எங்கே உள்ளது` எனத் தேடி உழல்வது போல் உள்ளது` என்றது தற்குறிப்பேற்ற அணி. `நிலா` இரண்டில் முன்னது திங்களின் ஒளி; பின்னது திங்கள்.

காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு - மாலையின்
தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலும் மிடறு. **#108**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

காலை நேரம், அருணோதயத்தாலும், உதய சூரியனாலும் வானம்மிகச் சிவந்து தோன்றுதலால், அக்காலத்து வானம் சிவனது திருமேனிக்கும், உச்சி வேளையில் சூரியன் வெண்ணிறமாய் நிற்றலால் வானமும் வெளிது ஆதலின், அக்காலத்து வானம் அவன் அணிந்துள்ள வெண்ணீற்றிற்கும், மாலையில் மறை கின்ற ஞாயிற்றின் கதிர்கள் பல

திசைகளிலும் பல கம்பிகள் போல வீசுதலால் அவற்றின் தோற்றம் அவனது விரிந்த சடைக்கும், இரவு நேரத்தில் மிகுந்துள்ள இரவு மிகக் கரிதாய்த் தோன்றலின் அஃது அவன் கறை மிடற்றிற்கும் உவமையாயின. இவை மாலையுவமை யணி. `காலை, பகல்` என்பன அக்காலத்து வானத்தையும், `மாலை` என்பதும் அக்காலத்துக் கதிர் வீச்சினையும் குறித்தன. மாலை - மயங்கும் மாலை. அந்தக் காலம். `மாலையின் உரு` என இயையும். தாங்கு உரு - தாங்கப்படும் உரு. வேலை - பொழுது. கடும் பகல் - மிக்க பகல்; நண்பகல். மற்று, அசை, `அவன்` என்பது சிவபிரானைச் சுட்டியது பண்டறி சுட்டு. வீங்குதல் - மிகுதல். சிவபிரானது திருமேனியது உறுப்பழகைப் புகழ்ந்தவாறு.

மிடற்றில் விடம்உடையீர் உம்மிடற்றை நக்கி
மிடற்றில் விடங்கொண்ட வாறோ - மிடற்றகத்து
மைத்தாம் இருள்போலும் வண்ணங் கரிதாலோ
பைத்தாடும் நும்மார்பிற் பாம்பு. **#109**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மிடற்றில் விடம் உடையீர் நும் மார்பில் பைத்து ஆடும் பாம்பு வண்ணம் (நும்) மிடற்றில் மைத்து ஆம் இருள் போலும் கரிது; (அது) உம் மிடற்றை நக்கித் (தனது) மிடற்றில் வடம் கொண்ட வாற்றாலோ?` என இயைத்துப் பொருள் கொள்க. `உமது மிடற்றின் நிறமும், நும் மார்பில் ஆடும் பாம்பின் நிறமும் ஒன்றாய் இருக் கின்றதே` என வியந்துரைத்தவாறு. பின் வந்த மிடற்றுக்கு, `தன்` என்பது வருவிக்க. `உம்` என்பதை ஈற்றில் வந்த மிடற்றுக்கும் கூட்டுக. `விடம் கொண்டவாற்றால்` என உருபு விரிக்க. ஓகாரம் தெரிநிலைப் பொருட்டு. மைத்து ஆம் - மையின் தன்மை யுடையதாகி. `பாம்பு வண்ணம் கரிது` எனப் பண்பின் வினைபண்பிமேல் நின்றது. ஆல், ஓ அசைகள். பைத்து - படத்தை உடையதாய். இது, `பை` என்னும் பெயர் அடியாகப் பிறந்த வினைச் சொல்.

பாம்பும் மதியும் மடமானும் பாய்புலியுந்
தாம்பயின்று தாழருவி தாங்குதலால் - ஆம்பொன்
உருவடியில் ஓங்கொளிசேர் கண்ணுதலான் கோலத்
திருவடியின் மேய சிலம்பு. **#110**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதனுள் `சிலம்பு` என்றது கழலையே குறித்தது, மாதொரு பாகமாம் வடிவில் சிவன் திருவடியில் மேயது கழலேயாகையால் `கழல் வீரம்

உடையார்க்கே உரியது. முதல் இரண்டு அடிகளில் கூறியவாறு. சிவபெருமான் பகைப் பொருள்களைத் தனது மேனியில் பகைதீர்த்துப் பயில வைத்தமையாலும், தாங்கற்கரிய கங்கையைத் தலையில் தாங்கினமையாலும் அவன் கழல் அணிதல் தக்கதே `பயின்று` என்பதை, `பயில` எனத் திரிக்க. தாழ்தல் - வீழ்தல். `அருவி` என்றது கங்கையை. `பயின்று, தாங்குதலால் சிலம்பு ஆம்` என இயைக்க. ஆம் - பொருந்துவதே. உரு - நிறம். `வடிவில் ஓங்கின்ற ஒளி` என்க. சிவபிரானது எல்லாம் வல்ல தன்மையை வியந்தவாறு. பெருமான் புலித்தோலையே உடையனாயினும், மான் அதையே கண்டு, `புலி` என்று அஞ்சும் ஆகலின், `அங்ஙனம் அஞ்சவில்லை` என்பது கருத்து.

சிலம்படியாள் ஊடலைத் தான் தவிர்ப்பான் வேண்டிச்
சிலம்படிமேற் செவ்வரத்தஞ் சேர்த்தி - நலம்பெற்
றெதிராய செக்கரினும் இக்கோலஞ் செய்தான்
முதிரா மதியான் முடி. #111

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`செந்நிறத்தால் செக்கர் வானமும், சிவ பெருமானது சடைமுடியும் ஒன்றை ஒன்று வெல்லப் பார்க்கும் நிலையில், சிவபெருமான் உமாதேவியின் ஊடலைத் தவிர்க்க வேண்டி அவளது பாதங்களில் தனது முடியைப் பல முறை சேர்த்துதலால் அப்பாதங்களில் தனது முடியைப் பல முறை சேர்த்துதலால் அப்பாதங்களில் உள்ள செம்பஞ்சுக் குழம்பு பட்டுப் பட்டுச் சடைமுடி செக்கர் வானத்தை வென்று விட்டது` என்பது இப்பாட்டின் திரண்ட பொருள். இஃது உவகைச்சுவை. இதனை, `சிருங்கார ரசம்` என்பர் வட நூலார். அனைத்துச் சுவைகளையும் பத்திச் சுவைக்குத் துணையாகவே திரு முறைகள் கொள்ளும்.

செவ்வரத்தம் - செம்பஞ்சு. `செவ்வரத்தத்தில் சேர்த்தி` என உருபு விரிக்க. `சேர்த்தி` என்றாரேனும், `சேர்த்திச் சேர்த்தி` என அடுக்கிக் கூறுதல் கருத்தென்க. நலம் - அழகு. `பெற்று` என்பதில் `பெறுவித்து` என்னும் பிறவினை விகுதி தொகுக்கப்பட்டது. செக்கர் - செவ்வானம் இதன்பின், `சிறக்க` என ஒரு சொல் வருவிக்க. `முதிரா மதியான் தனது முடியைச் செவ்வரத்தத்தில் சேர்த்து நலம் பெறுவித்து இக்கோலம் செய்தான்` என்க. மதி திங்களாயினும், `அறிவு` என்றும் பொருள்தரும் ஆதலின், `ஒரு பெண்ணின் அடிகளில் பல முறை முடி தோய வணங்குகின்றான்` என்னும் நகை நயம் தோன்ற அப்பொருள் மேற் செல்லும் குறிப்பும் உடையது.

முடிமேற் கொடுமதியான் முக்கணான் நல்ல
அடிமேற் கொடுமதியோம் கூற்றைப் - படிமேற்

குனியவல மாம்அடிமை கொண்டாடப் பெற்றோம்
இனியவலம் உண்டோ எமக்கு. #112
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கொடு மதி - வளைந்த பிறை. `வாலறிவான் நற்றாள்` * என்பதன் உரையில், `பிறவிப் பிணிக்கு மருந்தாகலின் `நற்றாள்` என்றார்` எனப் பரிமேலழகர் உரைத்த உரை இங்கு, `நல்ல அடி` என்பதற்குக் கொள்ளத்தக்கது. மேற் கொடு - தலைமேற் கொண்டமையால், `கூற்றை மதியோம்` என்க. கூற்று, இறப்பைத் தரும் தெய்வம்; யமன். படி - பூமி, `படிமேல் பொருந்தத் தலை குனிய வல்ல மாகிய அடிமைத் தன்மையைக் கொண்டாடப் பெற்றோம்` என்பதில் `வல்லம்` என்பது இடைக் குறைந்து நின்றது. கொண்டாடுதல் - பாராட்டுதல். அவலம் - துன்பம்.

எமக்கிதுவோ பேராசை என்றுந் தவிரா
தெமக்கொருநாள் காட்டுதியோ எந்தாய் - அமைக்கவே
போந்தெரிபாய்ந் தன்ன புரிசடையாய் பொங்கிரவில்
ஏந்தெரிபாய்ந் தாடும் இடம். #113
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

எந்தாய், சடையாய், இரவில் நீ ஆடும் இடம் எமக்கு ஒருநாள் காட்டுதியோ? இதுவோ எமக்கு ஒரு பேராசையாய் (உள்ளது) தவிராது` என்க. அமைக்கவே போந்த எரி - சிலர் செயற்கையாக அமைக்க அதனாலே உண்டான எரி, பாய்தல் - பரத்தல்; `இயற்கையேயாயினும் செயற்கைபோல அத்தனை அமைப்பாய் உள்ளது` என்பதாம். `போந்த` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. பொங்குதல் - இருள் மிகுதல். ஏந்து எரி - ஓங்கி எரியும் எரி. `இதுவோ` என்னும் ஓகாரம் சிறப்பு. `தவிராது` என்றது. `தவிர்க் கினும் தவிராது` என்றபடி. `காட்டுதியோ` என்பதில் ஓகாரம் ஐயப் பொருட்டு ஆகலின், `மாட்டாயோ` என்பதும் கொள்ளப்படும். `சிவன் இரவில் எரியாடும் இடம் இந்தச் சுடுகாடாயின், யாவரும் அதனை எளிதிற் சென்று கண்டுவிடலாம்; `அவன் காட்ட வேண்டும்` என்பதில்லை. ஆசை தோன்றுதலும், அதனை நிரப்ப முடியாதிருத்தலும் நிகழா. அதனால், இரவாவது முற்றழிப்புக் காலமும், எரியாடும் இடமாவது சூக்குமமாகிய காரண நிலையுமாம் - என்பது கருத்து.

இடப்பால வானத் தெழுமதியை நீயோர்
மடப்பாவை தன்னருகே வைத்தால் - இடப்பாகங்
கொண்டாள் மலைப்பாவை கூறொன்றுங் கண்டிலங்காண்

கண்டாயே முக்கண்ணாய் கண். #114

விளக்கவுரை

`முக்கண்ணாய்` என்பதை முதலிற்கொண்டு `உரைக்க. இடப்பால் - `இடப் பக்கத்தில் உள்ள மதி` என்க. ஓர் மடப் பாவை, கங்கை. கங்கை தலையிலேயிருப்பதால், மதியை (பிறையை) அவள் பக்கத்தில்தான் வைக்க வேண்டியுள்ளது. அஃது உண்மைதான்; ஆயினும் அதனால் நீ அழகாகச் சூடிய பிறையில் உன் இடப் பாகத்தில் உள்ள தேவிக்குத் தொடர்பில்லாமல், அவள் மாற்றாட்கன்றோ (கங்கைக்கு) தொடர்புடையதாகின்றது? கண் கண்டாயே இனை நீ உன் கண்ணால் கண்டு கொண்டு தானே இருக்கின்றாள். (`இதற்கு என் செய்தாய்` என்பது இசை யெச்சம். `நீ, இடப்பாகத்தில் ஒருத்தியிருக்க, மற்றொருத்தியைத் தலையில் வைத்தது பிழை` என்பது குறிப்பு.) இதுவும் நிந்தாத் துதி. `கண்டிலம் காண்` என்பதில் காண், முன்லையசை. கண் கண்டாயே` என மாற்றி, `கண்ணால்` என உருபு விரிக்க. இனி, ஈற்றில் `கண்` என்பதை, `காண்` எனப் பாடம் ஓதி, `கண்டாயே; இதற்கு ஒரு வழியைக் காண்` என உரைப்பினும் ஆம்.

கண்டெந்தை என்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனேல்
அண்டம் பெறினும் அதுவேண்டேன் - துண்டஞ்சேர்
விண்ணாறுந் திங்களாய் மிக்குலகம் ஏழினுக்குங்
கண்ணாளா ஈதென் கருத்து. #115

விளக்கவுரை

`நின்னைக் கண்டு நினக்குப் பணி செய்யே னேல்` என்க. கைப் பணி - கையால் செய்யும் தொண்டு. சிறப்புடைமை பற்றி இதனை எடுத்தோதினார். ஆகவே, மனத்தொண்டும், வாய்த் தொண்டும் சொல்லாமே அடங்கின. `செய்யேனேல்` என்றது, `செய்யும் வாய்ப்பைப் பெறேனாயின்` என்றபடி. அண்டம் - வானுலக ஆட்சி. இதனைக் கூறவே, மண்ணுலக ஆட்சியும் அடங்கிற்று, திங்களாய் - திங்களை அணிந்தவனே. இதனையும், `கண்ணாளா` என்பதையும் முதலிற் கொள்க. `மிக்க` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. `கண்` என்றது, கண்போலும் தன்மையை. அஃதா வது நன்னெறி தீநெறிகளை விளக்கும் தன்மை. ஆளன் உடையவன். கைப்பணி பிறப்பை அறுப்பதும், மண்ணுலக விண்ணுலக ஆட்சிகள் பிறப்பை மிகுவிப்பனவும் ஆதலின் அவை முறையே விரும்பப்படு வதும், வெறுக்கப்படுவனவும் ஆயின.

கருத்தினால் நீகருதிற் றெல்லாம் உடனே
திருத்தலாஞ் சிக்கெனநான் சொன்னேன் - பருத்தரங்க

வெள்ளநீர் ஏற்றான் அடிக்கமலம் நீ விரும்பி
உள்ளமே எப்போதும் ஓது. #116

விளக்கவுரை

`உள்ளமே` என்பதை, `பருத் தரங்கம்` என்ப தற்கு முன்னே கூட்டி, அது முதலாக உரைக்க. தரங்கம் - அலை. வெள்ள நீர் - மிக்க நீர். வாயின் தொழிலாகிய ஓதுதலை நெஞ்சிற்கு ஏற்றியது இலக்கணை. நெஞ்சிற்குக் கருத்து உள்ளதுபோலக் கூறியதும் அது. திருத்தலாம் - நிரப்பலாம். சிக்கென - உறுதியாக.

ஓத நெடுங்கடல்கள் எத்தனையும் உய்த்தட்ட
ஏதும் நிறைந்தில்லை என்பரால் - பேதையர்கள்
எண்ணா திடும்பலியால் என்னோ நிறைந்தவா
கண்ணார் கபாலக் கலம். #117
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பொ: ஓதம் - அலை. `எத்தனை` என்பது ஆகு பெயராய் அவற்றின் நீரைக் குறித்தது. அட்டுதல் - சேர்த்தல். `அட்ட வும்` என உம்மை விரிக்க. `நிறைந்தது` என்பதில் அகரம் தொகுத்தல். அமர் நீதி நாயனார் நாட்டிய துலாக்கோல் மண்ணுலகத்ததாயினும் இறைவனது கோவணத்தை தாங்கிய தட்டு, எதிர்த் தட்டில் எத்தனைப் பொருள்களை வைப்பினும் மேல் எழாது இருந்தமை போல, கபாலம், பிரமன் தலையேயாயினும் இறைவன் கையில் இருத்தலால் எத்தனைக் கடல்களின் நீரை வார்ப்பினும் நிரம்பாதாயிற்று. பேதையர்கள் - பெண்கள். எண்ணாது - பாத்திரத்தின் பெருமையை அறியாமல். பலி- பிச்சை. `கலம் பலியால் நிறைந்தவா என்னோ? என்க. (நிறைய வில்லை, நிறைந்து விட்டதுபோல இறைவன் அப்பாற் சென்றான்` என்பது குறிப்பு. கண் ஆர் - இடம் மிகுந்த. கலம் - பாத்திரம். இறை வனை அடைந்த பொருள்களும் அவனைப் போலவே அளப்பரிதாதல் கூறியபடி.

கலங்கு புனற்கங்கை ஊடால லாலும்
இலங்கு மதியியங்க லாலும் - நலங்கொள்
பரிசுடையான் நீள்முடிமேற் பாம்பியங்க லாலும்
விரிசடையாங் காணில் விசும்பு. #118
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஊடு - உள்ளே, ஆலல் - ஒலித்தல். அசைதலு மாம். பரிசு - தன்மை; இயல்பு. `நீள் முடிமேல் விரி சடை` என இயைக்க. காணில் -

பார்க்கும்பொழுது. `சடை விசும்பாம்` என்க. ஆக்கம் உவமை குறித்து நின்றது. `கங்கை மழைபோலவும், பாம்பு இராகு போலவும் தோன்றுகின்றன` என்பதாம். இஃது ஏது உவமை யணி.

விசும்பில் விதியுடைய விண்ணோர் பணிந்து,
பசும்பொன் மணிமகுடந் தேய்ப்ப - முசிந்து,
எந்தாய் தழும்பேறி யேபாவ பொல்லாவாம்
அந்தா மரைபோல் அடி. **#119**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`எந்தாய்` என்பதை முதலிற் கொள்க. விசும்பின் - வானின்கண் உள்ள. விதி, இங்கு நல்வினை. விண்ணோர்` என்பது `தேவர்` என்னும் அளவாய் நின்றது. `மகுடத்தைத் தேய்ப்ப` என்க. `மகுடத்தால் தேய்ப்ப` என்றும் ஆம். முசிந்து - தேய்ந்து. ஏகாரம் பிற காரணங்களினின்று பிரித்தலின் பிரிநிலை. பொல்லா ஆம் - அழகில்லன ஆகின்றன. `நின் அடி` என வருவித்து, `தேய்ப்ப முசிந்து, தழும் பேறிப் பொல்லா ஆம்` என வினை முடிக்க. பாவம், இரக்கக் குறிப்புச் சொல். விண்ணோர் யாவரும் சிவபெருமானது திருவடிகளில் தங்கள் முடி தோய வணங்குதலைக் குறித்தவாறு.

அடிபேரிற் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரின் மாமுகடு பேருங் - கடகம்
மறிந்தாடும் கைபேரில் வான்திசைகள் பேரும்;
அறிந்தாடும் ஆற்றா தரங்கு. **#120**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`அடிகளது` என உருபு விரித்து, முதலிற் கூட்டுக. அடிகள் - சுவாமிகள். இஃது உயர்வு குறித்து வரும் பன்மைச் சொல். முகடு - அண்டத்தின் உச்சி. அது பேர்தலாவது, உடைதல், `மறிந்து` என்பதை, `மறிய` என திரிக்க. மறிதல் - உழலுதல். வான், இங்குச் சேய்மை. `ஆகலான் அரங்கு ஆற்றாது; அதனை யறிந்து மெல்ல ஆடுமின்` என்பதாம். ஆடும், முன்னிலைப் பன்மை ஏவல், சிவபெருமானது விசுவரூபத்தினைச் சிறப்பித்தவாறு.

அரங்கமாப் பேய்க்காட்டில் ஆடுவான் வாளா
இரங்குமோ எவ்வுயிர்க்கும் ஏழாய் - இரங்குமேல்
என்னாக வையான் தான் எவ்வுலகம் ஈந்தளியான்
பன்னாள் இரந்தாற் பணிந்து. **#121**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஏழாய், ஆடுவான் எவ்வுயிர்க்கும் வாளா இரங்குமோ! பன்னாள் பணிந்து இரந்தால் (இரங்கும்), இரங்குமேல், தான், என்னாகவையான்; எவ்வுலகம் ஈந்து அளியான்!` என இயைத்துக் கொள்க. `அரங்கமாப் பேய்க் காட்டில் ஆடுவான்` என்றாரேனும், `பேய்க் காடு அரங்கமா அதன்கண் ஆடுவான்` என்றல் கருத்து என்க. எவ்வுயிர்க்கும் - எத்துணைச் சிறப்புடைய உயிர்க்கும். அவை அயன்,மால், ஏனைத் தேவர் முதலியோர். `அவரெல்லாம் அவனைப் பன்னாள் பணிந்து இரந்தே தத்தம் பதவிகளைப் பெற்றனர் என்றபடி. எனவே, `அவனைப் பன்னாள் பணிந்து இரந்தால் திருவுளம் இரங்குவான்` என்பதற்கும், `இரங்கினால் எத்தகைய சிறப்பைத் தான் அவன் தரமாட்டான்` என்பதற்கும் அவ் அயன், மால் முதலியோரே சான்று` என்றவாறு. ஏழாய் - அறிவிலியே. இது தமது நெஞ்சத்தை விளித்தது. `இரங்குமோ` என்னும் ஓகாரம் எதிர்மறை. `இரங்கு மேல்` என்ற அனுவாதத்தால், இரங்குதலும் பெறப்பட்டது. அளித்தல்- காத்தல். `எத்தகைய சிறப்பையும் எய்தச் செய்வான். எந்த உலகத்தையும் ஈந்து அளிப்பான்` எனக் கூறற்பாலதனை இங்ஙனம் வினாவாகக் கூறினார். வலியுறுத்தித் தெளிவித்தற்கு `சிவன் வாளா இரங்கான்; பன்னாள் பணிந்து இரந்தால் இரங்குவான்` என்பது உணர்த்தியவாறு.

சும்மா கிடைக்குமோ சோணாசலன்பாதம்
அம்மால் விரிஞ்சன் அறிகிலார் நம்மால்
இருந்துகதை சொன்னக்கால் என்னாகும் நெஞ்சே
பொருந்த நினையாத போது*
எனப் பிற்காலத்தவரும் கூறினார்.
சிவன்எனும் நாமம் தனக்கே உடைய
செம்மேனிஎம்மான்
அவன்எனை ஆட்கொண் டளித்திடுமாயின்
அவன்றனை யான்
பவன்எனும் நாமம் பிடித்துத் திரிந்து
பன்னாள் அழைத்தால்
இவன்எனைப் பன்னாள் அழைப்பொழியான் என்று
எதிர்ப்படுமே.
என்பது அப்பர் திருமொழி.
உழப்பின் வாரா உறுதிகள் உளவோ!
கழப்பின் வாராக் கையற வுளவோ!
என்றார் பட்டினத்தடிகள்.

பணிந்தும் படர்சடையான் பாதங்கள் போதால்

அணிந்தும் அணிந்தவரை ஏத்தத் - துணிந்தென்றும்
எந்தையார்க் காட்செய்யப் பெற்ற இதுகொலோ
சிந்தையார்க் குள்ள செருக்கு. #122
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`படர்சடையான் பாதங்கள்` என்பதை முதலிற் கொள்க. போது - பேரரும்பு. அணிதல் - அலங்கரித்தல். வினைக்கண் வந்த எண்ணும்மைகள் ஆட்செய்யும் வகைகளை எண்ணி நின்றது. கொல், அசை. ஓகாரம் சிறப்பு. `சிந்தையார்` என உயர்த்தற்கண் அஃறிணை உயர் திணையாய் மயங்கிற்று.
செருக்கு - பெருமிதம். அஃதாவது, `ஒருவரை மதியாது உறாமைகள் செய்தல்` *3* பெரு மிதத்தைத் தம் சிந்தைமேல் வைத்து, அதனை வேறுபோற் கூறினார். `சிவனுக்கு ஆட்செய்யப் பெறுகின்ற பேறு கிடைத்தற்கரியது` என்பதைக் குறித்தவாறு.

செருக்கினால் வெற்பெடுத்த எத்தனையோ திண்தோள்
அரக்கனையும் முன்னின் றடர்த்த - திருத்தக்க
மாலயனுங் காணா தரற்றி மகிழ்ந்தேத்தக்
காலனையும் வென்றுதைத்த கால். #123
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`திருத் தக்க` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. திரு - திருமகள். `திருவுக்குத் தக்க` என நான்கன் உருபு தொகுத்தலாயிற்று. திருவினால் தக்க என மூன்றன் உருபு விரிப்பின் மாலுக்குக் குறையுண்டாகும். `காணாது` என்பதை, `காணப்படாது நின்று` எனச் செயப்பாட்டு வினைப் பொருட்டாக்கி, அதனை, `ஏத்தக் காணப்பட்ட` என ஒரு சொல் வருவித்து முடிக்க. இல்லையேல், `ஏத்த` என்பதற்கு முடிபின்றாம். `காணப்பட்ட கால்` என்க. `வென்று உதைத்த` என்பதனை, `உதைத்து வென்ற` எனப்பின் முன்னாக வைத்து, விகுதி பிரித்துக் கூட்டியுரைக்க. `கால் அடர்த்த` என முடியும். அடர்த்த அடர்த்தன; ஒறுத்தன. வெற்பு - கயிலை மலை. `எத்தனையோ` என்றது, `பல` என்றவாறு. எண் வரையறை கூறாது இங்ஙனம் கூறியது. அவனது வலிமிகுதியைக் குறித்தது, அதனானே அவன் செருக்கியதன் காரணத்தை உணர்த்தற்கு. அரக்கன், இராவணன். உம்மை, பிறருக்கில்லாத அவனது தலைகளும், தோள் களும் பற்றிய சிறப்பைக் குறித்தது. முன் நிற்றல், அனைத்துறுப்புக் களும் பின் நிற்கத் தான் முன்னிற்றல். அதனால், `அஃதே, காண் பார்க்கு முதலிற் காணப்படுவது` என்பதும்

பெறப்பட்டது. `அத்துணை வலியன் தோளால் முயன்று எடுத்த மலையை, தாளால் (அதனுள்ளும் ஒரு விரலால்) தடுத்து ஒறுத்தவனோடு இகலி நிற்பார் யாவர்` என அவனது அளவிலாற்றலைக் குறித்தது, அதனானே அவனது தன்வயம் உடைமையையும் குறித்தவாறு.

காலனையும் வென்றோம் கடுநரகம் கைகழன்றோம்
மேலை இருவினையும் வேரறுத்தோம் - கோல
அரணார் அவிந்தழிய வெந்தீஅம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து. **#124**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கோல அரணார்` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. கோலம் - அழகு. அரண் - மதில். முப்புரம். அரணார் - அவற்றையுடைய அசுரர். `அவிந்து அழிய` என்பது ஒரு பொருட் பன்மொழி. தீ - தீக்கடவுள் `தீக் கடவுளாகிய அம்பு` - என்க. சரண அரவிந்தங்கள் - திருவடியாகிய தாமரை மலர்கள். சார்ந்து - சார்ந்தமையால். கழன்றோம் - நீங்கினோம். கை, இடைச்சொல். மேல், இடமேல். அது காலத்தால் `கீழ்` எனப்படும்.ஐ சாரியை. மேலை வினை- முன்னே சேர்ந்து கிடக்கின்ற வினை; சஞ்சித கன்மம். `வேரோடு` என மூன்றாவது விரிக்க. சஞ்சிதம் இன்மையால், `பிறவியில்லையாயிற்று` என்பது கருத்து.

சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே ஒத்திலங்கிச் சாராது
பேர்ந்தார்க்குத் தீக்கொழுந்தின் பெற்றியதாம் - தேர்ந்துணரில்
தாழ்சுடரோன் செங்கதிருஞ் சாயுந் தழல்வண்ணன்
வீழ்சடையே என்றுரைக்கும் மின். **#125**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`தாழ் சுடரோனை` என்பது முதலாகத் தொடங்கி, `தேர்ந்து உணவில்` என்பதை ஈற்றிற் கூட்டி உரைக்க. தாழ் சுடரோன். மறைகின்ற சூரியன். எனவே, செங்கதிர், மாலை வெயிலாம். சாய்தல் - தோல்வியுறுதல். `சாயும் வண்ணன்` என இயையும். வீழ் - தொங்குகின்ற. மின் - மின்னல். `சடையே என்று உரைக்கும் மின்` என்றது உருவக அணி. `சடையே` என்னும் தேற்றேகாரம் உண்மையுவமைப் பொருட்டாய், உருவகத்தோடு இயைந்து வந்தது. `சார்ந்தார் இன்பமே பெறுதலால் அவர்க்கு அழகி தாயும், சாராதார் ஒறுத்தலே பெறுதலால் அவர்க்கு அச்சம் தருவதாயும் உள்ளது` என்க.

மின்போலுஞ் செஞ்சடையான் மாலோடும் ஈண்டிசைந்தால்
என்போலுங் காண்பார்கட் கென்றிரேல் - தன்போலும்

பொற்குன்றும் நீல மணிக்குன்றுந் தாமுடனே
நிற்கின்ற போலும் நெடிது. #126
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`காண்பார் கட்கு என்போலும்` எனக் கூட்டுக. என் போலும் - எதைப்போல இருக்கும். `தன்போலும்` என்றது, `சிவனைப் போல இருக்கின்ற பொற்குன்று` என்றபடி. இதனை நீல மணிக்கும் கூட்டி. `திருமாலைப் போல இருக்கின்ற நீல மணிக்குன்று` என்க. உலக இலக்கியங்களில் உபயோகத்தை மிக உயர்த்துக் கூறுதற்பொருட்டு. உபமான உபமேயங்களை நிலைமாற்றிக் கூறுதல் உண்டு. அங்ஙனம் கூறியவழி அஃது, `எதிர்நிலை உவமம்` என்றும், `விபரீத உவமை` என்றும் சொல்லப்படும். அதற்குக் காரணம் உலகப் பொருள்களில் உண்மையில் உயர்ந்து நிற்பது உவமையே. அதனை, `உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை` *1* என்னும் தொல்காப்பியத் தாலும் அறியலாம். இறையிலக்கியத்தில் உபமேயமாகிய இறையே உண்மையில் உயர்ந்து நிற்பது. எனினும் இலக்கண மரபு பற்றி அங்ஙனம் கூறுதல் கூடும். `பொற்குன்றும் நீல மணிக் குன்றும் உவம மாக வேறிடத்து வைத்துக் கருதப்படாது. அவையே பொருளாகக் காட்சியில் முன்னிலையில் வைத்து உணரப்படும்` என, அரியர்த்த உருவத்தைச் சிறப்பித்தவாறு. உடன் - ஒருசேர, `இரு பாதியாக` என்ற படி. நிற்கின்ற - நிற்கின்றன. நெடிது - நெடுங்காலம். `எல்லையில் காலம்` என்பதாம்.

நெடிதாய பொங்கெரியுந் தண்மதியும் நேரே
கடிதாங் கடுஞ்சுடரும் போலும் - கொடிதாக
விண்டார்கள் மும்மதிலும் வெந்தீ யினிலழியக்
கண்டாலும் முக்கணாங் கண். #127
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கொடிதாக` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்குங்கால், `வெந்தீ - இயற்கையிலே வெப்பம் உடையதாகிய தீ, மேலும் கொடிதாகி எரிக்க, அதனில்` என உரைக்க. விண்டார்கள் - பகையாகியவர்கள்; அசுரர். `ஆறும் கண்` என இயைக்க. ஆறுதல் - மகிழ்தல். காட்சியால் உள்ளம் மகிழ்தலை, `கண்களிப்பக் கண்டார்கள். *2* என்றது போல `கண் களித்தது` என்றல் வழக்கு `மூன்றாகிய கண்` என்றற்பாலதனை, `முக்கண் ஆம் கண்` என்றார். எனவே, முன் உள்ள `கண்` என்பது `பொருள்` எனப் பொதுமையில் நின்றதாம். `முக்கணான் கண்`

எனப்பாடம் ஓதி. `சிவனது கண்கள்` என உரைத்தல் சிறக்கும். `நெடிது` என்பதற்கு, முன்னை வெண்பாவில் உரைத்தவாறே உரைக்க. பொங்கு எரி - எரிகின்ற நெருப்பு. நேரே போலும் - ஒப்பனவேபோலும். கடிது - மிக்கது. `கடுஞ் சுடர்` என்பதில் கடுமை வெம்மை குறித்தது. வெஞ்சுடர், ஞாயிறு. `போலும்` என்பது உரை யசை, `மங்கலம் என்பது ஓர் ஊர் உண்டுபோலும்` என்றல் போல. உவமம் அன்று. `சிவனது` மூன்று கண்களே முச்சுடர்கள்` என உணர்த்தியவாறு.

கண்ணாரக் கண்டுமென் கையாரக் கூப்பியும்
எண்ணார எண்ணத்தால் எண்ணியும் - விண்ணோன்
எரியாடி என்றென்றும் இன்புறுவன் கொல்லோ
பெரியானைக் காணப் பெறின். #128

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியை முதலில் வைத்து உரைக்க. பெரியான் - மகாதேவன்; சிவன். `அவனை` எனச் சுட்டுப் பெயர் வருவிக்க. ஆர - நிரம்ப. எண், எண்ணம் - அதனைச் செய்வதாகிய என்றும் - என்று என்றும் சொல்லியும். கொல், அசை, ஓகாரம், ஐயப் பொருட்டு `என்` என்பது தாப்பிசையாய் முன்னும் சென்று இயைந்தது. பேரவாக் காரணமாக இங்ஙனம் ஐயுற்றவாறு. `காணப்பெறின்` என்பது, காணப்பெறலின் அருமை குறித்து நின்றது.

பெறினும் பிறிதியாதும் வேண்டேம் எமக்கீ
துறினும் உறாதொழியு மேனுஞ் - சிறிதுணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்றன் பேயாய
நற்கணத்தில் ஒன்றாய நாம். #129

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மற்றொரு கண் நெற்றிமேல் சிறிது உணர்த்தி வைத்தான்றன் பேய் நற்கணத்தில் ஒன்றாய நாம், (இஃது) உறினும், உறாதொழியுமேனும் பிறிதுயாதும் பெறினும் வேண்டேம்` என இயைத்து முடிக்க. நெற்றிக் கண்ணைச் சிறிது உணர்த்தலாவது, `உளது` என்னும் அளவிலே காட்டுதல். நன்கு திறப்பின் உலகம் வெந்தொழி யும். கணம் - படை. `நற்கணம்` என்றமையால், சிவகணமாகிய பேய்கள். பாவப் பிறவியாகிய பேய்களாகாமை விளங்கும். ஞானி களை உலகம் அவர்களது புறக்கோலம் பற்றி, பித்தராக நினைப்பினும் அவர் பித்தராகாமை போல்வதே இது. ஊழி முடிவில் உடம்பின்றிச் சிறிதே உணர்வு மாத்திரமாய் இருக்கும் உயிர்களே சிவப் படைகளாகக் கூறப்படுதலின் உண்மை. எனவே, பௌதிக உடம்பு நீங்கிச் சிவனைச்

சார்ந்திருக்கும் உயிர்களும் அவையாகவே விளங்கும் என்க. அம்மையார் மேற்காட்டிய திருப்பதிகங்களிலும் இவ்வந்தாதியின் இறுதியிலும் தம்மை, `காரைக்காற் பேய்` எனக் குறித்தமையால், அவர் அந்நிலையராகியே இறைவனைச் சார்ந்தமை தெளிவு. அதனால் நம்பியாரூரர் இவரது வரலாற்றை, `பேயார்` என்ற ஒரு சொல்லில் அடக்கி அருளிச் செய்தார்*(1)* சேக்கிழார். மெய்யில் ஊனுடை வனப்பை யெல்லாம் உதறி, எற்புடம்பே யாகி, வானமும், மண்ணும் எல்லாம் வணங்குப்பேய் வடிவ மானார்.*1* பொற்புடைச் செய்ய பாத புண்டரீ கங்கள் போற்றும் நற்கணத் தினில்ஒன் றானேன் நான்என்று நயந்து பாடி. *2* என விரித்தும், அருளிச் செய்தார். இத்தகைய நற்பேறு கிடைக்கப் பெற்ற பெருமிதம் பற்றி அம்மையார் தம்மை `நாம்` என்றும், `வேண்டேம்` என்றும், `எமக்கு` என்றும் பன்மைச் சொல்லாற் குறித்தருளினார். `பிற பேறுகளோடு தமக்கு இயைபில்லாமையால் அவை தம்மைக் கிட்டப் போவதில்லை` என்பது தோன்ற, `பெறினும்` என எதிர்மறை உம்மை கொடுத்துக் கூறினார். `பிற பேறுகள் எல்லாம் இதன் முன் எம்மாத்திரம்` என்பது கருத்து. உறுதல் நன்மை பயத்தல்.

நாமாலை சூடியும் நம்ஈசன் பொன்னடிக்கே
பூமாலை கொண்டு புனைந்தன்பாய் - நாமோர்
அறிவினையே பற்றினால் எற்றே தடுமே
எறிவினையே என்னும் இருள். **#130**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நா மாலை - நாவால் தொடுக்கப் படும் மாலை; சொன் மாலை; பா மாலை. `நம் ஈசன் பொன் அடிக்கே` என்பதை முதலிற் கொள்க. `கொண்டு` என்பது `ஆல்` உருபின் பொருட்டாய இடைச்சொல். புனைந்து - அலங்கரித்து, ஓர் அறிவு, `அவனே நமக்கு எல்லாப் பொருளும், பிறிதொன்றும் பொருளாவதில்லை` என அறியும் அந்த ஒருமை அறிவு. `ஏ தாய், அற்றாய் அடும்` என்க. ஏது, `யாது` என்பதன் மரூஉ. எற்று - என்ன தன்மைத்து. அடும் - வருத்தும். எறி - தாக்குகின்ற. `வினையே` என்னும் ஏகாரம். அசை. `வினை யென்னும் இருள்` என்றது உருவகம். இருள் - துன்பம். துன்பம் தருவதனைத் `துன்பம்` என்றது உபசாரம். பற்றினால், இருள், ஏதாய், எற்றாய் அடும்? என முடிக்க. `வினாக்கள், யாதாயும், எற்றாயும் அடாது` என்னும் எதிர் மறைப்பொருள் குறித்து நின்றன. `சிவனுக்குப் பணி செய்து நிற்பாரை வினை அணுகமாட்டாது` என்றபடி.

இருளின் உருவென்கோ மாமேகம் என்கோ
மருளின் மணிநீலம் என்கோ - அருளெமக்கு

நன்றுடையாய் செஞ்சடைமேல் நக்கிலங்கு வெண்மதியம்
ஒன்றுடையாய் கண்டத் தொளி. #131
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நன்றுடையாய்` என்பது முதலாகத் தொடங்கி, `உன்னுடைய கண்டத்து ஒளியை யான் என் என்கோ! எமக்கு அருள்` என முடிக்க. `எமக்கு அருள்` என்பது வேறு தொடராதலின், ஒருமை பன்மை மயக்கம் அன்மை உணர்க. என்கோ - என்பேனோ. ஓகாரங்கள் - ஐயப் பொருள வாயினும், `எவ்வாறு கூறினும் பொருந்தும்` என்பதே. மா - கருமை. மருள் - மருட்கை; வியப்பு. `வியப்பைத் தரும் மணி` என்க. இதில் சாரியை நிற்க இரண்டன் உருபு தொக்கது, பெயர்த் தொகையாகலின். அருள் - சொல்லியருள். நன்று உடையாய் நன்று ஒன்றையே உடையவனே. `நன்றுடை யானைத் தீயதில்லானை`* என அருளிச் செய்தமை காண்க. நக்கு இலங்குதல் - ஒளிவிட்டு விளங்குதல்.

ஒளிவிலி வன்மதனை ஒண்பொடியா நோக்கித்
தெளிவுள்ள சிந்தையினிற் சேர்வாய் - ஒளிநஞ்சம்
உண்டவாய் அஃதிருப்ப உன்னுடைய கண்டமிருள்
கொண்டவா றென்இதனைக் கூறு. #132
பொழிப்புரை எழுதவில்லை

விளக்கவுரை

ஒளி வில் - அழகையுடைய வில்; கரும்பு வில். வில்லி - வில்லையுடையவன். இஃது இடைக்குறைந்து நின்றது. பொடியாக - சாம்பலாகும் படி, நோக்கி - (நெற்றிக் கண்ணால்) பார்த்து. இவ் எச்சம், எண்ணின் கண் வந்தது. தெளிவு - ஞானம். சேர்வாய் - சேர்பவனே, ஒளி நஞ்சம் - ஒளிக்கப்பட்ட விடம், `வாயாகிய அஃது\\\' என்க. அஃது - அவ்வுறுப்பு. இருப்ப - கறை படாமலே இருக்க. `கண்டமும் கறைபடாமல்தான் உள்ளது; ஆயினும் உள்ளிருக்கும் நஞ்சின் கறை வெளித் தோன்றுதலை உலகம் கண்டம் கறைபட்டதாக எண்ணுகின்றது \\\' என்பதாம். `எந்த ஒரு பொருளும் இறைவனை மாசுபடுத்துதல் இயலாது\\\' என்பது குறிப்பு.

கூறெமக்கீ தெந்தாய் குளிர்சடையை மீதழித்திட்
டேற மிகப்பெருகின் என்செய்தி - சீறி
விழித்தூரும் வாளரவும் வெண்மதியும் ஈர்த்துத்
தெழித்தோடுங் கங்கைத் திரை. #133
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`எந்தாய்` எனத் தொடங்கி, `கங்கை மிகப் பெருகின், அரவும், மதியும், ஈர்த்து ஓடும்; (அப்பொழுது) நீ என் செய்வாய்? ஈது எமக்குக் கூறு` என இயைத்து முடிக்க. எந்தாய் - எம் தந்தையே. `சடையை அழித்திட்டு மீது ஏறப் பெருகின்` என்க. அழித்தல் - கட்டுக்கு அடங்காது போதல். `சீறி விழித்து ஊரும் அரவு` என்க. தெழித்து - ஆரவாரித்து. திரை - அலை. `என் செய்வாய்` என நகையாடிக் கூறியது, `கங்கை என்னும் அவ்வாறு பெருகப் போவது இல்லை` எனப் பழித்தது போலப் புகழ்ந்தது.

திரைமருவு செஞ்சடையான் சேவடிக்கே ஆளாய்
உரைமருவி யாமுணர்ந்தோங் கண்டீர் - தெரிமினோ
இம்மைக்கும் அம்மைக்கும் எல்லாம் அமைந்தோமே
எம்மைப் புறனுரைப்ப தென் #134

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உரை - சிவனைப் பற்றிக் கூறும் புகழுரையும், பொருளுரையும். அவை தோத்திர சாத்திரங்களாம். உணர்ந்தோம் - உணரற்பாலனவற்றை யெல்லாம் உணர்ந்தோம். `இனி வேறு உரைகள் பற்றியாம் உணரற்பாலது யாதுமில்லை` என்பதாம். கண்டீர், முன்னிலை யசை. ஓகாரம், அசை. `அதனால், இம்மைக்கும், அம்மைக்கும் ஆவன யாவற்றாலும் அமைந்தோம்; இஃது அறியாது, நீவிர் எம்மைப் புறங்கூறுதல் ஏன்` - என வேண்டும் சொற்கள் வருவித்து முடிக்க. அமைதல் - நிரம்புதல். ஏகாரம் தேற்றம். புறன் உரைத்தல் - காணாத வழி இகழ்ந்துரைத்தல். அஃதாவது, `பித்தனைப் பேணித் திரிகின்றார்` எனக் கூறுதலாம். இங்ஙனம் கூறுவோர் புறச் சமயிகள் ஆதலின், முதற்கண், `புறச் சமயத்தீர்` என்பது வருவித்துக் கொள்க.

என்னை உடையானும் ஏகமாய் நின்றானுந்
தன்னை அறியாத தன்மையனும் - பொன்னைச்
சுருளாகச் செய்தனைய தூச்சடையான் வானோர்க்
கருளாக வைத்த அவன். #135

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உடையான் - ஆளாக உடைய தலைவன். ஏகமாய் நிற்றல் - ஒப்பாரும், மிக்காரும் இல்லாது தனி முதல்வனாய் நிற்றல். தன்னை அறியாத தன்மையாவது, எத்துணையும் பெரியவ னாகிய தனது தன்மையைத் தான் எண்ணாமல், எத்துணையும் எளிய வனாய் வந்து அருள் புரியும் குணம். `பெறுமவற்றுள் யாம் அறிவ தில்லை` *1* என்பதிற்போல, அறிதல் இங்கு மதித்தல், `தன் பெருமை தானறியாத் தன்மையன்காண்` *2* என்று

அருளிச் செய்ததும் இப் பொருட்டு. `அருளை வானோர்க்கு ஆகும்படி வைத்த அவன்` என்க.

அவன்கண்டாய் வானோர் பிரானாவான் என்றும்
அவன்கண்டாய் அம்பவள வண்ணன் - அவன்கண்டாய்
மைத்தமர்ந்த கண்டத்தான் மற்றவன்பால் நன்னெஞ்சே
மெய்த்தமர்ந்தன் பாய்நீ விரும்பு. #136
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`அவன்` என்றது முன்னை வெண்பாவிற் சுட்டிய அவனை. `என்றும் பிரான் ஆவான்` என்க. பிரான் - தலைவன். மைத்து அமர்ந்த - மையின் நிறத்தைக் கொண்டு பொருந்திய. இது தேவர் அமுதுண்ணத் தான் நஞ்சை உண்ட கருணையைக் குறித்தது. மற்று, அசை. `நன்னெஞ்சே` என்பதை முதலிற் கூட்டுக. மெய்த்து - மெய்ம்மைப் பட்டு. அஃதாவது, `பயன் யாதும் கருதாத நிலையில் நின்று` என்றதாம். `மெய்த்து அமர்ந்த` என்பதின் ஈற்று அகரம் தொகுத் தலாயிற்று. `மெய்த்து அமர்ந்த அன்பு` என்றது சிறப்பும், `விரும்பு` என்பது பொதுவுமாய்த் தம்முள் இயைந்து நின்றன.

விருப்பினால் நீபிரிய கில்லாயோ வேறா
இருப்பிடமற் றில்லையோ என்னோ - பொருப்பன்மகள்
மஞ்சுபோல் மால்விடையாய் நிற்பிரிந்து வேறிருக்க
அஞ்சுமோ சொல்லாய் அவள். #137
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மஞ்சுபோல் மால் விடையாய்` என்பதை முதலிற்கொள்க. மஞ்சு - மேகம். மேகம் போலும் நிறத்தையுடைய மால், திருமால். விடை - இடபம், `திருமாலாகிய இடபம்` என்பதாம். `சிவபெருமான் திரிபுரம் எரித்த காலத்தில் திருமால் அவருக்கு இடபவாகனமாய் இருந்தார்` என்பது புராண வரலாறு. தடமதில்கள் அவைமூன்றும் தழல்எரித்த அந்நாளில் இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ.* என்னும் திருவாசகத்தைக் காண்க. பொருப்பன் - மலையரையன். அவன் மகள் உமாதேவி. அவளை நீ வேறு வையாது உன் உடம்பில் ஒரு பாதியாக வைத்திருப்பதற்குக் காரணம் யாது? அவள்மீது நீ வைத் துள்ள பெருவிருப்பத்தால் அவளை விட்டு நீ வேறாய் இருக்க ஆற்றாயோ? அவளுக்கு இருக்க வேறு இடம் இல்லையோ? உன்னை விட்டுப் பிரிந்து அவள் தனியேயிருக்க அஞ்சுகின்றாளோ? என் - யாது காரணம்? - என்க. `என்னோ` ஓகாரம் அசை. இவையெல்லாம் காரணங்களல்ல; இருவரும்

இருவரல்லர்; ஒருவரே` என்பதைக் குறிப்பால் உணர்த்தியவாறு. `பொருப்பன்மகள்` என்னும் சீரை, னகர ஒற்றுத் தள்ளி அலகிடுக.

அவளோர் குலமங்கை பாகத் தகலாள்
இவளோர் சலமகளும் ஈதே - தவளநீ
றென்பணிவீர் என்றும் பிறந்தறியீர் ஈங்கிவருள்
அன்பணியார் சொல்லுமினிங் கார். #138

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`உம்முடைய ஒரு பாகத்தினின்றும் நீங்கா திருப்பவளாகிய அவள் (நீ முறைப்படி மணந்து கொண்ட) குல மங்கை` என்பது நன்கு விளங்குகின்றது. (அவள் நிற்க) இவள் ஒருத்தி யும் நீர் வடிவாய் (உமது தலையில் இருக்கின்றாள்) இவளையும் நீர் என்றும் பிரிந்தறியீர்; உம்முடைய தன்மை இதுவேயாய் உள்ளது. (இருக்கட்டும்) இவ்விருவருள் அன்பு மிகுதியால் நெருங்கிய உறவுடையவர் யார்? சொல்லுமின்` - என்க. `சொல்லுமின்` - என்றது. `பொருப்பன் மகள்தான் அன்பால் அணியளாய் இருக்க முடியும்; சலமகள் எங்ஙனம் அன்பாய் இருக்க முடியும்` எனக் குறித்தவாறு, `சலம்` என்பதற்கு, - `வஞ்சம்` - என்பதும் பொருளாகலின், அதனாலும் ஒரு சொல்நயம் தோற்றுவித்தவாறு. `பொருப்பன் மகளே உமது அங்கமும், பிரத்தியங்கமும் ஆவள்; ஏனைய வெல்லாம் உமது சாங்க உபாங்கங்களாம்` என்றபடி. பொருப்பன் மகளே சிவனது சத்தி; அவனது சம்பந்தத்தாலே சிவனது அணி, ஆடை, இடம் முதலியன சத்திகள் ஆகின்றன என்பது உணர்க. `கங்கையின் வீழ்ச்சியால் உலகம் அழிந்தொழியாதபடி அவளைச் சிவன் தன் தலையில் தாங்கிய தல்லது, காம தகனனாகிய அவனுக்கும் நம்மைப் போலக் காமம் உள தாகக் கருதுதல் மடமை யாதலின், நகைச் சுவை தோன்றவே புலவர்கள் அவனை இவ்வாறு கூறித் துதிக்கின்றனர்` என்பது கருத்து.

ஆர்வல்லார் காண அரன்அவனை அன்பென்னும்
போர்வை யதனாலே போர்த்தமைத்துச் - சீர்வல்ல
தாயத்தால் நாமுந் தனிநெஞ்சி னுள்ளடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து. #139

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நாமும் சீர்வல்ல தாயத்தால்` என மாற்றி முதலிற் கூட்டி, `மாயத்தால் மறைத்து வைத்தோம்; இனி அரன் அவனை ஆர் காண வல்லார்` என இயைத்து முடிக்க. அன்பென்னும் போர்வை, உருவகம். `போர்வையது`

என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. அன்பினுள் அகப்படுபவனாதல் பற்றி அன்பு அவனை மறைக்கும் போர்வையாக உருவகிக்கப்பட்டது. சீர், ஆகு பெயராய்ப் பாட்டை உணர்த்திற்று. `அவனைப் பாட்டால் போற்ற வல்ல தாயத்தால் என்க. தாயம் - செல்வ உரிமை. `நாமும்` என்னும் உம்மை மற்றைத் தொண்டர்களோடு என இறந்தது தழுவி நின்றது. தனி நெஞ்சம் - அன்பு மிக்கமையால் ஒப்பற்ற மனம். மாயம் - என்ற உபாயம். `அரனாகிய அவனை` என்க. `அன்புடையவர் கூடித் தங்கள் அன்பாகிய போர்த்து வைத்திருத்தலால் அன்பில்லாத பிறர் அவனை எங்ஙனம் காண முடியும்` என நயம்படக் கூறியவாறு. `அன்பில்லாதார் அரனைக் காணுதல் இயலாது` என்பது கருத்து.

மறைத்துலகம் ஏழினிலும் வைத்தாயோ அன்றேல்
உறைப்போடும் உன்கைக்கொண் டாயோ - நிறைத்திட்
டுளைந்தெழுந்து நீயெரிப்ப மூவுலகும் உள்புக்
களைந்தெழுந்த செந்தீ யழல். **#140**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நீ நிறைத்திட்டு எரிப்ப, உளைந்து எழுந்து, மூவுலகும் உள்புக்கு, அணைந்து எழுந்த செந்தீ அழலை உலகம் ஏழினிலும் மறைத்து வைத்தாயோ? அன்றேல், உறைப்போடும் உன் கைக் கொண்டாயோ? (அஃது இன்று உலகை எரிக்கவில்லையோ,) என இயைத்து முடிக்க. ஈற்றில் வருவித்து உரைத்தது இசையெச்சம். உறைப்போடும் - வலிமையோடும். உம்மை சிறப்பு. உளைந்து - சினந்து. `மூவுலகினும்` என்பதில் சாரியை தொக்கது. அணைந்து - விரவி. அழல் - சுவாலை. `யாதொரு பொருளும் இறைவனது சங்கற்பத்தைக் கடக்கமாட்டாது` என்பதாம்.

அழலாட அங்கை சிவந்ததோ அங்கை
அழகால் அழல்சிவந்த வாறோ - கழலாடப்
பேயோடு கானிற் பிறங்க அனலேந்தித்
தீயாடு வாய்இதனைச் செப்பு. **#141**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அங்கை - அகங்கை. ஆறு - பயன். தீ ஆடுவாய் - தீயின்கண் நின்று ஆடுவாய்; விளி. அகங்கையும், தீயும் அழகால் ஒன்றனை ஒன்று விஞ்சுவனவாய் உள்ளன` எனக் கூறி, அகங்கையின் மிக்க அழகைப் புகழ்ந்தவாறு. இஃது ஏது அணியின் பாற் படும்.

செப்பேந் திளமுலையாள் காணவோ தீப்படுகாட்

டப்பேய்க் கணமவைதாங் காணவோ - செப்பெனக்கொன்
றாகத்தான் அங்காந் தனலுமிழும் ஐவாய
நாகத்தாய் ஆடுன் நடம். #142
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`தான் அங்காந்து` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. செப்பு ஏந்து. கிண்ணம்போல நிமிர்ந்த. `கணமவை` என்பதில் அவை, பகுதிப் பொருள் விகுதி. பின் வந்த, `காணவோ` என்பதன்பின், `நிகழ்கின்றது` என்னும் பயனிலை அவாய் நிலையாக எஞ்சி நின்றது. `நடம் நிகழ்கின்றது` என இயையும். `எனக்கு ஒன்றாகச் செப்பு` என்க. ஒன்றாக - திட்டமாக. இனி, `நீ ஆடும்` என எழுவாய் வருவித்து. முடிப்பினும் ஆம். `எவர் காணுதற் பொருட்டும் நீ ஆடவில்லை; உனது கருணை காரணமாகவே நீ ஆடுகின்றாய்` என்பது குறிப்பு.

`ஆடும் எனவும், அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும்..........
....
*நாடும் திறத்தார்க்(கு) அருளல்லது நாட்ட லாமே?** `

என அருளிச் செய்தமை காண்க. அங்காத்தல் - வாய் திறத்தல். ஐவாய - ஐந்து வாய்களை உடைய. நாகத்தாய் - பாம்பை அணிந்தவனே.

நடக்கிற் படிநடுங்கும் நோக்கில் திசைவேம்
இடிக்கின் உலகனைத்தும் ஏங்கும் - அடுக்கல்
பொருமேறோ ஆனேறோ பொன்னொப்பாய் நின்ஏ
றுருமேறோ ஒன்றா உரை. #143
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பொன் ஒப்பாய், நின் ஏறு நடக்கில்` எனக் கூட்டி உரைக்க. படி - பூமி. நோக்கில் - கண் விழித்துப் பார்த்தால். `கண்ணினின்றும் எழும் தீயால் திசைகள் வேகும்` என்க. இடிக்கின் - கதறினால் ஏங்கும் - கதி காணாது கலங்கும். இதன்பின், `ஆதலால்` என்பது வருவிக்க. அடுக்கல் - மலை. `மலையின்கண் நின்று` என விரிக்க. பொரும் ஏறோ - இடபத்தானோ. உரும் ஏறோ - மேகத்தி னின்றும் தோன்றுகின்ற இடியேறோ, சிவனைச் சார்ந்தமையால், ஆனேறும் பிறவகை ஏறுகளினும் மிகுவலி பெற்றமையைக் கூறிய வாறு.

உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக்
கரைவினாற் காரைக்காற் பேய்சொல் - பரவுவார்
ஆராத அன்பினோ டண்ணலைச்சென் றேத்துவார்

பேராத காதல் பிறந்து. #144

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`காரைக்காற் பேய் சொல் இம்மாலை அந்தாதி வெண்பாக்களை உரையினால், கரைவினாற் பரவுவார் ஆராத அன்பினோடு சென்று அண்ணலைப் பேராத காதல் பிறந்து ஏத்துவார்` என இயைத்து முடிக்க. `மாலையாய் அமைந்த வெண்பா` என்க. மாலையாதல் சொற்றொடர்நிலைச் செய்யுள் ஆதல். `உரை` என்றது, `மனம், மொழி, மெய்` என்னும் மூன்றனுள் `மொழி` என்னும் மொழியைக் குறித்தது. கரைவு - அன்பு. பரவுதல், ஏத்துதல் இரண்டும் துதித்தலைக் குறிக்கும் சொற்கள். ஆராத - நிரம்பாத. பேராத - மாறாத. காதல் - பேரன்பு. பிறந்து தோன்றப் பெற்று. `கரைவினால் பரவுவார்` என்றது இவ்வுலகத்திலும், பின் வந்தவை சிவலோகத்திலும் ஆதலின் அவை கூறியது கூறல் அல்லவாதலை அறிக. சென்று - சிவலோகத்தை அடைந்து. இது நூற் பயன் கூறியவாறு. ஈற்றில் `பிறந்து` என்றது முதல் வெண்பாவின் முதற் சீரோடு சென்று மண்டலித்தல் காண்க. அற்புதத் திருவந்தாதி முற்றிற்று.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் - சேத்திரத் திருவெண்பா

ஒடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாரும்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று - நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமுன் நன்னெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர். #145

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(இவ்வெண்பாக்கள் யாவும், `யாக்கையின் நிலையாமையை உணர்ந்து, இன்றே, இப்பொழுதே தலங்கள் தோறும் சென்று சிவனை வழிபட்டு உய்தல் வேண்டும்` என்பதையே அறி வுறுத்துகின்றன). இவ்வெண்பா, `தில்லைத் திருச்சிற்றம்பலப் பெருமானைக் கண்டு வணங்குக` எனக் கூறுகின்றது.

நீர்மை - தன்மை; `நடத்தலேயன்றி ஓடவும் இருந்த வலிமை நீங்க, மூப்பு வந்தவுடன்` என்றபடி. உற்றார் - பிறவியிலே அன்புடைய வராய்ப் பொருந்தினவர்; சுற்றத்தார்; மனைவி, மக்கள் முதலாயினார். `உற்றாரும்` என்னும் உம்மை உயர்வு சிறப்பு. கோடுகின்றார் - மனம் மாறிவிடுவர்; தெளிவினால் எதிர்காலம் நிகழ்காலமாகச் சொல்லப் பட்டது. `மூப்பும்` என்னும் உம்மை இளமையாகிய இறந்ததனைத் தழுவிற்று. `வரும்` என்று அஞ்சப்பட்ட அதுவும் வந்துவிட்டது - என்ற படி. நாடுகின்ற - மிகவும் விரும்பப்படுகின்ற. நல் அச்சு - வண்டியில் பளுவைத் தாங்குகின்ற நல்ல அச்சுப் போல்வதாகிய உடம்பு. அஃது இறுதலாவது, செயலற்று வீழ்தல். அம்பலம், யாவருக்கும் உரிய பொது இடம். அஃது மயானத்தைக் குறித்தது. `அம்பலமே` என்னும் பிரிநிலை ஏகாரம் செயலற்று வீழ்ந்த உடலுக்கு அது தவிர இடம் இன்மையைக் குறித்தது. `சிற்றம்பலமே` என்னும் பிரிநிலை ஏகாரம், `சேரத் தக்க இடம் பிறிதன்று என்பதை உணர்த்திற்று. `நல்நெஞ்சே` என்பதை முதலிற்கொள்க. `நல்வழியைப் பற்றுதற்கு உரியை` என்பது தோன்ற, `நல் நெஞ்சே` - என்றார். பின்னிரண்டடிகள் `திரிபு` என்னும் சொல்லணி பெற்றன. மேலும் இவ்வாறு வருவன காண்க.

கடுவடுத்த நீர்கொடுவா காடிதா என்று
நடுநடுத்து நாஅடங்கா முன்னம் பொடியடுத்த
பாழ்க்கோட்டஞ் சேராமுன் பன்மாடத் தென்குடந்தைக்
கீழ்க்கோட்டஞ் செப்பிக் கிட. #146

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கடு - கடுக்காய்; `இது பித்தத்தைப் போக்குவது` என்பர். காடி - பழஞ்சோற்று நீர். இதுவும் அத்தன்மையாதலோடு உணவும் ஆகும். `வெடுவெடுத்தல்` என்பது போல, நடுநடுத்தல், நடுக்கத்தைக் குறித்ததோர் இரட்டைக் கிளவி.
நா அடங்குதல் - பேச்சு நீங்குதல். பொடி - சாம்பல். பாழ்க் கோட்டம் - அழிவிடம், மயானம். தென் குடந்தை - தென்னாட்டில் உள்ளதாகிய `திருக்குடமூக்கு` என்னும் தலம். தென், அழகும் ஆம், செப்பி - துதித்து. `கிட` என்றது `நிலைமாறுதலை விடுக` என்றபடி. இது முதலாக இனி வரும் வெண்பாக்களில் வேண்டும் இடங்களில் `நெஞ்சே` என்பது வருவிக்க. `முன்னம், முன்` என்பன செவ்வெண்.

குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி,
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை. **#147**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குந்தி நடத்தல் - நெடுக நடந்துபோக இயலாமல் இடையிடையே குந்திக் குந்தி எழுந்து நடத்தல். `ஐ` இரண்டில் முன்னது கோழை. அது நுரைத்து, மேலே ஏறி, வெளி வந்து, ஓட்டெடுத்து வாய் ஆறு (வாய்வழியால்) பாயா முன்` என்க. ஐயாறு, சோழ நாட்டுத் தலம். தலப் பெயரைச் சொல்லுதலும் அங்குள்ள இறைவன் பெயரைச் சொல்லுதலோடே ஒக்கும். இனி, `ஐயாறு` என்பது ஆகுபெயரில் அங்கு எழுந்தருளியுள்ள இறைவனைக் குறித்தது என்றலும் ஆம், பின்னிரண்டடிகள் `மடக்கு` என்னும் சொல்லணி பெற்றன.

காளை வடிவொழிந்து கையறவோ டையுறவாய்
நாளும் அணுகி நலியாமுன் பாளை
அவிழ்கமுகம் பூஞ்சோலை ஆரூரற் காளாய்க்
கவிழ்கமுகம் கூம்புகஎன் கை. **#148**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

காளை - கட்டிளைஞன். இஃது அப் பருவத்தைக் குறித்தது. கையறவு - செயலற்ற நிலை. ஐயுறவு - சந்தேகித்தல், அஃது, `இன்றோ, நாளையோ வாழ்வு முடிவது` எனப் பலரும் நினைப்பது. நாள் - இறுதி நாள். உம்மை, முன்னர்க் கூறிய வற்றைத் தழுவிநின்றது. நலிதல் - அடர்த்தல். இதற்கு வினை முதலான `கூற்றுவன்` எனத் தனித் தனி இயைக்க. `முகம்`

என்றது தலையை. அதற்கும் `என்` என்பதனைக் கூட்டி, `என் முகம் (தலை) கவிழ்க; (வணங்குக) கை (கள்) கூம்புக` என்க. இதிலும் திரிபணி வந்தது.

வஞ்சியன நுண்ணிடையார் வாள்தடங்கண் நீர்சோரக்
குஞ்சி குறங்கின்மேற் கொண்டிருந்து கஞ்சி
அருத்தொருத்தி கொண்டுவா என்னாமுன் நெஞ்சே
திருத்துருத்தி யான்பாதஞ் சேர். **#149**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வஞ்சி - வஞ்சிக் கொடி. நுண்ணிடையார், தேவியார்; உயர்வுப் பன்மை. குஞ்சி - ஆடவர் தலை மயிர். அது விடாத ஆகுபெயராய், அஃது உள்ள தலையைக் குறித்தது. குறங்கு - தொடை. இது தேவியாருடையது. `தேவியார் உனது தலையைத் தமது தொடைமேற் கொண்டிருந்தது, - அருத்த ஒருத்தி கஞ்சி கொண்டு வா - என்னாமுன்` என்க. `அருத்த` என்பதன் ஈற்று அகரம் தொகுத்த லாயிற்று. திருத்துருத்தி, சோழநாட்டுத் தலம் இது, `குத்தாலம்` என வழங்குகின்றது.

காலைக் கரையிழையாற் கட்டித்தன் கைஆர்த்து
மாலை தலைக்கணிந்து மையெழுதி மேலோர்
பருக்கோடி மூடிப் பலரழா முன்னம்
திருக்கோடி காஅடைநீ சென்று. **#150**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`காலைக் கட்டி` என இயையும். கரையிழை - பழந்துணியின் ஓரத்தில் உள்ள கரையைக் கிழித்து எடுத்த நீள் வடம். இறந்தோரது இரு காற் பெருவிரல்களையும் இத்தகைய இழையாற் சேர்த்துக் கட்டுதல் வழக்கம். `தன்` என்றது. `தன் பிணத்தினது` என்ற படி. உடல் உயிருக்கு வேறாய் வீழ்ந்தமையின் பிறிதாகச் சொல்லப் பட்டது. கைகளையும் ஆட வொட்டாமல் கட்டுவர், ஆர்த்து - கட்டி. தலைக்கு மாலை சூட்டுதலும், கண்ணுக்கு மை யெழுதுதலும் பிணச் சிங்காரம். `மேல் மூடி` என்க. பருக் கோடி - பெரிய புத்தாடை. `பருக் கோடியால் மூடி` என்க. திருக்கோடிகா, சோழ நாட்டுத் தலம்.

மாண்டு வாய் அங்காவா முன்னம் மடநெஞ்சே
வேண்டுவா யாகி விரைந்தொல்லைப் பாண்டவாய்த்
தென்னிடை வாய் மேய சிவனார் திருநாமம்
நின்னிடைவாய் வைத்து நினை. **#151**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அங்காத்தல் - திறத்தல். வேண்டு வாயாகி - விரும்புதல் தன்மையை உடையையாகி. விரைந்து விரைந்து சென்று. ஒல்லை - சீக்கிரமாக. `பண்டு` என்பது முதல் நீண்டு `பாண்டு` என வந்ததாகக் கொண்டு. பண்டே அவாவி இடைவாய் மேலே சிவனார்` என்க. இனி, பாண்டத்தின் வாய் போலும் உனது வாயில் வைத்து` என்றலும் ஆம். தென் இடைவாய் - தென்னாட்டில் உள்ள `இடைவாய்` என்னும் தலம். சோழ நாட்டில் அண்மையில், `விடைவாய்` என்னும் தலத்து ஞானசம்பந்தர் திருப்பதிகம் ஒன்றைக் கல்வெட்டிலிருந்து கண்டு சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாசம் வெளியிட்டது. * `இடைவாய்` என்பது அத்தலத்தின் மறுபெயராகலாம். அல்லது வேறொரு வைப்புத் தலமாகவும் இருக்கலாம். இவ்வெண்பாக்களில் வைப்புத் தலங்களும் சில காணப்படுகின்றன. நின்னிடை - நின்னிடமாக. வாய் வைத்தல், வாசகமாகக் கணித்தல். நினைதல் - மானதமாகக் கணித்தல். இவை ஒன்றின் ஒன்று மிக்கது.

தொட்டுத் தடவித் துடிப்பொன்றுங் காணாது
பெட்டப் பிணமென்று பேரிட்டுக் - கட்டி
எடுங்களத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை. **#152**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

துடிப்பு - இருதயத் துடிப்பு, நாடித் துடிப்பு முதலியன. பெட்ட - முன்பெல்லாம் பலராலும் விரும்பப்பட்ட. இது பழமையை நினைவு கூர்தல் கூறியது. பகர வொற்று விரித்தல். பேர், மாற்றுப் பேர். `அப்பனைக் கண்டேன், அம்மையைக் கண்டேன்` எனற் பாலனவற்றை. `அப்பாவைக் கண்டேன், அம்மாவைக் கண்டேன்` என்னும் நாட்டு வழக்குப் போல, `அத்தனை எடுங்கள்` என்பது `அத்தாவை எடுங்கள்` என வந்ததாகக் கொண்டு, இரண்டாம் உருபு விரித்துரைக்க. அல்லது, `அத்தா` என உரியவரை விளித்தது எனின், ஒருமைப் பன்மை மயக்கமாகும். இனி `அத்தான்` எனப் பாடம் ஓதி, `அத்தன்` என்பது நீண்டு வந்தது, எனினும் ஆம். இப்பொருட்கும் இரண்டன் உருபு விரிக்கப்படும். நெடுங்களம் சோழ நாட்டுத் தலம். ஏழை மடம், ஒரு பொருட் பன்மொழி.

அழுகு திரிகுரம்பை ஆங்கதுவிட் டாவி
ஒழுகும் பொழுதறிய ஒண்ணா கழுகு
கழித்துண் டலையாமுன் காவிரியின் தென்பாற்

குழித்தண் டலையானைக் கூறு. #153
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திரி - கெட்டுப்போன. கெட்டது மூப்பினாலும், பிணியினாலும். குரம்பை - குடில். குடில் போலும் உடம்பு. ஆங்கது, ஒரு சொல் நீர்மைத்து. ஆவி - உயிர். ஒழுகுதல் - ஓட்டைக் குடத்தி னின்றும் நீர் நீங்குதல் போல நீங்குதல். இது நீங்குதலே இயல்பாதலைக் குறித்தவாறு. அறிதல், இங்கு நினைத்தல் `கழித்து உண்டு அலையா முன்` என்றாரேனும், `அலைந்து உண்டு கழியாமுன்` என்றலே கருத் தென்க. தண்டலை - `தண்டலை நீணெறி` என்னும் தலம். இது `குழித் தண்டலை` என வழங்கினமை பெறப்படுகின்றது.

படிமுழுதும் வெண்குடைக்கீழ்ப் பாரெலாம் ஆண்ட
முடியரசர் செல்வத்து மும்மைக் கடியிலங்கு
தோடேந்து கொன்றையந்தார்ச் சோதிக்குத் தொண்டுபட்
டோடேந்தி யுண்ப துறும். #154
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

படி - நிலவுலகம். `ஒரு வெண்குடை` என்பது ஆற்றலால் கொள்ளக் கிடந்தது. `கீழாக` என ஆக்கம் வருவிக்க. `படி` என முன்னர் வந்தமையின், `பாரெலாம்` என்றது, `அவற்றை யெல்லாம்` எனச் சுட்டுப் பெயரளவாய் நின்றது. `செல்வத்தின்` என ஒப்புப் பொரு, அல்லது உறழ் பொருப் பொருட்டாகிய ஐந்தாவது விரிக்க. `செல்வத்தின்` என்றே பாடம் ஓதலும் ஆம். மும்மை - மும் மடங்கு. `மும்மடங்கு உறும்` என முடியும். உறும் - நன்றாம். கடி - வாசனை. தோடு - இதழ். `கடியிலங்கு ..... உண்பது` என்பதனை முதலிற் கூட்டியுரைக்க. ஓடு ஏந்துதல், எந்தி இரத்தலாகிய தன் காரி யத்தைத் தோற்றி நின்றது. இந்நாயனார். மன்னர் எலாம் பணிசெய்ய அரசாண்ட பல்லவ மன்னராய் இருந்தும், `அரசை இன்னல்` எனத் துறந்தார் - என்று சேக்கிழார் கூறியதற்கு இவ்வெண்பாவும், இனி வரும் `தஞ்சாக மூவுலகும்` என்னும் வெண்பாவும் அகச்சான்றாய் நிற்றலையறிக.

குழீஇயிருந்த சுற்றம் குணங்கள்பா ராட்ட
வழீஇயிருந்த அங்கங்கள் எல்லாந் தழீஇயிருந்தும்
என்னானைக் காவா இதுதகா தென்னாமுன்
தென்னானைக் காஅடைநீ சென்று. #155
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

எவர் ஒருவர் இறப்பினும் இறந்த அத்துக்கக் குழுவினர் இறந்தவரது குற்றங்களையெல்லாம் மறைத்து விட்டுக் குணம் சிலவேயாயினும் அவற்றை எடுத்துக் கூறிப்பாராட்டுதல் வழக்கம். வழுவுதல் - நிலைகெடுதல். அங்கங்கள் - உடல் உறுப்புக்கள். `எல்லா வற்றையும்` என இரண்டாவதன் தொகை. `இருந்தும்` என்னும் உம்மையை வேறு வைத்து, அழுகை ஒலிக் குறிப்பாகக் கொள்க. `ஆனை` என்றது, காதல் பற்றி வந்த உபசார மொழி.* ஆ ஆ - அழுகை ஒலிக் குறிப்பு. தென் ஆனைக் கா - தென்னாட்டில் உள்ள `திரு ஆனைக் கா` என்னும் தலம். சோழ நாடு.

குயிலொத் திருள்குஞ்சி கொக்கொத் திருமல்
பயிலப் புகாமுன்னம் நெஞ்சே மயிலைத்
திருப்புன்னை யங்கானல் சிந்தியா யாகில்
இருப்பின்னை யங்காந் திளைத்து. **#156**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஒத்து இருண்ட குஞ்சி` என்க. `குயில் ஒத்து இருண்ட` என்பதனோடு இயைய, `கொக்கு ஒத்து வெளுத்த` என்பது வருவிக்க. பயில - அடிக்கடியாக. முதுமையில் கோழை மிகுதலால், இருமல் அடிக்கடியெழுவதாம். புன்னையங் கானல் - புன்னை மரங்கள் மிக்குள்ள கடற்ரை. மயிலை - மயிலாப்பூர், இது தொண்டை நாட்டுத் தலம். இஃது இங்குள்ள திருக்கோயிலைக் குறித்தது. இக் கோயில் `கபாலீச்சரம்` என்னும் பெயருடையது.

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம் அமர்ந்தான்.

என்னும் அற்புதத் திருப்பதிக அடிகளைக் காண்க. பின்னை, யாதும் இயலாத இறுதிக் காலம். அங்காந்து - (துயரத்தால்) வாயைத் திறந்து கொண்டு (உயிர் போய்விட,) `இரு - காண் போர் இரங்கக் கிட` என்ற படி `இப்பொழுதே சிந்திப்பாயாயின் இந்நிலைவாராது` என்பது குறிப்பு.

காளையர்கள் ஈளையர்க ளாகிக் கருமயிரும்
பூளையெனப் பொங்கிப் பொலிவழிந்து சூளையர்கள்
ஓகாளஞ் செய்யாமுன் நெஞ்சமே உஞ்சேனை
மாகாளங் கைதொழுது வாழ்த்து. **#157**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஈளையர்கள்` என்றது, முதுமையெய் தினமையைக் குறிப்பால் உணர்த்தியது. பூளை - பூளைப் பூ. இது வெண்ணிறம் உடையது.

பொங்குதல், படியாது விரிதல். சூளையர்கள்- எரிகொளுவச் சூழ்ந்திருப்பவர்கள். ஓகாளம் செய்தல், அருவருப்பால், முன் உண்டதைக் கக்குதல். உஞ்சேனை - உச்சயினி; இது வட நாட்டில் உள்ள ஒரு நகரம். இதன்கண் உள்ள கோயிலும் `மாகாளம்` எனும் பெயரினது. இஃதொரு வைப்புத் தலம். `நளிர்சோலை உஞ்சேனை மாகாளம்` *2* `உஞ்சேனை மாகாளம் ஊறல் ஓத்தூர்` *3* என்னும் தேவாரத் திருமுறைகளைக் காண்க.

இல்லும் பொருளும் இருந்த மனையளவே
சொல்லும் அயலார் துடிப்பளவே நல்ல
கிளைகுளத்து நீரளவே கிற்றியே நெஞ்சே
வளைகுளத்துள் ஈசனையே வாழ்த்து. **#158**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இல் - இல்லாள். மனை - இல்லம். சொல் - இறந்தமை பற்றிய இரங்கிச் சொல்வனவும், தேற்று வனவும். துடிப்பு, வந்து கண்டு நீங்குவதில்` உள்ள கடமையுணர்ச்சி. கிளை - சுற்றம் கிற்றியே - இதனை அறிய வல்லாயோ? ஏகாரம் வினாப் பொருட்டு. வாழ் முதலாகக் கருதியிருந்த பொருள்களுள் ஒன்றேனும் (உடன் வருவதில்லை) என்பது கருத்து. `கிற்றியேல் வாழ்த்து` என்பது குறிப்பு. `கிற்றி யேல்` என்றே பாடம் ஓதுதலும் ஆம். வளைகுளம் ஒரு வைப்புத் தலம்.

அஞ்சனஞ்சேர் கண்ணார் அருவருக்கும் அப்பதமாய்க்
குஞ்சி வெளுத்துடலங் கோடாமுன் நெஞ்சமே
போய்க்காடு கூடப் புலம்பாது பூம்புகார்ச்
சாய்க்காடு கைதொழுநீ சார்ந்து. **#159**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அஞ்சனம் - மை மையெழுதிய கண்ணார், மகளிர். பதம் - நிலைமை `வெளுத்து` `வெளுக்க` எனத் திரிக்க. `அரு வருக்கப்படுவதும் உடலமே` என்க. கோடுதல் - வளைதல்; கூன் விழுதல், கூடப்படுங் காடு சுடுகாடு. புலம்புதற்கு, `பலர்` என்னும் எழுவாய் வருவிக்க. காடு போய்க் கூடவிட, பின்னர்ப் பலர் இருந்து புலம்பாமுன்` என்க. `பூம்புகாரை அடுத்துள்ள சாய்க்காடு` எனக் கொள்க.

இட்ட குடிநீர் இருநாழி ஒருழக்காச்
சட்டவொரு முட்டைநெய் தான்கலந் தட்ட
அருவாய்ச்சா றென்றங் கழாமுன்னம் பாச்சில்
திருவாச்சி ராமமே சேர். **#160**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முட்டை, முட்டை வடிவமாக எண்ணெய் முகப் பதற்குச் செய்து வைக்கப்படும் சிறிய அகப்பை. ஒரு முட்டையளவான விளக்கெண்ணெயை இருநாழியளவு நீரிற் கலந்து, அதனை ஓர் உழக்களவாகச் சுவறக் காய்ச்சி யெடுத்ததை `உடலுக்கு நல்லது` என ஊற்றப் பிறர் முயலுவர்.
அட்ட - காய்ச்சி எடுக்கப்பட்ட. அருவாய்ச் சாறு - அரிய சாறு; கசாயம். வாய் - வாயில் ஊற்றச் தக்க. `சாறு` என்பதன் பின், `குடியுங்கள்` என்பது வருவிக்க. என்று சொல்லி அழுபவர்கள், சுற்றத்தார்.
திருப்பாச்சில் ஆச்சிராமம் சோழ நாட்டுத் தலம்.

கழிந்தது நென்னற்றுக் கட்டுவிட்டு நாறி
ஒழிந்த துடல்இரா வண்ணம் அழிந்தது
இராமலையா கொண்டுபோ என்னாமுன் நெஞ்சே
சிராமலையான் பாதமே சேர். **#161**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`உயிர் போயது நேற்றையது; அதனால் உடல், கட்டுக்களெல்லாம் தளர்ந்து நாற்றம் எடுத்து விட்டது. இனிச் சிறிது நேரமும் இருக்க முடியாதபடி அஃது அழிந்து விட்டது. ஆகவே, உறவினனான ஐயா, இனிச் சிறிது நேரமும் இருக்க முடியாதபடி அதனை அடக்கம் செய்ய வேண்டிய இடத்திற்குக் கொண்டு போ என்று அயலார் பலரும் சோல்லுவதற்குமுன், நெஞ்சே, திருச்சிராமலையில் உள்ள சிவன் திருவடிகளைத் தஞ்சமாகப் பற்று.
`நன்னெற்று` என்பது பாடம் அன்று. `கழிந்தது` என்பதற்கு, `உயிர்` என்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது. சிராமலை, திருச்சிராப் பள்ளிக் குன்று.

இழவாடிச் சுற்றத்தார் எல்லாருங் கூடி
விழவாடி ஆவி விடாமுன்னம் மழபாடி
ஆண்டானை ஆரமுதை அன்றயன்மால் காணாமை
நீண்டானை நெஞ்சே நினை. **#162**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இழவு ஆடுதல் - இழவு கொண்டாடுதல். விழவு ஆடுதல் - விழாக் கொண்டாடுதல். விழா, பிண விழா. `ஆடி` என்ப வற்றை `ஆட` எனத் திரித்துக் கொள்க. `இழவாடி` என்பதனை, `விழா வாடி` என்பதற்கு முன்னே கூட்டுக. மழபாடி, சோழநாட்டுத் தலம்.

உள்ளிடத்தான் வல்லையே நெஞ்சமே ஊழ்வினைகள்
கள்ளிடத்தான் வந்து கலவாமுன் கொள்ளிடத்தின்
தென்திருவாப் பாடியான் தெய்வமறை நான்கினையும்
தன்திருவாய்ப் பாடியான் தாள். **#163**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உள்ளுதல் - நினைத்தல். அதனுடன் `இடு` என்னும் அசையிடைச் சேர்ந்து, `உள்ளிடை` என வந்தது. தான், அசை. உள்ளிட வல்லையே - நினைக்க வல்லாயோ. கள் இடம் - களவான காலம். அஃதாவது உயிர் சோர்வுற்றிருக்குங்காலம், `கள் இடத்தான்` என்னும் ஆன் உருபு ஏழாவதன் பொருளில் வந்தது. `காலத்தினாற் செய்த நன்றி` * என்பதிற் போல. திருஆப்பாடி சோழ நாட்டுத் தலம். திருவாய்ப் பாடியான் - திருவாயால் பாடினவன். `தாள் உள்ளிடவல்லையே` என மேலே கூட்டுக. `கலவா முன் உள்ளிட வல்லையே எனவும் இயைக்க. `வல்லையே` என்னும் வினா, `வல்லையாயின் நன்று` என்னும் குறிப்பினது.

என்னெஞ்சே உன்னை இரந்தும் உரைக்கின்றேன்
கன்னஞ்செய் வாயாகிற் காலத்தால் வன்னஞ்சேய்
மாகம்பத் தானை உரித்தானை வண்கச்சி
ஏகம்பத் தானை இறைஞ்சு. **#164**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரத்தல், குறையிரத்தல், உம்மை, இழிவு சிறப்பு. கன்னம் - செவி. அதனைச் செய்தலாவது, செயற்படச் செய்தல்; கேட்டல் `செவிசாய்த்தல்` என்றலும் வழக்கு. `காலத்தால்` என்பதனை, மேல், `கள்ளிடத்தான்` என்றதனைக் கொண்டவாறு கொள்க. வல் நஞ்சு ஏய் - கொடிய நஞ்சு போன்ற. நஞ்சுய் ஆனை, மா ஆனை, கம்பத்து ஆனை` எனத் தனித்தனி இயையும். மா - பெரிய கம்பத்து - அசைதலையுடைய கச்சி. காஞ்சி. ஏகம்பம் அத்தலத்தில் உள்ள கோயில்.

கரமூன்றிக் கண்ணிடுங்கிக் கால்குலைய மற்றோர்
மரமூன்றி வாய்குதட்டா முன்னம் புரம்மூன்றுந்
தீச்சரத்தாற் செற்றான் திருப்பனந்தாள் தாடகைய
ஈச்சரத்தான் பாதமே ஏத்து. **#165**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கரம் - கை. முதுமையில், எழும் பொழுது எழுந் திருக்க இயலாமல்

கைகளை நிலத்தில் ஊன்றிக் கொண்டு எழுதலும், ஒளியை முற்ற வாங்க முடியாமல் கண் கூட இடுக்கிப் பார்ப்பதும், நடக்க முடியாமல் கால்கள் தள்ளாடுதலும், அவை தள்ளாடாமைப் பொருட்டுக் கோல் ஊன்றி நடத்தலும், பல் இல்லாமையால் வாயைக் குதட்டுதலும் இயற்கை. மரம், கோல். மற்று, வினைமாற்று. தீச்சரம் - தீக்கடவுளாகிய அம்பு. திருப்பனந்தாள், சோழ நாட்டுத்தலம். தாடகை யீச்சரம், அதில் உள்ள கோயிலின் பெயர்.

தஞ்சாக மூவுலகும் ஆண்டு தலையளித்திட்
டெஞ்சாமை பெற்றிடினும் யான்வேண்டேன் நஞ்சங்
கரந்துண்ட கண்டர்தம் ஒற்றியூர் பற்றி
இரந்துண் டிருக்கப் பெறின். **#166**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`தஞ்சம்` என்பது ஈற்று அம்முக் குறைந்து, `தஞ்சு` என நின்றது. தஞ்சம் - எளிமை. தலையளித்தல் - குடிகளை நன்கு காப்பாற்றுதல், எஞ்சாமை - அங்ஙனம் காப்பதில் இளையாமை. அத்தகைய பேற்றினைப் பெற்றாலும் அதனை வேண்டேன்` என்க. `கரந்து உண்ட` என்பதை `உண்டு கரந்த` என முன்பின்னாக வைத்து விகுதி பிரித்துக் கூட்டியுரைக்க. ஒற்றியூர் - தொண்டை நாட்டில் உள்ள கடற்கரைத் தலம். `ஓடு ஏந்தி இரந்து உண்டல்` என்பது துறவு வாழ்க்கையைக் குறித்தது.

நூற்றனைத்தோர் பல்லூழி நுண்வயிர வெண்குடைக்கீழ்
வீற்றிருந்த செல்வம் விழையாதே கூற்றுதைத்தான்
ஆடரவங் கச்சா அரைக்கசைத்த அம்மான்தன்
பாடரவம் கேட்ட பகல். **#167**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நூற்று அனைத்து - நூற்றுக் கணக்கான. ஓர் நூற்றனைத்து` என மாற்றி, `ஓர்` என்பதனை நூற்றுக்கு அடையாக்குக. `பல் ஊழி வீற்றிருந்த` என்க. நுண்வயிரம் - நுண்ணிய ஒளியை யுடைய வயிரம் - `செல்வம்` என்பது, செல்வத்தோடு வாழ்ந்த காலம். பாடு அரவம் கேட்ட காலத்தை விழையாது` என்க. விழையாது. ஒவ்வாது. `அரவம்` இரண்டில் முன்னது பாம்பு; பின்னது ஓசை. `அம்மான் தன்னை` என்னும் இரண்டாம் உருபு தொகுக்கப்பட்டது. இதில் தலம்யாதும் குறிக்கப்படவில்லை. அதனால், `கூற்று உதைத் தான்` என்ற குறிப்பினால், `திருக்கடவூர் கூறப்பட்டது` எனலாம்.

உய்யும் மருந்திதனை உண்மின் எனவுற்றார்
கையைப் பிடித்தெதிரே காட்டியக்காற் பைய
எழுந்திருமி யான்வேண்டேன் என்னாமுன் நெஞ்சே
செழுந்திரும யானமே சேர். #168
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உய்யும் மருந்து - இறவாமல் வாழ்வதற்கு ஏதுவான மருந்து. உற்றார் - சுற்றத்தார் கையைப் பிடித்துக் காட்ட வேண்டிய நிலை. கண் தெரியாமையால் வருவது. பைய எழுந்து - மெல்ல எழுந்து. `யான் வேண்டேன்` என்றல், உண்ண முடியாமை யால். `திருமயானம்` என்பது சில தலங்களில் உள்ள கோயில்களின் பெயராய் அமைந்துள்ளது. கச்சி மயானம், கடவூர் மயானம், நாலூர் மயானம் - இவை காண்க.
சேத்திரத் திருவெண்பா முற்றிற்று.
சேத்திரத் திருவெண்பா குறிப்பிடும் சிவதலங்கள். தில்லைச் சிற்றம்பலம், குடந்தைக் கீழ்க்கோட்டம், திருவையாறு, திருவாரூர், திருத்துருத்தி, திருக்கோடிகா, திருஇடைவாய் திருநெடுங்களம், திருத்தண்டலைநீணெறி, திருஆனைக்கா, திருமயிலை, திருஉஞ்சேனைமாகாளம், திருவளைகுளம், திருச்சாய்க்காடு, திருப்பாச்சிலாச்சிராமம், திருச்சிராப்பள்ளி திருமழபாடி, திருஆப்பாடி, திருக்கச்சியேகம்பம், திருக்கடவூர், திருப்பனந்தாள், திருவொற்றியூர், திருமயானம் *(கச்சி, கடவூர், நாலூர்)*.

சேரமான்பெருமாள் நாயனார் - பொன்வண்ணத் தந்தாதி

பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
ஆகிய ஈசனுக்கே. **#169**

தன்னைக் கண்ட எனது மேனியின் நிறம் அங்ஙனம் கண்டபின் எந்த நிறமாயிற்றோ அந்த நிறத்தையே தனது இயற்கை நிறமாக உடைய இறைவனுக்கு மேனி, எப்பொழுதும் பொன்னின் நிறம் என்ன நிறமோ அந்த நிறமே.

தாழ்ந்து தொங்குகின்ற சடைகள், விட்டு விளங்குகின்ற மின்னல் என்ன நிறமோ அந்த நிறமே.

பெரிய இடப ஊர்தி, வெள்ளி மலை என்ன நிறம் வடிவோ அந்த நிறம் வடிவுகளே.

விளக்கவுரை

``தன்னைக் கண்ட`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.
இச்செய்யுள் தில்லைக் கூத்தப் பெருமானைக் கண்டு அவர் மேல் காதல் கொண்டு ஆற்றாமை எய்தினாள் ஒருத்தி கூற்றாகச் செய்யப்பட்டது.
காதலால் வருந்தும் தலைவியரது மேனி பொன்னிற மாகிய பசலையை அடையும் என்பது,
பசப்பித்துச் சென்றாரை உடையையோ? அன்ன
நிறத்தையோ? பீர மலர்
என்பது முதலியவற்றான் விளங்கும்.
``தன்னைக் கண்ட என் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணமாகிய ஈசன்`` என்பது இவ்வாறு வெளிப் பொருள் தருவதாயினும்,
`காணப்படாத இறைவனது இயல்பு.
காணப்படுகின்ற அவன் அடியவரிடத்து விளங்குதல் பற்றியே அறியப்படும்` என்பதே இதன் உட்பொருள்.

ஒன்றும் குறியே குறிஆத லால்அதனுக்கு
ஒன்றும் குறிஒன் றிலாமையினால் ஒன்றோடு
உவமிக்க லாவதுவுந் தான்இல்லை ஒவ்வாத்

தவம்மிக்கா ரேஇதற்குச் சான்று.

என்ற திருக்களிற்றுப்படியினைக் காண்க.
மால், மாயோனுமாம்

ஈசனைக் காணப் பலிகொடு
செல்லஎற் றேஇவளோர்
பேயனைக் காமுறு பிச்சிகொ
லாமென்று பேதையர்முன்
தாயெனை ஈர்ப்பத் தமியேன்
தளர அத் தாழ்சடையோன்
வாவெனைப் புல்லவென்றான்இமை
விண்டன வாட்கண்களே. #170

(``பிச்சை`` என்று கேட்டு வாயிலில் வந்தவன் சிவ பிரான் - என்று தெரிந்துயான்) `அவனைக் காண வேண்டும்` என்னும் ஆசையால் பிச்சையைப் பிறர் எடுத்துச் செல்வதற்கு முன் யானே விரைந்து எடுத்துச் செல்ல, என் தாய் (செவிலி) `பிறர் செல்லலாகாத இவள் மிக விரைந்து புறம் செல்கின்றாள் ஆதலின் பிச்சைக்கு வந்த இந்தப் பேய்க் கூட்டத்தான் மேல், பித்துப் பிடித்தவள் போல் இவள் காதல் கொண்டாள் போலும்` என்று அறிந்து, தோழியர் பலர்முன் தாய் என்னை, `ஏடி, உள்ளே வா` என்று பற்றி ஈர்க்க, எனக்கு உதவுவார் யாரும் இன்றி யான் சோர்தலைக் கண்டு, பிச்சைக்கு வந்த, நீண்ட சடையையுடைய அவன், `நீ என்னைக் காதலித்து விட்டபின் எவர் உன்னைத் தடுத்து என்ன பயன்.
(நீ என்னைக் காதலித்துவிட்ட பொழுதே நீ எனக்கு உரியவளாய் விட்டாய்; ஆகவே,) நீ யாவரும் அறியவே என்னைத் தழுவ வா` என்று அழைத்தான்.
அவனது பொருளை அறிய, என்னுடைய வாள் போன்ற கண்கள் பொழிந்த அன்பு நீரைத் தடுக்க மாட்டாமல் இமைகள் திறந்துவிட்டன.

விளக்கவுரை

``கண்டார் காதலிக்கும் கணநாதன் எம் காளத்தியாய்``* என்று அருளிச் செய்தபடி, ``பக்குவான்மாக்கள் சிவனது வடிவைக் கண்டவுடனே அவன்மேற் கரையிறந்த காதல் உடையனவாம்`` என்பதையும், `அதுபொழுது அவ்வான்மாவை அபக்குவான்மாக்கள் ஏசியும், இகழ்ந்தும் தம் வயப்படுத்த முயலும்` என்பதையும், `எனினும் சிவன் தன்னைக் காதலித்த ஆன்மாவைத் தன்பால் ஈர்த்துக் கொள்ளுதலை ஒருவராலும் தடுக்க இயலாது` என்பதையும் இவ்வாறு அகப்

பொருள்மேல் வைத்து அருளிச் செய்தவாறாக உணர்க.
இதற்குக் கண்ணப்ப நாயனார் சிறந்த எடுத்துக்காட்டு.
அதனையே மேற்காட்டிய சுந்தரர் திருமொழி குறிப்பால் உணர்த்தியது.
பிச்சி - பித்துக் கொண்டவள்.
சகரயகரங்கள் ஒன்றற்கு ஒன்று எதுகையாய் வருதல் உண்டு.

கண்களங் கஞ்செய்யக் கைவளை
சோரக் கலையுஞ்செல்ல
ஒண்களங் கண்ணுதல் வேர்ப்பவொண்
கொன்றையந் தார்உருவப்
பெண்களங் கம் இவள் பேதுறும்
என்பதோர் பேதைநெஞ்சம்
பண்களங் கம்இசை பாடநின்
றாடும் பரமனையே. #171

இச்சிறுமியை, அழகிய கண்டத்தையுடைய சிவன் வெறுக்கவும் இவள் அவன்மேற் கொண்ட காதலால், கண்கள் நீர் பொழிய, கை வளைகள் கழல, துகில் நெகிழ, அவனது கொன்றை மாலை போலும் நிறத்தை எய்தியதுடன் அறியாமையுடைய மனம் பித்துக் கொண்டவளாயினாள். இஃது இவளது பெண்மைக்குக் குற்றமாம்.

விளக்கவுரை

இது சிவபிரானைக் காதலித்த தலைவி தன் தாய் கூற்று.

வீழப் படுவார் கெழீஇயிலர், தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின்.
*
என்றபடி, தம்மால் காதலிக்கப்பட்ட தலைவரால் தாமும் காதலிக்கப் பட்ட மகளிரன்றோ பெருமையடைதற்கு உரியர்? இவள் அவ்வா றின்மையின் குற்றப்படுகின்றாள் - எனத் தாய் நொந்து கூறினாள் என்க.
தீவிர பக்குவம் எய்தாத ஆன்மாவின் நிலைமையை இங்ஙனம் அகப்பொருள் முறையில் வைத்துக் கூறியதாக உணர்க.
`கண்கள் அங்கு அம் செய்ய` எனப் பிரிக்க.
அம் - நீர்.
`களக் கண்ணுதல்` என்பது எதுகை நோக்கி மெலிந்து நின்றது.
வேர்த்தல் - சிதைத்தல்.
அஃது இங்கு வெறுத்தலைக் குறித்தது.
`வேர்ப்பவும்` ஓர் பேதை நெஞ்சம் அவனையே விரும்பிப் பேதுறுகின்றாள் என்பது பெண் களங்கம்` என இயைத்து முடிக்க.

களங்கம் - குற்றம்.
உருவத்தோடு` என உருபு விரித்து அதனை, ``பேதுறும்`` என்பதனோடு முடிக்க.
`பண்களுக்கு அங்கமான (உறுப்பான) இசைகளை இனிது விளங்கப் பலர் பாட ஆடும் பரமனையே விரும்பிப் பேதுறும்` என ஒரு சொல் வருவித்து முடிக்க.
இப்பாட்டுள் `திரிபு` என்னும் சொல்லணி வந்தது.

பரமனை யே பலி தேர்ந்துநஞ்
சுண்டது பன்மலர்சேர்
பிரமனை யே சிரங் கொண்டுங்
கொடுப்பது பேரருளாம்
சரமனை யேயுடம் பட்டும்
உடம்பொடு மாதிடமாம்
வரமனை யேகிளை யாகும்முக்
கண்ணுடை மாதவனே. **#172**

மூன்று கண்களையுடைய, பெரியதவக் கோலத்த னாகிய சிவபிரான் அயலார் இல்லந் தோறும் சென்று இரந்த போதிலும் அவன் உண்டது நஞ்சமே.
இதழ்களால் பன்மையைப் பெற்ற மலரின் கண் இருக்கும் பிரம தேவனைச் சிரம் கொய்ததும் அவனுக்கு வழங்கி யது பெரிய அருளே.
(படைப்புத் தொழில் தொன்மையை அளித்தது.
) மலர்க் கணைகளையுடைய மன்மதனை அழித்தபோதிலும் உடம்பில் இடப்பாதியாகக் கொண்டது பெண்ணையே.
இனி மேலாவன மனைவியாகிய அவளே அவனுக்குத் தாயும், மகளும் ஆகிய சுற்றம்.

விளக்கவுரை

`இஃது அவன் இலக்கணம்` எனப் பழித்தல் குறிப் பெச்சம்.
இது பழித்ததுபோலப் புகழ்ந்தது.
சத்திக்குச் சிவன் எவ்வெம் முறையனாம் என்பதை, ``எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன், மகன், தகப்பன்,
தமையன்``.
1 என்னும் திருவாசகத்தாலும், தவளத்த நீறணி யும்தடந் தோள் அண்ணல் தன்னொருபா
லவள் அத்த னாம்; மகனாம் தில்லையான்.
2 என்னும் திருக்கோவையாராலும் அறிக.
இங்ஙனம் கூறவே, இவை உலகில் உள்ள முறைபோலத் தம்

பிறப்பினால் ஆகாது தமது அருள் நாடகச் செயலால் ஆவனவாதல் விளங்கும்.
தத்துவங்களில் சுத்த தத்துவங்கள் தோன்றுமிடத்து.
பிறிதொன்றையும் நோக்காது நோக்குங்காலத்தில் `சிவன், சக்தி` என் இரு கூறாய்ப் பரநாதமாகிய சிவன் சுத்த சிவத்தினின்றும் தோன்றித் தன்னின்றும் பரவிந்துவாகிய சத்தியைத் தோற்றுவித்தலால் சத்திக்குச் சிவன் தந்தையாகின்றார்.
பின்பு பரவிந்துவாகிய சத்தியினின்றும், அபரநாதமாகிய சிவன் தோன்றுதலால் சத்திக்குச் சிவன் மகனாகின்றார்.
பின்பு அபர நாதமாகிய சிவன் அபர விந்துவாகிய சத்தியைத் தோற்றுவிக்க அச்சத்தியினின்றும் முதலில் சதாசிவனும், பின்பு மனோன்மனியும் தோன்றுதலால் சத்திக்குச் சிவன் தமையனாகின்றார்.
பின்பு அவ் விருவரும் சேர்ந்தே மகேசுரன் முதலிய தலைவர்களைத் தோற்று வித்து, அவர்கள் வழியால் உலகத்தையும் தோற்றுவித்தலால் சத்திக்குச் சிவன் கேள்வன் (கணவன்) ஆகின்றார்.
எனவே, இத்தத்துவக் குறிப்பே முறையில்லாத முறைகளாக நகைச்சுவை தோன்றச் சொல்லப் படுகின்றன என்க.
இப்பாட்டிலும், `திரிபு` என்னும் சொல்லணி வந்தது.
பர மனை - அயல் வீடு.
சரம், இங்கு பூங்கணையும், மன், மன்மதனுமாம்.
உடம்பு அட்டு - உடம்பை அழித்து.
``உடம்பொடு`` என்பதை `உடம்பின்கண்` எனத் திரிக்க.
வர மனை - மேலான மனைவி.
கிளை - சுற்றம்.
``உடம்பின் கண் இடம் ஆம்`` எனச் சினை வினை முதல்மேல் நின்றது.
கிளை ஆகும் - கிளையாக இருக்கும்.

தவனே உலகுக்குத் தானே
முதல் தான் படைத்தவெல்லாம்
சிவனே முழுதும்என் பார்சிவ
லோகம் பெறுவர்செய்ய
அவனே அடல்விடை ஊர்தி
கடலிடை நஞ்சம்உண்ட
பவனே எனச்சொல்லு வாரும்
பெறுவரிப் பாரிடமே. **#173**
`சிவபெருமானே எல்லோரிலும் மிக்கவன்; (எனவே, முதற்கடவுள்)
உலகிற்கு முதல்வனும் அவனே.
எல்லா உயிர்களும், எல்லாப் பொருள்களும் அவன் படைத்தனவே.

(உயிர்கள், பிறப்பெடுத்த உயிர்கள்).
அவன் அனைத்துப் பொருள் களிலும் அவையேயாய்
நிறைத்திருக்கின்றான்` என இவ்வாறு உணர்கின்றவர்கள் சிவலோக
வாழ்க்கையைப் பெறுவர்.
`அவன் திருமாலை இடபமாகக் கொண்டு ஏறி நடாத்துபவன்,
பாற்கடலில் தோன்றிய நஞ்சினைத் தேவர் பொருட்டு உண்டவன்,
நினைப்பவர் நினைத்த இடத்தில் அவர் நினைத்த வடிவில்
தோன்றுபவன்` என இவ்வாறு அவனைப் புகழ்பவரும் இவ்வுலக
ஆட்சியைப் பெறுவர்.

விளக்கவுரை

மிகுதியை உணர்த்தும் `தவ` என்னும் உரிச்சொல்லடி யாக, `தவன்` என்னும் பெயர் பிறந்தது.
`சால்` என்பது அடியாக, `சான்றோன்` என்பது பிறத்தல் போல.
பவன் - தோன்றுபவன்.
பெறப்படுவன வேறாயினும் இரண்டும் பேறாதல் பற்றி, ``சொல்லுவாரும்`` என இறந்தது தழுவிய எச்சவும்மை தரப்பட்டது.

இடம்மால் வலந்தான் இடப்பால்
துழாய்வலப் பாலொண்கொன்றை
வடமால் இடந்துகில் தோல்வலம்
ஆழி இடம்வலம்மான்
இடமால் கரிதால் வலஞ்சே
திவனுக் கெழில்நலஞ்சேர்
குடமால் இடம்வலங் கொக்கரை
யாம்எங்கள் கூத்தனுக்கே. **#174**

சிவபெருமான் ஓரமையத்தில் இடப்பக்கம் திரு மாலும், வலப்பக்கம்
தானுமான ஒரு வடிவத்துடன் நின்றான்.
(அது படைப்புக் காலம் என்க) அப்பொழுது இடப்பக்கம் துழாய் மாலை
யும், வலப்பக்கம் கொன்றைப் பூ மாலையும் - இடப்பக்கம்
பொன்னாடையும், வலப்பக்கம் தோல் ஆடையும், இடப்பக்கம் சக்கர
மும், வலப்பக்கம் மானும், இப்பக்கம் கருநிறமும், வலப்பக்கம் செந்
நிறமுமாய் இருந்தன.
இனி இடப்பக்கம் குடக் கூத்தும், வலப்பக்கம் கொக்கரைக் கூத்தும்
ஆடின.

விளக்கவுரை

`இதோர் அதிசய வடிவம்` என்பது குறிப்பெச்சம்.
இவ் வடிவம் `அரியர்த்தேசுரவடிவம்` எனப்படும்.

``எங்கள் கூத்தனுக்கு`` என்பதை முதலில் கொண்டு உரைக்க.
வட மால் - தாமோதரன், `இடம், வடமாவது துகில்` என்க.
துகில் - உயர்ந்த ஆடை.
`வலக்கையில் மான்` என்றது இவ்வடிவத்தில் மட்டும் சிறப்பாகக் கொண்டது.
``இடம் ஆல் கரிது ஆல்`` என்னும் `ஆல்` இரண்டும் அசைகள்.
சேது - செய்யது; செந்நிறமானது.
உருவம் கூறியபின் செயல் கூறுகின்றார்.
ஆகலின், ``இவனுக்கு`` என மீட்டும் சுட்டிக் கூறினார்.
எழல் நலம், ஒருபொருட் பன்மொழி.
குடம் கொண்டு ஆடிய கூத்தைக் ``குடம்`` என்றும் *1* கொக்கரித்து ஆடிய கொடுகொட்டிக் கூத்தைக் *2* ``கொக்கரை`` என்றும் கூறினார்.

கூத்துக் கொலாமிவர் ஆடித்
திரிவது கோல்வளைகள்
பாத்துக் கொலாம்பலி தேர்வது
மேனி பவளங்கொலாம்
ஏத்துக் கொலாமிவர் ஆதரிக்
கின்ற திமையவர்தம்
ஓத்துக் கொலாமிவர் கண்ட திண்
டைச்சடை உத்தமரே. **#175**

`இண்டை` என்னும் வகை மாலையைச் சடையில் தரித்துள்ள மேலானவராகிய இவர், எங்கும் ஆடிச் செல்வது முறைப் படி அமைந்த நடனம்.
எங்கும் சென்று பிச்சை ஏற்பது தம் தேவியர் பகுத்து உண்டற்கு.
இவர் மேனி பவளம்போல்வது, இவர் எவரிடமும் விரும்புவது தம்மைப் புகழ்தலை.
இவர் நினைவு மாத்திரத்தாற் செய்தது வேதம்.

விளக்கவுரை

இஃது இறையது பொது வியல்பைக் கூறியது.
``கூத்து`` எனப் பொதுப்படக் கூறினாராயினும், ``ஆடித் திரிவது`` என எடுத் தோதினமையால், அது முறைப்படி (கூத்த நூல் முறைப்படி) அமைந்த கூத்தாயிற்று.
இது பெத்தான்மாக்களுக்கு ஊன நடனமாயும், முத்தான் மாக்களுக்கு ஞான நடனமாயும் நிகழ்தலை உண்மை விளக்க நூலால் அறிக.
* ``கோல் வளை`` என்பது `திரட்சியான வளையலை அணிந்த வள் என ஒருமையாய் நின்று, பின் `கள்` விகுதியேற்றுப் பன்மையா யிற்று.
சிவபெருமானுக்குத் தேவியர் `உமை, கங்கை` என இருவராதல்

வெளிப்படை.
எனவே, `அவர்களைக் காப்பாற்றுதற்கு வழியில்லா மையால் பிச்சை எடுக்கின்றான்` என்பது வெளிப்படைப் பொருளாய் இகழ்ச்சியைத் தோற்றுவித்தது.
ஆயினும், `பிச்சையிட வரும் மகளிரது வளைகளைக் கவர்ந்துகொள்கின்றான்` என்பது உள்ளுறைப் பொரு ளாய்ப் புகழ்ச்சியைத் தோற்றுவித்தது.
இது சிலேடையணி.
தொழிற் பெயர்கள் வினையொடு முடியுங்கால் வினையெச்சத்தோடே முடிதலும் உண்டு.
ஆகையால், ``திரிவது`` என்னும் தொழிற் பயர் ``பாத்து`` என்னும் வினையெச்சத்தோடே முடிந்தது.
பாத்து - பகுத்து.
இது வெளிப்படைப் பொருளில் `பகுக்க` எனச் செயவெனெச்சப் பொருட்டாயும், உள்ளுறைப் பொருளில் `கவர்ந்து` என்னும் பொருட்டாயும் நின்றது.
ஏத்து - துதி; முதனிலைத் தொழிற்பெயர்.
ஆதரித்தல் - விரும்புதல் ``இமையவர் ஒத்து`` என்றதனால் இறைவன் திருவருட் குறிப்பினை உணரத் தேவர்களும் வேதத்தை உணர்தல் சொல்லப்பட்டது.
`பெத்தான்மாக்கள், முத்தான்மாக்கள் ஆகிய இருவகை ஆன்மாக்களுக்கும் ஏற்புடையவற்றைச் செய்து அவைகளை உய் வித்தலும், தன்னை உணராதவரையும் தக்க வழியால் உணர்வித்தலும், சிறிது உணர்ந்தாரையும் தம்மைப் புகழ்தல் வாயிலாக மிக உணர்ந்து அன்பு கூரச் செய்தலும், உயிர்களுக்கு நூல்கள் வாயிலாக நன் னெறியை உணர்த்துதலும் இறையது பொது வியல்புகள்`` என்பது கூறியவாறு.
`மேனி பவளம்` என்றது வசிகரித்தலைக் கூறியது.
``கொல், ஆம்`` என வந்தன எல்லாம் அசைநிலைகள்.

உத்தம ராயடி யாருல
காளத் தமக்குரிய
மத்தம் அராமதி மாடம்
பதிநலஞ் சீர்மைகுன்றா
எத்தம ராயும் பணிகொள
வல்ல இறைவர்வந்தென்
சித்தம ராயக லாதுடன்
ஆடித் திரிதவரே. **#176**

தம் அடியார்கள் யாவரினும் மேலானவராய், மண்ணுலகு வானுலகுகளை ஆள, ஊமத்தை மலர், பாம்பு, திங்கள், அவற்றின் அருகே நீர் இவைகளே தமக்கு உரியவாய் மிக அழகும் புகழும் குறையாதனவாய் உள்ளன.

எக்குலத்தவராயினும் தமக்கு அடியார்களாக ஆகும்படி செய்துகொள்ள வல்ல இறைவர் தமது மேல் நிலையினின்றும் இறங்கி வந்து என் உள்ளத்தில் பொருந்தி என்னோடு உடன் இயங்கியே திரியும் தன்மையுடையராகின்றனர்.

விளக்கவுரை

`இதுவும் மேற்கூறிய ஊமத்தை முதலியவற்றை உவந்து கொண்டது போல்வதுதான்` என்பது குறிப்பெச்சம்.

இக்கருத்துக் குறிப்பால் தோன்றவே இதனை இருதொடராக அருளிச் செய்தார்.

``தமக்கு உரியவாய்` என ஆக்கம் விரித்து ``சீர்மை குன்றா`` என்பதற்கு முன்னே கூட்டுக.

மத்தம் - ஊமத்தை.

மாடு - பக்கம்.

`அம்பு + அதி நலம்` எனப்பிரிக்க.

அம்பு - நீர், நலம் - அழகு.

`அதிநலமும், சீர்மை யும் குன்றா` என்க.

ஈற்றடியில், `மருவாய்` என்பது, மராய்` என வந்தது.

மருவு - மருவுதல்; முதனிலைத் தொழிற்பெயர்.

திரிதவர் - திரிதலையே தவமாக - தொழிலாக - உடையவர்.

திரிதவர் கண்ணுள்ளும் உள்ளத்தின்
உள்ளுந் திரிதரினும்
அரிதவர் தன்மை அறிவிப்ப
தாயினும் ஆழிநஞ்சேய்
கரிதவர் கண்டம் வெளிதவர்
சாந்தம்கண் மூன்றொடொன்றாம்
பரிதவர் தாமே அருள்செய்து
கொள்வர்தம் பல்பணியே. **#177**

இறைவர் மேற்கூறியவாறு என் கண்ணினுள்ளும், கருத்தினுள்ளும் என்னோடு அகலாது நின்று உடனே திரிபவராயினும், `அவரது தன்மை இதுதான்` என்று என்னால் வரையறுத்துச் சொல்லுதல் இயலாது. ஆயினும் கடல் நஞ்சம் பொருந்திய அவரது மிடறு கறுத்தது; அவர் பூசிய சந்தனம் வெளுத்தது; (திருவெண்ணீறு) கண்களோ மூன்று, ஏந்திய வில் பிறரால் ஏந்துதற்கு அரிய ஒன்று (அஃதாவது மலை) தமக்குத் தாமே பல

பணிகளைப் பணித்துக் கொள்வார்.
(பிறரால் யாதும் பணிக்கப்படுவாரல்லர்).
என இங்ஙன் ஒருவாறு அவரைப் பற்றிக் கூறலாம்.

விளக்கவுரை

ஈற்றில் வருவித்து உரைத்தது குறிப்பெச்சம்.
`கண் முன்னொரு பரி தவர் ஒன்றாம்` என்க - பரித்தல் - தாங்குதல்.
தவர் - வில்.

பணிபதம் பாடிசை ஆடிசை
யாகப் பனிமலரால்
அணிபதங் கன்பற் கொள்அப்பனை
அத்தவற் கேயடிமை
துணிபதங் காமுறு தோலொடு
நீறுடல் தூர்த்துநல்ல
தணிபதங் காட்டிடுஞ் சஞ்சலம்
நீயென் தனிநெஞ்சமே. **#178**

எனது ஒப்பற்ற மனமே, சூரியனது பல்லை உகுத்த, யாவர்க்கும் தந்தையாகிய சிவனை அடி பணி; கூத்தாடு; பொருந்தும் வகையால் பல இசைகளைப் பாடு; குளிர்ந்த மலர்களால் அலங்கரி;
`அப்பெருமானுக்கேயான் அடிமை` என்னும் நிலைமையை நிச்சயமாக உணர்வதையே விரும்பு.
இச்செயல்களில் உனக்கு அவனைப் போலவே உடம்பில் தோலை உடுத்தலோடு, நீற்றை நிறையப் பூசி அமைதியுற்றிருத்தலாகிய நல்ல பதவியைக் கொடுக்கும்.
இனி உனது கவலையை விடு.

விளக்கவுரை

தம் மொழி வழி நிற்றல் வேண்டி, `ஒப்பற்ற நெஞ்சமே` என்றார்.
இனி, `துணையில்லாது தனித்து நிற்கும் நெஞ்சமே` என்றலும் ஆம்.
`பதம் பணி` என மாற்றியுரைக்க.
இசையாக - இசைவாக; பொருந்தும்படி.
`இசையாக இசை பாடு` என்க.
பதங்கன் - சூரியன்.
`அடிமைப் பதம் துணி` என இயைக்க.
பதம் - நிலைமை.
``தோலொடு............தணிபதம்`` என்றது சாரூப பதவியை நீ - நீத்துவிடு.

நெஞ்சந் தளிர்விடக் கண்ணீர்
அரும்ப முகம்மலர

அஞ்செங் கரதலங் கூம்பஅட்
டாங்கம் அடிபணிந்து
தஞ்சொல் மலரால் அணியவல்
லோர்கட்குத் தாழ்சடையான்
வஞ்சங் கடிந்து திருத்திவைத்
தான்பெரு வானகமே. **#179**

மனம், வறட்சியால் வாடிய செடியாகாது, அன்பென்னும் நீரால் குளிர்ந்த செடியாகித் தளிர்க்க, அதினின்றும் தோன்றுகின்ற குருத்து அரும்புவதன் அறிகுறியாக அழகிய, சிவந்த கைகள் குவிந்து தோன்ற அக்கருத்தில் அன்பாகிய தேன் ததும்புவ தாகக் கண்களில் நீர் ததும்ப, அரும்பிய கருத்து மலர்வதாக முகம் மலர, மலர்ந்த கருத்துக்களை வெளிப்படத் தெரிவிக்கின்ற, தமது சொற்க ளாகிய மலர்களைத் தொடுத்த பாக்களாகிய மாலைகளை அணிவித்து, எட்டுறுப்புக்களாலும் அடிபணிய வல்லவர்க்கு என்றே நீண்ட சடையையுடையவனாகிய சிவபெருமான் சிறிதும் கர வில்லாமல் தனது பெரிய சிவலோகத்தை நன்றாகப் படைத்து வைத்தான்.

விளக்கவுரை

``தளிர்விட`` என்பது முதலியன உருவகத்தைக் குறிப் பால் உணர்த்தி நின்றன.
``கண்ணீர்`` என்பது சிலேடையாய் `கள் + நீர்` எனப் பிரித்து, `தேன்` எனப் பொருள் கொள்ள நின்றது.
எட்டுறுப் பாவன; முழங்கால் இரண்டு, மார்பு ஒன்று, தோள் இரண்டு, செவி இரண்டு, முகம் ஒன்று.
இவ் எட்டுறுப்பும் நிலத்தில் தோயப் பணிதல் அட்டாங்க நமற்காரம்` எனப்படும்.
மார்பும், தோள்களும் ஒழிந்த ஐந்துறுப்புக்கள் நிலத்தில் தோயப் பணிதல் பஞ்சாங்க நமற்காரமாகும்.
`மகளிர் அட்டாங்க நமற்காரம் செய்தல் கூடாது` என விலக்கியுள்ளது.
தலைமட்டும் தாழக் கும்பிட்டு வணங்குவது ஏகாங்க நமற்காரம்.
`இறைஞ்சுதல்` என்பதும் இதுவே.
அட்டாங்கத்தோடு கூடியது, `சாட்டாங்கம்` எனப்படும்.
ஈற்றில் வைக்கற்பாலதாய இதனைச் செய்யுள் நோக்கி இடை வைத்தார்.
`சிவபெருமானை அன்பொடு பணிந்து பணி செய்பவர்கள் தவறாமல் சிவலோகத்தை அடைவர்` என்பது உணர்த்தியவாறு.
``தம் சொல் மலரலா`` என்றமையால் தாமே பாக்களை இயற்றிப் போற்றுவார் குறிக்கப்பட்டனர்.
தம் சொல்லால் தொடுக்கப்படும் பாக்களுக்கு ஒரு தனிச் சிறப்புச்

சொல்லப்படுகின்றது.
இதனால், `பாமாலைகளைப் புதிது புதிதாய்த் தொடுத்தணியும் மரபு இடையே அற்றொழியாமல், நீடு செல்லல் வேண்டும்` என்பது இறைவனது திருவுளக் குறிப்பாதல் விளங்கும்.
தேவார திருவாசகங்கட்குப் பின்னரும் அன்புடைத் தொண்டர்கள் பாமாலை சாத்திப் பரவினமை இதற்குத் தக்கச் சான்று.
`பத்திமையால் பணிந்தடியேன் றன்னைப் பன்னாள் பாமாலை பாடப் பயில்வித் தானை` *1*
`பந்தமறுத் தாளாக்கிப் பணிகொண் டாங்கே
பன்னியநூல் தமிழ்மாலை பாடு வித்துஎன்
சிந்தைமயக் கறுத்ததிரு அருளினானை`.
2 `நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை.
` *3* `நமக்கும் அன்பிற் பருகிய சிறப்பின் மிக்க
அற்சனை பாட்டேயாகும்; ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுகென்றார், தூமறை பாடும் வாயார்.
` என்பன முதலிய திருவாக்குகள் இதனை வலியுறுத்தும்.

வானகம் ஆண்டு மந் தாகினி
ஆடிநந் தாவனஞ்சூழ்
தேனக மாமலர் சூடிச்செல்
வோருஞ் சிதவல்சுற்றிக்
கானகந் தேயத் திரிந்திரப்
போருங் கனகவண்ணப்
பால்நிற நீற்றற் கடியரும்
அல்லாப் படிறருமே. **#180**

சிவகங்கையில் ஆடுதல், சிவ நந்தனவனத்தில் நிறைந்த பூக்களைச் சூடுதல் முதலிய சிறப்புக்களுடன் சிவலோகத்தில் வாழ்பவரும், கிழிந்த ஆடையை அரையில் சுற்றிக்கொண்டு, கால் நகம் தேய மண்ணுலகில்`` எங்கும் திரிந்து, இரப்பவரும் யாவர் எனின், முற்பிறப்பில் திருமேனியில் பால்போலும் நிறத்தையுடைய திருநீற்றைப் பூசியுள்ள சிவபெருமானுக்குத் தொண்டு செய்தவரும், அது செய்யாது அதனை இகழ்ந்தவருமேயாவர்.

விளக்கவுரை

`சிவத் தொண்டு தூய இன்பங்களைத் தரும்` எனவும், `அதனை இகழ்தல் இவ்வுலகில் வறுமைத் துன்பத்தைத் தரும்` எனவும் உறுதிப்படக் கூறுவார் இங்ஙனம் கூறினார்.
படிறர் - பொய்யர்.
பொய் நிலையாமையை நிலைத்ததாக உணர்ந்து, நிலைத்ததை

நிலையாததாக இகழ்தல்.
ஏகாரம், தேற்றம்.
ஆளுதல் - பயன் கொள்ளுதல்.
அவை மந்தாகினி ஆடுதல் முதலியன.
மந்தாகினி - கங்கை.
அஃது இங்குச் சிவலோக கங்கையைக் குறித்தது.
`நந்தவனம்` என்பது நீண்டு வந்தது.
`கெடாத வனம்` என்றலும் ஆம்.
`இவ்வாறெல்லாம் வானகத்தை ஆள்பவர்` என இறுதிக்கண் கூறற்பாலது செய்யுள் நோக்கி முதலிற் கூறப்பட்டது.

படிறா யினசொல்லிப் பாழுடல்
ஓம்பிப் பலகடைச்சென்
றிடறா தொழிதும் எழு நெஞ்ச
மேயெரி ஆடியெம்மான்
கடல்தா யினநஞ்சம் உண்ட
பிரான்கழல் சேர்தல்கண்டாய்
உடல்தான் உளபயன் ஆவசொன்
னேனிவ் வுலகினுள்ளே. **#181**

``எள் விழுந்த இடத்தைத் தேடிக்கொண்டு, `ஈ மொய்த்தாலும் இழப்பு ஏற்படும்` என்று அது பற்றி ஈயை அடிக்கின்ற உலோபியை `வரையாது வழங்கும் வள்ளலே` எனக் கூறுவது போன்ற பல பொய்களைச் சொல்லி
1 இரந்து, பிறிதொன்றற்கும் பயன்படாத உடலைப் பாதுகாத்தலை மேற்கொண்டு, பல இல்லங்களின் வாயிற் படிகளில் ஏறி இடறுதல் நேராத படி அதனினின்றும் நீங்குவோம்; நெஞ்சமே, புறப்படு. `எதற்கு` எனின், எரியின்கண் ஆடுபவனும், எம்பெருமானும் கடலில் பரந்து எழுந்த நஞ்சத்தை உண்டவனும் ஆகிய அவனது திருவடிகளைப் பல்லாற்றானும் சார்வனவே, இவ்வுலகத்தில் கிடைத்ததாகிய இவ்வுடலினால் உளவாம் பயன்களாகும்.
இதனை நான் உனக்குச் சொல்லிவிட்டேன்.
(என்மேற் பழியில்லை).

விளக்கவுரை

`எனவே, அவற்றைச் சார்தற்கே புறப்படுக` என்பதாம்.
அவற்றைச் சாராதவர் நிலை முன்னைப் பாட்டில் கூறப்பட்டமையால், `அந்நிலை நமக்கு வாராது ஒழிய முயல்வோம்` என்றபடி.
படிறு - பொய்.
`சொல்லி ஓம்பி` என இயையும்.
சொல்லுதல் அதன் காரிய மாகிய இரத்தல்.

மேலும், ஓம்புதல் அதன் காரணமாகிய மேற்கொள்ளு தல் மேலும் நின்றன.
தாயின - பரந்த.
கண்டாய், முன்னிலையசை.
மனம், மொழி, மெய் என்பவற்றால் சார்தல் பலவாகலின் பன்மையாற் கூறினார்.
தான், அசை.
``சொன்னேன்`` என்ற விதப்பு இக்கருத்துடைய தாதலைக்
``குற்றமில்லை எனமேல்; நான் கூறினேன்``.

உலகா ளுறுவீர் தொழுமின்விண்
ணாள்வீர் பணிமின்நித்தம்
பலகா முறுவீர் நினைமின்
பரமனொ டொன்றலுற்றீர்
நலகா மலரால் அருச்சிமின்
நாள்நர கத்துநிற்கும்
அலகா முறுவீர் அரனடி
யாரை அலைமின்களே. **#182**

மண்ணுலகத்தை ஆள விரும்புகின்றவர்களே, `நீவிர், உங்கள் விருப்பம் நிறைவேறச்) சிவபெருமானைக் கைகுவித்துக் கும்பிடுங்கள்.
விண்ணுலகை ஆள விரும்புகின்றவர்களே, (நீவிர், உங்கள் விருப்பம் நிறைவேறச்) சிவபெருமானது திருவடிகளில் வீழ்ந்து பணியுங்கள்.
நாள்தோறும் பற்பலவற்றை விரும்புகின்றவர்களே (நீவிர் உங்கள் விருப்பம் நிறைவேறச்) சிவபெருமானை இடையறாது நினையுங்கள்.
இவைகளையெல்லாம் விடுத்துச்) சிவபெருமானோடு இரண்டறக் கலக்க விரும்புகின்றவர்களே, (நீவிர் உங்கள் விருப்பம் நிறைவேற) அப்பெருமானை நந்தவனத்தில் உள்ள நல்ல பல மலர்களால் அருச்சனை செய்யுங்கள்.
என்றும் நரகத்தில் நிற்றலாகிய பொல்லாத விளைவை விரும்புகின்றவர்களே, (அதற்கு நீவிர்) சிவ பெருமானுடைய அடியாரை வருந்தப் பண்ணுங்கள்.

விளக்கவுரை

`சிவபெருமானை இந்த இந்த அளவில் வணங்குகின்ற வர்கள் இன்ன இன்ன பயன்களை அடைவார்கள்` என்னும் வகை முறையையும், `சிவாபராதம், சிவனடியார்க்கு அபராதம் நரகம் விளைக்கும்` என்பதையும் இவ்வாறு கூறினார்.
நித்தம் - நாள்தோறும்.
கா - சோலை; நந்தவனம்.

`நாளும்` என்னும் முற்றும்மை தொகுத்த லாயிற்று.
`அல்ல` என்பது இடைக்குறைந்து நின்றது.
நரகங்கள் பல வகையின ஆதல் பற்றி, `அல்ல` எனப் பன்மையாற் கூறினார்.
அலைத்தல் - வருத்துதல்.

அலையார் புனலனல் ஞாயி
றவனி மதியம்விண்கால்
தொலையா உயிருடம் பாகிய
சோதியைத் தொக்குமினோ
தலையாற் சுமந்துந் தடித்துங்
கொடித்தேர் அரக்கனென்னே
கலையான் ஒருவிரல் தாங்ககில்
லான்விட்ட காரணமே. **#183**

(உலகீர்) கொடியை உயர்த்திய தேரை உடைய இராவணன் பத்துத் தலையும், இருபது தோளும் உடைமையால் மிகப் பருத்திருந்தும் சிறிய மானைக் கையில் ஏந்திய சிவபெருமானது கால் விரல்களில் ஒன்றன் ஊன்றலைத் தாங்கமாட்டாது அலறிய காரணம் என்ன? (அதனை எண்ணிப் பார்த்து,) அலை பொருந்திட நீர், ஞாயிறு, நிலம், திங்கள், வானம், காற்று, அழிவற்ற உயிர் ஆகிய எட்டினையும் தனது உடம்பாகக் கொண்ட, ஒளி வடிவாகிய அந்தப் பெருமானையே அவனது திருவடிகளைத் தலையிற் சுமந்தாயினும் சேருங்கள்

விளக்கவுரை

``தலையாற் சுமந்தும்`` என்பதை, ``தொக்குமினோ`` என்பதற்கு முன்னே கூட்டுக.
தடித்தல் - பருத்தல்.
``என்னே`` என்னும் வினா, `அது நன்கு தெரிந்ததன்றோ! என்னும் தேற்றக் குறிப்பினது.
`எத்தனை பேர் எத்தனைப் பெரிய உடலும் பேராற்றலும் படைத் திருப்பினும் அவர்களது ஆற்றல்கள் எல்லாம் எங்கும் நிறைந்த பெரும் பொருள் ஆகிய சிவபெருமானது ஆற்றலின்முன் எவ்வளவு` என்றற்கு அவன் அட்ட மூர்த்தியாய் நிற்றலை எடுத்தோதினார்.
அட்ட மூர்த்தங்கள் செய்யுளுக்கேற்ப வைக்கப்பட்டன.
`அவன் சிறியதொரு மானை ஏந்துதலைக் கண்டு தவறாக உணர்ந்து விடாதீர்கள்` என்றற்கு, ``கலையான்`` என்றார்.
தொகுதல் - சேர்தல்.
``தொக்குமினோ`` என்பதில் ககரமெய் விரித்தல்.
ஓகாரம், அசை.

காரணன் காமரம் பாடவோர்
காமர்அம் பூடுறத்தன்
தாரணங் காகத் தளர்கின்ற
தையலைத் தாங்குவார்யார்
போரணி வேற்கண் புனற்படம்
போர்த்தன பூஞ்சுணங்கார்
ஏரணி கொங்கையும் பொற்படம்
மூடி இருந்தனவே. #184

எப்பொருட்கும் காரணனாகிய சிவபிரான் (வீணை யேந்தி) இசை பாடிக் கொண்டு வீதியிலே வர, குறும்பு செய்கின்ற ஒருவனாகிய மன்மதனது அம்பு மார்பில் தைத்து ஊடுருவுதலால் போர்க்குக் கொள்ளப்படுகின்ற வேல்போலும் கண்கள் `நீராகிய துணியால் தம்மை மூடிக்கொண்டன. அழகோடு அணிகளைத் தாங்கி அழகு தேமலையுடைய கொங்கைகள் பொன்னாடையால் தம்மை மூடிக் கொண்டன.

அவனது கொன்றை மாலையை வேட்ட வேட்கையே தனக்குத் துன்பமாக இவ்வாறு சோர்வடைகின்ற இம் மகளைத் தாங்குவார் யார்?

விளக்கவுரை

இது தில்லைப் பெருமானைக் காதலித்து வருந்தும் தலைவியது ஆற்றாமை நோக்கித் தோழி நெஞ்சழிந்து கூறியது.
``காமர்`` என்பது இழித்தற்கண் வந்த பன்மை.
``ஓர்`` என்றதும் இழிவு பற்றி.
தன் - சிவபிரானது.
``தார்`` என்றது அதனை வேட்ட வேட்கையை.
அணங்கு - துன்பம்.
`இத்தையலை` எனச் சுட்டியுரைக்க.
``புனற்படம்,பொற்படம்`` என்பன உருவகங்கள்.
`கண்கள் நிரம்ப நீரைச் சொரிந்தன; கொங்கைகள் பசலை போர்த்தன` என்பது பொருள்.

இருந்தனம் எய்தியும் நின்றுந்
திரிந்துங் கிடந்தலைந்தும்
வருந்திய வாழ்க்கை தவிர்த்திடு
போகநெஞ் சேமடவாள்
பொருந்திய பாகத்துப் புண்ணியன்
புண்ணியல் சூலத்தெம்மான்
திருந்திய போதவன் றானே
களையுநம் தீவினையே. #185

நெஞ்சே, நாம் தவறு செய்யாமல் திருந்தும் பொழுது, மாதொரு பாகத்துப்

பொருந்தப் பெற்ற புண்ணிய வடிவினனும்,கொடியோரை அழித்தலால் அவர் புண் பொருந்திய சூலத்தை ஏந்தியவனும் ஆகிய எம் சிவபெருமான் நமது தீவினை களை யெல்லாம் அவனே முன் வந்து நீக்கிவிடுவான்.

(ஆகையால் நீ திருந்து.

அஃதாவது,) நின்றும், திரிந்தும், கிடந்து அலைவுற்று மிக்க பொருளை ஈட்டியபோதிலும் வருத்தத்தையே தருகின்ற இவ்வுலக வாழ்க்கையை (நீ விரும்புதலை விடுத்து,) அஃது உன்னை விட்டு நீங்கும்படி நீக்கு.

விளக்கவுரை

``நெஞ்சே`` என்பது முதலாகத் தொடங்கி, `நம் தீவினையைக் களையும்` எனவும் `இருந்தனம் எய்தியும் வருந்திய` எனவும், `போகத் தவிர்த்திடு` எனவும் இயைத்து உரைக்க.

`திருந்தா நிலையாவது இது` என்பதையே வாழ்க்கையின் விளக்கமாக முதலிற் கூறினார்.

``அலைந்தும்`` என்னும் உம்மையைப் பிரித்து, ``கிடந்து`` என்பதனுடன் கூட்டுக.

`இறைவன் நமக்கு அருளாமைக்குக் காரணம் நமது குற்றமேயன்றி, அவனது குற்றம் அன்று` என்பதை விளக்கிய வாறு.

திருந்துதலுக்கு `நாம்` என்பதே தோன்றா எழுவாய் ஆதல் அறிக.

``இருந்தனம் எய்தியும் வருந்திய வாழ்க்கை`` என்றது உலக வாழ்க்கையின் இயல்புணர்த்தியது.

தீவினை யேனைநின் றைவர்
இராப்பகல் செத்தித்தின்ன
மேவின வாழ்க்கை வெறுத்தேன்
வெறுத்துவிட் டேன்வினையும்
ஒவின துள்ளந் தெளிந்தது
கள்ளங் கடிந்தடைந்தேன்
பாவின செஞ்சடை முக்கணன்
ஆரணன் பாதங்களே. **#186**

தீவினையைப் பெரிதும் உடைய என்னை ஐம்புலன் களாகிய வேடர், கருவி கொண்டு சிதைத்துத் தின்னுதல் போன்ற துன்பத்தை உறுவிக்கும்படி இதுகாறும் பொருந்திநின்ற வாழ்க்கையை இதுபொழுது நான் வெறுத்து விட்டேன்.

அதனால் எனது சஞ்சித வினைகளும் என்னை விட்டு ஒழிந்தன.

அதனால் எனது உள்ளம் சிவனை வஞ்சித்து ஒழுகுதலை விலக்கித் தெளிவடைந்தது.

நான் விரிந்த, சிவந்த சடையையும், மூன்று கண்களையும்

உடையவனும், வேதப் பொருளாய் உள்ளவனும் ஆகிய அவனது திருவடிகளையே சார்பாகச் சார்ந்தேன்.

விளக்கவுரை

இருவினை ஒப்பு, மல பரிபாகம், சத்தி நிபாதம் இவை வந்தபொழுதே இவையெல்லாம் நிகழ்வன ஆகலின், `இதுபொழுது` என்பது வருவித்துரைக்கப்பட்டது.
உள்ளம் தெளியாமைக்குக் காரணம் சஞ்சித கன்மமேயாதலின் ``ஓவினது`` எனப்பட்ட வினை அதுவேயாயிற்று.
`இவ்வினை சத்தி நிபாதர்க்கு ஞான குருவால் அழிக்கப்படும்` என்பது சைவ சித்தாந்தம்.
ஆயினும், ``சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின்`` *(குறள்.*
, 359) * என்னும் திருக்குறளின் உரையில் பரிமேலழகர், ``அவ்வழிக் (ஞானத்தைப் பெற்றுவிட்ட பின்பு) கிடந்த துன்பங்கள் எல்லாம் என் செய்யும் - என்னும் கடாவை ஆசங்கித்து, - அவை ஞான யோகங்களின் முதிர்ச்சியுடைய உயிரைச் சாரமாட்டாமையானும், வேறு சார்பின்மையானும் கெட்டுவிடும் - என்பது இதனாற் கூறப்பட்டது``. என்றார்.
இன்னும் அவர் இதற்குமுன் சஞ்சித கன்மத்தைப் பற்றி, ``சாரக் கடவனவாய் நின்ற துன்பங்களாவன, பிறப்பு அநாதி யாய் வருதலின் உயிரான் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான் அனுபவித்தனவும், பிறந்த உடம் பான் முகந்து நின்றனவும் ஒழியப் பின்னும் அனுபவிக்கக் கடவன வாய்க் கிடந்தன`` என விளக்கம் தந்தார்.
``ஐவர்`` என்றது தொகைக் குறிப்பு உருவகம்.
செத்தித் தின்னல், வினைநிலை ஒட்டு, ``கான முயல் எய்த அம்பினில் யானை - பிழைத்த வேல் ஏந்தல் இனிது`` *1* என்றது போல், இஃது ``அடையும் பொருளும் அயற்பட மொழிதல்`` *2* என்பதனானே அடை அயற்பட மொழிதலாய் அடங்கும்.
ஆயினும் பரிமேலழகரும் இது பற்றி வாளா போயினார்.

பாதம் புவனி சுடர்நய னம்பவ
னமுயிர்ப் போங்
கோதம் உடுக்கை உயர்வான்
முடிவிசும் பேயுடம்பு
வேதம் முகம் திசை தோள் மிகு
பன்மொழி கீதமென்ன
போதம் இவற்கோர் மணிநிறந்
தோற்பது பூங்கொடியே. **#187**

என் மகளால் காதலிக்கப்பட்ட இவனுக்கோ இவளால் தழுவப்படுவதோர் உடம்பில்லை.
மற்று, இவனுக்கு நிலமே பாதங்கள்; கதிரும் மதியுமே கண்கள்; காற்றே மூச்சு; பெரிய கடலே உடை; உயர்ந்த வான முகடே தலை; எங்கும் பரந்துள்ள வானமே உடல்; வேதங்களே வாய்; திசைகளே தேர்கள்; பல வகையினவாய் வழங்குகின்ற மொழிகளே இவன் பாட்டு.
இங்ஙனமாக, இவன் பொருட்டு இவள் தனது அழகிய நிறம் கெட நின்று வருந்துவது என்ன அறிவுடைமை!

விளக்கவுரை

இது செவிலிதன் இரங்கற் கூற்று.
சிவ பத்தர்களது நிலையைக் கண்டு பிறர் அறியாமையால் இரங்கிக் கூறும் கூற்றாதல் இதன் உள்ளுறைப் பொருள்.
புவனி - புவனம்; நிலம்.
சுடர் - ஞாயிறும், திங்களும், நயனம் - கண்.
பவனம் - காற்று உயிர்ப்பு - மூச்சு, ஓதம் - அலை; அது கடலுக்கு ஆகு பெயர்.
உடுக்கை - உடை.
``வான்`` என்றது அதன் முகட்டினை; அஃது ``உயர்`` என்றதனானும் விளங்கும்.
விசும்பு - வானம்.
உடம்பு - உடல்; கழுத்திற்குக் கீழும், அரைக்கு மேலும் கை, தோள்கள் அல்லாத பகுதி; மார்பும், வயிறும்.
வாயை `முகம்` என்றல் வடமொழி வழக்கு.
கீதம் - இசை; அஃது அதனையுடைய பாட்டைக் குறித்தது.
போதம் - அறிவு.
இகழ்வது போலச் சிவபெருமானது உலக உருவத்தை (விசுவ ரூபத்தை)ப் புகழ்ந்தவாறு.
மாநிலம் சேவடி யாகத், தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கை யாக,
விசும்புமெய் யாகத், திசைகை யாகப்
பசுஞ்சுடர் மதியமொடு சுடர்கண் ணாக
இயன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வன் என்ப,
தீதற விளங்கிய திகிரி யோனே.
என்னும் நற்றிணைக் கடவுள் வாழ்த்துச் செய்யுளை இதனுடன் ஒப்பு நோக்குக.
இதனுள் ``திகிரி`` என்பதைப் பொதுப்பட ஆஞ்ஞா சக்கரமாகக்

கொள்வுழி இது பரம்பொருளின் தடத்தலக்கணத்தை விளக்கியதாதல் அறிக.
சேவடி முதலியவற்றை வேறு வேறு பொருளாகக் கூறிய வர்க்குச் சக்கரத்தையும் வேறுபொருளாக உடம்பொடு புணர்த்துக் கூறலே கருத்தாதல் அறிக.

கொடிமேல் இடபமுங் கோவணக்
கீளுமோர் கொக்கிறகும்
அடிமேற் கழலும் அகலத்தின்
நீறும்ஐ வாய்அரவும்
முடிமேல் மதியும் முருகலர்
கொன்றையும் மூவிலைய
வடிவேல் வடிவுமென் கண்ணுள்ளஎப்
போதும் வருகின்றவே. **#188**

கொடிச் சீலையின்மேல் எழுதப்பட்டுள்ள இடபமும், கோவணத்துடன் கூடிய கீளும், முடியின்மேல் ஒப்பற்ற ஒரு கொக்கின் இறகும், திங்களும், நறுமணத்தோடு மலர்ந்த கொன்றை மலர்மாலையும், மார்பில் பூசப்பட்டுள்ள திருநீறும், அங்குத் தவழ்ந்து சென்று முடிக்கு மேலே விரிக்கின்ற படங்களையுடைய ஐந்தலை நாகமும், திருவடியில் கட்டப்பட்டுள்ள கழல்களும், தோள்மேல் சார்த்தியுள்ள இலைவடிவான, கூரிய முத்தலை வேலும் ஆகிய இவை எப்பொழுதும் என் கண்ணில் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன.

விளக்கவுரை

`இமைப் பொழுதும் நெஞ்சில் நீங்காது நிற்கின்ற சிவனது திருவுருவமும் கண்களிலும் தெரிகின்றன` என்றபடி.
செய்யுளுக்கு ஏற்ப முறை பிறழ வைக்கப்பட்டவை முறையானே வைத்து உரைக்கப்பட்டன.
கொக்குருவில் வந்த `குரண்டன்` என்னும் அசுரன் மிக்க வலியுடையன் என்பதைக் குறிக்க ``ஓர் கொக்கு`` என்றார்.
அவனை அழித்து எடுத்த சிறகை அதன் அடையாளமாகச் சிவபெருமான் தனது முடிமேற் சூடியுள்ளான்.

வருகின்ற மூப்பொடு தீப்பிணிக்
கூற்றம்வை கற்குவைகல்
பொருகின்ற போர்க்கொன்றும் ஆற்றகில்
லேன்பொடி பூசிவந்துன்
அருகொன்றி நிற்க அருளுகண்
டாய்அழல் வாய்அரவம்
வெருகொன்ற வெண்மதி செஞ்சடை

மேல்வைத்த வேதியனே. #189
நெருப்புப்போலும் நஞ்சினை வெளிவிடுகின்ற பாம்பைக் கண்டு அஞ்சுதலை ஒழித்து வெள்ளிய திங்களைச் சிவந்த சடை முடியின் மேல் வைத்துள்ள, வேதப் பொருளானவனே, நாளுக்கு நாள் மிகுந்து வருகின்ற மூப்பும் கொடிய நோயும் செய்கின்ற போருக்கு அடியேன் சிறிதும் ஆற்ற மாட்டாதவனாய் உள்ளேன்.
அதனால், திருநீற்றைப் பூசிக் கொண்டு உன் அருகில் வந்து நிற்கும்படி அடியேனுக்கு அருள்புரி.

விளக்கவுரை

கண்டாய், முன்னிலையசை.
கூற்றுவன் வருகைக்கு அறிகுறியானவற்றை, ``கூற்றம்`` என்றே உபசரித்துக் கூறினார்.
`விரைந்து வீடருளுக` என்பது கருத்து.
வைகல் - நாள்.
வெரு - வெருவுதல்; முதனிலைத் தொழிற் பெயர்.
``வெண்மதி செஞ்சடை`` சொல் முரண் தொடை.

வேதியன் பாதம் பணிந்தேன்
பணிந்துமெய்ஞ் ஞானமென்னும்
சோதியென் பால்கொள்ள உற்றுநின்
றேற்கின்று தொட்டிதுதான்
நீதியென் றான் செல்வம் ஆவதென்
றேன் மேல் நினைப்பு வண்டேர்
ஒதிநின் போல்வகைத் தேயிரு
பாலும் ஒழித்ததுவே. #190

வேதப் பொருளாகிய சிவபெருமானது பாதங் களை யான் பாவித்தேன்; பணிந்து, `ஞானம்` என்னும் ஒளி என்னிடத்தில் வந்து பொருந்துபடி இசைந்து நின்றேன்.
அங்ஙனம் நின்ற எனக்கு, `இன்று முதல் இந்த முறைமையே முறைமை` என அவன் அருளிச் செய்தான்.
ஆயினும், இதற்கு மேலும் எனக்கு ஒரு கருத்து உளது.
அஃதாவது, `உமையையும் உன்னையும் போன்ற வகையில் இருவராய் நில்லாது ஒருவராதலே பெருஞ் செல்வம் என்பதாம் - என்றேன்.

விளக்கவுரை

`அச்செல்வம் வாய்க்குங்கொல்` என்பது குறிப்பெச்சம்.
``என்றான்`` என்பதன்பின், `மேல் நினைப்பு, வண்டு ஏர் ஓதியையும், நின்னையும்போலும் வகைத்தாய் இருபாலும் ஒழித்த அதுவே செல்வம்

ஆவது என்றேன்`` என இயைக்க.
``ஆவது`` என்பது, `ஆவ தாகிய நினைப்பு` என்றபடி.
ஏய்தல் - பொருந்துதல்.
`சிவன் சிவத் தொடு இரண்டறக் கலந்து நிற்பதே ஞானத்தின் பயன்.

ஒழித்தேன் பிறவியை ஊர்ந்தேன்
அறுபகை ஒங்கிற்றுள்ளம்
இழித்தேன் உடம்பினை ஏலேன்
பிறரிடை இம்மனையும்
பழித்தேன் பழியே விளைக்கும்பஞ்
சேந்தியக் குஞ்சரமும்
தெழித்தேன் சிவனடி சேர்ந்தேன்
இனிமிகத் தெள்ளியனே. **#191**

சிவனது திருவடிகளையே பற்றாகச் சேர்ந்தேன்.
அதனால் யான் இனி வரக்கடவதாகிய பிறவி யாதொன்றும் இல்லாமல் ஒழித்துவிட்டேன்.
பிறப்பிற்குக் காரணமாகிய அகப்பகை ஆறினையும் மிதித்து மேல் ஏறினேன்.
எனது உள்ளம் உயர்நிலையை அடைந்தது.
உடம்பின் இழிவை உணராது பற்றியிருந்த நிலையைவிட்டு அதன் இழிவை அறிந்து இனிப் பிறரிடம் சென்று இரத்தலைச் செய்யேன்.
எனக்கு உரியதாக என்றாலும், பிறராலும் மதிக்கப்பட்ட இந்த இல்லத்தையும் இகழ்ந்து நீங்கினேன்.
குற்றங்களையே விளைக்கின்ற பஞ்சேந்திரியங்களாகிய யானைகளை அதட்டி அடக்கினேன்.
ஆகவே, யான் இப்பொழுது மயக்கங்கள் யாவும் நீங்கித் தெளிவடைந்தேனாகியேவிட்டேன்.

விளக்கவுரை

`இல்லம்` என்பது இல்லாளையும் குறிப்பது.
அகப்பகை ஆறு - காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்.
அடக்குதலாகிய தன் காரியம் தோற்றி நின்றது.
ஏகாரம், தேற்றம்.
சிவனடி சேர்தலின் பயனை உணர்த்தியவாறு.

தெள்ளிய மாந்தரைச் சேர்ந்திலன்
தீங்கவி பாடலுற்றேன்
ஒள்ளிய சொல்லும் பொருளும்
பெறேன்உரைத் தாருரைத்த

கள்ளிய புக்காற் கவிகளொட் டார்
கடல் நஞ்சயின்றாய்
கொள்ளிய வல்லகண் டாய் புன்சொல்
ஆயினுங் கொண்டருளே. #192

சிவபெருமானே, அடியேன் இனிய கவிகளைப் பாடவல்ல தெளிந்த அறிவடையாரை அடுத்ததும், இல்லை.
ஆயினும் ஆசையால் உன்மேல் இனிய கவிகளைப் பாடத் தொடங்கிவிட்டேன்.
அவற்றிற்கு `ஏற்ற விளக்கமான சொற்கள் இவை` என்பதையும் அச்சொற்கள் என்னென்ன பொருள்களைத் தரும் என்பதையும் அறிவினால் பெறப் பெற்றேனில்லை.
பழமையாகப் பாடினவர் களுடைய கவிகளிலிருந்து அவற்றைக் களவு செய்து கொள்ளப் புகுந்தால், அவர்களோ, அல்லது அக்கவிகளைக் கற்று வல்லவர்களோ அதற்கு இடங்கொடுக்க மாட்டார்கள்.
ஆகவே, ஆசையால் வாய்க்கு வந்ததைக் `கவி` என்று சொல்லிப் பாடுகின்ற பாடல்கள் அறிவுடை யோரால் கொள்ளத்தக்கன அல்ல.
அவை மிகப் புல்லிய சொற்களா யினும் ஏற்றருள்; நீ கடலில் தோன்றிய நஞ்சினையும் உண்ட பெருமான் அல்லையோ!

விளக்கவுரை

`அந்நஞ்சினுமா என் கவிகள் கொடியன` என்பது குறிப்பு.
கள்ளிய - களவு செய்ய.
கவிகள் - கவிபாடுவோர்.
கொள்ளிய - கொள்ளப்படுவன.
கண்டாய், முன்னிலையசை.
``நஞ்ச யின்றாய்`` என்பது உடம்பொடு புணர்த்தது ஆகலின், அதனை வேறு வைத்து, இவ்வாறு பொருள் உரைக்கப்பட்டது.
`பாடிப்பரவும் ஆசை யுடையாரை அவர்க்கு அவ்வன்மையின்மை பற்றி இகழாது, அன்பு பற்றி ஏற்றுக் கொள்ளவே செய்வான் என்பதும், `அவன் நஞ்சுண்ட செயல் இதனைக் குறிக்கும் குறிப்பும் ஆகும்` என்பதும் கருத்து.

அருளால் வருநஞ்சம் உண்டுநின்
றாயை அமரர்குழாம்
பொருளார் கவிசொல்ல யானும்புன்
சொற்கள் புணர்க்கலுற்றேன்
இருளா சறவெழில் மாமதி
தோன்றவும் ஏன்றதென்ன
வெருளா ததிர்சென்று மின்மினி

தானும் விரிகின்றதே. #193
(பெருமானே) இருளாகிய குற்றம் நீங்கும்படி இரவில் அழகு பொருந்தி நிறை நிலாத் தோன்றி விளங்கினாலும், சிறிய மின்மினிப் பூச்சியும் அஞ்சாது அதன் எதிரே சென்று, `எனது ஒளியும் இருளை விழுங்கும்` எனக் கருதித் தனது ஒளியால் சிறிது விளங்கிநிற்கின்றது.
அதுபோல, பாற்கடலினின்றும் தோன்றித் தேவரைத் துரத்தி வந்த நஞ்சினை அவர்கள் மேல் வைத்த கருணை யால் உண்டும் இறவாதிருக்கின்ற உனது கருணை மிகுதியைப் பொரு ளாக நிரப்பி அத்தேவர் கூட்டம் உயர்ந்த கவிகளைப் பாட, நானும் `கவிகள்` என்ற பெயரில் சில சிறுசொற்களைக் கோக்கின்றேன்.

விளக்கவுரை

`உலகர் மின்மினியை வெறாது நகைத்து ஏற்றல்போல, நீயும் எனது கவிகளை வெறாது நகைத்து ஏற்றருள்வாய்` என்பது கருத்து.
மூன்றாம் அடி முதலாகத் தொடங்கியுரைக்க.
``பொருள்ஆர்`` என்பதற்குக் கருத்து நோக்கி இவ்வாறு உரைக்கப்பட்டது.
`இறைவன் தனக்கு அர்ப்பணிக்கப்படும் பொருள்களின் தன்மையை நோக்காது, அர்ப்பணிப்பவர்களது உள்ளத்தில் நிற்கும் அன்பையே நோக்குவான்` என்பதும் இதனால் உணர்த்தப்பட்டது.
இச்செய்யுள் எடுத்துக்காட்டு உவமையணி பெற்றது.

விரிகின்ற ஞாயிறு போன்ற
மேனியஞ் ஞாயிறுசூழ்ந்
தெரிகின்ற வெங்கதிர் ஒத்தது
செஞ்சடை அச்சடைக்கீழ்ச்
சரிகின்ற காரிருள் போன்றது
கண்டம் காரிருட்கீழ்ப்
புரிகின்ற வெண்முகில் போன்றுள
தாலெந்தை ஒண்பொடியே. #194

என் தந்தையாகிய சிவபெருமானுடைய திரு மேனி விரிந்து விளங்குகின்ற ஞாயிற்று வட்டம் போன்றுள்ளது.
எங்கும் வீழ்ந்து சுழல்கின்ற சிவந்த சடைகள் அந்த ஞாயிற்றைச் சூழ்ந்து சுடர்விடுகின்ற வெவ்விய கதிர்களைப் போன்றுள்ளன.
அச்சடைக்குக் கீழ் உள்ள கண்டம், அந்த ஞாயிற்றின் கதிர்கட்கு அஞ்சி ஓடி ஒளிந்த கரிய இருள்போன்றுள்ளது.
கண்டத்தின் கீழ் மார்பில் பூசப்பட்டுள்ள திருநீறு, அந்த இருட்குக் கீழாய்த் தோன்றிப்படரும் வெள்ளிய முகில் கள் போன்றுள்ளது.

விளக்கவுரை

சரிதல் - தோற்று நீங்குதல்.
சடை, சாதியொருமை.
`அச் சடைக்கீழ்க் கண்டம் இருள்போன்றது` என இயைக்க.
வெண்முகில் சூல் கொள்ளாத மேகம்.
பெருமானது திருவுருவத்தை வகுத்துப் புகழ்ந்தபடி.
இது மாலை யுவமையணி.

பொடிக்கின் றிலமுலை போந்தில
பல்சொற் பொருள்தெரியா
முடிக்கின் றிலகுழல் ஆயினும்
கேண்மின்கள் மூரிவெள்ளம்
குடிக்கொண்ட செஞ்சடைக் கொண்டலங்
கண்டன்மெய்க் கொண்டணிந்த
கடிக்கொன்றை நாறுகின் றாள்அறி
யேன்பிறர் கட்டுரையே. **#195**

(என் மகளுக்கு) இன்னும் கொங்கைகள் முகிழ்ப் படையவில்லை.
பல் விழுந்து முளைக்கவில்லை.
அவளது சொற்கள் பொருள் விளங்கும் அளவிற்குத் திருந்தவில்லை.
கூந்தல் கூட்டி முடிக்க வரவில்லை.
(`பேதைப் பருவத்தினள்` என்றபடி) ஆயினும் இவள் நிலைமையைக் கேளுங்கள்; பெரிய வெள்ளநீர் எப்பொழுதும் இருக்கும் சிவந்த சடைமுடியையும், மேகம் போன்ற கண்டத்தையும் உடைய சிவபெருமான் தன்மேனியில் அணிந்துள்ள நறுமணம் உள்ள கொன்றைத் தாரின் மணம் கமழ்கின்ற உடம்புடையளாயினாள்.
`இதையறிந்தால் அயலார் சொல்லும் சொற்கள் எவையாய் இருக்கும்` என்பதையான் அறிகின்றிலேன்.

விளக்கவுரை

`பேதைப் பருவத்தே இவள் புத்தியறிந்து சிவனைத் தழுவிவிட்டாள்; இனி, இவள் பிறன் ஒருவனுக்கு உரியளல்லள்` எனப் பலரும் கூறுவார்கள் என்பதாம்.
இது கருவிலே திருவுடையராய்ச் சாமுசித்தராய்ப் பிறந்து, குழவிப் பருவத்தே சிவனையடைந்த ஞானசம்பந்தர் போன்றாரது பெருமையைக் குறிப்பால் உணர்த்தியது.
முதுக்குறைந் தனளே! முதுக்குறைந் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி;
முலையும் வாரா; முதுக்குறைந் தனளே!

என்னும் பழம்பாடல் ஒன்றை இதனுடன் ஒப்பு நோக்குக.
`பிறர்க்கு உரியளல்லள்` என்பது, `கைச்சிறு மறியவன் கழல் அலாற் பேணாக் கருத்து` *1* உடையர் ஆதலையும், `அயலார்` என்பது பௌத்தர்களையும் உள்ளுறையாகக் குறிக்கும்.
``முடிக்கின்றில`` என்பது முடிக்கப் படு கின்றில` என்றபடி.
நீங்காதிருத்தலை, `குடிகொண்டிருத்தல்` என்றல் வழக்கு, ``குடிக் கொண்ட`` என்பதில் ககர ஒற்று விரித்தல்.
போக மாலையாவது மார்பிற் புரளும் தார் ஆகலானும் ``கண்ணிகார் நறுங் கொன்றை, காமர் - வண்ண மார்பில் தாரும் கொன்றை`` *2* என்ப ஆகலானும், ``மெய்க்கொண்ட கொன்றை` என்றது, கொன்றைத் தார் ஆயிற்று.
அது மும்மடி ஆகு பெயராய், அத்தாரின் மணத்தைக் குறித்தது.
நாறுதல் - கமழ்தல்.
ஒற்றுமையால் உடம்பும், உயிரும் சினையும், முதலும்போல நிற்றலால், ``நாறுகின்றாள்`` என்றது, சினைவினை முதல்மேல் நின்றதாம்.
இப்பாட்டுச் சிவபெருமானோடு களவிற் கலந்த பேதைப் பெண் ஒருத்திக்குச் செவிலியாயினாள் கூற்றாக அருளிச் செய்யப்பட்டது.
ஞானிகளது செயலை உலகர் அறியார் ஆதலின், அது களவோடு ஒப்பதாயிற்று.

உரைவளர் நான்மறை ஓதி
உலகம் எலாந் திரியும்
விரைவளர் கொன்றை மருவிய
மார்பன் விரிசடைமேல்
திரைவளர் கங்கை நுரைவளர்
தீர்த்தம் செறியச்செய்த
கரைவளர் வொத்துள தால்சிர
மாலையெம் கண்டனுக்கே. **#196**

எம் தலைவனாகிய சொற்கள் வளர்ந்து வாரா நின்ற நான்கு வேதங்களையும் பாடிக்கொண்டு உலகம் எங்கும் பிச்சைக்குத் திரிகின்ற, சிவபெருமானுக்கு அவனது சடை முடியில் அலையை அடக்கிக் கொண்டுள்ள கங்கை நீர் தீர்த்தமாய் இருக்க, அதைச் சுற்றியுள்ள தலைமாலை, அந்தத் தீர்த்தத்திற்கு உயர்த்துக் கட்டிய கரை போன்று அமைந்து பெருமையைத் தருகின்றன.

விளக்கவுரை

கண்டன் - தலைவன்.
`எம் கண்டனாகிய மார்பனுக்கு அவன் விரிசடைமேல்` எனக் கூட்டியுரைக்க.

சொற்கள்.
வளர்த லாவது, வழிவழியாக ஓதப்பட்டு வருதல்.
வினா - வாசனை.
முன் இரண்டடிகள் சிவனைச் சிறப்பித் துணர்த்த வந்தன.
``திரை வளர்`` என்றதில் வளர்தல், உள்ளே பொங்குதல்.
தீர்த்தம் - புண்ணியப் பொய்கை.
வளர்வு - வளர்ச்சி உயர்தல்.
சிவபெருமானது தலையலங் காரத்தையும் புகழ்ந்துரைத்தவாறு.

கண்டங் கரியன் கரிஈர்
உரியன் விரிதருசீர்
அண்டங் கடந்த பெருமான்
சிறுமான் தரித்தபிரான்
பண்டன் பரம சிவனோர்
பிரமன் சிரமரிந்த
புண்தங் கயிலன் பயிலார
மார்பனெம் புண்ணியனே. **#197**

எமது புண்ணியத்தின் பயனாய் விளங்கும் சிவ பெருமான் கண்டம் கரிய நிறமானவன்; யானையை உரித்த தோலைப் போர்வையாக உடையாக உடையவன்; சிறிய மானைக் கையில் ஏந்திய தலைவன்; பிரமனது தலைகளில் ஒன்றைச் சேதித்த குருதி பொருந்திய கூரிய படைக்கலத்தை உடையவன்.

ஆயினும் அவன் தனது இயற்கையில் அனைத்துலகங்களையும் கடந்த பெரியோன்; அநாதியன்; அதனால, `பரம சிவன்` என்று குறிக்கப்படுபவன்.

விளக்கவுரை

`சிவன் தனது இயற்கை நிலையில் அனைத்திற்கும் அப்பாற்பட்டு, அருவத்தையும் கடந்து, கால இட எல்லைகளில் எதுவும் இன்றியிருப்பவனாயினும் உயிர்களின் மேல் வைத்த கருணையால் பலவேறு திருமேனிகளையும், அவற்றிற்கு ஏற்ற பெயர்களையும், செயல்களையும் உடையவன் ஆகின்றான்` என்றபடி.
பரம சிவன் - சுத்த சிவன்.
அல்லது சொரூப சிவன்.
சிவன் தடத்த சிவன்.
`பிரமன் தலையைக் கை உகிரால் கிள்ளினான்` என்பதே வரலாறு.
ஆதலின் அதனை இங்கு, `படைக்கலம்` எனக் கூறினார் என்க.
`பிரமன் ஓர் சிரம் அரிந்த` எனக் கூட்டுக.
`பண்டு` என்பது ஐகாரம் பெற்று, `பண்டை` என வருவது இங்கு ஐகாரம்

பெறாது வந்தது.
`ஆரம், எலும்புமாலை` என்பது ஏற்புழிக் கோடல்.

புண்ணியன் புண்ணியல் வேலையன்
வேலைய நஞ்சனங்கக்
கண்ணியன் கண்ணியல் நெற்றியன்
காரணன் காரியங்கும்
விண்ணியன் விண்ணியல் பாணியன்
பாணி கொளவுமையாள்
பண்ணியன் பண்ணியல் பாடல
நாடற் பசுபதியே. **#198**

பசுக்களாகிய உயிர்கட்கெல்லாம் பதியாகிய சிவன் நல்லோருடைய புண்ணியங்களின் பயனாய் உள்ளவன்; கொடி யோருடைய குருதி ஒழுகும் முத்தலை வேலை ஏந்திய தலைவன்; கடலில் தோன்றிய நஞ்சைக் கண்டத்திலே உடையவன்.
எலும்பு மாலையன்; கண் பொருந்திய நெற்றியை உடையவன்; ஆகாய கங்கையைத் தரித்தவன்; உமையவள் தாளம் இட ஆடுபவன்; பண் பொருந்திய பாடலைப் பாடுபவன்.
அவனையே, நெஞ்சே, நாடுக.

விளக்கவுரை

`பசுபதி` என்பதை முதலிற் கொள்க.
வேல், முத்தலை வேல், வேலை - கடல்.
அங்கம் - எலும்பு.
கண்ணி - மாலை.
`விண்ணன்` என்பது இடையே இகரம் விரித்தல் பெற்று வந்தது.
அடியார்கட்கு வெளிப்படுங்கால் விண்ணில் நின்று காட்சி வழங்குதல் பற்றி இறைவனை, `விண்ணன்` என்றார்.
``பாணி`` இரண்டில் முன்னது நீர்; பின்னது தாளம்.
`உமையாற் பாணி கொளப் பண்ணியன்` என்க.
பண்ணியன் - கூத்தாடுபவன்.
`கோயில் திருப்பண்ணியர் விருத்தம்` என்றது காண்க.
நாடல் - நாடுக.
`அல்` ஈற்று வியங்கோள்.
இதற்கு.
`அவனையே` என்னும் செயப்படுபொருள் வருவிக்கப் பட்டது.
`ஆடல்` எனப் பிரித்து, `பல்வேறான அருள் நாடகங்களை உடைய பசுபதி` என்று எடுத்துக் கொண்டு உரைப்பினும் ஆம்.
இப் பொருட்குப் பாடம், `ஆடற் பசுபதி` என்பதாகும்.

பதியார் பலிக்கென்று வந்தார்
ஒருவர்க்குப் பாவைநல்லீர்
கதியார் விடைஉண்டு கண்மூன்
றுளகறைக் கண்டமுண்டு
கொதியார் மழுவுண்டு கொக்கரை
உண் டிறை கூத்துமுண்டு
மதியார் சடையுள மாலுள
தீவது மங்கையர்க்கே. **#199**

பாவைபோலும் அழகை உடையவர்களே, நம் தில்லைப் பதியில் இருப்பவராய், பிச்சை ஏற்பதற்கென்று வந்த ஒருவருக்கு வேகமாகக் செல்லும் காலை ஊர்தி ஒன்று உண்டு; கண்கள் மூன்று உள்ளன; கறை பொருந்திய கண்டம் உண்டு; வெப்பம் மிகுந்த மழு உண்டு; `கொக்கரை` என்கின்ற வாச்சியம் உண்டு; தலைமை வாய்ந்த நடனம் உண்டு; பிறையைக் கண்ணியாகச் சூடிய முடிச் சடைகள் உள; இவையேயல்லாமல்; தம்மைக் காண்கின்ற மங்கையர்கட்குத் தருவதாக ஒரு மையலும் அவரிடம் உண்டு.

விளக்கவுரை

`அவர் யாவர் என நீவிர் அறிவீரோ? அறிவீராயின், எனக்காக அவர் பாற் சென்று, எனது மையல் நோயை உரைப்பீராக` என்பது குறிப்பெச்சம்.
இது தலைவன்பால் பாங்கியைத் தூதுவிடக் கருதியாள் கூற்று.
எனினும் உயிர்ப் பாங்கியை நோக்கிக் கூறாது, இறைவனைப் பிரிந்து ஆற்றகில்லாத அதிதீவிர பக்குவரது நிலை இதன் உள்ளுறை.
இறை - இறைமை; தலைமை.
மால் மயக்கம்.

மங்கைகொங் கைத்தடத் திங்குமக்
குங்குமப் பங்கநுங்கி
அங்கமெங் குந்நெகச் சங்கமங்
கைத்தலத் துங்கவர்வான்
கங்கைநங் கைத்திரைப் பொங்குசெங்
கண்ணர வங்கள்பொங்கிப்
பங்கிதங் கும்மலர்த் திங்கள்தங்
கும்முடிப் பண்டங்கனே. **#200**

பெண்மைத்தன்மைத்தாகிய கங்கை நதியின் அலையிடையே, சீற்றம் மிக்க சிவந்த கண்களையுடைய பாம்புகள் மிகுதியாய்ச் சடைகளின் இடையே தங்குவதும், கொன்றை முதலிய மலர்களுக்கிடையே பிறை தங்குவதும் ஆகிய முடியினையுடைய, பாண்டரங்கக் கூத்தனாகிய

சிவபெருமான் இம்மங்கையின் கொங்கைச் சரிவிற்கு இடையே இங்கும் அழகிய குங்குமச் சேறு உடல் வெப்பதால் நீராகி உடம்பெங்கும் ஓட, இவள் கையில் உள்ள சங்க வளையல்களையும் கவர்ந்து அங்கே (அயலிடத்தே) செல்பவனாகின்றான்.

விளக்கவுரை

`இனிச் செய்வதென்` என்பது குறிப்பெச்சம்.
இது, நற்றாய்க்கு அறத்தொடு நிற்கக் கருதும் செவிலியது கூற்று.
இப்பாட்டு மெல்லிசை வண்ணக் கலித்துறையாய் நின்றது.
மூன்றாம் அடி முதலாகத் தொடங்கியுரைக்க.
`பாண்டரங்கன்` என்பது `பண்டங்கன்` என மருவிற்று, பாண்டரங்கம், ஒருவகைக் கூத்து.
பங்கம் - சேறு.
நுங்குதல் - முழுதும் வீழ்ந்து மறைத்தல்.
பங்கி - தலைமயிர்.
அஃது இங்குச் சடையைக் குறித்தது.

பண்டங்கன் வந்து பலிதாவென்
றான்பக லோற்கிடென்றேன்
அண்டங் கடந்தவன் அன்னமென்
றான்அயன் ஊர்தியென்றேன்
கொண்டிங் குன்னையம்பெய் என்றான்
கொடித்தேர் அனங்கனென்றேன்
உண்டிற் கமைந்ததென் றாற்கது
சொல்ல உணர்வுற்றதே. **#201**

`பாண்டரங்கம்` என்னும் கூத்தினைச் செய்வோ னாகிய சிவபெருமான் பிச்சாடனனாய் எங்கள் கடைத்தலையில் வந்து நின்று, இருபொருள் பட `பலிதா` எனக் கூறினான்`, அவன் குறும்பாக பல்லை உடையவளே, அவற்றை எனக்குத் தா (முத்தம் கொடு) என உள்ளுறையாக வேறொரு பொருளைத் தருதலை யான் உணர்ந்து கொண்டு, அந்த வார்த்தையை நீவிர் சூரியனிடம் சொல்லுக` என்றேன்.
பின்பு அவர் `அன்னம்` என்றார்.
அது வெளிக்கு, `சோறு (தா - எனப்பொருள் தருமாயினும், உள்ளுறையாக, `நீ ஓர் அன்னப் பறவை போல நடக்கின்றாய்` எனப் பொருள் தருதலை யான் உணர்ந்து கொண்டு, `ஆம்! நீர் சொல்வது பிரமதேவனுடைய ஊர்தி` என்றேன்.
பின்பு அவர், நீ விரைவில் கொண்டு உனது ஐயம்பெய் என்றார்.
அது வெளிக்கு, `பிச்சையிடு` எனப் பொருள் தருமாயினும், உள்ளுறையாக `உன்னிடத்து உள்ள ஐந்து அம்புகளை கொண்டு வந்து

எய்` எனவும் பொருள் தருதலை யான் உணர்ந்துகொண்டு, ஆம்! அதற்கு உரியவன் மன்மதன்` என்றேன்.

அவரும் `உண்மை; நீ சொல்லியன எல்லாம் பொருத்தமானவைகளே` (என்று சொல்லிவிட்டு வாயடங்கிப் போனார்).

அவரது சொல்வன்மைக்குத் தக மறுமொழி சொல்ல எனக்கும் உணர்வு உண்டானது வியப்பு.

விளக்கவுரை

வருவித் துரைத்தன இசையெச்சங்கள்.

`பாண்டரங்கன்` என வந்தது பண்டங்கன் செய்யுள் முடிபு, `பலி` என்பது உள்ளுறைப் பொருளில் `பல்லி` என்பதன் இடைக்குறை.

பல்லி - பல்லை உடைய வள்.

`ஐயம்பெய்` என்பதை, `ஐயம் பெய்` எனவும் `ஐ அம்பு எய்` எனவும் பிரித்துக் கொள்க.

அனங்கன் - மன்மதன்.

இது முன்பே தனது உள்ளம் சிவன் வயப்பட்டு அதனை மறைத்து ஒழுகும் தலைவியது நிலையை.

அவள் தன்னிடம் மறையாது வெளிப்படுத்தற் பொருட்டுத் தோழி தானும் அந் நிலை அடைந்தது போலவும், அடையாதது போலவும் இரு பொருள் பயப்பக் கூறியது.

இது, ``மெய்யினும், பொய்யினும் வழிநிலை பிழையாது பல்வேறு கவர் பொருள் நாட்டம்`` ``கயமலர் உண் கண்ணாய்`` என்னும் கலித்தொகைப் பாட்டுப்போல *(கலித். - குறிஞ்.37).*

உற்றடி யாருல காளவோர்
ஊணும் உறக்குமின்றிப்
பெற்றம தாவதென் றேறும் பிரான்
பெரு வேல்நெடுங்கண்
சிற்றடி யாய்வெண்பற் செவ்வாய்
இவள்சிர மாலைக்கென்றும்
இற்றிடை யாம்படி யாகவென்
னுக்கு மெலிக்கின்றதே. **#202**

தன்னைப் புகலிடமாக அடைந்த அடியார்களை (யானைமேல் உலாவந்து) உலகாள வைத்துத்தான் எருதின் மேல் ஏறிச் செல்கின்ற, அத்தகைய கருணையாளனாகிய சிவபிரான், பெரிய வேல் போன்ற, நீண்ட கண்களையும், சிறிய பாதங்களையும், வெண்மையான பற்களையும், சிவந்த வாயினையும் உடைய, என் தாயாகிய இவள் அவன் அணிந்துள்ள தலை மாலையை விரும்ப, அதனைத் தாராமல், அதன் பொருட்டு நாளும் உண்ணும், உறக்கமும் இல்லாமல், தன் இடை

இயல்பிலே துவளுவது போல மேனி முழுதும் மெலிந்து போம்படி
இவளை மெலியப் பண்ணவது ஏனோ!

விளக்கவுரை

`உற்ற` என்னும் பெயரெச்சத்து ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.
`உறக்கம்` என்பது ஈற்று அம்முக்கெட்டு, `உறக்கு` என நின்றது.
பெற்றம் - எருது.
ஆவது - விருப்பமாவது.
தாய் மகளை, `யாய்` என்றது, காதல் பற்றி வந்த மரபு வழுவமைதி.
இது தலைவியது ஆற்றாமை கண்டு, சிவபெருமானாகிய தலைவனைச் செவிலி இயற் பழித்துக் கூறியது.
இதன் கொண்டு கூட்டினை அறிந்து கொள்க.
``இற்று இடை ஆம்படியாக`` என்பதை, `இடையாய் இற்றிடும் படியாக` என மாற்றிவைத்து உரைக்க.

மெலிக்கின்ற வெந்தீ வெயில்வாய்
இழுதழல் வாய்மெழுகு
தலிக்கின்ற காமங் கரதலம்
மெல்லி துறக்கம்வெங்கூற்
றொலிக்கின்ற நீருறு தீயொளி
யார்முக்கண் அத்தர்மிக்க
பலிக்கென்று வந்தார் கடிக்கொன்றை
சூடிய பல்லுயிரே. **#203**

நீரின்கண் விரவிய தீ வெளித்தோன்றாது நிற்றல்போல எப்பொருளினுள்ளும் நிறைந்திருப்பவரும், ஒளி பொருந்திய மேனியை உடையவரும், மூன்று கண்களையுடைய முதல்வரும் ஆகிய சிவபெருமானாகப் பிச்சை ஏற்பவராக வேடம் பூண்டு, `பிச்சை` என்று கேட்டு வீதியிலே வந்தார்.
அவர் வரவைக் கண்டதும் பல உயிர்கள் அவரது வாசனை பொருந்திய கொன்றை மாலையைப் பெற்றுத் தாம் சூடிக்கொள்ள விரும்பி, எம்பொருளையும் அழிக்கின்ற, கொடிய தீயினிடத்து வெண்ணெயும், வெயிலிடத்து மெழுகும் போல ஆகிவிட்டன.
(ஆயினும் பயன் என்ன?) தாங்கிக் கொள்கின்ற காமம் கைப்பொருளானதும், உறக்கம் அருகிப் போனதுந்தாம் கண்டது.
கால தூதுவர் வந்து தம்முள்முணு முணுக்கின்ற ஓசைகள் அவற்றின் காதுகளில் ஒலிக்கின்றன.

விளக்கவுரை

`இனி அவைகட்கு நிகழ இருப்பது இறந்து பாடே என்ப தாம்.

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி உரைக்க.
சூடிய - சூடுதற்கு, `செய்யிய` என்னும் வினையெச்சம்.
பெண்டிரைப் பயனின்றி மெலிதல் நோக்கி, ``உயிர்`` என்றார்.
``வாய்`` என்னும் ஏழன் உருபை தீக்கும் கூட்டுக.
இழுது - வெண்ணெய்.
மெழுகு - அரக்கு.
இவற்றின் பின், `ஆயின` என்பது எஞ்சி நின்றது.
`தரிக்கின்ற` என்பது எதுகை நோக்கித் திரிந்து நின்றதும் கரதலப் பொருளைக் ``கரதலம்`` என்றது ஆகுபெயர்.
கரதலப்பொருளவாது, கிடைத்த பொருள்.
மெல்லிது, இங்கு மிகக் குறைந்ததைக் குறித்தது.
``கூற்றம்`` என்றது, கூற்றனின் தூதுவரை.
அஃது ஆகுபெயராய் அவர்தம் வாயொலியைக் குறித்தது.
ஒலிக்கின்ற - ஒலிக்கின்றன.
இது பெருமானது பிச்சைக் கோலத்து அழகினைப் புகழ்ந்தவாறு.
`சென்றார்` என்னாது, ``வந்தார்`` என்றது இடவழுவமைதி.
``வருவிருந்து வைகலும் ஓம்புவான்`` * என்பதிற் போல.
``நீருறு தீயே`` என்னும் திருவாசகத்தைக் காண்க.

பல்லுயிர் பாகம் உடல் தலை
தோல்பக லோன்மறல்பெண்
வில்லியோர் வேதியன் வேழம்
நிரையே பறித்துதைத்துப்
புல்லியுஞ் சுட்டும் அறுத்தும்
உரித்துங்கொண் டான்புகழே
சொல்லியும் பாடியும் ஏத்தக்
கெடும்நங்கள் சூழ்துயரே. **#204**

பகலோனது (சூரியனது) பல்லைப் பறித்தும், மறலி (யமனது) உயிரை உதைத்துப் போக்கியும், பெண் (உமா தேவியது) ஒரு பாதியினைத் தான் பொருந்தியும், வில்லி (மன் மதனது) உடலைச் சுட்டும், ஓர் வேதியனது (பிரமனது) தலையை அறுத்தும், யானையை உரித்தும் புகழைப் பெற்ற சிவபெருமானது புகழை உரையாற் சொல்லியும், பாட்டால் பாடியும் துதித்தால் நம்மைச் சூழ்ந்துள்ள துன்பங்கள் அழிந்துபோம்.

விளக்கவுரை

`இது நிரல் நிறைப் பொருள்கோள்` என்பதை ஆசிரியரே, ``நிரையே`` என்பதனாற் குறித்தார்.
இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(குறள்.
, 5) என அருளிச் செய்த வழி நிற்றற்கு இறைவனது பொருள்சேர் புகழ் களைக் கிளந்தெடுத்துக் கூறியவாறு.
``துயர்`` என்றது பிறவித் துயரை யும் உள்ளடக்கியேயாம்.
`மறலி` என்பதைத் தொழிலாகு பெயராக, ``மறல்`` என்றார்.
இது முதல்நிலைத் தொழிற் பெயர்.

துயருந் தொழுமழும் சோரும்
துகிலுங் கலையுஞ்செல்லப்
பெயரும் பிதற்றும் நகும்வெய்
துயிர்க்கும் பெரும்பணிகூர்ந்
தயரும் அமர்விக்கும் மூரி
நிமிர்க்குமந்தோ இங்ஙனே
மயரும் மறைக்காட் டிறையினுக்
காட்பட்ட வாணுதலே. **#205**

(மறைக் காட்டு இறைக்கு ஆட்பட்ட வாள் நுதல்) திருமறைக்காட்டுப் பெருமானுக்கே தான் உரியளாகத் தன்னைத் தகுதிபடுத்திக் கொண்ட என் மகள், (அவன் வந்து தன்னை ஏற்றுக் கொள்ளாமையால்)
துன்புறுவாள்.
தொழுவாள்.
அழுவாள்; நெகிழ்கின்ற உடையும் மேகலையும் தன்னைவிட்டு நீங்கத் தான் அலைவாள்; வாயில் வந்தவற்றைப் பிதற்றுவாள், சிலபொழுது சிரிப்பாள், பெருமூச்செறிவாள், தணிக்கலாகா நோய் மிகுந்தவளாய்ச் சோர்வாள்; போராட்டமாக விக்குள் எழ விக்குவாள்; உடல் திமிர் ஏறியது போல முரித்துக்கொள்வாள்.
அந்தோ! அவ்வா றெல்லாம் மையல் மிகுகின்றாளே; (யான் என் செய்வேன்.)

விளக்கவுரை

``துயரும், மயரும்`` என்பனவும் ஏனைய போலச் `செய்யும்` என்னும் முற்றுக்களே.
இப் பொதுவினை இங்குப் பெண் பாலில் வந்தது.
இது தலைவியது ஆற்றாமை கண்டு செவிலி கவன் றுரைத்தது.
அதிதீவிர பக்குவிகளது நிலைமை கண்டு உறவினர் கவறுதல் இதன் உள்ளுறைப் பொருள்.

வாணுதற் கெண்ணம்நன் றன்று
வளர்சடை எந்தைவந்தால்
நாணுதற் கெண்ணாள் பலிகொடு
சென்று நகும்நயந்து

பேணுதற் கெண்ணும் பிரமன்
திருமால் அவர்க்கரிய
தாணுவுக் கென்னோ இராப்பகல்
நைந்திவள் தாழ்கின்றதே. #206

வளர்ந்த சடைகளையுடைய, அடியார்கள் `எந்தை` என்று ஏத்தும் சிவபெருமான் பிச்சை ஏற்க வந்தால், என் மகள் `நாண வேண்டுமே` என்று எண்ணாமல், விரைவில் பிச்சையை எடுத்துக்கொண்டு சென்று, அவன் எதிரிலே சிரிக்கின்றாள்.

அவன் மேல் விருப்பங் கொண்டு அவனுடன் நட்புக் கொள்ள நினைக் கின்றாள், அந்தப் பிரம விட்டுணுக்களாலே அடைதற்கரிய தலை வனைத் தான் அடைய விரும்பி இவள் இராப்பகலாக வருந்தி நகுதற் குரியளாதல் என்ன அறிவுடைமை? இவளுக்குப் புத்தி நல்லதாய் இல்லை.

விளக்கவுரை

நல்லது, இங்குப் பயன்படுவதை விரும்புவது.

இது, தலைவியது பேதைமை பற்றிச் செவிலி இரங்கிக் கூறியது.

இறைவன் அன்பர்க்கு எளியன் ஆதலையறியாத உலகர் அல்லாதார்க்கு அவன் அரியன் ஆகின்ற அஃது ஒன்றே பற்றி அன்பு செய்வார்மேல் இரக்கங் கொள்ளுதல் இதன் உள்ளுறை.

``எந்தை`` என்பதை ஒரு சிலர் கூற்றாக்காவிடின் முறை கெடும்.

தாழுஞ் சடைசடை மேலது
கங்கைஅக் கங்கைநங்கை
வாழுஞ் சடைசடை மேலது
திங்களத் திங்கட்பிள்ளை
போழுஞ் சடை சடை மேலது
பொங்கர வவ்வரவம்
வாழுஞ் சடைசடை மேலது
கொன்றையெம் மாமுனிக்கே. #207

எங்கள் பெருமுனிவனாகிய சிவபெருமானுக்கு உள்ளவை நீண்டு தொங்கும் சடை.

அச்சடையின்மேல் உள்ளது கங்கை நதியாதலின் அது கங்கையாகிய நங்கை வாழும் சடையாகின்றது.

அந்தச் சடை மேல் மற்றும் உள்ளது பிள்ளைத் திங்கள் (பிறை) ஆதலின் அந்தச் சடை பிள்ளைத் திங்களால் (பிறையால்) போழப் படும் (நுழைந்து செல்லப்படும்) சடையாகின்றது.

அந்தச் சடைமேல் உள்ளது சீற்றம் மிக்க பாம்பு ஆதலின் அந்தச் சடை பாம்பு வசிக்கின்ற சடையாகின்றது.

அந்தச் சடைமேல் உள்ளது கொன்றை மாலை (ஆதலின் அதுவே அவனுக்கு அடையாள மாலையாய் உள்ளது)

விளக்கவுரை

ஈற்றில் வருவித்துரைத்தது இசையெச்சம்.
``மேலது`` என்பவற்றை அடுத்து வந்தன பலவற்றின் பின்னும் `ஆதலால்` என்பது சொல்லெச்சமாய் எஞ்சிநின்றது.
இரண்டாம் முறையாக வந்த ``சடை`` என்பவற்றிற்குச் சுட்டு வருவிக்க.
`பிள்ளை` என்பதை முன்னும் கூட்டி, `பிள்ளைத் திங்கள்` என மாற்றியுரைக்க.
புகழை மிகுத் துரைக்கின்றார் ஆதலின், சொற் பொருட் பின்வரு நிலையணி தோன்றப் பல தொடராற் கூறினார்.
எனினும், அடையாள மாலை யாகிய கொன்றையைச் சிறப்பித்தலே இப்பாட்டிற்குக் கருத்தென்க.
`சிவபிரான் பெரு முனிவன்` என்பதை விசுவாதிகோ, ருத்ரோ, மஹாருஷி`` *1* என்னும் உபநிடதத் தாலும் அறியலாம்.
`பற்றற்றவன், தவக்கோலம் உடையவன்` என்பது இதற்குக் கருத்து.
``முன்னியாய் நின்ற முதல்வா போற்றி`` *2* என அப்பரும் அருளிச் செய்தார்.
இதன் பின்னும் `உள்ளது` என்னும் எழுவாய் எஞ்சி நின்றது.

முனியே முருகலர் கொன்றையி
னாயென்னை மூப்பொழித்த
கனியே கழலடி அல்லாற்
களைகண்மற் றொன்றுமிலேன்
இனியேல் இருந்தவஞ் செய்யேன்
திருந்தவஞ் சேநினைந்து
தனியேன் படுகின்ற சங்கடம்
ஆர்க்கினிச் சாற்றுவனே. **#208**

முனிவனே, நறுமணம் கமழ மலர்கின்ற கொன்றை மாலையை அணிந்தவனே, எனக்குச் சாதலைத் தவிர்த்த கனியாய் உள்ளவனே, உனது வீரக் கழல் அணிந்த திருவடிகளைத் தவிர வேறு துணை ஒன்றும் இல்லேன்; (இவ்வுடம்பொடு நிற்றலால்) பெரிய தவத்தைச் செய்ய இயலாமல் ஐம்புலன்களையே நினைந்து தமியேன் படுகின்ற இடர்ப்பாட்டினை யார்க்கு அறிவித்துத் தீர்வு காண்பேன்; இப்பொழுதே என்னை நீ ஏற்றுக்கொள்.

விளக்கவுரை

முதற்கண், `முனியேல்` எனப்பாடம் ஓதுவாரும் உளர்.

``என்னை`` என்பது உருபு மயக்கம்.
அன்றி, `மூப்பொழித்து ஆண்ட` என ஒரு சொல் வருவித்து முடிப்பினும் ஆம்.
கனி, ஔவை உண்ட நெல்லிக் கனி போன்றது.
இப்பாட்டு, பாசப் பற்று அற்றவழியும் வாதனை தாக்குதலைக் கூறியது.

சாற்றுவன் கோயில் தலையும்
மனமுந் தவம்இவற்றால்
ஆற்றுவன் அன்பெனும் நெய்சொரிந்
தாற்றியஞ் சொல்மலரால்
ஏற்றுவன் ஈசன்வந் தென்மனத்
தானென் றெழுந்தலரே
தூற்றுவன் தோத்திரம் ஆயின
வேயினிச் சொல்லுவனே. **#209**

யான் இப்பொழுது அன்பு என்னும் நெய்யைச் சொரிந்து, (அருளாகிய தீயை வளர்த்து) அதில் தலையையும், மனத்தையும் நிறுத்தித் தவம் செய்வேன்; அதனால் அவை யிரண்டையும் `சிவனுடைய கோயில்` என்றே சொல்வேன்.
அழகிய சொல் மாலைகளைச் சிவனுக்கு அணிவிப்பேன்; தோத்திரங்களாய் உள்ளவற்றைச் சொல்லுவேன்; இவ்வாற்றால், `சிவன் என் மனத்தில் தான் உள்ளான்` என்று பலரும் அறியக் கூறுவேன்.

விளக்கவுரை

`தலையும், மனமும் கோயில் எனச் சாற்றுவன் எனவும், `நெய் சொரிந்து இவற்றால் தவம் ஆற்றுவன்` எனவும் இயைக்க.
நெய்சொரிதலாகிய காரணத்தைக் கூறினமையால், தீ வளர்த்தலாகிய காரியம் கொள்ளப்பட்டது.
`என` என்பது எஞ்சி நின்றது.
ஒருகாலை ஊன்றித் தவம் செய்தலேயன்றித் தலைகீழாக நின்று தவம் செய்தலும் உண்டு என்பதை அறிந்து கொள்க.
புறத்து வளர்க்கும் அங்கியிலும், அகத்து வளர்க்கும் அங்கி சிறந்தது என்க.
``சொல் மாலை`` என்றது தாமே இயற்றுவனவற்றையும், ``தோத்திரம்`` என்றது முன்னோர் இயற்றியவற்றையும் என்க.
``மாலையால்`` என்பதை, `மாலையை` எனத் திரிக்க.
இனி - இப்பொழுது.
`தவம் செய்தல், சொல் மாலை அணிவித்தல்,தோத்திரம் சொல்லுதல். இவற்றைச் செய்தல் அவ்வாறு செய்பவரது உள்ளத்தில் சிவன் வந்து குடிகொள்ளுதல் உறுதி` என்பது உணர்த்தியவாறு.

சொல்லா தனகொழு நாவல்ல
சோதியுட் சோதிதன்பேர்
செல்லாச் செவிமரம் தேறித்
தொழாதகை மண் திணிந்த
கல்லாம் நினையா மனம் வணங்
காத்தலை யும்பொறையும்
அல்லா அவயவந் தானும்
மனிதர்க் கசேதனமே. **#210**

சோதிக்குட் சோதியாய் (ஒளிக்குள் ஒளியாய் - அறிவுக்குள் அறிவாய்) உள்ள சிவபெருமானுடைய பெயரைக் கேளாத செவிகள் செவிகள் அல்ல; ஒலி நுழையாத வன்மையை யுடைய மரங்கள்.
அதனைச் சொல்லாத நாக்கள் நாவல்ல; உழுபடை யின் நாக்கு, அவனைப் பரம்பொருளாகத் தெளிந்து தொழாத கைகள் மண்ணால் செய்து வைக்கப்பட்ட போலிக் கைகள்; மனிதக் கைகள் அல்ல; அவனை நினையாத மனங்கள் மனங்கள் அல்ல; உளியால் போழ்ந்தாலும் போழப்படாத உறுதியான கற்கள்; அவனை வணங் காத தலைகள் தலைகள் அல்ல; பிற உடற் பகுதிகளுக்கு ஏற்றி வைக்கப் பட்ட ஒரு சுமைகள்.
மக்கட்கு அமைந்த பிற உறுப்புக்களும் (கண், கால் முதலியனவும்) அவனுக்குத் தம்மால் ஆகும் பணியைச் செய்யா விடின் மனித உறுப்புக்கள் ஆகா; சடப்பொருட் பகுதிகளே ஆகும்.

விளக்கவுரை

தோத்திரமும், சாத்திரமும் 1 சிவனை, ``சோதியுட் சோதி`` எனக் கூறுதல் இங்கு நினைக்கத் தக்கது.
தான், பன்மை யொருமை மயக்கம்.
இங்குக் கூறியவாறே, கோளில் பொறியில் குணமிலவே
எண்குணத்தான் தாளை வணங்காத் தலை.
*(*குறள்.
, 9) 2 எனத் திருவள்ளுவரும் கூறினார்.
``வன்பராய் முருடொக்கும் என் சிந்தை*;* மரக்கண் என் செவி*;*
இரும்பினும் வலிது`` எனவும், ``நெஞ்சம் கல்லாம்*;* கண்ணிணையும்
மரமாம் தீவினை யினேற்கே`` எனவும் போந்த திருவாசகத்தையும்
காண்க.
3 ``திணிந்த`` என்ற விதப்பினால் அதற்கு இவ்வாறு உரைக்கப்பட்டது.
``மனிதர்க்கு`` என்றதனால், `மனித உடம்பும், அவற்றில் அமைந்த உறுப்புக்களும் சிவன் பணி செய்தற் பொருட்டே தரப்பட்டுள்ளன` என்பது விளங்கும்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன்.
எனவும் *4* ``வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்த வைத்து``
எனவும், கால்களாற் பயன் என்*!* கறைக்
கண்டன் உறைகோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக்
கால்களாற் பயன் என்
ஆக்கையாற் பயன் என்*!* - அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி யென்னாத
இவ்வாக்கையாற் பயன் என்.
5 எனவும், ஆமாத்தூர் - அம்மானைக் - காணாத கண்ணெல்லாம்
காணாத கண்களே
ஆமாத்தூர் - அம்மானைக் கூறாத நாவெல்லாம் கூறாத நாக்களே
ஆமாத்தூர் - அம்மானைக் கேளாச் செவியெல்லாம் கேளாச் செவிகளே
ஆமாத்தூர் - ஆம்மான்எம் வள்ளல் கழல் பரவா வாழ்க்கையும்
வாழ்க்கையே
ஆமாத்தூர் - நிச்சல் நினையாதார் நெஞ்சமும் நெஞ்சமே.
1 எனவும்,
மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும் அரன்பணிக் காக அன்றோ.
2 எனவும் வருவன பலவும் கண்டுணர்க.

தனக்குன்றம் மாவையம் சங்கரன்
தன்னருள் அன்றிப்பெற்றால்
மனக்கென்றும் நஞ்சிற் கடையா
நினைவன் மதுவிரியும்
புனக்கொன்றை யானரு ளாற்புழு
வாகிப் பிறந்திடினும்
எனக்கென்றும் வானவர் பொன்னுல
கோடொக்க எண்ணுவனே. **#211**

சிவபெருமானது அருள் வழியன்றிப் பிற வழிகளால் மலைபோலும் நிதியையும், பெரிய உலகம் முழுவதையும், பெற்றாலும் அவைகளை யான் என் மனத்தின் கண் நஞ்சினும் கடைப் பட்டனவாக என்றும் நினைப்பேன்.
கொல்லையில் நிற்கும் கொன்றை மரத்தில் தேனொடு மலரும் பூக்களால் ஆகிய மாலையையணிந்துள்ள சிவபெருமானது அருள் வழிப் புழுவாய்ப் பிறக்கினும் அதனையான் எனக்குத் தேவர்களது பொன்னுலகமே

கிடைத்துவிட்டது போல என்று நினைப்பேன்.

விளக்கவுரை

``சங்கரன்றன் அருளாலன்றி`` என்பதனை முதலிற் கொள்க.
``பிறந்திடினும்`` என்னும் எதிர்மறை யும்மையை``, ``பெற்றால்`` என்பதற்கும் கூட்டுக.
``மனக்கு`` என்பது உருபு மயக்கம்.
`மனத்துக்கு` என்பதில் சாரியை தொகுக்கப்பட்டது.
``எனக்கு`` என்பதன்பின் `வாய்த்ததாக` என ஒருசொல் வருவித்து முடிக்க.
திருவருளாலன்றிப் பிற வழியால் வருவன வினையின்றி வருதலால் அசுத்தமும், திருவருள் வழியால் வருவன வினையின்றி வருதலால் சுத்தமும் ஆதல் பற்றி இவ்வாறு எண்ணினார்.
திருவருளால் அன்றி வினையால் மட்டுமே வருவனயாதும் இன்மையின் ``பெற்றாலும்`` என்றும் உம்மையும், திருவருளால் புழுவாய்ப் பிறத்தல் இன்மையின் ``பிறந்திடினும்`` என்னும் உம்மையும்
எதிர்மறைப்பொருள.

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.
(குறள்.
, 755)
எனவும்,
பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை.
(குறள்.
, 657)
எனவும் திருவள்ளுவர் அறம் பற்றிக் கூறியதனை இங்கு ஒப்பு நோக்குக.

எண்ணம் இறையே பிழைக்குங்
கொலாமிமை யோரிறைஞ்சும்
தண்ணம் பிறைசடைச் சங்கரன்
சங்கக் குழையன்வந்தென்
உண்ணன் குறைவ தறிந்தும்
ஒளிமா நிறங்கவர்வான்
கண்ணும் உறங்கா திராப்பகல்
எய்கின்ற காமனுக்கே. **#212**

தேவர் பலராலும் வணங்கப்படும், குளிர்ந்த அழகிய பிறையை அணிந்த சடைமுடியை உடையவனும், சங்கால் ஆகிய குழையை அணிந்தவனும் ஆகிய சிவபெருமான் வந்து என் உள்ளத்தின்கண் நீங்காது இருத்தலை

அறிந்திருந்தும் எனது அழகிய நிறத்தை அழித்தற் பொருட்டும் இரவும், பகலும் ஊணோடு உறக்கமும் இன்றித் தன் அம்புகளைத் தொடர்ந்து எய்து கொண்டிருக்கின்ற மன்மதனுக்கு, `யாம் வெல்வோம்` என்னும் எண்ணம் சிறிதாயினும் நீங்காதோ!

விளக்கவுரை

சிவபெருமானைக் கண்ட பின் காமனால் கண்ணும் உறங்காது மெலிகின்றவள் தன் மெலிவை மறைத்துக் காமனைத் தோல்வியுறுபவனாக வைத்து இகழ்ந்தாள்; மக்களிலுள்ள இவள் தோற்பதன்றித் தேவரில் உள்ள காமன் தோற்பது எங்குளது! இதனால் அவட்குப் பெருமிதம் பிறந்ததாயினும், கேட்டார்க்கு நகை பிறந்தது.

நனவினான் நம்நீத்தார் என்பர்; கனவினான்
காணார்கொல் இவ்வூரவர்.

* என்றாற் போல்வனவற்றை இங்கு நினைவு கூர்க.

`இறையேனும்` என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்த லாயிற்று.

கொல், ஐயப்பொருட்டாய், இகழ்ச்சி குறித்து நின்றது.

ஆம், அசை.

``சங்கரன்`` என்பதைச் ``சங்கக் குழையன்`` என்பதன்பின் கூட்டுக.

கவர்தல், இங்குப் போக்குதல்.

போதல், பசலையால், தலைவி சிவனைத் தலைப்பட்டவரும், காமன் பழ அடியார்களும் ஆதல் இதன் உள்ளுறைப் பொருள்.

காமனை முன்செற்ற தென்றாள்
அவளிவள் காலனென்னும்
தாமநன் மார்பனை முன்செற்ற
தென்றுதன் கையெறிந்தாள்
நாம்முனஞ் செற்றதன் றாரையென்
றேற்கிரு வர்க்குமஞ்சி
ஆமெனக் கிற்றிலர் அற்றெனக்
கிற்றிலர் அந்தணரே. **#213**

அழகிய தட்பத்தை (கருணையை) உடையவராகிய சிவபெருமான் முன்னிலையில் ஒரு பெண் `இப்பெருமான் (காமனை எரித்தவன், காலனை உதைத்தவன்) இவ்விரு செயல்களுள் முதலிற் செய்தது காமனை எரித்தது தான்` என்று சொன்னாள்.

அவட்கு எதிராக மற்றொருத்தி, `இல்லைகாலனை உதைத்ததுதான் முதலிற்செய்தது` எனத் தன் கைகளை ஒன்றோடு ஒன்று மோதும் படி அடித்து உறுதி படக் கூறினாள்.

யான் `அச்சம் உண்டாக, அவ்விரு வரில் நீவிர் முற்காலத்தில் முதலில் கொன்றது யாரை` என வினவி னேன்.

பெருமான் அவ்விருவருக்காகவும் அஞ்சி, `எவனை முதலிற் கொன்றது` என ஒன்றைத் திட்டமாக வாய்திறந்து கூறாமல், மௌன மாய் இருந்தார்.
(யான் இவரை, `யாரிடத்தில் அன்புடையவர்` என்று நினைப்பது?)

விளக்கவுரை

`சிவபெருமானது பண்டைச் செயல்கள் பற்றி முன் பின் கால ஆராய்ச்சி செல்லாது` என்பதனை, ஓர் மகளிர் உரையாடலாக வைத்துக் கூறினார்.
``முன்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே`` *1* என்ற அப்பர் திருவாக்கையும் காண்க.
நாம், அச்சப் பொருட் டாய உரிச்சொல் *2* இறைவன் ஒருவர்க்கு மட்டும் உரியன் ஆகாமையும் இங்குக் குறிக்கப்பட்டது.
``அந்தணர்`` என்பது இங்குக் காரணப் பெயராய் நின்றது.

அந்தண ராமிவர் ஆரூ
ருறைவதென் றேனதுவே
சந்தணை தோளியென் றார்தலை
யாயசலவர் என்றேன்
பந்தணை கையாய் அதுவுமுண்
டென்றார் உமையறியக்
கொந்தணை தாரீர் உரைமினென்
றேன்துடி கொட்டினரே. **#214**

துறவிகள் போலப் பிச்சை ஏற்க வந்த இவரைப் பற்றி யான், `இவர் இருக்கும் ஊர் ஆர் ஊர்` (யார் இருக்கும் ஊர்) என்று பிறரை வினாவினேன்; இவர் தாமே முன் வந்து, `சாந்து பூசிய தோளை உடையவளே, நீ வினாவாகச் சொல்லிய அந்த ஊர்தான் (ஆரூர்தான்) நாம் இருக்கும் ஊர்` என்றார்.
பின்பு யான் இவர் முதலில் வைத்து எண்ணத் தக்க `சலவர்` (வஞ்சனைக்காரர்) என்றேன்.
அதற்கு அவர், `பந்து ஏந்தும் கையை உடையவளே, நீ இரண்டாவதாகச் சொன்னதும் உண்மைதான்` (சலத்தை - நீரை - கங்கையைத் தாங்கினவர்) என்றார்.
இப்படி அவர் நகையாடிக் கூறினமையால் `அவர் என்னைக் காதலிக்கின்றார்` என்று கருதி, யான், `மார்பில் கொத்துக் கொத்தாகப் பல மாலையை அணிந்துள்ளவரே, உமை அறிய உம்மை நான் - இன்னார் - என்று நன்கு அறியும்படி சொல்லுவீர்` என்று கேட்டேன். அவர் சொல் ஒன்றும் சொல்லாமல் கையில் இருந்த உடுக்கையை அடித்தார்.
(என்னை அவர் பக்கத்தில் உள்ள உமாதேவி பார்த்துத் தெரிந்து

கொள்ளும்படிச் செய்தார்.)

விளக்கவுரை

`இவர் மிகவும் வல்லாளர்` என்பது குறிப்பெச்சம்.
`திருவாரூரை இடமாகக் கொண்டிருப்பவரும்.
உலகம் அழியா திருத்தற் பொருட்டுக் கங்கையைச் சடையில் தாங்கியவரும் ஆகிய சிவபெருமான் தம்மை அடைய விரும்புவோர்க்குத் தமது அருளாகிய கையைக் கொடுத்துக் காப்பார்` என்பது குறிப்புப் பொருள்.
``அந்தணர்`` என்பது இங்கு, ``அறவோரை`` * *(துறவிகளை)*க் குறித்தது.

கொட்டும் சிலபல சூழநின்
ரார்க்கும்குப் புற்றெழுந்து
நட்ட மறியும் கிரீடிக்கும்
பாடும் நகும்வெருட்டும்
வட்டம் வருமருஞ் சாரணை
செல்லும் மலர்தயங்கும்
புட்டங் கிரும்பொழில் சூழ்மறைக்
காட்டான் பூதங்களே. **#215**

மலர்கள் விளங்குகின்றனவும், பறவைகள் வாழ் வனவும் ஆகிய பெரிய சோலைகள் சூழ்ந்த திருமறைக்காட்டில் எழுந் தருளியுள்ள இறைவனது படையாகிய பூதங்களுட் சில (அச்சமும், துன்பமும் இன்றிக் களித்திருத்தலால்) கைகளையும், பறைகளையும் கொட்டும். பல சிவபெருமானைச் சூழ்ந்து நின்று ஆரவாரிக்கும்; மற்றும் சில குப்புற வீழ்ந்தும் எழுந்தும் கூத்தாடும்; பல பல விளையாட்டுக்களைச் செய்யும்; பல பாட்டுக்களைப் பாடும்; சிரிக்கும்; ஒன்றை ஒன்று அச்சுறுத்தும்; வட்டமாக ஓடி வரும்; அணி வகுத்துச் செல்லும்.

விளக்கவுரை

`சிவபெருமானுக்கு ஆட்பட்டவர் கட்கு எந்த வகையான அச்சமோ துன்பமோ, கவலையோ இல்லை, ``இன்பமே எந் நாளும்`` *1* என்பதைக் குறிப்பால் உணர்த்தியவாறு.
அச்சமிலர், பாவமிலர், கேடு மிலர், அடியார் நிச்சம்உறு நோயு மிலர்,
பச்சமுடை யடிகள் திருப் பாதம்பணி வாரே.
2 என்றது காண்க.
கிரீடித்தல் - விளையாடுதல்.

பூதப் படையுடைப் புண்ணிய
ரேபுறஞ்சொற்கள் நும்மேல்
ஏதப் படவெழு கின்றன

வாலிளை யாளொடும்மைக்
காதற் படுப்பான் கணைதொட்ட
காமனைக் கண்மலராற்
சேதப் படுத்திட்ட காரணம்
நீரிறை செப்புமினே. #216

பூதங்களையே படைகளாகக் கொண்டுள்ள புண்ணிய சொரூபரே, உம்மைப் பற்றிப் புறங் கூற்றுக்கள் நீர் குற்றப் படும்படி பலவாய் எழுகின்றன.
(அவற்றை நீர் அறிவீரோ, அறியீரோ! அவற்றுள் தலையாயது) இளையாள் ஒருத்தியின் காதலில் உம்மை அகப்படுத்தற்குத் தனது கணையாகிய மலரை எய்த மன்மதனை நீர் உமது கண்ணாகிய மலரால் அழிவுபடுத்தியது.
`அஃது ஏன்` என்ப தற்கு நீர் விடை கூறுவீர்.

விளக்கவுரை

புறங் கூற்றுக்களாவன தன் கடமையைச் செய்ய வந்த காலனைக் காலால் உதைத்தது, முப்புரத்தவரை அழித்தது; தாருகாவன முனிவரது மனைவியரின் கற்பை நிலைகுலையச் செய்தது முதலி யவை பற்றியன.
`இன்னோரன்னவற்றை நும் எதிரில் கூற மாட்டாது பலர் புறங் கூறுகின்றார்கள்` என்றபடி.
`மன்மதன் செய்தது, தனிய ராய் இருந்த உம்மை இல்வாழ்க்கையர் ஆக்குவிக்க முயன்றதே.
அவனை அழிவு செய்தமை தகுமோ` என்பதாம்.
இவரைப் பொருளுணர மாட்டாதா ரெல்லாம் இவரை இகழ்வதே கண்டீர் *
என அருளிச்செய்ததே என்பது கருத்து.
ஆல் அசை.
இறை - விடை.
``காரணம்`` என்பதன்பின் `என்` என்பது எஞ்சிநின்றது.

செப்பன கொங்கைக்குத் தேமலர்க்
கொன்றை நிறம்பணித்தான்
மைப்புரை கண்ணுக்கு வார்புனற்
கங்கைவைத் தான்மனத்துக்
கொப்பன இல்லா ஒளிகிளர்
உன்மத் தமும்அமைத்தான்
அப்பனை அம்மனை நீயென்
பெறாதுநின் றார்க்கின்றதே. #217

எல்லோரும் தங்கட்கு `அப்பன்` என்றும், `அம்மை` என்றும் சொல்லிப்

போற்றுகின்ற இறைவன், கிண்ணம் போலும் தனங்களையுடைய நின்மகளுடைய தனங்களுக்குத் தான் அணிந்துள்ள கொன்றைப் பூவின் நிறத்தைக் கொடுத்தான் (தனிமை யால் உண்டாகும் பசப்பூரச் செய்தான்.

) மை தீட்டப்பட்ட சிறந்த கண்ணிற்குத் தான் தரித்துள்ள, ஒழுகுகின்ற கங்கை நீரைக் கொடுத்தான் (கண்ணீர்விட்டு அழச் செய்தான்) மனத்துக்குத் தான் அணிந்துள்ள, ஒப்பில்லாத, அழகுமிக்க ஊமத்தம் பூவைக் கொடுத்தான்.

(பித்தம் பிடிக்கச் செய்தான்) இதையறியாது, `இவள் ஏதோ தெய்வந் தீண்டப்பட்டாள்` என்று அதற்குப் பூசை போடுகின்றாயே!

விளக்கவுரை

இது வெறியெடுத்த செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

ஞானியரை உலகர் ஏதோ மனநோய் உள்ளவராகக் கருதி அது தீரத் தெய்வங்களை வேண்டுதல் முதலியன செய்தலும், அவர்க்கு அறிவர் அறிவுறுத்தலும் இதன் உள்ளுறை.

புரை - உயர்வு.

`ஊமத்தம் பூவைத் தலையில் சூடிக்கொண்டால் பித்தம் பிடிக்கும்` என்பது உலக வழக்கு.

``அப்பனை`` என்பதனோடு இயைய, ``அம்மனை`` என்பதிலும் இரண்டன் உருபு விரிக்க.

பெறுதல், இங்கு வரைவு உடன் படுதல்.

ஆர்க்கின்ற நீரும் அனலும்
மதியும்ஐ வாயரவும்
ஓர்க்கின்ற யோகும் உமையும்
உருவும் அருவும்வென்றி
பார்க்கின்ற வேங்கையும் மானும்
பகலும் இரவுமெல்லாம்
கார்க்கொன்றை மாலையி னார்க்குடன்
ஆகிக் கலந்தனவே. **#218**

கார் காலத்தில் பூக்கின்ற கொன்றைப் பூவினா லாகிய மாலையைத் தனது அடையாள மாலையாகக் கொண்ட சிவ பெருமானிடத்தில் நீர் - நெருப்பு, திங்கள் - ஐந்து தலைப் பாம்பு, யோக நிலை - இல்லாள், உருவம் - அருவம், புலி - மான், பகல் - இரவு இவ்வாறு எல்லாம் ஒன்றுக்கொன்று பகையாய பொருள்கள்.

அப்பகை நீங்கி நட்புக் கொண்டு உடன் கலந்து வாழ்கின்றன.

விளக்கவுரை

`இஃது அதிசயம்` என்பது குறிப்பெச்சம்.
ஆர்க்கின்ற- ஒலிக்கின்ற.
ஓர்க்கின்ற - தியானிக்கின்ற.
யோகு - யோகம்.
அஃது ஆகுபெயராய்.
அந்நிலையைக் குறித்தது.
`யோகம் துறவிகட்கு உரித்து` என்பது பெரும்பான்மை.
உரு - உருவத் திருமேனி.
அரு - அருவத் திருமேனி.
- முழுமையாக அமைந்த புலித்தோல் உயிருடைய புலி பார்ப்பது போலத் தோன்றுதலின் ``பார்க்கின்ற வேங்கை`` என்றார்.
`அதைக் கண்டு மான் அஞ்சவில்லை`` என்றபடி.
மான் விலங்காதலுடன் மறி (கன்று) ஆதலின், `உயிரில்லது` என அறியும் அறிவில்லதாம்.
பகல் வலக் கண்ணாகிய சூரியனாலும், இரவு இடக்கண்ணாகிய சந்திரனாலும் உளவாகின்றன.
`சிவபெருமானைச் சேர்ந்தவர்க்கு நடுவு நிலையே உளதாவதன்றி, உறவு பகைகள் உளவாவன அல்ல` என்பதைக் குறிப்பால் உணர்த்தியவாறு.
``யோகும், உமையும்`` - என்றதனை,
ஒன்றொடொன்று றொவ்வா வேடம் ஒருவனே தரித்துக் கொண்டு
நின்றலால் உலகம் நீங்கி நின்றனன்.
எனவும், உருவும், அருவும்`` என்றதனை, பந்தமும் வீடும் ஆய/#
பதபதார்த் தங்கள் அல்லான்;
அந்தமும், ஆதி யில்லான்/# அளப்பிலன் ஆதலாலே
எந்தைதான் `இன்னன்` எ/#ன்றும், `இன்னதாம், இன்ன தாகி
வந்திடான்` என்றும் சொல்ல/# வழக்கொடு மாற்றம் இன்றே.
1 எனவும் சிவஞான சித்தி நூல் விளக்குதல் காண்க.
`சிவபிரான் அணி யும் கொன்றை கார்க் கொன்றையே` என்பதை ``கண்ணி கார்நறுங் கொன்றை; காமர் - வண்ண மார்பில் தாரும் கொன்றை`` *2* ``கொன்றைப் பொன்னேர் புதுமலர்த் - தாரன், மாலையன், மிலைந்த கண்ணியன்`` *3* என்பவற்றானும் அறிக.

கலந்தனக் கென்பலர் கட்டவிழ்
வார்கொன்றை கச்சரவார்
சலந்தனக் கண்ணிய கானகம்
ஆடியோர் சாணகமும்
நிலந்தனக் கில்லா அகதியன்
ஆகிய நீலகண்டத்து

அலந்தலைக் கென்னே அலந்தலை
யாகி அழிகின்றதே. **#219**
இவளால் காதலிக்கப்பட்டவனுக்கு அணிகலம் ஆவன எலும்புகளே;
அணியும் பூக்களாவன அரும்பவிழ்ந்த கொன்றைப் பூக்களே.
(இவை சூடும் மலர் அல்ல.
) அரைக்கச்சாவது பாம்பு.
அவனோ நீர் இல்லாமல் நீருக்கு அருகில் வெம்மை பொருந்திய காட்டில்
(ஈமத்தில்) ஆடுபவன்.
ஆகவே, அவன் ஒரு சாண் அளவினதான இடமும் `தன்னுடையது`
என்று இல்லாத அகதி, கழுத்தில் கறையுடை யனாய் எங்கும் திரிகின்ற
அவனை நினைந்து இவள் மனம் அலைதல் என்னோ!

விளக்கவுரை

இது, தலைவியது ஆற்றாமை கண்டு செவிலி இரங்கிக் கூறியது.
ஞானிகளது நிலைமை யறியாமல் உலகர் அவர் பொருட்டு இரங்குதல் இதன் உள்ளுறை.
``ஆடி`` என்றது பெயர்.
அலந்தலை - அலமரல்.
அது முன்னர் ஆகுபெயராய் அதனை உடையவனைக் குறித்தது.
`இவள் அழிகின்றது என்னே` எனத் தோன்றா எழுவாய் வரு வித்து முடிக்க.

அழிகின்ற தாருயிர் ஆகின்ற
தாகுலம் ஏறிடும்மால்
இழிகின்ற சங்கம் இருந்த
முலைமேற் கிடந்தனபீர்
பொழிகின்ற கண்ணீர் புலர்ந்தது
வாய்கலை போனவந்தார்
மொழிகின்ற தென்னினி நான்மறை
முக்கண் முறைவனுக்கே. #220

நான்கு மறைகளையும் அருளிச் செய்த,மூன்று கண்களையுடைய அறவோன் பொருட்டு எனது அரிய உயிர் போய்க் கொண்டிருக்கின்றது. அதுபோவதற்கு முன்னே மனக் கவலை உண்டா கின்றது; மயக்கம் ஒருகாலைக் கொருகால் மிகுகின்றது; சங்க வளையல்கள் கழன்று வீழ்கின்றன; இறுமாந்திருந்த கொங்கைகளின் மேல் பீர்க்கம்பூப் போலும் பசலைகள் வெளிப்பட்டுக் கிடந்தன; கண்கள் நீரைப் பொழிகின்றன; வாய் புலர்ந்து விட்டது; மேகலைகள் போயே விட்டன. எனக்காக அவரிடம் தூது சென்று வந்தவர்கள் என்ன சொல்கின்றனரோ!

விளக்கவுரை

`அவர்களது வாய்ச்சொல்லைப் பொறுத்துள்ளது என் உயிரின் நிலைமை` என்பது குறிப்பெச்சம்.
இது தூது சென்றார் வந்ததையறிந்து தலைவி அவர்சொல்லைக் கேட்க விதுப்புற்றுக் கூறியது.
தூதுவிடக் கருதுதலோடு ஒழியாமல், தூதுவிட்டே நின்றமையால், இது, ``மிக்க காமத்து மிடல்`` * என்னும் பெருந்திணை.
`நன்மைகள் பலவற்றை எய்தாது கழிகின்றது` என்னும் கருத்தால் தலைவி தனது உயிரை ``ஆருயிர்`` என்றாள்.
மால் - மயக்கம்.

பீர் - பீர்க்கு.
அஃது இருமடியாகுபெயராய் முன்னர் அதன் பூவையும், பின்னர் அப்பூப்போலும் பசலையையும் குறித்தது.
மணிக்கோவைகளின் பன்மை பற்றி மேகலை பலவாகச் சொல்லப்பட்டது.
மேகலையை, `கலை` என்றது தலைக் குறை, தீவிரதர பக்குவத்தில் அடியவர் வாய்மொழிகளை நோக்கியிருத்தல் இதன் உள்ளுறை.
`இறைவன், துறைவன், துணைவன்` - முதலியன போல, `முறைவன்` வகர இடைநிலை பெற்ற பெயர்.
இருந்த - கிடந்தன, நான்மறை - முக்கண் இவை முரண்தொடை; விரோத அணி.

முறைவனை மூப்புக்கும் நான்மறைக்
கும்முதல் ஏழ்கடலந்
துறைவனைச் சூழ்கயி லாயச்
சிலம்பனைத் தொன்மைகுன்றா
இறைவனை எண்குணத் தீசனை ஏத்தினர்
சித்தந் தம்பால்
உறைவனைப் பாம்பனை யாம்பின்னை
என்சொல்லி ஓதுவதே. **#221**

அறத்தின் வடிவானவனும், காலப் பழமைக்கும், நான்கு வேதங்கட்கும் முதலாய், ஏழு கடல்களால் சூழப்பட்ட ஏழு தீவு களிலும் வழிபடப்படுபவனும், ஞானியர் சூழ்ந்துள்ள கயிலாய மலை யில் இருப்பவனும், தனது அனாதி நிலையினின்றும் என்றும் குறைவு படாத கடவுளும், எட்டுக் குணங்களையே ஐசுவரியமாக உடைய வனும், தன்னைத் துதித்தவர்களது உள்ளத்திலே என்றும் உறை பவனும் பாம்புகளையே அணிகலமாக அணிந்தவனும் ஆகிய சிவ பெருமானை யாம் இவ்வளவிலன்றி, வேறு எவற்றைச் சொல்லி ஓயாது துதிப்பது?

விளக்கவுரை

`சிவனது அளவிறந்த புகழ்களில் நாம் அறிந்தன மிகச் சிலவே` என்பது கருத்து.
``முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள்``* ஆதலை, `மூப்புக்கு முதல்` என்றார்.
முதல் - முதல்வன்; ஆகுபெயர்.
``முதல்`` என்பதில் தொகுக்கப்பட்ட `ஆய்` என்னும் வினையெச்சம்.
``துறைவன்`` என்னும் குறிப்பு வினைப்பெயர் கொண்டது.
உலக முழுவதிலும் உள்ளாரால் வழிபடப்படுதல் பற்றி, ``ஏழ்கடல் துறைவன்`` என்றார்.

சூழ்தலுக்கு வினைமுதல் வருவிக்கப்பட்டது.
தொன்மை - அனாதி.
அஃதே இயற்கையாதலை அறிக.
எண் குணங்களாவன.
1.
தன்வயம்.
2.
தூய உடம்பு.
3.
இயற்கையுணர்வு *4.*
முற்றுணர்வு, *5.*
இயல்பாகவே பாசங்களின் நீங்கி நிற்றல் *6.*
முடிவில் ஆற்றல், *7.*
பேரருள், *8.*
வரம்பில் இன்பம் - என்பன.
* இவையே கடவுட் குணங்கள் ஆதலை ஓர்ந்துணர்க.
தம், சாரியை.
இன் சாரியை நீக்கித் தம் சாரியை கொடுத்தார்.
``பின்னை`` என்பது `மற்று` என்னும் பொருட்டு.
``ஓதுதல்`` என்பது இங்கு இடைவிடாது துதித்தலின் மேற்று.

ஓதவன் நாமம் உரையவன்
பல்குணம் உன்னைவிட்டேன்
போதவன் பின்னே பொருந்தவன்
வாழ்க்கை திருந்தச்சென்று
மாதவ மாகிடு மாதவ
மாளவர் புன்சடையான்
யாதவன் சொன்னான் அதுகொண்
டொழியினி ஆரணங்கே. **#222**

அரிய தெய்வப்பெண் போன்றவளே, உன்னை நான் இப்பொழுது பெரிய தவக்கோலமாய் வளர்கின்ற புல்லிய சடையை உடைய சிவபெருமான்பால் அனுப்புகின்றேன்; நீ அவ னிடம் சென்று, அவனுடைய பெயர்கள் பலவற்றையும் சொல்; அவ னுடைய இறைமைக் குணங்கள் பலவற்றையும் எடுத்துப் பேசு; அவன் எங்குச் சென்றாலும் அவனைவிடாது அவன் பின்னே செல்; சென்று, அவனது வாழ்க்கைக்கு ஏற்ப உன்னைத் திருத்திக்கொண்டு அவனுக்குப் பொருந்தியவளாய் இரு.
(மற்றும் அவன் மனம் இரங்க வேண்டிப்) பெரிய தவத்தைச் செய்.

(இவ்வளவும் செய்தால் அவன் ஏதாவது ஒரு முடிவைக் கூறாமல் இருக்க மாட்டான்.) அவன் என்ன முடிவைச் சொன்னாலும் அதைக் கேட்டுக் கொண்டு வந்துவிடு.

விளக்கவுரை

இது சிவபெருமானிடம் தூது விடுப்பவள் சொல்லியது.
`சிவபெருமான் பேரிரக்க குணம் உள்ளவன்` என்பதும், `அவனைப் பலபடியாலும் வழிபட்டால் அவன் இரங்கா தொழியான்` என்பது அவரது நம்பிக்கை.
நல்கா தொழியான் நமக்கென்றுன்/# நாமம் பரவி நயனம்நீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா/# வணங்கா மனத்தால் நினைந்துருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப்/# பரவிப் பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி/# யருளாய் என்னை உடையானே.
1 என்றாற் போலும் திருவாக்குகளைக் காண்க.
``மாதவம்`` இரண்டில் பின்னது ஆகுபெயராய்த் தவக்கோலத்தைக் குறித்தது.
``தவம் மறைந்து அல்லவை செய்தல்`` *2* என்பதிற் போல.
`வாழ்க்கையோடு`` என்னும் மூன்றன் உருபு தொகுத்தலாயிற்று.
`புன் சடையானாகிய அவன்` என்க.

ஆரணங் கின்முகம் ஐங்கணை
யானகம் அவ்வகத்தில்
தோரணந் தோள்அவன் தேரகல்
அல்குல்தொன் மைக்கண்வந்த
பூரண கும்பம் முலையிவை
காணப் புரிசடையெம்
காரணன் தாள்தொழும் அன்போ
பகையோ கருதியதே. **#223**

அரிய தெய்வப்பெண் போன்றவளாகிய இவளது முகம் மிக அழகிதாய் இருத்தலின் மன்மதன் வாழும் இல்லமாகின்றது; இவளது தோள்கள் தூங்கியசைதலால் அவ்இல்லத்தில் தூக்கப் பட்டுள்ள தோரணங்களாகின்றன.
அகன்ற அல்குல் மன்மதன் ஊரும் தேர் ஆகின்றது.
தனங்கள் பழைய மரபின்படி ஏந்தி வரும் பூரண கும்பங்களாகின்றன.
இவையெல்லாம் பலர்க்கும் தெரிய இவள் வந்து எங்கள் சிவபெருமானது திருவடிகளை வணங்குகின்றாள்.
ஆயினும் (இவள் மன்மதனது படைகளுள் ஒருத்தி யாதலின் இவள்) சிவபெரு மானை (மன்மதனையும் மறந்து) காதலித்து வரவேற்று வரவேற்று வணங்குகின்றாளா? இல்லை; பகைமை காரணமாக வெறும்

நடிப்பாக வரவேற்று வணங்குகின்றாளா? இவள் மனத்தில் உள்ளது என்ன?

விளக்கவுரை

சிவபெருமான் வீதியுலா வரும்பொழுது வரவேற்று வணங்குகின்ற பலருள் காதல் பொங்க அவ்வாறு வணங்குவாள் ஒருத்தியைக் கண்டோர் ஐயுற்றுக் கூறியது.
அவனது பேரழகும், முகக் குறிப்பும் அவர்களது ஐயத்திற்குக் காரணம்.
மெய்யன்பர்களது உண்மையன்பின் பெருமையை அறியாது உலகர் அவர்களையும் தம்முட் சிலராக வைத்துக் குறைத்து எண்ணுதல் இதன் உள்ளுறை.
அனைத்து அழகிலும் முகத்தழகே தலையாயது ஆதலின் அதனை யுடைய முகமே மன்மதனது இல்லமாகச் சொல்லப்பட்டது.
ஏனைய வெளி.
உவமைகள் சுட்டிக் கூறா உவமமாய் நின்றமையின் பொதுத் தன்மைகள் விரித்துரைக்கப்பட்டன.
காரணன் - முதல்வன்.
தொழும்.
`செய்யும்` என்னும் முற்று.

கருதிய தொன்றில்லை ஆயினுங்
கேண்மின்கள் காரிகையாள்
ஒருதின மும்உள ளாகவொட்
டாதொடுங் காரொடுங்கப்
பொருதநன் மால்விடைப் புண்ணியன்
பொங்கிளங் கொன்றையின்னே
தருதிர்நன் றாயிடும் தாரா
விடிற்கொல்லுந் தாழிருளே. **#224**

ஊரவரே, நீவிர் ஆற்ற வேண்டிய கடமையாகக் கொண்டது யாதொன்றும் இல்லையாயினும், யான் சொல்வதைக் கேட்டருளுங்கள்.
இன்று வர இருக்கும் இருட்பொழுது இந்த அழகி இனி ஒரு நாளாயினும் வாழ விடாது.
ஆகையால் (நீவிர் அருள் கூர்ந்து) பகையாகிய அசுரர் பலர் அழியும்படி போர் செய்த திருமாலை இடப ஊர்தியாக உடைய புண்ணிய சொரூபனாகிய சிவபெருமான் அணிந்துள்ள அழகு மிக்க, அன்றலர்ந்த கொன்றைப் பூமாலையை இப்பொழுதே சென்று அவனிடம் விண்ணப்பித்து வாங்கி வந்து தாருங்கள்; எல்லோருக்கும் நல்லாதாயிடும்.
தாராது விடிலோ, இருட்பொழுது இவளை இன்று கொன்றுவிடும்.

விளக்கவுரை

இது, தலைவி ஆற்றாமை மிகுவது கண்டு தோழி அயலாரிடம் இரங்கிக் கூறியது.
நாணழிந்து அயலார் அறியக் கூறினமையின் இது பெருந்திணைப்பாலது.
தாழ் இருள் - இனித் தங்க வரும் இருள்; எதிர்கால வினைத்தொகை.
இருள் ஆகுபெயராய் அது வருவதற்குரிய காலத்தைக் குறித்தது.
தீவிரதர பத்தியால் சிவனை அடைய விரையும் அன்பரது நிலையை அறிந்து அவரோடு உடன் உறைபவர் அவ்வன்பரது நிலைமையை அடியார்கள் அறியக் கூறுதல் இதன் உள்ளுறை.
`தலைவன் தான் அணிந்திருக்கும் மாலையைக் கழற்றி ஒருத்தி அணிந்து கொள்ள இசைந்து தருவானாயின், அவன் அவளைக் கைவிடாது தன் துணைவியாகக் கொள்ளல் வேண்டும்` என்பது அறநெறி.
அதனால் துயர் கூருந் தலைவியரை ஆற்றுவிக்கத் தலைவன் அணிந்திருக்கும் மாலையை இரத்தல் அகப்பாட்டுக்களுள் சொல்லப்படுகின்றது.
காரிகை - அழகு.
ஒடுங்கார் - பகைவர்.

இருளார் மிடற்றால் இராப்பகல்
தன்னால் வரைமரையால்
பொருளால் கமழ்கொன்றை யால்முல்லை
புற்றர வாடுதலால்
தெருளார் மதிவிசும் பால்பௌவந்
தெண்புனல் தாங்குதலால்
அருளாற் பலபல வண்ணமு
மாஅரன் ஆயினனே. **#225**

சிவபெருமான் கறுத்த கண்டத்தையுடைமையால் இரவாய் இருக்கின்றான்; தனது திருமேனி ஒளியால் பகலாய் இருக்கின்றான்; மானைக் கொண்டிருத்தலால் குறிஞ்சி நிலமாய் இருக்கின்றான்; அடையாளமாகப் பொருந்திய, மணங்கமழும் கொன்றையை அணிந்திருப்பதால் முல்லை நிலமாய் இருக்கின்றான்; பாம்புகள் இயங்கப் பெறுதலால் புற்றாய் இருக்கின்றான்; ஒளி பொருந்திய சந்திரன் தவழப் பெறுதலால் ஆகாயமாய் இருக்கின்றான்; தெளிவாகிய நீரைத் தாங்குதலால் கடலாய் இருக்கின்றான்.
இவ்வாறு அருள் காரணமாக அவன் பலப்பல பொருள் வடிவாய்க் காட்சியளிக்கின்றான்.

விளக்கவுரை

``தன்`` என்பது ஆகுபெயராய்த் தனது உடம்பைக் குறித் தது.
மரை - மான்.
`மதியால்` என்னும் மூன்றன் உருபு தொகுத்தலா யிற்று.
``விசும்பால்`` என்னும் ஆல், அசை.
சிவபிரானது தோற்றத்தை வியந்து கூறி `இத்தனைக்கும் காரணம் அவனது அருள்` என்றபடி.

ஆயின அந்தணர் வாய்மை
அரைக்கலை கைவளைகள்
போயின வாள்நிகர் கண்ணுறு
மைந்நீர் முலையிடையே
பாயின வேள்கைக் கரபத்
திரத்துக்குச் சூத்திரம்போல்
ஆயின பல்சடை யார்க்கன்பு
பட்டவெம் ஆயிழைக்கே. **#226**

மன்மதனது கையில் உள்ள படைக்கலத்திற்கு (கணைகளுக்கு) அவைகளைச் செயற்படாதபடி கட்டி வைக்கின்ற கயிறுபோலத் தோன்றுகின்ற பல சடைகளையுடைய எம்பெரு மானார்க்கு அன்பு செய்த எங்கள் மகளுக்கு இடையில் உடுத்துள்ள உடையும், கையில் அணிந்துள்ள வளையல்களும் அவளை விட்டு நீங்கிப் போய்விட்டன. வாள் போன்ற கண்களில் தீட்டப்பட்டுள்ள மையோடு வீழ்கின்ற கண்ணீர்த் துளிகள் மார்பிடையே தாரையாய்ப் பாய்கின்றன. ஆகவே, அறவோர் கூறும் மெய்ம்மொழி இவள்பால் மெய்யாகிவிட்டது.

விளக்கவுரை

அம்மொழியாவது `பற்றற்றான் பற்றினைப் பற்றினால் மற்றைய எல்லாப்
பற்றுக்களும் அற்றுவிடும்` என்பது
பற்றை அறுப்பதோர் பற்றினைப் பற்றிஅப்
பற்றை அறுப்பர்என் றுந்தீபற
என்னும் திருவுந்தியாரையும் காண்க.
வேள் - மன்மதன்.
கர பத்திரம்- கை வாள்.
அது பொதுவே `படைக்கலம்` என்னும் பொருட்டாய்க் கணையைக் குறித்தது.
மன்மதனது குறும்பு சடையையுடைய யோகிகள்பால் செல்லாமை பற்றிச் சிவபெருமானது சடைகளை அவனது கணைகளைக் கட்டிப்

போடுகின்ற கயிறாக உவமித்தார்.
``வேங்கைக் கர பத்திரத்துக்கு`` என்பது முதலாகத் தொடங்கி, `அந்தணர் வாய்மை ஆயின` என மாற்றி, இறுதியில் வைத்து உரைக்க ``அந்தணர்`` என்றது அறவோரை.
`வாய்மை` என முன்னர் வந்தமை யால் பின்னும் அதனைக் கூறாது வாளா ``ஆயின`` என்றாள்.
இது காதலால் நலிகின்ற தன் மகளது நிலைமை கண்டு செவிலி இரங்கிக் கூறியது ஆகலின், அந்தணர் வாய்மையைப் புகழ்ந்தது வஞ்சப் புகழ்ச்சியாம்.
எனினும் அடியவர் நோக்கில் உண்மையே உள்ளுறைப் பொருளில் செவிலி, உலகர்.

இழையார் வனமுலை வீங்கி
இடையிறு கின்றதுஇற்றால்
பிழையாள் நமக்கிவை கட்டுண்க
என்பது பேச்சுக்கொலாம்
கழையார் கழுக்குன்ற வாணனைக்
கண்டனைக் காதலித்தாள்
குழையார் செவியொடு கோலக்
கயற்கண்கள் கூடியவே. **#227**

மூங்கில்கள் நிறைந்துள்ள `திருக்கழுக் குன்றம்`` - என்னும் மலைமேல் வாழ்கின்றவனும், வரையறைப் படாதவனும் ஆகிய சிவபெருமானை இவள் காதலித்தாள்; அஃது எங்ஙனமெனின், இவளது அழகிய கண்கள் குழை பொருந்திய காதுகளுடன் சென்று சேர்ந்தன. (நன்றாகத் தன் கண்களை உருட்டி இவள் சிவபெருமானை நோக்கினாள்` - என்றபடி) அதனால் அணிகள் நிறைந்த, அழகிய இவளது கொங்கைகள் மிகவும் பூரித்தலால் இவளுடைய இடை கொங்கைகளைச் சுமக்க மாட்டாது ஒடிந்து கொண்டிருக்கின்றது. அஃது அறவே ஒடிந்துவிட்டால், இவள் பிழைக்க மாட்டாள் (என்பதைச் சொல்ல வேண்டுமோ! காதலால் இவள் உடம்பு பூரித்தலை, `நமக்குக் கட்டுப்பட்டு அடங்குவதாக` என நாம் சொல்வது வெறும் பேச்சே.

விளக்கவுரை

`அதனால் நாம் சிவபெருமானிடம் சென்று முறையிட்டுக் கொள்வதே வழி` என்பது குறிப்பெச்சம்.
இதுவும் மேற்கூறிய துறையே.
திரிபின்றி உறைத்த பத்தியுடையவரது நிலைமையை உணரும் பொழுது உலகவர் தம் செயல் அற்று அவர்வழி நிற்றல் இதன் உள்ளுறை.
கண்ணப்பர் அடைந்த நிலைமைக்கு முதலில் வருந்தித் தெரிவிக்க

முயன்ற தந்தை நாகனும், பிற வேடர்களும் பின்னர்ச் செயலற்றுத் திரும்பினமை இதற்கு எடுத்துக்காட்டாகும்.
மூன்றாம் அடி முதலாகத் தொடங்கியுரைக்க.
அகண்டனை, `கண்டன்` என்றது தலைக்குறை.
``காதலித்தாள்`` என்பதன் பின், `எங்ஙனம் எனின்` என்பது வருவிக்க.
`கண்கள் செவியொடு கூடின` என்றது நன்றாகப் பார்த்தமையைக் குறிப்பால் உணர்த்தியது.
வீங்கி - வீங்குதலால்.
``பிழையாள்`` என்பதன் பின் இசையெச்சம் வருவிக்கப்பட்டது.
கொல், ஆம் அசைகள்.

கூடிய தன்னிடத் தானுமை
யாளிடத் தானைஐயா
றீடிய பல்சடை மேற்றெரி
வண்ணம் எனப்பணிமின்
பாடிய நான்மறை பாய்ந்து
கூற்றைப் படர்புரஞ்சுட்
டாடிய நீறுசெஞ் சாந்திவை
யாமெம் அயனெனவே. **#228**

உமையவளை விரும்பிக் கூடிய தன் திருமேனியில் அவளை இடப்பாகத்தில் உடையவனைத் திருவையாற்றுத் தலத்தில் சென்று, `இவன் பாடியன நான்கு வேதங்கள், வெகுண்டு கொன்றது கூற்றுவனை; எங்கும் செல்வனவாகிய கோட்டைகளை எரித்துப் பூசிக்கொண்ட சாம்பலே இவனுக்கு நல்ல சந்தனம்; ஆகலின் இவன் எங்கள் சிவபெருமானே` என அடையாளம் கண்டு, `நெருப்பினது நிறம் இவன் தலையிலே உள்ள பல சடைகளிலும் உள்ளது` எனச்சொல்லி வணங்குங்கள்.

விளக்கவுரை

`வணங்கினால் பயன் பெறுவீர்` என்பது குறிப்பெச்சம்.
``இடத்தான்`` என இரண்டில் முன்னது, ஏழாவதன் பொருளில் வந்த மூன்றன் உருபை ஏற்ற பெயர்.
அம்மூன்றன் உருபு, பின் வந்த, ``இடித்தான்`` என்னும் குறிப்பு வினையொடு முடிந்தது.
இடத்தான் - இடப்பாகத்திலே உடையவன்.
`ஐயாற்றின் கண்`- என உருபு விரிக்க.
`ஈண்டிய என்பது இடைக்குறைந்து, ``ஈடிய`` என வந்தது.
ஈண்டுதல் - நெருங்குதல்.
பின் இரண்டு அடிகள் அடையாளம் காட்டின.

ஆம் - இவன்பால் உள்ளன.
இதன்பின் `ஆகலின், இவன்` எனவும், ``எம் அயன்`` என்பதன்பின் `கண்டு` எனவும் வேண்டும் சொற்கள் வருவித்து, `எரி வண்ணம் சடை மேற்று எனப் பணிமின்`` என முடிக்க.
ஐயன், `அயன்` எனப் போலியாய் வந்தது.

அயமே பலியிங்கு மாடுள
தாணுவோர் குக்கிக்கிடப்
பயமே மொழியும் பசுபதி
ஏறெம்மைப் பாய்ந்திடுமால்
புயமேய் குழலியர் புண்ணியர்
போமின் இரத்தல்பொல்லா
நயமே மொழியினும் நக்காம
மாவும்மை நாணுதுமே. **#229**

தாணுவே, (தலைவரே) நீர் இனிய வார்த்தை களையே பேசிய போதிலும், உமது கோலம் திகம்பரமாய் (நிருவாண மாய்) உள்ளது.
அதனால் உம்மைக் காண நாங்கள் வெட்கப்படுகின் றோம்.
அதனால், உம்முடைய வயிற்றுக்கு இட வேண்டுவது போல இங்கு நீர் பிச்சை ஏற்க வந்த செயலும் ஐயத்திற்கு உரியதே.
`பிச்சையிடு மின்; இட்டால் உங்கட்குப் புண்ணியம்` என்பனபோல், `நீவிர் சொல்லும் சொற்களும் உண்மைதாமோ` என ஐயுறவேண்டியுள்ளது.
இவைகிடக்க, நீர் ஏறிவந்திருக்கின்ற, பசுக்களுக்கெல்லாம் தலையாய எருது எங்களைப் பாய வருகின்றது.
ஆகவே, தங்கள் தோள்களின் மேல் நீர் பொருந்த இசைகின்ற மகளிர்தாம் உண்மையில் புண்ணியம் செய்பவராவர் (பிச்சையிடுவோர் புண்ணியரல்லர்) இப்படி நீர் பிச்சையெடுப்பது தீதாகும்.
இவ்விடத்தை விட்டுப் போய்விடுங்கள்.

விளக்கவுரை

இது, பிச்சைக் கோலத்தவராய்ச் சென்ற பெருமானைக் கண்டு காதலித்த மடவார் கூற்று, உண்மையில் அவரைக் கண்டு அவர்கள் நாணமும், வெறுப்பும் கொண்டவராயின் பொருக்கென இல்லத்துக்குள் போய்விட வேண்டியவர் தாமே? அதை விடுத்துப் பல வார்த்தைகளை விரிப்பது ஏன்?
`தாணு` என்பது விளி.
அது பன்மையொருமை மயக்கமாய் நின்றது.
குக்கி (குட்சி) = வயிறு.
`குச்சிக்கு இட இங்குப் போந்த பலி (ஏற்றல் செயல்) ஐயமே` என்க.

ஐயம், ``அயம்`` எனப் போலி யாயிற்று.
`மாடு உளஏறு, பசுபதியாம் ஏறு` எனத் தனி இயைக்க.
மாடு- பக்கம்.
`உம் பக்கம்` என்றபடி.
பயமே - பொருள் உடையனதாமோ? (உண்மையோ` - என்றபடி.
) ``குழல் `` என்னும் விதப்பினால் `வார் குழல்` (நீண்ட கூந்தல்) எனக் கொள்க.
``ஏய குழலியர்`` என்றது, `ஏய இசையும் குழலியர்` என்றபடி.
`குழலியரே` என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று.
`அவரே புண்ணியர்` என்றது, `அந்தப் புண்ணியச் செயலை விரும்பித்தான் நீர் வந்தீர்; பிச்சையிடும் புண்ணியச் செயலை விரும்பி வந்தீர்` என்றபடி.
அதை, ``புண்ணியம்`` என்றது வஞ்சப் புகழ்ச்சி,.
``இரத்தல்`` என்பதன் முன், `இவ்வாறு` என்பது ஆற்றலால் வந்து இயைந்தது.
`பொல்லாது` என்பதன் ஈறு தொகுத்தலாயிற்று.
`அம்மா` என்னும் அச்சக்குறிப்பு இடைச்சொல் இடைக் குறைந்து, `அமா`` என வந்தது.
`சிவன் பிச்சை ஏற்பது, உயிர்களைத் தன்பால் சேர்த்து கொள்ளுதற் பொருட்டே` என்பது இதன் உட் கருத்து.

நாணா நடக்க நலத்தார்க்
கிடையில்லை நாமெழுக
ஏணார் இருந்தமி ழார்மற
வேனுந் நினைமினென்றும்
பூணார் முலையீர் நிருத்தன்
புரிசடை எந்தைவந்தால்
காணா விடேன்கண் டிரவா
தொழியேன் கடிமலரே. **#230**

அணிகலன்கள் பொருந்திய தனங்களையுடைய தோழியர்களே, (உங்கள் உதவியை நாடாது) `நாமே செல்வோம்` என்றால் (நாணம் தடுக்கின்றது) நாணம் உண்டாகாதபடி செல்லச் சமையம் வாய்க்கவில்லை.
நடனம் புரிபவரும் புரியாகிய சடைகளை யுடையவரும், உலகர் எல்லாராலும் `எம் தந்தை` என்று போற்றப்படு பவரும் ஆகிய சிவபெருமான் (இங்கு வருவார்) வந்தால், நான் அவரைக் காணாமல் இருந்துவிடமாட்டேன்.
கண்டு, `உம்மை யான், உம்மை அகப்படுத்தவல்ல பெரிய தமிழாற்பாடி

மறவாதிருக் கின்றேன்; இதை நினைமின்` என்று சொல்லி அவர் அணிந்துள்ள வாசனை பொருந்திய மலர் மாலையை இரந்து வாங்கவும் செய்வேன்.

விளக்கவுரை

`முலையீர்`, `நாம் எழுக` என்றால் நாணாது நடக்க இடையில்லை` என மாற்றி ஒரு சொல் வருவிக்க.
`நாணாது` என்பது கடைக் குறைந்தது.
இடை - சமையம்.
எண் - வலிமை, இருமை - பெருமை அஃது இங்கு விரிவைக் குறித்தது.
`சிவபெருமான் தமிழ் விருப்பன்` என்பதை, ``நீர் தமிழோடு இசை கேட்கும் இச்சையால் காசு நித்தம் நல்கினீர்`` * என்பது முதலியவற்றால் அறிக.
`தமிழாற் பாடி` எனவும் ஒருசொல் வருவிக்க.
`உம்மை மறவேன்`` என உருபு விரித்து மாற்றுக.
``என்றும்`` என்னும் இறந்தது தழுவிய எச்ச உம்மையைப் பிரித்து, `இரவாது` என்பதனுடன் கூட்டுக.
இது தூதுவிடக் கருதிய, தோழியரோடு, புலந்து கூறியது, இது வாயிலாக, தமிழாற் பாடுவோரைச் சிவபெருமான் மிக விரும்புதல் குறிக்கப்பட்டது.
``தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்`` * என்பது முதலியவற்றையும் காண்க.

கடிமலர்க் கொன்றை தரினும்புல்
லேன்கலை சாரலொட்டேன்
முடிமலர் தீண்டின் முனிவன்
முலைதொடு மேற்கெடுவன்
அடிமலர் வானவர் ஏத்தநின்
றாய்க் கழ கல்லவென்பேன்
தொடிமலர்த் தோள்தொடு மேல்திரு
வாணை தொடங்குவனே. **#231**

(நாளை இங்கு வருகின்ற சிவபெருமான் என்னைத் துறவாமைக்கு அடையாளமாகத் தனது) வாசனை பொருந்திய கொன்றை மலர்களால் ஆன மாலையை வலிய எனக்குத் தந்தானாயினும் யான் உடல் பொருந்தத் தழுவ மாட்டேன்; எனது உடையை அவன் பற்றவரின் நெருங்க விடமாட்டேன்; என் கூந்தலில் முடிக்கப்பட்டுள்ள மலரைத் தொடும் முறையால் என்னைத் தொட முயல்வானாயின், வெகுண்டு விலக்குவேன், `கொங்கையை அவன் தொட்டு விட்டால் நான் இறந்து விடுவேன்` (என்பது தோன்றப் புறங் காட்டி நிற்பேன்) பிற குறும்புகளும்

செய்வானாயின் `தேவர் பலரும் உனது திருவடிகளை வணங்க இருக்கின்ற உனக்கு இவையெல்லாம் அழகல்ல` என அறிவுரை கூறுவேன், அவைகளையும் கடந்து அவன், வளையும், மாலையும் பொருந்திய எனது தோள்களை வலாற்கார மாகப் புல்ல வருவானாயின் அவன்மீதே ஆணை வைக்க முயலுவேன்.

விளக்கவுரை

`ஆகலான் நீ கவலற்க` என்பது குறிப்பெச்சம்.
இது வரைவுகடாவ எண்ணிய தோழியைத் தலைவி உடன்பட்டுக் கூறியது.
`தலைவன் வரைவு நீட்டிப்பின் இருமுது குரவர் பிறர் வரைவுக்கு உடன்படுதல் முதலியன நேரத் தலைவி இறந்துபடுவாள்` எனத் தோழி கவன்று, தலைவனை வரைவு கடாதற்கு விரைதல் இயல்பு.
அவ்வழித் தலைவி புணர்ச்சி மறுப்பாள் என்க.
அதிதீவிர பக்குவிகள் சத்தியோ நிர்வாணத்தையை விரும்பி வேண்டுதல் இதன் உள்ளுறை.
முனிதல் அதன் காரியம் தோற்றி நின்றது.
`தான் இறந்து படின் அவனும் படுவான்` எனத் தலைவி அஞ்சுவாள் ஆதலின், ``கெடுவேன்`` என்றது, கெடுதலைக் குறிப்பித்தலையேயாம்.
ஏனையோர்மீது வைக்கும் ஆணைபோலாது சிவன்மீது வைக்கும் ஆணை தலையாயது ஆகலின் ``திரு ஆணை `` என்றார்.
ஆணை வைத்து விடின் பின்னர்க் கூட்டம் இன்றாம் ஆகலின், ``ஆணை தொடங்குவன்`` என்றாள்.

தொடங்கிய வாழ்க்கையை வாளா
துறப்பர் துறந்தவரே
அடங்கிய வேட்கை அரன்பால்
இலர்அறு காற்பறவை
முடங்கிய செஞ்சடை முக்கண
னார்க்கன்றி இங்குமன்றிக்
கிடங்கின்றி பட்ட கராவனை
யார்பல கேவலரே. **#232**

(இல்லறத்தார் கிடக்க,) துறவறத்தை மேற் கொண்டவர்களிலே பலர் அந்தத் துறவறத்தைப் பயனிலதாகப் போக்குவர்.
எங்ஙனம் எனின், உலகப் பொருள்களினின்றும் நீக்கிய தங்கள் ஆசையை அரன்பால் செலுத்தாது, வேறு எவ்வெப்பொருளிலேயோ செலுத்துதலால்.
ஆகவே, அவர்கள் சிவனிடத்து அன்பு செய்யாது பிற விடத்து அன்பு செய்தலால் அம்மைக்கும் உரியராகாது, இவ்வுலகப் பொருள்களைத்

துறந்தமையால் இம்மைக்கும் உரியராகாது, அகழியுட் கிடக்கும் முதலைபோலத் துன்பத்திற் கிடத்தலல்லது, கரையேறாது தமியர் ஆகின்றனர்.

விளக்கவுரை

`இந்நிலை இரங்கத் தக்கது` என்பது குறிப்பெச்சம்.
``துறந்தவரே`` என்பதை முதலில் வைத்து, ``இலர்`` என்பதன் பின் `ஆகலின்` என்பதனைக் கூட்டுக.
அடங்கிய - உலகப் பொருள்மேல் செல்லாது அடங்கிய.
அறுகாற் பறவை, வண்டு.
அவை முடங்குதல் கொன்றை மலரிடத்து.
எனவே, `கொன்றையைச் சூடிய சடை` என்றபடி.
``அன்றி`` இரண்டில் முன்னது, `மாறுபட்டு` என்றதாம்.
பின்னது, `உரியராகாமல் எனப் பொருள் தந்தது.
``இங்கும்`` என்ற உம்மையால், `அங்கும்` என்பது பெறப்பட்டது.
`அங்கு, இங்கு` என்பன, `அம்மை, இம்மை` என்பவற்றைச் சுட்டின.
கிடங்கு - அகழி.
கரா - முதலை அது கரையேறாமைக்கு உவமை.
`கேவலர் தமியர்` என்பன ஒரு பொருளைக் குறிக்கும்.
தமியர் - துணையற்றவர்.
`உலகப் பற்றை விட்டபோதிலும், மெய்யுணர்வு இல்லையேல் துறவு பயன் இலதாம்` என்றபடி.
இதனைத் திருவள்ளுவரும்,
ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு.
1 என அருளிச்செய்தார்.
இத்தன்மையோரையே அப்பர் பெருமானும் ``இருப்பிறப்பும் வெறுவியர்`` *2* என்று அருளினார்.

வலந்தான் கழலிடம் பாடகம்
பாம்பு வலமிடமே
கலந்தான் வலம்நீ றிடம்சாந்து
எரிவலம் பந்திடமென்பு
அலர்ந்தார் வலமிடம் ஆடகம்
வேல்வலம் ஆழியிடம்
சலந்தாழ் சடைவலம் தண்ணங்
குழலிடம் சங்கரற்கே. **#233**

சிவபெருமானுக்கு வலப்பாதியும், இடப்பாதியும் மாறுபட்டதான வடிவம் உள்ளது.

எங்ஙனம் எனின், வலப்பாதியில் காலில் வீரக்கழல், மார்பில் பாம்பு, சாம்பல், இறந்தவர் எலும்பால் ஆகிய மாலை, கையில் மழு, சூலம், தலையில் நீர் தங்கியுள்ள சடை - இவ்வாறு உள்ளது.
இடப்பாதியில் காலில் பாடகம், மார்பில் விலை உயர்ந்த அணி கலம், சந்தனம், பொன்னரி மாலை, கையில் பந்து, மோதிரம், பூச்சூடிய கூந்தல் - இவ்வாறு உள்ளது.

விளக்கவுரை

`வலப்பாதி ஆணும், இடப்பாதி பெண்ணுமாய் உள்ளது` என்றபடி.
`இது ஒரு பெருவியப்பு` என்பது குறிப்பெச்சம்.
`சிவபெருமானது உருவம், ஏனையோரது உருவம் போன்றதன்று` என்பதாம்.
அப்பர் பெருமானும், சிவபெருமானது திருவடிகளை,
``உருவிரண்டும் ஒன்றோடொன்றொவ்வா அடி`` என்று அருளினார்.
செய்யுள் நோக்கிச் சிலவற்றை முறை பிறழ வைத்தார்.
``எரி`` என்றது மழுவை.
சலம் - நீர்.
தாழ்தல் - தங்குதல்.

சங்கரன் சங்கக் குழையன்
சரணார விந்தந்தன்னை
அங்கரங் கூப்பித் தொழுதாட்
படுமின் தொண் டீர்நமனார்
கிங்கரர் தாம்செய்யும் கீழா
யினமிறை கேட்டலுமே
இங்கரம் ஆயிரம் ஈரவென்
நெஞ்சம் எரிகின்றதே. **#234**

தொண்டு மனப்பான்மையுடைவர்களே, யம கிங்கரர்கள் (தூதுவர்கள்) சிவபெருமானுக்கு ஆட்படாதவர்கட்குச் செய்யும் இழிவான பல துன்பங்களை நூல்கள் வாயிலாகக் கேட்ட வுடன் இவ்வுலகத்திற்றானே எனது மனம் ஆயிர அரங்களால் அராவு வது போலத் துன்பத்தால் வெதும்புகின்றது.
ஆகவே, நீவிரும் பிற தொண்டுகளை விடுத்து, சுகத்தைச் செய்தலால், `சங்கரன்` எனப் பெயர் சொல்லப்படுகின்ற.
சங்கக் குழையணிந்த செவியையுடைய சிவபெருமானுடைய திருவடித் தாமரையை அகங்கைகளைக் குவித்துக் கும்பிட்டு, அவனுக்கே ஆளாகித் தொண்டு செய்யுங்கள்.

விளக்கவுரை

`செய்தால், யமகிங்கரர் அணுகார்` என்பது குறிப்பெச்சம்.
மிறை - துன்பம்.
கீழாயின மிறை.
அருவருக்கத் தக்க துன்பம்.

எரிகின்ற தீயொத் துளசடை
ஈசற்கத் தீக்கிமையோர்
சொரிகின்ற பாற்கடல் போன்றது
சூழ்புனல் அப்புனலிற்
சரிகின்ற திங்களோர் தோணியொக்
கின்றகத் தோணியுய்ப்பான்
தெரிகின்ற திண்கழை போன்றுள
தாலத் திறலரவே. #235

சிவபெருமானுக்கு அவனது சடை எரிகின்ற தீயைப் போலவும், அந்தச் சடையில் சுழல்கின்ற நீர் அந்தத் தீயை அணைப்பதற்காகத் தேவர்கள் ஊற்றுகின்ற பாற்கடற் பால் போலவும், அந்த நீரில் மிதந்து செல்கின்ற பிறை ஒரு தோணிபோலவும், அந்தப் பிறையைச் சூழ்கின்ற திறமையுடைய பாம்புகள் அந்தத் தோணியை இயக்குதற்குத் தெரிந்தெடுத்த உறுதியான மூங்கில் போலவும் உள்ளன.

விளக்கவுரை

மாலையுவமை.
திங்கட் கதிரால் நீர் வெண்ணிறம் பெற்றது.
இது சிவபெருமானது தலைக் கோலத்தைப் புகழ்ந்தவாறு.

அரவம் உயிர்ப்ப அழலும்
அங்கங்கை வளாய்க்குளிரும்
குரவங் குழலுமை ஊடற்கு
நைந்துரு கும்அடைந்தார்
பரவும் புகழண்ணல் தீண்டலும்
பார்வா னவைவிளக்கும்
விரவும் இடரின்பம் எம்மிறை
சூடிய வெண்பிறையே. #236

எங்கள் கடவுளாகிய சிவபெருமான் முடியில் சூடியுள்ள வெள்ளிய பிறை, அங்குள்ள பாம்பு தன்னை நோக்கிச் சீறும் பொழுது தான் கோபத்தால் தணலாய் எரியும்.
அங்குள்ள அழகிய கங்கை பாயும்பொழுது குளிர்ச்சியடையும்.
குராமலரைச் சூடியுள்ள கூந்தலையுடைய உமையவள் ஊடல் கொள்ளும் பொழுது, தன்னை அடைந்தோரால் துதிக்கப்படுகின்ற சிவபெருமான் (உமை அறியாத படி) தன்னைக் கையால் தீண்ட, தான்

நைந்து உருகி உமையவள்மேல் தனது கதிர்களைப் பொழியும்.
மற்றைய நேரங்களில் நிலத்தையும், வானத்தையும் இருள் நீங்க ஒளி பெற்று விளங்கச் செய்யும்.
ஆகவே, அது துன்பத்தையும், இன்பத்தையும் மாறி மாறி அடைவதாகின்றது.

விளக்கவுரை

திங்களின் கதிர்கள் காதலை மிகுவித்தலால் உமையவள் ஊடல் தணிவாளாவள்.
அதன் பொருட்டுத் திங்களைத் தூண்டச் சில சொற்களைச் சொல்லின் உமை மேலும் வெகுள்வாள் ஆதலின், குறிப்பால் தூண்டச் சிவபெருமான் தனது கையால் தீண்டுவான் என்க.
இவ்வாறு செய்தல் உலக வழக்கம்.
இது சிவபெருமானது தலைக் கோலத்துள் பிறை ஒன்றனையும் புகழ்ந்தவாறு.
``வளாய்`` என்பதனை `வளாவ` எனத் திரிக்க.

பிறைத்துண்டஞ் சூடலுற் றோபிச்சை
கொண்டனல் ஆடலுற்றோ
மறைக்கண்டம் பாடலுற் றோவென்பும்
நீறும் மருவலுற்றோ
கறைக்கண்டம் புல்லலுற் றோகடு
வாயர வாடலுற்றோ
குறைக்கொண் டிவளரன் பின்செல்வ
தென்னுக்குக் கூறுமினே. **#237**

(மகளிர்) இவள் (தலைவி) சிவன் பின்னே குறையிரந்து செல்லத் துணிந்தது அவன் சூடியுள்ள பிறையைத் தான் சூட விரும்பியோ? (அவனுடன் சென்று) பிச்சை ஏற்றுப்பின் அவ னோடு கூடத் தீயில் நின்று ஆட விரும்பியோ? அவனோடு இணைந்து கண்டத்தினின்றும் சாமவேதம் பாடவிரும்பியோ? அவன் அணிகின்ற எலும்பு மாலையையும், பூசுகின்ற சாம்பலையும் தானும் அணியவும், பூசவும் விரும்பியோ? அவனுடைய கருமையான கழுத்தைக் கட்டித் தழுவ விரும்பியோ? அவன் தன்மேல் ஆடவிட்டுள்ள நஞ்சு பொருந்திய வாயினையுடைய பாம்புகளைத் தன்மேலும் ஆட விட்டுக்கொள்ள விரும்பியோ? `எதனை விரும்பி` என்பதை எனக்கு நீவிர் கூறுமின்.

விளக்கவுரை

இது, செவிலி தலைவியது வேறுபாடு கண்டு இரங்கி ஆயத்தாருடன் கூறியது.

அவளால் காதலிக்கப்பட்ட சிவனைச் செவிலி தலைவியை ஆற்றுவித்தற்கு இயற்பழித்துக் கூறினாள்.
மெய்யுணர்வில்லாதார் சிவனது கோலங்களை இகழ்தலைக் குறித்தல் இதன் உள்ளுறை.
இவரைப் பொருளுணர மாட்டாதா ரெல்லாம்
இவரை இகழ்வதே கண்டீர்.
* என மேல் வந்த அம்மை திருவாக்கினைக் காண்க.
``செல்வது`` என்பது எதிர்காலம்.
ஆதலின் அது செல்லத் துணிந்தமையையே குறித்தது.
பின் செல்லல், வழிப்படுதலைக் குறித்த குறிப்பு மொழி.
`இது துணிந்தவள் உடன் போக்கிற்கும் உடன் படுவாள்` என்பது கருத்து.

கூறுமின் ஈசனைச் செய்ம்மின்குற்
றேவல் குளிர்மின்கண்கள்
தேறுமின் சித்தம் தெளிமின்
சிவனைச் செறுமின்செற்றம்
ஆறுமின் வேட்கை அறுமின்
அவலம் இவைநெரியா
ஏறுமின் வானத் திருமின்
விருந்தாய் இமையவர்க்கே. **#238**

(உலகீர்; நீவிர் நும்செயல்களை விடுத்து,) சிவனைத் துதியுங்கள்; அவனுக்கு அணுக்கராய் நின்று சிறிய பணி விடைகளைச் செய்யுங்கள். (அன்பினால் நீர் துளித்தலால்) கண்கள் குளிர்ச்சியடையுங்கள்; மனத்தை ஒரு நிலையில் நிறுத்துங்கள்; `சிவனே முதல்வன்` - என அவனைத் தெளியுங்கள்; எவரிடத்தும் பகைமை கொள்ளுதலைத் தடுங்கள்; ஆசையை அடக்குங்கள்; துன்பத்தினின்றும் நீங்குங்கள்; இவைகளையே வழியாகப் பற்றி வானுலகில் ஏறுங்கள்; ஏறியவராய் அங்கு வானத்தவர்க்கு எய்தற் கரிய விருந்தினராய் அங்கு அவர் உபசரிக்க வீற்றிருங்கள்.

விளக்கவுரை

குற்றேவலே கிரியா பூசையாகச் சொல்லப்படுகின்றது.
``ஏறுமின்`` என்றது குறிப்புருவகம்.
உலகியலில் நிற்போரை நோக்கிக் கூறினார்.
ஆகலின், `அவரது விருப்பமும் இவற்றால் நிறைவுறும்` என்றற்கு.
``வானத்து விருந்தாய் இருமின்`` என்றார்.
`சிவ வழிபாடே எல்லாப் பயன்களையும் தரும்` என்பது கருத்து.

இமையோர் கொணர்ந்திங் கிழித்திட

நீர்மைகெட் டேந்தல்பின்போய்
அமையா நெறிச்சென்றோர் ஆழ்ந்த
சலமக ளாயணைந்தே
எமையா ளுடையான் தலை
மகளாவங் கிருப்பவென்னே
உமையா ளவள்கீழ் உறைவிடம்
பெற்றோ உறைகின்றதே. **#239**

(கங்கையானவள் தான் வானுலகத்திலே இருக்கவும்) தேவர்கள் கொணர்ந்து நிலத்திலே இறக்கிவிடத் தன் தன்மை கேட்டு, (ஆகாயகங்கை` என்னும் சிறப்பு நீங்கி,) ஓர் அரசன் பின்னேசென்று, தனக்கு ஏற்புடைத்தாகாத வழியிலே நடந்து, பின்பு ஓர் ஆழமான ஆற்றுவடிவத்தை அடைந்து, தனது கரையில் எம்மை ஆளுடையானாகிய சிவன் தலைவனாய் வீற்றிருக்க. அதனால் அவன் தேவி உமையவள் தலைவியாய் இருத்தலால் அவருக்குக் கீழே ஓர் உறைவிடம் பெற்றோ இருப்பது! (இஃது என்ன முறை!)

விளக்கவுரை

சிவன் ஆகாய கங்கை மண்ணில் வந்து காசியில் சிறந்த புண்ணிய நதியாய் இருக்கச் செய்து, அதன் கரையில் தானும், தன் தேவியும் வீற்றிருந்து அங்குச் சென்று அந்த கங்கையில் முழுகித் தன்னை வழிபட்டவர்களது பாவங்களைப் போக்குதலும், இறந்தவர் களுக்கு வீடுபேற்றைத் தருதலும் ஆகிய அருட் செயல்களைக் கங்கை யின் பொருட்டு இரங்குவார் போலக் கூறியவாறு.
காசிக் கங்கை நதியின் பெருமையும் இதனால் குறிக்கப்பட்டது.
``ஏந்தல்`` என்றது பகீரதனை.
அமையா நெறி, தரை வழி.
பகீரதன் கங்கையைக் கொணர்ந்த வரலாற்றினை இராமாயணம் முதலியவற்றிற் காண்க.
``இமையோர்`` என்பது பிரமன் ஆணையைப் பெற்ற தேவர்களை.
`கெட்டு, ஆய் அணைந்து, உறைகின்றது` - என்பவற்றிற்கு, `கங்கை` என்னும் தோன்றா எழுவாய் வருவிக்க.
``சலமகளாய்`` என்றது, `நதி வடிவாய்` என்றபடி.

உறைகின் றனரைவர் ஒன்பது
வாயிலோர் மூன்றுளவால்
மறைகின்ற என்பு நரம்போ
டிறைச்சி உதிரம்மச்சை
பறைகின்ற தோல்போர் குரம்பை

பயனில்லை போயடைமின்
அறைகின்ற தெண்புனல் செஞ்சடைக்
கொண்டோன் மலரடிக்கே. **#240**
(உலகீர்) விரிந்து கிடக்கின்ற தோலாகிய கூரை வேய்ந்த சிறு குடிலாகிய இந்த உடம்பில் அக்கூரையால் எலும்பும், நரம்பும், இறைச்சியும், குருதியும், மச்சையுமாகிய கட்டுப் பொருள்கள் வெளித்தோன்றாது மறைந்து கிடக்கின்றன.
(வெளித் தோன்றினால் அருவருப்பைத் தரும்.
) இந்தச் சிறுகுடிலுக்கு வாயில்களோ ஒன்பது உள்ளன.
(ஆகவே பாதுகாப்பில்லை.
) இதில் பண்டங்கள் மூன்றே உள்ளன.
அவைகளை முன்னிட்டு இதில் ஐந்துபேர் வாழ்கின்றனர்.
(ஆகவே, இதில் உங்கட்குப் பயன் எப்படிக் கிடைக்கும்?) கிடையாது, ஆகையால், ஒலிக்கின்ற, தெளிவாகிய நீரைச் சிவந்த சடையிலே வைத்துள்ள சிவபெருமானது மலர்போலும் திருவடிகளை நோக்கிச் சென்று, அவற்றையே அடைமின்கள்.

விளக்கவுரை

ஐவர் - ஐம்புல ஆசைகள்.
மூன்று - வாத பித்த சிலேத்து மங்கள்.
மச்சை - பித்த நீர் ``போர் குரம்பை``, இறந்தகால வினைத் தொகை.
குரம்பையில்` என உருபு விரித்து, `என்பு முதலியன மறை கின்ற` என்க.
மறைகின்ற, அன்பெறா அகர ஈற்றுப் பலவின்பால் வினை முற்று.
`யாக்கையது நிலையாமையையும், துன்ப மிகுதியையும் உணர்ந்து இதன்மேல் உள்ள பற்றினை விடுத்துச் சிவனது திருவடிகளைப் பற்றல் வேண்டும் என்றபடி.
போதல் பற்று விடுதலையும், அடைதல் பற்றுதலையும் குறித்தன.
`உடம்பினால் வரும் துன்பத்தினை எண்ணாமல் அதன்மேல் மக்கள் பற்றுச் செய்கின்றனர்` என்பதைத் திருவள்ளுவர், இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம் உழத்தொறூஉம் காதற்று உயிர்.
* என்பதனால் உணர்த்தினார்.

அடிக்கண்ணி கைதொழு தார்க்ககன்
ஞாலங் கொடுத்தடிநாய்
வடிக்கண்ணி நின்னைத் தொழவளை
கொண்டனை வண்டுண்கொன்றைக்
கடிக்கண்ணி யாயெமக்கோரூர்
இரண்டகங் காட்டினையால்
கொடிக்கண்ணி மேல்நல்ல கொல்லே

றுயர்த்த குணக்குன்றமே. **#241**

வண்டுகள் தேனை உண்கின்ற கொன்றை மலரால் ஆகிய, நறுமணம் பொருந்திய கண்ணியைச் சூடியுள்ளவனே, நீ, உனது திருவடியை விரும்பி உன்னைக் கையால் தொழுதவர்கட்கெல்லாம் பெரிய இவ்வுலகத்தையே பரிசிலாகக் கொடுத்து, உனது அடிக்கீழ் கிடக்கும் நாய்போன்ற, மாவடு ஒத்த கண்களையுடைய இவள் நின்னைத் தொழ, (இவட்கு ஏதும் கொடாமல்) இவள் அணிந்திருந்த வளையல்களையும் கொண்டுவிட்டாய்.

கொடியை உயர்த்துக் கட்டும் கயிற்றில் அறமாகிய இடபக் குறியை உயர்த்துள்ள குணமலை போல்பவனே, எங்களைப் பொறுத்தமட்டில் ஓர் ஊரில் இரண்டு இல்லங்களைக் காட்டுதல் போலும் செயலைச் செய்தால்; (இது நீதியோ!)

விளக்கவுரை

``அடிக்கண்ணி`` என்பதில் ககர ஒற்று எதுகை நோக்கி விரிந்தது.
``கண்ணி`` - நான்கில் முதலாவது `கருதி` என்றும், இரண்டா வது, `கண்களையுடையவள்` என்றும், மூன்றாவது, `முடியில் அணி யும் மாலை` என்றும், இறுதியது `கயிற்று முடி` என்றும் பொருள் தந்தன.
ஓர் ஊரில் இரண்டு சுகம் - `வேண்டுபவர்க்கு` என்று எல்லா நலங்களும் நிறைந்த ஓர் இல்லமும், `வேண்டாதவர்க்கு` என்று ஒன்றும் இல்லாத ஓர் இல்லமுமாக அமைத்தல்.
ஓர் இல்லமேயிருப்பின் வேற்றுமையில்லை.
அதனால், `இரண்டகம்` என்று சொன்னாலே, `வேண்டாதவர்கட்கு` என்று வேறு இல்லம் அமைப்பதையே குறித்தல் வழக்கு.
`உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யாதே` என்பர்.
நன்மை, அறம்.
``கொல்லேறு`` என்றது இன அடை.
`ஏனையோர்க்கெல்லாம் அருள்செய்து, இவளைக் காதலால் வருந்தவிட்டாய்` என்பது கருத்து.
இது தலைவியது ஆற்றாமை கண்டு செவிலி இரங்கிக் கூறியது.
`மாணிக்க வாசகர் போலச் சிவனை அடைதலில் வேட்கை மிக்காரைச் சிவன் இவ்வுலகத்தில் வைத்தல் என்னை` என உலகத்தார் இரங்கி ஆராய்தல் இதன் உள்ளுறை.

குன்றெடுத் தான்செவி கண்வாய்
சிரங்கள் நெரிந்தலற
அன்றடர்த் தற்றுகச் செற்றவன்
அற்றவர்க் கற்றசிவன்
மன்றிடைத் தோன்றிய நெல்லிக்

கனிநிற்ப மானுடர்போய்
ஒன்றெடுத் தோதிப் புகுவர் நரகத்
துறுகுழியே. #242

தான் வீற்றிருக்கும் மலையைப் பெயர்த்த இராவணனை அன்று அவன் தனது காது, கண், வாய், தலை எல்லாம் நெரிந்து அவன் `ஓ` என்று அலறும்படி அடர்த்து, அவனது அகங்காரம் முழுதும் அற்றொழிய அவனை ஒறுத்தவனும், மற்றுப் பற்றுக்கள் எல்லாவற்றையும் விட்டுத் தன்னையே பற்றாகப் பற்றுவோர்க்குத் தானும் தன் பெருமைகளையெல்லாம் விட்டு அவர்க்கு இரங்கி வந்து எவ்வகையிலும் நலம் புரிபவனும் ஆகிய `சிவன்` என்னும் அரு நெல்லிக்கனி வெளியிடத்திலே தோன்றி நிற்க.
மக்கள் அதனை உண்ணாமல் தமக்கு எளிதில் தெரிந்ததை எடுத்துச் சொல்லி இறப்பிற்கு ஆளாகிப் பின்பு மிக ஆழ்ந்த குழியாகிய நரகத்திலும் வீழ்கின்றனர்.

விளக்கவுரை

`இஃது அவரது அறியாமையின் நிலை` என்பது குறிப் பெச்சம்
`நிக்கிரகமும், அநுக்கிரகமும் செய்யவல்ல முழுமுதல்` என்பதை முதல் இரண்டடிகள் குறித்தன.
``அற்றவர்க்கு அற்ற சிவன் உறைகின்ற ஆலவாய்`` * என்ற திருஞானசம்பந்தர் திருமொழி காண்க.
சிவன் அற்றவர்க்கு அற்றவன் ஆதலை, வன்றொண்டருக்கு இருமுறை தூது நடந்தமை முதலியன பற்றி அறிக.
செவி, கண் முதலிய வற்றை விதந்தோதியது.
அவை அளவின் மிக்கிருந்தமை குறித்தற்கு.
நெல்லிகனி, ஔவை உண்ட நெல்லிக்கனி போல்வது.
`சிவனை அடைந்தால் இறப்பில்லை` என்பதை அது குறித்தது.
ஒன்று - எளிதாகிய ஒன்று.
அது சிவனது கோலம்.
`அந்தக் கோலத்தின் மெய்ம்மையறியாது இகழ்ந்து, நரகுறுகின்றனர்` என்றபடி.
`உறுகுழி` நரகத்துப் புகுவர்` என மாற்றியுரைக்க.
உறு - மிகுதி.

குழிகண் கொடுநடைக் கூன்பற்
கவட்டடி நெட்டிடையூன்
உழுவைத் தழைசெவித் தோல்முலைச்
சூறை மயிர்ப்பகுவாய்த்
தெழிகட் டிரைகுரல் தேம்பல்

வயிற்றுத் திருக்குவிரற்
கழுதுக் குறைவிடம் போல் கண்டன்
ஆடும் கடியரங்கே. #243

யாவர்க்கும் தலைவனாகிய சிவன் ஆடுகின்ற விளக்கமான அரங்கமாவது, ஆழமான கண்களையும், வேகமான நடையினையும், வளைவான பிளவுபட்ட பாதங்களையும் நீண்ட இடையினையும், ஊன் தின்னும் புலி தொங்குகின்ற விரிந்த செவிகளையும், வெறுந் தோலாய்த் திரைந்த கொங்கைகளையும், பரட்டை மயிரினையும், பிளந்த வாயினையும், `கட்டு, உதை` என்று அதட்டி இரைகின்ற குரலையும், ஒட்டிய வயிற்றையும், முறுக்கிய விரல்களையும் உடைய பேய்களுக்கு உரிய உறைவிடந்தான் போலும்!

விளக்கவுரை

`வேறு இடம் இல்லையோ` என்பது குறிப் பெச்சம் `இங்குக் குறிக்கப்பட்ட இடம் முதுகாடு` என்பது தெளிவு.

`முதுகாடு` என்பது உண்மையில் அனைத்தும் ஒடுங்கிய முற்றொடுக்க நிலையையும், `பேய்கள்` என்பது அந்நிலையில் நிகழும் மூன்று வகையான கேவல நிலையில் நிற்கும் ஆன்மாக்களையும் குறிக்கும். அக்கேவலங்களைச் சிவஞான யோகிகளது சிவஞான போத ஆறாஞ் சூத்திரச் சிற்றுரையால் அறிக.

இந்நுட்பம் உணரமாட்டாதார் சிவனை உலக முதுகாட்டில் ஆடுபவனாகவே வைத்து இகழ்வர்.

அவர் அவ்வாறு இகழ்தலையே தாம் இகழ்வதுபோலக் கூறினார்.

``போல்`` என்றதனால், அவனுக்குப் பொன், வெள்ளி, மணி முதலிய நல்லரங்கு களும் உள என்பதனைக் குறிப்பால் உணர்த்துதலும் செய்தார்.

`சிவன் ஆடுவது சுடுகாட்டில் என, யார் அக்காட்டினை எத்துணை இகழினும் அனைவரும் இறுதியிற் செல்லும் இடம் அதுவேயாதல் அறியத் தக்கது.

இறப்பிற்கு அஞ்சுவோர் யாவரும் சுடுகாட்டை நினைப்பினும் துணுக்குறுவர்; இறவாதவன் ஏன் அதற்கு அஞ்சப் போகின்றான்?

``கட்டு`` என்பது கூறினமையால் அதற்கு இனமான `உதை` என்பதும் வருவிக்கப்பட்டது.

அரம்கா மணியன்றில் தென்றலோர்
கூற்றம் மதியம்அந்தீச்
சரம்காமன் எய்யஞ்சு சந்துட் பகையால்
இவள் தளர்ந்தாள்
இரங்கா மனத்தவர் இல்லை

இரங்கான் இமையவர்தம்
சிரம்கா முறுவான் எலும்புகொள்
வானென்றன் தேமொழிக்கே. #244

தேன்போலும் மொழியையுடைய என் மகளுக்குச் சோலைகளில் உள்ள அழகிய அன்றிலின் குரலாகிய அரம், தென்ற லாகிய ஓர் யமன், திங்களாகிய அழகிய நெருப்பு, மன்மதன் எய்கின்ற ஐந்து மலர்களாகிய அம்பு, பூசப்படுகின்ற சந்தனம் மேலுக்குக் குளிர் வதுபோலக் காட்டி உண்மையில் வெதுப்புகின்ற உட்பகை ஆகிய வற்றால் இவள் உயிர் தளர்ந்தாள்.

இதைக் கண்டு மனம் இரங்காதவர் இல்லை.

ஆயினும், தேவர்களது தலைகளையும், எலும்புகளையும் மாலையாகவும், அணிகலமாகவும் அணிய விரும்புகின்ற அவன் மனம் இரங்கவில்லை.

விளக்கவுரை

`அவனைக் காதலித்தே இவள் இந்நிலையை அடை கின்றாள்` என்றபடி.

இதுவும் செவிலியின் இரங்கற் கூற்றே.

உள்ளுறை யும், ``அடிக்கண்ணி`` என்னும் பாட்டில் கொண்டவாறே கொள்க.

`அழகிய தீ` என்றது.

`பார்ப்பதற்கு அழகாய்த் தோன்றிச் செயலால் வருத்தம் செய்கின்றது` என்றபடி.

அன்றில் தன் துணையை அழைத்து வருந்தும் குரல் தனிமைப்பட்ட காதலர்க்கு வருத்தத்தை மிகுவிக்கும்.

``உட்பகை`` என்பதன்பின், `இவற்றால்` என்று `இவை` என்பது தொகுத்தலாயிற்று.

மொழியக்கண் டான்பழி மூளக்கண்
டான்பிணி முன்கைச்சங்கம்
அழியக்கண் டானன்றில் ஈரக்கண்
டான்தென்றல் என்னுயிர்மேற்
கழியக்கண் டான்துயர் கூரக்கண்
டான்துகில் சூழ்கலையும்
கழியக்கண் டான்தில்லைக் கண்ணுத
லான்கண்ட கள்ளங்களே. #245

தில்லையில் உள்ள சிவபெருமான், என்னைப் பலரும் பழி தூற்றவும், எனக்கு வருத்தம் ஒரு காலைக் கொருகால் மிகவும், முன்கையில் உண்ட சங்க வளையல்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகவும், அன்றிலின் குரல் என்னையும் என் உயிரையும் வேறுபடும்படி

பிளக்கவும், தென்றல் எனது உயிர்மேல் சினந்து நோக்கவும், இன்ன பல இன்னல்கள் மிகுதிப்படவும், உடை யும், மேகலையும் நீங்கிப் போகவும் செய்தான்.

இவை என்னிடத்துச் செய்த கள்ளச் செயல்கள்.

விளக்கவுரை

தலைவி தானும் அறியாதவாறு இவை நிகழ்ந்தமையின், ``கள்ளங்கள்`` என்றாள்.

இதன்பின் `இவை` என்பது எஞ்சி பக்குவி களைச் சிவன் அவர்களையறியாமலே அவர்களைத் தன்வயம் ஆக்கல் இதன் உள்ளுறை.

கள்ள வளாகங் கடிந்தடி
மைப்படக் கற்றவர்தம்
உள்ள வளாகத் துறுகின்ற
உத்தமன் நீள்முடிமேல்
வெள்ள வளாகத்து வெண்ணுரை சூடி
வியன்பிறையைக்
கொள்ள வளாய்கின்ற பாம்பொன் றுளது
குறிக்கொண்மினே. **#246**

(உலகீர்) மனத்தில் வஞ்சனைக்கு இடம் அளிக்கா மல் போக்கி, உண்மையாக அடிமைப்படத் தெரிந்தவர்களுடைய உள்ளமாகிய வரைவிடத்தல் வீற்றிருக்கின்ற, மேலானவனாகிய சிவ பெருமான் தனது நீண்ட முடியின்மேல் பெருவெள்ளப் பரப்பின் நுரையிலே சூடிய வெள்ளிய பிறையைக் கொள்ளுதற்குச் சூழ்கின்ற பாம்பு ஒன்று இருத்தலைக் கருத்துட் கொள்ளுங்கள்.

விளக்கவுரை

`அஃது, ஒன்றற்கு ஒன்று பகையாகியவற்றைப் பகை யின்றி வாழச் செய்யும் குறிப்பினது ஆதலின், அவனை யடைந்தால் நீங்களும் பகை முதலிய இடர் இன்றி வாழ்வீர்` - என்றபடி.

வளாகம்- பரந்த வரைவிடம் `நுரைக்கண்` என ஏழாவது விரிக்க.

`சூடிய` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.

வளாவுதல் - சூழ்தல், `வளாவுகின்ற` என்பது, ``வளாய்கின்ற`` எனத் திரிந்து வந்தது.

குறிக்கொண் டிவள்பெய்த கோல்வளை
யேவந்து கோளிழைத்தீர்
வெறிக்கொண்ட வெள்ளிலம் போதோ
எலும்போ விரிசடைமேல்

உறைக்கொன்றை யோவுடைத் தோலோ
பொடியோ உடைகலனோ
கறைக்கண்ட ரேநுமக் கென்னோ
சிறுமி கடவியதே. #247

நீல கண்டத்தை உடையவரே, உமக்கு இவள், ஒன்றைக் கருத்திலே கொண்டு இட்டன தான் அணிந்திருந்த வளையல் களையே. அவைகளை நீர் வந்து கொண்டும் விட்டீர். ஆயினும் இச் சிறுமி உம்மை இரக்கக் கருதியது உம்மிடத்துள்ள மணம் பொருந்திய விளாம் பூவோ? எலும்போ? விரிந்த சடைமேல் இருக்கின்ற கொன்றை மாலையோ? உடையாகப் பொருந்திய தோலோ? சாம்பலோ? உடைந்து போன பிச்சைப் பாத்திரமோ?

விளக்கவுரை

`இவை தவிர உம்மிடத்தில் வேறு என்ன இருக்கின்றது` எனச் சொல்லி நகையாடித் தன் தலைவியின் அறியாமைக்குத் தோழி இரங்கியவாறு.
``சிறுமி`` என்றது பேதைமை குறித்ததே.
`இப் பேதைமையுடையாளை நீ கைவிடலாகாது` என ஓம்படுத்தினாள் என்க.
வெறி - நறு நாற்றம்.
வெள்ளில் - விளா.
`உறைதலை யுடைய கொன்றை` - என்க.
உடை கலன், வினைத்தொகை.
`நுமக்குப் பெய்தது` என மேலே கூட்டுக.
கடவியது - கடாவியது.
கேட்டது.

கடவிய தொன்றில்லை ஆயினும்
கேண்மின்கள் காரிகையாள்
மடவிய வாறுகண் டாம்பிறை
வார்சடை எந்தைவந்தாற்
கிடவிய நெஞ்சம் இடங்கொடுத்
தாட்கவ லங்கொடுத்தான்
தடவிய கொம்பதன் தாள்மேல்
இருந்து தறிக்குறுமே. #248

இவள் இங்கு வந்த நீண்ட சடையையுடைய, பலரும் `எம் தந்தை` எனப் போற்றுகின்ற சிவபெருமானிடம் எதனையும் இரக்கவில்லையாயினும் அவன் செய்ததைக் கேளுங்கள்; அவனுக்குத் தனது விரிந்த நெஞ்சத்தை இடமாகக் கொடுத்த ஒன்று தான் இவள் செய்தது. ஆயினும், அதற்குக் கைம்மாறாக அவன் இவளுக்குத் துன்பத்தைக்

கொடுத்தான்.

பெரிய கிளைகள் அடிமரத்தின் மேலே இருக்கும் பொழுது அந்த அடிமரம் நிற்கக் கிளை வெட்டப்படுவது உலக இயல்புதானே?

விளக்கவுரை

`அதுபோல, இவட்குப் பற்றுக்கோடாயினார் பலர் இருக்கவும் இவள் இறந்துபடுகின்றாள்` என்பதாம்.
ஈற்றடி ஒட்டணி யாய் நின்றது `ஆகவே, இவளது அறியாமையின் நிலையை யாம் கண்டோம்` என முடிக்க.
கடவியது - கடாவியது கேட்டது.
``காரிகையாள்`` என்பதை முதலிற் கூட்டுக.
மடவியவாறு.
மடமையாளாகிய வகை.
இடவிய - இடம் பரந்த.
தடவிய - பெரிய; `தட` என்னும் உரியடியாகப் பிறந்த பெயரெச்சம்.
கொம்பு - கிளை.
தாள் - அடிமனம்.
தறிக்குறும் - வெட்டப்படும்.

தறித்தாய் அயன்தலை சாய்த்தாய்
சலந்தர னைத்தழலாப்
பொறித்தாய் அனங்கனைச் சுட்டாய்
புரம்புன லுஞ்சடைமேற்
செறித்தாய்க் கிவைபுகழ் ஆகின்ற
கண்டிவள் சில்வளையும்
பறித்தாய்க் கிதுபழி ஆகுங்கொ
லாமென்று பாவிப்பனே. **#249**

(எங்கள் பெருமானே, நீ பிரமன் தலையைக் கிள்ளி னாய்; சலந்தராசுரனைக் கொன்று வீழ்த்தினாய்; காமனைப் பொறிக் கறிபோல ஆகும்படி நெருப்பாக்கினாய்; இவையெல்லாம் உனக்குப் புகழாதலைக் கண்டு, `இவளுடைய சில வளையல்களை நீ கவர்ந்தது உனக்குப் பழியாகும்` என்று கருதி நான் வருந்துகின்றேன்.

விளக்கவுரை

கொல், ஆம் அசை.
பாவித்தல் - கருதுதல்.
``வளையைக் கவர்ந்தாய்` என்றது, `மெலியப் பண்ணினாய்` என்றபடி.
வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி.

1 என்ப ஆதலின், `அவ்வாறு அருளாமை புகழுடைய நினக்கு ஆகாது` என்பதாம்.
இது தோழி தலைவனை இரந்து பின்னிற்றல் ஆகலின் பெண்பாற் கைக்கிளை.
சாம்பலைப் பூசித் தரையிற் புரண்டுநின் தாள்பரவி ஏம்பலிப் பார்கட்கு இரங்கு கண்டாய்.
2 நின்னடியார் இடர்களையாய்.
3 என்றாற்போல, அன்பர் பொருட்டு அருளாளர் விண்ணப்பித்தல் இதன் - உள்ளுறை.

பாவிக்கும் பண்டையள் அல்லள்
பரிசறி யாள்சிறுமி
ஆவிக்கும் குற்குலு நாறும்
அகம்நெக அங்கமெங்கும்
காவிக்கண் சோரும்பொச் சாப்புங்
கறைமிடற் றானைக் கண்ணில்
தாவிக்கும் வெண்ணகை யாளம்மெல்
லோதிக்குச் சந்தித்தவே. **#250**

எம் சிறுமி, செய்வது அறிகின்றிலள்; கொட்டாவி விடுகின்றாள்; மனம் நெகிழ இவள் உடம்பெங்கும் குங்குலியம் போன்ற மணம் வீசநின்றது. குவளை மலர் போலும் கண்கள் நீரைச் சொரியாநின்றன. தன்னை மறக்கின்றாள்; நீல கண்டனைத் தன் கண்களில் நிறுவுகின்றாள்.
இவையெல்லாம் வெண்மையான பற்களையும், மென்மையான கூந்தலையும் உடைய இவளை வந்து பொருந்தின.
ஆகலான் இவள் நாம் முன்பெல்லாம் அறிகின்ற பழைய பெண் அல்லள்.

விளக்கவுரை

`சிவனுக்கு உரியளாய புதியள்` என்பதாம், இது, நாற்றம் தோற்றம் முதலியவற்றால் பாங்கி மதியுடம் பட்டது.
சிவஞானிகளது நிலைமையை அவர்பால் நிகழும் சில மெய்ப்பாடுகள் பற்றி உலகத்தார் ஊகித் துணர்தல் இதன் உள்ளுறை, `செய்யும்` என்னும் வினைகள் பலவற்றுள் முதலதாகிய ``பாவிக்கும்`` என்பது ஒன்றும் எச்சம்; ஏனைய வெல்லாம் முற்று.
``சிறுமி பரிசறியாள்`` என்பது முதலாகத் தொடங்கி உரைக்க.
`அகம் நெக, அங்கம் எங்கும் குற்குலு நாறும்` என்க.
இது சிவனைத் தழுவியதால் உண்டாயது.
சோர்த லாகிய, இடத்தின்மேல் நின்ற வினைக்கு, `நீர்` என்னும் வினைமுதல் வருவிக்க.

தாவிக்கும் - தாபிக்கும், ஓதி - ஓதியை உடையாள்.
``ஓதிக்கு`` என்னும் நான்காவதை இரண்டாவதாகத் திரிக்க.

சந்தித்த கூற்றுக்குக் கூற்றாம்
பிணிக்குத் தனிமருந்தாம்
சிந்திக்கிற் சிந்தா மணியாகித்
தித்தித் தமுதமுமாம்
வந்திக்கில் வந்தென்னை மால்செய்யும்
வானோர் வணங்கநின்ற
அந்திக்கண் ஆடியி னானடி
யார்களுக் காவனவே. **#251**

வந்து எதிர்நின்ற நமனுக்கு நமன் ஆவான்; நோய்கட்கு ஒப்பற்ற மருந்தாவான்; நினைத்தால் சிந்தாமணிபோல, நினைப்பவற்றைக் கொடுப்பான்; இனிக்கின்ற அமுதம்போல இனிமையைத் தருவான்; வணங்கினால் எதிர்ப்பட்டுத் தன்வயம் ஆக்கிக் கொள்வான்; தேவர்களும் வணங்க நிற்கின்ற, இரவில் காட்டில் ஆடுகின்ற சிவன் தன் அடியார்களுக்கு ஆகின்ற பொருள்கள் இவைகளாகும்.

விளக்கவுரை

`தித்தித்த` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.
என்னை, `எவன்` என்னும் வினாப் பெயரின் திரிபு.
அஃது இங்கு `எத் துணை` என்னும் பொருட்டாய் மிகுதியைக் குறித்தது.
மால் - மயக்கம்.
அஃது இங்குவசப்படுத்துதலைக் குறித்தது.
`காட்டில்` என்பது ஆற்றலால் வந்தது.
`ஆவன இவை` என ஒரு சொல் வருவித்து முடிக்க.

ஆவன யாரே அழிக்கவல்
லாரமை யாவுலகில்
போவன யாரே பொதியகிற்
புராபுரம் மூன்றெரித்த
தேவனைத் தில்லைச் சிவனைத்
திருந்தடி கைதொழுது
தீவினை யேனிழந் தேன்கலை
யோடு செறிவளையே. **#252**

முப்புரத்தை எரித்த கடவுளாகிய தில்லையிலே எழுந்தருளியுள்ள சிவபெருமானை அடிதொழுதமையால் (நல்லோர் பலரும் பல நன்மைகளைப் பெற) யான் தீவினை செய்தேன் ஆகலின் எனது உடையோடு.
செறிந்த வளையல்களையும் இழந்தேன்.

ஒரு நெறிப்படாத இந்த உலகத்தில் ஊழ் வலியால் மேன்மேல் நன்றாய் வளர்வனவற்றை - அழிக்க வல்லவர் யாவர்! சிறிது சிறிதாய்த் தேய்ந்து போவனவற்றை அவ்வாறு தேயாமல் கட்டிக் காக்க வல்லவர் யாவர்! (ஒருவரும் இல்லை)

விளக்கவுரை

இது, சிவபெருமானைக் காதலித்தாள் அக்காதல் நிறை வெய்தாமை பற்றி ஆற்றாது கூறியது.
பக்குவ மிகுதியால் சிவனை அடைய விரும்பினார் அதற்குத் தடையாய் நிற்கும் பிராரத்தம் பற்றி வருந்திக் கூறுதல் இதன் உள்ளுறை.
ஊழ் வலியாகிய பொதுப் பொருளால் கலை வளையல்களை இழந்த சிறப்புப் பொருளைச் சாதித் தமையால் இது வேற்றுப் பொருள் வைப்பணி ``சிவனை அடியைத் தொழுது`` என்றதை, `கள்வனைக் கையைக் குறைத்தான்`` என்பது போலக் கொள்க.
திருந்து அடி செவ்வியவாய பாதங்கள்.

செறிவளை யாய்நீ வரையல்
குலநலம் கல்விமெய்யாம்
இறையவன் தாமரைச் சேவடிப்
போதென்றெல் லோருமேத்தும்
நிறையுடை நெஞ்சிது வேண்டிற்று
வேண்டிய நீசர்தம்பால்
கறைவளர் கண்டனைக் காணப்
பெரிதுங் கலங்கியதே. **#253**

செறிக்கப்பட்டவளைகளை உடையவளே `சிவனது செவ்விய பாதங்களாகிய தாமரை மலர்களே குடிப்பிறப்பு, கல்வி, மெய்ப்பொருள் எல்லாமாகும்! என யாவரும் புகழ்கின்ற அத் தன்மையையே நிலைபேறாக உடைய உனது மனம், `அந்தச் சிவனைத் தாம் விரும்பியதையே விரும்புகின்ற கீழ்மக்கள் கூட்டத்திற் சென்று காண்பேன்` என்று இப்பொழுது கலக்கமடைந்து விட்டதே; இஃது என்! அந்த மனத்தின்வழி நீ விரைந்து செல்லாதே.

விளக்கவுரை

இது, தலைவியை ஆற்றுவிக்க வேண்டி, `தலைவனை யான் விடர்கள் கூட்டத்திற் சென்று கழற்றுரை கூறி நின்னைச் சேர்விப்பேன்` எனத் தலைவனை இயற்பழித்த வழி, தலைவி, `அவர் விடர்களது கூட்டத்தில் சேர்பவர் அல்லர்` எனத் தலைவனை இயற்பட மொழிந்தது, பக்குவிகள் பால், `சிவஞானம் இன்றியும் வீடு பெறலாம்` என மயங்கிக் கூறுகின்றவர்களைப் பக்குவிகள் `அது கூடாது` எனத் தெருட்டுதல்

இதன் உள்ளுறை.
`சேவடித் தாமரைப் போது` என மாற்றுக.
நிறை - வழுவாது நிறுத்துதல்.
``நெஞ்சு இது`` என்றது.
`தான் அவள்` என்னும் வேற்றுமையின்மையால் தோழியது நெஞ்சத்தை.
``கலங்கியதே`` என்பதன்பின் வருவித்தது சொல்லெச்சம்.
விரையல் - விரையாதே.
``வேண்டிற்று வேண்டிய நீசர்`` என்பதனை, ``காணா தான் - கண்டானாம் தான்கண்டவாறு`` *1* ``பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தர்`` *2* முதலியவற்றோடு ஒப்பிட்டு உணர்க.
`அக்கறை வளர் கண்டனை` எனச் சுட்டு வருவிக்க.

கலங்கின மால்கடல் வீழ்ந்தன
கார்வரை ஆழ்ந்ததுமண்
மலங்கின நாகம் மருண்டன
பல்கணம் வானங்கைபோய்
இலங்கின மின்னொடு நீண்ட
சடைஇமை யோர்அவிந்தார்
அலங்கல்நன் மாநடம் ஆர்க்கினி
ஆடுவ தெம்மிறையே. **#254**

எங்கள் பெருமானே, கடல்கள் யாவும் தீயால் கொதித்து வற்றிவிட்டன.
கரிய மலைகள் பெருவெள்ளத்தில் மூழ்கி விட்டன.
பூவுலகங்களும் அவ்வெள்ளத்தில் ஆழ்ந்து மறைந்து விட்டன.
வானுலகங்களும் நிலை குலைந்து போயின.
பலவாகிய உமது கணங்களும் `என்ன செய்வது` என்று தோன்றாமல் மயங்கி விட்டன.
`இறவாதவர்` எனப்படுகின்ற தேவர்களும் இறந்துவிட்டனர்.
இந்த நிலையில், ஆகாயம் எங்கும் போய் விட்டுவிளங்குகின்ற மின்னலோடு மின்னலாய் ஒளிர்கின்ற உமது நீண்ட சடைகள் சுழல நல்லதொரு சிறந்த நடனத்தை யார் பார்ப்பதற்கு ஆடுகின்றீர்?

விளக்கவுரை

`பார்ப்பதற்கு ஒருவருந்தாம் இல்லையே என்றபடி.
இது `சிவன் சுடுகாட்டில் ஆடுபவன்` எனக் கூறப்படுவதன் உண்மையை விளக்கியது.
`சுடுகாடு` என்பது எல்லாம் ஒடுங்கிய நிலை.
இது முற்றழிப்பு, அல்லது `சருவ சங்காரம்` - எனப்படும்.
`இந் நிலையில் சிவன் ஆடுகின்றான்` என்பது, புனர் உற்பவத்திற்கு (மறு முறைப் படைப்பிற்கு) ஆவனவற்றைச் செய்தலைக் குறிக்கும்.

அச் செயல் `சூக்கும பஞ்ச கிருத்தியம்` - எனப்படும்.
இந்நிலையில் ஆன்மாக்கள் `சேகல கேவலம்` - என்னும் நிலையில் நிற்கும்.
அந்த ஒரு கேவலத்திற்குள்ளே `பிரளய கேவலம், விஞ்ஞான கேவலம் - என்னும் இருகேவலங்கள் உளவாகும், இவற்றைச் சிவஞானபோத ஆறாம் சூத்திரத்துச் சிவஞான யோகிகளது சிற்றுரையால் அறிக.
இக்கேவலங்களை உடைய ஆன்மாக்களே சிவனோடு உடன் நிற்கும் பேய்களாகச் சொல்லப்படுகின்றன.
இஃது உணராதார், `சிவன் ஆடும் சுடுகாடு உலகில் பல இடங்களில் உள்ள சுடுகாடுகளே` என்றும், `பேய்கள் அங்கு வாழும் பேய்களே` என்றும் கருதிவிடுகின்றனர் என்பது கருத்து.
நாகம் - சுவர்க்க லோகம்.
``இமையோர் அவிந்தார்`` என்பதை, ``பல்கணம்`` என்பதன் பின்னர்க் கூட்டுக.
``இமையோர் வியந்தார் என்பது பாடம் அன்று, அலங்கல் - அசைதல்.

எம்மிறை வன்னிமை யோர்தலை
வன்உமை யாள்கணவன்
மும்முறை யாலும் வணங்கப்
படுகின்ற முக்கண்நக்கற்
கெம்முறை யாளிவள் என்பிழைத்
தாட்கிறை என்பிழைத்தான்
இம்முறை யாலே கவரக்
கருதிற் றெழிற்கலையே. **#255**

எமக்கு இறைவனும், தேவர்கட்குத் தலைவனும், உமைக்குக் கணவனும், யாவராலும் மனம், மொழி, மெய் ஆகியவற்றால் வணங்கப்படுபவனும், மூன்று கண்களை உடைய வனும், திகம்பரனும் ஆகிய சிவனுக்கு என்னை வஞ்சித்து இவள் என்ன முறை உடையவள் ஆயினாள்? (`மனைவி ஆயினளோ` - என்றபடி - அது நிற்க,) என்னை வஞ்சித்த இவளுக்குச் சிவன் இவள் தன்னை விரும்பியதை அறிந்தும் இவளுக்கு மெலிவை நீக்காமல் மெலிவை விளைவித்து, இவளது அழகிய உடையை அகன்று போகும்படி இவ்வாறு தவறு செய்தது ஏன்?

விளக்கவுரை

`அதனை யான் அறிகின்றிலேன்` என்பதாம்.
`இறை பிழைத்தான்; என்` என மாறிக் கூட்டுக.
`எழிற் கலை கவரக் கருதிய தாகிய இம்முறையாலே பிழைத்தான்` என்க.
இது, செவிலி தலைவி யது ஆற்றாமை கண்டு தலைவனை இயற் பழித்தது.

இறைவனைச் சார்ந்தார்க்கு ஆற்றாமை உளதாதலைக் கண்டு உலகர் இறைவனை இயற் பழித்தல் இதன் உள்ளுறை.

கலைதலைச் சூலம் மழுக்கனல்
கண்டைகட் டங்கம்கொடி
சிலையிவை ஏந்திய எண்டோட்
சிவற்கு மனஞ்சொல்செய்கை
நிலைபிழை யாதுகுற் றேவல்செய்
தார்நின்ற மேருவென்னும்
மலைபிழை யாரென்ப ராலறிந்
தோர் இந்த மாநிலத்தே. **#256**

`எட்டுக் கைகளில் மான், முத்தலைச் சூலம், மழு, நெருப்பு, மணி, மழுவிற் சிறிது வேறுபட்ட கட்டங்கம், கொடி, வில் - என்னும் இவற்றை ஏந்தியுள்ள சிவபெருமானுக்கு மனம், மொழி, மெய் மூன்றும் பிற வழிகளில் செல்லாது பணிவிடை செய்தவர்கள் நிலையாய் உள்ள மகாமேருமலையைப் போன்ற உயர்ந்த குறிக்கோள்களைக் கொள்ளினும் தவறாமல் பெறுவார்கள்` - என்று, அறிவுடையோர் இந்தப் பெரிய பூமியில் எங்குள்ளவரும் அறியக் கூறுவர்.

விளக்கவுரை

``உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்`` எனக் கூறிய திருவள்ளுவர் `அஃது எய்துதல் அரிது` என்னும் கருத்தால், ``மற்றது- தள்ளினும் தள்ளாமை நீர்த்து`` என்றார் ஆகலின், `சிவனடியார்கள் அத்தகைய குறிக்கோள்களைத் தவறாமல் எய்துவர்` என்றார்.
`மேரு வும்` என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று.

மாநிலத் தோர்கட்குத் தேவர்
அனையவத் தேவரெல்லாம்
ஆநலத் தாற்றொழும் அஞ்சடை
ஈசன் அவன்பெருமை
தேனலர்த் தாமரை யோன்திரு
மாலவர் தேர்ந்துணரார்
பாநலத் தாற்கவி யாமெங்ங
னேயினிப் பாடுவதே. **#257**

பெரிய பூமியில் உள்ள மக்களினும் மேம்பட்ட பெருமையுடையவர் தேவர்.
அத்தேவர் யாவரும் தம்மால் ஆன மட்டும் நன்முறையில் வணங்கும் சிவபெருமான் பெருமையுடைய வன், அவனது பெருமையைத் தேன் பொருந்திய தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பிரம தேவனும், திருமாலும் ஆகிய அவரே ஆராய்ந்து முற்றும் உணரவல்லரல்லர் என்றால், அவனது

பெருமையை நாம் எங்ஙனம் முற்ற உணர்ந்து பாநயத்தோடு கூடிய கவிகளால் பாடுவது!

விளக்கவுரை

`இயலாது ஆகையால் அறிந்த அளவில் பாடுவேம்` - என்பது குறிப்பெச்சம்.

``யான் அறி அளவையின் ஏத்தி` என்றார் முருகாற்றுப் படையிலும் தேவரது பெருமையை உணர்த்தற்கு, ``மாநிலத் தோர்கட்குத் தேவர்`` என்றார்.

``தேவர்`` என்பதன் பின்னும், ``ஈசன்`` என்பதன் பின்னும் `பெருமையுடையர், பெருமையுடையன்` என்பன எஞ்சி நின்றன.

பாடிய வண்டுறை கொன்றையி
னான்படப் பாம்புயிர்ப்ப
ஓடிய தீயால் உருகிய
திங்களின் ஊறலொத்த
தாடிய நீறது கங்கையுந்
தெண்ணீர் யமுனையுமே
கூடிய கோப்பொத்த தாலுமை
பாகமெம் கொற்றவற்கே. **#258**

எம் தலைவனாகிய சிவபெருமானுக்கு அவன் பூசியுள்ள திருநீறு அவன் அணிந்துள்ள படத்தையுடைய பாம்பு பெருமூச்சு எறிதலால் கையில் ஏந்தியுள்ள நெருப்பு ஓங்கி எரிய, அதனால் அவன் முடியில் அணிந்துள்ள பிறை உருகி ஒழுகுவது போன்று உள்ளது.

பின்பு அந்நீறும், உமையாளது பாகமும் ஒன்று சேர்வது, கங்கை நதியும், தெளிவாகிய நீரையுடைய யமுனை நதியும் ஒன்று சேர்ந்தது போன்று உள்ளது.

விளக்கவுரை

கங்கை நீர் வெண்மை நிறத்தையும், யமுனை நீர் கருமை நிறத்தையும் உடையன.

``பாடிய வண்டு உறை கொன்றையினான்`` என்பது, ``எம் கொற்றவன்`` எனப்பட்டவனை.

`அவன் எனச் சுட்டும் அளவாய் நின்றது.

`அதுவும், உமை பாகமும் கூடியது, கங்கையும், தெண்ணீர் யமுனையும் கூடிய கோப்பு ஒத்தது` என வேண்டும் சொற்கள் வருவித்து இயைத்து முடிக்க.

கொற்றவ னேயென்றுங் கோவணத்
தாயென்றும் ஆவணத்தால்

நற்றவ னேயென்றும் நஞ்சுண்டி
யென்றும் அஞ்சமைக்கப்
பெற்றவ னேயென்றும் பிஞ்ஞுக
னேயென்றும் மன்மதனைச்
செற்றவ னேயென்றும் நாளும்
பரவுமென் சிந்தனையே. **#259**

என்னுடைய சித்தம் எந்நாளும், யாவர்க்கும் என்றும், `கோவணமாக உடுத்த உடையை உடையவனே` என்றும், `புனைந்துள்ள கோலத்தால் நல்ல தவசியே` என்றும், `நஞ்சை உண்டவனே` என்றும், அஞ்செழுத்தை நெஞ்சில் அமைத்தவர்களால் பெறப்பட்டவனே` என்றும், `தலைக்கோலம் உடையவனே` என்றும், `மன்மதனை அழித்தவனே` என்றும் இவ்வாறே சொல்லித் துதிக்கும்.

விளக்கவுரை

`வேறொன்றையும் செய்யாது` எனத் தமது உள்ளத்தின் உறைப்பை வெளியிட்டவாறு.
சிந்தித்தல் அன்றித் துதித்தல் சித்தத் திற்கு இல்லையாயினும், `சிந்தித்தலே துதித்தலாம்` என்னும் கருத்தால் `துதிக்கும்` என்றார்.
ஆவணம், `ஆய வண்ணம்` என இறந்தகால வினைத்தொகை.
உண்டி - உணவு.
உண்டியை உடையவனை, `உண்டி` என்றது ஆகுபெயர்.

சிந்தனை செய்ய மனமமைத்
தேன்செப்ப நாவமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத்
தேன்கை தொழவமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத்
தேன்மெய் அரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி ஈசற்
கிவையான் விதித்தனவே. **#260**

என்னுடைய மனத்தை இடையறாது உன்னுதற்கு வைத்தேன்; நாவைப் புகழ்சொல்லுதற்கு வைத்தேன்; தலையை வணங்குதற்கு வைத்தேன்; கைகளைக் கும்பிடுதற்கு வைத்தேன்; அன்பை அகப்படுத்தற்கு வைத்தேன்.
உடம்பை மயர்க்கூச்சு எறிவ தற்கு வைத்தேன்; வெந்து தணிந்த வெள்ளிய நீற்றைப் பூசுகின்ற இறை வனுக்கு யான் நேர்ந்தன இவை.

விளக்கவுரை

`என்னால் ஆயின இவை; இனி அவனது திருவுள்ளம்` என்பதாம்.

`மனம் முதலியவற்றை வேறொன்றற்கு வைத்திலேன்` என்றபடி.
``ஈசற்கு`` என இறுதியிற் கூறியமையால், முன்னர்க் கூறியன பலவும் அவனுக்கேயாதல் தெளிவு.

விதித்தன வாழ்நாள் பெரும்பிணி
விச்சைகள் கொண்டுபண்டே
கொதிப்பினில் ஒன்றும் குறைவில்லை
குங்குமக் குன்றனைய
பதித்தனங் கண்டனம் குன்றம்வெண்
சந்தனம் பட்டனைய
மதித்தனங் கண்டனம் நெஞ்சினி
என்செய்யும் வஞ்சனையே. **#261**

நன்மை தீமைகளை அறிகின்ற பலவகையான அறிவுகளைக் கொண்டு பிரமன் எமக்கு வகுத்த வாழ்நாள்களிலே பெரிய நோய்கள் வந்து வெதுப்புவதில் சிறிதும் குறைவில்லை.
மகளிரது குங்கும மலைபோலும், மார்பில் அழுந்துதலையுடைய தனங் களை முன்னே கண்டோம், பின்பு அத்தனங்கள் தாமே மலைகளில் வெள்ளிய சந்தனம் பூசப்பட்டனபோல் ஆயினமையை உணர்ந்து பார்த்தோம், (இவ்வளவும் செய்துவிட்டமையால்) எமது மனம் இனிச் செய்வதற்கு என்ன வஞ்சனை உள்ளது?

விளக்கவுரை

`செய்யக் கூடிய வஞ்சனைகள் அனைத்தும் செய்தாகி விட்டன` என்றபடி.
`இங்கு கூறியன எல்லாம் எமது மனம் எம் வழிநின்று சிவனை நினையாமல் தப்பி ஓடிச் செய்த வஞ்சனைகளால் விளைந்தன` என்பதாம்.
`சிவனை நினையாது மனம் போன போக்கிலே போகின்றவர் இவ்வாறு கெடுவர்` என்பது கருத்து.
`மகளிரது தனங்கள் முதலில் குங்குமக் குன்று போலக் காணப்பட்டது` என்றது கலவிக்கு முன்னுள்ள நிலையையும், `அவை வெண்சந்தனம் பூசப் பட்ட குன்று போலக் காணப்பட்டன` என்றது கலவிக்குப் பின்னுள்ள நிலையையும் குறித்தது.
தலைவரது மார்பில் சந்தனக் குழம்பு இருத்தல் இயல்பு.
இன்ப நோக்கில் இன்பமாய்த் தோன்றினும் துறவு நோக்கில் இவை இடர் ஆதல் அறிக.
`பட்டனையவாக` என ஆக்கம் விரிக்க.
`மதித்தனம்` என்பது முற்றெச்சம்.
`விச்சைகள் கொண்டு பண்டே விதித்தனவாகிய வாழ் நாளில்

பெரும்பிணி கொதிப்பினில் ஒன்றும் குறைவில்லை` என இயைக்க.
விதித்தன - விதிக்கப்பட்டன.

வஞ்சனை யாலே வரிவளை
கொண்டுள்ள மால்பனிப்பத்
துஞ்சும் பொழுதும் உறத்தொழு
தேன்சொரி மாலருவி
அஞ்சன மால்வரை வெண்பிறை
கவ்வியண் ணாந்தனைய
வெஞ்சின ஆனையின் ஈருரி
மூடிய வீரனையே. #262

என்னுடைய மனத்தில் மயக்கம் நிறைந்து ததும்பும்படி, யான் அறியாமலே எனது கீற்றுப் பொருந்திய வளையல் களைக் கவர்ந்து கொண்டு, யானைத் தோலைப் போர்த்துக் கொண்டு இருக்கின்ற வீரனை நான் உறங்கும் பொழுதும் மிக வணங்கினேன்.

விளக்கவுரை

`வணங்கியும் அவன் எனக்கு அருள் செய்திலன்` என்பது குறிப்பெச்சம்.
வஞ்சனையாலே கவர்ந்து கொண்டவன் தன்னை `வீரன்` என்று சொல்லிக் கொள்வதுவெட்கம் - என்பது கருத்து.
`மால் பனிப்பக் கொண்டு` என்க, ``கொண்டு`` என்னும் செய் தென் எச்சம், ``மூடிய`` என்பதனோடு முடிந்தது.
துஞ்சும் பொழுதும் தொழுதல், இடைவிடாத பழக்கத்தால் நிகழ்வது.
``நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே`` * என்று அருளிச் செய்தது காண்க.
``மால்`` மூன்றில் முன்னவை மயக்கம்; ஏனையது பெருமை.
பனித்தல் - ததும்புதல்.
`அருவியை யுடைய வரை` என்க.
வரை - மலை.
`மயக்க அருவி` என்பதில் மயக்கம், அதற்கு ஏதுவாகிய மத நீரைக் குறித்தது.
அஞ்சனம் - மை; அஃது அதன் நிறத்தைக் குறித்தது.
வெள்ளிய தந்தங் களை வாயில் கொண்டு நிமிர்கின்ற கரிய யானைக்கு, வெண்பிறை கௌவி அண்ணாக்கின்ற அஞ்சன மலையை உவமையாகக் கூறியது இல் பொருள் உவமம்.
ஈர் உரி - உரித்த தோல்; இறந்தகால வினைத் தொகை.

வீரன் அயனரி, வெற்பலர்
நீரெரி பொன்னெழிலார்
காரொண் கடுக்கை கமலம்

துழாய்விடை தொல்பறவை
பேரொண் பதிநிறம் தாரிவர்
ஊர்திவெவ் வேறென்பரால்
ஆரும் அறியா வகையெங்கள்
ஈசர் பரிசுகளே. **#263**

எங்கள் இறைவரது தன்மைகள் யாராலும் ஒரு நிலையாக அறிந்து சொல்லுதற்கு இயலாதன.
ஏன் எனில், அவர் பெயர் ஒன்றாகாது, `உருத்திரன், பிரமன், விட்டுணு` - என மூன்று என்றும், அவருக்கு இடம் ஆவதும் ஒன்றாகாது, `மலை, மலர், நீர்` என மூன்று என்றும், அவரது நிறமும் ஒன்றாகாது, `தீ வண்ணம், பொன் வண்ணம், அழகு நிறைந்த மேக வண்ணம்` என மூன்று என்றும், அவரது அடையாள மாலையும் ஒன்றாகாது, `கொன்றை மலர், தாமரை மலர், துளசி` என மூன்று என்றும், அவர் ஏறிச் செல்கின்ற ஊர்தியும் ஒன்றாகாது, `இடபம், அன்னம், கலுழன்` என மூன்று என்றும் இவ்வாறு அனைத்தையும் மூன்று மூன்றாகவே, அறிந்தோர் கூறுகின்றனர்.

விளக்கவுரை

இஃது, ஒருவனாகிய சிவனே `படைத்தல், காத்தல், அழித்தல்` என்னும் தொழிலை நோக்கி `அயன், அரி, அரன்` என மூவராய் நிற்கின்றான் - என உணர்த்தியவாறு.
ஓர் உருவாயினை மான் ஆங்காரத்து ஈரியல்பாய், ஒரு விண்முதற் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகள் ஆயினை``.
* என்று அருளிச் செய்தததது காண்க.
சம்பு பட்சமாகப் பார்க்கும் பொழுது மூவரும் ஒருவனே.
அணுபட்சமாகப் பார்க்கின் வேறுவேறாம்.
சம்பு பட்ச அணுபட்சங்களின் இயல்பைச் சித்தாந்த நூல்களுட் காண்க.
இறைவனது தொழிலை மூன்றாகக் கூறும் பொழுது மறைத்தல் காத்தலிலும் அருளல் அழித்தலிலும் அடங்கும் என்க.
தொழில்களை ஐந்தாக விரிக்குமிடத்துச் சிவன் `அயன், அரி, அரன்` என்பவரோடு `மகேசுரன், சதாசிவன்` - என மேலும் இருவராய், ஐவராய் நிற்பன் பேர், பதி, நிறம், தார், ஊர்தி - என்பவற்றுள் ஒவ்வொன்றையும் வீரன் முதலிய மும்மூன்றனோடு முறை நிரல் நிறையாகப் பொருத்திக் கொள்க.
இவர்தல் - ஏறுதல்.
இவர் ஊர்தி, வினைத்தொகை, அன்னமும், கலுழனும் ``பறவை`` என

அடங்கின.
`வகையின` என்பதில் சாரியையும், இறுதி நிலையும் தொகுத்தலாயின.
அன்றி, `வகை, ஆகுபெயர்` - என்றலும் ஆம், ``வீரன்`` என்றது ``அரன்`` என்னும் பொருட்டு.

பரியா தனவந்த பாவமும்
பற்றும்மற் றும்பணிந்தார்க்
குரியான் எனச்சொல்லி உன்னுட
னாவன் எனவடியார்க்
கரியான் இவனென்று காட்டுவன்
என்றென் றிவையிவையே
பிரியா துறையுஞ் சடையான்
அடிக்கென்றும் பேசுதுமே. #264

``அடியார்களைப் பிரியாது அவர்களோடு உடன் உறைபவனாகிய சிவபெருமான், பிறர்க்கு அரியவனாயினும், `யான் என்னைப் பணிந்தவர்கட்கு உரியவன்` என்று, சொல்லி உன்னோடு உடன் உறைவான் என்று அவன் அடியவர் சொல்ல, யாம், அவனுடைய அடியவர்களை விட்டு அகலாது வந்து பற்றுகின்ற பாவமும், பற்றும், மற்றும் பழி முதலியனவும் ஆகிய இவை இவை, `அவன் அடியார்க்கு எளியனல்லன்; அவர்கட்கும் அரியவனே` எனக் காட்டுவன்` என்று என்று அவன் திருவடிக்கு என்றும் விண்ணப்பிப்போம்.

விளக்கவுரை

இது, வீர, என்றன்னை விடுதிகண் டாய், விடில்,/# என்னை மிக்கார்
`ஆரடியான்` என்னின், `உத்தரகோச/# மங்கைக்கரசின்
சீரடியார் அடியான்` என்று நின்னைச்/# சிரிப்பிப்பனே.
* என்றது போலப் பிராரத்தத்தை விரைய விலக்காமை பற்றி வருந்திக் கூறியது.
பரிதல் - நீங்குதல்.
`பரியாதனவாய் வந்த` - என ஆக்கம் விரிக்க.
``பணிந்தார்க்கு உரியான் - எனச் சொல்லி, - உன்னுடன் ஆவன் - என`` என்பதை முதலிலும், ``இவை, இவை`` என்பதை ``மற்றும்`` என்பதன் பின்னும் கூட்டியுரைக்க.
`என - என்று அடியவர் சொல்ல` என்க.
``உன்னுடன்`` என்பது வேறு முடிபு ஆகலின் பன்மை யொருமை மயக்கம் இன்று.
`இவன் என்று காட்டுவன்` என்பது பாடம் அன்று.
அடுக்கு, பன்மை குறித்து நின்றது.

பேசுவ தெல்லாம் அரன்திரு

நாமம்அப் பேதைநல்லாள்
காய்சின வேட்கை அரன்பா
லதுவறு காற்பறவை
மூசின கொன்றை முடிமே
லதுமுலை மேல்முயங்கப்
பூசின சாந்தம் தொழுமால்
இவையொன்றும் பொய்யலவே. **#265**

அந்தச் சிறுமியாகிய அழகி பேசுகின்ற பேச்சு முழுதும் சிவன் திருப்பெயர்களேயாய் உள்ளன.
காய்கின்ற சினத்திற்கு முதலாய் உள்ள அவளது வேட்கை, சிவனிடத்தில் உள்ளதான, வண்டுகள் மொய்க்கும் கொன்றையை உடைய அவனது முடியின் மேலது.
அவள் தன் தனங்களின்மேல் பொருந்திய பூசியுள்ள சந்தனக் குழம்பை (`நீயேனும் சிவனை அடையத் தவம் செய்` என்று) அதனைக் கும்பிடுவாள்.
யான் சொல்லிய இவைகள் சிறிதும் பொய்யல்ல.
(மெய்)

விளக்கவுரை

`ஆகவே, இனி இவளை நாம் சிவனுக்கு வரைவு நேர்தலே செய்யத் தக்கது` என்பது குறிப்பெச்சம்.
இது செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.
பக்குவிகளது நிலைமையை அறிவர் அவர்தம் சுற்றத்தார்க்கு உணர்த்துதல் இதன் உள்ளுறை.
``எல்லாம்`` என்பது எஞ்சாமையைக் குறித்தது.
தலைவி அருகில் இல்லாமையால் ``அப்பேதை நல்லாள்`` எனச் சேய்மைச் சுட்டாகச் சுட்டினாள்.

பொய்யா நரகம் புகினுந்
துறக்கம் புகினும்புக்கிங்
குய்யா உடம்பினோ டூர்வ
நடப்ப பறப்பவென்று
நையா விளியினும் நானிலம்
ஆளினும் நான்மறைசேர்
மையார் மிடற்றான் அடிமற
வாவரம் வேண்டுவனே. **#266**

பாவிகட்குத் தப்பாது கிடைக்கின்ற நரகத்திலே நான் புகுந்தாலும், அதைவிட்டுச் சுவர்க்கத்தை அடைந்தாலும், இப்பூமியில் வந்து, வெறுப்பைத்தரினும் விட இயலாத உடம்புகளோடு கூடி, `ஊர்வன`

என்றும் `நடப்பன` என்றும், `பறப்பன` என்றும் பிறப்புக்களை எடுத்து வருந்தி வாழ்ந்து இறக்கினும், (யாதேனும் ஒரு பிறப்பில்) பேரரசனாகி நிலம் முழுவதையும் ஆளினும் நான் வேண்டுவன எல்லாம் நான்கு வேதங்களில் ஒலி பொருந்திய நீல கண்டத்தினை உடைய சிவபெருமானது திருவடிகளை மறவாதிருக் கின்ற அந்த ஒருவரமேயாகும்.

விளக்கவுரை

``புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே - வழுவாதிருக்க வரந்தர வேண்டும்`` * என அப்பர் பெருமான் அருளிச் செய்ததும் காண்க.

வேண்டிய நாள்களிற் பாதியும்
கங்குல் மிகவவற்றுள்
ஈண்டிய வெந்நோய் முதலது
பிள்ளைமை மேலதுமூப்
பாண்டின அச்சம் வெகுளி
அவா வழுக் காறிங்ஙனே
மாண்டன சேர்தும் வளர்புன்
சடைமுக்கண் மாயனையே. **#267**

(படைப்போன் ஆகிய நான்முகக் கடவுள்) மக்களைப் படைக்கும் பொழுது `ஒவ்வொருவரும் இவ்வுடம்போடு கூடி இத்துணை ஆண்டுகள் வாழ்க` என வேண்டி வரையறுக் கின்றான்.
அவ் ஆண்டுகள் அனைத்தும் மக்களுக்கு வாழும் நாளாக அமைவதில்லை.
பொதுவாக ஒரு பாதி ஆண்டுகள் இரவுப் பொழு தாகி விடுகின்றன.
(இரவு வாழ்க்கை வாழ்க்கையன்று) மற்றொரு பாதி ஆண்டுகளே பகலாய் மிஞ்ச, அவைகளிலும் பலவாய்த் திரண்ட கொடிய நோய்கள் உளவாகும்.
இனி, வரையறுக்கப்பட்ட ஆண்டு களில் தொடக்கப்பகுதி குழவிப் பருவமாய்க் கழிகின்றது.
முடிவுப் பகுதி முதுமைப் பருவமாய்க் கழிகின்றது.
(இடையில் எஞ்சும் ஒருசில ஆண்டுகளில் என்ன செய்ய இயலும்!) அவைகளிலும் `அச்சம், வெகுளி, அவா அழுக்காறு` என இப்படி ஆண்டுகள் கழிந்தோடிப் போகின்றன.
ஆகையால் (யாம் மிக இளைய பருவத்திற்றானே வேறு எதனையும் பொருட்படுத்தாமல்) நீண்ட, புல்லிய சடையையும், மூன்று கண்களையும் உடைய கள்வனைக் கண்டறிந்து, அவன் திருவடிகளையே புகலிடமாக அடைவோம்.

விளக்கவுரை

வேண்டுதல் - விரும்புதல்.
அஃது அதன்படி வரை யறுத்தலாகிய தன் காரியம் தோற்றி நின்றது.
இதற்கு வினைமுதல் வருவிக்கப்பட்டது.
``பாதியும்`` என்னும் உம்மை சிறப்பு.
கங்குல் இரவு.
`கங்குல் ஆம், பிள்ளைமை ஆம், மூப்பும் ஆம்` என்க.
மிகுதல்- எஞ்சுதல்.
ஈண்டுதல் - திரளுதல்.
ஆண்டின - `ஆண்டு` எனப்படும் காலங்கள்.
`கள்வன்` என்றது, எளிதில் அகப்படாமை பற்றி.

மாயன்நன் மாமணி கண்டன்
வளர்சடை யாற்கடிமை
ஆயின தொண்டர் துறக்கம்
பெறுவது சொல்லுடைத்தே
காய்சின ஆனை வளரும்
கனக மலையருகே
போயின காக்கையும் அன்றே
படைத்தது பொன்வண்ணமே. **#268**

எளிதில் அகப்படாமை பற்றி, `கள்வன்` எனப் படுகின்ற, நல்ல, உயர்ந்த நீலமணி போலும் கண்டத்தையுடைய வனும், நீண்ட சடையை உடையவனுமாகிய சிவனுக்குத் தொண்டு பூண்ட அடியார்கள் யாதோர் உடம்பினையும் பற்றா நிலையாகிய வீட்டைப் பெறுதல் உண்மையே. எங்ஙனம் எனில், பொன் மலையை அடுத்த காக்கையும் அப்பொழுதே பொன்னிறத்தைப் பெற்று விடுகின்றது.

விளக்கவுரை

இஃது எடுத்துக்காட்டுவமை.
தன்னைச் சார்ந்த பொருளைத் தன் வண்ணம் ஆக்குதல், சிவனுக்கும், செம்பொன் மலைக்கும் இடையேயுள்ள பொதுத் தன்மை.
சேர்வார் தாமே தானாகச் செயுமவன் என ஞானசம்பந்தர் அருளிச் செய்தது காண்க.
செம்மைச் சிவமேரு சேர்கொடி யாமே என்பது திருமந்திரம்.
கொடி - காக்கை.
``சொல்`` என்றது பொருளை.
``காய்சின ஆனை வளரும்`` என்றது கனக மலைக்கு அடைமொழி.

அன்றுவெள் ளானையின் மீதிமை

யோர்சுற் றணுகுறச்செல்
வன்றொண்டர் பின்பரி மேற்கொண்டு
வெள்ளி மலைஅரன்முன்
சென்றெழில் ஆதி உலாஅரங்
கேற்றிய சேரர்பிரான்
மன்றிடை ஓதுபொன் வண்ணத்
தந்தாதி வழங்கிதுவே.

#269

இதிற் குறிக்கப்பட்ட வரலாற்றைத் திருத் தொண்டர் புராணத்துக்
கழறிற்றறிவார் நாயனார் புராணத்தால் அறிக.
இது பிற்காலத்து ஆன்றோரால் செய்யப்பட்டது.

விளக்கவுரை

சுற்று - எப்பக்கத்திலும்.
மன்று - தில்லையம்பலம், பொன்வண்ணத் தந்தாதியாவது, இவ்வாறு வழங்குகின்ற இதுவே` என முடிக்க.
பொன்வண்ணத் தந்தாதி முற்றிற்று.

சேரமான்பெருமாள் நாயனார் - திருவாரூர் மும்மணிக்கோவை

விரிகடல் பருகி அளறுபட் டன்ன
கருநிற மேகம் கல்முக டேறி
நுண்துளி பொழிய நோக்கி ஒண்தொடி
பொலங்குழை மின்னப் புருவ வில்லிட்
டிலங்கெழிற் செவ்வாய்க் கோபம் ஊர்தரக்
கைத்தலம் என்னும் காந்தள் மலர
முத்திலங் கெயிறெனும் முல்லை அரும்பக்
குழலுஞ் சுணங்குங் கொன்றை காட்ட
எழிலுடைச் சாயல் இளமயில் படைப்ப
உள்நிறை உயிர்ப்பெனும் ஊதை ஊர்தரக்
கண்ணீர்ப் பெருமழை பொழிதலின் ஒண்ணிறத்
தஞ்சனக் கொழுஞ்சே றலம்பி யெஞ்சா
மணியும் பொன்னும் மாசறு வயிரமும்
அணிகிளர் அகிலும் ஆரமும் உரிஞ்சிக்
கொங்கை யென்னுங் குவட்டிடை இழிதரப்
பொங்குபுயல் காட்டி யோளே கங்கை
வருவிசை தவிர்த்த வார்சடைக் கடவுள்
அரிவை பாகத் தண்ணல் ஆரூர்
எல்லையில் இரும்பலி சொரியும்
கல்லோ சென்ற காதலர் மனமே. **#270**

பொருள்வயிற் சென்ற தலைவர் குறித்த கார்ப் பருவமும் யாவரும் அறிய வந்திறுத்தது.
அதனால் ஆற்றாமை காரண மாக இவளும் (தலைவியும்) மற்றொரு முகிலின் தன்மையை எய்தி னாள்; தலைவர் தலைவியிடத்து மாறாக் காதலராயினும் (குறித்தபடி வாராமையால்) அவர் மனம் கல்லுப்போல வலிதாகிவிட்டதோ!

விளக்கவுரை

``விரிந்த கடல் நீரைத் தான் முற்றப் பருகியதனால் அது சேறாயிற்றுப் போலத் தோன்றுதற்கு ஏதுவான கரிய மேகம் மலை முகட்டில் ஏறி நுண் துளி பொழிய, அதனை நேரே கண்டு, தலைவி தானும் தனது காதணியாகிய மின்னல் மின்ன, புருவமாகிய வான வில்லைத் தோற்றுவித்து, விளங்குகின்ற எழிலையுடைய தனது சிவந்த வாயாகிய, `இந்திரகோபம்` என்னும் வண்டு ஊர்தர, `அகங்கைகள்` என்னும் காந்தட் பூக்கள் விரிய, முத்துப்போல விளங்குகின்ற பற்க ளாகிய

முல்லை அரும்புகள் அரும்ப, கூந்தல் கொன்றைக் காயையும், தேமல் கொன்றைப் பூவையும், எழுச்சியையுடைய சாயல் மயிலையும் தோற்றுவிக்க, உள்ளிருந்து வெளிவரும் நெட்டுயிர்ப்பாகிய காற்று உடன் வீச, தனது கண்ணீராகிய பெருமழையைப் பொழிந்து, அத னானே கண்ணில் உள்ள மையாகிய கொழுவிய சேறு அலம்பப்பட்டு, அந்நீராகிய அருவி தன் கொங்கைகளாகிய மலைகளுக்கு இடையே, மாணிக்கம், பொன், குற்றம் அற்ற வைரம், அழகுமிகுந்த அகில், சந்தனம் இவைகளைத் தேய்த்து ஒழுகுதலால் மற்றொரு மேகமாம் தன்மையை விளக்கினாள்.

தலைவர் காதலுடை யாராயினும், (வந்து சேராமையால் அவர் மனம் இப்பொழுது கல்லாகிவிட்டதோ!`` எனப் பொருள் உரைத்துக் கொள்க.

``தவிர்த்த`` என்னும் பெயரெச்சம், ``சடை`` என்பதனோடு முடிந்தது.

`அண்ணலுக்கு` என நான்காவது விரிக்க.

பலி சொரியும் கல், பலிபீடம்.

பலி சொரியப்படும் கல் வலிதாதலோடு, பலியொன்றற்கன்றி பிறிதொன்றற்கு இடமாகாமையால் அதுவே கைப்பொருளுக்கன்றிப் பிறிதொன்றற்கு இடமாகாத மனத்திற்கு உவமையாயிற்று.

பொருளே காதலர் காதல்
அருளே காதல் என்றி நீயே

என்னும் அகப்பாட்டினையும் காண்க.

இப்பாட்டு உரிப் பொருளாற் பாலையாயிற்று.

இது நேரிசையாசிரியப்பா.

மனம்மால் உறாதேமற் றென்செய்யும் வாய்ந்த
கனமால் விடையுடையான் கண்டத் - தினமாகித்
தோன்றினகார் தோன்றிலதேர் சோர்ந்தனசங் கூர்ந்தனபீர்;
கான்றனநீர் ஏந்திழையாள் கண்.

#271

(தலைவர் குறித்துச் சென்ற கார்ப் பருவம் வந்து விட்டமையால்) பெருமை பொருந்திய திருமாலாகிய இடபவாகனத்தையுடை சிவபெருமானது கண்டத்திற்கு ஒத்த வகையினையுடையவாய் முகில்கள் கண் முன்னே தோன்றிவிட்டன.

ஆயினும் தலைவர் ஊர்ந்து சென்றதும், சேமமாகக் கொண்டு சென்றவும் ஆகிய தேர்கள் எம் கண் முன் தோன்றவில்லை.

ஆகவே, இவளுடைய (தலைவியுடைய) மனம் மயக்கம் கொள்ளாது என் செய்யும்! (ஒன்றையும் செய்ய மாட்டாது.

ஆகையால்) இவள் கையில் உள்ள சங்க வளையல்கள் கழன்று வீழ்ந்தன; மேனி முழுவதும் பசலைகள் போர்த்தன; கண்கள் நீரைப்

பொழிந்தன.

விளக்கவுரை

`இனி இறந்துபடுவாள் போலும்` என்பது குறிப்பெச்சம்.
இது பருவங்கண்டு ஆற்றாளாய தலைவியது நிலை கண்டு தோழி வருந்திக் கூறியது.
இதுவும் உரிப் பொருளாற் பாலையே.
`கனம் வாய்ந்த மால்` என மாற்றிக் கொள்க.

கண்ணார் நுதல்எந்தை காமரு
கண்டம் எனவிருண்ட
விண்ணால் உருமொடு மேலது
கீழது கொண்டல்விண்ட
மண்ணார் மலைமேல் இளமயில்
ஆல்மட மான் அனைய
பெண்ணாம் இவள்இனி என்னாய்க்
கழியும் பிரிந்துறைவே. **#272**

மேகம், `கண் பொருந்திய நெற்றியையுடைய எம் தந்தையாகிய சிவபெருமானது அழகிய கண்டம்` என்று சொல்லும்படி இருண்டு, தனக்கு இடமாகிய விண்ணின்கண் இடியுடன் மேலே உளதாயிற்று.
விசாலித்த நிலத்தின்கண் மலையிடத்து இளமையான மயிலின் ஆட்டம் கீழே உளதாயிற்று.
(எனவே,) விண்ணும், மண்ணும் கார்ப் பருவம் வந்ததைத் தெளிவாகக் காட்டி நிற்றலால்) இளைய மான் போலும் பெண்ணாகிய இவள் தலைவனைப் பிரிந்து உறையும் தனிமை இனி என்னாய்க் கழியுமோ!

விளக்கவுரை

`இறந்துபாடாய்க் கழியுமோ` என்றபடி ``இருண்ட`` என்னும் பெயரெச்சம் ``விண்`` என்னும் இடப் பெயர் கொண்டது.
`இருண்டு` என்றே பாடம் ஓதலும் ஆம்.
விண்ட - அகன்ற.
ஆல் - ஆலுதல்; முதனிலைத் தொழிற் பெயர்.
`கொண்டல் மேலது; மயில் ஆலுதல் கீழது; இனி என்னாய்க் கழியும்` என்க.
இதன் திணையும், துறையும் மேலனவே.

உறைகழி ஒள்வாள் மின்னி உருமெனும்
அறைகுரல் முரசம் ஆர்ப்பக் கைபோய்
வெஞ்சிலை கோலி விரிதுளி என்னும்
மின்சரந் துரந்தது வானே நிலனே

கடிய வாகிய களவநன் மலரொடு
கொடிய வாகிய தளவமும் அந்தண்
குலைமேம் பட்ட கோடலுங் கோபமோ
டலைமேம் பட்ட காந்தளும் இவற்றொடு
காயா வெந்துயர் தருமே அவரே
பொங்கிரும் புரிசை போக்கற வளைஇக்
கங்குலும் பகலும் காவல் மேவி
மாசறு வேந்தன் பாசறை யோரே
யானே இன்னே
அலகில் ஆற்றல் அருச்சுனற் கஞ்ஞான்
றுலவா நல்வரம் அருளிய உத்தமன்
அந்தண் ஆரூர் சிந்தித்து மகிழா
மயரிய மாக்களைப் போலத்
துயருழந் தழியக் கண்துயி லாவே. **#273**

வானம்; தன்னிடத்து உள்ள மேகங்களின்வழி மின்னலாகிய ஒளி பொருந்திய வாளை உறையினின்றும் உருவி வீசி, இடி முழக்கமாகிய போர்முரசம் ஒலிக்க, எவ்விடமும் அகப்படக் கொடிய வில்லை (வானவில்லை) வளைத்து, எங்கும் நிறைந்த மழைத் தாரைகளாகிய வெள்ளிய அம்புகளை ஏவிப் போர்புரியாநின்றது; நிலம், கடிய களாமலர், கொடிய முல்லை மலர், குலையாக மேம்பட்ட அழகிய, குளிர்ந்த வெண்காந்தள் மலர், அலைவால் மேம்பட்ட செங்காந்தள் மலர், `இந்திர கோபம்` என்னும் வண்டு காயா மலர் இவைகளுடன் கூடி கொடிய துன்பத்தைத் தாராநின்றது.

அவரோ (தலைவரோ) பகை மன்னரது காவல் மிக்க அரணை, வெளி வருவாரையும், உட்புகுவாரையும் அவற்றைச் செய்யாதவாறு தடுத்து முற்றுகையிட்டு, இரவும் பகலும் காவல் புரிதலை விரும்பிக்குற்றம் அற்றவனாகிய அரசன் பாசறைக்கண்ணே இருத்தலால் (எம்மையும், எமக்கு அவர் சொல்லிச் சென்ற சொல்லையும் நினைப்பாரல்லர்; ஆதலின்) யானோ இவ்விடத்திலே, அளவற்ற ஆற்றல் வாய்ந்த அருச்சுனனுக்கு அக்காலத்தில் அவன் போரில் இறந்து படாது வெற்றி பெறும்படி நல்ல வரத்தைக் கொடுத்த மேலோனாகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள, அழகிய, குளிர்ச்சி மிக்க திருவாரூரை நினைத்து மகிழும் நல் ஊழ் இல்லாது, உலக மயக்கத்திற் கிடக்கும் மாக்களைப் போலத் துயரத்தையே நுகர்ந்து இறந்துபடும்படி என்னுடைய கண்கள் உறங்குகின்றில.

விளக்கவுரை

`இனியான் என் செய்வேன்` என்பது குறிப்பெச்சம்.

இதுவும் உரிப்பொருளாற் பாலை.
வினைவயிற் பிரிந்த தலைவன் நீடத் தலைவி பருவங் கண்டு ஆற்றாமை துறை.
மயரிய - மயங்கிய.
``கடிய, கொடிய`` என்பன, `மணம் பொருந்திய, கொடியில் உள்ள என்னும் பொருளவாயினும் `கடுமையுடைய, கொடுமையுடைய` பிற நயங் களையுந் தந்தன.
இதனுள் இயைபுருவகம் வந்தமை காண்க.
இஃது இடையே குறளடி பெற்றமையால் இணைக்குறள் ஆசிரியப்பா.

துயிலாநோய் யாம்தோன்றத் தோன்றித்தீத் தோன்ற
மயிலால வந்ததால் மாதோ - அயலாய
அண்டத்துக் கப்பாலான் அந்திங்கட் கண்ணியான்
கண்டத்துக் கொப்பாய கார். **#274**

துயிலாமைக்கு ஏதுவாகிய துன்பம் எம்மிடத்திலே தோன்றுமாறு தோன்றிப் பூவாகிய நெருப்புத் தோன்றும்படியும், மயில்கள் ஆடும்படியும் அடுக்கடுக்காய் உள்ள பல அண்டங்கட்கும் அப்பால் உள்ள பல அண்டங்கட்கும் அப்பால் உள்ளவனும், அழகிய திங்களாகிய கண்ணியைச் சூடினவனும் ஆகிய சிவபெருமானது கண்டத்துக்கு ஒப்பாய் உள்ள முகில் வந்துவிட்டது.

விளக்கவுரை

`இனித் தலைவர் வருவார்` என்பது குறிப்பெச்சம்.
`வாராராயின் யாம் துயிலேம் என்பதை அவர் அறிவார்` என்றற்கு, `துயிலாநோய் யாம் தோன்றக் கார் வந்தது` என்றாள்.
இது, `பருவம் கண்டு தலைவி ஆற்றாள்` எனக் கருதி ஆற்றுவித்தற் பொருட்டுத் தலைவனை இயற் பழித்த தோழிக்குத் தலைவி இயற்பட மொழிந்தது.
``நோய் யாம் தோன்ற`` என இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத் தின் மேல் நின்றது.
தோன்றித் தீ, உருவகம்.
ஆல், மாது, ஓ அசைகள்.

காரும் முழக்கொடு மின்னொடு
வந்தது காதலர்தம்
தேருந் தெருவுஞ் சிலம்பப்
புகுந்தது சில்வளைகள்
சோருஞ் சிலபல அங்கே
நெரிந்தன துன்னருநஞ்
சாரும் மிடற்றண்ணல் ஆரூரன்

ஐய அணங்கினுக்கே. **#275**

மேகமும் இடியோடும், மின்னலோடும் வந்தது.
தலைவர் சொல்லியபடி அவரது தேரும், தெருவும் ஆரவாரிக்கும் படி புகுந்தது.
நினைத்தற்கரிய விடத்தை உண்ட கண்டத்தினை உடைய முதல்வராகிய சிவபெருமானது ஆரூரை ஒத்தவளாகிய அழகிய தலைவி தன் கைவளைகள் மெலிவால் கழல்வனவாய் இருந்தவை இப்பொழுது பூரிப்பால் நெரிவனவாயின.

விளக்கவுரை

இது, பிரிந்திருந்த தலைவன் தான் குறித்தபடி வந்தமை யறிந்து கண்டோர் கூறியது.
``காரும், தேரும்`` என்னும் உம்மைகள் எதிரது தழுவியதும், இறந்தது தழுவியதுமாய எச்ச உம்மைகள்.
``தெரு வும்`` என்னும் உம்மை உயர்வு சிறப்பு.
`அன்ன` என்பது கடைக் குறைந்து நின்றது.

அணங்குறை நெடுவரை அருமைபே ணாது
மணங்கமழ் தெரியல் சூடி வைகலும்
விடுசுடர் நெடுவேல் முன்னடி விளக்காக்
கடுவிசைக் கான்யாற்று நெடுநீர் நீந்தி
ஒருதனி பெயரும் பொழுதில் புரிகுழல்
வான்அர மகளிர்நின் மல்வழங் ககலத்
தானாக் காத லாகுவர் என்று
புலவி உள்ளமொடு பொருந்தாக் கண்ணள்
கலைபிணை திரியக் கையற வெய்தி
மெல்விரல் நெரித்து விம்மி வெய்துயிர்த்து
அல்லியங் கோதை அழலுற் றாஅங்
கெல்லையில் இருந்துயர் எய்தினள் புல்லார்
திரிபுரம் எரிய ஒருகணை தெரிந்த
அரிவை பாகத் தண்ண லாரூர்
வளமலி கமல வாள்முகத்
திளமயிற் சாயல் ஏந்திழை தானே. **#276**

தலைவ, தெய்வம் தங்கும் பெரிய மலைகளை `அவை அத்தன்மைய` என்றும், `ஏறுதற்கு அரியன` என்றும் எண் ணாது, நறுமணம் கமழும் மலையைச் சூடிக் கொண்டு, நாள்தோறும், வீசுகின்ற ஒளியையுடைய நீண்ட உனது வேற்படையே உனக்கு முன்னே வழியை விளக்கும் விளக்காய் அமைய, மிக்க வேகத்தை யுடைய கான்யாற்று நீண்ட நீரை நீந்திக் கடந்து, நீ ஒருவனே தனியாய் வரும்பொழுது, `பின்னப்பட்ட

கூந்தலையுடைய தேவ மகளிர் உன்னை, `தேவன்` என மருண்டு, திண்மை வாய்ந்த உனது மார்பின் கண் பொருந்துதற்கு நீங்காக் காதல் மிகுகின்றவராய் உன் குணத்தை வேறுபடுத்திவிடுவர்` என்று, பகைவரது மூன்று ஊர்களும் ஒருங்கே எரிந்தொழியும்படி ஓர் அம்பையே ஆராய்ந்து எடுத்து எய்த, மாதொரு பாகனாகிய இறைவனது திருவாரூரில் நீர் வளத்தாற் சிறந்த பொய்கையிற் பூத்த தாமரை மலர் போலும் ஒளி பொருந்திய முகத்தை யும், இளைய மயிலினது சாயல்போலும் சாயலினையும், ஏந்திய அணிகலங்களையும் உடைய என் தோழி உன்னை வெறுக்கும் உள்ளத்துடன் இமை குவியாத கண்களையுடையவளாய், எங்கள் குடில்களையடுத்து ஆண்மான்கள் பெண்மான்களோடே பிரியாது திரிதலைக் கண்டு செயலற்று, ஆற்றாமையால் கையிலுள்ள மெல்லிய விரல்களை நெரித்துக் கொண்டு, விம்மி வெப்பமாக மூச்செறிந்து, அக இதழோடு கூடிய பலவகை மலர்களால் தொடுக்கப்பட்ட மாலை ஒன்று கண்ணீர் விட்டு அழுதல்போல (இரவு முழுதும்) எல்லையில்லாத பெருந்துயரை எய்தி அழாநின்றாள்; (அவளை யான் ஆற்றுவிப்பது எங்ஙனம்?)

விளக்கவுரை

ஈற்றில் வருவித்துரைத்தது குறிப்பெச்சம்.
இது தலைவன் களவொழுக்கத்தை நீட்டியாது வரைதலை வேண்டித் தோழி இரவு வருவானை `வாரற்க` என இரவுக் குறி விலக்கியது.
இது முதல் கரு, உரி முப்பொருளாலும் குறிஞ்சி.
``கலை பிணை திரிய`` என்றது, `நீயும் அதுபோல இவளை வரைந்து கொண்டு பிரியாதிருத்தல் வேண்டும்`` என்பதைக் குறித்த உள்ளுறை யுவமம்.
`மணங்கமழ் தெரியல் சூடி`` என்றது, அவரது மருட்சிக்கு மற்றுமொரு காரணம் உண்மை கூறியது.

இழையார் வனமுலை யீர்இத்தண் புனத்தின்
உழையாகப் போந்ததொன் றுண்டோ - பிழையாச்சீர்
அம்மான் அனலாடி ஆரூர்க்கோன் அன்றுரித்த
கைம்மாநேர் அன்ன களிறு.

#277

அணிகலன்கள் நிறைந்த, அழகிய தனங்களை யுடையவர்களே, வறிது படாத புகழையுடைய பெரியோனும், தீயில் நின்று ஆடுவோனும், திருவாரூரில் உள்ள முதல்வனும் ஆகிய சிவபெருமான் முற்காலத்தில் உரித்த யானையே போன்ற அந்த யானை இந்தக் குளிர்ச்சியான புனத்தின் பக்கமாகப் போந்ததொரு செயலை நீவிர் கண்டது உண்டோ?

விளக்கவுரை

இஃது, இயற்கைப் புணர்ச்சியிலும், இடந்தலைப் பாட்டிலும், பாங்கற் கூட்டத்திலும் தலைவியைக் கூடி இன்புற்ற தலை வன் பாங்கியிற் கூட்டத்தின் பொருட்டு அவளை மதியுடம்படுத்தற்கு அவர் இருவரும் உள்வழிச் சென்று வேழம் வினாயது.
``அன்ன`` என்பது சுட்டு.

களிறு வழங்க வழங்கா
அதர்கதிர் வேல்துணையா
வெளிறு விரவ வருதிகண்
டாய்விண்ணினின் றிழிந்து
பிளிறு குரற்கங்கை தாங்கிய
பிஞ்ஞகன் பூங்கழல்மாட்
டொளிறு மணிக்கொடும் பூண்இமை
யோர்செல்லும் ஓங்கிருளே. **#278**

யானைகள் உலாவுதலால் மக்கள் செல்லாத வழியில் கையில் உள்ள வேல் ஒன்றே துணையாக, ஆகாயத்தினின்றும் இறங்கிய, ஒலிக்கும் ஒலியையுடைய கங்கையைச் சடையில் தாங்கிய தலைக் கோலத்தையுடைய சிவபெருமானது அழகிய திருவடிகளை வணங்குதற்பொருட்டு அவற்றை நோக்கி, ஒளிவீசுகின்ற இரத்தினங்களால் ஆயவளைந்த அணிகலன்களை அணிந்த தேவர் மட்டுமே செல்கின்ற மிகுந்த இருட் காலத்தில் நீ அத்தேவர்காண இங்கு வருகின்றாய்!

விளக்கவுரை

`இது தகாது` என்பது குறிப்பெச்சம்.
இதன் திணையும், துறையும் மேல், ``அணங்குறை நெடுவரை`` எனப் போந்த பாட்டின வேயாம்.
`அர்த்த யாம பூசையில் தேவர் சிவபெருமானைச் சென்று வணங்குவர்` என்பது பற்றி ``பிஞ்ஞகன் பூங்கழல் மாட்டு இமையோர் செல்லும் இருள்`` என்றார்.
கண்டாய், முன்னிலை அசை.

இருள்புரி கூந்தலும் எழில்நலம் சிதைந்தது
மருள்புரி வண்டறை மாலையும் பரிந்தது
ஒண்ணுதல் திலகமும் அழிந்தது கண்ணும்
மைந்நிறம் ஒழிந்து செந்நிறம் எய்தி
உள்நிறை கொடுமை உரைப்ப போன்றன
சேதகம் பரந்தது செவ்வாய் மேதகு

குழைகெழு திருமுகம் வியர்ப்புள் ளூறுத்தி
இழைகெழு கொங்கையும் இன்சாந் தழீஇக்
கலையுந் துகிலும் நிலையிற் கலங்கி
என்னிது விளைந்த வாறென மற்றி
தன்னது அறிகிலம் யாமே செறிபொழில்
அருகுடை ஆரூர் அமர்ந்துறை அமுதன்
முருகுவிரி தெரியல் முக்கண் மூர்த்தி
மராமரச் சோலைச் சிராமலைச் சாரல்
சுரும்பிவர் நறும்போது கொய்யப்
பெருஞ்செறு வனத்தில்யான் பிரிந்ததிப் பொழுதே. **#279**

நெருங்கிய சோலைகளைப் பக்கத்தே உடைய திருவாரூரில் விரும்பி உறைகின்ற அமுதமாய் உள்ளவனும், நறுமணத்தோடு மலர்கின்ற மாலையை அணிந்தவனும், மூன்று கண்களையுடையவனும் ஆகிய இறைவனது மராமரச் சோலையையுடைய திருச்சிராமலைச் சாரலில், வண்டுகள் வீழும் நறிய போது சிலவற்றைக் கொய்து வருதற் பொருட்டு, அடர்த்தியான காட்டில் இவளை யான் இப்பொழுதுதான் பிரிந்து போய்வந்தேன்.

(நெடும்பொழுது தாழ்த்திலேன்; வந்து பார்க்கும் பொழுது) இவளுடைய இருள் போன்ற கூந்தல் எழுச்சியுடைய அழகு சிதைந்து குலைந்துள்ளது; வியப்பைத் தரும், வண்டுகள் ஒலிக்கும் மாலை அலங்கோலமாகக் கசங்கியுள்ளது, ஒளிபொருந்திய நெற்றியில் இட்டதிலகம் அழிந்துவிட்டது.

கண்களில் தீட்டிய மை கலைய, கண்கள் சிவந்து, எவையோ சில கொடுமையைக் கூறுவனபோல்வன போன்றன; சிவந்த வாய் அந்நிலை குலைந்தது; காதில் குழையணிந்தமையால் அழகிதாய்த் தோன்றும் முகம் வெயர்ப்புடையதாக, அணிகலம் பொருந்திய தனங்களில் பூசப்பட்ட சந்தனம் அழிந்து, மேகலையும் தனங்களில் பூசப்பட்ட சந்தனம் அழிந்து, மேகலையும், உடையும் நெகிழ்ந்தமையால் `இவ்வாறான இந்நிலை எத்தன்மையின் விளைவு` என அறிய யாம் இயலேம்.

விளக்கவுரை

இது, தலைவி தலைவனது களவொழுக்கத்துக்குட்பட்ட மையைத் தலைவியது தோற்றம் பற்றித் தோழி குறிப்பால் உணர்ந்தது, திணை குறிஞ்சி.

``செறி பொழில்`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.

பொழுது கழிந்தாலும் பூம்புனங்காத் தெள்க
எழுது கொடியிடையாய் ஏகான் - தொழுதமரர்
முன்னஞ்சேர் மொய்கழலான் முக்கணான் நான்மறையான்

மன்னுஞ்சேய் போல்ஒருவன் வந்து. #280
தேவர்கள் வணங்கித் தனது சந்நிதியை அடைகின்ற, நெருங்கிய கழல் அணிந்த திருவடியை உடையவனும், மூன்று கண்களை உடையவனும், நான்கு வேதங்களின் முதல்வனும் ஆகிய சிவபெருமான்தன் மைந்தனாகிய முருகன்போன்ற ஒருவன் நமது அழகிய புனத்திலே வந்து, பொழுது போய்விட்டாலும் தான் போகாது, யாவரும் இகழும்படி காத்து நிற்கின்றான்; ஓவியத்தில் எழுதப்பட்டது, போன்ற அழகுடைய கொடிபோலும் இடையை உடையவளே!

விளக்கவுரை

`அவனுக்கு நான் என்ன சொல்வது` என்பது குறிப் பெச்சம்.
இது, தலைவனை மடல் விலக்கி அவனுக்குக் குறைநேர்ந்த தோழி தலைவியிடம் சென்று மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தது.
இதுவும் குறிஞ்சியே.

வந்தார் எதிர்சென்று நின்றேற்கு
ஒளிரும்வண் தார்தழைகள்
தந்தார் அவையொன்றும் மாற்றகில்
லேன் தக்கன் வேள்விசெற்ற
செந்தா மரைவண்ணன் தீர்த்தச்
சடையன் சிராமலைவாய்க்
கொந்தார் பொழிலணி நந்தா
வனத்துக் குளிர்புனத்தே. #281

(தோழீ!) தக்கன் வேள்வியை அழித்த, செந்தாமரை மலர்போலும் நிறத்தையும், கங்கையைத் தரித்த சடையையும் உடைய சிவபெருமானது திருச்சிராமலையின் கண், பூங்கொத்துக்கள் நிறைந்த சோலைகளால் சூழப்பட்டு, நமக்கே உரித்தாய் நாம் சென்று விளையாடுகின்ற நந்தவனத்தின் நடுவிலே நாம் இருக்கின்ற புனத்தின் கண் ஆடவர் ஒருவர் தனியே வந்தார்.
(`இஃது என்` என்று வினாவ) யான் அவர் எதிரே சென்றபொழுது அவர் அழகிய மாலையையும், தழையையும் (`இவை எங்கும் கிடைத்தற்கு அரிய` என்று சொல்லித்) தந்தார்.
அவற்றுள் ஒன்றையும் யான் மறுக்க மாட்டாதவளாய் வாங்கிக் கொண்டேன்.

விளக்கவுரை

இதுவும் மேற்கூறிய வகையில் தழை ஏற்பித்தது.

புனமயிற் சாயற் பூங்குழல் மடந்தை
மனைமலி செல்வம் மகிழா ளாகி

ஏதிலன் ஒருவன் காதலன் ஆக
விடுசுடர் நடுவண்நின் றடுதலின் நிழலும்
அடியகத் தொளிக்கும் ஆரழற் கானத்து
வெவ்வினை வேடர் துடிக்குரல் வெரீஇ
மெய்விதிர் எறியுஞ் செவ்விய ளாகி
முள்ளிலை யீந்தும் முளிதாள் இலவமும்
வெள்ளிலும் பரந்த வெள்ளிடை மருங்கில்
கடுங்குரற் கதநாய் நெடுந்தொடர் பிணித்துப்
பாசந் தின்ற தேய்கால் உம்பர்
மரையதள் வேய்ந்து மயிர்ப்புன் குரம்பை
விரிநரைக் கூந்தல் வெள்வாய் மறத்தியர்
விருந்தா யினள்கொல் தானே திருந்தாக்
கூற்றெனப் பெயரிய கொடுந்தொழில் ஒருவன்
ஆற்றல் செற்ற அண்ணல் ஆரூர்ச்
செய்வளர் கமலச் சீறடிக்
கொவ்வைச் செவ்வாய்க் குயில்மொழிக் கொடியே.

#282

முறைமையறியாத, `யமன்` என்னும் பெயரையும், கொடிய தொழிலையும் உடைய ஒருவனது வலிமையை அழித்த பெருமான் எழுந்தருளியுள்ள திருவாரூர் வயல்களில் பூத்துள்ள தாமரை மலர் போலும் சிறிய பாதங்களையும் கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயையும், குயிலின் குரலைப் போன்ற குரலையும், அழகிய மயில்போன்ற சாயலையும், பூவையணிந்த கூந்தலையும் உடையவள் ஆகிய, பூங்கொடி போல்பவளாகிய என் மகள், இந்த இல்லத்தில் நிறைந்த செல்வத்தில் திளைத்தலை விரும்பாதவளாய், அயலான் ஒருவனைத் தன் காதலனாகக் கொண்டு, (அவன்பின்னே போய்) ஒளியை வீசுகின்ற செங்கதிர் வானத்தின் உச்சியில் நின்று காய்தலால் நிலத்தில் உள்ளோரது நிழல்களும் அவர் அவர் அடிக்கீழ் வந்து ஒடுங்குகின்ற (எனவே, எந்த நிழலும் இல்லாத) பொறுத்தற்கரிய வெப்பத்தையுடைய சுரத்தின்கண் கொடுந்தொழிலை உடைய மறவர் கள் முழக்குகின்ற பறைகளின் ஓசையைக் கேட்டு உடம்பு நடுங்கும் நிலையை உடையவளாய் முள்போன்ற இலையை யுடைய ஈச்ச மரமும், அடிமரமும் உலர்ந்துபோன இலவ மரமும், (இலையுதிர்ந்த) விளா மரமும் ஆங்காங்கு உள்ள, மறைவு யாதும் இன்றி வெட்ட வெளியாகிய இடத்தில், கடுமையான குரலையுடைய, சினம் பொருந்திய நாய்களை நீண்ட சங்கிலியாற் கட்டிவைத் திருத்தலால் அந்தச் சங்கிலியால் தேய்ந்து போன கால்களின் மேல் மான்தோலை வேய்ந்து, அதனால்

அதன் மயிர்கள் தோன்றும் கூரையையுடைய சிறிய குடில்களில் வாழும், பரட்டையாய் நரைத்துப்போன தலை மயிரையும், பாசடை இன்மையின் வெளுத்த வாயினையும் உடைய மறத்தியர்களுக்கு விருந்தாய்ப் போய்த் தங்கினாளோ!

விளக்கவுரை

`ஒன்றும் தெரியவில்லை` என்பது குறிப்பெச்சம் இது தலைவி தலைவனோடு உடன்போயினமை யறிந்து செவிலி பின் தேடிச் சென்றது.

கொடியேர் நுடங்கிடையாள் கொய்தாரான் பின்னே
அடியால் நடந்தடைந்தாள் ஆவாக - பொடியாக
நண்ணார்ஊர் மூன்றெரித்த நாகஞ்சேர் திண்சிலையான்
தண்ணாரூர் சூழ்ந்த தடம். **#283**

பகைவரது முப்புரத்தைச் சாம்பல் ஆகும்படி எரித்த. பாம்பே நாணாகச் சேர்ந்த வலிய வில்லை உடைய பெருமானது குளிர்ந்த திருவாரூர்க்கு அயலாக உள்ள கொடிய வழியிலே கொடிபோலத் துவளுகின்ற இடையினையுடைய என் மகள் கத்தரியால் மட்டம் செய்யப்பட்ட மாலையை அணிந்த ஓர் அயலான்பின்னே காலால் நடந்தே சென்றாள்; இஃது இரங்கத் தக்கது.

விளக்கவுரை

`அடைந்தாளாக` என்பது பாடமன்று.

``கொய்தார்`` என்பதனைச் சினைவினை முதல்மேல் ஏற்றப்பட்டதாகக் கொண்டு, `கொய்யப்பட்ட மலரால் ஆகிய மாலை` என்றலும் ஆம். இதுவும் முன்னைப் பாட்டின் துறையே.

``திண்சிலை`` என்றது, `மலையாகிய வில்` என்பதனைக் குறிப்பால் உணர்த்தியது.

தடப்பாற் புனற்சடைச் சங்கரன்
தண்மதி போல்முகத்து
மடப்பால் மடந்தை மலரணைச்
சேக்கையிற் பாசம்பிரீஇ
இடப்பால் திரியின் வெருவும்
இருஞ்சுரஞ் சென்றனளால்
படப்பா லனஅல்ல வால்தமி
யேன்தையல் பட்டனவே. **#284**

தீர்த்தங்களில் ஒன்றாய் இருக்கற்பாலதாய நீரை சடையிலே உடைய சிவபெருமான் அணிந்துள்ள பிறை போலும் நெற்றியையுடைய, பேதைமைப்பாலளாகிய என் மகள் இயல்பாக மலர் அணையாகிய

படுக்கையினின்றும் சிறிது வெறுத்து நீங்கி இடம் மாறினாலும் அஞ்சி வருந்துவாள்.
அத்தகையவள் இப்பொழுது பெரிய பாலை நிலத்திலே நடந்து சென்றாள்.
தமியேன் %

பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி
நட்ட கல்லும் மூதூர் நத்தமும்
பரல்முரம் பதரும் அல்லது படுமழை
வரல்முறை அறியா வல்வெயிற் கானத்துத்
தேன்இவர் கோதை செல்ல மானினம்
அம்சில் ஓதி நோக்கிற்கு அழிந்து
நெஞ்செரி வுடைமையின் விலக்காது விடுக
கொங்கைக் கழிந்து குன்றிடை அடைந்த
கொங்கிவர் கோங்கமுஞ் செலவுடன் படுக
மென்றோட் குடைந்து வெயில்நிலை நின்ற
குன்ற வேய்களும் கூற்றடைந் தொழிக
மாயிருங் கடற்றிடை வைகல் ஆயிரம்
பாவையை வளர்ப்போய் நீநனி பாவையை
விலக்காது பிழைத்தனை மாதோ நலத்தகும்
அலைபுனல் ஆரூர் அமர்ந்துறை அமுதன்
கலையமர் கையன் கண்ணுதல் எந்தை
தொங்கலஞ் சடைமுடிக் கணிந்த
கொங்கலர் கண்ணி யாயின குரவே.

#285

நலத்தால் தகுதிப் பட்ட, அலையும் நீரையுடைய திருவாரூரில் விரும்பி உறைகின்ற அமுதமாகியவனும், மான் பொருந்திய கையை உடையவனும், கண் பொருந்திய நெற்றியை உடையவனும் ஆகிய எம் தந்தை கொன்றை மாலையோடு ஒக்க அணிந்த கண்ணியாதற்கு அமைந்த நறுமணத்தொடு கூடிய மலர்களை யுடைய குராமரமே, போரில் இறந்து பட்டோரது பெயர்களையும், அவர் செய்த வீரச் செயல்களையும் எழுதி நடப்பட்ட கற்களும், பழையனவாகிய குடில்களையுடைய சீறூர்களும், பரற்கற்கள் நிறைந்த அருவழிகளும் அல்லது, வானின்றும் வீழ்கின்ற பெய்தலை ஒரு காலத்தும் கண்டிராத மிக்க வெயிலையுடைய சுரத்தில்; தேன் ததும்பும் மாலையை அணிந்த என் மகள் செல்லும் பொழுதும் மான் கூட்டம் அவளது பார்வைக்குத் தோற்றுப் போன பகைமையால் மனம் வெதும்பி விலக்காதுபோகட்டும்; அவளது கொங்கைகளுக்குத் தோற்றுப் போய் மலையிடத்தே ஓடி நின்ற,

மணம் மிக்க மலர்களை யுடைய கோங்க மரங்கள் அவளை விலக்காமல் பார்த்துக் கொண் டிருக்கட்டும்; அவளது மெல்லிய தோள்களுக்குத் தோற்றுப் போய் வெயிலிலே நின்று வருந்துகின்ற மூங்கில்கள் அவளை விலக்காமல் ஓரிடத்தில் ஒதுங்கியிருக்கட்டும்; பெரிய சுரத்திடையிலே நாள்தோறும் ஆயிரம் பாவைகளைப் பெற்று வளர்க்கின்ற நீ அவளை விலக்காது குற்றத்திற்கு மிகவும் ஆளாயினை.

விளக்கவுரை

`இது நன்றோ` என்றபடி குராமலர் பாவை போலத் தோன்றுதலின், அது பாவையைப் பெற்று வளர்ப்பதாக இலக்கியங் களில் கூறப்படும்.
`பாவையைப் பெற்று வளர்க்கும் அன்பின்மேலும், உனது மலரைச் சிலர் விரும்பியணியும் தகுதியையும் உடைமை யன்றோ` என்றற்கு, ``எந்தை அணிந்த கண்ணியாயின குரவே`` என்றாள்.
`அணிந்த கண்ணிக் கொங்கலர் குரவே` என மாற்றியுரைக்க.
``குரா மலரோடு அரா மதியம் சடைமேற் கொண்டார்`` என்னும் திரு முறையால் *(திருமுறை 6-96-11)*குராமலர் இறைவனுக்கு இனிதாதல் அறிக.
இது மேலைத் துறையில் குரவொடு புலம்பல்.

குரவங் கமழ்கோதை கோதைவே லோன்பின்
விரவுங் கடுங்கானம் வெவ்வாய் - அரவம்
சடைக்கணிந்த சங்கரன் தார்மதனன் றன்னைக்
கடைக்கணித்த தீயிற் கடிது.

#286

குரா மலர் மணம் கமழ்கின்ற மாலையை அணிந்த என் மகள் மாலை யணிந்த வேலை ஏந்தியவன் பின்னே சென்ற கடிய சுரம், கொடிய நஞ்சு பொருந்திய வாயையுடைய பாம்பைச் சடை யிலே அணிந்த சிவபெருமான், மாலையணிந்த மன்மதனை நெற்றிக் கண்ணால் சிறிதே நோக்கிய பொழுது எழுந்த தீயினும் கொடியது.

விளக்கவுரை

`அதில் அவள் எப்படிச் சென்றாள்` என்றபடி.
இதுவும் செவிலி புலம்பல்.

கடிமலர்க் கொன்றையுஞ் திங்களுஞ்
செங்கண் அரவும்அங்கண்
முடிமலர் ஆக்கிய முக்கணக்
கன்மிக்க செக்கரொக்கும்
படிமலர் மேனிப் பரமன்
அடிபர வாதவர்போல்

அடிமலர் நோவ நடந்தோ
கடந்ததெம் அம்மனையே. #287
எம் தாய் (மகள்) சுரத்தைக் கடந்தது, வாசனை பொருந்திய கொன்றையோடு திங்கள், சிவந்த கண்களையுடைய பாம்பு இவைகளையும் முடியில் அணியும் மலராகக் கொண்டு அணிந் துள்ள, மூன்று கண்களையுடைய திகம்பரனும், செவ்வானம் போலும் மெல்லிய மேனியை உடையவனும் ஆகிய சிவபெருமானது திருவடி மலர்களைத் துதியாதவர்கள் போலப் பாதங்களாகிய தாமரை மலர்கள் நோகும்படி நடந்தேயோ!

விளக்கவுரை

இதுவும் மேலைத் துறை.

மனையுறைக் குருவி வளைவாய்ச் சேவல்
சினைமுதிர் பேடைச் செவ்வி நோக்கி
ஈன்இல் இழைக்க வேண்டி ஆனா
அன்புபொறை கூர மேன்மேல் முயங்கிக்
கண்ணுடைக் கரும்பின் நுண்தோடு கவரும்
பெருவளந் தழீஇய பீடுசால் கிடக்கை
வருபுனல் ஊரன் பார்வை யாகி
மடக்கொடி மாதர்க்கு வலையாய்த் தோன்றிப்
படிற்று வாய்மொழி பலபா ராட்டி
உள்ளத் துள்ளது தெள்ளிதின் கரந்து
கள்ள நோக்கமொடு கைதொழு திறைஞ்சி
எம்மில் லோயே பாண அவனேல்
அமரரும் அறியா ஆதிமூர்த்தி
குமரன் தாதை குளிர்சடை இறைவன்
அறைகழல் எந்தை ஆரூர் ஆவணத்
துறையில் தூக்கும் எழில்மென் காட்சிக்
கண்ணடி அனைய நீர்மைப்
பண்ணுடைச் சொல்லியர் தம்பா லோனே. #288

பாணனே, இல்லங்களில் வாழும் குருவிகளில் வளைந்த அலகினையுடைய ஆண் குருவி ஒன்று தன் பெட்டைக் குருவி கரு முதிர்ந்து முட்டையிடும் காலத்தை அடைந்திருப்பதை உணர்ந்து அது தங்கி முட்டையிடுவதற்கு உரிய கூடு ஒன்றைக் கட்ட வேண்டி, அப்பெட்டையின் மேல் உளதாகிய அன்பு மிகுந்து தனக்குச் சுமையாதலால், பெட்டை மனம் வருந்தாதபடி அதனை அடிக்கடி தழுவி மகிழ்ச்சி உண்டாக்கிக் கொண்டு பக்கத்து வயலில் கணு முற்றி வளர்ந்திருக்கின்ற கரும்பின் சிறிய சோனைகளில் நார் உரிக்கின்ற

வயல் வளம் மிகப் பொருந்திய, பெருமை நிறைந்த இல்லங்களையும், எப்பொழுதும்வற்றாது வரும் நீரினையும் உடைய ஊரை உடையவன் உன் தலைவன்.
அவன் கட்டிவைக்கும் பார்வை மிருகமாய், இளைய கொடிபோல்பவராகிய மகளிரை அவன் வலையில் வீழ்க்க வந்து, வஞ்சக வார்த்தைகள் பலவற்றை இனிமையாகச் சொல்லி, உள்ளத்தில் உள்ள உண்மையை முற்றிலுமாக மறைத்துத் திருட்டுப் பார்வை பார்த்துக் கொண்டு, கள்ளக் கும்பிடு போட்டு, (தலைவர் இங்கு உள்ளாரோ` எனப் பொய்யாக வினவிக் கொண்டு) எங்கள் இல்லத்திலே வந்து நிற்கின்றாய்.
(அவன் செய்தியை நீ அறியாயோ? அவன் இங்கா இருப்பான்?) அவனோ அமரரும் அறியா ஆதி மூர்த்தியும், முருகன் தந்தையும், நீரால் குளிர்ந்த சடையை உடைய இறைவனும், ஒலிக்கும் கழலை அணிந்தவனும், எம் தந்தையும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருவாரூர்க் கடைத் தெருவில் கடை களில் தொங்க விடப்பட்டுள்ள அழகிய தோற்றத்தையுடை கண்ணாடி களைப் போன்ற தன்மையை உடைய, பண்போல இனிமையாகப் பேசுகின்ற அத்தகைய பெண்டிர் இல்லங்களில் இருக்கின்றான்.

விளக்கவுரை

கண்ணாடி போன்ற தன்மையாவது அருகில் வந்தோர் யாராயினும், `இன்னார், இனியார்` என்னும் வரையறையின்றி உடனே அகத்திட்டுக் கொள்ளுதல்.
எனவே, `இந்நீர்மையுடையோர் வரை வின் மகளிர்` என்பது உணர்த்தியவாறு.
இது, தலைவியை வாயில் வேண்டிய பாணனுக்குத் தலைவி வாயில் மறுத்தது.
திணை, மருதம்.
``மனை வாய்ச் சேவற்குருவிதன் பெடையை அடிக்கடி தழுவித் தலையளி செய்து, ஈன் இல் இழைக்கக் கரும்பின் நுண்தோடு கவரும் ஊரன்`` என்றது, `அக்குருவியின் அன்பு தானும் உன் தலைவனுக்கு இல்லை` எனத் தலைவி உள்ளுறையாகக் கழற்றுரை கூறினாள்.
அவ் வுள்ளுறைக்கண் பொதியப்பட்ட பொருளானே தலைவி புதல் வனைப் பெறும் நிலையில் இருத்தலும், தலைவன் அதனையும் நோக்காது புறத்தொழுக்கினன் ஆயதும் பெறப்பட்டன.
ஈன் இல், வினைத்தொகை.

பாலாய சொல்லியர்க்கே சொல்லுபோய்ப் பாண்மகனே
ஏலா இங் கென்னுக் கிடுகின்றாய் - மேலாய

தேந்தண் கமழ்கொன்றைச் செஞ்சடையான் தாள்சூடும்
பூந்தண் புனலூரன் பொய். #289

ஏ பாண்மகனே, `மேலாய, இனிய, தண்ணிய கொன்றை மலரைச் சூடியுள்ள சிவபெருமானது திருவடிகளை யான் தலைமேற்கொள்பவன்; பொய்கூறேன்; உண்மையில் என்மேல் தவறு ஒன்றும் இல்லை` என்று தலைவன் கூறிய பொய்களையெல்லாம் இங்கே வந்து எதற்குக் `கொட்டுகின்றாய்? இங்கே அவைகள் ஏலா.

யாருடைய சொல் தலைவனுக்குப் பால்போல இனிக்கின்றதோ அவர் களிடத்தில் போய் அவைகளைச் சொல்லு; (கேட்டுக் கொள்வார்கள்.)

விளக்கவுரை

இதுவும் மேலைத் திணை; துறை.

``சூடும்`` என்றது, `சூடுவேன்` எனச் சொல்வானது சொற் பற்றிக் கூறியது.

பொய்யால் தொழவும் அருளும்
இறைகண்டம் போல்இருண்ட
மையார் தடங்கண் மடந்தையர்
கேட்கிற்பொல் லாதுவந்துன்
கையால் அடிதொடல் செல்வனில்
புல்லல் கலையளையல்
ஐயா இவைநன்கு கற்றாய்
பெரிதும் அழகியவே. #290

தலைவனே, இங்கே உன் கையினால் எம் காலைத் தொட்டு வணங்க வேண்டா.

மகனை அன்போடு அணைப்பது போலக் காட்டி, அவ்வழியாக வந்து எம்மைச் சார வேண்டா எம் உடையைப் பற்றி அலைக்கழிக்க வேண்டா ஏனெனில் பொய்யாக வணங்கி னாலும் அதற்கு அருள்செய்கின்ற சிவபெருமானது கண்டம் போலக் கறுத்த மைதீட்டிய, அகன்ற கண்களையுடைய உன் காதலிகள் இவற்றைக் கேள்விப்பட்டால் உனக்கு இடராய் முடியும்.

காதல் இன்றி யும் உடையவன்போல நடித்தற்கு இச்செயல்களையெல்லாம் நன்கு கற்றிருக்கின்றாய். இம்முறைமை உனக்கு மிகவும் அழகியவாய் உள்ளன.

விளக்கவுரை

இது, பள்ளியிடத்து ஊடலில் புதல்வன் வாயிலாகத் தலைவன் ஊடல் தணிவிக்கத் தலைவி ஊடல் தணியாளாய்க் கூறியது.

இதுவும் மருதத் திணை.

அழகுறு கிண்கிணி அடிமிசை அரற்றத்
தொழிலுடைச் சிறுபறை பூண்டு தேர்ஈர்த்
தொருகளி றுருட்டி ஒண்பொடி ஆடிப்
பொருகளி றனைய பொக்கமொடு பிற்றாழ்ந்த
பூங்குழற் சிறாரொடு தூங்குநடை பயிற்றி
அக்கரை உடுத்தி ஐம்படை கட்டி
ஒக்கரை இருக்கும் ஒளிர்புன் குஞ்சிக்
குதலையங் கிளவிப் புதல்வன் தன்னை
உள்ளச் சொரிந்த வெள்ளத் தீம்பால்
உடைய வாகிய தடமென் கொங்கை
வேண்டாது பிரிந்த விரிபுனல் ஊரன்
பூண்தாங் ககலம் புல்குவன் எனப்போய்ப்
பெருமடம் உடையை வாழி வார்சடைக்
கொடுவெண் திங்கட் கொழுநில வேய்க்கும்
சுடுபொடி யணிந்த துளங்கொளி அகலத்
தண்ணல் ஆரூர் திண்ணிதிற் செய்த
சிறைகெழு செழும்புனல் போல
நிறையொடு நீங்காய் நெஞ்சம் நீயே. **#291**

நெஞ்சே, அழகுடையவாகிய கிண்கிணிகள் அடி மேல் ஒலிக்க, அடிக்கத் தக்கதாகிய சிறுபறையைத் தோளில் மாட்டிக் கொண்டு, சிறுதேரை இழுத்துக் கொண்டும், யானையாகச் செய்யப் பட்ட அதனை உருட்டிக்கொண்டும், தெருப் புழுதியிலே முழுகி, போர்செய்தற்குரிய ஆண் யானை தன் பெண்யானையினிடத்துக் கொள்ளும் இன்பம் போலும் இன்பத்தை உள்ளத்தில் எய்தி, தன்னைப் பின்பற்றிவரும் அழகிய கால் அணிகளை அணிந்த மற்றைச் சிறுவர் களுடன் சாய்ந்து சாய்ந்து நடக்கும் நடை பழகி, ஓரங்களில் கரையை உடைய சிறுதுண்டை இடையிலே சுற்றிக்கொண்டு, கழுத்திலே ஐம்படைத்தாலி அணிந்து, பின் எனது ஒக்கலிலே வந்து அமரும், விளங்குகின்ற, சிறிதே வளர்ந்த தலைமயிரையும், மழலைச் சொல்லையும் உடைய என் பிள்ளையை யான் நினைத்ததனால் சுரந்து பொழிந்த வெள்ளம்போலும் இனிய பாலை உடையனவாய்விட்ட என் பருத்த, மெல்லிய கொங்கைகளை வெறுத்து பிரிந்து போய்விட்ட, மிக்க நீரையுடைய ஊரையுடைய தலைவனது அணிகலம் பொருந்திய மார்பினை, `யான் வலியச் சென்று தழுவுவேன்` என்று முயன்று, (அஃது இயலாமையால்) பெரிதும் பேதைமை யுடையை ஆயினாய்; நீ வாழ்வாயாக.
(இனி அது வேண்டா) தான் தனது நீண்ட சடையிலே அணிந்துள்ள, வளைந்த, வெள்ளிய திங்களினது செழித்த நிலவோடொக்கும் சுடுவெண்

பொடியை அணிந்து ஒளிவிடுகின்ற மார்பினையுடைய பெருமானது திருவாரூரில் வாய்க்கால்களில் உறுதியாகக் கட்டப்பட்ட மடைகளில் அப்பாற் செல்லாமல் தன் மேகம் தடையுண்டு நிற்கின்ற மிக்க நீர்போல, உறுதிப்பாட்டுடன் என்னிடத் திற்றானே நீங்காது நில்.

விளக்கவுரை

இது புதல்வற் பயந்து தன்தலைக்கடன் இறுத்து வாழும் தலைவி, தலைவன் பரத்தையிற் பிரிந்த வழி ஆற்றாமையால் அவன் உள்வழிச் செல்ல நினைத்து, நாண் தடுத்தலால் அஃது இயலாது நின்ற நெஞ்சினைக் கழறிக் கூறியது.
இது, ``புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு அகன்ற கிழவனைப் புலம்பு நனி காட்டி இயன்ற நெஞ்சம் தலைப்பெயர்த்து அருக்கி எதிர்பெய்து மறுத்த ஈரம்` (தொல்.
கற்பு.
6) என்பதன் பகுதியாம்.
இதுவும் மருதத் திணை.
தாழ்தல் தங்குதல்.

நீயிருந்திங் கென்போது நெஞ்சமே, நீளிருட்கண்
ஆயிரங்கை வட்டித் தனலாடித் - தீயரங்கத்
தைவாய் அரவசைத்தான் நன்பணைத்தோட் கன்பமைத்த
செய்வான தூரன் திறம். **#292**

நெஞ்சே, நம் தலைவனது செயற்கூறு, நெடிய இருளிடத்து தீ எரிகின்ற அரங்கத்தின்கண், தீயின் நடுவே நின்று கைகள் ஆயிரத்தைச் சுழற்றி ஆடி, ஐந்தலை நாகத்தைக் கட்டியுள்ள சிவபெருமானது அழகிய தோள்களினிடத்து அன்பை அமைத்த செயல்களைச் செய்வதாயிற்று நீ இங்கு இருந்து பெறுவது என்! என்னுடன் வா, போவோம்.

விளக்கவுரை

`நெஞ்சமே, ஊரன் திறம் அரவு அசைத்தான் தோட்கு அன்பு அமைத்த செய்வு ஆனது; நீ இங்கு இருந்து என்! போது` என இயைத்து முடிக்க.
`தோட்கு, தோட் கண்` என உருபு மயக்கம்.
அமைத்த - அமைத்தன.
அமைத்தனவாகிய செயல்கள்.
செய்வு - செய்தல்; தொழிற் பெயர்.
இஃது அறப்புறம் காவற் பிரிவில் ஆற்றா ளாய தலைவி தலைவன் உள்வழிச் செல்ல நினைந்து நெஞ்சத்தொடு கூறியது.
இதுவும் பாலைத் திணையே.

திறமலி சின்மொழிச் செந்துவர்

வாயின எங்கையர்க்கே
மறவலி வேலோன் அருளுக
வார்சடை யான்கடவூர்த்
துறைமலி ஆம்பல்பல் லாயிரத்
துத்தமி யேயெழினும்
நறைமலி தாமரை தன்னதன்
றோசொல்லும் நற்கயமே. #293

நீண்ட சடையை உடைய சிவபெருமானது திருக் கடவூரில் உள்ள குளத்தில் அதன் துறைகளில் நிறைய பல ஆயிரம் ஆம்பல் மலர்கள் பூத்திருக்க, அவற்றின் இடையில் மணம் மிக்க தாமரை மலர் ஒன்றே பூத்திருப்பினும் அந்தக் குளம் `தாமரைக் குளம், என்றுதானே புகழப்படும்? ஆகையால் வீரம் அமைந்த வேலை ஏந்திய தலைவன் எமக்கு அருள் பண்ணாமல், திறமை நிறைந்த சில சொற்களையும் சிவந்த வாயினையும் உடைய எம் தங்கைமார்க்கே அருள் பண்ணட்டும்; (தலைவனாதல் எமக்குத்தானே? அவர்கட்கு ஏது?)

விளக்கவுரை

குளத்திற்குச் சிறப்புத் தருவது தாமரை மலரே ஆகையால் அதைக் குறித்துத் தான் குளத்தை, `தாமரைக் குளம்` எனப் பெருமையாகக் கூறுவார்கள்.
அதுபோல இல்லறத்திற்குத் துணை யாகின்றவள் தலைவியே ஆகையால் `அவளுக்குத் தலைவன்` எனச் சொல்லியே தலைவனை யாவரும் பாராட்டுவர் - என்றபடி.
எனவே, இப்பாட்டில், ``வார்சடையான்`` என்பது முதலாக உள்ள பகுதி ஒட்டணியாம்.
இது, பரத்தையிற் பிரிவில் `தலைவி ஆற்றாள்` எனக் கவன்ற தோழிக்குத் தலைவி `ஆற்றுவல்` என்பதுபடக் கூறியது.
எனவே இது முல்லைத் திணையாம்.
``தன்னது`` என்பதில் தன், சாரியை.
அதில் ஒற்று இரட்டியது செய்யுள் விகாரம்.
`தனதாக` என ஆக்கம் விரிக்க.
``சொல்லும்`` என்பது `சொல்லப்படும்` எனச் செயப் பாட்டுவினைப் பொருள் தந்தது.

கயங்கெழு கருங்கடல் முதுகுதெரு மரலுற
இயங்குதிமில் கடவி எறிஇளி நுளையர்
நெய்ம்மீன் கவரல் வேண்டிக் கைம்மிகுத்
தால வட்டம் ஏய்ப்ப மீமிசை
முடிகெழு தருவலை வீசி முந்நீர்க்

குடரென வாங்கிக் கொள்ளை கொண்ட
சுரிமுகச் சங்கும் சுடர்விடு பவளமும்
எரிகதிர் நித்திலத் தொகுதியுங் கூடி
விரிகதிர் நிலவுஞ் செக்கருந் தாரகை
உருவது காட்டும் உலவாக் காட்சித்
தண்ணந் துறைவன் தடவரை அகலம்
கண்ணுறக் கண்டது முதலா ஒண்ணிறக்
காள மாசுணங் கதிர்மதிக் குழவியைக்
கோளிழைத் திருக்குங் கொள்கை போல
மணிதிகழ் மிடற்று வானவன் மருவும்
அணிதிகழ் அகலத் தண்ணல் ஆரூர்
ஆர்கலி விழவின் அன்னதோர்
பேர்செலச் சிறந்தது சிறுநல் லூரே. **#294**

ஆழம் பொருந்திய கரிய கடலின் முதுகு அலையும்படி அலைத்துச் செல்கின்ற ஓடங்களைச் செலுத்திய `இளி` என்னும் ஒருவகை ஒலியை வாயினின்றும் எழுப்புகின்ற வலைஞர் கள், `நெய்ம்மீன்` என்னும் ஒருவகை மீனைப் பிடிக்க வேண்டிக் கைமிகுந்து முடிச்சுகள் பொருந்திய வலையை ஆலவட்டம் போலத் தோன்றும்படி மிக உயரத்திலே சென்று வீழ வீசி, வீசிய வலைகள் கடலின் குடர்போலத் தோன்றும்படி வெளியே இழுத்து வாங்கும் பொழுது அவ்வலையில் அகப்பட்ட குவிந்த முனையையுடைய சங்கும், ஒளி வீசுகின்ற பவளமும், பொற்கதிரைப் பரப்புகின்ற முத்துக்களும் ஆகிய இவற்றின் தொகுதிகள் ஒருங்கு தொக்கு, வெள்ளொளியைப் பரப்புகின்ற திங்களும், செவ்வானமும், விண்மீன்களும் ஆகிய இவைகளின் உருவத்தைத் தோற்றுவிக்கின்ற, கெடாத காட்சியையுடைய, குளிர்ந்த, அழகிய துறையையுடைய தலைவனது அகன்ற மார்பினை ஒருமுறை கண்ணுறக் கண்டு, அங்ஙனம் கண்டது முதலாக இந்தச் சிறிய நல்ல ஊர், ஒளிபொருந்திய நிறத்தையுடைய கரும்பாம்பு இளந்திங்களை, `அது முதிரட்டும், முதிரட்டும்`, என்று விடாது பார்த்துக்கொண்டிருப்பது போல என்னைப் பற்றி விடாது எவற்றையேனும் சொல்லி, நீலமணிபோல விளங்குகின்ற கண்டத்தையுடைய பெருமான் எழுந்தருளியுள்ள, அழகு விளங்கும் விசாலித்த திருவாரூரில், நிறைந்த ஆரவாரத்தோடு கூடிய திருவிழாவில் அத்தலப் பெருமானது ஒருபெயரே எங்கும் ஒலித்தல்போலத் துறைவனது ஒரு பெயரே எங்கும் ஒலிக்கின்ற சிறப்பினை உடையதாயிற்று.

விளக்கவுரை

``இவ்வூரவர்க்குத் தொழில் வேறு இல்லை போலும்` என்பது

குறிப்பெச்சம்.
இது வரையா நாளின் வந்தோன் முட்டிடக் கண்ட ஆயத்தார் அலர் கூறுதல் அறிந்த தலைவி முன்னிலைப் புறமொழியாற் கழறிக் கூறியது.
இதன் பயன் உடன்போக்காதலின் இது நெய்தலிற் பாலையாயிற்று.
நிலவு, செக்கர், தாரகை என்பவற்றைச் சங்கு முதலிய மூன்றனோடு நிரலே இயைக்க.
``தண்ணந் துறைவன் .
.
.
.
.
கொள்கைபோல`` என்றதனை, கண்டது மன்னும் ஒருநாள்;
அலர்மன்னும் திங்களைப் பாம்புகொண் டற்று.
* என்பதனோடு ஒப்பு நோக்கு.
`போலச் சிறந்தது` என்பது பாடம் அன்று.

ஊரெலாந் துஞ்சி உலகெலாம் நள்ளென்று
பாரெலாம் பாடவிந்த பாயிருட்கண் - சீருலாம்
மாந்துறைவாய் ஈசன் மணிநீர் மறைக்காட்டுப்
பூந்துறைவாய் மேய்ந்துறங்கா புள். **#295**

ஊர் முழுதும் உறங்கி, உலகம் முழுதும் நள்ளிரவு நிலையை அடைந்து, மண் முழுதிலும் உள்ள உயிர்கள் அனைத்தும் ஒலி அடங்கிய இப்பரந்த இருளிடத்து, (தோழீ! என்னை காரணமோ) அழகு பொருந்திய திருமாந்துறையில் உள்ள ஈசனுக்கு உரித்தாய் உள்ள திருமறைக் காட்டில் உள்ள நீலமணிபோலும் நீரினது துறையில் நிரம்ப இரைமேய்ந்த பின்னும் அதில் உள்ள பறவைகள் உறங்காமல் ஆரவாரிக்கின்றன.

விளக்கவுரை

செய்தென் எச்சங்கள் எண்ணின்கண் வந்தன.
இஃது இரவுக் குறிக்கண் தலைவன் வந்தமையைத் தோழி தலைவிக்கு அவள் அறியுமாற்றாற் கூறியது.
புட்கள் உறங்காமல் எழுந்து ஆரவாரித்தல் தலைவன் தான் வந்தமை குறிக்கும் குறியாக எழுப்புதலினாலேயாம் இது குறிஞ்சித் திணை.

புள்ளுந் துயின்று பொழுதிறு
மாந்து கழுதுறங்கி
நள்நென்ற கங்குல் இருள்வாய்ப்
பெருகிய வார்பனிநாள்
துள்ளுங் கலைக்கைச் சுடர்வண்

ணனைத்தொழு வார்மனம்போன்
றுள்ளும் உருக ஒருவர்திண்
தேர்வந் துலாத்தருமே. **#296**

பறவைகளும் துயின்று, ஞாயிறு தன் கதிரும் தோன்றாமல் மறைந்து, பேயும் உறங்கி, இவ்வாறு `பாதி` என உணரப்படுகின்ற இரவில், இருளிலே, மிக்கு ஒழுகும் பனிக் காலத்தில், நினைத்தால் மனம் நெகிழ்ந்துருகும்படி, துள்ளுகின்றமானைக் கையில் ஏந்திய, தீ வண்ணனாகிய சிவபெருமானை வணங்குகின்றவர் களுடைய மனம் அப்பெருமானிடத்தே எவ்வாறு ஓய்வின்றி உலவுமோ அதுபோல ஒருவருடைய திண்ணிய தேர்வந்து வந்து உலவாநின்றது.

விளக்கவுரை

`ஊழது நிலை இவ்வாறாயிற்று` என்பது குறிப்பெச்சம்.

இஃது இரவுக் குறிக்கண் அல்ல குறிப்பட்டுத் தலைவனை எய்தாளாய தலைவி பின், வந்தவன் பெயர்ந்த வறுங்களம் நோக்கித் தன் பிழைப் பாகத் தழீஇத் தேறிக் கூறியது.

இது குறிஞ்சித் திணை.

இறுமாத்தல், இங்குச் செயலின்றி மடிந்திருத்தல்.

`உள்ளும்` என்னும் உம்மை, உயர்வு சிறப்பு.

உலாநீர்க் கங்கை ஒருசடைக் கரந்து
புலால்நீர் ஒழுகப் பொருகளி றுரித்த
பூத நாதன் ஆதி மூர்த்தி
திருமட மலைமகட் கொருகூறு கொடுத்துத்தன்
அன்பின் அமைத்தவன் ஆரூர் நன்பகல்
வலம்புரி அடுப்பா மாமுத் தரிசி
சலஞ்சலம் நிறைய ஏற்றி நலந்திகழ்
பவளச் செந்தீ மூட்டிப் பொலம்பட
இப்பியந் துடுப்பால் ஒப்பத் துழாவி
அடாஅ தட்ட அமுதம் வாய்மடுத்
திடாஅ ஆயமோடு உண்ணும் பொழுதில்
திருந்திழைப் பணைத்தோள் தேமொழி மாதே
விருந்தின் அடியேற் கருளுதி யோஎன
முலைமுகம் நோக்கி முறுவலித் திறைஞ்சலின்
நறைகமழ் வெண்ணெய்ச் சிறுநுண் துள்ளி
பொங்குபுனல் உற்றது போலஎன்
அங்க மெல்லாந் தானா யினனே. **#297**

(தோழீ, கேள்) பாய்ந்து செல்வதாகிய கங்கை நீரை ஒரு சடையிலே ஒளித்துவைத்தும், போர் செய்வதாகிய ஆண் யானை ஒன்றை உதிரம்

ஒழுக உரித்தும் தன் ஆற்றலைப் புலப்படுத்திய, பூதப் படைத் தலைவனும், யாவர்க்கும் முன்னேயுள்ள மூர்த்தியும், அழகிய, இளைய மலைமகட்கும் தனது திருமேனியில் பாதியைத் தந்து அன்பினாலே அவளை உடன் கொண்டு இருப்பவனும் ஆகிய சிவபெருமானது இத்திருவாரூரிலே (நாம் தெருவில் விளையாடுகின்ற பருவத்திலே நீ ஒருநாள் அன்னையோடு இருக்க நான் ஆயத்தாருடன் தெருவில்) வலம்புரிச் சங்குகளை அடுப்பாகக் கூட்டி, சலஞ்சலச் சங்கினைப் பானையாக ஏற்றி, அது நிறையச் சிறந்த முத்துக்களை அரிசியாக இட்டு, பவழங்களை: சிவந்த தீயாக மூட்டி அழகு உண்டாக இப்பியை அகப்பையாக இட்டு நன்றாகத் துழாவி இவ்வாறு உண்மையாகச் சமைக்காமல் பொய்யாகச் சமைத்த சோற்றினை வாயில் இடாமலே நான் ஆயத்தாருடன் உண்ணப் போகும் பொழுது (சிறான் ஒருவன் வந்து) `திருத்தமான அணிகளையும், பருத்த தோள்களையும், தேன்போன்ற சொற்களையும் உடைய மாதே, உங்கள் சிற்றில் அயர்வின்கண் விருந்து ஒன்று இல்லாத குறையை யான் நிரப்புதற்கு அருள்செய்வாயோ`` என்று வினவி, என் கொங்கையின் முகங்களை நோக்கி, உள்ளத்து ஆசை வெளிப்படும்படி சிரித்து, என் அடிகளில் வீழ்ந்து வணங்கினான்.

அவனது செயல், நறுமணம் கமழும்படி காய்ச்சப்படுகின்ற வெண்ணெயிலே சிறிய, நுண்ணிய நீர்த்துளி ஒன்று வீழின் அந்நெய் முழுவதும் அதனாலே ஆரவாரித்துப் பொங்குதல் போல யான் என் உடம்பு முழுதும் அவனாகி விட்டது போலும் உணர்ச்சியை அடைந்தேன்.

விளக்கவுரை

`இஃது இளமைக் காலத்தில் நிகழ்ந்தது` என்பது இசை யெச்சம்.
`இதனை நம் தாய்க்கு நீ சொல்லுதல் வேண்டும்` என்பது குறிப்பு.
இது களவொழுக்கத்தில் அது வெளிப்படாத வகையில் ஒழுகிய தலைவி தமர் வேற்று வரைவிற்கு முயல்வதை அறிந்து தானே தன் தோழிக்குப் படைத்து மொழியால் அறத்தொடு நின்றது.
இதுவும் குறிஞ்சித் திணை.
``பூத நாதன்`` என்பதற்கு, `உயிர்கட்கு முதல்வன்` என உரைத்தலும் ஆம்.
தனது ஊரையே வேறுபோலக் கூறினார்.
ஆதலின், ``இவ் ஆரூர்`` எனச் சுட்டுவருவித்துக் கண்ணுருபு விரிக்க `நல்லதொரு விளையாட்டு நிகழ்ந்த பகல்` என்பாள் பகலை, ``நன் பகல்`` எனச் சிறப்பித்துக் கூறினார்.
``துடுப்பு`` என்றாராயினும் சோற்றைத் துழாவுவது

அகப்பையேயாதல்பற்றி அதற்கு அவ்வாறு உரைக்கப்பட்டது.
`வாய் மடுத்திடா` என்பது ஒரு சொல்.
ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
`துளி` என்பது ``துள்ளி`` என விரித்தல் பெற்றது.
தான் - அவன் ``ஆயினன்`` என்பது தன்மை யொருமை வினைமுற்று.

ஆயினஅன் பாரே அழிப்பர் அனலாடி
பேயினவன் பார்ஓம்பும் பேரருளான் **-** தீயினவன்
கண்ணாளன் ஆரூர்க் கடலார் மடப்பாவை
தண்ணாருங் கொங்கைக்கே தாழ்ந்து. **#298**

தீயில் நின்று ஆடுபவனும், பேய்க் கூட்டத்தை உடையவனும், உலகத்தைக் காக்கும் பேரருளாளனும், நெருப்புப் பொருந்திய கண்ணை உடையவனும் ஆகிய சிவபெருமானது திருவாரூரோடு ஒத்த, கடற்கரைக் கண் உள்ள, இளையபரவை போல் வாளது குளிர்ச்சி நிறைந்த கொங்கையின் கண்ணே தங்கிவிட்ட அன் பினை இனி அழிப்பவர் யார்?

விளக்கவுரை

இது, குற்றம் காட்டிய வாயில் பெட்ப (கழற்றுரை கூறிய பாங்கன் பின் தன்னை விரும்பும்படி) தலைவன் தன் ஆற்றாமை கூறிக் கழற்றெதிர் மறுத்தது.
இது நெய்தலிற் குறிஞ்சி மயங்கியது.
``ஆடி`` என்பது பெயர்.
``பேயினவன்`` என்பதில் `இன்` சாரியை; அகரம் பெயரெச்ச விகுதி `வன்கண்` என்க.
`ஆரூர் போலும் மடப்பாவை` என்க.
கொங்கைக்கு , `கொங்கைக்கண்` என உருபு மயக்கம்.
தாழ்ந்து `ஆயின அன்பு` என மேலே கூட்டுக.
தாழ்தல் - தங்குதல்.

தாழ்ந்து கிடந்த சடைமுடிச்
சங்கரன் தாள்பணியா
தாழ்ந்து கிடந்துநை வார்கிளை
போல்அய் வேற்கிரங்கிச்
சூழ்ந்து கிடந்த கரைமேல்
திரையென்னும் கையெறிந்து
வீழ்ந்து கிடந்தல றித்துயி
லாதிவ் விரிகடலே. **#299**

தாழ்ந்து தொங்குகின்ற சடைமுடியை உடைய, `சங்கரன்` என்னும் பெயரினன் ஆகிய சிவபெருமானது திருவடிகளை வணங்காமையால்

துன்பத்தில் ஆழ்ந்து கிடந்து வருந்துவாரது சுற்றம் போல வருந்துகின்ற என்பொருட்டு இரங்கி இந்த அகன்ற கடல் தன்னைச் சூழ்ந்து கிடக்கின்ற கரைமேல் அலைகளாகிய கையை அடித்து அடித்து, தரைமேல் வீழ்ந்து, வாய்விட்டு அலறிக் கொண்டு உறங்காமல் உள்ளது.

விளக்கவுரை

`பிறர் ஒருவரும் என்பொருட்டு இரங்குவார் இல்லை` என்பது கருத்து.
இது, `தாளாண் எதிரும் பக்கம்` எனப்படும்.
பொருள் வயிற் பிரிவின்கண் தலைவன் நீட ஆற்றாளாய தலைவி தூது செல்லாத பாங்கியைப் புலந்து கடலை முன்னிலைப்படுத்துக் கூறி இரங்கியது.
இதனை, `காமம் மிக்க கழிபடர் கிளவி` என்பர்.
இது நெய்தல் திணை, பணியாதவரே யன்றி அவர் சுற்றமும் வருந்தும் நிலையை உடைத்தாதல் பற்றி, ``நைவார் கிளைபோல் அயர்வேற்கு`` என்றாள்.
திருவாரூர் மும்மணிக் கோவை முற்றிற்று.

சேரமான்பெருமாள் நாயனார் - திருக்கயிலாய ஞானஉலா

திருமாலும் நான்முகனும் தேர்ந்துணராதங்கண்
அருமால் உற அழலாய் நின்ற பெருமான் #300
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அரு மால் - போக்குதற்கு அரிய மயக்கம்.
அழலாய் - அக்கினிப் பிழம்பாய்.
மாலும், அயனும் அடிமுடி தேடிய சிவபுராண வரலாறு பலவிடத்தும் பரவலாக வழங்கும்.

பிறவாதே தோன்றினான் காணாதே காண்பான்
துறவாதே யாக்கை துறந்தான் முறைமையால் #301
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பகுதியில் சிவபெருமானது பெருமைகள் விரித்துரைக்கப்படுகின்றன.
`பிறர் செயற்கையால் அடையும் பெருமைகளைச் சிவபெருமான் இயற்கையாகப் பெற்றுள்ளான்` என்பது பலவகையில் கூறப்படுகின்றது.
தோன்றுதல் - உளன் ஆதல், பிறர் எல்லாம் கால வயப்பட்டு ஒரு காலத்தில் பிறத்தலால் உளர் ஆகின்றனர்; சிவபெருமான் அவ்வாறின்றி, என்றுமே உளனாய் இருக்கின்றான்.
எனவே, காலம் அவனுக்கு உட்படுகின்றதேயன்றி அவன் காலத்திற்கு உட்படுகின்றானில்லை.
பிறர் எல்லாம் கண்ணைக் கருவியாகக் கொண்டு அது வழி யாகவே பொருள்களைக் காண்கின்றனர்; சிவபெருமான் அவ் வாறின்றிப் பொருள்களை நேரே காண்கின்றான்.
`பிறர் எல்லாம் பொருள்களைக் கண் காட்டும் அளவில், அது காட்டியவாறு காண்பர்` என்பதும், `சிவபெருமான் அவ்வாறின்றி, எல்லாவற்றையும் உள்ள படி காண்பான்` என்பதும் விளங்கும்.
கட்புலத்திற்குச் சொல்லியது ஏனைச் செவிப்புலம் முதலிய வற்றிற்கும் ஒப்பதே.
பிறர்க்கெல்லாம் உடம்பு அறிவு இச்சை செயல்கட்கு இன்றி யமையாதது ஆதலின் வேண்டப்படுவதாயினும் அதனால் நிகழும் அறிவு முதலியன பிறவிக்குக் காரணமாதலின் பந்தமாய், அவரால் முயன்று

துறக்கப்படுவதாக, சிவனது அறிவு இச்சை செயல்கட்கு உடம்பு வேண்டாமையின் அவன் உடம்போடு கூடிநின்றே அதனாற் பந்தம் உறாது இருக்கின்றான்.

ஆழாதே ஆழ்ந்தான் அகலா தகலியான்
ஊழால் உயராதே ஓங்கினான் சூழொளிநூல் #302
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சிவபெருமான் எப்பக்கத்திலும் வரம்பின்றிப் பரந்துள்ளவன் ஆதலின், `ஆழம், அகலம், உயரம்` என்பவைகளில் இயல்பாகவே எந்த வகையிலும் ஓர் அளவு இல்லாதவன்.
`பிறர் எல்லாம் மேற்குறித்த அளவுகளில் சிறியராய்த் தோன்றிப் பெரியராய் வளர்வர்.
சிவபெருமான் அன்ன தன்மையில்லாதவன் என்பது, ``ஆழாது, அகலாது, ஊழால் உயராது`` என்னும் சொற்களால் குறிக்கப்பட்டது.
ஊழ் - முறைமை.
விரிந்து பரந்த அறிவைத் தரும் நூல்களை அவன் அவை தோன்றியபின் ஓதி உணராமல் என்றுமே உணர்ந்திருக்கின்றான்.
என்றது.
`அவற்றின் பொருளை அவன் தானே இயல்பாக உணர்ந் திருக்கின்றான்` என்றபடி.
எனவே, `அனைத்துப் பொருள்கட்கும் முதல் நூலைச் செய்தவன் அவனே` என்றதாயிற்று.

ஓதா துணர்ந்தான் நுணுகாது நுண்ணியான்
யாதும் அணுகாது அணுகியான் ஆதி #303
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சிவபெருமான் முன்பு பரியனாய் இருந்து பின்பு நுணுகி நுணுகித் தீர நுணுகுதல் இன்றி, இயல்பிலே தீர நுணுகியிருப்பவன்.
எனவே, `அவனிலும் நுணுகிய பொருள் ஒன்று இல்லை` என்பதாயிற்று.
`அவனிலும் பரிய பொருளும் எதுவும் இல்லை` என்பது மூன்றாம் கண்ணியில் சொல்லப்பட்டது.
எந்தப் பொருளையும் புதிதாக ஒருகாலத்தில் அணுகாது, இயல்பாகவே எல்லாப் பொருளிலும் அது அதுவாய்க் கலந்து நிற்கின்றான்.

அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரனாய் அழிப்பவனுந் தானே பரனாய #304

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சிவபெருமான் சுத்த மாயையில், தானே, `அயன், அரி, அரன்` - என்னும் மும்மூர்த்திகளாய் நின்று, படைத்தல் காத்தல் அழித்தல்களைச் செய்வான்.

எனவே, `அசுத்த மாயை பிரகிருதி மாயைகளில் தன் அருள்பெற்றவரை அயன்முதலிய பதவியினராகச் செய்து, அவர்கள் வழியாகப் படைத்தல் முதலிய தொழில்களைச் செய்விப்பன்` என்பது போந்தது.

தேவர் அறியாத தோற்றத்தான் தேவரைத்தான்
மேவிய வாறே விதித்தமைத்தான் ஓவாதே **#305**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சிவபெருமான் தானே கொள்ளும் வடிவங்கள் `சம்பு பக்கத்தின` என்றும், பிறருக்கு அவனால் தரப்படும் அவ்வடிவங்கள் `அணு பக்கத்தின` என்றும், சொல்லப்படும்.

எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான் எவ்வுருவும் **#306**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சிவபெருமான் எல்லாரினும் மேலாய்த் தேவர்களாலும் அறியப்படாத காட்சியை உடையவன்.

தேவரையெல்லாம் தான் விரும்பிய வண்ணம் படைத்து அவ்வத்தொழிலில் நிறுத்தினான்.

தானேயாய் நின்றளிப்பான் தன்னிற் பிறிதுருவம்
ஏனோர்க்குக் காண்பரிய எம்பெருமான் ஆனாத **#307**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

எவர் ஒருவர் எந்த உருவத்தில் வைத்து உள்ளத்தில் இடை யறாது தியானிக்கின்றார்களோ அவருக்கு அந்த உருவமாய்த் தோன்றியே அதன்வழி அருளற்பாலதாய அருளைச் சிவபெருமானே அருளுவான்.

இங்ஙனம் எந்த உருவத்தையும் தனது உருவமாகவே கொண்டு அருள்புரிகின்ற சிவபெருமான் பிறர் தனது உருவமாய் நின்றாராக எவரும் கண்டிலாத, காண வாராத நிலையை உடையவன்.

அத்தகைய அவனே எம் கடவுள்.

இவற்றால் எல்லாம், மூவரும், பிறரும் ஆகிய தேவர் பலரும் `பசு` எனப்படும் உயிர்வருக்கத்தினரேயாகச் சிவபெருமான் ஒருவனே

அனைவர்க்கும் தலைவனாகிய பதி - என்பது பல்லாற்றானும் விளக்கப்பட்டது.
`ஏனோர்க்கும்`` என்னும் உம்மை, `சிவநெறி யாளர்க்கேயன்றிப் பிற சமயத்தார்க்கும்` என இறந்தது தழுவிற்று.

சீரார் சிவலோகந் தன்னுள் சிவபுரத்தில்
ஏரார் திருக்கோயி லுள்ளிருப்ப ஆராய்ந்து **#308**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அவன் என்றும் நீங்காத சிறப்பினையுடைய சிவலோகத்தில், தன்னுடைய வளாகமாகிய சிவபுரத்தில் அழகு நிறைந்த திருக்கோயிலுள் ஓலக்கமாக வீற்றிருக்கும் பொழுதில் செந் தாமரை போலும் கண்களையுடைய தேவர்கள் செவ்வியறிந்து திருவணுக்கன் திருவாயிலை அடைந்து குழுமி, `பெருமானே, திரு வோலக்க மேயல்லாமல் தேவரீரது திருவுலாக் காட்சியையும் எங்கட்கு வழங்கியருளல் வேண்டும்` என்று பலநாட்கள் குறையிரந்த நிலைமையில் ஒருநாள்.
பொதுவாக, `ஆடவர்க்குக் கண்கள் செந்தாமரை போன் றிருத்தல் விரும்பத் தக்கது` என்னும் கருத்தால் ``செங்கண்`` என்றார்.

செங்கண் அமரர் புறங்கடைக்கண் சென்றீண்டி
எங்கட்குக் காட்சிஅருள் என்றிரப்ப அங்கொருநாள் **#309**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அவன் என்றும் நீங்காத சிறப்பினையுடைய சிவலோகத்தில், தன்னுடைய வளாகமாகிய சிவபுரத்தில் அழகு நிறைந்த திருக்கோயிலுள் ஓலக்கமாக வீற்றிருக்கும் பொழுதில் செந் தாமரை போலும் கண்களையுடைய தேவர்கள் செவ்வியறிந்து திருவணுக்கன் திருவாயிலை அடைந்து குழுமி, `பெருமானே, திரு வோலக்க மேயல்லாமல் தேவரீரது திருவுலாக் காட்சியையும் எங்கட்கு வழங்கியருளல் வேண்டும்` என்று பலநாட்கள் குறையிரந்த நிலைமையில் ஒருநாள்.
பொதுவாக, `ஆடவர்க்குக் கண்கள் செந்தாமரை போன் றிருத்தல் விரும்பத் தக்கது` என்னும் கருத்தால் ``செங்கண்`` என்றார்.

பூமங்கை, பொய்தீர் தரணி புகழ்மங்கை,
நாமங்கை என்றிவர்கள் நன்கமைத்த சேமங்கொள் **#310**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பூ மங்கை - இலக்குமி.
புகழ், பெற்றியால் வரும் புகழ்.
எனவே, புகழ் மங்கை கொற்றவையாம்.
நாமங்கை - கலைமகள்.
`இம்மூவரும் நன்கு செய்தமைத்த பாதுகாப்பில் இருக்கின்ற மலைமகள்` என்க.
ஞானக் கொழுந்து, மலைமகள், அவள் ஞானத்தின் முடிநிலையாதல் பற்றி அங்ஙனம் கூறப்பட்டாள்.
நகராசன் - மலையரையன்.
நகம் - மலை.
சிவபெருமான் புறப்படும் பொழுது மலைமகளே அவனைத் தீண்டி அலங்கரிக்கத் தக்கவள் ஆதலின் அவள் அவனுக்குத் தலைக்கோலம் செய்தாள்.
தேன் மொய்த்த குஞ்சி - `தேன் என்னும் வண்டுகள் மொய்த்த தலைமுடி.
நறுமணம் பொருந்திய மலர்கள் நிறைந்திருத்தலால் வண்டுகள் மொய்ப்பவாயின.
ஊனம் - குறை.
சீர் - அழகு.

ஞானக் கொழுந்து நகராசன் தன்மடந்தை
தேன்மொய்த்த குஞ்சியின்மேல் சித்திரிப்ப ஊனமில்சீர் **#311**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பூ மங்கை - இலக்குமி.
புகழ், பெற்றியால் வரும் புகழ்.
எனவே, புகழ் மங்கை கொற்றவையாம்.
நாமங்கை - கலைமகள்.
`இம்மூவரும் நன்கு செய்தமைத்த பாதுகாப்பில் இருக்கின்ற மலைமகள்` என்க.
ஞானக் கொழுந்து, மலைமகள், அவள் ஞானத்தின் முடிநிலையாதல் பற்றி அங்ஙனம் கூறப்பட்டாள்.
நகராசன் - மலையரையன்.
நகம் - மலை.
சிவபெருமான் புறப்படும் பொழுது மலைமகளே அவனைத் தீண்டி அலங்கரிக்கத் தக்கவள் ஆதலின் அவள் அவனுக்குத் தலைக்கோலம் செய்தாள்.
தேன் மொய்த்த குஞ்சி - `தேன் என்னும் வண்டுகள் மொய்த்த தலைமுடி.
நறுமணம் பொருந்திய மலர்கள் நிறைந்திருத்தலால் வண்டுகள்

மொய்ப்பவாயின.
ஊனம் - குறை.
சீர் - அழகு.

நந்தா வனமலரும் மந்தா கினித்தடஞ்சேர்
செந்தா மரைமலர்நூ றாயிரத்தால் நொந்தா #312
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நந்தா - கெடாத.
வனம் - பூஞ்சோலை `அதன்கண் மலரும் செந்தாமரை, தடம் சேர் செந்தாமரை` - என்க மந்தாகினித் தடம் - ஆகாய கங்கையாகிய தீர்த்தம்.
நூறாயிரம் - இலட்சம்.
நொந்தா - கெடாத.
வயந்தன் - வசந்தன்.
இவன் மன்மதனுக்குத் தோழன், இவன் ஆகாயகங்கையிற் பூத்த செந்தாமரை மலர் நூறாயிரத்தால் தொடுத்து வனைந்த திருவாசிகையைச் சிவ பெருமானது திருமுடிக்கு மேல் விளங்கும்படி சூட்டினான்.

வயந்தன் தொடுத்தமைத்த வாசிகை சூட்டி
நயந்திகழும் நல்லுறுப்புக் கூட்டிப் பயன்கொள் #313
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நந்தா - கெடாத.
வனம் - பூஞ்சோலை `அதன்கண் மலரும் செந்தாமரை, தடம் சேர் செந்தாமரை` - என்க மந்தாகினித் தடம் - ஆகாய கங்கையாகிய தீர்த்தம்.
நூறாயிரம் - இலட்சம்.
நொந்தா - கெடாத.
வயந்தன் - வசந்தன்.
இவன் மன்மதனுக்குத் தோழன், இவன் ஆகாயகங்கையிற் பூத்த செந்தாமரை மலர் நூறாயிரத்தால் தொடுத்து வனைந்த திருவாசிகையைச் சிவ பெருமானது திருமுடிக்கு மேல் விளங்கும்படி சூட்டினான்.
பச்சைக் கருப்பூரம், குங்குமப் பூ.
பனி நீர் முதலிய கலவை உறுப்புக்களைச் சேர்த்து உயர்குலப் பெண்டிர் உரு வாக்கிய செழுமையான சந்தனக் குழம்பால் பெருமானது மார்பிடம் முழுதும் பூசி.

குலமகளிர் செய்த கொழுஞ்சாந்தம் கொண்டு

தலமலிய ஆகந் தழீஇக் கலைமலிந்த #314
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பச்சைக் கருப்பூரம், குங்குமப் பூ.
பனி நீர் முதலிய கலவை உறுப்புக்களைச் சேர்த்து உயர்குலப் பெண்டிர் உரு வாக்கிய செழுமையான சந்தனக் குழம்பால் பெருமானது மார்பிடம் முழுதும் பூசி.
கற்பகதருவால் தரப்பட்ட, செயற்பாடு நிறைந்த நறுமணம் கமழும் பட்டு உடையை உடுத்து, பொன்னால் ஆகிய வீரக்கழல்களைப் பாதங்களில் விளங்கக் கட்டி.
செயற்பாடு கை வன்மை ஆதலின் ``கலை`` என்றார்.
உடைகளும் மணம் ஊட்டி வைக்கப்படுதல் அறிக.

கற்பகம் ஈன்ற கமழ்பட் டினையுடுத்துப்
பொற்கழல்கள் கால்மேற் பொலிவித்து விற்பகரும் #315
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கற்பகதருவால் தரப்பட்ட, செயற்பாடு நிறைந்த நறுமணம் கமழும் பட்டு உடையை உடுத்து, பொன்னால் ஆகிய வீரக்கழல்களைப் பாதங்களில் விளங்கக் கட்டி.
செயற்பாடு கை வன்மை ஆதலின் ``கலை`` என்றார்.
உடைகளும் மணம் ஊட்டி வைக்கப்படுதல் அறிக.
ஒளியை வீசுகின்ற சூளாமணி பதிக்கப்பெற்ற மணிமுடியைச் சென்னியிலே கவித்து, உச்சியினின்றும் போந்து நெற்றியில் தொங்குகின்ற சுட்டியைச் சேர்ந்த, ஒளி நிறைந்த நெற்றிப் பட்டத்தை நிலையாக அணிவித்து,

சூளா மணிசேர் முடிகவித்துச் சுட்டிசேர்
வாளார் நுதற்பட்டம் மன்னுவித்துத் தோளா #316
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஒளியை வீசுகின்ற சூளாமணி பதிக்கப்பெற்ற மணிமுடியைச் சென்னியிலே கவித்து, உச்சியினின்றும் போந்து நெற்றியில் தொங்குகின்ற சுட்டியைச் சேர்ந்த, ஒளி நிறைந்த நெற்றிப் பட்டத்தை நிலையாக அணிவித்து, துளையிடப்படாத மணிகள் அழுத்திய, சுறா மீன் வடிவமாகச் செய்யப்பட்ட வளையங்களைக் காதுகளில் அணிவித்து.

மணிமகர குண்டலங்கள் காதுக் கணிந்தாங்

கணிவயிரக் கண்டிகை பொன்னாண் பணிபெரிய #317
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

துளையிடப்படாத மணிகள் அழுத்திய, சுறா மீன் வடிவமாகச் செய்யப்பட்ட வளையங்களைக் காதுகளில் அணிவித்து.
அப்பொழுதே, அழகு பொருந்திய வயிரத்தால் ஆகிய கண்டிகை, பொன் இழை கோத்த பெரிய முத்தாரம், இவை களுடன் அழகிய சன்னவீரம் அழகிய மார்பில் ஒளிவிட, `பூட்டி` என ஒரு சொல் வருவிக்க,

ஆரம் அவைபூண் டணிதிக ழும்சன்ன
வீரந் திருமார்பில் வில்இலக ஏருடைய #318
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அப்பொழுதே, அழகு பொருந்திய வயிரத்தால் ஆகிய கண்டிகை, பொன் இழை கோத்த பெரிய முத்தாரம், இவை களுடன் அழகிய சன்னவீரம் அழகிய மார்பில் ஒளிவிட, `பூட்டி` என ஒரு சொல் வருவிக்க,
அழகுடைய எட்டுத் தோள்களிலும் தோள் வளைகளைப் பொருத்தி, (தோள்வளை - வாகு வலயம்).
பார்த்தவர் மனம் மகிழும்படி கச்சினை இறுகக்கட்டி.

எண்தோட்கும் கேயூரம் பெய்துஉதர பந்தனமும்
கண்டோர் மனம்மகிழக் கட்டுறீஇக் கொண்டு #319
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அழகுடைய எட்டுத் தோள்களிலும் தோள் வளைகளைப் பொருத்தி, (தோள்வளை - வாகு வலயம்).
பார்த்தவர் மனம் மகிழும்படி கச்சினை இறுகக்கட்டி.
கடி சூத்திரம் - அரை நாண்.
இஃது அழகிற்காக உடைமேல் கட்டப்படுவது.
`கடிசூத்திரம் கொண்டு புனைந்து` என மாற்றியுரைக்க.
கங்கணம் - காப்பு.
திருமேனி முழுதும் பொருந்திய புனையப்படுவன யாவற்றையும் புனைந்து.
ஆங்கு - அதன்பின், அடிநிலை - பாதுகை.
`அடிநிலைமேல் நிற்பித்து` என ஒரு சொல் வரு வித்து, அதனை, `நந்தி மாகாளர் கடைகழிந்த போழ்தத்து` என்பத னோடு முடிக்க.
மேற்கூறிய கோலங்களை எல்லாம் புனைவித்தவர் நந்தி மாகாளர் என்க.
கடை - முதல்வாயில்.

``போழ்தத்து`` என்பதில் அத்து, வேண்டாவழிச் சாரியை.

கடிசூத் திரம்புனைந்து கங்கணம்கைப் பெய்து
வடிவுடைய கோலம் புனைந்தாங்கு அடிநிலைமேல் **#320**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

நந்திமா காளர் கடைகழிந்த போழ்தத்து
வந்து வசுக்கள் இருக்குரைப்ப அந்தமில்சீர் **#321**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கடி சூத்திரம் - அரை நாண்.
இஃது அழகிற்காக உடைமேல் கட்டப்படுவது.
`கடிசூத்திரம் கொண்டு புனைந்து` என மாற்றியுரைக்க.
கங்கணம் - காப்பு.
திருமேனி முழுதும் பொருந்திய புனையப்படுவன யாவற்றையும் புனைந்து.
ஆங்கு - அதன்பின், அடிநிலை - பாதுகை.
`அடிநிலைமேல் நிற்பித்து` என ஒரு சொல் வரு வித்து, அதனை, `நந்தி மாகாளர் கடைகழிந்த போழ்தத்து` என்பத னோடு முடிக்க.
மேற்கூறிய கோலங்களை எல்லாம் புனைவித்தவர் நந்தி மாகாளர் என்க.
கடை - முதல்வாயில்.
``போழ்தத்து`` என்பதில் அத்து, வேண்டாவழிச் சாரியை.
வசுக்கள் - `முப்பத்து மூவர்` எனத் தொகை பெற்ற தேவர்களுள்.
எண்மராய ஒரு குழுவினர்.
இருக்கு - மந்திரங்கள்.
எண்ணருங் கீர்த்தி - அளவிட இயலாத புகழ், எழுவர் இருடிகள் - சத்த இருடிகள் அகத்தியர், புலத்தியர், அங்கிரா.
கௌதமர், வசிட்டர், காசிபர், மார்க்கண்டேயர்.
அண்ணல் - தலைவன்; சிவபெருமான் ஆசிகள் வாழ்த்துக்கள்.
அவை, ``நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க``! *1* என்றாற் போலக் கூறப்படுவன், `வெல்க` என்றும், `சயசய` என்றும் சொல்லப் படுவனவும் வாழ்த்துக்களே.
`இவ்வாறு இறைவனை உயிர் வருக்கத் தினர் வாழ்த்துதல் உலகம் வாழ்தற் பொருட்டு` என்பதை, வாழ்த்து வதும் வானவர்கள் தாம்வாழ்வான்`` *2* என்பதனான் அறிக.

எண்ணருங் கீர்த்தி எழுவர் இருடிகளும்

அண்ணல்மேல் ஆசிகள் தாம் உணர்த்த ஒண்ணிறத்த #322

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

எண்ணருங் கீர்த்தி - அளவிட இயலாத புகழ், எழுவர் இருடிகள் - சத்த இருடிகள் அகத்தியர், புலத்தியர், அங்கிரா.
கௌதமர், வசிட்டர், காசிபர், மார்க்கண்டேயர்.
அண்ணல் - தலைவன்; சிவபெருமான் ஆசிகள் வாழ்த்துக்கள்.
அவை, ``நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க``! *1* என்றாற் போலக் கூறப்படுவன், `வெல்க` என்றும், `சயசய` என்றும் சொல்லப் படுவனவும் வாழ்த்துக்களே.
`இவ்வாறு இறைவனை உயிர் வருக்கத் தினர் வாழ்த்துதல் உலகம் வாழ்தற் பொருட்டு` என்பதை, வாழ்த்து வதும் வானவர்கள் தாம்வாழ்வான்`` *2* என்பதனான் அறிக.
ஒள் நிறத்த - ஒளி பொருந்திய நிறத்தையுடைய.
ஆதித்தர் - சூரியர்.
முப்பத்து மூவர் தேவரில் சூரியர் பன்னிரு வராவர்.
``பல்லாண்டு`` என்பதும் `பல் யாண்டு` எண்ணில்லாத யாண்டுகள் - வாழ்க` என்னும் குறிப்பினதேயாகும்.
மகதி - `மகதி` என்னும் யாழை ஏந்திய முனிவன்; நாரதன்.

பன்னிருவர் ஆதித்தர் பல்லாண் டெடுத்திசைப்ப

மன்னும் மகதியன்யாழ் வாசிப்பப் பொன்னியலும் #323

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஒள் நிறத்த - ஒளி பொருந்திய நிறத்தையுடைய.
ஆதித்தர் - சூரியர்.
முப்பத்து மூவர் தேவரில் சூரியர் பன்னிரு வராவர்.
``பல்லாண்டு`` என்பதும் `பல் யாண்டு` எண்ணில்லாத யாண்டுகள் - வாழ்க` என்னும் குறிப்பினதேயாகும்.
மகதி - `மகதி` என்னும் யாழை ஏந்திய முனிவன்; நாரதன்.
பொன் இயலும் பொன்போல ஒளிவிடுகின்ற.
அங்கி - தீக்கடவுள்.
கமழ் தூபம் - நறுமணப் புகை, சத்த இருடிகள் கூறிய ஆசிகள் முன்பே வேதம் முதலியவற்றில் அமைந்து, மரபாகச் சொல்லப்பட்டு வருவன.
`அவை தம் பயனைத் தப்பாமல் தரும்` என்பது கொள்கை.
இங்கு யமன் வந்து மங்கல மொழிகளால் வாழ்த்தி யது தனது பணிவைப் புலப்படுத்திக்கொள்ளும் உபசார வார்த்தை.

`இவை தம்முள் வேறுபாடு` என்க.

அங்கி கமழ்தூபம் ஏந்த யமன்வந்து
மங்கல வாசகத்தால் வாழ்த்துரைப்பச் செங்கண் #324
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பொன் இயலும் பொன்போல ஒளிவிடுகின்ற.
அங்கி - தீக்கடவுள்.
கமழ் தூபம் - நறுமணப் புகை, சத்த இருடிகள் கூறிய ஆசிகள் முன்பே வேதம் முதலியவற்றில் அமைந்து, மரபாகச் சொல்லப்பட்டு வருவன.
`அவை தம் பயனைத் தப்பாமல் தரும்` என்பது கொள்கை.
இங்கு யமன் வந்து மங்கல மொழிகளால் வாழ்த்தி யது தனது பணிவைப் புலப்படுத்திக்கொள்ளும் உபசார வார்த்தை.
`இவை தம்முள் வேறுபாடு` என்க.
நிருதி - தென்மேற்குத் திசைக்குக் காவலன்.
`இவன் அரக்கன்` என்பது பற்றிச் சிவந்த கண்களையுடையவனாகக் கூறினார்.
முதலோர் - நிருதியின் பரிவாரங்கள், நிழல் - ஒளி.
கலன்கள் - அணிகலன்கள்.
இவை உலா இடையில் எந்த அணிகல மாயினும் பழுதுபடின் உடனே மாற்றிப் பூட்டுதற்கு அமைவன.
வருணன் - மேற்றிசைக் காவலன் கலசம் - நீர்ப் பாத்திரம்.

நிருதி முதலோர் நிகழ்கலன்கள் ஏந்த
வருணன் மணிக்கலசந் தாங்கத் தெருவெலாம் #325
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நிருதி - தென்மேற்குத் திசைக்குக் காவலன்.
`இவன் அரக்கன்` என்பது பற்றிச் சிவந்த கண்களையுடையவனாகக் கூறினார்.
முதலோர் - நிருதியின் பரிவாரங்கள், நிழல் - ஒளி.
கலன்கள் - அணிகலன்கள்.
இவை உலா இடையில் எந்த அணிகல மாயினும் பழுதுபடின் உடனே மாற்றிப் பூட்டுதற்கு அமைவன.
வருணன் - மேற்றிசைக் காவலன் கலசம் - நீர்ப் பாத்திரம்.
வாயு தேவன்.
`தெருவெலாம் விளக்க` என்க.
விளக்குதல், குப்பைகளைப் போக்கி அழகு விளங்கச் செய்தல்.

மழை- மேகம்.
மேகத்திற்குத் தலைவன் இந்திரன் ஆதலின் அவனே மேகங் களைக் கொண்டு தெருக்களில் நீர் தெளிப்பித்தான் என்க.
சோமன் - சந்திரன்.
குபேரனோடு கூட இவனும் வட திசையைக் காக்கின்றான்.
சீர் - புகழ்.

வாயு நனிவிளக்க மாமழை நீர்தெளிப்பத்
தூயசீர்ச் சோமன் குடையேடுப்ப மேவியசீர் **#326**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வாயு தேவன்.
`தெருவெலாம் விளக்க` என்க.
விளக்குதல், குப்பைகளைப் போக்கி அழகு விளங்கச் செய்தல்.
மழை- மேகம்.
மேகத்திற்குத் தலைவன் இந்திரன் ஆதலின் அவனே மேகங் களைக் கொண்டு தெருக்களில் நீர் தெளிப்பித்தான் என்க.
சோமன் - சந்திரன்.
குபேரனோடு கூட இவனும் வட திசையைக் காக்கின்றான்.
சீர் - புகழ்.

ஈசானன் வந்தடைப்பை கைக்கொள்ள அச்சுனிகள்
வாயார்ந்த மந்திரத்தால் வாழ்த்துரைப்பத் தூய **#327**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈசானன், வடகீழ்த்திசைக் காவலன்.
இவன் உருத்திரர் வகையைச் சேர்ந்தவன்.
அடை - வெற்றிலை.
அதனையுடைய பை அடைப்பை.
எட்டுத் திக்குப் பாலகர்களில் ஒவ்வொருவனும் ஒவ்வொரு பணியை மேற்கொண்டமை யறிக.
வடதிசையில் குபேரனுக்கு ஈடாகச் சந்திரன் சொல்லப்பட்டான்.
குபேரன் பின்பு சொல்லப்படுவான்.
அச்சுனிகள் - அச்சுவினி தேவர்கள்.
இவர்கள் தேவ மருத்துவர்கள்.
முப்பத்து மூவரில் இவர்கள் இருவராவர்.
வாய் ஆர்ந்த - வாய் நிறைந்த.
இவர்கள் வாழ்த்துரைத்தல், `தம்மால் சிவபெருமான் அடையத் தக்க

உடல் நலம் ஒன்றில்லை; அவன் நிராமயன்; (இயல்பாகவே நோயிலி என்பது பற்றியாம்,

உருத்திரர்கள் தோத்திரங்கள் சொல்லக் குபேரன்
திருத்தகு மாநிதியஞ் சிந்தக் கருத்தமைந்த #328
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இங்கு ``உருத்திரர்கள்`` என்றது ஏகாதச ருத்திரரை.
முப்பத்து மூவரில் இவர் பதினொருவராவர்.
இங்ஙனம் தேவர் முப்பத்து மூவரும் திரண்டமையறிக.
`இவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கோடி பரிவாரம்` என்பதால் தேவர் முப்பத்து முக் கோடியினர் ஆவர், குபேரன் இத்திருவுலாவில் தக்கார்க்கும், வேண்டுவார்க்கும் பொன் மழையும், மணி மழையும் பொழிந்து வந்தான் என்க.
கருத்து - உள்ளன்பு.
தீர்த்தங்கள் - தீர்த்தங்களின் அதிதேவதைகள்.
கவரி - சாமரை.
புடை - இருபக்கத்திலும் இரட்டுதல் - மாறி மாறி வீசுதல்.

கங்கா நதியமுனை உள்ளுறுத்த தீர்த்தங்கள்
பொங்கு கவரி புடைஇரட்டத் தங்கிய #329
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கருத்து - உள்ளன்பு.
தீர்த்தங்கள் - தீர்த்தங்களின் அதிதேவதைகள்.
கவரி - சாமரை.
புடை - இருபக்கத்திலும் இரட்டுதல் - மாறி மாறி வீசுதல்.
தங்கிய - எட்டுத் திசைகளிலும் தங்கியிருக் கின்ற பைந்நாகம் - படத்தையுடைய பாம்பு.
சுடர் - விளக்கு.
அவை தம் தம்மிடத்திலுள்ள மாணிக்கங்களையே விளக்காக எடுத்தன.
கைந் நாகம் - கையையுடைய யானை.
அவை கால்களை மண்டியிட்டு, கைகளைத் தலைமேல் வைத்து வணங்கின.

பைந்நாகம் எட்டும் சுடரெடுப்பப் பைந்தறுகண்
கைந்நாகம் எட்டும் கழல்வணங்க மெய்ந்நாக #330
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தங்கிய - எட்டுத் திசைகளிலும் தங்கியிருக் கின்ற பைந்நாகம் - படத்தையுடைய பாம்பு.
சுடர் - விளக்கு.
அவை தம் தம்மிடத்திலுள்ள மாணிக்கங்களையே விளக்காக எடுத்தன.
கைந் நாகம் - கையையுடைய யானை.
அவை கால்களை மண்டியிட்டு, கைகளைத் தலைமேல் வைத்து வணங்கின.
மெய் - இறைவனுக்குத் திருமேனியாய் உள்ள.
நாகம் - ஆகாயம்.
விதானம் - மேற்கட்டி.
கொடி - துகிற் கொடியாகிய மின்னல் - தோன்றித் தோன்றி மறைதலால் அது காற்றால் மாறி மாறி வீசுகின்ற கொடியாயிற்று.
மோகம் - மயக்கம்.
முரசின் ஓசையால் சிலர்க்கும், சில உயிர்கட்கும் மயக்கம் உண்டாயிற்று. என்க.
அன்றி, `உலாவைக் காண விருப்பத்தை உண்டாக்கிற்று`` என்றலும் ஆம்.
இங்கும், `மேகம்` எனல்பாடம் அன்று.
உருமு - இடி.
விதானம், கொடி, முரசு இவைகள் உண்மையாகவே பல இருப்பினும், இவை ஒப்புமையால் அவையாய் அழகுசெய்தன.

மேகம் விதானமாய் மின்னெலாஞ் சூழ்கொடியாய்
மோகத் துருமு முரசறையப் போகம்சேர் **#331**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மெய் - இறைவனுக்குத் திருமேனியாய் உள்ள.
நாகம் - ஆகாயம்.
விதானம் - மேற்கட்டி.
கொடி - துகிற் கொடியாகிய மின்னல் - தோன்றித் தோன்றி மறைதலால் அது காற்றால் மாறி மாறி வீசுகின்ற கொடியாயிற்று.
மோகம் - மயக்கம்.
முரசின் ஓசையால் சிலர்க்கும், சில உயிர்கட்கும் மயக்கம் உண்டாயிற்று. என்க.
அன்றி, `உலாவைக் காண விருப்பத்தை உண்டாக்கிற்று`` என்றலும் ஆம்.
இங்கும், `மேகம்` எனல்பாடம் அன்று.
உருமு - இடி.

விதானம், கொடி, முரசு இவைகள் உண்மையாகவே பல இருப்பினும், இவை ஒப்புமையால் அவையாய் அழகுசெய்தன.
தும்புரு நாரதர்கள், உம்மைத் தொகை.
`போகம் சேர் நுண்ணிடையார்` என இயைக்க.
இதுகாறும் வந்த `செய` என் எச்சங்கள் நிகழ் காலத்தன.

தும்புரு நாரதர்கள் பாடத் தொடர்ந்தெங்கும்
கொம்புருவ நுண்ணிடையார் கூத்தாட எம்பெருமான் #332
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தும்புரு நாரதர்கள், உம்மைத் தொகை.
`போகம் சேர் நுண்ணிடையார்` என இயைக்க.
இதுகாறும் வந்த `செய` என் எச்சங்கள் நிகழ் காலத்தன.

விண்ணார் பணிய உயர்ந்த விளங்கொளிசேர்
வெண்ணார் மழவிடையை மேல்கொண்டாங்கு எண்ணார் #333
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பணிய - பணியும்படி.
இவ்வெச்சம் எதிர் காலத்தது.
இது ``மேல்கொண்டு`` என்பதனோடு முடியும்.
`வெண்நார்` எனப்பிரித்து, `நார் - தனது அன்பிற்கு இடமாகிய விடை` என உரைக்க.
`மேல் கொள்ளல்` என்பது, `ஊர்தல்` என்னும் பொருட்டாக லின் அது ``விடையை`` என்னும் இரண்டாவதற்கு முடிபாயிற்று.
மழ விடை - இளமையான இடபம்.
எண் ஆர் - எண் நிறைந்த; எண்ணால் மிகுதிப் பட்ட.
கருத்துடைய - அன்புடைய, பாரிடங்கள் - கூளிச் சுற்றம்; பூத கணங்கள்.
`ஒத்துக் காப்புச் செய்ய` என்க.
ஒத்து - இணங்கி.
காப்பு - காவல்.
கடைகள் - வாயில்கள்.

கருத்துடைய பாரிடங்கள் காப்பொத்துச் செய்யத்
திருக்கடைகள் ஏழ்கடந்த போதில் செருக்குடைய #334
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

எண் ஆர் - எண் நிறைந்த; எண்ணால் மிகுதிப் பட்ட.
கருத்துடைய - அன்புடைய, பாரிடங்கள் - கூளிச் சுற்றம்; பூத கணங்கள்.

`ஒத்துக் காப்புச் செய்ய` என்க.
ஒத்து - இணங்கி.
காப்பு - காவல்.
கடைகள் - வாயில்கள்.
செருக்கு - பெருமிதம்; வீரம்.
சேனாபதி - தேவ சேனாபதி; முருகன்.
யானை - ஐராவதம்.
ஆனா - நீங்காத.
போர், அசுரர்மேற் செய்யும் போர், முன் செல்வது தூசிப்படை
பின்செல்வது கூழைப்படை.

சேனா பதிமயில்மேல் முன்செல்ல யானைமேல்
ஆனாப்போர் இந்திரன் பின்படர ஆனாத **#335**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

செருக்கு - பெருமிதம்; வீரம்.
சேனாபதி - தேவ சேனாபதி; முருகன்.
யானை - ஐராவதம்.
ஆனா - நீங்காத.
போர், அசுரர்மேற் செய்யும் போர், முன் செல்வது தூசிப்படை
பின்செல்வது கூழைப்படை.

அன்னத்தே ஏறி அயன்வலப்பால் கைபோதக்
கன்னவிலும் திண்டோள் கருடன்மேல் மன்னிய **#336**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கைபோத - பக்கத் துணையாய் வர.
கல் - வலிய கல்.
நவிலும், உவம உருபு.
மேல் இட - மேற்பட்டுத் தோன்ற.
கரும்பு வில் இடப்பால் ஏல்வுடைய - கரும்புவில்லை இடப்பக்கத்தில்
ஏற்றலை உடைய காமன்.
ஏல்வு, தொழிற் பெயர்.
``பால் மென் கரும்பு`` என்பதில் பால், `சாறு` என்னும் பொருட்டாய்க்
கரும்பிற்கு அடையாயிற்று.
எய்வான் - எய்தற் பொருட்டு.
கொங்கு - தேன்.
நறுமணமு மாம், வில் மேலே கூறப்பட்டமையால், `வாளியை அதன்

கண் கோத்து அமைத்த` என்க.
வாளி - அம்பு.
கணை ஐந்து மேலே கூறப்பட்டதாயினும் `காமனுக்கு உள்ள சிறப்பு ஐங்கணைகளை எய்வதே` என்பது தோன்றுதற்கு.
``ஐங்கணை யான் காமன்`` எனப் பெயர்த்துங் கூறினார்.
காமனது கொடி மீனக் கொடி.
அவனுடை படைகள் மகளிர் குழாம்.
அவர்கள் ஆடவர்மேல் போர்க்குச் செல்லக் காமன் அப்படைக்குத் தலைவனாய் வில்லும், அம்பும் கொண்டு செல்வான் - ஆயினும் இப்பொழுது அந்தப் படை சிவபெருமான் மேல் வரக் காமன் அச்சத்தால் சிவபெருமானுக்கே துணைசெய்பவனாய்த் தன் குறிப்பறியாது எதிர்த்து வரும் தன் படைகள் மேலேயே தன் அம்புகளை எய்ய வருகின்றான்.
`காமன் தன் கொடிப் படைக்கு எதிராய்ப் போத` என்க.
காரி - ஐயனார்.
கதம் - கோபம்.
வாமம் - அழகு.
`காரியாகிய வாமன்` என்க.

மால்இடப்பாற் செல்ல மலரார் கணைஐந்து
மேல்இடப்பால் மென்கருப்பு வில்இடப்பால் ஏல்வுடைய **#337**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

சங்கணையும் முன்கைத் தடமுலையார் மேல்எய்வான்
கொங்கணையும் பூவாளி கோத்தமைத்த ஐங்கணையான் **#338**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

காமன் கொடிப்படைமுன் போதக் கதக்காரி
வாமன் புரவிமேல் வந்தணைய நாமஞ்சேர் **#339**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கைபோத - பக்கத் துணையாய் வர.
கல் - வலிய கல்.
நவிலும், உவம உருபு.
மேல் இட - மேற்பட்டுத் தோன்ற.
கரும்பு வில் இடப்பால் ஏல்வுடைய - கரும்புவில்லை இடப்பக்கத்தில்

ஏற்றலை உடைய காமன்.
ஏல்வு, தொழிற் பெயர்.
``பால் மென் கரும்பு`` என்பதில் பால், `சாறு` என்னும் பொருட்டாய்க் கரும்பிற்கு அடையாயிற்று.
எய்வான் - எய்தற் பொருட்டு.
கொங்கு - தேன்.
நறுமணமு மாம், வில் மேலே கூறப்பட்டமையால், `வாளியை அதன் கண் கோத்து அமைத்த` என்க.
வாளி - அம்பு.
கணை ஐந்து மேலே கூறப்பட்டதாயினும் `காமனுக்கு உள்ள சிறப்பு ஐங்கணைகளை எய்வதே` என்பது தோன்றுதற்கு.
``ஐங்கணை யான் காமன்`` எனப் பெயர்த்துங் கூறினார்.
காமனது கொடி மீனக் கொடி.
அவனுடை படைகள் மகளிர் குழாம்.
அவர்கள் ஆடவர்மேல் போர்க்குச் செல்லக் காமன் அப்படைக்குத் தலைவனாய் வில்லும், அம்பும் கொண்டு செல்வான் - ஆயினும் இப்பொழுது அந்தப் படை சிவபெருமான் மேல் வரக் காமன் அச்சத்தால் சிவபெருமானுக்கே துணைசெய்பவனாய்த் தன் குறிப்பறியாது எதிர்த்து வரும் தன் படைகள் மேலேயே தன் அம்புகளை எய்ய வருகின்றான்.
`காமன் தன் கொடிப் படைக்கு எதிராய்ப் போத` என்க.
காரி - ஐயனார்.
கதம் - கோபம்.
வாமம் - அழகு.
`காரியாகிய வாமன்` என்க.

வேழ முகத்து விநாயகனை உள்ளுறுத்துச்
சூழ்வளைக்கைத் தொண்டைவாய்க் கெண்டையொண்கண்
தாழ்கூந்தல் **#340**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

மங்கை எழுவருஞ் சூழ மடநீலி
சிங்க அடலேற்றின் மேற்செல்லத் தங்கிய **#341**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நாமம் - அச்சம்.
`விநாயகனை உள்ளுறுத்துக் கதக் காரி செல்ல` என மேலே கூட்டுக.

``மங்கை`` என்பது அப்பருவத்தைக் குறித்தது.
எழுவர் - சத்தமாதர்.
இவருள் காளியும் ஒருத்தியாயினும் அவளைத் தலைவி யாக வேறு பிரித்துக் கூறுதலின் அவளுக்கு ஈடாகத் துர்க்கையைக் கொள்க.
எழுவர் மாதராவார் பிராம்மி, வைணவி, மாகேசுவரி, கௌமாரி, இந்திராணி, வாராகி, காளி.
பிராம்மி, `அபிராமி` என்றும், வைணவி `நாராயணி` என்றும் சொல்லப்படுவர்.
நீலி - காளி.
மடம் - இளமை.

விச்சா தரர்இயக்கர் கின்னரர் கிம்புருடர்
அச்சா ரணர்அரக்க ரோடுஅசுரர் எச்சார்வும் #342
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

விச்சாதரர் முதல் அசுரர் ஈறாகச் சொல்லப் பட்டவர்கள் தேவ சாதியினர்.
இவர் முதலாகப் பதினெண்கணங்கள் சில இடங்களில் சொல்லப்படும்.
விச்சாதரர் வித்தியாதரர்.
`கந்திருவர்` என்றும் சொல்லப்படுவர்.
இயக்கர் - யட்சர்.
யட்சனுக்குப் பெண்பால் யட்சிணி தேவ சாதியினருள் யட்சர் பேரழகுடையவர்களாகச் சொல்லப்படுவர்.
``அச்சாரணர்`` என்பதில் அகரம் பண்டறி சுட்டு.
எச்சார்வும் - எவ்விடத்திலும்.
சல்லரி முதல் முருடு ஈறாகச் சொல்லப்பட்டவை வாத்திய வகைகள்.
அவற்றுட் பெரும்பாலன தத்தம் ஓசை காரணமாகப் பெயர் பெற்றன.
கல்லவடம்- இரத்தின மாலை.
இதனை மொந்தைக்கு அடையாக்குக.
இலயத்தட்டு, தாள அறுதி தோன்றத் தட்டுதல்.
சங்கு, அத்தட்டினைக் கடந்து ஒலித்தலால், ``தட்டு அழி சங்கம்`` என்றார்.
`சலஞ்சலம்` என்பதும் ஒருவகைச் சங்கே.
தாளம் - பிரம்ம தாளம்.
கட்டு அழியாப் பேரி - வார்க்கட்டுத் தளராத பேரிகை.
கர தாளம் - கைத்தாளம்.
இது சிறிய அளவினதும், குவிந்த வடிவினதுமாய்ச் சிறிய அளவில் ஒலிப்பது.
மகளிர் தனங்கட்கு உவமையாகச் சொல்லப்படும் தாளம் இதுவே.

முன்னர்ச் சொல்லியது பெரிய அளவினதாய்ப் பேரோசையைத் தருவது.
இயம்ப - ஒலிக்க.

சல்லரி தாளம் தகுணிதம் தத்தளகம்
கல்லலகு கல்ல வடமொந்தை நல்லிலயத் #343
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

விச்சாதரர் முதல் அசுரர் ஈறாகச் சொல்லப் பட்டவர்கள் தேவ சாதியினர்.
இவர் முதலாகப் பதினெண்கணங்கள் சில இடங்களில் சொல்லப்படும்.
விச்சாதரர் வித்தியாதரர்.
`கந்திருவர்` என்றும் சொல்லப்படுவர்.
இயக்கர் - யட்சர்.
யட்சனுக்குப் பெண்பால் யட்சிணி தேவ சாதியினருள் யட்சர் பேரழகுடையவர்களாகச் சொல்லப்படுவர்.
``அச்சாரணர்`` என்பதில் அகரம் பண்டறி சுட்டு.

தட்டழி சங்கம் சலஞ்சலந் தண்ணுமை
கட்டழியாப் பேரி கரதாளம் கொட்டும் #344
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

குடமுழவம் கொக்கரை வீணை குழல்யாழ்
இடமாம் தடாரி படகம் இடவிய #345
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

மத்தளம் துந்துபி வாய்ந்த முரு டிவற்றால்
எத்திசை தோறும் எழுந்தியம்ப ஒத்துடனே #346
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

எச்சார்வும் - எவ்விடத்திலும்.
சல்லரி முதல் முருடு ஈறாகச் சொல்லப்பட்டவை வாத்திய வகைகள்.
அவற்றுட் பெரும்பாலன தத்தம் ஓசை காரணமாகப் பெயர் பெற்றன.
கல்லவடம்- இரத்தின மாலை.
இதனை மொந்தைக்கு அடையாக்குக.
இலயத்தட்டு, தாள அறுதி தோன்றத் தட்டுதல்.
சங்கு, அத்தட்டினைக் கடந்து ஒலித்தலால், ``தட்டு அழி சங்கம்`` என்றார்.

`சலஞ்சலம்` என்பதும் ஒருவகைச் சங்கே.
தாளம் - பிரம்ம தாளம்.
கட்டு அழியாப் பேரி - வார்க்கட்டுத் தளராத பேரிகை.
கர தாளம் - கைத்தாளம்.
இது சிறிய அளவினதும், குவிந்த வடிவினதுமாய்ச் சிறிய அளவில் ஒலிப்பது.
மகளிர் தனங்கட்கு உவமையாகச் சொல்லப்படும் தாளம் இதுவே.
முன்னர்ச் சொல்லியது பெரிய அளவினதாய்ப் பேரோசையைத் தருவது.
இயம்ப - ஒலிக்க.
மங்கலம் பாடுவார்; சூதரும், மாகதரும், இவர் கள் முறையே திருவோலக்கத்தில் நின்றேத்துவாரும், இருந்தேத்து வாரும் ஆவர்.
மல்லர் - மெய்க்காப்பாளர்.
கிங்கரர் - தூதுவர், இவ ரெல்லாம் சிவ கணத்தவராவர்.
கிலுகிலுத்தல் - முணுமுணுத்தலும், அதட்டுதலும்,

மங்கலம் பாடுவார் வந்திறைஞ்ச மல்லரும்
கிங்கரரும் எங்குங் கிலுகிலுப்பத் தங்கிய **#347**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மங்கலம் பாடுவார்; சூதரும், மாகதரும், இவர் கள் முறையே திருவோலக்கத்தில் நின்றேத்துவாரும், இருந்தேத்து வாரும் ஆவர்.
மல்லர் - மெய்க்காப்பாளர்.
கிங்கரர் - தூதுவர், இவ ரெல்லாம் சிவ கணத்தவராவர்.
கிலுகிலுத்தல் - முணுமுணுத்தலும், அதட்டுதலும்,

ஆறாம் இருதுவும் யோகும் அருந்தவமும்
மாறாத முத்திரையும் மந்திரமும் ஈறார்ந்த **#348**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இருது - ருது.
இது தமிழில் `பெரும் பொழுது` எனப்படும்.
அவற்றைக் கார் முதலாக (ஆவணி முதலாக` வைத்து எண்ணுதல் தமிழ் மரபு.
வசந்தம் முதலாக வைத்து எண்ணுதல் வடநூல் வழக்கு.
(வசந்தம், கிரீஷ்மம், வர்ஷம், சரத், ஹேமந்தம், சிசிரம்.
) வசந்தம் முதலிய ஆறும் சித்திரை முதல் இரண்டிரண்டு மாதங்களை யுடையன.
பெரும் பொழுது கூறியதனானே சிறுபொழுதுகளும் கொள்ளப்படும்.

யோகு - யோகம்.
முத்திரை - சின்முத்திரை முதலிய கைக்குறிகள்.
கணம் (க்ஷணம்) - நொடி இதனைக் கூறவே உபலக் கணத்தால் துடி, இலவம் முதலிய பிற நுட்பக்காலங்களும் கொள்ளப் படும்.
இருது முதலாக இதுகாறும் கூறப்பட்டன அவற்றின் அதி தேவர்களையாம்.
வாலகிலியர் - பிரமனது மானச புத்திரனாகிய `கிருது` என்பவனுக்கும், `கிரியை` என்பவளுக்கும் பிறந்த அறுபதினா யிரவர்.
இவர் அங்குட்ட அளவினராய், வானப்பிரத்தர்களாய்ச் சிவநெறியில் நிற்பவர்கள் என்பர்.
ஈண்டி - நெருங்கி.

காலங்கள் மூன்றும் கணமும் குணங்களும்
வால கிலியரும் வந்தீண்டி மேலை **#349**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இருது - ருது.
இது தமிழில் `பெரும் பொழுது` எனப்படும்.
அவற்றைக் கார் முதலாக (ஆவணி முதலாக` வைத்து எண்ணுதல் தமிழ் மரபு.
வசந்தம் முதலாக வைத்து எண்ணுதல் வடநூல் வழக்கு.
(வசந்தம், கிரீஷ்மம், வர்ஷம், சரத், ஹேமந்தம், சிசிரம்.
) வசந்தம் முதலிய ஆறும் சித்திரை முதல் இரண்டிரண்டு மாதங்களை யுடையன.
பெரும் பொழுது கூறியதனானே சிறுபொழுதுகளும் கொள்ளப்படும்.
யோகு - யோகம்.
முத்திரை - சின்முத்திரை முதலிய கைக்குறிகள்.
கணம் (க்ஷணம்) - நொடி இதனைக் கூறவே உபலக் கணத்தால் துடி, இலவம் முதலிய பிற நுட்பக்காலங்களும் கொள்ளப் படும்.
இருது முதலாக இதுகாறும் கூறப்பட்டன அவற்றின் அதி தேவர்களையாம்.
வாலகிலியர் - பிரமனது மானச புத்திரனாகிய `கிருது` என்பவனுக்கும், `கிரியை` என்பவளுக்கும் பிறந்த அறுபதினா யிரவர்.
இவர் அங்குட்ட அளவினராய், வானப்பிரத்தர்களாய்ச் சிவநெறியில் நிற்பவர்கள் என்பர்.
ஈண்டி - நெருங்கி.

இமையோர் பெருமானே போற்றி எழில்சேர்
உமையாள் மணவாளா போற்றி எமைஆளும் **#350**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தேவர் பலரும் பெருமான் புறப்பாட்டின் பொழுது அவனைப் பலவகையால் போற்றி செய்து ஆரவாரித்துப் பூமழையைப் பொழிந்தமை கூறப்பட்டது.

தீயாடி போற்றி சிவனே அடிபோற்றி
ஈசனே எந்தாய் இறைபோற்றி தூயசீர்ச் **#351**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

சங்கரனே போற்றி சடாமகுடத் தாய்போற்றி
பொங்கரவா பொன்னங் கழல்போற்றி அங்கொருநாள் **#352**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பொங்கு அரவா - சீற்றம் மிக்க பாம்பினை அணிந்தவனே.

ஆய விழுப்போர் அருச்சுனன் ஆற்றற்குப்
பாசுபதம் ஈந்த பதம்போற்றி தூய **#353**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஆற்றல் - தவ வலிமை.
பதம் - திருவடி.
திரு வருளைத் திருவடியாகக் கூறுதல் வழக்கு.
தூய மலை - வெண்மலை; கயிலாயம், மயானம், ஊழிமுடிந்த இடம், நிலை, நித்தியத்துவம்.

மலைமேலாய் போற்றி மயானத்தாய் வானோர்
தலைமேலாய் போற்றிதாள் போற்றி நிலைபோற்றி **#354**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தேவர் பலரும் பெருமான் புறப்பாட்டின் பொழுது அவனைப் பலவகையால் போற்றி செய்து ஆரவாரித்துப் பூமழையைப் பொழிந்தமை கூறப்பட்டது.
தூய மலை - வெண்மலை; கயிலாயம், மயானம், ஊழிமுடிந்த இடம், நிலை, நித்தியத்துவம்.

போற்றிஎனப் பூமாரி பெய்து புலன்கலங்க
நாற்றிசையும் எங்கும் நலம்பெருக ஏற்றுக் **#355**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நாற்றிசையும் எங்கும்`` என்றது, `எந்தப் பக்கத்திலும், எந்த இடத்திலும்` என்றபடி.
ஏற்றுக் கொடி - இடபக் கொடி.
இது சிவபெரு மானுக்கு உரியது.
பதாகை - கொடி.
பொதுப்படக் கூறியதனால் உடன் வந்த மால், அயன், இந்திரன் மற்றும் முருகன் முதலியோரது கொடி களைக் கொள்க.
வடிவு - அழகு.
தொங்கல் - மாலை.
கடி - நறுமணம்.

கொடியும் பதாகையும் கொற்றக் குடையும்
வடிவுடைய தொங்கலுஞ் சூழக் கடிகமழும் #356
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஏற்றுக் கொடி - இடபக் கொடி.
இது சிவபெரு மானுக்கு உரியது.
பதாகை - கொடி.
பொதுப்படக் கூறியதனால் உடன் வந்த மால், அயன், இந்திரன் மற்றும் முருகன் முதலியோரது கொடி களைக் கொள்க.
வடிவு - அழகு.
தொங்கல் - மாலை.
கடி - நறுமணம்.

பூமாண் கருங்குழலார் உள்ளம் புதிதுண்பான்
வாமான ஈசன் வரும்போழ்திற் சேமேலே #357
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பூ மாண் கருங் குழலார் - பூவையணிந்த, மாட்சிமைப்பட்ட, கரிய கூந்தலையுடைய மகளிர்.
`புதிதாக உண்ண` என ஆக்கம் வருவித்துரைக்க.
உண்ணல் - கவர்தல்.
`புதிதாக` என்றது இதுகாறும் இது நிகழாமையைக் குறித்தது.
எனவே, `மகளிர் உள்ளங்கள் எளிதில் உண்ணப்படும்` என்பது குறித்ததாயிற்று.
`வாம மான` என்பது ``வாமான`` எனக் குறைந்து நின்றது.

வாமம் - அழகு.
மானம் - பெருமை.

வாமான ஈசன் மறுவில்சீர் வானவர்தம்
கோமான் படைமுழக்கம் கேட்டலுமே தூமாண்பில் #358
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மறு இல் சீர் வானவர் - குற்றம் இல்லாத புகழை யுடைய தேவர்.

வானநீர் தாங்கி மறைஓம்பி வான்பிறையோ
டூனமில் சூலம் உடையவாய் ஈனமிலா #359
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மாளிகைக்கும், சிவபெருமானுக்கும் சிலேடை.
வான நீர் - ஆகாய கங்கை, மறை - சிவபெருமான் வேதங் களை அழியாமல் காக்கின்றான்.
மாளிகைகள் தம்முள் நிகழும் இரகசியங்களை வெளித் தோன்றாமல் காக்கின்றன.
இருவரும் முடியில் பிறையை அணிகின்றனர்.
சூலம் - சிவபெருமான் சூலம் ஏந்தியுள்ளான்.
மாளிகைகள் (சூல் ஆம்) கருக்கொண்ட மேகங்களைத் தாங்குகின்றன.
அம் - நீர்.
அஃது ஆகுபெயராய் மேகத்தைக் குறித்தது.
ஈனம் - தாழ்வு.
வெள்ளை - திருநீறு; சுதை வேழத்து உரி போர்த்த வள்ளல்.
சிவபெருமான்.
வடிவு - தோற்றம்.
ஒள்ளிய - ஒளி பொருந்திய.
மாடம் - மேல் மாடம்.
அமளி - படுக்கை.
அக்காலத்தில் அரசர்கள் போர் தொடங்கும் பொழுது.
நாளை `இன்ன நாள்` என்றும், களத்தை, `இன்ன இடம்` முன்பே குறித்துக் கொள்வர்.
அவற்றுள் இடம் குறித்தலை, `களம் குறித்தல்` எனக் கூறும் வழக்கம் பற்றி, ``போர்க்களமாக் குறித்து`` என்றார்.
போர், ஆடவரோடு ஆடும் கலவிப் போர்.
சிவபெருமான் உலாப் போதுங்கால் பல திறக்குழாங்கள் குழுமி நிற்குமாயினும், உலாவால் மகளிர் குழாம் பட்ட பாட்டினை எடுத்துக்

கூறுவதே இப்பிரபந்தம் ஆதலின், அவை பற்றியே குறிக்கின்றார்.

வெள்ளை யணிதலால் வேழத் துரிபோர்த்த
வள்ளலே போலும் வடிவுடைய ஒள்ளிய **#360**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

மாட நடுவில் மலர்ஆர் அமளியே
கூடிய போர்க்கள மாக்குறித்துக் கேடில் **#361**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மாளிகைக்கும், சிவபெருமானுக்கும் சிலேடை.
வான நீர் - ஆகாய கங்கை, மறை - சிவபெருமான் வேதங் களை அழியாமல் காக்கின்றான்.
மாளிகைகள் தம்முள் நிகழும் இரகசியங்களை வெளித் தோன்றாமல் காக்கின்றன.
இருவரும் முடியில் பிறையை அணிகின்றனர்.
சூலம் - சிவபெருமான் சூலம் ஏந்தியுள்ளான்.
மாளிகைகள் (சூல் ஆம்) கருக்கொண்ட மேகங்களைத் தாங்குகின்றன.
அம் - நீர்.
அஃது ஆகுபெயராய் மேகத்தைக் குறித்தது.
ஈனம் - தாழ்வு.
வெள்ளை - திருநீறு; சுதை வேழத்து உரி போர்த்த வள்ளல்.
சிவபெருமான்.
வடிவு - தோற்றம்.
ஒள்ளிய - ஒளி பொருந்திய.
மாடம் - மேல் மாடம்.
அமளி - படுக்கை.
அக்காலத்தில் அரசர்கள் போர் தொடங்கும் பொழுது.
நாளை `இன்ன நாள்` என்றும், களத்தை, `இன்ன இடம்` முன்பே குறித்துக் கொள்வர்.
அவற்றுள் இடம் குறித்தலை, `களம் குறித்தல்` எனக் கூறும் வழக்கம் பற்றி, ``போர்க்களமாக் குறித்து`` என்றார்.
போர், ஆடவரோடு ஆடும் கலவிப் போர்.
சிவபெருமான் உலாப் போதுங்கால் பல திறக்குழாங்கள் குழுமி நிற்குமாயினும், உலாவால் மகளிர் குழாம் பட்ட பாட்டினை எடுத்துக் கூறுவதே இப்பிரபந்தம் ஆதலின், அவை பற்றியே குறிக்கின்றார்.

சிலம்பு பறையாகச் சேயரிக்கண் அம்பா
விலங்கு கொடும்புருவம் வில்லா நலந்திகழும் #362
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மகளிர் ஆடவரோடு ஆடும் கலவியாகிய போருக்கு அவர்தம் காலில் அணிந்துள்ள சிலம்புகளே போர்ப் பறை.
அவை அப்போர்க்காலத்து ஒலித்தல் இயல்பு.
விலங்கு கொடும் புருவம் - விலங்குபோல வளைவான புருவங்கள்.
அவைகளே வில், அவை அப்போர்க் காலத்தில் வளைதல் (நெறிதல்) இயல்பு.
கூழை, வளை இவை சிலேடை.
கூழை - கூந்தல்; கூழைப் (பின்னணிப்) படை.
தாழ அவிழ்ந்து அலைய கலவிக் காலத்துக் கூந்தல் அலைதல் இயல்பு.
அது பினன்ணிப் படை முன்னணிப் படைக் கேற்பச் செயற்படுதலை ஒக்கின்றது.
வளை - கை வளையல்; சங்கு.
இவை இரண்டும் ஒலித்தலைச் செய்யும்.
கை - பக்கம் போதரலாவது போர் செய்வார் வலஞ்செல்லு தலும் இடம் செல்லுதலும் இந்நிலை கலவியிடத்தும் பொருந்தும்.
கேழ் கிளரும் - நிறம் மிக்க.
`நிறம்` என்றது `திதலை` எனப்படும் நிறத்தினை.
அல்குல் - பிருட்டம்.
`துடி இடை` எனக் கூறுதற்கு ஏற்ப, நடுவில் இடை சுருங்கியிருக்க, மேலே ஆகமும், கீழே பிருட்டமும் அகன்றிருக்கும் நிலையில் பிருட்டம் தேர்த்தட்டோடு உவமிக்கப் படுதல் வழக்கமாயிற்று.
உந்தி - செலுத்தி.
மா - யானை.
யானைத் தந்தத்தோடு உவமிக்கப்படுதல் பற்றி யானையாயின.
பொங்க - சினம் மிக; புளகிக்க.
``கொழுநர்`` என்றது, அப்பொழுது உரிமை பெற்றோரை.
அல்லாக்கால் கலவியாலே அவர் மனத்தைக் கவர்தல் வேண்டா என்க.
பொருது - போர் செய்து.
`பொருது அங்கம் அசைந்த` என்க.
அங்கம் - உறுப்புக்கள்.
அசைந்த - சோர்ந்த.

கூழைபின் தாழ வளைஆர்ப்பக் கைபோந்து
கேழ்கிளரும் அல்குலாம் தேர்உந்திச் சூழொளிய #363

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

கொங்கைமாப் பொங்கக் கொழுநர் மனம்கவர
அங்கம் பொருதசைந்த ஆயிழையார் செங்கேழ்நற் **#364**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மகளிர் ஆடவரோடு ஆடும் கலவியாகிய போருக்கு அவர்தம் காலில் அணிந்துள்ள சிலம்புகளே போர்ப் பறை.
அவை அப்போர்க்காலத்து ஒலித்தல் இயல்பு.
விலங்கு கொடும் புருவம் - விலங்குபோல வளைவான புருவங்கள்.
அவைகளே வில், அவை அப்போர்க் காலத்தில் வளைதல் (நெறிதல்) இயல்பு.
கூழை, வளை இவை சிலேடை.
கூழை - கூந்தல்; கூழைப் (பின்னணிப்) படை.
தாழ அவிழ்ந்து அலைய கலவிக் காலத்துக் கூந்தல் அலைதல் இயல்பு.
அது பினன்ணிப் படை முன்னணிப் படைக் கேற்பச் செயற்படுதலை ஒக்கின்றது.
வளை - கை வளையல்; சங்கு.
இவை இரண்டும் ஒலித்தலைச் செய்யும்.
கை - பக்கம் போதரலாவது போர் செய்வார் வலஞ்செல்லு தலும் இடம் செல்லுதலும் இந்நிலை கலவியிடத்தும் பொருந்தும்.
கேழ் கிளரும் - நிறம் மிக்க.
`நிறம்` என்றது `திதலை` எனப்படும் நிறத்தினை.
அல்குல் - பிருட்டம்.
`துடி இடை` எனக் கூறுதற்கு ஏற்ப, நடுவில் இடை சுருங்கியிருக்க, மேலே ஆகமும், கீழே பிருட்டமும் அகன்றிருக்கும் நிலையில் பிருட்டம் தேர்த்தட்டோடு உவமிக்கப் படுதல் வழக்கமாயிற்று.
உந்தி - செலுத்தி.
மா - யானை.
யானைத் தந்தத்தோடு உவமிக்கப்படுதல் பற்றி யானையாயின.
பொங்க - சினம் மிக; புளகிக்க.
``கொழுநர்`` என்றது, அப்பொழுது உரிமை பெற்றோரை.
அல்லாக்கால் கலவியாலே அவர் மனத்தைக் கவர்தல் வேண்டா என்க.
பொருது - போர் செய்து.
`பொருது அங்கம் அசைந்த` என்க.

அங்கம் - உறுப்புக்கள்.
அசைந்த - சோர்ந்த.

பொற்கலசத் துள்ளால் மணிநீர் முகம்சேர்த்தி
நற்பெருங் கோலம் மிகப்புனைந்து பொற்புடைய #365
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரவு கலவிப்போரால் சோர்வுற்ற மகளிர் காலையில் குளித்து ஒப்பனை செய்கின்றனர்.
`மணி நீரைப் பொற்கலசத்துள்ளால் எடுத்து முகம் சேர்த்தி` என மாற்றியும், ஒருசொல் வருவித்து என உரைக்க.
``நீர் முகம் சேர்த்தி`` என்றது, `தலை முழுகி` என்றபடி.
மணி நீர் - தெளிந்த நீர்.

பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக
மாதரவர் சொல்லார் மகிழ்ந்தீண்டிச் சோதிசேர் #366
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறாக மகளிரது பருவம் ஏழாகச் சொல்லப்படும்.
அவை பற்றி வரும் பகுதிகளில் காண்க.
மாது - அழகு; இனிமை.
இவர்தல் - மீதூர்தல்.

சூளிகையும் சூட்டும் சுளிகையும் கட்டிகையும்
வாளிகையும் பொற்றோடும் மின்விலக மாளிகையின் #367
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சூளிகை - மேல் மாடத்தின் நெற்றி.
சூட்டு - சிகரம்.
`இங்கெல்லாம் மின்னல்போல ஒளிவீ\\\\u2970?` என்க.
சுளிகை, சுட்டிகை, இவை மகளிர் நெற்றியில் அணியும் அணி வகைகள்.
வாளிகை - ஒருவகைக் காதணி.
`இவை மின் விலக` என்க.

மேல்ஏறி நின்று தொழுவார் துயர்கொண்டு
மால்ஏறி நின்று மயங்குவார் நூலேறு #368
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மால் - மயக்கம்.

நூல் ஏறு தாமம் - அருள் நூல்களில் எல்லாம் புகழ் இடம் பெற்று விளங்கும் கொன்றை மலர் மாலை.
சடாதாரி - சடையை உடைய சிவபெருமான்.
யாமம் - இரவுப் பொழுது.
அடும் - (எம்மைக்) கொல்லும்.

தாமமே தந்து சடாதாரி நல்கானேல்
யாமமேல் எம்மை அடும்என்பார் காமவேள் **#369**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நூல் ஏறு தாமம் - அருள் நூல்களில் எல்லாம் புகழ் இடம் பெற்று விளங்கும் கொன்றை மலர் மாலை.
சடாதாரி - சடையை உடைய சிவபெருமான்.
யாமம் - இரவுப் பொழுது.
அடும் - (எம்மைக்) கொல்லும்.

ஆம்என்பார் அன்றென்பார் ஐயுறுவார் கையெறிவார்
தாம்முன்னை நாணோடு சங்கிழப்பார் பூமன்னும் **#370**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சிலர், (அழகால்) `இவன் மன்மதனே` என்பார்.
சிலர் அதனை மறுத்து, அங்ஙனம் கூறுவது பொருந்துவதன்று; (இவனது அழகு காமனுக்கு இல்லை - காமன் கரியன்; இவன் செய்யன்) என்பர்.
சிலர் `இவன் வேறு யாவன்` என ஐயுறுவர்.
சிலர் ஆற்றாமையால் கையோடு கையை எறிவார்.
பலரும் முன்பே போய் விட்ட நாணத்தோடு, பின்பு தாம் அணிந்திருந்த சங்க வளையல் களையும் இழப்பர்.
பூ மன்னும் - அழகு நின்ற.
பொன் அரி மாலை பல அணிகலங்களுள் ஒன்றாக மகளிர் கழுத்தில் அணியப்படுவது.
அதனையே இப்பொழுது அவர்கள் மயக்கம் மிகுதியால் சிவபிரான் தம்மைத் தனக்கு உரியர் ஆக்கிக்கொள்ளக் கட்டும் மாங்கல்ய சூத்திர மாக (தாலிக்கயிறாக) நினைத்துத் தாங்களே எடுத்துப் புனைந்து கொள்வார்கள்.
`துன் மாலை, அரி மாலை` எனத் தனித் தனி இயைக்க.
துன் மாலை - இருவரும் ஒன்றுபடுதற்கு ஏதுவான மாலைத்தாலி, அரிமாலை அழகிய மாலை.
அரி - அரித்தல் செய்யப்படுவது.

பொன்னரி மாலையைப் பூண்பார்அப் பூண்கொண்டு
துன்னரி மாலையாச் சூடுவார் முன்னம் #371
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பூ மன்னும் - அழகு நின்ற.
பொன் அரி மாலை பல அணிகலங்களுள் ஒன்றாக மகளிர் கழுத்தில் அணியப்படுவது.
அதனையே இப்பொழுது அவர்கள் மயக்கம் மிகுதியால் சிவபிரான் தம்மைத் தனக்கு உரியர் ஆக்கிக்கொள்ளக் கட்டும் மாங்கல்ய சூத்திர மாக (தாலிக்கயிறாக) நினைத்துத் தாங்களே எடுத்துப் புனைந்து கொள்வார்கள்.
`துன் மாலை, அரி மாலை` எனத் தனித் தனி இயைக்க.
துன் மாலை - இருவரும் ஒன்றுபடுதற்கு ஏதுவான மாலைத்தாலி, அரிமாலை அழகிய மாலை.
அரி - அரித்தல் செய்யப்படுவது.

ஒருகண் எழுதிவிட் டொன்றெழுதா தோடித்
தெருவம் புகுவார் திகைப்பார் அருகிருந்த #372
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்களில் மைதீட்டத் தொடங்கித் தீட்டியவர்கள் ஒரு கண்ணிற்கு மட்டும் தீட்டி.
பொழுது உலா ஒலி கேட்டு அதனை விட்டுவிட்டு ஓடித் தெருவிலே வந்து நின்றார்கள்.
`தெருவம்` என்பதில் அம், சாரியை.

கண்ணாடி மேற்பஞ்சு பெய்வார் கிளியென்று
பண்ணாடிச் சொற்பந்துக் குற்றுரைப்பார் அண்ணல்மேற் #373
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மயக்கத்தால் நிலைக் கண்ணாடியை, `படுக்கை` என்று நினைத்து, அதன்மேல் பஞ்சைச் சொரிந்தார்கள்.
பந்தினை, `கிளி` என்று நினைத்து அதற்கு, `சிவா, முக்கண்ணா, பிறை சூடீ` என்றாற்போலும் சொற்களைச் சொல்லும்படி தங்கள் இசைபோலும் சொற்களைச் சொல்லிப் பயிற்றுவிப்பார்.
அண்ணல், சிவபெருமான்.
மாசாலம் - பெருங் கூட்டம்.
கோலுதல் - குவித்தல்.

`மகளிருடைய அனைத்துக் கண்களும் சிவபெருமான் ஒருவன்மேலே சென்று குவிந்தன` என்றபடி.
திண்ணம் நிறைந்தார் - `இவனைப் பற்றி யல்லது தனியே மீளோம்` என்னும் உறுதியுடன் கூடி நின்றார்கள்.
`திண்ணத்தோடு` என ஓடுருபு விரிக்க.
அவர்கள் கருதியது கூடாமையால் திகைத்தார்கள்.

கண்ணென்னும் மாசாலங் கோலிக் கருங்குழலார்
திண்ணம் நிறைந்தார் திறந்திட்டார் ஒண்ணிறத்த #374
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அண்ணல், சிவபெருமான்.
மாசாலம் - பெருங் கூட்டம்.
கோலுதல் - குவித்தல்.
`மகளிருடைய அனைத்துக் கண்களும் சிவபெருமான் ஒருவன்மேலே சென்று குவிந்தன` என்றபடி.
திண்ணம் நிறைந்தார் - `இவனைப் பற்றி யல்லது தனியே மீளோம்` என்னும் உறுதியுடன் கூடி நின்றார்கள்.
`திண்ணத்தோடு` என ஓடுருபு விரிக்க.
அவர்கள் கருதியது கூடாமையால் திகைத்தார்கள்.

பேதைப் பருவம் பிழையாதாள் வெண்மணலால்
தூதைச் சிறுசோ றடுதொழிலாள் தீதில் #375
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஐந்துமுதல் ஏழ் ஆண்டு முடியப் பேதைப் பருவம்.
இப்பருவத்தில் காமக் குறிப்புத் தோன்றாதாயினும் உலாப் பிரபந்தத்தில் மற்றைப் பருவ மகளிரோடு இப்பருவ மகளிரையும் கூட்டி நிரப்புதல் வழக்கு.
இப்பிரபந்தம் பட்டாங் குரைப்பதின்றிப் புனைந்துரை வகையால் தலைவனைச் சிறப்பிப்பதேயாகலின்.
பிழையாமை - கடவாமை.
தூதை - சிறுமட்கலம்.
`பேதை சிற்றில் இழைத்துச் சிறுசோறட்டு விளையாடுவாள்` என்றபடி.

இடையாலும் ஏக்கழுத்தம் மாட்டாள் நலஞ்சேர்
உடையாலும் உள்உருக்க கில்லாள் நடையாலும் #376
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உம்மைகள் எச்சப் பொருள.
ஏக்கழுத்தம் - செருக்கு; தன் பெண்மை நலத்தைத் தானே வியந்து செருக்குதல்.
இது முதலியன பேதைப் பருவத்தாளிடத்து இல்லாமை யறிக.
நலம் - அழகு.
உடையால் உள் உருக்குதல்.
பொன்னும், மணி யும் பொருந்திய உடைகளின்வழி உண்டாகும் செயற்கை அழகால் ஆடவரது உள்ளங்களை உருகச் செய்தல்.

கௌவைநோய் காளையரைச் செய்யாள் கதிர்முலைகள்
வெவ்வநோய் செய்யுந் தொழில்பூணாள் செவ்வன்நேர் **#377**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கௌவை - பழிச்சொல்.
அஃது, இவன், `தான் யார், இவள் யார்` என்று எண்ணாமல், பலருங்காண இவளை உற்று நோக்குகின்றான் - எனப் பலராலும் பழிக்கப்படுதல்.
`கௌவையால் என உருபு விரித்து, `நோய் செய்யாள்` என இயைக்க.
நோய் செய்தல்- வருத்துதல் ``காளையரை`` என்பதை எல்லாவற்றோடும் கூட்டுக.
`கதிராகிய முலைகள்` என்க.
கதிராதல், உண்மை தெரிக்கும் அளவாய் இருத்தல்.
``முலைகள் தொழில் பூணாள்`` எனச் சினை வினை முதல்மேல் நின்றது.
வெவ்வ நோய் - கொடிய வருத்தம்.
செவ்வன் - செவ்வையாக.
நேர் நோக்கிலும் - ஆடவர் நேர்நின்று பார்த்தபோதிலும், நோய் நோக்கம் நோக்காள் - அவர்கள் உள்ளத்தில் காம நோய் உண்டாக நோக்கும் நோக்கமாக நோக்க அறியாள்.
இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.
* என்னும் குறளில், ``நோய் நோக்கு`` என்பதற்குப் பரிமேலழகர் உரைத்த உரையை நோக்குக.
நோய் நோக்கம் - நோயை உண்டாக்கும் நோக்கம்.
``நோக்கமாக நோக்காள்`` என ஆக்கம் வருவித்துரைக்க.
வாக்கின் - சொல்லால்.
சொல்லால் பிறர் மனத்து வஞ்சித்தலா வது, ஆடவன் ஒருவன் தேர், அல்லது குதிரை மேல் செல்லுதலைக் கண்டபொழுது அவனைக் காதலித்த காதல் காரணமாகக் கண் கலுழ்ந்து நின்றாளைத் தாயர்

நோக்கி, `ஏடி, என்ன கண் கலுழ் கின்றாய்` என்று உருத்து வினாயபொழுது `அன்னாய், ஒன்றும் இல்லை; தேர், அல்லது குதிரை சென்ற வேகத்தால் எழுந்த தூசு கண் களில் வீழ்ந்து விட்டன. கண்கள் கலுழ்கின்றன` என விடையிறுக்க, அவர்கள் உள்ளத்தில், `இவள் நம்மை வஞ்சிக்கின்றாள்` என்னும் எண்ணம் தோன்றச் செய்தல். பிறர் மனத்தும் வஞ்சியாள் என்னும் உம்மை, `தன் மனத்தும் வஞ்சனையிலள்` என இறந்தது தழுவிற்று.

நோக்கிலும் நோய்நோக்கம் நோக்காள் தன் செவ்வாயின்
வாக்கிற் பிறர்மனத்தும் வஞ்சியாள் பூக்குழலும் **#378**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

செவ்வன் - செவ்வையாக.
நேர் நோக்கிலும் - ஆடவர் நேர்நின்று பார்த்தபோதிலும், நோய் நோக்கம் நோக்காள் - அவர்கள் உள்ளத்தில் காம நோய் உண்டாக நோக்கும் நோக்கமாக நோக்க அறியாள்.
இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.
* என்னும் குறளில், ``நோய் நோக்கு`` என்பதற்குப் பரிமேலழகர் உரைத்த உரையை நோக்குக.
நோய் நோக்கம் - நோயை உண்டாக்கும் நோக்கம்.
``நோக்கமாக நோக்காள்`` என ஆக்கம் வருவித்துரைக்க.
வாக்கின் - சொல்லால்.
சொல்லால் பிறர் மனத்து வஞ்சித்தலா வது, ஆடவன் ஒருவன் தேர், அல்லது குதிரை மேல் செல்லுதலைக் கண்டபொழுது அவனைக் காதலித்த காதல் காரணமாகக் கண் கலுழ்ந்து நின்றாளைத் தாயர்
நோக்கி, `ஏடி, என்ன கண் கலுழ் கின்றாய்` என்று உருத்து வினாயபொழுது `அன்னாய், ஒன்றும் இல்லை; தேர், அல்லது குதிரை சென்ற வேகத்தால் எழுந்த தூசு கண் களில் வீழ்ந்து விட்டன. கண்கள் கலுழ்கின்றன` என விடையிறுக்க, அவர்கள் உள்ளத்தில், `இவள் நம்மை வஞ்சிக்கின்றாள்` என்னும் எண்ணம் தோன்றச் செய்தல். பிறர் மனத்தும் வஞ்சியாள் என்னும் உம்மை, `தன் மனத்தும் வஞ்சனையிலள்` என இறந்தது தழுவிற்று.
`குழலை முடியாள்` என்க.
முடியாமைக்குக் காரணம் அவை முடிக்க வாராமை.
பேதைப் பருவத்தாளை, `முடி கூடாதவள்` என்றல் வழக்கு.
பாடவம் - ஆரவாரம்; பகட்டு.
இள வேய் - முற்றா, முளையாகிய மூங்கில்.

தோள்கள் அன்ன சிறிய ஆகலின் ஆடவர்க்கு விருப்பம் தாரா ஆயின.

பாடவம் தோன்ற முடியாள் இளவேய்த்தோள்
ஆடவர் தம்மை அயர்வுசெய்யாள் நாடோறும் #379
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`குழலை முடியாள்` என்க.
முடியாமைக்குக் காரணம் அவை முடிக்க வாராமை.
பேதைப் பருவத்தாளை, `முடி கூடாதவள்` என்றல் வழக்கு.
பாடவம் - ஆரவாரம்; பகட்டு.
இள வேய் - முற்றா, முளையாகிய மூங்கில்.
தோள்கள் அன்ன சிறிய ஆகலின் ஆடவர்க்கு விருப்பம் தாரா ஆயின.
`சொல்வது ஒன்று, நினைப்பது ஒன்று, அடுத்து விரும்புவது ஒன்று; இவ்வாறு நிலையாக ஒன்றிலும் நில்லாமை பேதைப் பருவத்து இயல்பு என்றபடி.

ஒன்றுரைத் தொன்றுன்னி ஒன்றுசெய் தொன்றின்கண்
சென்ற மனத்தினாளாஞ் சேயிழையாள் நன்றாகத் #380
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சொல்வது ஒன்று, நினைப்பது ஒன்று, அடுத்து விரும்புவது ஒன்று; இவ்வாறு நிலையாக ஒன்றிலும் நில்லாமை பேதைப் பருவத்து இயல்பு என்றபடி.

தாலி கழுத்தணிந்து சந்தனத்தால் மெய்பூசி
நீல அறுவை விரித்துடுத்துக் கோலஞ்சேர் #381
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தாலி - நாபி அளவும் தொங்கவிடும் அணிகலன்.
அறுவை - துணி.
பேதைப் பருவத்தாள் தெருப் புழுதியில் விளையாடு தல் பற்றி நீலத் துணியை உடுத்து விடுப்பர்.
`அதுவும் ஒரு சுற்றாகவே இருக்கும்` என்றற்கு, ``விரித்துடுத்து`` என்றார்.
கோலம் - அழகு.

பந்தரில் பாவைகொண் டாடுமிப் பாவைக்குத்
தந்தையார் என்றொருத்தி தான்வினவ அந்தமில்சீர் #382
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பாவை கொண்டு`` என்பதை, `பாவை கொள்ள` எனத் திரிக்க.
கொள்ளுதல், கொண்டு விளையாடுதல்.
ஒருத்தி, ஊராருள் ஒருத்தி.
தான், அசை.
வினவ - குறும்பாகக் கேட்க.
பேதைதன் தாய்.
`இப்பாவைக்குத் தந்தை சிவபெருமான்தான்` அஃதாவது, `கடவுள்தான்` என்று அவளும் குறும்பாக விடையிறுக்க, அந்தச் சிவபெருமான் அப்பொழுது; தற்செயலாய் ஒரு பெரிய இடப வாகனத்தின் மேல் அங்கு வந்தான்.
காய் சினம், விடைக்கு இன அடை.
பேதைப் பருவத்தாள் அவனைக் கண்ணாரக் கண்டாள்.

ஈசன் எரியாடி என்ன அவனைஓர்
காய்சின மால்விடைமேல் கண்ணுற்றுத் தாய்சொன்ன #383
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பாவை கொண்டு`` என்பதை, `பாவை கொள்ள` எனத் திரிக்க.
கொள்ளுதல், கொண்டு விளையாடுதல்.
ஒருத்தி, ஊராருள் ஒருத்தி.
தான், அசை.
வினவ - குறும்பாகக் கேட்க.
பேதைதன் தாய்.
`இப்பாவைக்குத் தந்தை சிவபெருமான்தான்` அஃதாவது, `கடவுள்தான்` என்று அவளும் குறும்பாக விடையிறுக்க, அந்தச் சிவபெருமான் அப்பொழுது; தற்செயலாய் ஒரு பெரிய இடப வாகனத்தின் மேல் அங்கு வந்தான்.
காய் சினம், விடைக்கு இன அடை.
பேதைப் பருவத்தாள் அவனைக் கண்ணாரக் கண்டாள்.
ஆயினும் தாய் சொல்லிய சொல்லின் முறைமையை முழுமையாக அறிதல் இவளைப்போன்ற பேதைப் பருவப் பெண்களுக்கு இயலாது. அஃதாவது, இல்லத்தில் தன் தாய் தன்னையும், மற்றும் குழவிகளையும் சீராட்டிப் பாராட்டுதலைப் பார்த்துத் தானும் ஒருபாவையைத் தன்னுடைய மகவாகக் கொண்டு அவ்வாறு சீராட்டி விளையாடுகின்ற பேதைப் பெண், `ஒரு மகவிற்குத் தாயாயினாள் என்றால், அதற்கு முன்னே அதற்குத் தங்கையாகக் கூடிய ஒருவனை மணந்திருக்க வேண்டுமன்றோ` என்னும் ஆழ்ந்த பொருளில் அயலாள் ஒருத்தி, `இப்பாவைக்குத் தந்தை யார்` என்று குறும்பாகக் கேட்டாள்.

இந்தப் பேதைப் பெண்ணுக்கு இதற்குள் மணவாளன் ஏது` என்பதுபடத் தாய், `கடவுள்தான் இப்பாவைக்குத் தந்தை` எனக் குறும்பாக விடையிறுத்தாள்.
இந்த நுட்பங்களைப் பேதை அறியமாட்டாள்.
ஆயினும் தாய் சொன்னபடி தெய்வச் செயலாகச் சிவபெருமான் அங்கு உலாப்போந்தாள்.
பேதை மற்றவர்போலத் தானும் அவனைக் கண்டாள்.
`இவள் போல்வாள் நோக்காள்` என மாறிக் கூட்டி, `ஆயினும் என்பது வருவிக்க.
`தன் பாவைக்குத் தந்தை வேண்டும்` என்றும் `அந்தத் தந்தை சிவபெருமான்தான்` என்று, தாய் கூறிவிட்டாள் - என்றும் இந்த முறைமைகளுக்காகப் பேதை சிவபெருமானை விரும்பவில்லை.
(அந்த முறைமையெல்லாம் அறியும் பருவம் அன்று அவள் பருவம்.
) ஆயினும் தன்னியல்பால் தானே சிவபெருமானைக் காதலிக்கின்ற முறைமையில் காதல் செய்வதற்கு நல்ல நேரத்தில் தொடக்கம் செய்தாள்.
`கணக்கு` இரண்டில் முன்னது முறைமை; பின்னது நூல்.
நாட் செய்தல்- நாள் கொள்ளுதல்; தொடங்குதல்.
பேதையின் காதல் நல்ல முறையில் நல்ல நேரத்தில் தொடங்கியது என்க.
இதற்குமுன் இவள் `காதல்` என்பதையே அறியாள் என்பதைக் குறித்தபடி.
காதல் என்பதையே அறியாதவளும் காதல் தோன்றப் பெற்றாள்; சிவபெருமானது திருவுலா அத்தன்மைத் தாய் இருந்தது.
அவ்வுலாப் `பத்தி` என்பதையே அறியாதவர்க்கும் பத்தியைத் தோற்றுவிக்கும் தன்மையது` என்பது இதன் உள்ளுறை.

இக்கணக்கு நோக்காள் இவள்போல்வாள் காமநூல்
நற்கணக்கின் மேற்சிறிதே நாட்செய்தாள் பொற்புடைய **#384**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

பேரொளிசேர் காட்சிப் பெதும்பைப் பிராயத்தாள்
காரொளிசேர் மஞ்ஞைக் கவினியலாள் சீரொளிய **#385**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

எட்டு முதல் பதினோர் ஆண்டு முடியப் பெதும்மைப் பருவம்.
பேரொளி - மிக்க அழகு.

சேர்தல் - ஒரு காலைக் கொருகால் மிகுதல்.
கார் ஒளி சேர் மஞ்ஞைக் கவின் இயலாள்- நீல ஒளி வளரப் பெறுகின்ற மயிலைப் போலும் அழகு வளர்தலையுடையவள்.

தாமரை ஒன்றின் இரண்டு குழைஇரண்டு
காமருவு கெண்டைஓர் செந்தொண்டை தூமருவு #386
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஒரு தாமரை மலரிலே இருதளிர், இரு அழகிய கெண்டைமீன், ஒரு சிவந்த கொவ்வைக் கனி, முத்துக்கள், வளைந்த வில், `சுட்டி` என்னும் அணிகலம், சிவந்த பவளம் இவைகளை ஒருங்கு வைத்தது போலும் நன்கு மதிக்கத்தக்க முகத்தையுடையவள்.
தளிர் காது; கெண்டை கண்கள்; கொவ்வைக் கனி இதழ்; முத்துக்கள் பற்கள்; வில் புருவம்; இவையெல்லாம் உருவக வகையால் கூறப்பட்டன.
சுட்டியும்.
பவளமும் உவமையாற் கூறப்பட்டன.
பவள படமும் அணிகலமாகக் கொள்க.

முத்தம் முரிவெஞ் சிலைசுட்டி செம்பவளம்
வைத்தது போலும் மதிமுகத்தாள் ஒத்தமைந்த #387
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஒரு தாமரை மலரிலே இருதளிர், இரு அழகிய கெண்டைமீன், ஒரு சிவந்த கொவ்வைக் கனி, முத்துக்கள், வளைந்த வில், `சுட்டி` என்னும் அணிகலம், சிவந்த பவளம் இவைகளை ஒருங்கு வைத்தது போலும் நன்கு மதிக்கத்தக்க முகத்தையுடையவள்.
தளிர் காது; கெண்டை கண்கள்; கொவ்வைக் கனி இதழ்; முத்துக்கள் பற்கள்; வில் புருவம்; இவையெல்லாம் உருவக வகையால் கூறப்பட்டன.
சுட்டியும்.
பவளமும் உவமையாற் கூறப்பட்டன.
பவள படமும் அணிகலமாகக் கொள்க.
ஒத்து அமைந்த - கைக்குப் பொருந்தி அமைந்த.
கங்கணம் - காப்பு.
பெதும்பை ஆதலின் வளை அணியாது, காப்பு அணிந்தாள்.
கதிர் மணி - ஒளி பொருந்திய இரத்தினம்.
கிங்கிணி - சதங்கை.

இதுவும் பெதும்பைக்கு உரியது.

கங்கணம் சேர்ந்திலங்கு கையாள் கதிர்மணியின்
கிங்கிணி சேர்ந்த திருந்தடியாள் ஒண்கேழ்நல் **#388**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஒண் கேழ் - ஒளி பொருந்திய நிறம்.
மேகலை யணியாது, துகில் மாத்திரமே உடுத்தாள்.
அசைதல் - இறுகக் கட்டப்படுதல்.
பேதை இவ்வாறு கட்டுதல் இல்லை.
ஆய் பொதியில் - தமிழை ஆராய்ந்த இடமாகிய பொதியில் மலை.
`அதன்கண் உண்டான சந்தன மரத்தின் தேய்வை` என்க.
சந்தனத்தைத் தொய்யிலாக எழுதாமல் வாளா பூசிக் கொண்டாள்.

அந்துகில் சூழ்ந்தசைந்த அல்குலாள் ஆய்பொதியில்
சந்தனம் தோய்ந்த தடந்தோளாள் வந்து **#389**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஒண் கேழ் - ஒளி பொருந்திய நிறம்.
மேகலை யணியாது, துகில் மாத்திரமே உடுத்தாள்.
அசைதல் - இறுகக் கட்டப்படுதல்.
பேதை இவ்வாறு கட்டுதல் இல்லை.
ஆய் பொதியில் - தமிழை ஆராய்ந்த இடமாகிய பொதியில் மலை.
`அதன்கண் உண்டான சந்தன மரத்தின் தேய்வை` என்க.
சந்தனத்தைத் தொய்யிலாக எழுதாமல் வாளா பூசிக் கொண்டாள்.
தம் இடத்தை விட்டு வந்து இங்கு எழுவதற்கு ஒளிந்துள்ள மலைகள் தாம் எழுவதற்குரிய காலத்தை எதிர் நோக்கிச் சிறிதே எட்டிப் பார்ப்பது போலும் கொங்கைகளையுடையவள்.
திடர் இடுதல் - மண்ணில் மறைந்திருத்தல்.
`அது போன்ற நிலையினை யுடைய மலைகள்` என்க.
கண் செய்தல் - எட்டிப் பார்த்தல்.
வழி கோலுதலும் ஆம்.
கடல் பட்ட இன்னமுதம் - பாற்கடலில் உருவாகிக் காணப் பட்ட இனிய அமுதம்.

திடரிட்ட திண்வரைக்கண் செய்த முலையாள்
கடல்பட்ட இன்னமுதம் அன்னாள் மடல்பட்ட **#390**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தம் இடத்தை விட்டு வந்து இங்கு எழுவதற்கு ஒளிந்துள்ள மலைகள் தாம் எழுவதற்குரிய காலத்தை எதிர் நோக்கிச் சிறிதே எட்டிப் பார்ப்பது போலும் கொங்கைகளையுடையவள்.
திடர் இடுதல் - மண்ணில் மறைந்திருத்தல்.
`அது போன்ற நிலையினை யுடைய மலைகள்` என்க.
கண் செய்தல் - எட்டிப் பார்த்தல்.
வழி கோலுதலும் ஆம்.
கடல் பட்ட இன்னமுதம் - பாற்கடலில் உருவாகிக் காணப் பட்ட இனிய அமுதம்.
மடல் பட்ட - பூவின் இதழ்கள் பொருந்திய.
மாலையால் சுற்றிக் கட்டப்பட்ட கூந்தலையுடையவள்.
இளங் கிளி - நன்கு முதிராத கிளி.
தூமொழி - வஞ்சனை கலவாத சொல்.

மாலை வளாய குழலாள் மணம்நாறு
சோலை இளங்கிளிபோல் தூமொழியாள் சாலவும் **#391**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மடல் பட்ட - பூவின் இதழ்கள் பொருந்திய.
மாலையால் சுற்றிக் கட்டப்பட்ட கூந்தலையுடையவள்.
இளங் கிளி - நன்கு முதிராத கிளி.
தூமொழி - வஞ்சனை கலவாத சொல்.

வஞ்சனை செய்து மனங்கவரும் வாட்கண்ணுக்
கஞ்சனத்தை யிட்டங் கழகாக்கி எஞ்சா **#392**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்கள் தம்மியல்பில் தாம் நின்றனவாயினும், காணும் காளையருள் சிலர் தம்மை அவள் விரும்பி நோக்குகின்றா ளாகக் கருத நிற்றலை இங்கு, ``வஞ்சனை`` என்றார்.
இயல்பிலே கவர்ச்சியில்லாதவற்றை அஞ்சனம் தீட்டி அழகாக்கினாள்
எஞ்சா - அணிய வேண்டுவனவற்றுள் எதுவும் குறையாத.
மணி - நவமணி, ஆழி - மோதிரம்.
வளை - தோள் வளை.
தான் மங்கைப் பருவத்தள் அல்லளாயினும் அப்பருவத்தாரோடு ஒப்பத் தோன்றும் ஆசையால் அவர்தம் அணிகலங்களையெல்லாம் தானும் அணிந்து ஒப்பனை செய்து கொண்டாள்.

மணிஆரம் பூண்டாழி மெல்விரலிற் சேர்த்தி

அணிஆர் வளைதோள்மேல் மின்ன மணியார்ந்த #393
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

எஞ்சா - அணிய வேண்டுவனவற்றுள் எதுவும் குறையாத.
மணி - நவமணி, ஆழி - மோதிரம்.
வளை - தோள் வளை.
தான் மங்கைப் பருவத்தள் அல்லளாயினும் அப்பருவத்தாரோடு ஒப்பத் தோன்றும் ஆசையால் அவர்தம் அணிகலங்களையெல்லாம் தானும் அணிந்து ஒப்பனை செய்து கொண்டாள்.
மணி ஆர்ந்த - அழகு நிறைந்த.
`வெண்மணலை இடமாகக் கொண்டு, அதன்கண் எழுதினாள்` என்க.
மங்கையர்போல நன்கு ஒப்பனை செய்து கொண்டு தோழியருடன் தெருவில் வந்தவள், `தனது அழகுக்கு ஏற்ற காதலன் மன்மதன் ஒருவனே` என்னும் எண்ணத்தினால் அவன் உருவத்தை இவள் வெண்மணலிலே எழுதிப் பார்க்க எழுதிக் கொண்டிருந்தாள்.
அதுபொழுது சிவபெருமான் தன் இயல்பிலே தான் இடப வாகனத்தின்மேல் அங்கு உலாப்போந்தான்.
அவனைக் கண்டதும் இப்பெதும்பை அவன் காமனிலும் மிக்க அழகுடையனாய் இருந்தலைக் கண்டு கரை கடந்த காதலை உடையளாய் நிலையழிந்து நின்றுவிட்டாள்.
கரும்பு + சிலை = கருப்புச் சிலை.
சிலை - வில்.
மன்மதனுடைய தேர் தென்றற் காற்று.
அஃது உருவம் இல்லதாயினும் அதன் போக்கினைச் சில கீறல்களால் எழுதிக் காட்டுதல் உண்டு.
ஒருப்பட்டு - காதலனாக ஏற்றுக் கொண்டு.
உடன்- அவனுக்குரிய பொருள்கள் பலவற்றையும் தொகுத்து.
ஊர்தல் - மீதூர்தல், `மீதூர்தற்கு ஏதுவான தீர்த்தன்` என்க.
தீர்த்தன் - பரிசுத்தன்.
வான மால் ஏறு - வானவருள் ஒருவனாகிய மாயோனாம் விடை.
வானம் - உயர்வும் ஆம்.
தான் - பெதும்பை.
`நன்று அறிவார் அமரச் சொன்ன` என்க.
அமர - யாவரும் விரும்பும் வண்ணம்.
நலம் - மகளிர்க்கு உரியன வாகச் சொல்லப்பட்ட உறுப்பிலக்கணங்கள்.
நிறை - மனம்.
தன் இயல்பில் ஓடாதவாறு நிறுத்தும் ஆற்றல்.

கை வண்டு - வளையல்.
இது முன்னர்க் கூறப்படாமையால் இப் பொழுது மற்றை அணிகலங்களுடன் அணிந்து வந்தாள் என்க.
கண் வண்டு, உருவகம்.
கலை - உடை.
நெய் விண்ட - மண நெய் பூசப்பட்ட ``நின்றொழிந்தாள்`` என்பது ஒரு சொல்.

தூவெண் மணற்கொண்டு தோழியரும் தானுமாய்க்
காமன் உருவம் வரவெழுதிக் காமன் **#394**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

கருப்புச் சிலையும் மலர் அம்பும் தேரும்
ஒருப்பட்டு உடன்எழுதும் போழ்தில் விருப்பூரும் **#395**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மணி ஆர்ந்த - அழகு நிறைந்த.
`வெண்மணலை இடமாகக் கொண்டு, அதன்கண் எழுதினாள்` என்க.
மங்கையர்போல நன்கு ஒப்பனை செய்து கொண்டு தோழியருடன் தெருவில் வந்தவள், `தனது அழகுக்கு ஏற்ற காதலன் மன்மதன் ஒருவனே` என்னும் எண்ணத்தினால் அவன் உருவத்தை இவள் வெண்மணலிலே எழுதிப் பார்க்க எழுதிக் கொண்டிருந்தாள்.
அதுபொழுது சிவபெருமான் தன் இயல்பிலே தான் இடப வாகனத்தின்மேல் அங்கு உலாப்போந்தான்.
அவனைக் கண்டதும் இப்பெதும்பை அவன் காமனிலும் மிக்க அழகுடையனாய் இருந்தலைக் கண்டு கரை கடந்த காதலை உடையளாய் நிலையழிந்து நின்றுவிட்டாள்.
கரும்பு + சிலை = கருப்புச் சிலை.
சிலை - வில்.
மன்மதனுடைய தேர் தென்றற் காற்று.
அஃது உருவம் இல்லதாயினும் அதன் போக்கினைச் சில கீறல்களால் எழுதிக் காட்டுதல் உண்டு.
ஒருப்பட்டு - காதலனாக ஏற்றுக் கொண்டு.
உடன்- அவனுக்குரிய பொருள்கள் பலவற்றையும் தொகுத்து.
ஊர்தல் - மீதூர்தல், `மீதூர்தற்கு ஏதுவான தீர்த்தன்` என்க.
தீர்த்தன் - பரிசுத்தன்.

வான மால் ஏறு - வானவருள் ஒருவனாகிய மாயோனாம் விடை.
வானம் - உயர்வும் ஆம்.
தான் - பெதும்பை.
`நன்று அறிவார் அமரச் சொன்ன` என்க.
அமர - யாவரும் விரும்பும் வண்ணம்.
நலம் - மகளிர்க்கு உரியன வாகச் சொல்லப்பட்ட உறுப்பிலக்கணங்கள்.
நிறை - மனம்.
தன் இயல்பில் ஓடாதவாறு நிறுத்தும் ஆற்றல்.
கை வண்டு - வளையல்.
இது முன்னர்க் கூறப்படாமையால் இப் பொழுது மற்றை அணிகலங்களுடன் அணிந்து வந்தாள் என்க.
கண் வண்டு, உருவகம்.
கலை - உடை.
நெய் விண்ட - மண நெய் பூசப்பட்ட ``நின்றொழிந்தாள்`` என்பது ஒரு சொல்.

தேனமருங் கொன்றையந்தார்த் தீர்த்தன் சிவலோகன்
வானமால் ஏற்றின்மேல் வந்தணையத் தானமர **#396**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

நன்றறிவார் சொன்ன நலந்தோற்றும் நாண்தோற்றும்
நின்றறிவு தோற்றும் நிறைதோற்றும் நன்றாகக் **#397**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

கைவண்டும் கண்வண்டும் ஓடக் கலைஓட
நெய்விண்ட பூங்குழலாள் நின்றொழிந்தாள் மொய்கொண்ட **#398**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பன்னிரண்டு பதின்மூன்றாம் ஆண்டுகள் மங்கைப் பருவம், மங்கை இடம் - மங்கைப் பருவத்தை அடைந்தவள் இருக்க வேண்டிய இடம்.

மங்கை இடம்கடவா மாண்பினாள் வானிழிந்த
கங்கைச் சுழியனைய உந்தியாள் தங்கிய **#399**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பன்னிரண்டு பதின்மூன்றாம் ஆண்டுகள் மங்கைப் பருவம், மங்கை இடம் - மங்கைப் பருவத்தை அடைந்தவள் இருக்க வேண்டிய இடம்.

அங்கை கமலம் அடிகமலம் மான்நோக்கி
கொங்கை கமலம் முகம்கமலம் பொங்கெழிலார் **#400**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மங்கையது உறுப்புக்களின் வருணனை.
நோக்கு - பார்வை.
இட்டிடை - சிறிய இடை.
வஞ்சி - கொடி.
பணைத் தோள் - பருத்த தோள்.
வேய் - மூங்கில்.
அல்குல் - *(கண்ணி - 64, உரை பார்க்க)* மட்டு விரி தேனோடு பூக்கள் மலர்கின்ற.
அறல் - கருமணல்.

இட்டிடையும் வஞ்சி இரும்பணைத்தோள் வேய்எழிலார்
பட்டுடைய அல்குலும் தேர்த்தட்டு மட்டுவிரி **#401**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

கூந்தல் அறல்பவளம் செய்யவாய் அவ்வாயில்
ஏய்ந்த மணிமுறுவல் இன்முத்தம் வாய்ந்தசீர் **#402**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மங்கையது உறுப்புக்களின் வருணனை.
நோக்கு - பார்வை.
இட்டிடை - சிறிய இடை.
வஞ்சி - கொடி.
பணைத் தோள் - பருத்த தோள்.
வேய் - மூங்கில்.
அல்குல் - *(கண்ணி - 64, உரை பார்க்க)* மட்டு விரி தேனோடு பூக்கள் மலர்கின்ற.
அறல் - கருமணல்.

வண்டு வளாய வளர்வா சிகைசூட்டிக்
கண்டி கழுத்திற் கவின்சேர்த்திக் குண்டலங்கள் **#403**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வாசிகை, வாசிகைபோல வளைத்துத் தலையில் சூடும் மாலை.
கண்டி - கழுத்தணி.

காதுக் கணிந்து கனமே கலைதிருத்தித்
தீதில் செழுங்கோலஞ் சித்திரித்து மாதராள் **#404**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

பொற்கூட்டிற் பூவையை வாங்கி அதனோடும்
சொற்கோட்டி கொண்டிருந்த ஏல்வைக்கண் நற்கோட்டு **#405**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பூவை நாகணவாய்ப் புள்.
கோட்டி கொள்ளுதல்- திறம்படப் பேசுதலை மேற்கொள்ளல்.
ஏல்வை - பொழுது, கோடு - சிகரம்.

வெள்ளி விலங்கல்மேல் வீற்றிருந்த ஞாயிறுபோல்
ஒள்ளிய மால்விடையை மேல்கொண்டு தெள்ளியநீர் **#406**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

விலங்கல் - மலை.

தாழுஞ் சடையான் சடாமகுடம் தோன்றுதலும்
வாழுமே மம்மர் மனத்தளாய்ச் சூழொளியான் **#407**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தாழ்தல் - தங்குதல்.
வாழுமே - உயிர் வாழ்வாளே! மம்மர் - மயக்கம்.

தார்நோக்கும் தன்தாரும் நோக்கும் அவனுடைய
ஏர்நோக்கும் தன்ன தெழில்நோக்கும் பேரருளான் **#408**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`அவனுடைய அழகுக்கு ஒத்த அழகுடைய வளாய் நான் இருக்கின்றேனா` என்பதை இருவர் தோற்றத்தையும் ஒப்பு நோக்கும் முறையால் ஆராய்கின்றாள்.
ஆடவர் போகமாலையே `தார்` எனப்பட, மகளிர் போகமாலை `மாலை` எனப்படுமாயினும் அதனையும் பொதுப்பட இங்கு, ``தார்`` என்றார்.
ஏர், எழில் இவை ஒருபொருட் சொற்கள்.
ஒப்பு நோக்கியபின் ஒப்புத் துணிந்தவளாய், அவன் மார்பை அணைய விரைந்து, அது கூடாமையால் பெருமூச் செறிந்தாள்.

தோள்நோக்கும் தன்தோளும் நோக்கும் அவன்மார்பின்
நீள்நோக்கம் வைத்து நெடிதுயிர்த்து நாண்நோக்காது **#409**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`அவனுடைய அழகுக்கு ஒத்த அழகுடைய வளாய் நான் இருக்கின்றேனா` என்பதை இருவர் தோற்றத்தையும் ஒப்பு நோக்கும் முறையால் ஆராய்கின்றாள்.
ஆடவர் போகமாலையே `தார்` எனப்பட, மகளிர் போகமாலை `மாலை` எனப்படுமாயினும் அதனையும் பொதுப்பட இங்கு, ``தார்`` என்றார்.
ஏர், எழில் இவை ஒருபொருட் சொற்கள்.
ஒப்பு நோக்கியபின் ஒப்புத் துணிந்தவளாய், அவன் மார்பை அணைய விரைந்து, அது கூடாமையால் பெருமூச் செறிந்தாள்.

உள்ளம் உருக ஒழியாத வேட்கையாம்
வெள்ளத் திடையழுந்தி வெய்துயிர்த்தாள் ஒள்ளிய **#410**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

காதல் வெள்ளம் கரையிறந்ததாக அதனிடையே அகப்பட்டு ஆற்ற மாட்டாது வெப்பமாக மூச் செறிந்தாள்.

தீந்தமிழின் தெய்வ வடிவாள் திருந்தியசீர்
வாய்ந்த மடந்தைப் பிராயத்தாள் ஏய்ந்தசீர் **#411**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பதினான்காம் ஆண்டு முதல் பத்தொன்பதாம் ஆண்டு முடிய மடந்தைப் பருவம்.
தமிழின் தெய்வம் - தமிழ்த் தெய்வம்.
இஃது இனிமையும், அழகும் பற்றி வந்த உவமை.
`இன்` வேண்டா வழிச் சாரியை.
திருந்திய - பெண்மை நலம் நன்கமைந்த.
சீர் - சிறப்பு.
``ஏய்ந்த சீர்`` என்பதனைச் சிலைக்கு அடையாக்குக.

ஈசன் சிலையும் எழில்வான் பவளமும்
சேய்வலங்கை வேலும் திரள்முத்தும் பாசிலைய **#412**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சிலை - வில், `சிறந்த வில்` என்றற்கு ``ஈசன் சிலை`` என்றார்.
``சேய் வலங்கை வேல்`` என்றதும் இது பற்றி.
சேய் - முருகன்.
வலம் - வெற்றி.
வெற்றியைத் தருவதனை `வெற்றி` என்றே உபசரித்தார்.
இனி `வலக்கை` என்பது மெலிந்து நின்றதாக உரைத்த லும் ஆம்.
மஞ்சு - மேகம்.
``மேகத்தோடு வரும் மதி`` என்றது கூந்தலைக் குறித்தற்கு.
மாமதி - நிறைமதி.
போல் அசை.
சிலை, பவளம், வேல் முத்து, வஞ்சி (கொடி), வேய் (மூங்கில்), தாமரை மொட்டு, மாமதி இவைகளை நிரலே புருவம், செவ்வாய், கண், எயிறு (பல்), நுசுப்பு (இடை), தோள், கொங்கை, முகம் இவற்றுடன் பொருத்திக் கொள்க.
சிலை முதலாக அனைத்திலும் இரண்டன் உருபு விரிக்க.
உருவம் - அழகு.
பங்கயப் போது - தாமரை மலர்.
சேவடி - சிவந்த பாதங்கள்.

வஞ்சியும் வேயும் வளர்தா மரைமொட்டும்
மஞ்சில்வரும் மாமதிபோல் மண்டலமும் எஞ்சாப் **#413**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

புருவமும் செவ்வாயும் கண்ணும் எயிறும்
உருவ நுசுப்பும்மென் தோளும் மருவினிய #414
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

கொங்கையும் வாண்முகமு மாக்கொண்டாள் கோலஞ்சேர்
பங்கயப் போதனைய சேவடியாள் ஒண்கேழல் #415
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சிலை - வில், `சிறந்த வில்` என்றற்கு ``ஈசன் சிலை`` என்றார்.
``சேய் வலங்கை வேல்`` என்றதும் இது பற்றி.
சேய் - முருகன்.
வலம் - வெற்றி.
வெற்றியைத் தருவதனை `வெற்றி` என்றே உபசரித்தார்.
இனி `வலக்கை` என்பது மெலிந்து நின்றதாக உரைத்த லும் ஆம்.
மஞ்சு - மேகம்.
``மேகத்தோடு வரும் மதி`` என்றது கூந்தலைக் குறித்தற்கு.
மாமதி - நிறைமதி.
போல் அசை.
சிலை, பவளம், வேல் முத்து, வஞ்சி (கொடி), வேய் (மூங்கில்), தாமரை மொட்டு, மாமதி இவைகளை நிரலே புருவம், செவ்வாய், கண், எயிறு (பல்), நுசுப்பு (இடை), தோள், கொங்கை, முகம் இவற்றுடன் பொருத்திக் கொள்க.
சிலை முதலாக அனைத்திலும் இரண்டன் உருபு விரிக்க.
உருவம் - அழகு.
பங்கயப் போது - தாமரை மலர்.
சேவடி - சிவந்த பாதங்கள்.

வாழைத்தண் டன்ன குறங்கினாள் வாய்ந்தசீர்
ஆழித்தேர்த் தட்டனைய அல்குலாள் ஊழித் #416
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறங்கு - துடை; ஆழித்தேர் - சக்கரத்தையுடையதேர்.
அல்குல் - (கண்ணி. 64 உரை பார்க்க.)

திருமதியம் மற்றொன்றாம் என்று முகத்தை
உருவுடைய நாண்மீன்சூழ்ந் தாற்போல் பெருகொளிய #417
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திரு - அழகு.
மற்றொரு மதியம் - வானத்தில் இயல்பாய் உள்ள சந்திரனுக்கு வேறான மற்றொரு சந்திரன்.
இது மயக்க அணி.
நாள் மீன் - அசுவினி, பரணி முதலிய நட்சத்திரங்கள்.
`அவைகட்குக் கணவன் சந்திரன்` என்பது புராணம்.
அதனால், `அவை அங்ஙனம் மயங்கிச் சூழ்ந் தாற்போல்` என்றது தற்குறிப்பேற்ற அணி.
கண்டம் - கழுத்து.
`அணிகலங்கள் மொய்த்தமையால் (நிறைந்தமையால்) ஆரவாரம் (புகழுரை) மிகப் பெருகி` என்க.

முத்தாரம் கண்டத் தணிந்தாள் அணிகலங்கள்
மொய்த்தார வாரம் மிகப்பெருகி வித்தகத்தால் **#418**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திரு - அழகு.
மற்றொரு மதியம் - வானத்தில் இயல்பாய் உள்ள சந்திரனுக்கு வேறான மற்றொரு சந்திரன்.
இது மயக்க அணி.
நாள் மீன் - அசுவினி, பரணி முதலிய நட்சத்திரங்கள்.
`அவைகட்குக் கணவன் சந்திரன்` என்பது புராணம்.
அதனால், `அவை அங்ஙனம் மயங்கிச் சூழ்ந் தாற்போல்` என்றது தற்குறிப்பேற்ற அணி.
கண்டம் - கழுத்து.
`அணிகலங்கள் மொய்த்தமையால் (நிறைந்தமையால்) ஆரவாரம் (புகழுரை) மிகப் பெருகி` என்க.
வித்தகம் - சதுரப்பாடு; திறமை, கள் - தேன்.
அது பூ மாலையைக் குறித்தது.
கடாம், இங்குக் கத்தூரி, இவை வேறு பொருளாம் நயம் தோற்றி நின்றன.
கலவை - சந்தனக் கலவை - கைபோதரல் - தோழியர்களால் கொண்டு வரப்படுதல்.
அவைகளைக் கொண்டு வரும் தோழியர் இவளது அருகிலும், சேய்மையிலும் நின்றதை `உள்ளும், புறம்பும் செறிவு` என்றார்.
அவர் அங்ஙனம் நின்றது இவளை நோக்கியாகலின் ``அமைத்து``

என்றார்.
காளிங்கம் - நீலமணி.
தாள் - அடிப்பாகம்.
`தாளை யுடைய தாமம்` என்க.
தாமம் - மாலை.
நெற்றியிலும் ஓர் இரத்தினமாலை கட்டுவர்.
நுதல் - நெற்றி.
`தோள் எங்கும் அப்பி` என்க.
தண் - குளிர்ச்சி.
சதுர் - பெருமை.
அது `சதிர்` என மருவி வழங்கும்.
``வண்ணம் பெற`` என்றதனால்.
சாந்து, `செஞ்சாந்து` என்க.
மட்டித்தல் - பூசுதல்.

கள்ளும் கடாமுங் கலவையுங் கைபோந்திட்டு
உள்ளும் புறமுஞ் செறிவமைத்துத் தெள்ளொளிய **#419**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

காளிங்கம் சோதி கிடப்பத் தொடுத்தமைத்த
தாளின்பத் தாமம் நுதல்சேர்த்தித் தோளெங்கும் **#420**
பொழிப்புரையை எழுதவில்லை

தண்ணறுஞ் சந்தனம்கொண் டப்பிச் சதிர்சாந்தை
வண்ணம் பெறமிசையே மட்டித்தாங் கொண்ணுதலாள் **#421**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வித்தகம் - சதுரப்பாடு; திறமை, கள் - தேன்.
அது பூ மாலையைக் குறித்தது.
கடாம், இங்குக் கத்தூரி, இவை வேறு பொருளாம் நயம் தோற்றி நின்றன.
கலவை - சந்தனக் கலவை - கைபோதரல் - தோழியர்களால் கொண்டு வரப்படுதல்.
அவைகளைக் கொண்டு வரும் தோழியர் இவளது அருகிலும், சேய்மையிலும் நின்றதை `உள்ளும், புறம்பும் செறிவு` என்றார்.
அவர் அங்ஙனம் நின்றது இவளை நோக்கியாகலின் ``அமைத்து`` என்றார்.

காளிங்கம் - நீலமணி.
தாள் - அடிப்பாகம்.
`தாளை யுடைய தாமம்` என்க.
தாமம் - மாலை.
நெற்றியிலும் ஓர் இரத்தினமாலை கட்டுவர்.
நுதல் - நெற்றி.
`தோள் எங்கும் அப்பி` என்க.
தண் - குளிர்ச்சி.
சதுர் - பெருமை.
அது `சதிர்` என மருவி வழங்கும்.
``வண்ணம் பெற`` என்றதனால்.
சாந்து, `செஞ்சாந்து` என்க.
மட்டித்தல் - பூசுதல்.
`தன் தோழியர்கள், அமர் தோழியர்கள்` என்க.
அமர்தல் - விரும்புதல்.
தவிசு - ஆசனம்.
பின்னும் ஓர் காமரம்- முன் பாடியது போகப் பின்னும் ஓர் பண்ணினை
`யாழின்கண் அமைத்து` என்க.
விரும்பும் பண்கள் தோற்றுமாறு இசைகள் வேறு வேறு வகையாக
எழும்படி நரம்புகளைக் கட்டுதல் வேண்டும் ஆதலின் அதனை
``அமைத்து`` என்றார்.
மன்னும் விடம் - நிலைபெற்றுள்ள விடத்தைக் கொண்டுள்ள.
வண்ணக் கண்டம் - கரிய கண்டம்.
வேதியன் - வேதத்தை ஓதுபவன்; சிவபெருமான்.
மகளிர் மடல் பாடுதல் இல்லையெனினும் பலர் அறியப் பாடாமல் தான்
இருக்குமிடத்திலே தோழியர் இடையே நகை உண்டாகும்படி தான்
சிவபெருமான்மேல் கொண்ட காதலால் நாண் இறந்து
பாடுவாள்போலப் பொய்யாகப் பாடத் தொடங்கினாள்.
மடலாவது, ஆடவன் ஒருவன் தான் காதலித்த கன்னிகை தனக்குக்
கிட்டாமையால் ஆற்றாது தான் உயிர்விடும் நிலையில் உள்ளதைத்
தெருக்கள் தோறும் சென்று தெரிவித்துப் பாடுதல்.
அது நாணத்தையே அணிகலமாகக் கொண்ட மகளிர்க்கு
இயல்வதில்லை.
அதனால் மகளிர் மடல் பாடியதாகத் தமிழில் இலக்கியம் இல்லை.
ஆயினும் இவள் தன் இல்லத்திற்குள் தன் தோழியர்முன் வேடிக்கை
யாகச் சிவபெருமானை முன் வைத்து மடல் பாடத் தொடங்கினாள்.

தன்அமர் தோழியர்கள் சூழத் தவிசேறிப்

பின்னும்ஓர் காமரம் யாழமைத்து மன்னும் #422
பொழிப்புரையை எழுதவில்லை
விடவண்ணக் கண்டத்து வேதியன்மேல் இட்ட
மடல்வண்ணம் பாடும் பொழுதுஈண்டு அடல்வல்ல #423
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈண்டு - `அவள் பாடுகின்றாள்` என்றது `இந்த நேரத்தில் கேட்டு` என்க.
அடல் - பகைவரை வெல்லுதல்.
வேல், இங்கு முத்தலை வேல்; சூலம்.
வில் மேரு மலையாகில் வில், மால் வல்லான் - மயக்கத்தைத் தர வல்லவன்.
கோலம் - அழகு - மணி - தன் கழுத்தில் உள்ள மணி - அதன் கழுத்தில் உள்ள மணி.
ஏறு - அந்த மணியினின்றும் எழுந்து எங்கும் பரவுகின்ற ஓசை.
ஆங்கு நோக்கு வாள் - அந்த ஓசை வந்த வழியைப் பார்க்கின்றவள்.
அணி - அழகு.
ஆங்கு - அப்பொழுதே.
அணி ஆர்ந்த கோட்டி - வரிசை வரிசையாய் அமர்ந்திருந்த தோழியர் கூட்டம்.

வேல்வல்லான் வில்வல்லான் மெல்லியலார்க் கெஞ்ஞான்றும்
மால்வல்லான் ஊர்கின்ற மால்விடையின் கோல #424
பொழிப்புரையை எழுதவில்லை
மணியேறு கேட்டாங்கு நோக்குவாள் சால
அணிஏறு தோளானைக் கண்டாங் கணியார்ந்த #425
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`தன் தோழியர்கள், அமர் தோழியர்கள்` என்க.
அமர்தல் - விரும்புதல்.
தவிசு - ஆசனம்.
பின்னும் ஓர் காமரம்- முன் பாடியது போகப் பின்னும் ஓர் பண்ணினை `யாழின்கண் அமைத்து` என்க.
விரும்பும் பண்கள் தோற்றுமாறு இசைகள் வேறு வேறு வகையாக எழும்படி நரம்புகளைக் கட்டுதல் வேண்டும் ஆதலின் அதனை ``அமைத்து`` என்றார்.
மன்னும் விடம் - நிலைபெற்றுள்ள விடத்தைக் கொண்டுள்ள.
வண்ணக் கண்டம் - கரிய கண்டம்.

வேதியன் - வேதத்தை ஓதுபவன்; சிவபெருமான்.
மகளிர் மடல் பாடுதல் இல்லையெனினும் பலர் அறியப் பாடாமல் தான் இருக்குமிடத்திலே தோழியர் இடையே நகை உண்டாகும்படி தான் சிவபெருமான்மேல் கொண்ட காதலால் நாண் இறந்து பாடுவாள்போலப் பொய்யாகப் பாடத் தொடங்கினாள்.
மடலாவது, ஆடவன் ஒருவன் தான் காதலித்த கன்னிகை தனக்குக் கிட்டாமையால் ஆற்றாது தான் உயிர்விடும் நிலையில் உள்ளதைத் தெருக்கள் தோறும் சென்று தெரிவித்துப் பாடுதல்.
அது நாணத்தையே அணிகலமாகக் கொண்ட மகளிர்க்கு இயல்வதில்லை.
அதனால் மகளிர் மடல் பாடியதாகத் தமிழில் இலக்கியம் இல்லை.
ஆயினும் இவள் தன் இல்லத்திற்குள் தன் தோழியர்முன் வேடிக்கை யாகச் சிவபெருமானை முன் வைத்து மடல் பாடத் தொடங்கினாள்.
ஈண்டு - `அவள் பாடுகின்றாள்` என்றது `இந்த நேரத்தில் கேட்டு` என்க.
அடல் - பகைவரை வெல்லுதல்.
வேல், இங்கு முத்தலை வேல்; சூலம்.
வில் மேரு மலையாகில் வில், மால் வல்லான் - மயக்கத்தைத் தர வல்லவன்.
கோலம் - அழகு - மணி - தன் கழுத்தில் உள்ள மணி - அதன் கழுத்தில் உள்ள மணி.
ஏறு - அந்த மணியினின்றும் எழுந்து எங்கும் பரவுகின்ற ஓசை.
ஆங்கு நோக்கு வாள் - அந்த ஓசை வந்த வழியைப் பார்க்கின்றவள்.
அணி - அழகு.
ஆங்கு - அப்பொழுதே.
அணி ஆர்ந்த கோட்டி - வரிசை வரிசையாய் அமர்ந்திருந்த தோழியர் கூட்டம்.

கோட்டி ஒழிய எழுந்து குழைமுகத்தைக்
காட்டி நுதல்சிவப்ப வாய்துலக்கி நாட்டார்கள் **#426**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குழை - காதணி.
வாய் துலக்குதல் - இயல் பாகவே சிவந்திருக்கின்ற வாயை மேலும் சிவக்கும்படி தம்பலந் தின்னல்.
நுதல் - நெற்றி, அது முன்பே குங்குமத்தால் சிவந்துள்ளது.
எனவே, `நுதல் சிவப்ப வாய் துலக்கி முகத்தைக் காட்டி` என்க.
இவையெல்லாம் தனது காதற் குறிப்புத் தோன்றச் செய்தாள் ஆகலின், ``நாட்டார்கள் எல்லாரும் கண்டார்`` என்றார்.

பலரும் அறியத் தான் சிவபெருமானைக் காதலித்து நின்றமை யால்,
`அவன் பேரருளாளன் ஆதலின் அவனும் எனது கருத்திற்கு
உட்படுவான்; ஆயினும் என் ஆயத்தார் அதற்குத் தடையாய் இல்லாமல்
இசைதல் வேண்டுதல்` என்பாள், ``இங்கு ஆயம் நல்லாய்ப்
படுமேற்படும்`` என்றார்.
`நல்லவாய்` என்பது ``நல்லாய்`` எனக் குறைந்து நின்றது.

எல்லாரும் கண்டார் எனக்கடவுள் இக்காயம்
நல்லாய் படுமேற் படுமென்று மெல்லவே **#427**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குழை - காதணி.
வாய் துலக்குதல் - இயல் பாகவே சிவந்திருக்கின்ற வாயை மேலும்
சிவக்கும்படி தம்பலந் தின்னல்.
நுதல் - நெற்றி, அது முன்பே குங்குமத்தால் சிவந்துள்ளது.
எனவே, `நுதல் சிவப்ப வாய் துலக்கி முகத்தைக் காட்டி` என்க.
இவையெல்லாம் தனது காதற் குறிப்புத் தோன்றச் செய்தாள் ஆகலின்,
``நாட்டார்கள் எல்லாரும் கண்டார்`` என்றார்.
பலரும் அறியத் தான் சிவபெருமானைக் காதலித்து நின்றமை யால்,
`அவன் பேரருளாளன் ஆதலின் அவனும் எனது கருத்திற்கு
உட்படுவான்; ஆயினும் என் ஆயத்தார் அதற்குத் தடையாய் இல்லாமல்
இசைதல் வேண்டுதல்` என்பாள், ``இங்கு ஆயம் நல்லாய்ப்
படுமேற்படும்`` என்றார்.
`நல்லவாய்` என்பது ``நல்லாய்`` எனக் குறைந்து நின்றது.

செல்ல லுறும்சரணம் கம்பிக்கும் தன்னுறுநோய்
சொல்லலுறும் சொல்லி உடைசெறிக்கும் நல்லாகம் **#428**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``உறும்`` என்பது முதலிய பலவற்றிற்கும் `உறுவாள்` என்பதுபோலப்
பொருள் உரைக்க.
சரணம் கம்பிக்கும் - கால் நடுங்குவாள்; இஃது அவன் நிலை
தளர்ந்தமையைக் குறித்தது.
செறித்தல் - சரிந்து வீழாதபடி இறுகக் கட்டுதல்.
ஆகம் - மார்பு.
சிவனுடைய மார்பு.

காண லுறும்கண்கள் நீர்மல்கும் காண்பார்முன்
நாண லுறும்நெஞ்சம் ஒட்டாது பூணாகம் **#429**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``உறும்`` என்பது முதலிய பலவற்றிற்கும் `உறுவாள்` என்பதுபோலப் பொருள் உரைக்க.
சரணம் கம்பிக்கும் - கால் நடுங்குவாள்; இஃது அவன் நிலை தளர்ந்தமையைக் குறித்தது.
செறித்தல் - சரிந்து வீழாதபடி இறுகக் கட்டுதல்.
ஆகம் - மார்பு.
சிவனுடைய மார்பு.
``நாணல் உறும் நெஞ்சம்`` பெயரெச்சத் தொடர்.
நெஞ்சம் ஒட்டாமையால் (தடுத்தலால்) தன் மார்பிலேயே தன் கையைத் தான் அணைத்துச் சிவனைத் தழுவியது பொய்யாய் இருத்த லால் `இவன் என் கைக்கு அகப்படவில்லையே` என்று சொல்லி இவ் வாறு பெரிதும் அல்லற்படுவாள்.

புல்லலுறும் அண்ணல்கை வாரான் என் றிவ்வகையே
அல்ல லுறும்அழுந்தும் ஆழ்துயரால் மெல்லியலாள் **#430**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நாணல் உறும் நெஞ்சம்`` பெயரெச்சத் தொடர்.
நெஞ்சம் ஒட்டாமையால் (தடுத்தலால்) தன் மார்பிலேயே தன் கையைத் தான் அணைத்துச் சிவனைத் தழுவியது பொய்யாய் இருத்த லால் `இவன் என் கைக்கு அகப்படவில்லையே` என்று சொல்லி இவ் வாறு பெரிதும் அல்லற்படுவாள்.
இவ்வாறு மூழ்கு பெருந்துயரத்தால் அவள் தன்னுடைய மேனியே பொன்பூத்தமையால் கொன்றை மாலை போல ஆய்விட, தான் சிவபெருமான் அணிந்துள்ள கொன்றை மாலை யாகிய அந்தப் பொன் போலும் பொருளைப் பெறவிரும்பும் காரணத் தால் புலம்பலாயினாள்.
``கொண்டு`` என்பது மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு.

தன்உருவம் பூங்கொன்றைத் தார்கொள்ளத் தான்கொன்றைப்
பொன்உருவங் கொண்டு புலம்புற்றாள் பின்னொருத்தி **#431**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இவ்வாறு மூழ்கு பெருந்துயரத்தால் அவள் தன்னுடைய மேனியே பொன்பூத்தமையால் கொன்றை மாலை போல ஆய்விட, தான் சிவபெருமான் அணிந்துள்ள கொன்றை மாலை யாகிய அந்தப் பொன் போலும் பொருளைப் பெறவிரும்பும் காரணத் தால் புலம்பலாயினாள்.

``கொண்டு`` என்பது மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு.

செங்கேழ்நல் தாமரைபோல் சீறடியாள் தீதிலா
அங்கேழ் அரிவைப் பிராயத்தாள் ஒண்கேழ்நல் #432
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இருபது முதல் இருபத்தைந்தாம் ஆண்டு முடிய அரிவைப் பருவம்.
சீறடி - சிறிய பாதம்.
அம் - கேழ் - அழகிய நிறம்.
அஃதாவது, `நிறத்தால் அழகு பெற்றவள்` என்றபடி.

திங்களும் தாரகையும் வில்லும் செழும்புயலும்
தங்கொளிசேர் செவ்வாயும் உண்மையால் பொங்கொளிசேர் #433
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திங்கள் முகம்; தாரகை (விண்மீன் நெற்றியில் அணிந்துள்ள முத்துப் பட்டம்; வில் புருவம்; புயல் (மேகம்) கூந்தல்; செவ்வாய் சிலேடை.
`செவ்வாய்` என்னும் கிரகம்; சிவந்த வாய்.
இவைகளால் வானத்தைத் தன்னிடமே விளங்கக் காட்டுவாள்.
மின் ஆர் - மின்னல் பொருந்திய; இதனை வானுக்கு அடை யாகக் கொள்க.
தன் ஆவார் - தன்னை யொப்பவர்.

மின்ஆர்வான் காட்டும் முகவொளியாள் மெய்ம்மையே
தன்ஆவார் இல்லாத் தகைமையாள் எந்நாளும் #434
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திங்கள் முகம்; தாரகை (விண்மீன் நெற்றியில் அணிந்துள்ள முத்துப் பட்டம்; வில் புருவம்; புயல் (மேகம்) கூந்தல்; செவ்வாய் சிலேடை.
`செவ்வாய்` என்னும் கிரகம்; சிவந்த வாய்.
இவைகளால் வானத்தைத் தன்னிடமே விளங்கக் காட்டுவாள்.
மின் ஆர் - மின்னல் பொருந்திய; இதனை வானுக்கு அடை யாகக் கொள்க.
தன் ஆவார் - தன்னை யொப்பவர்.

இல்லாரை எல்லாரும் எள்குவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பென்னும் சொல்லாலே #435
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சொல், திருக்குறள்.

சொல்லால் - சொல் சொல்லப்படுதலால்.
இயற்கை அழகு இருப்பினும் ஆடை அணிகலங் களாகிய செயற்கையழகு இல்லாவிடில் மற்றை மகளிர் இகழ்ச்சி செய்வார்கள்` என்று கருதி அவைகளை அணிந்தாள் என்க.

அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள் அணிமுலைமேல்
மல்கிய சாந்தொடு பூண்புனைந்து நல்கூர் **#436**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அல்குல் *(கண்ணி - 64 உரை பார்க்க.)* நல்கூர்தல், வறுமை எய்தல்.
அஃது இங்கே சிறுகுதலைக் குறித்தது.
இடையே - மேலும், கீழும் உள்ள உறுப்புக்கள் செழித்திருக்க அவைகளுக்கு இடையே துவண்டு மெலிய.
கண்டாள்- செய்தாள்.
என்றது, இயற்கையைச் செயற்கை போலக் கூறியது.

இடைஇடையே உள்ளுருகக் கண்டாள் எழிலார்
நடைபெடை அன்னத்தை வென்றாள் அடியிணைமேல் **#437**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நல்கூர்தல், வறுமை எய்தல்.
அஃது இங்கே சிறுகுதலைக் குறித்தது.
இடையே - மேலும், கீழும் உள்ள உறுப்புக்கள் செழித்திருக்க அவைகளுக்கு இடையே துவண்டு மெலிய.
கண்டாள்- செய்தாள்.
என்றது, இயற்கையைச் செயற்கை போலக் கூறியது.

பாடகம் கொண்டு பரிசமைத்தாள் பன்மணிசேர்
சூடகம் முன்கை தொடர்வித்தாள் கேடில்சீர்ப் **#438**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பரிசு அமைத்தாள் - தக்கபடி அமைத்தாள்.

பொன்அரி மாலை தலைக்கணிந்து பூண்கொண்டு
மன்னும் கழுத்தை மகிழ்வித்தாள் பொன்னனாள் **#439**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பொன் அரி மாலை - பொன்னால் அரிப்புத் தொழில் அமையச் செய்த மாலை.
இது பெரும்பான்மை மார்பில் தொங்கவிடுவது.

சிறுபான்மை தலையிலும் சுற்றப்படும்.
கழுத்துக்கு மகிழ்ச்சியில்லையாயினும் அதனைப் பொலிவித்தலை மகிழ் வித்ததாகக் கூறினார்.
பொன் அன்னாள் - இலக்குமி போன்றவள்.

இன்னிசை வீணையை வாங்கி இமையவர்தம்
அண்ணல்மேல் தான்இட்ட ஆசையால் முன்னமே **#440**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வாங்கியது தோழியரிடமிருந்து.
இமையவர்தம் அண்ணல் சிவபெருமான்.
`அவன்மேல் தான் முன்னமே இட்ட ஆசையால்` என்க.
இட்ட - வைத்த.

பாடல் தொடங்கும் பொழுதில் பரஞ்சோதி
கேடிலா மால்விடைமேல் தோன்றுதலும் கூடிய **#441**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

இன்னிசையும் இப்பிறப்பும் பேணும் இருந்தமிழும்
மன்னிய வீணையையுங் கைவிட்டுப் பொன்னனையீர் **#442**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பிறப்பைக் கைவிட்டமையாவது, தன் மாட்டு வந்தவனை ஏற்றல் அல்லது, தான் பிறனிடம் செல்லாமையாகிய தனது வழக்கத்தைக் கைவிட்டமை.
``தமிழ்`` என்றது தமிழ் இசையை.

இன்றன்றே காண்ப தெழில்நலங் கொள்ளேனேல்
நன்றன்றே பெண்மை நமக்கென்று சென்றவன்தன் **#443**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

எழில் நலம் காண்பது இன்றன்றே - எழுச்சியுள்ள எனது அழகின் சிறப்பை அளந்தறியும் நாள் இன்றன்றோ? அஃதாவது, `எனது அழகு சிவபெருமானது உள்ளத்தைக் கவரும் ஆற்றலுடையதா, இல்லையா - என்பதை அளந்தறிய வேண்டிய நாள் இன்றேயாம்` என்றாள்.
கொள்ளேனேல் - அவனது உள்ளத்தை யான் கவர்ந்து கொள்ளாவிடில்.
பெண்மை நமக்கு நன்று அன்று - நம்முடைய பெண்மை நலம் நமக்கு உதவுவதன்று.

சென்றவன் - உலாப் போந்தவன் சிவபெருமான்.

ஒண்களபம் ஆடும் ஒளிவாள் முகத்திரண்டு
கண்களபம் ஆடுவபோல் கட்டுரைத்தும் ஒண்கேழ்நல் **#444**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஒண்களபம் - சிவபெருமானது திருமேனி யிலிருந்து காற்றிற் பறந்து திருநீறும் சந்தனச் சாந்தின் துகளும், `இவற் றில் ஆடும்` என்க.
ஆடும் - மூழ்குவாள்.
கண், அரிவை தன் கண்கள்.
(களவு) என்பது அம் பெற்று `களவம்` என வருவது எதுகை நோக்கி, ``களபம்`` எனத் திரிந்து நின்றது.
களவு ஆடுவதுபோல் - நோக்கியும் நோக்காதது போல, ``கண் களவு கொள்ளுதல் சிறு நோக்கம்`` * என்றார் திருவள்ளுவரும்.
கட்டுரைத்தல் - தன் குறிப்பினை வெளிப்படுத்தல்.

கூந்தல் அவிழ்க்கும் முடிக்கும் கலைதிருத்தும்
சாந்தம் திமிரும் முலையார்க்கும் பூந்துகிலைச் **#445**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கலை - உடை.
திமிர்தல் - பூசுதல்.
ஆர்த்தல் - கச்சினால் இறுகக் கட்டுதல்.
துகில் - உயர்ந்த உடை.

சூழும் அவிழ்க்கும் தொழும்அழும் சோர்துயருற்
றாழும் அழுந்தும் அயாவுயிர்க்கும் சூழொளிய **#446**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சூழும் - சுற்றுவாள்.
அயாவுயிர்த்தல் - பெரு மூச்செறிதல்.

அங்கை வளைதொழுது காத்தாள் கலைகாவாள்
நங்கை இவளும் நலம்தோற்றாள் அங்கொருத்தி **#447**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அங்கை தொழுது வளை காத்தாள் - மற்ற வருடன் கூடத் தானும் அகங்கைகளைக் குவித்துக் கும்பிட்டமையால் வளைகள் `கழன்று வீழாதபடி காத்துக் கொண்டாள்.
ஆயினும் உடையை வீழாமல் காத்தாள் இல்லை.

நலம் தோற்றாள் - அழகினை இழந்தாள்.

ஆரா அமுதம் அவயவம் பெற்றனைய
சீரார் தெரிவைப் பிராயத்தாள் ஓரா **#448**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இருபத்தாறாவது முதல் முப்பத்தொன்றாம் ஆண்டு முடியத் தெரிவைப் பருவம்.
ஆர்தல் - நிரம்புதல்.
ஆரா அமுதம் - சுவை மிகுதியால் தெவிட்டாத அமுதம்.
அவயவம், உறுப்புக்கள் பலவும் நல்லனவாய் அமைந்த உடம்பு.
இஃது ஆகுபெயர், உடம்பு, பெண் உடம்பு, `அமுதம் உடம்பு பெற்றது போல்வாள்` என்றது இல் பொருள் உவமை.
சீர்மை- செம்மை.
ஓரா - பொருள் உணர வாராத மழலை - என்க.
`மழலையின் மருள் ஓசை வாய்ச் சொல்` என மாறுக.
அஃதா வது, `மழலை போலும் ஓசையையுடைய வாய்ச் சொல்` என்பதாம்.
இஃது இனிது பொருள் விளங்குதல் இன்மையும் இனிமை யுடைமையும் பற்றி வந்த உவமை.
`மங்கையரும், மடந்தையரும் வாய் திறந்து பேச மாட்டார்கள்.
பேரிளம் பெண் இனிது விளங்க எடுத்துப் பேசுவாள்.
தெரிவை இரண்டும் இன்றி இடைநிலையதாகப் பேசுவாள்` என்பதாம்.
``மருள்``, உவம உருபு.
`இத்தன்மைத்தான சொல் விடியற் காலத்தை ஒக்கும்; அஃதாவது பொருள் விளங்கியும், விளங்காதும் நிற்கும்` என்பதாம்.

மருளோசை யின்மழலை வாய்ச்சொலால் என்றும்
இருள்சீர் புலரியே ஒப்பாள் அருளாலே **#449**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஓரா - பொருள் உணர வாராத மழலை - என்க.
`மழலையின் மருள் ஓசை வாய்ச் சொல்` என மாறுக.
அஃதா வது, `மழலை போலும் ஓசையையுடைய வாய்ச் சொல்` என்பதாம்.
இஃது இனிது பொருள் விளங்குதல் இன்மையும் இனிமை யுடைமையும் பற்றி வந்த உவமை.
`மங்கையரும், மடந்தையரும் வாய் திறந்து பேச மாட்டார்கள்.

பேரிளம் பெண் இனிது விளங்க எடுத்துப் பேசுவாள்.
தெரிவை இரண்டும் இன்றி இடைநிலையதாகப் பேசுவாள்` என்பதாம்.
``மருள்``, உவம உருபு.
`இத்தன்மைத்தான சொல் விடியற் காலத்தை ஒக்கும்; அஃதாவது பொருள் விளங்கியும், விளங்காதும் நிற்கும்` என்பதாம்.
அருள், இங்குக் காதற் குறிப்பு.
உச்சி - உச்சிப் போது; நண்பகல்.
உருவம் - சாயல் ``வெப்பம் தீர்ந்து`` என்பது, அதன் எதிர்மறையாகி `குளிர்ச்சியைத் தந்து` எனப் பொருள் தந்தது.
இவ்வெச்சம் ``செம்மை`` என்புழித் தொக்கு நின்ற `உடைமை` என்னும் வினைக் குறிப்புப் பெயர் கொண்டது.

வெப்பம் இளையவர்கட் காக்குதலால் உச்சியோ
டொப்பமையக் கொள்ளும் உருவத்தாள் வெப்பந்தீர்ந் **#450**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அருள், இங்குக் காதற் குறிப்பு.
உச்சி - உச்சிப் போது; நண்பகல்.
உருவம் - சாயல் ``வெப்பம் தீர்ந்து`` என்பது, அதன் எதிர்மறையாகி `குளிர்ச்சியைத் தந்து` எனப் பொருள் தந்தது.
இவ்வெச்சம் ``செம்மை`` என்புழித் தொக்கு நின்ற `உடைமை` என்னும் வினைக் குறிப்புப் பெயர் கொண்டது.

தந்தளிர்போற் சேவடியும் அங்கையும் செம்மையால்
அந்திவான் காட்டும் அழகினாள் அந்தமில் **#451**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பாதமும், அகங்கையும் தளிர் போன்றுள்ளன` என்பதாம்.
செம்மை - செம்மை நிறம்.
அந்தம் - எல்லை.
சீர் - அழகு.
இதுகாறும் ஒருத்தியே பல சிறுபொழுதுகளைப் போலத் தோன்றுதலைக் கூறினார்; இனிப் பெரும் பொழுதுகளைப் போலத் தோன்றுதலைக் கூறுவார்.

சீரார் முகம்மதியம் ஆதலால் சேயிழையாள்
ஏரார் இரவின் எழில்கொண்டாள் சீராரும் **#452**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அந்தம் - எல்லை.
சீர் - அழகு.
இதுகாறும் ஒருத்தியே பல சிறுபொழுதுகளைப் போலத் தோன்றுதலைக் கூறினார்; இனிப் பெரும் பொழுதுகளைப் போலத் தோன்றுதலைக் கூறுவார்.

கண்ணார் பயோதரமும் நுண்ணிடையும் உண்மையால்
தண்ணிளங் காரின் சவிகொண்டாள் வண்ணஞ்சேர் **#453**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பயோதரம்`` என்பது `கொங்கை` எனவும், `மேகம்` எனவும் இருபொருளைத் தரும் ஆதலால் அது சிலேடையா யிற்று.
ஆகவே, ``கண் ஆர்`` என்பதை, `வானமாகிய இடத்து நிறைந்த` என மேகத்திற்கும், `கண்ணிற்கு நிறைந்த`, அல்லது `மார்பிடம் நிறைந்த` எனக் கொங்கைக்கும் பொருத்திக்கொள்க.
கண், கொங்கை யின் கண்ணுமாம்.
``இடை`` என்பதற்கு, `மின்னல்போலும் இடை` என உரைக்க.
கார் - கார்ப்பருவம்.
அதற்கு இளமையாவது தொடக்க மும், நடுவும்.
சவி - ஒளி; என்றது தோற்றத்தை.
வண்ணம் - அழகு.

மாந்தளிர் மேனி முருக்கிதழ்வாய் ஆதலால்
வாய்ந்த இளவேனில் வண்மையாள் மாந்தர் **#454**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மேனி மாந்தளிர்; வாய் முருக்கிதழ்` என மாற்றி யுரைக்க.
இவை இரண்டும் இளவேனிற் பருவத்து உருவாவன.
சிறு பொழுதுகள் பலவும் பெரும்பான்மை பற்றிக் காரும், வேனிலுமாக அடக்கப்பட்டன.
`மாந்தருள்` என உருபு விரிக்க.

அறிவுடையீர் நின்மின்கள் அல்லார்போம் என்று
பறையறைவ போலும் சிலம்பு முறைமையால் **#455**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அறிவுடையோராயின் ஆவி காப்பர் ஆதலின், அவர்களை ``நின்மின்`` எனவும், அல்லாதார் ஆவி விடுவர் ஆதலின், அவர்களை, ``போம்`` எனவும் பறையறைவதாகக் கூறினார்.

இது தற்குறிப்பேற்றம் `அறைவ போலும் சிலம்பினைச் சேர்த்தினாள்` என்க.
தேர் அல்குல் - தேர் போலும் அல்குல்.
ஓராது - (அளவு கடந்து அகலின் இடம் இன்றாம்` என்பதனை) ஆராயாது, அகலல் உறாது என்று - `அகலல் தகாது ஆதலின் அடங்குக` என்று கருதித் துகிலையும் மேகலையும் சுற்றிக் கட்டினாள் - என்க.

சீரார் திருந்தடிமேல் சேர்த்தினாள் தேர்அல்குல்
ஓரா தகலல் உறாதென்று சீராலே **#456**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

அந்துகிலும் மேகலையும் சூழ்ந்தாள் அணிமுலைகள்
மைந்தர் மனங்கவரும் என்பதனால் முந்துறவே **#457**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அறிவுடையோராயின் ஆவி காப்பர் ஆதலின், அவர்களை ``நின்மின்`` எனவும், அல்லாதார் ஆவி விடுவர் ஆதலின், அவர்களை, ``போம்`` எனவும் பறையறைவதாகக் கூறினார்.
இது தற்குறிப்பேற்றம் `அறைவ போலும் சிலம்பினைச் சேர்த்தினாள்` என்க.
தேர் அல்குல் - தேர் போலும் அல்குல்.
ஓராது - (அளவு கடந்து அகலின் இடம் இன்றாம்` என்பதனை) ஆராயாது, அகலல் உறாது என்று - `அகலல் தகாது ஆதலின் அடங்குக` என்று கருதித் துகிலையும் மேகலையும் சுற்றிக் கட்டினாள் - என்க.
முந்துறவே - இவைகட்கெல்லாம் முன்ன தாகவே.
அடைய - முழுதும்.
பூட்டு உறீஇ - உள் அடக்கி நிறுத்துதலை உறுவித்து.
தொடி - தோள்வளை.
ஏவி - செய்வித்து.
`தோள்களை மெலிய ஒட்டாமல் செய்ய மாட்டாத தொடிகளை, `செய்யும்` என அறியாமையாற் கருதி ஏவினாள்` என்றபடி.
தோள்கள் மெலிந்தவழி அவை கழன்றொழிவன அல்லது காக்க மாட்டாமை அறிக.

பூங்கச்சி னால்அடையப் பூட்டுறீஇப் பொற்றொடியால்
காம்பொத்த தோளிணையைக் காப்பேவி வாய்ந்தசீர் **#458**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முந்துறவே - இவைகட்கெல்லாம் முன்ன தாகவே.
அடைய - முழுதும்.
பூட்டு உறீஇ - உள் அடக்கி நிறுத்துதலை உறுவித்து.
தொடி - தோள்வளை.
ஏவி - செய்வித்து.
`தோள்களை மெலிய ஒட்டாமல் செய்ய மாட்டாத தொடிகளை, `செய்யும்` என அறியாமையாற் கருதி ஏவினாள்` என்றபடி.
தோள்கள் மெலிந்தவழி அவை கழன்றொழிவன அல்லது காக்க மாட்டாமை அறிக.

நற்கழுத்தை நல்ஆரத் தால்மறைத்துக் காதுக்கு
விற்பகரும் குண்டலங்கள் மேவுவித்து மைப்பகரும் **#459**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஆரம் - கண்ட சரம்.
மறைத்தது, ஆடவர் வருந் தாமைப் பொருட்டு.
வில் பகர்தல் - ஒளி தருதல்.
`மை யாகப் பகரும்` என ஆக்கம் விரித்து, `மழை (மேகம்) என்று சொல்லப்படும் கண்` என உரைக்க.
காவி - குவளை மலர்.
கதம் - கோபம்.
தாவிய அஞ்சனம் - பரந்த மை.
``அகலல் உறாதென்று சூழ்ந்தாள், மனம் கவரும் என்பதனால் பூட்டுறீஇ, காப்பு ஏவி, மறைத்து, கதம் தணிப்பாள் போல`` என்பன வும் தற்குறிப்பேற்றங்கள்.

காவியங் கண்ணைக் கதம்தணிப்பாள் போலத்தன்
தாவிய அஞ்சனத்தை முன்னூட்டி யாவரையும் **#460**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மை யாகப் பகரும்` என ஆக்கம் விரித்து, `மழை (மேகம்) என்று சொல்லப்படும் கண்` என உரைக்க.
காவி - குவளை மலர்.
கதம் - கோபம்.
தாவிய அஞ்சனம் - பரந்த மை.
``அகலல் உறாதென்று சூழ்ந்தாள், மனம் கவரும் என்பதனால் பூட்டுறீஇ, காப்பு ஏவி, மறைத்து, கதம் தணிப்பாள் போல`` என்பன வும்

தற்குறிப்பேற்றங்கள்.

ஆகுலம் ஆக்கும் அழகினாள் அன்னமும்
கோகிலமும் போலும் குணத்தினா ளாகிப் **#461**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஆகுலம் - மனக் கவலை.
``குணம்`` என்றது நடையையும், குரலையும்.

பலகருதிக் கட்டிக் கரியவாய்க் கோடி
அலர்சுமந்து கூழைய வாகிக் கலைகரந் **#462**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பல கருதிக் கட்டுதல் - குழல், பனிச்சை, அளகம் முதலிய பல வடிவங்களாகக் கட்டுதல்.
கோடி - மிகப் பல.
கூழை - கடைகுவிதல்.
கலை - கை வினைத் திறம்.
உள் யாதும் இன்றிப் புறம்.
கமழ்தல் - கமழும் பொருள் எதுவும் இல்லாமல் தானே இயற்கையில் கமழ்தல்.
கீழ்த் தாழ்தல் - நீண்டு தொங்குதல்.
கள் - தேன்.
ஆவி - அகிற்புகை.

துள்யாதும் இன்றிப் புறங்கமழ்ந்து கீழ்த்தாழ்ந்து
கள்ஆவி நாறும் கருங்குழலாள் தெள்ளொளிய **#463**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பல கருதிக் கட்டுதல் - குழல், பனிச்சை, அளகம் முதலிய பல வடிவங்களாகக் கட்டுதல்.
கோடி - மிகப் பல.
கூழை - கடைகுவிதல்.
கலை - கை வினைத் திறம்.
உள் யாதும் இன்றிப் புறம்.
கமழ்தல் - கமழும் பொருள் எதுவும் இல்லாமல் தானே இயற்கையில் கமழ்தல்.
கீழ்த் தாழ்தல் - நீண்டு தொங்குதல்.
கள் - தேன்.

ஆவி - அகிற்புகை.

செங்கழுநீர்ப் பட்டுடுத்துச் செங்குங் குமம்எழுதி
அங்கழுநீர்த் தாமம் நுதல்சேர்த்திப் பொங்கெழிலார் **#464**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

செங்கழுநீர்ப் பட்டு - செங்கழுநீர்ப் பூப்போலும் பட்டு.
குங்குமத்தால் எழுதுதல் மார்பிலும், தோளிலும்.
தாமம் - மாலை.
நுதல் - நெற்றி.

பொற்கவற்றின் வெள்ளிப் பலகை மணிச்சூது
நற்கமைய நாட்டிப் பொரும்பொழுதில் விற்பகரும் **#465**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கவறு - சூதாடு கருவி.
மணி - சூதுக்கு உரிய காய்கள்.
நற்கு - நன்கு பொருது - சூது போர் ஆடுதல்.

தோளான் நிலைபேறு தோற்றம் கேடாய்நின்ற
தாளான் சடாமகுடம் தோன்றுதலும் கேளாய **#466**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நிலைபேறு - காத்தல் தொழில்.
தோற்றம் - படைத்தல் தொழில்.
கேடு - அழித்தல் தொழில்.
`இம்மூன்றையும் சிவனது திருவடியே செய்யும்` என்பது பற்றி.
`இவையாய் நின்ற தாளான்`` என்றார்.
``போற்றி யருளுக நின் ஆதியாம் பாத மலர்`` * என்னும் திருவாசகத்தையும் காண்க.
சிவனது சத்தியை அவனது திருவடியாக உபசரித்தல் வழக்கு.
கண்ணி - *169, 170* - இல் உள்ள ``சொலற்கரிய தேவாதி தேவன் சிவனாயின், தேன் கொன்றைப் பூவார் அலங்கல் அருளாது போவானேல்`` என்பதை இங்குக் கூட்டுக.

நாணார் நடக்க நலத்தார்க் கிடையில்லை
ஏணார் ஒழிக எழிலொழிக பேணும் **#467**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நாண், `ஏண்` - என்னும் அஃறிணைப் பொருள்கள் `ஆர்` புணர்ந்து

உயர்திணை போலச் சொல்லப்பட்டன.
கேளாய நாண் - மகளிர்க்குச் சிறந்த நட்பாகிய நாண், ஏண் - வலிமை.
நலத்தார் - அழகினை உடைய மகளிர் என இவ்வாறு தன்னையே பிறர்போலக் கூறினார்.
அழகுடைய மகளிர்க்கு இடையில்லாமை இயல்பாதலின் எழுந்து சென்று அவனைக் காண இயலாது.
அதனால் அவனே வலிந்து தனது கொன்றை மாலையை எனக்கு ஈயக்கடவன்.
அங்ஙனம் அவன் தான் கடவதை உணர்ந்து கொன்றை மாலையை ஈயாதே அப்பாற் போய் விடுவானாயின், எனது நாண் ஒழியட்டும்; வலிமை ஒழியட்டும் அழகு ஒழியட்டும்; `இவைகளை யெல்லாம் ஒழியாது காப்பாற்றும் குலமகளிர்கள் நாங்கள்` என்று சொல்லிக் கொள்பவர்கள் எனக்கு உறவாகாது ஒழியட்டும்; அந்தக் குல மகளி ரால் குற்றம் உடையவர்களாகச் சொல்லப்படுகின்ற என் போன்ற மகளிரே, என்னுடன் வாருங்கள்; `போதும், போதும்` என்று துயரத் தால் வருந்துகின்றவர்களே, அத்துயரம் நீங்க வேண்டுமாயின் அவனை நினையுங்கள் - என்று இன்ன பல சொல்லி அங்கலாய்த்து அலம் - போதும் அலத்தீர் - போதும் என்று சொல்கின்றவர்களே.
`அலந்தீர்` என்பதும் பாடம்.

குலத்தார் அகன்றிடுக குற்றத்தார் வம்மின்
நலத்தீர் நினைமின்நீர் என்று சொலற்கரிய **#468**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நாண், `ஏண்` - என்னும் அஃறிணைப் பொருள்கள் `ஆர்` புணர்ந்து
உயர்திணை போலச் சொல்லப்பட்டன.
கேளாய நாண் - மகளிர்க்குச் சிறந்த நட்பாகிய நாண், ஏண் - வலிமை.
நலத்தார் - அழகினை உடைய மகளிர் என இவ்வாறு தன்னையே பிறர்போலக் கூறினார்.
அழகுடைய மகளிர்க்கு இடையில்லாமை இயல்பாதலின் எழுந்து சென்று அவனைக் காண இயலாது.
அதனால் அவனே வலிந்து தனது கொன்றை மாலையை எனக்கு ஈயக்கடவன்.
அங்ஙனம் அவன் தான் கடவதை உணர்ந்து கொன்றை மாலையை ஈயாதே அப்பாற் போய் விடுவானாயின், எனது நாண் ஒழியட்டும்; வலிமை ஒழியட்டும் அழகு ஒழியட்டும்; `இவைகளை யெல்லாம் ஒழியாது காப்பாற்றும் குலமகளிர்கள் நாங்கள்` என்று சொல்லிக் கொள்பவர்கள் எனக்கு உறவாகாது ஒழியட்டும்; அந்தக் குல மகளி ரால்

குற்றம் உடையவர்களாகச் சொல்லப்படுகின்ற என் போன்ற மகளிரே, என்னுடன் வாருங்கள்; `போதும், போதும்` என்று துயரத் தால் வருந்துகின்றவர்களே, அத்துயரம் நீங்க வேண்டுமாயின் அவனை நினையுங்கள் - என்று இன்ன பல சொல்லி அங்கலாய்த்து அலம் - போதும் அலத்தீர் - போதும் என்று சொல்கின்றவர்களே.
`அலந்தீர்` என்பதும் பாடம்.

தேவாதி தேவன் சிவனாயின் தேன்கொன்றைப்
பூவார் அலங்கல் அருளாது போவானேல் **#469**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

கண்டால் அறிவன் எனச்சொல்லிக் கைசோர்ந்து
வண்டார்பூங் கோதை வளந்தோற்றாள் ஒண்டாங்கு **#470**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்டால் - *(*பின்பு ஒருஞான்று அவனை நான் காணாமலா போய்விடுவேன்*?)* கண்டால்.
அறிவன் - அவன் இவ் வாறு கடவது கடந்த பழிக்குத் தீர்வு காணும் வழியை நான் அறிவேன்.
என்று இவ்வாறெல்லாம் வாய்ப் பறைசாற்றினாளே யன்றி, உண்மையில்.
கை சோர்ந்து வளம் தோற்றாள் - செயலற்று வீழ்ந்து, தன் பெண்மை வளத்தை யெல்லாம் முற்ற இழந்துவிட்டாள்.
முப்பத்திரண்டு முதல் நாற்பதாவது ஆண்டு முடியப் பேரிளம்பெண் பருவம்.
ஒள் தாங்கு - அழகைக் கொண்டிருக் கின்ற.
பணி மொழி - பணிந்த மொழி.

பெண்ணரசாய்த் தோன்றிய பேரிளம் பெண்மையாள்
பண்ணமரும் இன்சொற் பணிமொழியாள் மண்ணின்மேல் **#471**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முப்பத்திரண்டு முதல் நாற்பதாவது ஆண்டு முடியப் பேரிளம்பெண் பருவம்.
ஒள் தாங்கு - அழகைக் கொண்டிருக் கின்ற.
பணி மொழி - பணிந்த மொழி.

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்

ஒண்டொடி கண்ணே வுளவென்று பண்டையோர் **#472**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கட்டுரை`` * என்றது திருக்குறளை மேம் படுத்தமை, அவ்வுரைக்கு இலக்கியமாய் இலங்கினமை.

மண்டலம் - வட்டம்.

உகிர் - நகம்.

`அவை கண்ணாடிபோல விளங்கின` என்பதாம்.

கட்டுரையை மேம்படுத்தாள் கண்ணாடி மண்டலம்போல்
விட்டிலங்கு நல்லுகிர்சேர் மெல்விரலாள் கட்டரவம் **#473**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கட்டுரை`` * என்றது திருக்குறளை மேம் படுத்தமை, அவ்வுரைக்கு இலக்கியமாய் இலங்கினமை.

மண்டலம் - வட்டம்.

உகிர் - நகம்.

`அவை கண்ணாடிபோல விளங்கின` என்பதாம்.

அஞ்சப் பரந்தகன்ற அல்குலாள் ஆய்நலத்த
வஞ்சிக் கொடிநுடங்கு நுண்ணிடையாள் எஞ்சாத **#474**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அரவம் அஞ்சியது, தனது படத்தை வெல்லுதல் பற்றி ``பரந்தகன்ற`` என்பது மீமிசைச் சொல்.

`கொடிபோல நுடங்கும் இடை` என்க.

நுடங்குதல் - துவளுதல்.

எஞ்சாத - மாற்றுக் குறையாத.

பொற்செப் பிரண்டு முகடு மணிஅழுத்தி
வைத்தன போல வளர்ந்தே நீதி ஒத்துச் **#475**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

செப்பு - கிண்ணம்.

முகடு - உச்சி.

கிண்ணத்தைக் கவிழ்த்து வைக்கும்பொழுது அதன் அடிப்புறம் உச்சி யாய் விளங்கும்.

`அதன்கண் மணி அழுத்தி வைத்தன போல` என்க.

மணி - நீலமணி.

ஏந்தி - அண்ணாந்து.
ஒத்து - இரண்டும் இணை யொத்து.
சுணங்கு, திதலை.
இவை தேமலின் வகை.
சூழ்போந்து - முழுதும் படர்ந்து.
``கண்டார்`` என்றது ஆடவரை.
அணங்கு - நோய்.
காதல் நோய்.
``அமுதம்`` என்பதற்கு.
`அமுதக் குடம்` என உரைக்க.
அதுகண்டார்க்கு மகிழ்ச்சியைத் தருவது.
இணங்கு ஒத்து - ஆடவர் இணங்குதற்குப் பொருந்தி.
கோலங்கட்கெல்லாம் கோலம் - அழகுகட் கெல்லாம் அழகு.
``நாகிள`` என்பது மீமிசைச் சொல்.
வேய் - மூங்கில்.
அங்கை - அகங்கை.

சுணங்கும் சிதலையுஞ் சூழ்போந்து கண்டார்க்
கணங்கும் அமுதமுமாய்த் தோன்றி இணங்கொத்த **#476**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

கொங்கையாள் கோலங்கட் கெல்லாம்ஓர் கோலமாம்
நங்கையாள் நாகிளவேய்த் தோளினாள் அங்கையால் **#477**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

செப்பு - கிண்ணம்.
முகடு - உச்சி.
கிண்ணத்தைக் கவிழ்த்து வைக்கும்பொழுது அதன் அடிப்புறம் உச்சி யாய் விளங்கும்.
`அதன்கண் மணி அழுத்தி வைத்தன போல` என்க.
மணி - நீலமணி.
ஏந்தி - அண்ணாந்து.
ஒத்து - இரண்டும் இணை யொத்து.
சுணங்கு, திதலை.
இவை தேமலின் வகை.
சூழ்போந்து - முழுதும் படர்ந்து.

``கண்டார்`` என்றது ஆடவரை.
அணங்கு - நோய்.
காதல் நோய்.
``அமுதம்`` என்பதற்கு.
`அமுதக் குடம்` என உரைக்க.
அதுகண்டார்க்கு மகிழ்ச்சியைத் தருவது.
இணங்கு ஒத்து - ஆடவர் இணங்குதற்குப் பொருந்தி.
கோலங்கட்கெல்லாம் கோலம் - அழகுகட் கெல்லாம் அழகு.
``நாகிள`` என்பது மீமிசைச் சொல்.
வேய் - மூங்கில்.
அங்கை - அகங்கை.

காந்தட் குலம்பழித்தாள் காமவேள் காதலாள்
சாந்தம் இலங்கும் அகலத்தாள் வாய்ந்துடனே **#478**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

காந்தள் - காந்தள் மலர்.
ஒரு மலரை மட்டுமன்று.
அம்மலரின் குலம் முழுவதையுமே பழித்தாள்.
காதலாள் - காதலுக்கு ஏற்றவள்.
சாந்தம் - சந்தனம்.
அகலம் - மார்பு.

ஏய்ந்து குவிந்து திரண்டு மறிந்திருபால்
தேய்ந்து துடித்தச் செழும்பவளம் காய்ந்திலங்கு **#479**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரண்டும் ஏய்ந்து குவிந்து - இரண்டு இதழ்களும் ஒன்று சேர்ந்து குவிந்து.
மறிந்து - பின் நீங்கி.
(இங்ஙனம் செயற்பட்டு) திரண்டு - நடுவிடம் திரண்டு.
இருபால் தேய்ந்து - கடையிருபக்கமும் சிறுகி.
துடித்து - துடித்தலைச் செய்து.
செழும் பவளம் காய்ந்து இலங்கி - செம்மையான பவழத்தைக் கோபித்து விளங்கி.
முத்தமும் - பற்களும்.
தேனும் - மொழியும்.
(இவையிரண் டும் உருவகம்) பொதிந்து - நிரம்பி.

திறை - கப்பம்.
`திறைகொள்ளல்` என்பது.
`தன்வழிப்படுத்தல்` என்னும் பொருட்டாய், ``முனிவரை`` என்னும் இரண்டாவதற்கு முடிபாயிற்று.
உம்மை சிறப்பு.
இதனால் ஏனை ஆடவரைத் திறை கொள்ளல் சொல்ல வேண்டாவாயிற்று.

முத்தமும் தேனும் பொதிந்து முனிவரையும்
சித்தம் திறைகொள்ளும் செவ்வாயாள் ஒத்து **#480**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரண்டும் ஏய்ந்து குவிந்து - இரண்டு இதழ்களும் ஒன்று சேர்ந்து குவிந்து.
மறிந்து - பின் நீங்கி.
(இங்ஙனம் செயற்பட்டு) திரண்டு - நடுவிடம் திரண்டு.
இருபால் தேய்ந்து - கடையிருபக்கமும் சிறுகி.
துடித்து - துடித்தலைச் செய்து.
செழும் பவளம் காய்ந்து இலங்கி - செம்மையான பவழத்தைக் கோபித்து விளங்கி.
முத்தமும் - பற்களும்.
தேனும் - மொழியும்.
(இவையிரண் டும் உருவகம்) பொதிந்து - நிரம்பி.
திறை - கப்பம்.
`திறைகொள்ளல்` என்பது.
`தன்வழிப்படுத்தல்` என்னும் பொருட்டாய், ``முனிவரை`` என்னும் இரண்டாவதற்கு முடிபாயிற்று.
உம்மை சிறப்பு.
இதனால் ஏனை ஆடவரைத் திறை கொள்ளல் சொல்ல வேண்டாவாயிற்று.

வரிகிடந் தஞ்சனம் ஆடி மணிகள்
உருவம் நடுவுடைய வாகிப் பெருகிய **#481**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வரி - செவ்வரிகள்.
அஞ்சனம் ஆடி - மையி னுள் முழுகி.
மணிகள் - கண்மணிகள்.

`மணிகளின் உருவம்` என்க.

``சலஞ்சலம்`` என்பது `சலம் + சலம்` என இரு மொழியாய் முறையே `நீர், வஞ்சனை` என இருபொருளையும் `சலஞ்சலம்` என ஒருமொழி யாய் `ஒருவகைச் சங்கு` என வேறு ஒரு பொருளையும் தருதலால் சிலேடை.

வஞ்சனை, ஆடவரை நோக்காதது போல நோக்குதல்.

மகளிர் கண்களைக் கருமையும் விசாலமும், அலைவும் பற்றிக் கட லோடு ஒப்புமை கூறுதற்கு ஏற்ப, அவை சலஞ்சலமும் உடையவாயின என நயம்படக் கூறியவாறு.

தண்ணங் கயலுஞ் சலஞ்சலமும் தோன்றுதலால்
வண்ணங் கடலனைய வாட்கண்ணாள் ஒண்ணிறத்த **#482**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வரி - செவ்வரிகள்.

அஞ்சனம் ஆடி - மையி னுள் முழுகி.

மணிகள் - கண்மணிகள்.

`மணிகளின் உருவம்` என்க.

``சலஞ்சலம்`` என்பது `சலம் + சலம்` என இரு மொழியாய் முறையே `நீர், வஞ்சனை` என இருபொருளையும் `சலஞ்சலம்` என ஒருமொழி யாய் `ஒருவகைச் சங்கு` என வேறு ஒரு பொருளையும் தருதலால் சிலேடை.

வஞ்சனை, ஆடவரை நோக்காதது போல நோக்குதல்.

மகளிர் கண்களைக் கருமையும் விசாலமும், அலைவும் பற்றிக் கட லோடு ஒப்புமை கூறுதற்கு ஏற்ப, அவை சலஞ்சலமும் உடையவாயின என நயம்படக் கூறியவாறு.

குண்டலஞ்சேர் காதினாள் கோலக் குளிர்மதிய
மண்டலமே போலும் மதிமுகத்தாள் வண்டலம்ப **#483**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மதிமுகம், வினைத்தொகை.

அலம்ப - ஒலிக்க.

நாறுதல் - இயற்கையில் நாறுதல்.

வாசிகை - நெற்றிப் பட்டம்.

யோசனை நாறும் குழலாள் ஒளிநுதல்மேல்
வாசிகை கொண்டு வடிவமைத்தாள் மாசில்சீர்ப் **#484**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மதிமுகம், வினைத்தொகை.
அலம்ப - ஒலிக்க.
நாறுதல் - இயற்கையில் நாறுதல்.
வாசிகை - நெற்றிப் பட்டம்.

பாதாதி கேசம் பழிப்பிலாள் பாங்கமைந்த
சீதாரி கொண்டுதன் மெய்புகைத்தாள் மாதார்ந்த #485
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பாதாதி கேசம் - அடிமுதல் முடிவரையில், ``கேசம்`` என்பதன் பின் `அந்தம்` என்பது தொகுக்கப்பட்டது.
பழிப்பின்மை, அதன் எதிர்மறையாகிய புகழ் உடைமையைக் குறித்தது.
சீத அரி - குளிர்ந்த புகை.
குளிர்ச்சி.
இங்கு நறுமணத்தின் மேற்று.

பண்கவரும் சொல்லார்பல் லாண்டேத்தப் பாயொளிசேர்
வெண்கவரி வெள்ளத் திடையிருந்து ஒண்கேழ்நல் #486
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மாது ஆர்ந்த - அழகு நிறைந்த.
இதனை, ``சொல்லார்`` என்பதன் பொருளாகிய தோழியர்க்கு அடையாக்குக.
`பல்லாண்டினால் ஏத்த` என்க.
``பல்லாண்டு`` என்பது காரிய ஆகுபெயராய், அதனை உணர்த்தும் சொல்லைக் குறித்தது.

கண்அவனை அல்லாது காணா செவியவன
தெண்ணருஞ்சீர் அல்ல திசைகேளா அண்ணல் #487
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இந்த இரு கண்ணிகளையும் ஒன்றிணைக்க ஒரு நேரிசை வெண்பாவாம்.
இவ்வெண்பாவை இவள் தானே பாடினாளாக நாயனார் அருளிச் செய்தார்.
`அழல் அங்கை கொண்டான் மாட்டு அன்பு அஃது` என இயைத்து முடிக்க.
``அஃது`` என்பது அத்தன்மைத் தாய் இருத்தலைக் குறித்தது.
ஆல், அசை.

`அஃதான்று` என்பது பாடம் அன்று.
`இசையின் கண்கேளா என உருபு விரித்துரைக்க.

கழலடி யல்லது கைதொழா அஃதால்
அழலங்கைக் கொண்டான்மாட் டன்புளன் றெழிலுடைய #488
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இந்த இரு கண்ணிகளையும் ஒன்றிணைக்க ஒரு நேரிசை வெண்பாவாம்.
இவ்வெண்பாவை இவள் தானே பாடினாளாக நாயனார் அருளிச் செய்தார்.
`அழல் அங்கை கொண்டான் மாட்டு அன்பு அஃது` என இயைத்து முடிக்க.
``அஃது`` என்பது அத்தன்மைத் தாய் இருத்தலைக் குறித்தது.
ஆல், அசை.
`அஃதான்று` என்பது பாடம் அன்று.
`இசையின் கண்கேளா என உருபு விரித்துரைக்க.

வெண்பா விரித்துரைக்கும் போழ்தில் விளங்கொளிசேர்
கண்பாவு நெற்றிக் கறைக்கண்டன் விண்பால் #489
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

அரிஅரணஞ் செற்றாங் கலைபுனலும் பாம்பும்
புரிசடைமேல் வைத்த புராணன் எரிஇரவில் #490
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அரி - காற்று `விண்பால் காற்றுப் போல விரைந்து செல்கின்ற அரணம்` என்க.
இவை திரிபுரம்.
ஆங்கு - அது போல.
`இரவில் எரி ஆடும் இறைவன்` என்க.

ஆடும் இறைவன் அமரர்குழாம் தற்சூழ
மாட மறுகில் வரக்கண்டு கேடில்சீர் #491
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அரி - காற்று `விண்பால் காற்றுப் போல விரைந்து செல்கின்ற அரணம்` என்க.
இவை திரிபுரம்.

ஆங்கு - அது போல.
`இரவில் எரி ஆடும் இறைவன்` என்க.

வண்ணச் சிலம்படி மாதரார் தாம்உண்ட
கண்ணெச்சில் எம்மையே ஊட்டுவான் அண்ணலே #492

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சிலம்படியையுடைய மாதாரார்` என்க.
மால் - மயக்கம்.
நொந்தாள் போல் - வெறுத்தாள் போல.
``கை சோர்ந்து`` என்பதில் கை, இடைச் சொல்.
மட்டு - தேன்.
இவரும் - கொப்புளிக்கின்ற.

வந்தாய் வளைகவர்ந்தாய் மாலும் அருந்துயரும்
தந்தாய் இதுவோ தகவுஎன்று நொந்தாள்போல் #493

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

கட்டுரைத்துக் கைசோர்ந்து அகமுருகி மெய்வெளுத்து
மட்டிவரும் பூங்கோதை மால்கொண்டாள் கொட்டிமைசேர் #494

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சிலம்படியையுடைய மாதாரார்` என்க.
மால் - மயக்கம்.
நொந்தாள் போல் - வெறுத்தாள் போல.
``கை சோர்ந்து`` என்பதில் கை, இடைச் சொல்.
மட்டு - தேன்.
இவரும் - கொப்புளிக்கின்ற.
``கொட்டு இமை சேர் பெண்`` என்றது, `மானுடப் பெண் இனம்` என்றபடி.
மஞ்சு - மேகம்.
குடுமி, மாளிகைகளின் சிகரம்.
`வீற்றிருந்த.
போந்த` என்னும் பெயரெச்சங்கள் அடுக்கி, ``தெரு`` என்னும் ஒரு பெயர் கொண்டன.
``தெரு ஆரவாரம் பெரிது`` என இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது.

ஈற்றில் நிற்கும் இவ்வெண்பாப் பிற்காலத்தவரால் சேர்க்கப் பட்டதாகக் கருதப்படுகின்றது.
(சென்னைச் சைவ சித்தாந்த சமாசப் பதிப்பு - 1940.)
`பக்குவ வேறு பாட்டாற் பலவகைப்படும் நல்லோர் யாவரும் பெருமானது காட்சியால் தம் வசம் இழப்பர்` என்பது இப்பிரபந்தத்தின் உள்ளுறை.
திருக்கைலாய ஞான உலா முற்றிற்று.

பண்ணாரும் இன்சொற் பணைப்பெருந்தோள் செந்துவர்வாய்ப்
பெண்ஆர வாரம் பெரிதன்றே விண்ணோங்கி **#495**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

மஞ்சடையும் நீள்குடுமி வாள்நிலா வீற்றிருந்த
செஞ்சடையான் போந்த தெரு.

பெண்ணீர்மை காமின் பெருந்தோளி ணைகாமின்
உண்ணீர்மை மேகலையும் உள்படுமின் - தெண்ணீர்க்
காரேறு கொன்றையந்தார்க் காவாலி கட்டங்கன்
ஊரேறு போந்த துலா. **#496**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கொட்டு இமை சேர் பெண்`` என்றது, `மானுடப் பெண் இனம்` என்றபடி.
மஞ்சு - மேகம்.
குடுமி, மாளிகைகளின் சிகரம்.
`வீற்றிருந்த.
போந்த` என்னும் பெயரெச்சங்கள் அடுக்கி, ``தெரு`` என்னும் ஒரு பெயர் கொண்டன.
``தெரு ஆரவாரம் பெரிது`` என இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது.
ஈற்றில் நிற்கும் இவ்வெண்பாப் பிற்காலத்தவரால் சேர்க்கப் பட்டதாகக் கருதப்படுகின்றது.
(சென்னைச் சைவ சித்தாந்த சமாசப் பதிப்பு - 1940.)
`பக்குவ வேறு பாட்டாற் பலவகைப்படும் நல்லோர் யாவரும் பெருமானது காட்சியால் தம் வசம் இழப்பர்` என்பது இப்பிரபந்தத்தின் உள்ளுறை.

திருக்கைலாய ஞான உலா முற்றிற்று.

நக்கீரதேவ நாயனார் - கயிலைபாதி காளத்திபாதி யந்தாதி

சொல்லும் பொருளுமே தூத்திரியும் நெய்யுமா
நல்லிடிஞ்சில் என்னுடைய நாவாகச் சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகற் கேற்றினேன் பெற்று. **#497**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பெற்று`` என்பதை ``விளக்கா`` என்பதன்பின் கூட்டுக.
`ஆக` என்னும் உருவக உருபு ஈறு குறைந்து நின்றது.
வெண்பாவை விளக்காகக் கூறியது புற இருளைப் போக்கும் விளக்குப் போல் அக இருளாகிய அஞ்ஞானத்தை நீக்குதல் பற்றி.
அதனால், இப்பிரபந்தத்தால் பெறும் பயன் அஞ்ஞான இருள் நீங்க, மெய்ஞ்ஞான ஒளியைப் பெறுதலாயிற்று.
இடிஞ்சில் - அகல்.
எரிகின்ற திரிக்கு முதல் நெய்யாதல்போல விளங்குகின்ற சொல்லுதல் முதல் பொருளாதல் பற்றி அவற்றை முறையே திரி நெய்களாகவும், நெய்யிற் பொருந்தி எரியும் திரிக்கு நிலைக்களன் அகலாதல் போலப் பொருளை விளக்கும் சொல்லுக்குநிலைக்களன் நாவாதல் பற்றி அதனை அகலாகவும் திரி, நெய், அகல் இம்மூன்றா னும் தோன்றுவது (ஒளிர்வது) விளக்காதல் போலச் சொல், பொருள், நா இம்மூன்றானும் தோன்றுவது இப்பிரபந்த வெண்பாக்கள் ஆதல் பற்றி அவற்றை விளக்காகவும் உருவகித்தார்.
சிவனுக்குச் செய்யும் திருப்பணிகளுள் திருவிளக்கேற்றும் பணி சிறப்புடைத்து.
எனினும் புற இருளை நீக்கும் விளக்கை ஏற்றுதலிலும் அகஇருளை நீக்கும் இவ்விளக்கை ஏற்றியது மிகச் சிறந்த பணியாதலையறிக.
வியல் - அகலம்.
அஃது உரிச் சொல் ஆதலின், அதன் ஈற்று லகரம் னகரமாய்த் திரிதல் புறநடையாற் பெறப்படும்.

பெற்ற பயன்இதுவே யன்றே பிறந்தியான்
கற்றவர்கள் ஏத்துஞ்சீர்க் காளத்திக் கொற்றவர்க்குத்
தோளாகத் தாடரவம் சூழ்ந்தணிந்த அம்மானுக்
காளாகப் பெற்றேன் அடைந்து. **#498**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`யான் பிறந்து பெற்ற பயன் இதுவே` என மாற்றி, அதனை இறுதியிற் கூட்டுக.
`அம்மானையடைந்து அவனுக்கு ஆளாகப் பெற்றேன்` என்க.
கொற்றவர் - அரசர்; உடையவர்.
``ஆடு அரவம்``, வினைத்தொகை.
``சூழ்ந்து`` என்பதன்பின் `இருக்க` என ஒரு சொல் வருவிக்க.
அன்றி, ``சூழ்ந்து`` என்பதனைப் பிறவினை யாகக் கோடலும் ஆம்.
ஆகம் - உடம்பு.
அது முதலாகு பெயராய் அதன் உறுப்பைக் குறித்தது.
`ஆடு அரவத்தைத் தோளாகிய ஆகத்தில் சூழ்ந்து இருக்க அணிந்த அம்மான்` என்றபடி.

அடைந்துய்ம்மின் அம்மானை உம் ஆவி தன்னைக்
குடைந்துண்ண எண்ணியவெங் கூற்றங்கு அடைந்துநும்
கண்ணுளே பார்க்கும் பொழுது கயிலாயத்
தண்ணலே கண்டீர் அரண். **#499**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`அவ்வம்மானை அடைந்து, உய்ம்மின்` எனச் சுட்டு வருவித்து மாற்றி, இறுதிக்கண் கூட்டி யுரைக்க.
``அடைந்து`` என்றது, `அதற்கு முன்னே அடைந்து` என்றபடி.
எனவே, `அதற்குமுன்னே` என்பது சொல்லெச்சமாம்.
குடைதல் உள்ளகத்துப் பற்றின்றி நீங்க வாங்குதல்.
உண்ணுதல், அழித்தலைக் குறிக்கும் இலக்கணைச் சொல் அங்கு - உண்ணுதற்குரிய காலத்தில்.
``நுங்கண்` என்பதில் கண், ஏழன் உருபு.
`எண்ணிய கூற்று, எண்ணியதனை முடிக்க உள்ளிடத்தைப் பார்க்கும் என்க.
கண்டீர், முன்னிலையசை.
அரண் - பாதுகாப்பு.

அரணம் ஒருமூன்றும் ஆரழலாய் வீழ
முரணம்பு கோத்த முதல்வன் சரணமே
காணுமால் உற் றன்றன் காளத்தி கைதொழுது
பேணுமால் உள்ளம் பெரிது. **#500**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஆர் அழல் - தணித்தற்கு அரிய நெருப்பு.
முரண் - வலிமை.
சரணம் - பாதம்.
காணும் மால் - காண எழுந்த மயக்கம் - பித்து; பேரவா பேணும் - மறவாது நினைக்கும்.
`உள்ளம் பெரிது பேணும்` என இயைக்க ஆல், அசை.

பெரியவர் காணீர்என் உள்ளத்தின் பெற்றி
தெரிவரிய தேவாதி தேவன் பெரிதும்
திருத்தக்கோர் ஏத்தும் திருக்கயிலைக் கோனை
இருத்தத்தான் போந் திடம். **#501**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பெரியவர் - பெரியவர்களே, (சிவனடியார்களே) இஃது அண்மை விளி.
காணீர் - அறிமின் இதனை இறுதிக்கண் கூட்டுக.
இருத்துதல் - இருக்கவைத்தல் ``இடம் போந்தது`` என மாற்றுக.
போந்தது - அமையப் பெற்றது.
`திருக்கயிலைக் கோனை இருத்துதற்கு மட்டுமே இடம் அமையப் பெற்றது; மற்றொன்றை இருத்த இடம் அமையப் பெறவில்லை; இஃது என் உள்ளத்தின் பெற்றி; காணீர்` என வினை முடிக்க.
பெற்றி - தன்மை.
`சிவபெருமானைத் தவிரப் பிறிதொன்ற நினையாத தன்மையுடைத்து` என நெஞ்சின் தன்மையைக் குறிப்பால் வியந்தவாறு.
பிறிதொன்றற்கு இடம் அமையப் பெறாமையைக் குறை போலக் கூறினமையின்.
இது பழிப்பதுபோலப் புகழ்த்திறம் புனைந்ததாம்.
பெரிதும் தக்கோர் - மிகவும் தக வாய்க்கப் பெற்றவர்.
திரு - திருவருள்.
`திரு பெரிதும் தக்கோர்` என மாறிக் கூட்டுக.
``திருத்தக்கோர் ஏத்தும்`` என்றமையால், முன்னர், ``தெரிவரிய`` என்றது.
திருவாய்க்கப் பெறாதவரை நோக்கியாயிற்று.

இடப்பாகம் நீள்கோட் டிமவான் பயந்த
மடப்பாவை தன்டிவே யானால் விடப்பாற்
கருவடிசேர் கண்டத்தெம் காளத்தி ஆள்வார்க்
கொருவடிவே அன்றால் உரு. **#502**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

விடப்பால் - நஞ்சு பொருந்திய பகுதி.
`விடப் பாலாய்` என ஆக்கம் வருவிக்க.
வடி - வடிவு; கடைக் குறை.
``பாகம்`` என்பது ஆகுபெயராய், பாகமாகிய வடிவையே குறித்தது.
`இடப்பாகமாகிய வடிவம் பாவை வடிவேயானால், காளத்தி ஆள்வார்க்கு உரு ஒருவடிவே யன்று` (இருவடிவு) என்பதாம்.
இமம் - பனி.
அஃது ஆகு பெயராய், அதனை உடைய மலையைக் குறித்தது.
நீள் கோடு - உயர்ந்த சிகரங்கள்.
இது `பனி` என்னும் ஆகுபெயரைச் சிறப்பியாது, அதன் பொருளைச் சிறப்பித்தலின், ``நீள் கோட்டு இமம்`` என்றது, இரு பெயரொட்டு ஆகுபெயர், அல்லது பின்மொழியாகுபெயர்.
இம வான் - இமமலையைத் தனதாக உடையவன்; மலையரையன்.
மடம்- இளமை.
தன், சாரியை.
``ஆனால்`` என்பது தெளிவின்கண் வந்தது.

உருவு பலகொண் டுணர்வரிதாய் நிற்கும்
ஒருவன் ஒருபால் இருக்கை மருவினிய
பூக்கயிற்கொண் டெப்பொழுதும் புத்தேளிர் வந்திறைஞ்சும்
மாக்கயிலை என்னும் மலை. **#503**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கொண்டு`` - என்பது, `கொள்ளுதலால்` எனக் காரணப் பொருளில் வந்த செய்தென் எச்சம் ``அரிது`` என்பது அப் பண்பின்மேல் நின்று ஆகுபெயராய் அதனை உடையானைக் குறித்தது.
பல்வேறு நிலைகளில் பல்வேறு வடிவங்களுடன் தோன்றுத லால், அவனை, இன்ன உரு உடையன்` என அறுதியிட்டுணர்தல் அரிது` என்பதாம்.
பால் - இடம்.
`ஒருபால் ஆக` என ஆக்கம் விரிக்க.
இருக்கை - இருக்குமிடம்.
ஒருபாலாக இருக்கை - என்றும் நீங்காது நிலையாய் இருக்குமிடம்.
மரு - நறுமணம்.
`கையில்` என்பது `கயில்` எனப் போலியாய் வந்தது.

மலைவரும்போர் வானவரும் தானவரும் எல்லாம்

அலைகடல்வாய் நஞ்செழல்கண் டஞ்சி நிலைதளரக்
கண்டமையால் தண்சாரற் காலத்தி ஆள்வார்நஞ்
சுண்டமையால் உண்டிவ் வுலகு. **#504**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மலைவு அரும்போர் - வேறு இரு திறத்தினர் செய்தற் கரிய போர்.
அதனையுடையார் வானவரும், தானவரும்.
`மாலை வரும் போல்` என்பது பாடம் அன்று.
`வானவரும், தானவரும் ஆகிய எல்லாரும்` என்க.
எனவே எஞ்சினார் ஒருவரும் இல்லையாயிற்று.
``எல்லாம் அஞ்சி நிலை தளர` என்றது, உலகம் நிலையாது அழியும் நிலையாமையைக் கண்ட காரணத்தால் அவர்கள்மேல் அருள் மீக்கூரச் சிவபெருமான் நஞ்சினை உண்டான்` என்றற்கு, ``கண்டமையால் நஞ்சு உண்டமையால்`` என்றார்.
`காளத்தி ஆள்வார் நஞ்சு உண்டமையாலே இவ்வுலகு உளதாயிற்று` என்பது இனிது விளங்குதற்பொருட்டு முன் இரண்டு அடிகளைக் கூறினார்.
``உலகு`` என்றது உயிர்த் தொகுதியை `உண்டாயிற்று` என ஆக்கம் வருவிக்க.
கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு.
என உலகத்தின் நிலைபேற்றிற்கு கண்ணோட்டத்தினைக் காரணமாகக் கூறிய திருவள்ளுவர்,
அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.
எனக் கண்ணோட்டத்தினைச் சால்பாகிய பாரத்தைத் தாங்கும் தூண்களுள் ஒன்றாகக் கூறி,
சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை.
என, `சான்றோர் தனது சான்றாண்மையைக் கைவடின் உலகம் நிலை கலங்கிவிடும்` எனக் கூறியதையும், `கண்ணோட்டத்தின் மேல் எல்லை நண்பர் பெயக் கண்டும் நஞ்சினை உண்டு அமைதலே` எனக் கூறியதையும் ஊன்றியுணர்வார்க்கு இவ்வாசிரியர், ``காளத்தி ஆள்வார் நஞ்சு உண்டமையால் உண்டிவ் வுலகு`` எனக் கூறியது சிறிதும் வியப்பினைத் தராது.
`சிவபெருமானது திருவருளானே உலகம் உள்ளது` என்பது இவ்வெண்பாவின் ஆழ்ந்த பொருள்.

உலக மனைத்தினுக்கும் ஒண்ணுதல்மேல் இட்ட
திலக மெனப்பெறினும் சீசீ இலகியசீர்
ஈசா திருக்கயிலை எம்பெருமான் என்றென்றே
பேசா திருப்பார் பிறப்பு. #505
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``எம்பெருமான்`` என்றதும், ``ஈசா`` என்றதுபோல `எம்பெருமானே` என விளியேயாம்.
அடுக்குப் பன்மை பற்றி வந்தது.
பேசுதல், இங்குத் துதித்தல்.
`துதியா திருப்பார் பிறப்புப் பிறவகையில் எல்லாம் உலகில் சிறந்து விளங்கிற்றாயினும் கண்ணிலா முகம்போல அருவருக்கப் படுவதேயாம்` என்றபடி.
`சீசீ எனப்படுவதே` என ஒரு சொல் வருவித்து முடிக்க.

பிறப்புடையர் கற்றோர் பெருஞ்செல்வர் மற்றும்
சிறப்புடை ரானாலும் சீசீ இறப்பில்
கடியார் நறுஞ்சோலைக் காளத்தி ஆள்வார்
அடியாரைப் பேணாதவர். #506
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பிறப்பு - குலம்.
அது தலைமை பற்றி மேற் குலத்தைக் குறித்தது.
கற்றோர் - மிகக் கற்றவர்.
``சீசீ`` என்பதற்கு, மேல் உரைத்த வாறு உரைக்க.
இறப்பு - உயர்வு.
`தன்னின் உயர்ந்ததில்லாத காளத்தி யாகிய தலம்` என்க.
கடி - நறுமணம்.
நறு - நல்ல.

அவரும் பிறந்தவராய்ப் போவார்கொல் ஆவி
எவரும் தொழுதேத்தும் எந்தை சிவம்மன்னு
தேக்குவார் சோலைத் திருக்கயிலை ஏத்தாதே
போக்குவார் வாளா பொழுது. #507
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சிலர்` என்னும் தோன்றா எழுவாய் வருவித்து, `பொழுது வாளா போக்குவார்; அவரும் பிறந்தாராய், ஆவிபோவார் கொல்`- என

இயைத்து முடிக்க.
``ஆவி போவார்`` என்றது, ``இறப்பர்` என்னும் பொருட்டாய், `இறத்தற்கே பிறந்தான்போலும்` எனப் பொருள் தந்தது.
``பெயர்த்தும் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி இறக் கின்றாரே`` என்னும் அப்பர் திருமொழியை இங்கு ஒப்பிட்டு நோக்குக.
கொல், ஐயம் இன்றாயினும் உள்ளது போலக் கூறினமை யின் ஐயப் பொருட்டு.
``அவரும்`` என்னும் உம்மை, `ஏத்துவாரோடு` என இறந்தது தழுவிற்று.
சிவம் - மங்கலம்.
தேக்கு, ஒரு வகை மரம்.
வார் நீண்ட.

வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர்
கோளர்கொல் அந்தோ கிறிப்பட்டார் கீளாடை
அண்ணற் கணுக்கராய்க் காளத்தி யுள்நின்ற
கண்ணப்ப ராவார் கதை. **#508**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மானுடவர்`` என்பதை முதலிற் கொள்க.
பொழுது- கிடைக்கப் பெற்றுள்ள காலம், `அதனை வாளா கழிக்கின்றார்; அந்தோ! கிறிப்பட்டார்; கண்ணப்பராவார் கதை கேளார்கொல்` என இயைத்து முடிக்க.
காலம் இல்லாமற் போகவில்லை; கேட்டலைச் செய்தல் அரிதன்று; ஆயினும் கேட்டுப் பயனடைகின்றிலர்; கிறி - பொய்; உலக வாழ்க்கை.
`கிறிக்கண்பட்டார்` என ஏழாவது விரிக்க.
அந்தோ, இரக்க இடைச் சொல், ``ஆவார்`` என்பது எழுவாய் வேற்றுமைச் சொல் லுருபு.
``ஆவார்`` என்ற எதிர்காலம் முக்காலத்திற்கும் பொதுவாய் நின்றது.
`ஒருபோதும் கேளார்போலும்` எனப் பொருள் தந்து நிற்ற லின், ஐயப் பொருட்டு, `கண்ணப்பர் கதையைக் கேட்டலாகிய சிறு முயற்சியைச் செய்து பெரும்பயன் பெறலாய் இருக்க.
ஆறறிவு படைத்த மக்களிற் பலர் அதனைச் செய்யாது காலத்தை வீணே கழிக்கின்றனர்` என இரங்கியவாறு.
கீள் - அரைநாண் அளவாகக் கட்டும் சீலை.
`கீளாகிய ஆடை` என்க.

கதையிலே கேளீர் கயிலாயம் நோக்கிப்
புதையிருட்கண் மாலோடும் சென்று சிதையாச்சீர்த்
தீர்த்தன்பால் பாசுபதம் பெற்றுச் செருக்களத்தில்

பார்த்தன்போர் வென்றிலனோ பண்டு. **#509**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பண்டு பார்த்தன் இருட்கண் கயிலாயம் நோக்கி மாலோடும் போய்த் தீர்த்தன்பால் பாசுபதம் பெற்றுச் செருக்களத்தில் வென்றிலனோ! (அதனைக்) கதையிலே கேளீர் என இயைத்து முடிக்க.

கதை, பாரதக் கதை.

பார்த்தன் (அருச்சுனன்) முதற்கண் பெற்ற பாசுபதாத்திரத்தை இந்திரன் பொருட்டாக, `நிவாத கவசர், கால கேயர்` - என்னும் அசுரர்மேல் ஏவி அவர்களை அழித்ததனால் அவ் அத்திரம் மீண்டு கயிலாயத்திற்குச் சென்றுவிட, மறுபடியும் அவன் பதின்மூன்றாம் நாட்போர் முடிந்தபின் இரவில் கண்ணனுடன் கயிலைக்குச் சென்று சிவபெருமானை வணங்கி அவ்அத்திரத்தைப் பெற்று வந்து, பதின்மூன்றாம் நாட்போரில் தான் செய்த சபதப்படியே, தன்மகன் அபிமன்னுவைக் கொன்ற சயத்திரதனைப் பதினாலாம் நாள் சூரியன் மறைவதற்குள் கொன்று வெற்றி பெற்றான்.

இக்கதையே இவ் வெண்பாவிற் குறிக்கப்பட்டது.

அருச்சுனன் சயத்திரதனைக் கொன்றதில் ஓர் அதிசயம் உண்டு.

அருச்சுனன் செய்த சபதத்தைக் கேட்டுச் சயத்திரதன் தந்தை, `தன் மகனை நாளைப் பகலுக்குள் எப்படியும் அருச்சுனன் கொன்று விடுவான்; அவனுக்குச் சிவன், மால் இருவர் துணைகளும் உண்டு` என்று அஞ்சி, சமந்த பஞ்சக மடுவில் இறங்கி, `என் மகன் தலையைத் தரையில் எவன் வீழ்த்துகின்றானோ அவன் தலை அப்பொழுதே சுக்கு நூறாய் வெடித்துச் சிதறுக` என மந்திரம் செபித்துக் கொண்டிருந்தான் இறுதி நிலையில் அருச்சுனன் சயத்திரதன் தலையை அம்பினால் வீழ்த்த முயன்ற பொழுது, கண்ணன், `இவன் தலையை வீழ்த்துதல் மட்டும் உனக்கு வெற்றியாகாது; அந்தத் தலை மடுவில் செபம் செய்து கொண்டிருக்கும் இவன் தந்தை கையில் போய்ச் சேர வேண்டும்` என்றான்.

அருச்சுனன் அப்பொழுது பாசுபதாத்திரத்தை எடுத்து மந்திரித்துத் தன் கருத்தை முடிக்க வேண்டி ஏவ, அது சயத்திரன் தலையைக் கொய்து கொண்டுபோய் கண்ணைமூடிக் கொண்டு செபம் செய்யும் அவன் தந்தை கையில் சேர்த்தது.

அவன் `ஏதோ பொருள்` என்று அந்தத் தலையைத் தரையிலே விடுத்தான்.

அதனால், அவனது மந்திர செபம் அவனுக்கே பலிக்க, அவன் தலை சுக்கு நூறாய் வெடித்துச் சிதறியது.

இச்செயல் பாசுபதம் இல்லையேல் அருச்சுன னால் செய்திருக்க முடியாது அதனையே, ``பாசுபதம் பெற்றுப் பார்த்தன் போர் வென்றிலனோ பண்டு`` என இவ்வாசிரியர் சிறந் தெடுத்து மொழிந்தார்.
`பெருமானை வணங்குவோர் செயற்கரிய செயலையும் செய்ய வல்லராவர்` என்பது இதன் கருத்து.
புதை யிருள் - மிக்க இருள்.
மால், கண்ணன்.
தீர்த்தன் - பரிசுத்தன்; சிவபெருமான்.
பார்த்தன் - அருச்சுனன்.

பண்டு தொடங்கியும் பாவித்தும் நின்கழற்கே
தொண்டு படுவான் தொடர்வேனைக் கண்டுகொண்
டாளத் தயாஉண்டோ இல்லையோ சொல்லாயே
காளத்தி யாய்உன் கருத்து. **#510**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பண்டு`` என்றது இளமைக் காலத்தை.
`தொடர்ந்து பாவித்தும்` என ஒருசொல் வருவிக்க.
பாவித்தல் - நினைத்தல்.
இளமை தொட்டே இடைவிடாது நினைத்து வருதலை இவ்வாறு கூறினார்.
உம்மைகள் எண்ணும்மைகள்.
தொடர்தல் - பற்றி நிற்றல்.
``கண்டுகொண்டு`` என்பதில் கொள்.
தற்பொருட்டுப் பொருண்மை விகுதி - அதனால், `பிறர் வலிந்து காட்டாது, நீயே கண்டு` என்றாதா யிற்று `வலிந்து காட்டின் தயா இல்லையாகும்` என்பது பற்றி, `நீயே கண்டு கொண்டு ஆள வேண்டு` என்றார்.
``சொல்லாயே`` என்பதை இறுதியிற் கூட்டுக.
ஏகாரம் இரண்டனுள் முன்னது பிரிநிலை.
பின்னது அசை.

கருத்துக்குச் சேயையாய்க் காண்தக்கோர் காண
இருத்தி திருக்கயிலை என்றால் ஒருத்தர்
அறிவான் உறுவார்க் கறியுமா றுண்டோ
நெறிவார் சடையாய் நிலை **#511**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``காண் தக்கோர் காண`` எனப் பின்னர் வருதலால், முன்னர், ``கருத்துக்கு`` என்றது `காணத் தகாதார் கருத்துக்கு` என்றதா யிற்று.
தகுதி அன்பு.
``காண்டற் கரிய கடவுள் கண்டாய்;
கருதுவார்க்கு ஆற்ற எளியான் கண்டாய்.
`` * என்ற அப்பர் திருமொழியையும் காண்க.
இருத்தி - இருக்கின்றாய் `திருக்கயிலைக்கண்` என ஏழாவது இறுதிக்கண் தொக்கது.
`அறிவான் உறுவார் ஒருத்தர்க்கு` எனப் பின்முன்னாக வைத்து, உருபினை மாறிக் கூட்டுக.
அறிவான் - அறிதற்கு.
உறுவார் - முயல்வார், ``நிலை அறியு மாறு உண்டோ` என முன்னே கூட்டி முடிக்க.
``நெறி`` என்பது, ``சடை`` என்பதனோடு, `நெறித்த` என இறந்தகால வினைத்தொகைப் பொருட்டாய்த் தொக்கது.
நெறித்தல் - மேடும், பள்ளமுமாய், நீண்டு வளர்தல்.
வார் - நீண்ட, உரிச்சொல்.
``கடையாய்`` என்பது, முன்னிலை வினைக் குறிப்புப் பெயர்.
`சடையாயது நிலை` என ஆறாவது விரிக்க.
`நிலையை` என இரண்டாவது இறுதிக்கண் தொக்கது.
தகுதியில்லார்க்கு ஓரிடத்தும் காணப்படாது, தகுதியுடை யார்க்கும் திருக்கயிலையிலே காணப்படுகின்றாய்.
என்றால், `இவ்வுலகிலே உன்னைக் கண்டுவிடலாம்` என நினைதல் எங்ஙனம் கூடும் - என்பதாம்.

நிலையில் பிறவி நெடுஞ்சுழியிற் பட்டுத்
தலைவ தடுமாறு கின்றேன் தொலைவின்றிப்
போந்தேறக் கைதாராய் காளத்திப் புத்தேளிர்
வேந்தே இப் பாசத்தை விட்டு. **#512**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``புத்தேளிர் வேந்து`` என்பது, `சிவன்` என்னும் ஒரு சொல் தன்மைத்தாய் நின்றது.
``தலைவ`` என்பதனையும் ``வேந்தே`` என்பதன் பின்னர்க் கூட்டுக.
நிலை இல் பிறவி - ஒன்றாய் நில்லாது, பலவாய் விரைவில் மாறுபட்டு வரும் பிறவி.
நெடுமை, பெருமை குறித்தது.
சுழி - சுழல்.

தொலைவு இன்றி - அழிவு இல்லையாம்படி.
`கரை` என்பது வருவித்து, `கரை போந்து ஏற` என்க.
நீரில் வீழ்ந் தாரைக் கரையில் நிற்போர் கைகொடுத்தே கரையேற்றுவர்.
ஆதலின், ``கை தாராய்`` என்றார்.
`இப்பாசத்தை விட்டுப் போந்து ஏற` என்க.
இப்பாசம், உலக வாழ்ககை.

பாசத்தை விட்டுநின் பாதத்தின் கீழே என்
நேசத்தை வைக்க நினைகண்டாய் பாசத்தை
நீக்குமா வல்ல கயிலாயா நீஎன்னைக்
காக்குமா றித்தனையே காண். #513

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நேசம் - அன்பு.
``பாசத்தை விட்டு`` என்றது, `பாசத்தின்மேல் நேசத்தை வைத்தலை விடுத்து` என்றபடி.
எனவே, ``பாசம்`` என்றது உடம்பினையும், அதனோடு தொடர்புபட்ட பொருள்களையும் ஆயிற்று.
``கீழ்`` என்றது ஆகுபெயராய்.
`நிழல்` எனப் பொருள் தந்தது.
`கீழின் கண்ணே` என ஏழாவது விரிக்க.
ஏகாரம், பிரிநிலை.
`நீக்குமாறு` என்பது கடைக்குறைந்தது செய்யுள் முடிபு.
`நினை` என்றதனால்.
`நீ நினையாவிடில் அது கூடாது` என்பதும், `நினையின் தப்பாது கூடும்` என்பதும் பெறப்பட்டன.
``இத் தனையே`` என்றது, `இஃது ஒன்றே அனைத்தையும் தரும்` என்பது பற்றி காண், முன்னிலை யசை.

காணா தலக்கின்றார் வானோர்கள் காளத்திப்
பூணார மார்பன்றன் பொற்பாதம் நாணாதே
கண்டிடுவான் யான்இருந்தேன் காணீர் கடல்நஞ்சை
உண்டிடுவான் றன்னை ஒருங்கு. #514

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இவ்வெண்பாவினை, ``அன்பரீர்`` என, அடியவரை முன்னிலைப்படுத்து உரைக்க.
`காளத்தியான் பாதம் காணாது வானோர்கள் அலக்கின்றார்` யான்

நாணாதே அவனை ஒருங்கு காண இருக்கின்றேன்` என இயைத்து உரைக்க.
காணீர், முன்னிலையசை.
அலக்கின்றார் - அலமருகின்றார்.
ஆரம், பாம்பாகிய ஆரம், பொற் பாதம், உவமத் தொகை.
நாணுதலினின்றும் பிரித்தலின் ஏகாரம் பிரி நிலை.
``உண்டிடுவான்`` என்றது, `உண்ண வல்லவன்` என்றபடி மேல், ``பூண் ஆர மார்பன்`` என்றமையால், ``கடல் நஞ்சை உண்டிடு வான்`` என்றது `அவன்` என மேலே கூட்டி முடிக்க.
கண்டிடுவான், வான் ஈற்று வினையெச்சம்.
``இருந்தேன்`` என, முக்கால வினை இறந்த காலத்தில் வைத்துச் சொல்லப்பட்டது.
`வானவர் பாதத்தையே காணாது அலக்கின்றார்; யான் நாணாதே முற்றுங்காண இருக்கின் றேன்` என்றதனால், `இஃது என் அவா இருந்தவாறு` என்பது குறிப் பெச்சமாயிற்று.
`ஆசை வெட்கம் அறியாது` என்பது பழமொழி.

ஒருங்கா துடனேநின் றொர்ஐவர் எம்மை
நெருங்காமல் நித்தம் ஒருகால் நெருங்கிக்
கருங்கலோங் கும்பற் கயிலாயம் மேயான்
வருங்கொலோ நம்பால் மதித்து. **#515**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஒருங்காது - ஒரு முகப்படாமல் (அவரவர் விரும் பியபடியே) உடனே - கூடவே.
ஐவர், ஐம்புல வேடர்.
``நெருங்குதல்`` இரண்டில் முன்னது வலிசெய்து வருத்துதல்; பின்னது கிட்டுதல்.
நித்தம் - நாள்தோறும்.
கருங்கல் - கரிய மலை.
`கருங்கல் போல ஓங்கும் உம்பல்களையுடைய கயிலாயம்` என்க.
உம்பல் - யானை.
`ஓர் ஐவர்(எம்) உடனே நின்று, எம்மை நித்தம், ஒருங்காது நெருங்காமல், கயிலாயம் மேயான் நம்பால் (நம்மை) மதித்து ஒருகால் நெருங்கி வருங்கொலோ` என இயைத்து முடிக்க.
ஒருங்காது வருத்துதலாவது.
ஐவரும் ஒரு பெற்றியாக வருத் தாது, அவரவர் வேறு வேறு வகையாக வருத்துதல்.

``நெருங்காமல்`` என்பது, `நெருங்க` என எதிர்காலப் பொருட்டாய் வரும் செயவென் எச்சத்தின் மறை, `நெருங்காதபடி` என்பது பொருள்.
கொல், ஐய இடைச் சொல்.
ஓகாரம் அசை.
``உடனே`` என்னும் ஏகாரம் வேறு நிற்றலினின்றும் பிரித்தலின் பிரிநிலை.
மதித்து - பொருட் படுத்துதலைச் செய்து.

நம்பால் மதித்துறையும் காளத்தி நண்ணாதே
வம்பார் மலர்தூய் வணங்காதே நம்பா நின்
சீலங்கள் ஏத்தாதே தீவினையேன் யானிருந்தேன்
காலங்கள் போன கழிந்து. **#516**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நம்பால்`` என்பது `எம்பால்` என்னும் பொருட்டாய் நின்றது.
``மதித்து`` என்பதற்கு, மேல் உரைத்தது உரைக்க.
`நீ உறையும் காளத்தி` என்க.
வம்பு ஆர் - மணம் நிறைந்த.
சீலங்கள் - குணங்களும், செயல்களும்.
ஏத்துதல் - புகழ்தல் `தீவினையேனாகிய யான்` என்க.
இருந்தேன் - வாளா இருந்தேன்.
காலங்கள், நாள்கள், `போயின` என்பது இடைக் குறைந்து நின்றது.
`கழிந்து போயின` என்க.
`இனி இரங்கிப் பயன் என்` என்பது குறிப்பெச்சம் `மேற் கூறியன பலவும் காலம் உள்ள பொழுதே செய்யத் தக்கன` என்பது கருத்து.

கழிந்த கழிகிலாய் நெஞ்சே கழியாது
ஒழிந்தநாள் மேற்பட் டுயர்ந்தோர் மொழிந்தசீர்க்
கண்ணுதலான் எந்தை கயிலாய மால்வரையை
நண்ணுதலாம் நன்மை நமக்கு. **#517**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கழிந்த கழிகிலாய்`` என்பதை இறுதியிற் கூட்டுக.
கழியாது ஒழிந்தநாள் - வாளா கழியாது; உறுதி செயச் சென்ற நாள்கள்.
`நாள்களில் ` என ஏழாவது விரிக்க.
``மேற்பட்டு உயர்ந்தோர்`` என்பது ஒரு சொல் நீர்மைத்தாய் நின்றது.
`கயிலாய மால்வரையை நண்ணுதல் நமக்கு நன்மையாம்; ஆயினும் நாள்கள் கழிந்தன.

நீ இருந்த இடத்தை விட்டுப் பெயர்ந்திலை` என்க.

நமக்கிசைந்த வாநாமும் ஏத்தினால் நம்பர்
தமக்கழகு தாமே யறிவார் அமைப்பொதும்பின்
கல்லவாம் நீடருவிக் காளத்தி யாள்வாரை
வல்லவா நெஞ்சமே வாழ்த்து. #518
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நெஞ்சே, அமைப் பொதும்பின்` எனத் தொடங்கி யுரைக்க.
அமை - மூங்கில்.
பொதும்பு - மரச் செறிவு.
`மூங்கிலை யுடைய மரச் செறிவையுடைய காளத்தி` என்க.
இன், சாரியை; கல்லவாம் `கல்` என்னும் ஓசையை உடைய அருவி,
வல்லவா - இயன்ற அளவு.
(ஏன் எனில்,) நம்பர் தமக்கு அழகு தாமே அறிவார் - சிவபெருமான் தாம் செய்யத் தக்கதைத் தாமேயறிவார்; நாம் அவருக்குத் சொல்லத் தேவையில்லை.
அஃது, `இவரால் இயன்றது இவ்வளவு தான்.
ஆகவே, இவர்க்கு வேண்டுவதை நாம் அருள வேண்டுவது தான்` என்பது.
``இசைந்தவா`` என்பதும், `இயன்ற அளவு` என்றதே யாம்.
``நமக்கு இசைந்தவா நாமும் ஏத்தினால்`` என்றது அனுவாதம்.
உம்மை, `அவரும் அறிந்து செய்வார்` என எதிரது தழுவிற்று, `தன் கடன் அடியேனையும் தாங்குதல்``* என அருளிச் செய்தமை காண்க.
`இறைவனது பெருமையை முற்ற அறிந்து வாழ்த்துவார் ஒருவரும் இல்லை.
அதனால், அவரவரும் தாம் தாம் அறிந்த அளவில் வாழ்த்துதல் வேண்டும்` என்பது கருத்து.

வாழ்த்துவாய் வாழ்த்தா தொழிவாய் மறுசுழியிட்டு
ஆழ்த்துவாய் அஃதறிவாய் நீயன்றே யாழ்த்தகைய
வண்டார் பொழிற்கயிலை வாழ்கென் றிருப்பதே
கண்டாய் அடியேன் கடன். #519
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வாழ்த்துதல் - வாழப் பண்ணுதல்.
வாழ்த்தா தொழிதல் - வாழப் பண்ணுதலைச் செய்யாமை.
சுழி - சுழல்.

மறு சுழி- ஒன்றின்மேல் மற்றொன்றாய் வரும் சுழல்.
`சுழியின்கண்` என ஏழாவது விரிக்க.
அஃது மேற் கூறிய மூன்றனுள் செய்யத்தக்கது.
அறி வாய் நீ அன்றே - அறிபவன் நீயேயல்லது, பிறர் யார்! `பிறர் ஒருவரும் இல்லையாதலின், உனக்கு அதனை அறிவிப்பாரும் இல்லை` என்பது கருத்து.
ஒன்றனைச் `செய்தல்.
செய்யாமை, வேறொன்று செய்தல்` என்னும் இம் மூன்றனுள் ஒன்றைத் தான் விரும்பிய வண்ணம் செய்பவனே முதல்வன் (கருத்தா) ஆவன்; அத்தகைய முதல்வன் நீயே - என்பார் இங்ஙனம் மூன்று வகையாகக் கூறினார்.
இம்மூன்றும் முறையே, `கர்த்திருத்தவம், அகர்த்திருத்தவம், அந்யதாகர்த் திருத்தவம்` - என வடமொழியில் சொல்லப்படும்.
இம்மூன்றனையும் குறிக்கும் முறையில்தான் ஔவையார், `ஒன்றை
நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்; - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனை ஆளும் ஈசன் செயல்.
` *1* எனக் கூறினார்.
`உலகியல் என்னும் வெள்ளத்திலிருந்து என்னை எடுத்துக் கரையேற்று`` என்றோ, `வேண்டா; கரை யெற்றாதே` என்றோ, `மேலும் ஆழத்தில் அமிழ்த்திவிடு` என்றோ உனக்கு விதிக்க நான் யார்? தக்கதை நீயே அறிந்து செய்வாயன்றோ- என்பது கருத்து.
`யாழ்த் தகைய ஆக` என ஆக்கம் வருவிக்க.
`வண்டு ஆர்க்கும் பொழில்` என்க.
ஆர்த்தல் - ஒலித்தல்.
(உன்கடனை நீ அறி வாய்) `கயிலை வாழ்க! கயிலாயன் வாழ்க!!` - என்பன போல இயன்ற அளவு உன்னை வாழ்த்தியிருத்தலே எனது கடன்.
அதனை நான் செய்தல் வேண்டும் என்றபடி ``என் கடன் பணி செய்து கிடப்பதே`` *2* என்றமை காண்க.
கண்டாய், முன்னிலை யசை.

கடநாகம் ஊடாடும் காளத்திக் கோனைக்
கடனாகக் கைதொழுவார்க் கில்லை இடம்நாடி
இந்நாட்டிற் கேவந்திங் தீண்டிற்றுக் கொண்டுபோய்
அந்நாட்டில் உண்டுழலு மாறு. **#520**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``இல்லை`` என்பதை இறுதிக்கண் கூட்டுக.
கடநாகம் - மதத்தையுடைய யானை.
ஊடு ஆடும் - உள்ள இடங்களில் உலாவுகின்ற காளத்தி.
கடனாக - கடமையாக; நியமமாக.
இடம் - பிறப்பெடுக்கும் இடம்.
இந்நாடு.
மண்ணுலகம்.
ஈண்டிற்று - திரண்டது, வினைக் கூட்டம்.
வினையாலணையும் பெயர்; சாதியொருமை, `ஈண்டிற்றை` என இரண்டாவது விரிக்க.
அந்நாடு, சுவர்க்க நரகங்கள்.

மாறிப் பிறந்து வழியிடை யாற்றிடை
ஏறி யிழியும் இதுவல்லால் தேறித்
திருக்கயிலை ஏத்தீரேல் சேமத்தால் யார்க்கும்
இருக்கையிலை கண்டீர் இனிது. **#521**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`உலகீர்` என முன்னிலை வருவித்து, `தேறித் திருக் கயிலை ஏத்திரேல்` என்பதை முதற்கண் கூட்டியும், `யார்க்கும் சேமத் தால் இனிது இருக்கை இலை` என மாற்றியும் உரைக்க.
தேறி - *(உயர்ந்தோர் சொல்லைத்)* தெளிந்து.
`இடை` இரண்டும் ஏழன் உருபு.
மாறிப் பிறத்தல், உயர் பிறவியிலும், தாழ்பிறவியிலும் மாறி மாறிப் பிறத்தல்.
வழி - இனிது செல்லும் வழி.
யாறு- வெள்ளத்தில் அகப்பட்டு அல்லல் உறும் யாறு, `வழியிடை ஏறி, யாற்றிடை, இழியும்` என நிரல்நிறையாகக் கொள்க.
முன்னது உயர் பிறப்பிற் பிறத்தலையும், பின்னது தாழ் பிறப்பிற் பிறத்தலையும் குறித்தன.
வெள்ளத்தில் அகப்பட்டவர்க்கேயன்றி.
இருக்கும் இடம் இன்றி, ஓயாது வழி நடப்பார்க்கும் உளதாவது அல்லலேயன்றி அமைதியன்று.
அதனால் இரண்டுமே துன்பமாம்.
சேமம் - பாதுகாவ லோடு கூடிய, வாழும் இடம்.
``காலத்தினாற் செய்த நன்றி`` *1* என்பது போல, ``சேமத்தால்`` என்பது

வேற்றுமை மயக்கம் இருக்கை - அமைதியுடன் இருத்தல்; தொழிற் பெயர்.
கண்டீர், முன்னிலை யசை.
`சிவபெருமானைத் துதிப்பார்க்கல்லது அமைதி கிட்டாது` என்றபடி.
`தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தாற்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது`
என்னும் பொது மறையையும் காண்க.

இனிதே பிறவி இனமரங்கள் ஏறிக்
கனிதேர் கடுவன்கள் தம்மில் முனிவாய்ப்
பிணிங்கிவரும் தண்சாரல் காளத்தி பேணி
வணங்கவல்ல ராயின் மகிழ்ந்து. **#522**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பிறவியே இனிது` என ஏகாரத்தை மாற்றி வைத்து, இறுதிக்கண் கூட்டுக.
வீட்டினின்றும் பிரித்தலின் ஏகாரம், பிரிநிலை.
இனம் - பல்வேறு இனம்.
`தேர் கடுவன்கள் ஏறித் தம்மில் பிணங்கி வரும் சாரல் காளத்தி` என்க.
கடுவன் - ஆண் குரங்கு.
முனிவு - கோபம் (மக்கள்) காளத்தி பேணி மகிழ்ந்து வணங்க வல்லாராயின் (அவர்கட்கு) அப்பிறவியே இனிது - என்க.
`வீடு வேண்டா` என்பதாம்.
`வீட்டின் பயன் அப்பிறப்பிலே உள்ளது` என்றபடி.
`தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று,
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம்.
* என்றது காண்க.

மகிழ்ந்தலரும் வண்கொன்றை மேலே மனமாய்
நெகிழ்ந்து நெகிழ்ந்துள்ளே நெக்குத் திகழ்ந்திலங்கும்
விண்ணுறங்கா வோங்கும் வியன்கயிலை மேயாய்என்
பெண்ணுறங்காள் என்செய்கேன் பேசு. **#523**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`திகழ்ந்திலங்கும்.

.

.
என் பெண்` என்பதை முதலிற் கூட்டுக.
மகிழ்தல், இங்கு விரும்புதலைக் குறித்தது.
`விண் நிறத்தோடு` என்று ஓடுருபு தொகுக்கப்பட்டது.
விண்ணின் நிறம் புகைமை.
அஃது இங்கு இருளைக் குறித்தது.
கா - சோலை.
இது கயிலைப் பெருமான்மேல் காதல் கொண்டாள் ஒருத்திதன் செவிலித் தாய் கூற்று.

பேசும் பரிசறியாள் பேதை பிறர்க்கெல்லாம்
ஏசும் பரிசானா ளேபாவம் மாசுனைநீர்
காம்பையலைத் தாலிக்கும் காளத்தி என்றென்று
பூம்பயலை மெய்ம்முழுதும் போர்த்து. **#524**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மா சுனை நீர்` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.
காம்பு - மூங்கில்.
ஆலித்தல் - ஒலித்தல்.
பூம் பசலை - பூப் போலும் பசலை.
`பூ, பீர்க்கம் பூ` என்பது மரபு பற்றிக் கொள்ளப்படும்.
போர்த்து - போர்க்கப்பட்டு.
பேசும் பரிசு - வேறொன்றைப் பற்றியும் பேசும் தன்மை.
``பேதை`` என்றது சிலேடை.
பரிசு - தன்மை.
`தன்மை யுடையளாயினார்` என்க.
ஏகாரம், தேற்றம் ``பாவம்`` என்பது, இரக்கம் பற்றி வந்தது.
இதவும் மேலைத் துறை.

போர்த்த களிற்றுரியும் பூண்ட பொறியரவும்
தீர்த்த மகளிருந்த செஞ்சடையும் மூர்த்தி
குயிலாய மென்மொழியாள் கூறாய வாறும்
கயிலாயா யான்காணக் காட்டு. **#525**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`போர்வையாகப் போர்த்த` எனவும், `பூணாகப் பூண்ட` எனவும் உரைக்க.
உரி - தோல், பொறி - புள்ளி.

தீர்த்த மகள், கங்கை.
மூர்த்தி - வடிவம்.
இதனை முதற்கண் வைத்து, `கூறும் ஆய வாறு` என உம்மையை மாறிக் கூட்டி, `ஆயவாறு காட்டு` என முடிக்க.
இது சிவபெருமானது உருவத்தை நினையும் பாட்டாய் அமைதலை யறிக.

காட்டில் நடம்ஆடிக் கங்காளர் ஆகிப் போய்
நாட்டிற் பலிதிரிந்து நாள்தோறும் ஓட்டுண்பார்
ஆனாலும் என்கொலோ காளத்தி ஆள்வாரை
வானோர் வணங்குமா வந்து. **#526**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கங்காளர் - எலும்புக் கூட்டைத் தோளில் கொண்ட வர்.
`நாட்டில் போய்த் திரிந்து` என்க.
பலி - பிச்சை.
`பிச்சைக்கு` என நான்காவது விரிக்க.
`நாள்தோறும் போய்` எனக் கூட்டுக.
ஓட்டு - ஓட்டின்கண், ஓடு, தலைஓடு.
`வணங்குமாறு` `வணங்குமா` எனச் செய்யுள் முடிபு எய்தி நின்றது.
``என்கொலோ`` என்றது, `இவரது செயலின் உண்மையை உணர்ந்ததனால்` என்பதனைக் குறிப்பாற் புலப்படுத்தியது.
`அவனும்ஓர் ஐயம்உண்ணி; அதள்ஆடை யாவ
ததன்மேல்ஒரு ஆட லரவம்;
கவணளவுள்ள வுள்கு கரிகாடு கோயில்;
கலனாவது ஓடு; கருதில்
அவனது பெற்றி கண்டும், அவன்நீர்மை கண்டும்
அகன்நேர்வர் தேவ ரவரே`.
* என அப்பர் பெருமானும் அருளிச் செய்தமை காண்க.
கங்காளம் தாங்கியது முதலியவற்றின் உண்மைகளை.
`நங்காய்,இ தென்னதவம்! நரம்போ டெலும்பணிந்து
கங்காளம் தோள்மேலே காதலித்தான் காணேடீ,
கங்காளம் ஆமாகேள்; காலாந் தரத்திருவர்
தங்காலம் செய்யத் தரித்தனன்காண் சாழலோ`
(திருவாசகம் சாழல்.
11) என்பது முதலியவற்றான் அறிக.
`வானோர் வணங்குவர்` என்றத னால், உண்மை யுணராதவரெல்லாம் இவரது செயலைக் கண்டு இவரை, `பித்தர்` என்று இகழவே செய்வர்

என்பது போந்தது.
`பித்தரே என்றும்மைப் பேசுவர் பிறரெல்லாம்`
என்றார் ஆளுடைய நம்பிகள்.
`இவரைப்பொருள்உணர மாட்டாதா ரெல்லாம்
இவரை இகழ்வதே கண்டீர்.
` என்றார் காரைக்கால் அம்மையார்.

வந்தமரர் ஏத்தும் மடைக்கூழும் வார்சடைமேல்
கொந்தவிழும் மாலை கொடுத்தார்கொல் - வந்தித்து
வால்உகுத்த வண்கயிலைக் கோமான் மணிமுடிமேல்
பால்உகுத்த மாணிக்குப் பண்டு. **#527**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மடை`` என்பது, `நிவேதனம்` எனச் சிறப்புப் பெய ராயும், ``கூழ்``
என்பது `உணவு` என்னும் பொதுப் பெயராயும் நின்று, இருபெயர்
ஒட்டாய் வந்தன.
``மாலை`` என்பதிலும் எண்ணும்மை விரிக்க.
கொல், அசை.
வால் உகுத்த - வெள்ளொளியை எங்கும் வீசு கின்ற.
மாணி - பிரமசாரி.
இதில் சண்டேசுர நாயனாரது வரலாறு குறிக்கப்பட்டது.
அதனைத் திருத்தொண்டர் புராணத்துட் காண்க.

பண்டிதுவே அன்றா கில் கேளீர்கொல் பல்சருகு
கொண்டிலிங்கத் தும்பின்னூற் கூடிழைப்பக் - கண்டு
நலந்திக் கெலாம்ஏத்தும் காளத்தி நாதர்
சிலந்திக்குச் செய்த சிறப்பு. **#528**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பல் சருகு`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.
கொண்டு - மேற்கூரையாகக் கொண்டு.
இலிங்கம் - திருவானைக்கா வெண்ணாவலின்கீழ் உள்ள இலிங்கம்.
பின் நூல் - பின்னுகின்ற நூலால் கூடு.
பக்தர் நலம் - நலம் செய்வதாகிய கருணை.
`அதனை திக்கெலாம் ஏத்தும் காளத்தி நாதன்` என்க.
சிலந்திக்குச் செய்த சிறப் பாவது சோழ மன்னனாகப் பிறக்கச்
செய்தமை.
அம்மன்னனே திருவானைக்கா முதலான எழுபது தலங்களில்

சிவபிரானுக்கு மாடக் கோயில் எடுத்த கோச்செங்கணான்.
``பண்டு இதுவே`` என்பதை `இது பண்டே` என மாற்றி ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டுக.
`பண்டு` என்பது பெயர்த் தன்மைப்பட்டு, பண்டு நிகழ்ந்த செயலைக் குறித்தது.
`சிறப்பாகிய இது` என இயைக்க அன்றாகில் - `அவ்வாறு ஒன்று நிகழ்ந்ததில்லை` என்று எவரேனும் கூறுவீராயின்.
கேளீர்கொல் - செவிப்பொறி இல்லீர் போலும்! கொல், ஐய இடைச்சொல்.
`இந் நிகழ்ச்சி நாடறிந்த பெருவழக்காய் இருக்க, அதனை, `இல்லை` எனச் சொல்லிப்பிணங்குவார் உளராயின் அவர் செவிப் பொறி இல்லா தவரேயாவர்` என்றபடி.
`சிவபிரானுக்கு அன்புடன் சிறு பணி செய்யி னும் அவன் பெரும்பயன் தருவன்` என்பது கருத்து.

செய்த சிறப்பெண்ணில், எங்குலக்கும் சென்றடைந்து
கைதொழுவார்க் கெந்தை கயிலாயர் - நொய்தளவில்
காலற்காய்ந் தாரன்றே காணீர் கழல்தொழுத
பாலற்காய் அன்று பரிந்து. **#529**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கழல் தொழுது பாலற்காய் அன்று பரிந்து நொய்தள வில் காலற் காய்ந்தாரன்றே! சென்று அடைந்து கைதொழுவார்க்கு எந்தை கயிலாயர் செய்த சிறப்பு எண்ணில் எங்கு உலக்கும்? என இயைத்துக் கொள்க.
காணீர், முன்னிலையசை.
இதில் மார்க்கண்டே யருக்கு அருள்செய்த வரலாறு குறிக்கப்பட்டது.
எண்ணில் - எண்ணால் கூறி வரையறுக்கப்புகின்.
எங்கு உலக்கும் - எங்கே போய் முடியும்? `ஓரிடத்தும் முடியாது, எண்ணிலவாய் மிகும்` என்றாம்.
மேல், சண்டேசர், கோச்செங்கணான் இவர்கட்குச் செய்த சிறப்பையும், இங்கு மார்க்கண்டேயர்க்குச் செய்த சிறப்பையும் கூறினார்` `இப்படி எத்தனைப் பேருக்கு என்னென்ன சிறப்புச் செய்தார்` என வினாவு வார்க்கு விடையும் இதிலே கூறினார்.
``எந்தை கயிலாயர்`` என்பது பன்மை யொருமை மயக்கம்.
நொய்தளவில் - சிறிது நேரத்திற்குள்.
பரிந்து - அருள் கூர்ந்து.

பரிந்துரைப்பார் சொற்கேளாள் எம்பெருமான் பாதம்

பிரிந்திருக்க கில்லாமை பேசும் - புரிந்தமரர்
நாதா வா காளத்தி நம்பா வா என்றென்றென்
மாதாவா உற்ற மயல். #530
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``என் மாது`` என்பதை முதலிலும், ``பேசும்`` என்பதை ``என்றென்று`` என்பதன் பின்னும் கூட்டி (இவள்) `உற்ற மயல், ஆஆ` என முடிக்க.
பரிந்து - அன்பு கொண்டு உரைப்பார் சொல்லாவன, `அவன் உனக்கு எளியனல்லன்; அவனை நீ அடைதல் இயலாது` என்றல் போல்வன.
`பிரிந்திருக்ககில்லாமையால்` என உருபு விரிக்க.
பேசும் - பேசுவாள்.
`பிரிந்த` என்பதன் இறுதிநிலை தொகுத்தலாயிற்று.
புரிதல் - விரும்புதல்.
``ஆஆ`` என்பதன்பின் `என இரங்கத் தக்கது` என ஒரு சொல் வருவித்து முடிக்க.
இதுவும் மேற்போந்தன போலச் செவிலி கூற்று.
`சிவனிடத்து அன்பு கொண்டோர் அதனை விலக்கச் சொல்வார் கூற்றைக் கேளார்` என்பது இதன் உள்ளுறை.

மயலைத் தவிர்க்கநீ வாராய் ஒரு மூன்
றெயிலைப் பொடியாக எய்தாய் - கயிலைப்
பருப்பதவா நின்னுடைய பாதத்தின் கீழே
யிருப்பதவா வுற்றாள் இவள். #531
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கயிலைப் பருப்பதவா`` என்பது முதலாகத் தொடங்கி, இறுதியில், ``மயலைத் தவிர்க்க வாராய்`` என முடிக்க.
பருப்பதம் - மலை.
அஃது அடியாகப் பிறந்த `பருப்பதன்` என்னும் பெயர் ஒரு அகரம் விரித்தல் பெற்று, `பருப்பதவன்` என வந்தது, உன் பக்கத்திலே கூட இருக்க விரும்பினாள்` என்க.
``நீ ஒருமூன்று எயிலைப் பொடிய எய்தாய்`` என்றது, `தேவர் பொருட்டு அதனைச் செய்த அருளுடையயையன்றோ? இவட்கு இது நீ செய்யலாகாதோ` என்றபடி.
`இருப்பது` என்பது தொழிற்பெயர்.
`இருப்பதற்கு` என நான்காவது விரித்து, அதனை, `அவாவைப் பொருந்தினாள்` என்க.

இவ்வாறன்றி, `அவா உற்றார்`` என்பதனை `அவாவினாள்` என ஒரு சொல் நீர்மைத்தாகக் கொண்டு, `அவாவை` என இரண்டாவது விரிப் பினும் ஆம்.
இதுவும் செவிலி கூற்றே.

இவளுக்கு நல்லவா றெண்ணுதிரேல் இன்றே
தவளப் பொடியிவள்மேல் சாத்தி - இவளுக்குக்
காட்டுமின்கள் காளத்தி காட்டிக் கமழ்கொன்றை
சூட்டுமின்கள் தீரும் துயர். **#532**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இன்றே - இப்பொழுதே.
தவளப்பொடி - வெண் பொடி; திருநீறு.
`சந்தனத்தைப் பூசி இவள் உடல் வெப்பத்தைத் தணிக்க நினையாதீர்கள்` என்பதாம்.
`அது இவளுக்கு மேலும் வெம்மையைத் தரும்` என்பது குறிப்பு.
`காளத்தி காட்டுமின்கள்` என்க.
இப்பாட்டு தலைவிதன் வேற்றுமைக்குக் காரணம் அறியாது செவிலியும், நற்றாயும் அதனைப் பரிகரிக்க முயல்கையில் பாங்கி அறத்தொடு நின்றது.
சிவனடியார்கட்குச் சிவன்பணி கூடாமையால் உளதாகும் வருத்தம் பிறிதொன்றால் தீராமை இதன் உள்ளுறை.

துயர்க்கெலாம் கூடாய தோற்குரம்பை புக்கு
மயக்கில் வழிகாண மாட்டேன் - வியற்கொடும்போர்
ஏற்றானே வண்கயிலை எம்மானே என்கொலோ
மேற்றான் இதற்கு விளைவு **#533**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``வியற் கொடும் போர்.....எம்மானே`` என்பது தொடங்கி, `இதற்கு, மேல் விளைவு என்கொலோ` என முடிக்க.
வியல் - பெரிய.
``வியல் கொடும் போர்` என்பது ஏற்றிற்கு இன அடை.
ஏறு - இடபம்.
குரம்பை - குடில்.
தோற் குரம்பை - தோலால் மூடப்பட்ட குடில்.
உடம்பு.
மயக்கில் - மயக்கத்தால், வழி - செல்லத்தக்க வழி ``இது`` என்றது

மாட்டாமையை.
``இதற்கு விளைவு`` என்பதில் நான்காவது, `அவர்க்கு ஆகும் அக்காரியம்`` என்பதுபோல மூன்றாவதன் பொருட்டு.
மேல் விளைவு - பின் விளைவு.
தான், அசை.
கொல், ஐயம்.
ஓ, அசை.
`இவ் அறியாமை அறியாமையேயாகப் பிறவியே விளையுமோ! உனது அருளால் இது நீங்கி அறிவு தோன்ற, உனது திருவடிப்பேறு விளையுமோ! அறிகின் றிலேன்` என்பதாம்.

விளையும் வினை அரவின் வெய்ய விடத்தைக்
களைமினோ காளத்தி ஆள்வார் - வளைவில்
திருந்தியசீர் ஈசன் திருநாமம் என்னும்
மருந்தினைநீர் வாயிலே வைத்து. **#534**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``வினை அரவு``, ``திருநாமம் என்னும் மருந்து`` - இவை உருவகங்கள்.
விளையும் வினை, பிராரத்த வினை.
அதனை ``அரவு`` என்றதனால், ``அதன் விடம்`` என்றது, அது விளையும் பொழுது உளவாகின்ற இன்பத் துன்ப அனுபவங்களால் தோன்றும் ஆகாமியத்தையாம்.
``திருவாஞ்சியத்துறையும் - ஒருவனார் அடியாரை ஊழ்வினை நலிய ஓட்டாரே`` *1* என்று அருளிச்செய்தது இது நோக்கி.
``களைமின்`` என்பதை இறுதிக்கண் கூட்டுக.
ஓகாரம், அசை.
`ஆள்வாரது` என ஆறாவது விரிக்க.
வளைவு - கோட்டம்; அஃதாவது, மெய்யான.
சீர் - புகழ்.
`சீரை விளக்கும் திருநாமம்` என்க.
`ஈசன் ஆம் திருநாமம்` என ஒற்றுமைப் பொருட்டாகிய ஆக்கம் விரிக்க.
ஈசன் - ஐசுவரியத்தையுடையவன்.
இஃது உபலக்கணமாய் ஏனை பல பெயர்களையும் குறிக்கும்.
`சிவபெருமானது பொருள் சேர்ந்த புகழை எப்பொழுதும் சொல்லுதலே வினை நீக்கத்திற்கு வழி` என்றபடி.
`இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.
` *2* என்னும் பொது மறையையும் காண்க.

`மருந்துகள் யாவும் உள் விழுங்கவே நோயைத் தீர்க்கும்.
இஃது அவ்வாறின்றி, வாயில் வைத்த அளவே நோயைத் தீர்ப்பதோர் அதிசய மருந்து என்னும் நயத்தைத் தோற்றுவித்தமையறிக.
புகழ்கள் சொல்லப்படுதல் வாயினாலே யன்றோ! இவ்வாறே, வருகின்ற வெண்பாவில், ``வாயிலே வைக்கு மளவில் மருந்தாகி`` என ஓதுதல் காண்க.

வாயிலே வைக்கு மளவில் மருந்தாகித்
தீய பிறவிநோய் தீர்க்குமே - தூயவே
கம்பெருமா தேவியொடு மன்னு கயிலாயத்
தெம்பெருமான் ஓர்அஞ் செழுத்து. **#535**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``தூய`` என்பது, வேறுபடுதல் இன்மையைக் குறித்தது.
`பெருமாதேவியொடு தூய ஏகமாய்மன்னு எம் பெருமான்` என ஆக்கம் வருவித்துரைக்க.
தலைவராயினார்க்குத் தேவியாயினாரை `மாதேவி` என்றல் வழக்காதலின் தலைவர்க்கெல்லாம் தலைவனுக்குத் தேவியாயினாளை, ``பெருமாதேவி`` என்றார்.
`அஞ்செழுத்து ஆகித் தீர்க்கும்` என முடிக்க.
``அஞ்செழுத்து`` என்பது தொகைக் குறிப்பாய், ``நமச்சிவாய`` என்பவற்றைக் குறித்தல் மரபு வழியால் பெறப்பட்டது.
மரபு சைவாகம மரபு.
பிறவியை நோயாக உருவகித்தற்கு ஏற்ப அஞ்செழுத்தை மருந்தாக உருவகிக்கின்றார்.
ஆகலின் அதற்கேற்ப, `வாயாலே சொல்லுமளவில்` என்னாது, ``வாயிலே வைக்குமளவில்`` என்றார்.
வாயிலே வைத்த அளவில் நோய் நீங்குதல் கூறப்பட்டமையால், பின்னும் பின்னும் பேணி ஒழுக ஒழுகப் பேரின்பம் பெருகுதல் பெறப்பட்டது.
இவ்வஞ்செழுத்தின் பெருமையே திருமுறைகளில் எங்கும் விரித்துப் பேசப்படுதல் வெளிப் படை.
அவ்வாற்றானே இங்கும் பேசப்பட்டது.
`பிறவி நோயாதல் தெளிவாதல் போல, அஞ்செழுத்தே அந்நோய்க்கு மருந்தாதல் தெளிவு` என்பதாம்.

அஞ்செழுத்துங் கண்டீர் அருமறைகா ளாவனவும்
அஞ்செழுத்தும் கற்க அணித்தாகும் - நஞ்சவித்த
காளத்தி யாருக்கும் காண்டற் கரிதாய்ப்போய்

நீளத்தே நின்ற நெறி. **#536**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அஞ்செழுத்தும் ஏற்ற பெற்றியால் சொற்களுக்கு உறுப்பாதலேயன்றி, இறைவனது அருளாணையால் அஞ்சு பதங்களு மாதல் பற்றி, ``அஞ்செழுத்தும் என முற்றும்மை கொடுத்தார்.

துஞ்ச லும் துஞ்சலிலாத போழ்தினும்` *1* என்னும் திருப்பதிகத்திலும்,

`ஏதும் ஒன்றும் அறிவில ராயினும்
ஓதி அஞ்செழுத் தும்உணர் வார்கட்குப்
பேத மின்றி அவரவ ருள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வர்மாற் பேறரே.

` *2* என்றாற்போலும் இடங்களிலும் `அஞ்செழுத்தும்` என உம்மை கொடுத்தே ஓதப்பட்டன.

``அந்தியும் நண்பகலும்`` அஞ்சு பதம் சொல்லி*3* என்பதில் அஞ்செழுத்தும் அஞ்சு பதங்களாதல் குறித்தருளப்பட்டது.

இனி, இங்கு மேலை வெண்பாவிலும், அஞ்சினால் உய்க்கும் வண்ணம் காட்டினாய்க் கச்சம் தீர்ந்தேன்`` *4* அஞ்செழுத்து - ஓதி ஏறினார் உய்ய உலகெலாம்`` *5* என்றாற் போலும் இடங்களிலும் உம்மையின்றியே ஓதப்பட்டது.

அஞ்செழுத்தும் சொற்கு உறுப்பாய் நிற்க அதனாலாம் தொடர்மொழி, `சிவனுக்கு வணக்கம்` என்னும் ஒரு பொருளையே தந்து, சிவன் வணங்கப்படுபவனும், உயிர்கள் அவனை வணங்குவனவும் ஆகின்ற முறைமையை உணர்த்தி நிற்கும்.

இது பொதுவாக யாவராலும் ஓதத் தக்கதாதல் பற்றி, `தூல பஞ்சாக்கரம்` (*பருவைந்தெழுத்து)* எனவும், அஞ்செழுத்தும் அஞ்சு பதங்களாய் நின்று அஞ்சு பொருளை உணர்த்துதல் உபதேச முறையால் பெற்றுச் சிறந்தாரால் ஓதப்படுதலின் `சூக்கும பஞ்சாக்கரம்` (*நுண்ணைந்தெழுத்து)* எனவும் சொல்லப்படும்.

முன்னது நகாரம் முதலாகவும், பின்னது சிகாரம் முதலாகவும் வரும்.

அஞ்செழுத்தும் அஞ்சு பதம் ஆதல் ஆணையாற்கொள்வ தல்லது, வழக்கினாற் கொள்வதன்று.

அதனால், `இவை போல்வன வழக்குநூல் வரையறைக்கு உட்படா` என்பதை ஆசிரியர் தொல்காப்பியனார், `மந்திரப் பொருள்வயின் ஆஅ குநவும்
அன்றி அனைத்தும் கடப்பா டிலவே.

` *1* எனப் புறடுத்தோதினார்.

அருமறைகள் - பொருள் உணர்தற்கு அரிய இறைவன் நூல்கள்.

அந்நூல்களில் பரக்க வரும் பொருள் அனைத்தையும் இவ் அஞ்செழுத்து அடக்கி நிற்றலின் ``அஞ்செழுத்துமே அருமறைகள் ஆம்`` என்றார்.
`அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுராணம் அனைத்தும்.
`2 எனவும்,
`அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
பொருள் நூல் தெரியப் புகின்.
`3 எனவும் வரும் சாத்திர மொழிகளையும் காண்க.
கற்றல் - ஓதியுணர்தல்.
``போய்`` என்றது, `நீங்கி` என்றபடி.
`நிறத்தொடு` என ஒடு உருபு விரிக்க.
ஏகாரம், அசை.
``ஆவனவும்`` என்றதனோடு இயைய, `அஞ்செழுத்தும் கற்க, நெறி அணித்தாதலும்` என எண்ணும்மை விரித்து, `இரண்டும் ஆகும்` என்க.
ஆகும் முடியும்.
காளத்தியாருக்கும் காண்டற்கு அரிதாய், நீளத்தே நின்ற நெறியாவது, பகலவன் தனது கதிர்களைப் பரக்க வீசிய போதிலும் அவற்றை ஏற்க மாட்டாது இருளில் மூழ்கியிருக்கும் படலம் படர்ந்த கண்போலக் காளத்தி நாதர் தமது திருவருள் நோக்கினைச் செலுத்திய போதிலும் அதனை எய்த மாட்டாது அறியாமையில் அழுந்தியிருக்கும் பெத்தான்ம நிலை.
அந் நெறியும் அணித்தாதலாவது அவ்வாறான அறியாமை நீங்க, காளத்தி நாதரது திருவருளை எய்துதல்.
`இந்நிலை அஞ்செழுத்தை ஓதி உணர்தலால் உளதாம்` என்றபடி.
கண்டீர், முன்னிலை யசை.

நெறிவார் சடையாய் நிலையின்மை நீஒன்
றறியாய்கொல் அந்தோ அயர்ந்தாள் - நெறியில்
கனைத்தருவி தூங்கும் கயிலாயா நின்னை
நினைத்தருவி கண்சோர நின்று. **#537**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நெறி வார் சடை`` என்பதற்கு, மேல் * உரைக்கப் பட்டது.
`இவளது நிலையின்மை` என ஒருசொல் வருவிக்க.
நிலை - நிலைபேறு.
அஃது இன்மையாவது இறந்துபாடு, ஒன்று - சிறிது.
`ஒன்றும்` என இழிவு சிறப்பும்மை விரிக்க.
நெறியில் - வழியில்.

`நெறி யில் தூங்கும்` என இயையும்.
`கண் அருவி சோர நின்று அயர்ந்தாள்` எனக் கூட்டி முடிக்க.
அயர்தல் - சோர்தல்.
இதுவும் செவிலி கூற்று.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்யாம்
என்றும் நினைந்தாலும் என்கொலோ - சென்றுதன்
தாள்வா னவர் இறைஞ்சும் தண்சாரற் காளத்தி
ஆள்வான் அருளாத வாறு. **#538**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``என் கொலோ`` என்பதனை இறுதிக் கண் கூட்டுக.
நிற்றல் முதலியன அத்தொழில் நிகழும் காலத்தைக் குறித்தன.
`தன் தாள் வானவர் சென்று இறைஞ்சும் காளத்தி ஆள்வான்` என இயைக்க; ஆறு - காரணம்.
கொல், ஐயம், ஓ அசை.
``அருளாதவாறு என்கொல்`` என்றது, அருளைப் பெறுதற்கண் எழுந்த வேட்கை மிகுதியால்.
அங்ஙனம் கூறியதனானே, `நினைந்தார்க்கு அவன் அருளாமை இல்லை.
என்பது பெறப்பட்டது.
அருளும் காலத்தை அவன் அறிதலன்றிப் பிறர் அறியுமாறில்லை.

அருளாத வாறுண்டே யார்க்கேனும் ஆக
இருளார் கறைமிடற்றெம் ஈசன் - பொருளாய்ந்து
மெய்ம்மையே உன்னில் வியன்கயிலை மேயான்வந்
திம்மையே தீர்க்கும் இடர். **#539**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பொருள் - பொருளியல்பு.
அஃதாவது, அவனது இயல்பு, ஆய்தல், ஆய்ந்து உணர்தலாகிய தன் காரியம் தோற்றி நின்றது.
இதனை முதலிலும், ``யார்க்கேனும் ஆக என்பதை உன்னில் என்பதன் பின்னும் வைத்து, `எம் ஈசன் அருளாதவாறு உண்டே` என முடிக்க.
`எமக்கு அருளாதவாறு` என ஒருசொல் வருவிக்க.
``யார்க்கேனும்`` என்றது, `உயர்வு தாழ்வு நோக்காது` என்றபடி.
எனவே, `எமக்கு அருளா தொழிதல் இல்லை` என்றதாம்.
மேலை வெண்பாவால் ஆற்றாமை கூறிய நாயனார் இவ்வெண்பாவில்

ஆற்றினமை கூறினார்.
``எம் ஈசன்`` என்றது.
`அவன்` என்னும் அளவாய் நின்றது.

இடரீர் உமக்கோர் இடம்நாடிக் கொண்டு
நடவீரோ காலத்தால் நாங்கள் - கடல்வாய்க்
கருப்பட்டோங் கொண்முகில்சேர் காளத்தி காண
ஒருப்பட்டோம் கண்டீர் உணர்ந்து. **#540**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``உமக்கு ஓர் இடம் நாடிக்கொண்டு காலத்தால் நடவீர்`` என்பதனை இறுதிக்கண் வைத்துரைக்க.
``இடரீர்`` என உயர் திணையாகக் கூறியது இகழ்ச்சிக் குறிப்பு.
இடராவன பலவற்றையும் நோக்கிப் பன்மையாற் கூறினார்.
``நாடிக்கொண்டு`` என்பது ஒரு சொல்.
``காலத்தால்`` என்பது வேற்றுமை மயக்கம்.
கருப்படுதல் - நீரை நிரம்ப முகத்தல் ஒருப்படுதல் - மனம் இசைதல்.
கண்டீர், முன்னிலை யசை.
`உணர்ந்து நடவீர்` என இயையும்.
இடராவனவற்றிற்கு இடம் காளத்தி காணாதாரேயன்றிக் கண்டவரல்லர்` என்பது கருத்து.

உணருங்கால் ஒன்றை உருத்தெரியக் காட்டாய்
புணருங்கால் ஆரமுதே போலும் - இணரில்
கனியவாம் சோலைக் கயிலாயம் மேயாய்,
இனியவா காண்நின் இயல்பு. **#541**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இணரில் கனிய - கொத்துக்களில் கனிகளையுடைய.
உணருங்கள் - நினைக்குப் புகும் பொழுதும்.
`உரு ஒன்றைத் தெரியக் காட்டாய்` என்க.
(உரு இன்றியே உன்னைப் பணர வல்லவர்) உணருங்கால் நின்.
இயல்பு ஆரமுதே போலும், *(ஆதலின்)* இனியவா காண்.
(நின் இயல்புகள்) மிக இனியயவாமாற்றை நீ அறிவாயாக.
`இனியவாறு` என்பது ஈறு குறைந்து செய்யுள் முடிபு எய்தி நின்றது.
ஆறு - தன்மை அஃது அதனை உடையவற்றைக் குறித்தது.
``இனியவா`` என்றது உண்மையேயாயினும், ``உருத்தெரியக் காட்டாய்`` என்றதனால், நகையாடல்போலக் கூறப்பட்டது.

புணர்தல் - தழுவுதல்.
`புணருங்கால் இன்பம் தரும் பொருள்கள் யாதோர் உருவும் இன்றியே, புணருங்கால் பேரின்பம் தருபவனாய் உள்ளாய்` என வியந்துகூறியவாறு.
`சிவனது இன்பம் ஐம்புல இன்பம் போலாது, அவற்றின் வேறு பட்டதோர் இயல்பிற்று` என்பதாம்.
``காண்`` என்றது, புதிதாகக் கண்டவர் அதனை முன்னமே கண்டவர்க்கு அறிவித்தல் போன்றதொரு வழக்கு.
`போல்வாய்` எனப்பாடம் ஓதுதலும் ஆம்.

நின்னியல்பை யாரே அறிவார் நினையுங்கால்
மன்னியசீர்க் காளத்தி மன்னவனே - நின்னில்
வெளிப்படுவ தேழுலகும் மீண்டே ஒருகால்
ஒளிப்பதுவுமா னால் உரை. **#542**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மன்னிய சீர்`` என்பது முதலாகத் தொடங்கி, `நினையுங்கால் நின்னியல்பை அறிவார் யாரே? உரை` என முடிக்க.
மன்னியசீர் - நிலைபெற்ற புகழ்.
`என்றும் நிலைபெற்றிருத்தலால் பெற்ற புகழ்` என்க.
`நின்னினின்றும் வெளிப்படுவனாகிய ஏழுலகும்` என உரைக்க.
நின்னில், நீக்கப் பொருட்கண் வந்த ஐந்தாம் வேற்றுமை.
இதனை ஏழாம் வேற்றுமையாக்கி, ``ஒளிப்பதுவும்`` என்பதனோடும் கூட்டுக.
``மீண்டே ஒருகால்`` என்றதனால், `முன்பு ஒருகால் வெளிப் படுவ` என்பது வருவிக்க.
`ஏழுலகும் முன்பு ஒருகால் நின்னின்று வெளிப்பட்டு, மீண்டு ஒருகால் நின்னிடமே வெளிப்படுவ ஆனால்` என ஓதற்பாலதனைச் செய்யுள் நோக்கி இவ்வாறு ஓதினார்.
``நின்னில் வெளிப்படு ஏழுலகும்` என்பது உடம்பொடு புணர்த்தது.
``ஒளிப்பது`` என்பது தொழிற்பெயர்.
அஃது ஆகுபெயராய் அதனையுடைய உலகங்களின்மேல் நின்றது.
உம்மை.
இறந்தது தழுவியது.
``ஆனால்`` என்பது தெளிவின்கண் வந்தது.
தோன்றி ஒடுங்குவனவாகிய அனைத்துப் பொருள்கட்கும் இறைவன் நிலைக்களமாய் இருத்தலின், அவனது அளவை அத்தோன்றி ஒடுங்கும் பொருள்களில் ஒருவராய் உள்ள எவர் அறிதல் கூடும்? ஒருவரும் அறிதல்

கூடாது` என்பதாம்.
`தோன்றி ஒடுங்கும் பொருள்கள் அனைத்திற்கும் இறைவன் நிலைக் களம்` என்பதை மெய்கண்ட தேவர், ``வித்துண்டா மூலம் முளைத்தவா`` *1* என விளக்கினார்.
இதனையே பிற்காலத்தில் பட்டினத்து அடிகளும், `நுரையும், திரையும், நொப்புறு கொட்பும்
வரையில் சீகா வாரியும் குரைகடல்
பெருத்தும், சிறுத்தும் பிறங்குவ தோன்றி
எண்ணில வாகி யிருங்கடல் அடங்கும்
நின்னிடைத் தோன்றி, நின்னிடை அடங்கும், நீ
ஒன்றினும் தோன்றாய், ஒன்றினும் அடங்காய்`.
2 என அருளிச் செய்தார்.

உரையும் பொருளும் உடலும் உயிரும்
விரையும் மலரும்போல் விம்மிப் - புரையின்றிச்
சென்றவா றோங்கும் திருக்கயிலை எம்பெருமான்
நின்றவா றெங்கும் நிறைந்து. **#543**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

புரை - குற்றம்.
அஃது இங்கு , `தடை எனப்பொருள் தந்தது.
விம்மி - பருத்து.
``சென்றவாறு`` என்பது `தான் வேண்டிய வாறு` என்றபடி.
ஓங்குதல்.
உயர்தல்.
`விம்மி.
.
.
ஓங்கும் திருக்கயிலை எம்பெருமான் எங்கும் நிறைந்து நின்றவாறு, உரையும் பொருளும்.
.
.
போல்` என இயைத்து முடிக்க.
``எங்கும்`` என்பதன்பின் `எல்லாப் பொருளிலும்` என ஒருசொல் வருவிக்க.
உரை - சொல், விரை - மணம், ``போல்`` என்னும் முதல் நிலை, `போல்வது` என முற்றுப் பொருள் தந்தது, ``பெறுவது கொள்வாரும், கள்வரும் நேர்`` *3* என்பதில் ``நேர்`` என்றது போல, இறைவன் எல்லாப்

பொருளிலும் அது அதுவாய்; வேற்றுமையின்றிக் கலந்து நிற்றற்கு ``சொல்லும் பொருளும் முதலிய மூன்று உவமைகளைக் கூறினார். அவை பொதுப் படப் பிரிப்பற்றதாம் நிலையை உணர்த்தி நின்றன. `இறைவன் இவ்வாறு நிற்கும் நிலையே உபநிடதங்களில் `அத்துவிதம்` எனப்படு கின்றது` என்பதைப் பிற்காலத்தில் மெய்கண்ட தேவர் தமது சிவஞான போத நூலாலும், அதன் வார்த்திகத்தாலும் விளக்கினார்.

நிறைந்தெங்கும் நீயேயாய் நின்றாலும் ஒன்றின்
மறைந்தைம் புலன்காண வாராய் - சிறந்த
கணியாரும் தண்சாரற் காளத்தி ஆள்வாய்
பணியாயால் என்முன் பரிசு. **#544**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``சிறந்த.....ஆள்வாய்`` என்பதை முதலிற் கொண்டு, இறுதியில் `முன் பரிசு என்? பணியாய்` என மாற்றி முடிக்க.

``பார் அவன் காண்; பாரதனில் பயில் ஆனான்காண்; பயிர் வளர்க்கும் துளி அவன்காண்; துளியில் நின்ற - நீர் அவன்காண்`` *

என்றாற்போலப் பல இடங்களிலும் `எல்லாப் பொருளும் அவனே` என்றல், மேலை வெண்பாவிற் கூறியவாறு, எங்கும், எல்லாப் பொருளிலும் உடலில் உயிர்போல வேற்றுமையின்றி அது அதுவேயாய்க் கலந்து நிற்கும் கலப்பு நோக்கியே என்பது, ``நிறைந்தெங்கும் நீ யேயாய் நின்றாலும்`` என்றமையால் விளங்கும் உயிர் எங்கும் நிறைந்து நிற்பினும் ஐம் பொறியில் ஒன்றிற்கும் புலனாகாது மறைந்து நிற்றல் போல, எல்லாப் பொருளிலும் நீ நிறைந்து நிற்பினும் ஐம்பொறிகளில் ஒன்றிற் புலனாகாதே மறைந்து நிற்கின்றாய்; உன்னை முன் பரிசு (நாங்கள் நினைக்கும் முறைமை) யாது? பணித்தருள்` என்பது இவ்வெண்பா வின் சிறந்த பொருள்.

நினைத்தல் மனத்தின் தொழிலாயினும் அஃது ஐம்பொறிகள் உணர்ந்தவற்றையே நினைத்தல்லது, அவற்றிற்கு உணர வராத பொருளை நினைக்கவல்லது அன்று ஆதலின், ``ஐம்புலன் ஒன்றின் காணவாராய்; உன்னை நாங்கள் நினைக்கும் பரிசு என்`` என்றார். `கருவிகள் வழியாக நினைக்க முயலாமல் அருள் வழி யாக நினைக்க முயலாமல் அருள் வழியால் நினைக்கின் காணப்படு வான்- என்பது, ``பணியாய்`` என்றதனாற் போதரும் குறிப்புப் பொருள்.

புலன், பொறிகளை உணர்த்தலின் ஆகுபெயர்.

காண்டல் - புலப்பட உணர்தல்.

கணிவேங்கை மரம், ஆல் , அசை.

பரிசறியேன் பற்றிலேன் கற்றிலேன் முற்றும்

கரியுரியாய் பாதமே கண்டாய் - திரியும்
புரம்மாளச் செற்றவனே பொற்கயிலை மன்னும்
பரமா அடியேற்குப் பற்று. #545
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``திரியும் புரம்`` என்பது முதலாகத் தொடங்கி இறுதியில் `அடியேற்குப் பற்றுக் கண்டாய்` என முடிக்க.
பரிசு - பொருள்களின் நன்மை தீமை `அவற்றைப் பகுத்தறியும் அறிவிலேன் என்றபடி.
அறிவில்லாமையால் பற்றத் தகுவதனைப் பற்றிலேன்.
கற்றிலேன் - அறிந்து பற்றினவர்களை அடைந்து கேட்டும் உணர்ந் திலேன்.
`கரி உரியாய் பாதமே அடியேற்கு முற்றும் பற்று` என இயைக்க.
முற்றும் பற்ற - முற்றுமான (முழுமையான) துணை.
`வேறு துணை ஒன்றும் இன்று` என்பதாம்.
``பரிசறியேன்`` என்பது முதலாகக் கூறியன, ``யானாக அத்தன்மையைப் பெறும் ஆற்றல் இலேன்` என்றபடி.
உன் பாதமே துணை என அடைந்தேன்` என்பதாம்.
இனி உன் திருவுள்ளம் இருந்தவாறு செய்க` என்பது குறிப்பெச்சம்.
``கரி உரியாய்`` என்பது முன்னிலை வினைக்குறிப்புப் பெயர்.
கண்டாய், முன்னிலையசை.
``திரிபுரம்`` என்பது, ``திரியும் புரம்`` என வினைத்தொகையும் ஆம் என்பது இது போலும் திருமுறை ஆட்சியால் அறிக.
திரியும் புரம்வானத்தில் உலாவுகின்ற கோட்டை மதில்கள்.

பற்றாவான் எவ்வுயிர்க்கும் எந்தை பசுபதியே
முற்றாவெண் திங்கள் முளைசூடி - வற்றாவாம்
கங்கைசேர் செஞ்சடையான் காளத்தி யுள்நின்ற
மங்கைசேர் பாகத்து மன். #546
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`எவ்வுயிர்க்கும் பற்றாவான்` என எடுத்துக் கொண்டு.
``பசுபதி`` முதலிய பெயர்கள் பலவற்றோடும் முடிக்க.
பற்று - துணை.
பெத்தம், முத்தி என்னும் இரு நிலைகளிலும் எஞ்ஞான்றும் துணையாவான் பசுபதி முதலிய வகையிற் சொல்லப்படும் சிவன் ஒருவனே` என்பதாம்.

பசுபதி - உயிர்கள் எல்லாவற்றிற்கும் தலைவன்.
இப்பெயர் சிவன் ஒருவனுக்கே உரியதாதலை நோக்குக.
ஆதல் - பெருகுதல் ``வற்றா`` என்னும் பன்மை காலம் பற்றி வந்தது.
`காலந்தோறும் பெருகும்` என்க, மன் - உடையவன்.

மன்னா கயிலாயா மாமுத்தம் மாணிக்கம்
பொன்னார மாக்கொண்டு பூணாதே - எந்நாளும்
மின்செய்வார் செஞ்சடையாய் வெள்ளெலும்பு பூண்கின்ற
தென்செய்வான் எந்தாய் இயம்பு. #547
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மன்னன் - அனைத்துயிரையும் ஆள்பவன்.
மாமுத்தம், மாணிக்கம்`` என்பவற்றின் `இவைகளை` என ஒருசொல் வருவிக்க.
பொன் - அழகு ``மின் செய்`` என்பதில் செய், உவம உருபு.
செய்வான், வான் ஈற்று வினையெச்சம்.
செய்தல், பயன் தருதல் `பூணாமைக்குக் காரணம், அவைகளால் தான் சிறக்க வேண்டுவதொரு குறையில்லாமை` என்பதும், `பூணுதல், தனது நித்தியத் தன்மையை உணர்த்துதற் பயன் நோக்கி` என்பதும் குறிப்புக்கள்.
``முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா; யாரே அழகுக்கு அழகு செய்வார்`` * எனப் பிற்காலத்து ஆசிரியரும் கூறினார்.

இயம்பாய் மடநெஞ்சே ஏனோர்பால் என்ன
பயம்பார்த்துப் பற்றுவான் உற்றாய் - புயம்பாம்பால்
ஆர்த்தானே காளத்தி அம்மானே என்றென்றே
ஏத்தாதே வாளா இருந்து. #548
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மட நெஞ்சே, புயம் பாம்பால்.... இருந்து ஏனோர் பால்...உற்றாய்? இயம்பாய், என இயைத்துக் கொள்க.
பயம் - பயன்.
பார்த்து - எதிர் நோக்கி, பற்றுவான் - பற்றுதற் பொருட்டு புயம் - தோள் ஆர்த்தல் - கட்டுதல்.
`புயத்தைப் பாம்பாலே ஆர்த்தானே` என்க.
``என்ன பயம் பார்த்து உற்றாய்`` என்னும் வினா, `அவரால் கிடைப்பது யாதும் இல்லை` என்னும் குறிப்புடைத்தாய் நின்றது.
`காளத்தி அம் மான் பணியில் வாளா இருந்து, ஏனோர்பால் பயம் பார்த்து உற்றமை யால் நீ அறிவினை இழந்தாய்` என்பது தோன்ற ``மட நெஞ்சே`` என்றார்.

இருந்தவா காணீர் இதுவென்ன மாயம்
அருந்தண் கயிலாயத் தண்ணல் - வருந்திப்போய்த்

தானாளும் பிச்சை புகும்போலும் தன் அடியார்
வானாள மண்ணாள வைத்து. #549
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கயிலாயத்து அண்ணல், தன் அடியார் வான் ஆளவும், மண் ஆளவும் வைத்து, தான் நாளும் வருந்திப் போய்ப் பிச்சை புகும்போலும்! இது என்ன மாயம்! ஆயினும் இருந்தவா காணீர்` என இயைத்து முடிக்க.
முதற்கண், `தொண்டர்காள்` என முன்னிலை வருவிக்க.
`இருந்தவாறு` என்பது குறைந்து நின்றது.
மாயம் - அதிசயம், `ஆயினும் நிகழலே செய்கின்றது` என்பதை ``இருந்தவா`` என்வறாார்.
``ஆள`` இரண்டும் வினைக்கண் வந்த செவ்வெண்.
வான் ஆள வைத்தலும், மண் ஆள வைத்தலும் அவரவர் செய்த தவத்திற்கு ஏற்பவாம்.
`வேண்டுவார் வேண்டும் பயனை வழங்குபவன் பிச்சை புகுகின்றான்` என்றால், அஃது அதிசயமே யாயினும், ஊன்றி நோக்கின் அது தன்பொருட்டாகாது பிறர் பொருட்டாய், இயற்கையாய்விடும் - என்பது கருத்து.
இவற்குப் பிச்சையிடுவார்.
`தந்தவன் தண்டல் செய்கின்றான்` என்னும் உணர்வு தோன்றப் பற்றறுதல் பயன் என்க.

வைத்த இருநிதியே என்னுடைய வாழ்முதலே
நித்திலமே காளத்தி நீள்சுடரே - மொய்த்தொளிசேர்
அக்காலத் தாசை அடிநாயேன் காணுங்கால்
எக்காலத் தெப்பிறவி யான். #550
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வைத்த.....சுடரே, யான் காணுங்கால் எக்காலத்து, எப்பிறவி, ஒளி மொய்த்துச் சேர் அக்காலத்து அடிநாயேன் ஆை\\\\\\\\*u2970?*` என இயைத்து முடிக்க.
வைத்த - சேமித்து வைத்த.
இரு - பெரிய.
வாழ் முதல் - வாழ்விற்கு முதல்.
நித்திலம் - முத்து.
வைத்த நிதி, இளைத்த காலத்தில் உதவும்.
வாழ்விற்கு முதலாலேதான் வாழ்வு உளதாகின்றது.

நித்திலம் - அழகைத் தரும்.
`இறைவன் இம்மூன்றும் போல்பவனாய் உள்ளான்` என்பதாம்.
`காலம்` என்பது அம்முக்குறைந்து, ``கால்`` என நின்றது.
``பிறவி`` என்பதும் ஆகுபெயராய், அஃது உள்ள காலத்தையே குறித்தது.
``ஆை\\\\\\\\\u2970?`` என்பதன் பின் `உள்ளது` என்னும் பயனிலை எஞ்சி நின்றது.
`யான் உன்னை நேரே காணுங்காலம், எந்தக் காலத்தில் உளதாகின்ற எனது பிறவிக் காலமோ அந்தக் காலத்தையே அடியேன் அவாவிநிற்கின்றேன்` என்பது இவ்வெண்பாவின் திரண்ட பொருள்.
`அந்தக் காலமே எனக்கு ஒளி மிக்க காலமாகும்` என்பதும் கூறப்பட்டது.

யானென்று தானென் றிரண்டில்லை என்பதனை
யானென்றுங் கண்டிருப்பனா னாலும் - தேனுண்
டளிகள்தாம் பாடும் அகன்கயிலை மேயான்
தெளிகொடான் மாயங்கள் செய்து. **#551**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``தானென்று`` என்பதில் ``யானென்றும்`` என்பதிற் போல எண்ணும்மை விரிக்க.
இரண்டு இல்லை - வேறு வேறாய்ப் பிரிந்து நிற்றல் இல்லை.
`உடலும், உயிரும் போல் இருவரும் ஒன்றியே உள்ளேம்` என்றபடி.
`இவ்வாறு நாங்கள் இருவரும் ஒன்றியிருப்பினும் அவர் என்னோடு இருக்கும்.
இருப்பினை யான் உணராதபடி அவன் எனது அறிவை மறைத்தல் செய்கின்றான்` என்பது பிற்கூற்றின் பொருள்.
தெளி - தெளிவு.
மாயம் - மறைத்தல் `இரண்டில்லை` என்பது கலைஞானத்தால் உணர வருகின்றது.
அவ்வுணர்வு பேதைப் பெண் காம நூற்பொருளை உணர்வது போல்வதே யன்றி, அனுபவ உணர்வு அன்றாகலானும், அனுபவ உணர்வு அவன் அருளவே வரும் ஆகலானும், ... இரண்டில்லை என்பதனை
யான் என்றும் கண்டிருப்பன் ஆனாலும், -
கயிலை மேயான்
மாயங்கள் செய்து தெளிகொடான்
என்றார்.
எனவே, ``கண்டிருப்பன்`` என்பது கலைஞானத்தையும் ``தெளி`` என்றது அனுபவ ஞானத்தையும் ஆயின.

இறுதியில், `யான் செய்வது என்` என்னும் குறிப்பெச்சம் வருவிக்க.
தெளிவித்தலே இறைவனுக்கு இயல்பாவதன்றி, மறைத்தல் அவனுக்கு இயல்பன்று ஆயினும், உடல் நலத்தையே செய்கின்ற மருத்துவன் கழலையைப்போக்கக் கருவியாற் கீறி அழ வைப்பது போல, அவன் (இறைவன்) ஆணவத்தை மெலிவித்தற்கு அதனது மறைக்கும் ஆற்றலைச் செயற்படுத்தலையே, அவனே மறைத்தலைச் செய்வதாக நூல்கள் கூறும்.
அவனது ஆற்றல் (சக்தி) ஆணவம் முதலிய மலங்களைச் செயற்படுத்தி மறைப்பினை உண்டாக்கும் பொழுது, `திரோதான சத்தி` என்றும், மலம் நீங்கியபின் தன்னைக் காட்டியருளும் பொழுது `அருட் சத்தி` என்றும் பெயர் பெறும்.
இரண்டும் செயலால் வேறாவன அல்லது பொருளால் வேறல்ல; ஒன்றேயாம்.
இரண்டும் கருணையே யன்றி, எதுவும் கொடிதன்று, திரோதான சத்தி மறக் கருணை; அருட் சத்தி அறக் கருணை, மறக் கருணையாவது, செயலால் வன்கண்மையுடையது போன்று, பயனால் நலம் செய்வது; அறக் கருணையாவது, செயல், பயன் இரண்டினாலும் இனிதாவது.

மாயங்கள் செய்துஐவர் சொன்ன வழிநின்று
காயங்கொண் டாடல் கணக்கன்று - காயமே
நிற்பதன் றாதலால் காளத்தி நின்மலன்சீர்
கற்பதே கண்டீர் கணக்கு. **#552**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதற்கண், `உலகீர்` என்னும் முன்னிலை வருவிக்க.
``ஐவர்`` என்பதை முதலிற் கொள்க.
ஐவர் - ஐம்புலக் கள்வர்.
மாயம் - வஞ்சனை; அஃதாவது நல்லவர்போல் காட்டித் தீமையில் வீழ்த்துதல்.
`கள்வர்` என்றதற்கு ஏற்ப.
``சொன்ன`` என்றாராயினும் `செலுத்தியது` என்பதே பொருள் காயம் - உடம்பு.
`காயத்தை` என உருபு விரிக்க.
கொண்டாடுதல் - பாராட்டுதல், அது இயன்ற மட்டும் பேணிக் காத்த லாகிய தன் காரியம் தோற்றி நின்றது.
கணக்கு முறைமை.
``கணக்கு அன்று`` என்பதன்பின்.
`ஏன் எனில்` என்பது வருவிக்க.

காயமே - காயமோ.
சீர் - புகழ் கற்பது - பலகாலும் சொல்லுதல்.
கண்டீர், முன்னிலை யசை.

கணக்கிட்டுக் கொண்டிருந்து காலனார் நம்மை
வணக்கி வலைப்படா முன்னம் - பிணக்கின்றிக்
காலத்தால் நெஞ்சே கயிலாயம் மேவியநற்
சூலத்தான் பாதம் தொழு. **#553**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வணக்கி - தாம் சொன்ன படி கேட்க வைத்து, `படுத்தல்` என்பதில் பிறவினை விகுதி தொகுக்கப்பட்டு, ``படா`` என வந்தது பிணக்கு மாறுபாடான எண்ணம்.
காலத்தால் காலத்தின்கண், `இளமையிலே` என்றபடி, வேற்றுமை மயக்கம்.

தொழுவாள் பெறாளே தோள்வளையும் தோற்றாள்
மழுவாளன் காளத்தி வாழ்த்தி - எழுவாள்
நறுமா மலர்க்கொன்றை நம்முன்னே நாளைப்
பெறுமாறு காணீர்என் பெண். **#554**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`எண் பெண் மழுவாளன் காளத்தி வாழ்த்தி எழுவாள்; தொழுவாள்; தன் தோள்வளையும் தோற்றாள்.
ஆயினும் நறுமாமலர்க்கொன்றை பெறாளே; (இன்று இல்லை என்றாலும்) நாளை நம் முன்னே (அதனைப்) பெறுமாறு காணீர்` எனக் கூட்டிப் பொருள் கொள்க.
``பொருளே`` என்னும் ஏகாரம் தேற்றம்.
எழுவாள்- துயில் ஒழிவாள்.
இதுவும் செவிலி கூற்று.
காப்பு மிகுதி முதலியவற்றுள் யாதானும் ஒரு காரணத்தால் தலைவி வேறுபட்டவழி, `இஃது எற்றி னான் ஆயிற்று` எனத்தாயர் ஆராய்வுழித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றவாறே செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.
செவிலி தலைவியை ``என் பெண்`` என்று எடுத்துக் கூறியது, அவள் மாட்டுத் தனக்கு உள்ள அன்பின் மிகுதி தோன்றுதற்கு.
செவிலி ஆயத்தாரையும் உளப்படுத்து, ``காணீர்`` என்றாள்.
சிவபெருமானை வாழ்த்தியெழுதலும், தொழுதலும் உடையராய்ப்

பேரன்பு செய்வார் என்றாயினும் ஒருநாள் அவனைத் தலைப்படவே செய்தல் இதன் உள்ளுறை.

பெண்இன் றயலார்முன் பேதை பிறைசூடி
கண்நின்ற நெற்றிக் கயிலைக்கோன் - உண்ணின்ற
காமந்தான் மீதூர நைவாட்குன் கார்க்கொன்றைத்
தாமம்தா மற்றிவளைச் சார்ந்து. #555

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பிறை சூடியே, கயிலைக் கோனே` என இரு விளி களையும் முதற்கண் வைத்து, ``பெண்`` என்பதன்முன் `என்` என்பதும், ``பேதை`` என்பதன்பின் `ஆயினாள்` என்பதும் வருவிக்க.
தான், அசை.
மீதூர்தல் - புறத்தார்க்குப் புலனாகுமாறு மிகுதல்.
எனவே, நாணழிந்தாளாம்.
தாமம் - மாலை.
மற்று.
அசை.
சார்தல் - பக்கத்தே வருதல்.
இது ``மாலையிரத்தல்`` என்னும் துறை.
தோழிமேல் வருவது இங்குச் செவிலி மேலாதாய் வந்தது.
இது தூதிடையாடலின் * வகை.
எனவே, பெருந்திணையாம்.
மெய்யுணர்வாசிரியர் மெய்யுணர் மாணாக்கர் பொருட்டு இறைவனையிரத்தல் இதன் உள்ளுறை.

சார்ந்தாரை எவ்விடத்தும் காப்பனவும் சார்ந்தன்பு
கூர்ந்தார்க்கு முத்தி கொடுப்பனவும் - கூர்ந்துள்ளே
மூளத் தியானிப்பார் முன்வந்து நிற்பனவும்
காளத்தி யார்தம் கழல். #556

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அன்பு`` என்றதை, `அன்பு கூர்ந்து` என மீட்டும் கூட்டுக.
மூளத்தியானித்தல் - ஆழத் தியானித்தல்.

தங்கழல்கள் ஆர்ப்ப விளக்குச் சலன் சலன் என்
றங்கழல்கள் ஆர்ப்ப அனலேந்திப் - பொங்ககலத்
தார்த்தா டரவம் அகன்கயிலை மேயாய்நீ
கூத்தாடல் மேவியவா கூறு. #557

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அகன் கயிலை மேயாய்`` என்பதனை முதலிற் கொள்க.
தங்கு அழல்கள் ஆர்ப்ப ஆங்காங்கு எரியும் நெருப்புக்கள் தம் ஒலியை எழுப்ப ``சலன்சலன்`` என்பது ஒலிக்குறிப்பு.
அம் - அழகிய.
``விளக்குப் போலும் அனலை ஏந்தி` என இயைக்க.
பொங்கு அகலத்து ஆடு அரவம் ஆர்த்தது - அழகு மிகுந்த மார்பின்கண் படம் எடுத்து ஆடுகின்ற பாம்பைக் கட்டி, மேவியவா - விரும்பியவாறு.
`அரசர் முதலியோரை மகிழ்வித்துப் பொருளும், புகழும் பெற வேண்டுவார் செய்யும் செயலை நீ மேற்கொண்டவாறு என்? அதனை நீ கூறு` என்பதாம்.
`உனது இயல்புகளைக் கூத்துச் செய்கைகளால் உணர்த்திப் பக்குவிகளை ஆட்கொள்ளவே மேற்கொண்டாய் போலும்` என்பது குறிப்பு.
`ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும் புகழ் அல்லது பாவம் நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்கும் எனக் கேட்டீ ராகில்
நாடுந் தொழிலார்க் கருளல்லது நாட்டலாமே.
` * எனத் திருஞானசம்பந்தர் அருளிச்செய்தமை காண்க.

கூறாய்நின் பொன்வாயால் கோலச் சிறுகிளியே
வேறாக வந்திருந்து மெல்லெனவே - நீறாவும்
மஞ்சடையும் நீள்குடுமி வாளருவிக் காளத்திச்
செஞ்சடைஎம் ஈசன் திறம். **#558**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கோலச் சிறுகிளியே, (நீ) வேறாக வந்திருந்து, நின் பொன்வாயால், எம் ஈசன் திறம் மெல்லெனவே கூறாய்` என இயைத்துக் கொள்க.
பொன் - அருமை இதனைப் பேசுதல் பற்றிக் கொள்க.
கோலம் - அழகு.
வேறாக - தனியாக.
வந்து இருந்து - யான் இருக்கும் இடத்திற்கு வந்து இருந்து.
நீறாவும் + நீல் தாவும் - நீல நிறம் பொருந்திய.
மஞ்சு - மேகம்.
குடுமி - சிகரம்.
வாள் - ஒளி.

இது காளத்திப் பெருமான் மேல் காதல் கொண்டாள் ஒருத்தி தனது ஆற்றாமையால் தான் வளர்க்கும் கிளியை நோக்கிக் கூறி இரங்கியது.
`ஈசன் வாராவிடினும் அவன் திறத்தை பிறர் சொல்லக் கேட்பின் ஆற்றுதல் உண்டாகும்` என்பது கருத்து.
திறம் - குணம்.
தன் சொல்லைக் கேட்டலும், கேட்டு மறுமொழி கூறுதலும் இல்லாதனவற்றைத் தனது ஆற்றாமையால் அவற்றையுடையனபோல வைத்து இங்ஙனம் கூறுவனவற்றை, `காமம் மிக்க கழிபடர் கிளவி` என்பர்.
இறைவனிடத்தில் பேரன்பு.
கொண்டவர்களும் அஃறிணைப் பொருள்களை நோக்கி இவ்வாறு கூறுதல் உண்டு.

ஈசன் திறமே நினைந்துருகும் எம்மைப்போல்
மாசில் நிறத்த மடக்குருகே - கூசி
இருத்தியாய் நீயும் இருங்கயிலை மேயாற்
கருத்தியாய்க் காமுற்றா யாம். **#559**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மாசில் நிறத்த மடக் குருகே`` என்பதனை முதலிற் கொள்க.
மாசில் நிறம் - வெண்ணிறம்.
மடம் - இளமை.
குருகு - பறவை அஃது இங்கு நீர்நிலையைச் சார்ந்து வாழும் பறவையைக் குறித்தது.
`நீயும் எம்மைப்போல் கூசி இருத்தியாய்` என இயைக்க.
கூசியிருத்தல் - ஒடுங்கியிருத்தல்.
`இருத்தி` என்னும் முன்னிலை வினையாலணையும் பெயர், `ஆயினமையால்` என்னும் காரணப் பொருளில் வந்த ``ஆய்`` என்னும் செய்தென் எச்சத்தை ஏற்று, ``ஆம்`` என்பதனோடு முடிந்தது.
அருத்தி - விருப்பம்.
அருத்தியுடையதனை ``அருத்தி`` என்றது உபசார வழக்கு `காமம் உற்றாய்` என்பது `காமுற்றாய்` எனக் குறைந்து நின்றது.
``ஆம்`` என்பது, `அவன் கொடுத்தானாம்; நான் வாங்கினேனாம்` என்றல்போல மேவாமைப் பொருளில் வந்தது.
எனவே, ஈற்றடி, நகையுள்ளுறுத்த கூற்றாம்.
அங்ஙனமாயினும் தனது நிலைமையை அதன் மேல் ஏற்றிக் கூறியதனால், ஆற்றாமை மிக்க தலைவிக்கு ஓர் ஆற்றுதல் பிறந்தது.
இதுவும் காமம் மிக்க கழிபடர் கிளவி.

காமுற்றா யாமன்றே காளத்தி யான்கழற்கே
யாமுற்ற துற்றாய் இருங்கடலே யாமத்து
ஞாலத் துயிரெல்லாம் கண்துஞ்சும் நள்ளிருள்கூர்
காலத்தும் துஞ்சாதுன் கண். #560
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`இருங் கடலே.

.

.

இருள்கூர் யாமக் காலத்தும் உன் கண் துஞ்சாது.
(ஆகலின் நீயும்) யாம் உள்ளது உற்றாய்.
(அதனால் நீயும்) காளத்தியான் கழற்கே காமுற்றாயாமன்றே` எனக் கூட்டி முடிக்க.
கழற்கு - கழலைப் பெறுதற்கு.
இரு - பெரிய.
யாமம் - இடையாமம்.
அது துயிலுக்குச் சிறந்த காலம் ஆதலின் உம்மை உயர்வு சிறப்பு.
``யாமத்து`` என்பதில் அத்து, வேண்டாவழிச் சாரியை.
``காலத்தும்`` என்பதன் பின் `ஓலிக்கின்றாய் ஆதலின்` என்பது வருவிக்க.
உற்றது- உற்ற துன்பம்.

கண்ணும் கருத்துங் கயிலாய ரேஎமக்கென்
றெண்ணி யிருப்பவன்யான் எப்பொழுதும் நண்ணும்
பொறியா டரவசைத்த பூதப் படையார்
அறியார்கொல் நெஞ்சே அவர். #561
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நெஞ்சே, யான் எப்பொழுதும்` என்று எடுத்துக் கொண்டு,
`படையராகிய அவர் அறியார்கொல்` என முடிக்க.
கொல்.
ஐயம்.
ஐயத்திற்குக் காரணம் எதிர்ப்படாமை.
பொறி - புள்ளி.

நெஞ்சே அவர்கண்டாய் நேரே நினைவாரை
அஞ்சேல்என் றாட்கொண் டருள்செய்வார் நஞ்சேயும்
கண்டத்தார் காளத்தி ஆள்வார் கழல்கண்டீர்

அண்டத்தார் சூடும் அலர். #562
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முற்பகுதியை; தம் நெஞ்சை நோக்கியும், பிற் பகுதியை உலகரை நோக்கியும் கூறியவாறாகக் கொள்க.
`நினைவாரை, ேநரே `அஞ்சேல்` என்று ஆட்கொண்டு அருள் செய்வார் - எனவும், `அண்டத்தார் சூடும் அலர் காளத்தி ஆள்வார் கழல்` எனவும் இயைக்க.
``அஞ்சேல்`` என்பது வேறு முடிபு ஆகலின் இட வழுவின்று.
சூடுதல்- தலைமேற் கொள்ளல்.
கண்டாய், கண்டீர், முன்னிலை யசைகள்.

அலரோன்நெடுமால் அமரர்கோன் மற்றும்
பலராய்ப் படைத்துக்காத் தாண்டு - புலர்காலத்
தொன்றாகி மீண்டு பலவாகி நிற்கின்றான்
குன்றாத சீர்க்கயிலைக் கோ. #563
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியை முதலிற் கொள்க.
``அலரோன்`` முதலிய மூவர்க்கும் படைத்தல் முதலிய மூன்றனையும் நிரலே கொள்க.
`ஆளுதல், அமரரை` என்க.
``மற்றும் பலர்`` என்றதற்கு தேவர் பலருள் அவரவர்க்கு உரியதொழிலைக் கொள்க.
`தேவரை அணு பக்கமாக நோக்கின் பலராயினும், சம்பு பக்கமாக நோக்கின் சிவன் ஒருவனே யாம்` என்பது கருத்து.
இதனால், `தேவராவார் அதிகாரக மூர்த்திகள்` என்பது விளங்கும்.
புலர் காலம் - ஒடுக்கக் காலம், `அப்பொழுது செயல் இன்மையின் தான் மட்டுமே உளன்` என்பதும், `மீண்டு` என்றது, `மறுபடைப்புக் காலத்தில்` என்றபடி.
`பரம்பொருள் ஒன்றோ, பலவோ` என ஐயுறுவார்க்கு, `ஒடுக்கக் காலத்து ஒன்றாகித் தோற்றக் காலத்தில் பலவாகும்` எனவும், `அவ்வாறாகின்றவன் சிவனே` எனவும் கூறியவாறு.

கோத்த மலர்வாளி கொண்டனங்கன் காளத்திக்
கூத்தன்மேல் அன்று குறித்தெய்யப் -பார்த்தலுமே
பண்பொழியாக் கோபத்தீப் பற்றுதலும் பற்றற்று
வெண்பொடியாய் வீழ்ந்திலனோ வெந்து. #564

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`எத்துணைப் பேரரையோ வென்றவர் எத் துணையோ பேர் இருப்பினும் காமனை வென்றவர் ஒருவரும் இலர்; அவனை வென்றவன் சிவன் ஒருவனே` என்பது உணர்த்தியவாறு.

`சிவனடியார்களும் காமனை வென்றார் எனின், அவரும் சிவனது அருளாலே வெல்லுதலின், அவர் வெற்றியும் சிவன் வெற்றியேயாம் என்க.

பண்பு, குற்றம் செய்தாரை ஒறுத்துத் திருத்தும் குணம்.

`அக் குணத்தோடு கூடியதே சிவனது கோபம்` என்றபடி.

அனங்கன் - உருவிலி; மன்மதன்.

பற்று அற்று - துணையில்லாமல்.

அஃதாவது `காப்பவர் இல்லாமல்` என்றபடி.

வெந்திறல்வேல் பார்த்தற் கருள்செய்வான் வேண்டிஓர்
செந்தறுகண் கேழல் திறம்புரிந்து வந்தருளும்
கானவனாம் கோலமியான் காணக் கயிலாயா
வானவர்தம் கோமானே வா. **#565**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`அஞ்சாமை` என்னும் பொருட்டாகிய ``தறுகண்`` என்பது ஒரு சொல்லாயினும் பிரித்துக் கூட்டல் முறைமையால் ``கண்`` என்பதனைத் தனிச்சொல்லாகப் பிரித்து, ``செம்மை`` என்பதனோடும் கூட்டுக.

கேழல் - பன்றி.

கேழல் திறம் - கேழலைக் கொல்லும் செயல் திறம்.

புரிந்து - செய்து.

கானவன் - வேடன்.

கோலம் - வேடம்.

பார்த் தனைக் கொல்லச் சென்ற பன்றியைக் கொல்லும் முகத்தால் சிவ பெருமான் அவனோடு போர்புரியும் திருவிளையாடலைச் செய்து அவனுக்குப் பாசுபதம் அளித்த வரலாற்றைப் பாரதம் கூறும் அச்செயல் அப்பெருமானது எளிவந்த கருணையை இனிது விளக்கி நிற்றலின், அந்த வடிவத்தைக் காண்பதில் இவ்வாசிரியர் அவாமிக்குடையாரா யினார் என்க.

பார்த்தன் - அருச்சுனன்.

வாமான்தேர் வல்ல வயப்போர் விசயனைப்போல்
தாமார் உலகில் தவமுடையார் தாம்யார்க்கும்

காண்டற் கரியராய்க் காளத்தி யாள்வாரைத்
தீண்டத்தான் பெற்றமையாற் சென்று. **#566**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வா மான் - தாவிச் செல்லுகின்ற குதிரை.
வயம் - வெற்றி.
விசயன் - அருச்சுனன்.
``தாம்`` இரண்டில் முன்னது சாரியை `தவம் உடையார்தாம் உலகில் ஆர்` என மாற்றி யுரைக்க.
தாம் - படர்க்கைப் பன்மை இருதிணைப் பொதுப் பெயர்.
அஃது எழு வாயாய் நின்று பின் வந்த ``அரியராய்`` என்னும் பயனிலை கொண்டு முடிந்தது.
`தான் சென்று தீண்டப் பெற்றமையால், விசயனைப்போல் தவம் உடையார் உலகில் ஆர்` என்க.
சிவபெருமான் பலருக்கு அருள் புரியினும், மெய் தீண்டல் மிக அரிதாம்.
நாயன் மாருள்ளும் அப்பேறு மிகச் சிலர்க்கே கிடைத்தது.
`பார்த்தன் சிவபெருமானோடு மற்போர் தொடங்கிக் கட்டிப் புரண்டான்` என்றால், அவன் செய்த தவம் மிக மிகப் பெரிதேயாம்.
அதனால்தான் திருமுறைகளில் அவன் பல இடங் களில் எடுத்துப் பாராட்டப்படுகின்றான்.
``அருச்சுனற்குப் பாசுபதம் கொடுத்தானை.
.
.
என்மனத்தே வைத்தேனே`` *1* ``பார்த்தனுக் கன்று நல்கிப் பாசுபதத்தை யீந்தாய்.
.
.
.
தீர்த்தனே நின்றன் பாதத் திறமலால் திறம் இலேனே`` *2* என்றாற்போல வருவன பலவும் காண்க.

சென்றிறைஞ்சும் வானோர்தம் சிந்தைக்கும் சேயராய்
என்றும் அடியார்க்கு முன்னிற்பர் நன்று
கனியவாம் சோலைக் கயிலாயம் மேயார்
இனியவா பத்தர்க் கிவர். **#567**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கனியவாம் சோலைக் கயிலாயம் மேயார்` என்பதை முதலில் வைத்து, ``இவர் பத்தர்க்கு இனியவா நன்று`` என முடிக்க.
``கனியவாம் சோலைக் கயிலாயம்`` என்பதற்குப் பொருள் மேலே உரைக்கப்பட்டது.
``சிவபெருமான் பலர்க்கும் மிகச் சேயனாயினும், அடியார்க்கு மிக அணியனாயிருத்தல் மிக நல்லதாகின்றது என்றபடி.
(1) ``ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்`` எனத் தொடங்கும் புறப்பாடலில் ஔவையார் அதியமானைப் பாராட்டியது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

இவரே முதல்தேவர் எல்லார்க்கும் மிக்கார்
இவர் அல்லர் என்றிருக்க வேண்டா கவராதே
காதலித்தின் றேத்துதிரேல் காளத்தி யாள்வார்நீர்
ஆதரித்த தெய்வமே யாம். **#568**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`திருக்காளத்தி மலையைத் தமதாகக் கொண்டு ஆளும் தேவராகிய இவரே` என எடுத்துக்கொண்டு உரைக்க.
செய்யு ளாகலின் சுட்டுப் பெயர் முன்வந்தது.
முதல் தேவர் - தலைமைக் கடவுள்.
எனவே, `தேவர் பிறர் யாவரும் இவர்தம் பணிக் கடவுளர் என்பது போந்தது.
`இங்ஙனமாகவே - இவர் எல்லாரினும் மேலானவர்- என்பது சொல்ல வேண்டா` என்பது கருத்தாகலின்` ``எல்லார்க்கும் மிக்கார்`` என்றது முடிந்தது முடித்தலாம்.
`அன்னரல்லர்` என வருவிக்க.
இருத்தல் - அறியாமையுட் பட்டிருத்தல்.
``இவர் அல்லர் என்று இருக்க வேண்டா`` என்றது, மேலதனை எதிர்மறை முகத்தால் வலியுறுத்தியதேயாம்.
கவர்தல் - இரண்டு படுதல்; ஐயுறுதல்.
(2) ``கவராதே தொழும் அடியார்`` என அப்பரும் அருளிச் செய்தார்.
தரித்தல் - விரும்புதல்.
ஆதரித்த தெய்வம் - இட்ட தெய்வம்.
வேறு வேறு தெய்வங்களை விரும்புதல், `வேறு வேறு பயன்களை அது அதுவே தரும்` என்னும் எண்ணத்தினாலேயாம்.
`அனைத்துப் பயனையும் இவர் ஒருவரே தருதல் உண்மையாகலின், அனைத்துத் தெய்வங்களும் இவர் ஒருவரேயாவர்` என்றார்.
`ஆம்` என்பது உயர்திணை ஒருமையாய் நின்றமையின்

பன்மையொருமை மயக்கமாம்.

ஆம்என்று நாளை உள என்று வாழ்விலே
தாம்இன்று வீழ்தல் தவமன்று - யாமென்றும்
இம்மாய வாழ்வினையே பேணா திருங்கயிலை
அம்மானைச் சேர்வ தறிவு. **#569**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நாளை உள என்று`` என்பதை முதலிலே கொள்க.
`நாளை - நாளை - என்று தொடர்ந்து வரும் நாள்கள் பல உள; ஆகையால், நாம் செய்ய வேண்டுவதை நாளைச் செய்து கொள்ள முடியும் என்று எண்ணி, (தாம்) மக்கள் பலரும், `இன்று` என எண்ணப் படும் நாள்களில் உலக மயக்கிலே வீழ்தல் அறிவுடைமையன்று. (ஏனெனில், ``இன்றைக்கு இருந்தாரை நாளைக் கிருப்பர் என்று எண்ணவோ திடம் இல்லை`` *1* ஆதலின், மனமே,) நாம் எந்த ஒரு நாளிலும் இந்த நிலையற்ற வாழ்வை விரும்பாமல், பெரிய கயிலாய மலையில் வீற்றிருக்கும் தலைவனைப் புகலிடமாக அடைந்திருத்தலே அறிவுடைமையாகும் - என வேண்டும் சொற்கள் வருவித்து உரைத்துக் கொள்க.
`தவம் ஒன்றே தக்கது` என்பார், தக்கதனை இங்கு ``தவம்`` என்றார் அஃது இங்கு அதற்குக் காரணமாகிய அறியாமை மேல் நின்றதைப் பின் ``அறிவு`` என்றது பற்றி அறிக.
அன்றறிவாம் என்னாது அறம் செய்க
என்ற திருவள்ளுவர் வாய்மொழியும் காண்க.
`தகவன்று` எனப் பாடம் ஓதுதலும் ஆம்.

அறியாம லேனும் அறிந்தேனும் செய்து
செறிகின்ற தீவினைகள் எல்லாம் - நெறிநின்று
நன்முகில்சேர் காளத்தி நாதன் அடிபணிந்து
பொன்முகலி ஆடுதலும் போம். **#570**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அறியாது செய்யும் வினை `அபுத்தி பூர்வ வினை` என்றும், அறிந்து செய்யும் வினை, `புத்தி பூர்வ வினை` என்றும் சொல்லப்படும்.
செய்து - செய்தலால்.
செறிதல் - திரளுதல்.
கொடுமை மிகுதி பற்றித் தீவினையையே கூறினாராயினும் நல்வினையும் உடன் கொள்ளப்படும்.

பொன்முகலி, திருக்காளத்தி மலையைச் சார ஓடும் யாறு.
திருக்காளத்திப் பெருமானது திருவருளால் அவ்வாறு பெற் றுள்ள சிறப்பை உணர்த்தியவாறு.
`நெறிநின்று ஆடுதல்` என இயையும் நெறி நிற்றல், திருமுழுக்காடும் முறைவழி நிற்றல்.
`அம்முறைகளுள் தலையாயது சிவவணக்கம்` என்றற்கு, ``காளத்திநாதன் அடிபணிந்து ஆடுதல்` என்றார்.

போகின்ற மாமுகிலே பொற்கயிலை வெற்பளவும்
ஏகின் றெமக்காக எம்பெருமான் - ஏகினால்
உண்ணப் படாநஞ்சம் உண்டாற்கென் உள்ளுறுநோய்
விண்ணப்பஞ் செய்கண்டாய் வேறு. **#571**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கயிலை வெற்பளவும்`` என்பதனால், `வடக்கு நோக்கிப் போகின்ற மாமுகிலே` என்க.
எனவே இது வேனிற் காலத்துத் தென்றலால் வருந்தினவள் கூற்றாம்.
காலத்தால் இது பாலைத் திணை.
``எமக்காக இன்று கயிலை வெற்பளவும் ஏகு; ஏகினால்` என்க.
``எமக்கு`` என்பது ஒருமைப் பன்மை மயக்கம்.
எம் பெருமானாகிய உண்டாற்கு என் நோயை வேறு விண்ணப்பம் செய்` என இயைத்து முடிக்க.
வேறு - சிறப்பாக `பொதுவாக நீ விண்ணப்பிக்க வேண்டிய வற்றை விண்ணப்பித்தபின், தனியாகச் சிறந்தெடுத்து விண்ணப்பம் செய்` என்றபடி.
உள் உறு நோய் - பிறர்க்கு வெளிப்படுத்தலாகாது, உள்ளே மறைத்து வைக்கப்படுகின்ற நோய், கண்டாய், முன்னிலை யசை.
இது மேகவிடு தூது.
`உண்ணப்படா நஞ்சை உண்டாற்கு என்னை ஏற்றுக் கொள்ளுதல் ஏலாததன்று` என்பதைக் கூறுக - என்பது குறிப்பு.
இஃது உடம்பொடு புணர்த்தல்.

வேறேயும் காக்கத் தகுவேனே மெல்லியலாள்
கூறேயும் காளத்திக் கொற்றவனே - ஏறேறும்
அன்பா அடியேற் கருளா தொழிகின்ற
தென்பாவ மேயன்றோ இன்று. **#572**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கொற்றவனே, அன்பா`` என்னும் விளிகளை முதலிற் கொள்க.
``தகுவேனே`` என்னும் ஏகாரம் தேற்றம்.
இதன்பின், `ஆயினும்` என சொல் வருவிக்க.
வேறே - சிறப்பாக இஃது அளியளாம் காரணத்தால் அமைந்தது.
உம்மை சிறப்பு.
`தகுவேனை` என்பது பாடம் அன்று.
மெல்லியலாள், உமை.
ஏறு - இடபம்.
`இன்று அருளாது ஒழிகின்றது` எனக் கூட்டுக.
``இன்று`` என்பது, `அருளு வதே உனக்கு என்றும் இயல்பு` என்பதைக் குறித்து நின்றது.
ஒழிகின்ற தன் காரணத்தை.
``ஒழிகின்றது`` எனக் காரியமாக உபசரித்தார்.
இது தலைவி தனது வேட்கையைத் தானே தலைவனிடம் கூறி.
`வேட்கை முந்துறத்தல்` என்னும் பெருந்திணைத் துறை.

இன்று தொடங்கிப் பணிசெய்வேன் யானுனக்
கென்றும் இளமதியே எம்பெருமான் - என்றும்என்
னுட்காதல் உண்மை உயர்கயிலை மேயாற்குத்
திட்காதே விண்ணப்பஞ் செய். **#573**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(இளமதி, பெருமான் அணிந்த பிறை பலர், பெருமான் ஊறும் விடையை நோக்கி, `நீ எம்பக்கல் வருங்கால்மெல்ல நட` என வேண்டிக் கொள்ளுதல்போல, இவள், பெருமான் அணிந் துள்ள பிறையை நோக்கி வேண்டுகின்றாள்,) `இளமதியே, இன்று தொடங்கி, யான் உனக்கு என்றும் பணிசெய்வேன்; என்றும் என்னுள் காதல் உண்மையினை எம்பெருமானாகிய கயிலை மேயாற்கு விண்ணப்பம் செய்` என இயைத்து முடிக்க.
``உள்`` என்பது இடப் பெயர்.
அஃது ஆகுபெயராய் ஆங்கு உள்ள நெஞ்சத்தைக் குறித்தது.
திட்குதல் - நாத்தடைப்படுதல்.
இது, `திக்குதல்` என வழங்குகின்றது.
பிறைநுதல் வண்ணம் ஆகின்று; அப்பிறை
பதினெண் கணனும் ஏத்தவும் படுமே.
(புறநானூறு- கடவுள் வாழ்த்து) என்ப ஆகலின், அப்பிறைக்கு என்றும் பணிசெய்வதாகக் கூறியதில் புதிது ஒன்றும் இல்லை.

செய்ய சடைமுடிஎன் செல்வனையான் கண்டெனது

கையறவும் உள்மெலிவும் யான்காட்டப் - பையவே
காரேறு பூஞ்சோலைக் காளத்தி யாள்வார்தம்
போரேறே இத்தெருவே போது. **#574**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கையறவு - செயலற்ற நிலை.
உள் மெலிவு - மனச் சோர்வு.
யான் காட்ட - நான் நேரே புலப்படுத்தற் பொருட்டு.
`இத் தெருவே பையவே போது` என்க.
கார் - மேகம் `தெருவின்கண்ணே` என உருபு விரிக்க.
மேலை வெண்பாவின் உரையிற் கூறியபடி இவள் பெருமான் ஊர்ந்துவரும் விடையை நோக்கி வேண்டினாள்.
போது - வா; இது `புகுது` என்பதன் மரூஉ.

போது நெறியனவே பேசி நின் பொன்வாயால்
ஊதத் தருவன் ஒளிவண்டே - காதலால்
கண்டார் வணங்கும் கயிலாயத் தெம்பெருமான்
வண்தார்மோந் தென்குழற்கே வா. **#575**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஒளி வண்டே`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.
குழற்கு - குழற்கண்; வேற்றுமை மயக்கம்.
`பெருமான் தாரினை மோந்து மீண்டு குழற்கண் வந்தால், குழலும் அத்தாரின் மணத்தினைப் பெற்று, அத்தாரினைச் சூடியதுபோல் ஆகும்` என்னும் கருத்தால் அவ்வாறு செய்யுமாறு கூறினாள்.
இதுவும் அவளது ஆற்றாமையால் சொல்லிய சொல்லேயாகும்.
ஆகவே, `அது பயனுடைய செயல்தானா` என்னும் வினா எழவில்லை.
போது நெறியான - சென்று திரும்பிய வகையில் நிகழ்ந்த செயல்கள்.
`பேசி ஊத` என்க.
பொன், ஒளி இவை `அழகு` என்னும் பொருளன.
`பொன் போலும் வாய்` என உவமையாக்கலும் ஆம்.
`ஊதுதற்குரிய பக்குவத்தில் பல மலர்களைப் பறித்துப் பரிசாகத் தருவேன்` என்க.
`உண்ணத் தருவன், தின்னத் தருவன்` என்பன போல, ``ஊதத் தருவன்`` என்பது செயப்படுபொருள் தொக்கு நிற்க வந்தது.

வாவா மணிவாயால் மாவின் தளிர்கோதிக்
கூவா திருந்த குயிற்பிள்ளாய் - ஒவாதே

பூமாம் பொழில்உடுத்த பொன்மதில்சூழ் காளத்திக்
கோமான் வர ஒருகாற் கூவு. **#576**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``வா வா`` என்னும் அடுக்குத் தொடரை, ``பிள்ளாய்`` என்பதன்பின் கூட்டியுரைக்க.
`மணிவாயால் ஓவாதே தளிர்கோதிக் கொண்டு` என்க.
பூ - அழகு.
அன்றி, `பூம்பொழில், மாம் பொழில்` என இயைத்துரைப்பினும் ஆம்.
வர - வருமாறு.
அஃதாவது.
`நின்பொருட்டாக இறந்து படுவாள் ஒருத்தியைக் காக்க வா எனல்.
கூவு என்பதன்பின் அமையும் என்பது வருவித்து முடிக்க.
`அவன் பேரருளாளன் ஆதலின் ஒருகாற் கூடவே அமையும்` என்பதாம்.
அடுக்கு, விரைவு பற்றி வந்தது.
பிள்ளைப் பிராணிகளில் குயிலும் ஒன்றாதல் பற்றி, ``பிள்ளாய்`` என்றாள்.
``வா இங்கே நீ குயிற் பிள்ளாய்`` * எனத் திருவாசகத்தும் வந்தது.

கூவுதலும் பாற்கடலே சென்றவனைக் கூடுக என்
றேவினான் பொறிகயிலை எம்பெருமான் - மேவியசீர்
அன்பால் புலிக்காலன் பாலன்பால் ஆசையினால்
தன்பால்பால் வேண்டுதலும் தான். **#577**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கூவுதல் - அழைத்தல்.
``கூவுதலும்`` என்பதன்பின், `வர` என ஒரு சொல் வருவிக்க.
``மேவிய சீர்`` என்பது முதலாகத் தொடங்கி, ``எம்பெருமான்`` என்பதை, ``வேண்டுதலும்`` என்பதன் பின்னர்க் கூட்டியுரைக்க.
புலிக்காலன் - வியாக்கிர பாத முனிவர்.
பாலன் - அவர் மகன் உபமன்னிய முனிவர் ``பாலன்பால் தன்பால்`` என்பவற்றில் ``பால்`` ஏழன் உருபு.
`பாலன் பசிக்குப் பால் வேண்டப் பாற்கடலையே அழைத்துக் கொடுத்த பெருமான் கயிலைப் பெருமான்` என அவனது அருளையும், ஆற்றலையும் வியந்து கூறிய வாறு.
உபமன்னிய முனிவர்க்காகச் சிவபெருமான் பாற்கடலை அழைத்து கொடுக்க, அதனை அவர் உண்டு மகிழ்ந்த வரலாற்றைக் கோயிற்

புராணத்துட் *1* காண்க.
``பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்`` *2* என்னும் திருப்பல்லாண்டினை யும், ``அத்தர் தந்த அருட்பாற் கடல் உண்டு - சித்தம் ஆர்ந்து தெவிட்டி வளர்ந்தவன்`` *3* என்னும் திருத்தொண்டர் புராணத்தையும் காண்க.

தானே உலகாள்வான் தான்கண்ட வா வழக்கம்
ஆனான்மற் றார்இதனை அன் றென்பார் **-** வானோர்
களைகண்தா னாய்நின்ற காளத்தி யாள்வார்
வளைகொண்டார் மால்தந்தார் வந்து**. #578**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``வானோர்`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.
களைகண்- பற்றுக்கோடு, முன்னர்ப் பன்மையாகக் கொள்ள வைத்துப் பின் மூன்று இடங்களில் ``தான்`` என ஒருமையாகக் கூறியது.
`இப் பெருந்தகைமை யுடையார் தமக்கு அடாதது செய்தார்` என்பது தோன்றுதற்கு, `எனைத்துணையர் ஆயினும் என்னாம்
தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்`. *(குறள்.,144)*
என்பதிற்போந்த பால் மயக்கம்போல.
தான் கண்ட வா - தான் கருதிய வாறே.
வழக்கம் - தனது இயற்கை.
ஆனான் - நீங்கான் `அன்று` எனல்.
`இது தகாது` என இடித்துரைத்தல்.

வந்தோர் அரக்கனார் வண்கயிலை மால்வரையைத்
தந்தோள் வலியினையே தாம்கருதி **-** அந்தோ
இடந்தார் இடந்திட் டிடார்க்கீழ் எலிபோற்
கிடந்தார் வலியெலாங் கெட்டு**. #579**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஓர் அரக்கனார், இராவணன்.
ஆர் விகுதி இழிவு குறித்து நின்றது.
இடந்தார் - பெயர்த்தார்.
`அடார்` என்பது இங்கு ``இடார்`` என வந்தது.
`பாறங்கல்` என்பது பொருள்.
முன்னதற்கு முன் வெண்பாவில், வணங்கினார்க்குக் அருளல் சொல்லப்பட்டது.

இவ் வெண்பாவில் தருக்கினாரைத் தெறல் சொல்லப்பட்டது.
அந்தோ, இரக்கக் குறிப்பு.

கெட்ட அரக்கரே வேதியரே கேளீர்கொல்
பட்டதுவும் ஓராது பண்டொருநாள் - ஒட்டக்
கலந்தரனார் காளத்தி யாள்வார்மேற் சென்று
சலந்தரனார் பட்டதுவும் தாம். **#580**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கெட்ட - தீமையை மிக உடைமையால், பெருமையை முற்ற இழந்த.
வேதியர்.
மீமாஞ்சை மதத்தவர்.
அவர் தாருகாவன முனிவர் போன்றவர்.
பட்டது - அசுரர் பலர் அழிந்தமை.
`பண்டு ஒருநாள் சலந்தரனால், (முன்பு பலர்) பட்டதுவும் ஓராது, அரனால் மேல் ஒட்டக் கலந்து சென்று தாம் பட்டதுவும் கேளீர் கொல்? என இயைத்து முடிக்க.
ஒட்டுதல் - வஞ்சினம் கூறிப் போர் தொடங்குதல், கலந்து - உடன்பட்டு, `சலந்தரன்` எனும் அசுரன் பட்டதாவது, சக்கரத்தால் தலை அறுபட்டு வீழ்ந்தது, எல்லாரையும் வென்று செருக்கு மிக்க சலந்தராசுரன் சிவபெருமானை வெல்லக் கருதி அவர் மேல் சென்றபொழுது, அவர் மண்ணிற் கீறிய சக்கரத்தை எடுத்துத் தலையறுப்புண்டு அழிந்த வரலாற்றைக் கந்த புராணத்துட் காண்க.
சிவ பெருமானை - இயல்பாகவே ஏலாது எதிர்க்கும் வேதியரை நோக்கிக் கூற வந்தவர், அசுரருட் சிலரும் அத்தன்மையர் ஆதல் பற்றி, அவர் களையும் உடன் நோக்கிக் கூறினார்.
அரனாராகிய `காளத்தி ஆள்வார் மேல்` என்க.

தாம்பட்டது ஒன்றும் அறியார்கொல் சார்வரே
காம்புற்ற செந்நெற் கயிலைக்கோன் - பாம்புற்ற
ஆரத்தான் பத்தர்க் கருகணையார் காலனார்
தூரத்தே போவார் தொழுது. **#581**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியை இறுதியிற் கூட்டுக.
அங்ஙனம் கூட்டு தற்குமுன் `காலனார் பத்தர்க்கு அருகு அணையார்; தொழுது தூரத்தே போவார்` என இயைத்துக்கொள்க.
காம்பு - மூங்கில்.

`அதினின்றும் விளைந்த நல்ல நெல்லையுடைய கயிலை` என்க.
``போவார்`` என்பதன்பின், `ஆம்! முன்பு தான் பட்டதைச் சிறிதாயினும் அறியாது போவாரல்லர்; அதனால் அருகு சார்வாரோ` என ஏதுக் கூறி முடிக்க.
முன்புபட்டது, மார்கண்டேயர்மேற் சென்று உதையுண்டது இவ் வரலாறும் கந்தபுராணத்துட் கூறப்பட்டது.
`கொல்` என்னும் ஐய இடைச் சொல் எதிர்மறை வினையோடு பொருந்த உடன்பாடாய தேற்றத்தை உணர்த்திற்று.
``சார்வரே`` என்னும் ஏகாரம் வினாப் பொருட்டாய், எதிர்மறைப் பொருளைத் தந்தது.
``காலனார்`` என்னும் பன்மை இழிவு குறித்து நின்றது.
இழிவாவது மார்க்கண்டேயர் மேல் தன் நிலைமையறியாது சென்று கெட்டது.

தொழுது நமனுந்தன் தூதுவர்க்குச் சொல்லும்
வழுவில்சீர்க் காளத்தி மன்னன் - பழுதிலாப்
பத்தர்களைக் கண்டால் பணிந்தகலப் போமின்கள்
எத்தனையும் சேய்த்தாக என்று. **#582**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நமனும்`` என்பதை முதலிலும், ``சொல்லும்`` என்பதை ஈற்றிலும் வைத்துரைக்க.
அங்ஙனம் உரைக்குங்கால் ``பணிந்து எத்தனையும் சேய்த்தாக அகலப் போமின்கள்` என்க.
``நமனும்`` என்னும் உம்மை, உயர்வு சிறப்பு.
தொழுதல்.
பத்தரைத் திசை நோக்கியாம்.
எத்தனையும் சேய்த்து ஆக - நீவீர் செல்லுமிடம் எவ்வளவு தொலைவாக முடியுமோ அவ்வளவு தொலைவு ஆகும்படி.
``சிவனடியரை நமன் தூதுவர் அணுகார்` என்பது கருத்து.

வென்றைந்தும் காமாதி வேரறுத்து மெல்லவே
ஒன்ற நினைதிரேல் ஒன்றலாம் - சென்றங்கை
மானுடையான் என்னை உடையான் வடகயிலை
தானுடையான் தன்னுடைய தாள். **#583**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஐந்தும் வென்று` என்க.

ஐன்து, ஐம்புலன்.
காமாதி- காமம் முதலிய அறு பகைகள்.
அவை காமம், குரோதம்.
உலோபம், மோகம், மதம் மாற்சரியம் - என்பன.
இவை அவா, வெகுளி, இவறன்மை, மயக்கம், செருக்கு, அழுக்காறு என்பனவாம்.
`இவை களை வேரறுத்து` என்க.
ஒன்ற - பொருந்த.
`தாளில் ஒன்ற` எனவும் `சென்று ஒன்றலாம்` எனவும் இயையும்,
``தான்`` எழுவாய் வேற்றுமை.
``உடையான்`` என்னும் குறிப்பு வினைப் பயனிலையைக் கொண்டது.

தாளொன்றால் பாதாளம் ஊடுருவத் தண்விசும்பில்
தாளொன்றால் அண்டம் கடந்துருவித் - தோளொன்றால்
திக்கனைத்தும் போர்க்கும் திறற்காளி காளத்தி
நக்கனைத்தான் கண்ட நடம். **#584**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``திறல் காளி`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.
``கண்ட`` என்பது, `உண்டாக்கிய` என்னும் பொருட்டாய், `செய்வித்த`` எனப் பொருள் தந்து, ``நக்கனை`` என்னும் இரண்டா வதற்கு முடிபாயிற்று.
செய்வித்தமையாவது, செய்ததற்கு ஏதுவாய் நின்றமை, `தாருகன்` என்னும் அசுரனை அழித்த காளி, அதனால், செருக்கி உலகத்திற்கு ஊறு உண்டாக்கச் சிவபெருமான் அவளோடு நடனப் போர் செய்து, அவள் நாணிச் செருக்கொழியப் பண்ணினான் என்பது புராணம்.
``தாருகன் - பேருரங் கிழித்த பெண்ணும் அல்லள்``* என இளங்கோவடிகளும் கூறினார்.
அப்பர் தமது தச புராணத் திருப் பதிகத்து நான்காவது திருப்பாடலில் இவ்வரலாற்றைக் குறித்தருளி னார்.
`இந்நடனம் ஊர்த்துவ தாண்டவம்` என்பதை ``தண் விசும்பில் - தாள் ஒன்றால் அண்டம் கடந்துருவி`` எனக் குறித்தருளினார்.
அஃதாவது ஒருகால் ஆகாயம் நோக்கிச் செல்ல உயரத் தூக்கி ஆடிய நடனம்.
`இந்நடனம் திருவாலங் காட்டில் நிகழ்ந்தது` என்பது ஐதிகம்.
முதற்கண் இறைவன் மேல் வைத்து ``ஊடுருவ`` என்றார்.
போர்க்கும்- மறைக்கும்.
இறைவன் பாதாளம் ஊடுருவும்படி தான் அண்டம் கடந்து

உருவித்திக்கனைத்தும் போர்க்கும்` - என இயைத்து முடிக்க.

நடம்ஆடும் சங்கரன்தாள் நான்முகனும் காணான்
படம்ஆடும் பாம்பணையான் காணான் - விடம்மேவும்
காரேறு கண்டன் கயிலாயன் றன்உருவை
யாரே அறிவார் இசைந்து. #585
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நான்முகன் (பிரமன்) `முன்னே முடியைக் கண்டு விட்டுப் பின்னே அடியைக் காண்பேன்` என முயன்று, முதல் முயற்சியிலே தோல்வியுற்றமை பற்றி ``தாள் நான்முகனும் காணான்`` என்றார்.
தாளைப் பாம்பணையான் (மாயோன்) தேடிக்காணாது எய்த்தமை வெளிப்படை.
காணாமைக் குறை இனிது புலப்பட வேண்டித் தனித்தனித் தொடராகக் கூறினார்.
தன், சாரியை, `இசைந்து அறிவார்` என மாற்றுக.
இசைதல் - தம் இச்சையாகத் தாமே காண நினைத்தல்.
``யாரே அறிவார்`` - என்னும் வினா, அறிவார் ஒருவரும் இன்மையைக் குறித்தது.
`அவனே காட்டினாலன்றித் தாமாக ஒருவரும் காண மாட்டார்` என்பது கருத்து.
காண்பார் ஆர்? கண்ணுதலாய்க்
காட்டாக் காலே.
* என்னும் அருட்டிரு மொழியைக் காண்க.
இக்கருத்தினை வரும் வெண்பாவில் வெளிப்பட எடுத்துக் கூறுவார்.

இசையும்தன் கோலத்தை யான்காண வேண்டி
வசையில்சீர்க் காளத்தி மன்னன் - அசைவின்றிக்
காட்டுமேல் காட்டிக் காலந்தென்னைத் தன்னோடும்
கூட்டுமேல் கூடவே கூடு. #586
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இசையும் - தானே தன் இச்சைப்படி ஏற்கின்ற.
கோலம் - வடிவம்.
எனவே, தனக்கு உருவத்தைப் பிறர் படைத்துத் தர வேண்டாமை விளங்கிற்று.
``வேண்டி`` என்பதற்கு, `தான் வேண்டி` என உரைக்க.
வசை - தளர்ச்சி அஃதாவது, அருள் பண்ணாமை, ``கூடலே`` என்பதை

முதலிற் கொள்க.
``காட்டி`` என்றது அனுவாதம்.
கலத்தல் - எதிர்ப்படுதல்.
``காட்டுமேல், கூட்டுமேல்`` என்பன, `அவைகளை அவன் செய்தல் உண்டாகும் எனின்` என்னும் பொருள.
அகப்பொருள் நிகழ்ச்சிகளில் தலைவனைப் பிரிந்து ஆற்றாத தலைவி தலைவனது வருகை குறித்துப் பார்க்கும் குறிகளுள் கூடல் இழைத்தல் ஒன்று.
அஃதாவது, கண்ணை மூடியிருந்து நிலத்தில் வரைந்துவிட்டு விழித்துப் பார்க்கும் பொழுது வட்டத்தின் இரு முனை களும் ஒன்று கூட, வட்டம் குறையின்றி நன்கு அமைந்திருப்பின் `தலைவன் விரைவில் வந்து சேர்வான்` என்பதும், இருமுனைகளும் வேறு வேறாய்ப் போய்விட்டிருப்பின் `தலைவன் அண்மையில் வாரான்` என்பதும் முடிவுகளாகும்.
இம்முடிவுகளில் அக்கால மக்கட்கு முழு நம்பிக்கையிருந்தது.
இருமுனைகளும் ஒன்று கூடும்படி வரைதலால் அந்த வட்டத்திற்கே `கூடல்` என்பதும், அதனை வரைதற்கு, `கூடல் இழைத்தல்` என்பதும், பெயர்களாயின.
`நீடு நெஞ்சுள் நினைந்து, கண் நீர்மல்கும்
ஓடும் மாலினொடு, ஒண்கொடி மதராள்
மாடம் நீள்மரு கற்பெரு மான்வரின்
கூடு நீஎன்று கூடல் இழைக்குமே.
` * என அப்பர் பெருமானும் அருளிச் செய்தார்.
ஆகவே, இப்பாட்டு காளத்திப் பெருமான் மேல் காதல் கொண்டு ஆற்றாளாய தலைமகள் ஒருத்தி, `அவன் முற்றறிவும், பேரருளும் உடையன் ஆதலின் தன்னைக் காதலித்தார் முன் தான் விரைய வந்து அருள் பண்ணுவான்`- என்னும் உறுதிப்பாடு உடையளாய், `ஆயினும் அதனைக் கூடல் இழைத்துக் காண்போம்` எனக் கருதி அங்ஙனம் இழைக்கின்றாள் கூற்றாயிற்று.
ஆயினும், உண்மையில் இஃது ஆசிரியரது பேரன்பினை.
இம்முறையால் வெளிப்படுத்திய கூற்றேயாதல் தெளிவு.
இருவேறிடங்களில் விலகியுள்ளவர் விரைய ஓரிடத்தில் ஒன்று கூடுதலை அறிவித்தற்கு, இருமுனைகள் வேற்றுமை தோன்றாது ஒன்று கூடும் வட்டம் மிகச் சிறந்த குறியாயிற்று.

கூடி யிருந்து பிறர்செய்யுங் குற்றங்கள்
நாடித்தம் குற்றங்கள் நாடாதே - வாடி
வடகயிலை ஏத்தாதே வாழ்ந்திடுவான் வேண்டில்

அடகயில ஆரமுதை விட்டு. #587
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``இருந்து, நாடி`` என்னும் எச்ச வினைகளால் புறங்கூறுவாரது இயல்பினை விளக்கியவாறு.
``தம் குற்றங்கள் நாடாதே`` என்பதனை முதற்கண் வைத்து உரைக்க.
`ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு`.
1 என்னும் குறளுக்குப் பரிமேலழகர், `தம் குற்றங்களில் பிற குற்றங் களைக் காணாது, புறங்கூறலாகிய அந்தக் குற்றத்தைக் கண்டாலே போதும்` என்பது பட உரைத்தமையும் இங்கு நோக்கத்தக்கது.
நாடுதல் - ஆராய்தல்.
ஆராயுங்கால் சிலரைப் பற்றிப் புறங்கூறப் பொருள் கிடைக்காமலே போகலாம்.
அப்பொழுது அவர்கட்கு அது பற்றித் துன்பமும் உண்டாகலாம் என்பது பற்றி ``நாடி பாடி`` என்றார்.
``ஏத்தாதே வாழ்ந்திடுவான்`` என்றது, காலம் முழுவதையும் இப்படிப் பட்ட செயல்களிலே கழித்தலைக் குறித்தது.
வான் ஈற்று வினையெச்சம் இங்குத் தொழிற் பெயர்ப் பொருட்டாய் நின்றது.
வேண்டுதல் - விரும்புதல்.
அடகு - இலை.
அயிலுதல் - உண்ணுதல்.
`அமுதை விட்டு அடகு அயிலல்` என்பது, `கனியிருப்பக் காய் கவர்தல்` என்பதனோடு ஒத்த ஒரு பழமொழி ``அயில`` என்பது `உண்பார்களாக` என அகர ஈற்று வியங்கோள்.
``அயில்வார்களாக`` என்றது, `அயில்கின்றவர்களோடு ஒத்த அறிவனர்தாம்` என்றபடி `ஏத்தாதே வாழ்ந்திடச் சிலர் விரும்புவார்களாயின், அவர் அமுதை விட்டு அடகு அயில்வார்களாக` என்க.
இதனால், `திருவருள்வழி வாராத இன்பம் இன்பமன்று` என்பது கூறப்பட்டது.

விட்டாவி போக உடல்கிடந்து வெந்தீயிற்
பட்டாங்கு வேமாறு பார்த்திருந்தும் - ஒட்டாவாம்
கள்அலைக்கும் பூஞ்சோலைக் காளத்தி யுள்நின்ற
வள்ளலைச்சென் றேத்த மனம். #588
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஆவி விட்டுப் போக` என மாற்றிக் கொள்க.
``உடல்`` எனப் பின்னர் வருதலால், விடுதல், உடலை விடுதலாயிற்று.
பட்டு - பொருந்தி.
ஆங்கு - அதன்கண், பார்த்தல், பல இடங்களில் பல முறை நிகழக் காண்டல்.
`பார்த்திருந்தும் (மக்களுடைய) மனங்கள் சென்று வள்ளலை ஏத்த ஓட்டா` என இயைக்க.
ஒட்டுதல் - ஒருப்படுதல்.
ஆம்.
அசை.
`இஃது அவர்களது வினையிருந்தவாறு` என்பது குறிப்பெச்சம்.
இவ் எச்சத்தால், இரங்குதல் பெறப்பட்டது.
``பார்த் திருந்தும்`` என்றது, `காட்சியளவையானே உணர்ந்தும்` என்றபடி.
``சுடலை சேர்வது சொற்பிரமாணமே`` என அருளிச் செய்தார் அப்பர்.

மனம்முற்றும் மையலாய் மாதரார் தங்கள்
கனம்உற்றும் காமத்தே வீழ்வர் - புனமுற்
றினக்குறவர் ஏத்தும் இருங்கயிலை மேயான்
றனக்குறவு செய்கலார் தாழ்ந்து. #589

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``புனம் முற்றும்`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.
அங்ஙனம் உரைக்குங்கால் ``தாழ்ந்து`` என்பதை ``மைய லாய்`` என்பதன் பின் கூட்டி அவ்விரண்டையும் ``வீழ்வர்`` என்பதற்கு முன்னே கூட்டுக.
புனம் முற்று இனக் குறவர் - தினைப் புனங்களில் நிறைந்துள்ள, கூட்டமான குறவர், தான்.
சாரியை - உறசெய்தல், தங்களை ஆளாக்கிக் கொள்ளுதல்.
கனம் - சுமை.
`சுமையாக உற்றும்` என ஆக்கம் விரிக்க, சுமையாக உறுதலாவது உண்டியும், உறையுளும், மருந்தும் ஆகியவற்றால் புறந்தருதலேயன்றி, ஆடை அணிகலங்களால் சிறப்புச் செய்தலும் கடமையாகி விடுதல்.
`மாதாரர் கனம் ஆக` என இயையும்.
``தங்கள்`` என்றது உறவு செய்கலாதாரை.
`தங்கட்கு` என நான்காவது விரிக்க.

தாழ்தல் - அழுந்துதல்.
``மனம் முற்றும் மையலாய்`` என்றது, `அறிவை முற்றிலும் இழந்து` என்றபடி.
`மக்களே மணந்த தாரம் அவ்வயிற் றவரை ஓம்பும்
சிக்குளே அழுந்தி, ஈசன் திறம்படேன்.
` * என்னும் அப்பர் திருமொழியைக் காண்க.
`அஃது உலகியலின் இயல் பினை விரித்தது` என்பது உணரமாட்டாதார், `அவர் தாமே மக்களை யும், தாரத்தையும் உடையராய் இருந்தார்` எனக் கூறிக் குற்றப்படுவர்.
`உலகியலை யான் மேற் கொள்ளா தொழியினும் உடல் ஓம்பலை ஒழிய மாட்டாமையின் உலகியலில் நின்றாரோடு ஒத்தவனாகின்றேன்` என்ற படி.
``இனக் குறவர் ஏத்தும்`` என்றது, கல்லா மாக்களாகிய குறவராயினும் முன்னைத் தவத்தால் கயிலை யருகில் வாழப் பெற்றுச் சிவனை ஏத்துகின்றனர்; `கற்றறிந்தேம்; நல்லொழுக்கம் உடையேம்` எனச் செருக்குவார் அது செய்யாது.
காமத்தே வீழ்கின்றார் - என்பது தோன்றுதற்கு.

தாழ்ந்த சடையும் தவளத் திருநீறும்
சூழ்ந்த புலிஅதளும் சூழ்அரவும் - சேர்ந்து
நெருக்கி வானோர் இறைஞ்சும் காளத்தி ஆள்வார்க்
கிருக்கும் மா கோலங்கள் ஏற்று. **#590**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சடை முதலியன காளத்தி ஆள்வார்க்கு மாகோலங் களாக ஏற்று இருக்கும்` என இயைத்து முடிக்க.
`வானோர் (தம்முள்) நெருக்கிச் சேர்ந்து இறைஞ்சும்` என்க.
`கோலங்களாக` என ஆக்கம் விரிக்க.
ஏற்று - ஏற்கப்பட்டு, சிவபிரானது திருக்கோலத்தை வருணித்த வாறு.
தவளம் - வெண்மை.
அதள் - தோல்.

ஏற்றின் மணியே அமையாதோ ஈர்ஞ்சடைமேல்
வீற்றிருந்த வெண்மதியும் வேண்டுமோ - ஆற்றருவி
கன்மேற்பட் டார்க்கும் கயிலாயத் தெம்பெருமான்
என்மேற் படைவிடுப்பாற் கீங்கு. **#591**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியை முதலிலே கொண்டு, அதன்பின், `ஆற்று அருவி.

.

.

எம்பெருமான்` என்பதை வைத்து உரைக்க.
ஏறு - இடபம்.
பகற் காலத்தில் வெளியே சென்று மேய்கின்ற ஆன் நிரைகள் மாலைக் காலத்தில் ஊரை அடையும் பொழுது எருதுகளின் கழுத்தில் கட்டப்பட்டுள்ள மணிகள் ஒலிக்கும்.
அவ்வொலி இராக்காலத்தின் வருகையை அறிவிக்கும் அறிகுறிகள் ஆதலின், தலைவரைப் பிரிந்து தனித்திருக்கும் தலைவியர்க்கு அது வருத்தத்தை மிகுவிக்கும்.
அதனால், ஆற்றாமையுடைய தலைவியரால் வெறுக்கப்படும் பொருள்களுள் காளைகளின் கழுத்தில் உள்ள மணியும் ஒன்றாம்.
அம் முறைமை பற்றி, வீதியில் திருவுலாப் போதுகின்ற சிவபெருமானது இடபத்தின் கழுத்தில் ஒலிக்கும் மணியையும் அவர்மேற் கொண்ட காதலால் வருந்தும் தலைவி வெறுத்துக் கூறினாள்.
`எம்பெருமானது ஏற்றின்` என ஆறாவது விரித்தும்.
`அவனது ஈர்ஞ் சடைமேல்` என ஒரு சொல் வருவித்தும் உரைக்க.
``மணியே`` என்னும் ஏகாரம் பிறவற்றினின்றும் பிரித்தலின் பிரிநிலை.
அமையாதோ - போதாதோ.
கங்கை நீரால் சடை ஈர்ஞ்சடை (குளிர்ந்த சடை) யாயிற்று.
ஏற்றின் மணியைவிட வெண்மதியையே பெரிதும் வெறுத்தாள்.
படை - ஐங்கணை.
அவற்றை விடுப்பவன் மன்மதன்.
அவனுக்கு உதவி செய்வன ஏற்றின் மணியும், ஈர்ஞ்சடைமேல் வெண்மதியும்.
``ஈங்கு`` என்றது, `வாழ் இடமே மன்மதனது போர்க்களமாகி விட்ட இந்த இடத்தில்` என்றபடி.
ஆற்று அருவி - ஆறுபோலப் பாய்கின்ற அருவிகள்.
கல் - பாறைகள்.
ஆர்த்தல் - ஒலித்தல்.
``எம்பெருமான்`` என்பதை ஆறன் உருபேற்றதாகக் கொள் ளாது, விரியாகக் கொண்டு, `நும் ஏற்றின்` எனவும், `நும் சடைமேல்` எனவும் உரைப்பினும் ஆம்.

ஈங்கேவா என்றருளி என்மனத்தில் எப்பொழுதும்
நீங்காமல் நீவந்து நின்றாலும் - தீங்கை
அடுகின்ற காளத்தி ஆள்வாய் நான் நல்ல

படுகின்ற வண்ணம் பணி. #592
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`தீங்கை அடுகின்ற காளத்தி ஆள்வாய், நீ என் மனத்தில் எப்பொழுதும் நீங்காமல் (நின்று,) - ஈங்கே வா - என்று அருளி வந்து நின்றாலும், நான் நல்லவாறு பணிகின்ற வண்ணம் பணி` எனக் கூட்டி ஓரோர் சொல் வருவித்து முடிக்க.
அடுதல் - போக்குதல்.
``அருளி`` என்னும் எச்சம், `நடந்து வந்தான், ஓடி வந்தான்` என்பவற்றிற்போல வருதல் தொழிலோடு உடன் நிகழும் அடையாய் வந்தது.
வந்து - எதிர் வந்து.
மனத்தில் நீங்காமல் நிற்றல்.
இடையறாது நினைத்தலால் ஆம் நினைவும் பாவனையாகலின், நேர்வருதல் உண்மையாகக் கொள்ளப்படும்.
`கருணை மிகுதியால் நீ நேர்வந்து நிற்பினும், அங்ஙனம் நிற்கும் பொழுது பணிய வேண்டிய முறைகளை நான் அறியேன்.
அதனால், அதனையும் நீயே அறிவித்தருளல் வேண்டும்` என்றபடி.
``தொண்ட னேன் பணியுமா பணியே`` *1* என்றது இப்பொருட்டாயும் நிற்கும்.
``காண்பார் ஆர் கண்ணுதலாய் காட்டாக்காலே`` *2* என்றமையும் அறியற் பாற்று.
ஈற்றடி, மூன்றாம் எழுத்தெதுகை பெற்றது.
`படுகின்ற` எனப் பாடம் ஏதி, `நல்ல செயல்களைப் பொருந்துகின்ற வண்ணம்` என உரைப்பினும் ஆம்.

பணியாது முன்இவனைப் பாவியேன் வாளா
கணியாது காலங் கழித்தேன் - அணியும்
கருமா மிடற்றெம் கயிலாயத் தெங்கள்
பெருமான தில்லை பிழை. #593
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பாவியேன், இவனை முன் பணியாது, கணியாது வாளா காலங் கழித்தேன்.
அதனால், எங்கள் பெருமானது பிழை இல்லை` என இயைத்து முடிக்க.
கணித்தல் - எண்ணுதல்; பலமுறை நினைத்தல்.
செய்யுளாகலின், ``இவன்`` என்னும் சுட்டுப் பெயர் முன் வந்தது

அணிதல் - அழகு செய்தல், `பெருமானது பிழையாக ஒன்றேனும் இல்லை` என்றதனால், `எல்லாம் எனது பிழையே` என்றதாயிற்று. இக்கருத்தினைப் பட்டினத்து அடிகள், ``பாவிகள் தமதே பாவம்`` எனவும், ``அறுசுவை அடிசில் அட்டினி திருப்பப் புசியா தொருவான் பசியால் வருந்துதல் - அயினியின் குற்றம் அன்று`` *1* என்பது முதலிய உவமைகளாலும் விளக்கியருளுதல் காண்க.

பிழைப்புவாய்ப் பொன்றறியேன் பித்தேறி னாற்போல்
அழைப்பதே கண்டாய் அடியேன் **-** அழைத்தாலும்
என்னா தரவேகொண் டின்பொழில்சூழ் காளத்தி
மன்னா தருவாய் வரம்**. #594**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பிழைப்பு - குற்றம் செய்தல்.
இது, `பிழைத்தல்` எனவும் வரும், வாய்ப்பு - பொருந்துதல்.
இவை இரண்டும் ஒன்றற்கு ஒன்று மறுதலையாய் நேர்மையினின்று விலகுதலையும், நேர்மையில் நிற்றலையும் குறிக்கும்.
இத்தொழிற் பெயர்கள் `ஆகுபெயராய், அச்செயல்களால் விளையும் செயப்படு பொருள்களை உணர்த்தும்.
இவை, நூல்களில் சொல்லப்பட்ட விதி விலக்குக்களை இங்குக் குறித்தன.
`பிழைப்பு வாய்ப்பு ஒன்று அறியா நாயேன்``
என ஆளுடை அடிகளும் அருளிச் செய்தார்.
`இவற்றுள் ஒன்றையும் அறியேன் என்க.
அழைத்தல் - விரித்தல்.
அஃதாவது `அப்பா, ஐயா, ஆண்டானே, கடவுளே` என்றாற் போலக் கூப்பிடுதல், `அஃதொன்றை மட்டுமே நான் அறிவேன்` என்பதாம்.
`அடியேன் செய்வது அழைப்பதே` என ஒரு சொல்வருவிக்க.
``அழைத்தாலும்`` என்றது, `அஃது ஒன்றையே நான் செய்தாலும்` என்றபடி.
ஆதரவு - அன்பு.
`அறிவிலனாயினும், அன்புடையன்` எனக் கொண்டு இரங்கியருளல் வேண்டும் என்றபடி.
கண்டாய், முன்னிலையசை.

வரமாவ தெல்லாம் வடகயிலை மன்னும்
பரமா உன் பாதார விந்தம் **-** சிரம்ஆர
ஏத்திடும்போ தாகவந் தென்மனத்தில் எப்பொழுதும்
வாய்த்திடுநீ வேண்டேன்யான் மற்று**. #595**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`யான் வேண்டும் வரமாவதெல்லாம்` என்க.
``வட கயிலை மன்னும் பரமா`` என்பதை முதலிற் கொள்க.
``ஆவ தெல்லாம்`` என்பது ஒருமைப் பன்மை மயக்கம்.
சிரம் ஆர - தலை ஆர; என்றதனால்.
`வணங்கி` என்பது வருவிக்க.
ஆர்தல் - பயனால் நிரம்புதல்.
``தலையாரக் கும்பிட்டு``*(1)* என அப்பர் பெருமானும் அருளிச் செய்தார்.
``ஆக`` என்னும் செயவென் எச்சம், `பொழுது சாய வந்தான்` என்பது போல அக்காலத்தை உணர்த்தி நின்றது.
``எப் பொழுதும்`` என்றது.
`எத்தனை முறையாயினும்` என்றபடி, ``நீ`` என்பதன்பின், ``எல்லாம்`` என்ற எழுவாய்க்குப் பயனிலையாகிய `அதுவே` என்பது வருவிக்க.
மற்று - பிற வரங்கள்.
`மாற்றுயான் வேண்டேன்` என மாற்றுக.
வாய்த்தல் - நேர்படுதல் `வைத்திடு` என்பது பாடம் அன்று.

மற்றுப் பலிபிதற்ற வேண்டா மடநெஞ்சே
கற்றைச் சடையண்ணல் காளத்தி **-** நெற்றிக்கண்
ஆரா அமுதின் திருநாமம் அஞ்செழுத்தும்
சோராமல் எப்பொழுதுஞ் சொல்**. #596**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மற்றுப் பல பிதற்ற வேண்டா`` என்பதை இறுதிக் கண் கூட்டியுரைக்க.
மடமை - அறியாமை.
அஃதாவது, `பிறவற்றைச் சொல்லுதலால் பயன் உண்டாகும்` எனக் கருதுதல்.
அது பிழையாதல் பற்றி அவற்றை, பிதற்றுதலாகக் கூறினார்.
`காளத்தி அமுது` என இயையும்.
அமுது போல்வானை ``அமுது`` என்றது உவம ஆகு பெயர்.
ஆராமை - நிரம்பாமை; தெவிட்டாமை அஞ்செழுத்தின் சிறப்பு.
மேல் இரு வெண்பாக்களில்*(2)* சொல்லப்பட்டது.
சொல்லும் பொருளுமே தூத்திரியும் நெய்யுமா`` என்று தொடங்கியவர்.
திருநாம அஞ்செழுத்தைச் சோராமல் எப்பொழுதும் சொல்வதில் முடித்தருளிய அருமை அறிந்து பயன் கொள்ளத்தக்கது.

நக்கீரதேவ நாயனார் - திருஈங்கோய்மலை எழுபது

அடியும் முடியும் அரியும் அயனும்
படியும் விசும்பும்பாய்ந் தேறி - நொடியுங்கால்,
இன்ன தெனவறியா ஈங்கோயே ஓங்காரம்
மன்னதென நின்றான் மலை. **#597**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

\`ஈங்கோயே\` என்பதனை இறுதிக்கண் கூட்டியுரைக்க. இது இதனுள் வரும் அனைத்து வெண்பாக்கட்கும் பொருந்தும். நொடியில் - சொல்லுமிடத்து, இதனை முதலிற் கொள்க. படி - பூமி. விசும்பு - ஆகாயம். இன்னது - இன்ன தன்மையது. \`\`இன்னதென\`\` என்பதை \`அடி, முடி\` என்பவற்றோடு தனித் தனிக் கூட்டுக. \`\`மன் அது\`\` என்பதில் அது, \`\`பகுதிப்பொருள் விகுதி. மன் - முதல். அது தன்னியல்பில் அஃறிணையாதலின் \`அது\` என்னும் விகுதி பெற்றுப் பின் பண்பாகுபெயராய், \`\`நின்றான்\`\` என்பதனோடு இயைந்தது. அரியும், அயனும் அனற் பிழம்பாய் நின்ற சிவபெருமானது வடிவின் அடியையும், முடியையும் தேடிக் காணாது எய்த்த சிவமகாபுராண வரலாறு சைவ நூல்களில் பெரும்பான்மையாக எங்கும் சொல்லப் படுவது. \`அத்தகைய பெருமான் இருக்கும் மலை திருஈங்கோய்மலை\` என்பதாம்.

அந்தவிள மாக்குழவி ஆயம் பிரிந்ததற்குக்
கொந்தவிழ்தேன் தோய்த்துக் குறமகளிர் சந்தின்
இலைவளைக்கை யாற்கொடுக்கும் ஈங்கோயே மேரு
மலைவளைக்கை வில்லி மலை. **#598**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

\`வில்லி மலை ஈங்கோயே\` என முடிக்க. அந்தம் - அழகு. மாக் குழவி - மான் கன்று. ஆயம் - தன் இனம். பிரிந்து - பிரிந்து நின்றமையால். கொந்து அவிழ்தேன் - கொத்தாகிய பூக்கள் மலர்ந்து ஊற்றிய தேன். சந்து - சந்தன மரம். \`இலையை உண்ணக் கொடுக்கும்\` என்க. \`ஈங்கோய் மலையில் குறவரும் அருளுடையராய் உள்ளார்\` என்பதாம். \`மேரு மலையாகிய, வளைவை யுடைய கைவில்\` என்க. கைவில் - கையிற் பிடிக்கும் வில்; இஃது இனம் இல் அடை. வில்லி - வில்லை யுடையவன்.

அம்பவள வாய்மகளிர் அம்மனைக்குத் தம்மனையைச்
செம்பவளந் தாவென்னச் சீர்க்குறத்தி கொம்பின்
இறுதலையினாற் கிளைக்கும் ஈங்கோயே நம்மேல்

மறுதலைநோய் தீர்ப்பான் மலை. #599
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அம் - அழகு. மகளிர் - சிறுமியர். அம்மனைக்கு - அம்மானை ஆடுதற்கு. `தம் அன்னையை` என்பது இடைக் குறைந்து. ``தம் அனையை`` என வந்தது. `ஒருத்திக்கு மகளிர் பலர்` என்க. குறத்தி - தாய்க் குறத்தி. ``கொம்பு`` என்றது யானைக் கொம்பினை. இறுதலை - அறுக்கப்பட்ட முனை. கிளைக்கும் - நிலத்தை அகழ்கின்ற. அகழ்ந்தது பவளத்தைப் பெறுதற்பொருட்டு. அருவிகளால் வீழ்த்தப்பட்ட பவளங்கள் நிலத்தில் புதைந்து கிடத்தல் பற்றி அகழ்வாளாயினாள். `அத்துணை வளம் உடையது ஈங்கோய் மலை என்றபடி.
மறுதலை நோய் - சிவானந்தத்தைப் பெற ஒட்டாது மறுதலைக் கின்ற வினைகள். அவை பிராரத்துவமும், ஆகாமியமுமாம். `நம்நோய், மேல் வரும் நோய்` என்க. மேல் - இனி.

அரிகரியக் கண்டவிடத் தச்சலிப்பாய் ஓடப்
பிரிவரிய தன் பிடியைப் பேணிக் கரிபெரிதும்
கையெடுத்து நீட்டிக் கதஞ்சிறக்கும் ஈங்கோயே
மையடுத்த கண்டன் மலை. #600
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அரி - சிங்கம். ``கரி`` இரண்டும் களிற்றி யானை. சலிப்பாய் - இயங்குதல் உடைத்தாய். எனவே, முன்பு இயங்காது கிடந்தமை பெற்றாம். அகரம், அதன் இயல்பினைக் குறித்த பண்டறி சுட்டு. யானையைக் கண்டவிடத்து அதன் மேற் பாய்தல். சிங்கத்திற்கு இயல்பு. களிற்றியானை தன் பிடிமேற் கொண்ட அன்பினால் சிங்கத் தின் வருகைக்கு அஞ்சாது, துதிக்கையை நீட்டிக் கோபத்தால் பிளிறுவ தாயிற்று. `அன்பின்முன் அச்சம் நில்லாது` என்பதை, ``அச்சம் - தாய் தலையன்பின் முன்பு நிற்குமே`` * என்னும் பெரியபுராணத்தாலும் அறிக. கதம் - கோபம், `ஈங்கோய் மலை வாழ் அஃறிணை யுயிர்களும் அன்பு வாழ்க்கை வாழ்கின்றன` என்பதாம், மை அடுத்த - கருமை நிறம் பொருந்திய.

அரியும் உழுவையுமே ஆளியுமே ஈண்டிப்
பரியிட்டுப் பன்மலர்கொண் டேறிச் சொரிய
எரியாடி கண்டுகக்கும் ஈங்கோயே கூற்றம்
திரியாமற் செற்றான் சிலம்பு. #601
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உழுவை - புலி, ஈண்டுதல் - திரளுதல். பரி இடுதல் - நடத்தல். நடத்தலைக் கூறியது, அவை வன்குணம் இன்றி அன்புடையன ஆதலைக் குறித்தற்கு. எனவே, ``பரிஇட்டு`` என்றது, `மெல்ல நடந்து` என்றதாம். சொரிதல் இலிங்கத்தின்மேல். எரி ஆடி, சிவன். உகத்தல் - விரும்புதல். `ஈங்கோய் மலையில் கொடு விலங்கு களும் தம் தன்மை நீங்கி சிவபத்தியுடன் திகழ்கின்றன` என்பதாம். கூற்றம் - யமன். திரியாமல் - தன் அடியார்மேற் செல்லாதபடி செற்றான் - அழித்தான், `அத்தகையோன் இடம் ஈங்கோய் மலை என்றார். சிலம்பு - மலை. ``செற்றான்`` என்றாராயினும், `செற்ற அவன்` என்பது கருத்தாகக் கொள்க.

ஆளி தொடர அரிதொடர ஆங்குடனே
வாளி கொடு தொடரும் மாக்குறவர் கோளின்
இடுசிலையி னாற்புடைக்கும் ஈங்கோயே நம்மேற்
கொடுவினைகள் வீட்டுவிப்பான் குன்று. **#602**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஆளியைத் தொடர்ந்து போய்ப் பற்றுதற் பொருட்டு அதனை அரி தொடர` என்க. அரி - சிங்கம். சிங்கத்தைக் குறவர் தொடர்ந்தனர். தொலைவில் இருந்து அம்பால் எய்யக் கருதியவர் அருகிலே சென்று வில்லாலே புடைத்தனர். இஃது அவர்தம் ஆற்றல் மிகுதியால் ஆயது. இடு சிலை - கீழே போகடும் வில். கோள் - அகப்படுத்துதல்.

இடுதினைதின் வேழங் கடியக் குறவர்
வெடிபடு வெங்கவண்கல் ஊன்ற நெடுநெடென
நீண்டகழை முத்துதிர்க்கும் ஈங்கோயே ஏங்குமணி
பூண்டகழை யேறி பொருப்பு. **#603**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இடு தினை - பயிரிடப்பட்ட தினை, வேழம் - யானை. `வெடிபடு கல்` என இயையும். வெடிபடுதல் - வேகமாக வெளிப்போதல். `வெடிபடுத்த` எனப் பிறவினை யாக்குக. ``நெடு நெடென`` என்பது ஒலிக்குறிப்பு. கழை - மூங்கில். `ஈண்டு கழை` என்பதும் பாடமாகலாம். ஏங்குதல் - ஒலித்தல். `காளை` என்பது எதுகை நோக்கிக் குறுக்கலும், திரிதலும் பெற்று, ``கழை`` என வந்தது.

ஈன்ற குறமகளிர்க் கேழை முதுகுறத்தி
நான்றகறிக் கேறசலை நற்கிழங்கை ஊன்றவைத்

தென்அன்னை உண்ணென் றெடுத்துரைக்கும் எங்கோயே
மின்னன்ன செஞ்சடையான் வெற்பு. #604
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈன்ற மகளிர் - மகவை ஈன்ற பெண்டிர். ஏழை - எளியவர். நான்ற - முன்பே அதற்கென்று கொண்டு வந்து கோத்து வைத்த. கறிக்கு ஏறு - கறிக்குப் பொருத்தமான. அசலை - ஒருவகைக் கிழங்கு. ஊன்ற வைத்து - நிலையாக வைத்து. முதுகுறத்தி இளை யாளை, `என் அன்னையே` என்றது அன்பினால்.

ஈன்ற குழவிக்கு மந்தி இருவரைமேல்
நான்ற நறவத்தைத் தான்நணுகித் தோன்ற
விரலால்தேன் தோய்த்தூட்டும் ஈங்கோயே நம்மேல்
வரலாம்நோய் தீர்ப்பான் மலை. #605
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மந்தி`` என்பதை முதலில் வைத்து, `தான் ஈன்ற குழுவிக்கு` என்க.
`குரங்கும் முசுவும் ஊகமும் மூன்றும்
நிரம்ப நாடின் அப்பெயர்க் குரிய`
என்பதனால், இங்கு, `குழவி` என்பது குரங்கில் இளமைப் பெயராய் வந்தது. இரு வரை - பெரிய மலை. நறவம் - தேன்; அஃது அதன் அடையைக் குறித்தது. `சுவை தோன்ற` என ஒரு சொல் வருவிக்க. வரல் ஆம் - வருதற்குரிய.

உண்டிருந்த தேனை அறுபதங்கள் ஊடிப்போய்ப்
பண்டிருந்த யாழ்முரலப் பைம்பொழில்வாய்க் கண்டிருந்த
மாமயில்கள் ஆடி மருங்குவரும் ஈங்கோயே
பூமயிலி தாதை பொருப்பு. #606
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அறு பதங்கள் - வண்டுகள்; இதனை முதலிற் கொண்டு, `தாம் உண்டிருந்த` என்க. ஊடுதல், இங்கே, வெறுத்தல். நிரம்ப உண்டமையால் வெறுப்பு உண்டாயிற்று. `பண்டு இருந்த பொழில்வாய் முரல` என்க. யாழ் முரல - யாழின் இசைபோல ஒலிக்க. இது வினையுவமத் தொகை. யாழ் ஆகுபெயர். கண்டு - அவ்வண்டுகளின் செயலைப் பார்த்து. மருங்கு - வண்டுகளின் பக்கத்தில். பூ - அழகு. மயிலி - மயில் வாகனத்தையுடையவன்.

ஊடிப் பிடிஉறங்க ஒண்கதலி வண்கனிகள்

நாடிக் களிறு நயந்தெடுத்துக் கூடிக்
குணம்மருட்டிக் கொண்டாடும் ஈங்கோயே வானோர்
குணமருட்டுங் கோளரவன் குன்று. **#607**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

\`பிடி ஊடி உறங்க\` என மாற்றிக் கொள்க. \`\`ஊடி உறங்க\`\` என்றதனால். உறங்குதல், பொய்யாக உறங்குதலாயிற்று. \`\`களிறு\`\` என்பதை, \`\`உறங்க\`\` என்பதன் பின்னர்க் கூட்டுக. \`நாடிக் கொணர்ந்து\` என, நாடுதல், அதன் காரியமும் உடன்தோற்றி நின்றது. நயந்து - இனிமை காட்டி. குணத்தால் மருட்டிக் கொண்டாடும்\` என உருபு விரித்துரைக்க. குணத்தால் மருட்டுதலாவது, \`நின்னிற் சிறந்த பிடியில்லை\` என்பது போல அதன் இயல்பைப் புகழ்ந்து, அப்புகழ்ச்சி யில் அதனை மயங்கச் செய்தல். \`\`வானோர் குணம்\`\` என்பதில் \`\`குணம்\`\` என்றது அவர்கட்கு இயல்பாய் உள்ள அறிவினை. அதனை மருட்டுதலாவது, அவர்களால் அளந்தறியலாகாத அளவு, ஆற்றல் முதலியவற்றை அறிந்து வியக்கச்செய்தல். கோள் அரவம் - கொடிய பாம்பு. \`அதனை அணியாக அணிந்தவன்\` என்க.

எய்யத் தொடுத்தோன் குறத்திநோக் குற்றதெனக்
கையிற் கணைகளைந்து கன்னிமான் பையப்போ
என்கின்ற பாவனைசெய் ஈங்கோயே தூங்கெயில்கள்
சென்றன்று வென்றான் சிலம்பு. **#608**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

\`\`கன்னி மான்\`\` என்பதில் இரண்டன் உருபு விரித்து அதனை முதலிற் கூட்டிப் பின்னரும் \`கன்னி மானே\` என விளி யாக்குக. கன்னி - இளமை, பைய - மெல்ல. \`\`பாலனை\` என்றது கைச் செய்கையை. தூங்கு எயில்கள் - இயங்கும் கோட்டைகள்; அவை முப்புரங்கள். சென்று - வினை மேற் சென்று, மானைக் கொல்லக் கணையை வில்லில் வைத்துத் தொடுத்த குறவன் அதன் பார்வை தன் இல்லக் கிழத்தியின் பார்வைபோலத் தோன்றுதலைக் கண்டு அதன் மேல் அன்பு உண்டாகப் பெற்று அதனை இன்சொற் சொல்லிப் போக விடுத்தான். இது தலைவனிடத்துத் தோன்றிய. \`ஒப்புவழி யுவத்தல்\` * என்னும் மெய்ப்பாடு.

ஏழை இளமாதே என்னொடுநீ போதென்று
கூழை முதுவேடன் கொண்டுபோய் வேழ
வினைக்குவால் வீட்டுவிக்கும் ஈங்கோயே நந்தம்

வினைக்குவால் வீட்டுவிப்பான் வெற்பு. #609
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஏழை இள மாது - யாதும் அறியா இளம்பெண். இவள் விளையாடும் சிறுமி. `இவள் யானை வருதலைக் கண்டு நடுங்கினாள்; அப்பொழுது முதுவேடன் இவளது நடுக்கத்தைத் தீர்த்தான் என்க. கூழை - நிமிர்ந்து நிற்கலாற்றாது மெலிந்து குனிந்து நடக்கும் தன்மை. `இத்துணை முதியனாயினும் யானையை அடக்கினான்` என்பது கருத்து. வேழம் - யானை. வால் வீட்டுதல். வாலையறுத்துல். குறும்பு செய்தலை `வாலாட்டுதல்` என்றும், குறும்பை அடக்குதலை, `வாலையறுத்தல்` என்றும் கூறுதல் உலக வழக்கு. வேழ வினை; மதத்துத் திரிதல். அதற்கு வாலையறுத்தலைச் செய்தல், அதனை நிகழ வொட்டாமற் செய்தல், `உடன் கொண்டு போய்` என ஒருசொல் வருவிக்க. உடன் கொண்டு சென்றது, அவள் நேரில் காணுதற்பொருட்டு. வினைக் குவால் - கன்மக் குவியல்; இது சஞ்சிதம். அதனை வீட்டுவித்தலாவது, தனது திருநோக்கால் எரித்தல். பின்னிரண்டடிகள் `மடக்கு` என்னும் சொல்லணி பெற்றன.

ஏனம் உழுத புழுதி இன மணியைக்
கானவர்தம் மக்கள் கனலென்னக் கூனல்
இறுக்கங் கதிர்வெதுப்பும் ஈங்கோயே நம்மேல்
மறுக்கங்கள் தீர்ப்பான் மலை. #610
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`புழுதியில் கிடக்கும் மணி` என்க. மணி - மாணிக்கம். ``இன மணி`` என்பதை `மணி இனம்` என மாற்றிக் கொள்க. இனம் - கூட்டம். என்ன - என்றே மருளும் படி. கூனல் இறுக்கம் - முகமும், முழங்காலும் ஒருங்கு சேரும்படி உடல் வளைந்து கையால் கட்டிக் கொண்ட இறுக்கம். இது குளிரால் நேர்ந்தது. கதிர் - பகலவன் கதிர்கள். பகலவன் கதிர் வெதுப்புதலால் தங்கள் குளிர் நீங்குதலை யறியாத குறச்சிறுவர்கள், காட்டுப் பன்றி நிலத்தைக் கிளறியதால் உண்டான மாணிக்கங்களின் திரளை `நெருப்பு` என்றே மருள்கின்றார்கள் என்பதாம். இஃது, உதாத்த அணியும், திரிபதிசய அணியும் சேர்ந்த சேர்வை யணி. மறுக்கம் - துன்பம்.

ஏனங்கிளைத்த இனபவள மாமணிகள்
கானல் எரிபரப்பக் கண்டஞ்சி யானை
இனமிரிய முல்லைநகும் ஈங்கோயே நம்மேல்

வினையிரியச் செற்றுகந்தான் வெற்பு. #611
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஏனம் கிளைத்த - பன்றிகள் உழுததனால் வெளிப் பட்ட. கான் - காட்டில். அல் - இரவிலே. எரி - நெருப்புப் போலும் ஒளியை. அஞ்சி - `நெருப்பு` எனக் கருதி அஞ்சி. இரிய - ஓட. முல்லை - முல்லை அரும்புகள், ``யானை இனம் இரிய`` எனத் திரிபதிசய அணியும். ``முல்லை நகும்`` எனத் தற்குறிப்பேற்ற அணியும் சேர்ந்து வந்தது சேர்வையணி. எரி, உவமையாகுபெயர். முல்லை, முதலாகுபெயர்.

ஒருகணையும் கேழல் உயிர்செகுத்துக் கையில்
இருகணையும் ஆனைமேல் எய்ய அருகணையும்
ஆளரிதான் ஓட அரிவெருவும் ஈங்கோயே
கோளரிக்கும் காண்பரியான் குன்று. #612
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கேழல் - பன்றியை. இது காட்டுப் பன்றி. உயிர் செகுத்தல் - கொல்லுதல். கேழல் சிறிதாகலின் ஒருகணையே போதியா தாயிற்று. யானை பெரிதாதலின் அதற்கு இருகணைகள் வேண்டப் பட்டன. ஆளரி - ஆளி; யாளி. அஃது யானையோடு ஒருபுடை ஒப்பது ஆதலின் யானை எய்யப் பட்டதைக் கண்டு தான் அஞ்சி ஓடுவதாயிற்று. அஃது ஓடுதலைக் கண்டு சிங்கமும் அஞ்சிற்று. அரி - சிங்கம். கோளரி, இங்கு, நரசிங்கம். ``ஒருகணையும்`` என்னும் உம்மை முற்று, ``இருகணையும்`` என்னும் உம்மை சிறப்பு. ``செகுத்து`` என்றது, `செகுத்தபின்` என்றபடி. `வேடன் எய்ய` எனத் தோன்றா எழுவாய் வருவிக்க.

ஓங்கிப் பரந்தெழுந்த ஒள்ளிலவந் தண்போதைத்
தூங்குவதோர் கொள்ளி எனக்கடுவன் மூங்கில்
தழையிறுத்துக் கொண்டோச்சும் ஈங்கோயே சங்கக்
குழையிறுத்த காதுடையான் குன்று. #613
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தூங்குவது - தொங்குவது. கடுவன் - ஆண் குரங்கு. இறுத்துக்கொண்டு - ஒடித்துக்கொண்டு. ஓச்சுதல் - ஓங்குதல். தழையால் அடிப்பினும் கொள்ளி அணைவதாகும். மக்களோடு ஒத்திருக்கும் தன்மையால், நெருப்பைக் கண்டால் குரங்கிற்கும் அஞ்சி அதனை அணைக்க முயலும் இயல்பும் குரங்கிற்கும் உளதாகக் கூறப்பட்டது. இலவம் பூவை `நெருப்பு` என மருண்டது என்றது திரிபதிசய அணி. இறுத்த - தங்கிய.

ஓடும் முகிலை உகிரால் இறஊன்றி
மாடுபுக வான்கை மிகமடுத்து நீடருவி
மாச்சீயம் உண்டு மனங்களிக்கும் ஈங்கோயே
கோச்சீயம் காண்பரியான் குன்று. **#614**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உகிர் - நகம். இற - பிளக்கும்படி. மாடு புக - பிளந்த தனால் ஒழுகிய நீர் இம்மலையிடத்தை அடைய (அதனால் உண்டான) `நீடு அருவியை மாச்சீயம் வான் கையால் மிக மடுத்து மனங் களிக்கும்` என்க. சீயம் - சிங்கம். அதன் முன்னங்கால்கள் அதற்குக் கையாகவும் உதவும். கோச் சீயம் - தலைமைச் சிங்கம்; நரசிங்கம். இனி, `கோ மாயோன்` என வைத்து, `மாயோனாகிய சீயம்` எனினும் ஆம்.

கண்ட கனிநுகர்ந்த மந்தி கருஞ்சுனைநீர்
உண்டு குளிர்ந்திலவென் றூடிப்போய்க் கொண்டல்
இறைக்கீறி வாய்மடுக்கும் ஈங்கோயே நான்கு
மறைக்கீறு கண்டான் மலை. **#615**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ட கனி - கண்ணில்பட்ட கனிகளையெல்லாம். கருமை, ஆழம் மிகுதியால் உண்டாயிற்று. `கருநீர்` என இயையும். குளிர்தல் - தாகம் தணிதல். மந்திகளின் பன்மையால் தாகமும் பல வாயின. ஊடுதல் - வெறுத்தல். `கொண்டலை` எனவும், `இறையால்` எனவும் ஏற்கும் உருபுகள் விரிக்க. இறை - கை அஃது ஆகுபெயராய், நகத்தை உணர்த்திற்று. ஈறு கண்டான் - முற்ற உணர்ந்தவன். உணரப் பட்டன அவற்றின் பொருள். அதனை முன்னே தான் உணர்ந்தாலன்றி உலகிற்கு அதனைச் சொல்லுதல் கூடாமையறிக. ஒரு நூலின் பொருளை அதன் உரையாசிரியர் எவ்வளவு உணரினும் நூலை ஆக்கிய ஆசிரியன் கருத்தை முற்ற உணர மாட்டுவாரல்லர். அதனால், ``மறைக்கு ஈறு கண்டான்`` என்றது, `அதனை உலகிற்கு அளித்த ஆசிரியன்` எனக் கூறியவாறேயாம்.

கருங்களிற்றின் வெண்கொம்பாற் கல்லுரல்வாய் நல்லார்
பெருந்தினைவெண் பிண்டி இடிப்ப வருங்குறவன்
கைக்கொணருஞ் செந்தேன் கலந்துண்ணும் ஈங்கோயே
மைக்கொணருங் கண்டன் மலை. **#616**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நல்லார் - அழகுடைய பெண்கள். `தினையைப் பிண்டியாக இடிப்ப` என்க. பிண்டி - மா. வரும் - வெளிச்சென்று வருகின்ற. மை - மேகம் ``மைக் கொணரும்`` என்பதில் கொணரும். உவம உருபு, இனி, `மை கருமை`` எனக் கொண்டு, `அதனைத் தன் பால் கொணர்ந்த கண்டன்` என்றலும் ஆம். இருவழியும் ககர ஒற்று விரித்தல். ``கருங்களிற்றின் வெண்கொம்பு`` என்பது முரண்தொடை யும், விரோத அணியுமாம்.

கனைய பலாங்கனிகள் கல்லிலையர் தொக்க
நனைய கலத்துரத்தில் ஏந்தி மனைகள்
வரவிரும்பி ஆய்பார்க்கும் ஈங்கோயே பாங்கார்
குரவரும்பு செஞ்சடையான் குன்று. **#617**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கனைதல் - செறிதல். அதனை, `கனை யிருள்` என்பதனானும் அறிக. கனைய - செறிதலை உடைய. பல ஆம் கனிகள் - பலவாகிய பழங்கள். `கனிகளை ஏந்தி` என இயையும். கல் இலையர் - கற்ற இலைத் தொழிலர். அவராவார், இலைகளைக் கல்லை யாகச் செய்தல், தழையாகக் கோத்தல் முதலியவற்றைக் கற்றவர். `இலையரால்` என்னும் மூன்றன் உருபு தொகுக்கப்பட்டது. தொக்க - தொகுக்கப்பட்ட. நனைய - தேனை உடைய. இலையரால் தொகுக்கப் பட்ட கலம் தொன்னை. உரத்தில் - மார்பிற்கு நேராக. `கலத்தில், மனை களில்` என ஏழாவது விரிக்க. ஆய் - தாய்; பழம் விற்பவள். இவளை, `தாய்` என்றது நாட்டு வழக்கு. `பலவகைக் கனிகளை யாவரும் எளிதில் காணத் தேனோடு கலந்து மார்பிற்கு நேராகக் தொன்னை களில் ஏந்தி விற்பவள் தன்னை அழைக்கும் மனைகளில் செல்ல விரும்பி அவற்றை உற்று நோக்குகின்ற ஈங்கோய்` என்றபடி. ``வா`` என்றது இட வழுவமைதி. குரவு - குரா மரத்தின் அரும்பு.

கடக்களிறு கண்வளரக் கார்நிறவண் டார்ப்பச்
சுடர்க்குழையார் பாட்டெழவு கேட்டு மடக்கிளிகள்
கீதம் தெரிந்துரைக்கும் ஈங்கோயே ஆல்கீழ்நால்
வேதந் தெரிந்துரைப்பான் வெற்பு. **#618**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கடக் களிறு - மதத்தினையுடைய ஆண் யானை. கண்வளர்தல், உறங்குதல். ஆர்த்தல் - ஆரவாரித்தல். மதயானை உறங்கும் பொழுது வண்டுகள் ஆராவாரித்தல், அதன் மத நீரைத் தான் வேண்டியபடி உண்ணுதலாலாம். உழுதல், `உழவு` ஆயினாற்போல, எழுதல், `எழவு`

ஆயிற்று. மடம் - இளமை. இனி, `சொல்லியதைச் சொல்லுதல்` என்றும் ஆம், கீதம் தெரிந்து உரைக்கும் - இசையையும் உணர்ந்து. அம்முறையிலே பாட்டினையும் பாடுதல், ``ஆர்ப்ப உரைக்கும்`` என்றது. `இரண்டும் ஒருங்கு நிகழ்கின்றன` என்பதாம். நால் வேதத்தை நால்வர் முனிவர்க்குச் சிவன் அறிவுறுத்தமை திருமுறைகளிற் பல இடத்தும் சொல்லப்படுவது. ``உரைப்பான்`` என எதிர்காலத்தாற் கூறியது, `இது கற்பந் தோறும் நிகழ்வது`` என்றற்கு.

கறுத்தமுலைச் சூற்பிடிக்குக் கார்யானை சந்தம்
இறுத்துக்கைந் நீட்டும்ஈங் கோயே செறுத்த
கடதடத்த தோலுரிவைக் காப்பமையப் போர்த்த
விடமிடற்றி னான்மருவும் வெற்பு. **#619**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கருவுற்ற காலத்தில் மகளிர்தம் கொங்கை நுனி கறுப்பாகும்` என்னும் வழக்குப் பற்றி, ``கறுத்த முலைச் சூற் பிடிக்கு`` என்றார். சூல் - கருப்பம். பிடி - பெண் யானை. ``பிடிக்கு`` என்றத னால், ``யானை`` என்றது களிற்றியானை யாயிற்று. கார் யானை - கரிய யானை. இஃது இனம் இல் அடை. சந்தம் - சந்தனம் மரம். அஃது ஆகுபெயராய், அதன் தழையைக் குறித்தது. இறுத்தல் - ஒடித்தல் ``கை நீட்டும்`` என்றது, `கையை நீட்டிக் கொடுக்கும்` என்றபடி. செறுத்த - கொல்லப்பட்ட. கடம் - மதநீர். அஃது ஆகுபெயராய், யானையைக் குறித்தது. தடத்த - பெரிய. உரிவை - தோல். `யானைத் தோலாகிய தோல்` என இருபெயர் ஒட்டாகக் கூறினார்.

கங்குல் இரைதேருங் காகோ தரங்கேழற்
கொம்பி னிடைக்கிடந்த கூர்மணியைப் பொங்கும்
உருமென்று புற்றடையும் ஈங்கோயே காமன்
வெருவொன்றக் கண்சிவந்தான் வெற்பு. **#620**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கங்குல் - இரவு. காகோதரம் - பாம்பு. கேழல் - காட்டுப் பன்றி. கொம்பின் இடைக்கிடந்த மணி - நிலத்தைக் கிளறும் பொழுது அக்கொம்பினிடையே வெளிப்பட்ட மாணிக்கம். கூர் - ஒளி மிகுந்த. உரு - மேகத்தின் இடி. அஃது ஆகுபெயராய் அதனோடு உடன் தோன்றும் மின்னலைக் குறித்தது. `மின்னலுக்குப்பின் இடி விழும்` என்னும் அச்சத்தால் பாம்பு புற்றை அடைவதாயிற்று. மின்னல் `திடீர்` எனத் தோன்றுதல் போலப் பன்றி உழுதமையால் அதன்

கொம்புகளினிடையே மாணிக்கம் தோன்றிற்று. `அதனைப் பாம்பு - மின்னல் - என மருண்டது` என்றது திரிபதிசய அணி. காமன் - மன்மதன். வெருவு ஒன்ற - அச்சத்தைப் பொருத்த. ``கண் சிவந்தான்`` என்றது, இலக்கணையால், `சினந்தான்` எனப் பொருள் தந்தது. அது வும், `எரித்தான்` எனத் தன் காரியம் தோற்றிநின்றது. ``கொம்பின்`` என்றது இன எதுகை.

கலவிக் களிறசைந்த காற்றெங்குங் காணா
திலைகைக்கொண் டேந்திக்கால் வீச உலவிச்சென்
றொண்பிடிகாற் றேற்றுகக்கும் ஈங்கோயே பாங்காய
வெண்பொடிநீற் றான்மருவும் வெற்பு. **#621**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அசைந்த - இளைத்த. அசைந்த காற்று - முன்பெல் லாம் கலவிக்குப் பின் அவ் இளைப்புத் தீர ஏற்ற காற்று. காணாது - அப்பொழுது காணாமையால். இலை. பலவகையான இலைகள். கால் வீச - காற்றை வீச. `களிறு காற்றை வீசப் பிடி தன் இளைப்பு நீங்கும்படி அதனை உலவிச் சென்று ஏற்கும் ஈங்கோய்` என்க. வெண்பொடி நீறு- இருபெயரொட்டு.

கன்னிப் பிடிமுதுகிற் கப்புருவம் உட்பருகி
அன்னைக் குடிவரலா றஞ்சியே பின்னரே
ஏன்றருக்கி மாதவஞ்செய் ஈங்கோயே நீங்காத
மான் தரித்த கையான் மலை. **#622**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கன்னிப் பிடி - களிற்றியானையோடு சேர்தல் இல்லாத பிடி யானை. `முதுகில் கப்பு உருவம்` என்றது இடக்கர் அடக்கல். அதனை உட்பருகுதலாவது, தான் பூப்படைந்தமையை மனத்தில் எண்ணுதல். அன்னைக் குடி வரலாறு - தன் தாய், தாய்க்குத் தாய் இப்படிப் பெண்யானைகள் யாவும் கன்றுகளை ஈன்று இனத்தைப் பெருக்கி, வாளாதே இறந்தொழிந்த வரலாறு. (அதனை அறிந்த ஒரு பிடி யானை) அஞ்சி - அவ்வாறு தானும் துன்புற்று வாளா மாய்தற்கு அஞ்சி மாதவும் ஏன்று அருக்கிச் செய் ஈங்கோய் - பெரிய தவத்தை மேற்கொண்டு உண்டி முதலியவைகளை மறுத்து நோற்கின்ற ஈங்கோய் மலை, அருக்குதல் மறுத்தல்.

கள்ள முதுமறவர் காட்டகத்து மாவேட்டை
கொள்ளென் றழைத்த குரல்கேட்டுத் துள்ளி

இனக்கவலை பாய்ந்தோடும் ஈங்கோயே நந்தம்
மனக்கவலை தீர்ப்பான் மலை. **#623**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கள்ள - வஞ்சனையையுடைய. அஃதாவது ஒளிந் திருந்து மாக்களைப் பிடிக்கின்ற. முது மறவர் - கிழ வேடர். மாவேட்டை - விலங்கு வேட்டை. கொள் என்று - பிடியுங்கள் என்று. இனம் - பல்வேறு வகையான. கவ் வலை - சிக்க யாக்கின்ற வலை களைக் கடந்து. பாய்ந்து ஓடுவன மேற் கூறப்பட்ட மாக்கள். `கவ் வலை` என்பது இடைக் குறைந்து நின்றது.

கல்லைப் புனம்மேய்ந்து கார்க்கொன்றைத் தார்போர்த்துக்
கொல்லை எழுந்த கொழும்புறவின் முல்லை அங்கண்
பல்லரும்ப மொய்த்தீனும் ஈங்கோயே மூவெயிலும்
கொல்லரும்பக் கோல்கோத்தான் குன்று. **#624**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கல் - சிறு பாறைகள், `அவற்றை உடைய புனம் என்க. ஐ, சாரியை. படர்தல், இங்கு மேய்தலாகச் சொல்லப்பட்டது. தார் - மாலை. அதனை, ``போர்த்த`` என்றது. `நிரம்பத் தாங்கி` என்றபடி. புனம், கொல்லை, புறவு - யாவும் முல்லை நிலப்பெயர்கள். புறவின் முல்லை - முல்லை நிலத்துக்கே சிறப்பாக உரிய முல்லைக் கொடிகள். பல் அரும்பு, பற்கள் போன்ற அரும்புகள். ``மொய்த்து`` என்பதை, `மொய்ப்ப` எனத் திரிக்க. கொல் அரும்ப - கொலைத் தொழில் தோன்றும் படி. கோல் - அம்பு, ``மேய்ந்து, போர்த்து, ஈனும்`` என்றது சில சொல் நயங்கள்.

கல்லாக் குரங்கு பளிங்கிற் கனிகாட்ட
எல்லாக் குரங்கும் உடன்ஈண்டி வல்லே
இருந்துகிராற் கற்கிளைக்கும் ஈங்கோயே மேனிப்
பொருந்தஅராப் பூண்டான் பொருப்பு. **#625**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பின், ``எல்லாக் குரங்கும்`` என வருதலின் முதற்கண், `ஒருகல்லாக் குரங்கு` என உரைக்க. கல்லாமை, யாதும் அறியாமை. பளிங்கு - பளிக்குப் பாறை. கனி - அதனுள் தோன்றும் கனியினது நிழலை. ஈண்டி - நெருங்கி. இருந்து - அமர்ந்து கொண்டு `இருந்து, வல்லே உகிரால் கல் கிளைக்கும்` என்க. வல்லே - விரைவாக. உகிர் - நகம். கிளைக்கும் - கிள்ளுகின்ற. இதுவும் திரிபதிசய அணி.

கண்கொண் டவிர்மணியின் நாப்பண் கருங்கேழல்

வெண்கோடு வீழ்ந்த வியன்சாரல் தண்கோ
டிளம்பிறைசேர் வான்கடுக்கும் ஈங்கோயே வேதம்
விளம்பிறைசேர் வான்கடுக்கும் வெற்பு. **#626**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண் - கண்ணொளி; ஆகுபெயர். ``கொண்டு`` என்பதை, `கொள்ள` எனத் திரிக்க. அவிர்தல். ஒளி வீசுதல். மணி - நீலமணி. நாப்பண்- நடுவில். கேழல் - பன்றி, ``கடுக்கும்`` இரண்டில் முன்னது, `ஒக்கின்ற` என்னும் பொருளையும், பின்னது, `மிக்குறை கின்ற` என்னும் பொருளையும் உடையன. இளம் பிறை சேர்வான் - இளம் பிறை பொருந்திய ஆகாயம். வேதம் விளம்பு இறை - வேதத்தால் சொல்லப்பட்ட இறைமைக் குணங்கள். நீலமணிக் குவியல் இடையே பன்றிக் கொம்பு காணப்படுதலால், அக்குவியல் பிறை பொருந்திய ஆகாயம் போலத் தோன்றுவதாயிற்று. பின் இரண்டடிகள், திரிபணி.

காந்தள்அங் கைத்தலங்கள் காட்டக் களிமஞ்ஞை
கூந்தல் விரித்துடனே கூத்தாடச் சாய்ந்திரங்கி
ஏர்க்கொன்றை பொன்கொடுக்கும் ஈங்கோயே செஞ்சடைமேல்
கார்க்கொன்றை ஏன்றான் கடறு. **#627**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கைத்தலங்கள் காட்ட`` என்றது, கைகாட்டி, `வருக` என்று அழைக்க என்றபடி. காந்தள் மலர் கைக்கு உவமையாகச் சொல்லப்படுவது ஆதலின் அதன் அசைவு கையை அசைத்தலாகச் சொல்லப்படுவது. இது தற்குறிப்பேற்றம். கூந்தல் - தோகை. ஏர் - அழகு. கொன்றை மலர் பொன்போல்வது ஆதலின், அதனை உதிர்ப்பது, நடனமாடும் நாடகமகளுக்குப் பரிசாகப் பொன்னைச் சொரிவதாகக் கூறப்பட்டது. இதுவும் தற்குறிப்பேற்றம். சாய்தல். வளைதல். இரங்குதல் - மனம் இரங்குதல். இஃது இலக்கணை என்றதனால் மஞ்ஞை (மயில்) நாடக மகளாதலைப் பெற வைத்தது குறிப்புருவகம். களி - களிப்பு; மகிழ்ச்சி ``கை காட்ட, பொன் கொடுக்கும்`` என்பன இயைபுருவகம் ``கடறு`` என்ப காடாயினும், இஃது ஆகுபெயராய், ஆங்குள்ள மலையைக் குறித்தது.

குறமகளிர் கூடிக் கொழுந்தினைகள் குற்றி
நறவமாக் கஞ்சகங்கள் நாடிச் சிறுகுறவர்
கைந்நீட்டி உண்ணக் களித்துவக்கும் ஈங்கோயே
மைந்நீட்டுங் கண்டன் மலை. **#628**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நறவம் - தேன். நறவத்தோடு கூட்டி. `ஆக்க`, என்பதன் ஈற்று அகரம் தொகுக்கப்பட்டது. அன்றி, `ஆக்கு அகங்கள்` என வினைத்தொகையாக்கலும் ஆம். ஆகம் - இல்லம். ``அஞ்சு அகங்கள்` என்றதில் அஞ்சு, பன்மை குறித்தது. `அஞ்சு வீடு நுழைந்தேன்` என்பது நாட்டு வழக்கு. `நாடிச் சென்று` எனவும், `கைந்நீட்டி வாங்கி` எனவும் ஒரோர் சொல் வருவிக்க. உவப்பவர் குறவர்கள். களித்துவக்க, ஒருபொருட் பன்மொழி. மை நீட்டு - கருமையைக் காட்டுகின்ற.

கூழை முதுமந்தி கோல்கொண்டுதேன்பாய
ஏழை யிளமந்தி சென்றிருந்து வாழை
இலையால்தேன் உண்டுவக்கும் ஈங்கோயே இஞ்சி
சிலையால்தான் செற்றான் சிலம்பு. #629

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கூழை - உடல் வளைந்த. முது மந்தி - கிழப்பெண் குரங்கு. இது தாய். `கோல் கொண்டு தாக்க` என ஒருசொல் வருவிக்க. தாக்கப்பட்டது தேன் கூடு. ஏழை - அறிவில்லாத; திறமையற்ற. இளமந்தி, இது மகள். ``இலையால் உண்ணும்`` என்றதனால், இலை யால் ஏற்றமை பெறப்பட்டது. இஞ்சி - மதில்; முப்புரம். சிலை - வில். தான். அசை.

கொல்லை இளவேங்கைக் கொத்திறுத்துக் கொண்டுசுனை
மல்லைநீர் மஞ்சனமா நாட்டிக்கொண் டொல்லை
இருங்கைக் களிறேறும் ஈங்கோயே மேல்நோய்
வருங்கைக் களைவான் மலை. #630

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கொத்து, பூங்கொத்து, இறுத்துக்கொண்டு, `ஓடித்துக் கொண்டு` என ஒரு சொல். இனி, `குண்டு சுனை` எனப்பாடம் ஓதலும் ஆம். குண்டு - ஆழம். வேங்கைப் பூ தாம் ஆடும் நீரில் நறுமணத்திற் காக இடுவது. `சுனை நீர்` என இயையும். மல், `மல்லை` என ஐகாரம் பெற்றது. `வளப்பம்` என்பது பொருள். நாட்டிக் கொண்டு - மனத்தில் உறுதி செய்து கொண்டு. ஏறுதல். சுனை உள்ள இடத்தை நோக்கி ஏறுதல். `மேல் கை வரும் நோய்` என மாற்றுக. மேல் - வருங்காலம். கை வருதல் - நெருங்கி வருதல்.

கொவ்வைக் கனிவாய்க் குறமகளிர் கூந்தல்சேர்
கவ்வைக் கடிபிடிக்குங் காதன்மையால் செவ்வை

எறித்தமலர் கொண்டுவிடும் ஈங்கோயே அன்பர்
குறித்தவரந் தான்கொடுப்பான் குன்று. #631
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கூந்தலில் சேர்க்கின்ற கடி` என்க. கடி - வாசனை. கவ்வை - அலர் தூற்றுதல். அஃது இங்குச் சேய்மையினும் சென்று கமழ்ந்து கூந்தலின் இருப்பை அறிவித்தலைக் குறித்தது. ``ஆர்வலர் - புன்கணீர் பூசல் தரும்`` என்றார் திருவள்ளுவ நாயனாரும். கடி பிடித்தல் - வாசனையேற்றுதல். ``காதன்மை`` என்பதில், மை பகுதிப் பொருள் விகுதி. இதில் னகர ஒற்று நீக்கி அலகிடுக. செவ்வை எறித்த. மலர் - நன்றாகப் பூத்துப் பொலிகின்ற மலர்கள். பொதுப்படக் கூறியதனால், ஏற்கும் மலர்களையெல்லாம் கொள்க. ``கொண்டு விடும்`` என்பதில், விடு, துணிவுப் பொருண்மை விகுதி.

கொடுவிற் சிலைவேடர் கொல்லை புகாமல்
படுகுழிகள் கல்லுதல்பார்த் தஞ்சி நெடுநாகம்
தண்டூன்றிச் செல்லுஞ்சீர் ஈங்கோயே தாழ்சடைமேல்
வண்டூன்றுந் தாரான் மலை. #632
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கொல்லை - தினை, சோளம் முதலியவைகளை விளைவிக்கும் புன்செய் நிலம். அவற்றுள் யானை புகாமல் தடுக்கக் குறவர்கள் அப்பால் உள்ள இடங்களில் படுகுழிகள் தோண்டி, கழிக ளாலும், இலைகளாலும் அக்குழிகள் தெரியாதபடி மூடிவைப்பர். அதனையுணர்ந்து யானைகள் மரக் கிளைகளை முரித்துத் தண்டாக முன்னே ஊன்றிப் பார்த்துச் செல்லும். நாகம் - யானை. ``வண்டு ஊன்றும்`` என்பதில் ஊன்றுதல், கிளறுதல்.

கோங்கின் அரும்பழித்த கொங்கைக் குறமகளிர்
வேங்கைமணி நீழல் விளையாடி வேங்கை
வரவதனைக் கண்டிரியும் ஈங்கோயே தீங்கு
வரவதனைக் காப்பான் மலை. #633
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அழித்த - தோற்கச் செய்த. ``வேங்கை`` இரண்டில் முன்னது வேங்கை மரம்; பின்னது புலி, இது சொற்பின் வருநிலையணி. மணி - அழகு. `புலி வர, அதனைக் கண்டு இரியும்` என்க. இரிதல் - அஞ்சி நீங்குதல். ஈற்றடியில் ``வரவதனை`` என்பதில் அது, பகுதிப் பொருள் விகுதி.

வரவைக் காத்தலாவது, வாராமற் காத்தல்.

சந்தனப்பூம் பைந்தழையைச் செந்தேனில் தோய்த்தியானை
மந்தண் மடப்பிடியின் வாய்க்கொடுப்ப வந்ததன்
கண்களிக்கத் தான்களிக்கும் ஈங்கோயே தேங்காதே
விண்களிக்க நஞ்சுண்டான் வெற்பு. **#634**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பூ - அழகு. யானை, களிற்றியானை. `மந்தம்` என்பது ஈற்று அம்முக்கெட்டு நின்றது. மந்தம் - மெல்லிய நடை. தண் - குளிர்ச்சி. களிற்றுக்குத் தரப்படும் குளிர்ச்சி. மடம் - இளமை. ``கொடுப்ப`` என்றது, `கொடுக்க முயல` என்றபடி. தன் - அதனது. கண் களித்தல், கண்ணில் உவகை நீர் ததும்புதல். களிற்றின் அன்பு நோக்கிப் பிடி கண்களித்தது. பிடி கண்களித்ததைக் கண்டு களிறு ஆரவாரித்தது. கலித்தல் ஆரவாரித்தல், ``தான்`` என்றது களிற்றியானையை. தேங்குதல் - திகைத்தல். விண் - விண்ணோர், ஆகுபெயர்.

சந்தின் இலையதனுள் தண்பிண்டி தேன்கலந்து
கொந்தியினி துண்ணக் குறமகளிர் மந்தி
இளமகளிர் வாய்க்கொடுத்துண் ஈங்கோயே வெற்பின்
வளமகளிர் பாகன் மலை. **#635**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``குறமகளிர்`` என்பதை முதலில் வைத்தும், ``இளமகளிர் மந்திவாய்க் கொடுத்து`` என மாற்றி வைத்தும் உரைக்க. தண் - மென்மை. பிண்டி - தினை மா. கொந்தி - அளைந்து. குறமகளிர் அங்குள்ள மந்திகளுக்குக் கொடுத்து உண்கின்றார்கள்; இஃது அவர் களது முதுக்குறைவாகும். `வெற்பின் மகள்` என்பதை, ``வெற்பின் மகளிர்`` என்றது உயர்வு பற்றி வந்த பன்மை. அன்றிக் கங்கையும், இமவான் மகளாய், `ஐமவதி` எனப்படுகின்றாள் ஆதலின், அவ்விரு வரையும் குறித்ததுமாம். இப்பொருட்கு. `பாகன், ஒரு பகுதியிற் கொண்டவன்` என உரைக்க.

சாரற் குறத்தியர்கள் தண்மருப்பால் வெண்பிண்டி
சேரத் தருக்கி மதுக்கலந்து வீரத்
தமரினிதா உண்ணுஞ்சீர் ஈங்கோயே வெற்பின்
குமரன்முது தாதையார் குன்று. **#636**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சாரல் - இம்மலையின் பக்கம். தண் - குளிர்ச்சி. அஃதாவது, கண்ணிற்குத்

தரும் குளிர்ச்சி. அது வெண்மை, எனவே, மருப்பு யானைத் தந்தமாயிற்று. பிண்டி - மா. இது தினை மா, சேர நன்கு மசிந்து ஒன்றுபட. தருக்கி - மகிழ்ந்து. மது - தேன். வீரத் தமர் - வீரம் உடைய உறவினர்; என்றது, ஆடவரை. இனிது ஆக - மகிழ்ச்சி அடையும்படி. மகளிர் தங்கள் உதவியை நாடாது அவர்களே முயன்று இனிய உணவைப் பெற்று உண்ணுதலைக் கண்டு ஆடவர் மகிழ்வாரா யினர் என்க. இன்பம் - இருவர் தேவியருடன் இன்புற்றிருப்பான். குமரன்-மருகன், `அவன் மிக இளையனாயினும் அவனைப் பெற்ற தந்தை மிக முதியன்` என்னும் நயம் தோன்றுதற்கு. ``முதுதாதையார்`` என்றார் சிவபெருமானை. நன்றாய்ந்த நீணிமிர்சடை - முதுமுதல்வன்`` எனச் சங்கத்துச் சான்றோரும் *(புறம்.166)* கூறினார். ``குமரன் முது`` என்னும் சீரினை னகர ஒற்று நீக்கி அலகிடுக.

தாயோங்கித் தாமடருந் தண்சாரல் ஒண்கானம்
வேயோங்கி முத்தம் எதிர்பிதுங்கித் தீயோங்கிக்
கண்கன்றித் தீவிளைக்கும் ஈங்கோயே செஞ்சடைமேல்
வண்கொன்றைத் தாரான் வரை. **#637**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`தண் சாரல் ஒண்கானத்தில் தாய் ஓங்கி அடரும் வேய் ஓங்கிக் கண் கன்றி, முத்தம் எதிர் பிதுங்கித் தீ ஓங்கித் தீ விளைக்கும் ஈங்கோய்` என இயைத்துக் கொள்க. வேய் - மூங்கில் தாய் - பல பக்கங்களிலும் தாவி. தாம், அசை. ``தாய் ஓங்கி அடரும் வேய்`` எனக் கூறியது முன்னர் அதன் வளர்ச்சியையும், பின்னரும் ``ஓங்கி`` என்பது முதலாகக் கூறியன அதன் விளைவுகளையும் விளக்கியவாறு. கண் - கணுக்கள். கன்றுதல், உறுதிப்படுதல். கன்றி - கன்றுதலால். பிதுங்கி - பிதுங்கப் பெற்று. முன்னர், ``தீ ஓங்கி`` என்றது, ``கன்றி, பிதுங்கி`` என்றவற்றோடு ஒருங்கு நிகழ்ந்ததையும், பின்னும் `தீவிளைக்கும்` என்றது, வேய்கள் சாரலில் விளைக்கும் விளைவையும் குறித்தன.

செடிமுட்டச் சிங்கத்தின் சீற்றத்தீக் கஞ்சிப்
பிடிபட்ட மாக்களிறு போந்து கடம்முட்டி
என்னேசீ என்னுஞ்சீர் ஈங்கோயே ஏந்தழலிற்
பொன்னேர் அனையான் பொருப்பு. **#638**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சிங்கத்தின் சீற்றத்தீக்கு அஞ்சிப் பிடி செடி முட்ட, மாக்களிறு அட்டம் போந்து கடம் முட்டி, என்னே சீ என்னும் ஈங் கோய்` எனக் கூட்டுக.

முட்ட - சேர; சேர்ந்து மறைய முயல, அட்டம் போந்து - குறுக்காகப் புகுந்து. அஃதாவது பிடியைக் காக்கும் முறை யில் புகுந்து. கடம் - காட்டில்; அஃதாவது சிங்கம் வாழும் இடத்தில். முட்டி - சேர்ந்து. அங்குச் சிங்கம் காணப்படாமையால் அதனைக் களிறு `என்னே! சீ!` என்று இகழ்ந்தது. ஏந்து அழல் - எரிகின்ற நெருப்பு. நேர் ``அனையான்`` என்பது ஒருபொருட் பன்மொழி.

சுனைநீடு தாமரையின் தாதளைந்து சோதிப்
புனைநீடு பொன்னிறத்த வண்டு மனைநீடி
மன்னி மணம்புணரும் ஈங்கோயே மாமதியம்
சென்னி அணிந்தான் சிலம்பு. **#639**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தாது - மகரந்தம். சோதிப் புனை - ஒளியாகிய அழகு. ``மனை`` என்றது முதற்கண் கூறிய தாமரை மலரே.

செந்தினையின் வெண்பிண்டி பச்சைத்தே னாற்குழைத்து
வந்தவிருந் தூட்டும் மணிக்குறத்தி பந்தியாத்
தேக்கிலைக ளிட்டுச் சிறப்புரைக்கும் ஈங்கோயே
மாக்கலைகள் வைத்தான் மலை. **#640**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பிண்டி - மா, பச்சை - காய்ச்சப்படாதது. மணி - அழகு. சிறப்பு - உபசாரம். மாக்கலைகள் - உயர்ந்த நூல்கள். வைத்தான் - உலகர் பொருட்டு ஆக்கி வைத்தவன். முதல் அடி முரண்தொடையும், விரோத அணியும் பெற்றது.

தடங்குடைந்த கொங்கைக் குறமகளிர் தங்கள்
இடம்புகுத்தங் கின்நறவம் மாந்தி உடன்கலந்து
மாக்குரவை ஆடி மகிழ்ந்துவரும் ஈங்கோயே
கோக்குரவை ஆடிகொழுங் குன்று. **#641**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தடம் - சுனை. குடைந்த - முழுகிய. ``கொங்கை மகளிர்`` என்றது மங்கைப் பருவத்தினர் ஆதல் குறிக்கும்படி. நறவம் - தேன். உடன் - பலர் திரண்டு. ``கோக் குரவை`` என்பதில், குரவை, `கூத்து` எனப் பொதுப் பொருள் தந்தது. கோக் குரவை - தலையாய கூத்து. பின் வந்த ``ஆடி`` என்பது பெயர்.

தாமரையின் தாள்தகைத்த தாமரைகள் தாள் தகையத்

தாமரையிற் பாய்ந்துகளுந் தண்புறவில் தாமரையின்
ஈட்டம் புலிசிதறும் ஈங்கோயே எவ்வுயிர்க்கும்
வாட்டங்கள் தீர்ப்பான் மலை. #642
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தாமரையின் தாள் தகைத்த தாமர் - தாமரை மலரில் தாள்களை இணைத்துக் கட்டிய மாலையை அணிந்தவர்கள்; அந்தணர் கள். ஐ - அழகு. இஃது ஆகுபெயராய், அழகையுடைய இளஞ்சிறார் களைக் குறித்தது. தாமர்தம் ஐகள், அந்தணச்சிறார்கள். தாள் தகைய - தங்கள் கால்கள் வலிக்கும்படி. அரையில். பாய்ந்து - `அரை` என்னும் ஒருவகை மரத்தின்மேற் பாய்ந்து. உகளும் புறவு - விளையாடுகின்ற காடு. தா மரையின் ஈட்டம் - தாவி ஓடுகின்ற `மரை` என்னும் மானின் கூட்டத்தை. சிதறும் - அழிக்கின்ற. வாட்டம் - மெலிவு. ஈங்கோய் மலையைச் சூழ அந்தணர்கள் இருக்கையுள்ளதைக் குறித்தவாறு. இவ்வெண்பா, சொற்பின் வருநிலையணி பெற்றது.

தெள்ளகட்ட பூஞ்சுனைய தாமரையின் தேமலர்வாய்
வள்ளவட்டப்பாழி மடலேறி வெள்ளகட்ட
காராமை கண் படுக்கும் ஈங்கோயே வெங்கூற்றைச்
சேராமைச் செற்றான் சிலம்பு. #643
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அகடு - நடுவிடம். தெள் அகட்ட சுனை - தெளிவான நடுவிடத்தையுடைய சுனை. தேன் + மலர் = தேமலர். `வாயாகிய வட்டம்` என்க. வள்ள வட்டம் - கிண்ணம் போலும் வட்டம். பாழி - உள் ஆழ்ந்த. கடல் - இதழ் வெள் அகட்ட காராமை - வெண்மையான வயிற்றையுடைய கரிய ஆமை. குறிப்பு: பழம் பதிப்புக்களில் காணப்படாதனவாகிய இப் பதினைந்து பாடல்களும் திருப்பனந்தாள் ஷ்ரீகாசி மடத்துப் பதிப்பில் கண்டு, பின் இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

தேன்பலவின் வான்சுளைகள் செம்முகத்த பைங்குரங்கு
தான்கொணர்ந்து மக்கள்கை யிற்கொடுத்து வான்குணங்கள்
பாராட்டி யூட்டுஞ்சீர் ஈங்கோயே பாங்கமரர்
சீராட்ட நின்றான் சிலம்பு. #644
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பாங்கு அமரர் சீராட்ட நின்றான் சிலம்பு, குரங்கு பலவின் சுளைகளை

மக்கள் கையில் கொடுத்து ஊட்டும் ஈங்கோயே` எனக் கூட்டுக. தேன் - இனிமை, பலா - பலாமரம். கருங்குரங்கு என்பது இங்கு பைங்குரங்கு எனப்பட்டது. வான் குணங்கள் - மக்க ளுடைய சிறப்புப் பண்புகள். சீராட்டுதல் என்பது ஒரு சொல். புகழ்தல் என்பது அதன் பொருள். பாங்கு - பக்கம். சந்நிதி என்பது பொருள்.

தேன்மருவு பூஞ்சுனைகள் புக்குச் செழுஞ்சந்தின்
கானமர்கற் பேரழுகு கண்குளிர மேனின்
றருவிகள்தாம் வந்திழியும் ஈங்கோயே வானோர்
வெருவுகடல் நஞ்சுண்டான் வெற்பு. **#645**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சுனைகள் புக்கு என்பதன் பின் `ஆடும் மகளிர்` என ஒரு சொல் வருவிக்க. சுனை ஆடும் மகளிர் காட்டின் அழகை கண் குளிரக் காணும்படி அருவிகள் வந்து இழியும் ஈங்கோய் என்க. சந்தது - சந்தன மரம். கான் - காடு. சந்தனக் காட்டின் பேரழகு என்க.

தோகை மயிலினங்கள் சூழ்ந்து மணிவரைமேல்
ஒகை செறிஆயத் தோடாட நாகம்
இனவளையிற் புக்கொளிக்கும் ஈங்கோயே நம்மேல்
வினைவளையச் செற்றுகந்தான் வெற்பு. **#646**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஓகை செறி ஆயம் - உவகை மிகுந்த மகளிர் கூட்டம் இனவளை - கூட்டமாய் உள்ள புற்று. வினை வளையைச் செற்று - முன் செய்த வினை வந்து பற்றும் பொழுது அவற்றை அழித்து.

நறவம் நனிமாந்தி நள்ளிருட்கண் ஏனம்
இறவி லியங்குவான் பார்த்துக் குறவர்
இறைத்துவலை தைத்திருக்கும் ஈங்கோயே நங்கை
விரைத்துவலைச் செஞ்சடையான் வெற்பு. **#647**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நறவம் - தேன். ஏனம் - பன்றி. இனத்து வலை தைத் திருக்கும் - பலவாய வலைகளை அமைத்திருக்கின்ற (ஈங்கோய்). நங்கை - கங்கை. விரை - துவலை, மணம் பொருந்திய நீர்த்துளிகள். இரவு என்பது எதுகை நோக்கி இறவு எனத் திரிந்தது.

நாக முழைநுழைந்த நாகம்போம் நல்வனத்தில்
நாகம் விழுங்க நடுக்குற்று நாகந்தான்

மாக்கையால் மஞ்சுரிஞ்சும் ஈங்கோயே ஓங்கிசெந்
தீக்கையால் ஏந்தி சிலம்பு. **#648**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நாகமுழை நுழைந்த நாகம் - மலைக் குகையில் நுழைந்த மலைப்பாம்பு. போய் - வெளியே புறப்பட்டுச் சென்று. நாகம் விழுங்க - குரங்கை விழுங்க. நாகம் மாக்கையால் மஞ்சு உரிஞ்சும் - யானை தனது பெரிய கையால் மேகத்தைத் தடவுகின்ற. இது சொற்பின் வருநிலையணி.

நாகங் களிறுநுங்க நல்லுழுவை தாமரையின்
ஆகந் தழுவி அசைவெய்த மேகங்
கருவிடைக்க ணீர்சோரும் ஈங்கோயே ஓங்கு
பொருவிடைக்க ணூர்வான் பொருப்பு. **#649**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நாகம் களிறு நுங்க - மலைப்பாம்பு யானையை விழுங்க. உழுவை - புலி. தாமரையின் ஆகம் தழுவிட - தாவிச் செல்லு கின்ற மானின் உடம்பைத் தழுவி. அசைவு எய்த - தங்கியிருக்க. மேகம் கருவிடைக் கண் நீர் சொரியும் - சூல் கொண்ட மேகம் அச் சூலினின்றும் மழையைப் பொழிய. மழை பெய்யும்பொழுது பாம்பு யானையை விழுங்குதல் முதலியவை நிகழ்கின்றன என்பது கருத்து.

பணவநிலைப் புற்றின் பழஞ்சோற் றமலை
கணவனிடந்திட்ட கட்டி உணவேண்டி
எண்கங்கை ஏற்றிருக்கும் ஈங்கோயே செஞ்சடைமேல்
வண்கங்கை ஏற்றான் மலை. **#650**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பணவம் - பாம்பு. புற்றின் பழஞ்சோறு - புற்றாஞ் சோறு என வழங்கும். கணவன் - ஆண் கரடி. இடந்து - பெயர்த்துக் கொணர்ந்து. இட்டகட்டி - இட்ட சோற்றுத்திரள். எண்கு - பெண் கரடி.

பன்றிபருக்கோட்டாற் பாருழுத பைம்புழுதித்
தென்றி மணிகிடப்பத் தீயென்று கன்றிக்
கரிவெருவிக் கான்படரும் ஈங்கோயே வானோர்
மருவரியான் மன்னும் மலை. **#651**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பன்றி, காட்டுப் பன்றி. பருக்கோடு - பருத்த கொம்பு. புழுதித் தென்றி -

மண்மேடு. மணி - மாணிக்கம். கன்றி - மனம் நைந்து. கரி - யானை.

பாறைமிசைத் தன்நிழலைக் கண்டு பகடென்று
சீறி மருப்பொசித்த செம்முகமாத் தேறிக்கொண்
டெல்லே பிடியென்னும் ஈங்கோயே மூவெயிலும்
வில்லே கொடுவெகுண்டான் வெற்பு. **#652**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நிழல் - வெயில் காரணமாகத் தோன்றுகின்ற நிழல். பகடு - வேறோர் யானை. மருப்பு ஒசித்த - பாறை மேலே முட்டித் தன் கொம்பை ஒடித்துக் கொண்ட -செம்முகமா- உதிரம் ஒழுகுகின்ற முகத்தை உடைய யானை. எல்லே - அந்தப் பகற்பொழுதிலே. பிடி என்னும் - பெண் யானை என்று மகிழ்கின்ற.

பிடிபிரிந்த வேழம் பெருந்திசைநான் கோடிப்
படிமுகிலைப் பல்காலும் பார்த்திட் டிடரா
இருமருப்பைக் கைகாட்டும் ஈங்கோயே வானோர்
குருவருட்குன் றாய்நின்றான் குன்று. **#653**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பிடி - பெண் யானை. வேழம் - ஆண் யானை. இடரா - துன்பம் உடையதாய். இருமருப்பைக் கை காட்டும் - தனது இரு தந்தங்களையும் தும்பிக்கையையும் காட்டி அழைக்கின்ற. குரு அருட் குன்று - குரு மூர்த்தியாகிய அருள்மலை.

பொருத கரியின் முரிமருப்பிற் போந்து
சொரிமுத்தைத் தூநீரென் றெண்ணிக் கருமந்தி
முக்கிவிக்கி நக்கிருக்கும் ஈங்கோயே மூவெயிலும்
திக்குகக்கச் செற்றான் சிலம்பு. **#654**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முரி மருப்பிற் போந்து - முரிந்த மருப்பினின்றும் வெளிப்பட்டு தூ நீர் என்று - மழைநீர் என்று நினைத்து. கருமந்தி - கருங் குரங்கு (பெண்) முக்கி விக்கி நக்கு இருக்கும் - முழுகியும் பருகியும் பிற குரங்குகள் நகைக்க இருக்கின்ற. ஒக என்பது ஒக்கு எனத் திரிந்து வந்தது. திக்கு உகக்க - எட்டுத் திக்கிலும் உள்ளவர்கள் விரும்பும்படி.

மறவெங் களிற்றின் மருப்புகுத்த முத்தம்
குறவர் சிறார்குடங்கைக் கொண்டு நறவம்
இளவெயில்தீ யட்டுண்ணும் ஈங்கோயே மூன்று

வளவெயில்தீ யீட்டான் மலை. #655
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மறம் - வீரம். குடங்கை - உள்ளங்கை. கொண்டு - எடுத்துக்கொண்ட பின்பு. முத்துக்களை வாரிய குறங்கினார் தேனை இளவெயிலாகிய நீரில் காய்ச்சி உண்கின்றனர் என்க.

மலைதிரிந்த மாக்குறவன் மான்கொணர நோக்கிச்
சிலைநுதலி சீறிச் சிலைத்துக் கலைபிரிய
இம்மான் கொணர்தல் இழுக்கென்னும் ஈங்கோயே
மெய்ம்மான் புணர்ந்தகையான் வெற்பு. #656
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சிலைநுதலி - வில் போன்ற நெற்றியினை உடைய குறத்தி. சிலைத்து - கடிந்து பேசி. கலை - ஆண் மான். குறவன் பெண் மானைப் பிடித்து வந்ததற்கு குறத்தி சினம் கொண்டு பேச ஆண் மான் விலகிச் சென்றது.

மரையதளும் ஆடும் மயிலிறகும் வேய்ந்த
புரையிதணம் பூங்கொடியார்புக்கு நுரைசிறந்த
இன்நறவுண் டாடி இசைமுரலும் ஈங்கோயே
பொன்நிறவெண் ணீற்றான் பொருப்பு. #657
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மரை அதள் - மான் தோல். புரை இதணம் - உயர்ந்த பரண். இன் நறவு - இனிய தேன்.

மலையர் கிளிகடிய மற்றப் புறமே
கலைகள் வருவனகள் கண்டு சிலையை
இருந்தெடுத்துக் கோல்தெரியும் ஈங்கோயே மாதைப்
புரிந்திடத்துக் கொண்டான் பொருப்பு. #658
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மலையர் - மலையிலே உள்ள வேடர். கலைகள் - மான்கள். சிலை - வில். கோல் - அம்பு.

மத்தக் கரிமுகத்தை வாளரிகள் பீறவொளிர்
முத்தம் பனிநிகர்க்கும் மொய்ம்பிற்றால் அத்தகைய
ஏனற் புனம்நீடும் ஈங்கோயே தேங்குபுனல்
கூனற் பிறையணிந்தான் குன்று. #659
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மதக் கரி` என்பது, ``மத்தக் கரி`` என விரித்தல் பெற்றது. கரி - யானை. வாள் அரிகள் - கொடிய சிங்கங்கள். முத்தம் - முத்து. இவை யானையின் மத்தகத்திலிருந்து உதிர்ந்தவை. பனி - பனித்துளிகள், மொய்ம்பு - வலிமை. அஃது இங்கு `சிறப்பு எனப் பொருள் தந்தது. `மொய்ம்பிற்றாம் ஏனற் புனம்` என ஒரு தொடராக ஓதற்பாலதனை ``மொய்ம்பிற்று; அத்தகைய ஏனற் புனம்`` என இரு தொடராக ஓதினார், அச்சிறப்பை வலியுறுத்தற்கு. ஆல், அசை. ஏனல்- தினை. `புனலையும், பிறையையும் அணிந்தான்` என்க.

மந்தி இனங்கள் மணிவரையின் உச்சிமேல்
முந்தி இருந்து முறைமுறையே நந்தி
அளைந்தாடி ஆலிக்கும் ஈங்கோயே கூற்றம்
வளைந்தோடச் செற்றான் மலை. **#660**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மணி வரை - இரத்தின மலை. இஃது இம்மலையின் ஒரு பகுதியில் உள்ளதாகக் கூறப்பட்டது. `முறை முறையே முந்தி` - என மாற்றிக்கொள்க. முறைமுறையே முந்துதலாவது, `நான் முன்னே, நான் முன்னே` என ஒன்றை ஒன்று நந்தி - மகிழ்ந்து முந்து அணைதல் - ஒன்றை ஒன்று தழுவுதல். ஆலிக்கும் - ஆரவாரிக்கும் வளைந்து ஓடுதல் - மறைந்து ஓடுதல்.

மந்தி மகவினங்கள் வண்பலவின் ஒண்சுளைக்கண்
முந்திப் பறித்த முறியதனுள் சிந்திப்போய்த்
தேனாறு பாயுஞ்சீர் ஈங்கோயே செஞ்சடைமேல்
வானாறு வைத்தான் மலை. **#661**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மக இனங்கள் - குட்டிக் கூட்டங்கள். பறித்த - பிளந்து எடுத்த. முறி - சிறு துண்டுகள். ``உள்`` என்னும் ஏழன் உருபை. `இன்` என்னும் ஐந்தன் உருபாகத் திரிக்க. போய் - பல இடங்களிலும். தேன் - பலாச்சுளைச் சாறு `ஆறாகப் பாயும்` என ஆக்கம் வருவிக்க. ``உள்`` என்பதனைத் திரியாமலே, `சுளைத் துண்டுகளுக்குள்ளே தேனாகிய ஆறு பாயும்` என உரைத்தலும் ஆம்.

முள்ளார்ந்த வெள்ளிலவம் ஏறி வெறியாது
கள்ளார்ந்த பூப்படியுங் கார்மயில்தான் ஒள்ளார்
எரிநடுவுட் பெண்கொடியார் ஏய்க்கும்ஈங் கோயே

புரிநெடுநூல் மார்பன் பொருப்பு. #662
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முள்ளிலவின் பூச் சிவந்து நெருப்புப் போலக் காணப் படும். அதனால் அவற்றின் நடுவே நிற்கும் மயில் தீயின் நடுவில் தீங்கின்றி நிற்கும் கற்புடை மகளிர் போலத் தோன்றாநின்றது. ``வெள்ளிலவு`` என்றது அம்மரத்தின் நிறம் வெண்மையாய் இருத்தல் பற்றி. வெறித்தல் - வெற்றிடத்தில் நிற்றல். வெறியாது - வெற்றிடத்தில் செல்லுதல். கள் - தேன். பூப் படிதல் - பூக்களுக்கு நடுவே மூழ்குவது போல நிற்றல். கார் மயில் - கரிய மயில், தான், அசை. ஒள் எரி - ஒளி பொருந்திய தீ. ஆரெரி - தீண்டுதற்கரிய நெருப்பு.

வளர்ந்த இளங்கன்னி மாங்கொம்பின் கொங்கை
அளைந்து வடுப்படுப்பான் வேண்டி இளந்தென்றல்
எல்லிப் புகநுழையும் ஈங்கோயே தீங்கருப்பு
வில்லிக்குக் கூற்றானான் வெற்பு. #663
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கன்னி மாங்கொம்பின் கொங்கை அணைந்து`` என்பது கன்னிப் பெண்ணுக்கும், மாங்கொம்பிற்கும் ஆய சிலேடை. பெண்மேற் செல்லுங்கால், மாங்கொம்பு - மாந்தளிர்போலும் மேனியை உடைமையால் மாங்கொம்பு போல்பவள். கொங்கை - தனம். வடுப்படுத்தல் - குற்றம் உண்டாக்குதல். மாங்கொம்பின் மேற் செல்லுங்கால், கன்னி - புதுமை. கொங்கை = கொங்கு + ஐ. வாசனையை வடுப்படுத்தல் - மாவடுவை உதிர்த்தல். `அளைதல் - அளவளாவிக் கலத்தல். எல்லி - இரவு` இவை இரண்டிற்கும் பொது. இதில், தற்குறிப்பேற்றத்தோடு சிலேடை சேர்ந்து வந்தது. சேர்வையணி. கருப்பு வில்லி - கரும்பை வில்லாக உடைய மன்மதன்.

வான மதிதடவல் உற்ற இளமந்தி
கான முதுவேயின் கண்ணேறித் தானங்
கிருந்துயரக் கைநாட்டும் ஈங்கோயே நம்மேல்
வருந்துயரம் தீர்ப்பான் மலை. #664
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உற்ற - விரும்பி. ``கண்`` என்றது உச்சியிடத்தை. சந்திரனை மூங்கிலின் உச்சியில் இருப்பதாக மயங்கி. அதன் அழகைக் கண்டு அதனைக் கையால் தடவிப் பார்க்க விரும்பிய இள மந்தி, அங்குச் சென்று

இல்லாமையால் தன் ஆசையால் மேலே கையை நீட்டிப் பார்ப்பதாயிற்று. இதில் மயக்க அணியும், தொடர்புயர்வு நவிற்சியணியும் சேர்ந்து வந்தமையால் சேர்வை யணி.

வேய்வனத்துள் யானை தினைகவர வேறிருந்து
காய்வனத்தே வேடன் கணைவிசைப்ப வேயணைத்து
மாப்பிடிமுன் ஒட்டும்ஈங் கோயே மறைகலிக்கும்
பூப்பிடிபொற் றாளான் பொருப்பு. **#665**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வேய் வனம் - மூங்கிற் காடு. அதனிடையே தினை விதைக்கப்பட்டிருந்தது என்க. யானை, களிற்றியானை. வேறு - மறை வான ஒரு தனியிடம். காய் வனம் - வெயில் கடுமையாகக் காய்கின்ற காடு. விசைப்ப - வேகமாக ஏவ. பிடி வேய் அணைத்து முன் ஓட்டும்- பெண் யானை மூங்கிலை வளைத்து களிற்றியானை. வேறு - மறைவன ஒரு தனியிடம். காய் வனம் - வெயில் கடுமையாகக் காய்கின்ற காடு. விசைப்ப - வேகமா ஏவ. பிடி வேய் அணைத்து முன் ஓட்டும் - பெண் யானை மூங்கிலை வளைத்து அக்கிளை களிற்றின்மேல் படாதபடி விலகி ஓடச் செய்கின்ற. மறை கலிக்கும் தாள் - வேதமாகிய சிலம்பு ஒலிக்கின்ற திருவடி. பூப்பிடி - பூவின் தன்மையைக் கொண்ட. பொன்- அழகு.

வழகிதழ்க் காந்தள்மேல் வண்டிருப்ப ஒண்தீ
முழுகியதென் றஞ்சிமுது மந்தி பழகி
எழுந்தெழுந்து கைநெரிக்கும் ஈங்கோயே திங்கட்
கொழுந்தெழுந்த செஞ்சடையான் குன்று. **#666**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வழகு - வழுவழுக்கின்ற. அஃதாவது, மெத்தென்ற. காந்தள், செங்காந்தள் மலர். `தீயின்கண்` என ஏழாவது விரிக்க. பழகி- பன்முறையாக. இது திரிபதிசய அணி. திருஈங்கோய் மலை எழுபது முற்றிற்று

நக்கீரதேவ நாயனார் - திருவலஞ்சுழி மும்மணிக்கோவை

வணங்குதும் வாழி நெஞ்சே புணர்ந்துடன்
பொருகடல் முகந்து கருமுகிற் கணம்நற்
படஅர வொடுங்க மின்னிக் குடவரைப்
பொழிந்து கொழித்திழி அருவி குணகடல்
மடுக்குங் காவிரி மடந்தை வார்புனல்
உடுத்த மணிநீர் வலஞ்சுழி
அணிநீர்க் கொன்றை அண்ணல தடியே.
#667

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திருவலஞ்சுழி காவிரியின் தென்கரையில் உள்ள பாடல் பெற்ற தலங்களில் ஒன்று. `நெஞ்சே வலஞ்சுழி அண்ணலது அடியே வணங்குதும்; வாழி` என இயைத்து முடிக்க. கருமுகிற் கணம் உடன் புணர்ந்து பொரு கடல் முகந்து மின்னிக் குடவரைப் பொழிந்து கொழித்து இழி அருவி குண கடல் மடுக்கும் காவிரி` எனவும் இயைக்க. உடன் புணர்ந்து - ஒரு சேரச் சேர்ந்து. பொரு கடல் - அலை யால் கரையைத் தாக்குகின்ற கடல். கடல், அதன் நீரைக் குறித்தமை யால் ஆகுபெயர். மின்னல் தோன்றிய உடன் இடி முழக்கம் கேட்கும் ஆதலால் அதனை அறிந்த பாம்புகள் புற்றில் ஒடுங்குபவாயின. குடவரை - மேற்கு மலை; சைய மலை. பொழிந்து - பொழிதலால். `மணிகளைக் கொழித்து` எனக் கொழித்தற்குச் செயப்படு பொருள் வருவிக்க. குண கடல் - கீழ்க்கடல். `கடலை மடுப்பிக்கும் - உட்கொள் விக்கும் காவிரி` என்க. ``காவிரி`` என்றது அவ்யாற்றினை. அதனை அறம் வளர்க்கும் மடந்தையாக உருவகித்து, கடலைப் பசித்து நிற்கும் இரவலனாக உருவகம் செய்யாமையால் இஃது ஏகதேச உருவகம். காவிரியினது நீரால் சூழப்பட்டமையின் மணி நீரை உடைய வலஞ்சுழி யாயிற்று`` மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சூழி`` *1* என ஞானசம்பந்தரும் அருளிச் செய்தார். காவிரியாறு இத்தலத்துக்கு அருகில் ஓடி வந்து பாதலத்தில் வீழ்ந்து விட்டதை `ஏரண்டர்` என்னும் முனிவர் இறங்கி வெளிப்படச் செய்யக் காவிரி மேலே வலம் சுழித்து எழுந்தமையால் `வலஞ்சுழி` எனப் பெயர்பெற்றது. என்பது தலபுராணம். அணி நீர் - அழகிய தன்மை. கொன்றை, முன்னர் அதன் மலரையும், பின்னர் அம்மலரால் ஆகிய மாலையையும் குறித்தலால் இருமடியாகுபெயர். `எனது வேண்டுகோளுக்கு இணங்கினமையால் நீ வாழ்வாயாக` என்க.

அடிப்போது தம் தலைவைத் தவ்வடிகள் உன்னிக்
கடிப்போது கைக்கொண்டார் கண்டார் முடிப்போதா
வாணாகஞ் சூடும் வலஞ்சுழியான் வானோரும்
காணாத செம்பொற் கழல். **#668**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வானோரும் காணாத, வலஞ்சுழியான் செம்பொற் கழலை அவ் அடிப் போதினைத் தம் தலைமேல் வைத்து, அவ்அடி களை *(மனத்தில்)* உன்னிக் கடிப்போது *(மணம் மிக்க மலர்களைக்)* கைக்கொண்டாரே *(கைக்கொண்டு தூவி வழிபட்டவர்களே)* கண்டார்; *(ஏனையோர் கண்டிலர்)* எனக் கூட்டி முடிக்க.
``தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான்`` *2* எனச் சேக் கிழாரும் அருளிச் செய்தார். போதாக - சூடும் பூவாக. வாள் நாகம் - கொடிய பாம்பு.

கழல்வண்ண மும்சடைக் கற்றையும் மற்றவர் காணகில்லாத்
தழல்வண்ணங் கண்டே தளர்ந்தார் இருவர் அந் தாமரையின்
நிழல்வண்ணம் பொன்வண்ணம் நீர்நிற வண்ணம் நெடியவண்ணம்
அழல்வண்ணம் முந்நீர் வலஞ்சுழி ஆள்கின்ற அண்ணலையே. **#669**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`அம் தாமரையின் நிழல் வண்ணம்... அழல் வண்ணம் இவற்றோடு வலஞ்சுழியை ஆள்கின்ற அண்ணலை இருவர் தாம் கழல் வண்ணமும், சடைக் கற்றையும் காணகில்லாத் தழல் வண்ணராகக் கண்டே தளர்ந்தார்` என இயைத்துமுடிக்க. தாமரை வண்ணம் முதலாகக் கூறியன சிவபெருமான் எவ்வண்ணமும் உடையன் ஆதலைக் குறித்தது.
......வெளியாய், கரியாய்,
பச்சையனே செய்ய மேனியனே *
எனத் திருவாசகத்திலும் வந்தது. முந்நீர் - கடல்; `கடல் போலும் காவிரியின் வலஞ்சுழி` என்க.

அண்ணலது பெருமை கண்டனம் கண்ணுதற்
கடவுள் மன்னிய தடம்மல்கு வலஞ்சுழிப்
பனிப்பொருட் பயந்து பல்லவம் பழிக்கும்
திகழொளி முறுவல் தேமொழிச் செவ்வாய்த்
திருந்திருங் குழலியைக் கண்டு
வருந்திஎன் உள்ளம் வந்தஅப் போதே. **#670**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`குழலியைக் கண்டு என் உள்ளம் வருந்தி வந்த அப்போதே அண்ணலது பெருமை கண்டனம்` என இயைத்து முடிக்க. இது தோழி வெறி விலக்கிக் கூறியது. அண்ணல், தலைவன். தடம் மல்கு - பொய்கைகள் மிக்க. வைசேடிகர் பண்பு, தொழில் முதலிய அனைத்தையும் `பொருள்` எனக் கூறும் முறைபற்றிப் பண்பினை இங்கு, ``பொருள்`` என்றார். பனி - குளிர்ச்சி. குளிர்ச்சியாகிய பண்பு. காவிரி வலஞ்சுழித்து ஓடுதலால் அதனைச் சார்ந்து விளங்கும் தலம் குளிர்ச்சியைத் தருவதாயிற்று. `வலஞ்சுழிப் பொருள்` என இயையும். பயத்தலுக்கும், பழித்தலுக்கும் கருவியாய `மேனியால்` என்பது வருவிக்க. `மேனி தரும் குளிர்ச்சி மனத்திற்கு மாம் என்க. பல்லவம் - தளிர், திருந்துதல், நன்கு சீவிமுடித்தல். தலைவனோடு களவில் இயற்கைப் புணர்ச்சி எய்தி தலைவி வந்த காலத்தில் தோழி அவளது வேறுபாட்டைக் கண்டு வருந்தினளாயினும், `எட்டியும், சுட்டியும் காட்டப்படாத குலத்தையுடையவளாகிய இவளது உள்ளத்தைப் புதுவதாக ஒருமுறை கண்டபொழுதே முற்றிலும் கொள்ளை கொண்டவன் பல்லாற்றானும் ஒப்புயர்வற்ற தலைவனே யாவன்` என உய்த்துணர்ந்து மகிழ்ந்தாளாதலின், அதனைத் தலைவிதன் வேறுபாடு தெய்வத்தான் ஆயதாகக் கருதி வெறியாடத் தொடங்கியோர்முன் செவிலி கேட்பக் கூறினாள் என்க.

போதெலாம் பூங்கொன்றை கொண்டிருந்த பூங்கொன்றைத்
தாதெலாம் தன்மேனி தைவருமால் தீதில்
மறைக்கண்டன் வானோன் வலஞ்சுழியான் சென்னிப்
பிறைக்கண்டங் கண்டணைந்த பெண். **#671**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பூங் கொன்றை`` இரண்டில் முன்னது அழகிய கொன்றை மரம்; பின்னது `கொன்றைப் பூ` எனப் பின் முன்னாக மாற்றிக் கொளற்பாலது. போது - பொழுது. போதெலாம் - `எப் பொழுதும் தைவரும்` என முடிக்க. ``பெண்`` என்றது, `என் பெண்` என்றபடி. `என் பெண் பிறைக் கண்டம் கண்டு அணைந்த பின், கொன்றை மரம் கொண்டிருக்கின்ற கொன்றப் பூவைப் பறித்து அதன் மகரந்தத்தை உடம்பு முழுதிலும் எப்பொழுதும் பூசிக்கொண்டே யிருக்கின்றாள் என்க. தைவருதல் - தடவுதல். மறைக்கண்டன் - வேதம் முழங்கு மிடற்றினை உடையவன். வானோன் - தேவன். கண்டம் - துண்டம். அணைதல் - மீளுதல். இது, தலைவியது ஆற்றாமைக்குச் செவிலி நொந்து கூறியது.

பெண்கொண் டிருந்து வருந்துங்கொ லாம் பெரு மான்திருமால்
வண்கொண்ட சோலை வலஞ்சுழி யான் மதி சூடிநெற்றிக்
கண்கொண்ட கோபங் கலந்தன போல்மின்னிக் கார்ப்புனத்துப்
பண்கொண்டு வண்டினம் பாடநின் றார்த்தன **#672**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`புனத்து வண்டினம் பாடப் பன்முகில் மின்னி ஆர்த்தன; பெண் கொண்டிருந்து வருந்தும்` என இயைத்து, `என்செய்கேன்` என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க. பெண் தலைமை பற்றித் தலைவியையே குறித்தது. `திருமாலின் வண்ணம் கொண்ட சோலை என்க. திருமாலின் வண்ணம் கருமை. கொண்டு - இவற்றை நினைத்துக்கொண்டு. கொல், ஆம் அசைகள். ``கோபம்`` என்பது, கோபத்தால் தோன்றும் தீயைக் குறித்தமையால் கருவியாகுபெயர். கார்ப்புனம் - இருளால் கருமையுடைத்தாகிய புனம், ``வண்டுகள் பாட`` என்றது. ``கார்ப் பருவத்தில் பூக்கள் பூத்தன`` என்பதைக் குறித்தவாறு. இது, தலைவன் நீடக் கார்ப்பருவம் கண்டு, ``தலைவி ஆற்றாள்`` எனத் தோழி நொந்து தன்னுள்ளே சொல்லியது.

முகிற்கணம் முழங்க முனிந்த வேழம்
எயிற்றிடை அடக்கிய வெகுளி ஆற்ற
அணிநடை மடப்பிடி அருகுவந் தணைதரும்
சாரல் தண்பொழில் அணைந்து சேரும்
தடம்மாசு தழீஇய தகலிடம் துடைத்த
தேனுகு தண்தழை தெய்வம் நாறும்
சருவரி வாரல்எம் பெருமநீர் மல்கு
சடைமுடி ஒருவன் மருவிய வலஞ்சுழி
அணிதிகழ் தோற்றத் தங்கயத் தெழுந்த
மணிநீர்க் குவளை அன்ன
அணிநீர்க் கருங்கண் ஆயிழை பொருட்டே. **#673**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`எம் பெரும, ஆயிழை பொருட்டு, *(நீ)* சரு வரி வாரல்` என இயைத்து முடிக்க. `இடி முழக்கத்தைச் செய்த முகிற் கூட்டத்தைக் களிற்றியானை. `வேறு யானை` என்று கருதிச் சினந்து அதனைத் தன் தந்தங்களுக்கிடையே கோத்துக் கொள்ள, தவறாகக் கொண்ட அதன் சினத்தை ஆற்றுதற்குப் பிடியானை அதன் அருகு வந்து அணையும் தண்பொழிலில் தானும் வந்து சினம் தணிந்த களிற்றின் மதம் ஒழுகப்

பெறும் வழி மாசுபட்டதாக அதனைத் தம்மேல் ஒழுகிய தேனைச் சிந்தித்தூய்மைப் படுத்துகின்ற தண்ணிய தழைகள் தெய்வ மணம் கமழ்கின்ற, தேவர் உண்டாட்டுச் செய்கின்ற வழியிலே வருதல் வேண்டா` எனப் பொருள் காண்க. சரு -தேவர் உண்ணும் உணவு. வரி - இசை. அஃது அதனையுடைய வழியைக் குறித்தது. இது இரவுக் குறி வரும் தலைவனை `அது வேண்டா` என விலக்கியது. இதன் பயன், அவன் களவு நீட்டியாது வரைவு முயலல்.

பொருள்தக்கீர் சில்பலிக்கென் றில்புகுந்தீ ரேனும்
அருள்தக்கீர் யாதுநும்ஊர் என்றேன் மருள்தக்க
மாமறையம் என்றார் வலஞ்சுழிநம் வாழ்வென்றார்
தாம்மறைந்தார் காணேன்கைச் சங்கு. **#674**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பொருள் தக்கீர் - பொருள்கள் பலவற்றுள்ளும் `பொருள்` என்று உணரத் தக்கவரே. நீர் சில பொருள்களைப் பிச்சை யாக ஏற்றற்கு இல்லங்களில் புகுந்தீராயினும், அருள் தக்கீர் - கருணை யால் பெரிதும் தகுதி வாய்ந்திருக்கின்றீர். ஆகவே, `நும் ஊர் யாது` என அறிய விரும்புகின்றேன் - என்றேன். அவர் `மறையம்`என்றார். `நம் வாழ்வு வலஞ்சுழி` என்றார். இவ்வாறு சொல்லி மறைந்து விட்டார். அப்பொழுதே என் கையில் இருந்த சங்கவளையலை நான் காணவில்லை. மருள் தக்க - வியக்கத் தக்க. மறை - மறைக்காடு. மறையம்- அதன்கண் உள்ளேம் ``வாழ்வு`` என்க. அதற்கு உரிய இடத்தைக் குறித்த ஆகுபெயர். பின்பு அவரைக் காணாது காதல் மிகுதியால் உடல் மெலிந்தாளாகலின் அவள் கையிலிருந்த வளை அவளை யறியாமல் கழன்று ஒழிந்தது. இது நொதுமலர் வரைவு நோக்கித் தலைவி தோழிக்கு அறத்தொடு நின்றது.

சங்கம் புரளத் திரைசுமந் தேறுங் கழியருகே
வங்கம் மலியுந் துறையிடைக் காண்டிர் வலஞ்சுழியா
றங்கம் புலன்ஐந்தும் ஆகிய நான்மறை முக்கண்நக்கன்
பங்கன் றிருவர்க் கொருவடி வாகிய **#675**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திரை, சங்கங்களைப் புரளச் சுமந்து ஏறும் கழி` என்க. வங்கம் - மரக்கலம். ஆறு அங்கம் - வேதத்திற்கும் அங்கமான ஆறு நூல்கள். அவற்றில் சொல்லப்பட்ட முறைமைகளை உடைமையால், நான்மறையை அவையேயாகக் கூறினார். ``புலன் ஐந்து`` என்பது

உபலக்கணத்தால் அனைத்துத் தத்துவங்களையும் குறித்தது. `இவை யான நான்மறை` என்றதற்கும் அங்கங்கட்கு உரைத்தவாறே கொள்க. `நான்மறையை அருளிச் செய்த முக்கண் நக்கன்` என்க. `அவனது பங்கில் அன்றே இருவர்க்கும் ஒருவடிவேயாகும்படி ஒன்றியிருக் கின்ற பாவையை (தேவியை) வலஞ்சுழி வழிச் சென்று கழியருகே துறையிடைக் காணுதிர், என இயைத்து முடிக்க. ``பாவையைக் காண்டிர்`` என்றாராயினும் `முக்கண் நக்கர் பாவை யோடு ஒன்றாய், ஒருவடிவாய் இருக்கும் கோலத்தைக் காண்மின் என்பதே கருத் தென்க. இஃது இறைவரது அர்த்தநாரீசுர வடிவத்தை வியந்தவாறு.

பாவை ஆடிய துறையும் பாவை
மருவொடு வளர்ந்த வன்னமும் மருவித்
திருவடி அடியேன் தீண்டிய திறனும்
கொடியேன் உளங்கொண்ட சூழலுங் கள்ளக்
கருங்கண் போன்ற காவியும் நெருங்கி
அவளே போன்ற தன்றே தவளச்
சாம்பல் அம்பொடி சாந்தெனத் தைவந்து
தேம்பல் வெண்பிறை சென்னிமிசை வைத்த
வெள்ளேற் றுழவன் வீங்குபுனல் வலஞ்சுழி
வண்டினம் பாடுஞ் சோலைக்
கண்ட அம்மஅக் கடிபொழில் தானே. **#676**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வலஞ்சுழியில் வண்டினம் பாடும் சோலையாகக் கண்ட அக் கடிபொழில்தானே, துறையும், வன்னமும், திறனும், சூழலும், காவியும் நெருங்கி அவளே போன்றதன்றே` - என இயைத்து முடிக்க. பாவை ஆடுதல், மகளிர் பாவையைக் கையில் குழந்தையாக ஏந்தி அது பேசுவது போல வைத்து அதனுடனே பேசி நீரில் மூழ்கியாடுதல். `ஆடாநின்ற` என்னும் நிகழ்காலம், `ஆடிய` என இறந்த காலமாகச் சொல்லப்பட்டது. `பாவையை மருவுதலோடு வளர்ந்த வன்னமும்` என்க. வன்னம் - அழகு. கடல் நீர் பாவையோடு பொலிதலால் ஓர் அழகு பெற்று விளங்குவதாயிற்று, ``அடியேன், கொடியேன்`` என்பன தன்னை வெறுத்துக் கூறிக்கொண்டன. தலைவி தன் பாதங்களை, ``திருவடி`` என்றான். திரு - அழகு, அதனைத் தலைவன் தீண்டியது, வணங்கியது. ``திறன்`` என்றது, அதன் அடையாளமாகப் பதிந்த சுவட்டினை. உள்ளத்தைக் கவர்ந்தவள் தலைவி. கவர்ந்த இடத்தைக் காணும் பொழுது, கவர்ந்த நிலைமை உள்ளத்தில் தோன்றுகின்றது. காவி - குவளை மலர். துறை, வன்னம், திறன், சூழல் இவை அனைத்தினாலும்

கடற்றுறை தலைவனுக்குத் தான் முன்பு அங்குக் கண்ட தலைவிபோலவே தோன்ற அவன் இவ்வாறு வருந்திக் கூறினான். எனவே இது, களவொழுக்கத்தில் தலைவன் வறுங்களம் நாடி மறுகியதாம்.
தவளம் - வெண்மை. சாந்தென - சந்தனமாக, தைவந்து - உடம்பெங்கும் பூசிக் கொண்டு. தேம்பல் - இளைத்தல். சிறிதாதல். `ஏற்றை (எருதை) உடையவன் உழவன்` என்னும் முறையில் ``உழவன்`` என்க. கூறினார். `ஏற்றை ஊர்ந்து வந்து அடியவர்க்கு அருள் செய்பவன்` என்பது கருத்து. சோலை, கடற்கரைச் சோலை. `சோலையாக` என ஆக்கம் வருவிக்க. `கண்ட பொழில்` என இயைக்க. `தான்` என்பது. கட்டுரைச் சுவைபட வந்தது. அம்ம, வியப்பிடைச் சொல். இது `நோக்குவ எல்லாம் அவையேபோறல்` என்னும் நிலைமையாம்.

தானேறும் ஆனேறு கைதொழேன் தன்சடைமேல்
தேனேறு கொன்றைத் திறம்பேசேன் வானேறு
மையாருஞ் சோலை வலஞ்சுழியான் என்கொல்என்
கையார் வளைகவர்ந்த வாறு. **#677**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வான் ஏறும் மை ஆரும் சோலை - வானத்தில் செல்கின்ற மேகங்கள் நிறைந்த சோலை, `கண்டு தொழுதபின் வளையைக் கவராது, கண்ட பொழுதே கவர்ந்தான்` என இமைப்பில் காதல் மிக்கமையை வியந்து கூறினாள். இது வியப்போடு கூடிய அவலம், அவலம் அணையாமையால் உண்டாயது. இது பெண்பாற் கைக்கிளை.

ஆறுகற் றைச்சடைக் கொண்டொரொற் றைப்பிறை சூடிமற்றைக்
கூறுபெண் ணாயவன் கண்ணார் வலஞ்சுழிக் கொங்குதங்கு
நாறுதண் கொம்பரன் னீர்கள்இன் னேநடந் தேகடந்தார்
சீறுவென் றிச்சிலைக் கானவர் வாழ்கின்ற சேண்நெறியே. **#678**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண் ஆர் - கண்ணுக்கு நிறைந்த, அஃதாவது அழகிய. `வலஞ்சுழியில் கொம்பர்` என இயையும். வலஞ்சுழியில் உள்ள கொம்பர். கொங்கு - தேன், இன்னே - இப்பொழுதே. சேண் நெறி - நீண்ட வழி. `கொம்பர் அன்னீர், `இன்னே, கானவர் வாழ்கின்ற சேண் நெறி, (ஒருவனும், ஒருத்தியும்) நடந்தே கடந்தார்` என இயைத்து முடிக்க. இது, புணர்ந்துடன் போய் தலைமகளைப் பின் தேடிச் சென்ற செவிலி ஆற்றிடை (வழியிடை)க் கண்டோரை வினவ, அவர் கூறியது.

``கடந்தார்`` என்பதற்கு எழுவாய் தோன்றாது நின்றது.

நெறிதரு குழலி விறலியொடு புணர்ந்த
செறிதரு தமிழ்நூற் சீறியாழ்ப் பாண
பொய்கை யூரன் புதுமணம் புணர்தர
மூவோம் மூன்று பயன்பெற் றனமே
நீ அவன்
புனைதார் மாலை பொருந்தப் பாடி
இல்லதும் உள்ளதும் சொல்லிக் கள்ள
வாசகம் வழாமற் பேச வன்மையில்
வான்அர மகளிர் வான்பொருள் பெற்றனை
அவரேல்
எங்கையர் கொங்கைக் குங்குமந் தழீஇ
விழையா இன்பம் பெற்றனர் யானேல்
அரன்அமர்ந் துறையும் அணிநீர் வலஞ்சுழிச்
சுரும்பிவர் நறவயற் சூழ்ந்தெழு கரும்பின்
தீநீர் அன்ன வாய்நீர் சோரும்
சிலம்புகுரற் சிறுபறை பூண்ட
அலம்புகுரற் கிண்கிணிக் களிறுபெற் றனனே. **#679**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நெறிதரு குழல் - நெறிந்த கூந்தல். விறலி - பாணிச்சி; பாணன் மனைவி. தமிழ். இசைத்தமிழ், அதன் நூலிற் சொல்லப்பட்ட இலக்கணப்படி அமைந்த சீறியாழ் பேரியாழ் வேறுளதாகலின், இதனை, ``சீறியாழ்`` என்றாள். ஊரன் - மருதநிலத்துத் தலைவன். பொய்கை ஊருக்கு அடை. ஊரன் பழைய மணத்தை வெறுத்துப் புதுமணம் செய்து கொண்ட நிலையில். மூவோம் - நாங்கள் மூன்றுபேர். யாவரெனில், நானும், என் தோழியும், என் மகனும். மூன்று பயன் பெற்றனம் ஒவ்வொருவர் ஒவ்வொரு பயனைப் பெற்றோம். எங்ஙனம் எனில், யான் இல்லக் கிழத்தியான நிலையில் நன்மகனை ஈன்று புறந்தருதலாகிய தலைக்கடனை இறுத்தேன். என் தோழி அதற்கு உறுதுணையாய் இருந்து தன் கடமையை ஆற்றினாள். என் மகன் தான் தாயைக் கடனாளியாய் இருப்பதினின்றும் நீக்கிக் கடன் நிரப்பினான். நீ இல்லது பாதியும், உள்ளது பாதியுமாகப் பொய்களைச் சொல்லிப் பிறரை மகிழ்விக்க வல்ல வல்லமையினால் அந்த புதுமணப் பெண்டிராகிய தேவமாதரால் மிகப் பெரும் பொருள் களை அடைந்தாய். அவரோ *(தலைவனோ)* என் தங்கைமார்களது கொங்கைகளைத் தழுவி, உள்ளத்தில் அவர்கள் விரும்பாத இன்பத்தைத் தாம் விரும்பிப் பெற்றார்.

(அவர்கள் விரும்பியது பொருளேயன்றி இவரது இன்பத்தையன்று என்பதாம்) `ஆகவே, அவர் அவர்களோடே இருத்தற்கு உரியர்; யான் என் மகனோடே யிருத்தற்குரியேன்; இங்கு அவருக்கு என்ன தொடர்பு? என தலைவி தான் புதல்வற் பெற்று நெய்யாடியதறிந்து தலைவன் ஏவ வந்து வாயில் வேண்டிய பாணனுக்கு வாயில் மறுத்தாள். ஈற்றில் உரைத்த மறுப்புரை குறிப்பெச்சம் `தார்` என்பது போக காலத்தில் அணியும் மாலையாகலின், ``தார் மாலை`` என்றது இருபெயர் ஒட்டு. ஊடிக் கூறுகின்றார் ஆதலின் `வான் அர மகளிர்` என்றது இகழ்ச்சி தோற்றி நின்றது. ``என் தங்கைமார்கள்`` என்றதும் அன்னது. சுரும்பு இவர் நறவு - வண்டுகள் மொய்க்கக் கரும்பினின்றும் ஒழுகுகின்ற சாறு. `நறா` என்பது, ஈறு குறுகி உகரம் பெறாது நின்றது. இது வயலுக்கு அடை. `கருப்பஞ் சாறு போன்ற வாய் ஊறல் ஒழுகும் புதல்வன்` என்க. இதனால் மக்களால் பெறும் இன்பம் பெரிதாதலைத் தலைவி குறிப்பால் உணர்த்தி, `இஃது அவர்க்குக் கிடையாதாயிற்று` என்பதையும் குறித்தாள். சிலம்பு குரல் - ஒலிக்கும் குரல் ``அலம்பு குரல்`` என்றதும் அன்னது. கையில் கொண்ட `பூண்ட களிறு`, கிண்கிணிக் களிறு` எனத் தனித்தனி முடிக்க. கிண்கிணி - சதங்கை. புதல்வனை அளவற்ற அன்பால் ``களிறு`` என்றாள். பாணன் விறலியொடு கூடி வந்ததைக் குறித்தது, `இத்தகைய அன்பைத் துறந்தவனுக்காக நீ பரிந்து பேசுதல் தகுதியோ` என்றற்கு. இது பரத்தையிற் பிரிவு நிகழ்ச்சி. இவ் அகவற்பா இடையிடையே கூன் பெற்று வந்தது.

தனமேறிப் பீர்பொங்கித் தன்அங்கம் வேறாய்
மனம்வேறு பட்டொழிந்தாள் மாதோ இனமேறிப்
பாடாலம் வண்டலம்பும் பாய்நீர் வலஞ்சுழியான்
கோடாலம் கண்டணைந்த கொம்பு. **#680**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வண்டு இனம் ஏறிப் பாடலம் அலம்பும்` எனத் தொடங்கியுரைக்க. `பாடலம்` என்பது நீட்டல் பெற்றது. பெற்றது. பாடலம் - பாதிரி. சிவபெருமானுக்கு உரிய சில சிறந்த மலர்களுள் பாதிரியும் ஒன்றாகலால் அதனை விதந்து கூறினார், கோடாலம் - கொம்பு - பூங்கொம்பு போல்வாராய பெண்; என்றது தலைவியை. இஃது உவம ஆகுபெயர். `பீர் தனம் ஏறிப் பொங்கி` என மாற்றிக் கொள்க. பீர் - பசலை. தனம் - கொங்கை. பொங்கி - பொங்கப்பட்டு. அங்கம் - உடம்பு. ``வேறாய்`` என உடையாள் மேல் ஏற்றப்பட்டது. மனம் - மனத்தில் தோன்றும் எண்ணம் வேறுபடுதலாவது, அன்னை, அத்தன் முதலாயினாரை நீப்ப நினைத்தல். ஒழி துணிவுப் பொருண்மை விகுதி. மாது, ஓ அசைகள். இது தலைவியது

வேறுபாடு கண்டு வினவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

கொம்பார் குளிர்மறைக் காடனை வானவர் கூடிநின்று
நம்பா என வணங் கப்பெறு வானை நகர்எரிய
அம்பாய்ந் தவனை வலஞ்சுழி யானையண் ணாமலைமேல்
வம்பார் நறுங்கொன்றைத் தாருடை யானை வணங்குதுமே.

#681

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கொம்பு ஆர் குளிர் மறைக்காடு - பூங்கொம்புகளில் நிறைந்த குளிர்ச்சியை யுடைய திருமறைக்காடு. நம்பன் - பழை யோன்; விரும்பப்படுபவன்` என்றும் ஆம். அம்பு ஆய்ந்தவன் - அம்பை ஆராய்ந்து எடுத்து எய்தவன். வம்பு - புதுமை. நறு - மணம். ``கொன்றைத் தார் உடையான்`` என்பது, `சிவன்` என்னும் ஒரு பெயராய், ``அண்ணாமலை மேல்`` என்பதற்கு முடிபாயிற்று. இதனுள் ``மேல்`` என்றது மேலிடத்துள்ள கோயிலை. ``அண்ணா மலைமேல் அணிமலையை``* எனச் சேக்கிழாரும் கூறினார். அக்கோயில் இன்று நமக்குத் தரை மட்டத்தில் இருப்பதாகத் தெரிகின்றது. குறிப்பு: மும்மணிக் கோவை முப்பது பாடல்களை உடையதாய் வருதல் மரபாயினும், இது பதினைந்து பாடலோடே முற்றுப் பெற்றது. அஃது ஆசிரியர் கோட்பாடு. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை முற்றிற்று

நக்கீரதேவ நாயனார் - திருஎழுகூற்றிருக்கை

ஒருடம் பீருரு வாயினை ஒன்றுபுரிந்
தொன்றின் ஈரிதழ்க் கொன்றை சூடினை
மூவிலைச் சூலம் ஏந்தினை
சுடருஞ் சென்னி மீமிசை
இருகோட் டொருமதி எழில்பெற மிலைச்சினை:
ஒருகணை இருதோள் செவியுற வாங்கி
மூவெயில் நாற்றிசை முரணரண் செகுத்தனை
ஆற்ற முன்னெறி பயந்தனை
செறிய இரண்டும் நீக்கி
ஒன்று நினைவார்க் குறுதி ஆயினை
அந்நெறி ஒன்று
மனம்வைத் திரண்டு நினைவிலோர்க்கு
முன்னெறி உலகங் காட்டினை அந்நெறி
நான்கென ஊழிதோற்றினை
சொல்லும் ஐந்தலை அரவசைத் தசைந்தனை

நான்முகன் மேல்முகக் கபாலம் ஏந்தினை
நூன்முக முப்புரி மார்பில்
இருவர் அங்கம் ஒருங்குடன் ஏந்திய
ஒருவநின் ஆதி காணா திருவர்
மூவுல குழன்று நாற்றிசை ஊழிதர

ஐம்பெருங் குன்றத் தழலாய்த் தோன்றினை
ஆறுநின் சடையது ஐந்துநின் நிலையது
நான்குநின் வாய்மொழி மூன்றுநின் கண்ணே
இரண்டுநின் குழையே ஒன்றுநின் ஏறே
ஒன்றிய காட்சி உமையவள் நடுங்க

இருங்களிற் றுரிவை போர்த்தனை நெருங்கி
முத்தீ நான்மறை ஐம்புலன் அடக்கிய
அறுதொழி லாளர்க் குறுதி பயந்தனை
ஏழில் இன்னரம் பிசைத்தனை
ஆறில் அமுதம் பயந்தனை ஐந்தில்
விறலியர்கொட்டும் அழுத்த ஏந்தினை
ஆல நீழல் அன்றிருந் தறநெறி

நால்வர் கேட்க நன்கினி துரைத்தனை
நன்றி இல்லா முந்நீர்ச் சூர்மாக்
கொன்றங் கிருவரை எறிந்த ஒருவன்

தாதை ஒருடல் திருவடி வாயினை
தருமம் மூவகை உலகம் உணரக்
கூறுவை நால்வகை
இலக்கண இலக்கியம் நலத்தக மொழிந்தனை
ஐங்கணை யவனொடு காலனை அடர்த்தனை அறுவகைச் சமயமும்
நெறிமையில் வகுத்தனை
ஏழின் ஓசை இராவணன் பாடத்
தாழ்வாய்க் கேட்டவன் தலையளி பொருந்தினை
ஆறிய சிந்தை யாகி ஐங்கதித்
தேரொடு திசைசெல விடுத்தோன்
நாற்றோள் நலனே நந்திபிங் கிருடியென்
றேற்ற பூதம் மூன்றுடன் பாட
இருகண் மொந்தை ஒருகணம் கொட்ட
மட்டுவிரி அலங்கல் மலைமகள் காண
நட்டம் ஆடிய நம்ப அதனால்

சிறியேன் சொன்ன அறிவில் வாசகம்
வறிதெனக் கொள்ளா யாகல் வேண்டும்
வெறிகமழ் கொன்றையொடு வெண்ணில வணிந்து
கீதம் பாடிய அண்ணல்
பாதம் சென்னியிற் பரவுவன் பணிந்தே.

பணிந்தேன்நின் பாதம் பரமேட்டீ பால்நீ
றணிந்தால வாயில் அமர்ந்தாய் தணிந்தென்மேல்
மெய்யெரிவு தீரப் பணித்தருளு வேதியனே
ஐயுறவொன் றின்றி அமர்ந்து.

#682

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(அடி-1) ஒன்று புரிந்து - வீடு பேற்றினை விரும்பி. *(உயிர்கள் அடைய வேண்டும் என்று கொன்றை சூடினை என்க.)* கொன்றைப் பிரணவ வடிவினது ஆதலால், பிரணவத்தின் பொருள் தானே என்பதை உயிர்கள்

உணர்ந்து வீடடையவே அம்மாலையை அடையாள மாலையாகச் சிவன் சூடியுள்ளான்` என்றபடி. *(அடி-2)* ஒன்றின் - `ஓரு காம்பிலே ஐந்து இதழ்` என்க. ஈர் இதழ் - குளிர்ந்த இதழ் *(அடி-5)* இரு கோடு - இரண்டு முனை. *(அடி-7)* `மூவெயிலது அரண்` என்க. முரண், நாற்றிசையிலும் செல்லும் முரண், முரண் - வலிமை. அரண் பாதுகாத்தல். `முரணுடைய அரண்` என்க. *(அடி-8)* ஆற்ற - மிகவும், ஆற்றப் பயத்தல் - முற்ற விளக்குதல். முன் நெறி முதல் நெறி ``முன்னெறியாகிய, முதல்வன் முக்கணன் தன்னெறி`` *2* என அப்பரும் அருளிச் செய்தார். ``முன்னெறி`` என்பது ஓசை வகையில் `முந்நெறி` என்பதனோடு ஒத்து, `மூன்று` என்னும் எண்ணலங் காரமாய் நின்றது. இவ்வாறு மேலும் வருவனவற்றை அறிந்து கொள்க.

(அடி-9) இரண்டு - விருப்பு வெறுப்புக்கள் *(அடி-10)* ஒன்று, திருவருள். உறுதி - நல்ல துணை. *(அடி-11,12)* `அந்நெறி ஒன்றையே மனத்துள் வைத்து` என்க. இரண்டு நினைவு - ஐயம் *(அடி - 13)* முன் ஏழாவது விரிக்க *(அடி -14)* ஊழி - யுகம். `ஊழி நான்கு எனத் தோற் றினை` (படைத்தனை) என்க. *(அடி-15)* சொல்லும் - சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற. அசைத்து - உறுப்புக்களில் கட்டி. அசைந்தனை - ஆடினை *(அடி -16)* மேல் முகம் உச்சி முகம். கபாலம் - தலை ஓடு. *(அடி-17)* ``நூல் முகப் புரி` என்க. தோளில் ஏந்திய அங்கத்தை மார்பில் ஏந்தியதாகக் கூறினார். *(அடி-18)* இருவர், அயனும், மாலும். அங்கம் எலும்புக் கூடு. இது `கங்காளம்` எனப்படும். *(அடி-19)* `ஒருவனாகிய நினது` என்க. ``ஆதி`` என்றதனானே அந்தமும் கொள்க.

ஐ - அழகு. இஃது `ஐந்து` என்பதுபோல நின்றது. *(அடி-22)* ஆறு - யாறு; கங்கை. இதுவும் எண்ணுப் பெயர்போல நின்றது, ஐந்து நிலைகளாவன படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் *(அடி-23)* வாய்மொழி, வேதம். *(அடி-25)* இரண்டு - இரண்டு வகை. ``குழை`` என்பது பொதுப்பட, `காதணி` என்னும் பொருட்டாய் நின்றது. *(அடி-26)* இரு - பெரிய. இதுவும் எண்ணுப் பெயர்போல வந்தது *(அடி -28)* உறுதி, அறம் முதலிய பொருள்கள். ஆறில் அமுதம் - அறுசுவையில் உணவு. ஐந்து - ஐந்து வகையான இசைக் கருவிகள். (தோல், துளை, நரம்பு, கஞ்சம், மிடறு.) *(அடி -31)* கொட்டு - வாச்சியம். உம்மை, எச்சப் பொருட்டு. `எல்லா வாச்சியங்களையும் இறைவன் உடையவன்` என்றபடி, *(அடி-34)* முந்நீர் - கடல். `முந்நீரில் நின்ற` என்க. சூர் மா - சூரபதுமனாகிய மாமரம். *(அடி-35)* இருவரை - பெரிய மலை; கிரௌஞ்சம். *(அடி - 36)* மிடல் வடிவம் - விசுவ ரூபம். மிடல் வலிமை, *(அடி-37,38)* `தருமம் கூறுவை` என இயையும். *(அடி - 38,39)* `நால்வகை இலக்கணங்களையும், அவற்றையுடைய இலக்கியங்களையும்

மொழிந்தனை` என்க. நால் வகை இலக்கணமாவன `எழுத்து, சொல்,பொருள், செய்யுள்` என்பன பற்றியவை, அணியிலக்கணம் வடநூற் கொள்கை. *(அடி-41)* நெறிமையில் நெறியாம் வகையில். *(அடி-42)* `ஏழ் இன் ஓசை` என்க. ஓசை - இசை. *(அடி-43)* தாழ்வு - இரக்கம். ``அவன்தலை`` என்பதில் தலை ஏழன் உருபு. அளி- அருள், *(அடி-44)* ஆறிய - தணிந்த. சிந்தையனை, ``சிந்தை`` என்றது. ஆகுபெயர். *(அடி - 45)* ஐங்கதி குதிரைகளின் ஓட்டத்தின் வகை. `ஐங்கதியொடு தேர் திசை செலவிடுத்தோன்` பிரமன். *(அடி- 46,47)* அவனுக்கு முகம் நான்காயினும் தோளும் நான்கே. நலன். இங்குத் திறமை. `அதனைப் பாட` என்க. நந்தி பிங்கிருடி - நந்தி கணத்ததாகிய பிங்கிருடி. ``பூதம் மூன்று`` என்றதனால், தண்டி, குண்டோதரன் இவர் கொள்ளப்பட்டனர், *(அடி-48)* கண் - பக்கம். மொந்தை, ஒருவகை வாச்சியம். ஒரு கணம் - ஒப்பற்ற கணங்கள். மட்டு விரி - தேனோடு மலரும் *(அடி -50)* ``அதனால்`` என்றது, கூறிவந்தவை அனைத்தை யும் தொகுத்துக் குறித்தது. ஆகையால் இப்பாட்டினை, `நம்ப, நீ ஓர் உடம்பு ஈருருவாயினை; கொன்றை சூடினை;....அளி பொருந்தினை, அதனால், சிறியேன் சொன்ன வாசகம் வறிதெனக் கொள்ளா யாதல் வேண்டும்; (அதன் பொருட்டு) அண்ணலாகிய நின் பாதம் சென்னி யிற் பணிந்து பரவுவன்` என இயைத்து முடிக்கற் பாற்று. *(அடி-52)* வறிது - பொருளற்றது.

வெளி - நறுமணம். `சிவபெருமான் ஊழியிறுதியில் வீணை வாசித்திருப்பன்` என்பதை,

`பெருங்கடல் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போய்,
இருங்கடல்மூடியிறக்கும்; இறந்தான் களேபரமும்,
கருங்கடல் வண்ணன் களேபர முங்கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே`*

என்னும் அப்பர் திருமொழியால் அறிக. முக்காலத்தும் நிகழற் பாலதனை, ``பாடிய`` என இறந்த காலத்தில் வைத்துக் கூறினார்.

திருஎழுகூற்றிருக்கை முற்றிற்று.

நக்கீரதேவ நாயனார் - பெருந்தேவபாணி

சூல பாணியை சுடர்தரு வடிவனை
நீலகண்டனை நெற்றியோர் கண்ணனை
பால்வெண் ணீற்றனை பரம யோகியை
காலனைக் காய்ந்த கறைமிடற் றண்ணலை
நூலணி மார்பனை நுண்ணிய கேள்வியை

கோல மேனியை கொக்கரைப் பாடலை
வேலுடைக் கையனை விண்தோய் முடியனை
ஞாலத் தீயினை நாத்தனைக் காய்ந்தனை
தேவ தேவனை திருமறு மார்பனை
கால மாகிய கடிகமழ் தாரனை
வேத கீதனை வெண்தலை ஏந்தியை
பாவ நாசனை பரமேச் சுவரனை
கீதம் பாடியை கிளர்பொறி அரவனை
போதணி கொன்றைஎம் புண்ணிய ஒருவனை
ஆதி மூர்த்தியை அமரர்கள் தலைவனை

சாதி வானவர் தம்பெரு மான்தனை
வேத விச்சையை விடையுடை அண்ணலை
ஓத வண்ணனை உலகத் தொருவனை
நாத னாகிய நன்னெறிப் பொருளினை
மாலை தானெரி மயானத் தாடியை
வேலை நஞ்சினை மிகவமு தாக்கியை
வேத வேள்வியை விண்ணவர் தலைவனை
ஆதி மூர்த்தியை அருந்தவ முதல்வனை
ஆயிர நூற்றுக் கறி வரியானை
பேயுருவு தந்த பிறையணி சடையனை

மாசறு சோதியை மலைமகள் கொழுநனை
கூரிய மழுவனை கொலற்கருங் காலனைச்
சீரிய அடியாற் செற்றருள் சிவனை
பூதிப் பையனை புண்ணிய மூர்த்தியை
பீடுடை யாற்றை பிராணி தலைவனை

நீடிய நிமலனை நிறைமறைப் பொருளினை

ஈசனை இறைவனை ஈறில் பெருமையை
நேசனை நினைப்பவர் நெஞ்சத் துள்ளனை
தாதணி மலரனை தருமனை பிரமனை
காதணி குழையனை களிற்றின் உரியனை
சூழ்சடைப் புனலனை சுந்தர விடங்கனை
தார்மலர்க் கொன்றை தயங்கு மார்பனை
வித்தக விதியனை
தீதமர் செய்கைத் திரிபுரம் எரித்தனை
பிரமன் பெருந்தலை நிறைவ தாகக்
கருமன் செந்நீர் கபாலம் நிறைத்தனை
நிறைத்த கபாலச் செந்நீர் நின்றும்
உறைத்த உருவார் ஐயனைத் தோற்றினை
தேவரும் அசுரரும் திறம்படக் கடைந்த
ஆவமுண் நஞ்சம் அமுத மாக்கினை

ஈரமில் நெஞ்சத் திராவணன் தன்னை
வீரம் அழித்து விறல்வாள் கொடுத்தனை
திக்கமர் தேவரும் திருந்தாச் செய்கைத்
தக்கன் வேள்வியைத் தளரச் சாடினை
வேதமும் நீயே வேள்வியும் நீயே

நீதியும் நீயே நிமலன் நீயே
புண்ணியம் நீயே புனிதன் நீயே
பண்ணியன் நீயே பழம்பொருள் நீயே
ஊழியும் நீயே உலகமும் நீயே
வாழியும் நீயே வரதனும் நீயே

தேவரும் நீயே தீர்த்தமும் நீயே
மூவரும் நீயே முன்னெறி நீயே
மால்வரை நீயே மறிகடல் நீயே
இன்பமும் நீயே துன்பமும் நீயே
தாயும் நீயே தந்தையும் நீயே
விண்முதற்பூதம் ஐந்தவை நீயே
புத்தியும் நீயே முத்தியும் நீயே
சொலற்கருந் தன்மைத் தொல்லோய் நீயே
கூடல் ஆலவாய்க் குழகன் ஆவ
தறியா தருந்தமிழ் பழித்தனன் அடியேன்

ஈண்டிய சிறப்பின் இணையடிக் கீழ்நின்று
வேண்டும் அதுஇனி வேண்டுவன் விரைந்தே.

விரைந்தேன்மற் றெம்பெருமான் வேண்டியது வேண்டா
திகழ்ந்தேன் பிழைத்தேன் அடியேன் விரைந்தென்மேல்
சீற்றத்தைத் தீர்த்தருளும் தேவாதி தேவனே
ஆற்றவும்நீ செய்யும் அருள்.

#683

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(அடி - 1) சூல பாணியை - சூலம் ஏந்திய கையினை உடையாய். சுடர்தரு வடிவனை - ஒளியைத் தருகின்ற திருமேனியை உடையாய். *(அடி - 3)* பரம யோகியை - யோகியர்க்கெல்லாம் மேலான யோகியாம் தன்மை உடையாய். *(அடி - 6)* கொக்கரை - சங்கு. `அதன் ஒலியோடு கூடிய பாடலை உடையாய்` என்ப *(அடி - 7)* வேல் - வேறு படைக்கலம்; மழுமுதலியன *(அடி - 8)* ``நாத்தனை`` என்பதில் தன், சாரியை. எனவே, `நாவைக் காய்ந்தனை` என்க. தக்கன் வேள்வியழிப்பில் அக்கினி தேவனது கையையன்றி. நாவை அறுத்ததாகவும் சொல்லப்படும். ``தீயினை நாவினைக் காய்ந்தனை`` என்பதை, `யானையைக் காலை வெட்டினான்` என்பது போலக் கொள்க. *(அடி - 9)* ``திருமறு மார்பனை`` என்றது, `நீயே திருமாலாக வும் இருக்கின்றாய்` என்றபடி. *(அடி - 10)* காலமாகிய தாரனை - கால மாகிய மாலையை உடையாய்; என்றது, `காலத்தால் தாக்குண்ணாது நின்றாய்` என்றபடி. `காளமாகிய` எனப்பாடம் ஓதி, `நஞ்சு பொருந்திய பாம்பை மாலையாக உடையாய்` என்றலும் ஆம். *(அடி- 12)* பரமேச்சுவரனை - பரமேச்சுவரனாம் தன்மையை உடையை. ஈச்சுரன் - ஐசுவரியத்தை உடையவன். பரமேச்சுவரம் - மேலான ஐசுவரியம். அஃதாவது, எல்லா உயிர்களையும், எல்லாப் பொருள் களையும் தன்னவாக உடைமை. *(அடி - 16)* சாதி வானவர் பல இனத்தவராகிய தேவர்கள். அவர்கள் தம் பெருமான், இந்திரன். ``பெருமான்`` என்பது உயர்திணைச் சொல்லாதலின், `பெருமானினை என இன்சாரியை கொடாது தன் சாரியை கொடுத்து, ``பெருமான் றனை`` என்றார். `அவனை உடையை` என்றபடி. *(அடி - 18)* ஓதம் - கடல். ஒரு பாதி அம்மை, அல்லது திருமால் ஆதலின் சிவபெருமான் கடல் வண்ணத்தையும் உடையவன். *(அடி - 19)* நாதன் - குரு *(அடி - 20)* எரியும் தீ இருள் வந்த பின்பே விளங்கித் தோன்றுதல் பற்றி, `மாலையில் எரியும் மயானம்` - என்றார். தான்,

அசை, (அடி - 22) அமரர்களை மேலே கூறினார். ஆகலின், இங்கு ``விண்ணவர்`` என்றது சிவலோகத்தில் வாழ்பவர்களை (அடி - 23) `ஆதி` என்பது எப்பொருட்கும் முதலாம் தன்மையையும், காலத்தால் எவருக்கும் முதலாதலையும் குறிக்கும் ஆதலின் மேலேயும், இவ்விடத்திலும் ``ஆதி`` என இருமுறை கூறியவற்றிற்கு இவ்விரு பொருளையும் ஏற்ற பெற்றியாற் கொள்க (அடி - 24) ஆயிரம் நூற்றுக்கு அறிவரிதலாவது அன்ன பல பேரெண்களிலும் அடங்காமை. எனவே, ``ஏகன், அநேகன்`` என்றவற்றுள் ``அநேகன்`` * என்ற நிலையைக் குறித்ததாம். (அடி - 25) ``பேய் உருவு`` என்றது பிறர் கூறும். தந்த - தனக்குத் தானே செய்து கொண்ட (அடி - 30) ஆறு - வழி `அதன் பயனாய் நின்றாய்`. உயிர்களை, ``பிராணி`` என்றார். `பிராணிகள்` எனப் பாடம் ஓதுதலும் ஆம், (அடி - 31) ``நீடிய`` என்றது, `காலத்தைக் கடந்த` என்றபடி. (அடி - 32) ஈசனை - எல்லாரையும், எல்லாவற்றையும் ஆளுதல் உடையாய். இறைவனை - எல்லாப் பொருளிலும் அது அதுவாய் வேறறக் கலந்துள்ளனை. (அடி - 33) நேசனை - அருளுடையாய். (அடி - 35) மலரனை - தாமரை மலரை இருக்கையாக இருத்தலை உடையாய். தருமனை - அறத்தை நடாத்துதல் உடையாய், பிரமனை - பிரமனை உடையாய் (அடி - 35) ``குழையனை`` என்பது முதலான ஏழும் ஆடூஉவறிசொல்லின் அன் விகுதிமேல் ஐகார விகுதிபெற்று வருதலால் அவற்றிற்கு, `குழையனாய் உள்ளாய், உரியனாய் உள்ளாய்` என்பனபோல உரைக்க. உரி - தோல். சுந்தரம் - அழகு. விடங்கன் - உளியாற் போழ்ந்து செய்யப்படாமல் தானே முளைத்த இலிங்க வடிவினன். இதனை. `சுயம்பு லிங்கம்` என்பர். `சுந்தர விடங்கன்` என்பது மதுரைத் திருவாலவாய்ப் பெருமானுக்கு உரிய பெயராகவே சொல்லப்படுதலால் இப்பாட்டு அப்பெருமானை, வழுத்திப் பாடியதாகின்றது. மேல் பொதுப்படக் கூறிய கொன்றையை இங்கு, ``தார்`` எனச் சிறப்பாகக் கூறினார். தார் - மார்பில் அணியும் மாலை. (அடி - 38) வித்தகம் - திறமை. விதி - நேர்மை. `நேர்மையாள னாய் நிற்க வல்லாய்` என்றபடி (அடி - 41) கருமன் - கரிய நிறத்தை யுடைய திருமால். செந்நீர் - இரத்தம். `பிரமன் தலையைக் கிள்ளிய வயிரவர் அவன் கொண்ட செருக்கை ஒழித்து ஏனைத் தேவர்களும் அவனைப் போலச் செருக்குக் கொள்ளாதபடி ஒழிக்க வேண்டி எல்லாரிடமும் சென்று அக்கபாலமாகிய கலத்தில் இரத்த பிச்சை ஏற்றுக் கடைசியாகத் திருமாலின் இரத்தத்தை ஏற்றார்` என்பது வரலாறு. `திருமாலின் இரத்தத்துடன் கபாலம் நிறைந்துவிட்டது` என்பது ஒருவரலாறு. இதனையே வைணவர்கள் `திருமால் சிவனுக்குப் பிச்சையிட்டு, அவனது பிச்சையெடுக்கும் தொழிலை ஒழித்தருளினான்` எனப் பெருமையாகப்

பேசுவர். எனினும், `அப்பொழுதும் கபாலம் நிறையவில்லை என்பதும் ஒருவரலாறு.

காதி ஆயிர மால்களைப் பிழிந்துமாங் கனிபோல்
கோது வீசினும் கடல்கவிழ்த் தனையசெங் குருதி
பாதி யாயினும் நிரம்புறாக் கபாலபா ணியனாய்
மாது பாதியன் அவையிடை வந்தனன் வடுகன்.*

என்றார் சிவப்பிரகாச அடிகள் *(அடி - 42, 43)* திருமால் இரத்த பிச்சை தருகையில் ஆவி சோரும் நிலையை அடையத் திருமகள், நிலமகள் இவர்கள் வேண்டுகோளுக்கு இரங்கி வயிரவர் திருமாலை முன்போல அருள் புரிந்து சென்றார் என்பது வரலாறு ஆதலின், திருமால் கொண்ட மோகினி வடிவத்திலிருந்து சிவபிரான் ஐயனாரை *(அரிகர புத்திரரை)*த் தோற்றுவித்தமையை, வயிரவரது கபாலத்தில் திருமால் சொரிந்த குருதியினின்றும் தோற்றுவித்ததாக நகைச்சுவை படக் கூறினார் இனி அன்னதொரு புராணபேதம் பற்றி அவ்வாறு கூறினார் என்றலும் ஆம். உறைத்த உரு - வளர்ச்சியடைந்த உருவம். *(அடி - 45)* ஆவம் - ஆவி; உயிர் *(அடி - 48)* திக்கு அமர் தேவர் - திக்குப் பாலகர். *(அடி - 53)* பண்ணியன் - எல்லாவற்றையும் ஆக்கியவன் *(அடி - 55)* வாழி - கால எல்லையின்றி வாழ்பவன். *(அடி - 57)* முன் நெறி - எல்லா நெறி கட்கும் முன்னதாய நெறி. *(அடி - 62)* புத்தி - போகம். முத்தி - மோட்சம் *(அடி - 64)* குழகன் - அழகன் *(அடி - 64)* ஆவது - பின் விளைவது *(அடி - 64,65)* `ஆவது அறியாது குழகனாகிய நினது அருந்தமிழைப் பழித்தனன்` என மொழி மாற்றி யுரைக்க *(அடி - 66)* ஈண்டிய சிறப்பின் இணையடி - இங்குச் சொல்லப் பட்டவற்றுடன் மற்றும் பலவாகத் திரண்ட சிறப்புக்களையுடைய இணையடி. *(அடி - 66, 67)* இனி - இப்பொழுது. இதனை மேல் *(அடி- 65)* ``அடியேன்`` என்றதற்கு முன்னே கூட்டுக. *(அடி - 67)* வேண்டும் அது - எனக்கு வேண்டுவனவற்றை வேண்டிப் பெறுதலாகிய அதனையே. விரைந்து வேண்டுவன் - சற்றும் தாழாது விரும்பு கின்றேன் `தாழாது விரும்புகின்றேன்` என்றது. `முன்பு இருந்த நிலையினின்றும் நான் மாறிவிட்ே◌டன்` என்பதைக் குறித்தபடி. வெண்பா: `அடியேன், எம்பெருமான் வேண்டியது வேண்டாது விரைந்தேன் இகழ்ந்தேன்; பிழைத்தேன்; தேவாதி தேவனே, *(இனி நீ)* என்மேல் ஆற்றவும் செய்யும் அருள், என்மேல் *(நீ கொண்ட)* சீற்றத்தைத் தீர்த்தருளும்` என இயைத்து முடிக்க. நீ வேண்டியது - நீ விரும்பியதை *(நான் விரும்புவதே கடப்பாடாய் இருக்க அவ்வாறு செய்யாது அதனை நான்)* விரும்பாது இகழ்ந்தேன். *(எனது அறியாமையால் எண்ணிப் பாராமல்)* பதறிவிட்டேன். என்க. ``தீர்த் தருளும்`` என்றது, `தீர்த்தருளுவதாக` என்றபடி.

இத்திருமுறையில் திருமுருகாற்றுப்படை தவிர, நக்கீரர் அருளிச் செய்தனவாய் உள்ள பிரபந்தங்கள் பலவும் ஆலவாய்ப் பெருமானது அருந்தமிழை இகழ்ந்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டிப் பாடப்பட்டனவாகச் சொல்லப்பட்ட போதிலும் இந்த ஒரு பாட்டில்தான் அதற்கு அகச் சான்று காணப்படுகின்றது.
பெருந்தேவபாணி முற்றிற்று.

நக்கீரதேவ நாயனார் - கோபப் பிரசாதம்

தவறுபெரி துடைத்தே தவறுபெரி துடைத்தே
வெண்திரைக் கருங்கடல் மேல்துயில் கொள்ளும்
அண்ட வாணனுக் காழிஅன் றருளியும்
உலகம் மூன்றும் ஒருங்குடன் படைத்த
மலரோன் தன்னை வான்சிரம் அரிந்தும்

கான வேடுவன் கண்பரிந் தப்ப
வான நாடு மற்றவற் கருளியம்
கடிபடி பூங்கணைக் காம னாருடல்
பொடிபட விழித்தும் பூதலத் திசைந்த
மானுட னாகிய சண்டியை
வானவன் ஆக்கியும்
மறிகடல் உலகின் மன்னுயிர் கவரும்
கூற்றுவன் தனக்கோர் கூற்றுவ னாகியும்
கடல்படு நஞ்சங் கண்டத் தடக்கியும்
பருவரை சிலையாப் பாந்தள் நாணாத்

திரிபுரம் எரிய ஒருகணை துரந்தும்
கற்கொண் டெறிந்த சாக்கியன் அன்பு
தற்கொண் டின்னருள் தான்மிக அளித்தும்
கூற்றெனத் தோன்றியுங் கோளரி போன்றும்
தோற்றிய வாரணத் தீருரி போர்த்தும்
நெற்றிக் கண்ணும் நீள்புயம் நான்கும்
நற்றா நந்தீச் சுவரற் கருளியும்
அறிவினை ஓரா அரக்க னாருடல்
நெறுநெற இறுதர ஒருவிரல் ஊன்றியும்
திருவுரு வத்தொடு செங்கண் ஏறும்

அரியன திண்திறல் அசுரனுக் கருளியும்
பல்கதிர் உரவோன் பற்கெடப் பாய்ந்து
மல்குபிருங் கிருடிக்கு மாவரம் ஈந்தும்
தக்கன் வேள்வி தகைகெடச் சிதைத்து
மிக்கவரம் நந்தி மாகாளர்க் கருளியும்

செந்தீக் கடவுள்தன் கரதலஞ் செற்றும்

பைந்தார் நெடும்படை பார்த்தற் கருளியும்
கதிர்மதி தனையோர் காற்பயன் கெடுத்தும்
நிதிபயில் குபேரற்கு நீள்நகர் ஈந்தும்
சலந்தரன் உடலந் தான்மிகத் தடிந்தும்
மறைபயில் மார்க்கண் டேயனுக் கருளியும்
தாருகற் கொல்லமுன் காளியைப் படைத்தும்
சீர்மலி சிலந்திக் கின்னர சளித்தும்
கார்மலி உருவக் கருடனைக் காய்ந்தும்
ஆலின் கீழிருந் தறநெறி அருளியும்

இன்னவை பிறவும் எங்கள் ஈசன்
கோபப் பிரசாதங் கூறுங் காலைக்
கடிமலர் இருந்தோன் கார்க்கடற் கிடந்தோன்
புடமுறு சோலைப் பொன்னகர் காப்போன்
உரைப்போ ராகிலும் ஒண்கடல் மாநீர்

அங்கைகொண் டிறைக்கும் ஆதர் போன்றுளர்
ஒடுங்காப் பெருமை உம்பர் கோனை
அடங்கா ஐம்புலத் தறிவில் சிந்தைக்
கிருமி நாவாற் கிளத்தும் தரமே அதாஅன்று
ஒருவகைத் தேவரும் இருவகைத் திறமும்
மூவகைக் குணமும் நால்வகை வேதமும்
ஐவகைப் பூதமும் அறுவகை இரதமும்
எழுவகை ஓசையும் எண்வகை ஞானமும்
ஒன்பதின் வகையாம் ஒண்மலர்ச் சிறப்பும்
பத்தின் வகையும் ஆகிய பரமனை

இன்பனை நினைவோர்க் கென்னிடை அமுதினைச்
செம்பொனை மணியினைத் தேனினைப்பாலினைத்
தஞ்சமென் றொழுகுந் தன்னடி யார்தம்
நெஞ்சம் பிரியா நிமலனை நீடுயர்
செந்தழற் பவளச் சேணுறு வரையனை

முக்கட் செல்வனை முதல்வனை மூர்த்தியைக்
கள்ளங் கைவிட் டுள்ளம துருகிக்
கலந்து கசிந்துதன் கழலினை யவையே
நினைந்திட ஆங்கே தோன்றும் நிமலனைத்

தேவ தேவனைத் திகழ்சிவ லோகனைப்

பாவ நாசனைப் படரொளி உருவனை
வேயார் தோளி மெல்லியல் கூறனைத்
தாயாய் மன்னுயிர் தாங்குந் தந்தையைச்
சொல்லும் பொருளும் ஆகிய சோதியைக்
கல்லுங் கடலும் ஆகிய கண்டனைத்
தோற்றம் நிலைஈ றாகிய தொன்மையை
நீற்றிடைத் திகழும் நித்தனை முத்தனை
வாக்கும் மனமும் இறந்த மறையனைப்
பூக்கமழ் சடையனைப் புண்ணிய நாதனை
இனைய தன்மையன் என்றறி வரியவன்

தனைமுன் விட்டுத் தாம்மற்று நினைப்போர்
மாமுயல் விட்டுக்
காக்கைப் பின்போம் கலவர் போலவும்
விளக்கங் கிருக்க மின்மினி கவரும்
அளப்பருஞ் சிறப்பில் ஆதர் போலவும்

கச்சங் கொண்டு கடுந்தொழில் முடியாக்
கொச்சைத் தேவரைத் தேவரென் றெண்ணிப்
பிச்சரைப் போலஓர்
ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று
வட்டணை பேசுவர் மானுடம் போன்று
பெட்டினை உரைப்போர் பேதையர் நிலத்துன்
தலைமீன் தலைஎண் பலமென்றால் அதனை
அறுத்து நிறுப்போர் ஒருத்தர் இன்மையின்
மத்திர மாகுவர் மாநெறி கிடப்பவோர்
சித்திரம் பேசுவர் தேவ ராகில்

இன்னோர்க் காய்ந்தனர் இன்னோர்க் கருளினர்
என்றறிய உலகின்
முன்னே உரைப்ப தில்லை ஆகிலும்
மாடு போலக் கூடிநின் றழைத்தும்
மாக்கள் போல வேட்கையீ டுண்டும்
இப்படி ஞானம் அப்படி அமைத்தும்
இன்ன தன்மையன் என்றிரு நிலத்து

முன்னே அறியா மூர்க்க மாக்களை
இன்னேகொண் டேகாக் கூற்றம்
தவறுபெரி துடைத்தே தவறுபெரி துடைத்தே.

#684

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(அடி - 1) ஈற்றயல் அடியில் வரும் ``கூற்றம்`` என்பதை முதல் அடிக்கும் கூட்டி, `என்னை` என்னும் வினாவருவிக்க. *(அடி - 3)* அண்ட வாணன் - தேவன். கடல் மேல் துயில் கொள்ளும் தேவன் திருமால். ஆழி - சக்கரம். மலரோன் - பிரமன். பிரமனைச் சிரம் அரிந்த வரலாறு மேல் பெருந்தேவ பாணி உரையில் கூறப்பட்டது. *(அடி - 6)* வேடுவன், கண்ணப்ப நாயனார். இவர் வரலாறு இத்திருமுறையில் வேறு பாடல்களிலும், பெரியபுராணத்திலும் விளங்கக் கூறப்பட்டது. பரிந்து - பெயர்த்து. மற்று, அசை *(அடி - 8)* கடி படு நறுமணம் பொருந்திய. காமனார் - மன்மதன். ஆர் விகுதி இழிவு குறித்தது. பொடி பட - சாம்பலாகும்படி. *(அடி - 10)* சண்டி - சண்டேசுர நாயனார். இவரது வரலாறும் பெரியபுராணத்துட் காணத்தக்கது. *(அடி - 12, 13)* `சிவபெருமான் கூற்றுவனுக்குக் கூற்றுவனாய் யமனை உதைத்தது மார்க்கண்டேயருக்காக` என்பது நன்கறியப்பட்டது. *(அடி - 14)* தேவாசுரர் பாற்கடலைக் கடைந்தபொழுது அவர்கள் நினைத்தபடி அமுதம் எழாமல் ஆலகால விடம் தோன்றினமையால் அவர்கள் வேண்டு கோளுக்கு இரங்கிச் சிவபெருமான் தான் அதனை யுண்டு கண்டத்தில் நிறுத்தினான். அதனால் கண்டம் நீலகண்டம் ஆயது. *(அடி - 15, 16)* மேரு மலையை வில்லாகவும், `வாசுகி` என்னும் பாம்பினை நாணாகவும் கொண்டு ஒரு கணையால் முப் புரத்தை அழித்தமை சங்க இலக்கியத்திற்றானே சொல்லப்பட்டது.* *(அடி - 17, 18)* சாக்கிய நாயனார் கல் எறிந்து பேறு பெற்ற வரலாறும் பெரியபுராணத்துள்ளே காணத்தக்கது. தற் கொண்டு - தனக்கு ஏற்புடைத்தாகக் கொண்டு *(அடி - 19, 20)* கூற்றென - யமன்போல, கோளரி - சிங்கம். யானைக்குப் பகை சிங்கம். வாரணத்து ஈர் உரி - யானையினின்றும் உரித்த தோல், யானையாய் வந்து எதிர்த்தவன் கயாதரன் *(அடி - 21, 22)* நந்தீச்சுவரன், நந்திதேவர். இவர் செய்த தவத்திற்காக இவருக்குச் சிவபெருமான் தனது உருவைக் கொடுத்தலாகிய சாரூப பதவியைத் தந்தருளினான். நற்றா - நல்லதாக; நல்லது உண்டாக. *(அடி - 23, 24)* அறிவு - அறியத்தக்க பொருள். ஓரார் - ஆராய்ந்துணராத அரக்கனார், இராவணன். இங்கும் ஆர் விகுதி இழிவு குறித்து நின்றது. ``நெறு நெற`` என்பது ஒலிக்

குறிப்பு. *(அடி - 25, 26)* அசுரன், வாணன். இவன் செய்த பூசைக்காக இவனுக்குச் சிவபெருமான் தனது சாரூபத்தை வழங்கித் தான் நடனம் புரியும் பொழுது குடமுழா வாசிக்கப் பணித்தருளினான். சாரூபம் பெற்றமையால் அவனுக்கு ஊர்தியும் இடபமாயிற்று. ஏறு - இடபம் *(அடி - 27)* பல் கதிர் உரவோன், சூரியன். இவன் பல்லைத் தகர்த்தது தக்கன் வேள்வி அழிப்பில். அதனைக் கந்தபுராணத்துட் காண்க. *(அடி - 28)* பிருங்கிருடி, கணங்களில் ஒருவர். ``தண்டி குண்டோதரன் பிங்கிருடி`` * என அப்பரும் அருளிச் செய்தார் *(அடி - 29)* தக்கன் வேள்வியை அழித்தது கந்தபுராணத்துள் விரித்துக் கூறப்பட்டது. *(அடி - 30)* நந்திமாகாளர், திருக்கயிலைக் காவலருள் தலைவர். அத்தலைமை அளித்தது மிக்க வரம் ஆதல் அறிக. *(அடி - 31)* தீக்கடவுள் - அக்கினி தேவன். இவனது கையை அறுத்தது தக்கன் வேள்வியில் *(அடி - 32)* `நெடும்படை பைந்தார்ப் பார்த்தற்கு அருளியும்` என மாற்றியுரைக்க. நெடும் படை - பெரிய அத்திரம். பார்த்தன் - அருச்சுனன். *(அடி - 33)* `கதிர்`` என்றது நிலவை. `காலால் பயன் கெடுத்து` என்க. பயன் கெடுத்தது, கீழே தேய்த்து வலியிழக்கச் செய்தது. இதுவும் தக்கன் வேள்வியில் *(அடி - 34)* நீள் நகர், அளகாபுரி *(அடி - 37)* தாருகன், இவன் கந்தபுராணத்தில் சொல்லப்பட்ட தாரகன் அல்லன், அவனின் வேறானவன். ``கானகம் உகந்த காளி தாருகன் - பேருரங் கிழித்த பெண்ணும் அல்லள்``* எனச் சிலப்பதிகாரத்து கூறப்பட்டது காண்க. *(அடி - 38)* சிலந்திக்கு அரசளித்ததைப் பெரியபுராணம் கோச்செங்கட் சோழர் வரலாற்றில் காண்க. *(அடி - 39)* கார்- கருமை; அழகு. திருமாலின் ஊர்தியாகிய கருடனை இடபத்தின் மூச்சுக் காற்றில் அகப்பட்டு உழலச் செய்ததைக் காஞ்சிப் புராணம் தழுவக் குழைந்த படலத்தில் காண்க. *(அடி - 44)* புடம் - மறைப்பு; நிழல் *(அடி - 46)* ஆதர் - அறிவிலார். `உளர் ஆவர்` ஆக்கம் வருவித் துரைக்க. *(அடி - 47)* ஒடுங்கா - முடிவு பெறாத. உம்பர்கோன். சிவபெருமான் *(அடி - 49)* ``கிருமி`` என்றது ஆசிரியர் தம்மையே குறித்தது. பரம் - அளவு. ஏகாரம், எதிர் மறைவினா. *(அடி - 50)* ஒருவகைத் தேவர், சுவர்க்க லோகவாசிகள். திறம் - கூறுபாடு. இருவகைக் கூறுபாடு புண்ணியம் பாவம் *(அடி - 52)* இரதம், நாவால் நுகரப்படும் சுவை. *(அடி - 53)* ஓசை - இசை. ஞானம், புத்திகுணபாவகங்கள் எட்டில் ஒன்று. இஃது எண் வகைப்படுதலைச் சிவஞான போதம் *2* ஆம் சூத்திர பாடியத்தால் உணர்க. *(அடி - 54)* நவரத்தினங்கள் போல ஒன்பது வகையான நிறம் உடைய மலர்கள் விரும்பப்படுகின்றன. *(அடி - 55)* ``பத்தின் வகை`` என்பதனை, ``பத்துக் கொலாம் அடியார் செய்கை தானே`` * என்னும் அப்பர் திருமொழியால் உணர்க. *(அடி - 56)* `நினைவோர்க்கு இன்பனை` என மாற்றிக் கொள்க.

(அடி - 60) (அடி - 70) கல் - மலை. கண்டன் - அளவுட்படுபொருள்களாய் உள்ளான். *(அடி - 71)* தொன்மை, தொன்மைத்தான பொருள்; ஆகுபெயர். *(அடி - 72)* நித்தன் - அழிவில்லாதவன். முத்தன் - பாசம் இல்லாதவன். *(அடி - 73)* மறையன் - வேதப் பொருளாய் உள்ளவன். *(அடி - 77, 78)* `முயல் விட்டுக் காக்கைப்பின் போவது போல` என்பது ஒரு பழமொழி, அப்பர் திருமொழியிலும் வந்துள்ளது.* வேட்டையாடுபவன் முயலின்பின் விடாது சென்றால் பயன் பெறுவான்; அதை இடையில் விட்டுவிட்டுக் காக்கைப்பின் போனால் யாது பெறுவான்? ஒன்றையும் பெறான். இது பயன் தருவதை விட்டுப் பயன் தாராததைத் தொடர்வதற்கு உவமையாகும். கலவர் - படைக் கலம் எந்தியவர்; வேட்டையாடுபவர். *(அடி - 79)* ``விளக்கிருக்க மின்மினித் தீக் காய்தல்` என்பதும் முன் கூறியது போன்ற ஒரு பழமொழி. இதுவும் மேற்குறித்த அப்பர்திருமொழியில் வந்துள்ளது *(அடி - 80)* அளப் பரும் சிறப்பு, அறியாமையின் மிகுதி. *(அடி - 81, 82)* கச்சம் - அளவு; எல்லை. எல்லைக்கு உட்பட்ட ஆற்றல் உடையவர்களாய்ப் பெருஞ் செயலை முடிக்கமாட்டாத சிறிய தேவர்கள். கொச்சை - நிரம்பாமை; அரை குறை. *(அடி - 83)* பிச்சர் - பித்தர். ஓர் - சிறுமையுடைய *(அடி - 84)* ஆரியப் புத்தகம், பல தெய்வ வழிபாட்டைக் கூறும் ஆரிய நூல், அத்தகைய நூல் தமிழில் இல்லாமையால், `ஆரியப் புத்தகம்` என்றே கூறினார். அது வீணே அலையப் பண்ணுதலால் அதனை, ``பேய்`` என்றார். *(அடி - 85)* வட்டணை - சுற்றிச் சுற்றி முடிவில்லாது வரப் பேசுதல். மானுடராயினும் மானுடப் பண்பு இல்லாமையால் ``மானுடம் போன்று`` என்றார். ``மக்களே போல்வர் கயவர்`` என்னும் திருக்குறளைக் காண்க. *(அடி - 86)* பெட்டு - பொய், *(அடி - 87, 88)* குறும்பன் ஒருவன் வேறு ஒருவனைப் பார்த்து, ``உனது தலை. மனிதர் தலையாய் இல்லை; மீன் தலையாய் உள்ளது; அதன் எடை எட்டுப் பலமே`` என்று சொன்னால் உடனே தன் தலையை வெட்டி எடுத்து நிறுத்துப் பார்ப்பவர் உலகில் ஒருவரும் இல்லை. ஒருத்தர், பொதுமை பற்றி வந்த பன்மை; `ஒருத்தரும்` என்னும் இழிவு சிறப்பும்மை விரிக்க. *(அடி - 89)* மத்திரம் ஆகுவர் - அவ்வாறு சொன்னவர்மேல் சினங் கொள்வர். மாநெறி, எல்லா நெறிகளையும் தன்னுள் அடக்கி நிற்கும் நெறி; அது சிவ நெறி. மத்திர மாகுவர் - அதன் மேல் காழ்ப்புக் கொள்பவர். *(அடி - 90)* சித்திரம் - சொல்லளவில் அழகாய்த் தெரியும் சொற்கள். பேசுவர் - பேசப்படுபவர் தேவராகில் அவரால் குறிக்கப் படுவோர் பெருந்தேவராயின் *(அடி - 91, 92, 93)* ``இன்ன தீயோரைக் காய்ந்தனர்; இன்ன நல்லோர்க்கு அருள் புரிந்தனர்`` என்பது எங்கேனும் சொல்லப்படுகின்றதா? இல்லையே - என்க. இங்ஙனம் கூறியது, `புராண இதிகாசக் கதைகளாய் இல்லாமல்

சண்டேசுரர், கண்ணப்பர், கோச்செங்கட் சோழர், மூர்த்தியார் முதலியோர் வரலாறுபோல வரலாற்று முறையில் சொல்லக் கேட்கின்றோமா` என்னும் கருத்தினாற் கூறியதாகும். *(அடி - 94)* அழைத்தல் - கூப்பீடு செய்தல். *(அடி - 95)* ஈடுண்டல் - உட்படுதல் *(அடி - 96)* இப்படி ஞானம் - இங்கே சொல்லப்பட்ட ஞானம். அப்படி அமைத்தல் - மேல் வட்டணை பேசுவோர் கூறும் ஞானமாகத் திரித்து அமைத்தல். *(அடி - 97)* மேற்கூறிய பூக்கமழ் சடையனும் புண்ணிய நாதனும் ஆகிய இறைவனை இன்ன தன்மையன் என்று இருநிலத்து முன்னே *(இளமை யிற்றானே)* அறியாமாக்களை` என்க. *(அடி - 99)* இன்னே - இப் பொழுதே. `அவர்களைக் கூற்றம் கொளல் வேண்டும்` என்றது அவர்கள் மேல் எழுந்த சீற்றத்தால் அன்று; பயனில் உழப்புச் செய்தல் பற்றிய. பரிதாபத்தினாலாம்.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்
துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் சாகடிக்கும் கூற்று*

என்னும் திருக்குறள் போல்பவற்றைக் காண்க. *(அடி - 100)* தவறு - கடமையைச் செய்யாமை, `கூற்றம்` என்பது சொல்லால் அஃறிணை யாதலின், ``உடைத்து`` என அஃறிணையாகக் கூறினார். கோபப் பிரசாதம் முற்றிற்று.

நக்கீரதேவ நாயனார் - கார் எட்டு

அரவம் அரைக்கசைத்த அண்ணல் சடைபோல்
விரவி எழுந்தெங்கும் மின்னி அரவினங்கள்
அச்சங்கொண் டோடி அணைய அடைவுற்றே
கைச்சங்கம் போல்முழங்குங் கார். **#685**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

எல்லா வெண்பாக்களிலும் ``கார்`` என்பதை முதலிற் கொண்டு உரைக்க. `எங்கும் விரவி எழுந்து சடைபோல் மின்னி அடை வுற்றே சங்கம் போல் முழங்கும்` என இயைத்து முடிக்க. `அரவினங்கள் அணைய` என இயையும்.
``அரைக்கு`` என்பதை `அரைக்கண்` எனத் திரிக்க. இஃது உருபு மயக்கம். அசைத்த - கட்டிய. `புற்றில் அணைய` எனச் சொல்லெச்சம் வருவிக்க. சங்கு திருமாலுக்குச் சிறப்பாக உரித்தாயினும், `பிறர் அதனைக் கொள்ளலாகாது` என்பது இல்லை. வெற்றிச் சங்குத் தீயோரைக் காய்வார் பலரும் கொள்வதே. அதனால் இங்குச் சிவபெருமான் சங்கு உடைமையைக் கூறினார். `அவன் கைச்சங்கம் போல்` எனச் சுட்டுப் பெயர் வருவிக்க.

மையார் மணிமிடறு போற்கருகி மற்றவன்தன்
கையார் சிலை விலகிக் காட்டிற்றே ஐவாய்
அழலரவம் பூண்டான் அவிர்சடைபோல் மின்னிக்
கழலரவம் காண்புற்ற கார். **#686**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஐ வாய்`` என்பது முதலாகத் தொடங்கி உரைக்க. அழல் அரவம் - அழலும் அரவம். அழலும் - சீறுகின்ற; வினைத் தொகை. கழல் அரவம் - காலில் அணிந்த `கழல்` என்னும் அணி கலத்தின் ஒலி. காண்பு உள்ள - அவ்வொலி புலப்படுதற்கு இடமான; அஃதாவது இடி முழக்கத்தைச் செய்கின்ற. ``அவன்றன்`` என்பதை, ``மைஆர் மணி மிடறு`` என்பதற்கு முன்னே கூட்டுக. மை ஆர் - கருமை நிறம் பொருந்திய. மணி, நீ. மணில மற்று - அசை `சிலையைக் காட்டிற்று` என்க. சிலை - வில். விலகி - குறுக்கிட்டு.

ஆலமர் கண்டத் தரன்தன் மணிமிடறும்
கோலக் குழற்சடையும் கொல்லேறும் போல்வ
இருண்டொன்று மின்தோன்றி அம்பொன்றவ் வானம்
கருண்டொன்று கூடுதலின் கார். **#687**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கார், அம்பு ஒன்று அவ்வானம் இருண்டு, ஒன்று மின் தோன்றி, கருண்டு ஒன்றுதலின். மிடறும், சடையும், ஏறும் போல்வ` என இயைக்க. அம்பு ஒன்று - மழை நீர் பொருந்திய `வானத்தில்` என ஏழாவது விரிக்க. ஒன்று மின் - பொருந்திய மின்னல். தோன்றி - தோன்றப் பெற்று. இயம்புதல் - ஒலித்தல். கருண்டு - மயங்கி; அஃதாவது பல்வேறு வகைய வாய். ஏறு - இடபம், இருளுதலால் மிடறு போல்வனவும், மின்னுதலால் சடை போல்வனவும், இடி முழக்கம் செய்தலால் இடபம் போல்வனவும் ஆயின. இவ்வெண்பாவின் பாடம் பெரிதும் பிழைபட்டுக் காணப்படுகின்றது.

இருள்கொண்ட கண்டத் திறைவன்தன் சென்னிக்
குருள்கொண்ட செஞ்சடைபோல் மின்னிச் சுருள்கொண்டு
பாம்பினங்கள் அஞ்சிப் படம்ஒடுங்க ஆர்த்ததே
காம்பினங்கள் தோள்ஈயக் கார். **#688**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குருள் - தளிர். காம்பு - மூங்கில். மூங்கில் தோளுக்கு உவமையாகச் சொல்லப்படுதலால், அவற்றின் மேல் தங்கும் மேகங் களுக்கு அவை ஏறியிருக்கத் தோளைத் தந்ததாகக் கூறினார். `கார், காம்பினங்கள் தோள் ஈய (அவற்றின் மேல் தங்கி) மின்னிப் பாம்பினங்கள் அஞ்சி சுருள் கொண்டு படம் ஒடுங்க ஆர்த்தது` என்க.

கோடரவங் கோடல் அரும்பக் குருமணிகான்
றாடரவம் எல்லாம் அளையடைய நீடரவப்
பொற்பகலம் பூண்டான் புரிசடைபோல் மின்னிற்றே
கற்பகலம் காண்புற்ற கார். **#689**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கோடல் - காந்தள். அதன் அரும்பு பாம்பு போலும் தோற்றத்தை உடையது ஆகலின் `கோடல் கோடு அரவம் அரும்ப` என்றார். கோடு - வளைந்த. `அரவம் போல அரும்ப` என்க. மழைக் காலத்தில் காந்தள் அரும்பெடுத்து மலரும். குரு - நிறம். மணி, நவ மணிகள். கான்று - உமிழ்ந்து. அளை - புற்று. பொற்பு அகலம் - அழகிய மார்பு. கல் - மலை. அதனது தனது தன்மை. கற்பு, `கல்லினது தன்மையாகிய அகன்ற இடத்தில் காணப்பட்ட கார்` என்க.

பாரும் பனிவிசும்பும் பாசுபதன் பல்சடையும்

ஆரும் இருள்கீண்டு மின்விலகி ஊரும்
அரவம் செலஅஞ்சும் அஞ்சொலார் காண்பார்
கரவிந்தம் என்பார்அக் கார். #690
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதலிலும் `கார்` என்பது வருவித்து, `மின் விலகி, இருள் கீண்டு ஊரும்` என்க. பார் - நிலத்தின் கீழ் இடம். பனி விசும்பு. குளிர்ந்த ஆகாயம். பாசுபதன் சடை - சிவபெருமானது சடை. `இம் மூன்றிடங்களும் இருள் தங்கியிருக்கும் இடம்` என்றார். ஆரும் - பொருந்தும். சிவபெருமானது சடை முடி `அடவி` (சடாடவி) எனப் படுதலால், அதனையும் இருள் தங்கும் இடமாகக் கூறினார். விலகி - குறுக்கிட விட்டு. ஊரும் - தவழும் (அது பொழுது) `அரவம் வெளியே செல்ல அஞ்சும். `ஆயினும் அம் சொல்லார் (அழகிய சொற்களை யுடைய பெண்கள் பிரிந்து சென்ற கணவர் மீண்டு வருவார் என மகிழ்ந்து) அக் கார் காண்பார்கள். கண்டு, கர இந்து அம் (இவற்றுள்ளே மறைந்து நிற்கின்ற நிலவு அழகிது) என்பார்கள் இங்ஙனமெல்லாம் மகிழ்வார்கள்` என்றபடி. கர இந்து, இறந்தகால வினைத்தொகை.

செழுந்தழல் வண்ணன் செஞ்சடைபோல் மின்னி
அழுந்தி அலர்போல் உயர எழுந்தெங்கும்
ஆவிசோர் நெஞ்சினரை அன்பளக்க உற்றதே
காவிசேர் கண்ணாய்அக் கார். #691
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

காவி - கருங் குவளைப் பூ `அதன் தன்மை சேர்ந்த கண்களையுடைய தோழீ` என்க. அக்கார் - அஃதோ தோன்றுகின்ற மேகம்; `அன்பை அளத்தற் பொருட்டு, மின்னி, அழுந்தி, உயர எழுந்து, எங்கும் உற்றது; (யான் ஆற்றுமாறு எவன்) என முடிக்க. ஈற்றில் வருவிக்கப்படுவது குறிப்பெச்சம். அழுந்துதல் - இறுகுதல். `எனது ஆற்றாமையைப் பலரும் இகழ்கின்றார்கள் என்பதை நீ சொல்ல வேண்டாமலே யான் அறிவேன்` என்றற்கு, இடையே, ``அவர்போல் உயர எழுந்து`` என்றாள். ஆற்றாமையால் ஆவி சோர்தலைக் கண்டும் நீங்காமையால், `உயிர்விடுகின்றாளா, பார்ப்போம்` என்று இருக் கின்றது` என்பாள். ``ஆவி சோர் நெஞ்சினரை அன்பு அளக்க உற்றது`` என்றாள்; இரண்டன் உருபை ஆறன் உருபாகத் திரிக்க. இது தலைவனது பிரிவு நீட்டிக்க ஆற்றாளாய தலைமகளை, `ஆடவர் பிரிந்த செயலை முடித்து வருங்காறும் ஆற்றியிருத்தல் மகளிர் செயற்பாலது; அது நீ

செய்கின்றிலை` என வற்புறுத்திய தோழிக்குத் தலைவி, `அன்பிலார் ஆற்றியிருப்பர்; யான் ஆற்றேன்` என வன்புறை எதிரழிந்து கூறியது.

காந்தள் மலரக் கமழ்கொன்றை பொன்சொரியப்
பூந்தளவம் ஆரப் புகுந்தின்றே ஏந்தொளிசேர்
அண்டம்போல் மீதிருண்ட ஆதியான் ஆய்மணிசேர்
கண்டம்போல் மீதிருண்ட கார். **#692**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அண்டம் - ஆகாயம். அது நீல நிறத்தை உடையது ஆதலின் சிவபெருமானுடைய கண்டத்திற்கு உவமையாயிற்று. ``அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே`` என உவமைக்கு உவமை கூறலை விலக்கியது, உவமையால் பொருளைச் சிறப்பிப்பதாகிய நேர்நிலை உவமத்திற்கே யாம். அதில் உவமைக்குக் கூறும் உவமை ஆகவே அதற்கு அது விலக்கப்பட்டது. பொருளால் உவமையைச் சிறப்பிப்பதாகிய எதிர்நிலை உவமத்தில் உவமைக்கு உவமை கூறினால் இரண்டானும் பொருள் சிறப்பெய்துதலின் அதற்கு அவ் விலக்கு இன்றாம். `அண்டம்போல் மீதிருண்ட கண்டம் போல்` என இயைக்க. ``ஆதியான்`` என்பதும் ``கண்டம்`` என்பதனோடே முடியும். ஆதியான், சிவபெருமான். ஆய் மணி - ஆராய்ந்தெடுக்கப் பட்ட நீல மணி. `அதன் தன்மை சேர்ந்த கண்டம்` என்க. தளவம் - முல்லை. `தளவம் பூ ஆர` என மாற்றியுரைக்க. ஆர - நிறைய. மலரவும், `சொரியவும், ஆரவும் புகுந்தின்று` என்க. புகுந்தின்று - புகுந்தது. இன், சாரியை. இச்சாரியை ஈறு திரியாது வருதல் பண்டைய வழக்கம். `கூயிற்று, போயிற்று` என்றாற்போல ஈறு திரிந்தே வருதல் பிற்கால வழக்கம். அதனால் பிற்காலத்தில் இச்சாரியை ஏற்ற இடத்தே வருவதாம். ``புகுந்தின்று`` என்பதில் தகர ஒற்று இறந்த காலம் காட்டிற்று. `கூயிற்று, போயிற்று` என்பவற்றில் யகர ஒற்றே இறந்த காலம் காட்டுதலை, `ஆயது, போயது` முதலிய வற்றான் அறிக. கார் எட்டு முற்றிற்று.

நக்கீரதேவ நாயனார் - போற்றித் திருக்கலிவெண்பா

திருத்தங்கு மார்பின் திருமால் வரைபோல்
எருத்தத் திலங்கியவெண் கோட்டுப் பருத்த **#693**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(1) திருமால் வராக வடிவம் கொண்டு திரு வடியைத் தேடிக் காணாமை இவற்றால் கூறப்பட்டது. முதற்கண் உள்ள திரு. இலக்குமி. `எருத்தத்து இலங்கிய, வெண் கோடு முதலாக நீல நிறம் முடிவான இவற்றால் பொலிந்து வரைபோலும் பன்றி` என்க. வரை - மலை. எருத்தம் - பிடரி `எருத்தத்தால்` என உருபு. விரிக்க. `குறுந்தாள்` என்பது வலிந்து நின்றது. தாள் - கால். குன்றிக் கண் - குன்றி மணிபோலும் கண்கள். `பன்றித் திருஉருவாய் நிலம் ஏழ் உறத் தாழ்ந்து காணாத பாதங்கள்` என இயைக்க. நிலம், இங்குப் பாதல உலகங்கள். நின்றவா நின்ற நிலை - என்றும் ஒரு பெற்றியனவாய்த் திரிபின்றி நிற்கும் நிலை. *(இதற்குப்)* போற்றி - வணக்கம்.

குறுத்தாள் நெடுமூக்கிற் குன்றிக்கண் நீல
நிறத்தாற் பொலிந்து நிலம்ஏழ் உறத்தாழ்ந்து **#694**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(1) திருமால் வராக வடிவம் கொண்டு திரு வடியைத் தேடிக் காணாமை இவற்றால் கூறப்பட்டது. முதற்கண் உள்ள திரு. இலக்குமி. `எருத்தத்து இலங்கிய, வெண் கோடு முதலாக நீல நிறம் முடிவான இவற்றால் பொலிந்து வரைபோலும் பன்றி` என்க. வரை - மலை. எருத்தம் - பிடரி `எருத்தத்தால்` என உருபு. விரிக்க. `குறுந்தாள்` என்பது வலிந்து நின்றது. தாள் - கால். குன்றிக் கண் - குன்றி மணிபோலும் கண்கள். `பன்றித் திருஉருவாய் நிலம் ஏழ் உறத் தாழ்ந்து காணாத பாதங்கள்` என இயைக்க. நிலம், இங்குப் பாதல உலகங்கள். நின்றவா நின்ற நிலை - என்றும் ஒரு பெற்றியனவாய்த் திரிபின்றி நிற்கும் நிலை. *(இதற்குப்)* போற்றி - வணக்கம்.

பன்றித் திருவுருவாய்க் காணாத பாதங்கள்
நின்றவா நின்ற நிலைபோற்றி அன்றியும் **#695**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(1) திருமால் வராக வடிவம் கொண்டு திரு வடியைத் தேடிக் காணாமை இவற்றால் கூறப்பட்டது. முதற்கண் உள்ள திரு. இலக்குமி. `எருத்தத்து

இலங்கிய, வெண் கோடு முதலாக நீல நிறம் முடிவான இவற்றால் பொலிந்து வரைபோலும் பன்றி` என்க. வரை - மலை. எருத்தம் - பிடரி `எருத்தத்தால்` என உருபு. விரிக்க. `குறுந்தாள்` என்பது வலிந்து நின்றது. தாள் - கால். குன்றிக் கண் - குன்றி மணிபோலும் கண்கள். `பன்றித் திருஉருவாய் நிலம் ஏழ் உறத் தாழ்ந்து காணாத பாதங்கள்` என இயைக்க. நிலம், இங்குப் பாதல உலகங்கள். நின்றவா நின்ற நிலை - என்றும் ஒரு பெற்றியனவாய்த் திரிபின்றி நிற்கும் நிலை. (இதற்குப்) போற்றி - வணக்கம்.
புண்டரிகம் - தாமரை மலர். அதனுள் இருந்த புத்தேள், பிரம தேவன். `பறவை` என்னும் சாதி பற்றி அன்னத்தை, ``கழுகு`` என்றார். அன்றிப் புராண பேதம் பற்றிக் கூறினார் எனினும் ஆம். அண்டர் அண்டம் தேவர் உலகம். ஊடுருவியது கழுகுருவம். ``பண்டொருநாள்`` என்பதை முதலிற் கூட்டுக. ``காணான்`` என்பது, `காணானாய்` என முற்றெச்சம். இழிய - (முன் இருந்த இடத்திற்கு) இறங்கிவிட, சிவனுக்கு முடி சடையேயாயினும் கனக (பொன்) முடி விலக்கன்று. ``முடி கவித்து`` என்றதனால். `காணப்படாது நின்றது முடி` என்பது போந்தது. கோணாது - வளையாமல் `நிமிர்ந்து` என்றபடி.

புண்டரிகத் துள்ளிருந்த புத்தேள் கழுகுருவாய்
அண்டரண்டம் ஊடுருவ ஆங்கோடிப் பண்டொருநாள் **#696**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

புண்டரிகம் - தாமரை மலர். அதனுள் இருந்த புத்தேள், பிரம தேவன். `பறவை` என்னும் சாதி பற்றி அன்னத்தை, ``கழுகு`` என்றார். அன்றிப் புராண பேதம் பற்றிக் கூறினார் எனினும் ஆம். அண்டர் அண்டம் தேவர் உலகம். ஊடுருவியது கழுகுருவம். ``பண்டொருநாள்`` என்பதை முதலிற் கூட்டுக. ``காணான்`` என்பது, `காணானாய்` என முற்றெச்சம். இழிய - (முன் இருந்த இடத்திற்கு) இறங்கிவிட, சிவனுக்கு முடி சடையேயாயினும் கனக (பொன்) முடி விலக்கன்று. ``முடி கவித்து`` என்றதனால். `காணப்படாது நின்றது முடி` என்பது போந்தது. கோணாது - வளையாமல் `நிமிர்ந்து` என்றபடி.

காணான் இழியக் கனக முடிகவித்துக்
கோணாது நின்ற குறிபோற்றி நாணாளும் **#697**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

புண்டரிகம் - தாமரை மலர். அதனுள் இருந்த புத்தேள், பிரம தேவன். `பறவை` என்னும் சாதி பற்றி அன்னத்தை, ``கழுகு`` என்றார். அன்றிப்

புராண பேதம் பற்றிக் கூறினார் எனினும் ஆம். அண்டர் அண்டம் தேவர் உலகம். ஊடுருவியது கழுகுருவம். ``பண்டொருநாள்`` என்பதை முதலிற் கூட்டுக. ``காணான்`` என்பது, `காணானாய்` என முற்றெச்சம். இழிய - (முன் இருந்த இடத்திற்கு) இறங்கிவிட, சிவனுக்கு முடி சடையேயாயினும் கனக (பொன்) முடி விலக்கன்று. ``முடி கவித்து`` என்றதனால். `காணப்படாது நின்றது முடி` என்பது போந்தது. கோணாது - வளையாமல் `நிமிர்ந்து` என்றபடி.
பேணி - பாதுகாத்து `காலங்கள் தோறும்` என. `தோறும்` என்பது வருவிக்க. மாணி - பிரமசாரி. மார்க்கண்டேயர். கடவூர் - திருக்கடவூர். அட்ட வீரட்டத் தலங்களில் ஒன்று. ஊரில் உள்ளவர்களை ``ஊர்`` என்றார். `வரத்தின் பெற்ற பெரிய வலி` என்க. உரம் - மார்பு.

பேணிக்கா லங்கள் பிரியாமைப் பூசித்த
மாணிக்கா அன்று மதிற்கடவூர்க் காண **#698**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பேணி - பாதுகாத்து `காலங்கள் தோறும்` என. `தோறும்` என்பது வருவிக்க. மாணி - பிரமசாரி. மார்க்கண்டேயர். கடவூர் - திருக்கடவூர். அட்ட வீரட்டத் தலங்களில் ஒன்று. ஊரில் உள்ளவர்களை ``ஊர்`` என்றார். `வரத்தின் பெற்ற பெரிய வலி` என்க. உரம் - மார்பு.

வரத்திற் பெரிய வலிதொலையக் காலன்
உரத்தில் உதைத்தவுதை போற்றி கரத்தான்மே **#699**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பேணி - பாதுகாத்து `காலங்கள் தோறும்` என. `தோறும்` என்பது வருவிக்க. மாணி - பிரமசாரி. மார்க்கண்டேயர். கடவூர் - திருக்கடவூர். அட்ட வீரட்டத் தலங்களில் ஒன்று. ஊரில் உள்ளவர்களை ``ஊர்`` என்றார். `வரத்தின் பெற்ற பெரிய வலி` என்க. உரம் - மார்பு.
``கரத்தான் மே`` என்றதனை, ``குங்குமத்தின்`` என்பதற்கு முன்னே கூட்டுக. கற்பு - கற்றல். அஃதாவது இங்குக் கோலம் எழுதக் கற்றுக் கொள்ளுதல். அஃது ஆகுபெயராய் அக்கல்வி வன்மையால் எழுதப்படும் கோலத்தைக் குறித்தது. எனவே, `கொங்கைமேல், கரத்தான் மேவு குங்குமத்தின் கோலம் அழியும் வண்ணம்` - அஃதாவது, `கொங்கைமேற் சேரும் வண்ணம்` எனக் கூறியதாம். கசிவித்தல் - மனத்தை இளகச் செய்தல், `யோகத்தில் இருந்த தன்னை (சிவனை)ப் போகத்தில் இச்சையுடையனாக்கும் பொருட்டு` என்றவாறு. அழகுடைமை பற்றித் திருமாலும் `வாமன்` எனப்படுவான். பொற்பு - அழகு. எனவே,

``வாமன்`` என்பது வாளா பெயராய் நின்றது.

வெற்பன் மடப்பாவை கொங்கைமேற் குங்குமத்தின்
கற்பழியும் வண்ணங் கசிவிப்பான் பொற்புடைய **#700**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கரத்தான் மே`` என்றதனை, ``குங்குமத்தின்`` என்பதற்கு முன்னே கூட்டுக. கற்பு - கற்றல். அஃதாவது இங்குக் கோலம் எழுதக் கற்றுக் கொள்ளுதல். அஃது ஆகுபெயராய் அக்கல்வி வன்மையால் எழுதப்படும் கோலத்தைக் குறித்தது. எனவே, `கொங்கைமேல், கரத்தான் மேவு குங்குமத்தின் கோலம் அழியும் வண்ணம்` - அஃதாவது, `கொங்கைமேற் சேரும் வண்ணம்` எனக் கூறியதாம். கசிவித்தல் - மனத்தை இளகச் செய்தல், `யோகத்தில் இருந்த தன்னை (சிவனை)ப் போகத்தில் இச்சையுடையனாக்கும் பொருட்டு` என்றவாறு. அழகுடைமை பற்றித் திருமாலும் `வாமன்` எனப்படுவான். பொற்பு - அழகு. எனவே, ``வாமன்`` என்பது வாளா பெயராய் நின்றது.

வாமன் மகனாய் மலர்க்கணையொன் றோட்டியஅக்
காமன் அழகழித்த கண்போற்றி தூமப்
#701
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கரத்தான் மே`` என்றதனை, ``குங்குமத்தின்`` என்பதற்கு முன்னே கூட்டுக. கற்பு - கற்றல். அஃதாவது இங்குக் கோலம் எழுதக் கற்றுக் கொள்ளுதல். அஃது ஆகுபெயராய் அக்கல்வி வன்மையால் எழுதப்படும் கோலத்தைக் குறித்தது. எனவே, `கொங்கைமேல், கரத்தான் மேவு குங்குமத்தின் கோலம் அழியும் வண்ணம்` - அஃதாவது, `கொங்கைமேற் சேரும் வண்ணம்` எனக் கூறியதாம். கசிவித்தல் - மனத்தை இளகச் செய்தல், `யோகத்தில் இருந்த தன்னை (சிவனை)ப் போகத்தில் இச்சையுடையனாக்கும் பொருட்டு` என்றவாறு. அழகுடைமை பற்றித் திருமாலும் `வாமன்` எனப்படுவான். பொற்பு - அழகு. எனவே, ``வாமன்`` என்பது வாளா பெயராய் நின்றது.

தூமம் - தாருகாவனமுனிவர் செய்த வேள்வியின் புகை நடுவிலே. படம் எடுத்து வந்த பாம்புகள் வெகுண்டு பார்த்து தீங்கு செய்யவர அவைகளைப் பற்றி அணியாக அணிந்து.

படமெடுத்த வாளரவம் பார்த்தடரப் பற்றி
விடமெடுத்த வேகத்தான் மிக்குச் சடலம் **#702**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தூமம் - தாருகாவனமுனிவர் செய்த வேள்வியின் புகை நடுவிலே. படம் எடுத்து வந்த பாம்புகள் வெகுண்டு பார்த்து தீங்கு செய்யவர அவைகளைப் பற்றி அணியாக அணிந்து.
இவற்றில் முயலகன் வரலாறு சொல்லப்படு கின்றது. வேறு இடங்களில் இது பெறப்படவில்லை. `தாருகாவன இருடிகளால் அனுப்பப்பட்ட ஓர் அசுரன்` என்னும் அளவில் சொல்லப்பட்டது.) உடன் தோன்றிய பாம்புகள் உமிழ்ந்த விடவேகத்தைத் தானும் உடையவனாய், அப்பாம்புகளைப் போலத் தானும் உடலை வளைத்துத் திருமேனியைச் சுற்றி வளைத்து வலித்த (இழுத்த) முயலகனுடைய மொய்ம்பை (வலிமையை) அடங்க மிதித்த திருவடிக்கு வணக்கம்.

முடங்க வலிக்கும் முயலகன்தன் மொய்ம்பை
அடங்க மிதித்தவடர் போற்றி நடுங்கத் #703
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இவற்றில் முயலகன் வரலாறு சொல்லப்படு கின்றது. வேறு இடங்களில் இது பெறப்படவில்லை. `தாருகாவன இருடிகளால் அனுப்பப்பட்ட ஓர் அசுரன்` என்னும் அளவில் சொல்லப்பட்டது.) உடன் தோன்றிய பாம்புகள் உமிழ்ந்த விடவேகத்தைத் தானும் உடையவனாய், அப்பாம்புகளைப் போலத் தானும் உடலை வளைத்துத் திருமேனியைச் சுற்றி வளைத்து வலித்த (இழுத்த) முயலகனுடைய மொய்ம்பை (வலிமையை) அடங்க மிதித்த திருவடிக்கு வணக்கம்.
``நடுங்க`` என்பதை, ``குருமாற`` என்பதன் பின் கூட்டுக. குரு - பாரம். அஃது ஆகுபெயராய் மலையைக் குறித்தது. மலை, மந்தரமலை. மாற - மாறி. மாறிக் கடைய. `அவர்கள் நடுங்க வந்தெழுந்த ஆலம்` என இயையும். மால் கடல் - பெரிய கடல் `நாகத்தையும் பற்றி மாற` என்க. நாகம், `வாசுகி` என்னும் பாம்பு. நீலம் - நீல நிறத்தையுடைய கடல் நீர். ஆகுபெயர் `நீர் முகில்போல் வந்தெழுந்த ஆலம்` என்பதாம். அழல - துன்பத்தால் வருந்த. கண்ட மாகிய அதற்கு வணக்கம்.

திருமால் முதலாய தேவா சுரர்கள்
கருமால் கடல்நாகம் பற்றிக் குருமாற #704
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நடுங்க`` என்பதை, ``குருமாற`` என்பதன் பின் கூட்டுக. குரு - பாரம். அஃது ஆகுபெயராய் மலையைக் குறித்தது. மலை, மந்தரமலை. மாற - மாறி. மாறிக் கடைய. `அவர்கள் நடுங்க வந்தெழுந்த ஆலம்` என

இயையும். மால் கடல் - பெரிய கடல் `நாகத்தையும் பற்றி மாற` என்க. நாகம், `வாசுகி` என்னும் பாம்பு. நீலம் - நீல நிறத்தையுடைய கடல் நீர். ஆகுபெயர் `நீர் முகில்போல் வந்தெழுந்த ஆலம்` என்பதாம். அழல - துன்பத்தால் வருந்த. கண்ட மாகிய அதற்கு வணக்கம்.

நீலமுண்ட நீள்முகில்போல் நெஞ்சழல வந்தெழுந்த
ஆலமுண்ட கண்டம் அதுபோற்றி சாலமண்டிப்
#705
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நடுங்க`` என்பதை, ``குருமாற`` என்பதன் பின் கூட்டுக. குரு - பாரம். அஃது ஆகுபெயராய் மலையைக் குறித்தது. மலை, மந்தரமலை. மாற - மாறி. மாறிக் கடைய. `அவர்கள் நடுங்க வந்தெழுந்த ஆலம்` என இயையும். மால் கடல் - பெரிய கடல் `நாகத்தையும் பற்றி மாற` என்க. நாகம், `வாசுகி` என்னும் பாம்பு. நீலம் - நீல நிறத்தையுடைய கடல் நீர். ஆகுபெயர் `நீர் முகில்போல் வந்தெழுந்த ஆலம்` என்பதாம். அழல - துன்பத்தால் வருந்த. கண்ட மாகிய அதற்கு வணக்கம்.

``சால மண்டி`` என்பதை ``மிக்கடர்க்கும்`` என்பதற்குமுன்னே கூட்டுக. உகந்த - விரும்பிய. சால மண்டி - மிகவும் நெருங்கி. அடர்க்கும் - வருத்துகின்ற. தாருகன், ஓர் அசுரன். இவன் முருகக் கடவுளால் அழிக்கப்பட்ட தாரகனின் வேறானவன். `அதற்கு வீரம் கொடுத்து` என்க. ``எறியும்`` என்றது, `எறிந்து கொல்லும்` எனத் தன் காரியம் தோற்றி நின்றது. மாகாளி - வீர மாகாளி. `அவள் தான் கொண்ட கோபம் தணியாது உலகிற்கு இடர் புரிந்தமையால், அவளை நடனப் போரினால் சிவபெருமான் நாணம் அடையச் செய்து வென்றான்` என்பது வரலாறு. இந்நடனப் போர் நிகழ்ந்த இடமாகக் கூறப்படுவது திருவாலங்காடு.

போருகந்த வானவர்கள் புக்கொடுங்க மிக்கடர்க்கும்
தாருகன்தன் மார்பில் தனிச்சூலம் வீரம் **#706**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``சால மண்டி`` என்பதை ``மிக்கடர்க்கும்`` என்பதற்குமுன்னே கூட்டுக. உகந்த - விரும்பிய. சால மண்டி - மிகவும் நெருங்கி. அடர்க்கும் - வருத்துகின்ற. தாருகன், ஓர் அசுரன். இவன் முருகக் கடவுளால் அழிக்கப்பட்ட தாரகனின் வேறானவன். `அதற்கு வீரம் கொடுத்து` என்க. ``எறியும்`` என்றது, `எறிந்து கொல்லும்` எனத் தன் காரியம் தோற்றி நின்றது. மாகாளி - வீர மாகாளி. `அவள் தான் கொண்ட

கோபம் தணியாது உலகிற்கு இடர் புரிந்தமையால், அவளை நடனப் போரினால் சிவபெருமான் நாணம் அடையச் செய்து வென்றான்` என்பது வரலாறு. இந்நடனப் போர் நிகழ்ந்த இடமாகக் கூறப்படுவது திருவாலங்காடு.

கொடுத்தெறியும் மாகாளி கோபந் தவிர
எடுத்த நடத்தியல்பு போற்றி தடுத்து #707
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``சால மண்டி`` என்பதை ``மிக்கடர்க்கும்`` என்பதற்குமுன்னே கூட்டுக. உகந்த - விரும்பிய. சால மண்டி - மிகவும் நெருங்கி. அடர்க்கும் - வருத்துகின்ற. தாருகன், ஓர் அசுரன். இவன் முருகக் கடவுளால் அழிக்கப்பட்ட தாரகனின் வேறானவன். `அதற்கு வீரம் கொடுத்து` என்க. ``எறியும்`` என்றது, `எறிந்து கொல்லும்` எனத் தன் காரியம் தோற்றி நின்றது. மாகாளி - வீர மாகாளி. `அவள் தான் கொண்ட

கோபம் தணியாது உலகிற்கு இடர் புரிந்தமையால், அவளை நடனப் போரினால் சிவபெருமான் நாணம் அடையச் செய்து வென்றான்` என்பது வரலாறு. இந்நடனப் போர் நிகழ்ந்த இடமாகக் கூறப்படுவது திருவாலங்காடு.

`வாளரக்கனைத் தடுத்து அவன் வாய் ஆறு உதிரம் நிலை எடுத்து` என உருபு விரித்தும், சுட்டுப் பெயர் வருவித் தும் உரைக்க. வரை, கைலாயமலை, அதனை எடுத்த அரக்கன் இராவணன். நிலை, தாரைகளின் வரிசை. எடுத்து - தோன்றி. இற்று - முரிந்து. இரு செய்தென் எச்சங்களும் எண்ணின்கண் வந்து, ``நெரிய`` என்பதனோடு முடிந்தன. புரை எடுத்த - `குற்றத்தை மேற் கொண்ட முடியும், தோளும்` என்க. பத்து அனைய - `பத்து` என்னும் அவ் எண்ணிக்கையை உடைய. முடி. ஆகுபெயராய் அதனை அணிந்த தலையை உணர்த்திற்று. வலி பொறுக்கமாட்டாது அழும் அளவிற்கு ஊன்றியதன்றி, இறந்தொழியும்படி ஊன்றாமையால் ``மெத்தெனவே வைத்த விரல்`` என்றார்.

வரையெடுத்த வாளரக்கன் வாயா றுதிரம்
நிரையெடுத்து நெக்குடலம் இற்றுப் புரையெடுத்த #708
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வாளரக்கனைத் தடுத்து அவன் வாய் ஆறு உதிரம் நிலை எடுத்து` என உருபு விரித்தும், சுட்டுப் பெயர் வருவித் தும் உரைக்க. வரை, கைலாயமலை, அதனை எடுத்த அரக்கன் இராவணன். நிலை,

தாரைகளின் வரிசை. எடுத்து - தோன்றி. இற்று - முரிந்து. இரு செய்தென் எச்சங்களும் எண்ணின்கண் வந்து, ``நெரிய`` என்பதனோடு முடிந்தன. புரை எடுத்த - `குற்றத்தை மேற் கொண்ட முடியும், தோளும்` என்க. பத்து அனைய - `பத்து` என்னும் அவ் எண்ணிக்கையை உடைய. முடி. ஆகுபெயராய் அதனை அணிந்த தலையை உணர்த்திற்று. வலி பொறுக்கமாட்டாது அழும் அளவிற்கு ஊன்றியதன்றி, இறந்தொழியும்படி ஊன்றாமையால் ``மெத்தெனவே வைத்த விரல்`` என்றார்.

பத்தனைய பொன்முடியும் தோளிருப தும்நெரிய
மெத்தெனவே வைத்த விரல்போற்றி அத்தகைத்த

#709

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வாளரக்கனைத் தடுத்து அவன் வாய் ஆறு உதிரம் நிலை எடுத்து` என உருபு விரித்தும், சுட்டுப் பெயர் வருவித் தும் உரைக்க. வரை, கைலாயமலை, அதனை எடுத்த அரக்கன் இராவணன். நிலை, தாரைகளின் வரிசை. எடுத்து - தோன்றி. இற்று - முரிந்து. இரு செய்தென் எச்சங்களும் எண்ணின்கண் வந்து, ``நெரிய`` என்பதனோடு முடிந்தன. புரை எடுத்த - `குற்றத்தை மேற் கொண்ட முடியும், தோளும்` என்க. பத்து அனைய - `பத்து` என்னும் அவ் எண்ணிக்கையை உடைய. முடி. ஆகுபெயராய் அதனை அணிந்த தலையை உணர்த்திற்று. வலி பொறுக்கமாட்டாது அழும் அளவிற்கு ஊன்றியதன்றி, இறந்தொழியும்படி ஊன்றாமையால் ``மெத்தெனவே வைத்த விரல்`` என்றார்.

(இவற்றில் பிரமன் தலையை வெட்டிய வரலாறு வேறு வகையாகக் கூறப்படுகின்றது. ``நாமகள் நாசி, சிரம்பிரமன் பட`` திருவாசகத்தில் பிரமன் சிரம் தக்கன் வேள்வியில் வெட்டப்பட்டதாகக் கூறப்பட்டது. ``அரி அயன் தலை வெட்டி வட்டாடினார்``* என்பது அப்பர் திருமொழி.)

``தகைத்த`` என்பது `தகை` என்பது அடியாகப் பிறந்த தெரிநிலைப் பெயரெச்சம். மந்திரித்தல் - மந்திராலோசனை செய்தல், மந்திரம் - மந்திராலோசனை செய்து முடிக்கப்பட்ட பொருள். இஃது இரகசியமானது. விதிர் விதிர்த்தல். அஞ்சுதல் - நடுங்குதல். பிரமன் அஞ்சியது, `இம்முடிவு தன்னால் ஏற்பட்டது) எனக் கொண்டு அசுரர்கள் தனக்குக் கேடு சூழ்வர் என நினைத்தமையாலாம். மேல் - பின்பு. தானவர் - அசுரர். `விதிர் விதிர்த்து, மேல் தானவருக்கு நவில ஓடி, ஒட்டிக் குறளை உரைத்த அயன்` என்க. குறளை உரைத்தல் - கோள் சொல்லல், ஒட்டி- அவர்களோடு பொருந்தி. `இது பற்றித் தேவர்கள்

முறையிடச் சிவ பெருமான் அயனது சிரசை அறுத்தான்` என்க.

வானவர்கள் தாம்கூடி மந்திரித்த மந்திரத்தை
மேனவில ஒடி விதிர்விதிர்த்துத் தானவருக் **#710**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

*(*இவற்றில் பிரமன் தலையை வெட்டிய வரலாறு வேறு வகையாகக் கூறப்படுகின்றது. ``நாமகள் நாசி, சிரம்பிரமன் பட`` திருவாசகத்தில் பிரமன் சிரம் தக்கன் வேள்வியில் வெட்டப்பட்டதாகக் கூறப்பட்டது. ``அரி அயன் தலை வெட்டி வட்டாடினார்``* என்பது அப்பர் திருமொழி.*)* ``தகைத்த`` என்பது `தகை` என்பது அடியாகப் பிறந்த தெரிநிலைப் பெயரெச்சம். மந்திரித்தல் - மந்திராலோசனை செய்தல், மந்திரம் - மந்திராலோசனை செய்து முடிக்கப்பட்ட பொருள். இஃது இரகசியமானது. விதிர் விதிர்த்தல். அஞ்சுதல் - நடுங்குதல். பிரமன் அஞ்சியது, `இம்முடிவு தன்னால் ஏற்பட்டது*)* எனக் கொண்டு அசுரர்கள் தனக்குக் கேடு சூழ்வர் என நினைத்தமையாலாம். மேல் - பின்பு. தானவர் - அசுரர். `விதிர் விதிர்த்து, மேல் தானவருக்கு நவில ஓடி, ஒட்டிக் குறளை உரைத்த அயன்` என்க. குறளை உரைத்தல் - கோள் சொல்லல், ஒட்டி- அவர்களோடு பொருந்தி. `இது பற்றித் தேவர்கள் முறையிடச் சிவ பெருமான் அயனது சிரசை அறுத்தான்` என்க.

கொட்டிக் குறளை உரைத்த அயன்சிரத்தை
வெட்டிச் சிரித்த விறல்போற்றி மட்டித்து **#711**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

*(*இவற்றில் பிரமன் தலையை வெட்டிய வரலாறு வேறு வகையாகக் கூறப்படுகின்றது. ``நாமகள் நாசி, சிரம்பிரமன் பட`` திருவாசகத்தில் பிரமன் சிரம் தக்கன் வேள்வியில் வெட்டப்பட்டதாகக் கூறப்பட்டது. ``அரி அயன் தலை வெட்டி வட்டாடினார்``* என்பது அப்பர் திருமொழி.*)* ``தகைத்த`` என்பது `தகை` என்பது அடியாகப் பிறந்த தெரிநிலைப் பெயரெச்சம். மந்திரித்தல் - மந்திராலோசனை செய்தல், மந்திரம் - மந்திராலோசனை செய்து முடிக்கப்பட்ட பொருள். இஃது இரகசியமானது. விதிர் விதிர்த்தல். அஞ்சுதல் - நடுங்குதல். பிரமன் அஞ்சியது, `இம்முடிவு தன்னால் ஏற்பட்டது*)* எனக் கொண்டு அசுரர்கள் தனக்குக் கேடு சூழ்வர் என நினைத்தமையாலாம். மேல் - பின்பு. தானவர் - அசுரர். `விதிர் விதிர்த்து, மேல் தானவருக்கு நவில ஓடி, ஒட்டிக் குறளை உரைத்த அயன்` என்க. குறளை உரைத்தல் - கோள் சொல்லல், ஒட்டி- அவர்களோடு பொருந்தி. `இது பற்றித் தேவர்கள்

முறையிடச் சிவ பெருமான் அயனது சிரசை அறுத்தான்` என்க. மட்டித்தல் - பூசுதல். அது நன்கு அமையச் செய்தலைக் குறித்தது. வாலுகம் - வெண்மணல் குவை. வகுத்து - செய்து. உகைத்து - அப்புறப்படுத்தி. ஓட்டிய - தன்னையும் வெருட்டிய. வன்தாதை - கொடிய தகப்பன், `தகப்பன்` எனக் கருதுதற்கு உரியன் அல்லாதவன்` என்றபடி. சண்டி - சண்டேசுர நாயனார். வேறாக - தனியாக. `வேறாக இருத்தி` என்க. பூ மாலை தான் சாத்தி எடுத்த பூ மாலை. போனகம் - நிவேதனம். இதுவும் நிவேதித்து. நற்கோலம் - சிவ வடிவு. ``நற்கோலம்`` என்பதிலும் உம்மை விரிக்க. இவற்றையெல்லாம் கொடுத்தது. மகன்மையுரிமை மிக்குத் தோன்றவாம்.

வாலுகத்தால் மாவிலங்க மாவகுத்து மற்றதன்மேல்
பாலுகுப்பக் கண்டு பதைத்தோடி மேலுதைத்தங் **#712**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மட்டித்தல் - பூசுதல். அது நன்கு அமையச் செய்தலைக் குறித்தது. வாலுகம் - வெண்மணல் குவை. வகுத்து - செய்து. உகைத்து - அப்புறப்படுத்தி. ஓட்டிய - தன்னையும் வெருட்டிய. வன்தாதை - கொடிய தகப்பன், `தகப்பன்` எனக் கருதுதற்கு உரியன் அல்லாதவன்` என்றபடி. சண்டி - சண்டேசுர நாயனார். வேறாக - தனியாக. `வேறாக இருத்தி` என்க. பூ மாலை தான் சாத்தி எடுத்த பூ மாலை. போனகம் - நிவேதனம். இதுவும் நிவேதித்து. நற்கோலம் - சிவ வடிவு. ``நற்கோலம்`` என்பதிலும் உம்மை விரிக்க. இவற்றையெல்லாம் கொடுத்தது. மகன்மையுரிமை மிக்குத் தோன்றவாம்.

கொட்டியவன் தாதை இருதாள் எறிந்துயிரை
வீட்டிய சண்டிக்கு வேறாக நாட்டின்கண் **#713**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மட்டித்தல் - பூசுதல். அது நன்கு அமையச் செய்தலைக் குறித்தது. வாலுகம் - வெண்மணல் குவை. வகுத்து - செய்து. உகைத்து - அப்புறப்படுத்தி. ஓட்டிய - தன்னையும் வெருட்டிய. வன்தாதை - கொடிய தகப்பன், `தகப்பன்` எனக் கருதுதற்கு உரியன் அல்லாதவன்` என்றபடி. சண்டி - சண்டேசுர நாயனார். வேறாக - தனியாக. `வேறாக இருத்தி` என்க. பூ மாலை தான் சாத்தி எடுத்த பூ மாலை. போனகம் - நிவேதனம். இதுவும் நிவேதித்து. நற்கோலம் - சிவ வடிவு. ``நற்கோலம்`` என்பதிலும் உம்மை விரிக்க. இவற்றையெல்லாம் கொடுத்தது. மகன்மையுரிமை மிக்குத் தோன்றவாம்.

பொற்கோயில் உள்ளிருத்திப் பூமாலை போனகமும்
நற்கோலம் ஈந்த நலம்போற்றி நிற்க
#714
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மட்டித்தல் - பூசுதல். அது நன்கு அமையச் செய்தலைக் குறித்தது. வாலுகம் - வெண்மணல் குவை. வகுத்து - செய்து. உகைத்து - அப்புறப்படுத்தி. ஓட்டிய - தன்னையும் வெருட்டிய. வன்தாதை - கொடிய தகப்பன், `தகப்பன்` எனக் கருதுதற்கு உரியன் அல்லாதவன்` என்றபடி. சண்டி - சண்டேசுர நாயனார். வேறாக - தனியாக. `வேறாக இருத்தி` என்க. பூ மாலை தான் சாத்தி எடுத்த பூ மாலை. போனகம் - நிவேதனம். இதுவும் நிவேதித்து. நற்கோலம் - சிவ வடிவு. ``நற்கோலம்`` என்பதிலும் உம்மை விரிக்க. இவற்றையெல்லாம் கொடுத்தது. மகன்மையுரிமை மிக்குத் தோன்றவாம்.

வலந்தருமால் நான்முகனும் வானவரும் கூடி
அலந்தருமால் கொள்ள அடர்க்கும் சலந்தரனைச் **#715**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வலம் தரும் மால் - வெற்றியைத் தருகின்ற திருமால். அலந்து அரு மால் கொள்ள - அலமந்து, நீக்குதற்கரிய மயக்கத்தைக் கொள்ள. அடக்கும் - துன்புறுத்தும். சலந்தரன் - சலந்தராசுரன். அரி - திருமால். விறல் - வெற்றி.

சக்கரத்தால் ஈர்ந் தரிதன் தாமரைக்கண் சாத்துதலும்
மிக்கஃதன் றீந்த விறல்போற்றி அக்கணமே **#716**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வலம் தரும் மால் - வெற்றியைத் தருகின்ற திருமால். அலந்து அரு மால் கொள்ள - அலமந்து, நீக்குதற்கரிய மயக்கத்தைக் கொள்ள. அடக்கும் - துன்புறுத்தும். சலந்தரன் - சலந்தராசுரன். அரி - திருமால். விறல் - வெற்றி.

நக்கு இருந்த - பொருட்படுத்தாது சிரித்துக் கொண்டிருந்த. `அக்கணமே மூக்கரிந்து` என்க. தொக்கு இருந்த - தொகைமிக்கு இருந்த. வண்ணம் - வகை; புகழ்; அங்கைத் தலத்தே அணி மாலை - உள்ளங்கையில் வைத்திருத்தற்குரிய செபமாலை, ஆங்கு அளித்த - அப்பொழுதே கொடுத்த. `அணி மானை` என்பதும், `ஆங்கணிந்த` என்பதும் பாடங்கள் அல்ல.

நக்கிருந்த நாமகளை மூக்கரிந்து நால்வேதம்
தொக்கிருந்த வண்ணம் துதிசெய்ய மிக்கிருந்த **#717**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வலம் தரும் மால் - வெற்றியைத் தருகின்ற திருமால். அலந்து அரு மால் கொள்ள - அலமந்து, நீக்குதற்கரிய மயக்கத்தைக் கொள்ள. அடக்கும் - துன்புறுத்தும். சலந்தரன் - சலந்தராசுரன். அரி - திருமால். விறல் - வெற்றி.
நக்கு இருந்த - பொருட்படுத்தாது சிரித்துக் கொண்டிருந்த. `அக்கணமே மூக்கரிந்து` என்க. தொக்கு இருந்த - தொகைமிக்கு இருந்த. வண்ணம் - வகை; புகழ்; அங்கைத் தலத்தே அணி மாலை - உள்ளங்கையில் வைத்திருத்தற்குரிய செபமாலை, ஆங்கு அளித்த - அப்பொழுதே கொடுத்த. `அணி மானை` என்பதும், `ஆங்கணிந்த` என்பதும் பாடங்கள் அல்ல.

அங்கைத் தலத்தே அணிமாலை ஆங்களித்த
செங்கைத் திறத்த திறல்போற்றி திங்களைத் **#718**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நக்கு இருந்த - பொருட்படுத்தாது சிரித்துக் கொண்டிருந்த. `அக்கணமே மூக்கரிந்து` என்க. தொக்கு இருந்த - தொகைமிக்கு இருந்த. வண்ணம் - வகை; புகழ்; அங்கைத் தலத்தே அணி மாலை - உள்ளங்கையில் வைத்திருத்தற்குரிய செபமாலை, ஆங்கு அளித்த - அப்பொழுதே கொடுத்த. `அணி மானை` என்பதும், `ஆங்கணிந்த` என்பதும் பாடங்கள் அல்ல.
திங்கள் - சந்திரன். தக்கன் வேள்வியில் சந்திரன் தரையில் வைத்துத் தேய்க்கப்பட்டான். ``அதுவே`` என்ப தனை, `அதனையே` என உருபுவிரித்துரைக்க. `வாய்த்த` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. வாய்த்த - தக்கன் வேள்வியில் சென்றிருந்த தேவர்களை மடிவித்துப் பின் எழுப்பியதாகக் கூறப்பட்ட செய்தி இங்குச் சிறையில் அடைத்துப் பின்பு விடுவித்ததாகச் சொல்லப்பட்டது.

தேய்த்ததுவே செம்பொற் செழுஞ்சடைமேற் சேர்வித்து
வாய்த்திமையோர் தம்மைஎல்லாம் வான்சிறையில் பாய்த்திப் **#719**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திங்கள் - சந்திரன். தக்கன் வேள்வியில் சந்திரன் தரையில் வைத்துத் தேய்க்கப்பட்டான். ``அதுவே`` என்ப தனை, `அதனையே` என

உருபுவிரித்துரைக்க. `வாய்த்த` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. வாய்த்த - தக்கன் வேள்வியில் சென்றிருந்த தேவர்களை மடிவித்துப் பின் எழுப்பியதாகக் கூறப்பட்ட செய்தி இங்குச் சிறையில் அடைத்துப் பின்பு விடுவித்ததாகச் சொல்லப்பட்டது.

பிரமன் குறையிரப்பப் பின்னும் அவற்கு
வரமன் றளித்தவலி போற்றி புரமெரித்த #720
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திங்கள் - சந்திரன். தக்கன் வேள்வியில் சந்திரன் தரையில் வைத்துத் தேய்க்கப்பட்டான். ``அதுவே`` என்ப தனை, `அதனையே` என உருபுவிரித்துரைக்க. `வாய்த்த` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. வாய்த்த - தக்கன் வேள்வியில் சென்றிருந்த தேவர்களை மடிவித்துப் பின் எழுப்பியதாகக் கூறப்பட்ட செய்தி இங்குச் சிறையில் அடைத்துப் பின்பு விடுவித்ததாகச் சொல்லப்பட்டது.
திரிபுரத்தையெரித்த பொழுது அவற்றுள் இருந்த பலருள் சிவபத்தியினின்றும் மாறாது உறைத்து நின்ற, `சுதன்மன், சுசீலன், சுபுத்தி` - என்னும் மூவர் திருவருளால் உய்தி பெற்றிருந்தனர். திரிபுரத்தசுராகிய தாரகாக்கன், கமலாக்கன், வித்யுன்மாலி - இவரும், மற்றையோரும் அழிந்தொழிந்தனர். உய்ந்த மூவரில் இருவர் கோயில் வாயில் காவலராகும் வரத்தையும், ஒருவன் முழவு வாசிக்கும் வரத்தையும் பெற்றனர்.

மூவார் புரங்கள் எரித்த அன்று
மூவர்க் கருள் செய்தார்;
மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில்
இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளரென் றேவிய பின்னை
ஒருவன் நீ கரி காடரங் காக
மானை நோக்கிஓர் மாநடம் மகிழ
மணிமுழா முழக்க அருள் செய்த
தேவ தேவ
உய்யவல்லார் ஒரு மூவரைக் காவல் கொண்டு
எய்யவல் லானுக்கே உந்தீபற

என்னும் திருமுறைகளைக் காண்க. அமர்ந்து - விரும்பி. நிகழ்வித்து - யாவரும் அறியச் செய்து. `நடை காவலால்` என உருபு விரிக்க. நடை- ஒழுக்கம். காவல் - அதனைக் காத்துக் கொள்ளுதல். காத்துக் கொண்டவர் அம்மூவர். கடை - வாயில்.

அன்றுய்ந்த மூவர்க் கமர்ந்து வரமளித்து

நின்றுய்ந்த வண்ணம் நிகழ்வித்து நன்று #721

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திரிபுரத்தையெரித்த பொழுது அவற்றுள் இருந்த பலருள் சிவபத்தியினின்றும் மாறாது உறைத்து நின்ற, `சுதன்மன், சுசீலன், சுபுத்தி` - என்னும் மூவர் திருவருளால் உய்தி பெற்றிருந்தனர். திரிபுரத்தசுராகிய தாரகாக்கன், கமலாக்கன், வித்யுன்மாலி - இவரும், மற்றையோரும் அழிந்தொழிந்தனர். உய்ந்த மூவரில் இருவர் கோயில் வாயில் காவலராகும் வரத்தையும், ஒருவன் முழவு வாசிக்கும் வரத்தையும் பெற்றனர்.

மூவார் புரங்கள் எரித்த அன்று
மூவர்க் கருள் செய்தார்;
மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில்
இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளரென் றேவிய பின்னை
ஒருவன் நீ கரி காடரங் காக
மானை நோக்கிஓர் மாநடம் மகிழ
மணிமுழா முழக்க அருள் செய்த
தேவ தேவ
உய்யவல்லார் ஒரு மூவரைக் காவல் கொண்டு
எய்யவல் லானுக்கே உந்தீபற

என்னும் திருமுறைகளைக் காண்க. அமர்ந்து - விரும்பி. நிகழ்வித்து - யாவரும் அறியச் செய்து. `நடை காவலால்` என உருபு விரிக்க. நடை- ஒழுக்கம். காவல் - அதனைக் காத்துக் கொள்ளுதல். காத்துக் கொண்டவர் அம்மூவர். கடை - வாயில்.

நடைகாவல் மிக்க அருள்கொடுத்துக் கோயில்
கடைகாவல் கொண்டவா போற்றி விடைகாவல்
#722

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திரிபுரத்தையெரித்த பொழுது அவற்றுள் இருந்த பலருள் சிவபத்தியினின்றும் மாறாது உறைத்து நின்ற, `சுதன்மன், சுசீலன், சுபுத்தி` - என்னும் மூவர் திருவருளால் உய்தி பெற்றிருந்தனர். திரிபுரத்தசுராகிய தாரகாக்கன், கமலாக்கன், வித்யுன்மாலி - இவரும், மற்றையோரும் அழிந்தொழிந்தனர். உய்ந்த மூவரில் இருவர் கோயில் வாயில் காவலராகும் வரத்தையும், ஒருவன் முழவு வாசிக்கும்

வரத்தையும் பெற்றனர்.
மூவார் புரங்கள் எரித்த அன்று
மூவர்க் கருள் செய்தார்;
மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில்
இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளரென் றேவிய பின்னை
ஒருவன் நீ கரி காடரங் காக
மானை நோக்கிஓர் மாநடம் மகிழ
மணிமுழா முழக்க அருள் செய்த
தேவ தேவ
உய்யவல்லார் ஒரு மூவரைக் காவல் கொண்டு
எய்யவல் லானுக்கே உந்தீபற
என்னும் திருமுறைகளைக் காண்க. அமர்ந்து - விரும்பி. நிகழ்வித்து - யாவரும் அறியச் செய்து. `நடை காவலால்` என உருபு விரிக்க. நடை- ஒழுக்கம். காவல் - அதனைக் காத்துக் கொள்ளுதல். காத்துக் கொண்டவர் அம்மூவர். கடை - வாயில்.
`காவல் விடை` என மாற்றி, `வாயில் காவலர் பால் விடை பெற்று அடைந்த வானவர்கள்` என உரைக்க. தானவர்கள் - அசுரர்கள். மயில் ஊரும் கோன், முருகன். முருகனை வான் ஆள வைத்தமையால் அவன் அசுரரை அழித்து வானவரை வாழச் செய்தான் என்க.

தானவர்கட் காற்றாது தன்னடைந்த நன்மைவிறல்
வானவர்கள் வேண்ட மயிலூரும் கோனவனைச் **#723**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`காவல் விடை` என மாற்றி, `வாயில் காவலர் பால் விடை பெற்று அடைந்த வானவர்கள்` என உரைக்க. தானவர்கள் - அசுரர்கள். மயில் ஊரும் கோன், முருகன். முருகனை வான் ஆள வைத்தமையால் அவன் அசுரரை அழித்து வானவரை வாழச் செய்தான் என்க.

சேனா பதியாகச் செம்பொன் முடிகவித்து
வானாள வைத்த வரம்போற்றி மேனாள் **#724**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`காவல் விடை` என மாற்றி, `வாயில் காவலர் பால் விடை பெற்று அடைந்த வானவர்கள்` என உரைக்க. தானவர்கள் - அசுரர்கள். மயில் ஊரும் கோன், முருகன். முருகனை வான் ஆள வைத்தமையால் அவன் அசுரரை அழித்து வானவரை வாழச் செய்தான் என்க.

அந்தகன் - அந்தகாசுரன். அண்டர் அண்டம் - தேவர் உலகம். `அந்தகாசுரனை வைரவர் சூலத்தாற் குத்தி எடுத்து உயரத் தூக்கி வைத்திருக்க, அவன் அகந்தை அடங்கிப் பல நாள் துதிசெய்தமையால் கீழே விடுத்து முத்தியடையச் செய்தார்` என்பது புராணம். பவம் - பிறப்பு. பாவனை - நினைவு; சங்கற்பம்.

அதிர்த்தெழுந்த அந்தகனை அண்டரண்டம் உய்யக்
கொதித்தெழுந்த சூலத்தாற் கோத்துத் துதித்தங் **#725**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அந்தகன் - அந்தகாசுரன். அண்டர் அண்டம் - தேவர் உலகம். `அந்தகாசுரனை வைரவர் சூலத்தாற் குத்தி எடுத்து உயரத் தூக்கி வைத்திருக்க, அவன் அகந்தை அடங்கிப் பல நாள் துதிசெய்தமையால் கீழே விடுத்து முத்தியடையச் செய்தார்` என்பது புராணம். பவம் - பிறப்பு. பாவனை - நினைவு; சங்கற்பம்.

கவனிருக்கும் வண்ணம் அருள்கொடுத்தங் கேழேழ்
பவமறுத்த பாவனைகள் போற்றி கவைமுகத்த **#726**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அந்தகன் - அந்தகாசுரன். அண்டர் அண்டம் - தேவர் உலகம். `அந்தகாசுரனை வைரவர் சூலத்தாற் குத்தி எடுத்து உயரத் தூக்கி வைத்திருக்க, அவன் அகந்தை அடங்கிப் பல நாள் துதிசெய்தமையால் கீழே விடுத்து முத்தியடையச் செய்தார்` என்பது புராணம். பவம் - பிறப்பு. பாவனை - நினைவு; சங்கற்பம்.
(இவற்றுள் கயாசுர வதம் கூறப்படுகின்றது. கயாசுரன் - யானை வடிவம் உடைய அசுரன். கயமுகாசுரன் இவனின் வேறாவன்.) பொன் - இரும்பு. கவை முகத்த பொன் - பல கிளைகளாகிய முகத்தையுடைய, இரும்பால் ஆன கருவி. அங்குசம் முதலியன. தன்னை அடக்க வந்த பாகர்களைக் கயாசுரன் கொன்று விட்டான். `மேல்` என்பது `மெல்` எனக்குறுகி நின்றது. பாசறைக்குப் போவதற்குத் தடையாகத் தன்மேல் வந்தவர்களை விலகப்பண்ணி. `விலகு வித்து` என்பது விகுதி தொக, ``விலகி`` என்று ஆயிற்று. நில் பால - நின்ற பான்மையையுடைய. தறுகண் - அஞ்சாமை; அதற்குப் `பசுமை` என்னும் அடை கொடுத்தது, கெடாது நிற்றலைக் குறித்தவாறு. கண்ணி - *36*இன் முதலடியில் முரண்தொடை, அல்லது விரோத அணி வந்தது. இரைத்து - இரைச்சல் இட்டு. இசை - புகழ். `இறை` என்பது பாடமன்று.

பொற்பா கரைப்பிறந்து கூறிரண்டாப் போகட்டு

மெற்பா சறைப்போக மேல்விலகி நிற்பால **#727**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

மும்மதத்து வெண்கோட்டுக் கார்நிறத்துப் பைந்தறுகண்
வெம்மதத்த வேகத்தால் மிக்கோடி விம்மி **#728**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

அடர்த்திரைத்துப் பாயும் அடுகளிற்றைப் போக
எடுத்துரித்துப் போர்த்தவிசை போற்றி தொடுத்தமைத்த
#729

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

*(*இவற்றுள் கயாசுர வதம் கூறப்படுகின்றது. கயாசுரன் - யானை வடிவம் உடைய அசுரன். கயமுகாசுரன் இவனின் வேறாவன்.*)* பொன் - இரும்பு. கவை முகத்த பொன் - பல கிளைகளாகிய முகத்தையுடைய, இரும்பால் ஆன கருவி. அங்குசம் முதலியன. தன்னை அடக்க வந்த பாகர்களைக் கயாசுரன் கொன்று விட்டான். `மேல்` என்பது `மெல்` எனக்குறுகி நின்றது. பாசறைக்குப் போவதற்குத் தடையாகத் தன்மேல் வந்தவர்களை விலகப்பண்ணி. `விலகு வித்து` என்பது விகுதி தொக, ``விலகி`` என்று ஆயிற்று. நில் பால - நின்ற பான்மையையுடைய. தறுகண் - அஞ்சாமை*;* அதற்குப் `பசுமை` என்னும் அடை கொடுத்தது, கெடாது நிற்றலைக் குறித்தவாறு. கண்ணி - *36*இன் முதலடியில் முரண்தொடை, அல்லது விரோத அணி வந்தது. இரைத்து - இரைச்சல் இட்டு. இசை - புகழ். `இறை` என்பது பாடமன்று.

நாள் மாலை - நாள் மலர் மாலை*;* அஃதாவது அன்றலர்ந்த பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை. நால்வர்- முனிவரர் நால்வர். `சனகர், சனந்தனர். சனாதனர், சனற்குமாரர்` என்பர். வாள் - ஒளி*;* ஞானம். மாலை - தன்மை. `ஞானத்தின் இயல்பு விளங்கும் வண்ணம் அருளிச் செய்து` என்க. விட்டு - ஒளிவீசி. தக்கிணம் - தெற்கு. குணம் எட்டு, சைவாகமங்களில் சொல்லப்பட்ட தன்வயத்தனாதல் முதலிய எண்குணங்கள். இலங்க - அம்முனிவரர் கட்கு விளங்கும்படி. இறை - இறைத்தன்மை*;* அது முதல் நூல் செய்தல். எனவே, இஃது அறம் முதலிய நாற்பொருள்களைக் கூறிய பழைய தமிழ் நான்மறைகளை அருளிச் செய்ததைக் குறித்ததாம்.

நாள்மாலை கொண்டணிந்த நால்வர்க்கன் றால்நிழற்கீழ்
வாள்மாலை ஆகும் வகையருளித் தோள்மாலை #730
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நாள் மாலை - நாள் மலர் மாலை; அஃதாவது அன்றலர்ந்த பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை. நால்வர்- முனிவரர் நால்வர். `சனகர், சனந்தனர். சனாதனர், சனற்குமாரர்` என்பர். வாள் - ஒளி; ஞானம். மாலை - தன்மை. `ஞானத்தின் இயல்பு விளங்கும் வண்ணம் அருளிச் செய்து` என்க. விட்டு - ஒளிவீசி. தக்கிணம் - தெற்கு. குணம் எட்டு, சைவாகமங்களில் சொல்லப்பட்ட தன்வயத்தனாதல் முதலிய எண்குணங்கள். இலங்க - அம்முனிவரர் கட்கு விளங்கும்படி. இறை - இறைத்தன்மை; அது முதல் நூல் செய்தல். எனவே, இஃது அறம் முதலிய நாற்பொருள்களைக் கூறிய பழைய தமிழ் நான்மறைகளை அருளிச் செய்ததைக் குறித்ததாம்.

விட்டிலங்கத் தக்கிணமே நோக்கி வியந்தகுணம்
எட்டிலங்க வைத்த இறைபோற்றி ஒட்டி #731
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நாள் மாலை - நாள் மலர் மாலை; அஃதாவது அன்றலர்ந்த பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை. நால்வர்- முனிவரர் நால்வர். `சனகர், சனந்தனர். சனாதனர், சனற்குமாரர்` என்பர். வாள் - ஒளி; ஞானம். மாலை - தன்மை. `ஞானத்தின் இயல்பு விளங்கும் வண்ணம் அருளிச் செய்து` என்க. விட்டு - ஒளிவீசி. தக்கிணம் - தெற்கு. குணம் எட்டு, சைவாகமங்களில் சொல்லப்பட்ட தன்வயத்தனாதல் முதலிய எண்குணங்கள். இலங்க - அம்முனிவரர் கட்கு விளங்கும்படி. இறை - இறைத்தன்மை; அது முதல் நூல் செய்தல். எனவே, இஃது அறம் முதலிய நாற்பொருள்களைக் கூறிய பழைய தமிழ் நான்மறைகளை அருளிச் செய்ததைக் குறித்ததாம்.

ஒட்டி - வலிமை பேசி. `விசயன்` என்பது, ``விசையன்`` எனப் போலியாயிற்று. விசயன் - அருச்சுனன். விசை - வேகம்; போராற்றல். `வேடன்` என்பது `வேடு` என்னும் சாதிப் பெயரால் கூறப்பட்டது. அசைய - அவன் தளர்ச்சியடையும்படி. உடல் திரியாநின்று - உடம்பைக் குப்புறக் கீழ்மேலாக விழச்செய்து. வசை யினால் - வசை வகையில் அமையும்படி. `பதைப்பு` என்பது, எதுகை நோக்கி, ``பதப்பு`` எனத் திரிந்து நின்றது, மற்று, வினைமாற்று, பதம் - திருவடி. திருவருளை, `திருவடி` என்றல் வழக்கு.

விசையன் விசையளப்பான் வேடுருவம் ஆகி
அசையா உடல்திரியா நின்று வசையினால் #732
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஒட்டி - வலிமை பேசி. `விசயன்` என்பது, ``விசையன்`` எனப் போலியாயிற்று. விசயன் - அருச்சுனன். விசை - வேகம்; போராற்றல். `வேடன்` என்பது `வேடு` என்னும் சாதிப் பெயரால் கூறப்பட்டது. அசைய - அவன் தளர்ச்சியடையும்படி. உடல் திரியாநின்று - உடம்பைக் குப்புறக் கீழ்மேலாக விழச்செய்து. வசை யினால் - வசை வகையில் அமையும்படி. `பதைப்பு` என்பது, எதுகை நோக்கி, ``பதப்பு`` எனத் திரிந்து நின்றது, மற்று, வினைமாற்று, பதம் - திருவடி. திருவருளை, `திருவடி` என்றல் வழக்கு.

பேசுபதப் பான பிழைபொறுத்து மற்றவற்குப்
பாசுபதம் ஈந்த பதம்போற்றி நேசத்தால்
#733
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஒட்டி - வலிமை பேசி. `விசயன்` என்பது, ``விசையன்`` எனப் போலியாயிற்று. விசயன் - அருச்சுனன். விசை - வேகம்; போராற்றல். `வேடன்` என்பது `வேடு` என்னும் சாதிப் பெயரால் கூறப்பட்டது. அசைய - அவன் தளர்ச்சியடையும்படி. உடல் திரியாநின்று - உடம்பைக் குப்புறக் கீழ்மேலாக விழச்செய்து. வசை யினால் - வசை வகையில் அமையும்படி. `பதைப்பு` என்பது, எதுகை நோக்கி, ``பதப்பு`` எனத் திரிந்து நின்றது, மற்று, வினைமாற்று, பதம் - திருவடி. திருவருளை, `திருவடி` என்றல் வழக்கு.

மகுடம் - தலை; ஆகுபெயர். `சிவ பெருமானை, `வேடர்` என்று இகழ்ந்த அருச்சுனனே பின்பு வேடர் குலத்தில் கண்ணப்ப நாயனாராக அவதரித்துக் காளத்தியில் சிவ பெருமானை வேடுவராயே இருந்து வழிபட்டு முத்தி பெற்றான்` எனச் சீகாளத்திப் புராணம் கூறும். அதற்கேற்ப இங்குக் கண்ணப்ப நாயனார் செய்தி அருச்சுனன் செய்தியை அடுத்துக் கூறப்பட்டது. வட கயிலை யில் சிவபெருமானோடு போராடிய அருச்சுனன், மறுபிறப்பில் தென் கயிலாயத்தில் சிவபெருமானை வழிபட்டு ஆறே நாளில் முத்தி பெற்றான் போலும்!

வாயில்நீர் கொண்டு மகுடத் துமிழ்ந் திறைச்சி
ஆயசீர்ப் போனகமா அங்கமைத்துக் தூயசீர்க் #734

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மகுடம் - தலை; ஆகுபெயர். `சிவ பெருமானை, `வேடர்` என்று இகழ்ந்த அருச்சுனனே பின்பு வேடர் குலத்தில் கண்ணப்ப நாயனாராக அவதரித்துக் காளத்தியில் சிவ பெருமானை வேடுவராயே இருந்து வழிபட்டு முத்தி பெற்றான்` எனச் சீகாளத்திப் புராணம் கூறும். அதற்கேற்ப இங்குக் கண்ணப்ப நாயனார் செய்தி அருச்சுனன் செய்தியை அடுத்துக் கூறப்பட்டது. வட கயிலை யில் சிவபெருமானோடு போராடிய அருச்சுனன், மறுபிறப்பில் தென் கயிலாயத்தில் சிவபெருமானை வழிபட்டு ஆறே நாளில் முத்தி பெற்றான் போலும்!

கண்ணிடந்த கண்ணப்பர் தம்மைமிகக் காதலித்து
விண்ணுலகம் ஈந்த விறல்போற்றி மண்ணின்மேல் #735

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மகுடம் - தலை; ஆகுபெயர். `சிவ பெருமானை, `வேடர்` என்று இகழ்ந்த அருச்சுனனே பின்பு வேடர் குலத்தில் கண்ணப்ப நாயனாராக அவதரித்துக் காளத்தியில் சிவ பெருமானை வேடுவராயே இருந்து வழிபட்டு முத்தி பெற்றான்` எனச் சீகாளத்திப் புராணம் கூறும். அதற்கேற்ப இங்குக் கண்ணப்ப நாயனார் செய்தி அருச்சுனன் செய்தியை அடுத்துக் கூறப்பட்டது. வட கயிலை யில் சிவபெருமானோடு போராடிய அருச்சுனன், மறுபிறப்பில் தென் கயிலாயத்தில் சிவபெருமானை வழிபட்டு ஆறே நாளில் முத்தி பெற்றான் போலும்!

நீளத்தினால் - கால வரையறையின்றி. `ஆங்குச் சேர்வார்கள்` என்க. ஆங்கு - சிவலோகத்தில். எனவே, இங்கு `இமையோர்` எனப்பட்டவர் சிவகணங்கள் ஆவர். `இவ் வுலகில் சிவபெருமானை அவனது திருப்புகழ் பலவற்றையும் எடுத் தோதிப் போற்றி செய்தவர்கள் அவ்வுலகில் இமையோர் போற்றி செய்ய விளங்குவர்` என்றபடி. போற்றித் திருக்கலிவெண்பா முற்றிற்று

காளத்தி போற்றி கயிலைமலை போற்றி யென
நீளத்தினால் நினைந்து நிற்பார்கள் தாளத்தோ #736

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நீளத்தினால் - கால வரையறையின்றி. `ஆங்குச் சேர்வார்கள்` என்க. ஆங்கு - சிவலோகத்தில். எனவே, இங்கு `இமையோர்` எனப்பட்டவர்

சிவகணங்கள் ஆவர். `இவ் வுலகில் சிவபெருமானை அவனது திருப்புகழ் பலவற்றையும் எடுத் தோதிப் போற்றி செய்தவர்கள் அவ்வுலகில் இமையோர் போற்றி செய்ய விளங்குவர்` என்றபடி. போற்றித் திருக்கலிவெண்பா முற்றிற்று

டெத்திசையும் பன்முரசம் ஆர்த்திமையோர் போற்றிசைப்ப
அத்தனடி சேர்வார்கள் ஆங்கு. **#737**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நீளத்தினால் - கால வரையறையின்றி. `ஆங்குச் சேர்வார்கள்` என்க. ஆங்கு - சிவலோகத்தில். எனவே, இங்கு `இமையோர்` எனப்பட்டவர்
சிவகணங்கள் ஆவர். `இவ் வுலகில் சிவபெருமானை அவனது திருப்புகழ் பலவற்றையும் எடுத் தோதிப் போற்றி செய்தவர்கள் அவ்வுலகில் இமையோர் போற்றி செய்ய விளங்குவர்` என்றபடி. போற்றித் திருக்கலிவெண்பா முற்றிற்று

நக்கீரதேவ நாயனார் - திருமுருகாற்றுப்படை

உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாள்நுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பின் உள்உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்
திருள்படப் பொதுளிய பராஅரை மராஅத்
துருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்
மால்வரை நிவந்த சேண்உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழைச்
சேண்இகந்து விளங்கும் செயிர்தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணையீர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாள் குவளைத் தூஇதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரிவயின் வைத்துத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகள்அறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்
டுளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்
பிணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகம் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்

வேங்கை நுண்தா தப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்
சூர்அர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதர் பனிக்கடல் கலங்கஉள் புக்குச்
சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்
உலறிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின் பிணர்மோட்
டுருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூருகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணம்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்
தெய்யா நல்லிசைச் செவ்வேல் சேஎய்

இரவலன் நிலை

சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்
செவ்வநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்நசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
திருப்பரங்குன்றம்

செருப்புகன் றெடுத்த சேண்உயர் நெடுங்கொடி

வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடம்மலி மறுகின் கூடற் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எற்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன் றமர்ந் துறைதலும் உரியன்
அதாஅன்று.
திருச்சீரலைவாய்

வைந்நுதி பொருத வடுஆழ் வரிநுதல்
வாடா மாலை ஒடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்
கூற்றத் தன்ன மாற்றரும் மொய்ம்பின்
கால்கிளர்ந் தன்ன வேழம்மேல் கொண்
டைவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பில் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங் கியற்கை வாள்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவில் கொள்கைத் தம்தொழில் முடிமார்
மனன்நேர் பெழுதரு வாள்நிற முகனே
மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத் தன்றே ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வியோர்க் கும்மே ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம்உற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே ஒருமுகம்

குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே ஆங்குஅம்
மூவிரு முகனும் முறைநவின் றொழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பில்
செம்பொறி வாங்கிய மொய்ம்பில் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க் கேந்தியது ஒருகை
உக்கம் சேர்த்தியது ஒருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை
அசைஇய தொருகை
அங்குசம் கடாவ ஒருகை இருகை
ஐயிரு வட்டமொடு எஃகுவலம் திரிப்ப
ஒருகை மார்பொடு விளங்க
ஒருகை தாரொடு பொலிய ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப
ஒருகை பாடின் படுமணி இரட்ட
ஒருகை நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய
ஒருகை வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட
ஆங்கப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர்எழுந் திசைப்ப வால்வளை ஞரல
உரம்தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும் பாறாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஒங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே
அதாஅன்று
திருஆவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசற விளங்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பெழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு

செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவனர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முன்புகப்
புகைமுகந் தன்ன மாசில் தூவுடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்துச்செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்னரம் புளர
நோயின் றியன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திதலையர் இன்னகைப்
பருமம் தாங்கிய பணிந்தேந் தல்குல்
மாசில் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவொ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்
றழலென உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பலவரிக் கொழுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமைஅமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவர்ஆக
ஏமுறு ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வரப்
பகலில் தோன்றும் இகலில் காட்சி
நால்வே றியற்கைப் பதினொரு மூவரோ
டொன்பதிற் றிரட்டி உயர்நிலை பெறீஇயர்

மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந்த தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
உரும்இடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவி னன்குடி அசைதலும் உரியன்
அதா அன்று

திருஏரகம்

இருமூன் றெய்திய இயல்பினின் வழாஅ
திருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான் கிரட்டி இளமை நல்லியாண்
டாறினில் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்
திருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புல உடீஇ
உச்சி கூப்பிய கையினர் தற்புகழ்ந்
தாறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கில் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்
தேரகத் துறைதலும் உரியன்
அதாஅன்று

குன்றுதோறாடல்

பைங்கொடி நறைக்காய் இடையிடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளந் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல்உளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்கான்

குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை இலையுடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வால்இணர் இடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் இயத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவல்அம்
கொடியன் நெடியன் தொடியணி தோளன்
நரம்பார்த் தன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே
அதா அன்று
பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறி அயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்
மாண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர
நெய்யோடு ஐயவி அப்பி ஐதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி

மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொ விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீரம் நறுந்தண் மாலை
துணையற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை அருவியோ டின்னியம் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்த உருகெழு வியல்நகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலும் அறிந்த வாறே
ஆண்டாண் டாயினும் ஆக காண்தக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெரும் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ
ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெரும் செல்வ
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே

அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்தும் இசைபேர் ஆள
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்ற டகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசில் எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின்அளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி உள்ளி வந்தனன் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமை யோய்எனக்
குறித்தது மொழியா அளவையில் குறித்துடன்
வேறுபல் உருவில் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல்விளங் குருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந் தெய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலம் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவென
அன்புடை நன்மொழி அளைஇ விளிவுஇன்
றிருள்நிற முந்நீர் வளைஇய உலகத்
தொருநீ யாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்கும்மதி பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்
தாரம் முழுமுதல் உருட்டி வேரல்
பூவுடை அலங்குசினை புலம்ப வேர்கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியில் தொடுத்த
தண்கமழ் அலர்இறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர ஊகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று

நன்பொன் மணிநிறம் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலொ
டிரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉ மயிர் யாக்கைக் குடா அடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்ஏறு சிலைப்பச் சேண்நின்
றிழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

#738

விளக்கவுரை

அடி.*1*-

உலகம் - உயிர்த் தொகுதி.

`உவப்ப ஏர்பு வலன் திரிதரு` - என இயைக்க. ஏற்பு - எழுந்து; புறப்பட்டு. `வலன் ஆக` என ஆக்கம் வருவிக்க.

வலமாதல் மேரு மலைக்கு ஆதலின் அதனையும் சொல்லெச்சமாக வருவிக்க.

அடி. *2*-

`திரிதரு ஞாயிறு`, பலர்புகழ் ஞாயிறு எனத் தனித்தனி இயைக்க. `பலரும்` என உம்மை விரித்து, `எல்லாச் சமயத்தாரும்` என்பர் நச்சினார்க்கினியர். `ஞாயிற்றைக் கடலிலே கண்டாங்கு`,

அடி. *3*-

இமைக்கும் ஒளி என்க. கடல், இங்கே கீழ்க்கடல். எனவே, ஞாயிறு இள ஞாயிறாயிற்று. இமைக்கும் ஒளி - இமைத்துப் பார்க்கப்படும் ஒளி. இமையாது பார்க்கும் சிற்றொளியன்று ஆதலின், இமைத்துப் பார்த்தல் வேண்டுவதாயிற்று.

ஓவு அறச் சேண் விளங்கு அவிர் ஒளி - எவ்விடமும் எஞ்சாத படி, நெடுந்தொலைவான பரப்பு இடத்தும் சென்று விட்டு விட்டு விளங்குகின்ற ஒளி. என்றது முருகனது திருமேனி ஒளியை. `ஒவுஅற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி` ஞாயிறாகிய உவமைக்கும் முருகனாகிய பொருளுக்கும் உரிய பொதுத் தன்மை. `கடல்` என்னும் உவமை மயில் ஊர்தியைக் கருதிக் கூறினமையால் அதன்மேல் இருந்த திருமேனியின் ஒளி` என உரைக்க. அங்ஙனம் உரையாக்கால், வாளா

`கண்டாங்கு` என்னாது, `கடற்கண் டாங்கு` என்றதனால் பயன் இன்றாம்.

அடி. *4-*

உறுநர் - அடைக்கலமாக அடைந்தோரையெல்லாம். தாங்கிய நோன்தாள் - துன்பக் குழியில் வீழாது தாங்கின வலிய திருவடி. மதன் உடை நோன்தாள் - அறியாமையை உடைத்தெறிகின்ற வலிய திருவடி.

அடி. *5-*

செறுநர்த் தேய்த்த கை - அழித்தற்கு உரியவரை அழித்த கை. செல் உறழ்கை - *(*கைம்மாறு கருதாது வழங்குதலில்*)* மேகத்தை வென்ற கை. தடக்கை - *(*முழந்தாள் அளவும்*)* நீண்ட கை.

அடி. *6-*

மறு இல் கற்பின் வாள் நுதல் கணவன் - *(*பின்முறை வதுவைப் பெருங்குலக் குழத்தியாராகிய வள்ளி நாயகியார்மேல் பொறாமை கொள்ளுதலாகிய*)* குற்றம் சிறிதும் இல்லாத கற்பினையும், *(*பொறாமையில்லாமையால் வெகுண்டு வேர்த்தல் இல்லாது எப்பொழுதும் மகிழ்ந்தே பார்த்தலால்*)* ஒளி மழுங்குதல் இல்லாத நெற்றியினையும் உடைய தெய்வயானையார்க்குக் கணவன். *(*`மறுஇல்` என்றதனானே, வள்ளி நாயகியார்க்குக் கணவன்` என்பது பெற வைத்தமையால் முருகன் தனது இச்சா சத்தி கிரியா சத்திகளால் உலகை ஐந்தொழிற்படுத்தருளுதல் குறிப்பால் உணர்த்தப் பட்டதாம்.*)*

அடி. *7 -*

கார் கோள் முகந்த கமஞ்சூல் மா மழை *(9 -* தலைப் பெயல் தலைஇய*)* கடல் நீரை முகந்து நிரம்பிய கருப்பத்தைக் கொண்ட கரிய மேகங்கள் *(*முதல் மழையைப் பொழிந்து விட்ட*).*

அடி. *8 -*

வாள் போழ் விசும்பு - ஞாயிறு, திங்கள் முதலியவற்றின் ஒளிகள் இருளைக் கிழிக்கின்ற வானம்.

அடி. *8, 9 -*

விசும்பில் வள் உறை சிதறி தலைப்பெயல் தலைஇய - வானத்தின்கண் வளமான துளிகளைச் சிதறி, முதல் மழை பொழிந்து விட்ட.

அடி. *9 -*

தலைப் பெயல் தலைஇய கானம் - முதல் மழை பொழிந்து விட்டகாடு. தண் நறுங் கானம் - குளிர்ந்த நறுமணம் கமழ்கின்ற காடு.

அடி. *9, 10 -*

கானத்து இருள்படப் பொதுளிய மரா - காட்டிடத்து இருள் உண்டாகும்படி தழைத்த மரா மரம்.

அடி. *10, 11-*

மராஅத்து பூந்தண்தார் புரளும் மார்பினன் - செங்கடப்ப மரத்தினது பூவால் ஆகிய, குளிர்ந்த தார் புரளுகின்ற மார்பினை உடையவன். பராரை - பருத்த அடிமரம், உருள் - தேரினது உருளைப் போலும் (தார்.)

அடி. 12 -

மால் வரை நிவந்த வெற்பில் - பெரிய மூங்கில் வளர்ந்த மலையில் (உள்ள 41 சோலை), சேண் உயர் - வானுலகளவும் உயர்ந்த (மலை).

அடி. 13 -

கிண்கிணி கவைஇய சீறடி - சிறு சதங்கை சூழ அணிந்த சிறிய பாதங்களை உடைய (41- மகளிர்) ஒள் - ஒளி பொருந்திய (பாதம்) செ- செம்மை நிறத்தவனாகிய (பாதம்).

அடி. 14-

கணைக்கால் - திரண்ட கால்களையுடைய (41- மகளிர்). வாங்கிய நுசுப்பின் - வளைந்து துவளும் இடையினை யுடைய (41-மகளிர்). பணைத் தோள் - பருத்த தோளினையுடைய (41- மகளிர்). `மூங்கில்போலும் தோள்` என்றும் ஆம்.

அடி. 15-

கோபத்து அன்ன துகில் - `இந்திர கோபம்` என்னும் பூச்சியினது நிறத்தோடு ஒத்த சிவந்த நிறத்தையுடைய உயர்ந்த புடைவையை உடைய (41-மகளிர்). தோயா (த் துகில்) - செயற்கையாக ஏற்றப்படாது இயல்பாகவே சிவந்த (துகில்) பூ (பூக்கள் பொறிக்கப்பட்ட (துகில்)

அடி. 16

பல் காசு நிரைத்த சில்காழ் அல்குல் - பல மணிகளைக் கோத்த வடம் ஏழால் அமைந்த `மேகலை` என்னும் அணிகலனை யுடைய பிருட்டங்களையுடைய (41-மகளிர்). முன்னழகிற்கு வேறுபல இடப்படும் ஆகலின் மேகலை பின் அழகிற்கே இடப்படுவது ஆகும். இம் மணிவடக் கோப்பு வடத்தின் எண்ணிக்கை பற்றி வேறு வேறு பெயரால் சொல்லப்படுகின்றன. அதனை,

எண்கோவை காஞ்சி; எழுகோவை மேகலை;
பண்கொள் கலாபம் பதினாறு - கண்கொள்
பருமம் பதினெட்டு; முப்பத் திரண்டு
விரிசிகை என்றுணரற் பாற்று.

என்னும் வெண்பாவால் விளக்கினார் நச்சினார்க்கினியர். இப் பொருள் சேந்தன் திவாகரம், பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு களில் சொல்லப்பட்டது.

அடி. 17-

கை புனைந்து இயற்றாக் கவின் பெறு வனப்பின் - சிலர் தம் கைவன்மையால் புனைந்து தோற்றுவியாத அழகாக, இயல்பாற் பெற்ற

அழகினையுடைய (41-மகளிர்). `தெய்வ மகளிரது அழகு இயற்கையானது` என்றபடி. `கவினாக` என ஆக்கம் வருவிக்க.
அடி. 18-
நாவலொடு பெயரிய பொலம் புனை அவிர் இழை - நாவலோடு பொருந்தி பொன்னால் (நாவல் - சம்பு. அதனைப் பொருந்திய பெயர் சாம்பூநதம், `பொன் நால்வகைத்து` என வகுத்து, `அவற்றுள் இப்பொன் சிறந்தது` என்பர். `பூவிற்குத் தாமரையே; பொன்னுக்குச் சாம்புநதம்* என்றதும் காண்க.) செய்யப்பட்டன போன்று மிக்கு விளங்குகின்ற அணிகலன்களையுடைய (41- மகளிர்)
அடி. 19-
சேண் இகந்து விளங்கும் மேனி - நெடுந் தொலைவு கடந்தும் விளங்குகின்ற நிறத்தையுடைய (41-மகளிர்) செயிர்தீர் - குற்றம் அற்ற (மறு வற்ற மேனி.)
அடி. 20-
துணையோர் ஆய்ந்த ஓதி - ஆயத்தார் உற்று நோக்கி மெச்சும் தலை மயிரில். இணை - எல்லாம் ஒன்று போல முனை ஒத்துக் கூடிய (தலைமயிர்). ஈர் - இயற்கையில் நெய்ப்பசையையுடைய (தலைமயிர்.)
அடி. 21-
செங்கால் வெட்சிச் சிறு இதழிடை இடுபு - சிவந்த காம்பையுடைய வெட்சிப் பூக்களின் இடையே இட்டு. (சீறிதழ் - ஆகுபெயர்.)
அடி. 22-
பைந் தாள் குவளை தூ இதழ் கிள்ளி - பசுமையான காம்பை உடைய குவளைப் பூவினது இதழ்களைத் தனித் தனியாகக் கிள்ளி எடுத்து.
அடி. 23
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின் வைத்து - திருமகள் வடிவாகச் செய்யப்பட்ட `உத்தி` என்னும் தலைக்கோலத் துடனே, வலம் புரிச் சங்கு வடிவாகச் செய்யப்பட்ட தலைக்கோலத்தை யும் வைத்தற்குரிய இடத்திலே வைத்து.
அடி. 24, 25
திலகம் தையஇய பகுவாய் மகரம் தாழ மண்ணுறுத்து - திலகம் இட்டு அழகுபடுத்தப்பட்ட நெற்றியிலே, பிளந்த வாயையுடைய சுறாமீன் வடிவாகச் செய்யப்பட்ட தலைக் கோலத்தைத் தொங்கவிட்டு அழகுபடுத்தி. தேம் கமழ் - மணம் கமழ்கின்ற (திருநுதல்)
அடி. 26-
துவர முடித்த முச்சி - முற்றப் பின்னிப் பின் முடியாக முடித் கொண்டையில். துகள் அறும் - குற்றம் அற்ற (முச்சி)
அடி. 27-

சண்பகம் செரீஇ - சண்பகப் பூவைச் செருகி. பெருந்தண் - பெரிய, குளிர்ந்த *(சண்பகம்)*

அடி. *27, 28-*

மருதின் பூ இணர் அட்டி - மருத மரத்தினது பூக்கொத்தினை *(ச் சண்பகத்தின் மேலே தோன்ற)* வைத்து. கருந் தகட்டு உளைப்பூ - புறத்தில் கரிய புற இதழினையும், அகத்தில் கேசரத்தினையும் உடைய பூக்களை உடைய *(மருது)*. ஒள் - ஒளி பொருந்திய *(இணர்)*.

அடி. *29, 30-*

கிளைக் கவின்று எழுதரு செவ்வரும்பு இணைப் புறு பிணையல் வளைஇ - காம்பினின்றும் அழகாய் எழுகின்ற *(அம் மருத)* சிவந்த அரும்புகளை இணைத்துக் கட்டிய மாலையை *(க் கொண்டையைச் சூழ)* வளைத்து. கீழ்நீர் - நீர்க்கீழ் *(இட்டுவைத்து எடுத்த அரும்பு. பறித்த அரும்பை நீரில் இட்டு வைப்பின் சிவப்புப் பின்னும் மிக அழகு மிகும்.)*

அடி. *30, 31, 32-*

வண் காது துணைத் தக நிறைந்த பிண்டித் தளிர் ஆகம் திளைப்ப - வளமான காதுகளில் இரண்டும் ஒருபடியாய் ஒத்துத் தோன்றும்படி வைக்கப்பட்டு நிறைந்த அந்த அசோகந்தளிரே மார்பிலும் அணிகலங்களுக்கு இடையே பொருந்தி அசையச் சேர்த்து. *(`சேர்த்து` என ஒரு சொல் வருவிக்க. `அந்த` என்றது சாதி பற்றி.)*

அடி. *32, 33-*

திண் காழ் நறுங் குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை - திண்ணிய, வயிரத்தையுடைய, நறிய சந்தனக் கட்டையை உரைத்ததனால் உண்டாகிய அழகிய நிறத்தையுடைய சாந்தினை.

அடி. *34-*

தேம் கமழ் மருது இணர் கடுப்ப - மணம் கமழ்கின்ற மருதம் பூவின் கொத்துப்போலத் தோன்றும்படி *(கொட்டி)*.

அடி. *34, 35-*

கோங்கின் குவி முகிழ் - கோங்க மரத்தினது குவித்த அரும்புபோலும் *(முலை)* இள - இளமையான *(முலை)*.

அடி. *35-*

முலைக் கொட்டி - கொங்கைகளின்மேல் அள்ளியிட்டு.

அடி. *35, 36-*

வேங்கை விரி மலர் நுண் தாது அப்பி - *(சந்தனச் சாந்து புலர்வதற்கு அதன்மேலே)* வேங்கை மரத்தில் மலர்ந்த மலரினது நுண்ணிய மகரந்தத்தை அப்பி.

அடி. *37-*

வெள்ளில் குறு முறி கிள்ளுபு காண் வரத் தெறியா - விளா மரத்தினது

குறுந்தளிரைக் கிள்ளி அழகு உண்டாக (விளை யாட்டாக) ஒருவர்மேல் ஒருவர் வீசி.

`வெற்பின்கண் உள்ள சோலை` எனவும், `சூர் அர மகளிர் ஆடும் சோலை` எனவும் இயைத்து, `சோலையையுடைய அடுக்கத்துப் பூத்த காந்தள் கண்ணி மிலைந்த சென்னியன்` என முடிக்க.

`13, சீறடியையும், 14. கணைக் காலையும் நுசுப்பையும், பணைத் தோளையும், 15. துகிலையும், 16. அல்குலையும், 17. வனப்பையும், 18. இழையையும், 19. மேனியையும் உடைய, 41. சூர் அர மகளிர் 39. பலர் உடனாகி, 20. ஓதியில், 21. வெட்சி இதழின் இடையில், 22. குவளை இதழ்களை இட்டு, 23. (தலையில்)தெய்வ உத்தியொடு வலம்புரி வைத்து, 25. நுதலில் மகரம் தாழ மண்ணுறுத்து, 26. முச்சியில் 27. சண்பகம் செரீஇ, 28. மருதின் இணர் அட்டி, 30. பிணையல் வளைஇ, 32. திளைப்பச் செய்து, 34. தேய்வை 35. முலைக் கொட்டி அப்பி, 37. தெறியா, 39. ஏத்தி, 40. ஆடும் சோலை` என்க.

அடி. 38

கோழி ஓங்கிய (கொடி) - கோழியோடு உயர்ந்த தோன்றும் (கொடி; முருகன் கொடி,) அட்டு வெல் விறல் (கொடி) - கரவாது எதிர் நின்று பொருது வென்று எடுத்த, வெற்றியைக் குறிக்கும் (கொடி,)

அடி. 40-

சீர் திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடி (ஆடும் சோலை)- அழகு விளங்குகின்ற மலையகத்து ஒலியெழும்படி பாடி (விளை யாடும் சோலை). `அம்மகளிரது உருவம் ஈண்டுள்ளார்க்குக் கட்புல னாகாவிடினும் அவர்கள் பாடும் பாட்டின் ஒலி செவிப் புலன் ஆகும்` என்பது கருத்து.

அடி. 41, -

சூர் அர மகளிர் பலர் உடன் ஆடும் சோலை (அடுக்கம்) - மக்களாய் உள்ளார்க்கு அச்சம் தோன்றும் தெய்வ மகளிர் பலர் ஒன்று சேர்ந்து விளையாடுகின்ற சோலையினையுடைய (சாரல்)

அடி. 42-

மந்தியும் அறியா மரன் பயில் அடுக்கத்து(க் காந்தட் பூ) - மிக உயர்ந்திருத்தலின் மரம் ஏறுதலில் வல்ல குரங்குகளும் உச்சி வரையில் ஏறி அறியாத மரங்கள் நிறைந்த சாரலின்கண் (பூத்த காந்தட் பூ)

அடி. 43, 44-

காந்தட் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன் - காந்தட் பூவால் ஆகிய பெரிய, குளிர்ந்த முடி மாலையைச் சூடிய தலையை உடையவன். சுடர்க் காந்தட் பூ - நெருப்புப் போலும் செங்காந்தட் பூ. சுரும்பும் மூசாக் காந்தட் பூ - நெருப்புப் போறலின் வண்டும் மொய்க்காத காந்தட் பூ.

உம்மை, `பிற குற்றங்கள் அணுகாமையே யன்றி` என இறந்தது தழுவிற்று. இனி, `பிற குற்றங்களை விலக்குதல் கூடுமாயினும் வண்டு மூசுதலை விலக்குதல் அரிதாகலின் அக்குற்றமும் இல்லது` எனச் சிறப்பும்மையாகக் கொள்ளுதலும் ஆம்.

அடி. *45, 46-*

கடல் கலங்க உள்புக்குத் தடிந்த வேல் - கடல் கலங்கும்படி அதனுள்ளே புகுந்து அழித்த வேற்படையாகிய *(61* செவ் வேல்*)* சூரபன்மா கடலுள் ஒளித்தானாகலின் வேல் கடலுள்ளே புகுந்து அவனை அழித்தது.

அடி. *46-*

சூர் முதல் - சூரபன்மாவாகிய தலைவனை.

அடி. *47-*

உலறிய கதுப்பின் - எண்ணெய் இன்றிக் காய்ந்த தலைமயிரினையும். பிறழ் பல் பேழ்வாய் - ஒழுங்கில்லாது பல வாறாகப் பிறழ்ந்து காணப்படும் பற்களையுடைய பெரிய வாயையும்.

அடி. *48-*

சுழல் விழிப்பசுங்கண் - *(*எத்திசையையும் வெகுண்டு நோக்குதலால்*)* சுழலுகின்ற விழியினையுடைய பசிய கண்ணினையும் *(*`கண்` என்னும் உறுப்பில் உருவத்தைக் கவர்வதே `விழி` எனப் படும்*).* சூர்த்த நோக்கின் - *(*அக்கண்களால்*)* யாவரையும் அச்சுறுத்து கின்ற பார்வையினையும்,

அடி. *49,50-*

கழல் கண் கூகையொடு கடும் பாம்பு தூங்கப் பெரு முலை அலைக்கும் காதின் - பிதுங்கிய கண்களையுடைய கூகைகளை *(*கோட்டான்களை*)* முடிந்து விட்டுத் தூங்குதலால் பெரிய கொங்கைகளை வருந்தப் பண்ணுகின்ற காதினையும், பிணர் மோட்டு- `சொர சொர` என்னும் உடம்பினையும்,

அடி. *51-*

உரு கெழு செலவின் - கண்டவர்கள் அஞ்சுதல் பொருந்திய நடையினையும் உடைய *(51-* பேய்மகள்.*)* அஞ்சு வரு - கண்டவர்க்கு அஞ்சுதல் வருதற்குக் காரணமான *(*பேய் மகள்*)*

அடி. *51-*

பேய் மகள்.

அடி.*52, 53-*

குருதி ஆடிய கூர் உகிர்க்கொடு விரல் கண் தொட்டு உண்ட கழி முடை - இரத்தத்திலே தோய்ந்த, கூர்மையான நகங்களையுடைய வளைந்த விரலாலே கண்களை அவள் தோண்டி உண்ட, மிக்க முடை நாற்றத்தையுடைய (கருந்தலை) `*3.* சேண் விளங்கு அவிர் ஒளியையும், *4.* நோன் தாளையும், *5.* தடக்கையையும் உடைய கணவனும், *10,11.*

மராத்துப் பூந்தளிர்தார் புரளும் மார்பினனும், 12. சேண் உயர் வெற்பில் உள்ள, 41. அர மகளிர் ஆடும் சோலையை உடைய 42. அடுக்கத்து 43. காந்தள் 44. கண்ணி மிலைந்த சென்னியனும், 46. சூர் முதல் தடிந்த நெடிய வேலாகிய, 51. பேய் மகள் 56. துணங்கை தூங்கும்படி 59. அவுணர் வலம் அடங்க 60. மா முதல் தடிந்த 61. நல் இசையினையும் உடையவனும் ஆகிய சேய்` என இயைத்துக் கொள்க.

`3. சேண் விளங்கு அவிர் ஒளியையும், 4. நோன் தாளையும், 5. தடக்கையையும் உடைய கணவனும், 10,11. மராத்துப் பூந்தளிர்தார் புரளும் மார்பினனும், 12. சேண் உயர் வெற்பில் உள்ள, 41. அர மகளிர் ஆடும் சோலையை உடைய 42. அடுக்கத்து 43. காந்தள் 44. கண்ணி மிலைந்த சென்னியனும், 46. சூர் முதல் தடிந்த நெடிய வேலாகிய, 51. பேய் மகள் 56. துணங்கை தூங்கும்படி 59. அவுணர் வலம் அடங்க 60. மா முதல் தடிந்த 61. நல் இசையினையும் உடையவனும் ஆகிய சேய்` என இயைத்துக் கொள்க.

அடி. 53-

கருந்தலை.

அடி. 54-

கையின்ஏந்தி,

அடி. 55-

தோள் பெயரா (பெயர்த்து)

அடி. 56-

துணங்கை தூங்க - `துணங்கை` என்னும் கூத்தினை ஆடும்படி (60. மா முதல் தடிந்த) நிணந்தின் வாயள் - (பிணங்களின்) நிணங்களை எடுத்துத் தின்கின்ற வாயினை உடையளாய் (தூங்க) வாயார், முற்றெச்சம்.

அடி. 57, 58, 59-

இரு பேர் உருவின் ஒரு பேர் யாக்கை அறுவேறு வகையின் அவுணர் அஞ்சு வர மண்டி - இருவகையை பெரிய உருவத்தினாலே அத்தன்மையைக் குறிக்கும் ஒரு பெயரை உடைய அவுணர்களது உடம்புகள் அற்று வேறாரும்படி அவர்கட்கு அஞ்சுதல் வர நெருங்கிச் சென்று.

அடி. 59-

நல் வலம் அடங்க - அவர்களது மிக்க வலிமை அற்றுப் போம்படி.

அடி. 59-

-

கவிழ் இணர் - கீழ் நோக்கிய பூக்களின் கொத்துகளை யுடைய (60 - மாமரம்.)

சூரபதுமனுடைய படைகளில் குதிரை முகத்தை உடைய அசுரர்கள்

சிறப்புப் பெற்று இருந்தனர்` என்பதும், `அசுரர் அனை வர்க்கும் பாதுகாவலாகத் தென்கடலில் மாமரம் ஒன்று இருந்தது` என்பதும் பழமையான சிவபுராண வரலாறுகள். இவ் அசுரர்களது உடம்பே இங்கு `இருவே றுருவின் ஒருபேர் யாக்கை` எனக் குறிக்கப்பட்டது. இவை கந்த புராணத்தில் காணப்படவில்லை. `குதிரை முகம் உடைய அசுரர்கள்` என்றதை ஒட்டி, `அவ்வாறான உடல் அமைப்பை யுடைய ஒரு பூதம் நக்கீரரை மலைக்குகையில் அடைத்தபொழுது அதனினின்றும்` விடுபட வேண்டியே அவர் திருமுருகாற்றுப் படையைப் பாடினார், என்ற வரலாறு சீகாளத்திப் புராணத்தில் கூறப் பட்டது. அப்பூதத்தின் பெயர் `கற்கி முகாசுரன்` என்பதாகச் சொல்வது உண்டு, கற்கி - குதிரை.

அடி. *60-*

மறு இல் கொற்றத்து - குற்றம் இல்லாத வெற்றியையும். *(*`கொடியோரை அழித்தல் குற்றம் அன்று` என்பது குறித்தபடி.*)*

அடி. *60, 61-*

மா முதல் தடிந்த செவ்வேல் - மா மரத்தை அடியோடு அழித்த சிவந்த வேலையும்.

அடி. *61-*

எய்யா நல் இசைசேய் -ஒருவராலும் அளந்தறியப் படாத நல்ல புகழையும் உடைய சேயோன். *(*முருகன்.*)*

அடி. *61,62, 64-*

சேய் சேவடி படரும் உள்ளமொடு. செலவ - முருகனையே எப்பொழுதும் நினைத்தலால் தலைமை பெற்ற உள்ளத் தோடே செல்லும் செலவை உடைய புலவனே. செம்மல் - தலைமை பெற்ற *(*உள்ளம்*)*

அடி. *63, 64-*

நலம் புரி கொள்கைப் புலம் பிரிந்து உறையும் - நன்மையை விரும்பும் கோட்பாட்டினால், *(*அலைவைத் தரும்*)* புலன் இன்பங்களினின்றும் நீங்கி, *(*நிலைப்பைத் தரும் இன்பத்திலே*)* தங்குதலைப் பயனாக உடைய *(64* செலவ*)*

அடி. *64-*

நீ நயந்தனையாயின் - அங்ஙனம் உறைதலாகிய பயனை நீ விரும்பியே விட்டாயாயின். பலவுடன் - அப்பயனே யன்றி ஏனைப் பல பயன்களுடனும். *(*`பலவற்றுடன்` - என்பதில் சாரியை தொகுத்தலாயிற்று.*)*

அடி. *65, 66-*

நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப நீ முன்னிய வினை இன்னே பெறுதி - நன்றான உனது நெஞ்சத்திலே எழுந்த இனிய விருப்பம் நிறைவுறுதற்பொருட்டு நீ கருதி மேற்கொண்ட வினையாகிய செலவின்

பயனை இப்பொழுதே பெறுவாய். (அஃது எங்ஙனம் எனில், முருகனை அவன் இருக்கும் இடத்தில் சென்று பணிதலால், பணிதற்கு அவன் இருக்கும் இடம் எது எனின், ஏனையோர் போல அவன் இருக்குமிடம் ஒன்றன்று; பல. அவை யாவையெனின்,) `வினை` என்றது செலவை. அஃது ஆகுபெயராய் அதன் பயனைக் குறித்து நின்றது.

அடி. 67-

செரு புகன்று எடுத்த சேண் உயர் நெடுங் கொடி - (மாற்றரசர் வந்து புரியும்) போரினை ஏற்க விரும்பி, (அதற்கு அடையாளமாக) உயரத் தூக்கிய, வானளாவ உயர்ந்து பறக்கும். நீண்ட கொடியின் பக்கத்திலே கட்டப்பட்ட. (`கொடி` என்பது 68 `பாவை` என்பதனுடன் ஏழாம் வேற்றுமைத் தொகைபடத் தொக்கது)

அடி. 68-

வரிப் புனை பந்தொடு பாவை தூங்க - நூலால் வரிந்து செய்த பந்தையுடைய பாவை (அறுப்பார் இன்மையால்) தூங்கியே கிடக்க. (மாற்று வேந்தரை மகளிராக வைத்து இகழ்தலைக் காட்டும் அடையாளமாகக் கொடியின் பக்கத்தில் பந்தாடுவாளைப் போலப் புனையப்பட்ட பாவை ஒன்று தூங்க விடப்படும். மாற்று வேந்தர் வந்து முற்றுகையிடக் கருதினாராயின் அந்தப் பாவையை முதலிலே அறுத்து வீழ்த்துதல் வேண்டும்.) அங்ஙனம் ஒருவரும் வந்து அதனை அறுத்து வீழ்த்தாமையால் அது தூங்கிக் கொண்டேயிருக்கின்றது. ஆகவே,

அடி. 69-

பொருநர் தேய்த்த போர் அரு வாயில் - போர் செய் பவரை இல்லையாக்கிய காரணத்தால் போர் இல்லாத வாயிலையும்.

அடி. 70-

திரு வீற்றிருந்த - திருமகள் சிறப்புடன் இருக்கப் பெற்றதும். தீது தீர் நியமத்து - குற்றம் அற்ற கடைத் தெருக்களையும்.

அடி. 70-

இரு சேற்று அகல் வயல் - கரிய சேற்றினையுடைய அகன்ற வயல்களில். விரிந்து வாய் அவிழ்ந்த - முறுக்கு நீங்கி மலர்ந்து, பின்பு வாய் நன்கு மலர்ந்த.

அடி. 71, 72-

மாடம் மலி மறுகின் மேல் மாடங்களோடு கூடின மாளிகைகள் நிறைந்த மற்றைத் தெருக்களையும் உடைய. கூடல் குடவாயின் - மதுரை மாநகரத்திற்கு மேற்கில் உள்ள (77 குன்று)

அடி. 71, -

கூடற் குடவயின் குன்று அமர்ந்து உறைதலும் உரியன் - மதுரை நகரத்திற்கு மேற்கில் உள்ள திருப்பரங்குன்றத்தில் விரும்பி

உறைதலையும் அவன் தனக்கு உரிமையாக உடையன். (எனவே, `அங்குச் சென்றாலும் அவனைக் காணலாம்` என்பதாம்.
அடி. *73-*
தாமரைத் துஞ்சி - தாமரை மலர்களில் (பகலில் வீழ்ந்து, மாலையில்) அவை கூம்பிவிட்டமையால் இரவெல்லாம் அவற்றினுள்ளே) உறங்கிக் கிடந்த. முள் தாள் - முள்ளையுடைய தண்டினை உடைய (தாமரை)
அடி. *73, 74-*
வைகறை நெய்தல் ஊதி - விடியற் காலையில் (பறந்து சென்று) நெய்தற் பூவில் வீழ்ந்து ஊதி. கள் கமழ் - தேன் மணக் கின்ற (நெய்தல்). எல் பட - ஞாயிறு தோன்றியவுடன்.
அடி. *75, 76, 77-*
சுனை மலர் ஒலிக்கும் குன்று - சுனையின் கண் மலர்ந்த மலர்களிலே வீழ்ந்து ஆரவாரிக்கின்ற திருப்பரங்குன்றம். கண்போல் மலர்ந்த - சுனைகளினுடைய கண்களைப் போல விளங்க மலர்ந்த (மலர் எனவே, `இவை நீலப்பூ` என்பது பெறப்படும்.) காமர்- (காண்பாரது) விருப்பம் பொருந்துகின்ற (மலர்). (`காமம் மரு` என்பது `காமர்` என மருவிற்று.
அடி. *76-*
அம் சிறை வண்டின் அரிக்கணம் - அழகிய சிறகினை யுடைய வண்டுகளாகிய இசைபாடும் கூட்டம்.
அடி. *78-*
அதாஅன்று - அதுவன்றியும் இனி `அம்முருகன் தனது ஆறு முகங்களும், பன்னிரண்டு தோள்களும், `கைகளும் விளங்க யானைமேல் ஏறி, வானில் பல வாச்சியங்கள் ஒலிக்கத் திருச்சீரலைவாயை நோக்கி வான் வழியாக செல்லலும் உரியன்` என்பது கூறப்படுகின்றது.
அடி. *79-*
வை நுதி பொருத வடு ஆழ் வரி நுதல் - கூரிய நுனியை உடைய அங்குசம் குத்தின வடு சூழ்ந்து காணப்படுகின்ற, பல புள்ளிகளையுடைய நெற்றியில். அடி. *80-*
வாடா மாலை ஓடையொடு துயல்வர - வாடுதல் இல்லாத பூவாகிய பொன்னால் ஆகிய அரிமாலை நெற்றிப் பட்டத்துடன் இருந்து அசைய.
அடி. *81-*
படு மணி இரட்டும் மருங்கின் - இரு பக்கமும் பொருந்தின மணிகள் மாறி மாறி ஒலிக்கின்ற பக்கங்களையும். கடு நடை - வேகமாக நடக்கும் நடையினையும்.
அடி. *82-*
கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பின் வேழம் மேல் கொண்டு - கூற்றுவனைப் போலத் தடுக்க இயலாத வலிமையினையும் உடைய

யானையை ஏறி.
அடி. *83-*
கால் கிளர்ந்து அன்ன - *(*ஓடும் வேகத்தால்*)* காற்று எழுந்தாற் போலக் காணப்படுகின்ற *(*வேழம்*).*
அடி. *84, 85-*
ஐ வேறு உருவின் செய்வினை முற்றிய முடியொடு விளங்கிய முரண் மிகு திருமணி - ஐந்து வகையான வேறுபட்ட உருவம் உடையனவாகச் செய்யப்பட்ட செயற்பாடுகளெல்லாம் முற்ற முடிந்த முடிகளோடு கூடி விளங்குகின்ற, மாறுபாடு மிக்க நிறங்களை யுடைய மணிகள். *(*ஐவேறு உரு - தாமம், முகுடம், பதுமம், கிம்புரி, கோடகம் என்பன.*)*
அடி. *86-*
மின் உறழ் இமைப்பின் சென்னிப் பொற்ப- மின்ன லொடு மாறுபட்டு விளங்கும் விளக்கத்துடன் தலையிலே பொலிவு பெற.
அடி. *87-*
நகை தாழ்பு துயல் வரூஉம் வகை அமை பொலம் குழை - ஒளியோடு தாழ்ந்து அசைதல் வரும் வகையாக அமைந்த, பொன்னால் இயன்ற மகரக் குழைகள்.
அடி. *88, 89-*
சேண் விளங்கு இயற்கை வாள் மதி கவைஇ அகலா மீனின் அவிர்வன இமைப்ப - நெடுந் தொலைவு சென்று விளங்கும் இயல்பினையுடைய ஒளியையுடைய திங்களைச் சூழ்ந்து நீங்காதுள்ள மீன்களைப் போல விட்டு விட்டு விளங்குவனவாய் ஒளியை வீச.
அடி. *90, 91-*
தா இல் கொள்கைத் தம் தொழில் முடிமார் மனம் நேர்பு எழுதரு வாள் நிற முகன் - குற்றம் இல்லாத கொள்கையையுடைய தங்கள் தொழிலை முடிப்பவரது மனத்தை ஏற்று அவண் தோன்றுகின்ற ஒளிவீசும் நிறத்தையுடைய முகங்களில் *(*குற்றம் இல்லாத கொள்கையையுடைய தொழிலாவது தவம். `தவத்தோர் மனத்தை இருத்தற் குரிய இடமாக ஏற்று, அங்கு விளங்கும் முகங்கள்` - என்றபடி. இஃது ஆறு முகங்களையும் பொதுவாகச் சுட்டிச் சொல்லியது*).*
அடி. *92,93-*
ஒரு முகம் மா ஞாலம் இருள் மறு இன்றி விளங்கப் பல் கதிர் விரிந்தன்று - ஒரு முகம் - பெரிய உலகம் இருளாகிய குற்றம் தீர்ந்து ஒளியைப் பெறும்படி பல கதிர்களைப் பரப்புதலை உடைத்தாயிற்று. *(*`எல்லாச் சுடர்களின் ஒளிகளும் முருகன் அருளிய ஒளியை யுடையனவே` என்றபடி.*)*
அடி. *93, 94, 95-*

ஒரு முகம் ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக் காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே - மற்றொரு முகம், அன்பர்கள் துதிக்க, அத்துதியை விரும்பி ஏற்று அவர்க்கு ஏற்ப இயங்குதலை உடைத்தாய், அவர்கள் விரும்பிய பொருளை முடிப்பனவாகிய மெய்ம்மொழியை வழங்கியே இருந்தது. *(*வரம் - விரும்பிய பொருள். அஃது ஆகுபெயராய், அதனை முடிப்பதாகிய சொல்லைக் குறித்தது. ஏகாரத் தேற்றம். இனி வருவனவும் அவை.*)*

அடி. *95, 96, 97-*

ஒரு முகம் மந்திர விதியின் மரபுளி வழா வேள்வி ஓர்க்குமே - மற்றொரு முகம், மந்திரத்தோடு, கூடிய விதி முறைகளினின்றும் வழுவாத வேள்விகள் இனிது முடியும் வண்ணம் நினைந்து நோக்கியே இருக்கும். அந்தணர் வேள்வி. அம் தணர் - அழகிய தட்பத்தை - கருணையை - உடையவர். அக்கருணை காரண மாகச் செய்யப்படும் வேள்வி உலக நலத்தைப் பயக்கும் ஆகலின், அவற்றை முருகன், இனிது முடிய வேண்டுவானாவன். பல வகை வழிபாடுகளும் வேள்விகளே. கருணை காரணமாக உலக நலத்தின் பொருட்டுச் செய்யும் வழிபாடு, `பரார்த்த பூசை` எனப்படும். அவன் ஆன்மார்த்த பூசையைக் காத்தல் இதற்கு முன் கூறிய அதனுள்ளே அடங்கிற்று.

அடி. *97, 98, 99-*

ஒரு முகம் எஞ்சிய பொருள்களை ஏம் உற நாடித் திங்கள் போலத் திசை விளக்குமே - மற்றொரு முகம், வேள்வி யொழிந்த பிற பொருள்களையும் அவை பாதுகாவல் பெறும்படி நினைந்து, திங்களைப் போல எல்லாத் திசைகளையும் இடரின்றி விளங்கச் செய்தே இருக்கும்.

அடி. *99, 100, 101-*

ஒரு முகம் செறுநர் தேய்த்துச் செல் சமம் முருக்கிக் கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே - மற்றொரு முகம். பகைவரை அழித்து நிகழாநின்ற போரினை வெற்றியாக முடித்துப் பின்னும் பகைவர் தோன்றாதவாறு. வெகுள்கின்ற நெஞ்சத் தோடே கள வேள்வி வேட்டேயிருக்கும். *(*கறுவு - நீடு நிற்கின்ற பகைமை யுணர்வு அது கொடியார் மேலதாதலின் அறமாயிற்று. `தேய்த்து` என்னும் செய்தென் எச்சம் பின் வரும் செல்லுதல் வினைக்கு நிகழ்காலம் உணர்த்தி நின்றது.

அடி. *101, 102, 103-*

ஒரு முகம் குறவர் மடமகள் வள்ளியொடு நகை அமர்ந்தன்று - மற்றொரு முகம், குறவர்தம் இளைய மகளாகிய வள்ளியோடு மகிழ்ந்திருத்தலை விரும்பியே இருந்தது. கொடிபோல் நுசுப்பின் - கொடிபோலத் துவள்கின்ற இடையினையுடைய *(*வள்ளி*)*, மட வரல் - `மடம்` என்னும் குணத்தினது வருகையைப் பொருந்திய வள்ளி. மடமாவது, கொளுத்தக்

கொண்டு, கொண்டது விடாமை. இதுபெண்மைகளுள் ஒன்று.)
அடி. 103, 104, 105-
அம்மூவிரு முகனும் ஆங்கு முறை நவின்று ஒழுகலின் - அந்த ஆறு முகங்களும் அவ்வாறான முறைகளில் பயின்று நிகழ்தலால். (119 பன்னிரு கையும் இயற்றி.)
அடி. 105,106-
ஆரம் தாழ்ந்த அம் பகட்டு மார்பின் செம்பொறி வாங்கிய - பொன்னரி மாலை தங்கி, அழகிய, விளக்கமான மார்பின் கண் உள்ள செவ்வையான கீற்றுக்களைத் தம்மிடத்தே வருமாறு வாங்கி வைத்துக் கொண்ட (107 தோள் மார்பில் மூன்று கீற்றுக்கள் தோன்றித் தோளளவும் சென்றிருத்தல் சிறந்த ஆடவர்க்கு உள்ள இயல்பாகக் கூறப்படுகின்றது.)
அடி. 106, 107, 108-
மொய்ம்பின் வண்புகழ் நிறைந்து - வலிமை யினாலே வளவிய புகழ் நிறையப் பெற்று. சுடர் விடுபு வாங்கு - ஒளி பொருந்திய படைக்கலங்களை ஏவிப் பகைவர்களது மார்பைப் பிளந்த பின்பு வாங்கிக் கொள்கின்ற (107 தோள்) நிமிர் தோள் - பருத்த தோள்களில் உள்ள. (சுடர், ஆகுபெயர்.)
அடி. 108, 109, 110-
ஒரு கை விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது. ஒருகை, (உலகம் ஞாயிற்றின் வெம்மையால் அழியாதபடி அதனைத் தாங்கி) எப்பொழுதும் வானத்தில் உலாவிக் கொண்டிருக்கின்ற அறவோர்களைத் தாங்கி உயரச் சென்றது. (நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத் - தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக் கால் உணவாகச் சுடரொடு கொட்கும் - `அவிர்சடை முனிவர்` என்றது காண்க.) ஒரு கை உக்கம் சேர்த்தியது - அந்தக் கைக்கு இணையான மற்றொருகை இடையின்கண் வைக்கப்பட்டது. (அதற்குத் தொழில் இன்மையால் வாளா இடையின்கண் வைக்கப்பட்டது. இந்த இருகைகளும் மேல், `மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப் பல்கதிர் விரிந்தன்று` எனக் கூறிய முகத்திற்கு உரியன.)
அடி. 111, 112, 113-
ஒருகை அங்குசம் கடாவ ஒரு கை நலம் பெறு கலிங்கத்துக் குறங்கின் மிசைஅசைஇயது - மற்றொருவகை யானையைச் செலுத்துதற்கு அங்குசத்தைப் பயன்படுத்த, அதற்கு இணையான மற்றொரு கை அழகைப் பெற்ற உடையின் மேலாய் துடையின்கண் இருத்தப்பட்டது. (வரம் வேண்டினார்க்கு அதனை வழங்கவருமிடத்து யானை மேல் வருவானாகலின், இந்த இருகை களும் காதலின் உவந்து வரங்கொடுக்கும் முகத்திற்கு உரியனவாம்.)

அடி. *114, 115-*
ஒரு கை மார்பொடு விளங்க, ஒரு கை தாரொடு பொலிய - மற்றொரு கை, மெய்யுணர்வு வேண்டினார்க்கு, அதனைச் சொல்லாமல் சொல்லும் வகையில் குறிக்கும் அடையாள மாக மார்பின்கண் பொருந்தி விளங்க, அதற்கு இணையான மற்றொரு கை மார்பில் புரளும் தாரொடு சேர்ந்து பொலிந்தது. *(*மெய்யுணர்வா வது `எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு` ஆதலின், இந்த இருகைகளும் `எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித் திங்கள் போலத் திசை விளங்கும் முகத் திற்கு உரியன.*)*
அடி. *115, 116, 117-*
ஒரு கை கீழ் வீழ் தொடியொடு மீ மிசைக் கொட்ப, ஒருகை இன்பாடு படுமணி இரட்ட - மற்றொரு கை, தோளில் அணிந்த வளை மேல் நின்று கீழே கழன்று வீழ்வதுபோல விழ வேள்வித் தீக்கு மேலே உயர்த்தி ஆகுதி பண்ணுதலாலும், முத்திரை கொடுத்தலாலும் சுழல, அதற்கு இணையான மற்றொரு கை இனிய ஓசை தோன்றுகின்ற பூசை மணியை இடையிடையே எடுத்து அடிக்கின்றது. *(*எனவே, இந்த இரண்டு கைகளும் கள வேள்வி வேட்கும் முகத்திற்கு உரிய ஆதலை அறிந்துகொள்க.*)*
அடி. *118-*
ஒரு கை நீல நிற விசும்பின் மலி துளி பொழிய - மற்றொரு கை நீல நிறத்தை உடையனவாகிய மேகங்களைத் தூண்டி மிகுந்த மழைத்துளிகளைப் பெய்விக்க. *(*`பொழிவிக்க` என்பதில் பிற வினை விகுதி தொகுக்கப்பட்டது. ஒரு கை வான் அரமகளிர்க்கு வதுவை சூட்ட - அதற்கு இணையான மற்றொரு கை தேவ மாதர்கட்கு மண மாலையைச் சூட்ட. *(*இது தன்னை வாழ்க்கைத் தலைவனாகக் கொள்ள விழைந்த மகளிர்க்கு அவரது கருத்து நிரம்புமாறு அருளுதலைக் குறித்தது. எனவே, வதுவை சூட்டுங் கை வள்ளியொடு நகையமர்ந்த முகத்திற்கு ஏற்புடைத்தாதல் தெளிவு. இனி மழை பொழிவிக்கின்ற கையும் மண வாழ்க்கையை ஏற்றோர் இல்லறம் நடத்துதற்கு முதற்கண் வேண்டப்படும் மழை வளத்தைத் தருவதாதலும் தெள்ளிதேயாம்.
அடி. *120, 121-*
ஆங்கு அப்பன்னிரு கையும் பாற்பட இயற்றி - அவ்வாறு அப்பன்னிரண்டு கைகளும் ஆறு முகங்களின் வகையில் பொருந்தும்படி பல தொழிகளைச் செய்து.
அடி. *122-*
அந்தரப் பல் இயம் கறங்க - வானுலக வாச்சியங்கள் பலவும் ஒலிக்க.
அடி. *122, 123-*

திண் காழ் வயிர் எழுந்த இசைப்ப - திண்ணிய வயிரத்தையுடைய கொம்பு ஒலி நன்கு எழுந்து ஒலிக்க. (`கொம்பு` எனப்படுவது தாரை, இதன் ஓசை வடமொழியில் `சிருங்க நாதம்` எனப்படும்` வால் வளை ஞரல - வெண்மையான சங்கு முழங்க.
அடி. *124-*
உரம் தலைக் கொண்ட உரும் இடிமுரசமொடு - வலிமையைத் தன்னகத்துக்கொண்டு இடி இடித்தாற்போலும் முரசொலியுடன்.
அடி. *125-*
வெல்கொடி பல் பொறி மஞ்ஞை அகவ - வெல்லென்று எடுத்த கொடியிலே பல புள்ளிகளையுடைய தோகையை உடைய மயில் அகவாநிற்க.
அடி. *126-*
விரை செலல் முன்னி - விரையச் செல்லுதலைக் கருதி. விசும்பு ஆறாக - வான் வழியாக.
அடி. *127-*
உலகம் புகழ்ந்த ஓங்கு உயர் விழுச் சீர் - உயர்ந் தோர் புகழ்ந்த மிக உயர்ந்த மேலான புகழையுடைய. அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பு - (கடல் அலை மோதும் இடம் ஆதலின்) `அலைவாய்` என்னும் பெயருடைய திருத்தலத்திற்கு அவ்வப் பொழுது சென்று தங்குதலும் அவனுக்கு நிலை பெற்ற குணமாகும் (ஆகவே, அங்குச் சென்றும் அவனைக் காணலாம். *83.* `வேழம் மேல்கொண்டு, *85* முடியொடு விளங்கிய திரு மணி *86* சென்னிப் பொற்ப, *88* பொலம் குழை *89* இமைப்ப, *104* மூவிரு முகனும் முறை நவின்று ஒழுகலின், *119* பன்னிருகையும் பாற் பட இயற்றி, *120* பல் இயம் கறங்க, *121* வயிர் இசைப்ப, வளை ஞரல, *122* முரசமொடு *123* மஞ்ஞை அகவ *124* விரை செலல் முன்னி விசும்பு ஆறாக அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பு` என இயைத்து முடிக்க.
அடி. *129-*
அதாஅன்று - அதுவன்றியும்.
அடி. *130-*
சீரை - மரவுரியை. தைஇய உடுக்கையர் - உடையாக அமைக்கப்பட்டதனை உடுத்தலை உடையவர்களும்.
அடி. *130, 131-*
சீரொடு - அழகோடு கூடியதாக. வலம்புரி புரையும் வால் நரை முடியினர் - நிறத்தால் சங்கினோடு ஒப்ப நரைத்த வெள்ளிய நரையான முடியை, வடிவாலும் சங்கு போலத் தோன்றும் படி முடிந்த முடியினை உடையவர்களும்.

அடி. *132-*
மாசு அற இமைக்கும் உருவினர் - *(*பன்முறை நீரின் கண் மூழ்குதலால்*)* அழுக்குப் போக விளங்கும் மேனியை உடையவர்களும். *(*`மாண்டார் நீராடி`* என்றார் திருவள்ளுவரும். சமண் முனிவர் இதற்கு மாறாக உடம்பில் மாசு பூசுபவர்கள்*)*
அடி. *132, 133, 134-*
மானின் உரிவை தங்கிய ஊன் கெடு மார்பின் என்பு எழுந்து இயங்கும் யாக்கையர் - மான் தோலால் போர்க்கப்பட்டதும், தசை வற்றியதும் ஆகிய மார்பில் எலும்புகள் வெளித் தோன்றி அசையும் உடம்பினை உடையவரும்.
அடி. *134, 135-*
நன்பகல் பல உடன் கழிந்த உண்டியர் - நோன்பினால் `நல்ல நாள்` எனப்படும் நாள்கள் பல தொடர்ந்து சென்று பின்னர் உண்ணும் உணவை உடையவர்களும். *(*எனவே, `பல நாள் உண்ணாதவர்கள்` என்றதாம். பட்டினி விட்டுப் பின்பு உண்டல் `பௌர்ணை` எனப்படும்.
அடி. *135, 136-*
இகலோடு செற்றம் நீக்கிய மனத்தினர் - யாரிடத்தும் மாறுபாட்டினையும், அது காரணமாக உள்ளத்தில் நிற்கும் பகைமை உணர்வையும் நீக்கின மனத்தை உடையவர்களும்.
அடி. *137-*
கற்றோர் யாவதும் அறியா அறிவினர் - கல்வியை முற்றக் கற்றவர்கள் சிறிதும் அறியாத மெய்யறிவினை உடையவர் களும்.
அடி. *137, 138-*
கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர் - `கற்றோர்` என்பவரது பெருமைகட்கெல்லாம் தாம் மேல்வரம்பாகிய தலைமைப்பாட்டினை உடையவர்களும். *(*`கல்வியைக் கரை கண்டவர்` என்றபடி.*)*
அடி. *138, 139-*
காமமொடு கடுஞ்சினம் கடிந்த காட்சியர் - பலவகை ஆசைகளையும், கடிதாகிய வெகுளியையும் அறவே போக்கின அறிவையுடையவர்களும்.
அடி. *139, 140-*
இடும்பை யாவதும் அறியா இயல்பினர் *(*`இன்பம் விழையாது, இடும்பையை - இது வருதல் இயற்கை *1* - என்று எண்ணி அமைதலால்*)* உள்ளத்தில் சிறிதா யினும் துன்பம் தோன்றியறியாத இயல்பினை உடையவர்களும்.
அடி. *140, 141-*
மேவர துனி இல்காட்சி - யாவருடைய உள்ளமும் விரும்புதல் உண்டாகத் தாம், `எந்நாளும் இன்பமே யன்றித் துன்பம் இல்லை` *2* என

மகிழ்ந்திருக்கும் தோற்றத்தினை உடையவர்களும் ஆகிய *(முனிவர்கள்)*
அடி. *141-*
முனிவர் முன்புக - *(தங்கள் வேண்டுகோளின் படி)* முனிவர்கள் முன்னே புகுத *(வருகையை முருகன் மறுக்கா திருத்தற் காக முனிவர்களை முன்னே விடுத்தனர்.)*
அடி. *142-*
புகை முகந்தன்ன மாசில் தூவுடை - *(மென்மையால்)* புகையை ஒருங்கியையச் சேர்த்து வைத்தாற் போலும், அழுக்கில்லாத தூய உடையையும்.
அடி. *143-*
முகை வாய் அவிழ்ந்த தகை சூழ் ஆகத்து - *(கட்டிய பின்)* அரும்புகள் வாய் மலர்கின்ற மாலை சூழ்ந்த மார்பினையும் உடைய *(கந்தருவர்)* தகைதல் - கட்டுதல். அஃது ஆகுபெயராய், கட்டப்பட்ட மாலையைக் குறித்தது.
அடி. *145, 146-*
நல் யாழ் நவின்ற நயன் உடைய நெஞ்சின் மெல்மொழி மேவலர் இன் நரம்பு உளர - நல்லதாகிய யாழினது இசையிலே பயின்ற பயிற்சியால் இளகிய மனத்திலே *(வன்சொல்லை விரும்பாது)* மென்சொல்லையே விரும்புகின்ற கந்திருவர்கள் இனிய இசையைத் தோற்றுவிக்கின்ற யாழின் நரம்புகளைத் தடவி இசையை இசைத்துக் கொண்டு வரவும்.
அடி. *147-*
நோய் இன்று இயன்ற யாக்கையர் - *(தேவர் ஆதலின்)* மக்கள் யாக்கை போல நோய் உடையன ஆகாது, நோய் இல்லனவாய் அமைந்த உடம்பினையும்.
அடி. *147, 148-*
மாவின் அவிர் தளிர் புரையும் மேனியர் - மா மரத்தினது விளக்கமான தளிர்களை ஒத்த நிறத்தினையுடையவரும்.
அடி. *148, 149-*
அவிர்தொறும் பொன் உரை கடுக்கும் திதலையர் - விளங்குந்தோறும் பொன்னை உரைத்த உரை விளங்குதல் போலக் காணப்படுகின்ற தேமலையுடையவரும.
அடி. *149,150-*
இன் நகைப் பருமம் தாங்கிய அல்குல் - இனிய ஒளியை உடைய பதினெண் கோவை மணிவடங்களைத் தாங்கிய பிருட்டத்தினை உடையவரும் *(ஆகிய மகளிர்)* பணிந்து ஏந்து அல்குல் - தாழ வேண்டிய பகுதி தாழ்ந்தும், உயர வேண்டும் இடம் உயர்ந்தும் உள்ள *(அல்குல் - பிருட்டம்)*

அடி. *151-*
மாசு இல் மகளிரொடு - *(உடம்பிலும், குணத்திலும்)* யாதொரு குற்றமும் இல்லாத கந்தருவ மாதரோடு கூடி *(இன் நரம்பு உளர` என மேலே கூட்டக)*
அடி. *151-*
மறு இன்றி விளங்க - *(பண்கள் பலவும்)* குற்றம் இன்றி வெளிப்படும்படி. `இன் நரம்பு உளர` என மேலே கூட்டுக.
அடி. *152-*
கடுவொடு ஒடுங்கிய - நஞ்சுடனே ஒளிந்துள்ள. தூம்பு உடைய எயிறு - உள்துளையில் பொருந்திய பல், வால் - வெள்ளிய எயிறு *(எயிற்றினை யுடைய பாம்பு.)*
அடி. *154-*
அழல் என உயிர்க்கும் - நெருப்புப் போலப் பெரு மூச்செறியும் *(பாம்பு)* அஞ்சு வரு கடுந் திறல் - கண்டார்க்கு அஞ்சுதல் வருதற்கு ஏதுவாகிய கடுமையான கொலை வன்மையையுடைய *(பாம்பு)*
அடி. *154-*
பாம்பு படப் புடைக்கும் கொடுஞ் சிறை - பாம்புகள் இறக்கும்படி அவைகளை அடிக்கின்ற வளைந்த சிறகு. பல் வரி - பல கோடுகளைப் பொருந்திய. சிறகு *(இத்தகைய சிறகினையுடைய புள், கருடன்.)*
அடி. *155-*
புள் அணி நீள் கொடிச் செல்வனும் - பறவையை அணிந்த நீண்ட கொடியையுடைய தேவனாகிய திருமாலும்.
அடி.*155, 156-*
வெள் ஏறு வலவயின் உயரிய - வெள்ளிய இடபத்தையுடைய கொடியை வலப்பக்கத்து உயர்த்திக் கொண்ட *(செல்வன்)* பலர் புகழ் திணி தோள் - *(கணபதியும், முருகனும் ஏறி விளையாட இருத்தல் பற்றிப்)* பலரும் புகழ்கின்ற `திண்` என்ற தோள்களையுடைய *(செல்வன்)*
அடி. *157-*
உமை அமர்ந்து விளங்கும் - உமையம்மை உடனாக எழுந்தருளி விளங்கும் *(செல்வன்)* இமையா முக்கண் - இமைத்தல் இல்லாத மூன்று கண்களையுடைய *(செல்வன்)*
அடி. *158-*
மூ எயில் முருக்கிய முரண் மிகு செல்வனும் - திரிபுரத்தை அழித்த ஆற்றல் மிக்க சீகண்ட உருத்திரனும் இப்பெருமான் திருக்கயிலையில் எழுந்தருளியிருப்பவன்.
அடி. *159-*
நூற்றுப் பத்து அடுக்கிய நாட்டத்து - நூற்றைப் பத்தாக அடுக்கிய

(ஆயிரம் ஆன) கண்களையுடைய (163 செல்வன்.)
அடி. 159, 160-
நூறு பல் வேள்வி முற்றி - `நூறு` என்னும் எண்ணிக்கையையுடைய பலவாகிய வேள்விகளை வேட்டு முடித்ததனால் பெற்ற (செல்வன் - செல்வத்தையுடையவன். இது பற்றி இவன் `சதமகன்` எனச் சொல்லப்படுவான்.)
அடி. 160-
அட்டு வெல் கொற்றத்து - அசுரர்களை அழித்து வெல்கின்ற வெற்றியையுடைய (செல்வன்)
அடி. 161, 162, 163-
ஏந்திய ஈர் இரண்டு மருப்பின் - வாயில் ஏந்தியுள்ள நான்கு கொம்புகளையும். எழில் நடை - அழகிய நடையினையும். தாழ் பெருந் தடக்கை - நிலத்தளவும், தாழ்கின்ற. பெரிய , வளைந்த கையையும் (தும்பிக்கையையும்) உடைய. உயர்த்த யானை எருத்தம் ஏறிய - யாவராலும் உயர்த்துச் சொல்லப்பட்ட யானையின் பிடரியில் ஏறிவரும் (செல்வன்) திருக்கிளர் செல்வனும்- நல்லூழால் மிகுகின்ற செல்வத்தையுடையவனும். (இந்திரனும்)
அடி. 164-
நால் பெருந் தெய்வத்து - நான்கு திசைகளும் ஞாயிறு, நடுவன், வருணன், திங்கள் ஆகிய பெரிய தேவர்களையுடைய (உலகம்) நல் நகர் நிலைஇய - நல்ல நகரங்கள் பல நிலை பெற்றிருக்கும் (உலகம்).
அடி. 165, 166-
உலகம் காக்கும் ஒன்று புரி கொள்கைப் பலர் புகழ் மூவரும் தலைவர் ஆக - உலகத்தைச் செவ்வன் நடத்துதலாகிய ஒன்றையே விரும்புகின்ற கொள்கை காரணமாகப் பலராலும் போற்றப் படும் `அயன், அரி, அரன்` - என்னும் மூவரும் ஒத்த தலைவாராய் இருக்கவும்.
அடி. 167, 169-
ஞாலம் தன்னில் தோன்றி ஏம் உறும் நான்முக ஒருவன் சுட்டி - (அத்தலைமையை இழந்து) மண்ணுலகில் பிறந்து மயங்குகின்ற பிரமனாகிய ஒருவனை மீட்டல் கருதியே சென்று. (`சென்று` என்பது சொல்லெச்சம்.)
அடி. 168-
தாமரை பயந்த தாஇல் ஊழி - `தாமரை` என்னும் எண்ணினைத் தருகின்ற வருத்தம் இல்லாத ஊழிகளைத் தன் வாழ்நாளாக உடைய நான்முகன் (தாமரை - `பதுமம்` எனப் பெயர் பெற்ற ஒரு பேரெண். நான்முகன் தன் தலைமையையிழந்து மண்ணில் சென்று மயங்கக் காரணம் முருகன் இட்ட சாபம்.

அஃது, அசுரரை அழித்துத் தனது அரசினை நிலைபெறுத்தினமைக்கு நன்றிக் கடனாக இந்திரன் தன் மகளார் தெய்வயானையாரை மணம்புரிவித்த ஞான்று முருகன், `இச் சிறப்பெல்லாம் நமக்கு இவ் வேலால் வந்தன` என்று சொல்லி வேலினைப் பார்க்க, அங்கிருந்த நான்முகன், `இவ்வேலிற்கு இவ்வாற்றல் என்னால் தரப்பட்டது` என்றான். அங்ஙனம் அவன் கூறியது, `எல்லாவற்றையும் படைப்பவன் தான்` - என்னும் செருக்கினாலாம், அதனால் முருகன், `இவன் இத்தலைமையைப் பெற்றது எவ்வாறு` என்பதை மறந்து செருக்குகின்றான் எனச் சினந்து, `நீ உனது சத்திய லோகத்தை விட்டு மண்ணுலகில் புகக்கடவாய்` எனச் சபித்ததே யாம். இது பழம் புராணமாகச் சொல்லப்படுகின்றது.*)*

அடி. *170-*

பகலின் தோன்றும் இகல் இல் காட்சி - பகுத்துக் காண்டலால் காணப்படுகின்ற, தம்முள் மாறுபாடு இல்லாத அறிவினை யுடைய *(*பதினொருமூவர்.*)*

அடி. *171-*

நால் வேறு இயற்கைப் பதினொரு மூவரோடு - `கதிரவர், உருத்திரர், வசுக்கள், மருத்துவர்` என்னும் நான்கு வேறுபட்ட இயல்பினையுடைய முப்பத்து மூவரும். *(*`கதிரவர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர் ஆக முப்பத்து மூவர்` என்றபடி. இவர்களைப் பரிவாரங் களொடு கூட்டி, `முப்பது முக்கோடியினர்` என்பர்.*)*

அடி. *172-*

ஒன்பதிற்று இரட்டி உயர் நிலை பெறீஇயர் - `பதினெட்டு` என்னும் எண்ணளவாக, உயர்ந்த நிலைகளைப் பெற்ற வரும். `பதினெண் கணத்தவர்` என்றபடி. அவராவார், `தேவர், அசுரர், தானவர், கருடர், கின்னரர், கிம்புருடர், யட்சர், வித்தியாதரர், அரக்கர், கந்தருவர், சித்தர் சாரணர், பூதர், பைசாசர், தாரகையர், நாகர், ஆகாச வாசிகள், போக பூமியர்` என்பர். இவ்வகை சிறிது வேறுபடவும் கூறப்படும்.

அடி. *173-*

மீன் பூத்தன்ன தோன்றலர் - விண்மீன்கள் வெளிப் பட்டு விளங்கினாற்போலும் தோற்றத்தை உடையராயும்.

அடி. *173, 174-*

மீன்சேர்பு வளி கிளர்ந்தன்ன செலவினர் - அம்மீன்களை யெல்லாம் பொருந்திக் காற்று எழுந்து வீசினாற் போலும் போக்கினை உடையராயும்.

அடி. *174, 175-*

வளியிடைத் தீ எழுந்தன்ன திறலினர் - அக் காற்றினிடையே நெருப்பு ஓங்கினால் ஒத்த வலிமையினை யுடையராயும்.

அடி. *175,176-*

தீப் பட உரும் இடித்தன்ன குரலினர் - நெருப்புத் தோன்ற இடி இடித்தாற்போலும் குரலினை உடையராயும்.

அடி. *176,177-*

தம் விழுமிய உறுகுறை மருங்கின் பெருமுறை கொண்மார் காண - தங்கள் விழுமிதாகிய பெரிய குறையை இவனிடத் திலே பெறும் முறையாலே பெற்றுக் கொள்வாராய்க் காணும்படி *(*குறையாவது, நான்முகனோடு முன்புபோலக் கூடி முத்தொழிலை இயற்ற வேண்டுதல்*)*

அடி. *178-*

அந்தரக் கொட்பினர் உடன் வர. வானத்தில் சுழலும் சுழற்சியினை உடையராய் உடன்வர (`வந்து` என்பதனை, `வர` எனத் திரிக்க.

அடி. *179, 180-*

ஆவினன்குடி சின்னாள் தா இல் கொள்கை மடந்தையொடு அசைதலும் உரியன் - `திரு ஆவினன்முடி` என்னும் தலத்தில் சில நாள், கெடுதல் இல்லாத கோட்பாட்டினை யுடைய தெய்வயானையாரோடு தங்கியிருத்தலையும் தனக்கு உரித்தாக உடையன். மேற் கூறியவாறு, `முருகனது சாபத்தால் மண்ணிடைப் போந்து மயங்கிக் கிடக்கின்ற. நான்முகனைச் சாப விடுதி செய்து முன்பு போலத் தங்களுடன் இருக்கும்படி மீட்டுக்கொள்ள வேண்டித் திருமாலும், உருத்திரனும், இந்திரனும் முருகனைத் திருவாவினன் குடியில் சென்று, தெய்வயானையாருடன் இருக்கக் கண்டார்` என்க. `நான்முக ஒருவனைச் சுட்டி, புள்ளணி நீள் கொடிச் செல்வனும், மூவெயில் முருக்கிய செல்வனும், நூற்றுப் பத்து அடுக்கிய நாட்டத்துச் செல்வனும், முனிவர் முன்புக, யாழ் நவின்ற நயனுடைய நெஞ்சின் மென்மொழி, மேவலர், மாசில் மகளிரொடு மறு இன்றி விளங்க இன் நரம்பு உளர, நால் வேறு இயற்கைப் பதினொருமூவரும், ஒன்பதிற்றிரட்டி உயர்நிலை பெறீஇயரும். தோன்றலராயும், செலவினராயும், குரலினராயும் கொட்பினராயும் உடன் வர, தம் உறு குறை கொண்மார் காண அசைதலும் உரியன்` என இயைத்து முடிக்க. (எனவே, `அப்பொழுது அங்குச் செல்லினும் அவனைக் காணலாம் என்பதாம். நான்முகனை வீடு செய்த பின்பும் அன்பர் பொருட்டாக முருகன் முன் இருந்த குலத்துடன் ஆவினன் குடியில் இருத்தல் பற்றி, `அங்குச் செல்லினும் காணலாம்` என்பது கூறப்பட்டது.

அடி. *181-*

அதாஅன்று - அதுவன்றியும்.

அடி *182,183-*
இரு மூன்று எய்திய இயல்பினின் வழாது இருவர் சுட்டிய பல்வேறு தொல்குடி - ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என ஆறாகப் பொருந்திய ஒழுக்கத்தி னின்னும் வழுவாமையால், `தாய், தந்தை` என்னும் இருவராலும் உயர்த்துக் கூறப்பட்ட, பலவாய் வேறுபட்ட பழைய குடிகளில் பிறந்த *(187* இருபிறப்பாளர்*.)*
அடி. *184-185-*
அறு நான்கு இரட்டி இளமை நல்யாண்டு ஆறினில் கழிப்பிய - ஆறாகிய நான்கின் இரட்டியாகிய நாற்பத்தெட்டாகிய, இளமைப் பருவத்தையுடைய நல்ல யாண்டுகளை நன்முறையிலே கழித்த *(187* இருபிறப்பாளர்*)* `நன்முறை` என்றது பிரமசரிய ஒழுக்கத்தை.
அடி. *185-*
அறன் நவில் கொள்கை - அறநூல்களில் சொல்லப் பட்ட கொள்கைகளையே தம் தம் கொள்கையாக உடைய *(187* இருபிறப்பாளர்*)*
அடி. *186-*
மூன்று வகைக் குறித்த முத் தீச் செல்வத்து - ஆகவனீயம், காருக பத்தியம், தக்கிணாக்கினி` - என மூன்றாகப் பகுக்கப்பட்ட வேள்வித் தீயாகிய செல்வத்தையுடைய.
அடி. *187-*
இருபிறப்பாளர். ஆகவனீயம், முதலிய மூன்று தீக்களும் முறையே சதுரம், முக்கோணம், வில் வளைவு ஆகிய வடிவில் அமைக்கப்படும் குண்டங்களில் வளர்க்கப்படும். அவ்வடிவங்கள் முறையே நிலம், நெருப்பு, நீர் என்னும் பூதங்களின் வடிவமாகும், காற்றும், வானமும் கட்புலனாகாப் பொருள்கள் ஆதலின் அவற்றின் வடிவில் தீ யெழாது.*)*
அடி. *188-187-*
ஒன்பது கொண்ட மூன்று புரி நுண் ஞாண் இருபிறப்பாளர் பொழுது அறிந்து - மூன்று நூல்களை ஒன்றாகப் புரித்துப் பின்பு அந்த புரி மூன்றினை ஒன்றாகப் புரித்தமையால் ஒன்பது இழைகளைக் கொண்டபுரி மூன்றினையுடைய நுண்ணிய பூணுலை அணிந்த, உபநயனத்திற்கு முன்னே ஒரு பிறப்பும், உபநயனத்திற்குப் பின்னே ஒரு பிறப்பும் ஆக இருபிறப்புக்களை யுடைய அந்தணர்கள் வழிபாட்டிற்குரிய காலங்களைத் தெரிந்து. அடி. *189-*
புலராக் காழகம் புலர உடீஇ - நீரில் தோய்த்து எடுக்கப்பட்டு ஈரம் புலராத உடை, உடம்பிற்றானே புலரும்படி உடுத்து. *(*உலர்ந்த உடையை உடுத்தலே ஆசாரமாயினும், ஈர உடையை உடுத்தலை ஆசாரமாகக் கொள்ளுதல் மலை நாட்டு வழக்கமாகுதலைக் குறித்தது.*)*

அடி. *190-*
உச்சிக் கூப்பிய கையினர் - தலைமேலே குவித்து வைத்த கைகளை உடையவர்களாய்.
அடி. *191-*
ஆறு எழுத்து அடக்கிய கேள்வி - `நமக் குமாராய` என்னும் ஆறு எழுத்துக்களைத் தன்னுள். அடக்கியுள்ள மந்திரத்தை. *(*ஆறெழுத்து மந்திரத்தை வேறாகச் சிலர் கூறவர். `நாதா குமார நம` என அருணகிரி நாதரும் இம்மந்திரத்தையே வேறோராற்றால் குறித்தார்.*)*
அடி. *191-*
அரு மறை - கேட்டற்கு*;* அரிதாய்*; (*மறைத்துச் சொல்லப்படும் கேள்வி*)*
அடி. *192-*
நா இயல் மருங்கில் நவிலப் பாடி *(190)* தற்புகழ்ந்து *(16)* நுவல - நாப் புடைபெயரும் அளவாகப் பல முறை கூறித் தன்னைப் புகழ்ந்து தோத்திரங்கள் சொல்ல.
அடி. *193-*
விரை உறு நறு மலர் ஏந்தி - மணம் மிக்க நல்ல பூக்களைத் தாங்கி.
அடி. *193-*
பெரிது உவந்து *(194)* ஏரகத்து உறைதலும் உரியன்- அவற்றிற்கெல்லாம் பெரிதும் மகிழ்ந்து `திருவேரகம்` என்னும் தலத்தில் எழுந்தருளியிருத்தலையும் தனக்கு உரிமையாக உடையன். *(*எனவே, `அங்குச் சென்றாலும் அவனைக் காணலாம்` என்பதாம்*).*
`இருபிறப்பாளர்*,* பொழுதறிந்து*,* புலராக்காழகம் உடீஇ*,* நறுமலர் ஏந்தி*,* உச்சிக் கூப்பிய கையினராய் ஆறு எழுத்து அடக்கி கேள்வியை நா இயல் மருங்கின் பாடித் தற்புகழ்ந்து நுவலப் பெரிது உவந்து ஏரகத்து உறைதலும் உரியன்` என இயைத்து முடிக்க.
அடி. *194-*
அதாஅன்று - அதுவன்றியும்.
அடி. *195, 196, 197-*
வேலன் - குறிஞ்சி நிலத்துப் பூசாரி. (இவன் `முருகனுடைய வேல்` என்று சொல்லி எப்பொழுதும் வேல் ஒன்றைக் கையில் வைத்திருத்தலால் - வேலன் - எனப் பெயர் பெற்றான். பைங் கொடி நறைக் காய் இடை இடுபு அம்பொதி புட்டில் விரைஇக் குளவி யொடு வெண் கூதாளம் தொடுத்த கண்ணியன் - பச்சைக் கொடியாலே நறிய சாதிக் காய்களை இடையிடையே யிட்டு*,* அழகிய*,* உள்ளே பொதிவுடையது போலத் தோன்றும் புட்டில் வடிவாகிய ஏலக்காயையும் கலந்து*,* காட்டு மல்லிகையுடன் சேர்த்து வெண் தாளி மலரைத் தொடுத்த கண்ணியை உடையவனாய் *(*கண்ணி - தலையில் அணியும் மாலை.*)*

அடி. *199-*
கொடுந் தொழில் வல்வில் கொலைஇய கானவர் - கொடிய தொழிலை உடைய வலிய வில்லாலே பல விலங்குகளைக் கொன்ற வேட்டுவர்கள்.
அடி. *200-*
நீடு அமை விளைந்த தேன்கள் தேறல் - நீண்ட மூங்கிற் குழாய்களில் ஊற்றிப் புதைத்து வைத்ததனால் நன்கு புளிப்பேறின, *(அவர்கட்குத்)* தேன் போல்வதாகிய கள்ளின் வடித்தெடுத்த தெளிவை.
அடி. *201-*
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து - சிறு குன்றுகளின் இடையே உள்ள `சிறுகுடி` எனப் பெயர் பெற்ற ஊரின் கண் தங்கள் சுற்றத்தாருடனே உண்டு மகிழ்ந்து.
அடி. *202-*
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர - `தொண்டகம்` என்னும் அந்நிலத்துச் சிறிய பறையைக் கொட்டி, அக்கொட்டுக்கு ஏற்ப, `குரவை` என்னும் கூத்தினை ஒருபக்கத்திலே ஆட, *(*பலர் கைகோத்து நின்று ஆடுவது குரவைக் கூத்து.*)* அடி. *203-*
விரல் உளர்ப்ப அவிழ்ந்த வேறுபடு நறுங்கான் - விரலாலே வலிய மலர்த்தினமையால் வேறுபட்ட நறுமணத்தை யுடைய.
அடி. *204-*
குண்டு சுனை பூத்த வண்டு படு கண்ணி - ஆழ்ந்த சுனையிலே பூத்த பூக்களால் தொடுக்கப்பட்டு வண்டுகள் மொய்க் கின்ற தலைமாலையையும்.
அடி. *205-*
இணைத்த கோதை அணைத்த கூந்தல் - பூக்களை இணைத்துக் கட்டிய மாலையையும் முடித்த கூந்தலினையும்.
அடி. *206-*
முடித்த குல்லை - பலகாலும் முடித்துப் பழகிய கஞ்சங் குல்லையினையும். இலை உடை நறும் பூ - இலைகளையுடைய வேறு பல பூக்களையும்.
அடி. *207-*
செங்கால் மராத்த வால் இணர் இடை இடுபு - சிவந்த காம்புகளையுடைய, மராமரத்தில் உள்ளனவாகிய, வெண்மையான பூங்கொத்துக்களை இடையிடையே வைத்து.
அடி. *208-*
தொடுத்த தழை - தொடுக்கப்பட்ட `தழை` என்னும் உடை, சுரும்பு உண - வண்டுகள் தேனை உண்ணும் படி *(தொடுத்த தழை)* பெரு தண் மா - பெரிய, குளிர்ந்த, அழகிய *(தழை)*

அடி. *209-*
திருந்து காழ் அல்குல் திளைப்ப உடீஇ - திருத்தமான மணி வடங்களையுடைய பிருட்டத்தினிடத்தே பொருந்தி அசையும்படி உடுத்து.
அடி. *210-*
மயில் கண்டன்ன மகளிரொடு - சாயலால் மயிலைக் கண்டாற் போலும் பெண் அடியார்களோடும். மடநடை பெண்மை ஒழுக்கத்தினை உடைய *(*மகளிர்*)*
அடி. *211-*
செய்யன் - செஞ்சாந்து பூசிச் சிவந்தவனாயும், சிவந்த ஆடையன் - சிவப்பான உடையை உடுத்தவனாயும்,
அடி. *211, 212-*
செ அரைச் செயலைத் தண் தளிர் துயல் வரும் காதினன் - சிவந்த அடி மரத்தையுடைய அசோக மரத்தினது குளிர்ந்த தளிர்கள் அசையும் காதுகளையுடையவனாயும்.
அடி. *213-*
கச்சினன் - உடையின்மேல் இறுகக் கட்டிய கச்சினை உடையவனாயும். கழலினன் - வீரர் அணியும் கழலினைக் காலில் கட்டியவனாயும் செச்சைக் கண்ணியன் - வெட்சி மாலையை அணிந்தவனாயும். *(*இங்கு மாலை `கண்ணி` எனப்பட்டது.*)*
அடி. *214-*
குழலன் கோட்டன் குறும் பல் இயத்தன் - குழலையும், கொம்பையும், மற்றும் சில சிறு வாச்சியங்களையும் ஒலிப்பிக்கின்றவனாயும்.
அடி. *215-*
தகரன் - ஆட்டுக் கிடாயைப் பின்னே உடையவ னாயும். *(*இது பலியிடப்படுவது. அன்றி, முருகன் ஊர்தி அடையாளமுமாம்.*)*
மஞ்ஞையன் - மயிலை ஊர்பவனாயும். *(*இம்மயில், செயல் வல்லோரால் செய்து தரப்பட்டது.*)*
அடி. *215, 216-*
புகர் இல் சேவல் அம் கொடியன் - *(*ஊர்திக்கு மேலலே பறக்க எடுத்த*)* குற்றம் இல்லாத கோழிக் கொடியை உடையவ னாயும். நெடியன் - உயரத் துள்ளி ஆடுதலால் நீண்ட உருவம் உடையவனாயும். தொடி அணி தோளன் - தோள்வளையை அணிந்த தோள்களையுடையவனாயும்.
அடி. *217-*
நரம்பு ஆர்த்தன்ன இன் குரல் தொகுதியொடு - யாழின் நரம்பு ஒலித்தாற் போல ஒலிக்கும் இனிய குரலைடைய பாடல் மகளிர் கூட்டத்தோடும்.

அடி. *218, 219-*
மருங்கின் கட்டிய குறும்பொறிக் கொண்ட நிலன் நேர்பு துகிலனன் - இடையிலே புரளக் கட்டிய, சிறிய புள்ளிகளைக் கொண்ட, நிலத்திற் பொருந்துதலையுடைய துகிலை உடையவனாயும், நறுந் தண் சாயல் - நல்ல மென்மைத் தன்மையை உடைய *(*துகில், நேர்பு, தொழிற் பெயர்*)*
அடி. *220-*
முழவு உறழ் தடக்கையின் ஏந்தித் தழீஇத் தலைத் தந்து - மத்தளம் போலும் தோளோடு கூடிய பெரிய கைகளில் அவர்களை ஏந்தித் தழுவி முதற்கை கொடுத்து. *(*முதற் கை கொடுத்தலாவது, முன்னே இவன் கை கொடுக்கப் பின்னே அம்மகளிர் அதனைப் பற்றிக் கொண்டு ஆடுதல்*)*
அடி. *221-*
மெல் தோள் பல் பிணை இயல - மெல்லிய தோள்களையுடைய, மான்போலும் மகளிர் பலர் குரவை யாடி வர.
அடி. *222-*
குன்று தோறு ஆடலும் நின்ற தன் பண்பு - மலைகள்தோறும் ஆடும் அவ் ஆடலில் தான் பொருந்தி நிற்றலும் நிலையான அவனது பண்பு.
*(*எனவே, `அவ்வாடல்களிலும் அவனைக் காணலாம்` என்பதாம்.*)*
கானவர்கள் தேறலை கிளையுடன் மகிழ்ந்து குகரவை அயர, வேலன் கண்ணியனாய், மடநடை மகளிரோடும், இன்குரல் தொகுதி யோடும், செய்யனாயும், ஆடையனாயும், காதினனாயும், கண்ணிய னாயும், குழலனாயும், கோட்டனாயும், இயத்தனாயும், தகரனாயும், மஞ்ஞையனாயும், கொடியனாயும், நெடியனாயும், தோளனாயும், துகிலினனாயும் பல் பிணை இயலத் தடக் கையின் ஏந்தித் தழீஇத் தலைத் தந்து ஆடலும் தன் பண்பு` என இயைத்து முடிக்க.
தன்னை முருகனாகவே எண்ணும் எண்ண வலிமையால் வேலன் ஆடும் ஆடல்களை முருகன் தன்னுடைய ஆடலாகவே ஏற்று அந்நிலத்து மக்களுக்கு அருள்புரிந்து வருதலின், `அந்நிலத்துச் சென்று அவன் வழியாகவும் நீ கருதியதைப் பெறலாம்` என முன்பே அப்பேற்றைப் பெற்ற புலவன் கூறினான்.
அடி. *223-*
அதா அன்று - அதுவன்றியும்.
அடி. *224-*
சிறு தினை மலரொடு விரைஇ - சிறிய தினை அரிசியைப் பூக்களோடே கலந்து *(*பரப்பி, இதன்மேல் பிரம்பை, மஞ்சள் பூசிக் குங்குமம் இட்டுப் பூச்சூட்டி நாட்டி வைப்பர். அதனால் இதன் கீழ் பரப்பப்படும் அரிசி `பிரப்பரிசி` எனப்படும் `விரைஇ` என்பதன்பின், `பரப்பி` என்னும் சொல்லெச்சம் வருவிக்க.*)* மறி அறுத்து - செம்மறியாட்டுக் கிடாயைப்

பலியிட்டு. (இவை தீய தெய்வங்களை மகிழ்வித்தற் பொருட்டுச் செய்யப்படுவன.

அடி. *225-*

வாரணக் கொடியொடு வயின்பட நிறீஇ - கோழிக் கொடியைக் கோயிலின் முன் உயர்த்துக் கட்டி, அதனையுடைய அவ் விடத்திலே பொருந்தத் தன்னை *(முருகனை மந்திரங்களால்)* நிறுவி.

அடி. *226-*

ஊர் ஊர் கொண்ட சீர் கெழு விழவினும் - ஊர்கள் தோறும் எடுத்த சிறப்புப் பொருந்திய விழாக்களிலும் *(அவன் உறைவான்)*

அடி. *227-*

ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும் - அன்பர்கள் துதிக்க. அதற்குத் தான் விரும்புதல் வருகின்ற இடங்களிலும் *(அவன் உறைவான்)*

அடி. *228-*

வேலன் தைஇய வெறி அயர் களனும் - வேலன் * அணி செய்த வெறியாடு களத்திலும் (வேலன் வேண்டுதலுக்காக அப்பொழுது உறைவான். வெறி - செம்மறியாட்டுக் கிடாய், அதனைப் பலியிட்டு ஆடும் வழிபாடு வெறியாடுதலாகும். அயர்தல் - கொண்டாடுதல். வெறியாடுதல் பெரும்பாலும் அகத்திணை நிகழ்ச்சிக் குரியதாய் வரும். அஃதாவது களவொழுக்கத்தில் தலைவனைக் காண்டல் அருமையால் தலைவி வேறுபாடுற, அதனைச் செவிலியும், நற்றாயும் தெய்வத்தான் ஆயதாகக் கருதி வேலனை அழைத்து வெறியாடுவித்துக் குறிகேட்டல் முதலியன செய்வர். எனினும் சிறுபான்மை வெட்சியாகிய புறத்திணையிலும் வருதல், `வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறியாட்டயர்ந்த காந்தளும்`* என்னும் தொல்காப்பியக் கட்டளையால் விளங்கும். வீரர் போர்க்குச் செல்லுங்கால் வெற்றி வேண்டிக் கொற்றவையையும், முருகனையும் பரவத்தேவராட்டியைக் கொண்டு வழிபடுதல் பெரும்பான்மை. அதனைக் கண்ணப்ப நாயனார் புராணத்தாலும் அறியலாம்.*)*

அடி. *229-*

காடும் - முல்லை நிலத்திலும் (அவ்விடத்து வேண்டினார் பொருட்டு அவன் உறைவன்.*)* காவும் - சோலைகளிலும் (அங்கு நிறுவினார் வேண்ட உறைவன்*)* கவின் பெறு துருத்தியும் - அழகு பெற்ற. யாறு பிளவுபட்டு ஓட அவற்றிடை அமைந்த திடல்களிலும் அவன் விரும்பி உறைவன்*)*

அடி. *230-*

யாறும் - ஆற்றங்கரைகளிலும். (அவன் உறைவான்) குளனும் - குளத்தங் கரைகளிலும் (அவன் உறைவான். வேறு பல் வைப்பும் - தன்மையால்

வேறுபட்ட பல சிற்றூர்களிலும் *(அவன் உறைவன்)*
அடி. *231-*
சதுக்கமும் - நான்கு தெருக்கள் ஒன்று கூடுகின்ற சந்திகளிலும் *(அவன் உறைவன்)* சந்தியும் - *(மூன்று தெரு, ஐந்து தெரு கூடுகின்ற)* மற்றைச் சந்திகளிலும் *(அவன் உறைவான்)* புதுப் பூ கடம்பும் - *(அவனுக்கு மிக விருப்பமாகிய புதிய பூக்களைப் பூத்துக் குலாவுகின்ற கடப்ப மரங்களின் அடிகளிலும் (அவன் உறைவான்)*
அடி. *232-*
மன்றமும் - அவை கூடுகின்ற அம்பலமாகிய மர நிழலிலும் *(அவன் உறைவான்)* பொதியிலும் - வழிப் போவார் தங்குதற் பொருட்டு அறமாக அமைக்கப்பட்ட பொது இல்லங்களிலும் *(அவன் உறைவான்)* கந்து உடை நிலையிலும் - *(தறியை உடைய நிலையங்களிலும்)* அவன் உறைவான். தறியாவது சிவலிங்கம். இது வட மொழியில் `தாணு` எனப்படும் இஃது உள்ள நிலையங்களில் முருகன் அம்மை அப்பர்க்குப் பிள்ளையாய் இருப்பான். தறி சிவலிங்கம் ஆதலை `கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே` என்னும் அப்பர் திருமொழியால் அறிக. ஆதீண்டு குற்றியுள்ள இடத்தில் முருகனை வழிபடுதல் காணப்படாமையால் `தறி` என்பதற்கு, `ஆ தீண்டு குற்றி` என உரைத்தல் பொருந்துவதன்று,*)*
அடி. *233-*
மாண் தலைக் கொடியொடு அமை வர மண்ணி. மாட்சிமைப்பட்ட, தலைமையையுடைய கோழிக் கொடியோடு பொருந்துதல் வரத் தூய்மை செய்து. *(*`ஆண்டலை` எனப் பாடம் ஓதி, `ஆண்டலையாவது கோழி` என்று உரைப்பாரும் உளர்.*)*
அடி. *234-*
ஐயவி நெய்யோடு அப்பி - வெண்சிறு கடுகை *(மணம் மிகுதற் பொருட்டு)* நெய்யோடு கலந்து நிரம்பப் பொருத்தி.
அடி. *234, 235-*
ஐது உரைத்துக் குடந்தம் பட்டு - அழகிதாகிய முகமனுரை கூறி உடல் வளைந்து கும்பிட்டு.
அடி. *235-*
கொழு மலர் சிதறி - செழிப்பான மலர்களை எங்கும் இறைத்து.
அடி. *236-*
முரண் கொள் உருவின் இரண்டு உடன் உடீஇ - மாறுபட்ட நிறத்தையுடைய இரண்டு ஆடைகளை *(ஒன்றை உடையாக வும், மற்றொன்றை வல்லவாட்டாகவும்)* ஒருங்கு உடுத்து.
அடி. *237-*

செந்நூல் யாத்து - சிவப்பு நூலைக் கையில் காப்பாகக் கட்டி.
அடி. *237-*
வெண் பொரி சிதறி - வெண்மையான பொரிகளை யும் இறைத்து.
அடி. *239, 239, 240-*
மத வலி நிலைஇய மா தாள் கொழுவிடைக் குருதியொடு விரைஇய தூவெள் அரிசி சில் பலிச் செய்து - செருக்கும், வலிமையும் நிலை பெற்ற, பருத்த கால்களையுடைய செம்மறியாட்டுக் கிடாயினது இரத்தத்தோடு சேர்த்துப் பிசைந்து, தூய, வெண்மையான அரிசியைச் சிறு படையலாக வைத்து. பல் பிரம்பு இரீஇ - பல இடங்களில் பிரம்புகளை நாட்டி. *(*பிரம்பு, பிரப்பங் கூடைகளும் ஆம்*)*. அவற்றில் பண்டங்கள் நிரம்பியிருக்கும்.
அடி. *241-*
சிறு பசுமஞ்சளொடு நறு விரை தெளித்து - *(*அரைத்த, சிறிய, பாடம் செய்யப்படாத பச்சை மஞ்சளோடே நல்ல மணம் கலந்த நீரை எங்கும் தெளித்து.
அடி. *242, 243-*
பெரு தண் கணவீர நறு தம் மாலை துணை அற அறுத்துத் தூங்க நாற்றி - பெரிய குளிர்ந்த செவ்வலரிப் பூவால் ஆகிய, மணம் கமழும் குளிர்ந்த மாலைகளை ஓர் அளவாக அறும்படி அறுத்து, எங்கும் தூங்கும் படி தூங்க விட்டு. *(*`துணையாக` என ஆக்கம் வருவிக்க*)*.
அடி. *244-*
நளி மலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி - செறிந்த மலைகளின் எதிரொலியை உடைய தங்கள் நல்ல ஊர்களை, `அவை வாழ்வனவாக` என வாழ்த்தி.
அடி. *245-*
நறும் புகை எடுத்து - நறுமணம் கமழும் புகையை உயர எடுத்து.
அடி. *245-*
குறிஞ்சி பாடி - குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, அந்தாளிக் குறிஞ்சி ஆகிய அந்நிலத்துப் பண்களில் பாட்டுக்களைப் பாடி.
அடி. *246-*
இமிழ் இசை அருவியோடு இன் இயம் கறங்க `இழும்` என்னும் ஓசையைத் தருகின்ற அருவிகளோடு கூடி இனிய வாச்சியங்களும் ஒலிக்க.
அடி. *247-*
பல் உருவப் பூத் தூஉய் - பல நிறங்களையுடைய பூக்களை நிரம்ப இறைத்து.

அடி. *247, 248-*
வெருவரக் குருதிச் செந்தினை பரப்பி - கண்டார்க்கு அச்சம் வருமாறு, இரத்தத்தோடு கலந்த செம்மையான தினையைப் பரப்பி வைத்து.
அடி. *248-*
குற மகள் - இளையளாகிய குறத்தி. *(*முதியளாயின் `மூதாட்டி` எனப்படுவாளல்லது வாளா `மகள்` எனப்படாள்.*)*
அடி. *249-*
முருகு இயம் நிறுத்து - முருகனுக்கே உரிய வாச்சியங்களை நிலையாக ஒலிப்பித்து.
அடி. *249, 250-*
முரணினர் உட்க முருகாற்றுப் படுத்த உரு கெழுவியல் நகர் - *(*`தெய்வம் இல்லை` என்று*)* முரணிக் கூறினவர்கள் நெஞ்சு நடுங்க முருகனை அவ்வழியில் வந்து பொருந்தச் செய்த, *(*பல வகையாலும்*)* அச்சம் பொருந்திய, அகன்ற கோயிலின்கண்.
`குறமகள், கொடியொடு அமை வர மண்ணி, அப்பி, சிதறி, சிதறி, பலிச் செய்து, பிரப்பு இரீஇ, விரை தெளித்து, மாலை தூங்க நாற்றி, பூத்தூஉய், தினை பரப்பி, அருவியோடு இயம் கறங்கக் குறிஞ்சி பாடி, நன்னகர் வாழ்த்தி, ஐது உரைத்துக் குடந்தம் பட்டு, உட்க முருகு ஆற்றுப்படுத்த நகர் என இயைத்துக் கொள்க. முருகனை ஆற்றுப் படுத்தலாவது, அவன் அருளால் குறிபார்த்துக் கூறுதலும் ஆவேசிக்க ஆடிக் குறிசொல்லுதலும் போல்வனவற்றால் அவனை மெய்யாகக் காட்டல்.
அடி. *251-*
ஆடு களம் சிலம்ப - வெறியாடுகளம் ஒலிக்க. பாடி - அவ்வொலிக்கு இயையத் தாமும் பல பாட்டுக்களைப் பாடி. அடி. *251, 252-*
கோடு பல உடன் வாய் வைத்து - கொம்புகள் பலவற்றை ஒரு சேர வாய் வைத்து ஊதி, *(*`ஊதி` என்பது சொல் லெச்சம்.*)* கொடு மணி இயக்கி - பேரோசையை உடைய மணியை அடித்து.
அடி. *253, 254-*
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி வழிபட - பின்னிடாத வலியினையுடைய, `பிணிமுகம்` என்னும் பெயரின தாகிய யானை ஊர்தியை, `அது வாழ்வதாக` என்று வாழ்த்தி *(*அவ் விடத்தும் அவன் உறைதலும் உரியன் வழிபாடு செய்ய.*)*
மணிமயில் உயரிய மாறா வென்றிப்
பிணிமுக ஊர்தி ஒண்செய் யோனும்
எனப் புறத்திலும் முருகனுக்கு மயிற்கொடியும், `பிணிமுகம்` என்னும் யானை ஊர்தியும் சொல்லப்பட்டன. இனி, `பிணிமுகமாவது மயல்` என்றே கொள்ளலும் ஆம். மேற்கூறிய `சீர் கெழு விழவு` முதலிய

இடங்களிலும் (வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் சென்று வழிபடு வாராயினும், பெரும் பான்மை பற்றிக் குறமகள் முருகாற்றுப்படுத்த கோயிலையே அதற்கு உரித்தாகக் கூறினார்.)
அடி. 254-
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் - பயன்களை விரும்புபவர்கள் விரும்பிய பயன்களை விரும்பியபடியே பெற்றமையால் (சென்று நேர்ச்சிக் கடன் செலுத்துவாராய்)
அடி. 255-
ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்த ஆறே - மேற் கூறியவாறு, ஊர் ஊர் கொண்ட சீர் கெழு விழா முதலிய பல இடங் களிலும் அவன் உறைதலை உரியனாதல் நன்கறியப் பட்ட முறைமையே யாம்.
(`வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபடுதலை இறுதியிற் குறித்த உரு கெழு வியல் நகருக்கே உரித்தாகக் கூறினமை யின், மேற் கூறிய அவை இகந்து படாமைப் பொருட்டு. `ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்தவாறே` என வலியுறுத்து ஓதினார்.)
அடி. 256-
ஆண்டு ஆண்டு ஆயினும் ஆக - கூடற் குடவயின் குன்று முதலாக இதுகாறும் கூறி வந்து அவ்வவ்விடங்களிலே யாயினும் ஆக;
(உம்மையால், `பிற இடங்களிலே யாயினும் ஆக` இதனால் அவன் உறையும் இடங்களை வரையறுத்துக் கூறுதல் இயலாமை பெறப்பட்டது.)
அடி. 257-
கண்டுழி, முந்து முகன் காண் தக அமர்ந்து ஏத்தி - நீ சென்று கண்ட பொழுது, முதலில் உனது முகம் அவனால் நோக்கப் படத்தக்கதாகும்படி உவகையால் மலர்ந்து, ஒரு துதியைச் சொல்லிப் பின்பு.
அடி. 258-
கை தொழூஉ - கைகளைக் குவித்துக் கும்பிட்டு - பரவி பல துதிகளைப் பாடி. கால் உற வணங்கி - அவனது திருவடிகளிலே உனது தலை பொருந்தும்படி நிலத்திலே வீழ்ந்து பணிந்து.
அடி. 259, 261-
நெடும் பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை பயந்த ஆறு அமர் செல்வ - இமைய மலையின்) நெடிய பெரிய சிகரங் கட்கு இடையே உள்ள நீல நிறத்தை உடைய, நாணற் புதர்களால் பசுமை மிக்க சுனையிடத்தே (`சரவணப் பொய்கையில்` என்றபடி.) பெறப்பட்ட, ஆறு உருவம் பொருந்திய செல்வ.
(முருகன் அவதாரம் பழைய புராணங்களில், `உமை வயிற்றில் கரு உண்டாயின் அதனால் உலகிற்குத் தீமை பல உளவாம் - என்று

இந்திரன் கருதி, - அது வேண்டா - என்று சிவபெருமானை வேண்டிக் கொண்டமையால், அப்பெருமானது வீரியத்தை இருடியர் எழுவரும் ஏற்று வேள்வித் தீயில் இட்டு அதனை வேள்விப் பிரசாதமாக வாங்கித் தம் மனைவியரிடம் கொடுக்க நினைக்கும் பொழுது அருந்ததி அப்பாற் சென்றமையால், அதனை ஆறு கூறு செய்து ஏனை அறுவர்க்கும் கொடுக்க, அவர்கள் அதனை விழுங்கிச் சூல் முதிர்ந்தவர்களாய்ச் சரவணப் பொய்கையில் ஈன்றமைால் ஆறு குழந்தைகளாய் முருகன் அப்பொய்கையில் தோன்றி, விளையாட்டயர்ந்து இருக்க, அதனையறியாது இந்திரன் வந்து போர் தொடுக்க, முருகன் ஆறு முகங்களும், பன்னிரண்டு கைகளும் கொண்ட ஓர் உருவினனாய் அவனை வென்று, பின்னும் அவ்வுருவத்தையே உடையனாயினான்` எனக் கூறப்பட்டது. அதனால், இங்கும், பரிபாடலிலும் அவ்வாறே கூறப்பட்டது. `இவையெல்லாம் பொருத்தம் அற்றன` என்று, பிற் காலத்தில், `முருகன் அவதாரம் வேறு வகையாகப் புராணங்களில் கூறப்பட்டது` என்பதைக் கந்த புராணத்தால் அறிகின்றோம்.)

அடி. 260-

ஐவருள் ஒருவன் அகம்கை ஏற்ப - ஐம்பூதங்களின் தலைவர்களில் ஒருவனாகிய தீக் கடவுள் சிவபெருமானது வீரியத்தைத் தனது அகங்கையிலே ஏற்றலால்.

அடி. 261-

அறுவர் - இருடியர் பத்தினியர் எழுவருள் அருந்ததி யொழிந்த ஏனை அறுவர்.

அடி. 262-

ஆல் கெழு கடவுள் புதல்வ - ஆல நிழலில் அமர்ந் திருக்கும் கடவுளுக்கு (சிவபெருமானுக்கு) மைந்த!

அடி. 262, 263-

மால் வரை மலைமகள் மகனே - மலைகளி லெல்லாம் மிகப் பெரிய மலையாகிய இமயமலைக்கு மகளான உமைக்கு மகனே! மாற்றோர் கூற்றே - அசுரராகிய பகைவர்க்குக் கூற்றுவனே!

அடி. 264-

வெற்றி வெல் போர்க் கொற்றவை சிறுவ - வேந்தர்க்கு வெற்றியைத் தருபவளும், எப்பொழுதும் வெல்லும் போரையே மேற்கொள்பவளும் ஆகிய கொற்றவைக்கு (துர்க்கைக்கு) மைந்த!

அடி. 265-

இழை அணி சிறப்பின் பழையோள் குழவி - அணிகலங்களை அணிந்த சிறப்பினையுடைய காடுகிழாளுக்கு மைந்த (இவள் `மாயோள்` எனப்படுதல் பற்றி இவளை வடமொழியாளர், `காளி` என்றனர்.

(வனதுர்க்கையாவாள் இவளே` என்னாது, நச்சினார்க்கினியர் கொற்றவையை `வன துர்க்கை` என்றார்.)
அடி. 266-
வணங்குவில் வானோர் தானைத் தலைவ - தேவர் பொருட்டு. வளைந்த வில்லுடன், அவர்தம் சேனைக்குத் தலைமை பூண்டவ (`தேவ சேனாபதி` என்றதாம்.)
அடி. 267-
மாலை மார்ப - (போர்க் காலத்திலும் அதனால் வருந்துதல் இன்மையால்) இன்பத்திற்கு உரிய தாரினை அணிந் திருக்கும் மார்பை உடையவ, நூல் அறி புலவ - எல்லா நூற்பொருள் களையும் இயல்பிலே அறிந்த அறிவ, அடி. 268-
செருவில் ஒருவ - போர்க்களத்தில் ஈடாவார் இன்றி யிருப்பவ. பொருவிறல் மள்ள - போர் பொருமிடத்து வெற்றியே பெறும் வீர.
அடி. 269-
அந்தணர் வெறுக்கை - அந்தணர்க்கு அவர் பெறும் செல்வமாம் தன்மைய. அறிந்தோர் சொல் மலை - அறிந்தோர் புகழ்ந்து சொல்லும் சொற்களின் திரட்சியானவ.
அடி. 270-
மங்கையர் கணவ - ஒருவரன்றி மங்கையர் இருவர்க்குக் கணவ.
அடி. 270-
மைந்தர் ஏறே - வீரருள் அரியேறு ஒப்பவனே!
அடி.271-
வேல் கெழு தடக்கைச் சால் பெருஞ் செல்வ -வேல் பொருந்திய பெரிய கையால் வந்து நிறையும் பெரிய வெற்றிச் செல்வத்தை உடையவ.
அடி. 272, 273-
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்துக் குறிஞ்சி கிழவ - `கிரௌஞ்சம்` என்னும் மலையை அழித்த குறையாத வெற்றியையுடைய குறிஞ்சிக் கிழவ. விண் பொரு நெடு வரைக் குறிஞ்சி கிழவ - வானத்தை அளாவும் உயர்ந்த மலைகளை யுடைத்தாகிய குறிஞ்சி நிலத்தை உரிமையாக உடையவ. `குறிஞ்சிக் கிழவ` - என்பதில் ககர ஒற்று விரித்தல்.)
அடி. 274-
பலர் புகழ் நல்மொழிப் புலவர் ஏறே - பலரும் புகழ்ந்து சொல்லும் நல்ல சொல்வன்மையையுடைய புலவர்களில் ஆனேறு போல்பவனே! (ஆனேறு புகழும், பெருமிதமும் உடையது.)
அடி. 275-
பெறல் அரு மரபின் முருக - யாவராலும் பெறுதற் கரிய முறைமையினையுடைய முருக. (`முருகன்` என்னும் பெயர்க்

காரணத்தை மேல் விளக்குவார்) பெரும் பெயர் - ஒரு மொழிப் பொருளாய் உள்ள (முருக. ஒரு மொழி யாவது, வேதம் முதலிய அனைத்து நூல்களின் பொருள்களையும் அடக்கி நிற்கும் ஒரு சொல். அச்சொல் முருகன் மேலதாயது மேல், `ஆறு எழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி` என்பதில் சொல்லப்பட்டது.

அடி. *276-*

நசையுநர்க்கு ஆர்த்தும் பேர் இசை ஆள - நினது இன்பத்தை நுகர்தலை விரும்பி நின்பால் வந்தவர்க்கு அதனை அருகாதே நுகர்விக்கின்ற பெரும்புகழை ஆளுதலுடையவ.

அடி. *277-*

அலந்தோர்க்கு அளிக்கும் சேஎய் - களைகண் காணாது அலமந்து வந்தோர்க்கு இரங்கும் சேஎய்! (அளபெடை விளிப்பொருட்டு.)

அடி. *278, 277-*

மண்டு அமர் கடந்த வென்று ஆடு நின் அகலத்துப் பொலம் பூண் - மிகுந்த போர்களைத் தொலைத்த எப்பொழுதும் வென்றே செல்கின்ற நின் மார்பிடத்துப் பொன்னாலாகிய அணிகளையுடைய (சேஎய்.)`

அடி. *279-*

பரிசிலர்த் தாங்கும் நெடு வேஎள் - இரவலரை அவர் வேண்டுவன கொடுத்துத் துன்பம் தீர்த்துப் புரக்கின்ற நெடிய வேஎள். (இங்கும் அளபெடை விளிப்பொருட்டு.) உரு கெழு - பகைத்தவர்க்கு அச்சம் தோன்ற நிற்கின்ற (வேஎள்) என இவ்வாறு முதற்கண் சேயனாக வைத்து விளித்தும், பின்பு,

அடி. *280-*

பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள் - உயர்ந்தோர் எடுத்துச் சொல்லித் துதிக்கின்ற எண் மிகுந்த பெயர்களை யுடைய இயவுள். (எண் மிகுந்த பெயர்களை `ஆயிரம் பேர்` என்பர். `இயவுள்` என்பதும் `கடவுள்` என்பதனோடு ஒத்த ஒரு பெயர். `இயக்குதலையுடைய பொருள்` என்பது இதன் பொருள். இதற்கு, `தலைவன்` எனப் பொருள் கூறினார் நச்சினார்க்கினியர்.)

அடி. *281, 282-*

சூர் மருங்கு அறுத்த மொய்ம்பின் மத வலி போர் மிகு பொருந - சூரபன்மனது கிளையை அழித்த வலிமையாலே, எப்பொழுதம் செருக்கினால் வலிய எழும் போரில் வெற்றியால் மேம்பட்டு விளங்குகின்ற போர் வீர. குரிசில் - தலைவ. என - இவ்வாறு அணியனாக விளித்தும் (ஏத்தி) ஆனாது - அவ்வளவின் அமையாது.

அடி. *282, 283-*

யான் அறி அளவையின் பல ஏத்தி - நான் அறிந்த அளவு உனக்குக்

கூறிய பலவற்றைச் சொல்லித் *(மலர்தூவி)* துதித்து *(பலவாவன).*
அடி. *284, 285-*
நின் னளந்தறிதல் மன் உயிர்க்கு அருமையின் நின்அடி உள்ளி வந்தனென் - நினது பெருமையை அளவிட்டு அறிதல் பலவாகிய உயிர்கட்கு இயல்வதன்று ஆகையால் *(யானும் நின்னை அளந்தறிய வாராது)* நினது திருவடிக்கீழ் உறைதலையே விரும்பி வந்தேன்.
அடி. *285, 286-*
நின்னொடு புரையுநர் இல்லாப் புலமை யோய்- நீ நின்னோடு ஒப்பார் இல்லாத பேரறிவினை யுடையாய் *(ஆயின்)*
அடி. *286, 287-*
எனக் குறித்தது மொழியா அளவையின் - என்று இவ்வாறு, நீ கருதிச் சென்ற காரியத்தை எடுத்துச் சொல்லி விண்ணப் பித்தற்கு முன்பே.
அடி. *288, 287-*
வேறு பல் உருவின் குறு பல் கூளியர் உடன் குறித்து - வேறு வேறான பலவகைப்பட்ட வடிவங்களையுடைய, குறளாராகிய கூளிச் சுற்றத்தவர் *(பூத கணங்கள்)* பலர் தாமும் நீ கருதியதையே உடன் கருதி.
அடி. *289-*
சாறு அயர் களத்து வீறு பெறத் தோன்றி - *(முருகன் இருக்கும் இடம் எல்லாம் விழாக் கொண்டாடும் களமாகவே யிருக்கும் ஆதலால் அவ்வாறு)* விழாக் கொண்டாடும் களத்தில் *(உனக்காக முருகன் முன்பு)* பெருமிதம் பெறத் தோன்றி.
அடி. *290-*
முது வாய் இரவலன் - புலமை முதிர்ந்த, வாய்மையை யுடையனாகிய இரவலன் ஒருவன்.
அடி. *290-*
தான் அளியனே - அவன் நின்னால் அருள் பண்ணத் தக்கவனே.
அடி. *291-*
என - என்று விண்ணப்பிக்க. *(`இவ்வாறு அவர் வழியாக அன்றி நீ அவனை நேரே பெறுதல் அரிது` என்றற்கு இது கூறினான்.*
அடி. *291-*
பெரும - பெருமானே.
அடி. *291-*
நின் வள் புகழ் நயந்து - நினது வளவிய புகழைக் கூறுதலையே விரும்பி.
அடி. *292, 291-*
இனியவும் நல்லவும் நனி பல ஏத்தி வந்தோன் - கேட்டார்க்கு இனிமை பயப்பனவும், உறுதி பயப்பனவும் ஆகிய அப்புகழ்களைச்சொல்லி நின்னைத் துதித்து வந்துள்ளான்.

அடி. *293, 294-*
திறல் தெய்வம் சான்ற விளங்கு உருவம் வான் தோய் நிரப்பின் வந்து எய்தி - *(*யாவரும் வழிபடும் வழிபாட்டு வடிவத்தில் அவனைக் கண்டு நிற்கின்ற உன் முன்னே, தன்னை நீ நேரே கண்டு, `அவனே` எனத் தெளிதற் பொருட்டு, முதலில்,*)* தெய்வத்திறம் நிரம்பிய பேரொளியுடன் விளங்குகின்ற வடிவம் வானத்தை அளாவும் உயரத்தொடு கூடியதாய்த் தோன்ற உன்முன் எதிர்வந்து நின்று. *(*பின்னர்*).*
அடி. *294-*
தான் - தானே.
அடி. *295-*
அணங்கு சால் உயர் நிலை தழீஇ - *(*அச்சத்தால் உனக்குத்*)* துன்பம் நிறைந்ததாகின்ற அந்தப் பெருநிலையைத் தன்னுள் அடக்கி.
அடி. *295, 296-*
பண்டைத் தன் தெய்வத்து மணம் கமழ் இளநலம் காட்டி - தான் அவதரித்த அன்று உளதாகிய, இயல்பாகவே தெய்வ மணம் கமழ்கின்ற, இளமையோடு கூடிய, அழகிய அந்த வடிவத்தையே *(*நீகண்டு நிற்க*)* நெடு நேரம் காட்டி. *(*`முருகு` என்னும் சொல் தரும் மணம், இளமை, அழகு - என்னும் இம்மூன்று பொருளையும் இங்கு எடுத்துக் கூறி, முருகன் அப்பெயர் பெற்ற காரணத்தை விளக்கினார்.*)*
*(*மக்கள் யாக்கை இயல்பாகவே முடை நாற்றம் உடைத்தாதல் போலத் தேவ யாக்கை இயல்பாகவே மணம் உடையது. அது பற்றியே சிவபிரான் நக்கீரர் தொடுத்த வழக்கில் `தேவ மாதர் கூந்தலுக்கும் இயற்கையில் மணம் இல்லையோ` என வினாவினார். நக்கீரர் தாம் பிடித்தது பிடியாக, `இல்லை; தேவமாதர் கூந்தலுக்கும் இயற்கை மணம் இல்லை` எனச் சாதித்தார். அப்பால் சிவபெருமான் நீ நாள் தோறும் வழிபடும் , அருளே திருமேனியாகிய ஞானப் பூங்கோதைதன் கூந்தலுக்கும் இயற்கை மணம் இல்லையோ` என்றார். `இல்லை., அவ்வம்பிகைதன் கூந்தலுக்கும் செயற்கை மணம் அன்றி, இயற்கை மணம் இல்லை` எனப் பிடிவாதம் பேசினார். `அருளே திருமேனியான அம்பிகை கூந்தலுக்கு, அசுத்தத்திலும் அசுத்தமாய பிரகிருதியில் தோன்றும் மலர்களே நறுமணத்தைத் தரும்` என்றது எத்துணைப் பிடிவாதமான பேச்சு*!* அவ்வாறு பிடிவாதம் பேசிய நக்கீரர் பிற்காலத்தவர். இத்திருமுருகாற்றுப்படை செய்த நக்கீரர் முற்காலத்தவர். இவர், `முருகன் திருமேனி இயற்கையாகவே தெய்வ மணங் கமழ்வது` என உண்மையைக் கூறினார். இவ்வாறு அன்றி, `பிடிவாதம் பேசிய நக்கீரரே பின்பு திருந்திக் கயிலை யாத்திரை செய்யும் வழியில் திருமுருகாற்றுப் படையை இயற்றினார்` என்றலும் உண்டு.*)*

அடி. *297, 298-*
அறிவல் நின் வரவு; அஞ்சல் ஓம்பு என அன்புடை நன்மொழி அளைஇ - *(நின்னை நோக்கி, புலவனே!)* `நின் வரவு இன்னது பற்றியது` என்பதனை யான் முன்பே அறிவேன்; அது நினக்குக் கிடைக்குங்கொல், கிடையாதுகொல் என அஞ்சுதலை இனி நீ ஒழிவாயாக` என இவ்வாறான அன்புடைய நல்ல மொழிகளை, உனக்கு வீடுபேற்றை வழங்கும் மொழியோடு கலந்து கூறிப் பின், `கூறி` என்பது சொல்லெச்சம்.
அடி. *299, 300,298-*
இருள் நிற முந்நீர் வளைஇய உலகத்து நீ ஒருவன் ஆகி விளிவின்று தோன்ற - இருளின் நிறம் போலும் நிறத்தை யுடைய கடல் நீரால் சூழப்பட்ட நிலவுலகத்தில், வீடு பெற்றமையால் நின்னோடு, ஒப்பார் பிறர் இன்றி நீ ஒருவனுமேயாய் இறப்பின்றித் தோன்றும்படி. *(*`நீ ஒருவன்` என்பது பின் முன்னாக மாறி நின்றது. இறப்பாவது, சூக்கும தேகம் நிற்கத் தூல தேகம் மாத்திரையே நீங்குவது. வீடெய்துவார்க்குச் சூக்கும தேகமும் தூல தேகத்தோடு ஒரு சேர நீங்குமாகலின் முன்னர்க் கூறிய இறப்பு எய்தாமையை `விளி வின்று` என்றும், அவர் அத்தன்மையராதல் தேகம் உள்ள பொழுதே நிகழும் சில நிகழ்ச்சிகளால் வெளிப்படுதல் பற்றி, `நீ ஒருவனுமேயாகித் தோன்ற` என்றும் கூறினார்.
அடி. *301-*
பெறலரும் விழுமிய பரிசில் நல்கும் - *(நீ கருதிய,)* பலர் பெறுதற்கரிய சீரிய பரிசிலை, *(அஃதாவது வீடு பேற்றினை)* உனக்கு நல்கியருளுவன். *(*`மதி` என்னும் முன்னிலை யசை. இங்குப் படர்க்கைக் கண் வந்தது.*)*
அடி. *302-*
பல்வேறு பல உடன் துகிலின் நுடங்கி - வகை பலவாய் வேறுபட்டன பல சேர்ந்த துகிற் கொடிகள் அசைவன போல அசைந்து. *(*`உடன்` என்பதன் பின் `ஆய` என்பது வருவிக்க.*)* அகில் சுமந்து - அகிற் கட்டைகளை மேலே கொண்டு.
அடி. *303-*
ஆர முதல் முழுது உருட்டி - சந்தன மரமாகிய முதலினை முழுதாக உருட்டிக் கொண்டு.
அடி. *303, 304-*
வேரல் பூ உடை அலங்கு சினை புலம்ப வேர் கீண்டு - குறு மூங்கில்களின் பூவையுடைய முனைகள் வளர்க்கும் முதல் இன்றித் தனித்து வாடும்படி, *(புதருட் சென்று)* அவற்றின் வேர்களைப் பெயர்த்துவிட்டு.
அடி. *305, 306-*

விண்பொரு நெடு வரைப் பரிதியின் தொடுத்த தண் கமழ் அலர் இறால் சிதைய - வானத்தைக் குத்தும் நெடுமூங்கில் களில் ஞாயிற்று வட்டத்தைப் போல ஈக்களால் தொடுத்துக் கட்டப்பட்ட குளிர்ந்த, மணக்கின்ற விரிந்த தேன் கூடுகள் சிதையவும்.
அடி. *306, 307-*
நல் பல ஆசினி முது சுளை கலாவ - நல்ல, பல ஈரப் பலாக்களின் முதிர்ந்த பழம் *(*வெடித்து உதிர்தலால் அவற்றின்*)* சுளைகள் வீழ்ந்து உடன் கலக்கவும்.
அடி. *307, 308-*
மீமிசை நாக நறு மலர் உதிர - உச்சியில் உள்ள சுரபுன்னை மரங்கள் அதிர்தலால் அவற்றின் நறிய மலர்கள் உதிரவும்.
அடி. *308,309-*
ஊகமொடு மா முக முசுக் கலை பனிப்ப- *(*அங்கு உலாவுகின்ற*)* கருங்குரங்கின் ஆண்கேளாடு, கரிய முகத்தையுடைய முசுக் குரங்கின் ஆண்களும் நடுங்கவும்.
அடி. *309, 310-*
பூ நுதல் இரும்பிடி குளிர்ப்ப வீசி - அழகிய நெற்றியையுடைய பிடி யானை மெய் குளிரும்படி நீரை இறைத்து.
அடி. *310, 311-*
பெருங் களிற்று வான் கோடு தழிஇ - பெரிய ஆண் யானைகளின் வெள்ளிய கொம்புகளை உள் அடக்கி. முத்து, உடை- முத்தினை உடைய *(*கோடு*)*
அடி. *312, 311-*
நல் பொன் மணி நிறம் கிளர தத்துற்று - நல்ல பொன்னும், மணியும் தம் நிறம் கிளர்ந்து தோன்றக் குதித்துக்கொண்டு பொன் கொழியா - பொற்பொடிகளை அரித்தெடுத்து.
அடி. *313, 314-*
வாழை முழு முதல் துமிய தாழை இளநீர் விழுக் குலை உதிர தாக்கி - மலை வாழையாகிய முழுமையான முதல் ஒடியவும், தென்னையது இளநீர்கள் சிறந்த குலைகளினின்று உதிரவும் அவ்விரண்டனையும் மோதி.
அடி. *315-*
கறிக் கொடிக் கருந்துணர் சாய - மிளகு கொடியில் உள்ள கரிய கொத்துக்கள் மடியவும்.
அடி. *315, 316, 317-*
பொறிப் புற மட நடை மஞ்ஞை பல உடன் வெரீஇ கோழி வயப் பெடை இரிய - புள்ளிகளையுடைய தோகையையும், இளமை தோன்றும்

நடையையும் உடைய மயில்கள் பலவும் ஒருங்கு சேர்ந்து அஞ்சிக் கானங் கோழியின் ஓடுதல் வல்ல பெடைகளோடு இடம் தேடி நீங்கவும். *(`பெடையோடு`)* என உருபு விரிக்க.

அடி. *317, 320-*

கேழலோடு வெளிற்றின் இரு, பனை புன் சாய் அன்ன கூரூஉ மயிர் யாக்கை குடா அடி உளியம் பெருங் கல் விடர் அளைச் செறிய - காட்டுப் பன்றியின் ஆண்களோடு, உள்ளே வெளிற்றை யுடைய கரிய பனைமரத்தினது புல்லிய துறும்புகளை ஒத்த, நிறம் வாய்ந்த மயிரினை உடைய உடம்பையும், வளைந்த பாதங்களையும் உடைய கரடிகளும் பெரிய கல் பிளந்துள்ள முழையில் போய் ஒளியவும்.

அடி. *320 321-*

கரு கோட்டு ஆமா நல் ஏறு சிலைப்ப - கரிய கொம்புகளையுடைய, ஆமா இனத்து நல்ல எருதுகள் சினந்து முழங்கவும் *(321, 322 -* சேண் நின்று இழிதரும் அருவி*)*

`சோய் சேவடி படரும் செம்மல் உள்ளமொடு செல்லும் செலவ, நயந்தனையாயின், அவன் கூடற் குடவயின் குன்று அமர்ந்து உறைதலும் உரியன்; அதாஅன்று, விழுச் சீரலைவாய்ச் சேறலும் உரியன்; அதாஅன்று, ஆவினன் குடி அசைதலும் உரியன்; அதாஅன்று, ஏரகத்து உறைதலும் உரியன்; அதாஅன்று, குன்றுதோறாடலும் நின்ற தன் பண்பு; அதாஅன்று; ஊர் ஊர் கொண்ட சீர் கெழு விழவு முதலிய இடங்களில் உறைதலும் உரியன், குறமகள் முருகாற்றுப்படுத்த நகரில் வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட உறைதலும் உரியன் இவற்றோடு அவன் ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்த ஆறே; ஆண்டு ஆண்டு ஆயினும் ஆக; பிற இடங்களிலாயினும் ஆக; நீ சென்று கண்டுழி, முந்து முகன் அமர்ந்து ஏத்தி, பின் கை தொழூஉப் பரவி, கால் உற வணங்கி, யான் அறிந்து கூறிய அளவான பல பெயர்களால் சேயனாக விளித்தும், அணியனாக விளித்தும் மலர் தூவி ஏத்தி, முடிவில் நின் அளந்து அறிதல் மன் உயிர்க்கு அருமையின் நின் அடி யுள்ளி வந்தனென் - என்று சொல்லி, நீ கருதிச் சென்றதை விண்ணப்பி. அவ்வாறு நீ விண்ணப்பிக்கும் முன்பே கூளியர் களத்துத்தோன்றி, - பெரும ,முது வாய் இரவலன் நின் புகழ் நயந்து ஏத்தி வந்துள்ளான்; தான் அளியனே என்று கூறப் பழமுதிர் சோலை மலை கிழவோன் முதற்கண் வான் தோய் நிவப்பின் வந்து எய்தி, பின் அணங்கு சால் உயர் நிலை தழீஇப் பண்டைத் தன் இநலங்காட்டி அன்புடை நன்மொழி அளைஇ, முந்நீர் வளைஇய உலகத்து விளிவின்று நீ ஒருவனே யாகித் தோன்றும்படி பெறவலரும் பரிசில் நல்கும்` என இங்ஙனம் முருகன்பால் சென்று வணங்கித் திருவருள் பெற்றான் ஒரு புலவன் அது பெற

விரும்பிச் செல்லும் மற்றொரு புலவனை எதிர்ப்பட்டு அவனை முருகனிடத்தில் ஆற்றுப்படுத்தியவாறாக இயைத்து முடிக்க.
இத்தனி வெண்பாக்கள் பிற்காலத்தவரால் செய்து சேர்க்கப் பட்டவை.
அடி. *321, 322-*
சேண் நின்று இழும் என இழிதரும் அருவி - உச்சியினின்றும் `இழும்` என்னும் ஓசை தோன்ற வீழ்கின்ற அருவிகளையுடைய *(*சோலை மலை.*)*
அடி. *323-*
பழமுதிர் சோலை மலை கிழவோன் - *(*மேற்கூறிய இடங்களோடு*)* பழம் முற்றின சோலைகளை மிக உடைமையால், `பழமுதிர் சோலை மலை` என்றே பெயர் பெற்ற மலையையும் தனக்கு உரிமையாக உடைய அம்முருகன் *(*கூளியர் கூறியவற்றைக் கேட்டு.*)*
இவற்றின் பொருள் வெளிப்படை.
திருமுருகாற்றுப்படை முற்றிற்று.

குன்றம் எறிந்தாய் குரை கடலில் சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய் என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய்என் உள்ளத் துறை. **1**

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல். **2**

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை. **3**

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்குக்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா - முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். **4**

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே. **5**

அஞ்சு முகம்தோன்றில் ஆறு முகம்தோன்றும்
வெஞ்ச மரில்அஞ்சல்என வேல்தோன்றும் நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன். **6**

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். **7**

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி. **8**

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்தன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல். **9**

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினால் முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும். **10**

#739

நக்கீரதேவ நாயனார் - திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

திருக்கண் ணப்பன் செய்தவத் திறத்து
விருப்புடைத் தம்ம விரிகடல் உலகே பிறந்தது
தேன்அழித் தூனுண் கானவர் குலத்தே திரிவது
பொருபுலி குமுறும் பொருப்பிடைக் காடே வளர்ப்பது
செங்கண் நாயொடு தீவகம் பலவே பயில்வது
வெந்திறற் சிலையொடு வேல்வாள் முதலிய
அந்தமில் படைக்கலம் அவையே உறைவது
குறைதசை பயின்று குடம்பல நிரைத்துக்
கறைமலி படைக்கலங் கலந்த புல்லொடு
பீலி மேய்ந்தவை பிரிந்த வெள்ளிடை

வாலிய புலித்தோல் மறைப்ப வெள்வார்
இரவும் பகலும் இகழா முயற்றியொடும்
அடைத்த தேனும் வல்நாய் விட்டும்
சிலைவிடு கணையிலும் திண்சுரி கையிலும்
பலகிளை யவையொடும் பதைப்பப் படுத்துத்
தொல்லுயிர் கொல்லுந் தொழிலே வடிவே
மறப்புலி கடித்த வன்திரள் முன்கை
திறற்படை கிழித்த திண்வரை அகலம்
எயிற்றெண்கு கவர்ந்த இருந்தண் நெற்றி
அயிற்கோட் டேனம் எடுத்தெழு குறங்கு

செடித்தெழு குஞ்சி செந்நிறத் துறுகண்
கடுத்தெழும் வெவ்வுரை அவ்வாய்க் கருநிறத்
தடுபடை பிரியாக் கொடுவிற லதுவே மனமே
மிகக்கொலை புரியும் வேட்டையில் உயிர்கள்
அகப்படு துயருக் ககனமர்ந் ததுவே இதுவக்
கானத் தலைவன் தன்மை கண்ணுதல்
வானத் தலைவன் மலைமகள் பங்கன்
எண்ணரும் பெருமை இமையவர் இறைஞ்சும்
புண்ணிய பாதப் பொற்பார் மலரிணை
தாய்க்கண் கன்றெனச் சென்றுகண் டல்லது

வாய்க்கிடும் உண்டி வழக்கறி யானே அதாஅன்று

கட்டழல் விரித்த கனற்கதிர் உச்சியிற்
சுட்டடி இடுந்தொறுஞ் சுறுக்கொளும் சுரத்து
முதுமரம் நிரந்த முட்பயில் வளாகத்து
எதிரினங் கடவிய வேட்டையில் விரும்பி
எழுப்பிய விருகத் தினங்களை மறுக்குறத்
தன்நாய் கடித்திரித் திடவடிக் கணைதொடுத்து
எய்து துணித்திடும் துணித்த விடக்கினை
விறகினிற் கடைந்த வெங்கனல் காய்ச்சி
நறுவிய இறைச்சி நல்லது சுவைகண்டு

அண்ணற் கமிர்தென்று அதுவேறு அமைத்துத்
தண்ணறுஞ் சுனைநீர் தன்வாய்க் குடத்தால்
மஞ்சன மாக முகந்து மலரெனக்
குஞ்சியில் துவர்க்குலை செருகிக் குனிசிலை
கடுங்கணை அதனொடும் ஏந்திக் கனல்விழிக்
கடுங்குரல் நாய்பின் தொடர யாவரும்
வெருக்கோ ளூற்ற வெங்கடும் பகலில்
திருக்கா ளத்தி எய்தி சிவற்கு
வழிபடக் கடவ மறையோன் முன்னம்
துகிலிடைச் சுற்றியில் தூநீர் ஆட்டி

நல்லன விரைமலர் நறும்புகை விளக்கவி
சொல்லின பரிசிற் சுருங்கலன் பூவும்
பட்ட மாலையும் தூக்கமும் அலங்கரித்
தருச்சனை செய்தாங் கவனடி இறைஞ்சித்
திருந்த முத்திரை சிறப்பொடும் காட்டி
மந்திரம் எண்ணி வலம்இடம் வந்து
விடைகொண் டேகின பின்தொழில்
பூசனை தன்னைப் புக்கொரு காலில்
தொடுசெருப் படியால் நீக்கி வாயில்
இடுபுனல் மேனியில் ஆட்டித் தன்தலைத்

தங்கிய துவர்ப்பூ ஏற்றி இறைச்சியில்
பெரிதும் போனகம் படைத்துப் பிரானைக்
கண்டுகண் டுள்ளங் கசிந்து காதலில்
கொண்டதோர் கூத்துமுன் ஆடிக் குரைகழல்
அன்பொடும் இறுக இறைஞ்சி ஆரா

அன்பொடு கானகம் அடையும் அடைந்த
அற்றை அயலினிற் கழித்தாங் கிரவியும்
உதித்த போழ்தத் துள்நீர் மூழ்கி
ஆத ரிக்கும் அந்தணன் வந்து
சீரார் சிவற்குத் தான்முன் செய்வதோர்

பொற்புடைப் பூசனை காணான் முடிமிசை
ஏற்றிய துவர்கண் டொழியான் மறித்தும்
இவ்வா றருச்சனை செய்பவர் யாவர்கொல் என்று
கரந்திருந்து அவன்அக் கானவன் வரவினைப்
பரந்த காட்டிடைப் பார்த்து நடுக்குற்று
வந்தவன் செய்து போயின வண்ணம்
சிந்தையிற் பொறாது சேர்விடம் புக்கு
மற்றை நாளுமவ் வழிப்பட் டிறைவ
உற்றது கேட்டருள் உன்தனக் கழகா
நாடொறும் நான்செய் பூசனை தன்னை

ஈங்கொரு வேடுவன்
நாயொடும் புகுந்து மிதித் துழக்கித்
தொடுசெருப் படியால் நீக்கி வாயில்
இடுபுனல் மேனியில் ஆட்டித் தன்தலை
தங்கிய சருகிலை உதிர்த்தோர் இறைச்சியை
நின்திருக் கோயிலில் இட்டுப் போமது
என்றும் உன்தனக் கினிதே எனையுருக்
காணில் கொன்றிடும் யாவ ராலும்
விலக்குறுங் குணத்தன் அல்லன் என்உன்
திருக்குறிப் பென்றவன் சென்ற அல்லிடைக்

கனவில் ஆதரிக்கும் அந்தணன் தனக்குச்
சீரார் திருக்கா ளத்தியுள் அப்பன்
பிறையணி இலங்கு பின்னுபுன் சடைமுடிக்
கறையணி மிடற்றுக் கனல்மழுத் தடக்கை
நெற்றி நாட்டத்து நிறைநீற் றாக
ஒற்றை மால்விடை உமையொரு மருங்கில்
திருவுருக் காட்டி அருளிப்
புரிவொடு பூசனை செய்யும்
குனிசிலை வேடன் குணமவை ஆவன

உரிமையிற் சிறந்தநன் மாதவன் என்றுணர்

அவனுகந் தியங்கிய இடம்முனி வனமதுவே அவன்
செருப்படி யாவன விருப்புறு துவலே
எழிலவன் வாயது தூயபொற் குடமே
அதனில் தங்குநீர் கங்கையின் புனலே
புனற்கிடு மாமணி அவன் நிறைப் பல்லே
அதற்கிடு தூமலர் அவனது நாவே
உப்புனல் விடும்பொழு துரிஞ்சிய மீசைப்
புன்மயிர் குசையினும் நம்முடிக் கினிதே அவன்தலை
தங்கிய சருகிலை தருப்பையிற் பொதிந்த
அங்குலி கற்பகத் தலரே அவனுகந்

திட்ட இறைச்சி எனக்குநன் மாதவர்
இட்ட நெய்பால் அவியே
இதுவெனக் குனக்கவன்
கலந்ததோர் அன்பு காட்டுவன் நாளை
நலந்திகழ் அருச்சனை செய்தாங் கிருவென்று
இறைவன் எழுந் தருளினன்
அருளலும் மறையவன் அறிவுற் றெழுந்து
மனமிகக் கூசி வைகறைக் குளித்துத்
தான்முன் செய்வதோர்
பொற்புடைப் பூசனை புகழ்தரச் செய்து

தோன்றா வண்ணம் இருந்தன னாக இரவியும்
வான்தனி முகட்டில் வந்தழல் சிந்தக்
கடும்பகல் வேட்டையிற் காதலித் தடிந்த
உடம்பொடு சிலைகணை உடைத்தோல் செருப்புத்
தொடர்ந்த நாயொடு தோன்றினன் தோன்றலும்
செல்வன் திருக்கா ளத்தியுள் அப்பன்
திருமேனியின் மூன்று கண்ணாய்
ஆங்கொரு கண்ணில் உதிரம்
ஒழியா தொழுக இருந்தன னாகப்
பார்த்து நடுக்குற்றுப் பதைத்து மனஞ்சுழன்று

வாய்ப்புனல் சிந்தக் கண்ணீர் அருவக்
கையில் ஊனொடு கணைசிலை சிந்த

நிலம்படப் புரண்டு நெடிதினில் தேறிச்
சிலைக்கொடும் படைகடி தெடுத்திது படுத்தவர்
அடுத்தவிவ் வனத்துளர் எனத்திரிந் தாஅங்கு
இன்மை கண்டு நன்மையில்
தக்கன மருந்துகள் பிழியவும் பிழிதொறும்
நெக்கிழி குருதியைக் கண்டுநிலை தளர்ந்தென்
அத்தனுக் கடுத்ததென் அத்தனுக் கடுத்ததென் என்
றன்பொடுங் கனற்றி

இத்தனை தரிக்கிலன் இதுதனைக் கண்டஎன்
கண்தனை இடந்து கடவுள்தன் கண்ணுறு
புண்ணில் அப்பியும் காண்பன் என்றொரு கண்ணிடைக்
கணையது மடுத்துக் கையில் வாங்கி
அணைதர அப்பினன் அப்பலுங் குருதி
நிற்பதொத் துருப்பெறக் கண்டுநெஞ் சுகந்து
மற்றைக் கண்ணிலும் வடிக்கணை மடுத்தனன் மடுத்தலும்
நில்லுகண் ணப்ப நில்லுகண் ணப்பஎன்
அன்புடைத் தோன்றல் நில்லுகண் ணப்பஎன்
றின்னுரை அதனொடும் எழிற்சிவ லிங்கம்

தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையால்
அன்னவன் தன்கை அம்பொடும் அகப்படப்பிடித்
தருளினன் அருளலும்
விண்மிசை வானவர்
மலர்மழை பொழிந்தனர் வளையொலி படகம்
துந்துபி கறங்கின தொல்சீர் முனிவரும்
ஏத்தினர் இன்னிசை வல்லே
சிவகதி பெற்றனன் திருக்கண் ணப்பனே.

தனி வெண்பா

தத்தையாம் தாய்தந்தை நாகனாம் தன்பிறப்புப்
பொத்தப்பி நாட்டுடுப்பூர் வேடுவனாம் - தித்திக்கும்
திண்ணப்ப னாஞ்சிறுபேர் செய்தவத்தாற் காளத்திக்
கண்ணப்ப னாய்நின்றான் காண்.

#740

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மறம் - வீரம்.
இது மறக்குடியில் பிறந்தவர்கட்கு இயல்பாக உளதாகும்.
ஆயினும் அந்த மறம் பெரும் பான்மையும் பொருளாகிய அரசுரிமை பற்றியும், சிறுபான்மை அறம் பற்றியும் பலரிடம் நிகழ்ந்தமை, நிகழ்கின்றமை கண்கூடு.
ஆயினும் மறக் குடியில் பிறந்த கண்ணப்ப தேவர் மேற்காட்டிய அனைத்தினும் மேலான பத்தித்துறையில் இணையில்லாத மறம் உடையராய் இருந் தமையைச் சிறப்பித்தலால் இப்பாடல் `திருக்கண்ணப்ப தேவர் திருமறம்`- எனப்பட்டது.
அடுத்து வரும் கல்லாட தேவ நாயனார் அருளிச்செய்த திருமறத்திற்கும் இது பொருந்தும்.
அடி - *1, 2:* `திறத்து உலகே விருப்புடைத்து` என இயைக்க உலகு - உயிர்த் தொகை.
`சில பகுதிகள் மட்டும் அல்ல, முழுதும் என்பது விளக்கலின் ஏகாரம், தேற்றப் பொருட்டாய் தவத் திறத்தது பெருமையை விளக்கி நின்றது.
அம்ம, வியப்பிடைச் சொல்.
அடி - *2, 3, 4:* ``பிறந்தது`` என்பது அத்தொழில் மேலும், ``திரிவது`` என்பது அதற்குரிய இடத்தின்மேலும் நின்றன.
பொருப்பு- மலை.
`பொருப்புக்களை இடையிலே உடைய காடு` என்க.
அடி - *4, 5, 6, 7:* ``வளர்ப்பது, பயில்வது`` என்னும் ஒருமைகள் அவ்வத்தொழில்மேல் நின்றன.
எனவே, நாய் முதலாகக் கூறியன செயப்படுபொருள் வினை முதல்போலக் கூறப்பட்டனவாம்.
தீவகம்- பார்வை மிருகம்.
சிலை - வில்.
அடி - *7, 10:* `உறைவது வெள்ளிடை` என்க.
வெள்ளிடை - வெளியான இடம்: பொத்தற் குடிசை.
``உறைவது`` என்பது, அதற் குரிய இடத்தின்மேல் நின்றது.
அடி - *8:* பயிலல் - பலவிடத்து இருத்தல்.
குடம் - கட்குடம்.
பல நிறைத்து, கலந்த வெள்ளிடை` என்க.
அடி - *10:* பீலி - மயில் இறகு.
மேய்ந்து - வேயப்பட்டு `பின்பு அவை பிரிந்துபோன வெள்ளிடை` என்க.
அடி - *11:* ``மறைப்ப`` என்றது, `அற்றம் மறைப்ப` என்றபடி.

எனவே, `புலித்தோலே உடை` என்றதாம்.
வாலிய - தூய.
(அதன்மேல் மாசுபடியாது` என்பதாம்.
``வார்`` என்பது ஆகுபெயராய், வலையைக் குறித்தது.
அடி - *11, 12:* `வாரினை இகழாது, இரவும், பகலும் முயலும் முயற்றி` என்க.
முயற்றி - முயற்சி.
அடி - *13:* அடைத்த - மூங்கிற் குழாய் முதலியவற்றில் நிறைத்த.
``அடைத் தேனும்`` என்றார் பின்னும், `தேன் அடைத்தலும்` என்பதே கருத்தென்க.
அடி - *14:* சுரிகை - உடைவாள்.
அடி - *15:* கிளை, விலங்குகளின் சுற்றம்.
`கிளையாகிய அவை` என்க.
`அவற்றொடும்` என்பதில் சாரியை தொகுக்கப்பட்டது.
படுத்து - வீழ்த்து.
அடி - *16:* தொன்மறைக் காட்டில் வாழும் வாழ்வு பற்றிக் கூறப் பட்டது.
`தேன் அடைத்தலும், கொல்லலும் தொழிலே` என்க.
`கொல்லுக தொழிலே` என்பது பாடம் அன்று.
``வடிவே`` என்னும் பிரிநிலை ஏகாரம், எழுவாய்ப் பொருள் தோற்றி நின்றது.
அடி *17, 21:* முன்கை முதலிய சினைகளையே `வடிவு` என்னும் முதலாக உபசரித்துக் கூறினார்.
அவையும் அவ்வாறு கூறற்கு இயைபுடைமை பற்றி.
மறம் - வீரம்.
`கடித்த முன்கை.
திரள் முன்கை` என்க.
படை - படைக்கலம்.
அவை வெட்சிக் காலத்தில் கரந்தையார் விடுத்தனவும்.
கரந்தைக் காலத்தில் வெட்சியார் விடுத்தனவுமாம்.
இவற்றைக் கண்ணப்பர் அறியார் ஆயினும் இனம் குறித்தற்கு இவற்றைக் கூறினார்.
திண் வரை அகலம் - தெளிவாக ஆழ்ந்து விளங்கும் கீற்றுக்களையுடைய மார்பு.
எயிற்று - எயிற்றால்.
எண்கு - கரடி.
கவர்ந்த - கடிந்த.
இரு - பெரிய.

தண்மை வியர்வையால் வந்தது.
அன்ன - அந்தக் கரடிகளே, அயில் கோட்டு - கூர்மையான பற்களால்.
எடுத்து எழு குறங்கு - குத்தி யெடுத்த துடை.
செடித்து எழு குஞ்சி - செடிகளின் தன்மையை உடையனவாய்,
(அடர்ந்து, குறுகி) வளர்ந்த தலைமயிர்.
`செந் நிறத்தை உறு கண்` என்க.
ஐயுருபு சாரியை நிற்கத் தான் தொகுத்தலை இலேசினால் கொள்க.
* அடி - *22:* கடுத்து - சினந்து.
`கரு நிற அவ்வாய்` - என்னும் இரண்டாவதன் தொகை பின் முன்னாக மாறி நின்றது.
`உரையை யுடைய அந்த வாய்` என்க.
அடி - *23:* அடு படை - கொல்லும் படைஞர்.
பிரியா விறல் - பிரிந்து போகாமைக்கு ஏதுவான விறற் சொல்.
விறல் - வெற்றி.
அஃது ஆகுபெயராய் அதனையுடைய சொல்லைக் குறித்தது.
விறலது - விறலையுடையது.
`அவ்வாய் விறலது` என்க.
இங்ஙனமாயினும் விறலதுவாகிய வாய்` என்றதே.
இதுகாறும் வடிவே கூறப்பட்டது.
கருத்து, இவற்றால் எஞ்ஞான்றும் வேட்டையே தொழிலாய் ஈடுபடுதல் குறிக்கப்பட்டது.
இதன்பின் `ஆகியன` என்பது வருவிக்க.
அடி - *23, 24, 25:* அகப்படுதுயர் - அகப்படுதலால் உண்டாகும் துன்பம்.
அகன் அமர்தல் - உள்ளூற விரும்புதல்.
அமர்ந்தது - வினை யாலணையும் பெயர்.
இது வடிவியல்பு கூறிய பின் வேட்டை யொழிந்தபொழுதும் மனத்தியல்பு அது வேயாதல் கூறியது.
அடி - *25, 26:* ``இது அக் கானகத் தலைவன் தன்மை`` என்றது, `கண்ணப்ப தேவரது பிறப்பும், அவருக்கு வாய்த்த சூழ் நிலைகளும் திருவருளோடு சிறிதும் இயைபில்லனவாயினமை மேலும், அதற்கு மாறானவையாயும் இருந்தன` என்பதனை முடித்துக் கூறியவாறு.
கானம் - காடு.
காட்டில் வாழும் வேடுவர்களைக் `காடு` என உபச ரித்துக் கூறினார்.
``அக்கானத் தலைவன்`` எனச் சுட்டிக் கூறிய அவ் அனுவாதத்தானே, முதற்கண், `கானத் தலைவன் ஒருவன் இருந்தான்; அவன் பிறந்தது` என எடுத்தக் கொண்டு உரைத்தல் கருத்தாதல் பெறப் பட்டது.
அடி - *26, 27:* ``கண்ணுதல்`` முதலிய மூன்றும் ஒரு பொருள் மேல் வந்த

பல பெயர்களாய்ச் `சிவன்` என்னும் அளவாய் நின்றன.
`பங்கன் பாதம்` *(29)* என இயையும்.
இங்கும், ``கண்ணுதல்`` என்பதற்கு முன்னே, `அவன்` என்னும் எழுவாய் வருவித்துக்கொள்க.
அடி - *28, 29:* `பெருமைப் பாதம், இறைஞ்சும் பாதம் புண்ணியப் பாதம்` என்றபடி.
பொற்பு ஆர் - அழகு நிறைந்த.
`மலரிணையைக் *(30)* கண்டல்லது` என இயையும்.
அடி - *30, 31:* தாய்க்கண் கன்று - தாய்ப் பசுவினிடம் செல்லும் கன்று.
இஃது ஆரா அன்பினால் விரைந்தோடிச் செல்லுதலாகிய பண்பும், தொழிலும் பற்றி வந்த உவமை.
கண்டல்லது உண்டி வழக்கறி யான்`` என்றதனால், `கண்டு வழிபட்ட பின்பே உண்ணும் நியமம் உடையரானார்` என்பது பெறப்பட்டது.
ஆயினும் சேக்கிழார், `கண்ணப்பர் காளத்தி நாதரைக் கண்டபின் ஊண் உறக்கம் இன்றியே யிருந்தார்` என்பது படக் கூறினார்.
அடி - *32-41:* இப்பகுதி கண்ணப்பர் வேட்டையாடி ஊன் அமுது அமைத்தலைக் கூறியது.
கட்டு அழல் - வலுவான தீ.
கனற் கதிர் - ஞாயிறு.
சுட்டு - சுடுதலால்.
`உச்சியில் நின்று சுடுதலால்` என்க.
சுறுக்கொள்ளுதல் - சுறுக்கெனக் கால்கள் வெம்மை கொள்ளுதல்.
சுரம் - பாலை நிலம்.
நிரந்தரம் - எப்பொழுதும்.
பயில் - நிறைந்த.
வளாகம் - ஓர் இடம்.
எதிர் இனம் கடவிய - எதிர்ப்படுகின்ற விலங்கினத்தை நாள்தோறும் வெருட்டிப் பழகிய.
எழுப்பிய - நாயைக் குரைப்பித்தும், தாம் அதட்டியும் அவை உள்ள இடத்தினின்றும் வெளிப்பட்டு ஓடும்படி எழுப்பிய.
விருகம் - மிருகம்.
மறுக்கு உற - வருத்தம் எய்தும்படி.
`மறுகு` என்னும் முதனிலை `மறுக்கு` எனத் திரிந்து பெயராயிற்று.
இஃது அம்முப் பெற்று, மறுக்கம்` என வரும்.
இரித்திட - துரத்திட.
வடிக் கணை - கூராக வடித்தலைப் பெற்ற அம்பு.
துணித்திடும் - துண்டாக்க வெட்டுவான்.

நறுவிய - நன்றாகத் திருத்திய.
`சுவை கண்டு, நல்லது தெரிந்து அது வேறு அமைத்து` என ஒருசொல் வருவித்து இயைக்க.
நல்லது, சாதியொருமை.
`நல்லது வேறு அமைத்து` என்றதனால், `நல்லது அல்லாததைத் தனக்கு வைத்தான்` என்பது பெறப்பட்டது.
அடி - *42, 43, 44:* இப்பகுதி கண்ணப்பர் வழிபாட்டிற்கு ஆவன வற்றை அமைத்துகொண்டவாற்றைக் கூறியது.
``வாய்க் குடம்`` என்றது, `வாய்தானே பயனால் குடமாயிற்று` என்றபடி.
இஃது உருவகம் அன்று.
குஞ்சி - தலைமயிர்.
துவர்க் குலை - சிவந்த தளிர்க் கொத்து.
``மலர் என`` என்றதனால், இலையே கொண்டு சென்றமை பெறப்படும்.
`சிலை *(45)* ஏந்தி`` என்க.
அடி - *45, 46:* விழியையும், குரலையும் உடைய நாய்` என்க.
கரு - பெரிய.
அடி - *46, 47, 48:* `தொடரக் கடும் பகலில் திருக்காளத்தி எய்தி என்க.
``காளத்தி`` என்றது அங்குள்ள மலையையும்.
``அச் சிவன்`` என்றது, அம்மலையில் உள்ள சிவலிங்கத்தையு மாம்.
`எய்திய சிவன்` என்பது பாடம் அன்று.
அடி - *48-57:* இப்பகுதி அருச்சகர் பூசை செய்த முறைகளைக் கூறியது.
`மறையோன் சிவற்கு ஆட்டி, அருங்கலன், அலங்கரித்து, செய்து, இறைஞ்சி, காட்டி, வந்து, விடை கொண்டு ஏகினபின்` என்க.
வழிபடக் கடவ மறையோன் - வழிபாட்டினைக் கடமையாகக் கொண்ட அந்தணன்; அருச்சகன்.
இவர் பெயர் `சிவகோசரியார்` என்பதாகப் பெரியபுராணத்தில் அறிகின்றோம்.
அதற்கு மேற்கோள் அடுத்துவரும் திருமறம்.
துகிலை - வத்திரத்தை.
இடை சுற்றியது - நீரை வடித்தெடுத்தற்பொருட்டு.
`சுற்றி` என்பது பாடம் அன்று.
`மலர், புகை, விளக்கு, அவி இவைகள் ஆகமங்களில் சொல்லிய முறையிற் சிறிதும் சுருங்கலனாய்` என்க.
அவி - நிவேதனம்.
பொருள்களது சுருக்கம் அவற்றைப் படைப்பான்மேல் ஏற்றப்பட்டது.
பரிசு - தன்மை.
பூ - விடுபூக்கள்.

பட்ட மாலை - நெற்றியில் விளங்கச் சாத்தும் இண்டை.
தூக்கம் - தொங்கவிடும் மாலை.
`ஆகியவற்றால் அலங்கரித்து` என ஒரு சொல் வருவிக்க.
``முத்திரை காட்டி`` என்றதனால், செய்யப்பட்ட வழிபாடு ஆகம முறை வழிபாடாதல் குறிக்கப்பட்டது.
ஆகவே, ``மந்திரம்`` என்றதும் ஆகம மந்திரங்களேயாயின.
இவற்றால் `அருச்சகர் ஆதிசைவர்` என்பதும், அவரை, `மறையோர்` என்றல் வழக்கு என்பதும் கொள்ளக் கிடந்தன.
`வலமாகவும், இடமாகவும்` என ஆக்கம் விரிக்க.
வலமாக வருதல் போகத்தையும், இடமாக வருதல் மோட்சத்தையும் தருவன ஆதல் பற்றி, இரண்டையும் செய்தார் என்க.
``விடைகொண்டு எகின பின்`` என்றதனால், பெருமானிடம் அருச்சகர் வழிபாடு முடித்து இல்லம் செல்லும் பொழுது விடை பெறுதலும் மரபாயிற்று.
விடையை, `உத்தரவு` என்பர், ``விடை கொண்டு``* எனச் சேக்கிழாரும் கூறினார்.
அடி - *57, 66:* புக்கு - புகுந்து.
இதனை மேல் ``பின்`` *(57)* என்றதன் பின்னர்க் கூட்டுக.
இதனால், மேல், ``எய்தி`` *(48)* என்றது,- அருச்சகர் போயின பின் எய்தி என்றதாம் என விளக்கியவாறு.
தொழிற் பூசனை - நாள்தோறும் நடைபெறக் கடவதாக அமைக்கப்பட்ட வழிபாடு.
`வழிபாடு` என்பது இங்கு அதனால் தோன்றிக் காணப்பட்ட பொருள்களைக் குறித்தது.
தொடு - தொட்ட; அணிந்த.
அடி - அடிப்புறம்.
``துவர்ப் பூ`` என்றதற்கு, மேல் , *(39)* ``துவர்க் குலை`` என்றது பார்க்க.
`இறைச்சியின் போனகம் பெரிதும் படைத்து` என இயைக்க.
``பெரிதும்`` என்றது, `வேண்டுமளவும்` என்றபடி.
``பிரானைக் கண்டு`` `தரிசித்து` என்றபடி.
``கண்டு கண்டு`` என்னும் அடுக்கு.
ஆராமையால் நெடு நேரம் தரிசித்தமையைக் குறித்தது.
கொண்டது - தான் அறிந்தது.
அன்பு மீதூரப் பெற்றவழிக் கூத்துத் தானே நிகழும் ஆதலின், ``தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடி`` * என்றாற்போலக் கூறக் கேட்டிலாராயினும் ஆடினார் என்க.
ஆரா அன்பு - நிரம்பாத (தமது செயல்களை `இவ்வளவு போதும்` என்று

நினையாத) அன்பு.
``இறைஞ்சிக் கானகம் அடையும்`` என்றதனால்.
`இராப் பொழுதில் காட்டில் ஓரிடத்தில் இருப்பார்`` என்றதாயிற்று.
எனவே, `இங்ஙனம் சில நாள்கள் சென்றன` என்பது போதர சேக்கிழார்,
`இரவெல்லாம் இறைவற்குக் காவல் புரிந்தார்` என்றார்.
அதுவும் அடுத்துவரும் திருமறத்தில் குறிப்பால் பெறப்படுகின்றது.
அடி - *69:* ஆதரிக்கும் அந்தணன் - அன்பு செய்யும் அந்தணன்*;* `அவ் அந்தணன்` எனச் சுட்டு வருவித்துரைக்க.
`இனி அவ்வந்தணன் செய்தன ஆவன` என எடுத்துக்கொண்டு உரைத்தல் கருத்து என்க.
அடி - *66-90:* அடைந்த அற்றை - தாம் *(*அருச்சகர்*)* திரும்பித் தம் இடத்தை அடைந்த அந்த நாளை, *(*இரவுப் பொழுதை*)*.
``அயல்`` என்றது*,* அந்தக் காட்டில் அவர் கொண்டிருந்த தவச் சாலையை.
``தணிந்த மனத் திருமுனிவர் தபோவனத்தினிடைச் சார்ந்தார்`` * என்ற சேக்கிழார் திருமொழியைக் காண்க.
உதித்த போழ்தத்துள் - உதயமான அந்த நேரத்திற்கு முன்பே.
பொற்பு - அழகு.
அஃதாவது முறை தவறாது செய்யப்பட்டது.
இங்கும் ``பூசனை`` என்றது அது நிகழ்ந்தமையை உணர்த்தும் அடையாளங்களை.
துவர் - தளிர்களை.
`சாத்தினவன் அன்பினால்தான் செய்திருக்க வேண்டும்` என்னும் கருத்தால் அவற்றை உடனே எடுத்தெறியவில்லை.
மறித்தும் - நாம் பூசைசெய்து போன பின்பும்.
`இவ்வாறு செய்தவன் யாவன்` என அறிவாராய்ச் சிறிது நேரம் ஒளிந்திருந்து பார்த்தவர் கண்ணப்பர் வருகையைக் கண்டு நடுங்கிப் பின் அவர் செய்தவற்றையெல்லாம் பார்த்துவிட்டுத் தம் இடத்திற்குச் சென்று விட்டார்.
செல்லும் முன் பவித்திர பூசையைச் செய்ய வேண்டுவது தம் கடமை` எனக் கொண்டு அவ்வாறு செய்து சென்றார் என்பது பின்பு அவர், ``நாள் தொறும் நான்செய் பூசனை தன்னை`` எனக் கூறினமையால் விளங்கும்.
``போயின வண்ணம்`` என்பதன்பின் `கண்டு` என ஒருசொல் வருவிக்க.
`ஈங்கொரு வேடுவன்` என்பது முதல் ``இட்டுப்போம் அது`` என்பது முடிய உள்ளவை சிவகோசரியார் கண்ணப்பர்
செய்தவைகளையெல்லாம்.

ஊகித்தறிந்து இறைவன்பால் எடுத்துக் கூறி முறையிட்டுக் கொண்டது.
`உனக்கு அழகா இவை?` என்க.
``என்றும்`` என்பதற்கு, `என்றாயினும்` என உரைக்க.
`இவ்வாறான செயல் என்றா யினும் உனக்கு இனிதாகுமோ` என்றபடி.
``இனிதே`` என்னும் ஏகாரம் வினாப் பொருட்டு.
`என் உன் திருக்குறிப்பு` என்க.
`என்னுந் திருக் குறிப்பு` என்பது பாடம் அன்று.
``என்று அவன் சென்ற`` என்ற அநு வாதத்தால், `என்று முறையிட்டுவிட்டு அவன் சென்றான்` என்பது பெறப்பட்டது.
அடி - *90-116:* அல் - இரவு `அந்தணன் தனக்குக் கனவில்` என்க.
``பிறை யணி`` என்பது முதல், ``மருங்கின்`` என்பது முடிய உள்ள பகுதி இறைவன் திருவுரு வருணனை ``முடி மிடற்றுக் கை நாட்டத்து ஆக விடை மருங்கு`` என்பன பலபெயர் உம்மைத் தொகையாய் ஒரு சொல் நீர்மைப்பட்டு, ``திருவுரு`` என்பதனோடு இரண்டாவதன் உருவும் பயனும் உடன் தொக்க தொகையாகத் தொக்கன.
இரண்டாவதன் பெயர்த் தொகையாகலின், சிலவிடத்துச் சாரியை களையும் பெற்றது.
ஆகம் - மார்பு.
அஃது உம்மைத் தொகை நிலைப் புணர்ச்சியில் மகர ஈறு கெட்டு நின்றது.
``உமையொடு`` என்பதில், கூடிய` என ஒருசொல் வருவிக்க.
மருங்கு - பக்கம்.
``காட்டியருளி`` என்பது ஒருசொல்.
புரிவு - விருப்பம்; கருணை `குணம்` என அடை யின்றிக் கூறியவழி அது நற்குணத்தையே குறிக்கும்.
அஃது இங்கு ஆகுபெயராய் அதனால் விளைந்த சிறப்புக்களைக் குறித்தது.
`அவன் வேடன் அல்லன்; மா தவன்` என்க.
முனி வனம் - முனிவனுக்கு உரித்தாயவனம்.
அது, பகுதிப் பொருள் விகுதி.
துவல் - தளிர்.
புனற்கு - புனற்கண்; உருபு மயக்கம்.
மா மணி - உயர்ந்த இரத்தினங்கள்.
அதற்கு - புனற்கு.
``உப்புனல்`` என்பதில் உகரச் சுட்டு மேலிடம் பற்றி வந்தது.
உரிஞ்சுதல் - உராய்தல், `உரிநுதல்` என்றல் பழைய வழக்கு.
புன் மயர் - கீழ்மையையுடைய மயிர்.

குசை - தருப்பை.
வழிபாட்டினை ஏற்பவற்றில் சிறப்புடையன திருவடிகளேயாதலின்.
``நம் அடிக்கு`` என அவற்றையே கூறினார்.
தருப்பையின் பொதிந்த - தருப்பையால் நிரம்பிய.
`செய்யப்பட்டு முடிந்த` என்றபடி.
அங்குலி- மோதிரம்; பவித்திரம், `பவித்திரத்தோடு பொருந்த எடுத்துத் தூவப் பட்ட அலர்; மலர்` என்க.
நல் மாதவர் - சைவ முனிவர்.
அவர் செய்யும் வேள்வியில் அவிசாய் அமைவன நெய், பால், தயிர் அல்லது ஊனாகாமை பற்றி.
``நல் மா தவர் இட்ட அவி ஊன் அவையே`` என்னாது, ``நெய் பால் அவியே`` - என்றார்.
``இது`` என்றது, கூறப் பட்ட அனைத்தையும் தொகுத்து, `இந்நிலைமை` என்றவாறு.
`எனக்கு இந்நிலைமை` என இறைவன் கூறியதனால், `ஏனையோர் பலர்க்கும் அவையெல்லாம் மிக இழிந்தனவாம்` என்றதாயிற்று.
எனவே, `அன்போடு கூடிய வழி எவையும் பூசையாம்` என்பதும், `அன்போடு கூடாதவழி எதுவும் பூசையாகாது` என்பதும் கூறப்பட்டனவாம்.
இவை பற்றியே.

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்;
பொக்கம் மிக்கவர் பூவும்நீ ரும் கண்டு
நக்கு நிற்கும் அவர்தம்மை நாணியே
உள்ளம் உள்கலந் தேத்தவல் லார்க்கலால்
கள்ளம் உள்ளவ ருக்கருள் வான்அலன்;
வெள்ள மும்அர வும்விர வும்சடை
வள்ள லாகிய வான்மியூ ரீசனே
யாவ ராயினும் அன்ப ரன்றி
அறியொ ணாமலர்ச் சோதியான்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனும் காணா அரன்
அன்பேஎன் அன்பேஎன்று அன்பால் அழுதரற்றி
அன்பே அன்பாக அறிவழியும் - அன்பன்றித்
தீர்த்தம், தியானம், சிவார்ச்சனைகள் செய்வனவும்
சாத்தும் பழமன்றே தான்
என்றாற்போலும் தோத்திர சாத்திரங்கள் எழுந்தன.

இவ்வாற்றால் கண்ணப்பர் இட்ட பொருள்கள் பொருளால் இழிந்தனவே யாயினும் அவரது அன்பாகிய தகுதியால் அவை திவ்வியப் பொருள்கள் தரும் இனிமையை இறைவற்குத் தந்தன.
இதனானே அன்பின்றி யிடுவன திவ்வியமேயாயினும் இறைவற்கு அவை மிக இழிந்தனவேயாய் வெறுப்பைத் தருதல் பெறப்படும்.
இம்முறை உலகியலிலும் உள ஆதலை நினைக.
அடி - *117, 121:* இப்பகுதி கனவு கண்ட பின் சிவகோசரியார் செய்தவற்றைக் கூறியது.
கூசியது.
தாம் உண்மையறியாது வெறுத்ததை நினைந்து.
``குளித்து`` என்றது உபலக்கணம் ஆதலின், `பிற கடன்களை முடித்து` என்பதும் கொள்க.
இதன் பின் `சென்று` என ஒருசொல் வருவிக்க.
அடி - *121, 125:* இப்பகுதி கண்ணப்பர் காளத்தியப்பர்பால் வந்த நிலைமையைக் கூறியது.
``இரவி அழல் சிந்த`` என்றது, உச்சிப்போது ஆயினமையைக் குறித்தது.
தடிந்த உடும்பு - கொல்லப்பட்ட உடும்பு.
அது பாகமாக்கப்படவில்லை.
இறைவற்கு நகை தோற்றுவிக்க அன்பினால் கொண்டு வரப்பட்டது.
அடி - *125, 129:* ``தான்`` என்பதை ஒழித்து ஓதுவதும், ஒரு கண்ணிலும் உம்மை சேர்த்து ஓதுவதும் பாடங்கள் அல்ல.
அடி - *130-147:* இப்பகுதி இறைவன் கண்ணப்பரது அன்பைச் சிவகோசரியார்க்குக் காட்டுதற் பொருட்டுச் செய்ததையும், அதனால் கண்ணப்பர்பால் நிகழ்ந்த அருஞ் செயல்களையும் கூறியது.
நெக்கு நெக்கு இழிதல் - தடைகளைக் கடந்து கடந்து ஒழுகுதல்.
கனற்றி - துயரத்தால் மனம் புழுங்கி அரற்றி.
இத்தனை தரிக்கிலன் - இவ்வளவு பெருந் துன்பத்தைக் காண இனி நான் பொறேன், ``அப்பியும்`` என்னும் உம்மை, இதுவே இப்பொழுது இதற்கு இதுவே முடிவான மருந்து என்று எண்ணியதையும், ``காண்பன்`` என்றது `செய்து பார்ப் போம்; பின்பு ஆகட்டும்` என்று துணிவு கொண்டதையும் குறித்தன.
ஐயமாயவழியும் செய்யத் துணிந்தது, அவரது அளவிலா ஆர்வத்தைக் காட்டுகின்றது.
நிற்பது ஒத்து - நிற்பது போன்று.
என்றது, `கண்ணை அப்பியதனால் குருதி நிற்கவில்லை; ஒழுகவிட்ட குருதியை இதனை அடுத்து `நாயனார் தமது மற்றைக் கண்ணிலும் வடிக்கணை மடுத்தார்` எனக் கூறியதனால், `இறைவன் குருதி நின்ற

கண் நிற்க.
தனது மற்றைக் கண்ணில் குருதியை ஒழுக விட்டான்` என்பது உய்த்துணர வைக்கப்பட்டதாம்.
அங்ஙனம் அல்லாக்கால் முன்பு, ``ஆங்கு ஒருகண் உதிரம் ஒழுக நின்றனன்`` என்றது பழுதாம் ஆகலின்.
அடி - *148-158:* இவ் இறுதிப் பகுதி இறைவன் கண்ணப்பரது அரிய செயலை ஆற்றமாட்டாது விரைந்து அவருக்கு அருள் புரிந்தமையைக் கூறியது.
அன்புடைத் தோன்றல் - அன்பராயினார் எல்லாரினும் தலையாயவன்.
``தோன்றல்`` என்றதும் விளி.
இறுதியிலும், ``திருக்கண்ணப்பனே`` என்றது, தொடக்கத்திற் குறித்த அப்பெயரை அதற்குரிய காரணத்தை விளக்கிக் கூறி முடித்தவாறு.
தனி வெண்பா, பெரியபுராணத்தை ஓதி உணர்ந்த பிற்காலத் தவரால் செய்து சேர்க்கப்பட்டது.
நக்கீரதேவ நாயனார் அருளிய
திருக்கண்ணப்ப தேவர் திருமறம் முற்றிற்று.

கல்லாடதேவ நாயனார் - திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

பரிவின் தன்மை உருவுகொண் டனையவன்
போழ்வார் போர்த்த தாழகச் செருப்பினன்
குருதி புலராச் சுரிகை எஃகம்
அரையிற் கட்டிய உடைதோற் கச்சையன்
தோல்நெடும் பையில் குறுமயிர் திணித்து

வாரில் வீக்கிய வரிகைக் கட்டியன்
உழுவைக் கூனுகிர்க் கேழல்வெண் மருப்பு
மாறுபடத் தொடுத்த மாலையுத் தரியன்
நீலப் பீலி நெற்றி சூழ்ந்த
கானக் குஞ்சிக் கவடி புல்லினன்
முடுகு நாறு குடிலை யாக்கையன்
வேங்கை வென்று வாகை சூடிய
சங்கரன் றன்இனத் தலைவன் ஒங்கிய
வில்லும் அம்பும் நல்லன ஏந்தி
ஏற்றுக் கல்வனம் காற்றில் இயங்கி
கணையில் வீழ்த்துக் கருமா அறுத்து
கோலின் ஏற்றிக் கொழுந்தீக் காய்ச்சி
நாவில் வைத்த நாட்போ னகமும்
தன்தலைச் செருக்கிய தண்பளித் தாமும்
வாய்க்கல சத்து மஞ்சன நீரும்
கொண்டு கானப் பேருறை கண்ணுதல்
முடியிற் பூசை அடியால் நீக்கி
நீங்காக் குணத்துக்
கோசரிக் கன்றவன் நேசங் காட்ட
முக்கண் அப்பனுக் கொருகணில் உதிரம்

தக்கி ணத்திடை இழிதர அக்கணம்
அழுது விழுந்து தொழு தெழுந் தரற்றிப்
புன்மருந் தாற்றப் போகா தென்று
தன்னை மருந்தென்று மலர்க்கண் அப்ப
ஒழிந்தது மற்றை ஒண்திரு நயனம்
பொழிந்த கண்ணீர்க் கலுழி பொங்க
அற்ற தென்று மற்றக் கண்ணையும்

பகழித் தலையால் அகழ ஆண்டகை
ஒருகை யாலும் இருகை பிடித்து
ஒல்லை நம்புண் ஒழிந்தது பாராய்

நல்லை நல்லை எனப்பெறும்
திருவேட் டுவர்தந் திருவடி கைதொழக்
கருவேட் டுழல்வினைக் காரியங் கெடுமே.

#741

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி *-1:* பரிவு - அன்பு, பரிவின் தன்மை - பரிவாகிய பண்பு, இன், வேண்டாவழிச் சாரியை.
இவ்அடியையே பற்றிச் சேக்கிழார் ``அன்பு பிழம்பாய்த் திரிவார்`` எனவும், ``அவனுடைய வடிவெல்லாம் நமபக்கல் அன்பு`` எனவும் அருளினமை காண்க.
அடி*-2:* போழ் வார் போர்த்த - தோலை வாரால் தைத்த. `போழ்` என்னும் முதனிலைத் தொழிற் பெயர் ஆகுபெயராய்ச் செயப்படு பொருளைக் குறித்தது. போழ்தல் - உரித்தல். தாழ் அகச் செருப்பு - தாழ்ந்த உள்ளிடத்தையுடைய செருப்பு.
அடி- *3:* சுரிகை எஃகம் - குற்றுடைவாளாகிய படைக்கலம். எஃகம் - கூர்மை. அதுவும் ஆகுபெயராய், அதனையுடைய படைக் கலத்தைக் குறித்தது. `எஃகத்தோடு கட்டிய` என உருபு விரித்துரைக்க.
அடி - *4:* `உடையாகிய தோலின்மேல் கச்சையை உடையன்` என்க. `உடைத் தோல்` என்பதில் தகர ஒற்றுத் தொகுத்தலாயிற்று.
அடி*-6:* `வீக்கிய வாரின் வரி` என மாற்றிக் கொள்க. வீக்கிய - கட்டி முடிந்த, வாரின் வரி - வாரால் திரிக்கப்பட்ட கயிறு. கட்டியன் - கட்டினவன்; கட்டியிருப்பவன்.
அடி*-7:* உழுவைக் கூர்ன் உகிர் - புலியினது வளைந்த நகம் கேழல் வெண் மருப்பு - பன்றியின் வெள்ளிய கொம்பு(பல்). இவைகளைத் தொடுத்த மாலை` என்க.
அடி*-8:* மாறுபடத் தொடுத்தல் - ஒன்றையிடையிட்டு மற்றொன்றைத் தொடுத்தல். `மாலையோடு உத்தரியத்தை யுடைய வன்` என்க. உத்தரியம் - மேலாடை. `அது புலித் தோல்` என்பது, மேல், ``உழுவைக் கூன் உகிர்` என்ற குறிப்பாற் பெறப்பட்டது.
அடி*-10:* கானக் குஞ்சி - காடுபோன்ற தலை மயிர். கவடி- பல கறை; அஃது அவை பல கோத்த மாலை. புல்லினன்- பொருந்தியவன்.

அடி-*11:* முடுகு - முடை நாற்றம்; ``முடுகு நாறிய வடுகர்``* என்றார் சுந்தரரும். குடிலம் - வளைவு. குடிலை - வளைந்துள்ளது; `கூன்` என்றபடி. வலை முதலியவற்றைச் சுமந்து, முதுகு கூனா யிற்றாம்.
அடி- *12,13:* வேங்கை - புலி. `புலிகளை அஞ்சாது சென்று கொன்று வெல்லுதலால் வேடுவர் சிவன் குலத்தவர்` என நகை தோன்றக் கூறியவாறு. தலைவன், அக்குலத்தார்க்கு அரசன், ``தலைவன்`` என்றது, `தலைவனாயினான் ஒருவன்` என்றபடி. இஃதே எழுவாய். எனவே, மேற் போந்தன எல்லாம் இவ் ஒரு பொருள்மேல் வந்த வினைப் பெயர்களும், வினைக் குறிப்புப் பெயர்களுமாய், இவனது நிலையை வருணித்த வருணனைகளாயின. இனி, இவன் செய்த செயல்கள் கூறப்படும்.
அடி-*14:* இவன் தாங்கிய வில்லும், அம்பும் கொலைக் கருவிகளே யாயினும் இறை வழிபாட்டிற்குத் துணையாய் அமைந்தமை பற்றி, ``நல்லன்`` என்றார்.
அடி- *15:* ஏற்றுக் கல் - உயரமான மலை. காற்றுப் போலும் உடல் விரைவு. `நாதனார் பசி மிகுதற்கு முன்பு விரைந்து சென்று ஊட்டுதல் வேண்டும்` என்னும் உள்ள விரைவினால் நிகழ்ந்தது. அடி-*16:* கரு மா - பன்றி. ``இழிவாய கரு விலங்கு``* எனச் சேக்கிழாரும் கூறினார்.
அடி-*17:* கோல் - அம்பு.
அடி-*18:* நாட் போனகம் - அன்றைய உணவு. `புதிது புதிதாக அமைக்கும் உணவு` என்பதாம்.
அடி-*19:* பள்ளித் தாமம் - பூ மாலை. அஃது இடைக் குறைந்து நின்றது. இங்குப் பள்ளித் தாமம் சருகுகள்.
அடி-*20:* `வாய் கலசம்`` என்றது `வாயே கலசமாயிற்று`` என்பதாம். உருவகம் அன்று.
அடி-*21:* `கொண்டு சென்று` என ஒரு சொல் வருவிக்க. வினை முதனிலைகள் திரிந்து பெயராதல் போல. இங்கு `பெரு` என்னும் பண்புப் பகுதி `பேர்` எனத் திரிந்து பெயராகி பெரிதாகிய இடத்தைக் குறித்தது. கானப் பேர் - காடாகிய பெரிய இடம். அது காளத்தி மலை.
அடி- *22:* செருப்பினை, ``அடி`` என்றது தகுதி வழக்குப் பற்றி.
அடி-*23:* நீங்காக் குணம் - நீங்காமையாகிய பண்பு. எனவே, பெயரெச்சம் பண்புப் பொருட்டாய் வந்ததாம்.
அடி - *26:* கோசரி, `சிவகோசரியார்` என்னும் அந்தணர். காட்ட- காட்டுதற்கு.
அடி-*25:* ``அப்பனுக்கு`` என்பதன் பின்னும் `அவன் செயலால்` என்பது வருவிக்க.
அடி- *26:* தக்கிணர் - வலப்பக்கம். ``ஒரு கண்`` என்றது `வலக் கண்` என்றபடி.

அடி- *28:* புன் மருந்து, நோயின் வலிமையை நோக்க மெலிவுடைத்தான அயல் மருந்து. - சாதி யொருமை. `புண் மருந்து` எனப் பாடம் ஓதுதல் ஆம். ஆற்றப் போகாது. கண்ணிற் புண்ணினை ஆற்ற வல்லது ஆகாது.
அடி- *29:* `தன்னையே` என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்த லாயிற்று. ``தான்`` என்றது தனது உடம்பினை. ``மலர்க்கண்`` என்பதில் மலர், மென்மை பற்றி வந்த உவமை. உறுப்புக்கள் பலவற்றினும் கண்ணினது மென்மையை விதந்த படி. ``பகழித் தலையால் அகழ`` எனப் பின்னர் வருதலின், ``அப்ப`` என்றது அம்பாற் பெயர்த்து அப்பியதாயிற்று.
அடி- *30:* உதிரம் இழிதல் ஒழிந்தது` என்க.
அடி- *31:* `பொழிந்த கலுழி, கண்ணீர் போலும் கலுழி` எனத் தனித் தனி இயைக்க. `கண்ணீர் போலும் கலுழி` என்றதனால் அது மேற் கூறிப் போந்த உதிரக் கலுழியாயிற்று. பொங்க - ஒரு காலைக்கு ஒரு கால் மிகுவதாக.
அடி- *32:* அற்றது - கை கண்டு. அறுதியிட்டு உணர்ந்த மருந்து என்று - என்று தெளிந்த.
அடி- *33:* ஆண் தகை - எல்லாம் வல்ல தன்மையை உடையவன்; இறைவன்.
அடி-*34:* ``ஒரு கையாலும்`` என்னும் முற்றும்மை, முயன்று பிடித்தமை குறித்தது. `இருகையும்` என்பதே பாடம் போலும்!
அடி-*35:* ஒல்லை - நீ அப்பும் முன்பே.
அடி-*36:* ``நல்லை! நல்லை!!`` எனப் புகழப் பெற்றார் என்றது, `புகழ்ந்து உயர் பதம் அருளினார்` என்னும் குறிப்பினது. `அப்பத மாவது, தம் அருகிலே இருத்திக் கொண்டது` எனப் பெரியபுராணம் கூறிற்று.
அடி-*37:* ``திருவேட்டுவர்`` என்பது உயர்வு பற்றி வந்த ஒருமைப் பன்மை மயக்கம். திருவேட்டுவர் - திருவருளுக்கு உரியவரான வேட்டுவர்.
அடி-*38:* கரு - பிறவி. வேட்டு - மேலும் மேலும் விரும்பி. உழல் காரியம் - உழல்வதாகிய செயல். எனவே, இது தொழில் மேல் தொக்க வினைத் தொகையாம். கருவி இன்றிக் காரியம் கூடாது ஆகலானும், உலகப் பயன்கள் பிறவியைக் கருவியாக உடைமையானும் `உலகப் பயனை விரும்புவோர் யாவரும் பிறவியை விரும்புவோரேயாவர்` என்னும் கருத்தினால், உலகப் பயனை விரும்புவோரைப் பிறவியை விரும்புவோராகவே கூறினார். `கண்ணப்ப நாயனாரை வணங்கு பவர்க்கு உலகப் பற்று நிகழாது, திருவருட் பற்றே நிகழும் என்றபடி.
இவ் இரு திருமறங்களும் பின்னர்ச் சேக்கிழார் கண்ணப்பரது வரலாற்றை விளங்கக் கூறுதற்குத் துணையாய் நின்றமையறிக.
கல்லாடதேவ நாயனார் அருளிய
திருக்கண்ணப்ப தேவர் திருமறம் முற்றிற்று.

கபிலதேவ நாயனார் - மூத்த நாயனார் திருஇரட்டை மணிமாலை

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை. #742
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மூத்த நாயனார் - மூத்த பிள்ளையார் (ஆனை முகத்தான்). திரு ஆக்கும்; செஞ்சொற் பெருவாக்கும், பீடும் பெருக்கும்; உரு ஆக்கும்; ஆதலால் அவனைக் காதலால், வானோரும் தம் கை கூப்புவர் - எனக் கூட்டுக. திரு - செல்வம். செய் கருமம் - செய்யத் தொடங்கும் செயல், கை கூட்டும் - இடையூறின்றி இனிது முடியச் செய்வான். செஞ்சொல் பெருவாக்கு - குற்றமற்ற சொற்களை வழங்கும் உயர்ந்த சொல் வன்மை. பீடு - பெருமை; புகழ். உரு - அழகு. ``வானோரும்`` என்னும் உம்மை உயர்வு சிறப்பு. அதனால் ஏனையோர் கைகூப்புதல் தானே அமைந்தது. ``கை கூப்புவர்`` என்பது `தொழுவார்` என்னும் பொருளது ஆதலின், அஃது ``ஆனை முகத்தானை`` என்னும் இரண்டாவதற்கு முடிபாயிற்று. `செய் கருமம் கை கூட்டும்; ஆதலால் கைகூப்புவர்` என்று, `பிள்ளையாரைத் தொழாதபொழுது செய் கருமம் கை கூடுதல் அரிது` என்னும் குறிப்பினது.
இத்திருப்பாடலையே பற்றிப் பிற்காலத்தில் ஔவையார்,
வாக்குண்டாம்; நல்ல மனம் உண்டாம்; மாமலராள்
நோக்குண்டாம்; மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு*
என அருளிச் செய்தமை அறியத் தக்கது.

கைக்கும் பிணியொடு கான் தலைப்படும் ஏல்வையினில்
எய்க்கும் கவலைக் கிடைந்தடைந் தேன்வெம்மை நாவளைக்கும்
பைக்கும் அரவரை யான்தந்த பாய்மத யானைபத்துத்
திக்கும் பணிநுதற் கண்திரு வாளன் திருவடியே. #743
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பிணியொடு, கவலைக்கு இடைந்து (யான்) அரவு அரையான் தந்த யானையாகிய நுதற்கண் திருவாளனது திருவடி களையே (புகலிடமாக)

அடைந்தேன்` எனக் கூட்டுக. `அதனால், யான் பிணியும் கவலையும் இலனாயினேன். ஆதலால் நீவிரும் அவனது அடிகளையே புகலிடமாக அடைமின்` - என்பது குறிப் பெச்சம்.

கைத்தல் - கசத்தல்; அஃது இங்கு, வெறுக்கப்படுதலைக் குறித் தது. பிணி - நோய். ஒடு, எண் ஒடு. மேற்காட்டிய ஔவையார் பாட்டி லும், ``மேனி நுடங்காது`` என வந்தமை காண்க. தலைப்படுதல் - சந்தித்தல். ஏல்வை - பொழுது. எய்த்தல் - இளைத்துச் செயல் அறுதல். எய்க்கும் கவலை - எய்த்தலால் உண்டாகும் கவலை. எனவே, ``எய்க்கும்`` என்னும் பெயரெச்சம் காரணப் பொருளில் வந்ததாம். இடைந்து - தோற்று. வெம்மை - சீற்றம். `வெம்மையோடு` என உருபு விரிக்க. பைக்கும் - படம் எடுத்து ஆடும். `பணி திருவாளன்` என இயையும்.

அடியமர்ந்து கொள்வாயே நெஞ்சமே அப்பம்
இடிஅவலோ டெள்உண்டை கன்னல் வடிசுவையில்
தாழ்வானை ஆழ்வானைத் தன்னடியார் உள்ளத்தே
வாழ்வானை வாழ்த்தியே வாழ். **#744**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அடி அமர்ந்து கொள்வாயே`` என்பதை இறுதிக்கண் கூட்டுக. இடி - மா. கன்னல் - கரும்பு. வடிசுவை - இவைகளினின்றும் ஒழுகுகின்ற *(மிகுகின்ற)* சுவை. தாழ்வான் - உள்ளம் தங்குகின்றவன். ஆழ்வான் - அழுந்தி நுகர்வான். பணியாரங்களை மிக விரும்புவர் மூத்த பிள்ளையார். ``அவனை வாழ்த்தியே வாழ்`` என்றது. `வாழ்த் தினால் அல்லது வாழ்வு உண்டாகாது` என்றதாம். ஆகையால், `நெஞ்சமே, அவனுடைய அடிகளை விரும்பி உன்னுள் இருத்திக் கொள்வாயோ` என்க. அமர்தல் - விரும்புதல், ஏகாரம், வினாப் பொருட்டு. ஏகாரத்தைத் தேற்றப் பொருட்டாக்கி, `கொள்வாய்` என ஏவல் முற்றாக உரைப்பினும் அமையும்.

வாழைக் கனிபல வின்கனி மாங்கனி தாஞ்சிறந்த
கூழைச் சுருள்குழை அப்பமெள் ளுண்டையெல் லாந்துறுத்தும்
பேழைப் பெருவயிற் றோடும் புகுந்தென் உளம்பிரியான்
வேழத் திருமுகத் துச்செக்கர் மேனி விநாயகனே. **#745**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பல - பலா. கூழைச் சுருள் - இரு முனைகள் குவிந்த, உள்ளே பூரணம் இடப்பட்ட கொழுக்கட்டை. குழை - குழைவு; பாயசம். துறுத்தல் - திணித்தல். `துறுத்தும் வயிறு` என இயையும். ேபழைப் பெருவயிறு -

பெட்டகம் போலும் பெரிதாகிய வயிறு. ``வயிற்றோடும்`` என்னும் இறந்தது தழுவிய எச்ச உம்மை, நன்கு புகுந்தமையைக் குறித்தது. `என்றன் உளம் புகுந்து பிரியான்` என மாற்றிக் கொள்க. வேழம் - யானை. செக்கர் - சிவப்பு. `செக்கர் வானம்` எனினும் ஆம்.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து. **#746**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியை, `கண்ணின் கண்டு` என ஒரு சொல் வரு வித்து, `கண்டு, கனிந்து பணிமின்` என மாற்றிக் கொள்க. வேட்கை - ஆசை. ``தணிவிப்பான்`` என்பதற்கு, `நிரப்புவான் போக்குவான்` என இரு பொருளும் கொள்க. கனிதல் - மகிழ்தல். அஃது அரும்பொருள் எதிர்ப்பட்டமை பற்றித் தோன்றுவது. `பணிந்தால், மேற்கூறிய பயன்களைப் பெறலாம்` என்பது கருத்து, ``விநாயகனே`` என்னும் சொல் ஒரு பொருளிலே பலமுறை வந்தது. இது சொற்பொருள் பின்வருநிலையணி.

கனிய நினைவொடு நாடொறும் காதற் படும்அடியார்க்
கினியன் இனியொ ரின்னாங் கிலம்எவ ரும்வணங்கும்
பனிவெண் பிறைநறுங் கொன்றைச் சடைப்பலி தேரியற்கை
முனிவன் சிறுவன் பெருவெங்கொல் யானை முகத்தவனே. **#747**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``எவரும் வணங்கும்`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. `எவரும் வணங்கும் முனிவன்` என இயையும். முனிவன், சிவபெருமான். `பிறைச் சடை, கொன்றைச் சடை` என்க. பலி தேர்தல், பிச்சையைப் பலவிடத்தும் சென்று பெறுதல். இயற்கை - இயல்பு. ``பெரு வெங் கொல்`` என்பது யானைக்கு எய்திய இன அடை. கொல் யானை - கொல்லும் தன்மை வாய்ந்த யானை. ``நினைவு`` என்றது அதனைச் செய்யும் நெஞ்சினை. `நினைவு கனிய, அதனொடும் காதற்படும் அடியார்க்கு` என்க. ``இனி`` என்பது, வினைமாற்றின் கண் வந்தது. ஒருவுதல் - நீங்குதல். ஆம் - உண்டாகும். `கிலம்` `குறை` என்னும் பொருளதாகிய வடசொல். இதன் மறுதலையே `அகிலம்` என்பது `அவனை ஒருவின் கிலம் ஆம்` என்க. `அது, சிவனது தேர் அச்சு முரிந்தமை முதலியவற்றால் அறியப்படும்` என்பது கருத்து.

யானை முகத்தான் பொருவிடையான் சேய்அழகார்
மான மணிவண்ணன் மாமருகன் மேல்நிகழும்
வெள்ளக் குமிழி மதத்து விநாயகன்என்
உள்ளக் கருத்தின் உளன். #748
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பொரு விடை - போர் புரியும் இடபம். சேய் - மகன். மானம் - பெருமை. மணி - நீலமணி. நீல மணியின் வண்ணம்போலும் வண்ணத்தை உடையவன். மாயோன். மா - பெருமை, மருகன், உடன்பிறந்தாள் மகன். நிகழும் - வழிந்து ஓடுகின்ற (மதம்) `குமிழி வெள்ளம்` என மாற்றுக. வெள்ள மதம் - வெள்ளம் போலும் மத நீர். உள்ளக் கருத்து - உள்ளத்தில் எழுகின்ற கருத்து. அதன்கண் உளனாதலாவது, கருதப்படும் பொருள் அவனேயாய் இருத்தல்.

உளதள வில்லதொர் காதல்என் நெஞ்சில்வன் நஞ்சமுண்ட
வளரிள மாமணி கண்டன்வண் டாடுவண் கோதைபங்கத்
திளவளர் மாமதிக் கண்ணியெம் மான்மகன் கைம்முகத்துக்
களகள மாமதஞ் சேர்களி யானைக் கணபதியே. #749
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`என் நெஞ்சில், கணபதிகண் அளவில்லதோர் காதல் உளது` என இயைத்து முடிக்க. இளமை, இங்கு அதன் கண் உள்ள அழகைக் குறித்தது. ``வளர் இள`` என்றது, `பின்னும் வரும் இளமை` என்றவாறு. மா மணி - நீல மணி. `நஞ்சம் உண்ட கண்டம்` என இயையும். கோதை - மாலை. அஃது அதனை உடைய உமாதேவியைக் குறித்தது. `பங்கத்து எம்மான்` என இயையும். அத்து, வேண்டா வழிச் சாரியை. அஃது இரண்டாவதன் பொருள் குறித்து நின்றது. கண்ணி, முடியில் அணியும் மாலை. கை - தும்பிக்கை. `களகள` என்பது ஒலிக் குறிப்பு. `சோர் மாமதம்` எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். மா மதம் - கரிய மதம். களிமதம் - மத மயக்கம். ``யானைக் கணபதி`` என்பது `செஞ்ஞாயிறு` என்பதுபோல இயைபின்மை நீக்கிய விசேடணத்தையுடைய இருபெயர் ஒட்டு.

கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தட் சடைமேல் மணங்கொண்ட
தாதகத்த தேன்முரலுங் கொன்றையான் தந்தளித்த
போதகத்தின் தாள்பணியப் போம். #750
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கண் கொண்ட நெற்றியையும், சடைமேல் கொன்றையையும் உடையவன். தந்தளித்த போதகத்தின் தாள் பணிய, கணங்கொண்ட வல்வினைகள் போம்` என இயைத்து முடிக்க. கணம் கொண்ட - கூட்டமாகத் திரண்ட. வல்வினைகள் - வலியனவாகிய வினைகள்; சஞ்சிதம். பணம் - பாம்பின் படம். பாந்தள் - பாம்பு. `பாந்தளையுடைய சடை` என்க. தாது அகத்த - மகரந்தத்தை உள்ளே உடைய. `தாதகத்த கொன்றை, தேன் முரலுங் கொன்றை` என்க. தேன், ஒருவகை வண்டு. முரலுதல் - ஊதுதல். அளித்த - தேவர் முதலியோரைக் காத்த, ``அளித்த போதகம்`` எனப் பெயரெச்சம் கருவிப் பெயர் கொண்டது. போதகம் - யானை.

கைவேழ முகத்தவனைப் படைத்தான் போலும்!
கயாசுரனை அவனால்கொல் வித்தார் போலும்!*
என அப்பரும் அருளிச் செய்தார்.
அல்லல்போம்; வல்வினைபோம்; அன்னைவயிற் றிற்பிறந்த
தொல்லைபோம்; போகாத் துயரம்போம்; - நல்ல
குணம்அதிக மாம்அருணைக் கோபுரத்தின் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்
எனப் பிற்காலத்து வெண்பா ஒன்றும் கூறிற்று.

போகபந் தத்தந்தம் இன்றிநிற் பீர்புனை தார்முடிமேல்
நாகபந் தத்தந்த நாள்அம் பிறையிறை யான்பயந்த
மாகபந் தத்தந்த மாமழை போல்மதத் துக்கதப்போர்
ஏகதந் தத்துஎந்தை செந்தாள் இணைபணிந் தேத்துமினே. **#751**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

போக பந்தம் - உலக இன்பமாகிய கட்டு. (அதில்) அந்தம் இன்றி நிற்பீர் - முடிவு இல்லாமல் இருந்து கொண்டே இருப்பவர்களே! இது விளி. நாக பந்தம் - பாம்பாகிய கட்டு. அதனை யுடைய இறையான் சிவன். அந்த, பண்டறி சுட்டு. `அந்த இறையான்` என இயையும். நாள் அம் பிறை - முதல்முதலாகத் தோன்றுகின்ற மூன்றாம் நாட் பிறை. கபந்தம் - கழுத்து. கன்ன மதம் கழுத்து வழியாக மழைபோல ஒழுகுகின்றமதம். அந்த மா மழை - உலக முடிவுக் காலத்தில் பெய்கின்ற பெருமழை. கதம் - கோபம். கதப் போர், யானை இனம் பற்றிக் கூறியது. ``ஏத்துமின்`` என்றது, `ஏத்தினால் போக பந்தத் தில் அந்தம் இன்றி நில்லாது, அதற்கு அந்தம் (முடிவு) உளதாகும்` என்றபடி.

ஏத்தியே என்னுள்ளம் நிற்குமால் எப்பொழுதும்

மாத்தனிவெண் கோட்டு மதமுகத்துத் தூத்தழல்போல்
செக்கர்த் திருமேனிச் செம்பொற் கழல்ஐங்கை
முக்கட் கடாயானை முன் #752
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`என் உள்ளம் எப்பொழுதும் யானைமுன் ஏத்தியே நிற்கும்` என இயைத்து முடிக்க. ஆல், அசை. மா - பெருமை. தனி - ஒற்றை. செக்கர் - சிவப்பு. முன்னர் `மதம்` கூறினமையால், பின்னர். ``கடாம்`` என்றது, களிற்றினைக் குறிக்கும் குறிப்பாய் நின்றது. தனிக் கோடு, செக்கர் மேனி, கழல், ஐங் கை இவை பிற யானைகளினின்று பிரித்த, பிறிதின் இயைபு நீக்கிய விசேடணங்கள். `அங்கை` என்பது பாடம் அன்றாம்.

முன்னிளங் காலத்தி லேபற்றி னேன்வெற்றி மீன்உயர்த்த
மன்னிளங் காமன்தன் மைத்துன னேமணி நீலகண்டத்
தென்னிளங் காய்களி றேஇமை யோர்சிங்க மே,உமையாள்
தன்னிளங் காதல னேசர ணாவுன் சரணங்களே. #753
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`உன் சரணங்களே சரணா முன் இளங் காலத்திலே பற்றினேன்` என முடிக்க. மீன் - மீன் எழுதப்பட்ட கொடி உயர்த்த - உயர்த்துக் கட்டிய. மன் - தலைவன். இரண்டாவதான இளமை அழகைக் குறித்தது. விநாயகருக்கு மன்மதன் அம்மான் மகன் ஆதல் பற்றி அவரை, `அவனுக்கு மைத்துனன்` என்றார். மணி நீலகண்டம் - நீல மணிபோலும் நீலகண்டம். விநாயகருக்கும் நீலகண்டம் உண்மை,

நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும் *

என்னும் ஔவையார் வாக்காலும் அறிக. என் - எனது. இங்ஙனம் உரிமை பாராட்டியது அன்பினால், `இளங் களிறு, காய் களிறு` என்க. காய்தல் - இனம் பற்றி வந்த அடை. ``சிங்கமே`` என்றது, ``வடிவத்தில் யானையாய் இருப்பினும், வீரத்தில் சிங்கம்` என்றபடி. ஈற்றில் நின்ற இளமை பருவம் உணர்த்தியதன்றி, பிறப்புமுறை குறித்ததன்று. காதலன் - மகன். இளமையிலேயே விடுவன விடுத்துப் பற்றுவன பற்றுதல் முற்றவம் உடையார்கன்றி ஆகாது. இவ்வாசிரியர், ``முன் இளங்காலத்திலே பற்றினேன்`` என்றமையால் அத்தகைய தவம் உடையாராதல் விளங்கும். முன் இளங்காலம் - பருவங்களில் முதலதாகிய இளமைப் பருவம். முன்னாயதனை ``முன்`` என்றது ஆகுபெயர். ``சரண்`` இரண்டில் முன்னது அடைக்கலம்; பின்னது திருவடி.

சரணுடை யேன்என்று தலைதொட் டிருக்க
முரண்உடையேன் அல்லேன் நான்முன்னம் திரள்நெடுங்கோட்
டண்டத்தான் அப்புறத்தான் ஆனைமுகத் தான்அமரர்
பண்டத்தான் தாள்பணியாய் பண்டு. **#754**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`முன்னம் திரள் நெடுங்கோட்டு ஆனை முகத்தான், அண்டத்தான், அப்புறத்தான், அமரர் பண்டத்தான் தாள் நான் பண்டு பணியா, - சரண் உடையேன் - என்று தலை தொட்டிருக்க முரண் உடையேன் அல்லேன்` என இயைத்து முடிக்க. முன்னம் திரள் - முகத்திற்கு முன்னே திரண்டு தோன்றுகின்ற. அண்டத்தான் - அனைத்து அண்டங்களிலும் உள்ளவன், (ஆயினும்) அப்புறத்தான் - அனைத்து அண்டங்கட்கும் அப்பாலும் உள்ளவன். பண்டத்தான் - அடையத்தக்க பொருளாய் உள்ளவன். சரண் - புகலிடம். முரண் - வலிமை. ``பண்டமாப் படுத்து என்னை`` *1* என்னும் அப்பர் திரு மொழியையும் காண்க.
பணிய - பணிந்து. `தலை தொடுதல்` என்பது சூளுரைத் தலைக் குறிப்பதொரு வழக்கு மொழி. `பண்டே பணிந்தேனாயினும், அந்நிலையில் - உன்னையே நான் சரணாக (புகலிடமாக) உடையேன் - என்று சூள் உரைக்கும் அளவிற்கு நான் உறுதி யுடையேன் அல்லேன்` என்பதாம். `அத்தகைய உறுதியை எனக்கு நீ அருளல் வேண்டும்` என்பது கருத்து.
நின்றன் வார்கழற்கு அன்பு எனக்கும் -
நிரந்தரமாய் அருளாய் *2*
எனவும்,
``இறவாத இன்ப அன்பு வேண்டி`` எனவும் போந்தனவும் இக்கருத்தே பற்றியாம். *3*

பண்டம்தம் ஆதரத் தான்என் றினியன வேபலவும்
கொண்டந்த நாள்குறு காமைக் குறுகுவர் கூர்உணர்வில்
கண்டந்த நீண்முடிக் கார்மத வார்சடைக் கற்றைஒற்றை
வெண்தந்த வேழ முகத்தெம் பிரானடி வேட்கையரே. **#755**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கூர் உணர்வில்`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. கூர் உணர்வு - நுணுகிய ஞானம் `உணர்வில் கண்டு` என்க. ``அந்த`` என்பது பண்டறி சுட்டு. `அந்த எம் பிரான்` என இயையும். கார் மதம் - கரிய மத நீர். `மேகம் போலப் பொழியும் மதம்` என்றலும் ஆம். விநாயகருக்கும்

சடைமுடி உள்ளது. `ஒற்றைத் தந்தம்` என இயையும். அடி வேட்கையார் - அடிக்கண் அன்பு செய்பவர். ``பண்டம்`` என்றும், ``தம் ஆதரத்தான்`` என்றும் உணர்ந்து குறுகலர் - என்க. பண்டம் - தமக்குப் பொருளாய் உள்ளவன். ஆதரத்தான் - அன்பிற்கு உரியவன். இனியன - இனிய சுவையுடைய பண்ணியங்கள். `கொண்டு குறுகுவர்` என்க. அந்த நாள் குறுகாமை - முடிவு நாள் உண்டாகாதபடி; `என்றும் நிரந்தரமாக` என்பதாம். குறுகுவர் - அடைவர்.

வேட்கை வினைமுடித்து மெய்யடியார்க் கின்பஞ்செய்து
ஆட்கொண் டருளும் அரன்சேயை வாட்கதிர்கொள்
காந்தார, மார்பிற் கமழ்தார்க் கணபதியை
வேந்தா உடைத்தமரர் விண். **#756**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மெய்யடியார்க்கு வினை முடித்து இன்பம் செய் சேய்` என இயைக்க. வேட்கை வினை - விரும்பிய விருப்பத்தை ஏற்ற ெசயல். என்றது, `விரும்பிய செயல்` என்றபடி. சேய் - மகன். வாட் கதிர்- ஒளிக் கதிர். கதிராவது - எங்கும் பரந்து செல்வது. `கதிர் மார்பில் காந் தாரத்தார், கமழ் தார்` என்க. காந்தாரம் - (வண்டுகளின்) இசை. விண்- இங்குச் சிவலோகம். எனவே, அமரர், பதமுத்தி பெற்றவர் களாவார். `பத முத்தி பெற்றவர்கள் விநாயகரை வணங்கி வாழ்வர்` என்றவாறு.

விண்ணுதல் நுங்கிய விண்ணும்மண் ணும்செய் வினைப்பயனும்
பண்ணுதல் நுங்கடன் என்பர்மெய் அன்பர்கள் பாய்மதமாக்
கண்ணுதல் நுங்கிய நஞ்சமுண் டார்கரு மாமிடற்றுப்
பெண்ணுதல் நும்பிரி யாஒரு பாகன் பெருமகனே. **#757**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

விண்ணுதல் - `விண்` என ஒலித்தல். நுங்கிய விண்- அங்ஙனம் ஒலிக்கும் ஒலியைத் தன்னுட் கொண்ட ஆகாயம். ``விண்`` என்பது அதன்கண் உள்ள உலகத்தையும், ``மண்`` என்பது அதனால் ஆகிய உலகத்தையும் முன்னர்க் குறித்துப் பின்னர் அவ்வுலகங்களில் வாழும் தேவரையும், மக்களையும் குறித்தலால் இருமடி யாகுபெயர். வினைப் பயனைப் பண்ணுதல் - தொடங்கிய செயலின் பயனை விளைவித்தல். அஃதாவது, அச்செயல் இடையூறின்றி இனிது முற்றுப் பெறச் செய்தல். பெண் தநுப் பிரியா ஒரு பாகன் - பெண்ணைத் தனது உடம்பினுள் பிரியாதவாறு ஒரு பாகத்தில் கொண்ட சிவபெருமான். `பிரியாது` என்னும் எதிர்மறை வினையெச்சத்தின் ஈறு தொகுத்தலா யிற்று. அவ்வெச்சம், ``பாகன்``

என்னும் வினைக்குறிப்புப் பெயரோடு முடிந்தது. பெருமகன் - மூத்த மகன். மெய் அன்பர்கள் - கண் நுதலை யும், கருமாமிடற்றையும், பெண் தநுப் பிரியா ஒரு பாகத்தையும் உடையவனுக்குப் பெருமகனாய்த் தோன்றியவனே! தேவரும், மக்களும் தொடங்கிய செயல்களை இடையூறின்றி இனிது முற்று வித்தலே உனது கடன் - என்பார்கள் என இயைத்து முடிக்க.

பெருங்காதல் என்னோடு பென்னோடை நெற்றி
மருங்கார வார்செவிகள் வீசி ஒருங்கே
திருவார்ந்த செம்முகத்துக் கார்மதங்கள் சோர
வருவான்தன் நாமம் வரும். **#758**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`காதலையுடைய என்னோடு` என இரண்டாவது விரிக்க. ஓடை - நெற்றிப் பட்டம். நெற்றி மருங்கு ஆர - நெற்றியின் இரு பக்கங்களிலும் பொருந்தும்படி. வார் - நீண்ட. திரு - அழகு. `நெற்றி மருங்கு ஆரச் செவிகளை வீசி. முகத்தில் மதங்கள் சோர வருவான் தன் நாமம் என்னோடு வரும்` என இயைத்து முடிக்க. நாமம் உடன் வருதலாவது, ஓரிடத்தில் நில்லாது நடந்து சென்றாலும் நாமங்களை உச்சரித்துக் கொண்ட நடத்தலாம். ``செம்முகத்துக் கார்மதம்`` என்பது முரண் தொடை.

வருகோள் தருபெருந் தீமையும் காலன் தமரவர்கள்
அரு கோட் டருமவ ராண்மையும் காய்பவன் கூர்ந்தன்பு
தருகோள் தருமர பிற்பத்தர் சித்தத் தறியணையும்
ஒருகோட் டிருசெவி முக்கண்செம் மேனிய ஒண்களிறே. **#759**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வரு கோள் - தசா புத்திகளாகவும், பிறவாறாகவும் வந்து பற்றுகின்ற கிரகங்கள். அருகு ஓட்டரும் - அருகினின்றும் அப்பாற்போகும்படி துரத்த இயலாத. அரும், பண்படியாகப் பிறந்த குறிப்பு வினைப் பெயரெச்சம். அவர் காலன் தமர் (தூதுவர்). அன்பு தருகோள் தரும் மரபின் பத்தர் - அன்பினால் தரப்படும் கொள்கை யால் தரப்படும் நெறிமுறைகளையுடைய அடியார். `அன்பு காரண மாகவே வழிபடும் அடியார்கள்` என்றபடி. சித்தத் தறி - உள்ளமாகிய தறி; ``தறி`` என்றது அவர் கருது கோள் பற்றி, உருவகம் அன்று. `தறியை அணையும் களிறு` என இயையும். ``ஒரு கோட்டுச் செம் மேனிய களிறு`` என்றது, `இஃதோர் அதிசயக் களிறு` என்றபடி. களிறு- முகத்தால்

யானையாகியவன். எனவே, ``களிறு`` என்றது `யானை போல்பவன்` என உவமை யாகுபெயர். ஆகுபெயர் அல்லாக்கால். ``காய்பவன்`` என உயர்திணை வினையோடு இயையாது. ஏகரம் பிரிநிலை. `களிறே தீமையும். ஆண்மையும் காய்பவன்` என இயைத்து முடிக்க. `ஆதலின் அவனையே அடைக` என்பது குறிப்பெச்சம்.

களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும் அளியானைக்
கண்ணுவதும் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்தாள்
நண்ணுவதும் நல்லார் கடன். #760

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

களி - மதக் களிப்பு. மதம், இங்கு அருள். ``யானைக் கன்று`` என்பது, `கன்றாகிய யானை` என்னும் பண்புத் தொகை. முன்பின்னாகிய புணர்ச்சி. ``யானை`` என்பது பிறிதின் இயைபு நீக்க வரின், ஆறாம் வேற்றுமைத் தொகைப் புணர்ச்சியாம். இங்கு அவ்வா றில்லை. செம்பொன் ஒளியான் - செவ்விய பொன்னினது ஒளி போலும் ஒளியையுடையவன், அளியான் - அருளாளன். கண்ணல் - கருதல். மற்று, அசை, நல்லார் கடன் - நல்லொழுக்கம் உடையவர்கட்கு இன்றியமையாக் கடமைகள். `கடன் கணபதியைக் கண்ணுவதும்` கைத் தலங்கல் கூப்புவதும், அவன்தாள் நண்ணுவதும் என இயைத்து முடிக்க. நல்லார்க்கு இவைகளைக் கடனாகக் கூறியது, நல்லார் எண்ணியவற்றை இடையூறின்றி இனிது முடித்தற் பொருட்டும், தீயார் எண்ணியவற்றை இடை முரிவித்தற் பொருட்டுமே இறைவனால் தந்தருளப்பட்ட கடவுளாதல் பற்றி. இதனைத் ``தனதடி வழிபடு மவர்இடர் - கணபதி வர அருளினன்... ... இறையே`` என ஆளுடைய பிள்ளையார் அருளிச் செய்தமையான் அறிக.

நல்லார் பழிப்பில் எழிற்செம் பவளத்தை நாணநின்ற
பொல்லா முகத்தெங்கள் போதக மேபுரம் மூன்றெரித்த
வில்லான் அளித்த விநாயக னேயென்று மெய்ம்மகிழ
வல்லார் மனத்தன்றி மாட்டாள் இருக்க மலர்த்திருவே. #761

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நல்லார், இங்கு இரத்தின பரீட்சையில் வல்லவர், அவரால், `குற்றம் உடைத்து` என்று பழித்தல் இல்லாத பவளம் என்க. பவளத்து ஐ - பவளத்தினது அழகு. `நாண நின்ற போதகம்` என இயை யும். `பொற்` என்பது எதுகை நோக்கி, `போல்` எனத் திரிந்து நின்றது. பொள் -

பொள்ளல்; புழை. புழை ஆம் முகம் - உள்துளை பொருந்திய தும்பி முகம். போதகம் - யானை. எங்கள் போதகமே, விநாயகனே - என்று துதித்து, அதனால் உள்ளமே யன்றி உடம்பும் மகிழ்வடைய வல்லாரது மனத்திலின்றி (ஏனையோர் மனங்களில்) மலர்த் திரு இருக்க மாட்டாள்` என இயைத்து முடிக்க. முன் தவம் உடையார்க் கன்றி இது கூடாமையின் ``வல்லார்`` என்றார். மெய் மகிழ்தலாவது, புளகம் போர்த்தல்.

மூத்த நாயனார் திருஇரட்டை மணிமாலை முற்றிற்று.

கபிலதேவ நாயனார் - சிவபெருமான் திருஇரட்டை மணிமாலை

அந்தி மதிமுகிழான் அந்தியஞ் செந்நிறத்தான்
அந்தியே போலும் அவிர்சடையான் அந்தியின்
தூங்கிருள்சேர் யாமமே போலும் சுடுநீற்றான்
வீங்கிருள்சேர் நீல மிடறு. **#762**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இங்கு, `இரட்டை மணி மாலை` என்று இருப்பது `இணைமணி மாலை` என்று இருத்தல் வேண்டும். ஏனெனில், இப்பொழுது இதில் கிடைத்துள்ள பாடல்கள் - *37.37* ஆவது பாடல் இப்பிரபந்தத்தின் இறுதிப்பாடல், முதற் பாடல் தொடங்கிய அந்தச் சொல்லால் முடிய வேண்டும். அவ்வாறு முடியவில்லை. வெண்பா வும், கட்டளைக் கலித்துறையும் மாறி மாறி அந்தாதியாக வந்து, *20* பாடல்களில் முடிவது இரட்டை மணி மாலை. அவை அவ்வாறு வந்து, *100* பாடல்களில் முடிவது இணைமணி மாலை. எனவே இதில் எஞ்சிய பாடல்கள் கிடைத்தில. பதிப்புக்களில், `இரட்டை மணிமாலை` என்று இருப்பதால், இங்கும் அவ்வாறே சொல்லப்பட்டது.

இப்பாட்டில், ``அந்தி`` என்னும் சொல் ஒரு பொருளிலே பின்னும் பின்னும் வந்தது சொற்பொருட் பின்வருநிலையணி. அந்தி- மாலைக் காலம். மதி முகிழ் - முகிழ் மதி; இளந்திங்கள்; மூன்றாம் பிறை. அந்திச் செந்நிறம், உவமத் தொகை. அவிர் - ஒளிவிடுகின்ற. ``அந்தியில்`` என்பதில், ``இல்`` என்பது `பின்` என்னும் பொருட் டாகிய ஏழன் உருபு. இல்லின் பின் உள்ளதை. `இல்லில் உள்ளது` என்றல் போல. தூங்கு இருள் - திணிந்த இருள். யாமம், இடையாமம். வீங்கு இருள் - மிகுந்த இருள். இதில் ``இருள்`` என்றது கருமையை. `சுடு நீற்றான் மிடறு யாமமே போலும்; அவன் மதி முகிழான்; செந்நிறத் தான்; அவிர் சடையான்` என இயைத்து முடிக்க. இது சிவபெருமானது திருவுருவை வியந்தது.

மிடற்றாழ் கடல்நஞ்சம் வைக்கின்ற ஞான்று மெல் லோதிநல்லாள்
மடற்றா மரைக்கைகள் காத்தில வேமழு வாளதனால்
அடற்றா தையைஅன்று தாளெறிந் தாற்கருள் செய்தகொள்கைக்
கடற்றாழ் வயற்செந்நெல் ஏறும்வெண் காட்டெங் கரும்பினையே. **#763**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வெண்காட்டு எம் கரும்பு போல்வானை (அவன் தனது) மிடற்றில் நஞ்சம் வைக்கின்ற ஞான நல்லாள் தாமரைக் கைகள் காத்திலவே; (தடுத்திலவே; அஃது ஏன்?) என இயைத்து முடிக்க. மெல் ஓதி - மென்மையான கூந்தல். நல்லாள் - அழகுடையவள்; உமை. மடல் - இதழ்கள். மழுவாளால் அன்று தாதையைத் தாள் எறிந்தான் - சண்டேசுர நாயனார். `கொள்கைக் கரும்பு` என இயையும். கடல் - கடலைச் சார்ந்த நிலம். தாழ் வயல் - பள்ளமான வயல்கள். நெல் - நெற்பயிர். ஏறும் - வளர்க்கின்ற. வெண்காடு. `திருவெண்காடு` என்னும் தலம். `வெண்காட்டின்கண் உள்ள கரும்பு` என்க. கரும்பு உவமையாகு பெயர் . `தடாமைக்குக் காரணம், இதனால் இவற்கு விளைவதொரு தீங்கில்லை என அறிந்திருந்தமையே` என்பது குறிப்பு. இங்ஙனம் இறைவியது அறிவைப் புகழும் முகத்தால், இறைவனது ஆற்றலைப் புகழ்ந்தவாறு. பல தலங்களுள் ஒன்றில் வைத்துப் புகழ்ந்தவாறு.

கருப்புச் சிலை அநங்கன் கட்டழகு சுட்ட
நெருப்புத் திருநெற்றி நாட்டம் திருச்சடையில்
திங்கள் புரையும் திரள்பொன் திருமேனி
எங்கள் இமையோர் இறைக்கு. **#764**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`எங்கள் இறைக்குத் திருநெற்றி நாட்டம் சுட்ட நெருப்பு; திருமேனி திங்கள் புரையும்` என இயைத்து முடிக்க. நாட்டம் - கண். திருமேனி திங்களை ஒத்தல் திருவெண்ணீற்றால், `திருச்சடை மட்டும் திங்களால் விளங்குவதன்று; திருமேனி முழுதுமே திங்களைப் போல விளங்கும்` என்றற்குத் திருச்சடைமேல் திங்களையே உவமை கூறினார். திரள் பொன் - பொன்திரள், பொன் திருமேனி, உவமத் தொகை. இதுவும் திருவுருவின் சிறப்பையே புகழ்ந்தவாறு. ``இமையோர் இறை`` என்பது `கடவுள்` என்னும் பொருட்டாய், ``எங்கள்`` என்பதனோடு ஆறாவதன் தொகை படத்தொக்கது.

இறைக்கோ குறைவில்லை உண்டிறை யேஎழி லார்எருக்கு
நறைக்கோ மளக்கொன்றை துன்றும் சடைமுடி நக்கர்சென்றிப்
பிறைக்கோர் பிளவும் பெறுவிளிக் கொண்டெம் பிரான்உடுக்கும்
குறைக்கோ வணமொழிந் தாற்பின்னை ஏதுங் குறைவில்லையே. **#765**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(`எல்லார்க்கும் குறைகள் உண்டு; இறைவனுக்கு யாதும் குறையில்லை` எனக் கூறினால்.) `இறைக்கோ குறைவில்லை? உண்டு. (ஆயினும்)

இறையே. சிறிதே (அஃது யாது எனின்,) எம்பிரான் (தான் சூடியுள்ள) ஒருபாதியாகிய பிறைக்கு மற்றொரு பாதி பெறவேண்டிய இளிவரலைக் கருத்திற்கொண்டு, தான் உடையின்றிக் கோவணம் மட்டும் உடுத்திருத்தலை நீங்கினால், அதற்குப்பின் அவனுக்கு ஏதும் குறையில்லை` என இவ்வாறு இயைத்துரைக்க. `இறைக்கு யாதும் குறையில்லை` என்பாரை மறுப்பார்போல இவற்றைச் சில குறைகளாகக் கூறியது, அவர் கூறியதையே மறை முகமாக வலியுறுத்தியதாம். இது பழிப்பதுபோலப் புகழ்ந்தது.நறை - தேன். கோமளம் - அழகு. `சடைச் சென்னி நக்கு ஆர் பிறை` என மாற்றிக் கொள்க. `நக்கார் என்பது குறுக்கல் பெற்றது. நக்கு- ஒளிவீசி. ``பிளவு`` என்பது `பாதி` என்றபடி. இளி - இளிவரல். ``கருத்திற் கொண்டு` என்பது, கருத்திற் கொண்டு ஆவன செய்தலாகிய தன் காரியம் தோற்றி நின்றது.

இல்லை பிறவிக் கடலேறல் இன்புறவில்
முல்லை கமழும் முதுகுன்றில் கொல்லை
விடையானை வேதியனை வெண்மதிசேர் செம்பொற்
சடையானைச் சாராதார் தாம். **#766**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இன் புறவு - இனிய காடு. முதுகுன்று - திரு முதுகுன்றத் தலம். `முதுகுன்றில் உள்ள` என்க. `கொல்` என்பது ஐகாரம் பெற்று. ``கொல்லை`` என வந்தது. `கொல் விடை` என்பது இன அடையாய். ஆற்றல் மாத்திரையே விளக்கிற்று. `போர் விடை` என்றபடி. ``விடையானை... சாராதார் தாம் பிறவிக் கடல் ஏறல் இல்லை`` என்க. இதனால், `பிறவி நீங்குமாறு சிவபத்தியன்றி வேறு இல்லை` என்பது கூறப்பட்டதாம். ``யதா சர்மவ தாகாசம் வேஷ்ட யிஷ்யந்தி மாநவா; ததாசிவ மவிஜ்ஞாய துக்கஸ்யாந்தோ பவிஷ்யதி!!`` என்னும் சுருதியையும் *1*அதனை மொழி பெயர்த்து, பரசிவ னுணர்ச்சி யின்றிப்
பல்லுயிர்த் தொகையு மென்றும்
விரவிய துயர்க்கீ றெய்தி
வீடுபே றடைது மென்றல்,
உருவமில் விசும்பிற் றோலை
உரித்துடுப் பதற்கொப் பென்றே
பெருமறை பேசிற் றென்னில்.
பின்னும்ஓர் சான்று முண்டோ *2*
எனக் கந்த புராணமும்,
மானுடன் விசும்பைத் தோல்போற்

சுருட்டுதல் வல்ல னாயின்
ஈனமில் சிவனைக் காணாது
இடும்பைதீர் வீடும் எய்தும்;
மானமார் சுருதி கூறும்
வழக்கிவை யாத லாலே
ஆனமர் இறையைக் காணும்
உபாயமே அறிதல் வேண்டும்
எனக் காஞ்சிப்புராணமும் *3* கூறுவனவற்றையும், மற்றும்
அவனவ ளதுவெனு மனைவதொ றொன்றும்இச்
சிவனலால் முத்தியில் சேர்த்து வார் இலை;
துவளரும் இம்முறை சுருதி கூறுமால்;
இவனடி வழிபடின் முத்தி எய்துவாய்
என அக்காஞ்சிப் புராணமும் *1* கூறுதலையும் காண்க.

தாமரைக் கோவும்நன் மாலும் வணங்கத் தலையிடத்துத்
தாம்அரைக் கோவணத் தோடிரந் துண்ணினுஞ் சார்ந்தவர்க்குத்
தாமரைக் கோமளத் தோடுஉல காளத் தருவர்கண்டீர்
தாமரைக் கோமளக் கைத்தவ ளப்பொடிச் சங்கரரே. **#767**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியை முதலிற் கூட்டியுரைக்க. தாமரைக்கோ - பிரமன். தலையிடம் - வாயிற் படியிடம். `தாம் அரையிலே கோவணத் தோடு இரந்து உண்ணினும்` என்க. ``கோவணத்தோடு`` என்றது, `கோவணத்தை மாத்திரமே உடுத்து` என்றபடி.

தாமரைக் கோமளம் - திருமகள். கண்டீர், முன்னிலையசை. தாமரைக் கோமளக் கை - தாவுகின்ற மானையேந்திய அழகிய கை. தவளப்பொடி - வெண் பொடி; திருநீறு. `தாம் கோவணத்தோடு இரந்து உண்ணினும், தம்மைச் சார்ந்தவர்க்கு உலகாளத் தருவர்` என்க.

தான்நாளும் பிச்சை புகும்போலும் தன்அடியார்
வான்ஆள, மண் ஆள வைத்து
என நக்கீர தேவரும் கூறினார். *2* இப்பாட்டு யமகம் என்னும் சொல்லணி பெற்றது.

சங்குகோள் எண்ணுவரே பாவையரைத் தம்அங்கம்
பங்குபோய் நின்றாலும் பாய்கலுழிக் கங்கை
வரியராப் போதும் வளர்சடையாய் நின்போல்
பெரியர்ஆ வாரோ பிறர். **#768**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பாய் கலுழி... வளர் சடையாய், தம் அங்கம் பங்கு போய் நின்றாலும் பாவையரைச் சங்கு கோள் எண்ணுவரே; (ஆயினும்) பிறர் நின்போல் பெரியர் ஆவாரோ? (ஆகார்.) - எனக் கூட்டியுரைக்க. அங்கம் - உடம்பு. பாவையர் - மகளிர். ``சங்கு கோள் எண்ணுவர்`` என்றது, `தம்மைக் காதலிக்கச் செய்ய விரும்புவர்` என்றபடி.

காதல் மீக்கூரப் பெற்ற மகளிர்க்கு அவர் தம் சங்க வளைகள் கழன்று வீழ்தல் இயல்பு. அதனை நிகழ்விக்கச் சிலர் எண்ணுதலையே, ``சங்கு கோள் எண்ணுவர்`` என்றார். ஏகாரம் தேற்றம். ``பிறர், அங்கம் பங்கு போய் நின்றாலும் சங்கு கோள் எண்ணுவரே ஆனாலும் நின்போல் பெரியவர் ஆவரோ`` என்றது, `நீ அங்கம் பங்குபோய் நின்றாலும் பாவையரைச் சங்கு கொண்டு பெரியவன் ஆகின்றாய்; அது மற்றவர்களுக்குக் கூடுமோ` என்றபடி. அங்கம் பங்குபோதல் சிவனுக்கு, உமாதேவிக்கு ஒருபாகத்தைக் கொடுத்ததனாலும், பிறர்க்கு, உடம்பு நரை திரை மூப்புப் பிணிகளால் மெலிதலாலும் பொருந்துகின்றது. பாவையரைச் சங்கு கொள்ளுதல் சிவனுக்குத் தாருகாவனத்து இருடியர் பத்தினிகளை மையல் செய்வித்ததனாலும், பிறர்க்கு, மகளிரை மையல் செய்விக்க எண்ணுதலாலும் பொருந்து கின்றது.

எனவே, மேற்போக்கில் ஏனையோரும் சிவன் செய்த வற்றையே செய்வார் போலக் காணப்பட்டாலும், சிவன் தனக்குப் பற்று யாதுமின்றி அருள் காரணமாக எல்லாவற்றையும், பிறர் பொருட் டாகவே செய்து பெரியன் ஆதல்போல ஆதல் பிறர்க்குக் கூடாது` என விளக்கியவாறு.

கலுழிக் கங்கை - (சடைக் காட்டின் இடையே பாய்தலால்) கான்யாற்றைப் போலும் கங்கை. `கங்கையிலே அரா (பாம்பு) போதும் (புகும்) சடை` என்க.

பிறப்பாழ் குழியிடை வீழ்ந்துநை வேற்குநின் பேரருளின்
சிறப்பார் திருக்கை தரக்கிற்றியேதிரி யும்புரமூன்
றறப்பாய் எரியுற வான்வரை வில்வளைத் தாய்இரவாய்
மறப்பா வரியர நாணிடைக் கோத்தகை வானவனே. **#769**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``திரியும் புரம் மூன்று`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க, திரியும் புரம் - வானத்தில் உலாவும் கோட்டைகள். இங்ஙனம் கூறியதனால் `திரிபுரம்` என்பது வினைத்தொகையாகவும் கொள்ளுதற்கு உரித்தாதல் அறியப்படும். ``திரியும் புரம்`` என்றே திருமுறைகளில் பல இடங்களில் வருதல் காணலாம்.

அறப் பாய் எரி- முற்றும் அழியும்படி பற்றும் தீ. உற - பொருந்தும்படி. வான் வரை - சிறந்த மலை; மகாமேரு. இனி, `உறுவான்` என வான் ஈற்று வினையெச்சமாகப் பாடம் ஓதலும் ஆம். `வில்லாக` என ஆக்கம் வருவிக்க. ஆயிர வாய், மற, பாவரி அர - ஆயிரம் வாய்களையும், கொடுமையையும், பரவியவரிகளையும் உடைய பாம்பு. செய்யுளாதலின், `அர` என்பதில் குறிற்கீழ் ஆகாரம் உகரம் செலாது குறுகிமட்டும் நின்றது. இடை - வில்லின் கண். வானவன் - தேவன். `பிறப்பாகிய ஆழ் குழி` எனவும், `அருளாகிய சிறப்பு` எனவும் உரைக்க. சிறப்புத் தருவதனைச் ``சிறப்பு`` எனவும் உரைக்க. சிறப்புத் தருவதனைச் ``சிறப்பு`` என உபசரித்தார். சிறப் பாவது வீடாதலைச் ``சிறப்பீனும் செல்வமும் ஈனும்``, ``சிறப்பென் னும் செம்பொருள்`` என்னும் திருக்குறள்களால் * அறிக. ``அருளின்`` என்பதில் இன், தவிர்வழி வந்த சாரியை. `சிறப்பைத் தருவதாகிய அருள் நிறைந்த திருக்கை` என்றபடி. ஆழ் குழியில் வீழ்ந்தாரை எடுப் போர் கைதர வேண்டியிருத்தலை நினைக. கிற்றியே - வல்லையோ? `என்னைப் பற்றியுள்ள மலங்கள் மிக வலியன என்பார், `வல்லையோ` என்றார்.

வானம் மணிமுகடா மால்வரையே தூணாக
ஆன பெரும்பார் அரங்காகக் கானகத்தில்
அம்மா முழவதிர ஆடும் பொழுதாரூர்
எம்மானுக் கெய்தா திடம். **#770**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மணி முகடு - அழகிய மேற் கூரை. மால் வரை - பெரிய அட்டதிசை மலைகள். பார் - பூவுலகம். அரங்கு - ஆடும் மண்டபம். அம் மா முழவு - அழகிய, பெரிய மத்தளம். இது வாசிப்பாரால் வாசிக்கப்படும். எய்தாது - போதாது. இங்குக் கூறிய ஆட்டம். பிரம தேவனுடைய நித்திய கற்பங்களின் முடிவில் செய்யப்படும் நடனம். ``கானகம்`` என்றது உயிர்கள் ஒடுங்கிய நிலையில் உள்ள உலகத்தை. `அப்பொழுதும் சிவபெருமானது அருளிலே உயிர்கள் பிழைக்கின்றன` என்பதாம். `முகடா, தூணா, அரங்காக ஆடும் பொழுது ஆரூர் எம்மானுக்கு இடம் எய்தாது` என்க. `இங்ஙனம் ஆகலின், அவன் ஊர்தோறும் உள்ள சுடுகாட்டில் ஆடுவதாக நினைப் பாரது நிலைமை எத்தன்மையது` என்பது கருத்து. சிவபெருமானது பெரு நிலையை எடுத்தோதியவாறு.

இடப்பா கமுமுடை யாள்வரை யின்இள வஞ்சியன்ன
மடப்பால் மொழியென்பர் நின்வலப் பாகத்து மான்மழுவும்
விடப்பா சனக்கச்சும் இச்சைப் படநீ றணிந்துமிக்க
கடப்பார் களிற்றுரி கொண்டுளங்கும் மூடும்எங் கண்ணுதலே. **#771**

`தனது இடப்பாகத்தில் உடையாளாகிய, வரை ஈன் பால்மொழி உள்ளாள்` என்பர்; அங்கும், `வலப்பாகத்தில் மானுக்கு நேராக மழு உள்ளது` என்பர்; அங்கும், `வயிற்றில், நஞ்சுள்ள பாத்திர மாகிய பாம்பாகிய கச்சு உள்ளது` என்பர்; அங்கும், விருப்பம் உண்டாதலால் திருநீற்றை நிறையப் பூசியிருந்தும் எங்கள் சிவ பெருமான், மிக்க மதம் பொருந்திய பரிய யானையின் தோலை அந்த எல்லா இடங்களும் மறையும்படி போர்த்துள்ளான்.

விளக்கவுரை

`இஃது எதற்கு` என்பது குறிப்பெச்சம். மலைமகள், மழு, பாம்பு, திருநீறு இவற்றின்மேல் உள்ள ஆசையால் இவற்றைத் தன் திருமேனியில் கொண்டுள்ள சிவபெருமான் அந்தக் கோலம் சிறிதும் தோன்றாதபடி யானைத் தோலால் மூடியிருப்பது ஏன்` என்றபடி. `திருநீறே கவசமாய் எங்கும் பொதிந்திருக்க, மற்றும் ஓர் கவசம் மிகை` என்பதும் கருத்து. ``இடப்பாகம்`` முதலியவற்றைச் சொல் பல்காமைப் பொருட்டு இருமுறை கூறாது ஒருமுறையே கூறினார் ஆகலின், அதற்கு இவ்வாறுரைத்தலே கருத்தாதல் அறிக. ``என்பர்`` என்பது பிற இடங்களிலும் சென்று இயைவது. உடையாள் - அனைத்தையும் உடையவள். வரை ஈன் - மலை பெற்ற. இள வஞ்சி அன்ன - இளைய வஞ்சிக் கொடி போன்ற. மடம் - மகளிர் குணம் நான்கனுள் ஒன்று. பால் மொழி, பால் போலும் சொற்களை உடையவள். ``மழுவும்`` என்னும் உம்மையை ``வலப் பாகத்து`` என்பதனோடு கூட்டுக. ``கச்சு`` என்றதனால், `வயிறு` என்பது வருவிக்கப்பட்டது. கடம் - மதம். `யானையை உரித்துப் போர்த்தது பிறர்மேல் வைத்த கருணையால்` என்பதே இங்குப் புலப்படுத்தக் கருதியது.

கண்ணி இளம்பிறையும் காய்சினத்த மாசுணமும்
நண்ணி இருந்தால் நலம்இல்லை தண்அலங்கல்
பூங்கொன்றை யின்தேன் பொதியுஞ் சடைப்புனிதா
வாங்கொன்றை இன்றே மதித்து. **#772**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``தண் அலங்கல்.... புனிதா`` - என்பதை முதலிற் கூட்டி, `மதித்து, இன்றே வாங்கு` என மாற்றி வைத்து உரைக்க. கண்ணி - முடியில் அணியும் மாலை. `கண்ணியாகிய பிறை` என்க. மாசுணம் - பாம்பு. `பிறையும், பாம்பும் பகைப் பொருள்கள். ஆகையால், அந்த இரண்டையும் உனது சடையில் சேர்ந்து இருக்க வைத்தால் நன்மை யில்லையாம். (தீமை விளையும்.) ஆகையால், இதனைப் பொருட்படுத்தி

உணர்ந்து, அந்த இரண்டில் ஏதேனும் ஒன்றை இப்பொழுதே நீக்கிவிடு` என்க. இஃது, இறைவனது அருளாற்றலின் சிறப்பை உணராதவர் போல அச்சம் உற்றுக் கூறியது. இங்ஙனம் கூறும் முகத்தால், பகைப் பொருள்களும் சிவபெருமானை அடைந்தால் பகை நீங்கி நட்புற்று வாழ்தலை உணர்த்தியவாறு.

`ஒற்றி ஊரும் ஒளிமதி பாம்பினை
ஒற்றி ஊரும்அப் பாம்பும் அதனையே;
ஒற்றி ஊர ஒருசடை வைத்தவன்
ஒற்றி யூர்தொழ நம்வினை ஒயுமே` *1*

என்பதும்,

`பாம்பும், மதியும், புனலும் தம்மிற்
பகைதீர்த் துடன்வைத்த பண்பா போற்றி`` *2*

என்பதும் அப்பர் திருமொழிகள்.

மதிமயங் கப்பொங்கு கோழிருள் கண்டவ விண்டவர்தம்
பதிமயங் கச்செற்ற கொற்றவில் வானவ நற்றவர்சூழ்
அதிகைமங் கைத்திரு வீரட்ட வாரிட்ட தேனுமுண்டு
கதிமயங் கச்செல்வ தேசெல்வ மாகக் கருதுவதே **#773**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மதி - உயிர்களின் அறிவு. கோழிருள் கண்டவ - திணிந்த இருள்போலும் மிடற்றை உடையவனே. `கண்டன்` என்னும் சினையடியாகப் பிறந்த பெயர் இடையே அகரத்தை வேண்டாவழி சாரியையாகப் பெற்று, ``கண்டவன்`` என நின்றது. இனி, `இருள் கண்டவ` எனப் பாடம் ஓதி, `ஊழிக் காலத்து இருளைக் கண்டவனே` என உரைப்பினும் அமையும். விண்டவர் - பகையால் நீங்கினவர். பதி - ஊர், அதிகை மங்கை - திருவதிகைத் தலம். ``அதியரைய மங்கை அமர்ந்தார் போலும்`` *3* என அப்பரும் அருளிச் செய்தார். கதி மயங்க - வழி பலவாய்க்கூட. `பல ஊர்களுக்குச் சென்று` என்றபடி. `கண்டல், வானவ, வீரட்ட, ஆர் இட்டதேனும் உண்டு கதி மயங்கச் செய்வதையே செல்வமாக நீ கருதலாமோ?` (இஃது உனக்குத் தகுதியா?) என முடிக்க. இதுவும் பழித்தது போலப் புகழ்ந்தது. சிவ பெருமான் வைரவரைத் தோற்றுவித்துப் பிரம கபாலத்தில் இரத்த பிச்சை ஏற்கச் செய்தது தேவர்களது அகங்காரங்களை அடக்குதற் பொருட்டும், பிட்சாடனராய்ச் சென்று பிச்சை ஏற்றது தாருகாவன இருடியரது அறியாமையைப் போக்குதற் பொருட்டும் ஆதலைச் சொல்லாமற் சொல்லி வியந்தவாறு.

கருதுங் கருத்துடையேன் கையுடையேன் கூப்பப்
பெரிதும் பிறதிறத்துப் பேசேன் அரிதன்றே

யாகப் பிறையான் இனியென் அகம்புகுந்து
போகப் பெறுமோ புறம். #774
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கருதுதல் - நினைத்தல். கருத்து - மனம் ``கருதும்`` என்றதும், `கருதுதற்கு` என்றவாறேயாம். `கூப்பக் கையுடையேன்` என்க. எனவே, `யான் அவனைக் கருதுதற்கும், தொழுதற்கும் தடை என்னை` என்றபடி. அரிது அன்றே - (தடையில்லையாகவே) அவை யியல்வது அரிதாதலே இல்லை. ஏகாரத் தேற்றம். `அவை யியல்வது அரிதன்று ஆதலால், பிறையான் என் அகம் (மனம்) புகுந்து புறம் போகப் பெறுமோ` என்க. புகுந்து - பின் புகுந்தபின். ``இனிப் புறம் போகலொட்டேனே`` என மாணிக்கவாசகரும் அருளிச் செய்தார்.*

புறமறையப்புரி புன்சடை விட்டெரி பொன்திகழும்
நிறமறையத்திரு நீறு துதைந்தது நீள் கடல்நஞ்
சுறமறை யக்கொண்ட கண்டமும் சால உறைப்புடைத்தால்
அறமறையச்சொல்லி வைத்தையம் வேண்டும் அடிகளுக்கே. #775
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியை முதலிற் கூட்டியுரைக்க. அறம் மறையைச் சொல்லி - அறத்தை மறைபொருளாய் நிற்கும்படி (மறைகளின் உள்ளேயிருக்கும்படி) சொல்லி வைத்து, ஐயம் வேண்டும் (அது நடைமுறையில் நிகழவேண்டித்)தானே பிச்சைவேண்டி நிற்கின்ற. புறம் - முதுகு. விட்டு - தாழ விடப்பட்டு. இஃது எண்ணின் கண் வந்த வினையெச்சம். எரி பொன் திகழும் - நெருப்பில் காய்கின்ற பொன்போலும் நிறம். துதைந்தது - நிறையப் பூசப்பட்டது. உற மறைய - முற்றிலும் மறையும்படி. ``கண்டமும்`` என்னும் உம்மை சிறப்பு. உறைப்பு - உரம்; வலிமை. ஆல், அசை. இதுவும் திரு மேனியை வருணித்துப் புகழ்ந்தவாறு.

அடியோமைத் தாங்கியோ ஆடை யுடுத்தோ
குடியோம்ப மாநிதியங் கொண்டோ பொடியாடும்
நெற்றியூர் வாளரவ நீள் சடையாய் நின்ஊரை
ஒற்றியூர் ஆக்கிற் றுரை. #776
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பொடி ஆடும்` என்பது முதலாகத் தொடங்கி, ``உரை`` என்பதை, ``கொண்டோ`` என்பதன் பின்னர் வைத்து உரைக்க. தாங்குதல் -

புரத்தல். குடி - மனைவியும், மக்களும். ஆடையே இல்லாதவனை ``ஆடை உடுத்தோ`` என்றது, அவனது நிலையைச் சுட்டிக்காட்டி நகைத்தவாறு. ``அடியோமைத் தாங்கியோ`` என்றதும், ``குடிஓம்பவோ`` என்றதுங்கூட அவ்வாறு தாங்காமையை யும், ஓம்பாமையையும் மறுதலை முகத்தாற் கூறி நகையாடினவேயாம். `உன் அடியார்கள் ஒன்றும் அற்றவர்கள்தாமே? உன்னுடைய மனைவியும், மக்களும் தங்கள் தங்கள் திறமையால்தானே மக்களிடம் வழிபாடு பெறுகின்றார்கள்?` என்பது கருத்து. `அதனால், நீ உன் ஊரை ஒற்றியாக்கியது வீணேயன்றோ` என்றபடி. பொடு ஆடும் - திருநீற்றில் மூழ்குகின்ற. `பொடி ஆடும் நெற்றியையும், ஊர்கின்ற வாளரவத்தையுடைய சடையையும், உடையவனே` என்க. கடல் அலைகள் வந்து ஒற்றுதல் பற்றி, `ஒற்றியூர்` எனப் பெற்ற பெயரைச் சிலேடையால் ஆசிரியர் பலரும் இங்ஙனம் நகைதோன்றக் கூறுவர். ``ஒற்றியூரேல், உம்மதன்று`` சுந்தரம் - தி.7 ப.5 பா.9 என்றது முதலியன காண்க. ஒற்றியூரை ஊராகக் கொண்டதனைக் குறித்து நயம்படப் புகழ்ந்தவாறு.

உரைவந் துறும்பதத் தேயுரை மின்கள்அன் றாயினிப்பால்
நரைவந் துறும்பின்னை வந்துறுங் காலன்நன் முத்திடறித்
திரைவந் துறுங்கரைக் கேகலம் வந்துறத் திண்கைவன்றாள்
வரைந் துறுங்கடல் மாமறைக் காட்டெம் மணியினையே. **#777**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நன் முத்து இடறி`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. உரை வந்து உறும் பதம் - பேச்சுக்கள் தடையின்றி வந்து பொருந்த (நன்றாய்ப் பேச முடிகின்ற) அந்தப் பருவத்தில் தானே (துதியுங்கள்). கலம் - மரக் கலம், வந்து உற - வந்து சேரும்படி. கை - கைபோன்றவனும். தாள் - முயற்சி; செயற்பாடு, முயற்சியை, முன் ``கை`` என்றதற்கு ஏற்ப, ``தாள்`` (கால்) என்றது சொல் நயம். வரை - மலை. ``திரை வந்துறும்`` என்பது கரைக்கு அடையாய், வேறுமுடி பாயிற்று. மலை போலும் அலைகள்; உவமையாகுபெயர். மணி - மாணிக்கம். இது காதற் சொல், `மணியினை உரைமின்கள்` என்க.

மணியமரும் மாமாட வாய்மூரான் தன்னை
அணியமர ரோடயனும் மாலும் துணிசினத்த
செஞ்சூட்ட சேவற் கொடியானு மாய்நின்று
நஞ்சூட்ட எண்ணியவா நன்று. **#778**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மணி அமரும் மாடம் - மணிகளை வைத்து இழைத் தமையால் அவை பொருந்தியுள்ள மாடங்கள். வாய்மூர் - திருவாய் மூர்த்தலம். அணி - வரிசை; கூட்டம். செஞ்சூட்ட சேவல் - சிவந்த கொண்டையையுடைய சேவற் கோழி. அதனைக் கொடியாக உடைய வன் முருகன். `இவர்கள் எல்லாரும் ஒருங்கு சேர்ந்து நின்ற நஞ்சு ஊட்ட எண்ணம் இட்டவாறு நன்று` எனப் பழித்தவாறு (அமரரும், அயனும், மாலும் தாங்கள் பிழைக்க நினைத்து எண்ணம் இட்டார்கள்; முருகன் ஏன் அதற்கு இசைய வேண்டும்` என்பது கருத்து. `இவர்கள் யாவராலும் சிவபெருமானது நித்திய (அழிவிலா)த் தன்மை நன்கறியப்பட்டது) என்பது இதன் உண்மைப் பொருள். மேலேயும்,

மிடற்று ஆழ்கடல் நஞ்சம் வைக்கின்ற ஞான்று
மெல்லோதி நல்லாள்
மடற் றாமரைக் கைகள் காத்திலவே.*

என இரங்கும் முகத்தால் இதனை விளக்கினார்.

நன்றைக் குறும்இரு மல்பெரு மூச்சுநண் ணாதமுன்னம்
குன்றைக் குறுவது கொண்டழி யாதறி வீர்செறிமின்
கொன்றைக் குறுநறுங் கண்ணியி னான்றன்கொய் பூங்கயிலைக்
குன்றைக் குறுகரி தேனும்உள் ளத்திடைக் கொள்மின்களே. **#779**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``குன்றைக் குறுவது... அறிவீர்`` என்னும் தொடரை முதற்கண் கூட்டி உரைக்க. ஐக்கு நன்று உறும் இருமல் - கோழையை வெளிப்படுத்தற்கு நன்கு பொருந்துவதாகிய இருமல். இருமலும், பெருமூச்சும் நண்ணுதல் முதுமைக் காலத்தில். எனவே, ``அவை நண் ணும் முன்னம்`` என்றது, `இளமையிற்றானே` என்றதாம். `குறியது` என்பது. எதுகை நயம் நோக்கி, ``குறுவது` என வந்தது. `குறுவதாக` என ஆக்கம் வருவிக்க. குன்றைக் குறுவதாகக் கொண்டு அழியாது அறிவீர் - மலையை (மலை போலப் பெரிதாகிய பயனை)ச் சிறியதாக நினைத்து இழந்து கெடாதவாறு. ஆவனவற்றை அறியும் அறிவுடைய வர்களே, கயிலாயத்தை அடைதல் அரியதொன்றாயினும் (`அரிது` என்று விட்டொழியாது) கயிலை நாயகனை உள்ளத்தில் நினையுங் கள்; அதன் பயனாகப் பின் கயிலாயத்தில் செறியுங்கள். (சேருங்கள்)

கொண்ட பலிநுமக்கும் கொய்தார்க் குமரர்க்கும்
புண்டரிக மாதினுக்கும் போதுமே மண்டி
உயிரிழந்தார் சேர்புறங்காட் டோரிவாய் ஈர்ப்ப

மயிரிழந்த வெண்டலைவாய் வந்து. #780
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பெருமானே` என்பதை வருவித்து, ``மயிரிழந்த`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. பலி - பிச்சை. புண்டரிகம் - புலி. அது சாதி பற்றிச் சிங்கத்தைக் குறித்தது. சிங்க வாகனத்தை யுடைய மாது காளி. இனி, `அன்பர் இதயத் தாமரை` எனினும் ஆம். குமரர் - பிள்ளைகள் விநாயகனும், முருகனும் `உயிர் இழந்தார் மண்டிச் சேர் புறங்காடு` என்க. மண்டி - நெருங்கி. வெண்தலைவாய்- வெண்தலையின்கண் (கொண்ட பலி) `பெருமானே, ஒரு தலையோட்டளவில் நீர் கொண்டு செல்கின்ற பிச்சை உமக்கும், உம் பிள்ளைகள் இருவருக்கும், அம்மைக்கும் ஆக நால்வருக்கும் போதுமோ` என்க. `எடுப்பதுதான் பிச்சையாயிற்றே; அதையாவது எல்லாருக்கும் ஆகும்படி பெரிய பாத்திரத்தைக் கொண்டு எடுக்கலா காதோ` என்றபடி. இதனால், `உங்களில் யாருக்கும் இந்தப் பிச்சை தேவையில்லாமை தெரிகின்றது` என்பதைக் குறிப்பாய் உணர்த்திப் பழிப்பது போலப் புகழ்ந்தவாறு.

வந்தா றலைக்கும் வலஞ்சுழி வானவ வானவர்தம்
அந்தார் மகுடத் தடுத்தபைம் போதில்அந் தேனுழக்கிச்
செந்தா மரைச்செல்வி காட்டும் திருவடிக் குஞ்செல்லுமே
எந்தாய் அடித்தொண்டர் ஓடிப் பிடித்திட்ட இன்மலரே. #781
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஆறு - காவிரியாறு. `ஆறு வந்து அலைக்கும் வலஞ்சுழி` என்க. வானவ - கடவுளே `போதினின்றும் ஒழுகும் அழகிய. தேன்`` என உரைக்க. ``திருவடிகளை, `தாமரை` எனக் கூறுதல் தேனோடு பொலிதலால் உண்மையாகின்றது`` - என்றபடி. எந்தாய் அடி- எந்தையாகிய உனது திருவடி. செல்லுமே - ஏற்குமோ. பிடித்தல்- கண்டறிந்து பறித்தல். `பறிந்திட்ட` எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். `தேவர்களது கற்பக மலரைப் பொருந்தி விளங்கும் உனது திருவடிகட்கு இங்கு மக்கள் தேடிக் கண்டு பறித்து இடுகின்ற சில மலர்கள் ஏற்புடைய வாகுமோ` என்றபடி. `இன்மலர் செல்லுமே` என முடிக்க.

மலர்ந்த மலர்தூவி மாமனத்தைக் கூப்பிப்
புலர்ந்தும் புலராத போதும் கலந்திருந்து
கண்ணீர் அரும்பக் கசிவார்க்குக் காண்பெளியன்
தெண்ணீர் சடைக்கரந்த தே. #782
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கூப்பி`` என்பதனோடு இயைத்து முரண் நயம் தோன்றுதற்பொருட்டு ``மலர்ந்த`` என்றாராகலின் அதற்கு. `மலரும் நிலையில் உள்ள` என்பதே பொருளாதல் அறிக. மா - குதிரை. கூப்பி- குவியப் பண்ணி. `போது` என்பது, ``புலர்ந்த`` என்பதனோடும் இயையும் ஆதலின், ``புலர்ந்ததும்`` என்றதற்கும், `புலர்ந்தபோதும்` என்பதே பொருள். புலர்ந்தபோது காலை நேரம். புலராத போது - மாலை நேரம். கலந்து - அன்பால் உள்ளம் பொருந்தி. `தே, தூவி, கூப்பி, கலந்திருந்த கண் நீர் அரும்பக் கசிவார்க் காண்பு எளியன்` என இயைத்து முடிக்க. `அல்லாதார்க்கு எளியனல்லன்` என்பது கருத்து.

தேவனைப் பூதப் படையனைக் கோதைத் திருஇதழிப்
பூவனைக் காய்சினப் போர்விடை தன்னொடும் போற்றநின்ற
மூவனை ஈருரு வாயமுக் கண்ணனை முன்னுமறை
நாவனை நான்மற வேன் இவை நான்வல்ல ஞானங்களே. **#783**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``தேவன்`` என்றது, தலைமை பற்றி, `தேவ தேவன்; மகாதேவன்` என்னும் பொருட்டாய் நின்றது. கோதை - மாலை `கோதையின் கண்` என ஏழாவது விரித்து, அதனை, ``பூவன்`` குறிப்பு வினைப்பெயரோடு முடிக்க. இதழி - கொன்றை. அடையாளப் பூவா தலின் ``திருஇதழி`` என்றார். விடை - இடபம். அதற்குக் காய் சினமும், போரும் இன அடையாய் வந்தன. ``போற்ற`` என்றது, `யாவரும் போற்ற` என்றபடி. மூவன் - மூப்பவன். `மூத்தவன்` என இறந்த காலத் தாற் கூறற்பாலதனை எதிர்காலத்தாற் கூறினார். எதிர் காலம் உணர்த்து வதில் வகரமெய் பகர மெய்யோடு ஒக்கும் ஆதலின், ஈண்டு எதுகை நோக்கி வகரமெய் வந்தது. மூத்தவன் - பெரியோன். `முத்தானே, மூவாத முதலானே`

`விண்ணோர்க் கெல்லாம் மூப்பாய்` *

என ஆளுடைய அடிகளும் அருளிச் செய்தார். ``ஈருருவாய முக்கண்ணன்`` என்றது எண்ணலங்காரம். சிவபெருமானை, `தேவன்` முதலிய பல பெயர்களால் கூறி, ``நான் மறவேன்`` என்றதனால், `இன்னோரன்ன அவனது பெயர்களை மறவேன்` என்பதே பொருளாம். பெயர்கள் பலவாதல் பற்றி அவற்றை உணரும் ஞானங் களும் பலவாகக் கூறப்பட்டன. பிரித்துக் கூட்ட, ``இவையே`` என வரும் பிரிநிலை ஏகாரத்தால், ``பிற ஞானங்களை நான் வல்லே னல்லேன்`` என்பதைப் பிரிநிலை எச்சத்தால் உணர்த்தி, `பிற ஞானங்கள் வேண்டுவதில்லை`

எனக் குறிப்பாற் புலப்படுத்தியவாறு.

நானுமென் நல்குரவும் நல்காதார் பல்கடையில்
கானிநிமிர்த்து நின்றிரப்பக் கண்டிருக்கும் வானவர்கள்
தம்பெருமான் மூவெயிலும் வேவச் சரந்துறற்றல்
எம்பெருமான் என்னா இயல்பு. **#784**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``வானவர்கள் தம் பெருமான்`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. நல்குரவு - வறுமை. அஃது எங்குச் சென்றாலும் நீங்காமை நோக்கி, அது தனி நிற்பதொன்றாய் உடன் வந்து நிற்பது போலப் பான்மை வழக்காற் கூறினார். கடை - வாயில். கால் நிமிர்த்தல் - வலி தாங்காமையால் வளைத்தும், நிமிர்த்தியும் நிற்றல். ``எம்பெருமான்`` என்பதன் பின், `துணை` என்பது சொல்லெச்சமாய் எஞ்சி நின்றது. என்னா, என்று நினையாமை. அவ் எம்பெருமான் என்பதில் சுட்டு, `அத்தன்மையன்` எனப் பொருள் தந்தது. `எம் பெருமான் என்னாத அந்த இயல்பே இப்படி இரந்து நிற்கும் நிலைமையைத் தந்தது` என்பதனை, `இயல்பு நாங்கள் இரத்தலைக் கண்டு, மகிழ்ந்துகொண்டிருக்கின்றது` என்றார். `சிவபெருமானை ஏத்தாதவரே வறுமையாளராய் இரப்பர்` என்றல் கருத்து.

வானகம் ஆண்டு,மந் தாகினி ஆடி, நந்
தாவனம்சூழ்
தேனக மாமலர் சூடிச்செல் வோரும், -
சிதவல்சுற்றிக்
கால்நகம் தேயத் திரிந் திரப்போரும்
கனக வண்ணப்
பால்நிற நீற்றற் கடியரும், அல்லாப்
படிறருமே. *

எனச் சேரமான் பெருமாள் நாயனாரும் அருளிச் செய்தார்.
``இயல்பு, கண்டிருக்கும்` என்றதும் பான்மை வழக்கு.

இயல் இசை நாடக மாய் எழு வேலைக ளாய்வழுவாப்
புயலியல் விண்ணொடு மண்முழு தாய்ப்பொழு தாகிநின்ற
மயிலியல் மாமறைக் காடர்வெண் காடர்வண் தில்லைமல்கு
கயலியல் கண்ணியங் காரன்பர் சித்தத் தடங்குவரே. **#785**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பின்னர், `எழு கடலாய்` எனக் கூற இருப்பவர் அதற்கியைய முன்னர்

`முத்தமிழாய்` எனக் கூறுகின்றவர் அம்முத் தமிழ்களையும் விதந்தோதினார். வேலை - கடல். வழுவா- எஞ்சாத (விண்ணும், மண்ணும்). புயல் இயல் விண் - மேகங்கள் உலவுகின்ற ஆகாயம். பொழுது - கால தத்துவம். ``கடல்`` என்றது உபலக்கண மாய் ஏனைக் கருப்பொருள் பலவற்றையும் குறித்தது. `தமிழ்ச் சொற்களையும் அவற்றின் பொருள்களையும் குறித்தது. எனவே, இறைவர் முதல், கரு, உரி ஆகிய அனைத்துப் பொருளுமாய் நிற்றல் கூறப்பட்டதாம். ஆகவே, `இங்ஙனம் விசுவத்திற்கு அந்தரியாமியாய் நிற்கும் பெரியோனாகிய பெருமான் அன்பர் சித்தத்தில் அடங்குவன்` என வியந்தருளிச் செய்தவாறு. இப்பாட்டில் திருமறைக்காடு, திருவெண்காடு, திருத்தில்லை என்னும் தலங்கள் எடுத்தோதப் பட்டன. மயில் இயல் - மயில்கள் நடமாடுகின்ற. மா - பெருமை. `கயல் இயல் மல்கு கண்ணி` என மாற்றி, `மீனின் இயல்பு நிறைந்த கண்ணையுடைய உமாதேவி` என உரைக்க. `பங்கர்` என்பதில் `அர்` விகுதி நீக்கி, ஆர் விகுதி புணர்த்து. `பங்கார்` என்றார். `பங்கினார்` என்பதில், `இன்` சாரியை தொகுக்கப்பட்டது எனினும் ஆம்.

அடங்காதார் ஆரொருவர் அங்கொன்றை துன்று
மடங்காதல் என்வளைகொள் வார்த்தை நுடங்கிடையீர்
ஊருரன் சென்றக்கால் உண்பலிக்கென் றங்ஙனே
ஆரூரன் செல்லுமா றங்கு. **#786**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நுடங்கிடையீர்; ஆரூரன், - உண் பலிக்கு - என்று அங்ஙனே ஊர் ஊரனாய்ச் சென்றக்கால், (அவன்) செல்லும் ஆறாகிய அங்கு காதலையுடைய என் வளைகளை (அவன்) கொண்ட வார்த்தையினுள் அடங்காதாராக யார் ஒரு மகளிர் உளராவர்? (ஒருவரும் உளராகார்) என இயைத்து முடிக்க. `அவன் பலிக்குச் செல்லும் எவ்விடத்திலும் உள்ள மகளிர் யாவரும் அவன் மீது, கொள்ளும் காதலால் தங்கள் வளைகளை இழக்கவே செய்வர்` என்றவாறு. `நிலைமை இதுவாகலின், யான் என் வளைகளை இழந் தமை பற்றித் தாய் முனிதல் தகுமா` எனத் தனது வேறுபாடு கண்டு கழறிய தோழியரைக் கழற்றெதிர் மறுத்தாள். இன்னோரன்ன துறைகள் கைக்கிளை பெருந்திணைகளில் வருதல் இயல்பு.
அடங்குதல் - உட்படுதல். கொன்றைதுன்று மடம் காதல் என்வளை - கொன்றை மாலையைப் பெற வேண்டிய மடமையையும், காதலையும் உடைய எனது வளைகள். ``வார்த்தை`` என்பதில், `உள்` என்னும் பொருளில் வந்த கண் உருபு விரித்து, வார்த்தைக்கண் அடங்காதார் ஆர்

ஒருவர்` என மேலே கூட்டி முடிக்க. நுடங்கு துவள்கின்ற. `ஊர் ஊரனாய்` என ஆக்கம் விரிக்க. ஆறு - வழி.

அங்கை மறித்தவ ராலவி உண்ணுமவ் வானவர்கள்
தங்கை மறித்தறி யார்தொழு தேநிற்பர் தாழ்சடையின்
கங்கை மறித்தண வப்பண மாசுணக் கங்கணத்தின்
செங்கை மறித்திர விற்சிவன் ஆடுந் திருநட்டமே. **#787**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அங்கை மறித்தவர் - வேள்வித் தீயில் ஆகுதி பண்ணுதற்குக் கைகளை மூடி விரிப்பவர்கள் அந்தணர்கள். அவி - அவிப் பாகம். தம் கை மறித்து அறியாதவர் - விரித்து இணைத்துக் குவித்த கைகளை மீட்க அறியாதவர். `அறியாதவராய்` என ஆக்கம் விரிக்க. `எப்பொழுதும் கும்பிட்டுக்கொண்டேயிருப்பவராய்` என்ற படி. கங்கை மறித்து - கங்கை நீரைத் தடுத்து வைத்து. அணவாப் பண மாசுணம் - சுருக்கிச் சுருக்கி உயர எடாமல், (எப்பொழுதும் உயர எடுத்து ஆடிக்கொண்டே) இருக்கின்ற படத்தையுடைய பாம்பு. செங்கை மறித்து - சிவந்த கையை (அஞ்சலீர் என) அமைப்பதாகக் காட்டி `தாழ் சடையில் கங்கையை மறித்து வைத்து, மாசுணக் கங்கணத்தின் கையை மறித்துச் சிவபெருமான் இரவில் ஆடும் திருநட்டம் வானவர்கள் தம் கை மறித்தறியாராய்த் தொழுதே நிற்பர்` என இயைத்து முடிக்க. இரவாவது, ஊழி யிறுதிக் காலம். நட்டம், புனர் உற்பவத்திற்கு ஆவனவற்றைப் புரியும் சூக்கும நடனம். ``வானவர்கள்`` என்றத னால், இங்கு `இரவு` என்றது நில உலகத்து ஊழியை.

நட்டம்நீ ஆடும் பொழுதத்து நல்லிலயம்
கொட்டக் குழிந்தொழிந்த வாகொல்லோ அட்டுக்
கடுங்குன்ற மால்யானைக் காருரிவை போர்த்த
கொடுங்குன்ற பேயின் கொடிறு. **#788**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அட்டு`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. ``பொழுது`` என்பதில் அத்து வேண்டாவழிச் சாரியை. இலயம் கொடுத்தல் - தாள அறுதிக்கு ஏற்ப முழக்குதல். ஒழி, துணிவுப் பொருண்மை விகுதி. கொல், அசை. ஓகாரம், ஐயப் பொருட்டு. அட்டு - கொன்று. கடுங்குன்ற மால் யானை - பெரிய மலைபோலும் மத யானை. கார் உரிவை - கறுத்த தோல். கொடுங் குன்றம், பாண்டி நாட்டுத் தலங்களுள் ஒன்று. ``கொடுங்குன்ற`` என்பது விளி. `உன்னுடைய பேயின் கொடிறு` என்க. கொடிறு - தாடை.

முழவு முதலியவற்றைத் தாள அறுதி தோன்ற முழக்கும் பொழுது வாய்ச் செய்கையால் தாடை குழிதல் உண்டு.
பேய்கட்கு இயற்கையாய் உள்ள தாடைக் குழியை இங்ஙனம் செயற்கையால் நேர்ந்தன போலக்கூறி நகைத்தவாறு. `உனது கூத்திற்குக் கொட்டி முழக்கப் பேய்கள் தவிரப் பிறர் இல்லையோ` என நகை தோன்றக் கூறியதாம். `ஒடுக்கக் காலத்தில் இறைவனைச் சார்ந்து நிற்கும் உயிர்களே அவ்விடத்து உள்ளன` என்பது இதன் உண்மைப் பொருள்.

கொடிறு முரித்தனன் கூறாளன் நல்லன் குருகினஞ்சென்
றிடறுங் கழனிப் பழனத் தரசை எழிலிமையோர்
படிறு மொழிந்து பருகக் கொடுத்துப் பரவைநஞ்சம்
மிடறு தடுத்தது வும்மடி யேங்கள் விதிவசமே. **#789**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கூறாளன் - ஒரு பாதியில் இருப்பவனும், நல்லன் - நற்குணம் (சாத்துவிக குணம்) உடையவனும் ஆகிய திருமால் (அவ்வாறு இருந்துகொண்டே) கொடிறு முரித்தனன் - எங்கள் பெருமானுடைய கழுத்தை முரித்து விட்டான். (`இது, கூடவேயிருந்து கொண்டு குழிபறித்தான்` என்னும் பழமொழிக்கு ஒப்பாயிற்று - என்பதாம்.) கொடிறு, ஆகுபெயர். குருகு - நீர்ப் பறவை. பழனம், `திருப்பழனம்` என்னும் சோழ நாட்டுத் தலம். `பழனத் தாரசைக் கொடிறு முரித்தனன்` என்பதை, `யானையைக் கோட்டைக் குறைத் தான்` என்பது போலக் கொள்க.
படிறு மொழிந்து - கபட்டுரை கூறியது. அது, `தேவ யாகத்தில் முதற் பங்கு உம்முடையதே யன்றோ? அதனால், தேவ காரியமாகப் பாற்கடலைக் கடைந்ததில் முதலில் தோன்றியது உமக்குத் தானே ஆக வேண்டும்?`` எனக் கூறியது. விதி, இங்கு நல் ஊழ். `மிடறு தடுத்திராது விடில் நாங்கள் எங்கள் தலைவனை இழந்திருப்போமன்றோ` என்றபடி. இவ்வாறு, தேவர்களது தந்நலத் தன்மையையும், அநித்தியத் தன்மையையும், சிவபிரானது பெருங்கருணைத் திறத்தையும், நித்தியத் தன்மையையும் குறிப்பாற் கூறிவியந்தவாறு. பரவை - கடல்.

விதிகரந்த வெவ்வினையேன் மென்குழற்கே வாளா
மதுகரமே எத்துக்கு வந்தாய் நதிகரந்த
கொட்டுக்காட் டான்சடைமேர் கொன்றைக் குறுந்தெரியல்
தொட்டுக்காட் டாய்கழல்வாய் தொக்கு. **#790**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மதுகரமே, கொட்டுக்கு ஆட்டான் சடைமேல் கொன்றைத் தெரியல் தொட்டுக் காட்டாய்; தொக்குச் சுழல்வாய்; வாளா, எத்துக்கு வினையேன் மென் குழற்கே வந்தாய்?` என இயைத்து முடிக்க. விதி - பிரமதேவன். கரந்த வினை - மறைந்து வகுத்த பிராரத்துவ கன்மம். குழற்கே - கூந்தலின்கண்; உருபு மயக்கம். மதுகரம் - வண்டு. `எற்றுக்கு` என்பது, `எத்துக்கு` என மருவி வந்தது. `நதி கரந்த சடை` என இயையும். கொட்டுக்கு ஆட்டு, மத்தளம் முதலிய கொட்டுக்களுக்கு இயைய ஆடும் நடனம்.

தெரியல் - மாலை. தொட்டு - கிளறி. `அதன் நறுமணத்தைக் கொண்டுவந்து காட்ட மாட்டாய் என்க. `மாலையைப் பெறாவிடினும் மணத்தையேனும் பெற்றால் `ஆற்றலாம்` என்பது கருத்து. தொக்கு - வேறு பல வண்டுகளோடு கூடி. இஃது ஆற்றாமை மீதூர்வால் தலைவி வண்டினை நோக்கிக் கூறிய, காமம் மிக்க கழிபடர் கிளவி.

தொக்கு வருங்கணம் பாடத்தொல் நீறணிந் தேநிலவு
நக்கு வருங்கண்ணி குடிவந் தார்நறும் புன்னைமுன்னம்
அக்கு வருங்கழிக் கானல்ஐ யாறரைக் காணஅன்பு
மிக்கு வரும்அரும் போதரைக் காண வெள்குவனே. **#791**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஐயாறரைக் காண அன்புமிக்கு வாழும்; (அவர் வந்தார்; காண வெள்குவன்` என இயைத்து முடிக்க. தொக்கு - கூடி. கணம் - பூத கணம். `நிலவாகிய கண்ணி, நக்கு வரும் கண்ணி` எனத் தனித்தனி இயைக்க. நக்கு - ஒளி வீசி. கண்ணி - முடியில் அணியும் மாலை. புன்னை - புன்னை மலர்; ஆகுபெயர். அக்கு - சங்கு. கானல் - கடற்கரைச் சோலை. ஐயாறு, சோழ நாட்டுத் தலங்களில் ஒன்று. அரும் போதர் - அரியஞான சொரூபர், இஃது இங்கு, `அவர்` என்னும் சுட்டுப் பெயரளவாய் நின்றது. இது தலைவி தன் நாண் அழிவு கூறித் தோழியை வரைவு கடாவுவித்தது.

வெள்காதே உண்பலிக்கு வெண்டலைகொண் டூர்திரிந்தால்
எள்காரே வானவர்கள் எம்பெருமான் வள்கூர்
வடதிருவீ ரட்டானத் தென்னதிகை மங்கைக்
குடதிருவீ ரட்டானங் கூறு. **#792**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``எம்பெருமான்`` என்பது விளி. அது முதலாகத் தொடங்கி, `வானவர்கள் எள்காரே`` என முடிக்க. `வல்` என்பது அடி யாக `வல்கு` எனப் பிறந்த பண்புப் பெயர், `வள்கு` எனத் திரிந்து `ஊர்` என்பதனோடு புணர்ந்து,

கோவலூரை உணர்த்திற்று. அவ்வூர் வீரட்டமே, ``வடதிருவீரட்டானம்`` எனப்பட்டது. தென் - தென்திரு வீரட்டம்; திருவதிகை. குட திருவீரட்டானம் - மேற்கேயுள்ள வீரட்டானம்; திருக்கண்டியூர். கூறு - பங்கு. `இவை போல எத்தனையோ வீரட்டானம் உம்முடைய பங்காய் இருக்க, நீர் `பிச்சைக்கு` என்று வெண்தலை கொண்டு ஊர் திரிந்தால், வானவர்கள் ஏற்காரே?` என்க. `வானவர்கள் நீர் இரப்பதன் உண்மையை அறிவார் கள் ஆகையால் எள்கிற்றிலராய், உம்மை வணங்குவர்` என்பது குறிப்பு. ``அவனும் ஓர் ஐயம் உண்ணி; அதள் ஆடையாவது, கலனா வது ஓடு. கருதில் - அவனது பெற்றி கண்டும், அவன் நீர்மை கண்டும் அகன் நேர்வர் தேவரவரே``* என்னும் அப்பர் திருமொழியையும் காண்க.

கூறு பெறுங்கன்னி சேர்கருங் கூந்தல்சுண் ணந்துதைந்து
நீறு பெறுந்திரு மேனி நெருப்புப் புரைபொருப்பொத்
தாறு பெறுஞ்சடை அங்கொன்றை யந்தேன் துவலைசிந்த
வீறு பெறுஞ்சென்று சென்றெம் பிரானுக்கு வெண்ணிறமே. **#793**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`எம்பிரானுக்கு வெண்ணிறம், துதைந்து, ஒத்து, சிந்த வீறு பெறும்` என இயைத்து முடிக்க. கூறு பெருங்கன்னி, திருமேனியில் ஒரு கூற்றைப் பெற்று விளங்கும் கன்னிகை; உமை. சுண்ணம் - பொடி; திருநீறு. துதைந்து - மூழ்கப் பெறுதலாலும், `நீறு பெறும் நெருப்புப் புரை திருமேனி நெருப்பு ஒத்து` என மாற்றி. `நீறு பூத்த நெருப்பை ஒத்த திருமேனி மலைபோலத் தோன்றுதலாலும்` என உரைக்க. `கொன்றை அம் தேன் திவலையைச் சிந்தவும்` என்க. கொன்றை - கொன்றைப் பூ; ஆகுபெயர். சென்று சென்று வீறு பெறும். தொடர்ச்சியாக விளங்கி விளங்கிப் பெருமை பெறும். `கண்ணி, பெருஞ்சடை` என்பன பாடம் அல்ல. செய்தென் எச்சங்கள் எண்ணின் கண் வந்து, காரணப் பொருளவாய் நின்றன. `பெருமானது பெரிய திருமேனி முழுதும் திருநீற்றால் விளங்குகின்ற வெண்ணிறம், அதன்மேல் உமாதேவி தன் கூந்தல் விழுதலால் கரு நிறத்தைச் சிறிது பொருந்தியும், சடையினின்றும் தேன் துளித் துளியாகச் சிந்துதலால் பல புள்ளிகளைப் பெற்றும் மேலும் மேலும் அழகு பெறுகின்றது` என அதனை வியந்துவாறு. பல நிறங்கள் ஒன்று கூடுதலை அழுகுடையதாக மதிப்பர்.

நிறம்பிறிதாய் உள்மெலிந்து நெஞ்சுருகி வாளா
புறம்புறமே நாள்போக்கு வாளோ நறுந்தேன்
படுமுடியாய்ப்பாய்நீர் பரந்தொழுகும் பாண்டிக்
கொடுமுடியாய் என்றன் கொடி. **#794**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நறுந்தேன்`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. தேன்படும் முடியாய் - மலர்கள் தேனைச் சிந்துகின்ற முடியினை (தலையை) உடையதாய். பாண்டிக்கொடுமுடி, கொங்கு நாட்டுத் தலங்களுள் ஒன்று. கொடி - கொடி போல்வாளாகிய பெண்; உவமையாகு பெயர். வாளா - யாதொரு பயனையும் பெறாது. புறம் புறமே - பெரிதும் தொலைவில் நின்று; அடுக்கு, மிகுதி பற்றி வந்தது. ஓகாரம் இரக்கப் பொருட்டு. அதனால், `நீ இரங்காயோ` என்பது பெறப்படும். இது தலைவியது நிலைமை பற்றித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்ற பின்பு செவிலி இறைவனாகிய தலைவனை எதிர்பெய்துகொண்டு, இரங்கிக் கூறியது.

கொடிக்குல வும்மதிற் கோவலூர் வீரட்ட கோளரவம்
பிடிக்கில அம்முடிப் பூணலை யத்தொடு மால்விடையின்
இடிக்குரல் கேட்டிடி என்றிறு கக்கடி வாளெயிற்றால்
கடிக்க லுறுமஞ்சி நஞ்சம் இருந்தநின் கண்டத்தையே. **#795**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வீரட்ட, அரவம் அம் முடிப் பிடிக்கில்; அத்தொடு விடையின் குரல்கேட்டு இடி - என்று அஞ்சி நின் கண்டத்தை அடிக்கடி இறுகக் கடித்தலுறும். (ஆகையால் அவற்றைப்) பூணலை` என இயைத்து முடிக்க. `கொடியையுடைய மதில், குலம் மதில்` எனத் தனித் தனி இயைக்க. குலவுதல் - விளங்குதல். ``குலவும் மதில்`` என்பதில் மகர ஒற்று விரித்தல். பிடித்தல் - போதுமானதாக அமைதல். முடி பெரிதாய் `இருத்தலின் அதை முழுவதுமாகச் சுற்றுதற்குச் சிறிதான பாம்பு, போதவில்லை` என்றபடி. `அதனோடு` என்பு, அத்தோடு` என மருவிற்று. `இவ் இருகாரணம் பற்றியேனும் அரவம் பூணுதலை விடு` என வேண்டியதாம்.

கண்டம் நிறங்கறுப்பக் கவ்வைக் கருங்கடல்நஞ்
சுண்டல் புரிந்துகந்த உத்தமற்குத் தொண்டடைந்தார்
கூசுவரே கூற்றைக் குறுகு வரேதீக்கொடுமை
பேசுவரே மற்றொருவர் பேச்சு. **#796**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`உத்தமற்குத் தொண்டு அடைந்தார் கூற்றைக் கூசுவரே? தீக் கொடுமை. குறுகுவரே? மற்றொருவர் பேச்சுப் பேசுவரே? என வினாப் பொருளில்வந்த ஏகாரங்கள் அவை நிகழா மையைக் குறித்தன. கவ்வை -

ஆரவாரம். `புரிந்தும்` என்னும் உம்மை தொகுக்கப்பட்டது. உகந்த (அதனை உண்பித்தவர்களை வெறாமல்) விரும்பிய. உத்தமன் - மேலானவன். `தொண்டாய் அடைந்தார்` என ஆக்கம் விரிக்க. கூசுதல் - நாணுதல். அஃது இங்கு அஞ்சுதலின் மேற்று. தீ - தீமை அது துன்பத்தைக் குறித்தது. கொடுமை - அடைய லாகாதவை. `தீயவையாகிய கொடுமையைக் குறுகுவரே` - என்க. மற்றொருவர் பேச்சு - பிறர் ஒருவரைப் பற்றிய பேச்சு, `உத்தமன் பேச்சையன்றிப் பிறர் பேச்சைப் பேசார்` என்றபடி.

பேய்ச்சுற்றம் வந்திசை பாடப் பிணமிடு காட்டயலே
தீச்சுற்ற வந்துநின் றாடலென் னாம்செப்பு முப்பொழுதும்
கோச்சுற்ற மாக்குடை வானவர்கோன் அயன் மால்முதலா
மாச்சுற்றம் வந்திறைஞ் சுந்திருப் பொற்சடை மன்னவனே. **#797**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``முப்பொழுதும்`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. கோச் சுற்றம் ஆ - அரசனுக்குரிய பரிவாரங்கள்போல. `இடு காட்டு ஆடல்` என இயையும். `இந்திரன், அயன், மால் முதலிய மேலான தேவர்களும் முப்போது வந்து வணங்க நிற்கின்ற நீ இடு காட்டில் ஆடல் என்? செப்பு என வினை முடிபு செய்க. ஆம், அசை. `இடுகாடு` எனப்படுவது, உலகர் தம் கிளைஞரை இடுகின்ற காடு அன்று; உலகம் அனைத்தும் ஒடுங்கிய நிலையில் காரணமாத்திரை யாய் நிற்கின்ற மாயையே - என்பது கருத்து. அதனால், ``பேய்`` எனப் படுவனவும் ஒடுக்கக் காலத்து யாதோர் உடம்பும் இன்றி, மாயையில், பிரளய கேவல நிலையில் இருக்கும் உயிர்களே - என்பதும் பெறப்படும்.

மன்னும் பிறப்பறுக்கும் மாமருந்து வாளரக்கன்
துன்னுஞ் சுடர்முடிகள் தோள்நெரியத் தன்னைத்
திருச்சத்தி முற்றத்தான் சித்தத்துள் வைத்தான்
திருச்சத்தி முற்றாத்தான் தேசு. **#798**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மன்னும் பிறப்பறுக்கும் மாமருந்து`` என்பதை யிறுதியிற் கூட்டியுரைக்க. வாள் அரக்கன் கொடிய இராக்கதன்; என்றது இராவணனை. ``சுடர் முடிகள்`` என்பது அடையடுத்த ஆகுபெயராய், அவற்றை யணிந்த தலைகளைக் குறித்தன. முடிகள், தோள்கள் செவ்வெண். ``திருச்சத்தி`` இரண்டில். ஈற்றடியில் உள்ள ``திருச்சத்தி முற்றம்``, சோழநாட்டுத் தலங்களில் ஒன்று. ``தன்னைத் திருச்சத்தி முற்ற

என்றது, `தன்னை (அவ் அரக்கன்) என்றும் நிலையான பேராற் றலை உடையவனாக நன்கு உணருமாறு` என்றபடி. சித்தத்துள் வைத்தான் திருவுள்ளத்தில் நினைத்தவன். என்றது, நினைத்துக் கால் விரலால் ஊன்றியான்` என்றதாம். தேசு - ஒளி; அருள். `அரக்கனைத் தன்னை உணருமாறு செய்தவனும். திருச்சத்திமுற்றத்தில் உள்ளவனும் ஆகிய அவனது அருளே, பலகாலமாய் நீங்காதிருக்கின்ற பிறவியாகிய நோயை நீக்கும் பெரிய மருந்து` என முடிக்க. சிவபெருமான் திருஇரட்டை மணிமாலை முற்றிற்று.

சிவபெருமான் திருஇரட்டை மணிமாலையில் குறிக்கப் பெற்றுள்ள தலங்கள்

திருவெண்காடு, திருமுதுகுன்றம், திருவாரூர், திருவதிகை, திருவொற்றியூர், திருமறைக்காடு,
திருவாய்மூர், திருவலஞ்சுழி, தில்லை, திருக்கொடுங்குன்றம், திருப்பழனம், திருவையாறு,
திருக்கண்டியூர், திருப்பாண்டிக்கொடுமுடி, திருக்கோவலூார், திருச்சத்தி முற்றம்.

கபிலதேவ நாயனார் - சிவபெருமான் திருவந்தாதி

ஒன்று முதலாக நூறளவும் ஆண்டுகள்வாழ்ந்
தொன்றும் மனிதர் உயிரையுண் டொன்றும்
மதியாத கூற்றுதைத்த சேவடியான் வாய்ந்த
மதியான் இடப்பக்கம் மால். **#799**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஒன்று முதலாக நூறளவும் ஆண்டுகள்`` என்றது, `இடைப்பட்ட எந்த ஆண்டிலும் கூற்றுவன் வருவான்; அதற்குத் தடை யில்லை` என்றபடி. `மக்கள் வாழ்நாளின் மேல் எல்லை நூறு ஆண்டு` என்பதையும் பெரும்பான்மை பற்றிக் குறித்தார்.

ஒன்றும் மனிதர் - உலகில் பொருந்தியுள்ள மனிதர். `ஒன்றையும் மதியாத` என உருபு விரிக்க. இதில் ``ஒன்று`` என்றது, `உயர்ந்ததாயினும், அன்றி, இழிந்த தாயினும்` என்றபடி. ``ஒன்று`` என்னும் எண்ணுப் பெயர் எண்ணப் படும் காரணத்தின் மேல் நின்றது. உம்மை, முற்று. அடியையும், இடப்பக்கத்தையும் கூறியதனால், மதி, முடியில் உள்ள மதியாயிற்று. ``இடப்பக்கம் மால்`` என்றது, அரியர்த்தேசுர வடிவம், அல்லது சங்கர நாராயண வடிவத்தை. கற்பத் தொடக்கங்கள் பலவற்றில் சிவபெருமான் சிலபொழுது தனது இடப்பக்கத்தில் மாயோனைத் தோற்றுவித்து, அதன் வழியாகப் பிரமனைத் தோற்றுவித்து உலகத்தைப் படைக்கச் செய்வான். சில பொழுது இடப்பக்கத்தில் மாயோனோடு கூடவே வலப்பக்கத்தில் பிரமனையும் தோற்றுவிப்பான். சிலபொழுது வலப்பக்கத்தில் பிரமனைத் தோற்றுவித்து அவனைக் கொண்டே மாயோனைப் படைப்பிப்பான். அவற்றுள் ``இடப் பக்கம் மால்`` என்று மட்டும் கூறிப் போயினமையால் இது, பின்பு மாயோனைக் கொண்டு பிரமனைத் தோற்றுவிக்கும் முறையைக் குறித்தது. இங்குக் கூறியவைகளை.

அயனைமுன் படைத்திடும் ஒருகற்பத்
தரியைமுன் படைத்திடும் ஒருகற்பத்
துயர் உருத்திரன் றனைமுனம் படைப்பன்
ஒருகற்பம் மற்றொருகற் பந்தன்னில்
முயலும் மூவரை ஒருங்குடன் படைப்பன்
முன்பி றந்தவர் மற்றிரு வரையும்
செயலி னாற்படைக் கவும் அருள் புரிவன்
சிவபிரான் எனில், ஏற்றமிங் கெவனோ

என்னும் சிவதத்துவ விவேகத்தால் *1* உணர்க. ``முன்பிறந்தார் மற்றிரு

வரையும் ... . படைக்கவும் அருள்புரிவன்`` என்றதனால், `அஃதே நியதியன்று; ஒருகற்பத்தில் சிவபிரான் தானே மூவரையும் படைத்தல் உண்டு` என்பது போந்தது. இங்கு `அயன், மால்` என்பவரோடுகூட உருத்திரனையும் குறித்தமையை உணர்பவர்க்கு,
நான்முகனை நாரா யணன்படைத்தான்; நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான் *2*
என்றது ஒரே ஒரு கற்பத்தில் நிகழும் நிகழ்ச்சி. என்பதும், அதுதானும் மூவருள் ஒருவனாகிய உருத்திரனைக் குறிப்பதன்றி, மூவர்க்கும் மேலான நான்காமவனாகிய சிவபிரானைக் குறியாது. ஒருகற்பத்தில் பிரமனுக்குப் படைத்தல் தொழிலைச் செம்மையாக உணர்த்துதற் பொருட்டு அவனது நெற்றியினின்றும் தோன்றிய நீலலோகிதன் முதலிய உருத்திரர் பதினொருவரே எங்கும் `ஏகாதச ருத்திரர்` எனக் குறிக்கப்படுகின்றனர். `இங்ஙனம் சிவ புண்ணிய மிகுதியால் சிவ பிரானது உருவம், பெயர், தொழில் இவைகளைப் பெற்று நிற்கின்ற உருத்திரர்களே சிற்சில இடங்களில் பிரம விட்டுணுக்களினும் கீழ்ப் பட்டவர்களாகக் கூறப்படுகின்றனர்`` என்பதையறியாமல் சிவனையே பிரம விட்டுணுக்களுக்குக் கீழ்ப்பட்டவனாக எண்ணுதல் தவறுடையதாதல் அறிக. பிரமனை, `சாக்கிர மூர்த்தி` என்றும், விட்டுணுவை, `சொப்பன மூர்த்தி` என்றும் கூறுதல் பலர்க்கும் உடன்பாடு. அந்நிலையில் சைவாகமங்கள் சிவனை இம்மூவர்க்கும் அப்பாற்பட்ட `துரிய மூர்த்தி` என்றே கூறுதல் குறிக்கொளத்தக்கது. ``மால்`` என்னும் எழுவாய், `உளன்` என எஞ்சி நின்ற பயனிலையோடு முடிந்தது. இவ்வந்தாதியின் எல்லாப் பாடல்களும் சொற் பின்வருநிலையணி பெற்று வருதல் காண்க.

மாலை ஒருபால் மகிழ்ந்தானை வண்கொன்றை
மாலை ஒருபால் முடியானை மாலை
ஒளியானை உத்தமனை உண்ணாநஞ் சுண்டற்
கொளியானை ஏத்தி உளம். **#800**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரண்டாவதாக வந்த ``ஒருபால்``, இடப்பக்கம். `அப்பக்கத்தில் கொன்றை மாலையைச் சூடான்` என்றது, அஃது அம்மையது பாகம் ஆதலைக் குறித்தது. இறுதிக்கண் வந்த மாலை, அந்திக் காலம். அது கால ஆகுபெயராய். அது பொழுது தோன்றும் செவ்வானத்தைக் குறித்தது.
உண்ணா - உண்ணப்படாத, ஒளியான் - பின் வாங்கி மறையாதவன். ``ஏத்தி`` என்பது தகர ஒற்றுப் பெறாது வந்த இகர ஈற்று ஏவல்

வினைமுற்று. `துதிப்பாயாக` என்பது பொருள். ``உளம்`` என்பதை முதலிற் கூட்டி முடிக்க. `உண்ணா நஞ்சு உண்டல்` என்றது முரண்தொடை.

உளம்மால்கொண் டோடி ஒழியாது யாமும்
உளமாகில் ஏத்தாவா றுண்டோ உளம்மாசற்
றங்கமலம் இல்லா அடல்வெள்ளே றூர்ந்துழலும்
அங்கமல வண்ணன் அடி. **#801**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``யாமும்`` என்பதை முதலிலும், ``ஏத்தாவாறு உண்டே`` என்பதை இறுதியிலும் கூட்டி யுரைக்க. ``உளம்`` மூன்றில் இடையது தன்மைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று; ஏனையவை, `மனம்` எனப்பெயர். ``ஆகில்`` என்பது தெளிவின்கண் வந்தது, `நாமும் மற்றவர்கள் போல மன மயக்கங்கொண்டு ஓடி ஒழியாது, நிலைபெற்றிருக்கின்றோம் என்றால், நாம் (முற்பிறப்பில்) சிவபெருமானது, திருவடிகளை துதியாதிருந்தது உண்டோ` என்பது இதன் திரண்ட பொருள். ஏகார வினா, எதிர்மறையைக் குறித்தது.
அங்கம் - உடம்பு, `மலம் - மாசு. உள்ளமும் மாசற்று, உடம்பும் மாசற்று விளங்கும் ஏறு` என்க, அறக் கடவுளே விடையா தலையும், அதன் நிறம் வெண்மை யாதலையும் இவ்வாறு குறித்தார். அம் கமலம் - அழகிய தாமரை மலர். இது செந்தாமரை மலர்.

அடியார்தம் ஆருயிரை அட்டழிக்குங் கூற்றை
அடியால் அருவாகச் செற்றான் அடியார்தம்
அந்தரத்தால் ஏத்தி அகங்குழைந்து மெய்யரும்பி
அந்தரத்தார் சூடும் அலர். **#802**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மார்க்கண்டேயர் வரலாற்றைக் குறிப்பிடுகின்றவர் அதில் உள்ள சிவபெருமானது நேர்மையை விளக்குதற்கு, `அடியான்` என ஒருமையாற் கூறாது, ``அடியார்`` எனப்பன்மையாற் கூறினார். அட்டு - கொன்று. அழித்தல் - செயற்படாதபடி செய்தல். ``அந்தரத் தார்`` என்பதை மூன்றா வதாய் உள்ள ``அடியார்`` என்பதற்கு முன்னே கூட்டி, `அதன் கண், `அடியாராய்` என ஆக்கம் விரித்து, `சூடும் அவர் களையுடைய அடியால் செற்றான்` என முடிக்க. ``அருவாக`` என்றது, `தூலஉடம்பை இழக்கும்படி` என்றதாம். அம்தரத்தால் ஏத்தி - அழகிய, மேலான குணத்தால் துதித்து. `மந்திரத்தால்` என்பது பாடம் ஆயின்

மடக்கணிக்குச் சிறிதும் இடம் இல்லாது போதலால் அது பாடம் அன்று.

அலராளுங் கொன்றை அணியல்ஆ ரூரற்
கலராகி யானும் அணிவன் அலராகி
ஓதத்தான் ஒட்டினேன் ஓதுவன்யான் ஓங்கொலிநீர்
ஓதத்தான் நஞ்சுண்டான் ஊர். **#803**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, திருவாரூர்ப் பெருமான்மேல் காதல் கொண்டாள் ஒருத்திதன் கூற்று. ``அலர் ஆளும் கொன்றை`` என்பதை, `கொன்றை ஆளும் அலர்` என மாற்றிக் கொள்க. கொன்றை - கொன்றை மரம். அதனால் ஆளப்படுதல், பூத்து அசையச் செய்தல். அணியல் - அணிதலை உடைய. `அலர் அணிந்த ஆரூரனைக் காதலித்ததனால் யானும் எங்கும் அலர் உடையேனாயினேன்` எனச் சொல் நயம்படக் கூறி இரங்கியவாறு. இவ் அலர் இரண்டனுள் முன்னது மலர்; பின்னது, ஊரார் கூறும் பழிச்சொல். மூன்றாவதாகிய அலர் - பரந்து செல்லுதல். `நாண் இழந்து, எங்கும் பரந்து செல்லும் செல வினை உடையேனாய்` என்க. ``ஓதத்தான்`` இரண்டில் முன்னதில் தான், அசை, ஓத ஒட்டினேன் - நிகழ்ச்சியை வெளிப்படுத்தத் துணிந்து விட்டேன் `அதன்படி இனி யான் நஞ்சுண்டாவது ஊரைப் பலர்க்கும் ஓதுவன்` *(வெளிப்படச் சொல்வன்)* என முடிக்க. ஓதம், பின்னது அலை, அஃது ஆகுபெயராய்க் கடலைக் குறித்தது. அதன்பின் வந்த `ஆன்` உருபு ஏழாவதன் பொருட்டாய் நின்றது.

ஊருமொ தொற்றியூர் உண்கலனும் வெண்தலையே
ஊரும் விடையொன் றுடைதோலே ஊரும்
படநாகம் மட்டார் பணமாலை ஈதோ
படநாகம் அட்டார் பரிசு. **#804**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இவ்வெண்பாவும் பழிப்பது போலப் புகழ்ந்தது. ``ஊரும் விடை`` என்பதில் பெயரெச்சம் செயப்படுபொருட்டாயும், ``ஊரும் நாகம்`` என்பதில் பெயரெச்சம் வினைமுதற் பொருட்டாயும் நின்றன. ``ஊரும் விடை ஒன்று`` என்றது, `ஊர்தியாகக் கொள்ளப் பட்டது யானை, குதிரை முதலியன அல்ல; காளையே, அதுவும் ஒன்று தவிர, இரண்டாவதில்லை` என்றபடி. ``தோலே`` என்னும் பிரிநிலை ஏகாரங்களால் நற்கலங்களும் நல் உடைகளும் பிரிக்கப்பட்டன. பட நாகம் மட்டு ஆர் பண் அம் மாலை - படத்தையுடைய பாம்பும், தேன்

பொருந்திய அத்தியமே அழகாகச் செய்யப்பட்ட மாலைகள். நாகம் பட அட்டார் - யானை (கயாசுரன்) அழியும்படி அழித்தவர். பரிசு தன்மை `அவர் தன்மை இதுதானோ` என்க ஓகரம் இழிவு சிறப்பு.

பரியானை ஊராது பைங்கண் ஏறூரும்
பரியானைப் பாவிக்க லாகாப் பரியானைக்
கட்டங்கம் ஏந்தியாக் கண்டுவாழ் நன்னெஞ்சே
கட்டங்கம் ஏந்தியாக் கண்டு. #805

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதற்கண் உள்ள ``பரியானை`` என்பதில் `பரிய` என அகரம் தொகுக்கப்பட்டது. இரண்டாம் அடியில் முதற்கண் நின்ற பரி- ஊர்தி. பாவித்தல் - நினைத்தல். நினைத்தல் செய்யாதவர்க்குப் பரியான் - அருளான். ``கட்டங்கம்`` இரண்டில் முன்னது `கட்வாங்கம்` என்பதின் திரிபு. `மழு` என்பது பொருள். பின்னது, கட்டு அங்கம் - மாலையாகக் கட்டப்பட்ட எலும்பு, நெஞ்சே பரியானை கட்டங்கம் ஏந்தியாகக் கண்டும், கட்டு அங்கம் ஏந்தியாகக் கண்டும் வாழ்` என முடிக்க.

கண்டங் கரியன் உமைபாலுந் தன்பாலும்
கண்டங் கரியன் கரிகாடன் கண்டங்கள்
பாடியாட் டாடும் பரஞ்சோதிக் கென்னுள்ளம்
பாடியாக் கொண்ட பதி. #806

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கண்டங்கள் பாடி ஆட்டாடும்`` என்பது முதலாகத் தொடங்கி, ``சோதிக்கு`` என்பதனோடு இயைய, ``பதி`` என்பதிலும் `பதிக்கு` என, தொகுக்கப்பட்ட நான்காவது விரித்துரைக்க, முதற்கண் நின்ற கண்டம் கழுத்து; மிடறு. `உமை பாலினையும், தன் பாலினையும் கண்டு` என இரண்டிடத்தும் இரண்டாவது விரிக்க. ``கண்டு`` என்னும் எச்சத்திற்கு முடிவாகிய `உணர` என்பது தொகுத்தலாயிற்று. அங்கு - அவனிடத்து `உமையொரு பாகமாகிய திருமேனியை யுடையனா யினும் அவனருள் பெற்றார்க்கன்றிக் காண இயலாதவன்` என்பதாம். இறுதியில் நின்ற கண்டம், `குரல்` என்னும் பொருளது. `இக்குரல், பூத கணங்களின் குரல்` என்க. ஆட்டு ஆடும் - பலவகை ஆட்டங்களை ஆடுகின்ற. பின் நின்ற பாடி - பாசறை; தங்குமிடம். பதி - தலைவன்.

பதியார் பழிதீரா பைங்கொன்றை தாவென்
பதியான பலநாள் இரக்கப் பதியாய
அம்மானார் கையார் வளைகவர்ந்தார் அஃதேகொல்

அம்மானார் கையார் அறம் #807
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பதியார் பழி - ஊரில் உள்ளவர்கள் தூற்றும் அலர்கள். தீரா - ஒழிகின்றில. `என்பது` என்னும் சொல்லின் ஈற்றுக் குற்றிய லுகரம் யகரம் வரக் குற்றிய லிகரமாய்த் திரிந்து முற்றியலுகரம் போல அலகு பெற்றது. `என்பது சொல்லி யான் இரக்கும்படி` என, `சொல்லி` என்னும் சொல்லெச்சம் வருவிக்க. பதி ஆய - தலைவர் ஆகிய. அம் மான் ஆர் கையார் - (தாருகாவன முனிவர்கள் விடுத்த) அந்த மான் பொருந்திய கையை உடையவர். அகரம், பண்டறி சுட்டு. `அம் - அழகு` என்றலும் ஆம். அஃதே கொல் அத்தன்மையது தானோ! அம்மானார் - யாவரினும் பெரியோராயினார். கையார் - ஒழுக்கம் உடையார். ``வளை கவர்ந்தார். அம்மானார், கையார் அறம் அஃதே கொல்` என முடிக்க. இதுவும் கைக்கிளைப் பாற்பட்ட தலைவி ஒருத்தி யது கூற்று.

அறமான நோக்கா தநங்கனையும் செற்றங்
கறமாநஞ் சுண்ட அமுதன் அறல்மானும்
ஓதியாள் பாகம் அமர்ந்தான் உயர்புகழே
ஓதியான் தோற்றேன் ஒளி. #808
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அறம் ஆன நோக்காது - தனக்கு அறமாவனவற்றை எண்ணாமல், (இரக்கம் இல்லாமல்` என்றபடி. இதுவும் பழித்ததுபோல் புகழ் புலப்படுத்தியது. அநங்கன் - மன்மதன். `மா நஞ்சு அற உண்ட அமுதன்` என மாற்றிக்கொள்க. அற - முற்றிலும். அறல் மானும் ஓதியாள் - கருமணல் போலும் கூந்தலை உடையவள்; உமை. `அறமான` என்பது பாடம் அன்று. அமர்ந்தான் - விரும்பினான். புகழே ஓதி - புகழையே சொல்லி. `ஒளி தோற்றேன்` என மாற்றி, `அழகினை இழந்தேன்` என உரைக்க. இதுவும் கைக்கிளைப் பாற்பட்ட தலைவி ஒருத்தியது கூற்று.

ஒளியார் சுடர்மூன்றும் கண்மூன்றாக் கோடற்
கொளியான் உலகெல்லாம் ஏத்த ஒளியாய
கள்ளேற்றான் கொன்றையான் காப்பிகந்தான் நன்னெஞ்சே
கள்ளேற்றான் கொன்றை கடிது. #809
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கோடற்கு ஒளியான் - கொள்ளுதலுக்குப் பின்னிடாதவன். ``ஒளியாயகள்`` என்பதில் கள், விகுதிமேல் விகுதி. `ஒளியானவைகள்`

என்றபடி - இங்கு ஒளி - புகழ். `உலகம்` ஏத்துதற்கு உரிய புகழ்கள் பலவற்றையும் ஏற்றவன்` என்க. இரண்டிடத்தும் ``கொன்றை`` என்பது கொன்றை மாலையையே குறித்தது. ``காப்பு இகழ்ந்தான் - என்னை இறவாமல் காத்தலைக் கைவிட்டான். இதன் பின் `ஆயினும்` என்பது வருவிக்க. `தான் கொன்றையைக் கடிது ஈயக் கள்ளேல்` என இயைத்து முடிக்க. `ஈய என்பது சொல்லெச்சம் கள்ளேல் - (என்னால் இயலாது` என்று சொல்லிக்) கரவு செய்யாதே. `விரைந்து சென்று இரந்து வாங்கி வா` என்றபடி. இப்பாட்டின் துறையும் முன்பாட்டின் துறையே.

கடியரவர் அக்கர் இனிதாடு கோயில்
கடியரவர் கையதுமோர் சூலம் கடியரவ
ஆனேற்றார்க் காட்பட்ட நெஞ்சமே அஞ்சல்நீ
ஆனேற்றார்க் காட்பட்டேம் யாம். #810
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கடி அரவர் - கடிக்கும் குணத்தையுடைய பாம்பை அணிந்தவர். அக்கர் - எலும்பை அணிந்தவர். ஆடு கோயில் கடியர் - ஆடுமிடத்தைக் கடிதாக (சுடுகாடாக)க் கொண்டவர். `கடிய கோயி லார்` எனற்பாலது, இடத்தின் தன்மையை இடத்து நிகழ்பொருள்மேல் ஏற்றி, ``கடியர்`` எனப்பட்டது. ``கையதும்``என்னும் உம்மை, `அதுவும் கடிது`` என இறந்தது தழுவிற்று. கடி அரவ ஆன் ஏறு - கடுமையான குரல் ஓசையை உடைய இடபம், `கடியரவர் ஆனேறு` என்பது பாடம் அன்று. ஆன் ஏற்றார்க்கு ஆட்பட்டோம். அவ்விடத்துத் தகுதி வாய்ந்த தலைவர்க்கே ஆட்பட்டோம். ஈற்றடி, அஞ்ச வேண்டாமைக்குக் காரணத்தை விளக்கிற்று. ஆன் - அவ்விடம். அஃது, ``ஆன்வந்தியையும் வினைநிலை யானும்`` என்னும் தொல்காப்பியத்தாலும் * அறியப்படும். `அவ்விடம்` என்பது ஆட்பட்ட நிலையைக் குறித்தது. ஏற்றான் - ஏற்றவன்; ஏற்புடையவன். இதனால், பிறரெல்லாம் ஏற்புடையர் ஆகாமையும் குறிக்கப்பட்டதாம்.

யாமானம் நோக்கா தலர்கொன்றைத் தார்வேண்ட
யாமானங் கொண்டங் கலர்தந்தார் யாமாவா
ஆவூரா ஊரும் அழகா அனலாடி
ஆவூரார்க் கென்னுரைக்கேன் யான். #811
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

யாம் மானம் நோக்காது - நாம் நாணத்தைப் பொருட்படுத்தாமல், யா மானம் கொண்டு அங்கு யா மாவா ஆவூரா ஊரும் அழகா அனலாடி

அலர் தந்தார் - என்ன பெருமை பற்றி அவ் விடத்து எந்த வகைக் குதிரையாகவோ இடபத்தை ஊர்பவரும், அழகாகத் தீயில் ஆடுபவரும் ஆகிய பெருமான் (கொன்றை மாலையைத் தாராமல்) பழிச் சொல்லையே தந்தார்? ஆ - ஐயோ! `யான் (அலர்தூற்றும்) ஊரார்க்கு என் உரைப்பேன்` என்க. ``ஆடி`` என்பது பன்மை யொருமை மயக்கம். அன்றி, `தந்தான்` என்றே பாடம் ஓதலுமாம். `என்னுரைக்கோம் யாம்` என்பது பாடம் ஆகாமையறிக. மூன்றாம் அடியில், ``ஊரா`` என்றது, `ஊர்தியாக` என்றபடி. இதுவும் காதற்பட்ட தலைவி கூற்று.

யானென்றங் கண்ணா மலையான் அகம்புகுந்து
யானென்றங் கையறிவும் குன்றுவித்து யானென்றங்
கார்த்தானே யாயிடினும் அம்பரன்மேல் அங்கொன்றை
ஆர்த்தானேல் உய்வ தரிது. **#812**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அண்ணாமலையான், அம் பரன்`` என்பவற்றை முதற்கண் கூட்டியுரைக்க. அன்பான் - அழகிய இறைவன். ``யான்`` மூன்றில் முன்னது இறைவன் தான் தன்னை அறிமுகப்படுத்தியது, இடையது, `யான்` என்னும் செருக்கு. `என்ற` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. ஐயறிவு - ஐம்புல அறிவு. இறுதியது, இறைவன், `எல்லாவற்றிற்கும் முதல்வன் யானே` என அறிவித்தது. மூன்றாம் அடியில் உள்ள ஆர்த்தல் ஆரவாரித்தல். ஈற்றடியில் உள்ள ஆர்த்தல் இறுகக் கட்டுதல்; சூடியிருத்தல். `கொன்றை மாலையை எனக்குத் தாராமல் தானே சூடியிருப்பானாயின், யான் உய்வது அரிது` என்க. இதுவும் முன்னைத் துறை.

அரியாரும் பூம்பொழில்சூழ் ஆமாத்தூர் அம்மான்
அரியாரும் பாகத் தமுதன் அரியாரும்
வேங்கடத்து மேயானை மேவா உயிரெல்லாம்
வேங்கடத்து நோயால் வியந்து. **#813**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அரி`` மூன்றில் முதலது வண்டு; இடையது திருமால்; இறுதியது சிங்கம், மூன்றாம் அடியில் ``வேங்கடம்`` திருவேங்கட மலை (மேவா உயிரெல்லாம் வியந்து கடத்து நோயால் வேம்) என்க. மேவுதல் - விரும்புதல். கடம் - உடல். வியத்தல், உடலை, `இளையது` என்றும், `அழகிது` என்றும் புகழ்தல். வேம் - வேகும்; அழியும். இப்பாட்டால் திருவேங்கட மலையில் எழுந்தருளியிருப்பவர் அரியர்த்தேசுரர் (சங்கர

நாராயணர் ஆதல் விளங்கும். முதலாழ்வார் பாடலும் * இக்கருத்தை வலியுறுத்தும்.

வியந்தாழி நன்னெஞ்சே மெல்லியலார்க் காளாய்
வியந்தாசை யுள்மெலிய வேண்டா வியந்தாய
கண்ணுதலான் எந்தைகா பாலி கழலடிப்பூக்
கண்ணுதலாம் நம்பாற் கடன். **#814**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வியம் தாழி - எனது ஏவலிற் பொருந்து. இந்த ஏவல் வினைமுற்றில் இகரவிகுதி தகர ஒற்றுப் பெறாமல் வந்தது. `தாழ்தி` என்றே பாடம் ஓதலுமாம், தாழ்தல் - தங்குதல். இதனை இறுதிக்கண் கூட்டுக. வியந்து - (அவர்களைப்) புகழ்ந்து. வியம்தாய - அகன்ற இடமுழுதும் நிறைந்த. கண் நுதலான் - கண் பொருந்திய நெற்றியை உடையவன். அடிப்பூ - திருவடியாகிய மலர். கண்ணுதல் - நினைதல். `நம்மால் உள்ள கடன்` என ஒரு சொல் வருவிக்க. கடன் - கடமை. ``என்கடன் பணிசெய்து கிடப்பதே`` * என அப்பரும் அருளிச் செய்தார்.

கடனாகம் ஊராத காரணமும் கங்கை
கடனாக நீகவர்ந்த வாறும் கடனாகப்
பாரிடந்தான் மேவிப் பயிலும் பரஞ்சோதி
பாரிடந்தான் மேயாய் பணி. **#815**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கடன்`` இரண்டில் முன்னது மதம்; அது, `கடம்` என்பதன் இறுதிப் போலி. பின்னது கடமை, ``பாரிடம்`` இரண்டில் முன்னது பூதகணம்; பின்னது பூமியாகிய இடம், பணி - சொல்லி யருள். இரண்டாம் அடியில் உள்ள ``கடனாகம்`` என்பதை. `கடல் நாகம்` - எனப் பிரிக்க இதில் நாகம் - விண்ணுலகம் `நாகக் கடல் கங்கை` என மாற்றி, விண்ணுலகத்தில் இருந்த கடல்போலும் கங்கையை` என உரைக்க. முதலில் உள்ள நாகம், யானை. மேவி - விரும்பி. பயிலும் - சூழ்கின்ற. மேயாய் எழுந்தருளியிருப்பவனே பரஞ்சோதி மேயாய் யானையை ஊராமல், எருதை ஊரும் காரணத்தையும், ஆகாய கங்கையை உன்சடைமுடியில் கவர்ந்து வைத்த காரணத்தையும், பணி` என முடிக்க. ``முன்னதன் காரணம் அறத்தை நடத்துதலும், பின்னதன் காரணம் பகீரதன் தவமும்` என்பது கருத்து. ``தான்`` இரண்டும் அசைகள்.

பணியாய் மடநெஞ்சே பல்சடையான் பாதம்
பணியாத பத்தர்க்குஞ் சேயன் பணியாய

ஆகத்தான் செய்துமேல் நம்மை அமரர்கோன்
ஆகத்தான் செய்யும் அரன். #816
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பணி ஆதபத்தர் - இடையறாத பணியை (தொழிலை) உடைய வெயிலவர். (ஆதபம் வெயில்) ஆதித்தர். சேயன் - சிவந்த ஒளியை உடையவன். `சூரியர் பலர் ஒன்று கூடினால் உண்டாகும் ஒளியைவிடமேலான ஒளியை உடையவன்` என்றபடி. பணி ஆய ஆகம் - பாம்புகள் பொருந்திய உடம்பை உடையவன். செய்துமேல் - செய்வோ மாயின். தான், அசை. `நெஞ்சே, பல் சடையான் பாதம் பணியாய்; செய்துமேல் சேயனும் ஆகத்தானும் ஆகிய அரன் நம்மை அமரர் கோனாகச் செய்யும்` - என இயைத்து முடிக்க. ``ஆதபத்தர்க்கு`` என்னும் நான்கன் உருபு, `ஆதபத்தரினும்` என ஐந்தாவதன் பொருளில் வந்தது. ``செய்தும்`` என்பது வேறு முடிபாகலிற் பால் இடம்வழுவிய `நம்மை அமரர் கோன் ஆக` என்பது பன்மையொருமை மயக்கம்.

அரன்காய நைவேற் கநங்கவேள் அம்பும்
அரன்காயும் அந்தியுமற் றந்தோ அரங்காய
வெள்ளில்சேர் காட்டாடி வேண்டான் களிறுண்ட
வெள்ளில்போன் றுள்ளம் வெறிது. #817
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அரன் காய - சிவன் (என்னை விரும்பாமல்) வெறுத்தலால், ``அம்பும் அரன்`` என்பதில் அரம், ``அரன்`` எனப் போலியாய் வந்தது. அது காரிய ஆகுபெயராய் அரத்தால் அராவி உண்டாக்கப்பட்ட கூர்மையைக் குறித்தது. உம்மையை மாற்றி, `அநங்க வேள் அம்பின் அரனும் காயும்` என்க. மற்று, அசை ``வெள்ளில்`` இரண்டில் முன்னது வெற்றிடம்; பின்னது விளாமரம். ஆடி, பெயர். மேற்புறம் அழகாய் இருந்து உள்ளே ஒன்றும் இல்லாததை, `வேழம் உண்ட விளாங்கனிபோல்வது` என்றல் வழக்கு. `வேழம் உண்டல்` என்பது விளாங்கனிக்கு இயற்கையில் ஏற்படுகின்ற ஒரு நோய். `தேரை மோந்த தேங்காய்` என்றலும் இது போல்வதே, இப்பழமொழிகளால் யானையும், தேரையும் உண்ணாமலே பழியைச் சுமத்தலால் உண்ணாமலே வரும் பழிக்கு இவைகளை உவமையாக உலகத்தார் கூறுவர். `அரங்கு ஆய காட்டின்கண் ஆடி (என்னை) வேண்டான். (அதனால்) என் உள்ளம் களிறு உண்ட வெள்ளில் போன்று வெறிதாயிற்று. (இங்ஙனம்) அரன் காய நைவேற்கு அநங்க வேள் அம்பின் அரமும் காயாநின்றது. அந்திக் காலமும்

அந்தோ!` என இயைத்து முடிக்க. ``அந்தோ`` என்பதன் பின் `கொடிது` என்பது எஞ்சிநின்றது. இதுவும் கைக்கிளைப்பட்டாள் ஒருத்திதன் கூற்று.

வெறியானை ஊர்வேந்தர் பின்செல்லும் வேட்கை
வெறியார்பூந் தாரார் விமலன் வெறியார்தம்
அல்லல்நோய் தீர்க்கும் அருமருந்தாம் ஆரூர்க்கோன்
அல்லனோ நெஞ்சே அயன். **#818**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வெறி யானை ஊர் - மதத்தை உடைய யானையை ஊர்தியாகக் கொண்டு ஊர்கின்ற வேந்தர்பின் செல்லும் வேட்கை வெறியார் - *(பரிசில் வேண்டி)* அரசர் பின்னே திரிகின்ற ஆசை யில்லாதவர்கள். விமலன் வெறியார் - மலம் இல்லாதவனாகிய இறைவன்மேல் பித்துக் *(பேரன்பு)* கொண்டவர்கள். `ஐயன்` என்பது `அயன்` எனப் போலியாய் வந்தது. ஐயன் - தலைவன். `நெஞ்சே, யாவர்க்கும் தலைவனாவான் வேட்கை வெறியாரும், விமலன் வெறியாரும் ஆகிய அடியார்களது நோயைத் தீர்க்கும் அருமருந்தாம் ஆரூர்க்கோன் அல்லனோ` என இயைத்து முடிக்க. `அங்ஙனமாக, நீ பிறரை நாடியலைதல் எற்றுக்கு` என்பது குறிப்பெச்சம் இனி, ``அயன்`` என்பதைப் போலியாக்காமல், `அயன் முதலாகிய காரணக் கடவுளர்களும் அவனே யன்றோ` என முடிப்பினும் ஆம்.

அயமால்ஊண் ஆடரவம் நாண ததள தாடை
அயமாவ தானேறார் ஆரூர் அயமாய
என்னக்கன் தாழ்சடையன் நீற்றன் எரியாடி
என்னக்கன் றாழும் இவள். **#819**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அயம் ஆல் ஊண்`` என்பதில், ``ஊண்`` என்பதை முதலிற் கூட்டுக. ஆல், அசை. `ஐயம்`, எனப்போலியாய் வந்தது. ஐயம் - பிச்சை. அதள் - தோல். ``அயமாவது`` என்பதில், குதிரையை உணர்த்துவதாய ``அயம்`` என்னும் பெயர் இங்குப் பொதுப்பட `ஊர்தி` என்னும் பொருட்டாய் நின்றது. இரண்டாம் அடியின் இறுதியிலும், `ஐயம்` என்பது போலியாய் ``அயம்`` என வந்தது. ஐயம், இங்கு, சந்தேகம். ஐயம் மாய சந்தேகம் நீங்க. இதனை, ``ஆழும்`` என்பதற்குமுன் கூட்டுக. நக்கன். உடை உடாதவன். உரிமை பற்றி, ``என் நக்கன்`` எனத் தம் தமனாக்கிக் கூறினார். `ஆடிபால்` என ஏழாவது விரிக்க. `இவள் என் நக்கு அன்று

ஆழும்` என இயைத்து முடிக்க.
நகுதல் - மகிழ்தல்; விரும்புதல். அன்று - அவனைக் கண்ட அன்றே. ஆழும் - காதல் வெள்ளத்தில் ஆழ்வாள். `என் நக்கனுக்கு ஊண் ஐயம்; நாண் அரவு; ஆடை அதள்; அயமாவது ஆனேறு; ஊர் ஆரூர்; (அங்ஙனமாக, அவன்பால்) இவள் என் நக்கு அன்று முதலாக ஐயம் மாய ஆழும்` என இயைத்து முடிக்க. இதுவும் பழிப்பது போலச் சிவபெருமானது வசிகரத்தைப் புகழ்ந்தவாறு.

ஆழும் இவளையுங் கையலஆற் றேனென்
றாழும் இவளை அயராதே ஆழும்
சலமுடியாய் சங்கரனே சங்கக் குழையாய்
சலமுடியா தின்றருள்வாய் தார். **#820**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஆழும் சல முடியாய் - வீழ்வார் அமிழ்ந்து போதற் குரிய நீரையணிந்த முடியை உடையவனே. இதனுடன் பிறவற்றையும் முதலிற் கூட்டுக. முதற்கண் உள்ள, ``ஆழும் இவ்வளையும் கை அல; ஆற்றேன்`` என்பது காதல் கொண்டாள் ஒருத்தியது கூற்று. ``வளை`` என்பது ஆகு பெயராய், நிலத்தை வளைத்துள்ள கடல் அலைகளைக் குறித்தது. கை - ஒழுக்கம். அஃதாவது, பிறர்மாட்டு இரக்கம். ஒழுக்கம் உடையவற்றை `ஒழுக்கம்` என்றே கூறினார். கடல் அலை எழுப்பும் ஓசை காதலால் இரவெல்லாம் தூங்காது துன்புறுபவர்களை மேலும் தூங்க ஒட்டாது ஒலித்து வருத்துவன கடல் அலைகள். அவைகளை, ``கை அல`` என்றாள், ``இவ்வளை`` என்பதில் வகர ஒற்றுத் தொகுக்கப்பட்டது. அயராதே - மறந்து விடாதே. ஈற்றடியில் உள்ள ``சலம்`` - வஞ்சனை. முடியாய் - இப்பொழுது கொண்டுள்ள இந்த வஞ்சனையை இறுதி வரையில் கொள்ளாதே. தார் - மாலை. `தார் அருள்வாய்` என்க. இதுவும் காதல் கொண்டாள் ஒருத்தி கூற்று.

தாராய தண்கொன்றை யானிரப்பத் தானிதனைத்
தாராதே சங்கஞ் சரிவித்தான் தாராவல்
லானைமேல் வைகும் அணிவயல்ஆ ரூர்க்கோன்நல்
லானையும் வானோர்க் கரசு. **#821**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரண்டாம் அடி இறுதியில் உள்ள ``தாரா`` - தாராக் கோழி; அது வயலுக்கு அடையாதலின், ``அணிவாய்`` என்பதற்கு முன்னே செல்லக் கூட்டுக. ஆன்ஐ - எருதை. மேல் வைகும் - `மேற் பொருந்தி ஊர்கின்ற

அரசு` என்க. நல்லான் - நல்லவன். நையும் - வானோர் - பல துன்பங்களால் வருந்துகின்ற தேவர். அரசு - தலைவன். இதுவும் கைக்கிளைத் தலைவி கூற்று.

அரசுமாய் ஆள்விக்கும் ஆட்பட்டார்க் கம்மான்
அரசுமாம் அங்கொன்றும் மாலுக் கரசுமான்
ஊர்தி எரித்தான் உணருஞ் செவிக்கினியன்
ஊர்தி எரித்தான் உறா. **#822**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அம் மான் - அழகிய பெண்; இலக்குமி, அவளுக்கு அரசு (கணவன்) ``அரசும் ஆம்`` என்றாராயினும், `அரசு ஆகின்றவனும்` என்றலே கருத்து என்க. அங்கு ஒன்றும் - இலக்குமி யாகின்ற அப்பொழுதே தனது ஒருபாகத்தில் பொருந்துகின்ற அப் பொழுதே தனது ஒருபாகத்தில் பொருந்துகின்ற. அரசும் - தலைவன் ஆகின்றவனும். ஆன் ஊர்தி - இடபத்தை ஊர்பவன். எரி - எரி போலும் உருவம் உடையவன். `தான் கண்ணுக்கு எரிபோலத் தோன்றினும் செவிக்கு இன்பம்` என்க. செவிக்கு இன்பத்தைத் தருபவனாதல். ``தான்`` என்பதன்பின், `ஆயினும்` என்பது எஞ்சி நின்றது. ஈற்றடியில், `தீ யெரித்தான்` என்பது `தி எரித்தான்` எனக் குறுகி நின்றது. அதற்கு முன் உள்ள `ஊர்` திரிபுரம். `தீயால்` என உருபு விரிக்க. உறுதல் - விரும்புதல். ``உறார் போன்று உற்றார் குறிப்பு * `உறாது` என்பது ஈறு குறைந்து நின்றது. `ஊரை உறாது தீயால் எரித்தான்` என்க. ``ஆட்பட்டார்க்கு`` என்னும் நான்கன் உருபை இரண்டன் உருபாகத் திரிக்க. `அம்மானுக்கு அரசு ஆகின்றவனும், அப்பொழுதே தனது ஒருபாகத்தில் பொருந்துகின்றவனும் ஆகிய மாலுக்குத் தலைவன் ஆகின்றவனும், ஆன் ஊர்தியும், தான் எரியாயினும் செவிக்கு இன்பனும் ஊர் உறாது எரித்தவனும் ஆகிய சிவபெருமான் தனக்கு ஆட்பட்டவரை அரசுமாய் ஆள்விக்கும்` என இயைத்து முடிக்க.

உறாவேயென் சொற்கள் ஒளிவளைநின் உள்ளத்
துறாவேதீ உற்றனகள் எல்லாம் உறாவேபோய்க்
காவாலி தார்நினைந்து கைசோர்ந்து மெய்சோர்ந்தாள்
காவாலி தாம்நின் கலை. **#823**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஒளி வளை, தலைவி. `ஒளிவளை நினைந்து சோர்ந்தாள்` என்க. மூன்றாம் அடியில் உள்ள ``காவாலி`` என்பது `காபாலி` என்பதாம்.

`காபாலியாகிய நின் தார் (மாலையை) நினைந்து (நினைதலால்) இரண்டாம் அடி முதலில் உள்ள ``உறா`` என்பது, `உற்று` என, `மிகுந்து` என்னும் பொருட்டாயிற்று. வே தீ - `வேகின்ற தீ` என வினைத்தொகை. `தீயைப்போல உற்றனகள் எல்லாம்` என்க. `கள்`, விகுதி மேல் விகுதியாய் வந்தது. ஏகாரத்தை மாற்றி வைத்து `உறா போயே, கைசோர்ந்து மெய் சோர்ந்தாள்` என்க. உறா - பற்றி. ஏகாரம் தேற்றம். கைசோர்தல் செயல் அறுதல். மெய்சோர்தல் நினைவிழத்தல். (இது பற்றி எழுந்த என் சொற்கள் (காபாலி) நின் உள்ளத்து உருவோ? வாலிதாம் நின் கலை கா` என்க. கலை - பிறை. `பிறை இனியும் தனது நிலவை வீசுமாயின் உன்னைப் பெண் பழி சாரும்` என்றபடி. வாலிது - வெள்ளிது. கா - தடைக்காவல் செய். இது தலைவியது ஆற்றாமை குறித்துச் செவிலி வேண்டியது.

கலைகாமின் ஏர்காமின் கைவளைகள் காமின்
கலைசேர் நுதலிர்நாண் காமின் கலையாய
பால்மதியன் பண்டரங்கன் பாரோம்பு நான்மறையன்
பால்மதியன் போந்தான் பலிக்கு. **#824**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கலைசேர் நுதலிர்`` என்பது முதலாகத் தொடங்கி, ``நாண் காமின்`` என்பதை இறுதியில் வைத்து உரைக்க. கலை சேர் - பிறை சேர்ந்தது போலும். கலையாய பால் - நூல்களாய பகுதிகள். மதியன் - அவற்றால் விளங்கப்பெறும் அறிவாய் உள்ளவன். `பாண்டரங்கன்` என்பது குறுகி நின்றது. பாண்டரங்கம், ஒருவகைக் கூத்து, பால் மதியன் - பால்போலும் பிறையை அணிந்தவன். பலி - பிச்சை. `பலிக்குப் போந்தான்` என்க `தானே மகளிரை மெலியச் செய்தல் போகப் பிறையையும் அணிந்துவந்தான்` என்றபடி முதற்கண் உள்ள கலை - ஆடை. காமின் - இழவாது காப்பாற்றுங்கள். ஏர் - அழகு. இது தோழியர் தலைவியர்க்குக் கூறியது.

பலிக்குத் தலையேந்திப் பாரிடங்கள் சூழப்
பலிக்கு மனைபுகுந்து பாவாய் பலிக்குநீ
ஐயம்பெய் என்றானுக் கையம்பெய் கின்றேன்மேல்
ஐயம்பெய் தான்அநங்கன் ஆய்ந்து. **#825**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பலிக்கு - பிச்சைக்கு. பலிக்கும் மனை - பயன் விளையும் இல்லம். பாவாய் - பெண்ணே `பல்லி` என்பது இடைக் குறைந்து ``பலி`` என

வந்தது. பல்லிக்கு - பல்லைக் காட்டிக் கொண்டிருக்கின்ற இந்தப் பாத்திரத்தில். ஐயம் பெய் - பிச்சையிடு. ஐ அம்பு - ஐந்து அம்புகள். அநங்கன் - மன்மதன். இது தலைவி தோழிக்கு அறத்தொடு நின்றது.

ஆயம் அழிய அலர்கொறைத் தார்வேண்டி
ஆயம் அழிய அயர்வேன்மேல் ஆயன்வாய்த்
தீங்குழலும் தென்றலும் தேய்கோட் டிளம்பிறையும்
தீங்குழலும் என்னையே தேர்ந்து. **#826**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஆய் அம் - நுணுகிய அழகு. ஆயம் - தோழியர் கூட்டம். அவர் அழிதலாவது வருந்தி இரத்தல். `தோழியர் வருந்திக் கொண்டிருக்கச் சோர் வடைகின்ற என்மேல்` என்க. `ஆயன் குழல்` என இயையும் ஆயர் ஊதும் குழல் மாலைக் காலம் நெருங்குதலைத் தெரிவித்தலால் தனிமையால் வாடுவார்க்கு அதனால் துன்பம் மிகும். தேய் கோடு - கூரிய முனைகள். `இவை வருத்துதல் சொல்ல வேண்டுமோ` என்பதாம். தீங்கு உழலும் - தீமை செய்து கொண்டு திரிகின்றன. இதுவும் கைக்கிளைத் தலைவி கூற்று.

தேரோன் கதிரென்னுஞ் செந்தழலால்வெந்தெழுபேய்த்
தேரோன் கதிரென்னுஞ் செய்பொருள்நீ தேராதே
கூடற்கா வாலி குரைகழற்கா நன்னெஞ்சே
கூடற்கா வாலிதரக் கூர். **#827**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நன்னெஞ்சை என்பதை முதலில் வைத்தும், ``கழற்கு ஆ`` என்பதில் உள்ள ``ஆ`` என்பதை இறுதியில் வைத்தும் உரைக்க. தேரோன் - வியத்தகுதேரை உடையவன்; சூரியன். வெந்து, (மணல்கள்) வேதலால். பேய்த் தேர் - கானல். அதனையும் ஒரு தேவனாக வைத்து ``பேய்த் தேரோன்`` என உயர்திணையாகக் கூறினார். அதன் இழிவு தோன்றுதற்கு, `இளமையார் போவார்; முதுமையார் வருவார்` என்றல் போல, கதிர் - ஒளி. பேய்த் தேரின் ஒளி நிலையாது நீங்குவது போல நில்லாது நீங்கும் பொருள்` என்க. ``என்னும்`` என்பன உருவக உருபும், உவம உருபுமாய் வந்தன. தேராது - அதனை அடையும் வழியை ஆராயாமல், கூடல் காவாலி - மதுரையில் உள்ள கபாலி. அவன் கழலைக் கூடுதற்காக. ஆலிதர - கண்ணீர் மழை போல வார. கூர் ஆ - மிகுந்த அன்பை உடையை ஆகு.

கூராலம் மேயாக் குருகோடு நைவேற்குக்

கூரார்வேற் கையார்க்காய்க் கொல்லாமே கூரார்
பனிச்சங்காட் டார்சடைமேற் பால்மதியைப் பாம்பே
பனிச்சங்காட் டாய்கடிக்கப் பாய்ந்து. #828
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கூர் ஆலம் - மிக்க நீர். (அதன்கண் சென்று) மேயாக் குருகு - இரையை உண்ணாமல் (ஏதோ காரணத்தால் வாடியிருக் கின்ற) நீர்ப் பறவையோடு. நைவேற்கு - (உன்னையும் உன் துணை விட்டுச் செல்ல) `வாடுகின்றாயோ` என்று சொல்லி வருந்துகின்ற என் பொருட்டு, `பாம்பே, பால் மதியைப் பனிச்சு அங்கு ஆட்டாய்` என இயைத்து முடிக்க. `பனிப்பித்து` என்பது பிறவினை விகுதி தொக்கு, `பனிச்சு` எனப் போலியாயிற்று. `நடுங்குவித்து` என்பது பொருள். அங்கு ஆட்டாய் - அந்தச் சடையிலே அலைக்கழி. தமக்குத் துன்பம் செய்பவர்களைத் தம்மால் துன்புறுவிக்க இயலாதபொழுது, அதற்கு ஏற்புடையவர்களைக் கொண்டு துன்புறுவித்தலாகிய உலகியல்பு பற்றி, தன்னை வருத்தும் பால்மதியை வருத்தும் படி பாம்பை வேண்டிக் கொண்டாள் காதல் நோயால் வருந்துகின்ற தலைவி, கடிக்கப் பாய்ந்து. கடிக்கப் போவதுபோல் பாய்ந்து (ஆட்டு). `கடித்துக் கொன்று விட்டால் சிவபெருமான் உன்னை ஒறுப்பார் ஆதலின், அது வேண்டா` என்பாள். ``கூரார் வேல் கையார்க்காய்க் கொல்லாமே`` என்றாள். வேல் - மூவிலை வேல், மூன்றாம் அடியில், கூந்தலைக் குறிப்பதாகிய `பனிச்சை என்பது, ஈற்றில் அம்முப் பெற்று, ``பனிச்சம்`` எனவந்தது. கூர் ஆர் பனிச்சம் - அடர்த்தி மிகுந்த கூந்தல். இஃது உமாதேவிதன் பாகத்தைக் குறித்தது. காட்டு ஆர் சடை - காடு போலும் சடை. இதுவும் காதற் பட்டாள் ஒருத்தியது கூற்று.

பாயும் விடையூர்தி பாசுபதன் வந்தெனது
பாயிற் புகுதப் பணை முலைமேல் பாயிலன்நற்
கொன்றாய் குளிர்சடையாற் கென்நிலைமை கூறாதே
கொன்றாய் இதுவோ குணம் #829
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(கொன்றை என்பது விளியேற்குமிடத்து, `கொன்றாய்` என நிற்கும்.) நற்கொன்றாய் - நல்ல கொன்றை மலரே. இதனை முதலிற் கொள்க. பாயில் புகுத - படுக்கையில் புகவும். பணை முலை மேல் பாய் - பருத்த தனங்களின் மேல் படுக்கவும் (இலன்) ``பாய்`` - பரவி. இது `படுத்து` என்னும் பொருட்டாய் நின்றது. இதனைச் செயவென் எச்சமாகத் திரிக்க.

(அதனால் நீயாயினும்) என் நிலைமைகள் குளிர் சடையாற்குக் (கூறினால் உய்வேன்.) கூறாமை யால் என்னைக் கொன்றுவிட்டாய் (பெரிய இடத்தில் உள்ளவர்கட்கு) இதுவோ குணம்! (நன்மை) இது கொன்றையோடிரங்கிய காமம் மிக்க கழிபடர் கிளவி.

குணக்கோடி கோடாக் குளிர்சடையான் வில்லின்
குணக்கோடிக் குன்றஞ்சூழ் போகிக் குணக்கோடித்
தேரிரவில் வாரான் சிவற்காளாஞ் சிந்தனையே
தேரிரவில் வாழும் திறம். **#830**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குணக் கோடி - கோடிகுணம்; `அளவற்ற நன்மைகள்` என்றபடி. கோடா - அவற்றினின்றும் மாறுபடாத. வில்லின் குணம் - வில்லின் நாண், `குணத்துக்கு என்பதில் அத்துச் சாரியை தொகுக்கப்பட்டது. சிவபெருமானது வில்லின் நாண் பாம்பு. அஃது பாம்புகள் வாழும் நாக லோகத்தைக் குறித்தது. குன்றம், மேருமலை. குணக்கு கிழக்கு. ``கிழக்கே ஓடி, இல் வாரான் என்க. மூன்றாம் அடியில் `இரவி` என்பதன் ஈற்று இகரம் தொகுக்கப்பட்டது. ஈற்றடியில் உள்ள ``தேர்``, அறிவாயாக` என ஏவல் வினை முற்று. `நெஞ்சை என்பது வருவித்துக் கொள்க. `நெஞ்சே, இரவி, சிவபெருமானது வில்லின் நாணாகிய பாம்பு வாழும் உலகத்திற்கு ஓடி, அதன் பின்பு மேருவைச் சுற்றி வந்து, கீழ்த்திசையை அடைந்து, தனது தேரில் எனது இல்லத்திற்கு நேராக வரவேண்டும். அவ்வாறு அவன் வரவில்லை. ஆகையால் நாம் இரவில் (இறந்துபடாது) உயிர்வாழும் முறை சிவபெருமானுக்கு அடிமையாகும் நிலைமையைச் சிந்தித்திருப்பதே. இதனை நீ அறிவாயாக - என்பது இதன் பொருள். இதுவும் பெண்பாற் கைக்கிளை.

திறங்காட்டுஞ் சேயாள் சிறுகிளியைத் தான்தன்
திறங்காட்டுந் தீவண்ணன் என்னும் திறங்காட்டின்
ஊரரவம் ஆர்த்தானோ டென்னை யுடன்கூட்டின்
ஊரரவஞ் சால உடைத்து. **#831**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திறம் காட்டும் சேயாள் - அழகினால் யாவர்க்கும் ஒன்றுபடுத்திக் காட்டப்படும் இலக்குமி. `அழகினால் யாவராலும் `இலக்குமி` என்றே எண்ணப்படுபவள்` என்றபடி. என்றது தலைவியை. ``சிறுகிளியை`` என்பதன் பின் `நோக்கி` என ஒருசொல் வருவிக்க. `சேயாள் சிறு கிளியை (நோக்கி) ஊர் அரவம் உடைத்து என்னை அரவம்

ஆர்த்தானோடு கூட்டின், தீவண்ணன் தன் திறம் காட்டும்` என இயைத்து முடிக்க. தன் திறம் - திருவருள். காட்டும் - உனக்கு எந்தவகையி லாவது விளங்கச் செய்வான். மூன்றாவதாய் வந்த ``திறம்`` என்பதில் ஆக்கம் விரித்து, திறமாகக் காட்டில் ஊர்கின்ற அரவம் (பாம்பு) என்க. ஊர் அரவம் - ஊரார் தூற்றும் அலர். சால உடைத்து - முற்றிலும் போக்கி. `எனக்காக நீ தீவண்ணனிடத்தில் தூது செல்ல வேண்டும்` என வேண்டிக் கொண்டபடி.

உடைஓடு காடாடி ஊர்ஐயம் உண்ணி
உடைஆடை தோல்பொடிசந் தென்னை உடையானை
உன்மத் தகமுடிமேல் உய்த்தானை நன்னெஞ்சே
உன்மத் தகமுடிமேல் உய். #832

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(எப்பொழுதும்) உடைந்த ஓடுகளையுடைய காட்டில் ஆடிக்கொண்டு, ஊரார் இடுகின்ற ஐயத்தையே உண்பவனாய், தோலையே` உடையும் ஆடையும் ஆகவும், சாம்பலையே சந்தனமாகவும், என்னை ஆளாகவும் உடையவனும், உன்மத்தத்தை உண்டாக்குகின்ற பூவை (ஊமத்தையை) முடிமேல் அணிந்தவனும், ஆகிய சிவபெருமானை, நல்ல நெஞ்சமே, உனது மத்தகத்தின் மேல் (தலையின்மேல்) உள்ள குடுமிக்கு மேலே இருக்கச் செலுத்து. உடை, அரையில் உடுப்பது. ஆடை, தோள்மேல் இடுவது. இதனை `உத்தரியம்` என்பர். சந்து - சந்தனம். ஆடி அசைவதால், `ஆடை` எனப்பட்டது. வேண்டும் இடங்களில் ஆக்கம் விரிக்க. ``அப்பூதி - குஞ்சிப் பூவாய் நின்ற சேவடியாய்`` * என்பதனாலும் இறைவனுடைய திருவடிகள் அடியார்களது குடுமிகளில் சூடிக்கொள்ளும் பூவாதல் விளங்கும்.

உய்யாதென் ஆவி ஒளிவளையும் மேகலையும்
உய்யா உடம்பழிக்கும் ஒண்திதலை உய்யாம்
இறையானே ஈசனே எம்மானே நின்னை
இறையானும் காண்கிடாய் இன்று. #833

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரண்டாம் அடியில், ``உய்யா`` என்றது, `கழல விடுத்து` என்றதாம். `திதலை உடம்பை அழிக்கும் என மாற்றிக் கொள்ள. ``உடம்பு`` என்றது, உடம்பில் உள்ள அழகை. தேமலைக் குறிப்பதாகிய `திதலை` என்பது இங்கு பசலையைக் குறித்தது. தனிச் சீரில் உள்ள, ``உய் ஆம்`` என்றது, `உயிர்கட்கெல்லாம் உய்தியாய் உள்ள` என்றபடி. உய், முதனிலைத்

தொழிற் பெயர். இறையானும் - சிறிதாகிலும் காண் கிடாய் - காணக் கிடத்து. உன்னைக் காண என்னைக் கிடத்து` என்க. இதுவும் கைக்கிளைத் தலைவி கூற்று.

இன்றியாம் உற்ற இடரும் இருந்துயரும்
இன்றியாம் தீர்தும் எழில்நெஞ்சே இன்றியாம்
காட்டாநஞ் சேற்றான் காமரு வெண்காட்டான்
காட்டானஞ் சேற்றான் கலந்து. **#834**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``எழில் நெஞ்சைஎன்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. எழில் - எழுச்சி; ஊக்கம் யாம் காட்டாஇன்றி நஞ்சு ஏற்றான்- யாம் சான்றாக இல்லாமல் விடத்தை உண்டான். (தேவர்கள் நஞ்சு ஊட்டும் பொழுது நாம் இருந்திருந்தால் தடுத்திருப்போம் என்றபடி.) காட்டான் அஞ்செழுத்து. உணர்வை விளக்கும் விளக்காக அஞ்செழுத்தை ஏற்ற பெருமான், காட்டு காட்டுவது; விளக்கு, ஆன், மூன்றன் உருபு.

``காட்டான்`` - என்றது, காட்டாய் இருத்தலால்` என்றபடி. கலந்து - நம்மிடம் வந்து கலந்தமையால். இடர் - இடையூறுகள்.

கலம்பெரியார்க் காஞ்சிரம்காய் வின்மேரு என்னும்**,**
கலம்பெரிய ஆற்கீழ் இருக்கை கலம்பிரியா
மாக்கடல்நஞ் சுண்டார் கழல்தொழார்க் குண்டாமோ
மாக்கடனஞ் சேரும் வகை. **#835**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதற்கண் உள்ள ``கலம்`` - அணிகலம். பெரியார்க்கு ஆம் சிரம் - பெரிய தேவர்களுக்கு ஆன தலையால் ஆகிய மாலை, காய் வில் - பகைவர்களை அழிக்கும் வில். என்னும் - என்று சொல்லப்படும். இரண்டாம் அடி முதலில் `களம்` என்பது எதுகை நோக்கி, ``கலம்`` எனத் திரிந்து நின்றது. களம் பெரிதாதலாவது, நிழலால் நிலத்தில் பேரிடத்தைக் கவர்தல். இறுதியில் நின்ற ``கலம்`` - மரக் கலம். ஈற்றடியில், `ஆன்மாக்கள்` என்பது முதற் குறைந்து, ``மாக்கள்`` என நின்றது.

தனம் - பொருள். ஆன்மாக்கள் யாவும் அடையத்தக்க பொருள் வீடு பேறு, `அது, நித்தியத்துவத்தை உணர்த்தும் தலைமாலை களையும், எல்லாம் வல்ல தன்மையை உணர்த்தும் மேரு வில்லையும், ஞானோபதேசத்தைக் குறிக்கும் ஆல் நிழலையும் உடையோனாகிய சிவபெருமானை முதல்வனாக உணர்ந்து போற்றாதவர்க்குக் கிடைக்க

மாட்டாது` என்றபடி.

கையா றவாவெகுளி அச்சங் கழிகாமம்
கையாறு செஞ்சடையான் காப்பென்னும் கையாறு
மற்றிரண்ட தோளானைச் சேர்நெஞ்சே சேரப்போய்
மற்றிரண்ட தோளான் மனை. **#836**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நெஞ்சைஎன்பதை முதலிலும், ``சேரப் போய்`` என்பதை, ``மனை`` என்பதற்குப் பின்னும் கூட்டியுரைக்க. ``கையாறு`` இரண்டில் முன்னது செயல் அறுதி. அது மிகுதுயரைக் குறிக்கும். கழிகாமம் - அளவிறந்த காமம். கை ஆறு செஞ்சடை - பல பக்கங் களிலும் சுழலுகின்ற சிவந்த சடை. `கையாறு முதலிய ஐந்தும் சிவ பெருமானால் தடுக்கப்படும் - என நூல்களில் சொல்லப்படும்` என்பது முதல் இரண்டடியின் பொருள். கை ஆறு மல் திரண்ட தோளான் - வெகுண்டு வந்த கங்கையின் வலிமை பொருந்திய பல அலைகளால் துளைக்கப்படாதவன். `ஆகாயத்தினின்றும் வீழ்ந்த கங்கையை வருத்தம் இன்றித் தாங்கினான்` என்றபடி. மற்று இரண்ட தோளான் - (தேவர் பலர்க்கும் பொதுவாய் அமைந்த நான்கு தோள்களினும் வேறு பட்ட இரட்டிப்பான தோள்களை (எட்டுத் தோள்களை) உடையவன். அவனது மனையாவன திருக்கோயில்கள். `சிவபெருமானது திருக் கோயிலை அடைந்து அவனை வணங்கினால், கையாறு முதலியவை களுக்கு அஞ்ச வேண்டா` என்பதாம். மூன்றாம் அடியில் ``திரண்ட`` என்பதும், ஈற்றடியில் ``இரண்ட`` என்பதும் அன்பெறா அகர ஈற்று அஃறிணைப் பன்மை வினையாலணையும் பெயர்கள்.

மனைஆய் பலிக்கென்று வந்தான்வண் காமன்
மனைஆ சறச்செற்ற வானோன் மனைஆய
என்பாவாய் என்றேனுக் யானல்லேன் நீதிருவே
என்பாவாய் என்றான் இறை. **#837**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வண் காமன் மன் ஐ ஆசு அறச் செற்ற வானோன் - வளவிய, மன்மதனது அழகிய உடம்பை, அவனது குற்றம் நீங்குதற் பொருட்டு அழித்த இறைவன். மனை - எனது இல்லத்தில். ஆய் பலிக்கு என்று வந்தான் - `பல இடங்களிலும் சென்று ஏற்கும் பிச்சைக்கு` என்று சொல்லி வந்தான் (அவனை யான் கண்டு) `மன் ஐயாய என்பாவாய்` என்றேன் - (உன் உடம்பு முழுதும்) `நிலையான தலைமையை உணர்த்து வனவாகிய

என்பாய் உள்ளவனே` என்றேன். (அதற்கு) இறை - அவன். திருவே என் பாவாய் - `திருமகளே` என்று சொல்லத்தக்க பாவையே. (பெண்ணே `என்பு ஆவாய்` என நான் கூறியதை, `என் பாவாய்` எனக் கூறியதாக வைத்து,) யான் அல்லேன்; நீ; என்றான் - நான் பாவையல்லேன்; (பெண்ணல்லேன்; ஆண்.) `நீதான் பாவை` என்றான். `என்னே அவனது சொல்திறம்` என்பது குறிப்பெச்சம். குற்றமாவது சிவாபராதம். `முன்னர்த் திருமேனியழகில் ஈடுபட்ட வளாய்த் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தவள், பின்பு அவன் சொல் திறத்தில் ஆழ்ந்துவிட்டாள்` என்பது கருத்து இதுவும் காதலித்தாள் ஒருத்தியது கூற்று.

இறையாய வெண்சங் கிவைதருவேன் என்னும்
இறைஆகம் இன்றருளாய் என்னும் இறையாய்
மறைக்காட்டாய் மாதவனே நின்னுருவம் இங்கே
மறைக்காட்டாய் என்னும்இம் மாது. **#838**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``இம் மாது`` என்பதை, தனிச் சீரில் உள்ள ``இறையாய்`` என்பதற்கு முன்னர்க் கூட்டிப் பின்பு அது முதலாக, ``மாதவனே`` என்பது ஈறாக உள்ளவற்றை முதலில் வைத்து உரைக்க. ``இறை`` - இரண்டில் முன்னது கை; பின்னது சிறிது. ஆகம் - மார்பு. `இறையான்` என்பது விளியேற்று, ``இறையாய்`` என வந்தது. மறைக் காடு தலம். மாதவன் - பெண்ணை உடம்பிலே உடையவன். இங்கே மறைக் காட்டாய் - இவ்விடத்தில் மறைவான ஓர் இடத்தில் காட்டு, ``என்னும்`` என்பதைப் பல முறை கூறியது. `இவ்வாறு இவள் பிதற்றுகின்றாள்` என்றற்கு. இதுவும் காதற்பட்டாள் ஒருத்தி கூற்று.

மாதரங்கம் தன்ன ங்கஞ் சேர்த்தி வளர்சடைமேல்
மாதரங்கக் கங்கைநீர் மன்னுவித்து மாதரங்கத்
தேரானை யூரான் சிவற்காளாஞ் சிந்தனையே
தேரானை யூரானைத் தேர். **#839**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மாதர் அங்கம் - உமாதேவியது உடம்பு. மா தரங்கம் - பெரிய அலைகளையுடைய. மாது அரங்கத் தேர் ஆனை ஊரான். அழகிய பொது இடங்களில் ஊர்தியாக யானையை ஊராதவன். (இடபத்தையே ஊர்பவன்) என்றபடி. `தேராக என ஆக்கம் வருவிக்க. ஈற்றடியில் உள்ள ``தேர்`` இரண்டில் முன்னது, `தெளி` என்னும் பொருட்டு. `சிவனுக்கு ஆளாக எண்ணுகின்ற எண்ணமே நல்லெண்ணம்` எனத் தெளிவாயாக -

என்றபடி. பின்னது, (தெளிந்த வண்ணமே) `சிந்தனை செய்` என்பதாம். இரண்டும் ஏவல் வினைமுற்றுக்கள். ஈற்றடியில் உள்ள ``ஆனை ஊரான்`` என்றது, `திருவானைக்கா` என்னும் தலத்தில் இருப்பவன் என்றதாம்.

தெருளிலார் என்னாவார் காவிரிவந் தேறும்
அருகில் சிராமலையெங் கோமான் விரியுலகில்
செல்லுமதில் மூன்றெரித்தான் சேவடியே யாம்பரவின்
செல்லுமெழில் நெஞ்சே தெளி. **#840**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(`தேர்` என்பது குறுக்கம் பெறின் `தெரு` எனவரும் ஆகலின் `தெருள்`` என்பது அந்தாதியாயிற்று.) அருகு - அண்மை யிடம். விரி உலகம் செல்லும் மதில் - விரிந்த உலகம் எங்கும் செல்லக் கூடிய மதில்கள். ஈற்றடியில் ``செல்லும்`` என்றது. `நமது ஒழுக்கம் பெரியோர்களது அவையில் ஏற்கப்படும்` என்றதாம். ``எழில் நெஞ்சைஎன்பதை முதலிற் கொள்க.

தெளியாய் மடநெஞ்சே செஞ்சடையான் பாதம்
தெளியாதார் தீநெறிக்கண் செல்வர் தெளியாய
பூவார் சடைமுடியான் பொன்னடிக்கே ஏத்துவன்நற்
பூவாய வாசம் புனைந்து. **#841**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தனிச் சீரில், ``தெளி ஆய்`` என்பதில் `தெளி என்னும் முதனிலைத் தொழிற்பெயர் ஆகுபெயராய், அதனையுடைய நீரைக் குறித்தது. ``பூ`` இரண்டில் முன்னது அழகு; பின்னது மலர். ``பாசம்`` என்பது ஆகுபெயராய் அதனையுடைய பொருளைக் குறித்தது. ``அடிக்கே`` என்னும் நான்கனுருபை இரண்ட னுருபாகத் திரிக்க. புனைதல் - சூட்டுதல். `புனைந்து ஏத்துவன்` என்க.

புனைகடற்குப் பொன்கொடுக்கும் பூம்புகார் மேயான்
புனைகடுக்கை மாலைப் புராணன் புனைகடத்து
நட்டங்கம் ஆட்டயரும் நம்பன் திருநாமம்
நட்டங்க மாட்டினேன் நக்கு. **#842**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதல் அடியில், `புன்னை` என்பது இடைக்குறைந்து `புனை` என வந்தது. இது நெய்தல் நிலக் கருப்பொருள். இதன் பூவின் மகரந்தம்

பொன்போலுதலால், இதனை உதிர்த்தல். கடலுக்குப் பொன் சொரிதல்போல உள்ளதாம். கடுக்கை - கொன்றை. புராணன் - பழையோன். புனை கடத்து - அழகிய குடமுழா ஓசையுடன். நட்டம் கம் ஆடும். நடனத்தை சிதாகாசத்தில் ஆடுதலைச் செய்யும். சிதாகாசம் சிதம்பரமாகிய தலத்தையும் குறிக்கும். திருநாமம் நட்டு - திருப்பெயரை (உள்ளத்திலும், நாவிலும்) இருத்தி. நக்கு - மகிழ்ந்து. அங்கம் ஆட்டினேன் - உடம்பை ஆனந்தக் கூத்து ஆடச் செய்தேன். `இனி எனக்கென்ன குறை` என்பது குறிப்பெச்சம்.

நக்கரை சாளும் நடுநாளை நாரையூர்
நக்கரை வக்கரையோம் நாமென்ன நக்குரையோம்
வண்டாழங் கொன்றையான் மால்பணித்தான் மற்றவர்க்காய்
வண்டாழங் கொண்டாள் மதி. **#843**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நக்கு அரைசு ஆளும் நடுநாளை - (பேய்கள்) சிரித்துக் கொண்டு ஆட்சி புரிகின்ற பாதியிரவில். இதன்பின் `வந்து` என ஒரு சொல் வருவிக்க. நாரையூர் நக்கர் - `திருநாரையூர்` என்னும் தலத்தில் உள்ள சிவபெருமான் (உண்மையைக் கூறாமல்) நாம் ஐவக்கரை யோம் என்ன நக்கு - `நாம் அழகிய `திருவக்கரை` என்னும் தலத்தில் உள்ளோம்` என்று (பொய்யாக கூறி) நகைக்கவும். உரையாம் - அவரை நாம் ஒன்றும் இகழவில்லை. (அங்ஙனமாகவும்) வண்டு ஆழ் அம் கொன்றையான் மால் பணித்தான் - வண்டுகள் தேனில் மூழ்கிக் கிடக்கின்ற கொன்றை மாலையை அணிந்த நாரையூரான் (அம் மாலையைத் தாராமல்) மயக்கத்தைக் கொடுத்துப் போயினான். (அதனால் இவள்) மதிவண் தாழம் கொண்டாள் - அறிவு அவனிடத்தை தங்குதலை அடைந்தாள். `கொண்டான்` என்பது பாடமன்று. தாழ்தல் - தங்குதல். ``தாழம்``, அம் ஈற்றுத் தொழிற் பெயர். எள்ளல் பற்றிப் பன்மையில் ஒருமை மயங்கிற்று. இது செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.

மதியால் அடுகின்ற தென்னும்மால் கூரும்
மதியாதே வைதுரைப்பர் என்னும் மதியாதே
மாதெய்வம் ஏத்தும் மறைக்காடா ஈதேகொல்
மாதெய்வங் கொண்ட வனப்பு. **#844**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மறைக்காடா`` என்பதை முதலிலும், ``ஈதேகொல்`` என்பதை இறுதியிலும் கூட்டியுரைக்க. முதற்கண் உள்ள மதி`, சந்திரன். ஆல்,

அசை. தனிச்சீரில் `அஃதியாதே` என்பது, ஆய்தம் தொகுக்கப் பட்டு, `அதியாதே` எனவந்தது. `வைது உரைப்பர்; அஃதியாதே` எனக் கூட்டுக. வைதுரைப்பார் செவிலியும், நற்றாயும். அஃதியாதே - அஃது ``ஏத்தும்`` என்னும் பெயரெச்சம், என்ன முறைமை. ``மறைக்காடன்`` என்பதனோடு முடிந்தது. ``ஈற்றடியில் உள்ள மாது, தலைவி. அதன் பின், `எய்ப்பு` என்பது, ``எய்வு`` என வந்தது. `இவளது எய்ப்புக்குக் காரணமான உனது வனப்பின் தன்மை ஈதோ` என்க `இனி நீ வரைதல் இன்றியமையாதது` என்பது குறிப்பெச்சம். ஏகாரம் வினாப் பொருட்டு. கொல், அடை. அம் கொண்ட வனப்பு - இவளது அழகைக் கொள்ளை கொண்ட உனது அழகு. இது தோழி வரைவு கடாயது.

வனப்பார் நிறமும் வரிவளையும் நாணும்
வனப்பார் வளர்சடையான் கொள்ள வனப்பால்
கடற்றிரையும் ஈரும்இக் கங்குல்வாய் ஆன்கட்
கடற்றிரையும் ஈருங் கனன்று. **#845**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதற்கண் உள்ள வனப்பு, அழகு. இரண்டாம் அடியில் வனம், காடு. `பரிய` எனப் பொருள் தரும். ``பார்`` என்பது `திரண்ட` என்னும் பொருளைத் தந்தது. வனப்பால் - நீரின்கண் உள்ள (திரை) என்க. ஈற்றடியை, `கடற்று + இரை` எனப்பிரித்து, `கடற்று ஆன்கண் இரையும் ஈரும்` என இயைக்க. கடறு - காடு; என்றது முல்லை நிலத்தை. ஆன் - ஆனிரை. இரை - இரைச்சல், `இக்கங்குல் வாய்க் கடல் வனப்பால் திரையும் ஈரும்; கடற்று ஆன்கண் இரையும் கனன்று ஈரும்` என முடிக்க. இது கைக்கிளைத் தலைவி மாலைப் பொழுதின்கண் தனிப்படர் மிக்குக் கூறியது. கங்குல், இங்கு மாலைக் காலத்தைக் குறித்தது.

கனன்றாழி நன்னெஞ்சே கண்ணுதலார்க் காளாய்க்
கனன்றார் களிற்றுரிமால் காட்டக் கனன்றார்
உடம்பட்ட நாட்டத்தன் என்னையுந்தன் ஆளா
உடம்பட்ட நாட்டன் உரு. **#846**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதற்கண் உள்ள ``கனன்று`` என்பதை, `கல் + நன்று` எனப் பிரித்து, `நன்று கல்` என மாற்றி, இறுதியில் வைத்து உரைக்க. ஆழி - (கவலையில்) ஆழ்தலை உடையது. கனன்று ஆர் களிறு - கோபித்து ஆர்ப்பரித்த யானை; கயாசுரன். (யானைத் தோலின் போர்வை தன்னிடத்தில்) மால் காட்ட - மாயானது நிறத்தைக் காட்ட. கனன்றோர் -

மற்றும் பகைவர் சிலர். உடம்பு அட்ட நாட்டத்தன் - உடம்பை அழித்த நாட்டத்தன், ``நாட்டம்`` என்பது இரட்டுற மொழித லாய், `கண்` எனவும், `கருத்து` எனவும் இருபொருள் தந்து. மன்மதன், திருபுரத்தசுரர் ஆகிய இரு திறத்தினர்க்குப் பொருந்திற்று. ``கனன்றார்`` என்பது பொதுப்பட, `பகைத்தவர்` என்னும் அளவாய் நின்றது. ஆளா உடம்பட்ட நாள் - தொண்டனாக ஏற்றுக் கொண்ட நாள். `நாளில் காட்டிய தன் உரு` என விரித்து. `அதனை நன்று கல்` என முடிக்க. நன்று கற்றலாவது, வருணிக்கவும், புகழவும் வன்மை எய்துதல், ``உடம்பட்ட நாள் தன் உரு`` என்றதனால், இவ்வாசிரியர் இறைவனால் எவ்வகையிலோ ஆட்கொள்ளப்பட்டமை விளங்கும்.

உருவியலுஞ் செம்பவளம் ஒன்னார் உடம்பில்
உருவியலுஞ் சூலம் உடையன் உருவியலும்
மாலேற்றான் நான்முகனும் மண்ணோடு விண்ணும்போய்
மாலேற்றாற் கீதோ வடிவு **#847**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உரு இயலும் - உடம்பின் நிறமும்; உம்மை சிறப்பு. இரண்டாம் அடியில் `இயலும்` முதற் குறைந்து வந்தது. இயலும் - போகின்ற. உரு இயலும் மால் ஏற்றான் - அழகாக நடக்கின்ற பெரிய இடப உருவத்தை உடையவன்; திருமால், இங்கும் எண்ணும்மை விரிக்க, மால் ஏற்றாற்கு - மயக்கத்தை ஏற்பதற்குக் காரணமாய் இருந்த வனுக்கு; இருந்தவன் சிவபெருமான். `வடிவு ஈதோ` என்க. ஓகாரம் வியப்பு.

வடிவார் அறப்பொங்கி வண்ணக்கச் சுந்தி
வடிவார் வடம்புனைந்தும் பொல்லா வடிவார்வேல்
முற்கூடல் அம்மான் முருகமருங் கொன்றையந்தார்
முற்கூட மாட்டா முலை. **#848**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உந்தி வடி வார் அறப் பொங்கு வண் கச்சு (புனைந் தும்) - உந்தியின்மேல், நீண்டு தொங்குகின்ற வார்போலவே மிக விளங்குகின்ற கச்சினை (பாம்பாகிய கச்சினை)ப் புனைந்தும் பின்னர், ``புனைந்தும்`` என்றதற்கு, மார்பில் புனைந்தும்` என உரைக்க. வடம் - தலைமாலை. வடிவு ஆர் வடம் - அழகு நிறைந்த வடம், ``புனைந்தும்`` என்பது முன்னரும் சென்றியைந்தது. வடிவு ஆர் வேல் - கூர்மை பொருந்திய படைக்கலம்; சூலம், முற் கூடல் - தலங் களில் முன்னிற்பதாகிய மதுரை, இதனை, ``முளைத்தானை எல்லார்க் கும்

முன்னே தோன்றி`` * என்னும் அப்பர் வாக்கினாலும் அறிக, இனி மடக்கணி கருதாது, `முக்கூடல்` என்பது பாடமாயின், `திரிகூடமலை` என்க. அவ்வாறன்றி, `முக்கூடல் வேர்திரிசூலம்` என்றலும் ஆம். தார்-போக காலத்தில் மார்பில் அணியும் மாலை, `அதனைக் கூட மாட்டா` என்றதனால், `மார்பை அணையப் பெற வில்லை` என்றதாயிற்று. முருகு - நறுமணம். தேனும்` ஆம் முலை கூடமாட்டா` என்க. ``மாட்டா`` என்ற, `மாட்டாமை யுடையனவாய் வருந்துகின்றன` என்றபடி. `இவைகளைப் பெருமையால் பெண்மை நலம் வாயாதோர் பலர் இருக்க. யாம் இவைகளைப் பெற்றும் பயன் என்னை` என்பது குறிப்பெச்சம் இதுவும் கைக்கிளைப் பட்ட தலைவி கூற்று.

முலைநலஞ்சேர் கானப்பேர் முக்கணான் என்னும்
முலைநலஞ்சேர் மொய்சடையான் என்னும் முலைநலஞ்சேர்
மாதேவா என்று வளர்கொன்றை வாய்சோர
மாதேவா சோரல் வளை. **#849**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``முலை`` மூன்றில் முன் இரண்டில் `முல்லை` என்பதன் இடைக்குறை. அவற்றுள் முன்னது முல்லை நிலம், `கானப் பேர்த்தலம் முல்லை நிலத்தில் உள்ளது` என்றபடி. பின்னது கற்பு, `கற்பு நலம்` என்பது அதனையுடைய பெண்ணை - கங்கா தேவியைக் குறித்தது. ``மாதேவா`` இரண்டில் முன்னது இருமொழித் தொடர். `பெண்ணே, வா` என்பது அதன் பொருள் பின்னது சிவபிரானை `மாதேவா` என விளிக்கும் விளி. இவற்றுள் பின்னின்ற ``மாதேவா`` என்பதை முதலிற் கொள்க. ``என்னும்; என்னும்`` என்பன, `என்று பிதற்றுகின்றான்` என்னும் பொருளன. வாய்சோர்தல் - வாய் தன்னை யறியாமலே பலவற்றைச் சொல்லுதல். `வாய் சோர என்னும், என இயைக்க. இவளை நீ, `நலம் சேர் மாத, வா` என்று அழைத்து, நின் வளர் கொன்றை காரணமாக வளை சோர்தலை நீக்கு` என முடிக்க. ``கொன்றை`` என்பதில் தொக்கு நின்ற `ஆன்` உருபு. `அது காரணமாக` என்னும் பொருளது. தன்வினை. பிறவினை இரண்டிற் கும் பொதுவாம் ``சோரல்`` என்பது இங்குப் பிறவினைக் கண் வந்தது. இது தோழி மாலை யிரந்தது. ``முலைநலஞ்சேர்`` என்னுந் தொடர் மீள மீள வந்து, பொருள் வேறுபட்டது சொற் பின்வருநிலையணி.

வளையாழி யோடகல மால்தந்தான் என்னும்
வளையாழி நன்னெஞ்சே காணில் வளையாழி
வன்னஞ்சைக் கண்டமரர் வாய்சோர வந்தெதிர்ந்த
வன்னஞ்சக் கண்டன் வரில். **#850**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஆழி நன்னெஞ்சே, வளை ஆழி வன்னஞ்சைக் கண்டு அமரர் வாய்சோர வந்து எதிர்ந்த வன்னஞ் சக்கு அண்டன் காணில் ஆழி வளையோடு அகல மால் தந்தான்; வரில் வளை` - என்னும் - என இயைத்து முடிக்க. ``ஆழி`` மூன்றில் முதலது மோதிரம்; இடையது, துன்பத்துள் ஆழ்தலையுடையது, இறுதியது கடல், ``வளை`` மூன்றில் முதலது மோதிரம்; இடையது, துன்பத்துள் ஆழ்தலையுடையது, இறுதியது கடல், ``வளை`` மூன்றில் முதலது வளையல் இடையது, ``வளைத்துக் கொள்`` என முற்று, இறுதியது `வளைந்த` (பூமியைச் சூழ்ந்த) என வினைத் தொகை. காணில் - காட்சியளவில் வன்னம் - ஒளி. சக்கு (சட்சு) - கண், ஒளியான கண் - `ஞாயிறு திங்கள், தீ` என்பனவாய் அமைந்த கண்கள். அண்டன் - தேவன் `வந்தெதிர்ந்த அண்டன்` என்க. என்னும் - என்று என் தோழி பிதற்றுகின்றாள். இது தலைவியை ஆற்றுவிக்கும் தோழி கூறியது.

வரிநீல வண்டலம்பு மாமறைக்காட் டங்கேழ்
வரிநீர் வலம்புரிகள் உந்தி வரிநீர்
இடுமணல்மேல் அந்நலங்கொண் டின்னாநோய் செய்தான்
இடுமணல்மேல் ஈசன் எமக்கு. **#851**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியை முதலிற் கொள்க. அந்த அடியில், ``மேல் ஈசன்`` என்பது `மேலாய சிவன்` என்னும் பொருளது, இடும் அணல் ஈசன் - (எமக்கு எல்லாவற்றையும்) தருபவனாகிய ஈசன்; `இது பொழுது நோய் செய்தான்` என்பதாம். ``வரி`` மூன்றில் முன்னது அழகு. இடையது, கீற்று. இறுதியது `வாரி` என்பது குறுகிநின்றது, வாரி - கடல். ``நீர்`` இரண்டில் முன்னது நீர்மை; பின்னது தண்ணீர். அம் நலம் - அழகினால் உண்டாகின்ற இன்பம். `இடு மணல் மேல் நலங் கொண்டான்` என்பது கைக்கிளைத் தலைவி தான் கண்ட கனவைத் தோழிக்குக் கூறியது.

அக்காரம் ஆடரவம் நாண்அறுவை தோல்பொடிசாந்
தக்காரந் தீர்ந்தேன் அடியேனுக் கக்காரம்
பண்டரங்கன் எந்தை படுபிணஞ்சேர் வெங்காட்டுப்
பண்டரங்கன் எங்கள் பவன். **#852**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதல் அடியில் உள்ள ``அக்கு`` - எலும்பு ஆரம் - ஒளிமணிவடம். நாண் -

அரைநாண். அறுவை - துணி; உடை. பொடி- சாம்பல். சாந்து - சந்தனம். `ஆரம் அக்கு; நாண் அரவம்; அறுவை தோல்; சாந்து பொடி` என்க. இரண்டாம் அடியில் உள்ள அக்காரம் - அத வெறுப்பு. அஃதாவது, `மாலை எலும்பு, சாந்து சாம்பல்` என்பன போல இகழ்தல். `காரம் தீர்ந்தேன் ஆகையால், அடியேனுக்கு அவன் அக்காரம் (சருக்கரை) என்க. ``சாந்து`` என்பதன்பின். `என்னும்` என ஒருசொல் வருவிக்க. ``பண்டரங்கன்`` இரண்டில் முன்னது, ஒருவகைக் கூத்து. பின்னது, பழமையான நடன அரங்கம். `வெங்காடாகிய பழைய அரங்கினை உடையவன்` என்க. ``பவன்`` என்பது சிவபெருமானது திருப்பெயர்களுள் ஒன்று.

பவனடிபார் விண்நீர் பகலோன் மதிதீப்
பவனஞ்சேர் ஆரமுதம் பெண்ஆண் பவனஞ்சேர்
காலங்கள் ஊழி அவனே கரிகாட்டில்
காலங்கை ஏந்தினான் காண். #853

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கரி காடு - கரிந்த காடு; சுடுகாடு. ``கால் அங்கை ஏந்தினான்`` என்றது, `ஊர்த்துவ தாண்டவம் ஆடினான்` என்றபடி. ``அவனே`` என்பதை இதன்பின் பின்னும் முதல் அடியில் ``பவனடி`` ஒழிந்தவற்றை அதற்குப் பின்னும் கூட்டி, ``காண்`` என்பதை அசையாக்கியும், ``பவன் அடி பார்`` என்பதை வேறு முடிபாக வைத்தும் உரைக்க. பவன் - சிவன். சிவபெருமான் அனைத்துப் பொருள்களும் தானாகியும், பூமியே திருவடியாகக் கொண்டும் விளங்குதலைக் கூறியவாறு. இரண்டாம் அடி முதற்கண் உள்ள பவனம், தேவலோகம், ஈற்றில் உள்ள பவனம், மேடம், இடபம் முதலிய இராசிகள்.

காணங்கை இன்மை கருதிக் கவலாதே
காணங்கை யாற்றொழுது நன்னெஞ்சே காணங்கை
பாவனையாய் நின்றான் பயிலும் பரஞ்சோதி
பாவனையாய் நின்ற பதம். #854

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

காணம் - பொற்காசு. கவலாது - கவலைப்படாமல். ஏகாரம் தேற்றம். `அங்கையால் தொழுது காண்` என மாற்றுக. காண் நங்கை - தன்னைக் கண்டு வழிபட்ட உமாதேவி. `அவள்பாவிக்கப் படும் பொருளாய் நின்றான்` என்க. ஈற்றடியில் உள்ள ``பாவனை`` என்பதை, `பா + வனை` எனப்பிரிக்க. பா - பாமாலை. வனைதல் - ஆக்குதல். `பதத்துக்

கண்` என ஏழாவது இறுதிக்கண் தொக்கது. நின்ற பதம் - நிலையான பாதங்கள். நிலையாவது, அடைந்தார் பின் நீங்காமை.

பதங்க வரையுயர்ந்தான் பான்மகிழ்ந்தான் பண்டு
பதங்கன் எயிறு பறித்தான் பதங்கையால்
அஞ்சலிகள் அன்பாலும் ஆக்குதிகாண் நெஞ்சேகூர்ந்
தஞ்சலிகள் என்பாலும் ஆக்கு. **#855**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பதங்கம் - பறவை. அது கருடனைக் குறித்தது. வரை - மலை, கருடனாகிய மலைமேல். உயர்ந்தான் - ஏறி வருபவன்; மாயோன். பால் - அவனது பாகத்தை. மகிழ்ந்தான் - தன்பாகத்தில் இருக்க விரும்பினவன். பதங்கன் - சூரியன். சூரியன் தக்கன் வேள்வி யில் பல் உதிர்க்கப்பட்டான் அவனது பதம் - பாதங்களில், நெஞ்சே, அன்பாலும் கூர்ந்து அஞ்சலிகள் (கும்பிடுகள்) ஆக்குதி; (அதனால்) என்பாலும் நீ அஞ்சலிகள் (அஞ்சாமைத் தன்மைகளை) ஆக்கு. அஞ்சப்படும் பொருள்கள் பலவாகச் சொல்லப்பட்டன. `சிவ பெருமானைத் தொழுதால் நாம் எதற்கும் அஞ்ச வேண்டுவதில்லை` என்பது கருத்து, ``சுண்ணவெண் சந்தனச் சாந்தும். உடையார் ஒருவர் தமர் நாம் - அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை`` *1*, ``நாம் ஆர்க்கும் குடியல்லோம்; நமனை யஞ்சோம்`` *2* என்னும் அப்பர் திருமொழிகளையும் ``அச்சம் இலர்; பாவம் இலர்; கேடும் இலர் ... ... கொன்றை நயந்தாளும் - பச்சம்முடை அடிகள் திருப்பாதம் பணிவாரே``* என்னும் திருஞானசம்பந்தர் திருமொழியையும் காண்க. காண், முன்னிலையசை. என்பாலும் - என்னிடத்திலும்.

ஆக்கூர் பனிவாடா ஆவிசோர்ந் தாழ்கின்றேன்
ஆக்கூர் அலர்தான் அழகிதா ஆக்கூர்
மறையோம்பு மாடத்து மாமறையோன் நான்கு
மறையோம்பு மாதவர்க்காய் வந்து. **#856**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஆக்கூர்`` மூன்றில் முதலது, ``ஆக்கு ஊர் பனி`` எனப் பிரித்து, `பொழிகின்ற, உலகை மறைக்கின்ற பனி` எனப் பொருள் கொள்ளுதற்கு உரியது. இடையது, ஊர் ஆக்கு அவர் - ஊரார் தூற்று பழி. இறுதியது. `திரு ஆக்கூர்`த் தலம். மாடம் - மாடக் கோயில். மறை ஓம்பு மாடம் - காவல் செய்கின்ற மாடம். மா மறையோன், சிவபெருமான், ஈற்றடியில் உள்ள மறை, வேதம். மாதவர், அந்தணர். வந்து - வந்ததனால்

`திருஆக்கூர்ப் பெருமான் அங்குள்ள அந்தணர்களுக்கு அருள்புரிய வேண்டி வீதியில் வந்ததனால் நான் பனியால் வாடி ஆவி சோர்ந்து ஆழ்கின்றேன்` எனக் கைக்கிளைத் தலைவி கூற்றாக உரைத்துக் கொள்க.

வந்தியான் சீறினும் வாழி மடநெஞ்சே
வந்தியா உள்ளத்து வைத்திராய் வந்தியாய்
நம்பரனை யாடும் நளிர்புன் சடையானை
நம்பரனை நாள்தோறும் நட்டு. **#857**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மூன்றாம் அடியில் `நம்பு + அரனை` எனப்பிரிக்க. நம்புதல். அரனை, சடையானை, பரனை (அவன்) வந்தியாய் வந்த பொழுது யான் சீறினும் நெஞ்சே (நீ அவனை) நாள்தோறும் நட்டு நட்புக் கொண்டு வந்தியா (வந்தித்து - வணங்கி) உள்ளத்து வைத் திராய்` என இயைத்து முடிக்க. தனிச் சீரில் உள்ள ``வந்தி`` - மங்கல மாகப்படுபவன். `வந்தியாய் வந்து` என முன்னே கூட்டுக. ``வந்து`` என்பதனை, `வர` எனத்திரித்துக் கொள்க. `ஆற்றாமை காரணமாக எனக்குச் சீற்றம் எழலாம்; ஆயினும் நீ அவனை வெறாதே` எனத் தலைவி தன் நெஞ்சிற்கு அறிவுறுத்தினாள். வாழி, முன்னிலை யசை.

நட்டமா கின்றன வொண்சங்கம் நானவன்பால்
நட்டமா நன்னீர்மை வாடினேன் நட்டமா
டீயான் எரியாடி எம்மான் இருங்கொன்றை
ஈயானேல் உய்வ திலம். **#858**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நட்டம் ஆகின்றன - இழப்பு ஆகின்றன. சங்கம் - சங்க வளையல். நட்ட மா நன்னீர்மை - நட்புக் கொண்ட பெரிய, நல்ல இயல்பு, `நன்னீர்மையால்` என உருபு விரிக்க. நட்டம் ஆடியான் - நடனம் ஆடுபவன். `ஆடியான்` என்பது நீட்டல் பெற்றது. ``இலம்`` என்னும் பன்மை இரக்கக் குறிப்புணர்த்தி, ``நான்`` என்ற ஒருமை யோடு மயங்கிற்று. இதுவும் கைக்கிளைத் தலைவி தோழியை மாலையிரக்க வேண்டியது.

இலமலரஞ் சேவடியார் ஏகப் பெறாரே
இலமலரே ஆயினும் ஆக இலமலரும்
ஆம்பல்சேர் செவ்வாயார்க்கு ஆடாதே ஆடினேன்
ஆம்பல்சேர் வெண்தலையர்க் காள். **#859**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி, ``ஆடினேன்`` என்பதை இறுதிக்கண்ணும், ``இலமலரே ஆயினும் ஆக`` என்பதை அதன்பின்னும் கூட்டியுரைக்க. மூன்றாம் அடியில் உள்ள ``ஆம்பல்`` என்பது ஆம்பல் மலரின் நிறத்தைக் குறித்தது. ``செவ்வாயார்`` என்றதும், ``சேவடியார்`` என்றதும் தோழியரை. ஏகாரம் வினாப் பொருட்டு. ஆடுதல் - உரையாடுதல். இரண்டில் முன்னது வெளிப் படுத்துதலையும், பின்னது அளவளாவுதலையும் குறித்தன. ஈற்றடியில் ``ஆம்`` என்பதில் `ஆளாய்` என ஆக்கம் விரிக்க. முதலடியின் முதலில் `இலவு` என்பது உகரம் இன்றி வந்தது. இலவ மலர். சிவப்பு நிறம் உடையது ஆதலின் சேவடிக்கு உவமையாயிற்று. இரண்டாம் அடியில் உள்ள ``இலம்`` - இல்லம்; அஃதாவது குடிமை.

அலர் ஆதல் - பழிச் சொல்லுக்கு உள்ளாதல். `தோழியர்க்கு உரையாமலே யான் வெண்டலையர்க்கு ஆளாய் அளவளாவினேன்; அதன்மேலும் நமது குடி பழிச் சொல்லுக்கு உள்ளாவதாயினும் ஆகுக. சேவடியார் (இறைவர் பால்) தூது ஏகப்பெறாரோ? (பெற்றால் யாதும் உய்வேன்.) யாவரும் பிறர் தூற்றும் பழியை இலமாவோம்` என இயைத்து முடிக்க. இதுவும் மேலைத் துறை.

ஆளானம் சேர்களிலும் தேரும் அடல்மாவும்
ஆளானால் ஊரத்தான் ஏறூறூர்ந்தே ஆளான்போய்
நாடகங்க ளாட்டயரும் நம்பன் திருநாமம்
நாடகங்கள் ஆடி நயந்து. **#860**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஆளான் அஞ்சு ஏர் களிறு - மனிதரால் அஞ்சப் படுகின்ற, அழகிய யானை. மா - குதிரை. ஆள் ஆனார் - தனக்கு அடியர் ஆயினார். பொய் ஆளான் - ஒரு ஞான்றும் பொய்யைப் பயன்படுத்தாதவன்; `வாய்மையையே உடையவன்` என்றபடி. நாடகங்கள் - பலவகை நடனங்கள். நாடு அகங்கள் - நினைக்கின்ற மனங்கள். ஆடி - கண்ணாடி போலத் தூய்மையைப் பெறும். `ஆடி ஆம்` என ஒரு சொல் வருவிக்க. நயந்து - விரும்பி. நயந்து `நாடு அகங்கள்` எனக் கூட்டுக. `ஏறூருந் தாளான்` என்பது பாடம் அன்று.

தான்நாளும் பிச்சை புகும்போலும், தன்அடியார்
வான்ஆள, மண்ஆள வைத்து *
என நக்கீர தேவரும் அருளிச் செய்தார்.

நயந்தநாள் யானிரப்ப நற்சடையான் கொன்றை
நயந்தநாள் நன்னீர்மை வாட நயந்தநாள்
அம்பகலஞ் செற்றான் அருளான் அநங்கவேள்
அம்பகலன் பாயும் அலர்ந்து. **#861**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நய் அந்த நாள் நன்னீர்மை வாட - வருந்துகின்ற அந்த நாட்களில் எனது நல்ல அழகெல்லாம் வாடிப் போதலால், நய் அந்த நாள் நற் சடையான் கொன்றை யான் இரப்ப - இறந்துபடுகின்ற இறுதி நாள் வந்தது போன்ற நிலையில் யான் நல்ல சடைகளையுடைய சிவபெருமானது கொன்றை மாலையை இரக்கவும். நயந்த நாள் அம் பகல் அம் செற்றான் அருளான் - அவனைக் கண்டு நான் விரும்பிய நாளாகிய அழகிய நாளில் எனது அழகை அழித்துச் சென்றவன் அதனை எனக்கு ஈயவில்லை. அநங்க வேள் அம்பு அலர்ந்து அகலம் பாயும் - காமவேளது அம்புகள் எங்கும் பரந்து வந்து என் மார்பிற் பாயாநின்றன; *(யான் இனிச் செய்வது என்!)* `நை` என்பது, `நய்` எனப் போலியாய் வந்தது. ``அந்த`` இரண்டில் பின்னது சுட்டு; முன்னது `அந்தம்` என்பதன் புணர்ச்சி விகாரம். இதுவும் கைக்கிளைத் தலைவி ஆற்றாமை கூறியது.

அலங்காரம் ஆடரவம் என்புதோல் ஆடை
அலங்கார வண்ணற் கழகார் அலங்காரம்
மெய்காட்டும் வார்குழலார் என்னாவார் வெள்ளேற்றான்
மெய்காட்டும் வீடாம் விரைந்து. **#862**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அலங்காரம்`` மூன்றில், முதலது அலங்கு ஆரம் - *(மார்பில்)* அசையும் மாலைகள். அவை அரவமும், எலும்புமாம். இடையது அழகு. வண்ணற்கு - நிறத்தையுடையவன் *(சிவ பெருமான்)* பொருட்டாக. அழகு ஆர் அலங்கு ஆர மெய் காட்டும் வார் குழலார் - தங்களது மேனி யழகு, நிறைந்த ஒளியை வீசுகின்ற முத்தின் நிறத்தைக் காட்டி நிற்கும் நீண்ட கூந்தலையுடைய மகளிர் *(உடல் வெளுத்துப் போன மகளிர்` என்றதாம்.)* இனி என்னாவாரோ! *(இவர்கட்கு இனி)* ஏற்றான் மெய்காட்டும் வீடு விரைந்து ஆம் - இடப வாகனத்தையுடையவன் தனது உண்மையை விளக்குகின்ற வீடு விரைவில் கிடைத்துவிடும்போலும்! *(`இறந்துபடுவர் போலும்` என்றபடி.)*

விரையார் புனற்கங்கை சேர்சடையான் பொன்னா
விரையார் பொழிலுறந்தை மேயான் விரையாநீ

றென்பணிந்தான் ஈசன் இறையான் எரியாடி
என்பணிந்தான் ஈசன் எனக்கு. #863
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

விரை ஆர் புனல் - விரைந்த (வேகமாய்) ஆர்க்கின்ற (ஒலிக்கின்ற) நீர். பொன்னாவிரை - பொன் போலும் ஆவிரம் பூ. ஆர் - நிறைந்த. உறந்தை - உறையூர்; முக்கீச்சரம். நீறு விரையா அணிந்தான் - திருநீற்றை வாசனை பொருந்திய சந்தனமாக அணிந்தவன். `விரைவாக` என்றதற் கேற்ப, `மாலையாக` என்பது வருவித்து, `மாலையாக என்பை அணிந்தான்`` என்க. ஈற்றடியில் ``ஈசன்`` என்பது `அவன்` எனச் சுட்டளவாய் நின்ற `அவன் எனக்குப் பணிந்தான்; என்` - என்க. எனக்கு - என் அளவிற்கு. பணிந்தான் - இறங்கி வந்து அருள் செய்தான். என் - என்ன வியப்பு.

எனக்குவளை நில்லா எழிலிழந்தேன் என்னும்
எனக்குவளை நில்லாநோய் செய்தான் இனக்குவளைக்
கண்டத்தான் நால்வேதன் காரோணத் தெம்மானைக்
கண்டத்தால் நெஞ்சேகாக் கை. #864
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`இனக் குவளைக் கண்டத்தான் ... ... எம்மானைக் கண்ட அத்தால், (அவன்) நக்கு, வளை நில்லா நோய் என் செய்தான்? (இவள்) `எனக்கு வளை நில்லா; எழில் இழந்தேன் என்னும்; (இனி இவளைக் காக்கை நெஞ்
என இயைத்து உரைக்க. இனக் குவளைக் கண்டத்தான் - கூட்டமான நீலோற்பலப் பூப்போலும் கரிய கண்டத்தை யுடையவன். கண்ட அத்தால் - அவனைக் கண்ட அதனாலே, `கண்ட` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. `அதனால்` என்பது `அத்தால்` என மருவிற்று. நக்கு - சிரித்து; `அன்பு காட்டி` என்றபடி வளை நில்லா நோய் - தாழ்ந்து நில்லாது உயர்ந்து எழுகின்ற நோய், காக்கை - காத்தலைச் செய்வது. நெஞ்சு காத்தலாவது, அவனை நினையாது மறத்தல், என்னும் - என்று சொல்லி இரங்குகின்றாள்.

காக்கைவளை என்பார்ப்பார்க் கன்பாய்ப்பால் நையாதே
காக்கைவளை யென்பார்ப்பான் ஊர்குரக்குக் காக்கைவளை
ஆடானை ஈருரியன் ஆண்பெண் அவிர்சடையன்
ஆடானை யான தமைவு. #865
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதலடியில் ``காக்கைவளை`` என்பதை, `கை வளை கா` என மாற்றுக. ``கா`` - கழன்று வீழாமல் காப்பாற்று. ஏவல் வினை முற்றின்முன் வல்லொற்று மிக்கது, என்பு - என்றல்; புகர ஈற்றுத் தொழிற் பெயர். என்பு ஆர்ப்பார்க்கு அன்பாய் - என்பதாகச் சொல்ல ஆரவாரிக்கின்றவர்கள் மேல் அன்பாய். தலைவி தன்னைப் பிறர் போலக் கூறினாள் ஆதலின், ``ஆர்ப்பார்`` எனப் பன்மையாற் கூறினாள்; பால் நையாது - அவர்கள்பால் மனம் இரங்காமல் ஏகாரம் தேற்றம். காக்கை வளை என்பு ஆர்ப்பான் - காக்கைகள் சூழ்கின்ற எலும்புகளை (`புறங்காட்டில் உள்ள எலும்புகளை` என்றபடி) மாலையாக அணிந்தவன்; சிவபெருமான். ``குரக்குக் கா`` என்பதும் ஈற்றடியில் உள்ள ``ஆடானை`` என்பதும் தலங்கள். கை வளை ஆடு ஆனை ஈர் உரியன் - தும்பிக்கை வளைந்து அசைகின்ற யானையை உரித்த தோலையுடையவன். ஆண் பெண் - ஆணும் பெண்ணுமாய உருவம் உடையவன். அமைவு - பொருந்தும். `காதல் மிக்கு மெலி கின்ற மகளிர், - எங்கள் கை வளைகளைக் கா - என்று முறையிடு கின்றவர்கள்மேல் அன்பாய், அவர்பால்இரக்கங் கொள்ளாமலே சிவன் குரக்குக்கா, ஆடானை ஆகிய தலங்களில் வாளா அமர்ந் திருத்தல் பொருந்துவதொன்றே` எனத் தலைவி இரங்கினாள். `பொருந்துவது` என்றது எதிர்மறைக் குறிப்பு.

அமையாமென் தோள்மெலிவித் தம்மாமை கொண்டிங்
கமையாநோய் செய்தான் அணங்கே எமையாளும்
சாமத்த கண்டன் சடைசேர் இளம்பிறையன்
சாமத்தன் இந்நோய்செய் தான். **#866**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அமை - மூங்கில். அம் மாமை - அழகிய, மாந்தளிர்போலும் நிறம், அமையா நோய் - தீரா நோய், சாமத்த - சாமவேதம் பொருந்திய. `சாமத்தனாய்` என ஆக்கம் விரிக்க. சாமத்தன் - இடாயாமத்திலே வந்தவன். ``அணங்கே`` எனத் தோழியை தலைவி விளித்தாள். ஆகவே, இது தோழியைத் தூது செல்ல வேண்டிக்கொண்ட தலைவி கூற்றாயிற்று.

தானக்கன் நக்க பிறையன் பிறைக்கோட்டுத்
தானக் களிற்றுரியன் தண்பழனன் தானத்
தரையன் அரவரையன் ஆயிழைக்கும் மாற்கும்
அரையன் உடையான் அருள். **#867**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`தான் + நக்கன்` எனப் பிரிக்க. நக்கன் - உடை யில்லாதவன்; திகம்பரன்; திக்குகளையே ஆடையாக உடையவன். நக்க பிறையன். ஒளி வீசுகின்ற பிறையை அணிந்தவன். கோடு - தந்தம், தானக் களிறு - மத நீரையுடைய யானை தானத்து அரையன் - தானம் செய்தற்கு வேண்டப்படும் சற்பாத்திரங்களுள் முதலாவதான வன். `சிவனை நோக்கிச் செய்யும் தானங்களை விடச் சிறந்த தானம் பிறிதில்லை` என்றபடி. ஆயிழை - உமை. மால் - மாயோன். அரையன் - இவர்களைப் பாதி உடலிற் கொண்டவன் `அருள் உடையான்` எனமாற்றி, `இங்ஙனம் கூறப்பட்ட இவன் உயிர்கள் மாட்டுப் பேரருள் உடையவன்` என்க.

அருள்நம்பாற் செஞ்சடையன் ஆமாத்தூர் அம்மான்
அருள்நம்பால் நல்கும் அமுதம் அருள்நம்பால்
ஓராழித் தேரான் எயிறட்ட உத்தமனை
ஓராழி நெஞ்சே உவ. **#868**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதலடியிலும், இரண்டாம் அடியீற்றிலும் உள்ள ``அருணம்`` - சிவப்பு. அஃது ஆகுபெயராய், முதற்கண் நெருப்பினை யும், பின்னர் சூரியனது கிரணங்களையும் குறித்தன. பால் - பான்மை; தன்மை. ஆமாத்தூர், ஒருதலம். இரண்டாம் அடியில் உள்ள ``அருணம் பால்`` என்பதை, `அருள் + நம்பால்` பிரித்து உரைக்க. `ஆழி நெஞ்சே ஓர்; உவ` என மாற்றி, `துன்பத்தில் ஆழ்கின்ற நெஞ்சே, நினை; அதன் பயனாக மகிழ்ச்சியடை` என உரைக்க.

உவவா நறுமலர்கொண் டுத்தமனை உள்கி
உவவா மனமகிழும் வேட்கை உவவா
றெழுமதிபோல் வாள்முகத் தீசனார்க் கென்னே
எழுமதிபோல் ஈசன் இடம். **#869**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஈசனார்க்கு ஈசன் இடம், உத்தமனை மலர் கொண்டு உள்கி மகிழும் வேட்கை எழுமதி போல் என்` என இயைத்து முடிக்க. ஏகாரம் தேற்றம். ``உத்தமன்`` என்பது ``ஈசனார்`` எனப்பட்ட வனையே குறித்தலால் `அவன்` என்னும் சுட்டுப் பெயரளவாய் நின்றது. உவவா உள்கி - மகிழ்ந்து நினைத்து, இரண்டாம் அடியில் `உவ்வவா` என்பது வகரமெய் குறைந்து ``உவவா`` என வந்தது. உகரம் சுட்டு. `உந்த அவாவால் மனம்

மகிழ்கின்ற வேட்கை எழும் மதி` என்க. மதி - புத்தி. உவவு ஆறு - உவா நாளில் (பௌர்ணிமையில்) எழுகின்ற திங்கள். என் - என்று அறி, ஈற்றடியில் உள்ள ஈசன் - தலைமை; `ஈசனார்க்கே, நறுமலர் கொண்டு உள்கி மகிழும் வேட்கை எழுகின்ற புத்தியே சிறப்புடைய இடம்` என்றபடி உயர்த்தற் கண் ஒருமையோடு பன்மை மயங்கிற்று.

இடமால் வலமாலை வண்ணமே தம்பம்
இடமால் வலமானஞ் சேர்த்தி இடமாய
மூவா மதிபுரையும் முன்னிலங்கு மொய்சடையான்
மூவா மதியான் முனி. **#870**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதல் அடியில், இடம் - இடப்பக்கம். மால் - மாயோன், மாலை - அந்தி வானம். தம்பம் இட - நிலைநிற்றலை இடும் படி. மால் வல மான் அம் சேர்த்தி - மருளுதலை மிக உடைய மானை அழகாக ஏந்தி. `அதற்கு (மதிக்கு) இடமாய சடை` என இயைக்க. புரைய - உயர்ந்து விளங்க. மூவா மதியான் - கெடாத அறிவை உடையவன்; `நித்தியன்` என்றபடி. முனி - தவக் கோலத்தையுடைய வன். இடப்பக்கத்தில் மாயோனை உடையனாய் இருத்தல் முதலிய வற்றைக் கூறி, இறுதியில் அவனது தவக்கோலத்தைப் புகழ்ந்தவாறு.

முனிவன்மால் செஞ்சடையான் முக்கணான் என்னுமர்
முனிவன்மால் செய்துமுன் நிற்கும் முனிவன்மால்
போற்றார் புரமெரித்த புண்ணியன்தன் பொன்னடிகள்
போற்றாநாள் இன்று புலர்ந்து. **#871**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முனிவன் - தவக் கோலத்தையுடையவன். மால் சடை - பெரிய சடை. என்னும் - என்று சொல்வாள். முனி வன்மால் செய்து - யாவரும் வெறுத்தற்குரிய வலியமையலைக் கொண்டு. முன் நிற்கும் - அவன் எதிரில் போய் நிற்பாள். முனிவன்மால் போற்றார் - கோபிக் கின்ற, வலிய அஞ்ஞானத்தையுடைய பகைவர். அடிகள் போற்றா நாள் இன்று. பாதங்கள் இவளைக் காப்பாற்றாது கைவிட்ட நாளாகிய இன்று புலர்ந்து - மெலிந்து `இவள்` என்னும் எழுவாய் வருவித்து, `இன்று புலர்ந்து என்னும், `நிற்கும்` என முடிக்க. இது தலைவியது ஆற்றாமை கண்டு செவிலி நொந்து கூறியது.

புலர்ந்தால்யான் ஆற்றேன் புறனுரையும் அஃதே
புலர்ந்தானூர் புன்கூரான் என்னும் புலர்ந்தாய

மண்டளியன் அம்மான் அவர்தம் அடியார்தம்
மண்டளியன் பின்போம் மனம். #872
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரண்டாம் அடியில் தனிச்சீர் முதலாகத் தொடங்கி யுரைக்க. `கல் தளி`, `கற்றளி` ஆதல்போல, `மண் தளி`, `மண்டளி` யாயிற்று. `மண்ணால் (சுடுமண்ணால் - செங்கற்களால்) ஆகிய கோயில்` என்பது பொருள். பல கோயில்கள் இவ்வாறு அமைந்தன. `திருவாரூர்ப் பரவையுள் மண்டளி` என்பதும் எண்ணற்பாற்று. இங்குக் குறிக்கப்பட்டதும் அதுவேயாகலாம். புலர்ந்து ஆய மண் - சுடப்பட்டு அமைந்த மண். ஈற்றடியில் `மண்டு` + அளியன் - எனப் பிரித்து, `மிக்க அன்பில் விளங்குபவன்` என உரைக்க. `அம்மானவன்` என்பதில் `அவன்`, பகுதிப் பொருள் விகுதி. (பொழுது, பயனின்றி வீணே) வீணே விடியுமாயின். புறன் உரை - அலர். அஃதே - முன்னிருந்த நிலையினதே. `புல் ஆர்ந்த ஆன்` என்பதில் ``ஆர்ந்த`` என்பது முதல் குறுகியும், ஈற்று அகரம் தொகுக்கப்பட்டும் நின்றது - `புல்லை உண்கின்ற இடபம்` - என்பது பொருள். புன்கூர் - திருப்புன்கூர்த் தலம், `மனம் என்னும்` என முடிக்க. என்னும் - என்று பதைக்கும். கைக்கிளைத் தலைவி கூற்று.

மனமாய நோய்செய்தான் வண்கொன்றை தாரான்
மனமாய உள்ளார வாரான் மனமாயப்
பொன்மாலை சேரப் புனைந்தான் புனைதருப்பைப்
பொன்மாலை சேர்சடையான் போந்து. #873
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரண்டாம் அடியின் தனிச் சீரில் ``மனமாய`` என்பதை, `மன் அம் ஆய் அ` எனப் பிரித்து, `நிலை யான அழகாக அந்த` எனப் பொருள் கொண்டு, `அப் பொன் மாலை` என இயைத்து, `அந்தப் பொன்போலும் கொன்றை மாலையை` என உரைக்க. ஈற்றடியில் உள்ள மாலை - தன்மை. `தருப்பை பொன் மாலை` என்பதை, பொன் தருப்பை மாலை` என மாற்றி, `பொன்னாலாகிய தருப்பையின் தன்மையை உடைய சடை` என்க. மனம் மாய நோய் செய்தான் - மனம் அழியும்படி துன்பத்தை உண்டாக்கினான். தாரான்- தாமாட்டான். மனம் ஆய உள் ஆர வாரன் - எனது மனநிலையை உள்ளபடி உணர்தற்கு என் இருப்பிடத்தினுள்ளும் வரமாட்டான். `என் செய்வது` என்பது குறிப்பெச்சம். இதுவும் மேலைத் துறை.

போந்தார் புகவணைந்தார் பொன்னேர்ந்தார் பொன்னாமை

போந்தார் ஒழியார் புரமெரித்தார் போந்தார்
இலங்கோல வாள்முகத் தீசனார்க் கெல்லே
இலங்கோலந் தோற்ப தினி. **#874**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``புரம் எரித்தார்`` என்பதை முதலிற் கொள்க. போந்தார் - வீதி வழியே வந்தார். புக அணைந்தார் - என் இல்லத்துள் புகுவார் போல அணுகிவந்தார். பொன் நேர்ந்தார் பெற்றோர்க்குப் பொன் தரவும் இசைந்தார் (ஆயினும்) பொன் ஆம் ஐ போம் தார் ஒழியார் - பொன் போலும் அழகு பொருந்திய கொன்றைமாலைய விடார்; (தாரார்) போந்தார் - மறைந்துவிட்டார். எல்லே, இரக்கச் சொல், இனி, `எல் - பகல்` எனக் கொண்டு, `எல்லே போந்தார்` என மேலே கூட்டி உரைப்பினும் ஆம் மூன்றாம் அடியில் ``இலங்கு ஓலம்`` என்பதை `ஓலம் இலங்கு` என மாற்றி, `பலரது முறையீடுகளை யடைய முகத்தை யுடைய ஈசனார்` என்க. ஈசனார்க்கு - ஈசனார் பொருட்டு. கோலம் தோற்பது இனி இலம் - அழகை இழப்பதை இனி யாம் செய்ய மாட்டோம். இஃது அருளாமை நோக்கி ஊடி யுரைத்தாள் கூற்று.

இனியாரும் ஆளாக எண்ணுவர்கொல் எண்ணார்
இனியானஞ் சூணிருக்கைக் குள்ளான் இனியானைத்
தாளங்கை யாற்பாடித் தாழ்சடையான் தானுடைய
தாளங்கை யால்தொழுவார் தாம். **#875**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரண்டாம் அடி முதலாகத் தோடங்கி, ``தாம்`` என்பதை, ``ஆளாக`` என்பதற்கு முன்னே கூட்டியுரைக்க. இனியா நஞ்சு - இனிப்பை (விருப்பத்தை) உண்டாக்காத நஞ்சு. நஞ்சு ஊண் இருக்கைக்கு உள்ளான் இனியான் - நஞ்சினை உண்டு, அதனை உள்ளே அடக்கியதனால் தானும் அதுவே போன்று இனித்தல் இல்லாத வன். `கையால் தாளம் பாடி` - என மாற்றி, `தாளத்தோடு` என உருபு விரிக்க. முதல் அடியில், ``இனி`` என்றது, `அவன் சிறிதும் அருளான் ஆனபின்பு` என்றபடி. இஃது ஆசிரியர் ஊடிக் கூறியது. ``உங்களுக்கு ஆள் செய்ய மாட்டோம்; ஓணகாந்தன் தளியுளீரே`` என்றாற் போல்வன காண்க.

தாமரைசேர் நான்முகற்கும் மாற்கும் அறிவரியார்
தாமரைசேர் பாம்பர் சாடமகுடர் தாமரைசேர்
பாணியார் தீர்ந்தளிப்பர் பாரோம்பு நான்மறையார்
பாணியார் தீர்ந்தளிப்பர் பார். **#876**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தாம் அரை சேர் பாம்பர் - (நான்முகற்கும், மாற்கும் அரியாராகிய) அவர் தமது இடையிலே (கச்சாகச்) சேர்ந்த பாம்பினை உடையவர். தா மரைசேர் பாணியார் - தாவுகின்ற மான் பொருந்திய கையை உடையவர். தார்ந்து அளிப்பர் பார் ஓம்பு - பாசம் நீங்கி, அது நீங்காதாரை ஆள்பவர்களது தூய உலகத்தை (சுத்த மாயா புவனங்களை)க் காக்கின்ற (பரமசிவனார்) பாணித்தல் - தாமதித்தல். பாணியார் - தாமதியாராய் தீர்ந்து அளிப்பர் - விரைந்து தமது உலகத்தி னின்றும் நீங்கி வந்து அருள் வழங்குவார்` பார் - இதனை (நெஞ்சே) நீ அறிவாயாக.

பார்கால்வான் நீர்தீப்ப பகலோன் பனிமதியன்
பார்கோல மேனிப் பரனடிக்கே பார்கோலக்
கோகரணத் தானறியக் கூறுதியே நன்னெஞ்சே
கோகரணத் தானாய கோ. #877

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதல் அடியில் அட்ட மூர்த்தங்களில் இயமானன் (ஆன்மா) தவிர, ஏனைய ஏழும் கூறப்பட்டன. இரண்டாம் அடியில், `பார் மேனி` என இயைத்து, `பார்க்கத் தக்க திருமேனி` என உரைக்க. தனிச்சீரில் உள்ள பார் - நில உலகம் - கோகரணம், துளுவ நாட்டுத் தலம். ஆன் - அவ்விடம் `அவ்விடத்துச் சென்று` என்க. ஈற்றடியில், கோகு - ஆகாயம். கரணம் - உடம்பு. ஆகாயம் போலும் உடம்பை உடைய கோ (தலைவன்) அநங்கன்; மன்மதன் என்றது, அவனால் உண்டாகின்ற துன்பம். `நெஞ்சே, கோ கரணத்தான் ஆய கோவினால் உண்டாகின்ற துன்பத்தைப் பரனடிக்கே கூறுதியோ` என இயைத்து முடிக்க. கூறுதல் - விண்ணப்பித்தல். இதுவும் கைக்கிளைத் தலைவி கூற்று.

கோப்பாடி ஓடாதே நெஞ்சே மொழி கூத்தன்
கோப்பாடிக் கோகரணங் குற்றம் கோப்பாடிப்
பின்னைக்காய் நின்றாற் கிடம்கொடுக்கும் பேரருளான்
பின்னைக்காம் எம்பெருமான் பேர். #878

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நெஞ்சே, கோப்பாடி ஓடாதே` என மாற்றி முதலிலும், `கூத்தன் கோப்பாடிக் கோகரணம், குற்றாலம் கூறு` என மாற்றி, இறுதியிலும் வைத்து உரைக்க கோப்பாடி ஓடாதே - அரசரைப் பாடிக்கொண்டு

அவர்கள்பால் ஓடாதே. `கோ` என்பது சொல்லால் அஃறிணையாதலின், அஃது இங்குப் பன்மையதாயிற்று, கோப் பாடிக் கோகரணம் - தலைவனது (சிவபெருமானது) இடமாகிய, பின்னைக்காய்க் கோப்பு ஆடி நின்றாற்கு - நப்பின்னைக்கு அன்பனாய் ஆயர்மகளிரோடு கைகோத்துக் குரவையாடி நின்ற மாயோனுக்கு. இடம் கொடுக்கும் - இடப்பாகத்தைக் கொடுத்த. எம்பெருமான் பேர் பின்னைக்கு ஆம். எமக்குப் பெருமானாகிய சிவபெருமானது திருநாமத்தைச் சொன்னால் அது, வருகின்ற பிறப்பிற்கு உறுதுணையாய் வந்து உதவும்.

பேரானை ஈருரிவை போர்த்தானை ஆயிரத்தெண்
பேரானை ஈருருவம் பெற்றானைப் பேராநஞ்
சுண்டானை உத்தமனை உள்காதார்க் கெஞ்ஞான்றும்
உண்டாம்நா ளல்ல உயிர். **#879**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பேரானை ஈர் உரிவை - பெரிய யானையை உரித்த தோல். ``ஆயிரத்தெண் பேர்`` என்பதை வடமொழியில், `அட்டோத்தர சகத்திர நாமம்` என்பர். ஈர் உருவம் - பெண்ணும், ஆணும் ஆய இருதிற உருவம். பேரா நஞ்சு - பிறரால் விலக்கலாகாத நஞ்சு. எஞ்ஞான்றும் - எந்த ஒரு நாளும் `உயிர் உண்டாம் நாள் அல்ல` (இறந்த நாளேயாம்) என்க. `ஞான்று` என்பது இங்குப் பெயர்த் தன்மைப்பட்டு, எழுவாயாய் நின்றது. ``பெரும்பற்றப் புலியூரானைப் - பேசாத நாளெல்லாம் பிறவா நாளே`` என்ற அப்பர் திருமொழியையும் நோக்குக.

உயிராய மூன்றொடுக்கி ஐந்தடக்கி உள்ளத்
துயிராய ஒண்மலர்த்தால் ஊடே உயிரான்
பகர்மனத்தான் பாசுபதன் பாதம் பணியப்
பகர்மனமே ஆசைக்கட் பட்டு. **#880**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``உயிர்`` மூன்றனுள் முதலது உயிர்ப்பு; மூச்சு - மூன்று மூச்சாவன இடநாடி மூச்சு, வலநாடி மூச்சு, நடுநாடி மூச்சு. ஒடுக்கி - அடக்கி; கும்பித்து. ஐந்து - ஐம்புல ஆசை. `ஐம்புல ஆசையைப் பிராணாயாமத்தில் அடக்கி` என்றபடி. `பிராணாயாமம்` என்றது உபலக்கணம் ஆதலின், அஃது ஏனைய ஏழ் உறுப்புக்களையும் தழுவி, `யோகம்` எனப் பொருள் தந்தது. ``உள்ளம்`` என்றதும், `உயிர்க்கு உயிர்` என்றவாறாம். சத்தியை, `தாள்` என்றல் மரபு. உயிரான். உயிராய் இருப்பவன். `உயிருக்கு உயிராய் உள்ளது சத்தி; சத்திக்கு உயிராய்

உள்ளது சிவம்` - என்றபடி. ``பகர்`` இரண்டனுள் முன்னது, `அறுகுணங்களின் தொகுதியாகிய பகத்தை யுடையவர்` என்னும் பொருட்டு. அறுகுணங்களாவன ஐசுவரியம். திரு, புகழ், ஞானம், வீரம், வைராக்கியம்` என்பன. (திருவாவது நன்மை) இது `பகைவர்` என வருதல் பெரும்பான்மை. ``முக்கோற்பகவர்`` * முதலியன காண்க. பகர் - (அவன் பெயர்களைச்) சொல், `மனமே, பாசுபதன் பாதம் பணிய ஆசைக்கட்பட்டு, ஐந்து அடக்கிப் பகர்` என இயைத்து முடிக்க.

பட்டாரண் பட்டரங்கன் அம்மான் பரஞ்சோதி
பட்டார் எலும்பணியும் பாசுபதன் பட்டார்ந்த
கோவணத்தான் கொல்லேற்றன் என்றென்று நெஞ்சமே
கோவணத்து நம்பனையே கூறு. **#881**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பட்டார் அண் - அன்பு பட்டவர் அணைகின்ற. பட்ட அரங்கன் - பெயர் பெற்ற அம்பலவன். அகரம் தொகுத்தல்) பட்டார் எலும்பு - இறந்தவர்களது எலும்பு. பட்டு ஆர்ந்த கோவணத்தன் - பட்டு இழைகள் பொருந்திய கோவணத்தை அணிந்தவன். கோ வண்ணத்து நம்பன் - ஆகாயத்தை வடிவமாக உடைய பழையோன், (ணகர ஒற்றுத் தொகுத்தல் பெற்றது.)

கூற்றம் பொருளும்போற் காட்டியெற் கோல்வளையைக்
கூற்றின் பொருள்முயன்ற குற்றாலன் கூற்றின்
செருக்கழியச் செற்ற சிவற்கடிமை நெஞ்சே
செருக்கழியா முன்னமே செய். **#882**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

எல் கோல் வளை - ஒளி பொருந்தினவும், ஒழுங்காய் அமைந்தனவும் ஆகிய வளையல்களை அணிந்தவள்; உமாதேவி. (அவளை) கூற்றின் - தனது திருமேனியின் ஒரு கூற்றில் இருக்கத்தக்க. பொருள் - பொருளாக. (ஆக்கம் வருவிக்க) கூற்றும் பொருளும் போல் காட்டி முயன்ற - சொல்லும், அதன் பொருளும் போலப் பிரிவற்றுத்தோன்றும்படி காட்சிப்படுத்து இருக்கச் செய்த. மூன்றாம் அடியில் `செரு + கழிய` எனப் பிரித்து, `போர் ஒழியும்படி` என உரைக்க. இரண்டாம் அடியில் ``செருக்கு`` என்பது, உடல் வலிமையைக் குறித்தது. `என் கோல் வளை` என்பது பாடம் அன்று.

செய்யான் கருமிடற்றான் செஞ்சடையான் தேன்பொழில்சூழ்
செய்யான் பழனத்தான் மூவுலகும் செய்யாமுன்

நாட்டூணாய் நின்றானை நாடுதும்போய் நன்னெஞ்சே
நாட்டூணாய் நின்றானை நாம். #883
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதலடியில் `செய்யான்` - செம்மை நிறத்தை யுடையவன். இரண்டாம் அடியில் `செய்யான்` - செப்பம் (நடுவு நிலைமை) உடையவன்; இதனை, ``செஞ்சடையான்`` என்பதன்பின் கூட்டுக. பழனம் ஒருதலம். செய்யா - படைத்து. முன்நாள் தூணாய் நின்றான் - படைத்த காலம் முதலாகவே உலகத்தைத் தாங்கி நிலை பெறுத்து வோனாய் நின்றான். நாட்டு ஊணாய் நின்றான் - உலக போகமாய் நின்றான். பின் இரண்டடிகள் `நாட்டுணாய்` என ஓதுவன பாடம் அல்ல.

நாவாய் அகத்துளதே நாமுளமே நம்மீசன்
நாவாய்போல் நன்னெறிக்கண் உய்க்குமே நாவாயால்
துய்க்கப் படும்பொருளைக் கூட்டுதும் மற்றவர்க்காள்
துய்க்கப் படுவதாஞ் சூது. #884
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வாயகத்து உளதே` என மாற்றுக. `வாழ்த்த நா உளதாகவும், அதைக் கொண்டு நாம் உளேமாகவும், பிறவியாகிய கடலை` மரக்கலம் போல நின்று கடப்பித்து, நன்னெறியின் பயனாகிய வீடுபேறாம் கரையை அடைவிக்க இறைவன் இருக்கவும் (நாம் அவனை வாழ்த்துதலைச் செய்யாமல்) வாயில் உள்ள அந்த நாவால் சுவைத்து உண்ணுதற்குரியன திரட்டுவதிலே காலம் கழிக்கின்றோம். (அது நாம் உய்தற்குரிய உபாயம் அன்று.) இறைவனுக்கு ஆளாகிப் பணிசெய்து அதனால் நுகரப்படும் இன்பத்தை இன்பமாகக் கருதி முயலுதலே உபாயமாகும்` என்க. சூது - உபாயம். `கற்றுக் கொள்வன வாயுள; நாவுள;
இட்டுக் கொள்வன பூவுள; நீருள;
கற்றைச் செஞ்சடை யானுளன்; நாமுளோம்;
ஏற்றுக் கோ,நம னால்முனி வுண்பதே`
என்னும் அப்பர் திருமொழியை இங்கு ஒப்பிட்டுக் காண்க.

சூதொன் றுனக்கறியச் சொல்லினேன் நன்னெஞ்சே
சூதன் சொலற்கரிய சோதியான் சூதின்
கொழுந்தேன் கமழ்சோலைக் குற்றாலம் பாடிக்
கொழுந்தே இழந்தேன் குருகு. #885
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சூது - வஞ்சனை. அஃதாவது தலையளி செய்வான் போலக் காட்டிச் செய்யாது போனமை. சூதன் - சூத முனிவர். இவர் வேத வியாத முனிவர்க்கு மாணாக்கராயவருள் ஒருவர். தம் ஆசிரியர் பால் கேட்ட புராணங்கள் பதினெட்டினையும் நைமிசாரணிய முனிவர்கட்குக் கூறியவர். `இவரால் சொலற்கரிய` என்றது, `புராணங்களால் முடித்துக் கூறப்படாத புகழை யுடையவன்` என்றபடி. குற்றாலம், ஒரு தலம். சூதின் - மாமரத்தின். `சூதம்` என்பது அம்முக் குறைந்து ``சூது`` எனவந்தது. கொழுந்தே கொழுந்து - போலும் கையினின்றே. குருகு - வளையல். இது நெஞ்சினைத் தூது விடக் கருதியவள் அதனை நோக்கிக் கூறியது.

குருகிளவேய்த் தோள்மெலியக் கொங்கைமார் பொல்கிக்
குருகிளையார் கோடு கொடாமே குருகிளரும்
போதார் கழனிப் புகலூர் அமர்ந்துறையும்
போதாநின் பொன்முடிக்கட் போது. **#886**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கொடாமே`` என்பதை இறுதிக்கண் கூட்டி, மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி உரைக்க. போது - பூக்கள். புகலூர், ஒருதலம். போதா - ஞான சொரூபனே. பொன்முடிக்கண் உள்ள போது (மலர்) கொன்றை. கொடாமே - கொடாமையாலே, `குருகு` என்பது கைவளைக்குப் பெயராயினும் இங்குத் தோள்வளையைக் குறித்து நின்றது. `மார்பின்கண்` என உருபு விரிக்க. ஒல்கி - தளர்ந்து `மார்புல்கி` என்பது பாடம் அன்று. குருகு இணையார் - அன்னப் பறவை போலும் இளைய மகளிர். `இணையாது` என ஆறாவது விரித்து. ``குருகிள வேய்த் தோள்`` என்பதற்கு முன்னே கூட்டுக. கோடு - யானைத் தந்தம். மேற்போந்த கொங்கையைச் சுட்டுவதாகிய சுட்டினை விரித்து, `அக்கோடு` என்க. குரு - நிறம்; பொன்னிறம், பசலை, கிளரும் - மிகும். `ஆதலின் நின் முடிக்கட் போதினைத் தந்தருள்` என்பது குறிப்பெச்சம். இது தோழி தலைவனை மாலை யிரந்தது. தன் தலைவியது மெலிவு கூறுவாள் அதனைப் பலர்மேலும் இட்டுப் பொதுப் பட, ``இளையார்`` என்றாள். `குருக்கிளரும்` என்பதில் ககரஒற்று எதுகை நோக்கித் தொகுக்கப்பட்டது.

போதரங்க வார்குழலார் என்னாவார் நன்னெஞ்சே
போதங்க நீர்கரந்த புண்ணியற்குப் போதரங்கக்
கானகஞ்சேர் சோதியே கைவிளக்கா நின்றாடும்
கானகஞ்சேர் வாற்கடிமை கல். **#887**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

போது அரங்க வார் குழலார் - பூக்களுக்கு அரங்கு போல் உள்ள நீண்ட கூந்தலையுடைய மகளிர். என் ஆவார் - அவர் உனக்கு என்ன பயனைச் செய்வார்? இரண்டாம் அடியில், ``போ`` என்பதைத் தனியே பிரித்து, இறுதிக்கண் கூட்டுக. தரங்கம் - அலை, `போதுவர்` என்பது உகரம் தொகுத்தலாய் `போதர்` எனவந்தது. `கொண்டு வரப்பட்டவர்` என்பது பொருள். அங்கம் - உடம்பு. கானகம், முதுகாடு. `ஆடும் கால்களையுடைய நகம் சேர்வான்` என்க, நகம் - கயிலாய மலை, கல் - கற்றுச் செய். ``போ`` என்றது வலியுறுத்தற் பொருட்டு.

கற்றானஞ் சாடுகா வாலி களந்தைக்கோன்
கற்றானைக் கல்லாத நாளெல்லாம் கற்றான்
அமரர்க் கமரர் அரக்கடிமை பூண்டார்
அமரர்க் கமரரா வார். **#888**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கற்று ஆன் அஞ்சு ஆடு - கன்றையுடைய பசுவினின்றும் உண்டாகின்ற ஐந்து பொருள்களில் (பஞ்ச கௌவியங் களில்) முழுகுகின்ற. காவாலி - காபாலி. களந்தை - களத்தூர். வேட் களம், நெடுங்களம் முதலாக, `களம்` எனப் பெயர் பெற்ற தலங்கள் பல. கல் தானை - கல்லாடை. தானை - ஆடை. இதனை, ``களந்தைக் கோன்`` என்பதற்கு முன்னே கூட்டி, `கோனை` என இரண்டாவது விரிக்க. கல்லாமை - அறியாமை . ஒருவாறு அறியினும் போற்ற அறியாமை, ``கல்தான்`` என்பதில், ``கல்`` என்பது உவமையாகு பெயராய் உயிர் இல் பொருளைக் குறித்து, அதற்குரிய காலத்தை யுணர்த்திற்று உயிர் இப்பொருளின் காலம், யாதொரு பயனையும் தராது செல்வதாதலையறிக. `தான்` என்பது தேற்றப் பொருட்டு. அஃறிணை பன்மை யொருமை மயக்கம். ``அமரர் - விரும்புவோரினும் மேலாய் மிக விரும்புவோர், `விரும்புவோராய்` என ஆக்கம் விரிக்க. அமரர்க்கு அமரர் - தேவர்கட்கெல்லாம் தேவர்.

ஆவா மனிதர் அறிவிலரே யாதொன்றும்
ஆவார்போற் காட்டி அழிகின்றார் ஆவா
பகல்நாடிப் பாடிப் படர்சடைக்குப் பல்பூப்
பகல்நாடி ஏத்தார் பகர்ந்து. **#889**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதற்கண் `அவா` என்பது நீண்டு ``ஆவா`` என வந்தது. `யாதொன்றும் அறிவிலர்` என மாற்றுக. ஆவார்போல் காட்டி அழிகின்றார் - தாங்கள்

மேல்மேல் உயர்வது போலக்காட்டி (உலகியலிலே மூழ்கிநின்று, உண்மையில்) அடியோடு அழிந்தொழி கின்றார்கள். ஆவா - இஃது இரங்கத்தக்கது. மூன்றாம் அடியில், `பகவன்` என்பது இடைக் குறைந்து, ``பாகன்`` என வந்தது `பகனை` என இரண்டாவது விரித்து, `பாடி ஆடி` என மாற்றியுரைக்க. `அவனது படர் சடைக்கு` என்க. பகல் நாடி - நாள்தோறும் தேடிக் கொணர்ந்து. தூவி - (அவன் நாமங்களைப்) `பகர்ந்து ஏத்தார்` என்க.

பகனாட்டம் பாட்டயரும் பாட்டோடாட் டெல்லி
பகனாட்டம் பாழ்படுக்கும் உச்சி பகனாட்டந்
தாங்கால் தொழுதெழுவான் தாழ்சடையான் தம்முடைய
தாங்கால் தொழுதல் தலை. #890

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பகல் நாட்டம் பாட்டு அயரும் - பகற் காலத்தில் அன்பர்கள் பாடும் பாட்டைக் கேட்பதிற் செல்லும். எல்லி - இரவில். பாட்டோடு பொருந்த ஆகுதலைச் செய்யும். (இங்கு `பகல்` என்பது உலகம் நிலைத்துள்ள காலத்தையும், `இரவு` என்பது அஃது ஒடுங்கிய காலத்தையும் குறித்து நின்றன.) பகன் - `பகன்` என்னும் பெயரை உடைய சூரியன். நாட்டம் - அவனது கண். நாள் உச்சிப் பகல் தந்து ஆங்கால் - நாளானது நண்பகலைத் தந்து பொருந்தும் பொழுது. (அஃதாவது, உச்சி வேளையில்) தொழுது எழுவான் - பிச்சையிடு வாரைக் கும்பிட்டுச் சொல்வான். `தாழ்சடையான்`` என்பதை முதலிற் கொள்க. தன்னுடையது ஆம் கால் (பாதம்) தொழுதல் தலையாய செயலாம், `தொழுவார், சடையார்` எனப் பன்மைப் பாடமாயின. ``அயரும், படுக்கும்`` என்பன பன்மை ஒருமை மயக்கமாம். `தன்னுடையது ஆம் கால்` என்றது சாதியொருமை. அன்றி, `அது உருபு பன்மைக்கண் வந்தது` எனினும் ஆம்.

தலையாலங் காட்டிப் பலிதிரிவர் என்னும்
தலையாலங் காடர்தாம் என்னும் தலையாய
பாகீ ரதிவளரும் பல்சடையீர் வல்விடையீர்
பாகீ ரதிவளரும் பண்பு. #891

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``தலையாய`` என்பது முதலாகத் தொடங்கி, இகரம் தொகுக்கப்பட்ட, `ரதிவளரும் பண்பு பாகீர்` என மாறிக் காட்டி, `அதனால் என்மகள்` என்பது வருவித்து உரைக்க. முதல் அடியில், `அம் காட்டித் தலையால்

பலி திரிவர்` என மாற்றி, தமது அழகைக் காட்டிக் கொண்டு தலையால் ஏற்கும் பலிக்கு (பிச்சைக்கு)த் திரிவர்` என உரைக்க. தலையாலங்காடு, ஒருதலம், `தாம் தலையாலங்காடர்` என்க. தாம் - என்னை மெலிவித்தவர், என்னும் - என்று பிதற்றுவாள். பாகீரது - பகீரதனால் கொண்டுவரப்பட்ட கங்கை. ஈற்றடியில் `பகீர்` என்பது முதல் நீண்டு, ``பாகீர்`` என வந்தது. பகீர் - பகிர்ந்தளிக்க மாட்டீர். `இரதி` என்பது எதுகை நோக்கி முதர் குறைந்து நின்றது. `விருப்பம் (ஆசை) என்பது. வளரும் பண்பு - வளர்தற்கு ஏதுவாகிய குணத்தையுடைய திருமேனி. `பண்பு பகீர்` என்க. இது வீதியுலாவில் செவிலி இறைவனைக் குறையிரந்தது.

பண்பாய நான்மறையான் சென்னிப் பலிதேர்வான்
பண்பாய பைங்கொன்றைத் தாரருளான் பண்பால்
திருமாலு மங்கைச் சிவற்கடிமை செய்வான்
திருமாலு மங்கைச் சிவன். **#892**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பண் மறை, பாய மறை` எனத் தனித்தனி இயைக்க. பண் - செய்யப்பட்ட பாய - பரந்த; விரிந்த. நான்மறையான் - பிரமன், `சென்னிக்கண்` என ஏழாவது விரிக்க. பண் பாய கொன்றை- வண்டுகளின் இசை பரவிய கொன்றை மலர். ``அருளான்`` என்பதன் பின். `ஆயினும்` என்பது வருவிக்க. பண்பால் - தனது இயல்பாய் குணத்தினால். (``மாலும்`` என ஈற்றடியிற் சேர்த்து முடிக்க மூன்றாம் அடியில், ``திருமாலும்`` என்பதனோடு இயைய, `மங்கையும்` என என்னும்மையும், `ஆய` என்பது விரித்து `அவ்விருவரும் ஆய சிவற்கு` என்க. மங்கை, உமாதேவி `அச்சிவற்கு` எனச் சுட்டு வருவித் துரைக்க. ஈற்றடியில் ``மங்கை`` என்றது காதற்பட்ட தலைவியை. மடக்களிப் பயன் வேண்டி, `சீவன்` என்பது குறுக்கப்பட்டது. அதற்கு முன் நின்ற சகர ஒற்று விரித்தல். ஈற்றடியில் உள்ள திரு - அழகு. அதன்பின் வந்த, `மயங்கும்` என்னும் குறுக்கப்பட்டது. அதற்குமுன் நின்ற சகர ஒற்று விரித்தல். ஈற்றடியில் உள்ள திரு - அழகு. அதன்பின் வந்த, `மயங்கும்` என்னும் பொருட்டாகிய ``மாலும்`` என்பது, `மயங்கிக் கெடும்` எனத் தன் காரியம் தோற்றி நின்றது. ``சிவன் தார் அருளானாயினும், மங்கை, தனது பண்பால் அவனுக்கு அடிமை செய்ய வேண்டி, உயிர் தன் அழகு கெட மயங்குகின்றாள்` என்றபடி. இது தலைவியது ஆற்றாமை கண்டு செவிலி கவன்றுரைத்தது.

சிவன்மாட் டுகவெழுதும் நாணும் நகுமென்னும்
சிவன்மேய செங்குன்றூர் என்னும் சிவன்மாட்டங்

காலிங் கனம்நினையும் ஆயிழைஈர் அங்கொன்றை
யாலிங் கனம்நினையு மாறு. **#893**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஆயிழை`` என்பதை முதலிலும், ``சிவன் மாட்டுக எழுதும்`` என்பதை இறுதியிலும் வைத்து உரைக்க. ``நாணும்`` என்பதன் இறுதி ஒற்று சந்தி வகையாற் கெட்டது. நாணும் - நாணுவாள். `நகும்` என்னும் - *(ஊர்)* `சிரிக்கும்` என்பாள், செங்குன்றூர். கொடி மாடச் செங்குன்றூர்; ஒரு தலம், அங்குச் சிவன்மாட்டு ஆலிங்கனம் நினையும் - அவ்விடத்தில் சிவனிடத்தில் தங்கித் தழுவுதலை நினைவாள். இங்ஙனம் நினையும் ஆறு - இவள் இவ்வாறெல்லாம் எண்ணுகின்ற முறைமை. ஈர் அம் கொன்றையால் - குளிர்ந்த அழகிய கொன்றை மாலை காரணமாகலாம். *(ஆகையால் இவளை)* சிவன் மாட்டு உக எழுதும் - சிவபெருமானிடத்தில் கொண்டுபோய் விட்டுவிடப் புறப்படுவோம். இதில் ``சிவன்`` என்பது சொற்பொருட் பின்வரு நிலையாகவே வந்தது. இதுவும் மேலைத் துறை.

ஆறாவெங் கூற்றுதைத் தானைத்தோல் போர்த்துகந்தங்
காறார் சடையீர்க் கமையாதே ஆறாத
ஆனினர்தார் தாந்தம் அணியிழையி னார்க்கடிமை
ஆனினத்தார் தாந்தவிர்ந்த ஆட்டு. **#894**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியை, ``ஆறாத`` என்பதற்கு முன்னே கூட்டி, அது முதலாகத் தொடங்கியுரைக்க. ஆனின் அத்தார் தாம் ஆட்டுத் தவிர்ந்த பசுக்களின் கழுத்தில் உள்ள மாலைகள் *(மணிகட்டிய வடங்கள்)* அசைதலை ஒழிந்தன. *(`பசுக்கள் கொட்டில்களில் சென்று அடங்கின; இரவுப் பொழுதாயிற்று என்றபடி. அதனால்)* ஆனினத்தார் - ஆயர்கள். தாம் தம் அணியிழையினார்க்கு அடிமை களாயினர். `ஆயினும், இஃது ஆறு ஆர்சடையீர்க்கு அமையாதே; பொருந்தாதோ` என்க. இஃது இரவின்கண் தனிப்படர் மிகுதியால் ஆற்றாத தலைவி தலைவனை எதிர்பெய்துகொண்டு கழறியுரைத்தது. எனவே, இது ``மிக்க காமத்து மிடல்`` * பெருந்திணைத் துறையாம். முதற்கண் உள்ள ஆறு ஆ - முறைமை உண்டாக. முறைமை யாவது சிவனடியார்மேல் கூற்றுவன் செல்லாது தவிர்தல். தனிச் சீரில், ஆறாத சினமும் கன்றைப் பிரிந்த துயரமும் தணியாத ஆன் இனம் என்க. சினம், ஆனேற்றுக்கு உரியது.

ஆட்டும் அரவர் அழிந்தார் எலும்பணிவார்

ஆட்டும் இடுபலிகொண் டார்அமரர் ஆட்டுமோர்
போரேற்றான் கொன்றையான் போந்தான் பலிக்கென்று
போரேற்றான் போந்தான் புறம். #895
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரண்டாம் அடியில், `அட்டும்` என்பது நீண்டு, ``ஆட்டும்`` என வந்தது. அட்டும் நிரப்புகின்ற அமரரை ஆட்டும் ஓர் போர் ஏறு - தேவர்களை தன் இச்சைப்படி நடத்துகின்ற திருமாலாகிய போர் விடை. சொல்லளவில் `பலிக்கு என்று` சொல்லிப் போந்தானா யினும் உண்மையில் மகளிர்மேற் செய்யும் போரினை ஏற்றானாகியே புறம் போந்தான் - என்க. இதுவும் கைக்கிளைத் தலைவி தன் தோழிக்கு கூறியது.

புறந்தாழ் குழலார் புறனுரையஞ் சாதே
புறந்தாழ் புலிப்பொதுவுள் ஆடி புறந்தாழ்பொன்
மேற்றளிக்கோன் வெண்பிறையான் வெண்டுடர்போல் மேனியான்
மேற்றளிக்கோன் என்றுரையான் மெய். #896
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

புறந்தாழ் புலிப் பொதுவுள் ஆடி - நகர்க்குப் புறத்தே தங்குகின்ற புலிக்கு (வியாக்கிர பாதருக்கு) உரித்தாகிய மன்றினுள் நடனம் செய்பவனும், வெண்பிறையானும், வெண்சுடர்போல் மேனியானும் ஆகிய சிவபெருமான், புறம் தாழ் புரிகுழலாய் - பின்புறத்தே நீண்டு தொங்குகின்ற கூந்தலை உடைய ஊர்ப் பெண்கள் சொல்கின்ற. புறன் உரை அஞ்சாதே - புறங்கூற்று மொழிக்கு அஞ்சாமலே புல் தந்து - தழுவுதலாகிய புணர்ச்சியைக் கொடுத்து. (`புற்றந்து` என்பது இடைக் குறைந்து நின்றது.) ஆழ் பொன்மேற்று அளிக்கோன் - துன்பத்துள் ஆழ்கின்ற, திருமகள் போல்பவளாகிய இவள்மேலதாகிய அன்பையுடைய தலைவனாயினும். `மேற்றளிக் கோன்` என்று மெய் உரையான் - `தான் இத்திருமேற்றளித் தலத்தில் உறைகின்ற தலைவன்தான்` என்னும் உண்மையைக் கூறிற்றிலன், `கூறியிருந்தால், இவள் இவ்வாறு செயலனும் நிலையை அடைதற்கு முன்பே கொண்டுபோய் அவனிடம் சேர்த்திருக்கலாம்` என்பது கருத்து. திருமேற்றளி, காஞ்சியின் கண்ணதாய ஒருதலம். அப்பெருமான் இத்தலைவியைப் புல்லியதிலனாயினும் இவளது நிலைமையை வைத்துப் புல்லினானாகச் செவிலி கருதி இரங்கினாள் என்க. எனவே, இது கைக்கிளைத் தலைவியது கையற்ற நிலையைக் கண்டு செவிலி இரங்கிக் கூறியதாம். மெய்யுரையாமை, தலைவி அவனை அறிந்து

கூறாமையாலும், தோழியர் அறிந்து கூறினமையாலும் அறியப்பட்டதாம். வெண்சுடர் - சந்திரன். சிவபெருமானுக்கு வெண்சுடர் போல் மேனி திருநீற்றால் அமைந்தது.

மெய்யன் பகலாத வேதியன் வெண்புரிநூல்
மெய்யன் விரும்புவார்க் கெஞ்ஞான்றும் வெய்ய
துணையகலான் நோக்கலான் போற்றிகலா நெஞ்சே
துணையிகலா கூறுவான் நூறு. **#897**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மெய் அன்பாவது, பயன் கருதாது செய்யப்படும் அன்பு. `அன்பினின்றும்` என ஐந்தாவது விரிக்க. வேதியன் - வேதம் ஓதுபவன். `வேதப் பொருளாய் உள்ளவன்` என்றும் ஆம், புரி நூல் மெய்யன். புரிநூல் பொருந்திய திருமேனியை உடையவன். வெய்ய துணை அகலான் - விரும்பத்தக்க துணையாய் இருத்தலை நீங்கான். நோக்கு அகலான் - அருட் பார்வையை விடான். இகலா நெஞ்சு - மாறு படாத நல்ல மனம், `வான் நூறு கூறு துணை இகலா` - என மாற்றி, (அவனது பெருமைக்கு) அண்டங்கள் நூற்றில் ஒரு கூற்றளவு ஒவ்வா என உரைக்க. இகலுதல் - ஒத்தல் `நெஞ்சே, வேதியனும், நூல் மெய்ய னும், விரும்புவார்க்கு அகலாதவனும் ஆகிய அவனை அண்டங்கள் நூற்றில் ஒரு கூறு ஒவ்வா; அவனைப் போற்று` என இயைத்து முடிக்க. `அகலா` என்பன பாடம் அல்ல.

நூறான் பயன்ஆட்டி நூறு மலர்சொரிந்து
நூறா நொடிவதனின் மிக்கதே நூறா
உடையான் பரித்தவெரி உத்தமனை வெள்ளே
றுடையானைப் பாடலால் ஒன்று. **#898**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நூறு ஆன் பயன் - நூறு பசுக்களின் பால். நொடிவது - சொல்வது. நூறா நொடிவது - பெயர்கள் `நூறு` என்னும் எண் படச் சொல்வது. ``நூறா உடையான்`` என்பதில் `நூறு` என்பது அளவின்மையைக் குறித்து, அத்தகையவான குணங்களைக் குறித்தது. இறைவன் செய்யும் தொழில், வகையால் ஐந்தாயினும் விரியால் எண்ணிலவாகலின், அவற்றிற்கு ஏற்பக் குணங்களும் எண்ணிலவாம். இதனை,

எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி

என்னும் திருவாசகத்தாலும் அறிக. `நூறு` ஆன் பயன் ஆட்டுதல் முதலியவற்றினும் ஒன்று மிக்கது` என இயைத்து முடிக்க. ``பாடல்``

என்றதனால் ``ஒன்று`` - என்றது `பாட்டு` என்பது போந்தது. ஆல், அசை, இதனால், பொதுப்படப் பாமாலை சாத்துதற் பயன் கூறிய துடன், இவ்வந்தாதியால் துதிப்பார்க்கு வரும் பயனும் கூறப்பட்டதாம். ஈற்றில் நின்ற ``ஒன்று`` என்பது முதற்பாட்டின் முதலிற் சென்று மண்டலித்தல் காண்க.

பரணதேவ நாயனார் - சிவபெருமான் திருவந்தாதி

ஒன்றுரைப்பீர் போலப் பல உரைத்திட் டோயாதே
ஒன்றுரைப்பீர் ஆயின் உறுதுணையாம் ஒன்றுரைத்துப்
பேரரவம் பூண்டு பெருந்தலையில் உண்டுழலும்
பேரரவும் பூணும் பிரான். **#899**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`உலகீர்` என்பதை முதற்கண் வருவித்து, தனிச் சீரில் உள்ள ``ஒன்றுரைத்து`` என்பதை, ``உறுதுணையாம்`` என்பதற்கு முன்னே கூட்டி, அவ்விரண்டையும் இறுதிக்கண் வைத்து உரைக்க.
``ஒன்று`` மூன்றில் முதற்கண்ணது, ஒருபொருள்.
இடையது, யாம் சொல்கின்ற ஒன்று.
அது சிவபெருமானது திருப்பெயர்.
ஈற்றில் உள்ளது.
பிறழ்தல் இல்லாத ஒரு சொல்.
அது, `நீவிர் விரும்பியதைத் தருகின்றோம்` என அருளிச் செய்வது.
``அரவம்`` இரண்டில் முன்னது, பாம்பு; பின்னது ஆரவாரம்; பழிச்சொல்.
அவை, `பாம்பை அணிகின்றான், தலையோட்டில் பிச்சை ஏற்று உண்கின்றான்` என்றாற் போல்வன.
`உலகீர் அவனது பெருமையை யறியாமல் அறிவலாதாரால் இகழப்படுகின்ற சிவபிரானது திருப்பெயரைச் சொல்வீராயின், அவன் நீவிர் விரும்பியதைத் தப்பாமல் பெறும் வரத்தை அருளுவான்`.
பல பொருள்களை உரைத்தல், உண்மையை உணராது அலமருதலாலாம்.
ஓயாது - மெலியாமல்.

பிரானிடபம் மால்பெரிய மந்தாரம் வில்லுப்
பிரானிடபம் பேரொலிநா ணாகம் பிரானிடபம்
பேணும் உமைபெரிய புன்சடையின் மேலமர்ந்து
பேணும் உமையிடவம் பெற்று. **#900**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றில், `உம்மை` என்பது இடைக் குறைந்து, ``உமை`` என வருதலால் அதற்கேற்பப் ``பிரான்`` என்பவற்றை அண்மை விளியாக்கி, `உமது இடபம் மால்` எனவும், `உமது வில் மந்தரம்` எனவும், நீர் இட; பம் - பேரொலி நாண் நாகம்` எனவும், `உமது இட அம் உமை பேணும்` எனவும், `நீர் இட, அம், பெரிய புன்சடைமேல் அமர்ந்து உம்மைப்

பேணும்` எனவும் உரைக்க.
மால் - விட்டுணு.
`மந்தரம்` என்பது நீட்டல் பெற்றது.
இரண்டாம் அடியில், ``பம்`` என்பது ஒலிக்குறிப்பு.
நாண் - வில் நாண்.
தனிச்சீரில், அம், அழகு.
அதன் முதல் வகர உடம்படுமெய் பெற்று `வம்` என வந்தது.
எதுகை நோக்கி, ``பம்`` எனத் திரிந்தது.
அழகு ஆகுபெயராய் உடம்பைக் குறித்தது.
ஈற்றடியில் அம் - நீர்; கங்கை.

பெற்றும் பிறவி பிறந்திட் டொழியாதே
பெற்றும் பிறவி பிறந்தொழிமின் பெற்றும்
குழையணிந்த கோளரவக் கூற்றுதைத்தான் தன்னைக்
குழையணிந்த கோளரவ நீ. #901

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதல் அடியில், `பிறவி பெற்றும்` என மாற்றி, ``பிறந் திட்டு`` என்பதற்குப் `பிறந்ததனோடு` என உரைக்க.
``பிறவி`` என்பது சிறப்புப் பற்றி, மக்கட் பிறவியையே குறித்தது.
இரண்டாம் அடியில் பெற்றும் பிறவி - பெருகி வரும் பிறவிகள்.
பெற்று - பெருக்கம்.
அதனை , `ஏ பெற்றாகும்`` * என்னும் தொல்காப்பியத்தால் அறிக.
பின்னர் வந்த ``பிறந்து`` என்பது அனுவாதம் ஆகலான் அதற்கு, `அது செய்து` என உரைக்க.
`பிறவியை ஒழிமின்` என்க.
மூன்றாம் அடியில் ``குழை`` என்பதில் `குழையாக` என ஆக்கம் விரிக்க.
``கோள் அரவம்`` இரண்டில் முன்னது கொடிய பாம்பு; பின்னது, சில கொள்கைகளோடு கூடிய ஆரவாரம்.
பெற்றும் குழை - குழைய (திருவுளம் இரங்க)ப் பண்ணு.
அண் - (அவனையே) அணுகு.
நீ - நீத்துவிடு.
`இந்த` என்னும் சுட்டின்முன் ககர ஒற்று தொகுத்தலாயிற்று.
இவற்றிற்கெல்லாம் முன்னிலையாக.
`நெஞ்சமே` என்பது வருவிக்க.

நீயேயா ளாவாயும் நின்மலற்கு நன்னெஞ்சே
நீயேயா ளாவாயும் நீள்வாளின் நீயேயேய்
ஏறூர் புனற்சடையா எங்கள் இடைமருதா

ஏறுூர் புனற்சடையா என்று. #902
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நன்னெஞ்சே`` என்பதை முதலிற் கொள்க.
கொண்டு அதன்பின், பின் இரண்டடிகளைக் கூட்டி, `நீ ஏய்; (ஏய்ந்தால்) நின்மலற்கு ஆள் ஆவாயும் நீயே; (மற்றும்) யாவாயும் நீள்வாளின் நீயே ஆள்` என முடிக்க.
`ஆள் ஆவாய்` என்றது.
`அடியார்களுள் சிறந்தனை ஆவாய்` என்றபடி.
யா வாயும் - எந்த இடத்தையும், ``வாள்`` என்றது படைக்கலப் பொது.
அது நெற்றியைக் குறிக்கும் குறிப்பாயிற்று.
ஏய் - பொருந்து.
``ஏறுூர் புனற் சடையா`` என வந்த இரண்டினுள் ஒன்றை, `உயர்தல் மிகுந்த நீரை அணிந்த நல்ல சடையவனே` என்னும் பொருட்டாகவும், மற்றொன்றைப் புல் ஏறு ஊர் நல் சடையா (புல்லை உண்கின்ற இடபத்தை ஊர்கின்ற, நல்ல `சடை` என்னும் அத்தியயனத்தை விரும்புபவனே) என்னும் பொருட்டாகவும் கொள்க.
`யா வாய்` என்பதில், `யா` என்னும் வினா எழுத்து யகர மெய் கெட்டு. ``ஆ`` என நின்றது.

என்றும் மலர்தூவி ஈசன் திருநாமம்
என்றும் அலர்தூற்றி யேயிருந்தும் என்றும்
* * * * * *

புகலூரரா புண்ணியனே என். #903
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(இந்தப் பாடல் முழுமையாகக் கிடைக்கவில்லை.
அதனால் பொருள் காணவும் இயலவில்லை.
)

என்னே இவளுற்ற மால்என்கொல் இன்கொன்றை
என்னே இவளொற்றி யூரென்னும் என்னே
தவளப் பொடியணிந்த சங்கரனே என்னும்
தவளப் பொடியானைச் சார்ந்து. #904
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`இவள் உற்றமால் என்னே! (இவள் உள்ள) இன்கொன்றை என்கொல்! இவள் `ஒற்றியூர்` என்னும்; என்கொல்! `தவளப் பொடி அணிந்த

சங்கரனே` என்னும்; (என்கொல்!) அப் பொடியானைச் சார்ந்து, தவள் (தவம் செய்பவள் - ஆயினள்; என்கொல்!) என இயைத்தும், தொக்கு நின்ற சொற்களை விரித்தும் முடிக்க.
இது கைக்கிளைத் தலைவிதன் ஆற்றாமை கண்டு செவிலி இரங்கிக் கூறியது.
மால் - மயக்கம்; மையல், ``என்`` என்பன எல்லாம் இரக்கக் குறிப்புக்கள். அதனை ஈற்றிலும் வருவித்து உரைக்க.
``கொல்`` எல்லாம் அசைநிலை.
``என்கொல்`` என்பது இரக்கம் மிகுதியால் பலகாலும் சொல்லப்பட்டது.

சார்ந்துரைப்ப தொன்றுண்டு சாவாமூ வாப்பெருமை
சார்ந்துரைத்த தத்துவத்தின் உட்பொருளைச் சார்ந்துரைத்த
ஆதியே அம்பலவா அண்டத்தை ஆட்கொள்ளும்
ஆதிஏன் றென்பால் அருள். **#905**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``சார்ந்து உரைப்பது ஒன்று உண்டு`` என்பதை ஈற்றடி யில் உள்ள ``ஆதி`` என்பதன் பின்னர்க் கூட்டி, ``சார்ந்து - உன்னை அடைந்து , உரைப்பது - யான் உரைக்க வேண்டுவது`` என உரைக்க.
``சாவா, மூவாப் பெருமை`` என்றது, `இறையில்பு` (`பதியிலக்கணம்`) என்றபடி.
மூவாமை - முதுமையடையாமை.
சார்ந்து - அதனைப் பற்றி.
உரைத்த - சிவலோகத்தில் உள்ளார்க்குச் சொல்லிய.
சார்ந்து - இவ்வுலகில் ஆல நிழலை அடைந்து.
உரைத்த - நால்வர் முனிவர் முதலியோர்க்குக் கூறிய.
ஆதியே - முதல்வனே, ``ஆட்கொள்ளும்`` என்பதன்பின் `அவன்` என்பது வருவிக்க.
ஆதி - ஆகின்றவனே; அண்மை விளி.
`என்பால் வந்து` என ஒருசொல் வருவித்து.
``ஏன்று அருள் - என்னை அடியனாக ஏற்று அருள் புரி`` - என உரைக்க.

அருள்சேரா தார்ஊர்தீ ஆறாமல் எய்தாய்
அருள்சேரோ தாரூர்தீ யாடி அருள்சேரப்
பிச்சையேற்று உண்டு பிறர்கடையிற் கால்நிமிர்த்துப்
பிச்சையேற்று உண்டுழல்வாய் பேச்சு. **#906**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி - *1* - அருள் சேராதார் ஊர் - உன்னுடைய திருவுள்ளக் கனிவை அடைய விரும்பாத அசுரர்களது திரிபுரம், அடி- *2* `அருள் சேராது எய்தாய்` என இயையும்.
இதன்கண் உள்ள அருள் - இரக்கம்.
``ஆரூரில் உள்ள தீ ஆடி` என்பது விளி.
இதனை முதற்கண் வைத்து உரைக்க.
வினையொடு தொக்க ஏழாவதன் தொகையில் வல்லினம் மிகாது, இயல்பாயிற்று.
தனிச்சீரில் உள்ள அருள் - ஞானம்.
இறை உணர்வு இல்லாதார் அவ்வுணர்வைப் பெற வேண்டி அடி-*3*.
பித்து, `பிச்சு` எனப் போலியாய் வந்தது.
அது பேரருளைக் குறித்தது.
`பேரருளை ஏற்று, அதனால் நலிவுண்டு` என்க.
பிச்சை ஏற்பான் போலச் சென்று இரத்தல் பெருங் கருணை காரணமாக என்றபடி.
கடை - தலைவாயில்.
``பேச்சு`` என்பதற்கு, `இஃதே எங்கும் நிகழ் கின்ற பேச்சு` என்க.
அஃது இகழ்வாய பேச்சையே குறித்தது.

பேச்சுப் பெருக்குவதென் பெண் ஆண் அலியென்று
பேச்சுக் கடந்த பெருவெளியைப் பேச்சுக்
குரையானை ஊனுக்கு உயிரானை ஒன்றற்
குரியானை நன்நெஞ்சே உற்று. **#907**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பேச்சுப் பெருக்குவது என்`` என்பதை இறுதியிற் கூட்டி உரைக்க.
பேச்சுக்கு உரை - சொல்லுக்குப் பொருள்.
ஊன் - உடம்பு.
``சொல்லுக்குப் பொருள் போலவும், உடம்பிற்கு உயிர்போல வும் எப்பொருட்கும் களைகணாய் உள்ளவன்` என்றபடி.
``ஒன்றற்கு`` என்பதன் பின் `உவமையாக` என்பது வருவிக்க.
உரையான் - சொல்லப்படான்.
உற்று - அடையத் தொடங்கி.
`பேசாமை, அஃதாவது மோன நிலையாலே அடையத் தக்கவன்` என்றபடி.

உற்றுரையாய் நன்நெஞ்சே ஓதக் கடல்வண்ணன்
உற்றுரையா வண்ணம்ஒன் றானானை உற்றுரையா
ஆனை உரித்தானை அப்பனை எப்பொழுதும்

ஆனையுரித் தானை அடைந்து. #908
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நன்னெஞ்சே`` என்பதை முதலிலும் ``உற்றுரை யாய்`` என்பதை இறுதியிலும் வைத்து உரைக்க.
உற்று உரையாய்.
அணுக நின்று நின் குறைகளைச் சொல்வாயாக.
`சொன்னால் அவைகட்குத் தீர்வு காணலாம்` என்பதாம்.
ஓதம் - அலை.
உற்று உரையா வண்ணம் - வேறிடத்திலிருந்து வந்து துதிக்க வேண்டாமல்.
ஒன்று ஆனான் - அவனோடே இயைந்து ஒன்றாயினான்.
`பிரமன், மால் இருவருமே வந்து போற்றுதற்கு உரியராயினும் மாலது அன்பு நோக்கி அவனைத் தன்னோடு ஒன்றாய் இருக்க வைத்தான்` என்றவாறு.
தனிச் சீரில், `உற்ற` என்பதன் ஈற்று அகரம் தொகுத்த லாயிற்று.
உற்ற உரை - பொருந்திய சொல், அஃது ஆகுபெயராய்ப் பொருளை உணர்த்திற்று.
`அவளைப் பொருளாக உடைய சொல்லே சொல்லத் தக்க சொல்` என்றபடி.
அடி- *3* உரித்தான் - எல்லாரும் அடையத் தக்க பொருளாய் உள்ளவன்.
`எப்பொழுதும் அடைந்து உரையாய்` என மேலதனோடு கூட்டுக.

அடைந்துன்பால் அன்பாய் அணிமணிகொண் டர்ச்சித்
தடைந்துன்பால் மேலுகுத்த மாணிக் கடைந்துன்பால்
அவ்வமுதம் ஊட்டி அணிமலருஞ் சூழ்ந்தன்று
அவ்வமுத மாக்கினாய் காண். #909
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அணி - பொன் அணி.
மணி - இரத்தினாபரணம்.
கொண்டு - பாவனையால் கொண்டு.
அடி - *2* ``அடைந்து`` என்ப தனை, `அடைய` எனத் திரித்து, `முழுதுமாக` என உரைக்க.
உன் பால்- சிறந்த பொருளாக எண்ணப்படுகின்ற பால்.
மாணி - பிரமசாரி; சண்டேசுரர்.
தனிச்சீரில் `அடையும்` என்னும் பெயரெச்சம் உம்மை தொகுக்கப்பட

நின்றது.
அடையும் துன்பால் - தந்தையால் வந்த துன்பம் காரணமாக.
``அவ்வமுதம்`` எனச் சுட்டிக் கூறியது.
``நீ உண்ட மிச்சிலாகிய அமுதம்` என்பது தோன்றுதற்கு.
``மலர்`` என்றது மாலையை.
அணி மலர் - வினைத் தொகை.
``அவ்வமுதம்`` என்பதில் அகரம் பண்டறி சுட்டு.
பந்தத்தை `மிருத்யு` என்றும், மோட்சத்தை `அமிர்தம்` என்றும் கூறுதல் மெய்ந்நூல் வழக்கு.
``பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்``* - என மாணிக்க வாசகரும் அருளிச் செய்தார்.

காணாய் கபாலி கதிர்முடிமேல் கங்கைதனைக்
காணாயக் கார்உருவிற் சேர்உமையைக் காணா
உடைதலைகொண் டூரூர் திரிவானை நச்சி
உடைதலைகொண் டூரூர் திரி. **#910**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(இதனுள் முன் இரண்டு அடிகளில் மடக்கணி வாராது, சொற்பொருட் பின்வருநிலையணியே வந்தது.
) `நெஞ்சே` - என்பதை முதலில் வருவித்துக் கொள்க.
`கங்கைதனைக் காணாய்; உமையைக் காணாய்; காணா (கண்டு).
நச்சி, திரி` என இயைத்து முடிக்க.
உடை தலை - உடைந்த தலை; வினைத் தொகை.
``ஊர் ஊர்`` என்னும் அடுக்கு இரண்டில் முன்னது பொதுவாயும், பின்னது `அவனது ஊர்` எனச் சில தலங்களைக் குறிக்கும் சிறப்பாயும் நின்றது.
இரண்டிலும் `தோறும்` என்பது வருவிக்க.
கார் உரு - நீல நிறம்.
நச்சுதல் - விரும்புதல்.
உடைதல் - நெகிழ்ந்து உருகுதல்.

திரியும் புரம்எரித்த சேவகனார் செவ்வே
திரியும் புரம்எரியச் செய்தார் திரியும்
அரிஆன் திருக்கயிலை என்னாதார் மேனி
அரிஆன் றிருக்கயிலை யாம். **#911**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திரியும் புரம் - வானத்தில் சுழலுகின்ற ஊர்கள்; முப்புரம்.
செவ்வே - முறையாக.
திரியும் - பரிணமித்து வளர்கின்ற.
புரம் - பல வகை உடம்புகளை.
எரியச் செய்தார் - அழித்தார்; ``தேவர் களையும் அழித்தார்`` என்றபடி.
திரியும் - உலாவுகின்ற.
அரி - சிங்கம்.
``ஆன்`` என்றது ஆமாவை.
என்னாதார் - என்று சொல்லாதவர்கள்.
அரி ஆன்று இருக்கை இலை - அழகு நிறைந்து இருத்தல் இல்லை.
`இருக்கை` என்பது எதுகை நோக்கிப் போலியாய் வந்தது.
ஆம், அசை.

(இப்பாட்டில் முதல் அடி கிடைக்கவில்லை)
ஆம்பரிசே செய்தங் கழியாக்கை ஆம்பரிசே
ஏத்தித் திரிந்தானை எம்மானை அம்மானை
ஏத்தித் திரிந்தானை ஏத்து. **#912**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(இப்பாட்டின் முதல் அடி கிடையாமையால், பொருளை நன்குணரவும் இயலவில்லை.
)

ஏத்துற்றுப் பார்த்தன் எழில்வான் அடைவான்போல்
ஏத்துற்றுப் பார்த்தன் இறைஞ்சுதலும் ஏத்துற்றுப்
பாசுபதம் அன்றளித்த பாசூரான் பால்நீற்றான்
பாசுபதம் இன்றளியென் பால். **#913**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதல் அடியில் உள்ள ``பார்த்தன்`` என்பதை முதலில் கூட்டுக.
பார்த்தன் - அருச்சுனன்.
ஏத்து உற்று - துதித்தலைப் பொருந்தி.
ஏ - உயரம்.
ஏத்து உயரத்திலே உற்றுப் பார்த்து` என்க.
வான் அடைவான் போல் உயரத்திலே உற்றுப் பார்த்து நிற்றல் அவனது தவ நிலையாகும்.
இதனை,
ஒருதாளின் மிசை நின்று, நின்ற தாளின் - ஊருவின்மேல்

ஒருதாளை ஊன்றி ஒன்றும்
கருதாமல் மனம் அடக்கி, விசும்பினோடு - கதிரவனைக்
கவர்வான் போல் கரங்கள் நீட்டி,
இருதாரை நெடுந்தடங்கண் இமையாது, ஓரா யிரங்கதிரும்
தாமரைப் போதென்ன நோக்க
என்னும் வில்லி பாரதச் செய்யுளாலும் அறிக.
ஏதுற்றுப் பதம் - பல வகை அம்பின் ஆற்றல்களும் ஒருங்கு நிறைந்த பாசுபதாத்திரம்.
பாசூர், ஒருதலம்.
சுபதம் - நல்ல சொற்கள்.
`பாசூரானைப் பற்றிய பாக்களாகிய நல்ல என.
அவாய் சொற்கள்.
இன்று அளியன்பால் உள என, அவாய் நிலையாய் நின்ற பயனிலையை வருவித்து முடிக்க.
அளியன் - இரங்கத் தக்கேன்; `எளியேன்` என்றபடி.
`அவனைப் பற்றிய பாக்கள் என்னிடத்தில் இருத்தலால் எனக்குக் குறை எதுவும் இல்லை` என்பது கருத்து.
சுபதம் என்பது வடசொல் ஆதலின் பண்புத் தொகைக்கண் ஒற்று மிகாதாயிற்று.

பாலார் புனல்பாய் சடையானுக் கன்பாகிப்
பாலார் புனல்பாய் சடையானாள் பாலாடி
ஆடுவான் பைங்கண் அரவூர்வான் மேனிதீ
ஆடுவான் என்றென்றே ஆங்கு. **#914**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரண்டாம் அடியில் உள்ள.
``பாலார் புனல் பாய் சடையானாள்`` என்பதை இறுதியிற் கூட்டுக.
பால் ஆர் புனல் பாய் சடையான் - அமுதம் போல நிறைந்த நீர் (ஆகாய கங்கை பாயப் பெற்ற சடையினை உடையவன்.
பால் ஆடி ஆடுவான் - பாலில் சிறப்பாக முழுகி மற்றைப் பொருளிலும் முழுகுவான்.
``பால்`` என விதந்தமையால் அதனது சிறப்புப் பெறப்பட்டது.
`மேனியில் அரவு ஊரப்படுவான்` என்க.
என்று என்று - அவனைப் பலவகையிலும் சொல்லிச் சொல்லி.
ஆங்கு - அவ்வாற்றால்.
பால் ஆர் புனல் பாய் சடை ஆனாள் - பல பக்கங்களிலும் நிறைந்துள்ள நீரில் பொருந்திய சடைப் பூண்டு போல இவள் ஆகிவிட்டாள்.

சடைப் பூண்டைக் `கிடை` என்பர். அதனை,
நீருட் பிறந்து நிறம் பசியவேனும்
ஈரம் கிடையகத் தில்லாகும்
என்பதனானும் அறிக.
சடைப் பூண்டு வலுவற்ற ஒரு மெல்லிய பொருள்.
`காதலால் இவள் அவ்வாறு மெலிந்து விட்டாள்` என்க.
இது தலைவியது வேறுபாடு கண்டு வினாய செவிலிக்குத் தோழி `உண்மை செப்பல்` வகையால் அறத்தொடு நின்றது.

ஆங்குரைக்க லாம்பொன் மலர்ப்பாதம் அஃதன்றே
ஆங்குரைக்க லாம்பொன் அணிதில்லை ஆங்குரைத்த
அம்பலத்தும் அண்டத்தும் அப்பாலு மாய்நின்ற
அம்பரத்தும் அண்டத்தும் ஆம் **#915**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதனுள், ``ஆங்கு`` என்பனவற்றுள் முன் இரண்டும் அசைகள்.
ஈற்றில் உள்ளது.
`அவ்வாறு என்னும் பொருட்டு.
``மலர்ப் பாதம்`` எனப் பொதுப்படக் கூறப்பட்டதாயினும், சொல்லுவான் குறிப்பால் அது சிவபெருமானது மலர்ப் பாதத்தையே குறித்தது.
`சிவனது மலர்ப் பாதத்தை உரைத்து மாற்று அறியப்படும் - பொன் என்றே சொல்லலாம்.
அஃதன்றே, பொன் என உரைக்கலாம்.
தில்லையுள் அவ்வாறு - பொன் - என்றே சொல்லப்பட்ட அம்பலத்திலும், அண்டம் முழுவதிலும், அண்டத்திற்கு அப்பாலுமாய் உள்ள அம்பரத்திலும் (சிதம்பரத்திலும் - சிதாகாசத்திலும்), அத்தன்மையதாகிய சிவலோகத்திலும் உள்ளது! என இயைத்துக் கொள்க.
சிவபெருமானது திருவடிச் சிறப்பினைப் புகழ்ந்தவாறு.
திருவடியாவது அவனது சத்தியேயாகலின் அஃது இவ்வகையான புகழ்ச்சிகளுக்கெல்லாம் உரியதாயிற்று.
``அப்பாலுமாய்`` என்ற உம்மை.
`அண்டமும் ஆய்` என இறந்தது தழுவி நின்றது.
அண்டம் இரண்டில் பின்னது சிவலோகம் இதனுள்ளும் மடக்கணி வரவில்லை.

மாயனைஒர் பாகம் அமர்ந்தானை வானவரும்
மாயவரும் மால்கடல்நஞ்சு உண்டானை மாய
உருவானை மாலை ஒளியானை வானின்

உருவானை ஏத்தி உணர். #916
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அமர்ந்தான் - விரும்பினான்.
மாய வரு - இறக்கும் படி வந்த.
மால் கடல் - பெரிய கடல் தனிச்சீரில் ``மாயம்`` என்றது வஞ்சனையை. `மாயத்து` என்னும் அத்துச் சாரியை அணி நயம் நோக்கித் தொகுக்கப்பட்டது.
உருவான் - ஊடுருவிமாட்டான்; `உட்புகான்` என்றபடி.
மாலை ஒளி மாலைக் காலத்துச் செவ்வான் ஒளி.
ஒளியான் - ஒளிபோல்பவன்.
வானின் உருவான், இறைவன் ஆகாயத்தை உருவாக உடையவன்.
``ஏத்தி உணர்`` என்னும் பயனிலைக்கு `நெஞ்சே, நீ` என்னும் எழுவாய் வருவிக்க.

உணரா வளைகழலா உற்றுன்பாற் சங்கம்
உணரா வளைகழல ஒட்டி உணரா
அளைந்தான மேனி அணியாரூ ரேசென்
றளைந்தானை ஆமாறு கண்டு. #917
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரண்டாம் அடி முதலாகத் தொடங்கியுரைக்க.
அடி -2ல் உணராவளை அறியாமையாகிய கோட்டம்.
கழல - நீங்க தனிச் சீரில் ``உணரா`` என்னும் எச்சத்தை, `உணர` எனத் திரிக்க ஒட்டி உணர்தல் - ஒன்றி உணர்தல்.
அவ்வாறு உணரும் உணர்வில் அணைந்து ஆன மேனி கலந்து விளங்கும் உருவம்.
அவ்வுருவம் விளங்குகின்ற ஆரூரில் சென்று அணைந்தானை - புற்றுருவாயவனை அணை.
புற்று; அதனடியாக `அணைந்தான்` என்னும் பெயர் பிறந்தது.
ஆமாறு கண்டு - அவன் அங்ஙனம் ஆமாற்றைக் கண்டு.
அன்பால் உற்று - அன்பால் பொருந்தினமையால்.
வளை சங்கம் கழலா உணரா- வளையல்களாகிய சங்குகள் கையை விட்டுக் கழன்று, தம் கடமையைத் தாம் உணரவாவாயின.
கடமை - கழலாது கையிற் செறிந்து நிற்க வேண்டுவது.
இதுவும் கைக்கிளைத் தலைவியது ஆற்றாமைக் கூற்று.

கண்டிறந்து காயெரியின் வீழ்ந்து கடிதோடிக்

கண்டிறந்து காமன் பொடியாகக் கண்டிறந்து
கானின் உகந்தாடும் கருத்தர்க்குக் காட்டினான்
கானின்உகந் தாடுங் கருத்து. #918
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

\`காமன் (மன்மதன்) கண்டு இறந்து (தனது யோக நிலையைக் கண்டும் நெறி கடந்து) காய் எரியைக் கண்டு கடிது ஓடியும் அதன்கண் வீழ்ந்து இறந்து பொடியாகி, (தான் அங்ஙனம் ஆம்படி) கண் திறந்து (நெற்றிக் கண்ணைத் திறந்து அதன்பின்னும்) கானின் உகந்து ஆடும் கருத்தர்க்கு (முதுகாட்டில் விரும்பி ஆடுகின்ற முதல்வர் முன்) கானின் உகந்து ஆடும் கருத்துக் காட்டினான் (அவர் அங்ஙனம் ஆடுவதன் உண்மையைப் பலரும் உணரச் செய்தான்.

உண்மை யாவது, முற்றழிப்புக் காலத்தில் எல்லாரையும் அழித்துத் தன்னை அழிப்பார் இன்றித்தான் ஒருவனேயாய் நிற்றல்.

இவ்வுண்மையைக் காமனை எரித்துத் தான் அவனால் மயங்குவிக்கப்படாமல் இருந்த செயல் உணர்த்துதலால், \`காமன் எரியின் வீழ்ந்து பொடியாக் காட்டி னான்\` என்றார்.

\`\`கருத்தர்க்கு\`\` என்னும் நான்காவதை, \`கருத்தர்முன்\` என ஏழாவதாகத் திரிக்க.

கருத்துடைய ஆதி கறைமிடற்றெம் ஈசன்
கருத்துடைய கங்காள வேடன் கருத்துடைய
ஆன்ஏற்றான் நீற்றான் அனலாடி ஆமாத்தூர்
ஆனேற்றான் ஏற்றான் எரி. #919
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரண்டாம் அடியில் உள்ள, \`கருத்துடைய கங்காள வேடன்\`\` என்பதை இறுதியிற் கூட்டுக.

அடி - *1*ல் கருத்து - கருணை, தனிச்சீரில் \`கறுத்து\` என்பது எதுகை நோக்கி, \`\`கருத்து\`\` எனத் திரிந்து நின்றது.

கறுத்து - சினந்து.

\`சின விடை\` என்றபடி.

சினம், இன அடை.

ஆமாத்தூர் ஆன் ஏற்றான் - ஆமாத்தூரில் தன்னை வழிபட்ட பசுக்களைக் காக்க ஏற்றுக் கொண்டவன்.

\`எரி ஏற்றான்\` என மாற்றிக் கொள்க.

இதுவும் பெயர்.

அடி-*2*-ல் கருதுடைய - `பிறவி துடைப் புண்ணும்படி கங்காள வேடன் ஆயினான்` என்க.
`சிவபிரானது திருமேனியில் தம் உடம்பு தீண்டப் பெற்றவர் பிறப்பறுவர்` என்பது பற்றி இவ்வாறு கூறினார்.
கங்காளம் பிரம விட்டுணுக்களது எலும்புக் கூடு.
இவைகளைச் சிவபிரான் தன் தோள் மேல் தாங்கினான்.
``கங்காளம் தோள்மேலே காதலித்தான் காணேடி`` *1* என்னும் திருவாசகத்தால் அறிக.

எரியாடி ஏகம்பம் என்னாதார் மேனி
எரியாடி யேகம்ப மாகும் எரியாடி
ஈமத் திடுங்காடு தேரும் இறைபணிப்ப
ஈமத் திடுங்காடு தான். **#920**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரண்டாம் அடியில் உள்ள ஏகாரம் தேற்றம்.
அதன்பின் வந்த ``கம்பம்`` நடுக்கம் ஆதலின், அஃது இங்குச் சாம்ப லாகிச் சிந்துதலைக் குறித்தது.
தனிச்சீரில் எரியாடி - தீ எரியப்படுவ தாகிய.
`ஈ மத்தை` என்பதில் சாரியை நிற்க.
ஐ உருபு தொகுதல் இலேசினாற் *2* கொள்க.
ஈமத்தையும் இடும் காட்டையும் ஆடரங்காத் தேரும் இறை சிவபெருமான் அவன் பணிப்ப - பணித்தலால்.
ஈமம் - பிணம் சுடும் விறகு.
ஈற்றடியில் உள்ள `காடு` ஆகுபெயராய் அதன்கண் கிடக்கும் விறகைக் குறித்து.
`ஈமத்தோடு ஈமமாய் ஒழிவதேயன்றித் தன்னை எடுத்த உயிருக்கு யாதொரு பயனையும் தந்ததாகாது` என்றபடி.
முன்னர்.
``எரியாடியே கம்பம் ஆகும்`` என்பதும் தேற்றப் பொருளில் வந்தது.

தானயன் மாலாகி நின்றான் தனித்துலகில்
தானயன் மாலாய தன்மையான் தான்அக்
கரைப்படுத்தான் நான்மறையைக் காய்புலித்தோ லாடைக்
கரைப்படுத்தான் தன்பாதஞ் சார். **#921**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``காய் புலித்தோல் ஆடைக் கரைப்படுத்தான்`` என்பது.

``சிவன்`` என்னும் அளவாய் நின்றது.
அதனை முதலிற் கொள்க.
அதன்கண் ``கரை`` என்றது ஆடையில் அமைக்கப்படும் கோட்டினை;
``கொடுந் தானைக் கோட்டழகும்`` * என நாலடியாரிலும் கூறப்பட்டது.
``தான்`` என்பன பலவற்றிலும் பிரிநிலை ஏகாரம் விரிக்க.
`அயனும், மாலும் ஆகி நின்றான்` என்றது `அவர்கள் வழியாகப் படைத்தல் காத்தல்களை நிகழ்விக்கின்றான்` என்றபடி.
அடி-2ல் `அயன் உலகில் தனித்து மால் ஆய தன்மையான் - அவ்விருவரின் வேறாய் உயிர்களிடையில் தனி ஒருவனாய்ப் பெரும் பொருளான தன்மையையுடையவன்.
மால் - பெருமை.
நான்மறையை அக்கரைப்படுத்தான் - நான்கு வேதங்களை ஓரோர் வரம்பிற்கு உட்படுத்தினான்.
அவ்வரம்புகளாவன `அறம், பொருள், இன்பம், வீடு` என்பன.
இவ்வாறு நாற்பொருளைக் கூறும் நான்கு நூல்களே நான்கு வேதங்கள்` எனக் கூறுதல் தமிழ் வழக்கு.
இவைகளால் எல்லாம் இறைத் தன்மையை விதந்தவாறு.
தன் பாதம் சார் - அவனுடைய திருவடிகளையே (நெஞ்சே) புகலிடமாக அடை.

சாராவார் தாமுளரேல் சங்கரன் தன்மேனிமேல்
சாராவார் கங்கை உமைநங்கை சார்வாம்
அரவமது செஞ்சடைமேல் அக்கொன்றை ஒற்றி
அரவமது செஞ்சடையின் மேல். **#922**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``சார்வு`` என்பது முன்னர் இரண்டிடங்களில் இறுதிநிலை கெட்டு, ``சார்`` என நின்றது.
சார் ஆவார் தாம் உளரேல் சங்கரன் எவர் ஒருவர்க்கும் சார்வாக (பற்றுக் கோடாக) ஒருவர் உளர் என்றால் அவர் சிவன் ஒருவனே.
(முன்னர்ப் பொதுவாகக் கூறிப் பின்னர்ச் சிறப்பாக விதந்தமையால் பன்மை ஒருமைகள் மயங்கின.
) அஃது எங்ஙனம் எனின், கங்கையும், உமையும் முறையே அவனது செஞ்சடை மேலும், மேனிமேலும் அவைகளையே சார்வாகப் பற்றித் தங்கள் ஆரவாரத்தை அடக்கியுள்ளனர்.
பாம்பு அவனுடைய செஞ்சடைமேல் கொன்றை மாலையை ஒற்றினாற்போல் உள்ளது.
தனிச்சீரில் உள்ள ``சார்வாம்`` என்பதை இறுதியிற் சேர்க்க.

கங்கையும், உமையும், பாம்பும் அவனையே பற்றுக்கோடாகப் பற்றியுள்ள நிலைமை.
`அனைத்துயிர்கட்கும் பற்றுக் கோடு அவனே` என்பதைக் குறிக்கும் அடையாளங்களாம் - என்பது கருத்து.
``அரவம்`` இரண்டில் முன்னது ஆரவாரம்; பின்னது பாம்பு.

மேலாய தேவர் வெருவ எழுநஞ்சம்
மேல்ஆயம் இன்றியே உண்பொழுதின் மேலாய
மங்கை உமைவந் தடுத்திலளே வான்ஆளும்
அங்கை உமைவந் தடுத்து. **#923**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-*2*ல் - ஆயம் இன்றியே - வேறு ஒருவர் துணை யில்லாமலே `நீர் உண் பொழுதின்` என்க.
இங்ஙனம் உரைத்தற்கு ஏற்ப, முதற்கண் `எங்கள் பெருமானே` என்பதை வருவித்துக் கொள்க.
வான் ஆளும் அம் கை உமை - வானுலகத்தை ஆள்கின்ற அழகிய செய்கையை உடைய உம்மை.
மேலாய மங்கை உமை வந்து அடுத்து `வம்` *(*என்று தடுத்திலளே*;* *(*ஏன்*?)* `-உம்மை நஞ்சு யாதும் செய்யாது - என்னும் கருத்தினாலோ*?*` என்பது குறிப்பெச்சம்.
`வம்` என்பது தடுத்தலை உணர்த்தும் குறிப்பு, `என்று` என்பது சொல்லெச்சம் சிவபெருமானது அளவில் ஆற்றலைப் புலப்படுத்ததவாறு.
ஈற்றடி எழுத்தொப்புமை மாத்திரையால் மடக்காயிற்று.

அடுத்தபொன் அம்பலமே சார்வும் அதனுள்
அடுத்த திருநட்டம் அஃதே அடுத்ததிரு
ஆனைக்கா ஆடுவதும் மேல்என்பு பூண்பதுவும்
ஆனைக்கா வான்தன் அமைவு. **#924**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அடுத்த`` மூன்றினுள் முதலது.
`அண்மையில் உள்ள` என்றும், இடையது `ஏற்புடையது` என்றும், இறுதியது, `பொருந்தியுள்ள` என்றும் பொருள் தந்தன.
சார்வு - இருப்பிடம்.
``அஃதே`` என்பதன் பின்னும், `அஃதேயும்` என எண்ணும்மை விரிக்க.
ஆன் ஐ - இடப உருவான தலைவன்*;* திரு - இலக்குமி.

திருவைப் பொருந்தியுள்ள தலைவன் மாயோன்.
`அவனுக்காக ஆடுவது` என்றது, அவன் மத்தளம் முழக்க அதற்கு ஏற்ப ஆடுதல்.
ஈற்றடியில் உள்ள ஆனைக்கா, தலம் அமைவு - பொருந்திய ஒழுக்கம்.

அமைவும் பிறப்பும் இறப்புமாம் மற்றுஆங்
கமைவும் பரமான ஆதி அமையும்
திருவால வாய்சென்று சேராது மாக்கள்
திருவால வாய்சென்று சேர். **#925**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அமைவு`` இரண்டில் முன்னது உலக வாழ்வு.
பின்னது (உங்கு - பிறப்பையும், இறப்பையும் கடந்த) வீடுபேறு.
பரம் ஆன ஆதி - இவை அனைத்தும் தன்மேலவாகக் கொண்ட முதல்வன்; இறைவன்.
அவன் அமைந்துள்ள திருவாலவாய்த் தலம்` என்க.
மாக்கள் - அறிவிலா மக்கள் திருவால் - செல்வத்தால்; செல்வமாகிய காரணத்தால் அவாய்ச் சென்று சேர் - மேலும் மேலும் அவாவி ஓடி.
அஃது இருக்கும் இடத்தை நாடி அடைதல்.
`இரங்கத் தக்கது` என்பது சொல்லெச்சம்.
சேர் - சேர்தல்; முதனிலைத் தொழிற் பெயர்.
`சேர்வு` என்பதே பாடம் எனினும் ஆம்.
``ஆம், ஆன`` - என்னும் பெயரெச்சங்கள் அடுக்கி, ``ஆதி`` என்னும் ஒரு பெயர் கொண்டன.

சென்றுசெருப் புக்கால் செல்ல மலர்நீக்கிச்
சென்று திருமுடிவாய் நீர்வார்த்துச் சென்றுதன்
கண்இடந் தன்றுஅப்புங் கருத்தற்குக் காட்டினான்
கண்இடந் தப்பாமைப் பார்த்து. **#926**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டுக் கண்ணப்ப நாயனாருக்கு அருள் செய்தமையை விளக்குவதாதல் வெளிப்படை.
இதிலும் மடக்கணி வரவில்லை.
`காலால்` என ஆல் உருபை விரித்து ஓதுதல் பாடம் அன்று.
ஈற்றடியில் கண் - மற்றொரு கண்ணை.
இடந்து அப்பாமைப் பார்த்து - இடந்து அப்பாதபடி உற்று நோக்கி, காட்டினான் - தனது மற்றொரு கண்ணும் ஊறு இன்றி விளங்குதலைக்

காட்டினான்.
கருத்து- உள்ளம்.
அஃது ஆகுபெயராய் உள்ளத்தின்கண் உள்ள அன்பைக் குறித்தது.
எனவே, ``கருத்தன்`` என்றது `அன்பன்` என்றதாயிற்று.

பார்த்துப் பரியாதே பால்நீறு பூசாதே
பார்த்துப் பரிந்தங்கம் பூணாதே பார்த்திட்
டுடையானஞ் சோதாதே ஊனாரைக் கைவிட்
டுடையானஞ் சோதாதார் ஊண். **#927**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஊனாரைக் கைவிட்டு`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.
ஊன் - உடம்பு.
கைவிடுதல் - பற்று விடுதல்.
ஊண் - உண்ணும் தொழில்.
இதனை எழுவாயாக வைத்து, ``பரியாது``, ``பூசாது`` முதலியன, `அவைகளைச் செய்யாமலே உண்டாகும்` என்றபடி.
அதனால், `அந்த உணவு நியாயமான உணவா காது, தண்ட உணவாம்` எனக் கடிந்துரைத்ததாயிற்று பார்த்தல் - தக்கதை உணர்தல்.
பரிதல் - அன்பு செய்தல்.
அங்கம் - உடம்பு.
பூணு தற்கு, `கண்டிகை` என்னும் செயப்படுபொருள் வருவிக்க.
அஞ்சு - அஞ்செழுத்து.

ஊணொன்றும் இல்லை உறக்கில்லை உன்மாலின்
ஊணென்று பேசவோர் சங்கிழந்தாள் ஊணென்றும்
விட்டானே வேள்வி துரந்தானே வெள்ளநீர்
விட்டானே புன்சடைமேல் வேறு **#928**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஊண் என்றும் விட்டானே`` என்பது முதலாகத் தொடங்கி, `இவள் தன்னை` என்பது வருவிக்க.
உன் மாலின் ஊணால், `ஊண் இல்லை; உறக்கு இல்லை;` என ஊரார் பேசும்படி சங்கினை இழந்தாள்` என இயைத்து முடிக்க.
ஏகாரங்கள் விளியுருபு.
`என்றும் ஊண்விட்டான்` என்பது, `அவன் உண்பதும் இல்லை; உறங்குவதும் இல்லை` என்பதைக் குறித்தது.
ஆயினும் தக்கனது அகங்காரத்தை அடக்க வேண்டி அவனது

வேள்வியைத் துரந்தான்.
உறக்கு - உறக்கம்.
மால் - மயக்கம்; மையல்.
``மாலின்`` என்னும் இன் வேண்டாவழிச் சாரியை.
`மாலாகிய ஊணால்` என்க.
மையல் ஊணாக உருவகம் செய்யப்பட்டது.
ஓர் - ஒப்பற்ற; சிறந்த இதுவும் தலைவியது ஆற்றாமையைத் தோழி தலைவற்கு உரைத்து வரைவு கடாயது.

வேறுரைப்பன் கேட்டருளும் வேதம்நான் காறங்கம்
வேறுரைத்த மேனி விரிசடையாய் வேறுரைத்த
பாதத்தாய் பைங்கண் அரவூர்வாய் பாரூரும்
பாதத்தாய் என்னும் மலர். **#929**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`எம்பெருமானீர்` என்பது வருவித்து.
``வேறு உரைப்பன் கேட்டருளும்`` என முடிக்க.
வேறு - வேறாக; சிறப்பாக.
உரைக்கப்படும் பொருள் ஈற்றில் உள்ள ``அலர்`` என்பது.
அலர் - பழிச்சொல்.
அஃதாவது தலைவி, ``விரிசடையாய்`` என்றும், ``பாதத்தாய்`` என்றும், ``அரவு ஊர்வாய்`` என்றும் இங்ஙனம் பலவாறு பிதற்றும் பிதற்றுரை அஃது அவர் அருளாமையால் உண்டாவதாகலின் பழியாற்றி.
வேறு உரைத்த - பிற நூல்களினினும் மேலாய்ச் சிறந்து விளங்கச் சொல்லிய.
`மேனிமேல் விரிந்த சடையாய்` என்க.
வேறு உரைத்த பாதம் - ஏனைப் பலரது பாதங்களினின்றும் வேறு பிரித்து வேதாகமங்கள் உயர்த்துக் கூறிய பாதம்.
அவ்வுயர்வாவது, உயிர்களின் பொருட்டு ஐந்தொழிலையும் செய்தல்.
ஈற்றடியில் `பாதத்தாய்` என்பது இடைக் குறைந்து, ``பாதத்தாய்`` என நின்றது.
`அரவு பார் ஊரும் பாதத்ததாய் ஊர்வாய்` என இயைக்க.
ஊர்வாய் - ஊரப்படுவாய்.
என்னும் அலர் - என்று இவள் சொல்கின்ற பழி.
இதுவும் மேலைத் துறை - `அலர்` என்பது சந்தி வகையால் ``மலர்`` என வந்தது.
அவ் எழுத்தெல்லாம் பற்றியே ``மலர்`` என்பது அந்தாதியாயிற்று.

மலர்அணைந்து கொண்டு மகிழ்வாய்உன் பாத

மலர்அணைந்து மால்நயன மாகும் மலர்அணைந்து
மன்சக் கரம்வேண்ட வாளா அளித்தனையால்
வன்சக்கர் அம்பரனே வாய்த்து. #930
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியில் சக்கு, `சக்கர்` எனப் போலியாய் நின்றது.
சக்கு - கண்.
வன் சக்கு - நெருப்புக்கண் அம் பரன் - அழகிய முதல்வன்.
இவ்வாறான ஈற்றடியை முதலிற் கூட்டுக.
மலர் அணைந்து கொண்டு - அன்பர்கள் இடும் மலர்களை மேனிமேல் பொருந்தி ஏற்றுக்கொண்டு.
பாத மலர், உருவகம்.
மால் - திருமால்.
நயனம் ஆகும் மலர் அணைந்து - தனது கண்ணாகிய மலரைச் சாத்தி, `அணிந்து` என்பது எதுகை நோக்கி ``அணைந்து`` எனத் திரிந்து நின்றது.
இனி.
`அணைவித்து` எனினும் ஆம்.
மன் - நிலை பெற்ற.
வாள் - படைக்கலப் பொது.
ஆல், அசை.
`இது போற்றத்தக்க ஒன்று` என்பது குறிப்பெச்சம் ``வாய்த்து`` என்பதை, `வாய்ப்ப` எனத் திரித்து, ``வாளா`` என்பதன்பின் கூட்டுக.

வாய்த்த அடியார் வணங்க மலரோன்மால்
வாய்த்த அடிமுடி யுங்காணார் வாய்த்த
சலந்தரனைக் கொன்றிட்டுச் சங்கரனார் என்னோ
சலந்தரனாய் நின்றவா தாம். #931
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடியார்கள் எளிதில் கண்டு வணங்க, மலரோனும், மாலும் தேடியும் காணாராயினார் என்பதும், `சலந்தரனைக் கொன்றது போலும் மறக்கருணையை உடையன் ஆயினும் கங்கையைத் தலையில் தாங்கியது போலும் அறக்கருணையை உடையன்; என்பதும் கூறியவாறு.
``சலந்தரன்`` இரண்டில் முன்னது ஓர் அசுரன், பின்னது சலத்தை (கங்கையை)த் தரித்தவன்.

`தாம் சலந்தரனாய் நின்றவா என்னோ` என்க.

தாம்என்ன நாம்என்ன வேறில்லை தத்துறவில்
தாம்என்னை வேறாத் தனித்திருந்து தாமென்
கழிப்பாலை சேருங் கறைமிடற்றார் என்னோ
கழிப்பாலை சேருங் கடன். #932
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கழிப்பாலை`` இரண்டில் முன்னது ஒரு தலம்; சோழநாட்டில் காவிரியின் வடகரையது; கொள்ளிடக் கரையது.
பின்னது, அனைத்தையும் கழித்து நின்ற இடம்; நிலைமை.
தாமென் கழிப்பாலை - அலைகள் தாவுகின்ற ஈர நிலமாகிய திருக்கழிப்பாலை.
தாம் - கறைமிடற்றார்.
நாம் - உயிர்கள்.
தத்து உறவு - ஒருவரை ஒருவர் சார்ந்து நிற்கும் தொடர்பு - `தாமும், நாமும் பொருளால் வேறாயினும், ஒருவரை ஒருவர் சார்ந்து நிற்கும் தொடர்பில் வேறாகாது ஒன்றாவேம்; அஃதாவது, இருமையில் ஒருமையாவேம் என்றபடி.
`அவ்வாறிருக்கவும், அவர் என்னின் வேறாய்த் தனித்திருப்பது, அனைத்தையும் கழித்து நாம் தனியே நின்ற நிலையில் மட்டுமே அடைய நிற்கின்ற கடன் (முறைமை) என்னோ` என்க.
இறைவன் உயிர்களோடு உயிர்க்கு உயிராய் ஒன்றியிருப் பினும் பாசத்தடையால் உயிர்கள் அவனை அடைந்து அவனது இன்பத்தைப் பெறமாட்டாது கிடந்து, பாசத் தடை நீங்கிய பின்பே அவனையடைந்து இன்புறுதலை விதந்தவாறு.

கடனாகக் கைதொழுமின் கைதொழவல் லீரேல்
கடல்நாகைக் காரோணம் மேயான் கடநாகம்
மாளவுரித் தாடுவான் நும்மேல் வல்வினைநோய்
மாளவிரித் தாடுவான் வந்து. #933
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கட நாகம் - மதத்தையுடைய யானை.
`காரோணம் மேயானும், ஆடுவானும் ஆகிய பெருமானைத் தொழுமின்; தொழ வல்லிரேல்.
அவன் வந்து உம்முடைய வல்வினை நோய் மாளும்படி இரித்து (ஓட்டி) ஆடும் (உங்களுடன் கலந்து விளங்குவான்.

) என ஏற்குமாறு இயைத்து முடிக்க.
`மேயார், ஆடுவார்` எனப் பன்மை யாகவும்.
`நம்` எனத் தன்மையாகவும் ஓதுவன பாடங்கள் அல்ல.

வந்தார் வளைகழல்வார் வாடித் துகில்சோர்வார்
வந்தார் முலைமெலிவார் வார்குழல்கள் வந்தார்
சரிதருவார் பைங்கொன்றைத் தாராரைக் கண்டு
சரிதருவார் பைங்கொன்றத் தார். **#934**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மூன்றாம் அடி சிவபெருமானைக் குறித்த தொட ராகும்.
சரிதரு - சடையில் நிரம்பி, வெளியேயும் வீழ்கின்ற தார்` என்க.
``தாரார்`` என்றாராயினும் `தாரார் முன்` என விரித்து ``வந்தார்`` என மேலே கூட்டிப் பின், `அவரைக் கண்டு வளைகழல்வார்` என உரைத்தல் கருத்து என்க.
`சுரிதருவார்`, `ஐங்கொன்றை` என்பன பாடம் அல்ல.
வந்தார் - வந்த மகளிர்.
``வந்தார்` என்பன பலவும் சொற்பொருட் பின்வருநிலையணியாய் வந்தன.
இறுதியில், `பைங் கொன்றைத் தார்போலும் வார் குழல்கள் சரிதருவார்` என இயைத்து முடிக்க.
இதன்கண் ``தார்`` என்றது, தார்போலும் காயை.
கொன்றைக் காயை மகளிரது கூந்தலுக்கு உவமையாகக் கூறுதல் வழக்கம்.
பெருமானது திருமேனியழகைப் புகழ்ந்தவாறு.

தாரான் எனினும் சடைமுடியான் சங்கரன்அம்
தாரான் தசமுகனைத் தோள்நெரித்துத் தாராய
நாளுங் கொடுத்தந்த வானவர்கள் தம்முன்னே
வாளுங் கொடுத்தான் மதித்து. **#935**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சடை முடியான்; சங்கரன்; அம் தாரான்; (அத் தாரினை இப்பொழுது நமக்குத்) தாரான் எனினும், தசமுகனை முதலில் (சினந்து) தோள் நெரித்துப் பின்பு (நன்கு) மதித்து, அந்த வானவர்கள் தம் முன்னே வாழ்நாளும் கொடுத்துத்தார் ஆய (தூசிப் படையில் ஏற்கத் தக்கதாகிய) வாளும் கொடுத்தான்; (ஆகலின் பின்பு (தருவான்) என இயைத்து முடிக்க.

ஈற்றில் எஞ்சி நின்றது அவாய் நிலை`.
சிவபெருமான் முன்னே முனிந்தானாயினும் பின்னே திருவுளம் இரங்குபவன் என்பது அவன் இராவணனை முன்னே தோள்நெரித்துப் பின்னே அருளியவாற்றால் விளங்கும்` என்றபடி.

மதியாருஞ் செஞ்சடையான் வண்கொன்றைத் தாரான்
மதியாரும் மாலுடைய பாகன் மதியாரும்
அண்ணா மலைசேரார் ஆரோடுங் கூட்டாகி
அண்ணா மலைசேர்வ ரால். #936

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மதி`` மூன்றில் முதலது பிறை; இறுதியது நிறை நிலா.
இடையது அறிவு.
மால் சிவபிரானைப் பலமுறை வழிபட்டமை பற்றி அறிவு நிறைந்தவனாகக் கூறினார்.
அண்ணாலை - திரு அண்ணாமலை.
ஆரோடும் - மனைவி, மக்கள் முதலிய சுற்றத்தாரும், மற்றும் நண்பரும் ஆகிய யாரோடும்.
கூட்டு ஆகி.
கூடி வாழும் வாழ்க்கையராகி.
அண்ணாமல் - நெருங்காமல்; `வாழ்விழந்து` என்றபடி.
ஐசேர்வார் - மிடற்றில் கோழைவந்து சேரப் பெறுவார்.
ஆல், அசை.

ஆல நிழற்கீழ் இருப்பதுவும் ஆய்வதறம்
ஆலம் அமுதுசெயல் ஆடுவதீ ஆலந்
துறையுடையான் ஆனை உரியுடையான் சோற்றுத்
துறையுடையான் சோராத சொல்லு. #937

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஆலந்துறை யுடையான் என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.
ஆலந்துறை, அன்பில் ஆலந்துறை பாடல் பெறாது வேறு உளவேனும் கொள்க.
`அவனது சொல் சோராதன; பயனளியாது போகாதன.
அவன் இருப்பது ஆல நிழற்கீழ்; ஆய்வது அறம்; அமுது செய்வது ஆலம். (நஞ்சு) ஆடுவது தீ` என்க.
`ஆடுவது` என்பது ஈறு குறைந்து நின்றது.
சிவபெருமானது இயல்புகளை விதந்தவாறு.

``இருப்பதுவும்`` என்றாற்போல ஏனையவற்றிலும் இழிவு சிறப்பும்மை - உயர்ந்தவற்றைத் தாழ்ந்தனபோலக் கூறிப் புகழ்ந்தவாறு.

சொல்லாயம் இன்றித் தொலைவின்றித் தூநெறிக்கண்
சொல்லாய்ப் பெருத்த சுடரொளியாய்ச் சொல்லாய
வீரட்டத் தானை விரவார் புரம்அட்ட
வீரட்டத் தானை விரை. **#938**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சொல் ஆயம் - சொற்கூட்டம்; பலவகை மொழிகள்.
`அவை இன்றி` என்றது, `அவைகளைக் கடந்து` என்றபடி.
சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற சொலற்கரிய சூழலாய் * என அப்பரும் அருளிச் செய்தார்.
தொலைவு - சேய்மை.
சேய்மை யின்றியிருத்தலாவது, `அங்கு, இங்கு` எனாதபடி எங்கும் நிறைந் திருத்தல்.
தூநெறி - வீட்டு நெறி.
அந்நெறிக்கண் உள்ள சொல், நூல்கள் `அவைகளால் ஆயப்படும் பெருத்த சுடரொளி` என்க.
தனிச்சீரில் உள்ள சொல்.
`புகழ் பொருந்திய வீரட்டம்` என்க.
``வீரட்டம்` இரண்டில் முன்னது தலம்.
பின்னது வீர அட்டகாசம்.
அட்டகாசம் - பெருஞ்சிரிப்பு.
ஈற்றடியில் `வீரட்டத்தானை வணங்க` என ஒருசொல் வருவிக்க.
விரை - விரைந்து முயல்.

விரையாரும் மத்தம் விரகாகச் சூடி
விரையாரும் வெள்ளெலும்பு பூண்டு விரையாரும்
நஞ்சுண்ட ஆதி நலங்கழல்கள் சேராதார்
நஞ்சுண்ட வாதி நலம். **#939**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ரை எலும்பு - யாவரும் விரைந்து அப்பால் விலகும் எலும்பு.
தனிச் சீரில், `வீரை` என்பது முதல் குறுகி நின்றது.
வீரை - கடல்.
ஈற்றடியை, `ஆதி நலம் நஞ்சுண்ட` என மாற்றி, `முதற்கண் விதித்த நன்மைகள் மெலிந்தன` என உரைக்க.

முதற்கண் விதித்த நன்மைகள் நல்வினை செய்வார்க்கு வலுப்படுதலும், தீவினை செய்வார்க்கு மெலிவடை தலும் உளவாதல் பற்றி இவ்வாறு கூறினார்.
``சேராதார்`` என்பதில் ஆறாவது விரியாது நான்காவது விரித்தலும் ஆம்.

நலம்பாயு மாக்க நலங்கொண்டல் என்றல்
நலம்பாயு மானன் குருவ நலம்பாய்செய்
தார்த்தார்க்கும் அண்ணா மலையா னிடந்
தார்த்தார்க்கும் அண்ணா மலை. **#940**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(இப்பாட்டு நிரம்பக் கிடையாமல் ஒரு சீர் விடுபட்டுக் கிடைத்தலால் பொருள் காண்டல் அரிது.
)

மலையார் கலையோட வார்ஓடக் கொங்கை
மலையார் கலைபோய்மால் ஆனாள் மலையார்
கலையுடையான் வானின் மதியுடையான் காவாத்
தலையுடையான் என்றுதொழு தாள். **#941**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-*1*-ல் மலை ஆர் கலை - மணி வடங்கள் ஒன்றோடு ஒன்று மோதுகின்ற மேகலை.
கொங்கை மலை, உருவகம்.
அதன்மேல் உள்ள கலை, மேலாடை.
மால் - மயக்கம்.
மையல்.
மலை ஆர் கலை - மலைகளில் வாழ்கின்ற மான்.
வானின், கலை, பிறை.
`தலைகளைக் காவாக உடையான்` என்க.
கா -தோளில் சுமக்கப்படும் பொருள்.
இதுவே, `காவடி` என வழங்குகின்றது; ``கலையுடையான்`` என்பன முதலியவற்றைச் சொல்லி அவனைத் தொழுதாள்; அதன் பயனா மால் ஆனாள்` - என்க.
இதுவும் தலைவியது ஆற்றாமை கண்டு தோழி அஞ்சி உரைத்தது.

தாளார் கமல மலரோடு தண்மலரும்
தாள்ஆர வேசொரிந்து தாமிருந்து தாளார்

சிராமலையாய் சேமத் துணையேஎன் றேத்தும்
சிராமலையார் சேமத் துளார். #942
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியில் உள்ள சிராமலை - திருச்சிராப்பள்ளிக் குன்று.
அதன் கண் உள்ள இறைவர் யாவர்க்கும் நன்மைதர இருக் கின்றார்.
சேமம் - நன்மை.
``தாள்`` மூன்றில் முதலது தாமரைத் தண்டு; இடையது திருவடி.
ஈற்றது, முயற்சி.
சிரம் அலையாய் - சிரசிலே நீரில் அலையைத் தாங்கியுற்றவனே.
சேமத் துணையே எய்ப்பில் வைப்புப் போல உதவ இருப்பவனே.
`தாளார் (வீடு அடைய முயல்பவர்) ஏத்தும் சிராமலையார்` என்க.

ஆர்துணையா ஆங்கிருப்ப தம்பலவாஅஞ்சொலுமை
ஆர்துணையா ஆனை உரிமூடின் ஆர்துணையாம்
பூவணத்தாய் பூதப் படையாளி பொங்கொளியாய்
பூவணத்தாய் என்னின் புகல். #943
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`அம்பலவா! ஆர்துணையாம் பூவணத்தாய்! பூதப் படையாளி!
பொங்கொளியாய்!`` என்பன விளி.
ஆர் துணையாம் - யாவர்க்கும் நிறைந்த துணையாகின்ற பூவணம்,
பாண்டி நாட்டுத் தலம், ``அம் சொல் உமை `பூவணத்தாய்` எனின் -
`பூப்போலும் தன்மையை தாய் என்றல்.
(நீ) யார் - யாரும்.
உமமை தொகுத்தல்.
துணையா - நிகராகாதபடி.
(யானையை உரிப்பார் வேறு ஒருவர் இல்லை.
) ஆனை உரி மூடின் - யானைத் தோலை உரித்து
மூடிக்கொண்டால்,ஆங்கு ஆர் துணையா இருப்பது - அவள் (உமை)
அப்பொழுது யாரைத் துணையாகப் பற்றி அஞ்சாமல் இருப்பது?
சிவபிரான் யானையை உரித்த பொழுது உமை அஞ்சி அகன்றாள்`
என்பது புராண வரலாறு.
புகல் - சொல்லு.
`மூடி` என்பது பாடம் அன்று.

புகலூர் உடையாய் பொறியரவும் பூணி
புகலூர்ப் புனற்சடையெம் பொன்னே புகலூராய்

வெண்காடா வேலை விட முண்டாய் வெள்ளேற்றாய்
வெண்காடா என்பேனோ நான். #944
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``புகலூர்`` மூன்றில் முதலது திருப்புகலூர்த் தலம்.
பொறி - படத்தில் உள்ள புள்ளிகள்.
இடையது - புகுதலையுடைத் தாய்ப் பொங்குகின்ற புனல் என்க.
இறுதியது யாவரும் சிறப்பித்துச் சொல்கின்ற கயிலாயம்.
அதனை, ``ஊர்க்கோட்டம்`` என்ற சிலப்பதி காரத்தாலும் உணர்க.
``வெண்காடு`` இரண்டில் முன்னது சோழ நாட்டுத் தலம்.
பின்னது, சாம்பலால் வெண்மையைப் பெற்ற சுடுகாடு.
``புகலூர் உடையாய்.வெள்ளேற்றாய்! உன்னை நான் சுடுகாட்டில் ஆடுபவன்` என்று இகழ்வேனோ என்க.

நானுடைய மாடே என்ஞானச் சுடர்விளக்கே
நானுடைய குன்றமே நான்மறையாய் நானுடைய
காடுடையாய் காலங்கள் ஆனார் கனலாடும்
காடுடையாய் காலமா னாய் #945
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நானுடைய`` மூன்றும் சொற்பொருட் பின்வரு நிலை யணியாயே வந்தன.
``காடு`` இரண்டில் முன்னது, ``நானுடைய காடு`` என்றதனால் வினைக்காடாயிற்று.
பின்னது, ``கனலாடுங் காடு`` என்றதனால் முதுகாடாயிற்று.
காலங்கள் ஆனார் - தம் தம் காலம் முடியப் பெற்றார்.
`நானுடைய மாடே` என்பன முதலான விளிகள் பலவற்றையும் முன்னே வைத்து, `வினைக் காட்டை உடைத்தெறி வாயாக` என முடிக்க.
மாடு - செல்வம்.

ஆயன் றமரர் அழியா வகைசெய்தான்
ஆயன் றமரர் அழியாமை ஆயன்
திருத்தினான் செங்கண் விடையூர்வான் மேனி
திருத்தினான் சேதுக் கரை. #946
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-*1*-ல் ஆயன், நந்தகோபன்.
அவனுடைய *தமரர்(சுற்றத்தார்)* அழியா வகை செய்தான் - இந்திரன்

பெய்வித்த கல்மழையால் அழியாதபடி வகை செய்து காத்தலின்.
பின்னொரு காலத்தில் இவ்வாறு செய்தவனாகிய திருமால்.
அன்று - முன் ஒரு காலத்தில் அமரர் ஆய் அழியாமையாய் - தேவர்கள் நலம் பெற்று, இராவணனால் அழியாமைப் பொருட்டு முன்னின்று.
`அழியாமைக்கு` என உருபு விரிக்க.
(அவனை அழித்து) இருத்தினான் - இருக்கச் செய்தான்.
அவன் அன்றே விடை ஊர்வானது திருமேனியை *(சிவ லிங்கத்தை)* சேதுக் கரையில் திருத்தினார்.
*(*செம்மையாக நிறுவி வழிபட்டான்.
) இராமேச்சரத் தலத்தின் சிறப்புணர்த்தியவாறு.

கரையேனும் மாதர் கருவான சேரும்
கரையேனும் ஆது கரையாம் கரையேனும்
கோளிலியெம் மாதி குறிபரவ வல்லையேல்
கோளிலியெம் மாதி குறி. **#947**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-*1*-ல் `கரேணுவும்` என்பது ``கரையேனும்`` என மருவி நின்றது.
கரேணு - யானை.
அடி-*2*ல் முதற்கண் கரை, எதுகை நோக்கித் திரிந்த கறை*;* அதன் பொருள் `அழுக்கு` என்பது.
இரண்டாவது கரையாம் - சொல்ல மாட்டோம்*;* `சொல்ல வேண்டுவ தில்லை` என்பதாம்.
அதற்குமுன் `அது` என்னும் சுட்டுப் பெயர் நீண்டு, ``ஆது`` என வந்தது.
யானையாயினும், மாதரது கருப்பைகள் அழுக்குப் பொருளாயினும்*;*
சேரும் - அதன்கண் சேர்ந்துதான் பிறக்கும்.
அது கரையாம் - அதனை நாம் செய்ய வேண்டுவதில்லை.
யானை தெய்வத் தன்மையுடைய உயிராகக் கருதப்படுவதுடன் பெரிய உருவத்தையும் உடையது.
ஆயினும் அது பிறப்பது, என்றால் கருப் பையுள் வீழ்ந்து கிடந்துதான் பிறக்கவேண்டும்.
*(*ஆகவே, எத்துணைத் தூயோரும், பெரியோரும் `பிறப்பது` என்றால் கருவில் வீழ்ந்து யோனிவாய்ப் பட்டுத்தான் பிறக்கவேண்டும்.
அதனால் அதனை நீ வெறுத்தல் உண்மையாயின்.
கோளிலி எம் ஆதிதன் குறி *(இலிங்கம்)* கரையேனும் - எல்லைக்குட்பட்ட சிறுபொருளாயினும் *(அதன் பெருமையை உணர்ந்து அதனை நீ)* பரவவல்லையேல், *(நீ)* கோள் இலி எம் ஆதி குறி - குற்றம் இல்லாதவனாகிய எம் முதல்வனாம் சிவபெருமானால் குறிக்கப்படும்

பொருளாவை.
`பிறவிக் கடலினின்றும் எடுக்கப்படுவை` என்றபடி.
இறுதிக்கண் `ஆவை`` என்னும் பயனிலை எஞ்சிநின்றது.
கோளிலி, சோழநாட்டுத் தலம்.

குறியார் மணிமிடற்றுக் கோலஞ்சேர் ஞானக்
குறியாகி நின்ற குணமே குறியாகும்
ஆலங்கா டெய்தா அடைவேன் மேல் ஆடவரம்
ஆலங்கா டெய்தா அடை. **#948**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``குறி`` மூன்றில் முதலது, உடம்பில் உளதாகின்ற `மச்சம்` என்னும் அடையாளம்.
`சிவபெருமான் திருமேனி முழுதும் சிவந்திருக்க, மிடற்றில் மட்டும் உள்ள நஞ்சுக்கறை மச்சம்போல உள்ளது` என்றபடி.
இடையது அடையாளம்.
`கறை மிடற்றோடு கூடிய திருமேனி ஞானத்தின் அடையாளமாய் உள்ளது` என்றபடி.
அவ்வாறாகி நின்ற குணமாவது அருள்.
தனிச்சீரில் உள்ள குறி, திருமேனி, ஆலங்காடு, `திருவாலங்காடு` என்னும் தலம்.
``எய்தா`` இரண்டு, `எய்தி` என்னும் பொருட்டாய வினையெச்சம்.
ஈற்றில் ஆல் - ஆலம் விழுது.
`ஆட` என்பதில் ஈற்று அகரம் தொகுக்கப்பட்டது.
`எம்பெருமானே` என்பதை முதற்கண் வருவித்து, `நீ ஞானக் குறியாகி நின்ற குணமே குறியாகியுள்ள ஆலங்காடு என்று நான் அடைவேன்.
நீ ஆடு அரவங்கள் உன் மேல் ஆலம் விழுது போல அங்கு ஆட என்முன் வந்து அடை` என முடிக்க.
`உனது திருக்காட்சியைத் தந்தருள வேண்டும்` என வேண்டியவாறு.

அடையும் படைமழுவும் சூலமும் அங்கி
அடையும் பிறப்பறுப்ப தானால் அடைய
மறைக்காடு சேரும் மணாளர்என்பாற் சேரார்
மறைக்காடு சேர்மக்கள் தாம். **#949**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சிவபெருமான் மழுப்படையையும், சூலப் படையையும், நெருப்பையும் ஏந்தியிருத்தல் தன்னை அடைந்தாரது பாசத்தை போக்குமாற்றால்

அவர்களது பிற்பை நீக்குங் குறியாய் இருக்கவும், (நல் ஊழ் இன்மையால்) பிறந்து இறப்பவராகிய மக்கள் `திருமறைக்காட்டில் எழுந்தருளியிருக்கும் அழகர்` எனப்படுகின்ற அவரை அடைய மாட்டார்கள்.
(`வேறு எங்கெல்லாமோ சென்று அடைவார்கள்` என்றபடி.
) ஈற்றடியில் உள்ள ``மறைக்காடு`` - இடு காடு.

தாமேய ஆறு சமய முதற்பரமும்
தாமேய ஆறு தழைக்கின்றார் தாமேல்
தழலுருவர் சங்கரவர் பொங்கரவம் பூண்ட
தழலுருவர் சங்காரர் என்பார். **#950**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தாம் மேய ஆறு சமய முதல் பரமும் - சமயிகள் பலரும் அவரவர் விரும்பிய ஆறு சமயங்கட்கும் முதல்வர்களாய் உள்ள கடவுளர் பலரும்.
(`பரம்` என்பது ஆரியச் சொல்லாயினும் தமிழில் வடசொல்லாய், சொல் வகையால் அஃறிணை இயற்பெயராய், இங்கு பன்மை குறித்து நின்றது.
) தாம் ஏய ஆறு தழைக்கின்றார்- சிவபெருமானால் ஏவியவாற்றானே பெருமை பெற்று விளங்கு கின்றனர்.
(`தொழிற் கடவுளர் பலரும் உயிர் இனத்தவர் ஆதலின் அவர் யாவரும் சிவபெருமானது திருவருளானே கடவுள் தன்மை பெற்று அதிகாரத்தில் உள்ளனர்` என்றபடி.
) தாமேல் - இனி அவரோ (சிவபெருமானாரோ) என்றால்.
தழுவல் உருவர் - (`தழுவல்` என்பது உகரங்கெட்டு, `தழல்` என நின்றது,) உமாதேவியால் தழுவப்பட்ட உருவத்தையுடையவர்.
(`அருளாகிய சத்தியோடு கூடியவர்` என்றபடி.
) சங்க அரவர் (`சங்க` என்னும் அகரம் தொகுக்கப்பட்டது.
) அமரரும், அடியவரும் ஆகிய குழாத்தின் துதி ஆரவாரத்தை உடையவர்.
தழல் உருவர் - நெருப்புப் போலும் திருமேனியையுடையவர்.
என்பார் - எனப்படுவார்.

பார்மேவு கின்ற பலருருவர் பண்டரங்கர்
பார்மேவு கின்ற படுதலையர் பார்மேல்
வலஞ்சுழியைச் சேர்வர் மலரடிகள் சேர்வார்
வலஞ்சுழியைச் சேரவரு வார். **#951**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பார்`` மூன்றில் முதலது பல உலகங்கள்.
அவை களில் மேவும் பலராவர் மக்கள், அசுரர், இராக்கதர், நரகர், தேவர், உருத்திரர் முதலியோர்.
கலப்பினால் அவர்களேயாய் நிற்பார்` என்றவாறு.
இடையது, வாழ் நிலம், ஈற்றது, நிலவுலகம்.
வலஞ்சுழி, சோழ நாட்டுத் தலம்.
ஈற்றடியில் வலம் சூழி - வெற்றியாகிய வட்டம்.
மூன்றாம் அடியில் உள்ள ``வலஞ்சுழியைச் சேர்வார்`` என்பதனை எழுவாயாக்கி, முதலிற் கூட்டுக.

வாரணிந்த கொங்கை உமையாள் மணவாளா
வாரணிந்த கொன்றை மலர்சூடி வாரணிந்த
செஞ்சடையாய் சீர்கொள் சிவலோகா சேயொளியாய்
செஞ்சடையாய் செல்ல நினை. **#952**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி *-2-*ல் வார் அணிந்த - நீளமாகத் தொடுக்கப் பட்ட.
தனிச்சீரில் உள்ள வார் - நீர்.
ஈற்றடியில் சடை - வேர்.
`எப் பொருட்கும் செவ்விய வேராய் உள்ளவனே` என்க.
செல்ல நினை - நின் அடியார்களைக் கடைபோக நினை; `இடையிலே மறந்து விடாதே` என்றபடி.
``கடையவனேனைக் கருணையினாற் கலந்து ஆண்டுகொண்ட விடையவனே, விட்டிடுதி கண்டாய்`` * என மாணிக்கவாசகரும் விண்ணப்பித்துக் கொண்டார்.

நினைமால் கொண்டோடி நெறியான தேடி
நினைமாலே நெஞ்சம் நினைய நினைமால்கொண்
டூர்தேடி யும்பரால் அம்பரமா காளாஎன்
டூர்தேடி என்றுரைப்பான் ஊர். **#953**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-*2*-ல் ``மாலே`` என்றது சிவனை விளித்ததே.
மால் - பெரியோன்.
இப்பெயர் இடுகுறியாய்த் திருமாலைக் குறிப்ப தாயினும் காரணங் கருதியவழி பெருமையுடையோர் பலரையும் குறிப்பதே.
இதனை முதற்கண் கொண்டு உரைக்க.
அடி-*1*-ல் நினை மால் - (உன்னையே) நினைத்தலால் உண்டாகிய

மையல்.
நெறி - உன்னை அடையும் வழிகள்.
`நெஞ்சம் நினை நினைய` என்க.
``நினை மால் கொண்டு`` எனப் பின்னுங் கூறியது, அடி-*1*-ல் கூறியதை மீட்டும் கூறிய அனுவாதம்.
அடி-*3*-ல் `ஊர் ஊர்` என்னும் அடுக்குக் குறைந்து நின்றது.
உம்பர் ஆர் - தேவர்கள் நிறைந்த.
அம்பர் மாகாளம்.
சோழ நாட்டுத் தலம்.
என் ஊர் தேடி - எனது ஊரைத் தேடி வந்தவனே.
`என்று இவள் உனது ஊரை (அம்பர் மாகாளத்தை)ச் சொல்வாள்` என்க.
இதில் பாடங்கள் பல திரிபுபட்டன.
இதுவும் தலைவியது ஆற்றாமை கண்டு செவிலி தலைவனை எதிர்பெய்து கொண்டு கூறியது.

ஊர்வதுவும் ஆனேறு உடைதலையில் உண்பதுவும்
ஊர்வதுவும் மேல்லுரகம் ஊடுவர்கொல் ஊர்வதுவும்
ஏகம்பம் என்றும் இடைமருதை நேசத்தார்க்
கேகம்ப மாய்நின்ற ஏறு. **#954**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இடை மருதை நேசத்தார்க்கே - திருவிடை.
மருதூரை விரும்பும் விருப்பம் உடைய இறைவற்கே.
ஏகாரம் தேற்றம் இதனை முதலிற் கொண்டு, ``என்றும்`` என்பதை இதன்பின் கூட்டுக.
`உண்பதுவும் உடைதலையில்` என மாற்றுக.
`மேல் ஊர்வதும் ஊரகம்` என்க.
ஊடுதல், இங்கே வெறுத்தல்.
ஊடுவர்கொல் - இவைகளை வெறுப்பாரோ! வெறார் (ஆயினும்) ஏறு - ஆண் சிங்கம் நரசிங்கம்.
கம்பமாய் நின்றது - நடுக்கம் உடையதாய் நின்றுவிட்டது.
``நேசத்தார்க்கே`` என்னும் ஏகாரத்தால், `இவ்வாறு மிக எளியாராய்க் காணப்படுகின்றவர்க்கே` என, அவரது ஆற்றல் மிகுதி விளக்கப் பட்டது.
திருமால் கொண்ட நரசிங்க அவதாரத்தைச் சிவபெருமான் சரபமாய்த் தோன்றி அழித்தமை புராணங்களில் காணப்படுவது.

ஏறேய வாழ்முதலே ஏகம்பா எம்பெருமான்
ஏறேறி யூரும் எரியாடி ஏறேய

ஆதிவிடங் காகாறை கண்டத்தாய் அம்மானே
ஆதிவிடங் காஉமைதன் மாட்டு. #955
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-1-ல் ஏறு ஏய - தேவர்களில் ஆண்சிங்கம் போல `வாழ்கின்ற முதலே` என்க.
தனிச்சீரில் ஏறு ஏய - உயர்வு பொருந்தக் `காறையை அணிந்த கண்டத்தை உடையவனே` என்க.
காரை - கழுத்தணி; அது விடக் கறையைக் குறித்தது.
`அண்டத்தாய்` என்பது பாடம் அன்று.
அடி-3-ல் ``ஆதிவிடங்கா`` என்பதைக் ``கண்டத்தாய்`` என்பதன் பின்னர்க் கூட்டுக.
ஆதி விடங்கன் முதற்கண் தோன்றிய சுயம்பு மூர்த்தி.
`ஆதி விடம் உமைதன் மாட்டுகா` என இயைத்து, `முற்காலத்தில் நீ உண்ட நஞ்சினை உமைக்குத் துன்பம் நேராதவாறு காப்பாற்று` என உரைக்க.

மாட்டும் பொருளை உருவு வருகாலம்
வாட்டும் பொருளை மறையானை மாட்டும்
உருவானைச் சோதி உமைபங்கார் பங்காம்
உருவானைச் சோதி உரை. #956
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-1-ல் மாட்டும் பொருள் - எல்லாம் வல்ல பொருள் .
உருவு வருகாலம் - பிறப்பு வருங்காலம், அடி-2-ல் மாட்டும் பொருள் - அந்தப் பிறப்பிலே சேர்க்கும் பொருள்.
மாட்டும் உரு - நெருப்புப் போல விளங்கும் திருமேனி.
நெருப்பை வளர்த்தலை `மாட்டுதல்` என்றல் வழக்கு.
சோதி உமை - அழகிய உமாதேவி.
அடி-4-ல் உரு - திருமேனி, சோதி - (மனமே, நீ) ஆராய்; எண்ணு.
உரை - துதி.

உரையா இருப்பதுவும் உன்னையே ஊனில்
உரையாய் உயிராய்ப் பொலிந்தாய் உரையாய
அம்பொனே சோதி அணியாரூர் சேர்கின்ற
அம்பொனே சோதியே ஆய்ந்து. #957
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உரையா - உரைத்து; துதித்து.
ஊனில் உரையாய் - உடம்பினின்றும் எழுகின்ற சொல்லாய்.
உரையாய அம்பொன் - மாற்று உரைக்குப் பொருந்திய அழகிய பொன்.
இதன்பின் உள்ள `சோதி` என்பதை இறுதியிற் கூட்டுக.
அடி-4-ல் அம் பொன் - அழகிய இலக்குமி.
ஏ சோதியே - ஏவிய ஒளிவடிவானவனே.
ஏவுதல் - இங்கு, வாழ விடுதல், திருவாரூர், இலக்குமி, வழிபட்ட தலமாகும்.
ஆய்ந்து சோதி - எனது உயிரை அலசித் தூய்மை செய்.

ஆய்ந்துன்றன் பாதம் அடைய வரும்என்மேல்
ஆய்ந்தென்றன் பாச மலமறுத் தாய்ந்துன்றன்
பாலணையச் செய்த பரமா பரமேட்டி
பாலணையச் செய்த பரம். **#958**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடைய - அடைவதற்கு.
வரும் - விரும்பி வருகின்ற.
என்மேல் ஆய்ந்து - என்னிடத்துப் படிந்துள்ள குற்றங்களை ஆராய்ந்து, அக்குற்றமாகிய, கட்டாம் மலங்களை அறுத்து.
`ஆய்ந்து அளைய` என இயையும்.
பரமேட்டடி - முன்னோனாகிய இறைவன்.
அடி-4-ல் பால் - ஊழ்; வினை - அணைய - அழியும் படி.
பரம் - உனது கடமை `நன்று` என ஒரு சொல் வருவித்து முடிக்க.

பரமாய பைங்கண் சிரம்ஏயப் பூண்ட
பரமாய பைங்கண் சிரமே பரமாய
ஆறடைந்த செஞ்சடையாய் ஐந்தடைந்த மேனியாய்
ஆறுஅடைந்த செஞ்சடைஆய் அன்பு. **#959**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பரம்`` மூன்றில் முதலது சுமை.
இடையது பரம் பொருள்.
இறுதியது மேன்மை.
முதற்கண் உள்ள ``பைங்கண் சிரம்``, இறந்தாரது குழிந்தாழ்ந்த கண்களையுடைய தலை.
`அவைகளை ஏய (பொருந்த)ப் பூண்ட ``சிரமே`` என இயைக்க.
இச் சிரம் - தலைமை இரண்டாம் அடியில் உள்ள.

``பரமய சிரமே`` என்பதற்கு.
`பரம் பொருளாக மதிக்கப்படுபவருள் தலையாயவனே` என உரைக்க.
சிவபெருமானுடைய கண்கள் திங்களும், ஞாயிறுமாய் நிற்றல் பற்றி, `பைங்கண்` எனப்படுதல் உண்டு.
பரமாய ஆறு - மேலான நதி; ஆகாய கங்கையை.
ஐந்து அடைந்த மேனி - `அயன், அரி, அரன், மகேசுரன், சதாசிவன்` என்னும் மூர்த்தங்கள்.
``அன்பு`` என்பதை `என் அன்பு` எனக்கொண்டு, ஆறு அடைந்த செஞ்சடையை ஆய் - `முறைப்படி உன்னை வந்து பற்றிய செவ்விய மூலத்தை ஆராய்` என உரைக்க.
சடை - வேர்; மூலம்.
`ஆராய்` என்றது.
`ஆராய்ந்து அருள்செய்` எனத் தன் காரியம் தோற்றி நின்றது.

அன்பே உடைய அரனே அணையாத
அன்பே உடைய அனலாடி அன்பே
கழுமலத்துள் ஆடுங் கரியுரிபோர்த் தானே
கழுமலத்து ளாடுங் கரி. **#960**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-*1*-ல் `அந்` என்னும் வடசொல் `அன்` எனத் திரிந்து, அச்சத்தைக் குறிக்கும் `பே` என்பதை அடுத்து நின்றது அன்பே உடைய அரன்.
வேண்டாத அச்சத்தையுடைய உருத்திரன்.
வேண்டாத அச்சமாவது, கொடுமை நன்மையாதலை உணராமையால் கொள்கின்ற அச்சம்.
இஃது உயிர்கள்பால் உள்ளது.
அணையாத - நெருங்கக் கூடாத.
வன்பேய் - வலியபேய்களை.
அன்பே உடைய - சுற்றிலும் கொண்ட அடி-*3*-ல் கழுமல் - நிறைதல்.
அன்பே கழுமலத்துள் - அன்பே நிறைந்துள்ள உள்ளங்களில்.
ஆடும் - நடனம் புரிகின்ற.
ஈற்றடியில் உள்ள கழுமலம் - சீகாழி.
ஆடும் கரி - பொருந்தியுள்ள சான்று.
உயிர்களின் செயல்கள் அனைத்திற்கும் சான்று.
`அரனும், அனலாடியும், கரியுரி போர்த்தானும் ஆகிய அவனே கரி` எனற்பாலதனை, ``கழுமலத்துள் ஆடும் கரி`` எனச் சிறப்பித்துக் கூறினார்.

கரியார்தாம் சேருங் கலைமறிகைக் கொண்டே

கரியார்தாஞ் சேருங் கவாலி கரியாகி
நின்ற கழிப்பாலை சேரும் பிரான் நாமம்
நின்ற கழிப்பாலை சேர். #961
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கரியார்`` இரண்டில் முன்னது, `குற்றம் உடையவர்` என்னும் பொருட்டாய்த் தாருகாவன முனிவரைக் குறித்தது.
பின்னது `சான்றாவார்` என்னும் பொருட்டாய்ச் சான்றோரைக் குறித்தது.
முதல் அடியில் `சேர்த்தும்` என்னும் பிறவினைச் சொல் பிறவினை விகுதி தொகுக்கப்பட்டு, `சேரும்` என வந்தது.
கலை மறி - மான் கன்று.
தனிச்சீரில் உள்ள ``கரி`` - சான்று.
``கழிப்பாலை`` இரண்டில் முன்னது சோழநாட்டுத் தலம்.
பின்னது, ``உன்னிடத்தில் உள்ள குற்றங்களை நீக்கும் பான்மையால்`` என்றபடி.
ஐ, சாரியை.
``சேர்`` என்பதற்கு.
`நெஞ்சே, நீ` என்னும் எழுவாய் வருவிக்க.

சேரும் பிரான்நாமம் சிந்திக்க வல்லீரேல்
சேரும் பிரான்நாமஞ் சிந்திக்கச் சேரும்
மலையான் மகளை மகிழ்ந்தாரூர் நின்றான்
மலையான் மகளை மகிழ்ந்து. #962
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``சேரும் பிரான்` இரண்டில் முன்னது, யாவராலும் அடையப்படும் கடவுளாகிய சிவபெருமானைக் குறித்தது.
பின்னது, `யாவரும் வந்து வணங்குகின்ற தலைவன்` எனப் பொருள் தந்தது.
இதன்பின் `என்னும்` என்னும் பண்பு உருபு விரிக்க.
`சிவபிரானுடைய பெயரைச் சிந்தித்தால் யாவராலும் வணங்கப்படும் தலைமைப் பதவி கிடைக்கும்` என்றபடி.
``சித்திக்க`` இரண்டில் முன்னது `நீவிர் சிந்தித்தால்` எனவும், பின்னது, `யாவரும் நினைக்கும்படி` எனவும் பொருள் தந்தன.
`அவ்வாறு சிந்திப்பதற்கு அவன் யாண்டுறைவன்` எனின், ``ஆரூர் நின்றான்`` என முடிக்க.

உமை, கங்கை இருவருமே மலையரையன் மகளிர் ஆதலின் மலையரையன் இரண்டும் தனித் தனி அவருள் ஒவ்வொருவரைக் குறித்தது.

மகிழ்ந்தன்பர் மாகாளஞ் செய்ய மகளிர்
மகிழ்ந்தம் பரமாகி நின்றார் மகிழ்ந்தங்கம்
ஒன்றாகி நின்றபங்கர் ஒற்றியூர்
ஒன்றாகி நின்ற உமை. **#963**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மா காளம் - பெரிய `எக் காளம் என்னும் சின்னம்.
செய்ய - அதனை ஊத; `நீர் புறப்பட்டு வர` என்றபடி.
அம்பரம் - ஆகாயம்; வெளி `வெளியாகி நின்றார்` என்பது.
`ஆடையிழந்து நின்றார்` என்பதாம்.
அங்கம் - உடம்பு.
``உமை பங்கர்`` என்பது அண்மை விளி.
ஈற்றடியில் உள்ள ``ஒன்றாகி`` என்பது `ஒன்றுதல் உடையீராகி` என்றபடி.
உமை - உம்மை `உம்மை அன்பர் மகிழ்ந்து` என மேலே கூட்டுக.
`உமது உலாவில் மகளிர் பலர் உம்மைக் கண்டு மையல் கொண்டனர்` எனப் பெருமானது அழகைப் புகழ்ந்தவாறு.

உமைகங்கை என்றிருவர் உற்ற உணர்வும்
உமைகங்கை என்றிருவர் காணார் உமைகங்கை
கார்மிடற்றம் மேனிக் கதிர்முடியான் கண்மூன்று
கார்மிடற்றம் மேனிக் கினி. **#964**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-*2*-ல் உம்மை.
``உமை`` என இடைக் குறைந்து நின்றது.
உம்மை - முன் ஒரு காலத்தில்.
இருவர், அயனும் மாலும், அடி-*2*ல், கங்கு ஐ என்று - எல்லையுட்பட்ட நம்மைப் போலும் ஒருதலைவன்` எனக் கருதினமையால்.
அடி-*4*-ல் கார்மிடல் தம் மேனிக்கு - கரியதும் வலியதும் ஆகிய தங்கள் உடம்பினிடத்தே கரியமேனி திருமாலுடையது.
இனி - இனிக்கும் பொருளாக.
உமை, தனிச் சீரில் உ - சிவனது.
மை - யாவரும்.

`குற்றம்` எனக் கருதுகின்ற.
கம் கை - தலையை ஏந்திய கைகையும் கார் மிடற்று அம் மேனிக் கதிர் முடியான் கண் மூன்றும் - நீல கண்டத்தையுடைய அழகிய திருமேனியையும், ஒளி பொருந்திய சடை முடியையும் உடைய அவனது மூன்று கண்களையும் அடி-*1* -ல் உமை, கங்கை என்ற இருவர் உற்ற உணர்வும் பொருந்தியுள்ள அன்பையும்.
காணார் - அறியாராயினர்.
`தம் மேனியில் அறியார் ஆயினர்` என்றதனானே `வேற்றுரு எடுத்தும் கண்டிலர்` என்பது குறிக்கப் பட்டது.
`இனிப்பு` என்பது இறுதிநிலை குன்றி முதனிலை மாத்திரமாய் நின்றது.

இனியவா காணீர்கள் இப்பிறவி எல்லாம்
இனியவா ஆகாமை யற்றும் இனியவா
றாக்கை பலசெய்த ஆமாத்தூர் அம்மானை
ஆக்கை பலசெய்த அன்று. **#965**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``இனியவா காணீர்கள்`` என்பதை இறுதிக்கண் கூட்டுக.
`இப்பிறவியில்` என ஏழாவது விரிக்க.
இனி - இனிமேலும்.
அவா ஆகாமை - ஆசை வளராமல், ஆக்கை பல - பலவகையான பிறப்புக்களை, இனியவாறு செய்த - நல்ல வகையில் படைத்த.
ஆக்கை பல செய்த அன்று அம்மானை இனியவா காணீர்கள் - உங்களுடைய உடம்பு வலுவாயிருந்து பல செயல்களை விரும்பியவாறே செய்த இளமைக் காலத்தில் பெருமானை நல்லவராகா அறிந்து வழிபாடும் செய்யாது விட்டீர்கள்.
`இன்று இரங்கி என் பயன்` என்பது குறிப்பெச்சம்.
இப்பாட்டிற்கு, `உலகீர், நீவிர்` என எழுவாய் வருவித்துக் கொள்க.
ஆமாத்தூர், நடுநாட்டுத் தலம்.

அன்றமரர் உய்ய அமிர்தம் அவர்க்கருளி
அன்றவுணர் வீட அருள்செய் தான் அன்றவுணர்
சேராமல் நின்ற அடிகள் அடியார்க்குச்
சேராமல் நின்ற சிவம். **#966**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அன்று அவுணர் - பகைத்த அசுரர்; திரிபுரத்தவர்.
வீட - அழிய.

அருள், மறக் கருணை.
தனிச்சீரில், `உணர்வு` என்பது, ``உணர்`` என முதல் நிலையளவாய் நின்றது.
உணர்வு அன்றச் சேராமல் நின்ற அடிகள் - அறிவு மாறு பாடாச் செல்லாதபடி செவ்வே நிற்கின்ற பெருமான்; ஈற்றடியிலும், `சேர்வு` என்பது, ``சேர்`` என முதனிலையளவாய் நின்றது.
மல் - வளம்.
மங்கலம் அடியார்களுக்குச் சேர்வாக (ப்புகலிட மாக) மங்கலம் நிலைபெற்ற சிவம் என்க.
அமரர்க்கு அருளித் திரிபுரத்தவர்க்கு மறக் கருணையே செய்தவனும், யாவர்க்கும் அவரது அறிவு கோட்டம் அடையாதபடி செம்மையனாய் நிற்கின்றவனும் ஆகிய பெருமான் அடியார்கட்குப் புகலிடமாய் நிற்கின்ற சிவமாய் உள்ளான்` என்க.

சிவனந்தஞ் செல்கதிக்கோர் கண்சேர்வ தாக்கும்
சிவனந்தஞ் செல்கதிக்கோர் கண்ணாம் சிவனந்தம்
சேரும் உருவுடையீர் செங்காட் டங்குடிமேல்
சேரும் உருவுடையீர் செல். **#967**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-*1*-ல் அந்தம் செல்கதிக்கு - முடிவில் அடையக் கூடிய கதிக்கு; முத்திக்கு.
ஓர் கண் - ஒப்பற்ற கண்; முத்தி நெறிக்கு ஒப்பற்ற கண்ணாவது ஞானம். `சேர்வதை ஆக்கும்` என்க.
அடி-*2*ல் நம்தம் கதி - நம்முடைய கதி; நாம் அடையக் கூடிய கதி. அதற்குக் கண் ஆதலாவது, வழிகாட்டியாய் நிற்றல்.
தனிச்சீரில் அந்தம் சிவன் சேரும் உரு உடையீர் - முடிவில் சிவனை அடையும் குறிக்கோளை உடையவர்களே.
ஈற்றடியில் செல் உரு உடையீர் - நினைத்த இடத்தில் செல்லுதற்குரிய உடம்பைப் பெற்றவர்களே.
`செங்காட்டாங்குடிமேல் சேரும்` என முடிக்க.
செங்காட்டாங்குடி, சோழ நாட்டுத் தலம்.

செல்லும் அளவும் சிதையாமல் சிந்திமின்
செல்லும் அளவும் சிவன்உம்மைச் செல்லும்
திருமீச்சூர்க் கேறவே செங்கண்ஏ றூரும்
திருமீச்சூர் ஈசன் திறம். **#968**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-*1*-ல் செல்லும் அளவும் - இயலும் அளவும்.
அடி-*2*-ல் செல்லும் அளவும் - நீவிர் மேலே செல்லும் அளவும்.
``உம்மை`` என்னும் இரண்டாவதை, `உம்மொடு` என மூன்றாவதாகத் திரிக்க.
மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி உரைக்க.
அடி-*3*-ல் `திருமீயச்சூர்` என்பது ``திருமீச்சூர்`` எனக் குறைந்து நின்றது. இது சோழ நாட்டில் உள்ள ஒருதலம்.
ஏற - இதனை அடைய.
ஏறு - இடபம்.
அடி-*4*-ல் திரு மீச்சு ஊர் - மங்கலம் மேற்பட்டு மிகுகின்ற `ஈசன்` என்க.

திறமென்னும் சிந்தை தெரிந்தும்மைக் காணும்
திறமென்னும் சிந்தைக்கும் ஆமே திறமென்னும்
சித்தத்தீர் செல்வத் திருகடுவூர் சேர்கின்ற
சித்தத்தீரே செல்லும் நீர். **#969**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தனிச்சீர் முதலாகத் தொடங்கியுரைக்க.
திறத்தை யுடையது ``திறம்`` எனப்பட்டது.
திறம் - வலிமை - *(*இடையூறுகளை யெல்லாம் கடக்கும்*)* வலிமையுடைய சித்தத்தை.
*(*மனத்தை - அத்துச் சாரியை நிற்க ஐயுருபு தொக்கதனை இலேசினால் * கொள்க*)* `ஈர் திருக்கடவூர்` என இயைத்து, `ஈர்க்கின்ற திருக்கடவூர்` என வினைத் தொகை யாக்குக.
``திருக்கடவூர் சேரும் சித்தத்தீரே`` என்றது அத்தலப் பெருமானை விளித்தது.
சித்தம் - உள்ளம்.
நீர் செல்லும் - உமது விருப்பம்போல் நீர் திருக்கடவூர் செல்லும்.
அடி-*1*-ல் திறம் என்னும் சிந்தை - உண்மையில் வலிமையுடைய உள்ளமானது, உம்மைத் தெரிந்து காணும் - பல பொருள்களையும் விட்டு உம்மை ஆராய்ந்து அறியும்.
*(*அவ்வாறின்றி*)* திறம் என்னும் சிந்தைக்கும் ஆமே - `யான் வலிமையுடையேன் என வாளா தற்பெருமை பேசிக்கொள்கின்ற உள்ளத்திற்கும் அது கூடுமோ*?* *(*கூடாது*)*.
`திறமையுள்ள உள்ளத்திற்கு அடையாளம் சிவபெருமானது பெருமையை உணர்ந்து அவனைப் பற்றுதலே` என்றபடி.

நீரே எருதேறும் நின்மலனார் ஆவீரும்
நீரே நெடுவானில் நின்றீரும் நீரேய்
நெருப்பாய தோற்றத்து நீளாரம் பூண்டீர்
நெருப்பாய தோற்றம் நிலைத்து. **#970**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நீரேய். பூண்டீர்`` என்பதை முதலிற் கூட்டி, `எருதேறும் நின்மலனார் ஆவீரும் நீரே; நெருப்பாய தோற்றம் நிலைத்து நெடுவானில் நின்றீரும் நீரே` என இயைத்து முடிக்க.
தனிச் சீரில் `நீறு` என்பது எதுகை நோக்கி ``நீர்`` என நின்றது.
சிவபெரு மானது திருமேனி இயற்கையில் நெருப்புப் போன்றதாய், அதன்மேல் நீறு பூசப்பட்டிருத்தலின் அதற்கு நீறு பூத்த நெருப்பு உவமையாயிற்று.
`பூண்டு` என்பது பாடம் அன்று.
ஆரம், எலும்புமாலையும், தலை மாலையும்.
நிலைத்து - நிலைக்கப் பெற்று.
இறைவரது இயல்பை வருணித்தவாறு.

நிலைத்திவ் வுலகனைத்தும் நீரேயாய் நின்றீர்
நிலைத்தில் வுலகனைத்தும் நீரே நிலைத்தீரக்
கானப்பே ரீங்கங்கை சூடினீர் கங்காளீர்
கானப்பே ரீர்கங்கை யீர். **#971**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியில் உள்ள கானப்பேர் பாண்டி நாட்டுத் தலம்.
அதனடியாகப் பிறந்த, ``கானப்பேரீர்`` என்பதை முதலில் வைத்து, இவ்வுலகு அனைத்தும் நீரேயாய் நிலைத்து நின்றீர்` எனவும், நிலைத்த இவ்வுலகு அனைத்தும் நிலைத்து ஈர, நீரே கானப்பேர் ஈர்ங் கங்கை சூடினீர்; கங்காளீர்; கம் கையீர்` எனவும் இயைத்து உரைக்க.
இரண்டாம் அடி முதலில், `நிலைத்த` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.
அதனையடுத்து வந்த ``உலகனைத்தும்`` என்பதில், `உலகனைத்திலும்` என ஏழாவது விரிக்க.
தனிச்சீரில், நிலைத்து - தேங்கி.
ஈர - அழிக்க.
இவை கங்கையின் செயல்.
`ஈரக் கண்டு` என ஒருசொல் வருவிக்க.

கானம் - காடு; கற்பகச் சோலை.
`அவ்விடத்து உள்ள பெரிய, குளிர்ந்த கங்கையை நீரே சூடினீர்` என்க.
கம் கையீர் - கபாலத்தைக் கையில் கொண்டுள்ளீர்.

ஈரம் உடைய இளமதியம் சூடினீர்
ஈரம் உடைய சடையினீர் ஈர
வருங்காலம் ஆயினீர் இவ்வுலகம் எல்லாம்
வருங்காலம் ஆயினீர் வாழ்வு. **#972**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-*1*-ல் ஈரம் - குளிர்ச்சி.
அடி-*2*-ல் ஈர் அம் - குளிர்ந்த நீர் ``சடையினீர்`` என்பதை விளியாக்கி முதற்கண் கூட்டுக.
ஈர வருங் காலம் ஆயினீர்`` என்பதை இறுதியில் வைத்து உரைக்க.
வரும் காலம் - தோன்றும் காலம்.
வாழ்வு - வாழ்தல்; நிலைத்தல்.
``வருங்காலம் ஆயினீர்`` என்பதை இதன்பின்னும் கூட்டுக.
``ஈர வருங்காலம்`` என்பதில் ஈர்தல் - பிளத்தல்; அஃதாவது அழித்தல்.
``உயிர் ஈரும் வாள்`` *1* என்றார் திருவள்ளுவரும், `உலகத்திற்கு மூன்று காலமும் நீரேயாயினீர்` - என்றபடி.
ஞாலமே, விசும்பே, இவை வந்துபோம் காலமே *2* - என மணிவாசகரும் அருளிச் செய்தார்.

வாழ்வார் மலரணைவார் வந்த அருநாகம்
வாழ்வார் மலரணைவார் வண்கங்கை வாழ்வாய
தீயாட வானாள்வான் வான்கழல்கள் சேராதார்
தீயாட வானாளு மாறு. **#973**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வண் கங்கை வாழ்வாய தீ - வளவிய கங்கா தேவி பொருந்தும் இடமாகிய சடைமுடி.
``தீ`` என்பது உவம ஆகுபெயராய்த் தீப்போலும் சடைமுடியைக் குறித்தது.
வான் ஆள்வான் - அண்டம் முழுதையும் ஆள்பவன்; சிவபெருமான்.
அவன் கழல்கள் சேராதார் நிலைமை பின்னர்க் கூறப்படுதலின் முன்னர்க் கூறப்பட்டவை அவன் கழல்கள் சேர்ந்தாரது நிலைமை யாயின.
இதனை, ``பிறவிப் பெருங்கடல் நீந்துவர்`` *1* என்னும் குறளில்

`சேர்ந்தார்` என்பது போலக் கொள்க.
`அவன் கழல்களைச் சேர்ந்து, மலர் அணைவார்(பிரம தேவர் அப்பதவியில்) வாழ்வார்; மலர் (மலரின்கண் உள்ள திருமகளை) அணைவார் (விட்டுணு மூர்த்தி), வரு நாகம் (பாம்பணையில்) வாழ்வார். (இங்ஙனமாகச் சிலர்) அவர் கழல்களைச் சேராதாராய், தீ ஆட (உடம்பில் தீ மூண்டு எரிய) வான் ஆளும் ஆறு (கூற்றுவன் உலகை இடமாகக்கொள்ளும் வகை) இரங்கத்தக்கது என்க.
`இரங்கத் தக்கது` என்பது சொல்லெச்சம்.

மாறாத ஆனையின் தோல் போர்த்து வளர்சடைமேல்
மாறாத நீருடைய மாகாளர் மாறா
இடுங்கையர் சேரும் எழிலவாய் முன்னே
இடுங்கையர் சேர்வாக ஈ. #974

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மாகாளம்` என்னும் பெயரை உடைய தலங்கள் பல உள்ளன.
மாகாளர் அத்தலங்களில் இருக்கும் இறைவர்.
தனிச்சீரில் மாறா - நீங்காத.
அடி-*3*-ல் இடுங்கை - சோர்தல் வறுமையால் வாடுதல்.
வறுமையால் வாடுவோர் அறிந்து சேரும் எழிலவாய் (அழகுடையன வாய்) முன்னே இடும் கையர் - விரைவாகக் கொடுக்கும் கையை உடையவர்கள் சேர்வு - புகலிடம்.
`மாகாளரை வறியவர்க்கு இடும் கையை உடையடவர்களது புகலிடமாக, அறிந்து, (நெஞ்சே, நீ) வறிய வர்க்கு ஈதலைச் செய்` - என முடிக்க.
``இரப்பவர்க்கு ஈய வைத்தார்; அருளும் வைத்தார்`` *2* என அப்பர் அருளிச் செய்ததையும் நோக்குக.
ஈதல் தொழில் நெஞ்சுக்கு இல்லையாயினும் ஈய நினைத்தலே ஈதலைச் செய்தற்கு முதல் ஆகலின் அதனைச் செய்தலாகக் கூறினார்.

ஈயும் பொருளே எமக்குச் சிவலோகம்
ஈயும் பொருளே இடுகாட்டின் ஈயும்
படநாகம் பூணும் பரலோகீர் என்னீர்
படநாகம் பூணும் படி. #975

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`உலகீர், நீவிர்` என்பதை முதலில் வருவித்துக் கொள்க.
`அடி-*4*-ல் பட - நீவிர் இறந்த பின்பு நாகம் பூணும்படி.

புண்ணிய போகத்தை அடையுமாற்றிற்கு.
(`படிக்கு` என நான்காவது விரிக்க.
) அடி-1-ல் பொருள் ஈயும் - உங்கள் பொருளை வறியவர்க்கு ஈயுங்கள்.
(சிவபெருமானை) எமக்குச் சிவலோகம் ஈயும் பொருளே- `எங்களுக்குச் சிவலோகத்தை ஈந்தருள்கின்ற பரம்பொருளே - `எங்களுக்குச் சிவலோகத்தை ஈந்தருள்கின்ற பரம்பொருளே` என்றும், (`தனிச் சீரில் - `ஈ உம் இடுகாட்டின்` - என மாற்றிக் கொள்க.
) ஈ - வண்டுகளின், உம் இடுகாட்டின் - உங்காரம் பொருந்தியுள்ள இடு காட்டின்கண் ஆடுகின்ற.
`பட நாகம் பூணும் பரபோகீர்` என்னீர் என்று சொல்லித் துதியுங்கள்.

படியேறும் பார்த்துப் பரத்தோடும் கூட்டி
படியேரு பார்த்துப் பரன்இப் படிஏனைப்
பாருடையாய் பைங்கண் புலியதளாய் பால்நீற்றாய்
பாருடையாய் யானுன் பரம். **#976**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``இப்படி`` என்பது முதலாகத் தொடங்கி, அடி-2-ல் (யானோ) படி பார்த்து ஏறும் பரன் - (திடீரென மேலே பறப்பவன் அல்லன்.
) படிகளைப் பார்த்து ஒவ்வொன்றாகக் கடந்து மேல் எறுகின்ற அயலான்.
(என்னை) பார்த்து படி ஏறும் பரத்தோடும் கூட்டி - உற்றுப் பார்த்துப் பார்த்துத் தாம் மிகுகின்ற உனது மேலான நிலையோடு சேர்த்தருள்.
அடைபவர் மேல் மெல்ல மெல்லச் சேர்த்தருள் - என்று ஏறும் தன்மையை அடையப்படும் பொருள்மேல் ஏற்றினார்.
``பார்த்துப் படியேறும் பரன்`` - என்றது உயிர்களின் இயல்பை விளக்கியவாறு.
`கூட்டுதி` என்னும் ஏவல் வினை முற்றின் இகர விகுதி தகர ஒற்று இன்றி, ``கூட்ட`` என வந்தது.
``நன்றுமன் அது நீ நாடாய் கூறி`` * என்பதிற்போல.

பரமாய விட்டுநின் பாதம் பணிந்தேன்
பரமாய ஆதிப் பரனே பரமாய
நீதியே நின்மலனே நேரார் புரம்மூன்றும்
நீதியே செய்தாய் நினை. **#977**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரண்டாம் அடியையும் அதன்பின் மூன்றாம் அடியில் உள்ள ``நீதியே!

நின்மலனே!`` என்பதையும் முதலிற் கூட்டியுரைக்க.
``பரம்`` மூன்றில் முதலது, பாரம்; பற்றுக்கள்.
ஏனை யவை மேன்மை.
நேரார் - பகைவர்.
அடி- 4ல் `தீயே` என்பது ``தியே`` எனக் குறுகி நின்றது, ``திருத்தார்நன் றென்றென் தியேன்``* - என்பதிற் போல ``தீயே செய்தாய்; அதனை நினை` என்க.
`அமரர்கள் நின் பாதம் பணிய முப்புரத்தை எரித்ததை நினைக` என்றது, `அதுபோலப் பாதம் பணிந்து எனது மும்மலங்களை நீக்கியருள்` என்பது குறிப்பு.

நினையடைந்தேன் சித்தம் நிலையாகும் வண்ணம்
நினையடைந்தேன் சித்த நிமலா நினையடைந்தேன்
கண்டத்தாய் காளத்தி யானே கனலாரும்
கண்டத்தாய் காவாலி கா. **#978**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சித்த நிமலா - எல்லாம் வல்ல சித்தனாகிய நிமலனே! தனிச் சீரில் அடையுந் தேன் கண்டத் தாய் - உனது திரு முன்பில் வந்த தேன் கலந்த இறைச்சித் துண்டத்தை (கண்ணப்பர் படைத்தது) ஏற்றவனே.
`அடையும்` என்னும் பெயரெச்சத்தில் உகரம் கெட்டது.
கனல் ஆரும் கண் - நெருப்பு பொருந்திய கண்ணையுடைய.
`தந்தாய்` என்னும் விளிப்பெயர் வலிந்து நின்றது.
காவாலி - கபாலியே, அடி-2ல் `நினை அடைந்தேன்;` என முன்னர்க் கூறினமை யால் அடி-1-ல் ``நினையடைந்தேன்`` என்பது `எனது` என்னும் அளவாய் நின்றது.

காவார் பொழிற்கயிலை ஆதீ கருவேளம்
காவாய்ப் பொலிந்த கடுவெளியே காவாய
ஏறுடையாய் என்னை இடைமருதிலேஎன்றும்
ஏறுடையாய் நீயே கரி. **#979**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-1-ல் ``கா`` என்பது இளமரக் காக்களையும், ``பொழில்`` என்பது பெருமரச் சோலைகளையும் குறித்தன.
கரு - மூலப் பொருள்.
அடி-2-ல் கா - கற்பகத் தரு.
கடு வெளி - தூய்மையான ஆகாயம்.

சிதாகாசம்.
தனிச்சீரில், `அங்கா` என்பது முதல் குறைந்து ``கா`` என நின்றது.
`அங்காக்கின்ற வாயை உடைய ஏறி` (இடபம்) என்க.
வேறு - தனிச் சிறப்பையுடைய அடியவனாக .
இடை மருது - திருவிடைமருதூர்.
கரி - எல்லாவற்றுக்கும் சான்று.

கரியானும் நான்முகனு மாய்நின்ற கண்ண
கரியாருங் கூற்றங் கனியே கரியாரும்
காடுடையாய் காலங்கள் ஆனாய் கனலாடும்
காடுடையாய் காலமா னாய். **#980**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண் - பார்வை; இங்கு அருள் நோக்கினைக் குறித்து.
`அருள் நோக்கினால் அரி, அயன் இவர்களது தொழிலை நடத்து விக்கின்றான்` என்பது கருத்து.
தனிச்சீர் ஒழித்து, இரண்டாம் அடியில் ஏனைய பகுதியை இறுதிக்கண் கூட்டுக.
அதன்கண், `கூற்று `வாக்கு` என்பது, ``கூற்றம்`` என வந்தது.
``குறித்தேன் கூற்றம்`` * எனத் தொல் காப்பியரும் கூறினார்.
கரி ஆரும் கூற்றம் - உண்மை நிறைந்த வாக்கு.
உண்மை மொழியே சான்றாகக் கொள்ளப்படும் ஆதலின் அதனைக் ``கரி ஆரும் கூற்றம்`` என்றார்.
உண்மை மொழி, ஞானோபதேசம்.
கரி யானை, அஃது ஐராவதத்தைக் குறித்தது.
ஐராவதம் வழிபட்ட காடு வெண்காடு; திருவெண்காடு, கனல் ஆடும் காடு - முதுகாடு.
ஈற்றடி யில் காலம் (காளம்) - நஞ்சு.
ஆனாய் - (கண்டத்தினின்று) நீங்காய்.

ஆன்ஆய ஆய அடலேறே ஆரூர்க்கோன்
ஆனாய னாவமுத மேயானாய் ஆனாய்
கவர்எலும்போ டேந்தி கதநாகம் பூணி
கவலெலும்பு தாகை வளை. **#981**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-*1*-ல் உள்ள ஏகாரத்தைப் பிரித்து, `அடல் ஏறு ஆன் ஆயனே ஆய ஆரூரன் ஆனாய்` எனக் கூட்டி, `வலிமை பொருந்திய இடபம்.

ஆன் நிரைமேய்த்த ஆயன் ஆகிய மாயோனே யாக உடைய, திருஆரூர்த் தலைவன் ஆகியவனே` என உரைக்க.
அடி-2-ல் `அன்னாய் - பல்லுயிர்க்கும் தாயே! உயிர்கட்கெல்லாம் அமுதம்போல இருப்பவனே.
தனிசீரில் உள்ள ``ஆனாய்`` என்பதை மூன்றாம் அடி இறுதியிற் கூட்டி, `இவ்விடத்தை விட்டு நீங்காய்` என உரைக்க.
அடி-3-ல் கவர் எலும்பு - பிளவுபட்ட எலும்புகள்.
ஏந்தி - ஏந்தினவனே.
பூணி - பூண்டவனே.
அடி-4 -ல் உள்ள தொடரை, `எலும்பு கையினின்றும் கவர்ந்த பிரிநிலைப் பொருளவாய் வந்த ஏகாரங்கள் உயர்வு குறித்து நின்றன.
வளையைத் தா` என இயைத்து முடிக்க.
`தடை மெலிந்து, அழகிழந்த கை` என்றற்கு `எலும்புக்கை` என்றாள்.
`தார்` என்பது பாடம் அன்று.
இதுவும் கைக்கிளைத் தலைவி ஆற்றாமையைத் தோழி இறைவற்குக் கூறிக் குறையிரந்தது.

வளைகொண்டாய் என்னை மடவார்கள் முன்னே
வளைகொண்டாய் மாசற்ற சோதி வளைகொண்டாய்
மாற்றார் கதுவ மதில்ஆரூர் சேர்கின்ற
மாற்றார் ஊர்கின்ற மயல். **#982**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மாசற்ற சோதி`` என்பதை முதலிற் கொண்டு, அதன்பின், முதல் அடியில் உள்ள தொடரை, `என்னை மடவார்கள் முன்னே வளை கொண்டாய்` என மாற்றிக் கூட்டுக.
``வளை கொண்டாய்`` என்பது, `மெலிவித்தாய்` என்னும் பொருட்டாதலின், ``என்னை`` என்னும் இரண்டாவதற்கு முடிபாயிற்று.
அடி-2-ல் வளை கொண்டாய் வளைத்துக் கொண்டாய்; அகப்படுத்திக் கொண்டாய்.
தனிச்சீரில் வளை - சங்கு; வெள்ளிச் சங்கு.
`வெற்றிச் சங்கை உடன் கொண்டு (கைப்பற்றும் முறைகளை) ஆராய்கின்ற மாற்றார் (பகைவர் கள்) கதுவும் (முற்றுகை யிடுகின்ற; ஆயினும் கைப்பற்ற இயலாத) மதில்` என்க.
ஆரூர் சேர்கின்ற (திருவாரூரைச் சென்று சேரவேண்டும் என்று எழுகின்ற) ஆர்ந்து (நிறைந்து) ஊர்கின்ற (மீதூர்கின்ற) மயல் (மையலை) மாற்று - நீக்கு.
இதுவும் மேலைத் துறை.

ஒற்றுமை பற்றித் தலைவியையே தோழி ``என்னை`` என்றார்.

மயலான தீரும் மருந்தாகும் மற்றும்
மயலானார் ஆரூர் மயரார் மயலான்
கண்ணியர்தம் பாகர் கனியேர் கடிக்கொன்றைக்
கண்ணியன்றன் பாதமே கல். #983

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மயல், நோக்கத்தால் புலப்படுதல் இயல் பாகலின் அது கண்களை மயலை உடையன போல வைத்து, ``மயலான கண்ணியர்`` என்றார்.
இத்தொடர் மகளிரைக் குறித்தல் சொல்ல வேண்டா.
பாகு ஆர் - அவர்கட்குச் சருக்கரையை ஒத்தவன்.
கனி ஏர்- மற்றும் கனியையும் ஒப்பவன்.
கடி - நறுமணம்.
கண்ணி - முடியில் அணியும் மாலை.
``கடிக்கொன்றைக் கண்ணியான்`` என்பது, `சிவன்` என்னும் அளவாய் நின்றது, கல் - போற்றக் கற்றுக்கொள்.
(`நெஞ்சே, நீ` - என்பது வருவித்துக் கொள்க.
) ஏனெனில், அவையே மயல் ஆன- உலகத்தைப் பற்றி மயக்கங்கள் பலவும் தீர்தற்கு உரிய மருந்தாகும்.
மற்றும் - மேலும்.
மயல் ஆனார் - சிவபெருமானைப் பற்றிய ஆசை நீங்காதவர்கள்.
ஆரூர் மயரார் - அவனது திருவாரூரை மறக்க மாட்டார்கள்.

கலைமான்கை ஏனப்பூண் காண்கயிலை மானின்
கலைமான் கறைகாண் கவாலி கலைமான
ஆடுவதும் பாடுவதும் காலனைப்பொன் அம்பலத்துள்
ஆடுவதும் ஆடான் அரன். #984

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கலை மானை ஏந்திய ஏனத்தின் (பன்றியின்) கொம்பாகிய பூண் இவற்றுடன் காணப்படுகின்ற கயிலைப் பெரியோனால் (மான் - பெரியோன்).
அடி-2ல் மான் (நின் மகள்) கலைக் கறை - ஆடைபற்றிய குற்றத்தில்.
கவாலி - அவனேயாயினாள்.
(அஃதாவது, உடையில்லாதவள் ஆயினாள்.
ஆடையின் குற்றம் - ஆடை அணியாமை.
(``கவாலி`` என்பதன் பின் `ஆயினாள்` என்பது எஞ்சி நின்றது.

இனி) அரன் - அவன்.
பொன் அம்பலத்துள் கலைமான, ஆடற்கலையும் பாடற்கலையும் பெருமையுறும் வண்ணம் ஆடுவதும், பாடுவதும் (அல்லது இவளை நோக்குகின்றான் இல்லை.
நோக்காவிடினும் இவளது உயிரைக் கொள்ளாதபடி) காலனை (யமனை) ஆடுவதும் ஆடான் அழித்தலையும் செய்யான்.
(நாம் என் செய்வது!) ஈற்றடியில் `அடுவது, அடான்` என்பன முதல் நீண்டு நின்றன.
இது தலைவியது வேறுபாடு கண்டு வினவிய நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நின்றது.

அரனே அணியாரூர் மூலட்டத் தானே
அரனே அடைந்தார்தம் பாவம் அரனே
அயனார்தம் அங்கம் அடையாகக்கொண்டார்
அயனாக மாக அடை. #985
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அரன்`` மூன்றில் முதலது `சிவன்` என்னும் அளவாய் நின்றது.
இடையது `அறன்` என்பது எதுகை நோக்கித் திரிந்த பெயர்.
அறன் - அறவடிவினன்; இறுதியது, அரிப்பவன்.
மூன்று பெயர்களுமே விளி ஏற்று நின்றன.
அயனார் - பிரம தேவர்.
`அவரது அங்கம்` என்றது, தலை ஓட்டினை, அடி-3ல் `அடையாளம்` என்பது ``அடை`` எனக் குறைந்து நின்றது.
ஈற்றடியில் உள்ள தொடரை, `அயல் ஆக அடை நாகம்` என மாற்றி, `அதற்கு மேல் உனது திருமேனியில் அணியப்படும் பொருள் பாம்பு ஆகின்றது.
(`அஃது எதற்கு` என்பது குறிப்பெச்சம்.
)

அடையுந் திசைஈசன் திண்டோளா காசம்
அடையுந் திருமேனி அண்டம் அடையும்
திருமுடிகால் பாதாளம் ஆடைகடல் அங்கி
திருமுடிநீர் கண்கள்சுடர் மூன்று. #986
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஈசனது திண் தோள்திசை அடையும்; திருமேனி ஆகாசம் அடையும்.
திருமுடி (சிறப்பு வாய்ந்த சிரம்) அண்டம் அடையும்.

கால் பாதாளம் (அடையும்) அவனுக்கு ஆடை கடல்.
``தூநீர் - வளைநரல் பௌவம் உடுக்கையாக, விசும்பு மெய்யாகத் திசை கையாக`` * எனப் பழம் புலவரும் கூறினார், அங்கி (அக்கினி) போலும் அழகிய சடா மகுடத்தில் நீர் (உள்ளது.
) கண்கள் மூன்று சுடர்` - என இயைத்துக் கொள்க.
பெருமானது திருவடிவைப் புகழ்ந்த வாறு.
``அடையும்`` என்பதைப் ``பாதாளம்`` என்பதோடும் கூட்டுக.

மூன்றரணம் எய்தானே மூலத் தனிச்சுடரே
மூன்றரண மாய்நின்ற முக்கணனே மூன்றரண
மாய்நின்ற சோதி அணியாரூர் சேர்கின்ற
ஆய்நின்ற சோதி அறம். **#987**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மூன்று அரணம்`` மூன்றில் முதலது முப்புரம், இடையது (அரணம் - பாதுகாவல்) மும்மூர்த்திகள்.
இறுதியது (அரணம் - சரீரம்) தூலம், சூக்குமம், காரணம் ஆகிய சாரங்கள்.
``சோதி`` இரண்டில் முன்னது, பொதுவில் `ஈசுரன்` என்றும், பின்னது, சிறப்பாகச் `சிவன்` என்றும் பொருள் பயந்தன.
தூல சூக்கும காரண சரீரங்களில் நின்று அறிவைப் பயப்பிக்கும் ஈசுரனை முறையே `விராட், தைசசன், மகேசுரன்` எனக் குறியிட்டு வழங்குவர் வேதாந்திகள்.
ஈற்றடியில் ஆய் நின்ற - நுணுகி நின்ற.
``சோதி`` என்பனவும் விளி களே.
`நீயே அறம்` என எழுவாய் வருவித்துரைக்க.
எனவே, `உன்னை வணங்குதலே அறம்` என்றபடி.

அறமாய்வ ரேனும் அடுகாடு சேர
அறமானார் அங்கம் அணிவர் அறமாய
வல்வினைகள் வாரா வளமருக லாரென்ன
வல்வினைகள் வாராத வாறு. **#988**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மருகலால்`` எனப் பின்னர் வருதலால் முன் இரண்டடிகளும் அவரைப் பற்றியவேயாயின.
மருகல், சோழநாட்டுத் தலம்.
அறம் ஆய்வர் - அற நூலை ஆராய்ந்து விளக்குவார்.

அறங் களில் ஆசாரம் அல்லது தூய்மையும் ஒன்று ஆகலின், `அறம் ஆய்வ ரேனும் அங்கம் (எலும்பை) அணிவர்; இஃது அவர்க்குப் பொருந் துமோ` என ஐயுற்றார் போலக் கூறினார்.
தூய்தல்லாத பொருளைப் பற்றிய போதிலும் அதனால் நெருப்பு வாதிக்கப் படாமைபோல, அவர் எதனாலும் வாதிக்கப்படாமை கூறியவாறு.
அடு காடு - சுடு காடு.
அறம் ஆனார் - அறுதியாயினார்.
தனிச் சீரில் உள்ள அறம், சிவதருமம்.
அது செய்தற்கு அரிதாகலின், ``வல்வினைகள்`` என்றார்.
வாரா - வரப்பெற்று.
ஈற்றடியில் உள்ள வல்வினைககள், வலிய இருவினைகள், `அவை வாராதவாறு சிவதருமம் வாய்க்கப் பெற்று, வளப்பம் பொருந்திய `திருமருகலார்` எனச் சொல்லித் துதிக்க.
``என்ன`` என்பது அகர ஈற்று வியங்கோள்.
`என்க` எனப் பாடம் ஓதலும் ஆம்.

ஆறுடையர் நஞ்சுடையர் ஆடும் அரவுடையர்
ஆறுடையர் காலம் அமைவுடையர் ஆறுடைய
சித்தத்தீர் செல்வத் திருக்கயிலே சேர்கின்ற
சித்தத்தீர் எல்லார்க்குஞ் சேர்வு. **#989**

பொழிப்புரையை எழுதவில்லைபொழிப்புரையை எழுதவில்லைபொழிப்புரையை எழுதவில்லைபொழிப்புரையை எழுதவில்லைபொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஆறு`` மூன்றில் முதலது கங்கை.
இடையது.
``ஆறு` என்னும் எண், இறுதியது.
ஆறுதல்; சாந்தம், காலம் ஆறு, பூசா காலங்கள்.
அமைவு - நிறைவு; திருப்தி.
இஃது எண் குணங்களில் வரம்பில் இன்பமாகும்.
`ஆறுதலுடைய சித்தத்தீர்யாவர் அவர் ``ஆறுடையர்`` முதலாகச் சொல்லப்பட்ட அவரது திருக்கயிலை சேர்கின்ற சித்தத்தீர் ஆவீர்; அத்திருக்கயிலையே எல்லார்க்கும் சேர்வு` (புகலிடம்) என முடிக்க.

சேர்வும் உடையார் செழுங்கொன்றைத் தாரார்நஞ்
சேர்வும் உடையர் உரவடையர் சேரும்
திருச்சாய்க்காட் டாடுவரேல் செய்தக்க என்றும்
திருச்சாய்க்காட் டேநின் உருவு. **#990**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``சேர்வு`` இரண்டில் முன்னது சேரும் இடம்.
அவை பல தலங்கள்.
பின்னது, அடைக்கலமாக அடைதல்.
அவர், `திருச் சாய்க்காடு` என்னும் தலத்தில் ஆடுவர் *(விளங்கியிருப்பார்)* ஆயின், *(நெஞ்சே, நீ)* செய்தக்கது என்றும் நின் உருபு *(உடம்பை)* திருச்சாய்க் காடு *(நன்றாய வணக்கத்தில் ஏ (ஏவுதலே)* பின்னுள்ள ``சாய்க்காடு`` என்பதில் உள்ள காடு, `நோக்காடு, வேக்காடு` முதலியவற்றிற் போலத் தொழிற் பெயர் விகுதி.
அது வேற்றுமைப் புணர்ச்சியில் ஒற்று இரட்டிற்று.
ஏ - ஏவுதல்; முதனிலைத் தொழிற் பெயர்.

உருவு பலகொண் டொருவராய் நின்றார்
உருவு பலவாம் ஒருவர் உருவு
பலவல்ல ஒன்றல்ல பைஞ்ஞீலி மேயார்
பலவல்ல ஒன்றாப் பகர். **#991**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பைஞ்ஞீலி மேயார்`` என்பதனை முதலிற் கொள்க.
பைஞ்ஞீலி, சோழநாட்டுத் தலம்.
அடி-*1*ல் `பலகொண்டும்` எனவும், அடி-*3*-ல் `பலவும், ஒன்றும்` எனவும் போந்த உம்மைகள் தொகுக்கப் பட்டன.
உருவு பல ஆம் ஒருவர் - பொருள்கள் பலவும் ஆகின்ற ஒருவர்.
அவரது உருவு பலவும் அல்ல; ஒன்றல்ல; *(எனவே, `உருவே இல்லாதவர்` என்பதாம்)* அவரைக் குறிக்கும் சொற்கள் பல அல்லவாக, ஒன்றாக *(நெஞ்சே, நீ)* பகர்.

பகரப் பரியானை மேல்ஊரா தானைப்
பகரப் பரிசடைமேல் வைத்த பகரப்
பரியானைச் சேருலகம் பல்லுயிர்க ளெல்லாம்
பரியானைச் சேருகலம் பண். **#992**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-*1*-ல் பகர் அப் பரி யானை மேல் ஊராதான் - யாவரும் உயர்த்துச் சொல்கின்ற பருத்த யானையை ஊர்தியாகக் கொண்டு அதன்மேல் ஊர்தல் இல்லாதவன்.
`இடபத்தையே ஊர்கின்றவன்` என்பதாம்.

அடி-*2*-ல் விளக்கத்தை.
`பகம்` என்றல் உலக வழக்கு.
பரி சடை.
`பரிக்கின்ற சடை` என வினைத்தொகை.
தனிச்சீரில் பகம் - `ப` என்னும் எழுத்து.
அது பாம்பைக் குறிப்பால் சுட்டியது.
அடி - பரியான் - தூல நிலையைக் கொண்டவன்; `உருவு கொண்டு நின்றவன்` என்றபடி.
`விளக்கமான, கங்கை முதலிய வற்றைத் தாங்கியுள்ள சடையின்மேல் வைத்த பாம்பைக் கொண்ட உருவுகொண்டு விளங்குபவன்` என்க.
அடி-*3*-ல் சேர் உலகம் - பலவாய்த் திரண்டுள்ள உலகங்கள்.
அடி-*4*-ல் பரியான் - (அறியாமையால்) அன்பு செய்யப்படாதவன்.
அவனைச் சேர்ந்துள்ள உலகமே; சிவலோகம்; பண் - தகுதி வாய்ந்ததாகும்.
(ஆகவே, `அதனை அடையவே மக்கள் முயல வேண்டும்` என்பது குறிப்பெச்சம்.

பண்ணாகப் பாடிப் பலிகொண்டாய் பாரேழும்
பண்ணாகச் செய்த பரமேட்டி பண்ணா
எருத்தேறி ஊர்வாய் எழில்வஞ்சி எங்கள்
எருத்தேறி ஊர்வாய் இடம். **#993**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-*1*ல் பண் - இசை.
பலி - பிச்சை.
அடி-*2*ல் பண்- தகுதி.
செய்த - ஆக்கிய; படைத்த.
அடி-*3*-ல் `எருது`, ``எருத்து`` என ஒற்றிரட்டி நின்றது.
தனிச் சீரில் பண்ணா - ஏறுதற்கு உரிய வகையில் அமைத்து.
`எருத்துப் பண்ணா ஊர்வாய்` என மாற்றிக் கொள்க.
அடி-*4*ல் எருத்து - எருத்தம்; பிடரி.
`எங்கள் எழில் வஞ்சிதன் எருத்து இடமாக ஏறி ஊர்வாய்` என மாற்றியுரைக்க.
வஞ்சி - கொடி போன்றவள்.
இஃது எருதேறிப் பிச்சைக்கு வந்த இறைவனைத் தலைவிதன் ஆற்றாமை கண்ட தோழி குறையிரந்தது.
`எருது` என்பன பாடல் அல்ல.
``வஞ்சி எருத்தேறி ஊர்வாய்`` என்றது.

`இவளை உன்னிடத்துப் பணிகொண்டருள்` என்றபடி.

இடமாய எவ்வுயிர்க்கும் ஏகம்பம் மேயார்
இடமானார்க் கீந்த இறைவர் இடமாய
ஈங்கோய் மலையார் எழிலார் சிராமலையார்
ஈங்கோய் மலையார் எமை. #994

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``எவ்வுயிர்க்கும்`` என்பதை முதலிற் கூட்டுக.
``ஏகம்பம் மேயார்`` என்பது, `இறைவர்` என ஒரு சொல் நீர்மைத்தாய் நின்று, ``இடமாய்`` என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாயிற்று.
அடி-*2*-ல் ஆனார் - நீங்காதவர்.
`உள்ளத்தால் நீங்காதவர்` என்க.
`தம்மை உள்ளத்தால் என்றும் நீங்காதவர்க்குத்தம்மை அண்மை யிலிருக்க இடம் ஈந்த இறைவர்` என்க.
அடி-*4*-ல் உள்ள தொடரை, `எமை ஈங்கு ஒய மலையார்` என மாற்றி உரைத்துக் கொள்க.
`ஒய` என்பதன் ஈற்று அகரம் தொகுத்த லாயிற்று.
ஒய - மெலியும்படி.
மலையார் - வருத்தார்; `வருத்தத்தைத் தீர்ப்பார்` என்பதாம்.
திருஈங்கோய் மலை, திருச்சிராமலை இவை சோழ நாட்டுத் தலங்கள்.

எமையாள வந்தார் இடரான தீர
எமையாளும் எம்மை இமையோர் எமையாறும்
வீதிவிடங் கர்விடம துண்டகண் டர்விடையூர்
வீதிவிடங் கர்விடையூர் தீ. #995

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முன்னிரண்டு அடிகளில் மடக்கணி வாராது சொற்பொருட் பின்வருநிலையணியே வந்தது.
`இடரான தீர எமை ஆள வந்தார்` எனவும், `எம்மையும் எமையாளும் இமையோர்` எனவும் மாற்றுக.
வந்தார் - எம்பால் வந்தார்.
வினைப்பெயர்.
`எம்மையும்` என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று.
எம்மையும் - எப்பிறப்பிலும்.
``வீதி`` இரண்டில் முன்னது ஒளி, பின்னது சுயம்பு மூர்த்தி.
``விடை`` இரண்டில் முன்னது இடபம்; பின்னது விடுத்தல்; ஏவுதல் அது

`ஏவப் படும் பொருள்` எனப் பொருள் தந்தது.
``ஊர்`` இரண்டில், முன்னது ஏறிச் செலுத்துதல்; வினைத்தொகையாய் வந்தது.
பின்னது நகரம்; திரிபுரம்.

தீயான மேனியனே செம்பவளக் குன்றமே
தீயான சேராமற் செய்வானே தீயான
செம்பொற் புரிசைத் திருவாரூ ராய்என்னைச்
செம்பொற் சிவலோகஞ் சேர். **#996**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``தீ`` மூன்றில் முதலது நெருப்பு; இடையது தீமை; இறுதியது ஒளி.
புரிசை - மதில்.
ஈற்றடியில் ``பொன்`` என்றது பொருளை.
செம்பொருள் - மெய்ப்பொருள்; அஃது `அழியாப் பொருள்` எனப் பொருள் தந்தது.

சேர்கின்ற சிந்தை சிதையாமல் செய்வானே
சேர்கின்ற சிந்தை சிதையாமல் சேர்கின்றோம்
ஒற்றியூ ரானே உறவாரும் இல்லைஇனி
ஒற்றியூ ரானே உறும். **#997**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முன்னிரண்டடிகளில் சொற்பொருட் பின்வரு நிலையணியே வந்தது.
பின் வந்த ``சிதையாமல்`` என்பது, `சிதையாமைப் பொருட்டு`,
``ஒற்றியூர்`` இரண்டில் முன்னது தொண்டை நாட்டுக் கடற்கரைத் தலம்; பின்னது, பொருந்தி ஊர்கின்ற இடபம், (உன்னைத் தவிர எமக்கு) `ஆரும் உறவு இல்லை` என்க.
உறும் - பொருந்தும் `அதனால் அதன் மேல் நீ வந்து அருள்` என்பது குறிப்பெச்சம்.

உறுமுந்த முன்னே உடையாமல் இன்னம்
உறுமுந்த முன்னே யுடையா உறுமும்தம்
ஒரைந் துரைத்துஉற்று உணர்வோ டிருந்தொன்றை
ஒரைந் துரக்கவல்லார்க் கொன்று**.**

தனி வெண்பா
ஒன்றைப் பரணர் உரைத்தஅந் தாதிபல
ஒன்றைப் பகரில் ஒருகோடி ஒன்றைத்

தவிராது உரைப்பார் தளரா உலகில்
தவிரார் சிவலோகந் தான்.

#998

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தனிச்சீர் முதலாகத் தொடங்கி யுரைக்க.
தனிச்சீரில்- உறுமும் - சினந்து வருகின்ற.
தம் ஓர் ஐந்து - தங்கள் ஐம்புல ஆசைகளை.
உற்று - நேர்ந்து.
உரைத்து - அவைகட்கு அறிவுரை கூறி (அவை கேட்கும் தம்மையில் ஆயினும் தமக்குள் தாம் சொல்லிக் கொள்வதை அவைகள் கேட்பனபோல வைத்துக் கூறினார்.
) உணர் வோடு இருந்து - மெய்யறிவோடு அமைதியாய் இருந்து, ஒன்றை - ஒன்றாகிய செம்பொருளை.
ஓர் ஐந்து உரைக்க வல்லார்க்கு- அஞ்செழுத்தால் துதிக்க வல்லார்க்கு.
ஒன்று - அந்தச் செம்பொருள்.
அடி-1-ல் முன்னே - முதற்கண்.
உடையாமல் உந்த உறும் - அவ் வைம்புல ஆசைகட்குத் தோலாமல், அவர்களை முன்னோக்கிச் செலுத்த முற்படும்.
இன்னம் - அதற்குமேல்.
அடி-2ல் முன் உடையாமுந்த உறும் - அவர்களது ஆற்றல் (அறிவு இச்சை செயல்கள்) சலியாதபடி முற்காப்பாக எப்பொழுதும் பொருந்தியிருக்கும்.
`அஞ்செழுத்தை ஒருமித்த மனத்துடன் ஓதுபவர்க்கு முதலில் அருட் பேறும்.
பின்னர் ஆனந்தப் பேறும் உளவாம்` என்றபடி.
இவ் வெண்பாவின் ஈற்றடி ``ஒன்று`` என முடிந்து முதல் வெண்பாவின் முதலோடு சென்று மண்டலித்தல் காண்க.
தனிவெண்பா - குறிப்புரை: இறுதியிற் காணப்படும் வெண்பா நூற்பயன் சொல்வதாகப் பிற்காலப் பெரியோரால் செய்து சேர்க்கப் பெற்றது.

இளம்பெருமான் அடிகள் - சிவபெருமான் திருமும்மணிக்கோவை

முதல்வன் வகுத்த மதலை மாடத்து
இடவரை ஊன்றிய கடவுட் பாண்டிற்
பள்ளிச் செம்புயல் உள்விழு தூறீஇப்
புத்தேள் நிவந்த முத்த மாச்சுடர்
எறிவளி எடுப்பினும் சிறுநடுக் குறாநின்
அடிநிழல் அளியவோ வைத்த முடிமிசை
இலங்குவளைத் தனிபோது விரித்த
அலங்குகதிர் ஒலியல்நீ அணிந்ததென் மாறே.
#999

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதல்வன் - சிற்பம் வல்லாருள் தலையாயவன். மதலை - தூண்களையுடைய `மாடம்` என்க. மாடம் - உயர்நிலை மாடம். உயர்நிலை மாடம். திருக்கோயிலின் உட்கருவறை. ஊன்றிய- அழுந்த வைத்த. கடவுட் பாண்டில். தெய்வத் தன்மை பொருந்திய வட்டம் இதனைக் `கூர்மாசனம்` என்பர். `பாண்டிலாகிய பள்ளி` என்க. பள்ளி - தங்கும் இடம். `பள்ளியின்கண்` என ஏழாவது விரிக்க. செம்புயல் - மாலைக் காலத்தில் காணப்படுகின்ற சிவந்த மேகம். `மேகம் போல` எனவும் `விழுதுபோல` எனவும் உவம உருபு விரிக்க. `விழுது போல` என்றது இலிங்க வடிவத்தை. புத்தேள் நிவந்த முத்த மாச்சுடர் - கடவுள் தன்மை மேல் எழுந்து தோன்றிய முத்தொளியே. முத்தொளி உவமையாகு பெயர். முத்து. உயர்வாகிய குறிப்புப் பற்றி வந்த உவமை. `முத்தொளி` என்றது சிவபெருமானை. சுடர், அண்மை விளி. `தலங்கள் தோறும் இலிங்க வடிவில் கோயில் கொண்டு விளங்கி அருள் புரிகின்ற பெருமான் என்றபடி. எறிவளி - பெருங்காற்று. `பெருங்காற்று அடிக்கினும் சிறிதும் அசைவுறாத உனது திருவடி அரியவோ` (எளியவோ) என்க. `எளிய அல்ல ஆயினும் அவற்றை நீ சூட்டிய எங்கள் தலைமேல் மற்றும் உனது குவளை மலர் மாலையைச் சூட்டியது எக்காரணத்தால்` என முடிக்க. ஞான தீக்கை செய்யும் காலத்துக் குவளை மாலையைச் சூட்டுதல் மரபு. ``கழுநீர் மாலைக் கடவுள் போற்றி`` - எனத் திருவாசகத்தையும் காண்க. ஒலியல்- மாலை. மாறு. மூன்றாவதன் பொருள்படுவதோர் இடைச்சொல்.

மாறு தடுத்த மணிக்கங்கை திங்களின்
கீறு தடுப்பக் கிடக்குமே நீறடுத்த

செந்தாழ் வரையின் திரள்போல் திருமேனி
எந்தாய்நின் சென்னி இடை. #1000
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தனிச்சீர் முதலாகத் தொடங்கி உரைக்க. ``செவ்வரை`` என்பதில் செம்மை, ஆகுபெயராய் நெருப்பைக் குறித்தது. நீறு அடுத்த செம்மை - நீறு பூத்த நெருப்பு. பெருமான் திருமேனி முழுதும் திருநீறு பூசப்பட்டுள்ளது.
தாழ்வன - தங்கியுள்ள (அசையாது நிற்கின்ற) மலை. திரள் - திரட்சியான வடிவம். மாறு - எதிர். `மாறாத` என ஆக்கம் விரிக்க. தடுத்த - தடுக்கப்பட்ட. உலகை அழிக்க எண்ணி வந்த எண்ணத்திற்கு எதிராகத் தடுக்கப்பட்ட கங்கை என்க. `சடையால் தடுக்கப்பட்ட கங்கை சிறிதும் கீழே ஒழுகாதபடி பிறை தடுத்து நிற்கின்றது போலும் எனத் தற்குறிப்பேற்றமாகக் கூறி வியந்தவாறு. ஒழுகும் தன்மை உடையதாகிய கங்கையை ஒழுகாது வைத்துள்ள தன்மையை.
``நில்லாத நீர் சடைமேல் நிற்பித்தானை`` * என அப்பரும் வியந்தவாறு காண்க. ஏகாரம், வினாப் பொருட்டு.

இடைதரில் யாம்ஒன் றுணர்த்துவது உண்டிமை யோர்சிமையத்
தடைதரு மூரிமந் தாரம் விராய்நதி வெண்ணிலவின்
தொடைதரு துண்டங் கிடக்கினும் தொண்டர் ஒதுக்கியிட்ட
புடைதரு புல்லெருக் குஞ்செல்லு மோநின் புரிசடைக்கே. #1001
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இடைதரின் - வாய்ப்பு அளித்தால். `உனக்கு உணர்த்துவது` என்க. சிமையம் - கோபுரம். அஃது ஆகுபெயராய் அதனையுடைய நகரத்தைக் குறித்தது. மூரி - பெரிய மந்தாரம். தேவலோகத்துப் பஞ்ச தருக்களில் ஒன்று. அஃது இங்கு அதன் பூவைக் குறித்தது. தொடை - மாலை. நிலவின் மாலை. நிலாக் கதிர்கள். `மந்தார மலர்கள், நதி பிறை இவைகளோடு கூட, உனது அடியார்கள் இடுகின்ற புல்லிய எருக்கம் பூவும் உனது சடை முடிக்குப் பொருந்துமோ` என்க. `அன்பர் இடுவன யாதாயினும் அதுவே பெருமானுக்கு மிகு விருப்பத்தைத் தருவது என்றபடி.

சடையே
நீரகம் ததும்பி நெருப்புக்கலிக் கும்மே
மிடறே
நஞ்சகம் துவன்றி அமிர்துபிலிற் றும்மே

வடிவே
மிளியெரி கவைஇத் தளிர்தயங் கும்மே
அடியே
மடங்கல்மதம் சீறி மலர்பழிக் கும்மே
அஃதான்று
இனையஎன் றறிகிலம் யாமே முனைதவத்
தலைமூன்று வகுத்த தனித்தாள்
கொலையூன்று குடுமி நெடுவே லோயே. **#1002**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றயலடி முதலாகத் தொடங்கி உரைக்க. மூன்று தலைகளையும், ஒற்றைக் காலையும் உடைய வேல் திரிசூலம். ஊன்றுதல் - சேர்த்தல். குடுமி - முனை - `சடை முதலாகச் சொல்லப் பட்டவற்றில் ஒவ்வொன்றும் தோற்றத்திலும், செயலிலும் நேர்மாறாய் உள்ளன. ஆகவே, அவைகளை எத்தன்மையுடையன - ஒரு பெற்றிய வாகத் துணிய எங்களால் இயலவில்லை` என்பதாம். முளி எரி - பிற பொருள்களையெல்லாம் உலர்த்துகின்ற நெருப்பு. கவைஇ - கவித்து. தளிர் தயங்கும் - தளிர் விளங்கப்பெறும். மடங்கல் - யமன். முனை தவ - போரை மிகுதியாக உடைய `வேல்` என்க. அஃதான்று - அது வன்றி. இதனைச் சடை முதலிய எல்லாவற்றின் பின்னும் தனித்தனிக் கூட்டுக.

வேலை முகடும் விசும்பகடும் கைகலந்த
காலைநீர் எங்கே கரந்தனையால்
மாலைப் பிறைக்கீறா கண்முதலா பெண்பாகா ஐயோ
இறைக்கூறாய் எங்கட் கிது. **#1003**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மாலைப் பிறைக் கீறா!... போர்பாகா!` - என்பதனை முதற்கண் கூட்டியுரைக்க. `கீற்றன்` என்பது இடைக் குறைந்து `கீறன்` என நின்று விளியேற்றது. வேலை முகடு - கடலின் உச்சி. விசும்பு அகடு - வானத்தின் நடுவிடம். கை கலந்த காலை - இவை இரண்டும் ஒன்றுபடும்படி நீ ஒரு தூணாய் நின்ற காலத்தில் நீரை எங்கே கரந்தணை (உள்ளடக்கி வைத்தாய்?). ``ஐயோ`` என்றது. `இதனை அறியாது திகைக்கின்றோம்` என்னும் குறிப்பினது. இறை - சிறிது. ``இறைக் கூறாய்`` என்பதில் ககர ஒற்று விரித்தல்.

இதுநீர் ஒழிமின் இடைதந் துமையிமை யத்தரசி
புதுநீர் மணத்தும் புலியத ளேயுடை பொங்குகங்கை

முதுநீர் கொழித்த இளமணல் முன்றில்மென் தோட்டதிங்கள்
செதுநீர் ததும்பத் திவளஞ்செய் செஞ்சடைத் தீவண்ணரே. **#1004**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பொங்கு கங்கை`` என்பது முதலாகத் தொடங்கி, ``இடை தந்து இதுநீர் ஒழிமின்`` என்பதை இறுதியில் வைத்து உரைக்க. ``புது நீர்`` என்பதில் நீர் - நீர்மை; தன்மை. `இமையத்தரசியாகிய உமையைப் புதுமணம் கொண்ட பொழுதும் உம்முடைய உடை புலித்தோலாகவே இருந்தது. இது போன்ற தன்மையை அதற்கு ஒரு வாய்ப்புத் தந்து ஒழிப்பீர் என்க. `முன்றிலின்கண் உள்ள திங்கள்` எனவும், `திங்களின் மேல் நீர் ததும்புதலால் அத் திங்கள் திவள் அம் (துவளுகின்ற ஓர் அழகைச்) செய்கின்ற (உண்டாக்குகின்ற) சடை` எனவும் உரைக்க. தோட்ட - பூ இதழ்போல் அமைந்த. செது நீர் - அலம்புகின்ற நீர்.

வண்ணம்
அஞ்சுதலை கவைஇப் பவள மால்வரை
மஞ்சுமின் விலகிப் பகல்செகுக் கும்மே
என்னை
பழமுடைச் சிறுகலத் திடுபலி பெய்வோள்
நெஞ்சகம் பிணிக்கும் வஞ்சமோ உடைத்தே
அஃதான்று
முளையெயிற்றுக் குருளை இன்துயில் எடுப்ப
நடுங்குதலைச் சிறுநிலா விதிர்க்கும்கொடும்பிறைத்
தேமுறு முதிர்சடை இறைவ
மாமுறு கொள்கை மாயமோ உடைத்தே. **#1005**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``முளையெயிற்றுக் குருளை ... சடை இறைவ`` எனபதை முதலிலும், ``அஃதான்று`` என்பதைச் ``செகுக்கும்மே`` என்பதன் பின்னும், ``என்னை`` என்பதை ``உடைத்தே`` என்பதன் பின்னுமாகக் கூட்டியுரைக்க.
`உனது வண்ணம் (நிறம்) உனது ஐந்து தலைகளையும் கவைஇ (மூடி) பவளமால் வரையிடத்துத் தவழும் மஞ்சின் (மேகத்தின்) மின்னல் போல விலகி (இடையிடையே விளங்கி) பகல் ஒளியைச் செகுக்கும். (அழிக்கும்). `பழங்கலம், முடைக் கலம், சிறு கலம்` எனத் தனித்தனி இயைக்க. கலம் - பிச்சைப் பாத்திரம். முடை - முடை நாற்றம் உடையது. இங்ஙனமாயினும் நெஞ்சகத்தைக் கவரும் அதிசயத்தை உடையது.

வஞ்சம். இங்கு அதிசயம். இங்ஙனம் ஆகலின் உமது கொள்கை மாயம் உடைத்தாகின்றது. கொள்கை, இங்குத் தன்மை. ஓகாரம் வியப்பு. முறு கொள்கை - முறுகிய (இறுகிய) கொள்கை.
குருளை, பாம்புக் குட்டி, அது சீறுதலால் திங்கள் துயிலெழுந்து நடுங்குகின்றது. `நடுங்குதலையை உடைய பிறை` என்க. நடுங்குதலை, `தலை நடுங்கல்` என்றல் வழக்கு. விதிர்க்கும் - வீசுகின்ற. கொடு - வளைந்த. பிறைத்து - பிறையை உடையது. `பிறையை உடையதாய் ஏமுறு சடை` என்க. ஏமுறு - பல பொருள் கட்கும் பாதுகாவலாகப் பொருந்திய.

உடைதலையின் கோவை ஒருவடமோ கொங்கை
புடைமலிந்த வெள்ளெருக்கம் போதோ சடைமுடிமேல்
முன்னாள் பூத்த முகிழ்நிலவோ முக்கணா
இன்னநாள் கண்டதிவள். #1006

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`முக்கணா` என்பதை முதலிற் கொள்க.இவள் - (உன்மேல் வைத்த காதலால் மெலிகின்ற) இவள். இன்ன நாள் - இன்று. கண்டது - உன்பால் கண்டது. மார்பில் உள்ள தலை மாலையையோ? வெள்ளெருக்கம் பூ மாலையையோ? சடைமேல் உள்ள முதல்நள் தோன்றும் பிறையையோ? என்க. `இவற்றுள் ஒன்றேனும் காதலை விளைக்கும் பொருளாய் இல்லையே` என்பது குறிப்பு. ``தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்`` *- என்பதில் தலைவன். தலைவியர் தம்முள் ஒருவரது இழிபை மற்றவர் தேறாமையும் அடங்கும் ஆதலின் அஃது அவ்வாற்றான் ஆய பெருந்திணைத் தலைவியது ஆற்றாமை கூறித் தோழி தலைவனைக் குறையிரந்தது. ``கொங்கை`` என்பது மார்பைக் குறித்தது. ``கண்டது`` - எனச் செயப்படுபொருள் வினை முதல் போலக் கூறப்பட்டது.

இவள்அப் பனிமால் இமையத் தணங்குகற் றைச்சடைமேல்
அவள்அப்புத் தேளிர் உலகிற் கரசி அதுகொண்டென்னை
எவளுக்கு நீநல்ல தாரைமுன் எய்திற்றெற் றேயிதுகாண்
தவளப்பொடிச்செக்கர் மேனிமுக் கண்ணுடைச் சங்கரனே. #1007

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியை முதலிற் கொள்க. ``இவள்`` என்றது உமாதேவியைச் சுட்டியதும், ``அவள்`` என்றது கங்காதேவியைச் சுட்டியதும் ஆகும். கங்கையை, `புத்தேளிர் உலகிற்கு அரசி`` என்றது ஆகாய கங்கையாதல்

பற்றி. ``அது கொண்டு என்னை`` என்றது, `எவள் உயர்ந்தவள். எவள் தாழ்ந்தவள் என்னும் ஆராய்ச்சியில்லை என்றபடி. எவளுக்கு நீ நல்லது? யாரை முன் எய்திற்று? எற்றே? - என்றது. எவள் உனை விரும்புபவள்? முதலிற் கொள்ளப்பட்டவள் யார்? முன்னர் ஒருத்தியிருக்கப் பின்னர் ஒருத்தியைக் கொண்டது எதற்கு என்றபடி. இவற்றின்பின் `என்னும்` என்பதை வருவித்து. `என்னும் இது கா - என்று எழுகின்ற வினா எழாதபடி பார்த்துக் கொள்` என உரைக்க. `இந்த வினா எழுந்தால் உன்னால் விடையிறுக்க இயலாது` என்பதாம். `இருவருள் ஒருத்தி தான் இவனை விரும்பு பவள்` என்றலும் ஒருத்தி முன், மற்றொருத்தி பின் எனக் கூறுதலும். இருவருள் ஒருத்தியை `மிகை` என்றலும் கூடா என்றபடி. `சிவபிரான் கொள்வன யாவும் உலக நலத்திற்கு இன்றியமையாமை கருதியே` என்பதைக் குறிப்பால் உணர்த்தியவாறு. `நல்லது` என்றது `நல்ல பொருள் என்றபடி. `நல்லை` எனப் பாடம் ஓதுதல் சிறக்கும்.

கரதலம் நுழைத்த மரகதக் கபாடத்து
அயில்வழங்கு முடுமிக் கயிலை நாடநின்
அணங்குதுயில் எடுப்பிற் பிணங்குநிலாப் பிணையல்
யாமே கண்டதும் இலமே தாமா
மூவா எஃகமும் முரணும்
ஒவாது பயிற்றும் உலகம்மால் உளதே. **#1008**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``குடுமி`` என்றது ஆகுபெயராய்ச் சூலத்தைக் குறித்தது. `கரதலம் நுழைத்த சூலம்` என்க. சிவபெருமான் ஏந்தியுள்ள சூலத்தின் மூவிலைகள் உயிர்களின் அறிவு, இச்சை, செயல் இவை களைப் பிணித்துள்ள ஆணவ மலத்தின் சத்தியைப் போக்கும் ஞானேச்சரக் கிரியைகளாகிய சத்திகள் ஆதல் பற்றி, ``மரகதக் கபாடத்து அயில் வழங்கு குடுமி`` என்றார். ``ஆணவமாகும் கபாடமும்`` *1* எனப் பிற்காலத்தில் சிவப்பிரகாச அடிகளும் கூறினார். ``நின் அணங்கு`` என்றது கங்கா தேவியை. துயில் எடுத்தல் - எழுப்பு தல். `எழுப்புதல் பிறையை` என்க. பிறையைக் கங்கை எழுப்புத லாவது மிதக்கச் செய்தல். `மிதக்கச் செய்யும்பொழுது சந்திரனது நிலா ஒளி எங்கும் விளங்குதல் வேண்டுமன்றோ? அங்ஙனம் விளங்க யாம் ஒருபோதும் கண்டதிலம் என்க. பிணையல் - மாலை. ``நிலாப் பிணையல்`` என்றது உருவகம். `இனி, நிலாவாகிய அப் பிணையல் மூவா எஃகமும் (கெடாத சூலப்படையோடு) மூரணும் - மாறுபட்டுத் தோன்றுதலும் செய்யும். ``இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தினை`` *2* - என்றபடி சூலம் கருநிறமாய்

இருத்தலின் நிலவு அதனோடு மாறுபடுவ தாயிற்று. ஓவாது பயிற்றும் - உனது சடையில் உள்ள பிறையை இடைவிடாது கண்டு கொண்டிருக்கின்ற. உலகம் மால் உளது - உலகம் திகைப்பை உடையதாகின்றது. `பிறை என்றும் பிறையாகவே உள்ளதன்றி, வளரவில்லையோ என்க` என்றபடி. ``வளருமோ பிள்ளை மதி`` - என அம்மை திருவந்தாதியிலும் *3* கூறப்பட்டது.

உளரொளிய கங்கை ஒலிதிரைகள் மோத
வளரொளிதேய்ந்து உள்வளைந்த தொக்கும் கிளரொளிய
பேதைக் கருங்கட் பிணாவின் மணாளனார்
கோதைப் பிறையின் கொழுந்து. **#1009**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தனிச்சீர் முதலாகத் தொடங்கியுரைக்க. பேதைப்பிணா, கருங்கட் பிணா` எனத் தனித்தனி இயைக்க. பேதை - `மடம்` என்னும் பெண்மைக் குணம். பிணா - பெண்மான். அஃது உவமையாகு பெயராய். உமா தேவியைக் குறித்தது. மானினது நோக்குப்போலும் நோக்குடைமை பற்றி மகளிரை `மான்` என்றல் வழக்கு. கோதைப் பிறை - கொன்றை மாலையை அடுத்துள்ள பிறை. `பிறையாகிய கொழுந்து` என்க. இன், வேண்டாவழிச் சாரியை. உளர் ஒளி - வீசுகின்ற ஒளி. `ஒளிய திரைகள்` என இயையும். இயல்பாகவே குறைந்த களையினையும், உள் வளைவையும் உடைய பிறைக்கு அவற்றைச் செயற்கை போலக் கூறியது தற்குறிப்பேற்றம்.

கொழுந்திரள் தெண்ணில வஞ்சிநின் கூரிருள் வார்பளிங்கின்
செழுந்திரள் குன்றகஞ் சென்றடைந் தால்ஒக்குந் தெவ்வர்நெஞ்சத்
தழுந்திரள் கண்டத் தவளப் பொடிச்செக்கர் மேனிநின்றோர்
எழுந்திரள் சோதி பிழம்பும்என் உள்ளத் திடங்கொண்டவே. **#1010**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டிற்கு `எங்கள் பெருமானே` என்னும் விளியை முதற்கண் வருவித்துக் கொண்டு `கூர் இருள், கொழுந்திரள் தெண்ணிலவு அஞ்சி வார் பளிங்கின் செழுந்திரட் குன்றகம் சென்று அடைந்தால் ஒக்கும் நின், தெவ்வர் நெஞ்சத்து அழுந்து கண்டத்துப் *(பிழம்பும்)* தவளப் பொடிப் *(பிழம்பும்)*, செக்கர் மேனி நின்று எழும் ஓர் திரட் சோதிப் பிழம்பும் என் உள்ளத்து இடம் கொண்ட` என இயைத்து உரைத்துக் கொள்க. நிலவு, பெருமான் முடிமேல் உள்ளது. கூர் இருள் - உலகத்தில் மிகுந்துள்ள இருள். திருநீற்றினால் பெருமானது திருமேனி பளிங்கு

மலைபோல் உள்ளது. அவனது நீலகண்டம் அம்மலையின் ஒருபுடை புகுந்த இருள் போன்றுள்ளது. பெருமானது திருமேனி அவளை வெறுப்பவர்கள் உள்ளங்களில் அழுந்தி அச்சுறுத்துகின்றது. `அழுந்து` என்பது கடைக் குறைந்து நின்றது. ``பிழம்பும்`` என்ற உம்மையால் அஃது ஏனைக் கண்டம், பொடி இவற்றுடனும் சென்று இயைந்தது. ``உள்ளத்து இடம்`` என்னும் ஆறாவதன் தொகையை, `நிலத்தது அகலம்` என்பது போல ஒற்றுமைக் கிழமைப் பொருட்டாகக் கொள்க.

கொண்டல் காரெயிற்றுச் செம்மருப் பிறாலின்
புண்படு சிமையத்துப் புலவுநாறு குடுமி
வரையோன் மருக புனலாள் கொழுந
இளையோன் தாதை முதுகாட்டுப் பொருநநின்
நீறாடு பொலங்கழல் பரவ
வேறாங்கு கவர்க்குமோ வீடுதரு நெறியே. **#1011**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கொண்டல் - கிழக்குத் திசைக் காற்று. `இதுவே மழையைத் தரும்` என்பது தமிழ்நாட்டு வழக்கம். கார் - மேகம் எயிற்று மருப்பு - பல்லாகிய கொம்பு. மின்னல் இவ்வாறு உருவகம் செய்யப் பட்டது. எனவே, மேகத்தை யானையாக உருவகம் செய்யாமை ஏகதேச உருவகமாயிற்று. செம்மருப்பு, இல்பொருள் உவமை பற்றி வந்த உருவகம். இறால் - தேன் கூடு ``இறாலின் புண்`` எண்பதையும் ``இறாலாகிய புண்`` என விரித்து உருவகமாதல் உணர்க. `மருப்பால் ஆய புண்` என உருபு விரித்துக் கொள்க. சிமயம் - சிகரம். `மேகமாகிய யானையது எயிறாகிய மருப்பினால் உண்டாகிய இறால் ஆகிய புண் பொருந்திய சிகரங்கள்` என்றபடி. இயல்பாகப் பொருந்தியுள்ள தேன் அடையை, `யானை மருப்பால் உண்டாகிய புண்` எனச் செயற்கை யாகக் கூறியது தற்குறிப்பேற்றம். `மேகத்தினது எயிறாகிய கொம்பு` என்றது மின்னலை. `மின்னல் அடிக்கடி தோன்ற அதனிடையே தேனடை காணப்படுவது. அம்மின்னலாய் உண்டான புண்போலத் தோன்றுகின்றது` என்பதாம். சிகரங்களிடை இறந்த விலங்குகளது முடை நாற்றம் மேற்கூறிய புண்ணின் நாற்றமாகக் கூறப்பட்டது. ``குடுமி`` என்பதும் சிகரமே. `புண்படு சிகரம் ஆதலின் புலவு நாறு சிகரமாயிற்று` என்பதாம். இமயமாகிய குடுமியை உடையவரையோன், இமையமலையரசன். புனலாள் - கங்காதேவி. இளையோன் - முருகன். பொருநன் - வீரன். `முதுகாட்டில் செல்லப் பலரும் அஞ்ச, நீ அஞ்சவில்லை` என்றபடி. வேறாங்கு கவர்க்குமோ - வேறுபடுவதாய் இரண்டுபட்டு நிற்குமோ, `சிவபெருமானது திருவடியைத் துதித்தலுக்கு

வேறாக வீட்டு நெறி ஒன்று உளதோ` - என்றபடி.

நெறிவிரவு கொன்றை நெடும்படற்கீழ்க் கங்கை
எறிதிரைகள் ஈர்த்தெற்ற ஏறிப் பொறிபிதிர
ஈற்றராக் கண்படுக்கும் இண்டைச் சடைச்செங்கண்
ஏற்றரால் தீரும் இடர். **#1012**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நெறி விரவு - ஒழுங்காகப் பொருந்திய `மாலை` எனப் பொருள் தரும். `படலை` என்பது ஈற்று ஐகாரம் தொகுக்கப்பட்டு நின்றது. ஏற்றுதல் - மோதுதல். ஏறி - கங்கையை விட்டுக் கொன்றை மாலை மேல் ஏறி. பொறி பிதிர - புள்ளிக் விளங்கும்படி. ஈற்று அரா - சூல் கொண்ட பாம்பு. ஏற்றர் - இடப வாகனத்தையுடையவர். `ஏற்றாராலே` எனப் பிரிநிலை ஏகாரம் விரித்து. `அவராலேதான் இடர் தீரும். ஏனையோராலே தீராது` - என உரைக்க. இடர், சிறப்பாகப் பிறவித் துன்பம்.

இடர்தரு தீவினைக் கெள் கிநை வார்க்குநின் ஈரடியின்
புடைதரு தாமரைப் போதுகொ லாம்சரண் போழருவிப்
படர்தரு கொம்பைப் பவளவண் ணாபரு மாதைமுயங்
கடைதரு செஞ்சுடர்க் கற்றையொக் குஞ்சடை அந்தணனே. **#1013**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``போழருவி`` என்பது முதலாகத் தொடங்கி ``பவள வண்ணா`` என்பதை ஈற்றடியிறுதியில் கூட்டி உரைக்க. போழ்தல் நிலத்தை. அருவி - ஆற்று வடிவாய் உள்ள கங்காதேவி. கொம்பை அடைதரு செஞ்சுடர்க் கற்றை பருமாமுதை ஒக்கும் சடை - கங்கையைப் பொருந்தியுள்ள சுடர்க் கற்றையை உடைய, பெரிய முதிர்ந்த கட்டினை ஒக்கும் சடை. முதை - முதிர்ந்த காடு. தீவினைக்கு- தீவினை நிமித்தத்தால். எள்கி - பிறரால் இகழப்பட்டு நைவார்க்குச் சரண் நின் ஈரடியின் தாமரைப் போது கொலாம்` என முடிக்க. சரண் - புகலிடம். ஈரடியின் போது, ஈரடியாகிய மலர். இன், வேண்டாவழிச் சாரியை. புடை - பக்கத்திற் பொருந்திய `இணைந்துள்ள` என்றபடி. `கொல், ஆம்` என்பன அசைகள். `தீவினையால் வருந்துபவர்க்குப் புகலிடமாகத் தக்கன சிவபெருமானது இணையடிகளே` என்றபடி.

அந்த ணாளர் செந்தொடை ஒழுக்கமும்
அடலோர் பயிற்றும்நின் சுடர்மொழி ஆண்மையும்
அவுணர் நன்னாட் டிறைவன் ஆகிக்
குறுநெடுந் தானை பரப்பித் தறுகண்

மால்விடை அடரத் தாள்நிமிர்ந் துக்க
காய்சின அரவுநாண் பற்றி நீயோர்
நெடுவரை நெறிய வாங்கிச்
சுடுகணை எரிநிமிர்த்துத் துரந்த ஞான்றே.
#1014
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டிலும் முதற்கண், `எங்கள் பெருமானே` என்னும் விளியை முதற்கண் வருவித்துக் கொண்டு, `நீ, அவுணர் நன்னாட்டு இறைவனாகிக் குறுநெடுந்தானை பரப்பிக் காய்சின அரவு நாண் பற்றி ஓர் நெடுவரை நெளிய வாங்கிச் சுடுகணை எரிநிமிர்த்துத் துரந்த ஞான்று (உனது) மால் விடை தாள் நிமிர்ந்து அடர, ஒழுக்கமும், ஆண்மையும் உக்க` என இயைத்து உரைக்க. அந்தணாளர் செந் தொடை, வேதம். அடலோர் - வீரம் உடையோர். சுடர் மொழி, வரமாக வழங்கிய சொல். அதனால் அவுணர்கள் (திரிபுரத்தவர்) அடைந்த ஆண்மை. அந்த ஆண்மை வீரர் பலராலும் பாராட்டிப் பேசப்பட்டது. `பயிற்றும் ஆண்மை` என இயைக்க. மால்விடை, திருமாலாகிய இடபம். அடர- அது தனது கால்களை நீட்டி உதைக்க. உக்க - சுக்குநூறாகி உதிர்ந்தன. `உக்கன` என்றே பாடம் ஓதுதலும் ஆம். `நீ சுடுகணை துரந்ததன்றியும், உனது விடை அடர்ந்ததனாலும் திரிபுரமும், அதன்கண் இருந்தோர் ஆண்மை உருவின்றிச் சிதறி அழிந்தன` என சிவபெருமானது ஊர்தியின் ஆற்றலைப் புகழ்ந்தவாறு. வேத நெறி பிழைத்தமை காரணமாகச் சிவபெருமான் போர் தொடுத்ததை அங்ஙனம் தொடுத்தபின் நிகழ்ந்தது போலக் கூறினார். எனினும், அஃது அதற்கு முன்பே அழிந்தது` என்பதே கருத்து. இறைவனாகி - `யான் இறைவன்` என்பதைப் புலப்படுத்தி. குறுமை பூதங்களின் உருவம் பற்றியும், நெடுமை மிகுதி பற்றியும் கூறப்பட்டன. ``நிமிர்ந்து`` என்பதை `நிமிர` எனத் திரிக்க. `சுடுகணையால் எரியை நிமிர்த்து அதனைத் துரந்த ஞான்று` என்க

ஞான்ற புனமாலை தோளலைப்ப நாண்மதியம்
ஈன்ற நிலவோடும் இவ்வருவான் மூன்றியங்கு
மூதூர் வியன்மாடம் முன்னொருகால் துன்னருந்தீ
மீதூரக் கண்சிவந்த வேந்து. **#1015**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

புனம் - கொல்லை; முல்லை நிலம். அஃது ஆகுபெயராய்க் கொன்றைப் பூவைக் குறித்தது. `ஞான்ற மாலை` என இயையும். ஞான்ற - தொங்கிய.

நாள் மதியம் - முதல் நாட்பிறை. இவ் வருவான் - இப்பொழுதே நம்முன் தோன்றுவான். `வேந்து வருவான்` என்க. மூன்றாய் இயங்கும் மூதூர் திரிபுரம். வியல் மாடம் - அவற்றில் உள்ள மாட மாளிகைகள். ``மாடத்தில்`` என ஏழாவது விரிக்க. ``கண் சிவந்த`` என்றது. `சினந்த` என்றபடி. `இப்பொழுதே வருவான்` என்றது, தமது அன்பு காரணமாக எழுந்த தெளிவினாலாகும்.

வேந்துக்க மாக்கடற் சூரன்முன் னாள்பட வென்றிகொண்ட
சேந்தற்குத் தாதையிவ் வையம் அளந்ததெய் வத்திகிரி
ஏந்தற்கு மைத்துனத் தோழனின் தேன்மொழி வள்ளியென்னும்
கூந்தற் கொடிச்சிதன் மாமன்வெம் மால்விடைக் கொற்றவனே. **#1016**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``வேம் மால் விடைக் கொற்றவன்`` என்பதை முதலில் கூட்டியுரைக்க. `முன்னாள் சூரன் வேம் துக்க மாக்கடல் படவென்றி கொண்ட சேந்தன்` என மாற்றிக் கொள்க. சூரன் இறுதியில் மாவாகி (மாமரம் ஆகி)க் கடல் நடுவில் நின்றான்` என்பர். அஃது உண்மை யன்று. `வேகின்ற துக்கமாகிய பெரிய கடல் நடுவில் பொருந்தினான்` என்பது தான் உண்மை எனச் சொல் நயம்படக் கூறினார். சேந்தன் - முருகன். திகிரி - சக்கரம். `தெய்வத் திகிரி ஏந்தல்` என்பது `மாயோன்` என்னும் ஒரு பெயர்த் தன்மைத்தாய், ``அளந்த`` என்னும் ஒரு பெயரெச்சத்திற்கு முடிவாயிற்று. `வள்ளி என்னும் கொடிச்சி` எனவும், `கூந்தற் கொடிச்சி` எனவும் தனித் தனி முடிக்க. கொடிச்சி - குறத்தி.

கொற்றத் துப்பின் பொற்றை ஈன்ற
சுணங்கையஞ் செல்வத் தணங்குதரு முதுகாட்டுப்
பேய்முதிர் ஆயத்துப் பிணவின் கொழுநநின்
ஏர்கழல் கவைஇ இலங்கிதழ்த் தாமம்
தவழ்தரு புனல்தலைப் படுநர்
அவல மாக்கடல் அழுந்தலோ இலரே. **#1017**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கொற்றத் துப்பின் - வெற்றிக்கு ஏதுவான வலிமையை உடையவளும், பொற்றை ஈன்ற - மலையால் (மலை யசரசனால்) பெறப்பட்டவளும். சுணங்கு அம் செல்வத்து - தேமலின் அழகாகிய செல்வத்தை உடையவளும், (ஐ சாரியை) அணங்கு தரு முதுகாட்டு - அச்சத்தைத் தருகின்ற முதுகாட்டின்கண் வாழ்பவளும். பேய் முதிர் ஆயத்து -

பேய்களாகிய முற்றிய சுற்றத்தை உடையவளும் ஆகிய பிணவின் கொழுந - மான் போன்றவளுக்குக் கணவனே. இங்ஙனம் வருணிக்கப்பட்டவள் காடுகிழாள். இவளும் சத்தியின் கூறாதல் பற்றி `மலையரையனால் பெறப்பட்டவள்` என்றார். பொற்றை - மலை. `ஒற்றை` என்பது பாடம் அன்று. ஏர் கழல்- அழகிய திருவடியை. கவைஇ - சூழ்ந்து. தாமம் தவழ் தரு புனல் - பூக்கள் மிதக்கின்ற நீர். தலைப்படுநர் - தங்கள் தலையிலே உறப் பெற்றவர்கள். ``அழுந்தலோ`` என்னும் ஓகாரம் சிறப்பு. `சிவபெருமானுடைய பாத தீர்த்தம் தலையிலே படப்பெற்றவர்களது துன்பங்கள் நீங்கியொழியும்` என்பது கூறியவாறு.

இலர்கொலாம் என்றிளைஞர் ஏசப் பலிக்கென்
றுலகெலாஞ் சென்றுழல்வ ரேனும் மலர்குலாம்
திங்கட் குறுந்தெரியல் தேவர்காட் செய்வதே
எங்கட் குறும் தெரியின் ஈண்டு. **#1018**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இளைஞர் - அறிவு முதிரப் பெறாதவர்கள். இலர் என்று ஏச - `இவர் யாதோன்றும் இலராகிய நிச்சல் நிரப்புடையர்` என்று சொல்லி இகழும்படி. தெரியின் - ஆராய்ந்து பார்த்தல். குறுந் தெரியல் - சிறிய மாலைக் கண்ணி. ஈண்டு எங்கட்கு உறும் - இப்பிறப்பில் எங்கட்கு நன்மை தருவதாகும். `அறிவு முதிர்ந்தோர் இகழ்தல் கண்டு யாமும் அது செய்யோம்` என்றபடி.

புத்தரோடு பொறியில் சமணும் புறங்கூற
நெறிநில்லா
ஒத்தசொல்ல உலகம் பலிதேர்ந்து எனது
உள்ளம் கவர் கள்வன்` *1*
எனவும்,
புத்தரும், சமணரும் புறன் உரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே *2*
எனவும் ஞானசம்பந்தரும் அருளிச்செய்தார். கோல், ஆம் அசைகள்.

ஈண்டுமுற் றத்தொற்றை மால்விடை ஏறியை அம்முனைநாள்
வேண்டிமுற் றத்திரிந் தெங்கும் பெறாது வெறுங்கைவந்தார்
பூண்டவொற் றைச்செங்கண் ஆரமும் கற்றைச் சடைப்புனலும்
நீண்டஒற் றைப்பிறைக் கீளும்எப் போதுமென் நெஞ்சத்தவே. **#1019**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈண்டு முற்றத்து - `இவ்வுலகமாகிய முற்றத்திலே (வெற்ற வெளியான

இடத்திலே) முற்றத் திரிந்து` என இயைக்க. `முற்றத் திரிந்து, அம் முனைநாள், விசை ஏறியை எங்கும் பெறாது வெறுங் கை வந்தார்` என்க. முனைநாள் - முன்னை நாள். பெறாது - காணப் பெறாமல். `மாலும், அயனுமாகிய இரு பெருந் தேவர்கள்` என்பதைச் சொல்லாமற் சொல்லக் கருதி அத்தொடரைத் தோன்றா எழுவாயாக வைத்தார். செங்கண் - சிவந்த கண்; நெருப்புக்கண். ஆரம் - எலும்பு மாலை. `செங்கண்` என்பதிலும் உம்மை விரித்து, `ஒற்றைச் செங்கண்ணும், பூண்ட ஆரமும் ... கீளும் எப்போதும் என நெஞ்சத்தவே` என இயைத்து முடிக்க. `மாலும், அயனும் எத்துணை முயன்று தேடியும் காணப்படாத முதல்வன் என் நெஞ்சத்தில் எப்பொழுதும் குடிகொண்டுள்ளான்` எனத் தாம் பெற்ற பேற்றினை வியந்துரைத்தவாறு.

நெஞ்சிற் கொண்ட வஞ்சமோ உடைத்தே
மடவோர் விரும்புநின் விளையாட் டியல்போ
மருள்புரி கொள்கைநின் தெருளா மையோ
யாதா கியதோ எந்தை நீதியென்
றுடைதலை நெடுநிலா வெறியல்
கடைதலென் றருளிச் சூடிய பொருளே. **#1020**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``எந்தை`` என்பது முதலாகத் தொடங்கி, முதல் அடியை இறுதியில் வைத்து முடிக்க எந்தை. விளி, நீதி இங்குத் தகுதியைக் குறித்தது. வெறியல் - மாலை. கடைதல் - மார்பின்கண் அசைதல். உடை தலை மாலை மார்பின்கண் அசைதலைத் தகுதி யென்று அருளிச் சூடிய பொருள் விளையாட்டியல்போ? தெருளா மையோ? (இவ்விரண்டுமாய் இருத்தல் இயலாது. ஆகையால்) ஒரு வஞ்சமோ உடைத்து` என முடிக்க. `தலை மாலை சூடிக் கொள்ளுதலை ஒரு விளையாட்டாகக் கருதுதல் மடவோர் இயல்பாகும்` என்பார், ``மடவோர் விரும்பு விளையாட்டு`` என்றார். தெருளாமையாகிய மருள்புரி கொள்கையோ` என மாற்றியுரைத்தல் கருத்து என்க. ``அருளி`` என்றது, `உனது செயல்கள் யாவும் அருள் காரணமாகவே நிகழும் ஆதலால் இன்னதோர் அருளைக் கொண்டு` என்றபடி. பொருள் - கருத்து. பழிப்பது போலப் புகழ்தல் வேண்டி ``வஞ்சம்`` என்றார் ஆகலின், ``ஆழ்ந்ததோர் கருத்து`` என்பதே அதன் உண்மைப் பொருளாம். ஓகாரம் சிறப்பு. அக்கருத்தாவது, தனது நித்தியத் தன்மையை உயிர்கட்கு உணர்த்துதலாம்.

பொருளாக யானிரந்தால் புல்லெருக்கின் போதும்
அருளான்மற் றல்லாதார் வேண்டின் தெருளாத
பான்மறா மான்மறிக்கைப் பைங்கண் பகட்டுரியான்

தான்மறான் பைங்கொன்றைத் தார். #1021
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``தெருளாத ... பகட்டுரியான்`` என்பதை முதலிற் கொள்க. மறி - கன்று. `தெருளாத மறி, பால் மறா மறி` எனத் தனித் தனி முடிக்க. ``தெருளாத`` என்றதும், ``பால் மறா`` என்றதும் குழவிப் பருவத்தைக் குறித்தவாறு. பகடு - யானை. `பைங்கண் பகடு` என்க. பொருளாக - இன்றியமையாப் பொருளாக. மற்று. அசை. அல்லாதார்- யான் தவிர ஏனையோர். `பைங்கொன்றைத் தாரையும் தான் மறான்` என்க. உம்மை தொகுத்தலாயிற்று. மறான் - மறுக்கமாட்டான். இது தூது செல்லுமாறு வேண்டி தலைவிக்குத் தோழி தலைவனது அன்பின்மை கூறி இயற்பழித்தது.

தாரிளங் கொன்றைநல் ஏறு கடாவித் தலைமைமிக்க
ஏரிள மென்முலைப் பொன்மலை யாட்டிக்கெற் றேயிவனோர்
பேரிளங் கொங்கைப் பிணாவொடுங் கூடிப் பிறைக்கொழுந்தின்
ஒரிளந் துண்டஞ் சுமந்தையம் வேண்டி உழிதருமே. #1022
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``இவன் ஓர்`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. அங்ஙனம் உரைக்குங்கால் ``நல் ஏறு கடாவி`` என்பதை ``ஐயம் வேண்டி உழிதரும்`` என்பதற்கு முன்னர்க் கூட்டுக. ``ஓர் பேரிளங் கொங்கைப் பிணா`` என்றது கங்காதேவியை. `இவன் இத்தகையனாய் இருத்தலால் தலைமை மிக்க பொன் வழங்கியதனால் என்ன பயன்? என்றபடி. பொன் மலையாட்டி, உமாதேவி. `அவரே பெருந்தேவி` என்றற்கு ``தலைமை மிக்க`` என்றார்.

உழிதரல் மடிந்து கழுதுகண் படுக்கும்
இடருறு முதுகாட்டுச் சீரியல் பெரும
புகர்முகத் ததுளைக்கை உரவோன் தாதை
நெடியோன் பாகநின்
சுடர்மொழி ஆண்மை பயிற்று நாவலர்க்
கிடர்தரு தீவினை கெடுத்தலோ எளிதே. #1023
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உழிதரல் மடிந்து - அலைவதினின்றும் ஓய்வுபெற்று. கழுது - பேய். சீர் இயல் பெரும - நடனம் புரிகின்ற பெருமானே. சீர் - தாளம். `தாளத்திற்கு இசை நடனம் ஆடுபவன்` என்றபடி. புகர் முகத் துளைக்கை உரவோன்.

யானை முகக் கடவுள். நெடியோன் பாக - திருமாலை ஒரு பாகத்தில் உடையவனே. நின் சுடர் மொழி ஆண்மை- வேதத்தை ஆளும் தன்மை. அஃதாவது, வேத நெறிப்படி உன்னை மன மொழிமெய்களால் வழிபடுந்தன்மை. ``பயிற்றும்`` - என்பது தன் வினை பிறவினை இரண்டற்கும் பொதுவாய் நின்றது. ஓகாரம், சிறப்பு.

எளியமென் றெள்கி இகழாது நாளும்
அளியம்ஆட் செய்தாலும் ஐயோ தெளிவரிய
வள்கயிலை நீள்பொருப்ப வான்தோய் மதிச்சடையாய்
கொள்கயிலை எம்பாற் குறை. **#1024**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தனிச் சீரிலிருந்து தொடங்கி, ஈற்றடியை இறுதியில் வைத்து உரைக்க. வள்ளன்மையைக் குறிக்கும் `வள்ளல்` என்பது ஈறு குறைந்து, முதனிலையளவாய் நின்றது. வள்ளன்மையைப் பொருப் பிற்கு ஏற்றினும்,பொருப்பற்கு ஏற்றினும் பொருந்தும். எளியம் என்று ஏற்கி இகழாது - `யாம் சிவனுக்கு செய்யும் அளவிற்குத் தகுதியுடையமோ` என்று `எங்களை நாங்களே இகழ்ந்துகொண்டு, அது பற்றி உனக்கு ஆட்செய்தலை ஒழியாது செய்தாலும் நீ எங்கள் பால் உள்ள குறைபாட்டினை கருத்திற் கொள்கின்றாய் இல்லை (கருத்திற் கொண்டு தீர்க்கின்றிலை) என்க. `கொள்கையிலே` என்பது, ``கொள்கயிலை`` எனப் போலியாய் வந்தது. `எம்மாற் குறை` என்ப தும் பாடம். அதற்கு, `குறை - பணி` என்பது பொருளாகும்.

குரையாப் பலியிவை கொள்கவென் கோல்வளை யுங்கலையும்
திறையாக்கொண் டாயினிச் செய்வதென் தெய்வக்கங் கைப்புனலில்
பொறையாய் ஒருகடல் நஞ்சுண்ட கண்டா பொடியணிந்த
இறைவா இடுபிணக் காடசெம் மேனியெம் வேதியனே. **#1025**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``தெய்வக் கங்கை`` - என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. ``கடல்`` என வருதலால், ``பொறை`` என்பது கடலில் உள்ள நீரைக் குறித்தது. ``ஆகாயத்தில் உள்ள தெய்வக் கங்கையில் தனது நீர் எழுந்து பாய்வதாகிய ஒரு கடல்`` என்க. `இறைவன்` என்பது `இறையன்` எனவும் வரும். `இறையனார்` என்பதை நினைக. விளியேற்குங்கால் `இறைவன்` என்பது `இறைவா` என வந்தது. `என் பலியாகிய இவைகளைக் கொள்க. இவற்றை விடுத்து என் வளையையும், கலையையும் கொண்டாய், என் செய்வது! என்க. பலி - பிச்சை. இது

கைக்கிளைத் தலைவி தலைவனை நெருங்கிக் கூறியது

வேதியர் பெரும விண்ணோர் தலைவ
ஆதி நான்முகத் தண்ட வாண
செக்கர் நான்மறைப் புத்தேள் நாட
காய்சின மழவிடைப் பாகநின்
மூவிலை நெடுவேல் பாடுதும்
நாவலம் பெருமை நல்குவோய் எனவே. **#1026**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வேதியர் - நிலத் தேவர்; பூசுரர், விண்ணோர் - வானத் தேவர். நான்முகத்து அண்டம் - பிரமாண்டம். `அதன் முழு இடத்திலும் நிறைந்துள்ளாய்` என்றற்கு ``நான்முகத்து அண்டவாண``- என்றார். ``நாடு`` என்றது உலகத்தை; அது சத்திய லோகம். `அது செம்பொன் நிறத்தது` என்றற்கு. ``செக்கர் நாடு`` என்றார். விடை திருமால் ஆதலின் ``அதன் பாக`` என்றதனானே வைகுந்தத்தில் நிறைந்தமை சொல்ல வேண்டாவாயிற்று. நாவல் பெருமை - நாவால் வலியராம் பெருமை. அது தம்மால் மொழியப்படும் மொழிகள் யாவும் நிறைமொழிகளாய்ப் பயன்தருதல். எனவே, `அருளாளர்கள் மொழியும் மொழிகள் நிறைமொழிகளாய் நின்று பயன் தருதல், இறைவனது அருளாற்றல் அம் மொழிகளில் கலந்து நின்று இயக்குதலானே` என்பது அறியப்படும். ``நல்குவோய்`` என்பது முற்று.

எனவே உலகெலாம் என்றிளைஞர் ஏச
நனவே பலிதிரிதி நாளும் சினவேங்கைக்
கார்க்கயிலை நாட களிற்றீர் உரியலாற்
போர்க்கையிலை பேசல்நீ பொய். **#1027**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``சின வேங்கைக் கார்க் கயிலை நாட`` என்பதை முதலிற் கொள்க. சின வேங்கை - புலி. கார் - மேகம். `இவைகளை யுடைய கயிலை` என்க. ``நாடு`` என்றது, `இடம்` என்றபடி. எனவே இளைஞர் - எடுத்துச் சொல்லப் புகுங்கால் உலகியலில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்கள் இகழ்ந்தே கூறும்படி `(நீ) நாளும் நனவே உலகெலாம் பலிதிரிந்து` என்க. ``நனவே`` என்றது, ``யாவரும் நன்கறியும்படி`` என்றவாறு. `அதுவன்றி, நீ போர்க்கை களிற்று உரியலால் இலை; `அங்ஙனமாக - யான் பேரைசுவரியம் உடையவன் - என்று உன்னை நீயே உயர்த்திப் பேசிக் கொள்ளுதல் வேண்டா` என்க. `ஐசுவரியம் உடையேன்` எனக்

கூறிக்கொள்ளுதல் `என் பெயர் ஈசுவரன்; (இன்னும்) மகேசுரன்` என்று சொல்லிக் கொள்ளுதல். பேசல் - பேசற்க. இனி இதனைத் தொழிற் பெயராக்கி. `நீ பேசல் பொய்` என முடிக்கினும் ஆம். அன்றி, `பேசேல்` எனப் பாடம் ஓதலும் ஆம்.

பொய்நீர் உரைசெய்தீர் பொய்யோம் பலியெனப் போனபின்னை
இந்நீள் கடைக்கென்று வந்தறி யீரினிச்
செய்வதென்னே செந்நீர் வளர்சடைத் திங்கட் பிளவொடு
கங்கைவைத்த
முந்நீர்ப் பவளத் திரட்செக்கர் ஒக்கும் முதலவனே. **#1028**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``செந்நீர் வளர்சடை`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. செந்நீர் - சிவந்த நீர்மை. செந்நிறம். `வைத்த முதல்வன்` என இயையும். `திரளினது செக்கர்` என ஆறாவது விரிக்க. ``நீர்``, ``செய்தீர்``, ``அறியீர்`` என்பன எள்ளல் பற்றி வந்த பன்மையாகலின் அவை ``முதல்வனே`` என்னும் ஒருமையோடு மயங்கின. ``பொய் நீர் உரை செய்தீர்`` என்பதை, ``செய்வது என்னே`` என்பதற்கு முன்னே கூட்டுக. பல் பொய்யோம் - நாள்தோறும் பிச்சைக்கு வருதலைப் பிழையோம். இஃது ஒருநாள் பிச்சைக்கு வந்த இறைவன் கூறியது. அங்ஙனம் கூறியதை நிறைவேற்றாமையால் `நீர் பொய் உரை செய்தீர்; செய்வது என்னே` என்றாள். கடை - தலைவாயில். இது கைக்கிளைத் தலைவி ஆற்றாமையால் தலைவனை எதிர் பெய்துகொண்டு கூறியது. ``முதலவனே`` என வந்த இதன் இறுதிச் சீர் இதன் முதல் செய்யுள் முதலோடு சென்று மண்டலித்தல் காண்க. சிவபெருமான் திருமும்மணிக்கோவை முற்றிற்று.

அதிரா அடிகள் - மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை

ஒருநெடுங் கங்கை இருங்குறும் பைம்புகர்
மும்முகச் செந்நுதி நாலிணர் வெள்நிணக்
குடற்புலவு கமழும் அடற்கழுப் படையவன்
மதலை மாமதந் துவன்றிய கதனுடைக்
கடதடக் கபோலத் தோரிட மருப்பின்
கரண்டக உதரத்து முரண்தரு குழவிதன்
சேவடி யுகளம் அல்லது
யாவையும் இலம்இனி இருநிலத் திடையே.
#1029

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதன் முதல் மூன்று அடிகளும் சிவபெருமானைக் குறித்தன. ``இருங்குறும் பைம்புக.. கழுப்படை`` என்னும் தொடர் சிவபெருமான் ஏந்தியுள்ள சூலத்தைக் குறித்தது. இருமை - கருமை. அஃது மையீறு இன்றி நின்றமையின் மெல்லினம் மிகுந்தது. குறுமை - சிறுமை. பசுமை - ஈரம். அது பகைவர் உடலில் பாய்ந்து புலராமையால் ஆயிற்று. புகர் - அழகு. நுதி - முனை. அஃது உதிரத்தால் சிவந்து நின்றது. நாலுதல் - தொங்குதல். நுதியிலே நாறுகின்ற. இணர் - கொத்தாகிய குடல் என்க. நிணம் - கொழுப்பு. குடல் பகைவ ருடையன. கமழும் - நாறுகின்ற. இவ்வளவும் சூலத்திற்கு அடை. மதலை - மகன். துவன்றுதல் - நெருங்குதல். அஃது இங்கே மிகுந்து பாய்தலைக் குறித்தது. கதன் - கதம், கோபம். கடம் - மதநீர்; தட - பெரிய, கபோலம் - கன்னம். வல மருப்புக் கயமுகாசுரனை அழிக்க ஒடிக்கப்பட்டது. ஆகலின், ``இட மருப்பின்`` என்றார். கரண்டக உதரம் - கூடை போலும் வயிறு. ``சிற்றுண்டிகள் பலவற்றால் நிரம்பி யது` என்றபடி. `கதனுடைக் குழவி. கபோலக் குழவி, மருப்பிற்குழவி, உதரத்துக் குழவி என முடிக்க. முரண் - வலிமை. யுகளம் - இணை. யாவையும் - அனைத்துப் பொருள்களின்மேல் உள்ள பற்றுக்களும் ஆகுபெயர். இதன்கண் ஒன்று முதல் நால் அளவான எண்ணலங்காரம் வந்தது. ``செந்நுதி வெள்நிணம்`` முரண் தொடை.

நிலந்துளங்க மேருத் துளங்க நெடுவான்
தலந்துளங்கச் சப்பாணி கொட்டும் கலந்துளங்கொள்
காமாரி ஈன்ற கருங்கைக் கடதடத்து
மாமாரி ஈன்ற மணி. **#1030**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தனிச்சீர் முதலாகத் தொடங்கியுரைக்க. காமாரி - காமனை அழித்தவன்; சிவபெருமான். `அன்பர்கள் உள்ளத்தில் கலந்து அவற்றை இடமாகக் கொள்கின்ற காமாரி` என்க. கருமை - பெருமை. கடம் - மதம். தட - பெருமை. `தடத்துக் கடம்` பின் முன்னாக மாற்றி யுரைக்க. கடமாகிய மாரி, உருவகம். மணி - இரத்தினம் போலும் பிள்ளை. சப்பாணி கொட்டுதல், குழந்தைகள் தங்கள் இரு கைகளையும் சேர்த்துக் கொட்டும் விளையாட்டு. `இச்சிறு பிள்ளையின் சப்பாணி கொட்டுக்கு உலகம் அதிரும்` என தன் ஆற்றலை வியந்தவாறு. `சக பாணி` ``சப்பாணி`` என மருவிற்று.

மணிசிந்து கங்கைதன் மானக் குருளையை வாளரக்கர்
அணிசிந்த வென்றஎம் ஐயர்க்க கிளங்கன்றை அங்கரும்பின்
துனிசிந்த வாய்ப்பெய்த போதகத் தைத்தொடர்ந் தோர்பிறவித்
பிணிசிந்து கான்முனை யைப்பிடித் தோர்க்கில்லை பேதுறலே. **#1031**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சிவபெருமானுக்கு மகனாகவே கங்கைக்கும் மகன் ஆயினான். மானம் - பெருமை. அரக்கர். திரிபுரத்து அசுரர். அவர் களது அணி படைகள். `இளங் கன்று` என்பதில் இளமை, பருவத்தைக் குறித்தது; குறையைக் குறித்த தன்று. துணி - துண்டு. போதகம் - யானை. தொடர்ந்தோர் - அன்பு செய்தோர். `தன்னைத் தொடர்ந் தோர்` என்க. பிணி சிந்து - நோயை அழிக்கின்ற. கான்முனை - பிள்ளை. பேதுறல் - மயங்கல். ``பேதுறல் இல்லை`` என்றது. `தெளிவு உண்டாகும்`` என்றபடி.

பேதுறு தகையம் அல்லம் தீதுறச்
செக்கர்க் குஞ்சிக் கருநிறத் தொக்கன்
நாப்பண்
புக்கவண் இரும்பொறித் தடக்கையும்
முரணிய பெருந்தோள்
கொட்ட நாவி தேவிதன்
மட்டுகு தெரியல் அடிமணந் தனமே.
#1032

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதல் அடியை, தீதுறப் பேதுறு தகையமல்லம்` என மாற்றி இறுதியில் வைத்துரைக்க. ``குஞ்சி`` என்றது சடையை. `துவக்கு` என்னும் வடசொல் `தொக்கு` எனத் திரிந்து வந்தது. `தோல்` என்பது பொருள்.

தோல், யானைத் தோல். தொக்கன் - அத்தோலைப் போர்த் திருப்பவன். ``நாப்பண்`` என்றது. `அவனுக்கும், உமைக்கும் நடுவில்` என்றதாம். பொறி - புள்ளி. தடக்கை - வளைந்த கை - தும்பிக்கை. முரணிய - மற்றைக் கைகளோடு மாறுபட. ``கொட்ட`` என்பதன்பின், `விளங்கும்` என ஒரு சொல் வருவிக்க. `நாபி` என்னும் வடசொல் `நாவி` எனத் திரிந்து வந்தது. நாபி - கொப்பூழ். அஃது ஆகுபெயராய் வயிற்றைக் குறித்தது. `வயிறு` என்னும் விதப்பால் `பெருவயிறு` என்பது பெறப்பட்டது. தே - கடவுள். `தேவாகிய இதன் அடி மணந் தனம்` என்க. தே, சொல்லால் அஃறிணையாதலின், ``இதன்`` என்றார். மட்டு உகு தெரியல் - தேனைச் சிந்துகின்ற பூமாலை. மணந்தனம் - கூடினோம். அதனால் `தீது அடைதலால் பேதுறு தகையமல்லமாயி னோம்` என்க. பேதுறல் - வருந்தல். `அல்லது` என்பது பாடம் அன்று.

மேய உருமிடற்றர் வெள்ளெயிற்றர் திண்சேனை
ஒய மணியூசல் ஆடின்றே பாய
மழைசெவிக்காற் றுந்திய வாளமர்க்கண் எந்தை
தழைசெவிக்காற் றுந்தத் தளர்ந்து.

#1033

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வாளமர்க்கண், பாய மழை செவிக் காற்று உந்திய, எந்தை தழை செவிக் காற்று உந்த, மேய ... ... திண் சேனை தளர்ந்து ஒய ஊசலாடின்று என இயைத்துக் கொள்க. உரும் - இடி. அஃது அதனோடு ஒத்த ஓசையைக் குறித்தது. ``எயிறு`` என்றது. கோரப் பல்லை. சேனை. கயமுகாசுரனுடன் வந்தது. ஓய - போரை ஒழியும்படி. மணி ஊசல் - அழகிய ஊசல் போல. ``ஆடின்று`` என்பதில் `இன்` என்பதன் ஈற்று னகர மெய் றகர மெய்யாய்த் திரியாதே நின்றது; இது முற்கால வழக்கு. ``மழை செவி`` என்பதில் `செவ்வி` என்பது இடைக்குறையாய் வந்தது. சகர ஒற்றுத் தொகுத்தல். பா - பரவிய. `பரவிய மழைச் செவ்வியை உண்டாக்கும் இயற்கைக் காற்றை வென்ற எந்தையது தழை செவிக்காற்று உந்தியதனாலே சேனை தளர்ந்து ஓய ஊசலாடின்று` என முடிக்க.

உந்தத் தளரா வளைத்தனம் முன்னம்மின் ஒடைநெற்றிச்
சந்தத் தளரா ஒருதனித் தெவ்வர்தந் தாளிரியூர்
விந்தத் தளரா மருங்குற் கிளிபெற்ற வேழக்கன்றின்
மந்தத் தளரா மலர்ச்சர ணங்கள் வழுத்துமினே. **#1034**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஊர் விந்தத்தள் - தனது இருப்பிடமாக விந்த மலையைக் கொண்டவள்; துர்க்கை - இவள் உமாதேவியின் கூறாதல் பற்றி `முருகனை இவளுக்கு மகன்` எனக் கூறுதல் போல, மூத்த பிள்ளையாரையும் `இவளுக்கு மகன்` என்றார். அரா மருங்கு - பாம்பு போலும் இடை. `இவள் பெற்ற` என்பதன்பின் ``ஓடை நெற்றிச் சந்தம்`` என்பதையும், ``தாள் இரி`` என்பதையும் கூட்டி, வேழக் கன்று`` என்பதற்கு அடையாக்குக. உந்த - வெளிப்படுத்த. தளரா வளைத்தன- தளர்ச்சியடையாது எல்லாப் பொருள்களையும் உள்ளடக்குவன வாகிய ஒளிக்கதிர்கள். முன்னம் மின் ஓடை நெற்றிச் சந்தம் - முன்னே மின்னுகின்ற பட்டத்தையுடைய நெற்றியின் அழகு. தனித் தெவ்வர் தம் தாள் இரி - ஒப்பற்ற பகைவரது முயற்சிகளைப் பின்னிட்டு ஓடும்படி ஓட்டிய. மந்தம் - மெல்ல நடக்கின்ற. (ஆயினும்) தளரா - மெலி வடையாத சரணங்கள் (பாதங்கள்) என்க. வழுத்துதல் - துதித்தல். ``வழுத்துமின்`` என்றது. `வழுத்தினால் எந்நலமும் பெறுவீர்` என்னும் குறிப்பினது.

மின்னெடுங் கொண்டல் அந்நெடு முழக்கத்து
ஒவற விளங்கிய துளைக்கைக் கடவுளை
யாம்மிக வழுத்துவ தெவனோ அவனேல்
பிறந்ததிவ் வுலகின் பெருமூ தாதை
உரந்தரு சிரமரிந் தவற்கே வரைந்தது
மேருச் சிமையத்து மீமிசை
வாரிச் செல்வன் மகள்மகன் மொழியே. **#1035**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மேகத்தின் முழக்கம் போலும் முழக்கத்துடன் என்றும் ஒரு பெற்றியனாய் விளங்கும் யானைமுகக் கடவுளை (எமக்கு அருளவேண்டி) யாம் மிகவும் துதிக்க வேண்டுவதில்லை. ஏனெனில், அவன் பிறந்தது, இவ்வுலகம் முழுவதையும் படைத்தவனது அகங் கரித்த தலையை அரிந்தவனுக்கு, எழுதியது. மேருமலையாகிய ஏட்டில் வலைஞர் தலைவன் மகளுக்கு மகனது மொழியை - என்பது இதன் திரண்ட பொருள். `தந்தையது ஆற்றல் இவனிடத்தும் உளதாதலும், வலைஞர் தலைவன் பெயரன் சொல்லத்தான் ஏடுஎழுதுவோனாய் இருந்து எழுதிய அருளாளன் ஆதலாலும், ஆற்றலும், அருளும் ஒருங்குடையோர் தம்மையடைந்த எளியவர்க்கு இரங்கியருளல் இயல் பாதலும் யாம் `உமக்கு அருளுக` என மிகவும் வேண்ட வேண்டுவதில்லை. அவனேயருளுவன் என்பதாம். வலைஞர் தலைவன் மகளுக்கு மகன் வியாத முனிவன்; அவன் மொழி

மகாபாரதம். `மகா பாரதத்தை வியாத முனிவன் சொல்ல, விநாயகப் பெருமான் சிவபெருமானது ஆணையின் வண்ணம் தாம் முன்பே ஒடித்து வைத்திருந்த தந்தத்தை எழுத்தாணியாகவும், மகாமேரு மலையை ஏடாகவும் கொண்டு எழுதினார் என்பது இவ்விதிகாச வரலாறு.

மொழியின் மறைமுதலே முந்நயனத் தேறே
கழிய வருபொருளே கண்ணே செழிய
கலாலயனே எங்கள் கணபதியே நின்னை
அலாலையனே சூழாதென் அன்பு. **#1036**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மறைமொழியின் முதல், பிரணவம். விநாயகர் பிரணவ வடிவாய் உள்ளவர். `அவர் தோன்றியதே பிரணவத்திலிருந்து` என்பது வரலாறு. * `மறை மொழியின் முதலே` என மாற்றியுரைக்க. முந் நயனம் - மூன்று கண். ஏறு - ஆண் சிங்கம். கழிய வரு பொருள் - பாசங்கள் யாவும் நீங்கிய பின் கிடைக்கும் பொருள்; முதற் கடவுள். கண்ணே - எங்களுக்குக் கண்போல இருந்து எல்லாவற்றையும் அறிவிப்பவனே. செழியகலாலயனே - பொருள் நிறைந்த கலைகளுக்கெல்லாம் இருப்பிடமாய் உள்ளவனே.

அன்பு தவச்சுற்றத் தாரழல் கொண்டெயில் மூன்றெரிய
வன்புத வத்துந்தை மாட்டுகின் றான்மதஞ் சூழ்மருப்பிற்
கன்பு தவக்கரத் தாளமிட் டோடிக் கடுநடையிட்
கின்பு தவச்சென்று நீயன்று காத்த தியம்புகவே. **#1037**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அன்பு தவச் சுற்றம் - அன்பை மிகுதியாக உடைய சுற்றம்; அது தேவர் குழாம். `அசுரர்கள் அன்பில்லாதவர்கள்` என்பது கருத்து. சுற்றத்து - சுற்றத்தால்; சுற்றம் காரணமாக. `எரிய மாட்டு கின்றான். என இயையும். `மாட்டுகின்றான்` என்றது இறந்த காலத்தில் நிகழ்காலம். எனவே, `அன்று மாட்டுகின்றான்` என்றபடி. மாட்டு கின்றான் - எரிக்கின்றான். வன்பு தவத்து - வலிமை மிகுதியால் மாட்டு கின்றான் என்க. அன்று நீ காத்தது இயம்புக - அது பொழுது (வலிமை மிகுந்த) நீ அவனுக்கு என்ன உதவி செய்தாய்? சொல்லுக. `தந்தை போரில் ஈடுபடும்பொழுது மைந்தர் அவனுக்கு உதவ வேண்டுவது முறைமையன்றோ` என்றபடி `நீ அன்று அவனுக்கு உதவியது, அவனுடைய தேரினது அச்சை முறித்ததுதானோ` எனக் குறிப்பால் பழித்தவாறு, இது பழித்தது போலப் புகழ்ந்தது. `யாவர்க்கும் முதல்வ னாகிய சிவபெருமானது தேரின்

அச்சையே நீ முறித்து விட்டாய்` என்றால், உனது ஆற்றல் முன் பிறர் ஆற்றல் என்னாம் என்பதாம். கன் புதவம் - கல்லால் ஆகிய கோபுர வாயிற் கதவு. `புதவின்கண்` என ஏழாவது விரிக்க. அரசர்கள் பகைவரது ஊரை முற்றுகையிடும் பொழுது அவர்களது கோட்டை வாயிற் கதவுகளை யானைகளை ஏவி உடைக்கச் செய்வது வழக்கம். அம்முறையில் நீயே வலிய யானை யாய் இருத்தலால் திரிபுரத்தசுரன் கோட்டை வாசலின்மேல், ``கரத் தாளமிட்டுக் கடுநடையிட்டு ஓடி இன்பு உதவச் சென்று மருப்பின் உதவியது உண்டோ` என்பதும் உடன் கூறியவாறு. மருப்பு - தந்தம்.

கவவுமணிக் கேடகக் கங்கணக் கவைவல்நா
அறைகழல் அவுணரொடு பொருத ஞான்றுநின்
புழைக்கரம் உயிர்த்த அழற்பேர் ஊதை
வரைநனி கீறி மூரி
அஞ்செறு புலர்த்தும் என்பர்
மஞ்சேறு கயிலை மலைகிழ வோயே. **#1038**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியை முதலிற் கொண்டு உரைக்க. மஞ்சு - மேகம். தந்தையது பொருள் தனயர்க்காதல் பற்றி விநாயகப் பெருமானை, ``கயிலை மலை கிழவோன்`` என்றார். உனது கேடகமும், கங்கணக்கவையும், வல் நாவும் அவுணரோடு பொருத ஞான்று என்க. கவவு மணி - முற்றிலும் நிறைந்த இரத்தினம். கேடகம் - வாளோடு ஏந்தும் பலகை. பூணினை, ``கங்கணம்`` என்றார். கவை - பிளவு. அது தந்தத்தைக் குறித்தது. வல் நா - வலிய நாக்கு. பகைவரை யானை தனது தந்தத்தால் குத்தும் பொழுது அதன் நாவும் அவர்களுக்கு ஊறு விளைவிக்கும், அவுணர், கயமுகாசுரன் படைஞர். அழல் - வெப்பம். பேர்ஊதை - பெருங்காற்று. மூரிச் சேறு - பெருஞ்சேறு; என்றது. கடலின் அடியில் உள்ள சேறு. என்பர் - என்று அறிந்தோர் கூறுவர். பிள்ளையாரது வலிமையை விளக்கியவாறு.

மலைசூழ்ந் திழிகின்ற மாசுணம்பொற் பாறைத்
தலைசூழ்ந்து தானினைப்ப தொக்கும் கலைசூழ்
திரண்டகங்கொள் பேரறிவன் திண்வயிற்றின் உம்பர்க்
கரண்டகங்கொள் காலுயிர்க்குங் கை. **#1039**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தனிச்சீர் முதலாகத் தொடங்கியுரைக்க. கலை - உடை. கலை சூழ் திரண்டு அகங்கொள் பேரறிவன் - நூல்களின் ஆய்வுகள் யாவும்

ஒருங்குகூடி தங்கள் அகத்தும் கொள்கின்ற. பெரிய அறிவு வடிவாய் உள்ளவன். உம்பர் - மேலே; உயரத்தில். கால் உயிர்க்கும் கை - மூச்சுக் காற்றை வெளிவிடும் கை; தும்பிக்கை. கரண்டகம் கொள் கால் - கூடை நிரம்பத்தக்க காற்று. `கை மாசுணம் இணைப்பது ஒக்கும்` - என முடிக்க. மலை சூழ்ந்து இழிகின்ற மாசுணம் - மலையைச் சுற்றிக் கொண்டு கீழ்நோக்கியிறங்கும் பாம்பு. பொற் பாறைத் தலை - பொற் குன்றின் உச்சி. தான். அசை. இளைப்பது - இளைப்பாறுவது. பெருமூச்சு விடுவது.

காலது கையது கண்ணது தீயது கார்மதநீர்
மேலது கீழது நூலது வெற்பது பொற்பமைதீம்
பாலது தேனது தானது மென்மொழிப் பாவைமுப்பூண்
வேலது வாளது நான்மறைக் கின்ற விடுசுடர்க்கே. **#1040**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நான் மறைக்கின்ற - நான் உள்ளத்திலே பொதிந்து வைக்கின்ற சுடர், பிள்ளையார். இதனுள் ``கையது, நூலது, வெற்பது, வேலது வாளது`` என்பவற்றில் உள்ள ``அது`` என்பன எல்லாம் பகுதிப் பொருள் விகுதிகள். ஏனைய ``காலது`` முதலியன பலவும் `அதனை உடையது` என்னும் குறிப்பு முற்று வினையாலணையும் பெயர்கள். எனவே, ``கை காலது, (தும்பிக்கை காற்றை இடையது). கண் தீயது (தீயை உடையது) மதநீர் மேலது, நூல் (முந்நூல்) அதன் கீழது, வெற்பு (மலைபோலும் திருமேனி) ``பாவையது`` என இத னிடத்தும் துவ் விகுதி விரிக்க. பாவையது - பெண்ணை (வல்ல பையை) உடையது. ``பாலது, தேனது`` என்பவற்றில் உள்ள `அது` என்பனவும் பகுதிப் பொருள் விகுதிகளே. எனவே `அதுபால்தான், தேன்அதுதான் என்னும் மெல்லிய மொழியையுடைய பாவை` என்பதாம். `வால் முப்பூண் வேல் (சூலம்)` என்க.

சுடர்ப்பிழம்பு தழைத்த அழற்றனி நெடுவேல்
சேய்மூ வுலகமும் வலம்வர வேஅக்
கொன்றையம் படலை துன்றுசடைக் கணிந்த
ஒங்கிருந் தாதையை வளாஅய் மாங்கனி
அள்ளல் தீஞ்சுவை அருந்திய
வள்ளற் கிங்கென் மனங்கனிந் திடுமே. **#1041**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நெடுவேற் சேய். முருகன். அவன் மூன்று உலகங் களையும்

சுற்றிவருவதற்குமுன் விநாயகர் தம் தாய் தந்தையரை வலம் வந்து மாங்கனியைப் பெற்று உண்ட வரலாறு நன்கறியப்பட்டது. படலை - மாலை. வளாய் - சுற்றி வந்து. அள்ளல் - சாறு.

இக்கயங்கொள் மூவலயஞ் சூழேழ் தடவரைகள்
திக்கயங்கள் பேர்ந்தாடச் செங்கீரை புக்கியங்கு
தேனாட வண்டாடச் செங்கீரை ஆடின்றே
வானாடன் பெற்ற வரை. #1042

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியை முதலிற் கொள்க. வானாடன் - சிதாகாசத் தில் உள்ளவன்; சிவபெருமான். வரை - மலை போலும் தோற்றத்தை யுடைய பிள்ளை. ``திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்` எனத் தொடங் கும் கந்த புராணக் காப்புச் செய்யுளால் விநாயகரது பேருருவ நிலையை உணர்க. `இவ் வலயம்` என இயையும். வலயம் - பூமியை வளைந்துள்ள கடல். கயம்கொள் - ஆழத்தைக் கொண்ட. மூ வலயம். மூத்த (பழமையான) வலயம்; வினைத்தொகை. ஏழ் வரைகள். ஏழு தீவுகளிலும் உள்ள மலைகள். திக் கயங்கள் - திசை யானைகள். `தட வரைகளும், திக் கயங்களும் பேர்ந்து செங்கீரை ஆடும்படி வானாடன் பெற்ற வரை செங்கீரை யாடின்று` என இயைத்து முடிக்க. `செங்கீரை யாடின்று`` என்பதை மேல் ``ஊசலாடின்று`` என்றது போலக் கொள்க. மேல் சப்பாணி கொட்டற் சிறப்புக் கூறி, இங்குச் செங்கீரை யாடற் சிறப்புக் கூறினார். தேன் - வண்டுகளில் ஒருவகை. தேனும், வண்டும் புகுந்து ஆடுதல் தான் அணிந்த கொன்றை மாலையில் என்க.

பெற்றமெல் லோதி சிலம்பின் மகள்பெறப் பிச்சுகந்த
மற்றவள் பிச்சன் மயங்கன்முன் னோன்பின் னிணைமைமிகக்
கற்றவன் ஐயன் புறங்காட் டிடைநடம் ஆட்டுகந்தோ
செற்றவெண் தந்தத் தவன்நம்மை ஆட்கொண்டு செய்தனவே. #1043

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தன்னைப் பெற்ற மெல்லோதி. மெல் ஓதி - மெல்லிய கூந்தலை உடையவள். ``சிலம்பின் மகள்`` என்றது, `மலைவாழ் சாதியினள்` என இகழ்ச்சி தோன்றக் கூறியது. மற்று, வினைமாற்று. பெற அவள் பிச்சு உகந்த பிச்சன் - தன்னைப் பெறுவதற்கு அவள் தன் கணவனாகப் பெரிதும் விரும்பப்பட்ட பித்தன். மயங்கல் முன்னோன்- பித்துக் கொள்ளியான முதியோன். (ஆயினும் அவன்) பின் இணைமை மிகக் கற்றவன் - நடனம் ஆடுதலில் வல்லவன். ஐயன் - யாவர்க்கும் தலைவன்.

அவன் புறங்காட்டிடை ஆடுதலையே விரும்புகின்ற காரணத்தால்தானோ, செற்ற வெண் தந்தத்தவன் (ஒடிக்கப்பட்ட தந்தத்தை உடையவன்) எங்களை இறவா நிலையினராகச் செய்தன! `தன் அடியவர்களைப் புறங்காடு அடையாவகை செய்து, `தன் தந்தை புறங்காட்டு ஆடுதலைத் தவிர்க்க நினைத்தான் போலும்!` என்றபடி. நடனங்களில் சில வகைகள் இணைந்து ஆடுவனவாகவும் இருத்தலின் ``இணைமை`` என்றார். `உகத்தலால்` என்பது `உகந்து` எனத் திரிந்தது. ``அஃது ஆற்றாது - எழுவாரையெல்லாம் பொறுத்து`` * என்பதிற்போல.

செய்தரு பொலம்படை மொய்தரு பரூஉக்குருளை
வெள்ளெயிறு பொதிந்த வள்ளுகிர்த் திரள்வாய்ப்
பெருந்திரட் புழைக்கை
மண்முழை வழங்கும் திண்முரண் ஏற்றின்
பனையடர்ப் பாகன் றனதி ணையடி
நெடும்பொற் சரணம் ஏத்த
இடும்பைப் பௌவம் இனிநீங் கலமே. #1044

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பொலம் படை - பொன்னால் செய்யப்பட்ட அணிகலக் குழாம். (`ஐம்படைத் தாலி` என்றல் பொருந்தாது.) கூர்மை நோக்கித் தந்தத்தை `உகிர்` என்றார். யானையின் வாயில் சிறு பற்கள் உள்ளே நிறைந்திருக்க, அதன் தற்காப்புக் கருவியாய் இரு தந்தங்கள் முன்னே நீண்டு வளரும் `அத்தகைய தந்தத்தையுடைய திரண்ட வாய்` எண் `திரள் வாயையும், புழைக் கையையும் உடைய பாகன்` எனக் கொள்க. ``மண் முழை வழங்கும் திண் முரண் ஏற்றின் பனை`` பெருச்சாளி. ஏறு - விலங்கின் ஆண். பனை - பனந் துண்டம். `ஏறாகிய பனை` என்க. இன், வேண்டா வழிச் சாரியை. இணை அடி சரணம் - இணைந்த அடியாகிய பாதம். ஏத்த - ஏத்துதலால், `இடும்பைப் பௌவம் நோக்கி இனி நீங்கலம்` என்க. `பௌவத்திற்கு` என நான்காவது விரித்துக் கொள்க. இடும்பை. பிறவித் துன்பம்.

அலங்கல் மணிகனகம் உந்தி அருவி
விலங்கல் மிசையிழிவ தொக்கும் பலன்கனிகள்
உண்டளைந்த கோன்மகுடத் தொண்கடுக்கைத் தாதளைந்து
வண்டணைந்து சோரும் மதம். #1045

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தனிச்சீர் முதலாகத் தொடங்கியுரைக்க. பலன் - பயன். மரங்களின்

பயனாகிய கனிகள். அளைந்த - திளைத்த. கடுக்கைத் தாது - கொன்றை மலரின் மகரந்தம். அளைந்து - கலந்து. அலங்கல் மணி - ஒளி வீசுதலையுடைய மணி. விலங்கல் - மலை - `கொன்றை மலரின் மகரந்தம் பொன் போலவும், வண்டுகள் நீல மணி போலவும் உள்ளன` என்பதாம்.

மதந்தந்த மென்மொழி மாமலை யாட்டி மடங்கல்கொன்றை
மதந்தந்த முக்கண் ணரற்குமுன் ஈன்றவம் மாமலைபோல்
மதந்தந்த கும்பக் குழவிமந் தாரப்பொன் னாட்டிருந்து
மதந்தந்த செம்மலன் றோவையம் உய்ய வளர்கின்றதே. **#1046**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மதம்`` நான்கில் முதலது மகிழ்ச்சி; இரண்டாவது வலிமை; மூன்றாவது மதநீர்; நான்காவது மிகுதி. மடங்கல் - நரசிங்கம். ``மடங்கல் கொன்ற`` என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை. கும்பம் - மத்தகம். மந்தாரப் பொன் நாடு - `மந்தாரம்` என்னும் தருக்களையுடைய தேவ லோகம். `தேவலோகத்தில் இருந்து தேவர் கட்குச் செல்வ மிகுதியைத் தந்த செம்மல்` என்க. இஃது அசுரர்கட்கு இடர் இழைத்தலைக் கருத்துட் கொண்டு கூறியது. தேவலோகத்தி லிருந்து `தேவர்கட்கு அருள் புரிகின்ற அந்தச் செம்மல் வையம் உய்ய இங்கும் வளர்கின்றான்` என்றபடி, வளர்கின்றது தொழிற் பெயர். எனவே, வளர்கின்றது `போற்றுதலுக்குரியது` என்பது எஞ்சி நின்ற தாம். இதன்கண் சொற்பின்வருநிலையணி வந்தது.

வளர்தரு கவட்டின் கிளரொளிக் கற்பகப்
பொதும்பர்த் தும்பி ஒழிவின் றோச்சும்
பாரிடைக் குறுநடைத் தோடி ஞாங்கர்
இட்ட மாங்கனி
முழுவதும் விழுங்கிய முளைப்பனைத் தடக்கை
எந்தை அல்லது மற்று யாவுள
சிந்தை செய்யும் தேவதை நமக்கே. **#1047**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கவடு - மிலாறுகள். `கவட்டினது` என ஆறாவதும், பொதும்பரில்` என ஏழாவதும் விரிக்க. தும்பு - தும்பிக்கை. பாரிடை- நிலவுலகத்தில். இங்கு இது கூறப்பட்டமையால் முதற்கண் ``வானிடை`` என்பது வருவித்துக் கொள்க. `குறுநடைத்தாய்` என ஆக்கம் வருவிக்க. ஞாங்கர் - அவ்விடத்து - இட்ட - அன்பர்கள் படைத்த. ``ஓச்சும், விழுங்கிய``

என்னும் இரு பெயரெச்சங்கள் அடுக்கி, ``எந்தை`` என்னும் ஒரு பெயர் கொண்டன. `விண்ணுலகத்திலும், மண்ணுலகத்திலும் உலாவியும், இருந்தும் அருள் புரிகின்ற எந்தை என்றபடி.

கேளுற்றி யான்தளர ஒட்டுமே கிம்புரிப்பூண்
வாளுற்ற கேயூர வாளரக்கர் தோளுற்
றறுத்தெறிந்து கொன்றழித்தவ் அங்கயங்கண் மீண்டே
இறுத்தெறிந்து கொன்றழித்த ஏறு. **#1048**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கிம்புரிப்பூண்`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. கிம்புரிப் பூண் கேயூரம் - யானையின் தந்தங்களில் இடுகின்ற `கிம்புரி` என்னும் பூண்போலும் கேயூரம் என்க. கேயூரம் - தோள் வளை. வாள் உற்று - ஒளி பொருந்திய. வாளரக்கர் - கொடிய அசுரர்கள் - அவர்களது தோள்களை முன்னே பற்றி அறுத்தெறிந்து அவர்களைக் கொன்றழித்துப் பின்பு, அக்கயம் கண் மீண்டு அவர் களுக்குத் தலைமை பூண்டு வந்த அந்த யானையின்மேல் (கய முகாசுரன் மேல்) பார்வையைத் திருப்பி, அவனை இறுத்து எறிந்து - துண்டுகளாக்கி வீசிக் கொன்றழித்த ஏறு (ஆண் சிங்கம். கேள் - உற்று எனக்கு உறவாகப் பொருந்தினமையால் யான் தளர ஒட்டுமோ - கொன்றழித்தல், மீமிசைச் சொல்.

ஏறு தழீஇயவெம் புத்தேள் மருகவெங் குந்தவள
நீறு தழீஇயஎண் தோளவன் செல்வவண் டுண்ணநெக்க
ஆறு தழீஇய கரதலத் தையநின் றன்னை அல்லால்
வேறு தழீஇத்தொழு மோவணங் காத வியன்சிரமே. **#1049**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஏறு தழுவியது. நப்பின்னையை மணத்தற் பொருட்டு, வெருட்டி விடப்பட்ட காளைகளை அடக்கி வென்றது. எனவே, இங்கு, ``புத்தேள்`` எனப்பட்டவன் கண்ணபிரானாயினான். அவன் சிவபிரானுக்கு அன்புடையன் ஆகலின் அவனை ``எம்புத் தேள்`` என்றார். உமாதேவி மாயோனுக்குத் தங்கையாகச் சொல்லப் படுதலின், விநாயகரை, `அவன் அவதாரமாகிய கண்ணபிரானுக்கு மருகன்` என்றார். எண் தோளவன் சிவபிரான்.

வண்டு உண்ண நெக்க ஆறு - வண்டுகள் மொய்த்து உண்ணும் படி கசிந்து ஒழுகும் மதநீர்த் தாரை. அவை இரு காதுகளினின்றும் வீழ்ந்து தோள் வழியாகக் கைகளிலும் செல்லுதலால், `அவற்றைத் தழுவிய கரதலத்தை உடையவர்` என்றார். வணங்காத வியன் சிரம் - `யாரையும்

வணங்காத பெருமையுடைய எமது தலை நின்றன்னை யல்லால் வேறொரு தெய்வத்தைப் பொருந்தி வணங்குமோ` என்க.

சிரமே
விசும்பு போத உயரி இரண்
டசும்பு பொழி யும்மே
கரமே
வரைத்திரண் முரணிய இரைத்து விழும்மே
புயமே
திசைவிளிம்பு கிழியச் சென்று செறிக்குமே
அடியே
இடும்தொறும் இவ்வுல கம்யெபரும்மே
ஆயினும்
அஞ்சுடர்ப் பிழம்பு தழீஇ
நெஞ்சகத் தொடுங்குமோ நெடும்பணைச் சூரே. **#1050**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நெடும் பணைச் சூர்`` என்பதை முதலில் வைத்து, அதன்பின், `அதனது` என்பது வருவித்து அதனை ``சிரம்`` முதலிய வற்றோடு இயைத்து உரைக்க. நெடும் பணைச்சூர் - நெடுக உயர்ந்த, பருத்த, அச்சம் தரும் தெய்வம் ஒன்று. விசும்பு போத உயரி - ஆகாயம் நிறையும்படி உயர்ந்து. அசும்பு - கசிவு; மதநீர். அஃது இரு காதுகள் வழி ஒழுகுதலால், ``இரண்டு அசும்பு பொழியும்`` என்றார். முரணிய- மாறுபடும்படி. ``இரைத்து விழும்`` என்றதனால், கரம், தும்பிக்கை யாயிற்று. செறிக்கும் - அடைக்கும். இடுந்தொறும் - பெயர்த்து வைக்குந்தோறும். அம் சுடர்ப்பிழம்பு தழீஇ - அழகிய தீயினது உருவம் போன்ற தோற்றத்தைப் பொருந்தி. ``அழகிய`` என்றதனால் தோற்றம் மாத்திரையே தீப்போலும் தன்மையுடையதன்றிச் சுடுதல் இன்மை பெறப்பட்டது. `அவற்றொடும் எம் நெஞ்சகத்து ஒடுங்கும்` என முடிக்க. ஓகாரம் வியப்புக் குறிப்பு. இதனால் பிள்ளையாரது பேருருவத் தோற்றம் இனிது விளங்கும்.

சூர்தந்த பொற்குவட்டின் சூளிகையின் வானயிர்த்து
வார்தந் தெழுமதியம் மன்னுமே சீர்தந்த
மாமதலை வான்மதியங் கொம்பு வயிறுதித்த
கோமதலை வாண்மதியங் கொம்பு. **#1051**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தனிச்சீர் முதலாகத் தொடங்கியுரைக்க. சீர் தந்த மா மதலை -

தந்தையாகிய மலையரையனுக்குப் புகழைத்தந்த பெருமையையுடைய மகள். வான்மதி - மிகுந்த ஞானமே வடிவானவள். அம் கொம்பு - அழகிய பூங்கொம்பு போன்றவள்; உமை. அவள் வயிற்றின்கண் உதித்த கோ மதலை - தலை மகன், விநாயகர் கடவுள். அவன் முடியில் அணிந்த வாள் மதிக்கொம்பு - ஒளி பொருந்திய பிறைக் கீற்று. சூர் தந்த பொற்குவட்டின் சூளிகையின் அயிர்த்து - `அச்தத்தைத் தரும் பொன்மலையினது சிகரத்தின் நெற்றி` என மருண்டு. வார்தந்து எழுவான் மதியம் மானும் - ஊர்தலை மேற் கொண்டு தோன்றிய வானப் பிறையை ஒக்கும். பிள்ளையார் தமது திருமுடியில் அணிந்துள்ள பிறை அம்முடியை வானத்தில் செல்லும் பிறை. `பொன்மலையின் சிகரம்` என மயங்கி வந்து பொருந்தியது போல் உள்ளது என்பதாம். இது தற்குறிப் பேற்றமும், மயக்க அணியும் சேர்ந்து வந்த சேர்வையணியாகும்.

பட்டினத்து அடிகள் - கோயில் நான்மணிமாலை

பூமேல் அயனறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவோம் பாமேவும்
ஏத்துகந்தான் தில்லை இடத்துகந்தான் அம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை. #1052
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மோலி - மௌலி; கிரீடம்.
புறத்தது - மேலே சென்றுள்ளது.
அடிமுடி தேடிய வரலாற்றில் சிவபெருமானது முடி அயனால் அறியப்படாமை கூறப்படுதலின் சிவபெருமானது மகுடத்தை, ``அயன் அறியா மோலி`` என்றார்.
``புறத்தது`` என்பதன் பின், `ஆயின்` என்பது வருவிக்க.
``நாமே`` என்னும் வினாநிலை ஏகாரம் நாம் நாட்டுவேம் ஆகாமையைக் குறித்து நின்றது.
பா மேவும் ஏத்து - `பா` என்னும் உறுப்புப் பொருந்திய இவ்வாறான செய்யுளே.
``பாட்டு`` எனப் பெயர் பெறும்.
எனவே, துதிகளில் பாட்டாய் அமையும் துதிகளே இறைவனுக்கு மிக்க விருப்பத்தைத் தரும் துதி யாதல் பெறப்பட்டது.
``இடம்`` என்றது ஊரை, ``இடத்தை`` என்பதில் சாரியை நிற்க உருபு தொக்கது, `அந்த இடத்தில் அம்பலத்தே கூத்து உகந்தான்` என்க.
கொற்றம் - வெற்றி.
`குடை அயன் அறியா மோலிப் புறத்த தாயின், அதன் அளவை நாமே புகழ்ந்து நாட்டுவோம்` என வினை முடிக்க.
தில்லையம்பலக் கூத்தப் பெருமானது கொற்றக் குடையின் சிறப்புணர்த்தியவாறு.

குடைகொண்டிவ் வையம் எலாங்குளிர்
வித்தெரி பொற்றிகிரிப்
படைகொண் டிகல்தெறும் பார்த்திவர்
ஆவதிற் பைம்பொற்கொன்றைத்
தொடைகொண்ட வார்சடை அம்பலத்
தான்தொண்டர்க் கேவல்செய்து
கடைகொண்ட பிச்சைகொண் டுண்டிங்கு
வாழ்தல் களிப்புடைத்தே. #1053
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

எரி - காய்கின்ற, பொன் - அழகு, திகிரிப் படை - சக்கராயுதம்.
இகல்தெறும் - பகைவரை அழிக்கின்ற.
பார்த்திவர் - அரசர்.
பொற்கொன்றை - பொன்போலும் கொன்றை.
தொடை - மாலை.
கடை - தலைவாயில்.
அரசர் வாழ்வாயினும் உலக வாழ்வு கவலைகள் பலவுடையதாயும், ஒன்றும் இல்லாதவராயினும் அடியவர் வாழ்வு கவலையற்ற அமைதி வாழ்வாயும் இருத்தல் பற்றி, `அடியவர் வாழ்வே மகிழ்வைத் தருவது` என்றார்.
தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது *
எனத் திருவள்ளுவரும் கூறினார்.

களிவந் தமுதூறிக் கல்மனத்தை எல்லாம்
கசியும் படிசெய்து கண்டறிவார் இல்லா
வெளிவந் தடியேன் மனம்புகுந்த தென்றால்
விரிசடையும் வெண்ணீறும் செவ்வான மென்ன
ஒளிவந்த பொன்னிறமும் தொல்நடமும் காட்டும்
உடையான் உயர்தில்லை அம்பலமொன் றல்லால்
எளிவந் தினிப்பிறர்பாற் சென்றவர்க்குப் பொய்கொண்
டிடைமிடைந்த புன்மொழியால் இச்சையுரை யோமே. **#1054**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வெளியாய்` என ஆக்கம் வருவிக்க.
கண்டறிவர் இல்லா வெளி, அருள் வெளி, ``களி வந்து`` என்பதில் ``வந்து`` என்னும் செய்தென் எச்சம் `வந்தபின்` என்பதன் திரிபு ``விரிசடையும் .
காட்டும் அம்பலம், களிவந்து.
அடியேன் மனம் புகுந்தது என்றால் (அஃது ஒன்றை உரைத்தல் அன்றி, இனிப் பிறர்பால் சென்று எளிவந்து பொய்கொண்டு.
இச்சையுரையோம்`` என இயைத்து முடிக்க.
வரையறையின்மையின் சில சீர்கள் ஓரசை குறைந்து வந்தன அன்றி, ஒற்றளபெடையாகப் பாடம் ஓதலும் ஆம்.

உரையின் வரையும் பொருளின் அளவும்
இருவகைப் பட்ட எல்லையும் கடந்து

தம்மை மறந்து நின்னை நினைப்பவர்
செம்மை மனத்தினும் தில்லைமன் றினும்நடம்
ஆடும் அம்பல வாணா நீடு

குன்றக் கோமான் தன்திருப் பாவையை
நீல மேனி மால்திருத் தங்கையைத்
திருமணம் புணர்ந்த ஞான்று பெருமநின்
தாதவிழ் கொன்றைத் தாரும் ஏதமில்
வீர வெள்விடைக் கொடியும் போரில்

தழங்கும் தமருகப் பறையும் முழங்கொலித்
தெய்வக் கங்கை ஆறும்பொய்நீர்
விரையாக் கலியெனும் ஆணையும் நிரைநிரை
ஆயிரம் வகுத்த மாயிரு மருப்பின்
வெண்ணிறச் செங்கண் வேழமும் பண்ணியல்
வைதிகப் புரவியும் வான நாடும்
மையறு கனக மேருமால் வரையும்
செய்வயல் தில்லை யாகிய தொல்பெரும் பதியுமென்று
ஒருபதி னாயிரந் திருநெடு நாமமும்
உரிமையிற் பாடித் திருமணப் பந்தருள்

அமரர் முன்புகுந் தறுகு சாத்திநின்
தமர்பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்து
என்னையும் எழுத வேண்டுவன் நின்னருள்
ஆணை வைப்பிற் காணொணா அணுவும்
வானுற நிமிர்ந்து காட்டும்
கானில்வால் நுளம்பும் கருடனா தலினே. **#1055**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

\`சொல்லுலகம், பொருளுலகம்\` என இருவகைப்பட்ட உலகங்களையும் கடந்தவன் இறைவன் என்பார் \`\`உரையின் வரையும்.

.

கடந்து\`\` என்றார்.

\`\`தாம்\`\` என்றது உயிர்களை, நினைத்தல், இங்கு உணர்தல்.

உயிர்கள் தம்மை உணரும் உணர்வு \`யான்\` என்றும் \`எனது\` என்றும் இருவகையாக நிகழும்.

இவ்விரு வகை உணர்வு உள்ள பொழுது இறைவனை உணர்வு நிகழாது

ஆகலின், ``தம்மை மறந்து நின்னை நினைப்பவர்` என்றார்.
``அவரது உணர்வே செம்மை யுணர்வு`` என்றமையால், `தம்மை நினைந்து இறைவனை மறக்கும் உணர்வு கோட்டம் உடைய உணர்வு` என்பதும், `அவர் மனத்தில் இறைவன் நிற்றல் இல்லை` என்பதும் போந்தன.
சிறைவான் புனல்தில்லைச் சிற்றம் பலத்தும் என்
சிந்தையுள்ளும்
உறைவான் *
என்றவாறே, ``செம்மை மனத்தினும், தில்லை மன்றினும் - நடம் ஆடும் அம்பலவாண`` - என்றார்.
தாது - மகரந்தம்.
தார் - மாலை.
தழங்கும்- ஒலிக்கின்ற.
தமருகம் - உடுக்கை.
சிவபெருமானது ஆணை, `விரையாக்கலி` எனப்படும்.
`இரு ஆயிரம் வகுத்த மருப்பு` என்க.
கயிலையில் இருக்கும் சிவபெருமானது யானை `அயிராவணம்` என்னும் பெயரையும், இரண்டாயிரம் தந்தங்களையும் வெள்ளை நிறத்தையும் உடையது.
வைதிகப் புரவி - வேதமாகிய குதிரை.
இவைகளே திரிபுரத்தேர் மேல் சென்ற காலத்தில் அத்தேரையிழுத்தன.
தார் - மாலை.
மாலை, கொடி, பறை, யாறு, ஆணை, யானை, குதிரை, நாடு, மலை, ஊர் - இப்பத்தும் ``தசாங்கம்`` எனப் பெயர்பெறும்.
தலைவன் ஒருவனைப் புகழ்வோர் அவனுக்கு உரிய இப்பத்தினையும் புகழ்தல் மரபு.
இதனைத் திருவாசகத்துட் காண்க.
`அமரருக்கு முன்னே புகுந்து` என்க.
``நறுமுறு தேவர் கணங்களெல்லாம் நம்மிற் பின்பல்லது எடுக்க லொட்டோம்`` என்னும் திருவாசகத்தைக் காண்க.
`அறுகு எடுத்தல்` என்பது மங்கலம் கொள்வார்க்கு அறுகம்புல் கொண்டு செய்யப்படும் ஒரு சடங்கு.
அஃது இறைவழிபாட்டின் பகுதியாய் வழங்கும்.
அருக்கியம் முதலியன கொடுத்தலும் இவ்வாறு அமையலாம்.
மேற்குறித்த அத்திருவாசகத்தில், ``அறுகெடுப்பார் அயனும், அரியும் - அன்றி மற்று இந்திரனோடு அமரர்`` என வந்தமை காண்க.
தமர் - சுற்றத்தார்; அடியவர்.

மங்கல வினை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்தல், வரிசையளித்தல் முதலியன செய்தோரது பெயர்களை ஏட்டில் முறையாக எழுதிக்கொண்டு பின்பு அவர்கட்கு மங்கலம் பெற்றோர் சிறப்புச் செய்தல் வழக்கம்.
அம்முறை பற்றி, `யான், இப்பிறப்பில் இன்று உள்ளது போல அன்று இருந்திலேன் ஆயினும், ஏதோ ஒரு வகைப் பிறப்பில் அன்று நின் திருமண நிகழ்ச்சியில் இருந்துதான் இருப்பேன்; ஆகையால், என்றும் என்னை எவ்வகையிலும் அறிபவனாகிய நீ நின் திருமண நிகழ்ச்சியில் இருந்துதான் இருப்பேன்; ஆகையால், என்றும் என்னை எவ்வகையிலும் அறிபவ னாகிய நீ நின் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமர் பெயர் களை எழுதிய வரி நெடும் புத்தகத்து என் பெயரையும் எழுதிக் கொள்ளல் வேண்டும்.
ஏனெனில், நினது அருளாணை தரப்படுமாயின் சிறிய அணுவும் பெரிய மலையாகிவிடும்.
தாழ்ந்த கொசுகும் உயர்ந்த கருடன் ஆகிவிடும் ஆதலின்` என்றார்.
``அணுவும் மலையாம்; கொசுகும் கருடனாம்`` என்றதனால், `அன்று நான் இழிந்த பிறப்பிலே இருந்தேனாயினும் உனது அருள்கூடின் உன் அடியார் கூட்டத்தில் ஒருவனாகியிருப்பேனன்றோ` என வினவியவாறு.
``என்`` என்றது, `என் பெயர்` என்னும் பொருட்டு ஆதலின் ஆகுபெயர்.
கானில்வாய்- காட்டில் பொருந்திய.
நுளம்பு - ஒருவகைக் கொசுகு.

ஆதரித்த மாலும் அறிந்திலனென் றஃதறிந்தே
காதலித்த நாயேற்குங் காட்டுமே போதகத்தோற்
கம்பலத்தான் நீள்நாக கங்கணத்தான் தென்புலியூர்
அம்பலத்தான் செம்பொன் அடி. **#1056**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஆதரித்த மால் - அன்பு செய்து வழிபட்ட திருமால்.
அவன் அறியாது போயது, தன்முனைப்பால் காண முயன்றதனாலாம்.
`தனையறிந்தவன் ஆதலின், அன்பு மட்டுமே செய்து நிற்கின்ற நாயேற்குத் தன் அடியைக் காட்டியே தீர்வான்` என்றபடி.
இதனால், `எத்தகையோரும் தன் முனைப்புக் கொண்டவழிச் சிவனைக் காண மாட்டார்` என்பது போந்தது.
போதகம் - யானை.
`அம்பலத்தான், அஃது அறிந்து தன் செம்பொன் அடியை நாயேற்குக் காட்டும்` என இயைப்பினும் ஆம்.
இவ்வாறு இயைப்பின் யான் தன்முனைப்புக் கொண்டிலேன் என்பது

குறிப்பாற் பெறப்படும்.

அடியொன்று பாதலம் ஏழிற்கும்
அப்புறம் பட்டதிப்பால்
முடியொன்றிவ் வண்டங்கள் எல்லாம்
கடந்தது முற்றும்வெள்ளைப்
பொடியொன்று தோளெட்டுத் திக்கின்
புறத்தன பூங்கரும்பின்
செடியொன்று தில்லைச்சிற் றம்பலத்
தான்தன் திருநடமே.

#1057

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அடி ஒன்று`` என்பதில் ``ஒன்று`` என்றது சாதி பற்றி.
செடி ஒன்று - புதர் பொருந்திய தில்லை என்க.
``நடம்`` என்பது ஆகுபெயராய் அதன் இயல்பை உணர்த்திற்று.
இதன்பின் `இது` என்னும் பயனிலை எஞ்சி நின்றது.
நடனத்தின் பெருமையை விளக்கியவாறு.

நடமாடி ஏழுலகம் உய்யக் கொண்ட
நாயகரே நான்மறையோர் தங்க ளோடும்
திடமாட மதில்தில்லைக் கோயில் கொண்ட
செல்வரே உமதருமை தேரா விட்டீர்
இடமாடி இருந்தவளும் விலக்கா விட்டால்
என்போல்வார்க் குடன்நிற்க இயல்வ தன்று
தடமாலை முடிசாய்த்துப் பணிந்த வானோர்
தஞ்சுண்டா யங்கருநீர் நஞ்சுண்டீரே.

#1058

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது, சிவபெருமான் நஞ்சுண்ட கருணையைப் பழிப்பதுபோலப் புகழ்ந்தது, உமது அருமையைத் தேராது (ஆராயாது) விட்டீர்.
`உமக்குப் பின் உம்மோடு ஒப்பார் பிறர் கிடைப்பரோ` என்பதை நீர் எண்ணிப் பார்க்கவில்லை - என்றபடி.
நல்ல வேளையாக உமையவள் அந்த நஞ்சினை உமது கண்டத்திலே நிறுத்தித் தடுத்திராவிட்டால் என்ன நிகழ்ந்திருக்கும்? என்னைப் போல்வார் அதனை (கண்டத்தில் தடுத்து நிறுத்துதலை)ச் செய்தல் இயல்வதன்று என்க.

தஞ்சம், அம்முக் குறைந்து, ``தஞ்சு`` என நின்றது.
தஞ்சம் - அடைக்கலம் புகுதல்.
உண்ட - அதனை உடைத்தாய் இருந்த.
ஆயம் - கூட்டம்.
கருதி - `பிழைக்க வேண்டும்` என எண்ணி.
``உண்டீரே`` என்னும் தேற்றே காரம் வெளிப்படைப் பொருளில் பழித்தலையும்.
குறிப்புப் பொருளில் புகழ்தலையும் குறிக்கும்.
தான்புக்கு நட்டம் பயன்றிலனேல் தரணியெலாம்
ஊன்புக்க வேற்காளிக்கு ஊட்டாங்காண் சாழலோ
என்றார் ஆகலின், `நடம் ஆடி ஏழ் உலகும் உய்யக் கொண்ட நாயகரே``
என்றார்.

நஞ்சுமிழ் பகுவாய் வெஞ்சின மாசுணம்
தன்முதல் முருக்க நெல்முதற் சூழ்ந்த
நீர்ச்சிறு பாம்புதன் வாய்க்கெதிர் வந்த
தேரையை வவ்வி யாங்கி யான்முன்
கருவிடை வந்த ஒருநாள் தொடங்கி

மறவா மறலி முறைபிறழ் பேழ்வாய்
அயில்தலை அன்ன எயிற்றிடைக் கிடந்தாங்
கருள்நனி இன்றி ஒருவயி றோம்பற்குப்
பல்லுயிர் செகுத்து வல்லிதின் அருந்தி
அயர்த்தனன் இருந்த போதும் பெயர்த்துநின்று
எண்டோள் வீசிக் கண்டோர் உருகத்
தொல்லெயில் உடுத்த தில்லை மூதூர்
ஆடும் அம்பலக் கூத்தனைப்
பாடுதல் பரவுதல் பணிதலோ இலமே. **#1059**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டின் உண்மைப் பாடம் விளங்கவில்லை.
மக்கள் யாவரும் கருவில் தோன்றியது முதலே கூற்றுவன் வாயில் இருப்பவர் ஆகின்றனர்.
அதை நினையாமல் அவர்கள் வயிறு வளர்த்தற்குப் பிற உயிர்களைக் கொல்கின்றனர்.
இது நஞ்சுடைய நாகத்தின் வாயில் தனது வால் அகப்படப்பட்ட நீர்ப்பாம்பு வயல் நீரில் வாழ்கின்ற தவளையைப் பிடித்து விழுங்க முயல்வதை ஒக்கும்.

அடி *10*-ல் ``இருந்தும் போலும்`` எனக் காணப்படுவது பாடம் அன்று. `இருந்த போதும்` என்பது பாடமாயின், ஈற்றடியில் ``பணிதலோ விலனே`` எனப் பாடம் கொண்டு, `இவைகளை யான் ஒழிந்திலேன்` எனவும், ``இருந்தேன் போலும்`` என்பது பாடமாயின் `பாடுதல் முதலியவற்றைச் செய்திலேனாய் இருந்தேன்` எனவும் பொருள் கொள்ளுதல் வேண்டும் போலும் என்பது அசையாகும்.
முருக்க - அழிக்க.
நெல் - நெற்பயிர்.
மறலி - கூற்றுவன்.
`என்னை மறவா மறலி` என்க.
அயில் தலை அன்ன எயிறு - வேலின் முனை போன்ற கூர்மையையுடைய பற்கள்.
அருள் - உயிர்களின் மேல் இரக்கம்.
``நனி`` என்பது இன்மையைச் சிறப்பித்தது.
அயர்த்தல்- மறத்தல்.

இலவிதழ்வாய் வீழ்வார் இகழ்வார் அவர்தம்
கலவி கடைக்கணித்தும் காணேன் இலகுமொளி
ஆடகஞ்சேர் அம்பலத்தே ஆளுடையார் நின்றாடும்
நாடகங்கண் டன்பான நான். **#1060**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அவர்தம் கலவி கடைக் கணித்தும் காணேன்`` என்பதை இறுதிக்கண் கூட்டியுரைக்க.
இலவு இதழ் - இலவ மரத்தின் காய்போலும் சிவந்த இதழ்.
வாய், ஏழன் உருபு.
வீழ்வார் - விருப்பம் வைப்பார்.
`சிலர் வீழ்வார்; சிலர் இகழ்வார்; நான் அதைக் கடைக் கண்ணாலும் பார்க்க மாட்டேன்.
எனவே, `விரும்புவதோ, இகழ்வதோ - எதுவும் இலேன்` என்பதாம்.
இவ்வாறு இருத்தலே `புறக்கணித்தல்` எனப்படும்.
அவர் - அத்தகைய இதழினையுடைய மகளிர்.
ஆடகம் - பொன்.
`நான், கலவி கடைக்கணித்தும் காணேன்` என வினை முடிக்க.
இதனால் திருநடனத்தின் ஆனந்தத்தது சிறப்புக் கூறப்பட்டது.

நானே பிறந்த பயன்படைத்
தேன் அயன் நாரணனெம்
கோனே எனத்தில்லை அம்பலத்

தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகியென்
தீமையெல் லாமறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத்
தேவந்து சந்திக்கவே.
1 #1061
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நானே பிறந்த பயன் படைத்தேன்`` என்பதை இறுதிக்கண் கூட்டியுரைக்க.
`எம் கோனே` என்று சொல்லித் துதிப்பவர் அயனும்,மாலும்.
என - என்று துதிக்கும்படி.
``தேன்`` என்றது சிவ பெருமானை.
``தேனே`` என்னும் பிரிநிலை ஏகாரம், `யான் வேண்டாமல் இருக்கவும் தானாகவே திருவுள்ளம் செய்தான்` எனப் பொருள் தந்தது.
`தானே திருவுள்ளம் செய்து, தானே புகுந்தான்` என்க.

சந்து புனைய வெதும்பி மலரணை
தங்க வெருவி இலங்கு கலையொடு
சங்கு கழல நிறைந்த அயலவர்
தஞ்சொல் நலிய மெலிந்து கிளியொடு
பந்து கழல்கள் மறந்து தளிர்புரை
பண்டை நிறமும் இழந்து நிரையொடு
பண்பு தவிர அனங்கன் அவனொடு
நண்பு பெருக விளைந்த இனையன
நந்தி முழவு தழங்க மலைபெறு
நங்கை மகிழ அணிந்த அரவுகள்
நஞ்சு பிழிய முரன்று முயலகன்
நைந்து நரல அலைந்த பகிரதி
அந்தி மதியொ டணிந்து திலைநகர்
அம்பொன் அணியும் அரங்கின் நடம்நவில்
அங்கண் அரசை அடைந்து தொழுதிவள்
அன்று முதல் எதிர்இன்று வரையுமே.
#1062
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நந்தி முழவு தழங்க`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.

தழங்க - ஒலிக்க.
`நஞ்சு விழிய முரன்று` என இயைத்து.
``முரன்று`` என்பதையும் ஏனையவற்றோடு இயைய, `முரல` எனத் திரிக்க.
முரல - மூச்சொலி செய்ய.
நரல - ஒலம் இட.
`முழுவு தழங்க, நங்கை மகிழ, அரவுகள் நஞ்சு பிழிய.
முரல, முயலகன் நைந்து நரல நடம் நவில் அரசு` என்க.
பிழிய - வெளிப்பட.
எதிர் இன்று - `அன்று` எனக் குறிக்கப்பட்ட அந்த நாளுக்கு எதிராய் வந்த இந்தநாள்.
`இவள் வெதும்பி, வெருவி, கழல, மெலிந்து, மறந்து, இழந்து, தவிர, பெருக நிற்றலால் விளைந்தன இனையன` என இயைத்து வினை முடிக்க.
சந்து புனைய - (உடல் வெப்பத்தைத் தணித்தற் பொருட்டு யாம் - தோழியர்) சந்தனத்தைப் பூச `அதனால் மேலும் வெதும்பி` என்க.
மலர் அணை முள்போலத் தோன்றுதலால் வெருவினார்.
கலை - உடை.
சங்கு - சங்க வளையல்.
அயலவர் சொல், அலர்.
நலிய - வருத்த, ``கிளியொடு`` என்னும் ஒடு எண் ஒடு.
நிறை - நெஞ்சுரம்.
பண்பு பெண் தன்மையாகிய நாணம், அனங்கன் - மன்மதன்.
அவனொடு நண்பு பெருகுதலாவது, `ஒன்று என்மேல் இன்சொற் சொல்லி வேண்டுதல், ``பெருக`` என்னும் வினையெச்சம் காரணப் பொருட்டாகலின், அதற்கு, `பெருக நிற்றலால்` என உரைத்தல் பொருந்துவதாயிற்று.
`இனையனவே` என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுக்கப்பட்டது.
அதனால் `இவை விளைந்ததைத் தவிரக் கண்ட பயன் ஏதும் இல்லை` என்பது போந்தது.
இது கைக்கிளைத் தலைவியது வேறுபாடு கண்டு வினவிய செவிலிக்குத் தோழி பட்டாங்குச் சொல்லி அறத்தொடு நின்றது.
பகிரதி - கங்கை.
`தில்லை` என்பது சந்தம் நோக்கி இடைக் குறைந்து நின்றது.
`தொழுத` என்னும் பெயரெச்சத்தின் ஈறு தொகுத்தலாயிற்று.

வரையொன்று நிறுவி அரவொன்று பிணித்து
கடல்தட ஆகம் மிடலொடும் வாங்கித்

திண்டோள் ஆண்ட தண்டா அமரர்க்
கமிர்துணா அளித்த முதுபெருங் கடவுள்
கடையுகஞ் சென்ற காலத்து நெடுநிலம்
ஆழிப் பரப்பில் ஆழ்வது பொறாஅ
தஞ்சேல் என்று செஞ்சே லாகித்தன்
தெய்வ உதரத்துச் சிறுசெலுப் புரையில்
பௌவம் ஏழே பட்டது பௌவத்தோ
டுலகு குழைத் தொரு நாள் உண்டதும்

உலகம் மூன்றும் அளந்துழி ஆங்கவன்
ஈரடி நிரம்பிற்றும் இலவே தேரில்
உரைப்போர்க் கல்ல தவன்குறை வின்றே
இனைய னாகிய தனிமுதல் வானவன்
கேழல் திருவுரு ஆகி ஆழத்

தடுக்கிய ஏழும் எடுத்தனன் எடுத்தெடுத்து
ஊழி ஊழி கீழுறக் கிளைத்தும்
காண்பதற் கரியநின் கழலும் வேண்டுபு
நிகில லோகமும் நெடுமறைத் தொகுதியும்
அகில சராசரம் அனைத்தும் உதவிய

பொன்னிறக் கடவுள் அன்ன மாகிக்
கண்டி லாதநின் கதிர்நெடு முடியும்
ஈங்கிவை கொண்டு நீங்காது விரும்பிச்
சிறிய பொதுவின் மறுவின்றி விளங்கி
ஏவருங் காண ஆடுதி அதுவெனக்

கதிசயம் விளைக்கும் அன்றே அதிசயம்
விளையாதும் ஒழிந்த தெந்தை வளையாது
கல்லினும் வலிஅது நல்லிதிற் செல்லாது
தான்சிறி தாயினும் உள்ளிடை நிரம்ப
வான்பொய் அச்சம் மாயா ஆசை

மிடைந்தன கிடப்ப இடம்பெறல் அருமையில்
ஐவர் கள்வர் வல்லிதிற் புகுந்து
மண்மகன் திகிரியில் எண்மடங்கு கழற்ற
ஆடுபு கிடந்த பீடில் நெஞ்சத்து

நுழைந்தனை புகுந்து தழைந்தநின் சடையும்
செய்ய வாயும் மையமர் கண்டமும்
நெற்றியில் திகழ்ந்த ஒற்றை நாட்டமும்
எடுத்த பாதமும் தடுத்தசெங்கையும்
புள்ளி ஆடையும் ஒள்ளிதின் விளங்க
நாடகம் ஆடுதி நம்ப கூடும்

வேதம் நான்கும் விழுப்பெரு முனிவரும்
ஆதி நின்திறம் ஆதலின் மொழிவது
பெரியதிற் பெரியை என்றும் அன்றே
சிறியதிற் சிறியை என்றும் அன்றே
நிறைபொருள் மறைகள் நான்கும்நின் அறைகழல்

இரண்டொடும் அறிவினில் ஆர்த்து வைத்த
மறையவர் தில்லை மன்றுகிழ வோனே

#1063

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நம்ப, மன்று கிழவோனே`` என்பவற்றை முதற்கண் கூட்டுக.
``கடவுள்`` என்பதும் அவற்றை அடுத்து நிற்கும் விளி.
தட ஆகம் - விசாலித்த உடம்பு.
`ஆகத்தில்` என உருபு விரிக்க.
மிடல் - வலிமை.
ஆண்ட - பயன்படுத்திய.
தண்டா - நீங்காத.
``கடையுகஞ் சென்ற`` என்பது முதல் ``குறைவின்றே`` என்பது முடிய உள்ள பகுதி திருமாலின் சிறப்புக் கூறியது.
``கடையுகம்`` என்பதை `யுகக் கடை` என மாற்றிக் கொள்க.
சேல் - மீன்.
``செஞ்சேல்`` என்பதில் செம்மை செப்பத்தைக் குறித்தது.
``ஆகியபின்`` என்பது `ஆகி` எனத் திரிந்து நின்றது.
`ஏழும்` என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று.
ஏகாரம் தேற்றம்.
``பட்டது`` என்னும் ஒருமை அத்தொழில் மேல் நின்றது.
`படுத்தது` என்பது விகுதிகுன்றி, ``பட்டது`` என நின்றது.
ஓர் உக முடிவில் `சோமுகன்` என்றும் அசுரன் வேதத்தைக் கவர்ந்து கொண்டு கடலுள் ஒளிந்து கொள்ள திருமால் அவனை அழித்தற்குக்

கொண்ட அவதாரமாகிய மச்சத்தின் வாய்க்குள் ஏழு கடல்களும் அடங்கி விட்டன` என அதன் பெருமை கூறியவாறு.
இதன் பின் உலகம் உண்டதும், மூவுலகையும் ஈரடியாலே அளந்ததும் ஆகிய திருமால் பெருமையையே கூறினார்.
`ஒருநாள் உண்டதும் பௌவத்தோடு உலகு குழைத்து` என்க.
`இத்தகைய பெருமைகளை உடையனாயினும் பிறத்தல், இறத்தல் முதலிய குறைகளையும் அவன் உடையனாயினும் அவற்றைப் பலர் அறியார்` என்றற்கு ``உரைப்போர்க்கல்லது அவன் குறைவு இன்றே`` என்றார்.
உரைப்போர் - உணர்ந்து சொல்வோர்.
கேழல் - பன்றி.
கிளைத்தல் - தோண்டுதல்.
நிகிலம், அகிலம் - எஞ்சுதல் இன்மை.
சரம் - இயங்கியற் பொருள, அசரம் - நிலையியற் பொருள்,பொன்னிறக் கடவுள் - இரணியகருப்பன்; பிரம தேவன்; இங்குக் கூறிய பெருமைகளை யெல்லாம் உடைய பெரிய தேவர்களாகிய மாலும், அயனும் வேற்றுருக் கொண்டு ஊழி ஊழி தேடியும் அறியப்படாத, எல்லை காண்பரிய அடியும், முடியும் தில்லையில் ஒரு சிறிய மன்றினுள் ஆடுதல் எனக்கு அதிசயத்தை விளைக்கின்றது.
ஆயினும் அதிசயம் விளைக்கவும் இல்லை.
ஏனெனில், அம்மன்றினும் மிகச் சிறியதும், ஆயினும் அசுத்தப் பொருள்களை மிக உடையதும், அதனோடும் கூட, ஒருவர் அல்லர்; ஐவர் கள்வரால், ஒருவன் குயவன் சுழற்றுகின்ற அச்சக்கரத்தின் வேகம்போல எண்மடங்கு வேகத்துடன் சுழலும்படி சுழல்வதுமாகிய என் நெஞ்சினுள்ளே நுழைந்து உனது உறுப்புக்களெல்லாம் நன்கு விளங்க ஆடுகின்றாய்; (இது அதிசயம் விளையாமைக்குக் காரணம், இரண்டும் மிக மிக அதிசயமேயாகலின் அதிசயம் விளையாமற்போகவும் இல்லை.
) இதனாலன்றோ உன்னைப் ``பெரியதினும் பெரியை`` என்றும், ``சிறியதினும் சிறியை`` என்றும் வேதங்களும் சொல்கின்றன.
பெரியவர்களும் சொல்கின்றார்கள்.
``அணோரணீயாந்; மஹதோ மஹீயாந்`` என்பது கடோபநிடதம்.
வான் - பெரிய.
மாயா - கெடாத.
மிடைந்தன - நெருங்கின; இது முற்றெச்சமாய் நின்றது.
ஐவர் கள்வர்; ஐம்புல ஆசை.
மண் மகன் - குயவன்.
திகிரி - சக்கரம், தடுத்த - `அஞ்சற்க` என அபயம் தந்தகை.

கிழவருமாய் நோய்மூப்புக் கீழ்ப்பட்டுக் காமத்
துழவரும்போய் ஒயுமா கண்டோம் மொழிதெரிய
வாயினால் இப்போதே மன்றில் நடமாடும்
நாயனார் என்றுரைப்போம் நாம். **#1064**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நெஞ்சே` என்பதை முதற்கண் வருவித்து, ``காமத்து உழவரும்` என்பதை அதன்பின்னும், ``நாம்`` என்பதை, ``மொழி தெரிய`` என்பதன்பின்னும் கூட்டியுரைக்க.
``கண்டோம்`` என்பதன் பின்னும், `ஆதலால்` என்பது வருவிக்க.
உழவர் -முயல்பவர்.
கிழவர்- முதியோர், நோய் மூப்பு, உம்மைத் தொகை.
அதன்பின் நான்காவது விரிக்க.
கீழ்ப் படுத்தலைக் கூறுதற்பொருட்டு ``மூப்பு`` என மீண்டு மநுவதித்தார்.
மொழி தெரிய - நமது சொல் மற்றவர்களுக்கும் விளங்கும்படி.
நாயனார் - தலைவர்.
`எப்பொழுதும் உரைப்போம்` என்றபடி.
அவ்வாறு உரையாதோர் ``வாளா மாய்ந்து மண்ணாகிக் கழிவர்`` * நாம் அவ்வாறின்றி `மன்றில் நடம் ஆடும் நாயனார்` என்று எப்பொழுதும் சொல்லியிருப்போமானால் இவ்வுடம்பு நீங்கியபின் அவன் திருவடியை அடைவோம் - என்பது கருத்து.

நாமத்தி னால்என்தன் நாத்திருத்
தேன்நறை மாமலர்சேர்
தாமத்தி னாலுன் சரண்பணி
யேன்சார்வ தென்கொடுநான்
வாமத்தி லேயொரு மானைத்
தரித்தொரு மானைவைத்தாய்
சேமத்தி னாலுன் திருத்தில்லை
சேர்வதோர் செந்நெறியே. **#1065**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மூன்றாம் அடியை முதற்கண் வைத்து உரைக்க.
``மான்`` இரண்டில் முன்னது மான் கன்று; பின்னது பெண்.
வாமம் - இடப்பக்கம் ``வைத்தாய்`` என்பது விளி, `உன்றன் நாமத்தினால்` என்க.

நாமம் - பெயர்.
அஃது அஞ்செழுத்து மந்திரம், அதனைப் பயில்கின்ற நா
குற்றத்தினின்றும் நீங்கும் ஆகலின், `அவ்வாறு செய்து அதனை
திருத்தாமல் இருக்கின்றேன்` என்றார்.
நறை - தேன்.
தாமம் - மாலை.
சரண் - திருவடி.
`உன்னைச் சார்வது` என்க.
சார்வது - அடைவது, என்கொடு - எதை வழியாகக் கொண்டு.
என்றது, `எதுவும் வழியாதற்கில்லை` என்றபடி.
`கொண்டு` என்பது, ``கொடு`` என மருவிற்று.
சேமம் - நம்மை `ஒன்றும் செய்யாத எனக்கு உன் திருத் தில்லையை
அடைவதாகிய ஒரு வழிதான் உள்ளது` என்க.
``நெறியே`` என்னும் ஏகாரம் பிரிநிலை.
அதன்பின் `உளது` என்பது எஞ்சிநின்றது.

நெறிதரு குழலை அறலென்பர்கள்
நிழலெழு மதியம் நுதலென்பர்கள்
நிலவினும் வெளிது நகையென்பர்கள்
நிறம்வரு கலசம் முலையென்பர்கள்
அறிகுவ திரிதிவ் விடையென்பர்கள்
அடியிணை கமல மலரென்பர்கள்
அவயவம் இனைய மடமங்கையர்
அழகியர் அமையும் அவரென்செய
மறிமழு வுடைய கரனென்கிலர்
மறலியை முனியும் அரனென்கிலர்
மதிபொதி சடில தரனென்கிலர்
மலைமகள் மருவு புயனென்கிலர்
செறிபொழில் நிலவு திலையென்கிலர்
திருநடம் நவிலும் இறையென்கிலர்
சிவகதி அருளும் அரசென்கிலர்
சிலர்நர குறுவர் அறிவின்றியே. **#1066**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பின் வருவன பலவற்றோடும் இயையுமாறு.
``குழலை`` என்பதில் `ஐ சாரியை` என வைத்து.
`குழல் அறல்` என்பார்கள் என அங்ஙனம் கூறுவார் கூற்றாக்கியே
உரைக்க.

குழல் - கூந்தல்.
அறல் - நீரோடையிற் காணப்படும் கருநுண் மணல்.
நெறி - நெறிப்பு, இங்கு உரைத்தது போலவே ``நுதல்`` முதலியன எழுவாயாக வும், மதியம் முதலியன பயனிலையாகவும் அமைந்து உரைப்பவர் கூற்றாகி வருதல் காண்க.
நிழல் - ஒளி ``மதி`` என்றது பிறையை.
`இனைய ஆன` என ஆக்கம் வருவிக்க.
`மடமங்கையர், அவர் கூறுமாறே அழகியராதல் அமையும்; `ஆயினும், அவர் என் செய உளர்! என்க.
`அவர்களால் ஆவது ஒன்றில்லை; அதனால் அவர் களது அழகைச் சொல்லிக்கொண்டிருப்பதால் பயனில்லை` என்ப தாம்.
மடமங்கையரை மேற்கூறியவாறு பலபடப் புகழ்கின்ற சிலர், தில்லைக் கூத்தப் பெருமான் தொடர்பாக ஒன்றையேனும் சொல்கின் றிலர்.
மறி - மான் கன்று.
தரன் - தரித்தவன்.
புயன் - தோள்களை யுடையவன்.
அவர் நரகிற்கு ஏதுவான செயல்களையே செய்து போவர் ஆதலின், `நரகு உறுதலைத் தவிரமாட்டார்` எனவும், `அதற்குக் காரணம் அறிவின்மையே` எனவும் கூறினார்.

அறிவில் ஒழுக்கமும் பிறிதுபடு பொய்யும்
கடும்பிணித் தொகையும் இடும்பை ஈட்டமும்
இனையன பலசரக் கேற்றி வினையெனும்
தொல்மீ காமன் உய்ப்ப அந்நிலைக்
கருவெனும் நெடுநகர் ஒருதுறை நீத்தத்துப்
புலனெனும் கோள்மீன் அலமந்து தொடர
பிறப்பெனும் பெருங்கடல் உறப்புகுந் தலைக்கும்
துயர்த்திரை உவட்டின் பெயர்ப்பிடம் அயர்த்துக்
குடும்பம் என்னும் நெடுங்கல் வீழ்த்து
நிறையெனும் கூம்பு முரிந்து குறையா
உணர்வெனும் நெடும்பாய் கீறிப் புணரும்
மாயப் பெயர்படு காயச் சிறைக்கலம்
கலங்குபு கவிழா முன்னம் அலங்கல்
மதியுடன் அணிந்த பொதியவிழ் சடிலத்துப்
பையர வணிந்த தெய்வ நாயக
தொல்லெயில் உடுத்த தில்லை காவல
வம்பலர் தும்பை அம்பல வாண நின்
அருளெனும் நலத்தார் பூட்டித்

திருவடி நெடுங்கரை சேர்துதமா செய்யே. #1067
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அலங்கல் மதியுடன் .
அம்பலவாண`` என்னும் தொடரை முதற்கண் வைத்து உரைக்க.
இடும்பை - துன்பம்.
இனையன - இவைபோல்வன.
எனவே, இங்குக் குறிக்கப்படுகின்ற மரக்கல வாணிபம் நஞ்சும், கள்ளும், கொலைக் கருவிகளும் போன்ற தீப்பொருள் வாணிபமாகின்றதேயன்றி, நற்பொருள் வாணிபமாக வில்லை.
மீகாமன் - மாலுமி.
உய்ப்ப - செலுத்த - கரு - உடம்பு தோன்றுதற்கு முதலாய் உள்ள வித்தும், நிலமும்.
அவைதாம் பலவாகலின், பல துறைமுகப்பட்டினங்களாக உருவகம் செய்யப் பட்டன.
- `அந்தத்` துறைகள் பலவற்றில் ஒருதுறைப் பிறப்பாகிய கடலில் புகுந்து` என்க.
நீத்தம் - நீர்.
புலன் - ஐம்புல ஆசை.
கோள்மீன்- முதலை.
அலமந்து - பல திசையாகச் சூழ்ந்து சூழ்ந்து.
அலைக்கும் - மனத்தைக் கவற்றுகின்ற.
துயர்த்திரை - துன்பமாகிய அலைகளின் உவட்டு - மோதல்கள்.
பெயர்ப்பு இடம் அயர்த்து - பெயர்ந்து அடைய வேண்டிய இடத்தை மறந்து.
அடைய வேண்டிய இடம் வீடு.
கல் - பாறை `கல்லில் வீழப்பண்ணி` என்க.
நிறை - மனம் ஒருநெறியில் நிற்றல்.
கூம்பு - பாய்கள் கட்டப்படும் தூண்.
கீறி - கிழிக்கப்பட்டு.
`கீறிக் கவிழா முன்னம்` என இயைக்க.
மாயப் பெயர்ப் படுகாயம் - பொய்யாய் இருந்தும், `மெய்` என வஞ்சனையான பெயரோடு பொருந்திய உடம்பு.
சிறைக் கலம் - உண்மையில் சிறையாய், தோற்றத்தில் கரைசேர்ப்பதுபோலக் காணப்படுகின்ற மரக்கலம்.
கலங்குபு - நிலைகலங்கி.
அலங்கல் - கொன்றை மலை.

வம்பு அலர் - நறுமணத்துடன் மலர்கின்ற தார் - கயிறு.
நடுக்கடலில் கவிழும் நிலையில் உள்ள மரக்கலங்களைத் தரையில் நாட்டப்பட்டுள்ள தூணில் பிணிக்கப்பட்டுள்ள கயிற்றைக் கொண்டுபோய்க் கட்டி யீர்த்துக் கரைக்குக் கொணர்வது அக்கால வழக்கம்.
இப்பாடலில் அமைந்துள்ள முற்றுருவகத்தின் சிறப்பு அறிந்து மகிழத்தக்கது.
`இவ் வுடம்பு வீழ்வதற்குள் உயிர் உன் திருவடியை அணைதலாகிய சீவன் முத்தி நிலையைத் தந்தருளல் வேண்டும்` என்பதாம்.
`அங்ஙனம் அடையாதே உடம்பு வீழுமாயின், அடுத்த பிறப்பில் செல்ல வேண்டி வரும்` என்பது கருத்து.

செய்ய திருமேனிச் சிற்றம் பலவருக்கென்
தையல் வளைகொடுத்தல் சாலுமே ஐயன்தேர்
சேயே வருமளவில் சிந்தாத மாத்திரமே
தாயே நமதுகையில் சங்கு. **#1068**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நற்றாய்க்கு மகளாயினாளை அவளோடு தனக்குள்ள கேண்மை பற்றி, ``என் தையல்`` என்றார்.
சாலும் - பொருந்தும்.
இதன்பின் `ஏனெனில்` என்பது வருவிக்க.
ஐயன் - சிற்றம்பலத்தான்.
சேயே - தொலைவில்தானே.
ஏகாரம் பிரிநிலை.
மகளைப் பெற்ற நற்றாய்க்குத் தோழியே மகளுக்குச் செவிலித்தாய் ஆதலாலும், தோழி தலைவியை, `அன்னாய்` என்றல் வழக்கு ஆதலாலும் ``தாயே`` என்றாள், ``நமது கையில் உள்ள சங்கு சிந்தாத மாத்திரமே`` என்றதனால், `சிந்துநிலையை அடைந்து விட்டன` என்றதாம்.
`உலார்ப் புறத்துத் தலைவனைக் காதலித்தாராகக் கூறப்படும் மகளிர் பொதுமகளிரே யல்லது, குல மகளிரல்லர் என்பதை.
``வழக்கொடு சிவணிய வகைமையான`` என்னும் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் உரைத்த உரையான் உணர்க.
அங்ஙனம் ஆதலின் இங்குச் செவிலி நற்றாய்க்கு இவ்வாறு கூற அமைவதாயிற்று.
இனி, இறைவன் மேலவாய் வரும் அகத்துறைப் பாடலின் உள்ளுறைப் பொருள் தலைவியராவார் பக்குவான்மாக்களும், பிறர்

அபக்குவான்மாக்களும், பாசங்களுமே யாதலாலும் அவ்வுள்ளுறை நோக்கில் இஃது அமைவுடையதேயாம்.
இது கைக்கிளைத் தலைவியது வேறுபாடு கண்டு ஐயுற்று வினவிய நற்றாய்க்குச் செவிலி அமைவு கூறும் முகத்தால் அறத்தொடு நின்றது.
`முதியராகிய நாமே அந்நிலையை அடைவோம் என்றால், இளையளாகிய நம் மகள் இந்நிலையை அடைந்தது வெகுளத் தக்கதோ` என்றபடி.

சங்கிடத் தானிடத் தான்தன
தாகம் சமைந்தொருத்தி
அங்கிடத் தாள் தில்லை அம்பலக்
கூத்தற் கவிர்சடைமேல்
கொங்கிடத் தார்மலர்க் கொன்றையென்
றாயெங்கை நீயுமொரு
பங்கிடத் தான்வல்லை யேல்இல்லை
யேலுன் பசப்பொழியே.

#1069

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சங்கு இடத்தான் - `பாஞ்சசன்னியம்` என்னும் சங்கினை இடக் கையிலே உடையவன்; திருமால்.
அவனை இடப் பாகத்திலே உடையவன் சிவபெருமான்; அம்பலவாணன்.
ஆகம் - திருமேனி, திருமேனியில் ஒருத்தி (உமை) அவனுக்குச் சமைந்து அந்த இடப்பாகத்தையே பற்றியிருக்கின்றார்.
இந்நிலையில் அவளுக்கு நீ தங்கையாகும்படி.
`அவ்வம்பல வாணனுடைய முடிமேல் உள்ள கொன்றைமலர் மாலை எனக்கு வேண்டும்` என்கின்றாய்.
அதனை நீ விடாப்பிடியாய் விரும்புவ தாயின், மால் உமை என்னும் அவ் இருவரைப் போல நீயும் அந்த இடப்பாகத்தை உனக்கு உரியதாகப் பற்றிக் கொள்ளும் வல்லமை யிருக்கு மாயின் விரும்பு; அஃது இல்லை யேல், உன் விருப்பத்தை விட்டொழி.
``பசப்பு ஒழி`` என்றது, `விருப்பத்தை ஒழி` என்றதே யாம்.
`திருமாலையும், உமையையும் தனது சத்திகளாக உடையவன் சிவ பெருமான்` என்பதும், `ஏனையோர்க்கு அந்நிலை கூடா` என்பதும் இங்கு மறைமுகமாக விளக்கப்பட்டது.
கொங்கு இடு அத்தார் - தேனைச் சொரிகின்ற அந்த மாலை.
``எங்கை`` என்பதன் பின் (என) என்று ஒரு சொல் வருவித்து, `அவள்

உன்னை - என் தங்கை- என்று சொல்லும் படி` என உரைக்க.
இது, தன்னைத் தூது விடக் கருதிக் குறிப்பாற் சில கூறிய கைக்கிளைத் தலைவியைத் தோழி அருமை கூறி ஆற்றுவித்தது.
``கொன்றை`` என்பதன் பின் `வேண்டும்` என்பது எஞ்சி நின்றது.
``வல்லையேல்`` என்பதன்பின், `வேண்டு` என்பது வருவிக்க.

ஒழிந்த தெங்களுற வென்கொ லோஎரியில்
ஒன்ன லார்கள்புரம் முன்னொர்நாள்
விழுந்தெ ரிந்துதுக ளாக வென்றிசெய்த
வில்லி தில்லைநகர் போலியார்
சுழிந்த உந்தியில் அழுந்தி மேகலை
தொடக்க நின்றவர் நடக்கநொந்
தழிந்த சிந்தையினும் வந்த தாகிலுமொர்
சிந்தை யாயொழிவ தல்லவே.

#1070

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு மேற் பலவிடத்தும் வந்தன போலப் பாடாண் கைக்கிளையாகாது, ``சொல்லெதிர் பெறான் சொல்லியின் புறல்`` * என்னும் ஆண்பாற் கைக்கிளையாய அகப்பாட்டு.
இதிற் சிவ பெருமான் பாட்டுடைத் தலைவன் மட்டுமே.
கிளவித் தலைவன் வேறு கொள்ளப்பட்டான்.
``எங்கள் உறவு`` என்றது, தலைவியது கருத்து வேறானமைக்குக் காரணத்தை ஆராய்ந்தது.
வென்றி செய்த - வெற்றி படைத்த.
தில்லை நகர் போலியார் - தில்லைத் தலத்தைப் போல அருமையுடையவர்; தலைவி.
சுழிந்த - நீர்ச் சுழி போன்ற.
தொடக்க நின்று - பிணிக்கநின்று.
அழிந்த சிந்தை - கெட்டே போன மனம்.
இன்னும் வந்ததாகிலும் - ஒருகால் உயிர்த் தெழுந்து திரும்பிவந்தது என்றாலும்; அஃது ஒன்றாயிராது பலவாய்ச் சிதறுவதாம்.
`ஆகவே இனி உய்வது அரிது` என்பது குறிப்பெச்சம்.
`அழுந்தி, நின்று, நொந்து, அழிந்த சிந்தை` என்க.
``ஒழிவது`` என்பதில் ஒழி, துணிவுப் பொருண்மை விகுதி.
அல்ல என்பது ஒருமைப் பன்மை மயக்கம்.

அல்லல் வாழ்க்கை வல்லிதின் செலுத்தற்குக்
கைத்தேர் உழந்து கார்வரும் என்று

வித்து விதைத்தும் விண்பார்த் திருந்தும்
கிளையுடன் தவிரப் பொருளுடன் கொண்டு
முளைமுதிர் பருவத்துப் பதியென வழங்கியும்
அருளா வயவர் அம்பிடை நடந்தும்
இருளுறு பவ்வத் தெந்திரங் கடாஅய்த்
துன்றுதிரைப் பரப்பிற் குன்றுபார்த் தியங்கியும்
ஆற்றல் வேந்தர்க்குச் சோற்றுக்கடன் பூண்டும்
தாள்உழந் தோடியும் வாளுழந் துண்டும்

அறியா ஒருவனைச் செறிவந்து தெருட்டியும்
சொற்பல புனைந்தும் கற்றன கழறியும்
குடும்பப் பாசம் நெடுந்தொடர்ப் பூட்டி
ஐவர் ஐந்திடத் தீர்ப்ப நொய்தில்
பிறந்தாங் கிறந்தும் இறந்தாங்கு பிறந்தும்
கணத்திடைத் தோன்றிக் கணத்திடைக் கரக்கும்
கொப்புட் செய்கை ஒப்பில் மின்போல்
உலப்பில் யோனிக் கலக்கத்து மயங்கியும்
நெய்யெரி வளர்த்துப் பெய்முகிற் பெயல்தரும்
தெய்வ வேதியர் தில்லை மூதூர்
ஆடகப் பொதுவில் நாடகம் நவிற்றும்
கடவுட் கண்ணுதல் நடம்முயன் றெடுத்த
பாதப் போதும் பாய்புலிப் பட்டும்
மீதியாத் தசைத்த வெள்ளெயிற் றரவும்
சேயுயர் அகலத் தாயிரங் குடுமி

மணிகிடந் திமைக்கும் ஒருபே ராரமும்
அருள்பொதிந் தலர்ந்த திருவாய் மலரும்
நெற்றியில் திகழ்ந்த ஒற்றை நாட்டமும்
கங்கை வழங்கும் திங்கள் வேணியும்
கண்ணிடைப் பொறித்து மனத்திடை அழுத்தி ஆங்

குள்மகிழ்ந் துரைக்க உறுதவஞ் செய்தனன்
நான்முகன் பதத்தின் மேல்நிகழ் பதந்தான்
உறுதற் கரியதும் உண்டோ
பெறுதற் கரியதோர் பேறுபெற் றேற்கே. **#1071**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அல்லல் வாழ்க்கை, உடல் ஓம்பும் வாழ்க்கை.
வல்லிதின் - திறமையாக.
செலுத்துதற்கு - நடத்துதற் பொருட்டு மேற்கொள்ளப்படும்
பலவகையான தொழில்கள் இங்குக் குறிக்கப் பட்டன.
உழந்து.
கார் - மழை.
கிளை உடன் தவிர - சுற்றத்தார் பலரும் இல்லத்திலே இருந்துவிடத்
தான் மட்டும்.
`பதி` என வழங்கி, `எந்த ஊர் நல்ல ஊர்` என ஆராய்ந்து சென்று.
அருளாவயவர் - இரக்கம் காட்டாத படைவீரர்.
அம்பிடை நடத்தல் போர்க்களத்து உலவுதல்.
பவ்வம் - கடல்.
எந்திரம் - மரக்கலம்.
கடாஅய் - செலுத்தி.
குன்று - நீருள் நின்று மரக்கலத்தை உடைக்கும் மலைகள்.
சோற்றுக் கடன் - படைவீரர் தாம் போர் இல்லாது உண்டு இருக்கும்
கடன்.
இது போர் வந்த காலத்தில் போர்க்களம் புகுந்து வஞ்சியாது பொருது
வெல்லுதல், அல்லது உயிர்கொடுத்தலால் தீரும்.
தாள் உழந்து ஓடி - கால் கடுக்க ஓடித் தூது உரைத்தல்.
வாள் உழந்து - வாட்படை பயிற்றுவித்து.
அறியா .
தெருட்டி - கல்வி கற்பித்து புனைதல் - கவி யாத்தல்.
கற்றன கழறி - தான் அறிந்தவற்றைப் பலரும் அறிய அவைக்களத்து
விரித் துரைத்து.
பாச நெடுந்தொடர் (சங்கிலி) பூட்டி ஈர்ப்பவர் ஐவர் - ஐம்புலக் குறும்பர்.
ஆங்கு, உவம உருபுகள்.
அவை, `எல்லாம் வினை களின் பயன்` என்பது பற்றி வந்தன.
கொப்புள் - நீர்க் குமிழி.
ஒப் பின்மை, கணத்தில் தோன்றி கணத்தில் மறைதலில் பிற பொருள்கள்
யாவும் ஒப்பிலவாதல் பற்றி என்பது வகை, அல்லது சாதியாகலின் விரி
அளவில்லனவாம்.
கலக்கம் - வேறுபாடு.
``மயங்கியும்`` என்னும் உம்மை இழிவு சிறப்பு.
`மயங்கினாலும் கண்ணிடைப் பொறித்தும், மனத்திடை அழுத்தியும்,
(வாக்கிடை) உரைக்க உறுதவம் (யான்) செய்தனன்.
தான் - இந்நிலைமை, நான்முகன் பதத்தினும் மேல் நிகழ் பதமாகும்

(இந்தப்) பெறுதற்கரியதோர் பேறு பெற்றேற்கு உறுதற் கரியதும் உண்டோ` என முடிக்க.
``அரியதும்`` என்னும் உம்மை உயர்வு சிறப்பு.
``நெய் எரி.
வேதியர்`` - `கற்று ஆங்கு எரி ஓம்பிக் கலியைவாராமே செற்ற` தில்லைவாழந்தணர்.
புலி - புலித்தோல்; ஆகுபெயர்.
யாத்து அசைத்த - கச்சாக இறுக்கிக் கட்டிய.
ஆயிரங் குடுமிப் பேராரம், ஆதிசேடனாகிய பாம்பு.
உறுதவம் - மிக்க தவம்.

பெற்றோர் பிடிக்கப் பிழைத்துச் செவிலியர்கள்
சுற்றோட ஓடித் தொழாநிற்கும் ஒற்றைக்கைம்
மாமறுகச் சீறியசிற் றம்பலத்தான் மான்தேர்போம்
கோமறுகிற் பேதை குழாம். **#1072**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பெற்றோர் - நற்றாயர்.
பிழைத்து - அவர்களுக்குத் தப்பி.
சுற்று - சுற்றிலும்.
ஒற்றைக்கை மா - தும்பிக்கையை உடைய விலங்கு; யானை.
மறுக - வருந்த.
மான் தேர் - குதிரைகள் பூட்டிய தேர்.
விதப்பினால், `வேதமாகிய குதிரைகள்` என்பது பெறப்பட்டது.
கோ மறுகு - இராச வீதி.
`பேதையர்` என்பதை, ``பேதைகள்`` - என அஃறிணையாக உபசரித்தார்.
பேதையர் - மகளிர்.
இதனால், கூத்தப் பெருமானது, தேர் விழாவின் சிறப்புக் கூறியவாறு.
பெற்றோரும், செவிலியரும் தடுத்தல், `சென்று காணின், அவனது காதல் வலையில் வீழ்ந்து, பிறிதொன்றற்கும் உதவார்` என்னும் அச்சத்தினாலேயாம், இதனால், காந்தத்தை நோக்கிச் செல்லும் இரும்புபோலக் கடவுளை நோக்கிச் செல்வதே உயிர்கட்கு இயல்பு` என்பதும், `அதனைச் செயற்கையாகிய பாசத்தளைகளே குறுக்கிட்டுத் தடுத்துத் துன்புறுத்து கின்றன` என்பதும் ஆகிய உண்மைகள் புலப்படுத்தப்பட்டவாறு அறிக.

பேதையெங் கேயினித் தேறியுய்
வாள்பிர மன்தனக்குத்

தாதை தன் தாதையென் றேத்தும்
பிரான்தண் புலிசைப்பிரான்
கோதையந் தாமத்தண் கொன்றை
கொடான் நின்று கொல்லவெண்ணி
ஊதையும் காரும் துளியொடும்
கூடி உலாவி யவே. #1073
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பேதை எங்கே இனித் தேறி உய்வாள்`` என்பதை இறுதியில் வைத்து உரைக்க.
பிரமன்றனக்குத் தாதை, திருமால், அவனால் `தனக்குத் தாதை` என்று ஏத்தப்படும் பிரான் சிவபிரான்.
கோதை, தாமம் - ஒரு பொருட் சொற்கள்.
அவை தம்மில் சிறிது வேறுபாடுடைய.
ஊதை - வாடைக் காற்று.
கார் - மேகம்.
``ஊதையும், காரும் துளியொடு கூடி உலாவிய`` என்றது, `காலம் கார்காலமாயிற்று` என்றவாறு.
தலைவியரைப் பிரிந்து சென்ற தலைவர் கார்காலத்தில் வந்து கூடுவர் ஆகலின், `அவ்வாற்றால் களிப்பு எய்துகின்ற மகளிரைக் காணுந்தோறும் இவள் ஆற்றாமை மிகுவாள்` என்பது பற்றி, ``பேதை எங்கே இனித் தேறி உய்வாள்` என்றாள்.
இது கைக்கிளைத் தலைவிக்குத் தோழியாயினாள் பருவ வரவு கண்டு கவன்றுரைத்தது.

உலவு சலதி வாழ்விடம் அமரர் தொழவு ணாவென
நுகரும் ஒருவர் ஊழியின் இறுதி யொருவர் ஆழிய
புலவு கமழ்க ரோடிகை உடைய புனிதர் பூசுரர்
புலிசை யலர்செய் போதணி பொழிலின் நிழலின் வாழ்வதோர்
கலவ மயில னார்கருள் கரிய குழலி னார்குயில்
கருதுமொழியி னார்கடை நெடிய விழியி னாரிதழ்
இலவின் அழகி யாரிடை கொடியின் விடிவி னார்வடி
வெழுதும் அருமை யாரென திதய முழுதும் ஆள்வரே.
#1074
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது மடல் மா ஊரத் துணிந்த தலைவன் `அஃது இயலுமோ` எண்ணிக்

கவன்று கூறியது.
மடல் மா ஊர்பவன் தலைவியது உருவத்தை அவளேபோலத் தோன்றும்படி நன்கு எழுதிய கிழியைக் கையில் கொண்டு ஊர்தல் வேண்டும்.
அதற்கு, `இவளது அவயவங்கள் எழுதற்கு அரியனவாய் உள்ளனவே` எனக் கவன்று கூறினான் எனவே, இதுவும் நேரே அகப்பாட்டாம்.
இங்கும் கூத்தப் பெருமான் பாட்டுடைத் தலைவர் மட்டுமே.
சலதி - கடல்.
கடலில் தோன்றிய விடத்தை அதன்கண் வாழ்வ தாகக் கூறினார்.
ஊழியின் இறுதி; சங்கார கால முடிவு.
`அது பொழுது சிவபிரானைத் தவிரப் பிறர் ஒருவரும் இல்லை` என்றற்கு, ``ஊழியில் இறுதி ஒருவர்`` என்றார்.
ஆழிய - ஆழ்ந்த.
கரோடிகை - தலைஓடு.
`புலால் கமழும் தலையோட்டை யுடையராயினும் தூயரே` என்றற்கு, ``புனிதர்`` என்றார்.
பூசுரர், தில்லைவாழந்தணர்.
`புலிசைப் பொழில்` என இயையும்.
``வாழ்வது`` என்றது மயிலை.
கலவம் - கலாபம்; தோகையை பொழிலிடத்தே கண்டான் ஆகலின், ``பொழிலின் நிழலில் வாழ்வது ஓர் மயிலை ஒத்தவர்`` என்றான்.
தனது நன்கு மதிக்கற்பாடு, தோன்ற, ஒருத்தியையே பலவிடத்தும் பன்மைச் சொல்லாற் கூறினான்.
`குயில் எனக் கருதும் மொழி` என்க.
கடை நெடியவிழி என்ற குழை அளவு செல்லும் விழி என்றவாறு.
இலவு - இலவங் காய்.
இன், உவம உருபு.
``அழகியார்`` எனச் சினைவினை முதல்மேல் ஏற்றப்பட்டது.
``வடிவினார்`` என்பதும் அது.
`ஆறு சென்ற வியர்` என்பதில் பெயரெச்சம் காரணப் பொருட்டாய் நின்று காரியப் பெயர் கொண்டாற்போல, இங்கு, ``எழுதும் அருமை`` என்பதில் பெயரெச்சம் பண்பிப் பொருட்டாய் நின்று, பண்புப் பெயர் கொண்டது.

ஆளெனப் புதிதின்வந் தடைந்திலம் அத்தநின்
தாளின் ஏவல் தலையின் இயற்றி
வழிவழி வந்த மரபினம் மொழிவதுன்
ஐந்தெழுத் தவையெம் சிந்தையிற் கிடத்தி

நனவே போல நாடொறும் பழகிக்

கனவிலும் நவிற்றும் காதலேம் வினைகெடக்
கேட்பதும் நின்பெருங் கீர்த்தி மீட்பது
நின்னெறி அல்லாப் புன்னெறி படர்ந்த
மதியில் நெஞ்சத்தை வரைந்து நிதியென
அருத்திசெய் திடுவ துருத்திர சாதனம்

காலையும் மாலையும் கால்பெயர்த் திடுவதுன்
ஆலயம் வலம்வரு தற்கே சால்பினில்
கைகொடு குயிற்றுவ தைய நின்னது
கோயில் பல்பணி குறித்தே ஒயாது
உருகி நின்னினைந் தருவி சோரக்

கண்ணிற் காண்பதெவ் வுலகினும்காண்பனவெல்லாம்
நீயே யாகி நின்றதோர் நிலயை நாயேன்
தலைகொடு சார்வதுன் சரண்வழி அல்லால்
அலைகடல் பிறழினும் அடாதே அதனால்
பொய்த்தவ வேடம் கைத்தகப் படுத்தற்கு
வஞ்சச் சொல்லின் வார்வலை போக்கிச்
சமயப் படுகுழி சமைத்தாங் கமைவயின்
மானுட மாக்களை வலியப் புகுத்தும்
ஆனா விரதத் தகப்படுத் தாழ்த்தும்
வளைவுணர் வெனக்கு வருமோ உளர்தரு

நுரையுந் திரையும் நொப்புறு கொட்பும்
வரையில் சீகர வாரியும் குரைகடல்
பெருத்தும் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
எண்ணில வாகி இருங்கடல் அடங்கும்
தன்மை போலச் சராசரம் அனைத்தும்
நின்னிடைத் தோன்றி நின்னிடை அடங்கும்நீ
ஒன்றினும் தோன்றாய் ஒன்றினும் அடங்காய்
வானோர்க் கரியாய் மறைகளுக் கெட்டாய்
நான்மறை யாளர் நடுவுபுக் கடங்கிச்
செம்பொன் தில்லை மூதூர்
அம்பலத் தாடும் உம்பர்நா யகனே. **#1075**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதனுள் ``உளர்தரும்`` என்பது முதல் ``எட்டாய்`` என்பது முடிய உள்ள பகுதி சிவபெருமானது அருமை கூறியது.
`அத் துணை அரியனாகிய நீ எளியனாய்த் தில்லை அம்பலத்தில் ஆடு கின்றாய்` என்றார்.
அதனால், ``உளர்தரும்`` என்பது முதல் இறுதி முடிய உள்ள பகுதி முதற்கண் கூட்டி உரைக்கற்பாலதாயிற்று.
அதனுடன், ``அத்த, ஐய`` என்பவற்றையும் முதலிற் கொள்க.
பின்பு, ``வழி வழி மரபினம்`` எனக் கூறுவதால், ``புதிதின் `ஆள்` என வந்து அடைந்திலம்`` என்றது தம் முன்னோரையும் உளப்படுத்துத் தம் மரபு நிலை கூறியதேயாயிற்று.
இதனால், அடிகள் வழி வழிச் சைவராதல் விளங்கும்.
இத்தகையோரையே `பழவடியார்` என்பர்.
தம் காலத்தில் சைவராகின்றவர், `புத்தடியார்` ஆவர்.
தம் பழமையை அடிகள் பின்னரும் தொடர்ந்து விளக்குதல் காண்க.
தாளின் ஏவல் - காலால் ஏவிய பணி.
ஏவல் ஏவப் பட்டதனைக் குறித்தலால் ஆகுபெயர்.
``சிந்தையிற் கிடத்தி`` என்பதை, ``மொழிவது`` என்பதன்பின் கூட்டுக.
`நாள்தோறும் பழகி நனவேபோலக் கனவிலும் நவிற்றும் காதலெம்` எனக் கூட்டுக.
துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
என்று அருளிச்செய்தது.
இந்நிலையையேயாம் தொழிற் பெயர் எழுவாயாய் நிற்கும் பொழுது தொழில் முதல் நிலைகள் பயனிலை யாய் வருதல் உண்டு.
அதனை அம்முதனிலைப் பொருளவாய உருபுகளை ஏற்ற பெயர்களும் பயனிலைகளாய் வரும்.
அவ்வாற்றால் ``நெஞ்சத்தை`` என்பது போல ஏனைய ``அஞ்செழுத்தவை, கீர்த்தி, சாதனம், நிலை`` என்பவற்றிலும் இரண்டாவது விரிக்க.
கேட்டது.
``மொழிவது, செய்திடுவது, காண்பது`` என்பன தொழிற் பெயர்கள்.
நவிற்றுதலுக்கு `அவற்றை` என்னும் செயப்படுபொருள் வருவித்து அதனை வேறு தொடராக்குக.
`வரைந்து மீட்பது`` என மேலே கூட்டுக.
அருத்தி - விருப்பம்.
சாதனம் - மணி.

குயிற்றுவது - செய்வது.
`பணியாதல் குறித்தே` என ஆக்கம் வருவிக்க.
சரண் வழி - திருவடிகளை அடையும் வழி.
``மாப்பின் ஒப்பின்`` *1* என்னும் சூத்திரத்துள் ``செலவின்`` என்பதும் கூறப்பட்டமையால் வழி என்பதும் இரண்டாவதன் தொகையாம்.
அல்லால் என்பதற்கு முன்னே இவை என்பதும் பின்னை `பிறிது` என்பதும் வருவித்து, `இவையல்லால் அடாது` என்க.
அடாது - வந்து பொருந்தாது.
ஏகாரம் தேற்றம்.
`தம் கைத்தாக அகப்படுத்தற்கு` என, `தம்` என்பதும், ஆக்கமும் வருவிக்க.
``வேடர்`` என்பதும், `வேடம் உடையவர், வேடர்` என இரட்டுற் மொழிய நின்றது.
கைத்து - கைப்பொருள்.
``சொல்லின் வலை, சமயப் படுகுழி`` என்பன உருவகங்கள்.
இன், வேண்டாவழிச் சாரியை.
படுகுழி, வீழ்ந்தழியும் குழி.
அமைவயின் - வாய்ப்பு நேரும்பொழும்.
``மானுட மாக்கள்`` என்பதும் உருவகம்.
``வலியப் புகுத்தும் விரதம்`` என்றமையால் மேல், ``சமயம்`` எனப்பட்டன.
சமணமும், மீமாஞ்சகமும் ஆயின.
இவற்றுள் மீமாஞ்சக மதம்.
``கங்கை ஆடில் என்! *2* காவிரி ஆடில் என்!`` எனத் தொடங்கும் திருப்பதிகத்துள்ளும் ``விரதமே பரமாக வேதியரும் சரதமாகவே சாத்திரங் காட்டினர்`` *3* எனத் திருவாசகத்துள்ளும், ஆதிமறை ஓதி, அதன்பயன்ஒன் றும் அறியா
வேதியர்சொல் மெய்யென்று மேவாதே
எனச் சாத்திரத்துள்ளும் விலக்கப்பட்டமை காண்க.
வளைவுணர்வு - கோணலான அறிவு.
ஓகாரம்.
எதிர்மறை.
இதனுள் ``நுரையும், திரையும்`` என்பது முதலாகப் போந்த அடிகளைச் சிவஞான போதத்து இரண்டாம் சூத்திர மாபாடியத்துள் பிரம முதற்காரணவாத மறுப்பில் எடுத்துக் காட்டி இதன் உண்மைப் பொருளைத் தெளிவுபடுத்தி யிருத்தல் காண்க.
நொப்புறு கொட்பு - கலங்கலையுடைய சுழல்.

வரையின் சீகரம் - மலைபோன்ற அலைகள்.
வாரி, சங்கு முதலியன வருவாய்.
குரை - ஒலிக்கின்ற.

நாயனைய என்னைப் பொருட்படுத்தி நன்களித்துத்
தாயனைய னாயருளும் தம்பிரான் தூயவிரை
மென்துழாய் மாலொடயன் தேட வியன்தில்லை
மன்றுளே ஆடும் மணி. #1076

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மாலும், அயனும் தேடிக் காணாராயினும் மன்றுளே ஆடுகின்றான்` என்றபடி.
`தம் பிரான்` என்பது `தமக்குப் பிரான்` என்னும் பொருளதாயினும் இங்குப் பொதுப்படத் `தலைவன்` என்னும் அளவாய் நின்றது.
`மணி, என்னை அளித்து அருளும் தலைவன்` என முடிக்க.
அளித்து - காத்து.

மணிவாய் முகிழ்ப்பத் திருமுகம்
வேர்ப்ப அம் மன்றுக்கெல்லாம்
அணிவாய் அருள்நடம் ஆடும்
பிரானை அடைந்துருகிப்
பணியாய் புலன்வழி போம்நெஞ்ச
மேயினிப் பையப்பையப்
பிணியாய்க் கடைவழி சாதியெல்
லோரும் பிணமென்னவே.
#1077

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முகிழ்ப்ப - முறுவல் சிறிதே அரும்ப புலன் வழிப்பேர் - ஐம்புல வழியினின்றும் நீங்கு.
கடை வழி - இறுதிக் காலத்தில் பிணம் என்ன - முன்பு சொன்ன பெயராலே சுட்டாமல், பிணம் என்னும் பெயராலே சுட்டும்படி.
சாதி - சாவாய்.

என்நாம் இனிமட வரலாய் செய்குவ
தினமாய் வண்டுகள் மலர்கிண்டித்
தென்னா எனமுரல் பொழில்சூழ் தில்லையுள்
அரனார் திருமுடி அணிதாமம்
தன்னா லல்லது தீரா தென்னிடர்

தகையா துயிர்கரு முகிலேறி
மின்னா நின்றது துளிவா டையும்வர
வீசா நின்றது பேசாயே.

#1078

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மடவரலாய், கருமுகில் ஏறிமின்னா நின்றது; துனி வாடையும் வர வீசாநின்றது; அரனார் திருமுடி அணி தாமந்தன் னாலல்லது என் இடர் தீராது; உயிர் தகையாது; (அவரோ அதைத் தருவதாய் இல்லை) இனி நாம் என் செயகுவது பேசாய்` என இயைத்துக் கொள்க.

இது, பருவம் கண்டு ஆற்றளாய கைக்கிளைத் தலைவி தூது விடக்கருதித் தோழியை நோக்கிக் கூறியது.

``மட வரலாய்`` என்றது தோழியை.

தகையாது - தகைக்க (தடுக்க)ப்படாது.

துனி வாடை - துன்பம் தருகின்ற வாடைக் காற்று.

பேசு வாழி பேசு வாழி
ஆசையொடு மயங்கி மாசுறு மனமே
பேசு வாழி பேசு வாழி
கண்டன மறையும் உண்டன மலமாம்
பூசின மாசாம் புணர்ந்தன பிரியும்

நிறைந்தன குறையும் உயர்ந்தன பணியும்
பிறந்தன இறக்கும் பெரியன சிறுக்கும்
ஒன்றொன் றொருவழி நில்லா வன்றியும்
செல்வமொடு பிறந்தோர் தேசொடு திகழ்ந்தோர்
கல்வியிற் சிறந்தோர் கடுந்திறல் மிகுந்தோர்
கொடையிற் பொலிந்தோர் படையிற் பயின்றோர்
குலத்தின் உயர்ந்தோர் நலத்தினின் வந்தோர்
எனையர் எங்குலத்தினர் இறந்தோர் அனையவர்
பேரும் நின்றில போலுந் தேரின்
நீயுமஃ தறிதி யன்றே மாயப்

பேய்த் தேர் போன்றும் நீப்பரும் உறக்கத்துக்
கனவே போன்றும் நனவுப்பெயர் பெற்ற
மாய வாழ்க்கையை மதித்துக் காயத்தைக்
கல்லினும் வலிதாக் கருதிப் பொல்லாத்
தன்மயர் இழிவு சார்ந்தனை நீயும்

நன்மையில் திரிந்த புன்மையை யாதலின்
அழுக்குடைப் புலன்வழி இழுக்கத்தின் ஒழுகி
விளைவாய்த் தூண்டிலின் உள்ளிரை விழுங்கும்
பன்மீன் போலவும்
மின்னுபு விளக்கத்து விட்டில் போலவும்
ஆசையாம் பரிசத் தியானை போலவும்
ஓசையின் விளிந்த புள்ளுப் போலவும்
வீசிய மணத்தின் வண்டு போலவும்
உறுவ துணராது செறுவுழிச் சேர்ந்தனை
நுண்ணூல் நூற்றுத் தன்னகப் படுக்கும்
அறிவில் கீடத்து நுந்தழி போல
ஆசைச் சங்கிலிப் பாசத் தொடர்ப்பட்டு
இடர்கெழு மனத்தினோ டியற்றுவ தறியாது
குடர்கெவு சிறையறைக் குறங்குபு கிடத்தி
கறவை நினைந்த கன்றென இரங்கி

மறவா மனத்து மாசறும் அடியார்க்
கருள்சுரந் தளிக்கும் அற்புதக் கூத்தனை
மறையவர் தில்லை மன்று ளாடும்
இறையவன் என்கிலை என்நினைந் தனையே. **#1079**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதனுள் முதல் மூன்று அடிகள் இரட்டைத் தொடை.
இடையே ஒருதொடர் மடுக்கப்பட்டமையால் அடுக்கு இசைநிறை யாகாது.
பொருள் நிலையாய், வலிசெய்தற் பொருட்டாயிற்று.
``வாழி`` என்பன அசை.
இவைகளை இறுதியிற் கூட்டியுரைக்க.
நான்காவது முதல் ஏழு முடிய உள்ள அடிகளில், காலம் காரணமாகப் பொருள்கள் மிக விரைவில் நேர் மாறான நிலைகளை அடைதல் கூறும் முகத்தால் அவற்றது நிலையாமை விளக்கப்பட்டது.
ஒன்று ஒன்று - அது அது.
இதில் முற்றும்மை தொகுக்கப்பட்டது.
ஒரு வழி - நிலையில்.
``அது அது`` எனப்பட்டவை அனைத்தும் தொக்குப் பன்மையாதலின் ``நில்லா`` என்றார்.
``பிறந்தோர், திகழ்ந்தோர்`` முதலிய எட்டிலும் ``ஆகியும்`` என்பதை

விரித்து அவைகளை ``இறந்தோர்`` என்பதோடு முடித்து, `இறந்தோராகிய எம் குலத்தினர் எனையர்!` என்க.
தேசு - புகழ் நலத்தினின் வந்தோர் - நல்லொழுக்கத்தில் பொருந்தினோர், எனையர் - எத்துணையர்! என்றது, `எண்ணிலர்` என்றபடி.
``தேரின்`` என்பதை, ``அனையவர்`` என்பதற்கு முன்னே கூட்டுக.
``பேரும்`` என்னும் உம்மை இழிவு சிறப்பு.
``போலும்`` என்பது உரையசை.
உலகர் பலரையும் குறியாது, ``எம் குலத்தினர்`` என்றார்.
தாம் நன்குணர்ந்தமையைக் குறித்தற்கு, ``நீயும் அஃது அறிந்தனை யன்றே`` என்றது, `அறிந்தும் இழிவு சார்ந்தனை` என அதன் மடமையை `உணர்த்தற்கு.
ஆகவே, அவ்விடத்து, `அறிந்தும்` என்பது வருவிக்க.
பேய்த் தேர் - கானல், ``நனவுப் பெயர் பெற்ற`` என்றது, `அப்பெயர் நீடு நில்லாதது` என்றற்கு.
மாயம் - கடிதின் மறைவது.
`பொல்லாத் தன்மையரது இழிவினை நீயும் சார்ந்தனை என்க.
``இழிவு`` என்பது அதனை உடைய செயைல உணர்த்தலின் ஆகுபெயர்.
``சார்ந்தனை`` என்பதன்பின், `அதனால்` என்பது வருவிக்க.
ஆதலின் - ஆகிவிட்டமையால்.
இழுக்கம் - சகதி.
`புலன்வழியாகிய இழுக்கம்` என்க.
ஒழுகி - நடந்து.
தூண்டிலில் உள்ள இரையை விரும்பிச் சென்று இறக்கின்ற மீன் `சுவை` என்னும் புலனால் கெடுதற்கும், விளக்கு ஒளியை `இரை` என ஓடி வீழ்ந்து இறக்கும்` என்பர் ஆதலின் அஃது `ஊறு` என்னும் புலனால் கெடுதற்கும், புள் - அதணம்.
`இது வேடர்கள் வஞ்சனையால் இசைக்கும் இசையால் மயங்கி வந்து வலையில் விழும்` என்பர் ஆதலின் அஃது `ஓை\\\\\\\\*u2970?*` என்னும் புலனால் கெடுதற்கும், பூக்களின் மணத்தை நுகரச் சென்று அவற்றினுள் வீழ்கின்ற வண்டுகள் அம்மலர்கள் குவிந்த பொழுது உள்ளே கிடந்து இறத்தலின் அவை `நாற்றம்` என்னும் புலனால் கெடுதற்கும் உவமையாயின.
`அசுணம் விலங்கு` என்பாரும்.
`வண்டுகள் மலர்த்தேனில் வீழ்ந்து இறத்தல் பற்றிச் சொல்லப்படுவது` என்பாரும் உளர்.
விளக்கம் - விளங்கல்.
ஆகுபெயராய் அதனையுடைய விளக்கைக் குறித்தது.

செறு உழி - கொல்லும் இடம்.
தன் அகப்படுத்தல் - தன்னையே தான் கட்டுக்குள் அகப்படுத்திக் கொள்ளுதல் `உலண்டு` என்னும் பூச்சி தனது வாய் நூலால் தன்னையே தான் சுற்றிக் கொள்ளும் என்பது சங்க இலக்கியங்களில் சொல்லப்படுவது.
``கீடம்`` என்பது புழுவாயினும் இங்கு அது பூச்சியையே குறித்தது.
``நுந்துழி`` என்பதும் அவ்வுலண்டிற்கு ஒரு பெயர்போலும்.
குடர் கெவு சிறை - தாயின் கருப்பை.
சிறக்கு - சிறைக்கண்.
வேற்றுமை மயக்கம்.
உறங்குபு கிடத்தி - உறங்கிக் கிடக்கின்றாய்.
`ஆயினும் - இறையவன் - என்கிலை; அஃதொழிந்து, அவ் இறைவனைப் பேசு` என முடிக்க.

நினையார் மெலியார் நிறையழியார் வாளாப்
புனைவார்க்குக் கொன்றை பொதுவோ அனைவீரும்
மெச்சியே காண வியன்தில்லை யானருளென்
பிச்சியே நாளைப் பெறும். **#1080**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பிச்சி - பித்தி; பித்துக்கொண்டவள்.
அஃதாவது, `காதல் மீதூர்வால் இடையறாது நினைந்தும், அதனால் உடல் மெலிந்தும், நிறையழிந்தும் நிற்பவள்.
தில்லைப் பெருமான் அனைவர் நிலையையும் நன்கு அறிந்து அவரவர் நிலைக்கு ஏற்ப அருள்புரிபவன் ஆகலின் அவனது அருளை இவளே பெறுவாள்; அஃதாவது, அவன் தனது கொன்றை மாலையை இவளுக்கே தருவான்.
ஆகையால், இவளைப் போல அன்பில்லாதவர்கள் பலர் அவனது கொன்றை மாலையை விரும்புதற்கு அஃது என்ன.
அன்பருக்கின்றி எல்லார்க்கும் பொதுவோ` என ஒருத்தியைத் தலைவியாகக் கொண்ட தோழி பிற மகளிரைக் காமக் கிழத்தியராக வைத்து இகழ்ந்தாள்.
இதன் உள்ளுறை, `அன்பர் அல்லார்க்குத் தில்லைப் பெருமானது அருள் கிட்டாது` என்பதாம்.

பெறுகின்ற எண்ணிலித் தாயரும்
பேறும் யானுமென்னை
உறுகின்ற துன்பங்க ளாயிர
கோடியும் ஒய்வொடுஞ்சென்

றிறுகின்ற நாள்களு மாகிக்
கிடந்த இடுக்கணெல்லாம் அறுகின் றனதில்லை யாளுடை
யான்செம்பொன் னம்பலத்தே. #1081
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பெறுகின்ற தாயர் - வரும் பிறப்புக்களில் என்னைப் பெற்றெடுக்க இருக்கின்ற தாய்மார்கள்.
பேறும் உறும் யான் - அவர்கள் பெறும் பேறாக அவர்களை அடைகின்ற யான்.
ஓய்வு - துடிப்புக்களெல்லாம் அடங்குதல்.
இறுகின்ற நாள்கள் - இறக்கின்ற நாள்கள்.
இவைகள் யாவும் துன்பங்களாய், நான் தில்லையம்பலத் திலே சென்று கூத்தப் பெருமானைக் கண்டு தொழுகின்ற இந்த நேரத்திலே அடியொடு ஒருங்கி நீங்குகின்றன.
``தாயர்`` என்னும் உயர்திணையும், ``யான்`` என்னும் தன்மையும் இடுக்கண்களாய் அடங்கினமையால், ``அறுகின்றன`` என்பதிலே முடிந்தன.

அம்பலவர் அங்கணர் அடைந்தவர் தமக்கே
அன்புடையர் என்னுமிதென் ஆனையை யுரித்தே
கம்பலம் உவந்தருளு வீர்மதனன் வேவக்
கண்டருளு வீர்பெரிய காதலறி யாதே
வம்பலர் நிறைந்துவசை பேசவொரு மாடே
வாடையுயிர் ஈரமணி மாமையும் இழந்தென்
கொம்பல மருந்தகைமை கண்டுதக வின்றிக்
கொன்றையரு ளீர்கொடியிர் என்றருளு வீரே.
#1082
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது கைக்கிளையாதலின் செவிலி தலைவனை மாலையிரத்தலாய் வந்தது.
`தில்லைக் கூத்தரே` என்பதை முதலில் வருவித்து, `நீர் ஆனையை உரித்து அதன் தோலைக் கமலமாகப் போர்த்துக் கொண்டு மகிழ்ச்சியடைந்தீர்; மன்மதன் எரிந்தொழியப் பார்த்தீர்; இவளது காதலின் இயல்பு அறியாமல் வம்பலர் (பிறரைத் தூற்றும் இயல்புடையோர்) நிறைந்து (தெருவில் கூடிக் கொண்டு) வசை பேசவும், மாடே (ஒருபக்கம்) வாடைக் காற்று இவளுடைய உயிரை வாங்கவும்,

அழகையும் இழந்து அலமருகின்ற இவளது நிலையைக் கண்டு இரக்கம் இல்லாமல், கொன்றை மாலையை, `தாரேன்` என்கின்றீர். அதற்கு மேல் எங்களை, `நீவிர் கொடியீர்` என வைகின்றீர். உம்மை அறிஞர்கள் - யாவரும் எளிதில் அடைய அம்பலத்திலே நிற்கின்றார் - என்றும், அம்கணர் (கருணை மிகுந்தவர்) - என்றும், தம்மைச் சார்ந்தவரிடத்திலே அன்பு செய்பவர்- என்றும் இவ்வாறெல்லாம் புகழ்கின்றது என்னோ!` என உரைக்க. இதுவும் பழித்ததுபோலப் புகழ்ந்தது ``கொடியீர்`` என்பது சிலேடை.

அருளு வாழி அருளு வாழி
புரிசடைக் கடவுள் அருளு வாழி
தோன்றுழித் தோன்றி நிலைதவக் கரக்கும்
புற்புதச் செவ்வியின் மக்கள் யாக்கைக்கு
நினைப்பினுங் கடிதே இளமை நீக்கம்

அதனினுங் கடிதே மூப்பின் தொடர்ச்சி
அதனினுங் கடிதே கதுமென மரணம்
வாணாள் பருகி உடம்பை வறிதாக்கி
நாணாள் பயின்ற நல்காக் கூற்றும்
இனைய தன்மைய திதுவே யிதனை

எனதெனக் கருதி இதற்கென்று தொடங்கிச்
செய்தன சிலவே செய்வன சிலவே
செய்யா நிற்பன சிலவே யவற்றிடை
நன்றென்ப சிலவே தீதென்ப சிலவே
ஒன்றினும் பாடதன சிலவே யென்றிவை

கணத்திடை நினைந்து களிப்பவுங் கலுழ்பவும்
கணக்கில் கோடித் தொகுதி அவைதாம்
ஒன்றொன் றுணர்வுழி வருமோ வனைத்தும்
ஒன்றா உணர்வுழி வருமோ என்றொன்று
தெளிவுழித் தேறல் செல்லேம் அளிய
மனத்தின் செய்கை மற்றிதுவே நீயே
அறியை சாலவெம் பெரும தெரிவுறில்
உண்டாய்த் தோன்றுவ யாவையும் நீயே
கண்டனை அவைநினைக் காணா அதுதான்
நின்வயின் மறைத்தோ யல்லை யுன்னை

மாயாய் மன்னினை நீயே வாழி
மன்னியுஞ் சிறுமையிற் கரந்தோ யல்லை
பெருமையிற் பெரியோய் பெயர்த்தும் நீயே
பெருகியுஞ் சேணிடை நின்றோ யல்லை
தேர்வோர்க்குத் தம்மினும் அணியை நீயே

நண்ணியும் நீயொன்றின் மறைந்தோ யல்லை
இடையிட்டு நின்னை மறைப்பது மில்லை
மறைப்பினும் அதுவும்
நீயே யாகி நின்றதோர் நிலையே அஃதான்று
நினைப்பருங் காட்சி நின்னிலை யிதுவே

நினைப்புறுங் காட்சி எம்நிலை யதுவே
இனிநனி இரப்பதொன் றுடையன் மனமருண்டு
புன்மையின் திளைத்துப் புலன்வழி நடப்பினும்
நின்வயின் நினைந்தே னாகுதல் நின்வயின்
நினைக்குமா நினைக்கப் பெறுதல் அனைத்தொன்றும்

நீயே அருளல் வேண்டும் வேய்முதிர்
கயிலை புல்லென எறிவிசும்பு வறிதாக
இம்ப ருய்ய அம்பலம் பொலியத்
திருவளர் தில்லை மூதூர்
அருநடங் குயிற்றும் ஆதிவா னவனே. **#1083**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``வேய்முதிர்.
ஆதிவானவனே`` என்னும் பகுதியை முதலிலும், அதனை அடுத்து, ``புரிசடைக் கடவுள், பெரும`` என்பவற்றையும் வைத்து, ``அருளு வாழி`` என்பவற்றை இறுதியிற் கூட்டி யுரைக்க.
வேய் - மூங்கில்.
புல்லென - `கயிலை பொலி விழக்கும்படியும், ஒளி எறிக்கின்ற வானகம் வெறுமை யாகும்படியும், இவ்வுலகம் உய்யும்படியும் அம்பலம் பொலியும் படியும் அருநடம் குயிற்றும் - செய்கின்ற.
ஆதி வானவன் - முதற் கடவுள்.
``புரிசடைக் கடவுள்`` என்பதும் விளி.
`பருகியபின்` என்பது, `பருகி` எனத் திரிந்து நின்றது.
வாழ்நாள் முடிவைக் குறிக்கொண்டு நோக்கி வருதல் பற்றிக்

கூற்றுவனை வாழ்நாளைப் பருகுவோனாகக் கூறினார்.
``கூற்றம் அளந்து நும் நாள் உண்ணும்`` *1* எனப் பிறவிடத்தும் கூறப்பட்டது.
``உடம்பை வறிதாக்கி`` என்றது, `உயிரைப் பிரித்தெடுத்து`` என்றபடி.
நாள்நாள் - பல நாளும்.
பயிலுதல் - அத் தொழிலையே செய்தல்.
நல்குதல் - இரங்குதல்.
`வறிதாக்கிப் பயின்ற கூற்றம்` என்க.
``இனைய தன்மையது`` என்றது.
`இதன் இயல்பு இது ஆதலின் அஃது ஒருவ ராலும் மாற்றப்படாது` என்றபடி.
`கூற்றமாகிய இது இனைய தன்மையதே` என மாற்றிக் கொள்க.
மரணத்தின் இயல்பை விளக்கு தற்கு.
இடையே கூற்றத்தின் இயல்பு கூறினார் ஆகலின்.
பின்னர், `இதனை`` என்றது, முன்னர்க் கூறிவந்த மக்கள் யாக்கையே யாயிற்று.
``நன்று, தீது`` என்பன ஓர் இனத்துப் பல பொருள்கள் மேல் தனித்தனிச் சென்று, பன்மை யொருமை மயக்கமாய் வந்தன.
ஒன்றினும் படாது வருவன, துரும்பு கிள்ளுதல், வாளாமுகம், முடி, கால் முதலியவை களைத் தடவல் போல்வன.
இவைகளை, `நினையாது செய்வன` என்பர்.
`என்ற` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.
களித்த லும், கலுழ்தலும் விருப்பு வெறுப்புக்களைக் குறிக்க.
``களிப்ப, கலுழ்ப`` என்பன.
அவ்வச் செயப்படு பொருள்மேல் நின்றன.
`ஒன்று ஒன்றாக என ஆக்கம் விரிக்க.
எதிர் காலப் பொருளவாய `உணர` என்னும் எச்சங்கள் ``உணர்வுழி`` எனத் திரிந்து நின்றன.
ஒன்று ஒன்றாக - தனித் தனியாக.
ஒன்றாக - ஒருதொகுதியாக.
தெளிவுழி - ஆராயும் பொழுது.
`தெரிவுழி` எனப் பாடம் ஓதுதல் சிறக்கும்.
தேறல் செல்லேம் - தெளிய மாட்டேம்.
மற்று.
அசை `இதுவே மனத்தின் செய்கை` என்க.
``செய்கை`` என்றது தன்மையை.
`வினைகள் வந்து பயன் தரும் முறைமைகளை யெல்லாம் அறியும்

ஆற்றல் மனித மனத்திற்கு இல்லை` என்றபடி.
அளிய - எளிய `மனத்தின் தன்மை இதுவாக.
உனது இயல்பை நோக்கும் பொழுது.
நீயும் யாராலும் அறிதற்கு மிக அரியை` என்பதாம்.
``உண்டு`` என்பது உண்மைத் தன்மையைக் குறித்தது.
``யாவையும்`` என்பதில் `யாவற்றையும்` என இரண்டாவது விரிக்க.
``கண்டனை`` என்பதன் பின், `ஆயினும் என்பது வருவிக்க.
``அது`` என்றது அதன் காரணத்தை.
`அவை நின்னைக் காணாமை.
அங்ஙனம் அவற்றின் கண்களை நீ மறைத்த தனாலன்று; இனி, நீ தானும் மாயாய் - மறைந்திலை.
மன்னினை - வெளிப்பட்டே நிற்கின்றாய்.
வாழி, அசை.
``மன்னியும்`` என்னும் உம்மை.
`மன்னியதன்மேலும்` என எதிரது தழுவி நின்றது.
சிறுமையிற் கரந்தோய் அல்லை - சிறியதினும் சிறியதாய் மறைத்து நிற்றல்.
மட்டும் அன்று பெயர்த்தும் - மாறாக பெருமையிற் பெரியோய் நீயே.
பெருமை - பெரியது; ஆகுபெயர்.
பெருகியும் - அவ்வாறு.
பெரிதாயினாயேனும் சேணிடை நின்றோய் அல்லை.
மிக உயரத்திலே நீ இருக்கவில்லை.
தேர்வோர்க்கு - உன்னைத் தேடுபவர்கட்கு.
தம்மினும் நீ அணியையே - அவரினும் பார்க்க நீ அண்மையில் உள்ளவனே.
அவர்கள் உயிரினுள் நிற்பவன்.
(ஆயினும் அவர்கள் உன்னைக் காணாமல் தேடுகின்றனர் ஆயினும்) நீ ஒன்றில் மறைந்து நிற்கவில்லை.
உன்னைப் புலப்பட ஒட்டாது மறைப்பதொரு பொருளும் இல்லை.
இருப்பதாயின், அதுவும் நீயே ஆகின்ற நிலைமையை உடையாய்.
நினைவைக் கடந்த தோற்றத்தையுடைய உனது நிலைமை இது ஆயினும், நினைவையே உடையேனாகிய எனது நிலைமை இது.
அதாவது நீ எத்துணை எளியனாய் இருப்பினும் உன்னைக் காணாமல் இருப்பதேயாகும்.
அதனால் உன்னிடத்தில் யான் இரந்து கேட்பது ஒன்றை உடையேன்.
அஃது யாது எனின், நான் எந்தச் செயலைச் செய்தாலும் (அவை உன்னைவிட்டுத் தனியே இல்லாமையால்) உன்னையே நினைத்துச்

செய்தனவாகக் கொள்ளுதலாகிய நினைத்துச் செய்தனவாகக் கொள்லுதலாகிய நினைப்பை நீ கொள்ளப் பெறுதலாம்.
அன்னதொரு வரத்தை நீ எனக்கு அருளல் வேண்டும்.
அருளு! அருளு!! அருளு!!!` என முடிக்க.
``வாழி`` என்பன அசைகள், ``தோன்றுழி`` என்பதில் ``உழி`` காலம் உணர்த்தி நின்றது.
தவ - கெட.
`கறங்கும்` என்பது பாடம் அன்று.
புற்புதம் - நீர்க்குமிழி `உன்னை மறைப்பதொரு பொருள் இருக்குமாயின் அதுவும் நீயே` என்றது.
திரோதான சத்தியாய் நின்று மறைத்தல் பற்றி.

வானோர் பணிய மணியா சனத்திருக்கும்
ஆனாத செல்வத் தரசன்றே மாநாகம்
பந்திப்பார் நின்றாடும் பைம்பொன்னின் அம்பலத்தே
வந்திப்பார் வேண்டாத வாழ்வு.

#1084

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அன்றே`` என்னும் தேற்றச் சொல்லை இறுதிக்கண் கூட்டுக.
செல்வம், இந்திர பதவிச் செல்வம்.
பந்தித்தல் - கைகள்.
கழுத்து, வயிறு இவைகளைச் சுற்றிக் கட்டுதல்.
வேண்டாத - விரும்பாத, விரும்பாமைக்குக் காரணம், நிலையாமையும், துன்பமும் மயக்கமும் நிறைந்திருத்தலுமாகும்.

வாழ்வாக வும்தங்கள் வைப்பாக
வும்மறை யோர்வணங்க
ஆள்வாய் திருத்தில்லை அம்பலத்
தாயுன்னை அன்றியொன்றைத்
தாழ்வார் அறியார் சடிலநஞ்
சுண்டிலை யாகிலன்றே
மாள்வார் சிலரையன் றோதெய்வ
மாக வணங்குவதே.

#1085

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மறையோர், தங்கள்`` என்பவற்றை முதலிற் கூட்டுக.

மறையோர், தில்லைவாழந்தணர்.
``ஆள்வாய், அம்பலத் தாய்`` என்பன விளிகள்.
வைப்பு - சேம நிதி.
`உன்னையன்றி ஒரு தெய்வத்தை வணங்குபவர்.
தெய்வமாகக் கொண்டு வணங்குவது, நீ நஞ்சினை உண்ணாதிருப்பின் அன்றே இறந்து போயிருப்பாரை யன்றோ? அதனை அவர் அறியார்` என இயைத்து முடிக்க.
ஆரணி துங்கன், நாரணி பங்கன், அருணேசன்
தாரணி அஞ்சும் காரண நஞ்சம் தரியானேல்,
வாரணர் எங்கே, சாரணர் எங்கே, மலர்மேவும்
பூரணர் எங்கே, நாரணர் எங்கே போவாரே.
1 என்றார் சைவ எல்லப்ப நாவலர்.
அசைவைக் குறிப்பதாகிய ``சடிலம்`` என்பது முன்னர் அலைகளையும். பின்னர் அவற்றையுடைய கடலையும் குறித்தலால் இருமடியாகுபெயர்.

வணங்குமிடை யீர்வறிது வல்லியிடை யாள்மேல்
மாரசர மாரிபொழி யப்பெறு மனத்தோ
டுணங்கியிவள் தானுமெலியப் பெறும் இடர்க்கே
ஊதையெரி தூவியுல வப்பெறும் அடுத்தே
பிணங்கியர வோடுசடை ஆடநடமாடும்
பித்தெரென வும்மிதயம் இத்தனையும் ஒரீர்
அணங்குவெறி யாடுமறி யாடுமது வீரும்
மையலையும் அல்லலையும் அல்லதறி யீரே.

#1086

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது கைக்கிளைத் தலைவிதன் தோழி ஆயத்தாரை முன்னிலைப்படுத்தி வெறிவிலக்கியது.
வணங்கும் - துவள்கின்ற.
வல்லி - கொடி.
வறிது - காரணம் இல்லாமல்.
`இவள் உணங்கி மெலிய` என மாற்றுக.
தான், உம் அசைகள், உணங்குதல் - வற்றுதல்.
மெலிதல் - வலிமை குன்றுதல்.
இடர்க்கு, துன்பத்திற்கு உறுதுணையாக.
ஊதை - வாடைக் காற்று.
எரி தூவுதல் - வெப்பத்தைத் தருதல்.
``மெலியப் பெறும், உலவப் பெறும்`` என்பன அவ்வத் தொழிலை

உடையளாதலையும், உடைத்தாதலையும் குறித்தன.
அடுத்து - இவைகளைச் சார்ந்து ``சடை அரவோடு பிணங்கி ஆடும்படி நடனம் ஆடுகின்ற பித்தர், பித்தர்`` எனப் பிதற்றுகின்றாள்.
`அப்படிப் பிதற்றக் கேட்டும் உங்கள் இதயங்களில் இவள் பிதற்றலின் காரணத்தை நீவிர் அறியவில்லை.
(நீவிர் எப்படி அறிவீர்;) `தெய்வத்தைக் குறித்து வெறியாடுதற்கு வேண்டிய செம்மறியாட்டையும், மதுவால் மயக்கப்படுகின்ற மயக்கத்தையும், மற்றும் பல உழைப்பையும் அல்லது வேறு ஒன்றையும் நீவிர் அறிய மாட்டீர்` என்க.
இத்தனையும் - `இவ்வளவுதானும்` என இழிவு சிறப்பும்மை.

ஈரவே ரித்தார் வழங்கு சடிலத்துக்
குதிகொள் கங்கை மதியின்மீ தசைய
வண்டியங்கு வரைப்பின் எண்தோள் செல்வ
ஒருபால் தோடும் ஒருபால் குழையும்
இருபாற் பட்ட மேனி எந்தை

ஒல்லொலிப் பழனத் தில்லை மூதூர்
ஆடகப் பொதுவில் நாடகம் நவிற்றும்
இமையா நாட்டத் தொருபெருங் கடவுள்
வானவர் வணங்கும் தாதை யானே
மதுமழை பொழியும் புதுமந் தாரத்துத்
தேனியங் கொருசிறைக் கானகத் தியற்றிய
தெய்வ மண்டபத் தைவகை அமளிச்
சிங்கஞ் சுமப்ப ஏறி மங்கையர்
இமையா நாட்டத் தமையா நோக்கம்
தம்மார்பு பருகச் செம்மாந் திருக்கும்

ஆனாச் செல்வத்து வானோர் இன்பம்
அதுவே எய்தினும் எய்துக கதுமெனத்
தெறுசொ லாளர் உறுசினந் திருகி
எற்றியும் ஈர்த்தும் குற்றம் கொளீஇ
ஈர்ந்தும் போழ்ந்தும் எற்றுபு குடைந்தும்

வார்ந்துங் குறைத்தும் மதநாய்க் கீந்தும்
செக்குரல் பெய்தும் தீநீர் வாக்கியும்
புழுக்குடை அழுவத் தழுக்கியல் சேற்றுப்
பன்னெடுங் காலம் அழுந்தி இன்னா

வரையில் தண்டத்து மாறாக் கடுந்துயர்

நிரயஞ் சேரினுஞ் சேர்க உரையிடை
ஏனோர் என்னை ஆனாது விரும்பி
நல்லன் எனினும் என்க அவரே
அல்லன் எனினும் என்க நில்லாத்
திருவொடு திளைத்துப் பெருவளஞ் சிதையாது

இன்பத் தழுந்தினும் அழுந்துக அல்லாத்
துன்பந் துதையினும் துதைக முன்பின்
இளமையொடு பழகிக் கழிமூப்புக் குறுகாது
என்றும் இருக்கினும் இருக்கவன்றி
இன்றே இறக்கினும் இறக்க வொன்றினும்
வேண்டலும் இலனே வெறுத்தலும் இலனே
ஆண்டகைக் குரிசில் நின் அடியரொடு குழுமித்
தெய்வக் கூத்தும்நின் செய்ய பாதமும்
அடையவும் அணுகவும் பெற்ற
கிடையாச் செல்வங் கிடைத்த லானே.

#1087

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வேரி வழங்கு ஈரத்தார்ச் சடிலம்` என்க.
வேரி - தேனை.
வழங்கு - ஊற்றுகின்ற - ஈரம் - குளிர்ச்சி.
வரைப்பு - எல்லை.
வண்டுகள் தோளில் புரளும் மாலையின் தேனை உண்ண வந்து இயங்குகின்றன.
தோடு பெண்பாற்கு உரியதும், குழை ஆண்பாற்கு உரியதும் ஆகலின் மேனி இருபாற்பட்டதாயிற்று.
தேன் - வண்டுவகைகளில் ஒன்று - சிறை - பக்கம்.
அமளி - அமை.
``மங்கையர் பருக`` என இயையும் `இமையா நாட்டத்து அமையா நோக்கத்தால் பருக``` என்க.
அமையா நோக்கம் - தெவிட்டாத பார்வை.
``அதுவே`` என்னும் பிரிநிலை ஏகாரம் அதன் சிறப்புணர்த்தி நின்றது
கதுமென - விரைவாக.
தெறுசொலாளர் - கடுஞ்சொற்களை யுடைய கால தூதுவர்.

உறுசினம் - மிக்க கோபம் திருகி - முறுகப் பெற்று.
குற்றம் - மண்ணுலகில் செய்த குற்றங்கள்.
கொளீஇ - கொளுவி; எடுத்தெடுத்துக் கூறி.
மத நாய் - வெறி நாய்.
தீ நீர் - உலோகங்களை உருக்கிய நீர்.
அழுவம் - பள்ளம்ஓ குழி ``இன்னா`` என்பதன்பின் `செய்யும்` என ஒருசொல் வருவிக்க.
வரை இல் - எல்லையில்லாத.
``உரையிடை`` என்பதை.
``விரும்பி`` என்பதன் பின்னர்க் கூட்டுக.
திரு - இவ்வுலகச் செல்வம்.
முன்பு - வலிமை.
முன்பின் - வலிமையை உடைய.
பழகுதல் - பலநாள் வாழ்தல்.
கழி மூப்பு - இளமை.
கழிய வரும் மூப்பு - ஆண் தகைக் குரிசில் - ஆளும் தகைமையை உடைய தலைவர்.
`குரிசிலாகிய நினக்கு அடியரா யினாரோடும் குழுமி` என்க.
அடைதல் - அடைக்கலமாய் புகுதல்.
அணுகுதல் - அகலமாதிருத்தல்.
`ஒரு பெருங்கடவுளே! எனக்கு மிகப் பெரிய இன்பங்கள்வரினும் வருக; மிகப்பெரிய துன்பங்கள்வரினும் வருக.
எந்த ஒன்றிலும் விருப்போ, வெறுப்போ கொள்கிலேன், எதனால் எனின், யாவர்க்கும் கிடைத்தற்கரிய மிகப் பெரிய செல்வம் எனக்குக் கிடைத்துவிட்டதனால்` என வினை முடிவு செய்க.

ஆனேறே போந்தால் அழிவுண்டே அன்புடைய
நானேதான் வாழ்ந்திடினும் நன்றன்றே வானோங்கு
வாமாண் பொழிற்றில்லை மன்றைப் பொலிவித்த
கோமானை இத்தெருவே கொண்டு. **#1088**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது கைக்கிளைத் தலைவியின் காமம் மிக்க கழிபடர் கிளவி.
அஃதாவது காமம் மிகுதியால் வாய்க்கு வந்தன பிதற்றல்.
கழி படர் - மிக்க துன்பம்.
`ஆனேறே! தில்லை மன்னைப் பொலிவித்த கோமான்மேல் அன்புடைய நானே (இறவாது) உயிர் வாழ்ந்தாலும் உனக்கு நல்லதுதானே? (அவ்வாறிருக்க.

நீ ஒருநாள் போந்ததுபோலப் பல நாளும் அவனை இத்தெருவே கொண்டு போந்தால் உனக்கு அழிவது (கெடுவது) ஏதேனும் உண்டோ` என உரைத்துக் கொள்க.
இஃது இறைவனது ஊர்தியை எதிர்பெய்து கொண்டு கூறியது.
``அன்புடைய`` என்பதற்குமுன், `அவன்மேல்` என ஒருசொல் வருவிக்க.
``நானே`` என்னும் பிரிநிலை ஏகாரம் அவள் தன்னை இழித்துக் கூறியதனை உணர்த்திற்று.
தான், அசை `ஏனையோர் போல நான் உயர்ந்தவள் அல்லாவிடினும், அவன்மேல் அன்புடையளேயன்றோ என்றபடி.
நன்று - அறம்; புண்ணியம்.
`வாமம்` என்பது ஈற்று அம்முக்குறைந்து நின்றது.
வாமம் - அழகு.

கொண்டல்வண் ணத்தவன் நான்முகன்
இந்திரன் கோமகுடத்
தண்டர்மிண் டித்தொழும் அம்பலக்
கூத்தனுக் கன்பு செய்யா
மிண்டர்மிண் டித்திரி வாரெனக்
கென்னினி நானவன்றன்
தொண்டர்தொண் டர்க்குத் தொழும்பாய்த்
திரியத் தொடங்கினனே.

#1089

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கோ - தலைமை.
மிண்டர் - நெஞ்சுரம் உடையவர் மிண்டி - நெருங்கி (கலாய்த்து)த் திரிவார்.
`நான் தொழும்பாய்த் திரியத் தொடங்கினன்.
ஆகையால் இனி எனக்கு என்ன குறை` என்க.
இதனுள் வழி எதுகை வந்தது.

தொடர நரைத்தங்க முன்புள்ள வாயின
தொழில்கள் மறுத்தொன்று மொன்றி யிடாதொரு
களிவு தலைக்கொண்டு புன்புலை வாரிகள்
துளையொழு கக்கண்டு சிந்தனை ஒய்வொடு
நடைகெட முற்கொண்ட பெண்டிர் பொறாதொரு
நடலை நமக்கென்று வந்தன பேசிட
நலியிரு மற்கஞ்சி உண்டி வேறாவிழு
நரக உடற்கன்பு கொண்டலை வேனினி

மிடலொடி யப்பண் டிலங்கையர் கோனொரு
விரலின் அமுக்குண்டு பண்பல பாடிய
விரகு செவிக்கொண்டு முன்புள தாகிய
வெகுளி தவிர்த்தன்று பொன்றி யிடாவகை
திடமருள் வைக்குஞ் செழுஞ்சுடர் ஊறிய
தெளியமு தத்தின் கொழுஞ்சுவை நீடிய
திலைநக ரிற்செம்பொன் அம்பல மேவிய
சிவனை நினைக்குந் தவஞ்சது ராவதே. **#1090**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``*(நான்)* உடற்கு அன்பு செய்து அலைவேன்; *(*`இதனை விடுத்துத் *)*தில்லை யம்பலம் மேவிய சிவனை நினைக்கும் தலமே இனி *(எனக்குச்)* சதுராவது`` என முடிவு கொள்க.
அங்கம் - உறுப்புக்கள்.
தொடர நரைத்து - நாள்தோறும் தொடர்ந்து நரை தோன்றப்பெற்று
முன்பு - இளமைக் காலத்தில் ஒன்றும் - *(அங்கம்)* ஒன்றேனும்,
ஒன்றியிடாது - வசப்படாது.
``களிவு தலைக்கொண்டு`` என்பதை, ``கண்டு`` என்பதன்பின் கூட்டுக.
`வெறுப்பை மேற் கொண்டு` என்பது இதன் பொருல், புன்புலை
வாரிகள் - அற்பமான இழிந்த நீர்கள்; கோழை, சிறுநீர் முதலியன, நடை
கெட - நடத்தல் இல்லாதொழிய.
(`இடம் பெயராது கிடந்து` என்றபடி*)* கொண்ட பெண்டிர் - மனைவியர்,
`தொல்லை பொறாது` என்க.
நடலை - துன்பம்.
விழும் உடல் - இறுதியில் வீழ்ந்தொழிகின்ற உடம்பு.
நரக உடல் - இழிவாலும், துன்பத்தாலும் நரகம்போல்வதாகிய உடம்பு.
மிடல் - வலிமை.
விரகு - திறமை.
`அவன் பொன்றியிடா வகை` என்க.
திடம் - உறுதி.
`திடமாக` என ஆக்கம் வருவிக்க.
அருள்காரணமாகத் தரப்பட்ட வரத்தினது திடம்.
அதற்குக் காரணமான அருள்மேல் ஏற்றப்பட்டது.
ஊறிய - உள்ளுள் சுரக்கின்ற, ``சுடர், சுவை`` என்பன பின் வந்த
``சிவன்`` என்னும் ஒரு பொருள்மேல் வந்த பெயர்கள்.
நீடிய- `நிலை பெற்ற, அம்பலம்` என்க.
சதுர் - திறமை.

சதுர்முகன் தந்தைக்குக் கதிர்விடு கடவுள்
ஆழி கொடுத்த பேரருள் போற்றி
முயற்சியொடு பணிந்த இயக்கர்கோ னுக்கு
மாநிதி இரண்டும் ஆனாப் பெருவளத்
தளகை ஒன்றும் தளர்வின்றி நிறுவிய
செல்வங் கொடுத்த செல்வம் போற்றி
தாள்நிழல் அடைந்த மாணிக் காக
நாண்முறை பிறழாது கோண்முறை வலித்துட்
பதைத்துவருங் கூற்றைப் படிமிசைத் தெறிக்க
உதைத்துயிர் அளித்த உதவி போற்றி

குலைகுலை குலைந்த நிலையாத் தேவர்
படுபேர் அவலம் இடையின்று விலக்கிக்
கடல்விடம் அருந்தன கருணை போற்றி
தவிராச் சீற்றத் தவுணர் மூவெயில்
ஒல்லனல் கொளுவி ஒருநொடிப் பொடிபட

வில்லொன்று வளைத்த வீரம் போற்றி
பூமென் கரும்பொடு பொடிபட நிலத்துக்
காமனைப் பார்த்த கண்ணுதல் போற்றி
தெய்வ யாளி கைமுயன்று கிழித்தெனக்
கரியொன் றுரித்த பெருவிறல் போற்றி

பண்டு பெரும்போர்ப் பார்த்தனுக் காகக்
கொண்டு நடந்த கோலம் போற்றி
விரற்பதம் ஒன்றில் வெள்ளிமலை எடுத்த
அரக்கனை நெரித்த ஆண்மை போற்றி
விலங்கல் விண்டு விழுந்தென முன்னாள்

சலந்தரற் றடிந்த தண்டம் போற்றி
தாதையை எறிந்த வேதியச் சிறுவற்குப்
பரிகலங் கொடுத்த திருவுளம் போற்றி
நின்முதல் வழிபடத் தன்மகன் தடிந்த
தொண்டர் மனையில் உண்டல் போற்றி

வெண்ணெய் உண்ண எண்ணுபு வந்து
நந்தா விளக்கை நுந்துபு பெயர்த்த

தாவுபல் எலிக்கு மூவுல காள
நொய்தினில் அளித்த கைவளம் போற்றி
பொங்குளை அழல்வாய்ப் புகைவிழி ஒருதனிச்
சிங்கங் கொன்ற சேவகம் போற்றி
வரிமிடற் றெறுழ்வலி மணியுகு பகுவாய்
உரகம் பூண்ட ஒப்பனை போற்றி
கங்கையுங் கடுக்கையுங் கலந்துழி ஒரு பால்
திங்கள் சூடிய செஞ்சடை போற்றி

கடவுளர் இருவர் அடியும் முடியும்
காண்டல் வேண்டக் கனற்பிழம் பாகி
நீண்டு நின்ற நீளம் போற்றி
ஆலம் பில்குநின் சூலம் போற்றி
கூறுதற் கரியநின் ஏறு போற்றி

ஏகல் வெற்பன் மகிழும் மகட்கிடப்
பாகங் கொடுத்த பண்பு போற்றி
தில்லை மாநகர் போற்றி தில்லையுட்
செம்பொன் அம்பலம் போற்றி அம்பலத்
தாடும் நாடகம் என்றாங்

கென்றும் போற்றினும் என்தனக் கிறைவ
ஆற்றல் இல்லை ஆயினும்
போற்றி போற்றிநின் பொலம்பூ அடிக்கே.
#1091
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கடவுள் ஆழி - தெய்வத் தன்மையுடைய சக்கரம்.
இயக்கர் கோன் - யட்சர் தலைவன் குபேரன்.
மாநிதி இரண்டு சங்கநிதி, பதுமநிதி ``செல்வம்`` இரண்டில் பின்னது
திருவருள் மாணி - பிரமசாரி; மார்க்கண்டேயர், கோல் முறை - பற்றிக் கொண்டு செல்லும் முறை.
வலித்து - துணிந்து தெறிக்க - துள்ளி விழும்படி.
`மாணிக்கு உயிர் அளித்த` என்க.
அரவம் - ஓசை இடையின்றி - காலம் தாழ்த் தாமல் ஒல் அனல் - வல்லதாய தீ `கரும்பொடு பூப் பொழி பட` என்க.
கிழித்தென - கிழித்தாற்போல்.

விலங்கல் விண்டு விழுந்தென - மலை பிளந்து வீழ்ந்தாற்போல; `விழ` என ஒருசொல் வருவிக்க.
பரிகலம் - உண்டகலம்; என்றது `மிச்சில்` என்றபடி முதல் - தாள்;
திருவடி ``உண்டல்`` என்றது உண்ண அமர்ந்ததைக் குறித்தது.
நொய்தில் - எளிதாக.
கை வளம் - வள்ளன்மை உளை - பிடரி மயிர், சிங்கம், நரசிங்கம் சேவகம் வீரம்.
வரி - புள்ளிகள்.
எறுழ் வலி - மிக்க வலிமை.
உரகம் - பாம்பு.
ஒப்பனை - அலங்காரம், கடுக்கை - கொன்றை.
வேண்டா - விரும்பும்படி ஆலம் - நஞ்சு.
பில்குதல் - சிந்துதல்.
ஏகல் வெற்பு - மிகப் பெரிதாகிய மலை.
`முற்றக் கூறிய போற்ற ஆற்றல் இல்லை` என்க.
பொலம் பூ அடி - பொற்பூப்போலும் திருவடிகள்.
``போற்றி போற்றி`` என்னும் சொற்கள் பொருள் உணர்த்தாது,
தம்மையே தாம் உணர்த்தி நின்றன.
அவற்றைச் செயப்படுபொரு ளாக்கி, அவற்றின் பயன் `ஆக்குவன்` என ஒரு சொல் வருவித்து, ``ஆயினும்`` என்பதற்கும், ``பூவடிக்கு`` என்பதற்கும் முடிபாக்கி முடிக்க.
``பூவடிக்கு`` என்பதில் `பூ` என்பது இதன் முதற் செய்யுளின் முதலோடு சென்று மண்டலித்தல் காண்க.
கோயில் நான்மணிமாலை முற்றிற்று.

பட்டினத்து அடிகள் - திருக்கழுமல மும்மணிக்கோவை

திருவளர் பவளப் பெருவரை மணந்த
மரகத வல்லி போல ஒருகூ
றிமையச் செல்வி பிரியாது விளங்கப்
பாய்திரைப் பரவை மீமிசை முகிழ்த்த
அலைகதிர்ப் பரிதி ஆயிரந் தொகுத்த

வரன்முறை திரியாது மலர்மிசை இருந்தெனக்
கதிர்விடு நின்முகங் காண்தொறுங் காண்தொறும்
முதிரா இளமுறை முற்றாக் கொழுந்தின்
திருமுகத் தாமரை செவ்வியின் மலரநின்
தையல் வாணுதல் தெய்வச் சிறுபிறை

இளநிலாக் காண்தொறும் ஒளியொடும் புணர்ந்தநின்
செவ்வாய்க் குமுதஞ் செவ்வி செய்யநின்
செங்கைக் கமலம் மங்கை வனமுலை
அமிர்த கலசம் அமைவின் ஏந்த
மலைமகள் தனாது நயனக் குவளைநின்

பொலிவினொடு மலர மறையோர்
கழுமலம் நெறிநின்று பொலிய
நாகர் நாடு மீமிசை மிதந்து
மீமிசை உலகங் கீழ்முதல் தாழ்ந்திங்
கொன்றா வந்த குன்றா வெள்ளத்

துலகம்மூன் றுக்குங் களைகண் ஆகி
முதலில் காலம் இனிதுவீற் றிருந்துழித்
தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னா யோவென் றழைப்பமுன் நின்று

ஞான போனகம் அருளட்டிக் குழைத்த
ஆனாத் திரளை அவன்வயின் அருள
அந்தணன் முனிந்து தந்தார் யார் என
அவனைக் காட்டுவன் அப்ப வானார்
தோஒ டுடைய செவியன் என்றும்

பீஇ டுடைய பெம்மான் என்றும்
கையில் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட் டருளினை ஆங்கே.
#1092
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இம்முதற் பாட்டில் தோணியப்பர் ஆளுடைய பிள்ளையார்க்கு அருள்புரிந்த வரலாறு சுருக்கமாகச் சொல்லப் படுகின்றது.
பவளப் பெருவரையைப் பற்றிப் படர்ந்த ஒரு மரகதக் கொடி போல உமையம்மை தனது ஒரு கூற்றில் விளங்கச் சிவபெருமான் விளங்குகின்றான்.
திரு - அழகு.
முகிழ்த்த - முளைத்த.
அலை கதிர் - வீசுகின்ற ஒளிக்கதிர்களையுடைய, `பரிதி ஆயிரம் இருந்தென` என இயையும்.
தொகுத்த வரல் முறை - அக்கதிர்களை முழுமையாகப் பெற்று உதயமாகி வருகின்ற முறை.
மலர் மிசை - தாமரை மலரின் மேலிடத்தில்.
உனது முகமாகிய பகலவனைக் காணுந்தோறும் உமை யம்மைதன் திருமுகமாகிய தாமரை மலரும் காலத்தைப் பொருந்தி மலரவும், (கொழுந்து - உமை) அவளது நெற்றியாகிய பிறையைக் காணுந்தோறும் உனது வாயாகிய செவ்வாம்பல் மலரவும், உனது கைகளாகிய செந்தாமரை மலர்கள் அவளது தனங்களாகிய அமிர்த கலசத்தைத் தாங்கவும், அவளது கண்களாகிய குவளை மலர்கள் உனது திருமேனியின் ஒளியாகிய நிலவினால் மலரவும் `இங்ஙனமாக நீ வீற்றிருந்துழி` என்க.
`கழுமலம்` என்னும் தலம் அன்றோடு அழிந் தொழியாது நிலைத்து நின்று வழி வழி விளங்க வேண்டிச் சிவ பெருமான் மேற்கூறியவாறு வீற்றிருந்தருளினான்.
`எப்பொழுது` எனின், நாகர் நாடும் (தேவர் உலகமும்) முதலில் மேலே மிதந்து, பின் உள்ளே மூழ்கி அடிநிலையிற்போய்விடும் படி மண்ணும், விண்ணும் வேறுவேறாகாது ஒன்றாகும்படி ஊழி வெள்ளம் பெருகிவந்த காலத்தில் அவ்வெள்ளத்தின் மேல் வீற்றிருந்தருளினார்.
உலகம் மூன்றிற்கும் களைகணாகி (பற்றுக்கோடாகி) வீற்றிருந்தருளினான்.
உலகம் முழுதும் மறைந்து போயினமையால் அக்காலம் அநாதி

காலத்தோடு ஒத்தது.
முதல் இல் காலம் - அநாதி காலம்.
உலகம் நிலை தடுமாறிற்றாயினும் அவன் இனிதே வீற்றிருந்தருளினான்.
அவ்வாறு அவன் அன்று வீற்றிருந்தவாறே இன்றும் அக்கழுமல நகரில் தோணியில் தோணியப்பனாய் வீற்றிருக்கின்றான்.
வீற்றிருந்துழி - அவ்வாறு அவன் வீற்றிருக்கும் இடத்தில்.
(திருக்கோயிலில்) ``தாதை யொடு வந்த வேதியச் சிறுவன்`` என்க.
``பசி வருத்த`` என்றதும், அது காரணமாகப் பால் வேண்டித் தாயாரை மட்டுமே ``அன்னாயோ`` என அழைத்தார் என்றதும்.
`குழந்தைமையை விளக்கிய உபசார மொழி` எனக் கொண்டு, நீருள் மூழ்கிய தந்தையாரைக் காணாமையால் சுற்றும், முற்றும் பார்த்து அழுத பிள்ளையார், திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து, ``அம்மே*!* அப்பா*!!*`` என்று இருவரையுமே அழைத்தருளி அழுதருளினார், என அருளிச் செய்தார் சேக்கிழார்.
இங்கு ``ஞான போனகம்`` என்றதைச் சேக்கிழார் *1* ``எண்ணரிய சிவஞானத்து இன்னமுதம்`` எனவும், அடிசில் எனவும் கூறி விளக்குகின்றார்.
அதுவேறாயாம்.
இங்கு அருள் என்றது திருமுலைப் பாலை.
`ஞான போனகத்தை அருளோடு அட்டிக் குழைத்த திரள்` என்க.
அட்டுதல் - கலத்தல்.
திரள்- உருண்டை.
ஆனா - நீங்காத.
`போனகத்தில் அருளை அட்டி` எனினும் ஆம்.
காட்ட - காட்டும்படி.
`பிள்ளையார் கையிற் சுட்டிக் காட்டிய போதிலும் தந்தையார் கண்டிலர் என்றே சேக்கிழார் கூறினார்.
இடையே இரண்டடி முச்சீர் பெற்று வந்தமையால், இஃது இணைக் குறள் ஆசிரியப்பா.

அருளின் கடலடியேன் அன்பென்னும் ஆறு
பொருளின் திரள்புகலி நாதன் இருள்புகுதுங்
கண்டத்தான் என்பாரைக் காதலித்துக் கைதொழுவார்க்
கண்டத்தார் தாமார் அதற்கு. **#1093**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`அடியேனுடைய அன்பாகிய ஆறாயும், பொருளின் திரளாயும் உள்ள

புகலி` நாதன், - இருள் புகுதும் கண்டத்தான் - என்பாரைக் காதலித்துக் கை தொழுவார்க்கு அருளின் கடல்.
(ஆகலான்) அதற்கு அண்டத்தார்தாம் ஆர்` என இயைத்துக் கொள்க.
புகலி நாதன், சீகாழியில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்.
`கடல், ஆறு, திரள்` என்பன உருவகங்கள்.
பொருளாவது ஞானம்.
``ஞானத் திரளாய் நின்ற பெருமான்`` என ஞானசம்பந்தரும் அருளிச் செய்தார்.
`இருள் புகுதும் கண்டத்தான்` என்பார், `நீலகண்டன்` முதலிய பல பெயர்களைச் சொல்லிச் சீகாழிப் பெருமானைத் துதிக்கும் அடியார்கள் `அவர்களைக் கைதொழுவார்க்கே சீகாழிப் பெருமான் அருட் கடலாய் இருந்து பேரருள் புரிகின்றான்` என்பதாம்.
அதற்கு - அந்தப் பேற்றை விரும்புதற்கு.
அண்டத் தார்தாம் - தேவராயினும்.
ஆர் - என்ன உரிமையுடையர்.
`அடியார்க்கு அடியராயினார்க்கு உரித்தாகிய சீகாழிப் பெருமானது திருவருள் தேவர்களாலும் பெறுதற்கரிது` என்பதாம்.
``அருளின்`` என்பதில் இன், வேண்டா வழிச் சாரியை.

ஆரணம் நான்கிற்கும் அப்பா
லவனறி யத்துணிந்த
நாரணன் நான்முக னுக்கரி
யான்நடு வாய்நிறைந்த
பூரணன் எந்தை புகலிப்
பிரான்பொழில் அத்தனைக்கும்
காரணன் அந்தக் கரணங்
கடந்த கருப்பொருளே. **#1094**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``எந்தை புகலிப்பிரான்`` என்பதை முதலிற் கொள்க.
நடுவாய் - உள்ளீடாய்.
பொழில் - உலகம்.
அந்தக்கரணம் - உட்கருவி.
அவை மனம் முதலியன.
கருப்பொருள் - உயிர் நாடியான பொருள், இது புகலிப் பிரானது மாண்பினை வகுத்தருளிச் செய்தவாறு.

கருமுதல் தொடங்கிப் பெருநாள் எல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனுந்

தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதின் இகழ்ந்து போக்கிப் பொருதிறல்
மையிருள் நிறத்து மதனுடை அடுசினத்
தைவகைக் கடாவும் யாப்பவிழ்த் தகற்றி
அன்புகொடு மெழுகி அருள்விளக் கேற்றித்
துன்ப இருளைத் துரந்து முன்புறம்
மெய்யெனும் விதானம் விரித்து நொய்ய
கீழ்மையில் தொடர்ந்து கிடந்தஎன் சிந்தைப்

பாழறை உனக்குப் பள்ளியறை யாக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவி
செந்தைநீ இருக்க இட்டனன் இந்த
நெடுநில வளாகமும் அடுகதிர் வானமும்
அடையப் பரந்த ஆதிவெள் ளத்து

நுரையெனச் சிதறி இருசுடர் மிதப்ப
வரைபறித் தியங்கும் மாருதம் கடுப்ப
மாலும் பிரமனும் முதலிய வானவர்
காலம் இதுவெனக் கலங்கா நின்றுழி
மற்றவர் உய்யப் பற்றிய புணையாய்

மிகநனி மிதந்த புகலி நாயக
அருள்நனி சுரக்கும் பிரளய விடங்கநின்
செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி இமயக்
கொழுந்தையும் உடனே கொண்டிங்

கெழுந்தரு ளத்தகும் எம்பெரு மானே.

#1095

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-*11* `பாழ் அறையாய்க் கிடந்த சிந்தையை உனக்குப் பள்ளியறையாக்கி` என்க.
அடி *-1* கருமுதல் தொடங்கி *(*தாய் வயிற்றில் கருவாய் இருந்த காலம் முதல்*)* அது பாழ் அறையாய்க் கிடந்தது.
`பாழ் அறை` என்றது, உதவாக் குப்பைகள் நிரம்பிக் கிடந்த இடம். அப்பொருள்கள் காமம்*,* வெகுளி முதலியன.

காமம் - ஆசை.
அக்குப்பைகளை அகற்றியவாறும், பின்பு தூய்மை செய்யப்பட்டவாறும் தொடர்ந்து கூறப்பட்டன.
மை இருள் நிறம் - மைபோலும் பேரிருளை ஒத்த நிறம்.
இதைக் கடாக்களுக்குக் கூறியது இன அடை.
கடா - எருமைக் கடா.
இஃது உருவகம்.
முருட்டுக் குணம் பற்றி ஐம்புல ஆசைகள் எருமைக் கடாக்களாக உருவகிக்கப்பட்டன.
மதன் - மதம்; செருக்கு.
யாப்பு - கட்டு அருள் - ஞானம்.
இருள் - அஞ்ஞானம் துன்ப இருள் - துன்பத்திற்கு ஏதுவான இருள்.
அஞ்ஞானம் துன்பத்திற்கு ஏதுவாதல் கூறினமையின் ஞானம் இன்பத்திற்கு ஏதுவாதல் சொல்லாமே பெறப்பட்டது.
மெய் - வாய்மை.
``சிந்தை`` இரண்டில் முன்னது `சித்தம்` என்னும் அந்தக் கரணம்.
பின்னது இருதயம்.
தவிசு- ஆசனம்.
அடு கதிர் - வெங்கதிர்; ஞாயிறு.
அடைய - இடைவெளியின்றி ஒன்றாகும்படி.
ஆதி வெள்ளம் - முன்பு ஒரு பிரளயத்தில் தோன்றிய வெள்ளம்.
`இரு சுடர்களும் அந்த வெள்ளத்தில் நுரை போல மிதக்க` என்க.
வரை பறித்து இயங்கும் மாருதம் கடுப்ப - மலைகளையெல்லாம் புரட்டி வீசும் காற்று கடுவேகமாய் அடிக்க.
காலம் - முடிவு காலம்.
மற்று, அசை.
புணையாய் - புணைபோல `வானவர் பலரும் திருக்கழுமலப் பெருமானைச் சார்ந்து பிழைத் திருந்தனர்` என்பதாம்.
விடங்கன் - அழகன்.
பிரளய அழகன், தோணியப்பன்.
``உடனே கொண்டு`` என்பதில் ஏகாரத்தை மாற்றி, `உடன் கொண்டே` என உரைக்க.
`என் சித்தம் முன்பு பாழ் அறை யாய்க் கிடந்தது போல இல்லாமல் பள்ளியறையாகும்படி செய்துள்ளேன் ஆதலின் அதில் நீ உன் துணைவியுடன் வந்து இருக்கத்தகும்` என்பதாம்.
பாழ் அறையாய்க் கிடந்தது அஞ்ஞான நிலையில், பள்ளியறையானது மெய்ஞ்ஞான நிலையில்.

எனவே, இறைவன் அஞ்ஞானிகளது உள்ளத்தில் புகாது, மெய்ஞ்ஞானிகளது உள்ளத்தில் புகுதல் கூறப்பட்டதாம்.
ஈற்றயலின் அயலடியும் முச்சீராய் வந்தமையின் இதுவும் இணைக் குறளாசிரியப்பா.

மானும் மழுவுந் திருமிடற்றில் வாழுமிருள்
தானும் பிறையுந் தரித்திருக்கும் வானவர்க்கு
வெள்ளத்தே தோன்றிக் கழுமலத்தே வீற்றிருந்தென்
உள்ளத்தே நின்ற ஒளி. **#1096**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``வாழும்`` என்பது `செய்யும்` என் எச்சம்.
``இருக் கும்`` என்பது `செய்யும்` என் முற்று.
தான், அசை.
ஏனைய வெளி.

ஒளிவந்த வாபொய் மனத்திருள்
நீங்கவென் உள்ளம்வெள்ளம்
தெளிவந்த வாவந்து தித்தித்த
வாசிந்தி யாததொரு
களிவந்த வாஅன்பு கைவந்த
வாகடை சாரமையத்
தெளிவந்த வாநங் கழுமல
வாணர்தம் இன்னருளே
. #1097

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மனத்து`` என்பதனோடு பின் வரும்``என்`` என்பதைக் கூட்டி முதலிற் கொள்க.
ஒளி ஞானம்.
``ஆறு`` என்பன பலவும் செய்யுள் முடிபாய்க் கடைக் குறைந்து `ஆ` என நின்றன.
அவை அனைத்திலும் எண்ணும்மை விரித்து அவற்றை `வியப்பு` என ஒரு சொல் வருவித்து முடிக்க.
கழுமல வாணர்தம் இன்னருள் எளிவந்த வாறு`` என மாற்றிக் கொள்க.
பொய் - திரிபுணர்ச்சி.
வெள்ளத் தெளி- மிகுதியான தெளிவு.
சிந்தியாது ஒரு களி - எதிர்பாராத ஒரு பெரு மகிழ்ச்சி.

கைவருதல் - இடர்ப்பாடின்றி இனிது நிகழ்த்துதல்.
கடை சார் அமையம் - முடிவு கிட்டும் காலம்; இறுதிக் காலம்.

அருள்பழுத் தளிந்த கருணை வான்கனி
ஆரா இன்பத் தீராக் காதல்
அடியவர்க் கமிர்த வாரி நெடுநிலை
மாடக் கோபுரத் தாடகக் குடுமி
மழைவயிறு கிழிக்கும் கழுமல வாணநின்

வழுவாக் காட்சி முதிரா இளமுலைப்
பாவையுடன் இருந்த பரம யோகி
யானொன் றுணர்த்துவான் எந்தை மேனாள்
அகில லோகமும் அனந்த யோனியும்
நிகிலமுந் தோன்றநீ நினைந்தநாள் தொடங்கி

எனைப்பல யோனியும் நினைப்பரும் பேதத்து
யாரும் யாவையும் எனக்குத் தனித்தனித்
தாய ராகியுந் தந்தைய ராகியும்
வந்தி லாதவர் இல்லை யான் அவர்
தந்தைய ராகியுந் தாய ராகியும்
வந்தி ராததும் இல்லை முந்து
பிறவா நிலனும் இல்லை அவ்வயின்
இறவா நிலனும் இல்லை பிறிதில்
என்னைத் தின்னா உயிர்களும் இல்லை
யான் அவை

தம்மைத் தின்னா தொழிந்ததும் இல்லை
அனைத்தே காலமும் சென்றது யான்இதன்
மேல்இனி
இளைக்குமா றிலனே நாயேன்
நந்தாச் சோதிநின் அஞ்செழுத்து நவிலுந்

தந்திரம் பயின்றதும் இலனே தந்திரம்
பயின்றவர்ப் பயின்றதும் இலனே ஆயினும்
இயன்றஓர் பொழுதின் இட்டது மலராச்
சொன்னது மந்திர மாக என்னையும்
இடர்ப்பிறப் பிறப்பெனும் இரண்டின்

கடற்ப டாவகை காத்தல்நின் கடனே. #1098

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மிகக் கனிந்த` என்றற்கு ``அருள் பழுத்து அளிந்த`` என்றும், பிறிதொருவகைக் கனியன்று`, ``கருணை வான்கனி`` என்றும் ஈரிடத்து எடுத்துக் கூறினார்.
``கனி, காதல், வாரி`` என்பனவும் ``வாண, யோகி, எந்தை`` என்பனபோல விளிகளே.
காதல் - பேரன்பு.
மாணிக்கவாசகர், ``என்னுடை அன்பே`` என்றதுபோல இவரும் இறைவனை, `தீராக் காதலே`` என விளித்தார்.
வாரி - கடல்.
குடுமி - சிகரம்.
மழை - மேகம்.
காட்சி - தோற்றம்.
``இருந்த`` என்னும் சினைவினை முதல் மேலதாய்.
``யோகி`` என்பதனோடு முடிந்தது.
பரமயோகி - மேலான யோகி.
``பாவையுடன் இருந்த யோகி`` என்றது சிவபெருமானது அதிசய நிலையை வியந்ததாம்.
``அகலம், நிகிலம்`` என்பன எஞ்சாமைப் பொருளை உணர்த்தும் வடசொற்கள்.
யோனி - பிறப்பு வகையின் உட்பிரிவுகள்.
நிகலமும் - அனைத்துப் பொருள்களும்.
இறைவன் செய்வன எல்லாம் சங்கற்ப மாத்திரையான் ஆதல் பற்றி, ``நினைந்த நாள்`` என்றார்.
``யாரும், யாவையும்`` எனத் திணை விராய் எண்ணப்பட்டன சிறப்புப்பற்றிப் பின் பல இடத்திலும் உயர் திணை முடிபு கொண்டன.
``அவர்`` என்பதிலும், ``எனக்கு`` என்பதிற் போல, `அவர்க்கு` என நான்காவது விரிக்க.
பின் வந்த ``தந்தையர், தாயர்`` என்பன பொருட்பன்மை பற்றாது இடப்பன்மை பற்றியும், காலப்பன்மையும் பற்றி வந்த பன்மை யாகலின் அவை ``யான்`` என்னும் ஒருமையோடு மயங்கின.
``நிலன்`` என்பன உலகங்கள்.
``பிறிதல்`` என்றது.
`இன்னும் கூறில்` என்றபடி.
அனைத்து - அத் தன்மைத்து.

`அனைத்தேயாம்` என ஆக்கம் விரிக்க.
``இலனே`` என்னும் ஏகார வினா எதிர்மறுத்து நின்றது.
எனவே, `திண்ணமாக இளைத்து நிற்கின்றேன்` என்றதாம்.
இதன்பின் `ஆயினும்` என்பது வருவிக்க.
நந்தா - கெடாத.
சோதி - ஒளி, ஞானம் `சோதியாகிய அஞ் செழுத்து` என்க.
சோதியின் காரணம் சோதியாக உபசரிக்கப்பட்டது.
`அஞ்செழுத்தை நவிலும் தந்திரம்` என்க.
தந்திரம் - நூல்; என்றது அதன்கண் கூறப்பட்ட நெறிமுறைகளை,
`பயின்றவரொடு` என ஒடு உருபு தொகுக்கப்பட்டு.
அதனானே ``பயின்றவர்`` என்பதன்பின், பகர ஒற்று மிக்கது.
``இயன்றதோர் பொழுது`` என்றது, ``சொன்னது`` என்பதனோடும் இயையும்.
அதனால் `கட்டளையின்றி, நேர்ந்த பொழுது செய்யும் இயல்பினேன்` என்றவாறாம்.
``இட்டது மலரா`` என்றதனால், `இடப்பட்டன மலரல்லாத பிறவாம்` என்பதும், ``சொன் னது மந்திரமாக`` என்றதனால், `சொல்லப்பட்டன மந்திரம் அல்லாத பிறவாம்` என்பதும் பெறப்பட்டன.
`இரண்டாகிய கடல்` என்க.
இன், வேண்டாவழிச் சாரியை.
`நீ அருள் பழுத்து அளிந்த கனியாதல் பற்றி இதனை உனக்கு உணர்த்துவேனாயினேன் என்பது கருத்து.

கடலான காமத்தே கால்தாழ்வார் துன்பம்
அடலாம் உபாயம் அறியார் உடலாம்
முழுமலத்தை ஓர்கிலார் முக்கட் பெருமான்
கழுமலத்தைக் கைதொழா தார். **#1099**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``முக்கட் பெருமான்`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.
``கடலான`` என்பதில் ஆக்கம் உவமை குறித்து நின்றது.
`துன்பத்தை அடல் ஆம் உபாயம்` என்க.
அடல் - அழித்தல், முழு மலம் - பெரிய அசுத்தம் ஓர்கிலார் - எண்ண மாட்டார்.
எனவே, `அதில் பற்றுச் செய்து துன்புறுவர்` என்றபடி.

தொழுவாள் இவள்வளை தோற்பாள்
இவளிடர்க் கேஅலர்கொண்
டெழுவாள் எழுகின்ற தென்செய

வோஎன் மனத்திருந்தும்
கழுமா மணியைக் கழுமல
வாணனைக் கையிற்கொண்ட
மழுவா ளனைக் கண்டு வந்ததென்
றாலொர் வசையில்லையே.

#1100

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கழுமல வாணன்`` எனப் பின்னர் வருதலால் முதற் கண் வாளா ``தொழுவாள்`` என்றாள்.
``இவள்`` எனப் பின்னும் கூறியது, அவளது அவல மிகுதியை உணர்த்தற்கு.
``இடர்க்கு`` என்பது போலும் நான்கன் உருபேற்ற பெயராகலின், அதற்கு, `இடர் தீர்தற் பொருட்டு` என உரைக்க.
அலர் - ஊரார் தூற்றும் பழிச்சொல், ``கொண்டு`` என்றது `தனைப் பொருட்படுத்தாது` என்றபடி.
`எழு கின்றது என் செயவோ` - என்றது, `இவள் இவ்வாறு எழுந்து செல் வதால் பயன் அடையப்போகின்றாளா` என்றபடி.
இவளது எழுச்சி கழுமல வாணனைக் கண்டு வந்ததாய் முடியுமாயின் ஓர் வசையில்லை என்க.
அஃது இயலாது ஆதலின் மேலும் வசைதான்` என்பது குறிப் பெச்சம்.
`மனந் திருந்தும்` என்பது பாடம் அன்று.
இது கைக்கிளைத் தலைவி தலைவன் உள்வழிச் சேறல்.
செவிலி இரங்கிக் கூறியது.

வசையில் காட்சி இசைநனி விளங்க
முன்னாள் நிகழ்ந்த பன்னீ ருகத்து
வேறுவேறு பெயரின் ஊறின் றியன்ற
மையறு சிறப்பின் தெய்வத் தன்மைப்
புகலி நாயக இகல்விடைப் பாக

அமைநாண் மென்தோள் உமையாள் கொழுந
குன்று குனிவித்து வன்தோள் அவுணர்
மூவெயில் எரித்த சேவகத் தேவ
இளநிலா முகிழ்க்கும் வளர்சடைக் கடவுள்நின்
நெற்றியில் சிறந்த ஒற்றை நாட்டத்துக்
காமனை விழித்த மாமுது தலைவ
வானவர் அறியா ஆதி யானே

கல்லா மனத்துப் புல்லறிவு தொடர
மறந்து நோக்கும் வெறுங்கண்நாட் டத்துக்
காண்தொறும் காண்தொறும் எல்லாம் யாண்டை

யாயினும் பிறவும் என்னதும் பிறரதும்
ஆவன பலவும் அழிவன பலவும்
போவதும் வருவதும் நிகழ்வதும் ஆகித்
தெண்ணீர் ஞாலத்துத் திரண்ட மணலினும்
எண்ணில் கோடி எனைப்பல வாகி

இல்லன உளவாய் உள்ளன காணாப்
பன்னாள் இருள்வயிற் பட்டேன் அன்னதும்
அன்ன தாதலின் அடுக்கும் அதென்னெனின்
கட்புலன் தெரியாது கொட்புறும் ஒருவற்குக்
குழிவழி யாகி வழிகுழி யாகி

ஒழிவின் றொன்றின் ஒன்றுதடு மாற
வந்தாற் போல வந்த தெந்தைநின்
திருவருள் நாட்டம் கருணையின் பெறலும்
யாவையும் எனக்குப் பொய்யெனத் தோன்றி
மேவரும் நீயே மெய்யெனத் தோன்றினை

ஒவியப் புலவன் சாயல்பெற எழுதிய
சிற்ப விகற்பம் எல்லாம் ஒன்றித்
தவிராது தடவினர் தமக்குச்
சுவராய்த் தோன்றுங் துணிவுபோன் றனவே.

#1101

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வசை இல் காட்சி- குற்றம் இல்லாத தோற்றம்.
அஃது என்றும் ஒடிபடித்தாய் இருத்தல்.
`காட்சியால்` என உருபு விரிக்க.
இசை - புகழ்.
சீகாழித் தலம் பன்னிரு யுகங்களில் யுகத்திற்கு ஒன்றாக பன்னிரு பெயரைப் பெற்றது.
அப்பெயர்களாவன பிரமபுரம், வேணு புரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம்,

கழுமலம்` என்பன.
இவை ஞான சம்பந்தர் பாடல்கள் பலவற்றில் எடுத்தோதி அருளப்பட்டிருத்தல் காண்க.
மை - குற்றம்.
அமை நாண் தோள் - மூங்கில் நாணத் தக்க தோள்.
சேவகம் - வீரம்.
மாமுது தலைவன் - பெரிய, பழைய தலைவன்.
ஆதியான் - முதற் கடவுள்.
கல்லா உளம் - கல்வியைக் கல்லாத மனம்.
`அதன்கண் தோன்றும் புல்லறிவு` என்க.
தொடர - தொடர்ந்து நிகழ்தலால்.
மறந்து - ஆன்றோர் உரைகளை மறந்து.
வெறுங் கண் - கல்வியறிவொடு கூடாத கண்.
இதனை, ``புண்`` *1* என்றார் திருவள்ளுவர்.
`தண்` என்பது பாடம் அன்று.
நாட்டம் - பார்வை.
`நாட்டத்தினால்` என மூன்றாவது விரிக்க.
`யாண்டை எல்லாமாயினும்` என மாற்றிக் கொள்க.
``பிற`` என்பதின்பின்னும் `ஆயின்` என்பது வருவித்து `பிறவாயினும்` என்க.
எனவே, `அஃது உண்மையன்று` என்றதாயிற்று.
`ஆவன ஆகிய பலவும் அழிவனவேயன்றி, ஒன்றேனும் நிலைத்திருப்பதன்று` என்பதாம்.
பின் வந்த ``பலவும்`` என்பதற்குமுன் `அவை` என்பது வருவிக்க.
``போவது`` முதலிய மூன்றும் இறப்பு, எதிர்வு, நிகழ்வு ஆகிய கால நிகழ்ச்சிகளைக் குறித்தன.
தெள் நீர், கடல் நீர்.
`நீரால்` என உருபு விரிக்க.
``ஞாலம்`` என்றது கரையை, என - என்று சொல்லும்படி இதன்பின் ``பல`` என்றது எண்ணிலியை.
உளவாதல் - தோன்றுதல்.
காணா - காணப்படாது.
துவ்விகுதி தொகுத்தலாயிற்று.
`இல்லன உள்ளன போலவும், உள்ளன இல்லனபோலவும் தோன்ற` என்க.
இருள் - அறியாமை என்றது திரிபுணர்ச்சியை அன்னதும் அன்னது - அந்தத் திரிபுணர்ச்சியும் நிலையாததே.

அடுக்கும் - பொருந்தும்.
`அஃது` என்னும் ஆய்தம் தொகுக்கப்பட்டு `அது` என நின்றது.
என் எனின் - எவ்வாறு எனின்.
கொட்புறுதல் - சுழலுதல்.
ஒன்றின் - ஒரு பொருளில்.
ஒன்று - அதனின் வேராய ஒன்றின் உணர்வு.
தடுமாற - திரிவுபட.
`ஒழிவின்று தடுமாற` என்க.
`இன்றி` என்னும் வினை யெச்சத்து ஈற்று இகரம் செய்யுளுள் உகரமாய்த் திரிந்தது.
`கட்புலன் இல்லா ஒருவனது தடுமாற்றம் அவன் கண்பெற்றுழி நீங்குதல்போல, வெறுங் கண் நாட்டத்தால் எனக் உண்டாய தடுமாற்ற. நினது அருள் நாட்டம் பெற்றவழி நீங்குவதே` என்பார்.
``அன்னதும் அன்னதே அடுக்கும்`` என்றார்.
கருணையின் - நீ அருளுதலின்.
(வழங்கினமை யால்) மேவரும் - விரும்பத் தகும்.
விகற்பம் வேறுபாடு.
துணிவு - உண்மையுணர்வு `போன்றது என` என்பது `போன்றென` எனக் குறைந்து நின்றது.
ஓவிய வகைகள் கட்புலனுக்கு வேறு வேறு பரிமாணம் உடைய வேறு வேறு பொருள்களாய்த் தோன்றுமாயினும் மெய்ப் புலனுக்கு ஓவியந் தோன்றாது அவற்றிற்கு நிலைக்களமாகிய சுவர் ஒன்றே தோன்றுதல் போல, மருள் நாட்டத்திற்கு அவ்வப் பொருளும் தனித் தனியே நிலை பெறும் பொருள்கள் தோன்று மாயினும் திருவருள் நாட்டத்தில் திருவருளாகிய ஒன்றினையே பற்றுக் கோடாகப் பற்றி நிலைபெறுதல் தோன்றும்` என்றபடி.

எனவே எழுந்திருந்தாள் என்செய்வாள் இன்னம்
சினவேறு காட்டுதிரேல் தீரும் இனவேகப்
பாம்புகலி யால்நிமிரும் பன்னாச் சடைமுடிநம்
பூம்புகலி யான்இதழிப் போது. #1102

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``இன வேகம்`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.
இனம் - கூட்டம்.
வேகம் - விரைந்த செலவு.
கலியான் இமிரும் பல் நா - ஆரவாரத்தோடு ஒலிக்கின்ற பல நாக்குகள்.
`இமிரும்` என்னாது, `நிமிரும்` எனினும் ஆம் `பாம்புகளின் பல

நாக்குக்களை யுடைய சடை` என்க.
பூம் புகலி - அழகிய சீகாழி, இதழிப் போது எனவே எழுந்திருந்தாள் - `கொன்றைப் பூ மாலை` என்று சொல்லிக் கொண்டே புறப்பட்ட இவள்.
என் செய்வாள் - என்ன செய்து அதனை மாட்டு அன்புடையவர்களே!)
இன்னம் சின ஏறு காட்டுதிரேல் தீரும் - இனியொரு முறையும் முன்பு அப்புகலிப் பெருமானை இங்குச் சுமந்து வந்த சினவிடையைக் காட்டுவீர்களாயின் இவள் நோய் தீரும் (அஃதறியாது வேறு பரிகாரங்களை நீவிர் செய்து பயன் என!) இது கைக்கிளைத் தலைவியது வேறுபாடு கண்டு வெறியாட்டெடுத்த நற்றாய் செவிலித் தாயரை நோக்கித் தோழி அறத்தொடு நின்றது.
``எழுந்திருந்தாள்`` என்பது ஒருசொல்.

போதும் பெறாவிடில் பச்சிலை
உண்டு புனலுண்டெங்கும்
ஏதும் பெறாவிடில் நெஞ்சுண்டன்
றேஇணை யாகச் செப்பும்
சூதும் பெறாமுலை பங்கர்தென்
தோணி புரேசர்வண்டின்
தாதும் பெறாத அடித்தா
மரைசென்று சார்வதற்கே.

#1103

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

காய் கனிகளை நோக்கப் போது (பூ) எளிதாகலின், ``போதும்`` என்னும் உம்மை இழிவு சிறப்பு.
``ஏதும்`` என்னும் உம்மையும் அப்பொருட்டு.
`எங்கும் பச்சிலை உண்டு; புனல் உண்டு` என்க.
``அன்றே`` என்பது தேற்றம்.
செப்பு - கிண்ணம்.
சூது - சூதாடு கருவி `இவை இணையாகப் பெறா முலை` என்க.
முலை.
சினையாகு பெயர்.
இணை - ஒப்பு.
`வண்டு பெறாத` என இயையும்.
இன் தாது - இனிய மகரந்தம்.
`தேனே யன்றித் தாதும் பெறாத தாமரை` என்க.
எனவே, `தாமரை போல்வது அல்லது தாமரை அன்றென்ற வாறாம்.
ஆகவே, `வண்டு தாதும் பெறாத தாமரை` என்றது விபாவனையாம்

`அடித் தாமரை சென்று சார்வதற்குப் போதும் பெறாவிடில் பிற உண்டு?
என்க.
(இப்பிரபந்தத்தில் இன்னும் 18 பாடல்கள் இருக்க வேண்டும்.
ஆயினும் நல்ல பதிப்புக்களில் இந்த 12 பாடல்களே உள்ளன.
ஆனூர் சிங்காரவேல் முதலியார் பதிப்பகத்தில் எஞ்சிய பாடல்கள்
காணப்படுவதாகவும், அவைகளை அறிஞர்கள் `ஆசிரியர் வாக்கல்ல`
என்று கருதுவதாகவும் சென்னைச் சைவ சித்தாந்த சமாஜத்து 1940 ஆம்
ஆண்டுப் பதிப்பில் குறிப்புத் தரப்பட்டுள்ளது.
ஆனூர் சிங்காரவேல் முதலியார் பதிப்புக் கிடைக்கவில்லை.
) திருக்கழுமல மும்மணிக்கோவை முற்றிற்று.

பட்டினத்து அடிகள் - திருவிடைமருதூர் மும்மணிக் கோவை

தெய்வத் தாமரைச் செவ்வியின் மலர்ந்து
வாடாப் புதுமலர்த் தோடெனச் சிவந்து
சிலம்புங் கழலும் அலம்பப் புனைந்து
கூற்றின் ஆற்றல் மாற்றிப் போற் றாது
வலம்புரி நெடுமால் ஏன மாகி

நிலம்புக்
காற்றலின் அகழத் தோற்றாது நிமிர்ந்து
பத்தி அடியவர் பச்சிலை இடினும்
முத்தி கொடுத்து முன்னின் றருளித்
திகழ்ந்துள தொருபால் திருவடி அகஞ்சேந்து

மறுவில் கற்பகத் துறுதளிர் வாங்கி
நெய்யில் தோய்த்த செவ்வித் தாகி
நூபுரங் கிடப்பினும் நொந்து தேவர்
மடவரல் மகளிர் வணங்குபு வீழ்த்த
சின்னப் பன்மலர் தீண்டிடச் சிவந்து

பஞ்சியும் அனிச்சமும் எஞ்ச எஞ்சாத்
திருவொடும் பொலியும் ஒருபால் திருவடி
நீலப் புள்ளி வாளுகிர் வேங்கைத்
தோலின் கலிங்கம் மேல்விரித் தசைத்து
நச்செயிற் றரவக் கச்சையாப் புறத்துப்
பொலிந்துள தொருபால் திருவிடை இலங்கொளி
அரத்த ஆடை விரித்துமீ துறீஇ
இரங்குமணி மேகலை ஒருங்குடன் சாத்திய
மருங்கிற் றாகும் ஒருபால் திருவிடை
செங்கண் அரவும் பைங்கண் ஆமையுங்

கேழற் கோடும் வீழ்திரன் அக்கும்
நுடங்கு நூலும் இடங்கொண்டு புனைந்து
தவளநீ றணிந்ததோர் பவளவெற் பென்ன
ஒளியுடன் திகழும் ஒருபால் ஆகம்
வாரும் வடமும் ஏர்பெறப் புனைந்து

செஞ்சாந் தணிந்து குங்குமம் எழுதிப்
பொற்றா மரையின் முற்றா முகிழென
உலகேழ் ஈன்றும் நிலையில் தளரா
முலையுடன் பொலியும் ஒருபால் ஆகம்
அயில்வாய் அரவம் வயின்வயின் அணிந்து

மூவிலை வேலும் பூவாய் மழுவுந்
தமருகப் பறையும் அமர்தரத் தாங்கிச்
சிறந்துள தொருபால் திருக்கரஞ் செறிந்த
சூடகம் விளங்கிய ஆடகக் கழங்குடன்
நொம்மென் பந்தும் அம்மென் கிள்ளையும்

தரித்தே திகழும் ஒருபால் திருக்கரம்
இரவியும் எரியும் விரவிய வெம்மையின்
ஒருபால் விளங்குந் திருநெடு நாட்டம்
நவ்வி மானின் செவ்வித் தாகிப்
பாலிற் கிடந்த நீலம் போன்று

குண்டுநீர்க் குவளையின் குளிர்ந்து நிறம்பயின்று
எம்மனோர்க் கடுத்த வெம்மைநோய்க் கிரங்கி
உலகேழ் புரக்கும் ஒருபால் நாட்டம்
நொச்சிப் பூவும் பச்சை மத்தமும்
கொன்றைப் போதும் மென்துணர்த் தும்பையும்
கங்கை யாறும் பைங்கண் தலையும்
அரவும் மதியமும் விரவத் தொடுத்த
சூடா மாலை சூடிப் பீடுகெழு
நெருப்பில் திரித்தனைய உருக்கிளர் சடிலமொடு
நான்முகம் கரந்த பால்நிற அன்னம்

காணா வண்ணங் கருத்தையுங் கடந்து
சேணிகந் துளதே ஒருபால் திருமுடி பேணிய
கடவுட் கற்பின் மடவரல் மகளிர்
கற்பக வனத்துப் பொற்பூ வாங்கிக்
கைவைத்துப் புனைந்த தெய்வமாலை

நீலக் குழல்மிசை வளைஇமேல் நிவந்து

வண்டும் தேனும் கிண்டுபு திளைப்பத்
திருவொடு பொலியும் ஒருபால் திருமுடி
இனைய வண்ணத்து நினைவருங் காட்சி
இருவயின் உருவும் ஒருவயிற்றாகி

வலப்பால் நாட்டம் இடப்பால் நோக்க
வாணுதல் பாகம் நாணுதல் செய்ய
வலப்பால் திருக்கரம் இடப்பால் வனமுலை
தைவந்து வருட மெய்ம்மயிர் பொடித்தாங்
குலகம் ஏழும் பன்முறை ஈன்று

மருதிடங் கொண்ட ஒருதனிக் கடவுள் நின்
திருவடி பரவுதும் யாமே நெடுநாள்
இறந்தும் பிறந்தும் இளைத்தனம் மறந்தும்
சிறைக்கருப் பாசயம் சேரா
மறித்தும் புகாஅ வாழ்வுபெறற் பொருட்டே.

#1104

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இத்திருப்பாட்டு திருவிடைமருதூர்ப் பெருமானை மாதொரு பாதி *(அர்த்த நாரி)* வடிவினனாக வருணித்து விளித்துக் கருத்தை விண்ணப்பிக்கின்றது.
அடி-*17* ``ஒரு பால் திருவடி`` என்பதை முதலில் வைத்து, `மலர்ந்து, சிவந்து, புனைந்து, நிமிர்ந்து, அருளித் திகழ்ந்துளது` என்க.
தெய்வத் தாமரை - தேவலோகத் தாமரை.
`அதனது செவ்விபோல` என்க.
செவ்வி - மலரும் நேரம்.
அஃது ஆகுபெயராய், அப்பொழுது மலரும் மலர்ச்சியைக் குறித்தது.
`இன்` உவம உருபு.
வாடாமலர் - கற்பக மலர்.
தோடு - இதழ்.
இது பண்பு பற்றிய உவமையாய் வந்தது.
அலம்ப - ஒலிக்க; இவ் எச்சம் இதன் காலத்தை உணர்த்தி நின்றது.
எனவே `ஒலிக்கும் இடத்துத் தான் கழலைப் புனைந்து` என ஆற்றல் பற்றிக் கொள்ளப்படும்.
இரண்டும் மாறி மாறி ஒலியாது, ஒருங் கொலித்தல் பற்றி இவ்வாறு கூறினார்.

இது மற்றொருபால் திருவடிக் கும் ஒக்கும்.
கூற்று - கூற்றுவன்.
யமன்.
`நெடுமால் போற்றாது ஏனமாகி அகழ` என்க.
`திருவடி, போற்றிக் காணத் தக்கதல்லது, முயன்று காணத் தக்கதன்று` என்றற்கு, ``போற்றாது`` என்றார்.
``தொழுவார்க்கே யருளுவது சிவபெருமான் எனத் தொழார்`` *1* எனச் சேக்கிழாரும் அருளிச் செய்தார்.
நிமிர்ந்து - அப்பாற்பட்டு.
அடி- *17* ``ஒருபால் திருவடி`` என்பதை, ``மறுவில் கற்பகத்து உறு தளிர்`` என்பதற்கு முன்னே வைத்து, `சேந்து, செவ்வித்தாகி, நொந்து, சிவந்து திருவொடும் பொலியும்` என்க.
அகம் - உள்ளிடம்.
சேந்து - சிவந்து.
கற்பகத்தின்கண்` என உருபு விரிக்க.
வழுவழுப்புத் தோன்றுதற் பொருட்டு.
நெய்யில் தோய்த்தல் கூறப்பட்டது.
செவ்வி - பக்குவம்.
நூபுரம் - சிலம்பு.
``கிடப்பினும்`` என்னும் அனுவாதத்தால் கிடத்தல் பெறப்பட்டது.
மட வரல் மகளிர் - மடப்பம் *(*இளமை*)* வருதலை உடைய மகளிர்.
வீழ்த்த - தூவிய.
சின்னம் - சிறுமை.
எஞ்ச- தோற்க.
இது மென்மை மிகுதியைக் கூறியது.
எஞ்சாத் திரு - குறையாத அழகு.
பொலியும் - விளங்கும்.
அடி - *21* ``ஒருபால் திருஇடை`` என்பதை, ``நீலப் புள்ளி`` என்பதற்கு முன்னே கூட்டி, `விரித்து அசைத்து, யாப்புறுத்துப் பொலிந் துளது` என்க.
வாள் கூர்மை.
உகிர் - நகம்.
`புள்ளியையும், உகிரையும் உடைய வேங்கை` என்க.
கலிங்கம் - உடை.
அசைத்து - உடுத்தி.
யாப்பு உறுத்து - இறுகக் கட்டி.
அடி-*24* ``ஒருபால் திரு இடை`` என்பதை ``இலங்கொளி`` என்பதற்கு

முன்னே கூட்டி, `விரித்து, உறிஇ சாத்திய மருங்கிற்று ஆகும் என்க.
அரத்தம் - செம்மை.
ஆடை - பட்டாடை.
உறீஇ - உறுவித்து; பொருந்தப் பண்ணி.
இரங்கு - ஒலிக்கின்ற.
மணி மேகலை - இரத்தினங்களால் ஆகிய வடங்களின் தொகுதி.
மருங்கிற்று - பக்கங்களையுடையது.
அடி- *29* ``ஒருபால் ஆகம்`` என்பதை செங்கண் அரவும்`` என்பதற்கு முன்னே கூட்டி, ``இடம் கொண்டு`` என்பதை `இடம் கொள` எனத் திரித்து, `அருவம், ஆமையும், கோடும், அக்கும், நூலும் இடம் கொளப் புனைந்து வெற்பென்னத் திகழும் என்க.
ஆகம் - மார்பு.
ஆமை - ஆமை ஓடு; ஆகுபெயர் கேழல் - பன்றி, அக்கு - எலும்பு.
நுடங்குதல் - துவளுதல்.
நூல், முந்நூல்.
தவளம் - வெண்மை.
நீறணிந்தது ஓர் பவள வெற்பு, இல்பொருள் உவமை.
அடி *34* ``ஒருபால் ஆகம்`` என்பதை, ``வாரும் வடமும்`` என்பதற்கு முன்னே கூட்டி, `புனைந்து, அணிந்து, எழுதித் தளரா முலையுடன் பொலியும்` என்க.
வார் - கச்சு.
வடம் - மணி வடங்கள்.
ஏர் - அழகு ``புனைந்து`` முதலிய மூன்றும், `புனையப்பட்டு, அணியப்பட்டு, எழுதப்பட்டு` எனச் செயப்பாட்டு வினைப்பொருளவாய் நின்றன.
`குங்குமத்தால்` என மூன்றாவது விரித்து, `கோலம் எழுதி` என்க.
``பொற்றாமரை`` என்பதும் இல்பொருள் உவமை.
முகிழ் - அரும்பு.
அடி *38* ``ஒரு பால் திருக்கரம்`` என்பதை, ``அயில் வாய் அரவம்`` என்பதற்கு முன்னே கூட்டி, `அணிந்து தாங்கிச் சிறந்துளது` என்க.
அயில் - கூர்மை.
வாய் - பல்; ஆகுபெயர்.
வயின் வயின் - முன் கை.
முழங்கை, தோள் ஆகிய இடங்கள்.
அணிந்து - பூண்டு.
பூ வாய்- மெல்லிய வாய்.
கூர்மை மிகுதியால் மெல்லிதாயிற்று.

தமருகம் - உடுக்கை.
அமர்தர - பொருந்த.
அடி - *41* ``ஒருபால் திருக்கரம்`` என்பதை, ``செறிந்த`` என்ப தற்கு முன்னே கூட்டி, `விளங்கித் தரித்துத் திகழும்` என்க.
செறிந்த - அழுந்தப் பற்றிய.
சூடகம் - கங்கணம்.
``விளங்கி`` என இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேல் ஏற்றப்பட்டது.
கழங்கு - கழற்சிக் காய் அளவாகச் செயற்கையாகச் செய்யப்பட்ட விளையாட்டுக் கருவி.
ஒம்மெனல் - உயர எறிதல்.
அம் மெல் கிள்ளை - அழகுபட மெல்லப் பேசும் கிளி.
அடி-*42,43* ஒருபால் திருநெடு நாட்டம் இரவியும், எரியும் விரவிய வெம்மையின் விளங்கும்` என்க.
இரவி - சூரியன்.
எரி - அக்கினி இவையிரண்டும் சிவபெருமானுடைய இரண்டு கண்கள்.
எனவே, மேல், ``நாட்டம்`` என்றது பன்மைப் பொருட்டாய் இவ்விரு கண்களையும் குறித்தது.
இரவியும், எரியும் வெம்மையோடு கூடி விளங்கும்` என்க.
அடி - *48* ``ஒருபால் நாட்டம்`` என்பதை ``பாலிற் கிடந்த`` என்பதற்கு முன்னே கூட்டி, `நீலம் போன்று குவளையிற் குளிர்ந்து, இரங்கிப் புரக்கும்` என்க.
நவ்வி, மானின் வகை.
நீலம் - நீல மணி.
``கிடந்த`` என்றது, `தனது நிறம் வேறுபடாது கிடந்த` என்றபடி, `நீல மணியைச் சோதித்தற்கு அதனைப் பாலில் இட்டால், பாலையும் நீல நிறமாகத் தோற்றுவித்துத் தான் நிறம் மாறாதிருப்பதே முழுமையான நீலம்` என்பர்.
எனவே, ``பாலிற் கிடந்த நீலம்`` என்றது, `முழுநீலம்` என்றதாம்.
குண்டு - ஆழம்.
``நிறம் பயின்று`` என்பதை, ``நீலம் போன்று`` என்பதன் பின் கூட்டுக.
எம்மனோர் - எம்மை போலும் அடியவர்.
``இரங்கி`` என்றது, சிறப்புக் கருணை காட்டுதலை.
`ஏழும்` என்னும் முற்றும்மை தொகுக்கப்பட்டது.
ஏழுலகத்தையும் புரத்தல் பொதுக் கருணை.
அடி- *57* ``ஒருபால் திருமுடி`` என்பதை, ``நொச்சிப் பூவும்`` என்பதற்கு முன்னே கூட்டி, `பூவும், மத்தமும், போதும், தும்பையும் தொடுத்த மாலை

சூடி, விரவி, சடிலமொடு கடந்து, சேண் இகந்து உளது` என்க.
மத்தம் - ஊமத்தை.
``பச்ை\\\\\\\\u2970?`` என்றது முதலுக்காகிய அடை.
மத்தமும், தும்பையும் அவற்றது பூவைக் குறித்தலால் முதலாகு பெயர்கள்.
`யாறு` முதலிய நான்கும் விரவி` என்க.
விரவி - விரவப் பட்டு.
அன்றி, `இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது` எனினும் ஆம்.
சூடா மாலை - பிறரால் சூட்டப் பெறாத மாலை, பீடு கெழு - `பெருமை பொருந்திய சடிலம்` என்க.
நெருப்பின் - நெருப்பால்.
உருக்கிளர் - நிறம் விளங்குகின்ற.
சடிலம் - சடை.
`சடிலமொடு உளது` என்க.
கருத்தையும் - யாவர் கருத்தையும்.
சேண் இகந்து - ஆகாயத்தின் நீங்கி.
அடி-63 ``ஒருபால் திருமுடி`` என்பதை, ``பேணிய`` என்ப தற்கு முன்னே கூட்டி, `மகளிர் வாங்கி வைத்துப் புனைந்த மாலை வளைஇ, மேல் நிவந்து, திளைப்பப் பொலியும்` என்க.
பேணி.
- `போற்றிக் காத்த கற்பு` என்க.
தெய்வ மகளிர் ஆதலின் அவரது கற்பு, ``கடவுட் கற்பு`` எனப்பட்டது.
பொற்பூ - பொன்னால் ஆகிய பூ.
புனைந்த - தொடுத்த.
வளைஇ - சுற்றப்பட்டு, நிவந்து - உயர்ந்து.
`தேன்` என்பதும் ஒருவகை வண்டேயாம்.
கிண்டுபு - கிளறி.
திளைப்ப- இன்புற.
திரு - அழகு.
இதுகாறும் ``ஒருபால், ஒருபால்`` எனக் கூறிவந்தவற்றுள் முன்னவையெல்லாம் வலப்பாலையும், பின்னவையெல்லாம் இடப் பாலையும் குறித்தன.
இங்கு அடி -64-ல் `வண்ணம்` என்றது தன்மையை.
நினைவருங் காட்சி, நினைத்தற்கு இயலாத (மனத்தைக் கடந்த) தோற்றம்.
இரு வயின் உரு - இரண்டிடத்தில் வேறு வேறாய் இருத்தற்குரிய

வடிவங்களை ஒரு வயிற்று ஆகி - ஓர் இடமே உடையதாம்படி ஆகி.
``வாணுதல்`` என்பது பின்னர் வருதலால் முன்னர் `ஆண்` என்பது வருவித்து, `வலப்பால் ஆண் பாகம் இடப் பால் வாணுதல் பாகத்தை நோக்க, அது நாணுதல் செய்ய` என்க.
தைவரல், வருடல் இரண்டும் ஒருபொருட் சொற்களாயினும் சிறிதே பொருள் வேற்றுமையுடையன.
`கரம் வருட, மெய்ம் மயிர் பொடித்து என்க.
மெய், இருபால் மெய்யும்.
ஆங்கு - அவ்வாறு `அவ்வாறு உலகம் ஈன்று` என்றதனால்,
`மேலெல்லாம் பலபடக் கூறிய வாறு, இருவயின் உருவும் ஒருவயிற்று ஆக இயைவன எல்லாம் உயிர்கள் மாட்டு வைத்த கருணை காரணமாக மேற்கொண்ட செயற்கையாவன அல்லது, தமக்கே இயல்பாக உடைய இயற்கையல்ல`` என்பது கூறப்பட்டதாம்.
போகியாய் இருந்து உயிர்க்குப்
போகத்தைப் புரிதல் ஒரார்
எனச் சாத்திரம் கூறிற்று.
சிறைக் கருப்பாசயம் - கருப்பாசயமாகிய சிறை; உருவகம்.
ஆசயம் - தங்குமிடம்.
கருப்பம் - கரு கருப்பாசயம்- கருப்பம் தங்கியிருக்குமிடம்; கருப்பப் பை.

பொருளுங் குலனும் புகழுந் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும் ஒருவர்
கருதாவென் பார்க்குங் கறைமிடற்றாய் தொல்லை
மருதாவென் பார்க்கு வரும். **#1105**
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குலம் - குடி.
``ஒழுக்கம் உடைமை குடிமை`` *2* என்ப ஆகலின், குலமாவது ஒழுக்கமேயாம்.
திறன் - கருதியதை முடிக்கும் ஆற்றல்.
அருள் - எல்லா உயிர்களிடத்தும் காட்டும் இரக்கம்.
இதனை யுடையார்க்கு இறைவனது அருள் தானே கிடைக்கும்.
`ஒருவரும்` என்னும் இழிவு சிறப்பும்மை தொகுக்கப்பட்டது.
கருதா - விரும்பாத, என்பு ஆர்க்கும் - எலும்பைப் பூணுகின்ற.
தொல்லை - பழைமை; அநாதி.
வரும் - கிடைக்கும்.

வருந்தேன் இறந்தும் பிறந்தும்
மயக்கும் புலன்வழிபோய்ப்

பொருந்தேன் நரகிற் புகுகின்றி
லேன்புகழ் மாமருதிற்
பெருந்தேன் முகந்துகொண் டுண்டு
பிறிதொன்றில் ஆசையின்றி
இருந்தேன் இனிச்சென் றிரவேன்
ஒருவரை யாதொன்றுமே.

#1106

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`இறந்தும், பிறந்தும் வருந்தேன்` என்க.
``புகழ் மா மருதில்.
இருந்தேன்`` என்பதை முதற்கண் வைத்து உரைக்க.

ஒன்றினோ டொன்று சென்றுமுகில் தடவி
ஆடுகொடி நுடங்கும் பீடுகெழு மாளிகைத்
தெய்வக் கம்மியர் கைம்முயன்று வகுத்த
ஓவநூல் செம்மைப் பூவியல் வீதிக்
குயிலென மொழியும் மயிலியல் சாயல்

மான்மற விழிக்கும் மானார் செல்வத்
திடைமரு திடங்கொண் டிருந்தளந்தை
சுடர்மழு வலங்கொண் டிருந்த தோன்றல்
ஆரணந் தொடாராப் பூரணபுராண
நாரணன் அறியாக் காரணக் கடவுள்

சோதிச் சுடரொளி ஆதித் தனிப்பொருள்
ஏக நாயக யோக நாயக
யானொன் றுணர்த்துவ துளதே யான்முன்
னனந்தலை யுலகத் தனந்த யோனியில்
பிறந்துழிப் பிறவாது கறங்கெனச் சுழன்றுழித்
தோற்றும் பொழுதின் ஈற்றுத் துன்பத்து
யாயுறு துயரமும் யானுறு துயரும்
இறக்கும் பொழுதில் அறப்பெருந் துன்பமும்
நீயல தறிகுநர் யாரே அதனால்
யானினிப் பிறத்தல் ஆற்றேன் அஃதான்

றுற்பவம் துடைத்தல் நிற்பிடித் தல்லது
பிறிதொரு நெறியின் இல்லையந் நெறிக்கு

வேண்டலும் வெறுத்தலும் ஆண்டொன்றிற் படரா
உள்ளமொன் றுடைமை வேண்டும் அஃதன்றி
ஐம்புலன் ஏவல் ஆணைவழி நின்று

தானல தொன்றைத் தானென நினையும்
இதுவென துள்ளம் ஆதலின் இதுகொடு
நின்னை நினைப்ப தெங்ஙனம் முன்னம்
கற்புணை யாகக் கடல்நீர் நீந்தினர்
எற்பிற ருளரோ இறைவ கற்பம்

கடத்தல்யான் பெறவும் வேண்டும் கடத்தற்கு
நினைத்தல்யான் பெறவும் வேண்டும் நினைத்தற்கு
நெஞ்சுநெறி நிற்கவும் வேண்டும் நஞ்சுபொதி
உரையெயிற் றுரகம் பூண்ட
கறைகெழு மிடற்றெங் கண்ணுத லோயே.

#1107

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி-*30* ``இறைவ`` என்பதையும், அடி-*33* ``நஞ்சு பொதி.

.

.

கண்ணுதலோயோ`` என்பதையும் அடி-*12* யோக நாயக`` என்பதன் பின்னர்க் கூட்டியுரைக்க.

`ஒன்றினொடு ஒன்று சேர்ந்து` என ஒருசொல் வருவிக்க.

`முகிலைத் தடவி` எனவும், `மாளிகையில் வகுத்த` எனவும் கொள்க.

`செம்மை வீதி, பூ இயல் வீதி` எனத் தனித் தனி இயையும்.

பூ இயல் - அழகு விளங்குகின்ற.

``மான் ஆர்`` என்பதில் `மான்` என்னும் அஃறிணை யியற் பெயர் இங்குப் பன்மைப்பாலதாய் உவம ஆகுபெயராகி மகளிரைக் குறித்தது.

வீதி ஆர் - வீதியின்கண் நிறைந்த.

மாற - தோற்க.

புராணன் - பழையோன்.

சோதி - திரட்சியான ஒளி.

சுடர் - கதிர் ``யோகம்`` என்பது வீட்டு நெறியைக் குறித்தல் வழக்கு.

நனந்தலை - அகன்ற இடம்.

அனந்தம் - முடிவின்மை, அளவின்மை.

யோனி - பிறப்பு வகை.

``பிறந்துழிப் பிறவாது`` என்றது `எல்லா யோனிகளிலும் பிறந்து` என்றபடி.
கறங்கு - காற்றாடி.
தோற்றும் பொழுது - பிறக்கும் பொழுது.
ஈற்றுத் துன்பத்து - கருவுற்ற பொழுதில் உளவாகின்ற துன்பங்களில்.
யாய் - என் தாய்.
அறப் பெரிது - மிகப் பெரிது.
அஃதான்று - அதுவன்றி.
என்றது, `பிறவித் துன்பத்தை ஆற்றாமை யேயன்றி, வேறும் இடர்கள் உள` என்றபடி.
`பிறப்பில் பெருமானாகிய உன்னைப் பற்றும் நெறியிலல்லது.
பிறந்தும், இறந்தும் உழல்கின்ற ஏனைத் தேவரைப் பற்றும் நெறிகளில் பிறவியறுதல் கூடாது` என்பார்.
உற்பவம் துடைத்தல் நிற்பிடித் தல்லது
பிறிதொரு நெறியின் இல்லை
என்றார்.
``சிவனலால் முத்தியிற் சேர்த்துவார் இலை`` என்றார் காஞ்சிப்புராணத்திலும்.
அந்நெறிக்கு - அந்நெறியில் நிற்றற்கு.
ஆண்டு - அதனைப் பற்றுமிடத்து.
தொகுக்கப்பட்ட இழிவு சிறப் பும்மையை விரித்து, `ஒன்றிலும் வேண்டலும் வெறுத்தலும் படரா ஓர் உள்ளம் உடைமை வேண்டும்`` என்க.
அடி-*27* `எனது உள்ளம் அஃதன்றி, நின்று, நினையும் இது; ஆதலின் இதுகொடு நின்னை நினைப்பது எங்ஙனம்` என்க.
`அஃது, இது` என்பன, `அன்னது, இன்னது` என்னும் பொருளவாய் நின்றன.
இன்னதாகிய உள்ளத்தைக் கொண்டு உன்னுடைய நெறியில் நிற்கக் கருதினேன் யான் ஆதலின், ``கற்புணையாகக் கடல்நீர் நீந்தினர் எற் பிறர் உளரோ`` என்றார்.
கருதினர் - கருதி முயன்றவர்.
`என்னையன்றிப் பிறர் உளரோ`` என்க.
`எனது மடமை யிருந்தவாறு இது` என்றபடி.
`இங்ஙனமாயினும் வேண்டும்; வேண்டும்; வேண்டும்` என்க.
கற்பம்- பிறந்து இறந்துவரும் நெடுங்காலம், `நின்னை நினைத்தல்` என்க.
`நெஞ்சு நிற்கவும்` என இயைக்க.

காரணம், காரியம் இரண்டனுள் காரியங்களை முன்னரும், `காரணங்களைப் பின்னருங் கூறியது முதலாவதாகிய நெஞ்சு நிலைபெறுதலே இல்லாத யான் பின்னர் விளையத் தக்கனவாகிய பயன்களைப் பெறுதல் எவ்வாறு` எனத் தமது எளிய நிலையை வெளிப்படுத்தி, `எனக்கு அருள்புரிதல் வேண்டும்` என வேண்டிக் கோடற் பொருட்டு.
உறை - துளி.
`நஞ்சு உறை பொதி எயிற்று உரகம்` என்க.

கண்ணென்றும் நந்தமக்கோர் காப்பென்றும் கற்றிருக்கும்
எண்ணென்றும் மூல எழுத்தென்றும் ஒண்ணை
மருதவப்பா என்றுமுனை வாழ்த்தாரேல் மற்றுக்
கருதவப்பால் உண்டோ கதி. **#1108**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நந்தமக்கு, மூலம்`` என்பவற்றை முன்னருங் கூட்டிப் பொருள் கொள்க.
மூல எண் - முதற் கருத்து.
மூல எழுத்து - அக்கருத்தைத் தோற்றுவிக்கின்ற நாதம்.
மூலமாவனவற்றைக் கூறவே பின் பின் அவை வழியாகத் தொடர்ந்து தோன்றும் எண்ணும் எழுத்தும் அடங்கின.
ஒண் ஐ - எல்லாம் வல்ல தலைவன்.
`ஐயாகிய மருதவப்பன்` என்க.
அப்பால் - இவ்வுடல் நீங்கிய பின்பு.
கருத - `அடையற் பாலது இது` எனத் துணிதற்கு.

கதியா வதுபிறி தியாதொன்றும்
இல்லை களேபரத்தின்
பொதியா வதுசுமந் தால்விழப்
போமிது போனபின்னர்
விதியாம் எனச்சிலர் நோவதல்
லாலிதை வேண்டுநர்யார்
மதியா வதுமரு தன்கழ
லேசென்று வாழ்த்துவதே.
#1109

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கதியாவது பிறிது யாதொன்றும் இல்லை`` என்பதை மூன்றாம் அடியின் இறுதியிற் கூட்டுக.

``பிறிது`` என்பதன் முன், பின் வருகின்ற கழலைச் சுட்டுவதாகிய `அஃது` என்பது வருவித்து, `அஃதன்றிப் பிறிதியா தொன்றும் இல்லை; அதனால்` என உரைக்க.
களேபரம் - உடம்பு.
`களேபரமாகிய பொதி` என்க.
இன், வேண்டா வழிச் சாரியை.
``பொதியாவது`` என்பதில் `ஆவது` என்பது எழுவாய் வேற்றுமைச் சொல்லுருபாய் வந்தது.
``சுமந்தால் விழப்போம்`` என்பது, `நாம் விழாமல் போற்றிக் காத்துச் சுமந்தாலும் நில்லாது விழவே செய்யும்` என்றபடி.
`சுமந்தாலும்` என்னும் உயர்வு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று.
``போம்`` என்றது, `செய்யும்` என்றபடி.

வாழ்ந்தனம் என்று தாழ்ந்தவர்க் குதவாது
தன்னுயிர்க் கிரங்கி மன்னுயிர்க் கிரங்கா
துண்டிப் பொருட்டாற் கண்டன வெஃகி
அவியடு நர்க்குச் சுவைபலபகர்ந்தேவி
ஆரா உண்டி அயின்றன ராகித்

தூராக் குழியைத் தூர்த்துப் பாரா
விழுப்பமும் குலனும் ஒழுக்கமும் கல்வியும்
தன்னிற் சிறந்த நன்மூ தாளரைக்
கூஉய்முன் நின்றுதன் ஏவல் கேட்குஞ்
சிறாஅர்த் தொகுதியின் உறாஅப் பேசியும்

பொய்யொடு புன்மைதன் புல்லர்க்குப் புகன்றும்
மெய்யும் மானமும் மேன்மையும் ஒரீஇத்
தன்னைத் தேறி முன்னையோர் கொடுத்த
நன்மனைக் கிழத்தி யாகிய அந்நிலைச்
சாவுழிச் சாஅந் தகைமையள் ஆயினும்

மேவுழி மேவல் செய்யாது காவலொடு
கொண்டோள் ஒருத்தி உண்டிவேட் டிருப்ப
எள்ளுக் கெண்ணெய் போலத் தள்ளாது
பொருளின் அளவைக்குப் போகம்விற் றுண்ணும்
அருளில் மடந்தையர் ஆகம் தோய்ந்தும்

ஆற்றல்செல் லாது வேற்றோர் மனைவயின்

கற்புடை மடந்தையர் பொற்புநனி வேட்டுப்
பிழைவழி பாராது நுழைவழி நோக்கியும்
நச்சி வந்த நல்கூர் மாந்தர்தம்
விச்சையிற் படைத்த வெவ்வேறு காட்சியின்

அகமலர்ந் தீவார் போல முகமலர்ந்
தினிது மொழிந்தாங் குதவுதல் இன்றி
நாளும் நாளும் நாள்பல குறித்தவர்
தாளின் ஆற்றலும் தவிர்த்துக் கேளிகழ்ந்து
இகமும் பரமும் இல்லை என்று
பயமின் றொழுகிப் பட்டிமை பயிற்றி
மின்னின் அனையதன் செல்வத்தை விரும்பித்
தன்னையும் ஒருவ ராக உன்னும்
ஏனையோர் வாழும் வாழ்க்கையும் நனைமலர்ந்து
யோசனை கமழும் உற்பல வாவியில்

பாசடைப் பரப்பில் பால்நிற அன்னம்
பார்ப்புடன் வெருவப் பகுவாய் வாளைகள்
போர்த்தொழில் புரியும் பொருகா விரியும்
மருதமும் சூழ்ந்த மருத வாண
சுருதியும் தொடராச் சுருதி நாயக

பத்தருக் கெய்ப்பினில் வைப்பென உதவும்
முத்தித் தாள மூவா முதல்வநின்
திருவடி பிடித்து வெருவரல் விட்டு
மக்களும் மனைவியும் ஒக்கலும் திருவும்
பொருளென நினையாதுன் னருளினை நினைந்து

இந்திரச் செல்வமும் எட்டுச் சித்தியும்
வந்துழி வந்துழி மறுத்தனர் ஒதுங்கிச்
சின்னச் சீரை துன்னல் கோவணம்
அறுதற் கீளொடு பெறுவது புனைந்து
சிதவல் ஓடொன் றுதவுழி எடுத்தாங்

கிடுவோர் உளரெனின் நிலையில்நின் றயின்று
படுதரைப் பாயலிற் பள்ளி மேவி ஓவாத்
தகவெனும் அரிவையைத் தழீஇ மகவெனப்

பல்லுயிர் அனைத்தையும் ஒக்கப் பார்க்கும்நின்
செல்வக் கடவுள் தொண்டர் வாழ்வும்

பற்றிப் பார்க்கின் உற்றநா யேற்குக்
குளப்படி நீரும் அளப்பருந் தன்மைப்
பிரளய சலதியும் இருவகைப் பொருளும்
ஒப்பினும் ஒவ்வாத் துப்பிற் றாதலின்
நின்சீர் அடியார் தஞ்சீர் அடியார்க்
கடிமை பூண்டு நெடுநாட் பழகி
முடலை யாக்கையொடு புடைபட் டொழுகியவர்
காற்றலை ஏவலென் நாய்த்தலை ஏற்றுக்
கண்டது காணின் அல்லதொன்
றுண்டோ மற்றெனக் குள்ளது பிறிதே.

#1110

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, அடியரல்லார் செல்வச் செருக்கால் இறுமாந்து கண்டபடி வாழும் செல்வ வாழ்க்கையின் இழிவினையும், அடியராயினார் திருவருளில் அடங்கி நெறிநின்று வாழும் வறுமை வாழ்க்கையின் உயர்வையும் ஒப்பிட்டுத் தெரிக்கின்றது.

பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை
நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.

என்பன பொது மறைத் திருமொழி.

``உயிர்`` இரண்டும் ஆகுபெயராய் அவற்றது துன்பத்தைக் குறித்தன.

வெஃகி - விரும்பி.

அவி - அடப்படுவன.

அடுநர்க்குச் சுவை பல பகர்தலாலது, `இதை இதை இன்று சமை, இப்படி இப்படிச் சமை` எனக் கட்டளையிடுதல்.

ஆரா உண்டி - வயிறு நிறையினும் சுவை மிகுதியால் மனம் நிறையாது அளவின்றி உண்ணும் உணவு.

தூராக் குழி - தூர்க்கும் பொழுது தூர்ந்து விட்டது போலத் தோன்றிப் பின் வெறிதாகி, ஒரு நாளும் தூராத குழி; வயிறு.

பாரா - பாராது இதனை, `கல்வியும்`` என்பதன்பின்னர்க் கூட்டுக.

விழுப்பம் - சில காரணங்களால் தமக்கு அமைந்த பெருமை.

குலம் - குடிப் பிறப்பு.

ஒழுக்கம் - முன்னோர் ஒழுகி வந்த நல்லொழுக்கம்.
கல்வி - பெற்றோராலும், ஆசிரியராலும் வற்புறுத்திக் கற்பிக்கப்பட்ட கல்வி.
இவைகளைப் பாராது அஃதாவது, `இவை வீணாவதை எண்ணாமல் நன்மூதாளரைஉறாப்பேசி` என்க.
உறாப் பேசுதல் - அன்பால் உளம் பொருந்துதல் இன்றிப் பேசுதல்.
எனவே கடிந்து பேசுதலாம்.
கூவுதல் - அழைத்தல்.
``கூய்`` என்பதை, `கூவ` எனத் திரிக்க.
`தொகுதியைப் பேசுதல் போலப் பேசி` என்பதாம்.
இன், உவம உருபு.
புன்மை - கீழான செய்திகள்.
தன் புல்லர் - தனக்கு நண்பராய் உள்ள அற்பர்.
`அற்பர்` என்றதனால், அத்தகையோரே அவருக்கு நண்பராதல் குறிக்கப்பட்டது.
தேறி - தெளிந்து; கைவிடாது காப்பாற்று வான் `என நம்பி.
`அந்நிலையில்` என உருபு விரித்து, அதன்பின், ``கொண்டோள் ஒருத்தி`` என்பதைக் கூட்டுக.
கொண்டோள் - கொள்ளப்பட்டோள்.
`ஆயினும் அவள்பால் மேவுழி மேவல் செய்யாது` என்க.
மேவுழி - சொல்ல வேண்டிய காலத்தில்.
உண்டு வேட்டு இருத்தற்கு, `அவள்` என்னும் எழுவாய் வருவிக்க.
எள்ளைக் கொடுத்து, அதன் அளவுக்கு எண்ணெய் வாணிபரிடம் எண்ணெய் பெறுதல் அக்காலத்து வழக்கம்.
அவ்வாணிபர் அந்த எள்ளின் அளவுக்குச் சிறிது மிகுதியாகவும் எண்ணெய் கொடுக்க உடம்படார்.
தள்ளாது - பொருள் கொடுப்பின் யாரையும் விலக்காமல்.
`அன்பு உண்டாகக் காரணம் இல்லையாயினும், அருளேனும் உண்டாகப் பெறுவரோ எனின் அஃதும் இல்லை` என்றற்கு விலை மாதரை ``அருள் இல் மடந்தையர்`` என்றார்.
ஆற்றல் - ஆற்றுதல்; பொறுத்தல்.
பொறுக்கப்படுவது ஆசையின் வேகம்.
இதனை, ``கேட்டு`` என்பதன் பின்னர்க் கூட்டுக.
வேற்றோர் - அயலார்.
பிழை வழிபாராது- குற்றமான நெறியாதலை நோக்காமல்.
நச்சி - விரும்பி நல்கூர் - வறுமையுற்ற.
விச்சையின் படைத்த - அவர்களது அறிவில் பதியும்படி தோற்றுவித்த,

காட்சி - மெய்ப்பாடுகள்.
தாளின் ஆற்றல் - நடப்பன வாகிய கால்களின் உரம்.
கேள் - சுற்றம், இகம் - இம்மை.
அது இம்மைக்கண் எய்தற்பாலதாகிய புகழைக் குறித்தது.
பரம் - மறுமை.
பயன் இன்று - பயன் இல்லாமல்.
பட்டிமை - கட்டுப்பாடின்றி வேண்டியவாறே ஒழுகும் தன்மை.
பயிற்றி - பலகாலும் மேற்கொண்டு ``ஒருவர்`` என்பது உன்னுவார் கருத்துப் பற்றி வந்ததாகலின் அது முன்னர்ப் போந்த ஒருமைச் சொற்களோடு இசையாது வேறு நின்றது.
நனை - அரும்பு.
உற்பலம் - நீலோற்பலம், பாசடை- பசுமையான இலை.
பார்ப்பு - குஞ்சு.
``மருதம்`` இரண்டில் முன்னது வயல், நிலம்.
வைப்பு - சேம நிதி.
முத்தித் தாள - முத்தியாகிய திருவடியை உடையவனே.
மூவா - அழியாத.
``மருத வாண, சுருதி நாயக, முத்தித் தாள, முதல்வ`` என்பவற்றை முதற்கண் கொண்டு உரைக்க.
ஒக்கல் - சுற்றம்.
திரு - செல்வம் ``மறுத்தனர்`` என்பது முற்றெச்சமாய் நின்றது.
சின்னம் - சிறுமை.
சீரை - மரவுரி.
துன்னல் - கீளோடு சேர்த்துத் தைத்தல்.
அறுதல் - நெய்யப்பட்ட பின் வேறாய் நீங்குதல்.
பெறுவது - கிடைத்த ஒன்று.
சிதவல் - உடைதல்.
உதவுழி - கிடைக்குமிடத்தில்.
படுதரைப் பாயல் - எதிர்ப்பட்ட நிலமாகிய பாயல்.
தகவு - தகுதி; ஒன்றிலும் பற்றின்மை.
கடவுள் - தெய்வத் தன்மை.
பிரளய சலதி - ஊழிக் காலத்தில் எங்கும் பொங்கிப்பரக்கும் கடல், இதவும் ஆகு பெயரால் நீரையே குறித்தது.
`குளப்படி நீரும், சலதி நீரும் ஆகிய இரு வகைப் பொருளும்` என்க.
துப்பிற்று - வலிமையுடையது.
முடலை யாக்கை - பல முறுக்குக்களையுடைய உடம்பு.
புடைப்பட்டு - பக்கத்தில் பொருந்தி.

கால் தலை - பாதமாகிய இடம்.
ஏவல் - ஏவப்படும் பணிகள்.
`ஏற்றுச் செய்து` என ஒரு சொல் வருவிக்க `அவர் கண்டது நான்காணின் அல்லது, எனக்கென்று பிறிது உண்டோ` என உரைக்க.
`அடியவர்க்கு அடிமையாதலிற் சிறந்த செல்வம் பிறிது இல்லை` என்பதை உணர்த்துவார், முதற்கண் அடியர் அல்லாதாரது இழிவையும், அடியாரது உயர்வையும் விரித்து ஒப்பிட்டுக் காட்டினார்.

பிறிந்தேன் நரகம் பிறவாத வண்ணம்
அறிந்தேன் அநங்கவேள் அம்பில் செறிந்த
பொருதவட்ட வில்பிழைத்துப் போந்தேன் புராணன்
மருதவட்டம் தன்னுளே வந்து. **#1111**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அநங்க வேள் - மன்மதன்.
`செறிந்த வில், பொருத வில், அட்ட வில்` எனத் தனித்தனி இயைக்க.
பொருத - போர் செய்த.
அட்ட - கொன்ற; கொன்றது போலும் துன்பத்தைச் செய்த.
புராணன்- பழையோன்.
``புராணன் மருத வட்டம் தன்னுளே வந்து`` என்பதை முதலிற் கொள்க.

வந்திக்கண் டாயடி யாரைக்கண்
டால்மற வாதுநெஞ்சே
சிந்திக்கண் டாயரன் செம்பொற்
கழல்திரு மாமருதைச்
சந்திக்கண் டாயில்லை யாயின்
நமன்தமர் தாங்கொடுபோய்
உந்திக்கண் டாய்நிர யத்துன்னை
வீழ்த்தி உழக்குவரே.
#1112

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கண்டாய்`` நான்கும் முன்னிலை யசைகள்.
முதல் மூன்று அடிகளில் முதற்கண் நின்ற சீர்களில் வந்த ககர ஒற்றுக்கள் ஈற்றடியோடு எதுகை பொருந்த வேண்டி விரிக்கப்பட்டன.
``நெஞ்ே\\\\u2970?`` என்பதை முதலில் வைத்து, `அடியாரைக் கண்டால் வந்து; அரன் செம்பொற்கழல் மறவாது சிந்தி; திரு மாமருதைச் சந்தி; இல்லையேல் நமன் தமர் உன்னைக் கொடுபோய் நிரயத்து உந்தி

வீழ்த்தி உழக்குவர்` என இயைத்து உரைக்க.
வந்தி - வணங்கி; சந்தி - நேர்நின்று காண்க.
தாம், அசை.
உந்தி - பின்னின்று தள்ளி.
உழக்கு வார் - அலைப்பர்.

உழப்பின் வாரா உறுதிகள் உளவோ
கழப்பின் வாராக் கையுற வுளவோ
அதனால்
நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை
வேரற அகழ்ந்து போக்கித் தூர்வைசெய்து
அன்பென் பாத்தி கோலி முன்புற
மெய்யெனும் எருவை விரித் தாங் கையமில்
பத்தித் தனிவித் திட்டு நித்தலும்
ஆர்வத் தெண்ணீர் பாய்ச்சிநேர் நின்று
தடுக்குநர்க் கடங்கா திடுக்கண் செய்யும்
பட்டி அஞ்சினுக் கஞ்சியுட் சென்று
சாந்த வேலி கோலி வாய்ந்தபின்
ஞானப் பெருமுளை நந்தாது முளைத்துக்
கருணை இளந்தளிர் காட்ட அருகாக்
காமக் குரோதக் களையறக் களைந்து
சேமப் படுத்துழிச் செம்மையின் ஓங்கி
மெய்ம்மயிர்ப் புளகம் முகிழ்த்திட் டம்மெனக்
கண்ணீர் அரும்பிக் கடிமலர் மலர்ந்து.
புண்ணிய
அஞ்செழுத் தருங்காய் தோன்றி நஞ்சுபொதி
காள கண்டமும் கண்ணொரு மூன்றும்
தோளொரு நான்கும் சுடர்முகம் ஐந்தும்
பவளநிறம் பெற்றுத் தவளநீறு பூசி
அறுசுவை யதனினும் உறுசுவை உடைத்தாய்க்
காணினுங் கேட்பினுங் கருதினுங் களிதரும்

சேணுயர் மருத மாணிக்கத் தீங்கனி
பையப் பையப் பழுத்துக் கைவர
எம்ம னோர்கள் இனிதினி தருந்திச்
செம்மாந் திருப்பச் சிலர்இதின் வாராது
மனமெனும் புனத்தை வறும்பா ழாக்கிக்

காமக் காடு மூடித் தீமைசெய்
ஐம்புல வேடர் ஆறலைத் தொழுக
இன்பப் பேய்த்தேர் எட்டா தோடக்
கல்லா உணர்வெனும் புல்வாய் அலமர
இச்சைவித் துகுத்துழி யானெனப் பெயரிய

நச்சு மாமரம் நனிமிக முளைத்துப்
பொய்யென் கவடுகள் போக்கிச் செய்யும்
பாவப் பல்தழை பரப்பிப் பூவெனக்
கொடுமை அரும்பிக் கடுமை மலர்ந்து
துன்பப் பல்காய் தூக்கிப் பின்பு

மரணம் பழுத்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கும் உதவா
திமைப்பிற் கழியும் இயற்கையோர் உடைத்தே.

#1113

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உழப்பு - முயற்சி.
உறுதி - நன்மை.
கழப்பு - நெடுநீர்மை; மடி கையறவு - துன்பம்.
``முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்`` *1*
என்பதனை முதல் இரண்டு, அடிகளால் வலியுறுத்திக் கூறினார்; தாம் முயற்சியால் இன்பம் எய்தி யதையும், சிலர் மடிமையால் துன்பம் எய்துதலையும் நிறுவுதற்கு.
இப் பாட்டு முழுவதும் `நன்று, தீது` என்னும் இருவகையான் ஆகிய முற்றுருவகம் ஆதலை அறிக.
அதனால் - அதனை யறிந்தமையால், `அகழ்தல் முதலியவற்றைச் செய்தோம்` என்பதாம்.
புனம் - கொல்லை.
வஞ்சக் கட்டை - பிறரை வஞ்சித்தலாகிய பெருமரம்.
மெய் - வாய்மை.
பத்தி - இறையன்பு.
ஆர்வம் - சிவானந்த வேட்கை.
பட்டி அஞ்சு, கட்டுக்கு அடங்காத ஐம்புல ஆசையாகிய யானைகள்.
சாந்தம் - பொறுமை.
ஞானம் - மெய்யுணர்வு.

நந்தாது - கெடாமல்.
கருணை - திருவருள் அருகா - பயிரின் பக்கமாய் முளைக்கின்ற காமக் குரோதங்களைக் கூறவே இனம் பற்றி உலோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஏனை நான்கும் உடன் கொள்ளப்படும்.
சேமப் படுத்துழி - பாதுகாவல் செய்த பொழுது.
செம்மையின் ஓங்கி - (பத்தியாகிய மரம்) நன்றாக வளர்ந்து.
முகிழ்த்தல் - அரும்பெடுத்தல்.
அம்மென - அழகாக ``அரும்பி`` என்றது, `போதாகி` என்றபடி.
கடி - மணம்; அஃது இங்குப் பக்குவத்தைக் குறித்தது.
புண்ணியம் - சிவபுண்ணியம்.
`அதனைத் தருகின்ற அஞ்செழுத்து` என்க.
`அஞ்செழுத்துத் தானே சிவபெருமானாய்த் தோன்றி நின்றது` என்ற படி.
காள கண்டம் - கரிய மிடறு.
சுவை, அவற்றையுடைய உணவைக் குறித்தது.
``இனிது இனிது`` என்னும் அடுக்குக் காலப்பன்மை பற்றி வந்தது.
உறு - மிக்க.
``மருத மாணிக்கம்`` என்பது `சிவபிரான்` என்னும் அளவாய் நின்றது.
`இனி யருந்தி` எனப் பாடம் ஓதி, `இப் பொழுதே அருந்தி` என உரைத்தலும் ஆம்.
`பாழாக்கிக் கழியும் இயற்கையோர் ஆகின்றனர்; அத்தகையோரையும் உடையது இவ் வுலகம்` என முடிக்க.
ஆறு அலைத்தல் - வழிப் பறி செய்தல்.
இன்பப் பேய்த்தேர் - உலக இன்பமாகிய கானல்.
புல்வாய் - மான்.
பாலை நிலத்தில் தோன்றுகின்ற கானலை நீர் என்று நினைத்து விடாய் தணியப் பருகுதற்கு ஓடி ஓடி எய்த்தல் மான்களுக்கு இயல்பு.
இச்சை - ஆசை.
உதிர்த்தல் - தூவுதல் ``யான்`` என்பதைக் கூறவே, `எனது` என்பதும் கொள்ளப்படும்.
மாமரம் - பெரிய மரம்.
பொய் - பொய் கூறுதல்.
கவடுகள் - கிளைகள்,கொடுமை - வெகுளி.
கடுமை - கடுஞ் சொல்லும், வன்செயலும்.
தூக்கி - காய்த்துத் தொங்கவிட்டு ``தூக்கி, பழுத்து`` என்னும் செய்தென் எச்சங்களை, `தூக்க, பழுத்து`` எனச் செயவென் எச்சங்களாகத் திரிக்க.
இறுதிக்கண், `இவ்வுலகம்` என ஒரு சொல் வருவித்து முடிக்க.

உடைமணியின் ஓசைக் கொதுங்கி அரவம்

படமொடுங்கப் பையவே சென்றங் கிடைமருதர்
ஐயம் புகுவ தணியிழையார் மேல் அநங்கன்
கையம் புகவேண்டிக் காண்.

#1114

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உடை மணி - மேகலையில் உள்ள மணிகள்.
அவை மகளிர் ஐயம் இட வரும்பொழுது ஒலிக்கும்.
அவ்வொலியை! இடியின் தோற்றமோ` என ஐயுற்றுப் பிச்சைக்குச் செல்லும் பெருமான் அணிந்துள்ள பாம்புகள் தம் படங்களைச் சுருக்கிக் கொள்ளும்.
அம்பு உக - அம்புகள் சிந்த.
காண் முன்னிலை யசை.
இடை மருதர் பசிக்கு உணவு வேண்டிப் பிச்சைக்குச் செல்கிலர்.
தாருகாவனத்து முனிவர் பத்தினியர் மையற்பட வேண்டியே பிச்சைக்குச் செல்கின்றார்` என்பதாம்.

காணீர் கதியொன்றுங் கல்லீர்
எழுத்தஞ்சும் வல்லவண்ணம்
பேணீர் திருப்பணி பேசீர்
அவன்புகழ் ஆசைப்பட்டுப்
பூணீர் உருத்திர சாதனம்
நீறெங்கும் பூசுகிலீர்
வீணீர் எளிதோ மருதப்
பிரான்கழல் மேவுதற்கே.

#1115

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உருத்திர சாதனம் - உருத்திராக்கம்.
வீணீர் - பயனில்லாது திரிகின்றவர்களே.
இதனை முதற்கண் வைத்து, `மருதப்பிரான் கழல் மேவுதற்கு உமக்கு எளிதோ! (அன்று; ஆதலால் நீவிர்) கதி என்றும் காணீர் - காணமாட்டீர்` என்க.
`செயற்பாலன வற்றைச் செய்கிலீர்; நீவிர் பயன் பெறுதல் எங்ஙனம்` என்றபடி.

மேவிய புன்மயிர்த் தொகையோ அம்மயிர்
பாவிய தோலின் பரப்போ தோலிடைப்

புகவிட்டுப் பொதிந்த புண்ணோ புண்ணிடை
ஊறும் உதிரப் புனலோ கூறுசெய்
திடையிடை நிற்கும் எலும்போ எலும்பிடை
முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்து
உள்ளிடை ஒழுகும் வழும்போ மெள்ளநின்
றூரும் புழுவின் ஒழுங்கோ நீரிடை
வைத்த மலத்தின் குவையோ வைத்துக்
கட்டிய நரம்பின் கயிறோ உடம்பிற்குள்

பிரியா தொறுக்கும் பிணியோ தெரியா
தின்ன தியானென் றறியேன் என்னை
ஏதினுந் தேடினன் யாதினுங் காணேன்
முன்னம்
வரைத்தனி வில்லால் புரத்தைஅழல் ஊட்டிக்

கண்படை யாகக் காமனை ஒருநாள்
நுண்பொடி யாக நோக்கியண் டத்து
வீயா அமரர் வீயவந் தெழுந்த
தீவாய் நஞ்சைத் திருவமு தாக்கி
இருவர் தேடி வெருவர நிமிர்ந்து
பாலனுக் காகக் காலனைக் காய்ந்து
சந்தன சரள சண்பக வகுள
நந்தன வனத்திடை ஞாயிறு வழங்காது
நவமணி முகிழ்த்த புதுவெயில் எறிப்ப
எண்ணருங் கோடி இருடிகணங் கட்குப்
புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத பொருவிடைப் பாக
மங்கை பங்க கங்கைநா யகநின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலங் கீறித் தூய

ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும்
என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை அனைத்தையும் கண்டேன் என்னே
நின்னைக் காணா மாந்தர்

தம்மையுங் காணாத் தன்மை யோரே.

#1116

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பதியில்பை மட்டுமன்று; ஏனைப் பசு பாசங்களது இயல்பையும் உள்ளவாறு உணர்தல் திருவருள் வழியால் வரும் சிவஞானத்தாலன்றிக் கூடாது` என்பதையும், `சிவஞானத்தால் அறிகின்றுழி, முன்னர்ப் பதியில்பை உணருமாற்றானே ஏனைப் பசு பாசங்களது இயல்பும் உள்ளவாறு உணரப்படும்` என்பதையும் இப்பாடல் இனிது விளக்குகிறது.

`வரைத் தனி வில்லால்.

.

.

கங்கை நாயக! நின்னைக் காணா மாந்தர் தம்மையும் காணாத் தன்மையோரே; என்னை? (நான் ஞான நாட்டம் பெறுதற்கு) முன்னம், - மயிர்த் தொகையோ? தோலின் பரப்போ? புண்ணோ? உதிரப் புனலோ? எலும்போ? மூளை விழுதோ? வழும்போ? புழுவின் ஒழுங்கோ? மலத்தின் குவையோ? நரம்பின் கயிறோ? ஒறுக்கும் பிணியோ? - `இன்னது யான்` என்று தெரியாது ஏதினும் தேடினேன்; யாதினும் காணேன்; (அதனால்) என்னையே (யான்) அறிந்திலேன்.

நின் திருவருள் கிடைத்த பொழுது (அதனால்) மாயையாகிய திரையைக் கீறி, ஞான நாட்டம் பெற்றபின் நின் பெருந் தன்மையுங் கண்டேன்; காண்டலும் என்னையும் கண்டேன்; பிறரையும் கண்டேன்` என ஏற்குமாற்றான் இயைத்துப் பொருள் காண்க.

அடி-*1:* மேவிய - உடம்பு முழுதும் பொருந்திய.

புன் மயிர் - குறு உரோமங்கள்.

பாவிய - பரந்த, பொதிந்த - மூடிய புண் - சீயும், சினையும்.

கூறு - துண்டு.

முடை - முடைநாற்றம்.

விழுது - நெகிழ்ச்சி யுடையதிரள், வழும்பு - நிணம்; கொழுப்பு.

நீர் - சிறுநீரும், வெயர்வை யும்.

``மலம்`` என்பது உடல் அழுக்கையும் குறிக்கும் `நரம்பாகிய கயிறு` என்க.

இன், வேண்டாவழிச் சாரியை.

`ஏதினும்` என்பது, `யாதினும் என்பதன் மரூஉ.

வரை - மேருமலை.

தனி - ஒப்பற்ற.

புரம், திரிபுரம்.
கண் படையாக - கண்ணையே படைக்கலமாகக் கொண்டு.
பொடி - சாம்பல்.
வீயா - இறவாத `அமரர்` என்பது `மரித்தல் இல்லாதவர்` என்னும் பொருளது ஆதலின் இங்கு அது வாளா பெயராய் வந்தது.
அமுது - உண்ணும் உணவு.
`உண்டதனால் ஊறு எதுவும் நிகழ்ந்திலது` என்றற்கு `உணவாக்கி` என்றார்.
வெருவா - அச்சங் கொள்ள.
சரளம் - தேவ தாரு.
வகுளம் - மகிழ்.
முகிழ்த்த - தோற்றுவித்த.
புது வெயில் - அதிசய வெயில்.
இருடி கணங்கட்கு ஆன புண்ணியம் தவம்.
`புரக்கும் பெருமான்` என்க.
இனி, புரக்கும் இடைமருது` என்றலும் ஆம்.
தெய்வத் திருவருள் - தெய்வத் தன்மையைத் தரும் திருவருள்.
உரிமையாக்கிக் கொள்ளுதலை, `கைக்கொள்ளுதல்` என்றும் `கைப்பற்றுதல்` என்றும் கூறும் வழக்கம் பற்றி, ``கைவந்து`` என்றார்.
`கையின்கண் வந்து` என உருபு விரிக்க.
படலம் - மறைப்பு.
`பசுக்களும், பாசங்களும் பதியின்கண் வியாப்பிய மேயாகலின், வியாபகமாகிய பதியை உணரவே, அதன்கண் வியாப்பியமாகிய பசுக்களும், பாசங்களும் தாமாகவே உணரப்படும்` என்க.
அது கடலுள் மூழ்கி அதன் ஆழத்தைக் காண்பவர் அதனானே அக்கடலின்கண் உள்ள பொருள்களையும் நன்குணர்தலில் வைத்து உணர்ந்து கொள்க.
கடல் ஆழத்தைக் காண முயலாமல் கடலில் உள்ள பொருள்களை மட்டும் காண முயல்வோர் அவற்றுட் சிலவற்றை மட்டுமே பெற்றொழிதலன்றி அனைத்தையும் பெறாமைபோலப் பதியை உணர முயலாமல் பசுபாசங்களை மட்டும் உணருவோர் அவற்றது இயல்பினை ஒருபுடையாக உணர்தலன்றி முற்ற உணராமை பற்றி.
நின்னைக் காணா மாந்தர்
தம்மையுங் காணாத் தன்மை யோரே
என்றார்.
`தன்னையும்` என்பது பாடம் ஆகாமையை.
மாதவச் சிவஞான யோகிகள் சிவஞான போத மாபாடியத்துள் இதனை

எடுத்துக்காட்டிய இடத்தில் *1* காணும் பாடம் பற்றியறிக.
முதற்கண் போந்த ஓகாரங்கள் தெரிநிலைப் பொருள.

ஒராதே அஞ்செழுத்தும் உன்னாதே பச்சிலையும்
நேராதே நீரும் நிரப்பாதே யாராயோ
எண்ணுவார் உள்ளத் திடைமருதர் பொற்பாதம்
நண்ணுவாம் என்னுமது நாம். **#1117**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஓராது`` முதலிய நான்கும் எதிர்மறை வினையெச்சங்கள்.
அவைகளில் உள்ள ஏகாரங்கள் பிரிநிலைப் பொருள.
ஓர்தல், இங்கு அறிதல்.
அதற்கு `நூற்பொருளை` என்னும் செயப்படுபொருள் வருவிக்க.
நேர்தல் - சாத்த உடன்படுதல்.
எந்தத் திருமுழுக்கும் நீரால் நிரம்புதல் பற்றி, ``நீரும் நிரப்பாதே`` என்றார்.
யார் ஆயோ - என்ன இயைபு உடையேமாகியோ, `நண்ணுவாம் என்னும் அது யார் ஆயோ` என்க.
செயற்பாலனவற்றுள் ஒன்றையும் செய்யாமலே, `நண்ணுவாம்` எனக் கூறுதற்கு யாதோர் இயைபும் இல்லை - என்றபடி.
``அது`` என்பது, என்று சொல்லுதலாகிய அத்தொழிலையே குறித்து நிற்றலால் அஃது, `யாராய்` என்னும் வினையெச்சத்தோடு முடிந்தது.

நாமே இடையுள்ள வாறறி
வாமினி நாங்கள்சொல்லல்
ஆமே மருதன் மருத
வனத்தன்னம் அன்னவரைப்
பூமேல் அணிந்து பிழைக்கச்செய்
தாரொரு பொட்டுமிட்டார்
தாமே தளர்பவ ரைப்பாரம்
ஏற்றுதல் தக்கதன்றே.
#1118

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு அகத்திணைப் பொருளில் `மெய் தொட்டுப் பயிறல்` என்னும் துறை பற்றித் தலைவன் கூற்றாய் அமைந் தது.
மருத வனத்து அன்னம் அன்னவர் தலைவி.
மேல் - தலை மேல்.

அணிந்து - அலங்கரித்து.
`மேல் பூவால் அணிந்து` என்க.
பிழைக்கச் செய்தார் - அணிந்தவர்கள் தம் செயல் குற்றமாகும்படி செய்தார்கள்.
`அன்னம் அன்னவரது இடை எவ்வாறு உள்ளது` என்பதை *(*அது பூவைச் சுமக்காது என்பதை*)* நாம் மட்டுமே அறிவோம். *(*அவர்கள் அறியார்கள்*)* இனி நாங்கள் அவர்களுக்குச் சொல்லலாமோ*!* *(*கூடாது*)* பூவை அணிந்ததற்குமேல் நெற்றியில் ஒரு பொட்டும் முன்பே மெலிகின்றவர் மேல் மேலும் சுமையை ஏற்றல் தக்கதன்று.
*(*தலைவன் இவ்வாறு கூறி*,* `இதற்கு மேல் தலையில் உள்ள மலர்களை நாடி வண்டுகள் வருகின்றனவே` எனக் கூறி*,* அவைகளை ஓட்டுவான் போலத் தலைவியை நெருங்கி அவளது மெய்யைத் தீண்டுவான்.
) அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்லா படாஅ பறை *(*குறள்*, 1115)*
என்னும் திருக்குறள் இங்கு நினைவுகூரத் தக்கது.
``தளர்பவரை`` என்னும் இரண்டன் உருபை ஏழன் உருபாகத் திரிக்க.

அன்றினர் புரங்கள் அழலிடை அவியக்
குன்றுவளைத் தெய்த குன்றாக் கொற்றத்து
நுண்பொடி அணிந்த எண்தோள் செல்வ
கயிலைநடந் தனைய உயர்நிலை நோன்தாள்
பிறைசெறிந் தன்ன இருகோட் டொருதிமில்

பால்நிறச் செங்கண் மால்விடைப் பாக
சிமையச் செங்கோட் டிமையச் செல்வன்
மணியெனப் பெற்ற அணியியல் அன்னம்
வெள்ளைச் சிறுநகைக் கிள்ளைப் பிள்ளை
குயிலெனப் பேசும் மயிலிளம் பேடை

கதிரொளி நீலங் கமலத்து மலர்ந்தன்ன
மதரரி நெடுங்கண் மானின் கன்று
வருமுலை தாங்குந் திருமார்பு வல்லி
வையம் ஏழும் பன்முறை ஈன்ற
ஐய திருவயிற் றம்மைப் பிராட்டி

மறப்பருஞ் செய்கை அறப்பெருஞ் செல்வி
எமையா ளுடைய உமையாள் நங்கை
கடவுட் கற்பின் மடவரல் கொழுந

பவள மால்வரைப் பனைக்கைபோந் தனைய
தழைசெவி எண்தோள் தலைவன் தந்தை

பூவலர் குடுமிச் சேவலம் பதாகை
மலைதுளை படுத்த கொலைகெழு கூர்வேல்
அமரர்த் தாங்குங் குமரன் தாதை
பொருதிடம் பொன்னி புண்ணியம் புரக்கும்
மருதிடங் கொண்ட மருத வாண
நின்னது குற்றம் உளதோ நின்னினைந்
தெண்ணருங் கோடி இடர்ப்பகை கடந்து
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா
இறப்பையும் பிறப்பையும் இகந்து சிறப்பொடு
தேவர் ஆவின் கன்றெனத் திரியாப்

பாவிகள் தமதே பாவம் யாதெனின்
முறியாப் புழுக்கல் முப்பழங் கலந்த
அறுசுவை யடிசில் அட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துதல்
அயினியின் குற்றம் அன்று வெயிலின்வைத்

தாற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப
மடாஅ ஒருவன் விடாஅ வேட்கை
தெண்ணீர்க் குற்றம் அன்றுகண் ணகன்று
தேன்துளி சிதறிப் பூந்துணர் துறுமி
வாலுகங் கிடந்த சோலை கிடப்ப

வெள்ளிடை வெயிலிற் புள்ளிவெயர் பொடிப்ப
அடிபெயர்த் திடுவான் ஒருவன்
நெடிது வருந்துதல் நிழல்தீங் கன்றே.
#1119
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அன்றினர் - பகைத்தவர்.
நுண்பொடி, தோளுக்கு அடை, ``கயிலை நடந்தனைய`` என்பது முதலியன மால்விடைக்கு அடை ``கயிலை நடந்தனைய`` இல்பொருள் உவமை.
`நடந் தனையதாள்` என்க.

எனவே, `நடந்தாற் போலும் நடையை யுடைய தாள்` என்பதாம்.
தாள் - பாதம்.
நோன் - வலிய.
உயர்நிலை - ஓங்கி நிற்கும்தாள்.
கோடு - கொம்பு.
திமில் - முசுப்பு.
சிமையம் - சிகரம்.
``செங்கோடு`` என்பதில் செம்மை ஆகுபெயராய்ப் பொன்னைக் குறித்தது.
கோடு - சிகரம்.
மணி - மாணிக்கம்.
இமயச் செல்வன் பெற்ற அன்னம், உமாதேவி `கிள்ளைப் பிள்ளை, மயில் இளம்பேடை, மானின் கன்று, வல்லி` என்பனவும் அப்பெருமாட்டியையே குறித்தன.
``வல்லி`` என்பது தவிர ஏனைய உருவகங்கள்.
``குயில் எனப் பேசும்`` என்றாரேனும் பேசுமிடத்து எழும் குரலே அங்குக் கருதப்பட்டது.
`மொழியாற் கிள்ளை, சாயலால் மயில், கண்ணால் மான்கன்று` என்க.
இடையே ``குயில் எனப் பேசும்`` என உவமையணி வந்தது.
வருமுலை - வளர்கின்ற தனம்.
``தாங்கும்`` என்பது மார்பிற்கு அடை.
வல்லி - கொடி போன்றவர், உவம ஆகுபெயர்.
நீலம் - நீலப் பூ.
கமலம் - தாமரைப் பூ.
`நீலப் பூ தாமரைப் பூமேல் பூத்தது போலும்` என்பது இல்பொருள் உவமை.
அது முகத்தின்மேல் கண் விளங்குதலுக்கு உவமை, மதர் - களிப்பு.
அரி - செவ்வரிகள்.
ஐய - அழகிய.
பணைக் கை - பருத்த துதிக்கை.
`கையொடு` என உருபுவிரிக்க.
``பவள மால் வரை பணைக் கையோடு போந்தனைய`` - என்பது இல்பொருள் உவமை.
தலைவன்; கணபதி.
சிவபெருமானுக்கு உள்ளவை விநாயகருக்கும் இருத்தல் பற்றி, `எண்தோள் தலைவன்` என்றார்.
பதாகை - கொடி.

`கூர்வேற் குமரன்` என இயையும்.
`அமரரைத் தாங்கும்` என உருபுவிரிக்க.
தாங்குதல், அசுரரால் இன்னற்படா வண்ணம் காத்தல்.
``தாங்கும்`` என்றதை இறந்த காலத்தில் வந்த நிகழ்காலமாகக் கொள்ளலும் பொருந்தும்.
பொருதல்- மோதுதல்.
`கரையைப் பொருதிடும்` என்க.
பொன்னி - காவிரி நதி.
அது பல வளங்களையும் தருதலால் புண்ணியங்களைப் புரப்பதாயிற்று.
தேவர் ஆ - காமதேனு.
`அஃது எல்லார்க்கும் எல்லாம் வழங்குவதாகலின், அதன் கன்றிற்குக் கிடையாதது ஒன்று இல்லை` என்னும் பொருட்டு.
வதையா - வதைத்து.
முறியாப் புழுக்கல் - உடைபடாத அரிசியால் ஆக்கப்பட்ட சோறு.
அயினி - உணவு; அது சோற்றைக் குறித்தது.
விளாவிய நீர் காய்ச்சப்படாத நீரில் உள்ள குற்றத்தை உடைத்தாம் ஆகலின், அக்குற்றம் இன்மையைக் குறித்தற்கு, ``ஆற்றிய தெண்ணீர்`` என்றார்.
`நெருப்பில் வைத்துக் காய்ச்சினும் குற்றம்படும்` என்றற்கு.
``வெயிலின் வைத்து`` என்றார்.
நாற்றம் - நறுநாற்றம்.
மடுத்தல் - வாய்மடுத்தல்.
வேட்கை - தாகம்.
``விடாவேட்கை`` என்றாராயினும் `வேட்கை விடாமை` என்றலே கருத்து.
கண் அகன்று - இடம் பரந்து.
துணர் - கொத்து.
துறுமி - செறிந்து.
வாலுகம் - வெண்மணல்.
`நிழலிற் செல்லாமல் வருந்துதல்` என்க.
தீங்கு - குற்றம்.
`செல்வ! பாக! கொழுந! தலைவன் தந்தை! குமரன் தாதை! மருதவாண! (உலகில் சிலர் துயர் உறுதல்) நின்னது குற்றம் யாதுமில்லை; நின் நினைந்து காலனை வதைத்துச் சிறப்பொடு திரியாப் பாவம் பாவிகள்தமதே; அஃது எத்தன்மைத்து எனின், அடிசில் அட்டு இனிதிருப்ப ஒருவன் புசியராது வருந்துதல் அயினியின் குற்றம் அன்று; தெண்ணீர் இருப்ப, ஒருவன் மடாது வேட்கை விடாமை தெண்ணீர்

குற்றம் அன்று; சோலை கிடப்ப, ஒருவன் நிழலிற் புகாது வெயிலில் வருந்துதல் நிழல் தீங்கன்று` என இயைத்து, `இவை போலும் தன்மைத்து` என முடிக்க.

அன்றென்றும் ஆமென்றும் ஆறு சமயங்கள்
ஒன்றொன்றோ டொவ்வா துரைத்தாலும் என்றும்
ஒருதனையே நோக்குவார் உள்ளத் திருக்கும்
மருதனையே நோக்கி வரும்.

#1120

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``உரைத்தாலும்`` என்பதன்பின், `அவ்வுரைகள் அனைத்தும்` என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க.

ஒரு தனையே- ஒருவனாகிய (தன்னோடு ஒப்பது பிறிதொன்று இல்லாதவனாகிய) தன்னையே, `உண்மையான மெய்ப்பொருள் திருவிடைமருதூர்ப் பெருமானேயாகையால், மெய்ப்பொருளை ஆயப் புகுந்த சமயங்கள் பலவும் தான் தான் அறிந்த அளவில் அம்மெய்ப்பொருளைப் பற்றிக் கூறும் கூற்றுக்கள் தம்முள் ஒவ்வாது இகலியிருப்பினும் அவை அனைத்தும் அப்பெருமானைப் பற்றிக் கூறும் கூற்றாகவே அமையும்` என்பதாம்.

இஃது யானையின் ஒவ்வோர் உறுப்பை மட்டும் கையால் தடவி முடித்து, `அவ்வவ்வுறுப்புக்களே யானை` எனக் கருதிக் கொண்டு யானையின் இயல்பைப் பற்றிக் குருடர்கள் தம்முள் இகலியுரைக்கும் உரைகள் யாவும் யானையின் இயல்பேயாதல் போல்வதாம்.

``அன்று`` என்றல், எதிர்ப் பக்கத்தவர் கூறும் உரையை உடன்படுவார் கூறுவது.

ஆறு சமயங்களாவன மெய்ப்பொருளை ஆயப்புகுந்த ஆறு சமயங்கள். அவை `உலகாயதம், பௌத்தம், சமணம், சாங்கியம், தருக்கம், ஏகான்ம வாதம்` என்பன.

உலகாயதம், ``உலகமே மெய்ப்பொருள்`` எனவும், சமணம், ``வினையே மெய்ப் பொருள்`` எனவும், ``சாங்கியம், உயிரே மெய்ப்பொருள்`` எனவும், தருக்கம், ``உயிரினும் சிறிதே உயர்ந்தது மெய்ப்பொருள்`` எனவும் கூறும்.

பிற சமயங்களின் மெய்ம்மைகள் எல்லாம் இவற்றுள்ளே அடங்குமாற்றையும், இவை அனைத்தும் சிவநெறிமெய்ம்மையுள் அடங்குதலையும் அறிந்து கொள்க.

நோக்கிற்றுக் காமன் உடல்பொடி
யாக நுதிவிரலால்

தாக்கிற் றரக்கன் தலைகீழ்ப்
படத்தன் சுடர்வடிவாள்
ஓக்கிற்றுத் தக்கன் தலையுருண்
டோடச் சலந்தரனைப்
போக்கிற் றுயர்பொன்னி சூழ்மரு
தாளுடைப் புண்ணியமே.

#1121

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நோக்கிற்று, தாக்கின்று`` முதலிய நான்கும் நோக்கியது, தாக்கியது முதலிய பொருளவாய், அவ்வத் தொழிலைக் குறித்தன.
அவற்றிற்கெல்லாம் வினை முதல் இறுதிக்கண் உள்ள ``புண்ணியன்`` என்பது.
`புண்ணியம்` என்பது பாடமாயின் அதுவும் உபசார வழக்கால் புண்ணியனையே குறித்து நிற்கும்.
அரக்கன், இராவணன், ஓக்கிற்று - உயர எடுத்தது.
மருது - மருதூர்.
நுதி - நுனி.
நுதி விரல் - விரல் நுதி; இலக்கணப் போலி மொழி.
`உயிர் போக்குதல்` என்பது `அழித்தல்` என்னும் பொருட்டாய் நிற்றலின் அது, ``சலந்தரனை`` என்னும் இரண்டாவதற்கு முடிபாயிற்று.

புண்ணிய புராதன புதுப்பூங் கொன்றைக்
கண்ணி வேய்ந்த ஆயிலை நாயக
காள கண்ட கந்தனைப் பயந்த
வாளரி நெடுங்கண் மலையாள் கொழுந
பூத நாத பொருவிடைப் பாக

வேத கீத விண்ணோர் தலைவ
முத்தி நாயக மூவா முதல்வ
பத்தியாகிப் பணைத்தமெய் யன்பொடு
நொச்சி யாயினுங் கரந்தை யாயினும்
பச்சிலை இட்டுப் பரவுந் தொண்டர்

கருவிடைப் புகாமற் காத்தருள் புரியும்
திருவிடை மருத திரிபு ராந்தக
மலர்தலை உலகத்துப் பலபல மாக்கள்
மக்களை மனைவியை ஒக்கலை ஒரீஇ

மனையும் பிறவும் துறந்து நினைவரும்

காடும் மலையும் புக்குக் கோடையில்
கைம்மேல் நிமிர்த்துக் காலொன்று முடக்கி
ஐவகை நெருப்பின் அழுவத்து நின்று
மாரி நாளிலும் வார்பனி நாளிலும்
நீரிடை மூழ்கி நெடிது கிடந்தும்

சடையைப் புனைந்துந் தலையைப் பறித்தும்
உடையைத் துறந்தும் உண்ணா துழன்றும்
காயுங் கிழங்குங் காற்றுதிர் சருகும்
வாயுவும் நீரும் வந்தன அருந்தியுங்
களரிலுங் கல்லிலுங் கண்படை கொண்டும்
தளர்வுறும் யாக்கையைத் தளர்வித்
தாங்கவர்
அம்மை முத்தி அடைவதற் காகத்
தம்மைத் தாமே சாலவும் ஒறுப்பர்
ஈங்கிவை செய்யாது யாங்கள் எல்லாம்

பழுதின் றுயர்ந்த எழுநிலை மாடத்துஞ்
செழுந்தா துதிர்ந்த நந்தன வனத்துந்
தென்றல் இயங்கும் முன்றில் அகத்துந்
தண்டாச் சித்திர மண்டப மருங்கிலும்
பூவிரி தரங்க வாரிக் கரையிலும்

மயிற்பெடை ஆலக் குயிற்றிய குன்றிலும்
வேண்டுழி வேண்டுழி ஆண்டாண் டிட்ட
மருப்பின் இயன்ற வாளரி சுமந்த
விருப்புறு கட்டில் மீமிசைப் படுத்த
ஐவகை அமளி அணைமேல் பொங்கத்

தண்மலர் கமழும் வெண்மடி விரித்துப்
பட்டின்உட் பெய்த பதநுண் பஞ்சின்
நெட்டணை யருகாக் கொட்டைகள் பரப்பிப்
பாயல் மீமிசைப் பரிபுரம் மிழற்றச்
சாயல் அன்னத்தின் தளர்நடை பயிற்றிப்
பொற்றோ ரணத்தைச் சுற்றிய துகிலென

அம்மென் குறங்கின் நொம்மென் கலிங்கம்
கண்ணும் மனமுங் கவற்றப் பண்வர
இரங்குமணி மேகலை மருங்கில் கிடப்ப
ஆடர வல்குல் அரும்பெறல் நுசுப்பு
வாட வீங்கிய வனமுலை கதிர்ப்ப
அணியியல் கமுகை அலங்கரித் ததுபோல்
மணியியல் ஆரங் கதிர்விரித் தொளிர்தர
மணிவளை தாங்கும் அணிகெழு மென்தோள்
வரித்த சாந்தின்மிசை விரித்துமீ திட்ட
உத்தரீ யப்பட் டொருபால் ஒளிர்தர
வள்ளை வாட்டிய ஒள்ளிரு காதொடு
பவளத் தருகாத் தரளம் நிரைத்தாங்
கொழுகி நீண்ட குமிழொன்று பதித்துக்
காலன் வேலும் காம பாணமும்

ஆல காலமும் அனைத்தும்இட் டமைத்த
இரண்டு நாட்டமும் புரண்டுகடை மிளிர்தர
மதியென மாசறு வதனம் விளங்கப்
புதுவிரை அலங்கல் குழன்மிசைப் பொலியும்
அஞ்சொல் மடந்தையர் ஆகந் தோய்ந்துஞ்

சின்னம் பரப்பிய பொன்னின் கலத்தில்
அறுசுவை அடிசில் வறிதினி தருந்தா
தாடினர்க் கென்றும் பாடினர்க் கென்றும்
வாடினர்க் கென்றும் வரையாது கொடுத்தும்
பூசுவன பூசியும் புனைவன புனைந்தும்

தூசின் நல்லன தொடையிற் சேர்த்தியும்
ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்தும்
மைந்தரும் ஒக்கலும் மனமகிழ்ந் தோங்கி
இவ்வகை இருந்தோம் ஆயினும் அவ்வகை
மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாது

சிந்தை நின்வழி செலுத்தலின் அந்த
முத்தியும் இழந்திலம் முதல்வ அத்திறம்
நின்னது பெருமை அன்றோ என்னெனின்
வல்லான் ஒருவன் கைம்முயன்று எறியினும்

மாட்டா ஒருவன் வாளா எறியினும்

நிலத்தின் வழாஅக் கல்லேபோல்
நலத்தின் வழார்நின் நாமம்நவின் றோரே.

#1122

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி -*76*.
``முதல்வ`` என்பதை, ``திரிபுராந்தக`` என்பதன் பின்னர்க் கூட்டி.
`முதல்வன் - முழுமுதற் கடவுள்` என்க.
அடி-*4* வாட்கண் அரிக்கண்` எனத் தனித் தனி இயைக்க.
வாட்கண் - வாள்போலும் கண்.
அரி - செவ்வரி.
அடி-*7* மூவா - கெடாத, இடையே கெடும் முதல்வரின் நீக்குதற்கு மூவர் முதல்வ`` என்றார்.
ஐந்தெழுத்து ஓதலை அடி-*8*.
பணைத்த - பெருத்த.
அறியாமை பற்றி அம்மக்களை ``மாக்கள்`` என்றார்.
கை மேல் நிமிர்த்தல், இருகைகளையும் வானத்தை நோக்க நீட்டுதல்.
கால் ஒன்றுமுடக்குதலாவது, ஒரு கால் அடியை எடுத்து மற்றொரு காலின் துடை மேல் ஊன்றுதல்.
ஐவகை நெருப்பு - பஞ்சாக்கினி.
அவை நான்கு திசையிலும் மூட்டப்பட்ட நான்கு தீக்களோடு நடுவண் தீயாகக் கருதிக் கொள்ளப்படும் பகலவன்.
அழுவம் - பள்ளம்; குண்டம்.
வார் பனி - ஒழுகுகின்ற பனி, கண் படை- துயிலுதல்.
தளர்வுறும் யாக்கையைத் தளர்வித்து - தானே மெலிவதாகிய உடம்பைத் தாங்கள் வலிதின் மெலிவித்து.
அம்மை - மறுமை.
தம்மை ஒறுத்தலாவது, உடலை வாட்டும் முகத்தால் - உயிரை வருத்துதல்.
தாது - மகரந்தம்.
முன்றில் - இல்முன்.
தண்டா - நீங்காத.
ஆல - ஆடும்படி.
குயிற்றிய - செய்யப்பட்ட.
குயிற்றிய குன்று - செய்குன்று; கட்டு மலை, மருப்பு - யானைத் தந்தம்.

வாள் அரி - கொடிய சிங்கம்.
படுத்த.
இடப்பட்ட.
அமளி - படுக்கை.
அணை - மெத்தை.
ஐ வகை அமளி அணை - பஞ்ச சயனம்.
அவை மயிலின் மெல்லிறகு அன்னத்தின் மெல்லிறகு; இலவம் பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு - இவை அடைக்கப்பட்ட மெத்தை.
`அணைமேல் விரித்து` என இயையும்.
`மலர் போலக் கமழும்` என்க.
மடி - துணி.
பட்டு - பட்டால் ஆகிய உறை.
பதப் பஞ்சு - கொட்டி எடுத்துப் பதம் ஆக்கிய பஞ்சு.
நுண் பஞ்சு, இலவம் பஞ்சு.
`பஞ்சின் கொட்டைகள்` என்க.
நெட்டணை - பஞ்ச சயனங்களைத் தாங்குகின்ற நீண்ட மெத்தை.
கொட்டைகள் - தலையணைகள்.
பாயல் - படுக்கை.
`இவ்வாறான பாயல்` என்க.
`பாயல் மீமிசைத் தோய்ந்து` என இயையும்.
பரிபுரம் - காலில் அணிந்த சிலம்பு.
அன்னத்தின் நடையைத் தாம் பயிற்றி என்க.
பயிற்றுதல் - நிகழ்வித்தல்.
தோரணம், இடைக்கு உவமை, அம் - அழகு.
மெல் - மெல்லிய.
குறங்கு - துடை.
``ஒம்`` என்பது மெல்லென ஒலிக்கும் ஒலிக் குறிப்பு.
`குறங்கின்கண் ஒண் என்னும் கலிங்கம்` என்க.
கலிங்கம் - உடை.
கவற்ற - ஏக்கறும்படி செய்ய.
பண் வர இரங்கும் - பல பண்களும் தோன்ற ஒலிக்கின்ற.
நடை வேறுபாட்டால் மேகலையின் ஒலி வேறுபடுவனவாம்.
மருங்கு - இடை; அரும் பெறல் நுசுப்பு - அரிதில் காணப்பெறும் இடை`
`அல்குலின் மேலதாகிய நுசுப்பு` என்க.
வனம் - அழகு.
கதிர்ப்ப - அழகு விளங்க.
ஆரம் - கழுத்துச் சரம், வளை, இங்குத் தோள் வளை.

தோள் வரித்த சாந்து.
தோள்களை அலங்கரித்த சந்தனம்.
உத்தரியம் - மேலாடை.
வள்ளை - வள்ளைத் தண்டு; நீரிற் கிடப்பது.
இது காதிற்கு உவமையாகும்.
`வள்ளையை வாட்டிய` என்க.
வாட்டிய - தோற்கச் செய்த.
உருவக வகையால் பவளம் இதழையும், தரளம் (முத்து) பற்களையும், குமிழ் மூக்கினையும் குறித்தன.
குமிழ் - குமிழம் பூ.
நாட்டம் - கண்.
அவை காமத்தை மிகுவிக்கும் முகத்தால் ஆடவரது உயிரைப் போக்குவன போறல் பற்றிக் காலனது (கூற்றுவனது) வேல் முதலிய மூன்றும் ஒருங்கமைந்தனவாகக் கூறப்பட்டன.
மிளிர்தல் - சிவத்தல்.
அம் சொல் - அழகிய சொல்.
ஆகம் - மார்பு.
சின்னம் - ஓவியம்.
வறிது - சிறிது.
அருந்தா - அருந்தி.
சிறிதே அருந்துதல் பசியின்மையால்.
வாடினர் - வறியவர்.
வரையாது கொடுத்தல் - `இன்னார், இனியார்` என்று வேற்றுமை பாராது எல்லார்க்கும் வழங்குதல்.
தூசு - நல் ஆடை.
`அவற்றுள்ளும் நல்லன` என்க.
தொடை - மாலை.
`தொடையின்கீழ்` எனவும்.
`மைந்தரொடும், ஒக்கலோடும்` எனவும் உருபுகள் விரிக்க.
ஆர - நிரம்ப.
ஆர்ந்து - நுகர்ந்து.
ஒக்கல் - சுற்றம்.
``இவ்வகை யிருந்தேமாயினும்`` என்பது நியமம் ஆகாமை விளங்கும்.
அந்த முத்தி - மேல் தம்மைத் தாமே ஒறுப்பவர் விரும்பியதாகக் கூறப்பட்ட முத்தி.
இனி, `முத்திகளில் எல்லாம் முடிவான பரமுத்தி` என்றலும் ஆம்.
``வாயிடை`` என்பதன் பின், `வைத்தலை` என ஒரு சொல் வருவிக்க.

``வல்லான் ஒருவன்.

.

.

கல்லே போல்`` என்பதை ``அந்த முத்தியும் இழந்திலம்`` என்பதற்கு முன்னே கூட்டுக.

அடி-*29* ``யாங்கள் இவ்வகை யிருந்தேமாயினும் அந்த முத்தியும் இழந்திலம்`` என்றதனால், `தம்மைத் தாமே ஒறுப்பவர் அவ்வாறு ஒறுப்பினும் அந்த முத்தியைப் பெறுகிலர்` என்பது பெறப்பட்டது.

பல வகையிலும் உடலை வருத்தி நோற்றல் மன ஒருக்கத்தின் பொருட்டேயாம்.

அவ்வாற்றால் மனம் ஒருங்குதலின் பயன், மந்திர எழுத்து ஐந்தும் வாயிடை மறவாது சிந்தை சிவன்வழிச் செலுத்தலே யாகலின் தம்மைத் தாமே ஒறுத்தும் அது செய்யாதார் அந்த முத்தியை அடைவாரல்லர்` எனவும், `முன்னைப் புண்ணிய மிகுதியால் இம்மையில் மனம் ஒருங்கப் பெற்றோர் உடல் வருந்த நோலாதே, மாறாக, ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்தும் அந்த முத்தியையும் இழவாது பெறுவர்` எனவும் `எவ்வாற்றானும் சிவனை நினைதலே முத்தி சாதனம்` என்பதும், `எனவே, எதனைச் செய்யினும் அச்சா தனத்தைப் பெறாதார் முத்தியாகிய பயனைப் பெறுமாறு இல்லை` என்பதும் உணர்த்தியவாறு.

அப்பர்.

இக்கருத்தை, ``கங்கை யாடில் என், காவிரி யாடில் என்`` *1* என்பது முதலாக எடுத்துக் கூறி, ``எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே`` என நியமித்து அருளிச் செய்தார்.

அதனால் அவர் அங்குக் கங்கை ஆடுதல் முதலியவற்றையும், இங்கு இவ்வாசிரியர், ``மக்களை, மனைவியை, ஒக்கலை ஒரீஇக் காடும், மலையும் புகுந்து கடுந்தவம் புரிதலையும் இகழ்ந்தார் என்னற்க.

மற்று, எவ்வாற்றானும் சிவனை நினைத்தலே சாதனம் ஆதலையே வலியுறுத்தினர் என்க.

அவைதிகருள் சமணரும் வைதிகரும் மீமாஞ்சகரும் இங்குக் கூறியவாறு, `தம்மைத் தாம் ஒறுப்பதே முத்தி சாதனம்` என்பர்.

அது பற்றியே இங்கு வைதிகர் புரியும் தவங்களாகக் கூறிவந்தன பலவற்றுக்கு இடையே அடி-*20, 21* தலையைப் பறித்தல், உடையைத் துறத்தல், உண்ணாது உழலல், கல்லில் கண் படைகொள்ளல் ஆகிய சமணர் தவங்களையும் கூறினார்.

கல் ஒன்றை வல்லான் ஒருவன் கைம் முயன்று எரிதல், மக்களை, மனைவியை, ஒக்கலை ஒருவுதல் முதலியவற்றைச் செய்வோர் ஐந்தெழுத்தை ஓதுதற்கும், மாட்டா ஒருவன் வாளா எறிதல், அவற்றைச்

செய்யமட்டாது ஐம்புலன்களை ஆர நுகர்வார் ஐந்தெழுத்தை ஓதுதற்கும் உவமைகள்.
`கல்லின் இயல்பு, யாவர் உயர எறியினும் தப்பாது நிலத்தில் வீழ்தல் ஆதல் போல, ஐந்தெழுத்தின் இயல்பு, யாவர் ஓதினும் முத்தியிற் சேர்த்தல்` என்பது இவ்வுவமை களால் விளக்கப்பட்டது.
இதனை, சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று *(குறள்.,307)*
என்னும் குறளிற் போந்த உவமையோடு வைத்துக் காண்க.
அடி-*77:* அத்திறம் - ஐம்புலன்களையும் ஆர நுகர்ந்தும் அந்த முத்தியையும் யாம் இழாவது பெறுதலாகிய கூறுபாடு.
என் எனின் - எங்ஙனம் எனின் `நின் நாமம் நவின்றோர் நலத்தின் வழார் ஆகலின்` என முடிக்க.
`ஆகலின்` என்பது சொல்லெச்சம் எனவே, ``வழார்`` என்றது, `வழாதவாறு` நீ அருளுகின்றாய்` என்றதாம்.
`சிவனை நினையாது பிறவற்றையெல்லாம் செய்வோர் அச்செயலுக்கு உரிய பயன்களைப் பெறுதலோடு ஒழிவதல்லது, பிறவி நீங்குதலாகிய முத்தியைப் பெறார்` என்பது கருத்து.
இதனை, பரசிவன் உணர்ச்சி யின்றிப்
பல்லுயிர்த் தொகையும் என்றும்
விரவிய துயர்க் கீ றெய்தி
வீடுபே றடைது மென்றல்
உருவமில் விசும்பின் தோலை
உரித்துடுப் பதற்கொப்பென்றே
பெருமறை பேசிற் றென்னில்
பின்னும்ஓர் சான்றும் உண்டோ
எனக் கந்த புராணத்திலும்
மானுடன் விசும்பைத் தோல்போற்
சுருட்டுதல் வல்ல னாயின்
ஈனமில் சிவனைக் காணாது
இடும்பைதீர் வீடும் எய்தும்;
மானமார் சுருதி கூறும்
வழக்கிவை ஆத லாலே
ஆனமர் இறையைக் காணும்
உபாயமே யறிதல் வேண்டும்
எனக் காஞ்சிப் புராணத்திலும் *2* கூறப்பட்ட உபநிடதப் பொருள் பற்றி யறிக.

நாமம் நவிற்றாய்மனனே நாரியர்கள் தோள்தோய்ந்து

காமம் நவிற்றிக் கழிந்தொழியல் ஆமோ
பொருதவனத் தானையுரி போர்த்தருளும் எங்கள்
மருதவனத் தானை வளைந்து. #1123
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நாமம் நவிற்றாய்`` என்பதற்கு முன் `அவன்` என்பது வருவித்து, அத்தொடரை இறுதிக்கண் கூட்டுக.
நவிற்றாய் - சொல்லு.
``காமம்`` என்பது அதன்வழி நிகழ்வதாகிய கலவியைக் குறித்தது.
``தோய்ந்து நவிற்றி`` என்பது, `ஓடி வந்து` என்பதுபோல செய்யும் செயலை வகுத்துக் கூறியதாம்.
பொருத - போர் செய்த.
வனத்து ஆனை - காட்டு யானை.
வளைந்து - வலம் வந்து.

வளையார் பசியின் வருந்தார்
பிணியின்மதன னம்புக்
கிளையார் தனங்கண் டிரங்கிநில்
லாரிப் பிறப்பினில்வந்
தளையார் நரகினுக் கென்கட
வார்பொன் னலர்ந்தகொன்றைத்
தளையார் இடைமரு தன்னடி
யார்அடி சார்ந்தவரே.
#1124
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பொன் அலர்ந்த`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.
பொன் அலர்ந்த - பொன்போல மலர்ந்த.
தளை - தளைக்கப்பட்டது; மாலை.
வளைதல் - வலிமையிழத்தல்.
`பசியின் வளையார்; பிணியின் வருந்தார்` என மாற்றிக் கொள்க.
தனம் - மகளிர் கொங்கை.
இரங்குதல் - ஆற்றாது வருந்தல், ``பொழுதுகண்டிரங்கல்``*1* என்றது காண்க.
அளைதல் - உலகியலில் ஈடுபடுதல்.
என் கடவார் - என்ன கடமையுடையாராவர்! `யாதொரு கடமையும் உடையவர் ஆகார்` என்பதாம்.

அடிசார்ந் தவர்க்கு முடியா இன்பம்
நிறையக் கொடுப்பினுங் குறையாச் செல்வம்
மூலமும் நடுவும் முடிவும் இகந்து
காலம் மூன்றையும் கடந்த கடவுள்
உளக்கணுக் கல்லா ஊன்கணுக் கொளித்துத்

துளக்கற நிமிர்ந்த சோதித் தனிச்சுடர்
எறுப்புத் துளையின் இருசெவிக் கெட்டாது
உறுப்பில் நின் றெழுதரும் உள்ளத் தோசை
வைத்த நாவின் வழிமறுத் தகத்தே
தித்தித் தூறும் தெய்வத் தேறல்

துண்டத் துளையில் பண்டைவழி யன்றி
அறிவில் நாறும் நறிய நாற்றம்
ஏனைய தன்மையும் எய்தா தெவற்றையும்
தானே ஆகி நின்ற தத்துவ
தோற்றுவ எல்லாம் தன்னிடைத் தோற்றித்
தோற்றம் பிறிதில் தோற்றாச் சுடர்முளை
விரிசடை மீமிசை வெண்மதி கிடப்பினும்
இருள்விரி கண்டத் தேக நாயக
சுருதியும் இருவரும் தொடர்ந்துநின் றலமர
மருதிடம் கொண்ட மருதமா ணிக்க

உமையாள் கொழுந ஒருமூன் றாகிய
இமையா நாட்டத் தென்தனி நாயக
அடியேன் உறுகுறை முனியாது கேண்மதி
நின்னடி பணியாக் கல்மனக் கயவரொடு
நெடுநாட் பழகிய கொடுவினை ஈர்ப்பக்

கருப்பா சயமெனும் இருட்சிறை அறையில்
குடரெனும் சங்கிலி பூண்டுதொடர்ப்பட்டுக்
கூட்டுச் சிறைப்புழுவின் ஈட்டுமலத் தழுந்தி
உடனே வருந்தி நெடுநாட் கிடந்து
பல்பிணிப் பெயர்பெற் றல்லற் படுத்துந்

தண்ட லாளர் மிண்டவந் தலைப்ப
உதர நெருப்பில் பதைபதை பதைத்தும்

வாதமத் திகையின் மோதமொத் துண்டும்
கிடத்தல் நிற்றல் நடத்தல் செல்லா
திடங்குறை வாயிலின் முடங்கி இருந்துழிப்

பாவப் பகுதியில் இட்டுக் காவல்
கொடியோர் ஐவரை ஏவி நெடிய
ஆசைத் தளையில் என்னையும் உடலையும்
பாசப் படுத்திப் பையென விட்டபின்
யானும் போந்து தீதினுக் குழன்றும்

பெரியோர்ப் பிழைத்தும் பிறர்பொருள் வெளவியும்
பரியா தொழிந்து பல்லுயிர் செகுத்தும்
வேற்றோர் மனைவியர் தோற்றம் புகழ்ந்தும்
பொய்பல கூறியும் புல்லினம் புல்லியும்
ஐவருங் கடுப்ப அவாயது கூட்டி
ஈண்டின கொண்டு மீண்டு வந்துழி
இட்டுழி இடாது பட்டுழிப் படாஅது
இந்நாள் இடுக்கண் எய்திப் பன்னாள்
வாடுபு கிடப்பேன் வீடுநெறி காணேன்
நின்னை அடைந்த அடியார் அடியார்க்

கென்னையும் அடிமையாகக் கொண்டே
இட்டபச் சிலைகொண் டொட்டிநன் கறிவித்
திச்சிறை பிழைப்பித் தினிச்சிறை புகாமல்
காத்தருள் செய்ய வேண்டும்
தீத்திரண் டன்ன செஞ்சடை யோனே.

#1125

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`செல்வம், சுடர், ஓசை, தேறல், நாற்றம், முளை` - என்பன உருவக வகையால் திருவிடைமருதூர் இறைவனையே குறித்தனவாய், விளியேற்று நின்றன.

``கொடுப்பினும் குறையாச் செல்வம், (திருவருள்) ஊன் கண்ணுக்கு ஒளித்து, உளக்கண்ணுக்கு விளங்கித் துளக்கற நிமிர்ந்த சுடர். இரு செவிக்கு எட்டாது உள்ளத்திற்குக் கேட்கும் ஓசை, நாவில்தித்தியாது மனத்தில் தித்திக்கும் தேறல், (தேன்) மூக்கிற்கு மணக்காமல் அறிவிற்கு மணக்கும் நாற்றம், அனைத்தும் தன்னினின்றும்

முளைத்தலன்றித் தான் ஒன்றினின்றும் முளையாத முளை ஆகியவை அதிசய உருவகங்கள்.
அதிசய உருவகம் புறனடையாற் கொள்ளப்படும்.
1 மூலம் - முதல்.
``காலம் மூன்றையும் கடந்த கடவுள்`` என்றதனால், கால வயப்பட்டுத் தோன்றி நின்று மறையும் கடவுளரும் இருத்தல் பெறப்பட்டது.
``கடவுள்`` என்பதும் விளியே.
இகந்து - இகத்தலால்.
துளக்கற நிமிர்ந்த - அசை வில்லாது.
ஓங்கி எரிகின்ற.
`என்பு`, எற்பு` என்ற ஆய பொழுது அஃது எதுகை நோக்கி, `எருப்பு` என ஓர் உகரமும், பகர ஒற்றும் விரியப் பெற்றது.
`அங்கம்` என்னும் வடசொல்லின் மொழி பெயர்ப்பாக, உடம்பு இங்கு ``உறுப்பு`` எனப்பட்டது.
உயிரினுள்ளே எழுகின்ற ஓசையை ஒற்றுமை பற்றி உடம்பினின்றும் எழுவதாகக் கூறினார்.
உள்ளத்து ஓசை, மனத்தால் உணரப்படும் ஓசை.
வைத்த - `சுவைக்கு` என்று வைக்கப்பட்ட.
தெய்வத் தேறல் - தெய்வத்தன்மையுடைய தேன்.
துண்டம் - மூக்கு.
`வழியிலன்றி` என உருபு விரிக்க.
நறிய நாற்றம் - நறுமணம்.
ஏனைய தன்மை - ஏனைய பொருள்களின் தன்மை.
அவை மேற்கூறிய செல்வம் முதலியனபோல உள்ள பொருள்களின் தன்மை.
எய்தாது - அடையாமல்.
அடையாவிடினும் எல்லாப் பொருள்களும் தானேயாகி நின்ற.
தத்துவன் - மெய்ப் பொருளாய் உள்ளவன்.
இறைவன் சார்பு இல்லையாயின் யாதொரு பொருளும் நிலைக்கமாட்டாது.
அஃது அகர உயிர் இன்றேல் அக்கரங்கள் இல்லையாமாறு *1* போலும் அதனால் எப்பொருளும் நிலைபெறுதற் பொருட்டு அவற்றில் அவையே தானாகிக் கலந்து நிற்கின்றான்.
அங்ஙனம் அவன் கலந்து நிற்பினும் யாதொரு பொருளாலும் தாக்கப் படாமையால், ``ஏனைய தன்மையும் எய்தாது எவையும் தானேயாகி நின்ற தத்துவன்`` என்றார்.
``தானே`` என்பது வேறு முடிபு கொள்ளுதலால் இடவழுவின்று.

உம்மை இறந்தது தழுவிய எச்சம்.
தத்துவ - தத்துவனே.
``ஏனைய தன்மையும்.
.
.
.
தத்துவ`` என்பதைப் பின் வரும் ``முளை`` என்பதன் பின்னர்க் கூட்டி யுரைக்க.
இனி, `அவ்வாறு ஓதுதலே பாடம்` என்றலும் ஆம்.
தோற்றுவஎல்லாம் - தோன்றற் பாலன எல்லாவற்றையும் தோற்றி - தோற்றுவித்து.
``முளை`` என்பதற்கு `முளையாய் உள்ளவனே` என்பதே பொருளாகலானும், அங்ஙனமாகும் பொழுது `முளை` என்பது படர்க்கையேயாகலானும், `நின்னிடைத் தோற்றி` என்னாது ``தன்னிடைத் தோற்றி`` என்றார்.
``தோற்றம் தோற்றா`` என்பது ``உண்ணலும் உண்ணேன்`` *2* என்பது போல நின்றது.
சுடர் - விளங்குகின்ற.
`வெண்மதி இருக்கவும் இருள் விரிதல் வியப்பு என்றபடி, இருவர் மாலும், அயனும்.
இது தொகைக் குறிப்பு.
மாணிக்க - மாணிக்கனே! மாணிக்கம் போல்பவனே, ஈற்றடியை, ``தனி நாயக`` என்பதன்பின் கூட்டுக.
உறு குறை - உன்பால் இரக்கின்ற குறை, மதி, முன்னிலை யசை.
இருட் சிறை - இருளுக்கு இருப்பிடம்.
தொடர்ப்பட்டு - கட்டுப்பட்டு.
கூடு, தாயது வயிறாகிய கூடு.
கூட்டுச் சிறை உருவக உருவகம்.
`சிறைக்கண் புழுவினுடனே அழுந்தி வருந்தி` என இயைக்க.
`புழுவினுடனே` என்றதனால், அங்குப் புழுக்கள் மலிந்திருத்தல் பெறப்பட்டது.
பிணிப் பெயர், `வயிற்று வலி, தலைவலி, முடக்கு வாதம்` முதலிய பெயர்கள்.
`அப்பெயர்களால் வந்துவருத்தும் தண்டனாளர்` என்க.
தண்டனாளர், தலைவன் விதித்த தண்டனையைச் செய்பவர்கள்.
``தண்டனாளர்`` என்பதும் உருவகம்.
மிண்டி - நெருங்கி, அலைப்ப - துன்புறு விக்க.

உதரம் - தாயது வயிறு `பதை பதைத்தல்` என்னும் இரட்டைக் கிளவி செய்யுள் நோக்கி மிக்குவிரிந்தது.
வாதம் - பிரசூத வாயு; குழந்தையைத் தாய் வயிற்றினின்றும் வெளியேற்றும் காற்று.
மத்திகை - குதிரையை அடித்து ஓட்டும் சவுக்கு.
இதுவும் உருவகம்.
இனி இவ்வாறு வருவன பிறவும் அவை.
`அது மோத` என்க.
கிடத்தல் முதலியவற்றிற்குப் போதிய இடம் இல்லாத இல்லம்; தாய் வயிறு.
`இடம் குறைய வாய்ந்த இல்` என்க.
துன்பத்திற்குக் காரணமாதல் பற்றிய பாவத்தையே கூறினாராயினும் புண்ணியமும் உடன் கொள்ளப்படும்.
`கருவிற்றானே பாவ புண்ணியங்களாகிய பிராரத்தங்கள் அமைக்கப்படுகின்றன` என்றபடி.
காவல் ஐவர் - திருவருளிற் செல்ல ஒட்டாமல் காத்து நிற்கின்ற ஐவர்; ஐம்புலன்கள்.
தளை - விலங்கு.
பாசப்படுத்தல் - தடைப்படுத்தல்.
பையென - மெல்ல.
`தாய் வயிற்றினின்றும் வெளியில் விட்டபின்` என்க.
தீன் - தின்னப்படுவது.
உண்ணப்படுவதனையும் இழிவு பற்றித் தின்னப் படுவனவாகக் கூறினார்.
`தீதினுக்கு` என்பது பாடம் அன்று.
`பெரியோரைப் பிழைத்தல்` என இரண்டாவது விரித்து.
அதனை நான்காவதாகத் திரிக்க.
பிழைத்தல் - தவறு இழைத்தல்.
பரியாது - இரங்காமல்.
தோற்றம் - அழகு.
புகழ்தல், விரும்புதலாகிய தன் காரணம் தோற்றி நின்றது.
புல்லினம் -புல்லர் கூட்டம்.
புல்லர் - அற்பர்.
புல்லுதல் - தழுவுதல் கடுத்தல் - சினத்தல்.
அஃது சினந்து ஏவுதலாகிய காரியத்தைக் குறித்தது.
அவாயது - விரும்பியது.
இது சாதியொருமை.

`அவாவது` என்பது பாடம் அன்று.
ஈண்டின - கிடைத்தவை, மீண்டு வருதல் உறைவிடத்திற்கு.
உறைவிடம் ஒன்றால் இல்லாமல் பல ஊரும், பல நாடுமாக அலைதலால், இன்று வைத்த இடத்தில் நாளை வையாமல், இன்று இருந்த இடத்தில் நாளை இல்லாமல் ஊர் பெயர்ந்தும், நாடு பெயர்ந்தும் உழன்று, `இந்நாள் வரை` என ஒரு சொல் வருவிக்க.
வீடு நெறி - இத்துன்பம் நீங்கும் வழி.
ஒட்டி - துணையாய் நின்று.
நன்கு - நல்லது, `நன்கை அறிவித்து` என்க.
இச்சிறை - இவ்வுடம்பாகிய சிறை.
பிழைப்பித்து - தப்புவித்து, இனி இதுபோலும் சிறையில் புகாமல் காத்து அருள்செய்ய வேண்டும்` என்க.

சடைமேல் ஒருத்தி சமைந்திருப்ப மேனிப்
புடைமேல் ஒருத்தி பொலிய இடையேபோய்ச்
சங்கே கலையே மருதற்குத் தான்கொடுப்ப
தெங்கே இருக்க இவள்.

#1126

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, கைக்கிளைத் தலைவியது முதுக்குறை வுடைமையைத் தோழி முன்னிலைப் புறமொழியால் அவளைப் பழிப்பாள் போன்று புகழ்ந்து கூறியது.
சமைந்து - அமைந்து.
புடை - பாகம், ``இவள்`` என்பதை, ``பொழிய`` என்பதன்பின் கூட்டுக.
``சங்கே, கலையே`` என்னும் ஏகாரங்கள் எண்ணுப் பொருள.
சங்கு - சங்க வளையல், கலை - உடை.
``எங்கே இருக்க`` என, `இடம் இல்லாதவனைக் காதலிக்கின் றாள்` என இகழ்வாள்போலக் கூறினாளாயினும், `எவ்விடமும் அவன் இடமேயாதலை அறிந்தே காதலிக்கின்றாள்` என உள்ளுறையாகப் புகழ்ந்தாள் என்க.

இருக்கும் மருதினுக் குள்ளிமை
யோர்களும் நான்மறையும்
நெருக்கும் நெருக்கத்தும் நீளகத்
துச்சென்று மீளவொட்டாத்
திருக்கும் அறுத்தைவர் தீமையுந்
தீர்த்துச்செவ் வேமனத்தை
ஒருக்கும் ஒருக்கத்தின் உள்ளே

முளைக்கின்ற ஒண்சுடரே.

#1127

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி ``மருதினுக்குள் இருக்கும்`` என்பதை இறுதியில் வைத்து உரைக்க.

`ஓட்டாது` என்னும் எதிர்மறை வினையெச்சம் துவ்வீறு கெட்டு நின்றது.

நெருக்கம் நெருக்கத்திலும் தளராது நீளச் சென்று கருவறையை அடைந்து காண் கின்றவர்கள் அன்பர்கள்.

`அவர்களை இன்புறுத்தும் வகையால் மீண்டு போக ஒட்டாது ஒண்சுடர் வீற்றிருக்கும்` என்க.

திருக்கு - நன்மைக்கு மாறான குணம்.

செவ்வே - நேராக.

ஒருக்குதல் - ஒருமுகம் ஆக்கல்.

ஒருக்கம் - ஒருங்கிய நிலை.

முளைக்கின்ற - வெளித் தோன்றுகின்ற.

சுடர்விடு சூலப் படையினை என்றும்
விடையுகந் தேறிய விமல என்றும்
உண்ணா நஞ்சம் உண்டனை என்றும்
கண்ணாற் காமனைக் காய்ந்தனை என்றும்
திரிபுரம் எரித்த சேவக என்றும்
கரியுரி போர்த்த கடவுள் என்றும்
உரகம் பூண்ட உரவோய் என்றும்
சிரகரம் செந்தழல் ஏந்தினை என்றும்
வலந்தரு காலனை வதைத்தனை என்றும்
சலந்தரன் உடலம் தடிந்தனை என்றும்

அயன்சிரம் ஒருநாள் அரிந்தனை என்றும்
வியந்தவாள் அரக்கனை மிதித்தனை என்றும்
தக்கன் வேள்வி தகர்த்தனை என்றும்
உக்கிரப் புலியுரி உடுத்தனை என்றும்
ஏனமும் அன்னமும் எட்டா தலமர

வானம் கீழ்ப்பட வளர்ந்தனை என்றும்
செழுநீர் ஞாலஞ் செகுத்துயிர் உண்ணும்
அழல்விழிக் குறளினை அமுக்கினை என்றும்
இனையன இனையன எண்ணிலி கோடி

நினைவருங் கீர்த்தி நின்வயின் புகழ்தல்

துளக்குறு சிந்தையேன் சொல்லள வாதலின்
அளப்பரும் பெருமைநின் அளவ தாயினும்
என்தன் வாயில் புன்மொழி கொண்டு
நின்னை நோக்குவன் ஆதலின் என்னை
இடுக்கண் களையா அல்லல் படுத்தா

தெழுநிலை மாடத்துச் செழுமுகில் உறங்க
அடித்துத் தட்டி எழுப்புவ போல
நுண்துகில் பதாகை கொண்டுகொண் டுகைப்பத்
துயிலின் நீங்கிப் பயிலும் வீதித்
திருமரு தமர்ந்த தெய்வச் செழுஞ்சுடர்
அருள்சுரந் தளிக்கும் அற்புதக் கூத்த
கல்லால் எறிந்த பொல்லாப் புத்தன்
நின்நினைந் தெறிந்த அதனால்
அன்னவன் தனக்கும் அருள்பிழைத் தின்றே.

#1128

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``எழுநிலை மாடத்து.

.

.

திருமரு தமர்ந்த தெய்வச் செழுஞ்சுடர் - அருள்சுரந்து அளிக்கும் அற்புதக் கூத்த`` என்பதை முதற்கண் கொண்டு உரைக்க.

ஒருவரைப் புகழுமிடத்து அவர் செய்த அருஞ்செயல்களைக் கூறிப் புகழினும் அச்செயல்களை அவர்க்கு அடையாக்கியும் வினைப் பெயராக்கி அவரை விளித்தும் புகழினும் அமைதல் பற்றி இங்கு மருதப் பிரானை அவ்வெல்லாவகையாலும் தாம் புகழ்தலைப் புலப்படுத்தினார்.

உண்ணா நஞ்சம் - ஒருவரும் உண்ணலாகாத நஞ்சம்.

சேவகம் - வீரம்.

உரகம் - பாம்பு.

உரவோய் - ஆற்றல் உடையவனே.

சிரம் ஏந்திய கரம் வேறாயினும் சாதி பற்றி ``சிரகரம் தழல் ஏந்தினை`` என்றார்.

வலம் - வெற்றி.

தரு - தனக்குத் தானே தந்துகொள்கின்ற.

வியந்த - தன்னைத் தான் வியந்து கொண்ட அரக்கன், இராவணன்.
உக்கிரம் - சினம்.
குறளன் - பூதமாகிய முயலகன்.
`நின்வயிற் சொல்லி` என ஒரு சொல் வருவிக்க.
சொல் அளவு - சொல் செல்லக் கூடிய அளவு.
`சொல்லளவே` எனப் பிரிநிலை ஏகாரம் விரிக்க.
`நின் பெருமை அளப்பரும் அளவதா யினும்` என மாற்றிவைத்து உரைக்க.
`ஆயினும் இயன்ற அளவு கொண்டு நின்னை நோக்குவன்` என்க.
நோக்குதல் மனத்தால்.
``கொண்டு`` என்பது ஆன் உருபின் பொருள்படுவதோர் இடைச் சொல்.
`என்னை அல்லற்படுத்தாது இடுக்கண்களையாய்` என மாற்றியுரைத்து, அதன்பின் `ஏன் எனில்` என்பது வருவித்து, `அவன் றனக்கும் நின் அருள் பிழைத்தின்றே` என முடிக்க.
`நின்` என்பதின்றி வாளா `அருள்` என்பது பாடம் அன்று.
``உறங்க`` என்பதன்பின் `அம்மாடம்` என்பது வருவிக்க.
உகைத்தல் - பெயர்த்தல்.
``சுடர்`` என்பதும் விளி.
பொல்லாமை, சிவவேடம் புனையாது புத்த வேடத்தோடேயிருந்தமை.

இன்றிருந்து நாளை இறக்கும் தொழிலுடைய
புன்தலை மாக்கள் புகழ்வரோ வென்றிமழு
வாளுடையான் தெய்வ மருதுடையான் நாயேனை
ஆளுடையான் செம்பொன் அடி.

#1129

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`இன்று இருந்து, நாளை இறத்தல்` என்பது பொதுப்பட நிலையாமையைக் குறித்தது.
அஃது அனைவர்க்கும் பொதுவாயினும் அதற்கிடையே நிலையாய பயனைத் தேடிக் கொள்பவர் வல்லுநராய் உயர்த்துக் கூறப்படுவர்.
அப்பயனைத் தேடிக் கொள்ளாமல் இன்று இருந்து நாளை இறத்தலை மட்டுமே உடையோர் மக்களாக மதிக்கப்படார் ஆதலின் அவர்களை, ``புன்தலைய மாக்கள்`` என்றார்.
உடம்பின் புன்மையை அதன் முதன்மை உறுப்பாகிய தலைமேல் வைத்துக் கூறினார்.
அனைவர் உடம்பும் புன்மை யுடையவேயாயினும் அவ்வுடம்பு பயனுடைய உடம்பாக மாறும் பொழுது அதன் புன்மையும்

மாறிவிடுகின்றது.
`பயனை எய்தாது, இருந்து இறத்தலை மட்டுமே செய்பவர்` என்பது தோன்ற, ``இன்று இருந்து நாளை இறக்கும் தொழில் உடையர்`` என்றார்.
பெயர்த்தும் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே
என அப்பரும் அருளிச் செய்தார்.
நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது
என்னும் திருக்குறளும் இங்கு நினைக்கத்தக்கது.
வாள் - படைக்கலம்.
`மாக்கள் ஆளுடையான் அடி புகழ்வாரே` என இயைத்து முடிக்க.
`ஆளுடையான் அடி புகழ்வாரே உண்மை மக்களாவார்; அது செய்யா தார் மக்களே போல் தோன்றும் *3* மாக்களே` என்பதை இங்ஙனம் கூறினார்.

அடியா யிரந்தொழில் ஆயின
ஆயிரம் ஆயிரம்பேர்
முடியா யிரங்கண்கள் மூவா
யிரம்முற்றும் நீறணிந்த
தொடியா யிரங்கொண்ட தோளிரண்
டாயிரம் என்றுநெஞ்சே
படியாய் இராப்பகல் தென்மரு
தாளியைப் பற்றிக்கொண்டே.

#1130

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நெஞ்சே*!* மருதாளியைப் பற்றிக் கொண்டு, *(*அவனுக்கு*)* - அடி ஆயிரம், தொழிலாயின ஆயிரம், பேர் ஆயிரம் முடி ஆயிரம், கண்கள் மூவாயிரம், தோள் *(*வலம் ஆயிரம், இடம் ஆயிரம் ஆக*)* இரண்டாயிரம் - என்றும் இராப் பகல் படியாய்` என இயைத்துரைக்க.
படித்தல் - சொல்லுதல்; `இங்ஙனம் சொல்லின், அது தோத்திரமாகிப் பயன் தரும்` என்பது கருத்து.
`ஆயிரம்` என்பது பன்மை குறித்து நின்றதாகலின் ``தோள் இரண்டாயிரம்`` என்றது இழுக்கிற்றில்லை அப்பர்பெருமானும் பின்பு,
ஆயிர ஞாயிறு போலும்
ஆயிரம் நீண்முடி யானும்
எனக் கூறுகின்றவர் அதற்கு முன்னே

ஆயிரம் பொன்வரை போலும்
ஆயிரந் தோளுடை யானும்
என அருளிச் செய்தமை காண்க.
`நீறு அணிந்த தோள், தொடி கொண்ட தோள்` எனத் தனித் தனி இயைக்க.
தொடி - வீர வளை.
இதனை,
வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்
களம் படக் கடந்த கழல்தொடித் தடக்கை
என்பதனால் அறிக.

கொண்டலின் இருண்ட கண்டத் தெண்தோள்
செவ்வான் உருவிற் பையர வார்த்துச்
சிறுபிறை கிடந்த நெறிதரு புன்சடை
மூவா முதல்வ முக்கட் செல்வ
தேவ தேவ திருவிடை மருத
மாசறு சிறப்பின் வானவர் ஆடும்
பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி
அயிரா வணத்துறை ஆடும் அப்ப
கயிலாய வாண கௌரி நாயக
நின்னருள் சுரந்து பொன்னடி பணிந்து

பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோர்
இமையா நெடுங்கண் உமையாள் நங்கையும்
மழைக்கவுட் கடத்துப் புழைக்கைப் பிள்ளையும்
அமரர்த் தாங்கும் குமர வேளும்
சுரிசங் கேந்திய திருநெடு மாலும்

வான்முறை படைத்த நான்முகத் தொருவனும்
தாருகற் செற்ற வீரக் கன்னியும்
நாவின் கிழத்தியும் பூவின் மடந்தையும்
பீடுயர் தோற்றத்துக் கோடிஉருத் திரரும்
ஆனாப் பெருந்திறல் வானோர் தலைவனும்

செயிர்தீர் நாற்கோட் டயிரா வதமும்
வாம்பரி அருக்கர் தாம்பன் னிருவரும்
சந்திரன் ஒருவனும் செந்தீக் கடவுளும்
நிருதியும் இயமனும் சுருதிகள் நான்கும்

வருணனும் வாயுவும் இருநிதிக் கிழவனும்

எட்டு நாகமும் அட்ட வசுக்களும்
மூன்று கோடி ஆன்ற முனிவரும்
வசிட்டனும் கபிலனும் அகத்தியன் தானும்
தும்புரு நாரதர் என்றிரு திறத்தரும்
வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்

திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வம் அவமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும்
(1) வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்
(2) ஓடும் பல்நரி ஊளைகேட் டரனைப்
பாடின என்று படாம்பல அளித்தும்
(3) குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் தன்னை ஏத்தின என்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்

(4) வழிபடும் ஒருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை எள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலும் அவன்இப் பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவன் எச்சிலை நுகர்ந்தும்
(5) மருத வட்டத் தொருதனிக் கிடந்த

தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல எம்இத் தலையும்
கிடத்தல் வேண்டுமென் றடுத்தடுத் திரந்தும்
(6)கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்றுநாய்க் கட்டம் எடுத்தும்

(7) காம்பவிழ்த் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்
(8)விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவரும்

இனைய தன்மையர் எண்ணிறந் தோரே
அனையவர் நிற்க யானும் ஒருவன்
பத்தி என்பதோர் பாடும் இன்றிச்
சுத்த னாயினும் தோன்றாக் கடையேன்
நின்னை
இறைஞ்சிலன் ஆயினும் ஏத்திலன் ஆயினும்
வருந்திலன் ஆயினும் வாழ்த்திலன் ஆயினும்
கருதி யிருப்பன் கண்டாய் பெரும
நின்னுல கனைத்தினும் நன்மை தீமை
ஆனவை நின்செய லாதலின்

நானே அமையும் நலமில் வழிக்கே.
#1131
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கண்டத்திலும், தோளிலும், உருவிலும் அரவு ஆர்த்து` ஆர்த்து - ஆர்க்க (கட்ட)ப்பட்டு.
இவ் எச்சம் எண்ணுப் பொருளில் வந்தது.
நெறி தரல் - நெறிப்புக் காட்டுதல்.
மூவா - அழியாத.
பூசத் தீர்த்தம் - தைப் பூச நாளில் மூழ்கும் தீர்த்தம்.
இஃது இத்தலத்தின் சிறப்பு.
ஈசன் எம்பெரு மான்இடை மருதினில்
பூசம்நாம் புகுதும்புன லாடவே
என அப்பரும் அருளிச் செய்தார்.
புரக்கும் - தன்னிடத்தில் வைத்துக் காக்கின்ற `பொன்னி` என்க.
`பொன்னியது துறை` என ஆறாவது விரிக்க.
`அயிராவணத் துறை` என்பது பெயர்.
அயிராவணம், கயிலை யில் உள்ள யானை.
அஃது இரண்டாயிரம் தந்தங்களை உடையது.
இடைமருதீசர் இத்துறையில் ஆடுவது மேற் குறித்த பூச நாளில்.
``பெரும`` என்பதை, ``கௌரி நாயக`` என்பதன் பின் கூட்டுக.
சுரந்து- சுரத்தலால்.
பதம் - பதவி `வரம் பல பெற்றோர் அடி - இனைய தனமையராகிய எண்ணிலர்` என இயையும் கவுள் - கன்னம்; காது `கண்` என்பது பாடம் அன்று.
கடம் - மத நீர்.

புழைக் கை - தும்பிக்கை.
சுரி சங்கு - வளைந்த சங்கு.
`வானத்தை முறையாகச் சிருட்டித்த` என்க.
தாருகனைச் செற்ற வீரக் கன்னி காளி.
வானோர் தலைவன் - இந்திரன்.
அருக்கர் - சூரியர்.
இடையில் ஐராவதம், சூரியர், சந்திரன், சுருதி இவர் ஒழிய, இந்திரன் முதல் இருநிதிக் கிழவன் (குபேரன்) ஈறாகச் சொல்லப்பட்ட எழுவரும் திக்குப் பாலகர்கள், ஈசானன் உருத்திரர் வகையைச் சேர்ந்தவன் ஆதலின், மேல், ``கோடி உருத்திரர்`` எனப்பட்டோருள் அடங்கினான்.
முனிவர், மகலோக வாசிகள்.
வசிட்டன் முதலிய மூவரும் மண்ணுலக முனிவர்கள், தும்புரு, நாரதன் இருவரும் சிவபெருமான் அருகிலிருந்து வீணையிசைக்கும் பேறு பெற்றவர்.
``தும்புரு நாரதர்`` என்பது உம்மைத் தொகை.
`உமையவள் முதலாக, தும்புரு நாரதர் ஈறாகச் சொல்லப்பட்டோர் யாவரும் அடைந்த பெருமைகள் யாவும் சிவபெருமானை வழிபட்டுப் பெற்றனவே என்றபடி.
இவ்வாற்றால், `சிவபெருமான் அனைவராலும் வழிபடப்படுபவனே யன்றித் தான் ஒருவரையும் வழிபடுதல் இல்லாதவன்` என்பதும் இனிது விளக்கப்பட்டது.
இவை அனைத்தும் ஆகமப் பிரமாணத்தால் பெறப்பட்டன.
இனி நாட்டு வரலாறாகிய காட்சிப் பிரமாணத்தால் பெறப்பட்டோரையும் கூறுகின்றார்.
``வித்தகப் பாடல்`` என்றது தேவாரத் திருப்பதிகங்களை.
வித்தகம் - திறல்.
அது கல்லை மிதப்பித்தலும், எலும்பைப் பெண்ணாக்குதலும், முதலையுண்ட பாலனை மீட்டலும் போன்றன.
பிள்ளை - ஞான புத்திரன்.
சிவபெருமானே குருவாகிவந்து உப தேசிக்கப் பெற்றவர்.
இங்ஙனம் ஓரொரு சொல்லாலே சமயாசாரியர் களது வரலாறுகளைச் சுருங்கக் கூறினார்.
``அத்தகு`` என்பது பண்டறி சுட்டு.
அத்தகு செல்வம் - உலகர் பலரும் விரும்பும் பொருட் செல்வம்.
அதனை அவமதித்தமை கூறவே, அருட் செல்வத்தை மதித்தமை பெறப்பட்டது.
சிவ வாக்கியர் பதினெண் சித்தருள் தலையாயவராகச்

சொல்லப்படுபவர்.
இவருக்குப்பின் இங்குச் சொல்லப்படுகின்ற வரகுணதேவர் பண்டை வரகுண பாண்டியன்.
இவனே மேல் ``பெருந் துறைப் பிள்ளை`` - எனக் குறிக்கப்பட்ட மாணிக்கவாசகரைத் தனக்கு அமைச்சராகக் கொண்டிருந்தவன்.
இவனும், மாணிக்க வாசகரும் காலத்தால் மூவர் முதலிகளுக்கு முற்பட்டவராயினும், திருமுறைகள் வகுக்கப்பட்ட காலத்திலும் திருப்பதிகங்களையே முதற்கண் கண்டெடுத்து வகுத்துப் பின்பு ஒரு சமயத்தில் பிற திருமுறைகள் வகுக்கப்பட்டமையால் மாணிக்கவாசகர் மூவருக்குப் பின் நான்காமவராக எண்ணப்பட்டு வரும் முறை பற்றி இவர்களை மூவருக்குப் பின்னர்க் கூறினார்.
அங்ஙனம் கூறுகின்றவர் வரகுணன் அரசன் ஆகலின் சித்தராகிய சிவவாக்கியரை அவனுக்கு முன் வைத்துக் கூறினார்.
`இவ்வரகுணன் பத்திப் பெருக்கால் பித்துக் கொண்டவர் செயல்போலச் சிலவற்றைச் செய்தான்` என்பது செவி வழிச் செய்தி.
இவனது பத்தி மிகுதி விளங்குதற் பொருட்டு அச்செய்தி களை இவ்வாசிரியர் தம் பாடலிற் பொறித்தார் அவை வருமாறு: *(1)* உண்மையாகவே களவு செய்த ஒருவனைக் காவலர் கண்டு பிடித்துக் கையில் விலங்கு பூட்டிக் கொணர்ந்த பொழுது அரசனது பத்தியை அறிந்து அவன் வழியில் இருந்த ஒரு சுடுகாட்டில் கீழே விழுந்து புரண்டு உடம்பெங்கும் சாம்பலைப் பூசிக்கொண்டவனாய்ச் சிரித்து `அரஹர` என்று சொல்லிச் செல்ல அதனைக் கண்டு இவ்வரசன், ``இவ் அடியவரைக் `கள்வன்` என்றல் தகாது`` என்று சொல்லி விடுவித்துவிட்டான்.
(2) எப்பொழுதும், `சம்போ, சங்கர, மகாதேவ` என்று சொல்கின்ற இவன் காதில் ஒரு நாள் நள்ளிரவில் காட்டில் குறுநரிகள் ஊளையிட்ட சத்தம் கேட்க.
`சம்பு` என்றும், `சம்புகம்` என்றும் பெயர் பெற்ற அவைகள் சம்புவைப் பாடித் தோத்திரிக்கின்றன - எனக் கருதி, அவைகள் பனியின் குளிரால் வருந்தாதபடி ஏவலரை ஏவிப் போர்வைகள் போர்க்கக் கட்டளையிட்டான்.
(3) ஒரு சமயம் பெருமழை பெய்து ஒய்ந்தபின் தவளைகள் பல ஒருங்கே கத்த, அந்த ஓசையை அவை `அரஹர, அரஹர!` எனச் சிவபெருமானைத் துதிப்பதாகக் கருதி அவைகளுக்குப் பரிசாக இரத்தினங்களையும், பொன்னையும் நீர் நிலைகளில் சென்று இறைக்கும்படி ஏவலர்களைக் கொண்டு செய்வித்தான்.
(4) ஒரு சமயம் சிவாலயத்தில் உள்ள சிவபெருமானது திருமஞ்சனத்திற்கு

வேண்டிய எண்ணெயின் பொருட்டு அர்ச்சகன் ஒருவனிடம் செக்கில் இடும்படி அரசனது பண்ட சாலையிலிருந்து கொடுத்தனுப்பிய எள்ளில் அவ்வர்ச்சகன் சிறிது எடுத்துத் தின்னு வதைக் கண்டு சிலர் அவனைப் பிடித்துக் கொண்டுபோய் இவ்வரச னுக்குக் காட்ட, இவன் அவனை விசாரித்த பொழுது அவன், `திரு மஞ்சன எண்ணெய்க்கு வைத்த எள்ளைத் தின்றவர் அடுத்த பிறப்பில் திருமஞ்சன எண்ணெய் ஆட்டும் செக்கினை இழுக்கும் எருதுகளாகப் பிறப்பர்` என்பது சாத்திரம். அப்பிறப்பை நான் அடைய விரும்பி இந்த எள்ளைத் தின்றேன் - என்று சொல்ல, இவன், `நானும் அப்பிறப்பை அடைய வேண்டும்` என்று சொல்லி அவன் வாயிலிருந்து சிறிது எள்ளை எடுத்துத் தின்றான்.

(5) திருவிடைமருதூர் வீதியில் கிடந்த ஒரு தலையோட்டினை இவன் கண்டு, `இஃது இங்ஙனம் இங்குக் கிடத்தலால் இத்தலையைப் பெற்றிருந்தவர் சிவலோகத்தை அடைந்திருத்தல் திண்ணம் என்று கருதி, அத்தலையோட்டினிடம் சென்று, ``எனது தலையோடும் இவ்வாறு கிடக்க அருள்செய்வீர்` எனக் குறையிரந்தான்.

(6) சிவாலயத்தின் முன் ஓரிடத்தில் நாயின் மலம் இருக்கக் கண்டு அதனைத் தானே சென்று எடுத்து அப்புறப்படுத்தி ஆலயத்தைத் தூய்மை செய்தான்.

(7) வேப்ப மரம் ஒன்றின்கீழ் அதன் கனிகள் உதிர்ந்து கிடக்க அவை சிவலிங்கம் போலக் காணப்படுதலைக் கண்டு, `இனி வேப்பமரங்களில் எதுவும் வெயிலில் உலர்தலும், மழையில் நனை தலும் கூடா` என்று அவைகட்கெல்லாம் நல்ல பந்தல்கள் இடச் செய்தான்.

(8) திருவிடைமருதூரில் இவன் மணந்துகொண்ட பெண்ணை அவள் அழகு மிகுந்திருத்தலை நோக்கி, `இவள் மருத வாணருக்கு ஆகட்டும்` என்று சொல்லி இரவிலே திருவிடை மருதூர்க் கோயிலிலே கொண்டு போய் விட்டான்.

பெருமான் அவளைச் சிவலிங்கத்தில் மறையும்படிச் செய்து, அவன் செயலை ஊரார் அறிதற் பொருட்டு அவளது வலக்கை மட்டும். இலிங்கத்தில் வெளியில் காண வைத்தான்.

அதனால் இச்செய்தி ஊரெங்கும் பரவ இவன் கோயிலில் சென்று, இக் கை நான் பற்றிய கை` என்று ஏற்கவில்லையோ என்றான்.

அதனால் பெருமான் அக்கையையும் மறைத்துவிட்டான்.

இச்செவிவழிச் செய்திகள் பழைய திருவிளையாடற் புராணத்து, `வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய திருவிளையாடல்` கூறுமிடத்தில் சிறிது வேறுபாடுகளுடன் கூறப்பட்டன.

இப்பாண்டிய னது வரலாறு இத்திருவிடை மருதூர்த் தலத்தோடு தொடர்புடையதாய் இருத்தலால் ஆசிரியர் இவற்றையெல்லாம் இங்கு

எடுத்தோதினார்.
`இவற்றால் எல்லாம் அறியப்படுவது வரகுண பாண்டியன் பெரிய சிவபத்தன்` என்பது என்பார்.
`பெரிய அன்பின் வரகுண தேவர்` என்றார்.
இம்மன்னனை இவனது பத்தியைக் கருத்துட் கொண்டு மாணிக்கவாசகர் தமது திருக் கோவையாரில் குறித்திருக்கின்றார்.
திருமுறைகளை வகுத்தமைத்த நம்பியாண்டார் நம்பிகளும் தமது கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தத்துள் குறித்தார்.
மிகப் பிற்காலத்தில் கல்வெட்டுக்களில் `வரகுணன்` என்னும் பெயருடைய இருவர் பாண்டியர் குறிக்கப்பட்டுள்ளனர்.
அவருள் எவனையும் இப்பெரிய அன்பின் வரகுண தேவராகத் துணிதற்குச் சிறிதும் ஆதாரம் இல்லை.
ஆயினும் இக்கால ஆராய்ச்சியாளருள் ஒரு சிலர்.
பெயர் ஒன்றே பற்றி, `அவ் இருவருள் ஒருவனே இப் பெரிய அன்பின் வரகுண தேவர்` எனக் கூறுகின்றார்கள்.
அங்ஙனம் கூறு வோருள் ஒரு சாரார்.
`முதல் வரகுணனே இங்குக் குறிக்கப்பட்டான்` என்றும்,
மற்றொருசாரார், `இரண்டாம் வரகுணனே இங்குக் குறிக்கப் பட்டான்` என்றும் கூறித் தம்முள் மாறுபடுவர்.
அம்மாறுபாடுதானே, `அவ்இருவருள் எந்த ஒருவனையும், இங்குக் குறிக்கப்பட்ட வரகுண தேவர்` எனத் துணிதற்கு ஆதாரம் இன்மையைக் காட்டுவதாகும்.
`அனையவர் ஒருபால் நிற்க` என்க.
பாடு - பெருமை, ``ஓர் பாடும் இன்றி`` என்பதை, `பாடு ஒன்றும் இன்றி` என மாற்றிக் கொள்க.
ஒன்று - சிறிது.
இன்றி - இன்மையல்ல.
சுத்தன் - பரிசுத்தன்.
ஆணவமலம் நீங்கப் பெற்றவன்.
இன்னும் - அநாதி தொட்டு இன்றுகாறும்.
`இன்றும் சுத்தனாய்த் தோன்றாத கடையேனாய் உள்ளேன்` என்க.
தோன்றாத - பிறவாத, ``சுத்தனாய்த் தோன்றாத`` எனவே, அசுத்தனாய்த் தோன்றினமை பெறப்பட்டது.
படவே, `அவர் போலப் பெரும் பதம் பிழைய வரம் பெறல் கூடாதவனா கின்றேன்` என்பதாம்.
இவ்வாற்றால் யான் நின்னை இறைஞ்சுதல் முதலிய வற்றைச் செய்யேனாயினும் அவற்றைச் செய்ய விரும்பும் அளவில் உள்ளேன்

என்க.
கண்டாய், முன்னிலை யசை.
உலகனைத்தும் அவனுடையன என்பது கூறுவார் ``நின் உலகனைத்தும்` என்றா ராயினும்.
`உலகனைத்தும்` என வாளா கூறிப் போதலே கருத்து.
``நன்மை தீமை`` என்னும் பண்புகள் அவற்றையுடைய பொருள்மேல் நின்றன.
``ஆனவை`` என்பது எழுவாய் உருபு.
``ஆனவை`` என்றாராயினும்.
`ஆனவை உறவாதல்` என்றலே கருத்து.
`நற்பொருளோடு தீப் பொருளையும் உண்டாக்குதல் உனது கருத்தாகின்ற நிலைமையில் தீமைக்கு இடம் நான் ஒருவனே போதும் (பிறரோ, பிறிதோ வேண்டா) என முடிக்க.
என்னை வகுத்திலையேல் இடும்பைக் கிடம்
யாது சொல்லே
என அப்பரும் அருளிச் செய்தார்.
எனது இயல்பு இதுவாயினும்.
கருதியிருத்தல் ஒன்றே பற்றி எனக்கும் அருள்புரிதல் வேண்டும் என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது.

வழிபிழைத்து நாமெல்லாம் வந்தவா செய்து
பழிபிழைத்த பாவங்கள் எல்லாம் பொழில்சூழ்
மருதிடத்தான் என்றொருகால் வாய்கூப்ப வேண்டா
கருதிடத்தாம் நில்லா கரந்து. **#1132**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நாமெல்லாம்`` என்பதை முதலிற் கொள்க.
வழி - நல்வழி.
பிழைத்து - தவறி.
வந்தவா - தாமாக எதிர்வந்த செயல்களை.
செய்து - நன்று தீது ஆராயாமலே செய்து, `பழியாகப் பிழைத்த` என்க.
பிழைத்த - தவறாக ஒழுகிய.
மருது - திருவிடை மருதூர்.
``கருதிடத் தான்`` என்பதில் தான் அசை.
கரந்து - மறைந்து.
`மறைந்து அருவ மாயும் நில்லாது போம்` என்க.

கரத்தினில் மாலவன் கண்கொண்டு
நின்கழல் போற்றநல்ல

வரத்தினை ஈயும் மருதவப்
பாமதி ஒன்றுமில்லேன்
சிரத்தினு மாயென்றன் சிந்தையு
ளாகிவெண் காடனென்னும்
தரத்தினு மாயது நின்னடி
யாந்தெய்வத் தாமரையே.

#1133

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

\`மாலவன் கண்கரத்தினில் கொண்டு\` என்க.
\`கண்ணைப் பறித்தெடுத்து\` என்றபடி.
\`மதி ஒன்றும் இல்லேனது\` என ஆறாவது விரிக்க.
ஒன்றும் - சிறிதும்.
தாம் - மேன்மை; என்றது புகழை.
\`மருத அப்பா, நின் அடியாம் தாமரை சிரத்தினும் ஆய், சிந்தை யுளாகித் தரத்தினும் ஆயது\` என இயைத்து முடிக்க.
\`இது நின் கருணை இருந்தவாறு\` என்பது குறிப்பெச்சம்.
திருவிடைமருதூர் மும்மணிக்கோவை முற்றிற்று.

பட்டினத்து அடிகள் - திருஏகம்பமுடையார் திருவந்தாதி

மெய்த்தொண்டர் செல்லும் நெறியறி
யேன்மிக நற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலும் நற்றொண்
டுவந்திலன் உண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புற
மேயுன்னைப் போற்றுகின்ற
இத்தொண்ட னேன்பணி கொள்ளுதி
யோகச்சி ஏகம்பனே.

#1134

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மெய்த்தொண்டர், பயன் கருதாது பணி செய்பவர்.
அவர் செல்லும் நெறி, ``தன்கடன் அடியேனையும் தாங்குதல்;- என்கடன் பணி செய்து கிடப்பதே`` *1* - எனக் கொண்டு ஒழுகுதல்.
`மனத் தொண்டு, வாய்த் தொண்டு, கைத்தொண்டு ஆதலின் அது செய்பவரை, ``மிக நற்பணி செய் கைத்தொண்டர் என்றும் `பயன் கருதியாவது அவருடன் கூடி அப்பணியைச் செய்திலேன்`` என்றும் கூறினார்.
உவத்தல் - மகிழ்தல், அது மகிழ்ச்சியோடு செய்தலாகிய தன் காரியம் தோன்ற நின்றது.
உண்பதற்கு - பயன்கொள்ளுதற் பொருட்டு.
பயன் கொள்ளுதற் பொருட்டுத் திருத்தொண்டினை உயர்த்துப் பேசுதலால், அதனைப் பொய்த் தொண்டு பேசுதலாகக் கூறினார்.
மனத்தின்கண் உள்ள பொய்ம்மை அதன் வழிச் செய்யப்படும் தொண்டினையும் சார்வதாகும்.
``புறம் புறம்`` என்னும் அடுக்குப் பன்மைப் பொருட்டாய், `எப்பொழுதும்` எனப் பொருள் தந்தது.
புறமே போற்றுதலாவது மெய்த் தொண்டிற்கு ஏதுவான மெய்யன்பு உள்ளத்தில் இன்றிப் பொதுவான அன்பினால் போற்றுதல்.
`இவ்வாறு உன்னைப் போற்றினும் யானும் உன் அடியவருள் ஒருவனே` என்பார் தம்மை, ``இத்தொண்டனேன்`` என்றும், `மெய்த்தொண்டர் செய்யும் பணியையன்றி, என்போன்ற தொண்டர் செய்யும் பணியை நீ விரும்புவாயோ` என்பார், ``இத்தொண்டனேன் பணி கொள்ளுதியோ`` என்றும் கூறினார்.

``கச்சி ஏகம்பனே`` என்பதை முதலிற் கொள்க.

ஏகம்ப னேயென்னை ஆள்பவ
னேயிமை யோர்க்கிரங்கி
போகம்பன் னாளும் கொடுக்கின்ற நாயக
பொங்கும்ஐவாய்
நாகம்பொன் னாரம் எனப்பொலி
வுற்றுநல் நீறணியும்
ஆகம்பொன் மாமலை ஒப்பவ
னேயென்பன் ஆதரித்தே.

#1135

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஆகம் - திருமேனி.
ஆதரித்து - விரும்பி, ஏனைய வெளி.

தரித்தேன் மனத்துன் திகழ்திரு
நாமம் தடம்பொழில்வாய்
வரித்தேன் முரல்கச்சி ஏகம்ப
னேயென்றன் வல்வினையை
அரித்தேன் உனைப்பணி யாதவர்
ஏழைமை கண்டவரைச்
சிரித்தேன் உனக்கடி யாரடி
பூணத் தெளிந்தனனே.

#1136

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தரித்தேன் - தாங்கினேன்.
`உன்திருநாமம் மனத்துத் தரித்தேன்` என்க.
வரித்தேன் - இசைபாடும் `தேன்` என்னும் வண்டுகள்.
`தரித்தேன்; அதனால் என் வல்வினையை அரித்தேன்` என உரைக்க.
ஏழைமை - அறியாமை.
சிரித்தேன் - இகழ்ந்தேன்.

தெளிதரு கின்றது சென்றென்
மனம்நின் திருவடிவம்
அளிதரு நின்னருட் கையம்
இனியில்லை அந்திச்செக்கர்
ஒளிதரு மேனியெம் ஏகம்ப

னேயென் றுகந்தவர்தாள்
தளிதரு தூளியென் றன்தலை
மேல்வைத்த தன்மைபெற்றே.

#1137

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`அந்திச் செக்கர்.

.

.

தன்மை பெற்று என் மனம் நின் திருவடிவில் சென்று தெளிதருகின்றது; இனி நின் அளிதரு அருட்கு ஐயம் இல்லை` என இயைத்து முடிக்க.

``தெளிதருகின்றது`` என்பதன் பின், `அதனால்` என்னும் சொல்லெச்சம் வருவிக்க.

அளிதரல் - கனிதல்.

``தெளிதரு, அளிதரு`` என்பவற்றில் `தரு` துணைவினை.

அருட்கு - அருள் கிடைத்தற்கு.

`திருவடிவம்` என்பது பாடமாயின், `திருவடிவத்தின் கண்` என ஏழாவது விரித்துக் கொள்க.

பெற்றுகந் தேனென்றும் அர்ச்சனை
செய்யப் பெருகுநின்சீர்
கற்றுகந் தேனென் கருத்தினி
தாக்கச்சி ஏகம்பத்தின்
பற்றுகந் தேறும் உகந்தவ
னேபட நாகக்கச்சின்
சுற்றுகந் தேர்விடை மேல்வரு
வாய்நின் துணையடியே.

#1138

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கச்சி ஏகம்பத்தின்`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.

கச்சி, நகரம்.

ஏகம்பம், அந்நகரத்தின்கண் உள்ள ஓர் இடம்.

பற்று - நீங்காதிருத்தல்.

உகந்து - விரும்பி.

ஏறும் - இடபமும்.

உம்மை இறந்தது தழுவியது.

இடபத்தை உகந்தமையாவது, அது செய்த பிழையைப் பொறுத்து அதற்கு அருள்செய்தது.
அது செய்த பிழை யாவது, திருமாலின் ஊர்தியாகிய கருடனது செருக்கை இறைவன் ஆணையின்றித் தானே ஒறுத்து அடக்க முயன்றது.
இவ்வரலாற்றைக் காஞ்சிப் புராணத் தழுவக் குழைந்த படலத்திற் காண்க.
இங்ஙனம் இறைவன் அருள் செய்யும்படி இடபம் வழிபட்ட ஓர் இலிங்கம் திருவேகம்பத் திருக்கோயில் தீர்த்தக் கரையில் இருத்தல் காணலாம்.
சுற்று - சுற்றிக் கட்டுதல்.
ஏர் - அழகு.
`நின் துணையடியே என்றும் அர்ச்சனை செய்யப்பெற்று உகந்தேன்; என்கருத்து இனிதாக நின் பெருகு சீர் கற்று உகந்தேன்` என இயைத்துக் கொள்க.
`இனி எனக்கு என்ன குறை` என்பது குறிப்பெச்சம்.
உகந்தேன் - மேலும் மேலும் விரும்பினேன்.
சீர் - புகழ்.

அடிநின்ற சூழல் அகோசரம்
மாலுக் கயற்கலரின்
முடிநின்ற சூழ்முடி காண்பரி
தாயிற்றுக் கார்முகிலின்
இடிநின்ற சூழ்குரல் ஏறுடை
ஏகம்ப யாமெங்ஙனே
வடிநின்ற சூலப் படையுடை
யாயை வணங்குவதே.

#1139

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கச்சி ஏகம்பத்தின்`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.
கச்சி, நகரம்.
ஏகம்பம், அந்நகரத்தின்கண் உள்ள ஓர் இடம்.
பற்று - நீங்காதிருத்தல்.
உகந்து - விரும்பி.
ஏறும் - இடபமும்.
உம்மை இறந்தது தழுவியது.
இடபத்தை உகந்தமையாவது, அது செய்த பிழையைப் பொறுத்து

அதற்கு அருள்செய்தது.
அது செய்த பிழை யாவது, திருமாலின் ஊர்தியாகிய கருடனது செருக்கை இறைவன் ஆணையின்றித் தானே ஒறுத்து அடக்க முயன்றது.
இவ்வரலாற்றைக் காஞ்சிப் புராணத் தழுவக் குழைந்த படலத்திற் காண்க.
இங்ஙனம் இறைவன் அருள் செய்யும்படி இடபம் வழிபட்ட ஓர் இலிங்கம் திருவேகம்பத் திருக்கோயில் தீர்த்தக் கரையில் இருத்தல் காணலாம்.
சுற்று - சுற்றிக் கட்டுதல்.
ஏர் - அழகு.
`நின் துணையடியே என்றும் அர்ச்சனை செய்யப்பெற்று உகந்தேன்; என்கருத்து இனிதாக நின் பெருகு சீர் கற்று உகந்தேன்` என இயைத்துக் கொள்க.
`இனி எனக்கு என்ன குறை` என்பது குறிப்பெச்சம்.
உகந்தேன் - மேலும் மேலும் விரும்பினேன்.
சீர் - புகழ்.

வணக்கம் தலைநின் திருவடிக்
கேசெய்யும் மையல்கொண்டோர்
இணக்கன்றி மற்றோர் இணக்கறி
வோமல்லம் வல்லரவின்
குணக்குன்ற வில்லி குளிர்கச்சி
ஏகம்பம் பாடினல்லால்
கணக்கன்று மற்றொரு தேவரைப்
பாடும் கவிநலமே.

#1140

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`*(எம்)* தலை வணக்கம் நின் திருவடிக்கே செய்யும்; *(யாம்)* மையல் கொண்டோர் இணக்கன்றி மற்றோர் இணக்கறிவோமல்லம்; *(எம்)* கவி நலம், வல் அரவின் குணக் குன்ற வில்லியாகிய நின் குளிர் கச்சி ஏகம்பம் பாடின் அல்லால் மற்றொரு தேவரைப் பாடும் கணக்கு அன்று` என இயைத்து உரைத்துக்கொள்க.
``மையல்`` என்றது இங்குத் திருவருட் பித்தினை.
இதனைத் தத்துவத்துறையில் `சிவராகம்` *1* என்பர்.
`இணங்கு` என்னும் முதனிலை வலித்தல் பெற்றுப் பெயராயிற்று.
மற்றோர் - பிறர்.

அரவின் குணக் குன்ற வில் - பாம்பாகிய நாணினையுடைய மலையாகிய வில்.
கணக்கு - முறைமை.
கணக்கு உடையதனை, ``கணக்கு`` என்றார்.
நலம் - இன்பம்.
இங்ஙனம் தம் அடிமைத் திறத்தை வலியுறுத்தவாறு.

நலந்தர நானொன்று சொல்லுவன்
கேண்மின்நல் லீர்களன்பு
கலந்தர னார்கச்சி ஏகம்பம்
கண்டு கனல்திகிரி
சலந்தரன் ஆகம் ஒழிக்கவைத்
தாய்தக்கன் வேள்வியெல்லாம்
நிலந்தர மாகச்செய் தாயென்று
பூசித்து நின்மின்களே.

#1141

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நல்லீர்கள்`` என்னும் விளியை முதற்கண் கொள்க.
`உங்கள் செயல் நலம் தர` என வினைமுதல் வருவித்துக் கொள்க.
கனல் திகிரி - நெருப்புப் போலும் கொடிய சக்கரம்.
``எல்லாம்`` என்பது எஞ்சாமை குறித்து நின்றது.
நிலம் தரமாக - பூமியளவாக; தரைமட்டம் ஆகும்படி.
எதுகை கெடுதலையும் நோக்காது, `நிரந்தரமாக` என ஓதுதல் பாடம் அன்று.

மின்களென் றார்சடை கொண்டலென்
றார்கண்டம் மேனிவண்ணம்
பொன்களென் றார்வெளிப் பாடுதம்
பொன்னடி பூண்டுகொண்ட
என்களென் றாலும் பிரிந்தறி
யார்கச்சி ஏகம்பத்தான்
தன்களென் றாருல கெல்லாம்
நிலைபெற்ற தன்மைகளே.

#1142

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கச்சி ஏகம்பத்தானைத் தன் பொன்னடி பூண்டு பிரிந் தறியார்` எனத்

தொகுக்கப்பட்ட இரண்டன் உருபை விரித்து மாறிக் கூட்டி பின்னும்.
``தன்கண் என்றார்`` என்பதை இறுதியில் வைத்து உரைக்க.
`சடை மின்கள்` என்றார்; `கண்டம் கொண்டல்` என்றார்; `மேனி வண்ணம் புலப்பாடு பொன்கள்` என்றார்; கொண்டல் என்கள் என்றாலும், உலகெல்லாம் நிலைபெற்ற தன்மைகள் தன்கள் என்றார் என்பது இப்பாட்டின் முதன்மைப் பொருள்.
``மின்கள்`` என்பதற்கு ஏற்ப, `சடைகள்` என உரைக்க.
உறுப்பின் பன்மையால் புலப்பாடும் பலவாயின.
``பொன்கள்`` என்னும் பன்மை அதன் சாதிபற்றி வந்தது.
அச்சாதியாவன.
`எவன்` என்னும் வினாப் பெயர் `என்` என்று ஆகி, `கள்` விகுதி ஏற்று ``என்கள்`` என வந்தது.
`எவைகள்` என்பது இதன் பொருள்.
`கொண்ட எவைகள் என்றாலும்` என்றது, `அவன் கொண்ட கோலங் களை எந்த எந்தப் பொருட்கு ஒப்பாகக் கூறியபோதிலும்` என்றவாறு.
`உண்மை, - உலகம் முழுதிலும் நிலைபெற்றுள்ள தன்மைகள் எல்லாம் தன்கள்` (அவனுடைய தன்மைகளே) என்பதாம்.
`தன்னகள்` என்பதில் அகரம் தொகுக்கப்பட்டது.
தன்ன - தன்னுடையன.

தன்மையிற் குன்றாத் தவத்தோர்
இமையவர் தாம்வணங்கும்
வன்மையிற் குன்றா மதிற்கச்சி
ஏகம்பர் வண்கயிலைப்
பொன்மயிற் சாயலுஞ் சேயரிக்
கண்ணும் புரிகுழலும்
மென்மையிற் சாயும் மருங்குலும்
காதல் விளைத்தனவே.

#1143

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, அகப்பொருள் ஐந்திணைப் பாங்கற் கூட்டத்தில் தலைவன் பாங்கன் கழற்றெதிர் மறுத்தல் துறையது.
`தவத்தோரும், இமையவரும் ஏகம்பர்` என்க.
தாம், அசை.
வன்மையிற் குன்றாமை மதிலுக்கு அடை.
``ஏகம்பரது வண் கயிலைப் பொன்`` என்றது தலைவியை.
பொன் - திருமகள் போல்வாள்.

`பொன்னினது சாயல் முதலியன காதல் நோயை விளைத்தன` என்றான்.
மயிற் சாயல் - மயிலினது சாயல் போலும் சாயல், சேயரி - செவ்வரிகள்.
புரி - புரிந்த குழல் - கூந்தல், `மென்மையின்` என்பது எதுகை நோக்கி, `மென்மயின்` எனப் போலியாய் வந்தது.
சாய்தல் - மெலிதல்.
மருங்குல் - இடை.

தனமிட் டுமைதழு வத்தழும்
புற்றவர் தம்மடியார்
மனம்விட் டகலா மதிற்கச்சி
ஏகம்பர் வான்கயிலைச்
சினம்விட் டகலாக் களிறு
வினாவியொர் சேயனையார்
புனம்விட் டகலார் பகலாம்
பொழுதும்நம் பூங்கொடியே.

#1144

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதுவும் அகப் பொருள் துறையதே.
துறை, பாங்கி யிற் கூட்டத்தில் தோழி தலைவியை மெலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தல்.
`கயிலையில் வந்து வினாவி` என்க.
`களிறு வினாவலாவது, கண்டீரோ` என வினாவுதல்.
இது தலைவன் தோழியோடு பேசத் தொடங்குதற்கு ஒரு வழியாகும்.
தொடர்ந்து நிகழ்த்தும் பேச்சி னிடையே கண்ட தலைவனது குறிப்பையே தோழி தலைவியிடம் ``புனம் விட்டு அகலார்`` எனக் குறித்தாள்.
``அவர்க்கு நான் என்ன சொல்வது`` என்பது குறிப்பெச்சம்.
சேய் - முருகன்.
ஆம் பொழுதும்- ``சேயனையார்`` என்பது `தலைவர்` என்னும் அளவாய் நிற்றலின், ஓர் என்பதற்கு முடிவாயிற்று.
முடியும் காலம் வரையில்.
``நம்`` என்பதை `நம் புனம்` என முன்னே கூட்டுக.

பூங்கொத் திருந்தழை யார்பொழில்
கச்சியே கம்பர்பொற்பார்
கோங்கத் திருந்த குடுமிக்
கயிலையெம் பொன்னொருத்தி
பாங்கொத் திருந்தனை ஆரணங்

கேபடர் கல்லருவி
ஆங்கத் திருந்திழை ஆடிவந்
தாற்கண் டடிவருத்தே.

#1145

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பூங்கொத்தும், இரு தழையும் ஆர் பொழில்` இரு- பெருமை.
பெரியன.
ஆர் - நிறைந்த.
`பொற்பு ஆர் கயிலை` என இயையும்.
`கோங்கத்தொடு` என உருபு விரிக்க.
கோங்கு.
ஒருவகை மரம்.
ஆர் அணங்கு - அரியளாகிய தேவ மாது.
``ஆர் அணங்கே`` என்பதை முதலிற் கொண்டு உரைக்க.
எம் பொன் ஒருத்தி பாங்கு ஒத்து இருந்தனை - எங்கள் பொன் போல்பவளாகிய மகள் ஒருத்தியின் தன்மையோடே ஒத்த தன்மையை உடையவளாய் இருக்கின்றாய்.
(ஆகையால்) `உப்பொழுது அருவி ஆடி வரச் சென்றுள்ள அவள் இங்கு வந்தபின் நீ செல்` என்க.
ஆங்கு - அம்மலையிடத்தில்.
திருந்து, இழை - திருத்தமான அணிகலன்களை யுடையவள்.
`படர் கல் அருவி ஆடி வந்தால்` என இயையும்.
படர் - ஓடுகின்ற, அருவி.
கல் - மலை.
``அடி வருத்து`` என்பது, `உன் பாதத்தை நோகச் செய்` எனப் பொருள் தந்து, `நடந்து செல்` என்னும் கருத்தை உணர்த்திற்று.
இவ்வாற்றால் இப்பாட்டுப் பாங்கி மதியுடன் பாட்டின்பின் ஒருசார் ஆசிரியர் வேண்டும் `நாண நாட்டம்` என்பதில், `வேறுபடுத்திக் கூறல்` என்னும் துறையது.
அஃதாவது, தலைவி அருவியாடும் ஆரவாரத்தில் தோழியர் கூட்டத்தினின்றும் பிரிந்து சென்று தலைவனொடு கூடி வந்தபொழுது அவள் முன்னையினும் மிக்க மகிழ்ச்சியும், பொலிவும் உடையளாய் இருத்தலைக் கண்டு அவளது செயலை நன்கு உணர்ந்து கொண்ட தோழி தான் அங்ஙனம் உணர்ந்துகொண்டதைத் தலைவிக்குக் குறிப்பால் உணர்த்துவாளாய், அவள் நாணும்படி, தெய்வமாக உணர்ந்தாள் போலக் கூறுதல்.

அங்ஙனம் கூறுதலால் தலைவி தனது புதுநலத்தினையும், அதன் காரணத்தையும் தோழி தெரிந்து கொண்டாள் என அறிந்து நாணமுற்று, ஏதேனும் கூறுவாள்.
தனது களவொழுக்கத்தைத் தோழிக்கும் மறைத்து ஒழுகிய தலைவி பின் மறையாது தோழிக்குக் கூற உடன்படுதல் இக்கூற்றிற்குப் பயன்.

வருத்தந் தரும்மெய்யுங் கையில்
தழையும்வன் மாவினவும்
கருத்தந் தரிக்கும் நடக்கவின்
றைய கழல்நினையத்
திருத்தந் தருளும் திகழ்கச்சி
ஏகம்பர் சீர்க்கயிலைத்
துருத்தந் திருப்பதன் றிப்புனம்
காக்கும் தொழிலெமக்கே.

#1146

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஐய`` என்பதை முதலிலும், ``நடக்க`` என்பதை இறுதியிலும் கூட்டியுரைக்க.
மெய் - உடம்பு.
அது வருத்தந் தருதற்குக் காரணம் வேட்டையாடி வருதல்.
தழை - பூவும், பச்சிலையும் விரவ, அழகிய மேகலாபரணம்போலக் கைவன்மையால் தொடுக்கப்பட்ட தொரு உடை வகை.
இஃது இளமகளிரது கண்ணையும், கருத்தையும் கவர்வதாய் இருக்கும்.
வேட்டையாடி வருபவன் கையில் நாணில் வைத்துத் தொடுக்கப்பட்ட வில், அல்லது ஈட்டி முதலிய கருவிகள் இருக்க வேண்டுவதுபோய், இளமகளிரது மனத்தைக் கவரும் தழை யிருத்தலைச் சுட்டி, `உம் வினா பொய்யாக வினாவும் வினாவாகும்` என்பதைத் தோழி தலைவனுக்குக் குறிப்பால் உணர்த்தி நகைப்பாள், ``வருத்தம் தரும் மெய்யும், மா வினவும் கருத்தும், (இடையே) கையில் தழையும்`` தம்முள் ஒவ்வாதனவாய் உளவே - என்பாள், ``கருத்து அந்தரிக்கும்`` என்றாள்.
``கருத்து`` என்பதிலும் `கருத்தும்` என எண்ணும்மை விரிக்க.
`வேறுபாடு` என்னும் பொருட்டாகிய `அந்தரம்` என்னும் வடமொழிப் பெயர் அடியாக, ``அந்தரிக்கும்`` என்னும், வினைமுற்றுப் பிறந்தது.
அந்தரிக்கும் - வேறுபடா நின்றன.
`இன்று அந்தரிக்கும்` என இயைக்க.
இன்று இப்பொழுது.
திரு - திருவருள் `கயிலையில் எமக்கு இப்புனம் காக்கும் தொழில்

(உளது); அதைத் தவறவிடுவது எமக்குத் தொழில் அன்று; ஆதலின் நீவிர் இவ்விடம் விட்டு அப்பால் நடக்க` என ``தொழில்`` என்பதன்பின் `உளது` என்பது எஞ்சி நின்றது.
`தீமை, பிழை` முதலிய பொருள்களைத் தருவதாகிய `துர்` துர் என்னும் வடமொழி இடைச்சொல் ஈற்றில் உகரம் பெற்றுவந்தது நிர் என்பது `நிரு` என வருதல்போல.
இப்பாட்டு தலைவன் பாங்கியை மதியுடன்படுத்தலில் கெடுதி வினாதலுள் வேழம் வினாதல் துறையது.
தோழி இங்ஙனம் இகழ்ந்துரைத் தாளாயினும் தலைவியது நிலைமையைக் குறிப்பால் உணர்ந்து இருவரும் ஒரு மனத்தராயதை உணர்ந்தேவிடுவாள்.

எம்மையும் எம்மைப் பணிகொள்ளும்
கம்பர் எழிற்கயிலை
உம்மையும் மானிடம் இப்புனத்
தேவிட்டு வந்தமைந்தர்
தம்மையும் மானையும் சிந்தையும்
நோக்கம் கவர்கவென்றோ
அம்மையும் அம்மலர்க் கண்ணும்
பெரியீர் அருளுமினே.

#1147

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

எம்மையும் - எப்பிறப்பிலும்.
கம்பர் - ஏகம்பர்.
உம்மையும் - (எம்மோடு) உங்களையும்.
மானிடம் - மக்கட் பிறப்பு.
`மானிடமாக` என ஆக்கம் விரிக்க.
விட்ட - விட்டன.
வாழவிட்டன.
வாழ்வோர் பலராதல் பற்றி விட்டதாகிய தொழிலும் பலவாயின.
`கயிலையில் இப்புனத்தே விட்டன` என்க.
`விட்டு` என்பது பாடம் அன்று.
`இங்கு வந்த மைந்தர்தம்மையும்` என்க.
`சிந்தையைக் கவர்தல்` என்பது `வசப்படுத்துதல்` என்னும் பொருட்டாகலின் அது `தம்மை, மானை` என்னும் இரண்டாம் வேற்றுமைகட்கு முடிபாயிற்று.
மானைச் சிந்தை கவர்தல், அதன்நோக்கினும் சிறந்த நோக்கு ஆதலால்.

அம் மை - அழகிய மை.
`மையும், கண்ணும் நோக்கத்தால் கவர்க என்றோ` என இயைக்க.
``பெரியீர்`` என்றது தோழியை.
இதனை முதலிற் கொள்க.
இப்பாட்டு, பாங்கியைத் தலைவன் மதியுடம் படுத்தலில் பிற வினாதல் துறையது.

அருளைத் தருகம்பர் அம்பொற்
கயிலைஎம் ஐயர்அம்பு
இருளைக் கரிமறிக் கும்மிவர்
ஐயர் உறுத்தியெய்ய
வெருளக் கலைகணை தன்னொடும்
போயின வில்லிமைக்கு
மருளைத் தருசொல்லி எங்கோ
விலையுண்டிவ் வையகத்தே.

#1148

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டுத் தலைவன் தலைவி தோழியுடன் இருக்கும், பொழுது சென்று `கலைமான் ஒன்று கணைதைத்த உடலுடன் இவ்வழியாகச் சென்றதோ` என, அதுபற்றி அவரை நோக்கி, வினாயதற்குத் தோழி தலைவியை நோக்கிக் கூறியது.
``மருளைத் தரு சொல்லி`` என்பது தோழி தலைவியை விளித்தது.
மருள் - மயக்கம்.
சொல்லி - சொல்லை உடையவளே.
`எம் ஐயர் (தமையன் மாருடைய) அம்பு கரியை (யானையை) மறிக்கும். (எய்த இடத்திற்றானே மடிந்து விழச் செய்யும்; இவர் ஐயர் (இவர் அவர்களினும் மேலானவர் - வேடரினும் சிறந்த அரசர்.
இவர் தம் அம்பை ஒரு மான்மீது) உறுத்தி எய்ய, (ஆழமாகப் பாயும்படி எய்ய) அந்த மான அந்தக் கணையையும் பறித்துக்கொண்டு எங்கோ போய்விட்டது.
போயின வில்லிமைக்கு (அப்படிப் போய்விடும்படி எய்த இவரது வில் வீரத் தன்மைக்கு) இவ் வையகத்து எங்கோ விலை உண்டு` எனக் கூறித் தோழி நகையாடினாள்.
கம்பர் - ஏகம்பர்.
இரு கரி - இருள்போலும் யானை.
ஐக் கரிய - தலைமை யானை.
வெருள் - அச்சம் மிகுந்த `எம் ஐயர் அம்பு தலைமை யானையை

அங்கேயே வீழ்த்தும்.
இவ்ஐயர் அம்பு எய்ய, அச்சம் மிகுந்த ஒரு மான் அந்த அம்பையும் பறித்துக்கொண்டு ஓடிவிட்டது` என்றாள்.

வையார் மழுப்படை ஏகம்பர்
ஈங்கோய் மலைப்புனத்துள்
ஐயார் வருகலை ஏனங்
கரிதொடர் வேட்டையெல்லாம்
பொய்யான ஐயர் மனத்ததெம்
பூங்கொடி கொங்கைபொறாப்
பையார் அரவிடை ஆயிற்று
வந்து பரிணமித்தே.

#1149

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வை ஆர் - கூர்மை பொருந்திய `ஐயர்` என்பது நீட்டல் பெற்று ``ஐயார்`` என வந்தது.
`ஐயார் தொடர் வேட்டை` என இயையும்.
``ஐயார், ஐயர்`` என்றவை தலைவனை.
`கலையையும், ஏனத்தையும் கரியையும் தொடர் வேட்டை` என்க.
பொய் ஆன - பொய் ஆயின.
`ஐயர் மனத்தது ஒவ்வொன்றாகப் பரிணமித்து வந்து, முடிவில் பூங்கொடி இடையாயிற்று` என்க.
பின் வந்த ``ஐயர்`` என்பது `அவர்` என்னும் சுட்டுப் பெயரளவாய் நின்றது.
இப்பாட்டின் துறையும் முன் பாட்டின் துறையே.
இருவரும் உள்வழிச் சென்ற தலைவன் முதற்கண், `இவ்வழியாக, அம்பு தைத்த உடலுடன் மான் ஒன்று போயிற்றா` என்று அவர்களை வினவினான்; விடை யில்லை; பின்பு காட்டுப் பன்றி போயிற்றா`; என்றான் விடையில்லை; பின் `யானை போயிற்றா` என்றான்; விடையில்லை.
(அதனால் அவன் பின் அவர்களை நெருங்கிச் சென்று, `என்ன, ஒருவர் வந்து வினாவினால் யாதும் விடைசொல்லா திருக்கின்றீர்கள்?
உங்களைப் பார்க்கும் பொழுது - உங்களுக்கு இடையிருக்கின்றதா என்று ஓர் ஐயம் எழுகின்றது.
இருக்கின்றதா? இல்லையா? சொல்லுங்கள்` என்றான்.
அதைக் கேட்ட தோழி மேற்காட்டியவாறு சொல்லி நகையாடினாள்.
தொடர்தல் - பின்பற்றிச் செல்லல்.

`இவர் முதற்கண் குறித்த மான் வேட்டைகள் எல்லாம் வெறும் பொய்யாகிவிட்டன.
அவ்வேட்டைகள் முதலில் மானாய் இருந்தது.
பன்றியாகப் பரிணமித்து, பின் பன்றி யானையாகப் பரிணமித்து, முடிவில் எங்கள் பூங்கொடி போல உள்ள உனது இடையாகி நிலைபெற்றது` எனக் கூறி நகைத்தாள்.
மனத்தது - மனத்தில் உள்ள கருத்து.
எனவே, `அஃதே உண்மை` என்றும், `முன்னர்க் கூறியன எல்லாம் பொய் என்றும் ஆயின.
இடை சிறிதாய், மெல்லி தாதலின் அது பெரியவாய், வலியவாய கொங்கைகளைத் தாங்கலாற்றாது வருந்திற்று.
பை ஆர் - படம் பொருந்திய அரவு.
இடை - பாம்புபோலும் இடை.

பருமுத் துதிர்த்திடும் சீர்மத்த
யானை நுதல்பகுந்திட்
டுருமொத்த திண்குரற் சீயம்
திரிநெறி ஓங்குவைவாய்ப்
பொருமுத் தலைவேற் படைக்கம்பர்
பூங்கயி லைப்புனத்துள்
தருமுத் தனநகை தன்நசை
யால்வெற்பு சார்வரிதே.

#1150

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``வெற்பு`` என்பதை முதலிற் கொள்க.
`முத்து உதிர்த் திடும் நுதல்` என்க.
சீர் - அழகு.
`மத யானை` என்பது, ``மத்த யானை`` என விரித்தல் பெற்றது.
நுதல் - நெற்றி.
பகுந்திட்டு, பிளந்திட்டு.
உரும் ஒத்த - இடியோடு ஒலித்த.
சீயம் - சிங்கம்.
நெறி - வழி.
ஓங்கு - மலைமேல் இருத்தலால் ஓங்கிக் காணப்படுகின்ற.
`ஓங்கு கயிலை` என இயையும்.
முத்தலை வேல் - சூலம்.
கம்பர் - ஏகம்பர்.

நகைதன் நசை - நகையினை உடையாளது விருப்பம்.
ஆல், அசை `வெற்ப, (உனக்குப் பிற யாவும் எளிய எனினும்) புனத்துள் முத்தன்ன நகையாள்மேல் நசை சார்வரிது` என முடிக்க.
நிரம்புதல் கூடாமையால் நசையும் கொள்ளுதல் கூடாதாயிற்று.
இது தன்பால் வந்து குறையிரந்த தலைவனைத் தலைவியது அருமை சொல்லி அகற்றியது.
அருமை யாவது, தோழி இச்செய்தியைத் தலைவிக்குத் தெரிவித்தற்குச் செவ்வி யருமை.
அருமை இன்றாயினும் உள்ளது போலச் சொல்லி அகற்றுதல்; அவனது காதலின் மிகுதி அறிதற்பொருட்டாம்.

அரிதன் திருக்கண் இடநிரம்
பாயிரம் போதணிய
அரிதன் திருவடிக் கர்ச்சித்த
கண்ணுக் கருளுகம்பர்
அரிதன் திருக்கங் குலியால்
அழிந்த கயிலையல்லிங்
கரிதென் றிப்பதெம் பால்வெற்ப
எம்மையர்க் கஞ்சுதுமே.

#1151

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``வெற்ப`` என்பதை முதலிற் கொள்க.
நிரம்பு ஆயிரம் போது அணிய அரி தன் திருக்கண் இடநிரம்பு - ஆயிரம் போது அணிய திருமால் தன் கண்ணையே இட்டமையால் எண் நிரம்பிய ஆயிரம் மலரைச் சாத்த, பறித்து அரி திருவடி - வினைகளை அரித்தொழிக்கின்ற திருவடி.
`மற்றை மலருக்காக அருள்செய்யாது கண்ணாகிய மலருக்கு அருள் செய்தான்`; அஃதாவது, `கண்ணைப் பறித்து சாத்தியதற்கு மகிழ்ந்து அருள்செய்தான்` என்க.
கம்பர் - ஏகம்பர்.
மூன்றாம் அடியில் உள்ள அரி - பகைவன்; இராவணன், திருக்கு - அவனது முறையற்ற செயல்; கயிலை மலையைப் பெயர்த்தது.
அங்குலி - விரல்.
`கம்பர் திருக்கு அழித்த கயிலை` என்க.
அல் - இரவு `கயிலையில் இங்கு நீவிர் அவ்எம்பால் இருப்பது அரிது` என்று எம் ஐயர்க்கு அஞ்சுதும் என முடிக்க.
ஐயர் - தமையன்மார்.

களவொழுக்கத்தில் ஒழுகிய தலைவன், `தலைவி இற்செறிக்கப்படுதல் காரணமாக அது கூடாது` எனக் கருதி, `ஒருநாள் இரவு உங்கள் இல்லத்தில் விருந்தினனாக வருவேன்` என `அதுவேண்டா` எனத் தோழி விலக்கியது இது.
இது, `விருந்திறை விலக்கல்` எனப்படும்.
தலைவன் வேண்டுதல், `விருந்திறை விரும்பல்` எனப்படும்.
இப்பாட்டில், `மடக்கு` என்னும் சொல்லணி வந்தது.

அஞ்சரத் தான்பொடி யாய்விழத்
தீவிழித் தன்புசெய்வோர்
நெஞ்சரத் தாழ்வுகந் தோர்கச்சி
ஏகம்பர் நீள்கயிலைக்
குஞ்சரத் தாழ்வரை வீழநுங்
கொம்புய்யக் கும்பமூழ்கும்
வெஞ்சரத் தாரன வோவல்ல
வோவிவ் வியன்முரசே.

#1152

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அம் சரம்`` என்றது, `பூவாகிய அம்பு` என்றபடி.
நெஞ்சு அரம் - மனமாகிய தடம்.
தாழ்வு - தங்குதல்.
தாழ் வரை - மலைச் சாரல்.
(இவ்வியன் முரசு) குஞ்சரம் வீழ, நும் கொம்பு உய்யக் கும்பம் மூழ்கும் வெஞ்சரத்தார் - யானை கீழே வீழ்ந்தொழியும் படியும், உம் பூங்கொம்புபோலும் மகள் தப்பிப் பிழைக்கும்படியும் யானையின் மத்தகத்தில் மூழ்கிய,கொடிய அம்பினையுடைய அவருடையனவோ*?* அல்லவோ*?* `குஞ்சரந் தாழ்வரை` என்பது எதுகை நோக்கி கும்பம் - யானை மத்தகம், வலிந்து நின்றது.
இது, களவொழுக்கத்தில் களிறு தரு புணர்ச்சியால் ஒருவனுக்கு உரியளாகிவிட்ட தலைவி தன் இல்லத்தில் மணமுரசு முழுங்குதலைக் கேட்டு, `இம்முரசொலி என தலைவர் மணத்தனவோ, பிறர் மணத்தனவோ` என ஐயுற்றுக் கலங்கியது.

சேய்தந்த அம்மை உமைகண
வன்திரு ஏகம்பத்தான்
தாய்தந்தை யாயுயிர் காப்போன்
கயிலைத் தயங்கிருள்வாய்
வேய்தந்த தோளிநம் ஊச

லொடும்விரை வேங்கைதன்னைப்
பாய்தந்து பூசலுண் டாங்கொண்ட
தோசைப் பகடுவந்தே.

#1153

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``வேய் தந்த தோளி`` என்பதை முதலிற் கொள்க.
அது தோழி தலைவியை விளித்தது.
தந்த, உவம உருபு.
சேய் - முருகன்.
`சேயை` என இரண்டாவது விரிக்க.
``கைப் பகடு வந்து`` என்பதை, ``தயங்கிருள்வாய்`` என்பதன் பின்னரும், ``பூசல் உண்டாம்`` என்பதை இறுதியிலும் கூட்டியுரைக்க.
தயங்கு - நிறைந்த.
விரை - வாசனை.
வேங்கை - வேங்கை மரம்.
ஊசல் வேங்கை மரக்கிளையில் கட்டப்பட்டிருப்பதால், ``ஊசலொடும் வேங்கை தன்னைப் பாய்ந்து கொண்டதோ`` என்றாள்.
கை - தும்பிக்கை.
பகடு- யானை.
பூசல் - ஆரவாரம் உண்டாம் - உண்டாகாநின்றது.
இரவுக் குறிக்கண் தலைவன் வந்தமை யறிந்த தோழி அதனைத் தாய் அறியாவாறு தலைவிக்குக் கூறியது.
இது, வரவுணர்ந்துரைத்தல் எனப்படும்.

வந்தும் மணம்பெறிற் பொன்னனை
யீர்மன்னும் ஏகம்பர்தம்
முந்தும் அருவிக் கயிலை
மலையுயர் தேனிழிச்சித்
தந்தும் மலர்கொய்தும் தண்தினை
மேயுங் கிளிகடிந்தும்
சிந்தும் புகர் மலை கைச்சுமிச்
சாரல் திரிகுவனே.

#1154

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பொன் அனையீர்`` என்பது, தலைவன் தோழியை விளித்தது.

அதனை முதலிற் கொள்க.
பொன் - இலக்குமி.
மனம் பெறில் - இசைவு கிடைக்குமாயின் `கயிலை மலையின்கண்` என ஏழாவது விரிக்க.
சிந்தும் - எதிர்ப்பட்ட வரை அழிக்கின்ற.
புகர் மலை - முகத்தில் புள்ளிகளையுடைய மலை போலும் யானை.
கைச்சல் - கட்டுதல்; அடக்குதல்; இது தலைவன் பாங்கியை மதியுடம் படுத்தற் கண் குறையுற்று நின்றது.

திரியப் புரமெய்த ஏகம்ப
னார்திக ழுங்கயிலைக்
கிரியக் குறவர் பருவத் திடுதர
ளம்வினையோம்
விரியச் சுருள்முத லானும்
அடைந்தோம் விரைவிரைந்து
விரியக் கதிர்முத்தின் நீர்பெற்ற
தென்னங்குப் பேசுமினே.

#1155

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திரி அப்புரம் - வானத்தில் திரிகின்ற அந்த மதில்கள்.
`கயிலைக் கிரியில் உள்ள அக்குறவர்` என்க.
பருவம் - மூங்கில்கள் முதிர்ந்து முத்தினைச் சொரியும் காலம்.
இடு தரளம் - சேர்த்து வைக்கின்ற முத்து.
வினையோம் - முயற்சியுடைய யாங்கள்.
(இவ்வாறு தோழி, தலைவி முதலானவர்களைத் தன்னோடு உளப்படுத்துக் கூறினாள்.
) விரியச் சுருள் முதல் - பின் விரிதற் பொருட்டு முன்னே சுருண்டு இருக்கும் இலைகளையுடைய இள மூங்கில், `கயிலைச் சாரலில் உள்ளோர் முற்றிய மூங்கிலினின்றும் பெறுகின்றோம்` எனத் தலைவன் தலைவியை வரைதற்கு முலை விலையாகத் தருவதாகக் கூறிய முத்துத் திரளைத் தோழி, `அஃது எங்கட்கு அரியது ஒன்றன்று` என இகழ்ந்து கூறினாள்.
இவ்வாறு தோழி இகழ்ந்து கூறியதன் கருத்து, `எம் தமர்க்கு உனது (தலைவனது) குல நலம், கல்வி, பண்பு முதலியவைகளை அறிவிப்பின் அவை காரணமாக அவர் வரைவுடம்படுத்தலல்லது, விலைக்குக் கொடுப்ப தாயின் இவட்கு ஏழ் பொழிலைக் கொடுப்பினும் நிரம்பாது ஆகலின் உடன்படார்` எனக் கூறுதலாம்.

1 ``விரைவிரைந்து`` இரட்டைக் கிளவி.
நீர் பிரிய அங்குக் கதிர் முத்தின் பெற்றது என் - வரை பொருட் பிரிதலாக நீர் பிறிதற்கு அங்கு (நும் இடத்தில் - கயிலை மலை சாரலில்)ப் பெறும் முத்தினால் அடையத் தக்க பயன் யாது? `பெறுவது` எனற்பாலது, ``பெற்றது`` என் இறந்து காலமாக ஓதப்பட்டது.
இது தலைவன் வரைபொருட் பிரிதலில் தோழி தலைவற்குத் தலைவியது முலைவிலை பற்றிக் கூறியது.
`முத்துக்கள் எமக்கு அரியவல்ல` என்றற்குத் தோழி முத்தினை இளமூங்கிலே தங்கட்குத் தருவதாகக் கூறினாள்.
பிரிய - பிரிதலால்.
`பிரிதலால் கிடைக்கும் முத்து` என ஒரு சொல் வருவிக்க.

பேசுக யாவர் உமைக்கணி
யாரென்று பித்தரெங்கும்
பூசுகை யார்திரு நீற்றெழில்
ஏகம்பர் பொற்கயிலைத்
தேசுகை யார்சிலை வெற்பன்
பிரியும் பரிசிலர்அக்
கூசுகை யாதுமில் லார்க்குலை
வேங்கைப் பெயர்நும்மையே.

#1156

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`யாவர் பித்தர் (அவர்) உமை, - கணியார்- என்று பேசுக` என மாற்றி இறுதியிற் கூட்டி, அதன்பின், `யாம் அவ்வாறு பேசோம்` என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க.
`கணி` என்பது வேங்கை மரத்திற்கும், சோதிடனுக்கும் பெயர் ஆதலால், ``கணியார்` என்றது சிலேடை.
பூசிகை ஆர் - பூசுதலைப் பொருந்திய.
தேசு - அழகு.
கை ஆர் - கையில் பொருந்திய.
சிலை - வில் `தேசு சிலை, கை ஆர் சிலை` எனத் தனி தனி இயைக்க.
வெற்பர் பிரியும் பரிசு இலர் - தலைவர் இது பொழுது இவ்விடம் விட்டும் பிரிந்து போகும் தன்மையை உடையர் அல்லர் (ஆகையால் வேங்கை மரங்களே! நீங்கள், `தலைவர் பிரிவார்` எனச் சோதிடம் கூறுவதால், உம்மைப் பித்தர்கள்தாம் சிறந்த சோதிடர் என்று கூறுவார்கள்; நாங்கள் அவ்வாறு கூறமாட்டோம்.
ஆயின் `உண்மை யாது` எனில்) `கொலை செய்யக் கூசுதல் `சிறிதும்

இல்லாத, நன்மையைக் குலைக்கின்ற வேங்கைகள் (புலிகள்) என்பதே உங்கள் பெயர்.
அத்தன்மையையுடைய உங்களை, `வருவதறிந்து கூறும் சோதிடர்` என்று யாவர் சொல்வார்! வேங்கை மரம் பூக்கும் காலத்தில் தினைகளும் அறுவடை செய்யும் காலத்தை அடையும்.
அதனால் வேங்கைகள் பூத்தால் தினைப் புனங் காக்கத் தினைப் புனங்களில் பரண் அமைத்துத் தங்கியிருந்த மகளிரும் ஊருக்குள் உள்ள தங்கள் இல்லத்தை அடைந்து விடுவர்.
ஆகவே, வேங்கைகள் பூத்தால் களவொழுக்கத்தில் ஒழுகுவோர் கவலையடைவர்.
மகளிர் தலைவனுக்குத் தாங்கள் தினைப்புனத்தை விட்டு இல்லம் சென்றுவிடுவதாக அறிவித்து, விரைவில் தலைவியை வரைந்துகொள்ள வற்புறுத்துவர்.
அவ்வாறு வற்புறுத்துதல் `வரைவு கடாதல்` - எனப்படும்.
அங்ஙனம் தலைவனை வரைவு கடாவ எண்ணிய தோழி தலைவன் கேட்கும் படி வேங்கை மரங்களை நோக்கி ஏதோ கூறுபவள் போல இவ்வாறு நகையுண்டாகக் கூறி வரைவு கடாயினாள்.
வேங்கைகள் காலம் அல்லாக் காலத்தில் பூத்ததுபோலக் கூறித் தினை முதிர்வுரைத்து வரைவு கடாயினாள்.
1 `வேங்கை` என்னும் பெயருடைய உங்களைப் பித்தர்கள், `கணியார்` என்று பேசட்டும்; நாங்கள் அவ்வாறு பேசோம் - என்றாள்.

பெயரா நலத்தெழில் ஏகம்ப
னார்பிறை தோய்கயிலைப்
பெயரா திருக்கப் பெறுகிளி
காள்புன மேபிரிவின்
துயரால் வருந்தி மனமுமிங்
கோடித் தொழுதுசென்ற
தயரா துரையும்வெற் பற்கடி
யேற்கும் விடைதமினே.

#1157

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பெயரா நலத்து எழில் - என்றும் மாறா திருக்கும் அழகினால் உண்டாகும் எழுச்சி.
ஏகம்பனார் காலத்தைக் கடந்தவர் ஆதலின் அவரது நலம் என்றும் பெயரா நலமாம்.
`கயிலையினின்றும், தினையை அறுத்த பின்னும் அதன் தாள்களில்

தங்கிப் பெயராதிருக்கப் பெறுகின்ற கிளிகளே! யான் பிரிவினால் வருந்திச் சென்றதைப் பின்பு இங்குவரும் வெற்பற்கு (தலைவற்கு) அயராது (மறவாமல்) உரையுங் கள்; அடியேனுக்கு (மறவாமல்) உரையுங்கள்; அடியேனுக்கும் விடை தாருங்கள்` என்று, தலைவன் சிறைப்புறமாகத் தோழி பிரிவருமை கூறி வரைவு கடாயினாள் 2 புனமே பிரிவின் துயர் - இப்புனத்தையே அடியோடு பிரிதலால் வரும் துன்பம்.
``மனமும்`` என்னும் உம்மை உயர்வு சிறப்பு.
இங்கு உலாவிக்கொண்டே.
``ஓடி`` எனச் சினைவினை முதல் மேல் நின்றது.
தொழுது, மீட்டும் கூட்டு விக்க வேண்டித் தெய்வத்தைத் தொழுது.
தன்னின் வேறாகாமை பற்றித் தலைவியைத் தோழி ``அடியேன்`` எனத் தான் என்றே கூறினாள்.

தம்மைப் பிறவிக் கடல்கடப்
பிப்பவர் தாம்வணங்கும்
மும்மைத் திருக்கண் முகத்தெழில்
ஏகம்பர் மொய்கயிலை
அம்மைக் கருங்கண்ணி தன்னொடின்
பந்தருந் தண்புனமே
எம்மைக் கவலை செயச்சொல்லி
யோவல்லி எய்தியதே.

#1158

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`தம்மைத் தாம் பிறவிக் கடல் கடப்பித்துக் கொள்ள விரும்புபவர் வணங்கும் ஏகம்பர்` என்க.
எனவே, `ஒருவர் தம்மைத் தாம் பிறவிக் கடலினின்றும் கடப்பித்துக் கொள்ளுதற்கு ஏகம்பரை வணங்குதல் தவிர வேறு வழியில்லை` என்பது பெறப்பட்டது.
``மும்மை`` என்றது, `மூன்று` என்றே பொருள் தந்தது.
`கயிலையில் இன்பந்தரும் புனம்` ஏழாவதன் தொகையாகக் கொள்க.
`அ` என்னும் சுட்டுக் கருங்கண்ணியைச் சுட்டிற்று.
மை, கண்ணிற்கு அடை.
கருங் கண்ணி, தலைவி.
தன், சாரியை, `கருங்கண்ணியோடு சேர்ந்திருந்து முன்பெல்லாம் இன்பத்தைத் தந்து கொண்டிருந்த தண்புனமே` எனத் தலைவன் தினைப் புனத்தை விளித்துக் கூறினான்.
வல்லி எய்தியது - கொடிபோலும் தலைவி உன்பால் வந்தது.

எம்மைக் கவலை செயச் சொல்லியோ - (முதலில் இன்பத்தைத் தந்து பின்பு) எம்மைக் கவலைப் படுத்தச் சொல்லித்தானே? `அவ்வாறு இருத்தல் இயலாது; எம் வினைதான் இவ்வாறு ஆயிற்றுப்போலும்` என்பது குறிப்பெச்சம்.
இது தினை அறுக்கப்பட்டபின் அப்புனத்திற்குச் சென்ற தலைவன் அங்குத் தலைவி முதலானோர் இல்லாமல் புனம் வெறிச்சோடிக் கிடத்தலைப் பார்த்து வருந்திக் கூறியது.
`வறும்புனங் கண்டு வருந்தல்` - என்னும் துறை *1* `வறுங்களம் நாடி மறுகல்` எனவும் கூறுவர்.

இயங்குந் திரிபுரம் எய்தவே
கம்பர் எழிற்கயிலைத்
தயங்கும் மலர்ப்பொழில் காள்தையல்
ஆடரு வித்தடங்காள்
முயங்கு மணியறை காள்மொழி
யீரொழி யாதுநெஞ்சம்
மயங்கும் பரிசுபொன் னார்சென்ற
சூழல் வகுத்தெமக்கே.

#1159

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இயங்கும் - வானத்தில் திரிகின்ற, திரிபுரம் - மூன்று கோட்டைகள்.
தயங்கும் - விளங்குகின்ற.
(`கயிலைக் கண் தயங்கும்` என்க).
`தட அருவிகாள்` என மாற்றிக் கொள்க.
தட - பெரிய.
முயங்கும் - நாங்கள் தழுவும் இடமாகிய.
மணி அறை - அழகிய பாறை.
`நெஞ்சும் ஒழியாது மயங்கும் பரிசாக` என ஆக்கம் வருவிக்க.
பரிசு - தன்மை `எம்நெஞ்சம்` என உரைக்க.
பொன்னார் - பொன் போல்பவர்கள் பொன் - திருமகள்.
சூழல் - இடம்.
`எமக்கு வகுத்து மொழியீர்` என இயைக்க.
வகுத்து மொழிதல் - விவரமாகச் சொல்லுதல்.
இது வறும்புனம் கண்டு வருந்தும் தலைவன் கண்ட வற்றொடு கவன்றுரைத்தது.
ஆடுதலைப் பொழிலுக்கும் கூட்டுக.
`அவர் ஆடும் பொழில் ஆதலாலும், அவன் ஆடும் அருவி ஆதலாலும்,

யாம் முயங்கும் அறை ஆதலாலும் உம்பால் அவர்கள் சொல்லியே சென்றிருப்பர்` என்பது குறிப்பு.

வகுப்பார் இவர்போல் மணத்துக்கு
நாள்மணந் தன்னொடின்பம்
மிகுப்பார்கள் ஆருயிர் ஒன்றாம்
இருவரை விள்ளக்கள்வாய்
நெகுப்பால் மலர்கொண்டு நின்றார்
கிடக்க நிலாவுகம்பர்
தொகுப்பால் மணிசிந் தருவிக்
கயிலையிச் சூழ்புனத்தே.

#1160

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது, தோழி, `இனிக் களவொழுக்கம் வெளிப்பட்டுத் தீமை பயக்கும்` எனக் கூறி வரைவு கடாவத் தலைவன் மேலும் களவை நீட்டிப்பான் வேண்டி வரை வுடன்படாது மறுத்தது.
``கள்வாய்`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.
நெகுப்பு - நெகிழ்வு, அது மலர் மலருங் காலத்தைக் குறித்தது.
ஆல் உருபைக் கண்ணுரு பாகத் திரித்துக் கொள்க.
`அருவிகள் தம்பால் மலர்களை வேண்டி நின்றார்க்கு மணிகளைச் சிந்தும் கயிலை` எனவும், `கம்பர் கயிலை` எனவும் தனித்தனி இயைக்க.
`கயிலையில் இப்புனத்தில்` என உரைக்க.
`ஆர் உயிர் ஒன்றாம் இருவரை (அஃது அறியாது) விள்ள - இருவராகிப் பிரிய வைத்து மணத்துக்கு நாள் வகுப்பவரும், மணத் தோடு கூட்டியே இன்பத்தை மிகுப்பவரும் இவரே போலும்` என இயைத்துக் கொள்க.
`உடலால் இருவர் போலத் தோன்றினும் உயிர் ஒன்றேயாய் உள்ளார்க்கு மணம் என்ன வேண்டுகின்றது? எனத் தலைவன் தங்கள் களவொழுக்கத்தின் சிறப்பைப் புலப்படுத்தி வரை வுடன்படாது மறுத்தான்.
`இவரே போலும்` என்பது ``இவர்போல்`` எனத் தொகுத்தல் பெற்றது.
`இவர்` என்றது தோழி வழியாக அன்பைப் பெற வேண்டினார்க்கு, பிறப்பிலே உண்டான அன்பைத் தருவது யாம் வாழிடம்` எனத் தலைவன் இறைச்சிப் பொருள் கூறினான்.
அங்ஙனம் கூறுதல் தலைவர்க்கும் உரித்தாகலின்.

புனங்குழை யாதென்று மென்தினை
கொய்ததும் போகலுற்ற
கனங்குழை யாள்தற் பிரிய

நமக்குறும் கையறவால்
மனங்குழை யாவரும் கண்கனி
பண்பல பாடுந்தொண்டர்
இனங்குழை யாத்தொழும் ஏகம்பர்
இக்கயி லாயத்துள்ளே.

#1161

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மனங் குழையா`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.
மனம் குழையா - மனம் கசிந்து.
அன்பு நீர் சிந்துதல் பற்றிக் கண்களை.
``அருங் கண்`` என்றார்.
கண் கனிதலாவது, நீரைச் சொரிதல்.
கண் கனி பண் - கண்கள் கனிதற்கு ஏதுவான இசைகள்.
முன்னர் மனம் குழைதல் கூறப்பட்டமையால், ``குழையாத் தொழும்`` என்றது, உடல் குழைந்து தொழுதலை.
`ஏகம்பரது இக்கயிலாயம்` என்க.
`புனங் குழையாது` என்று தினை கொய்தது - `புனம் இதற்கு மேல் பசுமை பெற்றுத் தழைக்க மாட்டாது` என்று அறிந்து தினைக் கதிர்களைக் குறவர்கள் கொய்தது.
கனம் குழையாள் தன் பிரியவும் - கனமாகிய குழையை அணிந்த தலைவி புனத்தை விட்டுப் பிரிந்து இல்லத்தில் இருக்கச் செய்தற்கும் ஆம்.
(உம்மை மாற்றி யுரைக்கப் பட்டது.
) குறவர் தம் இயல்பிலே தம் தொழிலைச் செய்தாராயினும் அதனால், நமக்குக் கையறவு உறும் - செயல் அறும் அளவில் துன்பம் உறாநின்றது.
(இதனை அவர்கள் அறியமாட்டார்கள்) ஆல், அசை.

உள்ளம் பெரியரல் லாச்சிறு
மானுடர் உற்றசெல்வம்
கள்ளம் பெரிய சிறுமனத்
தார்க்கன்றிக் கங்கையென்னும்
வெள்ளம் பெரிய சடைத்திரு
ஏகம்பர் விண்ணரணம்
தள்ளம் பெரிகொண் டமைத்தார்
அடியவர் சார்வதன்றே.

#1162

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியின் பாடம் பிழைப்பட்டு, வேறாய்க் காணப்படுகின்றது.
தள் அம்பு - வில்லினின்றும் எய்யப்படுகின்ற அம்பினை.
விண் அரணம் எரியக் கொண்டார் - ஆகாயத்தில் உலாவிய கோட்டைகள் (திரிபுரங்கள்) எரிந்தழியும்படி கைக் கொண்டவர்.
`சிறு மானுடர் உற்ற பொருட் செல்வம் அவரைப் போலும் சிறுமனத்தை உடையவர்கட்கு அடையப்படும் பற்றுக் கோவைத் தன்றித் திரிபுரத்தை எரித்தவராகிய சிவபெருமானுக்கு அடியவராயினரால் அடையப்படுவதன்று` என முடித்துக்கொள்க.
``பொருட் செல்வம் பூரியார் கண்ணு முள`` *1* ஆதலின் அஃது ஒறையே விரும்பி, அருட் செல்வத்தை விரும்பாதாரைச் ``சிறுமானுடர்`` எனவும், ``சிறுமனத்தார்`` எனவும் கூறினார்.
கள்ளம், இரப்பார்க்கு, `இல்லை` எனக் கூறிக் கரக்கும் கரவு.
`சிவனடியார்க்குப் பொருட் செல்வம் செல்வமாய்த் தோன்றாது` என்றபடி.
எனவே, அதனைப் படைக்கவும், காக்கவும் அவர் முயலாமை கூறப்பட்டதாம்.

அன்றும் பகையடர்க் கும்பரி
மாவும் மதவருவிக்
குன்றும் பதாதியுந் தேருங்
குலவிக் குடைநிழற்கீழ்
நின்றும் பொலியினுங் கம்பர்நன்
நீறு நுதற்கிலரேல்
என்றும் அரசும் முரசும்
பொலியா இருநிலத்தே.

#1163

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அன்றும் - மாறுபடுகின்ற.
பகை - பகைவர்; ஆகுபெயர்.
அடக்கும் - வெல்கின்ற.
பரிமா - குதிரை.
மத அருவிக் குன்று - யானை - பதாதி - காலாட்படை.
நால்வகைப் படைகளும் இங்குக் கூறப்பட்டன.
கம்பர் - ஏகம்பர்.
நல் நீறு - திருநீறு.

நுதல் - நெற்றி.
திருநீறு நெற்றியில் இல்லாதவர் சிவன்பால் அன்பில்லாதவரே, அதனால் அவர் பெற்ற செல்வம் அவர் முன்செய்த பசுபுண்ணியத்தால் கிடைத்தது ஆகலானும், பசுபுண்ணியம் நிலையற்றது ஆகலானும் `அச்செல்வம் நிலையாது` என்றார்.

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று

என்பதில் கூத்தாட்டோடு உவமிக்கப்பட்டது பசுபுண்ணியங்களே.
சிவனடியார்கட்குச் சிவபுண்ணியத்தால் வரும் செல்வம் சிவ புண்ணியங்கள் நிகழ்தற் பொருட்டுச் சிவனருளால் தரப்படுவ தாகலின், `அஃது என்றும் இருநிலத்தே பொலியும்` என்பதாம்.

நீறில்லா நெற்றிபாழ்

எனவும்,

நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம்; பேய்க்காம்; பரத்தையர்க்காம் - வம்புக்காம்;
கொள்ளைக்காம்; கள்ளுக்காம்; கோவுக்காம்; சாவுக்காம்;
கள்ளர்க்காம்; தீக்காகுங் காண்

எனவும் போந்த ஔவையார் நீதி மொழிகளையும் காண்க.
நம்பன் - சிவபெருமான்.
பம்புக்கு - வாளாத் தொகை பண்ணிக் குவித்தற்கு.
பம்புதல் - நிரப்புதல், பேய்க்கு - புதைத்து வைத்தபின் பூதம் காத்தற்கு.
வம்பு - அடா வழக்கு.
கொள்ளை - கூட்டக் கொள்ளைக்காரர் செயல்.
கள்ளர் - ஒளிந்து நின்று களவு செய்பவர்.
கோ - அரசன் உரியவர் இல்லாத காரணத்தாலும், புதையலாகக் கிடைத்தலாலும் சிலரது பொருள்கள் அரசனுக்கு உரியதாகும்.
இதனை ``உறுபொருள்`` *4* - என்றார் திருவள்ளுவர்.
சாவுக்கு ஆம் - வலிந்து பறிக்கும் கள்வர் செய்யும் கொலைக்கு ஏதுவாம்.
முரசு - வெற்றி முரசு.

நிலத்திமை யோரில் தலையாய்ப்
பிறந்து மறையொடங்கம்
வலத்திமைப் போதும் பிரியார்
எரிவளர்த் தாலும்வெற்பன்
குலத்துமை யோர்பங்கர் கச்சியுள்
ஏகம்பங் கூடித்தொழும்
நலத்தமை யாதவர் வேட்டுவர்
தம்மின் நடுப்படையே.

#1164

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நிலத்து இமையோர் - பூசுரர்; அந்தணர்.
தலை - தலைமை; அது குடிச் சிறப்பாம்.
மறை - வேதம் அங்கம் - வேதாங்கம்.
வலத்து - வலிமை பெற்று.
`வல்லராய்` என்றபடி.
``பிரியம்`` என்பதை முற்றெச்சமாக்கி அதனை, ``வளர்த்தாலும்`` என்பதனோடு முடிக்க.
``வளர்த்தாலும்`` என்னும் உம்மை சிறப்பு.
`குலத்து உதித்த` என ஒருசொல் வருவிக்க.
ஏகம்பர் - ஏகம்பர் எழுந்தருளியிருக்கும் இடம்.
கூடி - அடைந்து.
நலம் - நன்மை; ஞானம் அஃது அதனாலாகிய செயலைக் குறித்தது.
`நலத்துக்கண்` என ஏழாவது விரிக்க.
அமையா தவர் - பொருந்தாதவர்.
`வேட்டுவர்தம் படையின் நடு` என மாறிக் கூட்டுக.
நடுவண் நிற்பவரை `நடு` என்றது ஆகுபெயர்.
`நிலத்து இமையோராயினும் ஏகம்பம் கூடித் தொழும் நலத்துக்கண் பொருந்தாதவர் வேட்டுவருள் தலையாய வேட்டுவர்` - என்பதாம்.
வைதிக அந்தணர்கள் வேள்வியிற் செய்யப்படும் கொலையை, `கொலையன்று` என விலக்குதல், சிவபெருமானை முன்னிட்டுச் செய்யின் ஒராற்றாலேனும் அமைவுடையதாம்; அவ்வாறு செய்யாத வழி அவர் வேள்விக்கண் செய்யும் கொலைக்கும், வேட்டுவர் செய்யும் கொலைக்கும் இடையே யாதும் வேறுபாடில்லை` என்பதாம்.
கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்,
புன்மை தெரிவா ரகத்து
என்னும் திருக்குறளின் உரையில் பரிமேலழகர் `கொலை வினையர்`- என்றதனால், அத்திருக்குறளில் வேடரும், அவரோடு ஒப்புரவும் செய்யும் கொலை கடியப்பட்டதன்றி, வேள்விக்கண் செய்யப்படும் கொலை விலக்கப்பட்டிலது` என்பதுபட உரை கூறினார்.
அக்கருத்துச் சிவனை முன்னிட்டுச் செய்யப்படும் வேள்விக்கே ஓராற்றால் பொருந்தும்` என்பது இங்குக் கூறப்பட்டது.
பரிமேலழகர் கூறிய கருத்து அவரால் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டதாகாது, வைதிக அந்தணர்களது பழமையான கருத்தே யாதலின் அது பற்றி இவ் வாசிரியர் இங்ஙனம் அருளிச்

செய்தார்.
இதனால் திருநெறியின் முறைமை இனிது விளங்குவதாம்.
``தலையாய்ப் பிறந்தும்.
.
.
.
.
.
வேட்டுவர்`` என்றதனால், ``பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்``1 என்றல் பொருந்தாது; பிறப்பு என்னும் பிறப்பே`` - என்று பிணங்கு வாரது கூற்றும் தகர்க்கப்பட்டதாம்.

படையால் உயிர்கொன்று தின்று
பசுக்களைப் போலச்செல்லும்
நடையால் அறிவின்றி நாண்சிறி
தின்றிநகும் குலத்தில்
கடையாய்ப் பிறக்கினும் கச்சியுள்
ஏகம்பத் தெங்களையாள்
உடையான் கழற்கன்ப ரேலவர்
யாவர்க்கும் உத்தமரே.

#1165

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, முன் பாட்டின்பொருட்கு மறுதலையாய பொருளை வற்புறுத்துகின்றது.
படை - கொலைக் கருவி ``கொன்று தின்று`` என்றது; கொல்லுதல், தின்னுதல் ஆகிய இரண்டினுள் ஒன்றே செய்யினும் பாதகமாயினும், இரண்டையுமே செய்து` என்றபடி.
பசுக்கள், ஆறாவது அறிவில்லாமை பற்றி வந்த உவமை.
`ஆறாவது அறிவு உண்டு` என வாதிக்கின், ``பிறிதின் நோய் தன் நோய்போல் போற்றமையால்`` `அஃது இருந்தும் பயனில்லை` என்பார். ``பசுக் களைப் போலச் செல்லும் நடையால் அறிவின்றி`` என்றார்.
``மாக்களே பிறிதின் நோய் தம் நோய்போல் போற்றாது பிற உயிர்களைக் கொன்று தின்னும்` என்பது கருத்து.
அறிவுளதாயினும் இக்காரணத்தால் - அறிவிலர் - என நல்லோரால் பழிக்கப்படுதல் பற்றிச் சிறிதும் நாணம் ஊறாமல் தாம் செய்வதே செய்வர் - என்றற்கு, ``நாண் சிறிதின்றி`` என்றார்.
`சிறிதும்` என்னும் இழிவு சிறப்பும்மை தொகுக்கப்பட்டது.

`நாண் இன்மையும் மாக்களது இயல்பே` என்றபடி.
`இக்காரணங்களால் இகழப்படும் குலம்` என்றற்கு ``நகும் குலம்`` என்றும், `அவற்றுள்ளும் கடைப்பட்ட குலம்` ``கடையாய்ப் பிறக்கினும்` என்றும் கூறினார்.
யாவருக்கும் உத்தமர் - யாவரினும் மேலானவர்.
``அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே`` - என அருளிச்செய்தது காண்க.
இறுதிக்கண் ``கடையாய்ப் பிறக்கினும்`` என உம்மை கொடுத்து ஓதியதனால், `மேற் கூறப்பட்டனவெல்லாம் கடியப்படாதன அல்ல; கடியத் தக்கனவே` என்பதும், `அவற்றைக் கடிந்து, ஆளுடையான் கழற்கு அன்பாராதல் பொன்மலர் நாற்ற முடைத்தாய வழிப் பெரிதும் பயன்படுதல்போலப் பயனுடையராகச் செய்யும்` என்பதும், `அவற்றைக் கடியாது ஆளுடையான் கழற்கு அன்பராயின் பொன் மலர் நாற்றம் உடைத்தாகாதாயினும் பொலிவுடைத்தா மாறுபோல ஆவர்` என்பதும் கூறியவாறாம்.
``ஆ உரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்`` என அப்பரும் உம்மை கொடுத்தே ஓதியருளினமை காண்க.
மற்றும், கொல்வ ரேனும், குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடினும்
எல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே
குலமில ராயினுங் குலத்திற் கேற்பதோர்
நலம் மிகக் கொடுப்பது நமச்சி வாயவே
என்றாற்போல வரும் இடங்களிலும் உம்மை கொடுத்தே ஓதியருளுதல் காண்க.

உத்துங்க யானை உரியார்
விரலால் அரக்கன்சென்னி
பத்துங்கை யான இருபதுஞ்
சோர்தர வைத்திலயம்
ஒத்துங்கை யாலவன் பாடக்
கயிலையின் ஊடுகைவாள்
எத்துங்கை யானென் றுகந்தளித்
தார்கச்சி ஏகம்பரே.

#1166

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உத்துங்கம் - உயரம்.

உரி - தோல்.
வைத்து - அழுத்தி.
இலயம் - தாளம்.
`ஒற்றும், எற்றும்` என்பன எதுகை நோக்கி, ``ஒத்தும், எத்தும்`` எனத் திரிந்து நின்றன.
கையால் பாடியது, கைவிரலால் வீணையின் நரம்பைத் தெறித்து இசையை எழுப்பியது.
கயிலையின் ஊடு அளித்தார்` என்க, ``ஊடு`` என்பது ஏழாவதன் பொருள்பட வந்தது ``என்றது`` என்பதை, `என்ன` எனத் திரித்து, `என்று ஆகும் படி` என உரைக்க.
எற்றுதல், இங்கு வெட்டி அழித்தலைக் குறித்தது.
எனவே, ``எற்றும்`` என்பது `அழிக்கும்` என்றதாய், அத்தகைய ஆற்றல் பெற்றமையை உணர்த்திற்று.
`யாவரையும் வெல்லும் வாட் படையை அளித்தருளினான்` என்றபடி.
`புரைபற்றி ஒறுப்பினும், வழிபட்ட பின் அருள்புரிபவர் கச்சி ஏகம்பர்` என்றவாறு.

அம்பரம் கால்அனல் நீர்நிலம்
திங்கள் அருக்கன்அணு
வம்பரங் கொள்வதொர் வேழத்
துரியவன் தன்னுருவாம்
எம்பரன் கச்சியுள் ஏகம்பத்
தானிடை யாதடைவான்
நம்பரன் தன்னடி யாரறி
வார்கட்கு நற்றுணையே.
#1167
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``வம்பரம்.
வேழத்து உரியவன், அம்பரம் .
.
.
.
அணு தன் உருவாம் எம் பரன், கச்சியுள் ஏகம்பத்தான், தன் அடியார் இடையாது அடைவான், நம் பரன்` என இயைத்து, இவை அனைத்தையும் எழுவாயாக்கி, ``அறிவார்க்கு நறுந் துணை`` என முடிக்க.
முதலில் அட்ட மூர்த்தங்கள் சொல்லப்பட்டன.

அம்பரம் - வான்.
அணு - ஆன்மா.
வம்பர் - தீயோர்; அசுரர், அம் கொள் வேழம் - (அவர்கள்) அழகிதாகக் கொண்ட யானை.
`கயாசுரன்` என்றபடி.
உரி- தோல் ``எம் பரன்`` என்பதில் ``எம்`` என்றது அடியார்களையும், ``நம்பரன்`` என்பதில் ``நம்`` என்பதும் அனைத்துயிர்களையுமாகும்.
இடையாது - தளர்ச்சியடையாதபடி.
அடைவான் - முன்வந்து காப்பான்.
அறிவார்க்கு - தன்னை மெய்ப்பொருளாக அறிபவர்க்கு.
நறுந்துணை - நல்ல துணைமை; பிறவிக் கடலினின்றும் கைகொடுத்து முத்திக் கரையில் ஏற்றும் துணை.

துணைத்தா மரையடி யும்பவ
ளத்திரள் நன்குறங்கும்
பணைத்தோள் அகலமுங் கண்டத்து
நீலமும் அண்டத்துமின்
பிணைத்தா லனசடை யுந்திரு
முக்கணும் பெண்ணொர்பக்கத்
தணைத்தார் எழிற்கம்பர் எங்கள்
பிரானார்க் கழகியவே.

#1168

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`எங்கள் பிரானார்க்கு, துணைத் தாமரை அடியும். முக்கணும் அழகிய` என்க.
துணை - இணை.
குறங்கு - துடை.
பணை- பருத்த ``தோள்`` என்பதிலும் எண்ணும்மை விரிக்க.
அகலம் - மார்பு.
`மின்னலை அண்டத்தில் (வானத்தில்) பிணைத்தாலன்ன சடை` என்க.
திருச்சென்னி உயரத்தில் உருத்தலால் ``அண்டத்தில் பிணைத் தாலன்ன`` என்றார்.
அழகிய - மிக அழகாய் உள்ளன.
அழகு - தனிமையிலும், தொகைமையிலும் தோன்றுவது.

அழகறி விற்பெரி தாகிய
ஏகம்பர் அத்தர்கொற்றம்
பழகறி விற்பெரி யோரதமைப்

பற்றலர் பற்றுமன்பின்
குழகறி வேற்பினுள் ஒன்றறி
யாரறி யாமைதெய்வம்
கிழகெறி யப்பட் டுலந்தார்
உலகிற் கிடந்தனரே.

#1169

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அழகு அறிவினும் பெரிதாகிய`` என்றது அழகினைப் புகழ்ந்த புகழுரை.

இறைவர் அறிவிற் பெரியர் (முற்றறி வுடையவர்) என்பது நன்கறியப்பட்டதாகலின், `அஃதேபோல் அழகிலும் பெரியவர் என்பது உணர்த்தியவாறு.

``பெரிதாகிய`` என்னும் பெயரெச்சம் ``ஏகம்பர்`` என்னும் இடப்பெயர் கொண்டது என்னை? `அவனது அழகு ஆடவர் கண்ணைக் கவர்கின்றது` என்றலேயன்றி, `அவள் கண்ணதாகிய அழகு ஆடவர் கண்ணைக் கவர்கின்றது` என்றலும் வழக்காதலின்.

அத்தர் - தலைவர்.

கொற்றம்- வெற்றி.

அஃது அதனால் உண்டாகிய ``பொருள்சேர் புகழின்`` *1* மேல் நின்றது.

``கொற்றத்தின்கண்`` என ஏழாவது விரிக்க.

`பழகு பெரி யோர்` என இயைக்க.

`அன்பாகிய குழகினையுடைய அறிவு` என்க.

இன், வேண்டாவழிச் சாரியை.

குழகு - அழகு.

`அறிவுக்கு அழகு அன்பு` என்றபடி.

ஏற்பு - ஏற்கும் வழிகள்.

`இறைவனிடத்து அன்பை ஏற்கும் வழிகள் பல உளவாக அவற்றினுள் ஒன்றையும் அறியார்` என்றபடி.

`ஒன்றும்` என்னும் இழிவு சிறப்பும்மை தொகுக்கப்பட்டது.

`அறியாமையால்` என ஆல் உருபு விரிக்க.

`கீழ்` எனப் பொருள் தருவ தாகிய `குழக்கு` என்பதில் ககர ஒற்று எதுகை நோக்கிக் குறைக்கப் பட்டது.

உலந்தார் - இறந்தார்.

`பயன் இன்றி இறந்தார்` என்பதாம்.

`பற்றலரும், அறியாரும் ஆகியோர் அறியாமையால் சிவநெறியி னின்றும் அப்பால் - சிறு தெய்வங்கள் பால் - தூக்கியெறியப்பட்டுப்

பயன் இன்றி உலகில் உலந்துகிடந்தார்` என வினை முடிக்க.
``உலந்தார்`` முற்றெச்சம்.

கிடக்கும் ஒருபால் இரைக்கின்ற
பாம்பொரு பால்மதியம்
தொடக்குண் டிலங்கும் மலங்குந்
திரைக்கங்கை சூடுங்கொன்றை
வடக்குண்டு கட்டத் தலைமாலை
வாளால் மலைந்தவெம்போர்
கடக்கும் விடைத்திரு ஏகம்பர்
கற்றைச் சடைமுடியே.

#1170

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``வாளா மலைந்த`` என்பது முதலாகத் தொடங்கி, `சடைமுடிக்கண்` என ஏழாவது விரித்து `ஒருபால் பாம்பு கிடக்கும்; ஒருபால் மதியம் இலங்கும்; கங்கை அலங்கும்; கொன்றை வடமும், தலைமாலையும் சூடப்பட்டிருக்கும்` என முடிக்க.
தொடக்குண்டு - கீழே விழாமல் சிக்குண்டு.
`பாம்பும், மதியும் பகைப்பொருளாயினும் அவரது முடியில் பகையின்றி வாழும்` என்பது கருத்து, அலங்கும் - அலையும்.
`வடங்குண்டு` என்பது, ஏதுகை நோக்கி வலிந்து நின்றது.
குண்டு கட்டு அத் தலை - ஆழ்ந்த கண்களையுடைய அந்தத் தலை; `உலந்தார் தலை` என்றபடி.
தசை முதலாயின இன்மையால் கண்கள் ஆழ்ந்து தோன்றுவ வாயின.
``கட்டு`` என்றது சாதியொருமை.
சுட்டு, உயிரின்மையைக் குறித்தது.
`குண்டு கட்டுத் தலை` எனப் பாடம் ஓதலும் ஆம்.
`வாளால் மலைந்த வெம்போரும்` எனச் சிறப்பும்மை விரிக்க.
கடக்கும் - வெல்லும்.
`போர் விடை` என்றபடி.

கற்றைப் பவளச் சடைவலம்
பூக்கமழ் கொன்றையந்தார்
முற்றுற் றிலாமதி யின் கொழுந்
தேகம்பர் மொய்குழலாம்
மற்றைத் திசையின் மணிப்பொற்
கொழுந்தத் தரங்கழுநீர்
தெற்றிப் பொலிகின்ற சூட்டழ

காகித் திகழ்தருமே.

#1171

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஏகம்பர்`` என்பதை ``வலம்`` என்பதற்கு முன்னே கூட்டி, அத்தொடரை முதற்கண் கொள்க.

`ஏகம்பர் வலம் கற்றைப் பவளச் சடையும் கமழ் கொன்றைப் பூ அம் தாரும், முற்றுற்றிலா மதியின் கொழுந்தும் - மணிகளாலும், பொன்னாலும் இயன்ற தளிர் களும், கழுநீர் தெற்றி அத்தரம் பொலிகின்ற - குவளை மலரை நெருங்க வைத்து அந்த அளவு சிறப்பாக விளங்குகின்ற.

சூட்டு - தலைவி சூட்டும் அழகாகித் திகழ்தரும்` என உரைக்க.

அர்த்தநாரீசுர வடிவத்தைப் புகழ்ந்தவாறு.

தருமருட் டன்மை வலப்பாற்
கமலக்கண் நெற்றியின்மேல்
திருமலர்க் கண்பிள விற்றிக
ழுந்தழல் செல்வக்கம்பர்
கருமலர்க் கண்ணிடப் பாலது
நீலங் கனிமதத்து
வருநுதற் பொட்டணங் குக்குயர்ந்
தோங்கும் மலர்க்குழலே.

#1172

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`செல்வக் கம்பர்`` என்பதை முதலிற் கொண்டு, `அணங்குக்கு இடப்பாலது மதர்த்து நீலம் கனி கருமலர்கண்ணும், மொய் குழலும் எனவும் `நுதற் பொட்டும் (திகழும்)` எனவும் இயைத்துக் கொள்க.

``அருள் தன்மை`` என்பது, எல்லா உயிர்கள் மேலும் கொள்ளும் அருள் தன்மைக்கு அடையாளமாகிய சடையைக் குறித்தது.

``அருள் தன்மையை உடைய வலப்பால்`` என உடம்பொடு புணர்த்துக் கூறியனால், வலப்பால் சடையுண்மை பெறப்பட்டது.

கமலக்கண் - செந்தாமரை மலர்போலும் கண்.

இது செங்கண் ஆதலைக் குறித்தது.

`நெற்றியின்மேல் உள்ள கண்` என இயைக்க.

பிளவின் - (கீழிருந்து மேற் செல்லும்) கீற்றுப் போல்வதாய்த் தழல் திகழும் என்க.

அணங்குக்கு இடப்பாலது - உமைக்கு உரியதாகிய இடப்பக்கத்தில் உள்ளது.
மதர்த்து நீலம் கனி மருமலர்க் கண்ட களிப்புடையதாய் நீலம் மிகுந்த நீலமலர் போலும் கண்ணும்.
மலர்க் குழலும்.
மற்றும் நுதலிற் பொட்டும் திகழும் என்க.
முன்னர்ப் போந்த ``திகழும்`` என்பதை பொட்டிற்கும் கூட்டுக.
`இடப்பாலது` என்பதை `கண், குழல்` என்ப வற்றோடு தனித்தனி இயைக்க.
இப்பாட்டின் கருத்தும் முன்பாட்டின் கருத்தேயாம்.

மலர்ந்த படத்துச்சி ஐந்தினுஞ்
செஞ்சுடர் மாமணிவிட்
டலர்ந்த மணிக்குண் டலம்வலக்
காதினில் ஆடிவரும்
நலந்திரு நீல்வயி ரம்வெயிற்
பாய நகுமணிகள்
கலந்தசெம் பொன்மக ரக்குழை
ஏகம்பர் காதிடமே.

#1173

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``வலக் காதினில்`` என்பதுபோல, ``காதிடம்`` என்பதை மாற்றி, `இடக் காதினில்`` என விரித்துக் கொள்க.
படம், பாம்பின் படம்.
``வயிரம் வெயிற் பாய`` எனச் சினைவினை முதல் மேல் நின்றது.
நகும் - ஒளிவீசுகின்ற.
``குண்டலம், மகரக்குழை`` என்னும் இரண்டிற்கும் தனித்தனி, `உள்ளது` பயனிலை அவாய் நிலை யாய் நின்றன.
`ஆடி வரும் நலம்` என இயையும்.
மகரக் குழை மகளிர் அணிவதாதலை, ``மகரப் பகுவாய் தாழ மண்ணுறுத்து`` என்னும் திருமுருகாற்றுப்படையாலும் *1* உணர்க.
`நலத்திரு` என்பது மெலிந்து நின்றது.

காதலைக் கும்வலத் தோள்பவ
ளக்குன்றம் அங்குயர்ந்து
போதலைக் கும்பனிப் பொன்மலை
நீற்றின் பொலியகலம்
தாதலைக் குங்குழல் சேர்பணைத்

தோள்நறுஞ் சாந்தணிந்து
சூதலைக் கும்முலை மார்பிடம்
ஏகம்பர் சுந்தரமே.

#1174

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``வலம்`` என்பதை முதலிலும், ``இடம்`` என்பதை, ``தாதலைக்கும்`` என்பதற்கு முன்னும் கூட்டுக.
காது குண்டலத்தால் தோளை அலைக்கின்றது.
பவளக் குன்றம், பொன்மலை இவற்றின் பின், `போல` என உவம உருபு விரிக்க.
போது - பகலவன்.
அவனை அலைத்தலாவது, சுற்றிவரச் செய்தல்.
`போது அலைக்கும் பொன் மலை` என்க.
பனி, நீற்றுக்கு உவமை, ``உயர்ந்து`` என்பதன்பின் `நிற்கும்` என்பதும், `அகலம்` என்பதன்பின் `விளங்கும்` என்பதும் எஞ்சி நின்றன.
அகலம் - மார்பு.
``பொன்மலை`` என்றது அதன் அகலத்தை.
பணை - மூங்கில்.
``அணிந்து`` என்பதன்பின் `விளங்க` என்பது வருவிக்க.
சூது - சூதாடு கருவி `முலை சூது அலைக்கும்` என்க.
அலைத்தல் - வருத்துதல்.
சுந்தரம் - அழகு.
சுந்தரம் `ஏகம்பர் சுந்தரம், வலத் தோள் பவளக் குன்றம்போல உயர்ந்து விளங்கும்; வல மார்பு பனிப் பொன்மலை அகலம்போல் நீற்றின் விளங்கும் மூங்கில் போலும் இடத்தோள் சாந்தணிந்து விளங்கும்; இடமார்பு முலை சூது அலைக்கும்` என்பதாம்.

தரம்பொற் பழியும் உலகட்டி
எய்த்துத் தரந்தளரா
உரம்பொற் புடைய திருவயி
றாம்வலம் உம்பர்மும்மைப்
புரம்பொற் பழித்தகம் பர்க்குத்
தரத்திடு பூண்முலையும்
நிரம்பப் பொறாது தளரிள
வஞ்சியும் நேர்வுடைத்தே.

#1175

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`உம்பர் மும்மைப்புரம் பொற்பு அழித்த கம்பர்க்கு வலம்` என மாற்றி, முதற்கண் வைக்க.
உம்பர்ப் புரம் - வானத்தில் உலாவும் கோட்டைகள்.
தரம் - தகுதி.
பொற்பு அழிதல் - அழகு அழிதல்.
`அட்டு` என்பது, `அட்டி` எனத் திரிந்து நின்றது.
அட்டு - அழித்து.
`எய்த்துத் தளரா உரம்` என்க.
உரம் - மார்பு.
``தரம் தளரா`` எனக் குணவினை குணிமேல் நின்றது.
`உரம் வயிறாம்` என்க.
வயிறாதலாவது, வயிறோடு ஒப்பதாம்.
உத்தரத்து - இடப்பக்கத்தில்.
இடு பூண் - இடப்பட்ட அணிகலங்களையுடைய.
நிரம்பப் பொறுத்தல் - கடைப்போகத் தாங்குதல்.
வஞ்சி - கொடி.
இஃது உவம ஆகுபெயராய், இடையைக் குறித்தது.
`உத்தரத்தில் முலையும், வஞ்சியும் நேர்தலை உடைத்து அவரது அழகு` என ஒரு சொல் வரு வித்து முடிக்க என்க.
நேர்தல் - பொருந்துதல்.

உடைப்புலி ஆடையின் மேலுர
கக்கச்சு வீக்கிமுஞ்சி
வடத்தொரு கோவணந் தோன்றும்
அரைவலம் மற்றையல்குல்
தொடக்குறு காஞ்சித் தொடுத்த
அரசிலை தூநுண்துகில்
அடல்பொலி ஏறுடை ஏகம்பம்
மேய அடிகளுக்கே.

#1176

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அடை`` என்பது, `துணி` என்னும் அளவாய் நின்றது.
ஈற்றடியை முதலிற் கூட்டி, அதன்பின் ``வலம்`` என்பதில் `வலத்தின்கண்` என ஏழாவது விரித்துச் சேர்க்க.
புலி - புலித்தோல்.

உரகம் - பாம்பு.
வீக்கி - இறுகக் கட்டி.
கட்டி - கட்டப்பட்டு.
முஞ்சி வடம் - தருப்பைக் கயிறு.
மற்றை அல்குல் - இடப்பக்கத்தில் உள்ள பிருட்டத்தில்.
காஞ்சி - பலவாகிய மணிவடங்களின் தொங்கல்கள்.
`காஞ்சியின்கண் தொடுத்த` என்க.
அரசிலை - அரசிலை வடிவாகச் செய்து கோக்கப்பட்டவை.
``கோவணம்`` என்பதன் பின் உள்ள ``தோன்றும்`` என்பதை, ``துகில்`` என்பதன் பின்னும் கூட்டுக.

அடிவலப் பாலது செந்தா
மரையொத் ததிர்கழல்சூழ்ந்
திடிகுரற் கூற்றின் எருத்திற
வைத்த திளந்தளிரின்
அடியிடப் பாலது பஞ்சுற
அஞ்சுஞ் சிலம்பணிந்த
வடிவுடைத் தார்கச்சி ஏகம்பம்
மேய வரதருக்கே.

#1177

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கச்சி ஏகம்பம் மேய வரதருக்கு வலப்பாலது ஆகிய அடி. கழல் சூழ்ந்து, கூற்றின் எருத்து இற வைத்தது; இடப்பாலது ஆகிய அடி பஞ்சு உற இளந்தளிரின் அஞ்சும்; மற்றும் சிலம்பு அணிந்த வடிவுடைத்து` என இயைத்துக் கொள்க.
அதிர் கழல் - ஒலிக்கின்ற வீரக்கழல்.
சூழ்ந்து - சூழப்பட்டு.
இடி குரல் - இடிக்கின்ற குரல்.
எருத்து - பிடரி.
இற - ஒடியும்படி.
``வைத்தது`` எனச் செயப்படுபொருள் வினை முதல்போலக் கூறப் பட்டது.
வடிவு - அழகு.
ஆர் கச்சி - பல வளங்களும் நிறைந்த கச்சி.
வரதர் - வரத்தைக் கொடுப்பவர்.
``கற்றைப் பவளச் சடை`` என்னும் பாட்டு முதலாக இதுகாறும் இறைவரது மாதொரு பாதி வடிவமே புகழப்பட்டது.

தருக்கவற் றான் மிக்க முப்புரம்
எய்தயன் தன்தலையை
நெருக்கவற் றோட மழுவாள்
விசைத்தது நெற்களென்றும்
பருக்கவற் றாங்கச்சி ஏகம்பர்
அத்தர்தம் பாம்புகளின்
திருக்கவற் றாலிட் டருளும்
கடகத் திருக்கரமே.
#1178
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`திருக்கரம் முப்புரம் எய்து, மழு வாள் விசைத்தது` என வினை முடிக்க.
தருக்கிற்கு ஏதுவாம் பொருள்களின் பன்மை பற்றித் தருக்கினை,
``தருக்கு அவற்றால்`` எனப் பன்மையாற் கூறினார்.
``தலை ஐ`` என்பதை `ஐந்தலை` என மாற்றிக்கொள்க.
`நெருக்கு அவற்றின்றும் ஓட` என ஐந்தாவது விரித்து, ``ஓட``
என்பதற்கு, `சில` என்னும் வினை முதல் வருவித்துக் கொள்க.
`தக்கன் வேள்வியில் பிரமனும் தலை வெட்டப்பட்டான்` என வரலாறு
உண்டு.
``அரி அயன் தலை வெட்டி வட்டாடினார்`` *1* என்னும் அப்பர்
திருமொழியில் அரியது தலையும் வெட்டப்பட்டதாக வந்துள்ளது.
தக்கன் வேள்விப் பொழுதில் அயன் ஐந்தலையுடன் இருந்ததாகக்
கொள்க.
அன்றி, `ஐ-அழகு` எனினும் ஆம், மழு வாள் - மழுவாகிய படைக்கலம்.
விசைத்தது - வீசிற்று.
நெற்கள் - நெற்பயிர்கள் `பருப் பிக்க` என்பதில் பிறவினை விகுதி
தொகுக்கப்பட்டு, ``பருக்க`` என வந்தது.
அன்றி, `பருத்தற்கு ஏதுவாய் வலியுடைத்து` எனினும் ஆம்.
`பாம்புகளின் திருக்கு அவற்றால் ஆக்கி` என ஒரு சொல் வருவித்துக்
கொள்க.
கடகம் - தோள்வளை.
மழுவை வீசும் வலிமை தோளுக்கு ஆதல் பற்றிக் கடகத்தையே
கூறினார்.

கரத்தத் தமருகத் தோசை
கடுத்தண்டம் மீபிளப்ப
அரத்தத்த பாதம் நெரித்திட்
டவனி தலம்நெரியத்

தரத்தத் திசைகளுக் கப்புறம்
போர்ப்பச் சடைவிரித்து
வரத்தைத் தருகம்பர்
ஆடுவர் எல்லியும் மாநடமே.

#1179

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வரத்தைத் தரு கம்பர் தமருகத்து ஓசை அண்ட மீப் பிளப்ப, பாதம் அவனி தலம் நெறிய நெரித்திட்டு, திசைகளுக்கு அப்புறம் போர்ப்பச் சடை விரித்து எல்லியும் மா நடம் ஆடுவர்` என இயைத்து முடிக்க.
அவ்வோசை - தமருகத்தினின்றும் எழுந்த அந்த ஓசை.
கடுத்து - மிகுந்து.
மீ - மேலிடம்.
அரத்தம் - சிவப்பு.
அரத்தத்தை - சிவந்த நிறத்தை யுடைய.
அவனி தலம் - பூ தலம்.
`தரத்து ஆக` என ஒரு சொல் வருவிக்க.
தாம் - மேன்மை எல்லி - இரவு `பகலே அன்றி இரவும்` என உம்மை இறந்தது தழுவிற்று.
எனவே, `எப்பொழுதும்` என்றதாம்.
திருநடனத்தை வியந்தவாறு.

நடனம் பிரானுகந் துய்யக்கொண்
டானென்று நான்மறையோர்
உடன்வந்து மூவா யிரவர்
இறைஞ்சி நிறைந்தஉண்மைக்
கடனன்றி மற்றறி யாத்தில்லை
அம்பலங் காளத்தியாம்
இடமெம் பிரான்கச்சி ஏகம்பம்
மேயாற் கினியனவே.

#1180

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கச்சி ஏகம்பம் மேயாற்கும் இனியனவான இடம் மூவாயிரவர் இறைஞ்சி, (காரணம்) அன்பு அன்றி மற்று அறியாத தில்லையம்பலமும், (அத்தன்மைத்தாகிய) காளத்தியுமே` என்க - `நம் பிரான் (உலகம்) உய்ய நடன் உகந்து கொண்டான்` - என்று இறைஞ்சி` என இயைக்க.

`நம் பெருமான் உலகம் உய்ய நடனம் ஆடுதற்கு இத் தில்லையம்பலத்தையே இடமாக உகந்து கொண்டான்` என்று அவ்வருளை நினைந்து மூவாயிரவர்.
பிறிது காரணம் இன்றி அன்பே காரணமாக அப்பெருமானை இறைஞ்சுகின்றனர் என்றபடி.
உலக நலம் கருதினாராயினும் அது தந்நலம் கருதல் அன்மையின் `அன்பே காரணமாக` என்றார்.
கண்ணப்ப நாயனாரது வழிபாட்டிற்கு அன்பன்றிப் பிறிது காரணம் இல்லாமை உலகம் அறிந்ததாகலின் அதனை எடுத்தோதாது, குறிப்பால் தோன்ற வைத்து, வாளா, ``காளத்தி`` என்றார்.
`அம்பலமும், காளத்தியும்` என எண்ணும்மை விரிக்க.
`உமை யம்மை வழிபாட்டிற்கு அன்பன்றி வேறு காரணம் உண்டுகொலோ` என்னும் ஐயத்திற்கே இடம் இல்லாமையால், அங்ஙனம் அன்பே காரணமாக ``என்றும் ஏத்தி வழிபடப்படும்`` *1* பெருமான் கச்சி ஏகம்பப் பெருமான் என்பது உடம்பொடு புணர்த்தலால் தோன்ற, ``ஏகம்பம் மேயாற்கு இனியனவான இடம் அன்பின் கடன் அன்றி மற்று அறியாத் தில்லையம்பலமும், காளத்தியுமே`` என்றார்.
இதனால் பயன் கருதாது செய்யும் நிட்காமிய வழிபாடே சிறப்புடைத் தாதல் குறித்தவாறு.
நடன் - நடம்.
மகரத்திற்கு னகரம் போலி.

இனியவர் இன்னார் அவரையொப்
பார்பிறர் என்னவொண்ணாத்
தனியவர் தையல் உடனாம்
உருவர் அறம்பணித்த
முனியவர் ஏறும் உகந்தமுக்
கண்ணவர் சண்டியன்புக்
கினியவர் காய்மழு வாட்படை
யார்கச்சி ஏகம்பரே.

#1181

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கச்சி ஏகம்பர்`` என்பதை முதலிற் கூட்டி, அதன் பின், ``அவரை ஒப்பார் பிறர்`` என்பதையும் சேர்க்க ``இன்னார்`` என்பது, `இன்ன சிறப்பியல்பை உடையவர்` என்னும் பொருட்டாய், ஒருவரையே வரைந்துணர்த்தும் குறிப்பு வினைப் பெயர்.
தனியர் - ஒப்பற்றவர்.

``முனியவர்`` என்பது, `முனிவர்` என்பதில் ஓர் அகரம் விரிந்து நின்ற பெயர்.
சண்டி - சண்டேசுர நாயனார்.
``மழுவாள்`` என்பது ஒரு பெயராய், ``படை`` என்பதனோடு இருபெயரொட்டாய்த் தொக்கது, ``இடைச்சொற் கிளவி`` *2* என்பதுபோல, ``தையல் உடனாம் உருவர்`` என்றதனால், `அருள் உடையர்` என்பதும், ``அறம் பணித்த முனியவர்`` என்பதனால் ``யாவர்க்கும் முதல் ஆசிரியர்`` என்பதும், ``ஏறும் உகந்தவர்`` என்பதனால், தாம்பணித்த அறத்தை நடத்துபவரும் தாமே`` என்பதும், *(*ஏறு - அறவிடை.
``ஏறும்`` என்னும் சிறப்பும்மை ``உகந்தவர்`` என்பதனோடே இயையும்.
``உகந்த`` என்றாராயினும் `உகந்தவர்` என்பதே கருத்து என்க.
) ``முக்கண்ணர்`` என்பதனால், `உலகிற்கு முச்சுடரானும் ஒளி வழங்குபவர்` என்பதும், ``சண்டீசர் அன்புக்கு இனியவர்`` என்பதனால், `தம்மையே உண்மை உறவாகக் கொள்பவர்க்கு இனியர்` என்பதும் குறிக்கப்பட்டன.
``மழுவாட் படையார்`` என்றது சண்டிக்கு உதவியவாற்றைக் குறித்தது.

பரவித் தனைநினை யக்கச்சி
ஏகம்பர் பண்ணும்மையல்
வரவித் தனைஉள்ள எங்கறிந்
தேன்முன் அவர்மகனார்
புரவித் தனையடிக் கக்கொடி
தாய்விடி யாவிரவில்
அரவித் தனையுங்கொண் டார்மட
வார்முன்றில் ஆட்டிடவே.

#1182

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``இத்தனை`` என்பன மூன்றும், `மிகுதி` என்னும் பொருளையே குறித்தன.
தனை - தன்னை; இது பன்மை யொருமை மயக்கம்.
வரவு - வருகை.
``எங்கு அறிந்தேன்`` என்றது, `எங்கும் அறிந்திலேன்` என்னும் பொருளைக் குறிப்பால் உணர்த்தின.
அவர் மகனார் முருகப் பெருமான்.
அவர் புரவு - அவரால் புரக்கப்படுவ தொன்று; அஃது அவர் கொடியாகிய கோழி.

அடித்தல் - அழைத்தல்.
அழித்தலை, `அடித்துக்கொண்டேன்` என்றல் வழக்கு.
அழைத்தல் பகலவனை.
`இரவில் மடவார் முன்றிலில் ஆட்டிட அரவு இத்தனை யும் கொண்டார்` என்க.
`ஆடும் பாம்பை ஆட்டுவார் இனிய இசை வழியாக ஆட்டுவர் ஆதலின், ஏகம்பர் அரவம் பூண்டதும் அவற்றை ஆட்டுவார்போல இசையால் மடவாரை மயக்குதற்கே` என, அவர்பால் மையல் கொண்டாள் ஒருத்தி மயங்கிக் கூறினாள்.
அவர் ஆடுவது இரவிலேயாகலின், `ஆட்டுவதும் இரவிலே` என்றாள்.

இடவம் கறுக்கெனப் பாயுமுஞ்
சென்னி நகுதலைகண்
டிடவஞ் சுவர்மட வாரிரி
கின்றனர் ஏகம்பத்தீர்
படமஞ்சு வாயது நாகம்
இரைக்கும் அதனுக்குமுற்
படமஞ் சுவரெங்ங னேபலி
வந்திடும் பாங்குகளே.

#1183

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பிச்சைக்குச் செல்லும் பொழுது முருட்டுக் காளை மேல் ஏறி, வெற்றெலும்பாய் உள்ள தலையை அணிந்து, ஐந்தலை நாகத்தை மேலெல்லாம் பூண்டு கொண்டு சென்றால் பெண்கள் எப்படி அஞ்சாது வந்துஇடுவர்` என்பது இதன் திரண்ட பொருள்.
இடவம் - இடபம்.
`கறுக்கென` என்பது காலை.
விரைவு உணர்த்துவதோர் `என` என் எச்சம்.
இரிகின்றனர் - ஓடுகின்றார்கள்.
`படத்தின்கண் அஞ்சு வாய்களை உடையதாகிய நாகம்` என்க.
`அதனுக்கு அஞ்சுவர்` என இயையும்.
பாங்குகள் - தன்மைகள்.
`எங்ஙன் உளவாகும்` என ஒரு சொல் வருவித்து முடிக்க.

பாங்குடை கோள்புலி யின்னதள்
கொண்டீர்நும் பாரிடங்கள்
தாங்குடை கொள்ளப் பலிகொள்ள
வந்தீர் தடக்கமலம்
பூங்குடை கொள்ளப் புனற்கச்சி
ஏகம்பம் கோயில்கொண்டீர்
ஈங்கிடை கொள்ளக் கலைகொள்ள
வந்தீர் இடைகுமின்றே.

#1184

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது திருவேகம்பரது பலியேல் கோலத்தைக் கண்டு மையல் உற்றாள் ஒருத்தியது கூற்று.
``கொண்டீர்`` என்பன விளிகள்.
பாங்கு உடை கோள் புலி அதள் கொண்டீர் - பக்கங்களில் பொருந்தும் உடையைக் கொள்ளுதலைப் புலித் தோலாகக் கொண்டவரே.
பாரிடங்கள் - பூதங்கள்.
தாம், அசை.
குடை கொள்ள - குடையை ஏந்திப் பிடிக்க.
தடக் கமலம் - பொய்கையில் உள்ள தாமரைக் கொடி.
பூங்குடை கொள்ள - பூவாகிய குடையைப் பிடிக்க.
இஃது உருவகம்.
`பலிகொள்ள வந்தீர்போல வந்தீர்; (ஆயினும் உண்மை அதுவன்று;) இடை கொள் அக்கலை கொள்ளவே ஈங்கு வந்தீர்` என்க.
கலை - உடை `கலைகொள்ளவே` எனப் பிரிநிலை ஏகாரம் விரிக்க,
இன்று இடைக்கும் - இன்று யாம் உமக்குத் தோற்கின்றோம்.
`ஆதலின் திருவுளம் இரங்கிக் கலையினைத் தாரும்` என்பது குறிப்பெச்சம்.
`தடங்கமலம், இடைக்கும்` என்பன பாடம் அல்ல.

இடைக்குமின் தோற்கும் இணைமுலை
யாய்முதியார்கள் தஞ்சொல்
கடைக்கண்நன் றாங்கச்சி
ஏகம்பர் ஐயங் கொளக்கடவும்
விடைக்குமுன் தோற்றநில் லேநின்
றினியிந்த மொய்குழலார்
கிடைக்குமுன் தோற்றநஞ் சங்கிது
வோதங் கிறித்துவமே.

#1185

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது, கைக்கிளைக்கண் தலைவி தலைவனை எய்த மாட்டாமையைத் தோழி கூறி அவளை விலக்கியது.
இஃது அகப் புறக் கைக்கிளையாகாது, பாடான் திணையில் வரும் புறப்புறக் கைக்கிளை யாதலின் இதன்கண் இன்னோரன்ன துறைகள் வரப்பெறும் என்க.
மின் - மின்னல்.
முதியோர்கள்தம் சொல் கடைக்கண் நன்றாம் - பெரியோர்கள் சொல்லும் சொல்லின் பயன் காரிய முடிவில் விளங்கும் (தொடக்கத்தில் தெரியாது; செய்து பார்த்தால் தெரியும்.
) ஐயம் - பிச்சை.
கடவும் விடை - செலுத்தி வரும் இடபம்.
தோற்ற - அவர் கண் காண.
நில்லேல் - நிற்காதே.
(ஏனெனில்,) இந்த மொய்குழலார் இனிமுன் நின்று சங்க வளையல்களை இழந்தனர்.
தம் கிறித்துவம் - அவரது பொய்த் தன்மை; வஞ்சனை ஓ இது - ஆ! இது.
கிடைத்தல் - எதிர்ப்படுதல்.
`கிடைக்கும் முன் தோற்றனர்` என்றது.
`அம்பு படும் முன் தலை துணிந்தது என்றல்போல.
`காரியம் முந்துறூஉம் காரண நிலை` என்னும் அதிசய அணி.

கிறிபல பேசிச் சதிரால்
நடந்து விடங்குபடக்
குறிபல பாடிக் குளிர்கச்சி
ஏகம்பர் ஐயங்கொள்ள
நெறிபல வார்குழ லார்மெலி
வுற்ற நெடுந்தெருவில்
செறிபல வெள்வளை போயின
தாயர்கள் தேடுவரே.

#1186

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கிறி - பொய்; வஞ்சனை.
அது, `பலியிடுமின்; பலியிடுமின்` எனக் கூறுதல்.

சதிரால் - பெருமையுடன்` மிடுக்குடன்.
கருத்து, விடங்கு பட - அழகு உண்டாக.
குறி - தாள அறுதி.
`குறி பல வற்றொடு` என ஒடு உருபு விரிக்க.
அன்றி, ``குறி`` என்பது ஆகு பெய ராய் அதனையுடைய பாட்டைக் குறித்தது என்றலும் ஆம்.
`ஏகம்பர் பிச்சை யேற்றுக் கொண்டு வர குழலார் மெலிவுற்றனர்` என்க.
நெறி - நெறிப்பு.
`நெறி குழல், பல குழல், வார் குழல்` எனத் தனி இயையும்.
வெள் வளை - சங்கவளையல்.
தாயர்கள் - செவிலித் தாயர்.
தெருவில் சிந்திப்போன வளையல்களைத் தாயர் தேடுதல்.
தம் மகளிர் முதலியோரது மானத்தைக் காத்தற் பொருட்டாம்.
இது, கண்டோர் கூற்று.

தேடுற் றிலகள்ள நோக்கந்
தெரிந்தில சொற்கள்முடி
கூடுற் றிலகுழல் கொங்கை
பொடித்தில கூறுமிவள்
மாடுற் றிலமணி யின்மட
வல்குலும் மற்றிவள்பால்
நாடுற் றிலவெழில் ஏகம்ப
னார்க்குள்ளம் நல்கிடத்தே.

#1187

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது, காமம் சாலாப் பெதும்பைப் பருவத்தளாயினும் கச்சி ஏகம்பர்பால் காதல் கொண்டாள் ஒருத்திதன் செவிலித் தாய், `இவளது பருவம் இன்மை காரணமாக அப்பெருமான் இவளை நினை யான் ஆகலின், இவள் ஆற்றுமாறு என்னை` எனக் கவன்று கூறியது.
இஃது உண்மையில், சத்தி நிபாதம் இன்மையால் உலகியலின் நீங்கப் பெறாதவரும் சில வேளைகளில் அவ்வியலிற்றானே ஞான வேட்கை உடையராதலையும், ஆயினும் அது கடைபோகாமையும் குறிக்கும்.
``தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்`` *1* என்றார் திருவள்ளுவரும்.
``இவள்`` என்பதை நோக்கம் முதலியவற்றிற்கும் வருவிக்க.
நோக்கம் - பார்வை.
கள்ளம் தேடுற்றில - உள்ளக் குறிப்பை மறைக்கும் நிலைமை பிறரால்

ஆராயப்படும் தன்மையை அடைய வில்லை.
சொற்கள் தெரிந்தில - பேசும் சொற்கள் பொருள் இனிது விளங்கவில்லை.
முடி - தலையில், குழல் கூடிற்றில - மயிர்கள் யாவும் நீண்டு வளர்ந்து முனை ஒக்க ஒன்று கூடவில்லை.
கொங்கை பொடித் தில - கொங்கைகள் புளகம் கொள்ளும் அளவிற்கு வளரவில்லை.
``மணி`` என்றது இவளையே.
மடம் - இளமை.
அல்குல் - பிருட்டங்கள்.
இவள் மாடு உற்றில - இவளது இரண்டு பக்கங்களிலும் உயர வளரவில்லை.
`பருவம் எய்தின் இவையெல்லாம் உளவாம்` என்றபடி.
மற்று, அசை.
நல்கு இடத்து - அருள் பண்ணும் பொழுது.
`ஏகம்பனார்க்கு இவள்பால் உள்ளம் நாடிற்றில` என்க.
உள்ளம் - உள்ளத்தில் எழும் எண்ணங்கள்; ஆகுபெயர்.
`இனி என் செய்வது` என்பது குறிப்பெச்சம்.

நல்கும் புகழ்க்கட வூர்நன்
மறையவன் உய்யநண்ணிக்
கொல்கின்ற கூற்றைக் குமைத்தவெங்
கூற்றம் குளிர்திரைகள்
மல்கும் திருமறைக் காட்டமிர்
தென்றும் மலைமகள்தான்
புல்கும் பொழிற்கச்சி ஏகம்பம்
மேவிய பொன்மலையே.

#1188

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மறையவன், மார்க்கண்டேயர்.
``கூற்றைக் குமைத்த கூற்றம்`` என்றது, `கால காலன்` என்றபடி.
பொன், வெண் பொன், `திருக்கடவூர்க் கால காலனும், திருமறைக்காட்டு அமிர்தும் ஆகிய இறைவன் பொருந்தியிருக்கும் கயிலை மலையாவது, மலைமகள் என்றும் புல்கும் கச்சி ஏகம்பம்` என இயைத்து முடிக்க.
திருவேகம்பத்தின் சிறப்புணர்த்தியவாறு.

மலையத் தகத்தியன் அர்ச்சிக்க
மன்னி வடகயிலை

நிலையத் தமரர் தொழவிருந்
தான்நெடு மேருவென்னும்
சிலையத்தன் பைம்பொன் மதில்திரு
ஏகம்பத் தான்திகழ்நீர்
அலையத் தடம்பொன்னி சூழ்திரு
வையாற் றருமணியே.

#1189

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மலயம், `மலையம்` எனப் போலியாயிற்று.
`மன்னித் தொழ இருந்தான்` என இயையும்.
மலயம் - பொதிய மலை.
`நந்தி பெருமான் காரணத்தால் திருஐயாறும், அம்மை வழிபடும் ஏகம்பத்தோடு ஒத்ததாகும்` என்றற்கு.
``திருஐயாற்று அருமணி` என்பதையும் உடன் கூறினார்.
`வடகயிலை நிலையத்து இருந்தானே ஏகம்பத்தானும், ஐயாற்று அருமணியுமாய் இருந்தான்` என்னாது, `ஏகம்பத்தானும், ஐயாற்று அருமணியும் ஆனவனே வடகயிலை நிலையத்து இருந்தான்` என்றது, தெளிவு மிகுதற் பொருட்டு.

மணியார் அருவித் தடமிம
யங்குடக் கொல்லிகல்லின்
திணியார் அருவியின் ஆர்த்த
சிராமலை ஐவனங்கள்
அணியார் அருவி கவர்கிளி
ஒப்பும்இன் சாரல்விந்தம்
பணிவார் அருவினை தீர்க்குமே
கம்பர் பருப்பதமே.

#1190

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஏகம்பர் பருப்பதம் இமயம், கொல்லி, சிராமலை, விந்தம்` என்க.
இறைவர் எழுந்தருளியுள்ள சிறந்த சில மலைகளைக் குறித்தவாறு.
தட - பெரிய `குடக்கு` என்பது ஈறு கெட்டுப் புணர்ந்தது.
குடக்கு - மேற்கு.
ஐவனம் - மூங்கில் நெல் `ஐவனங்களையும், அருவியையும் உடைய சாரல்` எனவும், `கிளி ஒப்பு சாரல்` எனவும் இயைத்துக் கொள்க.

`தினையைக் கவர்கின்ற கிளியை மடவார் ஓப்பும்` வேண்டும் சொற்கள் வருவித்துக்கொள்க.
பருப்பதம் - மலை.

பருப்பதம் சார்தவழ் மந்தரம்
இந்திர நீலம்வெள்ளை
மருப்பதங் கார்கருங் குன்றியங்
கும்பரங் குன்றம்வில்லார்
நெருப்பதங் காகுதி நாறும்
மகேந்திரம் என்றிவற்றில்
இருப்பதங் காவுகந் தான்கச்சி
ஏகம்பத் தெம்மிறையே.

#1191

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பருப்பதம் - திருப்பருப்பதம் (ஷ்ரீ சைலம்) இந்திர நீலம் - இந்திர நீலப் பருப்பதம், இவற்றோடு திருப்பரங்குன்றம் இவை மூன்றும் தேவாரம் பெற்றவை.
மகேந்திரமலை திருவாசகத்தில் சொல்லப்பட்டது.
மந்தர மலை புராணங்களால் புகழப்பட்டது.
இப்பாட்டும் முன்னைப் பாட்டோடு ஒத்தது.
மருப்பு - தந்தம் ``மருப்பது, நெருப்பது`` என்பவற்றில் ``அது``, பகுதிப்பொருள் விகுதி.
அவற்றை அடுத்துள்ள `அங்கு` என்பன.
ஆர் - பொருந்திய.
வெள்ளைத் தந்தம் பொருந்திய கருங் குன்று, யானை, வில் ஆர் - ஒளி பொருந்திய.
ஆகுதி, வேள்வித் தீயில் சொரியப்படும் பொருள்கள்.
இருப்பது - இருக்கும் இடம்.
`ஏகம்பத்து எம் இறை பருப்பதம் முதலிய மலைகளில் இருப்பிடம் அவ்விடத்ததாக உகந்தான்` என வினை முடிக்க.

இறைத்தார் புரமெய்த வில்லிமை
நல்லிம வான்மகட்கு
மறைத்தார் கருங்குன்றம் வெண்குன்றம்
செங்குன்ற மன்னற்குன்றம்
நிறைத்தார் நெடுங்குன்றம் நீள்கழுக்
குன்றமென் தீவினைகள்
குறைத்தார் முதுகுன்றம் ஏகம்பர்

குன்றென்று கூறுமினே.

#1192

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``இறைத்தார்.

.

.

மறைத்தார்`` என்பதை ``ஏகம்பர்`` என்பதற்கு முன்னே கூட்டுக.
இறைத்து ஆர் வில் இமை.
மிகுதியாக விசைத்து நிறைந்த வில்லின்தொடுப்பு; அம்புக் கூட்டம்,
`அதனை இமவான்மகட்கு மறைத்தார்` என்றது தாம் தனியே சென்று போர் செய்தார்` என்றபடி.
``கருங்குன்றம்`` முதலிய நான்கும் ஏனைக் கழுக்குன்றம், முதுகுன்றம் போலச் சில தலங்கள் போலும்! `குன்று` எனப் பெயர் பெற்ற தலங்களைக் கூறியவாறு.

கூறுமின் தொண்டர்குற் றாலம்நெய்த்
தானம் துருத்தியம்பேர்
தேறுமின் வேள்விக் குடிதிருத்
தோணி புரம்பழனம்
ஆறுமின் போல்சடை வைத்தவன்
ஆரூர் இடைமருதென்
றேறுமின் நீரெம் பிரான்கச்சி
ஏகம்பம் முன்நினைந்தே.

#1193

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`முன் ஏகம்பம் நினைந்து, (பின்) திருக்குற்றாலம் முதலிய தலங்களை அடைந்து வணங்குங்கள்; துதியுங்கள்; தெளியுங்கள்` என்க.
``தொண்டர்``, விளி.
``என்று`` எண்ணிடைச் சொல்.

நினைவார்க் கருளும் பிரான்திருச்
சோற்றுத் துறைநியமம்
புனைவார் சடையோன் புகலூர்
புறம்பயம் பூவணம்நீர்ப்
பனைவார் பொழில்திரு வெண்காடு
பாச்சில் அதிகையென்று

நினைவார் தருநெஞ்சி னீர்கச்சி
ஏகம்பம் நண்ணுமினே.
#1194
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நியமம் - பரி தியம்.
நீர்ப் பனை வார் பொழில் - கடற் கரையில் பனை மரங்கள் நீள்கின்ற பொழிலையுடைய.
பாச்சில் திருப்பாச்சிலாசிராமம்.
அதிகை - திருவதிகை.
நினைவு ஆர் தரு நெஞ்சின் - நினைதல் பொருந்திய நெஞ்சினோடு.
நீர் - நீவிர்.

நண்ணிப் பரவுந் திருவா
வடுதுறை நல்லம்நல்லூர்
மண்ணில் பொலிகடம் பூர்கடம்
பந்துறை மன்னுபுன்கூர்
எண்ணற் கரிய பராய்த்துறை
ஏர்கொள் எதிர்கொள்பாடி
கண்ணிப் பிறைச்சடை யோன்கச்சி
ஏகம்பம் காண்மின்சென்றே.
#1195
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதன் பொருள் வெளிப்படை.

சென்றே விண்ணுறும் அண்ணா
மலைதிகழ் வல்லம்மென்பூ
வின்தேறல் பாய்திரு மாற்பேறு
பாசூர் எழிலழுந்தூர்
வன்தே ரவன்திரு விற்பெரும்
பேறு மதிலொற்றியூர்
நின்றேர் தருகச்சி ஏகம்பம்
மேயார் நிலாவியவே.
#1196
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நின்று - என்றும் நிலைபெற்று நின்று.

ஏர் தரு கச்சி.
அழகைத் தருகின்ற கச்சி.
நிலாவிய - விளங்குகின்ற தலங்கள் அண்ணாமலை முதலியன என்க.
தேறல் - தேன் அழுந்தூர் - திருவழுந்தூர்.
இஃது இப்பொழுது `தேரழுந்தூர்` என வழங்குகின்றது.
வன் தேரவன் - திரிபுரத்தை எரித்தற்கு ஏறிச் சென்ற வலிய தேரை உடையவன்.
திருவில் பெரும் பேறு - `திருவில்` என்னும் பெயராகிய பெரிய பேற்றைப் பெற்ற தலம்; திருவிற்கோலம் இஃது இப்பொழுது கூவம்` என வழங்குகின்றது.
ஒற்றியூர் - திருஒற்றியூர்.

நிலாவு புகழ்த்திரு வோத்தூர்
திருஆமாத் தூர்நிறைநீர்
சுலாவு சடையோன் புலிவலம்
வில்வலம் கொச்சைதொண்டர்
குலாவு திருப்பனங் காடுநன்
மாகறல் கூற்றம்வந்தால்
அலாயென் றடியார்க் கருள்புரி
ஏகம்பர் ஆலயமே.

#1197

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திருப்புலிவலம், வில்வலம் இவை வைப்புத் தலங்கள்.
கொச்சை - சீகாழி.
இது முன்பு `திருத் தோணிபுரம்` எனச் சொல்லப்பட்டது.
(60) திருப்பனங்காடு - பனங்காட்டூர்.
`புறவார் பனங்காட்டூர் வன்பார்த்தான் பனங்காட்டூர்` என இரண்டு தலங்கள் உள்ளன.
`அலாய்` என்று - `நீ அணுகற்பாலை அல்லை` என்று.
`ஏகம்பர் ஆலயம் திருஓத்தூர் முதலியன என்க.

ஆலையங் கார்கரு காவைகச்
சூர்திருக் காரிகரை
வேலையங் கேறு திருவான்மி
யூர்திரு ஊறல்மிக்க
சோலையங் கார்திருப் போந்தைமுக்
கோணம் தொடர்கடுக்கை
மாலையன் வாழ்திரு வாலங்கா

டேகம்பம் வாழ்த்துமினே.

#1198

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`அங்கு` என்பன யாவும் அசைகள்.
ஆலை ஆர் - கரும்பு ஆலைகள் நிறைந்த.
கருகாவை - திருக்கருகாவூர், திருக் காரிகரை ஒரு வைப்புத் தலம்.
வேலை - கடல்.
திருஊறல் இப்பொழுது `தக்கோலம்` என வழங்குகின்றது.
திருப்போந்தை - திருப்பனந்தாள்.
முக்கோணம் - திரிகோண மலை; இலங்கைத் தலம்.
கடுக்கை - கொன்றை.

வாழப் பெரிதெமக் கின்னருள்
செய்யும் மலர்க்கழலோர்
தாழச் சடைத்திரு ஏகம்பர்
தம்மைத் தொழாதவர்போய்
வாழப் பரற்சுரம் ஆற்றா
தளிரடி பூங்குழலெம்
ஏழைக் கிடையிறுக் குங்குய
பாரம் இயக்குறினே.

#1199

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு உடன் போக்கில், செவிலி புலம்பல் துறையது, பூங்குழல் எம் ஏழை - பூவை யணிந்த கூந்தலை யுடைய எங்கள் பெண்ணை.
இயக்குறின் - தலைவன் நடத்திச் சென்றால்.
ஏகம்ப நாதரை வணங்காதவரே சென்று வாழ்தற்குரிய அந்தப் பரற்கற்கள் நிறைந்த பாலை நிலத்தின் கொடுமையை அவளது மாந்தளிர் போலும் பாதங்கள் பொறுக்க மாட்டா.
குயபாரம் (தன பாரம்) இடையை ஒடித்து விடும்.
`நாங்கள் எங்ஙனம் ஆற்றுவோம்` என்பது குறிப்பெச்சம்.
தாழ் - நீண்டு தொங்குகின்ற, தம், சாரியை.
சுரம் - பாலை.
பரல் - பரற் கற்கள்.

உறுகின்ற வெவ்வழல் அக்கடம்
இக்கொடிக் குன்பின்வரப்

பெறுகின்ற வண்மையி னாலைய
பேரருள் ஏகம்பனார்
துறுகின்ற மென்மலர்த் தண்பொழிற்
கச்சியைச் சூழ்ந்திளையோர்
குறுகின்ற பூங்குவ ளைக்குறுந்
தண்பணை என்றுகொளே.

#1200

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டுத் தோழி தலைவனைப் போக்கு உடன் படுவித்தது.
``ஐய`` என்பதை முதலிற் கொள்க.
அக் கடம் - அந்தப் பாலைநிலம்.
உன்பின் வரப்பெறுகின்ற வன்மையினால், இக் கொடிக்கு (கொடி போன்றவளாகிய இவளுக்கு) ஏகம்பனார் கச்சியைச் சூழ்ந்து உறும் தண் பணை என்று கொள்` என முடிக்க.
துறுகின்ற - நெருங்குகின்ற.
இளையோர் - இளம் பெண்கள்.
குறுகின்ற- பறிக்கின்ற.
தண்பனை - குளிர்ந்த மருத நிலம்.

கொள்ளுங் கடுங்கதி ரிற்கள்ளி
தீச்சில வேயுலறி
விள்ளும் வெடிபடும் பாலையென்
பாவை விடலைபின்னே
தெள்ளும் புனற்கச்சி யுற்றிரு
ஏகம்பர் சேவடியை
உள்ளும் அதுமறந் தாரெனப்
போவ துரைப்பரிதே.

#1201

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதுவும் உடன் போக்கில் செவிலி புலம்பல் துறையது.
`பாலை தீச்சில (உடையது;) வேய் வெடி படும்` என இயைக்க.
கடுங் கதிரின் - கடுமையான பகலவனது கிரணங்களால், கள்ளித் தீ - கள்ளிச் செடிகள் காய்ந்து எரிகின்ற தீ.
(அத்தீயால்) வேய்- மூங்கில்.
உலறி - காய்ந்து விள்ளும்.

வெடி படும் - பிளக்கின்ற வெடியோசை முழங்கும்.
``பாலை படும்`` என, இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏற்றபட்டது.
`அதில் என் பாவை போவது உரைப்பரிது` என முடிக்க.
விடலை - காளைப் பருவத்தன்.
`ஏகம்பர் சேவடியை உள்ளும் அது (நினைக்கின்ற அந்தச் செயலை) மறந்தவர்கள் போவது போலப் போவது` என்க.
உரைப்ப அரிது - சொல்ல ஒண்ணாது.
`ஆயினும் நிகழ்ந்து விட்டதே! என்ன செய்ய! என்பது குறிப்பெச்சம்.

பரிப்பருந் திண்மைப் படையது
கானர் எனிற்சிறகு
விரிப்பருந் துக்கிரை ஆக்கும்வெய்
யேன்அஞ்சல் செஞ்சடைமேல்
தரிப்பருந் திண்கங்கை யார்திரு
வேகம்பம் அன்னபொன்னே
வரிப்பருந் திண்சிலை யேயும
ராயின் மறைகுவனே.

#1202

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு உடன் போக்கில் இடைச் சுரமருங்கில் தலைவி தமரைக் கண்டு கலங்கத் தலைவன் தேற்றியது.
``செஞ்சடை மேல்.
.
.
அன்ன பொன்னே`` என்பதை முதலிற் கொள்க.
பரிப்பரு - தாங்குதற்கரிய.
``படையது`` என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி.
``கானர் எனில் - இந்நிலத்து மாக்கள் எனில், பருந்துக்கு இரையாக்கும் கொடியேனாவேன்.
உமர் எனின் மறைகுவன்; அஞ்சல்`` என முடிக்க.

வனவரித் திண்புலி யின்னதள்
ஏகம்ப மன்னருளே
எனவரு பொன்னணங் கென்னணங்
கிற்கென் எழிற்கழங்கும்
தனவரிப் பந்துங் கெடுத்தெனைப்
புல்லியும் இற்பிரிந்தே

இனவரிக்கல்லதர் செல்வதெங்
கேயொல்லும் ஏழைநெஞ்சே.

#1203

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பொன் அணங்காகிய என் அணங்கு` என்க.
பொன் அணங்கு - அழகிய பொன்.
என் அணங்கு - என் பெண்.
தன வரிப் பந்து - தனம் போன்றுள்ள, வரிந்து செய்யப்பட்ட பந்து.
தலைவி தான் அன்று பின்மாலையில் தலைவனுடன் போக முடிசெய்து விட்டமை யால் முன் மாலையில் செவிலியிடம் கழங்கும், பந்தும் கொடுத்து ஆசை தீர அவளைக் கட்டியணைத்துக் கொண்டாள்.
அதனை அப் பொழுது செவிலி அறியாமையால் விடிந்த பின் நினைத்துப் புலம்பி னாள்.
இற் பிரிந்து - இலத்தினின்றும் பிரிந்து.
எங்கே ஒல்லும் - எப்படி இயலும்! `ஒல்கும்` என்பது பாடமன்று.
எனவே, இதுவும் செவிலி புலம்பல் துறை.

நெஞ்சார் தரவின்பம் செய்கழல்
ஏகம்பர் கச்சியன்னாள்
பஞ்சார் அடிவைத்த பாங்கிவை
ஆங்கவள் பெற்றெடுத்த
வெஞ்சார் வொழியத்தன் பின்செல
முன்செல் வெடுவெடென்ற
அஞ்சா அடுதிறற் காளைதன்
போக்கிவை அந்தத்திலே.

#1204

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இஃது உடன் போக்கில், செவிலி பின் தேடிச் சேறலில் `சுவடுகண்டிரங்கல்` துறை.
பஞ்சு ஆர் அடி - பஞ்சு நிறைந்த பாதம்.
பாங்கு - இடம்.
ஆங்கு - அவ்விடம்.
`அவள் பின் செல முன் செல் காளை போக்கு இவை` என முடிக்க.
`அந்தத்தில் உள` என வேறு முடிபாக்குக.
வெம் சார்வு - விருப்பம் உள்ள சுற்றம்.

வெடுவெடு என்றல், விரைவுக் குறிப்பு.

இலவவெங் கான்உனை யல்லால்
தொழேஞ்சரண் ஏகம்பனார்
நிலவுஞ் சுடரொளி வெய்யவ
னேதண் மலர்மிதித்துச்
செலவும் பருக்கை குளிரத்
தளிரடி செல்கரத்துன்
உலவுங் கதிர்தணி வித்தருள்
செய்யுன் உறுதுணைக்கே.

#1205

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஏகம்பனார் நிலவும் சுடரொளி வெய்யவனே` என்பதை முதலிற் கூட்டி, அதன்பின், `உனை அல்லால் சரண் தொழேம்; செல்சுரத்துள் தளிரடி செலவும், வெங்கான்பருக்கை குளிர உறு துணைக்கு உன் உலவும் கதிர் தணிவித்தருள்` என இயைத்து முடிக்க.
இது, உடன் போக்கில் `நற்றாய் சுடரோடு இரத்தல் (அல்லது) சுரம் தணிவித்தல்` என்னும் துறை.
இலவம் - இலவ மரம்.
வெய்ய வன் - பகலோன்.
`ஏகம்பரனாரது சுடர் ஒளிபோலும் ஒளியையுடைய வெய்யோன்` என்க.
`மலர்போல் மிதித்துச் செல்ல` என உவம உருபு விரிக்க.
பருக்கை - பருக்கைக் கற்கள்.
`அவை சுடாது குளிரும்படி உன் கதிர் தணிவித்தருள்` என்க.
தலைவியை, `தாமரை மலரில் உள்ள திருமகள் போன்றவள்` எனக் கூறும் கருத்தால் தாமரை மலர்மேல் விருப்பமுடைய பகலவனுக்குத் துணை` என்றாள்.
`வன் துணைக்கு - உன் துணையை வேண்டி` என உரைத்து அதனை உனையல்லால் சரண் தொழேம்` என முடிப்பினும் ஆம்.

துணையொத்த கோவையும் போலெழில்
பேதையும் தொன்றலுமுன்
இணையொத்த கொங்கையொ டேயொத்த
காதலொ டேகினரே
அணையத்தர் ஏறொத்த காளையைக்
கண்டனம் மற்றவரேல்
பிணையொத்த நோக்குடைப் பெண்ணிவள் தன்னொடும் பேசுமினே.

#1206

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டை, ``மீண்டார் என உவந்தேன் கண்டு நும்மை`` என்னும் திருக்கோவையார்ப் பாட்டோடு *1* ஒப்பு நோக்கிக் காண்க.

``துணை`` என்பதிலும் எண்ணும்மை விரித்து, `துணையும், ஒத்த கோவையும்போல் பேதையும், தோன்றலும் முன் ஏகினரே` என நிரல் நிறையாக இயைத்துக் கொள்க.

துணை - செவிலியால் காணப் பட்ட தலைவி.

கோ - அவள் தலைவன்.

பேதை - செவிலிதன் பெண் ணாகிய தலைவி.

தோன்றல் - அவள் தலைவன்.

``ஏகினரே`` என்றது வினா.

இருவரது காதலும் இணையொத்ததாய் இருந்ததைச் செவிலி தன் பெண்ணின் இரு கொங்கைகளும் இமையொத்திருப்பது போல் இருந்தது` என விளக்கினாள்.

``கொங்கையொடே`` என்பதை ``ஒத்த`` என்பதனோடே முடிக்க.

முன் இரண்டடிகளும் செவிலிதன் வினா.

பின் இரண்டடிகளும் எதிர் வந்த தலைவன் கூற்று.

அத்தர் - ஏகம்பர்.

ஏறு - அவரது ஊர்தியாகிய இடபம்.

``இவள்`` என்றது, எதிர் வந்த தலைவன் தன் தலைவியைச் சுட்டியது.

``காளையைக் கண்டனம்; நீவிர் சொல்கின்ற மற்றொருவரைப் பற்றி இவளைக் கேட்டுப் பாருங்கள்`` என்றான் எதிர் வந்த தலைவன், இதனால், எதிர் வந்த தலைவன் தன்னைப் போல வந்த தலைவனை மட்டும் நோக்கியதன்றி, அவளுடன் வந்த தலைவியை நோக்கவில்லை` என்பது புலனாகி, அவன் தன் தலைவியை யன்றிப் பிறிதொரு பெண்ணின் முகத்தை நோக்காத பெருந்தன்மையை விளக்கிநிற்கின்றது.

பிணை - பெண் மான்.

மின்நலிக் கும்வணக் கத்திடை
யாளையும் மீளியையும்
நென்னலிப் பாக்கைவந் தெய்தின
ரேலெம் மனையிற்கண்டீர்
பின்னரிப் போக்கருங் குன்று
கடந்தவர் இன்றுகம்பர்
மன்அரி தேர்ந்து தொழுங்கச்சி
நாட்டிடை வைகுவரே.

#1207

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டுப் புணர்ந்துடன் வந்தோரை வினவிய செவிலித் தாயை அவர்கள் மீள (திரும்பிச் செல்லும்படி.
) உரைத்தது.
மின் நலிக்கும் இடை - மின்னலைத் தோற்றத்தால் நலிவிக்கும் இடை.
வணக்கத்து இடை - துவளுதலையுடைய இடை.
இடையாள் - செவிலியால் தேடப்படும் தலைவி.
மீளி, அவள் தலைவன்.
நென்னல்- நேற்று.
பாக்கை - பாக்கம்.
`எந்த மனையில் (இல்லத்தில்) கண்டீர்` எனச் செவிலி வினாவினாள்.
பின்னர் - இங்குத் தங்கிய பின்பு, போக்கரு - செல்லுதற்கரிய.
அவர், செவிலியால் தேடப்பட்ட இருவர், அரி - திருமால்.
``சென்று வைகுவர்`` என்றதனால், `நீவிர் மீளுக` என்பது குறிப்பெச்ச மாயிற்று.

உவரச்சொல் வேடுடைக் காடுகந்
தாடிய ஏகம்பனார்
அவரக்கன் போன விமானத்தை
ஆயிரம் உண்மைசுற்றும்
துவரச் சிகரச் சிவாலயம்
சூலம் துலங்குவிண்மேல்
கவரக் கொடிதிளைக் குங்கச்சி
காணினுங் கார்மயிலே.

#1208

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கார் மயிலே! ஏகமபனார் சிவாலயம் துவரத் துலங்கு விண்மேல கவரச் சூலம் துலங்கு கொடி திளைக்கும் கச்சி இன்னும் காண்` என இயைத்து முடிக்க.
இப்பாட்டு, தலைவியை உடன்கொண்டு சென்ற தலைவன் அவளுக்குத் தன் நகர் காட்டியது.
உவரச் சொல் வேடு - வெறுக்கப் பேசும் வேடர் இனம்.
அவ்வரக்கன், இராவணன்.
இஃது இடைக் குறைந்து நின்றது.
இராவணன் வான்வழியாகச் சென்றது புட்பக விமானம்.

அது குபேரனுடையது.
அதன் சுற்றளவுபோல ஆயிர மடங்கு சுற்றளவுடையது ஏகம்பனார் ஆலயத்தின் சிகரம், `அச்சிகரத்தை யடைய ஆலயத்தின் மேல் சூலம் துலங்கு கொடி திளைக்கும் கச்சி` என்க.
சிவாலயத்தின் மேல் பறக்கும் கொடியில் இடபத்தோடு சூலமும் எழுதப்பட்டிருக்கும்.
``இன்னும்`` என்றது, `நன்றாக` என்றபடி.
துவர - மிகவும் கார் மயில் - கார் காலத்தில் ஆடும் மயில்.
இஃது உவம ஆகுபெயர்.

கார்மிக்க கண்டத் தெழில்திரு
ஏகம்பர் கச்சியின்வாய்
ஏர்மிக்க சேற்றெழில் நெல்நடு
வோரொலி பொன்மலைபோல்
போர்மிக்க செந்நெல் குவிப்போர்
ஒலிகருப் பாலையொலி
நீர்மிக்க மாக்கட லின்னொலி
யேயொக்கும் நேரிழையே.

#1209

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, முன்பாட்டின் துறையை அடுத்து வரும் பதிபரிசு உரைத்தல் துறையது.
பதி - நகர்.
பரிசு - அதன் தன்மை.
உரைத்தவன் தலைவன்.
`கச்சியின் வாய்நெல் நடுவோர் ஒலியும், நெல் குவிப்போர் ஒலியும், கரும்பு ஆலையில் ஒலியும் கடலின் ஒலியே ஒக்கும்` என்க.

நேர்த்தமை யாமை விறற்கொடு
வேடர் நெடுஞ்சுரத்தைப்
பார்த்தமை யாலிமை தீந்தகண்
பொன்னே பகட்டுரிவை
போர்த்தமை யாலுமை நோக்கருங்
கம்பர்கச் சிப்பொழிலுள்
சேர்த்தமை யாலிமைப் போதணி
சீதஞ் சிறந்தனவே.

#1210

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது, தலைமகளை உடன்கொண்டு சுரத்திடைச் சென்ற தலைமகன் அப்பால் தன் நகர்ப்பொழில் கண்டு உவந்து கூறியது.
நேர்த்து அமையாமை விறல் - தன்னோடு ஒத்தது பிறிதில்லாத வெற்றி.
`விறலை உடைய, கொடிய வேடரது சுரம்` என்க.
`வேடரது சுரம்` என்பதில் ஆறாவது வாழ்ச்சிக் கிழமைக் கண் வந்தது, `நுமதூர், எமதூர்` முதலியனபோல, `கண்ணின் இமை தீந்தன` என்க.
``பொன்னே`` என்பது, தலைவன் தன் தலைவியை விளித்தது.
பகடு - யானை.
`சிவபெருமான் யானையை உரித்துப் போர்த்த காலத்தில் அதனைப் பார்க்க அஞ்சி உமையவளே அப்பால் ஓடினாள்` என்பது புராணம்.
`நம் நல் ஊழ் கொணர்ந்து சேர்த்தமையால்` என்க.
இமைப் போது - இமைகளாகிய இதழ்கள்.
போது, ஆகுபெயர்.
அணி - அழகு `அணியோடு` என ஒடு உருபு விரிக்க.
சீதம் - குளிர்ச்சி.
சிறந்தன - மிக்கன.
`தீந்துபோன இமைகள் குளிர்ச்சி மிகுந்தன` என்பதாம்.
`கண் தீந்த, சீதம் சிறந்தன` எனச் சினைவினை முதல்மேல் நின்றன.

சிறைவண்டு பாடுங் கமலம்
கிடங்கிவை செம்பழுக்காய்
நிறைகொண்ட பாளைக் கமுகின்
பொழிலிவை தீங்கனியின்
பொறைகொண்ட வாழைப் பொதும்புவை
புன்சடை ஏகம்பனார்
நறைகொண்ட பூங்கச்சி நாடெங்கும்
இவ்வண்ணம் நன்னுதலே.

#1211

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதுவும் முன் போந்த, ``கார் மிக்க கண்டத்து`` என்னும் பாட்டோடு ஒத்தது.
``நன்னுதலை`` என்னும் விளியை முதலிற் கொண்டு, `இவை கமலக் கிடங்கு; இவை கமுகின் பொழில்; உவை வாழைப் பொதும்பு; ஏகம்பனார் கச்சி நாடு எங்கணும் இவ் வண்ணமாம்` என முடிக்க.
கிடங்கு - அகழி.

பழுக்காய் - பாக்கு மரக் காய்.
பொறை - சுமை.
பொதும்பு - பொதும்பர்; சோலை, நறை - தேன்.

நன்னுத லார்கருங் கண்ணுஞ்செவ்
வாயுமிவ் வாறெனப்போய்
மன்னித ழார்திரு நீலமும்
ஆம்பலும் பூப்பவள்ளை
என்னவெ லாமொப்புக் காதென்று
வீறிடும் ஏகம்பனார்
பொன்னுத லார்விழி யார்கச்சி
நாட்டுள்இப் பொய்கையுளே.

#1212

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டுக் கச்சி மாநகரின் பொய்கைச் சிறப்பைப் புகழ்ந்தது.
``ஏகம்பனார்.
.
.
.
இப்பொய்கையுள்`` என்பதை முதலிற் கொண்டு, `நீலமும், ஆம்பலும் `நன்னுதலார் கண்ணும், வாயும் இவ்வாறு` எனப் போய்ப் பூப்ப, வள்ளை என்று எல்லாம் காது ஒப்பு என்ன வீறிடும் என இயைத்து முடிக்க.
நன்னுதலார் - மகளிர்.
`இவ்வாறு ஆவன` என ஒரு சொல் வருவிக்க.
போய் - வளர்ந்து, ``மன் இதழ் ஆர்`` என்பது நீலத்திற்கு அடை.
`வள்ளை யென்று` என்பதில் ``என்று`` பெயர்ப்பட வந்த எச்சம்,
`மங்கலம் என்று ஓர் ஊர்` வீறிடும் - சிறந்து நிற்கும்.
``பொன்`` என்பது உவம ஆகுபெயராய் நெருப்பைக் குறித்தது.

உள்வார் குளிர நெருங்கிக்
கருங்கிடங் கிட்டநன்னீர்
வள்வா ளைகளொடு செங்கயல்
மேய்கின்ற எங்களையாட்
கொள்வார் பிறவி கொடாதவே
கம்பர் குளிர்குவளை
கள்வார் தருகச்சி நாட்டெழில்
ஏரிக் களப்பரப்பே.

#1213

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``எங்களைஆட் கொள்வார்.

.

.

.

ஏரி களப் பரப்பிலும், கிடங்கு இட்ட நன்னீரிலும் வாளைகளொடு கயல் மேய்கின்றன` என முடிக்க.

உள் வார் - உள்ளே நீண்டு செல்கின்ற இடம்.

நெருங்குதல் - நிரம்புதல்.

கிடங்கு - அகழி.

`கிடங்கில் இட்ட` என உருபு விரிக்க.

இடுதல் - நிரப்புதல்.

வள் - கூரிய.

தலையும்.

வாலும், `ஆட் கொள்வாரும், (எமக்குப்) பிறவியைக் கொடாதவரும் ஆகிய ஏகம்பரது கச்சி` என்க.

கள் வார் - தேனை ஒழுக்கின்ற.

`ஏரியது களம்` என்க.

களம் - இடம்.

ஏரி - பெரிய நீர்நிலை.

`இப்பெயர் இப் பொருளில் வருமிடத்தில் வேற்றுமைப் புணர்ச்சியிலும் வல்லெழுத்து மிகுதி இல்லை` என்பர்.

பரப்பார் விசும்பிற் படிந்த
கருமுகில் அன்னநன்னீர்
தரப்பா சிகள்மிகு பண்பொடு
சேம்படர் தண்பணைவாய்ச்
சுரப்பார் எருமை மலர்தின்னத்
துன்னு கராவொருத்தல்
பொரப்பார் பொலிநுத லாய்செல்வக்
கம்பர்தம் பூங்கச்சியே.

#1214

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பொலி நுதலாய்`` என வந்தமையால் இப் பாட்டினைத் தலைவன் தலைவிக்குப் பதி பரிசு உரைத்ததாகவே கொள்க.

பொலி - விளங்குகின்ற.
பணை - வயல்கள்.
வயல்களில் பாசியும், நீர்ச் சேம்பும் அடர்ந்திருத்தல் வானத்தில் கருமுகில் படிந்தது போலக் காணப்படுகின்றது.
கரா ஒருத்தல் - ஆண் முதலை.
பொருதல் - தாக்குதல்.
`பொருவதாக, அதனைப் பார்` என்க.
`கச்சியின்கண்` என்னும் ஏழாவது இறுதிக்கண் தொக்கது.

கச்சார் முலைமலை மங்கைகண்
ணாரஎண் ணான்கறமும்
வைச்சார் மகிழ்திரு ஏகம்பர்
தேவி மகிழவிண்ணோர்
விச்சா தரர்தொழு கின்ற
விமானமுந் தன்மமறா
அச்சா லையும்பரப் பாங்கணி
மாடங்கள் ஓங்கினவே.

#1215

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மகிழ் திரு ஏகம்பர் தேவி மகிழ`` என்பதை முதலிற் கொள்க.
`ஏகம்பர் மலைமகளுக்கு அருள் புரிந்து, - மகிழ் தம் தேவி - என்னும் அன்பு பற்றி` என்றற்கு, ``தேவி மகிழ`` என்றார்.
``மலைமகள் கண்`` என்பதில் கண், ஏழனுருபு.
ஆர - பொருந்த.
`வைத்தார்` என்பது ஏதுகை நோக்கி, ``வைச்சார்`` என மருவிற்று.
`விண்ணோரும், விச்சா தாரும் தொழுகின்ற அவள் விமானமும்` என்க.
பரப்பு - நிலப்பரப்பு.
ஆங்கு - அப்பரப்பின்மேல் மாடங்கள் - மேல் மாடங்கள்.
இதனால் கச்சிக் காமக் கோட்டத்தது சிறப்பு உணர்த்தப்பட்டது.

ஓங்கின ஊரகம் உள்ளகம்
உம்பர் உருகிடமாம்
பாங்கினில் நின்ற தரியுறை
பாடகம் தெவ்இரிய
வாங்கின வாட்கண்ணி மற்றவர்
மைத்துனி வான்கவிகள்
தாங்கின நாட்டிருந் தாளது
தன்மனை ஆயிழையே.

#1216

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஊரகம் - உலகளந்த பெருமாள் கோயில்.
பாடகம் - பாண்டவ தூதப் பெருமான் கோயில், இவை கச்சியில் உள்ளவை.
தெவ் - பகை; பகைவர்; அசுரர்.
இரிய - தோற்று ஓட.
கன்னி - துற்கை.
மற்று, அசை.
அவர் - மேலெல்லாம் சொல்லி வருகின்ற கம்பர்.
வான் கவிகள் - தெய்வப் புலவர்கள்.
தாங்கிய நாடு - உயர்த்துக் கூறிய உலகம்அது சத்தி தத்துவ புவனம்.
அதில் இருந்தவள் சத்தி.
``அரி`` என்பதை ``ஓங்கின`` என்பதனோடும் கூட்டுக.
`அரி ஓங்கின (நின்ற கோலமாய் உள்ள) ஊரகம் (அவர் கச்சியில்) உள்ளகம்; ஓர் உட்பகுதி, அரி உறைகின்ற (இருந்த கோலமாய் உள்ள) பாடகம் உம்பர் உருகிட மாம்.
பாங்கினில் (கச்சியில் ஒருபக்கத்தில்) நின்றது.
தெவ் இரிய வாங்கின வாளையுடைய கன்னி அவர் மைத்துனி.
(மனைவிதன் தங்கை) எல்லாப் புவனங்கட்கும் மேலதாகிய சத்தி தத்துவ புனத்தில் உள்ள சத்தி அவருக்கு மனைவி.
(அவர் சத்தி தத்துவத்திற்குமேல் உள்ள சிவ தத்துவ புவனத்தில் இருப்பவர்.
) இங்ஙனம் திருவேகம்பரது பெருமை விளக்கப்பட்டது.
சத்தியை `மனைவி` என்றதனால் அவர் அத்தத்துவத்திற்கு மேலேயிருத்தல் குறிப்பால் உணர்த்தப்பட்டது.

இழையார் அரவணி ஏகம்பர்
நெற்றி விழியின்வந்த
பிழையா அருள்நம் பிராட்டிய
தின்ன பிறங்கலுன்னும்
நுழையா வருதிரி சூலத்தள்
நோக்கரும் பொன்கடுக்கைத்
தழையார் பொழில்உது பொன்னே
நமக்குத் தளர்வில்லையே.

#1217

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதுவும் உடன் போக்கு.
இறுதியில் தலைவன் பதிபரிசு உரைத்தது ``பொன்னே`` என்பதை முதலிற் கொள்க.
பொன் இலக்குமி.
இஃது உவமையாகு பெயராய்த் தலைவியைக் குறித்தது.
`இன்ன பிறங்கல் நம் பிராட்டியது; உது சூலத்தள் பொழில்; (தளர்) நமக்குத் தளர்வில்லை` என முடிக்க.
இழை - அணிகலம்.
ஆர் - நிறைந்த.
`இழையாக அணி` என ஆக்கம் வருவிக்க.
சத்திக்குச் சொல்வதும்போலச் சிவனுக்கும் வலக்கண்ணில் திருமகளையும், இடக்கண்ணில் கலைமகளையும், நெற்றிக் கண்ணில் ஞானமகளையும் தருதல் கூறப்படும்.
ஞானமகள் சத்தியின் கூறே ஆதலாலும், சத்தி மலைமகளாகச் சொல்லப்படுதலாலும் ``இன்ன பிறங்கல்`` என மலையை, ``நம் பிராட்டியது`` எனவும், `காடுகிழாள் மாயோன் தங்கை` என வைத்து `மாயோள்` எனப்படுதலின் கடுக்கைப் பொழிலை, (கொன்றைச் சோலையை) ``திரிசூலத்தள் பொழில்`` என்றும் கூறினான்.
பிறங்கல் - மலை.

தளரா மிகுவெள்ளம் கண்டுமை
ஓடித் தமைத்ததழுவக்
கிளையார் வளைக்கை வடுப்படும்
ஈங்கோர் கிறிபடுத்தார்
வளமாப் பொழில்திரு ஏகம்பம்
மற்றிது வந்திறைஞ்சி
உளரா வதுபடைத் தோம்மட
வாயிவ் வுலகத்துளே.

#1218

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டும் முன் பாட்டின் துறையதே.
``ஈங்கு`` என்பதை ``மடவாய்`` என்பதன் பின்னர்க் கூட்டி, அவ்விரண்டையும் முதலிற் கொள்க.
கிறி படுத்தார் - பொய்யை உண்டாக்கினார்.
தடத்தங்க ளெல்லாம் இறைவனது நாடகமாகக் கூறுதல் பற்றி ஏகம்பர்

உமையது வளைத் தழும்பைப் பெற்றதைத் தலைவன் ``கிறி``
வென்றான் கிளை - இனம்.
`கிறிபடுத்தாரது ஏகம்பம் இது.
இங்கு வந்து இதனை இறைஞ்சினமையால் நாம் இவ்வுலகத்துள்ளே
உளர் ஆவதன் (வாழ்வதன்) பயனைப் படைத்தோம்` என முடிக்க.
மற்று, அசை.

உலவிய மின்வடம் வீசி
உருமதிர் வுள்முழங்கி
வலவிய மாமதம் பாய்முகில்
யானைகள் வானில்வந்தால்
சுலவிய வார்குழல் பின்னரென்
பாரிர் எனநினைந்து
நிலவிய ஏகம்பர் கோயிற்
கொடியன்ன நீர்மையனே.

#1219

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைவன் கார் கண்டு தன்னுட் கூறியது.
``முகிலாகிய மத யானைகள் இடியாகிய பிளிறுதலைச் செய்து, மின்னலாகிய பாசத்தை அறுத்துத் தள்ளி, வானமாகிய களத்தில் வருமாயின், பின்னர்த் தலைவி என்னாவாள்` என்பதை நினைத்துப் பார்மின் - எனத் தோழி கூறியதை நினைந்து, ஏகம்பர் கோயில் வாசலில் உள்ள கொடி அலைவதுபோல மனம் அலமரும் நீர்மையை யுடையனானேன் யான் என இயைத்து முடிக்க.
வானத்தைக் `களம்` என்னாமை ஏகதேச உருவகம்.
முகில்களைப் போர்க்களத்து யானைகள் போல்வனவாகக் கண்டு தலைவி இறந்து படும் நிலைமையை அடைவாள் என்பதாம்.
``வலவிய யானைகள்`` என இயையும்.
வார் குழல் - நீண்ட கூந்தலை யுடையவள்.
``யானை`` என வருதலின் முழங்குதல் பிளிறுதலாயிற்று.

நீரென்னி லும்அழுங் கண்முகில்
காள்நெஞ்சம் அஞ்சலையென்
றாரென்னி லுந்தம ராயுரைப்
பார்அம ராவதிக்கு
நேரென்னி லுந்தகும் கச்சியுள்
ஏகம்பர் நீள்மதில்வாய்ச்

சேரென்னி லுந்தங்கும் வாட்கண்ணி
தானன்பர் தேர்வரவே.

#1220

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது கார்ப் பருவம் கண்டு ஆற்றாளாய தலைமகளை, `தலைவனது தேர் இனி வருதல் தப்பாது` எனக் கூறி வற்புறுத்தும் தோழி அதனை முகில்கள் முன்னிலையாகக் கூறியது.
`(நீவிர் பெய்வது மழையேயாயினும்) தலைவியது அழும் கண்கள் போலும் முகில்காள்! - கச்சியுள் ஏகம்பர் நீள் மதில் வாய்ச்சேர் - (சேர்ந்திருப்பன) என்னும் தகுவனவாகிய வாள்போலும் கண்களை யுடைய இவள், - நெஞ்சம் அஞ்சலை - என்று அன்பர் தேர்வரவு உரைப்பார் ஆர் என்னிலும் - தமர் - (என்பாள் - என இயைத்து, `ஆதலின், நீவிர் அதனைக் கூறுவீர்` என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க.
அமராவதி - இந்திரன் நகர்.

வரங்கொண் டிமையோர் நலங்கொள்ளும்
ஏகம்பர் கச்சியன்னாய்
பரங்கொங்கை தூவன்மின் நீர்முத்தம்
அன்பர்தம் தேரின்முன்னே
தரங்கொண்டு பூக்கொண்டு கொன்றைபொன்
னாகத்தண் காந்தட்கொத்தின்
கரங்கொண்டு பொற்சுண்ணம் ஏந்தவும்
போந்தன கார்முகிலே.

#1221

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது, தோழி பருவங் காட்டித் தலைவியை வற்புறுத்தது.
``கச்சி அன்னாய்`` என்றது தோழி தலைவியை விளித்தது.
``பரங்கொங்கை தூவல்`` என்பதை இறுதியில் வைத்து, `கார் முகில், நீராகிய முத்தினைத் தாரமாகக் கொண்டு, கொன்றை மரப் பூக்களைக் கொண்டு பொன்னாய் நிற்க, காந்தட் பூவின் கொத்தாகிய கைகளில் அன்பர் தேரின்முன் பொற்சுண்ணம் ஏந்த வேண்டிப் போந்தன. ஆகவே, நீ நின் கொங்கைகளைப் பரமாக (சுமையாக)ச் சுமக்க வேண்டா` என முடிக்க.
`பரமாக தரமாக` என ஆக்கம் வருவிக்க.

தூவல் - தாங்கற்க; சுமவற்க.
`மின்னலின்கண் நீர்` என ஏழாவது விரிக்க.
``ஏந்தவும்` என்னும் உம்மை சிறப்பு.
`கார் முகில் போந்தன; கொங்கை சுமவல் எனப் பருவங் காட்டி வற்புறுத்தினாள்.
`சுமவல்` என்றது `தனிமை காரணமாகச் சுமையாக எண்ண வேண்டா` என்றபடி.
இயற்கையாய் வந்த கார்ப் பருவத்தை அன்பர் தேரின்முன் சென்று வரவேற்க வந்ததாகக் கூறியது தற்குறிப்பேற்ற அணி.

கார்முகம் ஆரவண் கைக்கொண்ட
கம்பர் கழல்தொழுது
போர்முக மாப்பகை வெல்லச்சென்
றார்நினை யார்புணரி
நீர்முக மாக இருண்டு
சுரந்தது நேரிழைநாம்
ஆர்முக மாக வினைக்கடல்
நீந்தும் அயர்வுயிர்ப்பே.

#1222

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது, பகைவயிற் பிரிவின்கண் தலைமகள் கார்ப் பருவம் கண்டு ஆற்றாது தோழியொடு புலம்பியது.
``நேரிழை`` என்றது தலைவி தோழியை விளித்தது; அதனை முதலிற் கொள்க.
கார்முகம் - வில்.
`கை ஆரக் கொண்டு` என்க.
சென்றார் - சென்ற தலைவர்.
`நம்மை நினையார்` என்க.
புணரி - கடல்.
`அது மேகமாகி இருண்டு சுரந்தது` என்க.
நீர் முகமாக - யார் ஆற்றுவிப்பாராய் நிற்க.
வினை - தீவினையின் விளைவு; ஆகுபெயர்.
அயர்வுயிர்பு - இளைப்பாறுதல்.
`வினைக் கடலை நீந்துதலாகிய அயர்வுயிர்ப்பை ஆர்முகமாகப் பெறுவேம்` என ஒரு சொல் வருவித்து முடிக்க.

உயிரா யினவன்பர் தேர்வரக்
கேட்டுமுன் வாட்டமுற்ற

பயிரார் புயல்பெற்ற தென்னநம்
பல்வளை பான்மைகளாம்
தயிரார்பால் நெய்யொடும் ஆடிய
ஏகம்பர் தம்மருள்போல்
கையிரா வளையழுந் தக்கச்
சிறுத்தன கார்மயிலே.

#1223

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது வரைவொடு வந்த தலைமகனது தேர்வரவு கேட்டுத் தலைவி மகிழ்ந்த மகிழ்ச்சியைத் தோழி செவிலிக்கு உணர்த்தியது.
புயல் - மேகம்.
இஃது ஆகுபெயராய் மழையைக் குறித்தது.
பல் வளை - பலவாகிய வளையலை யணிந்த தலைவி.
`பல் வளைக்கு` என்னும் நான்கன் உருபு தொகுக்கப்பட்டது.
`தயிரையும், பாலையும் நெய்யோடு ஆடிய ஏகம்பர்` என்க.
`நம் பல் விலைக்கு முன்பு கையில் இராது கழன்ற வளையல்கள் அழுத்தமாகிவிடத் தனங்கள் கச்சினை இறப் பண்ணும்.
பான்மைகள் ஏகம்பர் அருள் போல் கார் மயில் ஆம்` என இயைத்து முடிக்க.
`இறுக்கும்` என்பதில் சாரியை தொகுக்கப்பட்டு ``இறும்`` என நின்றது.
``அருள்`` என்பது ஆகுபெயராக அதன் பயனைக் குறிக்க.
கார் மயில் பண்பு பற்றிய உவமையாய் நிற்றலின் அவை தம்முள் வேறாதல் அறிக.

கார்விடை வண்ணத்தன் அன்றேழ்
தழுவினும் இன்றுதனிப்
போர்விடை பெற்றெதிர் மாண்டார்
எனவண்டர் போதவிட்டார்
தார்விடை ஏகம்பர் கச்சிப்
புறவிடைத் தம்பொன்நன்பூண்
மார்விடை வைகல் பெறுவார்
தழுவ மழவிடையே.

#1224

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது, முல்லை, நிலத்துக் கைக்கிளையாகிய `ஏறு தழுவிக் கோடல்`

என்னும் ஆசுர மணத்தில் தழுவவிடப்பட்ட ஏற்றினைக் கண்டோர் கூறியது.
`அன்று கார் வண்ணத்தன் விடை ஏழ் தழுவினும், இன்று அண்டர் தனி விடை ஏகம்பர் கச்சிப் புறவிடை போதவிட்டார்; போர் விடை பெற்று எதிர் (சென்று) மாண்டார் என அம் மழவிடையை (எவரேனும்) தழுவினால் ( அவர்) அண்டரது பொன்னின் பூண் மார்பிடை வைகப் பெறுவார்` என்பது புராணம்.
அண்டர் - ஆயர்.
தனி - ஒற்றை.
புறவு - முல்லை நிலம்.
போத விட்டார் - வர விட்டார்.
போர், இங்கு ஏறுதழுவல் விடை - அதற்கு ஆயர்தரும் ஆணை.
தார் விடை - மணி யணிந்த இடபம்.
தன் பொன்- ஆயர்களுக்கு மகளாகிய இலக்குமி போல்பவள்.
மார்வு - அவளது மார்பு.
வைகல் - தங்குதல்.

விடைபாய் கொடுமையெண் ணாதுமே
லாங்கன்னி வேல்கருங்கண்
கடைபாய் மனத்திளங் காளையர்
புல்கொலி கம்பர்கச்சி
மடைபாய் வயலிள முல்லையின்
மான்கன்றொ டான்கன்றினம்
கடைபாய் தொறும்பதி மன்றில்
கடல்போற் கலந்தெழுமே.

#1225

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதுவும் முன்பாட்டின் துறையதே.
விடை - ஆயர் வரவிட்ட ஏறு.
அது தன் கொம்பால் தம் மார்பிற் பாய இருக்கின்ற கொடுமையை நினையாமல், மேலான ஆயர் கன்னியது வேல்போலும் கரிய கண்ணின் கடை பாய்கின்ற மனத்தினையுடைய காளையர் இனம், முல்லை நிலத்தின் பதியில் (ஊரில்) உள்ள மன்றின்கண் கடல் போற் கலந்து எழும்` என்க.
புல் - புலி.
கொலி - கொல்லி; கொன்றவன்; பன்மை யொருமை மயக்கம்.
கச்சி முல்லை - அடையடுத்த ஆகுபெயர்.

முல்லைக் கொடி வளரும் பாத்தியை ``வயல்`` என்றார்.
கடைதொறும் பாய் - வாயில்கள் தோறும் துள்ளுகின்ற.
`காளையர் இனம்` என மாற்றிக் கொள்க.

எழுமலர்த் தண்பொழில் ஏகம்பர்
கச்சி இருங்கடல்வாய்க்
கொழுமணப் புன்னைத் துணர்மணற்
குன்றில் பரதர்கொம்பே
செழுமலர்ச் சேலல்ல வாளல்ல
வேலல்ல நீலமல்ல
முழுமலர்க் கூரம்பின் ஓரிரண்
டாலும் முகத்தனவே.

#1226

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது நெய்தல் நிலத்துக் களவியலில் தலைவன் இயற்கைப் புணர்ச்சிப்பின் தலைவியைப் புகழ்ந்தது.
இது `நலம் புனைந்துரைத்தல்` எனப்படும்.
துணர் - பூங்கொத்துக்களையுடைய.
`மணற்குன்றில் நிற்கும் பரதர் கொம்பே` என்க.
பரதர் - வலைஞர்.
`உன் முகத்தன சேல் முதலியன அல்ல; கூரிய இரண்டு அம்புபோல ஆலும்`, *(பிறழும்)* என்க.
ஆவதாக உணர்ந்தன்றி `அன்று` என்றல் கூடாமையின், `சேல் முதலியன அல்ல` என்றானாயினும் இது கண்ணுக்கு அவன் சொல்லிய பலபொருளுவமையேயாம்.
``செழு மலர்`` என்பதில் மலர் தாமரை மலர்.
`செழுமலரின்கண் பிறழும் சேல்` என்க.
``முழுமலர்`` என்பதில் மலர், மன்மதன் அன்பு.

முகம்பாகம் பண்டமும் பாகமென்
றோதிய மூதுரையை
உகம்பார்த் திரேலென் நலமுயர்
ஏகம்பர் கச்சிமுன்நீர்
அகம்பாக ஆர்வின் அளவில்லை
என்னின் பவளச்செவ்வாய்
நகம்பால் பொழில்பெற்ற நாமுற்ற
வர்கொள்க நன்மயலே.

#1227

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது, காட்சியின் பின் தலைவியை ஐயுற்று.
மானுடமகளே எனத் துணிந்த தலைவியது குறிப்பை உணர்கின்றுழிக் கூறியது.
``உயர் ஏகம்பர் கச்சி மூன்னீர்`` என்பதை முதலிற் கொள்க.
கச்சி மூன்னீர் - கச்சிப் புறத்தில் நிற்கின்றவரே.
தலைவியைத் தலைவன் இங்ஙனம் முன்னிலைப் படுத்தனாயினும் அவள் கேட்ப இங்ஙனம் கூறாது தன்னுள்ளே இங்ஙனம் கூறினான்.
பாகம் - பாதி.
``முகம் பாதி; பண்டம் பாதி`` *1* - என்பது ஒரு பழமொழி - என்பது இப்பாட்டால் அறியப்படுகின்றது.
`ஒருவருக்கு ஒன்றைக் கொடுத்து உதவி கொடுப்பவரது முகத்தாற் பாதியும், கொடுக்கப்படும் பொருளாற் பாதியுமாக முழுமை பெறுகின்றது` என்பது இதன் பொருளாகும்.
முகமாவது, தம்பால் வருபவரைத் தொலைவிற் கண்டபொழுதே இன்முகங் காட்டி வரவேற்றல்.
பண்டமாவது, அவர் பின் அணுகியவழி அவர் விரும்பும் பொருளை நல்லனவாகக் கொடுத்தல்.
இன்சொல் முகத்திலே அடங்கிற்று ``சேய்மைக்கண் கண்டுழி இன்முகமும், அது பற்றி நண்ணியவழி இன்சொல்லும் அது பற்றி உடன்பட்ட வழி நன்றாற்றலும் என, விருந்தோம்புவார்க்கு இன்றியமையாதன மூன்று`` *2* என்னும் பரிமேலழகர் உரையாலும் அம்மூன்றனுள் ஒன்று இவ்வழியும் உதவி முழுமை யடையாமை விளங்கும்.
ஆகவே, `பொழிலின் கண் பவளச் செவ்வாயைப் பெற்ற நாம் உற்றவர் *(நம்மால் உறப்பட்டவர் - விரும்பப்பட்டவர்; தலைவி)* தம் உள்ளத்திலும் நம் போலக் காமத்தை உடையராதல் வேண்டும்` என்றான்.
பவளச் செவ்வாயைப் பெற்றமையாவது, ``நோக்கினாள் நோக்கெதிர் நோக்கப் பெற்றது *3* அந்நோக்கு அன்பை மட்டுமே வெளிப்படுத்தியல்லது காமக் குறிப்பினை வெளிப்படுத் தாமையின், ``நாம் உற்றவர் நன் மயல் கொள்க` என்றான், ``கொள்க`` என்பது, வேண்டுதற் பொருட்டு, ``வினைகலந்து வென்றீக வேந்தன்`` *4* என்பதில், ``வென்றீக`` என்பது போல.
``உற்றவர்`` என்பது தன்னுட் சொல்லிய சொல்லிடத்து என முன்னிலைக்கண் படர்க்கை மயங்கிற்று.
மூதுரை - பழமொழி.

உகம் - ஊழி, இது புனைந்துரை வகையால் காலத்தின் நெடுமையைக் குறித்தது.
`மூதுரையை நெடுங்காலமாக உணர்ந்தீராயினும் அதனால் பயன் என் என்பான்.
``மூதுரையை உகம் பார்த்திரேல் நலம் என்`` என்றான்.
`பார்த்திரேனும்` என்னும் உம்மை தொகுத்தலாயிற்று.
அகம் பாக ஆர்வு - முகம்போல் அகத்தின் பாகமாகிய நிறைவு.
நிறைவு - காம நிறைவு.
அளவு இல்லை - அதன் அளவு வரையறைப் படவில்லை.
`முகத்தால் இயைந்த இவர் அகத் தாலும் இயைதல் வேண்டும்` என்றபடி.
`அகத்தால் இயைந்தமை- கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் *1*- அறியப்படும், அதனை யான் இன்னும் பெற்றிலேன் என்பதாம்.
நகம் - மலை `நகப்பால்` என்பது மெலிந்து நின்றது.

மயக்கத்த நல்லிருள் கொல்லும்
சுறவோ டெறிமகரம்
இயக்கத் திடுசுழி ஓதம்
கழிகிளர் அக்கழித்தார்
துயக்கத் தவர்க்கரு ளாக்கம்பர்
கச்சிக் கடலபொன்னூல்
முயக்கத் தகல்வு பொறாள்கொண்க
நீர்வரும் ஊர்க்கஞ்சுமே.

#1228

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது, `களவு நீக்கி வரைதல் வேண்டும்` எனக் கூறுந்தோழி அதனைக் கூறாமல் இரவுக் குறி விலக்கியது.
தலைவன் இரவுக் குறி நீக்கிப் பகற் குறி வேண்டுவானாயின் அதனையும் எவை யேனும் சொல்லித் தோழி விலக்குவாள்.
கொண்கன் - நெய்தல் நிலத் தலைவன், கொண்க! கடல் பொன் உன் முயக்கத்து அகல்வு பொருள்; *(ஆயினும்)* நீ இரவில் வரும் இவ்வூர்க்கு *(இவ்வூரின் இயல்பிற்கு)* அஞ்சும்.
இவ்வூரின் இயல்பு மயக்கத்த நள்ளிருளில் உப்பங்கழியில் கொல்லும் சுறாவோடு முதலைகள் வெளிப்போதும்.
இயக்கத்துக் கழி கிளர் ஓதம் இடு சுழிகள் மிகுதியாம்.
அக்கழியே முடிவில்லாத நீட்சியது` என்பது குறிப்பெச்சமாம்.
கடல், ஆகுபெயர் அதன் கரைக் கண் உள்ள பாக்கத்தைக் குறித்தது.

அதன்கண் உள்ள பொன்.
நெய்தல் நிலத் தலைவி.
முயக்கத்து அகல்வு - தழுவலின் நீக்கம் - மகரம், இங்கு முதலையைக் குறித்தது.
`சுறாவும் மகரமும் வெளிப்போதும்` என ஒரு சொல் வருவிக்க.
இயக்கம் - வழி, துறை.
ஓதம் - அலை.
``சுழி`` என்னும் எழுவாய்க்கு, `மிகுதி` என்னும் பயனிலை வருவிக்க.
தார் மாலையாகலின் அது நீட்சியைக் குறித்தது.
தார் உடைதனை, ``தார்`` என்றல் உபசாரம்.
துயக்கத்தவர் - அறிவு கலங்கியவர்.

மேயிரை வைகஅக் குருகுண
ராமது உண்டுபுன்னை
மீயிரை வண்டோ தமர்புக்
கடிய விரிகடல்வாய்ப்
பாயிரை நாகம்கொண் டோன்தொழும்
கம்பர்கச் சிப்பவ்வநீர்
தூயிரை கானல்மற் றாரறி வார்நந்
துறைவர்பொய்யே.

#1229

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது தலைவன் வரைவிடை வைத்துப் பொருல் வயிற் பிரிந்த காலத்துப் பிரிவு நீட்டிப்பத் தலைவி தலைவனைத் தெரியாது தலைவனை இயற்பழித்துக் கூறியது.
இது நொதுமலர் வரைவு கேட்டுக் கூறியதுமாம்.
``தினைத்தா ளன்ன சிறுபசுங் கால`` என்னும் குறுந்தொகைப் பாட்டு, ``யானுந் தோழியும் ஆயமு ஆடுந் துறை நண்ணி`` என்னும் பழம்பாட்டு முதலியவற்றோடும் இதனை ஒப்பிட்டுக் காண்க.
இரைமேய் வைகு அக்குருகு உணரா - இரையையே விரும்பி அதன் வரவு பார்த்திருத்தலின் கொக்குகளும் பார்த்திருக்கமாட்டா.
புன்னை மீ மது உண்டு (ஒலிக்கின்ற) வண்டு களோ எனின் அமர்பு கடிய - மதுவிலே படிந்து எழமாட்டா.
எனவே, அவைகளும் பார்த்திருத்தற்கில்லை.
பாய் இரை கடல் வாய் நாகம் கொண்டோன் - பரந்துபட்டு ஒலிக்கின்ற கடலிடத்து பாம்பணையைக் கொண்டோன்; திருமால், பவ்வம் நீர் தூய் இரை கானல் - கடல் நீரைத்தூவி ஒலிக்கின்ற கரையிடத்து.

நம் துறைவர்பொய் மற்று ஆர் அறிவார் - நமது நெய்தல் நிலத்துத் தலைவர் `உன்னைப் பிரியேன்` என்று சூளுரைத்து அதனைப் பொய்த்தமைக்குச் சான்று சொல்வார் வேறுயாவர்! ``குருகு`` எனவும், ``புன்னை மீ வண்டு`` எனவும்.
``கானல்`` எனவும் கூறினமையால் தலைவன் கூடிப் பிரிந்தது கடற் கரைக் கண்ணே என்பதும், `மற்று ஆர் அறிவார்`` என்றதனால், `கூடியது களவினால்` என்பதும் குறிக்கப்பட்டன.

பொய்வரு நெஞ்சினர் வஞ்சனை
யாரையும் போகவிடா
மெய்வரும் பேரருள் ஏகம்பர்
கச்சி விரையினவாய்க்
கைவரும் புள்ளொடு சங்கினம்
ஆர்ப்பநம் சேர்ப்பர்திண்தேர்
அவ்வரு தாமங் களினம்வந்
தார்ப்ப அணைகின்றதே.

#1230

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது, வரைவிடை வைத்துப் பிரிந்த தலைவன் நீட்டிப்பபு பற்றி வருந்திய தலைவிக்குத் தோழி தலைவனது தேர்வரவைக் கூறியது.
பொய் வரு நெஞ்சினர் - பொய் சொல்லும் எண்ணம் வருகின்ற நெஞ்சையுடையவர்.
`நெஞ்சினரொடு` என்னும் எண்ணொடு தொகுத்தலாயிற்று.
உம்மை - இறந்தது தவிய எச்சம்.
போக விடாமை - தப்ப விடாமை அஃதாவது, `தப்பாது ஒறுப்பவர்` என்பதாம்.
`கச்சியின் கண் அணைகின்றது` என்க.
விரையின - விரைவாகப் பறப்பன.
கை வருதல் - எப் பக்கத்திலும் வருதல்.
`புள்ளினம் வானத்திலும் சங்கு கடலினும் ஆர்ப்ப` என்க.
அதிர்வு கேட்டு இவை ஆர்க்கின்றனவாம்.
புள் - நீர்ப் பறவை.
தாமங்கள் இனம் - தேரிலும், குதிரைகளிடத்திலும் உள்ள மணி ஒழுங்கின் இனம்.

இன்றுசெய் வோமித னில்திரு
ஏகம்பர்க் கெத்தனையும்
நன்றுசெய் வோம்பணி நாளையென்

றுள்ளிநெஞ் சேயுடலில்
சென்றுசெ யாரை விடும்துணை
நாளும் விடாதடிமை
நின்றுசெய் வாரவர் தங்களின்
நீள்நெறி காட்டுவரே.

#1231

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நெஞ்சே`` என்பதை முதலிற் கொள்க.
திரு ஏகம்பர்க்கு நாளும் விடாது அடிமை நின்று செய்வார் அவர்பால் நின்று நீள்நெறிகாட்டுவர்.
எத்தனையும் (மிகச் சிறிதாயினும் பணி) இன்று செய்வோம் (இன்றே செய்வோம்.
இதனில் நீங்கி, - பணி நாளை நன்று செய்வோம் (மிகுதியாகச் செய்வோம்) - என்று உள்ளி (நினைத்து) உடலில் (உடல் வளர்க்கும் செயலிலே) சென்று, ஒரு நாளும், ஒன்றும் செய்யாரைத் துணை விடு` என இயைத்து முடிக்க.
(பணி சிறிதளவாயினும் அப்பொழுதே செய்தல் வேண்டும்.
`நாளை மிகுதியாகச் செய்வோம்` என்று விடுதல் கூடாது என்பதாம்!

காட்டிவைத் தார்தம்மை யாம்கடிப்
பூப்பெய்யக் காதல்வெள்ளம்
ஈட்டிவைத் தார்தொழும் ஏகம்பர்
ஏதும் இலாதவெம்மைப்
பூட்டிவைத் தார்தமக் கன்பது
பெற்றுப் பதிற்றுப்பத்துப்
பாட்டிவைத் தார்பர வித்தொழு
வாமவர் பாதங்களே.

#1232

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது ஆசிரியர் திருவேகம்பர் தமக்குச் செய்த திருவருளை வியந்து போற்றியது.
`காதல் வெல்ளம் ஈட்டி வைத்தார் தொழும் ஏகம்பர், ஏதும் இலாத எம்மை, யாம் தம்மைக் கடிப் பூப் பெய்யக் காட்டி வைத்தார்; அன்பு பூட்டி வைத்தார்; அது பெற்றுப் பதிற்றுப் பத்துப் பாட்டு இவைத் தார்ப் பரவி அவர்பாதங்கள் தொழு தாம்` என இயைத்துக் கொள்க.

காதல் வெள்ளம் ஈட்டி வைத்தார், திருத்தொண்டர்கள்.
ஏதும் இலாத - நல்லது ஒன்றும் இல்லாத கடி - நறுமணம்.
``பூப்பெய்ய`` என்பது `பூசிக்க` என்னும் பொருட்டாகலின் அது.
``தம்மை`` என்னும் இரண்டாவதற்கு முடிபாயிற்று.
காட்டி - அறி வித்து.
பூட்டி - பூண்பித்து.
அது - அவ்வன்பை ``பதிற்றுப் பத்து`` என்பது `நூறு` என்னும் பொருட்டு.
நூறு பாட்டாகிய இவையாகிய தாரால் (மாலையால்) அவர் பாதங்களை யாம் பரவி (துதித்து)த் தொழுதாம்` என்க.
`யாம் அறிவையும், அன்பையும் பெற்று அவரைப் பூசித்ததும், நூறு பாடல்களாலாகிய பாமாலையால் அவர் பாதங் களைப் பரவித் தொழுததும் எல்லாம் அவர் செய்விக்கவே` என்றபடி.
`வைத்தல்` என்பது துணை வினையாகலின், ``காட்டி வைத்தார்`` முதலிய மூன்றும் ஒரு சொல் நீர்மைய!

பாதம் பரவியொர் பித்துப்
பிதற்றினும் பல்பணியும்
ஏதம் புகுதா வகையருள்
ஏகம்பர் ஏத்தெனவே
போதம் பொருளால் பொலியாத
புன்சொல் பனுவல்களும்
வேதம் பொலியும் பொருளாம்
எனக்கொள்வர் மெய்த்தொண்டரே.

#1233

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, `இப்பிரபந்தத்தை அடியார்கள் ஏற்றருள வேண்டும்` என அவையடக்கம் கூறியது, அடியார் ஏற்ற பின்பே ஆண்டான் ஏற்பன் ஆகலின்.
பாதம் பரவி- தமது பாதங்களைத் துதிக்கும் துதியாக.
ஓர் பித்துப் பிதற்றினும் - பித்தன் ஒருவன் பிதற்றுதல் போலச் சிலவற்றைப் பிதற்றினாலும், `அது குற்றம் ஆகாதபடி அருள்செய்பவர் திருவேகம்பர்` என்பதாம்.
இதனை, ``முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்போன்`` 1 என்ப தனோடு, ஒப்பிட்டுக் காண்க.
இதனால், இத்தகைய ஏகம்பரது ஏத்து (துதி) என்பது, ஞானம் பொருளாய் நிற்க விளங்கும் இல்லாத புன் சொற்கள் நிறைந்த பாத்

தொடையாயினும் அதனை மெய்த் தொண்டர்கள் வேதப் பொருள் பொலிகின்ற பாத் தொடையாகவே மதித்து ஏற்றுக்கொள்வார்` என்பதாம்.

எனவே, `எனது புன்சொற் பனுவலாகிய இதனையும் அவர்கள் அவ்வாறு ஏற்றுக் கொள்வார்கள்` என்பது குறிப்பெச்சமாயிற்று.

``வகையருள் ஏகம்பர்`` என்றதனால், `வகையருள்பவர் ஏகம்பர்` என்பது அனுவாதத்தால் பெறப்பட்டது.

``போதம் பொருளால் பொலியாத`` என்றது, `போதம் பொருளாக, அதனாற் பொலியாத` எனப் பொருள் தந்தது.

திருஏகம்பமுடையார் திருவந்தாதி முற்றிற்று

பட்டினத்து அடிகள் - திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது

இருநில மடந்தை இயல்பினின் உடுத்த
பொருகடல் மேகலை முகமெனப் பொலிந்த
ஒற்றி மாநகர் உடையோய் உருவின்
பெற்றியொன் றாகப் பெற்றோர் யாரே
மின்னின் பிறக்கம் துன்னும்நின் சடையே

மன்னிய அண்டம்நின் சென்னியின் வடிவே
பாவகன் பரிதி பனிமதி தன்னொடும்
மூவகைச் சுடரும்நின் நுதல்நேர் நாட்டம்
தண்ணொளி ஆரம் தாரா கணமே
விண்ணவர் முதலா வேறோர் இடமாக்

கொண்டுறை விசும்பே கோலநின் ஆகம்
எண்திசை திண்தோள் இருங்கடல் உடையே
அணியுடை அல்குல் அவனிமண் டலமே
மணிமுடிப் பாந்தள்நின் தாளிணை வழக்கே
ஒழியா தோடிய மாருதம் உயிர்ப்பே

வழுவா ஓசை முழுதும்நின் வாய்மொழி
வானவர் முதலா மன்னுயிர் பரந்த
ஊனமில் ஞானத் தொகுதிநின் உணர்வே
நெருங்கிய உலகினில் நீர்மையும் நிற்றலும்
சுருங்கலும் விரிதலும் தோற்றல்நின் தொழிலே

அமைத்தலும் அழித்தலும் ஆங்கதன் முயற்சியும்
இமைத்தலும் விழித்தலும் ஆகும்நின் இயல்பே
என்றிவை முதலாம் இயல்புடை வடிவினோ
டொன்றிய துப்புரு இருவகை ஆகி
முத்திறக் குணத்து நால்வகைப் பிறவி

அத்திறத் தைம்பொறி அறுவகைச் சமயமோ
டேழுல காகி எண்வகை மூர்த்தியோ
டூழிதோ றூழி எண்ணிறந் தோங்கி
எவ்வகை அளவினில் கூடிநின்று
அவ்வகைப் பொருளும்நீ ஆகிய இடத்தே.

#1234

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அகவல் ஆகிய ஒருவகைப்பாவே அந்தாதியாய் வரப் பத்துப் பாடல்களால் செய்யப்படுவது `ஒருபா ஒருபஃது` என்னும் பிரபந்தமாகும்.

`பொரு கடலாகிய மேகலையை இயல்பினின் உடைய இருநில மடந்தை முகம் எனப் பொலிந்த ஒற்றி மாநகர்` என இயைக்க.

``உருவின் பெற்றி ஒன்றாகப் பெற்றோர் யாரே`` என்பதனை இறுதியிற் கொள்க.

துன்னும் - நெருங்கிய.

`நின் சடை மின்னின் பிறக்கம்; நின் சென்னியில் வடிவு அண்டம். நின் நுதல் நேர் நாட்டம் மூவகைச் சுடரும்; ஆரம் தாராகணம்; நின் ஆகம் விசும்பே; தோள் எண்டிசை; உடை கடல்; அல்குல் அவனி மண்டலம்; தாள் இணை வழக்குப் பாந்தள்; உயிர்ப்பு மாருதமே; நின் வாய்மொழி ஓசை முழுதும்; நின் உணர்வு ஞானத் தொகுதியே; நின தெழிவின் விளைவுகள் உலகு நிற்றலும் சுருங்கலும், விரிதலுமே, நின் இயல்பு அவற்றின் முயற்சியே.

அதுவும் இமைத்தலும் விழித்தலுமே; என்று இவை முதலாம் இயல்புடை வடிவினோடு உரு இருவகை ஆகி, எண்வகை மூர்த்தியோடு முத்திறக் குணம் முதலிய ஆகி, எண் இறந்து ஓங்கி, எவ்வகை அளவினும் காடு நின்று அவ்வகைப் பொருளும் நீ ஆகிய இடத்து (நின்) உருவம் ஒன்றாகப் பெற்றார் யாரே` என இயைத்து முடிக்க.

`சடை ஒரு வகையது, சென்னி ஒரு வகையது, கண்கள் ஒரு வகையன, மற்றும் பலவும் பலப்பல வகையன முழுமையாகப் பார்க்கும் பொழுதும் ஒரு கூறு ஆண், ஒரு கூறு பெண் என்றால் உனது திருமேனியை உலகில் உள்ள என் இனத்து உடம்பிலும் வைத்து ஒருதலையாக உணர்ந்தோர் ஒருவரும் இலர்` என்பதாம்.

இவற்றிடையே, `இயல்பு களும் உலகில் உள்ள ஒத்த உயிர் இனத்தின் இயல்பாகவும் இல்லை` என்பது கூறப்பட்டது.

இதனால், `இறைவன் சேதனம், அசேதனம் என்னும் இரு கூற்றுப் பிரபஞ்சத்துள் ஒன்றும் அல்லன்` என்பது அவனது தடத்த இயல்பானே உணரப்படுதல் கூறப்பட்டது.

பிறக்கம் - விளக்கம்.

பாலகன் - அக்கினி.

நுதல் நேர் - முகத்தில் பொருந்திய.

நுதல், ஆகுபெயர்.

தண் ஒளி - வெள் ஒளி.
வெள் ஒளி ஆரம், தலை மாலை.
``விண்ணவர் முதலா`` என்பதில் ``முதலா`` என்பது முனிவர், பிரமன், விட்டுணு ஆகியோரைக் குறித்தது.
வேறு, மக்கள் உலகின் வேறு.
கோலம் - அழகு.
ஆகம் - உடம்பு.
இருங்கடல் - கரிய கடல்.
அல்குல் - பிருட்டம்.
இதுபோலும் உயர்ந்தோர் செய்யுட்கள் பலவற்றிலும் `அல்குல்` என்பது ஆடவர்க்கும் உரிய உறுப்பாதல் வெளிப்படையாகவே சொல்லப்படவும் அதற்கு இக்காலத்துச் சிலர் இடக்கர்ப் பொருள் கொண்டு பழித்துரை கூறுதல் இரங்கற்குரியது.
அவனி மண்டலம் - பூ மண்டலம்; நிலத்தது அகலம்.
பாந்தள் - ஆதிசேடன்.
வழக்கு - இயக்கம்.
மாருதம் - காற்று.
உயிர்ப்பு - மூச்சு.
இறைவனது உணர்வு உள்நின்று உணர்த்தவே உயிர்களின் உணர்வு எதனையும் உணர்தல் பற்றி `அவனது உணர்வு உயிர்களின் உணர்வுத் தொகுதியே` என்றார்.
`முயற்சியே, முயற்சியும்` என `முயற்சி` என்பதை இரட்டித்துக் கொள்க.
``அதன்`` என்பதைத் தனித் தனிக் கூட்டுக.
அமைத்தல் - ஆக்குதல்.
தொழில் - தொழிலின் விளைவு; ஆகுபெயர்.
``இமைத்தல்`` என்பது கண்ணை மூடுதலைக் குறித்தது.
`கண்ணை மூடிக் கொள்ளுதல்` என்பது ஒன்றையும் நினையாமையையும், `விழித்தல்` என்பது நினைவு எழுதலையும் இலக்கணை வழக்காற் குறித்தன.
`இறைவன் நினைவை ஒடுக்கலால் உலகம் ஒடுங்குதலும், நினைவு கொள்ளுதலால் உலகம் தோன்றுதலும் உளவாகும்` என்றபடி.
இமைத்தல் விழித்தல்களை அமைத்தல் அழித்தல்களோடு எதிர்நிரல் நிறையாக இயைக்க.
``என்று``, எண்ணிடைச் சொல்.
துப்பு உரு - தூயதாகிய திருமேனி.
எண்வகை மூர்த்தி - அட்ட மூர்த்தம்.
``எண் இறந்த`` என்பதை `எண் இறப்ப` எனத் திரிக்க.

எவ்வகை அளவு - சிறுமை பெருமைகள்.
கூடி நிற்றல் - மிகுந்து நிற்றல்.
அவையாவன சிறியவற்றிற்கெல்லாம் சிறியர் ஆதலும்,
பெரியவற்றிற்கெல்லாம் பெரியன் ஆதலும்.
``இடத்து`` என்பது வினையெச்ச விகுதி.
`நீ இவ்வாறானவிடத்து, நின் உருவின் பெற்றி ஒன்றாகப் பெற்றார் யார்` என மேலே கூட்டி முடிக்க.

இடத்துறை மாதரோ டீருடம் பென்றும்
நடத்தினை நள்ளிருள் நவிற்றினை என்றும்
புலியதள் என்பொடு புனைந்தோய் என்றும்
பலிதிரி வாழ்க்கை பயின்றோய் என்றும்
அருவமும் உருவமும் ஆனாய் என்றும்

திருவமர் மாலொடு திசைமுகன் என்றும்
உளனே என்றும் இலனே என்றும்
தளரான் என்றும் தளர்வோன் என்றும்
ஆதி என்றும் அசோகினன் என்றும்
போதியிற் பொலிந்த புராணன் என்றும்

இன்னவை முதலாத் தாமறி அளவையின்
மன்னிய நூலின் பன்மையுள் மயங்கிப்
பிணங்கும் மாந்தர் பெற்றிமை நோக்கி
அணங்கிய அவ்வவர்க் கவ்வவை ஆகிப்
பற்றிய அடையின் பளிங்கு போலும்

ஒற்றி மாநகர் உடையோய் உருவே.

#1235

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஒற்றி மாநகர் உடையோய்! *(நின்)* உரு, பன்னிய நூலின் பன்மையுள் தாம் அறி அளவையில் மயங்கி என்றும், என்றும்.
பிணங்கும் மாந்தர் பெற்றிமை நோக்கி அவ்வவர்க்கு அவ்வவையாகிப் பற்றிய அடையின் பளிங்கு போலும்` என இயைத்து முடிக்க.
முதல் நான்கு அடிகளில் கூறப்பட்டன சைவ புராணங்களையே பற்றி மாகேசுர மூர்த்தங்களுள் ஒவ்வொன்றையே சிவபெருமானது உண்மையியல்பாகக் கூறிப் பிணங்கும் பௌராணிகரும், அகப்புறச் சமயிகளும்.

`அருவம் ஆனாய்` என்றும், `உருவம் ஆனாய்` என்றும் எனக் கொண்டு கூட்டிக் கொள்க.
`இறைவன் உருவம் உடையனாயின் உயிர் வருக்கத்தவனாவன் ஆதலின் இறைவனுக்கு எவ்வாற்றானும் உருவமில்லை; அவன் அருவனே என்பார் மேற்கூறிய இருமதத்தவருள் ஒவ்வொரு சாரார்.
இனி, `இறைவன் உருவன் ஆகாவிடில் உயிர்களுக்குக் காட்சி வழங்குமாறில்லை.
அதனால் இறைவனுக்கு உருவமும், அவனுக்கென இடமும் உள்ளன` என்பாரும் மேற்கூறிய இரு மதத்தவருள் ஓரொரு சாரார்.
`திருமாலே இறைவன்` என்பார் பாஞ்சராத்திரிகள்.
`திசைமுகனே இறைவன்` என்பார் இரணிய கருப்ப மதத்தினர்.
`இறைவன் உளன்; ஆயினும் அவனை இன்னன் - எனக்கூற இயலாது` என்பார் மாயாவாதிகள்.
`இறைவன் இல்லை` என்பார் உலகாயதரும், மீமாஞ்சரரும், நிரீச்சுர சாங்கியரும்.
தளர்தல் நெகிழ்தல், அருளுதல், தளராமை இரங்காது ஒறுத்தலே செய்தல் தளர்தல் ஒறுத்தல் இன்றி அருளலே செய்தல்.
எட்டாம் அடியிற் கூறிய இரண்டும் சமணர் கூற்றுக்கள்.
ஆதி - ஆதி முத்தன்.
அசோகினன் - அசோக மரத்தின்கீழ் இருப்பவன்.
போதி - அரச மரம்.
புராணன் - பழையோன்.
`போதி நிழலில் இருப்போன் இறைவன்` என்பார் புத்த மதத்தினர்.
நூல் - வேறுபட்ட சமய நூல்கள்.
இவைகளையே உணர்ந்து வேத சிவாகமங்களை உணராதாரும், உணரினும் தெளியாதாரும் ஆசிரியராய் மெய்யுணர்வு கொளுத்தப் புகுதலால் இவை போலும் பிணக்குகள் உளவாகின்றன.
அதனையே திருமூல நாயனார், குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக் குருடுங் குருடுங் குழிவிழு மாறே
என்று அருளிச்செய்தார்.
``செய்பவர் செய்திப் பயன் விளைக்கும் செய்யேபோல்`` *2* அவரவரது அறிவு செயல்களுக்குத் தக இறைவன் பயன் அளிப்பவனேயல்லது, அவரது செயலையும் வீணாக்குபவன் அல்லன் ஆதலின் அவரவர் கருதுமாறே நின்று அவரவர்க்குப் பயன் தருவன் என்பது பற்றி ``அவ்வவர்க்கு அவ்வவை யாகி`` என்றார்.
அணங்கிய - துன்புற்ற.
அடை - அடைக்கப்பட்ட பொருள்.

பளிங்கு தன்னால் அடையப்பட்ட பொருளின் தன்மையாய் நிற்றல்போல, `இறைவன் தான் தனது அருள் காரணமாகத் துணையாய் அடையப்பட்டாரது கருத்திற்கேற்ற இயல்பினை உடையனாவன்` என்பதாம்.

பொன்மை நீலாதி வன்னம்
பொருந்திடப் பளிங்கு அவற்றின்
தன்மையாற் நிற்கு மாபோல்

என்றார் சிவஞான சித்தியிலும் *3* இடத்து - இடப்பாகத்தில் உரு, இங்கு `இயல்பு` என்னும் பொருட்டு.

உருவாம் உலகுக் கொருவன் ஆகிய
பெரியோய் வடிவிற் பிறிதிங் கின்மையின்
எப்பொரு ளாயினும் இங்குள தாமெனின்
அப்பொருள் உனக்கே அவயவம் ஆதலின்
முன்னிய மூவெயில் முழங்கெரி ஊட்டித்

தொன்னீர் வையகம் துயர்கெடச் சூழ்ந்ததும்
வேள்வி மூர்த்திதன் தலையினை விடுத்ததும்
நீள்விசும் பாளிதன் தோளினை நெரித்ததும்
ஓங்கிய மறையோர்க் கொருமுகம் ஒழித்ததும்
பூங்கணை வேளைப் பொடிபட விழித்ததும்

திறல்கெட அரக்கனைத் திருவிரல் உறுத்ததும்
குறைபடக் கூற்றினைக் குறிப்பினில் அடர்த்ததும்
என்றிவை முதலா ஆள்வினை எல்லாம்
நின்றுழிச் செறிந்தவை நின்செய லாதனின்
உலவாத் தொல்புகழ் ஒற்றி யூர

பகர்வோர் நினக்குவே றின்மை கண்டவர்
நிகழ்ச்சியின் நிகழின் அல்லது
புகழ்ச்சியிற் படுப்பரோ பொருளுணர்ந் தோரே.

#1236

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சிவபெருமான் செய்த வீரச் செயல்களாகப் புராணங்களில் சொல்லப்படுவன பல.

அவை திரிபுரம் எரித்தது, தக்கன் வேள்வியில் எச்சனது தலையைத் தடிந்தது, இந்திரன் தோளை ஒரு காலத்தில் முறித்தது, பிரமன்

தலைகளுள் ஒன்றைக் கிள்ளியது, காமனை எரித்தது, இராவணனை மலைக்கீழ் அகப்படுத்தி நெரித்தது.
யமனை உதைத்தது முதலியன.
சிவபெருமானது வியாபகத்துள் அடங்காதது எப்பொருளும் இல்லை.
அஃதே எல்லாப் பொருளையும் அவன் தனக்கு வடிவாக உடைமையின் எப்பொருளும் அவனது உறுப்பே.
ஆகவே, பொது மக்களேயன்றி, `எப் பொருளும் இறைவன் வடிவே` என உணர்ந்தோரும் மேற்கூறிய செயல்களைச் சிறப்பாக எடுத்துக் கூறுவார்களாயின் அது நீ ஓரோர் காலத்து நிகழ்த்திய நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுவதாகுமேயன்றி, உன்னைப் புகழ்ந்த தாகுமோ? (ஆகாது. ஏனெனில், ஒருவன் தனது உறுப்புக்களைத் தான் பலவகையில் இயக்குதல் அவனுக்குப் புகழாகுமோ? ஆகாமை போல என்பதாம்.)
உருவாம் உலகு - பருப்பொருளாய் உள்ள உலகு.
ஒருவன் - ஒப்பற்ற தலைவன்.
``வடிவு`` என்றது வியாபகத்தை.
சூழ்தல் - எண்ணுதல்.
வேள்வி மூர்த்தி - எச்சன்; யாக தேவன்.
விசும்பு ஆளி - இந்திரன்.
மறையோன் - பிரமன்.
ஆள்வினை - வீரம்.
``கண்டவர்`` என்பதன் பின் `ஆயின்` என ஒரு சொல் வருவிக்க.
படுப்பரோ - படுத்து உணர்வரோ.
``உலவாத் தொல் புகழ் ஒற்றியூர்`` என்பதை முதலிற் கொள்க.

பொருளுணர்ந் தோங்கிய பூமகன் முதலா
இருள்துணை யாக்கையில் இயங்கு மன்னுயிர்
உருவினும் உணர்வினும் உயர்வினும் பணியினும்
திருவினும் திறலினுஞ் செய்தொழில் வகையினும்
வெவ்வே றாகி வினையொடும் பிரியாது

ஒவ்வாப் பன்மையுள் மற்றவர் ஒழுக்கம்
மன்னிய வேலையுள் வான்திரை போல
நின்னிடை எழுந்து நின்னிடை ஆகி
பெருகியும் சுருங்கியும் பெயர்ந்தும் தோன்றியும்
விரவியும் வேறாய் நின்றனை விளக்கும்

ஓவாத் தொல்புகழ் ஒற்றி யூர
மூவா மேனி முதல்வ நின்னருள்

பெற்றவர் அறியின் அல்லது
மற்றவர் அறிவரோ நின்னிடை மயக்கே.

#1237

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஓவாத் தொல் புகழ் .
முதல்வ`` என்பதை முதலிற்கொள்க.
பொருள் - வேதப் பொருள்.
பூ மகன் - மாயோனது உந்திக் கமலத்தில் தோன்றிய பிரமன்.
முதல் தொழிலாகிய படைத் தலைச் செய்தல் பற்றிப் பிரமனையே முதல்வனாகக் கூறினார்.
எனினும் அவனுக்கு மேலும் உயர் இனத்தவர் உளர் என்க.
இருள் - அறியாமை.
துணை - அவ் இருளைச் சிறிதே போக்கி உதவுவது.
எனவே, அத்தகைய யாக்கையின்றி இயங்கும் மன்னுயிர்`` - என்றார்.
`மன்னுயிர் வினையொடும் பிரியாது` என இயையும்.
வினை காரண மாக அவையடையும் மாற்றங்கள் உருவொடு உணர்வும், உயர்வொடு தாழ்வும், திருவொடு தெளிவுமாம்.
உரு - உடம்பு.
இது பருப்பொருள்.
உடம்பினின்றும்.
தோன்றும் உணர்வுகள் நுட்பப்பொருள்.
பணி - தாழ்வு.
திரு - செல்வம்.
திறல் - வெற்றி.
இன் உருபுகள் ஏதுப் பொருளவாய், ``வெவ்வேறாகி`` என்பதனோடு முடிந்தன.
``பிரியாது`` என்னும் எதிர்மறை வினையெச்சம், `நின்று` என்னும் பொருட்டாய், ``வினை யொடும்`` என்பதற்கு முடிபாயிற்று.
அவ் எச்சம், `ஒழுக்கம்`` என்னும் தொழிற் பெயர் கொண்டது.
உண்மை சிறப்பு.
ஒவ்வா - ஒன்றுக்கொன்று மாறுபட்ட.
``பன்மையுள்`` என்பதில் உள்ள ``உள்`` என்பதை இன்னாகத் திரிக்க.
`நின்னிடையாகியும்` என உம்மை கொடுத்து ஓதுதல் பாடம் அன்று.
பெயர்தல் - மறைதல்.
``பெருகி`` முதலிய நான்கு வினை யெச்சங்களும் ``விரவி`` என்பதனோடு முடிந்தன.

``விரவியும்`` என்னும் உம்மை சிறப்பு.
`விளக்கம்` வேறாய் நின்றன` என மாற்றிக் கொள்க.
``நின்னிடையதாகிய இம் மயக்கினை நின் அருள் பெற்றவர் அறியினல்லது, மற்றவர் அறிவரோ`` என முடிக்க.
மயக்காவது, உண்மை மாத்திரையால் பொதுப் படத் தோன்றி, `இன்னது` எனச் சிறப்புற விளங்காமை.
மயக்கு உடையதனை ``மயக்கு`` என்றது உபசாரம்.
``ஒற்றியூர்ப் பெருமானே பலவாகிய உயிர்கள் தம் வினை காரணமாக அடையும் அளவிறந்த மாற்றங்கள் பலவற்றிற்கும் நீயே இடமாய் நின்றும் அவற்றுள் ஒரு மாற்றத்தினையும் நீ சிறிதும் எய்தாது, மாற்றம் இல் செம் பொருளாயே நிற்கின்றாய்; இஃது எவ்வாறு` என்னும் அருள் பொருளை உனது அருளைப் பெற்றோர் உணர்வதன்றி, மற்றவர் உணர வல்லுநரல்லர்` என்பது இப்பாட்டின் திரண்ட பொருள்.
இஃது எல்லாப் பொருட்கும் இடமாய் நிற்பது ஆகாயமேயாயினும், அப் பொருள்களின் மாற்றங்களுள் ஒன்றை யேனும் அவ் ஆகாயம் எய்தாதது போல்வது.
இதனையே, `கலப்பினால் எல்லாமாய் நிற்கின்ற இறைவன் பொருள் தன்மையால் அவற்றின் வேறாகியும் நிற்கின்றான்` எனச் சித்தாந்த நூல்கள் கூறுகின்றன.

மயக்கமில் சொல்நீ ஆயினும் மற்றவை
துயக்க நின்திறம் அறியாச் சூழலும்
உறைவிடம் உள்ளம் ஆயினும் மற்றது
கறைபட ஆங்கே கரந்த கள்ளமும்
செய்வினை உலகினிற் செய்வோய் எனினும்
அவ்வினைப் பயன்நீ அணுகா அணிமையும்
இனத்திடை இன்பம் வேண்டிநின் பணிவோர்
மனத்திடை வாரி ஆகிய வனப்பும்
அன்பின் அடைந்தவர்க் கணிமையும் அல்லவர்ச்
சேய்மையும் நாள்தோறும்

என்பினை உருக்கும் இயற்கைய ஆதலின்
கண்டவர் தமக்கே ஊனுடல் அழிதல்
உண்டென உணர்ந்தனம் ஒற்றி யூர
மன்னிய பெரும்புகழ் மாதவத்
துன்னிய செஞ்சடைத் தூமதி யோயே.

#1238

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஒற்றி யூர! செஞ்சடை மாதவன் துன்னிய தூ மதியோய்! `சொற்கள் யாவும் நீ` என்பது உண்மையாய் இருக்கவும் அவை உனது இயல்பை அறிய இயலாத நிலைமையை நீ உயிர்களின் உள்ளங்கள் யாவும் உனது உறைவிடங்களேயாதல் உண்மையாய் இருக்கவும், அவ்வுள்ளங்கள் அறியாதவாறு கரந்து நிற்கும் கள்வன் ஆகின்றனை நீ.

உலகில் நிகழும் தொழில்களையெல்லாம் செய்பவன் நீயேயாதல் உண்மையாய் இருக்கவும், அத் தொழில்களால் விளையும் பயன்களுள் ஒன்றும் உன்னைப் பற்றாதவாறே அவற்றிற்குப் பற்றாகின்றனை நீ.

அடியார் கூட்டத்துள் நின்று உனது இன்பத்தினை விரும்பி உன்னை வணங்குகின்றவர்களது உள்ளங்களில் அந்த இன்பமாகவே விளைகின்றவன் நீ.

உயிர்கள் யாவும் இனத்தால் ஒன்றாயிருந்த போதிலும் உன்னை அடைந்தவர்க்கு அண்மையனாயும், அடையாதவர்க்குச் சேய்மையனாயும் இருக்கின்றவன் நீ.

இத் தன்மைகளை எண்ணிப் பார்க்கின் இவை அங்ஙனம் எண்ணிப் பார்ப்பவரது எலும்பையும் உருக்கும்.

ஆகவே, இத் தன்மைகளை உணர்ந்தவர்கட்கே ஊன் உடம்பு அற்றொழியும் நிலைமை, (பிறவா நிலைமை) உண்டாகும் என யாம் உணர்ந்தேம்` என்பது இப்பாட்டின் பொருள்.

மற்று இரண்டும் அசைகள்.

துயக்கம் - கலக்கம்.

சூழல் - சூழ்நிலை.

கனற்பட - குற்றம் உண்டாக.

இனம் - அடியார் கூட்டம்.

வாரி - வெள்ளம்; அல்லது கடல்.

வனப்பு, இங்கே சிறப்பு.

அணிமையனை ``அணிமை`` என்றும், சேய்மையனை ``சேய்மை`` என்றும் கூறியன உபசார வழக்கு.

காண்டல் - உணர்தல்.

``மன்னிய பெரும் புகழ்`` என்பது மதியணிந்தவ னாகிய இறைவனைச் சிறப்பித்தது.

சந்திரன் இறைவன் திருமுடிமேல் இருக்கப்பெற்றது தவத்தினால் ஆகலின் ``மாதவம் துன்னிய தூமதி`` என்றார்.

`செஞ்சடைக் கண் மாதவன் துன்னிய தூமதியோய்` என்க.

தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி
ஆமதி யானென அமைத்த வாறே

அறனுரு வாகிய ஆனே றேறுதல்
இறைவன் யானென இயற்று மாறே
அதுஅவள் அவனென நின்றமை யார்க்கும்

பொதுநிலை யானென உணர்த்திய பொருளே
முக்கணன் என்பது முத்தீ வேள்வியில்
தொக்க தென்னிடை என்பதோர் சுருக்கே
வேத மான்மறி ஏந்துதல் மற்றதன்
நாதன் நானென நவிற்று மாறே

மூவிலை ஒருதாள் சூலம் ஏந்துதல்
மூவரும் யானென மொழிந்த வாறே
எண்வகை மூர்த்தி என்பதிவ் வுலகினில்
உண்மை யானென உணர்த்திய வாறே
நிலம்நீர் தீவளி உயர்வான் என்றும்

உலவாத் தொல்புகழ் உடையோய் என்றும்
பொருநற் பூதப் படையோய் என்றும்
தெருளநின் றுககினில் தெருட்டு மாறே
ஈங்கிவை முதலா வண்ணமும் வடிவும்
ஓங்குநின் பெருமை உணர்த்தவும் உணராத்

தற்கொலி மாந்தர் தம்மிடைப் பிறந்த
சொற்பொருள் வன்மையின் சுழலும் மாந்தர்க்
காதி ஆகிய அறுதொழி லாளர்
ஓதல் ஒவா ஒற்றி யூர
சிறுவர்தம் செய்கையிற் படுத்து
முறுவலித் திருத்திநீ முகப்படு மளவே.

#1239

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதற்கண் `நீ` என்னும் தோன்றா யெழுவாய் வருவித்துக் கொள்க.
நீ சடைமிசைத் தூமதி சூடுதல், `யான் தூநெறியை உணரும் அறிவு வடிவானவன்` என்பதைக் குறிக்கும் குறிப்பாம்.
நீ அறக்கடவுளாகிய ஆன் ஏறு (இடபம்) ஊர்தல், அறத்தின் வழி உலகை நடத்தும் முதல்வன் யான்` என அறிவிக்கும் குறிப்பாம்.
(தனி ஒரு பொருளேயாகிய நீதானே) ஒருகால் `சிவம்` என

அஃறிணையாயும், ஒருகால் `சிவன்` என உயர்திணை ஆடூவாயும் ஒருகால், `சிவை` என உயர்திணை மகடூவாயும் சொல்ல நிற்றல், `உலகப் பொருள் அனைத்திலும் ஒருபடித்தாக நிறைந்து நின்று அவற்றை அவ்வவ் வழியில் இயக்குபவன் யான்` என்பதை அறிவிப்பதாம்.
மதி, கதிர், தீ (சோம சூரியாக்கினி) மூன்றையும் மூன்று கண்களாகக் கொண்டது `அந்தணர்கள் வேட்கும் முத்தீயும் உனது கண்ணொளிக்கூறே` என்பதை உணர்த்துவதாம்.
நான்கு கால்களை உடையதாய், ஒலிக்கும் தன்மையுடைய மான் கன்றைக் கையில் பிடித்துள்ளது, `நான்கு பகுதியதாய `வேதத்திற்குக் கருத்தா யான்` என்பதைத் தெரிவிப்பதாம்.
முனை மூன்றாய், அடி ஒன்றாய் உள்ள சூலத்தை ஏந்தியிருப்பது, `மூவர் மூர்த்திகட்கும் முதலாய் உள்ள ஒருவனாகிய இறைவன் நான்` என்பதை அறிவுறுத்துவதாம்.
அட்ட மூர்த்தியாய் இருத்தல், `மாற்றம் உடைய அனைத்து உலகப் பொருட்கும் மாற்றம் இன்றி நிற்கும் அடிநிலைப் பொருள் நான்` என்பதைத் தெளிவுபடுத்துவதாம்.
ஈங்கு இவை முதலாம் வண்ணமும், வடிவும் `நிலம் முதலிய ஐம்பெரும் பூதங்களும் தானேயாய், மற்றும் முதற் பொருளின் இயல்புகள் பலவற்றையும் உடைய இறைவன் நீயே` என்றும், `அது, பூத நாதனாய் நிற்குமாற்றானே அறியப்படும் என்றும் தெளிவுபட வேதம் முதலிய நூல்கள் பலவும் ஒருபடித்தாக வெளிப்பட எடுத்துக் கூறுகின்றபடியே உனது பெருமைகளை உணர்த்தும் சிறப்பு அடையாளங்களாய் நின்று உணர்த்தவும் உணராது பிணங்கி நிற்போர், தமக்குத் தாமே கேடு சூழ்ந்து கொள்ளும் தற்கேடரே யாவர்.
அவர் தாம் (நல்ல போலவும், நயவ போலவும்) கூறும் சொல்லிலும், பொருளிலும் அகப்பட்டு மயங்குவார் மயங்காதபடி வேதத்தை வன்மையாக உணர்ந்த அந்தணர்கள் பலர்க்கும் தெளிவுபட ஓதும் வேத முழக்கம் என்றும் நீங்காது ஒலிக்கின்ற திருவொற்றியூரில் உள்ள பெருமானே! (நீ மேற்கூறிய பிணக்குரையாளர்கள்) பிணக்குரையை உன் முன்னே கூறும்பொழுது, நீ (நடை வழியை `சிறந்த மாட மாளிகை` என்றும், மணலை `சோறு` என்றும் சொல்லிக் களிக்கின்ற) `சிறுவர் செயலோடு ஒப்பது` என்று கருதிப் புன்முறுவல் பூத்திருக் கின்றாய் போலும்! என்பது இப்பாட்டின் திரண்ட பொருள்.
``ஓதி ஓர்க்கப்படாப் பொருளை ஓர்விப்பன`` 1 என்று அருளிச்செய்த ஆளுடைய பிள்ளையார் அருள்மொழியின்படி, வேதாகமங்களை ஓதியுணர மாட்டாத எளியோர்க்கும், வேதாகமங் களை ஓதிய போதிலும்

அதன் உண்மையுணர மாட்டாதவர்க்கும் சிவபெருமானது பெருமைகளை இனிது விளக்கி நிற்பனவே அவனது திருமேனியிற் காணப்படும் சிறப்பு அடையாளங்கள்.
ஆயினும் சில மயக்க நூல்களால் மயங்குவோர் அவற்றின் உண்மையை உணராது தோற்ற மாத்திரத்தையே கண்டு அவரை இகழ்ந்தேபோவர் - என்பதைக் காரைக்காலம்மையார், இவரைப் பொருள் உணர மாட்டாதா ரெல்லாம்
இவரை இகழ்வதே கண்டீர்
என்று அருளிச் செய்தார்.
காணிலும் உருப்பொலார்; செவிக்கினாத காட்சியார் *3* என்பது முதலியவைகளில் அவ்வாறான இகழுரைகளைக் காணலாம்.
அறக்கடவுளே ஆனேற்றுருவாய் வந்து சிவபெருமானைச் சுமந்த வரலாற்றைக் கந்த புராணத்துத் தட்ச காண்டத்துத் ததீசி உத்தரப் படலத்துட் காண்க.
முத்தீக்கள் வட்டம், வில், முக்கோணம் ஆகி இம்மூவகை வடிவில் அமைக்கப்படும் குண்டங்களில் வளர்க்கப்படும் வேள்வித் தீக்கள்.
அவை முறையே சூரியன், சந்திரன், அக்கினி வடிவங்களைக் குறிக்கும்.
சதுரமும் வட்டத்தில் அடங்குவதாகும்.
வேதமான் - வேதம் போலும் மான்.
வேதம் போலும், நான்கு கால்களை உடைமையும், ஒலித்தலும்.
`பூத நாதன்` என்பது வெளிப் படைப் பொருளில் ``பூத கணங்கட்குத் தலைவன்`` எனப் பொருள் தரினும் உள்ளுறைப் பொருளில் `உயிர்கட்குத் தலைவன்` *(பசுபதி)* எனப் பொருள் தரும்.
``தெருட்டுமாற்றானே` என உருபு விரிக்க.
``தற்கொலி`` என்பது சாதிப் பெயராய் நின்றது.
``சொல்வன்மை, பொருள் வன்மை`` எனத் தனித் தனிக் கூட்டுக.
பொருள் வன்மை யாவது வெளிப்படைப் பொருள் இகழ்ச்சியா அமைதல்.

அளவினில் இறந்த பெருமையை ஆயினும்
எனதுளம் அகலா தொடுங்கிநின் றுளையே
மெய்யினை இறந்த மெய்யினை ஆயினும்
வையகம் முழுதும்நின் வடிவெனப் படுமே
கைவலத் திலைநீ எனினும் காதல்

செய்வோர் வேண்டும் சிறப்பொழி யாயே
சொல்லிய வகையால் துணையலை ஆயினும்
நல்லுயிர்க் கூட்ட நாயகன் நீயே

எங்கும் உள்ளோய் எனினும் வஞ்சனை
தங்கிய அவரைச் சாராய் நீயே

அஃதான்று
பிறவாப் பிறவியை பெருகாப் பெருமையை
துறவாத் துறவியை தொடராத் தொடர்ச்சியை
நுகரா நுகர்ச்சியை நுணுகா நுணுக்கினை
அகலா அகற்சியை அணுகா அணிமையை

செய்யாச் செய்கையை சிறவாச் சிறப்பினை
வெய்யை தணியை விழுமியை நொய்யை
செய்யை பசியை வெளியை கரியை
ஆக்குதி அழித்தி ஆன பல்பொருள்
நீக்குதி தொகுத்தி நீங்குதி அடைதி
ஏனைய வாகிய எண்ணில் பல்குணம்
நினைதொறும் மயக்கும் நீர்மைய ஆதலின்
ஓங்குகடல் உடுத்த ஒற்றி யூர
ஈங்கிது மொழிவார் யாஅர் தாஅம்
சொல்நிலை சுருங்கின் அல்லது

நின்னியல் அறிவோர் யார்இரு நிலத்தே.
#1240
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஓங்கு கடல் உடுத்த ஒற்றி யூர`` என்பதை முதலிற் கொள்க.
அளவு - அளவை வகைகள்.
அவை யனைத்தையும் கடந்த பெருமை - பரப்பு.
`யாதோர் அளவைக்கும் உட்படாத நீ என்னுடைய சிறிய உள்ளத்தினுள் ஒடுங்கி நிற்கின்றாய்.
``இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்`` *1* என ஔவையாரும் கூறினார்.
மெய் - உயிர்கள் பெறுகின்ற பலவகையான உடம்புகள்.
அத்தகைய உடம்பு எதுவும் உனக்கு இல்லையாயினும் உலகம் முழுதும் உனக்கு உடம்பாகச் சொல்லப்படுகின்றது.
(``விசுவ ரூபி`` என்பது வேத மொழி) ``கைவலம்`` என்பதில் வலம், ஏழனுருபு.
நீ ஒருவர் கைக்கும் உட்படாதவனாயினும், காதல் செய்வோர்

(அன்பர்கள்) செய்யும் சிறப்பு - பூசையும், விழாவும் போல்வனவற்றில் நீங்காது நிற்கின்றாய்.
முற்படக் கூறிய வகைகளால் நீ ஒருவர் பக்கத்திலும் உள்ளாயில்லை யாயினும் உயிர்த் தொகுதிக்கு நீயே தலைவனாகின்றாய்.
நீ இவ்விடத்திலும் ஒழிவின்றி நிற்பவனாயினும் வஞ்சனையாளரை அணுகாதவனாகின்றாய்.
இவ்வாறன்றியும் பிறவாமலே பிறந்த பிறவியை உடையாய்;
(இயற்கைப் பொருள், அனாதிப் பொருள்` என்பதாம்.
படிமுறையால் பெருகாத (வளராத - இயல்பிலே) விரிந்து நிற்கின்ற விரிவை உடையாய்; துறவாமலே துறந்த துறவை உடையாய்;
(`முன்னே பற்றுக் கொண்டிருந்தது, பின்பு அப்பற்றைத் துறவாமல் இயல்பாகவே பற்றற்றவனாய் இருக்கின்றாய்` என்பதாம்.)
பிறப்பை, `பிறவி` என்றல் போலத் துறவை, `துறவி` என்றலும் வழக்கு.
தொடர்ச்சி - இயைபு.
முன்பு வேறாய் இருந்து, பின்பு பிற பொருள்களோடு தொடர்பு கொள்ளாமல் அனாதியே எல்லாப் பொருளிலும் இயைந்து நிற்கின்றாய்;
யாதொரு நுகர்ச்சியையும் உயிர்கள் நுகர்தற் பொருட்டு அவைகளோடு உடனாய் நின்று, அவை நுகர்வனவற்றை நீயும் நுகர்கின்றாய் எனினும், அந்நுகர்ச்சியால் நீ தாக்கப்படாது நினது இயல்பிலே நிற்கின்றாய்.
படி முறையால் வளர்ச்சியடையாது இயல்பாக விரிந்த விரிவினை உடையையாதல் போலச் சிறிது சிறிதாகத் தேய்ந்து நுணுகாது இயல்பிலே அணுவினும் அணுவாய் நுணுகி நிற்கின்றாய்; உயிர்களின் மன வாக்குக் காயங்களுக்கு முன்னர் அகப்படும் பொருளாய் இருந்து, பின் அகப்படாமல் நீங்கினையாகாது, இயல்பிலே அவற்றைக் கடந்து நிற்கின்றாய்.
அஃதேபோல, முன்பு சேய்மைப் பொருளாய் இருந்து, பின்பு அண்மைப் பொருள் ஆகாது இயல்பிலே அண்மைப் பொருளாய் நிற்கின்றாய்.
இவ்வாறே நீ ஒன்றையும் செய்யாமலே எல்லாவற்றையும் செய்தலையும், ஒரு காலைக்கொருகால் சிறந்து நில்லாது இயல்பாகவே எல்லாப் பொருளினும் மேலாகச் சிறந்த சிறப்பினையும் உடையவன் ஆகின்றாய்.
வெப்பத்தை உடையனாய், அதுபொழுது தட்பத்தை உடையவனாயும், திண்மையுடையவனாய், அதுபொழுதே நொய்ம்மையை உடையவனாயும் இருக்கின்றாய்; இன்னும் எப்பொருளையும் படைக்கின்றாய்; பின்பு அழித்து விடுகின்றாய்.
கூடியிருக்கும் பல பொருள்களை வேறு வேறாக்கி நீக்கச் செய்கின்றாய்; அதனோடு வேறு வேறாய் நீங்கி நிற்கின்ற பொருளை ஒன்றாய்த்

தொகுக்கின்றாய்.
நின்ற பொருளினின்றும் நீங்குகின்றாய்; (இஃது அப்பொருள் கேடுறுதற் பொருட்டு.
``கடலின் நஞ்சமுது உண்டவர் கைவிட்டால் - உடலினார் கிடந்து ஊர்முனி பண்டமே`` *1* என்னும் அப்பர் வாக்காலும் அறியப்படும்.)
நீங்கிநின்ற பொருளோடு சேர்கின்றாய்.
இஃது அப்பொருள் ஆக்கம் பெறுதற் பொருட்டு.
எண்ணில் பல்குணம் - ஓர் இனப்படுத்த இயலாத பல்வேறான தன்மைகள்.
மயக்குதல் - ஐயத்தைத் தோற்றுதல்.
உணர்வு ஒருதலைப் படாது பலதலைப்படச் செய்தல்.
ஈங்கிது - இத்தன்மைத்தாய இது.
மொழிவார் யார் - ஒருதலைப்பட அறுதியிட்டுச் சொல்பவர் யாவர்?
`ஒருவரும் இலர்` என்றபடி வந்தது.
இவ்வாறெல்லாம் `மெய்ப் பொருள் இன்னது எனச் சொல்ல வாராத அநிர்வசனப் பொருள்` என்பது கருத்தன்று - என்றற்கு,
சொல்நிலை சுருங்கி னல்லது
நின்னிலை அறிவோர் யார் இருநிலத்தே
என்றார்.
சொல்நிலை - `அது இன்னது` எனத் தம்மின் வேறாய்ச் சுட்டியுணர்ந்து சொல்லும் நிலை.
அது நீங்குதலாவது, தான் அதனின் வேறாய் நில்லாது அதுவேயாய் ஒட்டியுணரும் நிலை.
அந்நிலை உணர்வார் உணர்வதாய் நிற்பதல்லது, வேறாய்ப் பிறர்க்கு உணர்த்த வருவதன்று.
அதனையே,
இங்ங னிருந்ததென் றெவ்வண்ணம் சொல்லுகேன்
அங்ங னிருந்ததென் றுந்தீபற
அறியும் அறிவதன் றுந்தீபற
எனத் திருவுந்தியார் கூறிற்று.
``எவ்வண்ணம் சொல்லுவேன்`` என்றதனால் அட்டியுணர்த்தப்படாமை கூறினாராயினும் ``அங்ஙன் இருந்தது`` என்றமையால் அஃது அனுபவப் பொருளாயினமை கூறினாராதலின், `மெய்ப்பொருள் அநிர்வசனீயம்` என்றல் பொருந்தாதாம்.
விழுப்பம், இங்குத் திட்பத்தைக் குறித்தது.

நிலத்திடைப் பொறையாய் அவாவினில் நீண்டு
சொலத்தகு பெருமைத் தூரா ஆக்கை

மெய்வளி ஐயொடு பித்தொன் றாக
ஐவகை நெடுங்காற் றாங்குடன் அடிப்ப
நரையெனும் நுரையே நாடொறும் வெளுப்பத்

திரையுடைத் தோலே செழுந்திரை யாகக்
கூடிய குருதி நீரினுள் நிறைந்து
மூடிய இருமல் ஓசையின் முழங்கிச்
சுடுபசி வெகுளிச் சுறவினம் எறியக்
குடரெனும் அரவக் கூட்டம்வந் தொலிப்ப

ஊன்தடி எலும்பின் உள்திடல் அடைந்து
தோன்றிய பல்பிணிப் பின்னகம் சுழலக்
கால்கையின் நரம்பே கண்ட மாக
மேதகு நிணமே மெய்ச்சா லாக
முழக்குடைத் துளையே முகங்க ளாக
வழுக்குடை மூக்கா றோதம்வந் தொலிப்ப
இப்பரி சியற்றிய உடலிருங் கடலுள்
துப்புர வென்னும் சுழித்தலைப் பட்டிங்
காவா என்றுநின் அருளினைப் பெற்றவர்
நாவா யாகிய நாதநின் பாதம்

முந்திச் சென்று முறைமையின் வணங்கிச்
சிந்தைக் கூம்பினைச் செவ்விதின் நிறுத்தி
உருகிய ஆர்வப் பாய்விரித் தார்த்துப்
பெருகிய நிறையெனுங் கயிற்றிடைப் பிணித்துத்
துன்னிய சுற்றத் தொடர்க்கயி றறுத்து

மன்னிய ஒருமைப் பொறியினை முறுக்கிக்
காமப் பாரெனுங் கடுவெளி அற்றத்
தூமச் சோதிச் சுடருற நிறுத்திச்
சுருங்கா உணர்ச்சித் துடுப்பினைத் துழாவி
நெருங்கா அளவில் நீள்கரை ஏற்ற

ஆங்கவ் யாத்திரை போக்குதி போலும்
ஓங்குகடல் உடுத்த ஒற்றியூ ரோயே.

#1241

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியை முதலிற் கொள்க.
இப் பாட்டினுள் உடம்பு கடலாகவும், இறைவன் திருவடி அக்கடலைக் கடப்பிக்கும் மரக்கல மாகவும், இறைவன் திருவருளைப் பெற்றோரே அம்மரக்கலத்தைப் பற்றிக் கடலைக் கடக்கும் பயணிகளாகவும் உருவகம் செய்யப்படுதல் அறியத் தக்கது.
`பாதத்தில் சிந்தையை நிறுத்தி` என்க.
பொறை - சுமை.
`உடம்பை பூமியோடு பொருத்திக் காணின் உடம்பு பூமிக்குச் சுமையாகும்` எனவும், `ஆசையோடு பொருத்திப் பார்க்கின், எல்லை யின்றி நீள்வதாகும்.
(ஆசைக்கு அளவில்லை என்பதாம்.)
சிறுமையைப் `பெருமை` என்றது இகழ்ச்சிக்குறிப்பு.
``ஆக்கை`` என்னும் ஐகார ஈற்றுத் தொழிற்பெயர் ஆகுபெயராய் ஆக்கப்பட்ட குழியைக் குறித்தது.
குழி - பள்ளம்; ஆழம் என்றது வயிற்றை.
`பொறையாய், நீண்டு, தூர்க்கப்படாத ஆழத்தையுடைய இருங்கடல்` என்க.
வளி - வாதம்.
ஐ - சிலேத்துமம்.
வாதம் முதலிய மூன்று முதல் நிலைப் பொருள்களில் தலையாயது வாதமேயாதலின் அதனை, ``மெய் வளி`` என்றார்.
``ஓடு`` என்பதை வளி, பித்து இவற்றிற்கும் கூட்டுக.
`வளி முதலிய மூன்றனோடுங் கூடி, ஐவகைக் காற்று அடிப்ப` என்க.
தச வாயுக்களில் பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன் என்னும் ஐந்தே சிறப்புடைமை பற்றி ``ஐவகைக் காற்று அடிப்ப`` என்றார்.
கடலில் பல திசையான காற்றுக்கள் அடித்தல் இயல்பு.
வெளுப்ப - வெளிதாய்த் தோன்ற.
மெலிந்து தொங்கும் தோல், `திரை` எனப்படும்.
கடல் அலைகளுக்கும், `திரை` என்பது பெயர்.
மூடிய இருமல் - பேசுதலைத் தடுக்கும் இருமல்.
`பசியும், வெகுளியுமாகிய சுறவினம்` என்க.
அரவம் - பாம்பு; கடல் வாழ் பாம்பு.
ஒலிப்ப - இரைய.
ஊன் - இறைச்சி.
தடி - தசை.

திடல் - கடல் களில் சிறு தீவுகள்.
எதிர்பாராத தீவு எதிர்ப்படின் மரக்கலத்தைப் பின்னோக்கிச் செலுத்துவர்.
சுழல - திரும்ப.
முழக்குடைத் துளை, நவத்துவாரங்கள்.
கண்டம் - திசை திருப்பும் கருவிகள்.
சால் - உள் அமைப்பு.
முகம் - முன்னோக்கும் பகுதி.
மூக்கு ஆறு - மூக்கின் வழியாக விட்டு வாங்கும் மூச்சு.
ஓதம் - அலை; அஃது ஆருபெயராய், தன் ஓசையைக் குறித்தது.
இப்பரிசு இயற்றிய - `இத் தன்மைத்தாக இயற்றப்பட்ட உடல்` என்க.
துப்புரவு - நுகர்ச்சிப் பொருள்.
கூம்பு - பாய்மரம்.
ஆர்த்து - பொருத்தி, ``கயிற்றிடை`` என்பதை, `கயிற்றினால்` எனத் திரிக்க.
அறுக்கப்படுவதாகிய கயிறு, நின்று நீக்கப் படும் துறையின்கண் பிணித்து வைத்துள்ள கயிறு.
ஒருமை - மன ஒருமை.
பொறி - மரக்கலத்தை வேகமாகச் செலுத்தும் யந்திரம்.
பார்- பாறை; கடலுள் இருப்பவை.
கடுவெளி - கொடிய இடம்.
இது மரக்கலம் உடைதற்கு ஏதுவாம் ஆதலின், இஃது உள்ள இடம் `கொடிது` எனப்பட்டது.
அகற்ற - இந்த இடத்தைத் தெரிந்து மரக் கலத்தை அப்பாற்படுத்தற் பொருட்டு தூமம் - நறும் புகை.
சோதி - விளக்கு.
இவை வழிபாட்டுப் பொருள்கள்.
`தூமத்தோடு கூடிய சோதி என்க.
மரக்கலத்தை வழி தெரிந்து இயக்க அதன்கண் விளக்கு ஏற்றப்படும்.
உணர்ச்சி - மெய்யுணர்வு.
துழாவுதல் - தண்ணீரை ஒரு முகமாகத் தள்ளுதல்.
``அளவில் கரை`` என்றது `அளவின்றி நீண்ட கரை` எனப் பொருள் தந்தது.
``கரை`` என்றது `வீடு` என்பது தோன்ற அளவின்றி நீள்கரை`` என்றமையின், இது குறிப்புருவகம் `துடுப்பினைத் துழாவி நெருங்கிச் சென்று உயிரைக் கரை ஏற்றும்படி ஆங்கு அவ் யாத்திரை போக்குதி போலும்!` என முடிக்க.

போக்குதி - நிறைவேற்றுவாய்.
போலும், உரையசை.
`ஆகி`` என்னும் செய்தென் எச்சம் ``அடிப்ப`` என்பதனோடும், ``அடிப்ப, வெளுப்ப`` முதலிய செயவென் எச்சங்கள் பலவும் ``இயற்றிய`` என்பதனோடும், ``நிறைந்து, முழங்கி`` என்னும் செய்தென் எச்சங்கள் எண்ணுப் பொருளவாய், ``எறிய`` என்பதனோடும், ``அடைந்து`` என்னும் செய் தென் எச்சம் ``சுழல`` என்பதனோடும், ``வணங்கி, நிறுத்தி`` முதலிய செய்தென் எச்சங்கள், ``நெருங்கா`` என்னும் செய்யா என் எச்சத் தோடும், அது ``ஏற்ற`` என்னும் காரியப் பொருட்டாய செயவென் எச்சத்தோடும், அது ``போக்குதி`` என்பதனோடும் முடிந்தன. இடையில், ``தலைப்பட்டு`` என்பதில், `தலைப்பட்டும்` என இழிவு சிறப்பும்மை விரித்து, அதனை, ``பெற்றவர்`` என்பதனோடு முடிக்க. இவ்வாற்றால், `இடர்ப்பாடு மிக்க உடம்பினுள் தங்கி, இடர்ப் பாடான வாழ்வில் நின்றும் இறைவனது திருவருளைப் பெற்றவர் அவனது திருவடியைத் துணையாகப் பற்றி அவனது பணியிலே நின்று தம் உயிரை வீடுபேற்றிற்கு உரித்தாக ஆக்கிக் கொள்ள முயல்வர்`` என்பதும், `அவர்கட்கு இறைவன் துணை நின்று அவர்களது முயற்சி வெற்றிபெறச் செய்வன்` என்பதும் கூறப்பட்டன.

ஒற்றி யூர உலவா நின்குணம்
பற்றி யாரப் பரவுதல் பொருட்டா
என்னிடைப் பிறந்த இன்னாப் புன்மொழி
நின்னிடை அணுகா நீர்மைய ஆதலின்
ஆவலித் தழுதல் அகன்ற அம்மனை

கேவலம் சேய்மையிற் கேளான் ஆயினும்
பிரித்தற் கரிய பெற்றிய தாகிக்
குறைவினில் ஆர்த்தும் குழவிய தியல்பினை
அறியா தெண்ணில் ஊழிப் பிறவியின்
மயங்கிக் கண்ணிலர் கண்பெற் றாங்கு

தாய்தலைப் படநின் தாளிணை வணக்கம்
வாய்தலை அறியா மயக்குறும் வினையேன்
மல்கிய இன்பத் தோடுடன் கூடிய
எல்லையில் அவாவினில் இயற்றிய வாகக்
கட்டிய நீயே அவிழ்க்கின் அல்லது

எட்டனை யாயினும் யான்அவிழ்க் கறியேன்

துன்னிடை இருளெனும் தூற்றிடை ஒதுங்கி
வெள்ளிடை காண விருப்புறு வினையேன்
தந்தையுந் தாயுஞ் சாதியும் அறிவும்நம்
சிந்தையுந் திருவுஞ் செல்கதித் திறனும்

துன்பமுந் துறவுந் தூய்மையும் அறிவும்
இன்பமும் புகழும் இவைபல பிறவும்
சுவைஒளி ஊறோசை நாற்றத் தோற்றமும்
என்றிவை முதலா விளங்குவ எல்லாம்
ஒன்றநின் அடிக்கே ஒருங்குடன் வைத்து
நின்றனன் தமியேன் நின்னடி அல்லது
சார்வுமற் றின்மையின் தளர்ந்தோர் காட்சிச்
சேர்விட மதனைத் திறப்பட நாடி
எய்துதற் கரியோய் யானினிச்
செய்வதும் அறிவனோ தெரியுங் காலே.

#1242

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பொருட்டு - நிமித்தம்.
`பொருட்டாக` என ஆக்கம் வருவிக்க.
இன்னாமை - துன்பம்; செவிக்குத் துன்பமாகுவன.
புன்மை - சிறப்பிலாப் பொருள்களையுடைமை.
நீர்மை - தன்மை.
``என்னிடைப் பிறந்த இன்னாப் புன்மொழி - நின்னிடையணுகா நீர்மைய`` என்றமையால், `அருளாளரிடைப் பிறந்த நன்மொழி நின்னிடையணுகுதல் நீர்மைய` என்பது அருத்தாபத்தியாற் பெறப்பட்டது.
ஆவலித்தல் - வாய்விட்டுக் கதறுதல்.
அம்மனை - தாய்.
கேவலம் - தனிமை.
`சேய்மைக் கேவலத்தின்` என மொழி மாற்றிக் கொள்க.
குறைவினில் - தன் மனக்குறை காரணமாக.
ஆர்க்கும் - ஓசை செய்கின்ற.
அறியாது - உன்னை அடையும் நெறியை அறியாமல்.
`ஊழில்` என ஏழாவது விரிக்க.
மயங்கி மயக்குறும்` என இயையும்.
``தலைப்பட`` என்பதனையும், `தலைப்பட்டாற்போல` என்க.

`கண் இலர் கண்பெற்றாற் போலவும், முன்னர்க் கூறிய குழவி தாயைத் தலைப்பட்டாற் போலவும் வணக்கம் வாய்ந்து இன்புறுதலை அறியாமல், மேலும் மேலும் மயக்கத்திலே கிடக்கும் வினையேன் இயற்றிய ஆக` என்க.
இன்பம் - ஐம்புல இன்பம்.
கூடிய - கூடுதற்கு; `செய்யிய` என்னும் எச்சம்.
அவாவினில் - ஆசையால்.
இயற்றிய - இயற்றிவரும் செயல்கள்.
ஆக - நிகழும் நிலையில் நீயே அவிழ்க்கின் அல்லது` என்க.
துன்னிய இருள் - செறிந்த இருள்.
இருள் - அறியாமை.
தூறு - புதர்.
ஒதுங்கி - மறைந்து.
வெள்ளிடை - ஒளி பரந்த இடம்.
``வினையேன்`` என்பதற்குப் பின், ``நின்னடி யல்லது சார்வுமற் றின்மையின்`` என்பதைக் கூட்டுக.
(நீ) `தளர்ந்தோர் காட்சிச் சேர்விடமாகின்ற அதனை நாடி எய்துதற்கு அரியோய் ஆகலின் தெரியுங்கால் யான் இனிச் செய்வதும் அறிவனோ` என முடிக்க.

காலற் சீறிய கழலோய் போற்றி
மூலத் தொகுதி முதல்வ போற்றி
ஒற்றி மாநகர் உடையோய் போற்றி
முற்றும் ஆகிய முதல்வ போற்றி
அணைதொறுஞ் சிறக்கும் அமிர்தே போற்றி
இணைபிறி தில்லா ஈச போற்றி
ஆர்வஞ் செய்பவர்க் கணியோய் போற்றி
தீர்வில் இன்சுவைத் தேனே போற்றி
வஞ்சனை மாந்தரை மறந்தோய் போற்றி
நஞ்சினை அமிர்தாய் நயந்தோய் போற்றி

விரிகடல் வையக வித்தே போற்றி
புரிவுடை வனமாய்ப் புணர்ந்தோய் போற்றி
காண முன்பொருள் கருத்துறை செம்மைக்
காணி யாகிய அரனே போற்றி
வெம்மை தண்மையென் றிவைகுணம் உடைமையின்

பெண்ணோ டாணெனும் பெயரோய் போற்றி

மேவிய அவர்தமை வீட்டினிற் படுக்கும்
தீப மாகிய சிவனே போற்றி
மாலோய் போற்றி மறையோய் போற்றி
மேலோய் போற்றி வேதிய போற்றி

சந்திர போற்றி தழலோய் போற்றி
இந்திர போற்றி இறைவ போற்றி
அமரா போற்றி அழகா போற்றி
குமரா போற்றி கூத்தா போற்றி
பொருளே போற்றி போற்றி என்றுனை

நாத்தழும் பிருக்க நவிற்றின் அல்லது
ஏத்துதற் குரியோர் யாரிரு நிலத்தே.

#1243

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முன் பாட்டிற் போந்த, ``ஒற்றி யூர`` என்பதை இப்பாட்டின் முதலிலும் வருவித்து, `என்று இங்ஙனம் நவிற்றின் அல்லது, உன்னை ஏத்துதற்குரியோர் இருநிலத்து யார்` என முடிக்க.
நவிற்றுதல் - இயன்ற அளவு சொல்லுதல்.
ஏத்துதல் - புகழ்கள் அனைத்தையும் முற்ற எடுத்துக் கூறுதல்.
மூலம் - உலகத்திற்கு முதற் காரணம்; சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை.
அவை பல்வேறு வகை ஆற்றல்களின் திரட்சியாய் இருத்தலின் அவற்றைத் ``தொகுதி`` என்றார்.
முதல்வன், அதனை ஆக்கப்படுத்துபவன்.
அணைதல் - பற்றுதல்.
சிறத்தல் - சுவை மிகுதல்.
வையகம் - நிலம்.
வனம் - நீர்.
முன்னுதல் - நினைத்தல்.
காணவிரும்பி நினைக்கப் படுகின்ற பொருள், மெய்ப்பொருள்.
அது கருத்தில் உற வேண்டு மாயின் கருத்துச் செம்மை பெற வேண்டும்.
செம்மையுள் நிற்பராகில்
சிவகதி விளையு மன்றே
என அப்பரும் அருளிச் செய்தார்.
ஆணி - நிலைபெறுத்தும் பொருள்.

வெம்மையாவது அறத்திற்கு மாறானவற்றைக் காய்தல்.
தண்மையாவது அறம் உடையார்க்கு அருளல்.
`காய்தலும், அருளலும் ஆகிய மாறுபட்ட இரு தன்மைகளை இறைவன் உடையன்` என்பதை உணர்த்தவே அவன் ஆணும் பெண்ணுமாகிய மாறுபட்ட இரு கூறுகளை ஓர் உடம்பில் கொண்டு விளங்குகின்றான் என்றபடி மேவுதல் - விரும்புதல்.
தீபம் - விளக்கு.
மாலோன் - திருமால்.
மறையோன் - பிரமன்.
`இவர்கள்பால் இவர்களேயாய்க் கலந்து நின்று காத்தல் படைத்தல்களைச் செய்கின்றான்` என்பதாம்.
மேலோன் - அனைவர்க்கும் மேலானவன்.
வேதியன் - வேதத்தை அருளிச் செய்தவன்.
தழலோன் - அக்கினி.
இறைவன், இங்கு உருத்திரன்.
அமரன் - அனைத்துத் தேவரும் ஆயவன்.
குமரன் - இளையன்.
சிவனை `முதியன்` என்றல் உலக வழக்கிலும் காணப்படுவது.
பொருள் - அடையத்தக்க பொருள்.
திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது முற்றிற்று

நம்பியாண்டார் நம்பிகள் - திருநாரையூர் விநாயகர் இரட்டை மணிமாலை

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்.

#1244

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

விரசு - நெருங்கி.
``மகிழ்`` இரண்டில் முன்னது மகிழ மரம்; பின்னது மகிழ்ச்சி.
அத்தி - யானை.
அரசு, `அரசமரம்` எனவும், அத்தி, `அத்தி மரம்` எனவும் வேறொரு பொருளைத் தோற்றுவித்த லாகிய நயத்தைப் பயந்தது.
அந்நயம் முரண் தொடையாம்.
`நாரையூர் அத்தி முகத்தான்` என இயைக்க.
இவ்விநாயகர், `பொல்லாப் பிள்ளையார்` என்னும் பெயர் உடையர்.
இப் பெயர்ப் பொருளைச் சிவஞான போத மங்கல வாழ்த்து உரையிற் காண்க.
`இப்பெரு மானுக்கு யான் அடியன் ஆனதும் அவன் என்னை நினைந்து அடிமை கொண்டதனாலும், பின்பும் நான் அவனை மறவாது நினைதலும் அவன் நினப்பிப்பத னாலுமே` என்பதாம்.
`இப்பெருமானுக்கு யான் செய்யும் கைம்மாறு யாது? என்பது குறிப்பெச்சம்.
இதனால், `இவ்வாசிரியர் விநாயகப் பெருமானது திருவருளை எய்திய அருளாளர்` என்பது போந்தது.

முகத்தாற் கரியனென் றாலும்
தனையே முயன்றவர்க்கு
மிகத்தான் வெளியனென் றேமெய்ம்மை
உன்னும் விரும்படியார்
அகத்தான் திகழ்தரு நாரையூர்
அம்மான் பயந்தவெம்மான்
உகத்தா னவன்தன் னுடலம்
பிளந்த ஒருகொம்பனே.

#1245

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கரியன் - யானையாகியவன்.
வெளியன் - வெளிப்பட்டு நிற்பவன்.
இவை இரண்டும் முறையே `கருநிறத்தை உடையவன், வெண்ணிறத்தையுடையவன்` எனப் பிறிதுமோர் பொருள்தந்து, முரண்தொடையாயும் நின்றன.
முயலுதல், இங்குப் பணிதல், அகத்தான் - மனத்தில் இருப்பவன்.
திருநாரையூர் பாடல் பெற்ற சிவத்தலம் ஆதல் அறியத் தக்கது.
அம்மான் - அப்பெரியோன்; சிவபெருமான்.
எம்மான் - எங்கள் இறைவன்.
தானவன், கயா முகாசுரன்.
`அவன் உடலம் உகப் பிளந்த ஒரு கொம்பன்` என்க.
உக - சிதைந்து சிந்த.
யாதொரு படைக்கலத்தாலும் அழியா வரம் பெற்ற கயாமுகாசுரனை விநாயகப் பெருமான் தனது இரு தந்தங்களுள் வலத் தந்தத்தை ஒடித்து அதனாலே கொன்று, ஒற்றைக் கொம்பன் ஆகியதைக் கந்த புராணக் கயமுகன் உற்பத்திப் படலத்துக் காண்க.
இதன் முன்னிரண்டு அடிகளில் ஆசிரியர் தம் அனுபவத்தைக் குறிப் பாற் புலப்படுத்தியிருத்தலை உன்னுக.

கொம்பனைய வள்ளி கொழுநன் குறுகாமே
வம்பனைய மாங்கனியை நாரையூர் - நம்பனையே
தன்னவலம் செய்துகொளும் தாழ்தடக்கை யாயென்நோய்
பின்னவலம் செய்வதென்னோ பேசு.

#1246

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டிற்கு `நெஞ்சே` என்னும் முன்னிலை வருவித்துக் கொள்க.
கொம்பு, பூங்கொம்பு.
குறுகாமே - வந்து அடையும் முன்.
வம்பு அனைய - புதிதாகிய அந்த; இது பண்டறி சுட்டு.
தன்னம் - சிறுமை.
உலகை வலம் வருதலினும் அன்னை தந்தையரை வலம் வருதல் எளிதாதல் பற்றி ``தன்ன வலம்`` என்றார்.
மாங்கனியின் பொருட்டுச் சிவபெருமான் வைத்த ஓட்டத்துள் விநாயகர் முருகனை வென்று மாங்கனியைப் பெற்ற வரலாறு நன்கறியப்பட்டது.
என் - என்று சொல்.

`சொன்னால், பின் நோய் (வினைகள்) அவலம் (துன்பம்) செய்வது என் உளது? பேசு` என முடிக்க.

பேசத் தகாதெனப் பேயெரு
தும்பெருச் சாளியுமென்
றேசத் தகும்படி ஏறுவ
தேயிமை யாதமுக்கட்
கூசத் தகுந்தொழில் நுங்கையும்
நுந்தையும் நீயுமிந்தத்
தேசத் தவர்தொழும் நாரைப்
பதியுட் சிவக்களிறே.

#1247

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``இந்தத் தேசத்தவர் .

.

.

சிவக்களிறே! நுங்கையும், நுந்தையும், நீயும் - பேசத் தகாது - என ஏசத் தகும்படி பேயும், எருதும், பெருச்சாளியும் என்று இவற்றை ஏறுவதே`` என இயைத்து முடிக்க.

நுங்கை - உன் தங்கை.

துர்க்கையை உமை அம்சமாதல் பற்றி `அவள் தங்கை` என்பதேயன்றி மகளாகவும் கூறுவர்.

அதை வைத்து இங்கு ``நுங்கை`` என்றார்.

கூசத்தகும் தொழில் கொலை.

அசுரனை யழித்தல்.

``பேய்`` என்பதிலும் எண்ணும்மை விரிக்க.

களிறு முகத்தவனாய்க் காயம்செந் தீயின்
ஒளிரும் உருக்கொண்ட தென்னே - அளறுதொறும்
பின்நாரை ஊர்ஆரல் ஆரும் பெரும்படுகர்
மன்நாரை யூரான் மகன்.

#1248

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அளறுதொறும்`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.

அளறு - சேறு.

அஃது ஆகுபெயராய் அவற்றையுடைய வயல்களைக் குறித்தது.

`ஊர் ஆரலை அவ்வூர்தலின் பின்னாகப் பற்றி நாரை ஆரும் (உண்கின்ற) படுகர்` என்க.
ஆரல், மீன் வகை.
படுகர் - நீர் நிலை.
மன் - நிலை பெற்ற.
நாரையூரான் - திருநாரையூர்ச் சிவபெருமான்.
``களிறு முகத்தவனாய்`` என்பதை, `முகம் களிறவனாய்` என மாற்றிக் கொள்க.
`முகம் யானை யாகியவன், காயம் (திருமேனி மேகம் போலாது) செந்தீயைப்போல ஒளிறும் (ஒளிவிடுகின்ற) நிறத்தைக் கொண்டிருப்பது என்ன வியப்பு` என்றபடி.

மகத்தினில் வானவர் பல்கண்
சிரம்தோள் நெரித்தருளும்
சுகத்தினில் நீள்பொழில் நாரைப்
பதியுட் சுரன்மகற்கு
முகத்தது கையந்தக் கையது
மூக்கந்த மூக்கதனின்
அகத்தது வாய்அந்த வாயது
போலும் அடுமருப்பே.

#1249

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மகம் - வேள்வி.
தக்கன் செய்தது.
அதில் பல் உதிர்க்கப்பட்டவன் `பூடா` என்னும் சூரியன்.
கண் பறிக்கப்பட்டவன் `பகன்` என்னும் சூரியன்.
சிரம் அறுக்கப்பட்டவன் எச்சன்.
(யாக தேவன்) தோள் நெரிக்கப்பட்டவன் இந்திரன்.
`நெரித்தருளும் சுரன்` என்க.
சுரன் - தேவன்.
சுகம் - கிளி.
``சுகத்தினில்`` என்பதை `சுகத் தொடு` எனத் திரிக்க.
பின்னிரண்டடிகள் தும்பிக்கையின் அமைப்பை வியந்து கூறியன.

மருப்பையொரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பையடி போற்றத் துணிந்தால் - நெருப்பை
அருந்தவெண்ணு கின்றவெறும் பன்றே அவரை
வருந்தவெண்ணு கின்ற மலம்.

#1250

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மருப்பை`` என்பது, இசையெச்சத்தால் `ஒரு காலத்தில் ஒடிக்கப்பட்ட மருப்பை` எனவும், ``கொண்டு`` என்பது, `எப்பொழுதும் கொண்டு` எனவும் பொருள் தந்தது.
மருப்பு - தந்தம்.
``பொருப்பு`` என்பது `பொருப்புப் போன்றவன்` எனவும், ``எறும்பு`` என்பது எறும்பு போல்வது எனவும் பொருள் தருதலால் உவமையாகு பெயர்கள்.
பொருப்பு, வடிவு பற்றியும், எறும்பு, மடமையாகிய பண்பு பற்றியும் உவமையாயின.
``நெருப்பை.
.
.
எறும்பன்றே`` என்பதை இறுதியிற் கூட்டுக.
`வருத்த` என்பது எதுகை நோக்கி மெலிந்து நின்றது.
மலம் மூல மலமும், பின் அது பற்றி வரும் கன்ம மாயா மலங் களும், `அவை வருத்தா` எனவே, வீடு உளதாதல் அமைந்தது.

மலஞ்செய்த வல்வினை நோக்கி
உலகை வலம்வருமப்
புலஞ்செய்த காட்சிக் குமரற்கு
முன்னே புரிசடைமேற்
சலஞ்செய்த நாரைப் பதியரன்
தன்னைக் கனிதரவே
வலஞ்செய்து கொண்ட மதக்களி
றேபுன்னை வாழ்த்துவனே.

#1251

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மலம் செய்த வல்வினை நோக்கி`` என்பதை, ``உன்னை வாழ்த்துவன்`` என்பதற்கு முன்னே கூட்டியுரைக்க.
மலம் செய்த - ஆணவத்தால் வருவிக்கப்பட்ட ``வல்வினை`` என்பது அதன் நீக்கத்தைக் குறித்தது.
``நோக்கி`` என்றது, `அது நிமித்தமாகக் கருதி` என்றபடி.
புலம் செய்த - எவ்விடத்தும் நின்ற.

காட்சி - தோற்றம்.
சலம் - நீர்; கங்கை.

வனஞ்சாய வல்வினைநோய் நீக்கி வனசத்
தனஞ்சாய லைத்தருவா னன்றோ - இனஞ்சாயத்
தேரையூர் நம்பர்மகன் திண்தோள் நெரித்தருளும்
நாரையூர் நம்பர்மக னாம்.

#1252

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``இனம் சாய`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.
இனம் - அசுரர் சுற்றம்.
அசுரர், முப்புரத்து அசுரர்.
``நம்பர்`` என்பது சிவபெருமானைக் குறித்து இரு முறையாற் கூறப்பட்டது.
மகன் - மகவான்; இந்திரன்.
சிவபெருமான் இந்திரனைத் தோள் நெரித்தமை மேல், ``மகத்தினில் வானவர்`` என்னும் பாட்டிலும் சொல்லப்பட்டது.
`நோய் நீக்கி அலை தருவானன்றே` என இயைக்க.
வனம் - காடு.
உருவகம், `வினையாகிய வனம்` என வருதல் பெரும்பான்மைத் தாயினும் சிறுபான்மை `வனமாகிய வினை` என வருதலும் உண்டு என்பதைத் தொல்காப்பிய உவம இயலில் கண்டுணர்க.
`வனமாகிய வல்வினை சாய, அதனானே அவற்றால் வரும் நோயை (துன்பத்தை) நீக்கி` என்க.
வனசத்தன் - தாமரை மலரில் உள்ளவன்; பிரமன்.
அவனது அம் - அழகு; அழகிய எழுத்து.
இனி, `அழகாவது அவனது திறல்` எனினும் ஆம்.
திறலாவது இங்குப் படைக்கும் திறன்.
இதனையடுத்து நின்ற `சாய` என்பதில் ஈற்று அகரம் தொகுக்கப்பட்டது.
அலை - அலைத் தலை; அழித்தலை.
`நாம் இனி வினைகாரணமாகப் பிரமனால் படைக்கப்படுதலை ஒழிக்கும் நிலையை நமக்குத் தருவான்` என்பதாம்.
``நம்பர்மகன்`` இரண்டிலும் ரகர ஒற்று அலகு பெறாது நின்றது.

நாரணன் முன்பணிந் தேத்தநின்
றெல்லை நடாவியவத்
தேரண வும்திரு நாரையூர்
மன்னு சிவன்மகனே

காரண னேயெம் கணபதி
யேநற் கரிவதனா
ஆரண நுண்பொரு ளேயென்
பவர்க்கில்லை அல்லல்களே.

#1253

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஏத்த நின்று மன்னும் சிவன்` என்க.
எல்லை நடாவிய அததேர் அணவும் - நாற்பாங்கு எல்லையளவும் நடத்தப்படுகின்ற தேர் பொருந்திய.
காரணன் - எப்பொருட்கும் காரணன்.
கரி வதனன் - யானைமுகன்.
என்பவர் - என்று துதிப்பவர்.
இப்பாட்டின் முதலாகிய ``நாரணன்`` என்பது முன்பாட்டு இறுதியில் உள்ள `நாரையூர்` என்பதை ஓராற்றால் அந்தாதியாகக் கொண்டதாம்.

அல்லல் களைந்தான்தன் அம்பொன் உலகத்தின்
எல்லை புகுவிப்பான் ஈண்டுழவர் - நெல்லல்களை
செங்கழுநீர் கட்கும் திருநாரை யூர்ச்சிவன்சேய்
கொங்கெழுதார் ஐங்கரத்த கோ.

#1254

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஈண்டு உழவர்`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.
ஈண்டு - நெருங்கிய.
நெல் அல்களை - நெற் பயிருக்கு வேண்டத்தகாத களை.
`செங்கழு நீரைக் களையாகக் கட்கும்` என்க.
கட்டல் - களைதல்.
`அரிய செங்கழுநீர் மலர்களை எளியவாகக் கருதிக் களையோடு சேர்த்து எறிகின்றனர்` என்பது அதன் மிகுதி கூறியவாறு.
இதனை `வீறுகோளணி` அல்லது `உதாத்த அணி` என்பர்.
கொங்கு - நறுமணம்.
தார் - மாலை.
அவை கொன்றை மலர் முதலியவற்றால் ஆயவை.
``அவன்`` என்பதை, ``கோ`` என்பதன் பின்னர்க் கூட்டி, `சேயும், கோவுமாகிய அவன் தன் அடியார்க்கு` என உரைக்க.
`தன் அடியார்க்கு` என்பது இசையெச்சம்.

தன் உலகம் - கண லோகம்.
கணம், சிவகணம்.
`எல்லையும்` என உருபு விரிக்க.

கோவிற் கொடிய நமன்தமர்
கூடா வகைவிடுவன்
காவில் திகழ்தரு நாரைப்
பதியிற் கரும்பனைக்கை
மேவற் கரிய இருமதத்
தொற்றை மருப்பின்முக்கண்
ஏவிற் புருவத் திமையவள்
தான்பெற்ற யானையையே.

#1255

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதல் அடியில் `நமன் தமர் வரின் அவர் கூடாவகை யான் விடுவேன்` என வேண்டும் சொற்கள் வருவித்து விரித்து, அதனை இறுதியிற் கூட்டுக.
கோவில் - கோக்களில்; அரசர்களில்.
புண்ணியரை அளித்தல் செய்யாது, பாவிகளை `கோக்களில் கொடியவன்` என்றார்.
விடுவன் - எதிர் சென்று துரக்குமாறு அனுப்புவேன்.
`அனுப்புதல், குறையிரத்தல் வாயிலாக` என்க.
`யான் குறையிரந்தால் அவன் அருளாதோழியான்` என்பதாம்.
காவின் - காவினால்.
கா - சோலை.
கரு, பனைக் கை, இரு மதம், ஒற்றை மருப்பு.
முக்கண் இவை யனைத்தும் யானையைச் சிறப்பித்தன.
இரு மதம் - கரிய மதம்.
ஏ வில் புருவம் - அம்பையுடைய வில்போலும் புருவம்.
`கண்கள் அம்பு போலும்` என்பது குறிப்பு.
கண் இமையாதவளை ``இமையவள்`` என்றது எதிர்மறை இலக்கணையாய், `தேவி` என்னும் கருத்துடைய தாயிற்று.
தேவி உமா தேவி.
தான், அசை.

யானேத் தியவெண்பா என்னை நினைந்தடிமை
தானேச னார்த்தனற்கு நல்கினான் - தேனே
தொடுத்தபொழில் நாரையூர்ச் சூலம் வலனேந்தி

எடுத்த மதமுகத்த ஏறு.

#1256

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`யான் ஏத்திய வெண்பாக்கள் (யான் ஏத்திய அல்ல; மற்று,) நாரையூர் விநாயகப் பெருமான் தானே தனக்கு நல்கிக் கொண்டவை` என்க.
``வெண்பா`` என்பது, இங்கு, `வெளிற்றுப் பொருள்களையுடைய பாக்கள்` எனப் பொருள் தந்தது.
`இவைகளைத் தாமும் அவனது அருள் இன்றி, யானே இயற்றுதல் இயலாது` என்றபடி.
என்னை நினைந்து அருள் காரணமாக என்னையும் ஒருவனாகத் திருவுளத்து அடைத்து.
`தலைவனாகிய அவன் அடிமை நேசனாகிய யானாகவேயிருந்து நல்கிக் கொண்டான்` என்க.
இதனால் இப் பிரபந்தம் சீவபோதத்தின் வழிப் பொந்ததாகாது, சிவபோதத்தின் வழிப் போந்தாததால் விளங்கும் ``சூலம் வலனேந்தி`` என்றது, `சிவபெருமான்` என்றபடி.
``ஏந்தி`` என்பது பெயர்.
எடுத்த - ஈன்றெடுத்த.
மதம் - கன்ன மதம்.
`அது முகத்தின் வழியாகப் பாய்கின்றது` என்றபடி.
ஏறு - சிங்க ஏறு.
உவம ஆகுபெயர்.
இது நடையாகிய தொழில் பற்றி வந்த உவமம்.
``ஏறுபோற் பீடு நடை`` *1* என்றார் திருவள்ளுவரும்.
``நல்கினான்`` என உயர் திணையால் முடித்தமையின் ``ஏறு`` என்பது உபசாரமும், உருவகமும் ஆகாமை உணர்க.
இங்கும் ``சூலம்வலன்`` என்பதில் மகர ஒற்று அலகுபெறாதாயிற்று.

ஏறிய சீர்வீ ரணக்குடி
ஏந்திழைக் கும்இருந்தேன்
நாறிய பூந்தார்க் குமரற்கும்
முன்னினை நண்ணலரைச்
சீறிய வெம்பணைச் சிங்கத்தி
னுக்கிளை யானைவிண்ணோர்
வேறியல் பால்தொழும் நாரைப்
பதியுள் விநாயகனே.

#1257

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வீரணக் குடி ஏந்திழை - வீரர்களால் வெற்றி வேண்டி வழிபடப்படும் கொற்றவை; துர்க்கை.
இவளை மேல் *2* ``நுங்கை`` என்றதுபோல இங்கு `அவளுக்கு முன்` *(*முன்னோன் - தமையன்*)* என்றார்.
முன்னினை - தமையனை; இன், சாரியை.
நண்ணலர் - பகைவர்.
இங்குத் தக்கனும், அவன் சார்பாக அவனது வேள்வியை ஏற்றவரும்
வெம்பணை - போர் முரசு.
`அதனையுடைய சிங்கம்` என்றது வீரபத்திரரை.
அவர் உமை மலையரையன் மகளாதற்கு முன்னர்த் தோன்றினமையால் விநாயகரை `அவருக்கு இளையோன்` என்றார்.
``விநாயகன்`` என்பதிலும் தொகுக்கப்பட்ட இரண்டனுருபை விரித்து அதனை, ``இளையானை`` என்பதன் பின்னர்க் கூட்டுக.
விண் - தேவலோகம்.
`அது வேறு ஓர் இயல்பால் தொழும்` என்க.
வேறு - தனி - தனி ஓர் இயல்பால் தொழுதலாவது.
விரும்பிய செயலை இடையூறின்றி இனிது முற்றுவிக்க வேண்டித் தொழுதல்.
`முன்னவனும், இளையானும் ஆகிய நாரைப் பதியுள் விநாயகனை விண் வேறு இயல்பால் தொழும்` - என வினை முடிக்க.

கனமதில்சூழ் நாரையூர் மேவிக் கசிந்தார்
மனமருவி னான்பயந்த வாய்ந்த **-** சினமருவு
கூசாரம் பூண்டமுகக் குஞ்சரக்கன் றென்றார்க்கு
மாசார மோசொல்லு வான்**.**

#1258

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கனம் - மேகம், `கனம் மதிலின்கண் சூழ் நாரையூர்` என்க.
கசிந்தார் - அன்பால் மனம் உருகினவர்.
அவர்தம் மனம் மருவினான் சிவபெருமான்.
`பயந்த கன்று` என இயையும்.
வாய்ந்த - `அவனுக்குப் பொருந்திய ஆரம்` என்க.
சினம் மருவியதும், தீண்டுதற்கும் பிறர் கூசுவதும் ஆகிய ஆரம்; அதுபாம்பாகிய மாலை.

`குஞ்சர முகக் கன்று` என மாறுக.
முகம் யானையாயினமை பற்றிப் பிள்ளையாரையே `யானை` என்றலும் ஆம் என்றற்கு, `பிள்ளை` என்னாது, ``கன்று`` என்றார்.
என்றார்க்கு - என்று சொல்லித் துதித்த வர்க்கு.
`வான் மா சாரமோ? சொல்லு` என்க.
வான் - சுவர்க்க லோகம்.
மா சாரம் - பெரிய பயன்.
``சொல்லு`` என்றது நெஞ்சை நோக்கி.
எனவே, `நீயும் அவ்வாறு சொல்` என்பது குறிப்பெச்சமாயிற்று.

வானிற் பிறந்த மதிதவ
ழும்பொழில் மாட்டளிசூழ்
தேனிற் பிறந்த மலர்த்திரு
நாரைப் பதிதிகழும்
கோனிற் பிறந்த கணபதி
தன்னைக் குலமலையின்
மானிற் பிறந்த களிறென்
றுரைப்பரிவ் வையகத்தே.

#1259

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``தேனின் பிறந்த`` என்பதில் இன்னுருபை ஒடு உருபாகத் திரித்துக் கொள்க.
மலர், அவை மலரும் பொய்கையைக் குறித்தலால் தானியாகுபெயர்.
கோனின் - கோனால்.
குலம் சிறப்பு.
``மலையின் மான்`` என்பது இலக்கணை (சார்பு) வழக்கால் `மலை யரையன் மகள்` எனப் பொருள்படுவதை `மலையில் வாழ்கின்ற மான்` எனப் பொருள்படுகின்ற இயல்பு வழக்காகக் காட்டி, அதிசயம் தோற்றுவித்தவாறு.

வையகத்தோர் ஏத்த மதில்நாரை யூர்மகிழ்ந்து
பொய்கத்தார் உள்ளம் புகலொழிந்து - கையகத்தோர்
மாங்கனிதன் கொம்பண்டம் பாசமழு மல்குவித்தான்
ஆங்கனிநஞ் சிந்தையமர் வான்.

#1260

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நம் சிந்தை அமர்வான்`` என்பதை முதலில் வைத்து உரைக்க.
கை ஐந்து ஆகலின் ஐந்திலும் ஐந்து பொருள்கள் இருத்தல் கூறப்பட்டது.
மாங்கனி இடப்புறக் கீழ்க்கை.
கொம்பு - தந்தம்; வலப் புறக் கீழ்க்கை.
அண்டம் - ஆகாயம்; தும்பிக்கை; `ஆகாயத்தைக் தடவு கின்றது` என்றபடி.
பாசம் இடப்புற மேற்கை.
``மழு`` என்பது `படைக் கலம்`` எனப் பொருள் தந்து, அங்குசத்தைக் குறித்தது.
வலப்புற மேற்கை.
மல்குதல் - நிறைதல்.
``மல்குவித்தான்`` என்பது வினைப் பெயர்.
ஆம் அசை.
கனி சிந்தை வினைத்தொகை.
அமர்வான் - விரும்புவான்.
``நம் சிந்தை அமர்வான்`` என்பது, `புலி கொல் யானை` என்பதுபோலத் தடுமாறு தொழிற்பெயர்.

அமரா அமரர் தொழுஞ்சரண்
நாரைப் பதியமர்ந்த
குமரா குமரற்கு முன்னவ
னேகொடித் தேரவுணர்
தமரா சறுத்தவன் தன்னுழைத்
தோன்றின னேயெனநின்
றமரா மனத்தவர் ஆழ்நர
கத்தில் அழுந்துவரே.

#1261

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அமரா - தேவனே.
குமரன் - பிள்ளை.
சரண் - பாதம்.
குமரற்கு முன்னவன் - முருகனுக்குத் தமையன்.
தமர் - சுற்றத்தார்.
ஆசு - குற்றம்; அவணர் தமராகிய ஆசு` என்க.
அவுணர் இங்கு முப்புரத்து அசுரர்.
``என நின்று அமரர் மனத்தவர்`` என்பதை `என அமர்ந்து நில்லாதவர்`` என மாற்றி கொள்க.

அமர்தல் - விரும்புதல்.
`என` என் எச்சத்தால், `துதித்து நில்லாதவர்` எனக் கொள்க.

அவம்தியா துள்ளமே அல்லற நல்ல
தவமதியால் ஏத்திச் சதுர்த்தோம் - நவமதியாம்
கொம்பன் விநாயகன்கொங் கார்பொழில்சூழ் நாரையூர்
நம்பன் சிறுவன்சீர் நாம்.

#1262

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``உள்ளமே`` என்பதை முதலிற் கூட்டுக.
தவமதி - தவத்தால் உண்டாகிய ஞானம்.
தவமாவன, சரியை கிரியா யோகங்கள்.
சதுர்த்தோம் - பெருமை பெற்றோம்.
நவ மதியாம் கொம்பு - புதிதாகத் தோன்றுகின்ற பிறைபோலும் தந்தம்.
நம்பன் - சிவபெருமான்.
சிறுவன் - மகன் ``அவமதி யாது`` என்பது, முன் பாட்டில், ``மனத்தவர்`` என்ற அந்தத்தை ஆதியாகக் கொண்டதாம்.

நாந்தன மாமனம் ஏத்துகண்
டாயென்றும் நாண்மலரால்
தாந்தனமாக இருந்தனன்
நாரைப் பதிதன்னுளே
சேர்ந்தன னேயைந்து செங்கைய
னேநின் திரள்மருப்பை
ஏந்தின னேயென்னை ஆண்ட
னேயெனக் கென்னையனே.

#1263

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மனம் - மனமே.
இதனை முதலிற் கொள்க.
`நம் தனம்` என்பது ``நாம் தனம்`` என நீட்டல் பெற்றது.
தாம் தனம் - தாவும் (இவ்வுலகத்தைக் கடந்து பற்றும்) செல்வம்.
`இருந்தனனே` என இதுவும் விளி.
எனக்கு என் - `எனக்கு` என்று இருக்கின்ற.
ஐயன் - தலைவன்.
`மனமே! தாம் தனமாக இருத்தனனே!.

.

.

.

.

என் ஐயனே! என்று நாள் மலரால், நம் தனமாக ஏத்து ` என வினை முடிக்க.

கண்டாய், முன்னிலையசை.

திருநாரையூர் விநாயகர் இரட்டை மணிமாலை முற்றிற்று.

நம்பியாண்டார் நம்பிகள் - கோயில் திருப்பண்ணியர் விருத்தம்

நெஞ்சந் திருவடிக் கீழ்வைத்து
நீள்மலர்க் கண்பனிப்ப
வஞ்சம் கடிந்துன்னை வந்திக்கி
லேன்அன்று வானருய்ய
நஞ்சங் கருந்து பெருந்தகை
யேநல்ல தில்லைநின்ற
அஞ்செம் பவளவண் ணா வருட்
கியானினி யாரென்பனே.

#1264

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நஞ்சு அங்கு அருந்து`` என்பதில் அங்கு, அசை.
``அன்று வானர் உய்ய.
பவள வண்ணா`` - என்பதை முதலிற் கொள்க.
மலர்க் கண் - மலர்போலும் கண்கள்.
பனிப்ப - நீரைத் துளிக்க.
``உன்னை வந்திக்கிலேன்; இனி (உன்) அருட்கு `யார்` ``என்பன்`` என வினை முடிக்க.
அருட்கு - அருளைப் பெறுதற்கு.
யார் உயர்திணை முப்பாற்கும் உரித்தாகலானும், `தன்மைச் சொல் உயர் திணையது` என்றல் பழைய வழக்கு ஆதலாலும் அது ``நான் ஆர்`` *1* என்றாற் போல வருதல் இலக்கணமேயாதலின் இங்கு ``யான் யார்`` என வந்தது.
``என் உள்ளம் ஆர்`` *2* என்பது உயர்திணையாயினாரது உள்ளமேயாதலின் அது, ``எம் கோதைகூட்டுண்ணிய தான் யார்மன்``- என்பதிற் திணைவழுவமைதியாம் - `என்பர்` என்பது பாடமன்று.

என்பும் தழுவிய ஊனும்
நெகஅக மேயெழுந்த
அன்பின் வழிவந்த வாரமிர்
தேயடி யேனுரைத்த
வன்புன் மொழிகள் பொறுத்திகொ
லாம்வளர் தில்லைதன்னுள்
மின்புன் மிளிர்சடை வீசிநின்
றாடிய விண்ணவனே.

#1265

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வளர் தில்லைதன்னுள்.
விண்ணவனே`` என்பதை, ``ஆரமிர்தே`` என்பதன் பின்னர்க் கூட்டுக.
என்பும், `அதனைத் தழுவிய ஊனும்` என்க.
நெக - நெகிழ்ந்து உருகும்படி.
இறைவனை ``அமிர்து`` என்றதற்கு ஏற்ப, அன்பை, `கடல்` என உருவகம் செய்யாமையால் இஃது ஏகதேச உருவகம்.
``அன்பினில் விளைந்த ஆரமுதே`` *1* என்பது காண்க.
வன்மை - செவி பொறுக்க ஒண்ணாமை.
புன்மை - பொருட் சிறப்பு இன்மை.
கொல், அசை.
ஆம்.
உரையசை.
`போதும்` என்றபடி.
``அகமே எழுந்த அன்பின் வழி வந்த ஆரமிர்தே`` என்றமையால் `அன்பர் சொல்லை ஏற்கின்ற நீ அன்பில்லாத என் சொல்லையும் கருணையினால் ஏற்பாய் போலும்` என்பது குறிப்பாயிற்று.

அவநெறிக் கேவிழப் புக்கவிந்
தியான்அழுந் தாமைவாங்கித்
தவநெறிக் கேயிட்ட தத்துவ
னேஅத் தவப்பயனாம்
சிவநெறிக் கேயென்னை உய்ப்பவ
னேசென னந்தொறுஞ்செய்
பவமறுத் தாள்வதற் கோதில்லை
நட்டம் பயில்கின்றதே.

#1266

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நெறிக்கே - நெறிக்கண்ணே; உருபு மயக்கம்.
புக்கு - சென்று.
அவிந்து - (வீணே) இறந்து.
அழுந்தாமை - பின்பு நகரத்தில் அழுந்தாதபடி.
வாங்கி - மீட்டு.
தவநெறி - பசு புண்ணிய வழி.

பசு புண்ணியங்கட்கு இடையே நிகழும் அபுத்தி பூர்வ சிவ புண்ணியங் களே புத்தி பூர்வ சிவ புண்ணியமாகிய சிவ நெறியிற் சேர்க்குமாயினும் சிவநெறியை அத்தகைய அவ்வவபுத்தி பூர்வ புண்ணியங்கட்குத் துணையாகும் பசு புண்ணியங்களின் பயனாகவே கூறினார்.
தத்துவன் - மெய்ப்பொருளாய் உள்ளவன்.
`நீ நடம் பயில்கின்றது (உயிர்களை அவை) செய்பவம் அறுத்து ஆள்வதற்கோ` என்க.
பவம் - பாவம்.
ஓகாரம் சிறப்பு.
எனவே, `பவம் அறுத்து ஆள்வதற்கே` என்பதாம்.
`தில்லைப் பெருமான் திருநடம் புரிதல் உயிர்களுக்கு வீடுபேற்றைத் தருதற் பொருட்டே` என்பதாம்.
இதனானே, தில்லை, காண முத்தி தரும் தலம்` எனப்படுகின்றது.

பயல்கின் றிலேன்நின் திறத்திரு
நாமம் பனிமலர்த்தார்
முயல்கின் றிலேன்நின் திருவடிக்
கேயப்ப முன்னுதில்லை
இயல்கின்ற நாடகச் சிற்றம்
பலத்துளெந் தாய்இங்ஙனே
அயர்கின்ற நானெங்ங னேபெறு
மாறுநின் னாரருளே.

#1267

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அப்புதல், இங்குச் சாத்துதலைக் குறித்தது.
`பனி மலர்த்தார் அப்ப முயல்கின்றிலேன்` என்க.
அயர்தல் - இளைத்தல்.
எந்தாய் - என் தந்தையே.

அருதிக்கு விம்ம நிவந்ததோ
வெள்ளிக் குவடதஞ்சு
பருதிக் குழவி யுமிழ்கின்றதே
யொக்கும் பற்றுவிட்டோர்
கருதித் தொழுகழற் பாதமும்
கைத்தலம் நான்கும் மெய்த்த
சுருதிப் பதமுழங் குந்தில்லை
மேய சுடரிருட்கே.

#1268

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பற்று விட்டோர்`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.
மெய்த்த - திருமேனியால் அமைந்த.
சுருதி முழங்கும் சுடர் என இயைக்க.
சுருதி - வேதம்.
அதுவே கூத்தப் பெருமான் காலில் அணியும் சிலம்பு ஆதலின், `சுருதி பதத்தின்கண் முழங்கும் சுடர்` என்றார்.
``சுருதிப்பதம்`` என்பதில் பகர ஒற்று, எதுகை நோக்கி விரிக்கப்பட்டது.
`பதத்தின்கண்` என ஏழாவது விரிக்க.
சுடர், கூத்தப் பெருமான்.
இருட்கு - இருளை நீக்குதற்கு.
`தில்லை மேயசுடர், இருட்டு மஞ்சி பருதிக் குழவியை உமிழ்கின்றதே ஒக்கும்` என இயைத்து முடிக்க.
பருதிக் குழவி, இள ஞாயிறு.
மஞ்சு - மேகம்.
சிவபெருமானது திருநீறு நிறைந்த திருமேனிமேல் யானைத் தோற் போர்வையிருத்தலால், `அத்தோல் வெள்ளி மலைமேல் கவிந்த மேகம் போலவும், யானைத் தோற் போர்வையின் ஊடே ஊடே வெளிப் படுகின்ற சிவபெருமானது திருமேனியின் ஒளி, இளஞாயிறு வீசும் கதிர்கள்போலவும் உள்ளன` என்பதாம்.
`சுடரினுக்கே` என்பது பாடமன்று.
`அருந்திக்கு` என்பதில் நகர ஒற்று எதுகை நோக்கித் தொகுக்கப்பட்டது.
திக்கு - திசைகள்.
விம்ம - நிறையும்படி.
நிவந்தது- ஓங்கியது.

சுடலைப் பொடியும் படுதலை
மாலையும் சூழ்ந்தவென்பும்
மடலைப் பொலிமலர் மாலைமென்
தோள்மேல் மயிர்க்கயிறும்
அடலைப் பொலிஅயில் மூவிலை
வேலும் அணிகொள்தில்லை
விடலைக்கென் ஆனைக் கழகிது
வேத விநோதத்தையே.

#1269

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மடலை, அடலை என்பவற்றில் ஐகாரம் சாரியை.
அடல் - வெற்றி.
அயில் - கூர்மை.
மயிர்க்கயிறு.
பஞ்ச வடம்.
இதனை மாவிரதிகள் சிறப்பாக அணிவர்.
`அணியாக` என ஆக்கம் விரிக்க.
`குரிசில்` என்பதுபோல `விடலை` என்பதும் தலைவருக்கு உரிய பெயர்.
வினோதம் - பொழுது போக்கு.
``செலியரத்தை நின் வெகுளி``*1* என்பதிற்போல இப்பாட்டின் ஈற்றில் வந்த ``அத்தை`` என்னும் அசைநிலையிடைச்சொல்.
``அத்தின் அகரம் அகரமுனை யில்லை``*2* எனச் சாரியைஇடைச்சொற்கு ஓதிய முறையானே முதலில் உள்ள அகரம் கெட்டு நின்றது.

வேத முதல்வன் தலையும்
தலையாய வேள்விதன்னுள்
நாத னவனெச்சன் நற்றலை
யும் தக்க னார்தலையுங்
காதிய தில்லைச்சிற் றம்பலத்
தான்கழல் சூழ்ந்துநின்று
மாதவ ரென்னோ மறைமொழி
யாலே வழுத்துவதே.

#1270

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வேதமுதல்வன், பிரமன்.
எச்சன் - யாக தெய்வம்.
காதிய - அழித்த.
``வேள்வி வேத ஒழுக்கம் ஆயினும் வேள்வியில் வேத முதல்வன் தலையையும், வேள்வித் தேவன் தலையையும், வேட்டோன் தலையையும் அறுத்த சிவபெருமானை அந்தணர்கள் வேத மந்திரங்களைச் சொல்லித் துதித்தல் ஏன்`` என வியப்புத் தோன்றக் கூறிக் குறிப்பால், `உண்மை வேத ஒழுக்கம் இன்னது` என்பதைத் தோன்ற வைத்தமையின், இது விபாவனையணி, உண்மை வேத ஒழுக்கமாவது சிவபிரானைப் போற்றுதலன்றி இகழ்தலன்று என்பதாம்.
நாதன் - தலைவன்.

அவன், பகுதிப் பொருள் விகுதி.

வழுத்திய சீர்த்திரு மாலுல
குண்டுவன் பாம்புதன்னின்
கழுத்தரு கேதுயின் றான்உட்கப்
பாந்தளைக் கங்கணமாச்
செழுந்திரள் நீர்த்திருச் சிற்றம்
பலத்தான் திருக்கையிட
அழுத்திய கல்லொத் தன்ஆய
னாகிய மாயவனே.

#1271

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(``உண்ட களைப்புத் தொண்டருக்கும் உண்டு`` என்னும் முறையில்)
`திருமால் உலகை உண்டபின் ஆதிசேடனாகிய பாம்பின் கழுத்தில் படுத்துச் சிறிதே உறங்கினான்.
அப்பொழுது அப்பாம்பினைத் திருச்சிற்றம்பலத்து இறைவன் தனது கையில் கங்கணமாக இட, அக் கங்கணத்தில் அழுத்திய நீலமணிபோல அவன் விளங்கினான்` என்பதாம்.
உட்கு - அஞ்சத் தக்க.
`துயின்றனுக்கு` என்பது பாடமன்று.
பாந்தள் - பாம்பு.
`திருக்கையில் இட` என்க.
`அம் மாயவன்` எனச் சுட்டு வருவிக்க.
வழுத்திய சீர் - பலராலும் துகிக்கப் படும் புகழையுடைய.
`செழுந்திரள்` என்பது எதுகை நோக்கி வலிந்து நின்றது.
இடத்துக்குரிய, `செழுந்திரள் நீர்`` என்னும் அடை ஒற்றுமை பற்றி இடத்தின்கண் உள்ள பொருட்குக் கூறப்பட்டது.

மாயவன் முந்நீர்த் துயின்றவன்
அன்று மருதிடையே
போயவன் காணாத பூங்கழல்
நல்ல புலத்தினர்நெஞ்
சேயவன் சிற்றம் பலத்துள்நின்
றாடுங் கழலெவர்க்குந்
தாயவன் தன்பொற் கழலென்
தலைமறை நன்னிழலே.

#1272

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நல்ல புலத்தினர் நெஞ்சு ஏய் அவன்.

.

.

ஆடும் கழல்`` என்பதை முதலிற் கூட்டியுரைக்க.
புலம் - அறிவு.
ஞானம் ஏய்தல் - பொருந்துதல்.
தாயவன் - தாயாகியவன்.
மறைத்தல் - தீங்கைத் தடுத்துக் காத்தல்.
``நிழல்`` என்றதனால், தடுக்கப்படுவது வெயிலா யிற்று.
எனவே, `வெயிலைத் தடுத்துத் தலையைக் காக்கின்ற நிழல் போல, வினையைத் தடுத்துக் காக்கும் காப்பு` என்பதாம்.

நிழல்படு பூண்நெடு மாலயன்
காணாமை நீண்டவரே
தழல்படு பொன்னக லேந்தித்
தமருகம் தாடித்தமைத்
தெழில்பட வீசிக் கரமெறி
நீர்த்தில்லை யம்பலத்தே
குழல்படு சொல்வழி யாடுவர்
யாவர்க்குங் கூத்தினையே.

#1273

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நிழல் - ஒளி பூண் - அணிகலன்; இங்குச் சிறப்பாகக் கௌத்துவ மணியைக் குறித்தது.
`நீண்டவரே யாவர்க்கும் கூத்தினை ஆடுவன்` என இயைத்து முடிக்க.
``யாவர்க்கும்`` எனச் சிறப்புடைய உயர்திணை மேல் வைத்துக் கூறினாராயினும், `எவ்வுயிர்க்கும்` என்றலே கருத்து.
`யாவர்க்கும் ஆக` என ஆக்கம் வருவிக்க.
ஆதல் - நன்மை பயத்தல்.
`தழலை அகலில் ஏந்தி என்க.
படு - பொருந்திய.
பொன் - அழகு.
தமருகம் - உடுக்கை.
தாடமை என்னும் வடசொல், தாடித்தல் எனத் திரிக்கப்பட்டது.
`தாடனம் - அடித்தல்.

`கரத்தை எழில்பட வீசி` என மாறுக.
தில்லை - தில்லை நகர்.
நிறத்தொடுபட்ட இசையை.
``சொல்`` என்றார்.
நிறத்தை, `வானம்` என்பர்.
``நீண்ட வரே`` என்னும் பிரிநிலை ஏகாரத்தால், `பிறர் அது செய்கின்றிலர்` என்பது போந்தது.

கூத்தனென் றுந்தில்லை வாணனென்
றுங்குழு மிட்டிமையோர்
ஏத்தனென் றுஞ்செவி மாட்டிசை
யாதே யிடுதுணங்கை
மூத்தவன் பெண்டிர் குணலையிட்
டாலும் முகில்நிறத்த
சாத்தனென் றாலும் வருமோ
இவளுக்குத் தண்ணெனவே.

#1274

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டுத் தில்லை பெருமானைக் காதலித்தாள் ஒருத்தியது வேறுபாடு கண்டு, `இது தெய்வத்தான் ஆயது` எனக் கருதி எடுக்கப்பட்ட வெறியாட்டினைத் தோழி விலக்கி, அறத்தொடு நின்றது.
`குழுமியிட்டு` என்பது இடைக் குறைந்து நின்றது.
ஏத்தன் - துதிகளை உடையவன்.
செவிமாட்டு இசைத்தல் - செவியிற் செல்லும் படி கூறுதல்.
`அதனைச் செய்யாமல் பலவகை ஆடல்களை ஆடினால் பயன் தருமோ` என்றாள்.
துணங்கை, குணலை சில கூத்தின் வகைகள்.
பின்னர் `சாத்தன்` என வருதலால், ``மூத்தவன்`` என்றது.
அவனுக்கு முன்னோனாகிய முருகனை.
குறிஞ்சிக் கிழவனாய உரிமை பற்றிக் குறிஞ்சி நிலப் பெண்களை முருகன் பெண்டிராகக் கூறினார்.
`பெண்டீர்` என்பது பாடமாயின் அதனை முதற்கண் கூட்டியுரைக்க.
சாத்தன் - ஐயனார்.
குறிஞ்சி நிலப் பெண்களை முருகன் பற்றுவதாகக் கூறுதலும் உண்டு` என்பது இதனால் அறிகின்றோம்.
தண்ணென வருமோ - குளிர்ச்சி உண்டாகுமோ; உண்டாகாது; வெம்மையே உண்டாகும் என்பதாம்.

தண்ணார் புனல்தில்லைச் சிற்றம்
பலந்தன்னின் மன்னிநின்ற
விண்ணாள னைக்கண்ட நாள்விருப்
பாயென் னுடல்முழுதும்
கண்ணாங் கிலோதொழக் கையாங்
கிலோதிரு நாமங்கள் கற்
றெண்ணாம் பரிசெங்கும் வாயாங்கி
லோவெனக் கிப்பிறப்பே.

#1275

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இறுதிக்கண் தொக்க ஏழாவதனை, `எனக்கு இப் பிறப்பின்கண்` என விரித்து, ``கண்ட நாள்`` என்பதன் பின்னர்க் கூட்டுக.
இவ்வாறன்றி இன்மையை உடைமையின் மறுதலையாக்கி, இயல்பாகவே கொள்ள அம் ஆம், கண்ணிற்குக் கூறிய ``உடல் முழுதும்`` என்பதனை ஏனைக் கை, வாய் இவற்றிற்கும் இயைக்க.
கைக்கும், வாய்க்கும் முறையே ``தொழ`` எனவும், ``எண் ஆம் பரிசு`` எனவும் கூறினாற்போலக் கண்ணிற்கும், `காண` என்பது வருவிக்க.
``விருப்பாய்`` என்னும் எச்சம், `காண, தொழ, எண் ஆம் பரிசு` என்பவற்றோடு முடிந்தது.
``ஆங்கு`` மூன்று அசை நிலைகள்.
ஓகாரங்கள் இரக்கப் பொருள்.
எண் - எண்ணல்; உருவேற்றுதல்.
முதனிலைத் தொழிற்பெயர்.
``அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவார்`` *1* என்று அருளிச் செய்தது காண்க.
பரிசு - வகை.

பிறவியிற் பெற்ற பயனொன்று
கண்டிலம் பேரொலிநீர்
நறவியல் பூம்பொழில் தில்லையுள்
நாடக மாடுகின்ற
துறவியல் சோதியைச் சுந்தரக்
கூத்தனைத் தொண்டர்தொண்டர்
உறவியல் வாற்கண்கள் கண்டுகண்
டின்பத்தை உண்டிடவே.

#1276

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பிறவியில்.
கண்டிலம்`` - என்பதை இறுதிக்கண் கூட்டுக.
ஒன்று - வேறொன்று.
`ஒன்றும்` என்னும் இழிவு சிறப்பும்மை தொகுக்கப்பட்டது.
நறவு - தேன்.
துறவு இயல் - துறவு வேடம்.
அவை சடை முடியும் கல்லாடையும்.
உறவு இயல்வால் - கூட்டுறவு நிகழ் தலால்.
`தொண்டர் உறவே கூத்தனைக் காண வாய்ப்பளித்தது` என்ற படி.
`உண்டபின்` என்பது ``உண்டிட`` எனத் திரிந்து நின்றது.
`உண்ட பின்` என்பதும், `உண்ணுதலைப் பெற்றபின்` என்றதேயாம்.
``கண்டிலம்`` என்றது ``கருதிற்றிலம்` என்றபடி.

உண்டேன் அவரரு ளாரமிர்
தத்தினை வுண்டலுமே
கண்டேன் எடுத்த கழலுங்
கனலுங் கவித்தகையும்
ஒண்டேன் மொழியினை நோக்கிய
நோக்கு மொளிநகையும்
வண்டேன் மலர்த்தில்லை யம்பலத்
தாடும் மணியினையே.

#1277

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அருளாகிய அமிர்தத்தை உண்டதாவது, அருள் கைவரப் பெற்றமை.
`அருள் உண்டாய வழியே அம்பலத்து ஆடும் மணியினைக் காண்டல் கூடும்.
அஃது இல்லையாயின் அது கூடாது` என்றபடி.
செய்யுட்கண் முதற்கண் வந்த ``அவர்`` என்னும் சுட்டுப் பெயர் ஒருமைப் பன்மை மயக்கமாய்ப் பின் `மணி` எனப் பட்டவனையே சுட்டிற்று.
எடுத்த கழல் - தூக்கிய திருவடி.
``கனல்`` என்றே போயினா ராயினும், ஏனையவற்றோடு இயைய, `கனற் கையும்` என உரைக்க.
கவித்த கை, தூக்கிய திருவடியின்மேல் உள்ள கை.
தேன்மொழி - தேன்மொழியாள்; சிவகாம சுந்தரி.
முதற்சினைக் கிளவிக்கு அதுஎன் வேற்றுமை

முதற்கண் வரினே சினைக்கு ஐயாகும்
என்பது இலக்கணமாயினும், `அவனைக் கையைப் பிடித்தான்` என்ற வழி, `கையைப் பிடித்தான்` என்னும் தொடர் மொழி, `தீண்டினான்` எனப் பொருள் தந்து ஒரு சொல் தன்மைப்படுத்தலின் இவை போல் வனவற்றில் இரட்டித்து ஐயுருபு வருதல் சிறுபான்மை வழக்காய் அமைதல் பற்றி, இங்கு `மணியினைக் கழலையும், கையையும், நோக்கையும், நகையையும் கண்டேன்` என்றார்.
இரண்டன் உருபுகள் இறுதிக்கண் தொக்கன.
இனி இவ்வாறன்றி, ``மணியினை`` என்றது உருபு மயக்கம் எனினுமாம்.

மண்ணொப் பனதிரு மால்மகு
டத்து மலர்க்கமலத்
தணியொப் பனவவன் தன்முடி
மேலடி யேனிடர்க்குத்
துணியச் சமைத்தநல் ஈர்வா
ளனையன சூழ்பொழில்கள்
திணியத் திகழ்தில்லை யம்பலத்
தான்தன் திருந்தடியே.

#1278

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``சூழ் பொழில்கள் என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.
`அம்பலத்தான்றன் அடி திருமாலது முடியின்மேல் அதன் மணியும், அதில் அணியப்பட்ட கமல மலரும் ஒப்பன` என ஒரு தொடராகத் தொகுத்தோதற் பாலதனை இருதொடராக வகுத் தோதினார்.
இரண்டனையும் நன்கு வலியுறுத்தற்கு.
துணிய - துண்டு பட்டு விழும்படி என்றது, `விழுந்ததுபோலக் கெடும்படி` என்றவாறு.
ஈர் வாள் - அறுக்கின்ற வாள்.
``துணிய`` எனவும், ``ஈர் வாள்`` எனவும் போந்தவற்றிற்கு ஏற்ப, `வலிய பெருமரம் ஒத்த இடர்`` என வருவித் துரைக்க.
இங்கு.
பல பொருள் உவமை வந்தது.
``இடர்`` என்பது காரியவாகுபெயராய், அவற்றை விளைக்கும் வினைகளைக் குறித்து.
``இருவினை மாமரம்`` *1* என திருவாசகத்தும் கூறப்பட்டது.

அடியிட்ட கண்ணினுக் கோஅவ
னன்பினுக் கோ அவுணர்

செடியிட்ட வான்துயர் சேர்வதற்
கோ தில்லை யம்பலத்து
முடியிட்ட கொன்றை நன் முக்கட்
பிரான்அன்று மூவுலகும்
அடியிட்ட கண்ணனுக் கீந்தது
வாய்ந்த அரும்படையே.
#1279
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி இட்ட - திருவடியில் சாத்திய, செடி இட்டி - கீழ்மை பொருந்திய வான் துயர் - மிக்க துன்பம்.
கண்ணன் - திருமால்.
`திருமால் சிவபிரானை நாள்தோறும் ஆயிரந்தாமரை மலரால் அருச் சித்து வழிபட்டிருக்கும் நாள்களில் ஒருநாள் சிவபிரான் ஒரு மலரை மறைத்துவிட, அதற்கு ஈடாகத் திருமால் தனது கண் ஒன்றைப் பறித்துப் பெருமான் திருவடியில் சாத்திடப் பெருமான் மகிழ்ந்து தன்னிடம் இருந்த வலிய சக்கரப் படையை அளித்தருள, திருமால் அதைக் கொண்டு அசுரர்களை அழித்து உலகிற்கு நன்மை தந்து வருகின்றான்` என்பது புராண வரலாறு.
`அறத்திற்கோ, புகழுக்கோ பொருள் கொடுக்கின்றீர்` என வினவினால், `இரண்டிற்குந்தான்` என்பது பொது விடையாயினும் சிலர், அவற்றுள் ஒன்றையே சிறப்பாகக் கருதுவர்; அது போலவே, இங்கு, `கண்ணினுக்கோ, அன்பினுக்கோ, அவுணர் துயர் சேர்வதற்கோ அரும்படை ஈந்தது` என எழுப்பப்பட்ட வினா விற்கு, `மூன்றிற்குந்தான்` என்பது பொது விடையாயினும், `அன்பிற்கு` என்பதே இங்குச் சிறப்பாகக் கருதப்பட்டது.

படைபடு கண்ணிதன் பங்கதென்
தில்லைப் பரம்பரவல்
விடைபடு கேதுக விண்ணப்பங்
கேளென் விதிவசத்தால்
கடைபடு சாதி பிறக்கினும்
நீவைத் தருளுகண்டாய்
புடைபடு கிங்கிணித் தாட்செய்ய
பாதமென் னுள்புகவே.
#1280
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

படை, இங்கு வாள், படு, உவம உருபு.
வல்விடை - விரைந்து செல்லும் இடபம்.
கேதுகன் - விருது கொடியை உடையவன்.
தரைதனிதல் கீழை விட்டுத் தவம்செய் சாதியினில் வந்து
எனச் சாத்திரம் கூறுதலின்,
சாதி யிரண்டொழிய வேறில்லை. <brமேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
என்றாற்போல இங்கும், `தவம் செய் சாதி, தவம் செயாச் சாதி என இரு சாதிகளே கொள்ளப்பட்டு, அவற்றுள் `தவம் செய் சாதி மேற் சாதி, தவம் செயாச் சாதி கீழ்ச் சாதி` எனக் கொள்ளப்படுதல் அறியப்படுத லால் இங்கு ``கடை படு சாதி`` என்றது தவம் செயாச் சாதியையே யாயிற்று.
`வேறு சில வினை வயத்தால் அடியேன் அச்சாதியில் பிறக்கினும், இப்பொழுது செய்யும் இவ்விண்ணப்பத்தைத் திருச்செவி சாத்தி நீ அடியேனுக்கு அருளல் வேண்டும்` என்றபடி.
கண்டாய், முன்னிலையசை.
`கிங்கிணியை அணிந்தனவும், செம்மையான நிறத்தை உடையனவும் ஆகிய பாதம்` என்றல் கருத்து என்க.

புகவிகிர் வாளெயிற் றானிலங்
கீண்டு பொறிகலங்கி
மிகவுகும் மாற்கரும் பாதத்த
னேல்வியன் தில்லைதன்னுள்
நகவு குலாமதிக் கண்ணியற்
கங்கண னென்றனன்றும்
தகவு கொலாம்தக வன்று
கொலாமென்று சங்கிப்பனே.

#1281

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

புக - தான் உள்ளே செல்லுதற் பொருட்டு `உகிராலும், எயிற்றாலும் நிலத்தைக் கீண்டு` என்க.
பொறி - ஐம்பொறி.
கலங்கி - நிலை கலங்கி.
``கலங்கி`` எனச் சினைவினை முதல்மேல் ஏற்றப்பட்டது.
உகும் - மெலிந்த.
மாற்கு - திருமாலுக்கு.

அரு - காணு தற்கு அரிய.
`நகு` என்னும் முதனிலை `ஐ` என்னும் இறுதி நிலை பெற்று `நகை` என வருதல் பெரும்பான்மை.
அதற்கு `வு` இறுதி நிலை புணர்த்து, இடையே அகரச் சாரியை சேர்த்து, ``நகவு`` என்றார்.
``ஒளி` என்பது அதன் பொருள்.
அதற்கு - இருளைப் போக்குதற்கு.
அம் கணன் - அழகிய கண்களை உடையவன்.
அஃதாவது, சூரிய சந்தி ரனைக் கண்களாக உடையவன்.
நன்றும் - மிகவும், ``கொல்`` இரண் டும் ஐயப் பொருள்.
``ஆம்`` இரண்டும் அசைகள்.
சங்கிப்பன் - ஐயுறு வேன்.
``சிவபெருமான், திருமால் பாதங்களை உடையவன் - என்றல் உண்மையானால், - அவன் தில்லைத் தலத்தில் தனது முழுத் திரு மேனியையும் யாவரும் காண ஆடுகின்றான் - என்பது உண்மையா, அன்றா? என்று நான் பொருள்கட்கெல்லாம் பெரிய பொருளாய், அதே சமயத்தில் சிறிய பொருள்கட்கெல்லாம் சிறிய பொருளாய் நிற்கும் ஓர் அதிசய நிலையே பரம்பொருளது நிலை` என்பதை இங்ஙனம் குறிப்பால் உணர்த்தியவாறு.
எனவே, `இப்பாட்டிற் குறித்த இரண்டுமே உண்மைகள்தாம்` என்பதே விடையாதல் அறிக.

சங்கோர் கரத்தன் மகன்தக்கன்
தானவர் நான்முகத்தோன்
செங்கோல விந்திரன் தோள்தலை
யூர்வேள்வி சீருடலம்
அங்கோல வெவ்வழ லாயிட்
டழிந்தெரிந் தற்றனவால்
எங்கோன் எழில்தில்லைக் கூத்தன்
கடைக்கண் சிவந்திடவே.

#1282

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சங்கு ஓர் கரத்தன், திருமால். அவன் மகன் மன்மதன். தானவர்.திரிபுரத்து அசுரர்.
செங்கோல - செங்கோலை (வானுலக ஆட்சியை) உடைய - மன்மதன் முதலாகக் கூறப்பட்ட ஐவர்கட்கும், `தோள், தலை, ஊர், வேள்வி, உடலம்` என்பவற்றை எதிர்நிரல் நிறையாக இயைக்க. சீர் - அழகு. அம்

கோலம் - அழகிய தோற்றம்.
``ஆயிட்டு`` என்பதில் இட்டு, அசை. கண் சிவத்தல், கோலக் குறிப்பு.
`கடைக்கண் சிறிதே சிவந்த அளவில் இத்தனையும் சாம்பலாயின`
என்றது குணக்குறை பற்றி வந்த விசேட அணி.

ஏவுசெய் மேருத் தடக்கை
யெழில்தில்லை யம்பலத்து
மேவுசெய் மேனிப் பிரானன்றி
யங்கணர் மிக்குளரே
காவுசெய் காளத்திக் கண்ணுதல்
வேண்டும் வரங்கொடுத்துத்
தேவுசெய் வான்வாய்ப் புனலாட்
டியதிறல் வேடுவனே.

#1283

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஏ - அம்பு.
இஃது ஏவப்படும் காரணம் பற்றி வந்த பெயர்.
அஃது ஈற்றில் லகர உகரம் பெற்று, `ஏவு` என வந்தது.
எனவே, அஃது இரட்டுற மொழிதலாய், `அம்பை ஏவுதல் செய்கின்ற`
எனப் பொருள் தந்தது.
இதனால், ``மேரு`` என்பதும் ``மேருவாகிய வில்`` என்னும்
பொருட்டாயிற்று.
``அம்பலம்`` என்பது ஆகுபெயராய் அதன் கண் இயற்றப்படும் கூத்தைக்
குறித்தது.
அம் கண்ணர் - அழகிய கண்ணையுடையவர்.
``கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்`` *1* என்ப ஆகலின்,
அதனையுடைய கண் `அழகிய கண்` எனப்பட்டது.
ஆகவே, ``அங்கணர்`` என்பது `கருணையுடையவர்` என்னும்
கருத்தினதாம்.
``மிக்கு உளரே`` என்றாராயினும் `மிக்க கருணை யுடையவர் உளரே`
என்பதே கருத்தென்க.
ஏகாரம் வினாப் பொருட்டாய், எதிர் மறுத்தலையுணர்த்திற்று.
`காளத்திக் கண்ணுதலாய்` என ஆக்கம் வருவித்து, `வாய்ப் புனல்
ஆட்டிய வேடுவனை` எனத் தொகுக்கப் பட்ட இரண்டாவதை
வருவித்து, `வேண்டும் வரங் கொடுத்துத் தேவு செய்வான்` என முடிக்க.
தேவு செய்தது ஒரு காலத்தேயாயினும், `அஃது அவற்கு என்றும் உள்ள
இயல்பு` என்றற்கு ``செய்வான்`` என எதிர்காலத்தாற் கூறினார்.

காவு - கா; சோலை.
வாய்ப்புனல் ஆட்டிய வேடுவன், கண்ணப்ப நாயனார் என்பது வெளிப்படை.

வேடனென் றாள்வில் விசயற்கு
வெங்கணை யன்றளித்த
கோடனென் றாள்குழைக் காதனென்
றாள்இடக் காதிலிட்ட
தோடனென் றாள்தொகு சீர்த்தில்லை
யம்பலத் தாடுகின்ற
சேடனென் றாள்மங்கை யங்கைச்
சரிவளை சிந்தினவே.

#1284

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு தலைவியது வேறுபாடு கண்டு வினவிய நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நின்றது.
கோடன் - கோஷன்.
ஆரவாரத்தையுடையவன்.
ஆரவாரம் - போர்காரணமாக எழுந்தது.
சேடன் - பெருமையுடையவன்.
`அவ்வளை, கைவளை` எனத் தனித் தனி இயைக்க.
அம் - அழகு.
அது `வளை` என்பதனோடு புணருங் கால் ஈறுகெட்டு லகர ஒற்று மிக்கது.
சரி - வளையல்களில் ஒருவகை.
``மங்கை`` என்பதின்பின், `அதுபொழுது` என்பது வருவிக்க.
இவ் வாற்றால், `இவளது வேறுபாட்டிற்குக் காரணம் தில்லைக் கூத்தினைக் காதலித்த காதலே` என்பதைக் குறிப்பால் உணர்த்தினாளாம்.

சிந்திக் கவும்உரை யாடவும்
செம்மல ராற்கழல்கள்
வந்திக் கவும்மனம் வாய்கர
மென்னும் வழிகள்பெற்றுஞ்
சந்திக் கிலர்சிலர் தெண்ணர்தண்
ணார்தில்லை யம்பலத்துள்
அந்திக் கமர்திரு மேனியெம்
மான்ற னருள்பெறவே.

#1285

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சிந்திக்க மனம், உரையாட வாய், மலரால் கழல்கள் வந்திக்கக் கரம்` - என நிரல்நிறையாக இயைத்துக்கொள்க.
சந்தித்தல்- சென்று அடைதல்.
தெண்ணர் - அறவிலிகள்.
அமர் - ஒத்த; உவம உருபு.

அருள்தரு சீர்த்தில்லை யம்பலத்
தான்தன் அருளினன்றிப்
பொருள்தரு வானத் தரசாத
லிற்புழு வாதல்நன்றாம்
சுருள்தரு செஞ்சடை யோனரு
ளேல்துற விக்குநன்றாம்
இருள்தரு கீழேழ் நரகத்து
வீழும் இருஞ்சிறையே.

#1286

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அருளின் அன்றி - அருள்வழியாக அல்லாமல் பிறவாற்றால்.
அருளேல் - அருள் வழியாக வருமாயின் துறவிக்குப் புழுவாதலும் நன்றாம், நரகத்து வீழும் இருஞ் சிறையும் நன்றாம்` என்க.
``நரகம் புகினும் எள்ளேன் திருவருளாலே இருக்கப்பெறில் இறைவா`` *1* என மாணிக்கவாசகரும் அருளிச்செய்தார்.
புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும்.
2 என்பதும் இக்கருத்தே பற்றி எழுந்தது.
இன்பமாவது திருவருளோடு கூடியிருத்தலும், துன்பமாவது அதனொடு கூடாதிருத்தலுமே என்னும் உண்மை இவ்வாறு எங்கும் விளக்கப்படுகின்றது.
துறவி - உலகப் பற்றை விட்டவன்.

சிறைப்புள வாம்புனல் சூழ்வயல்
தில்லைச் சிற் றம்பலத்துப்
பிறைப்பிள வார்சடை யோன்திரு
நாமங்க ளேபிதற்ற
மிறைப்புள வாகிவெண் ணீறணிந்

தோடேந்தும் வித்தகர்தம்
உரைப்புள வோவயன் மாலினொ
டும்பர்தம் நாயகற்கே.

#1287

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சிறைப் புள் - சிறகையுடைய பறவை.
அவாம் - விரும்புகின்ற.
`பிறையாகிய பிளவு` என்க.
பிதற்றுதல் - அன்பால் பலகாலும் சொல்லுதல்.
மிறைப்பு - மன உறுதி.
உறைப்பு - வலிமை; யாதொன்றிற்கும் அஞ்சாமையும், எதனையும் வெல்லுதலும்.
அயன், மால், இந்திரனாகியோர் ஒவ்வொருவரையும் நோக்க வலிமை பலவாதலின், ``உளவோ`` என்றார்.
ஓடேந்துதலைக் கூறியது, வறுமையை உணர்த்த.

அகழ்சூழ் மதில்தில்லை யம்பலக்
கூத்த அடியமிட்ட
முகிழ்சூ ழிலையும் முகைகளு
மேயுங்கொல் கற்பகத்தின்
திகழ்சூழ் மலர்மழை தூவித்
திறம்பயில் சிந்தையராய்ப்
புகழ்சூ ழிமையவர் போற்றித்
தொழுநின் பூங்கழற்கே.

#1288

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முகிழ் - அரும்பு.
`அவை சூழ் இலை` என்றது, `இடையே அரும்புகளையுடைய இலைக் கொத்து` என்றபடி.
ஏயும் - பொருந்தும்.
கொல், ஐயம்.
`தேவர் தூவும் கற்பக மலர் மழையை யன்றி, யாம் இடும் நிலவுலக இலையையும், அரும்பையும் விரும்பு வையோ என வினாவிய படி.
`யாம் இடும் இலையையும்.
அரும்பை யுமே நீ விரும்புவாய்` என்பது இதன் உட்கருத்து.

ஏன் எனில், `யாம் அன்பே காரணமாக இடுகின்றோம்; இமையவரோ தாம் தம் நிலையிலே நிலைத்து வாழ்தல் வேண்டியிடுகின்றனர்` என்பதாம்.
வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் *1* என்று அருளியது காண்க.
இங்கு, ``திறம் பயில்`` என்றது அதனையே.

பூந்தண் பொழில்சூழ் புலியூர்ப்
பொலிசெம்பொ னம்பலத்து
வேந்தன் தனக்கன்றி யாட்செய்வ
தென்னே விரிதுணிமேல்
ஆந்தண் பழைய அவிழைஅன்
பாகிய பண்டைப்பறைச்
சேந்தன் கொடுக்க அதுவும்
திருவமிர் தாகியதே.

#1289

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சேந்தனார்` என்னும் அடியவர் பாடிய பாடல்கள் திருவிசைப்பாவில் இருத்தலுடன், திருப்பல்லாண்டு பதிகம் *9*-ஆம் திருமுறையிறுதியில் தனியே உள்ளது.
`இப்பதிகத்தைப் பாடி இவர், செல்லாது நின்ற கூத்தப் பெருமான் தேரினைச் செல்லச் செய்தார்` என்பர்.
`இவர் குலத்தால் தாழ்ந்தவர்` என்பது இப்பாட்டில், ``பறைச் சேந்தன்` என்பதனால் குறிக்கப்பட்டது.
திருவாதிரை நாளில் கூத்தப் பெருமானுக்கு அன்பர்கள் களி செய்து படைத்து வழிபடுதல் வழக்கம்.
கோயிலிலும் இது செய்யப்படும்.
`அம்முறையில் செய்ய அரிசி கிடையாமையால் சேந்தனார் தவிட்டுக் களி செய்து துணியில் இட்டுப் படைத்தார்` என்பதும் `அது மறுநாள் விடியலில் திருச்சிற்றம்பலக் கூத்தப்பெருமான் திருமேனியில் காணப்பட்டது` என்பதும் இவரைப் பற்றி வழங்கும் வரலாறுகள்.
அது இப்பாட்டின், பின் இரண்டு அடிகளில் குறிக்கப்பட்டது.

அவிழ்ந்த துணியில் அவிந்த அவிழை
அவிந்த மனத்தால் அவிழ்க்க - அவிழ்ந்த சடை
வேந்தனார்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பின்
சேந்தனார் செய்த செயல்

என இது திருக்களிற்றுப்படியாரிலும் கூறப்பட்டது.
தனிப்பாடல் ஒன்றில், ``தவிட்டமுதம் சேந்தன் இட உண்டனை`` - எனச்

சிவஞான யோகிகள் கூறினார்.
இப்பாட்டில் அவிழ் - உணவு.
``தண் பழைய`` என்றது `மிகவும் ஆறிப்போன` என்றபடி.
`குலத்தால் தாழ்ந்த ஒருவர் சுவையற்ற ஓர் எளிய உணவைப் படைக்க, அதனை மிக இனியதாக ஏற்றருளிய அந்தப் பெருமானுக்கு ஆட் செய்யாமல் பிறருக்கு ஆட் செய்வது என்ன அறியாமை` என்பது இப்பாட்டின் திரண்ட பொருள்.
இதனால் இவ்வாசிரியர் சேந்தனாருக்குப் பின்னர் வாழ்ந்தவராதல் அறியப்படும்.

ஆகங் கனகனைக் கீறிய
கோளரிக் கஞ்சிவிண்ணோர்
பாகங் கனங்குழை யாய்அரு
ளாயெனத் தில்லைப்பிரான்
வேகம் தருஞ்சிம்புள் விட்டரி
வெங்கதஞ் செற்றிலனேல்
மோகங் கலந்தன் றுலந்ததன்
றோவிந்த மூவுலகே.

#1290

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கனகன் - இரணியன்.
ஆகம் - மார்பு.
``கனகனை ஆகம் கீறிய`` என்றதை, `யானையைக் காலை வெட்டினான்` என்பது போலக் கொள்க.
கோளரி, இங்கு நரசிங்கம்.
`நரசிங்கமாகத் தோன்றி இரணியன் மார்பை நகத்தாற் பிளந்து, அவனது வரத்திற்கு அஞ்சி, அவனது உதிரம் ஒரு துளியும் கீழே விழாதபடி குடித்த திருமால் அந்த உதிர வெறியால் மூவுலகத்தையும் தாக்கிபொழுது தேவர்கள் சிவ பெருமானைத் துதித்து முறையிட, அவர் சரபமாய்ச் சென்று நரசிங்கத்தை அழித்தமையால், திருமால் முன் நிலைமையை அடைந்து அருள் உடையரானார் என்பது பண்டை வரலாறு.
குழை - குழையை உடையவளை ஒரு பாகத்தில் உடையவனே` என்க.
சிம்புள்- சரபம்.
இதனை `எண்காற் பறவை` என்பர்.
``சிம்புளை விட்டுச் செற்றியனேல்`` என்றமையால், சிம்புளைச் சிவபெருமான் தமது உருவினின்றும் தோற்றினனேல்`` என்றமையால், சிம்புளைச் சிவபெருமான் தமது உருவினின்றும் தோற்றுவித்து

விடுத்தமை பெறப்படும்.
அரி - திருமால்.
கதம் - கோபம்.
மோகம், இங்குத் திகைப்பு.
உலந்தது - அழிந்தது.
`அழிந்திருக்கும்` என்பதில் `இருக்கும்` என்பது எதிர்கால முற்றாதலின், அதனொடு முடிந்த `அழிந்து` என்னும் செய்தென் எச்சம்.
செய்தென் எச்சத்து இறந்த காலம்
எய்திட னுடைத்தே வாராக் காலம்.
1 என்னும் விதியினால் எதிர்காலத்து இறந்த காலமாய்த் தனி இறந்த காலத்தில் அது நிகழாமையைக் குறிக்கும்.
மூவுலகு - முப்பகுதியை உலகும்.

மூவுலக கத்தவ ரேத்தித்
தொழுதில்லை முக்கட்பிராற்
கேவு தொழில்செய்யப் பெற்றவர்
யாரெனில் ஏர்விடையாய்த்
தாவு தொழிற்பட் டெடுத்தனன்
மாலயன் சாரதியா
மேவிர தத்தொடு பூண்டதொன்
மாமிக்க வேதங்களே.

#1291

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஏவு தொழில் - அப்பெருமானால் குறிப்பிட்டு ஏவப் பட்ட தொழில்.
தாவு தொழில்பட்டு - குறித்த இடத்திற்குத் தாவிச் செல்லுகின்ற தொழிலிலே பொருந்தி.
சாரதியா - சாரதியாய் இருக்க.
`மால் விடையாய்த் தாவு தொழிற்பட்டு எடுத்தனன்.
அயன் சாரதியாக, வேதங்கள் இரதத்தொடு பூண்ட மா ஆயின` - என முடிக்க.
எடுத்தல் - தாங்குதல்; சுமத்தல்.
``சாரதியாக`` என்ற அனுவாதத்தானே, `சாரதி ஆயினான்` என்பது பெறப்பட்டது.
மா - குதிரை.
இதன்பின் `ஆயின` என்பது தொகுத்தலாயிற்று.
``இரதத்தொடு`` என்பதை, `இரதத்தை` எனத் திரிக்க.
அனைவரும் `தில்லைப் பிரானுக்கு ஏவலாளர்களே` என்றபடி.

வேதகச் சிந்தை விரும்பிய
வன்தில்லை யம்பலத்து
மேதகக் கோயில்கொண் டோன்சேய
வன்வீ ரணக்குடிவாய்ப்
போதகப் போர்வைப் பொறிவா
ளரவரைப் பொங்குசினச்
சாதகப் பெண்பிளை தன்ஐயன்
தந்த தலைமகனே.

#1292

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வேதம் - இரச வாதத்தால் பொன்னாக மாறிய பிற உலோகங்கள் அவைபோலும் சிந்தையாவது, திருவருளால் அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானத்தை அடைந்த சிந்தை.

அறிவு அதனை விரும்பியவன் என்றும், `அதனால் விரும்பப்பட்டவன்` என்றும் இருபொருளும் கொள்க.

``தந்த தலைமகன்`` என்பதைக் ``கோயில் கொண்டோன்`` - என்பதன் பின்னர்க் கூட்டுக.

தலைமகன்- விநாயகக் கடவுள்.

சேயவன் - முருகன்.

``வீரணக் குடிவாய்.

.

.

பெண் பிள்ளை`` துற்கை `இவ்விருவர்க்கும் ஐயன்; தமையன்` என்க.

`திருநாரையூர் விநாயகர் இரட்டைமணி மாலை` *14*-ஆம் பாடலைக் காண்க.

போதம் - யானை; அதன் தோல்; ஆகுபெயர்.

பொறி - புள்ளிகள்.

வாளரவு - கொடிய பாம்பு.

பெற்ற மக்களது சிறப்புக் கூறு முகத்தால், பெற்றோனது சிறப்பு உணர்த்தியவாறு.

சாதகம் - பேய்க் கூட்டம்.

தலையவன் பின்னவன் தாய்தந்தை
யிந்தத் தராதலத்து
நிலையவம் நீக்கு தொழில்புரிந்
தோன்அடு வாகிநின்ற
கொலையவன் சூலப் படையவன்

ஆலத் தெழுகொழுந்தின்
இலையவன் காண்டற் கருந்தில்லை
யம்பலத் துள்ளிறையே.

#1293

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஆலத்தெழு`` என்பது முதலாகத் தொடங்கி, ``இந்தத் தராதலத்து`` என்பதை முதலிற் கூட்டியுரைக்க.
ஆலத்து எழுகொழுந்தின் இலையவன் - ஆல் இலையில் பள்ளி கொள்பவன்; மாயோன்.
தலையவன் - முன்னோன்; முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருள் பின்னவன் - பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியன்.
1 ``தாய், தந்தை`` என்றதனால் தோற்று வித்தல் குறிக்கப்பட்டது.
நிலையவன் - நிலைக்கச் செய்பவன்.
நீக்கு தொழில் - அழிக்கும் தொழில்.
நடுவாகி நிற்றல் - இரு முனையோடு நடுவண் ஒரு முனையுடையதாய் இருத்தல்.
``கொலைய`` என்பது தொழிலடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்.

இறையும் தெளிகிலர் கண்டும்
எழில்தில்லை யம்பலத்துள்
அறையும் புனல்சென்னி யோனரு
ளாலன் றடுகரிமேல்
நிறையும் புகழ்த்திரு வாரூ
ரனும்நிறை தார்ப்பரிமேல்
நறையும் கமழ்தொங்கல் வில்லவ
னும்புக்க நல்வழியே.

#1294

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடு கரி - கொல்லும் யானை.
``கொல்லும்`` என்றது இன அடை.
ஆரூரன், சுந்தர மூர்த்தி நாயனார்.
தார்ப் பரி- மணிக் கோவையணிந்த குதிரை.
வில்லவன் - வீற்கொடியையுடைய சேரன்; சேரமான் பெருமாள் நாயனார்.

சுந்தரர் யானைமீது ஏறிக் கயிலாயம் செல்கையில் வழியில் சிவபெருமானைக் குறித்து,

மண்ணுல கிற்பிறந்து நும்மை
வாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல்
தொண்ட னேன்இன்று கண்டொழிந்தேன்

என அருளிச் செய்தார்.

அங்ஙனம் ``மண்ணுலகத்தில் மக்களாய்ப் பிறந்தோர் சிவபெருமானை வாழ்த்தி வணங்கினால் அவர்கள் பின்பு அப்பெருமானுடைய உலகத்தை அடைவர்`` என்னும் ஆகமப் பிரமாணம் காட்சிப் பிரமாணம் ஆனதையறிந்தும் மண்ணுலகில் மக்களாய்ப் பிறந்தோர் சிலர் அவ்ஆகமப் பிரமாணத்தைச் சிறிதும் தெளிகின்றிலர் என்பதாம்.

இறையும் - சிறிதும்.

அறையும் - ஒலிக்கின்ற.

சுந்தரர் யானைமேற் கயிலை சென்றபொழுது அவர்க்குத் தோழனாய் இருந்த சேரமான் பெருமாள் நாயனாரும் குதிரைமேல் உடன் சென்றதையறிக.

நல்வழி நின்றார் பகைநன்று
நொய்ய ருறவிலென்னும்
சொல்வழி கண்டனம் யாம்தொகு
சீர்த்தில்லை யம்பலத்து
வில்வழி தானவ ரூரெரித்
தோன்வியன் சாக்கியனார்
கல்வழி நேர்நின் றளித்தனன்
காண்க சிவகதியே.

#1295

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நொய்யார் - சிறியார்.

``நொய்யார் உறவில் நல்வழி நின்றார் பகை நன்று`` என்னும் சொல்லாவது,

பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும்

என்னும் குறள்.

சாக்கிய நாயனார் சிவலிங்கத்தைக் கல்லால் எறிதலை நியமமாகக் கொண்டு செய்து முத்தி பெற்றார்.

கல்லால் எறிதல் பகைமைச் செயலாயினும் அன்பு காரணமாகச்

செய்யப்பட்டது.
இங்ஙனமே கண்ணப்ப நாயனார் தமது செருப்புக் காலைச் சிவலிங்கத் தின்மேல் வைத்ததும் இதனால், `நல்வழியில் நிற்கும் நல்லோர் பிறர்க்குத் தீங்குபோல எவற்றையேனும் செய்வாராயினும் அச் செயற்குக் காரணம் பகைமையாகாது, அன்பேயாய் இருக்கும்` என்ற படி.
`வில்வழியாக` என ஆக்கம் விரிக்க.
தானவர் - அசுரர்; முப்புரத் தவர்.
கல்வழி - கல்லை எறிந்ததே வழியாக.
நேர் நின்று - நேரே காட்சி யளித்து ``காண்க`` என்பது அசை.

கதியே யடியவர் எய்ப்பினில்
வைப்பாக் கருதிவைத்த
நிதியே நிமிர்புன் சடையமிர்
தேநின்னை யென்னுள்வைத்த
மதியே வளர்தில்லை யம்பலத்
தாய்மகிழ் மாமலையாள்
பதியே பொறுத்தரு ளாய்கொடி
யேன்செய்த பல்பிழையே.

#1296

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கதியே`` முதலிய நான்கும் விளிகள்.
கதி - புகலிடம்.
`அனைத்துயிர்க்கும் கதியே` எனவும், `கருத்தினுள் வைத்த நிதியே` எனவும் உரைக்க.
மதியே - ஞான வடிவினனே.
பதி - கணவன்.
இங்ஙனம் பலவாறு விளித்துப் பிழை பொறுக்க வேண்டி விண்ணப்பித்தபடி.

பிழையா யினவே பெருக்கிநின்
பெய்கழற் கன்புதன்னில்
நுழையாத சிந்தையி னேனையும்
மந்தா கினித்துவலை
முழையார் தருதலை மாலை
முடித்த முழுமுதலே
புழையார் கரியுரித் தோய் தில்லை
நாத பொறுத்தருளே.

#1297

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மந்தாகினி.
தில்லை நாத! பிழையாயினவே.
பொறுத்தருள்`` என இயைத்து முடிக்க.
மந்தாகினி - கங்கை.
துவலை- திவலை; துளி.
`கங்கையினது துளிகள் தனது முழையின்கண் வந்து ஆரப் பெறுகின்ற (நிரம்பப் பெறுகின்ற தலை` என்க.
தலை, வெண்டலை.
புழை - உள்ளாற் செல்லும் துளை.
``புழை ஆர்`` என்பதில் உள்ள `ஆர், ``கரி`` என்பதன் முதனிலையோடு முடிந்தது.
கரம் + இ = கரி.
இதன் முதலிரண்டடிகளை.
பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச் சுருக்குமன்பின்
வெற்றடி யேனை விடுதிகண்டாய்
வெறுப்பனவே செய்யு மென்சிறுமை நின்
பெருமையினால் - பொறுப்பவனே.
என்னும் திருவாசகப் பகுதிகளோடு ஒப்பிட்டுக் காண்க.

பொறுத்தில னேனும்பல் நஞ்சினைப்
பொங்கெரி வெங்கதத்தைச்
செறுத்தில னேனும்நந் தில்லைப்
பிரானத் திரிபுரங்கள்
கறுத்தில னேனுங் கமலத்
தயன்கதிர் மாமுடியை
அறுத்தில னேனும் அமரருக்
கென்கொல் அடுப்பனவே.

#1298

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நம் தில்லைப்பிரான்`` என்பதை முதலிற் கூட்டியும், `நஞ்சினைப் பொறுத்திலனேனும்` எனவும் அமரருக்கு அடுப்பன என்கொல்` எனவும் மொழி மாற்றியும் உரைக்க.
எரி.

தாருகாவன முனிவர் சிவபிரான்மேல் ஏவிய வேள்வித்தீ.
அஃது அப்பெருமானை யாதும் செய்யமாட்டாது.
ஆயினும் ஆபிசார மந்திர ஆற்றலோடு கூடிய அத்தீத் தன்னை விட்டுச் சென்று பலரை இரையாக்கிக் கொள்ளாதபடி.
அப்பெருமான் அதனைத் தன் கையில் ஏந்திக் கொண்டான்.
அயன் - பிரமன்.
அவன் செருக்கு மிகுதியால் சிவ பெருமானை, ``என் மகனே! வா`` என்றான்.
`அவன் கூறிய சொல் பொல்லாச் செருக்குச் சொல்லேயன்றி, உண்மையன்று` என்பதை உணர்த்தச் சிவபெருமான் தன்னை அங்ஙனம் அழைத்த அவனது உச்சி தலையைக் கிள்ளி எடுத்தார்.
பிரமன் சிவபெருமானைப் படைக்கும் அளவிற்கு ஆற்றல் உடையனாயின், அவரால் பறிக்கப் பட்ட அத்தலையை உடனே முன்போலத் தோற்றுவித்துக் கொள்வான் அல்லனோ? பிரமன் படைப்பதும், மாயோன் காப்பதும், பிறவும் எல்லாம் சிவபிரானது சங்கற்பத்தின்படியல்லது, தங்கள் சங்கற்பத்தின் படியல்ல` என்பதையே இத்தகைய புராண வரலாறுகள் விளக்கு கின்றன.
பித்தன்உனது ஒர்தலை பிடுங்கிஎறி போதில்
அத்தலை நமக்கென அமைக்கவிதி யில்லாய்
எத்தலைவன் என்பதுனை? இத்தகைமை கொண்டோ
பைத்தலை அராமுடிகொள் பாரிடம் விதித்தாய்?
எனப் பிற்காலத்து ஆன்றோரும் 1 கூறினார்.
அயன்றனை யாதி யாக
அரனுரு என்ப தென்னை?
பயந்திடும் சத்தி யாதி பதிதலால்
எனவும்,
சத்திதான் பலவோ என்னில்
தான்ஒன்றே அநேக மாக
வைத்திடும் காரியத்தால்
மந்திரி யாதிக் கெல்லாம்
உய்த்திடும் ஒருவன் சத்திபோல்
அரனுடைய தாகிப்
புத்தி முத்திகளை யெல்லாம்
புரிந்து அவன் நினைந்தவாறாம்
என்னும் சிவஞான சித்திச் செய்யுள்களைக் காண்க.
1 `ஒரு கற்பத்தில் உண்டாக்கப்பட்ட பிரம தேவனுக்குப் படைத்தல் தொழிலைக் கற்பித்தற் பொருட்டுச் சிவபெருமானது சங்கற்பத்தின்படி

அவனது நெற்றியினின்றும் நீலலோகிதன் முதலிய உருத்திரர் பதினொருவர் தோன்றினர்` என்பது புராண வரலாறு.
இஃதே பற்றி, பிரமன் உருத்திரனைப் படைத்தான்` என வைணவர்கள் சிவபெருமானைப் பிரமனிலும் தாழ்ந்தவனாகக் கூறிக் கொள்கின் றார்கள்.
`உருத்திரன்` எனச் சிறப்பாகக் கூறப்படுபவர், அயல், மால் இருவர்க்கும் மேலாய் நின்று, பிரகிருதி மாயா உலகங்களை அழித்தல் தொழிலைச் செய்யும் சீகண்ட உருத்திரர்.
இவரைப் பிரமனிலும் தாழ்வாகக் கூறுதல் தத்துவ முறையோடு மாறுபடுவதாகும்.
பிரமனது செருக்கினால் உண்மை மறைக்கப்பட்டதுடன், அவனது படைத்தல் தொழிலும் தாறுமாறாய் நிகழ, உலகத்திற்குப் பல தீமைகள் உளவா மாகலின், `அவையெல்லாம் நிகழாமைப் பொருட்டு அவனது தலையைச் சிவபெருமான் கிள்ளினார்` என்றபடி.
அடுப்பன - விளைவன.
இஃது இறந்த காலத்தில் எதிர்காலம்.
பன்னுதல் - சொல்லுதல்.
அஃதாவது, தேவர் `உண்டருள்க` என்றது.
கதம் - கோபம்.
செறுத்தல் - அடக்குதல்.
கறுத்தல் - கோபித்தல்.
அஃது இங்கு அழித்தலாகிய தன் காரியத்தைத் தோற்றி நின்றது.
கொல், ஐயப் பொருட்டு.

அடுக்கிய சீலைய ராய்அக
லேந்தித் தசையெலும்பில்
ஒடுக்கிய மேனியோ டுணிரப்
பாரொரொள் ளிரணியனை
நடுக்கிய மாநர சிங்கனைச்
சிம்புள தாய்நரல
இடுக்கிய பாதன்றன் தில்லை
தொழாவிட்ட ஏழையரே.

#1299

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடுக்கிய சீலை - கிழிந்த துளைகள் தோன்ற ஒட்டா மல் பல மடிப்புக்களாக மடிக்கப்பட்ட சீலை.
அகல் - மண்டை; மட் பாத்திரம்.

`எலும்பில் தசை ஒடுக்கிய மேனி` என்க.
அஃதாவது எலும்புகள் நன்கு தோன்றும் உடம்பு.
நடுக்கிய - நடுங்கச் செய்த.
நரல் - (சிங்கன்) அலறும்படி.
ஏழையர் - அறிவிலிகள் (முற்பிறப்பில்) தில்லை தொழாத ஏழையர்கள் (இப்பிறப்பில்).
வறியராய் ஊண் இரப் பார்கள்` என்க.

ஏழையென் புன்மை கருதா
திடையறா அன்பெனக்கு
வாழிநின் பாத மலர்க்கே
மருவ அருளுகண்டாய்
மாழைமென் நோக்கிதன் பங்க
வளர்தில்லை யம்பலத்துப்
போழிளந் திங்கள் சடைமுடி
மேல்வைத்த புண்ணியனே.

#1300

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதன் பொருள் வெளிப்படை வாழி.
அசை மாழை - மாவடு.

புண்ணிய னேயென்று போற்றி
செயாது புலன்வழியே
நண்ணிய னேற்கினி யாதுகொ லாம்புகல்
என்னுள் வந்திட்
டண்ணிய னேதில்லை யம்பல வாஅலர்
திங்கள் வைத்த
கண்ணிய னேசெய்ய காமன்
வெளுப்பக் கறுத்தவனே.

#1301

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

புகல் - கதி.
அண்ணியன் - இனிப்பவன்.
கண்ணி - முடியிலணியும் மாலை.
அன்றி, `கண்ணியமானவன்` என்றலும் ஆம்.
செய்ய - எல்லாரையும் ஒருபடித்தாக வருத்துகின்ற.

காமன் - மன்மதன்.
வெளுப்ப - சாம்பலாகும்படி.
கறுத்தவன் - கோபித்தவன்.

கறுத்தகண் டாஅண்ட வாணா
வருபுனற் கங்கைசடை
செறுத்தசிந் தாமணி யேதில்லை
யாயென்னைத் தீவினைகள்
ஒறுத்தல்கண் டாற்சிரி யாரோ
பிறர்என் னுறுதுயரை
அறுத்தல்செய் யாவிடி னார்க்கோ
வருஞ்சொ லரும்பழியே.

#1302

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கறுத்த கண்டன் - நீல கண்டன்.
அண்ட வாணன் - ஆகாயத்தில் இருப்பவன்.
செறுத்த - அடக்கிய.
உறுதுயர் - மிக்க துன்பம்.
`அரும்பழி ஆர்க்கு வரும்?` சொல் என்க.
ஓகாரம் சிறப்பு.
`உனக்குத்தான் வரும்` என்பது குறிப்பு.

பழித்தக் கவுமிக ழான்தில்லை
யான்பண்டு வேட்டுவனும்
அழித்திட் டிறைச்சி கலைய
னளித்த விருக்குழங்கன்
மொழித்தக்க சீரதி பத்தன்
படுத்திட்ட மீன்முழுதும்
இழித்தக்க வென்னா தமிர்துசெய்
தானென் றியம்புவரே.

#1303

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டில் ``அழித்திட்டிறைச்சி புலையன் அளித்த அவிழ்க் குழங்கல்`` என இவ்வாறு இருக்க வேண்டிய பாடம் மிகவும் திரிபு பட்டுள்ளது. கண்ணப்ப நாயனாரை ``வேட்டுவன்`` எனச் சாதிப் பெயராற் கூறியது போலவே, சேந்தனாரையும் `புலையன்` எனச் சாதிப் பெயராற்

கூறினார்.
சேந்தனார் இட்ட தவிட்டுக் களி திருவமுதா யினமை மேல், ``பூந்தண் பொழில்சூழ்`` என்னும் பாடலிலும் குறிப்பிடப்பட்டது.
அதிபத்தன் - அதிபத்த நாயனார்.
இவர் வலைஞர்.
அழித்து - விலங்குகளைக் கொன்று.
`இட்ட` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.

வரந்தரு மாறிதன் மேலுமுண்
டோவயல் தில்லைதன்னுள்
புரந்தரன் மால்தொழ நின்ற
பிரான்புலைப் பொய்ம்மையிலே
நிரந்தர மாய்நின்ற வென்னையும்
மெய்ம்மையின் தன்னடியார்
தரந்தரு வான்செல்வத் தாழ்த்தினன்
பேசருந் தன்மையிதே.

#1304

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

புலைப் பொய்மை - கீழான நிலையாப் பொருள்கள்.
அவை உலகத் துப்புரவுகள்.
நிரந்தரம் - இடையறாமை.
`தன் அடியார், மெய்ம்மையில் தரம் தரு செல்வம்` என்க.
தரம் தருதல் - மேன்மை யடைதல்.
தன்மையுடையதை, ``தன்மை`` என்றார்.
`இது பேசருந் தன்மையுடையது ஆதலின், இதன்மேலும் (எனக்கு அவன்) வரம் (மேன்மை) தருமாறு உண்டோ` என முடிக்க.

தன்தாள் தரித்தார் யாவர்க்கும்
மீளா வழிதருவான்
குன்றா மதில்தில்லை மூதூர்க்
கொடிமேல் விடையுடையோன்
மன்றா டவும்பின்னும் மற்றவன்
பாதம் வணங்கியங்கே
ஒன்றார் இரண்டில் விழுவரந்
தோசில வூமர்களே.

#1305

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``சில ஊமர்கள்`` - என்பதை முதலிற் கூட்டியுரைக்க.
ஊமர் - பேச அறியாதவர்.
ஒழுகும் நெறியறியாதவரை இங்ஙனம் `பேச அறியாதவர்` என்றல் வழக்கு, ``கோடி மேல் விடையுடையான்`` என்பது, `சிவன்` என ஒரு சொல் தன்மைப்பட்டு நின்று, ``தில்லை மூதூர்`` என்பது ஏழாவதன் பொருள்படத் தொக்கு நின்றது.
``ஆடவும்`` என்னும் உம்மை எளிமையை உணர்த்தி நிற்றலின் இழிவு சிறப்பும்மை.
`மன்றில் ஆடவும் வணங்கி ஒன்றார்` என்க.
மற்று, அசை.
அங்கே - அம்மன்றிலே.
ஒன்றுதல் - மனம் ஒருங்குதல்.
இரண்டு, பிறப்பும் இறப்பும் இது தொகைக் குறிப்பு.

களைக கணிலாமையுந் தன்பொற்
கழல்துணை யாந்தன்மையும்
துளைக ணிலாம்முகக் கைக்கரிப்
போர்வைச் சுரம்நினையாம்
தளைக ணிலாமலர்க் கொன்றையன்
தண்புலி யூரனென்றேன்
வளைக ணிலாமை வணங்கும்
அநங்கன் வரிசிலையே.

#1306

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டுத் தலைவி தோழிக்கு அறத்தொடு நின்றது.
மூன்றாம் அடி முதலாகத் தொடங்கியுரைக்க.
தளைகள் நிலா மலர் - கட்டு (முறுக்கு - அரும்பாய் இருக்கும் நிலை) நில்லாத, (நிலா, இடைக்குறை) எனவே, நன்கு மலர்ந்த மலர்.
`கொன்றையன்` என்றும், `புலியூரன்` என்றும் ஒருமுறை சொன்னேன்.
அது காரணமாகக் கையில் வளைகள் நில்லாது கழன்று வீழும்படி அநங்கனது (மன்மத னது) வரிந்து கட்டப்பட்ட வில் என்னை நோக்கி வளையா நின்றது.
இது பற்றி அச்சுரன் (தேவன், சிவபெருமான்) நினைகின்றானில்லை.
`அதுவே என் வேறுபாட்டிற்குக் காரணம்` என்பது குறிப்பெச்சம்.
கணைகள் - பற்றுக்கோடு.

`கழலே` என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று.
`கண் நிலாவும் முகத்தையும்.
துளை நிலாவும் கையையும் உடைய கரி` என எதிர்நிரல் நிறையாக இயைத்துரைக்க.
``நிலாமை`` என்பது எதிர்மறை வினையெச்சம்.
`சுரம் நினையான்` என்பது பாடமன்று.

வரித்தடந் திண்சிலை மன்மத
னாதலும் ஆழிவட்டம்
தரித்தவன் தன்மக னென்பதோர்
பொற்புந் தவநெறிகள்
தெரித்தவன் தில்லையுட் சிற்றம்
பலவன் திருப்புருவம்
நெரித்தலும் கண்டது வெண்பொடி
யேயன்றி நின்றிலவே.

#1307

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சிற்றம்பலவன் (மன்மதனை நோக்கித்) திருப்புருவம் நெரித்த மாத்திரத்தில் கண்டது சாம்பலேயன்றி, அவனது பேரழகும், `திருமால் பெற்ற மகன்` என்னும் புகழும் சிறிதும் நின்றில என்க.
`மன்தனை நோக்கி` என்பது முன்னர்ப் போந்த சொற்களின் குறிப்பால் வந்து இயைந்த இசையெச்சம்.
தவநெறிகள் - சிவதன்ம வழிகள்.

நின்றில வேவிச யன்னொடுஞ்
சிந்தை களிப்புறநீள்
தென்தில்லை மாநட மாடும்
பிரான்தன் திருமலைமேல்
தன்தலை யால்நடந் தேறிச்
சரங்கொண் டிழிந்ததென்பர்
கன்றினை யேவிள மேலெறிந்
தார்த்த கரியவனே.

#1308

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பாரத - இதிகாசத்துள், `பதின்மூன்றாம் நாட்போர் முடிந்தபின் இரவில் கிருட்டினன் அருச்சுனனை அவனது சூக்கும தேகத்தோடு மட்டும் உடன்

கொண்டு கயிலாயத்தை அடைந்து, சிவபெருமானைத் தரிசிப்பித்து, அப்பெருமான் முன்பு அவனுக்கு வழங்கிய பாசுபதாத்திரம் இந்திரன் பொருட்டு அவனால் `நிவாத கவச காலகேயர்` என்னும் அசுரர் மேல் ஏவப்பட்டமையால் அஃது அவ்வசுரர்களையழித்துவிட்டுக் கயிலாயத்துள் சென்றிருந்ததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளச் செய்து மீண்டு குருச்சேத்திரத்தை அடையச் செய்தான்` எனக் கூறப்பட்டது. அப்பொழுது கிருட்டினன் கயிலாய மலைமேல் `காலால் நடத்தல் கூடாது` எனத் தலையால் நடந்து ஏறினமை இப்பாட்டால் அறியப்படுகின்றது.
இப்பாட்டு அந்தாதியாய் அமைதற் பொருட்டு, ``நின்றிலவே`` என்பது பாடமாகக் காணப்பட்ட போதிலும் ``நின்றிரவே`` என்பதே பாடமாகும். அப்பாடம் அந்தாதிக்கு மாறாவதன்று.
``நின்று`` என்பதை ``ஏறி`` என்பதன் பின்னர் கூட்டுக.
`கரியவன் இரவே விசயன்னொடும் திருமலைமேல் சரம் கொண்டு இழிந்தது தலையால் நடந்து ஏறி நின்று` என இயைத்து முடிக்க.

கருப்புரு வத்திரு வார்த்தைகள்
கேட்டலும் கண்பனியேன்
விருப்புரு வத்தினொ டுள்ளம்
உருகேன் விதிர்விதிரேன்
இருப்புரு வச்சிந்தை யென்னைவந்
தாண்டது மெவ்வணமோ
பொருப்புரு வப்புரி சைத்தில்லை
யாடல் புரிந்தவனே.

#1309

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கரும்பு + உருவம் = கருப்புருவம்.
`கரும்பு போலும் உருவம்` என்க.
கரும்பு போலுவதாவது கண்டார்க்கு இனிதாதல்.
`அவ்வுருவத்தைக் குறிக்கின்ற திருவார்த்தைகள்` என்க.
விருப்பு உருவம் - அன்பே வடிவான உடம்பு.
இரும்பு + உருவம் = இருப் புருவம்.
இங்கு ``உருவம்`` என்றது தன்மையை.
பொருப்பு உருவப் புரிசை -மலை போலும் உருவத்தையுடைய மதில்.

புரிந்தஅன் பின்றியும் பொய்மையி
லேயும் திசைவழியே
விரிந்தகங் கைம்மலர் சென்னியில்

கூப்பின் வியன்நமனார்
பரிந்தவ னூர்புக லில்லை
பதிமூன் றெரியவம்பு
தெரிந்தவெங் கோன்தன் திரையார்
புனல்வயற் சேண்தில்லையே.

#1310

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டிற்கு முதற்கண் `ஒருவன்` என்னும் எழுவாய் வருவிக்க.
பொய்ம்மையிலே - பொய்யாகவே; அஃதாவது மனம் பற்றாது மற்றவர் செய்வது போலச் செய்பவனாய்.
திசை வழியே - ஒருதிசை நோக்கிச் செல்லும் வழியில்.
அகங்கைம்மலர்- உள்ளங்கையாகிய மலர்கள்.
``விரிந்து`` என்பதனை, `விரிய` எனத் திரிக்க.
`முன்னே விரியப் பின்னே கூம்பின்` என்க.
அகங்கை இரண் டனையும் விரித்தல் ஒருவகை ஆவாகன முத்திரை.
இறைவனிடம் ஒன்றை வேண்டுதற்கும் இம்முத்திரை பயன்படும்.
`அவன்பால் மட்டு மன்று; அவனது ஊர்க்குள்ளும் நமனார் புகலில்லை` என்பதாம்.
`ஒருவன் தில்லையை நோக்கிச் சென்னியிற் கைகூப்பினால் அவனது ஊர்க்குள்ளும் நமனார் புகலில்லை` என்க.
பரிந்து - விரைந்து.
பதிமூன்று - முப்புரம்.

சேண்தில்லை மாநகர்த் திப்பியக்
கூத்தனைக் கண்டுமன்பு
பூண்டிலை நின்னை மறந்திலை
யாங்கவன் பூங்கழற்கே
மாண்டிலை யின்னம் புலன்வழி
யேவந்து வாழ்ந்திடுவான்
மீண்டனை யென்னையென் செய்திட
வோசிந்தை நீவிளம்பே.

#1311

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சேண் - அகன்ற இடம்.
`திவ்வியம்` என்பது ``திப்பியம்`` எனத் திரிந்து வந்தது.

திவ்வியம் - தெய்வத் தன்மை சந்தை அடங்குதலை `அது தன்னை மறத்தல்` என்றார்.
கழற்கு - கழற் கண்; உருபு மயக்கம்.
மாறாதல் - ஒடுங்குதல்.
மீண்டனை - கழலிற் சென்றும் திரும்பினாய்.
`என்னை என் செய்திட மீண்டனை` என ஓகாரம் வினாப் பொருட்டு.
``சிந்தை`` என்பதை முதலிற் கூட்டுக.
அதனைப் பின்னும் கூட்டுக.
சிந்தை, அண்மை விளி.

விளவைத் தளர்வித்த விண்டுவுந்
தாமரை மேலயனும்
அளவிற்கு அறியா வகைநின்ற
வன்றும் அடுக்கல்பெற்ற
தளர்வில் திருநகை யாளும்நின்
பாகங்கொல் தண்புலியூர்க்
களவிற் கனிபுரை யுங்கண்ட
வார்சடைக் கங்கையனே.

#1312

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈற்றடியை முதலில் வைத்து உரைக்க.
களா, ``கள`` எனச் செய்யுளில் ஈறு குறுகி நின்றது.
களா, ஒருவகைச் செடி.
`அதில் உள்ள கனி` என்க.
புரையும் - போலும்.
`கற்ற வார்சடை` என்பது பாட மன்று.
`வார்சடையிற் கங்கையை உடையவனே` என்க.
விளாவைத் தளர்வித்த - (கண்ணனாய் இருந்த நிலைமையில்) விளாங்கனியை (கன்று குணிலா) எறிந்து உதிர்த்த.
விண்டு - விட்டுணு; அடுக்கல் பெற்ற - மலையரையன் பெற்ற.
தளவின் திரு நகையாள் - முல்லையரும்பு போன்ற நகையை உடைய உமாதேவி.
`சடைக் கங்கையனே! நீ மாலும், அயனும் அடி முடிதேட அனற்பிழம்பாய் நின்ற அப்பொழுதும் மலைமகள் உன் இடப்பாகத்தில் இருந்தாளோ` என்க.
கொல, ஐயம்.
`என்றுமே உமை பாகம் பிரியாய்` எனப் படுகின்ற நீ நெருப்புருவாய்

நின்ற காலத்தில் அவளைப் பிரியா திருத்தல் எங்ஙனம் கூடிற்று என்றபடி.
``எத்திறம் நின்றான் ஈசன், அத் திறம் அவளும் நிற்பள் *1* என்பது அவன் இயல்பாகலின் நீ நெருப்பாய் நின்றபொழுது, அவன் அதன் சூடாய் இருந்தாள் போலும்`` என்பது குறிப்பு.

கங்கை வலம்இடம் பூவலங்
குண்டலம் தோடிடப்பால்
தங்குங் கரம்வலம் வெம்மழு
வீயிடம் பாந்தள்வலம்
சங்க மிடம்வலம் தோலிட
மாடை வலம்அக்கிடம்
அங்கஞ் சரிஅம் பலவன் வலங்கா
ணிடமணங்கே.

#1313

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு மாதொரு கூறாம் வடிவத்தை வருணித் தது.
`வலம் கரம் மழுதங்கும்` என இயைக்க.
வீ - பூச் செண்டு.
பாந்தள் - பாம்பு.
சங்கம் - சங்க வளையல்.
அங்கு, அசை.
அக்கு - எலும்பு மாலை.
அம்சரி - அழகிய சரிவு.
(தொங்கல்) பொன்னரி மாலை முதலியன.
காண், அசை.
`வலம் அம்பலவன்; இடம் அணங்கு.
(பெண்) இந்நிலைமைக்கு ஏற்ப, தலையில் வலம் கங்கை; இடம் பூ முதலியனவாம்` என்க.

அணங் காடகக்குன்ற மாதற
ஆட்டிய வாலமர்ந்தாட்
கிணங்கா யவன்தில்லை யெல்லை
மிதித்தலு மென்புருகா
வணங்கா வழுத்தா விழாவெழும்
பாவைத் தவாமதர்த்த
குணங்காண் இவளென்ன வென்றுகொ
லாம்வந்து கூடுவதே.

#1314

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது தலைவியது கைக்கிளைக் காதல் ஆற்றாமை கண்டு தோழி மனமழிந்து கூறியது.
ஆல் - திருஆலங்காடு தலம்.
அதில் அமர்ந்தவள் காளி.
அவளை ``அணங்கு`` என்றதனோடு, சத்தி கூறாதல் பற்றி, ``ஆடகக் குன்ற மாது`` என்றார்.
`பொன்மலை மகள்` என்பது அதன் பொருள்.
அற ஆட்டிய - தன்னை (சிவபெருமானை) என முற்கால ஆசிரியரும் கூறினார்.
அவளை ஒறுத்து அடக்காமல், இனிய நடனத்தினாலே வென்று அடக்கினமை பற்றிச் சிவபெருமானை ``அவளுக்கு இணங்கியவன்`` என்றார்.
தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயலுமது என்னேடீ?
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெலாம்
ஊன்புக்கு வேற்காளிக்கு ஊட்டாங்காண் சாழலோ
என்னும் திருவாசகத்தைக் காண்க.
வழுத்தல் - துதித்தல்.
பாவை, தலைவி.
`பாவை, தில்லை எல்லை மிதித்தலும் என்பு உருகா.
.
.
.
எழும்; (ஆகவே, தில்லைப்பிரான் இவளை) - இவள் மதர்த்த குணம் - என்ன (இரங்கி) என்று வந்து கூடுவது` என இயைத்து முடிக்க.
தவா - நீங்காத; மதர்த்த - களித்த; பித்துக் கொண்ட.
குணம் உடையவளை, ``குணம்`` என்றார்.
காண், கொல், ஆம் அசைகள் ``உருகா`` என்பது முதலாக எண்ணின்கண் வந்த வினையெச்சங்கள் யாவும் ``எழும்`` என்னும் முற்றொடு முடிந்தன.

கூடுவ தம்பலக் கூத்த
னடியார் குழுவுதொறும்
தேடுவ தாங்கவ னாக்கமச்
செவ்வழி யவ்வழியே

ஓடுவ துள்ளத் திருத்துவ
தொண்டசுட ரைப்பிறவி
வீடுவ தாக நினையவல்
லோர்செய்யும் வித்தகமே.
#1315
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பிறவி வீடுவதாக நினைய வல்லோர் செய்யும் வித்தகம் அடியார் குழுவு தொறும் கூடுவதும், அவன் ஆக்கம் செவ்வழி தேடுவதும், அவ்வழியே ஓடுவதும், ஒண் சுடரை உள்ளத்து இருத்துவதும் `ஆம்` என இயைத்து முடிக்க.

``ஆக்கும்`` என்பது இறந்த காலத்தில் வந்தது.

சிவபெருமான் ஆக்கிய செவ்விய வழியாவது சிவாகம நெறி.

அதனை அடுத்துவரும் பாட்டாலும் அறியலாம்.

``கூடுவது`` முதலிய நான்கு தொழிற் பெயர்களும் செவ்வெண்.

அவற்றது இறுதியில் அவற்றின் தொகை தொகுக்கப்பட்டு நின்றது.

`அவ்வழிக்கண்ணே` - என ஏழாவது விரிக்க.

ஒண்சுடர் - ஞானம்; என்றது சிவஞானத்தை.

``வீடுவது ஆக`` என்றது, `உண்டாகும்படி` என்றவாறு.

வித்தகம் - திறல்.

திறலால் செய்யப்படும் செயல்களை, `திறல்` என்றார்.

`பிறவாறு செய்யும் செயல்கள் பிறவியை நீக்க மாட்டா` என்பது கருத்து.

வித்தகச் செஞ்சடை வெண்மதிக்
கார்நிறக் கண்டத்தெண்தோள்
மத்தகக் கைம்மலைப் போர்வை
மதில்தில்லை மன்னனைத்தம்
சித்தகக் கோயில் இருத்தும்
திறத்தா கமியர்க்கல்லால்
புத்தகப் பேய்களுக் கெங்குத்த
தோஅரன் பொன்னடியே.
#1316
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வித்தகம், வெண்மதி, கார்நிறக் கண்டம், எண் தோள், கைம்மலைப் போர்வை - இவை அனைத்தும் தில்லை மன்னனாகிய ஒருவனையே சிறப்பித்தன.

வித்தகம் - திறல்.
`செஞ்சடைக் கண் வெண்மதியை உடைய` என்க.
கார் - மேகம்; கருமையுமாம்.
கை மலை - யானை.
இஃது ஆகு பெயராய், அதன் தோலைக் குறித்தது.
சித்தம் - மனம்.
`சித்த` என்பதன் ஈற்று அகரம் குறைந்து நின்றது.
`சித்த மாகிய அகக் கோயில்` என்க.
`கோயிலின்கண்` என ஏழாவது விரிக்க.
ஆகமியர் - சிவாகம நெறியில் நிற்பவர்கள்.
``காருறு கண்ணியர்`` என்றாற் போல்வன வற்றில் ஒருமையுணர்த்தும் இகர விகுதி சாரியை யாய்விட `அர்` என்னும் பன்மை விகுதிபுணர்ந்து பன்மையை உணர்த்தும்.
இவ்வாறு வருதல் அஃறிணைப் பெயர்கள் இன்மையாலும், இன்னோரன்னவை உயர்வு பற்றி வந்த பன்னைப் பெயராகாது, பொருட்பன்மை பற்றிய பெயர்களே ஆதலாலும் இவை தனி மொழிகளில் ஒட்டுப் பெயர் ஆக்கத்தில் உள்ள சில வேறுபாடுகளேயாம்.
ஆசிரியர் தொல்காப்பி யனார் தனிமொழியாக்கத்தைக் கூற முற்படாமையின் இன்னோரன்ன வற்றை அவர் விரித்திலர்.
``புத்தகப் பேய்கள்`` - சுவடிகளைக் காத்தல் மாத்திரத்தையே உடையவர்கள்.
புத்தகமே சாலத் தொகுத்தும் பொருளறியார்
உய்த்தக மெல்லாம் நிரப்பினும் - மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே; பொருள்தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.
1 என்னும் நாலடிச் செய்யுளைக் காண்க.
இதில் `போற்றுதல்` என்றது.
``ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்தல்`` *2* போல, மற்றவர்கள் உயர்த்துப் பேசுதலைக் கேட்டுத் தாங்களும் உயர்த்துப் பேசுதல், `சிவாகமப் பொருளை அறியாதவர்கட்குப் பிற நூல்களின் உண்மைப் பொருள் விளங்காது` என்பதாம்.
அசிக்க ஆரியங்கள் ஓதும்
ஆதரைப் பேத வாதப்
பிசுக்கரைப் காணாகண், வாய்
பேசாதப் பேய்க ளோடே
எனவும்,
ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று

வட்டணை பேசுவர்
எனவும் போந்தனவும், இக்கருத்தே பற்றி எழுந்தனவாம்.
`எங்குள் ளதோ` என்பதை, `எங்கித்ததோ` என்றல் ஒரு வட்டார வழக்கு.
``எங் கிருந்தோ`` என்றது, `அறிய வாராது` என்றபடி.

பொன்னம் பலத்துறை புண்ணிய
னென்பர் புயல்மறந்த
கன்னன்மை தீரப் புனிற்றுக்
கலிக்காமற் கன்றுபுன்கூர்
மன்னு மழைபொழிந் தீரறு
வேலிகொண் டாங்கவற்கே
பின்னும் மழைதவிர்த் தீரறு
வேலிகொள் பிஞ்ஞகனே.

#1317

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பொன்னம்பலத்துறை புண்ணியன் என்பர்`` என்பதனை இறுதியிற் கூட்டுக.
புயல் - மேகம்.
அஃது இங்கு மழையைக் குறித்தது.
கன்னல் - நாழிகை; அஃது இங்குப் பொதுவாக, `காலம்` எனப் பொருள் தந்து நின்றது.
மை - குற்றம்.
அது மழை பெய்யாமைக்குக் காரணமாகிய குற்றம்.
தீர - தீர்ந்தமையால் `தீர்ந்தது பிரார்த்தனையினால்` என்க.
நீற்றுக் கலிக்காமன் திருநீற்றை யணிந்த (அஃதாவது பிரார்த்தித்து அணிந்த) ஏயர்கோன் கலிக்காம நாயனார்.
`புன்கூர் - அந்நாயனாருக்கு உரியதாய் இருந்த திருப்புன்கூர்.
`புன்கூரில்` என ஏழாவது விரிக்க.
கலிக்காம நாயனார்.
தாமும், தம்மைச் சார்ந்த மக்களும் ஏதோ பிழை செய்தமையால் மழை பெய்யா தொழிந்தது` எனக் கருதி, அப்பிழை தீர்த்தற்குப் பன்னிரண்டு வேலி நிலத்தைத் திருப்புன்கூர் இறைவருக்குத் தேவதானமாகக் கொடுப்பது` என்று பிரார்த்தித்துக் கொண்டமையால் மழை பெய்யத் தொடங்கியது.
தொடங்கிய மழை விடாது பொழிந்தமையால் மழை நின்றால், மற்றும் பன்னிரு வேலி தேவதானம் செய்வதாகப் பிரார்த்தித்தமையால் மழை நின்றது.

இச் செய்தியைச் சுந்தரமூர்த்தி நாயனார் தமது திருப்புன்கூர்த் தலப் பதிகத்து இரண்டாம் பாடலில் குறித்தருளினார்.
அஃதே இப்பாட்டிற் கூறப்பட்டது.
`பொழிவித்து` என்பதில் பிறவினை விகுதி தொகுக்கப்பட்டது.
ஈற்றடியில், பின்னும் பிழை தவிர்த்து என்பது பாடமன்று.
ஈற்றில் தொகுக்கப்பட்ட `பிஞ்ஞகனை` என்னும் இரண்டாம் வேற்றுமையை விரிக்க.

நேசனல் லேன்நினை யேன்வினை
தீர்க்குந் திருவடிக்கீழ்
வாசநன் மாமல ரிட்டிறைஞ்
சேனென்தன் வாயதனால்
தேசனென் னானைபொன் னார்திருச்
சிற்றம் பலம்நிலவும்
ஈசனென் னேன்பிறப் பென்னாய்க்
கழியுங்கொல் என்தனக்கே.

#1318

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நேசன் - அன்பன்.
`வினை நீக்கும்` எனப் பாடம் ஓதுதல் சிறக்கும்.
தேசன் ஒளியுடையவன்.
`ஆனை` என்பது காதற் சொல்.
என்னேன் - என்று துதியேன்.
`இப்பிறப்பு` எனச் சுட்டு வருவிக்க.
என் ஆய் - என்ன பயன் தந்ததாய்.
`யாதொரு பயனையும் தந்ததாகாது வீணாய்க் கழியும் போலும்` என்பதாம்.
கொல், ஐயம் `என்றனக்கு என் ஆய்` எனக் கூட்டுக.

தனந்தலை சக்கரம் வானத் தலைமை
குபேரன் தக்கன்
வனந்தலை ஏறடர்த் தோன்வா
சவன்உயிர் பல்லுடலூர்
சினந்தலை காலன் பகல்காமன்
தானவர் தில்லைவிண்ணோர்
இனந்தலை வன்னரு ளால்முனி
வால்பெற் றிகந்தவரே.

#1319

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`தில்லைத் தலைவன் அருளால் தனமும், தலையும், சக்கரமும், வானத் தலைமையும் பெற்றவர் முறையே குபேரனும், தக்கனும் ஏறடர்த்தோனும், வாசவனும்` எனவும், `அவன் முனிவால் உயிரையும், பல்லையும், உடலையும், ஊரையும் இகந்தவர் முறையே காலனும், பகலவனும், காமனும், தானவரும்` எனவும் இயைத்துப் பொருள் கொள்க.
இது நிரல்நிறையணி.
`தில்லைப் பெருமான் அன்பர்கட்கு அருளையும், வன்பர்கட்கு ஒறுப்பையும் அளிக்க வல்லவன்` என்பதாம்.
தனம் - செல்வம்.
வானத்தலைமை - வானுலக ஆட்சி.
ஏறு அடர்த்தான், நப்பின்னையை மணப்பதற்காகக் காளை களைத் தழுவிக் கொன்றவன்.
கண்ணன், திருமால்.
வனந்தலை ஏறு - காட்டில் சென்று மேயும் காளைகள்.
சினந்து அலை காலன் - உயிர்கள்மேல் கோபித்துத் திரிகின்ற யமன்.
பகலைச் செய்பவனைப் ``பகல்`` என்றார்.
`இனத் தலைவன்` என்பது எதுகை நோக்கி மெலிந்து நின்றது.
``பெற்று இகந்தவர்`` என்பதில் ``பெற்று`` என்னும் எச்சம் எண்ணின்கண் வந்ததாகலின், `பெற்றவர், இகந்தவர்` என்றவாறு.

அவமதித் தாழ்நர கத்தில்
இடப்படும் ஆதர்களும்
தவமதித் தொப்பில ரென்னவிண்
ணாளுந் தகைமையரும்
நவநிதித் தில்லையுட் சிற்றம்
பலத்து நடம்பயிலும்
சிவநிதிக் கேநினை யாரும்
நினைந்திட்ட செல்வருமே.

#1320

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அவமதித்து - (கூற்றுவனால்) இகழப் பட்டு.
ஆதர்- அறிவிலிகள்.
தவம் மதித்து - தவத்தை மேன்மையாக மதித்துச் செய்து.

சிவ நிதி - சிவனாகிய செல்வம்.
`நிதிக்கே` என்னும் நான்காம் உருபை இரண்டாம் உருபாகத் திரிக்க.
ஈற்றில் `ஆவர்` என்னும் பயனிலை வருவித்து முடிக்க.
`நினையாதவர் நரகம் புகுவர்` எனவும், `நினைந் தவர் சிவலோகம் பெறுவர்` எனவும் கூறியவாறு.

வருவா சகத்தினில் முற்றுணர்ந்
தோனைவண் தில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன்
செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண்
டேயுமற் றப்பொருளைத்
தெருளாத வுள்ளத் தவர்கவி
பாடிச் சிரிப்பிப்பரே.

#1321

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வரு வாசகத்தினில் செய்` என இயையும்.
வரு வாசகம் - திருவருளின் வழித் தமது நாவில் வந்த சொற்கள்.
இவை `திருவாசகம்` - எனப் பெற்றன.
சிவ பாத்தியன் - சிவனது பாத சம்பந்தத்தை (திருவடி தீட்சையை)ப் பெற்றவன்; திருவாதவூரடிகள்.
`திருவாசகம் மாணிக்கம் போன்றது` என்னும் கருத்தால் அவ்வாசகத்தை வெளியிட்ட அடிகள் `மாணிக்க வாசகர்` எனப் பெயர் பெற்றார்.
இவரை `ஆதிசைவ அந்தணர்` என அறிஞர் கருதுவர்.
இவர் தில்லைப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாக வைத்து அருளிச் செய்த கோவைப் பிரபந்தம், `திருச்சிற்றம்பலக் கோவையார்` என்றும், `திருக்கோவையார்` என்றும் சொல்லப்படுதல் இப்பாட்டில் குறிக்கப்பட்டமை காண்க.
``வருவாசகத்தினில் செய்`` என்றதனால் இதுவும் திருவாசகமேயாக குறிக்கப்பட்டது.
இதனைக் `கோவைத் திரு வாசகம்` என்பர்.
இக்கோவையாரை இவ்வாசிரியர் (நம்பியாண்டார் நம்பி) எட்டாம் திருமுறையகைச் சேர்த்திருத்தல் வெளிப்படை.
அப் பொருள், அதில் சொல்லப்பட்டுள்ள உலகியற் பொருள், அறிவான் நூற் பொருள் `கவியாற் பாடி` என மூன்றாவது விரிக்க.
`அப் பெருமானைச் சிரிக்கச் செய்வர்` என்க.
சிரித்தல் - எள்ளி நகையாடுதல்.

`அருள்வழியால் வந்த சொற் பிரபந்தத்திற்கு அஃது இன்றி, மலவழியால் வரும் சொற்பிரபந்தங்கள் ஒவ்வா` என்பது கருத்து.
இதனால் இவ்வாசிரியர் காலத்தில் சிவபிரான் மீது பாடப்பட்ட வேறு சில கோவைகளும் இருந்தமை அறியப்படும்.

சிரித்திட்ட செம்பவ ளத்தின்
திரளும் செழுஞ்சடைமேல்
விரித்திட்ட பைங்கதிர்த் திங்களும்
வெங்கதப் பாந்தளும் தீத்
தரித்திட்ட வங்கையும் சங்கச்
சுருளுமென் நெஞ்சினுள்ளே
தெரித்திட்ட வாதில்லை சிற்றம்
பலத்துத் திருநடனே.

#1322

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``தில்லைச் சிற்றம்பலத்துத் திருநடன்`` என்பதை முதலிற் கொள்க.
சிரித்திட்ட - ஒளிவீசுகின்ற.
பவளம் - பவளத்தின் நிறம்; ஆகுபெயர்.
திரள் - திரள் போலும் திருவுருவம்.
கதம் - கோபம்.
சங்கச் சுருள் காதில் உள்ளது.
தெரித்திட்டவா - தோற்றுவித்தவாறு; `வியப் பினது` எனச் சொல்லெச்சம் வருவித்து முடிக்க.
நடன் - நடனத்தைச் செய்பவன்.

நடஞ்செய்சிற் றம்பலத் தான்முனி
வென்செயும் காமனன்று
கொடுஞ்சினத் தீவிழித் தாற்குக்
குளிர்ந்தனன் விற்கொடும்பூண்
விடுஞ்சினத் தானவர் வெந்திலர்
வெய்தென வெங்கதத்தை
ஒடுங்கிய காலனந் நாள்நின்
றுதையுணா விட்டனனே.

#1323

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு நிந்தாத்துதி, அஃதாவது, பழித்ததுபோலப் புகழ்

புலப்படுத்தியது.
மிக்க சினத்தோடு தீ எழப் பார்த்த அவன்முன் மன்மதன் குளிர்ந்து எழுந்தான்.
திரிபுரத்தை எரித்தபொழுது அதில் இருந்த அசுரர்கள் எரிந்தொழியவில்லை.
(முன்போலவே இருந் தார்கள்.
) அவனால் உதைக்கப்பட்ட பின்பும் யமன் முன்போல இருந்து கொண்டுதான் இருக்கின்றான் என்றால் தில்லையம்பலத்தில் நடனம் புரியும் பெருமான் கோபித்தால், அக்கோபம் யாரை, என்ன செய்யும்?
(ரதிதேவி தன் வேண்டுகோளுக்கு இரங்கிச் சிவபெருமான் முன்பு எரிந்துபோன மன்மதனை எழுப்பித் தந்து, அவளுக்கு மட்டும் முன்போலத் தோன்றியிருக்கும்படி செய்தார்.
திரிபுரத்தை எரித்த பொழுது புத்தன் போதனையால் மயங்கிப் பத்தியை விட்டுவிடாமல் முன்போலவே இருந்த ஒரு மூவர் அசுரரை எரியாது பிழைத்திருக்கச் செய்தார்.
யமனை உதைத்த பின்பு எழுப்பி `எம் அடியவர்பாற் செல்லாதே` என்று அறிவுரை கூறி விடுத்தார்.
இவைகளையெல்லாம் குறிப்பிடாமல் பொதுவாக நகைச்சுவை தோன்றக் கூறினார்.
``தீமைக்குத் தீமையைத் தருதல் மட்டுமன்றி, நன்மைக்கு நன்மையும் தருபவன் சிவன்`` என்பதைக் குறிப்பால் உணர்த்தியவாறு.
``விழித்தாற்கு`` என்னும் குவ்வுருபை, `முன்` என்னும் பொருட்டாகிய கண்ணுருபாகத் திரிக்க.
வில் - ஒளி.
`விற் பூண்` என இயையும்.
கொடுமை - வளைவு.
பூண் - அணிகலம்.
விடும் சினத்தானவர் - சினத்தை விட்டொழித்த அசுரர்.
வெய்தென - விளைவாக.
`ஒடுக்கிய` என்பது எதுகை நோக்கி மெலிந்து நின்றது.
``நின்று`` என்பது ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபு.
`அந்நாள் முதலாக` என்பது.

விட்டங் கொளிமணிப் பூண்திகழ்
வன்மதன் மெய்யுரைக்கில்
இட்டங் கரியன்நல் லானல்லன்
அம்பலத் தெம்பரன்மேல்
கட்டங் கியகணை யெய்தலுந்

தன்னைப்பொன் னார்முடிமேல்
புட்டங்கி னான்மக னாமென்று
பார்க்கப் பொடிந்தனனே.

#1324

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மதன் - மன்மதன்.
மெய் - உடம்பு.
கரியன் - கருமை நிறமானவன்.
இட்டம் - விருப்பம்.
இதனை, `கரியன்` என்பதன் பின்னர்க்கூட்டி, ``இட்டம் நல்லனல்லன்` என குணவினை குணிமேல் நின்றதாக உரைக்க.
``நல்லனல்லன்`` என்பதன்பின், அதனால் என்னும் சொல்லெச்சம் வருவிக்க.
கள் - தேன்.
கள் தங்கிய கணை, மலர்க் கணை.
தன்னை - அவனை.
புள் மேல் தங்கினான் - கருட வாகனத்தின் மேல் வருபவன்; திருமால்.
`அவன் பொன்னார் முடியை உடையவன் ``திருமால் மகன்`` என்பது, ``மன்மதன்`` என்னும் பெயரளவாய் நின்றது.
என்று - என்று தெரிந்து.
பார்க்க - நெற்றிக் கண்ணைத் திறந்து பார்க்க.
பொடிந்தனன் - சாம்பலாயினான்.
`சிவபெருமான் ஒறுப்பது தீயோரையே` என்றபடி.

பொடிஏர் தருமே னியனாகிப்
பூசல் புகவடிக்கே
கடிசேர் கணைகுளிப் பக்கண்டு
கோயிற் கருவியில்லா
வடியே படவமை யுங்கணை
யென்ற வரகுணன்தன்
முடி ஏர்தருகழ லம்பலத்
தாடிதன் மொய்கழலே.

#1325

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அம்பலத்து ஆடிதன் மொய்கழல்`` என்பதை முதலில் வைத்து உரைக்க.

`வரகுணன்` என்னும் பாண்டியன் மிகுந்த சிவபத்தனாய் இருந்த நிலையில் பகைவர்கள் படையெடுத்து வந்து அவன்மேல் போர் தொடுக்க.
அவன் திருநீற்றையே கவசமாகப் பூசிக்கொண்டு நிராயுதனாய்ப் போர்க்களத்தில் சென்று நிற்கப் பகைவர்கள் விட்ட அம்புகள் அவனை ஒன்றும் செய்யாமல், அவன் காலடியிலே வீழ்ந்தன` என்பது இப்பாட்டுள் கூறப்பட்டது.
இதுவும், இதுபோல இவனது பத்தி மிகுதியை விளக்குவனவாக பதினொன்றாம் திருமுறையில் உள்ள பட்டினத்து அடிகள் பாடலும், திருவிளையாடற் புராணங்களும் கூறும் செய்திகளும் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்ட இருவர் வரகுணருள் ஒருவனுக்கும் அக்கல்வெட்டுக்கள் கூறாமை யால் `கல்வெட்டுக்கள் கூறும் வரகுணர் இருவருள் இப்பாட்டில் குறிக்கப்பட் வரகுணன்` எனச் சிலர் கூறுதல் ஏற்புடையதாய் இல்லை.
எனவே, இவ்வரகுணன் தமிழ் நாட்டில் கல்வெட்டுக்கள் தோன்றுதற்கு முன்னே வாழ்ந்த வரகுணனாவன்.
பொடி - திருநீறு.
ஏர்தரு - அழகைத் தருகின்ற.
பூசல் - போர்; போர்க்களம்.
``அடிக்கு`` என்னும் நான்காவதை ஏழாவதாகத் திரிக்க.
கடி, வடி - கூர்மை.
கோயிற் கருவி - அரண்மனையில் உள்ள படைக் கலங்கள்.
`அவை யில்லாமல்` என்றது.
`அவைகளை எடாமலே` என்றபடி.
அமையும் - ஏற்கும்.
`முடியின் கண்` என ஏழாவது விரிக்க.

கழலும் பசுபாசர் ஆம்இமை
யோர்தங் கழல்பணிந்திட்
டழலு மிருக்குந் தருக்குடை
யோர்இடப் பால்வலப்பால்
தழலும் தமருக மும்பிடித்
தாடிசிற் றம்பலத்தைச்
சுழலு மொருகா லிருகால்
வரவல்ல தோன்றல்களே.

#1326

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``இடப்பால் வலப்பால்`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.
`இடப்பால் தழலும், வலப்பால் தமருகமும்` என நிரல் நிறையாக இயைக்க.
சுழல் வரல் - சுற்றி வருதல், ``சுழலும்`` என்னும் உம்மை `வீழ்ந்து பறிந்து` என இறந்தது தழுவிற்று.
தோன்றல் கள் - பெருமையுடையவர்கள்.
கழலும் பசு பாசம் - பசுக்களைக் கட்டி யுள்ள பாசம் கழலுபவர்.
ஆம் இமையோர் - மக்களின் மேலான வராகிய தேவர்கள்.
தம் கழல் - தமது (சுற்றி வந்தவர்களது) பாதங்கள்.
அழல் - அன்பினால் கண்ணீர் வார நிற்றல்.
``அழல்`` என்னும் தொழிற் பெயர் `அழ` என்னும் செயலென் எச்சப் பொருட்டாய் நின்றது.
உம்மை சிறப்பு.
தருக்கு - பெருமிதம்.
`தில்லையம்பலத்தை வணங்கினோர், தம்மைத் தேவர் வணங்க இருப்பார்கள்` என்பதாம்.

தோன்றலை வெண்மதி தாங்கியைத்
துள்ளிய மாலயற்குத்
தான்தலை பாதங்கள் சார்எரி
யோன்றன்னைச் சார்ந்தவர்க்குத்
தேன்றலை யான்பா லதுகலந்
தாலன்ன சீரனைச்சீர்
வான்தலை நாதனைக் காண்பதென்
றோதில்லை மன்றிடையே.

#1327

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தோன்றல் - பெருமையுடையவன்.
துள்ளிய - அகங்கரித்த.
தோன்றல், தாங்கி, சார்வரியோன், சீரன், நாதன் - இவை ஒரு பொருள்மேல் வந்த பல பெயர்கள்.
தேன்தலை - தேனின்கண்.
ஆன்பால் - பசுவின்பால்.
சீர் - தன்மை.
வான் - வானுலகத்திற்கு, தலை நாதன் - மேலான தலைவன்.
``காண்பது`` என்பதற்கு, `இடை விடாது காண்பது` என உரைக்க.

மன்றங் கமர்திருச் சிற்றம்

பலவ வடவனத்து
மின்றங் கிடைக் குந்தி நாடக
மாடக்கொல் வெண்தரங்கம்
துன்றங் கிளர்கங்கை யாளைச்
சுடுசினத் தீயரவக்
கன்றங் கடைசடை மேலடை
யாவிட்ட கைதவமே.

#1328

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மன்று அங்கு, கன்று அங்கு` என்பவற்றில் வந்த `அங்கு` என்பன அசைகள்.
வட வனம் - திருவாலங்காடு.
`மின் தங்கு இடை` என்றது காளியை.
`இடைக்கு எதிராக` என ஒரு சொல் வருவிக்க.
உந்தி - எழும்பி.
கொல், ஐயம்.
தரங்கம் - அலை.
அம் - அழகு கங்கையாற்றை வெளியில் இருக்கவிடாமல் சடைக்குள் மறைத்து வைத்த கைதவம் (கரவு) காளி எதிரில் நடனம் ஆடுதற் பொருட்டோ` என்றபடி.
இளம் பாம்புகளை, ``கன்று`` என்றது மரபு வழுவமைதி.
``இளநாகமொடு என முளைக்கொம்பவை பூண்டு`` *1* எனத் திருஞானசம்பந்தரும் அருளிச் செய்தார்.
அடைத்தல் - மறைத்தல்.
அடையா இட்ட - அடைத்து வைத்த.
கைதவம் - வஞ் சனை.
சிவபெருமான் திருவாலங்காட்டில் நடனப்போர் செய்தமை மேல்`` அணங்காடகக் குன்ற மாது *1*என்னும் பாட்டிலும் கூறப்பட்டது.

தவனைத் தவத்தவர்க் கன்பனைத்
தன்னடி யெற்குதவும்
சிவனைச் சிவக்கத் திரிபுரத்
தைச்சிவந் தானைச்செய்ய
அவனைத் தவளத் திருநீ
றனைப்பெரு நீர்கரந்த
பவனைப் பணியுமின் நும்பண்டை
வல்வினை பற்றறவே.

#1329

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`உலகீர்` - என்னும் முன்னிலை வருவித்து, ``நும் வினை பற்றற என எடுத்துக்கொண்டு உரைக்க.
தவன் - தவக்கோலம் உடையன்.
``சிவக்க`` என்றது, `தீயால் சிவந்து தோன்ற` என்றபடி.
சிவந்தான் - கோபித்தான்.
``பெறலின், இழவின், காதலின், வெகுளி யின்`` *2* என்றதனால், வெகுளுதல் இரண்டாம் வேர்றுமை பெறுதலை உணர்க.
`திரிபுரத்தை அவை சிவக்கச் சிவந்தான்` என மாற்றிக் கொள்க.
செய்ய - சிவந்த நிறத்தையுடைய.
பவன் - கருதுவார் கருதும் இடத்தில் தோன்றுபவன்.
``கடி சொல் இல்லைக் காலத்துப் படினே`` *3* என்பதனால் முன்னிலைக்கண் வந்த உம், விகுதியின் பின் `மின்` என்பது விகுதிமேல் விகுதியாய் வந்து, ``பணியுமின்`` என்றாயிற்று.

பற்றற முப்புரம் வெந்தது
பைம்பொழில் தில்லைதன்னுள்
செற்றறு மாமணிக் கோயிலின்
நின்றது தேவர்கணம்
சுற்றரு நின்புக ழேத்தித்
திரிவது சூழ்சடையோய்
புற்றர வாட்டித் திரியும்
அதுவொரு புல்லனவே.

#1330

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``சூழ் சடையோய்`` என்பதை முதலிற் கொள்க.
சூழ்தல் - சுற்றிலும் சுழலுதல்.
``உனது வெகுளியால் முப்புரம் வெந்தது.
நீ உயர்ந்த மாணிக்கக் கோயிலிலே இருப்பது, தேவர் கூட்டம் உன்னையே புகழ்ந்து திரிவது இவையெல்லாம் உனக்குப் பெருமையைத் தருகின்றன.
ஆயினும், நீ எங்கும் பாம்பாட்டித் திரிவது ஒன்று மட்டும் உனக்குச் சிறுமையைத் தருகின்றது` என்பது இப்பாட்டின் பொருள்.
``திரிவது`` என்பதன், பின் `இவை பெருமைய` என்பது வருவிக்க.

`ஆகையால் அதனை நீ விட்டொழிக` என்பது குறிப்பெச்சம்.
சிவபெருமானுக்கு இவற்றால் எல்லாம் பெருமையோ, சிறுமையோ உண்டாதல் இல்லை` என்பது இதன் உள்ளுறைப் பொருள்.
செல்தரு உயரத்தால் மேகங்களைத் தடுத்து நிறுத்துகின்ற.
சுற்று - எங்கும் பரவிய.
அரு - அருமையான.

புல்லறி வின்மற்றைத் தேவரும்
பூம்புலி யூருள்நின்ற
அல்லெறி மாமதிக்
கண்ணியனைப் போலருளுவரே
கல்லெறிந் தானுந்தன்
வாய்நீர் கதிர்முடி மேலுகுத்த
நல்லறி வாளனும் மீளா
வழிசென்று நண்ணினரே.

#1331

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி யுரைக்க.
சிவலிங்கத்தின் மேல் மறவாது கல்லெறிந்தவர் சாக்கிய நாயனார்.
சிவலிங்கத்தின் மேல் வாய்நீரை உமிழ்ந்தவர் கண்ணப்ப நாயனார்.
இவ்விருவரும் இச் செயல்களால் தீக்கதியடையாது உள்ளத்து அன்பே காரணமாக, மீளா வழியாகிய வீட்டு நெறியிற் சென்று முத்தியை அடைந்தார்கள்.
செயலை நோக்காது உள்ளத்தை நோக்கி இவ்வாறு அருள்செய்த தேவர் பிறர் இருக்கின்றனரா? என வினவுகின்றார்.
`செயலை விடுத்து உள்ளத்தையறிதல் முற்றறிவுடையானுக்கே கூடும்` என்பதாம்.
அவ் எறி மதி - இராக் காலத்தில் ஒளி வீசுகின்ற திங்கள்.

நண்ணிய தீவினை நாசஞ்
செலுத்தி நமனுலகத்
தெண்ணினை நீக்கி இமையோ
ருகலத் திருக்கலுற்றீர்
பெண்ணினொர் பாகத்தன் சிற்றம்
பலத்துப் பெருநடனைக்
கண்ணினை யார்தரக் கண்டுகை
யாரத் தொழுமின்களே.

#1332

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நாசத்திற் செலுத்து` என ஏழாவது விரிக்க.
நமன் உலகத்து எண் - யமனது உலகத்தைப் பற்றிய நினைவு.
அது விடாத ஆகுபெயராய், அதுபொழுது நிகழும் அச்சத்தைக் குறித்தது.
இருக்கல் உற்றீர் - இருக்க விரும்புபவர்களே! `உங்கள் விருப்பம் நிறைவேற வேண்டுமாயின் நீங்கள் பெருநடனைக் கண்டு தொழுமின்கள்` என்க.
ஆர்தல் - நிரம்புதல்.
அஃதாவது இன்பம் நிரம்புதல்.
`பெண்ணினை` என்பதில் சாரியை நிற்க இரண்டன் உருபு தொகுதல் இலேசினாற் கொள்க.
1 இனி, `பெண்ணினது பாகத்தன்` என ஆறாவது விரித்தலும் அமைவுடையதே.
நடன் - நடனம் ஆடுபவன்.

கைச்செல்வ மெய்திட லாமென்று
பின்சென்று கண்குழியல்
பொய்ச்செல்வர் செய்திடும் புன்மைகட்
கேயென்றும் பொன்றலில்லா
அச்செல்வ மெய்திட வேண்டுதி
யேல்தில்லை யம்பலத்துள்
இச்செல்வன் பாதங் கருதிரந்
தேனுன்னை யென்னெஞ்சமே.

#1333

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கைச் செல்வம் - கைப் பொருள்.
கருத்து நோக்கி, `பொய்ச் செல்வர் பின் சென்று அவர் செய்திடும் புன்மைகட்குக் கண் குழியல்` என உரைக்க.
கண் குழியல் - கண் குழியற்க.
கண் குழிதல் - பட்டினியால் `கண் குழித்தல்` என்பது பாடம் அன்று.
புன்மைகள் - அற்பச் செயல்.
அவை `இல்லை` எனக் கரத்தலோடு, இகழ்தலையும் செய்தல்.
`புன்மைகட்கு` என்னும் நான்காம் வேற்றுமை உருபை, `புன்மையால்` என மூன்றாவதாகத் திரிக்க.
``வேண்டுதியே`` என்னும் ஏகாரம் தேற்றம்.

இதன்பின், `அதற்கு` என்பது வருவிக்க.
இப் பாட்டின் இறுதியை முதற்பாட்டின் முதலோடு மண்டலிக்க வைத்தமை யின் இவ் அந்தாதி எழுபது பாட்டுக்களோடே முடிக்கப்பட்டதாம்.
அந்தாதிகள் சில இவ்வாறு எழுபது பாட்டோடே முடிதலும் மரபே.
கோயில் திருப்பண்ணியர் விருத்தம் முற்றிற்று.

நம்பியாண்டார் நம்பிகள் - திருத்தொண்டர் திருவந்தாதி

பொன்னி வடகரை சேர்நாரை
யூரிற் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர்
பதிதேம் மரபுசெயல்
பன்னஅத் தொண்டத் தொகைவகை
பல்குமந் தாதிதனைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற்
பாதத் துணைதுணையே.

#1334

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டுப் பிற்காலத்தவரால் சிறப்புப் பாயிரமாகச் செய்து சேர்க்கப்பட்டது.
திருத்தொண்டர்களாகிய நாயன்மார்களது வரலாற்றைப் பொதுவாகச் சுட்டும் முறையில் சுந்தர மூர்த்தி நாயனார் பெயரளவாக ஒரு திருப்பதிகத்தில் தொகுத்து அருளிச் செய்தார்.
அதனால் திருத்தொண்டர்களது வரலாற்றுத் தொகையாயிற்று.
அத்திருப்பதிகத்தில் சுட்டப்பட்ட நாயன்மார்களது நாடு, ஊர், குலம், அவர்கள் செய்த தொண்டு இவைகளை ஓரொரு சொல்லால் கூறி ஒருவருக்கு ஒருபாட்டினை அந்தாதியாகச் செய்தமையால் `திருத்தொண்டர் திருவந்தாதி` எனப் பெயர்பெற்ற இவ்வந்தாதி நாயன்மார்களது வரலாற்று வகையாயிற்று.
இவைகளையும், `இதை அருளிச் செய்தவர் திருநாரையூர் நம்பிகள் என்பதையும், இவர் அத்தலத்து விநாயகர் திருவருளைப் பெற்ற திருவருட் செல்வர்` என்பதையும் இப்பாட்டுக் கூறிற்று.
`ஆண்டார்` என்பது ஒரு காலத்தில் ஆதி சைவர்களைக் குறிக்கும் சிறப்புப் பெயராய் வழங்கிற்று ஆகலின், `நம்பியாண்டார்` என்பதே இவரது பெயராயிற்று.
இதற்கு மேலும் இவரது சிறப்பைக் குறிப்பதாக `நம்பி` என்பதைச் சேர்த்து, `நம்பியாண்டார் நம்பிகள்` என வழங்குவர்.
`நாயன்மார்களது ஊர், குலம், தொண்டு இவைகளைத் திருநாரையூர் விநாயகர் சொல்ல இவர் பாடினார்` என இப்பாட்டுக் கூறுகின்றது.
இதனை வைத்துத் திருமுறை கண்ட புராணமும் இவ்வாறே கூறிற்று.
1 இதனை ஆராய்ச்சியாளர் `நம்பிகள் விநாயகப் பெருமானது

திருவருளைப் பெற்ற திருவட்செல்வர்` - என்னும் அளவில் கொள்கின்றனர்.
`இத் திருவந்தாதியைச் சேக்கிழார் திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தோடு ஒத்த அருளாசிரியத் திருமொழியாகக் கொண்டே திருத்தொண்டர் வரலாற்று விரியைத் தாம் அருளிச் செய்தார்` என்பதை,
அந்த மெய்ப்பதி கத்து அடி யார்களை
நந்தம் நாதனாம் நம்பியாண் டார்நம்பி
புந்தி யாரப் புகன்ற வகையினால்
வந்த வாறு வழாமல் இயம்புவாம்
எனக் கூறியவாற்றால் அறிகின்றோம்.
`நாதன்` என்பது அருளா சிரியரைக் குறிக்கும் சொல்.
இதன்கண் சேக்கிழார், ``புந்தி ஆரப்புகன்ற வகை`` என்றதன்றி, `விநாயகர் சொல்லிய வகைப்படி`` எனக் கூறாமை நோக்கத் தக்கது.
வகை நூலாகிய இதன் விரியே திருத்தொண்டர் புராணம் ஆகலின், இவ்வந்தாதிப் பாடல்களின் விரி பொருள் அப்புராணத் திலே காணத்தக்கது.
இங்கு அவற்றைத் தந்துரைத்தல் மிகையாகும்.

செப்பத் தகுபுகழ்த் தில்லைப்
பதியிற் செழுமறையோர்
ஒப்பப் புவனங்கள் மூன்றினும்
உம்பரின் ஊர்எரித்த
அப்பர்க் கமுதத் திருநடர்க்
கந்திப் பிறையணிந்த
துப்பர் குரிமைத் தொழில்புரி
வோர்தமைச் சொல்லுதுமே.

#1335

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

புவனங்கள் மூன்றினும் ஒப்ப உம்பரின் ஊர் - மூவுலகங்களிலும் ஒருபடித்தாக மேலே திரிந்த ஊர்கள்; திரிபுரம்.
அமுதத் திருநடம் - அமுதம்போல இறப்பினை நீக்கிப் பேரானந் தத்தைத் தருகின்ற நடனம்.
நடர் - நடனமாடுபவர்.
துப்பர் - தூயவர்.
உரிமைத்தொழில் - அகம்படித் தொண்டு; அணுக்கத் தொண்டு; வழிபாடு.
சொல்லுதும் - துதிப்போம்.

சொல்லச் சிவன்திரு வாணைதன்
தூமொழி தோள்நசையை
ஒல்லைத் துறந்துரு மூத்தர்
பின்னுமை கோனருளால்
வில்லை புரைநுத லாளோ
டிளமைபெற் றின்பமிக்கான்
தில்லைத் திருநீல கண்டக்
குயவனாம் செய்தவனே.

#1336

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சிவன் திரு ஆணை சொல்ல` எனக் கூட்டுக.
சிவன் ஆணை - சிவன்மேல் ஆணை.
`தூய மொழியினையுடையாள்` என்னும் பொருட்டாகிய ``தூமொழி`` என்பது ``துணைவி`` என்னும் பொருட்டாய் நின்றது.
நசை - விருப்பம்.
ஒல்லை - விரைவாக; அப்பொழுதே.

செய்தவர் வேண்டிய தியாதுங்
கொடுப்பச் சிவன் தவனாய்க்
கைதவம் பேசிநின் காதலி
யைத்தரு கென்றலுமே
மைதிகழ் கண்ணியை யீந்தவன்
வாய்ந்த பெரும்புகழ்வந்
தெய்திய காவிரிப் பூம்பட்டி
னத்துள் இயற்பகையே.

#1337

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

செய் தவர் - தவம் செய்பவர்; சிவனடியார்கள் கொடுப்ப - கொடுத்துவரும் நாட்களில்.
கைதவம் - வஞ்சனை; தூர்த்தர் பேசுவது போலப் பேசியது.
``காவிரிப்பூம்பட்டினம்`` என்றதனானே `வணிகர்` என்பது பெறப்படும் என்பது கருத்து.

இயலா விடைச் சென்ற மாதவற்
கின்னமு தாவிதைத்த
வயலார் முளைவித்து வாரி

மனையலக் கால்வறுத்துச்
செயலார் பயிர்விழுத் தீங்கறி
யாக்குமவன் செழுநீர்க்
கயலார் இளையான் குடியுடை
மாறனெங் கற்பகமே.

#1338

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இயலா இடை - யாதும் செய்ய இயலாத காலம்.
அது வறுமை நிலையும் பாதி இரவும், மழைப் பெயலும் ஆகிய காலம்.
மாதவன் - சிவனடியான்.
வித்து- விதை.
மனை அலக்கு - வீட்டுக் கூரையாயிருந்த கழிகள்.
செயல் ஆர் பயிர் - வீட்டுப் புழைக்கடையில் அப்பொழுது தான் சிறிதே வளர்ந்த கீரைப்பயிர்.
விழு - விழுப்பம்; மேன்மை.
தீ - இனிமை; இளையான்குடி, ஊர்.
இஃது எந்த நாட்டில் உள்ள என்பது துணியப்படவில்லை.

கற்றநன் மெய்த்தவன் போலொரு
பொய்த்தவன் காய்சினத்தால்
செற்றவன் தன்னை யவனைச்
செறப்புக லுந்திருவாய்
மற்றவன் தத்தாநமரே
யெனச் சொல்லி வானுலகம்
பெற்றவன் சேதிபன் மெயப்பொரு
ளாமென்று பேசுவரே.

#1339

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`தன்னைக் காய் சினத்தால் செற்றவன் நன்மெய்த் தவன் போல் ஒரு பொய்த்தவன்.
அவனை எனக் கூட்டுக.
``போல் பொய்த்தவன்`` என்பது, `போல்கின்ற பொய்த்தவன்` என வினைத் தொகை.
இவன் `முத்த நாதன்` என்னும் பெயரினனாகிய பகையரசன்.
செற- கொல்ல - புகுந்தவன் `தத்தன்` என்னும் காவலாளி - என்பது

பின்பு, `தத்தா` என்றதனால் விளங்குகின்றது.
`திருவாயால்` எனவும், `மற்று அவனை` எனவும் உருபுகள் விரித்து, ``சொல்லி`` என்பதன்பின் `தடுத்து` என ஒரு சொல் வருவிக்க.
மற்று, வினை மாற்று.
சேதிபன் - சேதி நாட்டு அரசன்.
சேதிநாடு - திருமுனைப்பாடி நாடாகிய மலையமான் நாடு.

பேசும் பெருமையவ் வாரூ
ரனையும் பிரானவனாம்
ஈசன் தனையும் புறகுதட்
டென்றவ னீசனுக்கே
நேச னெனக்கும் பிரான்மனைக்
கேடுக நீடுதென்றல்
வீசும் பொழில்திருச் செங்குன்றம்
மேய விறன்மிண்டனே.

#1340

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஆரூரன், சுந்தரமூர்த்தி நாயனார்.
பிரான், திருவாரூர்ச் சிவபெருமான்.
தட்டு - தடை; தடுக்கப்பட்ட இடம்.
புறகு தட்டு - புறம்பாகிய தடுக்கப்பட்ட இடம்.
புறகாகிய இடத்தில் உள்ளவர்களை, ``புறகு தட்டு`` என்றது உபசாரம்.
`புறம்பாகிய இடத்தில் உள்ளவர்களை` என்றது `எம்மவரன்றி, அயலார்` என்றபடி.
`புறகு தட்டு` என்று சொல்லியே ஈசனுக்கு நேசன் ஆயினான்; எனக்கும் பிரான் (தலைவன்) ஆயினான் என்பதாம்.
திருச்செங் குன்றம், மலை நாட்டில் உள்ளது.

மிண்டும் பொழில்பழை யாறை
அமர்நீதி வெண்பொடியின்
முண்டந் தரித்த பிராற்குநல்
லூரின்முன் கோவணம்நேர்
கொண்டிங் கருளென்று தன்பெருஞ்
செல்வமுந் தன்னையுந்தன்
துண்ட மதிநுத லாளையும்
ஈந்த தொழிலினனே.

#1341

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மிண்டு - நெருங்கிய.
பொழில் - சோலை.
பழையாறை ஒரு பெருநகரம்.
இஃது இடைக் காலத்தில் பல ஆண்டுகள் சோழர்களுக்கு உறைவிடமாய் இருந்தது.
வெண்பொடி - திருநீறு.
முண்டம் - நெற்றி.
தரித்த - தாங்கிய .
வெண்பொடியணிந்த முண்டத்தைத் தரித்த பிரான் சிவன்.
நல்லூர் பழையாறைப்பெருநகரின் ஒரு பகுதி.
கோவணம் நேர் கொண்டு - கோவணத்திற்குச் சம எடையாக ஏற்று.
இங்கு அருள் - இப்பொழுது அருள் புரிவாயாக, \`மதிநுதலார்\` என்பது, \`துணைவி\` எனப் பொருள்தந்து நின்றது.
\`தொழில்\` என்பது,தொண்டினைக் குறித்தது.

தொழுதும் வணங்கியும் மாலயன்
தேடருஞ் சோதிசென்றாங்
கெழுதுந் தமிழ்ப்பழ வாவணங்
காட்டி யெனக்குன்குடி
முழுதும் அடிமைவந் தாட்செ
யெனப்பெற்ற வன்முரல்தேன்
ஒழுகும் மலரின்நற் றாரெம்பி
ரான்நம்பி யாரூரனே.

#1342

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தின் வகை யாகிய இவ்வாந்தாதியில் அத்திருப்பதிகத்தின் ஒவ்வொரு பாட்டிலும் சுந்தர மூர்த்தி நாயனார் தம்மைக் குறித்தருளினார் ஆகலின் அவரது வரலாற்றிற்குத் தனி ஒரு பாட்டே அமைத்துப் போகாமல், ஒவ்வொரு பாட்டிலும் சொல்லப்பட்ட அடியார்களைப் பற்றிக் கூறி முடித்தபின், சுந்தரரைப் பற்றிய பாட்டுக்களை அமைத்தருளினார்.
பின்பு இதன் விரிபாடிய சேக்கிழார் நாயனார் ஒரு பாட்டில் உள்ள நாயன்மார்களது வரலாறுகளை ஒரு சருக்கமாகத் தொகுத்தருளினார்.
தொழுதல் - கும்பிடுதல்.
வணங்கல் - வீழ்ந்து வணங்குதல்.

`வணங்கியும் அருஞ் சோதி` என வேறாக்கி முடிக்க.
முரலுதற்கு `வண்டு` என்னும் எழுவாய் வருவிக்க.
ஒழுகும் - ஒழுகுதற்கு முதலாகிய.
மலர், தாமரை மலர்.
தார் - மாலை.

ஊர்மதில் மூன்றட்ட வுத்தமற்
கென் றோருயர்தவத்தோன்
தார்மலர் கொய்யா வருபவன்
தண்டின் மலர்பறித்த
ஊர்மலை மேற்கொள்ளும் பாக
ருடல்துணி யாக்குமவன்
ஏர்மலி மாமதில் சூழ்கரு
வூரில் எறிபத்தனே.

#1343

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஊர் மதில் - வானத்தில் திரிகின்ற கோட்டைகள்.
உயர் தவத்தோன் `சிவகாமியாண்டார்` என்பவர்.
உத்தமற்கு - என்று மலர் கொய்யா (கொய்து) வருபவன்` என்க.
ஊர் - ஊரத்தக்க மலைபோலும் யானை.
மலையினதும், பாகரதும் ஆகிய உடல்களைத் துணி ஆக்கும் அவன் என உரைக்க.
இவரது மரபு அறியப்படவில்லை.

பத்தனை யேனாதி நாதனைப்
பார்நீ டெயினைதன்னுள்
அத்தனைத் தன்னோ டமர்மலைந்
தான்நெற்றி நீறுகண்டு
கைத்தனி வாள்வீ டொழிந்தவன்
கண்டிப்ப நின்றருளும்
நித்தனை யீழக் குலதீப
னென்பரிந் நீள்நிலத்தே.

#1344

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

எயினை - எயினனூர்.
`ஒழிந்து, அவன் கண்டிப்ப நின்றருளும் நித்தன்` என்க.

ஈழக் குலம் - ஈழச் சான்றார் குலம்.

நிலத்தில் திகழ்திருக் காளத்தி
யார்திரு நெற்றியின்மேல்
நலத்தில் பொழிதரு கண்ணில்
குருதிகண் டுள்நடுங்கி
வலத்திற் கடுங்கணை யால்தன்
மலர்க்கண் ணிடந்தப்பினான்
குலத்திற் கிராதன்நங் கண்ணப்ப
னாமென்று கூறுவரே.

#1345

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இந்நாயனார் வரலாறு மேற்போந்த இரு திருக்கண்ணப்ப தேவர் திருமறங்களிலும் சொல்லப்பட்டது

ஏய்ந்த கயிறுதன் கண்டத்திற்
பூட்டி எழிற்பனந்தாள்
சாய்ந்த சிவன்நிலைத் தானென்பர்
காதலி தாலிகொடுத்
தாய்ந்தநற் குங்குலி யங்கொண்
டனற்புகை காலனைமுன்
காய்ந்த அரற்கிட்ட தென்கட
வூரிர் கலயனையே.

#1346

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்டம் - கழுத்து.

`சிவனை நிலைப்பித்தான்` என்ப தில் இரண்டன் உருபும், பிறவினை விகுதியும் தொகுக்கப்பட்டன.

`கொடுத்துக்கொண்டு` என இயையும்.

காலனைக் காய்ந்த அரன்.

திருக்கடவூர்ப் பெருமான்.

கலச முலைக்கன்னி காதற்
புதல்வி கமழ்குழலை
நலசெய் தவத்தவன் பஞ்ச
வடிக்கிவை நல்கெனலும்
அலசு மெனக்கரு தாதவள்

கூந்தல் அரிந்தளித்தான்
மலைசெய் மதிற்கஞ்சை மானக்கஞ்
சாற னென்னும் வள்ளலே.

#1347

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கன்னியாகிய புதல்வி` என்க.
`நல்ல` என்பது இடைக்குறைந்து நின்றது.
பஞ்சவடி.
மாவிரத மதத்தினர் மார்பில் அணியும் மயிர்க்கயிறு.
அலசும் - (மகள்) வருந்துவாள்.
கஞ்சை - கஞ்சாறூர்.

வள்ளற் பிராற்கமு தேந்தி
வருவோ னுகலுமிங்கே
வெள்ளச் சடையா யமுதுசெய்
யாவிடி லென்தலையைத்
தள்ளத் தகுமென்று வாட்பூட்
டியதடங் கையினன்காண்
அள்ளற் பழனக் கணமங்
கலத்தரி வாட்டாயனே.

#1348

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வள்ளற் பிரான் - சிவபெருமான்.
அமுது - நிவேதன அமுது.
உகலும் - தவறிக் கீழ் கொட்டிப்போன பொழுது.
கண மங்கலம்.
ஊர்.

தாயவன் யாவுக்கும் தாழ்சடை
மேல்தனித் திங்கள்வைத்த
தூயவன் பாதம் தொடர்ந்து
தொல்சீர்த்துளை யாற்பரவும்
வேயவன் மேல்மழ நாட்டு
விரிபுனல் மங்கலக்கோன்
ஆயவன் ஆனாய னென்னை
யுவந்தாண் டருளினனே.

#1349

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தாயவர் - தாய்போன்றவன்.
துளை - துளைக் கருவி.
வேய் - மூங்கில்.
`துளையால் தொடர்ந்து பரவும் வேயவன்` என்க.
பரவுதல் - துதித்தல்.
மங்கலம், ஊர்.
`ஆன் ஆயன் - பசுக்களை மேய்க்கும் இடையன்.

அருட்டுறை யத்தற் கடிமைபட்
டேனினி யல்லனென்னும்
பொருட்டுறை யாவதென் னேயென்ன
வல்லவன் பூங்குவளை
இருட்டுறை நீர்வயல் நாவற்
பதிக்கும் பிரானடைந்தோர்
மருட்டுறை நீக்கிநல் வான்வழி
காட்டிட வல்லவனே.

#1350

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதன் முதல் இரண்டடிகள் ``பித்தா பிறை சூடி`` எனத் தொடங்கும் திருப்பதிகத்தின் பொருளை உணர்த்தி நின்றன.
குவளை மலர்கள் கருநிறத்தன ஆகலின் அவற்றை இருட்டாக உருவகம் செய்தார்.
நாவல், திருநாவலூர்.

அவந்திரி குண்டம ணாவதின்
மாள்வனென் றன்றாலவாய்ச்
சிவன்திரு மேனிக்குச் செஞ்சந்
தனமாச் செழுமுழங்கை
உவந்தொளிர் பறையில் தேய்த்துல
காண்டவொண் மூர்த்திதன்னூர்
நிவந்தபொன் மாட மதுரா
புரியென்னும் நீள்பதியே.

#1351

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குண்டு அமண் ஆவதில் மாள்வன் - கீழான சமண் சமயத்து அரசன் வழிபட்டு எனது பணியை ஒழிப்பதைவிட இறந்துபடுவேன்.
நிவந்த - ஓங்கிய.

பதிகந் திகழ்தரு பஞ்சாக்
கரம்பயில் நாவினன்சீர்
மதியஞ் சடையாற் கலர்தொட்
டணிபவன் யான்மகிழ்ந்து
துதியங் கழல்சண்பை நாதற்குத்
தோழன்வன் றொண்டனம்பொன்
அதிகம் பெறும்புக லூர்முரு
கன்னெனும் அந்தணனே.

#1352

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பதிகம் - திருமுறைத் திருப்பதிகங்கள்.
பதிகந்திகழ்தரு பஞ்சாக்கரம் என்க.
மலர் தொட்டு - பூக்களை மாலையாகத் தொடுத்து.
சண்பை நாதன், திருஞானசம்பந்தர்.
வன்றொண்டன், சுந்தரமூர்த்தி நாயனார், இவர் திருப்புகலூரில் பொன் பெற்ற வரலாற்றைப் பெரியபுராணத்துட் காண்க.

அந்தாழ் புனல்தன்னி லல்லும்
பகலும்நின் றாதரத்தால்
உந்தாத அன்பொடு ருத்திரஞ்
சொல்லிக் கருத்தமைந்த
பைந்தா ருருத்ர பசுபதி
தன்னற் பதிவயற்கே
நந்தார் திருத்தலை யூரென்
றுரைப்பரிந் நானிலத்தே.

#1353

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அம் - அழகிய.
தாழ்புனல் - ஆழமான நீர்.
ஆதரம்- விருப்பம்; உந்தாத - வெளிப்போக்காத.
உருத்திரம் - சீருத்திரம்.

இஃது எசுர் வேதத்தின் ஒரு பகுதியாய் உள்ளது.
இன்றும் சிவாலயங்களில் சிறப்பாக ஓதப்பட்டு வருவது.
வயற்கு - வயல்களில்.
நந்து ஆர் - சங்குகள் நிறைந்த.

நாவார் புகழ்த்தில்லை யம்பலத்
தானருள் பெற்றுநாளைப்
போவா னாவனாம் புறத்திருத்
தொண்டன்தன் புன்புலைபோய்
மூவா யிரவர்கை கூப்ப
முனியா யவன்பதிதான்
மாவார் பொழில்திக ழாதனூ
ரென்பரிம் மண்டலத்தே.

#1354

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

புறம் - நான்கு வருணங்கட்கும் புறமான சாதி.
அதனால் கோயில்களிலும் புறத்தே நிற்பவர்.
புன்புலை - கீழான புலைச் சாதியில் பிறந்த உடம்பு.
``போய்`` என்பதை, `போக` எனத் திரிக்க.
பதி - ஊர்.

மண்டும் புனற்சடை யாந்தமர்
தூசெற்றி வாட்டுவகை
விண்டு மழைமுகில் வீடா
தொழியின்யான் வீவனென்னா
முண்டம் படர்பாறை முட்டு
மெழிலார் திருக்குறிப்புத்
தொண்டன் குலங்கச்சி யேகா
லியர்தங்கள் தொல்குலமே.

#1355

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மண்டும் - நிறைந்த.
தமர் - அடியார்.
தூசு - ஆடை.
எற்றுதல் - அழுக்குப் போகத் துவைத்தல்.
வாட்டும் வகை - உலர்த்தும் படி.

விண்டு - நீங்கி.
`மழை முகில் விண்டு வீடாது எனின்` மாற்றுக.
`விண்டு வீடாது` ஒருபொருட் பன்மொழி.
வீவன் - இறப்பன்.
முண்டம் - நெற்றி.
படர் - அகன்ற.
முட்டும் - மோதிய.

குலமே றியசேய்ஞலூரிற்
குரிசில் குரைகடல்சூழ்
தலமே றியவிறற் சண்டிகண்
டீர்தந்தை தாளிரண்டும்
வலமே றியமழு வாலெறிந்
தீசன் மணிமுடிமேல்
நலமே றியபால் சொரிந்தலர்
சூட்டிய நன்னிதியே.

#1356

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குலம் ஏறிய - குலத்தால் உயர்ந்த; `அந்தணன் ஆகிய` குரிசில் என்க.
குரிசில் - தலைவன்.
விறல் - வெற்றி.
இஃது இதனால் உண்டாகிய புகழைக் குறித்தது.
கண்டீர், முன்னிலையசை.
வலம் - வலக்கை.
`எறிந்தும்` என உம்மை விரித்து, `எறிந்த பின்னும்` என உரைக்க.

நிதியார் துருத்திதென் வேள்விக்
குடியாய் நினைமறந்த
மதியேற் கறிகுறி வைத்த
புகர்பின்னை மாற்றிடென்று
துதியா வருள்சொன்ன வாறறி
வாரிடைப் பெற்றவன்காண்
நதியார் புனல்வயல் நாவலர்
கோனென்னும் நற்றவனே.

#1357

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

துருத்தி, வேள்விக்குடி இவையிரண்டும் சோழ நாட்டு இரண்டு தலங்கள்.
இவைகளில் துருத்தி, இப்பொழுது `குத்தாலம்` என வழங்குகின்றது.
இதில் உள்ள சிவபெருமான் பெயரே, `சொன்னவாறறிவார்` என்பது.
வேள்விக்குடியாய் - வேள்விக்குடியில் எழுந்தருளியுள்ளவனே.
அறிகுறி வைத்த புகர்.
அடையாளமாக நீ உண்டாக்கிய உடல்நோய்.
துதியா - துதித்து.
`அருள் பெற்றவன்` என இயைக்க.
காண்.
முன்னிலையசை.
`வைத்து` என்பது பாடமன்று.

நற்றவன் நல்லூர்ச் சிவன்திருப்
பாதந்தன் சென்னிவைக்கப்
பெற்றவன் மற்றிப் பிறப்பற
வீரட்டர் பெய்கழற்றாள்
உற்றவ னுற்ற விடம்அடை
யாரிட வொள்ளமுதாத்
துற்றவன் ஆமூரில் நாவுக்
கரசெனுந் தூமணியே.

#1358

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஆமூரில் நாவுக்கரசெனும் தூமணி` என்பதை ``நற்றவன்`` என்பதன் பின்னர்க் கூட்டி, செய்யுள் பற்றி முறை பிறழ வைக்கப்பட்ட நல்லூர்ச் சிவன் திருப்பாதம் தன் சென்னி வைக்கப் பெற்றவன்`` என்பது ``துற்றவன்`` என்பதன் பின்னர் வைத்து உரைக்க.
நல்லூர், தலம்.
உற்ற விடம் - சமணர் கருத்தில பொருந்திய நஞ்சு.
அடையார் - பகைவர்; சமணர்.
`நிறைதல்` எனப் பொருள் தரும் `துறு` என்னும் முதனிலை உண்டலையும் குறிக்குமாதலின், ``துற்றவன்`` என்பது, `உண்டவன்` எனப் பொருள்தந்தது.
``அமுதா உண்டவன்`` என்றதனால் அவ்விடத்தால் தீங்கின்றியிருந்தமை கூறப்பட்டதாம்.

மணியினை மாமறைக் காட்டு
மருந்தினை வண்மொழியால்
திணியன நீள்கத வந்திறப்

பித்தன தெண்கடலில்
பிணியன கல்மிதப் பித்தன
சைவப் பெருநெறிக்கே
அணியன நாவுக் கரையர்
பிரான்தன் அருந்தமிழே.

#1359

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மணி`` என்றதும், ``மருந்து`` என்றதும் திருமறைக் காட்டுப் பெருமானை.
திறப்பித்தன - திறக்க வைத்தன.
பிணி கல், `பிணிக்கப்பட்ட கல்` எனச் செயப்படுபொருள்மேல் தொக்க வினைத் தொகை.
`அந்த` என்னும் கூட்டுப் பொருளைத் தரும் `அன்ன` என்பது இடைக்குறைந்து நின்றது.
`கல்லை` என இரண்டாவது விரிக்க.
அணி- அணிகலம்.
அணியன - அணிபோல்வன.
`பலரது உள்ளங்களையும் கவரச் செய்வன` என்றபடி.
நாயனாரை, ``நாவுக்கரையர் பிரான்`` எனப் போற்றி, வரலாற்றுக்கிடையே அவரது திருப்பதிகங்களை ``சைவப் பெருநெறிக்கு அணி`` எனவும், `செயற்கரியவற்றைச் செய்த அருந்தமிழ்` எனவும் எடுத்தோதியருளிய அருமை அறியற்பாலது.

அருந்தமி ழாகரன் வாதி
லமணைக் கழுநுதிமேல்
இருந்தமிழ் நாட்டிடை யேற்றுவித்
தோனெழிற் சங்கம்வைத்த
பெரும்தமிழ் மீனவன் தன்அதி
காரி பிரசமல்கு
குருந்தவிழ் சாரல் மணமேற்
குடிமன் குலச்சிறையே.

#1360

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஆகரம் - இருப்பிடம், தமிழ் ஆகரன் - தமிழுக்கு இருப்பிடமானவர்; திருஞானசம்பந்தர்.

`அவர் செய்த வாதில் என்க` வாது என்றது வாதத்தின் முடிவை.
அமண் - சமணக் கூட்டம்.
நுதி - நுனி.
இருந்தமிழ் - பெருமைமிக்க தமிழ்; செந்தமிழ் ``தமிழ் நாட்டடை ஏற்றுவித்தோன்`` என்றாராயினும் `தமிழ் நாட்டிடை யிருந்த அமணை ஏற்று வித்தான்` என்றலே கருத்து என்க.
ஏற்றுவித்தது, அரசன் ஆணையால் ஏவலரைக் கொண்டு நிறைவேற்றியது.
பாண்டியன் இந்நாயனார் காலத்துப் பாண்டியன் நெல்வேலி வென்ற நெடுமாறன்.
`கூன் பாண்டியன்` என்றும் சொல்லப் படுவான்.
முன்னோர் சங்கம் வைத்த செயலை அவர் மரபின் வந்த உரிமை பற்றி இவன்மேல் வைத்துக் கூறினார்.
``மதுரைத் தொகை ஆக்கினான்`` *1* என இவ்வாறே ஞானசம்பந்தரும் அருளிச்செய்தார்.
சங்கம் புதிதாக வையாவிடினும் சங்கத்தைப் புரந்த செயல் இவனுக்கும் உண்டு என்க.
``அதிகாரி`` என்றது அமைச்சனை.
ஒட்டக்கூத்தரது தக்க யாகப் பரணியில் ``அதிகாரி`` என்னும் சொல் மட்டுமே காணப் படுகின்றது.
மணமேற் குடி - ஊர்.
மன் - தலைவன்.
இந்நாயனாரது மரபு அறியப் படவில்லை.

சிறைநன் புனல்திரு நாவலூ
ராளி செழுங்கயிலைக்
கிறைநன் கழல்நாளை யெய்து
மிவனருள் போற்றவின்றே
பிறைநன் முடிய னடியடை
வேனென் றுடல்பிரிந்தான்
பிறைநன் மலர்த்தார் மிழலைக்
குறும்ப னெனுநம்பியே.

#1361

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நாவலூராளி, சுந்தரமூர்த்தி நாயனார்.
`அவர் நாளைக் கயிலை செல்லப்போகிறார்` என்பதை இவர் தம் யோகக் காட்சியால் அறிந்து முன்னாளே யோகத்தால் உடலை விட்டுப்

பிரிந்து கயிலை சேர்ந்தார்.
பெருமிழலை, ஊர்.
குறும்பர் - சிற்றரசர்.
`குறும்பர்` என்பது `சிற்றரசர்` எனப் பொருள் தரும்.
எனினும், `சிர்றசராய் இருப்போர் தனியொரு மரபினர் அல்லர் என்பதனாற்போலும் இந்நாயனாரும் மரபறியா அடியார்களுள் ஒருவராகச் சொல்லப் பட்டார்.

நம்பன் திருமலை நான்மிதி
யேனென்று தாளிரண்டும்
உம்பர் மிசைத்தலை யால்நடந்
தேற வுமைநகலும்
செம்பொன் னுருவனெ ன்அம்மை
யெனப்பெற் றவள்செழுந்தேன்
கொம்பி னுகுகாரைக் காலினின்
மேய குலதனமே.

#1362

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``செழுந்தேன்`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.
காரைக்கால் ஊர்.
குலம் தனம் - பிறந்த குலத்திற்குச் செல்வம் போன்றவள்.
நம்பன், செம்பொன் உருவன் - சிவபெருமான்.
உம்பர்- ஆகாயம்.
மிசை, ஏழன் உருபு.
`மிசையாக` என ஆக்கம் வருவிக்க.
தலைகீழாக நடந்து வருவதைப் பார்த்து உமாதேவி சிரித்தாள்.
அம்மை - தாய்.
தாய்போல அன்பு செலுத்தி உபசரிப்பவள்.
உபசரித்தல் சங்கம வடிவில்.
எனப் பெற்றவள் - என்று சொல்லும் பேற்றினைப் பெற்றவள்.

தனமா வதுதிரு நாவுக்கரசின்
சரண மென்னா
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத்
தாங்கவன் வண்டமிழ்க்கே
இனமாத் தனது பெயரிடப் பெற்றவ
னெங்கள் பிரான்
அனமார் வயல்திங்க ளூரினில்

வேதியன் அப்பூதியே.

#1363

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

புனற் பந்தர் - தண்ணீர்ப் பந்தல் ``வாழ்த்தி`` என்பதை, ``என்னா`` என்பதன் பின்னர்க் கூட்டுக.
இனம் - அடிமையினம்.
`திங்களூர்` ஊர்ப்பெயர்.
தனது பெயர் - திருநாவுகரசரது பெயர்.
இடப் பெற்றவன் - இட்டப் பேற்றினைப் பெற்றவன்.

பூதிப் புயத்தர் புயத்தில்
சிலந்தி புகலுமஞ்சி
ஊதித் துமிந்த மனைவியை
நீப்பவுப் பாலவெல்லாம்
பேதித் தெழுந்தன காணென்று
பிஞ்ஞகன் கேட்டுமவன்
நீதித் திகழ்சாத்தை நீலநக்
கன்னெனும் வேதியனே.

#1364

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பூதி - விபூதி.
பூதிப்புயத்தர், விபூதியையணிந்த தோள்களையுடையவர் சிவபெருமான் என்றது சிவலிங்கத்தை.
புயம்- தோள்; மேல் இடம்.
`உடம்பின்மேல் சிலந்தி விழுந்தால், அது விழுந்த இடத்தில் கொப்புளம் உண்டாகிவிடும்` என்பர்.
அப்படிக் கொப்புளம் உண்டாகாதிருக்க உடனே வாய் எச்சிலைத் துமிந்து கையால் தேய்ப்பது வழக்கம்.
அப்படி மனைவியார் செய்தார்.
`அஃது அநுசிதம்` என்று நாயனார் அவரைத் துறந்தார்.
உப்பால - துமியப்படாத இடங்கள்.
பேதித்தல் - வேறுபடுதல்.
``பேதித்து`` என்பதை `பேதிக்க` எனத் திரிக்க.
`கொப்புளம் எழுந்தனவற்றைக் காண்க` என உணரக் காட்டியது கனவில்.

சாத்தை - சாத்த மங்கலம்; ஊர்.

வேத மறிகரத் தாரூர்
அரற்குவிளக்கு நெய்யைத்
தீது செறியமண் கையரட்
டாவிடத் தெண்புனலால்
ஏத முறுக வருகரென்
றன்று விளக்கெரித்தான்
நாதன் எழிலேமப் பேறூ
ரதிபன் நமிநந்தியே.

#1365

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மறி - மான் கன்று.
சிவபெருமானது சாங்க உபாங் கங்களை வேதமாக உபசரித்தல் மரபாதல் பற்றி, ``வேதமறி`` என்றார்.
வேதத்தை அரனுக்கு அடையாக்கலும் ஆம்.
கையர் - வஞ்சகர்; உள்ளதை `இல்லை` எனக் கரந்தவர்.
அட்டாவிட - வார்க்காமல் மறுக்க.
ஏதம் - குற்றம்; பாவம்.
நாதன் நமிநந்தி எம் தலைவனாகிய நமிநந்தி.
ஏமப்பேறூர், ஊர்.

நந்திக்கும் நம்பெரு மாற்குநல்
லாரூரில் நாயகற்குப்
பந்திப் பரியன செந்தமிழ்
பாடிப் படர்புனலில்
சிந்திப் பரியன சேவடி
பெற்றவன் சேவடியே
வந்திப் பவன்பெயர் வன்றொண்ட
னென்பரிவ் வையகத்தே.

#1366

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நந்தி` என்பதும் சிவபெருமானுக்கே பெயர்.
பந்திப் பரியன - செய்யுளாக யாத்தற்கு அரியன.
செந்தமிழ்.
அதனாலாகிய பாடல்களுக்கு ஆகுபெயர்.

படல் புனல், காவிரியாற்றில் ஓடிய வெள்ளம்.
சேவடி, திருஐயாற்றுப் பெருமானது திருவடிகள்.
அவற்றைப் பெற்றமையாவது, வெள்ளம் இருபாலும் ஒதுங்கி வழி விடப் பெற்றமை.
`சேவடி பெற்று, அவன் சேவடியே வந்திருப்பவன்` என்க.

வைய மகிழயாம் வாழ
வமணர்வலி தொலைய
ஐயன் பிரம புரத்தரற் கம்மென்
குதலைச் செவ்வாய்
பைய மிழற்றும் பருவத்துப்
பாடப் பருப்பதத்தின்
தைய லருள்பெற் றனனென்பர்
ஞானசம் பந்தனையே.

#1367

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

யாம் - சைவர்கள்.
பிரமபுரம் - சீகாழி.
`அரற்கு பாட என இயையும்.
பாட - பாடும் படி.
`அம் வாய், குதலை வாய், செவ்வாய்` எனத் தனித்தனி இயைக்க.
அம் - அழகு.
பருவம், குழவிப் பருவம்.
``குழிப் பருவத்தில் தையல் அருள் பெற்றனன்`` என்றதனால்,
`திருமுலைப் பால் அருளப் பெற்றான்` என்றதாயிற்று.

பந்தார் விரலியர் வேள்செங்கட்
சோழன் முருகன்நல்ல
சந்தா ரகலத்து நீலநக்
கன்பெயர் தான்மொழிந்து
கொந்தார் சடையர் பதிகத்தி
லிட்டடி யேன்கொடுத்த
அந்தாதி கொண்ட பிரானருட்
காழியர் கொற்றவனே.

#1368

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பந்தார் விரலியர் - மகளிர்.
அவர்கட்கு வேள் (மன்மதன்) போன்றவன் கோச்செங்கட் சோழன்,
முருகன் - முருக நாயனார்.
நீல நக்கன் - திருநீல நக்க நாயனார்.
இவர்கள் பெயர்களை ஞானசம்பந்தர்.
தமது பதிகத்தில் இட்டுப் பாடியன முறையே, ``மழை யார் மிடறா``
எனத் தொடங்கும் திருவானைக்காப் பதிகத்திலும், ``பட்டம் பால் நிற
மதியம்`` எனத் தொடங்கும் திருப்புகலூர் வர்த்த மானீச்சரப்
பதிகத்திலும், ``திருமலர்க் கொன்றை மாலை`` எனத் தொடங்கும்
திருச்சாத்தமங்கை பதிகத்திலும் ஆகும்.
இவர்களோடு சிறுத்தொண்ட நாயனாரது பெயரை இட்டுப் பாடிய
திருப்பதிகம், ``நறைகொண்ட மலர்தூவி`` எனவும், ``பைங்கோட்டு
மலர்ப்புன்னை`` எனவும் தொடங்கும் திருச்செங்காட்டங்குடித்
திருப்பதிகங்களாகும்.
இவைகளில் பின்னர்க்கூறிய பதிகத்தின் எல்லாம் சிறுத்தொண்டர்
பெயர் இடப்பட்டுள்ளது.
இதனை இவர் பின்வரும் திருவந்தாதி 72-ஆம் பாட்டில் குறிப்பால்
உணர்த்தினார்.
``அடியேன் தொடுத்த அந்தாதி கொண்டவன்`` என்றதனால்,
`அவ்வந்தாதிக்குப் பின்பே இவ்வந்தாதி பாடப்பட்டது` எனக் கருதலாம்.

கொற்றத் திறலெந்தை தந்தைதன்
தந்தையெம் கூட்டமெல்லாம்
தெற்றச் சடையாய் நினதடி
யேம்திகழ் வன்றொண்டனே
மற்றிப் பிணிதவிர்ப் பானென்
றுடைவாள்உருவி யந்நோய்
செற்றுத் தவிர்கலிக் காமன்
குடியேயர் சீர்க்குடியே.

#1369

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தெற்றம் - தெற்றுதல்; பின்னுதல்.
கூட்டம் - கூட்டத்தினர்; ஆகுபெயர்.
``நினது அடியேம்`` என உயர்திணைக்கண் அது உருபு வந்தது பிற்கால
வழக்கு.
வன்றொண்டன் - வன்மை பேசி எதிர்வழக்கிட்டு ஆட்பட்டவன்.
ஏகாரம், வினா.

மற்று, அசை.
அந் நோய், சூலை நோய்.

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குலம்
மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன்
தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி
யேபர விட்டெனுச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூல
னாகின்ற வங்கணனே.

#1370

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சாத்தனூர், திருவாவடுதுறை அருகில் உள்ள ஓர் ஊர்.
கோக்குலம் - பசுக்கூட்டம்.
குரம்பை - உடம்பு.
படி - அமைப்பு வகை.
``படி`` இரண்டில் முன்னதாகிய `படியால்` என உருபு விரிக்க.
பரவுதல் - துதித்தல்.
``பரவவிட்டு`` என்பதில், `இட்டு` என்பது அசை.
அம்கணன் - அழகிய கண்களையுடையவன்.
கண்ணுக்கு அழகு கருணை.

கண்ணார் மணியொன்று மின்றிக்
கயிறு பிடித்தரற்குத்
தண்ணார் புனல்தடம் தொட்டலுந்
தன்னை நகுமமணர்
கண்ணாங் கிழப்ப வமணர்
கலக்கங்கண் டம்மலர்க்கண்
விண்ணா யகனிடைப் பெற்றவ
னாரூர் விறல்தண்டியே.

#1371

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஒன்றும்`` என்னும் உம்மை இழிவு சிறப்பு.
`தொடலும்` என்பது விரித்தல் பெற்றது.
தொடுதல் - தோண்டுதல்.

இந்நாயனாரது மரபும் அரியப்படவில்லை.

தண்டலை சூழ்திரு வேற்காட்டூர்
மன்னன் தகுகவற்றால்
கொண்டவல் லாயம்வன் சூதரை
வென்றுமுன் கொண்டபொருள்
முண்டநல் நீற்ற னடியவர்க்
கீபவன் மூர்க்கனென்பர்
நண்டலை நீரொண் குடந்தையில்
மேவுநற் சூதனையே.

#1372

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திருவேற்காடு, தொண்டைநாட்டுத் தலம்.
கவறு - சூதாடு கருவி.
வல் ஆயம் - வலிய தொகை; பந்தயக் கணக்கு.
நண்டு அலை நீர் - நண்டுகள் உலாவுகின்ற நீர்.
குடந்தை.
இப்பொழுது `கும்பகோணம்` என வழங்குகின்றது.
இந்நாயனார் இறுதியில் அங்குச் சென்று தங்கினார்.

சூதப்பொழி லம்ப ரந்தணன்
சோமாசி மாறனென்பான்
வேதப் பொருளஞ் செழுத்தும்
விளம்பியல் லால்மொழியான்
நீதிப் பரன்மன்னு நித்த
நியமன் பரவையென்னும்
மாதுக்குக் காந்தன்வன் றொண்டன்
தனக்கு மகிழ்துணையே.

#1373

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சூதம் - மாமரம்.
அம்பர், அம்பர் மாகாளம்; சோழநாட்டுத் தலம்.
`மாறன்` என்பது இயற்பெயர்.
`சோமாசி` என்பது சிறப்பு பெயர்.
`சோமா யாஜி` என்பது `சோமாசி` எனத் திரிந்தது.
இப்பெயரே `இவர் வைதிக அந்தணர்` என்பதைக் காட்டும்.

`வேதப் பொருளை அஞ்செழுத்தாய மந்திரத்தை விளம்பியல்லால் விளம் பான்` என்க.
இதனால் இவர் ``வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது - நாதன் நாமம் நமச்சி வாயவே`` என்னும் துணிவினராய் இருந்தமை விளங்கும்.
`பரன்பால்` என ஏழாவது விரிக்க.
நித்த நியமம், நித்தியாக்கினி யோம்புதல்.
அதனை, `பரன்பால் மன்னு நியமம்` என்றதனால், சிவாக்கினியாக வளர்த்தமை அறியப்படும்.
`காந்தனாகிய வன்றொண்டன்` என்க.
மேற்கூறிய கொள்கையும், ஒழுக்கமும் உடையவராய் இருத்தமையால் சுந்தர மூர்த்தி நாயனாரைத் தமக்கு ஆசிரியராகக் கொண்டு ஒழுகின்றார் என்க.
இவரது வரலாறு வேறு புராணங்களில் சில பொருள்கள் கூடுதலாகச் சொல்லப்படுகின்றது.

துணையு மளவுமில் லாதவன்
தன்னரு ளேதுணையாக்
கணையுங் கதிர்நெடு வேலுங்
கறுத்த கயலிணையும்
பிணையும் நிகர்த்தகண் சங்கிலி
பேரமைத் தோளிரண்டும்
அணையும் மவன்திரு வாரூர
னாகின்ற அற்புதனே.

#1374

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

துணை - ஒப்பு.
பிணை - பெண் மான் என்றது அதன் பார்வையை.
சங்கிலி, சங்கிலி நாச்சியார்.
அமைத்தோள் - மூங்கில் போலும் தோள்.

தகடன வாடையன் சாக்கியன்
மாக்கல் தடவரையின்
மகள்தனம் தாக்கக் குழைந்ததிண்
டோளர்வண் கம்பர்செம்பொன்
திகழ்தரு மேனியில் செங்க
லெறிந்து சிவபுரத்துப்
புகழ்தரப் புக்கவ னூர்சங்க
மங்கை புவனியிலே.

#1375

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சாக்கியன் - பௌத்த மத வேடத்தை மாற்றிக் கொள்ளாதவன்.
அவ்வேடத்தையுடையவர் மருதம் துவம் தோய்ந்த ஆடையை அணிவர் ஆதலாலும், அந்த ஆடைகெட்டியாய்த் துவ ளாது நிற்கும் ஆதலாலும், `தகடு அன்ன ஆடையன்` என்றார்.
மாக்கல் - பெருங்கல்.
பெருங்கல்லாகிய வரை இமய மலை.
``தென் குமரி வடபெருங்கல்`` *1* என்றார் சங்கப் புலவரும்.
கம்பர் - திரு வேகம்பப் பெருமான்.
புவனி - பூமி.

புவனியில் பூதியும் சாதன
மும்பொலி வார்ந்துவந்த
தவநிய மற்குச் சிறப்புச்செய்
தத்துவ காரணனாம்
அவனியில் கீர்த்தித்தெ
னாக்கூ ரதிப னருமறையோன்
சிவனிய மந்தலை நின்றதொல்
சீர்நஞ் சிறப்புலியே.

#1376

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பூதி - விபூதி; திருநீறு.
சாதனம் - உருத்திராக்கம்; இது சைவ மரபுப் பெயர்.
``ஆர்ந்து`` என்பதை `ஆர` எனத் திரிக்க.
தவ நியமம் - தவமாகிய, தப்பாக் கடமை.
இஃது இங்கு சைவாசாரத்தின் மேல் நின்றது.
சிறப்பு, மேல்நிலையில் வைத்து வழிபடுதல்.
தத்துவம்- மெய்ம்மை; அஃதாவது, உளமார நேர்ந்து செய்தல்.
காரணன் - செய்பவன்; கருத்தா.
தலை நிற்றல் - பற்றி நிற்றல்.
`சிறப்புலி` என்பது பெயர்.

புலியி னதளுடைப் புண்ணியற்
கின்னமு தாத்தனதோர்
ஒலியின் சதங்கைக் குதலைப்

புதல்வ னுடல் துணித்துக்
கலியின் வலிகெடுத் தோங்கும்
புகழ்ச்சிறுத் தொண்டன்கண்டீர்
மலியும் பொழிலொண்செங் காட்டங்
குடியவர் மன்னவனே.
#1377
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கலி, பிள்ளைக்கலி.
அதைத் தொலைத்தமை, கறியாகச் சமைக்கப்பட்ட மகன் திருவருளால் மீண்டும் முன்போல உயிர்பெற்று எழுந்து வரப் பெற்றமை.
கண்டீர், முன்னிலையசை.
``தனது புதல்வன்`` என்பதற்கு, மேல் *1* ``நினது அடியேம்`` என்றதற்கு உரைத்ததை உரைக்க.

மன்னர் பிரானெதிர் வண்ணா
னுடலுவ ரூறிநீறார்
தன்னர் பிரான்தமர் போல
வருதலுந் தான்வணங்க
என்னர் பிரானடி வண்ணா
னெனவடிச் சேரனென்னுந்
தென்னர் பிரான்கழ றிற்றறி
வானெனும் சேரலனே.
#1378
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மன்னர்பிரான், தென்னர்பிரான், சேரலன்` என்பன ஒரு பொருள்மேல் வந்த பல பெயர்கள்.
உவர் - உவர் மண்.
ஊறி - ஊறியதனால்.
நீறு - திருநீறு.
தன்னர்பிரான் தமர் போல - தம்மைப் போல்பவர்களுக்குத் தலைவனாகிய சிவபெருமானுக்குத் தொண்ட ராயினார்போல.
என்னர்பிரான் - என்போன்ற குடி மக்கட்குத் தலைவரே; அண்மை விளி.
``அடி வண்ணான், அடிச்சேரன்`` என்னும் பயனிலைகட்கு `யான்` என்னும் எழுவாய் தனித்தனி வருவிக்க.
``தென்னர்`` என்பது `தமிழர்` எனப் பொதுப் பொருள் தந்தது.

சொல் வாரது குறிப்பினால் சேரநாட்டுத் தமிழரைக் குறித்தது.
கழறிற்று அறி வான், எந்த உயிரும் தன்தன் மொழியில் கூறுவதை அறிய வல்லவன்.

சேரற்குத் தென்னா வலர்பெரு
மாற்குச் சிவனளித்த
வீரக் கடகரி முன்புதன்
பந்தி யிவுளிவைத்த
வீரற்கு வென்றிக் கருப்புவில்
வீரனை வெற்றிகொண்ட
சூரற் கெனதுள்ளம் நன்றுசெய்
தாயின்று தொண்டுபட்டே.

#1379

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``எனது உள்ளம்`` என்பது விளி; அதனை முதற்கண் வைத்து உரைக்க.
``சேரற்கு, வீரற்கு, சூரற்கு`` என்பன ஒரு பொருள் மேல் வந்த பல பெயர்கள்.
தென்னாவலர் பெருமான், தென்னாட்டில் உள்ள திருநாவலூரில் உள்ளவர்க்குத் தலைவர்; சுந்தரமூர்த்தி நாயனார்.
கட கரி - மத யானை; இது வெள்ளை யானை.
பந்தி, குதிரைப் பந்தி.
இவுளி - குதிரை.
``வைத்த`` என்றது, `ஓட்டிய` என்ற படி.
கருப்பு வில் வீரன், மன்மதன்.
அவனை வெற்றி கொண்டமை யாவது, தமக்கு உரிமைத் தேவியரான பலருள் ஒருவரையும் நினை யாது ஒரு கணத்திலே துறந்து கயிலை சென்றமை.
சூரன் - ஆண்மையுடையவன்.
`ஏனையோரை வெல்லும் ஆண்மைகள் எல்லா வற்றினும் மேலான ஆண்மை மன்மதனை வெல்லும் ஆண்மையே` என்பதாம்.
`சூரற்கு இன்று தொண்டுபட்டு நன்று செய்தாய்` என்க.

தொண்டரை யாக்கி யவரவர்க்
கேற்ற தொழில்கள்செய்வித்
தண்டர்தங் கோனக் கணத்துக்கு
நாயகம் பெற்றவன்காண்
கொண்டல்கொண் டேறிய மின்னுக்குக்
கோல மடல்கள்தொறும்

கண்டல்வெண் சோறளிக் குங்கடல்
காழிக் கணநாதனே.

#1380

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தொண்டரை ஆக்குதலாவது, பிற வழிகளில் முயல் பவர்கள் சிவனது தொண்டு முயற்சியில் திருப்பிடுதல்.
`அம் முயற்சி களுள் அவரவருக்கு ஏற்புடைய பணி இது இது` எனத் தெரிந்து அப் பணியில் அவர்களை ஈடுபடுத்தியவர் இந்நாயனார் என்க.
அப்பணி களுள், திருமுறைகளை ஏட்டில் எழுதல் ஒரு சிறந்த திருப்பணியாகும் `திருமுறை` என்பது பழங்காலத்தில் இறைவணக்கப் பாடல்கள் வரையப்பட்ட ஏடுகளுக்கு வழங்கிய பெயர்.
அண்டர் - தேவர்.
கோணம், வரையறுக்கப்பட்ட இடம்.
கணம் - கூட்டம்; இது சிவ கணத்தையேயன்றிப் பதினெண் கணங்களையும் குறித்தது.
கணத்துக்கு நாயகம் பெற்றது பின்னர் என்க.
காண், முன்னிலையசை.
கண்டல் - தாழம் பூ.
சோறு - சோற்றி.
இஃது, `உணவு` என வேறொரு பொருளையும் நயம்படக் குறித்தது.

நாதன் திருவடி யேமுடி
யாகக் கவித்துநல்ல
போதங் கருத்திற் பொறித்தமை
யாலது கைகொடுப்ப
ஒதந் தழுவிய ஞாலமெல்
லாமொரு கோலின்வைத்தான்
கோதை நெடுவேற் களப்பாள
னாகிய கூற்றுவனே.

#1381

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நாதன் திருவடியே முடியாக - வேறு முடி புனையாமல் தில்லைப் பெருமான் திருவடியே முடியாக.
போதம் - ஞானம்.
பொறித்தல் - பதித்தல்.

அது - அத்திருவடி.
கைகொடுத்தல் - உற்றுழி உதவுதல்.
ஓதம் - அலை; கடல் அலை.
கோதை - மாலை.
இதனை வேலுக்கும், நாயனாருக்கும் கொள்க.
களப்பாளன்.

கூற்றுக் கெவனோ புகல்திரு
வாரூரன் பொன்முடிமேல்
ஏற்றுத் தொடையலு மின்னடைக்
காயு மிடுதருமக்
கோற்றொத்து கூனனுங் கூன்போய்க்
குருடனுங் கண்பெற்றமை
சாற்றித் திரியும் பழமொழி
யாமித் தரணியிலே.

#1382

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

புகல் - நம்பால் வருதல்.
எவன் - எக் காரணம் பற்றி உண்டாகும்? `உண்டாகாது` என்பதாம்.
`கூற்றுக்கு புகல் எவன்` என மாற்றி, இறுதியில் கூட்டி யுரைக்க.
ஓகாரம் அசை.
திருஆரூரன் - சுந்தர மூர்த்தி நாயனார்.
பிற்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் இரட்டையரைப் போல அக்காலத்தில், நடக்க மாட்டாத கூனன் ஒருவனைக் குருடன் ஒருவன் சுமந்து செல்லக் கூனன் பூக்களைப் பறித்து மாலையாகத் தொடுத்தும், வெற்றிலைப் பாக்குத் தேடிக் கொணர்ந்தும் நாள்தோறும் சுந்தரருக்குக் கொடுத்து வந்தமையால் அவர் பரவையாரது ஊடலை இறைவன் தூது சென்று தீர்த்தபின் இல்லத்தில் புக்கபொழுது அவ் இவருடைய கூனையும், குருட்டையும் நீக்கி நல்லுடல் பெறச் செய்தமை இப்பாட்டில் குறிக்கப்பட்டது.
இதனைச் சேக்கிழாரும் கூற்றுவ நாயனார் புராணத்து இறுதிப்பாட்டில் கூறியருளினார்.
அடைக்காய் - வெற்றிலைப்பாக்கு.
கோல் - நெறி.
தொத்துதல் - பற்றி நிற்றல்.
`தருமக் கோலில் தொத்து கூனனும், குருடனும்` என்க.
``போய்`` என்னும் எச்சம் எண்ணின்கண் வந்தது.

``திரியும்`` என்னும் பெயரெச்சம், ``பழமொழி`` என்னும் பிற பெயர் கொண்டது.
`குற்றே வலுள் ஒன்றிரண்டைச் செய்த கூனனும், குருடனும் நீக்கலாகாத கூனும், குருடும் நீங்கி நலம் பெற்றார்கள் என்றால் அவ் ஆரூரரையே தலைவராகக் கொண்டு அவர்க்கு முழுதும் ஆட்பட்ட நம்பால் கூற்றுவன் வாராது நீங்குதல் அரிதன்று` என்பதாம்.

தரணியில் பொய்ம்மை இலாத்தமிழ்ச்
சங்கம் அதில்கபிலர்
பரணர்நக் கீரர் முதல்நாற்பத்
தொன்பது பல்புலவோர்
அருள்நமக் கீயுந் திருவால
வாயரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல
பாடும் புலவர்களே.

#1383

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பொய்ம்மை இலாத் தமிழ்ச் சங்கம் - உலகியலை நோக்காத தமிழ்ச் சங்கம்.
இது சைவத் தமிழ்ச் சங்கம்.
`தலை, இடை, கடை` என்னும் மூன்று தமிழ்ச் சங்கங்களும் பெரும்பான்மையும் அறம், பொருள், இன்பங்களையே நெறிப்படுத்தினவாக, இச்சங்கம் வீடு ஒன்றனையே நோக்கி அமைந்தமையால், ``பொய்ம்மையிலாத தமிழ்ச் சங்கம்`` என்றார்.
இது திருவாதவூரடிகளை அமைச்சராகக் கொண்டு விளங்கிய, ``பெரிய அன்பின் வரகுண தேவன்`` எனப்பட்ட பழைய வரகுண பாண்டியனுக்குப் பின் வந்த பாண்டியன் காலம் முதலாகத் தொடங்கி நடைபெற்றது.
எனவே, `இதில் இருந்த கபிலர், பரணர், நக்கீரர் முதலிய புலவர்கள் பெயரால் ஒன்றுபட்டுக் காணப் பட்ட போதிலும் பழைய உலகியற் சங்கத்தில் இருந்த கபிலர், பரணர், நக்கீரர் முதலியோரின் வேறுபட்டோர்` என்பது உணரற்பாலது.
இவர்களும் முன்னோரைப் போற்றும் வகையில் அவர்களது பெயரைப் பூண்டு விளங்கினர்.
நாற்பத்தொன்பது புலவோர்; மற்றும் பல்புலவோர்` எனத் தனித்தனி இயைக்க.
நாற்பத்தொன்பதின்மர் சிறப்புடையோர் என்க.

`நாற்பத் தொன்பதின்மர்` என்பதும் ஒரு பாடும் புலவர்கள்``
என்றதனால், `இவர்கள் மக்களைப் பாடாத நெறிமையுடையவராதல்
விளங்கும்.
இவர்கள் பாடிய பாடல்கள் *11*-ஆம் திருமுறையாகக் கோக்கப்பட்டன.

புலமன் னியமன்னைச் சிங்கள
நாடு பொடுபடுத்த
குலமன் னியபுகழ்க் கோகன
நாதன் குலமுதலோன்
நலமன் னியபுகழ்ச் சோழன
தென்பர் நகுசுடர்வாள்
வலமன் னியவெறி பத்தனுக்
கீந்ததொர் வண்புகழே.

#1384

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

புலம் மன்னிய மன் - ஞானம் நிலைபெறப் பெற்ற தலைவன்.
கோகன நாதன் குலமுதலோன் - சூரிய குலத்தின் *(சோழர் மரபின்)*
மூதாதை.
இவையிரண்டும் ``புகழ்ச் சோழன்`` எனப்பட்ட அவரையே குறித்தன.
ஐ - அழகு.
`சிங்கள நாட்டைப் பொடிபடுத்த கோகன நாதன் குலம்` என்க.
கரிகாலன் முதலாக அவ்வப்பொழுது வந்த சோழர்கள் சிங்கள
நாட்டின்மேற் படைகளை ஏவிப் பலமுறை வென்றார்கள் ஆதலின்
அவ்வெற்றியை ஒருவனுக்கே உரித்தாக்கிக் கூறாது, குலம்
முழுவதற்குமாக ஆக்கிக் கூறினார்.
குலம் மன்னிய புகழ்க் குலம் - தொன்றுதொட்டு வழி வழியாக
நிலைபெற்று வரும் புகழையுடைய குலம்.

புகழும் படியெம் பரமே தவர்க்குநற் பொன்னிடுவோன்
இகழும் படியோர் தவன்மட
வார்புனை கோலமெங்கும்
நிகழும் படிகண் டவனுக்
கிரட்டிபொன் இட்டவன்நீள்
திகழு முடிநர சிங்க
முனையர சன்திறமே.

#1385

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

எம் பரமே - எம் அளவினதோ.
ஏகாரம், வினா.
இத்தொடரை இறுதியிற் கூட்டியுரைக்க.
தவர் - சிவனடியார்கள்.
அவர்கட்கு இந்நாயனார் திருவாதிரைத் திருநாளன்று திருவமுது படைத்து, ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு நூறு பொன் நன்கொடையாக அளித்து வந்தார்.
மடவார் புனை வேடம்.
`மடவார்க்கு` என நான்காம் உருபு விரிக்க.
இவ்வேடத்திற்கு இடையே அவன் தானும் பொன் பெற வேண்டி திருநீறு கண்டிகைகளையும் அணிந்துகொண்டு அடியார்களோடு சேர்ந்து வந்தான்.
அவனைப் பிறர் எல்லாரும் இகழ்ந்த போதிலும் இந்நாயனார் அவனுக்கு இருநூறு பொன்னை நன்கொடையாக அளித்தார்.
அதற்குக் காரணம், `அவையிகழ்ந்தால், திருநீறு உருத்திராக்கங்களை நாம் போற்றாதவர் ஆவோம்` எனக் கருதியதே யாம்.

திறமமர் மீன்படுக் கும்பொழு
தாங்கொரு மீன்சிவற்கென்
றுறவமர் மாகடற் கேவிடு
வோனொரு நாட்கனக
நிறமமர் மீன்பட நின்மலற்
கென்றுவிட் டோன்கமலம்
புறமமர் நாகை யதிபத்த
னாகிய பொய்யிலியே.

#1386

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கடலில் வலையை வீசி மீன் பிடிக்கும் பொழுது மீன் ஒன்றே ஒன்று தனியாக வலையில் அகப்பட்டுக் கிடைக்குமாயின் அந்த மீனை, `இந்த மீன் சிவனுக்கு உரிய மீன்` என்று அதனை மீண்டும் கடலிலே விடுபவர் இந் நாயனார்.
இவருக்குச் சோதனையாகப் பல நாட்களில் வலையில் ஒவ்வொரு மீனே அகப்பட்டு வந்தது.
அதைக் கடலிலே விட்டமையால் உணவின்றிக் குடும்பத்துடன் மெலியும் நாளில் ஒரு நாள் தனி ஒரு மீன் பொன்னும், இரத்தினமுமே

உருவாகி, உலகம் விலை பெறும் அளவினதாய் அகப்பட, அதனையும் கடலிலே விடுத்தார்.
உடனே பெருமான் காட்சி தந்து அழைத்துச் செல்ல, முத்தி பெற்றார்.
இந் நாயனார் பத்தருட் சிறந்த `அதிபத்தர்` எனப் பெயர் பெற்றமை உணரற்பாற்று.
அமர் - அந்த மீன் வாழ்கின்ற.
புறம் - புறத்துச் சூழ்ந்த பொய்கைகள்; ஆகுபெயர்.
நாகை - நாகப்பட்டினம்.

பொய்யைக் கடிந்துநம் புண்ணியர்க்
காட்பட்டுத் தன்னடியான்
சைவத் திருவுரு வாய்வரத்
தானவன் தாள்கழுவ
வையத் தவர்முன்பு வெள்கிநீர்
வாரா விடமனைவி
கையைத் தடிந்தவன் பெண்ணா
கடத்துக் கலிக்கம்பனே.

#1387

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தன் அடியான் - தனக்கு அடிமையாய்த் தனக்குப் பணிசெய்து இருந்தவன்.
சைவம் - சிவ வேடம்.
`கடிந்து, ஆட்பட்டு, கழுவ, நீர் வாரா மனைவி கையைத் தடிந்தவன் கலிக்கம்பன்` என இயைத்து முடிக்க.

கம்பக் கரிக்குஞ் சிலந்திக்கும்
நல்கிய கண்ணுதலோன்
உம்பர்க்கு நாதற் கொளிவிளக்
கேற்றறற் குடலிலனாய்க்
கும்பத் தயிலம்விற் றுஞ்செக்
குழன்றுங்கொள் கூலியினால்
நம்பற் கெரித்த கலியொற்றி
மாநகர்ச் சக்கிரியே.

#1388

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கம்பக் கரி - எப்பொழுதும் அசைந்து கொண்டே யிருக்கும் யானை.

சிவபெருமான் யானைக்கும், சிலந்திக்கும் அருள் புரிந்தது திருவானைக்காத் தலத்தில்.
`கண்ணுதலோன் ஆகிய நாதற்கு` என்க.
உடல் - பொன்; காசு.
தயிலம் - எண்ணெய்.
சக்கிரி - செக்கான்; செக்காடும் தொழிலை உடையவன்.
சக்கிரம் - செக்கு.

கிரிவில் லவர்தம் மடியரைத்
தன்முன்பு கீழ்மைசொன்ன
திருவில் லவரையந் நாவரி
வோன்திருந் தாரைவெல்லும்
வரிவில் லவன்வயல் செங்கழு
நீரின் மருவுதென்றல்
தெருவில் விரைமக ழுந்தென்
வரிஞ்சைத் திகழ்சத்தியே.

#1389

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கிரி வில்லவர் - மகாமேரு மலையாகிய வில்லை உடையவர்; சிவபெருமான்.
கீழ்மை சொல்லுதல் - இழித்துரைத்தல்.
திரு இல்லவர் - நல் ஊழ் இல்லாதவர்; பாவிகள்.
வரி வில்லவர் - வரிந்து கட்டப்பட்ட வில்லை ஏந்தியவர்.
விரை - நறுமணம்.
வரிஞ்சை - வரிஞ்சையூர்.

சத்தித் தடக்கைக் குமரன்நற்
றாதைதன் தானமெல்லாம்
முத்திப் பதமொரோர் வெண்பா
மொழிந்து முடியரசா
மத்திற்கு மும்மைநன் தாளரற்
காயயம் ஏற்றலென்னும்
பத்திக் கடல் ஐயடிகளா
கின்றநம் பல்லவனே.

#1390

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சத்தித் தடக்கைக் குமரன் - முருகக் கடவுள்.
அவனுக்குத் தாதை சிவபெருமான்.
தானம் - தலங்கள்.
`தானம் எல்லாம் சென்று, என ஒரு சொல் வருவிக்க.
முத்திப் பதம் - மோட்ச மாகிய அந்த ஒரு பதவியின் பெருமையைப் பற்றியே.
முடி அரசு ஆம் அத்தில் - முடிபுனைந்து ஆள்கின்ற அதைவிட.
அரற்கு ஆள் ஆய் ஐயம் ஏற்றல் மும்மை நன்று என்னும் -
சிவபெருமானுக்கு ஆளாகிப் பிச்சை ஏற்று உண்டல் மும்மடங்கு நன்றாகும்` என்று அருளிச்செய்த.
இவர் அருளிச் செய்த தனி வெண்பாக்கள் கிடைத்த அளவில் `சேத்திரத் திருவெண்பா` - எனப் பதினொன்றாம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன.
பல்லவர்கள் தமிழ் நாட்டிற்குப் புதியரானமை பற்றி அவர்களைச் சேக்கிழார் புராணம் ``குறுநில மன்னர்`` என்றது.

பல்லவை செங்கதி ரோனைப்
பறித்தவன் பாதம்புகழ்
சொல்லவன் தென்புக லூரரன்
பால்துய்ய செம்பொன்கொள்ள
வல்லவன் நாட்டியத் தான்குடி
மாணிக்க வண்ணனுக்கு
நல்லவன் தன்பதி நாவலூ
ராகின்ற நன்னகரே.

#1391

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`தக்கன் வேள்வியில் சூரியன் பல் உதிர்க்கப்பட்டான்` என்பது புராணம்.
செங்கதிரோன் - சூரியன்.
வீரபத்திரர் செயல் இங்குச் சிவபெருமான் செயலாகக் கூறப்பட்டது.
சொல்லவன்- சொற்களை உடையவன்.
நாட்டியத்தான் குடி.
கோட்புலி நாயனாரது ஊர்.
``மாணிக்க வண்ணன்`` என்றது இங்குள்ள சிவபெருமானையே.

நன்னக ராய விருக்குவே
ளூர்தனில் நல்குரவாய்ப்
பொன்னக ராயநல் தில்லை
புகுந்து புலீச்சரத்து

மன்னவ ராய வரற்குநற்
புல்லால் விளக்கெரித்தான்
கன்னவில் தோளெந்தை தந்தை
பிரானெம் கணம்புல்லனே.

#1392

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நற் புல் - `கணம்புல்` என்னும் ஒருவகைப் புல்.
கல் நவில்தோள் - கல்போலும் தோள்.
இந்நாயனார் மரபு அறியப்படவில்லை.
``எந்தை தந்தை பிரான்`` என்றது, `எம் குடி முழுதையும் ஆட்கொண்டவன்` என்றபடி.

புல்லன வாகா வகையுல
கத்துப் புணர்ந்தனவும்
சொல்லின வுந்நய மாக்கிச்
சுடர்பொற் குவடுதனி
வில்லனை வாழ்த்தி விளங்கும்
கயிலைப்புக் கானென்பரால்
கல்லன மாமதில் சூழ்கட
வூரினில் காரியையே.

#1393

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`உலகத்துப் புணர்ந்தனவும் புல்லன ஆகா வகை ஆக்கி` என இயைக்க.
உலகத்துப் புணர்ந்தன, பொருளிலக்கணத்தில் சொல்லப்பட்ட `முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்` என்னும் மூவகைப் பொருள்கள்.
வெளிக்கு அவைகளைப் பாடுவது போலத் தோன்றும்படி பாடல்களைப் பாடி.
அவற்றினுள்ளே சிவனது பெருமை உள்ளுறையாக அமையச் செய்தவர் இந்நாயனார்.
அதனால், ``உலகத்துப் புணர்ந்தனவும் புல்லன ஆகா வகை நய மாக்கி`` என்றார்.
`சொல்லின உள் நயமாக்கி` எனப் பாடம் ஓதுதல் சிறக்கும்.
புல்லன - கீழான தன்மையை உடையன.
அவை உலக நிகழ்ச்சிகள்.

இவ்வாறான பாடல்களால் மூவேந்தர்களைப் பாடி மகிழ்வித்து, அவர் தந்த பரிசுப் பொருளைக் கொண்டு சிவத் தொண்டும், சிவனடியார் தொண்டும் செய்தவர் இந் நாயனார்.
இவரது மரபு அறியப்படவில்லை.
இவர் சங்கப் புலவராகிய காரிகிழாராயின் வேளாண் மரபினராவர்.

கார்த்தண் முகிற்கைக் கடற்காழி
யர்பெரு மாற்கெதிராய்
ஆர்த்த வமண ரழிந்தது
கண்டுமற் றாங்கவரைக்
கூர்த்த கழுவின் நுதிவைத்த
பஞ்சவ னென்றுரைக்கும்
வார்த்தை யதுபண்டு நெல்வேலி
யில்வென்ற மாறனுக்கே.

#1394

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கை - பக்கங்கள் ``முகிற் கை`` என்பது கடலுக்கு அடை.
காழியர் பெருமான் - திருஞானசம்பந்தர்.
அழிந்தது - தோற்றது.
பஞ்சவன் - பாண்டியன்.
வார்த்தை - புகழ்.
அது, பகுதிப் பொருள் விகுதி.
`மாறனுக்கு உரியது` என ஈற்றில் ஒருசொல் வருவித்து முடிக்க.
இவ்வாறு உரையாது `வார்த்தை யதுவுண்டு` எனப் பாடம் ஓதலும் ஆம்.
`பகைவரை வென்ற` எனவும் ஒரு சொல் வருவிக்க.

மாறா வருளரன் தன்னை
மனவா லயத்திருத்தி
ஆறா வறிவா மொளி விளக்
கேற்றி யகமலர்வாம்
வீறா மலரளித் தன்பெனும்
மெய்யமிர் தங்கொடுத்தான்
வீறார் மயிலையுள் வாயிலா
னென்று விளம்புவரே.

#1395

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஆறா விளக்கு` என இயையும்.
ஆறா விளக்கு - அணையா விளக்கு அக மலர்வு - நெஞ்சில் எழுகின்ற சிவ நினைவுகள்.
அமிர்தம் - நிவேதனம்.

என்று விளம்புவர் நீடூ
ரதிபன் முனையடுவோன்
என்று மமரு ளழிந்தவர்க்
காக்கூலி யேற்றெறிந்து
வென்று பெருஞ்செல்வ மெல்லாங்
கனகநன் மேருவென்னுங்
குன்று வளைத்த சிலையான்
தமர்க்குக் கொடுத்தனனே.

#1396

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``என்று விளம்புவர்`` என்பதை இறுதியிற் கூட்டியுரைக்க.
அழிந்தவர் - தோற்றவர்.
எறிந்து - கூலி கொடுத்தவரை எதிர்த்து நின்றோரைத் தாக்கி
பெருஞ்செல்வம் - படைக்கூலியாகப் பெற்றதனால் வந்த பெருஞ்செல்வம்.
சிலை - வில்.
தமர் - அடியார்.

கொடுத்தான் முதலைகொள் பிள்ளைக்
குயிரன்று புக்கொளியூர்த்
தொடுத்தான் மதுர கவியவி
நாசியை வேடர்சுற்றம்
படுத்தான் திருமுரு கன்பூண்
டியினில் பராபரத்தேன்
மடுத்தா னவனென்பர் வன்றொண்ட
னாகின்ற மாதவனே.

#1397

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`அன்று புக்கொளியூரில், முதலை கொள்பிள்ளைக்கு உயிர் கொடுத்தான்` என்றும், `அவிநாசியை மதுர கவி தொடுத்தான்` என்றும், `திருமுருகன் பூண்டியினில் வேடர் சுற்றம் படுத்தான்` என்றும் கூட்டுக.

மதுரம் - இனிமை.
`கவியால் தொடுத்தான்` என உருபு விரிக்க.
தொடுத்தான் - தொடுத்துப் பாடினான்.
புக்கொளியூர், ஊர்ப் பெயர்.
அவிநாசி.
அவ்வூரில் எழுந்தருளியுள்ள இறைவன் பெயர்.
அவிநாசி - விநாசம் (அழிவு) இல்லாதவன்.
படுத்தான் - வென்றான்.
பராபரம் - மேனவும், கீழனவும் ஆகிய அனைத்துப் பொருள்களுமாய் உள்ள பொருள்; பரம்பொருள்.
இஃது ஆகுபெயராய், அதன்பால் உள்ள இன்பத்தைக் குறித்தது.
மடுத்தான்- உண்டான்.

மாதவத் தோர்தங்கள் வைப்பினுக்
காரூர் மணிக்குவைத்த
போதினைத் தான்மோந்த தேவிதன்
மூக்கை யரியப்பொற்கை
காதிவைத் தன்றோ வரிவதென்
றாங்கவள் கைதடிந்தான்
நாதமொய்த் தார்வண்டு கிண்டுபைங்
கோதைக் கழற்சிங்கனே.

#1398

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஆரூர் மணி, திருவாரூரில் எழுந்தருளியுள்ள இறைவன்.
``மாதவத்தோர் - தங்கள் வைப்பு`` ஆவானும் அவனே.
போது - மலர்.
தேவி - பட்டத்துத் தேவி.
`அவனது மூக்கை அரிந்தவர் செருத்துணை நாயனார்` என்பது பின்னர் வரும் பாட்டால் விளங்கும்.
காதி - வெட்டி.
``வைத்து`` என்பது, `முன்னர்ச் செய்து` எனப் பொருள் தந்து நின்றது.
எனவே, அரிவது, பின்னர்ச் செயற்பாலதாயிற்று.
``மொய்த்து ஆர் நாத வண்டு`` எனக் கூட்டுக.
ஆர்த்தல் - ஒலித்தல்.
நாதம் இசை.
இந்நாயனாரைச் சுந்தரர் ``கடல் சூழ்ந்த உலகெலாம் எனப் புகழ்ந்திருக்கவும் சேக்கிழார் புராணம் இவரை ``குறுநில மன்னர்``

என்றே கூறிற்று.

சிங்கத் துருவனைச் செற்றவன்
சிற்றம் பலமுகடு
கொங்கிற் கனக மணிந்தவா
தித்தன் குலமுதலோன்
திங்கட் சடையர் தமரதென்
செல்வ மெனப்பறைபோக்
கெங்கட் கிறைவ னிருக்குவே
ளூர்மன் இடங்கழியே.
#1399
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சிங்கத்து உருவன் - இரணியாசுரனை அழித்தற் பொருட்டுக் கொண்டே நரசிங்கமாகிய உருவத்தையுடையவன்.
செற்றவன் - (சரபமாய்த் தோன்றி) அழித்தவன்; சிவபெருமான்.
கொங்கிற் கனம் - கொங்கம் நாட்டினை வென்று கொணர்ந்த பொன்.
ஆதித்தன் - முதல் ஆதித்த சோழன்.
`இவன் குலத்து முன்னோராய் இருந்தவர் இந் நாயனார்` என்பதாம். சிற்றம்பலம் பொன் வேய்ந்தமை பற்றி ஆதித்த சோழன் புகழ்ச்சி மிக்கவனாய் இருந்தமையின், `அத் தகையோன் இந்நாயனார் வழியில் வந்தவனே` என்பது உணர்த்து முகத்தால் இந் நாயனாரது பெருமையைப் புலப்படுத்தினார்` இஃதே பற்றி இந்நூலாசிரியரை அவ் ஆதித்த சோழன் காலத்தவராகக் கொள்ள வேண்டிய கட்டாயம் இல்லை.
பறை போக்குதல் - பறை சாற்றுவித்தல்.
`பறை போக்கு இறைவன்` என இயையும்.
``இவரது ஊர் இருக்கு வேளூர்`` எனப்பட்ட போதிலும், ``ஆதித்தன் குல முதலோன்`` எனப் பட்டமையால், சேக்கிழார் புராணம் இவரை ``முடி மன்னர்`` எனக் கூறிற்று.

கழிநீள் கடல்நஞ் சயின்றார்க்
கிருந்த கடிமலரை
மொழிநீள் புகழ்க்கழற் சிங்கன்தன்
தேவிமுன் மோத்தலுமே
எழில்நீள் குமிழ்மலர் மூக்கரிந்
தானென் றியம்புவரால்
செழுநீர் மருகல்நன் னாட்டமர்
தஞ்சைச் செருத்துணையே.

#1400

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டின் பொருளை மேல் கழற்சிங்க நாய னாரைப் பற்றிப் போந்த. ``மாதவத்தோர் தங்கள்`` என்னும் பாட்டின் பொருள் பற்றி அறிக.
குமிழ் மலர் மூக்கு - குமிழம்பூப் போன்ற மூக்கு.

செருவிலி புத்தூர்ப் புகழ்த்துணை
வையம் சிறுவிலைத்தா
வுருவலி கெட்டுண வின்றி
யுமைகோனை மஞ்சனஞ்செய்
தருவதோர் போதுகை சோர்ந்து
கலசம் விழத்தரியா
தருவரை வில்லி யருளும்
நிதியது பெற்றனனே.

#1401

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

செருவிலிபுத்தூர் அரிசில் ஆற்றங்கரையில் இருத்த லால் `அரிசிற்கரைப் புத்தூர்` எனப்பட்டது.
தேவாரம் பெற்ற தலம்.
சிறுவிலை - பஞ்சம்.
வையம் சிறு விலையை உடையதாய்விட.
உரு - உடம்பு.
வலி கெட்டது உணவின்மையால் ஆகலின், `உணவின்றி உரு வலி கெட்டு` என மாற்றியுரைக்க.
``செய்தருவது`` என்பதில், `தரு` துணைவினை.
`தரியாது நடுங்கி` என ஒரு சொல் வருவிக்க.
நிதி, படிக் காசு.
இவ்வரலாற்றை இத்தலச் சுந்தரர் தேவாரத் திருப்பதிகத்து 6-ஆம் திருப்பாட்டால் அறிக.

பெற்ற முயர்த்தோன் விரையாக்
கலிபிழைத் தோர்தமது
சுற்ற மறுக்குந் தொழில்திரு
நாட்டியத் தான்குடிக்கோன்
குற்ற மறுக்கும்நங் கோட்புலி
நாவற் குரிசிலருள்

பெற்ற வருட்கட் லென்றுல
கேத்தும் பெருந்தகையே.

#1402

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

விரையாக் கலி - ஒருவராலும் கடக்கலாகாத ஆணை.
இது சிவபெருமான் மேல் இடப்படும் ஆணைக்கே பெயராய் வழங்கும்.
``தனது`` என்பதில் `தன்` சாரியை.
`தமது` என்பது பாட மன்று.
`பிழைத்தோராகிய தனது சுற்றம்` என்க.
பிழைத்தோர் - கடந் தோர்.
சுற்றத்தாரை, ``சுற்றம்`` என்றது உபசார வழக்கு.
திருநாட்டியத் தான்குடி, ஊர்ப்பெயர்.
குற்றம் அறுக்கும் - ஏனையயோரது குற்றங் களையும் நீக்கவல்ல.
நாவல் - நாவலூர்.
குரிசில் - தலைவன்.
நாவலூர்த் தலைவன் சுந்தரமூர்த்தி நாயனார்.
அவரது அருளாவது, ``கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற கொடிறன் கோட்புலி`` எனப் புகழ்ந்தருளிய புகழ்த்தொடர்.

தகுமகட் பேசினோன் வீயவே
நூல்போன சங்கிலிபால்
புகுமணக் காதலி னாலொற்றி
யூருறை புண்ணியன்தன்
மிகுமலர்ப் பாதம் பணிந்தரு
ளாலிவ் வியனுலகம்
நகும்வழக் கேநன்மை யாப்புணர்ந்
தான்நாவ லூரரசே.

#1403

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நூல்போன`` என்றது சிலேடை நயம்.
`மங்கல நாணை இழந்த என்பது மேற்போக்குப் பொருள்.
ஒருவன் மகட் பேசியதன்றி, பேசப்பட்ட மகளோ, அவன் தன் இருமுது குரவரோ மணத்திற்கு இசையாத நிலைமையில் மகட் பேசினோன் இறந்தமை பற்றி அவனால் பேசப்பட்ட மகளை, ``மங்கல நாணை இழந்தவள்`` என எவரும் கூற ஒருப்படார் ஆதலின் ``நூல் போன``

என்றது சிலேடை நயமேயாம்.
``நூல்`` என்பது விடாத ஆகுபெயராய் அதனைத் தரும் மண வினையைக் குறிக்க, மகட் பேசினோன் உடனே இறந்தமை கேட்டு அவளைமணம் பேச நினைவார் ஒருவரும் இல்லாது போயினர்` என்பதே அத்தொடரின் உட்பொருள்.
இனி உலகம் நகும் வழக்காவது, மகட் பேசினான் உடனே இறந்ததை அறிந்த பின்பு அவ் இறப்பிற்கு ஏதுவாய் நின்ற மகளை மணக்க எவன் ஒருவன் விரும்பினும் `அவன் விளக்கைப் பிடித்துக் கொண்டே கிணற்றில் வீழ்வான்போலும் அறிவிலி` என உலகம் இகழத் தொடங்கிய வழக்கு.
உலகத்தில் அத்தன்மைத்தாகிய வழக்குச் சுந்தரர்பால் பொய்த்துப் போய் இன்பம் பயந்ததையே ``உலகம் நகும் வழக்கே நன்மையாக`` என்றார்.
இச்சிலேடை நயம் உணர மாட்டாதார் இந் நூலாசிரியர் ``உலகம் `இழுக்கு` எனக் கடிந்த பழியொழுக்கத்தையே சுந்தரர் `நன்று என மேற்கொண்டதாகக் கூறினார்`` என்று இகழ்வர்.
இவரெல்லாம்,
மோகம் அறுத்தவர்க்கே முத்தி கொடுப்பமென
ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் - தோகையார்பால்
தூதாகப் போகவிடும் வன்றொண்டன்
என்றதில், ``விளங்கிழையார் இருவரோடும் முயங்கிய போதிலும் *2* வன்றொண்டர், தம் அறிவு மோக மயத்ததாகாது, சிவனை மறவாத சிந்தையால் சிவஞான மயமாகவே இருந்தார் என்னும் உண்மை உணர்த்தப்பட்டமையை அறியாது, சிவன் வன்றொண்டர் பொருட்டுத் தான் வகுத்த நெறியினைத் தானே அழித்தானாகக் கூறி மகிழ்பவரோடு ஒரு பெற்றியர் ஆவர்.
இன்னோரைத் தெருட்டுதல் அரிது.

அரசினை யாரூ ரமரர்
பிரானை அடிபணிந்திட்
டுரைசெய்த வாய்தடு மாறி
யுரோம புளகம்வந்து
கரசர ணாதி யவயவங்
கம்பித்துக் கண்ணருவி
சொரிதரு மங்கத்தி னோர்பத்த
ரென்று தொகுத்தவரே.

#1404

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உடல் நிலத்திற்படிய வீழ்ந்து சிவபெருமானது திருவடிகளை வணங்குதல், அன்பினால் நாக்குழற அப்பெருமானது புகழ்தனை எடுத்தோதுதல், உடம்பெங்கும் மயிர்க்கூச் செறிதல், கை, கால் முதலிய உறுப்புக்கள் யாவும் அன்பினால் நடுங்கல், கண்களி னின்றும் அன்புக் கண்ணீர் அருவிபோல் உடம்பெங்கும் ஒழுகப் பெறுதல் இவை முதலியவற்றை உடையோர் பத்தராய்ப் பணிவா ராவார்.
கம்பித்தல் - நடுங்குதல்.
அங்கம் - உடம்பு.
தொகுத்தவர் - தொகுக்கப்பட்டவர்.
எனவே, இவரைப் போல ஒருவராகச் சொல்லப்படாமல், பலராகச் சொல்லப்படுவார் `தொகையடியார்கள்` என்பது போந்தது.
போதவே, `ஒவ்வொருவராகச் சொல்லப்பட்டோர் தனியடியாராவர்` என்பதும் பெறப்பட்டது.
``சொரிதரும்`` என்னும் பெயரெச்சம் ``அங்கம்`` என்னும் இடப்பெயர் கொண்டது.

தொகுத்த வடமொழி தென்மொழி
யாதொன்று தோன்றியதே
மிகுத்த வியலிசை வல்ல
வகையில்விண் தோயுநெற்றி
வகுத்த மதில்தில்லை யம்பலத்
தான்மலர்ப் பாதங்கள்மேல்
உகுத்த மனத்தொடும் பாடவல்
லோரென்ப ருத்தமரே.

#1405

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``தொகுத்த`` என்னும் பெயரெச்சம் ``இயல், இை\\\\u2970?`` என்னும் செயப்படு பொருட் பெயர்களைக் கொண்டது.
``வடமொழி தென்மொழி`` என்பது உம்மைத்தொகை.
அதன் ஈற்றில் ஏழன் உருபு விரிக்க.
தோன்றியது - கைவந்தது.
``வடமொழி தென் மொழிகளில் யாதொன்று தோன்றியது`` எனக் கூறினமையால்.
நாயன்மார் நெறியில் மொழிவேற்றுமை கொள்ளப்படாமை விளங்கிற்று.
இவற்றுடன், ``தேசிகம்`` எனச் சேக்கிழார் பிறமொழிகளையும் சேர்த்துக்கூறினார்.

``வடமொழியும், தென்தமிழும், மறைகள் நான்கும் - ஆனவன்காண்`` எனவும், ``ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்`` *1* எனவும் அப்பர் பெருமானும், ``தமிழ்ச் சொலும் வட சொலும் தாள்நிழற் சேர`` *2* எனத் திருஞானசம்பந்தரும், ஆரிய மும்தமி ழும்உட னேசொலிக் காரிகை யார்க்குக் கருணைசெய் தானே.
தமிழ்ச்சொல் வடசொல் இரண்டும் அவனை உணர்த்தும்.
3 எனத் திருமூலரும் அருளினமை காண்க.
செய்யுள்கள் இயலிலும் உண்டு.
அவை `பா` எனவும், `பாவினம்` எனவும் கூறப்படும்.
அவை களிலும் ஓரளவு இசை உண்டு.
``இயல், இை\\\\*u2970?*`` எனவும், இனம் பற்றி நாடகச் செய்யுளும் கொள்ளப்படும்.
வல்ல வகையில் - இயன்ற அளவில், கோழைமிட றாககவி கோளுமில வாக இசை கூடும் வகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொல்மகிழும்
ஈசன் *4*
எனச் சம்பந்தப் பெருமான் அருளிச் செய்தார்.
வல்ல வகையில் பாட வல்லோர்` - என இயையும்.
வல்லோர் - மன நிலை கொண்டவர்.
நெற்றி - மதிலின் நெற்றி.
உகுத்த மனம் - உருக்கிச் சேர்த்த மனம்.
``பாடவல்லோர் உத்தமர் என்பர்` என மாற்றியுரைக்க.
``என்பர்`` என்பதற்கு, ``உயர்ந்தோர்`` என்னும் எழுவாய் வருவித்துக்கொள்க.

உத்தமத் தானத் தறம்பொரு
ளின்ப மொடியெறிந்து
வித்தகத் தானத் தொருவழிக்
கொண்டு விளங்கச்சென்னி
மத்தம்வைத் தான்திருப் பாத
கமல மலரிணைக்கீழ்ச்
சித்தம்வைத் தாரென்பர் வீடுபே
றெய்திய செல்வர்களே.

#1406

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இங்கு, ``உத்தமத்தானம்`` எனப்பட்டவற்றைச் சேக்கிழார், ``காரண பங்கயம் ஐந்து`` *1* என்றார்.

அவை மூலாதாரத் திற்கு மேல் உள்ள ஐந்து ஆதாரங்கள்.
அவற்றில் கீழ் இருந்து பிரமன் விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் ஆகிய காரணக் கடவுளர் வீற்றிருப்பராகலின் அவற்றைச் சேக்கிழார், ``காரண பங்கயம் ஐந்து`` என்றார்.
அந்த ஐவரும் முறையே படைத்தல் முதலிய ஐந்து தொழில் களைச் செய்வர் ஆதலானும் அவ் ஐந்தொழில்களில் உயிர்கள் பெறு வன வீடுதவிர, அறம் முதலிய ஏனை மூன்று பயன்களே ஆதலாலும் அம் முப்பயன்களுக்கு மேலான வீடு பெற நின்றாரை, ``அறம், பொருள், இன்பம் ஒடி எறிந்து`` என இவ்வாசிரியர் இங்குக் கூறினார்.
`ஒடிய` என்பது கடைக் குறைந்து நின்றது.
ஒடிய - அழிய.
அறம் முதலிய மூன்றும் பிறப்பையே பயப்பனவாம்.
``அறம், பொருள், இன்பம்`` என்பன ஆகுபெயரால் அவற்றின்மேற் செல்லும் ஆசை களைக் குறித்தன.
வித்தகம் - ஞானம்.
மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களை `யோகத் தானம்` என வைத்து, ஆஞ்ஞைக்கு மேல் உள்ள ஏழாம் தானமாகிய நிராதாரத்தையும், அதற்குப் பன்னிரு விரற் கடை கடந்துள்ள துவாதசாந்தத்தையும் `ஞானத் தானம்` என்பார், ``வித்தகத்தானம்`` என்றார்.
`ஆஞ்ஞையோடு நிற்கும் ஆதார யோகமும் பிறப்பை அறுக்காது` என்பதை ``யோகில் - தருவதோர் சமாதி தானும் தாழ்ந்து பின் சனனம் சாரும்`` என்னும் சித்தியார் மொழியால்2 உணர்க.
நிராதாரம் நாதத் தானமாகவும், துவாசாந்தம் நாதாந்தமாகவும் சொல்லப்படுதல் பற்றியும், அதுவே சிவம் விளங்கும் இடமாதல் பற்றியும் சித்தத்தைத் துவாதசாந்தத்தில் செலுத்தியவரைச் சேக்கிழார், ``நாதாந்தர் - தாரணையால் சிவத்த உரைத்த சித்தத்தார்`` என்றார்.
எனவே அதனையே இவ்வாசிரியர் இங்கு வித்தகத் தானத்து ஒருவழிக் கொண்டு சிவன் திருப்பாத மலர்க்கீழ்ச் சித்தம் வைத்தார்`` என்றார் என்க.
ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல்க; உந்தீபற
விமலற்கு இடம் அது என்று உந்தீபற
என்றே சாத்திரத்திலும் கூறப்பட்டது.
நிராதாரம் - ஏழாம் தானம்.
மீதானம் - துவாதசாந்தம்.
சென்னி மத்தம் வைத்தான் - திருமுடியில் ஊமத்தைப் பூவைச் சூடியிருப்பவன்; சிவன்.

`நிராதார, மீதான யோகங்களே ஞானயோகம்` என்பது உணர்த்துதற்கு அதனையுடைய வர்களை ``வீடுபேறு எய்திய செல்வர்கள்`` என்றார். எனவே, பிற் காலத்துச் சாத்திரங்களில் `சிவயோகிகள்` என குறிக்கப்படுவார் இந்த ஞான யோகிகளே என்பது உணர்க. `சித்தம்` வைத்தாரே வீடுபேறு எய்திய செல்வர்கள் என்பர்` என முடிக்க.

செல்வம் திகழ்திரு வாரூர்
மதில்வட்டத் துட்பிறந்தார்
செல்வன் திருக்கணத் துள்ளவ
ரேயத னால்திகழச்
செல்வம் பெருகுதென் னாரூர்ப்
பிறந்தவர் சேவடியே
செல்வ நெறியுறு வார்க்கணித்
தாய செழுநெறியே.

#1407

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`திருவாரூரில் வந்து பிறப்பவர்கள் முன்பு சிவகணத்துள் இருந்தவர்களே` என்பதும், `அவர்கள் முன்னை யுணர்வு முதிரப்பெற்றுச் சிவனடி சேர்தற்கே அங்கு வந்து பிறக் கின்றனர்` என்பதும் அருளாளர் மரபு. அதனால் அவர்கள் யாவரும் திருத்தொண்டராவர் என்க.
`திருவாரூர்ப் பிறந்தார் யாவரும் சிவ கணத்தவரே` என்பது பெரிய புராணத்துள் நமிநந்தியடிகள் புராணத் துள்ளும் விளக்கப்பட்டது.
`சேவடியே செழுநெறி` என இயைத்து முடிக்க.
செல்வ நெறி திருவருளாகிய செல்வத்தையுடைய நெறி.
அணித்து - அண்மையில் உள்ளது.
மதில் வட்டம் - முதற் காலத்திலே `திருவாரூர்` என வரையறுக்கப்பட்ட எல்லை வட்டம்.
செல்வன் - சிவன்.

நெறிவார் சடையரைத் தீண்டிமுப்
போதும்நீ டாகமத்தின்
அறிவால் வணங்கியர்ச் சிப்பவர்
நம்மையு மாண்டமரர்க்
கிறையாய்முக் கண்ணுமெண் தோளும்
தரித்தீறில் செல்வத்தொடும்
உறைவார் சிவபெரு மாற்குறை
வாய வுலகினிலே.

#1408

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நெறிசடை, வார்சடை` - எனத் தனித் தனி இயைக்க.
நெறி - நெறித்த; நெறிப்பில்லாத - தலைமயிர் `கோரை மயிர்` என இகழப்பட்டும் வார் - நீண்ட ``சடையர்`` என்றது, திருக்கோயிலில் எழுந்தருளிருப்பவரையே என உணர்க.
முப்போது - மூன்று காலம்; காலை, பகல் இரவு என்பன.
காலைக்குமுன் வைகறையும், பிற் பகலாகிய அந்தியும், இரவுக்குமுன் மாலையும் வேறுபடுத்துக்கூறி, `காலம் ஆறு` எனப்படும்.
``தீண்டி`` என விதந்து ஓதினமையால் தீண்டும் உரிமை சிலர்க்கே உரித்தாதல் பெறப்பட்டு இவ்வுரிமை யுடையாரைச் சேக்கிழார் ``முதற் சைவர்`` எனவும், ``சிவ வேதியர்`` என்றும் குறித்தருளினார்.
1 இவர்களை யுள்ளிட்ட திருத்தொண்டர் களைத் தொகுத்தோதியருளிய சுந்தரமூர்த்தி நாயனாரும் இவ்வாசிரியரும் அம்மரபினரேயாவர்.
ஆகமம், சைவாகமம்.
அர்ச்சிப்பவர் - வழிபடுபவர்.
`முப்போதும் சடையாரைத் தீண்டி அர்ச்சிப்பவர்` என்க.
``நம்மையும் ஆண்டு`` என்றதனால், அவரது ஆசிரியத் தன்மை குறிக்கப்பட்டது.
முதற் சைவர்கள் தந்தை, மகன், பெயரன் என இவ்வாறு குடி வழியானே ஆசிரியராய் இருத்தலால் அவரவரும் தம் தம் மக்கட்குத் தாமே ஆசிரியராயும் விளங்குவர்.
ஏனையோர்க்கு அவர் ஆசிரியராதல் சொல்ல வேண்டா.
இங்கு ``அமரர்`` என்றது இந்திரன், அயன், மால் உலகத்து உள்ளாரையும், வித்தியசேசுர, மகேசுர உலகத்து உள்ளாரையும்.
மால் உலகத்தவர் ஈறாயினார்க்கு இறைவராதல் உருத்திர புவனங்களில் இருந்தும், ஏனையிருவர்க்கும் இறைவராதல் சுத்த வித்தியா தத்துவ ஈசுர தத்துவ புவனங்களில் இருந்துமாகும்.
ஈசுர தத்துவ புவனத்தில் தலைவ ராயினார் `மந்திர மகேசுரர்` எனப்படுவர்.
எனவே, உருத்திர புவனங்களையும் இங்கு, ``சிவபெருமாற்கு உறைவாய உலகம்`` என்றல் உபசாரமாம்.
இங்ஙனம் வேறுபட்ட உலகத்திற் சென்று இறைவராதல் அவரவர் பத்தி நிலை வேறுபாட்டினாலாம்.
``இறை`` என்றது பன்மையொருமை மயக்கம்.
இவர்கள் சிவலோகத்தில் முக்கண், எண்தோள் முதலாகச் சிவபெருமானது உருவத்தைப் பெறுதல், கிரியையில் யோகமாகிய

அகவழிபாட்டில் சிவோகம் பாவனையை மிகச் செய்தலினாலேயாம்.
தில்லைவாழ் அந்தணருட் சிறந்தார் சிலரும் சிவசாரூபிகளாய்
நின்றமையைத் திருஞானசம்பந்தர் அவரது புராணத்தால் உணர்க.
ஈறு இல் செல்வம் - தாம் வீடு பெற்ற பின்பும் நீங்காது
இருந்தாங்கிருக்கும் செல்வம்.
இவை சுத்த தத்துவ புவனப் பொருள்களாம்.
ஆகவே, இவற்றைப் புசிக்கும் போகமும் சுத்த போகமேயாம்

உலகு கலங்கினும் மூழி திரியினு முள்ளொருகால்
விலகுத லில்லா விதியது
பெற்றநல வித்தகர்காண்
அலகில் பெருங்குணத் தாரூ
ரமர்ந்த வரனடிக்கீழ்
இலகுவெண் ணீறுதம் மேனிக்
கணியு மிறைவர்களே.

#1409

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``முழு நீறு`` என்பதில் முழுமையை இலக்கண நிறைவு, உடல் நிறைவு
இரண்டுமாகக் கொள்க.
இவ் இரு பொருளும் இப்பாட்டில் ``இங்கு`` என்பதனாலும்,
``மேனிக்கு`` என்பதனாலும் குறிக்கப்பட்டன.
திரிதல் - மாறி வருதல்.
விலகுதல் - கைவிட்டு நீங்குதல்.
வித்தகர் - திறல் உடையார்.
காண், முன்னிலையசை.
அலகு இல் பெருங்குணம், இறைமைக் குணம்.
`குணத்து அரன்` என்க.
``ஆரூர் அமர்ந்த அரன்`` என்றது எங்கும் உள்ளவனை ஓரிடத்தில்
வைத்துக் கூறியவாறு.
`அரன் அடிக்கீழ் நின்று` என ஒரு சொல் வருவிக்க.
இறைவர்கள், கட்புலன் ஆகும் இறைவர்கள்.
``நடமாடக் கோயில் நம்பர்`` *1* எனத் திருமுறையிலும், `பராவு சிவர்``
எனச் சாத்திரத்திலும் *2* சொல்லப்பட்டன.

வருக்க மடைத்துநன் னாவலூர்
மன்னவன் வண்டமிழால்
பெருக்கு மதுரத் தொகையிற்
பிறைசூடி பெய்கழற்கே

ஒருக்கு மனத்தொடப் பாலடிச்
சார்ந்தவ ரென்றுலகில்
தெரிக்கு மவர்சிவன் பல்கணத்
தோர்நஞ் செழுந்தவரே.

#1410

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``வருக்கம் அடைத்து`` என்பதை, ``மதுரத் தொகை யில்`` என்பதன் பின்னர்க் கூட்டுக.
வருக்கம் - இனம்; அடியார் இனம் ``அடைத்து`` என்பதை `அடைக்க` எனத் திரித்து, ``அப்பால்`` என்பதை அதன்பின்னர்க் கூட்டுக.
அடைத்தல் - நிரப்புதல்.
அப்பால் இடத்திற்கு அப்பாலும், காலத்திற்கு அப்பாலும்.
இவற்றுள் காலத்திற்கு அப்பாலாவன முன்னும், பின்னும்.
திருத்தொண்டத் தொகையில் சொல்லப்பட்ட அடியார்கள் வாழ்ந்த இடம் தமிழ் நாடே.
காலங்கள் பலவாயினும் அவைகளை ஒருங்கு இணைத்து நோக்கினால் அவை ஒரு கட்டமாய் அமையும்.
`இவ்வாறு உள்ள இடம், காலங்களில்` வாழ்ந்த, வாழும் அடியார்களை யான் அறியேனாயினும் அவர் கட்கும், அவர்தம் அடியார்க்கும் யான் அடியேன்` என நாவலூர் நம்பிகள் அருளிச் செய்தார்.
எனவே அவ்விடம், காலங்களில் முன்பு வாழ்ந்தவர்களுள்ளும், இனி வந்து வாழ்பவர்களுள்ளும் வேத சிவாகமங்களை உணர்ந்தும், உணர்ந்து ஒவுகுவோரைப் பின்பற்றியும் பிறை சூடிதன் பெய் கழற்கே ஒருக்கு மனத்தொடு அவ்வடிக்கே சார்ந்தாரும் திருத்தொண்டராதல் பெறப்பட்டது.
எனவே, ``அப்பாலும் அடிச் சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்`` என நம்பியாரூரர் அருளிச் செய்தது திருத்தொண்டத் தொகைக்குப் புறனடையாயிற்று.
பலவகைப் புறனடைகளில் இஃது ஒழிபாய புனடையாம்.
இவ்வாறு கூறுதல் ``அறியாது உடம்படல்`` என்னும் உத்திவகை.
அஃதாவது ஒரு பொருளைத் தான் சிறப்பு வகையால் அறியாவிடினும் பொதுவகையால் அறிந்த மாத்திரத்தானே அதனை உடம்பட்டுக் கொள்ளுதல் தெரிக்கும் - தெரிக்கப்படும்.
கணம் - குழாம்.
பல்கணம், இனத்தாலும் வாழ்க்கை நெறியாலும் வேறுபட்ட பல குழாத்தினர் எனினும் சிவபெருமானுக்குத் தொண்டுபட்ட வகையில் ஓர்

இனத்தவராயினோர்.
`பல்கணத்தவராகிய செழுந்தவர்` என்க.

செழுநீர் வயல்முது குன்றினில்
செந்தமிழ் பாடிவெய்ய
மழுநீள் தடக்கைய னீந்தபொன்
னாங்குக்கொள் ளாதுவந்தப்
பொழில்நீ டருதிரு வாரூரில்
வாசியும் பொன்னுங்கொண்டோன்
கெழுநீள் புகழ்த்திரு வாரூர
னென்றுநாம் கேட்பதுவே.

#1411

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டின் பொருளைப் பெரிய புராணத்தில் ஏயர்கோன் கலிக்காமப் புராணத்துட் போந்த சுந்தரர் வரலாற்றால் அறிக.
இதனுள், ``என்று`` என்னும் இடைச் சொல், `என்பது` எனப் பெயர்ப்பொருள் தந்தது.
அன்றி, `நாம் கேட்பது ஒன்று` என ஒரு சொல்வருவித்து முடித்தலும் ஆம்.

பதுமநற் போதன்ன பாதத்
தரற்கொரு கோயிலையான்
கதுமெனச் செய்குவ தென்றுகொலா
லாமென்று கண்துயிலா
ததுமனத் தேயெல்லி தோறும்
நினைந்தருள் பெற்றதென்பர்
புதுமணத் தென்றல் உலாநின்ற
வூர்தனிற் பூசலையே.

#1412

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கதுமென - விரைவாக, எல்லி - இருள்.
இரவு உறங்காமை கூறவே, பகல் உறங்காமை சொல்ல வேண்டவாயிற்று.
`அருள்பெற்ற நினைந்து` என மாற்றிக் கொள்க.
எழுவாய் தொழிற்பெயராய வழி பயனிலை வினையெச்சமாய் வருதல் உண்டு.

என்பர் - என்று புகழ்வர்.

பூச லயில்தென்ன னார்க்கன
லாகப் பொறாமையினால்
வாச மலர்க்குழல் பாண்டிமா
தேவியாம் மானிகண்டீர்
தேசம் விளங்கத் தமிழா
கரர்க்கறி வித்தவரால்
நாசம் விளைத்தா ளருகந்
தருக்குத்தென் னாட்டகத்தே. **#1413**

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பூசல் அயில் தென்னனார் - போரை வெல்லும் வேற்படையையுடைய பாண்டியர்.
``தென்னவனார்`` எனக் குடிப் பெயர் ஈற்று `அன்`னின் முன்னும், `ஆர்` விகுதி வந்தது.
அனல் - சமணர் திருஞானசம்பந்தரது திருமடத்தில் இட்டது.
ஆக - வந்து பற்ற.
`அவர் (பாண்டியர்) பொறாமையினால்` என்க.
``கண்டீர்`` என்னும் முன்னிலை அசையை, ``நாசம் விளைத்தாள்`` என்பதன் பின்னர்க் கூட்டி முடிக்க.
தமிழாகரர் - திருஞானசம்பந்தர்.

நாட்டமிட்ட டன்ரி வந்திப்ப
வெல்படை நல்கினர்தந்
தாட்டரிக் கப்பெற் றவனென்பர்
சைவத் தவரரையில்
கூட்டுமக் கப்படம் கோவணம்
நெய்து கொடுத்துநன்மை
ஈட்டுமக் காம்பீலிச் சாலிய
நேசனை இம்மையிலே.
#1414

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நாட்டம் - கண்.
இட்டு - மலராக இட்டு - அரி - திருமால்.
வந்திப்ப - வழிபட.
வெல்படை, இங்குச் சக்கரம்.

தாள் தரிக்கப்பெற்றவன் - திருவடியைத் தலையிலே சூட்டிக் கொள்ளப் பெற்றவன்.
சைவத்தர் - சைவ சந்நியாசிகள்.
அக்கம் + படம் = அக்கப்படம்.
அக்கம் - கண்.
படம் - துணி.
அக்கப்படம் - கண் போலக் காக்கும் துணி; என்றது கிழியினை.
நன்மையாவது சிவபுண்ணியம்.
காம்பீலி நகரம்.
`நேசனை.
`இம்மையில் தாள் தரிக்கப் பெற்றவன்` என்பர் எனக் கூட்டுக.
`மறுமையில் அடையற்பாலதாகிய சிவனடி நிழலை இம்மையிலே அடைந்தவன்` என்றபடி.

மைவைத்த கண்டன் நெறியன்றி
மற்றோர் நெறிகருதாத்
தெய்வக் குடிச்சோழன் முன்பு
சிலந்தியாய்ப் பந்தர்செய்து
சைவத் துருவெய்தி வந்து
தரணிநீ டாலயங்கள்
செய்வித்த வந்திருக் கோச்செங்க
ணானென்னுஞ் செம்பியனே.

#1415

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மற்றோர் நெறி கருதாத் தெய்வக் குடியில் பிறந்த சோழன்` என்க.
`சோழன்` என்பது குடிப்பெயர் ஆதலின் ``தெய்வக் குடி`` என்றது அக்குடியையேயாதல் தெளிவு.
முன்பு - முற்பிறப்பு.
பந்தர் செய்தது, வாய் நூலால் திருவானைக்காவல் இறைவற்கு.
எய்தி- வந்து.
சைவத்து உரு எய்தி - சைவ சமயியாய்ப் பிறந்து.
தரணி, சோழ நாடு.
நீடு ஆலயங்கள் - உயர்ந்த மாடக் கோயில்கள்.
செம்பியன் - சோழன்.
இந் நாயனார் சிவபெருமான் அருளால் தமது முற்பிறப்பின் நிலையை அறிந்திருந்தார்.

செம்பொ னணிந்துசிற் றம்பலத்

தைச்சிவ லோகமெய்தி
நம்பன் கழற்கீ ழிருந்தோன்
குலமுத லென்பர்நல்ல
வம்பு மலர்த்தில்லை யீசனைச்
சூழ மறைவளர்த்தான்
நிம்ப நறுந்தொங்கல் கோச்செங்க
ணானென்னும் நித்தனையே.

#1416

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சிற்றம்பலத்தைச் செம்பொன் அணிந்தவன் ஆதித்த சோழன்` என்பதை மேலே *1* கூறினார்.

முதல் - மூதாதை.

வம்பு - வாசனை.

மறை வளர்த்தது, தில்லை வாழ்அந்தணர்களுக்கு மாளிகைகளை அமைத்துக் கொடுத்து அவர்களால் வேதத்தை நியமமாக ஓதச் செய்தமையாலாம்.

நிம்ப நறுந்தொங்கல் - வேப்பம்பூ மாலை.

பாண்டியர்க்கு உரிய இதனை இவர்க்குக் கூறியது பாண்டிய நாட்டைப் பற்றினமை பற்றியாம்.

இவர் சேரரை வென்றமை சங்க இலக்கியத்தால் அறியப்படுகின்றது.

பாண்டியரை வென்றதை இதனால் அறிகின்றோம்.

நித்தன் - என்றும் அழியாத புகழ்உடம்பைப் பெற்றவன்.

தனையொப் பருமெருக் கத்தம்
பூலியூர்த் தகும்புகழோன்
நினையொப் பருந்திரு நீலகண்
டப்பெரும் பாணனைநீள்
சினையொப் பலர்பொழில் சண்பையர்
கோன்செந் தமிழொடிசை
புனையப் பரனருள் பெற்றவ
னென்பரிப் பூதலத்தே.

#1417

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நினைய`` என்பதன் இறுதி நிலை தொகுக்கப் பட்டது.

சினை - கிளை.

`சினை ஒப்ப` என்பதில் ``ஒப்ப`` என்பதும் அவ்வாறு நின்றது.
ஒப்ப அலர்தல் - யாவும் ஒன்றுபோல மலர்களைப் பூத்தல்.
சண்பை - சீகாழி.
சண்பையர் கோன், திருஞானசம்பந்தர்.
`அவரது செந்தமிழோடு` என்க.

தலம்விளங் குந்திரு நாவலூர்
தன்னில் சடையனென்னுங்
குலம்விளங் கும்புக ழோனை
யுரைப்பர் குவலயத்தில்
நலம்விளங் கும்படி நாம்விளங்
கும்படி நற்றவத்தின்
பலம்விளங் கும்படி யாரூ
ரனைமுன் பயந்தமையே.

#1418

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முதற்கண் உள்ள ``விளங்கும்`` என்னும் பெய ரெச்சம், ``திருநாவலூர்`` என்னும் ஏதுபெயர் கொண்டது.
உரைப்பர் - புகழ்வர்.
ஆரூரன், நம்பியாரூரன்.
சுந்தர மூர்த்தி நாயனார்.
`பயந்தமை சொல்லி` என ஒருசொல் வருவித்து, ``உரைப்பர்`` என்பதனோடு முடிக்க.
குவலயம் - நில வட்டம்.
அதன் நலமாவது, முற்செய்தவத்தோரும் அதன் பயனைப் பெற நிற்பது.
``நாம்`` என்றது தம்மையும் உளப்படுத்துச் சிவனடியார்களை.
பலம் - பயன்.
நற்றவத்தின் பயன் அடியார் பெருமையை அறிதல்.
அதனை அறிதலானே மக்கள் மக்களாய் விளங்குவர் ஆதலின் அது பற்றியே ``நாம் விளங்குபடி`` என்றார்.
``இவையெல்லாம் நம்பியாரூரர் திருநாவலூரில் சடையனார் பால் அவதரித்துத் திருத்தொண்டத் தொகையை அருளிச்செய்தமை யாலே` என்றபடி.

பயந்தாள் கறுவுடைச் செங்கண்வெள்
ளைப்பொள்ளல் நீள்பனைக்கைக்
கயந்தா னுகைத்தநற் காளையை
யென்றுங் கபாலங்கைக்கொண்

டயந்தான் புகுமர னாரூர்ப்
புனிதன் அரன்திருத்தாள்
நயந்தாள் தனதுள்ளத் தென்று
முரைப்பது ஞானியையே.

#1419

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வெள்ளைக் கயந்தான் உகைத்த நற் காளையைப் பயந்தாள்` என்றும், `அரன் புனிதனவன் திருத்தாள் தனது உள்ளத்து நயந்தாள் என்றும் (அறிந்தோர்) உரைப்பது ஞானியையே - எனக் கூட்டி முடிக்க.
கறுவி - பிறர் செய்த தீமையை மறவாது உட் கொண்டிருத்தல்; இஃது இன அடை.
பொள்ளல் - புழை.
கயம் - யானை.
உகைத்தது - ஊர்ந்தது ``யானையை `காளை` என்றல் சுந்தரர்க்கு ஏற்புடையதே.
அவர் வெள்ளை யானையை ஊர்ந்த காளை`` என்றது நயம்.
ஊர்ந்தது கயிலை செல்லுங்கால்.
ஐயம், `அயம்` எனப் போலியாயிற்று.
ஐயம் - பிச்சை.
``அவன்``, பகுதிப் பொருள் விகுதி.
உரைத்தற்கு வினைமுதல் வருவித்துக் கொள்க.
உரைப்பது, தொழிற் பெயர்.
`உரைப்பது தெளிவு` எனப் பயனிலையை வருவித்துக் கொள்க.
தொழிற்பெயர் எழுவாயாய் நிற்குமிடத்துப் பயனிலையை இவ்வாறு சொல்லெச்சமாக வைத்துப் போதல் ஒரு நடை.
இசை ஞானியை `ஞானி` எனச் சுருங்கச் கூறினார்.
`இவரது (`இசைஞானியாரது) பிறந்தகம் திருவாரூர் ஆதல் வேண்டும்` என ஆராய்ச்சியாளர் கருதுவர்.
இங்கு, ``ஆரூர்ப் புனிதனவன் திருத்தாள் தனது உள்ளத்து நயந்தாள்`` எனக் கூறி யிருப்பது அக்கருத்திற்கு அரண் செய்வதாய் உள்ளது.
இன்னும் அக் கூற்றினாலே, `ஆரூர்ப் பெருமானை நோக்கி இவர் செய்த தவத்தானே திருக்கயிலையில் இந்த ஆலால சுந்தரரைத் தமக்கு மகனாகப் பெறும் பேற்றைப் பெற்றார்` எனவும், அதனானே அந்த ஆரூர்ப் பெருமான் பெயரே இவருக்குப் பெயராக இடப்பட்டது` எனவும் கருத இடம் உண்டு.

ஞானவா ரூரரைச் சேரரை

யல்லது நாமறியோம்
மானவ வாக்கை யொடும்புக்
கவரை வளரொளிப்பூண்
வானவ ராலும் மருவற்
கரிய வடகயிலைக்
கோனவன் கோயில் பெருந்தவத்
தோர்தங்கள் கூட்டத்திலே.

#1420

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மாலை யாக்கையொடும் புக்கவரை`` என்பதை முன்னே கூட்டி, அதனோடும் முதல் அடியை ஈற்றிற் கூட்டுக.
``புக்கவர்`` என்றதும் பின்வரும் இருவரையே ``வடகயிலை`` எனப் பின்னர் வருதலின் வாளா, ``புக்கவரை`` என்றார்.
மானவ யாக்கை - உடல்.
மனித உடலை நீக்காமலே கயிலை அடைந்தவர்கள் சுந்தரரும், சேரமான் பெருமாள் நாயனாரும் தவிரப் பிறர் ஒருவரும் சொல்லப்படவில்லை.
கயிலையை அடைந்த பின்னர் அவர்களது உடம்பு வேற்றியல்பைப் பெற்றிருக்கலாம்.
இது, களையா உடலொடு சேரமான், ஆரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேல்கொள்ள *1* என ஒன்பதாம் திருமுறையிலும் எடுத்தோதப்பட்டது.
இனிச் சண்டேசுர நாயனாரைச் சேக்கிழார்,
அந்த உடம்பு தன்னுடனே
அரனார் மகனா ராயினார்
எனக் கூறியது,
செங்கண் விடையார் திருமலர்க்கை
தீண்டப் பெற்ற சிறுவனார்
அங்கண் மாயை யாக்கையின்மேல்
அளவின் றுயர்ந்த சிவமயமாய்
எனச் சிவபெருமான் செய்த பரிச தீக்கையால் என்பதை விளக்கினார்.
சேரரும், ஆரூரரும் அது செய்யப்படவில்லை.
``பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை`` என்பதிற் போல, அறிதல், இங்கு நன்கு மதித்தல்.

கூட்டமொன் பானொ டறுபத்து
மூன்று தனிப்பெயரா

ஈட்டும் பெருந்தவத்தோரெழு
பத்திரண் டாம்வினையை
வாட்டுந் தவத்திருத் தொண்டத்
தொகைபதி னொன்றின்வகைப்
பாட்டுந் திகழ்திரு நாவலூ
ராளி பணித்தனனே.

#1421

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கூட்டம் - தொகை.
எனவே, `திருத்தொண்டத் தொகையிற் சொல்லப்பட்ட நாயன்மார்களில் ஒன்பதின்மர் தொகை யடியார்கள்` எனவும் கூறியதாயிற்று.
`பதினொன்று` என்றது பாடல் தொகை.
எனவே, `பாட்டுப் பதினொன்றின் வகை, ஒன்பானொடு, தனிப்பெயர் எழுபத்திரண்டாப் பணித்தனன்` என்பது கொண்டு கூட்டாயிற்று.
``வினையை`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.
``பாட்டும்`` என்னும் உம்மும், மேற்போந்த ஒன்பது, அறுபத்தொன் றாய்ப் பாகுபட்டமையைத் தழுவிற்று.

பணித்தநல் தொண்டத் தொகைமுதல்
தில்லை யிலைமலிந்த
அணித்திகழ் மும்மை திருநின்ற
வம்பறா வார்கொண்டசீர்
இணைத்தநல் பொய்யடி மைகறைக்
கண்டன் கடல்சூழ்ந்தபின்
மணித்திகழ் சொற்பத்தர் மன்னிய
சீர்மறை நாவனொடே.

#1422

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``அணிதிகழ், சீர் இணைத்தல், பின் மணித்திகழ் சொல் - இவை செய்யுள் நோக்கி அடைமொழிகளாய் வந்தன.
இதனுள் பதினொரு முதல் நினைப்புக்கள் கூறப்பட்டமை காண்க.
இப் பாட்டுத் திருத்தொண்டத் தொகையை மனப்பாடம் செய்து சொல்வார்க்குப் பயன் தரும்.
``அணித்திகழ்`` என்பதில் தகர ஒற்று விரித்தல் மணித்திகழ் - மணிபோலத் திகழ்கின்ற.

ஓடிடும் பஞ்சேந் திரிய
மொடுக்கியென் னூழ்வினைகள்
வாடிடும் வண்ணம்நின் றெத்தவம்
செய்தனன் வானினுள்ளோர்
சூடிடுஞ் சீர்த்திருப் பாதத்தர்
தொண்டத் தொகையினுள்ள
சேடர்தஞ் செல்வப் பெரும்புக
ழந்தாதி செப்பிடவே.

#1423

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``எத்தவம் செய்தனன்`` என்பதற்கு, `யான்` என்னும் தோன்றா எழுவாய் வருவிக்க.

சேடர் - பெருமையுடையவர்.

இப் பாட்டே இவ்வந்தாதியின் முதற் செய்யுள் முதற் சொல்லால் முடிந்தமை யின் ஈற்று மூன்று பாடல்களுங்கூட ஆசிரியர் அருளிச் செய்தனவே என்க.

திருத்தொண்டர் திருவந்தாதி முற்றிற்று.

நம்பியாண்டார் நம்பிகள் - ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி

பார்மண் டலத்தினிற் பன்னிரு
பேரொடு மன்னிநின்ற
நீர்மண் டலப்படப் பைப்பிர
மாபுரம் நீறணிந்த
கார்மண் டலக்கண்டத் தெண்தடந்
தோளான் கருணைபெற்ற
தார்மண் டலமணி சம்பந்தன்
மேவிய தண்பதியே.

#1424

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஆளுடைய பிள்ளையார், திருஞானசம்பந்தர்.
பார் மண்டலம் - நிலவட்டம்.
சீகாழியின் பன்னிரு பெயர்களாவன, பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சை, கழுமலம்` என்பன.
இவைகளைத் திருஞானசம்பந்தர் திருப்பதிகங்களால் அறிக.
படப்பை - தோட்டம்.
கார் மண்டலக் கண்டம் - கறுத்த வட்டத்தையுடைய கழுத்து.
தார் மண்டலம் - மார்பிலணியும் மாலை வட்டம்.
மேவிய - அவதரித்த.
பதி - நகரம் எண்தோளன் கருணை பெற்ற சம்பந்தன் மேவிய தண்பதி பிரமபுரம்` என முடிக்க.
எண்தோளன் - சிவபெருமான்.

பதிகப் பெருவழி காட்டிப்
பருப்பதக் கோன்பயந்த
மதியத் திருநுதல் பங்க
னருள்பெற வைத்தஎங்கள்
நிதியைப் பிரமா புரநகர்
மன்னனை யென்னுடைய
கதியைக் கருதவல் லோரம
ராவதி காவலரே.

#1425

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பெருவழி, பல சிறுவழிகள் வந்து (குறுகிய தூர வழிகள்) வந்து சேரும் நெருந்தூர வழி சமயத் துறையில் பெருவழி, சைவம் பிற சமயங்கள் யாவும் அதனுள் அடங்கும்.

ஓதுசமயங்கள், பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோ டொன்று ஒவ்வாமல் உளபலவும்;
யாது சமயம்? பொருள்மூள் யாது இங்கு? என்னில்,
இவற்றுள்
`இது ஆகும்; இது அல்லது; எனும் பிணக்கது இன்றி,
நீதியினால் இவையாவும் ஓரிடத்தே காண
நின்றது யாது, அதுசமயம், பொருள் நூல்;
ஆதலினால் இவையிரண்டும் அருமறை, ஆகமத்தே
அடங்கியிடும்; இவையிரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்.

என்னும் சிவஞான சித்தியைக் காண்க.
பதிகப் பெருவழி - பதிகமாகிய பெருவழி.
வழிகாட்டும் கருவியை, ``வழி`` என்றது கருவியாகு பெயர்.
மதியத் திரு நுதல் - பிறைபோலும் அழகிய நெற்றியை உடைய மகள்.
``பங்கனது அருளை நாங்கள் பெற வைத்த (பெறுதற்கு வாய்ப்பு அளித்த) நிதி`` என்க.
நிதி, உருவகம்.
கதி - சென்று அடையும் இடம்.
அமராவதி - தேவேந்திரன் நகர்.
`அதைக் காப்பவர்`, என்றது, `இந்திரன் ஆவர்` என்றபடி.

காப்பயில் காழிக் கவுணியர்
தீபற்கென் காரணமா
மாப்பழி வாரா வகையிருப்
பேன்என்ன, மாரனென்னே!
பூப்பயில் வாளிக ளஞ்சுமென்
நெஞ்சுரங் கப்புகுந்த;
வேப்பயில் வார்சிலை கால்வளை
யாநிற்கும் மீண்டிரவே.

#1426

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டுக் கைக்கிளைத் தலைவி காதலால் ஆற்றாது கூறியது.
கா பயில் - சோலைகள் மிகுந்த.

கவுணியர் தீபன் - கவுணிய கோத்தரத்தவர்கட்கு ஒரு விளக்காக வந்தவர், ஞானசம்பந்தர்.
`அவருக்கு, நான் இறந்துபட்டால் பெண் பழி வரும்; அது கூடாது` என்று நான் எவ்வளவோ ஆற்றி யிருந்தாலும் மாரன் வாளிகள் அஞ்சும் என் நெஞ்சு அரங்கம் புகுந்தன; மீண்டும் அவன் இந்த அரவிலே தனது வில்லை வளைக்கின்றான் - என்பதாம்.
``என்னே`` என்பதை இறுதியிற் கூட்டி `நான் என் செய்வேன்` என உரைக்க.
மாப் பழி - பெரும் பழி; பெண் பழி என்ன - என்று நான் கருதியிருக்க.
வாளிகள் - அம்புகள்.
வேப் பயில் சிலை - வெப்பம் மிகுந்த வில்.
கால் - முனைகள்.
`மீண்டும் சிலை கால் விளயாநிற்கும்? என இயைத்து முடிக்க.
இரவு - இரவின்கண்.

இரவும் பகலும்நின் பாதத்
தலரென் வழிமுழுதும்
பரவும் பரிசே யருளுகண்
டாயிந்தப் பாரகத்தே
விரவும் பரமத கோளரி
யே!குட வெள்வளைகள்
தரளஞ் சொரியுங் கடல்புடை
சூழ்ந்த தராய்மன்னனே.

#1427

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``இந்தப் பராகத்தே`` முதலாகத் தொடங்கி உரைக்க, ``பாதத்து`` என்பதில் அத்து, வேண்டா வழிச் சாரியை.
`பாரகத்தே விரவும்` என்க.
பாத அலர், உருவகம்.
வழி - சந்ததி.
விரவும் பரமதம்- பலவாகக் கூடுகின்ற வேற்றுச் சமயங்கள்.
கோளரி - சிங்கம்.
`வேற்றுச் சமயங்களாகிய யானைகட்குச் சிங்கமாய் உள்ளவர்` என்பது பொருள் ஆகலான் இஃது ஏகதேச உருவகம்.
இது `பரசமய கோளரி` என்றும் வரும்.
குடவளைகள் - குடம் போன்ற சங்குகள்.
தரளம் - முதாது.

`பூந்தராய்` என்பதை, ``தராய்`` என்றது தலைக் குறை.

மன்னிய மோகச் சுவையொளி
யூறோசை நாற்றமென்றிப்
பன்னிய ஐந்தின் பதங்கடந்
தோர்க்குந் தொடர்வரிய
பொன்னியல் பாடகம் கிங்கிணிப்
பாத நிழல்புகுவோர்
துன்னிய காஅமர் சண்பையர்
நாதற்குத் தொண்டர்களே.

#1428

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மோகம் - மயக்கம்.
மோக ஐந்து - மயக்கத்தைத்தரும் ஐம்புலன்கள்.
பதம் - அவற்றின் ஆற்றல்.
ஐம்புல ஆற்றலைக் கடந்தோர், `துறவிகள், எல்லா நெறிகளிலும் துறவு நிலை உள்ளது எனினும், ஞானசம்பந்தருக்குத் தொண்டர் ஆகியவர்களே அவர் அடைந்த பேற்றினை அடைவர்` என்பதாம்.
அவர் அடைந்த பேறுசிவ சாயுச்சியம் அதனை,
போதநிலை முடிந்த வழிப்
புக்கு ஒன்றி உடன் ஆனார் *1* என்றதனால் உணர்க.
பாதம், ஞானசம்பந்தருடையன.
அவை சென்றது இறைவர் திருவடி நிழலில்.
பாத நிழல் புகுவோர் - அடியொற்றிச் சொல்பவர்.
துன்னிய கா அமர் சண்பையர் நாதன் - நெருங்கிய சோலைகள் பொருந்திய சீகாழியில் உள்ள அந்தணர் கட்குத் தலைவன்; ஞானசம்பந்தர்.

தொண்டினஞ் சூழச் சுரிகுழ
லார்தம் மனந்தொடர,
வண்டினஞ் சூழ வருமிவன்
போலும், மயிலுகுத்த
கண்டினஞ் சூழ்ந்த வளைபிரம்
போக்கழு வாவுடலம்
விண்டினஞ் சூழக் கழுவின
ஆக்கிய வித்தகனே.

#1429

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, ஞானசம்பந்தரது வீதி யுலாவைக் கண்டாள் ஒருத்தி கூறியது.
தொண்டு இனம் - அடியார் கூட்டம்.
இஃது அவரைச் சூழ்ந்து செல்கின்றது.
அவரைக் கண்ட மகளிரது மனங்களோ அக்கூட்டத்தைப் பின் தொடர்ந்து செல்கின்றன.
அவர் அணிந்துள்ள தாமரை மலரை விரும்பி வண்டுக் கூட்டமும் சூழ்கின்து.
``கண்டினம்`` என்பதை, `கண்+தினம்` எனப் பிரித்து, `மயில் தினம் உகுத்த கண்` என்க.
`கண்` என்பது ஆகுபெயராய் அதற்கு இடமாகி தோகையைக் குறித்ததும் தானியாகுபெயர்.
கண் வளை பிரம்போர் - மயில் தோகைகளை வளைத்துக் கட்டிய பிரம்பை உடைய சமணர்கள், `மயிலைக் கொன்று எடுக்காமல், அது தானாக உகுத்த தோகையைக் கொள்வர்` என்க.
நீராடாமை அவர் நோன்பு ஆகலின், ``கழுவா உடலம்`` என்றார், கழுவின - கழுவில் ஏறியிருப்பன.
``கழுவா உடலம் கழுவின ஆக்கின`` என்றது நயம்.
குருதியால் கழுவப்பட்டது என்க.
இனம் விண்டு சூழ - கழுவில் ஏறினார்க்கு இனமாய் உள்ளவர்கள் கழு மரங்களைச் சூழ்ந்து நிற்க.
வித்தகம் - சதுரப்பாடு உடையவன்.
`வாதில் வென்றவன்` என்றபடி.

வித்தகம் பேசி,நம் வேணுத்
தலைவனை வாள்நிகர்த்து
முத்தகங் காட்டும் முறுவல்நல்
லார்தம் மனம்அணைய,
உய்த்தகம் போந்திருந் துள்ளவும்
இல்லா தனவுமுறு
பொத்தகம் போலும்! முதுமுலைப்
பாணன் புணர்க்கின்றதே.

#1430

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, அகன் ஐந்திணையுள் மருதத் திணைய தாய், வாயில்

வேண்டிய பாணனைக் கழறித் தலைவி வாயில் மறுத்தது.
`பாணன் முது முலை புணர்க்கின்றது, (அவன் பேசுகின்ற) உள்ளவும், இல்லாதனவும் உறும் பொத்தகம் - அவ் இருசொற்களும் பொதிந்து உள்ள புத்தகம்.
தலைவி புதல்வனைப் பெற்றுள்ளாள் ஆகலின் தனது கொங்கைகளை ``முதுமுலை`` என்றாள்.
இங்ஙனம் கூறவே `நம்மை விரும்பாமல் இளையராகிய பரத்தையரைத் தேடி அவர் சேரியில் சென்று இரவெல்லாம் தங்கிவிட்டு, இங்குத் தங்குதல் மாத்திரைக்கு விடியலில் வர விரும்புகின்ற தலைவனை நம் இல்லத்துள் விடுத்தற்கு இப்பாணன் உள்ளதும், இல்லதுமாக ஏதேதோ சொல்லிக் கதைக் கின்றான்` எனத் தலைவி பாணனைக் கழறி வாயில் மறுத்தாளாம்.
``பரத்தையர் சேரியிலும் சென்று இப்படியே அவர்களிடம் பொய்யும், புனைவும் கூறி நம் தலைவனை அவர்கள் இல்லினுட் புகவிடுவதே இவனது தொழில்; அந்த தொழிலை நம் முன்பும் செய்ய வந்திருக்கின்றான்; ஆயினும் அது பலிக்காது`` என்றற்கு, ``பாணன் நம் முலை புணர்க் கின்றது, உள்ளவும், இல்லாதனவும் உறு பொத்தகம் போலும்`` என்றாள்.
புணர்க்கின்றது - புணர்ப்பதற்குக் கூறும் சொல், பொத்தகம் - இவன் கற்ற புத்தகத்தில் உள்ள சொற்கள்; ஆகுபெயர்.
`பாணன் தலைவனை முதுமுலை புணர்க்கின்ற சொல் பொத்தகம் போலும்` என்க.
வேணு - மூங்கில்.
இது முத்துக் களைப் பிறப்பிக்கும்.
`அது போல நம் தலைவன் பரத்தையரது வாய்களில் முத்துப் போலும் பற்களை வெளித்தோன்றி விளங்கச் செய்கின்றான்` என்பாள், ``நம் வேணுத்தலைவனை`` என்றும், `முத்து அகம் காட்டும் முறுவல் நல்லார்`` என்றும் கூறினார்.
வாள் - ஒளி நிகர்ந்து - நிகர்ப்ப; ஒரு படித்தாய் விளங்க.
வேணுத் தலைவன், உவமத் தொகை.
தலைவனை அவர்களது அகத்தில் வித்தகம் பேசி உய்த்து, தானும் போந்து இருந்து, அவர்தம் மனம் தலைவன்பால் அணைதற்குப் பேசுகின்ற` உள்ளவும் இல்லாதனவும் பொருந்திய பொத்தகம் எனக் கொள்க.
``முத்து அகம்`` என்பதில் அகம் - செப்பு.
வாய் இங்ஙனம் உருவகிக்கப்பட்டது.
``காட்டும்`` என்றது, `திறந்து காட்டு` என்றவாறு.

புணர்ந்தநன் மேகச் சிறுநுண்
துளியின் சிறகொதுக்கி
உணர்ந்தனர் போல விருந்தனை
யால்உல கம்பரசும்
குணந்திகழ் ஞானசம் பந்தன்
கொடிமதில் கொச்சையின்வாய்
மணந்தவர் போயின ரோசொல்லு,
வாழி! மடக்குருகே.

#1431

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, தலைவன் பிரிவால் ஆற்றாமை மிக்க தலைவி குருகோடு சொல்லி இரங்கியது இது, ``காமம் மிக்க கழிபடர் கிளவி`` எனப்படும்.
`குருகே! (நீயும்) மேகச் சிறு நுண் துளியில் சிறகை உதறி, ஆற்றியிருந்தவரைப் போல இருந்தனை.
(எனினும் உனது ஆற்றாமை தெரிகின்றது.
) இக்கொச்சையில் (என்னை மணந்தவரைப் போல) உன்னை மணந்தவரும் உன்னைத் தனியே விட்டுப் போயினரோ? சொல்லு` என உரைக்க.
``மேகத் துளியில்`` என்றதனால் அவர் சொல்லிச் சென்ற கார் காலம் வந்தமையைக் குறித்தாள்.
உணர்தல் - இங்கே, மெலியாது ஆற்றியிருத்தல்.
பரசுதல் - துதித்தல்.
குணம், பத்தி நெறிப் பண்பு.
கொச்சை - சீகாழி.
வாய், ஏழன் உருபு.
வாழி, அசை.
மடம் - இளமை.
குருகு - நீர்ப் பறவைப் பொது.

குருந்தலர் முல்லையங் கோவல
ரேற்றின் கொலைமருப்பால்
அருந்திற லாகத் துழுதசெஞ்
சேற்றரு காசனிதன்
பெருந்திற மாமதில் சண்பை
நகரன்ன பேரமைத்தோள்
திருந்திழை ஆர்வம்
. . . . முரசே.

#1432

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(இப்பாட்டின் ஈற்றடி ஏடு சிதலமாகி முழுமையாகக் கிடைக்காமையால் இதன் முழுப் பொருளை அறிதல் அரிதாகின்றது.
) இப்பாட்டு முல்லைத் திணைத் துறையை உடையதாகத் தெரி கின்றது.
ஏறு தழுவள் குறிப்பு உள்ளது.
அருக - அசனி = அருகாசனி; சமணர்கிளாகிய பாம்புகளுக்கு இடிபோன்றவன்; ஞானசம்பந்தர்.
சண்பை நகர் - சீகாழி - அமை - மூங்கில்.

முரசம் கரைய,முன் தோரணம்
நீட, முழுநிதியின்
பரிசங் கொணர்வா னமைகின்
றனர்பலர்; பார்த்தினிநீ
அரிசங் கணைதலென் னாமுன்
கருது, அரு காசனிதன்
சுரிசங் கணைவயல் தந்த
நகரன்ன தூமொழிக்கே.

#1433

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(இப்பாட்டு, தலைவியது நொதுமலர் வரைவு முடுக்கம் கண்டு தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.
) `அங்கு முரசு அறைய` என மாற்றி யுரைக்க.
முன் - தங்கள் வருகையின் முன்னால்.
பரிசம், பெண்ணை மணம் கொள்ளுதற்குத் தரும் விலை.
அமைகின்றனர் - இசைகின்றனர்.
``பலர்`` என்றதனால், `இன்னும் இருமுது குரவர் மகட் கொடை நேர்திலர்` என்பது பெறப் படும்.
``நீ`` என்பதற்கு முன் ``தாயே`` என்பது வருவிக்க.
`சங்கு, மணவினைச் சங்கு` என்பது தோன்றுதற்கு, ``அரி சங்கு`` என்றாள்.
அரி - திருமால்.
அவன் காத்தற் கடவுள் ஆதலின் அவன் சங்கு மங்கலச் சங்காம்.
அணைதல் - அணைக; வியங்கோள்.
என்னாமுன்- என்று இருமுது குரவர் கூறுதற்கு முன்.

அஃதாவது, மணத்திற்கு இசைவதற்கு முன் தூமொழி, தலைவி.
நான்கன் உருபை ஏழன் உருபாகத் திரித்து, `தூமெழிக்கண் நிகழ்ந்துள்ளதை கருது` என ஒரு சொல் வருவித்து முடிக்க.
நிகழ்ந்துள்ளது, தலைவன் ஒருவனோடு களவிற் கூடிய கூட்டம்.
அணை வயல் - நீர் மடைகளை உடைய வயல்.
`வயல் சுரிசங்கினைத் தந்த நகர்` என்க.
`அருகாசனிதன் நகர் அடைதற்கு அரிதாதல் போல இவள் அடைதற்கு அரியள்` என்பாள், ``அருகாசனிதன் நகர் அன்ன தூமொழி`` என்றாள்.

மொழிவது, சைவ சிகாமணி
மூரித் தடவரைத்தோள்
தொழுவது, மற்றவன் தூமலர்ப்
பாதங்கள்; தாமங்கமழ்ந்
தெழுவது, கூந்தல் பூந்தா
மரையினி யாதுகொலோ!
மொழிவது, சேரி முப்புதை
மாதர் முறுவலித்தே.

#1434

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தொழிற் பெயர் எழுவாய்கள் வினைகொண்டு முடியும் உருவுகளைப் பயனிலையாக ஏற்றல் இயல்பாகலின், ``மொழிவது, தொழுவது`` என்னும் தொழிற் பெயர்கள், ``தோளை, பாதங்களை`` என்னும் இரண்டன் உருபோடு முடிந்தன.
இரண்டன் உருபுகள் இங்கு இறுதிக்கண் தொக்கன.
எழுவது என்னும் எழுவாய், ``தாமரை`` என்னும் பெயர்ப் பயனிலை கொண்டு முடிந்தது.
ஈற்றில் நின்ற ``மொழிவது`` என்னும் எழுவாய், ``யாது`` என்னும் வினாப் பயனிலை கொண்டு முடிந்தது.
கொல், ஓ அசைகள்.
மொழிவது - புகழ்வது.
மூரித் தடவரைத் தோள் - பெரிய, அகன்ற மலைபோலும் தோள்கள்.
மற்று, வினைமாற்று.
தாமம் - மாலை.
`தாமமாய்` என ஆக்கம் வருவிக்க.
அகரச் சுட்டு `அவன் அணிந்த` எனப் பொருள் தந்தது.
முரி - மாறுபாடு.
புதைத்தல் - மறைத்தல் `சேரி மாதர்` என இயையும்.

முறுவலித்து - தமக்குள் எள்ளி நகையாடி.
`நாம் விரும்பிப் புகழ்வது சைவ சிகாமணி தோள்களையும், தொழுவது அவனது பாதங்களையும், கூந்தலில் மணங்கமழ அணிவது அவனது நினைவாக அவனுக்கு அடையாளமாகிய தாமரை மலர்மாலையுமாக ஆய்விட்டபொழுது சேரிப் பெண்டிர் நம்மை நகைத்துப் பேசுவதற்கு என்ன கிடக்கின்றது` என்பது இதன் திரண்ட பொருள்.
இப்பாட்டு, தன்னைத் தூதுவிடக் கருதிய கைக்கிளைத் தலைவிக்கு, ``இஃது அம்பல் அலராதற்கு ஏதுவாய்விடும்`` வன்புறை கூறியது.

வலிகெழு குண்டர்க்கு வைகைக்
கரையன்று வான்கொடுத்த
கலிகெழு திண்தோள் கவுணியர்
தீபன், கடலுடுத்த
ஒலிதரு நீர்வை யகத்தை
யுறையிட்ட தொத்துதிரு
மலிதரு வார்பனி யாம்,மட
மாதினை வாட்டுவதே.

#1435

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, ஒருவழித் தணந்து வந்த தலைமகனைத் தோழி குறியிடத்தில் நேர்ந்து வரைவு கடாயது.
`மாதினை வாட்டுவது வார்பனியாம்` என முடிக்க.
`உன்னைப் புல்லிக் கிடத்தலால் தலைவிக்கு மிக இனிதாதற்கு உரிய பனிக்காலம், நீ தணந்தமையால் மிக இன்னதாயிற்று` என்றபடி.
இதன் பயன் தலைவன் தலைவியை வரைந்தெய்து வானாதல்,
`கவுணியர் தீபன் (தனது திருவருள் வலியால்) வையகத்தை உறையிட்டது.
(மூடி மறைத்தது) ஒத்து உதிரும் பனி` என்க.
`வைகைக் கரையில்` என ஏழாவது விரிக்க.
கலி - ஆரவாரம்; புகழ் ஆரவாரம்.
கெழு - பொருந்திய.
`உதிரும் பனி, மலிதரு பனி, வார் பனி` எனத் தனித்தனி முடிக்க.
வார்தல் - ஒழுகுதல்.
`சில வேளை உதிர்ந்தும், சில வேளை ஒழுகியும் விழும் பனி` என்றபடி.
குறிஞ்சித் திணைக்கு முன்பனிக் காலமாகிய பெரும்பொழுது உரித்தாக ஓதப்பட்டமை நினைக.

வாட்டுவர் தத்தந் துயரை;வன்

கேழலின் பின்புசென்ற
வேட்டுவர் கோலத்து வேதத்
தலைவனை மெல்விரலால்,
தோட்டியல் காத னிவனென்று
தாதைக்குச் சூழ்விசும்பில்
காட்டிய கன்றின் கழல்திற
மானவை கற்றவரே.
#1436
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதன் பொருள் வெளிப்படை.
வன் கேழல் - காட்டுப் பன்றி.
சிவபெருமான் பன்றிப்பின் சென்றது.
அருச்சுனனுக்காக.
``கழல் திறம்`` என்று, `திருவருள் ஆற்றல்` என்றபடி.
ஆற்றல், அதனால் விளைந்த அற்புதங்களைக் குறித்து.
``கற்றவர்`` என்பது, கேட்டவர், பயின்றவர் ஆகியோரையும் தழுவி நின்ற உபலக்கணம்.
``கன்று`` என்றது குறிப்புருவகம் ஆதலின், `யானைக் கன்று` எனக் காதற் சொல்லாயிற்று.

அவர்சென் றணுகுவர்; மீள்வதிங்கு
அன்னை யருகர்தம்மைத்
தவர்கின்ற தண்டமிழ்ச் சைவ
சிகாமணி சண்பையென்னப்
பவர்கின்ற நீள்கொடிக் கோபுரம்
பல்கதி ரோன்பரியைக்
கவர்கின்ற சூலத் தொடுநின்று
தோன்றுங் கடிநகரே.
#1437
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, உடன்போக்கால் பிரிந்த தலைவியைத் தேடிப் பின் சென்ற செவிலிக்கு, முன் சென்ற வரைக்கண்டோர் கூறியது.
`அன்னை! அவர் சென்று கடிநகர் அணுகுவர்; (ஆகவே, நீ இனிச் செய்யத்தக்கது) மீள்வதே` என இயைத்து முடிக்க.
அவர் - தலைவன்.

தலைவியர் `தவல்விக்கின்ற` என்பது இவ்விகுதி தொகுக்கப்பட்டு, ஏதுகை நோக்கி லகரம் ரகரமாய்த் திரிந்து நின்றது.
தவல்வித்தல் - அழித்தல்.
`சண்பை என்னக் கோபுரம் சூலத் தொடு தோன்றும் கடி நகர் என்க.
கடி - காவல்.
இந்நகர் தலைவன் உடையது.
பவர்தல் - படர்தல்.
`கொடி` என்னும் பெயர் ஒருமை பற்றி, ``படர்கின்ற`` என்றார்.
பல் கதிரோன் - சூரியன்.
`அவனது தேர்க் குதிரைகளைச் சூலம் தனது உயர்ச்சியால் கவர்கின்றது` என்பதாம்.
கவர்தல், இங்கே தடுத்தல்.

நகரங் கெடப்பண்டு திண்தேர்
மிசைநின்று, நான்மறைகள்
பகரங் கழலவ னைப்பதி
னாறா யிரம்பதிகம்
மகரங் கிளர்கடல் வையம்
துயர்கெட வாய்மொழிந்த
நிகரங் கிலிகலிக் காழிப்
பிரானென்பர், நீணிலத்தே.

#1438

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நகரம், திரிபுரங்கள்.
``நின்று`` என்னும் செய்தென் எச்சம் எண்ணின்கண் வந்தது.
எனவே, `ஒரு காலத்தில் நான்மறை களைப் பகர்ந்தவனும், அழகிய கழல்களை உடையவனும் ஆகிய அவனை மொழிந்த நிகர் இலி` என்பது பொருளாயிற்று.
ஒரு காலத்தில் நான்மறை பகர்ந்தது, படைப்புக் காலத்தில் ஆல்நிழலில்
``அவனை`` என்பதை, `அவன்மேல்` எனத் திரித்துக் கொள்க.
``வாய்`` என்ற வேண்டாக் கூற்று, `ஞானப் பால் உண்ட` என்னும் சிறப்பினைத் தோற்றுவித்தது.
மகரம் - சுறாமீன்.
அங்கு, அசை.
நிகர்இலி - தனக்கு நிகராவார் ஒருவரையும் இல்லாதவன்.
கலிக் காழி - ஆரவாரம் மிக்க சீகாழி.
`அம் கழலவனைப் பதினாறாயிரப் பதிகம் வாய் மொழிந்த நிகர்

இலியாவான் காழிப் பிரான் என்பர்` என முடிக்க.
``நீள் நிலத்து`` என்றது.
`நிலத்துள்ளார் யாவரும்` என்பது தோன்றுதற்கு.

நிலம் ஏறியமருப் பின்திரு
மாலும், நிலம்படைத்த
குலம் ஏறியமலர்க் கோகனை
தத்தய னுங்கொழிக்குஞ்
சலம் ஏறியமுடி தாள்கண்
டிலர்,தந்தை காணவன்று
நலம் ஏறியபுகழ்ச் சம்பந்தன்
காட்டிய நாதனையே.

#1439

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நிலம் ஏறிய மருப்பின் திருமால் - வராக அவதாரத்தில் பூமி ஏறி நின்ற கொம்பினை உடைய மாயோன்.
குலம் ஏறிய - சிறப்பு மிகுந்த.
கோகனம் - தாமரை.
அது `கோகனதம்` என்றும் மருவி வரும்.
சலம் - கங்கை.
`முடியும், தாளும் கண்டிலர்` என்க.
இவையிரண்டும் ``திருமாலும், அயனும்`` என்பவற்றோடு எதிர்நிரல் நிறையாய் இயைந்தன.
சம்பந்தன் அன்று தந்தை
காணக் காட்டிய நாதனைத்
திருமாலும், அயனும் தாள்,
முடி கண்டிலர்.
என இயைத்து முடிக்க.
``நாதனைத் தாள் முடி கண்டிலர்`` என்பதில், ``யானையைக் கோட்டைக் குறைத்தான்`` என்பது போலச் சிறுபான்மை முதல், சினை இரண்டிலும் இரண்டன் உருபு வந்தது.

நாதன் நனிபள்ளி சூழ்நகர்
கானக மாக்கிஃதே
போதின் மலிவய லாக்கிய
கோனமர் பொற்புகலி
மேதை நெடுங்கடல் வாருங்
கயலோ? விலைக்குளது

காதி னளவும் மிளிர்கய
லோ?சொல்லு; காரிகையே.

#1440

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு,
காமஞ் சாலா இளமையோளாகிய
நெய்தல் நிலத் தலைவி பால் அந்நிலத்
தலைவன் ஏமம் சாலா இடும்பை
யாகிய கைக்கிளைப் பட்டுச்
சொல் எதிர் பெறான், சொல்லி இன்புற்றது.

2 \`காரிகையே*!* விலைக்கு உள்ளது *(*நீ விற்பது*)* கடலினின்றும் வாரிய கயலோ*?* அல்லது *(*உனது முகத்தில்*)* காதளவும் சென்று மிளிர்கின்ற கயலோ*? (*ஏது*?)* சொல்லு\` என \`மீன் விற்கின்ற நீ உன் கண்ணால் என்னை வாட்டுகின்றாய்\` என்பதாம்.

நாதன் நனி பள்ளி நகர் - சிவபெருமானது \`திருநனி பள்ளி\` என்னும் தலம்.

\`\`சூழ்\`\` என்னும் முதலனிலைத் தொழிற் பெயர் ஆகுபெயராய், அத்தொழிலை உடைய இடத்தைக் குறித்தது.

\`முன்பு கானகம் ஆக்கிப் பின்பு அதனையே வயல் ஆக்கிய கோன்\` என்க.

\`கானகம்\` என்பது முல்லை நிலமும், \`வயல்\` என்பது மருத நிலமும் ஆவன ஆயினும் அவை சிறு பான்மை பற்றி ஓதப்பட்டனவேயாகும். ஏனெனில், இது பாலை நெய்தல் பாடியதாகவே பிற இடங்களிலும் சொல்லப்படுதலாலும், இவ் ஆசிரியர்தாமே.

நனிபள்ளியது - பாலைதனை
நெய்தல் ஆக்கியும்
எனக் கூறுதலாலும் என்க.

மேதை - புகலிக் கடல் - சீகாழியைச் சார்ந்து நிற்கும் கடல்.

கைம்மையி னால்நின் கழல்பர
வாது,கண் டார்க்(கு)இவனோர்
வன்மைய னேயென்னும் வண்ணம்
நடித்து, விழுப்பொருளோ(டு)
இம்மையில் யானெய்து மின்பங்
கருதித் திரிதருமத்
தன்மையி னேற்கும் அருளுதி
யோ!சொல்லு சம்பந்தனே.

#1441

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கைம்மை - சிறுமை.
இஃது இப்பொருட்டாயின் பரவாமைக்கு காரணமாகும்.
இவ்வாறன்றி, `கைம்மை - கைத் தொண்டு` எனின், அது `கைத்தொண்டினால் பரவுதலைச் செய்யாமை` எனப் பரவுதலின் வகையைக் குறிக்கும்.
வன்மையன் - வல்லமை யுடையவன்; அஃதாவது, `வீடு பேற்றைப் பெற வல்லவன்` என்பதாம்.
விழுப்பம் - மேன்மை.
``திறன் அறிந்து தீதின்றி வந்து பொருள் அறம், இன்பம் இரண்டையும் தரும் *2* ஆதலின், ``விழுப் பொருள்`` எனப்பட்டது.
ஓடு, எண்ணிடைச் சொல்.

பந்தார் அணிவிரற் பங்கயக்
கொங்கைப் பவளச்செவ்வாய்க்
கொந்தார் நறுங்குழல் கோமள
வல்லியைக் கூறருஞ்சீர்
நந்தா விளக்கினைக் கண்டது
நானெப்பொழுது முன்னுஞ்
சந்தார் அகலத் தருகா
சனிதன் தடவரையே.

#1442

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, குறிஞ்சித் திணையில் `வறுங்களம் நாடி மறுகல்` என்னும் துறையது.
அஃதாவது தலைவியைத் தமர் இற்செறிக்கத் தினைப்புனமும் கொய்யப்பட்ட பின்னர்த் தலைவன் அவண் சென்று வெற்றிடத்தைக் கண்டு வருந்தித் தன்னுள்ளே கூறியது.
பந்து ஆர் விரவு - ஆடுவதற்கான பந்து சேர்ந்திருக்கும் விரல்களை உடையவள்.
சிலர், `பந்தவாது, அகங்கை புறங்கைகளின் திரட்சி` என்பர்.
அதனை எடுத்துக் கூறுதலால் பயன் யாதும் இல்லை யாகலானும், அஃது ஆடவர்கட்கும் உள்ளதே யாகவனும், அது பொருந்தா உரையாம்.
பங்கயம் - தாமரை, அஃது ஆகுபெயராய், அதன் அரும்பைக் குறித்தது.

பங்கயக் கொங்கை, பவள வாய்.
உவமத் தொகைகள்.
கோமள வல்லி - அழகிய கொடி போன்றவள்; உவமையாகுபெயர்.
நந்தா விளக்கு - அணையா விளக்கு.
இதுவும் உவமையாகுபெயரே.
`நான் கண்டது எப்பொழுது` என வருத்தத்தால் அண்மைக் காலத்தை மிகக் கடந்த சேய்மைக் காலமாக மயங்கி நினைவு கூர்வானாய் வருந்திக் கூறினான்.
`அருகாசனிதன் தடவரைக் கண்` என ஏழாவது இறுதிக்கண் தொக்கது.
முன்னும் - நினைக்கப் படுகின்ற.
`முன்னும் அருகாசனி` என்க.
சந்து ஆர் அகலத்து - சந்தனம் பொருந்திய மார்பினை உடைய.

வரைகொண்ட மாமதில் சண்பைத்
தலைவனை வாழ்த்தலர்போல்
நிரைகொண்டு வானோர் கடைந்ததின்
நஞ்ச நிகழக்கொலாம்,
நுரைகொண்டு மெய்ப்பரத் துள்ளஞ்
சுழலநொந் தோரிரவும்
திரைகொண் டலமரு மிவ்வகல்
ஞாலஞ் செறிகடலே.

#1443

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டும் தனிமை மிக்க தலைவி கடல் ஒலிக்கு ஆற்றாது இரங்கியது.
`ஆற்றாமையால் இரவில் துயில் வருதல் அரிதாய் இருக்க, அதன்மேல் கடலும் இரவு முழுதும் ஒலித்துத் துயிலைத் தடுக்கின்றது` என்பதாம்.
``கொண்ட`` என்பது உவம உருபு.
`வாழ்த்தாதவர்கள் துன்புற்று அரற்றுதல்போலக் கடல் திரை கொண்டு அலமரும்` என வினைமுடிக்க.
திரைகொண்டு - அலைகளைப் பெற்று.
அலமரும் - அலையும்.
`அலையும்` என்பது தன் காரியத்தின் மேலதாய், `ஒலிக்கும்` எனப் பொருள் தந்தது.
`கடல் இன்று அலமருதல், முன்பு தேவர்கள் கடைந்த காலத்தில் அவர்கள் விருப்பத்திற்கு மாறாக நஞ்சைத் தோற்றுவித்ததுபோலத் தோற்றுவிக்கவோ` என அஞ்சிய வாறாம்.
இது தற்குறிப்பேற்ற அணி.

கொல், ஐயம், ஆம், அசை.
``கடைந்தது`` என்பது அத்தொழிலைக் குறித்தது.
நிரை - வரிசை.
இன், உவமப் பொருள்கண் வந்த ஐந்தன் உருபு.
``நுரை கொண்டு`` என்பதைத் ``திரைகொண்டு`` என்பதன் பின்னர்க் கூட்டுக.
மெய் - உடம்பு.
பரம் - சுமை.
`உடற் சுமையோடு உள்ளம் சுழல நொந்தோர்` என்க.
`சுமையோடு` என்பது, `சுமையாக` அதனுடன் என்றவாறு.
நோதல், தனிமையினால், கூடினார்க்கு இனியதாகின்ற இரவு இன்னாது ஆதல் பிரிந்தோர்க்கே யாதலின் கடல் வருத்தம் செய்யும் இராக் காலத்தை ``நொந்தோர் இரவு`` என அவர்க்கே உரித்தாக் கினாள்.
ஞாலம் செறி கடல் - நிலத்தை உள்ளடக்கிய கடல்.

கடலன்ன பொய்மைகள் செய்யினும்
வெய்ய கடுநரகத்
திடநம னேவுதற் கெவ்விடத்
தானிருஞ் செந்தமிழால்
திடமன்னு மாமதில் சண்பைத்
தலைவன்செந் தாமரையின்
வடமன்னு நீள்முடி யானடிப்
போதவை வாழ்த்தினமே.

#1444

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதன் பொருள் வெளிப்படை.
வடம் - மாலை.
தாமரை மலர் மாலை அந்தணர்களுக்கு அடையாள மாலையாகும்.

வாழ்த்துவ தெம்பர மேயாகும்,
அந்தத்து வையமுந்நீர்
ஆழ்த்திய காலத்து மாழா
தது,வரன் சேவடியே
ஏத்திய ஞானசம் பந்தற்
கிடமிசைத் தும்பிகொம்பர்க்
காத்திகழ் கேதகம், போதக
மீனுங் கழுமலமே.

#1445

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கழுமலத்தையே வாழ்த்துதல் எம் பரமே யாகும்` என வினை முடிக்க.
பரம் - கடமை.
அந்தம் - யுக முடிவு.
முந்நீர் - கடலில் உள்ள மூன்று நீர்.
(ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர்).
`நீர் - நீர்மை` எனக் கொண்டு, ``படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தன்மைகளையுடைய கடல்`` என்பர் நச்சினார்க்கினியர்.
`முந்நீர், வையத்தை ஆழ்த்திய காலத்தும் ஆழாததும், சம்பந்தர்க்கு இடமும் ஆகிய கழுமலம்` என்க.
ஏகாரம், தேற்றம்.
கா - கடற்கரைச் சோலை.
இது, `கானல்` எனப்படும்.
கேதகம் - தாழம் பூ.
போது - மற்றை மலர்கள்.
`இவைகளில் தும்பி (வண்டுகள்) அடை கிடக்கும் கழுலம்` என்றபடி.

மலர்பயில் வாட்கண்ணி**,** கேள்**;**கண்ணி
நீண்முடி வண்கமலப்
பலர்மயில் கீர்த்திக் கவுணியர்
தீபன் பகைவரென்னத்
தலைபயில் பூம்புனங் கொய்திடு
மே**?**கணி யார்புலம்ப
அலர்பயி லாமுன் பறித்தன
மாகில் அரும்பினையே**.**

#1446

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, பகற்குறியில் தினைப்புனம் வந்த தலைமகனைத் தோழி கண்டு வரைவு கடாவுவாளாய், `வேங்கை மரம் பூத்தது, இதனைக் காணின் எமர் தினைப் புனத்தைக் கொய்து விடுவார்கள்.
அப்பால் தலைவி இற் சொறிக்கப்படுவாள்; இனி நீவிர் இங்கு வாரற்க` என்றாட்குத் தலைவன் வரைவு மறுத்தது.
வேங்கை பூப்பின் அதுவே காலமாகத் தினையை அறுவடை செய்தல் வழக்கம்.
`வாட் கண்ணியகேணியார் அலர்பயிலா முன்னம் அரும் பினைப்

பறித்தனமாகில் புனம் கொய்திடுமே?` என வினை முடிக்க.
வேங்கை மரம் பூத்து அலர்வதற்கு முன்னே நாம் அரும்புகளைக் கொய்து விடுவோம்; பின்பு எப்படி தினைப்புனம் கொய்யப்படும்` எனத் தலைவன் கூறித் தோழியை நகையாடினான்.
வேங்கை நன்கு பூத்துக் குலுங்குவது எப்பொழுது? எல்லாம் நாளையே நிகழப் போவ தாகச் சொல்லி என்னை ஏய்க்கின்றாய்` என்பது தோன்றத் தலைவன் இயலாத ஒன்றை இயல்வதுபோலக் கூறி அவளது விலக்குரையை இகழ்ந்தான்.
இஃது, `எள்ளல் பற்றி நகை` என்னும் மெய்ப்பாடு.
``மலர் பயில்`` என்பதில் `பயில்`, உவம உருபு.
`நீள் முடியில் கமலப் பூவை யுடைய தீபன்` என்க.
பின் வந்த `கண்ணி` முடியில் அணியும் மாலை.
`கீர்த்தியை` உடையவன்.
என்பதும் தீபனையே சிறப்பித்தது.
`தீபனுக்குப் பகையாயினார் புலம்புவது போல வேங்கை புலம்ப` என்க.
கணி - வேங்கை மரம், இகழ்ச்சி தோன்ற அதனை உயர் திணையாக்கிக் கூறினார்.
புலம்புதல் - தனிமைப்படுதல்.
அஃதாவது பொலிவை இழந்து நிற்றல்.
பகைவர்க்கும் இது பொருந்தும்.
`இத்தலை பயில்` எனச் சுட்டு வருவிக்க.
தலை - இடம் கொய்திடும் - கொய்யப் படும்.
ஏகாரம், வினாப் பொருட்டாய் கொய்யப்படாமையைக் குறித்தது.

அரும்பின அன்பில்லை யர்ச்சனை
யில்லை யரன்நெறியே
விரும்பின மாந்தர்க்கு மெய்ப்பணி
செய்கிலன் பொய்க்கமைந்த
இரும்பன வுள்ளத்தி னேற்கெங்ங
னேவந்து நேர்பட்டதால்
கரும்பன நீள்வயல் சூழ்காழி
நாதன் கழலடியே.

#1447

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அரும்பின அன்பு - மெய்ம்மயிர் பெடித்தற்கு ஏதுவான அன்பு.
``அரும்பின்`` என்னும் பெயரெச்சம் காரணப் பெயர் கொண்டு முடிந்தது.
`அரன் நெறியே விரும்பின மாந்தர் சிவன் அடியார்கள்.

மெய் - உண்மை உடம்பு இருபொருளும் கொள்க.
நேர்பட்டது - கிடைத்தது.
ஆல், அசை கரும்பன - கரும்புகளை உடைய `நல்வியல்புகள் பலவும் உடைய அன்புள்ளத்தார்க்கும் கிடையாத கழலடி, நல்லியல்பு ஒன்றும் இல்லாத வன்புள்ளத்தேனுக்கு எங்ஙனம் வந்து கிடைத்தது` என வியந்து கூறியவாறு.
`இப் பிறப்பில் யாதும் செய்யாவிடினும், முற்பிறப்பில் நல்வினை செய்தேன்போலும்` என்பது குறிப்பெச்சம்.

அடியால் அலர்மிதித் தாலரத்
தம்பில் கமிர்தமின்(று)இக்
கொடியா னொடும்பின் நடந்ததெவ்
வா(று)அலர் கோகனதக்
கடியார் நறுங்கண்ணி ஞானசம்
பந்தன் கருதலர்போல்
வெடியா விடுவெம் பரல்சுறு
நாறு வியன்கரத்தே.

#1448

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, தலைவியது உடன்போக்குப் போயதை அறிந்த நற்றாய் வருந்தியது.
`மிதித்தாலும்` என்னும் இழிவு சிறப்பும்மை தொகுக்கப் பட்டது.
அரத்தம் பிலகு - இரத்தம் சிந்துகின்ற.
அமிர்தம் - அமிர்தம் போல்வாள்.
அவளது மென்மையறியாமற் சுரத்து உய்த்தமை பற்றித் தலைவனை, ``கொடியான்`` என்றாள்.
கடி - விளக்கம்; அடையாள மாய் விளங்குவது.
``கருதலர்`` என்பது, `பகைவர்` என்னும் அளவில் நின்று, `ஞானசம்பந்தனுக்கு` எனத் தொக்கு நின்ற நான்காவதற்கு முடிபாயிற்று.
வெடியா விடு - நிலம் வெடித்து வெளித் தள்ளுகின்ற.
பரல் - பரற்கற்கள்.
சுரம் - பாலை நிலம்.
பின்னர், ``இன்று`` என்றமையால், முன்பு `இயல்பாக` என்பது வருவிக்க.
`இயல்பாக அடியால் அலர்மிதித்தாலும் (அடிகளில்) அரத்தம் பில்குபவளாகிய ளாகிய என்மகள் இன்று பரல் நாறும் சுரத்துக்கண் கொடியானொடும் பின் நடந்தது எவ்வாறு` என வினை முடிக்க.

இது, `தன் கண் தோன்றிய இழவு பற்றி பற்றி வந்த அழுகை` என்னும் மெய்ப்பாடு.

சுரபுரத் தார்தம் துயருக்
கிரங்கிச் சுரர்கள்தங்கள்
பரபுரத் தார்தந் துயர்கண்
டருளும் பரமன்மன்னும்
அரபுரத் தானடி எய்துவ
னென்ப, அவனடிசேர்
சிரபுரத் தானடி யாரடி
யேனென்றும் திண்ணனவே.

#1449

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`(யான்) - பரமன் மன்னும் மரபு உரத்தான் (அவன்) அடி எய்துவான் - என்ப, அவன் அடி சேர் சிரபுரத்தான் அடியார் அடி வான் என்னும் திண்ணனவே` என வினை முடிக்க.
(அடைதற்கு) உரிய மரபுகளாவன, சரியை முதலிய நான்கு, `அவைகளைச் செய்து பெற்ற உரத்தால் (வலிமையால்) நான் அவன் அடி அடைவேன்` என்று எண்ணுவன எல்லாம், `சிரபுரத்தான் அடியார்க்கு அடியான்` என்னும் பேற்றினை நான் பெற்ற வன்மையினாலேயாம்` என வினை முடிக்க.
சுரபுரம் - தேவ லோகம்.
தேவர்கட்குப் பரராய (வேற்றவ ராகிய) அசுரர்புரம், திரிபுரம்.
``மரபு உரத்தான்`` என்பதில் `ஆன்` மூன்றனுருபு.
சிரபுரம் - சீகாழி.
திண்ணன - திண்மையை உடையன.
`ஞானசம்பந்தருக்கு அடியார்க்கு அடியரானவரும் சிவனடியைச் சேர்வர்` என்பதாம்.

திண்ணென வார்சென்ற நாட்டிடை
யில்லைகொல்! தீந்தமிழோர்
கண்ணென வோங்கும் கவுணியர்
தீபன்கை போல்பொழிந்து
விண்ணின வாய்முல்லை மெல்லரும்
பீன,மற் றியாம்மெலிய
எண்ணின நாள்வழு வா(து)இரைத்(து)
ஓடி எழுமுகிலே.

#1450

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, பொருள் மேற் சென்ற தலைவன் வரவு நீட்டிப்பத் தலைவி கார் கண்டு இரங்கியது.

`விண்ணினவாய், முல்லை அரும்பு ஈனவும், யாம் மெலிய வும், எண்ணின நாள் வழுவாது இரைத்து ஓடித் தீபன் கைபோல் பொழிந்து எழு முகில் அவர் சென்ற நாட்டிடை இல்லை கொல்` என இயைத்து முடிக்க.

திண் என் அவர் - உள்ளம் இளகுதல் இன்றி வல்லென்றி இருக்கும் அவர்; தலைவர்.

`கண் பொருள்களைக் காட்டுதல் போலப் பாடுபொருளைத் தெரிவிப்பவன்` என்பதாம்.

இது சிறப்பு நிலைக் களனாக வந்து உவமை.

விண்ணினவாய் - வானம் முழுதும் பரந்தன வாய்.

எண்ணின நாள், ``இன்ன நாளில் வரும்`` என்று நாள் தோறும் எண்ணால் எண்ணிக் கொண்டு வந்த நாள்.

`அந்த நாள் வழுவாது முகில்கள் என்று சொல்லிச் சென்ற சொற்படி வந்திலர்` என்பது குறிப்பு.

`இந்நாட்டில் எழு முகில் அவர் சென்ற நாட்டில் இல்லையோ என்றதும் வழுவினதைக் குறிப்பாற் கூறியதே.

`கார் காலம் வந்தவுடன் வருவேன்` என்று சொல்லி வேனிற் காலத்தில் பிரிந்து செல்லுதலும், பின்பு கார் காலம் வந்தவுடன் வந்து சேர்தலும் தலைவரது இயல்பு.

இரைத்து - ஒலித்து.

எழுவாள் மதியால் வெதுப்புண்(டு)
அலமந் தெழுந்துவிம்மித்
தொழுவாள், தனக்கின் றருளுங்
கொலாந்,தொழு நீரவைகைக்
குழுவா யெதிர்ந்த உறிகைப்
பறிதலைக் குண்டர்தங்கள்
கழுவா வுடலம் கழுவின
வாக்கிய கற்பகமே.

#1451

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு ஞானசம்பந்தரைக் காதலித்த கைக் கிளைத் தலைவியது

ஆற்றாமையைச் செவிலி சொல்லி இரங்கியது.
``எழுவாள்`` என்பது முதலியவற்றிற்கு `என் மகள்` என்னும் தோன்றா எழுவாயை முதற்கண் வருவித்துக் கொள்க.
``எழுவாள்`` என்பதை ``அலமந்து`` என்பதன் பின்னர்க் கூட்டுக.
மதி - நிலவு.
தனக்கு - அவளுக்கு; `கற்பகம் அருளுங்கொல்` எனக் கூட்டி முடிக்க.
ஆம், அசை.
தொழு நீர - வணங்கப்படும் தன்மையை உடை.
`வைகையில் குழுவாய் எத்ர்ந்த` என்க.
எதிர்ந்தது, புனல் வாதம் செய்ய வந்தது.
``கழுவா உடலம் கழுவின ஆக்கிய`` என் மேல் வந்த தனை நோக்குக.
1 கற்பகம், எண்ணிய எண்ணியாங்கு வழங்குதல் பற்றி வந்த உருவகம்.

கற்பா நறவம் மணிகொழித்
துந்தும் அலைச்சிலம்பா!
நற்பா மொழியெழில் ஞானசம்
பந்தன் புறவமன்ன
விற்பா நுதலிதன் மென்முலை
யின்னிளம் செவ்விகண்டிட்(டு)
இற்பா விடும்வண்ண மெண்ணுகின்
றாளம்ம! வெம்மனையே.

#1452

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, தோழி, `தலைவி இனி இச்செறிக்கப் படுவாள்` எனப் படைத்துமொழி கூறி வரைவு கடாயது.
`கல் பா மணி` எனக் கூட்டி, `கற்களில் உள்ள ஒளிக் கற்களை` என உரைக்க.
நறவம் - தேன்.
நற் பா - ஞானப் பாடல்.
மொழி சம்பந்தன்.
வினைத்தொகை.
புறவம் - சீகாழி.
முலையின் செவ்வி கண்டு எம் அன்னை இற்பாவிடும் வண்ணம் எண்ணுகின்றாள்` என இயைக்க.
அம்ம - இதுகேள்.
``அம்ம கேட்பிக்கும்`` *1* என்பது இலக்கணம்.
``கண்டிட்டு`` என்பதில் இட்டு, அசை.

`இனித் தலைவி புறத்துவாராள்` என்பதாம்.
இது கேட்டுத் தலைவன் வரைவு முடுக்கத்தில் தலைப்படுவானாதல் பயன்.

எம்மனை யா,எந்தை யாயென்னை
யாண்டென் துயர்தவிர்த்த
செம்மலர் நீள்முடி ஞானசம்
பந்தன் புறவமன்னீர்!
வெம்முனை வேலென்ன வென்னமிளிர்ந்து
வெளுத்(து) அரியேன்(று)
உம்மன வோவல்ல வோவந்தெ
னுள்ளத் தொளிர்வனவே.

#1453

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, தலைவியது குறிப்பு உணர்ந்த தலை மகன் பின்னும் வேட்கை மீதூர்தலை உணர்ந்த தலைமகளுக்குத் தன் நிலை உரைத்தது.
அன்னை, `அனை` என இடைக் குறைந்து நின்றது.
எண் அன்னையாய் - எம் தாய்க்குத் தாய்.
எந்தை யாய் - எம் தந்தைக்குத் தாய், `இவர்களுடன் என்னையும் ஆண்டு` என்க.
குழி முழுதாண்டமை கூறியவாறு.
மலர், தாமரை மலர்.
புறவம் - சீகாழி.
அன்னீர் - போன்றவரே.
தலைவியைத் தலைவன் பன்மைச் சொல்லால் உயர்த்துக் கூறினான்.
அவள் இன்னும் தனக்கு உரியவள் ஆகாமையின்.
அடுக்குப் பன்மை பற்றி வந்தது.
மிளிர்தல் - சுழலுதல்.
அரி - செவ்வரிகள்.
ஒளிர்வன - ஒளிரும் கண்கள்.
`எம் உள்ளத்து ஒளிர்தலால் உண்மையில் அவை உம்முடையனவோ, அல்லவோ` என்றபடி.
`உம் பார்வையின் தொடர்ச்சியால் எனது வேட்கை ஒரு காலைக்கு ஒருகொல் மிகாநின்றது` என்பது கருத்து.

ஒளிறு மணிப்பணி நாட்டும்,
உலகத்தும் உம்பருள்ளும்
வெளிறு படச்சில நிற்பதுண்

டே?மிண்டி மீனுகளும்
அளறு பயற்சண்பை நாத
னமுதப் பதிகமென்னுங்
களிறு விடப்புகு மேல்தொண்டர்
பாடும் கவிதைகளே.
#1454
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சண்பை நாதன் (தனது) `பதிகம்` எனும் களிறுகளை விட, (அவை சென்று) புகுமேல், ஏனைத் தொண்டர்களது கவிதைகள் சில மூவுலகத்திலும் எதிர் நிற்பது உண்டே` எனக் கூட்டி முடிக்க.
மணி - மாணிக்கம்.
பனி நாடு - நாகலோகம்.
``உலகம்`` என்றது இவ்வுலகத்தை.
உம்பர் - வானுலகம்.
வெளிறு பட - உள்ளீடு இல்லாமை தோன்ற.
இது ஞானசம்பந்தரது பாடலின் முன் ஏனைக் கவிதைகள் பெறும் மதிப்பீடு பற்றிக் கூறியதன்றி, எப்பொழுதும் உள்ள நிலை பற்றிக் கூறியதன்று.
``உண்டே`` என்னும் ஏகாரம் வினாப் பொருட்டாய், `இன்று` என்னும் எதிர்மறைப் பொருளைத் தந்தது.
மிண்டி - வலிமை பெற்று.
அளறு - சேறு.
அமுதப் பதிகம், உவமத் தொகை.
பதிகம் என்னும் களிறு, உருவகம்.
உவமைப்பின் உருவகிக்கப்பட்டதாயினும் இது பலபொருள் உவமைப் பாலதே இரண்டிறஅகும் பொதுதன்மை வேறு வேறு ஆகலின் அமைந்தது.

கவிக்குத் தகுவன, கண்ணுக்
கினியன, கேட்கில்இன்பம்
செவிக்குத் தருவன, சிந்தைக்
குரியன பைந்தரளம்
நவிக்கண் சிறுமியர் முற்றில்
முகந்துதம் சிற்றில்தொறும்
குவிக்கத் திரைபரக் குங்கொச்சை
நாதன் குரைகழலே.
#1455

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதன் பொருள் வெளிப்படை.
நவ்வி, ``நவி`` என இடைக் குறைந்த நின்றது.
தாளம் - முத்து.
நவ்வி - மான்.
முற்றில் - சிறுமுறம் `சிறுமியர் தரளம் முற்றி முகந்து குவிக்க` என்க.
திரை - கடல் அலை.

கழல்கின்ற ஐங்கணை, யந்தியும்,
அன்றிலுங் கால்பரப்பிட்(டு)
அழல்கின்ற தென்றலும் வந்திங்
கடர்ப்ப,வன் றாயிழைக்காச்
சுழல்கின்ற நஞ்சந் தணித்தவன்
தன்னைத் தொடர்ந்துபின்போய்
உழல்கின்ற நெஞ்சமிங் கென்னோ,
இனிஇன் றுறுகின்றதே.

#1456

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதுவும் கைக்கிளைத் தலைவி தலைவன்.
அளி பெறாமையால் வருந்திக் கூறியது.
கழல்கின்ற - வில்லை விட்டுக் கழன்று வருகின்ற ஐங்கமை மாரனுடையன, அவற்றோடுகூட, அந்தி முதலிய மூன்றும் அடர்ப்ப (துன்புறுத்த) உழல்கின்ற நெஞ்சம் (அங்ஙனம் உழலுதலால் உறுகின்றது என்! (அடையப் போவது என்ன!) என்க.
ஆயிழை, வணிகப் பெண்.
அவளுக்காக ஞான சம்பந்தர் நஞ்சம் தணித்தது.
திருமருகலில், திருப்புறம்பயத்திலும் நிகழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.
`பரப்பியிட்டு` என்பது குறைந்து, ``பரப்பிட்டு`` என வந்தது.
கால் - காலுதல்; வெளிப்படுத்தல்.
`காலுதலால் பரப்பியிட்டு` என்க.
பரப்படுவது நாற்றம்.
``கால் பரப்பி`` என்பது பிறிதொரு பொருள்மேலது போலத் தோற்றுவித்தது நயம்.

உறுகின்ற வன்பினோ(டு) ஒத்திய
தாளமு முள்ளுருகிப்

பெறுகின்ற வின்பும், பிறைநுதல்
முண்டமுங் கண்டவரைத்
தெறுகின்ற வாறென்ன செய்தவ
மோ!வந்தென் சிந்தையுள்ளே
துறுகின்ற பாதன் கழுமலம்
போலுந் துடியிடைக்கே.
#1457
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, `பெருந்தமையாகிய நீ இன்னையாகுதல் தகாது` எனக் கழறிய பாங்கனுக்குத் தலைவன் தனது மெலிவைக் கூறியது.
`கழுமலம் போலும் துடி இடைக்கு அன்பினொடு, தாளமும், இன்பும், முண்டமும் கண்டவரைத் தெறுகின்ற வாறாய் உண்டாய் இருக்கை என்ன செய்தவமோ!`` எனக் கூட்டி முடிக்க.
அன்பு, ஒத்த அன்பினர்பாற் செல்லும் அன்பு.
இதுவும் ஒரு பண்பாடு.
``தாளம்`` சிறப்புருவகமாய்க் கொங்கைகளைக் குறித்தது.
`தன்னை மணப்பான் பெறுகின்ற இன்பும்` என்க.
இதனால் தலைவன் முன்பு கூட்டம் நிகழ்ந்தமையைக் குறிப்பிட்டு, அங்ஙனமாயினும் ``அறிதொறறி யாமை காணப்பட்டாற் போலக் காதலி மாட்டுச் செறிதொறும் முன்னைச் செறிவு செறிவாகா தொழிகின்றது`` *1* என்பதை உணர்த்தி னான்.
நுதல், இங்கே புருவம்.
முண்டம் - நெற்றி.
`தெறுகின்றவாறாய் அமைந்தமை அவள் முன்பு செய்த எந்தத் தவத்தின் பயனோ` என்க.
தவம், கருவியாகு பெயர்.
``கண்ட வரைத் தெறுகின்றவாறு`` என்றதனால், `நீயும் கண்டனை யாலின் இவ்வாறு கழலுகிறாய்` என்றான்.
துறுகின்ற - முழுமையாகச் செறிந்து நிற்கின்ற.

இடையு மெழுதா தொழியலும்
ஆம்;இன வண்டுகளின்
புடையு மெழுதினும் பூங்குழ
லொக்குமப் பொன்னனையாள்
நடையும் நகையுந் தமிழா
கரன்தன் புகலிநற்றேன்
அடையும் மொழியு மெழுதிடின்,

சால அதிசயமே.

#1458

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு ``மடல் என, மடல்மா கூறிய தலைவற்கு, ``அதற்கு அவள் வடிவை ஓவியமாக எழுதிக் கொணரல் வேண்டும்; அது நும்மால் இயலாது` எனத் தோழி கூறி நகையாடியது.

`வண்டுகள் மெய்க்கும் சூழலை நீர் எழுதிவிட்டாலும் அப்பொன்னனையாளது பூங்குழை ஒருவாறு எழுதியது போல் ஆய்விடும்.

இனி இடையையும் எழுதாது ஒழிந்தால் அதனையாரும் குறையாக நினைக்க மாட்டார்கள்.

(ஏனெனில் காண்டற்கு அரிது) ஆயினும் அவளது நடையையும், நகைப்பையும் தேன்போலும் மொழியையும் நீர் எழுதிக் கொணர்ந்தால் அது பெரிய அதிசமாகும்` என உரைக்க.

சிந்தா மணியும், திருக்கோ வையும்எழு திக்கொளினும்
நந்தா உரையை எழுதல் எவ் வாறு நவின்றருளே

எனப் பிற்கால ஆசிரியரும் கூறினார்.

தமிழாகரன் - ஞானசம்பந்தர்.

``தேன் அடையும்`` என்பதில் ``அடையும்`` என்பது `சிவணும்` என்பது போல உவம உருபு.

மேனாட் டமரர் தொழவிருப்
பாரும், வினைப்பயன்கள்
தாநாட் டருநர கிற்றளர்
வாருந் தமிழர்தங்கள்
கோனாட்(டு) அருகர் குழாம்வென்ற
கொச்சையர் கோன்கமலப்
பூநாட்டு அடிபணிந் தாருமல்
லாத புலையருமே.

#1459

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மேல் நாடு - விண்ணுலகம்.

``வினைப் பயன்கள் தாம்`` என்பதில் தாம், அசை.

தமிழர் தங்கள் கோன், பாண்டியன்.

பூ நாட்டு அடி - பூவின் தன்மை பொருந்திய பாதம்.

`அமலர் தொழ இருப்பாரும், அருநரகில் தளர்வாரும் (யாவர் என்னில்) கொச்சையர் கோன் அடி பணிந்தாரும், அல்லாத புலையருமே` என முடிக்க.
புலையர் - கீழ்மையர்.
ஏகாரம் பிரிநிலை.

புலையடித் தொண்டனைப் பூசுர
னாக்கிப் பொருகயற்கண்
மலைமடப் பாவைக்கு மாநட
மாடும் மணியையென்தன்
தலையிடைப் பாதனைக் கற்றாங்
குரைத்தசம் பந்தனென்னா,
முலையிடைப் பொன்கொண்டு, சங்கிழந்
தாளென்தன் மொய்குழலே.

#1460

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, கைக்கிளைத் தலைவி ஆற்றாமை கண்டு செவிலி இரங்கியது.
`புலைத் தொண்டன், அடித்தொண்டன்` எனத் தனித் தனி முடிக்க.
புலை - கீழ்மை; நெறிப்பா டின்மை.
ஆசிரியர் புலை அடித் தொண்டனைப் பூசுரன் ஆக்கியதாகக் கூறியது தம்மைக் குறித்தே யாயினும் அதனைச் செவிலி கூற்றாகக் கூறினமையால், ``தொண்டனை`` என்பதற்குத் `தொண்டன் ஒருவனைப் பூசுரன் ஆக்கி` எனப் பொருள் கொள்க.
ஆசிரியர் இவ்வாறு கூறியது, `யானை பூசுரனாய்ப் பிறந்தும் அதற்கேற்ற செயலை உடையனாயினேன் இல்லை` என்னும் இரக்கத்தினாலாம்.
இஃது அவர் தம் பெருமையை உணர்த்துகின்றது.
பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து
என்பஆகலின்.
பாவைக்கு - பாவை பொருட்டாக; `அவள் காணும் படி` என்பதாம்.
தலையிடைச் `சூட்டியபாதன்` என்க.
கற்றல், இங்கு, உணருமாறெல்லாம் உணர்தல்.
என்னா - என்று சொல்லிச் சொல்லி; `பிதற்றி` என்றபடி.
பொன் - பசலை.
சங்கு சங்க வளையல், ``பொன் கொண்டு சங்கு இழந்தாள்`` என்பது

`பரிவருத்தனை` என்னும் அணியாம்.
சங்கைக் கொடுத்துப் பொன்னை விலையாகப் பெறும் வழக்கம் அந்நாளில் இருந்தது.

குழலியல் இன்கவி ஞானசம்
பந்தன் குரைகழல்போல்
கழலியல் பாதம் பணிந்தே
னுனையுங் கதிரவனே!
தழலியல் வெம்மை தணித்தருள்
நீ;தணி யாதவெம்மை
அழலியல் கான்நடந் தாள்வினை
யேன்பெற்ற வாரணங்கே.

#1461

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, தலைவி தலைவனுடன் உடன் போக்காகப் போயினமை கேட்டு நற்றாய் சுரம் தணிவித்து இரங்கியது.
சுரம் - பாலை நிலம்.
`கதிரவனே! வினையேன் பெற்ற ஆரணங்கு, தணியாத வெம்மையால் அழல் இயல்பினையுடைய தான் நடந்தாள்; ஞான சம்பந்த கழலைப் பணிதல்போல உன்னையும் நான் கழலணிந்த பாதத்தைப் பணிந்தேன்; நீ அந்தத் தழல் இயல் வெம்மை தணித்தருள்` என இயைத்து முடிக்க.
குழல் இயல் இன்கவிகுழல் இசையின் இயல்பினை உடைய இனிய பாடல்கள்.
``பாதம் பணிந்தேன்`` என்பது `வணங்கினேன்` என ஒரு சொல் நீர்மைப்பட்டு, ``உனை`` என்றும் இரண்டாவதற்கு முடிபாயிற்று.

அணங்கமர் யாழ்முரித்(து) ஆண்பனை
பெண்பனை யாக்கி,அமண்
கணங்கழு வேற்றிக் கடுவிடந்
தீர்த்துக் கதவடைத்துப்
பிணங்கலை நீரெதி ரோடஞ்
செலுத்தின, வெண்பிறையோ(டு)
இணங்கிய மாடச் சிரபுரத்
தான்தன் இருந்தமிழே.

#1462

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டில் ஞானசம்பந்தர் நிகழ்த்திய அற்புதங்கள் பல எடுத்துக் கூறப்பட்டன.
அவைகளைப் பெரிய புராணத்தால் அறிக.
அணங்கு - தெய்வத் தன்மை.
`இசைத் தெய்வம்` என்னுமாம்.
கணம் - கூட்டம்.
பிணங்கு அலை நீர் - எதிராக வீசிவரும் அலைகளை யுடைய நீர்.

இருந்தண் புகலி,கோ லக்கா,
வெழிலா வடுதுறை,சீர்
பொருந்தும் அரத்துறை போனகம்,
தாளம்,நன் பொன், சிவிகை
அருந்திட ஒற்ற,முத் தீச்செய
வேற வரனளித்த
பெருந்தகை சீரினை யெம்பர
மோ!நின்று பேசுவதே.

#1463

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``புகலியில் அருந்தப் போனகம், கோலக்காவில் ஒற்றத் தாளம், ஆவடு துறை?ல் முத்தீச் செயப் பொன், அரத்துறையில் ஏறச் சிவிகை அரன் அளித்த சீரினை நின்று பேசுவது எம் பரமோ`` என இயைத்துக் கொள்க.
பெருந்தகை, ஞானசம்பந்தர்.
``அளித்த பெருந்தகை`` என்பதில், `அரசன் ஆ கொடுத்த பார்ப்பான்` என்பது போலப் பெயரெச்சம் கோடற் பொருட் பெயர் கொண்டது.

பேசுந் தகையதன் றேயின்று
மன்றும் தமிழ்விரகன்
தேசம் முழுதும் மழைமறந்(து)
ஊண்கெடச் செந்தழற்கை
ஈசன் திருவரு ளாலெழில்
வீழி மிழலையின்வாய்க்
காசின் மழைபொழிந் தானென்றிஞ்
ஞாலம் கவின்பெறவே.

#1464

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`தமிழ்விரகன், மழை மறந்து ஊண் கெட, வீழி மிழலையின்

வாய்க்காசின் மழைபொழிந்தான் என்றுஇஞ்ஞாலம் இன்று, அன்றும் பேசும் தகையது அன்று` என இயைத்துக் கொள்க.
``பேசும்`` என்று `பேசி முற்ற முடிக்கும்` என்றபடி.
கண்கூடாக விரைவிற் காண்பது.
இன்றைய நிலையாகலின் அதனை முன்னர்க் கூறினார்.
`உலகத்தாரால் முற்ற முடியக் கூறல் இயலாது` என்பதாம்.
காசின் மழை - காசினால் உண்டான மழை.
அஃது உண்டி மழை.
``மழை மறந்து`` என்றதற்கு ஏற்ப உண்டியையும் மழையாக உருவகித்தார்.
``மறந்து`` என்னும் செய்தென் எச்சம் காரணப் பொருட்டாய் நின்றது.

பெறுவது நிச்சயம் அஞ்சல்நெஞ்
சேபிர மாபுரத்து
மறுவறு பொற்கழல் ஞானசம்
பந்தனை வாழ்த்துதலால்
வெறியுறு கொன்றை மறியுறு
செங்கை விடையெடுத்த
பொறியுறு பொற்கொடி யெம்பெரு
மானவர் பொன்னுலகே.

#1465

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதன் பொருள் வெளிப்படை.
வெளி - நறுமணம்.
மறி - மான் கன்று.
`விடை எடுத்த கொடி` என்க.
பொறி - பொறித்தல்; எழுதுதல்.
பொன் - அழகு.
`ஞான சம்பந்தரை வாழ்த்தினாலே சிவலோகத்தை அடைதல் நிச்சயம்` என்பது கருத்து.

பொன்னார் மதில்சூழ் புகலிக்
கரசை, யருகர்தங்கள்
தென்னாட் டரணட்ட சிங்கத்
தினை,யெஞ் சிவனிவனென்(று)
அந்நாள் குதலைத் திருவாய்
மொழிக ளருளிச்செய்த
என்னானை யைப்பணி வார்க்கில்லை,

காண்க யமாலயமே.

#1466

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தென்னாட்டு அரண் - பாண்டி நாடாகிய கோட்டை; என்றது அவர்கள் யாராலும் வெல்ல இயலாத அளவு வலுப் பெற்று இருந்த இடம்` என்றபடி.
அட்ட - அழித்த.
``அரண் அட்ட`` என்றது.
`அரண்போல வாழ்ந்த நிலைமையை அழித்த` என்றபடி.
``சிங்கம்`` என்றது ஏகதேச உருவகம் ஆதலின், `அருகராகிய யானைகளது` என உரைக்க.
`திருவாயால்` என மூன்றாவது விரிக்க.
``ஆணை`` என்றது காதற்சொல், ``காண்க`` என்பதும், `காண்` என்பதுபோல அசை.
யமாலயம் - எமன் உலகம்.

மாலையொப் பாகும் பிறைமுன்பு
நின்று, மணிகுறுக்கி
வேலையைப் பாடணைத்(து) ஆங்கெழில்
மன்மதன் வில்குனித்த
கோலையெப் போதும் பிடிப்பன்
வடுப்படு கொக்கினஞ்சூழ்
சோலையைக் காழித் தலைவன்
மலரின்று சூடிடினே.

#1467

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, கைக்கிளைத் தலைவி தோழியைத் தூது செல்லும்படி குறையிரந்து கூறியது.
``வடுப்படு கொக்கினம் சூழ்`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.
`(நீ சென்று) காழித் தலைவன் மலரை (மாலையை) (மெலிவடையாது) நிற்பேன்; (சேவினங்களின் கழுத்தில் உள்ள மணி களின் ஓசையைக் குறுகச் செய்வேன்; (அடக்குவேன்.
) வேலையை (கடலை) பாடு (ஒலியை) அணைப்பேன்; (அடக்குவேன்.
) மற்றும் மன்மதன் தனது வில்லை வளைத்து தொடுத்துள்ள கோலை ஒரு போதும் விடாமல் தடுப்பேன்` என இயைத்து இவ்வாறு பொருள்

கொள்க.
பிறை முதலியன காதல் மிக்கவரை மேலும் வருத்துவன ஆதலின், `அவைகளால் யான் வருந்தி இறந்து படாது பிழைப்பேன்` என்பாள் இவ்வாறு கூறினாள்.
மாலை ஒப்பாகும் - காலம் வந்து வருத்த, அதற்கு ஒப்பாகத் தானும் உடன் கூடி வருத்து கின்ற.
``நின்று, குறுக்கி, அணைத்து`` என்னும் செய்தென் எச்சங்கள் எண்ணின்கண் வந்தன.
``மணி`` என்பது, ஏற்புழிக் கோடலால் சேவினங்களது மணியைக் குறித்து, ஆகுபெயரால் அவற்றின் ஓசையை உணர்த்திற்று.
ஆங்கு - அப்பொழுதே.
கோல் - அம்பு.
வடு - மா வடு.
கொக்கு - மா மரம்.
சோலை ஐ - சோலையினது அழகை உடைய.
``மலர்`` என்பதும் ஆகுபெயரால், மலரால் ஆகிய மாலையையே குறித்தது.
``குனித்த`` என்பது, `குனித்துத் தொடுத்த` எனப் பொருள் தந்தது.
`சூடாவிடில் ஆற்றேன்` எனச் சூடாமையைப் பிரித்தலின், ஏகாரம் பிரிநிலை.

சூடுநற் றார்த்தமி ழாகரன்
தன்பொற் சுடர்வரைத்தோள்
கூடுதற்(கு) ஏசற்ற கொம்பினை
நீயுங் கொடும்பகைநின்(று)
ஆடுதற் கேயத்த னைக்குனை
யே,நின்னை யாடரவம்
வாடிடக் காரும் மறுவும்
படுகின்ற வாண்மதியே.

#1468

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதுவும் கைக்கிளைத் தலைவி கங்குலில் கண்படை பெறாது வருந்துதல் கண்டு தோழி நிலவைப் பழித்துக் கூறியது.
`வாள் மதியே! ஏசற்ற கொம்பினை நீயும் கொடும் பகையாய் நின்று ஆடுதலாகிய குற்றத்திற்காகத்தான் நின்னை அரவம் வாட்டிடக் (கண்டு) காரும், மறுவும் உன்னையே அத்தனைக்குப் படுகின்றன` எனக் கூட்டி முடிக்க.

சூடு நல் தார்த் தமிழ் ஆகரன் - சிவபெருமானுக்கு அணிவிக்கின்ற நல்ல மாலையாம் தமிழுக்கு இருப்பிடமானவன்; ஞானசம்பந்தர்.
ஏசறுதல் - ஏக்கம் உறுதல்.
கொம்பு - பூங்கொம்பு போல்வாள்; தலைவி `தமிழாகரன் போல நீயும் பகையாகின்றனை` என்றமையால் உம்மை இறந்தது தழுவிய எச்சம்.
`பகையாய்` என ஆக்கம் வருவிக்க.
ஆடுதல் - வெல்லுதல்; ``ஆடாடென்ப ஒரு சாரோரே; - ஆடன் றென்ப ஒருசாரோரே`` *1* என்றது காண்க.
அரவம்- இராகு என்னும் பாம்.
`வாட்டிட` என எதுகை நோக்கி இடைக் குறைந்து நின்றது.
கார் - மேகம்; இது நிலவிற்குப் பெருங்குறையாய் நின்று இழிவை உண்டாக்குகின்றது.
அத்தனைப் படுகின்ற - அந்த அளவு பொருந்துகின்றன.

மதிக்க தகுநுதல் மாதொடும்
எங்கள் மலையில்வைகித்
துதிக்கத் தகுசண்பை நாதன்
சுருதி கடந்துழவோர்
மிதிக்கக் கமலம் முகிழ்த்தண்
தேனுண்டு, மிண்டிவரால்
குதிக்கக் குருகிரி யுங்கொச்சை
நாடு குறுகுமினே.

#1469

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, களவின் கண் தோழி தலைவனை ``வேளாண் பெருநெறி வேண்டியது`` அஃதாவது தலைவனை விருந்தினனாகத் தம் இல்லத்தில் ஓர் இரவு தங்கிச் செல்ல வேண்டியது.
மதிக்கு அத்தகு நுதல் சந்திர உவமையாகின்ற அத்துணைத் தகுதி வாய்ந்த நெற்றி.
`உவமை யாகின்ற` என்பது சொல்லெச்சம்.
மாது - தலைவி மாதொடும் வைகுதல் களவினாலாம்.
``வைகி`` என்றதனால் `இராப் பொழுது` என்பதும், அதனானே, `நாடு குறுகுதல் பொழுது புலர்ந்தபின்` என்பதும் போந்தன.
சுருது - இசை.
``அதனைக் கடந்து`` என்றது.
`நகர்க்குப் புறத்தே சென்று` என்றபடி.
கமலம் தாமரை மலர்; ஆகுபெயர், முகிழ்ந்த தேன் - கட்டு அவிழாமையால்

தங்கியுள்ள தேன்.
அதனை உண்பது வரால் மீன்.
மிண்டி - உழவர்களையும் மோதி.
குருகு - நீர்ப் பறவை.
இரியும் - அஞ்சி ஒடுகின்ற.
``துதிக்கத் தகு.
குருகு இரியும்`` என்றது கொச்சையை (சீகாழியை)ச் சிறப்பித்தது.

குறுமனம் உள்கல வாத்தமி
ழாகரன் கொச்சையன்ன
நறுமலர் மென்குழ லாயஞ்ச
லெம்மூர் நகுமதிசென்(று)
உறுமனை யொண்சுவ ரோவியக்
கிள்ளைக்கு நும்பதியிற்
சிறுமிகள் சென்றிருந்(து) அங்கையை
நீட்டுவர்; சேயிழையே.

#1470

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர்த் தலைவன் பிரியக் கருதிய பொழுது தலைவி, `இவர் எவ்விடத்தார்? இவண் மீள வருவார் கொல்லே! வாரார் கொல்லோ!` என ஐயுற்று அல மருதல் கண்டு தலைவன் `எம் இடம் அணித்து` எனக் கூறித் தேற்றியது.
`மென்குழலாய்! சேயிழையே! என் ஊர்ச்சுவர் ஒவியக் கிள்ளையை (உண்மைக் கிளி என்று நினைத்து) நும் பதியில் சிறுமிகள் அருகில் சென்று அங்கையை நீட்டுவர்; அஞ்சல்` என முடிக்க.
`அத் துணை அணித்து` என்றபடி.
குறு மனம் - விரிவடையாத மனம்.
அஃதாவது, உலகப் பற்று மிக்க மனம்.
`அத்தகைய மனங்கள் தம் உள் நினைத்தறியாத தமிழாகரன்` என்க.
நகு மதி - ஒளி வீசுகின்ற சந்திரன்.
மனை - மாளிகை.

இழைவள ராகத்து ஞான
சம்பந்த னிருஞ்சுருதிக்
கழைவளர் குன்று கடத்தலுங்
காண்பீர் கடைசியர்,நீள்
முழைவளர் நண்டு படத்தடஞ்
சாலிமுத் துக்கிளைக்கும்

மழைவளர் நீள்குடு மிப்பொழில்
சூழ்ந்த வளவளலே.

#1471

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, உடன்போக்காகச் சென்ற தலைவன் தலைவியரை எதிர்கண்டோர் தம் ஊரில் வந்து தங்க வேண்டி அவ்வூர் அணிமை கூறியது.
இழை - நூல், ஆகம் - மார்பு.
சுருதி - போல எழுகின்ற சுருதி.
`சுருதியை உடைய கழை` என்க.
கழை - மூங்கில் மூங்கிற் புழைகளில் இயற்கையாக வீசும் காற்றால் இசை தோன்றுதல் இயல்பு.
முழை - வளை.
சாலி - நெற்பயிர்.
கிளைத்தல், இங்கே, வெளிப்படச் செய்தல்.
கடைசியர் நண்டு தங்கட்கு அகப்படுத்த பொருட்டு நெற்பயிரைச் சாய்க்கும் பொழுது அப்பயிரினின்றும் முத்துக்கள் வெளிப்படுகின்றன என்க.
முத்துக் `கிளைக்கும் வயல், பொழில் சூழ்ந்த வயல்` எனத் தனித் தனி முடிக்க.
குடுமி, அதனையுடைய குன்றினைக் குறித்த ஆகுபெயர்,
`இக்குன்றினைக் கடத்தலும், இதனைச் சூழ்ந்த பொழிலை அடுத்துள்ள வயல்களைக் காண்பீர்` என்க.
மழை - மேகம்.
வயலைக் கூறவே ஊர் `அவ்விடத்து உள்ளது` என்பது தானே விளங்கும்.

வயலார் மருகல் பதிதன்னில்,
வாளர வாற்கடியுண்(டு)
அயலா விழுந்த அவனுக்
கிரங்கி யறிவழிந்த
கயலார் கருங்கண்ணி தன்துயர்
தீர்த்த கருணைவெள்ளப்
புயலார் தருகையி னைனென்னத்
தோன்றிடும் புண்ணியமே.

#1472

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதன் பொருள் வெளிப்படை.
அயலா விழுந்த அவன் - தன்னூரிலும் இல்லாமல், மாமன் ஊரிலும் இல்லாமல் அயலூரில் இறந்த அந்த வணிகன்.
அவ்வூர் திருமருகல்.
புயல் ஆந்தரு கை - மேகத்தின் தன்மை நிறைந்த கை.
அத்தன்மையாவது, கைம்மாறு கருதாது வழங்குதல்.
இத்தன்மை திருவீழிமிழலையில் காணப்பட்டது.
`கருணையாகிய வெள்ளத்தை உணவு உருவாக்கிப் பொழிந்த கையையுடைய ஞானசம்பந்தன்` என ஒருகாற் சொல்லவே புண்ணியம் வந்து சேரும் என்பதாம்.

புண்ணிய நாடு புகுவதற்
காகக் புலனடக்கி,
எண்ணிய செய்தொழில் நிற்ப(து)எல்
லாருமின் றியானெனக்கு
நண்ணிய செய்தொழில் ஞானசம்
பந்தனை நந்தமர்நீர்க்
கண்ணியன் மாடக் கழுமலத்
தானைக் கருதுவதே.

#1473

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`புண்ணிய நாடு புகுவதற்காக *(ப் பண்டு தொட்டு)* எல்லாரும் நிற்பது, புலன்களை அடக்கி, *(ஞான நூல்களில்)* முறைப் பட வைத்து எண்ணிய தொழில்களில்.
இன்று யான் எனக்கு ஏற்ற தொழிலாக நண்ணிய *(மேற் கொண்ட)* தொழில் ஞானசம்பந்தனை நினைப்பது ஒன்றே` என்க.
புண்ணிய நாடு, இறையுலகம்.
வைணவர்கள், `திருநாடு` என்பர்.
நந்து - சங்கு.
`நீர்க் கழுமலம், மாடக் கழுமலம்` எனத் தனித் தனி முடிக்க.
கண் இயல் மாடம் - கண்ணுக்கு இயன்ற *(அழகு மிக்க)* மாட மாளிகைகள்.
முன்பு ``புலன் அடக்கி,`` பின்பு, `புலன் அடக்காமல்` என்பது வருவிக்கப்படும்.
இதனால், ஞானசம்பந்தரைத் தியானிக்கும் தியான பலத்தின் சிறப்புக்

கூறப்பட்டதாம்.
வீடும், ஞானமும் வேண்டுதி ரேல்,
விரதங்களால்
வாடின் ஞானம் என் ஆவதும்! எந்தை
வலஞ்சுழி
நாடி, ஞானசம் பந்தன செந்தமிழ்
கொண்டுஇசை
பாடும் ஞானம் வல்லார் அடி சேர்வது
ஞானமே.
என அவர்தாமே அருளஇச் செய்தமை இங்கு அறியற்பாலது.

கருதத் தவவருள் ஈந்தருள்
ஞானசம் பந்தன்சண்பை
இரதக் கிளிமொழி மாதே!
கலங்கல் இவருடலம்
பொருதக் கழுநிரை யாக்குவன்;
நுந்தமர் போர்ப்படையேல்
மருதச் சினையில் பொதும்பரு
ளேறி மறைகுவனே.

#1474

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தவ அருள் - தவம் வாய்ப்பதற்கான அருள்.
இனி, ``தவ`` என்பதனை, மிகுதி குறித்த உரிச் சொல்லாகக் கொள்ளலும் ஆம்.
`சண்பை மாதே` என இயையும்.
`ரசம்` என்னும் ஆரியச் சொல் தமிழில் `இரதம்` எனத் திரிந்து வரும், `சுவை` என்பது அதன் பொருள்.
சுவை உவமைக்குப் பொருட்கும் உள்ள பொதுத் தன்மை.
கலங்கல் - அஞ்சற்க.
இவர் - நம்மைத் தொடர்ந்து ``வருகின்ற இவர்கள், ஆறலை கள்வர் முதலியோராயின் கழுநிரையில் ஏற்றுவேன்; நும் தமரது போர்ப் படையாயின், பொதும்பரும் மருதச் சினை ஏறி மறைகுவன்`` என்.
`நீ அவருடன் சென்றுவிடு` என்பது குறிப்பெச்சம்.
எனவே, இப்பாட்டு உடன் போக்கில் தமர் வரவைத் தலைவி காட்டியவிடத்துத் தலைவன் தலைவிக்குக் கூறியதாம்.
சினை - கிளை.
பொதும்பர் - மரச் செறிவு.
பொருது - போர் செய்து.
`அக்கழு` என்னும் சுட்டு, சமணர் ஏறிய கழுவைச் சுட்டியது.

மறைமுழங் குங்குழ லார்கலி
காட்ட**,** வயற்கடைஞர்
பறைமுழங் கும்புக லித்தமி
ழாகரன் பற்றலர்போல
துறைமுழங் குங்கரி சீறி**,**
மடங்கள் சுடர்ப்பளிங்கின்
அறைமுழங் கும்வழி நீவரிற்
சால வரும்பழியே**.**

#1475

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, தோழி வரைவு கடாதல் வேண்டி ஆற்றினது அருமை கூறித் தலைவனைக் குறி வரல் விலக்கியது.
மறை முழங்கும் குரல், அந்தணர்களுடையது, `குழல்` என்பது பாடம் அன்று.
ஆர்கலி - கடல்.
என்றது அதன் தன்மையை.

அஃதாவது ஒலி.
பற்றலர் - வருதல்போல நீவரின்` என்க.
`தீயூழ் உடையவரே இவ்வழியில் வருவர்` என்பதாம்.
துறை - கிளை வழிகள்.
``சீறி`` என்பது, `ஞாயிறு பட்டு வந்தான் என்பது போலக் காலப் பொருள் பற்றி வந்த செயவென் எச்சத் திரிபு.
மடங்கல் - சிங்கம்.
அறை - குகை.
மலைகளில் பளிங்குப் பகுதிகள் இருத்தல் இயல்பு.
`அரும் பழி சாலவரும்` என ஒரு சொல் வருவித்து முடிக்க.
இனி, மோனை நயம் கருதாது, `பழி சால வரும்` என முடித்தலும் ஆம்.
`தலைவனே! நீ வரின்` என விளி வருவித்துக் கொள்க.

பழிக்கே தகுகின்ற(து) இன்(று)இப்
பிறைபல் கதிர்விழுந்த
வழிக்கே திகழ்தரு செக்கரைக்
கொச்சை வயவரென்னும்
மொழிக்கே விரும்பி முளரிக்
கலமரு மோவியர்தம்
கிழிக்கே தருமுரு வத்திவள்
வாடிடக் கீள்கின்றதே.

#1476

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, கைக்கிளைத் தலைவியது ஆற்றாமை கண்டு தோழி கங்குற் காலத்தில் பிறையைப் பழித்துக் கூறியது.
இப் பிறை, கொச்சைவயவர் எனத் தானும், பிறரும் மொழிகின்ற மொழியையே விரும்பி, (அவர் சூடியுள்ள) தாமரை மாலையைப் பெறுதற்கு அலமருகின்ற இவள் வாடும்படி கதிர் விழுந்த பின்பு விளங்குகின்ற செவ்வானத்தைக் கீள்கின்றதே; (இது) இன்று பழிக்கே தகுகின்றது` என இயைத்து முடிக்க.
`இயல்பாகவே மெலிகின்றவரை நலிதல் பெருங் கொடுமை` என்பாதம்.
தகுகின்றது - ஏற்புடைத்தா கின்றது.
``பழிக்கே`` என்னும் பிரிநிலை ஏகாரத்தால், `புகழுக்குச் சிறிது தக்க தாயிற்றில்லை` என்பது பெறப்பட்டது.
பல் கதிர் - பல கிரணங்களை யுடைய சூரியன்.
விழுந்த வழி - மறைந்த வழி.
வழிக்கே - வழியின் கண்ணே; உருபு மயக்கம்.

செக்கர் - செவ்வானம்.
கொச்சைவயம் - சீகாழி.
முளரி, இருமடி யாகுபெயர்.
`அலமரும் இவள், உருவத்து இவள்` எனத் தனித் தனி முடிக்க.
``கிழிக்கு`` என்பதும் ``வழிக்கு`` என்பதுபோல உருபு மயக்கம்.
தரும் - `எழுதி காட்டுகின்ற உருவம்`` என்பது பாடமாயின், `இவளை` என்னும் இரண்டன் உருபு தொகுக்கப்பட்ட தாம்.
கீள்கின்றது - கிழிக்கின்றது; கிழித்துக் கொண்டு புறப்படா நின்றது.
`ஏனோ` என்பதகு சொல் லெச்சம்.
இது கேட்டுத் தலைவி, `இஃது இயற்கை` என்னும் உணர்வால் ஆற்றுவாள் ஆவது பயன்.

கீளரிக் குன்றத் தரவ
முமிழ்ந்த கிளர்மணியின்
வாளரிக் கும்வைகை மாண்டன
ரென்பர் வயற்புகலித்
தாளரிக் கும்அரி யானருள்
பெற்ற பரசமய
கோளரிக் குந்நிக ராத்தமிழ்
நாட்டுள்ள குண்டர்களே.

#1477

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பரசமயே கோளரிக்கு (ச் சற்றும்) நிகராகாத குண்டர்கள் வைகைக் கரையில் மாண்டனர் என்பர்` என இயைத்து முடிக்க.
கீள் அரிக் குன்றம் - பிற விலங்குகளைக் கிழிக்கின்ற சிங்கங் களை யுடைய மலை.
``கிளர் மணியின் வாள் அரிக்கும் வைகை`` என்பதை, `கிளர் வாளின் மணி அரிக்கும் வைகை` என மொழி மாற்றி உரைக்க.
வாள் - ஒளி.
அரித்தல் - கொழித்தல்.
தாள் அரிக்கும் அரியான் - தனது திருவடிகள் திருமாலும் காண அரியன ஆயினவன்; சிவபெருமான்.
``தாள் அரியான்`` எனச் சினைவினை முதல்மேல் நின்றது.
`நிகராக் குண்டர்கள்` என இயையும்.
``கோளரிக்கும்`` என்பதன் ஈற்று மகரமெய்கெட, நகர ஒற்று மிக்கது விரித்தல் விகாரம்.

குண்டகழ் சூழ்தரு கொச்சைத்

தலைவன்றன் குன்றகஞ்சேர்
வண்டக மென்மலர் வல்லியன்
னீர்!வரி விற்புருவக்
கண்டக வாளி படப்புடை
வீழ்செங் கலங்கலொடும்
புண்தகக் கேழல் புகுந்ததுண்
டோ?நுங்கள் பூம்புனத்தே.

#1478

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, களவியலில் தலைவன் தோழி, தலைவி இருவரும் உள்ள இடத்துச் சென்று தோழி தன் குறிப்பையறிதற் பொருட்டு கெடுதி வினாயது கெடுதி - தொலைந்து போன பொருள் அதைப் பற்றி வினாவியது என்க.

குண்டு - ஆழம், `குன்றகம் சேர் மலர் வல்லி` என்க.

வல்லி - கொடி.

அன்னீர் - போன்றவர்களே.

வரி வில் - விரிந்து கட்டப்பட்ட வில்.

அது போலும் உங்களது புருவத்தைச் சார்ந்துள்ள உங்களது, கண் தக - கண்கள் பாய்வது போல, வாளி பட - *(யான் எய்த)* அம்பு பட்டமையால்.

செங் கலங்கல் - குருதி.

புண் தக - புண் பொருந்த.

கேழல் - காட்டுப் பன்றி.

`வேழம்` எனப் பாடம் ஓதலும் ஆம்.

புனத்தெழு கைம்மதக் குன்றம
தாயங்கொர் புன்கலையாய்,
வனத்தெழு சந்தனப் பைந்தழை
யாய்,வந்து வந்தடியேன்
மனத்தெழு பொற்கழல் ஞானசம்
பந்தன்வண் கொஞ்சையன்னாள்
கனத்தெழு கொங்கைக ளாயல்கு
லாய்த்திவர் கட்டுரையே.

#1479

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, முன்பாட்டை அடுத்துப் பாங்கி, மதியுடம்பட்டது.

அஃதாவது, `தலைவன் கெடுதி வினாவ இங்கு வரவில்லை; தலைவியை அடைதற்கு என் துணையை வேண்டியே இங்கு வந்தான்` என பாங்கி உணர்ந்தது.
`இவரது கட்டுரை (பேச்சு) இவர் இழந்த பொருள் முதலில் யானையாய் இருந்து, பின்பு மானாகி, அதன்பின்பு மகளிர் உடுத்தும் சந்தனத் தழையை வழங்குவதாகி முடிவில் தலைவியது கொங்கை களாய், முடிவில் அவளது அல்குலாய்விட்டது என்க.
முதலில் இவர், `இவ் வழியாக அம்பு பட்ட ஓர் யானை வந்ததா` என்றார்; அடுத்து `மான் வந்ததா என்றார்; அடுத்து எதையும் தேடுவதை விடுத்து, `இத் தழை உங்கட்கு ஆகுமோ என்றார்.
பின்பு அப்படியும், இப்படியும் போய்த் தலைவியை முன்னும், பின்னும் நோக்கி நிற்கின்றார்; (நன்கு தெரிகின்றது இவரது எண்ணம்) என்பதாம்.
கைக் குன்றம், யானை.
காலை - மான்.
தழை - மகளிர் உடையின் மேல் அழகாகக் கட்டிக் கொள்ளுதற்குப் பூவும், பச்சிலையும் விரவத் தொடுத்து ஆக்கும் ஓர் உடைச் சிறப்பு.
இதனைத் தலைவன் `தலைவிக்கு` எனக் கொணர்ந்து, பெறும்படி பாங்கியை வேண்டுதல் ஒரு முறை.

கட்டது வேகொண்டு கள்ளுண்டு,
நுங்கைக ளாற்துணங்கை
இட்டது வேயன்றி, யெட்டனைத்
தானிவ ளுள்ளுறுநோய்
விட்டது வே?யன்றி வெங்குரு
நாதன்றன் பங்கயத்தின்
மட்டவிழ் தார்கொண்டு சூட்டுமின்,
பேதை மகிழ்வுறவே.

#1480

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, தலைவியது வேறுபாடு கண்டு தாயர் வேலனை வினாவி வெறியாட்டெடுக்கத் தோழி அதற்கு உடன்படாள் என்பது பற்றிச் செவிலிக்குப் பட்டாங் குரைத்து வெளிவிலக்கி அறத்தொடு நின்றது.
கட்டதுவே கொண்டு - குறிகேட்டுப் பார்த்து, அது, பகுதிப் பொருள் விகுதி.
சிறிது நெல்லை அள்ளி முறத்தில் இட்டு, இரண்டு இரண்டாக எடுத்து வைத்துக் குறிபார்ப்பதை, `கட்டு` என்றும், அப்படிப் பார்க்கும் குறித்தியை, `கட்டுவிச்சி` என்றலும் பழைய வழக்கங்கள்.

அங்ஙனம் குறிபார்த்து, `தலைவியது வேறுபாடு தெய்வத்தான் ஆயது` எனக் கொண்டு மனைக்குள் வெறியாட்டு எடுக்கப்பட்டது.
வெறி - செம்மறியாடு.
அதனைப் பலியிட்டுக் கொண்டாடுவது வெறியாட்டு.
துணங்கை - இரு கைகளாலும் விலாக் களைப் புடைத்து ஆடும் ஒருவகைக் கூத்து, வேலனைச் சார்ந்தவர்கள் ஆடிய இக்கூத்தை அதனைச் செய்வித்தோர் ஆடியதாக அவர்மேல் ஏற்றிக் கூறினாள், இகழ்ச்சி தோன்றுதற் பொருட்டு.
`சுணங்கை` என்பது பாடமன்று.
``நீங்கள் துணங்கை யாடியதைத் தவிர, இவளது நோய் நீங்கிற்றோ`` என்றாள்.
அன்றி ``இதை விடுத்து, இவள் மகிழ்வுற, வெங்குறு நாதன்றன் தார் கொண்டு சூட்டு மின்`` என முடிக்க.
ஐந்திணைகளிலன்றி கைக்கிளைக்கும் தலைவி ஆற்றாமை பற்றி வரும் இன்னோரன்ன சில துறைகள் பொதுவாம் என்க.
வெங்குரு - சீகாழி.
மட்டு அவிழ் - தேனோடு மலர்கின்ற சினைக்குரிய இவ்வினை முதல்மேல் ஏற்றப்பட்டது.
தார் - மாலை.
பேதை, தலைவி.

உறவும், பொருளுமொண் போகமுங்
கல்வியுங் கல்வியுற்ற
துறவும், துறவிப் பயனு
மெனக்குச் சுழிந்தபுனல்
புறவும், பொழிலும் பொழில்சூழ்
பொதும்புந் ததும்பும்வண்டின்
நறவும், பொழிலெழிற் காழியர்
கோன்திரு நாமங்களே.

#1481

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`காழியர் கோன் திரு நாமங்களே எனக்கு, உறவு, பொருள் முதலிய அனைத்தும்` என்பதாம்.
`கல்வியால் உற்ற` என மூன்றாவது விரிக்க.
``துறவி`` என்பதும் ``பிறவி` என்பது போலத் தொழிற் பெயர்.
இப்பொருட்கு `வி` விகுதி.
துறந்தவனைக் குறிக்குமிடத்தில் வகர ஒற்றுப் பெயர் இடைநிலையும்,

இகரம் விகுதியுமாகும்.
புறவு, முல்லை நிலம், ``பொழில்`` என்றது, முல்லை நிலத்துச் சிறுகாடுகளை, அவகைளால் சூழப்பட்ட பொதும்பு, நகர்ப்புறச் சோலை.
ததும்புதல், இங்கே மிகுதியாக மொய்த்தல்.
வண்டின் - வண்டுக் கூட்டத்தில்.
நறவு - தேன்.
``நறவும்`` என்னும் உம்மை, `வண்டுக் கூட்டங்களேயன்றி, அவற்றிடையே நறவும் பொழிகின்ற காழி` என இறந்தது தழுவிய எச்சம்.

நாமுகந் தேத்திய ஞானசம்
பந்தனை நண்ணலர்போல்
ஏமுக வெஞ்சரஞ் சிந்திவல்
இஞ்சி யிடிபடுக்கத்
தீமுகந் தோன்றிகள் தோன்றத்
தளவம் முகையரும்பக்
காமுகம் பூமுகங் காட்டிநின்
றார்த்தன காரினமே.

#1482

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, தலைவன் வரைவிடை வைத்துப் பொருள் பிரிந்த காலத்துக் கார்ப் பருவங் கண்டு தலைவி இரங்கியது.
`நாம், ஞானசம்பந்தனை நண்ணலர் போல் எம் உகக் கார் இனம் சரம் சிந்தி இஞ்சியை இடிக்கவும், தோன்றிகள் தீமுகம் தோன்றவும், தளவம் முகை அரும்பவும் கா முகத்தில் பூ முகத்தைக் காட்டி நின்று ஆர்த்தன` எனக் கூட்டியுரைக்க.
`ஏரம்` என்பது, `ஏம்` எனக் குறைந்து நின்றது.
ஏமம் - பாதுகாவலம்.
உக - கெடும்படி.
சரம்- சரமாரி போலும் மழை மாரி.
இஞ்சி - மதில்.
இடி படுத்தல் - இடியை வீழ்த்தும் முகத்தால் இடிபாட்டினை உண்டாக்குதல்.
தோன்றி - தோன்றிச் செடி.
இவற்றின் பூ சிவப்பாய் இருக்கும் ``தோன்ற`` எனச் சினைவினை முதல்மேல் நின்றது.
தளவம் - முல்லைக் கொடி.

கா முகம் - சோலைகளின்.
பூ முகம் காட்டுதல் - பூப் பூக்கச் செய்தல்.
தோன்றி பூத்தல் முதலியவை கார் காலத்தில் நிகழும் நிகழ்ச்சிகள்.
கார் காலம் வந்து நாள் பல ஆயினமையை இவை குறிக்கும்.
`தலைவன் இன்னும் வந்திலர்` என்பது குறிப்பெச்சம்.

கார்அங்(கு) அணைபொழிற்
காழிக் கவுணியர் தீபன்,நல்லூர்ச்
சீர்அங்(கு) அணைநற் பெருமணந்
தன்னில் சிவபுரத்து,
வார்அங்(கு) அணைகொங்கை
மாதொடும் புக்குறும் போது,வந்தார்
ஆர்அங்(கு) ஒழிந்தனர், பெற்றதல்
லால்,அவ் அரும்பதமே.

#1483

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`கவுணியர் தீபன், நல்லூர் பெருமணந் தன்னில் மாதொடும் சிவபுரத்துப் புக்குறும் போது, வந்தார் அவ் அரும்பதம் பெற்றதல்லால், ஆர் அங்கு ஒழிந்தனர்` எனக் கூட்டியுரைக்க.

அரும்பத மாக்கு மடயரொ(டு)
அஞ்சலித் தார்க்கரிய
பெரும்பத மெய்தலுற் றீர்!வந்
திறைஞ்சுமின், பேரரவம்
வரும்ப நான்மறைக் காழித்
தலைவன் மலர்க்கமலத்
தரும்பத ஞானசம் பந்தனென்
னானைதன் தாளிணையே.

#1484

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அரும் பதம் - அரிய சொல் என்றது துதிமொழியை அவைகளை ஆக்குதல், துதித்தல்.
எனவே, `துதி செய்யும் இடயரொடு, அஞ்சலி செய்தார்க்கும் அடைதற்கரிய பெரும்பதம்` என்றவாறாம்.
பெரும்பதம் - வீடு பேறு.
`பெரும்பதம் எய்தலுற்றீர்! வந்து என் ஆனை தன் தாளிணையே

இறைஞ்சுமின்` என இயைத்து முடிக்க.
பேர் அரவம் வரும் பதம் - பெரிய ஆரவாரம் எழுகின்ற இடம்.
`பதமாகிய காழி` என்க.
``பை அரவு அல்குல்`` *1* என்பதில், `அரவப் பை` என்பது `பை யரவு` எனப் பின் முன்னாகி நின்றது போல, `கமல மலர்` என்பது பின் முன்னாக மாறி, ``மலர்க் கமலம்`` என நின்றது.
இலக்கணப் போலி மொழி.
`பத சம்பந்தன்` என இயையும்.
``எண் ஆனை`` என்பது காதற் சொல்.
ஏகாரம், பிரிநிலை.
`வேறு முயலல் வேண்டா` என்பதாம்.

தாளின் சரணந் தருஞ்சண்பை
நாதன் தரியலர்போல்
கீளின் மலங்க விலங்கே
புகுந்திடும், கெண்டைகளும்,
வாளுந் தொலைய மதர்த்திரு
காதி னளவும்வந்து
மீளுங் கருங்கண்ணி மின்புரி
யாவைத்த மென்னகையே.

#1485

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கெண்டைகளும்`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.
இப்பாட்டு, `பாங்கன் நீ இன்னையாதற்குக் காரணம் என்னை` வினாயதற்குத் தலைவன் உற்றது உரைத்தது.
சரணம் - அடைக்கலம்.
தரியலர் - பகைவர்.
`தரியலர் போல் மலங்க` என்க.
மலங்குதல் - தலங்குதல்; ``மலங்கினேன் கண்ணின் நீரை மாற்றி`` *1* என்பது காண்க.
கீளுதல் - கிழித்தல்; உள்ளத்தைக் கிழித்தல்.
`கீளுதலால் மலங்க` என்பதாம்.
விலங்கே - குறுக்கே.
(யான்) `கீளின் மலங்க, கருங் கண்ணி வைத்த மென்னகை விலங்கே புகுந்திடும்` என இயைத்துக் கொள்க.
தொலைய - தோற்க.
மதர்த்தல் - களித்தல்.

மின் - ஒளி புரியா - புரிந்து; வெளிப்படுத்தி.

நகுகின்ற முல்லைநண் ணாரெரி
கண்டத்(து) அவர்கவர்ந்த
மிகுகின்ற நன்னிதி காட்டின
கொன்றை; விரவலரூர்
புகுகின்ற தீயெனப் பூத்தன
தோன்றி; புறவமன்கைத்
தகுகின்ற கோடல்கள்; அன்பரின்
றெய்துவர் கார்மயிலே.

#1486

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, தோழி தலைவியைப் பருவம் காட்டி வற்புறுத்தியது.
`கார் மயிலே! முல்லை நகுகின்ற; கொன்றை நிதி காட்டின; தோன்றி தீயெனப் பூத்தன; கோடல் கைத் தகுகின்ற; அன்பர் இன்று எய்துவர்` என இயைத்து முடிக்க.
`கார் காலம் வந்துவிட்டது; ஆகவே அவர் வந்துவிடுவார்` என்பதாம்.
``நகுகின்ற, தகுகின்ற`` என்பன, அன் பெறா அகர ஈற்று அஃறிணைப் பன்மை வினைமுற்றுக்கள்.
நண்ணார் - பகைவர்.
கண்டம் - நாடு.
`நண்ணார் நாடு` என்க.
`அது நம் அரசனைப் பகைத்தமையால் தீப்பற்ற எரிவதாயிற்று` என்பதாம்.
செய்யுளாகலின், பின்வரும் அன்பரைச் சுட்டும்.
`அவர்` என்னும் சுட்டுப் பெயர் முன் வந்தது.
நிதி, பொன் `கொன்றை பொன் காட்டின` என்பதாம்.
விரவலர் ஊர், மேற்குறித்தவர்களது ஊர்கள்.
தோன்றி - தோன்றிச் செடி.
புறவ மன் - முல்லை நிலமாகிய அரசன்.
கோடல்கள்- காந்தட் பூக்கள்.
`அவை அரசன் கைகளைப் போலத் தோன்றுகின்ற என்பதாம்.
இவையெல்லாம் கார் கால நிகழ்ச்சிகள்.
கார் மயில் - கார் காலத்தில் ஆடும் மயில்.
மயிலே - மயில் போன்றவளே! உவமை யாகுபெயர்.

மயிலேந் தியவள்ளல் தன்னை
யளிப்ப மதிபுணர்ந்த

எயிலேந் தியசண்பை நாத
னுலகத்(து) எதிர்பவர்யார்?
குயிலேந் தியபொழிற் கொங்கேந்
தியகொம்பி னம்புதழீஇ
அயிலேந் தியமலர் கண்டுள
னாய்வந்த அண்ணலுக்கே.

#1487

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(இப்பாட்டிற்கு இரண்டு வகையாகப் பொருள் சொல்லப்படுகின்றது. முதலாவது பொருள், ஞானசம்பந்தரை முருகன் அவதாரமாகக் குறிப்பது. இரண்டாவது பொருள், அவ்வாறன்றிப் பொதுவாய் நிற்பது.)

முதலாவது உரையில் ``மயில் ஏந்திய வள்ளல்`` என்பதைப் பின் வருகின்ற ``தன்`` என்பதனோடு இயைக்காமல், ``அளிப்ப`` என்பதன்பின் `வந்து` என ஒருசொல் வருவித்து, `வந்த மதி புணர்ந்த சண்பை நாதன்` என இயைத்து, ``மதி புணர்ந்த - ஞானத்தைப் பெற்ற`` எனப் பொருள் உரைக்கப்படும்.

இனி, `முருகனைப் புதிதாக ஞானம் பெற்றதாக உரைத்தல் சிறப்பன்று` எனக் கொண்டு, மதியைச் சந்திர னாக்கி, `சந்திரன் தவழ்கின்ற எயில்` என எயிலுக்கு அடையாக்கியும் உரைக்கப்படும்.

இதில் `வந்து` என்பது உருவிக்கப்படாமல் `வந்த` என்பது வருவிக்கப்படும்.

மயில் ஏந்திய வள்ளல் - மயிலால் தாங்கப்பட்ட வள்ளல்; முருகன், ஐ - தந்தை.

முதல் உரையிற் கொள்ளும் பொருள், ஒரு சொல்லை வருவித்தல். ``மதி புணர்ந்த`` என்பதை வெறும் ஓர் அடை மொழியாக்குதல் ஆகிய இடப்பாடுகள் உள்ளன.

இரண்டாவது உரையில், ``மயிலேந்திய வள்ளல் தன் ஐ`` என்பது நேரே ஒரு தொடராகி, `சிவபெருமான்` எனப் பொருள் தந்து, அவன் அளிப்ப ஞானம் பெற்ற சண்பை நாதன்` என நேரே சென்று எளிதில் விளங்குகின்றது.

முதலிற் கண்டவாறு உரை செய்கின்றவர்கள், `ஞான சம்பந்தரை முருகன் அவதாரமாக நம்பியாண்டார் நம்பிகள் சொல்லி இருப்பதைச் சேக்கிழார் சொல்லவில்லை` என்பர்.

`ஞானசம்பந்தர் முருகன் அவதாரமே` என ஒட்டக் கூத்தர் தமது தக்க யாகப் பரணியில் மிக வலியுறுத்திக் கூறினார்.

பிற் காலத்திலும் அருணகிரி நாதர், திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள்

இக் கருத்தைக் கொண்டிருந்தனர்.
துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அவ்வாறு எங்கு கூறவில்லை.
இவையெல்லாம் இப்பாட்டில் ``சண்பை நாதன்`` என்னும் அளவில் நிற்பன.
பின் உள்ளவை அகப் பொருள் துறையில் தலைவனைப் பகற்குறி விலக்கி, இரவுக்குறி நேரும் தோழி, அதற்குத் தலைவியை உடன்படுவித்தது.
கொங்கு - தேன்.
`கொம்பு போலும் அம்பு` என்க.
`கொடிய அம்பினைப் பூங்கொம்பு போலக் கொள் பவன்` எனத் தலைவனது ஆண்மையைக் குறிக்க இவ்வாறு கூறினாள்.
அயில் ஏந்திய மலர்; வேல்போலத் தோன்றும் மலர்கள், இவை கரும்பின் பூக்கள்.
தோடுகொள் வேலின் தோற்றம் போல
ஆடுகட் கரும்பின் வெண்பூ நுடங்கும்
என்றது காண்க.
`கரும்பினது வேல்போலும் பூக்களைக் கண்டுளனாய் வந்த அண்ணல்` என்றது `எதிர்ப்பவர் வேல்களையும் பூக்கள்போல் எண்ணி அழிப்பவன்` என்னும் குறிப்பினைத் தோற்றுவித்தது.
`அண்ணலுக்கு` என்னும் நான்கனுருபை இரண்டனுருபாகத் திரித்து அதனை, ``எதிர்ப்பவர் யார்`` என்பதனோடு முடிக்க.
`எதிர்பவர்` எனப் பாடம் ஓதலும் ஆம்.
நம் அண்ணலைத் தகைவார் ஒருவர் இனி இதனை, ஒருவழித் தணந்த தலைமகன் வரவு நீட்டிப்ப, `அவற்கு ஏதம் விளைந்தது கொல்லோ` என நினைந்து கவன்ற தலைவியைத் தோழி, `இஃது ஆகாது` என ஆற்றுவித்ததாகக் கொள்ளலும் ஆம்.

அண்ணல் மணிவளைத் தோளரு
காசனி சண்பையன்ன
பெண்ணி னமிர்தநல் லாள்குழல்
நாற்றம் பெடையொடுபூஞ்
சுண்ணந் துதைந்தவண் டே!கண்ட
துண்டுகொல்? தூங்கொலிநீர்த்
தண்ணம் பொழிலெழிற் காசினி
பூத்தமென் தாதுகளே.

#1488

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, ``கொங்குதேர் வாழ்க்கை`` எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாட்டின் பொருளையே உடையது.
1 அப்பாட்டின் கருத்தை நச்சினார்கினியர் பலவாகக் கூறுவார்.
2 அண்ணல் - பெருமை.
பெண்ணின் அமிர்த நல்லாள் - பெண்களுக்குள்ளே அமிர்தம் போல்வளாய அழகு மிக்கவல்.
சுண்ணம், இங்கே, மகரந்தம், ``பெடையோடு பூஞ் சுண்ணம் துதைந்த வண்டே`` என்பதை முதலிற் கொள்க.
தூங்கு ஒளி - தொடர்ச்சியாய் எழுகின்ற ஒலி.
``நீர்`` என்பது ஆகுபெயராய், அதனையுடைய பொய்கையைக் குறித்தது.
`பொய்கையை யுடைய பொழில்` என்க.
காசினி - பூமி.
தாது - மகரந்தம், இதுவும் ஆகுபெயராய் அதனை யுடைய பூக்களைக் குறித்தது.
இதன்பின் `தாதுகளில்` என ஏழாவது விரித்து, `வண்டே! காசினியில் பொழில்களில் பூத்த தாதுகளில் பெண்ணின் அமிர்தநல்லாள் குழல் நாற்றம் கண்டதுண்டுகொல்` என ஐயத்து முடிக்க.

தாதுகல் தோய்த்தநஞ் சந்தாந்
யார்சட லம்படுத்துத்
தூதையிற் சிக்கங் கரஞ்சேர்த்து
வாளா துலுக்குகின்றீர்;
பேதியிற் புத்தர்கள்! வம்மின்;
புகலியர் கோனன்னநாட்
காதியிட் டேற்றும் கழுத்திறம்
பாடிக் களித்திடவே.

#1489

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`போதியிற் புத்தர்களே! நீவிர் எம் சந்நியாசியார் போலவே காவியுடுத்துச் சமணர்களைத் துன்புறுத்தும் வகையில் அவர்களது உறிகளைக் கைப்பற்றி வீணாக வம்பு செய்கின்றீர்கள்; (அவர்களை வாதத்தில் வென்றபாடில்லை.
எம்முடன் சேர்ந்து) அவர்களை அன்று புகலியர் கோன் வாதில் வென்று கழுவேற்றிய திறத்தைப் பாடுதற்கு வாருங்கள்`` என்பது இப்பாட்டின் பொருள்.
போதி - அரசமரம்.

இது புத்தர்கள் தெய்விகத் தன்மை உடையதாகக் கருதி வழிபட்டிருப்பர்.
``போதி`` என்றது அதன் நிழலைக் குறித்தது.
``போதியிற் புத்தர்கள்`` என்பதை, `பறம்பிற்பாரி` என்பது போலக் கொள்க.
புத்தர்கள், அண்மை விளி.
தாது கல் - காவிக் கல்.
`சந்நியாசியார்` என்பது `சந்நாசியார்` என மருவி வந்தது.
அஃது ஆகுபெயராய் அவர் உடுக்கும் ஆடையைக் குறித்தது.
சடலம் படுத்தல் - உடம்பிற் பொருந்த வைத்தல்.
தூதை - மட் பாண்டம்.
இதில் கஞ்சி ஊற்றி வைக்கப்படும்.
சிக்கம் - உறி.
`தூதையினை உடைய சிக்கம்` என்க.
சமண முனிவர்கள் தாம் உண்ணும் கஞ்சியை இவ்வாறு உறியில் வைத்துக் கையிலே கொண்டிருப்பர்.
கீழே புறத்தே வைத்தால் ஈ, எறும்பு முதலிய சிற்றுயிர்கள் கஞ்சியில் வீழ்ந்து மாண்டு விடுமாம்.
`சிக்கத்தில் கரம் சேர்த்து` என்க.
கரம் - புத்தர்கள் கை.
துலக்குதல் - வம்பு பேசுதல்.
`சும்மா தும்பு துலுக்குகிறான்` என்னும் வழக்கம் இப்பொழுதும் நாட்டில் உண்டு.
காதுதல் - இங்கே, காய்தல் அது வாதில் வெல்லுதலைக் குறித்தது.
சமணரும், புத்தரும் வதத்தை இகழ்தலில் ஒன்று படினும் பிற வகையில் வேறுபட்டுத் தம்முட் கலாய்ப்பர்.
அது பற்றி, ``ஞான சம்பந்தர் காலத்திற்றானே `சமண் சமயம் பொய்ச் சமயம்` என்பது நாடறிய மெய்ப்பிக்கப்பட்டு விட்டிருக்க, இன்று புத்தர்கள் ஏன் அந்தச் சமயத்தை `பயனற்றது` எனக் காட்ட முயல வேண்டும் என்கின்ற முறையில் அமைந்தது இப்பாட்டு.
துறவுக் கோலத்தால் புறத்தே சமணரைப் போல இல்லாமல் எம்மைப் போல உள்ள நீவிர், சமணரை வென்ற வெற்றியைப் பாடுவதிலும் எங்களோடு சேர்ந்து கொள்ள லாமே` என்பது தோன்ற, ``நம் சந்நாசியார் சடலம் படுத்து`` என்றார்.
பௌத்தத் துறவிகள் சிவந்த ஆடையை உடுத்துதல், பட்டைத் துவராடைப் படிமம் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
என அருளிச் செய்தமையாலும் அறியலாம்.

படிமம் - துறவுக் கோலம்.
நாம் உரை காணும் பாட்டில் ``தாதுகல் தோய்த்த`` என்பது நம் சந்நாசியார் ஆடையின் இயல்பு கூறியது.
`பௌத்தருடையது பட்டைத் துவராடையாயினும் நிறத்தால் ஒருபடை ஒக்கின்றது` என்பது கருத்து.

களியுறு தேன்தார்க் கவுணியர்
தீபன் கருதலர்போல்
வெளியுறு ஞாலம் பகலிழுந்
தால்,விரை யார்கமலத்(து)
அளியுறு மென்மலர்த் தாதளைந்(து)
ஆழி யழைப்பவரும்
துளியுறு வாடையி தாம்மட
மானைத் துவளவிப்பதே.

#1490

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, பிரிவுணர்த்திய தலைவனுக்குத் தோழி தலைவி ஆற்றாளாவது கூறிச் செலவழுங்குவித்தது.
கவுணியர் தீபன் கருதலர் *(பகைவர்)* ஞான ஒளியை இழப்பதுபோல ஞாலம் பகற் பொழுதை இழந்தால்` என்க.
களி உறு - வண்டுகள் உண்ணக் களிப்பைத் தருகின்ர.
வெளி உறு ஞாலம் - பகற் காலத்தில் ஒளியைப் பெற்று மகிழ்கின்ற உலகம் விகை - நறுமணம்.
அளி - வண்டு.
தாது அணைந்து - மகரத்தில் மூழ்கி.
ஆழி அழைப்ப - கடல் ஒளியை உண்டாக்கும்படி.
துளி உறு வாடை - மழைத் துளியோடு பொருந்தி வரும் வாடைக் காற்று.
மட மான் - தலைவி `ஞாலம் பகலை இழந்தால் *(இரவில்)* மட மானைத் துவள்விப்பது வாடையாகிய இதுவாம்` என இயைத்து முடிக்க.
`அதுபொழுது எனக்கு அவளை ஆற்றுவித்தல் அரிது` என்பது குறிப்பெச்சம் இதனால் தலைவன் செலவழுங்குதல் பயன்.

தேறும் புனல்தில்லைச் சிற்றம்
பலத்துச் சிறந்துவந்துள்
ஊறு மமிர்தைப் பருகிட்
டெழுவதொ ருட்களிப்புக்
கூறும் வழிமொழி தந்தெனை
வாழ்வித் தவன்கொழுந்தேன்

நாறும் அலங்கல் தமிழா
கரனென்னும் நன்னிதியே.

#1491

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தேறும் புனல் - தெளிவாகிய நீர் வழிமொழி ``சுரருலகு நரர்கள் பயல்`` எனத் தொடங்கும் `வழிமொழித் திருவிராக`த் திருப்பதிகம் *1* .
அலங்கல் - தாமரை மலர் மாலை.
`எந்தத் தலத்தில் உள்ளவரும் தில்லைப் பெருமானே` என்பது பற்றி, அத்திருப்பதிகத்தின் வழிப் பிரமாபுரப் பெம்மானை உள்க எழும் இன்பத்தைத் தில்லைச் சிற்றம்பலத்தினின்றும் வந்து ஊறும் அமிர்தத்தைப் பருகுவதனால் உண்டாகும் இன்பமாகக் கூறினார்.

நிதியுறு வாரற னின்பம்வீ
டெய்துவ ரென்னவேதம்
துதியுறு நீள்வயல் காழியர்
கோனைத் தொழாரினைய
நதியுறு நீர்தெளித்(து) அஞ்ச
லெனவண்ண லன்றோவெனா
மதியுறு வாணுதல் பாதம்
பணிந்தனள் மன்னனையே.

#1492

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, தோழி செவிலிக்குப் புனல்தரு புணர்ச்சியால் அறத்தொடு நின்றது.
``-அவனைத் தொழுபவர் அறம் முதலிய நான்கையும் எய்துவா என வேதம் துதித்தலைப் பொருந்திய காழியர் கோன்`` என்க.
செய்யுள் நோக்கி நிதி முற் கூறப்பட்டது.
`நதியின் கண், தொழாதார் இனையும்படி *(வருந்தும்படி)* உறு நீர்` என உரைக்க.
``அந்நீரின்கண் அகப்பட்டுக் கலங்கிய உன் மகளைத் தலைவன் ஒருவன் கண்டு எடுத்துக் கரை சேர்த்துத் தெளிவித்து, `அஞ்சற்க` என்று சொல்ல, இவள், `அண்ணலே*!* இது நன்றோ` எனச் சொல் அவனைப் பாதம் பணிந்தால்`` எனத் தோழி கூறினாள், இதனால், ``உற்றாற்கு *(மெய் தீண்டினவனுக்கு)* உரியர் பொற்றொடி மகளிர்`` என்னும் முறைப்படி உன் மகள் இனி அவனுக்கே உரியள்`` என்பது குறிப்பால்

தோன்றக் குறினாள்.
வாள நுதல், தலைவி.
மன்னன் - அரசகுலத்தின னாய தலைவன.
``நன்றோ`` என்றதில் ஏகாரம் எதிர்மறைப் பொருட்டாய், ``கன்னியை யுடையாள் ஒருத்தியை அரசர் குலத்தினா ராகிய நீவிர் திடுமெனப் போந்து தீண்டியது நன்றன்று`` எனவும், ஓகாரம் சிறப்புப் பொருட்டாய் ``கன்னிப் பெண்ணைத் தீண்டும் முன் அவளை மணந்து கொள்ளத் துணிந்தே நெறியுடைய ஆடவர் தீண்டுவர் ஆதலின், `நீரும் அத்துணிவினை யுடையீர்` என்பதனை அறிய நன்றா கின்றது`` எனவும் இருபொருளும் தந்தது.
இவ்வாற்றால் முதலில், `நின் மகள் நம் குடிக்குப் பழியுண்டாக ஒழுகினாள் அல்லள்` எனவும் `தெய்வத்தால் நிகழ்ந்த இந்நிலைமையால் நின்மகள் குடிப் பிறந்தார்க்கு உரிய அறத்தையே பற்றி நின்று, தன்னை அவனுக்கு உரியளாகக் கருதிவிட்டாள்` எனவும் கூறினாள்.
``மதி`` என்பதைச் சந்திரனாகக் கொண்டு நுதலுக்கு உவமை யாக்காது, `புத்தி` எனக் கொண்டு, தலைவியது முதுக் குறைவைப் புகழ்ந்ததாக உரைத்தல் சிறப்பு.

மன்னங் கனை!செந் தமிழா
கரன்வெற்பில் வந்தொருவர்
அன்னங்கள் அஞ்சன்மி னென்றடர்
வேழத் திடைவிலங்கிப்
பொன்னங் கலைசா வகையெடுத்
தாற்கிவள் பூணழுந்தி
இன்னந் தழும்புள வாம்பெரும்
பாலுமவ் வேந்தலுக்கே.

#1493

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டும் முன்னது போலவே தோழி செவிலிக்குக் களிறு தரு புணர்ச்சியால் அறத்தொடு நின்றது.
``மன்னங்கனை`` என்பதை, ``மன் அங்கு அனை`` எனப் பிரித்து, `அனை - அன்னையே என உரைத்து, ``மன் அங்கு`` என்பதை எடுத்தாற்கு என்பதன் பின்னர்க் கூட்டி, `இது நிகழ்ந்த அங்கு` என உரைக்க.
இவ்வாறன்றி, தோழி செவிலியை, `அங்கனாய்` என விளித்தல் பொருந்தாது.
அன்னங்கள் - அனங்களே! என்றது மகளிர் கூட்டத்தை.

அடர் - தாக்க வந்த வேழம் - களிறு; ஆண் யானை இடை விலங்கி - குறுக்கே தடுத்து, பொன் அம் கலை சா வகை - எடுத்தாற்கு- பொன்போலும் அழகிய ஆண், மான்தன் பெண் மானைக் காக்கத் தன் உயிரையும் விடத் துணிந்ததுபோலத் துணிந்து எடுத்துக் காத்த அவனுக்கு.
இதன் பின் `உரித்தாக` என ஒரு சொல் வருவிக்க.
இரித்தாயது, பூணின் அழுத்தம்.
உள ஆம் - உளவாகலாம், ``உள`` என்ற பன்மையால், தழும்புகள் பலவாதல் பெறப்பட்டது.
`உள` எனத் துணிந்து கூறின் பின்னரும் அவனோடு பலநாள் பழகியதாகும் ஆதலின், பெரும்பாலும் உள ஆகலாம்` என ஊகமாகக் கூறினாள்.
இதனால், தலைவி தலைவனை இறுகத் தழுவி கொண்டமை கூறினாளாயிற்று.

ஏந்தும் உலகுறு வீரெழில்
நீலநக் கற்குமின்பப்
பூந்தண் புகலூர் முருகற்கும்
தோழனைப் போகமார்ப்பைக்
காந்துங் கனலிற் குளிர்படுத்
துக்கடற் கூடலின்வாய்
வேந்தின் துயர்தவிர்த் தானையெப்
போதும் விரும்புமினே.

#1494

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஏந்தும் உலகு - தாங்கும் உலகு; நிலவுலகம்.
போக மார்ப்பை - ``போகமார்த்த பூண்முலை யாள்`` என்னும் முதல் நினைப்பை யுடைய திருப்பதிகத்தை.
குளிர்படுத்து வேகாது பச்சையாகப் பண்ணி.
``மலிதேரான் கச்சியும் மாகடலும் தம்மின் ஒலியும் பெருமையும் ஒக்கும்`` *1* என்றது போலக் கடல் நகரத்தையும் கூறுதல் கூடுமாகலின், ``கடற் கூடல்`` என்பதை, `கடல் போலும் கூடல்` எனக் கொள்க.

விரும்பும் புதல்வனை மெய்யரிந்
தாக்கிய வின்னமிர்தம்
அரும்பும் புனற்சடை யாய்உண்
டருளென் றடிபணிந்த
இரும்பின் சுடர்களிற் றான்சிறுத்

தொண்டனை யேத்துதிரேல்
சுரும்பின் மலர்த்தமி ழாகரன்
பாதம் தொடர்வெளிதே.

#1495

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இரும்பு - அங்குசம்; ஆகுபெயர்.
சுடர் - ஒளி.
யானையை அடக்க உதவுகின்ற அங்குசத்தை அதன் காதிலேயே மாட்டி வைப்பது வழக்கம்.
``இரும்பின் சுடர்க் களிற்றான்`` என்றது தளபதியாய் இருந்து வெற்றி பெற்றதைக் குறித்த குறிப்புச் சொல்.
தொடர்வு - தொடர்தல்; அடைதல்.
`பாதத் தொடர்பு` என்பதும் பாடம்.
``தொடர்வு எளிதே`` என்றது, `சிறுத்தொண்டர்பால் மிக்க நட்புக் கொண்டவர்` என்பது விளங்குதற்கு.
``அரும்பும் புனற் கடையாய்`` என்றது, `சிவபெருமானாகவே தோன்றுகின்றவரே` என்றபடி.
மலர் - தாமரை மலர் மாலை.

எளிவந்த வா!வெழில் பூவரை
ஞாண்,மணித் தார்தழங்கத்
துளிவந்த கண்பிசைந் தேங்கலு
மெங்க ளரன்துணையாங்
கிளிவந்த சொல்லி,பொற் கிண்ணத்தின்
ஞான வமிர்தளித்த
அளிவந்த பூங்குஞ்சி யின்சொற்
சிறுக்கன்ற னாரருளே.

#1496

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``எளி வந்தவா`` என்பதை இறுதியிற் கூட்டி, `எளியேனுக்கு எளிவந்தவாறு வியக்கத் தக்கது` என முடிக்க.
``பூ`` இரண்டில் முன்னது அழகு; பின்னது பொற்பூ.
தார் - வடம்.
அழுங்க - ஒளி குன்றும்படி.
`அரனுக்குத் துமையாம்` என நான்காவது விரிக்க.

``கிள் வந்த`` என்பதில் `வந்த`, உவம உருபு.
``அளித்த`` என்னும் பெய ரெச்சம் ``சிறுக்கன்றனார்`` என்னும் கோடற் பொருட் பெயர் கொண்டது.
அளி - வண்டு.
``சிறுக்கன், சிறுக்கி` என்றாற் போலும் வழக்கு இருத்தலால், `சிறு` என்பது முன் வலி மிகுதல் வழக்கு நெறியாகக் கொள்ளப்படும்.
கன்று - யானைக் கன்று.
அன்னார் - போன்றவர்.

அருளுந் தமிழா கர!நின்
னலங்கல்தந் தென்பெயரச்
சுருளுங் குழலியற் கீந்திலை
யேமுன்பு தூங்குகரத்(து)
உருளும் களிற்றினொ(டு) ஒட்டரு
வானை யருளியன்றே
மருளின் மொழிமட வாள்பெய
ரென்கண் வருவிப்பதே.

#1497

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கைக்கிளைத் தலைவி பொருட்டாகத் தூது வந்து மாலை இரந்த தோழியை ஞானசம்பந்தர் இன்சொற் சொல்லி மறுக்க வேண்டி, அவளையே `தலைவீ` என அழைத்ததாகவும், அதனைக் கேட்டுத் தோழி மறுமொழி கூறியதாகவும் இப்பாட்டு அமைந்துள்ளது.
`பணி செய்பவளாகிய என்னை, `தொழீஇ` என அழைக்காமல், `தலைவி` என அழைக்கின்றீர்.
அப்பெயர் என் தலைவிக்கு உரியது.
அவளை நீர் ஏற்றுக் கொண்டால் பின்பு உரிமை பற்றி அவளை நீர் `தொழிஇ` என்றே அழைக்கலாம்.
அப்பொழுது நான் செய்த உதவி பற்றி எனக்கு நீர் தரும் பாராட்டாக என்னை அவன்முன் `தலைவீ` என்று கூட அழைக்கலாம்.
அவ்வாறு செய்யாமல் இப்பொழுதும் என்னை, `தலைவீ` என்று அழைத்து வெறும் இன்சொற் சொல்லி மறுக்க நினைக்கின்றீரே; இது முறையோ; என்னும் கருத்தினை இப்பாட்டு உடையது.
சுருளுங் குழல் இயல், தலைவி, ஞானசம்பந்தர் யானைமேல் பவனி வரக் கண்ட பொழுது அதன் பின்னே ஓடியதாக வைத்து, ``களிற்றினொடு ஓட்டருவாளை அருளியன்றே அவள் பெயரை என்கண் வருவிப்பது`` என்றாள், அவள் பெயர், `தலைவி` என்பது ஓடுதலை `ஓட்டருதல்`

எனவும் கூறுவர்.
``ஒக்கவே ஓட்டந்தேன்`` *1* என அருளிமை காண்க.
``ஓட்டருவானை`` என்பது பாடமன்று, அலங்கல் - மாலை.
`முன்பு அருளியன்றே` என இயையும்.

வருவார் உருவின் வழிவழி
வைத்த வனமருந்தும்
திருவார் இருந்த செழுநகரச்
செவ்வித் திருவடிக்காள்
தருவான் தமிழா கரகரம்
போற்சலம் வீசக்கண்டு
வெருவா வணங்கொண்டல்
கள்மிண்டி வானத்து மின்னியவே.

#1498

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, ஒருவழி தணந்த தலைமகள் வரவு நீட்டிப்பத் தலைவி கார் காலம் கண்டு ஆற்றாமை மிக்க வழித்தோழி, `இஃது அவர் வரும் காலம்` எனத் தேற்றி ஆற்றுவித்தது.
வருவார் உரு - பிரிந்து சென்று மீண்டுவரும் தலைவர்களது உருவம்.
அவைகள் வரும் வழியிலே வைத்த விழியை உடையவர்கள் தலைவியர்.
விழியை அவ்வாறு வைத்த வண்ணமே உணமை அருந்துகின்ற திருவை *(சிறப்பை)* உடையவர்கள் தலைவியர்.
`அவர்கள் இருந்த செழு நகரத்தில் கொண்டல்கள் மிண்டி மின்னிய` என்க.
செவ்வித் திருவடி - பக்குவம் வந்த காலத்தில் உயிர்களால் அடையப்படும் திருவடி.
அவை சிவபெருமானுடையன கொண்டல்கள் முன்னே சலத்தை *(மழையை)* வீச, அஃது இருண்டு பெய்தலின், `வருகின்றவர்கள் வழியறியாது திகைப் பார்களோ` என்று வெருவா வண்ணம் பின்பு மின்னின` என்க.
எனவே, `மின்னலே விளக்காக வருவர்` என வற்புறுத்தியவாறு.
இதன் முதல் அடியில் பாடங்கள் பிழைபட்டுள்ளன.
மிண்டி - வலிமை யுற்று.
`தலைவர் பிரியத் `தலைவியர் ஆற்றியிருத்தல் உலகியல் ஆதலின், நீயும் அத்தன்மைய ளாதல் வேண்டும்` என்பாள், `நம் தலைவர்` எனவும், `நீ` எனவும் கூறாது பொதுப்பட, ``வருவார்`` எனவும், ``அருந்தும் திருவார்`` எனவும் கூறினாள்.

மின்னார் குடுமி நெடுவெற்
பகங்கொங்கில் வீழ்பனிநோய்
தன்னார் வழிகெட் டழிந்தமை
சொல்லுவர் காணிறையே
மன்னார் பரிசனத் தார்மேல்
புகலு மெவர்க்குமிக்க
நன்னா வலர்பெரு மானரு
காசனி நல்கிடவே.

#1499

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வீழ் பனிநோய் இறையே, மன் ஆர் பரிசனத்தோர் மேற் புகலும் அருகாசனி நல்கிட, வெற்பகக் கொங்கில் தன் ஆர்வழி கெட்டமை சொல்லுவர்` என இயைத்து முடிக்க.
காண், முன்னிலை யசை.
வெற்பகக் கொங்கு - மலைகள் நிறைந்த கொங்கு நாடு.
பனி நோய் - குளிர்க் காய்ச்சல்.
தன் ஆர் வழி - தனக்கு ஏற்புடைய வழி ``தன்`` என்றது பனி நோயை.
`உலகத்தார் பலரும் சொல்லிப் புகழ்வர்` என்க.
இறை - சிறிது.
மன் ஆர் - மிகுதியாகப் பொருந்திய `பதினாறாயிரம் பேர்` என்பர்.
பரிசனத்தோர், உடன் வரும் அடியார்கள்.
நல்கிட - அருள்புரிய அஃதாவது, `திருப்பதிகம் அருளிச் செய்ய` என்பதாம்.

நல்கென் றடியி னிணைபணி
யார்;சண்பை நம்பெருமான்
பல்கும் பெரும்புகழ் பாடகில்
லார்சிலர் பாழ்க்கிறைத்திட்(டு)
ஒல்கு முடம்பின ராய்,வழி
தேடிட் டிடறிமுட்டிப்
பில்கு மிடமறி யார்கெடு
வாருறு பேய்த்தனமே.

#1500

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``சிலர்`` என எடுத்துக்கொண்டு, ``சண்பை நாதன்`` என்பதை

``நல்கென்று`` என்பதன்பின் கூட்டியுரைக்க.
நல்கு - அருள் செய்; ``அடியின் இணை`` என்பதில் பின், வேண்டாவழிச் சாரியை.
ஒல்குதல் - தளர்தல், வழி, வீடு பேற்றிற்கான வழி, பில்கும் இடம் - பேரின்பம் ததும்பும் இடம்.
அறியார்; முற்றெச்சம்.
உறு - மிகுதி.
`இஃது உறு பேய்த்தனம்` என்க.
பேய்த்தனம் - பேய்த் தன்மை அஃதாவது, பித்து.

தனமே தருபுகழ்ச் சைவ
சிகாமணி தன்னருள்போல்
மனமே புகுந்த மடக்கொடி
யே!மலர் மேலிருந்த
அனமே! யமிர்தக் குமுதச்செவ்
வாயுங்க ளாயமென்னும்
இனமே பொலியவண் டாடெழிற்
சோலையு ளெய்துகவே.

#1501

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் தலைவன் தலைவியை ஆயத்து உய்த்தது.
தனம் தரும் புகழ் - பொருள் வழங்கியதனால் உண்டாகிய புகழ்.
அது தந்தையார் சிவபாத இருதயருக்கும், திரிவீழி மிழலையில் பஞ்ச காலத்தில் பலர்க்கும் வழங்கியது.
`அன்னம்` என்பது இடைக் குறைந்து நின்றது.
``செவ்வாய்`` என்றதும் `சிவந்த வாயை உடையவளே` என்றவாறேயாம்.
பொலிய - (நீ இல்லாமையால் இழந்த) பொலிவைப் பெற்று விளங்கும்படி.
இங்ஙனம் கூறியதனால், `நீ செலவு தாழ்ப்பின் ஆயத்தார் தேடி வருவர்` என்பது குறிப்பித்தான்.
``சைவ சிகாமணிதன் அருள் போல் மனம் புகுந்த`` என்றதனால், `அவ்வருள் போல நீ என் உயிரினும் சிறந்ததாய் ஆதலின், நீ எங்கிருப்பினும் உனை நான் இமைப் போதளவின் மறவேன்` எனத் தனது காதர் சிறப்பு உணர்த்தினான்.

உகட்டித்து மோட்டு வராலினம்

மேதி முலையுரிஞ்ச
அகட்டிற் சொரிபால் தடம்நிறை
கொச்சை வயத்தரசைத்
தகட்டில் திகழ்மணிப் பூண்தமி
ழாகரன் தன்னையல்லால்,
பகட்டில் பொலியினும் வேண்டேன்,
ஒருவரைப் பாடுதலே.

#1502

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``உகட்டித்து`` என்னும் பிறவினை வினைச்சொல், `உகண்டு` எனத் தன்வினையாய் நின்றது.
உகளுதல் - பிறழ்தல், எழும்பிக் குதித்தல்.
மோட்டு வரால் இனம் - பெரிய வரால் மீனின் கூட்டம்.
மேதி - எருமை.
உரிஞ்ச - உராய.
அகடு - வயிறு அஃது ஆகுபெயராய், மடியைக் குறித்தது.
`அகட்டினின்றும் சொரிபால்` என்க.
தடம் - தடாகம்.
கொச்சைவயம் சீகாழி.
தகடு - பொன் தகடு.
மணி - இரத்தினம்.
பூண் - அணிகலம்.
பகடு - யானை.
ஒருவரை - வேறு ஒருவரை `வேறு` என்பது தமிழாகரரோடு இயைபில்லாமை `யானைமேற் செல்லும் செல்வத்தைப் பெறுவதாயினும்; தமிழாகரரோடு சிறிதும் இயை பில்லாத ஒருவரைப் பாடுதலை வேண்டேன்` என்பதாம்.

பாடிய செந்தமி ழாற்பழங்
காசு பரிசில் பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம்
பந்தன் நிறைபுகழான்
நாடிய பூந்திரு நாவுக் கரசோ
டெழில்மிழலைக்
கூடிய கூட்டத்தி னாலுள
தாய்த்திக் குவலயமே.

#1503

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதன் பொருள் வெளிப்படை.
`நேடிய` என்பது பாடமன்று.
ஞானசம்பந்தர் பழங் காசுபெற, நாவுக்கரசர் நல்ல காசு பெறிறமை பற்றி, ``பூந்திருநாவுக்கரசு`` என்றார்.
பூ - அழகு.
அவர் பெற்ற காசின் அழகு அவருக்கு ஆக்கிச் சொல்லப்பட்டது.
``இக் குவலயம் உளதாய்த்து`` என்றது, `உயிர்கள் பஞ்சத்தால் வாடி மடியாமல் வாழ்ந்தன` என்றவாறு.

வலையத் திணிதோள் மிசைமழ
வேற்றி, மனைப்புறத்து
நிலையெத் தனைபொழு தோகண்ட(து)
ஊரனை நீதிகெட்டார்
குலையக் கழுவின் குழுக்கண்ட
வன்திகழ் கொச்சையன்ன
சிலையொத்த வாள்நுதல்! முன்போல்
மலர்க திருக்கண்களே.

#1504

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, புதல்வனை வாயிலாகப் பற்றி வந்த தலைவனைத் தலைவி வாயில் மறுக்கத் தோழி வாயில் வேண்டியது.
`நீதி கெட்டார்.
வாள் நுதல்! ஊரனைத் தோள்மிசை மழவு ஏற்றி மனைப்புறத்துக் கண்டது எத்தனைப் பொழுதோ! திருக்கண்கள் முன்போல் மலர்க` எனக் கூட்டி யுரைக்க.
வலையம் - வாகு வலயம்; தோள்வளை.
மழவு - புதல்வன்.
மனைப்புறம் - புறங்கடை.
நிலை - நிற்றல்.
`நிற்றலில் கண்டது` என ஏழாவது விரிக்க.
``எத்தனைப் பொழுதோ`` என்றது, `மிக நீண்ட நேரம்` என்றபடி.
`தலைவர் இத்தன்மையராகவும் சிவப்பு ஆறாமை குல மகளிர்க்கு அழகன்று; உனது அழகிய கண்கள் சிவப்பு ஆறி, முன்போல் குளிர்ச்சியுடன் மலர்வன வாக` என்பதாம்.

நீதி கெட்டான்.
சமணர்.
குலைய - அழிய `அவரைச் கழுக் குழுவிற் கண்டவன்` என்க.

கண்ணார் திருநுத லோன்கோலக்
காவில் கரநொடியால்
பண்ணார் தரப்பாடு சண்பையர்
கோன்பாணி நொந்திடுமென்(று)
எண்ணா வெழுத்தஞ்சு மிட்டபொன்
தாளங்க ளீயக்கண்டும்
மண்ணார் சிலர்சண்பை நாதனை
யேத்தார் வருந்துவதே.

#1505

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண் ஆர் திருநுதலோன், சிவபெருமான் கோலக்கா, சீகாழியை அடுத்துள்ள தலம்.
நொடி - நொடித்தல்; தட்டுதல்; தாளம் இடுதல், பாணி - கை.
எண் ஆர் - எண்ணுதல் (கணித்தல்) பொருந்திய எழுத்து அஞ்சு திருவைந்தெழுத்து மந்திரம்.
இட்ட - பொறிக்கப்பட்ட மண்ணார் - மண்ணுலகத்தில் உள்ளவர்.
`அச்சண்பை நாதனை` எனச் சுட்டு வருவிக்க.
எண்ணார், முற்றெச்சம் `எண்ணாராய் வருந்துவது என்` என ஒருசொல் வருவித்து முடிக்க.

வருந்துங் கொலாங்கழல், மண்மிசை
யேகிடில் என்றுமென்றார்த்
திருந்தும் புகழ்ச்சண்பை ஞானசம்
பந்தற்குச் சீர்மணிகள்
பொருந்துஞ் சிவிகை கொடுத்தனன்
காண்;புண ரித்திகழ்நஞ்(சு)
அருந்தும் பிரான்நம் மரத்துறை
மேய வரும்பொருளே.

#1506

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதன் பொருள் வெளிப்படை.
மென்தார் - மெல்லிய மலர் மாலையை அணிந்த.

மணி, முத்து.
காண், அசை.
புணரி - கடல்.
`அரும் பொருளாய் உள்ளவன்` என்க.

பொருளென வென்னைத்தன் பொற்கழல்
காட்டிப் புகுந்தெனக்கிங்(கு)
அருளிய சீர்த்திரு ஞானசம்
பந்த னருளிலர்போல்
வெருளின மானின்மென் நோக்கியை
விட்டு விழுநிதியின்
திரளினை யாதரித் தால்நன்று
சாலவென் சிந்தனைக்கே.

#1507

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, பொருள்வயிற் பிரியக் கருதிய தலைமகன், பின் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.
`என்னைப் பொருளெனக் கொண்டு` என ஒரு சொல் வருவிக்க.
ஞானசம்பந்தன் அருள் இல்லாதவரே அருளைத் துறந்து, பொருளை விரும்புவர்` என்பதாம்.
ஆதரித்தால் - விரும்பினால், `அது நன்று` எனத் தோன்றா எழுவாய் வருவிக்க.
தீதாவதனை, ``நன்று`` என்றது இகழ்ச்சிக் குறிப்பு.
`யாம் பிரியின் தலைவி வாழாள்` என்பதை அறிந்து வைத்தும் பொருள் வலிக்கின்ற நெஞ்சம் பேதைமை யுடைத்து` என்றபடி.

சிந்தையைத் தேனைத் திருவா
வடுதுறை யுள்திகழும்
எந்தையைப் பாட லிசைத்துத்
தொலையா நிதியமெய்தித்
தந்தையைத் தீத்தொழில் மூட்டிய
கோன்சரண் சார்விலரேல்
நிந்தையைப் பெற்(று)ஒழி யாதிரந்
தேகரம் நீட்டுவரே.

#1508

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முன்பு `சிந்தையை` என்றதனால் பின்பு ``தேனை`` என்றதற்கு, `சிந்தையில் ஊறும் தேனை` என உரைக்க.
தொலையா நிதியம் - உலவாக் கிழி.
தீத் தொழில் மூட்டிய - வேள்வித் தொழிலில் ஈடுபடச் செய்த.
``சார்வலி ரேல்`` என்பது முதலாக வந்த பயனிலை கட்கு, `மக்கள்` என்னும் தோன்றா எழுவாய் வருவிக்க.

நீட்டுவ ரோதத்தொ டேறிய
சங்கம் நெகுமுளரித்
தோடுவெண் முத்தம் சொரிசண்பை
நாதன் தொழாதவரின்
வேட்டுவர் வேட்டதண் ணீரினுக்(கு)
உண்ணீ ருணக்குழித்த
காட்டுவ ரூறல் பருகும்
கொலாமெம் கனங்குழையே.

#1509

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, தலைவனுக் குறை நேர்ந்த தோழி தலைவியைக் குறை நயப்பிக்கச் சில கூறி காலத்தில் தலைவி அதனை அறியாள் போன்று குறியாள் கூறியது, அஃதாவது கூறப்பட்ட பொருளோடு தொடர்புபடாமல் பொதுவாக எதனையோ கூறியது.
இதனை, என் செய்வாம் - எனில், `பொன் செய்வாம்` - என்றல் போல்வது`` என்பர்.
``எம் கனங் குழையே`` என்பதை முதலிற் கொண்டு, இறுதியில், `பருகும் ஆம் கொல்` என மாற்றி முடிக்க.
நீட்டு உவர் ஓதத்தொடு - கரைமேல் நீட்டுகின்ற, உப்புச் சுவையை உடைய அலைகளோடு, முளரித் தோட்டு - தாமரை மலரின் இதழ்களின்மேல்.
இது நெய்தலில் மருதம் மயங்கிய திணை மயக்கம்.
வேட்ட தண்ணீர் - நீர் வேட்கையால் அதனைத் தணிக்க விரும்பிய நல்ல நீருக்கு ஈடு.
காட்டு உவர் ஊறல் பருகும் ஆம்.
கொல் - காட்டில் உள்ள உவர்க் கேணியில் ஊறுகின்ற அந்த நீரும்பருகுநீர் ஆகின்றது போலும்! இது வேடர் வாழ்க்கையின் தாழ்வினைப் புலப்படுத்தியது.
தோழி கருதிய பொருட்கும், இதற்கும் யாதோர் இயையும் இல்லை.
தலைவி இவ்வாறு தொடர்பில்லாமல் கூறியது, தோழி கருத்தைத் தான்

அறிந்து கொள்ளாதது போலக் காட்டிக் கொள்ளுதற்காம்,
``தொழாதவரின்`` என்றாரேனும் `தொழா தவர்க்கு ஆவது போல` என்பதே கருத்து.
`சண்பை நாதனைத் தொழாதவரே இடப்பாடான வாழ்க்கையை உடையவர் ஆவர்` என்பதாம்.
``பருகு`` என்னும் முதனிலைத் தொழிற் பெயர் ஆகு பெயராய், பருகப்படும் நீரைக் குறித்தது.

குழைக்கின்ற கொன்றைபொன் போல
மலரநுங் கூட்டமெல்லாம்
அழைக்கின்ற கொண்ட லியம்புஒன்
றிலையகன் றார்வரவு
பிழைக்கின் றதுகொலென் றஞ்சியொண்
சண்பைப் பிரான்புறவத்(து)
இழைக்கின்ற கூடல் முடயஎண்
ணாத இளங்கொடிக்கே.

#1510

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, தலைவன் நீடத் தலைவியது ஆற்றாமை கண்டு தலைவி முன்னிலைப் புறமொழிகளால் ஆற்று வித்தது.
கொண்டல் - மேகமே! இது மேகத்தைத் தோழி விளித்தது.
ஒன்று இலை - வேறு ஒன்றும் செய்தியில்லை.
`கொண்டலே, இழைக் கின்ற கூடல் முடிய எண்ணாத இளங்கொடிக்கு, அகன்றார் வரவு இயம்பு; வேறு ஒன்றும் செய்தியில்லை` எனக் கூட்டி முடிக்க.
கூடல் இழைத்தலாவது, கண்ணை மூடிக்கொண்டு மணலில் ஒரு வட்டம் வரைதல்.
`அவ்வட்டத்தின் இரு முனைகளும் ஒன்றாய்க் கூட, வட்டம் முழுமை பெற்று நிற்குமாயின் கருதிய பொருள் கைகூடும்` எனவும், `முனைகள் கூடாமல் வேறாய்ப் போய்விடின் கருதிய பொருள் கைகூடாது` எனவும் கொள்ளுதல் வழக்கம்.
பிரிந்து சென்ற தலைவர் வந்து சேர்தலை அறியத் தலைவியர் இவ்வாறு கூடல்களை இழைத்துப் பார்ப்பார்கள் இருமுனையும் ஒன்று கூடுதலால் இதற்குக் `கூடல்` என்பது பெயராயிற்று.
அது தலைவர் வந்து தலைவியரோடு கூடுதலையும் குறிப்பதாம்.
``கூடல் முடிய எண்ணாத இளங்கொடி`` என்றதனால், இங்குத் தலைவி பல முறை கூடல் இழைத்து அது கூடாமை கண்டு ஆற்றாமையுடைய

ளாயினாளாம்.
`கொண்டலே! அகன்றார் வரவை நீ இளங்கொடிக்கு இயம்பு` என்றது, `கார் காலம் வந்தமையால் இனித் தாழ்ந்து தலைவர் வருவார்` என்பதை முன்னிலைப் புறமொழியாகக் கூறி ஆற்றுவித்தது.
குழைக்கின்ற - தளிர்க்கின்ற.
புறம் - முல்லை நிலம்.

கொடித்தே ரவுணர் குழாமன
லூட்டிய குன்றவில்லி
அடித்தேர் கருத்தி னருகா
சனியை யணியிழையார்
முடித்தேர் கமலர் கவர்வான்,
முரிபுரு வச்சிலையால்
வடித்தேர் நயனக் கணையிணை
கோத்து வளைத்தனரே.

#1511

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, ஞானசம்பந்தரது உலாப் புறத்தில் கண்டோர் கூறியதாக அமைந்தது.
``அடித் தேர்`` என்பதில் தகர ஒற்று, எதுகை நோக்கி விரிக்கப்பட்டது.
தேர்தல் - சிந்தித்தல்.
`முடித்த` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.
ஏர் - அழகு.
கமலம், தாமரை மலர்க் கண்ணி; ஆகுபெயர், வடித்து - கூர்மை யாக்கப்பட்டு.
ஏர் - எழுச்சி பெற்ற.
வளைத்தனர் - முற்றுகை யிட்டனர்.

வளைபடு தண்கடற் கொச்சை
வயவன் மலர்க்கழற்கே
வளைபடு நீண்முடி வார்புன
லூரன்தன் நீரில்அம்கு
வளைபடு கண்ணியர் தம்பொதுத்
தம்பலம் நாறுமிந்த
வளைபடு கிங்கிணிக் கால்மைந்தன்
வாயின் மணிமுத்தமே.

#1512

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, புதல்வனை வாயிலாகக் கொண்டு போந்த தலைமகன் `யான் தவ றொன்றிலேன்` எனக் கூறியவாறே கூறிய வாயில் வேண்டிய தோழிக்குத் தலைவி வாயில் மறுத்தது.

வளை படு கடல் - சங்குகள் உண்டாகின்ற கடல்.

வளைபடும் முடி - வணங்குதல் பொருந்தும் முடி.

அம்குவளை படு கண்ணியர் - அழகிய குவளைப் பூப்போலும் கண்களை யுடைய மகளிர்; பரத்தையர் வளைபடுகிங்கிணி - வளைத்துக் கட்டப்பட்ட சதங்கை.

`மைந்தன் வாயினின்றும் பெறப்படுகின்ற முத்தத்தில் ஊரனது வாய்நீரிலே சில மகளிரது பலவாகப் பொருந்திய பொதுத் தம்பலம் நாறாநின்றது` என்க.

`அவன் தவறிலன் என்பது யாண்டையது` என்பது குறிப்பெச்சம்.

மணி - சிறப்பு.

இப்பாட்டு, `மடக்கு` என்னும் சொல்லணி பெற்று வந்தது.

முத்தன வெண்ணகை யார்மயல்
மாற்றி, முறைவழுவா(து)
எத்தனை காலம்நின்று ஏத்து
மவரினு மென்பணிந்த
பித்தனை, யெங்கள் பிரானை,
யணைவ தெளிதுகண்டீர்;
அத்தனை, ஞானசம் பந்தனைப்
பாதம் அடைந்தவர்க்கே.

#1513

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதன் பொருள் வெளிப்படை.

`அவரினும் பாதம் அடைந்தவர்க்கு எங்கள் பிரானை அணைதல் எளிது` என முடிக்க.

கண்டீர், முன்னிலை யசை.

அத்தன் - தலைவன்.

`சம்பந்தனைப் பாதத்தை அடைந்தவர்க்கு` என முதல், சினை இரண்டிலும் இரண்டன் உருபு சிறுபான்மை வந்தது.

அடைத்து மாமறைக் காடர்தம்
கோயிற்கதவினை அன்(று)
உடைத்தது பாணன்தன் யாழி

னொலியை; யுரகவிடம்
துடைத்து; தோணி புரத்துக்
கிறைவன் சுடரொளிவாய்
படைத்தது தண்மையை நள்ளாற்
றரசு பணித்திடவே.

#1514

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``தோணிபுரத்துக்கு இறைவன்`` என்பதனை முதலிற் கொள்க.
`துடைத்தது உரக விடம்` எனவும், `நள்ளாற்றரசு வணித்திடச் சுடரொளிவாய்ப் படைத்து தண்மையை` எனவும் கூட்டுக.
ஒளி - நெருப்பு; ஆகுபெயர்.

பணிபடு நுண்ணிடை பாதம்
பொறாபல காதமென்று
தணிபடு மின்சொற்க ளால்தவிர்த்
தேற்குத் தழலுமிழ்கான்
மணிபடு பொற்கழல் ஞானடம்
பந்தன் மருவலர்போல்
துணிபடு வேலன்ன கண்ணியென்
னோவந்து தோன்றியதே.

#1515

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டுத தலைவன் போக்குடன் படானகவும் அதனைத் துணிந்து வந்த தலைவியைக் கண்டு அவன் தன் நெஞ்சினுள்ளே சொல்லியது.
பனிபடும் இடை - பாம்பு போலும் இடை.
இஃது அதனை உடையாளைக் குறித்தது.
`இடையது பாதம்` என்க.
`பல காதம் நடக்கப் பொறா` என ஒரு சொல் வருவிக்க.
தணிபடும் இன்சொல் - பணிவு பொருந்திய இன்சொல்.
``தவர்த்தேற்கு`` என்னும் நான்கா வதை, `தவிந்தேன்கண்` என ஏழாவதாகத் திரிக்க.
`தவிர்த்தேன்கண், வேலன்ன கண்ணி, ஞானசம்பந்தன் மருவலர்போல், தழல் உமிழ் கான் வந்து படுதற்கு ஏது வாயவேல்.
தலைவனது உடன்பாட்டைத் தலைவி பெறுதலும், தலைவன் சிறிது ஆற்றுதலும் இதன் பயன்.

தோன்றல்தன் னோடுட னேகிய
சுந்தரப் பூண்முலையை
ஈன்றவ ரேயிந்த வேந்திழை
யார் இவ்வளவில்
வான்றவர் சூழுந் தமிழா
கரன்தன் வடவரையே
போன்றபொன் மாடக் கழுமல
நாடு பொருந்துவரே.

#1516

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, தலைவி தலைவன் உடன் போக்கில் பின் தேடிச் சென்ற செவிலியைக் கலந்துடன் வருவோர் கண்டு தேற்றியது.
``ஈன்றவரே`` என்றது செவிலியை.
`இந்த ஏந்திழையார் பூண் முலையை ஈன்றவரே` என்று துணிந்தபின் பின்வருமாறு அவட்குக் கூறினர்.
அவர் - இவர் தேடிச் செல்கின்ற அந்த இருவர்.
வடவரை - மேருமலை, ``அவர் `இவ்வளவில் கழுமல நாடு பொருந்துவர்` என்றதனால் இனி நீவிர் மேற் செல்ல வேண்டா, மீள்வதே தக்கது` என்பது குறிப்பெச்சம்.

பொருந்திய ஞானத் தமிழா
கரன்பதி, பொற்புரிசை
திருந்திய தோணி புரத்துக்
கிறைவன் திருவருளால்
கருந்தடம் நீரெழு காலையிற்
காகூ கழுமலமென்(று)
இருந்திட வாமென்று வானவ
ராகி யியங்கியதே.

#1517

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`தமிழாகரன் பதி எங்கும் வானவராகி இயங்கியது தோணிபுரத்துக்கு இறைவன் திருவருளால் காலையில், கா கூகழுமலம் என்று இருந்திடவாம்` என முடிக்க.
ஈற்றடியிலும் `என்று` என ஓதுதல் பாடம் அன்று.
``தோணிபுரத்துக்கு இறைவன்`` என்றதும் ஞான சம்பந்தரை,

`சீகாழியில் தங்குவதால் காலையில் அவரது பாடலை மற்றவர்களோடு நாமும் ஓதுப் பயன் பெறலாம்` என்னும் கருதினால் தான்.
சீகாழியில் தேவர்கள் குழுமுகிறார்கள் என்றபடி.
``கா கூ`` என்றது திருந்திய இசை இல்லாமையை.
காலையில் நீர்ப் பறவைகள் எழுந்து ஒலிப்பதை நீரே துயில் எழுவது போலக் கூறுதல் வழக்கம்.

இயலா தனபல சிந்தைய ராயிய
லுங்கொலென்று
முயலா தனவே முயன்றுவன்
மோகச் சுழியழுந்திச்
செயலார் வரைமதிற் காழியர்
கோன்திரு நாமங்களுக்(கு)
அயலா ரெனப்பல காலங்கள்
போக்குவ ராதர்களே.

#1518

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இயலாதன - கைகூடாதன.
`அன்ன பலவற்றைச் சிந்தையில் உடையவராய்` என்க.
முயலாதன - முயலத் தகாதன.
செயல் ஆர் - வேலைப்பாடு அமைந்த.
வரை மதில் - மலைபோலும் மதில்.
ஆதர்கள் - அறிவிலிகள்.

ஆதர வும்,பயப் பும்மிவ
ளெய்தின ளென்றபலார்
மாத ரவஞ்சொல்லி யென்னை
நகுவது! மாமறையின்
ஓதர வம்பொலி காழித்
தமிழா கரனொடன்றே
தீதர வம்பட வன்னையென்
னோபல செப்புவதே.

#1519

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, கைக்கிளை தலைவியது ஆற்றாமையைச் செவிலியறிந்தமை அறியாது அலர் அஞ்சிய அவளுக்குத் தோழி கூறியது.

ஆதரவு - காதல்.
பயப்பு - பசலை.
மா தரவு - பெரிய குற்றம்.
தாவு, `தரவம்` என வந்தது.
பின் இரண்டடிகளில் உள்ள அறவம் - ஒலி, அன்னை என்னோ பல செப்புவது தமிழாகர னொடு தீது அரவம் பட அன்றே` என முடிக்க.
தீது அரவம் - குற்றமாகிய சொல், அது, `தலைவி காதல் வயப்பட்டாள்` என்பது.
என்னோ - எவைவையோ.

செப்பிய வென்ன தவம்முயன்
ரேன்நல்ல செந்தமிழால்
ஒப்புடை மாலைத் தமிழா
கரனை, யுணர்வுடையோர்
கற்புடை வாய்மொழி யேத்தும்
படிதக றிட்டிவர
மற்படு தொல்லைக் கடல்புடை
சூழ்தரு மண்மிடையே.

#1520

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`தமிழாகரனை, உணர்வுடையோர் ஏத்தும்படி நல்ல செந்தமிழால் செப்பிய மண்ணிடை என்ன தவம் முயன்றேன்` என இயைத்து முடிக்க.
செப்பிய - செப்புதற்கு.
ஒப்புடை மாலை - ஒரு சீராக அமைக்கப்பட்ட பூமாலை.
கற்பு உடை வாய்மொழி - கற்ற கல்வியையுடைய வாயினின்றும் தோன்றும் சொற்களால்.
ஏத்தும்படி- துதிக்கின்ற முறையில்.
கதறிட்டு இவர - அலைகள் முழங்கிக் கொண்டு கரைமேல் ஏறுதலால்.
மல் படு தொல்லைக் கடல் - முத்து முதலிய செல்வங்கள் மிகுகின்ற பழைய கடல்.

மண்ணில் திகழ்சண்பை நாதனை
வாதினில் வல்லமணைப்
பண்ணைக் கழுவின் நுதிவைத்தெம்
பந்த வினையறுக்கும்
கண்ணைக் கதியைத் தமிழா
கரனை,யெங் கற்பகத்தைத்
திண்ணற் றொடையற் கவுணியர்

தீபனைச் சேர்ந்தனமே.

#1521

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அமண் - அமணர் குழாம்.
பண்ணைக் கழு - நிறைய நாட்டுப்பட்ட கழுமரம்.
கண் - கண் போன்றவர் கதி - யாவராலும் அடையப்படுபவர்.
திண்மை - நெருக்கம்.
தொடையல் - பூமாலை.
சேர்ந்தனம் - புகலிடமாக அடைந்தோம்.
`இனி எமக்கு யாது குறையுளது` என்பது குறிப்பெச்சம்.

சேரும் புகழ்த்திரு ஞானசம்
பந்தனை யானுரைத்த
பேருந் தமிழ்ப்பா வினவவல்
லவர்பெற்ற வின்புலகங்
காருந் திருமுடற் ராயரு
ளாயென்று கைதொழுவர்
நீரும் மலரும் கொளாநெடு
மாலும் பிரமனுமே.

#1522

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`-திருஞானசம்பந்தரை யான் துதிப்பாடிய இந்தத் தமிழ்ப் பாடலை ஓதி உணர்ந்தவர் பெற்ற பேரின்ப உலகத்தை எமக்கு அருள் கூர்ந்து அளித்தல் வேண்டும் - என் மாலும் பிரமனும் நீரும், மலருங் கொண்டு, சிவபெருமானைக் கும்பிடுவர்` என்பது இப்பாட்டின் திரண்ட பொருள்.
எனவே, இப்பாட்டு இப்பிரபந்தத்தின் பயன் கூறிற்றாம்.
காரும் - கறுத்த.
பேரும் பா - தொடர்ந்து நடக்கும் பாட்டுக்கள்.

பிரமா புரம்வெங் குரு,சண்பை,
தோணி, புகலி,கொச்சை
சிரமார் புரம்,நற் புறவந்,
தராய்,காழி, வேணுபுரம்
வரமார் பொழில்திரு ஞானசம்
பந்தன் பதிக்குமிக்க
பரமார் கழுமலர் பன்னிரு

நாமமிப் பாரகத்தே.

#1523

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சிரமார் புரம் - சிரபுரம், தராய் - பூந்தராய் வரம் - மேன்மை.
பரம் - மேன்மை.
`திருஞானசம்பந்தன் வரம் ஆர் பொழிற் பதிக்கு இப்பாரகத்துப் பன்னிருநாமம் பிரமாபுரம்.
.
.
.
கழுமலர்` என முடிக்க.
இப்பாட்டின் இறுதிச்சீர் - இதன் முதற்பாடலில் சென்று மண்டலித்தல் காண்க.

பராகலத் துன்பங் கடந்தமர ரால்பணியும்
ஏரகலம் பெற்றாலு மின்னாதால் - காரகிலின்
தூமங் கமழ்மாடத் தோணி புரத்தலைவன்
நாமஞ் செவிக்கிசையா நாள்.

#1524

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`தோணிபுரத் தலைவன் நாமம் செவிக்கு இசையா நாள், பாருலகத்தைக் கடந்து அமரர்களால் வணங்கப் படும் நாளாய் இருப்பினும் இன்னாது` என்க.
ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி முற்றிற்று.

நம்பியாண்டார் நம்பிகள் - ஆளுடையபிள்ளையார் திருச்சண்பை விருத்தம்

பாலித் தெழில்தங்கு பாரகம்
உய்யப் பறிதலையோர்
மாலுற் றழுந்த அவதரித்
தோன்மணி நீர்க்கமலத்
தாலித் தலர்மிசை யன்னம்
நடப்ப, வணங்கிதென்னாச்
சாலித் தலைபணி சண்பையர்
காவலன் சம்பந்தனே.

#1525

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சண்பையர் காவலன் சம்பந்தன், பார் முகம் உய்ய (அருள்) பாலித்து, பறி தலையோர் மால் உற்ற அழுந்த வெல்ல அவதரித்தோன்` என முடிக்க. `வெல்ல` என்பது சொல்லெச்சமாய் வந்து இயையும்.
பறி தலை - மயிர் பறிக்கப்பட்ட தலை. அ மணி நீர் - நீல மணிபோலும் நீர், ஆலித்து - அசைந்து. அலர் தாமரை மலர். அணங்கு - தெய்வம்; நாமகள். சாலி - நெற்பயிர். அது தலை வணங்குதற்கு இவ்வாறு காரணம் கற்பித்தது, தற்குறிப்பேற்ற அணி.

கொங்குதங் குங்குஞ்சி கூடாப்
பருவத்துக் குன்றவில்லி
பங்குதங் கும்மங்கை தன்னருள்
பெற்றவன், பைம்புணரிப்
பொங்குவங் கப்புனல் சேர்த
புதுமணப் புன்னையின்கீழ்ச்
சங்குதங் கும்வயற் சண்பையர்
காவலன் சம்பந்தனே.

#1526

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சம்பந்தன் குஞ்சி கூடாப் பருவத்துக் குன்றவில்லி பங்கு தங்கும் மங்கைதன் அருள் பெற்றவன்` எனக் கூட்டி முடிக்க.
கொங்கு - வாசனை. குஞ்சி கூடாப் பருவம் - தலை மயிர் கூட்டி முடிக்க வாராத பருவம்; குழவிப் பருவம். அருள் - ஞானப் பால். புணரி - கடல்.

வங்கம் - மரக்கலம். வயல் - உப்பளம்.

குவளைக் கருங்கண் கொடியிடை
துன்பந் தவிரவன்று
துவளத் தொடுவிடந் தீர்த்த
தமிழின் தொகைசெய்தவன்
திவளக் கொடிக்குன்ற மாளிகைச்
சென்னியின் வாய்த்
தவளப் பிறைதங்கு சண்பையர்
காவலன் சம்பந்தனே.

#1527

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குவளைக் கருங்கண் கொடியிடை யாவாள் ஒரு வணிகப் பெண். `கொடி இடை துவள` எனக் கூட்டுக.
திவளுதல் - சுண்ணத்தின் ஒளி விளங்குதல். `திவள் அம் மாளிகை` என்க. சூளிகை - மேல் மாடத்தின் முகப்பு. `சம்பந்தன், கொடியிடை துவள, அத்துன்பம் தவிர அன்று விடம் தீர்த்த தமிழின் தொகை செய்தவன்` என இயைத்து முடிக்க.

கள்ளம் பொழில்நனி பள்ளித்
தடங்கட மாக்கியஃதே
வெள்ளம் பணிநெய்த லாக்கிய
வித்தகன், வெண்குருகு
புள்ளொண் தவளப் புரிசங்கொ
டலாக் கயலுகளத்
தள்ளந் தடம்புனல் சண்பையர்
காவலன் சம்பந்தனே.

#1528

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சம்பந்தன் நனிபள்ளித் தடம் கடம் ஆக்கி, அஃதே நெய்தல் ஆக்கிய வித்தகன்` எனக் கூட்டி முடிக்க. கள் - தேன். நனிபள்ளி, ஒரு தலம். தடம் - வழி. கடம் - பாலை நிலம், வெள்ளம் பணி - மிகுந்த நீர் எங்கும் மலிகின்ற. வித்தகன் - சதுரப்பாடு உடையவன். ``வெண்குருகு புள்`` என்பது இருபெயர் ஒட்டு. ஆல ஒலிக்க. தள்- தட்டல்; தடுத்தல். ``தட்டோர் அம்ம இவண் தட்டோரே- தள்ளாதோர் இவண் தள்ளா தோரே`` என்னும் புறப்பாட்டைக் காண்க.

ஆறதே றுஞ்சடை யானருள்
மேவ வவனியர்க்கு
வீறதே றுந்தமி ழால்வழி
கண்டவன், மென்கிளிமாந்
தேறல்கோ தித்துறு சண்பகந்
தாவிச் செழுங்கமுகின்
தாறதே றும்பொழிற் சண்பையர்
காவலன் சம்பந்தனே.

#1529

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சம்பந்தன் அவனியர்க்குச் சடையான் அருள் மேவத் தமிழால் வழி கண்டவன்` என முடிக்க. ``ஆறது`` ``வீறது`` ``தாறது`` என்பவற்றில் அது பகுதிப் பொருள் விகுதி. வீறு - பெருமை. தேறல் - தேன், என்றது தேன்போலும் சுவையை உடைய தளிர்களை. துறு -நெருங்கிய. தாறு - குலை. `கிளி கோதி, தாவி ஏறும் பொழில்` என்க.

அந்தமுந் தும்பிற வித்துயர்
தீர வரனடிக்கே
பந்தமுந் துந்தமிழ் செய்த
பராபரன் பைந்தடத்தேன்
வந்துமுந் தும்நந்தம் முத்தங்
கொடுப்ப வயற்கயலே
சந்தமுந் தும்பொழிற் சண்பையர்
காவலன் சம்பந்தனே.

#1530

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சம்பந்தன் (ஓதுபவர்களைப்) பிறவித் துயர் தீர அரன் அடிக்கே உந்தும் தமிழ் செய்த பராபரன்` எனக் கூட்டி முடிக்க. அந்தம் முந்தும் பிறவி - இறப்பை முன்னிட்டுக் கொண்டு வரும் பிறப்பு. பந்தம் - சம்பந்தம்; தொடர்பு - `தொடர்பு உண்டாக உந்தும்` என ஆக்கம் வருவிக்க. `பராற் பரன்` என்பது `பராபரன்` என மருவிற்று. `மேலானவர்க் கெல்லாம் மேலானவன்` என்பது பொருள். தடம் - பொய்கை. தேன் - வண்டு, நந்தம் முந்தி முத்தம் கொடுப்ப - சங்குகள் முற்பட்டு முத்துக்களைக் கொடுக்க, ``முத்தம் கொடுப்ப`` என்பது சிலேடை. ``கொடுப்ப`` என்பதன் பின் `மீண்டு` என ஒரு சொல் வருவிக்க. சந்தம் உந்தும் - இசை

பாடுகின்ற முத்தத்தைப் பெறுதல் வண்டிற்கு இல்லையாயினும் உள்ளதுபோலத் தற்குறிப்பேற்றம்.

புண்டலைக் குஞ்சரப் போர்வையர்
கோயிற் புதவடைக்கும்
ஒண்டலைத் தண்டமிழ்க் குண்டா
சனியும்பர் பம்பிமின்னுங்
கொண்டலைக் கண்டுவண்
டாடப் பெடையொடுங்
தண்டலைக் குண்டகழ்ச் சண்பையர்
காவலன் சம்பந்தனே.

#1531

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

\`சம்பந்தன் குஞ்சரப் போர்வையர் கோயில் புதவு அடைக்கும் தமிழைப் பாடிய குண்டாசனி\` என வினைமுடிக்க. புண் - பாகன் குத்தியதனால் உண்டான புண். \`\`குஞ்சரம்\`\` என்பது ஆகுபெயராய், அதன் தோலைக் குறித்தது. புதவு - வாயில். உம்பர்ப் பம்பி - வானத்தில் நெருங்கி. தண்டலை - சோலை. குண்டு - ஆழம்.

எண்டலைக் குந்தலை வன்கழல்
சூடியெ னுள்ளம்வெள்ளங்
கண்டலைப் பத்தன் கழல்தந்த
வன்கதிர் முத்தநத்தம்
விண்டலைப் பத்தியி லோடும்
விரவி மிளிர்பவளம்
தண்டலைக் குங்கடற் சண்பையர்
காவலன் சம்பந்தனே.

#1532

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

\`சம்பந்தன், என் உள்ளம் எண் தலைக்கும் தலைவன் கழல் சூடி வெள்ளம் கண்டு அலைப்பத் தன் கழல் தந்தவன்\` எனக் கூட்டி முடிக்க. எண் தலை - எட்டுத் திசை. \`\`வெள்ளம்\`\` என்பதனை, \`இன்ப வெள்ளம்\` என்க. அலைப்ப - அலைத்து முழுகும் படி. \`\`கடல் அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும்\`\` *1* என்றது காண்க. \`சம்பந்தன் முன்னர்த் தன்கழலைத் தந்தமையால் பின்பு என் உள்ளம் சிவன் கழலைக் காணலாயிற்று\` என்பதாம். \`முத்தம் நத்தம் விண்ட அலைப் பத்தியில்

பவளம் விரவித் தண்டலைக்கும் ஓடும் கடல்` என்க. நத்தம் - சங்கு. ``விண்டு`` என்பதை `விள்ள` எனத் திரிக்க. விள்ளல் - ஈனுதல். தண்டலை - கடற்கரைச் சோலை. ``தண்டலைக்கு`` என்னும் நான்காவதை, `தண்டலைக்கண்` என ஏழாவதாகத் திரிக்க. உம்மை, இறந்தது தழுவிய எச்சம்.

ஆறுமண் டப்பண்டு செஞ்சொல்
நடாத்தி யமண்முழுதும்
பாறுமண் டக்கண்டு சைவ
சிகாமணி பைந்தடத்த
சேறுமண் டச்சங்கு செங்கயல்
தேமாங் கனிசிதறிச்
சாறுமண் டும்வயல் சண்பையர்
காவலன் சம்பந்தனே.

#1533

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சம்பந்தன், பண்டு ஆறு மண்டச் செஞ்சொல் நடாத்தி.... சைவ சிகாமணி` எனக் கூட்டி முடிக்க. ஆறு - வையை நதி; அஃது அதன் நீரைக் குறித்தது. மண்ட - பொருந்த. ``செஞ்சொல்`` என்றது செவ்விய சொற்களை எழுதிய ஏட்டைக் குறித்தது. நடாத்தியது எதிர்முகமாக. பாறு மண்ட - பருந்துகள் நெருங்கி உண்ண. `சங்கு தடத்த சேறு மண்ட, கயல் கனியைச் சிதறி அதன் சாறு மண்டும் வயல்` என்க. தடம் - பொய்கை. மண்டுதல் - நெருங்குதல்.

விடந்திளைக் கும்அர வல்குல்மென்
கூந்தல் பெருமணத்தின்
வடந்திளைத் குங்கொங்கை புல்கிய
மன்மதன் வண்கதலிக்
கடந்திளைத் துக்கழு நீர்புல்கி
யொல்கிக் கரும்புரிஞ்சித்
தடந்திளைக் கும்புனல் சண்பையர்
காவலன் சம்பந்தனே.

#1534

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சம்பந்தன் பெருமணத்தில் இருந்த அழகு மிக்க ஒருத்தி உள்ளத்தால் ஆரத் தழுவிய மன்மதன் போலும் அழகினை உடையவன்` இப்பாட்டின்

தெளிந்த பொருள். இதனால் பிள்ளை யாரது திருமேனி அழகைப் புகழ்ந்தவாறு. ``பெருமணம்`` என்பதை முதலிற் கொள்க. பெருமணம் - நல்லூர்ப் பெருமணம்; தலம். ``பெரு மணத்தின் கொங்கை`` என்பதை, `பறம்பிற் பாரி` என்பது என்க. கொங்கை சினையாகு பெயர். வடம் - மணி வடம், கடம் - காடு, புதரை, `காடு` என்றார். கழுநீர் - குவளை. ஒல்குதல் - அசைதல். தடம்- பொய்கை. திளைத்தல், இங்கே நிரம்பி நிற்றல். வருவித்துரைத்தன ஆற்றலாற் கொண்டவை.

பாலித்த கொங்கு குவளைகள்
எம்பொழில் கீழ்ப்பரந்து
வாலிப்ப வாறதே றுங்கழ
னிச்சண்பை யந்தமுந்து
மேலிட்ட புண்டலைக் குஞ்சரத்
எண்டலைக் குந்தலைவன்
கோலிட்ட வாறு விடந்திளைக்
கும்அர வல்குலையே.

#1535

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அந்தாதியிற் போல இவ்விருத்தத்திலும் ஒரு பாடலை அகத்துறைப் பாலதாக அருளிச் செய்தார். இது கைக்கிளைத் தலைவியது வேறுபாடு கண்டு வினாவிய செவிலிக்குத் தோழி உண்மை வகையால் அறத்தொடு நின்றது.

பாலித்த - `ஒழுக விடப்பட்ட கள்` என்க. கொங்கு நறுமணம். ஆலிப்ப - ஓட. `குவளைத் தேன் பரந்து ஓடும்படி ஆற்று நீர் மிக்கெழு கின்ற கழனி` என்க. அந்தம் - திசைகளின் முடிவு. குஞ்சரம் திக்கு. `அவை அனைத்திற்கும் தலைவன் சண்பையில் தலைவன்` என்க. இவ்விடம் திளைக்கும் அரவு அல்குல்` எனச் சுட்டு வருவிக்க. `இவளை சண்பையில் தலைவன் கோல் இட்ட ஆறே இவள் வேறு பாடு` என்றபடி. கோல் - ஆணை; `தழுவி வாழப் பெறாது. தனிமை யால் மெலிக` என்பதே அவ் ஆணையாம். ஆளுடையபிள்ளையார் திருச்சண்பை விருத்தம் முற்றிற்று.

நம்பியாண்டார் நம்பிகள் - ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை

திங்கட் கொழுந்தொடு பொங்கரவு திளைக்குங்
கங்கைப் பேரியாற்றுக் கடுவரற் கலுழியின்
இதழியின் மெம்பொ னிருகரை சிதறிப்
புதலெருக்கு மலர்த்தும் புரிபுன் சடையோன்
திருவருள் பெற்ற இருபிறப் பாளன்

முத்தீ வேள்வு நான்மறை வளர
ஐவேள் வுயர்த்த அறுதொழி லாளன்
ஏழிசை யாழை யெண்டிசை யறியத்
துண்டப் படுத்த தண்டமிழ் விரகன்
காழி நாடன் கவுணியர் தலைவன்

மாழை நோக்கி மலைமகள் புதல்வன்
திருந்திய பாடல் விரும்பினர்க் கல்லது
கடுந்துய ருட்புகக் கைவிளிக் கும்இந்
நெடும்பிற விக்கடல் நீந்துவ தரிதே.
#1536
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``திங்கட் கொழுந்தொடு.

.

.

.

பரிபுன் சடையோன் - சிவபெருமான்.
பொங்கு அரவு- சினம் மிக்க பாம்பு.
திளைத்தல் - விளையாடுதல்.
`திங்களோடு பாம்பு விளையாடுதல் வியப்பு.
கடு வரல் கலுழி வேகமாய் வருகின்ற வெள்ளம் - வெள்ளம் இருகரை யிலும் பொன்னைச் சிதறுதலும், மலர்களை மலர்த்துதலும் இயல்பு.
`அவ்வாறு இங்கு வெள்ளத்தால் இரு கரைகளிலும் சிதறப்படும் பொன் இதழியும், (கொன்றை மலரும்) மலர்த்தப்படும் மலர் எருக்குமாம்` என்றபடி.
இதழியின் செம்பொன் உருவகம்.
`இன்` வேண்டாவழிச் சாரியை.

புதல் - புதர்.
இருபிறப்பாளனும் அருதொழிலாளனுமாகிய தமிழ் விரகன்` - என்க.
`முத்தி வேள்வியைக் கூறும் நான்மறை` என உரைக்க.
``வேள்வு`` என்பது, `வி` என்னும் விகுதி பெறாமல், `வு` என்னும் விகுதி பெற்று வந்த தொழிற் பெயர்.
மழை நோக்கி - மாவடுப் போன்ற கண்களை யுடையவள்.
`புதல்வனது பாடல்` என ஆறாவது விரிக்க.
கை விளித்தல் - கையால் அழைத்தல்.
``கூற்றத்தைக் கையால் விளித்தற்றால்`` என்றது காண்க.
இது நிலைமண்டில ஆசிரியப்பா இதனுள் எண்ணலங்காரம் வந்தது.

அரியோடு நான்முகத்தோ னாதிசுரர்க் கெல்லாந்
தெரியாமைச் செந்தழலாய் நின்ற வொருவன்சீர்
தன்தலையின் மேல்தரித்த சம்பந்தன் தாளிணைகள்
என்தலையின் மேலிருக்க வென்று.

#1537

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சம்பந்தன் தாளிமைகள் என்றும் என் தலைமேல் இருக்க` என முடிக்க.
`என்றும்` என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று.
அடுத்த பாடல், ``என்றும்`` எனத் தொடங்குதல் காண்க.
சீர் - புகழ்.

என்று மடியவ ருள்ளத்
திருப்பன விவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித்
துதிப்பன நல்லசங்கத்
தொன்றும் புலவர்கள் யாப்புக்
குரியன வொண்கலியைப்
பொன்றுங் கவுணியன் சைவ
சிகாமணி பொன்னடியே.

#1538

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதன் பொருள் வெளிப்படை.
கல் - வறுமை, இன்மை.
ஒண்மை - ஒளி, ஞானம்.
``ஒண் கலி`` என்றது, `ஒண்மையின் கலி` என்றபடி.

அஃதாவது ஒண்மையைக் கெடுக்கும் கலி.
பொன்றுதல் - அழிதல்.
``பொன்றும்`` என்பது `பொன்றல்` என்பது `வி` என்னும் பிறவினை விகுதி தொக்கு நின்றதாகக் கொள்ளல் வேண்டும், ``குடி பொன்றிக் - குற்றமும் ஆங்கே தரும் *1* என்பதிற்போல என்றார் மாதவச் சிவஞான யோகிகள்

அடுசினக் கடகரி யாதுபடி உரித்த
படர்சடைக் கடவுள்தன் திருவரு ளாதனால்
பிறந்தது
கழுமலம் என்னும் கடிநக ரதுவே
வளர்ந்தது
தேங்கமழ் வாவிச் சிலம்பரை யன்பெறு
பூங்குழல் மாதிடு போனகம் உண்டே
பெற்றது
குழகனைப் பாடிக் கோலக்காப்புக்
கழகுடைச் செம்பொன் தாளம் அவையே
தீர்த்தது
தாதமர் மருகற் சடையனைப் பாடிப்
பேதுறு பெண்ணின் கணவனை விடமே
அடைத்த
தரசோ டிசையா அணிமறைக் காட்டுக்
குரைசேர் குடுமிக் கொழுமணிக் கதவே
ஏறிற்
றத்தியும் மாவும் தவிர அரத்துறை
முத்தின் சிவிகை முன்னாட் பெற்றே
பாடிற்
றருமறை ஒத்தூர் ஆண்பனை யதனைப்
பெருநிறம் எய்தும் பெண்பனை யாவே
கொண்டது
பூவிடு மதுவில் பொறிவண் டுழலும்
ஆவடு துறையிற் பொன்ஆ யிரமே
கண்டது
உறியோடுபீலி யொருகையிற் கொள்ளும்
பறிதலைச் சமணைப் பலகழு மிசையே
நீத்த
தவிழ்ச்சுவை யேஅறிந் தரனடி பரவும்
தமிழ்ச்சுவை யறியாத் தம்பங் களையே

நினைந்த
தள்ளற் பழனக் கொள்ளம் பூதூர்
இக்கரை ஓடம் அக்கரைச் செலவே
மிக்கவர் **35**
ஊனசம் பந்தம் அறுத்துயக் கொளவல
ஞானசம் பந்தனிந் நானிலத் திடையே. **37**

#1539

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஞானசம்பந்தன் இந்நானிலத்திடை`` என்பதை முதலிற் கொள்க.
`ஞாலத்திடை` என்பது பாட மன்று என்பது, அடுத்த பாடல்
``நிலத்துக்கு`` எனத் தொடங்குவதால் விளங்கும்.
முன் பாட்டு ``அடி`` என முடிந்தமையால் இப்பாட்டின் முதல் `அரிசினம்`
என்பதும் பாடமன்று.
அடு சினம் - போரில் பகைவரைக் கொல்ல எழுகின்ற சினம்.
`திருவருளதனால் பிறந்தது.
கடிநகரதுவே; வளர்ந்தது.
உண்டே; பெற்றது.
செம்பொன் தாளம் அவையே; தீர்த்தது.
விடமே; அடைத்தது.
கதவே; ஏறிற்று.
சிவிகை.
முன்னாட் பெற்றே; பாடிற்று ஆண்பனையதனைப்
பெண்பனையாகவே; கொண்டது.
சமணைப் பல் கழுமிசையே; நீத்தது அரன் அடி பரவும் தமிழ்ச் சுவை
யறியாத் தம்பங்களையே; நினைந்தது.
இக்கரை ஓடம் அக்கரைச் செலவே`` எனக் கூட்டி யுரைக்க.
பிறந்தது, வளர்ந்தது முதலாக வந்தன பலவும் இடம், செயப்படுபொருள்
ஆகியவை வினை முதல் போலக் கூறப்பட்டனவாம்.
``நீத்தது நினைந்து`` என்பன தொழிற் பெயர்கள்.
எழுவாய் நின்று செயப்படு பொருட் பெயர்களாகிய பயனிலைகளைக்
கொண்டன; ``ஏறிற்று`` என்பது ``பெற்று`` என்னும் வினையெச்சப்
பயனிலை கொண்டது.
``பாடிற்று`` என்னும் ``எழுவாயும்`` பெண் பனையாக என
வினையெச்சப் பயனிலை கொண்டது.
கொள வல்ல ஞானசம்பந்தன்` என்க.
மிக்கவர் - ஞானமும், அன்பும் மிகப் பெற்றவர்; மேலோர்.

`மிக்கவரது` என ஆறாவது விரிக்க.
வாவி, இங்குச் சுனை.
இனி, `மான சரோவரம்` என்னும் பொய்கையும் ஆம்.
சிலம்பு - மலை.
போனகம் - திருமுலைப் பாலில் அளைந்த அடிசில்.
பேதுறு - வருந்திய.
பெண், வணிகப் பெண் ``கணவனை`` என்பதை, `கணவனுக்கு` எனத் திரித்து ``தீர்த்தது`` என்பதனோடு இயைக்க.
அரசு - திருநாவுக்கரசர்.
இசையா - கூடி.
குரைசேர் - ஒலித்தல் பொருந்திய.
அத்தி - யானை.
மா - குதிரை.
விடு - ஒழுக விடுகின்ற.
அவிழ் - வாய் உணவு - அள்ளற் பழனம் - சேற்றையுடைய வயல்.
``கரியது, நகரது திருவருளதனால், ஆண் பனையதனை`` என்பவற்றில் அது பகுதிப் பொருள் விகுதி, ``தாளம் அவையே`` என்பதில் ``அவை`` என்றதும் அது.
இதுவும் நிலைமண்டில ஆசிரியப்பா.

நிலத்துக்கு மேலாறு நீடுலகத் துச்சித்
தலத்துக் மேலேதா னென்பர் சொலத்தக்க
சுத்தர்கள் சேர்காழிச் சுரன்ஞான சம்பந்தன்
பத்தர்கள்போய் வாழும் பதி.

#1540

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``சொலத் தக்க`` என்பது முதலாக எடுத்துக் கொண்டு உரைக்க.
சொலத் தக்க - சிறப்பித்துச் சொல்லத் தக்க சுத்தர்கள் - மலம் நீங்கிய தூயோர்; முத்தர்கள்.
சுரன் - பூசுரன்.
நிலம் - பூவுலகம்.
அதற்குமேல் உள்ள ஆறு நிலையான உலகங்களாவன, `புவர் லோகம், சுவர் லோகம், மக லோகம், சன லோகம், தவ லோகம், சத்திய லோகம்` என்பன.
புவர் லோகம் சூரிய சந்திர நட்சத்திர மண்டலங்களையுடைய சுடர் உலகம்.
காற்று மண்டலம் இவற்றின் கீழாய் அடங்கும்.

சுவர் லோகம், இந்திராதி தேவர் வாழ் உலகம்.
மக லோகம் மரீசி முதலிய மகான்கள் வாழும் உலகம்.
சன லோகம், சன்னு முதலிய பொது ஞானியர் வாழும் உலகம்.
தவ லோகம், சனகர் முதலிய சிறப்பு ஞானியர் வாழும் உலகம்.
சத்திய லோகம் பிரம தேவனுடைய உலகம்.
திருமாலினுடைய வைகுந்தமும் இதனுடன் சேர்ந்து ஒன்றாக எண்ணப்பட்டது.
இவற்றிற்கெல்லாம் மேலே உள்ளது சீகண்டருத்திரர் உலகம் அதுவும் சிவலோகமாகவே எண்ணப்படும்.
இவையெல்லாம் சிவஞான மாபாடியத்துட் கண்டன.
1 இவை பல்லூழி காலம் இருத்தல் பற்றி, ``நீடுலகு`` எனப்பட்டன.
``உச்சித் தலத்துக்கு மேல்`` என்றது, `அவைகளுக்கு அப்பால்` என்றபடி.
``தான்`` என்பது தேற்றப் பொருளில் வந்தது.
என்பர் - என்று சொல்லுவர் மெய்யுணர்ந்தோர்.
`ஞான சம்பந்தருக்கு அடியவராகவே, ஞானம் எளிதில் கூடும் - என்பது கருத்து.

பதிகம் பலபாடி நீடிய
பிள்ளை பரசுதரற்கு
அதிக மணுக்க னமணர்க்குக்
காலன் அவதரித்த
மதியந் தவழ்மாட மாளிகைக்
காழியென் றால்வணங்கார்
ஒதியம் பணைபோல் விழுவரந்
தோசில வூமர்களே.

#1541

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`ஞானசம்பந்தர் அவதரிக்கப் பெற்றது காழிப்பதி` என்று சொல்லக் கேட்டால் அறிவிலிகள் சிலர் உடனே வீழ்ந்து வணங்காமலே நிற்பார்கள்.
அவர்கள் இறுதியில் ஒதிய மரத்தின் கிளை வீழ்வதுபோல யாதொரு பயனும் இல்லாமல் வீழ்வார்கள்`` என்பது இதன் திரண்ட பொருள்.
`ஞானசம்பந்தர்பால் தலையாய அன்பினை உடையர் ஆகாதார் இவ்வாறு ஆவர்` என்பதாம்.
தலையன்பினது நிலைமை.
முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்;
மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள்;

பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்;
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
என்பதில் குறிக்கப்பட்டமை காண்க.
``பதிகம் பல பாடி நீடிய பிள்ளை`` என்றது, ``பிள்ளைமைப் பருவத்திலே அளவற்ற திருப்பதிகங்களை அருளிச் செய்து அதனால் என்றும் நிலை பெற்ற புகழையுடைய சிறிய பெருந்தகையார்` என்றபடி.
`அப்புகழைக் கேட்டும் அவருக்கு அடியர் ஆகாதவரைப் பற்றி என்ன சொல்வது` என்பதாம்.
பரசு - மழு - தரன் - தரித்தவன்; சிவபெருமான்.
அணுக்கன் - நெருக்கமானவன்.
`அவதரித்தது` எனற் பாலதனை, ``அவதரித்த`` என உடம்பொடு புணர்தலாக்கிக் கூறினார்.
``பிள்ளை, அணுக்கன், காலன்`` எனப்பட்ட பெயர்களை எடுத்தல் ஓசையாற் கூறி, அவரது அவதாரச் சிறப்பினை உணர்க.
ஒதி ஒருவகை மரம், இது நிற்றலாவது சிறிது நிழலைத் தரும்; வீழ்ந்தால் எந்த ஒன்றிற்கும் பயன்படாது.
அதனால் வீழ் தலையே கூறினார்.
இது முற்காலத்தில் `உதி` - என வழங்கப்பட்டது.
அம், சாரியை.
பணை - கிளை.
அந்தோ, இரக்கக் குறிப்பு.
``பலபாடி`` என ஓர் அடியின் இடையே மூவசைசீர் வந்தது.

தவள மாளிகைத் திவளும் யானையின்
கவுள்தலைக் கும்பத்
தும்பர் பதணத் தம்புதந் திளைக்கும்
பெருவளம் தழீஇத் திருவளர் புகலி
விளங்கப் பிறந்த வளங்கொள் சம்பந்தன்
கருதியஞ் செவ்விச் சுருதியஞ் சிலம்பில்
தேமரு தினைவளர் காமரு புனத்து
மும்மதஞ் சொரியும் வெம்முகக் கைம்மா
மூரி மருப்பின் சீரிய முத்துக்
கொடுஞ்சிலை வளைத்தே கொடுஞ்சரந் துரந்து

முற்பட வந்து முயன்றங் குதவிசெய்
வெற்பனுக் கல்லது
சுணங்கணி மென்முலைச் சுரிகுழல் மாதினை
மணஞ்செய மதிப்பது நமக்குவன் பழியே.

#1542

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இச் செய்யுள் அகப் பொருளில் களவியலில் நொது மலர் வரைவு முயல்வறிந்து தோழி செவிலிக்கு அறத்தொடு நின்ற துறையாகச் செய்யப்பட்டது.
2 முதல் நான்கு அடிகளை,
மாளிகைப் பதணத்து
யானைத் தலைக் கும்பத்து உம்பர்
அம்புதம் திளைக்கும் பெருவளம்
எனக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்க.
பதணம் - மேல்மாடத்து மேடை.
`மாளிகைப் பதணம்` என இயைக்க.
பதணத்துக் கும்பம் - அம்மேடையின் மேல் அழகிற்குச் செயற்கையாகச் செய்யப்பட்ட குடம்.
(அதன்) உம்பர் - மேலே அம்புதம் திளைக்கும் பெருவளம் - மேகங்கள் தவழ்கின்ற மிக்க வளமையை.
தழீஇ - தழுவி.
திருவளர் - அழகு மிகுகின்ற.
புகலி - சீகாழி.
`கவள யானை, திவளும் யானை` - எனத் தனித் தனி இயைக்க.
கவளம் - யானை உணவு.
திவளுதல் - அசைதல்.
`யானையின் தலைபோலும் கும்பம்` என்க.
கவுள் தலை - கன்னத்தையுடைய தலை.
யானையின் கன்னம் மத நீர் ஒழுக நிற்பது ஆதலின், அஃது எடுத்துக் கூறப்பட்டது.
`சம்பந்தன் சிலம்பில்` என இயையும்.
அலம்பு- மலை.
அம் - அழகு.
கருது இயம் செவ்விச் சுருதி - அறிஞர் விரும்புகின்ற வாச்சியங்கள் இனிமை பெற எழுப்புகின்ற இசையை உடைய சிலம்பு.
இவ் இசை வண்டுகளாலும், மூங்கில்களாலும் இசைக்கப்படுவன.
`செவ்வி பெற எழுப்பும் சுருதி` என, வேண்டும் சொற்களை இசையெச்சமாக வருவித்துக் கொள்க.
`சிலம்பிற் புனம்` என இயைத்துக் கொள்க.
தேமரு தேன் + மரு.

தேன்- இனிமை.
காமரு - அழகிய.
கைம் மா - யானை.
மூரி - பெரிய; வலிய.
மருப்பு - தந்தம்.
உக - சிந்தும்படி.
``முற்பட வந்து`` என்பதை, ``புனத்து`` என்பதன் பின்னர்க் கூட்டுக.
வெற்பன் - குறிஞ்சி நிலத் தலைவன்.
சுணங்கு அணி - தேமலைக் கொண்ட.
``புகலித் தலம் விளங்கப் பிறந்த சம்பந்தனது மலையில் தினை வலர் புனத்து (ஒருநாள் எங்கள்மேல் யானை வந்த பொழுது) முன் வந்து சிலை வளைத்துச் சரம் துரந்து முயன்று அங்கு உதவி செய்த வெற்பனுக்கு அல்லது பிறருக்கு நும் மகளை மணம் செய்து கொடுக்க எண்ணுவது நம் எல்லோருக்கும் வலிய பழியாய் முடியும்`` என்பதாம்.
`அவ்வாறு செய்ய முயன்றால் தலைவி இறந்துபடுவாள்` என்பது கருத்து.
இது, தோழி செவிலிக்குக் களிறு தருபுணர்ச்சியால் அறத்தொடு நின்றது.

பழியொன்றும் ஓராதே பாயிடுக்கி வாளா
கழியுஞ் சமண்கையர் தம்மை யழியத்
துரந்தரங்கச் செற்றான் சுரும்பரற்றும் பாதம்
நிரதந்தரம்போய் நெஞ்சே நினை.

#1543

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சமணர் பழி ஒன்றையும் ஓராமை (நினையாமை) வைதிக மதத்தவர்மேல் அன்று கொண்டிருந்த காழ்ப்பு உணர்ச்சியினால் ஆம்.
அதற்கு, ஞானசம்பந்தர் எழுந்தருளியிருந்த திருமடத்திற்குத் தீக்கொழுவியதே போதிய சான்றாகும், ஒன்றும் - சிறிதும் திகம்பர சமணருட் சிலர் பாயை உடுத்தாமல் கையால் இடுக்கித் திரிந்தனர்.
``வாளா`` என்றது, இருமையின்பத்தையும் இழந்தமை நோக்கியாம்.
அழிதல் - தோல்வியடைதல்.
துரந்து - ஓட்டி.
அரங்க - தாமே நசுங்க, அரங்குதல் என்னும் தன் வினையே வலித்தல் பெற்று `அரக்குதல்` என வருகின்றது.
``சுரும்பு அரற்றும்`` என்றது, `தாமரை மலர் போன்றது` என்றபடி.
நிரந்தரம் - இடை விடாமல்.
அந்தரம் - இடைவெளி.

நிர்அந்தரம் - இசை வெளியின்மை.
போய் - அருகணைந்து.
நெஞ்சு அணைதலாவது, பற்றுதல்.

நினையா தரவெய்தி மேகலை
நெக்கு வளைசரிவாள்
தனையாவ வென்றின் றருளுதி
யேதடஞ் சாலிவயல்
கனையா வருமேதி கன்றுக்
கிரங்கித்தன் காழ்வழிபால்
நனையா வருங்காழி மேவிய
சீர்ஞான சம்பந்தனே.

#1544

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது பாடாண் திணைக் கைக்கிளைத் துறையாகச் செய்யப்பட்டது.
இது புறப்புறக் கைக்கிளை.
``தடஞ் சாலி வயல்`` என்பது முதலாகத் தொடங்கி உரைக்க.
``நின்னை`` என்பது இடைக்குறைந்து ``நினை`` என நின்றது.
ஆதரவு - ஆதரித்தல்; விரும்புதல் நெகுதலும், சரிதலும் ஆகிய சினை வினைகள் முதல்மேல் ஏற்றிச் சொல்லப்பட்டன.
சினையொடு ஒட்டிய பொருள்களும் ஒற்றுமை பற்றிச் சினையாகவே கருதப்படும்.
சரிவாள், வினையாலணையும் பெயர்.
தன், சாரியை.
``ஆவ`` என்பது இரக்கக் குறிப்பு இடைச் சொல்.
அருளுதி - இரங்குவாய், ஏகாரம் அசை.
வினா வாக்கி உரைத்தலும் ஆகும்.
`தடவயல்` என இயையும்.
தட பெருமை யுணர்த்தும் உரிச்சொல்.
சாலி - நெற்பயிர்.
வயல் வரும் மேதி - வயல்களின் பக்கம் மேய்தற்கு வருகின்ற எருமை.
``வயல்`` என்பதன் பின், ``புடை`` என்னும் பொருட்டாய கண்ணுருபு விரிக்க.
கமையா - கனைத்து; ஒலியெழுப்பி.
கன்றுக்கு - உடைவனிடத்திலே கட்டுண் டிருக்கும் தனது கன்றை நினைந்த காரணத்தால், `நனைய` என்றதன் இறுதி நீட்டல் பெற்றது.
`எச்சத் திரிபு` என்றலும் ஆம்.

தனமலி கமலத் திருவெனுஞ் செல்வி
விருப்பொடு திளைக்கும் வீயா வின்பத்
தாடக மாடம் நீடுதென் புகலிக்
காமரு கவினார் கவுணியர் தலைவ
பொற்பமர் தோள நற்றமிழ் விரக

மலைமகள் புதல்வ கலைபயில் நாவநினாது
பொங்கொளி மார்பில் தங்கிய திருநீ
றாதரித் திறைஞ்சிய பேதையர் கையில்
வெள்வளை வாங்கிச் செம்பொன் கொடுத்தலின்
பிள்ளை யாவது தெரிந்தது பிறர்க்கே.

#1545

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதுவும் புறப்புறக் கைக்கிளை.
தனம் மலி - பொருளை நிரம்பத் தருகின்ற.
திரு - இலக்குமி.
`அவள் திளைக்கும் மாடம், இன்பத்து மாடம், ஆடக மாடம் எனத் தனித்தனி இயைக்க.
திளைத்தல் - இன்பம் உற்று இருத்தல்.
வீயா - அழியாத.
ஆடகம் - பொன்.
நீடு - உயர்ந்திருக்கின்ற.
தென் - அழகு.
புகலி - சீகாழிப் பதி.
`புகலிக் கவுணியர்` என இயைக்க.
காமரு - விரும்பப்படுகின்ற.
கவின் ஆர் - அழகு நிறைந்த (தலைவன்).
கவுணியர் - கரவுணிய கோத்திரத்தவர்.
தலைவன் - சிறந்தவன்.
பொற்பு - அழகு.
நற்றமிழ் - ஞானத் தமிழ்.
விரகன் - வல்லவன்.
ஞானசம்பந்தரை முருகன் அவதாரமாகக் கூறுவோர் ``மலைமகள் புதல்வ`` - என்பதற்கு உண்டமை பற்றி ஞானசம்பந்தரை முருகன் அவதாரமாகக் கூறுவோர் ``மலைமகள் புதல்வ`` என்பதற்கு `முருகன்` எனப் பொருள் கொள்வர்.

அம்மையது திருமுலைப் பாலை உண்டமை பற்றி ஞானசம்பந்தரை அங்ஙனம் கூறுதல் பொருந்துவதே.
பயிலுதல் - பல முறையும் சொல்லுதல்.
ஆதரித்து - விரும்பி.
``பேதையர்`` என்பதுபொதுப் பொருட்டாய், `மகளிர்` எனப் பொருள் தந்தது.
வெள் வளை - சங்க வளையல்.
``செம்பொன்`` - என்பது உவமையாகு பெயராய், அது போலும் தேமலைக் குறித்தது.
காதல் மிகுதியால் உடல் மெலிய வளை கழலுதலும், உடம்பில் தேமல் தோன்றுதலும் இயற்கை.
இவற்றை வாங்குதலும், கொடுத்தலுமாகக் கூறியது, ஏற்றுரை (இலக்கணை) வழக்கு.
சங்கினைப் பொன்னை விலையாகக் கொடுத்து வாங்குதலால், `சிறுபிள்ளை` என்பது உண்மையாயிற்று என்பதாம்.
`பிள்ளைமைப் பருவத்திற்றானே இத்துணைப் பேரழகுடையராய் இருந்தார்` என்பது கருத்து.

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தொஃறோணி கண்டீர் நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்.

#1546

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பொன் மாலை மார்பன்`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.
``நிறை யுலகில்`` என்பதை, ``பிறவி`` என்பதற்கு முன்னே கூட்டுக.
பிறவி - பிறத்தல்.
அது முடிவில்லாது வருதலால் பெரிய கடலாக உருவகிக்கப்பட்டது.
ஞானசம்பந்தரது தமிழ் பிறத்தல் தொழில் வாராது போக்குதல் பற்றி அஃது அக்கடலைக் கடக்க உதவும் தோணியாக உருவகிக்கப்பட்டது.
இஃது இயைபு உருவகம் பொல்லாமை - தீமை.
`துன்பத்தைத் தருவது` என்பது கருத்து.
நீந்துதல் - கடத்தல்.
துறவு; பற்றுக்களை அறவேவிடுதல்.
அவ்விடுதலை தருவதனை விடுதலாகவே கூறினார் காரணம் காரியமாக உபசரிக்கப்பட்டது.
தோல் + தோணி = தோஃறோணி.

தொன்மை - பழைமை.
`ஞான சம்பந்தரது தமிழ் பொருளால் பழைமை யுடையது` என்பது கருத்து.
`தோற்றோணி` என்பது பாடம் அன்று.
கண்டீர்; முன்னிலையசை.
நிறை உலகு - உயிர்கள் நிறைந்துள்ள உலகு.
பொன் மாலை, பிள்ளைகட்கு அணியப்படுவது.
தன், சாரியை.
`சம்பந்தன்தன் தமிழ்` என்க.
மாலைத் தமிழ் - கோவையாக (திருப்பதிகங்களாக)ச் செய்யப்பட்ட தமிழ்.
ஞானத் தமிழ் - ஞானத்தைத் தரும் தமிழ்; இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.
தமிழ், அதனால் ஆகிய பாடல்களைக் குறித்த கருவியாகுபெயர்.

ஞானந் திரளையி லேயுண்
டனையென்று நாடறியச்
சோனந் தருகுழ லார்சொல்
லிடாமுன் சுரும்புகட்குப்
பானந் தருபங்க யத்தார்
கொடுபடைச் சால்வழியே
கூனந் துருள்வயல் சூழ்காழி
மேவிய கொற்றவனே.

#1547

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதுவும் புறப் புறக் கைக்கிளை.
``படைச் சால் வழியே`` - என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.
``திரளை`` என்பது இங்குக் கிண்ணத்தைக் குறித்தது; ஆகு பெயர்.
சோனம் - மேகம்.
தரு, உவம உருபு.
``சோனந் தரு குழலார்`` என்றது தோழிமார்களை.
எனவே, `தலைவியர் கேட்பச் சொல்லிடா முன்` என்க.
``கொற்றவனே`` (அறிவால் அறியத் தக்க ஞானத்தைக்) கிண்ணத்திலே பெற்று உண்டாய்`` - என்னும் அதிசயத்தைத் தோழியர் தம் தலைவியர் கேட்ப நாடறியச் சொல்லும் முன்னே உனது பங்கயத் தாரினை (தாமரைமலர் மாலையை)க் கழற்றிக் கொடுத்துவிடு; (ஏனெனில், அதனைக் கேட்டவுடனே தலைவியர் ஆற்றாமையால் இறந்துபடுவர்) -

என்பது இதன் பொருளாகும்.
``தலைவியர் கேட்ப`` என்பது இசையெச்சம் இது `மாலையிரத்தல்` என்னும் துறை.
சுரும்புகட்குப் பானமாவது தேன்; அதனைத் தருவது பங்கயம் (தாமரை மலர்) தாமரை மாலை அந்தணருக்கு உரிய அடையாள மாலை.
படைச் சால், உழுபடை உழுது சென்ற பள்ளம், கூன் நந்து - வளைவான சங்குகள் கொற்றவன் - தலைவன்.

அவனிதலம் நெரிய வெதிரெதிர் மலைஇச்
சொரிமதக் கறிற்று மத்தகம் போழ்ந்து
செஞ்சே றாடிச் செல்வன அரியே எஞ்சாப்
படவர வுச்சிப் பருமணி பிதுங்கப்
பிடரிடைப் பாய்வன பேழ்வாய்ப் புலியே
இடையிடைச் செறியிரு ளுருவச் சேண்விசும் பதனில்
பொறியென விழுவன பொங்கொளி மின்னே
உறுசின வரையா லுந்திய கலுழிக்
கரையா றுழல்வன கரடியின் கணனே
நிரையார் பொருகட லுதைந்த சுரிமுகச் சங்கு

செங்கயல் கிழித்த பங்கய மலரின்
செம்மடல் நிறைய வெண்முத் துதிர்க்கும்
பழனக் கழனிக் கழுமல நாடன்
வைகையி லமணரை வாதுசெய் தறுத்த
சைவ சிகாமணி சம்பந்தன் வெற்பிற்

சிறுகிடை யவள்தன் பெருமுலை புணர்வான்
நெறியினில் வரலொழி நீமலை யோனே.

#1548

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இஃது அகப் பொருளில் களவியலில், தோழி தலைவனை வரைவுகடாதல் வேண்டி வரவு விலக்கு வாள்; ஆறின்னாமை கூறி விலக்கிய துறையாகச் செய்யப்பட்டது.
ஆறு இன்னாமை - வரும் வழி துன்பம் உடையது.
``மலையோனே`` என்றதை ``நிரையார்`` என்பதற்கு முன்னே கூட்டிப் பின்வரும் அடிகளையும் முதலில் வைத்து உரைக்க.
மலை யோன் - வெற்பன்; குறிஞ்சி நிலத் தலைவன்.
அவனி தலம் நெரிய - பூமியில் உள்ள இடங்கள் ஆங்காங்குக் குழியும்படி

மலைஇ - போர் செய்து, என்பது, `செய்து கொண்டு சொரிகின்ற மதம்` என நிகழ்காலம் உணர்த்தி நின்றது.
செஞ்சேறு - இரத்தத்தோடு கூடிய சேறு.
அரி சிங்கம், எஞ்சா - இளைக்காத.
பேழ்வாய் - பெரியவாய்.
சேண் விசும்பு- உயரத்தில் உள்ள ஆகாயம்.
`விசும்பினின்றும் மின் வீழ்வன` - என்க.
அது, பகுதிப் பொருள் விகுதி.
பொறி, தீப்பொறி, வரை - மலை.
அது சினம் உடைத்தன்றாயினும் வெள்ளத்தைப் பொங்க விடுதல் பற்றிச் சினம் உடையது போலக் கூறப்பட்டது.
இக்காலத்தவரும்.
`இயற்கையின் சீற்றம்` என்பர்.
உந்திய - வெளிப்படுத்தப்பட்ட கலுழி - (கான் யாற்று) வெள்ளம்,
கரையால் - கரை வழியாக.
கணன் - கணம்; கூட்டம்.
இத்துணையும் ஆறின்னாமை கூறியது.
இனிச் சீகாழிச் சிறப்பு.
நிரை ஆர் - அலைகளின் வரிசை பொருந்திய கரையை
மோதுதல் பொருதல்
உதைந்த - கரையில் கொண்டு வந்து ஒதுக்கிய
சுரி முகம் - வளைந்த முகம்.
`சங்கு பங்கய மலரின் மடல் நிறைய முத்து உதிர்க்கும் கழனி` என்க.
கிழித்த - மலர்த்திய.
மடல் - இதழ்.
பழனம் - மருத நிலம்.
செம்மடல், வெண்முத்து - `சிறுகு இடை பெருமுலை` முரண் தொடைகள்
`புணர்வன வரல் ஒழி நீ` என முடிக்க.
`இவ்வாறான நெறியினில்` என இசையெச்சம் வருவிக்க.

மலைத்தலங்கள் மீதேறி மாதவங்கள் செய்தும்
முலைத்தடங்கள் நீத்தாலும் மூப்பர் கலைத்தலைவன்
சம்பந்தற் காளாய்த் தடங்காழி கைகூப்பித்
தம்பந்தந் தீராதார் தாம்.

#1549

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`முலைத் தலங்கள் நீத்தாலும்`` என்றது, புறப் பற்றுக்களையெல்லாம்

அறவே நீக்கினாலும்` என்றபடி.
`முலைத் தலங்கள்` என்றது, அதற்கு இனமாகிய மற்றை மணி, பொன் இவை களையும் தழுவி நின்றமையின் உபலக்கணம்.
தலைவர் துயிலும் இடமாதல் பற்றி, ``தலங்கள்`` என்றார்.
முன் வைக்கற் பாலதாய இது செய்யுள் நோக்கி ஈற்றில் வைக்கப்பட்டது.
வான் - பெருமை.
தவம், உற்ற நோய் நோன்றலும், உயிர்க்கு உறுகண் செய்யாமையும் ஆகிய அவையேயாம்.
என்னை? `நற்றவம்` என்றோ,1 ``இறப்பில் தவம்`` என்றோ சிறப்பியாது வாளா, ``தவங்கள்`` என்றமையின் ``செய்து`` என்பதனையும், ``நீத்தாலும்`` என்பதனோடு இயைய, `செய்தாலும்` திரிக்க.
``கலைத் தலைவன் சம்பந்தற்கு ஆளாய்.
.
.
தீராதார், தாம் முலைத் தலங்கள் நீத்தாலும், மலைத் தலங்கள் மீதேறி வான் தலங்கள் செய்தாலும் மூப்பர்` - என இயைத்து வினை முடிவு செய்க.
மூப்பர் - முதுமையை எய்துவர்.
என்றது, `பின் ஏனையோர் போலவே இறந்தொழிவர்` என்னும் குறிப்பினது.
நிலையாமை யுணர்வு முதலிய காரணங்களால், `எனது` என்னும் புறப் பற்றுக்களை விட்ட வழியும்.
பற்றற்றான் பற்றினைப் பற்றாதவழி, 2 `யான்` என்னும் அகப் பற்று நீங்காமையால், `ஏனை யோர் போலவே இறப்பர்` என்றார்.
ஞானசம்பந்தரை ஆசிரியராக அடைந்து அவர் சொல்வழி நில்லாதவர்க்கு, `யான்` என்பது ஒழியாது என்பது கருத்து.
``யான் - என்னும் செருக்காவது, தானல்லாத உடம்பைத் தானாகக் கருதும் மயக்கம்`` என்றார் பரிமேலழகர் 1 தன்னை உடம்பின் வேறாக உணர்தலும் பசுஞானமாவதல்லது, பதிஞானம் ஆகாமையால் அவ்வாறுணர்தல் `யான்` என்பதினின்றும் நீங்கியது ஆகாது.
மற்று, எல்லாச் செயல்களும் சிவபெருமான் செயலேயாக, அவற்றுள் சிலவற்றை ``யான் செய்தேன்; பிறர் செய்தார்`` என மயங்கியுணர்ந்து விருப்பு வெறுப்புக்களைக் கொள்ளுதலே, `யான்` என்னும் செருக்காகும்.
அச் செருக்கு, ``எல்லாம் அவனே`` என உணர்ந்து இறைவனைப் பற்றாத வழி நீங்குமாறில்லை.
எனவே, இறுதியடியில் ``தம் பந்தம்`` என்றதில் `பந்தம்` எனப்பட்டது, `யான்` என்னும் அகப் பற்றையேயாயிற்று.

தாமரை மாதவி சேறிய
நான்முகன் தன்பதிபோல்
காமரு சீர்வளர் காழிநன்
னாடன் கவித்திறத்து
நாமரு வாதவர் போல்அழ
கீந்துநல் வில்லிபின்னே
நீர்மரு வாத சுரத் தெங்ங
னேகுமென் நேரிழையே.
#1550
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இஃது அகப் பொருள் உடன்போக்கில் நற்றாய் தலைவியது மென்மைத் தன்மை நினைந்து இரங்கிய துறையாகச் செய்யப்பட்டது.
இன்னோரன்னவற்றை, `அன்னை மருட்சி` என்பர் ``நேரிழை`` என்பதை, `மருவாதவர் போல்`` என்பதன் பின் கூட்டியுரைக்க.
மா தவிசு - சிறந்த ஆசனம்.
நான்முகன் தன்பதி, சத்தியலோகம் சீகாழி `பிரமபுரம்` எனப்படுதலால் அதனை, ``நான்முகன் தன்பதி போல் சீர் வளர் காழி` என்றார்.
சீர் வளர் - சிறப்பு மிக்க.
கவித் திறத்து நா மருவாதவர் - பாடல் வகைகளில் நாப் பொருந்தாதவர்கள்; பாடாதவர்கள்.
``அவர்களே, மெய்வருந்தப் பெற்று, நீரும் நிழலும் இல்லாத பாலை வனத்தில் வாழ்வோராவர்`` என்பதாம்.
``ஈந்து`` என்றது, `நீங்கப் பெற்று` என்றபடி.
வில்லை - வில்லை ஏந்திக் காத்துக் கொண்டு போகும் தலைவன், ``நீர் மருவாத சுரம்`` என்றது, சுரத்தினது இயல்பை எடுத்துக் கூறியவாறு.
``நீர்மரு`` என்பது ஆசெதுகை.
நேர் இழை - நுணுகிய வேலைப்பாடு அமைந்த அணிகலம்.

இழைகெழு மென்முலை யிதழிமென் மலர்கொயத்
தழைவர வொசித்த தடம்பொழி லிதுவே காமர்
கனைகுடைந் தேறித் துகிலது புனையநின்
றெனையுங் கண்டு வெள்கிட மிதுவே தினைதொறும்
பாய்கிளி யிரியப் பையவந் தேறி

ஆயவென் றிருக்கும் அணிப்பரண் இதுவே ஈதே
இன்புறு சிறுசொ லவைபல வியற்றி
அன்பு செய் தென்னை யாட்கொளு மிடமே பொன்புரை

தடமலர்க் கமலக் குடுமியி லிருந்து
நற்றொழில் புரியும் நான்முகன் நாட்டைப்

புற்கடை கழீஇப் பொங்கு சராவத்து
நெய்த்துடுப் பெடுத்த மூத்தீப் புகையால்
நாள்தொறும் மறைக்குஞ் சேடுறு காழி
எண்டிசை நிறைந்த தண்டமிழ் விரகன்
நலங்கலந் தோங்கும் விலங்கலின் மாட்டுப்

பூம்புன மதனிற் காம்பன தோளி
பஞ்சில் திருந்தடி நோவப் போய்எனை
வஞ்சித் திருந்த மணியறை யிதுவே.
#1551
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இஃது அகப்பொருள் களவியலில் பகற் குறி இடையீட்டில் தலைவி செறிக்கப்பட்டமையின் தலைவன் குறி யிடத்துச் சென்று தலைவியைக் காணாது, களம் நோக்கி மறுகுதலாகிய, `வறுங்களம் நாடி மறுகல்` என்னும் துறையாகச் செய்யப்பட்டது.
இழை கெழு - அணிகலன்கள் பொருந்திய.
``மென்முலை`` என்பது அடையடுத்த ஆகுபெயராய்த் தலைவியைக் குறித்தது.
பின் வரும் செய்யுட்களுக்கும் கொள்க.
கொன்றை; கொன்றை மரம்.
இது முல்லை நிலக் கருப் பொருளாயினும்,
எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த ஆகும்
என்பதனால் மலை நிலத்து வந்தது.
திணை மயக்கம் அன்று.
`இதழில் ஒசித்த பொழில்` என்க.
ஒசித்தல் - வளைத்தது பூவைப் பறித்தற் பொருட்டு.
தழை வர - இலைகள் நிலத்திற் படும்படி.
`என்னையும்` என்பது இடைக் குறைந்து நின்றது.
உம்மை, `காண்டல் கூடாத என்னையும்` என உயர்வு சிறப்பு.
தினை ஒட்டும் ஓசை.
சிறு சொல் - இகழ்ச்சியுரை.

இது அன்பினால் சொல்லப்படுவது.
செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன்று உற்றார் குறிப்பு
என்பது காண்க.
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை`` தினைப் புனத்தில்
வெகுளி பற்றி வந்தது.
2 `பொன்புரை குடுமி`` என இயைக்க.
குடுமி, இங்குக் கேசரம்.
தொழில், படைத்தல்.
நாடு- உலகம், புற் கடை - புல்லிய தலைவாயில்.
கழுவுதல் - தூய்மைப் படுத்தல்.
சராவம் - ஓமத்துள் நெய்யை விடும் அகப்பை.
துடுப்பு - அவ் அகப் பையை மூடுவது.
சேடு - பெருமை.
விலங்கல் - மலை, `விரகன் விலங்கள்` என்க.
காம்பு - மூங்கில்.
காம்பன தோளி, தலைவி.
இதனை, ``பொன் புரை`` என்பதற்கு முன்னே கூட்டுக.
வஞ்சித் திருத்தல் - ஒளிந் திருத்தல்.
விளையாட்டுக்களில் ஒளிந்திருப்பதும் ஒன்று.
மணி - மணிகளை உடைய.
அறை - குகை.

வேழங்க ளெய்பவர்க்கு வில்லாவ திக்காலம்
ஆழங் கடல்முத்தம் வந்தலைக்கும் நீள்வயல்சூழ்
வாயந்ததிவண் மாட மதிற்காழிக் கோன்சிலம்பிற்
சாய்ந்தது வண்தழையோ தான்.

#1552

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இதுவும் அகப்பொருள் களவியலில் தலைவன், தலைவி, தோழி இருவரும் உள்வழிச் சென்று, ``இவ் வழியாக அச்சம் உற்று ஓடிய யானை வந்ததா`` எனப் பொய்யாக வினாவ, தோழி அவன் கருத்தறிந்து நகை உண்டாகக் கூறுவதாகிய, ``தோழி இறை வனை நகுதல்`` என்னும் துறையாகச் செய்யப்பட்டது.
``*(இவர் ஏந்தியிருப்பது தழை; வினாவுவது வேட்டத்தில் தப்பிய யானை. அதனால்,)* இக்காலத்தில் யானையை எய்பவர்க்கு அம்பாய் அமைவது, சாய்ந்து துவள்கின்ற தழைதானோ`` என்பது இப் பாட்டின் பொருள்.

வில், ஆகுபெயராய், அதன்கண் தொடுக்கப்படும் அம்பைக் குறித்தது.
`ஆழ் கடல் அம் முத்தம்` என்க.
அம் - அழகு.
சீகாழி அக் காலத்தில் கடலைச் சார்ந்து இருந்தது.
அதனால் அதன் அலைகள் முத்துக்களை வயல்களில் எறிந்தன.
`வயல் சூழ் காழி, மாடக் காழி, மதிற் காழி` எனத் தனித் தனி இயைக்க.
வாய்ந்த - வாய்ப்பான (மாடம்) திவளுதல் - ஒளி வீசுதல், இதுவும் மாடத்திற்கே அடை.
காழிக் கோன், ஞானசம்பந்தர்.
சிலம்பு - மலை.
`துவள்தழை` என்பது எதுகை நோக்கிச் செய்கை வேறுபட்டது.
ஓகாரம், இழிவு சிறப்பு.
தான், அசை.

தழைக்கின்ற சீர்மிகு ஞானசம்
பந்தன் தடமலைவாய்
அழைக்கின்ற மஞ்சைக் கலர்ந்தன
கோடலம் பெய்திடுவான்
இழைக்கின்ற தந்தரத் திந்திர
சாபம்நின் னெண்ணமொன்றும்
பிழைக்கின்ற தில்லைநற் றேர்வந்து
தோன்றிற்றுப் பெய்வளையே.

#1553

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இஃது அகப் பொருள் கற்பியலில் ``கார் காலத்து வருவேன்`` எனக் கூறிப் பிரிந்த தலைவன் அக்காலம் வந்தும் வாரா மையால் ஆற்றாளாய தலைமகட்குத் தோழி அவன் வரவுணர்த்திய துறையாகச் செய்யப்பட்டது.
``பெய் வளையே`` என்பதை முதலிற் கொள்க.
இது தோழி தலைவியை விளித்தது.
தட மலை - பெரிய மலை.
வாய், ஏழன் உருபு.
`அழைக்கின்ற மஞ்ஞைக்கு` என்பதை, `மஞ்ஞை அழைக்கின்றதற்கு என மாற்றிக் கொள்க.
இதன்கண் உள்ள நான்கன் உருபை வினை செய்யிடப் பொருளாகிய கண்ணுருபாகத் திரித்து, `அழைக்கின்ற பொழுதாகிய இப்போது` எனப் பொருள் கொள்க.

அழைத்தல் - அகவுதல்.
மயில் அகவுதல் முகில் வருகையைத் தெரிவிக்கும்.
கோடல் - காந்தள்.
இது குறிஞ்சி நிலத்தில் மழைக் காலத்தில் பூக்கும் `கோடல் அலர்ந்தன` என்க.
`அம்பு எய்தல்` என்பது சிலேடை வகையால், மேகம், கோடையாகிய பகைவன்மேல் அம்பெய்வதாகப் பொருள் தரும்.
அம்பு - கணை; நீர், `இக் கமைக்கு ஏற்புடையவில் வானவில்` என்பது, ``அந்தரத்து இந்திர சாபம்`` என்பதனால் குறிக்கப்பட்டது.
அந்தரம் - ஆகாயம்.
சாபம் - வில்.
``இவை யெல்லாம் நிகழ்ந்து முடிவ தற்கு முன்னே நல்லவருடைய தேர் வந்து தோன்றிவிட்டது.
அதனால், இப்பருவத்தில் தலைவர் வருவார் - என்று உறுதியாக எண்ணியிருந்த உன் எண்ணம் ஒன்றும் (சிறிதும்) தவறவில்லை`` என்க.
``அம்பு எய்திடுவான் இந்திர சாபத்தை இழைக்கின்றது`` என்பதற்கு `மேகம்` என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க.
எய்திடுவான், வான் ஈற்று வினையெச்சம்.

வளைகால் மந்தி மாமரப் பொந்தில்
விளைதே னுண்டு வேணுவின் துணியால்
பாறை யில்துயில் பனைக்கை வேழத்தை
உந்தி யெழுப்பு மந்தண் சிலம்ப அஃதிங்கு
என்னைய ரிங்கு வருவர் பலரே
அன்னை காணி லலர்தூற் றும்மே பொன்னார்
சிறுபரற் கரந்த விளிகுரற் கிங்கிணி
சேவடி புல்லிச் சில்குர லியற்றி
அமுதுண் செவ்வா யருவி தூங்கத்
தாளம் பிரியாத் தடக்கை யசைத்துச்
சிறுகூத் தியற்றிச் சிவனருள் பெற்ற
நற்றமிழ் விரகன் பற்றலர் போல
இடுங்கிய மனத்தொடு மொடுங்கிய சென்று
பருதியுங் குடகடல் பாய்ந்தனன்
கருதிநிற் பதுபிழை கங்குலிப் புனத்தே.

#1554

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இஃது, அகப் பொருள் களவியலில் தோழியிற் கூட்டத்தில் தலைவன்

தோழியைக் குறையிரந்து நிற்கக் குறை நேரும் தோழி அதற்குத்தான் அச்சம் உற்றவளாய் தலைவனையும் அஞ்சுவித்தலாகிய அஞ்சி அச்சுறுத்தல் துறையாகச் செய்யப்பட்டது.
வளை கால் மந்தி - மரம் ஏறுதலால் வளைந்த காலையுடைய பெண் குரங்கு.
வேணுவின் துணி - மூங்கிலை முறித்துக்கொண்ட கழி.
வேழம் - யானை.
சிலம்ப - வெற்பனே.
``பெண் குரங்கு தேனை உண்ட மயக்கத்தால் மூங்கிலை முறித்துக் கொண்ட கழியால் அருகில் துயிலும் யானை எழுப்பப்படு கின்றது`` என்றதனால், ``தலைவியது இல்லில் உண்டு வாழ்ந்த கடமை உணர்ச்சியை யுடைய என்னால் என்பாள் விளைவது அறியாது மயங்கி நிற்கின்ற நீ அறிவுறுத்தப் படுபவனாயினை எனத் தோழி உள்ளுறை உவமம் கூறினாள்.
அஃது இங்கு - உனது நாட்டிற்குச் சொன்ன அந்த இயல்பு இங்கும் உள்ளது.
`அதனை நீ அறி` என்பது இசையெச்சம்.
இங்கு - இவ்விடத்தில் என் ஐயர் பலர் வருவர்.
ஐயர் - தலைவன்மார், ஏகாரம், அசை.
அலர் - வழி.
``தூற்றும்மே`` என்பதில் மகர ஒற்று விரித்தல்.
தேற்றேகாரம், அச்சத்தைக் குறித்தது.
பரல் - சதங்கையின் உள்ளிடு மணி.
``கரந்த பரல்`` என மாற்றிக் கொள்க.
விளி - விளிக்கின்ற; கூப்பிடுகின்ற.
கிங்கிணி - சதங்கை.
``கிங்கிணியைச் சேவடியில் புல்லி (பூட்டி) `` என்க.
அமுது - (பெற்ற தாயார் உண்பித்த) பால் ``அருவி`` என்றது வாய் ஊறலை.
தாளம் - சப்பாணி கொட்டுதல்.
கூத்து - குதிப்பு.
``சில் குரல் இயற்றி`` என்பது முதல் ``இயற்றி`` என்பது காறும் ஞானசம்பந்தர் தம் தந்தையார் சிவபாத இருதயரைக் காணாது அழுத அழுகைக் காட்சி விளக்கப்பட்டது.
`அவ் அழுகையானே சிவனருள் பெற்ற நற்றமிழ் விரகன்` என்க.
இறைவனை ``அழுதழைத்துக் கொண்டவர்`` *1* எனச் சேக்கிழாரும் கூறினார்.

பற்றலர் - பகைவர்.
`இடுகிய` என்பது ``இடுங்கிய`` என விரித்தல் பெற்றது.
ஒடுங்கிய - ஒடுங்குதற்கு; மறைதற்கு.
``பாய்ந்தனன்`` என்றது, விரைவு பற்றி எதிர் காலம் இறந்த காலமாகச் சொல்லப்பட்டது.
கருதி - யாதொன்றையும் நினைத்து.
`கங்குற்கண்` என ஏழாவது இறுதிக்கண் தொக்கது.

தேம்புனமே யுன்னைத் திரிந்து தொழுகின்றேன்
வாம்புகழ்சேர் சம்பந்தன் மாற்றலர்போல் தேம்பி
அழுதகன்றா ளென்னா தணிமலையர் வந்தால்
தொழுதகன்றா ளென்றுநீ சொல்.

#1555

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இஃது அகப் பொருள் களவியல் பகற் குறியில் தோழி தலைவன் சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுக்கும் வகைகளுள் ஒன்றாகிய புனம் நோக்கிக் கூறியதாகச் செய்யப்பட்டது.
தேம் புனம் - தேனை உடைய புனம்.
திரிந்து - வலம் வந்து.
``அணி மலையர் வந்தால்`` என்பதனை இதன்பின் கூட்டுக.
மலையர்- வெற்பர்.
குறிஞ்சி நிலத் தலைவன்.
வாம் புகழ் - வாவும் புகழ்; எங்கும் பரவிய புகழ்.
`வான் புகழ்` - எனப் பாடம் ஓதலும் ஆம்.
`அழுது அகன்றாள்` எனக் கூறினால்.
`உறவு இழக்கப்பட்டதாகும்` என்னும் கருத்தினால் அதனை விலக்கி, `தொழுது அகன்றாள்` எனக் கூறுமாறு கூறினாள்.
இதனால் தலைவனுக்கு ஆறுதல் உண்டாகும்.
``சொல்லு`` என்பதும் பாடம்.

சொற்செறி நீள்கவி செய்தன்று
வைகையில் தொல்லமணர்
பற்செறி யாவண்ணங் காத்தசம்
பந்தன் பயில்சிலம்பில்
கற்செறி வார்சுனை நீர்குடைந்
தாடுங் கனங்குழையை
இற்செறி யாவண்ணம் காத்திலை
வாழி யிரும்புனமே.

#1556

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இச் செய்யுளும் முன்னைச் செய்யுளின் துறை யாகவே செய்யப்பட்டது.
இங்கு, ``பல்`` என்றது, சொல்லைக் குறித்து, `அவன் பல் பலித்தது` என்றும், `பற்போனமையால் சொற்போயிற்று`` என்றும் வழக்கத்தில் வழங்குதல் காண்க.
செறிதல் - சேர்தல்; வெற்றி பெறுதல்.
படல் - விசாலித்த.
கல் சுனை - கற்களுக்கு இடையே உள்ள சுனை.
வார் - நீண்ட.
கனங் குழை - கனமாகிய காதணியை உடைய தலைவி.
இரும் புனம் - பெரிய புனம்.
`புனமே! கனங்குழையை *(அவள் தமர்)* இற் செறியா வண்ணம் காத்திலையே; நீ வாழி` என வினை முடிக்க.
காவாமை முற்றி முதிர்ந்ததால் உண்டாயிற்று.
வாழி, இகழ்ச்சிக் குறிப்பு.

புனலற வறந்த புன்முளி சுரத்துச்
சினமலி வேடர் செஞ்சர முரீஇப்
படுகலைக் குளம்பின் முடுகு நாற்றத்
தாடு மரவி னகடு தீயப்
பாடு தகையின் பஞ்சுரங் கேட்டுக்

கள்ளியங் கவட்டிடைப் பள்ளி கொள்ளும்
பொறிவரிப் புறவே யுறவலை காண்நீ நறைகமழ்
தேம்புனல் வாவித் திருக்கழு மலத்துப்
பையர வசைத்ததெய்வ நாயகன்
தன்னருள் பெற்ற பொன்னணிக் குன்றம்

மானசம் பந்தம் மண்மிசைத் துறந்த
ஞானசம் பந்தனை நயவார் கிளைபோல்
வினையே னிருக்கும் மனைபிரி யாத
வஞ்சி மருங்கு லஞ்சொற் கிள்ளை
ஏதிலன் பின்செல விலக்கா தொழிந்தனை

ஆதலின் புறவே யுறவறலை நீயே

#1557

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இஃது அகப் பொருள்.
களவியலில் உடன் போக்கின் செவிலி பின் தேடிச் செல்லுமிடத்துக் குரவொடு புலம்பல் பெரும் பான்மையாகச் சிறுபான்மை வரும் புறவொடு புலம்பலாகச் செய்யப் பட்டது.
புறவு - புறா; இது பாலை நிலப் பறவை.
வறத்தல் - வற்றுதல்.
வறந்த - வறந்தமையால்.
புல், தரையிற் பரவிய புற்கள்.
முளி - உலர்ந்த.
விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது
என்றது காண்க.
சரம் உரீஇ - அம்பு பட்டு உருவியதனால்.
படு கலை - இறந்த அம் மான்.
மானை வேட்டையாடிய வேடர், அதன் குளம்பை `பயன் இல்லது` என போகட்டுப் போதலின், அது வெயிலால் உருகி மிகத் தீ நாற்றத்தை உண்டாக்கிற்று என்க.
`நாற்றத்தை யுடைய சுரம்` என்க.
ஆடும் அரவு - படம் எடுத்து ஆடும் பாம்பு.
இஃது இனம் உள்ளது அகடு - வயிறு.
வெயில் வெப்பம் மிகுதியால், தரை மேல் ஊர்ந்து செல்லும் பாம்பின் அடி உடல் தீய்வதாயிற்று.
பாலை நிலத்தில் பாடுவன பருந்தும், கழுகும், `அவற்றது குரல் `பஞ்சுரம்` என்னும் பண்போன்றன` என்க.
இப்பண் குறிஞ்சியின் உட்பிரிவாய்ப் பாலைக்கு உரிமையுடையது.
``கலைக் குறம்பின் முடுகு நாற்றமும், அரவின் வயிறு தீய்கின்ற வெப்பமும் ஆகிய இவற்றிடையே கள்ளிக் கிளைகளில் பஞ்சுரப் பண்ணைக் கேட்டு நன்கு உறங்குகின்ற புறாவே`` - என்றதனால், ``நீ என மகளைச் சுரத்திடைப் போதலை விலக்காமை வியப்பன்று`` என்பதனைக் குறிப்பால் உணர்த்தியவாறு.
`நீ (எமக்கு) உறவாவாய் அல்லை` என்க.
பொறி - புள்ளி.
காண், முன்னிலை யசை நறை - தேன்.
தேம்- இனிமை.
அசைத்த - இறுகக் கட்டிய.

அணி - அழகு `அணி பொற் குன்றம்` என மாற்றிக் கொள்க.
`பொற் குன்றம்` என்றதும் ஞான சம்பந்தரை.
உருவகம்.
மானம் - அபிமானம்; பற்று.
மண்மிசை - இவ்வுலகத்தில், ``இவ்வுலகத்தில் `பற்று` எனப்படுவது ஒன்றையும் இல்லாது விடுத்த ஞானசம்பந்தன்`` என்க.
`நயவார் கிளைபோல், வஞ்சி மருங்குற் கிள்ளை ஏதிலன் பின் (சுரத்திற்) செல்ல` என உரைக்க.
``மனை விரியாத`` என்றது, `ஒரு ஞான்றும் வெளிச் சென்று அறியாதவள்` என்பதைக் குறித்தது.
வஞ்சி - கொடி.
மருங்குல் - இடை.
`மருங்குலையும், அழகிய சொல்லையும் உடைய கிள்ளை` என்பதாம்.
கிள்ளை - கிளி; உவம ஆகுபெயர்.
ஏதிலன் - அயலான்.
ஈற்றடி முடிந்தது முடித்தல்.

அலைகடலின் மீதோடி யந்நுளையர் வீசும்
வலைகடலில் வந்தேறு சங்கம் அலர்கடலை
வெண்முத் தவிழ்வயல்சூழ் வீங்குபுனற் காழியே
ஒண்முத் தமிழ்பயந்தா னூர்.

#1558

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முத்தமிழ் பயந்தான், ஞானசம்பந்தர்` அவரது ஊர் காழியே` என்க.
இங்ஙனம் கூறியதனால் காழியது சிறப்பு உணர்த்தப் பட்டது.
`கடலில் வந்து ஏறு சங்கம் நுளையர் வீசும் வலையிலும், மலர்கள் தலையிலும் முத்தை அவிழ்க்கும் வயல்` என்க.
வீங்கு - மிகுந்த.

ஊரும் பசும்புர வித்தே
ரொளித்த தொளிவிசும்பில்
கூரு மிருளொடு கோழிகண்
தூஞ்சா கொடுவினையேற்
காரு முணர்ந்திலர் ஞானசம்
பந்தனந் தாமரையின்
தாருந் தருகில னெங்ஙனம்
யான்சங்கு தாங்குவதே.

#1559

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டுப் பிறர் கூற்றாய் வாராது; தலைவி கூற்றாய் வந்தமையின், பாடாண் கைக்கிளையாகாது, அகப்புறக் கைக் கிளையாய் ``உட்கோள்`` என்னும் துறையின தாம்.

ஊரும் - ஏறிச் செல்கின்ற.

பசும் புரவி - பச்சைக் குதிரை இவை பூட்டப்பட்ட தேர் சூரியனுடையது.

கூரும் - மிகுகின்ற இருளொடு கண் துயிலாது கூவுகின்ற கோழி யாமக் கோழி.

கொடு வினையேற்கு - கொடிய வினையை உடையேனாகிய என் பொருட்டாக.

ஆரும் உணர்த்திலர் - (தோழி உட்பட) யாரும் விழித்திருக்கவில்லை.

சங்கு - சங்க வளையல்.

தேமலி கமலப் பூமலி படப்பைத்
தலைமுக டேறி யிளவெயிற் காயும்
கவடிச் சிறுகாற் கர்க்ட கத்தைச்
சுவடிச் சியங்கும் சூல்நரி முதுகைத்
துன்னி யெழுந்து செந்நெல் மோதுங்

காழி நாட்டுக் கவுணியர் குலத்தை
வாழத் தோன்றிய வண்டமிழ் விரகன்
தெண்டிரைக் கடல்வாய்க்
காண்தகு செவ்விக் களிறுக ளுகுத்த
முட்டைமுன் கவரும் பெட்டையங் குருகே

வாடை யடிப்ப வைகறைப் போதில்
தனிநீ போந்து பனிநீர் ஒழுகக்
கூசிக் குளிர்ந்து பேசா திருந்து
மேனி வெளுத்த காரண முரையாய்
இங்குத் தணந்தெய்தி நுமரும்

இன்னம்வந் திலரோ சொல்லிளங் குருகே.

#1560

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இஃது அகப் பொருட் களவியலில் ஒருவழித் தணத்தலாகப் பிரிந்த

தலைவன் வரவு நீட்டிக்கத் தலைவி இரங்கிய காமம் மிக்க கழிபடர் கிளவியாகச் செய்யப்பட்டது.
கழி படர் - மிக்க துன்பம்.
துன்ப மேலீட்டால் தன் சொல் - கேட்க மாட்டாத பொருளை நோக்கியும் கூற்று நிகழும்.
இது குருகோடு இரங்கியது குருகு - நீர்ப்பறவை.
``இளங் குருகே`` என்பதை முதலிற் கொள்க.
தே மலி - தேன் நிறைந்த.
படப்பை - தோட்டம்.
தலை, ஏழன் உருபு.
முகடு - மேட்டு நிலம்.
கவடி - பலகை.
இது நண்டின் கால்களுக்கு உவமை.
கற்கடகம்- நண்டு.
சுவடித்தல் - தின்னுதல்.
`சுவடித்து` என்பது, ``சுடிச்சு`` எனப் போலியாயிற்று.
நண்டினை விரும்பித் தின்னுதல் நரிக்கு இயற்கை.
சூல் நரி - கருவுற்ற நரி.
`நரியின் முதுகைச் செந்நெறி கதிர் எழுந்து மோதும் காழி` என்க.
``குலத்தை`` என்பதில் பிறவினை விகுதி தொகுத்தலாக, ``வாழ`` என வந்தது என்றலும் ஆம்.
காழி தமிழ் விரகனுக்கு உரித்து ஆயினமையின், அதனையடுத்த கடலும் உரித் தாயிற்று.
கடல் வாய் - கடலின் அடை கரை.
`அதன் கண் பெருங் குருகு - பெரிய நீர்ப்பறவை.
உகுத்த - இட்ட.
களிறு - ஆண் சுறா.
`பெரிய நீர்ப் பறவை கடலின் அடை கரையில் இட்ட முட்டையை ஆண் சுறா முன் ஏறிக் கவர்கின்றது; (அதனை அப்பறவை நோக்காது சோர்ந்துள்ளது என்க.
) ``பனி சொரிகின்ற இவ் இரவில் நீ துணை யோடன்றித் தனியே போந்து உடல் கூசி, குளிர் உற்று வாயடைத்து உடல் வெளுத்திருக்கின்றாய்.
இவ் இரண்டிற்கும் என்ன காரணம்? சொல்.
(என்னைப் பிரிந்து சென்ற என் தலைவர் இன்னும் வாராதது போல, உங்கள் தலைவரும் உங்களைப் பிரிந்துபோய் இன்னம் வர வில்லையோ?`` என்க.

`பெருங் குருகின் முட்டையைச் சுறாமீனும் விரும்புகின்றது` அதன் பெருமை கூறப்பட்டது.
இயல்பிலே சோர் வுற்றுப் பெருங் குருகு சிறுதுயில் கொள்வதனையும், இயல்பிலே இலங்கு குருகு நிறம் வெளுத்திருப்பதையும் தலைவி தனது கழிபடர் காரணமாக ஆற்றாமையால் விளைந்தனவாகக் கருதினார்.

குருகும் பணிலமுங் கூன்நந்துஞ் சேலும்
பெருகும் வயற்காழிப் பிள்ளை யருகந்தர்
முன்கலங்க நட்ட முடைகெழுமுமால் இன்னம்
புன்கலங்கள் வைகைப் புனல்.

#1561

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`வைகைப் புனல் இன்னம் புன்கலங்கல் தெளியா திருப்பது, முன் காழிப் பிள்ளை அருகந்தர் கலங்க நட்ட முடை கெழுமி` எனக் கூட்டி முடிக்க.
குருகு - நீர்ப்பறவை.
பணிலம் - சங்கு.
கூன் நந்து - கூன் பொருந்திய நத்தை.
கூன், முதுகில் உள்ள ஓட்டின் தோற்றம்.
சேல் - கெண்டை மீன்.
அருக முனிவர்கட்கு, `அருகந்தர்` என்பதும் பெயர்.
முடை கெழுமி - முடை நாற்றம் உடைய இரத்தம் முதலியன பொருந்தி நடப்பட்டது கழுமரம் ஆதலின் அவற்றின்கண் ஏறினாரது உடல் அழிவவாயின்.
நடுதலுக்குச் செயப்படு பொருள் வருவிக்க.
``நட்ட`` என்னும் பெயரெச்சம் காரணப் பொருட்டாய், ``முடை`` என்னும் காரியப் பெயர் கொண்டது, ``உண்ட இளைப்பு`` என்பது போல.

புனமா மயில் சாயல் கண்டுமுன்
போகா கிளிபிரியா
இனமான் விழியொக்கும் மென்றுவிட்
டேகா விருநிலத்துக்
கனமா மதிற்காழி ஞானசம்
பந்தன் கடல்மலைவாய்த்
தினைமா திவள்காக்க வெங்கே
விளையுஞ் செழுங்கதிரே.

#1562

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இஃது அகப்பொருள் களவியலில் பகற்குறி பற்றித் தலைவியது வேறுபாடு கண்டு ஐயுற்று, `தினைக் காவல் நன்கு போற்றப் படாதது என்னை` என வினவிய செவிலிக்கு, ஐயச்செய்கை மறுத்துப் பிறிது காரணங் கூறித் தெளிவித்த துறையாகச் செய்யப்பட்டது.
இவள் காக்க - இவள் தினைப் புனம் காக்கும் பொழுது.
``(எவ்வளவு கடிந்து ஓட்டினாலும்) மயில்கள் இவள் சாயலைக் கண்டு போகின்றில.
கிளிகள் (இவள் சொற்கேட்டுப்) போகின்றில, மான் இனம், `இவள் கண் நம் கண் ஒக்கும்` என்று இவ்விடம் விட்டுப் போகின்றில.
ஆதலின் தினை செழுங் கதிர் எங்கே விளையும்`` என்க.
கனம் - மேகம்.
`திண்மை` எனினும் ஆம்.
கடல் மலை - கடலை அடுத்துள்ள மலை.
நெய்தலொடு குறிஞ்சி மயங்கிய திணை மயக்கம்.
``எங்கே`` என்பது, ``எப்படி`` என்னும் பொருட்டு.

கதிர்மதி நுழையும் படர்சடை மகுடத்
தொருத்தியைக் கரந்த விருத்தனைப் பாடி
முத்தின் சிவிகை முன்னாட் பெற்ற
அத்தன் காழி நாட்டுறை யணங்கோ மொய்த்தெழு
தாமரை யல்லித் தவிசிடை வளர்ந்த
காமரு செல்வக் கனங்குழை யவளோ மீமருத்
தருவளர் விசும்பில் தவநெறி கலக்கும்
உருவளர் கொங்கை யுருப்பசி தானோ
வாருணக் கொம்போ மதனன் கொடியோ
ஆரணி யத்து ளருந்தெய்வ மதுவோ

வண்டமர் குழலும் கெண்டையங் கண்ணும்
வஞ்சி மருங்குங் கிஞ்சுக வாயும்
ஏந்திள முலையுங் காந்தளங் கையும்
ஒவியர் தங்க லொண்மதி காட்டும்
வட்டிகைப் பலகை வான்துகி லிகையால்

இயக்குதற் கரியதோர் உருவுகண் டென்னை
மயக்கவந் துதித்ததோர் வடிவிது தானே.

#1563

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இஃது அகப் பொருள் களவியலில் தலைவன் முதற்கண் கண்ட காட்சிக்குப் பின் `இம்மகள் மானுட மகளோ, தேவ மகளோ` என ஐயுற்ற ஐயத் துறையாகச் செய்யப்பட்டது.

``வண்டமர் குழலும்`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.

கதிர் - நிலாக் கதிர்.

மதி - பிறை.

``ஒருத்தி`` என்றது கங்கா தேவியை.

விருத்தன் - மேலானவன்.

இது, `முதுமை யுடையோன் தன் தேவியறி யாதவாறு வேறொருத்தியை மறைத்து வைத்துள்ளான்` என்பதொரு நயத்தைத் தோற்றுவித்தது.

அத்தன் - தலைவன்.

நாட்டுறை அணங்கு- ஊர்த் தேவதை.

அல்லி - அக இதழ்.

தாமரை மலர் ஆசனத்தில் வளர்ந்த கனங்குழையவள் - இலக்குமி.

மீத் தரு தேவ லோகத்துப் பஞ்ச தருக்கள்.

மரு - நறுமணம் உரு - அழகு உருப்பசி; ஊர்வசி.

முனிவர் களது தவத்தைக் கெடுத்தற்கு இவள் இந்திரனால் அவ்வப் பொழுது ஏவப்படுதல் பற்றி, ``தவ நெறி கலக்கும் உருப்பசி`` என்றார்.

தான், அசை.

வாருணக் கொம்பு - நீரர மகள்.

மதனன் கொடி - மன்மதன் தேவி; இரதி.

இது காதல் கொள்ளாக் காலத்து எழும் எண்ணம் ஆதலின், ``மதனன் கொடியோ`` என ஐயுறுதல், குற்றமாகாதாயிற்று.

ஆரணியத்துள் அருள் செய்வம் - வன தேவதை.

அது, பகுதிப் பொருளே விகுதி.

மருங்கு - இடை.

கிஞ்சுகம் - சிவப்பு.

`குழல் முதலிய உறுப்புக்கள் பலவும், திறம் வாய்ந்த ஓவியரால் தீட்டப் பட்டனபோல உள்ளன` என்றற்கு, ``ஓவியர் தங்கள் ஒண்மதி காட்டும் உருவு`` என்றான்.

வட்டிகைப் பலகை - ஓவியம் தீட்டும் பலகை.

வான் - சிறந்த துகிலிகை - எழுதுகோல்.

`ஓவியர் பலகையில் துகிலி கையால் தங்கள் ஒண்மதி காட்டும் உருவு` எனக் கூட்டுக.

`ஒண்மதி காட்டும் உரு ஒவிய உரு` என்பான், ``இயக்குதற்கு அரியது ஓர் உரு`` என்றான் ``கண்டு`` என்னும் செய்தென் எச்சம் காரணப்

பொருட்டாய், `காண்டலாலே` எனப் பொருள் தந்தது.
`காட்டி ஒன்றானே மயங்கிற்று` என்றதனால், `இது வியப்பு` என்பது குறிப்பெச்சமாயிற்று.
`தேவ மகள்` என்றே எண்ணாமல், `மானுட மகளே` என்னும் எண்ணம் உடன் நிகழ்தலின், மயக்கம் தோன்றிற்று.
`ஒரு வடிவாகிய இது அணங்கோ - அருந்தெய்வமாதுவோ` என முடிக்க.
ஐயக் கிளவிகளில் உயர்திணையுமாக விரவி எண்ணுவான் ஆகலின், முதற்கண் `இவள் ஒருத்தி` என்னாது ``ஓர் வடிவு இது`` என அஃறிணையாகக் கூறினான்; என்னை? திணை ஐயத்திற்கு `உருபு` முதலியன ஐயப் புலப் பொதுச் சொற்கள் ஆதலின்.

வடிக்கண்ணி யாளையிவ் வான்சுரத்தி னூடே
கடிக்கண்ணி யானோடும் கண்டோம் வடிக்கண்ணி
மாம்பொழில்சேர் வைகை யமண்மலைந்தான் வண்காழிப்
பூம்பொழிலே சேர்ந்திருப்பார் புக்கு

. #1564

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இஃது அகப் பொருள்களவியலில் உடன் போக்கின்கண் தலைவியைச் செவிலி பின் தேடிச் செல்லுங்கால் கண்டோரை வினவ, அவர்கள் செவிலிக்குக் கூறிய துறையாகச் செய்யப்பட்டது.
வடிக் கண்ணி - மாவடுவைப் போலும் கண்களையுடையவள்; தலைவி.
கடிக் கண்ணியான் - நறுமணம் கமழும் முடி மாலையை உடையவன்; தலைவன்.
பின் வந்த ``வடிக்கண்ணி`` என்பதை - `கண்ணி வடி` என மாற்றி, `மாலை போலும் வடுக்களையுடைய மாம் பொழில்` எனப் பொழிலுக்கு அடையாக்குக.
`பொழில் சேர் வைகை` என்க.
வைகையில் அமணரை மலைந்தவர் ஞானசம்பந்தர் `பூம் பொழிலே புக்குச் சேர்ந்திருப்பார்` - என உரைக்க.
இதற்கு `அவர்கள்` என்னும் தோன்றா எழுவாய் வருவிக்க.
எனவே, `மீளுதலே நீர் செய்யத்தக்கது` என்பது குறிப்பெச்சம்.

குருந்தும் தரளமும் போல்வண்ண
வெண்ணகைக் கொய்மலராள்
பொருந்தும் திரள்புயத் தண்ணல்சம்
பந்தன்பொற் றாமரைக்கா
வருந்தும் திரள்கொங்கை மங்கையை
வாட்டினை வானகத்தே

திருந்துந் திரள்முகில் முந்திவந்
தேறுதிங் கட்கொழுந்தே.

#1565

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இது பாடாண் திணைக் கைக்கிளைத் துறை.
செவிலி கூற்று.
குருந்து - குருத்து ஓலை.
இதுவும் வெண்மை நிறம் பற்றி நகைப் பிற்கு உவமையாயிற்று.
தரளம் முத்து, வண்ணம் - அழகு.
கொய்தல் மலருக்கு அடை.
யாவராலும் விரும்பிக் கொய்யப்படுகின்ற மலர் செந் தாமரை மலர்.
அதில் வீற்றிருப்பவள்.
இலக்குமி.
இங்கு வீர லக்குமியைக் கொள்க.
அமணரை வென்ற வெற்றி பற்றி ஞான சம்பந்தரை வீரலக்குமி பொருந்திய புயம் உடையவராகக் கூறினார்.
தாமரைக் கா - தாமரை மாலையைப் பெறுதற்காக.
`முகில்களுக்கு முந்தி வந்து எழுகின்ற திங்கட் கொழுந்து` என்க.
`கொழுந்து`` என்றத னால் இஃது அந்திப் பிறையாயிற்று.
எனவே, தலைவியின் பொருட்டுச் செவிலி பொழுதுகண்டு இரங்கிக் கூறியதாயிற்று, ``திங்கட் கொழுந்தே! மங்கையை வாட்டினை; (இது விசும்பில் இயங்கும் உனக்கு நன்றோ``) என முடிக்க.
ஈற்றில் வருவித்த குறிப்பெச்சம்.
இப் பாட்டின் இறுதி முதற்பாட்டில் சென்று மண்டலித்தல் காண்க.
ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை முற்றிற்று.

நம்பியாண்டார் நம்பிகள் - ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை

திருந்திய சீர்ச்செந்தா மரைத் தடத்துச் சென் றோர்
இருந் தண் இளமேதி பாயப் பொருந்திய
#1566
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி *1* முதல் *58* முடியச் சீகாழித் தலச் சிறப்பே சொல்லப்படுகின்றது. முதற் பத்துக் கண்ணிகள் சீகாழியின் வயற் சிறப்பைக் கூறும், இவ் வயல்கள் இடையிடையே சிறு குளங்களைக் கொண்டிருத்தலால், அக்குளங்களின் வளப்பங்களும் ஒன்றுபட்டு வயலின் வளப்பங்க ளாகவே காட்சியளிக்கின்றன.
(கண்ணி-1) தடம் - பெரிய குளம்.
மேதி- எருமை.

புள் இரியப் பொங்கு கயல்வெருவப் பூங்குவளைக்
கள் இரியச் செங்கழுநீர் கால்சிதையத் துள்ளிக்
#1567
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(கண்ணி -2) பொருந்தியபுள் - நீரிலே மூழ்கி வாழும் பறவைகள்

குருகிரியக் கூன்இறவம் பாயக் கெளிறு
முருகுவிரி பொய்மையின்கண் மூழ்க வெருவுற்றக்
#1568
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(கண்ணி - 3) குருகு - நீர்க் கரையில் வாழும் பறவைகள்.
இரிதல் - அஞ்சி நீங்குதல் - கால் - பூக்களின் காம்பு.
இ - இறால் மீன்.
இஃது `இறவு` என்று ஆகிப் பின் அம்முப் பெற்றது, கெளிறு - ஒருவகை மீன், `களிறு` என்பது பாடம் அன்று.
முருகு - தேன்; நறுமணமுமாம்.
`முருகோடு விரி` என மூன்றன் உருபு விரிக்க.
விரிதலுக்கு `மலர்கள்` என்னும் எழுவாய் வருவிக்க.

கோட்டகத்துப் பாய்வாளை கண்டலவன் கூசிப் போய்த்
தோட்டகத்த செந்நெல் துறைஅடையச் சேட்டகத்த

#1569

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(கண்ணி-4) கோட்டகம் - கரை; *(குளக் கரை)* அலவன் - நண்டு.
தோடு - இலை.
`தோட்டின் அகத்திலே உள்ள நெல்.
நெல் - நெற்கதிர்.
`அலவன் போய் நெல் துறையை அடைய` என்க.
சேடு - அழகு.
அகம் - உள்ளிடம்.
`அழகை அகத்திலே உடைய காவி` என்க.

காவி முகம்மலரக் கார்நீலம் கண்படுப்ப
ஆவிக்கண் நெய்தல் அலமர மேவிய

#1570

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(கண்ணி - 5) காவி, இங்குச் செந்நிறம்.
இஃது பெயராய்ச் செந்தாமரை மலரைக் குறித்தது.
கார் நீலம் - கரிய நீலோற்பவ மலர்.
படுப்ப - பொருத்துவித்து.
செந்தாமரை மலர் முகம் போல விளங்கு வதையும், நீலோற்பவ மலர் அம்மலரிற் பொருந்துதலையும், ``முகம் மலர்`` எனவும், ``கண்ணைப் பொருத்துவிக்க`` எனவும் கூறிய ஏற்றுறை *(இலக்கணை)* வழக்கு.
ஆவி - வாவி; சிறுகுளம்.

அன்னம் துயில்இழப்ப அம்சிறைசேர் வண்டினங்கள்
துன்னும் துணைஇழப்பச் சூழ் கிடங்கின் மன்னிய

#1571

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(கண்ணி -6) கிடங்கு - வயலுள் அகழப்பட்ட வாய்க்கால்.

வள்ளை நகைகாட்ட வண்குமுதல் வாய்காட்ட
தெள்ளுபுனற் பங்கயங்கள் தேன்காட்ட மெள்ள

#1572

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(கண்ணி - 7) வள்ளை - வள்ளைத் தண்டு.

இது நீரில் மிதப்பது.
இது காதிற்கு உவமையாக வருமாயினும், ஆம்பல் மலரோடு சேர்ந்தமையால் நகைப்பிற்கு உவமையாயிற்று.
``தேன் காட்ட`` என்பதில் ``காட்ட`` என்பதில் ``காட்ட`` என்பது `சொரிய` எனப் பொருள்.
தந்தமையின், சொற்பின் வருநிலை அணியாயிற்று.

நிலவு மலணையினின்றிழிந்த சங்கம்
இலகுகதிர் நித்திலங்கள் ஈன உலவிய

#1573

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(கண்ணி-8) மல் - வளம்.
ஐ, சாரியை.
பழனம் - பண்ணை.
வார் பிரசம் - ஒழுகுகின்ற சாறு.
இது வாழை, கரும்பு இவற்றினின்றும் ஒழுகுவது.
ஒல்லை - வேகமாக.
வரம்பு - வரப்பு.
`பிரசம்வரம்புமீது அழிய இடறி ஓடிப் போய்ப்புல்லிய அடை` மலிக.
புல்லிய - பொருந்திய

மல்லைப் பழனத்து வார்பிரசம் மீதழிய
ஒல்லை வரம்பிடறி ஓடிப்போய்ப் புல்லிய

#1574

பொழிப்புரையை எழுதவில்லை

பாசடைய செந்நெற் படர் ஒளியால் பல்கதிரோன்
தேசடைய ஓங்கும் செறுவுகளும் மாசில்நீர்

#1575

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(கண்ணி - 10) பசுமை + அடை = பாசடை.
பச்சையிலை, அச் செந்நெல் - மேற் கூறப்பட்ட செந்நெல், பல் கதிரோன், சூரியன், தேசு - ஒளி.
செறு - வயல், இஃது ஈற்றில் உகரம் பெற்றது.
செந்தாமரை மலர்களையுடைய பெரிய குளத்தில் இளமை வாய்ந்த எருமை சென்று பாய்ந்தமையால் அக்குளத்தின் நீரிலே வாழ்ந்திருந்த பறவைகளும், கரையிலே இருந்த பறவைகளும் அஞ்சி ஓடின.

கயல்மீன்கள் அச்சம் கொண்டும் போக வேறு வழியின்றி இருந்தன.
குவளை மலர் சிதைதலால் அதனின்றும் தேன் ஒழுகியது.
செங்கழுநீர்ப் பூத் தன் காம்பு வேறாக வேறுபட்டது.
இவை எருமை பாய்ந்தமையால் ஒருங்கு நிகழ்ந்தவை.
இனி, அவ் எருமை பாய்தலால் இறால் மீன்கள் அங்கும் இங்கும் பாய்ந்தன.
கெளிற்று மீன்கள் மேல் எழாது நீர்க்கு அடியிலே இருந்தன.
இயல்பிலே மிக மேலே துள்ளுவதாகிய வாளை மீன் துள்ளிக் கரையிலே பாய்ந்தது.
இவை மேற்கூறிய காரணத்தால் தனித்தனி நிகழ்ந்தவை.
வாளைமீன் கரையிலே பாய்ந்ததைக் கண்டு அங்கிருந்த நண்டுகள் மனம் வருந்தி நெற்பயிர் உள்ள இடத்தை அடைந்தன.
வாளை மீன் தங்கள் மேல் பாயாது கரைமேல் பாய்ந்ததைக் கண்டு அச்சம் நீங்கிச் செந்தாமரை முகம் மலர்ந்தது; நீலோற்பலம் கண் விழிந் திருந்தது.
நெய்தல் ஒன்றும் விளங்காமல் சுற்றும், முற்றும் பார்த்தது.
ஆயினும் வாளைமீன் கரையிற் பாய்ந்த அதிர்ச்சியால் அன்னம் துயில் ஒழிந்தது.
ஆண் வண்டு பெண் வண்டினை விட்டு ஓடிற்று.
இவைகளையெல்லாம் கண்டு குமுதம் சிவந்த வாயின்கண் பற்கள் தோன்ற நகைத்தது.
இவையெல்லாம் வாளை கரையிற் பாய்ந்தமையால் செயற்கையாக நிகழ்ந்தன.
இந்நிலையில் இயற்கையாகச் செந்தாமரை மலராகிய படுக்கையில் படுத்திருந்து, கரு உயிர்க்கும் வேதனையால் கீழே இறங்கி முத்தை ஈன்றது.
இங்ஙனம் உள்ள பொழுது வாழைப் பழச் சாறும் கரும்பின் சாறும் தாமாகவே வழிந்து ஓடி, வயல் வரப்புக்களை அழித்துச் சென்று வயல்களில் உள்ள தாமரையிலை மேல் தேங்கி நிற்கின்றன.
அத்தேனின்மேல் செந்நெற்களின் ஒலி வீழ்ந்தமையால் தாமரையிலை சூரியனை போல விளங்கிற்று.
இத்தகைய வளப்பங்களையுடைய காழி நகரைச் சூழ்ந்த வயல்கள்.

நித்திலத்திற் சாயும் நிகழ்மரக தத் தோலும்
தொத்தொளி செம்பொன் தொழிற்பரிய மொய்த்த

#1576

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *11,12, 13* கமுக மர வருணனை:- கமுகங்காய் முற்றாது இளம் பிஞ்சாய் இருக்கும் பொழுது முத்துப் போல விளங்கும்.
இங்கு, ``காய்`` என்றது, பிஞ்சினை.
நீர், நித்திலத்திற்கு அடை.
நித்திலக் காய் உவமத் தொகை.
இன், வேண்டா வழிச் சாரியை.
மரகதம் போலும் தோல், கமுக மரத்தின் தோல்.
முற்றிப் பழுத்த கமுகங்காய் பவளம்போலச் சிவந்திருக்கும்.
தொத்து ஒலி - திரளாகிய ஒளியை உடைய *(பவளம்),* செம்பொன் தொழில் பரிய - செவ்விய பொன்னின் வேலைப் பாட்டோடு கூடிய பருத்த *(பவளம்).*
செவ்வி - அழகு.
பாங்கு - உரிய இடம்.
கொடி திவள மருங்கில் சேர்த்தி - கொடிகளை அசையும் படி நடுவிடத்திலே சேர்த்துக் கொண்டு.
துவளாமை - கொடிகள் துவளாதபடி.
பட்டு ஆடை - பட்டுப் பூச்சிகள் ஆக்கிய பட்டாகிய ஆடை.
``தோடு, குழை`` இவை அணிகல வகைகளையும், பூவிதழ், இளந்தளிர் என்பவற்றையும் குறித்துச் சிலேடையாய் நின்றன.
`அணைந்த இளங்கமுகு, கண்ணார் இளங்கமுகு` என நேரே ஒரு பொருளும், `தோடும், குழையும் அணிந்து, அவைகளில் வந்து பொருந்திய கண்களையுடைய மகளிர்போலும் இளங்கமுகு` மற்றொரு பொருளும் கொள்க.
முதற்பொருளில், `கண் ஆர் - கண்ணுக்கு நிறைந்த` என்பதாம்.

பவளத்தின் செவ்வியும் பாங்கணைய ஓங்கித்
திவளக் கொடிமருங்கிற் சேர்த்தித் துவளாமைப்

#1577

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *11,12, 13* கமுக மர வருணனை:- கமுகங்காய் முற்றாது இளம் பிஞ்சாய் இருக்கும் பொழுது முத்துப் போல விளங்கும்.
இங்கு, ``காய்`` என்றது, பிஞ்சினை.
நீர், நித்திலத்திற்கு அடை.
நித்திலக் காய் உவமத் தொகை.
இன், வேண்டா வழிச் சாரியை.
மரகதம் போலும் தோல், கமுக மரத்தின் தோல்.
முற்றிப் பழுத்த கமுகங்காய் பவளம்போலச் சிவந்திருக்கும்.

தொத்து ஒலி - திரளாகிய ஒளியை உடைய (பவளம்), செம்பொன் தொழில் பரிய - செவ்விய பொன்னின் வேலைப் பாட்டோடு கூடிய பருத்த (பவளம்).
செவ்வி - அழகு.
பாங்கு - உரிய இடம்.
கொடி திவள மருங்கில் சேர்த்தி - கொடிகளை அசையும் படி நடுவிடத்திலே சேர்த்துக் கொண்டு.
துவளாமை - கொடிகள் துவளாதபடி.
பட்டு ஆடை - பட்டுப் பூச்சிகள் ஆக்கிய பட்டாகிய ஆடை.
``தோடு, குழை`` இவை அணிகல வகைகளையும், பூவிதழ், இளந்தளிர் என்பவற்றையும் குறித்துச் சிலேடையாய் நின்றன.
`அணைந்த இளங்கமுகு, கண்ணார் இளங்கமுகு` என நேரே ஒரு பொருளும், `தோடும், குழையும் அணிந்து, அவைகளில் வந்து பொருந்திய கண்களையுடைய மகளிர்போலும் இளங்கமுகு` மற்றொரு பொருளும் கொள்க.
முதற்பொருளில், `கண் ஆர் - கண்ணுக்கு நிறைந்த` என்பதாம்.

பட்டாடை கொண்டுடுத்துப் பைந்தோ டிலங்குகுழை
இட்டமைந்த கண்ணார் இளங்கமுகும் விட்டொளிசேர்

#1578

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *11,12, 13* கமுக மர வருணனை:- கமுகங்காய் முற்றாது இளம் பிஞ்சாய் இருக்கும் பொழுது முத்துப் போல விளங்கும்.
இங்கு, ``காய்`` என்றது, பிஞ்சினை.
நீர், நித்திலத்திற்கு அடை.
நித்திலக் காய் உவமத் தொகை.
இன், வேண்டா வழிச் சாரியை.
மரகதம் போலும் தோல், கமுக மரத்தின் தோல்.
முற்றிப் பழுத்த கமுகங்காய் பவளம்போலச் சிவந்திருக்கும்.
தொத்து ஒலி - திரளாகிய ஒளியை உடைய (பவளம்), செம்பொன் தொழில் பரிய - செவ்விய பொன்னின் வேலைப் பாட்டோடு கூடிய பருத்த (பவளம்).
செவ்வி - அழகு.
பாங்கு - உரிய இடம்.
கொடி திவள மருங்கில் சேர்த்தி - கொடிகளை அசையும் படி நடுவிடத்திலே சேர்த்துக் கொண்டு.
துவளாமை - கொடிகள் துவளாதபடி.

பட்டு ஆடை - பட்டுப் பூச்சிகள் ஆக்கிய பட்டாகிய ஆடை.
``தோடு, குழை`` இவை அணிகல வகைகளையும், பூவிதழ், இளந்தளிர் என்பவற்றையும் குறித்துச் சிலேடையாய் நின்றன.
`அணைந்த இளங்கமுகு, கண்ணார் இளங்கமுகு` என நேரே ஒரு பொருளும், `தோடும், குழையும் அணிந்து, அவைகளில் வந்து பொருந்திய கண்களையுடைய மகளிர்போலும் இளங்கமுகு` மற்றொரு பொருளும் கொள்க.
முதற்பொருளில், `கண் ஆர் - கண்ணுக்கு நிறைந்த` என்பதாம்.

கண்கள் அழல் சிதறிக் காய்சினத்த வாய்மதத்துத்
தண்டலையின் நீழல் தறிஅணைந்து கொண்ட

#1579

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மாமர வருணனை:- மாமரம் யானையோடு உவமிக்கப்படுகின்றது.
(கண்ணி - 15) ``கொம்பு வளைத்து ஏந்து மலை`` - என்றது, `யானை` - என்றபடி.
`அந்த மலையும் மர வடிவத்தைக் கொண்டது போல விளங்குகின்றது மாமரம்` என்பதாம்.
``கண்கள்`` என்பதை ``விட்டொளி சேர்`` என்பதற்கு முன்னே
கண்களில் தீப்பொறி பறக்கும்படி மிக்க சினங்கொள்ளுதல் யானைக்கு இயல்பு.
மாமரத்திலும் அதன் இளந்தளிர்கள் தீப்பொறிகள் போலக் காணப்படுகின்றது.
தீப்பொறி பறத்தலால் மதங்கொண்ட தோற்றம் உள்ளது.
தண்டலை - சோலை.
(கண்ணி - 14) தறி அணைதலும் யானைக்கு இயல்பு.
சோலை நிழல் கட்டும் கூடம் போலவும், மரங்கள் கட்டுத் தறி போலவும் உள்ளன.
`மாமரம் யானைப் போலத் தோன்று தல் பசுமையான இலை தழைத்தலால்` என்பது தோன்ற ``இலை நெருங்கு சூதம்`` என்றார்.
(கண்ணி -16) சூதம் - மாமரம்.
தோற்றத்தால் யானையை ஒத்திருப்பினும் பலர் சென்று தங்கும் நிழல் உடைமையால் *(கண்ணி- 15)* ``கொலை புரியா நீர்மையா`` எனப்பட்டன.
எனவே, ``இவை சில அதிசய யானைகள்`` என்பதாம்.

கொலைபுரியா நீர்மையவாய்க் கொம்புவளைத் தேந்தி
மலையும் மரவடிவும் கொண்டாங் கிலை நெருங்கு

#1580

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மாமர வருணனை:- மாமரம் யானையோடு உவமிக்கப்படுகின்றது.
(கண்ணி - 15) ``கொம்பு வளைத்து ஏந்து மலை`` - என்றது, `யானை` - என்றபடி.
`அந்த மலையும் மர வடிவத்தைக் கொண்டது போல விளங்குகின்றது மாமரம்` என்பதாம்.
``கண்கள்`` என்பதை ``விட்டொளி சேர்`` என்பதற்கு முன்னே
கண்களில் தீப்பொறி பறக்கும்படி மிக்க சினங்கொள்ளுதல் யானைக்கு இயல்பு.
மாமரத்திலும் அதன் இளந்தளிர்கள் தீப்பொறிகள் போலக் காணப்படுகின்றது.
தீப்பொறி பறத்தலால் மதங்கொண்ட தோற்றம் உள்ளது.
தண்டலை - சோலை.
(கண்ணி - 14) தறி அணைதலும் யானைக்கு இயல்பு.
சோலை நிழல் கட்டும் கூடம் போலவும், மரங்கள் கட்டுத் தறி போலவும் உள்ளன.
`மாமரம் யானைப் போலத் தோன்று தல் பசுமையான இலை தழைத்தலால்` என்பது தோன்ற ``இலை நெருங்கு சூதம்`` என்றார்.
(கண்ணி -16) சூதம் - மாமரம்.
தோற்றத்தால் யானையை ஒத்திருப்பினும் பலர் சென்று தங்கும் நிழல் உடைமையால் *(கண்ணி- 15)* ``கொலை புரியா நீர்மையா`` எனப்பட்டன.
எனவே, ``இவை சில அதிசய யானைகள்`` என்பதாம்.

சூதத் திரளும் கொகுகனிக ளான்நிவந்த
மேதகுசீர்த் தெங்கின் வியன்பொழிலும் போதுற்

#1581

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(கண்ணி -16) தென்னஞ் சோலையின் சிறப்பு;- நிவந்த - உயர்ந்த.
``கனிகளான்`` என்னும் ஆன் உருபு ஒடு உருபின் பொருளில் வந்தது.
மேதகு - மேன்மை தக்கிருக்கின்றன.
வியன் - அகன்ற.

றினம் ஒருங்கு செவ்வியவாய் இன்தேன் ததும்பும்
கனி நெருங்கு திண்கதலிக் காடும் நனிவிளங்கு

#1582

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *17* வாழைத் தோட்டச் சிறப்பு: போது - பூ: வாழைப் பூ.
இனம் ஒருங்கு செவ்விய ஆய் - தன் இனம் முழுதும் குலையை யீனும் பருவம் உடையவாய்.
``செவ்விய`` என்னும் பண்மை இனத்துக்கண் உள்ள பொருள்நோக்கி வந்தது.
கதலி - வாழை.

நாற்றத்தால் எண்டிசையும் வந்து நலம் சிறப்ப
ஊற்று மடுத்த உயர்பலவும் மாற்றமரு

#1583

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *18* பலாத் தோப்பின் சிறப்பு:- கனி விளங்கு நாற்றம் - பழத்தினின்றும் வெளிப்படுகின்ற நறுமணம்.
ஊற்று - பலாச் சுளையின் சாற்றின் சுரப்பு.
மடுத்த - நிலத்தை மூடிய.
பலவு - பலா மரம்.

மஞ்சள் எழில்வனமும் மாதுளையின் வார்பொழிலும்
இஞ்சி இளங்காவின் ஈட்டமும் எஞ்சாத

#1584

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *19* மஞ்சள், மாதுளை, இஞ்சி - இத்தோட்டங்களின் சிறப்பு:-
மாற்றம் அரு - சொல்லுதற்கு அரிய.
இளங் கா - இளமரக் கா.
ஈட்டம் - தொகுதி.

கூந்தற் கமுகும் குளிர்பாட லத் தெழிலும்
வாய்ந்தசீர்ச் சண்பகத்தின் வண்காடும் ஏந்தெழில்ஆர்

#1585

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *20* கமுகுகளில் ஒருவகை கூந்தற் கமுகு; `கூந்தற் பனை` என்பதுபோல.
இளங் காவைக் கூறியபின், பெருமரச் சோலை சொல்லப்படுகின்றது.

மாதவியும் புன்னையும் மன்னும் மலர்க்குரவும்
கேதையும் எங்கும் கெழீஇப் போதின்

#1586

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(கண்ணி - 21, 22) இதில் பாதிரி, *(பாடலம்)* சண்பகம், மாதவி, *(குருந்து)* புன்னை, குரா இம்மரங்களுடன் தாழையும் சொல்லப்பட்டது.
கேதகை - தாழை.
இது `கேதை` என மருவிற்று.
கெழீஇ - பொருந்தி.
இவைகளைத் திணை மயக்கமாகக் கொள்க.
போதின் - உரிய நேரத்தில்.
வார் பொழில் - நீண்ட சோலை; பெருமரச் சோலை.
மாடு - பக்கம்.

இளந்தென்றல் வந்தசைப்ப எண்டிசையும் வாசம்
வளந்துன்று வார்பொழிலின் மாடே கிளர்ந்தெங்கும்

#1587

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(கண்ணி - 21, 22) இதில் பாதிரி, *(பாடலம்)* சண்பகம், மாதவி, *(குருந்து)* புன்னை, குரா இம்மரங்களுடன் தாழையும் சொல்லப்பட்டது.
கேதகை - தாழை.
இது `கேதை` என மருவிற்று.
கெழீஇ - பொருந்தி.
இவைகளைத் திணை மயக்கமாகக் கொள்க.
போதின் - உரிய நேரத்தில்.
வார் பொழில் - நீண்ட சோலை; பெருமரச் சோலை.
மாடு - பக்கம்.

ஆலை ஒலியும் அரிவார் குரல்ஒலியும்
சோலைக் கிளிமிழற்றும் சொல்லொலியும் ஆலும்

#1588

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *23,24* பல வகை ஒலி யெழுதல் கூறப்படுகின்றது.
ஆலை - கரும்பாலை.
அரிவார் - நெல் அரிபவர்.

ஆலும் - பறந்து அசைகின்ற.
அறு பதங்கள் - ஆறு கால்களையுடைய வண்டுகள்.
ஆன்று - நிறைந்து.
பொலிவு - விளக்கம்.
வேலை - கடல்.
``வேலை ஒலிப்ப`` என்பது, `வேலை போல ஒலிப்ப` என வினை யுவமத் தொகை.
வெறி - நறுமணம்.

அறுபதங்கள் ஆர்ப்பொலியும் ஆன்றபொலி வெய்தி
உறுதிரைநீர் வேலை ஒலிப்ப வெறிகமழும்

#1589

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *23,24* பல வகை ஒலி யெழுதல் கூறப்படுகின்றது.
ஆலை - கரும்பாலை.
அரிவார் - நெல் அரிபவர்.
ஆலும் - பறந்து அசைகின்ற.
அறு பதங்கள் - ஆறு கால்களையுடைய வண்டுகள்.
ஆன்று - நிறைந்து.
பொலிவு - விளக்கம்.
வேலை - கடல்.
``வேலை ஒலிப்ப`` என்பது, `வேலை போல ஒலிப்ப` என வினை யுவமத் தொகை.
வெறி - நறுமணம்.

நந்தா வனத்தியல்பும் நற்றவத் தோர் சார்விடமும்
அந்தமில் சீரார் அழகினால் முந்திப்

#1590

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *25* புற நகர்ச் சிறப்பு:- `நந்த வனம்` என்பது நீட்டல் பெற்றது.
நந்த வனம் - பூந்தோட்டம்.
நற்றவத் தோர் சார்வு இடம் - தபோ வனம்.
அந்தம் - முடிவு சீர் ஆர் அழகு - சிறப்பு நிறைந்த அழகு.

புகழ்வாரும் தன்மையதாய்ப் பூதலத்துள் ஓங்கி
நிகழ்கிடங்கும் சூழ்கிடப்ப நேரே திகழ

#1591

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(கண்ணி-26) வார்தல் - நீளுதல்.
தன்மையஆ - (நந்த வனமும், தபோ வனமும்) இத்தன்மையால் இருக்க.
``பூதலத்துள் ஓங்கி`` என்பதை, ``திகழ`` என்பதன் பின்னே கூட்டுக.
கிடங்கு - அகழி.

முளைநிரைத்து மூரிச் சிறைவகுத்து மொய்த்த
புளகத்தின் பாம்புரிசூழ் போகி வளர

#1592

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *27-30* மதிலின் சிறப்பு:- முளை - வில்.
முதலியவை களை மாட்டி வைத்தற்குச் சுவரில் அடிக்கப்படும் முளைகள்.
இவை மதிலின் உட்புறத்தே இருக்கும்.
நிரைத்து - வரிசையாக அடித்து.
மூரி- பெரிய.
சிறை - சுவர்களை ஒட்டிச் சிறகுபோல உள்ள உறுப்பு.
இவை பொருள்களை வைக்கப் பயன்படுவதுடன் உயர ஏறி நிற்கவும் பயன்படும்.
பாம்பு உரி - பாம்புத் தோல்.
இது, காண்பார்க்கு அச்சம் உண்டாகத் தீட்டப்படும் ஓவியம்.
போக்கி - சுற்றிலும் எழுதி.
`பதணம், நாஞ்சில்` என்பன மதிலின் உறுப்பு வகைகள்.
அட்டாலை - வீரர்கள் இருக்கும் மண்டபம்.
தோமரம் - ஒருவகைக் கதாயுதம்.
தொல்லை - பழமை.
பொறி - பகைவர்மேல் வீசப்படும் சில சிறு யந்திரங்கள்.
வீசு யந்திரம்- தாமே பிற யந்திரங்களை எடுத்து வீசும் யந்திரம்.
இவை யெல்லாம் பாதுகாவலுக்கு மதிலின்கண் அமைக்கப்படும்.
வீசு + யந்திரம் - வீ சியந்திரம்; இகரம், குற்றிய லிகம் கா மரம் - காவடித் தண்டு.
இவை வேண்டும் பொருள்களைத் தாங்கி நிற்கும்.
ஏ - அம்பு.
ஏப்புழை அம்புக் கட்டுக்களை வைக்கும் மாடங்கள்.
கைகலத்தல் - ஒன்றோடு ஒன்று கலத்தல்.
கலந்து - கலக்கப் பெற்று.

மீ - மேல் இடம்.
வெங் கதிரோன் - சூரியன்.
விலங்கு - விலகிப் போகின்ற.
அம் - அழகு - கனகம் - பொன்.
இஞ்சி - மதில்.
அணி - அழகு.

இரும்பதணம் சேர இருத்தி எழில் நாஞ்சில்
மருங்கணைய அட்டாலை யிட்டுப் பொருந்தியசீர்த்

#1593

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *27-30* மதிலின் சிறப்பு:- முளை - வில்.
முதலியவை களை மாட்டி வைத்தற்குச் சுவரில் அடிக்கப்படும் முளைகள்.
இவை மதிலின் உட்புறத்தே இருக்கும்.
நிரைத்து - வரிசையாக அடித்து.
மூரி- பெரிய.
சிறை - சுவர்களை ஒட்டிச் சிறகுபோல உள்ள உறுப்பு.
இவை பொருள்களை வைக்கப் பயன்படுவதுடன் உயர ஏறி நிற்கவும் பயன்படும்.
பாம்பு உரி - பாம்புத் தோல்.
இது, காண்பார்க்கு அச்சம் உண்டாகத் தீட்டப்படும் ஓவியம்.
போக்கி - சுற்றிலும் எழுதி.
`பதணம், நாஞ்சில்` என்பன மதிலின் உறுப்பு வகைகள்.
அட்டாலை - வீரர்கள் இருக்கும் மண்டபம்.
தோமரம் - ஒருவகைக் கதாயுதம்.
தொல்லை - பழமை.
பொறி - பகைவர்மேல் வீசப்படும் சில சிறு யந்திரங்கள்.
வீசு யந்திரம்- தாமே பிற யந்திரங்களை எடுத்து வீசும் யந்திரம்.
இவை யெல்லாம் பாதுகாவலுக்கு மதிலின்கண் அமைக்கப்படும்.
வீசு + யந்திரம் - வீ சியந்திரம்; இகரம், குற்றிய லிகம் கா மரம் - காவடித் தண்டு.
இவை வேண்டும் பொருள்களைத் தாங்கி நிற்கும்.
ஏ - அம்பு.
ஏப்புழை அம்புக் கட்டுக்களை வைக்கும் மாடங்கள்.
கைகலத்தல் - ஒன்றோடு ஒன்று கலத்தல்.
கலந்து - கலக்கப் பெற்று.
மீ - மேல் இடம்.

வெங் கதிரோன் - சூரியன்.
விலங்கு - விலகிப் போகின்ற.
அம் - அழகு - கனகம் - பொன்.
இஞ்சி - மதில்.
அணி - அழகு.

தோமரமும் தொல்லைப் பொறிவீசி யந்திரமும்
காமரமும் ஏப்புழையும் கைகலந்து மீ மருவும்

#1594

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *27-30* மதிலின் சிறப்பு:- முளை - வில்.
முதலியவை களை மாட்டி வைத்தற்குச் சுவரில் அடிக்கப்படும் முளைகள்.
இவை மதிலின் உட்புறத்தே இருக்கும்.
நிரைத்து - வரிசையாக அடித்து.
மூரி- பெரிய.
சிறை - சுவர்களை ஒட்டிச் சிறகுபோல உள்ள உறுப்பு.
இவை பொருள்களை வைக்கப் பயன்படுவதுடன் உயர ஏறி நிற்கவும் பயன்படும்.
பாம்பு உரி - பாம்புத் தோல்.
இது, காண்பார்க்கு அச்சம் உண்டாகத் தீட்டப்படும் ஓவியம்.
போக்கி - சுற்றிலும் எழுதி.
`பதணம், நாஞ்சில்` என்பன மதிலின் உறுப்பு வகைகள்.
அட்டாலை - வீரர்கள் இருக்கும் மண்டபம்.
தோமரம் - ஒருவகைக் கதாயுதம்.
தொல்லை - பழமை.
பொறி - பகைவர்மேல் வீசப்படும் சில சிறு யந்திரங்கள்.
வீசு யந்திரம்- தாமே பிற யந்திரங்களை எடுத்து வீசும் யந்திரம்.
இவை யெல்லாம் பாதுகாவலுக்கு மதிலின்கண் அமைக்கப்படும்.
வீசு + யந்திரம் - வீ சியந்திரம்; இகரம், குற்றிய லிகம் கா மரம் - காவடித் தண்டு.
இவை வேண்டும் பொருள்களைத் தாங்கி நிற்கும்.
ஏ - அம்பு.
ஏப்புழை அம்புக் கட்டுக்களை வைக்கும் மாடங்கள்.
கைகலத்தல் - ஒன்றோடு ஒன்று கலத்தல்.
கலந்து - கலக்கப் பெற்று.
மீ - மேல் இடம்.
வெங் கதிரோன் - சூரியன்.

விலங்கு - விலகிப் போகின்ற.
அம் - அழகு - கனகம் - பொன்.
இஞ்சி - மதில்.
அணி - அழகு.

வெங்கதிரோன் தேர்விலங்க மிக் குயர்ந்த மேருப் போன்று
அங்கனகத் திஞ்சி அணிபெற்றுப் பொங்கிகொளிசேர்

#1595

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *27-30* மதிலின் சிறப்பு:- முளை - வில்.
முதலியவை களை மாட்டி வைத்தற்குச் சுவரில் அடிக்கப்படும் முளைகள்.
இவை மதிலின் உட்புறத்தே இருக்கும்.
நிரைத்து - வரிசையாக அடித்து.
மூரி- பெரிய.
சிறை - சுவர்களை ஒட்டிச் சிறகுபோல உள்ள உறுப்பு.
இவை பொருள்களை வைக்கப் பயன்படுவதுடன் உயர ஏறி நிற்கவும் பயன்படும்.
பாம்பு உரி - பாம்புத் தோல்.
இது, காண்பார்க்கு அச்சம் உண்டாகத் தீட்டப்படும் ஓவியம்.
போக்கி - சுற்றிலும் எழுதி.
`பதணம், நாஞ்சில்` என்பன மதிலின் உறுப்பு வகைகள்.
அட்டாலை - வீரர்கள் இருக்கும் மண்டபம்.
தோமரம் - ஒருவகைக் கதாயுதம்.
தொல்லை - பழமை.
பொறி - பகைவர்மேல் வீசப்படும் சில சிறு யந்திரங்கள்.
வீசு யந்திரம்- தாமே பிற யந்திரங்களை எடுத்து வீசும் யந்திரம்.
இவை யெல்லாம் பாதுகாவலுக்கு மதிலின்கண் அமைக்கப்படும்.
வீசு + யந்திரம் - வீ சியந்திரம்; இகரம், குற்றிய லிகம் கா மரம் - காவடித் தண்டு.
இவை வேண்டும் பொருள்களைத் தாங்கி நிற்கும்.
ஏ - அம்பு.
ஏப்புழை அம்புக் கட்டுக்களை வைக்கும் மாடங்கள்.
கைகலத்தல் - ஒன்றோடு ஒன்று கலத்தல்.
கலந்து - கலக்கப் பெற்று.
மீ - மேல் இடம்.
வெங் கதிரோன் - சூரியன்.
விலங்கு - விலகிப் போகின்ற.

அம் - அழகு - கனகம் - பொன்.
இஞ்சி - மதில்.
அணி - அழகு.

மாளிகையும் மன்னியசீர் மண்டபமும் ஒண்தலத்த
சூளிகையும் துற்றெழுந்த தெற்றிகளும் வாளொளிய

#1596

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *31-34* நகரத்தில் உள்ள இடங்களின் சிறப்பு.
சூளிகை - மேல் மாடத்து நெற்றி.
இது சிறிதே நிற்றற்கும், உலவுதற்கும் பயன்படும்.
துற்று எழுந்த தெற்றிகள் - *(இட்டிகையும், செங்கல்லும்)* நெருங்குதலால் எழுந்த திண்ணைகள்.
கபோதகம் - மாடப் புறாக்கள் உலாவும் வகையில் அமைந்த மேல் உத்தரம்.
வீடு - பெருமை.
உருவு - அழகு.
அம்பலம் - சபை.
செய்குன்று - கட்டு மலை.
இஃது ஏறி விளையாடப் பயன்படும்.
இவை தெருக்களின் கோடியில் நின்று தெருக்களைப் பிரிப்பதால், ``தெருவு வகுத்த செங்குன்று`` சித்திரக் கா - ஆங்காங்குப் பாவைகள் நிற்கும் சோலை.
செழும் பொழில் - பாவைகள் இன்றி மரங்கள் மட்டுமே காய்களோடும் கனிக ளோடும் குளிர்ந்த நிழலையுடைய சோலை.
வாவிகள் - சிறு குளங்கள்.
நிலைக்களம் - அமர்விடம்.
துன்னி - நெருங்கி.
சோதி, மலருக்கு அடை.
மலர் மடந்தை - இலக்குமி வாய்மைத்து - உண்மையாக உடையது.
என்றது நகரத்தை *(சீகாழியை)*

நாடக சாலையும் நன்பொற் கபோதகம் சேர்
பீடமைத்த மாடத்தின் பெற்றியும் கேடில்

#1597

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *31-34* நகரத்தில் உள்ள இடங்களின் சிறப்பு.
சூளிகை - மேல் மாடத்து நெற்றி.
இது சிறிதே நிற்றற்கும், உலவுதற்கும் பயன்படும்.
துற்று எழுந்த தெற்றிகள் - *(இட்டிகையும், செங்கல்லும்)* நெருங்குதலால் எழுந்த திண்ணைகள்.
கபோதகம் - மாடப் புறாக்கள் உலாவும் வகையில் அமைந்த மேல் உத்தரம்.
வீடு - பெருமை.
உருவு - அழகு.
அம்பலம் - சபை.
செய்குன்று - கட்டு மலை.
இஃது ஏறி விளையாடப் பயன்படும்.
இவை தெருக்களின் கோடியில் நின்று தெருக்களைப் பிரிப்பதால், ``தெருவு வகுத்த செங்குன்று`` சித்திரக் கா - ஆங்காங்குப் பாவைகள் நிற்கும் சோலை.
செழும் பொழில் - பாவைகள் இன்றி மரங்கள் மட்டுமே காய்களோடும் கனிக ளோடும் குளிர்ந்த நிழலையுடைய சோலை.
வாவிகள் - சிறு குளங்கள்.
நிலைக்களம் - அமர்விடம்.
துன்னி - நெருங்கி.
சோதி, மலருக்கு அடை.
மலர் மடந்தை - இலக்குமி வாய்மைத்து - உண்மையாக உடையது.
என்றது நகரத்தை *(சீகாழியை)*

உருவு பெறவகுத்த அம்பலமும்ஓங்கு
தெருவும் வகுத்தசெய் குன்றும் மருவினிய

#1598

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *31-34* நகரத்தில் உள்ள இடங்களின் சிறப்பு.
சூளிகை - மேல் மாடத்து நெற்றி.
இது சிறிதே நிற்றற்கும், உலவுதற்கும் பயன்படும்.
துற்று எழுந்த தெற்றிகள் - *(இட்டிகையும், செங்கல்லும்)* நெருங்குதலால் எழுந்த திண்ணைகள்.
கபோதகம் - மாடப் புறாக்கள் உலாவும் வகையில் அமைந்த மேல் உத்தரம்.
வீடு - பெருமை.
உருவு - அழகு.

அம்பலம் - சபை.
செய்குன்று - கட்டு மலை.
இஃது ஏறி விளையாடப் பயன்படும்.
இவை தெருக்களின் கோடியில் நின்று தெருக்களைப் பிரிப்பதால்,
``தெருவு வகுத்த செங்குன்று`` சித்திரக் கா - ஆங்காங்குப் பாவைகள் நிற்கும் சோலை.
செழும் பொழில் - பாவைகள் இன்றி மரங்கள் மட்டுமே காய்களோடும் கனிக ளோடும் குளிர்ந்த நிழலையுடைய சோலை.
வாவிகள் - சிறு குளங்கள்.
நிலைக்களம் - அமர்விடம்.
துன்னி - நெருங்கி.
சோதி, மலருக்கு அடை.
மலர் மடந்தை - இலக்குமி வாய்மைத்து - உண்மையாக உடையது.
என்றது நகரத்தை *(சீகாழியை)*

சித்திரக் காவும் செழும் பொழிலும் வாவிகளும்
நித்திலஞ்சேர் நீடு நிலைக்களமும் எத்திசையும்

#1599

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *31-34* நகரத்தில் உள்ள இடங்களின் சிறப்பு.
சூளிகை - மேல் மாடத்து நெற்றி.
இது சிறிதே நிற்றற்கும், உலவுதற்கும் பயன்படும்.
துற்று எழுந்த தெற்றிகள் - *(இட்டிகையும், செங்கல்லும்)* நெருங்குதலால் எழுந்த திண்ணைகள்.
கபோதகம் - மாடப் புறாக்கள் உலாவும் வகையில் அமைந்த மேல் உத்தரம்.
வீடு - பெருமை.
உருவு - அழகு.
அம்பலம் - சபை.
செய்குன்று - கட்டு மலை.
இஃது ஏறி விளையாடப் பயன்படும்.
இவை தெருக்களின் கோடியில் நின்று தெருக்களைப் பிரிப்பதால்,
``தெருவு வகுத்த செங்குன்று`` சித்திரக் கா - ஆங்காங்குப் பாவைகள் நிற்கும் சோலை.
செழும் பொழில் - பாவைகள் இன்றி மரங்கள் மட்டுமே காய்களோடும் கனிக ளோடும் குளிர்ந்த நிழலையுடைய சோலை.
வாவிகள் - சிறு குளங்கள்.

நிலைக்களம் - அமர்விடம்.
துன்னி - நெருங்கி.
சோதி, மலருக்கு அடை.
மலர் மடந்தை - இலக்குமி வாய்மைத்து - உண்மையாக உடையது.
என்றது நகரத்தை *(சீகாழியை)*

துன்னி எழில்சிறப்பச் சோதி மலர்மடந்தை
மன்னி மகிழ்ந்துறையும் வாய்மைத்தாய்ப் பொன்னும்

#1600

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி *-35-38.*
வாழ்வார் செய்யும் தான தருமங்களை நகரத்தின்மேல் வைத்துப் புகழ்தல்.
மாமணி - மாணிக்கம்.
கார் - மேகம்.
`கொடைவளர்க்கும் செப்பம்` என்க.
சாயாத - தளராத.
செப்பம் - நேர்மை.
புகழ் - புகழுக்கு ஏதுவான செயல்கள்; ஆகு பெயர்.
மேதக்கு - மேன்மை தக்கிருக்கப் பெற்று.

மரகதமும் நித்திலமும் மாமணியும் பேணி
இரவலருக் கெப்போதும் ஈந்து கரவாது

#1601

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி *-35-38.*
வாழ்வார் செய்யும் தான தருமங்களை நகரத்தின்மேல் வைத்துப் புகழ்தல்.
மாமணி - மாணிக்கம்.
கார் - மேகம்.
`கொடைவளர்க்கும் செப்பம்` என்க.
சாயாத - தளராத.
செப்பம் - நேர்மை.
புகழ் - புகழுக்கு ஏதுவான செயல்கள்; ஆகு பெயர்.
மேதக்கு - மேன்மை தக்கிருக்கப் பெற்று.

கற்பகமும் காருமெனக் கற்றவர்க்கும் நற்றவர்க்கும்

தப்பாக் கொடைவளர்க்கும் சாயாத செப்பத்தால்

#1602

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி *-35-38.*

வாழ்வார் செய்யும் தான தருமங்களை நகரத்தின்மேல் வைத்துப் புகழ்தல்.

மாமணி - மாணிக்கம்.

கார் - மேகம்.

`கொடைவளர்க்கும் செப்பம்` என்க.

சாயாத - தளராத.

செப்பம் - நேர்மை.

புகழ் - புகழுக்கு ஏதுவான செயல்கள்; ஆகு பெயர்.

மேதக்கு - மேன்மை தக்கிருக்கப் பெற்று.

பொய்மை கடிந்து புகழ்புரிந்து பூதலத்து
மெய்ம்மை தலைசிறந்து மேதக்கும் உண்மை

#1603

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி *-35-38.*

வாழ்வார் செய்யும் தான தருமங்களை நகரத்தின்மேல் வைத்துப் புகழ்தல்.

மாமணி - மாணிக்கம்.

கார் - மேகம்.

`கொடைவளர்க்கும் செப்பம்` என்க.

சாயாத - தளராத.

செப்பம் - நேர்மை.

புகழ் - புகழுக்கு ஏதுவான செயல்கள்; ஆகு பெயர்.

மேதக்கு - மேன்மை தக்கிருக்கப் பெற்று.

மறைபயில்வார் மன்னும் வியாகரணக் கேள்வித்
துறைபயில்வார் தொன்னூல் பயில்வார் முறைமையால்

#1604

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *39-44 சீகாழி* அந்தணர்களது சிறப்பு.

``பயில்வார்`` முதலியயாவும் முற்று வினையாலணையும் பெயர்கள்.

வியாகரணம்- வடமொழி இலக்கண நூல்.
தொன்னூல் - மரபு காக்கும் நூல்கள்.
அவை வேதத்தின் ஆறங்க நூல்கள்.
கலை நூல் - அறுபத்து நான்கு கலைகளைப் பற்றிய நூல்கள் - அவை இசை.
கூத்து, ஓவியம், சிற்பம் முதலியவை பற்றியன.
ஆதரித்து - விரும்பி.
`பொருளால் போகத்தை ஒடுங்காது துய்ப்பார்` என்க.
இங்ஙனம் கூறியது, ``உடாஅதும், உண்ணாதும் தம் உடம்பைச் செற்றுப்`` *1* பொருளைக் காக்கும் இவறன்மை உடையாரைக் கடிதற் பொருட்டு.
சோகம் - துன்பம் ``இன்றி உணர்வார்`` என்பதை, `உணர்ந்து` என மாற்றிக் கொள்க.
`சோகம் - இணைப்பு` எனக் கொண்டு, கிடந்தவாறே உரைப்பினும் ஆம்.
`ஐம்புலனிலும்` என ஐந்தாம் உருபு விரிக்க.
ஆதி - வேதத்தின் முற்பகுதி.
அது பற்றிய அருங்கலை நூல் உபாசனா காண்டம்.
`இதனை நன்கு ஓதிக் கனல் வகுப்பார்` என்க.
கனல் - முத்தீ வகுத்தல் - வேறு வேறாக வளர்த்தல்.
இங்ஙனம் வளர்த்தலால் மழை பொய்யாது பொழிய, உலகில் கலி *(பஞ்சம்)* வாராது நீங்கும்.
கற் றாங்கு எரி ஓம்பிக்
கலியை வாராமே
செற்றார் வாழ் தில்லை
என அருளிச் செய்தது காண்க.
காமமும் உறுதிப் பொருகளுள் ஒன்றாகலின் அது பற்றிய நூலும் வேண்டற்பாலதாயிற்று.
கலை ஞானம் - நூல்களால் அறிவிக்கப்படும்.
மெய்யுணர்வு.
இதனை `அபரஞானம்` என்பர்.
ஓம நூல் - வேதத்தின் கரும காண்டம்.
`ஓதுவார்க்கு` என நான்கன் உருபு விரிக்க.
உத்தரிப்பார் - ஐயுற்று வினாவும் வினாக்களுக்கு விடை கூறுவார்.
இவற்றால் எல்லாம் சீகாழி அந்தணர்கள் பிரமனுக்கு நிகராவர்.
``தில்லை மூவாயிரவர், திருச்செந்தில் முந்நூற்றவர்`` என்பன போல,
``சீகாழி நானூற்றுவர்`` என்றல் மரபு எனத் தெரிகின்றது.

ஆகமங்கள் கேட்பார் அருங்கலைநூல் ஆதரித்துப்

போகம் ஒடுங்காப் பொருள்துய்ப்பார் சோகமின்றி
#1605
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *39-44* சீகாழி அந்தணர்களது சிறப்பு.
``பயில்வார்`` முதலியயாவும் முற்று வினையாலணையும் பெயர்கள்.
வியாகரணம்- வடமொழி இலக்கண நூல்.
தொன்னூல் - மரபு காக்கும் நூல்கள்.
அவை வேதத்தின் ஆறங்க நூல்கள்.
கலை நூல் - அறுபத்து நான்கு கலைகளைப் பற்றிய நூல்கள் - அவை இசை.
கூத்து, ஓவியம், சிற்பம் முதலியவை பற்றியன.
ஆதரித்து - விரும்பி.
`பொருளால் போகத்தை ஒடுங்காது துய்ப்பார்` என்க.
இங்ஙனம் கூறியது, ``உடாஅதும், உண்ணாதும் தம் உடம்பைச் செற்றுப்`` *1* பொருளைக் காக்கும் இவறன்மை உடையாரைக் கடிதற் பொருட்டு.
சோகம் - துன்பம் ``இன்றி உணர்வார்`` என்பதை, `உணர்ந்து` என மாற்றிக் கொள்க.
`சோகம் - இணைப்பு` எனக் கொண்டு, கிடந்தவாறே உரைப்பினும் ஆம்.
`ஐம்புலனிலும்` என ஐந்தாம் உருபு விரிக்க.
ஆதி - வேதத்தின் முற்பகுதி.
அது பற்றிய அருங்கலை நூல் உபாசனா காண்டம்.
`இதனை நன்கு ஓதிக் கனல் வகுப்பார்` என்க.
கனல் - முத்தீ வகுத்தல் - வேறு வேறாக வளர்த்தல்.
இங்ஙனம் வளர்த்தலால் மழை பொய்யாது பொழிய, உலகில் கலி (பஞ்சம்) வாராது நீங்கும்.
கற் றாங்கு எரி ஓம்பிக்
கலியை வாராமே
செற்றார் வாழ் தில்லை
என அருளிச் செய்தது காண்க.
காமமும் உறுதிப் பொருகளுள் ஒன்றாகலின் அது பற்றிய நூலும் வேண்டற்பாலதாயிற்று.
கலை ஞானம் - நூல்களால் அறிவிக்கப்படும்.
மெய்யுணர்வு.
இதனை `அபரஞானம்` என்பர்.
ஓம நூல் - வேதத்தின் கரும காண்டம்.

`ஓதுவார்க்கு` என நான்கன் உருபு விரிக்க.
உத்தரிப்பார் - ஐயுற்று வினாவும் வினாக்களுக்கு விடை கூறுவார்.
இவற்றால் எல்லாம் சீகாழி அந்தணர்கள் பிரமனுக்கு நிகராவர்.
``தில்லை மூவாயிரவர், திருச்செந்தில் முந்நூற்றவர்`` என்பன போல,
``சீகாழி நானூற்றுவர்`` என்றல் மரபு எனத் தெரிகின்றது.

நீதி நிலையுணர்வார் நீள் நிலத்துள் ஐம்புலனும்
காதல் விடுதவங்கள் காமுறு வார் ஆதி

#1606

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *39-44* சீகாழி அந்தணர்களது சிறப்பு.
``பயில்வார்`` முதலியயாவும் முற்று வினையாலணையும் பெயர்கள்.
வியாகரணம்- வடமொழி இலக்கண நூல்.
தொன்னூல் - மரபு காக்கும் நூல்கள்.
அவை வேதத்தின் ஆறங்க நூல்கள்.
கலை நூல் - அறுபத்து நான்கு கலைகளைப் பற்றிய நூல்கள் - அவை இசை.
கூத்து, ஓவியம், சிற்பம் முதலியவை பற்றியன.
ஆதரித்து - விரும்பி.
`பொருளால் போகத்தை ஒடுங்காது துய்ப்பார்` என்க.
இங்ஙனம் கூறியது, ``உடாஅதும், உண்ணாதும் தம் உடம்பைச் செற்றுப்`` *1* பொருளைக் காக்கும் இவறன்மை உடையாரைக் கடிதற் பொருட்டு.
சோகம் - துன்பம் ``இன்றி உணர்வார்`` என்பதை, `உணர்ந்து` என மாற்றிக் கொள்க.
`சோகம் - இணைப்பு` எனக் கொண்டு, கிடந்தவாறே உரைப்பினும் ஆம்.
`ஐம்புலனிலும்` என ஐந்தாம் உருபு விரிக்க.
ஆதி - வேதத்தின் முற்பகுதி.
அது பற்றிய அருங்கலை நூல் உபாசனா காண்டம்.
`இதனை நன்கு ஓதிக் கனல் வகுப்பார்` என்க.
கனல் - முத்தீ வகுத்தல் - வேறு வேறாக வளர்த்தல்.
இங்ஙனம் வளர்த்தலால் மழை பொய்யாது பொழிய, உலகில் கலி *(பஞ்சம்)* வாராது நீங்கும்.

கற் றாங்கு எரி ஓம்பிக்
கலியை வாராமே
செற்றார் வாழ் தில்லை

என அருளிச் செய்தது காண்க.

காமமும் உறுதிப் பொருகளுள் ஒன்றாகலின் அது பற்றிய நூலும் வேண்டற்பாலதாயிற்று.
கலை ஞானம் - நூல்களால் அறிவிக்கப்படும்.
மெய்யுணர்வு.
இதனை `அபரஞானம்` என்பர்.
ஓம நூல் - வேதத்தின் கரும காண்டம்.
`ஓதுவார்க்கு` என நான்கன் உருபு விரிக்க.
உத்தரிப்பார் - ஐயுற்று வினாவும் வினாக்களுக்கு விடை கூறுவார்.
இவற்றால் எல்லாம் சீகாழி அந்தணர்கள் பிரமனுக்கு நிகராவர்.
``தில்லை மூவாயிரவர், திருச்செந்தில் முந்நூற்றவர்`` என்பன போல, ``சீகாழி நானூற்றுவர்`` என்றல் மரபு எனத் தெரிகின்றது.

அருங்கலைநூல் ஓதுவார் ஆதரித்து வென்றிக்
கருங்கலிநீங் கக்கனல்வ குப்பார் ஒருங்கிருந்து

#1607

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *39-44* சீகாழி அந்தணர்களது சிறப்பு.
``பயில்வார்`` முதலியயாவும் முற்று வினையாலணையும் பெயர்கள்.
வியாகரணம்- வடமொழி இலக்கண நூல்.
தொன்னூல் - மரபு காக்கும் நூல்கள்.
அவை வேதத்தின் ஆறங்க நூல்கள்.
கலை நூல் - அறுபத்து நான்கு கலைகளைப் பற்றிய நூல்கள் - அவை இசை.
கூத்து, ஓவியம், சிற்பம் முதலியவை பற்றியன.
ஆதரித்து - விரும்பி.
`பொருளால் போகத்தை ஒடுங்காது துய்ப்பார்` என்க.
இங்ஙனம் கூறியது, ``உடாஅதும், உண்ணாதும் தம் உடம்பைச் செற்றுப்`` *1* பொருளைக் காக்கும் இவறன்மை உடையாரைக் கடிதற் பொருட்டு.
சோகம் - துன்பம் ``இன்றி உணர்வார்`` என்பதை, `உணர்ந்து` என மாற்றிக் கொள்க.
`சோகம் - இணைப்பு` எனக் கொண்டு, கிடந்தவாறே உரைப்பினும் ஆம்.
`ஐம்புலனிலும்` என ஐந்தாம் உருபு விரிக்க.
ஆதி - வேதத்தின் முற்பகுதி.
அது பற்றிய அருங்கலை நூல் உபாசனா காண்டம்.
`இதனை நன்கு ஓதிக் கனல் வகுப்பார்` என்க.
கனல் - முத்தீ வகுத்தல் - வேறு வேறாக வளர்த்தல்.

இங்ஙனம் வளர்த்தலால் மழை பொய்யாது பொழிய, உலகில் கலி *(பஞ்சம்)* வாராது நீங்கும்.
கற் றாங்கு எரி ஓம்பிக்
கலியை வாராமே
செற்றார் வாழ் தில்லை
என அருளிச் செய்தது காண்க.
காமமும் உறுதிப் பொருகளுள் ஒன்றாகலின் அது பற்றிய நூலும் வேண்டற்பாலதாயிற்று.
கலை ஞானம் - நூல்களால் அறிவிக்கப்படும்.
மெய்யுணர்வு.
இதனை `அபரஞானம்` என்பர்.
ஓம நூல் - வேதத்தின் கரும காண்டம்.
`ஓதுவார்க்கு` என நான்கன் உருபு விரிக்க.
உத்தரிப்பார் - ஐயுற்று வினாவும் வினாக்களுக்கு விடை கூறுவார்.
இவற்றால் எல்லாம் சீகாழி அந்தணர்கள் பிரமனுக்கு நிகராவர்.
``தில்லை மூவாயிரவர், திருச்செந்தில் முந்நூற்றவர்`` என்பன போல, ``சீகாழி நானூற்றுவர்`` என்றல் மரபு எனத் தெரிகின்றது.

காமநூல் கேட்பார் கலைஞானங் காதலிப்பார்
ஓமநூல் ஒதுவார்க் குத்தரிப்பார் பூமன்னும்

#1608

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *39-44* சீகாழி அந்தணர்களது சிறப்பு.
``பயில்வார்`` முதலியயாவும் முற்று வினையாலணையும் பெயர்கள்.
வியாகரணம்- வடமொழி இலக்கண நூல்.
தொன்னூல் - மரபு காக்கும் நூல்கள்.
அவை வேதத்தின் ஆறங்க நூல்கள்.
கலை நூல் - அறுபத்து நான்கு கலைகளைப் பற்றிய நூல்கள் - அவை இசை.
கூத்து, ஓவியம், சிற்பம் முதலியவை பற்றியன.
ஆதரித்து - விரும்பி.
`பொருளால் போகத்தை ஒடுங்காது துய்ப்பார்` என்க.
இங்ஙனம் கூறியது, ``உடாஅதும், உண்ணாதும் தம் உடம்பைச் செற்றுப்`` *1* பொருளைக் காக்கும் இவறன்மை உடையாரைக் கடிதற் பொருட்டு.
சோகம் - துன்பம் ``இன்றி உணர்வார்`` என்பதை, `உணர்ந்து` என மாற்றிக் கொள்க.

`சோகம் - இணைப்பு` எனக் கொண்டு, கிடந்தவாறே உரைப்பினும் ஆம்.
`ஐம்புலனிலும்` என ஐந்தாம் உருபு விரிக்க.
ஆதி - வேதத்தின் முற்பகுதி.
அது பற்றிய அருங்கலை நூல் உபாசனா காண்டம்.
`இதனை நன்கு ஓதிக் கனல் வகுப்பார்` என்க.
கனல் - முத்தீ வகுத்தல் - வேறு வேறாக வளர்த்தல்.
இங்ஙனம் வளர்த்தலால் மழை பொய்யாது பொழிய, உலகில் கலி *(பஞ்சம்)* வாராது நீங்கும்.
கற் றாங்கு எரி ஓம்பிக்
கலியை வாராமே
செற்றார் வாழ் தில்லை
என அருளிச் செய்தது காண்க.
காமமும் உறுதிப் பொருகளுள் ஒன்றாகலின் அது பற்றிய நூலும் வேண்டற்பாலதாயிற்று.
கலை ஞானம் - நூல்களால் அறிவிக்கப்படும்.
மெய்யுணர்வு.
இதனை `அபரஞானம்` என்பர்.
ஓம நூல் - வேதத்தின் கரும காண்டம்.
`ஓதுவார்க்கு` என நான்கன் உருபு விரிக்க.
உத்தரிப்பார் - ஐயுற்று வினாவும் வினாக்களுக்கு விடை கூறுவார்.
இவற்றால் எல்லாம் சீகாழி அந்தணர்கள் பிரமனுக்கு நிகராவர்.
``தில்லை மூவாயிரவர், திருச்செந்தில் முந்நூற்றவர்`` என்பன போல, ``சீகாழி நானூற்றுவர்`` என்றல் மரபு எனத் தெரிகின்றது.

நான்முகனே அன்னசீர் நானூற் றுவர்மறையோர்
தாம்மன்னி வாவும் தகைமைத்தாய் நாமன்னும்

#1609

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *39-44* சீகாழி அந்தணர்களது சிறப்பு.
``பயில்வார்`` முதலியயாவும் முற்று வினையாலணையும் பெயர்கள்.
வியாகரணம்- வடமொழி இலக்கண நூல்.
தொன்னூல் - மரபு காக்கும் நூல்கள்.
அவை வேதத்தின் ஆறங்க நூல்கள்.
கலை நூல் - அறுபத்து நான்கு கலைகளைப் பற்றிய நூல்கள் - அவை இசை.
கூத்து, ஓவியம், சிற்பம் முதலியவை பற்றியன.
ஆதரித்து - விரும்பி.

`பொருளால் போகத்தை ஒடுங்காது துய்ப்பார்` என்க.
இங்ஙனம் கூறியது, ``உடாஅதும், உண்ணாதும் தம் உடம்பைச் செற்றுப்`` *1* பொருளைக் காக்கும் இவறன்மை உடையாரைக் கடிதற் பொருட்டு.
சோகம் - துன்பம் ``இன்றி உணர்வார்`` என்பதை, `உணர்ந்து` என மாற்றிக் கொள்க.
`சோகம் - இணைப்பு` எனக் கொண்டு, கிடந்தவாறே உரைப்பினும் ஆம்.
`ஐம்புலனிலும்` என ஐந்தாம் உருபு விரிக்க.
ஆதி - வேதத்தின் முற்பகுதி.
அது பற்றிய அருங்கலை நூல் உபாசனா காண்டம்.
`இதனை நன்கு ஓதிக் கனல் வகுப்பார்` என்க.
கனல் - முத்தீ வகுத்தல் - வேறு வேறாக வளர்த்தல்.
இங்ஙனம் வளர்த்தலால் மழை பொய்யாது பொழிய, உலகில் கலி (பஞ்சம்) வாராது நீங்கும்.
கற் றாங்கு எரி ஓம்பிக்
கலியை வாராமே
செற்றார் வாழ் தில்லை
என அருளிச் செய்தது காண்க.
காமமும் உறுதிப் பொருகளுள் ஒன்றாகலின் அது பற்றிய நூலும் வேண்டற்பாலதாயிற்று.
கலை ஞானம் - நூல்களால் அறிவிக்கப்படும்.
மெய்யுணர்வு.
இதனை `அபரஞானம்` என்பர்.
ஓம நூல் - வேதத்தின் கரும காண்டம்.
`ஓதுவார்க்கு` என நான்கன் உருபு விரிக்க.
உத்தரிப்பார் - ஐயுற்று வினாவும் வினாக்களுக்கு விடை கூறுவார்.
இவற்றால் எல்லாம் சீகாழி அந்தணர்கள் பிரமனுக்கு நிகராவர்.
``தில்லை மூவாயிரவர், திருச்செந்தில் முந்நூற்றவர்`` என்பன போல, ``சீகாழி நானூற்றுவர்`` என்றல் மரபு எனத் தெரிகின்றது.

ஆரணங்கும் மற்றை அருந்ததியும் போல்மடவார்
ஏரணங்கு மாடத் தினிதிருந்து சீரணங்கு

#1610

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *45-47* சீகாழியில் உள்ள மங்கையர்களது சிறப்பு.
நா மன்னும் ஆரணங்கு - நாமகள்; கலைமகள்.
கலை வன்மையால் நாமகளை ஒத்தும், கற்பின் சிறப்பால் அருந்ததியை

ஒத்தும் உள்ளார் என்க.
ஏர் - எழுச்சி.
அணங்கு - அழகு சீர் அணங்கு - சிறப்பினையும், அழகினையும் உடைய.
வீணையும், யாழும் வேறுவேறு ஆதலை.
``இன்னிசை வீணையர், யாழினர் ஒருபால்` *2* என்றதனானும் அறிக.
பாணம் - நாடக வகை.
பூவை - நாகணவாய்ப் புள்.
இக் காலத்தில், `மைனா` எனப்படுகின்றது.
பாவை - பதுமை.
பண்பு - உறுவார் - அழகு பார்ப்பார்.

வீணை பயிற்றுவார் யாழ்பயில்வார் மேவியசீர்ப்
பாணம் பயில்வார் பயன்உறுவார் பேணியசீர்ப்

#1611

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *45-47* சீகாழியில் உள்ள மங்கையர்களது சிறப்பு.
நா மன்னும் ஆரணங்கு - நாமகள்; கலைமகள்.
கலை வன்மையால் நாமகளை ஒத்தும், கற்பின் சிறப்பால் அருந்ததியை ஒத்தும் உள்ளார் என்க.
ஏர் - எழுச்சி.
அணங்கு - அழகு சீர் அணங்கு - சிறப்பினையும், அழகினையும் உடைய.
வீணையும், யாழும் வேறுவேறு ஆதலை.
``இன்னிசை வீணையர், யாழினர் ஒருபால்` *2* என்றதனானும் அறிக.
பாணம் - நாடக வகை.
பூவை - நாகணவாய்ப் புள்.
இக் காலத்தில், `மைனா` எனப்படுகின்றது.
பாவை - பதுமை.
பண்பு - உறுவார் - அழகு பார்ப்பார்.

பூவைக்குப் பாட்டுரைப்பார் பொறகிளிக்குச் சொற் பயில்வார்
பாவைக்குப் பொன்புனைந்து பண்புறுவா ராய் எங்கும்

#1612

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *45-47* சீகாழியில் உள்ள மங்கையர்களது சிறப்பு.
நா மன்னும் ஆரணங்கு - நாமகள்; கலைமகள்.
கலை வன்மையால் நாமகளை ஒத்தும், கற்பின் சிறப்பால் அருந்ததியை

ஒத்தும் உள்ளார் என்க.
ஏர் - எழுச்சி.
அணங்கு - அழகு சீர் அணங்கு - சிறப்பினையும், அழகினையும் உடைய.
வீணையும், யாழும் வேறுவேறு ஆதலை.
``இன்னிசை வீணையர், யாழினர் ஒருபால்` *2* என்றதனானும் அறிக.
பாணம் - நாடக வகை.
பூவை - நாகணவாய்ப் புள்.
இக் காலத்தில், `மைனா` எனப்படுகின்றது.
பாவை - பதுமை.
பண்பு - உறுவார் - அழகு பார்ப்பார்.

மங்கையர்கள் கூட்டமும் மன்னு சிறார்குழுவும்
பொங்குலகம் எல்லாம் பொலிவடையத் தங்கிய

#1613

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *48;* ``மன்னு`` என்பதை, ``எங்கும்`` என்பதன் பின் கூட்டுக.
சிறார் - சிறுவர் இனம் பற்றி இங்குச் சிறுமியரையும் கொள்க.
`கூட்டமும், குழுவும் ஆக` என ஒரு சொல் வருவிக்க.
*(*மேல் கண்ணி - *23,24*இல் புற நகர் ஒலிகள் கூறப்பட்டன.
)

வேத ஒலியும் விழாவொலியும் மெல்லியலார்
கீத ஒலியும் கிளர்ந்தோங்கும் மாதரார்

#1614

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி*-49-52-*இல் அகநகர் ஒலிகள் கூறப்படுகின்றன.
`வேத ஒலியால் உலகம் பொலிவை அடைகின்றது` என்க.
*(*கண்ணி - *48)* மெல்லியலார்- மகளிர்.
பாவை - பாவைப் பாட்டு.
இதனைத் திருவாசகத்துள்ளும் காணலாம்.
`பாவை நோன்புப் பாட்டு` என்பாரும் உளர், பறை - வாத்திய வகைகள்.
வியன் நகரம் - அக நகர், காவலனது பறைகள் காவலை உணர்த்தலின்
அவை வேறு கூறப்பட்டன.
துடி - உடுக்கை.
இதனையும் காவலர் கொண்டிருப்பர்.
பவ்வம் - கடல்.

பவ்வப் படை- கடல் போலும் போர்ப் படைகள்.
இவற்றிடையே ஒலிப்பன போர்ப் பறைகள்.
சில வேளைகளில் படைகள் அகநகருள்ளும் அணிவகுத்துச் செல்வது உண்டு கம்பக் களிறு - அசைதலையுடைய ஆண் யானைகள்.
கார் - மேகம்.

பாவை ஒலியும் பறைஒலியும் பல்சனங்கள்
மேவும் ஒலியும் வியன்நகரங் காவலர்கள்

#1615

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி-*49-52*-இல் அகநகர் ஒலிகள் கூறப்படுகின்றன.
`வேத ஒலியால் உலகம் பொலிவை அடைகின்றது` என்க.
(கண்ணி - 48) மெல்லியலார்- மகளிர்.
பாவை - பாவைப் பாட்டு.
இதனைத் திருவாசகத்துள்ளும் காணலாம்.
`பாவை நோன்புப் பாட்டு` என்பாரும் உளர், பறை - வாத்திய வகைகள்.
வியன் நகரம் - அக நகர், காவலனது பறைகள் காவலை உணர்த்தலின் அவை வேறு கூறப்பட்டன.
துடி - உடுக்கை.
இதனையும் காவலர் கொண்டிருப்பர்.
பவ்வம் - கடல்.
பவ்வப் படை- கடல் போலும் போர்ப் படைகள்.
இவற்றிடையே ஒலிப்பன போர்ப் பறைகள்.
சில வேளைகளில் படைகள் அகநகருள்ளும் அணிவகுத்துச் செல்வது உண்டு கம்பக் களிறு - அசைதலையுடைய ஆண் யானைகள்.
கார் - மேகம்.

பம்பைத் துடிஒலியும் பவ்வப் படைஒலியும்
கம்பக் களிற்றொலியும் கைகலந்து நம்பிய

#1616

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி-*49-52*-இல் அகநகர் ஒலிகள் கூறப்படுகின்றன.
`வேத ஒலியால் உலகம் பொலிவை அடைகின்றது` என்க.
(கண்ணி - 48) மெல்லியலார்- மகளிர்.
பாவை - பாவைப் பாட்டு.
இதனைத் திருவாசகத்துள்ளும் காணலாம்.

`பாவை நோன்புப் பாட்டு` என்பாரும் உளர், பறை - வாத்திய வகைகள்.
வியன் நகரம் - அக நகர், காவலனது பறைகள் காவலை உணர்த்தலின் அவை வேறு கூறப்பட்டன.
துடி - உடுக்கை.
இதனையும் காவலர் கொண்டிருப்பர்.
பவ்வம் - கடல்.
பவ்வப் படை- கடல் போலும் போர்ப் படைகள்.
இவற்றிடையே ஒலிப்பன போர்ப் பறைகள்.
சில வேளைகளில் படைகள் அகநகருள்ளும் அணிவகுத்துச் செல்வது உண்டு கம்பக் களிறு - அசைதலையுடைய ஆண் யானைகள்.
கார் - மேகம்.

கார்முழுக்கம் மற்றைக் கடல்முழுக்கம் போறகலந்த
சீர் முழக்கம் எங்கும் செவிடுபடப் பார்விளங்கு

#1617

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி-*49-52*-இல் அகநகர் ஒலிகள் கூறப்படுகின்றன.
`வேத ஒலியால் உலகம் பொலிவை அடைகின்றது` என்க.
(கண்ணி - 48) மெல்லியலார்- மகளிர்.
பாவை - பாவைப் பாட்டு.
இதனைத் திருவாசகத்துள்ளும் காணலாம்.
`பாவை நோன்புப் பாட்டு` என்பாரும் உளர், பறை - வாத்திய வகைகள்.
வியன் நகரம் - அக நகர், காவலனது பறைகள் காவலை உணர்த்தலின் அவை வேறு கூறப்பட்டன.
துடி - உடுக்கை.
இதனையும் காவலர் கொண்டிருப்பர்.
பவ்வம் - கடல்.
பவ்வப் படை- கடல் போலும் போர்ப் படைகள்.
இவற்றிடையே ஒலிப்பன போர்ப் பறைகள்.
சில வேளைகளில் படைகள் அகநகருள்ளும் அணிவகுத்துச் செல்வது உண்டு கம்பக் களிறு - அசைதலையுடைய ஆண் யானைகள்.
கார் - மேகம்.

செல்வம் நிறைந்த ஊர் சீரில் திகழ்ந்தஊர்
மல்கு மலர்மடந்தை மன்னும் ஊர் சொல்லினிய

#1618

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - 53, 54, 55 சீகாழியின் புகழ் வகை.

ஆலித்து - மழை விடாது பொழிதலால் `இருங்கால்` என்பதில் சந்தி ஒற்றுத் தொகுத்த லாக `இருகால்` என நின்றது.

இருங்கால் - பெரிய காற்று; ஊழிக் காற்று `இருங்காலால் (அலை வீசி) வளர் வெள்ளம்` - என்க.

உம்பர் - அண்ட முகடு.

`அதனோடும் சேர மிதந்த ஊர்` என்க.

`சீகாழியின் பெயர்கள் பன்னிரண்டும் ஓரோர் ஊழியில் எய்தின` என்றற்கு, ``பன்னிருகால் மிதந்த`` என்றார்.

ஞாலத்து மிக்கஊர் நானூற் றுவர்களூர்
வேலொத்த கண்ணார் விளங்கும் ஊர் ஆலித்து

#1619

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - 53, 54, 55 சீகாழியின் புகழ் வகை.

ஆலித்து - மழை விடாது பொழிதலால் `இருங்கால்` என்பதில் சந்தி ஒற்றுத் தொகுத்த லாக `இருகால்` என நின்றது.

இருங்கால் - பெரிய காற்று; ஊழிக் காற்று `இருங்காலால் (அலை வீசி) வளர் வெள்ளம்` - என்க.

உம்பர் - அண்ட முகடு.

`அதனோடும் சேர மிதந்த ஊர்` என்க.

`சீகாழியின் பெயர்கள் பன்னிரண்டும் ஓரோர் ஊழியில் எய்தின` என்றற்கு, ``பன்னிருகால் மிதந்த`` என்றார்.

மன்னிருகால் வேளை வளர்வெள்ளத் தும்பரொடும்
பன்னிருகால் நீரில் மிதந்தஊர் மன்னும்

#1620

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - 53, 54, 55 சீகாழியின் புகழ் வகை.

ஆலித்து - மழை விடாது பொழிதலால் `இருங்கால்` என்பதில் சந்தி ஒற்றுத் தொகுத்த லாக `இருகால்` என நின்றது.

இருங்கால் - பெரிய காற்று; ஊழிக் காற்று `இருங்காலால் (அலை வீசி) வளர் வெள்ளம்` - என்க.

உம்பர் - அண்ட முகடு.

`அதனோடும் சேர மிதந்த ஊர்` என்க.

`சீகாழியின் பெயர்கள் பன்னிரண்டும் ஒரோர் ஊழியில் எய்தின` என்றற்கு, ``பன்னிருகால் மிதந்த`` என்றார்.

பிரமன்ஊர் வேணுபுரம் பேரொலிநீர் சண்பை
அரன்மன்னு தண்காழி அம்பொற் சிரபுரம்

#1621

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *56,57,58* சீகாழியின் பன்னிரு பெயர்கள் இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணம் பற்றி வந்தமையை அறிந்து கொள்க.

``இற்றது`` என்பதில் உள்ள `அது` என்னும் பகுதிப் பொருள் விகுதியைப் ``பண்பு`` என்பதனோடு கூட்டி, ``பகர்கின்ற பண்பது இற்றாகி`` எனக் கொள்க.

இற்று - இன்னது.

பூந்தராய் கொச்சைவயம் வெங்குருப் பொங்குபுனல்
வாய்ந்தநல் தோணிபுரம் மறையோர் ஏய்ந்த

#1622

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *56,57,58* சீகாழியின் பன்னிரு பெயர்கள் இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணம் பற்றி வந்தமையை அறிந்து கொள்க.

``இற்றது`` என்பதில் உள்ள `அது` என்னும் பகுதிப் பொருள் விகுதியைப் ``பண்பு`` என்பதனோடு கூட்டி, ``பகர்கின்ற பண்பது இற்றாகி`` எனக் கொள்க.

இற்று - இன்னது.

புகலி கழுமலம் பூம்புறவம் என்றிப்
பகர்கின்ற பண்புற்ற தாகித் திகழ்கின்ற

#1623

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி - *56,57,58* சீகாழியின் பன்னிரு பெயர்கள் இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணம் பற்றி வந்தமையை அறிந்து கொள்க.

``இற்றது`` என்பதில் உள்ள `அது` என்னும் பகுதிப் பொருள் விகுதியைப் ``பண்பு`` என்பதனோடு கூட்டி, ``பகர்கின்ற பண்பது

இற்றாகி`` எனக் கொள்க.
இற்று - இன்னது.

மல்லைச் செழுநகரம் மன்னவும் வல்லமணர்
ஒல்லைக் கழுவில் உலக்கவும் எல்லையிலா

#1624

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி-*59-63*.
ஞானசம்பந்தர் அவதாரப் பயன்.
மல் - வளப்பம்.
அஃது ஐகாரம் பெற்று, ``மல்லை`` என வந்தது.
ஆதியாம் வென்றிக் கவி - தொன்று தொட்டு வெற்றி பெற்று வந்த
அருமை நல்லார் உளரேல் மழை பொய்யாது பொழியும்; மழை
பொய்யாது பொழியவே வறுமை அணுகாதாம்.
ஒன்றி - ஒற்றுமைப்பட்டு.
பனுவல் - பதிகம்.
``ஞானசம்பந்தர் பதினாறாயிரம் திருப்பதிகங்களை அருளிச் செய்தார்``
என்பர்.
கிடைத்தவை முந்நூற்றெண்பத்து மூன்று திருப்பதிகங்களே.
ஏனைய சிதலைவாய்ப்பட்டன கிடைத்த திருப் பதிகங்களிலும்
ஆங்காங்குச் சில பாடல்களும், பாடல்களின் அடி களும் அவ்வாறாயின.
அப்பர் சுந்தரரது திருப்பதிகங்களில் சிதலை வாய்ப்பட்டன பல.
கவுணியர் - கவுணிய கோத்திரத்தினர்.
1 ஓர் சேய்- ஒப்புயர்வற்ற பிள்ளை.
அங்கு - அச்சீகாழித் தலத்தில்.
வள்ளல் - வீடுபேற்றினை கொள்ளை கொள்ள விட்டவர்.

மாதவத்தோர் வாழவும் வையகத்தோர் உய்யவும்
மேதக்க வானோர் வியப்பவும் ஆதியாம்

#1625

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி-*59-63*.
ஞானசம்பந்தர் அவதாரப் பயன்.
மல் - வளப்பம்.
அஃது ஐகாரம் பெற்று, ``மல்லை`` என வந்தது.
ஆதியாம் வென்றிக் கவி - தொன்று தொட்டு வெற்றி பெற்று வந்த

அருமை நல்லார் உளரேல் மழை பொய்யாது பொழியும்; மழை பொய்யாது பொழியவே வறுமை அணுகாதாம்.
ஒன்றி - ஒற்றுமைப்பட்டு.
பனுவல் - பதிகம்.
``ஞானசம்பந்தர் பதினாறாயிரம் திருப்பதிகங்களை அருளிச் செய்தார்`` என்பர்.
கிடைத்தவை முந்நூற்றெண்பத்து மூன்று திருப்பதிகங்களே.
ஏனைய சிதலைவாய்ப்பட்டன கிடைத்த திருப் பதிகங்களிலும் ஆங்காங்குச் சில பாடல்களும், பாடல்களின் அடி களும் அவ்வாறாயின.
அப்பர் சுந்தரரது திருப்பதிகங்களில் சிதலை வாய்ப்பட்டன பல.
கவுணியர் - கவுணிய கோத்திரத்தினர்.
1 ஓர் சேய்- ஒப்புயர்வற்ற பிள்ளை.
அங்கு - அச்சீகாழித் தலத்தில்.
வள்ளல் - வீடுபேற்றினை கொள்ளை கொள்ள விட்டவர்.

வென்றிக் கலிகெடவும் வேதத் தொலிமிகவும்
ஒன்றிச் சிவனடியார் ஒங்கவும் துன்றிய

#1626

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி-*59-63*.
ஞானசம்பந்தர் அவதாரப் பயன்.
மல் - வளப்பம்.
அஃது ஐகாரம் பெற்று, ``மல்லை`` என வந்தது.
ஆதியாம் வென்றிக் கவி - தொன்று தொட்டு வெற்றி பெற்று வந்த
அருமை நல்லார் உளரேல் மழை பொய்யாது பொழியும்; மழை பொய்யாது பொழியவே வறுமை அணுகாதாம்.
ஒன்றி - ஒற்றுமைப்பட்டு.
பனுவல் - பதிகம்.
``ஞானசம்பந்தர் பதினாறாயிரம் திருப்பதிகங்களை அருளிச் செய்தார்`` என்பர்.
கிடைத்தவை முந்நூற்றெண்பத்து மூன்று திருப்பதிகங்களே.
ஏனைய சிதலைவாய்ப்பட்டன கிடைத்த திருப் பதிகங்களிலும் ஆங்காங்குச் சில பாடல்களும், பாடல்களின் அடி களும் அவ்வாறாயின.
அப்பர் சுந்தரரது திருப்பதிகங்களில் சிதலை வாய்ப்பட்டன பல.
கவுணியர் - கவுணிய கோத்திரத்தினர்.
1 ஓர் சேய்- ஒப்புயர்வற்ற பிள்ளை.
அங்கு - அச்சீகாழித் தலத்தில்.

வள்ளல் - வீடுபேற்றினை கொள்ளை கொள்ள விட்டவர்.

பன்னு தமிழ்ப்பதினா றாயிர நற்பனுவல்
மன்னு புவியவர்க்கு வாய்ப்பவும் முன்னிய

#1627

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி-*59-63*.
ஞானசம்பந்தர் அவதாரப் பயன்.
மல் - வளப்பம்.
அஃது ஐகாரம் பெற்று, ``மல்லை`` என வந்தது.
ஆதியாம் வென்றிக் கவி - தொன்று தொட்டு வெற்றி பெற்று வந்த
அருமை நல்லார் உளரேல் மழை பொய்யாது பொழியும்; மழை
பொய்யாது பொழியவே வறுமை அணுகாதாம்.
ஒன்றி - ஒற்றுமைப்பட்டு.
பனுவல் - பதிகம்.
``ஞானசம்பந்தர் பதினாறாயிரம் திருப்பதிகங்களை அருளிச் செய்தார்``
என்பர்.
கிடைத்தவை முந்நூற்றெண்பத்து மூன்று திருப்பதிகங்களே.
ஏனைய சிதலைவாய்ப்பட்டன கிடைத்த திருப் பதிகங்களிலும்
ஆங்காங்குச் சில பாடல்களும், பாடல்களின் அடி களும் அவ்வாறாயின.
அப்பர் சுந்தரரது திருப்பதிகங்களில் சிதலை வாய்ப்பட்டன பல.
கவுணியர் - கவுணிய கோத்திரத்தினர்.
1 ஓர் சேய்- ஒப்புயர்வற்ற பிள்ளை.
அங்கு - அச்சீகாழித் தலத்தில்.
வள்ளல் - வீடுபேற்றினை கொள்ளை கொள்ள விட்டவர்.

சிந்தனையால் சீரார் கவுணியர்க்கோர் சேய்என்ன
வந்தங் கவதரித்த வள்ளலை அந்தமில் சீர்

#1628

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி-*59-63*.
ஞானசம்பந்தர் அவதாரப் பயன்.
மல் - வளப்பம்.
அஃது ஐகாரம் பெற்று, ``மல்லை`` என வந்தது.
ஆதியாம் வென்றிக் கவி - தொன்று தொட்டு வெற்றி பெற்று வந்த
அருமை நல்லார் உளரேல் மழை பொய்யாது பொழியும்; மழை

பொய்யாது பொழியவே வறுமை அணுகாதாம்.
ஒன்றி - ஒற்றுமைப்பட்டு.
பனுவல் - பதிகம்.
``ஞானசம்பந்தர் பதினாறாயிரம் திருப்பதிகங்களை அருளிச் செய்தார்`` என்பர்.
கிடைத்தவை முந்நூற்றெண்பத்து மூன்று திருப்பதிகங்களே.
ஏனைய சிதலைவாய்ப்பட்டன கிடைத்த திருப் பதிகங்களிலும் ஆங்காங்குச் சில பாடல்களும், பாடல்களின் அடி களும் அவ்வாறாயின.
அப்பர் சுந்தரரது திருப்பதிகங்களில் சிதலை வாய்ப்பட்டன பல.
கவுணியர் - கவுணிய கோத்திரத்தினர்.
1 ஓர் சேய்- ஒப்புயர்வற்ற பிள்ளை.
அங்கு - அச்சீகாழித் தலத்தில்.
வள்ளல் - வீடுபேற்றினை கொள்ளை கொள்ள விட்டவர்.

ஞானச் சுடர்விளக்கை நற்றவத்தோர் கற்பகத்தை
மான மறைஅவற்றின் வான்பொருளை **-** ஆனசீர்த்

#1629

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி-*64-65:* ஞான சம்பந்தரது பெருமை.
64 - கற்பகம் வேண்டுவார் வேண்டுவதை வேண்டியவாறே கொடுக்கும் தெய்வ மரம்.
அஃது இங்கு உவம ஆகுபெயராய் வந்தது.
கணவன் உயிரைப் பெற விரும்பிய வணிகப் பெண்ணிற்கு அதனை அங்ஙனமே வழங்கியது, அருமை மகளை இழந்து வருந்திய வணிகர்க்கு அவளை எழுப்பித் தந்தது முதலியவற்றை இங்கு நினைக்க.
மானம் - பெருமை.
வான் பொருள் - முடிநிலைப் பொருள்.
அது சிவஞானம் சிவஞானம் உடையவரை, உயர்வு தோன்ற, ``சிவஞானம்`` என்றே பாற்படுத்துக் கூறினார்.
``ஞானத்தின் திருஉருவை`` எனச் சேக்கிழாருங் கூறினார்.
1 65- சீர்த் தத்துவம் - சிறந்த உம்மை.
தத்துவன் - உண்மையை உபதேசித்தருள்பவன்.
நித்தன் - நிலையுடைய புகழ் உடம்பைப் பெற்றவன்.
தவர் - தவம் செய்வோர்.
வித்தகம் - சதுரப்பாடு; திறமை.
இது சமண் சமயத்தவரோடு வாதம் புரிகையில் இனிது விளங்கிற்று.
விடலை - இளங் காளை; பதினாறு வயதிற்கு உட்பட்டவன்.

தெவ்வர்- பகைமைகொண்ட சமணர்.
அடல் - வலிமை.
உரும் - இடி.
தெவ் வரை, `பாம்பு` என்னாமையால், இஃது ஏகதேச உருவகம்.
``சிங்கம், குஞ்சரம்`` என்பன காதற் சொற்கள்.

தத்துவனை நித்தனைச் சைவத் தவர்அரசை
வித்தகத்தால் ஓங்கு விடலையை முத்தமிழின்

#1630

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கண்ணி-*64-65:* ஞான சம்பந்தரது பெருமை.
64 - கற்பகம் வேண்டுவார் வேண்டுவதை வேண்டியவாறே கொடுக்கும் தெய்வ மரம்.
அஃது இங்கு உவம ஆகுபெயராய் வந்தது.
கணவன் உயிரைப் பெற விரும்பிய வணிகப் பெண்ணிற்கு அதனை அங்ஙனமே வழங்கியது, அருமை மகளை இழந்து வருந்திய வணிகர்க்கு அவளை எழுப்பித் தந்தது முதலியவற்றை இங்கு நினைக்க.
மானம் - பெருமை.
வான் பொருள் - முடிநிலைப் பொருள்.
அது சிவஞானம் சிவஞானம் உடையவரை, உயர்வு தோன்ற,
``சிவஞானம்`` என்றே பாற்படுத்துக் கூறினார்.
``ஞானத்தின் திருஉருவை`` எனச் சேக்கிழாருங் கூறினார்.
1 65- சீர்த் தத்துவம் - சிறந்த உம்மை.
தத்துவன் - உண்மையை உபதேசித்தருள்பவன்.
நித்தன் - நிலையுடைய புகழ் உடம்பைப் பெற்றவன்.
தவர் - தவம் செய்வோர்.
வித்தகம் - சதுரப்பாடு; திறமை.
இது சமண் சமயத்தவரோடு வாதம் புரிகையில் இனிது விளங்கிற்று.
விடலை - இளங் காளை; பதினாறு வயதிற்கு உட்பட்டவன்.
தெவ்வர்- பகைமைகொண்ட சமணர்.
அடல் - வலிமை.
உரும் - இடி.
தெவ் வரை, `பாம்பு` என்னாமையால், இஃது ஏகதேச உருவகம்.
``சிங்கம், குஞ்சரம்`` என்பன காதற் சொற்கள்.

செஞ்சொற் பொருள்பயந்த சிங்கத்தைத் தெவ்வருயிர்
அஞ்சத் திகழ்ந்த அடலுருமை எஞ்சாமை

#1631

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

ஆதிச் சிவனருளால் அம்பொன்செய் வட்டிலில்
கோதில் அமிர்தநுகர் குஞ்சரத்தைத் தீதறுசீர்க்

#1632

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

காலத் தொகுதியும் நான்மறையின் காரணமும்
மூலப் பொருளும் முழுதுணர்ந்த சீலத்

#1633

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

காலம், பொதுவாக `ஒன்று` எனச் சொல்லப்பட்டாலும் நொடி, நாழிகை முதலாகவும், இறப்பு, நிகழ்வு, எதிர்வாகவும் பல ஆதலின் ``காலத் தொகுதி`` என்றார்.

இதனால் முக்காலத்தையும் உணர்ந்தமை பெறப்பட்டது.

நான்மறையின் காரணம் நாதம்.

அதற்கு மூலம் தூமாயை.

இவற்றை உணரவே இவற்றுள் அடங்கிய அனைத்துப் பொருள்களும் உணரப்பட்டன ஆதல் பற்றி, ``முழு துணர்ந்த திருஞான சம்பந்தன்`` என்றார்.

`ஞானிகள் முழுதொருங் குணர்ந்தவர்` என்பதை இங்கு நினைவு கூர்க.

இவர்களது இயல்பை, மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியில் ஆற்றிய அறிவின் தேயமும் என்றார் தொல்காப்பியர்.

திருஞான சம்பந்தன் என்றுலகம் சேர்ந்த
ஒரு நாமத் தால்உயர்ந்த கோவை வருபெரு நீர்ப்

#1634

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

குறிப்புரையை எழுதவில்லை

பொன்னிவள நாடனைப் பூம்புகலி நாயகனை
மன்னர் தொழுதிறைஞ்சும் மாமணியை முன்னே

#1635

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மன்னர் - பாண்டியனும், அவனுக்கு மகட் கொடை நேர்ந்த சோழனும்,

நிலவு முருகற்கும் நீலநக் கற்கும்
தொலைவில் புகழ்ச்சிறுத்தொண் டற்கும் குலவிய

#1636

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஞானசம்பந்தரோடு நட்புரிமை கொண்ட நாயன்மார் மூவர்.

தோழமையாய்த் தொல்லைப் பிறப்பறுத்த சுந்தரனை
மாழைஒண்கண் மாதர் மதனனைச் சூழொளிய

#1637

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நட்புப் பூண்டமையால் அவர்கள் பிறவா நெறியை எய்தினார்.
சுந்தரன் - அழகன்.
மாதரைத் தான் காதலியா தொழியினும் அவர்களால் ஒருதலைக் காமமாகக் காதலிக்கப்படுபவன்.

கோதைவேல் தென்னன்றன் கூடற் குலநகரில்
வாதில் அமணர் வலிதொலையக் காதலால்

#1638

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கோதை - மாலை.
தென்னன் - பாண்டியன்.
கூடல் - மதுரை.
குலம் - மேன்மை.
காதல் - காதுதல்; அழித்தல்.
தொழிற் பெயர்.
அழித்தல், இங்கு ``வாதில் வென்று அழித்தல்``

புண்கெழுவு செம்புனல்ஆ றோடப் பொரு தவரை
வண்கழுவில் வைத்த மறையோனை ஒண்கெழுவு

#1639

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

செம்புனல் - செந்நீர் இரத்தம்.
`அமணர் வலி தொலை வாதில் பொருது காதலால் அவரைச் செம்புனல் ஆறு ஓடக் கழுவில் வைத்த மறையோனை என மாறிக் கூட்டுக.
வாதில் வென்றவரது வெற்றித் தூணாய் நின்றது பற்றிக் கழுமரங்களை ``வண் கழு`` என்றார்.
அவை வெற்றித் தூண்கள் ஆயினமையை, போற்றுச்சீர்ப் பிள்ளை யார்தம்
புகழ்ச்சயத் தம்ப மாகும்
என்னும் திருத்தொண்டர் புராணத்தால் *3* அறிக.

ஞாலத் தினர்அறிய மன்னுநனி பள்ளியது
பாலை தனைநெய்த லாக்கியும் காலத்து

#1640

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஞானசம்பந்தர் நிகழ்த்திய அற்புதங்கள்;- திரு நனி பள்ளி,

பிள்ளையார்க்குத் தாய்ப் பாட்டனார் ஊர்.
அஃது இப்பொழுது `புஞ்சை` என வழங்குகின்றது.
நனி பள்ளி அது - நனி பள்ளியாகிய அந்த நிலம்.
`அதனை` என இரண்டன் உருபு விரிக்க.
பாலதனை - பாலையாய் இருந்ததனை.

நீரெதிர்ந்து சென்று நெருப்பிற் குளிர்படைத்தும்
பாரெதிர்ந்த பலவிடங்கள் தீர்த்தும் முன் நேரெழுந்த

#1641

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஞானசம்பந்தர் இட்ட ஏடு வெள்ளத்தில் எதிர் ஏறிச் சென்றதையும், நெருப்பில் குளிர்ச்சி பெற்றிருந்ததையும் அவரே செய்தனவாக ஏற்றிவைத்துக் கூறினார்.
பல் விடங்கள் - பாம்பின் பல்லால் வெளிவிடப்பட்ட நஞ்சுகள்.
நஞ்சு ஒன்றேயாயினும் அதன் வேகம் ஏழாகச் சொல்லப்படுதல் பற்றிப் பன்மையாற் கூறினார்.

யாழை முரித்தும் இருங்கதவம் தான் அடைத்தும்
சூழ்புனலில் ஓடத் தொழில்புரிந்தும் தாழ்பொழில்சூழ்

#1642

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஞானசம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனார் தமது யாழினைத் தாமே முறிக்க முயலும்படி யாழ் மூரிப் பதிகம் பாடினமை, திருமறைக் காட்டில் மறைக் கதவை அப்பர் திறக்கப்பாடியபின் அடைக்கப் பாடினமை

கொங்கிற் பனிநோய் பரிசனத்தைத் தீர்ப்பித்தும்
துங்கப் புரிசை தொகுமிழலை அங்கதனில்

#1643

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திருக்கொள்ளம் பூதூரில் ஆற்றில் ஓட்டுவார் இன்றியே ஓடம் ஓடப் பாடினமை, திருச்செங்கோட்டில் கால வேறு பாட்டால் வருகின்ற காய்ச்சல் நோய் வாராதிருக்கப் பாடினமை

நித்தன் செழுங்காசு கொண்டுநிகழ் நெல்வாயில்
முத்தின் சிவிகை முதல் கொண்டு அத்தகுசீர்

#1644

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திருவீழி மிழலையில் இறைவன் வாசி தீர்ந்த காசு தரப் பெற்றமை, திரு நெல்வாயில் அரத்துறையில் முத்துச் சிவிகை முதலியன பெற்றமை

மாயிரு ஞாலத்து மன்ஆ வடுதுறைபுக்
காயிரஞ் செம்பொ னதுகொண்டும் ஆய்வரிய

#1645

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

) திருவாவடுதுறையில் *(*தம் தந்தையார் செய்ய நினைத்த வேள்விக்காக*)* பொற்காசு ஆயிரம் நிறைந்த கிழியை இறைவன் அருளப் பெற்றமையும்

மாண்புதிகழ் எம்பெருமான் மன்னுதிரு ஓத்தூரில்
ஆண்பனைகள் பெண்பனைக ளாக்கியும் பாண்பரிசில்

#1646

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

திருஓத்தூரில் ஓர் அடியவர்க்காக ஆண்பனை பெண்பனையாகப் பாடினமையும்

கைப்பாணி ஒத்திக்கா ழிக்கோலக் காவிற்பொற்
சப்பாணி கொண்டும் தராதலத்துள் எப்பொழுதும்

#1647

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பாணி`` இரண்டில் முன்னது தாலம்.

`பாணர் குலத்தவரது தன்மைபோலக் கையால் தாளம் ஒத்தி` என்க.

சப்பாணி - சப்பாணி கொட்டுதல்.

அஃதாவது இரு கைகளையும் ஒன்று சேர்த்துக் கொட்டுதல்.

`சப்பாணிக்கு` என நான்கன் உருபு விரிக்க.

``பொன்`` என்பது ஆகுபெயராய்ப் பொன்னால் ஆகிய தாளத்தைக் குறித்தது.

`பொற்றாளத்தைச் சப்பாணி கொட்டுதற்குப் பெற்று` என உரைக்க.

தரா - பூமி.

தலம் - இடம்.

தராதலத்துள் - நிலத்தினிடத்துள்.

நீக்கரிய இன்பத் திராகமிருக் குக்குறள்
நோக்கரிய பாசுரம் பல் பத்தோடு மாக்கரிய

#1648

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஞானசம்பந்தர் அருளிச் செய்த பதிக வகைகள்:- இராகம் - முடுகிசை. இஃது `அராகம்` என்றும் சொல்லப் படும்.
இருக்குக் குறள் - மந்திரம் போலச் சுருக்கமான குறுகிய பாடல்கள்.
பாசுரம் - இன்றியமையாப் பொருளை அறிவுறுத்தும் பாடல்.
பல் பத்து - பல் பெயர்ப் பத்து.
இது சீகாழியின் பெயர்களை யெல்லாம் தொகுத்துக் கூறுவது.
மா - பெரிய; என்றது ``பேரியாழ்`` என்பதாம்.
கருமை, வார்க் கட்டின் கருமை.
யாழ் மூரி - யாழின் அளவைக் கடந்த பதிகம்.
மூரி - பெரியது.
சக்கர மாற்று கோமூத்திரி, எழுகூற்றிருக்கை ஆகிய ஏனைச் சித்திரக் கவிகளும், யமகம், ஏக பாதம் ஆகிய மிறைக் கவிகளும் இனம் பற்றித் தழுவிக் கொள்ளப் படும்.
இனித் தானச் சதி, ஈரடிமேல் வைப்பு, நாலடிமேல் வைப்பு ஆகியவைகளும் ஒருவகை மிறைக்கவிகளே.

யாழ்மூரி சக்கரமாற் றீரடி முக்காலும்
பாழிமையால் பாரகத்தோர் தாம்உய்ய ஊழி

#1649

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஈரடி - இரண்டடிப் பாடல்கள்.
முக்கால் - மூன்றடிப் பாடல்கள்; இவற்றில் இடையடி இடை மடக்காய் வரும்.
பாழிமை - வலிமை.

உரைப்பமரும் பல்புகழால் ஓங்கஉமை கோனைத்
திருப்பதிகம் பாடவல்ல சேயை விருப்போடு

#1650

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஊழி உரைப்ப அமரும் - (மேற் கூறிய பாடல்களை யாவரும்) நீடுழி காலம் பாடும் படி நிலைத்திருக்கின்ற காரணத்தால் `உரைப்ப` என்பதில் அகரம் தொகுத்தல்.
`பல் புகழால் ஓங்கப் பாட வல்ல சேய்` என்க.

சேய் - பிள்ளை.
இங்கு, `திருப்பதிகம்` தேவாரங் களைக் குறித்து வாளாபெயராய் நின்றது.

நண்ணு புகழ்மறையோர் நாற்பத்தெண் ணாயிரவர்
எண்ணின் முனிவரர் ஈட்டத்துப் பண்அமரும்
#1651
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சீகாழி அந்தணர்களுடன் தெய்வ முனிவர் நாற்பத் தெண்ணாயிரவரும் ஞானசம்பந்தரைச் சூழ்ந்திருந்தனர்` என்பதாம்.
அம்முனிவர் விண்வெளியிலே நின்றனர், என்க.
எண்ணின் - எண்ணினையுடைய.
பண் - பண்ணுதல்; ஆயத்தப் படுத்தல்.
அமரும் பொருந்திய.
87-ஓலக்கம் - கொலு.

ஓலக்கத் துள்இருப்ப ஒண்கோயில் வாயிலின்கண்
கோலக் கடைகுறுகிக் கும்பிட் டாங் காலும்
#1652
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கோ இல் - தலைவரது இல்லம்.
கோலக் கடை - அழகிய இடம்.
ஆலும் - ஆரவாரிக்கின்ற (வேதத்தை ஓதுகின்ற

புகலி வளநகருட் பூசுரர் புக் காங்
கிகல்இல் புகழ்பரவி ஏத்திப் புகலிசேர்
#1653
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`நகருள் வாழும் பூசுரர் கடைக் குறுகிக் கும்பிட்டு` என மேலே கூட்டுக.
இக் கும்பிடு வாயிலுக்குச் செய்தது.
``வந்து அங்கு அவதரித்த வள்ளலை`` என்பது முதல் *(63)* ``திருப்பதிகம் பாட வல்ல சேயை`` என்பது முடிய ஒருபொருள்மேல் வந்த பல பெயர்களும் ஏற்று நின்ற இரண்டன் உருபுகள் அனைத்தும் ஒரு தொடராய் அடுக்கி, இங்குப் போந்த, ``கும்பிட்டு`` என்பதனோடே முடிந்தன.
`ஆங்குக் கும்பிட்டு` எனவும், `ஆங்கு ஏத்தி` எனவும் முடித்துக் கொள்க.

இகல் இல் - மாறுபாடு இல்லாத.

வீதி எழுந்தருள வேண்டும் என விண்ணப்பம்
ஆதரத்தால் செய்ய அவர்க்கருளி நீதியால்

#1654

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஆதரம் - விருப்பம்.
அருளி - உடன்பட்டு.

கேதகையும் சண்பகமும் நேர்கிடத்திக் கீழ்த்தாழ்ந்த
மாதவியின் போதை மருங்கணைத்துக் கோதில்

#1655

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஞானசம்பந்தருக்குத் தலைக்கோலமாகச் சூட்டப் பெற்ற மலர் வகைகள்.
கேதகை - கைதை; செந்தாழை.
மாதவியின் போது - வனமல்லிகைப் போது.
கோதில் - குற்றம் இல்லாத.
இரு வேலி - வெட்டி வேர்.
`இரு வேரி` என்பதே பாடம் என்பாரும் உளர்.
மரு - மருக் கொழுந்து.
மல்லிகை - நாட்டு மல்லிகை.
கரு முகை - கருங்குவளை அரும்பு.
கழுநீர் - செங்கழு நீர்.
முருகு இயலும் - நறுமணம் கமழ்கின்ற.
புன்னாகம் - புன்னை மலர்.
`இருள் வாசி` என்பது மருவி, `இருவாட்சி` என வழங்கப்படுகின்றது.
`நள்ளிருள் வேளையில் மலர்ந்து வாசனை வீசுவது` என்பது `இருள்வாசி` என்பதன் பொருள்.
இது குறிஞ்சிப் பாட்டுள் ``நள்ளிருள் நாறி`` *1* எனச் சொல்லப்பட்டது.
`புன்னாகந் தன்னை இருவாட்சி புணர` என்க.
முல்லை - நாட்டு முல்லை.
மௌவல் - காட்டு முல்லை.
``செருந்தி செம்பொன் மலரும் சோலை இதுவோ திருவாரூர்`` என்னும் சுந்தரர் பாடலால் செருந்திப் பூப் பொன்னிறம் உடைத்தாதல் விளங்கும்.
இதனை, `செம்பருத்தி` என்றல் பொருந்தாது.
குருந்தம் - குருந்த மரப் பூ.

மாடு - பக்கம்.
`கமலக் கண்ணி` என இயைத்து `தாமரை மலரால் ஆகிய முடி மாலை` என உரைக்க.
தாது - மகரந்தம்.
குஞ்சி - ஆண் பிள்ளையின் (ஞானசம்பந்தரது) தலை மயிர்.
போது - பேரரும்பு.
கோலம் புனைவித்தவர்கள் முன்பு விண்ணப்பம் செய்த பூசுரர்கள்.
மேலும் ஒப்பனை செய்வோரும் அவரே.

இருவேலி தன்னை இடையிருத்தி ஈண்டு
மருவோடு மல்லிகையை வைத் தாங் கருகே

#1656

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஞானசம்பந்தருக்குத் தலைக்கோலமாகச் சூட்டப் பெற்ற மலர் வகைகள்.
கேதகை - கைதை; செந்தாழை.
மாதவியின் போது - வனமல்லிகைப் போது.
கோதில் - குற்றம் இல்லாத.
இரு வேலி - வெட்டி வேர்.
`இரு வேரி` என்பதே பாடம் என்பாரும் உளர்.
மரு - மருக் கொழுந்து.
மல்லிகை - நாட்டு மல்லிகை.
கரு முகை - கருங்குவளை அரும்பு.
கழுநீர் - செங்கழு நீர்.
முருகு இயலும் - நறுமணம் கமழ்கின்ற.
புன்னாகம் - புன்னை மலர்.
`இருள் வாசி` என்பது மருவி, `இருவாட்சி` என வழங்கப்படுகின்றது.
`நள்ளிருள் வேளையில் மலர்ந்து வாசனை வீசுவது` என்பது `இருள்வாசி` என்பதன் பொருள்.
இது குறிஞ்சிப் பாட்டுள் ``நள்ளிருள் நாறி`` *1* எனச் சொல்லப்பட்டது.
`புன்னாகந் தன்னை இருவாட்சி புணர` என்க.
முல்லை - நாட்டு முல்லை.
மௌவல் - காட்டு முல்லை.
``செருந்தி செம்பொன் மலரும் சோலை இதுவோ திருவாரூர்`` என்னும் சுந்தரர் பாடலால் செருந்திப் பூப் பொன்னிறம் உடைத்தாதல் விளங்கும்.
இதனை, `செம்பருத்தி` என்றல் பொருந்தாது.
குருந்தம் - குருந்த மரப் பூ.
மாடு - பக்கம்.

`கமலக் கண்ணி` என இயைத்து `தாமரை மலரால் ஆகிய முடி மாலை` என உரைக்க.
தாது - மகரந்தம்.
குஞ்சி - ஆண் பிள்ளையின் *(ஞானசம்பந்தரது)* தலை மயிர்.
போது - பேரரும்பு.
கோலம் புனைவித்தவர்கள் முன்பு விண்ணப்பம் செய்த பூசுரர்கள்.
மேலும் ஒப்பனை செய்வோரும் அவரே.

கருமுகையைக் கைகலக்க வைத்துக் கழுநீர்ப்
பெருகு பிளவிடையே பெய்து முருகியலும்

#1657

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஞானசம்பந்தருக்குத் தலைக்கோலமாகச் சூட்டப் பெற்ற மலர் வகைகள்.
கேதகை - கைதை; செந்தாழை.
மாதவியின் போது - வனமல்லிகைப் போது.
கோதில் - குற்றம் இல்லாத.
இரு வேலி - வெட்டி வேர்.
`இரு வேரி` என்பதே பாடம் என்பாரும் உளர்.
மரு - மருக் கொழுந்து.
மல்லிகை - நாட்டு மல்லிகை.
கரு முகை - கருங்குவளை அரும்பு.
கழுநீர் - செங்கழு நீர்.
முருகு இயலும் - நறுமணம் கமழ்கின்ற.
புன்னாகம் - புன்னை மலர்.
`இருள் வாசி` என்பது மருவி, `இருவாட்சி` என வழங்கப்படுகின்றது.
`நள்ளிருள் வேளையில் மலர்ந்து வாசனை வீசுவது` என்பது `இருள்வாசி` என்பதன் பொருள்.
இது குறிஞ்சிப் பாட்டுள் ``நள்ளிருள் நாறி`` *1* எனச் சொல்லப்பட்டது.
`புன்னாகந் தன்னை இருவாட்சி புணர` என்க.
முல்லை - நாட்டு முல்லை.
மௌவல் - காட்டு முல்லை.
``செருந்தி செம்பொன் மலரும் சோலை இதுவோ திருவாரூர்`` என்னும் சுந்தரர் பாடலால் செருந்திப் பூப் பொன்னிறம் உடைத்தாதல் விளங்கும்.
இதனை, `செம்பருத்தி` என்றல் பொருந்தாது.
குருந்தம் - குருந்த மரப் பூ.
மாடு - பக்கம்.
`கமலக் கண்ணி` என இயைத்து `தாமரை மலரால் ஆகிய முடி மாலை`

என உரைக்க.
தாது - மகரந்தம்.
குஞ்சி - ஆண் பிள்ளையின் *(ஞானசம்பந்தரது)* தலை மயிர்.
போது - பேரரும்பு.
கோலம் புனைவித்தவர்கள் முன்பு விண்ணப்பம் செய்த பூசுரர்கள்.
மேலும் ஒப்பனை செய்வோரும் அவரே.

புன்னாகந் தன்னைப் புணர இருவாச்சி
தன் அயலே முல்லை தலை எடுப்ப மன்னிய
#1658

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஞானசம்பந்தருக்குத் தலைக்கோலமாகச் சூட்டப் பெற்ற மலர் வகைகள்.
கேதகை - கைதை; செந்தாழை.
மாதவியின் போது - வனமல்லிகைப் போது.
கோதில் - குற்றம் இல்லாத.
இரு வேலி - வெட்டி வேர்.
`இரு வேரி` என்பதே பாடம் என்பாரும் உளர்.
மரு - மருக் கொழுந்து.
மல்லிகை - நாட்டு மல்லிகை.
கரு முகை - கருங்குவளை அரும்பு.
கழுநீர் - செங்கழு நீர்.
முருகு இயலும் - நறுமணம் கமழ்கின்ற.
புன்னாகம் - புன்னை மலர்.
`இருள் வாசி` என்பது மருவி, `இருவாட்சி` என வழங்கப்படுகின்றது.
`நள்ளிருள் வேளையில் மலர்ந்து வாசனை வீசுவது` என்பது
`இருள்வாசி` என்பதன் பொருள்.
இது குறிஞ்சிப் பாட்டுள் ``நள்ளிருள் நாறி`` *1* எனச் சொல்லப்பட்டது.
`புன்னாகந் தன்னை இருவாட்சி புணர` என்க.
முல்லை - நாட்டு முல்லை.
மௌவல் - காட்டு முல்லை.
``செருந்தி செம்பொன் மலரும் சோலை இதுவோ திருவாரூர்`` என்னும்
சுந்தரர் பாடலால் செருந்திப் பூப் பொன்னிறம் உடைத்தாதல் விளங்கும்.
இதனை, `செம்பருத்தி` என்றல் பொருந்தாது.
குருந்தம் - குருந்த மரப் பூ.
மாடு - பக்கம்.
`கமலக் கண்ணி` என இயைத்து `தாமரை மலரால் ஆகிய முடி மாலை`
என உரைக்க.

தாது - மகரந்தம்.
குஞ்சி - ஆண் பிள்ளையின் (ஞானசம்பந்தரது) தலை மயிர்.
போது - பேரரும்பு.
கோலம் புனைவித்தவர்கள் முன்பு விண்ணப்பம் செய்த பூசுரர்கள்.
மேலும் ஒப்பனை செய்வோரும் அவரே.

வண் செருந்தி வாய்நெகிழ்ப்ப மௌவல் அலர் படைப்பத்
தண் குருந்தம் மாடே தலை இறக்க ஒண்கமலத்

#1659

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஞானசம்பந்தருக்குத் தலைக்கோலமாகச் சூட்டப் பெற்ற மலர் வகைகள்.
கேதகை - கைதை; செந்தாழை.
மாதவியின் போது - வனமல்லிகைப் போது.
கோதில் - குற்றம் இல்லாத.
இரு வேலி - வெட்டி வேர்.
`இரு வேரி` என்பதே பாடம் என்பாரும் உளர்.
மரு - மருக் கொழுந்து.
மல்லிகை - நாட்டு மல்லிகை.
கரு முகை - கருங்குவளை அரும்பு.
கழுநீர் - செங்கழு நீர்.
முருகு இயலும் - நறுமணம் கமழ்கின்ற.
புன்னாகம் - புன்னை மலர்.
`இருள் வாசி` என்பது மருவி, `இருவாட்சி` என வழங்கப்படுகின்றது.
`நள்ளிருள் வேளையில் மலர்ந்து வாசனை வீசுவது` என்பது
`இருள்வாசி` என்பதன் பொருள்.
இது குறிஞ்சிப் பாட்டுள் ``நள்ளிருள் நாறி`` *1* எனச் சொல்லப்பட்டது.
`புன்னாகந் தன்னை இருவாட்சி புணர` என்க.
முல்லை - நாட்டு முல்லை.
மௌவல் - காட்டு முல்லை.
``செருந்தி செம்பொன் மலரும் சோலை இதுவோ திருவாரூர்`` என்னும்
சுந்தரர் பாடலால் செருந்திப் பூப் பொன்னிறம் உடைத்தாதல் விளங்கும்.
இதனை, `செம்பருத்தி` என்றல் பொருந்தாது.
குருந்தம் - குருந்த மரப் பூ.
மாடு - பக்கம்.
`கமலக் கண்ணி` என இயைத்து `தாமரை மலரால் ஆகிய முடி மாலை`
என உரைக்க.
தாது - மகரந்தம்.

குஞ்சி - ஆண் பிள்ளையின் (ஞானசம்பந்தரது) தலை மயிர்.
போது - பேரரும்பு.
கோலம் புனைவித்தவர்கள் முன்பு விண்ணப்பம் செய்த பூசுரர்கள்.
மேலும் ஒப்பனை செய்வோரும் அவரே.

தாதடுத்த கண்ணியால் தண்நறுங் குஞ்சிமேற்
போதடுத்த கோலம் புனைவித்துக் காதில்

#1660

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஞானசம்பந்தருக்குத் தலைக்கோலமாகச் சூட்டப் பெற்ற மலர் வகைகள்.
கேதகை - கைதை; செந்தாழை.
மாதவியின் போது - வனமல்லிகைப் போது.
கோதில் - குற்றம் இல்லாத.
இரு வேலி - வெட்டி வேர்.
`இரு வேரி` என்பதே பாடம் என்பாரும் உளர்.
மரு - மருக் கொழுந்து.
மல்லிகை - நாட்டு மல்லிகை.
கரு முகை - கருங்குவளை அரும்பு.
கழுநீர் - செங்கழு நீர்.
முருகு இயலும் - நறுமணம் கமழ்கின்ற.
புன்னாகம் - புன்னை மலர்.
`இருள் வாசி` என்பது மருவி, `இருவாட்சி` என வழங்கப்படுகின்றது.
`நள்ளிருள் வேளையில் மலர்ந்து வாசனை வீசுவது` என்பது
`இருள்வாசி` என்பதன் பொருள்.
இது குறிஞ்சிப் பாட்டுள் ``நள்ளிருள் நாறி`` *1* எனச் சொல்லப்பட்டது.
`புன்னாகந் தன்னை இருவாட்சி புணர` என்க.
முல்லை - நாட்டு முல்லை.
மௌவல் - காட்டு முல்லை.
``செருந்தி செம்பொன் மலரும் சோலை இதுவோ திருவாரூர்`` என்னும்
சுந்தரர் பாடலால் செருந்திப் பூப் பொன்னிறம் உடைத்தாதல் விளங்கும்.
இதனை, `செம்பருத்தி` என்றல் பொருந்தாது.
குருந்தம் - குருந்த மரப் பூ.
மாடு - பக்கம்.
`கமலக் கண்ணி` என இயைத்து `தாமரை மலரால் ஆகிய முடி மாலை`
என உரைக்க.
தாது - மகரந்தம்.
குஞ்சி - ஆண் பிள்ளையின் (ஞானசம்பந்தரது) தலை மயிர்.

போது - பேரரும்பு.
கோலம் புனைவித்தவர்கள் முன்பு விண்ணப்பம் செய்த பூசுரர்கள்.
மேலும் ஒப்பனை செய்வோரும் அவரே.

கனவயிர குண்டலங்கள் சேர்த்திக் கழுத்தில்
இனமணியின் ஆரம் இலகப் புனை கனகத்

#1661

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அணிகல வகைகளும், ஆடையும்.
மணியின் ஆரம் - இரத்தின வடம்.
கனகத் தொத்து - பொன் மணிக் கொத்து.
சுரிகை - வளைவு.
தாளிம்பம் - பதக்கம் போல்வது போலும்! பதக்கத்தில் கீழ்ப் புறத்தில் வளைவு ஒன்றில் பொன்மணிக் கொத்து தொங்கும்படி அது செய்யப்பட்டது என்க.
கண்டிகை - உருத்திராக்கம்.
`பூண்பித்து` என்பதில் பிறவினை தொகுக்கப்பட்டு, ``பூண்டு`` என வந்தது.
கேயூரம் - தோள்வளை; கடகம்.
வாய்மை பெறு நூல் - உண்மையைப் பெற்றுள்ள வேதத்தைக் குறிக்கும் நூல்; பூணூல்.
இது பஞ்சி நூலாய் இருத்தலோடு பொன்னால் செய்யப்பட்ட ஒன்று அணியப்பட்டது; இஃது உலாக் கோலத்திற்குச் சிறப்பைத் தரும்.
தமனியம் - பொன்.
தாழ்வடம் மார்பிற்குக் கீழே வழங்குகின்றது.
தரளக் கோப்பு - முத்து மாலை.
சிமய வரை - சிகரத்தை உடைய மாலை.
இஃது அடையடுத்த ஆகுபெயராய், மலையினது அகலத்தைக் குறித்தது.
`வரை போலும் மார்பு` என்க.
அமைவுற்ற வெண்ணீற்றின் ஒண்களவம் மட்டித்து - முன்பே வழிபாட்டுக் காலத்தில் அணியப் பட்டிருந்த திருவெண்ணீற்றின்மேல் இப்பொழுது சந்தனக் கலவையைப் பூசி.
ஒள் நூல் - பட்டிழை.
கலிங்கம் - ஆடை.
``புனை வித்து`` *(95)* என்பது முதல், ``புனைந்து`` *(100)* என்பது முடிய வந்து `செய்து` என் எச்சங்கள் எண்ணுப் பொருளவாய் வந்தமையின் இங்கு *(100)* ``புனைந்து`` என்பதை, `புனைந்தபின்` எனத் திரித்துக்

கொள்க.

தொத்தடுத்த பூஞ்சுரிகைச் சோதிசேர் தாளிம்பம்
வைத்து மணிக்கண் டிகைபூண்டு முத்தடுத்த
#1662
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அணிகல வகைகளும், ஆடையும்.
மணியின் ஆரம் - இரத்தின வடம்.
கனகத் தொத்து - பொன் மணிக் கொத்து.
சுரிகை - வளைவு.
தாளிம்பம் - பதக்கம் போல்வது போலும்! பதக்கத்தில் கீழ்ப் புறத்தில் வளைவு ஒன்றில் பொன்மணிக் கொத்து தொங்கும்படி அது செய்யப்பட்டது என்க.
கண்டிகை - உருத்திராக்கம்.
`பூண்பித்து` என்பதில் பிறவினை தொகுக்கப்பட்டு, ``பூண்டு`` என வந்தது.
கேயூரம் - தோள்வளை; கடகம்.
வாய்மை பெறு நூல் - உண்மையைப் பெற்றுள்ள வேதத்தைக் குறிக்கும் நூல்; பூணூல்.
இது பஞ்சி நூலாய் இருத்தலோடு பொன்னால் செய்யப்பட்ட ஒன்று அணியப்பட்டது; இஃது உலாக் கோலத்திற்குச் சிறப்பைத் தரும்.
தமனியம் - பொன்.
தாழ்வடம் மார்பிற்குக் கீழே வழங்குகின்றது.
தரளக் கோப்பு - முத்து மாலை.
சிமய வரை - சிகரத்தை உடைய மாலை.
இஃது அடையடுத்த ஆகுபெயராய், மலையினது அகலத்தைக் குறித்தது. `வரை போலும் மார்பு` என்க.
அமைவுற்ற வெண்ணீற்றின் ஒண்களவம் மட்டித்து - முன்பே வழிபாட்டுக் காலத்தில் அணியப் பட்டிருந்த திருவெண்ணீற்றின்மேல் இப்பொழுது சந்தனக் கலவையைப் பூசி.
ஒள் நூல் - பட்டிழை.
கலிங்கம் - ஆடை.
``புனை வித்து`` *(95)* என்பது முதல், ``புனைந்து`` *(100)* என்பது முடிய வந்து `செய்து` என் எச்சங்கள் எண்ணுப் பொருளவாய் வந்தமையின் இங்கு *(100)* ``புனைந்து`` என்பதை, `புனைந்தபின்` எனத் திரித்துக் கொள்க.

கேயூரம் தோள்மேல் கிடத்திக் கிளர்பொன்னின்

வாய்மை பெறுநூல் வலம்திகழ ஏயும்

#1663

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அணிகல வகைகளும், ஆடையும்.
மணியின் ஆரம் - இரத்தின வடம்.
கனகத் தொத்து - பொன் மணிக் கொத்து.
சுரிகை - வளைவு.
தாளிம்பம் - பதக்கம் போல்வது போலும்! பதக்கத்தில் கீழ்ப் புறத்தில் வளைவு ஒன்றில் பொன்மணிக் கொத்து தொங்கும்படி அது செய்யப்பட்டது என்க.
கண்டிகை - உருத்திராக்கம்.
`பூண்பித்து` என்பதில் பிறவினை தொகுக்கப்பட்டு, ``பூண்டு`` என வந்தது.
கேயூரம் - தோள்வளை; கடகம்.
வாய்மை பெறு நூல் - உண்மையைப் பெற்றுள்ள வேதத்தைக் குறிக்கும் நூல்; பூணூல்.
இது பஞ்சி நூலாய் இருத்தலோடு பொன்னால் செய்யப்பட்ட ஒன்று அணியப்பட்டது; இஃது உலாக் கோலத்திற்குச் சிறப்பைத் தரும்.
தமனியம் - பொன்.
தாழ்வடம் மார்பிற்குக் கீழே வழங்குகின்றது.
தரளக் கோப்பு - முத்து மாலை.
சிமய வரை - சிகரத்தை உடைய மாலை.
இஃது அடையடுத்த ஆகுபெயராய், மலையினது அகலத்தைக் குறித்தது. `வரை போலும் மார்பு` என்க.
அமைவுற்ற வெண்ணீற்றின் ஒண்களவம் மட்டித்து - முன்பே வழிபாட்டுக் காலத்தில் அணியப் பட்டிருந்த திருவெண்ணீற்றின்மேல் இப்பொழுது சந்தனக் கலவையைப் பூசி.
ஒள் நூல் - பட்டிழை.
கலிங்கம் - ஆடை.
``புனை வித்து`` *(95)* என்பது முதல், ``புனைந்து`` *(100)* என்பது முடிய வந்து `செய்து` என் எச்சங்கள் எண்ணுப் பொருளவாய் வந்தமையின் இங்கு *(100)* ``புனைந்து`` என்பதை, `புனைந்தபின்` எனத் திரித்துக் கொள்க.

தமனியத்தின் தாழ்வடமும் தண்தரளக் கோப்பும்
சிமய வரை மார்பிற் சேர்த்தி அமைவுற்ற

#1664

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அணிகல வகைகளும், ஆடையும்.
மணியின் ஆரம் - இரத்தின வடம்.
கனகத் தொத்து - பொன் மணிக் கொத்து.
சுரிகை - வளைவு.
தாளிம்பம் - பதக்கம் போல்வது போலும்! பதக்கத்தில் கீழ்ப் புறத்தில் வளைவு ஒன்றில் பொன்மணிக் கொத்து தொங்கும்படி அது செய்யப்பட்டது என்க.
கண்டிகை - உருத்திராக்கம்.
`பூண்பித்து` என்பதில் பிறவினை தொகுக்கப்பட்டு, ``பூண்டு`` என வந்தது.
கேயூரம் - தோள்வளை; கடகம்.
வாய்மை பெறு நூல் - உண்மையைப் பெற்றுள்ள வேதத்தைக் குறிக்கும் நூல்; பூணூல்.
இது பஞ்சி நூலாய் இருத்தலோடு பொன்னால் செய்யப்பட்ட ஒன்று அணியப்பட்டது; இஃது உலாக் கோலத்திற்குச் சிறப்பைத் தரும்.
தமனியம் - பொன்.
தாழ்வடம் மார்பிற்குக் கீழே வழங்குகின்றது.
தரளக் கோப்பு - முத்து மாலை.
சிமய வரை - சிகரத்தை உடைய மாலை.
இஃது அடையடுத்த ஆகுபெயராய், மலையினது அகலத்தைக் குறித்தது. `வரை போலும் மார்பு` என்க.
அமைவுற்ற வெண்ணீற்றின் ஒண்களவம் மட்டித்து - முன்பே வழிபாட்டுக் காலத்தில் அணியப் பட்டிருந்த திருவெண்ணீற்றின்மேல் இப்பொழுது சந்தனக் கலவையைப் பூசி.
ஒள் நூல் - பட்டிழை.
கலிங்கம் - ஆடை.
``புனை வித்து`` *(95)* என்பது முதல், ``புனைந்து`` *(100)* என்பது முடிய வந்து `செய்து` என் எச்சங்கள் எண்ணுப் பொருளவாய் வந்தமையின் இங்கு *(100)* ``புனைந்து`` என்பதை, `புனைந்தபின்` எனத் திரித்துக் கொள்க.

வெண்ணீற்றின் ஒண்களபம் மட்டித்து மேவுதொழில்
ஒண்ணூற் கலிங்கம் உடல்புனைந்து திண் நோக்கில்

#1665

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அணிகல வகைகளும், ஆடையும்.
மணியின் ஆரம் - இரத்தின வடம்.
கனகத் தொத்து - பொன் மணிக் கொத்து.
சுரிகை - வளைவு.
தாளிம்பம் - பதக்கம் போல்வது போலும்! பதக்கத்தில் கீழ்ப் புறத்தில் வளைவு ஒன்றில் பொன்மணிக் கொத்து தொங்கும்படி அது செய்யப்பட்டது என்க.
கண்டிகை - உருத்திராக்கம்.
`பூண்பித்து` என்பதில் பிறவினை தொகுக்கப்பட்டு, ``பூண்டு`` என வந்தது.
கேயூரம் - தோள்வளை; கடகம்.
வாய்மை பெறு நூல் - உண்மையைப் பெற்றுள்ள வேதத்தைக் குறிக்கும் நூல்; பூணூல்.
இது பஞ்சி நூலாய் இருத்தலோடு பொன்னால் செய்யப்பட்ட ஒன்று அணியப்பட்டது; இஃது உலாக் கோலத்திற்குச் சிறப்பைத் தரும்.
தமனியம் - பொன்.
தாழ்வடம் மார்பிற்குக் கீழே வழங்குகின்றது.
தரளக் கோப்பு - முத்து மாலை.
சிமய வரை - சிகரத்தை உடைய மாலை.
இஃது அடையடுத்த ஆகுபெயராய், மலையினது அகலத்தைக் குறித்தது. `வரை போலும் மார்பு` என்க.
அமைவுற்ற வெண்ணீற்றின் ஒண்களவம் மட்டித்து - முன்பே வழிபாட்டுக் காலத்தில் அணியப் பட்டிருந்த திருவெண்ணீற்றின்மேல் இப்பொழுது சந்தனக் கலவையைப் பூசி.
ஒள் நூல் - பட்டிழை.
கலிங்கம் - ஆடை.
``புனை வித்து`` *(95)* என்பது முதல், ``புனைந்து`` *(100)* என்பது முடிய வந்து `செய்து` என் எச்சங்கள் எண்ணுப் பொருளவாய் வந்தமையின் இங்கு *(100)* ``புனைந்து`` என்பதை, `புனைந்தபின்` எனத் திரித்துக் கொள்க.

காற்றுருமோ குன்றோ கடலோ அடல்உருமோ
கூற்றுருவோ என்னக் கொதித்தெழுந்து சீற்றத்

#1666

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உலாவின் பொருட்டுக் கொண்டு வரப்பட்ட யானையின் வருணனை:-
(100) நோக்கு - இங்குத் தோற்றம்.
`நோக்கினோடு` என `ஒடு` உருபு விரிக்க.
`உரும்` இரண்டில் முன்னது ஆகு பெயராய் மேகத்தைக் குறித்தது.
நடையின் வேகம் பற்றி காற்றோடு கூடிய மேகம் ஐய உவமையாகச் சொல்லப்பட்டது.
குன்று - வடிவு பற்றியும், கடல் பரந்து தோன்றும் கருமை பற்றியும், உரும் (இடி) பிளிறும் குரல் பற்றியும், கூற்று (யமன்) கொலைத் தொழில் பற்றியும் உடன் வைத்து ஐயுறப்பட்டன.
`தழல் உண்டாக விழித்து` என ஒரு சொல் வருவிக்க.
``எதிர்ந்து`` என்று, `முன் வருபவரை எதிர்நோக்கி` என்றபடி.
தால வட்டம், யானையின் காது.
புழை - உள்ளே துளையை உடைய.
தட - பெரிய (102) ``கொண்டு`` என்பது மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு.
எறிந்து - தாக்கி மழை மதம் உவமத் தொகை.
பூத்த - பொலிவு எய்தி.
யானைக்கு அதன் மத நீர் சிறப்பைத் தரும்.
கட தடம் - மத நீர் பாயும் வாவி.
`கடத்தை உடைய காத்திரம்` என்க.
போகம் - இன்பம்.
மதம் மிக்கு ஒழுகுதலால் அதன் போக நிலை மிக்க விளங்கிற்று காத்திரம் - உடல்.
கலித்து - ஆரவாரித்து.
`எங்கும் கலித்து` என மாற்றி யுரைக்க.
கோத்த - கட்டிய.
நிகளம் - சங்கிலி.
போக்கி - அறுத்தொழித்து.
``இடு வண்டு`` என்பதற்கு.
`தலை யிடுகின்ற வண்டுகள்` என்பது பொருளாகும்.
`யானை தனது மத நீரை நோக்கித் தன்மேல் வந்து மொய்க்கின்ற வண்டுகளைத் தும்பிக்கையால் பற்றிக் கீழே இட்டுத் தேய்த்தல் முதலியன செய்து கலிக்கின்றது - ஆர வாரித்தது` என்க.
நிலத்தை உழக்கி - பூமியைக் காலால் மிதித்துக் குழியாகவும், துகள்களாகவும் செய்து, நிகர் நீத்து - தனக்கு உவமையாக யாதொன்றும் இல்லாதபடி உயர்ந்து.
இடி பெயர - தந்தத்தால் மதில் முதலியவற்றை இடித்தல் தொழில் விட்டு

விட்டு எழச் செய்தலால்.
தாளத்து இலுப்பி - தாள வரிசையில் தனது உறுப்புக்களை உழலவிட்டு.
இலுப்புதல் - இஃது ஒரு நாட்டுப் புற வழக்கு.
சில இடங்களில் இஃது, `இளுப்புதல்` என்று சொல்லப்படுகின்றது.
அடு சினம் - எதிர்ப்பட்டோரைக் கொல்லும் அளவு எழுந்த சினம்.
கன்ற - மேலும் கரிதாக.
`முகம் கன்ற` என்க.
பருக்கை யெடுத்து - பருத்த தும்பிக்கையை உயர எடுத்து.
வென்றி மருப்பு உருவ - வெற்றியைத் தரும் தந்தங்கள் ஊடுருவும்படி.
இதனை `வெய்து உயிர்த்து`` என்பதற்குப் பின் கூட்டுக.
வெய்து உயிர்த்தல் - வெப்பமாக (புகை யெழும்படி)ப் பெருமூச்சு எறிந்து.
நிகர் - ஒளி; அழகு.
முன்பு, ``உழக்கி`` எனவும், ``இலுப்பி`` எனவும் *(105)* எனப் பொதுவாகக் கூறியதைப் பின்பு அவ்வப் பொருள்மேல் வைத்து, ``அவித்து, குத்தி, வீசி`` எனத் தனித்தனியாக வகுத்துக் கூறினார்.
பணம் - யானையை அடக்குவார் பயன்படுத்து ஓர் ஆயும்.
`அதனை யுடைய பாகர்` என்க.
பரிந்து - கிழித்து.
நிணப் பாகும் - கொழுப்புக் குழம்பு.
ஓடை - யானையின் நெற்றிப் பட்டம்.
பரிக்காரர்கள் - யானையின் இரு பக்கத்திலும் கோலைக் கையிற் கொண்டு நடத்திச் செல்லும் பரிக்கோற்காரர்கள் ``காரர்கடாம்`` என்னும் சீரில் ரகர ஒற்று அலகு பெறாது நின்றது.

தழல்விழித்து நின்றெதிர்ந்து தாலவட்டம் வீசிப்
புழைத் தடக்கை கொண்டெறிந்து பொங்கி மழை மதத்தால்

#1667

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உலாவின் பொருட்டுக் கொண்டு வரப்பட்ட யானையின் வருணனை:-
(100) நோக்கு - இங்குத் தோற்றம்.
`நோக்கினோடு` என `ஒடு` உருபு விரிக்க.
`உரும்` இரண்டில் முன்னது ஆகு பெயராய் மேகத்தைக் குறித்தது.
நடையின் வேகம் பற்றி காற்றோடு கூடிய மேகம் ஐய உவமையாகச் சொல்லப்பட்டது.
குன்று - வடிவு பற்றியும், கடல் பரந்து தோன்றும் கருமை பற்றியும், உரும் (இடி) பிளிறும் குரல் பற்றியும், கூற்று (யமன்) கொலைத் தொழில்

பற்றியும் உடன் வைத்து ஐயுறப்பட்டன.
`தழல் உண்டாக விழித்து` என ஒரு சொல் வருவிக்க.
``எதிர்ந்து`` என்று, `முன் வருபவரை எதிர்நோக்கி` என்றபடி.
தால வட்டம், யானையின் காது.
புழை - உள்ளே துளையை உடைய.
தட - பெரிய *(102)* ``கொண்டு`` என்பது மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு.
எறிந்து - தாக்கி மழை மதம் உவமத் தொகை.
பூத்த - பொலிவு எய்தி.
யானைக்கு அதன் மத நீர் சிறப்பைத் தரும்.
கட தடம் - மத நீர் பாயும் வாவி.
`கடத்தை உடைய காத்திரம்` என்க.
போகம் - இன்பம்.
மதம் மிக்கு ஒழுகுதலால் அதன் போக நிலை மிக்க விளங்கிற்று காத்திரம் - உடல்.
கலித்து - ஆரவாரித்து.
`எங்கும் கலித்து` என மாற்றி யுரைக்க.
கோத்த - கட்டிய.
நிகளம் - சங்கிலி.
போக்கி - அறுத்தொழித்து.
``இடு வண்டு`` என்பதற்கு.
`தலை யிடுகின்ற வண்டுகள்` என்பது பொருளாகும்.
`யானை தனது மத நீரை நோக்கித் தன்மேல் வந்து மொய்க்கின்ற வண்டுகளைத் தும்பிக்கையால் பற்றிக் கீழே இட்டுத் தேய்த்தல் முதலியன செய்து கலிக்கின்றது - ஆர வாரித்தது` என்க.
நிலத்தை உழக்கி - பூமியைக் காலால் மிதித்துக் குழியாகவும், துகள்களாகவும் செய்து, நிகர் நீத்து - தனக்கு உவமையாக யாதொன்றும் இல்லாதபடி உயர்ந்து.
இடி பெயர - தந்தத்தால் மதில் முதலியவற்றை இடித்தல் தொழில் விட்டு விட்டு எழச் செய்தலால்.
தாளத்து இலுப்பி - தாள வரிசையில் தனது உறுப்புக்களை உழலவிட்டு.
இலுப்புதல் - இஃது ஒரு நாட்டுப் புற வழக்கு.
சில இடங்களில் இஃது, `இளுப்புதல்` என்று சொல்லப்படுகின்றது.
அடு சினம் - எதிர்ப்பட்டோரைக் கொல்லும் அளவு எழுந்த சினம்.
கன்ற - மேலும் கரிதாக.
`முகம் கன்ற` என்க.
பருக்கை யெடுத்து - பருத்த தும்பிக்கையை உயர எடுத்து.

வென்றி மருப்பு உருவ - வெற்றியைத் தரும் தந்தங்கள் ஊடுருவும்படி.
இதனை `வெய்து உயிர்த்து`` என்பதற்குப் பின் கூட்டுக.
வெய்து உயிர்த்தல் - வெப்பமாக (புகை யெழும்படி)ப் பெருமூச்சு எறிந்து.
நிகர் - ஒளி; அழகு.
முன்பு, ``உழக்கி`` எனவும், ``இலுப்பி`` எனவும் *(105)* எனப் பொதுவாகக் கூறியதைப் பின்பு அவ்வப் பொருள்மேல் வைத்து, ``அவித்து, குத்தி, வீசி`` எனத் தனித்தனியாக வகுத்துக் கூறினார்.
பணம் - யானையை அடக்குவார் பயன்படுத்து ஓர் ஆயும்.
`அதனை யுடைய பாகர்` என்க.
பரிந்து - கிழித்து.
நிணப் பாகும் - கொழுப்புக் குழம்பு.
ஓடை - யானையின் நெற்றிப் பட்டம்.
பரிக்காரர்கள் - யானையின் இரு பக்கத்திலும் கோலைக் கையிற் கொண்டு நடத்திச் செல்லும் பரிக்கோற்காரர்கள் ``காரர்கடாம்`` என்னும் சீரில் ரகர ஒற்று அலகு பெறாது நின்றது.

பூத்த கடதடத்துப் போகம் மிகபொலிந்த
காத்திரத்த தாகிக் கலித்தெங்கும் கோத்த

#1668

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உலாவின் பொருட்டுக் கொண்டு வரப்பட்ட யானையின் வருணனை:-
(100) நோக்கு - இங்குத் தோற்றம்.
`நோக்கினோடு` என `ஒடு` உருபு விரிக்க.
`உரும்` இரண்டில் முன்னது ஆகு பெயராய் மேகத்தைக் குறித்தது.
நடையின் வேகம் பற்றி காற்றோடு கூடிய மேகம் ஐய உவமையாகச் சொல்லப்பட்டது.
குன்று - வடிவு பற்றியும், கடல் பரந்து தோன்றும் கருமை பற்றியும், உரும் (இடி) பிளிறும் குரல் பற்றியும், கூற்று (யமன்) கொலைத் தொழில் பற்றியும் உடன் வைத்து ஐயுறப்பட்டன.
`தழல் உண்டாக விழித்து` என ஒரு சொல் வருவிக்க.
``எதிர்ந்து`` என்று, `முன் வருபவரை எதிர்நோக்கி` என்றபடி.
தால வட்டம், யானையின் காது.
புழை - உள்ளே துளையை உடைய.
தட - பெரிய *(102)* ``கொண்டு`` என்பது மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு.
எறிந்து - தாக்கி மழை மதம் உவமத் தொகை.

பூத்த - பொலிவு எய்தி.
யானைக்கு அதன் மத நீர் சிறப்பைத் தரும்.
கட தடம் - மத நீர் பாயும் வாவி.
`கடத்தை உடைய காத்திரம்` என்க.
போகம் - இன்பம்.
மதம் மிக்கு ஒழுகுதலால் அதன் போக நிலை மிக்க விளங்கிற்று காத்திரம் - உடல்.
கலித்து - ஆரவாரித்து.
`எங்கும் கலித்து` என மாற்றி யுரைக்க.
கோத்த - கட்டிய.
நிகளம் - சங்கிலி.
போக்கி - அறுத்தொழித்து.
``இடு வண்டு`` என்பதற்கு.
`தலை யிடுகின்ற வண்டுகள்` என்பது பொருளாகும்.
`யானை தனது மத நீரை நோக்கித் தன்மேல் வந்து மொய்க்கின்ற வண்டுகளைத் தும்பிக்கையால் பற்றிக் கீழே இட்டுத் தேய்த்தல் முதலியன செய்து கலிக்கின்றது - ஆர வாரித்தது` என்க.
நிலத்தை உழக்கி - பூமியைக் காலால் மிதித்துக் குழியாகவும், துகள்களாகவும் செய்து, நிகர் நீத்து - தனக்கு உவமையாக யாதொன்றும் இல்லாதபடி உயர்ந்து.
இடி பெயர - தந்தத்தால் மதில் முதலியவற்றை இடித்தல் தொழில் விட்டு விட்டு எழச் செய்தலால்.
தாளத்து இலுப்பி - தாள வரிசையில் தனது உறுப்புக்களை உழலவிட்டு.
இலுப்புதல் - இஃது ஒரு நாட்டுப் புற வழக்கு.
சில இடங்களில் இஃது, `இளுப்புதல்` என்று சொல்லப்படுகின்றது.
அடு சினம் - எதிர்ப்பட்டோரைக் கொல்லும் அளவு எழுந்த சினம்.
கன்ற - மேலும் கரிதாக.
`முகம் கன்ற` என்க.
பருக்கை யெடுத்து - பருத்த தும்பிக்கையை உயர எடுத்து.
வென்றி மருப்பு உருவ - வெற்றியைத் தரும் தந்தங்கள் ஊடுருவும்படி.
இதனை `வெய்து உயிர்த்து`` என்பதற்குப் பின் கூட்டுக.
வெய்து உயிர்த்தல் - வெப்பமாக (புகை யெழும்படி)ப் பெருமூச்சு எறிந்து.
நிகர் - ஒளி; அழகு.
முன்பு, ``உழக்கி`` எனவும், ``இலுப்பி`` எனவும் (105) எனப் பொதுவாகக் கூறியதைப் பின்பு அவ்வப் பொருள்மேல் வைத்து, ``அவித்து, குத்தி, வீசி`` எனத் தனித்தனியாக வகுத்துக் கூறினார்.

பணம் - யானையை அடக்குவார் பயன்படுத்து ஓர் ஆயும்.
`அதனை யுடைய பாகர்` என்க.
பரிந்து - கிழித்து.
நிணப் பாகும் - கொழுப்புக் குழம்பு.
ஓடை - யானையின் நெற்றிப் பட்டம்.
பரிக்காரர்கள் - யானையின் இரு பக்கத்திலும் கோலைக் கையிற் கொண்டு நடத்திச் செல்லும் பரிக்கோற்காரர்கள் ``காரர்கடாம்`` என்னும் சீரில் ரகர ஒற்று அலகு பெறாது நின்றது.

கொடு நிகளம் போக்கி நிமிர் கொண்டெழுந்து கோபித்
திடுவண்டை இட்டுக் கலித்து முடுகி

#1669

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உலாவின் பொருட்டுக் கொண்டு வரப்பட்ட யானையின் வருணனை:-
(100) நோக்கு - இங்குத் தோற்றம்.
`நோக்கினோடு` என `ஒடு` உருபு விரிக்க.
`உரும்` இரண்டில் முன்னது ஆகு பெயராய் மேகத்தைக் குறித்தது.
நடையின் வேகம் பற்றி காற்றோடு கூடிய மேகம் ஐய உவமையாகச் சொல்லப்பட்டது.
குன்று - வடிவு பற்றியும், கடல் பரந்து தோன்றும் கருமை பற்றியும், உரும் *(இடி)* பிளிறும் குரல் பற்றியும், கூற்று *(யமன்)* கொலைத் தொழில் பற்றியும் உடன் வைத்து ஐயுறப்பட்டன.
`தழல் உண்டாக விழித்து` என ஒரு சொல் வருவிக்க.
``எதிர்ந்து`` என்று, `முன் வருபவரை எதிர்நோக்கி` என்றபடி.
தால வட்டம், யானையின் காது.
புழை - உள்ளே துளையை உடைய.
தட - பெரிய *(102)* ``கொண்டு`` என்பது மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு.
எறிந்து - தாக்கி மழை மதம் உவமத் தொகை.
பூத்த - பொலிவு எய்தி.
யானைக்கு அதன் மத நீர் சிறப்பைத் தரும்.
கட தடம் - மத நீர் பாயும் வாவி.
`கடத்தை உடைய காத்திரம்` என்க.
போகம் - இன்பம்.
மதம் மிக்கு ஒழுகுதலால் அதன் போக நிலை மிக்க விளங்கிற்று காத்திரம் - உடல்.
கலித்து - ஆரவாரித்து.

`எங்கும் கலித்து` என மாற்றி யுரைக்க.
கோத்த - கட்டிய.
நிகளம் - சங்கிலி.
போக்கி - அறுத்தொழித்து.
``இடு வண்டு`` என்பதற்கு.
`தலை யிடுகின்ற வண்டுகள்` என்பது பொருளாகும்.
`யானை தனது மத நீரை நோக்கித் தன்மேல் வந்து மொய்க்கின்ற வண்டுகளைத் தும்பிக்கையால் பற்றிக் கீழே இட்டுத் தேய்த்தல் முதலியன செய்து கலிக்கின்றது - ஆர வாரித்தது` என்க.
நிலத்தை உழக்கி - பூமியைக் காலால் மிதித்துக் குழியாகவும், துகள்களாகவும் செய்து, நிகர் நீத்து - தனக்கு உவமையாக யாதொன்றும் இல்லாதபடி உயர்ந்து.
இடி பெயர - தந்தத்தால் மதில் முதலியவற்றை இடித்தல் தொழில் விட்டு விட்டு எழச் செய்தலால்.
தாளத்து இலுப்பி - தாள வரிசையில் தனது உறுப்புக்களை உழலவிட்டு.
இலுப்புதல் - இஃது ஒரு நாட்டுப் புற வழக்கு.
சில இடங்களில் இஃது, `இளுப்புதல்` என்று சொல்லப்படுகின்றது.
அடு சினம் - எதிர்ப்பட்டோரைக் கொல்லும் அளவு எழுந்த சினம்.
கன்ற - மேலும் கரிதாக.
`முகம் கன்ற` என்க.
பருக்கை யெடுத்து - பருத்த தும்பிக்கையை உயர எடுத்து.
வென்றி மருப்பு உருவ - வெற்றியைத் தரும் தந்தங்கள் ஊடுருவும்படி.
இதனை `வெய்து உயிர்த்து`` என்பதற்குப் பின் கூட்டுக.
வெய்து உயிர்த்தல் - வெப்பமாக (புகை யெழும்படி)ப் பெருமூச்சு எறிந்து.
நிகர் - ஒளி; அழகு.
முன்பு, ``உழக்கி`` எனவும், ``இலுப்பி`` எனவும் (105) எனப் பொதுவாகக் கூறியதைப் பின்பு அவ்வப் பொருள்மேல் வைத்து, ``அவித்து, குத்தி, வீசி`` எனத் தனித்தனியாக வகுத்துக் கூறினார்.
பணம் - யானையை அடக்குவார் பயன்படுத்து ஓர் ஆயும்.
`அதனை யுடைய பாகர்` என்க.
பரிந்து - கிழித்து.
நிணப் பாகும் - கொழுப்புக் குழம்பு.
ஓடை - யானையின் நெற்றிப் பட்டம்.
பரிக்காரர்கள் - யானையின் இரு பக்கத்திலும் கோலைக் கையிற் கொண்டு நடத்திச் செல்லும் பரிக்கோற்காரர்கள் ``காரர்கடாம்`` என்னும் சீரில் ரகர ஒற்று அலகு பெறாது நின்றது.

நெடுநிலத்தைத் தான்உழக்கி நின்று நிகற் நீத்
திடிபெயரத் தாளத் திலுப்பி அடுசினத்தால்
#1670
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உலாவின் பொருட்டுக் கொண்டு வரப்பட்ட யானையின் வருணனை:-
(100) நோக்கு - இங்குத் தோற்றம்.
`நோக்கினோடு` என `ஒடு` உருபு விரிக்க.
`உரும்` இரண்டில் முன்னது ஆகு பெயராய் மேகத்தைக் குறித்தது.
நடையின் வேகம் பற்றி காற்றோடு கூடிய மேகம் ஐய உவமையாகச் சொல்லப்பட்டது.
குன்று - வடிவு பற்றியும், கடல் பரந்து தோன்றும் கருமை பற்றியும், உரும் (இடி) பிளிறும் குரல் பற்றியும், கூற்று (யமன்) கொலைத் தொழில் பற்றியும் உடன் வைத்து ஐயுறப்பட்டன.
`தழல் உண்டாக விழித்து` என ஒரு சொல் வருவிக்க.
``எதிர்ந்து`` என்று, `முன் வருபவரை எதிர்நோக்கி` என்றபடி.
தால வட்டம், யானையின் காது.
புழை - உள்ளே துளையை உடைய.
தட - பெரிய *(102)* ``கொண்டு`` என்பது மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு.
எறிந்து - தாக்கி மழை மதம் உவமத் தொகை.
பூத்த - பொலிவு எய்தி.
யானைக்கு அதன் மத நீர் சிறப்பைத் தரும்.
கட தடம் - மத நீர் பாயும் வாவி.
`கடத்தை உடைய காத்திரம்` என்க.
போகம் - இன்பம்.
மதம் மிக்கு ஒழுகுதலால் அதன் போக நிலை மிக்க விளங்கிற்று காத்திரம் - உடல்.
கலித்து - ஆரவாரித்து.
`எங்கும் கலித்து` என மாற்றி யுரைக்க.
கோத்த - கட்டிய.
நிகளம் - சங்கிலி.
போக்கி - அறுத்ததொழித்து.
``இடு வண்டு`` என்பதற்கு.
`தலை யிடுகின்ற வண்டுகள்` என்பது பொருளாகும்.
`யானை தனது மத நீரை நோக்கித் தன்மேல் வந்து மொய்க்கின்ற வண்டுகளைத் தும்பிக்கையால் பற்றிக் கீழே இட்டுத் தேய்த்தல்

முதலியன செய்து கலிக்கின்றது - ஆர வாரித்தது` என்க.
நிலத்தை உழக்கி - பூமியைக் காலால் மிதித்துக் குழியாகவும், துகள்களாகவும் செய்து, நிகர் நீத்து - தனக்கு உவமையாக யாதொன்றும் இல்லாதபடி உயர்ந்து.
இடி பெயர - தந்தத்தால் மதில் முதலியவற்றை இடித்தல் தொழில் விட்டு விட்டு எழச் செய்தலால்.
தாளத்து இலுப்பி - தாள வரிசையில் தனது உறுப்புக்களை உழலவிட்டு.
இலுப்புதல் - இஃது ஒரு நாட்டுப் புற வழக்கு.
சில இடங்களில் இஃது, `இளுப்புதல்` என்று சொல்லப்படுகின்றது.
அடு சினம் - எதிர்ப்பட்டோரைக் கொல்லும் அளவு எழுந்த சினம்.
கன்ற - மேலும் கரிதாக.
`முகம் கன்ற` என்க.
பருக்கை யெடுத்து - பருத்த தும்பிக்கையை உயர எடுத்து.
வென்றி மருப்பு உருவ - வெற்றியைத் தரும் தந்தங்கள் ஊடுருவும்படி.
இதனை `வெய்து உயிர்த்து`` என்பதற்குப் பின் கூட்டுக.
வெய்து உயிர்த்தல் - வெப்பமாக (புகை யெழும்படி)ப் பெருமூச்சு எறிந்து.
நிகர் - ஒளி; அழகு.
முன்பு, ``உழக்கி`` எனவும், ``இலுப்பி`` எனவும் *(105)* எனப் பொதுவாகக் கூறியதைப் பின்பு அவ்வப் பொருள்மேல் வைத்து, ``அவித்து, குத்தி, வீசி`` எனத் தனித்தனியாக வகுத்துக் கூறினார்.
பணம் - யானையை அடக்குவார் பயன்படுத்து ஓர் ஆயும்.
`அதனை யுடைய பாகர்` என்க.
பரிந்து - கிழித்து.
நிணப் பாகும் - கொழுப்புக் குழம்பு.
ஓடை - யானையின் நெற்றிப் பட்டம்.
பரிக்காரர்கள் - யானையின் இரு பக்கத்திலும் கோலைக் கையிற் கொண்டு நடத்திச் செல்லும் பரிக்கோற்காரர்கள் ``காரர்கடாம்`` என்னும் சீரில் ரகர ஒற்று அலகு பெறாது நின்றது.

கன்ற முகம் பருகிக் கையெடுத் தாராய்ந்து
வென்றி மருப்புருவ வெய்துயிர்த் தொன்றிய

#1671

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உலாவின் பொருட்டுக் கொண்டு வரப்பட்ட யானையின் வருணனை:-
(100) நோக்கு - இங்குத் தோற்றம்.
`நோக்கினோடு` என `ஒடு` உருபு விரிக்க.

`உரும்` இரண்டில் முன்னது ஆகு பெயராய் மேகத்தைக் குறித்தது.
நடையின் வேகம் பற்றி காற்றோடு கூடிய மேகம் ஐய உவமையாகச் சொல்லப்பட்டது.
குன்று - வடிவு பற்றியும், கடல் பரந்து தோன்றும் கருமை பற்றியும், உரும் *(இடி)* பிளிறும் குரல் பற்றியும், கூற்று *(யமன்)* கொலைத் தொழில் பற்றியும் உடன் வைத்து ஐயுறப்பட்டன.
`தழல் உண்டாக விழித்து` என ஒரு சொல் வருவிக்க.
``எதிர்ந்து`` என்று, `முன் வருபவரை எதிர்நோக்கி` என்றபடி.
தால வட்டம், யானையின் காது.
புழை - உள்ளே துளையை உடைய.
தட - பெரிய *(102)* ``கொண்டு`` என்பது மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு.
எறிந்து - தாக்கி மழை மதம் உவமத் தொகை.
பூத்த - பொலிவு எய்தி.
யானைக்கு அதன் மத நீர் சிறப்பைத் தரும்.
கட தடம் - மத நீர் பாயும் வாவி.
`கடத்தை உடைய காத்திரம்` என்க.
போகம் - இன்பம்.
மதம் மிக்கு ஒழுகுதலால் அதன் போக நிலை மிக்க விளங்கிற்று காத்திரம் - உடல்.
கலித்து - ஆரவாரித்து.
`எங்கும் கலித்து` என மாற்றி யுரைக்க.
கோத்த - கட்டிய.
நிகளம் - சங்கிலி.
போக்கி - அறுத்ததொழித்து.
``இடு வண்டு`` என்பதற்கு.
`தலை யிடுகின்ற வண்டுகள்` என்பது பொருளாகும்.
`யானை தனது மத நீரை நோக்கித் தன்மேல் வந்து மொய்க்கின்ற வண்டுகளைத் தும்பிக்கையால் பற்றிக் கீழே இட்டுத் தேய்த்தல் முதலியன செய்து கலிக்கின்றது - ஆர வாரித்தது` என்க.
நிலத்தை உழக்கி - பூமியைக் காலால் மிதித்துக் குழியாகவும், துகள்களாகவும் செய்து, நிகர் நீத்து - தனக்கு உவமையாக யாதொன்றும் இல்லாதபடி உயர்ந்து.
இடி பெயர - தந்தத்தால் மதில் முதலியவற்றை இடித்தல் தொழில் விட்டு விட்டு எழச் செய்தலால்.
தாளத்து இலுப்பி - தாள வரிசையில் தனது உறுப்புக்களை உழலவிட்டு.
இலுப்புதல் - இஃது ஒரு நாட்டுப் புற வழக்கு.

சில இடங்களில் இஃது, `இளுப்புதல்` என்று சொல்லப்படுகின்றது.
அடு சினம் - எதிர்ப்பட்டோரைக் கொல்லும் அளவு எழுந்த சினம்.
கன்ற - மேலும் கரிதாக.
`முகம் கன்ற` என்க.
பருக்கை யெடுத்து - பருத்த தும்பிக்கையை உயர எடுத்து.
வென்றி மருப்பு உருவ - வெற்றியைத் தரும் தந்தங்கள் ஊடுருவும்படி.
இதனை `வெய்து உயிர்த்து`` என்பதற்குப் பின் கூட்டுக.
வெய்து உயிர்த்தல் - வெப்பமாக (புகை யெழும்படி)ப் பெருமூச்சு எறிந்து.
நிகர் - ஒளி; அழகு.
முன்பு, ``உழக்கி`` எனவும், ``இலுப்பி`` எனவும் (105) எனப் பொதுவாகக் கூறியதைப் பின்பு அவ்வப் பொருள்மேல் வைத்து, ``அவித்து, குத்தி, வீசி`` எனத் தனித்தனியாக வகுத்துக் கூறினார்.
பணம் - யானையை அடக்குவார் பயன்படுத்து ஓர் ஆயும்.
`அதனை யுடைய பாகர்` என்க.
பரிந்து - கிழித்து.
நிணப் பாகும் - கொழுப்புக் குழம்பு.
ஓடை - யானையின் நெற்றிப் பட்டம்.
பரிக்காரர்கள் - யானையின் இரு பக்கத்திலும் கோலைக் கையிற் கொண்டு நடத்திச் செல்லும் பரிக்கோற்காரர்கள் ``காரர்கடாம்`` என்னும் சீரில் ரகர ஒற்று அலகு பெறாது நின்றது.

கூடம் அரண்அழித்துக் கோபுரங்க ளைக்குத்தி
நீடு பொழிலை நிகர் அழித் தோடிப்

#1672

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உலாவின் பொருட்டுக் கொண்டு வரப்பட்ட யானையின் வருணனை:-
(100) நோக்கு - இங்குத் தோற்றம்.
`நோக்கினோடு` என `ஒடு` உருபு விரிக்க.
`உரும்` இரண்டில் முன்னது ஆகு பெயராய் மேகத்தைக் குறித்தது.
நடையின் வேகம் பற்றி காற்றோடு கூடிய மேகம் ஐய உவமையாகச் சொல்லப்பட்டது.
குன்று - வடிவு பற்றியும், கடல் பரந்து தோன்றும் கருமை பற்றியும், உரும் (இடி) பிளிறும் குரல் பற்றியும், கூற்று (யமன்) கொலைத் தொழில் பற்றியும் உடன் வைத்து ஐயுறப்பட்டன.
`தழல் உண்டாக விழித்து` என ஒரு சொல் வருவிக்க.
``எதிர்ந்து`` என்று, `முன் வருபவரை எதிர்நோக்கி` என்றபடி.

தால வட்டம், யானையின் காது.
புழை - உள்ளே துளையை உடைய.
தட - பெரிய *(102)* ``கொண்டு`` என்பது மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு.
எறிந்து - தாக்கி மழை மதம் உவமத் தொகை.
பூத்த - பொலிவு எய்தி.
யானைக்கு அதன் மத நீர் சிறப்பைத் தரும்.
கட தடம் - மத நீர் பாயும் வாவி.
`கடத்தை உடைய காத்திரம்` என்க.
போகம் - இன்பம்.
மதம் மிக்கு ஒழுகுதலால் அதன் போக நிலை மிக்க விளங்கிற்று காத்திரம் - உடல்.
கலித்து - ஆரவாரித்து.
`எங்கும் கலித்து` என மாற்றி யுரைக்க.
கோத்த - கட்டிய.
நிகளம் - சங்கிலி.
போக்கி - அறுத்தொழித்து.
``இடு வண்டு`` என்பதற்கு.
`தலை யிடுகின்ற வண்டுகள்` என்பது பொருளாகும்.
`யானை தனது மத நீரை நோக்கித் தன்மேல் வந்து மொய்க்கின்ற வண்டுகளைத் தும்பிக்கையால் பற்றிக் கீழே இட்டுத் தேய்த்தல் முதலியன செய்து கலிக்கின்றது - ஆர வாரித்தது` என்க.
நிலத்தை உழக்கி - பூமியைக் காலால் மிதித்துக் குழியாகவும், துகள்களாகவும் செய்து, நிகர் நீத்து - தனக்கு உவமையாக யாதொன்றும் இல்லாதபடி உயர்ந்து.
இடி பெயர - தந்தத்தால் மதில் முதலியவற்றை இடித்தல் தொழில் விட்டு விட்டு எழச் செய்தலால்.
தாளத்து இலுப்பி - தாள வரிசையில் தனது உறுப்புக்களை உழலவிட்டு.
இலுப்புதல் - இஃது ஒரு நாட்டுப் புற வழக்கு.
சில இடங்களில் இஃது, `இளுப்புதல்` என்று சொல்லப்படுகின்றது.
அடு சினம் - எதிர்ப்பட்டோரைக் கொல்லும் அளவு எழுந்த சினம்.
கன்ற - மேலும் கரிதாக.
`முகம் கன்ற` என்க.
பருக்கை யெடுத்து - பருத்த தும்பிக்கையை உயர எடுத்து.
வென்றி மருப்பு உருவ - வெற்றியைத் தரும் தந்தங்கள் ஊடுருவும்படி.
இதனை `வெய்து உயிர்த்து`` என்பதற்குப் பின் கூட்டுக.
வெய்து உயிர்த்தல் - வெப்பமாக (புகை யெழும்படி)ப் பெருமூச்சு

எறிந்து.
நிகர் - ஒளி; அழகு.
முன்பு, ``உழக்கி`` எனவும், ``இலுப்பி`` எனவும் *(105)* எனப் பொதுவாகக் கூறியதைப் பின்பு அவ்வப் பொருள்மேல் வைத்து, ``அவித்து, குத்தி, வீசி`` எனத் தனித்தனியாக வகுத்துக் கூறினார்.
பணம் - யானையை அடக்குவார் பயன்படுத்து ஓர் ஆயும்.
`அதனை யுடைய பாகர்` என்க.
பரிந்து - கிழித்து.
நிணப் பாகும் - கொழுப்புக் குழம்பு.
ஓடை - யானையின் நெற்றிப் பட்டம்.
பரிக்காரர்கள் - யானையின் இரு பக்கத்திலும் கோலைக் கையிற் கொண்டு நடத்திச் செல்லும் பரிக்கோற்காரர்கள் ``காரர்கடாம்`` என்னும் சீரில் ரகர ஒற்று அலகு பெறாது நின்றது.

பணப்பா கரைப் பரிந்து குத்திப் பறித்த
நிணப்பாகை நீள்விசும்பில் வீசி அணைப்பரிய

#1673

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உலாவின் பொருட்டுக் கொண்டு வரப்பட்ட யானையின் வருணனை:- *(100)* நோக்கு - இங்குத் தோற்றம்.
`நோக்கினோடு` என `ஒடு` உருபு விரிக்க.
`உரும்` இரண்டில் முன்னது ஆகு பெயராய் மேகத்தைக் குறித்தது.
நடையின் வேகம் பற்றி காற்றோடு கூடிய மேகம் ஐய உவமையாகச் சொல்லப்பட்டது.
குன்று - வடிவு பற்றியும், கடல் பரந்து தோன்றும் கருமை பற்றியும், உரும் *(இடி)* பிளிறும் குரல் பற்றியும், கூற்று *(யமன்)* கொலைத் தொழில் பற்றியும் உடன் வைத்து ஐயுறப்பட்டன.
`தழல் உண்டாக விழித்து` என ஒரு சொல் வருவிக்க.
``எதிர்ந்து`` என்று, `முன் வருபவரை எதிர்நோக்கி` என்றபடி.
தால வட்டம், யானையின் காது.
புழை - உள்ளே துளையை உடைய.
தட - பெரிய *(102)* ``கொண்டு`` என்பது மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு.
எறிந்து - தாக்கி மழை மதம் உவமத் தொகை.
பூத்த - பொலிவு எய்தி.
யானைக்கு அதன் மத நீர் சிறப்பைத் தரும்.
கட தடம் - மத நீர் பாயும் வாவி.

`கடத்தை உடைய காத்திரம்` என்க.
போகம் - இன்பம்.
மதம் மிக்கு ஒழுகுதலால் அதன் போக நிலை மிக்க விளங்கிற்று காத்திரம் - உடல்.
கலித்து - ஆரவாரித்து.
`எங்கும் கலித்து` என மாற்றி யுரைக்க.
கோத்த - கட்டிய.
நிகளம் - சங்கிலி.
போக்கி - அறுத்தொழித்து.
``இடு வண்டு`` என்பதற்கு.
`தலை யிடுகின்ற வண்டுகள்` என்பது பொருளாகும்.
`யானை தனது மத நீரை நோக்கித் தன்மேல் வந்து மொய்க்கின்ற வண்டுகளைத் தும்பிக்கையால் பற்றிக் கீழே இட்டுத் தேய்த்தல் முதலியன செய்து கலிக்கின்றது - ஆர வாரித்தது` என்க.
நிலத்தை உழக்கி - பூமியைக் காலால் மிதித்துக் குழியாகவும், துகள்களாகவும் செய்து, நிகர் நீத்து - தனக்கு உவமையாக யாதொன்றும் இல்லாதபடி உயர்ந்து.
இடி பெயர - தந்தத்தால் மதில் முதலியவற்றை இடித்தல் தொழில் விட்டு விட்டு எழச் செய்தலால்.
தாளத்து இலுப்பி - தாள வரிசையில் தனது உறுப்புக்களை உழலவிட்டு.
இலுப்புதல் - இஃது ஒரு நாட்டுப் புற வழக்கு.
சில இடங்களில் இஃது, `இளுப்புதல்` என்று சொல்லப்படுகின்றது.
அடு சினம் - எதிர்ப்பட்டோரைக் கொல்லும் அளவு எழுந்த சினம்.
கன்ற - மேலும் கரிதாக.
`முகம் கன்ற` என்க.
பருக்கை யெடுத்து - பருத்த தும்பிக்கையை உயர எடுத்து.
வென்றி மருப்பு உருவ - வெற்றியைத் தரும் தந்தங்கள் ஊடுருவும்படி.
இதனை `வெய்து உயிர்த்து`` என்பதற்குப் பின் கூட்டுக.
வெய்து உயிர்த்தல் - வெப்பமாக (புகை யெழும்படி)ப் பெருமூச்சு எறிந்து.
நிகர் - ஒளி; அழகு.
முன்பு, ``உழக்கி`` எனவும், ``இலுப்பி`` எனவும் (105) எனப் பொதுவாகக் கூறியதைப் பின்பு அவ்வப் பொருள்மேல் வைத்து, ``அவித்து, குத்தி, வீசி`` எனத் தனித்தனியாக வகுத்துக் கூறினார்.
பணம் - யானையை அடக்குவார் பயன்படுத்து ஓர் ஆயும்.
`அதனை யுடைய பாகர்` என்க.
பரிந்து - கிழித்து.

நிணப் பாகும் - கொழுப்புக் குழம்பு.
ஓடை - யானையின் நெற்றிப் பட்டம்.
பரிக்காரர்கள் - யானையின் இரு பக்கத்திலும் கோலைக் கையிற் கொண்டு நடத்திச் செல்லும் பரிக்கோற்காரர்கள் ``காரர்கடாம்`` என்னும் சீரில் ரகர ஒற்று அலகு பெறாது நின்றது.

ஓடைக் கருங்களிற்றை ஒண்பரிக் காரர்கள்தாம்
மாடணையக் கொண்டு வருதலுமே கூடி

#1674

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

உலாவின் பொருட்டுக் கொண்டு வரப்பட்ட யானையின் வருணனை:-
(100) நோக்கு - இங்குத் தோற்றம்.
`நோக்கினோடு` என `ஒடு` உருபு விரிக்க.
`உரும்` இரண்டில் முன்னது ஆகு பெயராய் மேகத்தைக் குறித்தது.
நடையின் வேகம் பற்றி காற்றோடு கூடிய மேகம் ஐய உவமையாகச் சொல்லப்பட்டது.
குன்று - வடிவு பற்றியும், கடல் பரந்து தோன்றும் கருமை பற்றியும், உரும் *(இடி)* பிளிறும் குரல் பற்றியும், கூற்று *(யமன்)* கொலைத் தொழில் பற்றியும் உடன் வைத்து ஐயுறப்பட்டன.
`தழல் உண்டாக விழித்து` என ஒரு சொல் வருவிக்க.
``எதிர்ந்து`` என்று, `முன் வருபவரை எதிர்நோக்கி` என்றபடி.
தால வட்டம், யானையின் காது.
புழை - உள்ளே துளையை உடைய.
தட - பெரிய *(102)* ``கொண்டு`` என்பது மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு.
எறிந்து - தாக்கி மழை மதம் உவமத் தொகை.
பூத்த - பொலிவு எய்தி.
யானைக்கு அதன் மத நீர் சிறப்பைத் தரும்.
கட தடம் - மத நீர் பாயும் வாவி.
`கடத்தை உடைய காத்திரம்` என்க.
போகம் - இன்பம்.
மதம் மிக்கு ஒழுகுதலால் அதன் போக நிலை மிக்க விளங்கிற்று காத்திரம் - உடல்.
கலித்து - ஆரவாரித்து.
`எங்கும் கலித்து` என மாற்றி யுரைக்க.
கோத்த - கட்டிய.
நிகளம் - சங்கிலி.

போக்கி - அறுத்தொழித்து.
``இடு வண்டு`` என்பதற்கு.
`தலை யிடுகின்ற வண்டுகள்` என்பது பொருளாகும்.
`யானை தனது மத நீரை நோக்கித் தன்மேல் வந்து மொய்க்கின்ற வண்டுகளைத் தும்பிக்கையால் பற்றிக் கீழே இட்டுத் தேய்த்தல் முதலியன செய்து கலிக்கின்றது - ஆர வாரித்தது` என்க.
நிலத்தை உழக்கி - பூமியைக் காலால் மிதித்துக் குழியாகவும், துகள்களாகவும் செய்து, நிகர் நீத்து - தனக்கு உவமையாக யாதொன்றும் இல்லாதபடி உயர்ந்து.
இடி பெயர - தந்தத்தால் மதில் முதலியவற்றை இடித்தல் தொழில் விட்டு விட்டு எழச் செய்தலால்.
தாளத்து இலுப்பி - தாள வரிசையில் தனது உறுப்புக்களை உழலவிட்டு.
இலுப்புதல் - இஃது ஒரு நாட்டுப் புற வழக்கு.
சில இடங்களில் இஃது, `இளுப்புதல்` என்று சொல்லப்படுகின்றது.
அடு சினம் - எதிர்ப்பட்டோரைக் கொல்லும் அளவு எழுந்த சினம்.
கன்ற - மேலும் கரிதாக.
`முகம் கன்ற` என்க.
பருக்கை யெடுத்து - பருத்த தும்பிக்கையை உயர எடுத்து.
வென்றி மருப்பு உருவ - வெற்றியைத் தரும் தந்தங்கள் ஊடுருவும்படி.
இதனை `வெய்து உயிர்த்து`` என்பதற்குப் பின் கூட்டுக.
வெய்து உயிர்த்தல் - வெப்பமாக (புகை யெழும்படி)ப் பெருமூச்சு எறிந்து.
நிகர் - ஒளி; அழகு.
முன்பு, ``உழக்கி`` எனவும், ``இலுப்பி`` எனவும் (105) எனப் பொதுவாகக் கூறியதைப் பின்பு அவ்வப் பொருள்மேல் வைத்து, ``அவித்து, குத்தி, வீசி`` எனத் தனித்தனியாக வகுத்துக் கூறினார்.
பணம் - யானையை அடக்குவார் பயன்படுத்து ஓர் ஆயும்.
`அதனை யுடைய பாகர்` என்க.
பரிந்து - கிழித்து.
நிணப் பாகும் - கொழுப்புக் குழம்பு.
ஓடை - யானையின் நெற்றிப் பட்டம்.
பரிக்காரர்கள் - யானையின் இரு பக்கத்திலும் கோலைக் கையிற் கொண்டு நடத்திச் செல்லும் பரிக்கோற்காரர்கள் ``காரர்கடாம்`` என்னும் சீரில் ரகர ஒற்று அலகு பெறாது நின்றது.

நயந்து குரல்கொடுத்து நட்பளித்துச் சென்று
வியந்தணுகி வேட்டம் தணித் தாங் குயர்ந்த

#1675

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கூடி - பலரும் திரண்டு.
நயந்து குரல் கொடுத்து, அன்பை வெளிப்படுத்தும் முறையில் சில இனிய சொற்களைச் சொல்லி.
வேட்டம் - வேட்கை; இங்கு உணவு வேட்கை அதைத் தணித்தது `கரும்பு முதலிய வகைகளைக் கொடுத்து` என்க.
``தணித்த`` என்னும் பெயரெச்சத்து அகரம் தொகுத்தலாயிற்று.
தணித்த ஆங்கு - தணித்த அப்பொழுது.

உடல்தூய வாசிதனைப் பற்றிமேல் கொண் டாங்
கடற்கூடற் சந்தி அணுகி அடுத்த

#1676

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வாசி அளவு.
இஃது யானைமீது ஏறுதற்குப் படியாக அதன் உடலில் இடப்படும் கருவியைக் குறித்தது.
உடல் தூய வாசி - யானையில் உடலில் இடப்பட்ட தூய்மையான வாசி.
மேல் கொண்டு- மேலே ஏறி, ``கொண்டு`` என்றே கூறினாராயினும் `கொள்விக்கக் கொண்டு` என்பதே கருத்து என்க.
கூடற் சந்தி - மதுரை நகரின் தெருக்கள் சந்திக்கும் இடம்.

பயிர்பலவும் பேசிப் படுபுரசை நீக்கி
அயர்வு கெடஅணைத்த தட்டி உயர்வுதரு

#1677

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பயிர் - யானையைப் பழக்கும் மொழி.
புரசை - யானையின் கழுத்தில் இடும் கயிறு.
அயர்வு - சோர்வு

தண்டுபே ரோசையின்கண் தாள்கோத்துச் சீர்சிறுத்
தொண்டர் பிறகணையத் தோன்றுதலும் எண்டிசையும்

#1678

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தண்டு பேரோசை - வெளியே பரவிச் செல்லும் பெரிய ஒலி.
இஃது ஆகுபெயராய் யானையின் இரு பக்கத்திலும் தொங்கவிடப்பட்ட

மணிகளைக் குறித்தது.
தாள் கோது - இரு பக்கத்திலும் இரு மணிக்களுக்குள்ளே கால்களைக் கோத்து.
``சிறுத் தொண்டர்`` என்பது இங்கே அப்பெயரை உடைய நாயனாரைக் குறியாது, காரணப் பெயராய் அடியவர் பலரையும் குறித்தது.
பிறகு அணைய - பின்னால் வர.
தோன்றுதல் - காணப்படுதல்.

பல்சனமும் மாவும் படையும் புடைகிளர
ஒல்லொலியால் ஓங்கு கடல் கிளர மல்லற்

#1679

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மா, `யானை, குதிரை` - இரண்டிற் பொது.
படை - மக்கள் திரட்சி.
புடை கிளர - நாற்புறத்திலும் மிக்குத் தோன்ற.
ஒல்லொலி - ஒல்லென் ஒலி, கடல் கிளர - கடல் பொங்கி வந்தது போலத் தோன்ற.
மல்லல் - வளப்பம்.

பரித்தூரம் கொட்டப் படுபணிலம் ஆர்ப்பக்
கருத்தோ டிசைகவிஞர் பாட விரித்த

#1680

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`தூரியம்` என்பது, ``தூரம்`` என மருவி வந்தது.
பரித் தூரியம் - குதிரையின்மேல் வைத்து முழக்கப்படும் வாத்தியம்.
படு பணிலம் - ஒலிக்கின்ற சங்கு.
ஆர்ப்ப - ஒலிக்க, `கவிஞர் கருத்தோடு இசைபாட, கருத்து - பொருள்

குடைபலவும் சாமரையும் தொங்கல்களும் கூடிப்
புடைபரந்து பொக்கம் படைப்பக் கடைபடு

#1681

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

தொங்கல்கள் - மாலைகள்.
``தொங்கல்களும்`` என்னும் சீரில் லகர ஒற்று அலகு பெறாதாயிற்று.
பொக்கம் - பொலிவு (பொங்கு + அம் = பொக்கம்.)

வீதி அணுகுதலும் மெல்வளையார் உள்மகிழ்ந்து

காதல் பெருகிக் கலந்தெங்கும் சோதிசேர்

#1682

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கடை படுவீதி - பல வாயில்கள் (பக்கங்களில்) பொருந்திய வீதி; மாட வீதி.

ஆடரங்கின் மேலும் அணிமா ளிகைகளிலும்
சேடரங்கு நீள்மறுகும் தெற்றியிலும் பீடுடைய

#1683

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஆடு அரங்கு - நடன சாலை.
சேடு அரங்கு மறுகு - பலவகை அரங்குகளை உடையதெரு.
`அரங்கின்மேல் நின்றும், மாளிகைகளின்றும் மறுகின் கண்ணும், தெற்றியின் கண்ணும் புறப் பட்டு` என்க.
தெற்றி - திண்ணை.

பேரிளம்பெண் ஈறாகப் பேதை முதலாக
வாரிளங் கொங்கை மடநல்லார் சீர்விளங்கப்

#1684

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மேல் (117) ``வெள்வளையார்`` என்றது பொது.
இங்கு ``மட நல்லார்`` என்றது அவ்வப் பருவத்து மகளிரைச் சிறப்பாகக் குறித்து, எனவே, ``அம் மட நல்லார்`` எனச் சுட்டு வருவிக்க.
இறுதியை முன்னர்க் கூறியது காதற்கு உரிமையுடைமை பற்றி.
சீர் - அழகு.

பேணும் சிலம்பும் பிறங்கொளிசேர் ஆரமும்
பூணும் புலம்பப் புறப்பட்டுச் சேண் மறுகில்

#1685

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

புலம்ப - தனிமைப் பட; அஃதாவது, தங்களைவிட்டு நீங்கிப் போய்விட
புறப்பட்டு - வெளியே வந்து வெளியே வருதல் நாண் இழந்ததன் அறிகுறியாம்.
சேண் - நீளம்.
மறுகு - தெரு.

காண்டகைய வென்றிக் கருவரைமேல் வெண்மதிபோல்
ஈண்டு குடையின் எழில்நிழற் கீழ்க் காண்டலுமே
#1686
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கரிய யானையின் மேல் தோன்றுகின்ற வெண்குடை, கரியை மலைமேல் காணப்படும் முழுநிலவை ஒத்திருந்தது.

கைதொழுவார் நின்று கலைசரிவார் மால் கொண்டு
மெய்தளர்வார் வெள்வளைகள் போய் வீழ்வார் வெய்துயிர்த்துப்
#1687
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

(பிள்ளையாரைக் காண்டலும்) என்க.
கலை - ஆடை.
மால் - மயக்கம்.
மெய் - உடம்பு.
வெய்து உயிர்த்து - வெப்பமாகப் பெருமூச்சு விட்டு.

பூம்பயலை கொள்வார் புணர்முலைகள் பொன்பயப்பார்
காம்பனைய மென்தோள் கவின்கழிவார் தாம் பயந்து
#1688
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பூம் பயலை - வெள்ளை பூப்போலும் பசலை; காதல் நோயால் உண்டாகும் நிற வேறுபாடுகளுள் வெண்ணிறமாவதை, \`பசலை\` எனவும், பொன்னிறமாவதை \`சுணங்கு\` எனவும் கூறுவர்.
சுணங்கே இங்கு \`\`பொன்\`\` எனப்பட்டது.
காம்பு - மூங்கில்.
கவின் - அழகு.
\`\`தாம் பயந்து\`\` என்றது, மேல் \`\`பொன் பயப்பார்\`\` என்றதனை மீட்டும் வழி மொழிந்தது.

வென்றிவேற் சேய் என்ன வேனில் வேள் கோ என்ன
அன் றென்ன ஆம் என்ன ஐயுற்றுச் சென்றணுகிக்
#1689
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

வென்றி வேல் சேய், முருகன்.

வேனில் வேள் கோ, மன்மதன்.

காழிக் குலமதலை என்றுதம் கைசோர்ந்து
வாழி வளைசரிய நின்றயர்வார் பாழிமையால்

#1690

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பலவாறாக ஐயுற்றவர்கள்.
இறுதியில் `ஆளுடைய பிள்ளையார்` என்று துணிந்தனர்.
முன்பு ஐயுற்றதற்குக் காரணம் மிக்க அழகு.
குல மதலை - சிறந்த குழந்தை.
``குழவி மருங்கினும் கிழவ தாகும்`` *1* என்றார் ஆகலின், இங்குக் குழவியிடத்தும் மகளிரது காமம் புணர்க்கப்பட்டது.
(125) ``முன்னும் பின்னும் மொழியடுத்து வருத லும்`` *2* என்றபடி.
`கை` என்னும் இடைச்சொல் இங்கு, ``சோர்ந்து`` என்னும் சொல்லைப் பின் அடுத்து வந்தது.
`வாழி`, அசை.
பாழிமை - காதலின் மிகுதி.

உள்ளம் நிலைதளர்ந்த ஒண்ணுதலார் வெல்களிற்றை
மெள்ள நட என்று வேண்டுவார் கள்ளலங்கல்

#1691

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கள் - தேன்.
அலங்கல் - மாலை.

தாராமை யன்றியும் தையல்நல் லார்முகத்தைப்
பாராமை சாலப் பயன் என்பார் நேராக

#1692

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பாராமை சாலப் பயன்`` என்பது எழுவாய்த் தொடரா யும், ஆன் உருபின் மேல் தொக்க மூன்றாவதன் தொகையாயும் நின்று சிலேடையாயிற்று.
``சாலப் பயன்`` என்பதற்கு, `இவனது திருவருள் நிலைக்கு மிக்க பயனைத் தருவது` எனவும், `இவன் ஆண்டில் மிகச் சிறியன்` எனவும் இரு பொருள் கொள்க.
இரண்டாவது பொருட்கு, பயன் ``பயல்`` என்பதன் திரிபாகும்.

என்னையே நோக்கினான் ஏந்திழையீர் இப்பொழுது
நன்மை நமக்குண் டெனநயப்பார் கைம்மையால்
#1693
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஒவ்வொருவரும் `என்னையே நோக்கினான்` என நயப்பார் என்க.
நயத்தல் - மகிழ்தல்.
கைம்மை - கைக்கிளைத் தன்மை.

ஒண்கலையும் நாணும் உடைத்துகிலும் தோற்றவர்கள்
வண்கமலத் தார்வலிந்து கோடும் எனப் பண்பின்
#1694
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``கலை`` என்றது `மேலாடை` எனவும் ``உடை`` என்றது, `இடை யில் உடுக்கப்பட்ட உடை` எனவும் கொள்க.
`தோற்ற` என்னும் பெயரெச்சத்து அகரம் தொகுத்தலாயிற்று.
இங்ஙனம் இலக்கியங்களில் தெரு விடை உடையும், நாணும் ஒருங்கிழந்தராகச் சொல்லப்படுவோர் பொது மகளிரே யன்றிக் குலமகளிர் அல்லர் என்பதை, ``வழக்கொடு சிவணிய வகைமை யான`` என்னும் தொல்காப்பிய நூற்பாவாலும், அதற்கு நச்சினார்க்கினியர் உரைத்த உரையாலும் உணர்க.
கமலத் தார் - தாமரை மலர் மாலை.
இஃது அந்தணர்க்கு அடையாளமாவது.
கோடும் - கைக்கொள்வோம்.
பண்பு - தங்கட்கு இயல்பாய் உள்ள குணம்.

வடிக்கண் மலர்வாளி வார்புருவ வில்மேல்
தொடுத் ததரத் தொண்டை துடிப்பப் பொடித்தமுலைக்
#1695
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மகளிர் பிள்ளையார் மேல் காதற் போர் தொடுக்க எண்ணும் முறை.
வடிக் கண் - மாவடுவைப் போலும் கண்கள்.
வாளி - கண்.
கண் வாளி, புருவ வில் - இவை உருவகம்.
அதரம் - கீழ் உதடு.
தொண்டை - கொவ்வை, இஃது இதன் பழத்திற்கு ஆகுபெயர்.

அதரத் தொண்டை; உருவகம்.
பொடித்தல் - புளகித்தல்.
(பூரித்தல்)

காசைக் கருங்குழலார் காதற் கவுணியன்பால்
பூசற் கமைந்து புறப்படுவார் வாசச்

#1696

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

காசை - காயா.
இஃது ஒரு செடி வகை.
`பூவை` என்னும் சொல்லப்படும்.
இங்கு இதுவும் இதன் மலருக்கு ஆகுபெயர்.
காயாம் பூ மகளிர் கூந்தலுக்கு உவமையாகும்.
மாயோனும் `காயாம் பூ வண்ணன்` என்று சொல்லப்படுவான்.
`முலையை உடைய குழலார்` என்க.
காதற் கவுணியன் - காதலை உண்டாக்கிய கவுணியன்.
பூசற்கு அமைந்து - போர் செய்யத் துணிந்து ஆடல் புரிந்தால் மயங்குவன்` என்பது மகளிர் கொண்ட எண்ணம்.

செழுமலர்த்தார் இன்றெனக்கு நல்காதே சீரார்
கழுமலத்தார் கோவே கழல்கள் தொழுவார்கள்

#1697

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஒரு சார் மகளிர் எண்ணம் மேற் கூறியவாறாக, மற்றொரு மகளிர் இங்ஙனம் இரங்கு வாராயினர்.
அம் - அழகு கோள் வளை - ஒழுங்காக இடப்பட்ட வளையல்.

அங்கோல வளையிழக்கப் போவது நின்னுடைய
செங்கோன்மையோ என்று செப்புவார் நங்கையீர்

#1698

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஒரு சார் மகளிர் எண்ணம் மேற் கூறியவாறாக, மற்றொரு மகளிர் இங்ஙனம் இரங்கு வாராயினர்.
அம் - அழகு கோள் வளை - ஒழுங்காக இடப்பட்ட வளையல்.

இன்றிவன் நலகுமே எண்பெருங் குன்றத்தின்
அன்றமணர் கூட்டத்தை ஆசழித்துப் பொன்ற

#1699

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கலந்குதல் - இரங்குதல்.
``நல்குமே`` என்னும் வினா, `நல்கான்` என்னுங் குறிப்பினது.
ஆசு பற்றுக்கோடு

உரைகெழுவு செந்தமிழ்ப்பா ஒன்றினால் வென்றி
நிரை கழுமேல் உய்த்தானை நேர்ந்து விரைமலர்த்தார்

#1700

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இங்கு, ``பா`` என்றது ஆகுபெயராய்ப் பதிகத்தைக் குறித்தது.
``ஒன்று`` என்றது, ``வாழ்க அந்தணர்`` எனத் தொடங்கும் திருப்பாசுரப் பதிகத்தை.
நேர்ந்து - எதிர்ப்பட்டு

பெற்றிடலாம் என்றிருந்த நம்மினும் பேதையர்கள்
மற்றுளரோ என்று வகுத்துரைப்பார் மற்றிவனே

#1701

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஒரு திருப்பதிகத்தால் சமணரை வென்றது திருவருளாலன்றே!
``அத்தகைய திருவருளுக்கு உரியன் ஆகிய இவன் மகளிரை விழைவான்`` எனக் கருதியது பேதைமை - என ஒரு சார் மகளிர் தங்களைத் தாங்களே நொந்து கொண்டு, `இவன் மகளிர் வயப்படான்` என்னும் துணிவினராயினர்.
``மற்று`` என்பது மேற்கூறிய கருத்தை.
மாற்றி நிற்றலால் வினை மாற்று ``இவனே`` என்பதை ``வைத்தது`` என்பதன் பின்னே கூட்டுக.

பெண் இரக்கம் அன்றே பிறைநுதலீர் மாசுணத்தின்
நண்ணு கடுவித்தால் நாட்சென்று விண்ணுற்ற

#1702

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``பிறை நுதலீர்`` என்பதை, ``வகுத்துரைப் பார்`` என்பதன் பின்னர் கூட்டுக.
இது மகளிர் ஒருவர் ஒருவரைத் தம்முள் முன்னிலைப்படுத்தியது.

பெண் இரக்க - பெண் ஒருத்தி வேண்டிக் கொள்ள.
மா சுணம் - பாம்பு.
நாட் சென்று - வாழ்நாள் முடியப் பெற்று, மருகல், ஒரு தலம்.

ஆருயிரை மீட் டன்று றவளை அணிமருகல்
ஊரறிய வைத்த தென உரைப்பார் பேரிடரால்

#1703

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``வைத்தது`` என்னும் தொழிற் பெயராய், `வைத்தவன்` எனப் பொருள் தந்தது.
`ஒரு பெண்ணிற்கு இரங்கியவன் இங்கு நம்மில் எவருக்கேனும் இரங் காமலா போய் விடுவான்` என்றபடி.
அவளை ஊரறிய வைத்தது, பலரையும் கூட்டித் திருமணம் செய்வித்தது.
இவ்வாறு ஒருசாரர் கருத்து இருந்தது.

ஏசுவார் தாம் உற்ற ஏசறவைத் தோழியர் முன்
பேசுவார் நின்று தம் பீடழிவார் ஆசையால்

#1704

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஏசுவார் - ஒருவர் மற்றொருவரை இகழ்வார்கள்.
ஏசறவு - துன்பம்.
பீடு - பெருமை

நைவார் நலன்அழிவார் நாணோடு பூண் இழப்பார்
மெய்வாடு வார் வெகுள்வார் வெய்துயிர்ப்பார் தையலார்

#1705

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நலன் - அழகு.
மெய் - உடம்பு.

பூந்துகிலைப் பூமாலை என்றணிவார் பூவினைமுன்
சாந்தம் என மெய்யில் தைவருவார் வாய்ந்த

#1706

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மகளிரது மதிமயக்கம்.
சாந்தம் - சந்தனம்.

தைவருதல் - தடவுதல்.
பாவை - கிளிபோலச் செய்யப்பட்ட பதுமை.
பயிற்றுவார் என்பதில் பிற வினை விகுதி தொகுத்தல், அளி - வண்டு.

கிளி என்று பாவைக்குச் சொற்பயில்வார் பந்தை
ஒளிமே கலை என் றுடுப்பார் அளிமேவு

#1707

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மகளிரது மதிமயக்கம்.
சாந்தம் - சந்தனம்.
தைவருதல் - தடவுதல்.
பாவை - கிளிபோலச் செய்யப்பட்ட பதுமை.
பயிற்றுவார் என்பதில் பிற வினை விகுதி தொகுத்தல், அளி - வண்டு.

பூங்குழலார் மையலாய்க் கைதொழமுன் போதந்தான்
ஒங்கொலிசேர் வீதி உலா.

#1708

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`இவ்வாறான பூங்குழலார்` என எடுத்துக் கொண்டு உரைக்க.
கை தொழுமுன் - அருகிற் சென்று கும்பிடுவதற்கு முன்னே.
உலாப் போதந்தான் - உலாப் போந்து முற்றினான்.
நெடுவெண்பாட்டாக மிக நீண்டு வந்த இப்பாட்டில் முதற் றொட்டு, ``நித்திலங்கள் ஈன`` என்பது காறும் *(8)* வயல்களின் நடுவில் உள்ள குளங்களில் எருமை பாய்தலால் உளவான நிகழ்ச்சிகளே சொல்லப்பட்டன.
``உலவிய`` *(8)* என்பது முதல் ``ஓங்கு`` *(10)* என்பது காறும் வயல்களின் சிறப்பே கூறப்பட்டது.
``மாசில் நீர்`` *(10)* என்பது முதல், ``வளம் துன்று வார்பொழிலின் மாடே`` *(22)* என்பது காறும் மேற் கூறிய வயல்களை அடுத்துப் பல வகை மரக் கூட்டங்களையுடைய சோலையின் சிறப்புச் சொல்லப்பட்டது.
``கிளர்ந்தெங்கும்`` *(22)* என்பது முதல், ``வேலை ஒலிப்ப`` *(24)* என்பது காறும் புற நகரில் எழும் பல வகை ஒலிகள் கூறப்பட்டன.
``வெறிகமழும்.
.
.

.
தன்மையவா`` *(24 - 26)* என்னும் பகுதியில் புற நகர்ச் சிறப்புக் கூறப்பட்டது.
``சூழ் கிடப்ப`` என்பது அகழிச் சிறப்பு ``முளை நிரைத்து`` *(27)* என்பது முதல் ``இஞ்சி அணிபெற்று`` *(30)* என்பது காறும் மதிலின் சிறப்பு.
``பொங்கொளி சேர்`` *(30)* என்பது முதல், ``எழில் சிறப்ப`` *(34)* என்பதுகாறும் நகரத்தில் உள்ள மாளிகை முதலியவற்றின் சிறப்பு.
``மலர் மடந்தை.

.

.

.
வாய்மைத்தாய்`` *(35)* என்பதனால் நகரில் திருமகள் மகிழ்ந் துறைதல் கூறப்பட்டது.
``பொன்னும், மரகதமும்`` - என்பது முதல் *(36)* நகரில் உள்ளாரது கொடைச் சிறப்பும், அடுத்து அவர்களது வாய்மைச் சிறப்பும் *(38)* கூறப்பட்டன.
``உம்மை மறை பயில்வார்`` *(38,39)* என்பது முதல் ``நானூற்றுவர் மறையோர்`` *(44)* என்பதுகாறும் சீகாழியில் உள்ள அந்தணர்களது சிறப்புக் கூறப்பட்டது.
``நா மன்னும்`` *(44)* என்பது முதல் ``மங்கையர்கள் கூட்டமும்`` *(48)* என்பது காறும் சீகாழியில் உள்ள மகளிரது சிறப்புக் கூறப்பட்டது.
அடுத்துச் சிறார் குழுக் கூறப்பட்டது.
``வேத ஒலியும்`` *(52)* என்பது முதல், ``மல்லைச் செழு நகரம்`` *(59)* என்பதுகாறும் சீகாழியின் சிறப்பு.
அதன் பன்னிரு பெயர்களோடு கூறப்பட்டது.
``மன்னவும்`` *(59)* முதல், ``வாய்ப்பவும்`` *(62)* என்பது காறும் ஞானசம்பந்தரது அவதாரப் பயன்கள் சொல்லப்பட்டன.
``அவதரித்த வள்ளலை`` *(63)* என்பது முதல் திருப்பதிகம் பாடவல்ல சேயை`` *(85)* என்பது காறும் ஞானசம்பந்தரது பெருமை களே சொல்லப்பட்டன.
அவற்றிடையே கண்ணி *75-83*-ல் அவர் நிகழ்த்திய அற்புதங்களும், கண்ணி - *83-84*ல் - அவர் அருளிச் செய்த பதிக வகைகளும் கூறப்பட்டன.
கண்ணி *-86-89: சீகாழி அந்தணர்கள் ஞானசம்பந்தரை வணங்கி* உலாவாக எழுந்தருள வேண்டுதலும், அதற்கு அவர் இசைந்தருளலும் கூறப்பட்டன.
``நீதியால்`` *(89)* என்பது முதல், ``கோலம் புனைவித்து`` *(95)* என்பது

காறும் ஞானசம்பந்தருக்குச் செய்யப்பட்ட ஒப்பனைகளில் பூச் சூடுதலாகிய தலைக்கோலமே கூறப்பட்டது.
``காதில்`` *(95)* ``உடல் புனைந்து`` *(100)* என்பதுகாறும் அணி கல ஒப்பனை, திருநீறு கண்டிகை ஒப்பனை, உடை ஒப்பனை இவை கூறப்பட்டன.
``திண் நோக்கில்`` *(100)* ``கொண்டு வருதலும்`` *(109)* என்பது காறும் உலாவிற்குக் கொள்ளப்பட்ட யானை ஏற்றத்தின் சிறப்புக் கூறப்பட்டது.
``எண்டிசை`` *(113)* ``பொக்கம் படைப்ப`` *(116)* என்பது காறும் உலாவின் ஆரவாரச் சிறப்பே கூறப்பட்டது.
இதன்பின் உள்ள பகுதி முழுதும் வீதி உலாவில் ஞான சம்பந்தரைக் கண்ட, பேதை முதல் பேரிளம் பெண் ஈறான பருவ மகளிர் ஒருதலைக் காமமாகக் காதலித்து வருந்திய வருத்தமே கூறப்பட்டு முடிவெய்திற்று எனவே, ``பலவகைக் சிறப்புக்களையுடைய சீகாழித் தலத்தில் அந்தணர்களது கவுணிய கோத்திரத்தில் ஒப்புயர்வற்ற ஒரு புதல்வராய் உலகம் உய்ய அவதரித்துத் திருவருளால் பதினாறாயிரம் தமிழ்ப் பதிகங்களைப் பாடிப் பாண்டி நாட்டில் சமணர்களை வாதில் வென்றது முதலிய அற்புதங்களை நிகழ்த்திய திருஞானசம்பந்தர் சீகாழி அந்தணர்கள் விண்ணப்பித்துக் கொண்டபடி பலவகை ஒப்பனைகளுடன் யானைமீது ஏறி, விழா ஆரவாரங்களுடன், தமது அருள் நிலையை அறியாது காதல் கொண்டு ஏழு பருவத்து மகளிரும் வருந்தியே நிற்கச் சீகாழி நகர் வீதிகளில் உலாப் போந்து மீண்டருளி னார்`` என்பதே இப்பாட்டின் பொருட் சுருக்கமாகக் கொள்க.
ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை முற்றிற்று.

நம்பியாண்டார் நம்பிகள் - ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்

அலையார்ந்த கடலுலகத்
தருந்திசைதோ றங்கங்கே
நிலையார்ந்த பலபதிகம்
நெறிமனிதர்க் கினிதியற்றி
ஈங்கருளி யெம்போல்வார்க்
கிடர்கெடுத்தல் காரணமாய்
ஓங்குபுகழ்ச் சண்பையெனு
மொண்பதியு ளுதித்தனையே
செஞ்சடைவெண் மதியணிந்த
சிவனெந்தை திருவருளால்
வஞ்சியன நுண்ணிடையாள்
மலையரையன் மடப்பாவை
நற்கண்ணி யளவிறந்த
ஞானத்தை யமிர்தாக்கிப்
பொற்கிண்ணத் தருள்புரிந்த
போனகமுன் நுகர்ந்தனையே

தோடணிகா தினனென்றுந்
தொல்லமரர்க் கெஞ்ஞான்றும்
தேடரிய பராபரனைச்
செழுமறையின் அரும்பொருள
அந்திச்செம் மேனியனை
யடையாளம் பலசொல்லி
உந்தைக்குக் காணஅர
னுவனாமென் றுரைத்தனையே
அராகம்
வளம்மலி தமிழிசை வடகலை மறைவல
முளரிநன் மலரணி தருதிரு முடியினை. *(1)*
கடல்படு விடமடை கறைமணி மிடறுடை
அடல்கரி யுரியனை யறிவுடை யளவினை. *(2)*
பெயர்த்தும் தாழிசை
கரும்பினுமிக் கினியபுகழ்க்
கண்ணுதல்விண் ணவன்அடிமேல்
பரம்பவிரும் புவியவர்க்குப்

பத்திமையை விளைத்தனையே. *(1)*
பன்மறையோர் செய்தொழிலும்
பரமசிவா கமவிதியும்
நன்மறையின் விதிமுழுதும்
ஒழிவின்றி நவின்றனையே. *(2)*
நாற்சீர் ஓரடி அம்போதரங்கம்
அணிதவத் தவர்களுக் கதிகவித் தகனும்நீ *(1)*
தணிமனத் தருளுடைத் தவநெறிக் கமிர்தம்நீ *(2)*
அமணரைக் கழுநுதிக் கணைவுறுத் தவனுநீ *(3)*
தமிழ்நலத் தொகையினில் தகுசுவைப் பவனும்நீ *(4)*
மூச்சீர் ஓரடி அம்போதரங்கம்
மறையவர்க் கொருவன் நீ*(1)*
மருவலர்க் குருமு நீ *(2)*
நிறைகுணத் தொருவன் நீ *(3)*
நிகரில்உத் தமனும் நீ*(4)*
இருசீர் ஓரடி அம்போதரங்கம் அரியை நீ *(1)* எளியை நீ*(2)*
அறவன் நீ *(3)* துறவன் நீ *(4)*
பெரியை நீ *(5)* உரியை நீ *(6)*
பிள்ளை நீ*(7)* வள்ளல் நீ *(8)*
தனிச் சொல்
என வாங்
சுரிதகம்
கருந்தமிழ் விரக நிற் பரசுதும் திருந்திய
நிரைச்செழு மாளிகை நிலைதொறும் நிலைதொறும்
உரைச்சதுர் மறையில் ஓங்கிய ஒலிசேர்
சீர்கெழு துழனித் திருமுகம் பொலிவுடைத்
தார்கெழு தண்டலை தண்பணை தழீஇ
கற்றொகு புரிசைக் காழியர் நாத
நற்றொகு சீர்த்தி ஞானசம் பந்த
நின்பெருங் கருணையை நீதியின்
அன்புடை அடியவர்க் கருளுவோய் எனவே.
#1709
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`பா நிலைக் கொச்சகம், மயங்கிசைக் கொச்சகம்` எனக் கலி இருவகைப்படும்.
``கொச்சகம்`` என்பதே முறை பிறழ்ந்து வருவதுதான்.

வெண்பா முறை பிறழ்ந்து வருவது `பாநிலைக் கொச்சகம்` எனவும், கலிப்பாவின் உறுப்புக்கள் முறை பிறழ்ந்து வருவது `மயங்கிசைக் கொச்சகம்` எனவும் சொல்லப்படும்.
இவை கடவுளரைப் பொருளாகக் கொண்டு வரின் `ஒருபோகு கலி` எனப் படும்.
கடவுளரைப் பொருளாகக் கொண்டு வரும் பாட்டுக்களை, `தேவ பாணி` - என வழங்குதல் அக்கால வழக்கம்.
அத்தேவ பாணி யில் ஒருவகை ஒருபோகு கலி.
தேவ பாணியாய் வந்து ஒருபோகாய் நின்ற இக்கலிப்பா உறுப்புப் பிறழ்ந்து வந்தமையால் மயங்கிசைக் கொச்சக் கலிப்பாவாகும்.
இப்பாட்டில் அராக உறுப்பில் உள்ள, ``தமிழிசை மறைவல்`` என்பதையும், இறுதி யுறுப்பாகிய சுரிதகத்து முதற்கண் உள்ள ``அருந் தமிழ் விரக`` என்பதையும், மற்றும், ``காழியர் நாத, ``ஞானசம்பந்த`` என்பவற்றையும் முதலிற் கொள்க.
``தமிழிசை.
.
.
மறை`` உம்மைத் தொகை.
வலன் - வல்லவன்.
தாழிசை - *1* திசை - திசைகளில் உள்ள தலங்கள்; ஆகுபெயர்.
தேவாரங்கட்கு, ``திருப்பதிகம்`` என்பதே பெயர் ஆதலால் அவற்றால் உணர்த்தப்படும் நெறியை, ``திருப்பதிக நெறி`` என்றார்.
இயற்றி - ஒழுங்காக விளக்கி.
சண்பை - சீகாழி.
`ஞானசம்பந்தர் நிலவுலகில் அவதாரம் செய்ததற்குக் காரணமே பிறவித் துன்பத்திற்கு அஞ்சுபவரது துன்பத்தை நீக்கக் கருதித்தான்`` என்பது இங்கு உணர்த்தப்பட்டது.
தாழிசை -*2* நற்கண்ணி - நல்ல வகையாகப் பார்க்கும் கண்களை யுடையவள்.
நல்லவகை - அருளை வழங்குதல் மக்களுள் மகளிரைச் சிலரை அழகிய கண் உடைமை பற்றி, `நக்கண்ணையர்` - என்பது.
`சுலோசனா` - என்பது வடமொழி.
அமிர்து - உணவு; சோறு போனகம் - உண்டி.
தாழிசை -*3* `உவன் அரன் ஆம்` - என மாற்றிக் கொள்க.
உவன்- நீர், ``எச்சில் மயங்கிட உனக்கு ஈது இட்டாரைக் காட்டு`` *1* என வினாவிய அவன்.
அராகம் - *1* ``மறை வல`` என்னும் குறிப்புப் பெயரெச்சத்திற்கு,

``முளரிநன் மலரணிதரு திருமுடியினை`` என்னும் தொடர்மொழி, `அந்தணன்` என ஒரு சொல் நீர்மைத்தாய் முடிபாயிற்று.
அராகம்-*2:* கறை - நஞ்சு.
அறி - அறிதல்.
முதனிலைத் தொழிற் பெயர்.
`உடைய` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.
அளவு - பெருமை.
பெயர்த்தும் தாழிசை-*1:* பரம்ப - பரவுதலால் பரவியது பலவிடத்தும் சென்று பாடியதால்.
தாழிசை*2:* பன்மறையோர்,வைதிக அந்தணர்களும், சிவ மறையோர்களும், செய் தொழில் - செயற் பாலனவாகிய தொழில்கள்.
`ஒழுக்கம்` என்றபடி.
அகப் புற நூல்களாகிய தந்திரங்களை விலக்குதற்கு, ``பரம சிவ ஆகமம்`` என்றார்.
இஃதே பற்றிச் சேக்கிழார், வேத நெறி தழைத்தோங்க
மிகுசைவத் துறை விளங்க
புனிதவாய் மலர்ந்தழுத.
புகலி திருஞான சம்பந்தர்
என்றார்.
ஒழிவின்றி - எஞ்சாமல். நாற்சீர் ஓரடி அம்போதரங்கம் - அணி தவம் - சிவ புண்ணியம்.
`அவர்களுக்கு அறிவிக்கும்` என ஒரு சொல் வருவிக்க.
வித்தகம் - சதுரப்பாடு; திறமை.
அமிர்தம் - அமிர்தம் போல்பவன்; அழியாதபடி காப்பாற்றினவன்.
நுதி - நுனி; முனை.
`தக` என்பது இறுதிநிலை தொக்கு, ``தகு`` என நின்றது.
முச்சீர் ஓரடி அம்போதரங்கம் - மருவலர் - பகைவர்.
சிவநெறிக்குப் பகைவரே பிள்ளையார்க்குப் பகைவர்.
உரும் - இடி.
உகரம் சந்தி.
இருசீர் ஓரடி அம்போதரங்கம் - அருமை புறநெறியாளர்க்கு.
அறவன் - அறத்தை அறிவுறுத்துபவன்.
துறவன் - பற்று அற்றவன்.
தகுதியால் பெரியன்.
மற்றும் ஆசிரியனாக உரியன்.
திருமேனியால் பிள்ளை.
உறுதிப் பொருள்களை வழங்குதலால் வள்ளல்.

தனிச்சொல்: எனக் கூறியவாறு சுரிதகம்.
விரகன் - வல்லவன்.
பரசுதும் - துதிப்போம்.
துழனி - ஆரவாரம்.
முகம் - முகப்பு; புறநகர்.
தண்டலை - சோலை.
பணை - வயற் கூட்டம்.
`துழனியையும், திரு முகத்துத் தண்டலையையும், பணையையும் தழீஇக்கற்கள் தொக்கு நிற்கப் பெறும் புரிசையை யுடைய காழி` - என்க.
தார் - மலர்களின் ஒழுங்கு.
புரிசை - மதில்.
`நீதியாக` என ஆக்கம் வருவிக்க.
இஃது ஆசிரியச் சுரிதகம்.
``தமிழ் விரக! காழியர் நாத! ஞானசம்பந்த! - *(நீ)* நின் கருணையை நின் அடியார்க்கு நீதியாக அருளுவோய் எனக் கருதி நின்னை *(யாம்)* ``உதித்தனை; நுகர்ந்தனை; உரைத்தனை; திருமுடி யினை; அளவினை; விளைத்தனை; நவின்றனை; பல பெருமைகளை யுடையவன் நீ`` எனக் கூறியவாற்றால் பரவுதும் - என வினை முடிவு செய்து, `எமக்கும் நின் கருணையை வழங்கியருள்` எனக் குறிப் பெச்சம் வருவித்து முடிக்க.
ஏகாரங்கள் தேற்றப் பொருளவாய்ச் சிறப்புணர்த்தி நின்றன.
கலிப்பாவில் முதற்கண் வரற்பாலதாய தரவு இதன் கண் வரவில்லை.
முதற்கண் தாழிசை வந்ததாயினும், அராகத்தின் நாற்சீர் ஈரடி அம்போத ரங்கம் வரவில்லை; அளவெண் சிற்றெண்களே வந்தன.
இப் பிறழ்ச்சி களால் இக்கலிப்பா மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா ஆயிற்று.
ஆசிரியரைப் பொருளாகக் கொண்டமையால் ஒருபோகும் ஆயிற்று.

எனவே இடர் அகலும் இன்பமே எய்தும்
நனவே அரன் அருளை நாடும் - புனல்மேய
செங்கமலத் தண்தார்த் திருஞான சம்பந்தன்
கொங்கமலத் தண்காழிக் கோ.

#1710

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``புனல் மேய`` என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.
எனவே - என்று வாயால் சொல்லவே.
ஏகாரம், பிரிநிலை ``சொல்லவே`` என்னும் செயவென் எச்சம் காரணப் பொருட்டு.

நனவு - விழிப்பு நிலை.
அது கால ஆகுபெயராய் அதுபொழுது நிகழும் உணர்வைக் குறித்தது.
விழிப்பு நிலையில் உணர்வு அரன் அருளை நாடுதல் உலகப் பற்று நீங்கினார்க்கல்லது இயலாது என்க.
கமல (தாமரை) மலர் மாலை அந்தணர்களுக்கு அடையாள மாலையாகும்.
கொங்கு - பொன்.
அமலம் - தூய்மை.

கோலப் புலமணிச் சுந்தர
மாளிகைக் குந்தள வார்
ஏலப் பொழிலணி சண்பையர்
கோனை இருங்கடல் சூழ்
ஞாலத் தணிபுகழ் ஞானசம்
பந்தன நற்றமிழே
போலப் பலபுன் கவிகொண்டு
சேவடி போற்றுவனே.

#1711

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கோலம் - அழகு.
புல மணி - பல இடங்களிலும் வைத்து இழைக்கப்பட்ட இரத்தினங்கள். `பல மணி` என்பது பாட மாகக் கொள்ளலும் ஆம்.
குந்தளம் - கூந்தல்.
குந்தளப் பொழில், உவமத் தொகை.
`மாளிகைகட்குக் குந்தளம் போல விளங்குகின்ற பொழில்` என்க.
``ஞானசம்பந்தன்`` என்பது இங்கு `அவன்` என்னும் சுட்டுப் பெயர் அளவாய் நின்றது.
``சம்பந்தன`` என்பதில் ஈற்று அகரம் ஆறன் உருபு, `நற்றமிழே போல்வனவாக (எனது பேதைமையால்) நினைத்துக்கொண்டு` என இசையெச்சம் வருவிக்க.
`சேவடியை` என இரண்டன் உருபு விரிக்க.
`யானையைக் கோட்டைக் குறைத்தான்` என்பது போல, `சண்பையர் கோனைச் சேவடியைப் போற்றுவன்` என முதல், சினை இரண்டிலும் இரண்டன் உருபு வந்தது; முதற்கண் ஆறன் உருபு வருதல் சிறப்பு.
``கவிகொண்டு`` என்பது, ``கொண்டு`` என்பது மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு.
அணி புகழ் - அணிவிக்கப்படும் புகழ்.

``இறைவனைத் தமிழால் பாடிய ஆசிரியனை யானும் தமிழால் பாடி உவப்பிக்க நினைக்குங்கால், எனது புன்கவி களையும் யான் அவனது நன்கவிகள் போலக் கருதிக் கொள்ளும் ஓர் பேதமையை உடையேன் ஆயினேன்`` என்பதாம்.
இதனால், இக்கட்டளைக் கலித் துறை ஓராற்றால் இப்பிரபந்தத்தின் தொடக்கமாக அமைகின்றது.

போற்று வார்இடர் பாற்றிய புனிதன்
பொழில்சு லாவிய புகலியர் பெருமான்
ஏற்ற வார் புகழ் ஞானசம் பந்தன்
எம்பி ரான் இருஞ் சுருதியங் கிரிவாய்ச்
சேற்று வார்புனம் காவல் பிரிந்தென்
சிந்தை கொள்வ தும் செயச்தொழி லானால்
மாற்றம் நீர்எமக் கின் றுரை செய்தால்
வாசி யோ குற மாதுநல் லீரே.

#1712

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, அகப் பொருட் களவியலில், தலைவி, தோழி இருவரும் ஒருங்கு இருக்கும் அமையம் நோக்கி, அவர்கள்முன் தலைவன் சென்று அவர்களுடைய ஊரை வினாதல், பேரை வினாதல் முதலியவற்றைச் செய்யும் துறையாகச் செய்யப்பட்டது.
`ஒருநாள், இருநாள் மூன்று நாள்` என இதுகாறும் பிறர் ஒருவரும் அறியாதே களவொழுக்கத்தில் ஒழுகிய தலைவன் பின்னும் அதனை நீட்டிக்கக் கருதினால், `இனி இது துணையின்றி முடியாது` என்னும் கருத்தினால் பாங்கன் துணையையும் பாங்கியின் துணையை யும் பெறுவான்.
அத்துணைகளால் நிகழும் கூட்டம் முறையே `பாங்கற் கூட்டம்` என்றும் பாங்கியிற் கூட்டம் என்றும் சொல்லப்படும்.
அவற்றுள் இது பாங்கியிற் கூட்டத்து, `இருவரும் உள்வழி அவன் வர உணர்தல்` - என்னும் பகுதியாம்.
பாற்றிய - போக்கிய.
இடர் போக்கியதைக் கொங்கு நாட்டில் தீப்பிணி வாராமல் தடுத்தது, தந்தையார்க்கு வேள்வி செய்யப் பொன் அளித்தது முதலியவற்றால் அறிக.
வார் புகழ் - நீண்ட புகழ்.
`ஆர் புகழ்` எனலும் ஆம்.
``எம்பிரான் சம்பந்தன்`` - என்பது சுந்தரர் திருமொழி.

1 `எம்பிரானது சுருதி` எனவும், `அச்சுருதியை உடைய கிரி` *(மலை)* எனவும் கொள்க.
வாய், ஏழன் உருபு.
சேறு - இனிமை; தினையின் இனிமை.
காவல் புரிதலை இங்குக் கிளிகடியும் பாடலால் கவண் எறிதலாகக் கொள்க.
``புனம் காத்தல் உம் தொழிலாக எனக்குத் தெரியவில்லை; இனிய தோற்றத்தாலும், குரலாலும் என் உள்ளத்தைக் கவர்தலே உமது தொழிலாக எனக்குத் தெரிகின்றது`` என்பான்.
``சிந்தை கொள்வது உம் செய்தொழில் ஆனால்`` என்றான்.
``சிந்தை கொள்வது உம் செய்தொழில் ஆனால்`` என்றான்.
``ஆனால்`` என்பது தெளிவின்கண் வந்தது.
மாற்றம் - மறுமொழி.
`மறுமாற்றம்` என்றும் சொல்லப்படும்.
`யான் வினாய வினாவிற்கு உரிய விடை` என்பது பொருள்.
வாசி - மதிப்புக் குறைவு.
குற மாது நல்லீர் - பிறப் பால் குற மகளிராய் உள்ள, அழகுடையவர்களே.
இதனை முதலிற் கொள்க.

நலமலி தரும்புவனி நிறைசெய்புகழ் இன்ப நனி
பனிமதி அணைந்த பொழில்சூழ்
பொலமதில் இரும்புகலி அதிபதி விதம்பெருகு
புனிதகுணன் எந்தம் இறைவன்
பலமலி தரும்தமிழின் வடகலை விடங்கன் மிகு
பரசமய வென்றி அரிதன்
சலமலி தரும்கமல சரண் நினைவன் என்றனது
தகுவினைகள் பொன்றும் வகையே.

#1713

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

புவனி - புவனம்; உலகம் நிறை செய் - நிறைதலைச் செய்கின்ற.
அஃதாவது, நிறைந்த, புகழ், இன்பம், பொழில், மதில் இவை அனைத்தும் புகலிக்கு அடை.
பனி - குளிர்ச்சி.
மதி - சந்திரன்.
இது பொழிலுக்கு அடை.
விதம் பெருகு புனித குணன் - வகைகள் பலவாகிய தூய பண்புகளை

உடையவன்.
இறைவன் - தலைவன்.
பல மலி - பலவாக நிறைந்த.
`பலம் மலி` எனப் பிரித்து, `பயன் நிறைந்த` என்றும் பொருள் கொள்ளலாம்.
`தமிழின் விடங்கன், வடகலை விடங்கன்` எனத் தனித்தனி இயைக்க.
`தமிழின்`` என்பதில் `இன்` சாரியை நிற்க, இரண்டன் உருபு தொக்கது.
விடங்கன் - அழகன்.
பரசமய அரி; (கோளரி - சிங்கம்) வென்றி - வெற்றியை உடைய.
`தன் சரண்` என இயையும்.
சரண் - திருவடி.
சலம் மலி - நீரில் நிறையப் பூக்கின்ற.
``கமல சரண்`` என்னும் உவமத் தொகை வட நூல் முடிபை ஏற்றது.
``புகலி அதிபதி`` முதலாகச் சொல்லப்பட்ட அவனது சரண் களை எனது வினைகள் பொன்றும் வகை நினைவன்` என வினை முடிக்க.
தகுதி, இங்குத் தனக்கே உரிய ஆதல்.
பொன்றுதல் - அழிதல்.
``வகையால்`` என்பதில் தொக்கு நின்ற மூன்றன் உருபு.
`இது பயனாக` என்னும் முதனிலைப் பொருளில் வந்தது.

வகைதகு முத்தமிழ் ஆகரன் மறைபயில் திப்பிய வாசகன்
வலகலை வித்தகன் வானவில் மதிஅணை பொற்குவை மாளிகை
திகைதிகை மட்டலர் வார்பொழில் திகழ் புக லிக்கர சாகிய
திருவளர் விப்ர சிகாமணி செழுமல யத்தமிழ்க் கேசரி
மிகமத வெற்றிகொள் வாரணம் மிடைவரு டைக்குலம் யாளிகள்
விரவிரு ளில்தனி நீள்நெறி வினைதுயர் மொய்த்துள வே மணி
நகைஎழி லிற்குற மா துன தருமை நினைக்கிலள் நீ இவள்
நசையின் முழுப்பழி ஆதல்முன் நணுகல் இனிக்கிரி வாணனே.

#1714

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அகப் பொருள் களவியலில், தலைவனை வரைவு கடாவும் தோழி அதனை நேர் முறையிற் கூறாது, இரவு வருவானை, பகல் வருக எனவும், பகல் வருவானை, `இரவு வருக` எனவும், `ஒரு பொழுதிலும் இங்கு வாரற்க` எனவும் கூறுதற்காக இஃது, ஆறின்னாமை கூறி இரவுக் குறி விலக்கலாகச் செய்யப்பட்டது.
``கிரி வாணனே`` என்பதை, ``கேசரி`` என்பதன் பின்னர்க் கூட்டுக.
கிரி வாணன் - மலை வாழ்நன்; குறிஞ்சி - நிலத் தலைவன்.

ஆகரன் - இருப்பிடம் ஆனவன்.
திப்பிய வாசகன் - தெய்வத் தன்மை வாய்ந்த மொழியை உடையவன்.
அஃதாவது, நிறைமொழி ஐயன்.
``வலகலை வித்தகன்`` என்பதை, `கலை வல வித்தகன்` என மாற்றிக் கொள்க.
`வான வில்லும், மதியும் அணைகின்ற மாளிகை, பொற்குவைகளை யுடைய மாளிகை` என்க.
திகை - திசை.
அடுக்குப் பன்மை பற்றி வந்தது.
மட்டு அலர் - தேனை உடைய மலர்களை உடைய (பொழில்) திரு - திருவருள்.
விப்ர சிகாமணி - அந்தணர்களுக்குத் தலைமணி போன்றவன்.
மலயத் தமிழ் - பொதிய மலையில் தோன்றிய தமிழ்.
தமிழ்க் கேசரி - தமிழைப் பாட வல்ல சிங்கம்.
அரனை, ``அரசு`` என்றது, கேசரி போல்வானை, ``கேசரி`` என்றதும் பான்மை வழக்குக்கள் `வாரணமும், வருடைக் குலமும், யாளிகளும் விரவுகின்ற நீள்நெறி வாரணம் - யானை.
வருடைக் குலம்.
மலையாடுகளின் கூட்டம்.
வருடை, இங்குச் சரபம் ஆகாது, அவ் இனம் கூட்டம் ஆதல் இன்மையால்.
வினை துயர் - உம்மைத் தொகை.
வினை - கொலை வினை.
`விளைதுயர்` என பாடம் கொள்ளுதலுமாம்.
``நெறி - வழி ``நெறி துயர மொய்த்துள`` என, இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேல் ஏற்றப்பட்டது ஏகாரம், தேற்றம் மணி - முத்து மணி.
எழிலின் - அழகினையுடைய.
``குறமாது`` என்றது தலைவியை.
``உனது அருமை`` என்பதற்கு, `உனது கூட்டத்தினது அருமை` என உரைக்க.
`அதனை நினைக்கிலன்` எனவே, `வருதற்கண் உள்ள அருமையே, அஃதாவது இடர்ப்பாட்டினையே நினைக்கின்றாள்` என்பதாம்.
நசை - விருப்பம்.
நைடயின் இனி நணுகல் - விருப்பம் காரணமாக வருதலை இனித் தவிர்வாயாக (சிறிது பழி - அம்பல்) முழுப் பழி - அவர் முழுப் பழி ஆதல் முன் - (அம்பல்) அலர் ஆதற்கு முன்பே.

இவ்வாறு தோழி கூறியதற்குப் பயன், தலைவன் களவொழுக்கத்தை ஒழிந்து வரைவான் ஆதல்.

வாணில வும் புனலும் பயில் செஞ்சடை வண்கரு ணாகரனை
மலைமா துமையொடு மிவனா வானென முன்னாளுரை செய்தோன்
சேணில வும்புகழ் மாளிகை நீடிய தென்புக லிக்கரசைத்
திருவா ளனையெழி லருகா சனிதனை
மருவா தவர்கிளைபோல்
நாணில வும்பழி யோகரு தாதய லானொரு காளையுடன்
நசைதீர் நிலைகொலை புரிவே டுவர்பயில் தருகா னதர்வெயிலிற்
கேணில வுங்கிளி பாவையொ டாயமும் யாயெனை யும்மொழியக்
கிறியா லெனதொரு மகள்போ யுறுதுயர் கெடுவேனறிகிலேனே.

#1715

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு அகப் பொருள் உடன் போக்கில் செவிலி புலம்பல் துறையாகச் செய்யப்பட்டது.

வாள் நிலவு - ஒளியை உடைய திங்கள் *(பிறை)*.

கருணா ஆகரன் - அருளுக்கு இருப்பிடமானவன்.

`உமையொடும் கூடிய இவன்` என ஒரு சொல் வருவிக்க.

``ஆவான்`` என்பதற்கு, `நீவிர் வினாவியவன் ஆவான்` என உரைக்க.

உரை செய்யது தந்தையார்க்கு.

திருவாளன் - திருவருள் கைவரப் பெற்றவன்.

அருக அசனி - சமணர்க்கு இடியை ஒத்தவன்.

கிளை - சுற்றம்.

`நாளும் நிலவும் பதி` என முற்றும்மை விரிக்க.

ஓகாரம், சிறப்பு, நசை - விருப்பம், இரக்கம்.

``நசை தீர் வேடுவர், கொலை புரி வேடுவர்` எனத் தனித் தனி இயைக்க,

``பயில் தரு`` என்பதில் தரு, துணைவினை.

கான் அதர் - காட்டு வழி; பாலை நில வழி.

கேள் - கேளாக; நட்பாக.

பாவை - பதுமை.

ஒடு, எண் ஒடு.

`இது கிளி, ஆயம், யாய்` என்பவற் றோடும் இயைந்தது.

ஆயம் - தோழியர் கூட்டம்.

யாய் - நற்றாய்.

`கிளி முதலாக யாய் ஈறாக உள்ளவர்களையும், எனயும் ஒழிய` என்க.

`பெற்ற தாயினும் வளர்த்ததாய் மறக்கற்பாளலல்லள்` என்பாள்,

``எனையும்`` என வேறு பிரித்துக் கூறினாள்.
`ஒழியப் பண்ணி` என ஒரு சொல் வருவிக்க.
கிறி - வஞ்சனை; தலைவனை உட்கொண்டு, ``கிறியால் எனது ஒரு மகள் போய்`` என்றாள்.
போய் - போயதனால்.
``எனது மகள்`` என உயர்திணை முறைக் கிழமைக்கண் நான்காம் உருபு வாராது, ஆறாம் உருபு வந்தது கால வழக்கு.
கெடுவேன், இரக்க குறிப்பு இடைச்சொல்.
`இதனை அறிகிலேன்` என வேறு வைத்து உரைக்க.
`முன்பு அவள் செய்த குறிகளை உற்று அறியேன் ஆயினேன்` என்பதாம்.

அறிவாகி யின்பஞ்செய் தமிழ்வாதில் வென்றந்த
அமணான வன்குண்டர் கழுவேற முன்கண்ட
செறிமாட வண்சண்பை நகராளி யென்தந்தை
திருஞான சம்பந்த னணிநீடு திண்குன்றில்
நெறியால மண்துன்றி முனைநாள்சி னங்கொண்டு
நிறைவார் புனந்தின்று மகள்மேல் வருந்துங்க
வெறியார் மதந்தங்கு கதவா ரணங்கொன்ற
வெகுளாத நஞ்சிந்தை விறலா னுளன்பண்டே.

#1716

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, அகப் பொருட் களவியலில், தலைவி தலைவனை எய்தப் பெறாமை எவ்வாற்றாலோ நிகழ்ந்தமையின் வேறுபட, செவிலி, `இவள் வேறுபடக் காரணம் என்னை` என வினாவிய வழி அவட்குத் தோழி களிறு தரு புணர்ச்சியால் அறத்தொடு நின்றதுறையாகச் செய்யப்பட்டது.
அறிவாகி - ஞானமாகி.
இன்பம் செய் - வீட்டின்பத்தைத் தருகின்ற தமிழ்.
ஞானசம்பந்தரது தமிழ்ப் பாடல்கள் `தமிழால்` என முன்றாவது விரிக்க.
அமண் - சமண்; இது குழூஉப் பெயர்.
`திருஞான சம்பந்தனது குன்று` என்க.
நெறி ஆல - வழியில் உள்ளார் ஒலம் இட.
மண் - தூசு.
`துன்றுவித்து` என்பது பிறவினை விகுதி.
தொகுக்கப்பட்டு, ``துன்றி`` என வந்தது.
துன்று வித்தல் - அடரச் செய்தல்.

புனம் தின்று - காட்டை அழித்துக் கொண்டு `நின் மகள்மேல்` என்க.
தூங்க வாரணம் - உயரமான யானை.
வெறி- நாற்றம் ``கத வாரணம்`` என்பதில் கதம், இன அடை.
``வெகுளாத`` என்பது, `விரும்புகின்ற` என அதன் மறு தலைப் பொருளைக் குறித்தது.
`விரும்புகின்ற நம் சிந்தை` என்பதை, நம் சிந்தை விரும்புகின்ற` என மாற்றிக் கொள்க.
விறலான் - யானையை வென்ற வெற்றியை உடையவன்.
``நம் சித்தை விரும்பு கின்ற` என்பதனால், ``இனி அவனே நின் மகட்குத் தலைவனாக விரும்பத் தக்கவன்`` என்பதையும் தோழி உடம்பொடு புணர்த்துக் கூறினாள்.
``பண்டே உளன்`` என்றதனால், `அவ்விருவரது நட்பு உறுதியாய் விட்ட ஒன்று` எனக் குறித்தாள்.

பண்டமுது செய்ததுமை நங்கையருள் மேவுசிவ ஞானம்
பைந்தரள நன்சிவிகை செம்பொனணி நீடுகிற தாளம்
கொண்டதர னும்பர்பர னெங்கள்பெரு மானருள் படைத்துக்
கொடுத்ததமி ழைத்தவகு லத்தவர்க ளுக்குலகி லின்பம்
கண்டதரு கந்தர்குல மொன்றிமுழு துங்ககழுவிலேறக்
கறுத்தது வினைப்பயன் மனத்திலிறை காதலது அன்றி
விண்டதுவும் வஞ்சகரை மஞ்சணவு கின்றமணி மாட
வேணுபுர நாதன்மிகு வேதியர்சி காமணி பிரானே.

#1717

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மஞ்சு அணவுகின்ற`` என்பது முதலாகத் தொடங்கி உரைக்க.
மஞ்சு - மேகம்.
அணவுகின்ற - பொருந்துகின்ற.
பிரான் - தலைவன்.
``வேணுபுர நாதனும், வேதியர் சிகாமணியும் ஆகிய பிரான், அமுது செய்தது.
.
.
அருள்மேவு சிவஞானம்; கொண்டது சிவிகை.
தாளம்; தமிழால் தவக் குலத்தவர்களுக்கு இன்பம் கொடுத்தது எங்கள் பெருமான் அருள் படைத்து; கண்டது அருகந்தர் குலம் கழுவில் ஏற; கறுத்தது வினைப் பயன் விண்டது மனத்தில் இறை காதல் அன்றிய வஞ்சகரை`` எனக் கூட்டி வினைமுடிவு செய்க.

``செய்தது, கொண்டது, கறுத்தது வினையாலணையும் பெயர்கள்.
இவை எழுவாயாய் நிற்க, அத்தொழில்களுக்கு உரிய
செயப்படுபொருள்கள் பெயர்ப் பயனிலையாய் நின்றன.
இது செயப்படு பொருளை வினைமுதல் போலக் கூறுவதொரு
வழக்காம்.
கறுத்தது - வெகுண்டது; வெகுண்டு நீக்கியது.
செய்யுளுக்கு ஏற்ப, ``கொடுத்தல்`` எனக் கூறினாரேனும் அதனையும்
ஏனையவற்றோடு இயைய, `கொடுத்தது` என்றே கொள்க.
``படைத்து ஏற`` என்னும் வினையெச்சப் பயனிலையைக் கொண்டன.
``தமிழை`` என்றது, `தமிழால்` என உருபுமயக்கம்.
``விண்டது`` என்னும் தொழிற் பெயர்.
எழுவாய், ``வஞ்சகரை`` என்னும் உருபேற்ற பயனிலையைக்
கொண்டது.
``விண்டதுவும்`` என்னும் உம்மை சிறப்பு.
`அன்றிய` என்பதன் அகரம் தொகுத்தலாயிற்று.
அன்றிய - நீங்கிய.
``காதல் அது`` என்னும் அது, பகுதிப் பொருள் விகுதி.

பிரானை மெய்த்திரு ஞானசம்
பந்தனை மறையவர் பெருமானைக்
குராம லர்ப்பொழிற் கொச்சையர்
நாதனைக் குரைகழ லிணைவாழ்த்தித்
தராத லத்தினி லவனருள்
நினைவொடு தளர்வுறு தமியேனுக்
கிராவி னைக்கொடு வந்ததிவ்
அந்திமற் றினி விடி வறியேனே.

#1718

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, கவுணியர் தலைவர்பால் காதல் கொண்டாள் ஒருத்தி
கூற்றாக - பாடாண் கைக்கிளையாகச் செய்யப் பட்டது.
அக்கைக்கிளையுள் இது கண்படை பெறாது கங்குலை நோதல்
`கழலிணையை` என இரண்டன் உருபு விரித்து, மேல் *(பாட்டு-3)*
``சண்பையர் கோனச் சேவடி போற்றுவன்`` என்றது போலக் கொள்க.
அந்தி - எற்பாட்டுப் பொழுது.
`சிவஞானமே உண்மை மெய்ஞ் ஞானம்` என்றற்கு.
``மெய்த் திரு ஞானம்`` என்றார்.

ஏனமு கத்தவ புத்தரை யிந்திர சித்து மணம்புணர் வுற்றான்

ஈழவ னார்சொரி தொட்டி யினங்களை
வெட்டி யிசித்தனர் பட்டர்
தான மிரக்கிற சீதை மடுப்பது சாதி குடத்தொடு கண்டீர்
சக்கர வர்த்திகள் சிக்கர மட்டுவர் தத்துவம் இப்பரி சுண்டே
ஆன புகழ்ப்பயில் விப்ர சிகாமணி அத்தகு மைப்புரை யுங்கார்
ஆர்பொழில் நீடிய சண்பையர் காவலன்
வண்களி யேனெளி யேனோ
சோனக னுக்குமெ னக்குமெனத்தரை யம்மனை சூலது கொண்டாள்
தும்புரு வாலியை வென்று நிலத்திடை
நின்று துலக்குகிறாரே.

#1719

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

கலம்பக உறுப்புக்களுள் ஒன்றாகிய `களி` என்பது பற்றி வந்தது இப்பாட்டு.

களி - களிப்பு; உணர்வழிந்த மயக்கம்.

கள்ளை உண்டு இவ்வாறான மயக்கத்தை எய்தினோன் கூற்றாக வருவதே `களி` என்னும் உறுப்பு.

அது பொருளுடைக் கூற்றாகவே அமைதல் உண்டு.

ஆயினும் இங்கு இது கள்ளுண்டோன் பிதற்றும் பிதற்றுரையாகவே அமைந்துள்ளது.

அதனால் இப்பாட்டில், ``ஆன புகழ்ப் பயில்.

.

.

.

வண் களியேன் எளியேனோ`` என்னும் பகுதி தவிர, ஏனைய பகுதி முழுதும் பொருள் படாப் பிதற்றுரைகளாம்.

``அத்தகு`` என்பதில் அகரம் பண்டறி சுட்டாய், இயல்பாய் உள்ள சிறப்பினைச் சுட்டிற்று.

மைபோலும் கரிய மேகம்.

ஆர்மலி புகலி நாத
னருளென இரவில் வந்தென்
வார்முலை பயலை தீர
மணந்தவர் தணந்து போன
தேரத ரழிய லும்மைச்
செய்பிழை யெம்ம தில்லை
கார்திரை கனுலி மோதிக்

கரைபொருங் கடலி னீரே.

#1720

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, அகப்பொருட் களவியலில் ஒருவழித் தணந்த தலைமகன் வரவு நீட்டித்தமையால் தலைவி ஆற்றாது அஃறிணைப் பொருள்களை நோக்கிக் கூறும் காமம் மிக்க கழிபடர் கிளவிகளில் கடலை நோக்கிக் கூறியது.

ஆர் - அழகு.

புகலி நாதன், ஆளுடைய பிள்ளையார்.

வார் - கச்சு.

பயலை - பசலை தேர் அதர் - தேர் சென்ற வழி; என்றது அவ்வழியைக் காட்டும் சக்கரப் பதிவுப் பள்ளத்தை.

அழியல் - அழிக்காதே.

இது பன்மை யொருமை மயக்கம்.

கடலுக்கு மக்கள் செய்யும் பிழை அவற்றில் உள்ள முத்து முதலிய விலையுள்ள பொருள்களைக் கவர்ந்து கொள்ளுதல்.

``உம்மை`` என்னும் இரண்டன் உருபை, `உமக்கு` என நான்கன் உருபாகத் திரிக்க.

`எமது` என்பது, ``எம்மது`` என விரித்தல் பெற்றது.

களுலி - நெருங்கி.

கடல்மேவு புவியேறு கவிநீரர் பெருமான்றன்
தடமாடு மிகுகாழி தகுபேதை யருளாமல்
திடமாகி லணிநீறு செழுமேனி முழுதாடி
மடலேறி யெழில்வீதி வருகாத லொழியானே.

#1721

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, அகப்பொருட் களவியல் பாங்கியிற் கூட்டத்துள் பாங்கியை இரந்து அவள் குறை நேராமையால் `மடல் ஏறுவன்` என அச்சுறுத்தும் `மடல் மா கூறுதல்` என்னும் துறையாகச் செய்யப்பட்டது.

மடல் மா - பனை மடலால் செய்யப்பட்ட குதிரை.

தலைவன் ஒருவன் தன்னால் காதலிக்கப்பட்ட தலைவி யொருத்தியை எவ்வாற்றானும் பெற இயலாத நிலை தோன்றினால் அவன் உடலில் சாம்பலை நிறைய பூசிக்கொண்டு எருக்கம் பூ மாலை அணிந்து கொண்டு, தலைவியின் உருவம் எழுதப்பட்ட படத்துடன் பனை

மடலால் செய்யப்பட்ட குதிரைமேல் ஏறி, ``இவள் மேல் யான் வைத்த காதல்` கரை இறந்தமையால் யான் இறக்கின்றேன்`` என்று சொல்லிப் பறையை அடித்துக் கொண்டு தெருக்களில் எல்லாம் சுற்றி வருதல் மடல் ஏறுதல் ஆகும்.

இவ்வாறு ஒருவன் மடல் ஏறி வருவானாயின், `காதல் மிகுதியால் அவன் இறந்து விடுவனா` என்பது பல சோதனை களால் அறியப்படுமாயின் அத்தலைவியை ஊரார் வலிந்து அவனுக்கு மணம் செய்வித்தல் அக்காலத்தில் உலக நீதியாய் இருந்தது.

அதனால், தனக்குக் குறை நேராத தோழியை, ``நின் நிலைமை இதுவாயின், மடல் ஏறுவது தவிர எனக்கு வேறு வழியில்லை`` எனத் தலைவன் கூறி அச்சுறுத்துவான் மடல் ஏறிய தலைவனை ஒருத்தி மணப்பதும், அதற்குப் பெற்றோர், தமையன்மார் இசைவதும் மானம் போனபின் செய்யும் செய்யும் செயலாகவும் அக்காலத்தில் கருதப்பட்டது.

புவி ஏறு கவி நீரர் - நிலவுலகத்தில் மேம்பட்டு விளங்குகின்ற கவிகளைப் பாடும் தன்மையுடைய புலவர்கள்.

`பெருமான்றன் காழி` என இயையும்.

தடம் - தடாகங்கள்.

மாடு - பல பக்கங்கள்.

`மாடு தடம் மிகு காழி` என இயைக்க.

`காழித் தகு பேதை` - என்பதில் சந்தி ஒற்றுச் சந்தத்தின் பொருட்டுத் தொகுக்கப்பட்டது.

பேதை - தலைவி.

அருளாமை - இரங்காமை.

திடம் - திண்ணம்.

நீறு - சாம்பல்.

ஆடி - முழுகி.

வரு காதல் - வர விரும்பும் விருப்பம்.

ஒழியா தின்புறு பொழில்சூழ் சண்பைமன்
உயர்பார் துன்றிய தகுஞா னன்புகழ்
எழிலா ருங்கவு ணியர் தீ பன்திகழ்
இணையார் செங்கரன் நிகழ்வான் விண்குயின்
பொழியா நின்றன துளிதார் கொன்றைகள்
புலமே துன்றின கலைமா னொன்றின
பழிமேல் கொண்டது நுமர்தே ரன்பொடும்
அருகே வந்தது அதுகாண் மங்கையே.

#1722

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு அகப்பொருள் கற்பியலில் பருவம் குறித்துப் பிரிந்து சென்ற தலைவன் வாராது நீட்டிக்கப் பருவம் கண்டு ஆற்றாளாய தலைமகளுக்குத் தோழி தலைவன் குறித்த பருவத்தே வந்தமை கூறிய துறையாகச் செய்யப்பட்டது.
மன் - தலைவன்.
உயர் பார் - உயர்ந்ததாகிய வீட்டுலகம்.
துன்றிய ஞானம் - அதனை அடைதற்கு ஏதுவாய் உள்ள உணர்வு.
``செங்கரன்`` என்பதற்கு, `தாளம் ஏந்திய சிவந்த கைகளை உடையவன்` என உரைத்து, நிகழ்வான் - இனிது வளர்தற் பொருட்டு (க் குயின் துளி பொழியா நின்றன).
குயின் - மேகம்.
`மேகம் பொய்யாது பொழிதல் நல்லவர் வாழ்தற் பொருட்டு` என்பர் ஆதலின், `ஞானன் நிகழ்வான் குயின் துளி பொழியா நின்றன` என்றார்.
தார்க் கொன்றைகள் - மாலை போலப் பூக்கின்ற கொன்றை மரங்கள் - இவை கார்க் கொன்றை.
புலம் - நிலம்; முல்லை நிலம் `புலத்தின் கண்` என ஏழாவது விரிக்க.
துன்றின - பூக்கள் நெருங்கப் பெற்றன.
`கலை மான்கள் - பிணை மான்களோடு ஒன்றின` என்க.
`இவையெல்லாம் நிகழ்ந்தும் குறித்த வண்ணம் வந்திலது` என்னும் பழியைக் கொண்டதாகிய நமரது (நம் தலைவரது) தேர் அன்பொடும் அருகே வந்தது; மங்கையே! அது காண் என்க.
``வந்தது`` என்பதன் ஈற்றுக் குற்றிய லுகரம் முற்றிய லுகரம் ஆயது செய்யுளியல்பு.

மங்கை யிடத்தர னைக்கவி
நீரெதி ரோட மதித்தருள்செய்
தங்கு புகழ்ச்சதுர் மாமறை
நாவளர் சைவசி காமணிதன்
துங்க மதிற்பிர மாபுரம் மேவிய
சூல்பொழில் நின்றொளிர்மென்
கொங்கை யுடைக்கொடி யேரிடை
யாள்குடி கொண்டன ளெம்மனமே.

#1723

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, அகப்பொருட் களவியலில் பாங்கற் கூட்டத்தில் தன்னை உற்றது வினாவிய பாங்கனுக்குத் தலைவன் ``உற்றது உரைத்தல்`` என்னும் துறையாகச் செய்யப்பட்டது.
`மங்கையை இடத்துக் கொண்ட அரன்` என்க.
``அருள் செய்து`` என்பது, `பாடி` என்னும் பொருட்டாய், ``அரனை`` என விரிந் தும், ``கவி`` என்பதில் தொக்கும் நின்ற இரண்டன் உருபுகட்கு முடிபாயிற்று.
மதித்து - நிச்சயித்து நீர் எதிர் ஓடக் கவி அருள் செய்தது சமணரொடு செய் வாதத்தில்.
`அருள் செய் சைவ சிகாமணி` என இயைக்க.
``கொடியேர்`` என்பதில் ஏர், உவம உருபு.

மனங்கொண்டு நிறைகொண்டு கலையுங் கொண்டு
மணிநிறமு மிவள் செங்கை வளையுங் கொண்ட
தனங்கொண்ட பெருஞ்செல்வம் திகழுங் கீர்த்திச்
சண்பையர்கோன் திருஞான சம்பந் தற்கு
நனங்கொண்டு மெய்கொண்டு பயலை கொண்டே
நன்னுதலா ளயர்கின்றாள் நடுவே நின்றும்
இனங்கொண்டு நகைகொண்டு மடவீர் வாளா
என்செயநீ ரலர்தூற்றி எழுகின் றீரே.

#1724

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டுப் பாடாண் கைக்கிளையில் தலைவியை ஆற்றுவிக்கும் தோழி அவர் அறிவித்தலை அயற் பெண்டிரை நோக்கிக் கூறும் முன்னிலைப் புறமொழியாகச் செய்யப்பட்டது.
``இவள் என்பதை முதலிற் கொள்க.
மனம், நிறை.
(நிலை கலங்காமை) கலை (உடை) மணி நிறம் (அழகிய நிறம்) கை வளை இவைகளைக் கவர்ந் தவன் சண்பையர் கோன்.
சண்பை நகர் தனத்தை (கைப் பொருளை)க் கொண்ட பெருஞ் செல்வத்தையும்.
கீர்த்தியையும் உடையது.
சம்பந்தன் பொருட்டாக.
நனம் கொண்டு - அகலம் பொருந்தி.
நடுவே- சண்பையர் கோனுக்கும் இவளுக்கும் இடையிலே.
``நின்றும்`` என்னும் உம்மை சிறப்பு.
இனம் - கூட்டம் ``மடவீர்`` என்பதை, ``அயர் கின்றாள்`` என்பதன்

பின்னர்க் கூட்டுக.
எழுகின்றீர் - திரிகின்றீர்கள்.

எழுகுல வெற்பிவை மிடறி லடக்குவன்
எறிகட லிற்புனல் குளறிவ யிற்றினில்
முழுது மொளித்திர வியையிந்நிலத்திடை
முடுகுவ னிப்பொழு திவையல விச்சைகள்
கழுமல நற்பதி யதிப தமிழ்க்கடல்
கவுணிய நற்குல திலக னிணைக்கழல்
தொழுது வழுத்திய பிறரொரு வர்க்குறு
துயர்வரு விப்பனி தரியதொர் விச்சையே.

#1725

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`சம்பிரதம்` - என்பது கலம்பக உறுப்புக்களில் ஒன்று.
இது `சித்து` என்றும் சொல்லப்படும்.
இஃது, `உலகர் வியக்கத் தக்க அற்புதங்களைச் செய்து காட்ட வல்லோம்` எனச் சாலவித்தை காட்டுவோர் கூறும் கூற்றாகச் செய்யப்படும்.
நிலத்தில் ஏழு தீவுகளைச் சூழ்ந்துள்ள ஏழு மலைகள் `குலாசலம்` என்று சொல்லப்படும்.
நாவலந் தீவின் எட்டுத் திசைகளில் உள்ள மலைகளும் அவ்வாறு சொல்லப்படும்.
மிடறு - கழுத்து; தொண்டை.
குளறுதல் - குழப்பிச் சேறாக்குதல்.
இரவி சூரியன்.
முடுகுவன் - விரைந்து வீழச் செய்வேன்.
விச்சைகள் - வித்தைகள்.
``ஏழு குலமலைகளையும் என் தொண்டைக்குள் அடக்கு வேன்; கடல் நீரைக் கலக்கிச் சேறாக்கிக் குடித்து, அதன்பின் கடலில் தோன்றி மறையும் சூரியனைப் பூமியிலே (கிழக்கும், மேற்குமாக) உலாவச் செய்வேன்; இப்பொழுது இவைகளை ஒரு திறமையாக நான் குறிப்பிடவில்லை.
கவுணியர் திலகன் இணைக் கழலைத் தொழுது துதித்த பின்பும் ஒருவருக்குத் துன்பம் வருவிப்பேன்.
நான் இதுதான் குறிப்பிட விரும்பிய அரிய வித்தை.
இவ்வாறு சொல்லப்படுவதை உண்மையோடு பொருந்திய சிலேடை யாகச் செய்வது உண்டு.

இங்கு அவ்வாறில்லை.
`மிடற்றில்` என இரட்டி வந்து ஒற்றுச் சந்தம் பற்றித் தொகுக்கப்பட்டது.

சயமி குத்தரு கரைமு ருக்கிய தமிழ்ப யிற்றிய நாவன்
வியலி யற்றிரு மருக லிற்கொடு விடம ழித்தருள் நீதன்
கயலு டைப்புனல் வயல்வ ளத்தகு கழும லப்பதி நாதன்
இயலு டைக்கழல் தொழநி னைப்பவ ரிருவி னைத்துயர் போமே. *#1726*

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

முருக்கிய தமிழ் - வாதில் வென்று அழித்த தமிழ்ப் பாடல்.
வியல் இயல் - இடம் அகன்ற இயல்பை உடைய.
நீதன் - நீதியை உடையவன்.
இயல் - அழகு.

மேதகுந் திகழ்பூக நாகசண் பகசூத
வேரிவண் டறைசோலை யாலைதுன் றியகாழி
நாதனந் தணர்கோனெ னானைவண் புகழாளி
ஞானசுந் தரன்மேவு தார்நினைந் தயர்வேனை
நீதியன் றினபேசும் யாயுமிந் துவும்வாசம்
நீடுதென் றலும்வீணை யோசையுங் கரைசேர
மோதுதெண் திரைசேவல் சேருமன் றிலும்வேயும்
மூடுதண் பனிவாடை கூடிவன் பகையாமே.
#1727

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, பாடாண் கைக்கிளையுள் தலைவி இரவு நீடு பருவரலின் வகையாகிய திங்கள் முதலிய இனியனவற்றை இன்னாதனவாகக் கண்டு நோதல் துறையாகச் செய்யப்பட்டது.
மேதகு - மேன்மை தக்கிருக்கின்ற.
பூகம் - பாக்கு மரம்.
நாகம் - புன்னை மரம்.
சூதம் - மாமரம்.
பூகம் முதலிய நான்கும் உம்மைத் தொகை `இவைகளையுடைய சோலை` என்க.
வேரி - தேன்.
ஆலை - கரும்பு ஆலை.
துன்றிய - நெருங்கிய.
தார் - மாலை.

``அயர் வோனை`` என்னும் இரண்டன் உருபை நான்கன் உருபாகத் திரிக்க.
நீதி அன்றின - நியாயத்தோடு மாறுபட்ட சொற்கள் அவை தக்க தலைவனைக் காணின் கன்னியர்க்கு மனம் செல்லும் என்பதை அழித்துச் சொல்லும் சொற்கள்.
யாய் - என் தாய்.
இந்து - திங்கள்.
வாசம் - நறுமணம்.
திரை - கடல் அலை.
சேவல் சேரும் அன்றில் - அது, சேவலை அழைக்கும் குரலைக் குறித்தது. ஆகுபெயர்.
வேய் - வேய்ங்குழல்.
மாலையில் இஃது ஆயரால் ஊதப்படுவது.
கூடி - இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து.
``திரை, வாடை`` என்பவற்றிலும் எண்ணும்மை விரிக்க.
தென்றலையும் வாடையையும் ஒருங்கு கூறியது, `தென்றற் காலத்தில் தென்றலும் பகையாகின்றது; வாடைக் காலத்தில் வாடையும் பகையாகின்றது` என்றபடி.

வன்பகை யாமக் குண்டரை வென்றோய்
மாமலர் வாளிப் பொருமத வேளைத்
தன்பகை யாகச் சிந்தையுள் நையும்
தையலை யுய்யக் கொண்டருள் செய்யாய்
நின்புகழ் பாடிக் கண்பனி சோரா
நின்றெழில் ஞானா என்றகம் நெக்கிட்
டன்பக லாமெய்ச் சிந்தைய ரின்பாம்
அம்பொழில் மாடச் சண்பையர் கோவே.

#1728

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, பாடாண் கைக்கிளையுள் தலைவிக் குரிய தூதாகிச் சென்ற தோழி கூறும் `தூதிடையாடல்` என்னும் துறை யாகச் செய்யப்பட்டது.
``நின்புகழ் பாடி`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.
``நின்புகழ் பாடி.

.

.

.

மெய்ச் சிந்தையர்`` எனப் பட்டார் ஞானசம்பந்தர்க்கு அன்பராய

நல்லோர்.
`இன்பாம் கோ` என இயைத்து, `அவர் இன்புறுதற்குத் துணையாம் தலைவனே` என உரைக்க.

கோவின்திரு முக மீதொடு வருதூதுவ ஈரக்
குளிர்பைம்பொழில் வள நாடெழில் நிதியம்பரி சம்மீ
மாவீரிய ரிவர் தங்கையென் மகுடன்திற ம் அமண
மறவெங்குல மறிகின்றிலன் பழியச்சத வரசன்
பாவேறிய மதுரத்தமிழ் விரகன்புக லியர்மன்
பயில்வண்புக ழருகாசனி பணியன்றெனின் நமர்காள்
தூவேரியை மடுமின் துடி யடிமின்படை யெழுமின்
தொகுசேனையு மவனும்பட மலையும்பரி சினியே.

#1729

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

`மறம்` என்பதும் கலம்பக உறுப்புக்களுள் ஒன்று.
இது தம்மை மதியாது தம் மகளை எளிதில் தனக்குக் கொடுக்கும்படி ஓலை கொடுத்து விடுத்த தூதனைக் கண்டு மறவர் மறக் குடியில் பிறந்தோர் சினந்து கூறும் கூற்றாகச் செய்யப்படும்.
`காஞ்சி` என்னும் புறத் திணையுள் இது `மகட்பாற் காஞ்சி` என்னும் துறையாம்.
மறக் குடியாவது வழிவழியாகப் படைவீரராகும் தொழிலையுடைய குடி.
கோவின் திருமுகம் - அரசன் விடுத்த ஓலை.
மீதொடு வரு தூதுவ- அஃது உன தலை மேற் காணப்பட வருகின்ற தூதனே.
இவர் மா வீரியர் - இங்குள்ளார் பெரிய வீரர்கள் இவர் தங்கை பரிசம் - இவர்களுக்குத் தங்கையாகிய இவளுக்குப் பரிசமாவன *(*பரிசம் - மண் கொள்வார் அதன் பொருட்டு மணப் பெண் வீட்டாருக்குத் தரும் பொருள்*)* ஈரக் குளிர் பைம்பொழில்களை யுடைய வளநாடும் எழில் விளங்கும் நீதிக் குவையும் ஆகும்.
ஈ - இவைகளை நீ இப்பொழுதே கொடு.
மகுடன் திறமண அம் என் - முடியரசனாகிய உம் வேந்தன் கூற்றில் நிகழ்த்தும் மணவினையின் அழகு என்னே*!* (ஓர் ஓயும், தூதுவனுந் தானே*?)* பழிபச் சத அவ் அரசன் மற வெங்குலம் அறிகின்றிலன் - பழியை நிலையாகப் பெற்றுள்ள அரசன், `மறவர் களது கொடிய குலம் எத்தன்மையது` என்பதை அறிகின்றிலன்.
``*(*இவ் வோலை*)* தமிழ் விரகனும், அருகாசனியுமாகிய சம்பந்தனது ஆணை ஓலை அன்று என்பது தெளிவாதலால், நமர்காள்*!* தூ ஏரியை

மடுமின் - இப்பொழுதே இவ்வரசனது நாட்டில் உள்ள தூய நீர்தேங்கும் ஏரிகளைத் தூர்மின்! துடி (பறைகளை அடிமின்! படை எழுமின்! தொகு சேனையும், அவ் அரசனும் ஒரு சேர அழியும் படி போர் புரியும் நிலைமைதான் இனி.
(வேறு எதுவும் இல்லை.
) என உரைக்க.
``பழி அச்சத அரசன்`` என்பதில் அகரச் சுட்டினை, ``அரசன்`` என்பதனோடு புணர்க்க.
சதம் - நிலைத் திருத்தல் `பழி நிலைபெற்ற அவ் அரசன்`` என்க.

இனியின் றொழிமினிவ் வெறியும் மறியடு
தொழிலும் மிடுகுர வையுமெல்லாம்
நனிசிந் தையினிவள் மிகவன் புறுவதொர்
நசையுண் டதுநரை முதுபெண்டீர்
புனிதன் புகலியர் அதிபன் புனைதமிழ்
விரகன் புயமுறு மரவிந்தம்
பனிமென் குழலியை யணிமின் துயரொடு
மயலுங் கெடுவது சரதம்மே.

#1730

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, பாடாண் திணைக் கைக்கிளையுள் தலைவியது ஆற்றாமையால் தோன்றிய வேறுபாட்டினைச் செவிலி யும், நற்றாயும் தெய்வத்தான் ஆயதாகக் கருதி வேலனை வருவித்து வெறியாடுவிக்கத் தோழி உண்மை உரைப்பாளாய் வெறிவிலக்கிய துறையாகச் செய்யப்பட்டது.
``நரை முது பெண்டீர்`` என்பதை முதலிற் கொள்க.
வெறி - வெறியாடுதல்.
மறி அடு தொழில் - யாட்டைப் பலியிடும் தொழில்.
குரவை - தெய்வத்திற்குக் குரவையாடுதல்.
இதனைச் சிலப்பதிகாரத்து ஆய்ச்சியர் குரவை முதலியவற்றான் அறிக.
வெறி முதலிய ``இவைகளை இன்று இனி (இப்பொழுதே) ஒழிமின்`` எனக் கூட்டுக.
நசை - விருப்பம்.
அரவிந்தம் தாமரை.
அஃது அதன் மலரால் ஆகிய மாலையைக் குறித்தது.
இரண்டன் உருபு அணிதல் தொழிலினும் வரும் ஆதலலால், ``குழலியை அணிமின்`` என்றாள்.

சரதம் - உண்மை `இவள் உறுவது ஓர் நசை உண்டு; அது தமிழ் விரகன் புயம் உறும் அரவிந்தம் (அதனைக்) குழலியை அணிமின்` என முடிக்க.

சரத மணமலி பரிசம் வருவன
தளர்வில் புகலிய ரதிபன் நதிதரு
வரத ணணி தமிழ் விரகன் மிகுபுகழ்
மருவு சுருதிநன் மலையி னமர்தரு
விரத முடையைநின் னிடையி னவள்மனம்
விரைசெய் குழலியை யணைவ தரிதென
இரதம் அழிதர வருதல் முனமினி
யெளிய தொருவகை கருது மலையனே.

#1731

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு அகப் பொருட் களவியலில் தலை வனைத் தோழி வரைவு கடாதற்கண் பிறர் வரைவு உணர்த்திய துறை யாகச் செய்யப்பட்டது.
``மலையனே`` என்பதை முதலிற் கொள்க.
மலையன் - வெற்பன்; குறிஞ்சி நிலத் தலைவன் மண மலி பரிசம் வருவன சராதம் - தலைவியை வரைந்து கொள்ளுதற்கு உரிய மிகுந்த பரிசப் பொருள்கள் வருவன ஆயினமை உண்மை.
(அதனால்) தமிழ் விரகன் மலையின் அமர்தரு விரதம் உடையை நின் இடையின் அவள் மனம் - ஞானசம்பந்தனது மலையின்கண் விருப்பம் வைத்தலையே விரதமாக உடைய நின்னைப் பற்றி அவளது (தலைவியது) மனத்தில் எழுந்துள்ள எண்ணம் விரை செய் குழலியை அணைவது அரிது என- `இனித் தலைவன் தன்னைச் சேர்தல் இயலாது` என்பதாய் இருத்தலால்.
அழிதர இரதம் வருதல் முனம் எளியது ஒருவகை இனி கருது - அவள் இறந்து படும்படி அயலாரது தேர் இங்கு வந்து சேர்தற்கு முன்பு எளிதில் அதை மாற்றுதற்கு ஒரு வழியை நீ இப்பொழுதே எண்ணி முடிப் பாயாக.
அதி தரு வரதன் - மிகுதியாகத் தரும் வரத்தை உடையவன்.
சுருதி - தமிழ் மறை.
அமர் - அமர்தல்; விரும்புதல்; முதனிலைத் தொழிற் பெயர்.
``விரை செய் குழலி`` என்பது தோழி கூற்றாய் ``அவள்`` எனப்பட்டவளையே குறித்தது.
``ஞானம் தமிழ்`` என்பதில் சந்தி ஒன்றுச் சந்தம் நோக்கித் தொகுக்கப்பட்டது.

அயன்நெடிய மாலுமவ ரறிவரிய தாணுவரன்
அருளினொடு நீடவனி யிடர்முழுது போயகல

வயலணிதென் வீழிமிழ லையின்நிலவு காசின்மலி
மழைபொழியு மானகுண மதுரன்மதி தோய்கனக
செயநிலவு மாடம்மதில் புடை தழுவு வாசமலி
செறிபொழில்சு லாவிவளர் சிரபுரசு ரேசன்முதிர்
பயன்நிலவு ஞானதமிழ் விரகன்மறை ஞானமுணர்
பரமகுரு நாதன்மிகு பரசமய கோளரியே.

#1732

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``சுரேசன், தமிழ் விரகன், பரம குருநாதன், பரசமய கோளரி`` என்னும் ஒரு பொருட் பல பெயர்களை எழுவாயாக வைத்து, ``மான குண மதுரன்`` என்பதைப் பயனிலையாக்கி முடிக்க.
இது, ஞானசம்பந்தர் திருவீழிமிழலையில் படிக் காசு பெற்றுப் பஞ்ச காலத்தில் மக்களுக்கு உணவு அளித்துக் காத்த சிறப்பினைக் கூறியது.
`தாணுவாகிய அரன்` என்க.
தாணு - (நெருப்புத்) தூண்.
``அருளினோடு`` என்பதில் ஒடு உருபு கருவிப் பொருளில் வந்தது.
கனம் - பொன்.
இது மாடத்திற்கும் `மதிலுக்கும் அடை` அவனி - உலகம்.
நிலவு - ஒளி வீசுகின்ற.
காசின்- பொற் காசினால்.
மலி மழை - மிக்க மழை.
மான குணம் - பெருமை வாய்ந்த பண்பு.
மதுரன் - இனியவன்.
மதி, சந்திரன் செயம் - வெற்றி சிரபுரம் - சீகாழி.
சுரேசன் - பூசுரர் தலைவன்.
`ஞானத் தமிழ்` என்பதில் சந்தித் தகர ஒற்றுச்சந்தம் நோக்கித் தொகுக்கப்பட்டது.

அரியாருங் கிரிநெறியெங் ஙனம் நீர் வந்தீர்
அழகிதினிப் பயமில்லை யந்திக் கப்பால்
தெரியாபுன் சிறுநெறிக ளெந்தம் வாழ்விச்
சிறுகுடியின் றிரவிங்கே சிரமம் தீர்ந்திச்
சுரியார்மென் குழலியொடும் விடியச் சென்று
தொகுபுகழ்சேர் திருஞான சம்பந் தன்றன்
வரியாரும் பொழிலுமெழில் மதிலுந் தோற்றும்
வயற்புகலிப் பதியினிது மருவ லாமே.

#1733

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, அகப்பொருள் உடன் போக்கில் தலைவன் தலைவியரைச் சுரத்திடைக் கண்டோர் பொழுதும் வழியும் கடிய வாதலைக் கூறிச் செலவு விலக்கிய துறையாகச் செய்யப்பட்டது.
அரி ஆரும் கிரி நெறி - சிங்கங்கள் நெருங்கியுள்ள இம் மலை வழியில் ``தனித்து எங்ஙனம் வந்தீர்`` என்க.
``அழகிது`` என்றது இகழ்ச்சிக் குறிப்பு இனிப் பயம் இல்லை - இப்பொழுது அச்சம் இல்லை (ஆயினும் இனி) அந்திக்கு அப்பால் இடர் நிறைந்த சிறிய கொடி வழிகள் கண்ணிற்குப் புலப்படா.
வாழ்வு இடம் - வாழும் ஆகிய.
``இங்கே குழலியொடும் சிரமம் தீர்ந்து, விடியச் சென்று புகலிப் பதி இனிது மருவலாம்`` என முடிக்க.
விடிதலுக்கு `பொழுது` என்னும் எழுவாய் வருவிக்க.

ஆமாண்பொன் கூட்டகத்த வஞ்சொ லிளம் பைங்கிளியே
பாமாலை யாழ் முரியப் பாணழியப் பண்டருள்செய்
மாமான கந்தரன்வண் சம்பந்த மாமுனியெம்
கோமான்தன் புகழொருகா லின்புறநீ கூறாயே
கொச்சையர்கோன் தன்புகழ்யா னின்புறநீ கூறாயே. <br #1734

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டுப் பாடாண் கைக்கிளையுள் தலைவி தனது ஆற்றாமையால் அஃறிணைப் பொருள்களை நோக்கிக் கூறும் காமம் மிக்க கழிபடர் கிளவிகளுள் தான் வளர்க்கும் கிளியொடு கூறலாகச் செய்யப்பட்டது.
கிளி பேசுந் தன்மை உடையதாதல் பற்றிக் காமம் மிக்க கழிபடர் கிளவிகளுள் இது சிறிது பயன் உடையதாகக் கொள்ளப்படுகின்றது.
`மாண் பொன் ஆம் கூடு` என மாற்றி, `பொன் னால்` என ஆல் உருபு விரிக்க.
கூட்டு அகத்த - கூட்டினுள்ளே இருக் கின்ற அம்சொல் - அழகிய சொல்லைப் பேசுகின்ற.
யாழ் முரியும்படி பாணர் வருந்தும்படியும் பண்டு பாமாலை (தேவாரம்) அருளிச் செய்த மா (பெரிய) மானம் (பெருமை) உடைய சம்பந்தன்` என்க.
கொச்சை- சீகாழி.
``பாணர்`` எனற்பாலது, ``பாண்`` எனக் குடிப் பெயராகக் கூறப் பட்டது.
பாணர் - வருந்தும்படியும் பண்டு பாமாலை (தேவாரம்) அருளிச் செய்த

மா (பெரிய) மானம் (பெருமை) உடைய சம்பந்தன்` என்க.
கொச்சை - சீகாழி.
``பாணர்`` எனற்பாலது, ``பாண்`` எனக் குடிப் பெயராகக் கூறப்பட்டது.
பாணர் - திருநீலகண்ட யாழ்ப்பாணர்.
இவர் தமது யாழைத் தாமே முரிக்க முயலும்படி ஞானசம்பந்தர் பாடல் பாடினமையைத் திருத்தொண்டர் புராணத்துட் காண்க.
ஈற்றடி நீண்டு வந்தமையால் இது கலித் தாழிசையாயிற்று.

கூற தாகமெய் யடிமை தானெனை யுடைய
கொச்சையார் அதிபதி
வீற தார்தமிழ் விரகன் மேதகு புழி னானிவன் மிகுவனச்
சேற தார்தரு திரள்க ளைக்கன செழுமு லைக்குரி யவர்சினத்
தேறு தானிது தழுவி னாரென இடிகொள் மாமுர சதிருமே.

#1735

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, அகப் பொருள் களவியலில் தலைவன் தோழியைக் குறையிரந்தவிடத்துத் தோழி அவனை மறுத்துச் சேட் படுக்கும் வகைகளுள் தலைவியது அருமை சாற்றற்கண் `இவளது பெற்றோர் இவளை ஏறு தழுவியவர்க்குக் கொடுப்பதாகச் சொல்லிய படி பறைமுழங்குகின்றது` எனப் படைத்து மொழி கூறிச் சேட்படுத் தாகச் செய்யப்பட்டது.
ஏறு தழுவியவர்க்கு மகளைக் கொடுத்தல் முல்லை நில வழக்கு.
கூறு - பங்கு.
`என்னைத் தன் பங்கில் சேரும் வண்ணம் மெய்யடிமையாக உடைய அதிபதி` என்க.
`புகழினான் ஆகிய இவனது வனத்தின்கண்` என உரைக்க.
வனம் - காடு; முல்லை நிலம்.
சேறு - சந்தனக் குழம்பு.
திரள் - திரண்ட கணை - அழகு.
``செழு முலை`` என்பது சினையாகு பெயராய்த் தலைவியைக் குறித்தது.
`செழு முலைக்கு உரியவன் ஏறு இது தழுவினார்` என முரசு அதிரும் என்க.
`அது` இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள்.
`தான்` இரண்டும் அசைகள்.

சதுரன் புகலிய ரதிபன்கூர்
தவசுந் தரகவு ணியர்தஞ்சீர்
முதல்வன் புகலிய ரதிபன்தாள்

முறைவந் தடையலர் நகரம்போல்
எதிர்வந் தனர்விறல் கெடவெம்போர்
எரிவெங் கணைசொரி புரிமின்கார்
அதிர்கின் றனஇது பருவஞ்சே ரலர்தம்
பதிமதி லிடிமின்னே.

#1736

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, புறப்பொருளில் உழிஞைத் திணை முற்று முதிர்வுத் துறையைப் படைத் தலைவன் கூற்றாக்கிச் செய்யப் பட்டது.
முற்று முதிர்வாவது கோட்டையை அணுகி முற்றுகையிட்ட படைகள் அம்முற்றுகையை வலுப் பெறச் செய்தலாம்.
சதுரன் - திறல் உடையன்.
கூர் தவ சுந்தரம் - மிகுந்த தவமாகிய அழகு; (குல ஒழுக்கம்)
`கவுணியர்தம்` முதல்வன் என இயையும்.
தாள் முறை வந்து அடையலர், திருவடி முறையாக வந்து அடையாதவர்கள் `நகரம் போல் ஆக என ஒரு சொல் வருவிக்க.
``ஆக`` என்பது ``சேரலர்தம் பதி`` எனப்பின் வருவதைக் குறித்தது.
சேரலர் - பகைவர்.
எதிர் வந்தனர் - எதிரில் போராட வந்தவர்கள்.
விறல் வெற்றி கெட - அழியும் படி `போரில்` என ஏழாவது விரிக்க ``கமை சொரிமின்; மதில் இடமின்`` எனப் படைத் தலைவன் படைஞரை ஏவினான்.
`இடிமினே` என வரற்பாலது, சந்தம் நோக்கி ``இடமின்னே`` என விரித்து வந்தது.
கார் - மேகம்.
``இது பருவம்`` என்றது, `பருவ நிலை வந்தது.
இது வாயினும் அது பற்றிச் சோர்தல் கூடாது` என்றபடி.
மருதத்திணைக் கும், நெய்தல் திணைக்கும் பெரும்பொழுது வரைவின்மையால் மருதத்துப் புறனாகிய உழிஞைக்கு இங்குக் கார்ப் பருவம் வந்தது.
முன் பாட்டின் இறுதிச் சொல் ``அதிரும்`` என்பதேயாயினும் சந்தி வகையால் ``சதிரும்`` என வந்தமையால் அஃதே பற்றி இப்பாட்டு, ``சதுரன்`` எனத் தொடங்கிற்று.
இப்பாட்டுள் ``புகலியர் அதிபன்`` என்பது இருமுறை வந்துள்ளது.
அஃது, ஏடு பெயர்த்து எழுதினோரது நினைவுக் குறைவால் ஏற்பட்டதாகும்.

மின்னு மாகத் தெழிலி யுஞ்சேர்
மிகுபொன் மாடப் புகலி நாதன்
துன்னும் ஞானத் தெம்பி ரான்மெய்த்
தொகைசெய் பாடற் பதிக மன்னாள்
பொன்னும் மாநல் தரள முந்தன்
பொருக யற்கண் தனம்நி றைத்தாள்
இன்னு மேகிப் பொருள் படைப்பான்
எங்ங னேநா னெண்ணு மாறே.

#1737

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, அகப்பொருள் கற்பியலில் பொருள் வயிற் பிரியக் கருதிய தலைவன் அதனை யறிந்து தலைவி ஆற்றா ளாயது கண்டு செலவழுங்கிக் கூறிய துறையாகச் செய்யப்பட்டது.

மாகத்து மின்னும் எழிலி - வானத்தின்கண் மின்னலை வீசுகின்ற மேகம். உம்மை, சிறப்பு.

தலைவியது அருமைக்கு ஞானசம்பந்தரது திருப்பதிகத்தின் அருமையை உவமையாகக் கூறினான்.

அருமை - பெறுதற்கு அருமை.

``அத்தகையாள் இறந்து பட நான் பிரிதல் எங்ஙனம்`` என்றான்.

``தலைவி தன் தனங்களில் பொன்னையும், கண்களில் தாளத்தையும் (முத்துக்களையும்) நிறைத்தாள் என்க.

பொன் - பசலை நிறம்.

முத்து - கண்ணீர்.

எதிர் நிரல் நிறை.

``பொன்னும் முத்தும் இங்கே நிரம்பக் கிடைத்துவிட்ட பின்பு, பொருள் தேட முயல்வது எற்றுக்கு`` என்பான், ``இன்னும் ஏகிப் பொருள்படைப்பான்`` என்றான் படைப்பான், பான் ஈற்று வினையெச்சம்.

மாறி லாத பொடிநீ றேறு கோல வடிவும்
வம்புபம்பு குழலுந் துங்க கொங்கை யிணையும்
ஊறி யேறு பதிகத் தோசை நேச நுகர்வும்
ஒத்து கித்து நடையுஞ் சித்த பத்தி மிகையும்
வீற தேறும் வயல்சூழ் காழி ஞான பெருமான்
வென்றி துன்று கழலி னொன்றி நின்ற பணியும்
தேறல் போலும் மொழியும் சேல்கள் போலும் விழியும்
சிந்தை கொண்ட பரிசும் நன்றி மங்கை தவமே.

#1738

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, அகப்பொருட் களவியல் பாங்கற் கூட்டத்துள், தலைவன், பாங்கனுக்குத் `தலைவியது இடம், இயல்பு இவை` எனக் கூறும் துறையாகச் செய்யப்பட்டது.
``வீறது ஏறும், வயல் சூழ் காழி ஞான பெருமான்`` என்பதை முதலில் வைத்து, அதனை ``நீறு, பதிகம், பத்தி கழல்`` என்பவற்றோடு இயைக்க.
மாறு இலாத பொடி - விதிகட்கு மாறு பாடாப் பொடியாக அமைக்கப்பட்ட நீறு கோலம், திரு நீற்றை அணிந்த அழகு.
வம்பு பம்பு - நறுமணம் மிகுந்த.
இந்நறு மணம் `இயற்கை நறுமணம்`` என்க.
துங்கம் - உயர்ச்சி.
``மூரி`` என்பது எதுகை நோக்கி.
``மூறி`` எனத் திரிந்து நின்றது.
மூரி - யாழ் மூரி.
ஓசை - இசை; பண் நேச நுகர்வு - விருப்பத்தோடு துய்த்தல்.
மொத்துதல் - கால் தரையிற் சேர்தல்.
கித்து - தளர் நடை; மெல்ல நடக்கும் நடை.
`கித்தாகிய நடை` என்க.
தேறல் - தேன்.
பரிசு - தன்மை இயல்பு.
`இவைகளே என் சிந்தையைக் கவர்ந்த தன்மைகள்` என்ப தாம்.
நன்றி - நன்மை.
`இவை அம்மங்கை தனது தவத்தால் பெற்ற நன்மைகளாம்` என்றபடி.
``தவம்`` என்பது காரண ஆகு பெயராய், அதனால் விளைந்த பயனைக் குறித்தது.
`ஞானப் பெரு மான்` என்பதில் சந்திப்பகர ஒற்றுச் சந்தம் நோக்கித் தொகுக்கப் பட்டது.
``திருநீற்றுக் கோலமும், திருப்பதிகத்து விருப்பமும், குரு பத்தியும், ஆசிரியப் பணியும் நான் கண்ட தலைவிக்கே உரிய சிறப்புக்கள்`` என்பான் மகளிர்க்குரிய பொது இயல்புகள் சிலவற் றுடன் இவற்றைக் கூட்டிக் கூறினான்.
``இச்சிறப்பு அடையாளங்களே என நெஞ்சு அவளிடம் சென்றமைக்குக் காரணம்`` என்பது குறிப்பு.
திருக்கோவையாரில் சொல்லப்பட்ட தலைவன் தலைவியரும் இத்தன்மையாராகக் குறிக்கப்பட்டமை நினைக்கத்தக்கது.

சுந்தரரைப் பரவையார் கண்ட பொழுது பல பொதுவியல்புகளைக் கூறி, ``மின்னோர் செஞ் சடையண்ணல் மெய்யருள் பெற்று உடைய வனோ`` என்னும் சிறப்பினைக் கூறியதாக அருளிய சேக்கிழார் திரு மொழியும் இங்கு நினைக்கத் தக்கது.

கைதவத்தா லென்னிடைக்கு
நீவந்த தரியேனோ கலதிப் பாணா
மெய்தவத்தா ருயிரனைய
மிகுசைவ சிகாமணியைக் வேணுக் கோனைச்
செய்தவத்தால் விதிவாய்ந்த
செழுமலையா ரவனுடைய செம்பொன் திண்டோள்
எய்தவத்தால் விளிவெனக்கென்
யாதுக்கு நீபலபொய் இசைக்கின் றாயே.

#1739

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, அகப் பொருள் கற்பியலில் பரத்தையிற் பிரிவில் மீண்டு வந்த தலைவன் பாணனை வாயிலாக விடுத்துழித் தலைவி வாயில் மறுத்த துறையாகச் செய்யப்பட்டது.
``கலதிப் பாணா`` என்பதை முதலிற் கொள்க.
கைதவம் - வஞ்சனை.
அது `தலைவன் தவறிலன்` என வலியுறுத்தற்குக் கூறும் பல பொய் மொழிகள்.
என் இடை - எனது இடை.
அஃது இல்லம், வேணுபுரம், ``வேணு`` எனப்பட்டது.
வேணுபுரக் கோனைத் தாங்கள் முற்பிறப்பிற் செய்த தவத்தால் அத்தவத்தின் பயனாகத் தலைவனாக வாய்க்கப் பெற்றவர்கள் (இங்குள்ள) மலையார் (மலைவாணர்).
அவர்கள் அந்த வேணுபுரக் கோனது திண் தோள்களையே தங்களுக்குப் பாதுகாவ லாகக் கொண்டிருக்கின்ற காரணத்தால் அவர்கள் மகளாகிய எனக்கு எந்த ஒன்றினாலும் விளிவு (இறப்பு) உண்டாகாது.
(ஆகவே, `தலைவன் தவறுடையான்` என்பது தெரிந்தால் நான் இறந்துபடு வேன் என்று கருதி) நீ ஏன் (`தலைவன் தவறிலன்` என்பதாகப்) பல பொய்மொழிகளைச் சொல்கின்றாய் (வேண்டா; உடனே திரும்பிப் போ) என்பது.
இங்குக் கூறப்பட்ட பொருள்.
``தோள்`` என்பது வீரத்தைக் குறித்துப் பின் அதனால் உண்டாகும் பாதுகாவலைக் குறித்தது.

ஞானசம்பந்தரை புய வலிமையுடையராகக் கூறியது சமணர் பலரை வென்றமை கருதி.

இசையை முகந்தெழு மிடறுமி திங்கிவன்
இடுகர ணங்களி னியல்பும் வளம்பொலி
திசைதிசை துன்றிய பொழில்சுல வுந்திகழ்
சிரபுர மன்றகு தமிழ்விர கன்பல
நசைமிகு வண்புகழ் பயிலும் மதங்கிதன்
நளிர்முலை செங்கயல் விழிநகை கண்டபின்
வசை,தகு மென்குல மவைமுழு துங்கொள
மதிவளர் சிந்தனை மயல்வரு கின்றதே.

#1740

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

மதங்கம் (மிருதங்கம்) - மத்தளம், மதங்கியார் - மத்தளம் வாசிக்கும் பெண்மணியார்.
மத்தளத்தை மகளிர் வாசிக்கும் வழக்கம் ஒரு காலத்தில் இருந்தது.
இம்மகளிரும் பாணர் குலத்தவரே.
அதனால் மத்தளத்தை வாசித்துக் கொண்டு தெருக்கள் தோறும் போய்ப் பொருள் பெறுவது இவர்கட்குத் தொழிலாய் இருந்தது.
`மதங்கி` என்பது, ``மாதங்கி`` என்றும் வரும்.
இவ்வாறு தெருவிற் செல்லும் ஒருத்தியைக் கண்டு ஒருவன் கைக்கிளையாக (ஒருதலைக் காமமாகிக் காதலித்துக் கூறும் கூற்றே, கலம்பகங்களில் `மதங்கியார்` என்னும் உறுப்பாகச் சொல்லப்படும் `மதங்கியார்` என்பது உயர்வுப் பன்மை.
`இது இதிங்கிவள்` என வரற்பாலது செய்யுள் நோக்கி முற்றிய லுகரம் தொகுக்கப்பட்டு, ``இதிங்கிவள்`` என வந்து ``இங்கிவள்`` என்பது ஒருசொல் நீர்மைத்து.
மிடறு - கழுத்து.
`இசையை முகந்து எழு மிடறும் இது` என்றது, `இனிய குரலை உள்ளே உடைய கழுத்து` என்றபடி.
``இது`` என்றதும், `இத்துணை அழகிதாய் உள்ளது` என்றதே யாம்.
இடு காரணங்கள் காட்டுகின்ற - காட்டுகின்ற அபிநயங்கள்.
`பொலிவது` என்பதில் இறுதி நிலை தொகுக்கப்பட்டது.
சுலவும் - சூழ்ந்துள்ள.
சிரபுர மன் - சீகாழிப் பதிக்குத் தலைவன்.
`தமிழ் விரகனது வண்புகழைப் பயிலும் (மிகுதியாகப் பாடுகின்ற) மதங்கி` என்க.

நளிர் - குளிர்சிசியை (மகிழ்ச்சியை)த் தருகின்ற.
``இவளது கொங்கை, கண், நகைப்பு இவைகளைக் கண்டபின் தகுதிமிக்க எனது குலம் முழுவதையும் வசை கவர்ந்து கொள்ளும்படி. அறிவு மிகுந்த என் மனத்தில் மையல் உண்டாகின்றதே; (இதற்கு என் செய்வேன்!)`` என ஒருவன் மையல் கொண்டு கூறினான் என்க.
``மதங்கிதன் குலம் தாழ்வுடையதாகலின் இவளை நான் விரும்புதல் என் குலம் முழுவதற்கும் வசையாம்`` என்றபடி.
மயங்கினவனுக்கு இயற் பெயர் சொல்லப்படாமையால் இஃது அகப்புறக் கைக்கிளையாம்.
``இவளுடைய அவயவங்கள் மிக அழகுடையனவாய் இருத்தலுடன் இவள் பாடும் பொழுது தமிழ் விரகனது வளவிய புகழையே மிகுதி யாகப் பாடுதல் குறிப்பிடத் தக்கது`` என இவன் தன் மனத்தில் மையல் உண்டாதற்குரிய சிறந்த காரணத்தைக் கூறினமை காண்க.

வருகின் றனனென் றனதுள் ளமும்நின்
வசமே நிறுவிக் குறைகொண் டுதணித்
தருகும் புனல்வெஞ் சுரம்யா னமரும்
மதுநீ யிறையுன் னினையா தெனின்முன்
கருகும் புயல்சேர் மதில்வண் புகலிக்
கவிஞன் பயில்செந் தமிழா கரன்மெய்ப்
பெருகுந் திருவா ரருள்பே ணலர்போற்
பிழைசெய் தனைவந் ததர்பெண் கொடியே.

#1741

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, அகப்பொருள் உடன் போக்கில் தலைவன் தலைவியது அசைவு (தளர்ச்சி) அறிந்து இருத்தல்` துறையாகச் செய்யப்பட்டது.
``பெண் கொடியே`` என்பதை முதலிற் கொள்க.
இது தலைவியைத் தலைவன் விளித்தது.
எனது உள்ளமும் நின் வசமே நிறுவி - எனது உள்ளத்தை எப்பொழுதும் உன்னிடத்திலே நிற்கும்படி நிறுத்தி.
வருகின்றவன் - வாய்ப்பு நேரும் பொழுதெல்லாம் நான் உன்பால் வந்துகொண்டே யிருக்கின்றேன்.
(அவ்வாறு இருக்கவும்) யான் - நான்.
குறை கொண்டு - உன்னோடு எப்பொழுதும் இருக்க இயலாத குறையைப் பொறுத்துக் கொண்டு.
தனித்து அமரும்.
அது - தனித்து உறைகின்ற அந்த இடம்.

அருகும் புனல் வெஞ்சுரம் நீ இறையும் நினையாது - நீர் கிடையாத பாலை நிலம் என்பதை நீ சிறிதும் நினையாமல் என்னின் முன் அதர் வந்து பிழை செய்தனை.
என்னினும் முற்பட்டு இந்த வழியிலே வந்து பிழைசெய்து விட்டாய்; (சற்றே தங்கிப் போவம்) ``தமிழாகரனது அருளைப் பேணலர் போல வந்து பிழை செய்தனை`` என்க.
தலைவன் தனது ஊர் சுரத்தை அடுத்து இருத்தலை, ``சுரம்`` என்றே கூறினான்.
``உள்ளமும்`` என்னும் உம்மை எதிரது தழுவிய எச்சம்.
புயல் - மேகம்.

கொடிநீடு விடையுடைய பெருமானை யடிபரவு
குணமேதை கவுணியர்கள் குலதீப சுபசரிதன்
அடியேன திடர்முழுதும் அறவீசு தமிழ்விரகன்
அணியான புகலிநகர் அணையானகனை கடலின்
முடிநீடு பெருவலைகொ டலையூடு புகுவனுமர்
முறையேவு பணிபுரிவ னணிதோணி புனைவனவை
படியாரும் நிகரரிய வரியாரும் மதர்நயனி
பணைவார்மென் முலைநுளையர் மடமாதுன் அருள்பெறினே.

#1742

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு அகப் பொருட் களவியல் பாங்கியிற் கூட்டத்தில் தலைவன் தோழியைக் குறையுறும் துறையாகச் செய்யப்பட்டது.
``தலைவியை என் கருத்துக்கு இசையும்படி செய்வதாயின், அதன் பொருட்டு நீ எந்தப் பணியை இட்டாலும் அதை நான் செய்வேன்` என்பது இப்பாட்டின் திரண்ட பொருல்.
திருக் கோவையாரில் ``மருக்கோ கடலின் விடுதிமில்`` என்னும் பாடலோடு இதனை ஒப்பிட்டுக் காணலாம்.
`கொடியில்` என ஏழாவது விரிக்க.
மேதை - பேரறிஞர்.
சுப சரிதன் - நல்ல ஒழுக்கம் உடையவன்.
``தமிழ் விரகனது புகலி நகர்` என்க.
அணைவான் - அருகாக உள்ள.
கனை கடல் - ஒலிக்கின்ற கடல்.
``அவை`` பகுதிப் பொருள் விகுதி.
படியாரும் நிகர் அரிய - இப்பூமியில் ஒருவரும் தன்னை நிகர்ப்பவர் இல்லாத.

``வரி ஆரும் மதர் நயனி`` என்னும் தொகைச் சொல் ஒரு சொல் நீர்மைத்தாய், `தலைவி` எனப் பொருள் தந்து, ``அரிய`` என்னும் குறிப்புப் பெயர் எச்சத்திற்கு முடிபாயிற்று.
வரி ஆரும் (நயனம்) - செவ்வரி படர்ந்த (கண்கள்).
மதர் நயனம் - களப்புத் தங்கிய பார்வையை உடைய கண்கள்.
நயனி - கண்களை உடையவள்.
`நயனிக்கு` எனப் பொருட்டுப் பொருளதாகிய நான்கன் உருபு விரிக்க.
`நுளையர் பெண்ணாயினும் உனது அருளையான் வேண்டுகின்றேன்` என்பான், ``நுளையார் மடமாது உன் அருள் பெறின் யான் எப் பணியையும் புரிவேன்`` என்றான்.
இப்பாட்டு நெய்தல் திணையாதல் வெளிப்படை.

பெறுபயன் மிகப்புவியு ளருளுவன பிற்றைமுறை
பெருநெறி யளிப்பனபல பிறவியை யொழிச்சுவன
உறுதுய ரழிப்பனமு னுமைதிரு வருட்பெருக
உடையன நதிப்புனலி னெதிர்பஃறி யுய்த்தனபுன்
நறுமுறு குறைச்சமணை நிரைகழு நிறுத்தியன
நனிகத வடைத்தனது னருவிட மகற்றியன
துறுபொழில் மதிற்புறவ முதுபதிம னொப்பரிய
தொழில்பல மிகுத்ததமிழ் விரகன கவித்தொகையே.

#1743

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``துறுபொழில் மதிற் புறவ முதுபதி மன்`` என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.
இப்பாட்டுத் திருஞானசம்பந்தரது திருப்பதிகங்கள் செய்த அற்புதங்களைத் தொகுத்துக் கூறுகின்றது.
புவியுள் பெறு பயன்களை (பெற வேண்டிய பயன்களை) மிக அருளுவன.
பிற்றை முறை - அவற்றிற்குப் பின், `ஒழித்து` என்பது ``ஒழிச்சு`` என மருவி வந்தன.
`ஒழிச்சுவிடுவன` என்பதில் `விடு` என்னும் துணிவுப் பொருள் விகுதி தொகுக்கப்பட்டது.
பஃறி - ஓடம்.
உய்த்தன - செலுத்தின.
`புன் சமண்` என இயையும்.
``நறு மறு`` என்பது வெகுளியை முழுதும் காட்டாது சிறிது புலப்படுத்தும் ஒலிக்குறிப்பு.

குரை - குரைத்தல்; பேசுதலை, ``குரைத்தல்`` என்றது இகழ்ச்சி பற்றி.
சமண் - சமணக் குழாம்.
துன் அரு விடம் - பொருந்துதற்கு அரிய நஞ்சு.
துறு - நெருங்கிய.
புறவம் - சீகாழித் தலம்.
`தொழில் பல மிகுத்த தமிழ்` என இயைக்க.

தொகுவார் பொழில்சுற் றியவான் மதிதோ யுமதிற் கனமார்
தொலையா ததிருப் பொழில்மா ளிகைமா டநெருக்கியசீர்
மிகுகா ழியன்முத் தமிழா கரன்மே தகுபொற் புனைதார்
விரையார் கமலக் கழலே துணையா கநினைப் பவர்தாம்
மகரா கரநித் திலநீர் நிலையார் புவியுத் தமராய்
வரலா றுபிழைப் பி(லர்,ஊழிதொ)றூழி இலக்கிதமாய்த்
தகுவாழ்வு நிலைத் தொழில்சே ரறமா னபயிற் றுவர்மா
சதுரால் வினைசெற் றதன்மே லணுகார் பிறவிக்கடலே.

#1744

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, திருஞானசம்பந்தரது திருவடிகளையே துணையாகக் கொள்பவர் அடையும் பயன்களைக் கூறுகின்றது.
``பொழில் சுற்றியனவும், மதி (சந்திரன்) தோயப் பெறுவனவும் ஆகிய மதில்களினுள், கனம் ஆர் (மேகங்கள் தவழும்) திருப்பொழில்களை யுடைய மாளிகைகளும் மாடங்களும் நெருங்கியுள்ள சீர் மிகு காழி`` என்க.
``தமிழாகரனது மேதகு கழல் விரை ஆர் கழல், விரை ஆர் கழல், கமலக் கழல்`` எனத் தனித் தனி முடிக்க.
பொன் - அழகு.
புனை தார் விரை - தோளில் அணிந்த மாலை (பாதம் அளவு தூங்கிப்) புரளுத லால் உண்டாகும் நறுமணம் கமலக் கழல் தாமரை மலர் போலும் திருவடி.
மகர ஆகர நித்தில நீர் நிலை ஆர் புவி - சுறா மீன்களுக்கு வாழும் இடமாயும், முத்துக்களை உடையதாயும் உள்ள கடல் நீரின் கண் நிற்றல் பொருந்திய பூமி.
வரலாறு - பண்டு தொட்டு உயிர் வாழ்ந்து வரும் வரவு (பிழைப்பிலர் - நீங்கப் பெறாதவராய் ஊழி தொறு) ஊழி இலக்கிதமாய் - பல பல ஊழிகளிலும் பலராலும் காணப் படுபவர்களாய்) அடைப்புக் குறிக்குள் உள்ள பகுதி ஏடெழுதி னோரால் விடப்பட்டதாக எண்ண வேண்டியுள்ளது.

இலக்கிதம் - இலக்கியம்; குறிக்கொண்டு நோக்கப்படும் பொருள்.
`அறம்` என்னாது ``எழில் சேர் அறம்`` என்றமையால் அவை சிவ புண்ணியங்களாம் என்க.
பயிற்றுவர் - எப்பொழுதும் செய்வார்கள்.
சதுர் - திறல்.
இப்பாட்டினை, ``பன்னிரு சீர்க் கழிநெடிலடியை உடையது`` எனக் கொள்வாரும் உளர்; அது சிறவாமையை அறிந்து கொள்க.

கருமங் கேண்மதி கருமங் கேண்மதி
துருமதிப் பாண கருமங் கேண்மதி
நிரம்பிய பாடல் நின்கண் ணோடும்
அரும்பசி நலிய அலக்கணுற் றிளைத்துக்
காந்திய வுதரக் கனல்தழைத் தெழுதலின்

தேய்ந்துடல் வற்றிச் சில்நரம் பெழுந்தே
இறுகுபு சுள்ளி இயற்றிய குரம்பை
உறுசெறுத் தனைய வுருவுகொண் டுள்வளைஇ
இன்னிசை நல்லி யாழ்சுமந் தன்னம்
மன்னிய வளநகர் மனைக்கடை தோறும்

சென்றுழிச் சென்றுழிச் சில்பலி பெறாது
நின்றுழி நிலாவு வன்துயர் போயொழிந்
தின்புற் றிருநிதி எய்தும் அதுநுன
துள்ளத் துள்ள தாயின் மதுமலர்
வண்டறை சோலை வளவயல் அகவ

ஒண்திறற் கோள்மீன் உலாவு குண்டகம்
உயர்தரு வரையின் இயல்தரு பதணத்துக்
கடுநுதிக் கழுக்கடை மிடைதரு வேலிக்
கனகப் பருமுரண் கணையக் கபாட
விளையக் கோபுர விளங்கெழில் வாயில்

நெகிழ்ச்சியின் வகுத்துத் திகழ்ச்சியின் ஓங்கும்
மஞ்சணை இஞ்சி வண்கொடி மிடைத்த
செஞ்சுடர்க் கனகத் திகழ்சிலம் பனைய
மாளிகை ஒளிச் சூளிகை வளாகத்து
அணியுடைப் பலபட மணிதுடைத் தழுத்திய

நல்லொளி பரந்து நயந்திகழ் இந்திர
வில்லொளி பலபல விசும்பிடைக் காட்ட
மன்னிய செல்வத்துத் துன்னிய பெருமைச்
செம்மலர் மாது சேர்ந்திறை பிரியாக்
கழுமல நாதன் கவுணியர் குலபதி
தண்டமிழ் விரகன் சைவ சிகாமணி
பண்டிதர் இன்பன் பரசமய கோளரி
என்புனை தமிழ்கொண் டிரங்கிஎன் உள்ளத்
குறைவறுத் துள்கி நிறைகடை குறுகி

நாப்பொலி நல்லிசை பாட
மாப்பெருஞ் செல்வம் மன்னுதி நீயே.

#1745

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டும், மேல், ``கைதவத்தால் என்னிடைக்கு நீ வந்தது`` எனப் போந்த அப்பாட்டின் துறையை உடையதே.
``திரு மதிப் பாண`` என்பதை முதலிற் கொண்டு, - கருமம் கேள்! நின்கண் (உன்னிடத்தில்) நிரம்பிய (இசையியல்பு முற்றிய) பாடல்கள் ஓடா நின்றன.
(எழுந்து சென்று எங்கும் பரவாநின்றன; ஆயினும் நீயோ,) பசி நலிய இணைத்துக் காந்திய உதரக் கனல் தழைத்து எழுதலின் உடல் வற்றி நரம்பு எழுந்து, சில சுள்ளிகளால் இயற்றப்பட்ட குரம்பையைச் செலுத்தனைய உருவத்தைக் கொண்டு, (இந்நிலைமையில்) நல் யாழைச் சுமந்து நகர் மனைக்கடை தோறும் சென்றுழிச் சென்றுழி பல பெறாது வன் துயரையே (உடையை ஆகின்றாய்) `இவ்வன்துயர் நீங்கி இரு நிதி எய்த இன்புற வேண்டும்` என்னும் எண்ணம் நுனது உள்ளத்து உள்ளதாயின் `கழுமலம்` என்னும் பதிக்குத் தலைவனும்.
.
.
ஆகிய `பரசமய கோளரி` எனச் சிறப்புப் பெற்ற அவன்மீது யான் புனைந்த தமிழ்ப் பாடலைக் கற்று, என் மீதும் சிறிது இரக்கம் கொண்டு என் உள்ளத்திலும் தன்மீது செல்லும் அன்பினை அருளிய அந்த ஆண் தகையது புகழை நிரம்ப உணர்ந்து, அவனது வாயிலில் போய் நின்று (பாடு) பாடினால் நீ மாப் பெருஞ் செல்வம் மன்னுதி - என முடிக்க.
`துர்மதி` என்னும் ஆரியச் சொல் தமிழில் உகரம் பெற்று, ``துருமதி`` என வந்தது.

துர் மதி - தீய புத்தி.
கருமம் - செய்யத் தக்க காரியம்.
அடுக்கு வலியுறுத்தற் பொருட்டு.
நீ தலைவன் ஆணையில் நின்று பரத்தையரிடம் சென்று; - தலைவன் உங்களையே விரும்பு கின்றான் - என விருப்பமொழி கூறியும், அங்ஙனமே என்னிடம் வந்து, - தலைவர் சிறிதும் தவறிலர்; அவர்மீது நீவிர் வீண் பழி சுமத்த வேண்டா - என அமைதி கூறியும் இவ்வாறு பொய்யையே பேசித் திரிவதால் நீ அடைந்த பயன் வயிற்றுப் பிழைப்பும் கிடையாத மிகு வறுமையே யன்றி வேறில்லை`` என்க, ``நிரம்பிய பாடல் நின்க ணோடும் (ஆயினும்) சில் பலி பெறாது வன்துயர்`` (உறுகின்றாய்) என்றாள்.
ஆசிரியர் தாம் புனைந்த தமிழை தலைவி புனைந்ததாகவும், தமக்கு இரங்கி அன்பை அருளியதைத் தலைவிக்கு இரங்கி அன்பை அருளியதாகவும் பிரபந்தத் துறைக்கு ஏற்பக் கூறினார்.
ஆயினும் கருத்து வேறாதல் வெளிப்படை.
`கோளரிக்கு` என உருபு விரிக்க.
`புனை என் தமிழ்` என மாற்றிக் கொள்க.
உதரக் கனல் - வயிற்றுத் தீ.
இறுகுடி - முறுக்கு ஏறி.
குரம்பை- குடி உறு செறுத்து அணைய உருவு - மிகவும் உறுதிபடச் செய்தல் ஒத்த தோற்றம்.
பலி- பிச்சை.
`சோலை அறை வண்டு வயலில் (சென்று) அகவ (ஒலிக்க) என்க.
கோள் மீன் - முதலை.
குண்டு அகழ் - ஆழமான அகழி.
`அகழியோடு உயர்தரு பதணம்` என்க.
பதணம் - மதிலின் உறுப்பு.
கடு நுதி - கொடிய முனை கழுக்கடை - சூலம்.
மிடைதல் நெருங்குதல்.
பருமுரண் கணையக் கபாடம் - பருத்த, வலிமையை உடைய கணைய மரத்தோடு கூடிய கதவு.
கணைய மரமாவது, கதவைச் சார்த்திய பின்பும் அது திறக்கப்படாதபடி குறுக்காகப் போடப்படும் மரம்.
விலைய வாயில் விலை மதிப்புடைய வாயில்.
அஃதாவது பொன்னா லும், மணிகளாலும்.
இயன்ற வாயில், மஞ்சு - மேகம்.
இஞ்சி - மதில்.

கனகச் சிலம்பு - பொன் மாலை.
ஒலி - யானை கட்டும் கூடம்.
சூளிகை - மேல் மாடத்தின் நெற்றி.
பட மணி - நாக ரத்தினம்.
துடைத்து - மாசு போகக் கழுவி.
இந்திர வில் - வானவில்.
அஃது இங்கு அதனோடு ஒத்த ஒளியுருவைக் குறித்தது.
செம்மலர் மாது - திருமகள்.
இறை - சிறிதும்.
உம்மை, தொகுத்தல் ``வண்டு அறை சோலை.
.
.
.
கழுமலம்`` என்க.
``கேள் மதி`` என்பவற்றில் மதி, முன்னிலையசை.
முன் பாட்டு இறுதியில் ``அணுகார்`` என்றதனை, `கார்` என்றே
கொண்டு அதன் திரிபாக `கரு` என்பது இப்பாட்டின் முதலாயிற்று.

நீதியின் நிறைபுகழ் மேதகு புகலிமன்
மாதமிழ் விரகனை ஓதுவ துறுதியே.

#1746

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

நீதி - நடுவு நிலைமை.
`நீதி நிலை பெறுதலால் நிறைந்த புகழை உடைய புகலி` என்க.
ஏகாரத்தை மாறிக் கூட்டி, `தமிழ் விரகனை ஓதுவதே உறுதி` உறுதி` என
உரைக்க.
ஓதுவது - துதிப்பது.
உறுதி - நன்மை.
உறுதி பயப்பதனை ``உறுதி`` என்றது ஆகு பெயர்.

உறுதிமுலை தாழ எனையிகழும் நீதி
உனதுமனம் ஆர முழுவதும்அ தாக
அறுதிபெறும் மாதர் பெயர்தருதல் தானும்
அழகிதுஇனி யான்உன் அருள்புனைவ தாகப்
பெறுதிஇவை நீஎன் அடிபணிதல் மேவு
பெருமைகெட நீடு படி றொழி பொன் மாடம்
நறைகமழும் வாச வளர்பொழில் சுலாவும்
நனிபுகலி நாத தமிழ்விரக நீயே.

#1747

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, அகப் பொருட் கற்பியலில் பரத்தையிற் பிரிவினின்றும் நீங்கிப் புதல்வற் பெற்று நெய்யாடியிருந்த தலைவியை அணுக, அவள் ஏலாது ஊடியிருந்தமையால், அவளது அடிமேல் வீழ்ந்து வணங்கிய அவனை அதன்பின்பும் அவள் ``இதனைக் காதல் எங்கையர் காணின் நன்று`` எனச் சொல்லி மறுத்த துறையாகச் செய்யப்பட்டது.
(எங்கையர் - என் தங்கைமார்; பரத்தையர்.
) ``அவர் காணின் `நன்று` என நின்னை ஏற்பர்; யான் ஏலேன்`` வெளிப்படுத்து கின்ற நறுமணம்.
`நனி சுலாவும்` எனக் கூட்டுக.
நாதன் - தலைவன்.
இதுவும், ``தமிழ் விரகன்`` என்பதும் இங்கு ஞானசம்பந்தரைக் குறியாமல் அகப்பொருள் தலைவனையே குறித்தது.
பிற ஊர்களைக் கூறாது புகலியைக் கூறியதே இங்கு ஞானசம்பந்தரைப் போற்றிய போற்றுதலாய் அமைந்தது.
எனவே, ``புகலி`` என்றது பாட்டுடைத் தலைவரைப் புகழ்ந்தது ஆதலின் அகப் பொருள் தலைவனை.
``புகலி நாதன்`` என்றது இயற்பெயர் கூறியதன்றாம்.
``தமிழ் விரகன்`` என்றதும், `ஏமாளிகளை இனிய சொற்களால் ஏமாற்ற வல்லவன்` என்னும் பொருட்டாய் இகழ்ச்சியே தந்தது.
``நாத! விரக! நீ எனை இகழும் நீதி உனது மனம் ஆர முழுவதும் அது ஆக.
(அப்படியே இருக்கட்டும்.
நீ) இனி மாதர்பால் பெயர்தருதல் தானும் அழகிது; யான் உன் அருள் பெறுவதாக இவை பெறுதி.
நீ என அடி பணிதல் பெருமை கெட நீடு படிறு.
(இவற்றை) ஒழி`` எனக் கூட்டி உரைக்க.
`யான் புதல்வனைப் பெற்றமையால் உன்னால் இகழப்படுகின்றேன்` என ஊடி உரைப்பாள், ``உறுதி மலைதாழ எனனை இகழும் நீதி`` என்றாள்.
``உனக்கு நான் இம்மைக்கே யன்றி, மறுமைக்கும் துணையாகின்ற நன்மையைக் கருதவில்லை` என்பது குறிப்பு.
அறுதி பெறும் மாதர் - உன்னைத் தமக்கே உரியவனாக அறுதியாகப் பெற்றுள்ள பெண்டிர்.
`மாதர்பால்` என எழாவது விரிக்க.

பெயர்தருதல் - திரும்பிச் செல்லுதல்.
தான், அசை.
உம்மை, சிறப்பு.
புனைவதாக - நான் ஏற்று மகிழ்வதாகக் கருதி.
இவை பெறுதி - இச்செயல்களைச் செய்கின்றாய்; மேவு பெருமை கெட நீடு படிறு - (உனது உண்மை யறியாதார் சிலரால் உனக்கு) உண்டாகின்ற அப்பெருமையும் கெடும்படி நிலைக்கின்ற வஞ்சனைகள் ஆகும் (இவை).
ஒழி - இவற்றை விட்டொழிப்பாயாக- `அது ஆக` என்பது முற்றியலுகரம் தொகுக்கப்பட்டு, ``அதாக`` என வந்தது.

நீமதித் துன்னிநினை யேல்மட நெஞ்சமே
காமதிக் கார்பொழிற் காழி
நாமதிக் கும்புகழ் ஞானசம் பந்தனொடு
பூமதிக் கும்கழல் போற்றே.

#1748

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மட நெஞ்சமே`` என்பதை முதலிற் கொள்க.
மதித்து - (உன்னையும், உன்னின் வேறாகிய பிற பொருள்களையும்) பொருளாக மதித்து.
உன்னை நினைத்தல், ஒரு பொருட் பன்மொழி.
மதிக்கு ஆர் காபொழி - சந்திரனோடு பொருந்துகின்ற பூங்காக்களும், பலவகைச் சோலைகளும் மதிக்கு, உருபு மயக்கம்.
நாம திக்கு - அச்சம் தரும் திசைகள்.
அச்சம், எல்லை காணப்படாது நிற்றலால் உண்டா வது, திக்கு, `எட்டு` என்னும் அளவை உடையமையால், ``திக்கும்`` என்னும் உம்மை முற்றும்மை.
பூ - பூவுலகம்.
இரண்டு, நான்காம் அடிகள் சீர் குறைந்து வந்தைமையால் இஃது ஆசிரியத் துறையாயிற்று.

போற்றி செய்தரன் பொற்கழல் பூண்டதே
புந்தி யான்உந்தம் பொற்கழல் பூண்டதே
மாற்றி யிட்டது வல்விட வாதையே
மன்னு குண்டரை வென்றது வாதையே
ஆற்றெ திர்ப்புனல் உற்றதம் தோணியே
ஆன தன்பதி யாவதம் தோணியே
நாற்றி சைக்கவி ஞானசம் பந்தனே

நல்ல நாமமும் ஞானசம் பந்தனே.

#1749

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``நால் திசைக்கவி ஞானசம்பந்தன்`` என்பதை முதலில் வைத்து, ``எத்திசையிலும் சென்று அருட்கவிகளால் ஞானத்தைத் தொடர்பு கொள்ளச் செய்த ஆசிரியன்`` எனப் பொருள் கூறுக.

போற்றி செய்து பூண்டது - வாது வெல்லும் வழிகளாக அறிவால் தேர்ந்து.

உந்து அம்பு ஒற்கு அழல் - ஓடுகின்ற நீரும், (வையை நீர்) எப்பொருளும் ஒடுங்குதல்.

விட வாதை - நஞ்சுத் துன்பம் வென்றது வாது ஐ.

ஐ இரண்டன் உருபு.

இதனை ஏழன் உருபாகத் திரிக்க.

``தோணி`` இரண்டில் முன்னது, ஓடம்; பின்னது தோணிபுரம்; சீகாழி `அவனது நல்ல நாமம்` என்க.

உம்மை, `நால் திசைகளிலும் ஞானசம்பந்தத்தை உண்டாக்கிய தன்றி` என இறந்தது தழுவி நின்றது.

அம்புந்து கண்இமைக்கும் ஆன நுதல்வியர்க்கும்
வம்புந்து கோதை மலர்வாடும் சம்பந்தன்
காமரு கழுமலம் அனையா
ளாம்இவள் அணங்கலள் அடிநிலத் தனவே.

42 பன்னிரு சீர்க் கழிநெடிற் சந்த விருத்தம்

#1750

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பல்லாற்றானும் தம்முள் ஒத்து முன்பு ஒருவரை ஒருவர் அறியாத ஒருவனும், ஒருத்தியும் ஊழ் வலியால் தனியிடத்து எதிர்ப்பட்டுக் கூடும் கூட்டத்திற்கு முன் தலைவனிடத்து நிகழும் துணிவுணர்வு ஆகலின் இஃது அகப்புறக் கைக்கிளையாம்.

``அடி நிலத்தன; கண் இமைக்கும்; நுதல் வியர்க்கும்; கோதை மலர் வாடும்; (இவையெல்லாம் தேவ மகளிர்க்கு இல்லை ஆகையால்) இவள் அணங்கு (தேவ மகள்) அல்லள்; சம்பந்தன் கழுமலம் அனையாள் ஆம்`` எனக் கூட்டி முடிக்க.

``கழுமலம் நிலவுலகத்தது ஆதலின், இவளும் நிலவுலகத்தவளே`` என்பதாம்.

காமரு - விரும்பத் தக்க.
வம்பு உந்து கோதை - மணம் வீசுகின்ற மாலை இது.
முன்னர் வெண்பாவாகத் தொடங்கிப் பின்னர் ஆசிரியப் பாவாய் முடிந்தமையின் மருட்பா ஆயிற்று.
மருட்பாவிற் குரிய பொருள்களில் இது கைக்கிளைப் பொருள் பற்றி வந்தது.
முன் பாட்டின் இறுதியில் உள்ள ``சம்பந்தன்`` என்பதில் முதலில் நின்றும் சகர ஒற்றை நீக்க `அம்பந்தன்` என்று ஆதலின்; இப்பாட்டு ``அம்புந்து`` எனத் தொடங்குவதாயிற்று.

தனமும் துகிலும் சாலிக் குலையும் கோலக் கனமாடச்
சண்பைத் திகழ்மா மறையோர் அதிபன் தவமெய்க் குலதீபன்
கனவண் கொடைநீ டருகாசனிதன் கமலக் கழல்பாடிக்
கண்டார் நிறையக் கொள்ளப் பசியைக் கருதா தெம்பாண
புனைதண் தமிழின் இசைஆர் புகலிக் கரசைப் புகழ்பாடிப்
புலையச் சேரிக் காளை புகுந்தால் என்சொல் புதிதாக்கிச்
சினவெங் கதமாக் கலிறொன் றிந்தச் சேரிக் கொடுவந்தார்
சேரிக் குடிலும் இழந்தார் இதனைச் செய்குவ தறியாரே.

#1751

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, `ஞானசம்பந்தரைத் துதிப்பவர் இம்மைப் பயனையும் அடைவர்` என்பதைப் பாணர் சேரிப் பெண் ணொருத்தி நகைக்குங் கூற்றாக வைத்துக் கூறுகின்றது.
தனம் - கைப்பொருள்.
துகில் - உயர்ந்த ஆடை.
சாலிக் குவை - செந்நெற் குவியல்.
`இவைகளையுடைய மாடம்` என்க.
கண்டார் - கொடை யாளர்களைக் கண்டவர்கள் ``ஞானசம்பந்தன் கழலைப் பாடியவர்களெல்லாம் நல்ல உணவுகளைப் பெற்று உண்டு களிக்க, எம் சேரிப் பாணர், `தங்களுக்கும், தங்கள் சுற்றத்திற்கும் உள்ள பசியை எப்படித் தணிப்பது` என்று எண்ணிப் பாராமல்களிறு ஒன்றை இந்தச் சேரியில் கொண்டு வந்தார்; (அதனால் அவரை நான் எங்கள் குடிலுக்குள் நுழைய விடாமல் கதவை மூடித் தாழ் இட்டேன். இப்போது அவர் குடிலையும் இழந்தார்; இப்பொழுது அவர் இதனை (களிற்றை) என்ன செய்வது - என்று விழித்துக் கொண்டிருக்கின்றார்`` என்பது இப்பாட்டின் திரண்ட பொருள்.
``எம் பாணர்`` என்றதில் ``பாணர்`` என்பது ஒருவரையே பலர்பாலாக

உயர்த்துக் கூறியது.
இவ் உயர்வுச் சொல்லும் இங்கு நகைப்பின்கண் வந்தது.
``புலையச் சேரியில் காளை புகுந்தால் என்னாகும்`` என்பது ஒரு பழமொழி ``அந்தக்காளை உயிரோடு உரிக்கப்படும்`` என்பது கருத்து.
என் சொல் என்னும் பழ மொழி.
`அதை எம் பாணர் புதுக்குவது போல, அரிசி பெற்று வாராது களிறு பெற்று வந்தார்` எனச் சொல்லி நகையாடினாள் விறலி.
`சின வெங்கதம்` ஒருபொருட் பன்மொழி.
`சேரிக்கண்` என ஏழாவது விரிக்க.

யாரேஎன் போல அருளுடையார் இன்கமலத்
தாரேயும் சென்னித் தமிழ்விரகன் சீரேயும்
கொச்சை வயன்றன் குரைகழற்கே மெச்சி
அடிமைசெயப் பெற்றேன் அறிந்து.

#1752

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``இன் கமல`` என்பது முதலாகத் தொடங்கி, `குரைகழற்கே, அறிந்து, மெச்சி அன்பு செயப் பெற்றேன்; (ஆதலின்) என்போல அருளுடையார் யாரே`` என இயைத்து முடிக்க.
இது முன் இரண்டடிகள் ஒரு விகற்பமாக, ஏனையடிகள் வேறு வேறு விகற்ப மாய், இரண்டாம் அடியின் மேலும் மூன்றாம் அடியில் தனிச்சொற் பெற்று வந்தமையால் இன்னிசை வெண்பா ஆயிற்று.

அறிதரு நுண்பொருள் சேர்பதி கம் அரன் கழல்மேல்
அணிதரு சுந்தர மார்தமிழ் விரகன் பிறைதோய்
செறிதரு பைம்பொழில் மாளிகை சுலவும் திகழ்சீர்த்
திருவளர் சண்பையின் மாடலை கடல்ஒண் கழிசேர்
எறிதிரை வந்தெழு மீன்இரை நுகர்கின் றிலைபோய்
இனமும் அடைந்திலை கூர்இடரோடிருந் தனையால்
உறுதியர் சிந்தையி னூடுத வினர்எம் தமர்போல்
உமரும் அகன்றன ரோஇது உரைவண் குருகே.

#1753

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டும், மேல் ``ஆர்மலி புகலி நாதன்`` எனப் போந்த பாட்டுப் போலக் காமம் மிக்க கழிபடர் கிளவியில் `குருகோடு இரங்கல்` துறையாகச் செய்யப்பட்டது.

``வண் குருகே`` என்பதை முதலில் வைத்து, ``அறிதரு சண்பையின் மாடு அலைகடலை (அடுத்த) கழி சேர் திரை வந்து எழு மீன் இரையை நுகர்கின்றிலை; போய் இனமும் (சாதியையும்) அடைந்திலை; இடலோடு இருந்தனை; (என்) சிந்தையினூடு உறுதுயர் உதவின எம் தமர்போல உமரும் (உம்தமரும் உன்னை விட்டு) அகன்றனரோ? உரை`` எனக் கூட்டி முடிக்க.
மாடு - பக்கம்.
கூர் மிகுந்த.
ஆல், அசை.
உறு துயர் - மிகுந்த துன்பம்.
`உதவினராகிய எம் தமர்` என்க.
கூன்களைச் சீராகக் கொண்டு, இப் பாட்டினை, `பதின்சீர்க் கழிநெடில் விருத்தம்` என்பாரும் உளர்.

குருகணி மணிமுன் கைக்கொடி யும்நல் விறலவனும்
அருகணை குவர்அப் பால்அரி தினிவழி மீள்மின்
தருகெழு முகில்வண் கைத்தகு தமிழ்விர கன்றன்
கருகெழு பொழில்மா டக்கழு மலவள நாடே.

#1754

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு அகப் பொருள் உடன் போக்கில் தலைவனுடன் போன தலைவியைப் பின் தேடிச் செல்லும் செவிலித் தாய் நிலை கண்டோர் அவளைத் தடுத்த துறையாகச் செய்யப்பட்டது.
இதன்கண் முதலில், ``தாயீர்`` என்பது வருவித்து, `இனி வழி அப்பால் அரிது; கொடியும், விறலவனும் கழுமல வளநாடு அருகு அணைகுவர்; மீள்மின்`` எனக் கூட்டி முடிக்க.
குருகு - வளையல்.
தரு கெழு முகில் வண் கை - கொடுத்தல் பொருந்திய மேகம்போலும் வண்மையை யுடைய கை(கைஉடைய) தமிழ் விரகன்.
கருகு - இருண்ட.
எழு - ஓங்கிய.

நாடே றும்புகழ் ஞானசம் பந்தன்வண்
சேடே றும்கொச்சை நேர்வளம் செய்துனை
மாடே றும்தையல் வாட மலர்ந்தனை
கேடே றும்கொடி யாய்கொல்லை முல்லையே.

#1755

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, அகப் பொருட் களவியலில் தோழி தலைவனை வரைவு கடாவுவாள் அவன் சிறைப் புறத்தானாக முல்லைக் கொடியை நோக்கிக் கூறும் முன்னிலைப் புறமொழியாகச் செய்யப்பட்டது.

``கொல்லை முல்லையே`` என்பதை வளர்த்தவள் வாடிக்கிடக்க நீ மலர்ச்சி அடைகின்றாய் அதனால் கொடியாய்` என்பது இப்பாட்டின் திரண்ட பொருள்.

``கோடு ஏறும் கொடியாய்`` என்பது சிலேடை.

கோடு ஏறுதல் - கொம்பைப் பற்றிப் படர்தல்; நான் மறுத்தலை மிகச் செய்தல் இது கேட்டுத் தலைவன் வரைவான் ஆவது பயன்.

சேடு - பெருமை.

கொச்சை நேர் வளம் செய்து - சீகாழி நகர்போலும் வளப்பத்தைப் பெறச் செய்து, `உன்னை வளம் செய்து` என மாற்றிக் கொள்க.

மாடும் ஏறும் - அடிக்கடி அருகில் வந்து பழகும்.

முல்லை நகைஉமைதன் மன்னு திருவருளை
முந்தி உறுபெரிய செந்தண் முனிவன் மிகு
நல்ல பொழில்சுலவு தொல்லை அணிபுகலி
நாதன் மறைமுதல்வன் வேத மலையதனில்
வில்லை யிலர் கணையும் இல்லை பகழிஉறு
வேழம் இரலைகலை கேழல் வினவுறுவர்
சொல்லை இலர்விரக ரல்லர் தழை கொணர்வர்
தோழி இவர்ஒருவர் ஆவ அழிதர்வரே.

#1756

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

இப்பாட்டு, அகப்பொருட் களவியற் பாங்கியிற் கூட்டத்துள், தலைவன்றனக்குக் குறைநேர் பாங்கி தலைவிக்கு அவன் குறை உணர்தல் துறையாகச் செய்யப்பட்டது.

தம் நிலத்து மலையை, `புகலி முதல்வனது மலை` என்கின்றாள் ஆதலின் அதற்கேற்ப, `வேதம் வழங்கும் மலை` என்றாள்.

``வில்லைக் கையில் உடைய ரல்லர்; கையில் அம்பும் இல்லை. (ஆயினும்) இவ்வழியாக அம்பு தைக்கப்பட்ட யானை சென்றதோ? கலைமான் சென்றதோ? காட்டுப் பன்றி சென்றதோ! - என இவ்வாறெல்ம் வினவுகின்றார்.

இவை தவிர வேறுவகையான எந்த சொல்லையும் உடையரல்லர். வஞ்சிக்கும் தன்மை உடையவராய்த் தோன்றவில்லை.

கையில் கொண்டு வருவதோ தழை.
தோழீ! இப்படி ஒருவர் மிகவும் துன்பந் தோய்ந் தவராய்க் காணப்படுகின்றார்.
ஆ! ஆ! (என்ன துயர்நிலை!) எனக் கூட்டி உரைக்க.
கணை, பகழி - அம்பு.
இரலை - மான்.
கலை - ஆண்.
`இரலைக் கலை` என்பதில் சந்திக் ககர ஒற்றுச் சந்தம் நோக்கித் தொகுக்கப்பட்டது.
கேழல் - பன்றி.
விரகு - இங்கு, சூழ்ச்சி ``ஆவ`` என்பது இரக்கச் சொல்.

எழில்தருபிற வியின்உறு தொழில் அமர்துயர் கெடும்மிகு
பொழிலணி தருபுகலிமன் எழிலிணையடி இறைமினே.

#1757

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``மிகு - பொழில் அணி`` என்பது முதலாகத் தொடங்கி உரைக்க.
வழி தரு பிறவி.
பின்னே பின்னே விடாது தொடர்ந்து வருகின்ற பிறவி.
பிறவியின் உறு தொழில் அமர் துயர் - பிறவிகளில் பொருந்துகின்ற தொழிலில் நீங்காதிருத்தலால் வருகின்ற துன்பம்.
`இறைஞ்சுமின்` என்பது ``இறைமின்`` எனக் குறைந்து நின்றது.
இனி, `மலர்கணை` என ஒருசொல் வருவித்து, `இறைமின்` தூவிப் போற்றி செய்யுங்கள்` எனவும் உரைக்கலாம்.
ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் முற்றிற்று.

நம்பியாண்டார் நம்பிகள் - ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை

பூவார் திருநுதல்மேல் பொற்சுட்டி இட்டொளிரக்
கோவாக் குதலை சிலம்பரற்ற - ஒவா
தழுவான் பசித்தான் என்றாங் கிறைவன் காட்டத்
தொழுவான் துயர்தீர்க்கும் தோகை - வழுவாமே
முப்பத் திரண்டறமும் செய்தாள் முதிராத
செப்பொத்த கொங்கைத் திருநுதலி - அப்பன்
அருளாலே ஊட்டுதலும் அப்பொழுதே ஞானத்
திரளாகி முன்னின்ற செம்மல் - இருள்தீர்ந்த
காழி முதல்வன் கவுணியர்தம் போர்ஏறு
ஊழி முதல்வன் உவன் என்று - காட்டவலான்
வீழி மிழலைப் படிக்காசு கொண்டபிரான்
பாழி அமணைக் கழுவேற்றினான் - பாணர்
யாழை முறித்தான் எரிவாய் இடும்பதிகம்
ஆழி உலகத் தழியாமற் - காட்டினான்.
ஏழிசை வித்தகன் வந்தேனோரும் வானோரும்
தாழும் சரணச் சதங்கைப் - பருவத்தே
பாலையும் நெய்தலும் பாடவலான் சோலைத்
திருவா வடுது றையில் செம்பொற் - கிழிஒன்
றருளாலே பெற்றருளும் ஐயன் தெருளாத
தென்னவன் நாடெல்லாம் திருநீறு - பாலித்த
மன்னன் மருகல்விடம் தீர்த்த பிரான் பின்னைத்தென்
கோலக்கா வில்தாளம் பெற்றிக் - குவலயத்தில்
முத்தின் சிவிகை அரன் கொடுப்ப முன்னின்று
தித்தித்த பாடல் செவிக்களித்தான் - நித்திலங்கள்
மாடத் தொளிரும் மறைக்காட் டிறை கதவைப்
பாடி அடைப்பித்த பண்புடையான் - நீடும்
திருவோத்தூர் ஆண்பனையைப் பெண்பனைஆ கென்னும்
பெருவார்த்தை தான் உடைய பிள்ளை - மருவினிய
கொள்ளம்பூ தூர்க்குழகன் நாவா யது கொடுப்ப
உள்ளமே கோலாக ஊன்றினான் - வள்ளல்
மழவன் சிறு மதலை வான்பெருநோய் தீர்த்த
குழகன் குலமறையோர் கோமான் - நிலவிய
வைகை ஆற் றே டிட்டு வான்நீர் எதிர்ஒட்டும்
செய்கையான் மிக்க செயலுடையான் - வெய்யவிடம்

மேவி இறந்த அயில் வேற்கண் மடமகளை
வாவென் றழைப்பித் திம்மண்ணுலகில் - வாழ்வித்த
சீர்நின்ற செம்மைச் செயலுடையான் நேர்வந்த
புத்தன் தலையைப் புவிமேல் புரள்வித்த
வித்தகப் பாடல் விளம்பினான் - மொய்த்தொளிசேர்
கொச்சைச் சதுரன்தன் கோமானைத் - தான்செய்த
பச்சைப் பதிகத் துடன்பதினா றாயிரம்பா
வித்துப் பொருளை விளைக்க - வலபெருமான்
முத்திப் பகவ முதல்வன் திருவடியை
அத்திக்கும் பத்தர்எதிர் ஆணைநம - தென்னவலான்
கத்தித் திரிபிறவிச் சாகரத்துள் ஆழாமே
பத்தித் தனித்தெப்பம் பார்வாழத் - தந்தபிரான்
பத்திச் சிவம்என்று பாண்டிமா தேவியொடும்
கொற்றக் கதர்வேற் குலச்சிறையும் - கொண்டாடும்
அற்றைப் பொழுதத் தமணர்இடும் வெந்தீயைப்
பற்றிச் சுடுகபோய்ப் பாண்டியனை - என்னவல்லான்
வர்த்தமா னீசர் கழல்வணங்கி வாழ்முருகன்
பத்தியை ஈசன் பதிகத்தே - காட்டினான்
அத்தன் திருநீல நக்கற்கும் அன்புடையான்
துத்த மொழிக்குதலைத் தூயவாய் - நன்னுதலி
கொத்தார் கருங்குழற்கும் கோலச்செங் - கைம்மலர்க்கும்
அத்தா மரைஅடிக்கும் அம்மென் குறங்கினுக்கும்
சித்திரப்பொற் காஞ்சி சிறந்தபே - ரல்குலுக்கும்
முத்தமிழ்நூல் எல்லாம் முழுதுணர்ந்த பிள்ளையார்க்கு
ஒத்த மணம் இதுஎன் றோதித் - தமர்களெல்லாம்
சித்தம் களிப்பத் திருமணம்செய் காவணத்தே
அற்றைப் பொழுதத்துக் கண்டுட - னேநிற்க
பெற்றவர்க ளோடும் பெருமணம் போய்ப்புக்குத்
தன்அத்தன் அடியே அடைந்தான் அழகிதே.

#1758

பொழிப்புரையை எழுதவில்லை

1. ஞானப் பால் உண்டது

2. திருப்பதிகம் அருளிச் செய்தல்

3. படிக் காசு பெற்றது

4. சமணர் கழுவேற நின்றது

5. யாழ்மூரிப் பதிகம் பாடியது

6. நெருப்பில் ஏட்டையிட்டுப் பச்சென்றிருக்கக் காட்டியது

7. இசை வல்லான்
8. பாலை நெய்தல் பாடியது
9. பொற் கிழி பெற்றது
10. பாண்டிய நாட்டில் நீற்றொளி பரப்பியது
11. விடம் தீர்த்தது
12. பொற்றாளம் பெற்றது
13. முத்துச் சிவிகை பெற்றது
14. மறைக் கதவம் அடைத்தது
15. ஆண்பனை பெண்பனை யாக்கியது
16. ஓடம் கரையேறவிட்டது
17. முயலகன் தீர்த்தது
18. ஆற்றில் எடு எதிர்ஏற விட்டது
19. எலும்பைப் பெண்ணாக்கியது
20. புத்தன் தலையில் இடிவிழச் செய்தது
21. அமணர் இட்ட தீயைப் பாண்டியன்மேல் ஏவியது
ஆகிய 21 தலைப்புகளில் இப்பாடல்களைத் தந்ததாக எழுதுவர்.

விளக்கவுரை

அடி-1 பூ - பொலிவு.
திரு - அழல்.
நுதல்.
நெற்றிச் சுட்டி யணியும் (அடி-2) குதலை மொழியும் குழவிப் பருவத்தைக் குறித்தன.
கோவாக் குதலை - ஒழுங்குபட வாராத குதலைச்சொல்.
அஃது ஆகு பெயராய் அதனைப் பேசும் பிள்ளையைக் குறித்தது.
`குதலை (அடி-3) அழுவானை இறைவன் காட்ட` என இயைக்க.
(அடி-2) `சிலம்பு அரற்றுமாறு (காலை உதைத்துக் கொண்டு) அழுவானை`` என்க.
`அழுவானை` என்பதில் இரண்டாம் உருபு தொகுக்கப்பட்டது.
(அடி-3) தந்தையாரைக் காணாது அழுத பிள்ளையை, ``பசித்து அழுதான்`` என்றது, `பால் தருக` என்னும் குறிப்புத் தோன்றுதற் பொருட்டாம்.
குழவிப் பருவத்துப் பிள்ளைகள் எப் பொழுது பாலை ஊட்டினாலும் மறாது உண்ணுதல் இயல்பேயாம்.
(அடி-4) `தொழுவான்` என்றதும் பிள்ளையாரையே.
`முன்னை நிலையிலும் தொழுது, இனியும் தொழுவான்` என்றபடி.
(அடி-4) துயர் தீர்க்கும் - துயர் தீர்க்க இசைந்த.
தோகை, உமாதேவி.

(அடி 4,5) `முப்பத்திரண்டு அறமும் வழுவாமே செய்தாள்` என்க.
(அடி-5,6) ``முதிராத கொங்கை`` என்றது நித்திய கன்னிகை யாதலைக் குறித்தது.
செப்பு - கிண்ணம்.
`கன்னிகை யாயினும் முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்த அருளாலே, அழுகின்ற பிள்ளையைக் கண்டவுடனே பால் சுரக்கப் பெற்றாள்` என்றது குறிப்பு.
(அடி-6) `கொங்கையை உடைய திருநுதலி` என்க.
`திரு நுதலி` என்பது மேற் கூறிய சொற்களின் குறிப்பால் உமாதேவியையே குறித்தது.
அப்பன் - இறைவன்.
(அடி-7) ``அருள் என்றது `ஆணை` என்றபடி.
`அவன் ஆணையின்றிச் செய்தல் கூடாமையின் அது பெற்றாள்` என்பதாம்.
(அடி-8) திரள் - திரட்சி.
``ஞானத்திரளாய் நின்ற பெருமான்`` என்று அருளிச் செய்ததும் காண்க.
இஃதே பற்றிப் பிள்ளையாரை, ``ஞானத்தின் திருஉரு`` எனச் சேக்கிழாரும் கூறினார்.
முன் நின்ற - ஞானத்தைத் திருப்பதிகங்களாகப் பரப்புதற்கு முற்பட்டு நின்ற.
செம்மல் - தலைவன்; ஞானத் தலைவன்.
இது முதலாகச் சொல்லப்படும் அற்புதங்களை யெல்லாம் பெரிய புராணத்துட் காண்க.
இருள் - புறச் சமய இருள்.
தீர்தல் - அவைகள் துச்சமாகச் தோன்றப் பெறுதல்.
``துப்புர வில்லார் துணிவு துகளாகச் சூழ்ந்தெழுந் தார்`` என்னும் சேக்கிழார் திருமொழியைக் காண்க.
``இருள் தீர்ந்த *(அடி-9)* முதல்வன்`` என இயைக்க.
முதன்மை - ஆசிரியத் தலைமை.
கவுணியர் - கவுணிய கோத்திரத்தார்.
`அவரிடையே வந்து அவதரித்த ஏறு` என்க.
ஏறு - ஆண் சிங்கம்.
பரசமய கோளரி.
(அடி-10) ஊழி முதல்வன் - சிவபெருமான்.
`அவன் சுட்டிக் காட்ட ஒண்ணாதவனாயினும் சுட்டிக்காட்ட வல்லவன்` என்க.
(அடி-11) பாழி - சமணப் பள்ளி.

(அடி-12) பாணர் - திருநீலகண்டப் பாணர்.
(அடி-14) `ஆழி உலகத்துக் காட்டினான்` என்க.
(அடி-15) வித்தகன் - சதுரப்பாடு உடையவன்.
(அடி-16) தாழும் - வணங்குகின்ற சரணம் - பாதம் பாதங்களில் சதங்கையணிதல் குழவிப் பருவத்தேயாம்.
(அடி-17) பாலையும் நெய்தலும் பாட வலான் - பாலை நிலத்தையும், நெய்தல் நிலத்தையும் ஒருங்கு சேர்த்துப் பாடி அதனாலே பாலை நிலத்தை நெய்தல் நிலமாகச் செய்ய வல்லவன்.
(அடி-19) அருளால் - சிவபெருமானது திருவருளால்.
ஐயன்- தலைவன்.
(அடி-20) தென்னவன் - பாண்டியன்.
வழங்குதலை.
`பாலித்தல்` என்பது மரபு.
(அடி-25) செவி - அரன் செவி.
நித்திலங்கள் - முத்துக்கள்.
(அடி-29) பெரு வார்த்தை - புகழ்.
(அடி-30) குழகன் - அழகன்; சிவபெருமான்.
நாவாய் - ஓடம் பாடவல்ல வாய்.
இருபொருள், `அது`, பகுதிப் பொருள் விகுதி.
(அடி-31) உள்ளம் - ஊக்கம்; `திருவருள் துணை செய்யும்` என்னும் உள்ளத்துறுதி.
ஊன்றுதல், இங்கே, செலுத்துதல்.
(அடி-32) மழவன் - கொல்லி மழவன்.
``சிறுமதலை`` என்பதை, `சிறுமிதனை` என ஓதுதல் சிறக்கும்.
வான் பெரு நோய் - மிகப் பெரிய நோய்.
அது `முயலகன்` எனப்படுவது.
(அடி-33) குழகன் - அழகன்; இளம் பிள்ளை.
குலம் - மேன்மை கோமான் - தலைவன்.
(அடி-36) அயில் வேல் கண் - கூர்மையான வேல் போலும் கண்களை உடைய.
மடமகள் - இளம் பெண்.
(அடி-38) சீர் நின்ற - புகழ் பெற்ற நிலைபெறப் பெற்ற.
(அடி-41) கொச்சை - சீகாழி.
அதன்கண் தோன்றி, சதுரப் பாடுடையவன் இவ் ஆளுடைய பிள்ளை.
தன் கோமான் - அவனுக்குத் தலைவனாகிய சீகாழி இறைவன்.
``செய்த`` என்பது `பாடிய` என்னும் பொருட்டாய், ``கோமானை`` என்ற இரண்டாம் உருபிற்கு முடிபாயிற்று.

(அடி-42) பச்சைப் பதிகம் திருநள்ளாற்றுப் பெருமான் மேல தாயினும், `எங்கு இருந்தும் பிள்ளையார்க்கு அருள் பிள்ளையார்க்கு அருள் புரிந்தவன் சீகாழிப் பெருமானே` என்னும் கருத்தால் அத் திருப்பதிகத்தையும், மற்றும் பல திருப்பதிகங்களையும் சீகாழிப் பெருமானுக்கு உரியவாகவே கூறினார்.
பா - பாடல்.
`பாவின்கண்` என ஏழாம் உருபு விரித்து.
அதனை *(அடி-43)* ``விளைக்க வல பெருமான்`` என்பதனோடு முடிக்க.
வித்துப் பொருள் - ஞானத்தின் அடி நிலைப் பொருள்கள்.
`ஆளுடைய பிள்ளையார் அருளிச்செய்த பாடல்கள் பதினாறாயிரம்` நம்பியாண்டார் நம்பிகள் தமது பிரபந்தங்களில் குறித்துள்ளார்.
எனினும் இன்று கிடைத்துள்ள பதிகங்கள், விடைவாய்ப் பதிகத்தைச் சேர்த்தாலும் `*384*-தாம்` என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது.
(அடி-44) `முத்திப் பேற்றை அருளுபவன் சிவபெருமா னல்லது பிறர் ஒருவரும் இல்லை` என்பது கருத்து ஆகலின் அப் பெருமானை இங்கு, ``முத்திப் பகவன்`` என்றார்.
எனவே, ``பகவன்`` என்பது முகமன் உரையாக ஏனைக் கடவுளர்க்கும் பெயராதல் பெறப் பட்டது.
``முத்திப் பகவ முதல்வன்`` என்றதனால், முத்தியொழிந்த சிலவற்றிற்கு ஏனையோரும் முதல்வராதலும் விளங்கும்.
(அடி-45) `அற்சிக்கும்` என்பது எதுகை நோக்கி, ``அத்திக் கும்`` எனத் திரிந்து நின்றது, ``ஆணை நமதே`` என்றது, சில திருப் பதிகங்களின் திருக்கடைக்காப்புக்களில், அப்பதிகங்களுக்குச் சொல்லப்பட்ட பயன் விளைதலை உறுதி செய்தற் பொருட்டு.
அங்ஙனம் சொல்லப்பட்ட பாடல்களைக் காண்க.
(அடி-47) `பத்திச் சிவம்` என்று கொண்டாடும் - `இவர் இவ் வுலகப் பிள்ளையல்லர்; பெரியோர் பலரும் பத்தி செய்து போற்றுகின்ற சிவ பரம் பொருளே` என்று சொல்லக் கொண்டாடிய.
(அடி-48) பாண்டிமாதேவி, மங்கையர்க்கரசியார்.
(அடி-49) அவர்தம் அமைச்சர் குலச்சிறையார்.
(அடி-52) வர்த்தமானீசர் - திருப்புகலூர்க் கோயில்களில் ஒன்றில் எழுந்தருளியிருக்கும் இறைவர்.
முருகன், முருக நாயனார்.
இவரைத் தமது திருப்பதிகத்துள் சிறப்பித்திருத்தலை அத்தலத் திருப் பதிகத்திற் காண்க.
(அடி-54) அத்தன் - (சிவநெறித் தலைவன்.
திருநீலநக்கன், திருநீலநக்க நாயனார்.

இந்நாயனாருடைய இல்லத்தில் பிள்ளையார் தம் திருக்கூட்டத்தோடும் எழுந்தருளி வழிபடப் பெற்றமையைப் பெரிய புராணத்தால் அறிக.
பிள்ளையாரது திருமணச் சடங்குகளை அந்நாயனாரே செய்ததையும் அதன்கண் காண்க.
(அடி-56-59) இப்பகுதியில் `பிள்ளையார்க்குத் திருமணம் செய்விப்பது` என முடிவு செய்த அவர்தம் பெற்றோர் முதலிய சுற்றத்தார் அவருக்கு ஒத்த வகையினளாக உறுதி செய்யப்பட்ட கன்னிகைதன் அழகே குறிப்பிடப்படுகின்றது.
துத்தம், ஏழிசைகளுள் ஒன்று ``குதலை`` என்றது இனிமை பற்றி `நன்னுதலியது` என ஆறாவது விரிக்க.
கோலம் - அழகு.
அம் எமன் குறங்கு - அழகி, மெத்தென்ற துடை.
சித்திரம் - அழகு.
காஞ்சி - இடையில் அணியும் மேகலை வகை களில் ஒன்று.
அல்குல் - விருட்டம்.
நான்கன் உருபுகள் பலவற்றையும் ``ஒத்த`` என்பதனோடு முடிக்க.
(அடி -60-65) ஓதி - சொல்லி.
`ஓதி` செய் காவணம்` என்க.
தமர்கள் - சுற்றத்தார்கள்.
காவணம் - பந்தல்.
``உடன் கண்டு நிற்க`` என்றது சுற்றத்தாரை.
பெருமணம், `நல்லூர்ப் பெருமணம்` என்னும் தலம்.
இத்தலமே பிள்ளையார்க்கு மகட் கொடை நேர்ந்தவர் வாழ்ந்த தலமும், பிள்ளையார் இறைவனை அடைந்த தலமும் ஆகும்.
தன் அத்தன் - தனக்கு அம்மையைக் கொண்டு ஞானப் பாலைக் கொடுப்பித்த அப்பன்; சிவபெருமான்.
``ஞானத் திரளாகி முன்னின்ற செம்மல்`` என்பன முதலாக, ``திருநீலநக்கற்கும் அன்புடையான்`` என்பது ஈறாகப் போந்த பெயர்களை எழுவாயாக வைத்து, `பெற்றவர்களோடும் பெருமணம் *(தலம்)* போய்ப் புக்குத் திருமணம் செய்காவணத்தே தமர்களெல்லாம் கண்டு நிற்கத் தன் அத்தன் அடியடைந்தான்; *(இஃது)* அழகிதே*!* என முடிக்க.
ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை முற்றிற்று.

நம்பியாண்டார் நம்பிகள் - திருநாவுக்கரசு தேவர்
திருஏகாதச மாலை

புலனொ டாடித் திரிமனத்தவர்
பொறிசெய் காமத் துரிசடக்கிய
புனித நேசத் தொடுதமக்கையர்
புணர்வி னால்உற் றுரைசெயக்குடர்

சுலவு சூலைப் பிணிகெ டுத்தொளிர்
சுடுவெ ணீறிட் டமண கற்றிய
துணிவி னான்முப் புரமெ ரித்தவர்
சுழலி லேபட் டிடுத வத்தினர்

உலகின் மாயப் பிறவி யைத்தரும்
உணர்வி லாவப் பெரும யக்கினை
ஒழிய வாய்மைக் கவிதை யிற்பல
உபரி யாகப் பொருள்ப ரப்பிய

அலகில் ஞானக் கடலி டைப்படும்
அமிர்த யோகச் சிவவொ ளிப்புக
அடிய ரேமுக் கருளி னைச்செயும்
அரைய தேவத் திருவ டிக்களே. ***#1759***

உலகில் மாயப் பிறவியைத் தரும் பெருமயக்கினை - இவ்வுலகில் நிலையில்லாதனவாகிய பல பிறவிகளைத் தருவதான அந்தப் பெரிய திரிபினை.
உணர்வு இலா மயக்கினை - மெய்யுணர்வோடு சிறிதும் தொடர்பில்லாத திரிபினை ஒழிய - யாவரும் விட்டு அகலும்படி.
வாய்மைக் கவிதையில் - உண்மைகள் நிறைந்த பாடல்களில்.
உபரி யாகப் பொருள் பரப்பிய - கலைகளின் முடிநிலைப் பொருள்களைப் பரக்க அருளிச் செய்தவரும்.
அலகில் ஞானக் கடலிடைப்படும் அமிர்த யோகம் - அளவற்ற ஞான நூலாகிய கடலைக் கடைந்தவழித் தோன்றும் அமுத மாகிய சிவயோகத்தால்.
சிவ ஒளிப்புக அடியரேமுக்கு அருளினைச் செயும் - சிவ சோதியில் கலக்கும் பேற்றினை அடியோங்களுக்கு அருளியவரும் ஆகிய அரைய தேவத் திருவடிகள் - திருநாவுக்கரசு தேவராகிய சுவாமிகள்.
(தலைவர்) புலனொடு ஆடித் திரி மனத்தவர் - ஐம்புலன்களோடே

எப்பொழுதும் பழகித் திரிகின்ற மனத்தை உடையவரது பொறி செய் காமத் துரிசு அடக்கிய புனித நேசத்தொடு - ஐம்பொறிகளின் வழிச் செல்கின்ற ஆசைகளாகிய குற்றங்களை அடக்கிய வேறொரு தூய அன்புடனே.

தமக்கையர் புணர்வினால் உற்று உரை செய - தமக்கையார் திருவருள் வழிப்பட்ட அறிவினால் அறிந்து செல்ல.

(அச்சொல் வழியே ஒழுகி.

) சுலவு சூலைப் பிணி கெடுத்து தமது வயிற்றுட் குடைந்த சூலை நோயைப் போக்கி.

ஒளிர் சுடு வெண் நீறிட்டு அமண் அகற்றிய துணி வினால் - ஒளிவீசுகின்ற, நன்கு சுடப்பட்ட வெள்ளிய திருநீற்றைப் பூசிக்கொண்டு (முன்பு கொண்ட) சமணக் கோலத்தை நீக்கிய தெளிவினால் முப்புரம் எரித்தவர் சுழலிலே பட்டிடு தவத்தினர் - திரிபுரங்களை எரித்தவராகிய சிவபெருமானது ஆணையிலே பொருந்தி செய்யும் தவநெறியில் நின்றவராவர்.

விளக்கவுரை

`பெரு மயக்கினை ஒழிய, கவிதையில் பல பொருள்கள் பரப்பியதன் விளைவாகிய` யோகத்தினால் சிவ ஒளிப்புக அருளினைச் செயும் அரைய தேவத் திருவடிகள், புலனொடு ஆடித் திரிமனத்தவர்பால் (எழுகின்ற) காமம் ஆகிய குற்றம் (தம் மனத்திலே எழாதவாறு) அடக்கியதனால் தோன்றிய தூய அன்போடு (பத்தி யோடு) கூடித் தமக்கையர் உரை செய (அவ்வழி ஒழுகி) சூலைப் பிணி கெடுத்து வெண்ணீறு இட்டு, சமணக் கோலத்தை நீக்கிய துணிவினால் முப்புரம் எரித்தவரது சுழலிலே பட்டிடு தவத்தினர் ஆவர்` எனக் கூட்டி வினை முடிவு செய்க.

செய்யுள் நோக்கி முறை பிறழக் கூறினாராயினும், ``உரை செயத் திருநீறு இட்டு அமண் அகற்றிய துணிவினால் பிணி கெடுத்து சுழிலிலே பட்டிடு தவத்தினர்`` என்பதே கருத்து என்க.

``சுழல்`` என்பது `ஆற்றல்` என்னும் பொருளதாய்த் திரு வருளைக் குறித்தது.

``தவம்`` என்றது அரசுகள் சூலை நீங்கிய பின் இறுதிகாறும் மேற்கொண்டு செய்த உழவாரப்பணியைக் குறித்தது.

``பெருமயக்கு`` என்றது சமண் சமயக் கொள்கையை.

உபரி பாகம் - முடிநிலைப் பகுதி.

கடல், அமிர்தம் இவை உருவங்கள்.

``திருவடிக்கள்`` என்பதில் ககர ஒற்று விரித்தல்.

திருநாவுக் கரசடி யவர்நாடற் கதிநிதி

தெளிதேனொத் தினியசொல் மடவார்ஊர்ப் பசிமுதல்
வருவானத் தரிவையர் நடமாடிச் சிலசில
வசியாகச் சொலுமவை துகளாகக் கருதிமெய்
உருஞானத் திரள்மனம் உருகாநெக் கழுதுகண்
உழவாரப் படைகையில் உடையான்வைத் தனதமிழ்
குருவாகக் கொடுசிவ னடிசூடித் திரிபவர்
குறுகார்புக் கிடர்படு குடர்யோனிக் குழியிலே.
#1760
பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

\`அடியவர்\` நாடும் கதியாகிய நீதி என்க.
ஊர்ப்பசி - ஊர்வசி.
இறுதி நாளில் தேவ கணிகையர் சிலரை நாவுக்கரசர் முன் விடுத்து மயக்கச் செய்யும் முகத்தால் அவரது உள்ளத் தூய்மையை உலகறியச் செய்த வரலாற்றைப் பெரிய புராணத்துட் காண்க.
வசி - வசப்படுத்துவன.
\`ஞானத் திரளாகிய உருமும், மனமும் நெக்கு உருகா, கண் அழுது\` எனக் கொள்க.
உருகா, அழுது என்னும் வினையெச்சங்கள் \`\`உடையான்\`\` என்னும் குறிப்பு வினைப் பெய ரோடு முடிந்தன.
\`\`குரு\`\` என்பது ஆகுபெயராய், \`குரு உபதேசம்\` எனப் பொருல் தந்தது.
புக்கு இடர் படு - புகுந்தபின் துன்பத்திலே அகப்படுகின்ற \`\`குடர் யோனிக் குழி\`\` என்பது உம்மைத் தொகை.
\`திரிபவர் குழியில் குறுகார்\` என வினை முடிக்க.

குழிந்து சுழிபெறுநா பியின்கண் மயிர்நிரையார்
குரும்பை முலையிடையே செலுந்த கைநன்மடவார்
அழிந்தபொசியதிலே கிடந்தி ரவுபகல்நீ
அலைந்த யருமதுநீ அறிந்தி லைகொல்மனமே
கழிந்த கழிகிடுநா ளிணங்கி தயநெகவே
கசிந்தி தயமெழுநா றரும்ப திகநிதியே
பொழிந்த ருளுதிருநா வினெங்க ளரசினையே
புரிந்து நினையிதுவே மருந்து பிறிதிலையே.
#1761
முதல் அடி முழுதும் மடவாரது வருணனை.
குழிந்து- ஆழமாகி - சுழி பெறு - நீர்ச் சுழியை உவமையாகப் பெறுகின்ற.
நாவி- உந்தி.
(அதினின்றும் எழுகின்ற) மயிர் நிரையர் - மயிர் ஒழுங்கை உடையவர்.

அம்மயிர் ஒழுங்கு மேலே இரு தனங்களின் இடையே செல்கின்ற. தகை - அழகு, அழிந்த பொசி - வெளிப்படும் சுரத நீர்க் கசிவு. `மடவாரது பொசி` என இயைக்க. ``பொசியதில்`` என்பதில் அது, பகுதிப் பொருள் விகுதி. மனமே நீ அணைந்து அயரும் அது - நெஞ்சே நீ அழுந்தி உன்னை நீ மறந்துவிடுகின்ற அந்த இழி நிலையை, நீ அறிந்திலை கொல்! கழிகிடு நாள் கழிந்த - இன்று கழிந்த நாள்கள் பல போயின. *(ஆயினும் இன்று தொடங்கியாவது)* எழு நூறு அரும் பதிக நிதியே பொழிந்து அருளும் எங்கள் திருநாவின் அரசினையே - ஏழ் எழுநூறு திருப்பதிகங்களாகிய அருட் செல்வத்தைப் பொழிந் தருளிய எங்கள் திருநாவுக்கரசு தேவரையே, இதயம் கசிந்து புரிந்து நினை - உள்ளதும் உருகி விரும்பி நினை - பிறிது மருந்து இலை - *(அதற்கு)* வேறு மருந்து இல்லை.

விளக்கவுரை

`ஏழ் எழுநூறு இரும்பனுவல் ஈன்றவன் திருநாவினுக் கரையன்`` என்ற சுந்தரர் திருமொழியைக் கொண்டு ``பதிகம் ஏழ் எழுநூறு பகரும் மா சிவ யோகி`` என இவர் பின்பு அருளிச் செய்தலால் இங்கு, ``எழு நூறு`` என்றது திருப்பதிகம் ``நாலாயிரத்துத் தொளா யிரம்`` என்பதைப் பாடலாக வைத்துக் கொண்டாலுங் கூட, `பதிகம் *490*` ஆகும். ஆயினும் `இன்று` கிடைத்துள்ள பதிகங்கள் - *312* தாம்` என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

இலைமா டென்றிடர் பரியா ரிந்திர
னேயொத் துறுகுறை வற்றாலும்
நிலையா திச்செல்வம் எனவே கருதுவர்
நீள்சன் மக்கட லிடையிற்புக்
கலையார் சென்றரன் நெறியா குங்கரை
யண்ணப் பெறுவர்கள் வண்ணத்திண்
சிலைமா டந்திகழ் புகழா மூருறை
திருநா வுக்கர சென்போரே.

#1762

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``திருநாவுக்கரசு`` என்போர் இடர் பரியார்; ``இச் செல்வம் நிலையாது`` எனவே கருதுவர்; சன்மக் கடலிடையிற் புக்கு அலையார்; அரன் நெறியாகும் கரை அண்ணப் பெறுவார்கள் - எனக் கூட்டி முடிக்க. மாடு - செல்வம்.

பரியார் - சுமக்க மாட்டார்.
சன்மம் - பிறவி.
அரன் நெறி ஆகும் கரை - இவனது நெறியாகிய `சைவம்` என்னும் கரை.
அண்ணுதல் - அடைதல்.
வண்ணச் சிலை - சந்திர காந்தக் கற்கள்.

என்பட்டிக் கட்டிய விந்தப்பைக் குப்பையை
இங்கிட்டுச் சுட்டபி னெங்குத்தைக் குச்செலும்
முன்பிட்டுச் சுட்டிவ ருந்திக்கெத் திக்கென
மொய்ம்புற்றுக் கற்றறி வின்றிக்கெட் டுச்சில
வன்பட்டிப் பிட்டர்கள் துன்புற்றுப் புத்தியை
வஞ்சித்துக் கத்திவி ழுந்தெச்சுத் தட்டுவர்
அன்பர்க்குப் பற்றிலர் சென்றர்ச்சிக் கிற்றிலர்
அந்தக்குக் கிக்கிரை சிந்தித்தப் பித்தரே.

#1763

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

என்பு அட்டி - எலும்புகளை நெருங்க வைத்து ``பைக் குப்பையை``
என்பதை, `குப்பைப் பையை` என மொழி மாற்றி உரைக்க.
குப்பை - புறத்துப் போடப்படும் பொருட் குவியல்.
அவற்றையுடைய பை உடம்பு.
``குரம்பையை`` என ஓதினால் வல் லொற்று வாராமையே யன்றிச்
சந்தத்தில் ஓரெழுத்து மிகையாதலையும் நோக்குக.
மேலும் உடம்பைப் பையாக உருவகம் செய்த பின்பு குரம்பையாக
உருவகித்தலும் கூடாமை காண்க.
தைக்கு - அணி செய்தற்கு.
தைத்தல் - அணிதல்.
செல்லும் - உதவும் (உடம்பின் நிலை யாமை இவ்வாறு இருக்கவும்)
``சில வன்பட்டிப் பிட்டர்கள் அறி வின்றிக் கெட்டு புத்தி வஞ்சித்து.
.
.
.
எய்ச்சுத் தட்டுவர் (இன்னும்) அப் பித்தர் இவரைச் சிந்தித்து அன்பர்க்குப்
பற்றிலர்; அர்ச்சிக்கிலர்`` என வினை முடிக்க.
முன்பு அருந்திக்கு எத்திக்கு என இட்டுச் சுட்டி - முதலில் தங்கள்
மனத்தில், `கல்வியைத் தரும் திசை எந்தத் திசை` என ஆராய்ந்து முடிவு
செய்து மொய்ம்பு உற்றுக் கற்று அறிவின்றிக் கெட்டு- அம்முடிவில்
உறுதியாய் நின்று பல நூல்களைக் கற்றும் அறிவில்லாமல் கேடெய்தி

புத்தியை வஞ்சித்துக் கத்தி பிறருடைய உள்ளத்தையும் குழப்பி விடும் வகையில் மிகுதியாகப் பேசி.
எய்ச்சு விழுந்து தட்டுவர் - இளைத்து விழுந்து தடுமாறுவார்கள்.
அன்பர்க்கு - சிவனடி யாரிடத்தில்.
பற்று இலர் - விருப்பம் இல்லாதவர் ஆவர்.
அர்ச்சிக்கிலர்- சிவனையும் வழி பட மாட்டார்.
`அவர் திருநாவுக்கரசரை எவ்வாறு நினைவர்` என்பது குறிப்பெச்சம்.
வன் பட்டிப் பிட்டர்கள் - வன்கண்மையால் மனம் போனவாறு ஒழும்கும் பிட்டர்கள் (பிரஷ்டர்கள்) - சான்றோரால் விலக்கப்பட்டுபவர்கள்.

பித்தரசு பதையாத கொத்தைநிலை உளதேவு
பெட்டியுரை செய்துசோறு கட்டியுழல் சமண்வாயர்
கைத்தரசு பதையாத சித்தமொடு சிவபூசை
கற்றமதி யினனோசை யிட்டரசு புகழ்ஞாலம்
முத்திபெறு திருவாள னெற்றுணையின் மிதவாமல்
கற்றுணையில் வரும்ஆதி
பத்தரசு வசைதீர வைத்தகன தமிழ்மாலை
பற்பலவு மவையோத நற்பதிக நிதிதானே.

#1764

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

பித்து அரசு - அறியாமையை உடைய அரசன்; பல்லவன்.
பதைத்தல், இங்கு வெறுத்தலைக் குறித்தது.
பதையாத - வெறுப்படையாத.
அஃதாவது, `விரும்பிக் கொள்கின்ற` என்பதாம்.
தேவு கடவுள் பல்லவன் விரும்பிக் கொள்கின்ற கடவுள் அருக தேவன்.
அக்கடவுளை இங்கு, ``கொத்தை நிலை உள தேவு`` என்றார்.
கொத்தை நிலை - குருட்டு நிலைமை.
`அறியாமை யுடைய ஓர் உயிர்` என்றபடி.
இங்ஙனம் கூறியது அகண்டப் பொருளாகச் சொல்லப் படாது கண்டப் பொருளாகச் சொல்லப்படுதல் பற்றியாம்.
பெட்டு - விரும்பி.
இஃது இகரச் சாரியை பெற்று.
``பெட்டி`` என நின்றது.
``சோறு`` என்றது, `வயிற்றுப் பிழைப்பு` என்னும் பொருளதாய் நின்றது.
`சோறு சுட்டி உரை செய்து உழல் வாயர்` என இயையும்.
``சமண் வாயர்`` என்பதை ``வாயராகிய சமணர்`` என மாற்றிக் கொள்க.
சமண் கைத்த அரசு - சமணரால் வெறுக்கப்பட்ட திருநாவுக் கரையன்.

அரசு புகழ் திருவாளன் - பின்பு அந்தவப் பல்லவ மன்னனே புகழ்ந்து கொண்டாடிய திருவாளன்.
ஞான முத்தி - சீவன் முத்தி நிலை.
மிதத்தல் - இங்கு நீந்துதல்.
நெல் துணையின் மிதவாமல் - ஒரு நெல்லளவு தொலைவு கூட நீரில் மிதந்து நீந்தாமல்.
கல் துணையில் வரும் ஆதி - கல்லாகிய தெப்பத்தின் மேல் வந்து கரை ஏறிய முதல்வன்; ஆசிரியன்.
``சமணரால் வெறுக்கப்பட்ட அரையனும், சிவ பூசையைக் கற்ற மதியினனும், அரசு புகழ் திருவாளனும், கல் துணையில் வந்த முதல்வனும் ஆகிய அவன் வைத்துச் சென்ற தமிழ் மாலை`` என்க.
அரசு வசை - தலையாய குற்றங்கள்; நூற்குற்றங்கள்.
``அவை பத்து`` என்பது இலக்கணம்.
``அவைகளுள் ஒன்றும் இல்லாத படி பாடி வைத்த தமிழ் மாலை`` என்க.
கனம் - பெருமை; மாட்சி.
அவை, நூற்குச் சொல்லப்பட்ட அழகு பத்தும் என்க.
ஓத - ஓதினால்.
`அந்நற்பதிகங்களே பின்னடிக்கு வைப்பு நிதியாய் உதவும்` என்பதாம்.
தான், தேற்றப் பொருட்டு.
பிரிநிலை ஏகாரத்தை, ``நற்பதிகம்`` என்பதனோடு கூட்டி யுரைக்க.
``கைத்த`` என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.

பதிகம் ஏழேழுநூறு பகருமா கவியோகி
பரசுநா வரசான பரமகா ரணவீசன்
அதிகைமா நகர்மேவி யருளினா லமண்மூடர்
அவர்செய்வா தைகள் தீருமனகன் வார்குழல்சூடின்
நிதியரா குவர்சீர்மை யுடையரா குவர்வாய்மை
நெறியரா குவர்பாவம் வெறியரா குவர்சால
மதியரா குவரீச னடியரா குவர்வானம்
உடையரா குவர்பாரில் மனிதரா னவர்தாமே.

#1765

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

ஏழ் எழு நூறு - நாலயிரத்துத் தொள்ளாயிரம் ``பதிகம்`` என்றதை, `பதிகப் பாடல்கள் எனக் கொள்ளுதல் பொருந்தும்.
அல்லாவிடில், `கிடையாது போன பாடல்கள் மிகப் பல` எனல் வேண்டும்.
``பரம காரண ஈசன் அதிகை மாநகர் மேவி, அமண் மூடர் அவர் செய்

வாதைகள் அருளினால் தீரும் மா கவி யோகி, பரசு நாவரசான அனகன்`` என மாறிக் கூட்டுக.
கவி யோகி - யோக கவி.
யோகம், சிவ யோகம்.
பரசு - யாவராலும் துதிக்கப்படுகின்ற.
அனகன் - பாவம் இல்லாதவன்; தூயவன்.
பரம காரண ஈசன், சிவபெருமான்.
`அவன் அருளினால்` என்க.
சீர்மை - புகழ்`.
வாய்மை நெறி - மெய்ந் நெறி.
வெறியர் - இல்லாதவர்.
``பாரில் மனிதர் ஆனவர் தாமே, அனகன் வார்கழல் சூடின் நிதியர் ஆதல் முதலிய பயன்களைப் பெறுவர்`` என்பதாம்.

தாமரைநகு மகவிதழ் தகுவன சாய்பெறுசிறு தளிரினை யனையன
சார்தருமடி யவரிடர் தடிவன தாயினும் நலம் கருணையை யுடையன
தூமதியினை யொருபது கொடுசெய்த சோதியின்மிகு கதிரினை
யுடையன
தூயனதவ முனிவர்கள் தொழுவன தோமறுகுண நிலையின தலையின
ஓமரசினை மறைகளின் முடிவுகள் ஒலிடுபரி சொடுதொடர் வரியன
ஓவறுமுணர் வொடுசிவ வொளியன ஊறியகசி வொடுகவி செய்த
புகழ்
ஆமரசுய ரகம்நெகு மவருளன் ஆரரசதி கையினர னருளவன்
ஆமரசுகொ ளரசெனை வழிமுழு தாளரசுத னடியிணை மலர்களே.

#1766

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``ஊறிய கசிவொடு`` என்பது முதலாகத் தொடங்கி உரைக்க.
``ஆம் அரசு, ஆர் அரசு, அவன் ஆம் அரசுகொள் அரசு, எனை ஆள் அரசு`` என வந்த ``அரசு`` அனைத்தும் திருநாவுக்கரசு ஒருவரையே குறித்ததன.
அந்த அரசு தன் அடியனை மலர்கள், ``தகுவன, அனையன`` என்பன முதலாகப் பேர் அறியப் புகழப் பட்டன.
தாமரை நகும் - தாமரை மலரைத் தோற்கச் செய்கின்ற.
அக இதழ் - பூக்களில் உள்ள அக இதழ்கள்.
தகுவன - போல்வன.
சாய் பெறு - நுணுகுதலைப் பெற்ற; மென்மையான.
தடிவன - போக்குவன.

மதி - சந்திரன்.
``ஒருபது`` என்றது இரு திருவடிகளிலும் உள்ள நகங்களைக் குறித்து.
தோம் - குற்றம்.
குண நிலையின - குணங்கள் பலவற்றிற்கும் இடம் ஆவன.
தலையின - அன்பர் பலரது தலைமேல் விளங்குவன.
ஓம் அரசு - ஓங்காரத்திற்குத் தலைவன் சிவபெருமான்; ``அவனை மறைகளின் முடிவுகள் ஓலம் இட்டுத் தேடுகின்ற அத்தன்மை யோடே அவைகளால் தேடி எட்ட அரியன`` என்க.
ஓவு அறும் உணர்வொடு சிவ ஒளியன - நீங்குதல் இல்லாத அருள் உணர் வோடே, சிவமாகிய ஒளிப் பொருளைக் கொண்டு விளங்குவன.
ஊறிய கசிவு - சுரந்து மிகுகின்ற அன்பு.
புகழ் ஆம் அரசு - புகழ் மிகுகின்ற உளன் - உளம்; மகர னகரப் போலி.
ஆர் - பொருந்துகின்ற.
`அருளால்` என உருபு விரிக்க.
அவன் ஆம் அரசுகொள் அரசு - அந்தச் சிவனே தானாம் தலைமையினைப் பெற்ற அரசு.
வழி - குடி வழி.
``திருநாவுக்கரசு`` என இறைவனால் சிறப்பிக்கப் பெற்ற அவர் நாவுக்கரசர் மட்டும் அல்லர்; மற்றும் பல்வேறு அரசரும் ஆவர் - என்றற்கு ``அரசு, அரசு`` எனப் பலவற்றைக் கூறினார்.

அடிநாயைச் சிவிகைத் தவிசேறித் திரிவித்
தறியாவப் பசுதைச் சிறியோரிற் செறியுங்
கொடியேனுக் கருளைத் திருநாவுக் கரசைக்
குணமேருத் தனைவிட் டெனையாமொட் டகல்விற்
பிடியாரப் பெறுதற் கரிதாகச் சொலுமப்
பிணநூலைப் பெருகப் பொருளாகக் கருதும்
செடிகாயத் துறிகைச் சமண்மூடர்க் கிழவுற்
றதுதேவர்க் கரிதச் சிவலோகக் கதியே.

#1767

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

அடி நாயை - அடிக் கீழ்க் கிடக்கும் நாய் போன்ற என்னை.
இது தன்மையைப் படர்க்கை போலக் கூறியது.
`சிவிகையில்` என ஏழாவது விரிக்க.
தவிசு - ஆசனம்.
இது சிவிகையில் இடப் பட்டிருப்பது.
சிவிகையில் ஏறித் தவிசில் வீற்றிருந்து உலாவும் படி செய்தது, ஆசிரியத்

தன்மையை எய்து வித்தமையால் ஆம்.
எனவே, `அத்தகைய பேரருளை எனக்கு வழங்கிய திருநாவுக்கரசு` என்றவாறு.
இவ்வாசிரியருக்கு நாவுக்கரசர் இத்தகைய அருளை வழங்கியது இவர் அவரை நாள் தோறும் வழிபட்டு வந்த வழிபாட்டினாலாம்.
`வழி பாட்டு வழியாகவும்` ஆசிரியரது அருளைப் பெறுதல் என்னும் வேடன் கதையால் அறியலாம்.
தெய்வங்களையும், பெரியோர்களையும் வழிபடுகின்ற வழிபாடுகட்கும் பயன் தருபவன் இறைவனே யன்றோ! அறியாமைப் பசு தை சிறியோர் - ஆணவ மலத்தின் காரியமாகிய அறியாமையாகிய பசுத் தன்மை பொருந்திய சிறியோர்கள்.
`அவர் களது கூட்டத்தில் சேர்ந்து அறியாமையில் கிடந்த கொடியேனுக்கு அருள்புரிந்த திருநாவுக்கரசு` என்க.
ஐ - தலைமையை உடைய.
அஃதாவது, `ஆசிரியத் தன்மையை உடைய` என்பதாம்.
குண மேரு - நற்பண்புகளே உருவாகிய மகாமேரு மலை.
இஃது உருவகம்.
விட்டு - விட்டமை யால் ``திருநாவுக்கரசாகிய குண மேருவை அவரது பெருமையை அறிந்த பின்பு பின்பற்றாது பகைமை யுள்ளத்தோடே இருந்ததால் சமண் மூகர்க்கு சிவலோகக் கதி இழவுற்றது`` என்க.
இழவு - இழப்பு.
``திருநாவுக்கரசரைக் சமணர் சொற்கேட்டு முதலில் பல ஒறுப்புக் உள்ளாக்கிய பல்லவ மன்னன் அவர் கல்லை மிதப்பாகக் கடலைக் கடந்து கரையேறிய பின்பு அவரது பெருமையை உணர்ந்து அவரை வணங்கிச.
சைவனாகிச் சிவாலயப் பணிகளைச் செய்தான்.
அவைகளைக் கண்ட பின்பும் சமணர்கள் திருந்தவில்லை.
அதனால் யாருக்கு இழப்பு? சமணர்க்குத்தான் இழப்பு`` என்றபடி.
இது பற்றியே நாவுக்கரசரும் அவர்களை, ``திருந்தா அமணர்`` எனக் குறித்தருளினார்.
`என்னை` என்னும் வினாப் பெயர் இடைக் குறைந்து ``எனை`` என நின்றது.
ஓகாரம் இரக்கப் பொருட்டு.
மொட்டு - அரும்பு.
அகலுதல் - அது கட்டவிழ்ந்து மலர்தல்.
மொட்டுக் கட்டவிழ்ந்து மலர்தல் போல உள்ளம் அறியாமைப் பிணி நீங்க விரிவடைதலை, ``மொட்டு அகல்வு`` என்றார்.

``அத்தகைய செயலில் அதற்கு உரித்தாக ஒன்றையும் பெறுதல் இல்லாத பிண நூல்`` என்க.
பிண நூல் - உயிரற்ற நூல்.
``அதனைப் பெருக (மிகவும்)ப் பொருளாகக் கருதும் சமண் மூடர்`` என்க.
`தேவர்க்கும்` என்னும் உயர்வு சிறப்பும்மை தொகுக்கப்பட்டது.
பசு - பசுத் தன்மை.
அஃதாவது, பாசத்தால் கட்டுண்ணும் தன்மை.
தைத்தல் - பொருந்துதல்.
``தை சிறியோர்`` என்னும் வினைத் தொகையில் வல்லொற்று மிகாமை தொகுத்தல்.
``அரிது`` இரண்டும் `அரிதாயது` எனக் குறிப்பு வினையாலணையும் பெயர்.
அவற்றுள் முன்னது அருமை இன்மை குறித்து நின்றது.
செடி காயம் - (குளித்தல் இல்லாமையால்) முடி நாற்றம் பொருந்திய உடம்பு.

சிவசம் பத்திடைத் தவஞ்செய்து
திரியும் பத்தியிற் சிறந்தவர்
திலகன் கற்றசிட் டன்வெந்தொளிர்
திகழும் பைம்பொடித் தவண்டணி

கவசம் புக்குவைத் தரன்கழல்
கருதுஞ் சித்தனிற் கவன்றியல்
கரணங் கட்டுதற் கடுத்துள
களகம் புக்கநற் கவந்தியன்

அவசம் புத்தியிற் கசிந்து கொ
டழுகண் டசத்துவைத் தளித்தனன்
அனகன் குற்றமற் றபண்டிதன்
அரசெங் கட்கொர்பற் றுவந்தறு

பவசங் கைப்பதைப் பரஞ்சுடர்
படிறின் றித்தனைத் தொடர்ந்தவர்
பசுபந் தத்தினைப் பரிந்தடு
பரிசொன் றப்பணிக்கும் நன்றுமே. ***#1768***

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

சிவ சம்பத்து - சிவ நெறியாகிய செல்வம்.

(சிறந்தவர்க்கு) என நான்கவாது விரிக்க.
திலகன் - அழகு தருபவன்.
சிட்டன் - மேன்மையுடையவன்.
பொடி - திருநீறு.
``பைம் பொடி`` எனப் பசுமை கூறியது அன்போடு அணியப் படுதல் பற்றி.
`விருப்பம்` என்னும் பொருளதாகப் `பெள்` என்னும் முதனிலை `டு` என்னும் இறுதி நிலையோடு புணர்ந்து, `பெண்டு` என வருதல் போல `வெண்மை` என்னும் பொருளதாகிய `தவள்` என்னும் முதனிலை, `டு` என்னும் இறுதி நிலையோடு புணர்ந்து, ``தவண்டு`` என வந்தது.
தவண்டு அணி கவசம் - வெள்ளை நிறத்ததாய் அணியப்படும் கவசம்.
வெண்திருநீறு ``புக்கு வைத்து`` என்பதில் ``வைத்து` என்றது அசை.
சித்தன் - சித்தத்தை *(மனத்தை)* உடையவன்.
இல் கவன்று இயல் கரணம் - இல் வாழ்க்கையில் கவலை கூர்ந்து இயங்குகின்ற மனம் முதலிய அகப் பொறிகள்.
கட்டுதற்கு - அவைகளைக் கட்டுப் படுத்தற்கு.
அடுத்து உள - பொருத்தமாய் உள்ள.
களகம் புக்க நல் கவுந்தியன் - கழுத்தளவும் போர்த்த கந்தைப் போர்வையை உடையவன்; `பற்றுக்களை விட்டவன்` என்றபடி, ``கந்தை மிகையாம் கருத்தும்`` *1* எனச் சேக்கிழாரும் கூறினார்.
கவந்தி - கந்தை.
களகம் - கழுத்தில் சுற்றப்படுவது.
அவசம் - வசம் இன்மை பரவசம்.
அழு கண்டம் - அன்பினால்.
விம்முகின்ற குரல்.
அளிக்கப்பட்டன திருப் பதிகங்கள் `அவைகளைத் தன் குரலில் வைத்திருந்து வெளிப் படுத்தினான்` என்பதாம்.
அனகன் - பாவம் இல்லாதவன்.
அரசு - ஆளுடைய அரசு.
`திலகன், சித்தன், கவந்தியன், அளித்தனன், அனகன், பண்டிதன் ஆகிய அரசு` என்க.
ஒர் பற்று - ஒப்பற்ற துணை.
உவந்து உறு பரஞ்சுடர் - எங்களிடத்து மகிழ்ச்சி கொண்டு வந்து பொருந்தியுள்ள பேரொளி.
பல சங்கை பதை பரஞ்சுடர் - வினைக் கூட்டம் பதைத்து அழிதற்கு ஏதுவான பேரொளி.
இத்தொடரில் மிகுந்துள்ள பகர ஒற்றுக்கள் சந்தம் நோக்கி விரித்தலாய்

நின்றன.
படிறு இன்றி - வஞ்சனையின்றி.
பசு பந்தம் - உயிர்களைப் பசுத்தன்மைப் படச் செய்துள்ள கட்டு.
பரிதல் - அறுத்தல்.
அடு பரிசு ஒன்ற - வெல்லும் தன்மையைப் பொருந்தும்படி.
பணிக்கும் - திருவாய் மலர்ந்தருளுவான்; ஆசீர்வதிக்கும்.
அவனது மொழி நிறைமொழி யாதலின்.
(அவன் ஆசீர்வதித்தபடியே பசு பாசங்கள் அற்றொழியும்) நன்று -
நன்றாக; முற்றாக.
உம்மை, உயர்வு சிறப்பு.

நன்றும் ஆதரம் நாவினுக் கரைசடி
நளினம்வைத் துயினல்லால்
ஒன்றும் ஆவது கண்டிலம் உபாயம்மற்
றுள்ளன வேண்டோமால்
என்றும் ஆதியும் அந்தமும் இல்லதோர்
இகபரத் திடைப்பட்டுப்
பொன்று வார்புகும் சூழலில் புகேம்புகில்
பொறியில்ஐம் புலனோடே.

#1769

பொழிப்புரையை எழுதவில்லை

விளக்கவுரை

``என்றும் ஆதியும், அந்தமும்`` என்பது முதலாகத் தொடங்கி உரைக்க.
இகம் பரம் - இப்பிறப்பு வரும் பிறப்பு.
இத் தொடர்ச்சி முதலும் முடிவும் அறியப்படாமையின் ``என்றும் ஆதியும்
அந்தமும் இல் இகம் பரம்`` என்றார்.
சூழல் - நிலைமை.
புகில் - புகலிடமாகப் புகுவதாயின்.
பொன்றுவார் பொறியில் ஐம்புலனோடே புகும் சூழலில் புகேம் -
(பிறவிக் குழியில் வீழ்ந்து) கெடுவார் ஐம் பொறிகள் வழியாக
ஐம்புலன்களில் புகுகின்ற அந்த நிலைமையில் யாம் புக மாட்டோம்.
``புலனோடு`` என்றது உருபு மயக்கம்.
அடி நளினம் - திருவடியாகிய தாமரை மலர்களில்.
`ஆதரம் வைத்து உயின் அல்லது ஆவது ஒன்றும் கண்டிலம்` எனக்
கூட்டி யுரைக்க.
ஆவது - தக்கது.
மற்று உள்ளன.
உபாயம் - பிறவியைக் கடத் தற்குக் சொல்லப்படுகின்ற வழிகள்.

அவற்றுள் ஒன்றையும் நாம் விரும்பமாட்டோம்.
ஆல், அசை.
``மாலை`` என்றதற்கு ஏற்ப இப்பிரபந்தத்தின் இறுதிப் பாட்டின் இறுதிச் சீர் முதற் பாட்டின் முதற்சீரோடு இயைந்து மண்ட லித்து முடிந்தமை காண்க.

பதினொன்றாந் திருமுறை உரையுடன் முற்றுப் பெற்றது.

பதினொன்றாம் திருமுறை முற்றும்

பன்னிருதிருமுறை

சேக்கிழார் பெருமான்

பன்னிரெண்டாம் திருமுறை

தொகுப்பு: சங்கர்

சித்திரை *2017* வெளியீடு

பன்னிருதிருமுறை

பன்னிரண்டாம் திருமுறை - பெரியபுராணம்

சேக்கிழார் பெருமான் அருளியது

பன்னிரண்டாம் திருமுறை 13 சருக்கம், 71 புராணங்கள், 4272 பாடல்கள்



பன்னிருதிருமுறை

சேக்கிழார் பெருமான்

பன்னிரெண்டாம் திருமுறை

தொகுப்பு: சங்கர்

சித்திரை *2017* வெளியீடு

பாயிரம் - திருமலைச் சருக்கம்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். **#1**

எவ்வுயிர்களானும் தம்மறிவால் உணர்தற்கும் ஓதுதற்கும் அரியவனாயும், அங்ஙனம்அரியவனாயினும் தன்னை அடைந்து உய்ய வேண்டும் எனும் பெருங்கருணையினால் பிறைச் சந்திரன் உலாவுதற்கும், கங்கையைத் தாங்குதற்கும் இடனாயுள்ள திருச்சடையை உடையனாயும், அளவிறந்த ஒளியுரு உடையனாயும், தில்லைச்சிற்றம்பலத்தே திருக்கூத்து ஆடுகின்றவனாயும் உள்ள கூத்தப் பெருமானின், அன்பர்கள் உள்ளத்தில் என்றும் மலர்ந்து நிற்கின்ற சிலம்பணிந்த திருவடிகளை வாழ்த்தி வணக்கம் செய்வாம்.

விளக்கவுரை

உலகு என்பது ஈண்டு உயிர்களைக்குறித்தது; இடவாகு பெயர். உணர்தல் - மனத்தின் தொழில். ஓதல் - மொழியின் தொழில். இவ்விரண்டானும் அறிதற்கரியன் எனவே மாற்றம் மனம் கழிய நின்ற மறையோன் ஆதல் விளங்குகின்றது. நிலவை அணிந்தது தனி உயிர் காக்கும் தகைமையையும், கங்கையைத் தரித்தது பல்லுயிர் களையும் காக்கும் பண்பையும் விளக்குகின்றன. அலகில் சோதி - அள விறந்த ஒளியுரு. மலர் சிலம்படி - மலர்ந்த சிலம்படி, மலர்கின்ற சிலம் படி, மலரும் சிலம்படி என விரியும்: வினைத்தொகை. அன்பால் நினைவார்தம் உள்ளக் கமலத்தின் கண்ணே அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேரும் இயல்பு தோன்ற இவ்வாறு கூறினார். அரியவனாயும், வேணியனாயும், சோதியனாயும் உள்ள அம்பலத்தாடுவானின் மலர் சிலம்படியை வாழ்த்தி வணங்குவாம் எனக் கூட்டி உரைக்க. சிவ ஞானத்தால் உணர்ந்தும் எடுத்தோதுதற்கரியவர் என உரை காண்பர் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் (பெரியபு.-உரை). `உணர்ந்தார்க்கு உணர்வரியோன்` எனவரும் திருக்கோவையாரின் தொடருக்கு, `ஒருகால் தன்னை உணர்ந்தவர்கட்குப் பின் உணர்தற்குக் கருவியாகிய சித்த விருத்தியும் ஒடுங்குதலால் மீட்டும் உணர்வரி யோன்` என முதற்கண் உரைத்துப், பின்னர்த் `தவத்தானும், தியானத் தானும் எல்லாப் பொருள்களையும் உணர்ந்தவர்க்கும் உணர்வரி யோன் எனினும் அமையும்` என்றும் உரைத்தார் பேராசிரியர் (திருக்கோவையார் உரை). நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண் டவன் என்பது விளங்க நின்றது.

ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாந டம்செய் வரதர்பொற் றாள்தொழ. **#2**

தேன் நிரம்பிய மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த திருத்தில்லையுள் ஆனந்தக் கூத்தினை இடையறாது இயற்றி வருகின்ற கூத்தப் பெருமானின் அழகிய திருவடிகளைத் தொழ, தசை பொருந்திய உடம்பினை உடைய மானிடப் பிறவியே, தான் பெறுதற் குரிய உறுதிப் பொருளாய வீடுபேற்றினை அடையும்.

விளக்கவுரை

கூத்தப் பெருமானின் தாள் தொழ, மானுடப் பிறவி வீடு பேறடையும் என்பது கருத்து. தில்லையைத் தரிசிக்க முத்தி எனக் கூறு வதும் காண்க. ஊன் - தசை. உறுதி - வீடுபேறு. மாநடம் - ஆனந்தக் கூத்து. உயிர்க்குற்ற மும்மலக் கட்டையும் அறுத்து, அவ்வுயிரைத் தன் அருள்வெள்ளத்தில் அழுத்தி, அதனின்றும் மீளாதவாறு இன்புறச் செய்வது இத்திருக்கூத்தின் இயல்பாம்.

எடுக்கும் மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள் முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம். **#3**

பிறவிக் கடலினின்றும் உயிர்களை எடுத்து உய்யக் கொள்ளும் இத்திருத்தொண்டர் புராணம், இனிய தமிழ்ப் பாடல்களாக நிறைவுற்று, இந்நிலவுலகில் மேதக்க அருளை வழங்கிட, ஐந்து திருக் கைகளையும், தாழ்ந்த செவிகளையும், நீண்ட முடியினையும் உடைய மதம்பொருந்திய யானைமுகக் கடவுளை மனத்தில் இருத்தி வணங் குவாம்.

விளக்கவுரை

எடுக்கும் மாக்கதை - பிறவிக் கடலினின்றும் எடுக்கும் இப் பெருங்கதை. `என்னை இப்பவத்தில் சேரா வகையெடுத்து` *(சித்தி. -பாயிரம் 3)* என வருவதும் காண்க. இனி எடுத்துச் சொல்லப்படு கின்ற இம்மாக்கதை எனினும் அமையும். மாக்கதை - பெரியபுராணம். இப்பெயருடன் இந்நூல் வழங்குதற்கு இத்தொடரே காரணமாகும். நடக்கும் - நடத்தற் பொருட்டு: அஃதாவது நிறைவேறுதற் பொருட்டு. மூத்த பிள்ளையார் திருக்கரங்கள் ஐந்தனுள், ஒன்று மோதகம் ஏந்தி நிற்கும். ஒன்று இரத்தினக் கலசம் ஏந்தி நிற்கும். இது தம் தாய் தந்தையர்க்குக் காட்டும் உபசாரத்திற்கு ஆகும். நிறை குடம் காட்டி வரவேற்கும் வழக்கை நினைக. மற்றொன்று கயாசுரனை அழித்தற்குத் தம் கொம்பினை

ஒடித்து நிற்கும். ஏனைய இரண்டனுள் ஒன்று கயிற்றையும், மற்றொன்று தோட்டியையும் கொண்டு நிற்கும். உயிர்கட்குற்ற தீங்கை நீக்குதற்கு இவ்விரு கைகளும் உதவுகின்றன. கடம் - மதநீர். யானை என்னும் பொதுமை பற்றி இவ்வாறு கூறப்பட்டது.

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர்ப்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே. **#4**

இளம்பிறை வளர்தற்கு இடனாய திருச்சடையை உடைய கூத்தப்பிரானை எண்ணியும், வாழ்த்தியும், வழிபட்டும் உய்ந்த நாயன்மார்களின் தூய, சொல்மலர்களால் ஆகிய இவ்வரலாற் றில், பொதிந்து கிடக்கும் சொற்பொருள்களின் சுவை நலன்களை நுகர்ந்துகொண்டிருக்கும் புனிதமான, திருத்தொண்டர்கள் வதிந்தரு ளும் இப்பேரவை, இறைவனின் ஆணைவழி நின்று இவ்வுலகில் விளக்கமும் வெற்றியும் தந்து வளர்வதாகுக.

விளக்கவுரை

முன் துதி செயும் நாயன்மார் - முன்னியும் (எண்ணியும்), வணங்கியும் வாழ்ந்த அடியவர்கள். முன் - முன்னதாக எனப் பொருள் கொண்டு, அடியவர்கள் தம் செயல்கட்கு எல்லாம் முன்னதாக இறை வழிபாட்டை ஆற்றும் பெற்றியர் எனினும் அமையும். முன் - வழிபடுதலில் தாம் எல்லோர்க்கும் முன்னதாக எனப் பொருள் கொள்வதும் அமையும். `நம்மில் பின்பல்லது எடுக்க ஒட்டோம்` என வரும் திருவாசகமும் *(தி.8 திருப்பொற். பா.5)* காண்க. பொதி நலன் - சொற்பொருள்களின் சுவை நலன். ஏனைய நூல்களிலன்றி இந்நூலினிடத்தேயே, பொதிந்து நிற்கும் பத்திச் சுவை எனினும் அமையும். அன்றி இச்சொற்பொருள்களின் இடனாகவும், இவற்றிற்கு மேலாகவும் பொதிந்து நிற்கும் இறையின்பம் எனினும் அமையும். நாயன்மார் தூய சொல் மலர் - நாயன்மார்களால் அருளிச் செய்யப்பட்ட திருமுறைகள். நாயன்மார்களைப் பற்றிய திருமுறை என இரு வகையானும் பொருள்கொள நின்றது. இவ்வாற்றான் பன்னிரு திருமுறைகளும் அடங்குவவாயின. நுகர்தரு - நுகர்ந்தும், நுகர்ந்துகொண்டும், இனி நுகரவும் இருக்கின்ற: வினைத் தொகை விதிமுறை. இறைவனின் ஆணைவழி. பேரவை - இத்தகைய புனிதர்கள் இருக்கும் பேரவையே பேரவையாம். அன்றி வெறும் எண்ணிக்கையால் மட்டும் பெருகி நிற்கும் பேரவை, பேரவையாகாது என்பதாம். அது, பேருக்கு அவையாம்.

அளவி லாத பெருமைய ராகிய
அளவி லாஅடி யார்புகழ் கூறுகேன்

அளவு கூட உரைப்பரி தாயினும்
அளவில் ஆசை துரப்ப அறைகுவேன். **#5**

யாவராலும் அளத்தற்கரிய தகவும், தொண்டும் உடையராகிய எண்ணிறந்த அடியவர்களின் திருத்தொண்டினைக் கூறு தற்கு ஒருப்பட்ட யான், அதனை அளவிட்டுச் சொல்லும் ஆற்றலுடை யேன் அல்லேனாயினும், அடியவனின் அளவுபடாத ஆசை உந்த, ஒருவாறு கூறத் தொடங்கினேன்.

விளக்கவுரை

அளவு கூட - வரையறைப்படுத்திக் கூற. `காசில் கொற்றத்து இராமன் கதையினை ஆசை பற்றி அறை யலுற்றேன்`` *(கம்ப. -சிறப்புப்பாயிரம் 4)* என்பர் கம்பரும்.

தெரிவ ரும்பெரு மைத்திருத் தொண்டர் தம்
பொருவ ருஞ்சீர் புகலலுற் றேன்முற்றப்
பெருகு தெண்கடல் ஊற்றுண் பெருநசை
ஒருசு ணங்கனை ஒக்கும் தகைமையேன். **#6**

குளிர்ந்த கடலருகே பெருகிவரும் ஊற்று நீரை முழுமையாக உண்டுவிடுவேன் எனும் பெருவிருப்புடைய ஒரு நாயை ஒத்த தன்மையுடைய யான், உயிர்களால் முழுமையாக அறிதற்கரிய பெருமை வாய்ந்த திருத்தொண்டர்களின் ஒப்பற்ற சிறப்புக்களை எடுத்துச் சொல்ல முற்படுகின்றேன்.

விளக்கவுரை

தகைமையேன் புகலலுற்றேன் எனக் கூட்டுக. கடலருகே உளதாய ஊற்று நீராதலின் அந்நீர்ப் பெருக்கு என்றும் வற்றாது என் பது விளங்கும். அவ்வாறு பெருகிவரும் அந்நீரை முழுமையாகப் பருகுதற்கு நினையும் ஒரு நாயை ஒத்தவன் என்பதால், தொண்டர்தம் பெருமையும், ஆசிரியரின் எளிவந்த தன்மையும் ஒருங்கு அறிதற்கு ஏதுவாகின்றது. நாய் நக்கிக் குடிக்கும் இயல்பினது. ஆதலின் பெருகி வரும் நீரை முழுமையாகக் குடிக்க இயலாததோடு, குடிக்கும் நீரும் சிறிது சிறிதாகவே அமையும். அதுபோலத் திருத்தொண்டர்தம் பெருமை நினைய நினையப் பெருகிவரும் இயல்பினது. அதனை நான் முழுமையாகச் சொல்ல இயலாததோடு சொல்லுவதும் மிகச் சிறிதாகவே அமையும் என்பது கருத்து. அடியவர் திறம் ஆருயிர் களால் முற்ற அறிய இயலாது என்பதை நம்பியாரூரர்,

``இன்னவா றின்ன பண்பென் றேத்துகேன் அதற்கி யானார்
பன்னுபா மாலை பாடும் பரிசெனக் கருள்செய் என்ன``
-தி. *12 சரு.1-5 பா.198*

எனப் பின் கூறுமாற்றானும் அறியலாம்.
ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றுஒரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத்து இராமன் கதைஅரோ. -கம்பரா. சிறப்புப்பாயிரம்
எனவரும் கம்பர் திருவாக்கும் ஒப்பிட்டு உணர்தற்குரியதாம். நக்கிக் குடிக்கும் இயல்பினதாய நாயினைச் சேக்கிழார் கூற, அவ்வியல்பின தாய பூனையைக் கம்பர் கூறுகின்றார். கம்பர் கடலைக் கூற, சேக்கிழார் அதன்அருகே இருக்கும் ஊற்றைக் கூறியிருப்பது, தாம் எடுத்துக் கூறும் வரலாற்றருமையை மேலும் மிகுவிப்பதாகும் .

செப்ப லுற்ற பொருளின் சிறப்பினால்
அப்பொ ருட்குரை யாவருங் கொள்வரால்
இப்பொ ருட்கென் னுரைசிறி தாயினும்
மெய்ப்பொ ருட்குரி யார்கொள்வர் மேன்மையால். **#7**

ஒருவரால் கூறப்படுகின்ற பொருட் சிறப்பால், அப் பொருளைக் கூறுதற்குரிய சொற்கள் சிறப்பிலவாயினும் அதுபற்றி இகழாது, யாவரும் ஏற்றுக் கொள்வர். அதுபோல, ஈண்டுக் கூறப் பெறும் அடியவர்தம் வரலாற்றினைக் கூறுதற்குரிய என் சொற்கள் தகுதியுடையன வல்லவாயினும், உண்மை காணும் அறிஞர்கள் இச் சொற்களால் கூறப்பெறும் பொருளை நோக்க, மேன்மையாகவே கருதுவர்.

விளக்கவுரை

மெய்ப்பொருட்கு உரியார் - உண்மை காணும் விருப்பு டையார். `எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு` *(குறள் 423)* என்பதால், அவர் பொருளை நோக்குவரன்றி, அதனைக் கூறுவார்தம் சொல் வகைமையை நோக்கார் என்பதாம். இனி மெய்ப்பொருள் - இறை வன் எனக் கொண்டு, அவனுக்கு அடியராயினார், தம்மையும் அடிய ராகக் கொள்வராதலின் அவர் தம்மை இகழார் என்பதுமாம். `தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார் எம்மை உடைமை எமை இகழார்` *(சிவஞான. அவையடக்கம்)* என்னும் ஞானநூலும்.

மேய இவ்வுரை கொண்டு விரும்புமாம்
சேய வன்திருப் பேரம் பலஞ்செய்ய
தூய பொன்னணி சோழன்நீ டூழிபார்
ஆய சீர்அந பாயன் அரசவை. **#8**

செந்நிறத்தவனாய கூத்தப் பெருமானின் திருப்பேரம்பலத்தை, சிவந்த நிறமுடையதும் தூயதுமான பொன்னால் வேய்ந்து அழகு செய்தவனும்,

இவ்வுலகில் ஊழியளவும் பரவிய நிலைத்த புகழுடையவனுமான அநபாயனின் அரசவை, பொருந்திய இவ்வுரையை ஏற்று மகிழும்.

விளக்கவுரை

சோழன் - இரண்டாம் குலோத்துங்கன். இவனிடத்து முதல் அமைச்சராகப் பணிபுரிந்தவர் சேக்கிழார். இவன் திருப்பேரம் பலத்திற்குப் பொன் வேய்ந்தமை கல்வெட்டுகளாலும் அறியப்படும் உண்மையாகும்.இப்பேரரசனின்பாட்டனான முதற் குலோத்துங்கனும் சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்தவனாவன். அநபாயனின் தகவும் தொண்டும், தம்நன்றியுணர்வும் தோன்ற, இந்நூற்கண் இப்பேரரசனைப் பதினோரிடங்களில் போற்றி மகிழ்கின்றார் ஆசிரியர்.

அருளின் நீர்மைத் திருத்தொண் டறிவருந்
தெருளின் நீரிது செப்புதற் காமெனின்
வெருளின் மெய்ம்மொழி வானிழல் கூறிய
பொருளின் ஆகும் எனப்புகல் வாமன்றே. **#9**

பேரருட் தன்மை வாய்ந்த திருத்தொண்டர்களின் பெருமையை முழுமையாகத் தெளிதற்கு மெய்யுணர்வில்லாத நீர், இவர் பெருமையை எங்ஙனம் கூறமுடியும்? எனில், மயக்கமற்ற மெய்ம் மொழியாலே வானின் இடமாக அருளிய கூத்தப் பெருமானின் அரு ளால் அதனைக் கூறுதற்கு இயலும் எனத் துணிந்து கூறுவாம்.

விளக்கவுரை

மெய்ம்மொழி வான்நிழல் - வானினின்றும் ஒலி வடிவாகத் தோன்றிய மெய்மொழி. கூத்தப் பெருமான் அடியெடுத்துக் கொடுத்த `உலகெலாம்` எனும் தொடரை இது குறிக்கும். எனவே என்னறிவால் கூறுதற்குத் தகுதியுடையேன் அல்லேன் ஆயினும், இறைவன் அடி எடுத்துக்கொடுத்த அருட்கொடையால் கூறமுடியும் என்பது கருத்து. நிழல் - வானொலி *(அசரீரி)*. வெருளில்மெய் மொழிவான் - குற்றம் தீர்ந்த மறைகளை அருளுபவன்: இறைவன் எனப் பொருள் கூறுவாரும் உளர். இனி நிழல் என்பதற்கு இறை வனின் வேற்று வடிவாகிய நம்பியாரூரர் எனப் பொருள்கொண்டு, அவர் அருளிய திருத்தொண்டத் தொகையின் *(தி. 7 ப. 39)* துணை கொண்டு கூறுவேன் எனக் கூறுவாரும் உளர்.

இங்கிதன் நாமங் கூறின் இவ்வுல கத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப் புறவிருள் போக்கு கின்ற
செங்கதி ரவன்போல் நீக்குந் திருத்தொண்டர் புராணம் என்பாம். **#10**

இவ்விடத்து இவ்வரிய பனுவலின் பெயரைக் கூறுமிடத்து, இவ்வுலகில் தோற்றமில் காலந்தொட்டு இருந்துவரும் புறவிருள் அகவிருள்களில்,

புறவிருளைப் போக்குகின்ற கதிரவனைப் போல, மாக்களின் உயிரிடத்துப் பொருந்தி நிற்கும் அக இருளாகிய ஆணவத்தைப் போக்குகின்ற திருத்தொண்டர் புராணம் என்று சொல்வாம்.

விளக்கவுரை

முன்னாள் - தோற்றமில் காலம் (அநாதிக் காலம்). உயிரி டத்துப் பொருந்தியிருக்கும் இருள் ஆணவமாகும். தாழ்வெனும் தன் மையோடும் சைவமாம் சமயம் சாரும் செந்நெறியில் நின்று ஒழுகும் அடியவர் பெருமக்களின் வரலாறுகளும், அப்பெருமக்களின் வாய் மொழிகளுமே இவ்விருளைப் போக்க வல்லன. ஆதலின் ஆசிரியர் இவ்வாறு கூறுவாராயினர்.

பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரி யான்என்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை. **#11**

பொன்னிடத்து வெண்மையான திருநீற்றை அணிந் தாற்போல,அருளாளர்களால் சிறப்பித்துக் கூறப்படும் பனி சூழ்ந்த நீண்ட இமய மலையின் பகுதியில் உள்ளதும், அன்பரன்றிப் பிறர் எவரும் அறிதற்கரிய சிவபெருமான் எந்நாளும் நிலைபெற்று வீற்றிருந் தருளும் பெருமை பொருந்தியதுமானது திருக்கயிலாயமலையாகும்.

விளக்கவுரை

இமயமலை பொன்மயமானது. அதன் உச்சியிலுள்ளது திருக்கயிலாயமலையாகும். இது எஞ்ஞான்றும் பனிபடரப் பெற்றி ருத்தலின் வெண்மையாக இருக்கும். அப்பொன்மையும், வெண்மை யும் தோன்றப் `பொன்னின் வெண் திருநீறு புனைந்தென` என்று கூறி னார். புனைந்தென - புனைந்தாற் போல; ஈண்டு வந்த, என என்ற எச்சம், உவமப் பொருளில் வந்தது. இறைவன் வீற்றிருக்கப் பெற்ற சிறப்பினாலும், ஊழிதோறூழி உயர்தற்குரிய பெருமையினாலும், அருளாளர்கள் பலரும் இம்மலையைப் போற்றி வருவாராயினர். ஆதலின் ``பன்னுநீள்பனி மால்வரை`` என்றனர். பன்னுதல் - பாராட்டிக் கூறுதல், `பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும்` *(தி.2 ப.106 பா.1)* என்ற விடத்தும் இப்பொருள்படுதல் காணலாம். `கனவினும் தேவர்க்கு அரியோய் போற்றி நனவினும் நாயேற்கு அருளினை போற்றி` *(தி.8 போற்றி. 43)* என்பன போல் வரும் திருவாக்குகள் உண்மையின், `யார்க்கும்` என்றவிடத்து அன்பர் அல்லாத யார்க்கும் எனப்பொருள் கொள்ளப்பட்டது. திரு - முழுமுதற் பொருளாய திரு. மா - சலியாமையும் அளக்கலாகா அளவுடைமையும் பற்றி வந்த பெருமை. இவ்விரு

சிறப்புகளையும் என்றும் உடைமையின் `திருமாமலை` என்றார்.

அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலின்
நண்ணு மூன்றுல குந்நான் மறைகளும்
எண்ணில் மாதவஞ் செய்யவந் தெய்திய
புண்ணி யந்திரண் டுள்ளது போல்வது. **#12**

யாவர்க்கும் மேலான சிவபெருமான் வீற்றிருந் தருளும் பேறு பெற்ற திருமலையாதலால், அது பொருந்திய மேல், கீழ், நடு ஆகிய மூவுலகங்களும், நான்மறைகளும் அளவில் தவம் செய, அத்தவத்தின் பயனாக வந்து சேர்ந்த புண்ணியங்களின் திரண்ட உருவென அமைந்துள்ளதாம்.

விளக்கவுரை

புண்ணியத்தின் நிறம் வெண்மை என்பர். அதன் பயனாக அடைதற்குரியவன் சிவபெருமான் ஆதலின், அவன் வீற்றிருக்கப் பெற்ற மலையும் புண்ணியத்தின் திரட்சியாய் வெண்மையாய் அமைந் துள்ளது என்றார். உலகியல் வழிநின்றார்க்குக் கற்களின் திரட்சியாகத் தோன்றும் மலை, அருளியல் வழிநின்றார்க்குப் புண்ணியத்தின் திரட்சியாய்க் காண நின்றது. மூன்று உலகு - மேல் கீழ் நடுவாகிய மூவுலகு.

நிலவும் எண்ணில் தலங்களும் நீடொளி
இலகு தண்தளி ராக எழுந்ததோர்
உலகம் என்னும் ஒளிமணி வல்லிமேல்
மலரும் வெண்மலர் போல்வதம் மால்வரை. **#13**

நிலை பெற்று விளங்குகின்ற எண்ணற்ற சிவப்பதி களும் மிகு ஒளி பெற்று விளங்கும் தளிராக, எழுகின்ற உலகம் என்ப தொரு ஒளி பொருந்திய அழகிய கொடியின் மேல், மலர்கின்ற வெள் ளிய பூவை ஒத்தது, அத்திருக்கயிலாயமலை என்பதாம்.

விளக்கவுரை

உலகைக் கொடியாகவும், அதன்கண் விளங்கும் சிவப் பதிகளைத் தளிராகவும், அதன்மீது எழில் பெற நிற்கும் திருக்கயிலையை மலராகவும் உருவகிக்கின்றார் ஆசிரியர். இதனால் சிவப்பதிகளுள் தலையாயதாக விளங்குவது திருக்கயிலைமலை என்பது விளங்கும்.

மேன்மை நான்மறை நாதமும் விஞ்சையர்
கான வீணையின் ஓசையும் காரெதிர்
தான மாக்கள் முழக்கமும் தாவில்சீர்
வான துந்துபி யார்ப்பும் மருங்கெலாம். **#14**

மேதக்க நான்மறைகளின் ஓசையும், வித்தியா தரர்களின் இனிய இசை மீதூர்ந்த வீணையின் ஓசையும், மேகத்தோடு மாறு கொண்டு ஒலித்தும்,

மதநீர் பொழிந்தும், செருக்கி நிற்கும் யானை களின் ஓசையும், குற்றமற்றனவும், அளவிறந்த சிறப்பினை உடையன வுமான ஐவகைத் தேவ இசைக் கருவிகளின் ஓசையும் ஆகிய இப் பேரோசைகள் திருக்கயிலைமலையின் பக்கம் எல்லாம் எதிர்ந்து ஒலிக்கின்றன.

விளக்கவுரை

தானமாக்கள் - மதம் பொருந்திய யானைகள்.

பனிவி சும்பி லமரர் பணிந்துசூழ்
அனித கோடி அணிமுடி மாலையும்
புனித கற்பகப் பொன்னரி மாலையும்
முனிவர் அஞ்சலி மாலையும் முன்னெலாம். **#15**

குளிர்ந்த வான் உலகின்கண் வாழும் தேவர்கள் வணங்கிச் சூழ்ந்து நிற்ப அவர்களின் அளவிறந்த அழகிய முடி வரிசையும், அத்தேவர்கள் தம் முடிமேல் விளங்கும் தூய கற்பக மலர்களினால் தொடுக்கப் பெற்ற பொன்னிழைகளினால் ஆய மாலை களும், முனிவர்கள் கைதொழூஉப் பரவ அவர்களின் குவித்த கைகளின் வரிசையும் ஆகிய இவைகள் எல்லாம் இறைவனின் திரு முன்னிலையில் விளங்கி நிற்கின்றன.எனவே இறைவனின் திருமுன்பு தேவரும் முனிவரும் வணங்கி நிற்பர் என்பது பெற்றாம்.

விளக்கவுரை

அனிதம் - அளவற்ற. மாலையென வருவனவற்றுள் பொன்னரி மாலை என்பது கற்பகப் பூ மாலை யாம். ஏனைய இரண்டும் வரிசையெனும் பொருளன.

நீடு தேவர் நிலைகளும் வேண்டிடின்
நாடும் ஐம்பெரும் பூதமும் நாட்டுவ
கோடி கோடி குறட்சிறு பூதங்கள்
பாடி ஆடும் பரப்பது பாங்கெலாம். **#16**

தேவர்களின் நீடிய பதவிகளையும், ஐம்பொறி களானும் நாடுதற்குரிய ஐம்பெரும் பூதங்களையும், தாம் விரும்பின் தம் வயத்தவாக நிலை நிறுத்த வல்லனவாயுள்ள குறுகிய வடிவினை யுடைய சிறிய சிவபூத கணங்கள் எண்ணிறந்தனவாய்ப் பாடியும், ஆடியும் திருக்கயிலைமலையின்கண் உள்ள பரந்த இடங்களில் எல்லாம் மகிழ்ந்து நிற்கும்.

விளக்கவுரை

தேவர் நீடு நிலை என மாற்றுக. நீடு நிலை - உயர்ந்த தலைமைப் பதவிகள். நாடும் - ஐம்பொறிகளால் விரும்பப்படும். ஐம்புலன்களும் துய்த்தற்கு இடனாய இவ்வைம்பெரும் பூதங்களின் கூட்டாக இவ்வுலகு

விளங்குதலின் இங்ஙனம் கூறினார். `நிலம், நீர், தீ, வளி, விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்` *(தொல். மரபியல், 90)* என்னும் தொல்காப்பியமும்.

நாட்டுதல் - பூதகணங்கள் தம் இச்சைவழி ஆட்படுத்திக் கொள்ளுதல். இப்பூதங்கள் சிவகணங்கள் எனப்படும். இவை இறைவன் அருள்வழியன்றிச் செயற்படாவாதலின் அவ்வருள்வழி நிற்கும் செயற்பாட்டின் வல்லமை கூறினார் ஆயிற்று. நாவரசரின் திருத்தோளில் இடபமும், சூலமும் பொறித்தனவும், ஞானசம்பந் தருக்கு உலவாக்கிழியினை வழங்கியதும். சுந்தரரிடம் இருந்த பண்டாரங்களைக் கவர்ந்தனவும் இச்சிவகணங்களேயாம் என்பது அறியத்தக்கது. கோடிகோடி - கோடி கோடியாக விளங்கும் பூதங்கள். எண்ணிறந்தமை காட்ட இவ்வாறு கூறினார். குறள்சிறு - மிகச் சிறிய உடல் அளவிற்கேற்பக் கைகளும் கால்களும் அமைய விளங்கலின் இங்ஙனம் கூறினார்.

நாய கன்கழல் சேவிக்க நான்முகன்
மேய காலம் அலாமையின் மீண்டவன்
தூய மால்வரைச் சோதியின் மூழ்கியொன்
றாய அன்னமும் காணா தயர்க்குமால். **#17**

தம் தலைவனாய சிவபெருமானின் திருவடிகளை வணங்க வந்த நான்முகன், தான் சென்ற காலம் அதற்கு ஏலாததாய் அமைய, மீளத் திரும்பியவன், அத்தூய வெள்ளிமலையின் பேரொளி யில் மறைந்து, வேறு காணப்படாத தன் ஊர்தியாகிய அன்னப் பறவை யைக் காணாது வருந்துவானாயினன் என்பதாம்.

விளக்கவுரை

இறைவனை வணங்கற்கு அவரவர்க்கும் உரிய காலம் வரையறுக்கப் பெற்றிருந்தமை, இதனால் அறியலாம். இது போன்றே வணங்கும் அடியவர்களுள் ஒருசாரார் பிறிதொரு சாரார்க்கு இடையூறு இன்றித் தமக்குள் இடவரையறைப்படுத்திக் கொண்டு வணங்கியமை `இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்` எனத் தொடங்கும் திருவாசகத்தால் *(தி.8 திருப்பள்ளி.4)* அறியலாம். இவையன்றி வழிபாட்டிற்கெனச் செல்லும் அடியவர்களும் ஒருவர் பின் ஒருவராக இருந்து முறையாக வழிபாடு ஆற்றியமை `போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்` *(தி.4 ப.3 பா.1)* என வரும் திருமுறைத் தொடரால் அறியலாம்.

வெள்ளிமலை வெண்மையானது. அன்னமும் வெண்மை யானது. எனினும் அவ்வன்னத்தின் வெண்மையினும் அவ்வெள்ளி மலையின் வெண்மை மிகப் பெரியதாக விளங்கி நிற்றலின், அவ்வன் னம்

அவ்வெண்மையினின்றும் வேறுபடக் காண இயலாததாயிற்று.
`வெயிலிடைத் தந்த விளக்கென ஒளியிலா மெய்யாள்` (*கம்பரா. சுந். காட்சிப் படட. 4)* என்பதும் நினைவு கூர நின்றது.
`வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது
வெய்யோனை ஆகாத மீன்போல`
எனவரும் சிவஞானபோதமும் *(சூ.5 அதி.2 உதா.2)* ஈண்டு நினைவு கூரத்தக்கது.

காதில்வெண் குழையோன் கழல்தொழ நெடியோன்
காலம்பார்த் திருந்ததும் அறியான்
சோதிவெண் கயிலைத் தாழ்வரை முழையில்
துதிக்கையோன் ஊர்தியைக் கண்டு
மீதெழு பண்டைச் செழுஞ்சுடர் இன்று
வெண்சுட ரானதென் றதன் கீழ்
ஆதிஏ னமதாய் இடக்கலுற் றானென்
றதனைவந் தணைதருங் கலுழன். **#18**

திருச்செவியில் வெண் சங்கினால் ஆய குழையை அணிந்த இறைவனின் திருவடிகளைத் தொழுதற்கு நெடியவனாகிய திருமால், காலம் பார்த்திருத்தலை அறியாதவனாகிய கருடன், வெண் மையான கயிலையின் சாரலில் உள்ளதொரு குகையில் இருந்த மூத்த பிள்ளையாரின் ஊர்தியாகிய மூஞ்சூறு இருத்தலைப் பார்த்து, முன் பொரு காலத்து மேல் எழுந்த செழுஞ்சுடர்ப் பிழம்பானது இன்று வெண்சுடர்ப் பிழம்பாய் நிற்கின்றது என்று எண்ணிய எண்ணத்தால், அதனைப் பண்டு ஒரு பன்றியாய் நிலத்தைத் தோண்டிக் காண முயன்ற திருமால், இன்றும் அவ்வாறு காண இவ்வடிவில் முயன்றான் என்று கருதி அம்மூஞ்சூறிடத்து வந்து சேரும்.

விளக்கவுரை

இது வெள்ளிப் பாடல் என்பர். எனினும் பதிப்புகள் அனைத்திலும் இப்பாடல் இடம் பெற்றிருப்பதால் இதற்கும் உரை எழுதப் பெற்றது. காதில் வெண் குழையோன் - தோடுடைய செவியன். தன் தலைவனான பெருமானை வழிபடுதற்குக் காலம் பார்த்துத் திரு மால் இருத்தலை அறியாத கருடன், அவன் தான் இன்று மீண்டும் இவ் வெண்பிழம்பைக் காண முயன்று பன்றி வடிவெடுத்துக் காண முயல்கின் றனனோ எனக் கருதினன் என்பதாம்.
கு-ரை: மூஞ்சூறு பன்றிக்கு ஒருபுடை ஒப்புமையாய் இருத்தலின் அதனை இவ்வாறு கருதினன் கருடன். இதனை அணியிலக்கண நூலார் திரிபதிசயம் என்பர். கலுழன் - கருடன்.

அரம்பைய ராடல் முழவுடன் மருங்கின்

அருவிகள் எதிரெதிர் முழங்க
வரம்பெறு காதல் மனத்துடன் தெய்வ
மதுமல ரிருகையும் ஏந்தி
நிரந்தரம் மிடைந்த விமானசோ பான
நீடுயர் வழியினால் ஏறிப்
புரந்தரன் முதலாங் கடவுளர் போற்றப்
பொலிவதத் திருமலைப் புறம்பு. **#19**

இந்திரன் முதலிய இறையவர் பலரும் போற்ற விளங்கும் பொற்புடைய அத் திருமலைச் சாரலில், வரம் பெறும் வேட்கை பொருந்திய மனத்துடன் கூடிய தெய்வ மகளிர், கற்பகத் தருவின் தேன் பொருந்திய மலர்களை இரு கைகளிலும் ஏந்தி, இடை யீடின்றி நெருங்கிய விமானங்களுடன் கூடிய படிவழி ஏறி வந்து வணங்க, அம்மகளிரின் ஆடலுக்கு ஏற்ப ஒலித்து நிற்கும் மத்தள ஓசை யுடன், அம்மலையருகில் உள்ள அருவிகளும் ஒன்றோடொன்று மாறு பட்டு ஒலித்து நிற்கும்.

விளக்கவுரை

நிரந்தரம் - இடையீடின்றி எப்போதும். சோபானம் - படிநிலை. புரந்தரன் - இந்திரன்.தெய்வ மகளிரும் இந்திரன் முதலிய தேவர்களும் போற்றப் பொலிவது அத்திருமலை என்பது கருத்து.

வேதநான் முகன்மால் புரந்தரன் முதலாம்
விண்ணவர் எண்ணிலார் மற்றும்
காதலால் மிடைந்த முதற்பெருந் தடையாம்
கதிர்மணிக் கோபுரத் துள்ளான்
பூதவே தாளப் பெருங்கண நாதர்
போற்றிடப் பொதுவில்நின் றாடும்
நாதனார் ஆதி தேவனார் கோயில்
நாயகன் நந்தியெம் பெருமான். **#20**

நான்மறைகளில் வல்ல நான்முகன், திருமால், இந்திரன் முதலாக உள்ள எண்ணற்ற விண்ணவர்களும், மற்றும் பெருமானிடத்துப் பத்திமை பூண்ட முனிவர் முதலாயினாரும், இறை வனை வணங்குதற் பொருட்டு நிரல்படச் செல்லாது நெருங்கிச் சேரின், அவர்களை நிரல்பட நிறுத்தி ஆற்றுப்படுத்தும் முதல் பெருந் தடையாக விளங்கும் ஒளி பொருந்திய மணிகளால் ஆய திருக்கோபுரத்தின் திரு வாயிலின்கண் உள்ளவரும், சிவபூதங்களும், பத்திமை பூண்ட வேதா ளங்களும் முதலாய பெருங்கணநாதர்கள் போற்றி மகிழ்ந்திடத் திருக் கோவிலில் நிலையாக நின்று ஆடியருளுகின்ற தலைவனாரும், தோற் றமில் காலத்தேயே நிலை பெற்று இருந்தருள்பவரும், சிவபெருமா னின் திருக்கோவிலின் காவல் தலைவராக இருந்தருளும் நந்தியெம் பெருமான் ஆவர்.

விளக்கவுரை

முதல் பெருந் தடை - முதல் தடை + பெருந் தடை எனக் கூட்டுக. முதல் தடை - தடுத்தலில் முதன்மையாக நிற்கும் தடை. பெருந் தடை - இவரை மீறிச் செல்ல முடியாத தடை. இவ்வாறு தடை செய்பவர் நந்தியெம்பெருமான் ஆவர். இறை வழிபாடு ஆற்றுவா ரைத் தடுத்து நிறுத்தல் மறச்செயலாகும்.ஆனால் ஒருவர் ஒருவரின் முந்தச் சென்று வழிபட முயலின் மன அமைதியும் இராது; உடல் நெருக்கத்தால் மொழி மெய்களால் ஆய வழிபாடாற்றலும் செவ்வனே நிறைவேறாது. அந்நிலையை நீக்கவே அன்னோரைத் தடுத்து நிறுத்துதலின் இது அறனாயிற்று. வேதாளம் - பெரும் பேய். அவை அத் தன்மையினின்றும் நீங்கிச் சிவவழிபாடு செய்யும் பெற்றி யால் ஏனைய சிவ கணங்களோடு ஒருங்கு வைத்து எண்ணும் பெற்றி யவாயின. கோயில் நாயகன் - திருக்கோயிலைக் காத்தலில் தலைமை பூண்டு நிற்பவன்.

நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர்
நீறணி மேனியர் அனேகர்
பெற்றமேல் கொண்ட தம்பிரான் அடியார்
பிஞ்ஞகன் தன்னருள் பெறுவார்
மற்றவர்க் கெல்லாந் தலைமையாம் பணியும்
மலர்க்கையில் சுரிகையும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினாற் பெற்றான்
காப்பதக் கயிலைமால் வரைதான். **#21**

நெற்றியில் கண்களையுடையராய்ப் பருத்த நான்கு தோள்களையுடையராய்த் திருநீற்றினை அணிந்த திருவடிவுடைய ராய் உள்ளார்க்கும், விடை மீது இவர்ந்து வரும் பெருமானுக்கு அடிய வராய் உள்ளார்க்கும், அழகிய தலைக்கோலம் உடையனாய சிவ பெருமானின் திருவருள் உடையார்க்கும், மற்றும் ஆண்டு இருப்பார் அனைவர்க்கும் தலைவராய், இறைவற்குப் பணி விடை செய்யும் பேற்றையும், மலரனைய திருக்கைகளில் உடைவாளும் பிரம்பும் கொண்டு அடியவரை ஆற்றுப்படுத்தும் பொறுப்பையும், தொகுதியா கக் கட்டிய நீண்ட சடையினையுடைய சிவபெருமானின் திருவருள் கருணையால் பெற்றவர் திருநந்திதேவர் ஆவர். அவர்தம் காவலைப் பெற்றிருப்பது இத்திருக்கயிலை மலையாகும்.

விளக்கவுரை

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கும் சங்கரனை அடையும் நன்மார்க்கம் ஆகும்.
அவற்றுள் இங்குக் குறிக்கப் பெறுவோர் மூவர். நெற்றியில் கண்ணும்

நாற்பெருந் தோளும் நீறணி மேனியும் உடையவர், யோக நெறியில் நின்று அத்தகுதிக்குரிய சாரூபத்தைப் பெற்றவர்.
சாரூபமாவது இறைவன் திருவுருவத்தைப் பெறுதலாம். ஆத லின், பெருமானுக்குரிய வடிவும் வண்ணமும் இவர்க்கும் உளவாயின.
தம்பிரான் அடியார் என்பார் கிரியை நெறியில் நிற்பவராவர். அருள் பெறுவார் என்பார் சரியை நெறியில் நிற்பவராவர்.
சுரிகை - உடைவாள். தலைமையும் சுரிகையும் பிரம்பும் பெரு மானின் அருளால் பெற்ற நந்தியெம்பெருமான் காப்பது திருக்கயிலை மலையாம்.

கையின்மான் மழுவர் கங்கைசூழ் சடையில்
கதிரிளம் பிறைநறுங் கண்ணி
ஐயர்வீற் றிருக்குந் தன்மையி னாலும்
அளப்பரும் பெருமையி னாலும்
மெய்யொளி தழைக்குந் தூய்மையி னாலும்
வென்றிவெண் குடைஅந பாயன்
செய்யகோல் அபயன் திருமனத் தோங்குந்
திருக்கயி லாயநீள் சிலம்பு. **#22**

தம் இடக் கையில் மானும், வலக் கையில் மழுவும் உடையவரும், கங்கை சூழ்ந்து நிற்கும் திருச்சடையை உடையவரும், அதன்கண் ஒளி பொருந்திய இளம் பிறையையும் நறுமணம் மிக்க கொன்றையையும் அணிந்திருப்பவருமான மிகப் பெரியவராய சிவபெருமான் வீற்றிருந்தருளும் தன்மையினாலும், அளவிடற்கரிய பெருமையினாலும், தன்பால் வெண்மையான ஒளிமிக்கு இருக்கும் தூய்மையினாலும், வெற்றி பொருந்திய வெண்கொற்றக் குடையை யுடையவரும், செவ்விய செங்கோலையுடையவருமான அநபாய ரின் திருஉள்ளத்தில் ஓங்கி நிற்கும் சிறப்பினை உடையது திருக் கயிலாயம் என்னும் நீண்ட பெரிய மலையாகும்.

விளக்கவுரை

ஐயர் - பெரியோர். மெய் - திருக்கயிலாயமாம் மெய். ஒளிதழைக்கும் - \`பொன்னின் வெண் திருநீறு புனைந்தென\` எனத் தொடங்குதற்கண் கூறியவாறு, தழைத்து நிற்கும் வெண்மையான ஒளி. மெய் - திருநீறு எனப் பொருள் கொண்டு அதன் ஒளி தழைக்கும் எனினும் ஆம். திருநீறு மெய்யாதல் \`சத்தியமாவது நீறு\` *(தி.2 ப.66 பா. 3)* என்பதாலும் அறியப்படும். மெய் ஒளி - மெய்ப்பொருளை உணர்ந்தார் தம் ஒளி; \`ஐந்தும் ஆறு அடக்கியுள்ளார் அரும்பெருஞ் சோதியாலும்\` *(தி.12. பு.10 பா.131)* என வருதலின் அத்தகைய ஒளி எனலும் ஆம்.
அநபாயர் - அபாயம் *(தீங்கு)* இல்லாமல் செய்பவர். ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறங் காத்தலின் அநபாயர் ஆயினர். \`கோவினுக்கு அருங்கலம்

கோட்டம் இல்லது` *(தி.4 ப.11 பா.12)* எனவரும் அப்பரடிகள் திருவாக்கும் காண்க. கோட்டம் - தம்கண்ணும் தம்மால் காக்கப்படும் உயிர்களிடத்தும் உள்ள கோட்டம். திருமனம் - செம்மையாகிய திருவினை உடைய மனம்: `திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட` *(தி.7 ப.39 பா.4)* என வருவதும் காண்க`.

அன்ன தன்திருத் தாழ்வரை யின்னிடத்து
இன்ன தன்மையன் என்றறி யாச்சிவன்
தன்னை யேயுணர்ந் தார்வம் தழைக்கின்றான்
உன்ன ருஞ்சீர் உபமன் னியமுனி. **#23**

இதுகாறும் கூறிய அத்தன்மைகளை உடைய திருக்கயிலையின் அடிவாரத்தே, இவ்வாறாய தன்மையுடையர் என யாவரானும் அறியப்படாதவராகிய சிவபெருமானையே மனத்தகத்து எண்ணியும், இடையறாப் பேரன்பால் இயைந்து அநுபவித்துக் கொண்டும் இருப்பவர், நினைத்தற்கரிய சிறப்பினையுடைய உபமன் னியு முனிவர் என்பவராவர்.

விளக்கவுரை

`அவனருளே கண்ணாகக் காணின் அல்லால் இப்படியன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாதே` *(தி.6 ப.97 பா.10)* என்பர் அப்பரடிகள். `இன்ன தன்மையன் என்றறி வொண்ணா எம்மானை` *(தி.7 ப.59 பா.1)* என்பர் சுந்தரர். சிவன் தன்னையே - ஏகாரம் பிரிநிலை; தேற்றமும் ஆம். ஆர்வம் - ஆசை. இது அன்பின் வழியதாதலின் இடையறாப் பேரன்பு என உரை கொள் ளப் பெற்றது.

யாத வன்துவ ரைக்கிறை யாகிய
மாத வன்முடி மேலடி வைத்தவன்
பூத நாதன் பொருவருந் தொண்டினுக்கு
ஆதி யந்தம் இலாமை யடைந்தவன். **#24**

அவ்வுபமன்னியு முனிவர், யது மரபில் பிறந்தவ னும், துவாரகைக்கு அரசனுமாகிய கண்ணனின் முடிமேல் தம் திருவடி களைச் சூட்டியவர். உயிர்கட்குத் தலைவராய் உள்ள சிவபெருமா னிடத்துத் தாம் கொண்டிருக்கும் ஒப்பற்ற திருத்தொண்டிற்கு முதலும் முடிவும் இல்லாத தன்மையும் பெற்றவர்.

விளக்கவுரை

யாதவன் - யது என்ற அரசன்வழி வந்த சூரிய குலத்து அரச மரபினன். கண்ணன் இம்மரபில் வந்தவன் ஆதலால் `யாதவன்` என அழைக்கப்பெற்றான். இம்மரபில் தோன்றிய கண்ணன் இடைச்

சேரியில் வளர்ந்து வந்த தொடர்பு பற்றி, இடையர்களும் யாதவர் ஆயினர்.
முடிமேல் அடிவைத்த வரலாறு: சிவதீக்கை பெறாத கண்ணன், யமுனை ஆற்றங்கரையில் சிவ வழிபாடு ஆற்றிக் கொண்டிருந்தான். வழிபட்டபின், அம்மலர்களை யமுனை ஆற்றில் இட்டான். அவ்வாற் றின்வழி வந்த மலர்களை உபமன்னியு முனிவர் எடுத்துச் சிவவழி பாடு செய்தனர். அவை கண்ணனால் வழிபாடாற்றப் பெற்ற மலர்கள் (நிருமாலியம்) என்று ஆங்குள்ளார் முனிவரிடத்தில் கூறிய பொழுது, `கண்ணன் சிவதீக்கையின்றிவழிபட்டனன், ஆதலின் அவன் இட்ட மலர்கள் நிருமாலியம் ஆகா. எனவே அவற்றை மீண்டும் எடுத்து வழிபடுதலில் வழுவில்லை` என்றனர். அதுகேட்ட கண்ணன் தீக்கையின்றித் தான் இதுகாறும் செய்து வந்த சிவபூசைக்கு வருந்தி, அம்முனிவரை அடைந்து முறையாகச் சிவதீக்கை பெற்றனன் என்பது வரலாறு. அவ் வரலாற்றை உளங் கொண்டே `முடிமேல் அடி வைத்தவன்` என்றார்.

அத்தர் தந்த அருட்பாற் கடலுண்டு
சித்தம் ஆர்ந்து தெவிட்டி வளர்ந்தவன்
பத்த ராய முனிவர்பல் லாயிரர்
சுத்த யோகிகள் சூழ இருந்துழி. **#25**

உயிர்கட்கு எல்லாம் தந்தையாக இருந்தருளும் இறைவன் வழங்கிய திருப்பாற்கடலை உண்டு, மனநிறைவு பெற்று, அவ்வுணவு தெவிட்டிட வளர்ந்தவராகிய உபமன்னியு முனிவர், இறைவர்க்குப் பத்தராய முனிவர் பலரும் தூய சிவயோகியரும் சூழ அங்கிருந்த பொழுது...

விளக்கவுரை

அத்தர் - தந்தை: `எனக்கு அன்னையும் அத்தனும் அல்லனோ பெரும!` என்பதும் காண்க. உபமன்னியு முனிவர் தம் குழந்தைப் பருவத்தே பால்வேண்டி அழ, வசிட்டரும் குழந்தையைச் சிவபெருமான் திருமுன்னிலையில் இட்டு வணங்கித் தம் குறையைக் கூறினார். இறைவனும் இரங்கி, அவர் உண்ணத் திருப்பாற்கடலை வழங்கியருளினன் என்பது வரலாறு. ``பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்`` *(தி.9 திருப்பல்.9)* என்னும் திருப்பல்லாண்டும். சுத்த யோகிகள் - சுத்த அவத்தையில் நின்ற யோகிகள் என்பர் சிவக்கவிமணியவர்கள் *(பெ.பு.உரை)*. அவா வறுத்தல் முதலிய தூய குணங்களையுடைய சிவயோகியர் என்பர் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் *(பெ.பு.உரை)*. உண்டு என்பது பொது வினையாதலின் `கடல் உண்டு` என்றார்.

அங்கண் ஓரொளி ஆயிர ஞாயிறு

பொங்கு பேரொளி போன்றுமுன் தோன்றிடத்
துங்க மாதவர் சூழ்ந்திருந் தாரெலாம்
இங்கி தென்கொல் அதிசயம் என்றலும். **#26**

அவ்விடத்தே ஒரு பேரொளியானது ஆயிரம் கதிரவர்கள் ஒருங்கு தோன்றி நிற்கும் பேரொளி போன்று, அவ் வுபமன்னியு முனிவர் முன்பு தோன்ற, தூய தவமுனிவர்களாய் ஆண்டுச் சூழ்ந்திருந்தார் அனைவரும், இவ்விடத்து இது தோன்றுவது என்ன அதிசயம்? என்று வினவவும்.

விளக்கவுரை

துங்கம் - தூய்மை: பெருமையுமாம். ஆயிரம் ஞாயிறு - எண்ணிறந்த ஞாயிறு.

அந்தி வான்மதி சூடிய அண்ணல்தாள்
சிந்தி யாவுணர்ந் தம்முனி தென்திசை
வந்த நாவலர் கோன்புகழ் வன்றொண்டன்
எந்தை யார்அரு ளால்அணை வான்என. **#27**

மாலைப் பொழுதில் வானில் தோன்றும் இள மதியைச் சூடிய பெருமானின் திருவடிகளை இரவு பகலாகச் சிந்தித் துக் கொண்டிருக்கும் திறத்தால், உண்மை நிகழ்வை உணர்ந்து, நம்தென் திசையில் தோன்றியருளிய நாவலூராளி என, முனிவராலும் போற் றப் பெறும் வன்தொண்டர், எம்பெருமானின் திருவருளால் இவ்விடத் திற்கு எழுந்தருளுகின்றார் என்று கூற.

விளக்கவுரை

அந்தி - மாலை. \`குடதிசை மதியது சூடு சென்னி\` *(தி.1 ப.111 பா.6)* என்னும் திருமுறையும். சிந்தியா உணர்ந்து - இறை வனை இடையறாது சிந்தித்திருப்பதால் உணர்ந்து. \`நெறிநீர்மையர் நீள்வானவர் நினையுந்நினை வாகி, அறிநீர்மையி லெய்தும்மவர்க் கறியும்மறி வருளிக் குறிநீர்மையர்\` *(தி.1 ப.17 பா.6)* எனத் திருஞான சம்பந்தர் அருளுவதும் நினைவு கூர்தற்குரியதாம்.

கைகள் கூப்பித் தொழுதெழுந் தத்திசை
மெய்யில் ஆனந்த வாரி விரவிடச்
செய்ய நீள்சடை மாமுனி செல்வுழி
ஐயம் நீங்க வினவுவோ ரந்தணர். **#28**

இவ்வாறு தாம் உணர்ந்த வகையில் கைகளைக் குவித்துத் தொழுது கொண்டே, அவ்வொளி செல்லும் திசை நோக்கித் தம் உடல் முழுதும் ஆனந்த வெள்ளம் பெருக, சிவந்த நீண்ட சடையை உடைய முனிவர் செல்கின்ற பொழுது, ஆண்டுள்ள மாதவர்கள் தம் ஐயம் நீங்க ஒரு வினாவை அவரிடம் வினவுவாராயினர்.

விளக்கவுரை

ஆனந்த வாரி - ஆனந்த வெள்ளம்.

சம்பு வின்அடித் தாமரைப் போதலால்
எம்பி ரான்இறைஞ் சாயிஃ தென்னெனத்
தம்பி ரானைத்தன் னுள்ளந் தழீஇயவன்
நம்பி யாரூரன் நாம்தொழுந் தன்மையான். **#29**

சிவபெருமானின் திருவடித் தாமரை மலர்களை யன்றி, `எம்பெருமானே! நீவிர் யாரையும் வணங்க மாட்டீர்! அவ் வாறு இருக்க, இவரை வணங்கியது என்னோ?` என்று கேட்க, அவ ரும், `யாவர்க்கும் முழுமுதற் கடவுளாய சிவபெருமானைத் தம் உள்ளத்தே வைத்து எண்ணிக் கொண்டிருப்பவராய நம்பியாரூரர், நம் மால் தொழப்படும் தன்மையர்` என்று கூற.

விளக்கவுரை

சம்பு - இறைவன்.

என்று கூற இறைஞ்சி இயம்புவார்
வென்ற பேரொளி யார்செய் விழுத்தவம்
நன்று கேட்க விரும்பு நசையினோம்
இன்றெ மக்குரை செய்தருள் என்றலும். **#30**

உபமன்னியு முனிவர் தாம் வணங்கியதற்கான காரணம் இஃது என்று கூற, அம்முனிவர்களும் வணங்கிக் கூறுவார், `நம்பியாரூரர் செய்த தவத்தை அறிய நாங்கள் விரும்புகின்றோம், எமக்கு அதனை அருளிச்செய்ய வேண்டும்` என்று வேண்டிட.

விளக்கவுரை

வென்றபேரொளியார் - தம் தவமிகுதியால் ஐம்பொறி களையும் வென்ற பேரொளிப் பிழம்பாயவர்; நம்பியாரூரர்.

உள்ள வண்ணம் முனிவன் உரைசெய்வான்
வெள்ள நீர்ச்சடை மெய்ப்பொரு ளாகிய
வள்ளல் சாத்தும் மதுமலர் மாலையும்
அள்ளும் நீறும் எடுத்தணை வானுளன். **#31**

உபமன்னியு முனிவரும் அவர்கள் கேட்ட வர லாற்றை உள்ளவாறு அருளிச் செய்வாராய், பெருக்குடைய கங்கை நீரைத் தாங்கிய சடையை உடைய மெய்ப்பொருளாய சிவபெருமான், தம் திருவுடம்பில் அணிதற்குரிய, தேன் பொருந்திய மலர்களால் தொடுத்த திருமாலையையும், அணிதற்குரிய திருவிரலால் அள்ளு கின்ற திருவெண்ணீற்றினையும் எடுத்துக் கொடுக்கும் திருத்தொண்டர் ஒருவர் இருந்து வந்தார்.

விளக்கவுரை

மதுமலர் - தேன் பொருந்திய மலர்.

அன்ன வன்பெயர் ஆலால சுந்தரன்
முன்னம் ஆங்கொரு நாள்முதல் வன்தனக்கு
இன்ன வாமெனு நாள்மலர் கொய்திடத்
துன்னி னான்நந் தனவனச் சூழலில். **#32**

அத்திருத்தொண்டரின் பெயர் ஆலாலசுந்தரர் என்பதாம். அவர் முன்பொருநாள், திருக்கயிலையில் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு, இன்ன மலர்கள் உரியனவாம் எனக் கருதி, அம் மலர்களைக் கொய்தற்கெனத் திருநந்தனவனச் சோலைக்குச் சென்றரு ளினர்.

விளக்கவுரை

நாள் மலர் - அன்றலர்ந்த மலர்.

அங்கு முன்னெமை ஆளுடை நாயகி
கொங்கு சேர்குழற் காமலர் கொய்திடத்
திங்கள் வாள்முகச் சேடியர் எய்தினார்
பொங்கு கின்ற கவினுடைப் பூவைமார். **#33**

அத்திருநந்தன வனத்தில் ஆலாலசுந்தரர் வருதற்கு முன்னமேயே, உயிர்களை எல்லாம் ஆட்கொண்டு அருளுகின்ற தலைவியாம் உமையம்மையாரது, மணம் வீசுகின்ற கூந்தலுக்கு ஏற்கும் மலர்களைக் கொணர்தற்காக, முழுமதியென விளங்கும் ஒளி பொருந்திய முகத்தினையுடைய தோழியர் இருவர் சென்றிருந்தனர். அவர்கள், பொங்கி மிகும் அழகினையுடைய நன்மகளிராவர்.

விளக்கவுரை

கொங்கு - மணம்: இயற்கை மணம்.

அந்த மில்சீர் அனிந்திதை ஆய்குழல்
கந்த மாலைக் கமலினி என்பவர்
கொந்து கொண்ட திருமலர் கொய்வுழி
வந்து வானவர் ஈசர் அருளென. **#34**

அத்தோழியர், அளவிறந்த சிறப்பினையுடைய அனிந்திதை என்பாரும், நுணுகிச் செறிந்த கூந்தலையும் நறுமணம் மிக்க மாலையையும் உடைய கமலினியாரும் ஆவர். கொத்தாகப் பூத்த அழகிய மலர்களை அவர்கள் கொய்து கொண்டிருக்கும் பொழுது, தேவதேவனாம் சிவபெருமானின் திருவருள் என வந்து.

விளக்கவுரை

ஆய்குழல் - நுணுகிய குழல். கந்தம் - நறுமணம். கொந்து- பூங் கொத்து.

மாத வம்செய்த தென்றிசை வாழ்ந்திடத்

தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப்
போது வாரவர் மேல்மனம் போக்கிடக்
காதல் மாதருங் காட்சியிற் கண்ணினார். #35

பெருந்தவம் செய்த தென்னகம் வாழ்வடையவும், உயிர்கட்கு உற்ற தீங்குகள் இல்லையாகச் செய்யும் திருத்தொண்டத் தொகையை உலகிற்கு வழங்கவும் வருபவர், அவ்விரு தோழியர் மேலும் தம் மனத்தைச் செலுத்த, காதலுற்ற அவ்விரு பெண்களும் தமது கட்பொறியினால் பொருந்த நோக்கினர்.

விளக்கவுரை

தென்னகம் மாதவம் செய்திருக்குமாறு - அடுத்து வரும் *31* முதல் *36* வரையுள்ள பாடல்களில் விவரிக்கப்படுகிறது. தீதிலாத் திருத்தொண்டத் தொகை - உயிர்க்குற்ற தீங்கினை இல்லையாகச் செய்யும் திருத்தொண்டத் தொகை. ஈண்டுத் தீங்கு என்பது யான் எனது எனும் செருக்கினால் வரும் பிறவிப் பிணியாகும். காட்சியில் கண்ணினார் - தம் கட்பொறியினால் தம் கருத்தமைவைத் தெரிவித் தார்கள். `கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனுமில` *(குறள், 1110)* என்பர் திருவள்ளுவனாரும்.

அனிந்திதை, கமலினியார் ஆகிய இரு பெண்கள் மீது சுந்தர ரும், அப்பெண்கள் சுந்தரர் மீதும் கருத்தொருமித்த பார்வையைச் செலுத்தியதே, பின் அவர்கள் மையல் மானுடமாய்ப் பிறத்தற்கு ஏதுவாயிற்று. `கண்டது மன்னும் ஒருநாள் அலர் மன்னும் திங்களைப் பாம்பு கொண்டற்று` *(குறள், 1146)* எனவரும் குறட்பாவும் ஈண்டு நினைவு கூரத்தக்கதாம்.

முன்னம் ஆங்கவன் மொய்ம்முகை நாண்மலர்
என்னை யாட்கொண்ட ஈசனுக் கேய்வன
பன்ம லர்கொய்து செல்லப் பனிமலர்
அன்னம் அன்னவ ருங்கொண் டகன்றபின். #36

அவ்வாறு கண்ட மகளிர், அத்திருநந்தனவனத்தை விட்டுச் செல்லும் முன்னமேயே, வண்டுகள் மொய்த்தற்குரிய புதிய மலர்களை எல்லாம், `இவையே என்னை ஆட்கொண்டருளும் இறைவற்குப் பொருந்துவன` எனக் கருதி அவ்வாறு பறித்த மலர்கள் பலவற்றையும் ஆலாலசுந்தரர் கொண்டு செல்ல, குளிர்ந்த மலர்களைக் கொய்த அன்னத்தை ஒத்த அத்தோழியரும் திருநந்தனவனத்தை விடுத்துச் சென்றனர்.

விளக்கவுரை

மலர் பறித்தற்கு வந்த அச்சேடியருக்குப் பின் வந்த சுந் தரர், தாம் மலர் கொய்து கொண்டு அவர்களுக்கு முன்னே சென்றனர் என்பதாம்.

மொய்ம் முகை - வண்டுகள் மொய்த்தற்குரிய அரும்புகள்.

ஆதி மூர்த்தி அவன்திறம் நோக்கியே
மாதர் மேல்மனம் வைத்தனை தென்புவி
மீது தோன்றிஅம் மெல்லிய லாருடன்
காதல் இன்பம் கலந்தணை வாயென. **#37**

யாவர்க்கும் மூலகாரணமாய் நிற்கும் மூர்த்தியாகிய சிவபெருமான், மலர் கொய்து கொண்டு தம்பால் வந்து நிற்கும் சுந்தர ரைப் பார்த்து, `நீ அத்தோழியரின் மீது மனம் வைத்தாய்; ஆதலின் தென்னகத்தில் தோன்றி, அம்மகளிரிடத்து இன்பம் துய்த்து, மீண்டும் இங்கு வருவாயாக` என்று அருள.

விளக்கவுரை

ஆதி மூர்த்தி - யாவர்க்கும் மூல காரணமாய் நிற்கும் மூர்த்தி. வாழ்முதலாகிய சிவபெருமான், `வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்` *(தி.6 ப.23 பா.1)* என்பதற்கேற்ப, `மகளிர்மீது மனம் கொண்ட சுந்தரரை, அம்மகளிரைக் கலந்து இன்புற்றுப் பின் இக்கயி லையை அணைவாய்` என்றனர். *9;*

கைக ளஞ்சலி கூப்பிக் கலங்கினான்
செய்ய சேவடி நீங்குஞ் சிறுமையேன்
மையல் மானுட மாய்மயங் கும்வழி
ஐய னேதடுத் தாண்டருள் செய்என. **#38**

கைகளைத் தலைமேல் வைத்துக் குவித்து வணங்கி, மனம் கலங்கியவராகிய சுந்தரர், ``ஐயனே! நும் செவ்வியவாயவும், சிறந்தனவுமான திருவடிகளைப் பிரிந்து நீங்கும் சிறுமையுடைய னாகிய அடியேன், மயக்கம் பொருந்திய மானுடப் பிறப்பில் பிறந்து மயங்கும் பொழுது, பெருமானாராகிய நீர் வந்து அம்மயக்கத்தி னின்றும் தடுத்து, அடியேனை ஆட்கொண்டருள வேண்டும்`` என்று விண்ணப்பம் செய்ய.

விளக்கவுரை

செய்ய சேவடி - கோட்டம் இல்லனவும் சிவந்தனவுமாய திருவடிகள். வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாதவனாதலின் அவன் சேவடி கோட்டம் இல்லாதன ஆயின. நிறத்தால் சிவந்திருத் தலின், சேவடியாயின. மையல் மானுடம் - செய்வதும் தவிர்வதும் அறியாது மயங்கி நிற்கும் மானுடம்.

`மயங்கி, வலைப்பட்டார் மற்றையவர்` *(குறள், 348)*, `மால் கொடுத்து ஆவி வைத்தார்` *(தி.4 ப.33 பா.4)*, `மறக்குமாறு இலாத என்னை மையல் செய்து இம் மண்ணின் மேல், பிறக்குமாறு காட்டினாய்` *(தி.2 ப.98 பா.5)* எனவரும் திருவாக்குகளும் காண்க.

அங்க ணாளன் அதற்கருள் செய்தபின்
நங்கை மாருடன் நம்பிமற் றத்திசை
தங்கு தோற்றத்தில் இன்புற்றுச் சாருமென்று
அங்க வன்செயல் எல்லாம் அறைந்தனன். **#39**

பெருங்கருணையோனாகிய இறைவனும், அவர் கேட்டுக் கொண்ட விண்ணப்பத்திற்கு அருள் செய்தபின், அனிந்திதை, கமலினி என்னும் அவ்விரு பெண்களுடன், ஆலாலசுந்தரர் தென் திசைக்கண் வாழ்தற்குரிய மானுடப் பிறவியில் தோன்றி, அப் பெண் களுடன் இன்புற்று, மீண்டும் இங்கு வருகின்றார் என்று அவருடைய செய்திகளையெல்லாம் முழுமையாக உபமன்னியு முனிவர் கூறினார்.

விளக்கவுரை

அம்+கண் = அங்கண் - அழகிய கண். `கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டமாதலின்` *(குறள், 575)* பெருங்கருணை யாளனாகிய இறைவன் என உரை கூறப்பெற்றது. நம்பி - ஆடவருட் சிறந்தார்க்கு உரிய பெயர். நம்பியாரூரர், ஆளுடைய நம்பி என அவரை அழைத்தலும் காணலாம். இவர் அருளிய நம்பி எனவரும் பதிகத்தில் சிவபெருமானை நம்பி என்றே குறிப்பதும் நினைவு கூர்தற்குரியது.
இப்பதினைந்து பாடல்களும் ஒரு முடிபின.

அந்த ணாளரும் ஆங்கது கேட்டவர்
பந்த மானுடப் பாற்படு தென்றிசை
இந்த வான்றிசை எட்டினும் மேற்பட
வந்த புண்ணியம் யாதென மாதவன். **#40**

உபமன்னியு முனிவருடன் இருந்தருளிய முனிவர்களும் அவர் கூறியதைக் கேட்டு, `உலகப் பிணிப்புடைய மானுடர்கள் பிறந்தும் இறந்தும் வருதற்கு இடமாகிய எண்திசையிலும், இத்தென்திசை மேலாக, அவர் போந்ததற்குரிய புண்ணியம் யாது` என வினவ, அவ்வுபமன்னியு முனிவரும் கூறியருளுகின்றார் .

விளக்கவுரை

அந்தணாளர் - எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுவோர்.

பொருவ ருந்தவத் தான்புலிக் காலனாம்
அருமு னியெந்தை அர்ச்சித்து முள்ளது
பெருமை சேர்பெரும் பற்றப் புலியூரென்று
ஒருமை யாளர்வைப் பாம்பதி ஓங்குமால். **#41**

ஒப்பற்ற தவத்தையுடைய புலிக்காலர் (வியாக்கிர பாதர்) எனும் என் தந்தையாரால் வழிபடப் பெற்றதும், பெருமை மிகுந்த பெரும்பற்றப் புலியூர் என்று அழைத்தற்குரியதும், பெருமை கள் பலவும்

வந்தடைதற்குரியதுமான தில்லைப்பதி, ஒருநெறிய மனம் வைத்து உணர்வோர்க்குச் சேமவைப்பாக இருப்பதாம்.

விளக்கவுரை

வியாக்கிரம் - புலி; பாதர் - காலினையுடையவர். இவர் மத்தியந்தன முனிவரின் மகனார் ஆவர். சிவவழிபாட்டைத் தவறாது செய்த இவருக்குச் சிவபெருமான் நேரில் தோன்ற, அவரிடம் சிவ வழிபாட்டிற்குப் பழுதற்ற மலர் எடுக்க நகங்களில் கண்களும், மலர் பறித்தற்கென மரங்களில் ஏறுங்கால் வழுக்காமல் இருப்பதற்கெனப் புலிக்காலும் கையும் பெற்றவர். இவர் திருமகனார் உபமன்னியு முனிவராவார். பெரும்பற்றப் புலியூர் - பெரும்பற்றை உடைய புலி யூர். அஃதாவது எல்லாப் பற்றும் அற்றாரது உள்ளத்துப் பற்றுடையதாய்ப் பற்றப்படுவது. ஒருமையாளர் - ஒருநெறிய மனம் வைத்தவர்.

அத்தி ருப்பதி யில்நமை ஆளுடை
மெய்த்த வக்கொடி காண விருப்புடன்
நித்தன் நீடிய அம்பலத் தாடும்மற்று
இத்தி றம்பெற லாந்திசை எத்திசை. **#42**

அத்தகைய திருப்பதியின்கண் நம்மை ஆளாக உடைய அன்னையார் எஞ்ஞான்றும் விருப்போடு காணுமாறு என் றும் அழியாதவராய் நிலைபெற்றுள்ள பெருமான், திருச்சிற்றம்பலத் தின்கண் ஆடுகின்றார். இவ்வாறான மேன்மையை இத்திசையன்றி வேறு எத்திசை பெறும்?

விளக்கவுரை

மெய்த்தவக் கொடி - மெய்ம்மையான தவத்திற்குரிய கொடி: உமையம்மையார். நித்தன் - என்றும் அழியாது வீற்றிருப்ப வன். இவ்விரு பாடல்களும் குளகம்.

பூதம் யாவையின் உள்ளலர் போதென
வேத மூலம் வெளிப்படு மேதினிக்
காதல் மங்கை இதய கமலமாம்
மாதொர் பாகனார் ஆரூர் மலர்ந்ததால். **#43**

எவ்வுயிர்களிடத்தும் உள்ளிருந்து மலரும் இதயத் தாமரையின்கண், இறைவன் எழுந்தருளியிருப்பது போல, உலகமாகிய மங்கையின் இதயத் தாமரையாக விளங்கும் திருவாரூரின்கண் உமை யொரு கூறனாகிய தியாகேசப் பெருமான் எழுந்தருளியுள்ளார். இத் திருப்பதி தென்திசையிலிருந்து அணி செய்து வருகிறது.

விளக்கவுரை

பூதம் - உயிர்கள். வேதமுதல்வன் - இறைவன். உயிர் களிடத்து இலங்கும் இதயத் தாமரையின்கண் இறைவன் வீற்றிருந்தரு ளுவது

போல, உலகின் இதயத் தாமரையாக விளங்கும் திருவாரூரின் கண்ணும் இறைவன் வீற்றிருந்தருளுகின்றான் என்பது கருத்து. நிலவுலகைப் பெண்ணாக உருவகித்தல் இயல்பு. நிலமகள் என்ற வழக்கும் காண்க. `நிலம்புலந்து இல்லாளின் ஊடிவிடும்` *(குறள், 1039)* என வரும் திருவள்ளுவர் திருவாக்கும் காண்க.

எம்பி ராட்டிஇவ் வேழுல கீன்றவள்
தம்பி ரானைத் தனித்தவத் தால்எய்திக்
கம்பை யாற்றில் வழிபடு காஞ்சியென்று
உம்பர் போற்றும் பதியும் உடையது. **#44**

எம் தலைவியும் இவ்வேழுலகங்களையும் பெற்றெடுத்த தாயும் ஆகிய உமையம்மையார் தம் தலைவராகிய திருஏகம்பப் பெருமானாரை ஒப்பற்ற தவப்பயனால் கம்பையாற்றின் கரையில் சென்று வழிபட்டுப் போற்றும் காஞ்சிபுரம் விளங்குகிறது. தேவர்களும் வந்து வணங்கும் இத்திருப்பதியும் தென்திசையில் உள்ளதாம்.

விளக்கவுரை

கம்பை - ஓர் ஆறு. காஞ்சியில் நிலத்தின் கீழ் ஓடுகிறது என்பர்.

நங்கள் நாதனாம் நந்தி தவஞ்செய்து
பொங்கு நீடருள் எய்திய பொற்பது
கங்கை வேணி மலரக் கனல்மலர்
செங்கை யாளர்ஐ யாறுந் திகழ்வது. **#45**

நமக்கெல்லாம் குருநாதனாகிய நந்தியெம் பெருமான் தவம் செய்து, வளர்ந்து, நீடிய பேரருள் பெற்ற பொலி வினையுடையதாய், திருச்சடையிலே கங்கை மலரவும், சிவந்த கையில் கனல் மலரவும் கொண்ட இறைவனுடைய திருவையாறும் இத் தென்திசையிலேயே விளங்குவதாம்.

விளக்கவுரை

மலர்தல் - விரிந்து விளங்குதல். நீர் மிகின் தீ அவியும்; தீ மிகின் நீர் சுருங்கும். ஆனால் ஈண்டோ, இரண்டும் மலர்ந்து விளங்குவது திருவருள் திறத்தாலேயாம்.

கங்கை, அனல் ஆகிய இரண்டையும் ஒருங்கு வைத்திருப்பது ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களும் அவர்க்கு உளவாதல் பற்றியாம்.

தேசம் எல்லாம் விளக்கிய தென்திசை
ஈசர் தோணி புரத்துடன் எங்கணும்
பூச னைக்குப் பொருந்தும் இடம்பல
பேசில் அத்திசை ஒவ்வா பிறதிசை. **#46**

இனையபல தேயங்களையும் தன் தெய்வத் தன்மையால் விளங்கச் செய்திருக்கும் தெற்குத் திசையின்கண், அடிய வர் செய்யும் வழிபாட்டை ஏற்றருளுதற்கென இறைவன் எழுந்தருளி யிருக்கும் இடங்கள் மேற்கூறியனவேயன்றித் திருத்தோணிபுரத் துடன் மற்று எவ்விடத்தும் விளங்க நிற்கும் திருப்பதிகளும் பல உள்ளன. அதனால் தென்திசையின் புகழைச் சொல்லுமிடத்துப் பிற திசைகள் இத்திசையோடு ஒவ்வாவாம்.

விளக்கவுரை

தோணிபுரம் - சீகாழி. பேசில் - அதன் புகழைப் பேசின்.

என்று மாமுனி வன்றொண்டர் செய்கையை
அன்று சொன்ன படியால் அடியவர்
துன்று சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
இன்றெ னாதர வாலிங் கியம்புகேன். **#47**

இவ்வாறு அவ்வுபமன்னியு முனிவர் நம்பியாரூரர் வரலாற்றை, அந்நாளில் திருக்கயிலையின்கண் அருளியவாறு, அடிய வர்களின் பெருமை மிக்க வரலாற்றைச் சுருங்கக் கூறும் திருத்தொண் டத் தொகையின் விரியாகிய இந்நூலை, என் விருப்பம் காரணமாக இது பொழுது சொல்லத் தொடங்குகிறேன்.

விளக்கவுரை

திருத்தொண்டர் வரலாறு (செய்கை) என்னும் விரியை இயம்புவேன் எனக் கூட்டுக. அன்று - பண்டறிசுட்டு. சீர்துன்று திருத் தொண்டத் தொகை என மாறுக. `அளவில் ஆசை துரப்ப அறைகு வேன்` என்றார் முன்னும்.

மற்றி தற்குப் பதிகம்வன் றொண்டர்தாம்
புற்றி டத்தெம் புராணர் அருளினால்
சொற்ற மெய்த்திருத் தொண்டத் தொகையெனப்
பெற்ற நற்பதி கம்தொழப் பெற்றதாம். **#48**

இங்கு உரைக்கப் பெறும் இவ்விரி நூலுக்குப் பதிகம் அவ் வன்தொண்டர் திருவாரூரில் புற்றிடம் கொண்ட சிவபெரு மானின் திருவருளினால் அருளிச் செய்த மெய்ம்மை பொருந்திய திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பெயர் பெற்ற நல்ல திருப்பதிக மேயாம். அதனைத் தொழுது வரலாற்றை விரித்துரைக்கின்றேன் என் பதாம்.

விளக்கவுரை

பதிகம் என்பது பல்வகைப் பொருளையும் தொகுதி யாகச் சொல்லுவதாகும். இந்நூற்கண் எடுத்துரைக்கப்படுதற்கு ஏது வாக, அடியவர்கள் அனைவரையும், தொகுத்துச் சொன்னது திருத் தொண்டத் தொகையாதலின் அதனைப் பதிகம் என்றார்.

தொழப் பெற்றது - தொழுது மேற்கோளாக எடுத்துக் கொள்ளப் பெற்றது. எனவே அப்பதிகமே இதற்கு மூலமாகும் என்பது கருத்து.

அந்த மெய்ப்பதி கத்தடி யார்களை
நந்தம் நாதனாம் நம்பியாண் டார்நம்பி
புந்தி யாரப் புகன்ற வகையினால்
வந்த வாறு வழாமல் இயம்புவாம். **#49**

அத்தகைய மெய்ம்மை சான்ற திருப்பதிகத்தில் வழிபடப்பெற்ற அடியார்களை, நம் தலைவனாகிய நம்பியாண்டார் நம்பிகள், நம் உளங்கூர அருளிய வகையினால், அத்திருத்தொண்டர் திருவந்தாதியில் எடுத்துரைக்கப் பெற்ற முறையினின்றும் பிறழாமல் இந்நூற்கண் சொல்லுவாம்.

விளக்கவுரை

நம்பியாண்டார் நம்பிகள் - இவர் திருநாரையூரில் ஆதி சைவர் மரபில் தோன்றியவர். தம் இளமைக் காலத்தேயே பொள்ளாப் பிள்ளையாரின் அருள் பெற்றவர். அப்பெருமானின் அருள்வழி நின்ற இவர், திருமுறைகளைக் காண்டற்குப் பேருதவி புரிந்தவர். இவர் அருளிய நூல்கள் பத்தும், பதினொன்றாம் திருமுறையில் இடம் பெற் றுள்ளன. அவற்றுள் ஒன்று திருத்தொண்டர் திருவந்தாதியாகும். அந்நூலை வகை நூலாகக் கொண்டு இந்நூல் இயம்பப்பெறுகிறது. எனவே திருத்தொண்டத்தொகை தொகையாய், இவ்வந்தாதி வகை யாய், இத்திருத்தொண்டர் புராணம் விரியாய் அமைந்தமை புலனா கின்றது. இவ்வாறு தொகை, வகை, விரியாய் எழுந்த அமைப்பு இம்முப்பெரு நூல்களுக்கே ஆயது. இது திருவருட் பெருங்கருணை யினால் ஆயதாம். புந்தியார - நம்பிகளின் உளமகிழ என்றலும் ஆம்.

உலகம் உய்யவும் சைவம்நின் றோங்கவும்
அலகில் சீர்நம்பி ஆருரர் பாடிய
நிலவு தொண்டர்தங் கூட்ட நிறைந்துறை
குலவு தண்புனல் நாட்டணி கூறுவாம். **#50**

உலகில் வாழும் அனைத்து உயிர்களும் உறுதி பெறவும், சைவ சமயச் செந்நெறி என்றும் நிலை பெற்று நிலவவும், அளவற்ற சிறப்புகளை உடைய நம்பியாரூரர் அருளிய திருத் தொண்டத் தொகையில் விளங்கும் அடியவர் திருக்கூட்டம் நிறைந்து வாழ்ந்தருளிய குளிர்ச்சி பொருந்திய சோழநாட்டின் சிறப்பை இனிக் கூறுவாம்.

விளக்கவுரை

நிலவு தொண்டர் - என்றும் நிலைபெற்ற தொண்டர்.

பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுட்

கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனையான் நவில லுற்றனன். #51

வழக்கும் செய்யுளும் ஆகிய இயல்பினையுடைய தமிழ் வழங்கும் எல்லையின் கண், மலைகளில் உயர்ந்த இமய மலை யின் உச்சியின்கண் கட்டப்பட்ட நீண்ட புலிக்கொடியை உடைய சோழ மரபினரின் காவிரி பாயும் புனல் நாட்டின் வளத்தை யான் இங்குச் சொல்லத் தொடங்குகின்றேன்.

விளக்கவுரை

பாட்டு - செய்யுள். உரை - வழக்கு. எனவே வழக்கும் செய்யுளுமாம் இயல்பினையுடையது தமிழ் என்பதாயிற்று. இனி, பாடு - பெருமை எனக் கொண்டு, பெருமை பொருந்திய இயற் றமிழுக்குப் பொருளாகவுள்ள எல்லை எனினும் ஆம். கோடு - மலை. பனிவரைக் குன்று - குளிர்ந்த மலையாகிய குன்று: இமயமலை. இருபெயரொட்டுப் பண்புத்தொகை. புலி: ஈண்டு ஆகு பெயராய், அதனையுடைய கொடியை உணர்த்திற்று. புலிக்கொடி சோழர்க் குரியது. கரிகாற் பெருவளத்தான் இமய மலைமேல் புலிக்கொடி பொறித்தவரலாற்றை ஆசிரியர் பின்னும் கூறுவர். இயல்பு - வளம்.

ஆதிமா தவமுனி அகத்தி யன்தரு
பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி
மாதர்மண் மடந்தைபொன் மார்பில் தாழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத் தாமம் ஒக்குமால். #52

தலைமை பெற்ற அருந்தவ முனிவராகிய அகத்திய முனிவரால் கொண்டுவரப்பெற்ற, தூய்மையான நீரையுடைய கமண் டலத்தினின்றும் சொரிந்த காவிரி, அழகிய நிலமகளின் பொன்னிறம் பொருந்திய திருமார்பில் தாழ்ந்து விளங்கும் பெருக்குடைய கடல் நீரில் தோன்றிய முத்து மாலையை ஒத்து இருக்கும்.

விளக்கவுரை

ஆதி மாதவ முனி - முனிவர்களில் முதன்மையானவ ராயும் பெருந் தவமுடையவராயும் விளங்கும் முனிவர் அகத்தியர் ஆவர். இறைவனின் திருமணத்தின் பொழுது கூடிய மக்கட் பெருக் கத்தால் வடக்குத் தாழ, தெற்கு உயர, இறையருளால் அதனைச் சமப் படுத்தியவர் இவர். இறைவனால் முதன்முதல் தமிழ் அறிவுறுத்தப் பெற்றவரும் இவரேயாவர்.

பூதநீர் - தூய்மையாய நீர். ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றாய நீர் என்றும் அமையும். சூரபதுமன் முதலாய அசுரர்களுக்கு அஞ்சிய இந்திரன்,

சீகாழியை அடைந்து அங்கே நந்தனவனம் அமைத்து இறைவழிபாடு ஆற்றி வருங்கால், மழையின்மையால், நந்தனவனம் வாட, அதுகண்டு வாடிய இந்திரன், மூத்த பிள்ளையாரிடம் விண்ணப்பித்துக் கொள்ள, அவரும் கொங்கு நாட்டில் சென்று கொண்டிருந்த அகத்தியரின் கமண்டல நீரைக் காக வடிவு கொண்டு கவிழ்க்க, அதனின்றும் விரிந்து பெருகிய ஆறே காவிரியாம் என்பர். இதனை உளம் கொண்டே `பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி` என்றார் ஆசிரியர். `அமரமுனிவன் அகத்தியன் தனாது கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை` *(மணிமேகலை, பதிகம் வரி 11,12)* என்னும் மணிமேகலையும், தமிழகத்தில் கி. பி. *7*ஆம் நூற்றாண்டிற்குப் பின்பே மூத்த பிள்ளையார் வழிபாடு வந்தது என்பார் கூற்றுப் பொருந் தாமையை இதனால் அறியலாம். மாதர் - காதல் எனக் கொண்டு அனைவராலும் விரும்பப்படும் நில மடந்தை எனினும் அமையும். `மாதர் காதல்` என்னும் தொல்காப்பியம் *(தொல். உரி. 30),* ஓதநீர் - பெருக்குடைய நீர்: கடல். `விரிநீர் வியனுலகு` *(குறள், 13)* என்னும் திருக்குறளும். குடதிசையினின்றும் பெருகி வரும் காவிரி. நிலமக ளின் மார்பில் விளங்கும் மாலையை ஒத்திருக்கும் என்பது கருத்தாம். ஆல் - அசை.

சையமால் வரைபயில் தலைமை சான்றது
செய்யபூ மகட்குநற் செவிலி போன்றது
வையகம் பல்லுயிர் வளர்த்து நாடொறும்
உய்யவே சுரந்தளித் தூட்டு நீரது. **#53**

(இக்காவிரி) சையம் என்னும் பெருமை பொருந்திய மலையிடத்துத் தோன்றிய முதன்மை பெற்றது, செவ்வி தாய நிலமக ளுக்குச் சிறந்த செவிலிபோல்வது, உலகின்கண் உள்ள பல்வேறு உயிர்களையும் வளர்த்து அவை உய்யுமாறு குளிர்ந்த நீரைச் சொரிந்து உண்பிக்கும் தன்மை பெற்றது.

விளக்கவுரை

சையம் - மேற்குத் தொடர்ச்சி மலை: இது காவிரி தோன் றுதற்கு நிலைக்களனாக விளங்குவது. சையம் என்னும் பெயருடை யது. குடகு நாட்டில் உள்ளது. செவிலி - வளர்ப்புத் தாய். `மகவாய் வளர்க்கும் தாயாகி` *(சிலப்.கானல்வரி 27)* என்பர் இளங்கோவடிகளும். சுரத்தல் - ஊற்றுப் பெருக்காகக் காத்தல். `ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்` *(நல்வழி, 9)* என்பதும் காண்க. ஊட்டல் - பல வளங்களை யும் தந்துதவுதலோடு தானும் உணவாய் அமைந்திருப்பது.

மாலின்உந் திச்சுழி மலர்தன் மேல்வருஞ்
சால்பினால் பல்லுயிர் தருதன் மாண்பினால்
கோலநற் குண்டிகை தாங்குங் கொள்கையாற்

போலும்நான் முகனையும் பொன்னி மாநதி. #54
மிகப் பெருகிய நீர்ச் சுழியையும், மலர்களையும் தன்னிடத்தே தாங்கி வருகின்ற பெருமையினாலும், பல்லுயிர்களை யும் வளர்த்து வரும் அரிய குணங்களானும், அழகிய கமண்டலம் தன்னைத் தாங்கும் சிறப்பினாலும் காவிரி, நான்முகனின் செயலொடு ஒத்து இருக்கின்றது.

விளக்கவுரை

இப்பாட்டின்கண் அமைந்த சொற்றொடர்கள் பலவும், இரு பொருள் பெற்றியவாய் அமைந்திருத்தலின், இது சிலேடை அணியாம்.
காவிரிக்கும், நான்முகனுக்குமாகப் பொருள் கொள்ளப் படுவது.
அப்பொருள்: திருமாலின் உந்திச் சுழியினின்றும் தோன்றிய பெருமையினாலும், பல்லுயிர்களையும் தோற்றுவிக்கும் பண்பி னாலும், அழகிய கமண்டலத்தைத் தாங்கி நிற்கும் தகைமையானும் காவிரியை ஒத்து நிற்கின்றான் நான்முகன் என்பதாம்.
இவ்விரு பொருண்மைக்கும் அமைய உரை கொள்ளுமாறு: காவிரிக்கு ஆங்கால்: மால் - பெரிய. உந்திச்சுழி - பெருகி வரும் நீர்ச் சுழி: மலர்தல் - தாங்கிவருதல்: பல்லுயிர் தருதல் - பல உயிர்களுக்கும் உணவு வழங்கல். குண்டிகை தாங்கல். காவிரியாய்ப் பெருகுதற்கு முன் அகத்தியரின் கமண்டலத்தில் இருத்தல்.
நான்முகனுக்கு ஆங்கால்: மால் - திருமால். உந்திச்சுழி - கொப்பூழ்ச்சுழி. மலர்தல் - தோன்றல். பல்லுயிர் தருதல் - பல உயிர் களையும் தோற்றுவித்தல். குண்டிகை தாங்கல் - தன் கையில் கமண் டலத்தைக் கொண்டிருத்தல்.

திங்கள்சூ டியமுடிச் சிகரத் துச்சியில்
பொங்குவெண் டலைநுரை பொருது போதலால்
எங்கள்நா யகன்முடி மிசைநின் றேயிழி
கங்கையாம் பொன்னியாம் கன்னி நீத்தமே. #55

நிலவு தவழ்கின்ற உயர்ந்த முடிகளையுடைய சைய மலையின் உச்சியிலிருந்து பெருகி வருதலானும், வெள்ளிய தலை போலும் நுரைகளை வீசிக் கொண்டு போதலினாலும், பொன்னி எனப் பெயர் பெறும் கன்னியாம் காவிரி, எமது முதல்வராகிய சிவபெருமானின் திருமுடியினின்றும் இந்நிலவுலகத்திற்கு இழிந்து வந்த கங்கையை ஒத்துள்ளது.
இப்பாடல், காவிரிக்கும் கங்கைக்கும் ஏற்பப் பொருள் கொள்ளக் கிடப்பது. மேற்கூறிய பொருள் காவிரிக்கென அமைந்தது.
இனிக் கங்கைக்கு ஏற்ப அமையுமாறு: நிலவணிந்த திருமுடியை யுடைய சிவபெருமானின் திருச்சடையினின்றும் இழிந்து வருவதா லும், அப்பெருமானின் திருமுடியில் விளங்கும் வெண்மையான

தலைமாலையில் நுரைகளை வீசிக்கொண்டு வருவதாலும் கங்கையா னது காவிரியை ஒத்துள்ளது.

விளக்கவுரை

காவிரிக்கு ஆங்கால்: சிகரத்து உச்சி - சைய மலையின் உச்சி. வெண்தலை நுரை - வெள்ளிய தலை போன்ற நுரை.

கங்கைக்கு ஆங்கால்: சிகரத்து உச்சி - உயர்ந்து விளங்கும் திருச் சடையாகிய உச்சி. வெண்தலை நுரை - சிறந்த மால் அயன் முதலிய வர்களின் தலை.

வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்
எண்ணில்பே ரறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது. **#56**

காவிரி, அழகு பொருந்திய நீண்ட சைய மலையிடத் தினின்றும் தோன்றிய பெருமையினாலும், எண்ணிறந்த பேரறங்களை ஆற்றுதற்கு இடனாக நீரை வழங்கிவரும் கொடைத் தன்மையினாலும், இறைவனின் இடமருங்கைத் தன் ஒரு கூறாகக் கொண்டிருக்கும் உமை அம்மையாரின் திருவுள்ளத்தினின்றும் கனிந்து வரும் கருணைப் பெருக்கை ஒத்தது.

இப்பாடலும் மேலையது போலச் சிலேடையாம். காவிரிக்கும் உமையம்மையாருக்கும் ஆகப் பொருள் கொள்ளக் கிடப்பது. மேற் கூறிய பொருள் காவிரிக்கென அமைந்தது.

இனி, உமையம்மைக்கு ஏற்ப அமையுமாறு: அழகு பொருந்திய இமயமலைத் தலைவனாகிய இமவானிடத்தினின்றும் தோன்றிய மேன்மையானும், காஞ்சியிலிருந்து எண்ணற்ற அறங்களை வளர்த்து வருதலாலும் உமையம்மை, காவிரிக்கு ஒப்பாதல் விளங்கும்.

விளக்கவுரை

காவிரிக்கு ஆங்கால்: வண்ண நீள் வரை - சைய மலை. எண்ணில் பேரறங்கள் - எண்ணற்ற பேரறங்கள். தானமும் தவமும் வளர்தற்கு ஏது நீராதலின், எண்ணில் பேரறங்களும் வளர்ப்பதாயிற்று.

அம்மைக்கு ஆங்கால்: வண்ணநீள் வரை - இமயமலை. இதனை ஆண்ட அரசன் இமவான் ஆவன். இவனுக்குத் திருமகளாக ஒரு காலத்து அம்மை தோன்றியருளினாள். எண்ணில் பேரறங்கள்- காஞ்சிபுரத்தில் அம்மை தம் துணைவன்பால் பெற்ற இருநாழி நெற் கொண்டு உலகில் முப்பத்திரண்டு அறங்களையும் செய்தனள்.

தொல்லை மறைதேர் துணைவன்பா லாண்டுவரை
எல்லை யிருநாழி நெற்கொண்டோர் - மெல்லியலாள்

ஓங்குலகில் வாழு முயிரனைத்து மூட்டுமால்
ஏங்கொலிநீர்க் காஞ்சி யிடை -தண்டியலங்காரம் மேற்கோள்
எனவரும் பாடலும் காண்க. அன்னையின் கருணை அனைத்து உயிர்கட்கும் இடையீடின்றிப் பெருகி வரும் மாண்புடைய தாகும். ஆதலின் இடையீடின்றிப் பெருகிவரும் காவிரிக்கு அஃது உவமை யாயிற்று.

`முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்`
-தி.*8* திருவெம்பாவை *9*

எனவரும் திருவாக்கும் ஈண்டு நினைவு கூரத்தக்கதாம்.

வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை எண்ணில் சிவாலயத்து
எம்பி ரானை இறைஞ்சலின் ஈர்ம்பொன்னி
உம்பர் நாயகர்க் கன்பரும் ஒக்குமால். **#57**

மணம் கமழ்கின்ற மலர்களினாலும், நீரினாலும் வழிபாடு செய்து, சிவந்த பொன்மயமான மணல் நிறைந்த காவிரிக் கரையின் இருமருங்கிலுமுள்ள எண்ணற்ற திருக்கோவில்களில் எழுந் தருளியிருக்கும் எம் தலைவனை வணங்கி வருதலினால், குளிர்ந்த காவிரி, தேவர்களுக்கெல்லாம் தலைவனாய சிவபெருமானின் அடியவரையும் ஒத்து விளங்கும்.

விளக்கவுரை

இறைவற்கு உற்ற பல் பொருள்களையும் கொண்டு அடியவர்கள் வழிபடினும், ``புண்ணியம் செய்வார்க்குப் பூஉண்டு நீருண்டு`` *(தி.10 பா.1804)* என்பதால் இவ்விரண்டுமே அடிப்படை யும் முதன்மையும் கொண்டு விளங்குவனவாயின. ஆதலின் அடியவ ரோடு காவிரி ஒத்ததாயிற்று. வம்பு - நறுமணம், அன்றலர்ந்தமையால், நறுமணம் கமழும் மலர். ஆல் - அசைநிலை.

காவிரிக்கும் அன்பர்களுக்கும் செயல் வகையால் ஒப்புமை கூறலின், இதுவும் சிலேடை யணியமைந்ததாகும். இத்திருப்பாடற்கண் உள்ள சொற்கள் இவ்விரு பொருட்கும் அமையும் பொழுதும், சொற் கிடக்கை முறையும், பொருள் முறையும் மாறாது அமைந்துள்ளமை போற்றற்குரியதாகும். காவிரி தன் இரு மருங்கிலும் உள்ள சோலைகளில் மலர்கள் நிரம்பப் பெற்று இருத்தலின், தன்பால் உள்ள நீரும் பூவும் கொண்டு வழிபட்டது என்றார். இருகரைகளில் உள்ள சிவாலயங்களைக் காவிரி தீண்டிச் செல்லுதலின் வணங்கி வழிபட்ட தாகின்றது.

வாச நீர்குடை மங்கையர் கொங்கையில்

பூசு குங்கும மும்புனை சாந்தமும்
வீசு தெண்டிரை மீதிழித் தோடுநீர்
தேசு டைத்தெனி னும்தெளி வில்லதே. **#58**

நறுமணம் பொருந்திய தண்ணிய நீரில் ஆடும் மகளிர், தம்முடைய மார்பகத்துப் பூசிய குங்குமக் குழம்பையும், சந்தனக் குழம்பையும், வீசுகின்ற தெள்ளிய அலைகளினால் கரைத்துச் செல்லுகின்ற அவ்வாறானது, மிக்க வெண்ணிறம் உடைத்தெனினும் தெளிவின்றி இருந்ததாம்.

விளக்கவுரை

இயல்பில் ஆறு தெளிவுடைத்தெனினும், பெண்களின் மார்பகத் திருந்த குங்குமத்தாலும் சந்தனத்தாலும் தெளிவின்றி இருந்தது என்பது கருத்து. தேசு - ஒளி. ஏ - அசை நிலை.

மாவி ரைத்தெழுந் தார்ப்ப வரைதரு
பூவி ரித்த புதுமதுப் பொங்கிட
வாவி யிற்பொலி நாடு வளந்தரக்
காவி ரிப்புனல் கால்பரந் தோங்குமால். **#59**

வண்டுகள் ஆர்த்து எழுந்து ஒலிக்கவும், மலையிடத்து மரம் தரும் மலர்களிலிருந்து வரும் புதிய தேன் பொங்கித் ததும்பவும், ஆங்காங்குள்ள குளங்களினால் சீரிய வளத்தைக் கொடுக்கவும் காவிரிப் பேராறு பல கால்களாகப் பரந்து செல்லும்.

விளக்கவுரை

மா-என்பது பல பொருள் குறிக்கும் ஒரு சொல்லேனும் `இரைத்து` என்பதால் வண்டுகளைக் குறித்தது; இதனைத் தொல்காப் பியர் `வினை வேறுபடூஉம் பல பொருளொரு சொல்` *(தொல். கிளவி, 52)* என்பர். கால் பரந்து - கால்வாய்களில் பரந்து. ஆல் - அசை.

ஒண்து றைத்தலை மாமத கூடுபோய்
மண்டு நீர்வய லுட்புக வந்தெதிர்
கொண்ட மள்ளர் குரைத்தகை ஓசைபோய்
அண்டர் வானத்தின் அப்புறஞ் சாருமால். **#60**

(மேற்கூறியவாறு பல கால்வாய்களின் வழிவந்த நீர்) வலிய கரையின்கண் உள்ள பெரிய மதகின் வழிச் சென்று, மிகுந்து எழுந்த நீர் வயல்களிடத்துச் செல்லுதலும், அந்நீரை எதிர்கொண்ட உழவர்கள், தம் மகிழ்ச்சியால் கை தட்டிய ஓசையானது, தேவர்கள் வாழ்கின்ற விண்ணுலகத்திற்கும் அப்பாற் செல்லும்.

விளக்கவுரை

ஒண்துறை - ஒள்ளிய கரையமைந்த துறை; ஈண்டு ஒண்மை

வன்மையைக் குறித்தது. துறைத்தலை - துறையிடத்து; ஏழனுருபு. அண்டர் வானம் - தேவர்கள் வாழ்கின்ற விண்ணுலகம். குரைத்த - ஒலித்த. ஆல் - அசை.

மாதர் நாறு பறிப்பவர் மாட்சியும்
சீத நீர்முடி சேர்ப்பவர் செய்கையும்
ஓதை யார்செய் உழுநர் ஒழுக்கமும்
காதல் செய்வதோர் காட்சி மலிந்தவே. **#61**

அழகிய நாற்றைப் பறிக்கின்ற உழத்தியர்களின் சிறப்பும், குளிர்ந்த நீரிடத்து நாற்று முடிகளைச் சேர்க்கின்றவர்களது செய்கையும், ஒளி பொருந்திய வயலை உழுகின்ற உழவர்களது ஒழுக்கமும், கண்டார்க்கு மிகு விருப்பை வழங்கும் காட்சியாய்ச் சிறந்து விளங்கின.

விளக்கவுரை

மாதர் நாறு - கண்டார்க்கு விருப்பத்தைத் தரும் நாற்று. `மாதர் காதல்` *(தொல். உரி. 30)* என்னும் தொல்காப்பியமும். ஓதையார் - ஒலி நிரம்பிய.

உழுத சால்மிக வூறித் தெளிந்தசே
றிழுது செய்யினுள் இந்திரத் தெய்வதந்
தொழுது நாறு நடுவார் தொகுதியே
பழுதில் காவிரி நாட்டின் பரப்பெலாம். **#62**

ஏரால் உழப்பெற்ற பின், நீர் பெருகச் செய்து, தெளிந்த சேற்றை மீளவும் குழம்பாகப் பண்படுத்தப்பட்ட வயலின் உள்ளே, இந்திரனைத் தொழுது, நாற்று நடுபவர்களின் கூட்டமே, குற்ற மற்ற காவிரி பாயும் நாடு எங்கும் உள்ளது.

விளக்கவுரை

காவிரி நாட்டின் பரப்பெல்லாம் நாற்று நடுவார் கூட்டமே மிக்கு இருக்கின்றது என்பது கருத்து. சால் உழுதென மாறுக. இழுது செய்தல் - சேற்றைக் குழம்பாகச் செய்தல். இது நாற்று நடுதற்குரிய பதமாம். `கழனிபடு நடவை` *(மீனாட்சி காப்பு, 1)* எனக் குமரகுருபரர் குறித்தருள்வதும் காண்க. மருத நிலமாதலின் அதற்குத் தலைவனாய இந்திரனை வணங்கினர். `வேந்தன் மேய தீம்புனல் உலகமும்` *(தொல். அகத். 5)* என்னும் தொல்காப்பியமும். பழுதுஇல் காவிரி - தான் வருதலிலும், மக்கட்கு நீர் தருதலிலும் தவறாத காவிரி. உடல் உறுதியைக் குலைக்கும் பசியையும், உயிர் உறுதியைக் குலைக்கும் பாவத்தையும் நீக்கும் காவிரி எனலும் ஆம்.

மண்டுபுனல் பரந்தவயல்
வளர்முதலின் சுருள்விரியக்
கண்டுழவர் பதங்காட்டக்

களைகளையுங் கடைசியர்கள்
தண்டரளஞ் சொரிபணிலம்
இடறியிடை தளர்ந்தசைவார்
வண்டலையும் குழலசைய
மடநடையின் வரம்பணைவார். #63

மிகுந்த நீர் பரந்த வயல்களில் வளர்கின்ற நெற் பயிர் களின் சுருள்கள் விரியும் நிலையைக் கண்டு, உழவர்கள் களையை எடுக்கும் பருவம் ஈது என்று காட்ட, அக்களைகளைப் பறிக்கின்ற உழத்தியர்கள், குளிர்ந்த முத்துக்களைச் சொரிகின்ற சங்குகள் தம் காலில் இடற, அதனால் இடை தளர்ந்து வருந்துவாராய், வண்டுகள் தேன் விருப்பால் சுற்றுகின்ற தங்கள் கூந்தல் அவிழ்ந்து அசையுமாறு மெதுவான நடைகொண்டு அவ்வயல் வரம்பினிடத்துச் செல்வா ராயினர்.

விளக்கவுரை

மண்டுபுனல் - மிகு புனல்; புதுப்புனல் என்பது காட்டிய வாறு. வளர்முதல் - வளர்ந்துவரும் நாற்று. பதம் - களை எடுக்கும் பதம். இடை தளரவும், குழல் அசையவும், மட நடை கொள்ளவும் காலில் சங்குகள் இடறின. எனவே அந்நிகழ்ச்சிக்கு எல்லாம் இது காரணமாயிற்று என்பது விளங்கும். பணிலம் - சங்கு.

செங்குவளை பறித்தணிவார்
கருங்குழல்மேல் சிறைவண்டை
அங்கைமலர் களைக்கொடுகைத்
தயல்வண்டும் வரவழைப்பார்
திங்கணுதல் வெயர்வரும்பச்
சிறுமுறுவல் தளவரும்பப்
பொங்குமலர்க் கமலத்தின்
புதுமதுவாய் மடுத்தயர்வார். #64

(களை எடுக்கும் உழத்தியர்களில் சிலர்) தம் கரிய கூந்தலினிடத்துச் சிவந்த குவளை மலர்களைப் பறித்துச் சூடிக் கொள் வார்கள். (சிலர்) தம் கரிய கூந்தலின்மேல் விழுகின்ற சிறகினை யுடைய வண்டுகளை, அழகிய கைகளாகிய தாமரை மலர்களைக் கொண்டு ஓட்ட, அவை அவ்விடத்தினின்றும் போகாததோடு அருகில் இருக்கும் வண்டுகளையும் உடன் வருமாறு செய்துகொள்வர். (சிலர்) பிறை போன்ற தம் நெற்றியில் வியர்வை அரும்பவும், சிறுநகை செய்யும் முல்லையரும்புகள் மலரவும் பொலிவு மிக்க தாமரை மலரிடத்திலுள்ள புதிய தேனை உண்டு அதனால் மயங்குவார்கள்.

விளக்கவுரை

கருங்குழல் மேல் செங்குவளை பறித்தணிவார் என மாறுக. வண்டுகளை ஓட்டும் கைகள், தாமரை மலர்களை ஒத்து இருத்தலின், முன்னரே மொய்த்து நிற்கும் வண்டுகளுடன் அருகில் இருக்கும் வண்டுகளும் சூழ்வன வாயின. ஆதலின் `அயல் வண்டும் வர வழைப்பார்` என்றார். உகைத்து - ஓட்டி. சிறுமுறுவல் - புன்னகை: பல்லின் நுனி தெரியாது கொள்ளும் உவகை. `முன்றுணை தோன் றாமை முறுவல் கொண்டு அடக்கி` என்னும் கலியும் *(நெய்தல், 25).* தளவு - முல்லை.

கரும்பல்ல நெல்லென்னக்
கமுகல்ல கரும்பென்னச்
சுரும்பல்லி குடைநீலத்
துகளல்ல பகலெல்லாம்
அரும்பல்ல முலையென்ன
அமுதல்ல மொழியென்ன
வரும்பல்லா யிரங்கடைசி
மடந்தையர்கள் வயலெல்லாம். **#65**

பகல் முழுதும் அவ்வயலிடத்தைக் காண்பார்க்கு, இவை கரும்புகள் அல்ல நெற்பயிர்கள் என்று சொல்லவும், இவை பாக்குமரங்கள் அல்ல கரும்புகள் என்று சொல்லவும், இவை வண்டுகள் அல்ல, அவ்வண்டுகள் நீல மலர்களின் அக இதழைக் குடைந்த கரிய பொடி என்று சொல்லவும், பெண்களின் மார்பிலுள்ள மலர்களைக் கண்டு இவை அரும்புகள் அல்ல, அப்பெண்களின் மார்பகம் என்று சொல்லவும், அவர்கள் பேசும் மொழியினைக் கண்டு அவை அமுதம் அல்ல, அவர்கள் பேசும் சொற்கள் என்று சொல்லவும், வருகின்ற பல்லாயிரம் உழத்தியர்கள் தம்பணியைச் செய்து வருவார்கள்.

விளக்கவுரை

நெல்லினும் கரும்பு உயரமானது. கரும்பினும் கமுகு உயரமானது. எனினும் நெல் கரும்பாகவும் கரும்பு கமுகாகவும் காட்சியளித்தது, அவற்றின் உயர்வையும் செழுமையையும் காட்டு கின்றன.
அல்லியின் அகஇதழினின்றும் வீழ்ந்த நீலத்துகள் பகல் அல்ல இரவு எனக்காட்டுகின்றன.

கயல்பாய்பைந் தடநந்தூன்
கழிந்தபெருங் கருங்குழிசி
வியல்வாய்வெள் வளைத்தரள
மலர்வேரி உலைப்பெய்தங்
கயலாமை அடுப்பேற்றி
அரக்காம்பல் நெருப்பூதும்
வயல்மாதர் சிறுமகளிர்

விளையாட்டு வரம்பெல்லாம். **#66**

கெண்டை மீன்கள் பாய்ந்து விளையாடுகின்ற பசிய குளங்களில், தோன்றிய தசை நீங்கிய நத்தையின் ஓடுகளைப், பெரிய கரிய பானைகளாகவும், அகன்ற வாயையுடைய வெண்சங்குகள் ஈன்ற முத்துக்களை அரிசியாகவும், மலரிடத்துளதாய தேனை அப் பானையில் வார்க்கும் நீராகவும் இட்டு, அவ்விடத்து அருகில் காணப் படும் ஆமை ஓடாகிய அடுப்பில் ஏற்றி, செங் குமுதங்களாய நெருப்பை அதன்கீழ் வைத்து ஊதுகின்ற உழத்தியர்தம் பெண் குழந்தைகளின் விளையாட்டு, அவ்வரம்பிடங்களில் எல்லாம் நிறைந்து காணும்.

விளக்கவுரை

ஊன் கழிந்த நந்து என மாறுக. நத்தையின் ஓடு குழியாகவும் கரியதாகவும் இருத்தலின் அது கரிய பானையாக அமைக்கப்பட்டது. ஆமை ஓடுகள் வன்மையுடையவாதலின் அடுப் பாகப் பயன்படுத்தப் பெற்றன. வியல் வாய் - இடம் அகன்ற வாய். ``வியலென் கிளவி அகலப் பொருட்டே`` *(தொல். உரி.66)* என்னும் தொல்காப்பியம்.

காடெல்லாங் கழைக்கரும்பு
காவெல்லாங் குழைக்கரும்பு
மாடெல்லாங் கருங்குவளை
வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம்
குளமெல்லாங் கடலன்ன
நாடெல்லாம் நீர்நாடு
தனையொவ்வா நலமெல்லாம். **#67**

அம்மருத நிலத்தின்கண் உள்ள காடுகளில் எல்லாம் கழைக் கரும்புகள் உள்ளன. சோலைகள் எங்கும் தளிரொடு கூடிய அரும்புகள் உள்ளன. பக்கங்கள் எங்கும் கரிய குவளை மலர்கள் உள்ளன; வயல்களில் எல்லாம் நெருங்கிய சங்குகள் உள்ளன. குளக் கரைகள் எங்கும் இளஅன்னங்கள் உள்ளன. குளங்கள் எல்லாம் கடலை ஒத்துள்ளன. இனைய பல நலங்களை எல்லாம் ஒருங்கு காணின் இப்புனல் நாட்டை ஏனைய நாடுகள் ஒவ்வாதுள்ளன.

விளக்கவுரை

எல்லாம் என வருவன எஞ்சாமைப் பொருட்டாம். கழைக் கரும்பு - கழையாகிய கரும்பு: இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. குழைக் கரும்பு, கருங்குவளை, நெருங்குவளை என இச் சொற்களை இணைத்தும் பிரித்தும் பொருள் காண்க. குழைக்கு அரும்பு - இளந்தளிரோடு கூடிய அரும்பு. நான்கனுருபு, மூன்றனு ருபின்

பொருள்பட நின்றது; உருபு மயக்கம்.
குழைக்கும் அரும்பு எனக் கொண்டு முகிழ்க்கும் அரும்பு என உரைப்பினும் அமையும். கருங்குவளை என இணைக்க. நெருங்கு வளை எனப் பிரிக்க. கோடு - கரை: குளக்கரை

ஆலை பாய்பவர் ஆர்ப்புறும் ஓலமும்
சோலை வாய்வண் டிரைத்தெழு சும்மையும்
ஞாலம் ஓங்கிய நான்மறை ஓதையும்
வேலை ஓசையின் மிக்கு விரவுமால். **#68**

ஆலைகளிடத்துக் கரும்புகளைச் செலுத்துபவர்கள் ஒலிக்கும் ஒலியும், சோலைகளில் வண்டுகள் முழங்க எழும் ஒலியும், நிலவுலகில் உயரிய நான்மறைகளை ஒலிப்பவர்தம் ஒலியும் ஒருங்கு சேர்ந்து, கடல் ஒலியினும் பெரிதாக முழங்குவனவாயின.

விளக்கவுரை

பாய்பவர் - பாய்ச்சுபவர். அதாவது கரும்பினைச் செலுத்துபவர். அச்சொல் ஈண்டுத் தன்வினையாய்ப் பாய்பவர் என நின்றது. வேலை - கடல். கடல் ஒலியினும் இம் மூவகை ஒலிகளும் மிக்கு ஒலிக்கின்றன என்பது கருத்து.
ஓலம், சும்மை, ஓதை, ஓசை என்பன ஒலியைக் குறித்து நிற்பன. இவை ஒருபொருள் குறித்த பல சொற்களாம். ஆல் - அசை.

அன்னம் ஆடும் அகன்றுறைப் பொய்கையில்
துன்னும் மேதி படியத் துதைந்தெழும்
கன்னி வாளை கமுகின்மேற் பாய்வன
மன்னு வான்மிசை வானவில் போலுமால். **#69**

அன்னங்கள் விளையாடும் அகன்ற கரைகளை யுடைய குளங்களில், அந்நிலத்து வாழும் எருமைகள் படிந்து மூழ்க, அக்குளங்களினின்றும் நெருங்கி மேல் எழுகின்ற இளமீன்கள், கமுக மரத்தின்மேல் பாய்கின்ற தோற்றம், யாண்டும் பொருந்தி நிற்கும் வானத்தின்கண் நிலைபெறும் இந்திர வில்லை ஒக்கும்.

விளக்கவுரை

கோடெல்லாம் மட அன்னம் என முன்னர்க் கூறியதற் கேற்ப, ஈண்டும், ``அன்னம் ஆடும் அகன்றுறை`` என்றார். கன்னி வாளை - இள மீன்கள். இவ்வாறு கூறுவது சமாதி அணியின் பாற் படும். நீரில் மூழ்கி எழும் எருமைக்குப் பயந்த மீன்கள் அச்சத்தால் துள்ளி எழுவனவாயின. அவ் எழுச்சி அருகில் இருக்கும் பாக்கு மரம் வரை சென்று விழும்; அத்தோற்றம் வான வில்லை ஒத்தது. ஆல்: அசை நிலை.

காவி னிற்பயி லுங்களி வண்டினம்

வாவி யிற்படிந் துண்ணும் மலர்மது
மேவி அத்தடம் மீதெழப் பாய்கயல்
தாவி அப்பொழி லிற்கனி சாடுமால். **#70**

சோலையில் பயில்கின்ற வண்டின் கூட்டம் அடுத் துள்ள குளங்களில் உள்ள நீர்ப்பூக்களில் படிந்து, அவற்றின் கண் ணுள்ள தேனை உண்ணும். அக்குளங்களில் வாழும் கயல்மீன்கள் மேல் எழுந்து பாய்ந்து, அதன் அருகில் உள்ள சோலைகளின் பழங்களை உதிர்த்துச் சிதைக்கும்.

விளக்கவுரை

வண்டுகள் தமக்கெனச் சோலை இருந்தும், ஆண்டுள்ள மலர்களில் இருந்து தேனுண்ணாமல், அருகில் இருக்கும் நீர்ப் பூக்களில் உள்ள தேனை நுகர முற்பட்டன. அது கண்ட மீனினங்களும் தமக்குரிய குளத்தில் பாய்வதை விடுத்து, அருகிலுள்ள சோலைகளில் பாய்ந்து ஆண்டுள்ள மரங்களின் பழங்களைச் சிதைப்பன வாயின. தத்தம் இடங்களில் துய்த்தற்குரிய பொருளும், சூழலும் இருந்தும், அடுத்துள்ள பொருளை விரும்புதலும், அப்பொருளைத் தமக்கும் பிறர்க்கும் பயன்படாமல் கெடுத்தலும் பேதைமையாம். மீன், மேல் தாவிப் பழங்களை உதிர்ப்பதால் அதற்கும் நுகர்வோர்க்கும் பயன் இலவாதல் காண்க. ஆறறிவுடைய மனித இனமேனும் இத்தகைய தீங்குகளைச் செய்யாதிருக்க வேண்டும் என்பது ஆசிரியர் திருவுள்ளமாகும். ஆல் - அசை.

சாலிநீள் வயலின் ஓங்கித்
தந்நிகர் இன்றி மிக்கு
வாலிதாம் வெண்மை உண்மைக்
கருவினாம் வளத்த வாகிச்
சூல்முதிர் பசலை கொண்டு
சுருள்விரித் தரனுக் கன்பர்
ஆலின சிந்தை போல
அலர்ந்தன கதிர்க ளெல்லாம். **#71**

நெற்பயிர்கள் நீண்ட வயலினிடத்து வளர்ந்து, தமக்குப் பிறவிடங்களில் உள்ள நெற்பயிர்கள் எவையும் ஒப்பாகாத வாறு உயர்ந்து, தூய்மை பொருந்திய வெண்மையையும், உள்ளீடு உடையதாய், உண்மைக் கருவையும் கொண்டு நிற்கும் வளத்தவாகி, அவ் வெண்கரு முதிர்தலால் பொன்னிறமுடையதாகி, இதுகாறும் சுருண்டு கிடந்த நிலையினின்றும் விரிந்து, சிவபெருமானிடத்து அன்புடைய அடியவர்களின் இதயம் போலக் கதிர்கள் எல்லாம் மலர்ந்தன.

விளக்கவுரை

நெற்பயிர் தோன்றுங்கால் வெண்மையும், நெல் கருக் கொண்ட நிலையில் பொன்னிறம் உடையதாயும்.
இருக்கும். கருக் கொண்ட சுருள் விரிய விரிய, நெற்கதிர் விரியும். அவ்வாறு விரிந்த கதிர், அடியவர்தம் சிந்தை அலர்ந்திருப்பது போல அலரும் எனக் கதிர் வளர்ச்சியின் உண்மையைப் பட்டாங்கு கூறிய திறன் போற்றுதற் குரியதாகும். ஓங்குதல், மிகுதல், கருவளமாதல், பயலை கொள்ளுதல், சுருள் விரிதல், கதிர் அலர்தல் ஆகிய செயல்கள் அனைத்தும் நெற் பயிர்க்கும், அடியவர்க்கும் பொருந்துவனவாய் உள்ளன.
நெற்பயிர் அடியவர் *1.* ஓங்குதல் - செழித்து வளர்தல் *1.* சிந்தை மேலோங்கி நிற்றல்
2. மிகுதல் - ஒப்புமையின்றி *2.* பெருமையால் தம்மை வளர்தல். ஒப்பவராகி அடிமைத்திறத் தினால் வளர்ந்திருத்தல்.
3. கருவளம் ஆதல் - நெற்கரு *3.* சிவசத்தி பதிதற்குரிய வளர்தற்குரிய பால் பிடித்தல். நீர்மை பெறல்.
இக்கரு, வாலிதாம், வெண்மை, உண்மைக்கரு என மூன்று அடை, மொழிகளுடன் கூட்டிச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில்,
அ. வாலிதாதல் - அ. புறத்தூய்மையைநீரானும்,
தூய்மையதாதல் அகத்தூய்மையை வாய்மையானும் பெற்றிருத்தல்.
ஆ. வெண்மை - வெண்மை ஆ. பூசுநீறுபோல் உள்ளும் உடையதாதல் புனிதராய் இருத்தல். இ. உண்மை - பதரின்றி இ. உலகியல் உணர்வின்றி உள்ளீடு உடைத்தாதல். மாதோர் பாகர் மலர்த்தாள் அகத்துட் கொண்டு மறப்பிலா திருத்தல்.
4. பயலை கொள்ளுதல் - *4.* மனம், மொழி, மெய் பொன்னிறம் கொள்ளுதல். ஆகிய மூன்றும் இறைவனிடத்தேயே *9; 9;* ஆற்றுப்படுத்தப்பெற்றிருப்ப தால் உடல் வேறுபடல். `பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்` *(தி.6 ப.25 பா.7)*
`நின் கோயில் வாயிலில் பிச்சனாக் கினாய்` *(தி.8 திருச்சத.96)* எனவரும் திருவாக்குகளும் காண்க.
5. சுருள் விரிதல் - கதிர் முதிரச் *5.* தம்மளவில் கொண்டிருந்த சுருண்டு இருந்த நெற்பயிர் அன்பு, ஏனைய விரிதல். உயிர்களிடத்தும் விரிதல். `பல்லுயிர் அனைத்தையும் ஒக்கப் பார்க்கும் நின் செல்வத் தொண்டர்`. *(பட்டினத்துப் பிள்ளையார் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 7-54, 55)* என வரும் திருவாக்கும் காண்க
6. கதிர் அலர்தல் *6.* சிவபோகம் முதிர்ந்து
விளங்குதல். வாலிதாம் - தூய்மையாம். பயலை - பசலை.
ஆலின - அலர்ந்தன, அஃதாவது விரிந்தன.

பத்தியின் பால ராகிப்
பரமனுக் காளா மன்பர்
தத்தமிற் கூடி னார்கள்
தலையினால் வணங்கு மாபோல்
மொய்த்தநீள் பத்தி யின்பால்
முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல
விளைந்தன சாலி யெல்லாம். **#72**

பத்தி வயப்பட்டு இறைவனுக்கு அடிமை பூண்டு ஒழுகும் அடியவர்கள், தம்முள்தாம் கூடுகின்றபொழுது தலை தாழ்த்தி வணங்குதல் போல, செறிந்து நீண்ட வரிசையொடு பால் முதிர்ந்து விளங்கும் கதிர்கள், தலை வணங்கியனவாய், அவ்வடியார்களுக்குச் சிவபோகம் முதிர்வதுபோல அப்பயிர்களும் நெல் முதிர்ந்து பயன் விளைய நின்றன.

விளக்கவுரை

அடியவர்கள் தமக்குள் ஒருவரை ஒருவர் காணுங்கால் வணங்கி மகிழ்வர். அதுபோல நெற்பயிர்களும் தத்தமக்குள் வளைந்து நின்று அசைந்து நிற்கும்.

அடியவர்கள் தத்தமக்குள் வணங்குமாற்றைத் திருஞானசம் பந்தர் *(தி.12 பு.28 பா.271)*, திருநாவுக்கரசர் *(தி.12 பு.21 பா.182)*, சுந்தரர் *(தி.12 சரு.1-5 பா.123)* ஆகியோர்தம் வரலாறுகளிலும் பிற இடங்களிலும் காணலாம். `மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே` *(சிவஞானபோதம் நூற்பா.12)* என்னும் மெய்ந்நூலும்.

மொய்த்து - கதிர்களில் இடனின்றி நெல்மணிகள் செறிந்து. பத்தி - வரிசை .

சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே.

(சீவகசிந்தாமணி பா.53) எனச் சிந்தாமணி ஆசிரியர் உலகியல் நலம் கொள உவமித்திருப்பதும், ஆசிரியர் சேக்கிழார் அருளியல் நலம் கொள உவமித்திருப்பதும் கண்டு ஒப்பிட்டு மகிழலாம்.

அரிதரு செந்நெற் சூட்டின்
அடுக்கிய அடுக்கல் சேர்ப்பார்
பரிவுறத் தடிந்த பன்மீன்
படர்நெடுங் குன்று செய்வார்
சுரிவளை சொரிந்த முத்தின்
சுடர்ப்பெரும் பொருப்பு யர்ப்பார்

விரிமலர்க் கற்றை வேரி
பொழிந்திழி வெற்பு வைப்பார். #73

உழவர்களுள் சிலர், அரியப்பட்ட செந்நெல் கதிரோடு கூடிய நெற்றாள்களின் குவியல்களை மலைபோலக் குவிப்பர். சிலர், தாம் விருப்போடு பிடித்த பல்வேறு வகையான மீன் களையும் பரந்த பெரிய மலைபோலக் குவிப்பர். சிலர், வளைந்த சங்குகள் ஈன்ற ஒளி பொருந்திய முத்துக் குவியலாகிய பெருமலை களை, மேலும் உயரச் செய்வர். சிலர், நெற்பயிரோடு வளர்ந்த விரிந்த மலர்த் தொகுதிகளினாலாய பொருப்பிலிருந்து வரும் தேனருவி களைப் பெருகச் செய்வர்.

விளக்கவுரை

செந்நெற் சூடு - செந்நெல் கதிரோடு கூடிய நெற்றாள் களின் குவியல். செந்நெல் அரிகளைத் தரையில் ஓங்கி அடிக்கும் பொழுது முதிர்ந்த நெல்மணிகள் உதிர்ந்துவிடும். முதிராத பசிய நிலை யிலுள்ள நெல், வைக்கோலை விட்டுப் பிரியாது இருக்கும். அத் தகைய தாள் குவியலையே சூடு என அழைப்பர். தடிந்த - பிடித்த. சுரி வளை - வளைந்த சங்குகள். மலர்க்கற்றை - மலர்த்தொகுதி. வேரி - தேன்.

சாலியின் கற்றை துற்ற
தடவரை முகடு சாய்த்துக்
காலிரும் பகடு போக்குங்
கரும்பெரும் பாண்டில் ஈட்டம்
ஆலிய முகிலின் கூட்டம்
அருவரைச் சிமயச் சாரல்
மேல்வலங் கொண்டு சூழுங்
காட்சியின் மிக்க தன்றே. #74

நெற்கதிரையுடைய வைக்கோல் குவியல்கள் பலவும், பொருந்த நீண்ட மலையெனக் காட்சிதரும். அம்மலை முகட்டைச் சிறிது சரிக்க, அதனை மிதித்து வரும் வலிய கால்களை யுடைய எருமைக்கடாக்களுடன் இணைந்து நடக்கும் கரிய பெரிய எருமைகளின் தொகுதி, நீர் மிகுந்த மேகங்களின் கூட்டம் அரிய மலை யினது உச்சியில் வலமாகச் சூழ்கின்ற காட்சியினும் சிறந்திருந்தது.

விளக்கவுரை

சாலி - நெற்பயிர். துற்று - மேன்மேல் பொருந்த. தடவரை முகடு - நீண்ட மலை உச்சி. பாண்டில் - எருமை. ஆலிய முகில் - நீர்நிறைந்தமேகம். வைக்கோற் போர் மலையென இருந்தது; அதனைச் சரித்து அதன்மீது சுற்றிவரும் எருமைக் கூட்டம் மேகம் போல் இருந்தது.

வைதெரிந் தகற்றி யாற்றி

மழைப்பெயல் மானத் தூற்றிச்
செய்யபொற் குன்றும் வேறு
நவமணிச் சிலம்பும் என்னக்
கைவினை மள்ளர் வானங்
கரக்கவாக் கியநெற் குன்றால்
மொய்வரை உலகம் போலும்
முளரிநீர் மருத வைப்பு. **#75**

மேற்கூறியவாறு தாளடி செய்தவுடன் அவ் வைக்கோல்களின் தூசு போக முறத்தால் வீசி, அந்நெற்கண் உள்ள பதர் போகுமாறு அதனை மழை போலத் தூற்றி, சிவந்த பொன்மலையும், அதற்கு வேறான நவமணிகளால் ஆய ஒன்பது மலைகளும் போலக் கைத் தொழில் வல்ல உழவர்கள் விண்ணுலகம் மறையுமாறு உயர்த்திய நெல் மலைகளால், நெருங்கிய மலைகளையுடைய குறிஞ்சி நிலத்தை ஒத்திருந்தது, தாமரை மலர்களை உடையதாய மருதநிலம்.

விளக்கவுரை

செந்நெல் குன்று பொற்குன்றை ஒத்தது. ஏனைய வெண்நெல், கரு நெல்களையுடைய மலைகள், நவமணிச் சிலம்பு களை ஒத்தன.
வை - வைக்கோல். இவ்வாற்றான் குறிஞ்சி என மருதம் காட்சியளித்தது.

அரசுகொள் கடன்கள் ஆற்றி
மிகுதிகொண் டறங்கள் பேணிப்
பரவருங் கடவுட் போற்றிக்
குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையுந் தாங்கி
விளங்கிய குடிகள் ஓங்கி
வரைபுரை மாடம் நீடி
மலர்ந்துள பதிகள் எங்கும். **#76**

அவ்வாறு தொகுத்த நெற்குவியல்களுள் அரசர்க்குரிய ஆறில் ஒரு பங்கை அரசிறையாகக் கொடுத்து, எஞ்சிய ஐந்து பங்குகளில், தாம் செய்தற்குரிய அறங்களைச் செய்தும், வணங்குதற்குரிய இறை வழிபாட்டைச் செய்தும். குரவர்க்கும் விருந்தினர்க்கும், நற்குணம் அமைந்த சுற்றத்தார்க்கும் கொடுத்தும், இவ்வாற்றான் புகழ் விளங்கிய குடிகள் மிக்கு, மலை போலும் உயர்ந்த மாளிகைகள் விளங்க இருந்தன அந்நாடுகள் எல்லாம்.

விளக்கவுரை

அரசு கொள் கடன் எனவே அக்கால மரபுப்படி ஆறில் ஒன்று செலுத்துதல் அறனாயிற்று. வறியோர்க்கு ஈதல் முதலாய பல்வேறு ஈகை

வினைத் துறைகளும் தம்மைப் பேணுதலும் அடங்க `அறங்கள் பேணி` என்றார். எல்லா அறங்களும் தான் உளனாய் நின்றே செய்ய வேண்டுதலின், தன்னை ஓம்பலும் அறனாம். பரவரும் கடவுள் - பரவுதற்கு அமைந்த கடவுள். `காண்பவன் சிவனேயானால், அவனடிக்கு அன்பு செய்கை மாண்பு அறம்` *(சித்தி.2 சூத்.27)* என்பர். ஆதலின் அக்கடவுள் தாமும் சிவபரம் பொருளேயாம். `விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா ஆக்கம் பலவும் தரும்` *(குறள், 522)* என்னும் திருக்குறள். ஆதலின் அன்பும் அரிய பல குணங்களும் வாய்ந்த சுற்றமே சுற்றம் ஆதலின் `பண்பின் விரவிய கிளையும்` என்றார். தென்புலத்தார் - அயனால் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி; அவர்க்கு இடம் தென்புலமாதலின் தென்புலத்தார் என்றார் என விளக்கம் காண்பர் பரிமேலழகர் *(குறள், 43 உரை)*. எனினும் தமக்கு முன்பு வாழ்ந்து மறைந்த தம்முன்னோர்களையே அத்தொடர் குறிக்கும். இவ்வகையில், ஆசிரியர் சேக்கிழார் தம்மொடு வாழ்ந்து வரும் குரவரன்றித் தமக்கு முன் வாழ்ந்து மறைந்த குரவர்களை நினைவு கூர்ந்து வழிபடுதலும் அமையக் `குரவர்` என்றார் எனலாம்.

விருந்து - புதிது. ஈண்டு, அது புதியராய் வந்தார் மேல் நின்றது. முன்னரே அறிமுகமாகி வருபவர்களும், அறிமுகம் இன்றி வருப வர்களும் ஆக இருவரும் விருந்தினர் ஆவர் என விளக்கம் காண்பர் பரிமேலழகர். எனவே `குரவர்` என்பதால் தென்புலத்தாரையும் , `பரவரும் கடவுள்` என்பதால் தெய்வத்தையும், `விருந்து` என்பதால் விருந்தினரையும், ``பண்பின் விரவிய கிளையும்`` என்பதால் ஒக்கலையும் குறித்தாராயிற்று. துறந்தார், துவ்வாதவர், இறந்தார் ஆகிய மூவருக்கும் ஈதலையும், தம்மைப் பேணலையும் `அறங்கள் பேணி` எனும் தொடரால் குறித்தார். இனி, நாடு எனும் அதிகாரத்தில் `இறைவற்கு இறை ஒருங்கு நேர்தல்` *(குறள், 733)* வேண்டுமெனக் குறித்ததை `அரசுகொள் கடன்களாற்றி` எனும் தொடரால் குறித்தார். இவ்வாற் றான் `தென்புலத்தார் தெய்வம்` *(குறள், 43)* எனத் தொடங்கும் திருக்குறளையும், ``துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும்``*(குறள், 42)* எனத் தொடங்கும் திருக்குறளையும், ``பொறை ஒருங்கு`` *(குறள், 733)* எனத் தொடங்கும் திருக்குறளையும் ஒருங்கு தழுவி யாத்திருக்கும் இச்செய்யுளின் அருமை அறிந்து இன்புறற்குரியதாம்.

கரும்படு களமர் ஆலைக்
கமழ்நறும் புகையோ மாதர்
சுரும்பெழ அகிலால் இட்ட
தூபமோ யூப வேள்விப்
பெரும்பெயர்ச் சாலை தோறும்

பிறங்கிய புகையோ வானின்
வரும்கரு முகிலோ சூழ்வ
மாடமும் காவு மெங்கும். #77

கருப்பஞ் சாற்றைக் காய்ச்சுகின்ற உழவர்களின் ஆலை இருக்குமிடத்தில் தோன்றிய மணமிகு புகையோ? மகளிர் தம் கூந்தற்கு வண்டுகள் எழுமாறு அகில் துண்டுகளால் ஊட்டிய அரும் புகையோ? வேள்வித் தூணை நிலை பெறுத்திச் செய்யும் வேள்விச் சாலைகளினின்றும் எழும் புகையோ? விண்ணகத்து இயங்கும் கரு மேகமோ? என இன்னதென்று அறிய இயலாதவாறு நிலவும் புகை கள், அங்குள்ள மாடங்களிலும் சோலைகளிலும் சூழ்ந்து காணப்படு கின்றன.

விளக்கவுரை

மாடமும் காவும் சூழ்வன, புகையோ தூபமோ முகிலோ என இயையும். ஓகாரங்கள், ஐயப் பொருளன. கரும்பு: அதன் சாற்றைக் குறித்தலின் ஆகுபெயராம். ஆலை: அஃது இருக்குமிடத் தைக் குறித்தலின் ஆகுபெயராம். எனவே இந்நாட்டில் தோன்றும் புகை இவ்வகையில் தோன்றிய புகைகளுள் ஒன்றாக இருக்கு மேயன்றி வேறு பிற தீய வகையான் எழுந்த புகையாக இராது என்பது கருத்தாம்.
ஐயப்பொருளாகச் சூழும் இந்நான்கனுள் முன்னைய இரண்டும் முறையே பொருளும் இன்பமும் ஆம் மூன்றாவது அறம் குறித்ததாம். நான்காவதாய மேகம், ஈண்டுக் கூறிய மூன்றற்கும், வீடுபேற்றிற்கும் ஏதுவாவதாம்.இவ்வகையில் இணைத்துக் காணு மாறு அருளிய திறம் போற்றற்குரியதாம். யூபம் - வேள்வித்தூண்.

நாளிகே ரஞ்செ ருந்தி
நறுமலர் நரந்தம் எங்கும்
கோளிசா லந்த மாலங்
குளிர்மலர்க் குரவம் எங்கும்
தாளிரும் போந்து சந்து
தண்மலர் நாகம் எங்கும்
நீளிலை வஞ்சி காஞ்சி
நிறைமலர்க் கோங்கம் எங்கும். #78

தென்னை மரங்களும், செருந்தி மரங்களும், நறுமணம் வாய்ந்த மலர்களை உடைய நாரத்தை மரங்களும் எவ் விடங்களிலும் உள்ளன. அரச மரங்களும் கடம்ப மரங்களும், பச் சிலை மரங்களும், குளிர்ந்த மலர்களையுடைய குரா மரங்களும் எவ் விடங்களிலும் உள்ளன. பருத்த அடிப்பாகத்தை உடைய பனை மரங் களும், சந்தன மரங்களும், குளிர்ந்த மலர்களையுடைய குங்கும மரங் களும் எவ்விடங்களிலும் உள்ளன. நீண்ட இலைகளையுடைய வஞ்சி மரங்களும், காஞ்சி மரங்களும்,

நிறைந்த மலர்களையுடைய கோங்க மரங்களும் எவ்விடங்களிலும் உள்ளன.

விளக்கவுரை

நாளி கேரம் - தென்னை. நரந்தம் - நாரத்தை. கோளி - அரசு. சாலம் - கடம்பு. மராமரம் என்பாரும் பூவாது காய்க்கும் மரம் என்பாரும் உளர். தமாலம் - பச்சிலை மரம். போந்து-பனை: `போந்தை வேம்பே ஆர் என வரூஉம்` *(தொல். புறத்.5)* என்னும் தொல்காப்பியம். சந்து - சந்தனமரம். நாகம் - குங்கும மரம். குரா, குரவு எனக் குறுகி அம்முப் பெற்றது.

சூதபா டலங்கள் எங்குஞ்
சூழ்வழை ஞாழல் எங்குஞ்
சாதிமா லதிகள் எங்குந்
தண்டளிர் நறவம் எங்கும்
மாதவி சரளம் எங்கும்
வகுளசண் பகங்கள் எங்கும்
போதவிழ் கைதை எங்கும்
பூகபுன் னாகம் எங்கும். **#79**

மாமரங்களும், பாதிரி மரங்களும் எவ்விடத்தும் உள்ளன. சூழ்ந்த சுரபுன்னை மரங்களும், ஞாழல் மரங்களும், சிறு சண்பகங்களும், மல்லிகைகளும் எவ்விடத்தும் உள்ளன. குளிர்ந்த தளிரையுடைய அனிச்ச மரங்களும் எவ்விடத்தும் உள்ளன. குருக்கத்திக் கொடிகளும் சரள மரங்களும் எவ்விடத்தும் உள்ளன. மகிழ மரங்களும் சண்பக மரங்களும் எவ்விடத்தும் உள்ளன. பூவிரிந்த தாழை மரங்களும் எவ்விடத்தும் உள்ளன. கமுக மரங்களும் புன்னை மரங்களும் எவ்விடத்தும் உள்ளன.

விளக்கவுரை

சூதம் - மா. பாடலம் - பாதிரி மரம். வழை - சுரபுன்னை. சாதி - சண்பகப்பூ; சாதிப்பூ என்பாரும் உளர்.
மாலதி - மல்லிகை; முல்லையும் ஆம். நறவம் - அனிச்சம். மாதவி - குருக்கத்தி. சரளம் - சரளமரம்; நீண்ட இலைகளையுடைய ஒருவகைத் தேவதாரு என விளக்குவர் சிவக்கவிமணி *(பெரிய.பு. உரை)* அவர்கள். வகுளம் - மகிழ மரம். கைதை- - தாழை மரம்.பூகம் - பாக்குமரம். புன்னாகம் - புன்னைமரம்.

மங்கல வினைகள் எங்கும்
மணஞ்செய்கம் பலைகள் எங்கும்
பங்கய வதனம் எங்கும
பண்களின் மழலை எங்கும்

பொங்கொளிக் கலன்கள் எங்கும்
புதுமலர்ப் பந்தர் எங்குஞ்
செங்கயல் பழனம் எங்குந்
திருமகள் உறையுள் எங்கும். #80

மங்கல வினைகள் பலவும் எவ்விடத்தும் உள்ளன. மணம் செய்தலினால் உண்டாகின்ற ஒலிகள் எவ்விடத்தும் உள்ளன. மகளிரின் தாமரை அனைய முகங்கள் எவ்விடத்தும் உள்ளன. அவர்தம் பண்ணோடு இயைந்த இன்சொற்கள் எவ்விடத்தும் உள்ளன. பேரொளி வீசுகின்ற அணிகலன்கள் எவ்விடத்தும் உள்ளன. புதிய மலர்களால் பொலிந்து நிற்கும் பந்தல்கள் எவ்விடத்தும் உள்ளன. சிவந்த கெண்டை மீன்கள் உலாவும் வயல்கள் எவ்விடத் தும் உள்ளன. திருமகள் வதிந்து நிற்கும் இடங்கள் எவ்விடத்தும் உள்ளன.

விளக்கவுரை

மங்கல வினைகள் - பிறந்த நாள் வயின் நிகழும் பெரு மங்கலங்கள், காப்பிடுதல், மயிர் நீக்கும் மங்கலம், ஏமுறு கடவுளை ஏத்துதற்கான மங்கலங்கள் போல்வன. இவற்றோடு மணம் செய் கம்பலை ஒலியும் பேரொலியும் உடையவாய் இருத்தலின், இதனை வேறுபட ஓதினார். முகனமர்ந்து நல்விருந்து ஓம்புதல், போலும் நற் செயல்கள் பலவும் நிகழ்தற்குரிய இடனாகவிளங்குதலின் திருமகள் பிரிவின்றி உறைவாளாயினள். `நிலத்து இருப்பு உள்ளும் மாவும்` என்பர் பின்னும். திருமகள் உறையுள் - தாமரை என்பாரும் உளர். ஒருநாட்டின் மேம்பாட்டை விளக்குதற்கு இது போதிய தன்மையின் இப்பொருள் அத்துணைச் சிறப்பின்று.

மேகமுங் களிறு மெங்கும்
வேதமுங் கிடையு மெங்கும்
யாகமுஞ் சடங்கு மெங்கும்
இன்பமும் மகிழ்வு மெங்கும்
யோகமுந் தவமு மெங்கும்
ஊசலு மறுகு மெங்கும்
போகமும் பொலிவு மெங்கும்
புண்ணிய முனிவ ரெங்கும். #81

மேகக் கூட்டங்களும், யானைகளும் எவ்விடத்தும் உள்ளன. மறை ஒலியும், அதனை ஓதும் குழாங்களின் ஒலியும் எவ்விடத்தும் உள்ளன. வேள்விகளும் அவற்றிற்கு உறுப்பாய பிற செயற்பாடுகளும் எவ்விடத்தும் உள்ளன. அறவுணர் வினாலும், திருவருள் தோய்வினாலும் வரும் இன்பமும், உலகியல் அளவிலான மகிழ்வும் எவ்விடத்தும் உள்ளன. இயமம், நியமம் முதலிய எண்வகை

யோகங்களும் அவற்றிற்கு உறுப்பாய விரதம் முதலிய தவங்களும், எவ்விடத்தும் உள்ளன. ஊசல் ஆடுதலும் அவற்றையுடைய வீதிகளும் எவ்விடத்தும் உள்ளன. இன்பம் துய்த்தலும் அதனால் விளையும் பொலிவுநலங்களும் எவ்விடத்தும் உள்ளன. புண்ணியம் செய்யும் முனிவர்களும் எவ்விடத்தும் உள்ளனர்.

விளக்கவுரை

கிடை - மறை ஒலிக்கும் மாணவர் குழாம். போகம் - இன்பம்: ஈண்டு ஐம்பொறிகளால் நுகரப்படும் இன்பம் குறித்து நின்றது.

பண்டரு விபஞ்சி எங்கும்
பாதசெம் பஞ்சி எங்கும்
வண்டறை குழல்கள் எங்கும்
வளரிசைக் குழல்கள் எங்கும்
தொண்டர்த மிருக்கை எங்கும்
சொல்லுவ திருக்கை யெங்கும்
தண்டலை பலவும் எங்கும்
தாதகி பலவு மெங்கும். **#82**

நால்வகை நிலத்தினும் இசைத்தற்குரிய பண்களைப் பாடுதற்குரிய வீணைகள் எவ்விடத்தும் உள்ளன. மகளிர்தம் கால்களில் பூசப்பெற்ற செம்பஞ்சுகள் எவ்விடத்தும் உள்ளன. அம்மகளிரின் கூந்தல்களில் எவ்விடத்தும் வண்டுகள் ஒலித்தல் உள்ளது. இசை வளர்தற்குரிய குழல்கள் எவ்விடத்தும் உள்ளன. அடியவர்களின் திருமடங்கள் எவ்விடத்தும் உள்ளன. மறை ஒலிப்பதும் எங்கும் உள்ளது. சோலைகள் பலவும் எவ்விடத்தும் உள்ளன. ஆத்தி மரமும் பலாமரமும் எவ்விடத்தும் உள்ளன.

விளக்கவுரை

விபஞ்சி - வீணை: யாழ் வகைகளுள் ஒன்று என்றலும் ஒன்று. தண்டலை - சோலை. தாதகி - ஆத்திமரம் முதலியன. குழல்கள் என வருவனவற்றுள் முன்னையது கூந்தலைக் குறிக்கும்; பின்னையது இசைக் கருவிகளுள் ஒன்றாய குழல்களைக் குறிக்கும். இருக்கை என வருவனவற்றுள் முன்னையது இடத்தையும், பின்னையது மறைகளை யும் குறிக்கும்.

மாடுபோ தகங்கள் எங்கும்
வண்டுபோ தகங்கள் எங்கும்
பாடுமம் மனைகள் எங்கும்
பயிலுமம் மனைகள் எங்கும்
நீடுகே தனங்கள் எங்கும்
நிதிநிகே தனங்கள் எங்குந்

தோடுசூழ் மாலை எங்குந்
துணைவர்சூழ் மாலை எங்கும். **#83**

பக்கங்கள் எங்கும் யானைக்கன்றுகள் உள்ளன. மலரிடங்கள் எங்கும் வண்டுகள் உள்ளன. வீடுகள் எங்கும் பாடுவார் பாடுகின்ற இசைகள் மிக்குள்ளன. மகளிர் ஆடும் அம்மனைகள் எவ்விடத்தும் உள்ளன. நீண்ட கொடியாடைகள் எவ்விடத்தும் உள்ளன. பொருளைப் பொதிந்து வைத்திருக்கின்ற கருவூலங்கள் எவ்விடத்தும் உள்ளன. இதழ் சூழ்ந்த மலர்மாலைகள் எவ்விடத்தும் உள்ளன. சூழ்ந்து நிற்கும் ஆடவர் வரிசைகள் எவ்விடத்தும் உள்ளன.

விளக்கவுரை

மாடு - பக்கம். போதகங்கள் என வருவனவற்றுள் முன் னையது ஒரு சொல்லாய், யானை எனப் பொருள்படும்: *(போதகம் - யானை);* பின்னையது போது அகங்கள் எனப் பிரிக்கப்பட்டு மலர்களிடத்து எனப்பொருள்படும். அம்மனை என வருவனவற்றுள் முன்னையது வீடுகளையும் *(அம்மனை- அழகியமனை),* பின்னை யது விளையாட்டு வகைகளுள் ஒன்றான அம்மானையையும் குறிக்கும். கேதனம் - கொடி. நிகேதனம் - பொருள் வைப்பு: கருவூலம். மாலையென வருவனவற்றுள் முன்னையது மலர் மாலையையும், பின்னையது வரிசை என்ற பொருளையும் குறிக்கும்.

வீதிகள் விழவின் ஆர்ப்பும்
விரும்பினர் விருந்தின் ஆர்ப்பும்
சாதிகள் நெறியில் தப்பா
தனயரும் மனையில் தப்பா
நீதிய புள்ளும் மாவும்
நிலத்திருப் புள்ளு மாவும்
ஓதிய எழுத்தாம் அஞ்சும்
உறுபிணி வரத்தாம் அஞ்சும். **#84**

வீதிகளில் அவ்வப்பொழுதும் எடுக்கும் திருவிழாக்களால் இனிய முழக்கங்கள் எழும். வீடுகளில் தம்மை விரும்பி வருவோர்களுக்குச் செய்யும் விருந்தின் முழக்கங்கள் எழும். அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் எனும் நால்வகை இனத்தவர் களும் தத்தமக்குரிய ஒழுக்க நெறியில் தவறாது இருப்பர். அவ்வவ் வீடுகளில் உள்ள சிறுவர்களும் தத்தம் மனைகளில் தவறாது வதிவர். பறவைகளும், விலங்குகளும் பகையின்றித் தத்தமக்குரிய நெறியில் வாழும். திருமகளும் அந்நாட்டகத்து உறைதலையே விரும்புவாள். அந்நாட்டு மக்களால் ஓதப்படுவன திருவைந்தெழுத்தேயாம். அதனால் பிணி எவையும் அந்நாட்டில் வர அஞ்சும்.

விளக்கவுரை

விழவு: மக்கள் இறைவர்க்கெனவும் தமக்கெனவும் எடுக்கும் விழாக்கள்.

வீதிகடோறும் வெண்கொடியோடு விதானங்கள்
சோதிகள்விட்டுச் சுடர்மாமணிக ளொளிதோன்றச்
சாதிகளாய பவளமுமுத்துத் தாமங்கள்
ஆதியாரூ ராதிரைநாளா லதுவண்ணம். *(தி.4 ப.21 பா.3)*

எனவரும் திருவாக்கும் காண்க.

சாதிகள் - அந்தணர் முதலிய நால்வகை இனத்தவர்கள். இவ் வினத்தவர்கள் சங்ககாலத்திற்கு முன்னிருந்தே வாழ்ந்து வந்தவராவர். ``அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும், ஐவகை மரபின் அரசர் பக் கமும், இரு மூன்று மரபின் ஏனோர் பக்கமும்``, *(தொல். புறத்.20)* என வரும் தொல்காப்பியமும், ``வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்`` *(புறநா.183)* எனவரும் புறநானூறும் காண்க.

ஒரு நாட்டிற்கு இன்றியமையாது வேண்டப்படுவன இறைவழி பாடும், பாதுகாப்பும், பண்டமாற்றமுமாம். அப் பொருள்களில் இன்றி யமையாததாய உழவும் ஆம். இந்நால்வகைப் பொறுப்புகளையும் மேற்கூறிய நால்வகையினரும் முறையே எடுத்துக் கொண்டு அவற் றைச் செவ்விதாக நடத்திவந்தனர். அவ்வகையிலேயே `சாதிகள் நெறியில் தப்பா` என்றார்.

காலப்போக்கில் இவர்கள் ஏற்றுக்கொண்ட பொறுப்புகளை வைத்து, மேல் - கீழ் எனும் அமைப்பு உளவாயிற்று. இந்நிலையும் சங்ககாலத்தேயே வந்து விட்டமை `வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும், கீழ்ப்பால் ஒருவன் கற்பின் - மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே` *(புறம். 183)* எனவரும் புறநானூற்றுப் பாட்டானும், ``மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர், கீழிருந்தும் கீழல்லார் கீழல்லவர்`` *(குறள் 973)* எனவரும் திருக்குறளானும் அறியலாம்.

இதனால் வளர்ந்த சாதிப்பிணக்குகள் பலவாம். அவற்றால் ஏற் பட்ட அழிவுகளும் பலவாம். ஆனால் தொடக்க காலத்தில் அவ்வவ் வோர், அவ்வப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டவாறு தவறாது செய்து வந்தனர். அச்செயற்பாடு நாட்டிற்கு நன்மையையே தந்தது. அதுகொண்டே அமைச்சர் பெருமகனாராகிய சேக்கிழாரும் இதனைக் குறித்தனர்.

தனயர் - அவ்வவ் வீடுகளிலும் வளர்ந்து வரும் நன்மக்கள். பெற்றோர் பொறுப்பில் வாழ்ந்தும், வளர்ந்தும் வரும் இவர்கள், தத்தம் பெற்றோர்தம் ஆணைவழி நின்று இறைவழிபாடு, பெற்றோர் வழி பாடு, கல்வி, நாகரிகம், பண்பாடு, வாழ்வியல் பற்றிய வளர்ச்சிகளைப் பெறற்குரியவராவர். ஆதலின் இவர்கள், இன்றியமையாத காரணங்

களுக்கே மனையை விடுத்து வெளிச்சென்று வருதற்குரியவர்களாவர். இவ் வகையான வளர்ச்சியே அவர்தம் உடலும் உணர்வும் நெறிப்பட வளர் தற்கு ஏதுவாகும். ஆதலின் ``தனயரும் மனையில் தப்பார்`` என்றார்.

அப்பூதியடிகளார், தம்மனைக்கு வந்த நாவரசரை விருந்து ஓம்புதற்கென வாழையிலை கொணரத் தம் மகன் மூத்த திருநாவுக் கரசரை ஏவலும், அம் மைந்தனும், ``நல்ல தாய் தந்தை ஏவ நான் இது செய்யப் பெற்றேன்`` *(தி.12 பு.25 பா.24)* என மகிழ்ந்து அப்பணியை மகிழ்வுடன் ஏற்றதும் நினைவு கொளற்குரியன. எனவே மகளிர்க்கு இல்லிகவாப் பருவம் எனக் குறித்தது போன்று, மைந்தற்கும் இல்லிக வாப் பண்பு வேண்டுதல் இன்றியமையாததேயாகும்.

இவ்வாறு குரவர்தம் வழி நில்லாமையால்தான், பெற்ற துன்பத்திற்கு வருந்தி ``இருமுதுகுரவர் ஏவலும் பிழைத்தேன்`` *(சிலப். கொலைக். வரி 67)* எனக் கோவலனும் வருந்தினன், மாதவியின் தொடர்பு ஏற்படுமுன், அவன் குரவர் வழியில் நின்றமைக்கு, `குரவர் பணியன்றியும்` *(சிலப். புறஞ். வரி 89)* எனக் கூறும் மாதவியின் கூற்றுச் சான்றாதலையும் ஈண்டு நினைவு கொளற்குரிய தாம். அப்பரடிகளும் தம் தமக்கையார் வழிநில்லாமையால்,

``காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்;``
(தி.4 ப.1 பா.5)

என வருந்தியமையும் உளங்கொளற்குரியதாம்.

அங்ஙனமாயின், பெற்றோர் நெறியினின்றும் வழுவி இல்லிகத் தல் பெண்களுக்குப் பொருந்துமோ எனில் அதுவும் பொருந்தாது. அங்ஙனமாக அவரையும் ஈண்டு ஆசிரியர் கூறாதது என்னை எனில்,

`முலை முகம் செய்தன முள்ளெயிறு இலங்கின,
தலைமுடி சான்ற தண்டழை உடையை,
அலமரல் ஆயமோடு யாங்கணும் படாஅல்,
மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய,
காப்பும் பூண்டிசின் கடையும் போகலை,
பேதை அல்லை மேதையங் குறுமகள்` -அகநானூறு, 7

எனக் கூறுமாற்றான் பண்டுதொட்டே மகளிர்க்குரிய இந்நெறி போற்றப்பெற்று வருதலானும், ஆசிரியர் சேக்கிழாரும் இதனை `இல்லிகவாப் பருவம்` எனப் பின் குறித்தலானும் அந்நெறியை ஈண்டுக் கூறாராயினார்.

ஒரு நாட்டின் நீதியமைவு மக்களிடத்து மட்டுமன்றி ஏனைய பறவைகள், விலங்குகள் வரையிலும் கூட நிலவுமாறு அமைய வேண்டும். அவ்வாறு அவ்வுயிர்களளவிலும் நிலவ வேண்டுமானால் மக்களிடத்தும், அவர்களைக் காக்கும் மன்னரிடத்தும் எத்துணை யளவு நீதியும் நேர்மையும் அமைதல் வேண்டும் என்பது உய்த்துணரத் தக்கதாம்.

`கோள்வல் உளியமும் கொடும்புற் றகழா;
வாள்வரி வேங்கையும் மான்கணம் மறவா;
அரவும் சூரும் இரைதேர் முதலையும்
உருமும் சார்ந்தவர்க் குறுகண் செய்யா;
செங்கோற் றென்னவர் காக்கும் நாடென
எங்கணும் போகிய இசையோ பெரிதே.`` -சிலப். புறஞ்சேரி. *5-10*

என்னும் சிலப்பதிகாரமும். இதனை உளங்கொண்டே `நீதிய புள்ளு மாவும்` என்றார். ஈண்டுக் குறித்த மா விலங்காகும்.

இத்தகைய அருள்மனமும் அறமனமும் தவழ்ந்து நிற்கும் நாட்டில் திருமகள் அகலாது உறைவள். ஆதலின் `நிலத்து இருப்பு உள்ளும் மாவும்` என்றார். ஈண்டு மா என்பது திருமகளைக் குறிக்கும். அவள் இடம் பெயர்ந்து உறைபவள். ஆயினும் இத்தகைய நிலத் தகத்தெனில் இடம் பெயராது உறைவள்.

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்லிருந்து ஓம்புவான் இல். -குறள், *84*

பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு. -குறள், *482*

அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந் தாங்கே திரு. -குறள், *179*

எனவரும் திருக்குறள்களும் ஈண்டு நினைவு கூர்தற்குரியன.

திருவைந்தெழுத்தே ஆதி மந்திரமாகும். அரியதமிழ் மந்திரமும் ஆகும். இதனை நாளும் ஓதிவருவார், நோக்கும் திக்கிலும் மற்ற எவ்வித மந்திர விதிகளும் வாரா என்பர். இத்தகைய அரிய மந்திரத்தை இந்நாட்டில் உள்ள அனைவரும் இடையறாது ஓதி வருதலின் எப்பிணிகளும் வர அஞ்சும் என்றார். `தனயரும் மனையில் தப்பா` எனவரும் தொடருக்கு அவ்வவ் வீடுகள் தோறும் மகப்பேறு தப்பாது இருக்கும் என உரைகண்டு அதற்கு மேற்கோளாக,

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. -குறள், *60*

என்னும் குறளை எடுத்துக்காட்டுவர் சிவக்கவிமணி அவர்கள் *(*பெரிய. பு. உரை*)*. அதனினும் தனையர் என்பதற்கு ஆண்மக்கள் எனப் பொருள்கொண்டு அம்மக்கள் தாமும் தத்தம் பெற்றோரின் ஆணைவழி

நின்று மனையில் தப்பார் எனப் பொருள்கோடல் சிறக்கும். இன்னும் அவர், `நிலத்து இருப்பு உள்ளும் ஆவும்` எனப் பிரித்துக் காமதேனுவும் இந் நாட்டின்கண் இருத்தலை நினையும் எனப்பொருள் கொள்வர். திருமகளே உறைவள் என்பதினும் இவ்வுரை சிறத்தல் இல்லாமை காண்க.

நற்றமிழ் வரைப்பின் ஓங்கு
நாம்புகழ் திருநா டென்றும்
பொற்றடந் தோளால் வையம்
பொதுக்கடிந் தினிது காக்குங்
கொற்றவன் அநபா யன்பொற்
குடைநிழற் குளிர்வ தென்றால்
மற்றதன் பெருமை நம்மால்
வரம்புற விளம்ப லாமோ. **#85**

செந்தமிழ் நாட்டின்கண் விளங்கும் பிறநாடுகளினும் நம்மால் புகழப்பெற்ற சோழநாடானது எந்நாளும் அழகும் அகலமும் உடைய தோளினால் இந்நிலவுலகைப் பிற அரசர்கட்கு உரித்தாகும் பொதுமையினின்றும் நீக்கி, இனிதாகக் காக்கின்ற பேரரசனாகிய அநபாயனின் அழகிய வெண்கொற்றக் குடையின் நிழலால் அப்பெருமகனின் தண்ணளி பெறுவதெனில், அச்சோழநாட்டின் மாண்பினை நம்மால் அளவுபடுத்திக் கூறல் அமையுமோ? அமை யாது என்பதாம்.

விளக்கவுரை

தோள் வலிமையால் காப்பதனைத் தோளில் வைத்துக் காப்பது என்றதும், அரசன் தண்ணளியால் வாழும் உலகை அவன்தன் குடைநிழலில் வாழும் உலகு என்றலும் ஏற்றுரையாம்.

`கண்பொர விளங்கும் நின் விண்பொரு
வியன்குடை வெயில் மறைக் கொண்டன்றோ*?*
அன்றே, வருந்திய குடி மறைப்பதுவே கூர்வேல் வளவ*!*``
-புறநா*. 35*

எனவரும் புறப்பாட்டும் காண்க. தாம் காக்கும் உலகு பிறர்க்கும் பொதுவாதலை விலக்கித் தமக்கே உரித்தாகக் கொண்டு ஆளுதல் தலையாய அரசற்குரிய பெற்றிமையாம்.

`போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறாஅது` -புறநா*. 35*
என்னும் புறப்பாட்டும்

சொன்ன நாட்டிடைத் தொன்மையின் மிக்கது
மன்னு மாமல ராள்வழி பட்டது
வன்னி யாறு மதிபொதி செஞ்சடைச்

சென்னி யார்திரு வாரூர்த் திருநகர். #86

இதுகாறும் கூறிய சோழவள நாட்டின்கண், பழமை யால் சிறந்ததும், நிலைபெற்ற திருமகளால் வழிபடப் பெற்றதும், வன்னிஇலையும், கங்கையாறும், இளம் பிறையும் பொருந்திய சிவந்த சடைமுடியோடு கூடிய திருமுடியையுடைய தியாகேசப் பெருமான் வீற்றிருந்து அருளுவதும்ஆய பெருமை பெற்றது திருவாரூர் என்னும் திரு நகரமாகும்.

விளக்கவுரை

`ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ, ஓருருவே மூவுருவ மான நாளோ .... திருவாரூர் கோயிலாக்கொண்ட நாளே` *(தி.6 ப.34 பா.1)* எனவரும் திருவாக்கால் திருவாரூரின் தொன்மை விளங்கும். திருமால் தம் மகப்பேற்றிற்காகத் திருவாரூர்ப் பெருமானை வேண்ட, அவனும் அருளினன். தம் கணவரை வணங்கிய திருமால், தம்மை வணங்காமைபற்றிச் சினங்கொண்ட உமையம்மையார், `உமக்குப் பிறக்கும் மகன் எம் கணவரின் நெற்றிக்கண்ணால் சாம்பராகுக`! என்று ஆணை பிறப் பிக்க, வருந்திய மாலும், திருமகளும் அவ்வாணை நீங்க வேண்ட அம்மையப்பராக விளங்கும் இறைவன் `நும் மகன் இறந்தாலும் உம்மளவில் உயிர் வாழ் பவனாய் இருப்பன்` என வரம் ஈந்தனர். அந் நிகழ்வின்பின் திருமகள் திருவாரூருக்கு வந்து வழிபட்டனள். இது பற்றியே `மன்னும் மாமல ராள் வழிபட்டது` என்றார். இதற்கேற்ப ஊர்ப்பெயர் *(திரு+ஆர்+ஊர்= திருமகள் இருந்து வழிபட்ட ஊர்)* அமைந்திருப்பதும், அங்குள்ள குளம் கமலாலயம் எனப் பெயர் பெற்றிருப்பதும் காணலாம். வன்னி - வன்னியிலை. அடியவர் வழிபட்டு இட்ட இலை இது.

வேத ஓசையும் வீணையின் ஓசையும்
சோதி வானவர் தோத்திர ஓசையும்
மாதர் ஆடல் மணிமுழ வோசையும்
கீத வோசையு மாய்க்கிளர் வுற்றவே. #87

இத்திருநகரில், நான்மறைகளின் ஓசையும், வீணையின் ஓசையும், ஒளிபொருந்திய தேவர்கள் செய்யும் வழிபாட்டு ஓசையும், நாடகப் பெண்களின் கூத்திற்கு இசைந்த அழகிய மத்தள ஓசையும், அம்மகளிரின் பாட்டு ஓசையும் ஒன்றாக ஒலித்து நிற்கும்.

விளக்கவுரை

சோதி - ஒளி. இத்தகைய ஓசைகளால், அந்நகரில் எழுச் சியும் பொலிவும் மிக்கனவாய் உள்ளன.

கீதம் - இசை தழுவிய தமிழ்ப் பாட்டு. கிளர் உற்றது - எழுச்சியுடன்

விளங்குவது.

பல்லி யங்கள் பரந்த ஒலியுடன்
செல்வ வீதிச் செழுமணித் தேரொலி
மல்லல் யானை ஒலியுடன் மாவொலி
எல்லை இன்றி யெழுந்துள எங்கணும். **#88**

பல்வகை இசைக் கருவிகளின் ஒலியோடு, செல்வம் நிறைந்த திருவீதிகளில் அழகிய தேர்களின் ஒலியும், வளப்பம்மிக்க யானை ஒலியும், குதிரை ஒலியும் அளவின்றி அந்நகர் எங்கும் எழுந்துள்ளன.

விளக்கவுரை

கொட்டுவன, ஊதுவன, இயக்குவன, தட்டுவன ஆகிய நால்வகை இயங்களும்அடங்கப் `பல்லியம்` என்றார்.

மாட மாளிகை சூளிகை மண்டபம்
கூட சாலைகள் கோபுரந் தெற்றிகள்
நீடு சாளர நீடரங் கெங்கணும்
ஆடன் மாத ரணிசிலம் பார்ப்பன. **#89**

மேல்மாடங்களையுடைய மாளிகைகளும், செய் குன்றுகளும், மண்டபங்களும், கூடங்களையுடைய வீடுகளும், கோபுர வாயில்களும், திண்ணைகளும், நீண்ட பலகணிகளையுடைய பேரவைகளும் ஆகிய அனைத்திடங்களிலும் நாட்டியம் ஆடுகின்ற மகளிரின் அழகிய சிலம்புகள் ஒலிக்கும்.

விளக்கவுரை

சூளிகை - செய்குன்றுகள். தெற்றிகள் - திண்ணைகள். சாளரம் - பலகணி: காற்று உட்புகுந்து வீசுதற்கு ஏதுவாகப் பல கண் களையுடையனவாய் அமைக்கப்பட்ட இடம். இவ்விடங்கள் அனைத்தும் மகளிர்தம் ஆடற்கென அமைந்தவையாம்.

அங்கு ரைக்கென் னளவப் பதியிலார்
தங்கள் மாளிகை யின்னொன்று சம்புவின்
பங்கி னாள்திருச் சேடி பரவையாம்
மங்கை யாரவ தாரஞ்செய் மாளிகை. **#90**

அத்திருவாரூரின் பெருமையை அளவிட்டு எவ்வாறு யான் கூறுவேன்? அந்நகரத்தில் தமக்கெனக் கணவர் இல்லாத உருத்திர கணிகையர்களின் மாளிகைகளில் ஒன்று, சிவபிரான் இடமருங்கில் வீற்றிருந்தருளும் உமையம்மையாரின் தோழியர்களின் ஒருத்தியாகிய கமலினி என்னும் பரவையார் தோன்றியருளிய திருமாளிகையாக அமைந்திருக்குமாயின்.

விளக்கவுரை

உமையம்மையாரின் தோழியர்களில், ஒருவர்தம் பெரு மாளிகையே அமைந்திருக்குமாயின், அந்நகரில் உள்ளாரின் வளத்தை யான் எங்ஙனம் மதிப்பிட்டுக் கூறுவேன் என ஆசிரியர் வியக்கின்றார். சம்பு - சிவபெருமான். கயிலையில் வாழ்ந்த கமலினியார் என்பார் இறைவன் ஆணையின் வண்ணம் திருவாரூரில் பரவையார் எனும் பெயரில் தோன்றி வாழ்ந்து வருவாராயினர். அவர்தம் மாளிகைச் சிறப்பை

எடுத்து விதந்தது, இறைவனே அம்மாளிகைக்குத் தூதுவனாய் இருமுறை எழுந்தருளியமையும், கயிலையில் உமையம்மையாருக்குத் திருப்பணி செய்துவந்த சிறப்புடைமையும், ஆரூரரை மணந்தமையும், சேர வேந்தரை அவர்தம் அரசியல் சுற்றத்தாரோடு ஏற்று மகிழ்ந்தமையும் ஆகிய காரணங்களால் ஆம்.

படர்ந்த பேரொளிப் பன்மணி வீதிபார்
இடந்த ஏனமும் அன்னமும் தேடுவார்
தொடர்ந்து கொண்டவன் தொண்டர்க்குத் தூதுபோய்
நடந்த செந்தா மரையடி நாறுமால். **#91**

யாண்டும் பரவிய பேரொளியையுடைய பல மணிகளால் ஒப்பனை செய்யப் பெற்ற அம்மாளிகையமைந்த வீதியானது, நிலத்தைக் கீண்டு சென்ற திருமாலாகிய பன்றியும், மேல் பரந்து சென்ற அன்னமாகிய அயனும் அடியையும், முடியையும் தேடியும் காண இயலாத பெருமான், தம்மைத் தொடர்ந்து அடிமைத்திறம் பூண்டு ஒழுகிவரும் நம்பியாரூரருக்காகத் தூது சென்ற செந்தாமரை மலர்போலும் திருவடி மணம் கமழ்ந்து நிற்கும்.

விளக்கவுரை

மாலும் அயனும் காண இயலாத பெருமான், நம்பியாரூரருக்குத் தூது சென்றது, அப்பெருமானின் அருமையின் எளிய அழகைக் காட்டுகிறது. இருமுறை தூது சென்றதால் `போய் நடந்து` என்றார். இதனால் அப்பெருமானின் திருவடி மணம் கமழ்வது திருவாரூர் மண்ணாகும்; திருமுடிமணம் கமழ்வது மதுரை மண்ணாகும். `கலிமதுரை மண்சுமந்து` *(தி.8 ப.8 பா.8)* என வரும் திருவாக்கை நினைவு கூர்க. தொடர்ந்து கொண்ட வன்றொண் டர் - இறைவனையே பெரும்பற்றாகக் கொண்டு அடிமைத்திறம் பேணி வரும் நம்பியாரூரர். `அத்தாஉனக் காளாய்இனி அல்லேனென லாமே` *(தி.7 ப.1 பா.1)* `மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே ... ஆளாய் இருக்கும் அடியார்` *(தி.7ப.95பா.1)* என்பனவாகிய திருவாக்குகளைக் காண்க. தொடர்ந்து கொண்ட - தாமே வலியத் தொடர்ந்து சென்று ஆட்கொண்ட என இறைவற்கேற்றி உரைப்பர் சிவக்கவி மணியார் *(பெரிய. பு. உரை)*.

செங்கண் மாதர் தெருவில் தெளித்தசெங்
குங்கு மத்தின் குழம்பை அவர்குழல்
பொங்கு கோதையின் பூந்துகள் வீழ்ந்துடன்
அங்கண் மேவி யளறு புலர்த்துமால். **#92**

சிவந்த கண்களையுடைய பெண்டிர் வீதியில் தெளித்த சிவந்த குங்குமக் குழம்பை, அப்பெண்டிரின் கூந்தலில் முடிக்கப்பட்ட பூமாலைகளிலிருந்து வீழ்ந்த பூந்தாதுகள், பொருந்தி அச்சேற்றை உலரச்

செய்யும்.

விளக்கவுரை

தெருவில் தெளித்த குங்குமக் குழம்பு, பெண்கள் முடி மீதுள்ள மாலையிலிருந்து மகரந்தப்பொடிகள் வீழ்வதால் உலர்கின் றது. பூந்துகள் - அழகிய மகரந்தப் பொடி. அளறு - சேறு. `சோறுவாக் கிய கொழுங்கஞ்சி, யாறு போலப் பரந்தொழுகி, ஏறுபொரச் சேறாகித் தேரோடத் துகள் கெழுமி, நீறாடிய களிறுபோல, வேறுபட்ட வினை யோவத்து` *(பட்டினப்பாலை - 44-49)* என வரும் பாடல் பகுதியும் ஈண்டு நினைவுகூர்தற்குரியதாம். ஆல் அசை.

உள்ளம் ஆர்உரு காதவர் ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாந்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள். **#93**

ஆனேற்றை ஊர்தியாக் கொண்டருளும் தியாகேசப் பெருமான் வீற்றிருந்தருளும் திருவாரூரின் பக்கங்கள் எல்லாம், இனிய ஓசையையுடைய திருமுறைத் திருப்பதிகங்களைப் பசுமையாக கிளிப் பிள்ளைகள் பாடிக்கொண்டிருக்கும், நாகணவாய்ப் பறவைகள் அதனைக் கேட்டு நிற்கும். இவ்வாறு பறவையினங்களும் திருமுறை களைப் பாடியும் கேட்டும் மகிழுமாயின், அப்பெருநகரில் திருப் பதிகங்களை ஓதியும் கேட்டும் உள் உருகாதவர் யாவருளர்? ஒருவரும் இலர் என்பதாம்.

விளக்கவுரை

விடையூரும் வள்ளலார் திருப்பதிகங்களைப் பாடுவன கிளிகள், கேட்டு மகிழ்வன பூவைகள் எனில் அத்திருப்பதிகங்களுக்கு உள்ளம் உருகாதவர் யார்? எனக் கூட்டிப் பொருள் காண்க. ஊர்விடை என்பதனை விடைஊர் என மாறுக. வேண்டுவார் வேண்டுவன வற்றையெல்லாம் விரும்பி வழங்கலின் `வள்ளலார்` என்றார். தெள்ளும்ஓசை - தெளிந்த ஓசை; வினைகளை அகழ்ந்து எறியும் ஓசைஎன்றலும் ஒன்று. பூவைகள் - நாகணவாய்ப் பறவைகள்.

விளக்கம் மிக்க கலன்கள் விரவலால்
துளக்கில் பேரொலி யால்துன்னு பண்டங்கள்
வளத்தொ டும்பல வாறு மடுத்தலால்
அளக்கர் போன்றன ஆவண வீதிகள். **#94**

(இப்பாடல் ஆவண வீதிகளுக்கும் அலைகடற்கும் சிலேடையாய் அமைந்ததாம்) ஒளிமிக்க அணிகலன்கள் நிறைந்துள் ளன கடை வீதிகளில்; விளக்குஒளி மிக்க மரக்கலங்கள் நிறைந்துள் ளன கடலில்.

கொண்டும் கொடுத்தும் வாங்குவோரும் விற்போரும் பேசும் ஒலிகள் நிறைந்துள்ளன கடை வீதிகளில்; அலைகளின் மிகுதி யால் பேரொலி மிக்குள்ளது கடலில். பல்வேறு வகையான பண்டங்கள் (பொருள்கள்) நிறைந்துள்ளன கடை வீதிகளில்; மலைபடு பொருள் களும், மண்படு பொருள்களுமாக ஆறுகள் அடித்துக் கொண்டு சேர்த்துள்ளன கடலில். இவ்வகையால் அங்குள்ள கடைவீதிகள் அலைகடல் போல்வனவாய் உள்ளன.

விளக்கவுரை

ஆவணவீதிகளுக்கு ஆங்கால்; கலன்கள் - அணிகலன் கள், பேரொலி - வாணிகம் செய்வோர் கொண்டும் கொடுத்தும் பேசு வதால் வரும் பேரொலி, துன்னு பண்டங்கள் - நெருங்க வைக்கப்பட்டி ருக்கும் பல்வேறு பொருள்கள், பலவாறு மடுத்தலால் - பல்வேறு இடங் களிலிருந்து கொண்டுவரப்பட்டும் பலவகைகளில் அடுக்கப்பட்டும் இருத்தல். கடலுக் காங்கால்: கலங்கள் - மரக்கலங்கள், பேரொலி - அலைகளால் ஏற்படும் ஒலி, துன்னு பண்டங்கள் - மலைபடு பொருள் களும், மண்படு பொருள்களுமாக ஆறுகளின்வழி அடித்துக் கொண்டு வரப்பட்டிருக்கும் பொருள்கள், பல ஆறு மடுத்தலால் - பல ஆறுகளும் வந்து கலத்தலால்.

ஆர ணங்களே அல்ல மறுகிடை
வார ணங்களும் மாறி முழங்குமால்
சீர ணங்கிய தேவர்க ளேயலால்
தோர ணங்களில் தாமமுஞ் சூழுமால். **#95**

இத்திருநகர்த் திருவீதிகளில் நான்மறைகளின் ஒலிகளேயன்றி யானைகளின் ஒலிகளும் அவற்றொடு மாறுபட்டு ஒலிக்கும்; சீர்மைமிக்க தேவர்களேயன்றி அவ்வவ்விடத்தும் கட்டப் பட்டிருக்கும் தோரணங்களின் மாலைகளும் வானத்தில் சூழ்ந்திருக்கும்.

விளக்கவுரை

ஆரணம் - மறை. வாரணம் - யானை. நான்மறைகளை உச்ச சுரமாகிய நிஷாத சுரத்தில் ஓதுங்கால், அவ்வோசை, யானையின் பிளிற்றோசை போன்றிருக்கும் ஆதலின் இவ்வாறு கூறினார். தேவர்கள் நிலம் தீண்டா வகையினர். ஆதலின் அவர் வானத்திலேயே இயங்குவர். அவரைப் போன்றே தோரணங்களில் கட்டிய மாலைக ளும் வானத்திலேயே அசைந்து நிற்கும். ஆதலின் தேவர்களேயன்றி மாலைகளும் விண்ணில் சூழும் என்றார். ஆல் இரண்டும் அசைநிலை. ஏகாரம் இரண்டும் இசை நிறை. உம்மை இரண்டும் இறந்தது தழீஇய எச்சங்கள்.

தாழ்ந்த வேணியர் சைவர் தபோதனர்

வாழ்ந்த சிந்தை முனிவர் மறையவர்
வீழ்ந்த இன்பத் துறையுள் விரவுவார்
சூழ்ந்த பல்வே றிடத்ததத் தொல்நகர். **#96**

தாழ்ந்த சடையை உடைய சைவர்களும், பெருந்தவத்தரும், சித்தத்தைச் சிவன்பால் வைத்த முனிவர்களும், மறை வல்லுநர்களும், தாம் விரும்பிய இன்பத் துறையில் நின்று வாழ்ந்துவரும் இல்லறத்தவர்களும் இப்பழமையான நகரைச் சூழ்ந்த பல்வேறு இடங்களிலும் வதிந்துவரும் பெருமையுடையது .

விளக்கவுரை

ஈண்டுத் தாழ்ந்த வேணியர், சைவர் எனக் குறிக்கப் படுவோர் சைவத்தின் உட்சமயத்தவர்களாகிய காபாலிகர், பாசுபதர் போன்றவர்களே. வேணி - சடை. சைவர் - சிவபரம்பொருளையே தமக்குரிய தெய்வமாக வழிபட்டு வருபவர். தபோதனர் - தவத்தையே தமக்குரிய செல்வமாகக் கொண்டு வாழ்பவர். ஈண்டுத் தவம் என்றது சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்றுமாம். `தவத்தினில் உணர்த்த` எனவரும் சிவஞானபோதத்தால் *(சூ.8)* இவ்வுண்மை அறியப்படும். சித்தத்தைச் சிவன்பால் வைத்திருத்தலே, அச்சிந்தை வாழ்தற்கும் வளர்தற்கும் உரிய பயனாம். ஆதலின் `வாழ்ந்த சிந்தை` என்றார். வீழ்ந்த - விரும்பிய. இன்பத்துறை - இல்லறம். இல்லறம் பலராலும் விரும்பி ஏற்கப்படுவது ஒன்றாம். ஆதலின் விரும்புதற்குரிய இல்லறம் என்றார். `இல்லறம் அல்லது நல்லறம் அன்று` *(கொன்றைவேந்.3)*, `அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை` *(குறள் 49)*, `அறத்தாற்றின் இல் வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவது எவன்` *(குறள், 46)* எனவரும் திருவாக்குகளைக் காண்க.

நிலம கட்கழ கார்திரு நீள்நுதல்
திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் தாமரை போல்மலர்ந்து
அலகில் சீர்த்திரு வாரூர் விளங்குமால். **#97**

சோழர்கள் வீற்றிருக்கும் சிறப்புடையதும், அளவில்லாத சிறப்பினையுடைய திருவாரூர் என்னும் பெயருடையது மான இத்திருநகர், நிலமகட்கு அழகு நிறைந்த நீண்ட நெற்றியில் இட்ட திலகத்தை ஒப்பது, திருமகளுக்கு உறையுளாக விளங்கும் செந்தாமரை போன்ற அழகும், பொலிவும் தழைய நிற்பது.

விளக்கவுரை

நிலமகளின் திலகத்திற்கு ஒப்பச் சோழநாடும், திருமகளின் உறையுளான தாமரைக்கு ஒப்பத் திருவாரூரும் சிறந்து விளங்கும் என உரைகாண்பர்

தவத்திரு ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் (பெரிய.பு. உரை).

அன்ன தொல்நக ருக்கர சாயினான்
துன்னு செங்கதி ரோன்வழித் தோன்றினான்
மன்னு சீர்அந பாயன் வழிமுதல்
மின்னும் மாமணிப் பூண்மனு வேந்தனே. **#98**

மேற்கூறிய அத்தன்மைகள் பலவும் பொருந்தி யதும் பழமையானதுமான திருவாரூருக்கு அரசனாக இருந்தவன், செறிந்த செம்மைநிறம் வாய்ந்த ஒளிக் கதிர்களையுடைய கதிரவன் மரபில் தோன்றியவனும், நிலைபெற்ற புகழுக்கு நிலைக்களனாய அநபாய சோழனின் குலமுதல்வனாய் உள்ளவனும், ஒளி விளங்கும் சிறந்த மணிகளாலாய அணிகலன்களை அணிந்தவனுமாய மனு வேந் தனாம்.

விளக்கவுரை

துன்னு - நெருங்கிய; செறிந்த. மன்னுசீர் - நிலைபெற்ற சிறப்பு. பூண் - அணிகலன்கள். ஏ - அசை. வெங்கதிரோன் என்பதும் பாடம்.

மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாங்
கண்ணும் ஆவியு மாம்பெருங் காவலான்
விண்ணு ளார்மகிழ் வெய்திட வேள்விகள்
எண்ணி லாதன மாண இயற்றினான். **#99**

இவ்வேந்தன் இந்நிலவுலகில் வாழ்கின்ற நிலை பெற்ற உயிர்கட்கு எல்லாம் கண்ணெனவும் உயிரெனவும் காத்துவரும் பெரிய காவலையுடையவன். விண்ணவரும் மனம் மகிழுமாறு எண்ணிலாத பல வேள்விகளை நெறிப்பட இயற்றியவனாவன்.

விளக்கவுரை

மன்னுயிர் - நிலைபெற்ற உயிர். உயிர் தெளிவு பெறக் கண்ணும், உடல் இயக்கம் பெற உயிரும் இன்றியமையாதனவாம். `கண்ணிற்சிறந்த உறுப்பில்லையாவதும் காட்டியதே` (தஞ்சை. கோவை, 4) `உடம்பொடு உயிரிடை யன்ன` (குறள் 1122) எனக் கூறப்படுமாற்றான் இவற்றின் இன்றியமையாமை அறியலாம். இவற்றான் நிலையியற் பொருள், இயங்கியற் பொருள் (தாவர சங்கமங்கள்) ஆகிய இருதிறத் துயிர்களுக்கும் இன்றியமையாதவன் காவலன் (அரசன்) என்பது பெறுதும். `மன்னன் உயிர்த்தே மலர் தலையுலகம்` (புறம் 186) என்றும், `உயிரெலாம் உறைவதோர் உடம்புமாயினான்` (கம்பரா. பால. அர. 10) என்றும், அரசனை உயிராகவும் உயிர்களை உடம்பாக வும் கூறுவனவெல்லாம் அவ்விரண்டும் ஒன்றற் கொன்று இன்றியமை யாமையுடைமை கருதியேயாம்.

இனி உடற்கு உயிரும், கண்ணும் அகக்காவலும் புறக்காவலு மாதல்

போல, உயிர்கட்கு அரசனும் அவ்விருகாவலுமாதல் பற்றிக் கூறினார் என்றலும் ஒன்று. வேள்வி நற்பயன் வீழ்புனலாகும். அவ் வீழ்புனலால் நாடு தழைக்கும். ஆதலின் `வேள்விகள் எண்ணி லாதன மாண இயற்றினான்` என்றார். `கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார்` *(தி.1 ப.80 பா.1)* `அஞ்சிப்போய்க் கலிமெலிய வழலோம்பு மப்பூதி` *(தி.4 ப.12 பா.10)* என்னும் தொடக்கத்தனவாய திருவாக்குகளும் காண்க.

கொற்ற வாழி குவலயஞ் சூழ்ந்திடச்
சுற்று மன்னர் திறைகடை சூழ்ந்திடச்
செற்றம் நீக்கிய செம்மையின் மெய்ம்மனுப்
பெற்ற நீதியுந் தன்பெயர் ஆக்கினான். **#100**

(அவ்வரசன்) வெற்றியினையுடைய தன் ஆணையென்னும் உருள் (சக்கரம்) நிலவுலகம் முழுதும் சுற்றவும், தன் ஆணைவழி நிற்கும் மன்னர்களின் இறைப்பொருள் (கப்பம்) தன் அரண்மனை வாயிலில் சூழ்ந்து நிற்கவும், பகைமையைக் கெடுத்த செப்பமான குணநலன்களையுடையனாய் மெய்ம்மையையே வடிவாகவுமுடைய மனுவென்னும் அரசனால் ஆக்கப்பட்ட மனுநீதி என்பதையே தன்இயற் பெயராகக் கொண்டவன்.

விளக்கவுரை

`உறங்குமாயினும் மன்னவன் தன்னொளி, கறங்கு தெண்திரை வையகம் காக்குமால்` *(சிந்தா. நாமகள் 219)* என்பர் திருத்தக்கதேவர், எனவே அரசனின் ஆணை அவன் உறங்கும் பொழுதும் காக்க வல்லது. அவன் இருக்குமிடத்தன்றி அவன் ஆணை செல்லும் வையகம் முழுதும் காக்க வல்லது. அதுபற்றியே `கொற்றவாழி குவலயம் சூழ்ந்திட` என்றார். சுற்று மன்னர் - சூழ்ந்துள்ள மன்னர். அவர் தன் ஆணையால் சூழப்பட்டாரும், தன்னை நட்புக்கொள்ள வேண்டி அன்புவழிச் சூழப்பட்டாரும் என இருவகையர். இவருள் முன்னவர் திறை செலுத்தற்கு உரியவராவர். அன்னோர் பலராக இருத்தலின் ஒரு சிறுகால எல்லைக்குள் திறை செலுத்திவிட்டுச் சென்றுவிட இயலாது. ஆதலின் அவர் வாயிற் கடையில் காத்திருக்க வேண்டியவராயினர். ஆதலின் `திறைகடை சூழ்ந்திட` என்றார். `வேந்தர் வைகும் முற்றத் தான்` *(கம்பரா. அயோத். குகப்., 65)* என்பர் கம்பரும். முற்றத்தில் வைகுதலின் அன்னோர் திறை செலுத்துபவராயினர். செற்றம் - நெடுங்காலமாகக் கொண்டிருக்கும் பகைமை. மனித இனம் பல்வேறு உணர்வுடையனவாதலின் அதற்கும் அதனை ஆளும் அரசர்கட்கும் ஓரொருகால் கருத்து மாறுபாடு ஏற்படு தலும் இயற்கையே. ஆனால் அம்மாறுபாடுதானும் நெடுங்காலம் நிகழ்வதும், ஒருவரையொருவர்

அழிக்க முற்படுவதும் ஆக அமைதல் தவறாகும். ஆதலின் `செற்றம் நீக்கிய` என்றார். மெய்ம்மனு - மெய்ம்மையையே வடிவாகவுடைய மனு. அம்மன்னனால் செய்யப் பட்ட நூலும் அவன் பெயரே பெற்றது. அப்பெயரையே தன் பெயராக வுடையவன் என்பார். `பெற்ற நீதியும் தன் பெயராக்கினான்` என்றார். மன்+உ+மனு; நினைக்கத்தக்கவன். அஃதாவது உலகநன்மைக்கென எதனை நினைக்கவேண்டுமோ, அதனையே நினைக்கத்தக்கவன். இவன் கதிரவனின் மகன். உம்மை- சிறப்பும்மை. சில பதிப்புகளில் இப்பாடல், வரும் பாடலை அடுத்துள்ளது

பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர்
எங்கும் ஆகி இருந்தவர் பூசனைக்கு
அங்கண் வேண்டும் நிபந்தமா ராய்ந்துளான்
துங்க வாகமஞ் சொன்ன முறைமையால். **#101**

தத்தம் கருத்திற்கு இயையப்பொருள் விரித்தற்கு இடனாக விளங்கும் சீரிய நான்மறைகளின் வடிவாக நிற்கும் புற்றை இடனாகக் கொண்டிருப்பவரும், யாண்டும் நீக்கமற நிற்பவருமான புற்றிடம் கொண்டாருக்கு (வன்மீகநாதருக்கு) சீரிய ஆகமங்கள் வகுத்துக்கூறிய முறைமை வழுவாமல் வழிபாடாற்றுதற்கென அவ் விடத்து வேண்டும் பொருள்களை அறக்கட்டளையாக அமைத்தவன்.

விளக்கவுரை

பூசனைக்கு முறைமையால் ஆராய்ந்துளான் எனக் கூட்டுக. மறைப் பொருள் அறிதற்கரிதாக இருத்தல் போலப் புற்றும் அவ்விடத்து எழுந்தருளியிருக்கும் பெருமானை அறிதற்கரி தாய் மறைந்திருத்தலின் `மறைவடிவாம் புற்று` என்றார். நிபந்தம் - அறக்கட்டளை. துங்க ஆகமம் - சீரிய ஆகமங்கள். இறைவற்கு ஆற்றும் வழிபாடு இருவகைப்படும். ஒன்று நாள் வழிபாடு, மற்றொன்று சிறப்பு வழிபாடு. இவற்றுள் முன்னையது நாளும் நிகழ்த்தப் படுவது. பின்னையது சிவராத்திரி, தைப்பூசம் முதலாய சிறப்பு நாள்களிலும், விழாக்காலங்களிலும் நிகழ்த்தப்படுவது. இவ்விருவகை வழிபாட் டையும் `சிறப்பொடு பூசனை` *(குறள் 18)* எனத் திருவள்ளுவரும் குறிப்பர். இவ்வழிபாடுகள் காமிகம் முதலாய ஆகமங்களில் கூறியவாறு நடத்துதற்கு அறக்கட்டளை வைத்தவன் மனு வேந்தன் ஆவன்.

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில் களானவை
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே. -தி.*10* பா.*509*

முன்னவ னார்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளம்குன்றும்

கன்னம் களவு மிகுத்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே. -*தி.10 பா.510*
எனவரும் திருமந்திரங்களால் இவ்வழிபாடுகள் இன்றியமையாது நிகழவேண்டும் என்பதும், இவற்றை அரசன் அறநெறி வழுவாது போற்றிக்காத்தல் வேண்டும் என்பதும் விளங்கும்.
``ஆளு மன்னனை வாழ்த்தியது அர்ச்சனை
மூளும் மற்றிவை காக்கும் முறைமையால்``.
(தி.12 பு.28 பா.822) எனவரும் சேக்கிழார் திருவாக்கும் காண்க.

அறம்பொரு ளின்ப மான
அறநெறி வழாமற் புல்லி
மறங்கடிந் தரசர் போற்ற
வையகங் காக்கும் நாளில்
சிறந்தநல் தவத்தால் தேவி
திருமணி வயிற்றில் மைந்தன்
பிறந்தனன் உலகம் போற்றப்
பேரரிக் குருளை அன்னான். **#102**

இத்தகைய புண்ணியப் பேறுடைய மனு வேந்தன், அறம் பொருள் இன்பம் ஆகியவற்றை அறநெறி பிறழாமல் மேற்கொண்டு, இவற்றிற்கு மாறாய தீச்செயல்களைத் தன்னிடத்தும் ஏனைய மன்னுயிர்களிடத்தும் வாராதவாறு நீக்கியும், தன்னை யொத்த அரசர் பலரும் போற்றுமாறு இவ்வுலகைக் காத்தும்வரும் நாளில், அவன் இதுகாறும் ஆற்றிவந்த சீரிய நல்ல தவத்தால், அவனின் தேவி திருவயிற்றில், இளம் சிங்கத்தை ஒப்பான ஓர் ஆண் மகன், உலகம் போற்றப் பிறந்தனன்.

விளக்கவுரை

`அறம் பொருள்இன்பமான அறநெறி வழாமற் புல்லி` என்பது `அறன் இழுக்காது` *(குறள் 384)* எனவரும் திருக்குறள் தொடரின் விளக்கமாகும். `மறங்கடிந்து` என்பது `அல்லவை நீக்கி` எனவரும் தொடரின் விளக்கமாகும். `அரசர் போற்ற வையகம் காக்கும் நாளில்` என்பது `மறன் இழுக்கா மானம் உடையது அரசு` எனவரும் தொடரின் விளக்கமாகும். இவ்வாற்றான் `அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன் இழுக்கா மானம் உடையது அரசு` *(குறள் 384)* எனவரும் திருக்குறளின் விளக்கமாக இப்பாடலின் முன்னிரண்டடிகளும் விளங்குகின்றன.
வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத் தாகலானும், `பரனை நினைந்து இம் மூன்றும் விட்டதே பேரின்பவீடு` *(தனிப்பாடல்-ஔவை.)* எனப்படுதலானும், அவ்வீடுபேறுதானும் அவரவரும் தத்தம் பக்குவத்திற்கேற்பத் திருவருள்வழிப் பெறத்தக்க தாதலானும், `அறம் பொருள் இன்பமான அறநெறி` என இம்மூன்றை யுமே கூறினார்.

சிறந்த நற்றவம் - புற்றிடம் கொண்டார்க்கு நாள் வழிபாடும், சிறப்பு வழிபாடும் என்றென்றும் நிகழுமாறு அறக்கட் டளைகளை வைத்தும், நாளும் அவற்றைப் பேணிக்காத்தும் வந்த தவம், இவ்வருமை மகவைப்பெறக் காரணமாயிற்று. இத்தேவியின் பெயர் இரத்தினமாலை என்றும், மைந்தனின் பெயர் வீதிவிடங்கன் என்றும் கூறுவர். இவன்பெயர் பிரியவிருத்தன் எனத் திருவாரூர்க் கல்வெட்டுக் கூறுகிறது. உலகம் போற்ற - உலகம் இவனைப் பாராட்ட. இவன் உலகத்தைக் காப்பாற்ற என்றலும் ஆம்

தவமுயன் றரிதில் பெற்ற
தனிஇளங் குமரன் நாளுஞ்
சிவமுயன் றடையுந் தெய்வக்
கலைபல திருந்த ஓதிக்
கவனவாம் புரவி யானை
தேர்படைத் தொழில்கள் கற்றுப்
பவமுயன் றதுவும் பேறே
எனவரும் பண்பின் மிக்கான். **#103**

சிவபரம்பொருளை முன்னிட்டுச் செய்யும் வழிபாடாகிய தவத்தைச் செய்து, அருமையாகப் பெற்ற மிக இளைஞ னாகிய அம்மகன், நாள்தோறும் முயன்று சிவத்தை அடைதற்குக் காரணமாய தெய்வக் கலைகள் பலவற்றையும் தம் மனம் திருந்த ஓதியும், விரைவோடு பாய்கின்ற குதிரை ஏற்றமும், யானை ஏற்றமும், தேர் இயக்கலும், படைக்கலப் பயிற்சியும் பெற்று, வேண்டத் தகாத மானுடப் பிறவியும் இவனளவில் ஒரு பெரும் பேறேயாயிற்று என யாவரும் சொல்லும்படியான நற்குணங்களால் மேம்பட்டு விளங்கி னான்.

விளக்கவுரை

கற்றதனாலாய பயன், வாலறிவன் நற்றாள் தொழுதல் *(குறள் 2)* என்றும், `அலகின் கலையின் பொருட்கெல்லை ஆடும் கழலே`*(தி.12 பு.20 பா.15)* என்றும், அருளாளர் கூறுமாற்றான்,
கலையறிவின் பயன் வாழ்வாங்கு வாழ்தற்கு மட்டுமின்றி அதன் பயனாய திருவருளை அடைதலுமாம் என்பது விளங்கும். ஆதலின் அத்தகைய கலையறிவைக் கற்றனன் என்பார். `சிவம் முயன்று அடையும் தெய்வக்கலை பல ஓதி` என்றார். அவ்வாறு ஓதுதலும், உணர்த லும், பிறர்க்கு உரைத்தலும் எல்லாம், மன அடக்கம் பெற்றுச் சிறத்தற் கேயாம் என்பார். `திருந்தஓதி` என்றார்; தான் திருந்தாது பிறரைத் திருத்த முற்படின் அவனினும் அறிவிலி எவரும் இலர். `ஓதியுணர்ந் தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப் பேதையிற் பேதையார்இல்` *(குறள் 834)*, `மனம் அடங்கக் கல்லார்க்கு வாய்ஏன் பராபரமே` *(தாயு. பராபரக்.169)*

எனவரும் திருவாக்குகளைக் காண்க.
மன்னவன் மகனாக விளங்கலின், அவ்வாட்சிக்குரிய யானை, குதிரை, தேர்ப்படைகளைச் செலுத்துதற்கு ஏற்ற பயிற்சியையும், படைக்கலப் பயிற்சியையும் பயிற்றுவிக்கப்பட்டான். அறிவுக்கல்வி, தொழிற்கல்வி, ஆன்மீகக்கல்வி ஆகிய மூவகைக் கல்வியும் வேண்டு மென்பது இதனால் பெற்றாம். தொல்காப்பியரும், `வாயினும், கையினும் வகுத்த பக்கமோடு ஊதியம் கருதிய ஒரு திறத்தானும்` *(தொல். அகத்.41)* என்பதால் இம்மூவகைக்கல்வியும் வேண்டும் எனக் குறிப்பர். இக்கல்வி முறையே இன்றும் பின்பற்றப்பட வேண்டும். ஆளுநர்க்கும், ஆளப்படும் மக்கட்கும் இத்தகைய ஞானத்தைத் திருவருள் வழங்கியருளுமாக.
`பிறவாமை பெறுதலே பெரும் பேறெனினும் இம்மகனளவில் அவன் பிறந்ததே பெரும்பேறாயிற்று` என்பார், `பவம் முயன்றதுவும் பேறே எனவரும் பண்பின் மிக்கான்` என்றார். `திருநடம் கும்பிடப் பெற்று மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாம்` *(தி.12 சரு.1-5 பா.107)* எனவரும் திருவாக்கும் காண்க.

அளவில்தொல் கலைகள் முற்றி
அரும்பெறல் தந்தை மிக்க
உளமகிழ் காதல் கூர
ஓங்கிய குணத்தால் நீடி
இளவர சென்னுந் தன்மை
எய்துதற் கணிய னாகி
வளரிளம் பரிதி போன்று
வாழுநாள் ஒருநாள் மைந்தன். **#104**

எண்ணிறந்த பழைய கலைகள் அனைத்தையும் முழுமையாக நன்கு கற்றவனாய்ப், பெறுதற்கரிய தந்தையாரது மேம் பட்ட மனம் மகிழ்தற்குக் காரணமான உயர்ந்த நற்குணங்கள் பலவும் நிறைந்தவனாய், இளவரசு என்று சொல்லுதற்குரிய பருவத்தை அடைந்தவனாய், வளர்கின்ற இளங் கதிரவனையொத்து வாழ்கின்ற நாள்களில், ஒருநாள் அம் மைந்தனானவன்.

விளக்கவுரை

ஓதல், உணர்தல், உணர்த்தல், தானடங்கல், இவற்றின் பயனாய இறைவழிபாடு, தாய்தந்தையர் முதலியோர்க்குச் செய்யும் வழிபாடு, ஆகிய அனைத்தும் நிரம்பப் பெற்றமை தோன்ற `அளவில் தொல் கலைகள் முற்றி` என்றார்.

திங்கள்வெண் கவிகை மன்னன்
திருவளர் கோயில் நின்று
மங்குல்தோய் மாட வீதி

மன்னிளங் குமரர் சூழக்
கொங்கலர் மாலை தாழ்ந்த
குங்குமங் குலவு தோளான்
பொங்கிய தானை சூழத்
தேர்மிசைப் பொலிந்து போந்தான். **#105**

திங்களைப் போலும் வெள்ளிய குடையை யுடைய மனுநீதிச் சோழனின் பொலிவு மிக்க அரண்மனையினின்றும் புறப்பட்டு, மேகம் சூழ்ந்த உயர்ந்த மாடங்களையுடைய வீதியின்கண் அரசிளங்குமரர்கள் தன்னைச் சூழ, நறுமணம்மிக்க மலர்மாலைகள் தன் மார்பில் தவழுமாறு அணிந்து, குங்குமக் குழம்பு தோய்ந்த தோள்களை உடைய அம்மன்னன் மகன், மிகுந்த சேனைகள் தன்னைச் சூழ்ந்து வரத் தேரின்மீது ஏறிச் சிறந்த தோற்றப் பொலிவுடன் வந்தான்.

விளக்கவுரை

திங்களை வடிவானன்றிப் பண்பாலும் குடை ஒத்திருத்தல் பற்றித் `திங்கள் வெண் கவிகை` என்றார். `திங்கள் மாலை வெண்குடையான்` என்னும் சிலம்பும் *(சிலப்ப. புகார். கானல்வரி, 2)*. திருவளர் கோவில் - நாளும் திருவும் பொலிவும் வளர்ந்து வரும் அரண்மனை. கொங்கு - நறுமணம். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

பரசுவந் தியர்முன் சூதர்
மாகதர் ஒருபால் பாங்கர்
விரைநறுங் குழலார் சிந்தும்
வெள்வளை ஒருபால் மிக்க
முரசொடு சங்கம் ஆர்ப்ப
முழங்கொலி ஒருபால் வென்றி
அரசிளங் குமரன் போதும்
அணிமணி மாட வீதி. **#106**

தனது புகழைப் பரவிக்கொண்டு வரும் வந்தியர்கள் முன் செல்லவும், சூதர்கள் மாகதர்கள் ஆகியவர்கள் ஒரு மருங்கும், நறுமணம்மிக்க மலர்களை அணிந்த கூந்தலையுடைய மகளிர், தாம் அணிந்த வெள்வளைகள் சிந்துமாறு பிறிதொரு மருங்குமாக வரவும், முரசும் சங்கமும் முழக்கி ஒலிப்பவர் வேறு ஒருமருங்கு வரவும், வெற்றிபொருந்திய அரசனின் திருமகன், அழகிய மணிகள் நிறைந்த மாடங்களின் வீதியில் உலா வந்தனன்.

விளக்கவுரை

பரசுதல் - புகழ்பட வரும் சொற்களைப் பாடிவருதல். இவ்வாறு வருபவர் வந்தியர் எனப்படுவர். வந்தியர் - வழிபட்டு வருபவர். சூதர் - அவ்வப்

பொழுது அரசன் செய்துவரும் செயல் களைப் போற்றிக் கட்டியங் கூறிவருவோர். அரசனைத் துயில் எழுப்புங் காலத்தும் பிறாண்டும்கூட இவர் பாடிவருவார். இவர்கள் நின்று ஏத்துவோர் ஆவர். மாகதர் - இருந்து ஏத்துவோர்; அரசனின் வீரச் செயல்களை இருந்தவாறு (அமர்ந்தவாறு) பாடுவோர். மகளிர் புகழ்ந்து வெள்வளை சிந்துதல் பிரிவு வெப்பத்தாலாம். இவர்கள் ஆடல் மகளிர் ஆவர்.

தனிப்பெருந் தருமம் தானோர்
தயாவின்றித் தானை மன்னன்
பனிப்பில்சிந் தையினில் உண்மைப்
பான்மைசோ தித்தால் என்ன
மனித்தர் தன் வரவு காணா
வண்ணமோர் வண்ணம் நல்ஆன்
புனிற்றிளங் கன்று துள்ளிப்
போந்ததம் மறுகி னூடே. **#107**

ஒப்புயர்வற்ற பெரிய அறக்கடவுள், எள்ளளவும் தண்ணளியின்றி, நால்வகைச் சேனைகளையும் உடைய மனுநீதிச் சோழனின் சலிப்பற்ற திண்ணிய மனத்திலுள்ள உண்மைத் தன்மை யைச் சோதிக்க வந்தாற்போல, மனித இனத்தவர் எவரும் தன் வரவை அறியாதவாறு, ஒப்பற்ற அழகினதாய நல்ல பசுவினுடைய ஈன்ற ணிமையுடையதொரு இளங்கன்று ஒன்று அவ்வீதியினிடத்தே துள் ளிச் சென்றது.

விளக்கவுரை

அழியாமையும் தலைமையும் பற்றித் `தனிப்பெருந் தருமம்` என்றார். மற்றது, `பொன்றுங்கால் பொன்றாத்துணை` *(குறள், 36)* `அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை` *(குறள், 32)* எனவரும் திருவாக்குகளும் காண்க. மனுநீதிச் சோழனுக்கு அறநெறியில் இருக்கும் திண்மையை உலகிற்கு உணர்த்தக் கருதி இந்நிகழ்ச்சி நிகழ்ந்ததேயன்றி, வேறல்ல என்பார்.

`பனிப்பில் சிந்தையின் உண்மைப் பான்மை சோதித்தால் என்ன` என்றார். பனிப்பில் சிந்தை - ஒன்றாலும் நிலை குலையாத சிந்தை. புனிறு - ஈன்ற அணிமையுடைய கன்று: இளங் கன்று. `புனிறென்கிளவி ஈன்றணிமைப் பொருட்டே` *(தொல். உரி.77)* என்னும் தொல்காப்பியமும். தான் - அசை.

அம்புனிற் றாவின் கன்றோர்
அபாயத்தின் ஊடு போகிச்
செம்பொனின் தேர்க்கால் மீது
விசையினாற் செல்லப் பட்டங்
கும்பரி னடையக் கண்டங்

குருகுதா யலமந் தோடி
வெம்பிடும் அலறும் சோரும்
மெய்ந்நடுக் குற்று வீழும். **#108**

அழகிய அப்பசுவின் இளங்கன்றானது தீங்கு விளைதற்கு உரியதொரு வழியில், வீதியின் இடையே ஓடிச், சிவந்த பொன்னால் ஆய தேர்க்காலின் இடையே புகுதப்பெற்று, விண்ணுலகு அடைந்ததாக, அதுகண்டு அவ்விடத்தில் மனமுருகித் துன்புறுகின்ற தாய்ப் பசுவானது ஓடி, தன் கன்றினை இழந்த பெருந்துயரால் அழுது அலறிச் சோர்வடைந்து நடுங்கி வீழ்ந்தது.

விளக்கவுரை

உம்பர் - தேவர்; அமுதுண்டமையால் ஒருகால எல்லைவரை அழியாதிருப்பவர்.
இதுபொழுது தேர்க்காலின் வழி அக்கன்று இறந்ததெனினும், திருவருளால் பின்னும் உயிர்பெற்று வாழ இருக்கும் சிறப்பு நோக்கி \`உம்பரின் அடைந்தது\` என்றார்.

மற்றது கண்டு மைந்தன்
வந்ததிங் கபாயம் என்று
சொற்றடு மாறி நெஞ்சில்
துயருழந் தறிவ ழிந்து
பெற்றமுங் கன்றும் இன்றென்
உணர்வெனும் பெருமை மாளச்
செற்றஎன் செய்கேன் என்று
தேரினின் றிழிந்து வீழ்ந்தான் **#109**

இப்பசுவின் துயரைக்கண்ட அம்மனுவின் மைந்தன், இவ்விடத்து ஒரு பெருந்தீங்கு ஏற்பட்டுவிட்டது என்று உரை தடுமாறி, தன் மனத்தில் பெருந்துயர் உற்று, அறிவு சோர்ந்து, இப்பசுவும் கன்றும் இன்றைக்கு என்னுடைய உணர்வாகிய பெருமை கெடும்படிச் செய்தன. இதற்கு என் செய்வேன்? என்று தேரினின்றும் இறங்கி நிலத்தில் விழுந்தான்.

விளக்கவுரை

சிவம் முயன்று அடையும் தெய்வக்கலைகள் பலவற் றையும் தன் மனம் திருந்த ஓதிய தன்மையால் \`பிறிதின் நோய் தன்நோய் போல்\` *(குறள், 315)* போற்றும் பெற்றிமை வாய்க்க லாயிற்று. இவ்வியைபு தோன்ற உணர்வையும், பெருமையையும் வேறாகக் கூறாது \`உணர்வெனும் பெருமை\` என்றார்.

அலறுபேர் ஆவை நோக்கி
ஆருயிர் பதைத்துச் சோரும்

நிலமிசைக் கன்றை நோக்கி
நெடிதுயிர்த் திரங்கி நிற்கும்
மலர்தலை உலகங் காக்கும்
மனுவெனும் எங்கோ மானுக்கு
உலகில்இப் பழிவந் தெய்தப்
பிறந்தவா ளொருவ னென்பான். **#110**

விழுந்தவன் எழுந்துநின்று அழுகின்ற பெருமை பொருந்திய பசுவைக் காண்பான், அஃது உயிர் பதைபதைத்து நிற்ப தைக் கண்டு, தன் அரிய உயிர் பதைபதைத்துச் சோர்வான். நிலத்தின் மேல் இறந்து கிடக்கும் கன்றைப் பார்த்துப் பெருமூச்சு விட்டு அழுது நிற்பான். இடம் அகன்ற இந்நிலவுலகில் காவல் செய்கின்ற மனு என்னும் பெயருடைய என் அரசனுக்கு இவ்வுலகிடத்து இவ்வாறான பழிமொழி வர யான் ஒருவன் பிறந்தேனே என ஏங்குவான்.

விளக்கவுரை

என் தந்தை என்னாது `எங்கோமான்` என்றது, அறங் காத்துவரும் அப்பேரரசனுக்கு மகனாயிருந்தும் அதற்குரிய தகுதியின்மை பற்றியாம்.

வந்தஇப் பழியை மாற்றும்
வகையினை மறைநூல் வாய்மை
அந்தணர் விதித்த ஆற்றால்
ஆற்றுவ தறமே யாகில்
எந்தைஈ தறியா முன்னம்
இயற்றுவ னென்று மைந்தன்
சிந்தைவெந் துயரந் தீர்ப்பான்
திருமறை யவர்முன் சென்றான். **#111**

அறியாது செய்த இப்பழியை நீக்குதற்குரிய தீர்வை, மறைகளின் மெய்ம்மை உணர்ந்த மறையவர்கள் நியமித்த அறநூல் வழியால் நீக்கிக் கொள்வதே அறமானால், எனது தந்தை யாகிய மனுநீதிச்சோழர் இச்செய்தியை அறிவதற்கு முன்னமேயே அதனைச் செய்வேன் என்று அம்மன்னவன் மகன், தன் மனத்தகத் துள்ள பெரும் துயரை நீக்கிக் கொள்வானாய்ச் சிறந்த மறையவர் களிடத்துச் சென்றான்.

விளக்கவுரை

செய்த பழி என்னாது `வந்த இப் பழி` என்றான், அது தன் அறிவின் வழி அன்றி அறியாது வந்தமை தெளிய. பாவத்தை அறிந்து செய்யினும் அறியாது செய்யினும் அதன் பயன்வருதல் ஒருதலை. பாண்டுவும், தசரதனும் தாம் அறியாமல் செய்த தீங்கிற்கும் அவ்வவற்றின் பயனை அநுபவித்தார்கள் என்பது அவரவர் தம் வரலாற்றில் கண்டதொன்றாம்.

தன்னுயிர்க் கன்று வீயத்
தளர்ந்தஆத் தரியா தாகி
முன்நெருப் புயிர்த்து விம்மி
முகத்தினில் கண்ணீர் வார
மன்னுயிர் காக்குஞ் செங்கோல்
மனுவின்பொற் கோயில் வாயில்
பொன்னணி மணியைச் சென்று
கோட்டினால் புடைத்த தன்றே. **#112**

தன் உயிரனைய கன்றானது இறக்க, அதனால் வருந்திய அப்பசுவானது, அப்பெருந்துயரைப் பொறுக்க இயலாத தாய், தன்முன் நெருப்பு எழும்படியாகப் பெருமூச்சுவிட்டு அழுது, தன் முகத்திலிருந்து கண்ணீர் சிந்த, நிலைபெற்ற உயிர்களைக் காக்கும் செங்கோலினை உடைய மனுவேந்தனின் அழகிய அரண்மனை வாயிற்குச் சென்று, அங்குக் கட்டப்பட்டு நிற்கும் பொன்னால் அழகு செய்யப்பட்ட அழகிய ஆராய்ச்சி மணியைத் தன்னுடைய கொம்பி னால் அடித்தது.

விளக்கவுரை

`மன்னுயிர் காக்கும் செங்கோல்` என்றது, அவ்வுயிர் களில் தன் கன்றும் ஒன்றாக இருக்க அதனைக் காவாது அமைந்த குறிப்பினை வெளிப்படுத்துவதாம். கோடு - கொம்பு. அன்று, ஏ என்பன அசைநிலைகள்.

பழிப்பறை முழக்கோ ஆர்க்கும்
பாவத்தின் ஒலியோ வேந்தன்
வழித்திரு மைந்தன் ஆவி
கொளவரும் மறலி ஊர்திக்
கழுத்தணி மணியின் ஆர்ப்போ
என்னத்தன் கடைமுன் கேளாத்
தெழித்தெழும் ஓசை மன்னன்
செவிப்புலம் புக்க போது. **#113**

(இவ்வாறு முழக்கிய ஆராய்ச்சிமணியின் ஒலி) பழிவருதலை அறிவிக்கும் ஒரு பறையினது ஒலியோ, அல்லது உயிரைப் பிணித்து நிற்கும் பாவமே ஒரு வடிவெடுத்து வந்தாற் போல்வதொரு ஒலியோ, அல்லது மனுவேந்தன் வழிவந்த அத்திரு மைந்தனின் உயிரைக்கொள்ள வருகின்ற இயமனின் ஊர்தியான எருமைக் கடாவின் கழுத்தில் கட்டிய மணியின் ஒலியோ எனக் கேட்டார் ஐயுற்றுக் கூறுமாறு, தன் தலைவாயிலில் இதுவரை கேளாத இவ்வாராய்ச்சி மணியின் ஓசையானது மனுவேந்தனின் காதிடத்துப் புக்கது.

விளக்கவுரை

ஆனிளங்கன்று இறக்க நேர்ந்தது, அவ்வரசனின் மகனுக்குப் பழியும் பாவமும் ஆதலின் `பழிப்பறை முழக்கோ` அல்லது `பாவத்தின் ஒலியோ` என்றார். இப்பழியும் பாவமும் அவனுக்கு நேர்ந்தது மட்டுமன்று; உயிரிழப்பும் அவனுக்கு நேரவுள்ளது என்பது தோன்ற `மறலி ஊர்திக் கழுத்தணி மணியின் ஆர்ப்போ` என்றார். கடைமுன் என்பதை முன்கடை என மாறுக. அது தலை வாயில் என்னும் பொருள்பட நின்றது. கேளா மன்னன் என இயைக்க; இதுவரை இவ்வாறாய ஆராய்ச்சிமணியின் ஒலியைக் கேட்டறியாத அரசன். `மறைநா ஓசை கேட்டல் அல்லது மணிநா ஓசை கேட்டதும் இலனே` (சிலப். மதுரை. கட்டு. *31-32)* என்னும் சிலப்பதிகாரமும். இப்பாடற்கண் வந்த ஓகாரங்கள் ஐயப் பொருளன.

ஆங்கது கேட்ட வேந்தன்
அரியணை இழிந்து போந்து
பூங்கொடி வாயில் நண்ணக்
காவல ரெதிரே போற்றி
ஈங்கிதோர் பசுவந் தெய்தி
இறைவநின் கொற்ற வாயில்
தூங்கிய மணியைக் கோட்டால்
துளக்கிய தென்று சொன்னார். **#114**

அவ்வொலியைக் கேட்ட மனுவேந்தனும், தன் அரியணையினின்றும் இறங்கிச் சென்று, பொலிவுமிக்க கொடிகள் கட்டப்பெற்ற அரண்மனை வாயிலை அடைய, அங்கிருந்த வாயிற் காவலர்கள் அவ்வரசன் எதிர் வணங்கி, `அரசே! இவ்விடத்து வந்த தொரு பசு, நின் வெற்றி பொருந்திய தலைவாயிலில் தொங்கவிடப் பட்டிருக்கும் ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பின் நுனியால் அசைத்தது` என்று கூறினார்கள்.

விளக்கவுரை

பூங்கொடி - அழகிய கொடி. தூங்கிய மணி - தொங்க விடப்பட்டிருக்கும் மணி; இதுவரை யாரும் இம்மணியை அடிக்க நேராமையின் செயற்பாடின்றி இருந்த மணி எனக் கோடலுமாம்.

மன்னவ னதனைக் கேளா
வருந்திய பசுவை நோக்கி
என்னிதற் குற்ற தென்பான்
அமைச்சரை இகழ்ந்து நோக்க
முன்னுற நிகழ்ந்த எல்லாம்
அறிந்துளான் முதிர்ந்த கேள்வித்

தொன்னெறி யமைச்சன் மன்னன்
தாளிணை தொழுது சொல்வான். **#115**

அரசன் வாயிற்காவலர் கூறியதைக் கேட்டு, வருந்தி நிற்கும் அப்பசுவைப் பார்த்து, இதற்கு நேர்ந்த தீங்கு என்ன? என அமைச்சரை இகழ்ந்து பார்க்க, இதற்குமுன் நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் அறிந்தவனாகிய அறநூல்களில் துறை போய பேரறிவும், தொன்றுதொட்டுவரும் நீதி வழுவா நெறிமுறையும் உடைய ஓர் அமைச்சனானவன் அவ்வேந்தனின் திருவடிகளை வணங்கிச் சொல் வான் ஆயினன்.

விளக்கவுரை

இவ்வமைச்சனின் பெயர், இங்கணாட்டுப் பாலையூருடை யான் உபயகுலாமலன் எனத் திருவாரூர்க் கல்வெட்டுக் கூறும். (இங்கநாடு - நாகப்பட்டினம் வட்டத்தில் உள்ள பிரிவு.) பசுவினால் இம்மணி அடிக்கப்பட்டது என வாயில்காவலர் கூறினும், அதற்கு என்ன நேர்ந்தது என்பதை அமைச்சரையே வினவினன். காரணம் அங்கு நிகழும் நிகழ்ச்சிகளை அவனினும் அமைச்சர்கள் விசாரித்து முன்னரே முழுமையாக அறிந்திருப்பர் என்பதுபற்றியாம். அமைச்சரை நோக்க என்னாது, `இகழ்ந்து நோக்க` என்றார். பசு துயருறவும், அதனால் இவ்வாராய்ச்சி மணியை அடிக்க நேர்ந்ததும் அறநெறியைச் செயற்படுத்தத் தவறிவிட்ட இழிவு நோக் கியாம். ஆராய்ச்சிமணி அடித்தபொழுதே அமைச்சர் வந்துற்றதும், அத்திறனெல்லாம் ஒருங்கு அறிந்திருந்ததும் அவ்வமைச்சரின் அறநெறி வழாமையைப் புலப்படுத்துகின்றது. எனினும் இத்தகையதொரு நிகழ்ச்சி தம்நாட்டில் நடந்துவிட்டதே தவறு எனக்கருதினன் அரசன். ஆதலின் `இகழ்ந்து நோக்க` என்றார். நூலறிவையும், வழிவழியாகப் போற்றப் பெற்று வரும் அறநெறிச் செயலையும் ஒருங்கு பெற்றவன் அவ்வமைச்சன் என்பார் `முதிர்ந்த கேள்வித் தொன்னெறி அமைச்சன்` என்றார்.

வளவநின் புதல்வன் ஆங்கோர்
மணிநெடுந் தேர்மே லேறி
அளவில்தேர்த் தானை சூழ
அரசுலாந் தெருவிற் போங்கால்
இளையஆன் கன்று தேர்க்கால்
இடைப்புகுந் திறந்த தாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து
விளைத்ததித் தன்மை என்றான். **#116**

மனுவேந்தனே! நின்மகன் அம்மாடவீதியினிடத்து மணிகள் கட்டிய நெடியதொரு தேரின்மேல் ஏறி, அளவற்ற தேர்களும், சேனைகளும்

தன்னைச் சூழ்ந்துவர, அரசர்கள் உலாப்போதரும் அரச வீதியில் புகும்பொழுது, ஒரு பசுவின் இளங்கன்று ஒன்று அத்தேர் உருளையின் இடையே புகுந்து இறந்ததாக, அதனால் தளர்வுற்ற இத் தாய்ப் பசுவானது இவ்விடத்து வந்து இம்மணியை அசைத்தது என்றான்.

விளக்கவுரை

அமைச்சர் கூறிய இவ்விடை அஃகி அகன்ற அறிவு நலம் உடையது. வளவன் என்பது சோழரைக் குறிக்கும் பெயர்களில் ஒன்றாகும். அது ஈண்டு மனுவேந்தனே! என விளிக்க நின்றது எனினும், அச்சொல் அறம் தளர்ந்ததோ என அஞ்சும் மனு வேந் தனுக்கு விடையாக அமையாதவாறு ஆகிவிடும் . ஆதலின் `நின்னாடு நிலவளத்தானன்றி அற வளத்தானும் குறைவுடையதன்று` என்பாராய் `வளவ` என்றார். அறம் துஞ்சும் செங்கோலுடைய நின்மகன் ஆதலின் அவனும் அவ்வறத்தினின்றும் மாறுபடான் என்பார் `நின்புதல்வ` என்றார். அவன் இவர்ந்து சென்ற அத்தேர்தானும் மணி கட்டப் பெற்றதும், மிக உயரமானதுமாகும். ஆதலின் அம்மணியோசை கேட்டு அக்கன்று விலகி இருக்கலாம், அல்லது அத்தேரின் பெருவடிவு நோக்கியேனும் விலகியிருக்கலாம் என்பார், `மணிநெடுந் தேரில் ஏறி` என்றார். ஓடிவந்து புகும் இளங்கன்றின் வருகை, அவ்வரசிளங் குமரற்கன்றி அவனுடன் வரும் அத் தானைத்தலைவர் உள்ளிட்ட பிறர்க்கும் தெரிந்திலது: எனவே `அதனைப் பாராதது அவன் குற்றமட்டுமன்று` என்பார், `அளவில் தேர்த்தானை சூழ` என்றார். அத்தேர் சென்ற வழி அரசர்க்குரிய பெருவீதியே அன்றி ஏனையோ ரும் இயங்குதற்குரிய பொது வீதிஅன்று என்பார் `அரசுலாம் தெருவில்` என்றார். அத்தேர் சென்றதும் மிகுவேகத்ததும் இல்லை; மென்மையாகவே சென்றது என்பார், ஓடியது என்னாது `போங்கால்` என்றார்.

இவ்வாறு பிறபிற சூழல்களில் தவறு இல்லை எனவே அக்கன்றுதான் தவறு செய்துவிட்டதோ எனின், அதுவும் அன்று; சென்ற கன்று இளங்கன்று ஆதலின் அது பயமறியாது என்பார் `இளங் கன்று` என்றார். அக்கன்று புகுந்ததும் தேரின் முன் உருளையிலாயின் அரசிளங்குமரனும் அறிந்திருப்பன், பிறரும் அறிந்திருப்பர், அவ்வாறின்றி நடுவே புகுந்தது என்பார் `இடைபுகுந்து` என்றார். இறந்தது என்னாது இறந்ததாக என்றார், அச்செய்திதானும் மேலும் உறுதி செய்தற்குரியதாதல் பற்றி. தளர்வுறும் இத்தாய் வந்து மணி அடித்தது என்னாது, `விளைத்தது` என்றார், அவ்வாறு மணியடித்தது என்பதை வாயால் கூறவும் அஞ்சி. இவ்வாறு சொல்லுக்குச் சொல் அழகு தோன்றி நிற்கும் இப்பாடல் மிகச் சிறந்ததொரு பாடலாகும்.

அவ்வுரை கேட்ட வேந்தன்

ஆவுறு துயர மெய்தி
வெவ்விடந் தலைக்கொண் டாற்போல்
வேதனை யகத்து மிக்கிங்கு
இவ்வினை விளைந்த வாறென்
றிடருறு மிரங்கு மேங்குஞ்
செவ்விதென் செங்கோ லென்னுந்
தெருமருந் தெளியுந் தேறான். **#117**

அவ்வமைச்சரின் சொல்லைக் கேட்ட அரசன் அத் தாய்ப்பசு அடைந்த துன்பத்தைத் தானும் அடைந்து, கொடிய பாம்பின் விடம் தலைக்கு ஏறியதுபோல, மனத்துயரம் மிகுதியாக, இப்பழி இவ்வாறு விளைந்துவிட்டது ஏன்? என்று வருந்துவான், இரங்கி ஏங்குவான், என் செங்கோல் நன்கு இருந்தது என்பான், இப்பழிச் செயலுக்குத் தீர்வு என் செய்வன் எனத் தெளிந்து தேறாதவனாய் மனம் வருந்தினான்.

விளக்கவுரை

`ஆ உறு துயரம் எய்தி` என்பது அவ்வரசன் பட்ட ஆழ்ந்த துன்பத்தை விளக்கி நிற்கின்றது. தெருமரும் - சுழலும்: மனம் கவலும். `அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி` *(தொல். உரி. 13)* என்னும் தொல்காப்பியமும். செங்கோல் - அரசனின் செம்மை நலத்தைக் கோலின்மீது ஏற்றிக்கூறும் ஏற்றுரை.

மன்னுயிர் புரந்து வையம்
பொதுக்கடிந் தறத்தில் நீடும்
என்னெறி நன்றா லென்னும்
என்செய்தால் தீரு மென்னுந்
தன்னிளங் கன்று காணாத்
தாய்முகங் கண்டு சோரும்
அந்நிலை யரச னுற்ற
துயரமோர் அளவிற் றன்றால். **#118**

நிலைபெற்ற இவ்வுயிரினங்களைக் காத்து, நில வுலகத்தைப் பகைவர்க்கும் பொதுவாம் என்னும் தன்மையினின்றும் நீக்கி, அறவழியில் ஒழுகுகின்ற என் ஆட்சியானது நன்கு இருந்தது என்று கூறுவான். இப்பாவம் என்ன கழிவு (தீர்வு) செய்தால் நீங்கும் என்பான். தன் இளமைமிக்க கன்றைக் காணாது வருந்தும் தாய்ப் பசுவின் முகத்தைப் பார்த்துச் சோர்வடைவான். இவ்விடத்து அவ் வரசன் அடைந்த துன்பமானது ஓர் அளவினது அன்று; மிகப் பெரிய தாய் இருந்தது.

விளக்கவுரை

வையம் பொதுக் கடிதல் - இந்நிலவுலகம் யாவர்க்கும் பொது என்னும் தன்மையிலிருந்து நீக்குதல்: அஃதாவது, தனக்கே உரித் தாக்குவது. ஆல் - அசைநிலை.

மந்திரிகள் அதுகண்டு
மன்னவனை அடிவணங்கிச்
சிந்தைதளர்ந் தருளுவது
மற்றிதற்குத் தீர்வன்றால்
கொந்தலர்த்தார் மைந்தனைமுன்
கோவதைசெய் தார்க்குமறை
அந்தணர்கள் விதித்தமுறை
வழிநிறுத்தல் அறமென்றார். **#119**

இவ்வாறெல்லாம், அரசன் அடைந்த துயரத்தைக் கண்ட அமைச்சர்கள் பார்த்து. அம்மன்னவன் திருவடிகளை வணங்கி, இவ்விளைவிற்குத் தாங்கள் மனம் தளர்வது தீர்வாகாது; கொத்தாக அலர்ந்த பூமாலை உடைய நும்மைந்தனை, இதற்குமுன் பசுக்கொலை செய்த பாவிகட்குத் தீர்வாக மறை உணர்ந்தோரால் விதிக்கப்பட்ட ஆணைவழித் தீர்வு செய்வதே நீதியாகும் என்று கூறினர்.

விளக்கவுரை

பசுக்கொலை செய்தார்க்கு, அப்பாவத்திற்குக் கழிவா கக் கூறப்பட்டிருக்கும் முறையாவது: பசுக்கொலை செய்தானை மொட்டை அடித்து, ஆவின் சிறுநீரில் முழுகச் செய்து, அவன் கொன்ற பசுவின் தோலைப் போர்த்து, ஆறு திங்கள் அளவும் உப்பில்லாத உணவை ஒரு பொழுது மட்டுமே உண்ணச்செய்து, பசுக்கட்கு நோயாலும், பசியாலும், பிற உயிர்களாலும் நேரும் துன்பம் வாராது பாதுகாத்து வரும் பணியில் ஈடுபடச் செய்வதாகும் என்பர். மற்று, ஆல் என்பன அசைநிலைகள்.

வழக்கென்று நீர்மொழிந்தால்
மற்றதுதான் வலிப்பட்டுக்
குழக்கன்றை இழந்தலறுங்
கோவுறுநோய் மருந்தாமோ
இழக்கின்றேன் மைந்தனைஎன்
றெல்லீருஞ் சொல்லியஇச்
சழக்கின்று நானியைந்தால்
தருமந்தான் சலியாதோ. **#120**

பசுக்கொலை செய்தார்க்கு, மறைவழிக்காணும் தீர்வு செய்துகொள்ளுதல்தான் உலக வழக்கென்று நீவிர் கூறினால், அத்தீர்வு தானும் தன் இளங்கன்றினை இழந்து மனம் வருந்தி அலமரு கின்ற இப்பசுவின் நோய்க்கு மருந்தாகுமோ? ஆகாது. அதனால் என் மகனை

யான் இழக்கின்றேன் என்று நீவிரெல்லாம் கூறிய இப்பொய் மொழிக்கு, இன்றுநான் உடன்படுவேனானால் அறக்கடவுள்தான் சலிப்படையாதோ? அடையும்.

விளக்கவுரை

ஒருவர்க்குரிய பொருளை மற்றொருவர் வஞ்சித்தோ, வன்முறையிலோ எடுத்துக்கொள்வாராயின் அப்பொருளை மீட்டுக் கொடுப்பது அறம். பறிக்கப்பட்ட பொருள் மீண்டும் தருதற்கு உரிய தன்றாயின், அப்பொருளை இழத்தற்குக் காரணமான அவனை அழித்தலே முறை. இன்றளவும்கூட இதுவே நியதியாக உள்ளது. இவ் வகையில் பசு இழந்த பொருள் அதன் கன்றாகும். அக்கன்றை மீட்டும் கொடுக்க இயலாத நிலையில் அப்பசு அடையும் துன்பத்தை யான் அடைதலே அறம் என்கின்றான் அவ்வருமந்த அரசன். எனவேதான் `என் மைந்தனை இழக்கின்றேன்` என்று நீங்கள் இவ்வகையில் தீர்வு கூறினீர்கள் என்று கூறினான். இழப்பேன் என்னாது இழக்கின்றேன் என்றான், துணிவும் தெளிவும் பற்றி. மற்று, தான் என்பன அசை நிலைகள். ஓகாரம் இரண்டும் எதிர்மறைப்பொருளன.

மாநிலங்கா வலனாவான்
மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு
தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால்
கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த்
தறங்காப்பா னல்லனோ. **#121**

பெரிய நிலவுலகத்திற்கு அரசனாவான், நிலை பெற்ற உயிர்களைக் காக்குங் காலத்து, அவ்வுயிர்களுக்குத் தன் காரண மாயும், தன் கீழ்ப் பணிபுரியும் அமைச்சர் முதலானோரின் காரண மாயும், குற்றத்தை விளைவிக்கும் பகைவர்கள் காரணமாயும், கள்வர் காரணமாயும், பிற உயிர்கள் காரணமாயும் வருகின்ற துன்பங்களால் வரும் ஐந்து அச்சங்களையும் நீக்கி அறத்தை வழுவாமல் காப்பவன் அல்லனோ?

விளக்கவுரை

பிறவற்றால் வரும் இடையூறுகளைக் காப்பதற்கு உரியவன், தானே தவறு செய்வானாயின் அதனைத் தடுப்பார் எவரும் இல்லை. ஆதலால் அவ்வரசன் தன்னால் வரும் இடையூற்றை முதற்கண் கூறினான். அன்றியும் அரசனே தவறு செய்யின் ஏனை யோர்க்கு அது முன்னோடியாக அமைந்துவிடுதல் பற்றியும் அவன் தன் குற்றம்

நேராமையை முற்கூறினான். தன் பரிசனம்- தன்கீழ்ப் பணிசெய்து வாழும் அமைச்சர் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களும் ஆவர். அரசனுக்குச் சுற்றமாய கேளிரும் இதன்கண் அடங்குவர்.
ஊனமிகு பகைத்திறம் - குற்றத்தை விளைவிக்கும் பகைவரால், கள்வரால் உயிர்கள் தம்மால் என்றது, வலிமையுடையன வலிமை அற்றனவற்றைத் துன்புறுத்தலும், அழித்தலும் ஆகும்.

என்மகன்செய் பாதகத்துக்
கிருந்தவங்கள் செயஇசைந்தே
அன்னியனோர் உயிர்கொன்றால்
அவனைக்கொல் வேனானால்
தொன்மனுநூற் றொடைமனுவால்
துடைப்புண்ட தெனும்வார்த்தை
மன்னுலகில் பெறமொழிந்தீர்
மந்திரிகள் வழக்கென்றான். **#122**

என்னுடைய மகன் செய்த பசுக்கொலையாகிய இப்பாவத்திற்கு அதற்கு உரிய தீர்வாக அவனைக் கொலை செய்யாது, பிறபிற தீர்வுகளைச் செய்து, இதுபோன்றதொரு பாவச்செயலை வேறொருவன் செய்ய அவன் உயிரைக் கொலை செய்வேன் ஆயின், தொன்று தொட்டு வந்த மனுநூலில் விதித்த ஒழுக்கமானது, இம்மனுச் சோழனால் கெடுக்கப்பட்டது என்னும் சொல், நிலைபெற்ற இவ்வுல கத்தில் வழங்குமாறு கூறினீர். இவ்வாறு பிறழக் கூறுதல் அமைச்சர் களுக்கு வழக்கம் என்று கூறினான்.

விளக்கவுரை

தொடை - விதி. இவ்வொழுக்க நெறி தன்னால் கெட்டது எனும் பழி வரக்கூடாது. எனவே, பழமையாக இருந்த மனு நூலில், குற்றம் செய்தவன் எவனாயினும் அவன் செய்த குற்றத்திற் கேற்ப ஒறுப்பு வழங்கப்பெறுதல், அனைவர்க்கும் ஒரு படித்தாகவே இருந்து வந்தது என்று தெரியவருகிறது. ஆனால் `உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி` *(மனோன்மணியம், பாயிரம்,11)* என இக்காலத்துக் கூறப்படுமாற்றான். மனு நெறியில் ஒரு குலத்திற்கு ஒருநீதி இருந்தமை புலனாகின்றது. இம்முரண்பாடு எண்ணற்குரிய தாம். இதனால் இப்பொழுதுள்ள மனு நூல் முன்னையதாய மனு நூலுடன் வேறுபட்டதோ, என ஐயுறற்கு இடனாகின்றது. *(மேலும் எண்ணுக).* மந்திரிகள் வழக்கெனவே, அவர்கள் ஒருபாற்கோடுதலை வழக்கமாகக் கொண்டவர்கள் எனப் பொதுப்படக் கூறிவிடுதல் தவறு டைத்தாம். இதுவரை எக்குற்றமும் செய்யாதவனாதலானும், அவன் செய்ததெனக் கருதப்படும் குற்றமும் அவன் அறிவிற்கு அப்பாற் பட்டதாய்

நிகழ்ந்திருத்தலானும், வழிவழியாகப் பின்பற்றி வந்துள்ள இத்தீர்வைக் கூறினரேயன்றி, ஒருகுலத்துக்கு ஒரு நீதி எனும் முறையில் கூறினார் அல்லர் என்பதும் அறியத்தக்கதாம். அங்ஙனமாகவும், மனுவேந்தன் இவ்வாறு கூறியதற்குக் காரணம், அறவுணர்வில் அவனுக்கிருந்த மீதூர்ந்த உணர்வையும், எந்நிலையிலும் ஒருபால் கோடிய நிலையில் எத்தகைய தீர்வும் அமைந்துவிடக்கூடாது எனக்கருதும் அறநெஞ்சமும் கொண் டிருந்தமையாலேயாம்.

என்றரசன் இகழ்ந்துரைப்ப
எதிர்நின்ற மதியமைச்சர்
நின்றநெறி உலகின்கண்
இதுபோல்முன் நிகழ்ந்ததால்
பொன்றுவித்தன் மரபன்று
மறைமொழிந்த அறம்புரிதல்
தொன்றுதொடு நெறியன்றோ
தொல்நிலங்கா வலஎன்றார். **#123**

இவ்வாறு மனுவேந்தன் அவ்வமைச்சர்களை இகழ்ந்து கூற, அவ்வரசன் முன்பு நின்ற அறிவு சான்ற அமைச்சர் களும், பழமையாகிய இந்நிலவுலகத்தைக் காத்துவருகின்ற மன்ன வனே! நிலைபெற்ற அறநூல் வகுத்த வழியில் ஒழுகுகின்ற இந்நிலவுல கத்தில் இதுபோலப் பசுக்கொலைகள் முன்பு நிகழ்ந்திருத்தலால் இது பொழுது அம்மகனை இதன் காரணமாக இறக்கச் செய்தல் முறைமை யன்று. மறைகள் வகுத்த அறநெறியில் ஒழுகுதல் இதுவரை ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்கமன்றோ என்றனர்.

விளக்கவுரை

வழிவழியாக இந் நிலத்தைக் காத்துவரும் அரசமரபில் தோன்றிய தங்கட்கு, வழிவழியாக ஏற்றுக்கொள்ளப்பெற்று வரும் அறநெறியை ஏற்றலும் தகுவதே யாகும் என்றனர்.

அவ்வண்ணந் தொழுதுரைத்த
அமைச்சர்களை முகம்நோக்கி
மெய்வண்ணந் தெரிந்துணர்ந்த
மனுவென்னும் விறல்வேந்தன்
இவ்வண்ணம் பழுதுரைத்தீர்
என்றெரியி னிடைத்தோய்ந்த
செவ்வண்ணக் கமலம்போல்
முகம்புலர்ந்து செயிர்த்துரைப்பான். **#124**

இவ்வாறு வணங்கிக்கூறிய அமைச்சர்களுடைய முகத்தைப் பார்த்து, அறவுண்மையை மிகத்தெளிவாக ஆய்ந்தறிந்த மனுவென்னும்

பெயருடைய வெற்றி பொருந்திய சோழப் பேரரசன், `இவ்வாறு நீவீர் கூறியது மிகக் குற்றமுடையதாகும்` என்று நெருப்பிடத்துத் தோய்ந்த செந்நிறத்தையுடைய தாமரை மலர்போல் முகம் வாடிச் சினந்து சொல்வான்.

விளக்கவுரை

மிகு துன்பத்திற்கு எரியிடைத் தோய்ந்த மலரைக் காட்டுதல், `இணர் எரி தோய்வன்ன இன்னாசெயினும் புணரின் வெகுளாமை நன்று` *(குறள், 308)* எனவரும் திருக்குறளானும் அறிக. `மெய்த்திருப்பதம் மேவென்ற போதினும், இத்திருத் துறந்து ஏகென்ற போதினும், சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை ஒத்திருக்கும் முகத்தைப்பெற்றமை இராமன்பால் காண` *(கம்பரா. சுந்தர. காட்சி. 20)* இங்கு மறுதலையா யுள்ளதே எனின், அற்றன்று, அங்குத் தன்வயத்த தாய துன்பத்தைப் பெற்றநிலை; இங்குப் பிறவுயிர்வயத்ததாய துன்பத்தை ஏற்றநிலை எனும் வேற்றுமையுணர்தல் தக்கதாம். அன்றியும் இவன் அரசனாதலின் குற்றம் கடியும்பொறுப்புண்மையும் அறியத்தக்கதாம். மெய்வண்ணம் தெரிந்துணர்ந்த - அறநெறிகளை அளவைகளாலும் பொருந்துமாற்றானும் ஆராய்ந்துணர்ந்த.

அவ்வுரையில் வருநெறிகள்
அவைநிற்க அறநெறியின்
செவ்வியவுண் மைத்திறநீர்
சிந்தைசெயா துரைக்கின்றீர்
எவ்வுலகில் எப்பெற்றம்
இப்பெற்றித் தாமிடரால்
வெவ்வுயிர்த்துக் கதறிமணி
யெறிந்துவிழுந் ததுவிளம்பீர். **#125**

`அமைச்சர்களே! நீவிர் கூறும் அம்மனு உரை களின்படி வரும் நெறிகள் ஒருபுறம் நிற்க, அவ் அறநெறியின் சிறப்பான உண்மைத் தன்மையை நீவிர் கருதாமல் கூறுகின்றீர்! எந்த நாட்டில் எந்தப் பசு, தன் கன்றை இழந்த காரணத்தால் வரும் துன்பத் தைப் பெருமுச்சு விட்டு அழுது ஆராய்ச்சிமணியை அடித்து விழுந்தது? கூறுங்கள்.`

விளக்கவுரை

அவை நிற்க என்றது, அவை கிடக்கட்டும் எனும் இகழ்ச்சிக் குறிப்புத் தோன்ற நின்றது. பசுக் கொலை இவ்வாறு நிகழ்ந் திருக்கலாம். ஆனால் அது ஒரு சாதாரண மக்களுள் ஒருவனாக இருந்து செய்திருக்கலாம். இங்கு அப்படி அன்று. அறங்காத்தலின் திறம்பாத ஓர் அரசனின் மகன் இதனைச் செய்துள்ளான். அவ்வாறு செய்த துன்பத்திற்கு இலக்காகிய

அக்கன்றின் தாய்ப் பசுவோ அதற்கென அழுது துயர் உற்றதோடு ஆராய்ச்சி மணியையும் அடித்துள்ளது. எனவே இக்கொடும் செயலுக்கு உள்ளான கன்றின் தாயும் தனித்தன்மை உடையதாய் விளங்குகின்றது. இவ்வகையில் இதுவரை போற்றி வந்த பொதுவான தீர்வு *(பிராயச்சித்தம்)* இதற்கும் ஆகாது எனக்கருதினன்.

போற்றிசைத்துப் புரந்தரன்மா
லயன்முதலோர் புகழ்ந்திறைஞ்ச
வீற்றிருந்த பெருமானார்
மேவியுறை திருவாரூர்த்
தோற்றமுடை உயிர்கொன்றான்
ஆதலினால் துணிபொருள்தான்
ஆற்றவுமற் றவற்கொல்லும்
அதுவேயா மெனநினைமின். **#126**

இந்திரன், மால், அயன் முதலிய தேவர்கள் எல்லாம் வணங்கவும், வாழ்த்தவும் வீற்றிருந்தருளுகின்ற வீதி விடங்கப் பெருமானார் மிகவும் விரும்பி உறைகின்ற திருவாரூரில் தோன்றுதற்கு வாய்ந்த பெரும் புண்ணியமுடைய உயிர் ஒன்றைக் கொன்றான் ஆதலின், அதற்குக் கழிவாக, மிக உறுதியோடு செயத்தக்க செயல் அவனைக் கொல்வதே ஆம் என்று நினையுங்கள்.

விளக்கவுரை

`அயிரா வணமேறா தானே றேறி, அமரர்நா டாளாதே ஆரூ ராண்ட அயிரா வணமேயென் னம்மா னே` *(தி.6 ப.25 பா.1)* ஆதலின், அவன் விரும்பி உறையும் பதியாதல் விளங்கும்.

தோற்றம் உடை - தோன்றுதற்கு உரிய எனப் பொது வகையால் உரை கூறினும், திருவாரூரில் தோன்றுதற்குத் தகுதி உடைய உயிர் என்பது கருத்தாம்.

`ஆரூர்ப் பிறத்தல் நேர்படின் அல்லது செயற்கையின் எய்தும் இயற்கைத் தன்றே` *(குமரகுருபரர். சிதம். மும்.2)* என வரும் திருவாக்கான் இவ்வுண்மை அறியப்படும். ஆற்றவும் - மிகவும்.

எனமொழிந்து மற்றிதனுக்
கினியிதுவே செயல்இவ்ஆன்
மனமழியுந் துயரகற்ற
மாட்டாதேன் வருந்துமிது
தனதுறுபே ரிடர்யானுந்
தாங்குவதே கருமமென
அனகன்அரும் பொருள்துணிந்தான்
அமைச்சருமஞ் சினரகன்றார். **#127**

என்று மேற்கூறியவாறு கூறி, இனி இத்தீச் செயற்குச் செய்யக்கடவதாகிய செயல் இதுவேயாம் என்று கருதியவன், இப்பசுவின் மனம் வருந்துதற்கு ஏதுவான துன்பத்தை நீக்க மாட்டாதவனாகிய யான், வருந்திக் கொண்டிருக்கும் இப்பசுவினது மிகப் பெரும் துயரத்தை அடைவதே தக்கதாம் என்று கூறி, அம் மனு வேந்தனும் அச்செயற்கு உறுதி பூண்டனன். அதுகண்ட அமைச்சர் களும் அஞ்சி அவ்விடத்தினின்றும் நீங்கினர்.

விளக்கவுரை

யானும் - இத்தீச்செயல் செய்த மகனின் தந்தையாகிய யானும் என்பதுபட நின்றது. உம்மை இழிவு சிறப்பு. `அமைச்சரும்` எனவரும் இடத்துள்ள உம்மை, அவ்விடத்திருந்த பிறபிற அலு வலர்கள் மட்டுமன்றி அமைச்சரும் என்பது பட நிற்றலின் உம்மை இறந்தது தழீஇயதாம். இம் மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

மன்னவன்தன் மைந்தனையங்
கழைத்தொருமந் திரிதன்னை
முன்னிவனை அவ்வீதி
முரண்தேர்க்கா லூர்கவென
அன்னவனும் அதுசெய்யா
தகன்றுதன்ஆ ருயிர்துறப்பத்
தன்னுடைய குலமகனைத்
தான்கொண்டு மறுகணைந்தான். **#128**

இவ்வாறு மன உறுதி செய்துகொண்ட அம்மனு வேந்தனும், தன் மகனை அவ்விடத்து வரவழைத்து, ஓர் அமைச்சனை நோக்கி, `விரைவாக இம்மகனை அவ்வீதியின்கண் வலிய தேர்க் காலில் இட்டுச் செலுத்துக` என்று கூற, அவ்வமைச்சன் தானும் அச் செயலைச் செய்யாது அவ்விடத்தினின்றும் நீங்கித் தன் உயிரைவிட, (அது கேட்ட) அரசன் தன் அரசிளங்குமரனைத் தானே அழைத்துக் கொண்டு அவ்வீதியிடத்துச் சென்றான்.

விளக்கவுரை

முன் - விரைவு கருதியமுன். முரண் - வலிமை: மாறுபாடு. முன் பாடலில் அமைச்சரும் அகன்றார் எனக் கூறியதையும், இப் பாடலில் ஓர் அமைச்சரை நோக்கித் தேர்க்காலில் இம்மகனை ஊர்க எனக் கூறியதையும் நோக்க. அமைச்சர்கள் அரசன் கருத்திற்கு உடன்படாமை தோன்றச் சிறிது அகன்றிருப்பினும், அரசனின் ஆணையின்றி அகன்று போதல் மரபன்று எனக் கருதியவாறு பெரிதும் அகன்று போகாது, அவ்வரசன் கண்பட நின்றிருந்தனர் என்பது தெரிய வருகிறது.

ஒருமைந்தன் தன்குலத்துக்
குள்ளான்என் பதும்உணரான்
தருமம்தன் வழிச்செல்கை
கடனென்று தன்மைந்தன்
மருமம்தன் தேராழி
உறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி
அரிதோமற் றெளிதோதான். **#129**

தன் குலத்தில் அரசுரிமை பெற்று ஆட்சி நடத்து தற்கு ஒரு மகன் தான் உளன் என்பதையும் மனத்தில் கொள்ளாமல், அறத்தின்வழி நடத்தலே தனக்குரிய முறைமை என்று கருதித், தன் மகனது மார்பைத் தன் தேர்க்காலானது பொருந்த நடத்தினான் அம் மனுவேந்தன். இதனால் அரிய மருந்தனைய அரசாட்சியை நடத்துதல் அரியதோ? அல்லது எளியதோ? என்பது எண்ணற்குரியதாம்.

விளக்கவுரை

தனக்கேயன்றித் தன் குலத்திற்கும், இவனன்றிப் பிறன் ஒருவன் இலன் என்பார், `ஒரு மைந்தன்` என்றார். ஒப்பற்ற மைந்தன் எனினும் ஆம். மருமம் - மார்பு. அதன்மீது தேர்க்கால் ஊர என்றது, மங்கல வழக்கக் கூறியதாம். இறந்துபட என்பது பொருள். அருமருந்தனைய என்பது அருமந்த என்றாயிற்று. இஃது அமிழ்தத்தைக் குறிக்கும். அமிழ்தம் இனியதும், சாதல் நீங்கக் காப்பதுமாகும். அது போன்றே அரசும் தன்கீழ் வாழ்வார்க்கு இனிமையும், எவ்வாற்றானும் சாதல் இன்றிக் காப்பதும் ஆக இருக்க வேண்டும் என்பார். `அருமந்த அரசாட்சி` என்றார். இத்தகைய ஆட்சியை மேற்கொண்டு செலுத்துதல் அரிதோ, அன்றி எளிதோ என வரும் வினா, அஃது அரிதன்றி எளிதன்று என்பது போதர நின்றது. `மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும், இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும், காவலர்ப் பழிக்கும் இக் கண்ணகல் ஞாலம்` *(புறநா.35)*என்றும், `மழைவளம் கரப்பின் வான்பேர் அச்சம், பிழை உயிர் எய்தின் பெரும்பேர் அச்சம், குடிபுரவுண்டும் கொடுங்கோல் அஞ்சி, மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல் துன்பம் அல்லது தொழுதகவில்` *(சிலப்ப. வஞ்சி. காட்சிக். 100-104)* என்றும் பண்டைய நூல்கள் பகருவனவும் ஈண்டறியத் தக்கனவாம்.

தண்ணளிவெண் குடைவேந்தன்
செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார்
வானவர்பூ மழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே

அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான்
வீதிவிடங் கப்பெருமான். #130

உயிர்கள் மாட்டு வைத்த கருணையாகிய வெண்கொற்றக் கொடையினை உடைய கண்டு, ஆற்றாதவர்களாய் நிலவுலகில் உள்ள மனிதர்கள் கண்ணீரைப் பொழிந்தார்கள். வியந்த தேவர்கள் பூமழையைச் சொரிந்தார்கள். அந் நிலையில் அறத்தின் மேம்பட்ட அவ்வரசனின் கண்ணெதிரே அழகிய திருவீதியின்கண், இளைய மழவிடையின்மீது விண்ணவர்களும் தொழுமாறு தியாகேசர் காட்சி கொடுத்தருளினார்.

விளக்கவுரை

அளி - கருணை. `குளிர்வெண்குடை போன்று இவ்வங்கண் உலகளித் தலான்` *(சிலப்ப. மங்கல.1)* எனவரும் சிலப்பதிகாரமும் காண்க.

சடைமருங்கில் இளம்பிறையுந்
தனிவிழிக்குந் திருநுதலும்
இடமருங்கில் உமையாளும்
எம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையும்முன்
கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும்
விறல்வேந்தற் கருள்கொடுத்தான். #131

திருச்சடையின்கண் விளங்கும் மூன்றாம் பிறை யினையும், தனித்து விழிக்கும் கண்ணையுடைய திருநெற்றி யினையும், இடப்பக்கத்தில் உமையம்மையையும், எவ்விடத்தும் நெருங்கி யிருக்கும் பூதகணங்களையுமுடைய பெருமையையும் கொண்டு, தம் முன்பு தோன்றக்கண்டு, மனுவேந்தன் வழிபட்டு நிற்க, ஆனேற்றில் எழுந்தருளி வந்த அப்பெருமானும் வெற்றி பொருந்திய அச்சோழர் பெருமகனாருக்குக் கருணை வழங்கினான்.

விளக்கவுரை

தனிவிழி - நெற்றியில் தனித்து நிற்கும் கண்விழி. நெற்றிக்குக் கீழ் இருப்பன இணை விழிகள்; இது தனி விழியாம். உமை யம்மையார் ஒருகாலத்தில் இறைவனின் இருகண்களையும் மூட, அது பொழுது உலகிற்கு ஒளிதர இந்நெற்றிக்கண்ணைத் திறந்தனர் என்பர். அவ்வகையிலும் இது தனிவிழியாயிற்று. புடை - பக்கம்.

அந்நிலையே உயிர்பிரிந்த
ஆன்கன்றும் அவ்வரசன்

மன்னுரிமைத் தனிக்கன்றும்
மந்திரியும் உடனெழலும்
இன்னபரி சானானென்
றறிந்திலன்வேந் தனும்யார்க்கும்
முன்னவனே முன்னின்றால்
முடியாத பொருளுளதோ. #132

அக்காட்சியை அப்பெருவேந்தன் கண்டு கொண்டிருக்கும்பொழுதே, உயிர் நீங்கிக் கிடந்த பசுங்கன்றும், அம் மனுவேந்தனின் அரசுரிமைக் குரிய ஒப்பற்ற இளங்கன்றாய திருமக னும், அம்மகன் காரணமாகத் தன் உயிரை நீத்த அமைச்சரும் ஒருங்கே எழுதலும், அதைக்கண்ட மனுவேந்தன் பெருமகிழ்வால் இன்ன தன்மையன் ஆனான் என்று கூற அறியேன். இவ் வியத்தகு செயல்களை எல்லாம் காணும்பொழுது, எவ்வுயிர்க்கும் முதல்வ னாகிய சிவபெருமானே முன்னின்று அருளின் முடியாத பொருள் களும் உளவோ? இல என்பது தெரிகிறது.

விளக்கவுரை

இறந்த உடல் மீண்டும் உயிர்பெற்று எழுதல் என்பது உலகியலில் இயலாததே ஆகும். அதிலும் ஆன் கன்று, அமைச்சர், அரசிளங்குமரன் ஆகிய மூன்று உயிர்களும் மீளத்தோன்றுமாறு நிகழ்தல் யாண்டும் காண்டற்கின்று.

அங்ஙனம் ஆகவும் இம் மூவுயிர்களும் மீளத் தத்தம் உடற்கண் புகுந்து எழுதல் திருவருட் செயலாலேயே ஆகும். ஆதலால்தான் `யார்க்கும் முன்னவனே முன்னின்றால் முடியாத பொருள் உளதோ` என்றார். ஓகாரம் - எதிர் மறைக்கண் வந்தது. அரசிளங்குமரனைக் கன்று என்றது உயர்வின்கண் வந்த திணை வழுவமைதியாம்.

அடிபணிந்த திருமகனை
ஆகமுற எடுத்தணைத்து
நெடிதுமகிழ்ந் தருந்துயரம்
நீங்கினான் நிலவேந்தன்
மடிசுரந்து பொழிதீம்பால்
வருங்கன்று மகிழ்ந்துண்டு
படிநனைய வரும்பசுவும்
பருவரல்நீங் கியதன்றே. #133

தன்னுடைய திருவடிகளில் வணங்கிய அரசிளங்குமரனைத் தன் மார்புற எடுத்துத் தழுவி, மிக மகிழ்ந்து, தனக்குள் இருந்த பெருந்துயரினின்றும் நீங்கினான் இந்நிலவுலகை ஆளும் மனுவேந்தன். கன்றிழந்த காரணத்தால் அங்கு வந்து, துயரத்தினின்றும் நீங்கிய அத்தாய்ப் பசுவின் மடியிலிருந்து சுரந்து வரும் இனிய பாலை, உயிர் பெற்று எழுந்த

பசுங்கன்றும் மகிழ்ச்சியால் உண்ண, அதனால் தரையும் நனைந்தது.

விளக்கவுரை

அடிபணிந்த திருமகனை என்றது அவ்வரசிளங் குமரனின் பண்பையும் பத்திமையையும் காட்டுகின்றது. படி - நிலம். பருவரல் - துன்பம். அன்று, ஏ என்பன அசை நிலைகள். அன்றே - அப்பொழுதே என உரை காண்பர் சிவக்கவிமணியார் (பெரிய.பு. உரை) .

பொன்தயங்கு மதிலாரூர்ப்
பூங்கோயில் அமர்ந்தபிரான்
வென்றிமனு வேந்தனுக்கு
வீதியிலே அருள்கொடுத்துச்
சென்றருளும் பெருங்கருணைத்
திறங்கண்டு தன்னடியார்க்கு
என்றும்எளி வரும்பெருமை
ஏழுலகும் எடுத்தேத்தும். **#134**

பொன்மயமாய் விளங்குகின்ற மதில் சூழ்ந்த திருவாரூரில், பூங்கோயிலின் இடனாக வீற்றிருந்தருளுகின்ற தியாகேசர், வெற்றியினையுடைய மனுவேந்தனுக்கு அவ்வீதியின் கண்ணே காட்சி கொடுத்து மறைந்தருளும் பெருங்கருணைத் திறம் கண்டு, தம் அடியவர்களுக்கு எந்நாளும் எளிவந்து அருளும் கருணையின் பெருமையை ஏழுலகங்களும் எடுத்துக்கூறி வணங்கும்.

விளக்கவுரை

எந்த வீதியில் ஆனிளம் கன்றும், அரசிளம் கன்றும், அமைச்சர் ஒருவரும் இறக்க நேர்ந்ததோ, அவ்வீதியிலேயே அவரவர் களும் குற்றம் நீங்க உயிர் பெறவும், இறைவனின் காட்சி பெறவும் நேர்ந்தன. ஆதலின் அப்பெருமானின் எளிவந்த கருணை புலப்படுவ தாயிற்று. `என்றும்`, ஏழுலகமும்` எனவரும் இடங்களில் வரும் உம்மை முற்றும்மையாம்.

இனையவகை அறநெறியில்
எண்ணிறந்தோர்க் கருள்புரிந்து
முனைவரவர் மகிழ்ந்தருளப்
பெற்றுடைய மூதூர்மேல்
புனையுமுரை நம்மளவில்
புகலலாந் தகைமையதோ
அனையதனுக் ககமலராம்
அறவனார் பூங்கோயில். **#135**

இவ்வாறு வரும் அறவழியில் ஒழுகும் எண்ணற்ற அடியார்களுக்கு அருள் வழங்கித் தியாகேசர் மகிழ்ந்து வீற்றிருந் தருளும் திருவாரூரை, ஒப்பனை

செய்து கூறும் சிறப்பு நம்மால் எடுத்துக்கூற அடங்கும் அளவினதோ? அன்று. அத்திருநகரத்திற்கு இதய மலராக விளங்குவதுஅப்பெருமானாரின் பூங்கோயில் ஆகும்.

விளக்கவுரை

திருவாரூரின் பெருமை நம்மளவில் பாராட்டுதற் குரியதோ? என்றது, அதன் பெருமை தம்மளவிற்கும் மேம்பட்டது என்பது கருதியாம். அத்தகைய திருவாரூரின் இதயமலராக விளங் குவது இறைவனின் பூங்கோயிலாம் என நிறைவு செய்கிறார்.

பூத நாயகர் புற்றிடங் கொண்டவர்
ஆதி தேவர் அமர்ந்தபூங் கோயிலிற்
சோதி மாமணி நீள்சுடர் முன்றில்சூழ்
மூதெ யிற்றிரு வாயின்முன் னாயது. **#136**

பூதகணங்களுக்கு முதல்வரும், புற்றிடம் கொண்ட வரும், எவ்வுயிர்க்கும் தலைவர் ஆயவரும் ஆன சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பூங்கோயிலில், ஒளிபொருந்திய மாணிக்கங் களின் பேரொளி நிறைந்த திருமுற்றத்தைச் சூழ்ந்த பழமையான மதில்களை யுடைய திருவாயிலின் முன்னாகத் (தேவாசிரியன் மண்டபம்) உள்ளது.

விளக்கவுரை

முன்னாக உள்ளது யாதெனில், அது திருக்காவணமாம் என அடுத்த பாடலோடு நிறைவு பெறுதலின் இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின. மதில் சூழ்ந்த திருவாயிலைக் கடந்து செல்லுங்கால் முதற்கண் காணத்தக்கதாக முன்னிற்பது இம்மண்டபமாகும். இதன்கண் வீற்றிருக்கும் அடியவர் பெருமை இப்பகுதியில் பேசப்படுகின்றது. புற்றிடம் கொண்டவர் - புற்றை இடமாகக் கொண்டு விளங்குபவர் . பூங்கோயில் - திருமகள்வழிபட்ட கோயில். பூதம் - பூதகணங்கள்: உயிர்க் கூட்டம் எனினும் அமையும்; `பூதபரம்பரை பொலிய` *(தி.12 பு.28 பா.1)* எனவரும் திருவாக்கும் காண்க. சோதிமாமணி - ஒளி பொருந்திய மாணிக்கங்கள். நீள்சுடர் - பேர் ஒளி.

பூவார் திசைமுகன் இந்திரன் பூமிசை
மாவாழ் அகலத்து மால்முத லானவர்
ஓவா தெவரும் நிறைந்துறைந் துள்ளது
தேவா சிரிய னெனுந்திருக் காவணம். **#137**

தாமரை மலரில் வாழ்கின்ற அயனும், இந்திரனும், தாமரைமலரில் உறையும் திருமகளைத் தன் மார்பகத்தே கொண்டி ருக்கும் திருமால் முதலான தேவர்களும் ஆகிய எல்லோரும் நீங்காது நிறைந்து உறைவது தேவாசிரியன் என்னும் திருப்பெயருடைய திருமண்டபம் ஆகும்.

விளக்கவுரை

அயனும், திருமகளும் வீற்றிருக்குமிடம் தாமரை என்பர். ஆதலின் `பூவார் திசைமுகன்` என்றும், `பூமிசை மா` என்றும் கூறினார். பூவெனப் பொதுப்படக் கூறினும் அது தாமரையையே குறிக்கும். என்னை? `பூவெனப்படுவது பொறிவாழ் பூவே` *(நால்வர் நான்மணி, 40)* என்பவாகலின். திருமகள் தாமரையை இடனாகக் கொண்டிருப்பினும், திருமாலைப் பிரியாதிருத்தற் பொருட்டு அவரின் மார்பகத்தேயே வீற்றிருப்பாள் என்பர்; `அகல கில்லேன் இறையும் என்று அலர் மேல் மங்கை உறைமார்பா` என வருவதும் காண்க. தேவர்கள் திருவாரூர்ப் பெருமானை வணங்குதற் பொருட்டு மிகவும் விரும்பி வந்து நிற்குமிடம் தேவாசிரிய மண்டபம் ஆகும். இதுபோன்றே அடியவர்களும் இறைவனை வணங்கி இன்பம் ஆர்ந்து *(தேனித்து)* நிற்குமிடம் தேவாசிரிய மண்டபம் ஆகும். தேவர்களுக்கு, இவ்வடியவர்கள் ஆசிரியத் தன்மை பூண்டு வழிகாட்டுவர்.

`........ வாய்தல் பற்றித்
துன்றிநின் றார்தொல்லை வானவ ரீட்டம் பணியறிவான்
வந்துநின் றாரய னுந்திரு மாலும்` *-தி.4 ப.99 பா.10*

எனவரும் ஆளுடை அரசரின் திருவாக்கும் காண்க. திருக்காவணம் - மண்டபம்.

அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்
நிரந்த நீற்றொளி யால்நிறை தூய்மையால்
புரந்த வஞ்செழுத் தோசை பொலிதலால்
பரந்த வாயிரம் பாற்கடல் போல்வது. **#138**

அத்தேவாசிரிய மண்டபம், உயிர்க்குற்ற துன்பத்தை நீக்கும் அடியவர்களின் திருமேனியில் ஒழுங்குபெற அணிந்த திரு நீற்றின் ஒளியாலும், நிறைந்த தூய்மையாலும், தன்னை எண்ணு பவர்களைக் காப்பாற்றுதற்குரிய திருவைந்தெழுத்தின் ஒலியானது மீதூர்ந்து தோன்றுதலினாலும் பெரும் பரப்பினையுடைய ஆயிரம் பாற்கடலை ஒப்பது.

விளக்கவுரை

அரந்தை - துன்பம்: பிறவித்துன்பம். மந்திரம் தன்னை எண்ணுவாரைக் காப்பது என்னும் பொருளது: அது திருவைந்தெழுத் தாம். ஆதி மந்திரமாகிய இத்திருவைந்தெழுத்து இவ்வகையில் தலைமையும் சிறப்பும் உடைமைபற்றிப் `புரந்த அஞ்செழுத்து` என்றார். திருக்காவணம் வெண்மையான ஒளியாலும், தூய்மை யாலும், ஒலியாலும் பாற்கடலை ஒத்தது என்றார். அடியவர் ஒவ் வொருவரும்

ஒவ்வொரு பாற்கடலை ஒத்திருத்தலின் `ஆயிரம் பாற் கடல் போல்வது` என்றார். ஆயிரம் என்பது எண்ணின் மிகுதி குறித்து நின்றது.

அகில காரணர் தாள்பணி வார்கள்தாம்
அகில லோகமும் ஆளற் குரியரென்று
அகில லோகத்து ளார்க ளடைதலின்
அகில லோகமும் போல்வ ததனிடை. **#139**

மேல், கீழ், நடு எனும் மூவுலகிற்கும் தலைவனான தியாகேசப் பெருமானின் திருவடிகளைத் தொழுகின்றவர்கள்தாம், எல்லா உலகங்களையும் ஆளுதற்குரியவராவர் என்று, அனைத் துலகிலும் வாழும் முனிவர் முதலிய யாவரும் அங்கு வந்து வாழ் தலால், அம்மண்டபத்தின் பரப்பு அனைத்துலகங்களும் ஒருங்கிருந் ததை ஒத்ததாம்.

விளக்கவுரை

அதன் இடை - அம்மண்டபத்தின் பரப்பிடம்; இப் பாடல் சொற்பொருட் பின்வருநிலை அணியதாம்.

அத்தர் வேண்டிமுன் ஆண்டவர் அன்பினால்
மெய்த்த ழைத்து விதிர்ப்புறு சிந்தையார்
கைத்தி ருத்தொண்டு செய்கடப் பாட்டினார்
இத்தி றத்தவ ரன்றியும் எண்ணிலார். **#140**

உலகுயிர்க்கெலாம் தந்தையாக விளங்கும் சிவபெருமானால், முன்னமேயே விரும்பி ஆட்கொள்ளப் பெற்ற அவ்வடியவர், பெருமானை இடையறாது நினைதலால் உரோமம் சிலிர்க்கவும், உடல் விதிர்விதிர்க்கவும் ஆன சிந்தையை உடைய வர்கள். அவர்கள் தத்தம் திருக்கைகளால் திருத்தொண்டு செய்தலைக் கடனாகக் கொண்டவர்கள். இவ்வாறாய அன்புடையவர்களன்றித் தத்தம் அநுபவத்திற்கேற்ப அன்புகாட்டி ஒழுகும் அடியவர்களும் எண்ணிலாதவர்களாய் உள்ளனர்.

விளக்கவுரை

அத்தர் - தந்தையார். மெய் தழைத்து என்பதன்றி, மெய்த்து அழைத்து எனப்பிரித்துப்பொருள் விரிப்பர் ஆறுமுகத் தம்பி ரான் சுவாமிகள். அன்பினால் மெய்த்து அழைத்தலாவது:- ஆன்கன்று தாயை நாடி அழைத்தல் போல, அன்போடு திருநாமங்களைக் கூறி அழைத்தலாம் என்பது அவர்தம் உரையாகும். விதிர்ப்புறுதலாவது - அவ்வாறு அழைக்குங்கால் உரோமம் முகிழ்த்து உடம்பு சிறிது அசைதல். இவ்விரண்டும் வாக்கினிடத்தும் மெய்யினிடத்தும் உள்ளனவேனும் சிந்தைவழியவாய் நிற்றலில் `சிந்தையார்` என்றார். கைத்திருத்தொண்டு - திருவிளக்கு, திருப்பள்ளித்தாமம் அமைத்தல் முதலியன. கைத்தொண்டு

செய்தல் கற்புடையாளுக்குக் கணவன் மாட்டுச் செய்பணியேயன்றிப் பிறிதொன்றும் பொருளாகாமை போலத், தம்மையாண்ட முதல்வன் மாட்டு அன்புடையார், அவனுக்கே தொண்டுசெய்தல் அல்லது வேறறியார் என்பது தோன்றக் `கடப்பாட்டினார்` என்றார். செபம், தவம், தியானம், விரதம் முதலிய சீலங்களிலும், தியான யோகம் முதலிய நெறிகளினும் நிற்போரும் அடங்க `எண்ணிலார்` என்றார்.

மாசி லாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோ லுள்ளும் புனிதர்கள்
தேசி னால்எத் திசையும் விளக்கினார்
பேச வொண்ணாப் பெருமை பிறங்கினார். **#141**

இவ்வாறாய அடியவர்கள், குற்றமில்லாத உருத்தி ராக்கம் அணிந்து, விளங்குகின்ற தம் திருமேனியிடத்துப் பூசுகின்ற வெள்ளிய திருநீறுபோல, உள்ளத்தாலும் தூய்மை உடையவர்கள். தமது ஞானப் பேரொளியால் எத்திசைகளையும் விளக்குகின்றவர் கள். நம்மனோரால் இவ்வியல்பினர் என எடுத்து ஓதுதற்கரிய பெருமை பெற்றவர்கள்:

விளக்கவுரை

மந்திரம், தன்னை நினைத்தாரைக் காப்பதுபோல, உருத்திராக்கமும் தன்னை அணிந்தாரைக் காக்கும் தகையது. தீய பண்புகளும், தீய செயல்களும்தோன்றாதவாறு காத்தல் பற்றி `மாசிலாத மணி` என்றார். மணி - உருத்திராக்க மணி. தேசு - ஒளி: தவத் தாலும் அதனால் பெற்ற ஞானத்தாலும் பெற்ற ஒளி. `ஐந்தும் ஆறு அடக்கி உள்ளார் அரும்பெரும் சோதியாலும்` என்பர் பின்னும். இவ் விரு பாடல்களும் ஒருமுடிபின.

பூத மைந்தும் நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓது காத லுறைப்பி னெறிநின்றார்
கோதி லாத குணப்பெருங் குன்றனார். **#142**

இவ்வடியவர்கள், ஐம்பெரும் பூதங்களும் தத்தம் நிலையினின்றும் கலங்கியபோதும், தாம் கலங்காது, உமையம் மையை ஒரு பால் உடைய சிவபெருமானின் திருவடிகளை மறத்தல் இல்லாதவர். சிறப்பாகக் கூறுதற்குரிய பத்திமை நெறியில் அழுந்தி நிற்பவர்கள். குற்றமற்ற குணங்களால் பெரிய மலையை ஒத்தவர்கள்.

விளக்கவுரை

பூதம் ஐந்தாவன நிலம், நீர், தீ, வளி, வெளி என்பன. இவை நிலை கலங்குதலாவது தத்தம் தன்மையில் குன்றியும், திரிந்தும் நிற்பதாம். `வான்கெட்டு மாருதம் மாய்ந்தழல் நீர் மண்கெடினுந் தான் கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையன்`*(தி.8 ப.11 பா.18)* இறைவன். அப்

பெருமானைச் சார்ந்து நின்றார்க்கும் அவ்வியல்பு வரப் பெறுதலின் `பூதம் ஐந்தும் நிலையில் கலங்கினும் மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்` என்றார். இத்தகைய மாண்பு இவர்க்கு உளவாதலை,

வானம் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டூனமொன் றில்லா வொருவனுக் காட்பட்ட வுத்தமர்க்கே.
(தி.4 ப.112 பா.8) மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற்றேழ் உலகும்
விண்பால் திசைகெட்டிருசுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோம் திருப்பா திரிப்புலியூர்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே.
(தி.4 ப.94 பா.9) கன்னெடுங் கானம் வெதும்பிக் கருங்கடல் நீர்சுருங்கிப்
பன்னெடுங் காலம் மழைதான் மறுக்கினும் பஞ்சம்உண்டு என்று
என்னொடுஞ் சூளறும் அஞ்சல் நெஞ் சேஇமை யாதமுக்கட்
பொன்னெடுங் குன்றமொன்றுண்டு கண்டீரிப் புகலிடத்தே.
(தி.4 ப.113 பா.10) ஐம்பெருமா பூதங்காள் ஒருவீர் வேண்டிற்
றொருவீர்வேண் டீர்ஈண்டிவ் வவனி யெல்லாம்
உம்பரமே உம்வசமே யாக்க வல்லீர்க்கு
இல்லையே நுகர்போகம், யானேல் வானோர்
உம்பருமா யூழியுமா யுலகே ழாகி
ஒள்ளாரூர் நள்ளமிர்தாம் வள்ளல் வானோர்
தம்பெருமா னாய்நின்ற அரனைக் காண்பேன்
தடைப்படுவே னாக்கருதித் தருக்கேன் மின்னே. *(தி.6 ப.27 பா.2)*

எனவரும் அப்பரடிகள் திருவாக்குகளாலும் காண்க. சலியாமையும் பெருமையும் பற்றிக் `குணப்பெருங் குன்றனார்` என்றார். `குணமென் னும் குன்றேறி நின்றார்` *(குறள். 29)* எனவரும் திருக்குறளும் காண்க.

கேடு மாக்கமுங் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார். **#143**

இவ்வடியவர் பெருமக்கள், தமக்குளவாய பொருள் ஒன்றை இழத்தலால் வரும் கேடும், வளர்தலால் வரும் ஆக்கமும் இல்லாமை ஆகிய செல்வத்தை உடையவர்கள். ஓட்டையும் சிவந்த பொன்னையும் ஒப்ப நோக்கும் இயல்புடையவர்கள். தம்மி டத்துத் தோன்றுகின்ற அன்பு காரணமாய்ச் சிவபெருமானை வணங் குதலே யன்றி, வீடுபேற்றையும் விரும்பாத பத்திமைச் செல்வத்தை உடையவர்கள்.

விளக்கவுரை

யாதொரு பொருளினும் பற்றிருப்பின், அப்பொரு ளைப் பெறுதலிலும் வளர்த்தலிலும் அவா எழும். நினைத்தவாறு வளரின் மகிழ்ச்சி விளையும்; மாறாய வழித் துன்பம் விளையும். இவ்வடியவர்க்கு யாதொரு பொருளினும் பற்றின்மையால் அதன் வழிவரும் கேடும் ஆக்கமும் இலராயினார். இவ்வுள்ள அமைதியே பெரும் செல்வமாகும். `வேண்டாமை அன்ன விழுச் செல்வம் ஈண்டில்லை யாண்டும் அஃது ஒப்பதில்` *(குறள். 363)* எனத் திருவள்ளுவனார் கூறுவதும் ஈண்டு எண்ணத் தக்கதாம். `பொருளுடைமையும் பொருள் கொணர்ந்து துய்த்தலுமின்றி எஞ்ஞான்றும் திருத்தகவிற்றாயதோர் உள்ளநிகழ்ச்சி` எனப் பேராசிரியர் குறிப்பதும் இதுவாம். இவ்வுள்ள அமைதியினாலேயே ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கும் கருத்தும் உளதாகிறது.

செம்பொன்னும் நவமணியும் சேண்விளங்க ஆங்கெவையும்
உம்பர்பிரான் திருமுன்றில் உருள்பருக்கை யுடனொக்க
எம்பெருமான் வாகீசர் உழவாரத் தினில்ஏந்தி
வம்பலர்மென் பூங்கமல வாவியினில் புகவெறிந்தார்.
(தி.12 பு.21 பா.417) `புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபா டிலாநிலைமை துணிந்திருந்த
நல்லோர்......` *(தி.12 பு.21 பா.418)*

எனவரும் நாவரசர் வரலாற்று நிகழ்வும் எண்ணத்தக்கதாம். இறை வழிபாடாற்றும் பொழுதும் வழிபடுதல் குறிப்பு ஒன்றன்றி, வேறு பிற நினைவுகள், விருப்பு, வெறுப்புக்கள் எவையும் இல என்பார், `வீடும் வேண்டா விறலில் விளங்கினார்` என்றார். `வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே` *(தி.8 ப.33 பா.6)* என வரும் திருவாக்கும் காண்க. விறல் - வெற்றி; பத்திமை மேம்பாட்டால் வரும் வெற்றி. இது அவர்க்கு வாய்த்த பத்திமைச் செல்வமாகும்.

ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பார மீசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீர மென்னால் விளம்புந் தகையதோ. **#144**

அவர்கள் அணியும் மாலை உருத்திராக்க வடமேயாம். ஆடையாக உடுப்பது கந்தையேயாம். தாம் செய்யத் தகும் கடமையாகத் தாங்கி நிற்பதும் இறைவற்குரிய திருத்தொண் டன்றிப் பிறிதொரு கடமை இல்லாமையேயாம். இவர்கள் எவ்வுயிர்க ளிடத்தும் அன்புடையவர்கள். ஒன்றாலும் குறைவிலர். அத்தன்மைய ரான அடியவரின் வீரம் என்னால் முற்ற எடுத்துரைக்கும் தகைமை உடையதோ? அன்று என்பதாம்.

விளக்கவுரை

அணி என்பது இக்காலத்து ஒருவரால் அணியப்படும் அணிகலன்களைக் குறிக்கின்றன. இவை தன்னிடத்தினின்றும் ஒரு கால எல்லையில் நீங்கற்குரியன. இடையில் பிறரால் கவர்தற்குரியன. ஆனால் திருவள்ளுவர், நாவரசர் போன்ற அருளாளர்களோ, அவரவர்களுடன் கொள்ளத்தக்க சீரிய பண்புகளையே அணிகளாகக் கருதினர். அவ்வகையிலேயே இவ்வடியவர்கள் வாழ்வும் அமைந் துள்ளது. ``பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணியல்ல மற்றுப் பிற` *(குறள், 95)* `அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு` *(குறள், 1014)* எனவரும் திருக்குறள் திருவாக்குகளையும் காண்க.
பாரம் - மேற்கொண்டிருக்கும் கடமை. `தொண்டலாற் றுணையு மில்லை` *(தி.4 ப.40 பா.4)* `கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்` *(தி.1 ப.116 பா.1)* எனவரும் திருமுறைத் திருவாக்குகளும் காண்க. ஈரம் - அன்பு. `இன்சொல்லால் ஈரம் அளைஇ` *(குறள், 91)* என்னும் திருக்குறளும். இறைப்பற்றும் இறைத்தொண்டும் அன்றி வேறு எவற்றிலும் கருத்தில்லாமையால் அவையே அவர்க்கு அனைத்தையும் வழங்கிவிடுகின்றன. ஆதலால் `யாதும் குறைவிலர்` என்றார். `உன்னைக் குறுகினேற் கினியென்ன குறையே?` *(தி.8 ப.22 பா.4)*, `என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்?` *(தி.8 ப.7 பா.9)* எனவரும் மணிமொழிகளும் காண்க. வீரம் - இறை அன்பாலும் இறைத்தொண்டாலும் வரும் வீரம். இவ்வீரமே `நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்` *(தி.6 ப.98 பா.1)* என முழங்கக் காரணமாயிற்று.

வேண்டு மாறு விருப்புறும் வேடத்தர்
தாண்ட வப்பெரு மான்தனித் தொண்டர்கள்
நீண்ட தொல்புக ழார்தந் நிலைமையை
ஈண்டு வாழ்த்துகேன் என்னறிந் தேத்துகேன். **#145**

மேற்கூறிய திருவேடமே அன்றித் தாம் வேண்டு மாறு விரும்பி ஏற்றுக் கொள்ளும் பல்வேறு படிவங்களையுமுடையர். தியாகராசப் பெருமானின் ஒப்பற்ற தொண்டர்களாகிய நீட்டித்த பழமையான புகழ் உடையார்கள் தன்மையை இவ்விடத்துப் போற்று கின்ற யான், அவர்கட்குரிய முழுமையான பெருமைகளை எவ் வகையில் அறிந்து வாழ்த்துவேன்? முற்றவும் அறிந்து வாழ்த்த கில்லேன் என்பதாம்.

விளக்கவுரை

அடியவர்கள் மேற்கூறியவாறு கொள்ளும் கோலத்தரா யன்றிப் பிறவாறும் வேடம் கொண்டிருப்பர். எனினும் அவர்கள் எந் நிலையில்

நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னிய சீர்ச் சங்கரன் தாள் மறவாமையைக் கடப்பாடாகக் கொண்டிருப்பர். திருமூலர், சாக்கியர் முதலிய அடியவர்களின் வரலாறுகளை நினைவு கூர்க. அவர் புகழ் ஒருகாலஎல்லையிலோ சொல் அளவிலோ கூறத் தக்கதன்று. விரிக்கில் பெருகும்; சுருக்கில் எஞ்சும். ஆதலின், அதனை `நீண்ட தொல் புகழ்` என்றார். வாழ்த்துகேன் - வாழ்த்துகின்றவனாகிய யான், அச்சொல் என்னறிந்து ஏத்துகேன் என்பதனோடு இயைந்து பொருள்கொள நின்றது. வேண்டுமாறு விருப்புறும் வேடத்தர் என்பதை இறைவற்கு உரித்தாக்குவாரும் உளர். `பலபல வேடமாகும் பரனாரி பாகன்` என்றல் தொடக்கத்தனவாய திருவாக்குகளைக் காண்க.

இந்த மாதவர் கூட்டத்தை யெம்பிரான்
அந்த மில்புகழ் ஆலால சுந்தரன்
சுந்த ரத்திருத் தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ணம் உரைசெய்வாம். **#146**

இத்தகைய பெருமை வாய்ந்த அடியவர்களின் திருக் கூட்டத்தை, எம் தலைவரும் அளவற்ற புகழுடையவரும் ஆன ஆலாலசுந்தரர், திருக்கயிலையினின்றும் இம்மண்ணுலகிற்கு வந்து அழகிய திருத்தொண்டத் தொகை என்னும் தமிழ்ப் பதிகத்தில் வைத்துப் பாடிய வகைமையை இனிச் சொல்லுவாம்.

விளக்கவுரை

வந்து - `ஆரூரில் வருக நம்பால்` எனப் பெருமானார் அழைக்கத் திருவாரூருக்கு வந்து எனக் கோடலும் ஒன்று என்பர் சிவக் கவிமணியார் (பெரிய. பு. உரை). திருத்தொண்டத்தொகை அருளிய இடம் ஆரூர் ஆதலின் அவ்வாறு கொள்ளுதலும் ஏற்புடைத்தேயாம். இத்திருத் தொண்டத்தொகையைச் சுந்தரத் தமிழ் எனச் சேக்கிழார் குறித்தமையின், அந்த வகைமையில் பாடிய திருத்தொண்டர் புராணமும் தனித்தமிழேயாம். பக்த விலாசம் என்னும் வடமொழி நூலின் மொழிபெயர்ப்பல்ல என்பர் சிவக்கவிமணியார் (பெரிய. பு. உரை).

கங்கையும் மதியும் பாம்புங்
கடுக்கையு முடிமேல் வைத்த
அங்கணர் ஓலை காட்டி
ஆண்டவர் தமக்கு நாடு
மங்கையர் வதன சீத
மதியிரு மருங்கு மோடிச்
செங்கயல் குழைகள் நாடுந்
திருமுனைப் பாடி நாடு. **#147**

கங்கையையும், பிறையையும், பாம்பையும், கொன்றை மாலையையும்,

திருமுடியின்மேல் வைத்த சிவபெருமான், ஆவண ஓலையைக் காட்டி அடிமை கொண்ட நம்பியாரூரரின் நாடு, மகளிருடைய முகமாகிய குளிர்ந்த நிறைமதியின் இருபக்கத்தும் அவர் கண்களாகிய கயல் மீன்கள் தாவி அவர் காதுகளை அடையும் திருமுனைப்பாடி நாடாம்.

விளக்கவுரை

மகளிரின் கண்கள் அவர்கள் காதுவரை ஓடி மீளும் என்றல் இலக்கிய மரபாம். ``காதளவும் நீண்டுலவும் கண்`` *(தண்டி.மேற்)* `காதளவா வெங்கடுவளவா ஒளிர் காவியந்தண் போதளவா விழி` *(தஞ்சை. கோவை, 46)* எனவரும் இலக்கிய வழக்கும் காண்க. கடுக்கை - கொன்றை. வதனமதி - முகமாகிய மதி. திரு முனைப் பாடி நாடு - இது கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பகுதியாகும். முனைய தரையர், முனையரையர், முனையர் எனவரும் மரபினர் ஆண்ட பகுதியாதலின் இப்பெயர் பெற்றது. அந்நாட்டில் ஆரூரர் காலத்தில் வாழ்ந்த அரசர் நரசிங்கமுனையரையர் *(கி.பி.840-865)* ஆவர்.

பெருகிய நலத்தால் மிக்க
பெருந்திரு நாடு தன்னில்
அருமறைச் சைவ மோங்க
அருளினால் அவத ரித்த
மருவிய தவத்தான் மிக்க
வளம்பதி வாய்மை குன்றாத்
திருமறை யவர்கள் நீடுந்
திருநாவ லூரா மன்றே. **#148**

நிறைந்த பல வளங்களால் மேம்பட்ட பெருமை மிகுந்த அத்திருமுனைப்பாடி நாட்டில், அரிய மறைகளின் பிழிவாக விளங்கும் சைவநெறி மேன்மேலும் செழிக்க, சிவபெருமானின் திருவருளினால் நம்பியாரூரர் தோன்றுதற்கு இடனாக விளங்கும் மேதக்க தவம் நிறைந்ததும், மேம்பட்ட நலங்களை உடையதும் ஆகிய திருப்பதி, மெய்ந்நெறியினின்றும் வழுவாத மறையவர்கள் மிக்கிருக் கும் திருநாவலூர் என்னும் திருப்பதியாகும்.

விளக்கவுரை

ஒரு நாட்டின் வளம் அங்குள்ள நிலத்தானும், நீரானும் மட்டும் அமைவதன்று; அங்குள்ள பெருமக்களாலும் அமைவதாகும். `எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே` *(புறநா. 187),* `ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழுமூரே` *(புறநா. 191)* என்றற் றொடக்கத்தனவாய கூற்றுக்களையும் காண்க. இவ்வகையில் திருமுறை ஆசிரியராகிய இவரும், நாவரசரும்

தோன்றியதும், சந்தான ஆசிரியர்களில் மெய்கண்டார், அருணந்தி சிவாசாரியார் ஆகிய இருவரும் தோன்றியதும் ஆன பெருமை இந்நாட்டிற்கு உண்டு. நாவலூரர் தோன்றவும், மறை வல்லுநர்கள் வாழவும் இடனாக விளங்குவது திருநாவலூர் என இப்பாடல் இருவகையானும் சிறப்பித் துள்ளமை அறியத்தக்கதாம். அருமறைச் சைவம் - அரிய மறைகளின் முடிபாக விளங்கும் சைவம்; `வேதப் பயனாம் சைவமும்` *(தி.12 பு.20 பா.9)* எனப் பின்னர் வருதலும் காண்க. அன்று, ஏ என்பன அசை நிலைகள்.

மாதொரு பாக னார்க்கு
வழிவழி யடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி
மேம்படு சடைய னாருக்கு
ஏதமில் கற்பின் வாழ்க்கை
மனையிசை ஞானி யார்பால்
தீதகன் றுலகம் உய்யத்
திருவவ தாரஞ் செய்தார். **#149**

உமையம்மையாரை ஒரு கூற்றில் கொண்ட சிவபெருமானுக்கு வழிவழியாக அகத்தடிமை செய்து ஒழுகும் ஆதி சைவர் குலத்தில் தோன்றிய மேம்பட்ட சடையனாருக்குக், குற்றமற்ற கற்பினை உடைய வாழ்க்கைத் துணைவியாராகிய இசைஞானியா ரிடத்து, உலகிலுள்ள உயிர்கள் யாவும் தீநெறியினின்றும் நீங்கி நன்னெறி அடைய ஒரு பெருமகனார் தோன்றியருளினார்.

விளக்கவுரை

தாய் தந்தை ஆகிய இருவர்தம் மரபில் வந்த முன்னோர்களும் இறைவற்கு அடிமை செய்து வந்தவர்கள் ஆதலின் வழியடிமை என்னாது `வழிவழியடிமை` என்றார். `இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி` *(தி.11 திருமுரு. வரி.178)* என நக்கீரர் சிறப்பிப்பதும் காண்க. `மழவிடை யாற்கு வழிவழி ஆளாய்` *(தி.9 ப.29 பா. 11)* என்னும் திருப்பல்லாண்டும். இறைவனை அகத்தும் புறத்தும் வைத்து வழிபடும் உரிமையும் தகுதியும் உடையவர்கள் ஆதிசைவ மரபினர் ஆவர். திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவரை நாள் வழிபாட்டிலும், சிறப்பு வழிபாட்டிலும், தீண்டி வழிபடும்பேறும் இவர்கட்குண்டு. அம்மரபில் தோன்றியவர் சடையனார் என்பார் `மேம்படு சடையனார்` என்றார். ஏதம் இல் கற்பு - குற்றம் தீர்ந்த கற்பு; அறக்கற்பு. `மறுவில் கற்பின் வாள்நுதல் கணவன்` *(தி.11 திருமுரு. வரி 6)* எனவரும் நக்கீரர் கூற்றும் காண்க. கமலாபுரத்தில் *(திருவாரூரில்)* சிவகோதம கோத்திரத்தில் ஞான சிவாசாரியார் குடும்பத்தில் தோன்றியவர் இவர்

என்பது கல்வெட்டுக்களால் அறியப் படுவ தொன்றாம். *(73 of 95. S.I.I. Vol & Vol 11. p. 153)*

தம்பிரா னருளி னாலே
தவத்தினால் மிக்கோர் போற்றும்
நம்பியா ரூர ரென்றே
நாமமுஞ் சாற்றி மிக்க
ஐம்படைச் சதங்கை சாத்தி
அணிமணிச் சுட்டி சாத்திச்
செம்பொன்நாண் அரையில் மின்னத்
தெருவில்தேர் உருட்டு நாளில். **#150**

இவ்வாறு சிவபெருமான் திருவருளினாலே தோன் றிய அவருக்கு, தவத்தின் நிலையில் மேம்பட்டோரும் போற்றத் தக்க நம்பியாரூரர் எனும் பெயரிட்டு, மேதக்க ஐம்படையையும், சதங்கை யையும் முறையே மார்பிலும், காலிலும் அணிவித்து அழகிய இரத்தினச் சுட்டியை நெற்றியில் தாழுமாறு தலையில் சூட்டி, சிவந்த பொன்னாலாய அரை ஞாணை இடுப்பில் விளங்க அணிவித்து, திகழும் அவர், வீதியில் சிறுதேர் உருட்டி விளையாடும் நாள்களில் (ஒருநாள்).

விளக்கவுரை

ஐம்படை - திருமாலின் கரங்களில் விளங்கும் ஐந்து படைகளாய சங்கு, உருள் *(சக்கரம்),* வாள், கதை, கத்தி ஆகிய ஐந்தின் வடிவாகச் செய்யப்பட்ட அணி. இவற்றை மார்பில் கோத்து அணிவது மரபு. சதங்கை - இடையிலும் காலிலும் அணிவது. ஐம்படைச் சதங்கை - உம்மைத் தொகை.

நரசிங்க முனையர் என்னும்
நாடுவாழ் அரசர் கண்டு
பரவருங் காதல் கூர
பயந்தவர் தம்பாற் சென்று
விரவிய நண்பி னாலே
வேண்டினர் பெற்றுத் தங்கள்
அரசிளங் குமரற் கேற்ப
அன்பினால் மகன்மை கொண்டார் **#151**

அந்நாட்டு அரசராய நரசிங்க முனையர் என்பார், அந்நம்பியாரூரரைப் பார்த்துச் சொலற்கரிய ஆசை மிகுதியால், அவர் தந்தையாராகிய சடையனாரிடத்துச் சென்று, அவருக்கும் தமக்கும் இருக்கும் நட்பு மிகுதியால், அந்நம்பியாரூரரை வேண்டிப் பெற்றுக் கொண்டு, தம்மரபில் பிறந்த இளவரசருக்குச் செய்யும் சிறப்புக்களை யெல்லாம் செய்து, அன்போடு தம் மகனாராக வளர்த்து வந்தார்.

விளக்கவுரை

நரசிங்க முனையர்: இம்மரபினர் சிற்றரசர்களாகவும், சோழப் பேரரசின் அமைச்சர்களாகவும் விளங்கியவர்கள். `பலர் முடிமேல் - ஆர்க்குங் கழற் காலனகன் றனதவையுட் பார்க்குமதி மந்திர பாலகரிற் போர்க்குத் தொடுக்குங் கமழ் தும்பை தூசினொடுஞ் சூடிக் கொடுத்த புகழ்முனையர் கோனும்` (விக். உலா வரி, *140-142)* என வரும் விக்கிரம சோழனுலாவால் இம் மரபினர் அமைச்சராய் இருந் தமை அறியலாம். இவர் பல்லவ மன்னனாகிய கழற்சிங்கர் காலத்தில் வாழ்ந்த சிற்றரசர் ஆவர். பரவ அரும் - சொல்லுதற்கரிய. பயந்தவர் - பெற்றோர். விரவிய நண்பு - மனம் கலந்த அன்பு. நரசிங்க முனையருக்கும் சடையனாருக்கும் இருந்த நட்புரிமை இதனால் தெரிகிறது. வேண்டினர் பெற்று - நரசிங்கமுனையரின் வேண்டு கோட்கு இணங்கச் சடையனாரால் கொடுக்கப் பெற்று. மகன்மை - மகனாகக் கொள்ளும் உரிமை. இக்காலத்தில் இதனைச் சுவிகாரம், தத்து எடுத்தல் என்றெல் லாம் கூறுப. இவற்றிற்கு எல்லாம் மேலாகத் தெளிவும், இனிமையும் தோன்ற இச் சொல்லாட்சி அமைந்துள்ளது. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பெருமைசா லரசர் காதற்
பிள்ளையாய்ப் பின்னுந் தங்கள்
வருமுறை மரபின் வைகி
வளர்ந்துமங் கலஞ்செய் கோலத்
தருமறை முந்நூல் சாத்தி
யளவில்தொல் கலைகள் ஆய்ந்து
திருமலி சிறப்பின் ஓங்கிச்
சீர்மணப் பருவஞ் சேர்ந்தார். **#152**

பெருமை மிகுந்த அந்நரசிங்க முனையரின் பேரன்புக்குரிய திருமகனாராய் வாழ்ந்து வருவதோடு, அதன் பின்னும் தம்முடைய ஆதிசைவ மரபில் கொண்டு ஒழுகத் தகும் ஒழுக்கங்களையும் கொண்டு வளர்ந்து, முந்நூல் அணியும் காலம் வர, அதனையும் அம்மரபு வழி நின்று ஏற்று, எண்ணிறந்த மறை முதலாய நூல்களையும் கற்றுத் தெளிந்து, செல்வம் தழைய நிற்கும் சிறப்பைப் பெற்றுச் சிறப்புமிக்க திருமணப் பருவத்தை அடைந்தார்.

விளக்கவுரை

அரசர் மரபில் வளர்ந்தும், ஆதி சைவ நெறியை விடாது பின்பற்றி வளரவும், வளர்க்கப்பட்டதும் ஆய அருமை எண்ணற் குரியதாம். முந்நூல் அணிதலை உபநயனம் என்பர். உபநயனம் - மேலும் பெறும்கண். முன்னரே உள்ள இருகண்களுடன், புருவ நடுவில்

இறைவனை இடையறாது எண்ணுவதால் திறக்கப்படும் கண் இதுவாகும். காயத்திரி மந்திரத்தையருளி இம்முந்நூலையும் அணிவர். காயத்திரி - வினைவிளைவையறுத்து மேலும் பிறப்பில்லா தாக்குவது. இம் மந்திரத்தால் குறிக்கப் பெறுபவர் சிவபெரு மானேயாவர்.

தந்தையார் சடைய னார்தம்
தனித்திரு மகற்குச் சைவ
அந்தணர் குலத்துள் தங்கள்
அரும்பெரும் மரபுக் கேற்ப
வந்ததொல் சிறப்பில் புத்தூர்ச்
சடங்கவி மறையோன் தன்பால்
செந்திரு வனைய கன்னி
மணத்திறஞ் செப்பி விட்டார். **#153**

தந்தையாராகிய சடையனார் தம் ஒப்பற்ற திருமகனாருக்கு, ஆதிசைவ குலத்தில், தம் அரும்பெரும் மரபிற்கு ஏற்ப வழிவழியாக வாழ்ந்து வரும் சிறப்புடைய புத்தூரில் வாழும் சடங்கவி சிவாசாரியாரிடத்துச் சிவந்த திருமகளை ஒப்பத் தோன்றி யிருக்கும் மகளாரைத் திருமணம் செய்தற்குத் தக்கோர் வாயிலாகக் கேட்டு அனுப்பினார்.

விளக்கவுரை

சடங்கவி எனப் பாடலில் இருப்பினும், சடங்கவியார் எனக் கோடலே நம் மரபுக்குப் பொருந்துவதாகும். அதற்கு ஏற்பவே, பின்னும் முகத்தர், இசைந்தார் எனக் கொள்ளப்பெற்றன. சிவக்கவிமணியாரும் (பெரிய. பு. உரை) இங்ஙனமே பொருள் உரைத்துள்ளார்.

குலமுத லறிவின் மிக்கார்
கோத்திர முறையுந் தேர்ந்தார்
நலமிகு முதியோர் சொல்லச்
சடங்கவி நன்மை யேற்று
மலர்தரு முகத்த னாகி
மணம்புரி செயலின் வாய்மை
பலவுடன் பேசி ஒத்த
பண்பினால் அன்பு நேர்ந்தான். **#154**

தம் குலத்திற்குரியோரை வழிவழியாக அறிந்து வரும் மரபினையுடைய அறிவு மிக்கோரும், கோத்திரங்களின் வரலாற்றை நன்கு உணர்ந்தவருமாகிய நலம் பொருந்திய தம் சுற்றத்தாருள் முதிய பெரியவர்கள் சொல்ல, சடங்கவியாரும் அவ் வுறவு தமக்கு நன்மை உடையது என ஏற்று, மகிழ்ச்சி பொருந்திய முகத்தராகி, திருமணம் செய்தற்குரிய முறைமைகள் பலவற்றையும் ஒருங்கு பேசி முடித்து, தம் மகட்கும் வரும் மணவாளருக்கும் உரிய ஒத்த பண்புகள் உளவாதலைக்

கண்டு தம் மகளைக் கொடுக்க இசைந்தார்.

விளக்கவுரை

குலம் - ஒழுக்கத்தால் சிறந்துவரும் இயல்புடைமை. `ஒழுக்கம் உடைமை குடிமை` *(குறள், 133)*, `குலஞ் சுடும் கொள்கை பிழைப்பின்` *(குறள், 1019)* எனவரும் திருக்குறட் பாக்களையும் காண்க. `கோத்திரம் - இதனுள் வரும் சில பிரிவு. ஆதி சைவருக்குரிய கோத்திரங்கள் ஐவகைப்படும் என்பர். அவை: கௌசிகர், காசிபர், பரத்துவாசர், கௌதமர், அகத்தியர் என்னும் ஐந்து இருடிகளின் பெயர்களால் வரும் கோத்திரங்களாம். இக்கோத்திரங்கள் ஒவ்வொன் றின் வழித்தோன்றிய கிளைக் கோத்திரங்களும் உள என்பர். ஒரே கோத்திரத்தில் மகட்கோடல் தகாது என்பர். ஒத்த பண்பு - தலைமகனுக் கும் தலைமகளுக்கும் உரிய ஒத்த பண்பு. `பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு, உருவு நிறுத்த காம வாயில், நிறையே அருளே உணர்வொடு திருவென, முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே` *(தொல்.மெய்ப்.25)*, என்னும் தொல்காப்பியமும்.

பிறப்பு - குடிப்பிறப்பு. குடிமை - அதற்குத்தக்க ஒழுக்கமுடைமை. ஆண்மை - ஆளும் தன்மை: பெண்டிரும் ஆடவரும் தத்தமக்குரிய பண்பை என்றும் இழக்காது ஆளும் தன்மை: தம் குடியை ஆளும் ஆற்றல். ஆண்டு - பெண்மை பிறத்தற்கு ஏதுவாய பன்னீராண்டும், ஆண்மை பிறத்தற் கேதுவாய பதினாறாண்டுமாக அமைதல். உரு - பிறழ்ச்சியின்றியமைந்த வடிவு. நிறுத்த காம வாயில்- பெண்மை வடிவும் ஆண்மை வடிவும் அங்ஙனம் பிறழ்ச்சியின்றி அமைந்த வழி அவற்று மேல் நிகழும் இன்பத்திற்கு வாயிலாகிய அன்பு. நிறை - மறை பிறரறியாமை நெஞ்சினை நிறுத்துதல். அருள் - எவ்வுயிர்க்கும் இடுக் கண் செய்யாத அருள் உடைமை. உணர்வு - உலகியலால் செய்யத் தக்கதும் தவிரத் தக்கதுமாயவற்றை அறிதல். திரு - பொருளுடை மையும் பொருள் கொணர்ந்து துய்த்தலுமின்றி எஞ்ஞான்றும் திருத்தகவிற்றாயதோர் உள்ள நிகழ்ச்சி *(தொல். மெய். 25)* எனவரும் பேராசிரியர் உரையும் இங்கே கருதத் தக்கதாம்.மணம்புரி செயலின் வாய்மை - திருமணத்திற்குரிய நாள், இடம், மணநாளுக்கு முன்னும் பின்னும் செய்து கொள்ளும் செயல் வகைகள், சிறப்பு வகைகள் முதலியன.

மற்றவன் இசைந்த வார்த்தை
கேட்டவர் வள்ளல் தன்னைப்
பெற்றவர் தம்பால் சென்று
சொன்னபின் பெருகு சிந்தை
உற்றதோர் மகிழ்ச்சி யெய்தி

மணவினை உவந்து சாற்றிக்
கொற்றவர் திருவுக் கேற்பக்
குறித்துநாள் ஓலை விட்டார். **#155**

சடங்கவியார், தம் மகளைக் கொடுக்க இசைந்து கூறிய சொற்களைக் கேட்டவர்கள், நம்பியாரூரரைப் பெற்ற தந்தை யாராகிய சடையனாரிடத்தில் சென்று கூறிய பின்பு, எஞ்ஞான்றுமே மகிழ்ச்சி மீக்கூர இருக்கும் மனத்தின்கண், மேலும் ஒப்பற்ற மகிழ்ச்சியைப் பெற்று, அத்திருமணச் செயலை மகிழ்வோடு சுற்றத்தாரிடம் கூறித், தம் மகனார் அரசிளம் செல்வராக வளர்தற்கு ஏற்பத் திருமணச் செய்கையை உறுதி செய்து, அதற்குரிய திருமண ஓலையையும் அனுப்பினார்.

விளக்கவுரை

வள்ளல் - நம்பியாரூரர்; இறைவன்பால் தாம் பெற்ற பேரருள் திறத்தை வழிவழியாகப் பின்னுள்ளோரும் தம் திரு வாக்கின்வழிப் பெற அருளிய வள்ளன்மை கண்டு `வள்ளல்` என்றார். பெருகு சிந்தை - மகிழ்ச்சியால் என்றும் வளர்ந்து வரும் சிந்தை. கொற்றவர் திருவுக்கேற்ப - நரசிங்க முனையரிடத்து வளர்ந்ததற் கேற்ற செல்வப் பெருக்கு. எனவே திருமணம் அரசியல் திருவிற்கு ஏற்ப நடத்த மனம் கொண்டனர் என்பது கருத்து.

மங்கலம் பொலியச் செய்த
மணவினை ஓலை ஏந்தி
அங்கயற் கண்ணி னாரும்
ஆடவர் பலரும் ஈண்டிக்
கொங்கலர்ச் சோலை மூதூர்
குறுகினா ரெதிரே வந்து
பங்கய வதனி மாரும்
மைந்தரும் பணிந்து கொண்டார். **#156**

மங்கலம் பெருகுமாறு எழுதிய அம்மண வோலையை எடுத்துக் கொண்டு, அழகிய கயல் போலும் கண்களை உடைய மகளிரும், ஆடவர் பலருமாக ஒருங்கு கூடி, நறுமணம் உடையதாகிய மலர்களை உடைய சோலை சூழ்ந்த புத்தூருக்குச் சென்றார்கள். அவர்களை எதிர்கொண்டு வந்த சடங்கவியாரின் உறவினர்களாய தாமரை போலும் முகத்தை உடைய பெண்களும் ஆட வர்களும் அம் மணவோலையை வணங்கி வாங்கிக் கொண்டார்கள்.

விளக்கவுரை

மங்கல ஒலிகள் முழங்க மணவோலையைப் பொற்கலத்தில் வைத்துப் பூம்பட்டால் மூடி, மஞ்சள் பூசி எடுத்துச் செல்லுதல் மரபாதலின்

`மங்கலம் பொலியச் செய்த மணவினை ஓலை` என்றார். கொங்கு - நறுமணம்.

மகிழ்ச்சியால் மணமீக் கூறி
மங்கல வினைக ளெல்லாம்
புகழ்ச்சியாற் பொலிந்து தோன்றப்
போற்றிய தொழில ராகி
இகழ்ச்சியொன் றானும் இன்றி
ஏந்துபூ மாலைப் பந்தர்
நிகழ்ச்சியின் மைந்தர் ஈண்டி
நீள்முளை சாத்தி னார்கள். **#157**

மகிழ்ச்சியோடு அத்திருமணத்தை யாவரும் அறிய எடுத்துக்கூறி, அதன் தொடர்பாகச் செயத்தகும் மங்கலத் தொழில்களெல்லாம் புகழ் பொருந்தப் பொலிந்து விளங்க, அதனை விருப்புற்றுச் செய்யும் செயற்பாடு உடையவர்களாய், ஒன்றாலும் குறைவின்றித் தொங்கவிடப்பட்ட பூமாலைகளையுடைய பந்தலி னிடத்து மனக்கிளர்ச்சியோடு மறையவர்கள் அனைவரும் ஒருங்கு கூடி முளையிட்டுத் தொடங்கி வைத்தார்கள்.

விளக்கவுரை

முளை விளைத்தலாவது, பின் நிகழவிருக்கும் மங்கலச் செயல்களுக்கெல்லாம் தொடக்கமாகச் சந்திரனைத் தலைமையாக வைத்த கும்பத்தின் அருகில், பாலிற் கலந்த ஒன்பான் தானியங்களை, மந்திரங்களோடு புற்றுமண்ணிட்டு வைத்திருக்கும் கலங்களில் பெய்து, அவற்றை வளருமாறு செய்தலாம். இம்முளைகளின் வளர்ச்சி, மணமக்களுக்குப் பின்வரும் நலங்களுக்கு அறிகுறியாகக் கருதப் பெறும். இது மணநாளுக்கு முன் ஏழாம் நாளில் செய்யப்படுவதாகும்.

மணவினைக் கமைந்த செய்கை
மாதினைப் பயந்தார் செய்யத்
துணர்மலர்க் கோதைத் தாமச்
சுரும்பணை தோளி னானைப்
புணர்மணத் திருநாள் முன்னாட்
பொருந்திய விதியி னாலே
பணைமுர சியம்ப வாழ்த்திப்
பைம்பொன்நாண் காப்புச் சேர்த்தார். **#158**

இவ்வாறு அத்திருமணச் செயலுக்கு அமைந்த செயல்களை மணமகளைப் பயந்த சடங்கவியாரும், அவர்தம் உறவினரும் செய்ய, வண்டுகள் மொய்க்கின்ற கொத்தாக மலர்ந்த மலர்களால் கட்டப்பட்ட கோதையாகிய மாலையை அணிந்த தோள்களை உடைய

நம்பியாரூரரை, மணமக்கள் இருவரும் தம் மனம் கலத்தற்குரிய மணவிழாவிற்கு முன்னாளில், அறநூல் வகுத்திருக்கும் நியதியின் வண்ணம், பருத்த முரசுகள் ஒலிக்குமாறு வாழ்த்துதல் செய்து, பசிய பொன்னாலாகிய நாணை அவரைக் காக்குமாறு கையில் கட்டினார்கள்.

விளக்கவுரை

புணர்மணம் - மணமக்கள் இருவரும் தம் மனம் கலத்தற்கு ஏதுவாகிய திருமணம். திருமணத்திற்கு முதல்நாளில் மணமக்கள் இருவர்க்கும் எத்தகைய தீங்கும் அணுகாதவாறு காத்தற்குத் தனித்தனியாக அவரவர் வீட்டிலும் காப்பு நாணை அணிவர். மணமகனுக்கு வலக் கையிலும், மணமகளுக்கு இடக் கையிலும் காப்பு நாண் கட்டல் மரபு.

மாமறை விதிவ ழாமல்
மணத்துறைக் கடன்க ளாற்றித்
தூமறை மூதூர்க் கங்குல்
மங்கலந் துவன்றி ஆர்ப்பத்
தேமரு தொடையல் மார்பன்
திருமணக் கோலங் காணக்
காமுறு மனத்தான் போலக்
கதிரவ னுதயஞ் செய்தான். **#159**

பெருமை பொருந்திய மறை நெறிக்கு மாறாகாமல் திருமணத்திற்குரிய செயற்பாடுகளை எல்லாம் முழுமையாகச் செய்து, தூய மறை ஒலிக்கும் பழமையினை உடைய அத்திருநாவலூரில், முதல் நாள் இரவில், மங்கலம் நிறைந்த இயங்கள் ஒலிக்க, மறுநாட்காலை, தேன் பொருந்திய மாலையை அணிந்த மார்பினராய நம்பியாரூரரின் திருமணக் கோலத்தைக் காண்டற்குப் பெருவிருப்பு டைய மனம் உடையவன் போலக் கதிரவனும் தோன்றினன்.

விளக்கவுரை

தேமரு தொடையல் - தேன் மருவிய மாலை.

காலைசெய் வினைகள் முற்றிக்
கணிதநூற் புலவர் சொன்ன
வேலைவந் தணையு முன்னர்
விதிமணக் கோலங் கொள்வான்
நூலசைந் திலங்கு மார்பின்
நுணங்கிய கேள்வி மேலோன்
மாலையுந் தாரும் பொங்க
மஞ்சனச் சாலை புக்கான். **#160**

திருமண நாளன்று வைகறைப் போதில் செயத்தகும் நாள் கடன்களை

முடித்துச், சோதிடம் வல்லார் வரையறுத்த திருமணம் செய்தற்குரிய நேரம் வரும் முன்னே, மணக்கோலம் கொள்ளுதற்குரிய நெறியில், நூலணிந்த மார்பினரும், நுணங்கிய கேள்வியில் மிக்கு உயர்ந்தவருமாகிய நம்பியாரூரர், மணிமாலையும் மலர் மாலையும் விளங்க, நீராடுதற்குரிய இடத்தை அடைந்தார்.

விளக்கவுரை

நாள் கடன்களாவன: அநுட்டானமும் சிவ வழிபாடு மாகும். இவை என்றும் செய்யத்தக்கனவாதலின் இவற்றை வைகறை யில் செய்தார். இனித் திருமண நாளாதலின் அதற்குரிய சிறப்பு ஒழுக்கங்களை மேற்கொள்வார் மீண்டும் நீராடப் புகுந்தார்.

வாசநெய் யூட்டி மிக்க
மலர்விரை யடுத்த தூநீர்ப்
பாசனத் தமைந்த பாங்கர்ப்
பருமணிப் பைம்பொன் திண்கால்
ஆசனத் தணிநீ ராட்டி
அரிசனஞ் சாத்தி யன்பால்
ஈசனுக் கினியான் மேனி
எழில்பெற விளக்கி னார்கள். **#161**

மணம் கமழ்கின்ற நெய்ப்புகை ஊட்டப் பெற்றதும், உயர்ந்த மலர்களின் மணம் விரவியதுமான தூய நீரை உடைய கலத்தின் அருகில், வைத்த பருத்த முழு மணிகளை அழுத்திய பசிய பொன்னாலாகிய வலிய கால்களை உடைய இருக்கைமீது இருத்தி, அழகிய நீரால் திருமுழுக்காட்டி, கத்தூரி மஞ்சள் விரவிய நறுமணப் பொடியைப் பூசிச், சிவபெருமானுக்கு அன்பு செய்தலில் இனியராக விளங்கும் நம்பியாரூரர் திருமேனியை, அவர்தம் சுற்றத்தார்கள் மேலும் அழகுபெறச் செய்தார்கள்.

விளக்கவுரை

நெய் - அதன் புகையைக் குறித்தமையின் ஆகு பெயராம். அரிசனம் - கத்தூரி மஞ்சள் கலந்த நறுமணத் தூள். நீர்ப் பாசனம் - நீரை உடைய கலம் (பாத்திரம்). நீர்க்கு வாசனை ஊட்டும் மலர்கள் பாதிரி, சண்பகம் முதலியனவாம் என்பர்.

அகில்விரைத் தூப மேய்ந்த
அணிகொள்பட் டாடை சாத்தி
முகில்நுழை மதியம் போலக்
கைவலான் முன்கை சூழ்ந்த
துகில்கொடு குஞ்சி ஈரம்

புலர்த்தித்தன் தூய செங்கை
உகிர்நுதி முறையில் போக்கி
ஒளிர்நறுஞ் சிகழி ஆர்த்தான். **#162**

அகிலின் நறுமணமுடைய புகையை ஊட்டிய அழகிய பட்டாடையை உடுத்தி, மேகத்தினிடத்து நுழைகின்ற சந்திரனைப் போல, அழகுபடுத்தும் ஒப்பனைத் தொழிலில் வல்லவன் தன் முன்கையினிடத்துச் சுற்றிய ஆடையால் குடுமியின் ஈரத்தை உலரச் செய்து, தன் தூய்மையான சிவந்த கையிடத்து உள்ள நக நுனிகளால், அத்தலைமயிரின் பிணிப்பை விலக்கி, விளங்குகின்ற நறுமணத்தை உடைய குடுமியை முடித்துக் கட்டினான்.

விளக்கவுரை

ஈரம் புலர்த்திச் சிக்கறுத்துச் சிகழி *(குடுமி)*யை முடித்துக் கட்டினான். குடுமியின் கருமையும் அதனைப் புலர்த்தும் ஆடையின் வெண்மையும் தோன்ற `முகில் நுழை மதியம் போல` என்றார். கைவலான் - உடலை அழகுபடுத்துவதில் வல்லமை உடைய ஒப்ப னைத் தொழிலாளன். உகிர் - நகம். சிகழி - குடுமி.

தூநறும் பசுங்கர்ப் பூரச்
சுண்ணத்தால் வண்ணப் போதில்
ஆனதண் பனிநீர் கூட்டி
யமைத்தசந் தனச்சே றாட்டி
மான்மதச் சாந்து தோய்ந்த
மங்கலக் கலவை சாத்திப்
பான்மறை முந்நூல் மின்னப்
பவித்திரஞ் சிறந்த கையான். **#163**

அவ்வழகுபடுத்தும் தொழில் வல்லாளனால் தூய நறுமணம் உடைய பச்சைக் கற்பூரத்தின் பொடியோடு, அழகிய பல்வேறு மலர்களில் உண்டான குளிர்ந்த பனி நீரைச் சேர்த்துக் கூட்டிய சந்தனக் குழம்பால் ஆட்டப்பட்டு, கத்தூரிக் குழம்பு சேர்த்த மங்கலமான கலவைச் சாந்தும் சாத்தப் பெற்று, முறைப்படி அமைக்கப் பெற்ற முந்நூல் மார்பினில் விளங்க, தருப்பையினாலாகிய மோதிரம் விளங்க நம்பியாரூரர்...,

விளக்கவுரை

சுண்ணம் - பொடி. பால்முறை முந்நூல் - மறை நூல்களில் கூறிய முறையில் அமைக்கப்பட்ட முந்நூல். `ஒன்பது கொண்ட மூன்று புரிநுண்ஞாண்`*(தி.11 திருமுரு. திருவேரகம்,7)* எனக் கூறுதற்கு ஏற்ப, மந்திர விதி கொண்டு அமைக்கப்பட்ட முந்நூல் மார்பினில் விளங்கியது. பவித்திரம் - மோதிரம்.

தூமலர்ப் பிணையல் மாலை
துணரிணர்க் கண்ணி கோதை
தாமமென் றினைய வேறு
தகுதியால் அமையச் சாத்தி
மாமணி யணிந்த தூய
வளரொளி இருள்கால் சீக்கும்
நாமநீள் கலன்கள் சாத்தி
நன்மணக் கோலங் கொண்டான். **#164**

தூய மலர்களால் தொகுக்கப்பெற்ற பிணையல் மாலையையும், செறிந்த பூங்கொத்துக்களாலாய கொண்டை மாலையையும், கோதையையும், பத்தி மாலையையும், இனையபல வேறுபாடுகளையுடைய மாலைகளையும், மாணிக்கங்கள் அழுத்திய தூய ஒளியால் இருளை ஓட்டும் புகழ்பெற்ற வேறுபிற அணிகலன் களையும் அணியத் தக்க இடங்களில் அணிவிப்ப அணிந்து, அழகிய திருமணக் கோலத்தைக் கொண்டார்.

விளக்கவுரை

பிணையல் மாலை - மலர்களின் தாள் இரண்டையும் ஒருங்கு சேர்த்துக் கட்டப்பெற்ற மாலை. கண்ணி - தலையில் அணியும் மாலை. கோதை - நீளமாகக் கட்டும் மாலை. தாமம் - பல்வேறு மலர் களைப் பத்திபத்தியாக வைத்துக் கட்டும் மாலை. இண்டை மாலை - வட்ட வடிவாய் இறுகக் கட்டியதாய்த் தலை மீது அணியத்தக்க மாலை. கண்ணி என்பது தலை மயிரை முடித்துக் கட்டியிருக்கும் கொண்டை யைச் சுற்றி அணியும் மாலையாகும்.

தாமம் என்பது தோளில் அணிவதாகும். பிணையல், மாலை என்பன மார்பில் அணியத் தக்கவையாம். இவற்றின் விரிவை முருக நாயனார் புராணத்துட் *(தி.12 பு.16)* காண்க. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மன்னவர் திருவுந் தங்கள்
வைதிகத் திருவும் பொங்க
நன்னகர் விழவு கொள்ள
நம்பியா ரூரர் நாதன்
தன்னடி மனத்துள் கொண்டு
தகுந்திரு நீறு சாத்திப்
பொன்னணி மணியார் யோகப்
புரவிமேற் கொண்டு போந்தார். **#165**

அரசர்க்குரிய செல்வமும், மறைவழிப்பட்ட ஆதி சைவர்க்குரிய சீலமும் பொருந்த, நன்மை மிக்க திருநாவலூர் இத் திருமணத்திற்குரிய விழாவைக் கொள்ள, நம்பியாரூரர் சிவபெருமா னுடைய திருவடிகளை

மனத்தில் எண்ணிய வண்ணம் மேன்மை பொருந்திய திருநீற்றைத் திருமேனியில் அணிந்து, பொன்னாலும் முத்து முதலிய மணிகளினாலும் அழகு செய்யப்பட்டிருக்கும் நல்லிலக் கணம் அமைந்த குதிரையின்மீது எழுந்தருளிச் சென்றார்.

விளக்கவுரை

மன்னவர்திரு - அரசர்க்குரிய வெண்கொற்றக் குடை, முரசு, யானை முதலாயின. வைதிகத் திரு - ஆதிசைவர்க்குரிய அணிகள், ஆடைகள், திருநீறு, உருத்திராக்கம் முதலாயின. யோகப் புரவி - கூடுதலையுடைய குதிரை; அஃதாவது நற்சுழி முதலிய நல்லிலக்கணங்கள் பலவும் கூடிய குதிரை. யோக நிலையை வாசி, புரவி என்றெல்லாம் கூறுவர். இவ்வகையில் யோக நிலையை விளக்க வந்த சுந்தரர் இவர்ந்தருளிய குதிரையும் யோகப்புரவியாயிற்று என்றலும் ஒன்று.

இயம்பல துவைப்ப எங்கும்
ஏத்தொலி எடுப்ப மாதர்
நயந்துபல் லாண்டு போற்ற
நான்மறை ஒலியின் ஓங்க
வியந்துபார் விரும்ப வந்து
விரவினர்க் கின்பஞ் செய்தே
உயர்ந்தவா கனயா னங்கள்
மிசைக்கொண்டார் உழைய ரானார். **#166**

இயங்கள் பலவும் ஒலிக்கவும், சூழ நிற்போர் யாவரும் இறைவனை வழிபடுதற்குரிய பாடல்களை ஒலிக்கவும், உடன்வரும் பெண்கள் பல்லாண்டு கூறவும், நான்கு மறைகளும் இசை யோடு ஒலிக்கப்படவும், இத்தகைய அரிய திருமணத்தை வியந்து பாராட்டி வருபவர்களுக்கு அவரவரும் விரும்புமாறு இன்சொல்லும், நன்றாற்றலும் செய்து எதிர்கொள்ளவுமாக, உடன் வந்து கொண்டிருக் கும் சான்றோர்கள், யானை, குதிரை, சிவிகை முதலிய ஊர்திகளில் ஏறிக் கொண்டார்கள்.

விளக்கவுரை

துவைப்ப - முழக்க: ஒலிக்க. துவைப்ப, எடுப்ப, போற்ற, ஒல்க, விரும்ப, இன்பம் செய்ய, உடன் வந்தவர்கள் ஏறினார் என முடிக்க. உயர்ந்த வாகனங்கள் யானை, தேர், குதிரை ஆகியன. யானம் - சிவிகை. இயம் - பலவகை ஒலிக்கருவிகள்.

மங்கல கீத நாத
மறையவர் குழாங்க ளோடு
தொங்கலும் விரையுஞ் சூழ்ந்த
மைந்தருந் துவன்றிச் சூதும்

பங்கய முகையுஞ் சாய்த்துப்
பணைத்தெழுந் தணியின் மிக்க
குங்கும முலையி னாரும்
பரந்தெழு கொள்கைத் தாகி. **#167**

இசையாலும் பொருளாலும் மங்கலமுடைய தமிழ்ப் பாடல்களையும் இவ்வாறாய நான்மறைப் பகுதிகளையும் பாடுகின்ற மறையவர்களின் தொகுதியோடு, மலர்மாலைகளையும் நறுமணக் கலவைகளையும் அணிந்து கொண்ட ஆடவர்களும், நெருக்கத்தால் சூதாடு கருவியையும் தாமரை அரும்பையும் தோற்கச் செய்து அடி பெருத்து எழுந்து அழகு மிகுந்த குங்குமக் குழம்பு பூசிய மார்பகத்தை உடைய மகளிரும் உடன் வருகின்ற சிறப்பை உடைத்தாய்.

விளக்கவுரை

தொங்கல் - மலர்மாலைகள். விரை- நறுமணமிக்க கலவைச் சாந்து. துவன்றி - நெருங்கி.

அருங்கடி எழுந்த போழ்தின்
ஆர்த்தவெள் வளைக ளாலும்
இருங்குழை மகரத் தாலும்
இலங்கொளி மணிக ளாலும்
நெருங்கிய பீலிச் சோலை
நீலநீர்த் தரங்கத் தாலுங்
கருங்கடல் கிளர்ந்த தென்னக்
காட்சியிற் பொலிந்த தன்றே. **#168**

இவ்வாறு எழுந்த மகளிரின் அரிய திருமண எழுச்சி, முழங்குகின்ற வெண்மையான வளையல்களாலும், பெரிய மகரவடிவினவாகிய காதணிகளினாலும், விளங்குகின்ற ஒளியினை உடைய அணிகலன்களில் பொருந்திய முத்து முதலிய மணிகளாலும், நெருக்கமாகக் கைகளில் ஏந்தி நிற்கும் மயிற்பீலிக் குஞ்சங்களின் நீலநிறத்தை உடைய பெருக்கத்தாலும் கரிய கடல் பெருகி வருவது போன்ற தோற்றத்தை யொத்துப் பொலிவடைந்தது.

விளக்கவுரை

கடி - திருமணம். பீலிச்சோலை - மயில் இறகின் தொகு திகளாகிய சோலை. கடலில் காணப்பெறும் சங்கு, மீன், மணிகள், அலைகள் ஆகியன, பெண்களின் கைவளை, காதணி,அணிகலன், கைகளில் ஏந்திச் செல்லும் பீலி ஆகியவற்றோடு ஒப்புமையுடைத் தாதல் காண்க. அன்று, ஏ, என்பன அசைநிலைகள். இவ்விரு பாடல் களும் ஒருமுடிபின.

நெருங்குதூ ரியங்கள் ஏங்க

நிரைத்தசா மரைகள் ஓங்கப்
பெருங்குடை மிடைந்து செல்லப்
பிணங்குபூங் கொடிக ளாட
அருங்கடி மணம்வந் தெய்த
அன்றுதொட்டு என்றும் அன்பில்
வருங்குல மறையோர் புத்தூர்
மணம்வந்த புத்தூ ராமால். **#169**

நெருங்கிய பேரிகை முதலிய இயங்கள் ஒலிக் கவும், நிரல்பட வீசப்பெறும் சாமரங்கள் இயங்கவும், பெரிய குடைகள் நெருங்கிச் செல்லவும், விளங்குகின்ற அழகிய கொடிகள் அசையவும், அரிய சிறப்பு மிக்க திருமணம் அவ்வூரில் நிகழ இருந்த காரணத்தால், அன்று முதல் எந்நாளும் அன்புமிக்க ஆதிசைவ மறையவர்களின் புத்தூரானது `மணம்வந்த புத்தூர்` எனப் பெயர் பெற்றது.

விளக்கவுரை

தூரியங்கள் - பேரிகை முதலிய இயங்கள். அருங்கடி மணம் - அரிய சிறப்பினை உடைய மணம். இதுகாறும் நிகழ்ந்திராத புதுமையை உடைய மணம் எனலுமாம். ஆல் - அசை.

நிறைகுடந் தூபம் தீபம்
நெருங்குபா லிகைக ளேந்தி
நறைமல ரறுகு சுண்ணம்
நறும்பொரி பலவும் வீசி
உறைமலி கலவைச் சாந்தின்
உறுபுனல் தெளித்து வீதி
மறையவர் மடவார் வள்ளல்
மணமெதிர் கொள்ள வந்தார். **#170**

நிறைகுடங்களையும், நிறை மணங்களையும், ஒளி விளக்குகளையும், நெருங்கிய முளைப்பாலிகைகளையும் கையில் ஏந்திக் கொண்டு, நறுமணம் கமழ்கின்ற மலர்களும், அறுகும், நறுமணப் பொடியும், சிறந்த பொரியும் ஆகிய பல பொருள்களையும் வீசி, நீரொடு கலக்கப்பட்ட கலவைச் சாந்தினின்றும் தெளிந்த நீரை வருவார்மீது தெளித்து, அங்குள்ள மறையவர்களும் மடவார்களும் நம்பியாரூரரின் திருமண வருகையை எதிர்கொள்ள வந்தனர்.

விளக்கவுரை

பெரியவர்கள் வரும்பொழுது பிற நறுமணப் பொருள் களோடு அறுகும் தெளிப்பர். உறை - நீர்த்துளி. மறையவர் மடவார் என்பதை உம்மைத் தொகையாகக் கொள்ளாது, ஆதிசைவக் குலப் பெண்கள் என்ற

அளவிலேயே கொள்வர் ஆறுமுகத்தம்பிரான் சுவாமி கள் *(பெ.உரை)*.

கண்களெண் ணிலாத வேண்டுங்
காளையைக் காண என்பார்
பெண்களி லுயர நோற்றாள்
சடங்கவி பேதை என்பார்
மண்களி கூர வந்த
மணங்கண்டு வாழ்ந்தோம் என்பார்
பண்களில் நிறைந்த கீதம்
பாடுவார் ஆடு வார்கள். **#171**

மணம் எதிர்கொள்ள வந்த மகளிருள் சிலர், இம்மணமகனைப் பார்க்க எண்ணிறந்த கண்கள் வேண்டும் என்பர். சிலர், இம்மணமகனைப் பெறுதற்கு ஏனைய மகளிரினும் இச் சடங்கவியார் மகளார் மிகுதியான தவம் செய்தவள் என்பார். சிலர், இம்மண்ணுலகத்தார் உள்ளம் மகிழ்வடையுமாறு இம்மணக்கோலத் தைக் கண்டு யாம் பெரும்பேறு பெற்றோம் என்பார். சிலர், இசை நிரம்பிய அரிய பாடல்களைப் பாடிக் கொண்டு மிகுமகிழ்வால் கூத் தாடுவர்.

விளக்கவுரை

மண்களி கூரவந்த மணம் எனவே, இம்மணம் இம் மண மக்களுக்கு மகிழ்ச்சிதர வந்ததன்று என்னும் குறிப்பும் புலப்படு கின்றது. `மாநகர்க்கு ஈந்தார் மணம்` *(சிலப்ப. மங்கல. 44)* என்புழிப் போல. `நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும், கொம்பினைக் காணும்தோறும் குரிசிற்கும் அன்னதேயாம்` *(கம்பர். பால. கார்.792)* என்பார் கம்பர். ஈண்டு அதுபோலச் சடங்கவியார் மகளாரைச் சிறப்பியாது, `பெண்களில் உயர நோற்றாள்` என்ற அளவிலேயே சிறப்பித்ததற்குக் காரணம், ஈண்டு மண நிகழ்ச்சி நிறைவு பெறாமையாகும்.

ஆண்டகை யருளின் நோக்கின்
வெள்ளத்துள் அலைந்தோம் என்பார்
தாண்டிய பரியும் நம்பால்
தகுதியில் நடந்த தென்பார்
பூண்டயங் கிவனே காணும்
புண்ணிய மூர்த்தி யென்பார்
ஈண்டிய மடவார் கூட்டம்
இன்னன இசைப்பச் சென்றார். **#172**

சிலர், இம்மணமகனாரின் கண்களினின்றும் தோன்றும் கருணை நோக்கு என்னும் வெள்ளத்துள் அலைவுட்பட்டோம் என்பார்கள். சிலர், இவர் ஊர்ந்து வருவதும், தாவிச்செல்லுவதுமான குதிரையும் நம் எண்ணத்திற்கேற்ப நம்மிடத்து மெல்ல வருகின்றது என்பார்கள். சிலர்,

அணிநலம் சான்ற இவ்வாண்டகை, புண்ணியமே ஒருருவாய்த் திரண்ட உருவினை உடையன் என்பார்கள். மணவெழுச்சியை எதிர்கொள்ளுதற்கென வந்த மகளிர் கூட்டம் இவ்வாறெல்லாம் சொல்ல, நம்பியாரூரர் எழுந்தருளினார்.

விளக்கவுரை

தாண்டிய பரி - தாவிச் செல்லும் குதிரை. `கண்ணாரக் காண எம் சாலேகம் சார நட` *(முத்தொள்.பாண்டி.20)* என முத்தொள்ளாயிரத்து வரும் பெண்கள் வேண்டிக் கொள்வதையும் காணலாம். இக்குதிரை அவர்கள் வேண்டிக்கொள்ளாமலேயே அவர்கள் பக்கம் சாரச் செல்வது, அவர்களிடத்துக் கொண்ட மீதூர்ந்த கருணையினால் போலும்! பூண் - அணிகலன். `காணும்` என்பது அசைநிலை.

வருமணக் கோலத் தெங்கள்
வள்ளலார் தெள்ளும் வாசத்
திருமணப் பந்தர் முன்பு
சென்றுவெண் சங்க மெங்கும்
பெருமழைக் குலத்தி னார்ப்பப்
பரிமிசை இழிந்து பேணும்
ஒருமணத் திறத்தி னங்கு
நிகழ்ந்தது மொழிவேன் உய்ந்தேன். **#173**

இவ்வாறு வருகின்ற மணக்கோலத்தை உடைய எங்கள் நம்பியாரூரர், தெள்ளிதாகிய நறுமணம் கமழும் திருமணப் பந்தலினிடத்து எழுந்தருளி, வெண்மையான சங்குகள் எவ்விடத்தும் பெரிய மேகக் கூட்டங்களினின்றும் எழும் ஒலியென முழங்க, குதிரையினின்றும் இறங்கி, தாம் விரும்பிச் செய்தற்குரிய திருமணச் செயலில், அவ்விடத்து நிகழ்ந்ததொரு செய்தியைச் சொல்லுதற் குரியேனாய நிலையில் யான் பேறு பெற்றுள்ளேன்.

விளக்கவுரை

மொழிவேன் உய்ந்தேன் - சொல்லுகின்ற அதனால் உய்ந்தேன்; உய்தல் - பிழைத்தல்: ஈண்டுச் சொல்லுதற்குரிய பேற்றைப் பெறுதற்குரியராதல். மொழிவது எதிர்காலமாக, உய்தலை இறந்த காலமாகக் கூறியது அவ்வுய்தி கிடைத்தல் ஒருதலையாதல் பற்றியாம்.

ஆலுமறை சூழ்கயிலை யின்கணருள் செய்த
சாலுமொழி யால்வழி தடுத்தடிமை கொள்வான்
மேலுற வெழுந்துமிகு கீழுற அகழ்ந்து
மாலும்அய னுக்குமரி யாரொருவர் வந்தார். **#174**

மறை முழக்கம் சூழ்ந்து நிற்கும் திருக்கயிலாய மலையில், அருளிச் செய்த

மேதக்க திருவாக்கின்படி, அந்நம்பி யாரூரரை மணம் செய்யாது தடுத்து, வழி அடிமை கொள்ளும் பொருட்டு, அன்னவடிவாய் மேற்கொண்டு எழுந்தும், பன்றி வடி வாய்க் கீழ்ப் புகுந்து தோண்டியும் பெருமானைக் காணாது மயங்கி நிற்கும் மால் அயன் ஆகிய இருவருக்கும் அரியராய் இருந்த சிவ பெருமான், அங்கு ஒரு திருமேனி கொண்டு எழுந்தருளி வந்தார்.

விளக்கவுரை

தடுத்து - திருமணம் செய்து கொள்ளுதலின் வாயிலாக ஏற்படும் பிறவிச் சூழலைத் தடுத்து. `மையல் மானுட மாய்மயங் கும்வழி ஐய னேதடுத் தாண்டருள் செய்` *(தி.12 சரு.1-1 பா.28)* எனக் கயிலையில் வேண்டிக் கொண்டதற்கு இணங்க இதுபொழுது தடுத்தாட் கொள்ள இறைவன் வருவாராயினர். அத்திறத்தை, நம்பியாரூரர் மானுடராய்ப் பிறந்து மறப்பினும், இறைவன் மறவாது வந்தமை அவன் கருணைத் திறத்தைக் காட்டுகிறது. `நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்` *(சிலப்ப. கானல்.32)* என உலகியல்வழி வரும் அன்பே இத்திறத்தில் தலைப்படுமானால், அருளாளராய இறைவற்கு உளதாகும் அருள் அதனினும் பிற்படுமோ? படாது முற்படும்.

கண்ணிடை கரந்தகதிர் வெண்பட மெனச்சூழ்
புண்ணிய நுதற்புனித நீறுபொலி வெய்தத்
தண்மதி முதிர்ந்துகதிர் சாய்வதென மீதே
வெண்ணரை முடித்தது விழுந்திடை சழங்க. **#175**

நெற்றிக் கண்ணிடத்து மறைத்து நிற்கும் வெள் ளாடை போலப் புண்ணிய வடிவாய தூய திருநீறானது நெற்றியில் பொருந்தி விளங்கவும், திருச்சடையிடத்து வாழும் இளம்பிறையானது முதிர்ந்து அதனால் அதன் ஒளி கீழே செல்லுதல் போலத் தலையின் உச்சியிடத்து ஒருங்கு சேர்த்து முடித்த தலையின் வெண்மயிரானது இடையிடையே விழுந்து அசையவும்,

விளக்கவுரை

கண்ணிடை - நெற்றிக் கண்ணிடத்து. வெண்படம் - வெண்மையான ஆடை. இது திருநீற்றிற்கு உவமை ஆயிற்று. மதி முதிர்ந்து சாய்வது எனச் சடையினிடத்துள்ள நரைத்த மயிர்கள் தலை யிடத்து ஆங்காங்கே விரிந்து அசைந்தன. வெண்மையான நரைக்கு முதிர்ந்த பிறை ஒளியை உவமித்தது அதன் வெண்மை கருதியாம். சழங்க - அசைய.

காதிலணி கண்டிகை வடிந்தகுழை தாழச்
சோதிமணி மார்பினசை நூலினொடு தோளின்
மீதுபுனை யுத்தரிய வெண்டுகில் நுடங்க
ஆதப மறைக்குடை அணிக்கரம் விளங்க. **#176**

காதில் அழகுபெற அணியப் பெற்ற உருத்தி ராக்கத்தாலாய குண்டலமானது தாழ்ந்து அசையவும், ஒளி பொருந் திய உருத்திராக்க மாலை அணிந்த திருமார்பில் பூண நூலொடு திருத்தோளின்மேல் அணிந்திருக்கும் மேலாடையாகிய வெள்ளிய ஆடை அசையவும், வெயிலை மறைக்கின்ற குடையானது அழகிய திருக்கையில் விளங்கவும்,

விளக்கவுரை

சோதிமணி - ஒளி பொருந்திய உருத்திராக்க மணி. நூல் - பூணு நூல். உத்தரியம் - மேலாடை, ஆதவன் - கதிரவன். ஆதபம் - ஈண்டு அவனிடமாகத் தோன்றும் வெயிலைக் குறித்தது.

பண்டிசரி கோவண உடைப்பழமை கூரக்
கொண்டதொர் சழங்கலுடை யார்ந்தழகு கொள்ள
வெண்டுகி லுடன்குசை முடிந்துவிடு வேணுத்
தண்டொருகை கொண்டுகழல் தள்ளுநடைகொள்ள. **#177**

வயிற்றின்கீழ்ச் சரிய உடுத்த கோவணமாகிய உடை, அதன் பழமையை வெளிப்படுத்தவும், அதன்மீது விளங்கும் அசைய நிற்பதொரு உடையானது அழகிய இடுப்பின்கண் பொருந்தி அழகு செய்யவும், வெண்மையான ஆடையோடு தருப்பையைச் சேர முடித்து விளங்கும் மூங்கில் தண்டத்தை, ஒரு திருக்கையில் கொண்டு, திருவடிகள் தளர் நடை கொள்ளவும்,

விளக்கவுரை

பண்டி - வயிறு, கோவணம் - அதன் பழமையை விளக்க என்பது, அது பல்காலும் உடுத்தப்பட்டதொன்று என்பது விளங்க வாம். இனி மறையே அக்கோவணமாதல் பற்றிக் கோவண உடை \`பழமை கூர\` என்றார் என்றலுமாம். \`மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத் தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ\` *(தி.8*

ப.*12* பா.*2)* எனவரும் திருவாசகமும் காண்க. கொண்டதோர் - இடுப்பில் கொண்டதோர். சழங்கல் உடை - அசைந்து விளங்கும் உடை. குசை - தருப்பை.

மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ
அத்தகைய மூப்பெனு மதன்படிவ மேயோ
மெய்த்தநெறி வைதிகம் விளைத்தமுத லேயோ
இத்தகைய வேடமென ஐயமுற வெய்தி. **#178**

செறிந்து வளர்கின்ற பேரழகானது இளமையி னின்றும் முதிர்ந்து ஒரு வடிவு கொண்டதோ, அவ்வழகு மிளிரும் மூப்பு என்பது ஒரு வடிவுகொள்ள அவ்வடிவாக விளங்குகின்றதோ, மெய்ந்நெறிகளைத் தன்னகத்துக்கொண்ட வைதிகம் என்பது விளைத் ததொரு முதன்மையோ? இத்தன்மையுடையதொரு திருவுருவம் இருந்தவாறு என்? எனக் கண்டார் ஐயம்கொள்ளுமாறு எழுந்தருள.

விளக்கவுரை

பேரழகு உடையாரும் மூப்புவர அழகு குன்றுவர். ஆனால் இம்முதியவரிடத்தே அழகு பொலிந்து இருப்பதால், அழகென்பதே முதிர்ந்தொரு வடிவம்கொண்டதோ என ஐயுற்றனர். இவர்தம் முதுமை மூப்பிற்குரிய அனைத்துக் குணங்களையும் கொண் டிருத்தலின் அம்மூப்பே ஒரு வடிவெடுத்து வந்ததோ என்று ஐயுற் றனர். வைதிகம் - வேதத்தை அடிப்படையாகக்கொண்ட நெறி. இவர் வேடம் வேதநெறியில் வளர்ந்த பெருமக்களின் வடிவைக் கொண் டிருத்தலின் அந்நெறியே ஒரு வடிவெடுத்து வந்ததோ என்று ஐயுற் றனர். இவ்வாறெல்லாம் கண்டார் ஐயுற அவர் எழுந்தருளினர். மொய்த்து - செறிந்து, மெய்த்த நெறி - மெய்நெறி.

வந்துதிரு மாமறை மணத்தொழில் தொடங்கும்
பந்தரிடை நம்பியெதிர் பன்னுசபை முன்னின்று
இந்தமொழி கேண்மினெதிர் யாவர்களும் என்றான்
முந்தைமறை யாயிர மொழிந்த திருவாயான். **#179**

அழகிய மறைவழித் திருமணம் செய்யத் தொடங்கும் மணப்பந்தலினிடத்து, இவ்வாறு எழுந்தருளி வந்தவராய மிகப்பழங்காலத்தேயே எண்ணற்ற மறைகளை அருளிச்செய்த அழ கிய திருவாயினையுடைய சிவபெருமான், நம்பியாரூரர்க்கு முன், புகழத்தக்க அவையினரின் எதிர்நின்று, `எனக்கு எதிரில் அமர்ந்திருக் கும் இவ்வவையத்தில் உள்ளார் யாவரும் யான் கூறும் இச்சொல்லைக் கேளுங்கள்` என்று அருளிச் செய்தார்.

விளக்கவுரை

பன்னுசபை - புகழத்தக்க அவை. `மறை ஆயிரம்` என்றது எண்ணிக்கை குறித்தன்று; பலவாகிய மறை எனப் பொருள்பட நின்றது. இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

என்றுரைசெ யந்தணனை எண்ணில்மறை யோரும்
மன்றல்வினை மங்கல மடங்கலனை யானும்
நன்றுமது நல்வரவு நங்கள்தவ மென்றே
நின்றதிவண் நீர்மொழிமின் நீர்மொழிவ தென்றார். **#180**

இவ்வாறு கூறிவரும் மறையவரை, ஆண்டிருந்த எண்ணற்ற மறையவர்களும், திருமணத்திற்குரிய செயலைச் செய்து கொண்டிருக்கும் மணக்கோலம் கொண்ட சிங்கம் போன்ற ஆற்றலை உடைய நம்பியாரூரரும் `நும் வரவு எங்கட்கு மிக நன்மை பயப்பது; இது நாங்கள் செய்த தவமேயாகும்` என்று கூறி, `இவ்விடத்து நீர் சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்` என்றனர்.

விளக்கவுரை

மடங்கல் - சிங்கம்

பிஞ்ஞகனும் நாவலர் பெருந்தகையை நோக்கி
என்னிடையும் நின்னிடையும் நின்றஇசை வால்யான்
முன்னுடைய தோர்பெரு வழக்கினை முடித்தே
நின்னுடைய வேள்வியினை நீமுயல்தி என்றான். **#181**

இவ்வாறு அவையத்தார் கூற, சிவபெருமானா கிய மறையவரும், நம்பியாரூரரைப் பார்த்து, `என்னிடத்தும் உன்னி டத்தும் முன்னமேயே அமைந்ததொரு இசைவு இருப்பதால், முற்பட அமைந்ததொரு பெருவழக்கினை முடிவுசெய்தபின், உன்னுடைய மணத்தை நீ நடத்த முயலுக` என்றார்.

விளக்கவுரை

பிஞ்ஞகன் - தலைக்கோலம் கொண்ட சிவபெருமான். திருக்கயிலையில் தமக்கும் நம்பியாரூரர்க்கும் உரிய ஆண்டான் அடிமைத்திறமும், அதன்வழி நிகழ்ந்த பேச்சும், அவ்விருவரும் அறிவ தல்லது பிறர் அறியார் ஆதலின் `என்னிடையும், நின்னிடையும் நின்ற இசைவால்`என்றார். நின்ற-நிலைபெற்ற; அத்திறந்தானும் என்றும் நிலைபெற்றதாகலின், `நின்ற இசைவு` என்றார். முன்னுடையதோர்- முற்காலத்திருந்தே வழிவழியாக ஏற்றுக் கொண்டதொரு செயல். முன், இசைவு எனக்கூறியவர், பின் வழக்கு என்றார், அதனை அவர் ஏற்றுக் கொள்ளாமை பற்றி. வேள்வியினைச் செய்க என்னாது `செய்ய முயல்க` என்றார், இனி அவ்வினைதானும் நிறைவு பெறாது என்பது தோன்ற.

நெற்றிவிழி யான்மொழிய நின்றநிக ரில்லான்

உற்றதொர் வழக்கெனிடை நீயுடைய துண்டேல்
மற்றது முடித்தலதி யான்வதுவை செய்யேன்
முற்றவிது சொல்லுகென வெல்லைமுடி வில்லான். #182

நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமானாகிய மறையவர் இவ்வாறு அருளிச் செய்ய, அங்கு நின்ற ஒப்புமை கூறுதற்கு இயலாத நம்பியாரூரர் தாமும், நம் இருவருக்கும் உரியதொரு வழக்கு நின்னிடத்து இருக்குமானால், அவ்வழக்கை முடித்தன்றி யான் மணம் செய்து கொள்ளேன்; நீர் முழுமையாக இவ்வழக்கைச் சொல்வீராக! என்று கூற, தன்பெருமையைத் தானும் அறியாதவனாகிய அப் பெருமானாய மறையவரும்,

விளக்கவுரை

எனக்கும் உனக்கும் உரிய வழக்கொன்று இருத் தற்கில்லை என்பார் `நீ உடையது உண்டேல்` என்றார். எனவே, வந்தவர் பெருமான் என்பதும், தாமும் திருக்கயிலையிலிருந்து வந்த வர் என்பதும் அறியாராயினார் என்பது விளங்குகின்றது. எல்லை முடிவில்லான் - தன் பெருமையை வரையறுத்துக் கூறுதற்கும் முற்ற மொழிதற்கும் இயலாதவன். மற்று - அசை. சொல்லுக என என்பது, சொல்லுகென நின்றது.

ஆவதிது கேண்மின்மறை யோர்என்அடி யான்இந்
நாவல்நக ரூரனிது நான்மொழிவ தென்றான்
தேவரையும் மாலயன் முதற்றிருவின் மிக்கோர்
யாவரையும் வேறடிமை யாவுடைய எம்மான். #183

இந்திரன் முதலிய தேவர்களையும், மால் அயன் முதலிய தகுதிச் செல்வம் பெற்ற பிறர் எவரையும் தனித்தனியாக அடிமை கொண்டிருக்கும் சிவபெருமானாகிய மறையவரும், `மறை யவர்களே! நான் சொல்லத்தக்க இதனைக் கேளுங்கள், என்னுடைய அடிமையாவன் `இத்திருநாவலூரன்`, இதுவே நான் சொல்ல வந்தது` என்று அருளிச் செய்தார்.

விளக்கவுரை

திருவின் மிக்கார் - மால், அயன் என்னும் தகுதியாகிய செல்வத்தைப் பெற்றவர்கள். வேறு அடிமையாக உடையான் - புண் ணியம் நிறைந்த ஏனைய உயிர்களன்றி இத்தகைய மால் அயன் முதலோரையும் சிறந்த அடியாராகக் கொண்டுள்ளவன் எனும் பொருள் தோன்ற நின்றது என்றலுமாம். வேறு - சிறப்பு. இவ் விரு பாடலும் ஒருமுடிபின.

என்றான் இறையோன் அதுகேட்டவ ரெம்ம ருங்கும்
நின்றார் இருந்தார் இவனென்னினைந் தான்கொ லென்று
சென்றார் வெகுண்டார் சிரித்தார் திருநாவ லூரான்

நன்றால் மறையோன் மொழியென் றெதிர்நோக்கி நக்கான். #184
மறையவராக வந்த இறைவன் இவ்வாறு கூற, அதனைக்
கேட்டவர்களாய் எவ்விடத்திலும் நின்றவர்களும் இருந்த வர்களுமாகிய
யாவரும், இம்மறையவர் நினைந்தது தான் எவ் வகையது? என,
அம்மறையவர் அருகே சென்றார்கள், சினந்தார்கள், சிரித்தார்கள்.
நம்பியாரூரரும் இம்மறையவர்சொல் மிக நன்றாக இருந்தது என்று
அவர் எதிர்நோக்கிச் சிரித்தார்.

விளக்கவுரை

இம்மணம் தடைப்பட்டு விடுமோ என நினைந்து அவையத்தார் வெகுண்டனர். மறையவர் கூறும் வழக்கு இவ்வுலகில் இல்லா வழக்காக இருத்தலின் சிரித்தனர் நம்பியாரூரர். இச்சிரிப்புத் தானும் வெகுளியோடு கூடிய எள்ளல் சிரிப்பாக அமைந்தது.

நக்கான் முகநோக்கி நடுங்கி நுடங்கி யார்க்கும்
மிக்கான் மிசையுத்தரி யத்துகில் தாங்கி மேற்சென்று
அக்கா லமுன்தந்தை தன்தந்தையா ளோலை யீதால்
இக்கா ரியத்தை நீயின்று சிரித்ததென் ஏடவென்ன. #185
தம்மை இகழ்தல் குறிப்புடன் சிரித்த நம்பி யாரூரரின் முகத்தைப்
பார்த்து, உடல் நடுக்குற்றுப் பெருந்துயரால் வருந்தி, யாவர்க்கும்
மேலாய இறைவன், நழுவிய மேலாடையை விழாமல் கையால் தாங்கிக்
கொண்டு, அவர் அருகில் சென்று அந் நாளில், உன்னுடைய பாட்டன்
எனக்கு எழுதிக் கொடுத்த அடிமைச் சீட்டு இதுவாகும். அங்ஙனம்
இருக்க, \`ஏட! நீ இன்றைக்கு இகழ்ந்து சிரித்தது எவ்வாறு பொருந்தும்\`
என்று சொல்ல.

விளக்கவுரை

உத்தரியத் துகில்-மேலாடை. நடுங்கல், நுடங்கல், மேல் ஆடை நழுவல் ஆகிய இவை வெகுளிக்கண் வரும் மெய்ப்பாடு களாம். ஏட-அடிமையை அழைக்கும் முறைமையில் வருவதொரு சொல்லாம்.

மாசிலா மரபில் வந்த
வள்ளல்வே தியனை நோக்கி
நேசமுன் கிடந்த சிந்தை
நெகிழ்ச்சியாற் சிரிப்பு நீங்கி
ஆசிலந் தணர்கள் வேறோர்
அந்தணர்க் கடிமை யாதல்
பேசஇன் றுன்னைக் கேட்டோம்
பித்தனோ மறையோன் என்றார். #186
குற்றமற்ற ஆதி சைவ மரபில் தோன்றிய நம்பியாரூரர்,

சிவபெருமானாகிய மறையவரைப் பார்த்து, அவரி டத்து முன்பிருந்த அன்பின் நெகிழ்ச்சியால், சிரித்தலை விடுத்துக், குற்றமற்ற ஆதி சைவர்கள் வேறொரு ஆதிசைவர்க்கு அடிமையாத லைச் சொல்ல, இற்றை நாளில் உன்னிடத்தில் கேட்டோம் ஆதலின் மறையவனே! நீ பித்தனோ என்றார்.

விளக்கவுரை

முன்கிடந்த சிந்தை நிகழ்ச்சி - முன்னமேயே இருந்த உள்ள நெகிழ்ச்சி. சிரிப்பு நீங்கற்கு அவரொடு மாறுகொண்டு பேசும் பேச்சே காரணமாக இருப்பினும், முன் இருந்த அன்பின் நெகிழ்ச்சியும் சிறிது அரும்பியது என்பார், இங்ஙனம் கூறினார். பேச இன்று உன்னைக் கேட்டோம் என்பது, அம்மறையவரை நோக்கிக் கூறிய தாகும். `பித்தனோ மறையோன்` என்றது அவையத்தாரை நோக்கிக் கூறியதாகும். இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

பித்தனு மாகப் பின்னும்
பேயனு மாக நீயின்று
எத்தனை தீங்கு சொன்னாய்
யாதுமற் றவற்றால் நாணேன்
அத்தனைக் கென்னை யொன்றும்
அறிந்திலை யாகில் நின்று
வித்தகம் பேச வேண்டாம்
பணிசெய வேண்டு மென்றார். **#187**

இவ்வாறாக நம்பியாரூரர் கூறக் கேட்ட மறையவர், `நான் பித்தன் ஆனாலும் ஆகுக! பின் பேயன் ஆனாலும் ஆகுக! நீ இப்பொழுது எத்துணைக் குற்றமாய சொற்களைச் சொல்வாயாயினும் அச்சொற்களால் நான் எத்துணையும் நாணமாட் டேன். அவ்வளவிற்கு என்னை ஒருவகையாலும் நீ இன்னவன் என்று அறியவில்லை. ஆயினும் நீ என்முன் நின்று உன் திறமையைப் (சதுரப்பாட்டை) பேசவேண்டாம். எனக்குத் தொண்டு செய்ய வேண்டும்` என்றார்.

விளக்கவுரை

எனக்கும் உனக்கும் உள்ள தொடர்பையும், நின் வேண்டு கோளாலேயே யான் வர நேர்ந்தது என்பதையும் நீ அறிந் திலை என்பார், `அத்தனைக்கு என்னை ஒன்றும் அறிந்திலை` என்றார். வித்தகம் - சதுரப்பாடு (சாமர்த்தியம்) மற்று - அசைநிலை.

கண்டதோர் வடிவா லுள்ளங்
காதல்செய் துருகா நிற்குங்
கொண்டதோர் பித்த வார்த்தை

கோபமு முடனே யாக்கும்
உண்டொராள் ஓலை யென்னும்
அதனுண்மை யறிவே னென்று
தொண்டனா ரோலை காட்டு
கென்றனர் துணைவ னாரை. **#188**

`என்னால் காணப்பட்ட ஒப்பற்ற இம்மறையவரது திருவடிவால் என் மனம் இவரிடத்து அன்பு வைத்து உருகும். மாறாக, இவருக்கு நான் அடிமை என்று கொண்ட ஒரு பைத்தியச் சொல் சினத்தையும் உடனே விளைவிக்கும். எனினும் இவ்வுவத்தலும் காய்தலுமின்றி, அடிமை ஓலை ஒன்று உண்டு என்று சொல்லும் அச்சொல்லின் உண்மையை அறிவேன்` என்று, தம் துணைவனாரான சிவபெருமானாகிய மறையவரை நோக்கி, நம்பியாரூரர் அடிமை ஓலையைக் காட்டுக என்று கூறினார்.

விளக்கவுரை

துணைவனார் - எவ்வுயிர்க்கும் துணையாக நின்று அருளுபவர்; இவர் அளவில், சிறந்த தோழராகவே இருப்பவர்.

ஓலைகாட் டென்று நம்பி
யுரைக்கநீ யோலை காணற்
பாலையோ அவைமுன் காட்டப்
பணிசெயற் பாலை யென்ற
வேலையில் நாவ லூரர்
வெகுண்டுமேல் விரைந்து சென்று
மாலயன் தொடரா தானை
வலிந்துபின் தொடர லுற்றார். **#189**

நம்பியாரூரர் `அடிமை ஓலையைக் காட்டுக` என்று சொல்ல, அம்மறையவர் நீ அவ்வடிமை ஓலையைப் பார்த்து உணரத் தகுதி உடையையோ? (அல்லை). இவ்வவை முன் அதனை யாவரும் அறியக் காட்டியபின் அடிமை செய்தற்கே உரியை என்று கூறிய அளவில், நம்பியாரூரர் சினந்து மேல் விரைவாய்ச் சென்று, மாலும் அயனும் அறிய ஒண்ணாத சிவபெருமானை வன்மை செய்து, அவர் ஓடிய அளவில் தாமும் பின்தொடர்ந்து சென்றார்.

விளக்கவுரை

இவ்வோலையில் உள்ள செய்தி மெய்ம்மையுடையது ஆதலின் அவையத்தார் ஐயமின்றி ஏற்பர்; அவர் தீர்ப்பின்வழி நீயும் அடிமை செய்வாய் என்பார் `அவைமுன்காட்டப் பணி செயற்பாலை` என்றார். மால் அயன் காண இயலாத பெருமான் இவரளவில் எளிவந்து நின்றனர்

என்பது குறிப்பு.

ஆவணம் பறிக்கச் சென்ற
அளவினில் அந்த ணாளன்
காவணத் திடையே யோடக்
கடிதுபின் தொடர்ந்து நம்பி
பூவணத் தவரை உற்றார்
அவரலால் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையி னாரை
யார்தொடர்ந் தெட்ட வல்லார். **#190**

நம்பியாரூரர் தம்மை அடிமையெனக் குறித் திருக்கும் ஓலையைப் பறிக்கச் சென்றபொழுது, சிவபெருமானாகிய மறையவரும் அம்மணப் பந்தலின் ஊடே ஓட, விரைவாக நம்பி யாரூரரும் தொடர்ந்து அவர்பின் ஓடி, செந்தாமரை அனைய திருமேனியுடையராய சிவபெருமானாகிய அம்மறையவரைத் தலைப் பட்டார். அந்நம்பியாரூரர் அல்லாமல் முப்புரங்களையும் ஓரம்பினால் அழித்த சிவபெருமானை யார் தொடர்ந்து தலைப்பட வல்லவர்கள்? ஒருவருமாகார் என்பதாம்.

விளக்கவுரை

காவணம் - திருமணப் பந்தல். `பூ எனப்படுவது பொறிவாழ்பூவே` *(நால்வர் நான்மணி, 40)* ஆதலின், ஈண்டு அது செந்தாமரையைக் குறித்தது. `செந் தாமரைக்கா டனைய மேனி` *(தி.8 ப.5 பா.26)* எனவரும் திருவாக்கும் காண்க. இங்ஙனமன்றிப் பூவணம் என்பதை இடப் பெயராகக் கோடற்கு யாதும் இயைபின்று. ஏவணச்சிலை - அம்போடு கூடிய வில்.

மறைகளா யினமுன் போற்றி
மலர்ப்பதம் பற்றி நின்ற
இறைவனைத் தொடர்ந்து பற்றி
யெழுதுமா ளோலை வாங்கி
அறைகழ லண்ணல் ஆளாய்
அந்தணர் செய்த லென்ன
முறையெனக் கீறி யிட்டார்
முறையிட்டான் முடிவி லாதான். **#191**

மறைகளானவை முற்பட வணங்கிப் பின் திருவடி களைத் தொடர்ந்து பற்றி நிற்கின்ற சிவபெருமானைத் தொடர்ந்து பிடித்துக் கொண்டு, எழுதப் பெற்றிருக்கும் அடிமை ஓலையை வாங்கி, ஒலிக்கின்ற வீரக் கழலினை உடைய நம்பியாரூரர், `மறையவர்கள் அடிமையாய்ப் பிறரிடம் பணி செய்தல் எந்த நூலினும் கூறப்படும் முறைமையுடையதன்று` எனக் கிழித்தார். ஈறில்லாத சிவபெருமானும்

`இது முறையோ` என்று முறையிட்டு அருளினார்.

விளக்கவுரை

மறைகள் பொதுவாக இறைவனைப் பற்றிப் பேசுவன. அவற்றின் ஒரு பகுதியாயுள்ள மந்திரங்கள் இறைவனைப் போற்றுவன. ஆதலின் `மறைகளாயின முன்போற்றி மலர்ப்பதம் பற்றி நின்ற இறைவன்` என்றார். அறைகழல் - ஒலிக்கின்ற வீரக்கழல்

அருமறை முறையிட் டின்னும்
அறிவதற் கரியான் பற்றி
ஒருமுறை முறையோ என்ன
உழைநின்றார் விலக்கி இந்தப்
பெருமுறை உலகில் இல்லா
நெறிகொண்டு பிணங்கு கின்ற
திருமறை முனிவ ரேநீர்
எங்குளீர் செப்பு மென்றார். **#192**

அரிய மறைகளும் முறையிட்டு இதுவரையும் இவ்வியல்பினர் என்று அறிதற்கு அரியவராகிய சிவபெருமான், நம்பியாரூரரைத் தம் திருக்கரத்தால் பற்றிக் கொண்டு, ஒருமுறை `இது முறையோ` என்று கூற, அருகில் நின்றவர்கள் இருவரையும் விலக்கி, இவ்வுலகில் இல்லா வழக்காகிய ஒரு பெருவழக்கைக் கொண்டு அதை நிறைவேற்ற வேண்டுமென்று, `மாறு கொள்ளும் மேன்மை மிக்க மறை முனிவரே! நீர் தாம் எங்குள்ளீர்?` சொல்லும் எனக் கேட்டனர்.

விளக்கவுரை

அருமறை முறையிடலாவது, இறைவன் இப்படியன் இவ்வண்ணத்தன் என அறியாமையின், தாம் அறிந்தவாறே போற்றி நிற்பதாகும். பிணங்குதல் - மாறு கொள்ளுதல்.

என்றலும் நின்ற ஐயர்
இங்குளேன் இருப்புஞ் சேயது
அன்றிந்த வெண்ணெய் நல்லூர்
அதுநிற்க அறத்தா றின்றி
வன்றிறல் செய்தென் கையில்
ஆவணம் வலிய வாங்கி
நின்றிவன் கிழித்துத் தானே
நிரப்பினா னடிமை யென்றான். **#193**

இவ்வாறு விலக்கிய மறையவர்கள் வினவ, அதைக் கேட்டு நின்ற மறையவர், `இவ்விடத்தில் உள்ளேன், என் இருக்கையும் மிகத் தொலைவன்று; இந்தத் திருவெண்ணெய் நல்லூரேயாம். அது கிடக்க,

அறநெறிக்குப் புறம்பாக வன்முறை செய்து என் கையிலிருந்த அடிமைச் சீட்டை வலியப்பறித்த இந் நாவலூரன் கிழித்தமையால், அவன்தானே எனக்கு அடிமை என்பதை மெய்ப்பித்து விட்டான்` என்று அருளினார்.

விளக்கவுரை

அவையத்தார் `எங்குளீர்` என்று கேட்க, அதற்கு இங்கு உள்ளேன் என்று கூறியது, நகையும் சினமும் குறித்த விடையாம். தம் இருப்பைக் கேட்டவர்கள், தொடர்ந்து நலமும் உறவும் கேட்டு தாம் வந்த செயலை மடைமாற்றிவிடுவர் எனக் கருதிய பெருமான், `அது நிற்க` என்றார். அத்தகைய புறக் கேள்விகளை மேலும் கேட்க இயலாது செய்தது எண்ணற்குரியதாம். அன்றியும் தாம் வந்த செயற்கண் அவர் கருத்தை நிறுத்துதற்கு உரிய இடனும் ஆயிற்று. தன் கையில் இருந்த ஆவணத்தைக் கிழித்தமையாலேயே அவன்தன் அடிமையை மெய்ப் பித்துக் கொண்டான் என்பது வழக்கில் நிற்கும் உண்மையை எடுத்துக் காட்டுவதாம். இந்த ஆவணம் இருப்பின் தான் அடிமையாதல் உண் மையாகிவிடும்; அதனைக் கிழித்துவிடின் அது பொய்த்துவிடும் எனக் கருதியிருக்கின்றான். ஆனால் அவன் தரப்பில் செய்த இவ்வன் மையே, அவனுக்கு மென்மையாயிற்று என்று கூறுவது நுட்பமும் திட்பமும் உடையதாம்.

குழைமறை காதி னானைக்
கோதிலா ரூரர் நோக்கிப்
பழையமன் றாடி போலு
மிவனென்று பண்பின் மிக்க
விழைவுறு மனமும் பொங்க
வெண்ணெய்நல் லூரா யேலுன்
பிழைநெறி வழக்கை யாங்கே
பேசநீ போதா யென்றார். **#194**

கந்தருவராக இருந்து மறைந்த குழை களைஅணிந்த காதினை உடைய சிவபெருமானைக், குற்றமற்ற நம்பி யாரூரர் பார்த்து, பழைமையான அறம் கூறும் அவையத்தின்கண், இவர் பன்முறையும் வழக்காடி இருப்பர் போலும்! என்று மனத்துட் கொண்டு, `பண்புமிக்க அன்புறு மனமும் பொலிவும் பெறத் திரு வெண்ணெய்நல்லூரில் நீர் இருப்பவரானால் உம்முடைய குற்ற முடைய வழக்கை அங்கேயே பேசுதற்கு வாரும்` என்றார்.

விளக்கவுரை

கந்தருவர் இருவர், தம் இசையை இறைவர் எப்போ தும் கேட்குமாறு வரம் பெற்றுக் குழையாக அமைந்தனர் என்பர். ஆதலின் `குழை மறை`

என்றார். மறை குழை என மாற்றுக. பழைய மன்றாடி போலும் - அறங் கூறவையில் வழக்கிடுதலில் பல்காலும் மிக்க பட்டறிவு உடையவர் (அநுபவம் உடையவர்) போலும்! இனி அத் தொடர் பழைய தில்லை மன்றுள் ஆடுகின்றவர் போலும் எனும் பொருள்படவும் அமைந்துள்ளமை அறியத்தக்கது. பிழைநெறி வழக்கு - குற்றமுடைய நெறியினதாய வழக்கு. இப்பொருளொடு, `யான் இப்பிறவியினின்றும் பிழைத்தற்குரிய நெறியை உடைய வழக்கு` எனும் பொருள்படவும் நிற்கின்றது. பிறபிற ஊர்களில் பிழைபடப் பேசினும் தம்மூரில் தாம் பிழைபடப் பேசார் எனக் கருதி, `வெண்ணெய் நல்லூராயேல் அங்கே பேசுவோம்` என்றார். வெண்ணெய் நல்லூராயேல் என்றது, அஃது அவர்தம் ஊராதலிலும் தமக்கு நம்பிக்கையின்மை தோன்ற நின்றது.

வேதிய னதனைக் கேட்டு
வெண்ணெய்நல் லூரி லேநீ
போதினும் நன்று மற்றப்
புனிதநான் மறையோர் முன்னர்
ஆதியின் மூல வோலை
காட்டிநீ யடிமை யாதல்
சாதிப்ப னென்று முன்னே
தண்டுமுன் தாங்கிச் சென்றான். #195

சிவபெருமானாகிய மறையவர், அவர் கூறிய தைக் கேட்டு, திருவெண்ணெய் நல்லூரிலே நீ செல்லினும் நல்லதே. அவ்வூரில் இருக்கின்ற தூய்மையான நான்மறைகளையும் ஓதி உணர்ந்த மறையவர் முன்னிலையில், நின் முன்னோர் எழுதித் தந்துள்ள மூல ஆவணத்தைக் காட்டி, நீ எனக்கு அடிமை என்பதை உறுதிப்படுத்துவன் என்று சொல்லி, அவருக்கு முன்னாகத் தம்முடைய தண்டத்தை முன்னே ஊன்றிக் கொண்டு, திருவெண்ணெய் நல்லூருக்கு எழுந்தருளினார்.

விளக்கவுரை

மூல ஓலையைக் காட்டி உறுதிப்படுத்துவன் எனவே, நீ கிழித்தது படியோலை என்பதும், அதனைக் கிழித்ததால் நினக்கு வெற்றியாகும் எனக் கருதற்க என்பதும் கூறினாராயிற்று.

செல்லுநான் மறையோன் தன்பின்
திரிமுகக் காந்தஞ் சேர்ந்த
வல்லிரும் பணையு மாபோல்
வள்ளலுங் கடிது சென்றான்
எல்லையில் சுற்றத் தாரு
மிதுவென்னா மென்று செல்ல
நல்லவந் தணர்கள் வாழும்

வெண்ணெய்நல் லூரை நண்ணி. #196
திருவெண்ணெய் நல்லூரை நோக்கிச் செல்கின்ற சிவபெருமானாகிய மறையவரின் பின்பு, தன்முன் வைக்கப்பெற்ற பொருளை வேறுபடுத்தும் முகத்தை உடைய காந்தத்தின் முன் இரும்பு பற்றுவதுபோல, நம்பியாரூரரும் அவர்பின் விரைந்து சென்றார். எண்ணிறந்த சுற்றத்தாரும் இவ்வழக்கு என்னாகுமோ? எனும் நினைவுடன் பின் தொடர்ந்து செல்ல, நல்ல மறையவர்கள் வாழுகின்ற திருவெண்ணெய் நல்லூரை அடைந்து..,

விளக்கவுரை

காந்தத்தின் முன் வைக்கப்பட்ட இரும்பு அதன் ஆற் றலால் ஈர்த்துக் கொள்ளப்படுவதுபோல, முன் செல்லும் மறையவரின் திருவருள் ஆற்றலால் நம்பியாரூரர் ஈர்க்கப்பட்டுப் பின் சென்றார் என்பது கருத்து.

வேதபா ரகரின் மிக்கார்
விளங்குபே ரவைமுன் சென்று
நாதனாம் மறையோன் சொல்லும்
நாவலூர் ஆரூ ரன்றான்
காதலென் அடியான் என்னக்
காட்டிய வோலை கீறி
மூதறி வீர்முன் போந்தா
னிதுமற்றென் முறைப்பா டென்றான். #197

மறையவர்களுள் மிகச் சிறந்தவர்கள் விளங்கு கின்ற பேரவையின் முன்னே சென்று, சிவபெருமானாகிய மறையவர் சொல்லுவார், `திருநாவலூரின்கண் வாழும் இந்நம்பியாரூரன் விரும் புதற்குரிய என் அடியவன் என்று யான் காட்டிய அடிமை ஓலையைக் கிழித்து, முதிய அறிவினையுடைய மறையவர்களே! உங்களிடத்து வந்தான். இது என்னுடைய முறைப்பாடு` என்று அருளினார்.

விளக்கவுரை

வேதபாரகர் - மறைவல்லுநர். அவர்களால் தேர்ந் தெடுக்கப் பெற்றவர் ஆதலின் `அவரின் மிக்கார்` என்றார். முறைப் பாடு - முறையிடும் பொருள். மற்று - அசைநிலை. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அந்தண ரவையின் மிக்கார்
மறையவ ரடிமை யாதல்
இந்தமா நிலத்தி லில்லை
யென்சொன்னாய் ஐயா வென்றார்
வந்தவா றிசைவே யன்றோ
வழக்கிவன் கிழித்த வோலை

தந்தைதன் தந்தை நேர்ந்த
தென்றனன் தனியாய் நின்றான். #198

அவ்வவையில் அறிவில் மிக்கிருப்பவர்களாகிய மறையவர்கள், ஒரு மறையவருக்கு, மற்றொரு மறையவர் அடிமை யாதல் இவ்வுலகத்தில் வழக்கமில்லை. அங்ஙனம் இருக்க, ஐயா! நீர் என்ன பொருந்தா வழக்கைச் சொல்லுகின்றீர்கள் என்றார்கள். யான் கொண்டு வந்த வழக்கு, எழுதிக்கொடுத்த இசைவையுடைய தன்றோ? இவன் கிழித்த அடிமை ஓலை இவன் தந்தைக்குத் தந்தையாகிய பாட்டன் எனக்கு எழுதிக் கொடுத்ததாகும் என்று தனித்து நிற்கும் சிவபெருமானாகிய மறையவர் சொன்னார்.

விளக்கவுரை

அவையினர் அனைவரும் நம்பியாரூரர் பக்கமே வலி யுடையது எனக் கருதுதலின் இவர் பக்கம் யாரும் இல்லை என்பார் `தனியாய் நின்றான்` என்றார். இனி, `தாயுமிலி தந்தையிலி தான்தனியன்` *(தி.8 ப.12 பா.3)* என்பதற்கேற்பத் `தனியாய் நின்றான்` என்றலும் ஒன்று.

இசைவினா லெழுது மோலை
காட்டினா னாகி லின்று
விசையினால் வலிய வாங்கிக்
கிழிப்பது வெற்றி யாமோ
தசையெலா மொடுங்க மூத்தான்
வழக்கினைச் சாரச் சொன்னான்
அசைவில்ஆ ரூரர் எண்ணம்
என்னென்றார் அவையின் மிக்கார். #199

அவ்வவையில் உள்ள பெரியோர்கள், காண்பதற்கு உடன்பட்டு எழுதிய ஓலையை இம்மறையவர் காட்டினா ரானால், அதனை இன்று விரைந்து வலிய வாங்கிக் கிழித்தல் உமக்கு வெற்றியாகுமோ? உடம்பிலுள்ள தசைகளெல்லாம் வற்றுமாறு மூப்படைந்த இம்மறையவர், தம் வழக்கு இதுவென யாவர்க்கும் பொருந்துமாறு சொல்லியுள்ளார். (வெற்றி காண்டலில்) தளர்ச்சி யின்றி இருக்கும் நம்பியாரூரரே! இதற்கு நும் கருத்து யாது? என்று வினவினார்கள்.

விளக்கவுரை

இசைவினால் - நீர் காண்பதற்கு உடன்பட்டு. இனி இதனை எழுதும் ஓலை என்பதற்கு அடையாக்கி, மனம் இசைந்து எழுதப்பட்ட ஓலை என்று உரைத்தலும் ஒன்று. விசையினால் - விரை வாக. தம் கருத்தே வலியுடையது என்பதில் தளர்ச்சியின்றி இருத் தலைக் கண்ட அவையத்தார் `அசைவில் ஆரூரர்` என்றார்.

அனைத்துநூல் உணர்ந்தீர் ஆதி
சைவனென் றறிவீர் என்னைத்
தனக்குவே றடிமை யென்றிவ்
வந்தணன் சாதித் தானேல்
மனத்தினா லுணர்தற் கெட்டா
மாயையென் சொல்லு கேன்யான்
எனக்கிது தெளிய வொண்ணா
தென்றனன் எண்ணம் மிக்கான். **#200**

இவ்வாறு கேட்ட அவையத்தாருக்கு ஆராய்ந்த அறிவில்வல்ல நம்பியாரூரர் `மறை முதலிய அனைத்து நூல்களையும் உணர்ந்தவர்களே! என்னை ஆதி சைவன் என்று நீவிர் அறிவீர்! இம்மறையவர், உலக வழக்கிற்கு வேறாக என்னைத் தம் அடியன் என்று உறுதிப்படச் சொல்வாரேயானால், அச் செய்தி மனத்தினால் அறியப்படாத தோர் மாயையாய் இருக்கின்றது. இதற்கு யான் என்ன கூறுவேன்? எனக்கு இவ்வழக்கு ஒருவகையில் உறுதிப்படுத்த இயலாததாய் இருக்கின்றது` என்று சொன்னார்.

விளக்கவுரை

எண்ணம் - சூழ்ச்சி; அஃதாவது ஆராய்ந்த அறிவு.

அவ்வுரை யவையின் முன்பு
நம்பியா ரூரர் சொல்லச்
செவ்விய மறையோர் நின்ற
திருமறை முனியை நோக்கி
இவ்வுல கின்கண் நீயின்
றிவரையுன் னடிமை யென்ற
வெவ்வுரை யெம்முன் பேற்ற
வேண்டுமென் றுரைத்து மீண்டும். **#201**

அவ்வாறாய கருத்தினை, அவ்வவையார் முன்பு, நம்பியாரூரர் எடுத்துக்கூற, நடுவுநிலைமை உடைய அவ்வவை யத்தார், அங்கு நிற்கின்ற சிவபெருமானாகிய மறையவரைப் பார்த்து, `இவ்வுலகில் இற்றைப் போதில் நீர் இந்நம்பியாரூரரை உம்முடைய அடியான் என்று சொன்ன கடுஞ்சொல்லை எங்கள் முன் உறுதிப் படுத்த வேண்டும்` என்று கூறியவர், பின்னும் கூறுவார்.

விளக்கவுரை

ஓர் அந்தணர் மற்றொரு அந்தணருக்கு அடிமையாதல் இதுவரை இல்லாததும்கேளாததுமாய் இருத்தலின் அதனை `வெவ் வுரை` என்றார்.

ஆட்சியில் ஆவ ணத்தில்

அன்றிமற் றயலார் தங்கள்
காட்சியில் மூன்றி லொன்று
காட்டுவா யென்ன முன்னே
மூட்சியிற் கிழித்த வோலை
படியோலை மூல வோலை
மாட்சியிற் காட்ட வைத்தேன்
என்றனன் மாயை வல்லான். #202

ஆட்சி, ஆவணம், அயலார் கூறும் சான்று ஆகிய இம்மூன்றில் ஒரு சான்றை இந்நம்பியாரூரர் உமக்கு அடிமை என்பதற்குக் காட்டும் என்று அம்மறையவரிடம் கூற, மாயையில் வல்ல அச்சிவபெருமானாகிய மறையவர், முன்பு இவன் தன் சினத்தால் கிழித்த ஓலையானது என்னிடத்தில் இருக்கும் மூல ஓலையின் படியோலையாகும். (நகல்); ஆதலின் என்னிடம் உள்ள மூல ஓலையை மாண்புமிக்க இப்பேரவையின்முன் காட்டுதற்கென வைத்துள்ளேன் என்றார்.

விளக்கவுரை

ஒரு வழக்கைச் சொல்வதற்கு மூன்று சான்றுகள் வேண்டும்.
1. ஆட்சி. அஃதாவது தான் இதுகாறும் ஆண்டு வந்திருக்கும் உரிமை. இதனை இக்காலத்தார் `அநுபோக பாத்தியம்` என்பர்.
2. ஆவணம் - தனக்குரியதென்று அவ்வுடைமைக்கு உரிய முன்னோர் எழுதிக் கொடுத்திருக்கும் ஓலை. இக்காலத்தார் இதனை `மூல சாசனம்` என்பர்.
3. அயலவர் சான்று - தனக்குரிய உடைமையாக ஆண்டுவந்த ஒன்றைத் தம் கண்ணால் பார்த்து அதனைப் பிறர்க்கும் தெளிவித்தற் குரியார்தம் கூற்று. இதனை இக்காலத்தார் `சாட்சி` என்பர்.
இவையே இன்றும் வழக்கில் வெல்லுவதற்குரிய சான்றுகளாக இருந்து வருகின்றன என்பதும் அறியத்தக்கதாம். காட்சி - கண்ணால் கண்டது. இதனைப் பிறர்க்கும் தெளிவிப்பார் சான்றாவார். இம்மூன்றனுள் ஒன்றைக் காட்டினும் அமையும் என்றனர் அவையத் தார். இவ்வழக்கில் காட்டுதற்குரியதாக இருப்பது `ஆவணம்` ஒன்றேயாம். ஆதலின் அம்மூல ஓலையைக் காட்டுகிறேன் என்றார். சுந்தரர் அடிமையாயுள்ளதற்கு ஏனைய இரு சான்றுகளும் உளவே னும் அவையோர், அவற்றைக் காட்டக் காணும் தகையராவரல்லர். சுந்தரர் அடிமை செய்து வந்தது திருக்கயிலையில் ஆகும். அதனை ஆண்டுள்ளார் பலரும் அறிவர். ஆயினும் அச்சுந்தரரே நாவலூர ராய்த் தோன்றினார் என்பதை அவர்களுள் சிலரே தமக்குரிய ஞானத்தால் அறிவர். அவர்களும் ஈண்டு வரவோ, அச்சான்றுகளைக் கூற இவர்கள் ஏற்கவோ இயலாததாகும். இனி இறைவற்கு என்றும் அடிமையாய்

இருப்பதும் வாய்மையே. எனினும் அதனையும் உலகி யல் வழி உணர்த்த இயலாது. அன்றியும் எவ்வுயிர்களும் என்றென் றும் அப்பெருமானின் அடிமையேயாம். `என்று நீ அன்று நான் உன்னடிமை அல்லவோ` *(தாயுமான. சுவாமி.7)* என்ற திருவாக்கால் இந்த உண்மை பெறப்படும். இவற்றிற்கும் மேலாக வழக்காடுவோர் மறையவர் வேடத்தில் வந்திருப்பதாலும், அவையத் தாரும் உலகியல் வயப்பட்டவராதலாலும் ஆவணம் ஒன்றுமே காட்டவும், அதன்வழி அவர்கள் தெளியவும் வாய்ப்பாயிற்று. மூட்சி - சினம். மாயை - யாவ ரையும் தன்வயப்படுத்துதல். இவ்விரு பாடல்களும் ஒரே முடிபின.

வல்லையேற் காட்டிங் கென்ன
மறையவன் வலிசெய் யாமற்
சொல்லநீர் வல்லீ ராகில்
காட்டுவே னென்று சொல்லச்
செல்வநான் மறையோர் நாங்கள்
தீங்குற வொட்டோ மென்றார்
அல்லல்தீர்த் தாள நின்றார்
ஆவணங் கொண்டு சென்றார். **#203**

நீர் கூறியவாறு மூல ஓலையைக் காட்ட இயலு மேல் காட்டுக! என அவையத்தார் கூற, இந்நம்பியாரூரன் இம்மூல ஓலையைப் பறித்துக் கிழிக்காமல் இருக்குமாறு நீங்கள் சொல்ல வல்லவர்களானால் அதனைக் காட்டுகின்றேன் என்று கூற, அதற்குரிய தகுதி வாய்ந்த அவ்வவையத்தாரும் அம்மூல ஓலைக்குத் தீங்கு வாராமல் காப்போம் என்று உறுதி கூறினர். நம்பியாரூரரின் பிறவித் துன்பத்தை நீக்கி ஆளுதற்கு வந்த அம்மறையவரும் ஆவண மூல ஓலையை அவையத்தார்முன் காட்டி அருளினார்.

விளக்கவுரை

மறையவரிடத்திருந்த ஓலை நம்பியாரூரரால் கிழிக்கப் பட்டபின், அதற்குரிய மூல ஓலை ஒன்று உளதென்பதும், அஃது அவர் கையகத்துளது என்பதும் அவையத்தார் அறிந்திலராதலின் `வல்லை யேல் காட்டு இங்கு` என்றனர். இத்துணை அளவு எளிவந்தும், மூல ஓலை, படியோலைகளையும் கொண்டு வழக்காடியும் வருதற்குக் காரணம், நம்பியாரூரரைப் பிறவித் துன்பத்தினின்றும் நீக்கித் தடுத் தாட்கொள்ளவேயாம் என்பார் `அல்லல் தீர்த்து ஆள நின்றார்` என்றார். அல்லல் - துன்பம்; ஈண்டுப் பிறவித் துன்பத்தின் மேற்று.

இருள்மறை மிடற்றோன் கையி
லோலைகண் டவையோ ரேவ
அருள்பெறு கரணத் தானும்

ஆவணந் தொழுது வாங்கிச்
சுருள்பெறு மடியை நீக்கி
விரித்ததன் தொன்மை நோக்கித்
தெருள்பெறு சபையோர் கேட்ப
வாசகஞ் செப்பு கின்றான். **#204**

தம் கழுத்திலுள்ள கருமையான நிறத்தை மறைத்து வந்தவனாகிய சிவபெருமான் தந்த ஓலையைக் கண்ட அவையத்தார், அதனை யாவரும் அறியப் படிக்குமாறு கணக்கனிடம் கூற, அவர்தம் அனுமதியைப் பெற்ற கணக்கனும் அவ்வோலையைத் தொழுது வாங்கிச், சுருளாயிருக்கின்ற மடிப்பை நீக்கி விரித்து, அதன் பழமையைப் பார்த்து, அறநூல் உணர்வில் தெளிவு பெற்றிருக்கும் அவ்வவையத்தார் கேட்குமாறு அவ்வோலையில் இருந்த செய்தியை வாசிக்கத் தொடங்கினான்.

விளக்கவுரை

மூல ஓலைமிகப் பழமை உடையதாதலின் அதன் மடிப்பை நீக்கும்பொழுதும் விரித்துப் படிக்கும்பொழுதும் எத்தகைய ஊறு பாடும் விளையாதவாறு செயற்படத் தொடங்கினான் என்பார், `அதன் தொன்மை நோக்கி` என்றார். அன்றி அம்மூல ஆவணம் உண் மையிலேயே பழமையானதா? அன்றிப் புதிதா? என்பதைக் காண `அதன் தொன்மை நோக்கி` என்றார் என்றலுமாம்.

அருமறை நாவல் ஆதி
சைவனா ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப்
பித்தனுக் கியானும் என்பால்
வருமுறை மரபு ளோரும்
வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையா லெழுதி நேர்ந்தேன்
இதற்கிவை யென்னெ ழுத்து. **#205**

`அறிதற்கரிய மறைகளை உணர்ந்த திருநாவ லூரிலிருக்கும் ஆதி சைவனாகிய ஆரூரன் எழுதிக் கொடுத்த உடன் பாடு; பெருமுனிவராய திருவெண்ணெய் நல்லூரில் வாழும் பித்தன் என்னும் மறையவருக்கு `யானும் என் வழிவழி வரும் மரபினரும் வழிவழியாக அடிமை செய்தற்கு இந்த ஆவணத்தை உள்ளும் புறம்பும் ஒத்து எழுதிக் கொடுத்தேன் இப்படிக்கு இவை என் கையெழுத்தாம்.`

விளக்கவுரை

செய்கை - உடன்பாடு; உடன்பட்டு எழுதிக் கொடுக்கும் ஆவணம்.
இருமை - உள்ளும் புறம்பும் ஆகிய இருமை.

வாசகங் கேட்ட பின்னர்
மற்றுமே லெழுத்திட் டார்கள்
ஆசிலா வெழுத்தை நோக்கி
யவையொக்கு மென்ற பின்னர்
மாசிலா மறையோர் ஐயா
மற்றுங்கள் பேர னார்தந்
தேசுடை எழுத்தே யாகில்
தெளியப்பார்த் தறிமின் என்றார். **#206**

இவ்வாறு எழுதிய உடன்பாட்டைக் கேட்ட பின்பு, அவ்வுடன்படிக்கையில் சான்றாகக் கையெழுத்திட்டிருப்பவர்களின் குற்றமில்லாத கையெழுத்தைப் பார்த்து, அவையனைத்தும் முறையாக அமைந்துள்ளன என்று கூறிப், பின்பு நீதியில் திறம்புதலில்லா அவ் வவையத்தார், `நம்பியாரூரரே! உம்முடைய பாட்டனாரின் உண்மை யான கையெழுத்தாய் இருக்குமாயின் அதனை நன்றாகப் பார்த்துணர் வீர்!` என்றார்கள்

விளக்கவுரை

உங்கள் பேரனார் - உங்கள் பெயரையுடைய பாட்ட னார். இப்பெயர் மகன் அல்லது மகள் வயிற்றில் பிறந்தவர்களையே இக்காலத்துக் குறித்தற்குரியதாயுள்ளது. மேல் எழுத்து இட்டார்கள் - உடன்படிக்கையின்மீது சான்றாகக் கையொப்பமிட்டவர்கள். எழுதிக் கொடுக்கப்பட்ட உடன்பாடு மரபு நிலை திரியா மாட்சிமை உடையதாக உள்ளதா? என்பதைப் பொதுவகையான் பார்த்த அவையத்தார், அது உரிய முறையில் இருப்பது கண்டு `அவையொக்கும்` என்றனர். இனிச் சிறப்பு வகையான் உடன்படிக்கையில் கையெழுத்திட்டவரின் கையெ ழுத்துப் பாட்டனார் கையெழுத்தா என்பதை உற்று நோக்கிப் பார்க்கு மாறு அதனை நம்பியாரூரர் கையில் கொடுக்க நினைந்தார்கள்.மற்று என வருவனவற்றுள் முன்னையது பிறிது என்னும் பொருள்பட நின்றது, பின்னையது அசைநிலையாம்.

அந்தணர் கூற வின்னு
மாளோலை யிவனே காண்பான்
தந்தைதன் தந்தை தான்வே
றெழுதுகைச் சாத்துண் டாகில்
இந்தவா வணத்தி னோடு
மெழுத்துநீ ரொப்பு நோக்கி
வந்தது மொழிமின் என்றான்
வலியஆட் கொள்ளும் வள்ளல். **#207**

அவ்வவையில் உள்ள மறையவர்கள் இவ்வாறு சொல்ல, அடியவர்களை

வலிய வந்து ஆட்கொள்ளும் கருணைப் பெருக்குடைய சிவபெருமானாகிய மறையவர், இன்னமும் அடிமை ஓலையை, இந்நம்பியாரூரனோ காண வல்லவன்? இவன் பாட்டன் இதுவன்றி வேறாக எழுதியிருக்கும் கைச்சாத்துகள் இருக்குமாயின் இவ்வாவண ஓலையின்கண் இருக்கும் எழுத்துக்களோடு ஒத்து நோக்கி ஒக்கும் அல்லது ஒவ்வாது என்று உங்கள் மனத்தில் தோன்றும் தீர்ப்பைச் சொல்லுங்கள் என்றார்.

விளக்கவுரை

`இன்னும்` என்னும் உம்மை, முன் ஆவணம் கிழித்த மையை நினைவு கூர நின்றது; இறந்தது தழீஇய எச்சவும்மை. முன் வன்மை பேசி ஓலையைக் கிழித்தவன் ஆதலானும், வேறாகவுள்ள பாட்டன் கையெழுத்தோடு இவ்வோலையில் இருக்கும் கையெழுத் தை ஒப்புநோக்குதற்குரிய வயதும் திறனும் இல்லாதவன் ஆதலானும் `இவனே காண்பான்` என்றார். பேச்சிலும் வழக்காடுதலிலும் வன்மை உடையவன் போலத் தோன்றினும், உண்மையில் அடியவர்களை வலி யத் தடுத்தாட்கொள்ளும் பெருங்கருணை உடையவன் என்பார் `வலிய ஆட்கொள்ளும் வள்ளல்` என்றார். கைச்சாத்து - கையெழுத்து.

திரண்டமா மறையோர் தாமுந்
திருநாவ லூரர் கோமுன்
மருண்டது தெளிய மற்ற
மறையவ னெழுத்தால் ஓலை
அரண்டரு காப்பில் வேறொன்
றழைத்துடன் ஒப்பு நோக்கி
இரண்டுமொத் திருந்த தென்னே
யினிச்செயல் இல்லை யென்றார். **#208**

திரண்டிருக்கும் பெருமையுடைய மறையோர்க ளாகிய அவ்வவையோர் தாமும், நம்பியாரூரர் முன்பு ஐயம் தெளியு மாறு, அப்பாட்டனுடைய கையெழுத்தாக ஊர் அவையில் பாது காவலாக வைத்திருக்கும் கையெழுத்தொன்றை எடுக்கச் செய்து, அவ் வோலையிலுள்ள கையெழுத்துடன் எழுத்து வடிவங்களை ஒத்துப் பார்த்து, இரண்டும் ஒத்துள்ளமை கண்டு, ஈதென்ன வியப்பு என நினைந்து இனி வேறு செயலில்லை என்றனர்.

விளக்கவுரை

ஓலை கொண்டு வழக்கிடும் மறையவர் `இவனே காண்பான்` எனக் கூறிக் காண்டற்குரியன் அல்லன் என்றதும், நம்பியா ரூரருக்கு அச்சமும் ஐயமும் ஏற்பட்டன. அவ்வச்சத்தோடு கூடிய ஐயமே `மருட்சி`

எனப்பட்டது. அரண் தருகாப்பு - பாதுகாப்புடன் வைத்திருக் கும் இருப்பு. ஊராட்சி மன்றங்கள் பலவும் தத்தம் எல்லையில் உள்ளா ரின் கையெழுத்தைப் பெற்றுப் பாதுகாப்பாக வைத்திருந்தமை இதனால் அறியப்படுகிறது. ஆட்சி முறையின் அமைவு பண்டைக் காலத்தில் எத்துணைச் சீரியதாயிருந்தது என்பது அறியத்தக்கது.

நான்மறை முனிவ னார்க்கு
நம்பியா ரூரர் தோற்றீர்
பான்மையி னேவல் செய்தல்
கடனென்று பண்பின் மிக்க
மேன்மையோர் விளம்ப நம்பி
விதிமுறை யிதுவே யாகில்
யானிதற் கிசையே னென்ன
இசையுமோ வென்று நின்றார். **#209**

`நான்கு மறைகளையும் உணர்ந்த இம் மறைய வர்க்கு நம்பியாரூரரே! நீர் தோற்றீர்! ஆதலின் அவர் கூறியவாறு அவருக்குப் பணி செய்வதே உமக்குக் கடன்` என்று நற்குணங்கள் நிறைந்த மேதக்க அவ்வவையோர் கூற, நம்பியாரூரரும் `அவையத் தாரின் ஆணை இதுவாயின் யான் இதற்கு உடன்படேன் என மறுத்தற்கு ஒல்லுமோ?` என்று கூறி நின்றார்.

விளக்கவுரை

பான்மையின் - அம்மறையவர் கருத்தின்படி.

திருமிகு மறையோர் நின்ற
செழுமறை முனியை நோக்கி
அருமுனி நீமுன் காட்டும்
ஆவணம் அதனில் எங்கள்
பெருமைசேர் பதியே யாகப்
பேசிய துமக்கிவ் வூரில்
வருமுறை மனையு நீடு
வாழ்க்கையுங் காட்டு கென்றார். **#210**

மேதக்க அம்மறையவர்கள் அங்கு நிற்கும் சிவ பெருமானாகிய மறையவரைப் பார்த்து, `அரிய மறை முனிவரே! நீர் முன் காட்டிய ஆவணவோலையில் உம்முடைய ஊர் எங்கள் திரு வெண்ணெய்நல்லூர் எனக் குறிக்கப்பட்டுள்ளது. அதன்படி உமக்கு இவ்வூரில் வழிவழியாக ஆண்டுவரும் மனையையும், நீர் வாழ்ந்து வரும் நிலையான வாழ்க்கை வசதிகளையும் காட்டும்` என்றனர்.

விளக்கவுரை

நீடுவாழ்க்கை - தொடர்ந்து துய்த்து வரும் வாழ்க்கைச் செல்வங்கள்.

பொருவரும் வழக்கால் வென்ற
புண்ணிய முனிவ ரென்னை
ஒருவரும் அறியீ ராகில்
போதுமென் றுரைத்துச் சூழ்ந்த
பெருமறை யவர்கு ழாமும்
நம்பியும் பின்பு செல்லத்
திருவருட் டுறையே புக்கார்
கண்டிலர் திகைத்து நின்றார். **#211**

ஒப்பற்ற பெருவழக்கினால் வெற்றிகொண்ட புண்ணியத்தின் வடிவென நிற்கும் சிவபெருமானாகிய மறையவர், `இத்துணை முதியவராக இருந்தும் ஒருவரும் என் மனையையும் வாழ்க்கையையும் அறியீராயின் அவற்றை நான் காட்டுகின்றேன்` என அவர்களை அழைக்க, ஆண்டுச் சூழ்ந்துள்ள பெருமைமிக்க அவையத் தாரும் நம்பியாரூரரும் பின்வர, அவ்வூரிலுள்ள `திரு வருட்டுறை` என்னும் திருக்கோயிலில் புகுந்தார். அதன்பின்பு அவரை அவர்கள் காணாமல் திகைத்து நின்றனர்.

விளக்கவுரை

பொருவரும் - ஒப்பற்ற. திருவருட்டுறை - திரு வெண்ணெய் நல்லூரிலுள்ள திருக்கோயிலின் பெயராகும். இடர்க் கடலினின்றும் ஏறற்கு அமைந்த அருள்துறை; `தனியனேன் பெரும் பிறவிப் பௌவத்து....மல்லற் கரைகாட்டி ஆட்கொண்டாய்` *(தி.8 ப.5 பா.27)* எனவரும் திருவாசகத் திருவாக்கினையும் காண்க.

எம்பிரான் கோயில் நண்ண
இலங்குநூன் மார்பர் எங்கள்
நம்பர்தங் கோயில் புக்க
தென்காலோ வென்று நம்பி
தம்பெரு விருப்பி னோடு
தனித்தொடர்ந் தழைப்ப மாதோ
டும்பரின் விடைமேல் தோன்றி
அவர்தமக் குணர்த்த லுற்றார். **#212**

எம் சிவபெருமான் ஆகிய மறையவர், திருக்கோயிலுக்குட் சென்று மறைந்தருள, நம்மை அடிமை என்று உறுதிப்படுத்திய விளங்குகின்ற பூணூலணிந்த மார்பினை உடைய மறையவர், எம்பிரானார் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்குட் புகுந்தது என்னோ? என்று கருதிய நம்பியாரூரர், தம்மிடத்துத் தோன்றிய பெருவிருப்போடும் உடன் வந்த மறையவர்களினின்றும் பிரிந்து தனியே சென்று அழைக்கச், சிவபெருமான் உமையம்மை யாரோடு ஆனேற்றின்மீது எழுந்தருளி, அந்நம்பியாரூரர்க்கு அரு ளிச் செய்வாராய்.

விளக்கவுரை

நம்பியாரூரரோடு அவையத்தாரும் உடன் வந்திருப் பினும், மறையவர் கோயிலுட் சென்று மறைந்தது கண்டு, அவர்கள் வியந்ததல்லது அப்பெருமானைத் தொடர்ந்திலர். காரணம் தம்மள வில் உள்ள கடமை நிறைவு பெற்றுவிட்டதாலும், இறைவனாகக் கண்டு மகிழும் புண்ணியம் அவருக்கு இன்மையானுமாம். நம்பியா ரூரருக்கோ அடிமை செய்து வாழும் கடப்பாடு இருத்தலின் அவர் மட்டுமே தொடர்ந்தார்.

முன்புநீ நமக்குத் தொண்டன்
முன்னிய வேட்கை கூரப்
பின்புநம் ஏவ லாலே
பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத்
தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர்
நாம்தடுத் தாண்டோம் என்றார். **#213**

முற்பிறப்பில் நீ நமக்கு அடியனாய் இருந்தாய். மாதரைக் கருதிய விருப்பு மிகுதியால் பின் நம்முடைய ஆணையால் இந்நிலவுலகில் தோன்றினாய். அதனால் துன்பத்தை விளைவிக்கும் இல்வாழ்க்கையானது உன்னைத் தொடராமல் நாமே வலியத் தொடர்ந்து வந்து நல்லுணர்வினை உடைய மறையவர்களுக்கு முன்னே தடுத்தாட்கொண்டோம் என்றார்.

விளக்கவுரை

முன்னிய - கருதிய; மாதராரைக் கருதிய. `வைத்த நிதிபெண்டிர் மக்கள்குலம் கல்வியென்னும் பித்த உலகிற்` *(தி.8 ப.10 பா.6)* தலைப்படுதற்கு ஏதுவாதலின், அவ்வாழ்க்கையைத் `துன்புறு வாழ்க்கை` என்றார். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

என்றெழு மோசை கேளா
ஈன்றஆன் கனைப்புக் கேட்ட
கன்றுபோல் கதறி நம்பி
கரசர ணாதி யங்கந்
துன்றிய புளக மாகத்
தொழுதகை தலைமே லாக
மன்றுளீர் செயலோ வந்து
வலியஆட் கொண்ட தென்றார். **#214**

இவ்வாறு, சிவபெருமான் அருளிச் செய்த திருவாக்கைக் கேட்ட நம்பியாரூரர், ஈன்ற பசுவின் கனைப்பினைக் கேட்ட கன்றைப் போல அலறி, கைகால் முதலிய உறுப்புக்களில் நெருங்கி எழுந்த

மயிர்க்கூச்செறிதல் உண்டாக, தொழுத கை தலைமீது ஏற, திருமன்றுள் ஆடல் செய்தருளும் பெருமானே! உம்முடைய செய் கையோ இவ்வாறு வலிய வந்து தடுத்தாட்கொண்டது என்று விண்ணப் பம் செய்தார்.

விளக்கவுரை

ஈன்ற ஆன் - கன்றை ஈன்ற பசு. கரசரணம் - கைகால். புளகம் - மயிர்க் கூச்செறிதல். அன்பாலும் அச்சத்தானும் வந்த மெய்ப்பாடுகள் இவை.

எண்ணிய வோசை யைந்தும்
விசும்பிடை நிறைய வெங்கும்
விண்ணவர் பொழிபூ மாரி
மேதினி நிறைந்து விம்ம
மண்ணவர் மகிழ்ச்சி பொங்க
மறைகளும் முழங்கி ஆர்ப்ப
அண்ணலை ஓலை காட்டி
யாண்டவ ரருளிச் செய்வார். **#215**

எண்ணப்பட்ட ஐந்து இயங்களின் ஓசையும் விண்ணில் நிறையவும், எவ்விடத்தும் தேவர்கள் சொரிகின்ற மலர் மழையானது இந்நிலவுலகில் நிறைந்து மேற்படவும், மண்ணுலகத்தவர் மகிழ்ச்சியடையவும், மறைகள் பெருமுழக்கிடவும் நம்பியாரூரரை ஆவண ஓலை காட்டித் தடுத்தாட்கொண்ட சிவபெருமான் இவ்வாறு அருளிச் செய்வாராயினார்.

விளக்கவுரை

****

மற்றுநீ வன்மை பேசி
வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கு மன்பிற்
பெருகிய சிறப்பின் மிக்க
அற்சனை பாட்டே யாகும்
ஆதலான் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார்
தூமறை பாடும் வாயார். **#216**

தூய்மையான மறைகளைப் பண்டு அருளிச் செய்த சிவபெருமான், மேலும் நீ என்னுடன் வன்மையான சொற்க ளைச் சொல்லி வழக்கிட்டமையால், `வன்றொண்டன்` என்னும் பெயரைப் பெற்றாய். நமக்கும் அன்பினால் செய்யும் திருமுழுக்காட் டுதல் திருமாலை அணிவித்தல், திருவிளக்கிடுதல் முதலாய வழிபாடு களினும் மேலான வழிபாடாவது போற்றியுரைக்கும் புகழுரைகளே யாகும். ஆதலின் இந்நிலவுலகில் நம்மைத் தமிழ்ச் சொற்களால் ஆகிய பாடல்களைப்

பாடுக! என்றருளிச் செய்தார்.

விளக்கவுரை

அற்சனை - போற்றியுரைகள்; `இனியவும் நல்லவும் நனிபல ஏத்தி` *(தி.11 திருமுரு. வரி.286)* , `பொருள்சேர் புகழ் புரிந்தார்` *(குறள், 5)* என்றல் தொடக்கத்தனவும் காண்க. `தூய மறை களைப் பாடும் வாயார், `சொற்றமிழ் பாடுக` என்றதன் அருமையும் காண்க.
`ஆத னத்திடை வைத்த ருச்சனை செய்தபின்` *(தி.12 பு.4 பா.4),*
`வந்தஅர்ச் சனைவழி பாடு மன்னவாம்` *(தி.12 பு.28 பா.821),*
`அழுக்கிலாத் துறவ டக்கம்அறிவொ டர்ச்சித்தல்`(சிவஞா. சித்தி. சுப., *2-23),* எனவரும் இடங்களிலெல்லாம் இடையின ரகரம் இட்டே அருச்சனை என்னும் சொல் அமைந்துள்ளது.
ஈண்டு வல்லின றகரமாகி `அற்சனை` என வந்தது எதுகை நோக்கிலாம்.

தேடிய அயனு மாலுந்
தெளிவுறா தைந்தெ ழுத்தும்
பாடிய பொருளா யுள்ளான்
பாடுவாய் நம்மை யென்ன
நாடிய மனத்த ராகி நம்பியா
ரூரர் மன்றுள்
ஆடிய செய்ய தாளை
யஞ்சலி கூப்பி நின்று. **#217**

பண்டொருகால் பெருமானின் முடியையும் அடியையும் தேடிய அயனும் மாலும் காணாமல் வருந்திய நிலையில், திருவைந்தெழுத்தைத் துதித்து, வாழ்த்த, அவ்வளவில் அவர்க்குக் காட்சி கொடுத்தருளிய சிவபெருமான், நம்மைப் பாடுவாய் என்று அருளிச் செய்ய, சிவபெருமானின் திருவருளைச் சிந்தித்து நிற்கும் கருத்துடையராய நம்பியாரூரரும், திருமன்றுள் ஆடியருளும் சிவந்த திருவடிகளைக் கைகுவித்து வணங்கி நின்று.

விளக்கவுரை

பெருமானின் அடிமுடியைக் காண இயலாத அயனும், மாலும், திருவைந்தெழுத்தை எண்ணிய அளவில் பெருமான் வெளிப் பட்டருளப் போற்றி மகிழ்ந்தனர்.
தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாகுங் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்தும் துதித்துய்ந்த படிவிரித்தார்.
எனச் சேக்கிழார் பின்னும் *(தி.12 ப.28 பா.78)* விளக்குமாற்றானும்

இவ்வுண்மை அறியலாம்.

வேதிய னாகி யென்னை
வழக்கினால் வெல்ல வந்த
ஊதிய மறியா தேனுக்
குணர்வுதந் துய்யக் கொண்ட
கோதிலா அமுதே இன்றுன்
குணப்பெருங் கடலை நாயேன்
யாதினை யறிந்தென் சொல்லிப்
பாடுகேன் எனமொழிந்தார். **#218**

மறையவனாய் அடியேனை வழக்கிட்டு வெல்ல வந்த ஊதியத்தை அறியாத அடியேனுக்கு, முன்னைய உணர்வைக் கொடுத்து, உலக வாழ்வினின்றும் விலகுமாறு தடுத்தாட்கொண்ட குற்ற மற்ற அமுதாக விளங்குபவனே! இன்று உம் மேலான குணநலன் களாம் பெருங்கடலில், நாயை ஒத்த சிறுமைக்குணம் உடையவனா கிய யான், எவ்வளவில் முகந்து எக்குணத்தை அறிந்து எவ்வண்ணம் பாடுகேன்? என்று விண்ணப்பம் செய்தார்.

விளக்கவுரை

என்னை - ஒன்றற்கும் உரியனல்லாத என்னை என இழிவு தோன்ற நின்றது. ஊதியம் - இலாபம்: `முதலிலார்க்கு ஊதியம் இல்லை` *(குறள், 449)* எனவருவதும் காண்க.

எண்ணிறந்த குணங்கள் உடைமையின் `குணப்பெருங்கடல்` என்றார். அக்குணங்களுள் யாதொன்றனையும் அறியாதேனும், அதனை எடுத்துக் கூறிப் போற்றத் தகுதியில்லாதேனும் ஆகியேன் என்பார். `யாதினை அறிந்து என்சொல்லிப் பாடுகேன்` என்றார்.

இவ்விருபாடல்களும் ஒரு முடிபின.

அன்பனை யருளின் நோக்கி
அங்கணர் அருளிச் செய்வார்
முன்பெனைப் பித்த னென்றே
மொழிந்தனை யாத லாலே
என்பெயர் பித்த னென்றே
பாடுவா யென்றார் நின்ற
வன்பெருந் தொண்டர் ஆண்ட
வள்ளலைப் பாட லுற்றார். **#219**

இவ்வாறு வேண்டிய அடியவராகிய நம்பி யாரூரரைக் கருணையோடும் பார்த்து, அழகிய பேரருட் பெருங் கருணையை உடைய சிவபெருமான் அருளிச் செய்வார் `முன்னே என்னைப் பித்தன் என்றே கூறினாய், அதனால் இப்பொழுதும் என் பெயரைப் பித்தன் என்றே வைத்துப்

பாடுக!` என்று அருளினார். அதனைக் கேட்டு நின்ற பெருமைமிக்க தொண்டராகிய நம்பி யாரூரரும், தம்மைத் தடுத்தாட்கொண்ட கருணை வள்ளலாகிய பெருமானைப் பாடத் தொடங்கினார்.

விளக்கவுரை

அங்கணர் - அழகிய கருணைப் பெருக்குடையவர் .

கொத்தார்மலர்க் குழலாளொரு
கூறாயடி யவர்பான்
மெய்த்தாயினு மினியானையவ்
வியனாவலர் பெருமான்
பித்தாபிறை சூடியெனப்
பெரிதாந்திருப் பதிகம்
இத்தாரணி முதலாமுல
கெல்லாமுய வெடுத்தார். **#220**

கொத்தாக மலர்ந்த மலர்களை அணிந்த கூந்தலை உடைய உமையம்மையாரைஒரு மருங்கில் கொண்டவரும், அடிய வரிடத்து மெய்யன்புடைய தாயினும் இனியவருமான சிவபெரு மானை, இடமகன்ற திருநாவலூரில் உள்ளார்க்குத் தலைமை பெற்று விளங்குபவராகிய அந்நம்பியாரூரர், `பித்தா பிறைசூடி` என்னும் முதற்குறிப்புடைய பெருமை பொருந்திய திருப்பதிகத்தை, இந்நிலவுல கம் முதலாக எவ்வுலகத்தில் உள்ளாரும் உயரிய பேறான வீட்டின்பத் தைப் பெறும் பொருட்டுப் பாடத் தொடங்கினார்.

விளக்கவுரை

மெய்த்தாய் - உண்மையான அன்புடைய தாய்; பால் நினைந்து ஊட்டும் தாய். தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை என்பர். அது தாயைப் பெரிதும் வணங்கிப் போற்றி வாழ வேண்டும் என்னும்குறிப்பினது,ஆயினும்இறைவனை நோக்க அத்தாயன்பு தானும் குறைவுடையதேயாம். தாய் ஒரு கால எல்லையில் மட்டுமே உதவுபவள் அதிலும் பெரிதும் உடம்பையே பேணி வளர்த்தற் குரியவள். அவ்வாறு வளர்த்தற்கும் தக்க சூழல் வாய்த்துழியே செய்தற்குரியவள். ஆனால் இறைவனோ எஞ்ஞான்றும், அவ்வப் போதும் பெறும் உடலோடு உயிரையும் காத்து வருபவன். அவன் யாவர்க்கும் மேலாம் சீர் உடையவன் ஆதலின் அவனுக்கு இடம், காலம், ஏற்ற சூழல் போன்ற எச்சூழலும் வேண்டுவதின்று. ஆதலின் `மெய்த் தாயினும் இனியான்` என்றார். `மெய்த்தாய்` என்பது உடல் பற்றிய தாய் எனப்பொருள்படுமாறும் காண்க. `பித்தா பிறைசூடீ` *(தி.7 ப.1)* எனத் தொடங்கும் இப்பதிகமே சுந்தரர் திருவாயினின்றும் மலர்ந்த முதல்

திருப்பதிகம் ஆகும். சுந்தரர் இறைவனைப் `பித்தன்` எனக் கூறியது வன்மையானதும் குற்றமானதுமாகிய மொழியாகும். இதனையே முதலாக வைத்துப்பாடுக என்றருளியது இறைவனின் பெருங்கருணையாகும். `அற்றம் மறைக்கும் பெருமை` *(குறள் 980)* என்பர் திருவள்ளுவர். அப்பெருமையறிய நின்ற பதிகம் இதுவா தலின், `பெரிதாம் திருப்பதிகம்` என்றார். பொருளானும் பயனானும் பெரிதாகிய பதிகம் என்பர் சிவக்கவிமணியார் *(பெரிய.பு. உரை).*

முறையால்வரு மருதத்துடன்
மொழியிந்தள முதலிற்
குறையாநிலை மும்மைப்படி
கூடுங்கிழ மையினால்
நிறைபாணியி லிசைகோள்புணர்
நீடும்புகல் வகையால்
இறையான்மகி ழிசைபாடின
னெல்லாநிக ரில்லான். **#221**

எவ்வகையினாலும் தமக்குப் பிறர் ஒப்பில்லாத வன்தொண்டர், முறைமையாக வரும் மருதப் பண்ணுடன் கூடிய முதலில் எடுத்துப் பாடுகின்ற `இந்தளம்` என்னும் பண்ணை உடைய அத் திருப்பதிகத்தை, எடுத்தல், படுத்தல், நலிதல் எனவரும் இசை வேறுபாடு குறையாமல் பொருந்தும் முறைமையினாலும், நிறைந்த தாளத்தில் இசையின்பகுதி மிகவும் புணர்ந்து அமையும் வகைமை யாலும் சிவபெருமான் மகிழுமாறு இசையோடு பாடினர்.

விளக்கவுரை

மருதம் - இது குறிஞ்சி, பாலை, மருதம், செவ்வழி எனும் நான்கு பெரும் பிரிவுகளுள் ஒன்று. இதன் உட்பிரிவாக விளங்கும் இந்தளம், பகற்பொழுதில் பாடப் பெறும் பத்துப் பண்களுள் ஒன்றாம். மும்மைப்படி - வலிவு, மெலிவு, சமநிலை ஆகிய இசைக் கூறுபாடு. பகற்பொழுதாவது காலை பத்து முதல் பிற்பகல் *2* மணி வரையிலான பொழுதாம். மணம் வந்த புத்தூரில் திருமணம் செய்வதற் கென எடுத்துக் கொண்ட முயற்சி, திருநாண்பூட்டும் நேரத்தில் நிறுத்தப் பெற்றது. அதுபற்றி அருகிருந்தோர் வழக்கினை விசாரிக்கவும், பின் திருவெண்ணெய்நல்லூருக்கு வந்து விசாரணை நிறைவு பெற்று முடிவு பெறவும், பின்னர்த் திருக்கோயிலில் சென்று இறைவர் மறைய அப் பெருமானின் அருள்வழி நின்று ஆரூரர் பாடவும் நேர்ந்தது. இவற்றை யெல்லாம் ஆழமாக எண்ண இத்திருமணம் காலை *6-00* முதல் *7-30* மணி வரையிலான கால அமைப்பில் அமைக்கப்பட்டது என்று அறிய லாம். `திருமணக் கோலம் காணக் காமுறு மனத்தான் போலக் கதிரவன்

உதயம் செய்தான்` என ஆசிரியர் முன்னர் அருளுமாறும் காண்க எனவே இப்பதிகம் ஏறத்தாழ முற்பகல் *11* மணியிலிருந்து *12* மணிக்குள் பாடப்பெற்றது என அறியலாம். திருவெண்ணெய் நல்லூர்க் கல்வெட்டில் இறைவன் பெயர் தடுத்தாட்கொண்ட தேவர், தடுத்தாட்கொண்ட நாயனார் எனக்காணப்படுவதும் , வழக்கு வென்ற திருவம்பலம் என்ற பெயரில் மண்டபம் ஒன்று இருத்தலும், பிச்சன் என்று பாடச் சொன்னான் என்றொரு தொடர் கல்வெட்டில் காணப்படுவதும் இந்நிகழ்ச்சிக்கு அரணாகின்றன.

சொல்லார்தமி ழிசைபாடிய
தொண்டன்தனை இன்னும்
பல்லாறுல கினில்நம்புகழ்
பாடென்றுறு பரிவின்
நல்லார்வெண்ணெய் நல்லூரருட்
டுறைமேவிய நம்பன்
எல்லாவுல குய்யப்புரம்
எய்தானருள் செய்தான். **#222**

இவ்வாறு தம்மைச் சொற்கள் நிறைந்த தமிழ்ப் பதிகத்தை இசையோடு பாடியருளிய வன்தொண்டரை, இனியும் பலவகைகளால் இந்நிலவுலகத்தின்கண் இருந்து நம் புகழைப் பாடு வாயாக! என்று மீதூர்ந்த கருணையினால் எவ்வுலகும் உய்யுமாறு முப் புரங்களை எரித்தவரும் மெய்யன்பர்கள் வாழும் திருவெண்ணெய் நல்லூர்த் திருவருட்துறையில் எழுந்தருளியிருப்பவருமான சிவ பெருமான் ஆணையிட்டு அருளினர்.

விளக்கவுரை

`பலசொல்லால் பொருட்கிடனாக உணர்வினில் வல் லோர் அணிபெறச் செய்வன செய்யுள்` *(நன்னூல். பெய.11)* என்பவாகலின், ஆரூரர் பதிகமும் `சொல்லார் தமிழாயிற்று`. சொல்லார் தமிழ் - பல்வகையான இனிய அரியதமிழ்ச்சொற்களால் அமைந்த திருப்பதிகம். அவ்வாறமைந்த பதிகம்தாமும் சொல்வகை யானும், பொருள் வகையாலும், யாப்புவகையானும் பல திறப்படுமா தலின் `பல்லாறு உலகினில் நம் புகழ்பாடு` என்றார்.

அயலோர்தவ முயல்வார்பிற
ரன்றேமணம் அழியும்
செயலால்நிகழ் புத்தூர்வரு
சிவவேதியன் மகளும்
உயர்நாவலர் தனிநாதனை
யொழியாதுணர் வழியிற்

பெயராதுயர் சிவலோகமும்
எளிதாம்வகை பெற்றாள். #223
தம் கணவரிடத்து இடையில் மணமுறிவு நேரினும், அவருக்குப் பெரும் பிரிவு (இறப்பு) நேரினும், அவர்தம் மனைவியார் மேற்கொள்ளும் நெறிகள் பலவாம். அவ்வாறின்றி விளங்குகின்ற புத்தூரில் வாழும் சடங்கவியாரின் திருமகளாரோ, மணம் நேர்ந்த அந்நாளிலேயே அம்மணம் அழிந்த காரணத்தால், ஒப்பற்ற நாவலர் பெருமானாகிய நம்பியாரூரரைத் தம் மனத்தகத்து என்றும் நீங்காது சிந்தித்துவரும் கடப்பாட்டால், உயர்வாகிய சிவலோகத்தையும் எளிதாகப் பெற்றார்.

விளக்கவுரை

மண உறுதி செய்யப்பட்டு, உரிய மணமகனார் இறக்க, அம் மணம் தடைப்பட்டமை திலகவதியார் வரலாற்றில் காண்ப தொன்றாம். மணமகனோடு இருந்து திருநாண் பூட்டப்பட இருந்த நிலையில் மணம் நேராதது இவ்வரலாற்றில் காண்பதொன்றாம். இந்நிலையில் இவ்விரு பெருமாட்டியாரும் தம் வாழ்வை அமைத்துக் கொண்ட முறைமை மிகச் சீரியதாகும். திலகவதியார் கணவராக வர இருந்தவரே இறந்தமையால் உடன் உயிர் துறக்க நினைய, தம்பியார் வேண்டுகோளால் வாழ்ந்து அவர் திருந்தவும், உயிர்க்குயிராய நாதனை அடையவும் இம்பர் மனைத் தவம் செய்தார். இப்பெரு மாட்டியாரோ மணம் முறியினும் கணவராக இருந்த நாவலர் சொற் றமிழ் பாடி இந்நிலவுலகில் வாழ்ந்திருந்தமையின், அப் பெருமகனா ரையே மனத்தகத்து எண்ணி வீடுபேறு அடைகின்றார். காரணம், தமக்கென உறுதி செய்யப்பட்ட கணவனார் இறந்தே விடுவதால் இனி உனக்கு `அடுத்த தாதை நாம்` என அருளுமாப்போல, உடல் தலைவன் நீங்க, உயிர்த் தலைவனை *(இறைவனை)* எண்ணி வழிபடுவா ராயினர் திலகவதியார். இவ்வம்மையாரோ மணமுறிவு நிகழினும் தமக்கென உறுதி செய்யப்பட்ட கணவனார் மேலும் இவ்வுலகில் வாழ்ந்து வருவதால், அப்பெருமகனாரையே நினைந்து வாழ்ந்து வீடுபேறு அடைவாராயினர். அயலோர் தவமாவது,

``காதலர் இறப்பிற் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்காது
இன்னுயிர் ஈவர் ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்,
நளியெரி புகாஅ ராயின் அன்பரோடு
உடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்
பத்தினிப் பெண்டிர்`` -மணிமேகலை *, 2 , 42 - 48*

என்பதாகும்.

நாவலர்கோன் ஆரூரன்
தனைவெண்ணெய் நல்லூரின்
மேவுமருட் டுறையமர்ந்த
வேதியராட் கொண்டதற்பின்
பூவலருந் தடம்பொய்கைத்
திருநாவ லூர்புகுந்து
தேவர்பிரான் தனைப்பணிந்து
திருப்பதிகம் பாடினார். **#224**

திருநாவலூரராகிய நம்பியாரூரர், தம்மைத் திருவெண்ணெய்நல்லூரில் உள்ள திருவருட்டுறையுள் வீற்றிருந் தருளும் மறையவராகிவந்த இறைவன் தடுத்தாட் கொண்டதன்பின், மலர்கள் பலவும் மலர்ந்து விளங்குதற்கு இடனாய பொய்கைகளை உடைய திருநாவலூருக்குச் சென்று, அங்கு வீற்றிருந்தருளும் இறை வனைப் பணிந்து திருப்பதிகம் பாடுவாராயினர்.

விளக்கவுரை

இது போது அருளிய பதிகம் கிடைத்திலது.

சிவனுறையுந் திருத்துறையூர்
சென்றணைந்து தீவினையால்
அவநெறியிற் செல்லாமே
தடுத்தாண்டாய் அடியேற்குத்
தவநெறிதந் தருளென்று
தம்பிரான் முன்னின்று
பவநெறிக்கு விலக்காகுந்
திருப்பதிகம் பாடினார். **#225**

திருநாவலூரிலிருந்து சிவபெருமான் வீற்றிருந் தருளும் திருத்துறையூரை அணைந்து, தம் இறைவன் திருமுன்னி லையில் நின்று, என் தீவினைப்பயனால் உலகியல் உணர்வில் செல்லாதவாறு தடுத்து ஆளாகக் கொண்டருளினாய். அடியேற்கு யான் உய்தற்குரிய தவநெறியைத் தந்தருள வேண்டும் எனும் குறிப் பினையுடையதாய பிறவிப் பிணிக்கு விலக்காகும் திருப்பதிகத்தைப் பாடினார்.

விளக்கவுரை

இத்திருப்பதியில் பாடிய பதிகம் `மலையார் அருவி` *(தி.7 ப.13)* எனத் தொடங்கும் திருப்பதிகமாகும். இப்பதிகத்தில் வரும் பாடல்கள் தோறும் தவநெறி வேண்டும் எனும் குறிப்பு இடம் பெற்றுள் ளது. பதினோராவது பாடலில், `பொய்யாத் தமிழ் ஊரன் உரைத்தன வல்லார், மெய்யே பெறுவார்கள் தவநெறிதானே` *(தி.7 ப.13)* என ஓதுமாற்றான்

இப்பதிகத்தை ஓதுவார்க்கும் தவநெறி கிட்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

புலனொன்றும் படிதவத்திற்
புரிந்தநெறி கொடுத்தருள
அலர்கொண்ட நறுஞ்சோலைத்
திருத்துறையூர் அமர்ந்தருளும்
நிலவுந்தண் புனலுமொளிர்
நீள்சடையோன் திருப்பாத
மலர்கொண்டு போற்றிசைத்து
வந்தித்தார் வன்றொண்டர். **#226**

ஆரூரர் வேண்டியவாறே, ஐம்பொறிகளும் தம் வயப்பட்டு நிற்கும் தவநெறியை இறைவன் கொடுத்தருள, அதனை மேற்கொண்ட ஆரூரர், மலர்கள் நிறைந்த மணம் மிக்க சோலைகள் சூழ்ந்த திருத்துறையூரில் வீற்றிருந்தருளும் பிறையும், சடையும் இருத் தற்கிடனாய நீண்ட சடையினையுடைய பெருமானின் திருவடி மலர் களை மனத்திற் கொண்டு அழகிய மலர்களால் வழிபாடு செய்து வணங்கினார்.

விளக்கவுரை

பொறிகள் தத்தம் வழியில் செல்லாது ஒருவழிப்பட்டு நிற்க, இறைவனை அகத்தே உணர்ந்தும், புறத்தே வழிபட்டும் நிற்கும் அநுபவமே இப்பாடற்கண் குறிக்கும் தவமாகும் . `தவத்தினில் உணர்த்த` என்னும் சிவஞானபோதமும் *(சூத்.8)*. இத்தவத்தாலேயே இவர் திருக்கோயிலில் மலர் கொண்டு வழிபட்டார், இவ்வுரிமை அக் காலத்து வழிபடுவார் அனைவர்க்கும் இருந்தமை, `போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்` *(தி.4 ப.3 பா.1)* எனவரும் அப்பரடிகளின் திருவாக்கால் அறியப்படும். `இவ்வாற்றான் நம்பிகள் ஆன்மார்த்த பரார்த்தங்களாகிய இருவகைப் பூசைக்குமுரிய ஆதி சைவராதலும் உணர்க` எனச் சிவக்கவிமணியார் விளக்கம் தருவர் *(பெரிய.பு. உரை)*.

திருத்துறையூர் தனைப்பணிந்து
சிவபெருமான் அமர்ந்தருளும்
பொருத்தமா மிடம்பலவும்
புக்கிறைஞ்சிப் பொற்புலியூர்
நிருத்தனார் திருக்கூத்துத்
தொழுவதற்கு நினைவுற்று
வருத்தமிகு காதலினால்
வழிக்கொள்வான் மனங்கொண்டார். **#227**

திருத்துறையூரை வணங்கி மகிழ்ந்த ஆரூரர், அவ்விடத்தினின்றும் புறப்பட்டுச் சிவபெருமானை வழிபடுதற்கு ஏற்ற திருப்பதிகள் பலவற்றையும் சென்று வணங்கி, அழகிய தில்லைப் பதியின்கண் ஆடும்

கூத்தப் பெருமானைத் தொழ நினைந்து அதற் குரிய முயற்சியும்,
பேரன்பும் மீதூர்ந்தவாறு வழிச் செல்ல மனம் கொண்டார்.

விளக்கவுரை

வருத்தம் - முயற்சி; `மூப்பே பிணியே வருத்தம் மென் மையொடு` *(*தொல். மெய்ப். *6)* எனவரும் பகுதிக்குப் பேராசிரியர் கூறும் உரையும் காண்க. திருத்துறையூரிலிருந்து தில்லைக்குச் செல் லும் வழியில் சிவபெருமானை வழிபடுதற்கு ஏற்ற திருப்பதிகளாக வுள்ளன திருவதிகை, திருமாணிகுழி முதலாயினவாம். அவற்றை மேல்வரும் *228* மற்றும் *236* ஆகிய பாடல்களிற் சேக்கிழாரும் குறித்தருள்வர்.

மலைவளர்சந் தகில்பீலி
மலர்பரப்பி மணிகொழிக்கும்
அலைதருதண் புனற்பெண்ணை
யாறுகடந் தேறியபின்
இலகுபசும் புரவிநெடுந்
தேர்இரவி மேல்கடலிற்
செலவணையும் பொழுதணையத்
திருவதிகைப் புறத்தணைந்தார். **#228**

மலையின்கண் தோன்றிய சந்தன மரங்களும், அகில் மரங்களும், மயிற்பீலிகளும், மலர்களும் ஆகிய இவைகளைத் தன்மீது பரவச் செய்து, முத்துக்களைக் கரையில் தந்து நிற்கும் அலை களை உடைத்தாகிய குளிர்ந்த நீரையுடைய பெண்ணை ஆற்றினைக் கடந்து, கரையேறிய பின்பு, விளங்குகின்ற பசிய நிறம் பொருந்திய குதிரை பூட்டிய நீண்ட தேரினையுடைய கதிரவன் மேல்திசைக் கடலில் சென்று அணைதற்குரிய மாலைக்காலம் வர, திருவதிகையின் புறத்து வந்தருளினார்.

விளக்கவுரை

கதிரவன் இவர்ந்து செல்லும் தேரை ஏழு குதிரைகள் இழுத்துச் செல்லும் என்பர். அவ்வேழு குதிரைகளும் செந்நீலம், கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், பொன்சிவப்பு, சிவப்பு ஆகிய எழு நிறங்களையுடையன என்று கூறுவர். இவற்றுள் இங்குப் பச்சை நிறத்தைக் குறிக்கவே, ஏனைய ஆறும் அதன்கண் அடங்க ஏழு நிறமும் குறித்தார் என்பர் சிவக்கவிமணி அவர்கள் *(*பெரிய.பு. உரை*).*

உடையவர சுலகேத்து
முழவாரப் படையாளி
விடையவர்க்குக் கைத்தொண்டு
விரும்புபெரும் பதியைமிதித்

தடையுமதற் கஞ்சுவனென்
றந்நகரிற் புகுதாதே
மடைவளர்தண் புறம்பணையிற்
சித்தவட மடம்புகுந்தார். #229

ஆளுடைய அரசு என உலகவர் போற்றுகின்ற உழவாரப் படையினையுடைய திருநாவுக்கரசர், இறைவனுக்குக் கைத் தொண்டுகளை விரும்பிச் செய்த பெரும் திருப்பதியாகிய இத்திரு வதிகையினுள், காலால் நடந்து செல்வதற்கு நான் அஞ்சுகின்றேன் எனும் நினைவுடையராய், அந்நகரினுள் புகாமல் அதன் புறத்தே யுள்ள சித்தவட மடத்திற்குச் செல்வாராயினர்.

விளக்கவுரை

ஆளுடைய அரசு - இறைவற்கு அடிமைத் திறம் பேணிவரும் அரசு. உழவாரம் கொண்டு யாண்டும் பணிசெய்து வந்தமைபற்றி நாவரசர் உழவாரப் படையாளி எனவும் அழைக்கப் பெற்றார். சித்தவட மடம் - இது திருவதிகைக்கு வட மேற்கில் உள்ள பழமையானதொரு மடம்.

வரிவளர்பூஞ் சோலைசூழ்
மடத்தின்கண் வன்றொண்டர்
விரிதிரைநீர்க் கெடிலவட
வீரட்டா னத்திறைதாள்
புரிவுடைய மனத்தினராய்ப்
புடையெங்கு மிடைகின்ற
பரிசனமுந் துயில்கொள்ளப்
பள்ளியமர்ந் தருளினார். #230

வரிப் பாடல்களை இனிது ஒலிக்கும் வண்டுகளின் கூட்டம் மிக்க சோலைகள் சூழ்ந்த அத்திருமடத்தில், ஆரூரர் விரிந்த அலைகளையுடைய நீர்மிக்க கெடில நதிக்கு வடக்கே இருக்கும் திரு வீரட்டானத்தில் வதிந்தருளும் இறைவனின் திருவடிகளை இடை யறாது உளங்கொண்ட பண்பினராய், தம்மைச் சூழப் பொருந்திய, அடியவர்கள் துயிலத் தாமும் துயின்றார்.

விளக்கவுரை

வரி - வரிப்பாட்டு: ஈண்டு இதனை ஒலிக்கும் வண்டு களைக் குறிக்கும்.

அதுகண்டு வீரட்டத்
தமர்ந்தருளும் அங்கணரும்
முதுவடிவின் மறையவராய்
முன்னொருவ ரறியாமே
பொதுமடத்தி னுட்புகுந்து

பூந்தாரான் திருமுடிமேற்
பதுமமலர்த் தாள்வைத்துப்
பள்ளிகொள்வார் போல்பயின்றார். #231

ஆரூரர் அவ்வாறு துயில் கொண்டிருப்பதைக் கண்ட இறைவனும், முதிய வடிவு கொண்ட மறையவராய், முன்பு ஒருவரும் அறியாதபடி அப்பொது மடத்தின் உள்ளே புகுந்து, ஆரூர ரின் திருமுடியின் மேலே தம் தாமரை மலர் போன்ற திருவடிகளை வைத்துத், தாமும் துயில்கொள்வாரைப் போன்று இருந்தார்.

விளக்கவுரை

பொதுமடம் - அன்பராயினார் அனைவரும் தங்குதற் குரிய திருமடம். பூந்தாரான் - மலர்களாலாய மாலையை உடையவன்: நம்பியாரூரர். மலர்கள் எனப் பொதுப்படக் கூறினும் ஈண்டுத் தாமரை யைக் குறிக்கும்; `அல்லியந் தாமரைத்தார் ஆரூரன்` என ஆரூரர் தம்மைக் குறித்தலின் என்க. பதுமமலர் - தாமரை மலர்.

அந்நிலைஆ ரூரனுணர்ந்
தருமறையோ யுன்னடியென்
சென்னியில்வைத் தனையென்னத்
திசையறியா வகைசெய்தது
என்னுடைய மூப்புக்காண்
என்றருள அதற்கிசைந்து
தன்முடியப் பால்வைத்தே
துயிலமர்ந்தான் தமிழ்நாதன். #232

அவ்வாறு தம்முடிமேல் அடிவைத்திருப்பதை அறிந்த ஆரூரர், அரிய மறைகளை உணர்ந்த பெரியீர்! உம் அடிகளை என்முடிமேல் வைத்தது ஏன்? என வினவ, அதற்கு அவரும், என்னு டைய மூப்பு என்னைத் தெரியாமல் செய்துவிட்டது என்று கூற, தமிழ்த் தலைவராய ஆரூரரும், அதனை ஏற்றுக் கொண்டு, தம் முடியைப் பிறி தோரிடத்திலே வைத்துத் துயில் கொள்வாராயினர்.

விளக்கவுரை

தம் அடியை முடிமேல் வைத்தது முதுமையாலேயாம் என. ஆரூரர் அவரைக் கடியாது, வேற்றிடத்தில் தம் முடி வைத்துத் துயில் கொள்ள நினைந்தது அவர்தம் அரிய பண்பாட்டைக் காட்டு கிறது. இக்கால இளைஞர் உலகம் இதனை எண்ணுமாக.

அங்குமவன் திருமுடிமேல்
மீண்டுமவர் தாள்நீட்டச்
செங்கயல்பாய் தடம்புடைசூழ்

திருநாவ லூராளி
இங்கென்னைப் பலகாலும்
மிதித்தனைநீ யாரென்னக்
கங்கைசடைக் கரந்தபிரா
னறிந்திலையோ எனக்கரந்தான். #233

அவ்வாறு துயில் கொண்ட பிறிதோரிடத்தும், முதியவர் எனக் கூறிய அவர்தம் திருவடிகளை அவர் முடிமேல் மீண்டும் நீட்டவே, செழுமையவாகிய மீன்கள் பாய்ந்து விளையாடு கின்ற பொய்கைகள் சூழ்ந்த திருநாவலூரில் தோன்றிய ஆரூரர், இவ் விடத்தே என்னைப் பலகாலும் மிதித்தாய், நீ யார் என்று வினவ, கங்கையைத் தம் திருச்சடையின்கண் ஒருமருங்கே மறைத்து நிற்கச் செய்த பெருமானாகிய மறையவரும், `என்னை நீ அறியாயோ` எனக் கூறி மறைந்தனர்.

விளக்கவுரை

இருமுறை மிதித்தவரைப் பலகாலும் மிதித்தனை எனக் கூறியது, ஒன்றல்லன வெல்லாம் பல என்னும் தமிழ் வழக்குப் பற்றியாம். இறைவனின் கருணையை ஆரூரர் அறியாமை கண்டு `அறிந்திலையோ` என ஈண்டுக் கூறியதையும், முன்னர் இறைவன் தடுத்தாட்கொள்ள வந்தபோது `திருமறை முனிவரே நீர் எங்குளீர்` என அவையத்தார் கேட்க, `என்னை ஒருவரும் அறியீராகில் போதும்` எனக் கூறியதையும் ஒப்பிட்டுக் காண, உயிர் உணர்த்த உணரும் பான்மையதாதலை அறியலாம்.

செம்மாந்திங் கியானறியா
தென்செய்தே னெனத்தெளிந்து
தம்மானை யறியாத
சாதியா ருளரே யென்று
அம்மானைத் திருவதிகை
வீரட்டா னத்தமர்ந்த
கைம்மாவி னுரியானைக்
கழல்பணிந்து பாடினார். #234

இவ்விடத்து இறுமாப்படைந்து யான் அறியாமல் என்ன செயலைச் செய்துவிட்டேன்! எனக் கலங்கித், தெளிவடைந்து, தந்தையாராயும், திருவதிகை வீரட்டானத்து எழுந்தருளி இருப்பவ ராயும், யானைத் தோலைப் போர்வையாகக் கொண்டவராயும் உள்ள பெருமானின் திருவடிகளை வணங்கித் `தம்மானை யறியாத சாதியா ருளரே` (தி.7 ப.38 பா.1) எனும் முதற்குறிப்புடைய திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

விளக்கவுரை

இவ்வாறு தொடங்கியருளிய பதிகத்தில் பத்தாவது பாடலில் `வன்றொண்டன் ஆரூரன் மதியாது சொன்ன அன்பனை` *(தி.7 ப.38 பா.10)* எனவரும் குறிப்பே, `செம்மாந்து இங்கு யான் அறியாது என் செய்தேன்?` எனச் சேக்கிழார் அருளுதற்குக் காரணமாயிற்று. செம்மாந்து - இறுமாந்து. தனக்குரிய தலைவனைக் கூட அறியாதிருந்த அறியாமை, செருக்கினால் ஆயது என்பார் `செம்மாந்து` என்றார். `சிம்மாந்து சிம்புளித்துச்` *(தி.7 ப.30. பா.1)* என்பது தலை நிமிர்ந்து கண்களைச் சிறிது மூடி எனப் பொருள்படும். `சீரூர்ப்பாட லாட லறாத செம்மாப் பார்ந்து` என்பது பெருமா னின், சீர்மை மிகுந்த பாடல்களும் அவ்வுள்ளுணர்வால் தம்மை அறியாது ஆடும் ஆடல்களும் நீங்காத பெருமிதத்துடன் கூடி` எனப் பொருள்படும். எனவே ஈண்டு வரும் இறுமாப்பு எனப் பொருள் படும் `செம்மாந்து` என்பதற்கு, அவை மேற்கோளாகா. அங்ஙனமா கவும் சிவக்கவிமணியார் *(பெரிய.பு. உரை)* அவற்றை ஈண்டு மேற்கோளாகக் காட்டி விளக்கியிருப்பது இயைபுடைத்தன்றாம். இறுமாப்பு என்பதும், பெருமிதம் என்பதும் வேறுவேறாய நிலைய வாம். ஒரோவழிப் பெருமிதம் எனும் பொருளில் இறுமாப்பு எனும் சொல் வருதலும் உண்டு. `இறுமாந் திருப்பன்கொலோ` *(தி.4 ப.9 பா.11)* என்புழி அப்பொருளில் வருதல் காண்க. கைம்மா - துதிக்கையயுடைய யானை.

பொன்றிரளும் மணித்திரளும்
பொருகரிவெண் கோடுகளும்
மின்றிரண்ட வெண்முத்தும்
விரைமலரும் நறுங்குறடும்
வன்றிரைக ளாற்கொணர்ந்து
திருவதிகை வழிபடலால்
தென்திசையில் கங்கையெனுந்
திருக்கெடிலம் திளைத்தாடி. **#235**

பொற்பொடிகளின் தொகுதியையும், மணிகளின் தொகுதியையும், போர் செய்தற்குரிய யானைகளின் வெண்மையான தந்தங்களையும், ஒளி மிகுந்த வெண்மையான முத்துக்களையும், நறுமணம் உடைய மலர்களையும், சந்தனக் கட்டைகளையும் வலிய அலை என்னும் கைகளால் கொண்டுவந்து திருவதிகை என்னும் திருப்பதியை வழிபாடு செய்தலால், தென்திசையில் கங்கை என்று அறிஞர்கள் கூறும் திருக்கெடிலப் பேராற்றில் படிந்து முழுகி.

விளக்கவுரை

மின் - ஒளி. குறடு - சந்தனக் கட்டைகள். நாட்டுச் சிறப்பில் காவிரியை அடியவராகக் காட்டியது போல *(தி.12 சரு.1-2 பா.7),* ஈண்டும் கெடிலப் பேராற்றைக் கங்கையொடு ஒப்பிட்டு அடியவராகக் காட்டுகின்றார். `தென்றிசைக் கெங்கைய தெனப்படுங் கெடில வாணரே` *(தி.4 ப.10 பா.6)* என வரும் அப்பரடிகள் திருவாக்கினை நினைவு கூர்ந்தவாறு ஆசிரியர் அருளுவது எண்ணத்தக்கது.

அங்கணரை அடிபோற்றி அங்ககன்று மற்றந்தப்
பொங்குநதித் தென்கரைபோய்ப் போர்வலித்தோள் மாவலிதன்
மங்கலவேள் வியிற்பண்டு வாமனனாய் மண்ணிரந்த
செங்கணவன் வழிபட்ட திருமாணி குழியணைந்தார். **#236**

அழகிய திருக்கண்களையுடைய பெருமான் திருவடிகளை வணங்கி, அவ்விடத்தினின்றும் நீங்கிப் பொங்குகின்ற நீரையுடைய அப்பேராற்றின் தென்கரை வழியே சென்று, போர் செய்தலில் வலிமை உடைய தோளையுடைய மாவலி என்னும் பேரரசனின் மங்கலமான வேள்வியில் முன்னாளில் மிகக் குறுகிய வடிவாய்ச் சென்று, மூவடி மண் இரந்த திருமால் வழிபாடு செய்த திருமாணிகுழி என்னும் திருப்பதியை அடைந்தருளினார்.

விளக்கவுரை

அங்கணரை அடிபோற்றி என்பதால் இவ்விடத்துப் பதிகம் பாடியிருக்கலாம் எனத் தெரிகிறது. எனினும் இப்பதிகம் கிடைத்திலது. மாவலி - இவனோர் அரசன். திருமால் இவனை அழிக்கவே மூன்றடி மண் கேட்க, ஈரடியால் மூவுலகும் அளந்து எஞ்சிய ஓரடிக்கு அம்மன்னவன் தலையையே தாம் பெறுவதற்குரிய இடனாகக் கொண்டார் என்பது வரலாறு. இப்பாவம் நீங்கத் திருமால் வழிபட்ட பதி இதுவாகும். வாமனன் - திருமால் மிகக் குறுகிய வடிவு கொண்டு எடுத்த திருவுருவம். மாணி - பிரமச்சாரி; இவ்வடிவில் வந்தவர் திருமால்.

பரம்பொருளைப் பணிந்துதாள்
பரவிப்போய்ப் பணிந்தவர்க்கு
வரந்தருவான் தினைநகரை
வணங்கினர்வண் டமிழ்பாடி
நரம்புடையாழ் ஒலிமுழவின்
நாதவொலி வேதவொலி
அரம்பையர்தங் கீதவொலி
அறாத்தில்லை மருங்கணைந்தார். **#237**

திருமாணிகுழியில் வீற்றிருந்தருளும் இறை வனை வணங்கி, அவ்விடத்தினின்றும் சென்று அடியவர்க்கு வேண்டும் வரங்களைத் தந்தருளும் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருத்தினை நகரை

வணங்கி, வளமான திருப்பதிகத்தைப் பாடி, நரம்பு களையுடைய யாழோசையும், முழவோசையும், நான்மறையோசை யும், தெய்வமகளிரின் இன்னிசைப் பாடல் ஓசையும் ஆகிய இவைகள் எக்காலமும் நீங்காதிருக்கும் தில்லையின் அருகே அடைந்தருளினார்.

விளக்கவுரை

திருத்தினை நகரில் பாடிய பதிகம் `நீறு தாங்கிய` *(தி.7 ப.64)* எனத் தொடங்கும் திருப்பதிகமாகும். இப்பதிகப் பாடல்தொறும் `திருத்தினை நகருட் சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே` என வருவதால், இத்திருப்பதியைச் சென்று அடையுமுன் பாடப்பட்டதெ னத் தெரிகிறது. இது பற்றியே சேக்கிழாரும் தினை நகரை வணங்கினர் எனக் கூறி, பின் `வண்டமிழ் பாடி` எனக் குறித்தருளுகின்றார். நெஞ் சறிவுறுத்தலாக அருளப் பெற்றிருக்கும் இப்பதிகம், பன்முறையும் படித்து இன்புறுதற்குரியதாம்.

தேம லங்கலணி மாமணி மார்பில்
செம்ம லங்கயல்கள் செங்கம லத்தண்
பூம லங்கவெதிர் பாய்வன மாடே
புள்ள லம்புதிரை வெள்வளை வாவித்
தாம லங்குகள் தடம்பணை சூழுந்
தன்ம ருங்குதொழு வார்கள்தம் மும்மை
மாம லங்களற வீடருள் தில்லை
மல்ல லம்பதியி னெல்லை வணங்கி. **#238**

தேன் பொருந்திய புதிய தாமரை மலராலாய மாலையையும், அணிகலனாகிய சிறந்த மணிமாலையையும் அணிந்த மார்பினையுடைய ஆரூரர், அருகில் பறவைகள் ஒலிக்கும் அலை யோடு கூடிய வெண்மையான சங்குகளை உடைத்தாகிய குளத்திடத் துள்ள குளிர்ந்த செந்தாமரை மலர்கள் அசையுமாறு அழகிய கயல் மீன்கள் பாய்தற்கு ஏதுவாக, மலங்கு மீன்கள்அகன்ற வயல்களில் சூழ்கின்ற அத்தில்லையின் பக்கத்தே வழிபடுவோருடைய மும்மலங்க ளும் கெட வீடுபேற்றை வழங்கியருளும் வளமும் அழகும் தவழும் திருஎல்லையை வணங்கி.

விளக்கவுரை

தேம் அலங்கல் - தேனையுடைய மலர்மாலை; தாமரை மாலை. செம்மல் - நம்பியாரூரர். பறவைகளை உடையதும், நீர்ப்பெருக்கால் அலைகளொடு கூடியதும், வெண்மையான சங்குகளை உடையதுமான குளம். இக்குளத்தில் உள்ள தாமரை மலர்கள் அசையுமாறு மீன்கள் பாய்கின்றன. அதன் அயலிலிருக்கும் வயல்களில் `மலங்கு` என்னும்

ஒருவகையான மீன்கள் சூழ உள்ளன. இவ்வாறாய திருப்பதியே தில்லையாம். இத்தகைய திருப்பதியின் கண் உள்ள பெருமானை வழிபடுவார்க்கு இறைவன் மும்மலங்களும் கெட வீடு அருளுவன் என்கின்றார் சேக்கிழார். இதனால் நீர்வளம், நிலவளம் ஆகிய உலகியல் நலன்களும், பாச நீக்கமும் சிவப்பேறும் பெறுதற்குரிய அருளியல் நலன்களும் குறித்தாராயிற்று.

நாக சூதவகு ளஞ்சர ளஞ்சூழ்
நாளி கேரமில வங்க நரந்தம்
பூக ஞாழல்குளிர் வாழை மதூகம்
பொதுளும் வஞ்சிபல வெங்கு நெருங்கி
மேக சாலமலி சோலைக ளாகி
மீது கோகில மிடைந்து மிழற்றப்
போக பூமியினு மிக்கு விளங்கும்
பூம்பு றம்பணை கடந்து புகுந்தார். **#239**

புன்னை மரமும், மாமரமும், மகிழமரமும், சரள மரமும், சூழ்ந்திருக்கின்ற தென்னை மரமும், இலவங்க மரமும், நாரத்த மரமும், பாக்கு (கமுகு) மரமும், குங்கும மரமும், குளிர்ந்த வாழை மரமும், இலுப்பை மரமும், நெருங்கிய வஞ்சி மரமும் ஆகிய பல மரங்களும் எவ்விடத்தும் நெருக்கம் உடையவாய், மேகத் தொகுதி களைத் தாங்கி நிற்கும் சோலைகளை உடைத்தாய், குயில்கள் நெருங்கிக் கூவ, போக பூமியினும் சிறந்து விளங்கும் பொலிவினை உடைத்தாகிய மருத நிலத்தைக் கடந்து, தில்லையின் திருஎல்லையுள் சென்றருளினார்.

விளக்கவுரை

நாகம் - புன்னை. சூதம் - மா. வகுளம் - மகிழமரம். நாளிகேரம் - தென்னை. நரந்தம் - நாரத்தை. போக பூமி - இன்பச்சிறப் பொன்றே உள்ள உலகு. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வன்னி கொன்றைவழை சண்பகம் ஆரம்
மலர்ப்ப லாசொடு செருந்திமந் தாரங்
கன்னி காரங்குர வங்கமழ் புன்னை
கற்பு பாடலம் கூவிள மோங்கித்
துன்னு சாதிமரு மாலதி மௌவல்
துதைந்த நந்திகர வீர மிடைந்த
பன்ம லர்ப்புனித நந்தனவ னங்கள்
பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான். **#240**

வன்னி மரமும், கொன்றை மரமும், சுரபுன்னை மரமும், சண்பக மரமும், சந்தன மரமும், பூக்களை உடைய பலாச மரத்தொடு, செருந்தி மரமும், மந்தார மரமும், கோங்கு மரமும், குரா மரமும், மணம் கமழ்கின்ற

புன்னை மரமும், கற்பக மரமும், பாதிரி மரமும், வில்வ மரமும் ஆகிய இவைகளால் நிரம்பப் பெற்றும், நெருங்கிய சிறுசண்பகமும், நறுமணமுடைய முல்லையும், மல்லிகையும் ஆகிய மலர்கள் நிரம்பப்பெற்றும், இதழ்கள் நெருங்கிய நந்தியாவர்த்தம், அலரி ஆகிய கொடிகளும், செடிகளும் செறியப் பெற்றும் உளவாய நெருங்கிய பல மலர்களையுடைய தூய திருநந்தனவனங்களை, மணம் கமழ்கின்ற மாலையையுடைய ஆரூரர் வணங்கிச் சென்றார்.

விளக்கவுரை

வழை - சுரபுன்னை. ஆரம் - சந்தனமரம். கன்னிகாரம் - கோங்குமரம். கற்பு - கற்பகம் (பாரி சாதம்). பாடலம் - பாதிரி. கூவிளம் - வில்வம். மௌவல் - மல்லிகை. கரவீரம் - அலரி.

இடம ருங்குதனி நாயகி காண
ஏழ்பெ ரும்புவன முய்ய வெடுத்து
நடந வின்றருள் சிலம்பொலி போற்றும்
நான்ம றைப்பதியை நாளும் வணங்கக்
கடல்வ லங்கொள்வது போற்புடை சூழுங்
காட்சி மேவிமிகு சேட்செல வோங்குந்
தடம ருங்குவளர் மஞ்சிவர் இஞ்சித்
தண்கி டங்கையெதிர் கண்டும கிழ்ந்தார். **#241**

இடப்பக்கத்தில் நின்று உமையம்மையார் காணவும், பெருமையுடைய ஏழுலகத்தாரும் உய்யவும், தூக்கிய திருவடி கொண்டு ஆடியருளுகின்ற அத்திருவடியின் சிலம்போசை யைப் போற்றி மகிழும் நான்மறைகளும் வாழ்கின்ற அத்திருத்தில் லையை, நாள்தோறும் வணங்குதற்காகக் கடல் வலங்கொண்டிருப்பது போல, அந்நகரைச் சூழ்ந்திருக்கும் தோற்ற முடையதாய், நெடுந் தொலைவு உயர்ந்தும் அகன்றும் மேல் இவர்ந்தும் நிற்கும் மேகங்கள் சூழ்ந்து நிற்கும் மதிலைச் சூழ்ந்திருக்கும் குளிர்ந்த அகழியை ஆரூரர் எதிர்கண்டு மகிழ்ந்தார்.

விளக்கவுரை

தில்லைப் பதியைச் சூழவிருக்கும் அகழி, அந்நகரைக் கடல் வலம்கொண்டாற் போல் அமைந்திருந்தது. எனவே அகழியின் ஆழமும், நீர்ப்பரப்பும், குறித்தவாறாயிற்று. வலம்கொண்டது போல் எனும் தற்குறிப்பேற்றத்தால் அங்குள்ள பத்திமைப்பான்மையையும் குறித்தாராயிற்று.

மன்று ளாடுமது வின்னசை யாலே
மறைச்சு ரும்பறை புறத்தின் மருங்கே
குன்று போலுமணி மாமதில் சூழுங்

குண்ட கழ்க்கமல வண்டலர் கைதைத்
துன்று நீறுபுனை மேனிய வாகித் தூய
நீறுபுனை தொண்டர்க ளென்னச்
சென்று சென்றுமுரல் கின்றன கண்டு
சிந்தை அன்பொடு திளைத்தெதிர் சென்றார். #242

பொன்னம்பலத்தில் ஆனந்த நடனம் செய்தருளும் திருவடியாகிய தாமரை மலரின்கண் உள்ள இன்பத் தேனைத் தாம் உண்ண வேண்டும் எனும் ஆசையால் மறைகளாகிய வண்டுகள் முழங்குகின்ற சூழலையுடைய அத்தில்லையின் மருங்கே உள்ள மலைபோல் உயர்ந்த அழகிய பெருமையினையுடைய மதிலைச் சூழ்ந்த ஆழமான அகழியிலிருக்கும் தாமரை மலர்களில், வண்டுகளானவை அதனருகில் அலர்ந்து நிற்கும் தாழம் பூவினிடத்திருக்கும் மகரந்தப் பொடியில் தோய்ந்து, சிறந்த திருநீற்றை அணிந்த உடம்பினை உடையவாய்த் தூய திருநீற்றை அணிந்துநிற்கும் அடியவர்கள் என்று சொல்லுமாறு அவ்விடத்துச் சென்றுசென்று ஒலிப்பதைக் கண்டு, மனத்தில் எழுந்த அன்போடு பத்தியிலும் மூழ்கி எதிராகச் சென்றார் ஆரூரர்.

விளக்கவுரை

தாழம்பூவின் மகரந்தப் பொடியில் துதைந்த வண்டுகள், அகழியிலிருக்கும் தாமரைகளில் சென்றுசென்று ஒலிப்பது, திருநீறு அணிந்த தொண்டர்கள் பெருமானிடத்துச் சென்று போற்றி மகிழ்வதைப் போன்றிருந்தது. ஆருரர் இக்காட்சியைக் கண்டு மகிழ்ந்தார்.
மன்றுளாடும் மது - பொன்னம்பலத்தில் ஆடியருளுகின்ற கூத்தப் பிரான். இப்பெருமானைப் போற்றி மகிழும் வண்டுகள் மறைகளாகிய வண்டுகளாம். இவ்வண்டுகளைப் போன்றே, அகழியில் செந்தாமரை மலர்களில் மொய்த்து நிற்கும் வண்டுகளும் காட்சியளிக்கின்றன.

பார்வி ளங்கவளர் நான்மறை நாதம்
பயின்ற பண்புமிக வெண்கொடி யாடும்
சீர்வி ளங்குமணி நாவொலி யாலும்
திசைக ணான்கெதிர் புலப்பட லாலும்
தார்வி ளங்குவரை மார்பின் அயன்பொற்
சதுர்மு கங்களென வாயின தில்லை
ஊர்வி ளங்குதிரு வாயில்கள் நான்கின்
உத்த ரத்திசை வாயின்மு னெய்தி. #243

உலகத்தார் அறநெறி வழுவாமல் இருத்தற்கு ஏதுவாக வளர்கின்ற நான்மறைகளின் ஒலி அங்குள்ளார் பலரும் ஓதுவதால் மிக்கு இருக்கவும், வெண்மையான கொடிகள் அசையவும், சிறப்புமிக்க நல்ல மணிகளின் ஒலி எழவும், அவ்வொலி நான்கு திசைகளிலும் வெளிப்பட்டு வரவும்,

மாலையை அணிந்த மலை போலும் மார்பினையுடைய நான்முகனின் அழகிய நான்கு முகங்கள் போன்றிருக்கும் நான்கு வாயில்களையுடைய தில்லைப்பதியின்கண் வடக்குவாயிலின் திருமுன்பு அடைந்து.

விளக்கவுரை

இப்பாடலில் வரும் முதல் மூன்று அடிகளும் நான் முகனுக்கும், தில்லைப்பதிக்கும் பொதுப்பட அமைந்துள்ளன. நான் முகனுக்கு ஆகும்பொழுது நான்மறை பயின்ற நாவினை உடைய வனும், அந்நாவின்கண் கலைமகள் இருத்தலின் இடையறாது வரும் நா ஒலி உடையவனும், நான்கு முகங்களை உடையவனும் ஆனவன் எனப் பொருள்படும். தில்லையம்பதிக்கு ஆகும் பொழுது நான்மறைகளும் இடையறாது பயிலப்பட்டு வருவதும், கட்டப்பட்ட வெண் கொடிகள் பலவும் அசைந்து விளங்குவதும், மணிகளின் ஒலி ஆங்காங்கு கேட்கப் பெறுவதும், நான்கு வாயில்களை உடையதுமான `தில்லை` எனப் பொருள்படும். வெண்கொடி - நான்முகனுக்கு ஆகும்போது கலைமகளைக் குறிக்கும். தில்லைக்கு ஆகும்பொழுது வீதிகளில் கட்டப் பெற்றிருக்கும் கொடிகளைக் குறிக்கும். சதுர்முகங்கள் - நான்முகனைக் குறிக்கும்பொழுது நான்கு முகங்களைக் குறிக்கும். தில்லையைக் குறிக்கும் பொழுது நான்கு திசைகளிலும் உள்ள திருவாயிலைக் குறிக்கும். உத்தரத்திசை - வடக்குத் திக்கு.

அவ்வவ் ஊர்களின் பொலிவையும் மகிழ்வையும் காட்டி நிற்பன கொடிகளாம். `வீதிகடோறும் வெண்கொடியோடு விதானங் கள்` *(தி.4 ப.21 பா.3)* `விதானமும் வெண்கொடியு மில்லா வூரும் அருப்போடு மலர்பறித்திட்டுண்ணா வூரும் அவை யெல்லாம் ஊரல்ல` *(தி.6 ப.95 பா.5)* எனவரும் அப்பரடிகளின் திருவாக்குகளும் காண்க.

அன்பின் வந்தெதிர் கொண்டசீ ரடியார்
அவர்க ளோநம்பி யாரூரர் தாமோ
முன்பி றைஞ்சினர் யாவரென் றறியா
முறைமை யாலெதிர் வணங்கி மகிழ்ந்து
பின்பு கும்பிடும் விருப்பி னிறைந்து
பெருகு நாவனக ரார்பெரு மானும்
பொன்பி றங்குமணி மாளிகை நீடும்
பொருவி றந்ததிரு வீதி புகுந்தார். **#244**

அன்பு மீதூர விரும்பி வந்து எதிர்கொண்ட சிறந்த அடியவர்களோ அல்லது நம்பியாரூரரோ இவர்களுள் முற்பட வணங்கியவர்கள் இன்னார் என்று அறிய இயலாத முறைமையில், எதிரெதிர் வணங்கி மகிழ்ந்து, பின் கூத்தப்பெருமானை வழிபட இருக்கும் பேரவாவால் தமது உள்ளம் நிறைந்து அவ்வன்புப் பெருக் கெடுக்கும் நம்பியாரூரரும்,

பொன்மயமாய் நிற்கும் அழகிய திரு மாளிகைகள் மிக்கு இருக்கும் ஒப்பற்ற அத்தில்லைத் திருவீதியில் சென்றருளினார்.

விளக்கவுரை

நம்பியாரூரரும் அவரை எதிர்கொண்டு வந்த அடியவர்களும் யார் முற்பட வணங்கினர் என அறிய இயலாதவாறு ஒருவரையொருவர் முந்த வணங்கியுள்ளமை அறியலாம்.
பின்பு கும்பிடும் - அடியவர் வணக்கத்திற்குப் பின்பு பெருமா னைக் கும்பிடவிருக்கும். ஓகாரங்கள் ஐயப்பொருளன.
இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அங்கண் மாமறை முழங்கும் மருங்கே
ஆட ரம்பையர் அரங்கு முழங்கும்
மங்குல் வானின்மிசை ஐந்தும் முழங்கும்
வாச மாலைகளின் வண்டு முழங்கும்
பொங்கும் அன்பருவி கண்பொழி தொண்டர்
போற்றி சைக்குமொலி எங்கும் முழங்கும்
திங்கள் தங்குசடை கங்கை முழங்கும்
தேவ தேவர்புரி யுந்திரு வீதி. **#245**

இளம்பிறை வாழும் திருச்சடையில் விளங்குகின்ற கங்கையை வைத்திருக்கும் தேவர்க்கும் தேவனாய கூத்தப் பிரான், விரும்பும் அத்திருவீதியினிடத்துச் சிறந்த நான்மறைகளும் முழங்கும், அவ்வீதியின் அருகில் அரம்பையர் நடனம் செய்கின்ற கூத்து இயலும். மேகம் தவழும் வானின்கண் ஐந்து தேவ ஒலிகளும் ஒலிக்கும். நறுமணம் கமழ்கின்ற மாலைகளில் வண்டுகள் ஒலிக்கும். மிகுகின்ற இன்பக் கண்ணீரைக் கண்களினின்றும் பொழிகின்ற அடியவர்களின் திருவாயில் போற்றி உரைகள் எங்கும் ஒலிக்கும்.

விளக்கவுரை

தில்லைத் திருவீதிகளில் கேட்கும் மங்கல ஒலிகள் இவையெனவே, ஏனைய அவ ஒலிகளும், அமங்கல ஒலிகளும் அங்குக் கேட்கப்படா என்பது பெற்றாம்.

போக நீடுநிதி மன்னவன் மன்னும்
புரங்க ளொப்பன வரம்பில வோங்கி
மாக முன்பருகு கின்றன போலும்
மாளி கைக்குல மிடைந்த பதாகை
யோக சிந்தைமறை யோர்கள் வளர்க்கும்
ஓம தூமமுயர் வானி லடுப்ப
மேக பந்திகளின் மீதிடை எங்கும்

மின்னு டங்குவன வென்ன விளங்கும். #246

இன்பம் துய்த்தற்கு ஏதுவான பொருள்களால் நிரம்பப் பெற்று அவற்றை இடையீடின்றித் துய்த்தும் வரும் குபேரன் வாழும் அரண்மனையை ஒத்த தில்லைத் திருமாளிகைகள், எண்ணி றந்தனவாய் உயர்ந்து மேகமண்டலத்தினைத் தம்முள் அடக்குவன போல உயர்ந்து விளங்க, அவற்றில் கட்டப் பெற்றிருக்கும் நெருங்கிய கொடிகளில் அமைந்த ஆடைகள், இறைவனை மனத்தகத்து எண்ணி ஒருமையுற்று நிற்கும் மறையவர்கள் வளர்க்கும் வேள்வியில் எழும் ஓமப்புகை விண்ணை அடைய, அதனால், நிரல்பட அமைந்த மேகங்க ளிடத்து இடைஇடையே மின்னல் தோன்றி மறைவனபோல ஒளி விட்டு அசைந்து நிற்கும்.

விளக்கவுரை

தில்லைப் பதியில் விளங்கும் மாளிகைகளிடத்து உயர்ந்து விளங்கும் கொடிகள், ஓமப்புகையால் எழுந்த மேகக் கூட்டங்களில், இடையிடையே தோன்றி மறையும் மின்னல் போல ஒளிவிட்டு நிற்கின்றன என்பதாம். தில்லையின்கண் உள்ள மாளிகை கள் வளத்தால் குபேரனின் அரண்மனையை ஒத்தும், நெடிய உயரத் தால் மேகக் கூட்டங்களைத் தம்முள் அடக்குவனவாக அமைந்தும் விளங்குகின்றன. அங்குக் கட்டப்பட்டிருக்கும் கொடிகள் மறையவர் கள் வளர்க்கும் வேள்விக் கண் எழுந்த புகையாகிய மேகக் கூட்டங் களின் மின்னல் என ஒளிவிட்டு நிற்கும் என்பது ஆசிரியர் கருத்தாம். நிதி மன்னவன் - குபேரன். புரங்கள் - அரண்மனைகள். பருகுதல் - தம்முள் அடக்குதல். பதாகை - கொடிகள். யோக சிந்தை - திருவருளோடு ஒன்றிய சிந்தை. மேகபந்திகள் - மேகக் கூட்டங்கள்.

ஆடு தோகைபுடை நாசிகள் தோறும்
அரணி தந்தசுட ராகுதி தோறும்
மாடு தாமமணி வாயில்கள் தோறும்
மங்க லக்கலசம் வேதிகை தோறுஞ்
சேடு கொண்டவொளி தேர்நிரை தோறுஞ்
செந்நெ லன்னமலை சாலைகள் தோறும்
நீடு தண்புனல்கள் பந்தர்கள் தோறும்
நிறைந்த தேவர்கணம் நீளிடை தோறும். #247

ஆடுகின்ற மயில்கள், திருக்கோபுர நிலைகளில் அமைக்கப் பெற்றிருக்கும் முகங்கள்தோறும் உள்ளன. தீக்கடைக் கோலினால் உருவாக்கப்பட்ட நெருப்புகள், வேள்விச் சாலைகள் தோறும் உள்ளன. அழகிய மாலைகள், மணிகளால் இழைக்கப்பட்ட வாயில்கள் தொறும் இருமருங்குமாக அணிவிக்கப்பட்டுள்ளன. மங்கலம் பொருந்திய நிறைகுடங்கள், திண்ணைகள் தோறும் வைக்கப் பட்டுள்ளன. பெருமை

பொருந்திய ஒளிகள், தேர் வரிசை தோறும் அமைக்கப்பெற்றுள்ளன. செந்நெல் அரிசியாலாய சோற்றுமலைகள், உணவு வழங்கும் இடம் தோறும் அமைந்துள்ளன. குளிர்ச்சிமிக்க நீர்வகைகள் தண்ணீர்ப் பந்தர் தோறும் வைக்கப்பட்டுள்ளன, நெருங் கிய தேவகணங்கள் நீண்ட வீதிகள் தோறும் வதிந்துள்ளன.

விளக்கவுரை

நாசி - கோபுர நிலைகளின்மேல் வைக்கப் பெற்றுள்ள முகங்கள். அரணி - தீக்கடைக் கோல். நீர்கள் - குளிர்ந்த நீர் வகைகள், பானக நீர், நீர் மோர் முதலியன. இவ்வாற்றான் தில்லையம்பதி அழ கிய திருக்கோயில்களையும் அறம் மிக்க உணவுச் சாலைகளையும், நீர் மிக்க தண்ணீர்ப் பந்தர்களையும், சிவச்சார்புமிக்க சிவவேள்விகளை யும் உடையது எனத் தெரிய வருகின்றது.

எண்ணில் பேருல கனைத்தினு முள்ள
எல்லை யில்லழகு சொல்லிய வெல்லாம்
மண்ணில் இப்பதியில் வந்தன வென்ன
மங்க லம்பொலி வளத்தன வாகிப்
புண்ணி யப்புனித வன்பர்கள் முன்பு
புகழ்ந்து பாடல்புரி பொற்பின் விளங்கும்
அண்ண லாடுதிரு வம்பலஞ் சூழ்ந்த
அம்பொன் வீதியினை நம்பி வணங்கி. **#248**

எண்ணற்கரிய உலகங்கள் யாவற்றிலும் உள்ள எல்லையற்ற சிறப்பினவாகக் கூறப்படும் பொருள்களெல்லாம், நிலவுலகத்திலுள்ள இத்திருத்தில்லையில் ஒருங்கு வந்துள்ளன எனக் கூறுமாறு, மங்கலப் பொருள்கள் பலவற்றாலும் பொலிவுபெற்ற வளங்களை உடையவாய்ப், பெரும் புண்ணியமும், தூய்மையும் உடைய அடியவர்கள் முன்னின்று வணங்கி மகிழத்தக்க சிறப்பினால், விளங்கி ஒளிரும் இறைவன் ஆனந்தக் கூத்துச் செய்தருளும், திருஅம்பலத்தைச் சூழ்ந்த அழகிய பொன்மயமான தேர்கள் ஓடும் திருவீதியை வணங்கிய ஆரூரர்.

விளக்கவுரை

அழகு எத்தனை உண்டு புவிமீதே அவையாவும் படைத்த திருத்தில்லையென அருளுகின்றார் சேக்கிழார்.

மால யன்சத மகன்பெருந் தேவர்
மற்று முள்ளவர்கள் முற்றும் நெருங்கிச்
சீல மாமுனிவர் சென்றுபின் துன்னித்
திருப்பி ரம்பினடி கொண்டு திளைத்துக்
காலம் நேர்படுதல் பார்த்தயல் நிற்பக்

காத லன்பர்கண நாதர் புகும்பொற்
கோல நீடுதிரு வாயி லிறைஞ்சிக்
குவித்த செங்கைதலை மேற்கொடு புக்கார். **#249**

திருமால், நான்முகன், இந்திரன் முதலிய பெரிய தேவர்களும் அவரல்லாத பிறரும் முழுதும் நெருங்கவும், தூய தவ ஒழுக்கத்தையுடைய பெரிய முனிவர்கள் நெருங்கவும், அவர்களை ஒருவர்பின் ஒருவராக வருமாறு நந்திதேவர் தம் கைப்பிரம்பு கொண்டு நெறிப்படுத்த அப்பிரம்படிபடுவதால் மகிழ்ந்த அவ்வடியவர்கள், தாம் வழிபடுதற்குரிய காலம் பார்த்து அருகில் நிற்ப, மீதூர்ந்த அன்பினை உடைய அடியவர்களும் கணநாதர்களும் தடையின்றிச் செல்லும் அழகுமிக்க ஒப்பனைகளால் நிறைந்து நிற்கும் திருக்கோபுரவாயிலை நெருங்கி, கூப்பிய திருக்கரங்களைத் தம் தலைமேல் கொண்டு புகுந்தருளினர்.

விளக்கவுரை

சதமகன் - நூறு வேள்விகளைச் செய்து அவற்றால் தலைமை பெற்றவன் இந்திரன் ஆதலின் அப்பெயர் பெற்றான். இறை வனை வழிபடுதற்கெனச் சென்ற தேவர்களும், முனிவர்களும் நிரல்படச் செல்லாமையால் நந்திதேவரின் பிரம்படிபட நேர்ந்தனராயி னும், அதுவும் பின் வழிபாடு செய்தற்குத் துணையாய் நிற்றலின் `திளைத்து` என்றார். திளைத்து - மகிழ்ந்து. `கோவே ... கூவிப் பணி கொள்ளாது தொறுத்தால் ஒன்றும் போதுமே` *(தி.8 ப.33 பா.2)* எனவரும் மணிமொழியும் காண்க. இவர்கள் இவ்வாறு நிற்கவும், அடியவர்களும், கணநாதர்களும் தடையின்றிப் புகுதற்குக் காரணம், அவர்களின் அன்பும் தொண்டும் மேம்பட்ட சிறப்பும் கருதியேயாம். நம்பி வணங்கிப் புகுந்தனர் என முடிக்க. இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

பெருமதில் சிறந்த செம்பொன்மா ளிகைமின்
பிறங்குபே ரம்பல மேரு
வருமுறை வலங்கொண் டிறைஞ்சிய பின்னர்
வணங்கிய மகிழ்வொடும் புகுந்தார்
அருமறை முதலில் நடுவினில் கடையில்
அன்பர்தஞ் சிந்தையில் அலர்ந்த
திருவள ரொளிசூழ் திருச்சிற்றம் பலமுன்
திருவணுக் கன்திரு வாயில். **#250**

உயர்ந்த மதில்களால் சிறந்த சிவந்த பொன்னாலாகிய பொன்னம்பலத்தையும், ஒளி பொருந்திய பேரம் பலமாகிய மேருவையும் முறையாக வலம் செய்து வணங்கிய பின்பு, உட்சென்று வணங்குதற்குரிய மகிழ்ச்சியோடும், அருமறைகளின் முதல், இடை, இறுதி ஆகிய மூவிடங்களிலும், அடியவர்களின் உளத் தாமரையிலும்

வெளிப்பட்டு நிற்கும் அழகு வளரும் ஒளி சூழ்ந்த திருச் சிற்றம்பலத்தின் முன்னுள்ள திருஅணுக்கன் என்னும் திருவாயிலின் கண் புகுந்தார்.

விளக்கவுரை

பேரம்பல மேரு - பேரம்பலமாகிய மேரு. சலி யாமையும், பெருமையும் பற்றிப் பேரம்பலத்தை மேருமலையாகக் கூறினார். இலங்கை இடைகலையாகவும், இமயம் பிங்கலையாகவும் விளங்க இது சுழுமுனையாக விளங்கும் என்று கூறுவர்.

இடைபிங் கலைஇம வானோ டிலங்கை
நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுமுனை
கடவுந் திலைவனங் கைகண்ட மூலம்
படர் வொன்றி என்னும் பரமாம் பரமே. *(தி.10 பா.2711)*

மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூரு இவ்வானின் இலங்கை குறியுறுஞ்
சாருந் திலைவனந் தண்மா மலயத்தூட
ஏறுஞ் சுழுமுனை இவைசிவ பூமியே. *(தி.10 பா.2704)*

பூதல மேருப் புறத்தான தெக்கணம்
ஓதும் இடைபிங் கலையொண் சுழுனையாம்
பாதி மதியோன் பயில்திரு அம்பலம்
ஏதமில் பூதாண்டத் தெல்லையின் ஈறே. *(தி.10 பா.2705)*

எனவரும் திருமந்திரப் பாடல்களாலும் காண்க.

சிற்றம்பலம் - கூத்து இயற்றும் பெருமான் எழுந்தருளியிருக் கும் மன்றம். பேரம்பலம் - சோமாஸ்கந்தர் முதலிய விழாக் கொள்ளும் மூர்த்திகள் எழுந்தருளி இருக்கும் இடம். திருச்சிற்றம்பலம், ஓம் எனும் பிரணவ வடிவாய் விளங்குவதாகும். ஓம் என்பது அ, உ, ம், ஆகிய மூன்று எழுத்துகளும் சேர்ந்த நிலையாகும். பிரிந்த நிலையில் நிற்கும் முதல் எழுத்தாகிய அகாரம் இருக்கு வேதத்தின் முதலினும், *(அக்நி, மீளே)* உகாரம் யசுர் வேதத்தின் நடுவிலும் *(யோநிஸ் சமுத்திரோ பிந்து)*, மகாரம் சாமவேதத்தின் முடிவிலும் *(சமாநம், வரம்)* விளங்கு வதென்று கூறுவர்.

திருஅணுக்கன் திருவாயில் - கூத்தப்பெருமான் எழுந்தருளி யிருக்கும் மன்றின் முதல் வாயிலாக உள்ளது இது. உள்ளிருந்து கணக் கிடும்போது இது முதல் வாயிலாக விளங்கும். ஆதலின் இதனை இப் பெயரால் அழைப்பர். இனி இறைவனுக்கு அருகிருந்து வழிபாடு செயத்தகும் தொண்டர்களே உட்புகுதற்குரிய இடமாதலின் அணுக்கன் திருவாயில் எனப்பெயர் பெற்றது என்றலும் ஒன்று. இவ்விரு பாடல் களும் ஒரு முடிபின.

வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப

மன்றுளே மாலயன் தேட
ஐயர்தாம் வெளியே யாடுகின் றாரை
அஞ்சலி மலர்த்திமுன் குவித்த
கைகளோ திளைத்த கண்களோ அந்தக்
கரணமோ கலந்தவன் புந்தச்
செய்தவம் பெரியோன் சென்றுதாழ்ந் தெழுந்தான்
திருக்களிற் றுப்படி மருங்கு. **#251**

மாலும் அயனும் முன்னாளில் தேடவும், அவர்களுக்கும் எட்டாதிருந்த இறைவன், இம்மண்ணுலகத்தவர் மகிழவும், மறைகளாகிய சிலம்புகள் ஒலிக்கவும், வெளிப்பட நின்று பொன்னம்பலத்தின்கண் ஆனந்தக் கூத்து இயற்றி அருள்பவராகிய பெருமானை, `தம் திருமார்பில் குவித்த கைகள் தாமோ?`, திருவடியை வணங்கித் திளைத்த கண்கள் தாமோ? மனம் புத்தி, சித்தம், அகங்கா ரம் என்னும் அகக் கருவிகள் தாமோ? இவற்றுள் எவ்வுறுப்புகளிடத்து, இறைவனிடத்துக் கலந்த அன்பு செலுத்தியதோ அறியோம்; ஆனால் அவையனைத்துமே ஒன்றி நிற்க, முற்செய்தவத்தால் பெரியராகிய நம்பியாரூரர் திருக்களிற்றுப்படியின் அருகில் சென்று வணங்கி எழுந்தார்.

விளக்கவுரை

இறைவன் சிலம்பு ஒலிக்க யாவரும் அறிய வெளியில் நின்று ஆடவும், மால் அயன் அப்பெருமானைக் காணாது தேடியது என்னோ? என்ற நயமும் காண்க. அஞ்சலி மலர்த்தி முன் குவித்த கைகள் - தாம் செய்யும் வணக்கம் வெளிப்பட மார்பின் முன் குவித்த கைகள். இறைவழிபாடு செய்ய வேண்டும் எனும் அன்பு உந்த மனம் முதலாய அகக்கருவிகள் முற்படச் செயல்புரியும். அச்செயற்பாட்டி னால் கண்கள் காணும். அக்காட்சியால் கைகள் குவியும். இதுவே முறைமை. இத்தகைய அன்பு உந்துதலை அகக் கருவிகள் மட்டுமோ முன்பு பெற்றன. அன்றிக் கண்கள் மட்டுமோ முன்பு பெற்றன. அன்றிக் கைகள் மட்டுமோ முன்பு பெற்றன என அறிய இயலாதவாறு அத் தகைய கலந்த அன்பு அவ்வனைத்துறுப்புக்களிலும் உந்த ஆரூரர் வணங்கி மகிழ்ந்து எழுந்தார் என்பது கருத்து. திருக்களிற்றுப்படி - யானையின் துதிக்கை வடிவினதாகிய திரட்சிகள் இருபுறமும் அமையவிளங்கும் படிகள். இவ்வைந்து படிகளையும் பஞ்சாட்சரப் படிகள் எனவும் அழைப்பர். இப்பெயரமைந்த திருக்களிற்றுப்படியார் என்னும் ஞானநூல் ஒன்று இருத்தலும் ஈண்டு நினைவுகூரத்தக்கது.

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்

திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார். **#252**

ஐந்தாகப் பெயரும் புலன் உணர்வு ஐந்தையும் கண்களே தமதாக்கிக் கொள்ள, அளத்தற்கரிய மனம் முதலிய நான்கு கருவிகளின் செயல்களெல்லாம் சித்தம் ஒன்றின் செயலேயாக, உயிர்க்குற்ற முக்குணங்களின் செயல்களெல்லாம் சாத்துவிகம் என்ற ஒன்றேயாகி நிற்க, பிறை தவழும் சடையினையுடைய கூத்தப்பிரான் செய்தருளுகின்ற அளவில்லாத இன்பத்தை விளைவிக்கும் ஒப்பற்ற திருக்கூத்தால் தம்மிடத்தெழுந்த மிகப்பெரிய இன்ப வெள்ளத்தில் முழுகி, நீங்காத பெருமகிழ்ச்சியால் உள்ளமும், உடலும் ஒருங்கு மலர்ந்தார்.

விளக்கவுரை

மெய், வாய், கண், மூக்கு,செவி ஆகிய ஐம்பொறி களும் சுவை, ஒளி, ஊறு ஓசை, நாற்றம் ஆகிய ஐம்புல உணர்வுடை யன. அவற்றுள் பெருமானைக் காண்டற்கு அமைந்த கண்கள் இரண்டுமே காண, ஏனைய பொறிகள் தத்தம் செயலிழந்து நின்றன என்பார், `ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள` என்றார். பேரறிவு - பொறிகள் ஐந்தும் தத்தம் புலன்களில் பெயர்ந்து பெயர்ந்து நிற்கும் அறிவு. ஒன்று செயற்படுகின்ற பொழுது மற்றவை செயற்படாத நிலையில் இருத்தலே அமைவுடையது. மாறாக ஒன்றுக்கு மேற்பட்டன செயற்படின் எந்த ஒன்றிலும் உயிர் முழுமையாகப் படிந்து நிற்கும் நிலையில்லா தொழியும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கு அகக்கருவிகள், ஒவ்வொன்றும் ஒவ்வொரு செயற்பாட்டுக் குரியன. மனம் - நினைக்கும். சித்தம் - சிந்திக்கும். புத்தி - உறுதி செய்யும். அகங்காரம் - செயற்படும். இவ்வகையில் சித்தம் ஒன்றே பெருமானைச் சிந்தித்து நிற்கும் என்பார், `அளப்பரும் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக` என்றார். சாத்துவிகம், இராசதம், தாமதம் ஆகிய மூன்றும் முக்குணங்களாம். சாத்துவிகம் - எதனையும் அமைதியாகவும், மகிழ்வோடும் ஏற்பது. இராசதம் - இந்நிலைக்கு முற்றிலும் மாறாய்க் கடிந்து கொள்வது. தாமதம் - எவ்வுணர்விலும் கருத்தின்றிச் சோம்பியிருப்பது. இவ்வகையில் இம்முக்குணங்களும் பெருமானை வழிபடுங்கால் சாத்துவிக குணமேயாக அமைந்திருந் தன என்பார், `குணம் ஒரு மூன்றும் திருந்து சாத்துவிகமே ஆக` என்றார். முக்குணங்களுள் ஈதொன்றே உயிர் திருந்தி வாழ்தற்கு ஏது வாதலின் `திருந்து சாத்துவிகம்` என்றார். இந்து - இளம்

பிறை.
செந்திற் பெருமானின் திருவருள் பெற்ற குமரகுருபரர், குருவருள் பெறத் தருமபுர ஆதீனம் நான்காவது குருமூர்த்திகளாகிய ஷ்ரீலஷ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் திருமுன்பு அடைய, அவர் இப் பாடலைச் சுட்டி, இதன் அநுபவப் பொருளைக் கூறுக என, அவ்வளவில் அடிகள் வாக்குத் தடைப்பட்டார் என்பதும், திருவருள் முன் உணர்த்திய வகையால், அக்குரு மூர்த்திகளையே தமக்கு ஞானாசிரியராகக் கொண்டார் என்பதும் வரலாறு ஆகும்.
இம்மரபே இன்றும் தருமையும் பனசையும் (திருப்பனந்தாள்) குருபீடமாகவும் சீடர் பீடமாகவும் விளங்கக் காரணமாயிற்று.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணிலா னந்த அருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார். **#253**

வெண்மையான இளம்பிறை விளங்கும் திருச் சடையை உடையாய்! உன்னுடைய ஆனந்தத் திருக்கூத்தை வழி பாடாற்றப் பெற்று, இந்நிலவுலகத்தில் வந்த மானிடப் பிறவியே எனக்கு மேலான இன்பம் என்று, கண்களினின்றும் இன்பக் கண்ணீர் சொரிய, கைகளாகிய மலர்களைத் தலைமிசை வைத்துக் குவித்து, இசையோடு கூடிய அறிதற்கரிய திருப்பதிகத்தை இசைத்தார். போற்றினார், வணங்கினார்.

விளக்கவுரை

தெள் + நிலா = தெண்ணிலா. ஈண்டுத் தெளிவு வெண்மையின் மேற்று. மாமன் இட்ட சாபம், இறைவனை அடைந் தால் தான் நீங்கும் எனத் தெளிதலின் `தெள்நிலா` என்றார் என உரைப்பர் சிவக்கவிமணியார்(பெரிய.பு.உரை). வாலிதாம் இன்பம் - தூய இன்பம். மேலான இன்பம் என்று உரைப்பர் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் (பெரிய.பு.உரை). வாலிதாம் இன்பமாம் எனவரும் தொடர்கள் இதுபொழுது பாடிய பதிகத்தின் உட்குறிப்பாக அல்லது மகுடமாக (நிறைவுச் சொல்லாக) இருக்க வேண்டுமெனக் கருதுவர் சிவக்கவிமணியார்(பெரிய.பு.உரை). இவ்வரிய பதிகம் இதுபொழுது கிடைத்திலது.

தடுத்துமுன் ஆண்ட தொண்டனார் முன்பு

தனிப்பெருந் தாண்டவம் புரிய
எடுத்தசே வடியா ரருளினால் தரளம்
எறிபுனல் மறிதிரைப் பொன்னி
மடுத்தநீள் வண்ணப் பண்ணையா ரூரில்
வருகநம் பாலென வானில்
அடுத்தபோ தினில்வந் தெழுந்ததோர் நாதம்
கேட்டலும் அதுவுணர்ந் தெழுந்தார். **#254**

இறைவனால் முன்பு தடுத்தாட்கொள்ளப் பெற்ற நம்பிகள், முன்பு ஒப்பற்ற பெருங்கூத்தினை இயற்றுதற்கு எடுத்த திருவடிகளை உடைய கூத்தப்பிரானின் திருவருளால், அலைகளால் முகந்து முத்துக்களை வீசும் நிறைந்த நீர்ப் பெருக்கினையுடைய காவிரி பாய்கின்ற அழகிய வயல்கள் சூழ்ந்த திருவாரூரில் `நம்மிடத்து நீ வருவாயாக` என விண்ணினின்றும் ஓர் ஒலி எழ, அவ்வானொலி யைக் கேட்டலும் திருவாரூருக்குச் செல்ல எழுந்தருளினார்.

விளக்கவுரை

பொன்னி மடுத்த - காவிரியின் நீரானது பாய்கின்ற. வண்ணப் பண்ணை - அழகிய வயல்கள். வந்து எழுந்ததோர் நாதம் - வானொலி.

ஆடுகின் றவர்பே ரருளினால் நிகழ்ந்த
அப்பணி சென்னிமேற் கொண்டு
சூடுதங் கரங்கள் அஞ்சலி கொண்டு
தொழுந்தொறும் புறவிடை கொண்டு
மாடுபே ரொளியின் வளருமம் பலத்தை
வலங்கொண்டு வணங்கினர் போந்து
நீடுவான் பணிய வுயர்ந்தபொன் வரைபோல்
நிலையெழு கோபுரங் கடந்து. **#255**

கூத்தப் பெருமானின் பேரருளால் நிகழ்ந்த அப்பணிமொழியைத் தலைமேல் தாங்கி, தலைமேல் குவித்து நிற்கும் திருக்கைகளைக் கொண்டு வணங்கி, மேலும் மேலும் வணங்குந் தொறும் தாம் புறத்தே போதற்குரிய அனுமதியை வேண்டிக்கொள் பவராய், மிகப் பெருகும் பேரொளியால் வளர்ந்து வரும் அம்பலத்தை வலங்கொண்டு, இறைவன் திருமுன்னிலையில் வணங்கி, மகிழ்ந்து, நீடிய வானமும் குன்றியதென வளர்ந்து விளங்கும் பொன்மலை என மிளிரும் ஏழு கோபுரங்களையும் கடந்து சென்று.

விளக்கவுரை

****

நின்றுகோ புரத்தை நிலமுறப் பணிந்து

நெடுந்திரு வீதியை வணங்கி
மன்றலார் செல்வ மறுகினூ டேகி
மன்னிய திருப்பதி யதனில்
தென்றிரு வாயில் கடந்துமுன் போந்து
சேட்படுந் திருவெல்லை யிறைஞ்சிக்
கொன்றைவார் சடையா னருளையே நினைவார்
கொள்ளிடத் திருநதி கடந்தார். #256

திருக்கோபுரவாயிற்கு வெளியேநின்று, நிலமுறப் பணிந்து வணங்கி, அதனையடுத்த தேரோடும் திருவீதியையும் வணங்கி, நறுமணம் கமழ்கின்ற நிறைந்த செல்வத்தை உடைய ஆவண வீதிவழியே சென்று, நிலைபெற்ற அத்திருப்பதியின் தெற்கு வாயிலைக் கடந்து, முன்னே எழுந்தருளித் தொலைவில் இருக்கும் அத்திரு எல்லையை வணங்கிக், கொன்றை மலர்களால் ஆய மாலையை முடித்த நீண்ட சடைமுடியையுடைய சிவபெருமானின் திருவரு ளையே சிந்தித்து ஒழுகும் நம்பியாரூரர், கொள்ளிடம் என்னும் பேராற்றைக் கடந்து சென்றருளினார்.

விளக்கவுரை

கொள்ளிடம் - மரக்கலன்களைக் கொள்ளுகின்ற இடம். சோழ மன்னர்கள் கடலிலிருந்து தம் நாட்டிற்கு மரக்கலன்கள் வருவதற்காக அகலமும், ஆழமும் பெற அமைத்த இடம் இதுவாம். இதனைக் கல்வெட்டுக்களில் `கலன் கொள்ளிடம்` எனக் குறிக்கு மாற்றான் அறியலாம். வருகின்ற கலன்களும் இல்லையாக, இத் தொடரில் வரும் முதற் சொல்லாகிய `கலம்` என்பதும் இல்லையா யிற்றுப் போலும் என்பர் சிவக்கவிமணியார் (பெரிய.பு.உரை). கொள்ளிடம் - காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் பொழுது, அம்மிகுநீரைக் கொள்ளவும், அதன் வழிக் காவிரியின் வடபுலத்துள்ள நிலங்களில் பயன்கொள்ளவும் சோழப் பெருமக்களால் வெட்டப் பெற்ற ஆறே இது எனவும் கூறுவர். எனவே நிலத்தானும் நீரானும் பயன்கொள்ளக் கருதி இவ்வாறு வெட்டப்பட்டது என அறியலாம். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

புறந்தருவார் போற்றிசைப்பப்
புரிமுந்நூல் அணிமார்பர்
அறம்பயந்தாள் திருமுலைப்பால்
அமுதுண்டு வளர்ந்தவர்தாம்
பிறந்தருளும் பெரும்பேறு
பெற்றதென முற்றுலகிற்
சிறந்தபுகழ்க் கழுமலமாந்
திருப்பதியைச் சென்றணைந்தார். #257

தம்மைச் சூழ்ந்துவரும் அடியவர்கள் போற்றி உரைக்க, மூன்று முறுக்குகளையுடைய பூணூலை அணிந்த மார்பினை யுடைய நம்பியாரூரர், அறம் வளர்க்கும் தாயாகிய உமையம்மையார் திருமுலைப்பாலுடன் ஞான அமுதைக் குழைத்து ஊட்ட உண்டு வளர்ந்த ஆளுடைய பிள்ளையார் பிறந்து அருளுதற்கு ஏதுவான பெரியபேற்றைப் பெற்றது என்று உலகிலுள்ளார் யாவரும் போற்றி மகிழும் புகழால், சிறந்த சீகாழி என்னும் திருப்பதியை அடைந்தருளி னார்.

விளக்கவுரை

புறந்தருவார் - தம்மைச் சூழ்ந்து வரும் அடியவர்கள். தாம் - அசைநிலை.

பிள்ளையார் திருவவதா
ரஞ்செய்த பெரும்புகலி
உள்ளுநான் மிதியேனென்
றூரெல்லைப் புறம்வணங்கி
வள்ளலார் வலமாக
வரும்பொழுதின் மங்கையிடங்
கொள்ளுமால் விடையானும்
எதிர்காட்சி கொடுத்தருள. **#258**

ஆளுடைய பிள்ளையார் தோன்றுதற்கு இட னான பெருமை பொருந்திய சீகாழி என்னும் திருப்பதியின் எல்லை யையும் நான் மிதிக்க மாட்டேன் என்று அத்திருப்பதியின் புற எல்லை யைச் சூழ்ந்து வணங்கிய ஆரூரர், அப்பதியை வலமாக வருமிடத்து, உமையம்மையை ஒரு கூற்றில் வைத்திருப்பவரும் மிகப் பெரிய ஆனேற்றை ஊர்தியாக உடையவருமான தோணியப்பர் அவர் எதி ராக எழுந்தருளிக் காட்சி கொடுத்தருள,

விளக்கவுரை

ஞானசம்பந்தர் தோன்றிய சிறப்புடையதாதலின் சீகாழிப் பதியினகத்து நடந்து செல்லுதலும் தவறென்று கருதிய ஆரூரர், அப்பதியின் புறமாக வலம் வந்தார். ஆரூரருக்கு ஆளுடைய பிள்ளை யார் மீதிருந்த அளவற்ற பத்திமை இதனால் விளங்கும்.

மண்டியபே ரன்பினால்
வன்றொண்டர் நின்றிறைஞ்சித்
தெண்டிரைவே லையின்மிதந்த
திருத்தோணி புரத்தாரைக்
கண்டுகொண்டேன் கயிலையினில்
வீற்றிருந்த படியென்று

பண்டருமின் னிசைபயின்ற
திருப்பதிகம் பாடினார். #259
இவ்வாறு எளிவந்தருளிய இறைவனின் திருக்காட்சியை நிறைந்த
பேரன்போடு வணங்கி நின்ற நம்பியாரூரர், தெளிந்த
அலைகளையுடைய கடலில் ஒருகாலத்து மிதந்த திருத்
தோணிபுரத்தின்கண் வீற்றிருக்கும் பெருமானைத் `திருக்கயிலையின்
கண் இருந்தருளிய திருக்கோலமாக இங்குக் கண்டு மகிழ்ந்தேன்` என்று
பண் அமைந்த இனிய இசையோடு கூடிய திருப்பதிகத்தைப்
பாடியருளினார்.

விளக்கவுரை

மண்டிய - நிறைந்த. கடல் பொங்கி எழுந்த பேரூழிக் காலத்தில், இறைவன் அறுபத்து நான்கு கலைகளையும் ஆடையாக உடுத்துப் பிரணவத் தோணியில் அம்மையப்பராக எழுந்தருளி வரும்போது, ஊழியிலும் அழியாத இத்திருப்பதியைக் கண்டு இதுவே மூலம் என்றெண்ணித் தங்கினர் என்ப. இதனை உட்கொண்டே `வேலையில் மிதந்த திருத்தோணிபுரம்` என்றார். இறைவன் உரோமச முனிவருக்காகத் திருக்கயிலைச் சிகரமொன்றைத் தென்திசையில், தோற்றுவித்துத் தானும், அம்மையுமாக இருந்து காட்சி வழங்கினன் என்பதொரு வரலாறும் உண்டு. இதுவே மலைக்கோயில் எனும் பெயரில் இன்று அமைந்திருப்பதாகும்.

சாதலும் பிறத்தலுந் தவிர்த்தெனை வகுத்துத்
தன்னருள் தந்தஎம் தலைவனை மலையின்
மாதினை மதித்தங்கொர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்தஎம் மானை
ஏதிலென் மனத்துக்கோர் இரும்புண்ட நீரை
எண்வகை ஒருவனை எங்கள்பி ரானைக்
காதில்வெண் குழையனைக் கடல்கொள மிதந்த
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. *(தி.7 ப.58 பா.1)* எனத்
தொடங்கும் தக்கேசிப் பண்ணமைந்த திருப்பதிகமே இது பொழுது பாடியதாகும். இப்பதிகத்தில் பாடல்தொறும் வரும் கருத்தைத் திருவுளங் கொண்டே `திருத்தோணி புரத்தாரைக் கண்டு கொண்டேன் கயிலையினில் வீற்றிருந்த படியென்று பண்டருமின் னிசைபயின்ற திருப்பதிகம் பாடினார்` என்றருளினார் சேக்கிழார். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

இருக்கோல மிடும்பெருமான்
எதிர்நின்றும் எழுந்தருள
வெருக்கோளுற் றதுநீங்க

ஆரூர்மேற் செலவிரும்பிப்
பெருக்கோதஞ் சூழ்புறவப்
பெரும்பதியை வணங்கிப்போய்த்
திருக்கோலக் காவணங்கிச்
செந்தமிழ்மா லைகள்பாடி. **#260**

நான்மறைகளும் தம் எல்லையில் அறிய இயலாமையின் முறையிட்டு அழைக்கின்ற தோணியப்பர், ஆரூரர் தம் திருக்காட்சியினின்றும் மறைந்தருள, அதனால் அச்சமும், விரை வும் மீதூர, பின் அந்நிலை நீங்க, திருவாரூரை அடைய விரும்பி, வெள்ளப் பெருக்கினையுடைய கடல்சூழ்ந்த சீகாழி என்னும் திருப் பதியை வணங்கிச் சென்று, திருக்கோலக்கா என்னும் திருப்பதியை அடைந்து செந்தமிழ் மாலைகள் பல பாடியருளி.

விளக்கவுரை

இருக்கு - நான்மறைகள்; சாதி ஒருமை. இவை இறைவனைத் தம்மால் முழுமையாக அறிய இயலாமையின் இயன்ற வரையில் அழைத்து மகிழ்கின்றன என்பார் `இருக்கு ஓலமிடும் பெருமான்` என்றார். `வேதங்கள் ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே`(*தி.8 ப.1 வரி.34-35)* என்னும் திருவாசகமும், வெருக்கோள் - அச்சமும் விரைவும் தவழ நிற்பதொரு மெய்ப்பாடு. இறைவனின் காட்சி மறைந் ததும் எழுந்த இம்மெய்ப்பாடு, ஒரு சிறு கால எல்லையிலிருந்து நீங்கத், திருவாரூர் செல்ல வேண்டும் என்னும் நினைவு ஆரூரருக்குத் தோன்றியது. அவ்விருப்பின்வழிச் செல்லும் ஆரூரர், முதற்கண் திருக்கோலக்காவை அடைந்தார். இங்கு ஒன்றிற்கு மேற்பட்ட பதிகங்களை அருளியுள்ளமை, `செந்தமிழ் மாலைகள் பாடி` என வரும் திருவாக்கால் அறிய இயலுகின்றது. எனினும் இத்திருப்பதி கங்கள் எவையும் இதுபொழுது கிடைத்தில. இதுபொழுது கிடைத்திருக் கும் `புற்றில்வாழ்` எனத் தொடங்கும் பதிகம் பின்பொருமுறை வந்தபொழுது பாடியதாகும். *(தி.12 பு.29 பா.154* காண்க*)*. புறவம் - சீகாழிக்குரிய பன்னிரண்டு திருப்பெயர்களில் ஒன்று.

தேனார்க்கு மலர்ச்சோலைத்
திருப்புன்கூர் நம்பர்பால்
ஆனாப்பே ரன்புமிக
அடிபணிந்து தமிழ்பாடி
மானார்க்குங் கரதலத்தார்
மகிழ்ந்தஇடம் பலவணங்கிக்
கானார்க்கு மலர்த்தடஞ்சூழ்
காவிரியின் கரையணைந்தார். **#261**

வண்டுகள் ஒலிக்கும் மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த திருப்புன்கூர் என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் இறைவனிடத்து அமையாத பேரன்பு மேலும் மேலும் மீதூர, அப்பெருமானின் திருவடிகளை வணங்கித் தமிழ்ப் பதிகம் பாடி, மான் கன்றைத் தாங்கும் திருக்கரத்தையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருநீடூர் முதலிய பல திருப்பதிகளையும் வணங்கி, நறுமணம் மிக்க மலர்களையுடைய குளங்கள் சூழ்ந்த காவிரியின் கரையை அடைந்தார்.

விளக்கவுரை

தேன் - வண்டு. ஆனா - அமையாத. கான் ஆர்க்கும் - நறுமணம் மிக்கிருக்கும். இடம்பல - திருப்புன்கூருக்கும், காவிரிக் கரைக்கும் இடையிலுள்ள திருக்கஞ்சனூர், திருநீடூர் முதலாயினவாகலாம் எனச் சிவக்கவிமணியார் *(பெரிய.பு.உரை)* கருதுவார்கள். `திருப்புன்கூர் நம்பர்பால்..... தமிழ் பாடி` எனவரும் குறிப்பிற்கேற்ப இதுபொழுது பதிகங்கள் எவையும் கிடைத்தில. இதுபொழுதுள்ள `அந்தணாளன்` எனத் தொடங்கும் பதிகம் பிறிதோரமையத்துப் பாடியதாகும்.

இருவரும் எழுந்து புல்லி இடைவிடா நண்பி னாலே
பொருவரு மகிழ்ச்சி பொங்கத் திருப்புன்கூர்ப் புனிதர் பாதம்
மருவினர் போற்றி நின்று வன்றொண்டர் தம்பி ரானார்
அருளினை நினைந்தே அந்த ணாளனென் றென்றெடுத்துப் பாடி.

எனப்பின் *(தி.12 பு.29 பா.406)* வருவதால் இவ்வுண்மை அறியலாம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வம்புலா மலரலைய
மணிகொழித்து வந்திழியும்
பைம்பொன்வார் கரைப்பொன்னிப்
பயில்தீர்த்தம் படிந்தாடித்
தம்பிரான் மயிலாடு
துறைவணங்கித் தாவில்சீர்
அம்பர்மா காளத்தின்
அமர்ந்தபிரான் அடிபணிந்தார். **#262**

நறுமணம் கமழும் பூக்கள், அலைவழி அலைந்து நிற்ப, முத்து முதலிய மணிகளைக் கரையில் கொண்டு வந்து கொழித் துப், பாய்கின்ற பசிய பசும்பொன்னாலாகிய நீண்ட கொடிகளை யுடைய கரையினையுடைய காவிரியில் நீராடி, இறைவன் வீற்றி ருந்தருளும் திருமயிலாடுதுறையை வணங்கி, அவ்விடத்தினின்றும் எழுந்தருளி, திருஅம்பர்மாகாளத்தில் வீற்றிருந்தருளும் இறைவ னைப் பணிந்தார்.

விளக்கவுரை

வம்பு - நறுமணம். அலைகளால் மலர்கள் இங்கு மங்குமாக அலைக்கப்படுதலின் `மலர் அலைய` என்றார். தீர்த்தம் - புனிதநீர். இவ்விரு திருப்பதிகளிலும் ஆரூரர் அருளிய பதிகங்கள் கிடைத்தில.

மின்னார்செஞ் சடையண்ணல்
விரும்புதிருப் புகலூரை
முன்னாகப் பணிந்தேத்தி
முதல்வன்தன் அருள்நினைந்து
பொன்னாரும் உத்தரியம் பு
ரிமுந்நூ லணிமார்பர்
தென்னாவ லூராளி
திருவாரூர் சென்றணைந்தார். **#263**

மின்னலை ஒத்த சிவந்த சடைமுடியை உடைய சிவபெருமான் விரும்பி அருளும் திருப்புகலூரை முதற்கண் வணங்கி வழிபட்டு, அப்பெருமானின் திருவருளை நினைந்து, பொன் னிழையாலாய மேலாடையையும், முப்புரி நூலையும் கொண்ட மார்பினை உடையவரும், அழகிய திருநாவலூரின் தலைவருமாகிய நம்பியாரூரர் திருவாரூரின் எல்லையை அடைந்தருளினார்.

விளக்கவுரை

`மின் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை` *(தி.11* பொன்வண். *1)* என்பர் சேரர் பெருமான். ஆதலின் ஈண்டும்*,* `மிக்கார் செஞ்சடை அண்ணல்` என்றார். உத்தரியம் - மேலாடை.

தேராரும் நெடுவீதித்
திருவாரூர் வாழ்வார்க்கு
ஆராத காதலின்நம்
ஆரூரன் நாமழைக்க
வாராநின் றானவனை
மகிழ்ந்தெதிர்கொள் வீரென்று
நீராருஞ் சடைமுடிமேல்
நிலவணிந்தார் அருள்செய்தார். **#264**

தேர் ஓடுவதால் அழகு நிறைந்த நீண்ட வீதிகளை யுடைய திருவாரூரின்கண் வாழும் அடியவர்களுக்கு, `என்றும் தணியாத பத்திமையினால் நம்முடைய நம்பியாரூரன் நாம் அழைத் தமையால் இங்கு வருகின்றான். அவனை மகிழ்ச்சியோடு எதிர் கொள்வீர்களாக!` என்று கங்கையின் பெருக்கெடுக்கும் சடை முடி யின்கண் இளம்பிறையை அணிந்த இறைவன் கனவில் பணித் தருளினார்.

விளக்கவுரை

நீர் - கங்கை. நிலவு- பிறை.

தம்பிரா னருள்செய்யத்
திருத்தொண்ட ரதுசாற்றி
எம்பிரா னார்அருள்தான்
இருந்தபரி சிதுவானால்
நம்பிரா னாராவார்
அவரன்றே யெனுநலத்தால்
உம்பர்நா டிழிந்ததென
எதிர்கொள்ள வுடனெழுந்தார். **#265**

ஆரூர்ப் பெருமான் இவ்வாறு அருளிச் செய்ய, அங்கிருந்த திருத்தொண்டர்கள் அவ்வாணையை அனைவரிடத்தும் கூற, `எம் தலைவனாகிய பெருமானின் திருவருள் இருந்தமை இவ் வாறாயின் நம் தலைவராவார் அந்நம்பியாரூரரே` என்று கருதும் அன்போடு, தேவருலகமே இந்நிலவுலகின்கண் வந்ததென்று சொல்லு மாறு, அவரை எதிர்கொள்ள யாவரும் ஒருங்கு கூடி அதற்குரிய முறை யில் ஆயத்தமாயினர்.

விளக்கவுரை

பரிசு - தன்மை. உம்பர்நாடு - தேவருலகம்.

மாளிகைகள் மண்டபங்கள்
மருங்குபெருங் கொடிநெருங்கத்
தாளின்நெடும் தோரணமுந்
தழைக்கமுகுங் குழைத்தொடையும்
நீளிலைய கதலிகளும்
நிறைந்தபசும் பொற்றசும்பும்
ஒளிநெடு மணிவிளக்கு
முயர்வாயில் தொறும்நிரைத்தார். **#266**

மாளிகைகளிலும், மண்டபங்களிலும் பெரிய கொடிகள் நெருங்குமாறு அமைத்து,அவற்றின் அடிப்பக்கத்தில் நீண்ட தோரணங்களையும், தழைத்த பாக்கு மரங்களையும், மாவிலை முதலிய தழைகளால் கட்டிய தோரணங்களையும், நீண்ட இலைகளை யுடைய வாழை மரங்களையும், நீர் நிறைந்த பசும் பொன்னாலாகிய நிறைகுடங்களையும், ஒளி பொருந்திய நெடிய அழகிய இரத்தின விளக்குகளையும், உயர்ந்த வாயில்கள்தோறும் நிரம்ப வைத்தார்கள்.

விளக்கவுரை

தாளின் - அடிப்பக்கத்தில். தழைக் கமுகு - காய்க்குப் பயன்படாதனவாய் இலைகளடர்ந்த பாக்கு மரங்கள். கதலி - வாழை. பொன் தசும்பு -

பொற்குடங்கள்.

சோதிமணி வேதிகைகள்
தூநறுஞ்சாந் தணிநீவிக்
கோதில்பொரி பொற்சுண்ணங்
குளிர்தரள மணிபரப்பித்
தாதவிழ்பூந் தொடைமாலைத்
தண்பந்தர் களுஞ்சமைத்து
வீதிகள்நுண் துகள்அடங்க
விரைப்பனிநீர் மிகத்தெளித்தார். **#267**

ஒளிபடைத்த மணிகள் பதித்த திண்ணைகளில் தூய நறுமணம் மிக்க சந்தனக் குழம்பை அழகாக மெழுகி, அதன்மீது குற்றமற்ற பொரியும், பொன்பொடிகளும், குளிர்ந்த முத்துக்களும், அழகிய மணிளும் ஆகியவற்றைப் பரப்பி, மகரந்தப் பொடியைச் சொரிந்து நிற்கும் அலர்ந்த மலர்களைக் கொண்டு அமைத்த மாலை களைக் குளிர்ந்த பூம்பந்தல்களில் தொங்கச் செய்து, தெருக்களில் நுண்ணிய துகள்கள் அடங்குமாறு நறுமணம் மிக்க பனிநீரைச் செறி வாகத் தெளித்தார்கள்.

விளக்கவுரை

பொற்சுண்ணம் - மஞ்சள், அரிதாரம் முதலிய மணப் பொருள்கள் பலவற்றையும் உரலில் இட்டு இடித்த நறுமணப்பொடி. இப்பொடியாலும் இறைவனைத் திருமுழுக்காற்றுவர். இதனை, மகளிர் பலரும் குழுமி இடிப்பர் - `பலர்தொகுபு இடித்ததாதுகு சுண்ணத்தர்` - என மதுரைக் காஞ்சி, *399* கூறும். திருவாசகத்தில் வரும் திருப்பொற் சுண்ணமும் இவ் வகையில் அமைந்ததாம்.

மங்கல கீதம்பாட
மழைநிகர்தூ ரியமுழங்கச்
செங்கயற்கண் முற்றிழையார்
தெற்றிதொறும் நடம்பயில
நங்கள்பிரான் திருவாரூர்
நகர்வாழ்வார் நம்பியைமுன்
பொங்கெயில்நீள் திருவாயில்
புறமுறவந் தெதிர்கொண்டார். **#268**

மங்கலம் பொருந்திய இசைப்பாடல்கள் பாடவும், மேக முழக்கை ஒத்த பேரிகை முதலிய இயங்கள் முழங்கவும், சிவந்த கயல்மீன் போலும் கண்களையுடைய செய்தொழில் முற்றிய அணிகளை அணிந்த மகளிர்கள் நடனம் செய்தற்குரிய மேடைகள் தோறும் நடனம் செய்யவும், நம் தலைவனாகிய பெருமான் எழுந் தருளியிருக்கும் திருவாரூரில் வாழும் அடியவர்கள் நம்பியாரூரரை முற்பட்டு விளங்கும்

நகர்ப்புறத்துள்ள நீண்ட மதிலின் வாயில் புறத்தே வந்து எதிர் கொண்டார்கள்.

விளக்கவுரை

மழை நிகர் தூரியம் - மேக முழக்கை ஒத்த பேரிகை. முற்றிழை - செய்தொழில் முற்றிய அணிகள். தெற்றி - திண்ணை.

வந்தெதிர் கொண்டு வணங்கு வார்முன்
வன்றொண்டர் அஞ்சலி கூப்பி வந்து
சிந்தை களிப்புற வீதி யூடு
செல்வார் திருத்தொண்டர் தம்மை நோக்கி
எந்தை யிருப்பதும் ஆரூ ரவர்
எம்மையு மாள்வரோ கேளீர் என்னும்
சந்த விசைப்பதி கங்கள் பாடித்
தம்பெரு மான்திரு வாயில் சார்ந்தார். **#269**

தம்மை எதிர்கொண்டு வணங்கும் அடியவர் களுக்கு முன், நம்பியாரூரரும் கரங்குவித்து வணங்கி, அவர் எதிர் வந்து மனமகிழ்வோடு திருவீதியினிடத்துச்செல்லுகின்றவர், அவ் வடியவர்களைப் பார்த்து, `எந்தை இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்` (தி.7 ப.73 பா.7)என்னும் வினாவுரை யாக அமைந்த சந்தம் நிறைந்த இசையோடு கூடிய திருப்பதிகத்தைப் பாடியருளி, தம் முதல்வராகிய புற்றிடங்கொண்டார் திருக்கோயிலின் திருவாயிலை அடைந்தார்.

விளக்கவுரை

இதுபொழுது பாடியருளிய பதிகம் `கரையும் கடலும்` எனத் தொடங்கும் காந்தாரப் பண்ணிலமைந்த *(தி.7 ப.73)* பதிக மாகும். இப்பதிகப் பாடல்தொறும் இறைவனைப் பல பெயர்களால் குறித்து, `அவர் இருப்பதும் ஆருர், அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்` எனும் நிறைவுடையதாகப் பாடியுள்ளார். இப்பதிகத்தின் பதினோராவது பாடல், *(தி.7 ப.73 பா 11),*

எந்தை இருப்பதும் ஆரூர்அவர் எம்மையும் ஆள்வரோ என்று
சிந்தை செயுந்திறம் வல்லான் திருமரு வுந்திரள் தோளன்
மந்த முழவம் இயம்பும் வளவயல் நாவல்ஆ ரூரன்
சந்தம் இசையொடும் வல்லார் தாம்புகழ் எய்துவர் தாமே.

என்பதாகும். இத்திருப்பாடலின் முதல் அடியையே சேக்கிழார் எடுத்து மொழிந்துள்ளார். இப்பாடலின் நான்காவது அடியில் `சந்தம் இசையொடு வல்லார்` எனவரும் தொடரே `சந்த இசைப் பதிகங்கள் பாடி` என ஆசிரியர் அருளுவதற்கும் காரணமாயிற்று. இவ்வாறே, `திரு

வாரூரான் வருந்தும் போதெனை வாடலெ னுங்கொலோ?` *(தி.3 ப.45 பா.5)* என ஞானசம்பந்தரும், `நமக் குண்டுகொலோ... தொண் டர்க்குத் தொண்டராம் புண்ணியமே` *(தி.4 ப.101 பா.1)* என அப்பர் அடிகளும் இத்திருப்பதிக்கு எழுந்தருளியபொழுது வினா வுரைப் பதிகம் பாடியிருப்பதும் நினைவு கூரத்தக்கதாகும்.

வானுற நீள்திரு வாயில் நோக்கி
மண்ணுற ஐந்துறுப் பால் வணங்கித்
தேனுறை கற்பக வாச மாலைத்
தேவா சிரியன் தொழுதி றைஞ்சி
ஊனு முயிரும் உருக்கு மன்பால்
உச்சி குவித்த செங்கைக ளோடும்
தூநறுங் கொன்றை யான்மூலட் டானம்
சூழ்திரு மாளிகை வாயில் புக்கார். **#270**

விண்ணளவும் உயர்ந்து நீண்டிருக்கும் திரு வாயிலை வணங்கி, நிலத்தில் ஐயுறுப்புக்களும் பொருந்த வீழ்ந்து எழுந்து, தேன் தங்குகின்ற கற்பக மலர்களால் தொடுக்கப்பெற்ற நறு மண மாலைகள் கட்டப் பெற்றிருக்கும் , தேவாசிரிய மண்டபத்தை வணங்கித், தொழுது, உடலையும், உயிரையும் உருகச் செய்யும் அன்பால், தலைமேல் குவித்த கைகளுடன் தூய நறுமணம் கமழும் கொன்றை மாலையணிந்த பெருமானின் பூங்கோயிலைச் சூழ்ந்த திருமாளிகையின் வாயிலை அடைந்தார்.

விளக்கவுரை

ஐந்து உறுப்புக்களாவன: தலையும், கைகள் இரண்டும், கால்கள் இரண்டுமாம். இவை நிலத்தில் பொருந்த வணங்குதலைப் `பஞ்சாங்க நமஸ்காரம்` என்பர். திருமூலட்டானம் - புற்றிடங் கொண் டார் எழுந்தருளியிருக்கும் கருவறை. பொன்னம்பலத்தின் வடபால் திருமூலநாதர், திருமூலட்டானம் இருத்தல்போல, இங்கும் தியாகேசர் எழுந்தருளியிருக்கும் இடத்திற்கு வேறாக இத்திருமூலட்டானம் அமைந்துள்ளது. திருமாளிகை - மண்டபம்.

புற்றிடங் கொண்ட புராதனனைப்
பூங்கோயின் மேய பிரானை யார்க்கும்
பற்றிட மாய பரம்பொருளைப்
பார்ப்பதி பாகனைப் பங்க யத்தாள்
அர்ச்சனை செய்ய அருள்புரிந்த
அண்ணலை மண்மிசை வீழ்ந்தி றைஞ்சி
நற்றமிழ் நாவலர் கோன்உடம்பால்
நன்மையின் தன்மையை மெய்ம்மை பெற்றார். **#271**

புற்றை இடமாகக் கொண்டு எழுந்தருளியிருக் கும் பழம்பொருளாய் இருப்பவனைப், பூங்கோயிலின்கண் எழுந்த ருளியிருப்பவனை, யாவர்க்கும் பற்றுதற்கு இடனாக விளங்கும் மேலாய பொருளை, உமையம்மையை ஒரு கூற்றில் உடையவனைத், தாமரை மலரில் வாழும் திருமகள் வழிபட அவளுக்கு அருள்செய்த முதல் வனை, எண்வகை உறுப்புக்களும் நிலமுற விழுந்து வணங்கி, நற்றமிழ்ப் புலமை வாய்ந்த நம்பியாரூரர், தம் உடம்பு எடுத்ததனாலாய பயனின் விளைவை மெய்ம்மையாகப் பெற்றார்.

விளக்கவுரை

பங்கயத்தாள் - திருமகள், `மன்னு மாமலராள் வழி பட்டது` என முன்னரும் குறிக்கப் பெற்றமை காண்க. இனி இச் சொற்குத் தாமரையனைய இறைவனின் திருவடிகள் எனப் பொருள் கொண்டு இத்திருவடி மலர்களை வழிபாடு செய்யும் பெரும் பேற்றை அருளியவனை எனப்பொருள் விரிப்பர் சிவக்கவிமணியார் (பெரிய. பு. உரை). இவ் வாறு கூறின் நம்பியாரூரர் தமக்குக் கிடைத்த பேற்றைக் கூறியதாக அமையும்.

அன்பு பெருக உருகியுள்ளம்
அலையஅட் டாங்கபஞ் சாங்க மாக
முன்பு முறைமையி னால்வணங்கி
முடிவிலாக் காதல் முதிர வோங்கி
நன்புல னாகிய ஐந்தும்ஒன்றி
நாயகன் சேவடி எய்தப் பெற்ற
இன்பவெள் ளத்திடை மூழ்கிநின்றே
இன்னிசை வண்டமிழ் மாலை பாட. **#272**

அன்பானது தம் உள்ளத்தே பெருக்கெடுக்க, அதனால் மனம் கசிந்துருகி அவ்வன்பு வழித்தாய்ச் செயற்பட்டு நிற்க, எண்வகை உறுப்புக்களும் ஐவகை உறுப்புக்களும் பொருந்த முறை முறையாக வணங்கி, அளவற்ற பெருவிருப்பு மேற்பட அதனால் உயர் வடைந்து, அதனால் பெற்ற நல்லுணர்வாகிய ஐம்புலன்களும் ஒரு வழியவாகப் பெருமானின் திருவடிகளைத் தாம் அடைந்ததனால் உண்டாகிய பேரின்ப வெள்ளத்தில் முழுகி நின்று, இனிய இசையோடு கூடிய திருப்பதிகத்தைப் பாடியருள,

விளக்கவுரை

எண்வகை உறுப்புக்கள் - தலை, கைகள் இரண்டு, காதுகள் இரண்டு, நெற்றி ஒன்று, கால்கள் இரண்டு. இவ்வுறுப்புக்கள் நிலமுற வணங்குதலை அட்டாங்க நமஸ்காரம் என்பார். ஐந்து உறுப் புக்களால்

வணங்குதலை முன் *270*ஆவது பாடலிலும் உரைத்தார். இவ்வாறாய எண்வகை உறுப்புக்களைக் கொண்டு மும்முறையும், முற்கூறிய ஐவகை உறுப்புக்களையும் கொண்டு மும்முறை வணங்கல் முறையாம். `கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள` *(குறள், 1101)* என்பர் திருவள்ளுவர். இது சிற்றின்ப நுகர்வாம். இவ்வாறே இவ்வைம்புலனும் ஒன்றித்து அநுபவிக்கும் நிலை இறைவன் மாட்டும் உளதாம். இதனைப் பேரின்பம் என்பர். இவ்வநுபவமே இங்குப் பேசப்படுவதாகும். `ஐம் புலன்கள் ஆர வந்தனை ஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை மாலமுதப் பெருங்கடலே` *(தி.8 ப.5 பா.26)* என்னும் திருவாசகமும். இதுபொழுது பாடிய பதிகம் கிடைத்திலது. ஏகாரம் அசைநிலை.

வாழிய மாமறைப் புற்றிடங்கொள்
மன்னவ னாரரு ளாலோர் வாக்குத்
தோழமை யாக வுனக்குநம்மைத் த
ந்தனம் நாமுன்பு தொண்டு கொண்ட
வேள்வியி லன்றுநீ கொண்டகோலம்
என்றும் புனைந்துநின் வேட்கை தீர
வாழிமண் மேல்விளை யாடுவாயென்
றாரூரர் கேட்க எழுந்த தன்றே. **#273**

பெருமை பொருந்திய பிரணவ வடிவான புற்றை இடமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருவரு ளால், ஓர் வானொலியாக வந்த வாக்கானது, `நம்மை உனக்குத் தோழ னாகத் தந்தனம், நாம் முன்பு உன்னைத் திருநாவலூரில் தடுத்தாட் கொண்ட திருமணத்தில் நீ அன்று கொண்டிருந்த மணக்கோலத்தை எந்நாளும் கொண்டு, உன் விருப்பம் நீங்கும் வரை, கடல்சூழ் நிலவுல கத்து விளையாடுவாயாக` என நம்பியாரூரர் கேட்குமாறு எழுந்தது.

விளக்கவுரை

தோழமையாகக் கொடுத்தனம் என்னாது, தந்தனம் என்றார், அச்சொல்லும் தோழமை தோன்றவாம். `ஈ, தா, கொடு ஆகிய மூன்று சொற்களில் `தா` என்னும் சொல் தன்னிடத்து ஒத்தவனாக இருப்பவனிடத்துக் கூறும் கூற்றாகும். இதனைத் `தா வென் கிளவி ஒப்போன் கூற்றே`*(தொல். எச்ச. 50)* எனவரும் தொல்காப்பியத்தால் அறியலாம். ஆழி - கடல். வாழிய, அன்று , ஏ என்பன அசை நிலைகள். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

கேட்க விரும்பிவன் றொண்டரென்றும்
கேடிலா தானை யிறைஞ்சி நின்றே
ஆட்கொள வந்த மறையவனே

ஆரூ ரமர்ந்த அருமணி யே
வாட்கயல் கொண்டகண் மங்கைபங்கா
மற்றுன் பெரிய கருணை யன்றே
நாட்கம லப்பதந் தந்ததின்று
நாயினே னைப்பொரு ளாக என்றார். #274

அவ்வானொலியைக் கேட்ட அளவில், நம்பி யாரூரர் பெருவிருப்புற்று, எஞ்ஞான்றும் அழிவில்லாத சிவ பெருமானை வணங்கி நின்று, `என்னை அடிமை கொள்ள எழுந்தரு ளிய மறையவனே! திருவாரூரில் வீற்றிருந்தருளும் அரிய மாணிக் கமே! ஒளி பொருந்திய கயல் மீன் போலும் கண்களை உடைய உமை யம்மையை ஒரு கூற்றில் உடையவனே! உன்னுடைய பெருங் கருணையே, நாய்க்கு ஒப்பான அடியேனை இன்றைக்குப் பொருளாக மதித்து அன்றலர்ந்த தாமரை மலர் போன்ற திருவடிகளைப் புகுமிட மாகக் கொடுத்தது` என்று விண்ணப்பம் செய்தார்.

விளக்கவுரை

வாள் - ஒளி. நாட்கமலம் - அன்றலர்ந்த தாமரை. அன்று, மற்று என்பன அசைநிலைகளாம். ஏகாரம் இரண்டனுள் முன்னையது அசைநிலை; பின்னையது தேற்றமாம்.

என்று பலமுறை யால்வணங்கி
எய்திய உள்ளக் களிப்பி னோடும்
வென்றி யடல்விடை போல்நடந்து
வீதி விடங்கப் பெருமான் முன்பு
சென்று தொழுது துதித்துவாழ்ந்து
திருமா ளிகைவலஞ் செய்து போந்தார்
அன்று முதலடி யார்களெல்லாம்
தம்பிரான் தோழ ரென்றே யறைந்தார். #275

இவ்வாறு விண்ணப்பித்துக் கொண்ட ஆரூரர் பன்முறையும் வணங்கித் தம் உள்ளத்து நிகழ்ந்த மகிழ்வுடன் பெரு வெற்றியினையுடைய வலிய ஆனேற்றைப் போல் நடந்து, தியாகப் பெருமானின் திருமுன்பு சென்று வணங்கி வழிபட்டு அப்பேற்றால் வாழ்வடைந்து, திருக்கோவிலைச் சூழ்ந்த திருமாளிகையை வலம் வந்து புறப்பட்டார். அன்று முதல் திருக்கூட்டத்து அடியவர்களெல் லாம் தம்பிரான் தோழரென்று அழைத்து வரலானார்கள்.

விளக்கவுரை

வீதிவிடங்கன் - தியாகேசர்.

மைவளர் கண்ட ரருளினாலே

வண்டமிழ் நாவலர் தம்பெ ருமான்
சைவ விடங்கின் அணிபுனைந்து
சாந்தமும் மாலையுந் தாரு மாகி
மெய்வளர் கோலமெல் லாம்பொலிய
மிக்க விழுத்தவ வேந்த ரென்னத்
தெய்வ மணிப்புற்று ளாரைப் பாடித்
திளைத்து மகிழ்வொடுஞ் செல்லா நின்றார். **#276**

கரிய கழுத்தையுடைய சிவபெருமானின் திரு வருளால் வளம் நிரம்பிய தமிழ் வல்லவரான ஆரூரர், சைவசமயத் தைச் சார்ந்தோர்க்குரிய திருநீறு, உருத்திராக்கம், மகரக்குழை, பூணூல் ஆகிய திருவேடங்களைப் பூண்டு, சந்தனமும் முத்து மாலையும் மலர் மாலையும் அணிந்தவராய்த், தம் திருமேனியின்கண் மிகச் சிறந்த திருக் கோலமெல்லாம் பொலிந்திருக்கும் மேன்மை மிகுந்த சிறந்த தவவேந்தர் என யாவரும் சொல்லுமாறு தெய்வத்தன்மை வாய்ந்த அழகிய புற்றிடங்கொண்டாரைப் பதிகங்கள் பாடி, அப்பேற்றால் உண்டாகிய இன்ப வெள்ளத்துள் மூழ்கி மகிழ்ச்சியோடு நாள்தொறும் வணங்கி வருவாராயினர்.

விளக்கவுரை

சைவவிடங்கு - சைவசமயம் சார்ந்த தோற்றப் பொலிவு. விடங்கு - அழகு. `சுந்தர வேடங்களால்` என இவர்தாமே அருளுவதும் காண்க. இது பொழுது பாடிய பதிகங்கள் எவையும் கிடைத்தில.

இதற்குமுன் எல்லை யில்லாத்
திருநகர் இதனுள் வந்து
முதற்பெருங் கயிலை யாதி
முதல்வர்தம் பங்கி னாட்குப்
பொதுக்கடிந் துரிமை செய்யும்
பூங்குழற் சேடி மாரிற்
கதிர்த்தபூ ணேந்து கொங்கைக்
கமலினி அவத ரித்தாள். **#277**

நம்பியாரூரர் திருவாரூருக்கு எழுந்தருளுதற்கு முன்னே எல்லையில்லாத சிறப்பினையுடைய இத்திருவாரூரிடத்து வந்து, தலைமையும், பெருமையும் உடைய திருக்கயிலையின்கண் வீற்றிருந்தருளும், உயிர்களின் வாழ்முதலாக விளங்கும் சிவ பெருமானின் ஒரு கூற்றை இடனாக உடைய உமையம்மையாருக்குச் சிறப்பான உரிமைத் தொண்டு செய்துவரும், மலர்களை முடித்த கூந் தலையுடைய கமலினி, அநிந்திதை எனும் இரு பணிப்பெண்களுள், ஒளி பொருந்திய அணிகளைத் தாங்கிய மார்பகங்களையுடைய கமலினி என்னும்

பணிப்பெண் தோன்றினாள்.

விளக்கவுரை

திருவாரூரின் பெருமை பன்னிரு திருமுறைகளானும் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. `திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்` *(தி.7 ப.39 பா10)* எனவரும் திருத்தொண் டத் தொகைக் கூற்றொன்றே அதன் பெருமைக்குப் போதியதாகும். ஆதலின் `எல்லையில்லாத் திருநகர்` என்றார். பொதுக் கடிந்துரிமை செய்யும் என்றது உமையம்மையாருக்குப் பணி செய்தல் தமக்கும், பிறர்க்கும் பொதுவாய் உரியது என்பதை நீக்கித், தமக்கே சிறப்பாய் உரியதாக்கிக் கொண்டு பணி செய்வது. கதிர்த்த - ஒளி பொருந்திய. கமலினியாரும் அநிந்திதையாரும் திருக்கயிலையிலிருந்து இம்மண் ணுலகில் தோன்றுதற்குரிய காரணத்தை, திருமலைச் சருக்கம் *22* முதல் *27* வரையுள்ள பாடல்களில் காண்க.

கதிர்மணி பிறந்த தென்ன
உருத்திர கணிகை மாராம்
பதியிலார் குலத்தில் தோன்றிப்
பரவையா ரென்னு நாமம்
விதியுளி விளக்கத் தாலே
மேதகு சான்றோ ரான்ற
மதியணி புனிதன் நன்னாள்
மங்கல அணியால் சாத்தி. **#278**

இவ்வாறு தோன்றிய அவர், சிப்பியிடத்து ஒளி பொருந்திய முத்துப் பிறந்தாற்போல், இறைவற்குப் பணிசெய்யும் பதியிலார் குலத்தில் தோன்றி, நூல்களில் கூறியவாறு, மேன்மை பொருந்திய சான்றோர்களால், சிறந்த இளம்பிறையை அணிந்த சிவபெருமானுக்குரிய திருவாதிரை நன்னாளில் மங்கலம் பொருந்தப் பரவையார் என்னும் திருப்பெயரிடப்பட்டு.

விளக்கவுரை

கதிர் - ஒளி. பரத்தையர் - இற்பரத்தையர், சேரிப் பரத் தையர் என இருவகையர். இவர்களுள் முன்னவர் ஒருவன் தனக்கே உரிமைபூண்டு ஒழுகும் பான்மையர். பின்னையவர் பொருள் கொண்டு இன்பம்தரும் இயல்பினர். இவரைத் திருவள்ளுவர் `பொருட்பெண்டிர்`*(குறள், 914)* என்றழைப்பர். இங்குக் கூறப்படும் உருத்திர கணிகையர் என்பவர் முன்னைய வகையைச் சார்ந்தவர். இவர், பரத்தையர் குலத்தில் தோன்றினும், ஒருவன் தனக்கே உரிமை பூண்டு வாழும் தகையர். இறைவற்குரிய வழிபாட்டுக் காலங்களில் நடனம் செய்துவருபவர்.

காலப்போக்கில் பின்னையவர் இப்பணி யைச் செய்யும் நிலை நேர்ந்தது. ஆதலால் திருக்கோயில்களில் இவர்கள் பணி நிறுத்தப்பட நேர்ந்தது.

பரவினர் காப்புப் போற்றிப்
பயில்பெருஞ் சுற்றந் திங்கள்
விரவிய பருவந் தோறும்
விழாவணி யெடுப்ப மிக்கோர்
வரமலர் மங்கை யிங்கு
வந்தன ளென்று சிந்தை
தரவரு மகிழ்ச்சி பொங்கத்
தளர்நடைப் பருவஞ் சேர்ந்தார். **#279**

தமக்கு இனமான சுற்றத்தார்கள் தெய்வங்களை வழிபட்டவர்களாய், அப்பெருமானின் காப்பை வேண்டி அவ்வத் திங்களிலும் செய்யத் தக்க விழா அணிகளைச் செய்ய, சான்றோர்கள் மேன்மையான திருமகள் இவ்விடத்துத் தோன்றினாள் என்று தங்கள் உள்ளத்தின்கண் தோன்றிவரும் மகிழ்ச்சி மேம்படத் தளர்நடைப் பருவத்தை அடைந்தார்.

விளக்கவுரை

குழந்தை பிறந்தபின், செங்கீரை, சப்பாணி முதலான பருவத்ததாய திங்களில், அக்குழந்தைக்கு நலமும் வளமும் வளர, இறைவழிபாடாற்றி வருவர். அது பெருவிழாவாகக் கொண்டாடப் பெறும். அதனையே `திங்கள் விரவிய பருவந்தோறும் விழா அணி எடுப்ப` என்றார். வர மலர் மங்கை - இப்பதியின்கண் முன்னர்த் தவம் செய்து வரம்பெற்ற திருமகள்.

மானிளம் பிணையோ தெய்வ
வளரிள முகையோ வாசத்
தேனிளம் பதமோ வேலைத்
திரையிளம் பவள வல்லிக்
கானிளங் கொடியோ திங்கட்
கதிரிளங் கொழுந்தோ காமன்
தானிளம் பருவங் கற்குந்
தனியிளந் தனுவோ வென்ன. **#280**

இளமை தவழும் ஒரு பெண்மானோ, தெய்வத் தன்மையுடைய கற்பகத் தருவில், வளரும் பருவத்தையுடைய இள அரும்போ, நறுமணம் பொருந்திய கற்பக மலரிலிருந்து ஒழுகும் தேனினது ஓர் இளம் பதமோ, அலை வீசுகின்ற கடலில் தோன்றிய இளமையான பவளக்கொடிகளுள் ஓர் இளங்கொடியோ, ஒளி பொருந்திய சந்திரனிடத்துத் தோன்றும் ஓர் இளங்கலையோ, மன்மதன் தன் இளம்பருவத்தில் கற்றற்குரிய ஒப்பற்ற இளமையானதொரு கருப்பு வில்லோ எனக் கண்டார் கூற.

விளக்கவுரை

கான் - அழகு. ஓகாரங்கள் ஐயப்பொருளன. தான் - அசைநிலை.

நாடுமின் பொற்பு வாய்ப்பு
நாளுநாள் வளர்ந்து பொங்க
ஆடுமென் கழங்கும் பந்தும்
அம்மனை ஊச லின்ன
பாடுமின் னிசையுந் தங்கள்
பனிமலை வல்லி பாதங்
கூடுமன் புருகப் பாடுங்
கொள்கையோர் குறிப்புத் தோன்ற. **#281**

எல்லோராலும் கருதத்தக்க இனிய அழகினது சிறப்பு நாள்தோறும் வளர்ந்து பொலிவடைய, எடுத்து ஆடுகின்ற மென்மையான கழற்காயும், பந்தும், அம்மனையும், ஊசலாட்டும் ஆகிய இவற்றைப் பாடுங்கால் எழும் இனிய ஓசையில், தம் தலைவி யாராகிய பார்வதியாரின் திருவடிகளைக் கூடுதற்குக் காரணமான அன்போடு, மனம் உருகப் பாடுகின்ற கொள்கையாகிய ஒரு குறிப் பும், அவரிடத்துத் தோன்றவும்.

விளக்கவுரை

விளையாட்டு வகையால் பாடுகின்ற பாடல்களில் ஓரொருகால் உமையம்மையாரைக் கூடவேண்டும் என்னும் குறிப்பும் தோன்றியது என்பார், `பனிமலை வல்லிபாதம்......... குறிப்புத் தோன்ற` என்றார். கழங்கு, பந்து, அம்மனை, ஊசல் என விளை யாடும் விளையாட்டுக்களில், தெய்வ மணங்கமழும் திருப்பாடல் களைப் பாடி ஆடுதல் வழக்காதலைத் திருவாசகத்தாலும் அறியலாம் *(தி.8 ப.11, ப.16 முதலியன).*

பிள்ளைமைப் பருவ மீதாம்
பேதைமைப் பருவ நீங்கி
அள்ளுதற் கமைந்த பொற்பால்
அநங்கன்மெய்த் தனங்க ளீட்டங்
கொள்ளமிக் குயர்வ போன்ற
கொங்கைகோங் கரும்பை வீழ்ப்ப
உள்ளமெய்த் தன்மை முன்னை
உண்மையுந் தோன்ற வுய்ப்பார். **#282**

குழவிப்பருவமாகிய ஐந்து வயதிற்கு மேலான பேதைப் பருவத்தினின்றும் நீங்கி, அள்ளிக்கொள்வதற்கமைந்த அழகினால் மன்மதன் தேடிய மெய்ம்மையான பொருள் குவியல் மேன்மேலும் உயர்வது போன்று, கோங்கு அரும்புகளையும் தோற்கச் செய்த

கொங்கைகள் வளரவும், மனத்தின் உண்மை இயல்பானது, முன்தாம் திருக்கயிலையில் உமையம்மையாருக்குப் பணிப்பெண் ணாக இருந்த குறிப்பை ஓரொருகால் தோற்றுவிக்கவும் வாழ்ந்தார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின. இப்பாடலில் முதல் மூன்று அடிகளும் உடல் வளர்ச்சியைக் குறிக்கின்றன. நான்காவது அடி உள்ள வளர்ச்சியைக் குறிக்கின்றது.

பாங்கியர் மருங்கு சூழப்
படரொளி மறுகு சூழத்
தேங்கமழ் குழலின் வாசந்
திசையெலாஞ் சென்று சூழ
ஓங்குபூங் கோயி லுள்ளார்
ஒருவரை யன்பி னோடும்
பூங்கழல் வணங்க வென்றும்
போதுவார் ஒருநாட் போந்தார். **#283**

தம் தோழியர்கள் தம்மைச்சூழ்ந்து வரவும், தம் உடலில் படர்ந்து இருக்கும் ஒளியானது தெருவில் சூழவும், தேன் கமழும் கூந்தலின் நறுமணமானது திசைகளெல்லாம் சென்று சூழவும், உயர்ந்த பூங்கோயிலில் வீற்றிருந்தருளும் ஒப்பற்ற பெருமானை அன்புமீதூர, பொலிவினையுடைய திருவடிகளை வணங்க நாள் தோறும் செல்கின்றவராகிய பரவையார், ஒருநாள் அப் பூங்கோயிலுக்குச் சென்றார்.

விளக்கவுரை

பேரொளி - உடம்பில் பரந்திருக்கும் ஒளி. கூந்தலுக்கு இயற்கை மணம் உளதாதல், `கொங்கு தேர் வாழ்க்கை`*(குறுந்.1)* எனத் தொடங்கும் சங்கப்பாடலிலும் காண்பதொன்றாம்.

அணிசிலம் படிகள் பார்வென்
றடிப்படுத் தனமென் றார்ப்ப
மணிகிளர் காஞ்சி யல்குல்
வரியர வுலகை வென்ற
துணிவுகொண் டார்ப்ப மஞ்சு
சுரிகுழற் கழிய விண்ணும்
பணியுமென் றினவண் டார்ப்பப்
பரவையார் போதும் போதில். **#284**

கால்களில் அணிந்த சிலம்புகள், `இந்நிலவுலகின் மாதர்களை யாம் வென்றோம்` என்று ஒலிக்கவும், முத்து முதலிய மணிகளால்

கோக்கப்பெற்ற காஞ்சி என்னும் அணி, `பாம்பு உலகாய கீழுலகத்தை அல்குல் வென்றது` எனும் உறுதிப்பாட்டால் ஒலிக்கவும், சுருண்ட கூந்தற்கு மேகமானது தோற்ற காரணத்தால் `விண்ணு லகத்தவரும் இவரை வணங்குவார்கள்` என வண்டுகள் ஒலிக்கவும், பரவையார் தெருவில் செல்லும் பொழுதில்.

விளக்கவுரை

வரி அரவு உலகு - கோடுகளை உடைய பாம்பு உலகம்; கீழுலகம்.

புற்றிடம் விரும்பி னாரைப்
போற்றினர் தொழுது செல்வார்
சுற்றிய பரிச னங்கள்
சூழஆ ளுடைய நம்பி
நற்பெரும் பான்மை கூட்ட
நகைபொதிந் திலங்கு செவ்வாய்
விற்புரை நுதலின் வேற்கண்
விளங்கிழை யவரைக் கண்டார். **#285**

தம்முடன் வரும் அடியவர் பலரும் சூழ, புற்றை இடமாகக்கொண்டு எழுந்தருளியிருக்கும் பெருமானை வழிபட்டு வணங்கிச் செல்பவராகிய ஆளுடைய நம்பிகள், முன்னைய ஊழ் கூட்ட, மகிழ்ச்சியைத் தன்னுள் அடக்கி நிற்கும் விளங்குகின்ற சிவந்த வாயையும், வில்போன்ற புருவங்களையும், வேல் போன்ற கண் களையும் உடைய விளங்கிய அணிகலன்களையணிந்த பரவை யாரைக் கண்டார்.

விளக்கவுரை

நற்பெரும் பான்மை - நன்மையும் பெருமையும் பெறத் தக்க ஊழ்வினை. பண்டை விதி கடைக்கூட்டப் பரவையாருங் கண்டார்` *(தி.12 சரு.1-5 பா.288)* `மின்போன் மறையும் சங்கிலியார் தம்மை விதியாற் கண்ணுற்றார்.` *(தி.12 பு.29 பா.266)* எனப் பின்னும் ஊழ்வினை கூட்டக் காண்பதைச் சிறப்பிப்பர். `ஒன்றே வேறே என்றிருபால்வயின், ஒன்றி உயர்ந்த பாவது ஆணையின் ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப`*(தொல்.களவியல் 2)* என்னும் தொல்காப்பியமும். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

கற்பகத்தின் பூம்கொம்போ
காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர்
மதிபூத்த விரைக்கொடியோ

அற்புதமோ சிவனருளோ
அறியேனென் றதிசயித்தார். **#286**

இவ்விடத்து யான் காணும் இப்பொருள் கற்பக மரத்தின் பொலிவினையுடைய கொம்போ? மன்மதன்தன் பெருவாழ் வாகக்கொண்ட இரதி தேவியோ? உயர்வுமிக்க புண்ணியத்தின் பயனாய் விளைந்ததொரு புண்ணியமோ? மேகத்தைச் சுமந்து, வில், குவளை, பவளம், பிறபிற பூக்கள், சந்திரன் ஆகிய அனைத்தையும் தன்னிடத்தே கொண்டதொரு கொடியோ? இவற்றுள் யாதானும் ஒன்றோ, அல்லது வேறொன்றோ? என அறிய ஒண்ணாத அற்புதத் தின் திரண்ட வடிவோ? அல்லது சிவனருளால் வந்ததொரு திரு வடிவோ? இவற்றுள் எந்த ஒன்றாகவும் உறுதிப்படுத்த அறியேன் என்று அதிசயித்தார்.

விளக்கவுரை

முன் பாடலில் காட்சி நிகழ்ந்ததை அடுத்து, இப்பாட லில் ஐயம் நிகழ்வதாகக் காட்டுகின்றார். இது அகப்பொருள் இலக்கண மரபாகும். திருக்குறளில் காண்டலின்றி ஐயம் நிகழாதாதலின் ஐயமே முற்படக் கூறினார். அது அவர் செய்த புதுமைப் பொலிவாகும். திருக் கயிலையிலிருந்து வந்த பெண்ணாதலின் அத்தெய்வத் தோற்றமே காணக் `கற்பத்தின் பூங்கொம்போ` என்றார் . கற்பு + அகத்து + இன்பூ +கொம்பு எனப் பிரித்துக் கற்பினை அகத்தே கொண்ட இனிய பூ மலர்தற்கு இடமாகிய கொம்பு எனப் பொருள் காண்டலும் ஒன்று என்பர் சிவக்கவிமணியார் *(பெரிய.பு.உரை)*. காமன்தன் பெரு வாழ்வு - பெருவாழ்வு பெறுவதற்கு இலக்காகக் கொண்ட மன்மதனின் வெற்றிக்கொடியோ*?* எனப்பொருள் கொண்டு, `உருவளர் காமன்றன் வென்றிக் கொடி` *(தி.8 திருக்கோவை 1)*எனவரும் திருக்கோவையா ரையும் நினைவு கூர்வர் சிவக்கவிமணியார். புண்ணியத்தின் புண்ணியமோ என்றது புண்ணியத்தின் விளைவோ எனப் பொருள்பட நின்றது. வில் - புருவத்திற்கும் குவளை - கண் ணிற்கும், பவளம் - வாய் இதழிற்கும், கோங்குமலர் - மார்பகத்திற்கும் *(முலை)*, மதி - நெற்றிக்கும் உவமையாதல் வழக்கு. ஆதலின் இவ்வனைத்துப் பொருள்களையும் கொண்ட தொரு நறுமணக்கொடியோ*!* என்றார். `திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக் குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ மருவளர் மாலையொர் வல்லியி னொல்கி .....` *(தி.8 திருக்கோவை 1)* எனவரும் திருக்கோ வையாரில் பலமலர்களும் ஒருங்குடைய கொடியோ என்றார். ஈண்டு மலர்களோடு பிறவற்றையும். *(வில் - பிறைச்சந்திரன்)* கூட்டி அவற்றை யுடைய விரைக் கொடியோ*?* என்றார். ஓகாரங்கள் ஐயப்பொருளன.

ஓவியநான் முகனெழுத
வொண்ணாமை யுள்ளத்தால்
மேவியதன் வருத்தமுற
விதித்ததொரு மணிவிளக்கோ
மூவுலகின் பயனாகி
முன்னின்ற தெனநினைந்து
நாவலர்கா வலர்நின்றார்
நடுநின்றார் படைமதனார். **#287**

மூவுலகில் உள்ளவரும் கண்டு களிப்படைதற்குக் காரணமாய் என் முன் இங்கு நிற்கின்றது, நான்முகன் இத்தகையதான ஒரு பெண்கொடியைத் தன் கைகளால் எழுத இயலாமையின், தான் அடைந்த வருத்த மிகுதியினால் தன் உள்ளத்தால் நிறைவு கொள்ளு மாறு படைத்ததொரு இரத்தின விளக்கோ? என வியந்து நம்பியாரூரர் நின்றருளினார். பரவையாரும், நம்பியாரூரரும் தமக்குள் ஒருவரை யொருவர் மனங் கொள்ளுதற்கு ஏதுவாக, ஐவகை அம்புகளையுடைய மன்மதனாரும் இடைநின்றார்.

விளக்கவுரை

உயிர்கட்குற்ற வினைப்பயன் ஏதுவாக எத்தனையோ வகையான உடம்புகளைப் படைத்துக் கொடுக்கும் நான்முகனும், இவ் வடிவைத் தன் கையில் எழுதிப் பார்க்க இயலாதவாறு உள்ளத்தளவி லேயே உருவெழுதிக் காண்பதொரு மணிவிளக்காய் நின்றதெனவே, அவ்வடிவின் அருமையும், பெருமையும் சொல்லத்தகாத நிலைய வாயின. இது `கைபுனைந்து இயற்றாக்கவின்பெரு வனப்பு`*(தி.11 திருமுரு.17)* என்பதாயிற்று. `வேதா தன் கைமலரால் அன்றிக் கருத்தால் வகுத்தமைத்தான் மொய்ம்மலர்ப் பூங்கோதை முகம்` எனும் தண்டியலங்கார எடுத்துக் காட்டுச் செய்யுளும் ஈண்டு நினைவு கூர்தற்குரியதாம். மூவுலகின் பயனாகி - மூவுலகில் உள்ளவர்களும் கண்டுகளித்தற்குரிய வடிவாகி. நாவலர் காவலர் - திருநாவலூரில் தோன்றிய காவலர். `நாதனுக் கூர்நமக் கூர்..... நாவலூர்` *(தி.7 ப.17 பா.11)* என்பது ஆரூரரின் திருவாக்காதலின், நாவலர் என்பது நாவலூரில் தோன்றியவர் என்பதுபட நின்றது. காவலர் - நரசிங்க முனையரையர் மகன்மை கொள்ள வளர்ந்தவராதலின், இவரும் அந் நிலையினராவர். இனிப் பொதுவகையானன்றிச் சிறப்பு வகையானும் புலவர் பெருமக்களைத் திருவருள் திட்பம்கொண்டு வாழ ஆற்றுப் படுத்தி அருளியமைபற்றி நாவன்மையுடைய புலவர்கட்கு இவர் காவலர் ஆவர் என்றலும் ஒன்று. கரும்பு வில்லும் மலர் அம்பும் கொண்டு ஆண், பெண் ஆகிய இரு பாலார்க்கும் காதல் உணர்வைத் தோற்றுவிக்கும்

கடப்பாடுடைமைபற்றி `நடுநின்றார் படைமதனார்` என்றார். இவ்வுண்மை இனிவரும் வரலாற்றானும் அறியப்படும். ஓகாரம் ஐயப்பொருளது.

தண்டரள மணித்தோடும்
தகைத்தோடும் கடைபிறழும்
கெண்டைநெடுங் கண்வியப்பக்
கிளரொளிப்பூ ணுரவோனை
அண்டர்பிரான் திருவருளால்
அயலறியா மனம்விரும்பப்
பண்டைவிதி கடைகூட்டப்
பரவையா ருங்கண்டார். **#288**

குளிர்ந்த முத்துக்களினாலும், மணிகளினாலும் அமைந்த காதணிகளையும் தாண்டிச் செல்கின்ற நெருங்கிப் பிறழுகின்ற நீண்டகண்கள் வியக்குமாறு, விளங்குகின்ற ஒளி பொருந் திய அணிகலன்களை அணிந்த நம்பியாரூரரைத், தேவர்க்கும் தேவரா கிய புற்றிடம்கொண்டாரின் திருவருளால், திருவருள் சார்பன்றி, உலகியல் சார்பினை அறிந்திராத அவர்தம் மனம் விரும்புமாறு, முன் திருக்கயிலாயத்தில் நேர்ந்த ஊழின் வலியும் கூட்டுவிக்கப் பரவையா ரும் கண்டார்.

விளக்கவுரை

கந்தருவர் ஒழுக்கமாம் களவுப் புணர்ச்சியைத் தாமும் விரும்பி, முன்னமைந்த ஊழும் இயைய, பரவையாரும் அவரைப் பார்த்தார். உரவோன் - நம்பியாரூரர். அயலறியா மணம் எனப்பாடங் கொண்டு, பிறர் அறியாத காதல் மணம் எனப் பொருள் கோடலும் நன்று. கடைக்கூட்ட - முடித்துவைக்க.

கண்கொள்ளாக் கவின்பொழிந்த
திருமேனி கதிர்விரிப்ப
விண்கொள்ளாப் பேரொளியா
னெதிர்நோக்கு மெல்லியலுக்கு
எண்கொள்ளாக் காதலின்முன்
பெய்தாத தொருவேட்கை
மண்கொள்ளா நாண்மடம்அச்
சம்பயிர்ப்பை வலிந்தெழலும். **#289**

காட்சிக்கு அடங்காத அழகினைப் பொழியும் திரு உடம்பானது ஒளியைப் பரப்ப, அதனால் விண்ணிடமும் அதனைப் பொறாதென்று சொல்லுமாறு பரவிய பேரொளியையுடைய நம்பி யாரூரரை எதிரே பார்க்கும் மெல்லிய நடையினையுடைய பரவை யாருக்கு, அளவற்ற

அன்புப் பெருக்கால் முன்பு ஒரு காலத்தும் வாராத தொரு பெருவிருப்பானது, இந்நிலவுலகமும் ஏற்க இயலாதவாறு நிரம்ப, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு எனும் நான்கு குணங் களையும் கீழ்ப்படுத்தித் தோன்றவும்.

விளக்கவுரை

நாணம் - ஈன்றோள் மாட்டும் எதிர்முகம் நோக்காது அமையும் கூச்சம். மடம் - அறிவிக்க அறிதலும், அறிந்ததை மறவாமை யும். பயிர்ப்பு - முன்பின் காணாத பொருள்களைக் காண்டலால் வரும் அருவருப்பு. உயிர்க் குணங்களுள் ஒன்று தோன்ற, ஏனைய அடங்கி நிற்கும். இங்கு நம்பியாரூரரிடத்து வைத்த காதலுணர்வு மீதூர்ந்தமை யால் இவ்வருங்குணங்கள் அடங்கி நிற்பவாயின. புனல் ஓடும் வழி, புல் சாய்ந்து புறங்கிடப்பது போலக் காதல் மீதூர்ந்த வழி, இவை ஒரு பால் அடங்கி நிற்பதன்றி இவை என்றும் அழியா என்பதும் அறியத் தக்கதாம்.

முன்னேவந் தெதிர்தோன்றும்
முருகனோ பெருகொளியால்
தன்னேரில் மாரனோ
தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர்செஞ் சடையண்ணல்
மெய்யருள்பெற் றுடையவனோ
என்னேயென் மனந்திரித்த
இவன்யாரோ வெனநினைந்தார். **#290**

எனக்கு முற்பட வந்து என் எதிரில் தோன்றுகின்ற முருகப்பெருமானோ? பேரொளியால் தனக்கு ஒப்பில்லாத மன் மதனோ? மாலையை யணிந்த மார்பினையுடைய வித்தியாதரனோ? மின்னலையொத்த சிவந்த சடையினையுடைய சிவபெருமானின் மெய்ம்மையான திருவருளைப் பெற்றவனோ? என்ன வியப்பு? என் மனத்தைத் தன் வயப்படுத்தி நிற்கும் இப்பெருமகன் யாரோ அறியேன் என்று நினைந்தார்.

விளக்கவுரை

முன் ஆரூரர் இவரைக்கண்டதும் இவர் யாரோ என ஐய முற்றுக்கூறியதுபோல, இவரும் ஆரூரரைக் கண்டதும் ஐயுற்று இவர் யாரோ என வியக்கின்றார்.

``உயர்மொழிக் கிளவி உறழுங் கிளவி
ஐயக் கிளவி ஆடூஉவிற் குரித்தே``. -தொல்காப். பொருள், *42*

எனவரும் தொல்காப்பியத்தால் தலைமகனை ஐயுற்றுக் கூறல் தலை மகட்கு இல்லை எனத் தெரிகிறது. தலைமகள் ஐயப்படின் தெய்வமோ என்று ஐயுறல் வேண்டும், அவ்வாறு ஐயுறின் அச்சம் வரும். அதனால்

காம நிகழ்ச்சியுண்டாகாதெனக் காரணம் கூறுவர் இளம்பூரனார். ஆனால் இறையனார் களவியல் உரையாசிரியர், தலைமகளும் ஐயப் படுவர் எனக் கூறுவர்(இ.க.நூற்பா. *3* உரை). எனவே தொல்காப்பியர் காலத்தே மகளிர் ஐயுறுதல் இல்லையாகக் காலப்போக்கில் அவர்களும் ஐயுறுதற்கு ஏதுவாயிற்று என அறியலாம். இந்நிலையிலேயே ஆரூர ரைக் கண்டு பரவையார் ஐயுற்றார். அற்றேல்,

வணங்கு நோன்சிலை வார்கணைக் காமனோ
மணங்கொள் பூமிசை மைவரை மைந்தனோ
நிணந்தெ னெஞ்சு நிறை கொண்ட கள்வனை
யணங்கு காளறி யேனுரை யீர்களே. -சீவக. சிந். பதுமை. *146*

எனப் பதுமையார் ஐயுற்றது என்னாமோ எனில் அது, காட்சி விதுப் பால் ஐயுற்றதன்று: சீவகன் என்று அறிந்தபின் அவன் அழகுகண்டு வியந்ததாகும். பரவையார் இப்பாடலில் ஐயுற்றுக் கூறும் கூற்றோடு ஆரூரர் ஐயுற்றுக் கூறும் கூற்றும் ஒப்பிட்டுக் காண்டற்குரியதாம். ஆண்டு அவர் கற்பகத்தின் பூங்கொம்போ? என்றார். இங்கு இவர் அக்கற்பகத்தின் பூங்கொம்பாம் தெய்வயானையை மணந்த முரு கனோ? என்றார். ஆண்டு அவர் - காமன் தன் பெருவாழ்வோ? என்றார். இங்கு இவர் அத்தேவியை மணந்த மாரனோ? என்றார். ஆண்டு அவர் பொற்புடைய புண்ணி யத்தின் புண்ணியமோ? என்றார். இங்கு இவர் அப்புண்ணியத்தின் பயனான மின்னேர் செஞ்சடை அண்ணல் மெய்யருள் பெற்று உடையவனோ? என்றார். இவ்வாறு ஐயுற்ற திறன்களாலும் இவ்விருவர்தம் உளம் ஒத்த பாங்கு தெரியவருகிறது. இவ்வாறெல்லாம் ஐயுறுதற்குரிய பெருமையுடை யான், தோன்றிய அளவில் மறைந்தமைபற்றி இவன் யாரோ? என்றார். ஓகாரங்கள் ஐயப் பொருளன.

அண்ணலவன் தன்மருங்கே
அளவிறந்த காதலினால்
உண்ணிறையுங் குணநான்கும்
ஒருபுடைசாய்ந் தனவெனினும்
வண்ணமலர்க் கருங்கூந்தல்
மடக்கொடியை வலிதாக்கிக்
கண்ணுதலைத் தொழுமன்பே
கைக்கொண்டு செலவுய்ப்ப. **#291**

தலைமைசான்ற நம்பியாரூரரிடத்து ஏற்பட்ட அளவிறந்த காதல் வேட்கையால், தம் உள் நிறைந்த நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகிய நான்கு குணங்களும் ஒருமருங்கு விலகின வாயினும், அழகிய மலர்கள் நிறைந்த கரிய கூந்தலையுடைய இளங் கொடிபோல்வாளைத் தேற்றி,

சிவபெருமானைத் தொழுதற்குரிய அன்பே திருக்கோயிலுக்குச் செல்லுமாறு செலுத்த,

விளக்கவுரை

ஆரூரர்மீது உற்ற காதலால் அச்சம் முதலாகிய நான்கு குணங்களும் நிறை அழியினும், இறைவன்பால் கொண்ட அன்பு அழியாது மீதூர்ந்திருந்தது என்பார். `கண்ணுதலைத் தொழும் அன்பே கைக்கொண்டு செலவுய்ப்ப` என்றார். கைக்கொண்டு செலவு உய்ப்ப - (வலியிழந்தவர்களைக்) கைப்பிடித்து அழைத்துக் கொண்டு செல்வது போல, இறைவன் மீது கொண்டிருந்த அன்பும் இவரைக் கைப்பிடித்து அழைத்துச் செல்வது போல அழைத்துச் சென்றதாம்.

பாங்கோடிச் சிலைவளைத்துப்
படையனங்கன் விடுபாணம்
தாங்கோலி யெம்மருங்கும்
தடைசெய்ய மடவரலும்
தேங்கோதை மலர்க்குழல்மேல்
சிறைவண்டு கலந்தார்ப்பப்
பூங்கோயி லமர்ந்தபிரான்
பொற்கோயில் போய்ப்புகுந்தாள். **#292**

பக்கத்தில் ஓடிக் கருப்புவில்லை வளைத்து, தென்றல் முதலிய நால்வகைச் சேனைகளையுடைய மன்மதன் விடும் மலர் அம்புகள், வளைந்து நான்கு புறத்திலும் தடை செய்யவும், பர வையாரும் நறுமணமுடைய மலர்மாலையை அணிந்த கூந்தலிடத்துச் சிறகினையுடைய வண்டுகள் தம்முள் கலந்து ஒலிக்க, பூங்கோயி லின்கண் வீற்றிருந்தருளும் பெருமானின் அழகிய திருக்கோயிலுக் குள் சென்றார்.

விளக்கவுரை

தாம்- அசைநிலை. தாம் கோலி - தமக்குள் வளைத்துக் கொண்டு. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வன்றொண்ட ரதுகண்டுஎன்
மனங்கொண்ட மயிலியலின்
இன்றொண்டைச் செங்கனிவாய்
இளங்கொடிதான் யாரென்ன
அன்றங்கு முன்நின்றார்
அவர்நங்கை பரவையார்
சென்றும்பர் தரத்தார்க்குஞ்
சேர்வரியார் எனச்செப்ப. **#293**

பரவையார் கோயிலுள் புகுந்தமையைக் கண்ட ஆரூரர், என் மனத்தைத் தன் வயப்படுத்தி, சென்ற மயில்போலும் சாயலையும், கொவ்வைக் கனி போலும் சிவந்த வாயினையும் உடைய இளங்கொடிபோலும் இப்பெண் யாரென்று வினவ, அது பொழுது அவ்விடத்திருந்தவர்கள், இவர்பெண்களில் சிறந்த பரவையார் எனும் பெயரினர், தேவர்களும் நெருங்கிச் சேர்தற்கு அரியவர் என்று கூற.

விளக்கவுரை

தொண்டை - கொவ்வை. இதன் பழம் சிவந்திருத்தல் பற்றி இதனைப் பெண்களின் வாய் இதழுக்கு உவமையாகக் கூறுவர்.

பேர்பரவை பெண்மையினில்
பெரும்பரவை விரும்பல்குல்
ஆர்பரவை யணிதிகழும்
மணிமுறுவல் அரும்பரவை
சீர்பரவை யாயினாள்
திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை யிடைப்பட்ட
என்னாசை யெழுபரவை. **#294**

இவள் பெயர் பரவை என்று சொல்லப்படுவது. அவளுடைய பெண்தன்மையைக் குறிக்கொண்டு கூறின், பெரிய தேவர் கூட்டமும் விரும்புகின்ற திலோத்தமை முதலிய அரம்பை யர்களும் வணங்கத் தகுந்த தெய்வத் தன்மை வாய்ந்தது. அழகு பொலிகின்ற முத்துக்களையொத்த பற்கள் முல்லை அரும்புகளை ஒப்பன, திருமகளும் விரும்பும் அழகினை உடையவளது திருவுருவத் தின் இனிய மென்மையான அழகில் தோன்றும் என்னுடைய ஆசை ஏழு கடலையும் ஒத்துள்ளது.

விளக்கவுரை

இப்பாடலில் பரவை என்னும் சொல் ஏழு இடங்களில் வந்துள்ளது. பரவை என்பது கடல் எனப் பொருள்படுவது. இது கொண்டு திருச்சிராப்பள்ளி மீனாட்சிசுந்தரம் பிள்ளை `முறையின் ஒரு சிறு தூக்கின் எழுபரவையும் புக முடித்து உற நிறுத்தான், இவன் மொழி எங்கள் தம்பிரான் வல்லபம் உணர்ந்திலை கொல்` *(சேக்கிழார் பிள். தமிழ், அம்புலி, 6)* எனப் பாராட்டி மகிழ்ந்திருப்பதும் அறியத்தக் கதாம். இனி இப் பாட்டினிறுதியில் வரும் எழுபரவை என்பது ஏழு கடல்களைக் குறிப்பதும் அறிந்து இன்புறத்தக்கதாம். இவ்வாறெல்லாம் எண்ணி மகிழ்தற்குரியது எனினும், இச்சொல்வரும் ஏழு இடங்களில், பின்னிரண்டிடங்களில் மட்டுமே கடலைக் குறிப்பனவாக உள்ளன.

ஏனைய இடங்களில் வெவ்வேறான நிலையில், சொற்கள் பிரிக்கப் பட்டுப் பொருள்களும் வேறுபட நிற்கின்றன.

`பேர் பரவை` என வருமிடத்து, அது அப்பெருமாட்டியின் பெயரைக் குறித்து நிற்கின்றது, பெரும் பரவை என்பது. பெரு + உம்பர் + அவை எனப் பிரிக்கப் பெற்றுப் பெரிய தேவர் கூட்டம் எனும் பொருள்பட நிற்கின்றது. விரும்பு அல்குலார் பரவை என வருமிடத்து விரும்பு + அல்குலார் + பரவு + ஐ எனப் பிரிக்கப்பட்டு, தேவர்களும் விரும்புகின்ற திலோத்தமை முதலிய அரம்பையர்களும், வணங்கத் தகுந்த தெய்வத் தன்மை வாய்ந்தவள் எனும் பொருள்பட நிற்கின்றது ஐ - இறை; தெய்வத் தன்மை.

இனி, விரும்பு + அல்குல் + ஆர்பு + அரவு + ஐ எனப் பிரித்து விரும்பத் தகுந்த அல்குலின் நிறைவானது, பாம்பரசின் (ஆதி சேடன்) படத்தின் அழகையொக்கும் எனப் பொருள் கோடலும் ஒன்று என்பர் ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள்,(பெரிய.பு.உரை) `மணிகிளர் காஞ்சி யல்குல் வரியரவுலகை வென்ற துணிவுகொண்டார்ப்ப` (பா.284) என முன்னர்க் கூறப்பட்டதும் காணலாம். அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை என்பது மணி முறுவல் அரும்பர் அவை எனப்பிரிக்கப் பட்டு, முத்துக்களையொத்த முறுவலானது முல்லை அரும்புகளை ஒத்தது எனப் பொருள்பட நின்றது. அரும்பர் - முல்லை அரும்புகள்; சுரும்பு - சுரும்பர் என நின்றாற் போல, அரும்பு அரும்பர் என நின்றது. சீர் பரவை ஆயினார் (என்பது) சீர் + பரவு + ஐ எனப் பிரிக்கப் பட்டுத் திருமகளும் விரும்பும் அழகினை உடையாள் என நின்றது. ஐ - அழகு. மென்சாயல் ஏர் பரவை என்பது, மென்மையான அழகு பொருந்திய கடலினிடத்து எனும் பொருள்பட நின்றது. எழுபரவை என்பது ஏழுகடல் எனும் பொருள்பட நின்றது.

என்றினைய பலவுநினைந்
தெம்பெருமான் அருள்வகையான்
முன்றொடர்ந்து வருங்காதல்
முறைமையினால் தொடக்குண்டு
நன்றெனையாட் கொண்டவர்பால்
நண்ணுவனென் றுள்மகிழ்ந்து
சென்றுடைய நம்பியும்போய்த்
தேவர்பிரான் கோயில்புக. **#295**

இவ்வாறாகப் பலபட நினைந்து எம் தலைவ னாகிய புற்றிடங் கொண்டாரது திருவருட்பெருக்கால், முற்பிறவியி லிருந்து தம்மைத் தொடர்ந்து வருகின்ற விருப்பின் தகைமையால் கட்டுண்டு, பெரிதும் விரும்பி என்னை அடிமைகொண்ட பெருமானை அடைவேன் என்று,

தமது உள்ள மகிழ்ச்சியால் சென்று, ஆளுடைய நம்பிகளும் புற்றிடங் கொண்டாரின் திருக்கோயிலுள் செல்ல.

விளக்கவுரை

பரவையாரிடத்துத் தோன்றிய காதல் திருக்கயிலை யிலேயே தொடங்கப் பெற்ற தாதலின் `முன் தொடர்ந்து வரும் காதல்` என்றார். மடவரலும் (பரவையார்) பொற்கோயில் போய்ப் புகுந்தாள் எனக்கூறியதை அகப்படுத்துமாறு, இங்கு `நம்பியும் போய்த் தேவர் பிரான் கோயில் புக` என்றமையின், உம்மை இறந்தது தழீஇயிற்று.

பரவையார் வலங்கொண்டு
பணிந்தேத்தி முன்னரே
புரவலனார் கோயிலினின்
றொருமருங்கு புறப்பட்டார்
விரவுபெருங் காதலினால்
மெல்லியலார் தமைவேண்டி
அரவின்ஆ ரம்புனைந்தார்
அடிபணிந்தார் ஆரூரர். **#296**

அது பொழுது பரவையார் திருக்கோயிலை வலம்வந்து புற்றிடங் கொண்டாரை வணங்கிப் போற்றி, தம் வழிபாட்டை நிறைவு செய்துகொண்டு, ஆரூரர் திருக்கோயிலினுள் புகும் முன்பே பெருமானின் திருக்கோயிலிலிருந்து வேறொரு வழியாக வெளிச் சென்றார். (இந்நிலையில்) நம்பியாரூரரும், பெருமானிடத்துக் கொண்ட பெருவிருப்பால், பரவையாரைத் தமக்குத் தருமாறு பாம்பினை அணியாகக் கொண்ட புற்றிடங்கொண்டார் திருவடிகளை வணங்கினார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.
எனவே பரவையார் வழிபாடு செய்து வெளிப்போந்த பின் னரே, நம்பியாரூரர் உட்சென்று அவரைத் தருமாறு வேண்டினார் என்பது புலப்படுகின்றது. விரவு பெருங்காதலினால் - பெருமான் மீது வைத்த அளவிறந்த பற்றால். பெருமான் தம்மை விரும்பித் தடுத்தாட் கொண்டமையாலும், அவ்வாறு ஆட்கொள்ளப்பட்டபின் மீளா அடிமை கொண்டு ஆரூரரும் அப் பெருமானிடத்து அன்பு செலுத்தி வருதலாலும், அக்கயிலை நிகழ்ச்சி வழியே பரவையாரை விரும்ப வும் காணவும் நேர்ந்தமையாலும், இத் தொடருக்கு இவ்வாறு பொருள் கொள்ளல் ஏற்புடைத்தாயிற்று. இவ்வாறன்றி, பரவையார் மீதுற்ற பெருங்காதலால் என உரை கொள்ளின், அது ஆரூரர் அடிமைத் திறத்திற்கு அத்துணைப்

பெருமை தராததாய் அமையும்.

அவ்வாறு பணிந்தேத்தி
யணியாரூர் மணிப்புற்றின்
மைவாழுந் திருமிடற்று
வானவர்பால் நின்றும்போந்து
எவ்வாறு சென்றாள்என்
இன்னுயிராம் அன்னமெனச்
செவ்வாய்வெண் நகைக்கொடியைத்
தேடுவா ராயினார். **#297**

அவ்வகையில் பரவையாரைத் தருமாறு வேண்டி வணங்கி வழிபட்டுத், திருவாரூரின்கண் உள்ள அழகிய புற்றை இட மாகக் கொண்ட நீல நிறம் பொருந்திய திருக்கழுத்தினையுடைய சிவ பெருமானிடத்தினின்றும் நீங்கி, எவ்வழியாகச் சென்றாள் என் உயிர் போன்ற அன்னமாகிய பரவை என்று சிவந்த வாயினையும், வெண் மையான பற்களையும் உடைய பரவையாரைத் தேடுவாராயினார்.

விளக்கவுரை

மை - கருமை: அந்நிறத்தையுடைய நஞ்சைக் குறித்தது.

பாச மாம்வினைப் பற்றறுப் பான்மிகும்
ஆசை மேலுமொ ராசை யளிப்பதோர்
தேசின் மன்னியென் சிந்தை மயக்கிய
ஈச னாரரு ளெந்நெறிச் சென்றதே. **#298**

உயிரைப் பிணித்து நிற்கும் வினைத்தொடர்பை அறுத்தற்காகச் சிவபெருமானிடத்துக் கொள்ளும் மிக்க ஆசையின் மேலும் ஓர் ஆசையைக் கொடுக்கும் ஒப்பற்ற ஒளியாக விளங்கி, என் மனத்தை மயங்கச் செய்த சிவபெருமானின் திருவருளானது (பரவை யார்) எவ்வழியாகச் சென்றது?

விளக்கவுரை

பாசம் - கட்டு. உயிர்கள் தாம் கொள்ளும் பற்றின் காரணமாகவே இக்கட்டு நேர்கிறது. இதனை அறுத்தற்கு உரியான் இறைவனே யாவன். `பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே`*(தி.8 ப.1 வரி.64)* என்னும் திருவாசகமும். `பற்று` `கட்டாதல்` `ஒக்கல் வாழ்க்கை தட்கு மா காலே`(புறநா. *193), `*மயங்கி வலைப்பட்டார் மற்றை யவர்`*(*குறள்*,348)* என்பனவாய சங்க இலக்கியத்தாலும் திருக்குறாலும் உணரலாம். இறைவன் மீது கொண்ட ஆசையுடன் மேலும் ஒருவர் *(*பரவையார்*)* தன்மீது ஆசை கொள்ளுமாறு செய்யும் ஈசன் அருள் எவ்வழிச் சென்றது*?* என வியந்து கூறுகிறார். அற்புதமோ*,* சிவனருளோ என முன்னர்

ஐயுற்றதற்கு இணங்க, இங்குப் பரவையாரை `ஈசன் அருள்` எனக் குறித்தார். பற்று அறுப்பான் - பற்றினை அறுக்கும் பொருட்டு.

உம்பர் நாயகர் தங்கழல் அல்லது
நம்பு மாறறி யேனை நடுக்குற
வம்பு மால்செய்து வல்லியின் ஒல்கியின்று
எம்பி ரானரு ளெந்நெறிச் சென்றதே. **#299**

தேவர்கட்குத் தலைவனாகிய சிவபெருமானின் வீரக்கழலை அணிந்த திருவடிகளையன்றி வேறொன்றையும் ஒரு பொருளெனக் கருதிவிரும்பாத என்னை, வருந்துதற்கு ஏதுவாய நிலையில்லாத விருப்பத்தைத் தந்து, ஒரு கற்பகக் கொடிபோல் அசைந்து இற்றைக்கு எம் பெருமானின் திருவருளானது (பரவையார்) எவ்வழியாகச் சென்றது?

விளக்கவுரை

நம்புமாறு - விரும்புமாறு. நம்பு - விருப்பம். வம்பு - நிலையின்மை.

பந்தம் வீடு தரும்பர மன்கழல்
சிந்தை யார்வுற உன்னுமென் சிந்தையை
வந்து மால்செய்து மானென வேவிழித்து
எந்தை யார்அருள் எந்நெறிச் சென்றதே. **#300**

உடம்போடு உயிரைக் கூட்டி வாழ்விக்கும் கட்டையும், அவற்றின் நீக்கமாகிய வீட்டையும் கொடுக்கும் சிவ பெருமானின் திருவடிகளை உளங்குளிர எண்ணி மகிழும் என் சிந்தையை வந்து மயக்கி, மானென விழித்து, என் விருப்பை மிகுவித்த எம் சிவபெருமானின் திருவருள் (பரவையார்) எவ்வழிச் சென்றது?

விளக்கவுரை

இரு வினையானும் போக்குவரவு புரியுமாறு உயிர்க்கு உடம்பு கொடுத்து, அதன்வழி வினை நீக்கம்பெறச்செய்வது பந்தமாகும்.

என்று சாலவு மாற்றல ரென்னுயிர்
நின்ற தெங்கென நித்திலப் பூண்முலை
மன்றல் வார்குழல் வஞ்சியைத் தேடுவான்
சென்று தேவா சிரியனைச் சேர்ந்தபின். **#301**

இவ்வாறெல்லாம் கூறி, மிகவும் ஐம்புல இன்பத்திற்கு ஆற்றாதவராய், என்னுடைய உயிரானது எங்கு நிற் கின்றது? என்று, முத்துமாலையை அணிந்த மார்பையும் நறுமணம் கமழும் நீண்ட கூந்தலையும் உடைய அப்பரவையாரைத் தேடுவா ராய்த், திருக்கோயிலினின்றும் புறப்பட்டுத், தேவாசிரிய மண்டபத்தை அடைந்த பொழுது.

விளக்கவுரை

தேடுவான் - தேடும்பொருட்டு.

காவி நேர்வருங் கண்ணியை நண்ணுவான்
யாவ ரோடு முரையியம் பாதிருந்து
ஆவி நல்குவர் ஆரூரை யாண்டவர்
பூவின் மங்கையைத் தந்தெனும் போழ்தினில். **#302**

கருங்குவளை மலரை யொத்த கண்களையுடைய பரவையாரைச் சேரும்பொருட்டு, யாவரிடத்தும் உரையாடாதிருந்து, திருவாரூரில் அரசு வீற்றிருக்கும் பெருமான், திருமகளையொத்த பரவையாரைக் கொடுத்து, அதன் வாயிலாக என் உயிரையும் கொடுப்பர் எனக் கருதியிருக்கும் அமையத்தில்,

விளக்கவுரை

காவி - கருங்குவளை.

நாட்டு நல்லிசை நாவலூ ரன்சிந்தை
வேட்ட மின்னிடை இன்னமு தத்தினைக்
காட்டு வன்கட லைக்கடைந் தென்பபோற்
பூட்டு மேழ்பரித் தேரோன் கடல்புக. **#303**

நிலைபெற்ற நற்புகழையுடைய நம்பியாரூரர் தம் உள்ளத்து விரும்பிய மின்போலும் இடையினையுடைய இனிய அமுதாகிய பரவையாரை, இப்பொழுது கடலைக்கடந்து சென்று நாளை வந்து காட்டுவன் என்று கூறுவது போல, பூட்டிய ஏழு குதிரைகளை உடைத்தாகிய தேரையுடைய கதிரவன் கடலில் மறைய,

விளக்கவுரை

ஏழ்பரித்தேரோன் - கதிரவன்; இவன் ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் செல்வன் என்றும், அவ் ஏழு குதிரைகளும் ஏழு நிறங்களை உடையன என்றும் கூறுவர். இனி ஏழு நிறமுடைய `சப்தா` எனும் குதிரை பூட்டப்பெற்ற தேரையுடையவன் என்று கூறுவாரும் உளர். நீலம் முதல் சிவப்பு ஈறாக உள்ள ஏழு நிறங்களின் திரட்சியே கதிரவனின் கதிராகும் என்றும், இதனையே ஏழு குதிரைகள் பூட்டப் பெற்ற தேரில் செல்வதாகக் கருதுவர் என்றும் கூறுவர் சிவக்கவி மணியார் (பெரிய.பு.உரை).

எய்து மென்பெடை யோடிரை தேர்ந்துண்டு
பொய்கை யிற்பகல் போக்கிய புள்ளினம்
வைகு சேக்கைகண் மேற்செல வந்தது
பையுள் மாலை தமியோர் பனிப்புற. **#304**

பிரியாது உறையும் மென்மையான பெடை யொடு பகற்காலத்தே பொய்கைக் கண் சென்று, நல்ல இரைகளை ஆராய்ந்து உண்ட பறவைக்கூட்டங்கள், தாம் வாழும் கூடுகளில் சென்று

அடையவும்,தனித்திருக்கும் தலைவரும், தலைவியரும் பிரிவாற்றாது வருந்தவும் துன்பத்தைத் தரும் மாலைக் காலம் வந்தது.

விளக்கவுரை

எய்தும் - ஆண் பறவையோடு பிரியாது பொருந்தும். பையுள் - துன்பம். இவைநான்கு பாடல்களும் ஒருமுடிபின.

பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்கள்தம் வல்வினை யும்அரன்
அஞ்செ ழுத்து முணரா அறிவிலோர்
நெஞ்சு மென்ன இருண்டது நீண்டவான். **#305**

செம்பஞ்சினும் மெல்லிய அடியினையுடைய பெண்களின் மனமும், வஞ்சனை உடையாரது கொடிய தீவினையும், சிவபெருமானின் திருவைந்தெழுத்தை உணராத அறிவற்றார்தம் மனமும் போல நீண்ட விண்வெளியானது இருளடைந்தது.

விளக்கவுரை

`பேதைமை என்பது மாதர்க் கணிகலம்` என்பதாலும், மகளிர்க்கு உளவாகும் அச்சம் முதலிய நான்கு குணங்களுள் மடமை என்பதும் ஒன்றாதலானும் மாதர் உள்ளம் இருண்டது எனக் கூறினார். இப்பாவையர் குலமகளிரும் அடங்கப் பரத்தையரே குறிக்கும் என்பர் சிவக்கவிமணியார் (பெரிய. பு. உரை). திருமணம் ஆகும்வரை, பெற்றோர் அரவணைப்பிலும், திருமணம் ஆனபின் கொண்டான் குறிப்பிலும் நிற்றலின், நீண்டநெடிய அநுபவம் அவருக்கு அக் காலத்தே வாயாதிருந்தது. அதுபற்றியே பாவையர் எனப்பொதுப்படக் கூறினர் என்றலும் எண்ணத் தகுவதாகும். வஞ்சனையுடையார் உண்மை உணர இயலாமையின் அவர் உள்ளமும் `அரன் அஞ்செ ழுத்து முணரா அறிவிலோர்` ஆதலின், அவர்தம் உள் ளமும் இருண்டது என்றார். அஞ்செழுத்தும் எனவரும் உம்மை முற்றும்மை. ஏனைய எண்ணும்மைகளாம்.

மறுவில் சிந்தைவன் றொண்டர் வருந்தினால்
இறும ருங்குலார்க் கியார்பிழைப் பாரென்று
நறும லர்க்கங்குல் நங்கைமுன் கொண்டபுன்
முறுவ லென்ன முகிழ்த்தது வெண்ணிலா. **#306**

குற்றமற்ற சிந்தையையுடைய நம்பியாரூரரே வருத்தமுற்றால், மார்பகத்தின் பளுவால் அசைகின்ற சிறிய இடையை யுடைய பெண்களின் ஆசையினின்றும் யார்பிழைக்க முடியும்? என்று நறுமணம் கமழும் மலர்களைச் சூடிய கூந்தலையுடைய இரவாகிய பெண்ணானவள், முற்படச் செய்த புன்சிரிப்புப் போல வெண்ணிலா

தோன்றுவதாயிற்று.

விளக்கவுரை

இறும் - பளுவால் வளையும்.

அரந்தை செய்வார்க் கழுங்கித்தம் ஆருயிர்
வரன்கை தீண்ட மலர்குல மாதர்போல்
பரந்த வெம்பகற் கொல்கிப் பனிமதிக்
கரங்கள் தீண்ட அலர்ந்த கயிரவம். **#307**

துன்பம் செய்யும் இழிந்தாரின் கை தீண்ட வருந்தியும், தம் உயிர்க்காதலர் தம்மைத் தீண்ட உடலும் உள்ளமும் மலர்ச்சி அடைந்தும் வாழும் குலப் பெண்டிர் போல, பரந்த வெம்மை பொருந்திய கதிரவனின் ஒளியாகிய கைகள் படும்போது வாடிக் குவிந்தும் குளிர்ந்த சந்திரனுடைய ஒளிக் கதிராகிய கைகள் தம்மைத் தீண்டியபோது ஆம்பல்கள் மலர்ந்தும் இருந்தன.

விளக்கவுரை

அரந்தை - துன்பம். வரன் - கணவன். கயிரவம் - ஆம்பல்.

தோற்று மன்னுயிர் கட்கெலாந் தூய்மையே
சாற்று மின்பமுந் தண்மையுந் தந்துபோய்
ஆற்ற அண்டமெ லாம்பரந் தண்ணல்வெண்
நீற்றின் பேரொளி போன்றது நீள்நிலா. **#308**

இந்நிலவுலகில் பிறக்கும் நிலை பெற்ற உயிர் கட்கெல்லாம் தூய்மையையும், போற்றத்தகும் இன்பத்தையும், குளிர்ச் சியையும் கொடுத்தலன்றி, செல்கின்ற மிகப்பெரிய அண்டங்களிலும். சென்று நிலவுகின்ற சிவபெருமானின் திருநீற்றினது வெண்மையான பேரொளி போன்று நீண்டு ஒளிவிடும் நிலவு விளங்கியது.

விளக்கவுரை

நிலவு, இவ்வுலகில் தோன்றியிருக்கும் உயிர்கட் கெல் லாம் தூய்மையும், இன்பமும், தண்ணளியும், கொடுப்பதோடு எல்லா அண்டங்களிலும் ஒளிவிட்டு விளங்குவதும் ஆகும். தோற்றும்- உடலொடு பிறக்கும். ஆற்ற அண்டம் - மிகப்பெரிய அண்டங்கள்.

வாவி புள்ளொலி மாறிய மாலையில்
நாவ லூரரும் நங்கை பரவையாம்
பாவை தந்த படர்பெருங் காதலும்
ஆவி சூழ்ந்த தனிமையு மாயினார் . **#309**

குளங்களில் இரைதேடும் பறவைகளின் ஒலி நீங்கிய மாலைக்காலத்தில், நம்பியாரூரரும், பெண்களில் சிறந்த பரவையார் கொடுத்த மிகப்பெரிய வேட்கையும், தம் உயிரை நீங்காது நிற்கும் தனிமையும்

உடையராயினார்.

விளக்கவுரை

****

தந்தி ருக்கண் எரிதழ லிற்பட்டு
வெந்த காமன் வெளியே உருச்செய்து
வந்தென் முன்னின்று வாளி தொடுப்பதே
எந்தை யார்அருள் இவ்வண்ண மோவென்பார். **#310**

`சிவபெருமானின் நெற்றிக்கண்ணினின்றும் தோன்றிய தீயில்பட்டு இறந்த மன்மதன் இதுபொழுது உருவெடுத்து வெளிப்போந்து என் எதிர்நின்று அம்பைத் தொடுப்பதோ? எம் பெருமானது திருவருளும் இத்தகையதோ?` என்பார்.

விளக்கவுரை

எரிதழல் - எரிகின்ற நெருப்பு. உருச்செய்து - உருவெ டுத்து. வாளி - அம்பு.

ஆர்த்தி கண்டும்என் மேல்நின்று அழற்கதிர்
தூர்ப்ப தேயெனைத் தொண்டுகொண் டாண்டவர்
நீர்த்த ரங்கநெடுங் கங்கை நீள்முடிச்
சாத்தும் வெண்மதி போன்றிலை தண்மதி. **#311**

குளிர்ந்த சந்திரனே! யான் பரவையாரால் படும் துன்பத்தைக் கண்டபின்னும், என்னிடத்து நெருப்பை வீசும் ஒளிக் கதிர்களைத் தூவுவதோ? என்னை அடிமை கொண்டு ஆண்ட சிவ பெருமானின் வெள்ளப் பெருக்கையுடைய அலைவீசுகின்ற கங்கைப் பேராற்றையுடைய நீண்ட சடைமுடியில் அணிந்திருக்கின்ற வெண் மதியைப்போல் அமைந்தாய் அல்லையோ! என்பார்.

விளக்கவுரை

ஆர்த்தி - துன்பம். நின்னளவானும் நீ இருக்கும் இடத்தானும், தண்மையையே வழங்கவேண்டிய நீ, வெம்மையை வழங்குகின்றாயே என அலமருகின்றார்.

அடுத்து மேன்மேல் அலைத்தெழு மாழியே
தடுத்து முன்னெனை யாண்டவர் தாமுணக்
கடுத்த நஞ்சுண் தரங்கக் கரங்களால்
எடுத்து நீட்டுநீ யென்னைஇன் றென்செயாய். **#312**

இடைவிடாது ஒன்றன்மேல் ஒன்றாய் அடுக்கி எழும் அலைகளையுடைய கடலே! என்னை முன் தடுத்தாட்கொண்ட இறைவனே, உண்ணுமாறு கொடிய நஞ்சை உன் அலைகளாகிய கைகளால் எடுத்துக் கொடுத்த நீ, எனக்கு இன்று யாது செய்யாய்?

எக்கொடுமையும் செய்வாய் என்பார்.

விளக்கவுரை

கடுத்த - கொடிய.

பிறந்த தெங்கள் பிரான்மல யத்திடைச்
சிறந்த ணைந்தது தெய்வநீர் நாட்டினில்
புறம்ப ணைத்தடம் பொங்கழல் வீசிட
மறம்ப யின்றதெங் கோதமிழ் மாருதம். **#313**

தமிழ்த் தென்றலே! நீ பிறந்தது எங்கள் பெருமான் வீற்றிருந்தருளும் பொதிய மலையிலாம். அவ்விடத்தினின்றும் சிறப் பாக வந்தடைந்ததும் தெய்வத் தன்மை வாய்ந்த தென்தமிழ் நாட்டின் கண் உள்ள அழகிய நீர்நிலைகளின் வழியேயாம். அங்ஙனமாகவும், நீ வெம்மையாகிய காற்றைக் கொடுக்கப் பழகியது எங்ஙனம்? என்பார்.

விளக்கவுரை

ஒருவருக்கு அமையும் குணங்கள், ஒன்று பிறப்பின் வழி வரும். இன்றேல் அவர் பழகிய சிறப்பின் வழி வரும். அந்நிலை யில் பிறப்பின்வழித் திருவருள் தந்த அருட்டன்மை வாய்ந்த குளிர்ச்சி யையும், பழகிய சிறப்பின்வழி நறுமணங்கமழும் நீர்தர வந்த குளிர்ச்சி யையும் பெற்றிருக்கும் நீ, வெம்மை தருவது எங்ஙனம்? என வினவு கின்றார். புறம் பணைத் தடம் - தென்தமிழ் நாட்டில் அழகிய மருத நிலங்களிலுள்ள குளம். மறம் - ஈண்டு வெப்ப மிகுதியைக் குறித்தது.

இன்ன தன்மைய பின்னும் இயம்புவான்
மன்னு காதல னாகிய வள்ளல்பால்
தன்ன ரும்பெறல் நெஞ்சு தயங்கப்போம்
அன்னம் அன்னவள் செய்கை அறைகுவாம். **#314**

இதுகாறும் கூறிய மன்மதன், மதி, கடல், காற்று ஆகியவற்றோடு அன்றி, மேலும் குயில், கிளி, போன்றவற்றையும், வெறுத்துக் கூறுபவராகிய நிலை பெற்ற காதலை உடையவராகிய நம்பியாரூரரிடத்து, தனது பெறற்கரிய மனம் சென்று மீளாதிருப்ப, அன்னம் போன்ற நடையினையுடைய பரவையாரது செய்கையை இனிச் சொல்லுவாம்.

விளக்கவுரை

காம மீதூர்வினால் வருந்துபவர்கள் உறுப்புடையது போல், உணர்வுடையதுபோல், மறுத்துரைப்பதுபோல் நெஞ்சொடு புணர்த்தும், சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச் செய்யா மரபில் தொழிற்படுத்தி அடக்கியும் *(*தொல். பொருளியல், *2)* கூறல் மரபே யாம். அவ்வகையில் மன்மதன் உருவற்றவன் ஆதலின் பேசான். மதி, கடல், காற்று ஆகியவை உணர்வற்றனவாதலின் அவையும் பேசா, ஆயினும் அவை,

பேசுவன போலவும், உணர்வுடையன போலவும் கூறினார். இங்குக் கூறப் பட்டனவன்றி இவ்வாறு கூறுதற்கேற்ற குயில், கிளி, முதலாய பிற பொருள்களும் உளவாதலின் `இன்ன தன்மைய` என்றார். நெஞ்சு தயங்க - ஆரூரர்பால் சென்ற நெஞ்சு அவ்விடத்தே தயங்கி நிற்ப; மீளாது நிற்ப என்றவாறு.

கனங்கொண்ட மணிகண்டர் கழல்வணங்கிக்
கணவனைமுன் பெறுவாள் போல
இனங்கொண்ட சேடியர்கள் புடைசூழ
எய்து பெருங் காதலோடும்
தனங்கொண்டு தளர்மருங்குற் பரவையும்வன்
றொண்டர்பால் தனித்துச் சென்ற
மனங்கொண்டு வரும்பெரிய மயல்கொண்டு
தன்மணிமா ளிகையைச் சார்ந்தாள். **#315**

மேகத்தின் நிறத்தைக் கொண்ட நீலமணி போலும் கழுத்தினையுடைய சிவபெருமானின் திருவடிகளை வணங்கித் தாம் விரும்பும் கணவனாராகிய நம்பியாரூரரை இனிப் பெறுவார் போல, இனமாகிய தோழியர்கள் சூழ்ந்துவர, மார்பகங்களால் தளர்வடைந்த இடையினையுடைய பரவையாரும், பொருந்திய பெருவிருப் பொடும் ஆரூரரிடத்துத் தனித்துச் சென்ற மனத்தை மீளவும் வலிந்து கொண்டு, விருப்பின்வழிவந்த மயக்கத்தையும் தாங்கிக்கொண்டு, தமது அழகிய திருமாளிகையைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

கனம் - மேகம். இனிக்கனங்கொண்ட மணி என மணிக்கு அடையாக்கித் திரண்டமணி என்றலும் ஒன்று. மணி மாளிகை - மணிகளால் இழைக்கப்பெற்ற மாளிகை: அழகிய மாளிகையும் ஆம்.

சீறடிமேல் நூபுரங்கள் அறிந்தனபோல்
சிறிதளவே யொலிப்ப முன்னர்
வேறொருவ ருடன் பேசாள் மெல்லவடி
யொதுங்கிமா ளிகையின் மேலால்
ஏறிமர கதத்தூணத் திலங்குமணி
வேதிகையில் நலங்கொள் பொற்கால்
மாறின்மலர்ச் சேக்கைமிசை மணிநிலா
முன்றின்மருங் கிருந்தாள் வந்து. **#316**

தம் மாளிகையை அடைந்த பரவையார், தம் சிறிய அடிகளில் அணிந்த சிலம்புகள், அவர் தம் உள்ளத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அறிந்து கொண்டாற் போல், அதற்குத் தக்கவாறு மென் மையாக ஒலிக்க, தம் முன்னர் நிற்கும் எவருடனும் பேசாதவராய், மென்மையாக அடிமேல்

அடிவைத்துச் சென்று மாளிகையின் மேல் ஏறிப் போய், நிலவின் பயன் கொள்ளும் அவ்விடத்து, மரகதத்தால் ஆய தூண்களுடன் விளங்கும் அழகிய திண்ணை மீதுள்ள ஒப்பற்ற மலர்களால் ஆய படுக்கையில் அமர்ந்து இருந்தார்.

விளக்கவுரை

நூபுரம் - சிலம்பு, வேதிகை -திண்ணை. மலர்ச்சேக்கை மலர்களால் ஆய படுக்கை. நிலாமுன்றில் - நிலவின் பயன்கொள்ளும் இடம். இது மேற்பகுதி (கூரை) இன்றி விளங்கும்.

அவ்வளவில் அருகிருந்த சேடிதனை
முகநோக்கி ஆரூர் ஆண்ட
மைவிரவு கண்டரைநாம் வணங்கப்போம்
மறுகெதிர்வந் தவரா ரென்ன
இவ்வுலகி லந்தணரா யிருவர்தே
டொருவர்தா மெதிர்நின் றாண்ட
சைவமுதல் திருத்தொண்டர் தம்பிரான்
தோழனார் நம்பி யென்றாள். **#317**

அது பொழுது தம் அருகில் இருந்த தோழியைப் பார்த்துத் திருவாரூரை ஆண்டு வரும் கருமை பொருந்திய கழுத் தினையுடைய தியாகராசப் பெருமானை நாம் வணங்கச் சென்ற பொழுது, நம் எதிரில் வந்தார் யாவர்? எனப் பரவையார் கேட்க, அவள், இவ்வுலகில் மாலும் அயனும் காண இயலாத அழகிய அருளு டையரான இறைவர், அந்தணர் வடிவு கொண்டு பகைமைகொண்டவர் போலக் காட்டி, வழக்கிட்டு ஆட்கொள்ளப் பெற்றவரும், சைவத் திறத்தில் நின்றொழுகும் முதல் திருத்தொண்டருமான தம்பிரான் தோழராய ஆளுடைய நம்பிகள் ஆவர் என்று கூறினாள்.

விளக்கவுரை

சேடி - தோழி. எதிர் நின்று - பகைமை கொண் டவர்போல் நின்று. இறைவன், ஆளுடைய நம்பிகளைத் தம் அடியவன் என்று கூறிய அளவில், அஃது அவருக்குப் பகைமையாகத் தோன்றியது. எனினும் அஃதே அவருக்குப் பின் பெரும் பேறாயிற்று. ஆதலின் `எதிர் நின்று` என்றார். சைவப் பெருநெறிக்கு அடித்தளமாக விளங்கும் வழிபாட்டுநெறிகள் மூன்றாம். அவை குருவழிபாடு, சிவலிங்க வழிபாடு, அடியவர்வழிபாடு என்பனவாம். இவற்றுள் அடியவர் வழிபாட்டிற்கு அடித்தளமாய் நின்று விளங்கும் திருத் தொண்டத் தொகையை அருளிய பெருமை ஆளுடைய நம்பிகளுக்கு உரியதாதலின் அவரைச் `சைவமுதல் திருத்தொண்டர்` என்றார்.

என்றவுரை கேட்டலுமே எம்பிரான்
தமரேயோ வென்னா முன்னம்
வன்றொண்டர் பால்வைத்த மனக்காதல்
அளவின்றி வளர்ந்து பொங்க
நின்றநிறை நாண்முதலாங் குணங்களுடன்
நீங்கவுயி ரொன்றுந் தாங்கி
மின்றயங்கு நுண்ணிடையாள் வெவ்வுயிர்த்து
மெல்லணைமேல் வீழ்ந்த போது. **#318**

என்று தோழிகூறிய சொற்களைக் கேட்டதும் பரவையார், எம் இறைவராகிய தியாகேசருடைய தோழரோ என்று கூறி, அச் சொற்கள் வாயிலிருந்து வெளிப்படுதற்கு முன், வன்றொண் டரிடத்து மனத்தகத்துக் கொண்ட காதல் உணர்வு கரை கடந்து மேல் எழுந்ததால், முன்பு தம்மிடத்து இயல்பாகவே நிலைபெற்று நின்ற நிறை, நாண் முதலிய குணங்களும் ஒரு சேர நீங்க, உயிர் ஒன்றை மட்டும் தாங்கிய வண்ணம், மின்னலைப் போல அசைகின்ற நுண்ணிய இடையையுடைய அவர், பெருமூச்செறிந்து மென்மையான மலர்ப் படுக்கையில் வீழ்ந்தார். அப்பொழுது.

விளக்கவுரை

நிறை - மறை புலப்படாமல் நிறுக்கும் நெஞ்சுடைமை: `நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை` *(கலி. நெய். 16)* என்னும் கலித்தொகையும்.

ஆரநறுஞ் சேறாட்டி அரும்பனிநீர்
நறுந்திவலை யருகு வீசி
ஈரவிளந் தளிர்க்குளிரி படுத்துமட
வார்செய்த விவையு மெல்லாம்
பேரழலில் நெய்சொரிந்தால் ஒத்தனமற்
றதன்மீது சமிதை யென்ன
மாரனுந்தன் பெருஞ்சிலையின் வலிகாட்டி
மலர்வாளி சொரிந்தான் வந்து. **#319**

மணம் கமழும் சந்தனக் குழம்பைப் பூசியும், அரிய நறுமணமுடைய பனிநீரை மழைபோலச் சிறு துளிகளாகப் பக் கங்களில் எல்லாம் தெளித்தும், குளிர்ந்த குளிரியின் இளந் தளிர்களை இட்டும், இவ்வாறாகத் தோழியர் செய்த செயல்களும் இவை போன்ற பிற மகிழ்ச்சிக்குரிய செயல்களும், முன்னமேயே நெருப்பாய் மூண்ட அழல் மேல் அதனை வளர்க்கும் நெய்யைச் சொரிந்தது போல் ஆயின. அதன் மேலும் அந் நெருப்பை வளர்க்க ஆல் முதலிய சிறு குச்சிகளை இடுவது போல, மன்மதனும் வந்து, தன் ஒப்பற்ற வில் வலிமையைக் காட்டிப்

பூவாகிய அம்புகளை மேன்மேலும் எய்தான்.

விளக்கவுரை

ஆரம் - சந்தனம். குளிரி - நீர்க் குளிரி என்னும் ஒரு வகைக் கொடி. அதனுடைய இளம் தளிர்களைப் பரப்புவது உடல் வெப்பத்தை ஆற்றவாம். இச்செடி குளிர்ச்சி செய்யும் காரணத்தால் குளிரி எனப் பெயர்பெற்றது. இவ்வாறு தோழியர் செய்த செயல்கள் எல்லாம் எரியும் நெருப்பில் நெய் சொரிந்தாற்போல் இருந்தன. எனவே அவ்வெப்பம் மேலும் மிகுவதாயிற்று என்பது பொருளாம். `நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால்` *(குறள், 1148)* என்னும் திருக்குறளும். சமிதை - வேள்வித்தீ வளர்க்க இடும் ஆல் முதலாய மரத்துணுக்குகள். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மலரமளித் துயிலாற்றாள் வருந்தென்றல்
மருங்காற்றாள் மங்குல் வானில்
நிலவுமிழுந் தழலாற்றாள் நிறையாற்றும்
பொறையாற்றாள் நீர்மை யோடுங்
கலவமயி லெனவெழுந்து கருங்குழலின்
பரமாற்றாக் கைய ளாகி
இலவவிதழ்ச் செந்துவர்வாய் நெகிழ்ந்தாற்றா
மையின்வறிதே யின்ன சொன்னாள். **#320**

நிலா முற்றத்தின் கீழுள்ள மலர்ப்படுக்கையில் விழுந்த பரவையார், உறங்காராயினார். மெல்லெனத் தம் மீது வீசும் தென்றற் காற்று படுதலையும் பொறாதவராயினார். மேகங்கள் தவழும் வானத்தினின்றும் ஒளிவீசும் நிலவின் கதிர்களும் தம்மளவில் வெப்பம் தருதலின் அதனையும் பொறுத்துக் கொள்ளாதவராயினார். தம் பெண்மைக் குணமாய நிறையைக் கொண்டு செலுத்தவல்ல பொறையாற்றலையும், தாங்க இயலாதவராயினார். இவ்வாறாக அவர் சிறிய தோகைகளை உடையை மயிலைப் போல் எழுந்து, தம்கரிய கூந்தலின் பளுவையும் தாங்கமுடியாதவராயினார். இந் நிலையில் இலவ மலரனைய சிவந்தவாய் நெகிழ்ந்து பொறுக்க இயலாத வருத்தத்தால் சில சொல்வாராயினார்.

விளக்கவுரை

`மலர்ப் படுக்கையும், தென்றலும், நிலவும் இன்பம் தரு வனவே. எனினும் ஆளுடைய நம்பிகளை நினைந்த காம வெப்பத் தால் அவை துன்பம் தருவன வாயின`. கலவமயில் - தோகைகளை யுடைய மயில். பரம் - பளு. கையளாகி - தன்மையையுடையளாகி. வறிது - சிறிது.

கந்தங் கமழ்மென் குழலீர் இதுவென்

கலைவாண் மதியங் கனல்வா னெனையிச்
சந்தின் தழலைப் பனிநீ ரளவித்
தடவுங் கொடியீர் தவிரீர் தவிரீர்
வந்திங் குலவுந் நிலவும் விரையார்
மலயா னிலமும் எரியாய் வருமால்
அந்தண் புனலும் அரவும் விரவுஞ்
சடையா னருள்பெற் றுடையார் அருளார். #321

`நறுமணம் பொருந்திய மென்மையான கூந் தலையுடைய தோழியர்களே! இது என்ன வியப்பு? அமிர்தகலை களையுடைய ஒளிபொருந்திய சந்திரனோ என்னைச் சுடுகின்றான். இச்சந்தனக் குழம்பைப் பனிநீருடன் கலந்து என் மீது தடவுகின்ற கொடியவர்களே! இச்செயலைத் தவிரீர்! தவிரீர்! இங்கு வந்து உலவி நிற்கும் நறுமணம்பொருந்திய தென்றற் காற்றோ நெருப்பாய் வீசுகிறது. அழகிய குளிர்ந்த கங்கையையும் பாம்பையும் ஒருங்கே வைத்துள்ள சடையையுடைய சிவபெருமானின் அருளைப் பெற்றுநிற்கும் ஆரூரரோ எனக்கு அருள்செய்கின்றார் அல்லர்` என்றவாறு.

விளக்கவுரை

சந்து - சந்தனம். கொடியீர் - கொடிபோல்பவர்களே! என்றுரைத்தல் இவ்விடத்திற்குப் பொருந்துவதன்றாம். மலயானிலம்- தென்றற் காற்று.

புலரும் படியன் றிரவென் னளவும்
பொறையும் நிறையும் இறையும் தரியா
உலரும் தனமும் மனமும் வினையேன்
ஒருவேன் அளவோ பெருவாழ் வுரையீர்
பலரும் புரியுந் துயர்தா னிதுவோ
படைமன் மதனார் புடைநின் றகலார்
அலரும் நிலவு மலரு முடியார்
அருள்பெற் றுடையா ரவரோ வறியார். #322

என்னைப் பொறுத்த அளவில் இவ்விரவும் விடிவதாயில்லை. இக்காம வெப்பத்தைத் தாங்குதற்குரிய பொறையும், பிறர் அறியாமல் காத்தற்குரிய நிறையும் சிறிதும் என்னிடத்தில் இல்லை. மார்பகங்களும் மனமும் உலர்ந்தன. இத்துணைப் பெருவாழ்வுகளும் தீவினையாலாய என் ஒருத்தி அளவிலா நிகழ வேண்டும்? கூறுங்கள்! பலராக இருந்து தம்முள் கூடிஇருந்து இவ்வாறு துன்பம் செய்வதா? மன்மதனாரும் என் அருகு இருந்து தம் படையை ஓயாது செலுத்தி வருகின்றார். கொன்றையும், நிலவும், கமழும் திருச்சடையையுடைய சிவபெருமானின் திருவருளைப் பெற்று வாழும் ஆரூரரோ யான் படும் துன்பங்களை அறியாதவராயுள்ளார்!

விளக்கவுரை

இரவும் புலரவில்லை என்றது, `காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன், யாமத்தும் யானே உளேன்` *(குறள், 1167)* என்னும் திருக்குறளை நினைவு கூர வைக்கும். பெருவாழ்வு என்பது ஈண்டுப் பிரிவாற்றாத துன்பநிலைகளைக் குறித்தன. பலரும் புரியும் துயர் - நிலவும், தென்றலும், சந்திரனும், மன்மதனும் ஆகப் பலரும் புரியும் துயர். அலர் - இடம் நோக்கிக் கொன்றையைக் குறித்தது.

தேருங் கொடியு மிடையு மறுகில்
திருவா ரூரீர் நீரே யல்லால்
ஆரென் துயர மறிவா ரடிகேள்
அடியே னயரும் படியோ விதுதான்
நீரும் பிறையும் பொறிவா ளரவின்
நிரையுந் நிரைவெண் டலையின் புடையே
ஊருஞ் சடையீர் விடைமேல் வருவீர்
உமதன் பிலர்போல் யானோ வுறுவேன். **#323**

`தேர்களும் கொடிகளுமாகச் செறிந்து நிற்கும் வீதிகளையுடைய திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் இறைவரே! நும்மையன்றி என் துன்பங்களை அறியவல்லார் யாவர்? அடிகளே! அடியேன் வருந்தும் அளவும் இவ்வளவினதோ! கங்கையும், சந்தி ரனும், புள்ளிகளையுடைய நீண்ட பாம்புகளும், நிரல் பட அமைந்து நிற்கும் வெண்மையான தலைமாலையின் பக்கங்களில் ஊர்தற்கு இடனாய சடையையுடையவரே! ஆனேற்றின் மீது எழுந்தருள் பவரே! உம்மிடம் அன்பிலாதவர் போல் யானோ இத்துன்பத்தை அடைவது?

விளக்கவுரை

மிடையும் - நெருங்கிநிற்கும். வெண்மையான தலை கள் நிறைந்த மாலையை உடைமையின் அவற்றினூடே பிறையும் பாம்பும் ஊர்வனவாயின.

என்றின் னனவே பலவும் புகலும்
இருளா ரளகச் சுருளோ தியையும்
வன்றொண் டரையும் படிமேல் வரமுன்பு
அருள்வா னருளும் வகையார் நினைவார்
சென்றும் பர்களும் பணியுஞ் செல்வத்
திருவா ரூர்வாழ் பெருமா னடிகள்
அன்றங் கவர்மன் றலைநீர் செயுமென்று
அடியா ரறியும் படியா லருளி. **#324**

என்று இவ்வாறாய சொற்களை மேலும் மேலும் சொல்லுகின்ற கருமை

பொருந்திய சுருண்ட கூந்தலையுடைய பரவை யாரையும் நம்பியாரூரரையும் இந்நிலவுலகில் வருமாறு அருளிச் செய்த சிவபெருமான், இது பொழுது அருள்செய்யும் வகையை யாரே நினைய வல்லார்? தேவர்களும் வந்து தொழுகின்ற செல்வம் நிறைந்த திருவாரூரில் வாழ்கின்ற தியாகராசப் பெருமான் அன்றைய நாளி லேயே அவ்விருவர்க்கும் திருமணத்தைச் செய்து வைப்பீர் என அவ் வூரின்கண் வாழும் அடியவர்களுக்குக் கனவில் அருளிச்செய்து.

விளக்கவுரை

படிமேல்வர - இந்நிலவுலகில் தோன்றுமாறு. நம்பியா ரூரரும் பரவையாரும் தத்தம் உள்ளத்தில் கொண்டிருந்த பிரிவாற் றாமை பெரிதாக வருத்தக் கண்ட இறைவன், அன்றே திருமணம் செய்யுமாறு அருளிச் செய்த பான்மையால், `இறைவன் அருளும் அருளை யாரறிவார்? என வியந்து, பின் அவர் அருளிய அருளை ஆசிரியர் விரித்துரைப்பாராயினார். அடியார் அறியும் படியால் அருளி எனவே, கனவின்கண் அருளியமை விளங்குகின்றது. மன்றல் - திருமணம்.

மன்னும் புகழ்நா வலர்கோன் மகிழ
மங்கை பரவை தன்னைத் தந்தோம்
இன்னவ் வகைநம் மடியா ரறியும்
படியே யுரைசெய் தனமென் றருளிப்
பொன்னின் புரிபுன் சடையன் விடையன்
பொருமா கரியி னுரிவை புனைவான்
அன்னந் நடையாள் பரவைக் கணியது
ஆரூ ரன்பால் மணமென் றருள. **#325**

நிலை பெற்ற புகழையுடைய நாவலூரரும் மகிழுமாறு, மங்கை பரவையை உனக்கு மனையாளாகத் தந்தோம்; இவ்வாறு அருள் செய்ததைத் திருவாரூரில் வாழும் நம் அடியவர்கள் அறியுமாறும் அருள் செய்தனம்; எனக் கூறிய பின்பு, பொன்னை யொத்த முறுக்குண்ட மெல்லிய சடையையும், விடையையும் உடைய வரும் போரில் வெல்லவல்ல கரிய யானையின் தோலைப் போர்த்தி யிருப்பவருமான தியாகேசப் பெருமான், அன்னத்தையொத்த நடையையுடைய பரவையாரது கனவிலும் தோன்றி, ஆருரனுக்கும் நினக்கும் விரைவில் மணம் நிகழும், என்று அருளிச் செய்ய.

விளக்கவுரை

மன்னும் - நிலைபெற்ற.

காமத் துயரில் கவல்வார் நெஞ்சிற்
கரையில் லிருளுங் கங்குற் கழிபோம்

யாமத் திருளும் புலரக் கதிரோன்
எழுகா லையில்வந் தடியார் கூடிச்
சேமத் துணையா மவர்பே ரருளைத்
தொழுதே திருநா வலர்கோன் மகிழத்
தாமக் குழலாள் பரவை வதுவை
தகுநீர் மையினால் நிகழச் செய்தார். **#326**

காமத் துன்பத்தால் வருந்தி நின்ற ஆரூரர், பரவையார் ஆகிய இருவர் நெஞ்சிலும் நிறைந்திருந்த ஆற்றாமையா கிய இருளும், இரவு கழிதற்கென இடையே சென்று கொண்டிருக்கும் யாமங்களின் இருளும் நீங்கக், கதிரவன் எழுந்த எல்லையில், ஆரூரில் உள்ள அடியவர்கள் அனைவரும் தமக்கு உற்றவிடத்து உதவும் அருள் வைப்பாக நின்றருளும் பெருமானை வாழ்த்தி, திருநாவலூர்த் தலைவ ராகிய ஆரூரர் மகிழுமாறு, மாலை அணிந்த கூந்தலையுடைய பரவை யாரை உரிய சிறப்போடு திருமணம் செய்வித்து மகிழ்ந்தார்கள்.

விளக்கவுரை

கரையில் இருள் - கரைகாணமுடியாத இருள்: இருவர் மாட்டும் அமைந்திருந்த ஆற்றாமையை இருள் என உருவகித்தார். `மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற பொங்கிய இருள்` *(தி.12* பாயி. பா.*10),* `நீறணிந்தார் அகத்திருளும் நிறைகங்குல் புறத்திருளும் மாறவரும் திருப்பள்ளி யெழுச்சி` *(தி.12* பு.*21* பா.*68)* என ஆசிரியர் இதற்கு முன்னும் பின்னும் அறியாமையை இருள் என உருவகித்திருக்கும் திறமும் நினைவுகூர்தற்குரியது. கங்குல் - இரவு. இது ஒவ்வொரு யாமமாகக் கழிய இருள் நீங்குகின்றது. ஆதலின் `கங்குல் கழிபோம் யாமத்து இருளும் புலர` என்றார். கழிபோம்-கழிந்துசெல்லுகின்ற. சேமத்துணை - சேர்த்து வைத்திருக்கும் துணை: அஃதாவது நெஞ்சில் சேமித்து வைத்திருக்கும் துணை: பாதுகாப்பான துணை: அத்துணை இறைவன் ஒருவனேயாவன். தாமம் - மாலை.

தென்னாவ லூர்மன்னன்
தேவர்பிரான் திருவருளால்
மின்னாருங் கொடிமருங்குற்
பரவையெனு மெல்லியல்தன்
பொன்னாரும் முலைஓங்கல்
புணர்குவடே சார்வாகப்
பன்னாளும் பயில்யோக
பரம்பரையின் விரும்பினார். **#327**

அழகிய திருநாவலூரின் மன்னராக விளங்கும் ஆரூரர், தியாகேசப் பெருமானின் திருவருளால் மின்னலையும் கொடியையும் ஒத்த

இடையினையுடைய பரவையார் என்னும் மெல்லியலாரின், பொன் அணிகலன்களையுடைய தனங்களாகிய இருமலைகளின் நெருங்கிய சிகரங்களையே அரணாகக் கொண்டு பலநாள்களும் பழகும்யோகத்தை, அதற்கு உரித்தான வழிவழியாகச் சொல்லப் பெறும் அறத்தின் வழிநின்று துய்த்து மகிழ்வாராயினார்.

விளக்கவுரை

மின்னல், இடையின் அசைவிற்கும், கொடி அதன் மென்மைக்கும் உவமையாயின. யோகம் - கூடுவது. மனத்தை இறைவன்பால் கூட்டவும் பின் அதனை விட்டு நீங்காது காக்கவும் கொள்ளும் பயிற்சியே யோக மாகும். இதனைச் செய்தற்கு உலகியல் சூழலினின்றும் நீங்கி மலைச் சிகரங்களைச் சார்ந்து பயில்வர். அப் பொழுது தான் அது விரைவாகவும் நிறைவாகவும் கைகூடும். இவ் வாறே நம் ஆரூரரும் பரவையாரை மணந்திருந்தும், உலகியலில் காணும் இன்பவழியன்றி, அருளியல்வழிக்காணும் இன்பமாம் இவ் யோகப் பயிற்சியைச் செய்தார் என்பார், இங்ஙனம் கூறினார்.

ஓங்கல் - மலை. குவடு - சிகரங்கள். இங்குப் பரவையாரின் தனங்களாகிய மலைகளின் நெருங்கிய சிகரங்களையே இடனாகக் கொண்டு ஆரூரர் யோகம் செய்தார் என்றார். இறைவன் திருவருளி லேயே அழுந்திநின்று அவன் செயலாகவே அனைத்தையும் கண்டுநிற் பார்க்கு நாம் காணும் உலகியல் இன்பங்களும் இறைவனின் அருள் வழிவரும் இன்பங்களாகவே தோன்றும். அம்மனநிலையால் அவர் அநுபவிக்கும் உலகியல் இன்பங்கள் நம்போன்று வினை வழிப்படு வனவும் ஆகா. அந்நிலையில் அவர்க்கு வரக் கடவனவான நல்வினை தீவினைகளும் இலவாம். இந்நிலையிலேயே இவ்வநுபவமும் சுந்தர ருக்கு நிகழ்ந்தது. இறைவனால் தடுத்தாட் கொள்ளப் பெற்றதும் ஆரூரர் இறைவனை வேண்டிக் கொண்டது தவநெறியேயாகும். அந்நெறியினை அவருக்கு வழங்கியமை புலனாகவே சித்தவட மடத்தில் ஆரூரருக்கு இறைவன் தன் திருவடியையும் சூட்டி யருளினன். ஆரூரரின் மனமும் அந்நிலையிலேயே இருந்தது என்பதை,

ஓர்ந்தனன் ஒர்ந்தனன் உள்ளத்துள் ளேநின்ற ஒண்பொருள்
சேர்ந்தனன் சேர்ந்தனன் சென்று திருவொற்றி யூர்புக்குச்
சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி மென்றோள் தடமுலை
ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத் தூர்ஐயன் அருளதே.
தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள் நாள்தொறும்
நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயொர் நால்விரல்
மாடுவன் மாடுவன் வன்கை பிடித்து மகிழ்ந்துளே
ஆடுவன் ஆடுவன் ஆமாத் தூர்எம் மடிகளே. -*தி.7 ப.45 பா.4, 9*

`ஊனை உயிர்வெருட்டி ஒள்ளி யானை நினைந்திருந்தேன்` *(தி.7 ப.100 பா.2)* என்பனவாகிய அவர்தம் திருவாக்குகளே விளக்கி நிற்பதும் காணலாம்.
`பெற்றசிற் றின்பமே பேரின்ப மாம் அங்கே
முற்ற வரும் பரிசு உந்தீபற
முளையாது மாயையென் றுந்தீபற`
எனவரும் திருவுந்தியார் *(பா.33)* கூற்றும் இவ்வுண்மையை விளக்கும்.

தன்னையா ளுடையபிரான்
சரணார விந்தமலர்
சென்னியிலுஞ் சிந்தையிலும்
மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தொடைமாலை
பலசாத்திப் பரவையெனும்
மின்னிடையா ளுடன்கூடி
விளையாடிச் செல்கின்றார். **#328**

நாவலூரர் தம்மை ஆளாகவுடைய சிவபெரு மானின் திருவடித் தாமரைகளைத் தலைக்கு அணியாகச் சூடியும், மனத்தில் நினைந்தும், திருப்பதிகங்களாக அமைந்த தமிழ்ப் பாமா லைகள் பலவற்றை அருளியும், பரவையாருடன் கூடி விளையாடியும் வருவாராயினர்.

விளக்கவுரை

நாவலூரர் என்னும் எழுவாய், முன்னைய பாட்டி னின்றும் வருவிக்கப்பட்டது.
சரண அரவிந்தம் = சரணாரவிந்தம். திருவடித் தாமரைகள். இவற்றைச் சென்னியில் சூடுதல்; தலையின்கண் வைத்துச் சிந்திப் பதாகும். `சேவடிக்கண் நம் சென்னிமன்னித் திகழுமே!` *(தி.8 ப.42 பா.5)* என்னும் திருவாசகமும். இறைவன் திருவடிகளைத் தலையிலும் மனத்திலும் கொண்டு வாழ்த்தியும், இறைவனுக்கெனப் பல பாமாலை களைச் சூட்டியும் வழிபாடாற்றிவரும் நிலையிலேயே பரவையாருட னும் கூடிவிளையாடினார். இவ்வாற்றான் அவர்தம் யோக நிலை இங்கும் அறியப்படுகின்றது. இது பொழுது பாடிய பதிகங்கள் எவையும் கிடைத்தில.

மாதுடன் கூட வைகி
மாளிகை மருங்கு சோலைப்
போதலர் வாவி மாடு
செய்குன்றின் புடையோர் தெற்றிச்
சீதளத் தரளப் பந்தர்ச்
செழுந்தவி சிழிந்து தங்கள்

நாதர்பூங் கோயில் நண்ணிக்
கும்பிடும் விருப்பால் நம்பி. **#329**

பரவையாருடன் வாழ்ந்திருந்த நம்பியாரூரர் (ஒருநாள்) தம் மாளிகையின் அருகில் இருக்கும் சோலையில், நீர் மலர்கள் நிறைந்து கிடக்கும் குளங்கள் இருக்கும் பக்க அமைப்பில் உள்ள செய்குன்றின் பக்கத்தில், ஒரு திண்ணையில், குளிர்ந்த முத்து விதானத்தின் கீழ் அமைந்துள்ள அழகியதோர் இருக்கையிலிருந்து இறங்கி, தம் தலைவராகிய இறைவன் எழுந்தருளியிருக்கும் பூங் கோயிலை அடைந்து வழிபடும் விருப்பினராய்,

விளக்கவுரை

ஆரூரர்தம் மாளிகை வளமிக்க குளங்களும் செய்குன்று களும் சூழ அமைந்திருந்தமை, இதனால் புலனாகும். அங்கு நாளும் சென்று பரவையாருடன் மகிழ்ந்திருப்பர். அவ்வாறு இருக்கும் நாள்களில் ஒருநாள் திருக்கோவிலுக்குச் சென்று வழிபடும் நினைவு மீதூரப் புறப்படுவாராயினர்.

அந்தரத் தமரர் போற்றும்
அணிகிள ராடை சாத்திச்
சந்தனத் தளறு தோய்ந்த
குங்குமக் கலவை சாத்திச்
சுந்தரச் சுழியஞ் சாத்திச்
சுடர்மணிக் கலன்கள் சாத்தி
இந்திரத் திருவின் மேலாம்
எழில்பெற விளங்கித் தோன்ற. **#330**

மேலுலகத்திலுள்ள வானவர்களும் போற்றும் படியான தக்க அழகு பொருந்திய ஆடை அணிந்து, குங்குமம் கலந்த சந்தனக் குழம்பை உடம்பில் அணிந்து, அழகிய சுழியம் என்னும் தலை முடியை அணிந்து, ஒளிபொருந்திய பிற அணிகலன்களையும் அணிந்து, இந்திரச் செல்வத்தினும் மேலாய அழகு பொருந்தத் தோன்றி,

விளக்கவுரை

சுழியம் - ஆண்மக்கள் தலைக்கு அணியும் முடி *(கிரீடம்)* வகைகளுள் ஒன்று.

கையினிற் புனைபொற் கோலும்
9; காதினில் இலங்கு தோடும்
மெய்யினில் துவளு நூலும்
நெற்றியின் விளங்கு நீறும்
ஐயனுக் கழகி தாமென்

றாயிழை மகளிர் போற்றச்
சைவமெய்த் திருவின் கோலந்
தழைப்பவீ தியினைச் சார்ந்தார். #331

கையினில் அழகிய பொற்கோலும், செவிகளில் விளக்கம் பொருந்திய தோடுகளும், மார்பினில் அசையும் பூணூலும், நெற்றியில் விளங்குகின்ற திருநீறும் கண்ட பெண்கள், இத்தலைவர்க்கு இக்கோலம் மிகவும் அழகு ஊட்டுவதாகும் என்று பாராட்ட, சைவத் தின் மெய்ம்மையான அழகிய கோலம் தழையத் திருவீதியினை அடைந்தார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின. கையினில் கோலும், காதுகளில் கவச குண்டலங்களும் இருப்பது அரசியல் திருவாம். மார்பினில் நூலும் நெற்றியில் நீறும் இருப்பன வைதிகத் திருவாம்.

நாவலூர் வந்த சைவ
நற்றவக் களிறே யென்றும்
மேவலர் புரங்கள் செற்ற
விடையவர்க் கன்ப வென்றுந்
தாவில்சீர்ப் பெருமை யாரூர்
மறையவர் தலைவ வென்றும்
மேவினர் இரண்டுபாலும்
வேறுவே றாயம் போற்ற. #332

மேற்கூறிய இருவகைத் திருவினோடும், வீதியினை அடைந்த ஆரூரரைத், திருநாவலூரில் தோன்றிய சைவ சமயத்தின் நற்றவப் பயனாய் விளங்கும் ஆண் யானையே என்றும், திரிபுரம் எரித்த பெருமானின் அன்பரே என்றும், குற்றமற்ற சீரிய பெருமை பொருந்திய திருவாரூரில் வாழும் மறையவர் தலைவரே!`` என்றும் இருமருங்கும் தம்மொடு சூழ்ந்து வரும் மகளிர் போற்றவும்,

விளக்கவுரை

ஆயம் - மகளிர் கூட்டம்.

கைக்கடா குரங்கு கோழி
சிவல்கவு தாரி பற்றிப்
பக்கமுன் போது வார்கள்
பயில்மொழி பயிற்றிச் செல்ல
மிக்கபூம் பிடகை கொள்வோர்
விரையடைப் பையோர் சூழ
மைக்கருங் கண்ணி னார்கள்
மறுகநீண் மறுகில் வந்தார். #333

கையில் பிடித்துப் பழக்கும் கடா, குரங்கு, கோழி, சிவல், கௌதாரி ஆகிய இவற்றை இருமருங்கிலும், இவருக்கு முன்னேயும் பிடித்துக் கொண்டு செல்பவர்கள் அப்பறவைகளும் விலங்குகளும் பழகிய சொற்களைச் சொல்லிக் கொண்டு போகவும், மலர்கள் நிறைந்த மலர்க்கூடைகளைக் கொண்டு செல்பவரும், நறுமணம் பொருந்திய பொருள்களுடன் வெற்றிலை முதலியவற்றைக் கொண்டிருக்கும் அடைப்பையை எடுத்துக் கொண்டு செல்பவர்களும் தம்மைச் சூழ்ந்து வரவும், அப்பெருமகனாரைக் கண்ட மையணிந்த அகன்ற கண்களையுடைய பெண்கள் மயங்கவும் நீண்ட தெருவழியாக ஆரூரர் வந்தார்.

விளக்கவுரை

கைக்கடா - பழக்கப்பட்ட ஆட்டுக்கடா, சிவல் - கௌ தாரியின் இனம். பிடகை - கூடை. அடைப்பை - வெற்றிலை பாக்கு முதலியவற்றைக் கொண்டிருக்கும் கலம். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

பொலங்கலப் புரவி பண்ணிப்
போதுவார் பின்பு போத
இலங்கொளி வலயப் பொற்றோள்
இடையிடை மிடைந்து தொங்கல்
நலங்கிளர் நீழற் சூழ
நான்மறை முனிவ ரோடும்
அலங்கலம் தோளி னான்வந்
தணைந்தனன் அண்ணல் கோயில். **#334**

அழகிய அணிகள் பூண்ட ஆடல் குதிரைகளை ஆடச் செய்து வருபவர்கள் முன்பு செல்லவும், அவர்களின் பின்பு மிகவும் ஒளி வீசும் தோள் வளைகளை அணிந்த தோள்களின் மீது மயிற்பீலிகளை இடையீடின்றி நெருங்கக்கட்டி இருப்பதால் அவற்றின் நிழல் சூழவும், மாலை அணிந்த அழகிய தோள்களையுடைய ஆரூரர் மறையோதும் முனிவர்களுடனே வந்து தியாகேசுவரரின் திருக் கோயிலை அடைந்தார்.

விளக்கவுரை

பொலங்கலம் - அழகிய அணிகள். புரவி - குதிரை. இத்தகைய குதிரைகளைப் `பண்ணிப் போதுவார்` என்பதால், இக்குதிரைகள் உண்மைக் குதிரைகள் அல்ல என்பது விளங்கும். இவற்றைப் பொய்க்காற் குதிரைகள் என்பர். வலயம் - தோள்வளை. தோள்களில் மயிற்பீலிக் குஞ்சங்களை அணியின் பித்தம் மிகாது ஆதலின் `நலம்கிளர் நீழல்` என்றார் - அலங்கல் - மாலை. போத - மிகவும்.

கண்ணுதல் கோயில் தேவா

சிரியனாங் காவ ணத்துள்
விண்ணவ ரொழிய மண்மேன்
மிக்கசீ ரடியார் கூடி
எண்ணிலார் இருந்த போதில்
இவர்க்கியா னடியான்ஆகப்
பண்ணுநா ளெந்நா ளென்று
பரமர்தாள் பரவிச் சென்றார். **#335**

(திருக்கோயிலை அடைந்த நம்பியாரூரர்) நெற்றிக்கண்ணையுடைய இறைவனின் பூங்கோயிலின் முன் உள்ள தேவாசிரியன் மண்டபத்தின் வாயிலில் கூடியிருக்கும் விண்ணவர்கள் ஒருபுறம் நிற்க, இந்நிலவுலகில் தோன்றிச் சீர்மை மிக விளங்கும் அடிய வர்கள் எண்ணற்றவர்களாய்க் குழுமி இருந்த பொழுது, இவர்கட் கெல்லாம் என்னை அடியவன் ஆகுமாறு செய்கின்றநாள் எந்நாளோ எனும் கருத்துடன், இறைவனின் திருவடிகளை வழிபட்ட வண்ணம் செல்வாராயினார்.

விளக்கவுரை

தேவாசிரியன் - தேவர்கள் இறைவழிபாட்டிற்கெனக் கூடியிருக்கும் மண்டபம்.

இங்கு மண்ணுலகத்தவர்களன்றி விண்ணுல கத்தவரும் தங்கி வழிபாடாற்றி வருவர். ஒழிய - ஒரு புறம் நிற்க.

அடியவர்க் கடிய னாவேன்
என்னும்ஆ தரவு கூரக்
கொடிநெடுங் கொற்ற வாயில்
பணிந்துகை குவித்துப் புக்கார்
கடிகொள்பூங் கொன்றை வேய்ந்தா
ரவர்க்கெதிர் காணக் காட்டும்
படியெதிர் தோன்றி நிற்கப்
பாதங்கள் பணிந்து பூண்டு. **#336**

இவ்வடியவர்களுக்கு அடியனாவேன் என்னும் அன்பு மீதூரக் கொடிகளையுடைய நெடிய வெற்றி பொருந்திய உள்வாயிலிலே பணிந்து, கைகளைத் தலைமேல் வைத்துக் கூப்பிய வண்ணம், திருக்கோயிலின் உள்ளே நம்பியாரூரர் புகுந்தார். அது பொழுது நறுமணம் மிக்க அழகிய கொன்றையை அணிந்தவராய தியாகேசுவரரும், அவர் முன் வணங்கி மகிழுமாறு எதிர்காட்சி கொடுத்து நிற்க, அப்பெருவடிவைக் கண்டு வணங்கியவராய்.

விளக்கவுரை

கொற்றவாயில் - வெற்றிபொருந்திய உட்கோபுர வாயில்.

மன்பெ ருந்திரு மாமறை வண்டுசூழ்ந்
தன்பர் சிந்தை அலர்ந்தசெந் தாமரை
நன்பெ ரும்பர மானந்த நன்மது
என்த ரத்து மளித்தெதிர் நின்றன. **#337**

நிலையான பெருந்திருவாம் பரம்பொருளைத் தம் உட் கொண்டு நிற்கும் நான்மறைகளாகிய வண்டுகள் நெருங்கி ஒலிக்க, அன்பால் நினைவார்தம் உள்ளமாகிய தாமரையில் ஊறுகின்ற நல்ல, பெரிய, மேலாய ஆனந்தம் என்னும் நல்ல தேனைப் பெறத் தகுதியில்லாத அடியவனிடத்தும் பெறுமாறு வழங்கி எதிர் நிற்கின்றன.

விளக்கவுரை

மன் - நிலைபெற்ற. பெருந்திரு - எப்பொருளினும் பெரிதாய இறைவன். பரம ஆனந்தம் - மேலான ஆனந்தம்: ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்ப அன்பு.

ஞாலம் உய்ய நடமன்றுள் ஆடின
கால னாருயிர் மாளக் கறுத்தன
மாலை தாழ்குழல் மாமலை யாள்செங்கை
சீல மாக வருடச் சிவந்தன. **#338**

(இவ்வாறு எதிர்நின்று காட்சிஅளிக்கும் திருவடிகளே) உலகுயிர்கள் உய்யுமாறு ஐந்தொழில் பெருங்கூத்தைத் திருஅம்பலத்தில் ஆடின. இயமனின் உயிர்செலச் சினந்தன. மாலை அணிந்த கூந்தலையுடைய இமயப் பெருமலையின் தலைவியான உமையம்மையார் தம் சிவந்த கைகள் மனம் குளிர வருடச் சிவந்தன.

விளக்கவுரை

இறைவன் திருக்கூத்தை இடையறாது இயற்றிநிற்பது உலகுயிர்களை உய்யக் கொள்வதற்கேயாம். அவ்வகையில் கூறப் படும் தொழில்கள் படைப்பு முதலிய ஐந்துமாம். இவற்றை அத் திருவடிகள் செய்தருளுமாற்றை,

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

என வரும் *(தி.8 ப.7 பா.20)* திருவாசகமும் நன்கு விளக்கும்.

சீலமாக - பத்திமையும் மகிழ்வும் பொருந்த. உமை யம்மையார் இறைவனின் திருவடிமலர்களை மென்மையாக வருடினும் அம்மலர்கள் அம்மென்மையினும் மென்மையாய் இருத்தலின் அவ்வளவிலேயே சிவப்பவாயின.

``செருடக் கடிமலர்ச் செல்விதன் செங்கம லக்கரத்தால்
வருடச் சிவப்பன மாற்பே றுடையான் மலரடியே`
(தி.4 ப.108 பா.2)
``மன்னு மலைமகள் கையால் வருடின`` *(தி.4 ப.100 பா.1)*
என வரும் நாவரசர் திருவாக்கும் ஈண்டு நினைவு கூர்தற்குரியன.

நீதி மாதவர் நெஞ்சிற் பொலிந்தன
வேதி யாதவர் தம்மைவே திப்பன
சோதி யாயெழுஞ் சோதியுட் சோதிய
ஆதி மாலயன் காணா வளவின. **#339**

(இத் திருவடிமலர்களே) நெறிதவறாது நிற்கும் அருந்தவம் உடையவர்களின் நெஞ்சில் பொலிவு பெற்று விளங்கு வன. உலகியலினின்றும் வேறுபட்டு அருளியலைத் தலைப்படாத அறியாமை உடையவர்களையும் அறிவு விளங்கச் செய்வன. உலகிற்கு ஒளிதரும் பொருள்களுக்கெல்லாம் ஒளிதந்து நிற்பன. ஒரு கால எல்லையுள் பட்டு நிற்கும் திருமாலும் அயனும் காணமுடியாத அமைவினையுடையன.

விளக்கவுரை

நீதிமாதவர் - ஒழுக்கமும், பத்திமையும் உடையவர். வேதியாதவர் - வேறுபடாதவர்: உலகியலை விடுத்து அருளியலில் தலைப்படாது, அதுவே பொருள், என அதனுள் அழுந்தி நிற்பவர். வேதிப்பன - பிரிப்பன: அன்னோரை அச்சூழலினின்றும் பிரித்து ஞான விளக்கம் தந்துநிற்பன. சோதியாய் எழும் சோதி - அருக்கன், மதி, தீ என்பனவற்றிற்கு முறையே ஒளியையும், தண்மையையும், வெப்பத் தையும், தந்து நிற்பவன். தோற்றமுண்டேல் மரணம் உண்டு ஆதலால், மால், அயன்முதலாய தேவர்கள் எல்லாம் ஒரு கால எல்லையில் அழிவர்.

வேத வாரண மேற்கொண் டிருந்தன
பேதை யேன்செய் பிழைபொறுத் தாண்டன
ஏத மானவை தீர்க்க இசைந்தன
பூத நாதநின் புண்டரீ கப்பதம். **#340**

உயிர்கட்குத் தலைவராக விளங்கும் பெருமானின் திருவடித் தாமரைகளே, நான்மறைகளாகிய யானையின் மீது நின்று இலங்குவன. அறியாமையுடைய அடியவனின் செய்த பிழைகளைப் பொறுத்து ஆண்டன. இனி வரக்கடவனவாகிய பிழைகளையும் வாராமல் தடுத்தற்கு முன்நிற்பன.

விளக்கவுரை

பிழை - குற்றம்: கடந்த காலத்தும் நிகழ் காலத்தும் செய்த குற்றங்கள். பழவினையும், நுகர்வினையுமாம். ஏதமானவை - இனி வரத்தகும் துன்பங்கள்: இது வருவினையாம்.

இன்னவா றேத்து நம்பிக்
கேறுசே வகனார் தாமும்
அந்நிலை யவர்தாம் வேண்டும்
அதனையே அருள வேண்டி
மன்னுசீ ரடியார் தங்கள்
வழித்தொண்டை உணர நல்கிப்
பின்னையும் அவர்கள் தங்கள்
பெருமையை அருளிச் செய்வார். **#341**

இவ்வாறு போற்றுகின்ற நம்பியாரூரருக்கு ஆனேற்றின் மீது எழுந்தருளியிருக்கும் இறைவனும், அந்நிலையில் அவர் வேண்டும் பொருளை அவர்க்கு அருள் செய்வதற்காக, நிலை பெற்ற சிறப்பமைந்த அடியவர்கள் வழிவழியாகச் செய்துவரும் திருத் தொண்டின் திறன்களை உணரும் உணர்வை அறியச் செய்து, மேலும் அவர்களின் பெருமைகளைத் தாமே அருளிச் செய்வாராயினர்.

விளக்கவுரை

ஏறு - ஆனேறு. அவர் தாம் வேண்டும் பொருள் - இவர்க்கு யான் அடியேன் ஆகப்பண்ணும் நாள் எந்நாள் *(பா.335)* என முன் வேண்டிக் கொண்ட பொருள். மேல் ஆறு பாடல்களும் ஒரு முடிபின.

பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனமே லொன்று மில்லார்
அருமையாம் நிலையி னின்றார்
அன்பினா லின்ப மார்வார்
இருமையுங் கடந்து நின்றார்
இவரைநீ யடைவா யென்று. **#342**

அடியவர்கள் தம் பெருமையினால் தமக்குத் தாமே ஒப்பாவர். இடைவிடாது எம்மை நினைந்து உருகுதலால் எம்மைப் பெற்றவர். எம்மோடு ஒருமைப்பட நிற்றலால் உலகை வெல்வர். அதனால் மேல் வரக் கடவ துன்பங்கள் எவையும் இல்லார். பிறர் எவரும் நிற்றற்கரிய நிலையில் நிற்பவர்கள். அன்பின் நிறைவால் இன்பத்தையே நிறையத் துய்த்துவருபவர்கள். இம்மை மறுமைகளைக் கடந்து இனிய நிலையைப்

பெற்றவர்கள். இவ்வியல்பினராய இவ் வடியவர்களை நீ அடைவாயாக.

விளக்கவுரை

பேணல் - இறைவனை என்றும் மறவாது போற்றி வருதல். ஒருமை - இறைவனோடு ஒன்றுபட்ட ஒருமை: `உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி` *(தி.6 ப.25 பா.1)* எனவரும் திருவாக்கும் காண்க.

நாதனா ரருளிச் செய்ய
நம்பியா ரூரர் நானிங்கு
ஏதந்தீர் நெறியைப் பெற்றேன்
என்றெதிர் வணங்கிப் போற்ற
நீதியா லவர்கள் தம்மைப்
பணிந்துநீ நிறைசொன் மாலை
கோதிலா வாய்மை யாலே
பாடென வண்ணல் கூற. **#343**

எவ்வுயிர்க்கும் தலைவராய பெருமான் இவ்வாறு அருளிச் செய்ய, நம்பியாரூரரும் நான் இங்குக் குற்றத்தினின்றும் நீங்கும் நெறியை அடையப் பெற்றேன், என்று எதிர் வணங்கிப் போற்றி நின்றார். அதுபொழுது `நீ முறைமையாக இவர்களை வணங்கி நிறைந்த சொல்மாலையைக் குற்றம் இல்லாத உண்மைத் தன்மையால் பாடுவாயாக` என்று பெருமானும் அருளிய அளவில்.

விளக்கவுரை

கோது - குற்றம்.

தன்னையா ளுடைய நாதன்
தானருள் செய்யக் கேட்டுச்
சென்னியால் வணங்கி நின்ற
திருமுனைப் பாடி நாடர்
இன்னவா றின்ன பண்பென்
றேத்துகேன் அதற்கி யானார்
பன்னுபா மாலை பாடும்
பரிசெனக் கருள்செய் யென்ன. **#344**

தம்மை அடிமையாகக் கொண்ட பெருமான் இங்ஙனம் அருளிச்செய்த ஆணையைக் கேட்டவராய் அப் பெருமா னைத் தலையால் வணங்கி நின்ற நம்பிகள், அவ்வடியவர்களை இவ்வாறு தான் பாட வேண்டும் என்பதையோ இத்தகைய பண்புகளை அறிந்துதான் பாடவேண்டும் என்பதையோ அறியாத நிலையில் எவ்வாறு பாடுவேன்? அதற்கு யான் என்ன தகுதி உடையேன்? ஏதும் அறியாத எனக்கு அவ்வடியவர்களைப் பாடும் பாங்கினை அருளிச் செய்ய வேண்டும் என வேண்ட.

விளக்கவுரை

பாமாலை - பலவாறாகப் புகழ்ந்து சொல்லும் பாமாலை.

தொல்லைமால் வரைபயந்த
தூயாள்தன் திருப்பாகர்
அல்லல்தீர்ந் துலகுய்ய
மறையளித்த திருவாக்கால்
தில்லைவா ழந்தணர்தம்
அடியார்க்கும் அடியேனென்று
எல்லையில்வண் புகழாரை
யெடுத்திசைப்பா மொழியென்றார். **#345**

பழமையும், பெருமையும் வாய்ந்த இமைய மலையில் தோன்றிய தூய உமையம்மையை இடப்பக்கத்தில் கொண்ட இறைவரும், இவ்வுயிர்கள் துன்பம் நீங்க நான்மறைகளை வழங்கி யருளிய திருவாக்கால், `தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்` என்று தொடங்கி எல்லையற்ற பெரும் புகழையுடைய அடியவர்களை எடுத்துப் போற்றிப் புகழ்மாலை பாடுவாயாக என அருள் செய்தார்.

விளக்கவுரை

வரை - மலை: இமயமலை. இமவான் மகளாகத் தோன்றியமையின் `வரைபயந்த` என்றார். வினை வயத்தால் அன்றி அருள் வயத்தால் தோன்றியமையின் `தூயாள்` என்றார். திருவருள் துறையுள் புகுந்த இறைவர் மறைந்துவிட, ஆரூரர் யாதினை அறிந்து என்சொல்லிப் பாடுகேன் என, அங்கும் அவர் தம்மைப் பாடுவதற்குப் `பித்தன்` என்று தொடங்கிப்பாடுக என்றார். இங்கும் அப்பெருமா னின் அடியவர் பண்பை எவ்வாறு பாடுகேன் எனத் `தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்` எனத் தொடங்கிப் பாடுக என்றார். இதனால் உயிர்கள் இறைவனையோ அவன் அடியவர் களையோ தாமே அறிந்து பாடும் உணர்வுடையன வல்ல, உணர்த்த உணரவே போற்றும் தகுதி உடையன என்பது அறிதும். இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

மன்னுசீர் வயலாரூர்
மன்னவரை வன்றொண்டர்
சென்னியுற அடிவணங்கித்
திருவருள்மேல் கொள்பொழுதின்
முன்னமால் அயனறியா
முதல்வர்தா மெழுந்தருள
அந்நிலைகண் டடியவர்பாற்
சார்வதனுக் கணைகின்றார். **#346**

நிலை பெற்ற சிறப்பினைப் பொருந்திய வயல்கள் நிறைந்த திருவாரூர்ப் பெருமானின் திருவடிகளை நம்பியாரூரர் தம் தலையுற வணங்கி, இறைவனின் திருவருளை உளம் கொண்ட நிலையில், முன்பு ஒருமுறை மாலும், அயனும் அறியவாராத இறைவன் மறைந்தருள, அதைக் கண்ட நாவலூரர் தேவாசிரிய மண்டபத்தில் கூடியிருக்கும் அடியவர்களிடத்துச் சென்று சேர்வாராய்.

விளக்கவுரை

ஆரூர் மன்னவர் - தியாகேசர். எழுந்தருள - மறைந்தருள. மேல் *190*ஆவது பாடலில் நம்பியாரூரர்க்குக் காட்சி கொடுத்தார் என்றருளப்பெற்றது. அக் காட்சியைக் கண்ட நிலையில் ஆரூரர் போற்றி மகிழ *(பா.191-194)* அவருக்கு அடியவர் பெருமையை அருளி, அவரைப் பாடுக என, அவரும் எவ்வாறு ஏத்துவேன் என, இறைவனும் `தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்`` என அடிஎடுத்துக் கொடுத்தனர். *(பா.195 - 199)* ஆரூரரும் அப் பெருமானை உளம் கொண்டு நிற்கும் நிலையில், அப்பெருமான் மறைந்தருள, அவரும் அடியவரிடத்துச் சென்றார் என வரலாற்றை இயைத்து நினைவு கூர்க.

தூரத்தே திருக்கூட்டம்
பலமுறையால் தொழுதன்பு
சேரத்தாழ்ந் தெழுந்தருகு
சென்றெய்தி நின்றழியா
வீரத்தா ரெல்லார்க்குந்
தனித்தனிவே றடியேன் என்று
ஆர்வத்தால் திருத்தொண்டத்
தொகைப்பதிக மருள்செய்தார். **#347**

சென்ற ஆரூரர் தொலைவில் நின்றே அவ்வடிய வர் திருக்கூட்டத்தைப் பல முறை வணங்கியும், அன்பு மீதூரத் தாழ்ந்து எழுந்தும் நின்று, பின்பு அவ்வடியவர் அருகில் சென்று நின்று, எஞ்ஞான்றும் அழியாத வீரமுடைய அவ்வடியவர்கள் ஒவ்வொரு வரையும் தனித்தனியாக அவரவர்தம் திருப்பெயரையும் சொல்லி, இவருக்கு அடியேன், இவருக்கு அடியேன் என்றும், பின் அவர்க்கு வேறாகப் பல அடியவர்களைத் தொகுதியாய்க் குறித்து, அவ்வடியவர் களுக்கும் அடியேன் என்றும் போற்றியும், மேன்மேலும் பெருகி எழுகின்ற அன்பினால் `திருத்தொண்டத் தொகை` எனும் பெயரு ைடய திருப்பதிகத்தை அருளிச் செய்தார்.

விளக்கவுரை

`வீரம் என்னால் விளம்பும் தகையதோ` என *(பா.144)* முன்னர்க் கூறிய

தற்கேற்ப, ஈண்டும் `வீரத்தார் எல்லார்க்கும்` என்றார்.
இங்கு அருளிய பதிகமே `தில்லைவாழ் அந்தணர்தம் அடி யார்க்கும் அடியேன்` எனத் தொடங்கும் திருத்தொண்டத் தொகைப் பதிகமாகும். இவ்வரிய தொடர், இறைவனாலேயே அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட பெருமையுடைய தாகும். பெரிய புராணம் எனும் விரிநூல் அமைய, இது தொகை நூலாக அமைந்த சிறப்புடையதாகும்.
சுந்தரர் பெருமான் இந்நிலவுலகில் தோன்றுதற்குக் காரணம் இப்பதிகம் அருளவேயாம் என்பர் ஆசிரியர்.
வகை நூலாகிய திருத்தொண்டர் திருவந்தாதி இத்தொகை யின் அடிப்படையிலேயே எழுந்ததாகும். இத் தொகைக்கண் வரும் சொற்களும் சொற்றொடர்களும் பல்வேறு அரிய செய்திகளை வழங்குவன.
அடியவர் பெயரளவில் கூறுவன சில, அவர் தம் அரிய தொண்டையும் இணைத்துக் கூறுவன சில. தோன்றிய ஊரோடும் தாரோடும் குறிப்பன சில, நுட்பமாகக் காணத்தக்க அடைமொழிக ளுடன் அமைந்திருப்பன சில, கால ஆய்விற்குப் பயன்படும் குறிப் பின சில, இவ்வாறெல்லாம் எண்ணத் தக்க அருஞ்சிறப்பு உடையது இத்திருப்பதிகமாகும்.

தம்பெருமான் கொடுத்தமொழி
முதலாகத் தமிழ்மாலைச்
செம்பொருளால் திருத்தொண்டத்
தொகையான திருப்பதிகம்
உம்பர்பிரான் தானருளும்
உணர்வுபெற உலகேத்த
எம்பெருமான் வன்றொண்டர்
பாடியவ ரெதிர்பணிந்தார். **#348**

தம் இறைவன் எடுத்துக்கொடுத்த தொடர் மொழியையே முதலாக வைத்துத் தொடங்கிய தமிழ்ப் பாமாலையாய், அதன் பொருள்வகையால் திருத்தொண்டத் தொகை எனப் பெயர் பெற்றிருக்கும் அத் திருப்பதிகத்தை, தேவர்களுக்கும் தலைவனாய இறைவன் அருளும் அருள் உந்த, இவ்வுலகுயிர்கள் அனைத்தும் ஏற்றுப் போற்றுமாறு எம் தலைவராகிய ஆரூரர் அருளிச் செய்து அத் திருக்கூட்டத்தின் திருமுன்னிலையில் வணங்கினார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

உம்பர்நா யகர்அடியார்
பேருவகை தாமெய்த
நம்பியா ரூரர்திருக்

கூட்டத்தின் நடுவணைந்தார்
தம்பிரான் தோழரவர்
தாமொழிந்த தமிழ்முறையே
எம்பிரான் தமர்கள்திருத்
தொண்டேத்தல் உறுகின்றேன். **#349**

தேவர்கட்குத் தலைவனாய இறைவனின் அடியவர்கள் பெரு மகிழ்வு அடைய, ஆரூரர் அத்திருக்கூட்டத்துள் சென்றனர். இனித் தம்பிரான் தோழராகிய அப்பெருமகனார் அருளிய அத்திருப்பதிகத்தின் முறையிலேயே, திருத்தொண்டர்களாகிய அவ்வடியவர்களின் திருத்தொண்டுகளைத் தனித்தனியே எடுத்துக் கூற முற்படுகின்றேன்.

விளக்கவுரை

இத்திருப்பாடலின் முன்னிரண்டு அடிகளோடு இறை வன் ஆரூரரைத் தடுத்தாட்கொண்ட வரலாறு நிறைவு பெறுகின்றது. அடுத்த இரண்டு அடிகளில் திருத்தொண்டத் தொகையில் அமைந்த வாறு அவ் வடியவர்களின் திருத்தொண்டுகளைத் தனித்தனியே எடுத்துக் கூறுவன் என ஆசிரியர் இதன்வழித் தோற்றுவாய் செய்து கொள் கின்றார்.

தில்லைவாழந்தணர் புராணம்

ஆதியாய் நடுவு மாகி
அளவிலா அளவும் ஆகிச்
சோதியா யுணர்வு மாகித்
தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப்
பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப்
பொதுநடம் போற்றி போற்றி. **#350**

உயிர்கள் தத்தம் வினைப்பயனைத் துய்த்தற்கேற்ப எல்லாப் பொருள்களையும் தோற்றுவிக்கும் முதற்கடவுளாயும், அவற்றைக் காக்கும் காப்புக் கடவுளாயும், தன்னறிவாலும் (பசு ஞானம்) தன்னைச் சூழ்ந்துள்ள பொருள்களின் அறிவாலும் (பாச ஞானம்) அளந்து அறியப்படாததாயும், ஒளிப்பிழம்பாயும், உயிர்க் குயிராய் நின்று கருவி கரணங்களோடு கூட்டி அவற்றின் வழி உணரச் செய்யும் உணர்வாயும், தம்மால் தோற்றுவிக்கப்பட்ட அறிவுடைய னவும், அறிவற்றனவுமாய பொருள்களாயும், அவ்வப் பொருள்களி னின்றும் பிரித்தற்கு இயலாததாய் அவற்றுடன் கலந்து நிற்கும் பொரு ளாயும், உலகில் பிரித்துக் காண்டற்குரிய ஆண், பெண் என்னும் இரு வகை உயிரினங்களிலும் இயைந்து நிற்றல் பற்றி அவ்வாண், பெண் வடிவினதாயும் உள்ள இறை, உயிர்கட்கு எஞ்ஞான்றும் தன் குணங் களாலும் செயல்களாலும் அறிதற்குரிய அறிவினைக் கற்பித்து, தில்லை மன்றிலே நடனம் செய்கின்ற ஆடல் திறனுக்கு வணக்கம் செலுத்து கின்றேன்.

விளக்கவுரை

ஆதி - என்பது படைத்தலையும், நடுவு - என்பது காத்த லையும் குறித்தன. அளவு - உயிர் தன்னறிவாலும், தளையறிவானும் அளக்கும் அளவு. சோதி - ஒளிப்பிழம்பு. தோன்றிய பொருள் - தோற்றுவிக்கப்பட்ட பொருள்: \`தோற்றிய திதியே\` *(சிவஞானபோ. சூ.1)* என்புழிப்போல. பேதியா ஏகமாகி - வேறுபடுத்துக் காண்டற் கியலாததாயும் அவ்வப் பொருளுமாகியும் நிற்கும் நிலை. நடுவும் ஆகி என்றமையால்- இறுதியும் ஆகி என்பதும் ஈண்டுக் கொள்ளப் படும். ஆதி - அயன். நடு - மால். அளவு - இறுதியாகிய உருத்திரன். சோதியாய் உணர்வுமாகியவன் - உயிர்களுக்கு மறைப்பாற்றலைச் செய்யும் சத்தியை உடைய மகேசுவரன். தோன்றிய பொருள் - அறி வாற்றல் தோன்றுவதற்கு இடனாகிய சாதாக்கியம். சதாசிவமூர்த்தி என்று உரைப்பாரும் உளர்.

திருவைந்தெழுத்தின் இடமாக நின்று ஆடும் நடனம் மூவகை யாம். அவை *1.* ஊனநடனம் *2.* ஞானநடனம் *3.* ஆனந்த நடனம் என்பனவாம். இம்மூவகை நடனங்களும் உயிர்கட்குப் படிப்படியாக அறிவையும், அதனாலாய அநுபவத்தையும் விளக்கி நிற்கும். ஊனநடனம் - தன்னிலையில் நிற்கும் உயிர்க்கு மலஇருள் நீங்க, கருவி, கரணங்கள், உலகு ஆகியவற்றைக் கொடுக்கச் செய்யும் நடனமாகும். ஞானநடனம் - இவ்வகையில் வளர்ந்த உயிர்கட்கு ஞானத்தை வழங்குதற்குச் செய்யும் நடனமாகும். ஆனந்த நடனம் - அக்கூட்டால் உயிர் ஞானம் பெற்று அடையும் வீடு பேற்றில், அவ்வின்பத்தில் திளைக்கச் செய்வதாம். இம்மூவகை நடனங்களாலும் உயிர்கள் ஞானம் பெற்று வீடு பேறு அடையும். இவ்வுண்மைகளை இந்நடனங்கள் கற்பித்து நிற்றலின் `போதியாநிற்கும் தில்லைப் பொதுநடம்` என்றார். இத்திறங்களை எல்லாம் உண்மை விளக்கம் என்னும் ஞான நூலால் அறியலாம். தில்லைப் பொது - தில்லை நகரில் இருக்கும் பொதுவிடம் - மன்றம்.

கற்பனை கடந்த சோதி
கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி
யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந்
திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற
பூங்கழல் போற்றி போற்றி. **#351**

தன்னறிவாலும், தளையறிவாலும் கற்பிக்கப் பெறும் கற்பனைகளையெல்லாம் கடந்து நிற்கும் ஒளி வடிவாகிய இறைவன், தன் கருணையால் வடிவு கொண்டு, யாவர்க்கும் அற்புதம் விளைக்கும் திருக்கோலத்தில், சிறந்த அரிய மறைகளின் முடிவாக உள்ள உபநிடதங்கட்கும் உச்சியின் மேலாய் நிற்கும் ஞான ஒளி வடிவாய் விளங்கும் திருச்சிற்றம்பலத்துள் நிலைத்து நின்று, அழகும், மகிழ்வும், பொருந்த நடனம் செய்தருளும் பொலிவினை உடையவா கிய திருவடிகட்கு, என் வணக்கத்தைப் பன்முறையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளக்கவுரை

கற்பனை - ஒன்றைத் தாமே உருவாக்கிக் கொண்டு அதனை மேலும் கற்பித்துச் சொல்வதாம். அருமறைச்சிரம் - அரிய மறைகளின் முடிவாக நிற்கும் உபநிடதங்கள். சித்பரம் - உயிர் அறிவிற்கு மேலாக நிற்கும் ஞானப் பெருவெளி; அவ்வெளியே திருச் சிற்றம்பலம் ஆகும். சித் - அறிவு, பரம் - மேலான, வியோமம் - வெளி. உயிர்களை என்று வந்தாய்

என்னும் திருக்குறிப்புடன் ஏற்றருளும் நடனம் ஆதலின் பொற்புடைய நடம் ஆயிற்று.இவ்விரு பாடல்களும் தில்லையில் நடனம் செய்கின்ற கூத்தப் பெருமானைப் பற்றியதாகும். இப்பெருமானைத் தம் உள்ளத்திருத்தி, வழிபாடு செய்யும் கடமை உணர்வுடையவராதலின், தில்லைவாழ் அந்தணர் வரலாற்றைக் கூறும் இப்பகுதியில், கூத்தப் பெருமானுக்குரிய வணக்கப் பாடல்களை முன் வைத்தார்.

போற்றிநீள் தில்லை வாழந்
தணர்திறம் புகல லுற்றேன்
நீற்றினால் நிறைந்த கோல
நிருத்தனுக் குரிய தொண்டாம்
பேற்றினார் பெருமைக் கெல்லை
யாயினார் பேணி வாழும்
ஆற்றினார் பெருகும் அன்பால்
அடித்தவம் புரிந்து வாழ்வார். **#352**

இவ்வகையிற் கூத்தபெருமானை வணங்கிப் பத்திமைச் செல்வம் மிக்க தில்லைவாழ் அந்தணரின் அரிய பண்பு களைச் சொல்லப் புகுகின்றேன். இவர்கள், திருநீற்றினால் நிறைந்த திருமேனியை உடைய கூத்தப் பெருமானுக்குரிய பணிவிடைத் தொழில் செய்தலாகிய பெரும்பேற்றினைப் பெற்றவர்கள். பெருமை யின் வரம்பிற்கு ஓர் எல்லையாய் இருக்கின்றவர்கள். தாம் போற்றி ஒழுகுதற்குரிய நல்லொழுக்கங்களை உடையவர்கள். அப்போதைக் கப்போது ஆர்வம் மிகும் அன்பினால் கூத்தப் பெருமானின் திருவடி மலர்களைச் சிந்தித்து வழிபடப் பெறும் தவத்தைச் செய்து வாழ்கின் றவர்கள்.

விளக்கவுரை

போற்றி - வணங்கி. மேல் இரு பாடல்களிலும் கூறிய வாறு வணங்கி என்பதாம். நீள் தில்லை - நீண்ட பத்திமையால் வழிவழி யாகத் தொண்டு செய்துவரும் தில்லை. அடித்தவம் - திருவடியை நினைந்து வாழும் தவம். ஆற்றினார் - ஒழுக்கமுடையவர்கள்.

பொங்கிய திருவில் நீடும்
பொற்புடைப் பணிக ளேந்தி
மங்கலத் தொழில்கள் செய்து
மறைகளால் துதித்து மற்றுந்
தங்களுக் கேற்ற பண்பில்
தகும்பணித் தலைநின் றுய்த்தே
அங்கணர் கோயி லுள்ளா
அகம்படித் தொண்டு செய்வார். **#353**

பெருகுகின்ற செல்வத்தில் சிறந்த அழகிய அணி கலன்கள்,

திருப்பரிவட்டம் முதலியவற்றைப் பெருமானின் திருமேனி யில் அழகுபெறச் சாத்தி, மறைமொழிகளால் போற்றிசைத்து, பின்னும் தாம் செய்தற்குரிய பணிகள் அனைத்தையும் சிறக்கச் செய்து, கூத்தப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலினுள் உள்ளாக, இத்தகைய அகம்படிமைத் தொண்டுகளைச் செய்து வருபவர்கள்.

விளக்கவுரை

அகம்படித்தொண்டு - திருக்கோயிலுக்குள்ளேயும் இறைவனின் திருவடியைச் சார்ந்துள்ள இடத்தேயும் இருந்து அலகிடல், மெழுகிடல் முதலாய பணிகளையும், திருமுழுக்காட்டுதல், வழிபாடு செய்தல் முதலாய பணிகளையும் செய்துவருவதாம். அகம் படிந்து செய்யும் தொண்டு அகம்படித்தொண்டு எனலுமாம்.

வருமுறை எரிமூன் றோம்பி
மன்னுயி ரருளான் மல்கத்
தருமமே பொருளாக் கொண்டு
தத்துவ நெறியிற் செல்லும்
அருமறை நான்கி னோடுஆ
றங்கமும் பயின்று வல்லார்
திருநடம் புரிவார்க் காளாந்
திருவினாற் சிறந்த சீரார். **#354**

அறத்தையே பொருளாகக் கொண்டு, அதன்வழி மெய்ப்பொருளை உணரும் உணர்வில் தலைப்பட்டு நிற்பவர்களும், என்றும் திருநடம் செய்தருளும் பெருமானார்க்கு அடித்தொண்டு புரிதலையே செல்வமாகக் கொண்டு, சிறந்து விளங்கும் மேன்மை உடையவர்களும், அரிய நான்மறைகளோடு அதன் அங்கம் ஆறை யும் பயின்றவர்களும் ஆன அவர்கள், அந்நான்மறைகளும் கூறும் விதிவழி நின்று, மூவகை அமைப்புடைய வேள்விகளையும் வளர்த்து, அதனால் உலகில் வாழும் உயிர்கள் அனைத்தும் இறைவனின் இன்னருளில் திளைத்து வளருமாறு செய்வார்கள்.

விளக்கவுரை

எரி மூன்று - நெருப்பை வளர்த்துச் செயத்தகும் மூவகை வேள்விகள். அவை ஆகவனீயம், காருகபத்தியம், தக்கிணாக்கினியம் என்பனவாம். ஆகவனீயம் - நாற்சதுரமாய் வடதிசையில் வைத்துத் தேவர்கட்கு அவி கொடுத்தற்குரியது. காருகபத்தியம் - முச்சதுரமாய் அதன் தெற்கில் அமைக்கப்படுவது. தக்கிணாக்கினி - அதன் தெற்கில் தென்புலத்தார்க்குப் பலி ஓமம் முதலியன கொடுத்தற்கு அமைப்பது. காருகபத்தியம் என்னும் வேள்வியே ஏனைய இரண்டற்கும் காரண மாய்

நடுவில் வைக்கப்படுவதாம். இனி, ஆகவனீயம் - அந்தணர்கள் காடுகளில் தீயை உண்டாக்கும் கல் முதலியவைகளைக் கொண்டு அவ்வப் போது உருவாக்கிக் கொள்ளும் வேள்வித் தீ ஆகும் என்றும், காருகபத்தியம் - அந்தணர்கள் தங்கள் இல்லங்களில் வேள்விக் குண்டங்களை வளர்த்து அத்தீயை அணையாமல் பாதுகாத்து வழி வழியாகத் தொடர்ந்து செய்துவருவது என்றும், தக்கிணாக்கினி - அந்தணர்கள் தென்திசை வரும்போது கையில் கொண்டு வந்த தீயைக் கொண்டோ அல்லது ஆங்காங்கே கிடைக்கும் தீயைக் கொண்டோ செய்யும் வேள்வியாகும் என்றும் விளக்கம் கூறலும் ஒன்று. தத்துவநெறி - மெய்ப்பொருளை உணரும் உணர்வு. மறை நான்கு: இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்றே பலரும் கூறுவர். நச்சினார்க்கினியர், இவை சில்வாழ்நாள், பல்பிணிச் சிற்றறிவுடை யோர்க்குப் பிற்காலத்தே செய்யப்பட்டன என்றும், இவற்றுக்கு முன்னிருந்த நான்மறைகள் தைத்திரியம், பௌடிகம், தலவாகாரம், சாமவேதம் எனும் நான்குமே என்றும் கூறுவர். ஆறங்கமாவன: உலகியற் சொல்லை ஒழித்து வைதிகச் சொல்லை ஆராயும் நிருத்தமும், அவ்விரண்டையும் உடனாராய்ந்த ஐந்திரத் தொடக்கத்துள்ள வியாகரணமும், போதாயனீயம் பாரத்துவாசம் பரமார்த்தம் பரமாத்திரையம் முதலிய கற்பங்களும், நாராயணீயம் வராகம் முதலிய கணிதமும், எழுத்தாராய்ச்சியாகிய பிரமமும் செய்யுளிலக்கணமாகிய சந்தமுமாம். `கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார் வாழ் தில்லை` *(தி.1 ப.80 பா.1)* என ஞானசம்பந்தரும் தில்லைவாழந் தணரைப் போற்றி உரைப்பர்

மறுவிலா மரபின் வந்து
மாறிலா ஒழுக்கம் பூண்டார்
அறுதொழி லாட்சி யாலே
யருங்கலி நீக்கி யுள்ளார்
உறுவது நீற்றின் செல்வம்
எனக்கொளும் உள்ளம் மிக்கார்
பெறுவது சிவன்பா லன்பாம்
பேறெனப் பெருகி வாழ்வார். **#355**

குற்றமற்ற மறையவர் குலத்தில் தோன்றித் தம் குல ஒழுக்கத்திற்கு மாறுபடாத ஒழுக்கத்தைக் கொண்டு ஒழுகுபவர்கள், தமக்குரிய ஆறு தொழில்களையும் செய்து வருவதால் உலகில் வரும் பசி, பிணி முதலிய துன்பங்களை நீக்குபவர்கள். உயிர்கள் பெறுதற் குரிய உறுதிப் பயன்களுள் மிகச் சிறப்பாய திருநீற்றினைச் செல்வமாகப் பேணி விளங்குகின்றவர்கள். தாம் பெறத்தக்கது சிவ பெருமானிடத்துக் கொண்டு ஒழுகும் அன்பெனும் பேறேயாம் எனக் கருதி

அப்பெருமானிடத்து அன்பு பெருக வாழ்கின்றவர்கள்.

விளக்கவுரை

`குலம் சுடும் கொள்கை பிழைப்பின்` *(குறள், 1019)* என்பர் திருவள்ளுவர். ஆதலின் தம் குலத்திற்கேற்ற ஒழுக்கமும் உடையர் என்றார். அறுதொழில் - அறுவகைத் தொழில். அவை ஓதல், ஓது வித்தல், வேட்டல். வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பனவாம். இவற் றால் உயிர்கட்குற்ற துன்பத்தைநீக்கி வருபவர். கலி - பசி, பிணி முதலிய துன்பங்கள். இவர்கள் உறுவதும், பெறுவதும் முறையே,
நீற்றின் செல்வமும் சிவன்பால் அன்பும் என்பதால், இவர்தம் உள்ள மும் தகவும் ஒருங்கு புலப்படுகின்றன.

ஞானமே முதலா நான்கும்
நவையறத் தெரிந்து மிக்கார்
தானமுந் தவமும் வல்லார்
தகுதியின் பகுதி சார்ந்தார்
ஊனமேல் ஒன்றும் இல்லார்
உலகெலாம் புகழ்ந்து போற்றும்
மானமும் பொறையுந் தாங்கி
மனையறம் புரிந்து வாழ்வார். **#356**

ஞானம் முதலாகச் சொல்லப்பெறும் யோகம், கிரியை, சரியை ஆகிய நால்வகை நன்னெறிகளையும் குற்றமறத் தெரிந்து, அந்தப் படி நிலையில் உயர்ந்து ஞானத்தைப் பெற்றவர்கள், தானம், தவம் ஆகிய இரு பேரறங்களையும் செய்து வருதலில் வல்லவர்கள். நடுநிலைமை கோடலில் பகை, நொதுமல், நட்பு எனும் பாகுபாடின்றி, அதனைக் கடைப்பிடித்து வருபவர்கள். மேல் எதிர் கொள்ளுதற்குரிய எவ்வகைக் குறைபாடுகளும் இல்லாமல், உலகத்தவ ரெல்லாம் பெரிதும் புகழ்ந்து போற்றிவரும் மானம், பொறை ஆகிய ஈரறங்களையும் என்றும் மனத்தகத்துக் கொண்டு இல்லறத்தை என்றும் நடத்தி வருபவர்கள்.

விளக்கவுரை

``விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே``
-தாயுமான. பராபரக்.*157* என்பர் தாயுமானார். எனவே சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்றாலும் பெறத்தக்க பயன் ஞானமே என்பதும், அதுவே கனி என்பதும் விளங்குகின்றன. சரியையை முதலாக வைத்து எண்ணுவது போன்று, ஞானத்தை முதலாக வைத்து எண்ணும் மரபும் உண்டு.

``ஞானமுத னான்குமலர் நற்றிருமந் திரமாலை``

(தி.12 பு.30 பா.26) ``நலம் சிறந்த ஞானயோ கக்கிரியா சரியை யெலாம்`` *(தி.12 பு.30 பா.28)* எனச் சேக்கிழார் கூறுமாற்றால் இவ்வுண்மையை அறியலாம். `இன்ப மும், பொருளும் அறனும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந் திணை` எனத் தொல்காப்பியம் *(களவு. 1)* கூறும் மரபினையும் நினைவு கூர்க.
தானம் - அற நெறியால் வந்த பொருளைத் தக்கார்க்கு உவகையொடும் கொடுத்தல். தவம் - புறத்தும் *(சரியை)*, அகத்தும் *(கிரியை)* வழிபாடாற்றியதன் பயனால் மனவொருமை பெற்று இறைவனை எப்பொழுதும் எண்ணி வருதல். தகுதி - நடுநிலைமை. பகுதி - பகை, நொதுமல், நட்பு ஆகிய இம்முன்றானும் கோடுதலின்றிக் கொள்ளத் தக்கது. `தகுதி என ஒன்று நன்றே பகுதியால் பாற்பட்டு ஒழுகப் பெறின்` *(குறள், 101)* எனவரும் திருக்குறளை முகந்து நிற்கும் பகுதி இதுவாம். ஊனம் - குறைவு. மானம் - தன்னிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும் ஆம்.பொறை - காரணம் பற்றியாதல், அறியாமையானாதல் ஒருவர் தமக்குத் தீங்கு செய்தவழி, மீண்டும் அதனை அவரிடத்துச் செய்யாது பொறுத்துக் கொள்ளுதல். நவையற - ஐயம் திரிபுகள் நீங்க; தம் மனத்தின்கண் உள்ள குற்றம் நீங்க எனினும் ஆம். `கற்க கசடற` *(குறள், 391)* என்புழிப்போல.

செம்மையால் தணிந்த சிந்தைத்
தெய்வவே தியர்க ளானார்
மும்மைஆ யிரவர் தாங்கள்
போற்றிட முதல்வ னாரை
இம்மையே பெற்று வாழ்வார்
இனிப்பெறும் பேறொன் றில்லார்
தம்மையே தமக்கொப் பான
நிலைமையால் தலைமை சார்ந்தார். **#357**

செம்பொருளைச் சிந்தித்திருத்தலாகிய செம்மை யால், யாவரிடத்தும் பணிவு மிக்க பண்புள்ளம் கொண்டவர்கள். அவர்கள் மூவாயிரவர் ஆவர். தாங்கள் இம்மையிலேயே போற்றி வாழுதற்கு ஏதுவாகக் கூத்தப்பிரானை எளிவந்த அருட்கருணையாள ராகப் பெற்று வாழ்பவர்கள். இப்பெரும் பேற்றினைப் பெற்றிருப் பதால் இதற்கு மேலாயதொரு பேற்றினைப் பெற வேண்டாதவர்கள்; இவ் வகையில் தமக்குத் தாமே ஒப்பாம் நிலைமையில் தலைமை பெற்றவர்கள் தில்லைவாழந்தணர்கள் ஆவர்.

விளக்கவுரை

செம்மை - திருநின்ற செம்மை. அஃதாவது செம் பொருளாய சிவத்தையே மனத்தில் கொண்டிருக்கும் தன்மை. தணிந்த சிந்தை - எல்லார்க்கும்

நன்றாம் பணிதல் எனக் கொண்ட பணிவு உடைமை. தாழ்வெனும் தன்மை என்பதாம். இம்மையே பெற்று வாழ் வார் - கூத்தப் பெருமானை இடையறாது சிந்தித்திருத்தலின் அதன் பயனாகத் தாம் பெறத்தக்க பயன்கள் அனைத்தையும் இப்பிறப்பி லேயே பெற்று வாழ்பவர்கள். தில்லைப் பெருமானைக் கைதர வந்த கடவுளாகக் கொண்டிருப்பவர் என்பது கருத்து. குறைவிலா நிறை வாய பெருமானை வழிபட்டு வாழ்தலைவிடப் பெறற்கரிய பேறு பிறிதின்மையின் `இனிப் பெறும் பேறொன்றில்லார்` என்றார். ஒன்றும் என்பதில் உள்ள உம்மை தொக்கது. தனக்குவமை இல்லாதான் தாளைச் சேர்ந்திருத்தலால், சார்ந்ததன் வண்ணமாகத் தாமும் தமக் குவமை இல்லாதாராக விளங்குபவர்கள்.

இன்றிவர் பெருமை எம்மால்
இயம்பலா மெல்லைத் தாமோ
தென்றமிழ்ப் பயனா யுள்ள
திருத்தொண்டத் தொகைமுன் பாட
அன்றுவன் றொண்டர் தம்மை
யருளிய ஆரூர் அண்ணல்
முன்திரு வாக்காற் கோத்த
முதற்பொரு ளானா ரென்றால். **#358**

தென்தமிழின் பயனாய் விளங்குகின்ற திருத் தொண்டத் தொகையை முன்பு நம்பியாரூரர் பாடி அருளுதற்கு அரு ளாணை வழங்கியருளிய திருவாரூர்ப் பெருமான், அத்தொகையில் முதற்கண் கோக்கப்பெற்ற பொருளாக இத்தில்லைவாழ்ந்தணர்கள் அமைந்திருப்பவர் என்றால், இன்று இவர்கள் பெருமை எம்மால் சொல்லப்பெறும் எல்லையில் படுவதாமோ? படாது என்பது கருத்து.

விளக்கவுரை

திருவாரூர்ப் பெருமானே முதற்கண் கோத்த பொரு ளானார் என்றால், இன்றிவர் பெருமை எம்மால் இயம்பலாம் எல்லைத் தாமோ எனக் கூட்டுக. தமிழின் பயன், வாலறிவன் நற்றாள் தொழலும், அவ்வாறு தொழுது உயர்ந்தார்க்கு ஆளாதலுமே ஆம். அதனைத் திருத்தொண்டத் தொகை அழகும் இனிமையும் கமழும் சொற்களாலும், ஆழ்ந்த பொருள் நலத்தாலும் கூறியிருத்தலின் `தென்தமிழ்ப் பயனாயுள்ள திருத்தொண்டத் தொகை` என்றார்.

தென் - அழகு. திருவாரூர்ப் பெருமான், தம்மிடத்து வணங்கி மகிழ்ந்த நம்பியாரூரர்க்கு அடியவர் பெருமையைக் கூற, அவரும் மகிழ்வு கொள்ள, இறைவன் மேலும் அவரை நிறைசொல்மாலையால் பாடுக என, அவர் அடியவர்தம் வரலாற்றையும் மேதக்க பண்பு நலன் களையும்

எங்ஙனம் எடுத்துப் பாடுகேன் என, பெருமானே `தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்` என அடியெடுத்துக் கொடுத்தார் என்பது வரலாறு. இவ்வாற்றான் திருத்தொண்டத் தொகைக்கு, முதற் பொருளாக (அடியவராக) விளங்கும் பெருமை தில்லைவாழ் அந்தணர்களுக்கு உளதாயின், அவர் பெருமையை அடியவனாகிய யான் எங்ஙனம் முற்றக் கூற இயலும்? என்கின்றார் ஆசிரியர்.

அகலிடத் துயர்ந்த தில்லை
யந்தண ரகில மெல்லாம்
புகழ்திரு மறையோ ரென்றும்
பொதுநடம் போற்றி வாழ்க
நிகழ்திரு நீல கண்டக்
குயவனார் நீடு வாய்மை
திகழுமன் புடைய தொண்டர்
செய்தவங் கூற லுற்றாம். **#359**

விரிந்த இவ்வுலகில் உயர்ந்தவர்களாக விளங்கி அருளும் தில்லைவாழ் அந்தணர்களாகிய மறையவர்கள், இவ்வுலக மெல்லாம் புகழ்ந்து போற்றும் கூத்தப் பெருமானின் அருள் நடனத்தைப் போற்றி என்றும் வாழ்வார்களாக! இத்தில்லையில் வாழ்ந்து புகழ் விளங்க நிற்கும் திருநீலகண்டக் குயவனார் எனும் பெயருடையவரும், போற்றப்பெறும் வாய்மையினின்றும் வழுவாத அன்புடையவருமான அடியவர்தம் அருந்தவச் செயலை இனிக் கூறத் தொடங்குகின்றேன்.

விளக்கவுரை

வரலாறு கூறலுற்றாம் என்னாது, `செய்தவம் கூறலுற்றாம்` என்றார், இவர் வரலாற்றில் ஆழங்கால் பட்டு நிற்பது அவர்தம் தவமேயாதலின். `தீண்டுவீர் ஆயின் எம்மைத் திருநீல கண்டம்` எனும் ஆணை கூறி அம்மையார் தம்மை விலக்க, `எம்மை என்றதனால் `மற்றை, மாதரார் தமையும் என்தன் மனத்தினும் தீண்டேன்` என்று கூறிய இவர்தம் உறுதிப்பாடும், இற்புறம்பு ஒழியாது அங்கண் இருவரும் வேறு வைக அற்புறு புணர்ச்சியின்மை அயலறியாது வாழ்ந்த வாழ்வும், வடிவுறு மூப்பு வந்து தளர்வொடு சாய்ந்தும் அன்பு தம்பிரான் திறத்துச் சாயாமையும், `மாதைத் தீண்டிக் கொண்டு உடன் மூழ்கீர்` என்னக் `கூடாமைப் பாரோர்` கேட்கப் பண்டுதம் செய்கை சொல்லி மூழ்கிய பழுதிலாத்திறமும் அடங்கச் `செய்தவம் என்றார். `தில்லைத் திருநீலகண்டக் குயவனாம் செய்தவனே` என வகை நூலும் கூறுதற்கேற்ப இங்ஙனம் கூறினார்.

திருநீலகண்ட நாயனார் புராணம்

வேதியர் தில்லை மூதூர்
வேட்கோவர் குலத்து வந்தார்
மாதொரு பாகம் நோக்கி
மன்னுசிற் றம்ப லத்தே
ஆதியும் முடிவும் இல்லா
அற்புதத் தனிக்கூத் தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி
வழிபடும் நலத்தின் மிக்கார். **#360**

தில்லை மூவாயிரவராய மறையவர்கள் வாழும் பழமையான தில்லையின்கண், குயவர் குலத்தில் தோன்றியவர். தம் இட மருங்கில் இருந்தருளும் உமையம்மையாரை நோக்கியவாறு, நிலை பெற்ற சிற்றம்பலத்தின்கண், முதலும் முடிவும் இன்றி, வியக்கத் தக்க தும் ஒப்பற்றதும் ஆய திருக்கூத்தினை ஆடுகின்றப் பெருமானின் திருவடிகளை வாழ்த்தி வழிபட்டு வரும் பத்திமையில் சிறந்தவர்.

விளக்கவுரை

இத்திருப்பாடலிலிருந்து மூன்றாவது பாடல் வரை மேதக்க பண்பு நலன்களைக் கூறி, இத்தகைய பண்புடையார் திருநீல கண்டர் என்பார் என அவர் பெயரை நான்காவது பாடலில் அறிவுறுத் துகின்றார் சேக்கிழார். தில்லையின் பழமை `தில்லை மூதூர் ஆடிய திரு வடி` *(தி.8 ப.2 வரி, 1)* என்பதனாலும் அறியலாம். வேள் - மண்: இத னைக் கொண்டு தம் தொழில் செய்தலின் வேட்கோவர் எனப்பட்டார்.

பொய்கடிந் தறத்தின் வாழ்வார்
புனற்சடை முடியார்க் கன்பர்
மெய்யடி யார்கட் கான
பணிசெயும் விருப்பில் நின்றார்
வையகம் போற்றுஞ் செய்கை
மனையறம் புரிந்து வாழ்வார்
சைவமெய்த் திருவின் சார்வே
பொருளெனச் சாரு நீரார். **#361**

நிலையில்லாத உலகியற் பொருள்களில் பற்று வையாது, நிலையுடைய மெய்ப்பொருளிலேயே பற்று வைத்து வாழ் பவர். கங்கை அமைந்த திருச்சடையை உடைய சிவபெருமானிடத்து அன்புடையவர். உண்மையான அடியவர்களுக்கு உரிய தொண்டு களைச் செய்து வரும் விருப்புடையவர். உலகினரால் போற்றப்பெறும் செயற் பாடுகளையுடைய இல்லறத்தை ஏற்று ஒழுகுபவர். சைவத்தின்

உண்மைப் பொருளாக விளங்குகின்ற சிவபரம்பொருளைச் சார்ந்து வாழ்வதே வாழ்வெனக் கருதும் தன்மையர்.

விளக்கவுரை

பொய் - நிலையில்லாத பொருள்கள். இவற்றை நிலையுடையன எனக் கருதி வாழ்தல் புல்லறிவாம், அது இழிவு டையது *(குறள், 331)* என்பர் திருவள்ளுவர். ஆதலின் அப்பொருள் களில் பற்றின்றி வாழ்ந்தார் என்பார் `பொய்கடிந்து` என்றார். அறம் என்பது மெய்ப்பொருளாம். பொய்கடிந்து என்பதையடுத்து இச்சொல்நிற்றலின் இப் பொருள்பட நின்றது. இல்லறம், துறவறம் ஆகிய இரண்டும் சிறந்தனவே. எனினும் துறவறத்திற்கு வாயிலா கவும், அந்நெறி நின்றாரையும் பாதுகாக்கும் பாங்குடைய தாகவும் இருத்தல் பற்றி இல்லறம் சிறப்பெனப் புகழப்பெற்றது. `அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை` *(குறள், 49)* எனத் திருவள்ளுவர் கூறுவதும் இதுபற்றியாம். ஆதலின் `வையகம் போற்றும் செய்கை மனையறம்` என்றார். சைவ மெய்ப்பொருள்- சைவ சமயத்தின் மெய்ப் பொருளாகப் போற்றப்படும் பொருள்: சிவபெருமானே யாவர். ஆதலால்தான் இறைவனைச் சைவன் என்னும் பெயராலும் அழைத்தார்கள். சார்பு - பற்றுக் கோடு. `உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும் உன்னையல்லால் பிறதெய்வம் உள்கே னென்றும்` *(தி.6 ப.31 பா.7)* வாழ்வது சைவமெய்த்திருவின் சார்பாகும்.

அளவிலா மரபின் வாழ்க்கை
மட்கலம் அமுதுக் காக்கி
வளரிளந் திங்கட் கண்ணி
மன்றுளார் அடியார்க் கென்றும்
உளமகிழ் சிறப்பின் மல்க
ஓடளித் தொழுகு நாளில்
இளமைமீ தூர இன்பத்
துறையினில் எளிய ரானார். **#362**

கால எல்லை கூறற்கியலாததாய் வரும் குயவர் மரபில் வந்ததற்கேற்ப, தாம் செய்யும் மட்கலன்களைத் தாம் வாழ் வதற்கேற்ற ஊதியப் பொருளாக ஆக்கிக் கொண்டு, வளர்கின்ற இளமையினையுடைய மூன்றாம் பிறையாகிய குழவித் திங்களைத் தலையிற் கொண்ட கூத்தப்பெருமானின் அடியவர்களுக்கு, எந்நா ளும் அவர்தம் திருவுள்ளம் மகிழ்தற்குக் காரணமான சிறப்புகள் பெருக, அவர்களுக்குத் திருஓடு கொடுத்து வரும் நாளில், இளமை வயப்பட்ட சிற்றின்ப நெறியில் விருப்புடையவரானார்.

விளக்கவுரை

மட்பாண்டம் செய்து வரும் தொழில் மிகப் பழமை யுடையதாகும் `ஆரியன் குலால னாய்நின் றாக்குவ னகில மெல்லாம்` (சிவஞான சித். சுப. சூ.*1* பா.*18*) என இத்தொழில் அமைவு இறைத் தொழிலோடு ஒப்புமைப்படுத்திக் கூறப்படுதலும் காண்க. தம் குலத்திற் கேற்ற தொழில் மட்பாண்டங்கள் செய்வதாகும். இம்மட்பாண்டங் களைத் தம் வாழ்க்கைக்கு வேண்டும் பொருள் அளவில் செய்து கொண்டு, மற்றைய நேரங்களிலெல்லாம் திருஓடுகள் செய்து அவற்றை அடியவர்க்கு வழங்கி மகிழ்வதிலேயே கருத்துடையராய் இருந்தார் என்பார், `மட்கலம் அமுதுக் காக்கி` என்றார்.

இன்பத்துறை - சிற்றின்பத்திற்குரிய வகைகள். உண்டல், உடுத்தல் முதலியனவும் சிற்றின்பம் எனப்படினும், பெண் வழிப் பெறும் இன்பமே சிற்றின்பம் எனச் சிறப்பித்துச் சொல்லப்பெறும். எளியரானார் என்பது இவ்வின்பத்தில் தலைப்படுவாரானார் என்பது போதர நின்றது. சிற்றின்பங்கள் யாவும் நெறிபிறழாதனவாய் வேண்டுழி ஏற்கவும், விடுத்துழி ஒதுக்கவும் நிற்கற்பாலன. எனவே இவை உயிர்க்கு அடிமையாதல் வேண்டுமேயன்றி, இவற்றிற்கு உயிர் அடிமையாதல் கூடாது. மாறாக இவ்வடியவர் அச்சிற்றின்பத்திற்கு அடிமையானார் என்பார், அச்சொல்லால் கூறாது இன்பத்துறை யினில் `எளியர் ஆனார்` என்ற அளவிலேயே கூறி மகிழ்விக்கின்றார். இதனையும் அவ்வடியவர் மீது ஏற்றிச்சொல்ல மனம் இல்லாதவராகி `இளமை மீதூர` என அதற்கோர் ஏதுவும் காட்டிக் கூறினார். அடியவர் வரலாற்றைக் கூறுங்கால் அவர்தம் பெருமையும் பிழையாது, அவர் மீது கொண்ட பத்திமையும் பிறழாது கூறியிருக்கும் திறம் எண்ணி மகிழ்தற்குரியதாம்.

அவர்தங்கண் மனைவி யாரும்
அருந்ததிக் கற்பின் மிக்கார்
புவனங்க ளுய்ய ஐயர்
பொங்குநஞ் சுண்ண யாஞ்செய்
தவநின்று தடுத்த தென்னத்
தகைந்துதான் தரித்த தென்று
சிவனெந்தை கண்டந் தன்னைத்
திருநீல கண்ட மென்பார். **#363**

அந்நாயனாரின் மனைவியாரும் அருந்ததியை யொத்த கற்பிற் சிறந்தவர். சிவபெருமான் உலகமெல்லாம் உய்தற் பொருட்டுப் பாற்கடலில் தோன்றிய நஞ்சை அமுதாக உண்ண, நாம் அனைவரும் செய்த தவமானது அவ்விடத்திலிருந்து தடுத்தாற்போல, அந்நஞ்சு உட்செல்லாது தடுக்கப் பெற்று, தானே அவ்விடத்தில் நின்ற தென்று கருதத்தக்க எம் சிவபெருமானின் திருக்கழுத்தை, எந்நாளும்

திருநீலகண்டம் என்று போற்றி வருவார்,.

விளக்கவுரை

தேவர்கள் அமுது வேண்டி ஒரு காலத்தில் திருப்பாற் கடலைக் கடைய முற்பட்டு, மேருமலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு கடைந்தனர். கடையவே வாசுகி தன் வருத்த மிகுதியால் நஞ்சை உமிழ, அது தேவர்களை வருத்த, மாலயன் முதலியோரும் அதனைத் தகைக்க இயலாது வருந்தினர். பின் இறைவனை வேண்ட, அவன் நஞ்சை உண்டு அது மிடற்றில் தங்கு மாறு செய்தனன். அதனாற் கருமையுற்ற அக்கழுத்தினை நீலகண்டம் என அழைப்பாராயினர். இந்நிகழ்ச்சி தேவர்களை உய்யக் கொள் ளவும், பிறரால் செய்தற்கரிய செயற்கருஞ் செயலாக விளங்கவும் அமைந்தமையின் யாவராலும் எடுத்துப் புகழப்பெறுவதாயிற்று. `காரி உண்டிக் கடவுள்` *(பத்துப்பாட்டு, மலைபடு. வரி, 83)* எனவும்,

`விண்ணோரமுதுண்டுஞ் சாவவொரு வரும்
உண்ணாத நஞ்சுண்டிருந்தருள் செய்குவாய்`

(சிலப்ப. வேட்டுவ.21) எனவும் பண்டைப் பனுவல்கள் பாராட்டுவ தும் காண்க. இத்திருவுறுப்பைக் குறிக்கும் திருநீலகண்டம் என்பது மந்திரமுமாம். இதனை இவ்வடியவர் எப்போதும் கூறிவந்ததால் திருநீலகண்டர் என அழைக்கப்பட்டார். `செய்வினை வந்து எமைத் தீண்டப் பெறா திருநீல கண்டம்` *(தி.1 ப.116)* எனப் போற்றிக் கூறும் திருப்பதிகம் ஒன்று இருப்பதும், அடியவர் அறுபத்துமூவருள் இருவர் இப்பெயருடையராய் இருப்பதும் ஈண்டு நினைவு கூரத்தகும். திருநீலகண்டம் எனச் சொல்லி வருதலை மனைவியாரின் செயலாக, இந்நூலுக்குத் தாமெழுதிய உரையாக மகாலிங்க ஐயரும் ஆலாலசுந் தரம் பிள்ளையும் உரைப்பர். எனினும் இவ்வரலாற்றுத் தொடக்கம் முதல் இப்பாடல் வரை, அடியவரது செயலாகவே கூறி வந்த ஆசிரியர், அடுத்த செய்யுளில் `ஆனதம் கேள்வர்` என நிறைவு செய்தலானும் `ஆதியார் நீலகண்டத்து அளவுதாம் கொண்ட ஆர்வம் பேதியா ஆணைகேட்ட பெரியவர்` எனப் பின்னர்க் கூறலானும், இம்மந்திரம் கூறி வந்தமையினாலேயே இவர் பெயர் அதுவாக அமைந்திருத்தலானும், இம்மந்திரம் அடியவர் சொல்லி வந்ததேயாம் என்பது அறியத்தக்கது.

ஆனதங் கேள்வர் அங்கோர்
பரத்தைபா லணைந்து நண்ண
மானமுன் பொறாது வந்த
ஊடலால் மனையின் வாழ்க்கை
ஏனைய வெல்லாஞ் செய்தே
உடனுறைவு இசையா ரானார்

தேனலர் கமலப் போதில்
திருவினு முருவின் மிக்கார். #364

தேன் பொருந்திய செந்தாமரை மலரில் விளங்கும் திருமகளைவிடச் சிறந்த அழகினையுடைய மனைவியார், தம் கணவர் அவ்வூரில் ஒருபரத்தையை அணைந்து, தம்முடைய வீட்டிற்கு வர, அதைக் கண்டு மானம் மீதூர, அதனைப் பொறுக்காமல், தம்மிடத்தி னின்றும் தோன்றிய ஊடலால், இல்வாழ்க்கையின் இன்றியமையாக் கடமைகளாய் உள்ள திருவமுதமைத்தல் அதனைக் காலத்தில் கொடுத்துதவுதல் முதலிய செயற்பாடுகளை எல்லாம் செய்து, மெய்யுறு புணர்ச்சிக்கு மட்டும் உடன்படாதவர் ஆயினார்.

விளக்கவுரை

ஆன - மேற் கூறியவாறான. மானம் - கணவர் தம் உடன் உறைவிற்குத் தம்மினும் பரத்தையரை உயர்வாகக் கருதியத னால் வந்த மானம். எத்துணைக் கற்புடையாரும் தம் கணவர் தம்மை விடுத்துச் சிற்றின்ப நுகர்ச்சிக்குப் பிறர்பால் செல்லுதலை விரும்பார். இத்தகைய உள்ளமே இவ்வம்மையாரிடத்தும் இருந்தது. `கற்பு வழிப்பட்டவள் பரத்தையை ஏத்தினும் உள்ளத்து ஊடல் உண்டென மொழிப` *(தொல்.பொருளியல், 39),* ``போற்றா ஒழுக்கம் புரிந்தீர் யாவதும் மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலின் ஏற்றெழுந்தனன்`` *(சிலப்ப. கொலைக். வரி, 81,82)* எனவரும் பண்பாட்டின் நெறிமுறை களையும் காண்க. `திருவினும் உருவமிக்கார்` என்பதால் அவர் தம் உடல் அழகும், `மனையின் வாழ்க்கை ஏனைய எல்லாம் செய்தே` என்பதால் அவர்தம் உள்ள அழகாம் கற்பு மேம்பாடும் தெரியவருகின்றன.

மூண்டவப் புலவி தீர்க்க
அன்பனார் முன்பு சென்று
பூண்டயங் கிளமென் சாயல்
பொற்கொடி யனையார் தம்மை
வேண்டுவ இரந்து கூறி
மெய்யுற அணையும் போதில்
தீண்டுவீ ராயின் எம்மைத்
திருநீல கண்ட மென்றார். #365

மனைவியாரின் உள்ளத்தெழுந்த அவ்வூடலைத் தீர்க்கும் பொருட்டுத் திருநீலகண்டர், அவரிடத்தில் சென்று, அணிகள் விளங்கும் இளமையான மெல்லிய சாயலையுடைய பொற்கொடி போன்று விளங்கும் அம்மனைவியாரை, அவர் ஊடல் தீர்த்தற்குரிய சொற்களை இரந்து சொல்லி அவ்வளவில் அவரைத் தழுவ முயன்ற பொழுது, தம் ஊடலினின்றும் நீங்காதவராகிய அப்பெருமாட்டி யாரும் `நீர் எம்மைத்

தீண்டுவீரானால் திருநீலகண்டத்தின்மீது வைத்த ஆணை உம்மைத் தடுப்பதாகுக` என்றனர்.

விளக்கவுரை

மூண்ட - உள்ளத்தெழுந்த. வேண்டுவ - புலவி நீங்கு தற்கு ஏதுவாய சொற்கள். இரந்து - பணிவான மொழிகளைக் கூறி வேண்டி. `மனைவி உயர்வும், கிழவோன் பணிவும் நினையுங்காலைப் புலவியுள் உரிய` எனவரும் தொல்காப்பியத்தால் *(தொல். பொருளி யல், 33)* இத்துணையும் கூறல் இயைவதாயிற்று. `திருநீலகண்டத்தின் மேல் ஆணையிட்டுக் கூறுகின்றேன், நீர் எம்மைத் தீண்ட வேண்டாம்` எனக் கூறுவார், `தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்` என்றார். `இரந்து` என்றதால், கிழவோன் பணிவும், `எம்மை` என்றதால் மனைவி உயர்வும் புலப்படுதல் காண்க.

ஆதியார் நீல கண்டத்
தளவுதாங் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணை கேட்ட
பெரியவர் பெயர்ந்து நீங்கி
ஏதிலார் போல நோக்கி
எம்மைஎன் றதனால் மற்றை
மாதரார் தமையும் என்றன்
மனத்தினுந் தீண்டேன் என்றார். **#366**

எவ்வுயிர்க்கும் முதல்வராய சிவபெருமானின் திருநீலகண்டத்திடத்துத் தாம் வைத்த பெருவிருப்பினின்றும் வேறு படாத, அத்திருவாணையைக் கேட்ட திருநீலகண்டர், அவரைத் தீண்டாமல் அவ்விடத்தினின்றும் சிறிது நீங்கி, எம்மை என்று தன்மைப் பன்மையாகக் கூறியதனால், இம்மாதினையன்றி, வேறு எம்மாதர் களையும் இனி என் மனத்தினாலும் தீண்டமாட்டேன், என உறுதி கூறினார்.

விளக்கவுரை

தம் கணவனார் திருநீலகண்டத்தில் பெரும் பற்று உடையராய் அதனையே இடையறாது கூறி வரும் மந்திரமாகக் கொண்டிருத்தலின் அச்சொல்லையே ஆணையாக வைத்து அவர் மனைவியார் கூறினார். அடியவரும் அப்பெருமந்திரத்தின் ஆணை கடவாது ஒழுகுவார், இனி இவரையன்றி வேறு எம்மாதரையும் மனத்தினாலும் தீண்டேன் என உறுதி எடுத்துக் கொள்வாராயினர். `இந்த இப் பிறவியில் இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்` *(கம்ப. சுந்தர. சூடாமணி, 34)* என வரும் இராமரின் மனநிலையும் ஈண்டு நினைவு கூரத் தக்கதாம். பேதியா என்பதை முன்னுள்ள ஆர்வத்தோடு கூட்டின், தாம் இதுகாறும் கொண்ட

விருப்பத்தினின்றும் வேறுபடாத என்பது பொருளாகும். அதனைப் பின்னுள்ள ஆணை என்பதோடு கூட்டின், தாம் கூறிய இவ் வுறுதி மொழியினின்றும் வேறுபடாத ஆணை என்று பொருள்படும்.

கற்புறு மனைவி யாரும்
கணவனார்க் கான வெல்லாம்
பொற்புற மெய்யு றாமற்
பொருந்துவ போற்றிச் செய்ய
இற்புறம் பொழியா தங்கண்
இருவரும் வேறு வைகி
அற்புறு புணர்ச்சி யின்மை
அயலறி யாமை வாழ்ந்தார். **#367**

அறக் கற்பினையுடைய அவர் மனைவியாரும், தம் கணவனாருக்கு வேண்டிய பணிவிடைகளை எல்லாம் பொலிவு பெறத் தம் உடம்பு அவர் உடம்பைத் தீண்டாதவாறு செய்தற்குரிய வற்றை விரும்பிச் செய்து, தம் இல்லத்தை விடுத்துப் புறம்பே செல்லாதவராய், அவ்விடத்து அவ்விருவரும் வேறு வேறாக இருந்து, அன்பு மீதூருகின்ற புணர்ச்சி ஒன்றும் தவிர்ந்தவராய், இவ்வகையில் தமக் குற்ற பிணக்கை அயலார் அறியாதவாறு காத்து வாழ்ந்து வந்தார்கள்.

விளக்கவுரை

கற்புஉறு மனைவியார் - கற்பு என்றஒன்று தான் இருத் தற்கு நிலைக்களன் ஆயது இவ்விடமே எனக் கருதி வந்து பொருந்திய மனைவியார் எனினும் ஆம். `பேணநோற்றது மனைப் பிறவி` *(கம்பர். சுந்தர. காட்சி,73)* என வரும் கம்பர் திருவாக்கும் காண்க. மெய்யுறாத நிலையிலும் கணவனாருக்கு ஆனவெல்லாம் செய்ததும். எக்காரணத் தாலும் தம் இல்லத்தை விடுத்துச் செல்லுதல் அறம் அன்று எனக் கருதித் தம் இல்லத்திலேயே வதிந்ததும், அம்மையாரின் அரிய கற்பின் நிலையையும் பண்பு மேம்பாட்டையும் விளக்கி நிற்கின்றன. `அற்றேல் தணந்தனையாயின் எம்இல் உய்த்துக் கொடுமோ` (குறுந்*.354)* என்று கூறியது என்னாமோ எனில், அப்பெண்மணியார் தம் சினமிகுதியை யும் அதனாலாய வெறுப்புணர்வையும் காட்டற்கன்றிப் பிறிதன்று என்பதாம். தணந்தனையாயின் என்றது அவன் அப்பெண்மணியா ரைத் தணவாமையும் பெற்றாம். ஏகாரம் - அசைநிலை.

இளமையின் மிக்கு ளார்கள்
இருவரு மறிய நின்ற
அளவில்சீ ராணை போற்றி
ஆண்டுகள் பலவுஞ் செல்ல
வளமலி யிளமை நீங்கி

வடிவுறு மூப்பு வந்து
தளர்வொடு சாய்ந்தும் அன்பு
தம்பிரான் திறத்துச் சாயார். **#368**

இளமை மீதூர்ந்த திருநீலகண்டரும் அவர் மனைவியாரும் தாம் இருவரும் ஒருங்கு ஏற்று நின்ற அளவில்லாத சீர்மை மிகுந்த திருவாணையைப் போற்றி ஒழுக, ஆண்டுகள் பலவும் சென்றன. வளம் மிக்க இளமைப் பருவம் கழிந்த பின், உடம்பின் கண் மிக்க மூப்புப் பருவம் வந்து மிக இளைத்த பொழுதும், தாம் இது காறும் சிவபெருமானிடத்து வைத்த அன்பினின்றும் நீங்காராயினார்.

விளக்கவுரை

திருநீலகண்டம் எனும் அரிய மந்திரத்தை வைத்துச் செய்த ஆணையால் `அளவில் சீர் ஆணை` என்றார். வடிவுறு மூப்பு - உடம்பின்கண் உற்ற மூப்பு. இனி வடிவு கொண்ட மூப்பு எனினும் ஆம். `அத்தகைய மூப்பெனும் அதன் படிவமேயோ` *(தி.12 சரு.1-5 பா.42)* என முன்னர் அருளப் பெற்றதும் காண்க. இனி அழகு பெற்ற மூப்பு வடிவு எனினும் ஆம். `கண்டதோர் வடிவா லுள்ளங் காதல்செய்து உருகா நிற்கும்` *(தி.12 சரு.1-5 பா.42)* என முன்னர் அருளப் பெற் றதும் காண்க. சாய்ந்தும் - உள்ளம் ஒடுங்கியும்: `ஓய்தல், ஆய்தல், நிழத்தல் சாஅய், ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்` *(தொல். உரி. 32)* என்னும் தொல்காப்பியமும்.

இந்நெறி யொழுகு நாளில்
எரிதளிர்த் தென்ன நீண்ட
மின்னொளிர் சடையோன்
தானுந் தொண்டரை விளக்கங் காண
நன்னெறி யிதுவா மென்று
ஞாலத்தோர் விரும்பி உய்யும்
அந்நெறி காட்டு மாற்றால்
அருட்சிவ யோகி யாகி. **#369**

இத்தகைய வாழ்க்கை நெறியில் இவர்கள் ஒழுகி வரும் நாள்களில், நெருப்புத் தளிர்விட்டாற் போலச் சிவந்த நிறத்தையும் நீண்ட மின்னலையொத்து விளங்கும் சடையையும் உடைய சிவபெருமானும், தம் அடியவராகிய திருநீலகண்ட நாயனாரின் பெருமையை யாவரும் அறிதற்கு உரிய நல்வழி இது ஆகும் என்று, அவ்வழியை இவ்வுலகில் உள்ளார் விரும்பி உய்யுமாற்றான் அதனைக் காட்டுதற்கு அருள் மிகுந்த சிவயோகியாக வடிவு கொண்டு.

விளக்கவுரை

இறைவனது சடையின் நிறத்திற்கு எரி உவமையா யிற்று. அதன் நீண்ட ஒழுக்கிற்கு மின்னொளி உவமையாயிற்று, `மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை` *(தி.11 பொன் வண். பா.1)* என வரும் திருவாக்கும் காண்க. கற்புடை மனைவி யோடு வாழும் அடியவரின் பெருமையை விளக்குதற்கு இறைவன் சிவயோகியாக வந்தான் என்பதல்லது, அவரைச் சோதித்தற்கு வந் தான் அல்லன் என்பது அறியத் தக்கது.

உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்து அறியும் பெருமா னுக்கு, எவ்வுயிரையும் எந்நிலையிலும் சோதித்தறிய வேண்டும் என்பதில்லை. ஆதலின் இவ்வடியாரிடத்து இறைவன் வருவதும் இதுபோன்றதே. ஏனைய அடியவரிடத்து அவ்வப் பொழுதும் இறை வன் வந்தருளுவதும் அவ்வவ்வடியவர்களின் உரனையும் திறனை யும் உலகறியச் செய்தற்கன்றித் தாம் சோதித்து அருளுதற்கு அன்று என்பதும் அறியத்தக்கது.

`தனிப்பெருந் தருமம் தானோர் *#9;* தயாவின்றித் தானை மன்னன் பனிப்பில்சிந் தையினில் உண்மைப் பான்மைசோ தித்தால் என்ன`
(தி.12 சரு.1-4 பா.22)

எனக் கூறியவிடத்தும், ``சோதித்தால் என்ன` என்றதல்லது, சோதித் தது என்றில்லாமை அறியத்தக்கது. அன்றியும் அச்செயற்கு அறம் முற்பட்டாற் போன்றிருந்தது என்பதன்றி, இறைவன் முற்பட்டான் என்றில்லாமையும் அறியத் தக்கது.

கீளொடு கோவணஞ் சாத்திக் கேடிலா
வாள்விடு நீற்றொளி மலர்ந்த மேனிமேல்
தோளொடு மார்பிடைத் துவளும் நூலுடன்
நீளொளி வளர்திரு முண்ட நெற்றியும். **#370**

கீளும் கோவணமும் கொண்டு, அழியாத ஒளியை வீசுகின்ற திருவெண்ணீற்றின் ஒளி பரப்பும் திருமேனியின்கண் இடத்தோளோடு சேர்ந்து மார்பில் அசைகின்ற பூணூலுடனே, பேரொளி வீசுகின்ற திருநீற்றை முக்கீற்று வடிவாகத் தீட்டிய நெற்றியும்.

விளக்கவுரை

கீள் - தகட்டு வடிவாக நூலால் நெய்யப் பெற்ற அரை ஞாண். இஃது இடுப்பில் கட்டப் பெறுவது. `கீள் உடையும் கொண்ட உருவம்` `கீளார் கோவணமுந் திரு நீறுமெய்ப் பூசி` *(தி.7 ப.24 பா.2)* `கீளலா லுடையு மில்லை` *(தி.4 ப.40 பா.7)* எனவரும் திருவாக்கு களால் இவ்வுடை, பெருமானும் அவரடியவரும் அணியத்தக்க சிறப் புடையது என்பதறியலாம். வாள் - ஒளி. துவளும் - அசையும். திரு முண்டம் - முக்கீற்று வடிவாக அணியும் திருநீறு.

நெடுஞ்சடை கரந்திட நெறித்த பம்பையும்
விடுங்கதிர் முறுவல்வெண் ணிலவும் மேம்பட
இடும்பலிப் பாத்திர மேந்து கையராய்
நடந்துவேட் கோவர்தம் மனையை நண்ணினார். **#371**

நெடுஞ்சடை மறையுமாறு சுருண்டுகிடக்கும் தலைமயிரும், ஒளிவீசுகின்ற பற்களினின்றும் தோன்றும் வெள்ளிய நிலவும், மேம்படப், பிச்சை ஏற்றற்குரிய கலத்தை ஏந்திய வலத் திருக்கையும், உடையவராய் எழுந்தருளித் திருநீலகண்டர் மனையை அடைந்தார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின. நெடுஞ்சடை - நீண்டசடை: நன்று ஆய்ந்த நீள் நிமிர் சடை` *(புறநா.166)* என்னும் புற நானூறும். நெறித்த சுருண்டு கிடந்த. பம்பை - கீழ்வீழ்ந்து தொங்காமல் தம்பிடரியின் அளவாக உள்ள தலைமயிர்.

நண்ணிய தவச்சிவ யோக நாதரைக்
கண்ணுற நோக்கிய காத லன்பர்தாம்
புண்ணியத் தொண்டராம் என்று போற்றிசெய்
தெண்ணிய உவகையால் எதிர்கொண் டேத்தினார். **#372**

தம் மனைக்கண் இவ்வாறு எழுந்தருளிய தவத்தினையுடைய சிவயோகியாராகிய பெருமானாரைத் தம்முடைய கண்களால் கண்டு மகிழ்ந்த திருநீலகண்டர், இவர் புண்ணிய வடிவுடைய ஒரு சிவனடியார் ஆவர் என்று கருதிப் போற்றி, மகிழ்ச்சியால் நன்கு வரவேற்பதற்குரிய இன்னுரைகளோடு எதிர் கொண்டு வழிபட்டார்.

விளக்கவுரை

எண்ணியவகை - நன்கு மதிக்கத்தகுந்த வகையில். தாம் - அசை நிலை.

பிறைவளர் சடைமுடிப் பிரானைத் தொண்டரென்று
உறையுளில் அணைந்துபே ருவகை கூர்ந்திட
முறைமையின் வழிபட மொழிந்த பூசைகள்
நிறைபெரு விருப்பொடு செய்து நின்றபின். **#373**

இளம் பிறை வளர்தற்கிடனாகிய சடைமுடியினை யுடைய சிவபெருமானை, அவர் அடியார் என்று கருதி அவரை அழைத்துக் கொண்டு தம்முடைய வீட்டிற்குச் சென்று, பெருமகிழ்வு மிக, அடியவர்களை ஏற்றுப் போற்றுதற்கான வழிபாடுகளை முறைமை யாகத் தம் உள்ளத்து நிறைந்த பெருவிருப்போடு செய்து நிறைவுற்ற பின்,

விளக்கவுரை

`திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி` *(தி.4 ப.11 பா.5)* என்பதால்

`பிறைவளர் சடை` என்றார். உறையுள் - இருப்பிடம்: திரு நீலகண்டரின் இல்லம். மொழிந்த பூசைகள் - அடியவரை வழிபடுதற் கென அமைந்த முறை. அது `கொண்டு வந்து மனைப்புகுந்து` எனப்பின்னர்வரும் திருப்பாடலில் *(தி.12 பு.4 பா.4)* விளக்கப்படும்.

எம்பிரான் யான்செயும் பணிஎது என்றனர்
வம்புலா மலர்ச்சடை வள்ளல் தொண்டனார்
உம்பர்நா யகனும்இவ் வோடுன் பால்வைத்து
நம்பிநீ தருகநாம் வேண்டும் போதென்று. **#374**

நறுமணம் கமழும் மலர்களைத் திருச்சடையின் கண் கொண்டிலங்கும் சிவபெருமானின் அடியவராகிய திருநீலகண் டர், எம் தலைவனாக உள்ள பெருமானே! அடியேன் மேதகவமைந்த தங்கட்குச் செய்யத்தகும் பணிவிடை யாது? என்று வினாவினர். சிவபெருமானாகிய சிவயோகியாரும், சிறந்த திருத்தொண்டனே! இத்திருவோட்டை உன்னிடத்தில் வைத்திருந்து நாம் விரும்பும் பொழுது நீ கொடுப்பாயாக, என்று கூறி.

விளக்கவுரை

வம்பு - நறுமணம்.

தன்னையொப் பரியது தலத்துத் தன்னுழைத்
துன்னிய யாவையுந் தூய்மை செய்வது
பொன்னினும் மணியினும் போற்ற வேண்டுவது
இன்னதன் மையதிது வாங்கு நீயென. **#375**

இவ்வோட்டினை ஒப்பிடின் தனக்குத் தானே ஒப்பானது. இவ்வுலகில் தன்னிடத்தில் சேர்ந்த பொருள்கள் அனைத் தையும் தூய்மையாக்குவது. இது பொன், மணிகள், ஆகியவற்றைக் காட்டிலும் போற்றத்தக்கது. இத்தகைய சிறப்புடைய இவ்வோட்டை நீ வாங்குக எனக் கொடுக்க,

விளக்கவுரை

ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் ஞானியர் தம் திருக்கையில் இருப்பதாதலின் இத்துணைப் பெருமை உடையதா யிற்று. இவருக்கு ஓடும் கவந்தியும் அல்லது உறவில்லை என்பதும் அறியத்தக்கது. வாங்கு நீ என்றார், இவ்வோட்டை மீண்டும் என்னி டத்தில் கொடுத்தற்குரியை அல்லை என்னும் குறிப்புப் புலப்பட.

தொல்லைவேட் கோவர்தங் குலத்துள் தோன்றிய
மல்குசீர்த் தொண்டனார் வணங்கி வாங்கிக்கொண்டு
ஒல்லையின் மனையிலோர் மருங்கு காப்புறும்
எல்லையில் வைத்துவந் திறையை யெய்தினார். **#376**

பழமை வாய்ந்த குயவர்தம் குலத்தில் தோன்றிய நிறைந்த

புகழினையுடைய திருநீலகண்டர், அத்திருவோட்டைத் தொழுது வாங்கிக் கொண்டு, விரைவாகத் தம் வீட்டில் காப்புமிக்க தோர் இடத்தில் வைத்து, மீண்டும் சிவபெருமானாகிய சிவயோகியை அடைந்தார்.

விளக்கவுரை

ஒல்லையின் - விரைந்து. காப்புறும் எல்லையில் - பிறர் எவரும் அறியாதவாறு காப்பு மிக்கதோர் இடத்தில். இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

வைத்தபின் மறையவ ராகி வந்தருள்
நித்தனார் நீங்கிட நின்ற தொண்டரும்
உய்த்துடன் போய்விடை கொண்டு மீண்டனர்
அத்தர்தாம் அம்பல மணைய மேவினார். **#377**

தம் திருவோட்டைத் திருநீலகண்டர், காப்பான தோர் இடத்தில் வைத்தார் என்பதை அறிந்த சிவயோகியாராகிய பெருமான், அவ்விடத்தினின்றும் பெயர்ந்தாராக, அங்கிருந்த திருநீல கண்டரும் அவருடன் சிறிது தூரம் சென்று பின் விடைபெற்று மீண்ட னர். இறைவரும் தம் திருவம்பலத்தை அடைந்தார்.

விளக்கவுரை

தம் இல்லத்திற்குப் பெரியவர்கள் வந்து செல்லின், அவரைச் சிறிது தூரம்வரை சென்று, பின் அவரிடம் விடைபெற்று வருதல் மரபாகும். ஆதலின் `உய்த்துடன் போய் விடைகொண்டு மீண்டனர்` என்றார்.

சாலநாள் கழிந்த பின்பு
தலைவனார் தாமுன் வைத்த
கோலமார் ஓடு தன்னைக்
குறியிடத் தகலப் போக்கிச்
சீலமார் கொள்கை யென்றுந்
திருந்துவேட் கோவர் தம்பால்
வாலிதாம் நிலைமை காட்ட
முன்புபோல் மனையில் வந்தார். **#378**

இந்நிகழ்ச்சிக்குப் பின் பல நாள்கள் கழிந்த நிலையில், சிவயோகியார் தாம் முன்பு அவரிடத்து வைத்த அழகிய திருவோட்டை அவர் பாதுகாப்பாக வைத்திருந்த இடத்தினின்றும் மறையச் செய்து, சிறப்பு அமைந்த பத்திமையினால் என்றும் திருந்திய குணத்தை உடைய திருநீலகண்டரிடத்துள்ள தூய அப்பத்திமையைப் பிறரும் உணருமாறு செய்ய, முன்பு வந்தது போன்ற வேடங் கொண்டு, அவர் மனைக்கு எழுந்தருளினார்.

விளக்கவுரை

கோலம் ஆர் ஓடு - அழகு மிக்க திருவோடு. இவ்வழகு மேல் *375*ஆம் பாடலில் குறிக்கப்பெற்றது. குறியிடத்து - குறிப்பாக வைத்திருந்தவிடத்து. வாலிதாம் நிலைமை - தூய அன்பு கொண்ட அவர்தம் நிலைமை. `வாலிதாம் இன்பமாம்` என முன்னர் வந்த ஆட்சியும் *(தி.12 சரு.1-5 பா.107)* காண்க.

வந்தபின் தொண்ட னாரும்
எதிர்வழி பாடு செய்து
சிந்தைசெய் தருளிற் றெங்கள்
செய்தவ மென்று நிற்ப
முந்தைநா ளுன்பால் வைத்த
மொய்யொளி விளங்கும் ஓடு
தந்துநில் என்றான் எல்லாந்
தான்வைத்து வாங்க வல்லான். **#379**

இவ்வாறு யோகியார் தம் மனைக்கு எழுந்தருளிய பின்பு, திருநீலகண்டரும் எதிர் கொண்டு அழைத்து வந்து, முறைமை யாக வழிபாடும் செய்து, `பெருமான் அடியேன் இல்லத்திற்குத் திரு வுளங்கொண்டு எழுந்தருளியது நாங்கள் செய்த பெருந்தவமே யாகும்` என்று கூறி, அவர் திருமுன் நிற்ப, எல்லாப் பொருள்களையும் தானே வைக்கவும் வாங்கவும் வல்லானாகிய அச்சிவயோகியாராம் இறைவன், `முன்னாள் நின்னிடத்தில் யான் வைத்த பேரொளி மிக்க திருஓட்டினை எனக்கு அளித்து நிற்பாயாக` என்று அருளிச் செய்தார்.

விளக்கவுரை

`விச்ச தின்றியே விளைவு செய்குவாய், விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும் வைச்சு வாங்கு` *(தி.8 ப.5 பா.96)* வல்லவனாய்த் தோன்ற, `எல்லாம் தான் வைத்து வாங்க வல்லான்` என்றார். அத்தகைய பெருமையுடையோனுக்கு, இத்திருவோட் டினையும் வைத்து வாங்கல் அரிதோ*?* அன்று, என்றவாறு. தந்துநில் என்பது மீளஅத்திருவோட்டை என்னிடம் கொடுத்த பின்*,* எதனையும் செய்க என்னும் குறிப்பினது. விரைவும் அச்சுறுத்தலும் தோன்ற நின்றது.

என்றவர் விரைந்து கூற
இருந்தவர் ஈந்த ஓடு
சென்றுமுன் கொணர்வான் புக்கார்
கண்டிலர் திகைத்து நோக்கி
நின்றவர் தம்மைக் கேட்டார்
நேடியுங் காணார் மாயை

ஒன்றுமங் கறிந்தி லார்தாம்
உரைப்பதொன் றின்றி நின்றார். **#380**

இவ்வாறு விரைவும் அச்சுறுத்தலும் தோன்றக் கூறிய அம்மறையவர் திருவோட்டினை, விரைந்து வாங்குதற்குரிய குறிப்போடு கூற, அப்பெருமுனிவர் தந்தருளிய அத்திருவோட்டைத் தம் மனையில் முன் வைத்த இடத்திற்குச் சென்று கொண்டுவருதற்குப் புகுந்த திருநீலகண்டர், அத்திருவோட்டைக் காணாமல் திகைத்துப் பார்த்து, அங்கிருந்தோரை அத்திருவோட்டை யாவரேனும் எடுத்தீர் களா? என்று வினவிக் கொண்டே பிற இடங்களில் தேடியும் காணாதவ ராய், இவ்வாறு மறைந்த மாயை ஒன்றையும் அறியாது, தாம் அச்சிவ யோகியாருக்கு எவ்வித மாற்றமும் கூற இயலாதவராகி அம்மனையி டத்து நின்றிருந்தார்.

விளக்கவுரை

கொணர்வான் - கொண்டுவருதற்காக. வான்ஈற்று வினையெச்ச வாய்பாடு.

மறையவ னாகி நின்ற
மலைமகள் கேள்வன் தானும்
உறையுளிற் புக்கு நின்ற
ஒருபெருந் தொண்டர் கேட்ப
இறையிலிங் கெய்தப் புக்காய்
தாழ்த்ததென் னென்ன வந்து
கறைமறை மிடற்றி னானைக்
கைதொழு துரைக்க லுற்றார். **#381**

சிவயோகியாராக நின்ற உமை ஒரு கூறனாகிய சிவபெருமானும், திருவோட்டை எடுத்து வருதற்கென உட்சென்று, வருதற்குத் தாழ்த்து நின்ற ஒப்பற்ற பெருமையினையுடைய அத்திரு நீலகண்டர் கேட்குமாறு, `இவ்விடத்து மிக விரைவில் எடுத்து வருவதாக மனையுள் புகுந்த நீர், இத்துணைக்காலம் தாழ்ப்பது ஏன்?` என்று கூற, அதுகேட்ட அடியவரும், விரைய வந்து நீலகண்டத்தை மறைத்து வந்திருந்த சிவபெருமானாகிய யோகியாரைக் கைகளால் தொழுது சொல்லத் தொடங்கினார்.

விளக்கவுரை

உறையுள் - மனையகம். இறையில் - விரைவில். கறை மறை மிடறு - நீலநிறம் மறைந்துநிற்கும் திருக்கழுத்து.

இழையணி முந்நூன் மார்பின்
எந்தைநீர் தந்து போன

விழைதரும் ஓடு வைத்த
வேறிடந் தேடிக் காணேன்
பழையமற் றதனில் நல்ல
பாத்திரந் தருவன் கொண்டிப்
பிழையினைப் பொறுக்க வேண்டும்
பெருமவென் றிறைஞ்சி நின்றார். **#382**

`நூல் இழைகளால் அழகுபெறச் சேர்க்கப்பெற்ற முந்நூலையணிந்த மார்பினையுடைய எம்முதல்வரே! நீவிர் என்னிடத்துக் கொடுத்துச் சென்ற விரும்பத்தகும் அத்திருஓடு வைத்தவிடத்தும் பிறவிடத்தும்கூடத் தேடிக்கண்டிலேன். பெருமானே! நும் பழைய திரு ஓட்டினும் புதிதாக வனையப்பெற்றிருக்கும் நல்ல திரு ஓட்டினைத் தருகின்றேன்; அதனை ஏற்று இப்பிழையைப் பொறுத்தருள வேண்டும்` என்று வணங்கி விண்ணப்பித்து நின்றார்.

விளக்கவுரை

இழை - நூல்இழை: ஒன்பது கொண்ட மூன்று புரிநுண்ஞாண். வைத்த இடம் வேறிடம் எனத் தனித்தனிக் கூட்டுக. பழைய ஓடு ஆதலால் அது அழகு கெட்டிருக்கும், விரைவில் அழியத் தக்கதாயும் இருக்கும். அவ்வோட்டிற்கு மாறாகப் புதிதாகத் தரும் நல்ல ஓடு என்றால் அழகுடையதாகவும் இருக்கும், நீடித்த பயனுடைதாகவும் இருக்கும் என்பார் `பழைய மற்றதனில் நல்ல பாத்திரம் தருவன்` என்றார். எனினும் கொடுத்த பொருளைத் திரும்பத் தாராதது பிழையே என்பார் `பிழையினைப் பொறுக்க வேண்டும்` என்றும் வேண்டினார். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

சென்னியால் வணங்கி நின்ற
தொண்டரைச் செயிர்த்து நோக்கி
என்னிது மொழிந்த வாநீ
யான்வைத்த மண்ணோ டன்றிப்

பொன்னினா லமைத்துத் தந்தாய்
ஆயினுங் கொள்ளேன் போற்ற முன்னைநான் வைத்த வோடே
கொண்டுவா வென்றான் முன்னோன். **#383**

இவ்வாறு தலைவணங்கித் தம்மை வேண்டிக் கொண்ட திருநீலகண்டரைச் சினந்து, பார்த்து, ``இவ்வாறு நீ கூறியது தான் என்னாம்? யான் உன்னிடத்து வைத்த மண் ஓடேயன்றிப் பொன்னால் செய்ததொரு ஓட்டைக் கொடுத்தாயாயினும் அதனைக் கொள்ளமாட்டேன். காப்பாற்றித் தருமாறு முன்னை நாளில் நான் கொடுத்து வைத்த அவ்வோட்டினையே கொண்டு வா` என்று எவ்வு

யிர்க்கும் முன்னோனாகிய அவ்யோகியார் கூறினார்.

விளக்கவுரை

செயிர்த்து - சினந்து. போற்ற - காப்பாற்றி வைக்குமாறு கூறிய, முன்னோன் - எவ்வுயிர்க்கும் காலத்தாலும் சீலத்தாலும் பேரருள் திறத்தாலும் முதல்வனாய் இருப்போன்: `முன்னோன் காண்க முழுதோன் காண்க` என்னும் *(தி.8 ப.3 வரி.29)* திருவாசகமும்.

கேடிலாப் பெரியோய் என்பால்
வைத்தது கெடுத லாலே
நாடியுங் காணேன் வேறு
நல்லதோர் ஓடு சால
நீடுசெல் வதுதா னொன்று
தருகின்றேன் எனவுங் கொள்ளாது
ஊடிநின் றுரைத்த தென்றன்
உணர்வெலா மொழித்த தென்ன. **#384**

என்றும் கெடுதலில்லாத பெரியோனே! நீர் என்னிடத்து வைத்த திருஓடு காணாதாக, அதனை எவ்விடத்தும் தேடியும் யான் காணேன் அதனின் நல்லதொரு திருஓடு மிக நீண்ட காலம் நீடித்துப் பயன்படத்தக்கதாய் இருப்பதொன்றைக் கொடுக்கின் றேன் என்று சொல்லவும், அதனை ஏற்றருளாது சினந்து அதனையே கொடு என்று கூறியது, என் உணர்வு முழுமையையும் ஒழித்துவிட்டது என்று அடியவர் கூற.

விளக்கவுரை

இறைவன் ஈறிலாதவன் ஆதலின் `கேடிலாப் பெரியோய்` என்றார். ஓர் இடத்தில் வைத்த பொருள் அவ்விடத்தில் இல்லை என்றால், வேறிடத்திலும் தேடிப் பார்ப்பது இயற்கை.
அவ்வாறு தேடியும் காணவில்லையெனில் அதுபோன்ற தொன்றைக் கொடுத்தலே அமைவதாகும். அவ்வமைவைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளாத போது அதற்கு மேலாகவும் சிந்தனை செய்வதற்கு ஒன்று இன்மையின் `என் உணர்வெல்லாம் ஒழித்தது` என்றார்.

ஆவதென் நின்பால் வைத்த
அடைக்கலப் பொருளை வெளவிப்
பாவகம் பலவும் செய்து
பழிக்குநீ யொன்றும் நாணாய்
யாவருங் காண உன்னை
வளைத்துநான் கொண்டே யன்றிப்
போவதுஞ் செய்யே னென்றான்
புண்ணியப் பொருளாய் நின்றான். **#385**

`இனி நின்னிடத்து ஆக வேண்டியது என்ன? நின்னிடத்து அடைக்கலமாக யான் வைத்த பொருளைக் கவர்ந்து கொண்டு, அதனை மறைத்தற்குரிய வஞ்சனையான நடிப்பைச் செய்து, பழியான இச்செயல் செய்ததற்கு, நீ சிறிதும் நாணாதவனாய் இருக்கின்றாய். அதனால் இவ்வூரில் உள்ளார் யாவரும் காண உன்னைப் பற்றிக் கொண்டு, என்திருஓட்டைப் பெற்றுக் கொள்வ தல்லால் இவ்விடத்தினின்றும் யான் போகவும் மாட்டேன்` என்று புண்ணியத்தின் வடிவாய் நின்ற அச்சிவயோகியார் கூறினார்.

விளக்கவுரை

பாவகம் பலவும் செய்து - பிறர் நம்புமாறு நடிப்பாகப் பல செயல்களையும் செய்து *(பாசாங்கு செய்து)*. வளைத்துப்பற்றி - எங்கும் செல்ல ஒட்டாது, தடுத்து நின்னைப் பற்றி. `தொடுத்தும் கொள்ளாதமையலன்` *(புறநா. 164)*, `இம்மையே உன்னைச் சிக் கெனப்பிடித்தேன் எங்கெழுந்து அருளுவது இனியே` *(தி.8 ப.37 பா.3)* எனவரும் திருவாக்குகளையும் நோக்குக.
`பாவகம் பலவும் செய்து` என்பதால், சிவோகம் பாவனை செய்து கைவந்தவர் என்றும், பழிக்கு நீ நாணாய் என்பதால் `நாடவர் பழித்துரை பூணதுவாகக் கொள்வாய்` என்றும், `வளைத்து நான் கொண்டேயன்றி` என்பதால், நின்னையும் நின் வாழ்க்கைத் துணை யையும் சேர்த்து என் உலகத்திற்குக் கொண்டு செல்லல் அன்றி இங்கு விடேன் என்றும் குறிப்புப் பொருள்பட நின்றன என்பார் சிவக் கவிமணியார் *(பெரிய. பு. உரை)*

வளத்தினான் மிக்க ஓடு
வௌவினேன் அல்லேன் ஒல்லை
உளத்தினுங் களவி லாமைக்
கென்செய்கேன் உரையு மென்னக்
களத்துநஞ் சொளித்து நின்றான்
காதலுன் மகனைப் பற்றிக்
குளத்தினின் மூழ்கிப் போவென்
றருளினான் கொடுமை யில்லான். **#386**

`பொருளும், அருமையும் ஆய வளங்களால் அத்திருவோட்டைக் கவர்ந்து கொண்டேன் அல்லேன். என் மனத் தகத்தும் அக்கள்ளமில்லாமையைக் காட்டுதற்கு யாது செய்வேன்?` என்று கேட்க, திருமிடற்றின்கண் உள்ள நஞ்சினால் ஆய கருமையை மறைத்து நின்ற சிவபெருமானாகிய கொடுந்தன்மையற்ற சிவ யோகியானவர், `நின் விருப்பத்திற்குரிய நின் மகன் கையைப் பிடித்துக் கொண்டு திருக்குளத்தில் மூழ்கியவாறு நான் எடுக்கவில்லை என்னும் உறுதி மொழியைக் கூறிச் செல்க` என்றருளிச்

செய்தார்.

விளக்கவுரை

உளத்தினும் களவிலாமைக்கு என்செய்கேன் என்பது அதன் வழி வரும் சொல்லானும் செயலானும் கூடக் களவின்மையை உணர்த்தியவாறாயிற்று. `உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல்` *(குறள், 282)* என வரும் திருக் குறளையும் நினைவு கூர்க. அடியவரிடத்து இத்துணைக் கடுமையாக நடந்துகொள்வதும் அவர் பெருமையை உலகிற்குக் காட்டவும், அவர்வழி அவர்தம் மனைவியாரையும் ஆட்கொள்ளவுமேயாம், என்பது தோன்றக் `கொடுமையில்லான்` என்றார்.

ஐயர்நீ ரருளிச் செய்த
வண்ணம்யான் செய்வ தற்குப்
பொய்யில்சீர்ப் புதல்வ னில்லை
என்செய்கேன் புகலு மென்ன
மையறு சிறப்பின் மிக்க
மனையவள் தன்னைப் பற்றி
மொய்யலர் வாவி புக்கு
மூழ்குவாய் எனமொ ழிந்தார். **#387**

`அருள் மிக்க அடிகளே! நீர் அருளிச் செய்த வண்ணம் அடியேன் செய்தற்குக் குற்றமற்ற சிறப்பினையுடைய மகன் இல்லை. யான் அதற்கு என்செய்வேன்! அருளிச் செய்யும்` என்று விண்ணப்பம் செய்ய, `குற்றமற்ற சிறப்பால் உயர்ந்த உன் மனைவி யின் கையைப் பிடித்துக்கொண்டு நெருங்கிய மலர்களையுடைய திருக் குளத்திற்குச் சென்று மூழ்கியவாறு உறுதி கூறுவாயாக` என்றருளினார்.

விளக்கவுரை

`மற்றதன் நன்கலம் நன் மக்கட்பேறு` *(குறள், 60)* `மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே` *(புறநா. 188)* என வருவனவற்றால் மக்கட் பேற்றின் அருமை விளங்கும். அத்தகைய சிறப்பு மிக்க மகவில்லை என்பார் `பொய்யில் சீர்ப் புதல்வன் இல்லை` என்றார்.

கங்கைநதி கரந்தசடை
கரந்தருளி யெதிர்நின்ற
வெங்கண்விடை யவர்அருள
வேட்கோவ ருரைசெய்வார்
எங்களிலோர் சபதத்தால்
உடன்மூழ்க இசைவில்லை

பொங்குபுனல் யான்மூழ்கித்
தருகின்றேன் போதுமென. #388

கங்கையை உள்ளடக்கியிருக்கும் திருச்சடை முடியை மறைத்தருளி, தம்முன் எதிராக எழுந்தருளி நிற்கும் சினம் மிக்க கண்களையுடைய ஆனேற்றை ஊர்தியாகக் கொண்டருளும் சிவபெருமானாகிய யோகியார், இவ்வாறு அருளிச் செய்ய, திருநீல கண்டர் அதற்கு மறுமொழி கூறுவாராய், யானும் என் மனையாளும் ஒரு சூளுறவால் கையைத் தீண்டி மூழ்குதற்கு இயலாதுள்ளது ஆதலின், நீர் மிக்க திருக்குளத்தில் நானே மூழ்கி என் உறுதிப்பாட்டை மெய்ப்பிக் கின்றேன்; வாரும் என்று சொல்ல.

விளக்கவுரை

சூளுறவு - சபதம்.

தந்ததுமுன் தாராதே
கொள்ளாமைக் குன்மனைவி
அந்தளிர்ச்செங் கைப்பற்றி
அலைபுனலின் மூழ்காதே
சிந்தைவலித் திருக்கின்றாய்
தில்லைவா ழந்தணர்கள்
வந்திருந்த பேரவையில்
மன்னுவன்யா னெனச்சொன்னார். #389

நான் முன் கொடுத்த திருவோட்டைக் கொடுக் காமலும், அதனை நான் வஞ்சித்து எடுத்துக் கொள்ளவில்லை என்பதைத் தெரிவிப்பதற்கு உன் மனைவியின் அழகிய தளிர் போன்ற சிவந்த கையைப் பிடித்து அலை வீசுகின்ற நீரின் மூழ்கிச் சொல்லா மலும், மனத்தை வலிமை செய்து கொண்டிருக்கின்றாய். தில்லைவாழ் அந்தணர்கள் வந்து கூடியிருந்த பெருமை வாய்ந்த ஊர்ச் சபையில் இவ்வழக்கைச் சென்று சொல்லுவன்` என்று அருளிச் செய்தார்.

விளக்கவுரை

தில்லைவாழ் அந்தணர்கள் வந்திருந்த பேரவையின் மன்னுவன் யான் - தில்லைவாழ் அந்தணர்கள் கூடியிருக்கும் பேரம் பலத்தில் என்றும் வாழ்ந்திருப்பவன் யான் எனும் பொருளும் அமைய இருப்பது அருமையுடைத்தாம். ஏ இரண்டும் அசை நிலைகள். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

நல்லொழுக்கந் தலைநின்றார்
நான்மறையின் துறைபோனார்
தில்லைவா ழந்தணர்கள்

வந்திருந்த திருந்தவையில்
எல்லையிலான் முன்செல்ல
இருந்தொண்ட ரவர்தாமும்
மல்குபெருங் காதலினால்
வழக்கின்மே லிட்டணைந்தார். **#390**

நல்லொழுக்கத்தில் முதன்மையாக நிற்பவர்களும், நான் மறைகளாகிய கடலின் கரையைக் கண்டவர்களும்ஆகிய தில்லைவாழ் அந்தணர்கள் கூடியிருந்த திருத்தமான ஊர்ச்சபை யிடத்து, அளவிறந்த குணங்களையுடைய சிவயோகியார் முன்னே எழுந்தருள, பெருமை மிக்க திருநீலகண்டரும் மிகுந்த பேரன்போடு அவ் வழக்கை மேற்கொண்டு பின் சென்றார்.

விளக்கவுரை

திருந்து அவை - அறிவானும் பண்பானும் திருந்திய அவை. ஆன்றோர் தம்மிடத்து வந்த வழக்கையும் திருந்திய முறையில் தீர்த்து வைப்பர் என்பது பற்றித் `திருந்தவை` என்றார். தாம் திருந்தியும், பிறர் திருந்துமாறும் செய்து வரும் அவை. `சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க் கணி` *(குறள், 118)* என்பர் திருவள்ளுவரும்.

அந்தணனாம் எந்தைபிரான்
அருமறையோர் முன்பகர்வான்
இந்தவேட் கோவன்பால்
யான்வைத்த பாத்திரத்தைத்
தந்தொழியான் கெடுத்தானேல்
தன்மனைவி கைப்பற்றி
வந்துமூழ் கியுந்தாரான்
வலிசெய்கின் றான்என்றார். **#391**

மறையவர் வடிவில் வந்த எம் சிவயோகியாரும் அரிய நான்மறைகளை உணர்ந்த தில்லைவாழ் அந்தணர்கள் கூடி யிருந்த பேரவையில் இவ்வாறு அருளிச் செய்வார்: `இந்தத் திருநீல கண்டக் குயவன், யான் அவனிடத்துக் கொடுத்து வைத்த திரு வோட்டைத் திருப்பிக் கொடுக்காதிருக்கின்றான்; அதனைக் கெடுத் திருப்பனாயின் அதை உறுதி செய்தற்குத் தன் மனையாள் கையைப் பற்றி வந்து குளத்தில் மூழ்கிச் சொல் என்றால் அதுவும் செய்யாதிருக் கின்றான்; வன்கண்மை உடையனாய் இருக்கின்றான்` என்று கூறினார்.

விளக்கவுரை

`கெடுத்தானேல்` என்றார் அதுதனக்கு உடன் பாடில்லை என்பது

காட்டற்கு.

நறைகமழுஞ் சடைமுடியும்
நாற்றோளும் முக்கண்ணும்
கறைமருவுந் திருமிடறுங்
கரந்தருளி எழுந்தருளும்
மறையவனித் திறமொழிய
மாமறையோர் உரைசெய்வார்
நிறையுடைய வேட்கோவர்
நீர்மொழியும் புகுந்ததென. **#392**

நறுமணம் கமழும் சடைமுடியினையும், நான்கு திருத்தோள்களையும், முக்கண்களையும், கருநிறம் பொருந்திய திருக் கழுத்தினையும் மறைத்துக் கொண்டு சிவயோகியராய் எழுந்தருளி வந்த மறையவர் இவ்வாறு கூற, பெருமை பொருந்திய தில்லையி லிருக்கும் ஊரவையினரும், `சால்பமைந்த திருநீலகண்டரே! இது பற்றிய நும் கருத்தைச் சொல்லுவீராக` என்று கூற.

விளக்கவுரை

`நிறை எனப்படுவது மறைபிறர் அறியாமை என்பர்` *(கலித்.நெய்.16).* அவ்வரும் பண்பை உடையவராதல் பற்றி `நிறையுடைய வேட்கோவர்` என்றார்.

நீணிதியாம் இதுவென்று
நின்றவிவர் தருமோடு
பேணிநான் வைத்தவிடம்
பெயர்ந்துகரந் ததுகாணேன்
பூணணிநூன் மணிமார்பீர்
புகுந்தபரி சிதுவென்று
சேணிடையுந் தீங்கடையாத்
திருத்தொண்டர் உரைசெய்தார். **#393**

`பெருஞ் செல்வம் இதுவென்று கூறி இங்கு நிற்கும் இப்பெரியவரால் முன் கொடுக்கப்பட்ட திருஓடு நான் பெரிதும் பாதுகாத்து வைத்த இடத்தினின்றும் மறைந்து விட்டது. அவ்விடத் திலன்றிப் பிறவிடத்தும் தேடிக் கண்டிலேன். முப்புரி நூலை அணியாக மார்பில் கொண்டிருக்கும் மறையவர்களே! நடந்த நிகழ்ச்சி இதுவாம்` என்று, தீங்கென்பது நெடுந்தொலைவிலும் தம்மை அடையாதவராய திருநீலகண்டர் கூறினார்.

விளக்கவுரை

கொடுத்ததைத் தாராமலும், பெரியவர் கூறுமாறு சூளுறாமலும்,

பேரவையின் தீர்ப்புக்கு முன்னிற்கும் இவ்வடிய வர்க்குத் தீங்கு வந்து விடுமோ! என்று ஐயுறாது இருத்தற் பொருட்டு, அண்மையில் மட்டுமன்றிச் சேய்மையிலும் அவருக்குத் தீங்கு வாராது என்பார், `சேணிடையும் தீங்கடையாத் திருத் தொண்டர்` என்றார். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

திருவுடை யந்த ணாளர்
செப்புவார் திகழ்ந்த நீற்றின்
உருவுடை யிவர்தாம் வைத்த
வோட்டினைக் கெடுத்தீ ரானால்
தருமிவர் குளத்தின் மூழ்கித்
தருகவென் றுரைத்தா ராகில்
மருவிய மனைவி யோடு
மூழ்குதல் வழக்கே யென்றார். **#394**

இருவர்தம் கூற்றையும் கேட்ட ஞானச் செல்வத் தையுடைய அவ்வவையோர், தீர்ப்புச் சொல்வார்களாய், விளங்கிய திருஓட்டை நீர் வைத்த விடத்துக் காணீராயின், அத்திரு ஓட்டை உம்மிடத்துக் கொடுத்த இவர், குளத்தில் மூழ்கி அச் சொல்லை உறுதி செய்து தருவீராக என்று கூறுவாரானால், அவர் கூறுமாறு நீர், நும் இல் வாழ்க்கைக்கு அமைந்த மனைவியோடும் மூழ்கி, அவ்வுறுதி மொழி யைச் சொல்லுதலே முறைமையாம் என்று கூறினார்கள்.

விளக்கவுரை

திரு - ஞானச் செல்வம். `உறுவது நீற்றின் செல்வமும், பெறுவது சிவன் பால் அன்புமாகக் கொண்டவர்களாதலின்,இத்திரு அத்தகைய ஞானச் செல்வத்தைக் குறித்ததாம்.
இச் சிவயோகியார் தந்த ஓட்டைத் திரும்ப நீர் கொடுக்கும் வாய்ப்பு அமையாத பொழுது அவர் கூறுமாறு செய்வதே அறம், அதுவே அவருக்குத் தெளிவுதரும் ஆதலின், `மூழ்குதல் வழக்கே` என்றார். வழக்கு - அறம்: முறைமை. தாம் - அசைநிலை.

அருந்தவத் தொண்டர் தாமும்
அந்தணர் மொழியக் கேட்டுத்
திருந்திய மனைவி யாரைத்
தீண்டாமை செப்ப மாட்டார்
பொருந்திய வகையான் மூழ்கித்
தருகின்றேன் போது மென்று
பெருந்தவ முனிவ ரோடும்
பெயர்ந்துதம் மனையைச் சார்ந்தார். **#395**

அரிய தவத்தினையுடைய திருநீலகண்டரும் அவையத்தார் இவ்வாறு

கூறக்கேட்டு, மனையறத்தில் வழுவாத தம் மனைவியாரைத் தீண்டாமல் இருத்தற்குரிய காரணத்தை அவ்விடத் துச் சொல்லாதவராய்ப் பொருந்திய வகையில் நீரில் மூழ்கி உறுதி கூறுகின்றேன்; என்னுடன் வருவீராக என்று கூறி, பெரிய தவத்தை யுடைய சிவயோகியாரோடு தாமும் அவ்விடத்தினின்றும் பெயர்ந்து வீட்டை அடைந்தார்.

விளக்கவுரை

தம் மனைவியாரிடத்துத் திருநீலகண்டத்தின்மேல் ஆணை கூறிச் செப்பிய மொழியை, அயலறியாது காத்து வாழ்ந்தவ ராதலால், மனையாளொடு மூழ்கித் தரும் பொழுதும் அவரைத் தீண்ட இயலாமையை அந்தணர்களிடம் செப்ப மாட்டாதவராய் இருத்தலின், `பொருந்திய வகையால் மூழ்கித் தருகின்றேன்` என்றார். தாம் - அசைநிலை.

மனைவியார் தம்மைக் கொண்டு
மறைச்சிவ யோகி யார்முன்
சினவிடைப் பாகர் மேவுந்
திருப்புலீச் சுரத்து முன்னர்
நனைமலர்ச் சோலை வாவி
நண்ணித்தம் உண்மை காப்பார்
புனைமணி வேணுத் தண்டின்
இருதலை பிடித்துப் புக்கார். **#396**

தம்மனைவியாரை அழைத்துக் கொண்டு மறை யவர் வேடங்கொண்டு நிற்கும் சிவபெருமானாகிய சிவயோகியார் முன்பு, சினம் மிக்க ஆனேற்றை ஊர்தியாகக் கொண்டிருக்கும் சிவ பெருமான் வீற்றிருந்து அருளும் திருப்புலீச்சரம் எனும் திருக் கோயிலின் முன்னுள்ள அரும்புகளும் மலர்களும் உடைத்தாகிய சோலை சூழ்ந்த அத்திருக்குளத்திற்கு அண்மையில் வந்து, தம் மனைவியாரைத் தீண்டாதிருக்கும் உண்மையை அங்கும் காப்பாராய், மணிகள் இழைத்த மூங்கில் தண்டின் இருபுறத்தையும் தாமும் மனைவியாருமாகப் பிடித்துக் கொண்டு திருக்குளத்தில் இறங்கினார்கள்.

விளக்கவுரை

திருப்புலீச்சரம் - புலிக்கால் முனிவரராகிய வியாக் கிரபாதர், சிவலிங்கத் திருமேனியை எழுந்தருளுவித்து வழிபட்ட இடம் ஆதலின் இப்பெயர் பெற்றது. இது கூத்தப் பெருமான் திருக் கோயிலின் மேல்பால் சிறிது தொலைவில் உள்ளது. கணம் புல்ல நாயனார் தம் முடியினையே விளக்காக எரித்துப் பேறுபெற்ற இடம் இதுவாகும்.

திருநீலகண்டர் இத்திருக்கோயிலுக்கு அண்மையிலுள்ள திருக்குளத்தில்

மூழ்கி இளமை அடைந்ததனால், இதனை `இளமை யாக்கினார் கோயில்` என வழங்கி வரும் மரபு உளதாயிற்று. சின விடை - இனம் பற்றி வந்த அடைமொழி. நனை - அரும்பு. வேணு - மூங்கில்.

தண்டிரு தலையும் பற்றிப்
புகுமவர் தம்மை நோக்கி
வெண்டிரு நீற்று முண்ட
வேதியர் மாதைத் தீண்டிக்
கொண்டுடன் மூழ்கீ ரென்னக்
கூடாமை பாரோர் கேட்கப்
பண்டுதஞ் செய்கை சொல்லி
மூழ்கினார் பழுதி லாதார். **#397**

இவ்வாறு மூங்கில் தண்டின் இருபுறத்திலுமாகப் பிடித்துக் கொண்டு, திருக்குளத்தில் மூழ்கப் புகும் அத் திருநீல கண்டரைப் பார்த்து, வெண்மையான திருநீற்றை முக்கீற்று வடிவில் அணிந்திருக்கும் சிவயோகியார், `உம் மனையாள் கையைப் பிடித்து மூழ்குவீர்`என்று சொல்ல, குற்றமற்ற திருநீலகண்டரும் தாம் தம் மனைவியாரைத் தீண்டி மூழ்க இயலாதிருக்கும் சூழலை யாவரும் கேட்குமாறு, முன்னாளில் நிகழ்ந்த தம் சூளுறவைச் சொல்லித் திருக்குளத்தில் மூழ்குவாராயினர்.

விளக்கவுரை

திருநீலகண்டர் செய்த சூளுறவு இளமைக் காலத்தில் ஆகும்.
அதற்குப்பின் பல ஆண்டுகள் செல்ல அவர்தம் முதுமைக் காலத்தில் நிகழ்ந்தது இவ்வருஞ்செயலாகும்.
ஆதலின் ஈண்டுப் பண்டு என்றது, ஏறத்தாழ *20* அல்லது *25* ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்திருக்கலாம் என்பதை உய்த்துணரலாம்.
இக்கால எல்லையை முன்னுள்ள *368*ஆவது பாடல் கொண்டும் அறியலாம்.

வாவியின் மூழ்கி ஏறுங்
கணவரும் மனைவி யாரும்
மேவிய மூப்பு நீங்கி
விருப்புறும் இளமை பெற்றுத்
தேவரும் முனிவர் தாமுஞ்
சிறப்பொடு பொழியுந் தெய்வப்
பூவின்மா மழையின் மீள
மூழ்குவார் போன்று தோன்ற. **#398**

திருக்குளத்தின் மூழ்கிக் கரையேறும் திருநீலகண்ட நாயனாரும், அவருடைய மனைவியாரும் தாம் அடைந்த மூப்புப் பருவம் நீங்கி, யாவரும் விரும்பத்தக்க இளமைப் பருவத்தை அடைந்து, தேவர்களும்,

முனிவர்களும் போற்றிப் பொழிந்த தெய்வ மணம் மிக்க மலர் மழையில் மீண்டும் முழுகுகின்றவர்களைப் போலப் பொலிவடைந்து தோன்ற.

விளக்கவுரை

விருப்புறும் இளமை - யாவரும் விரும்பத்தக்க இளமை. பிற உயிர்களிடத்து இவ்விளமை செல்லின் ஒரு கால எல்லையில், தன் தன்மை கெடுதலின், அவ்வுயிர்களை விடுத்து, இவர்களிடத்து விருப்புற்றுப் பொருந்திய இளமை என்பார். `விருப்புறும் இளமை` என்றார் என்றலும் ஒன்று. தாம் - அசைநிலை.

அந்நிலை யவரைக் காணும்
அதிசயங் கண்டா ரெல்லாம்
முன்னிலை நின்ற வேத
முதல்வரைக் கண்டா ரில்லை
இந்நிலை இருந்த வண்ணம்
என்னென மருண்டு நின்றார்
துன்னிய விசும்பி னூடு
துணையுடன் விடைமேற் கண்டார். **#399**

வியக்கத் தக்க இளமைப் பருவம் அடைந்த அவ் விருவரையும் கண்டவர்கள் யாவரும் இது காறும் தமக்கு முன்னிருந்த மறைமுதல்வராகிய சிவயோகியாரைக் காணவில்லை. இவ்வாறு நிகழ்ந்த வண்ணந்தான் யாது? என்று ஐயுற்று நின்ற திருநீலகண்ட நாயனாரும் மனைவியாரும், யாண்டும் பரந்து நிற்கும் விண்ணிடத்து விடையின் மீது உமையொரு கூறனாய் எழுந்தருளி இருப்பதைக் கண்டார்கள்.

விளக்கவுரை

சிவயோகியாரைக் காணாதாரெல்லாம் விடையின் மேல் உமையொரு பாகனாய் வந்திருப்பாரைக் கண்டாரில்லை. ஆனால், நாயனாரும், அவர் தம் மனைவியாரும் மட்டுமே விடை யின் மேல் எழுந்தருளினாரைக் கண்டனர்.

காரணம் இவர்களை ஆட்கொள்வதே இறைவன் திருவுள்ள மாதலின். கண்டவர்கள் தொழுதும் போற்றியும் நின்றனர்.

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

கண்டனர் கைக ளாரத்
தொழுதனர் கலந்த காதல்
அண்டரும் ஏத்தி னார்கள்
அன்பர்தம் பெருமை நோக்கி
விண்டரும் பொலிவு காட்டி

விடையின்மேல் வருவார் தம்மைத்
தொண்டரும் மனைவி யாருந்
தொழுதுடன் போற்றி நின்றார். **#400**

அவ்வாறு எழுந்தருளியதைக் கண்ட திருநீலகண்ட நாயனார், தம் கைகள் கூப்பி வணங்கினார். அவர்தம் வியத்தகு பெருமையைக் கண்ட சிவபெருமானிடத்து ஒருப்பட்ட பத்திமை உணர்வுடைய தேவர்களும் போற்றிப் புகழ்ந்தார்கள். விண்ணிடத்துக் காணப்படும் திருக்கோலப் பொலிவைத் தமக்குக் காட்டியருளி, ஆனேற்றினை ஊர்தியாகக் கொண்டு எழுந்தருளும் சிவபெருமானைத் திருநீலகண்ட நாயனாரும் அவர்தம் மனைவியா ரும் ஒருங்கு வணங்கிப் போற்றி நின்றார்கள்.

விளக்கவுரை

அன்பர்தம் பெருமை நோக்கிக் கலந்த காதல் அண்டரும் ஏத்தினார்கள் எனக் கூட்டுக. கலந்த காதல் - சிவபெருமானிடத்துக் கொண்ட ஒருமைப்பட்ட பத்திமை.

மன்றுளே திருக்கூத் தாடி
அடியவர் மனைகள் தோறுஞ்
சென்றவர் நிலைமை காட்டுந்
தேவர்கள் தேவர் தாமும்
வென்றஐம் புலனான் மிக்கீர்
விருப்புட னிருக்க நம்பால்
என்றுமிவ் விளமை நீங்கா
தென்றெழுந் தருளி னாரே. **#401**

திருஅம்பலத்தின்கண் ஆனந்தக் கூத்தாடி, அடியவர்களின் இல்லங்கள் தோறும் எழுந்தருளிய பெருவீரரும், தேவர்கட்குத் தலைவரும் ஆன சிவபெருமானும், `ஐவகை நுகர்ச்சிகளையும் வென்றதனால் சிறப்படைந்தவர்களே! நம்மிடத்து அன்போடு நீங்கள் இருவரும் எந்நாளும் இவ்விளமை நீங்காமல் இருந்து வாழ்வீர்களாக` என்று அருளி மறைந்தருளினார்.

விளக்கவுரை

`கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம் புலனும் ஒண்டொடி கண்ணேயுள` *(குறள், 1101)* என்பர் திருவள் ளுவர். அவ் வைம்புல நுகர்வையும் அறத்துறந்து நின்ற பெரியவராகத் திருநீலகண்டரும் அவர் துணையாரும் விளங்குதலின் `வென்ற ஐம்புலனால் மீக்கீர்` என்றார்.

விறலுடைத் தொண்ட னாரும்
வெண்ணகைச் செவ்வாய் மென்றோள்
அறலியற் கூந்த லாராம்

மனைவியும் அருளின் ஆர்ந்த
திறலுடைச் செய்கை செய்து
சிவலோக மதனை யெய்திப்
பெறலரு மிளமை பெற்றுப்
பேரின்பம் உற்றா ரன்றே. **#402**

`உரன் என்னும் தோட்டியான்` (குறள், 24) ஓரைந்தும் காத்த பெருவலிமை உடைய திருநீலகண்ட நாயனாரும் , வெண்மையான பற்களையும், சிவந்த வாயையும், மென்மையான தோளையும், கருமணல் போன்ற கூந்தலையும் உடையவராகிய அவர் மனைவியாரும், சிவபெருமானின் திருவருளினால் யாவரும் செய் தற்கரிய செய்கையைச் செய்து யாவரும் பெறற்கரிய இளமையைப் பெற்றுச் சிவலோகத்தை அடைந்து பேரின்பத்தைப் பெற்றார்கள்.

விளக்கவுரை

விறல் - வலிமை: உரன் என்றும் தோட்டியான் ஓரைந்தும் காத்தொழுகிய வலிமையும், இறைவன்பாலும், அடியவர் பாலும் கொண்டிருந்த பத்திமை வலிமையும் ஆம். ஆணை கூறி வாழ்ந்த இளமைக் காலத்தும், அதன் பின்னரும் புலனடக்கத்தில் வெற்றி கொண்டமைக்குக் காரணம், இருவரும் திருவருள் திறத்தில் ஆழ்ந்திருந்தமையேயாம் என்பார். `அருளின் ஆர்ந்த திறலுடைச் செய்கை` என்றார். இளமை என்பது எவ்வுயிர்களும் ஒரு காலத்தில் பெறத் தக்கதே எனினும், இவ்விருவரும் பெற்ற இளமை என்றும் நீங்காமல் நிலைபெற்று இருத்தற்குரியதாதலின் `பெறலரும் இளமை` என்றார். அன்று, ஏ என்பன அசைநிலைகள்.

அயலறி யாத வண்ணம்
அண்ணலா ராணை யுய்த்த
மயலில்சீர்த் தொண்ட னாரை
யானறி வகையால் வாழ்த்திப்
புயல்வளர் மாட நீடும்
பூம்புகார் வணிகர் பொய்யில்
செயலியற் பகையார் செய்த
திருத்தொண்டு செப்ப லுற்றேன். **#403**

அயலில் உள்ளார் அறியாதவாறு சிவ பெருமானின் திருநீலகண்டத் திருவாணையைப் பாதுகாத்த மயக்க மற்ற சிறப்பினையுடைய திருநீலகண்ட நாயனாரை யான் அறிந்தவாறு போற்றி, மேகங்கள் வளர்கின்ற மாளிகைகள் மிக்க பொலிவினை உடைத்தாகிய காவிரிப் பூம்பட்டினத்தில் வணிகர் குலமரபில் தோன்றிய மெய்ம்மையான பத்திமையுடைய இயற்பகை நாயனார் செய்த திருத்தொண்டைச்

சொல்லத் தொடங்குகின்றேன்.

விளக்கவுரை

உய்த்தல் - கொண்டு செலுத்துதல். மயல் - மயக்கம்: இன்ப நுகர்ச்சிகளாய மயக்கம். புயல் - மேகம்.

இயற்பகை நாயனார் புராணம்

சென்னி வெண்குடை நீடந பாயன்
திருக்கு லம்புகழ் பெருக்கிய சிறப்பின்
மன்னு தொல்புகழ் மருதநீர் நாட்டு
வயல்வ ளந்தர இயல்பினில் அளித்துப்
பொன்னி நன்னதி மிக்கநீர் பாய்ந்து
புணரி தன்னையும் புனிதமாக் குவதோர்
நன்னெ டும்பெருந் தீர்த்தமுன் னுடைய
நலஞ்சி றந்தது வளம்புகார் நகரம். **#404**

சோழர்மரபில் தோன்றிய வெண்கொற்றக்குடை யையுடைய அநபாய சோழரது அரசியல் திருவுடைய, அவர் மரபினர், தம் மிகு புகழை விளங்கச் செய்தற்குக் காரணமாகிய சிறப்பி னால் நிலைபெற்ற பழமையாகிய புகழினையுடைய மருதவளம் மிக்க சோழநாட்டின்கண்உள்ள வயல்வளத்தைத்தருதற்குக் காரணமாய காவிரி,காலம் பிழையாது கொடுத்த நீர் வெள்ளம் பாய்ந்து கட லையும் தூய்மை செய்வதொரு நன்மை பெருகும் புண்ணிய முடைய நீர்வளம் சிறக்க நலம் பெருக்கும் நகரம் காவிரிப் பூம்பட்டினம் ஆகும்.

விளக்கவுரை

சோழர் மரபினர் வழிவழியாக அரசியற்றி வருவதும், வயல் வளம் மிக்க நீர் நாடெனப் போற்றப்படுவதுமான சோழ நாட்டின்கண் உள்ள காவிரிப் பூம்பட்டினம், புனிதமான காவிரியை முகப்பில் கொண்டுள்ளது என்பது கருத்து. நீர் நாடு - சோழநாடு. இயல்பினில் அளித்து - காலம் தவறாதும், மிகுதல், குறைதல் இன்றியும் இயல்பிற் கொடுத்து. புணரி - கடல். முன்னுடைய - முகப்பில் கொண்ட. `மருதநீர் நாட்டு` என்பதால் நாட்டுச் சிறப்பும், `வளம் புகார் நகரம்` என்பதால் நகரச் சிறப்பும், `புணரி தன்னையும் புனிதமாக்குவதோர் நன்னெடும் தீர்த்தம்` என்பதால் ஆற்றுச் (தீர்த்தச் சிறப்பு) சிறப்பும், `அநபாயன் திருக்குலம் புகழ் பெருக்கிய சிறப்பின்` என்பதால் அரசியல் சிறப்பும் ஒருங்குணருமாறு செய்திருக்கும் திறம் எண்ணி மகிழ்தற்குரியதாம்.

அக்கு லப்பதிக் குடிமுதல் வணிகர்
அளவில் செல்வத்து வளமையின் அமைந்தார்
செக்கர் வெண்பிறைச் சடையவ ரடிமைத்
திறத்தின் மிக்கவர் மறைச்சிலம் படியார்
மிக்க சீரடி யார்கள்யா ரெனினும்
வேண்டும் யாவையும் இல்லையென் னாதே
இக்க டற்படி நிகழமுன் கொடுக்கும்

இயல்பின் நின்றவர் உலகியற் பகையார். **#405**

அத்தகைய காவிரிப் பூம்பட்டினத்தின் வணிகர் குலத்தில் முதன்மையுற்று நிற்கும் மிக்க செல்வத்தால் ஆகிய வளத்திற் சிறந்தவரும், வெண்மையான பிறையை அணிந்த சிவந்த திருச்சடை யையுடைய சிவபெருமானுக்கு ஆட்படும் அடிமைத்திறம்பூண்ட வரும் , மறைகளாகிய சிலம்பினை அணிந்த திருவடிகளையுடைய சிவபெருமானின் சிறப்புடைய அடியவர்கள் எவர் வரினும் அவர்க ளுக்கு இல்லை என்னாது கடல்சூழ்ந்த இம்மண்ணுலகத்தில் விளக்க முறத் தொடர்ந்து முற்படக் கொடுத்து மகிழும் இயல்புடையவரு மானவர் இவ்வுலகில் இயற்பகையார் என அழைக்கப்படும் பெய ருடையவராவர்.

விளக்கவுரை

செக்கர் - சிவந்த அந்தி மாலை. கடற்படி - கடல் சூழ்ந்த உலகம். இயற்பகையார் - இஃது அவர் தம் இயற்பெயராகும். இப் பெயர் *416, 419, 432* ஆகிய பாடல்களிலும் தொடர்ந்து வருதல் கொண்டு இதனை அறியலாம். எனினும் இப்பெயர், உலகியற்கைக்கு மாறாக *(பகையாக)* இவர்தம் மனைவியைக் கொடுத்தமையின், உலக இயற்கைக்குப் பகையாகியவர் எனக் காரணப்பெயராகக் கருதவும் இடம் தருகின்றது. ``இனையதொன் றியாரே செய்தார் இயற்பகை பித்தன் ஆனால், புனையிழை தன்னைக் கொண்டு போவதா மொருவன்`` எனப் பின்வரும் *(பா. 416)* கூற்றாலும் இவ்வுண்மை அறியப்படும். இனி எல்லா உடைமைகளையும் எனது எனது எனக்கொள்ளும் உலக இயல்பிற்குப் பகைமையுடையார் எனவும், எல்லாவற்றையும் எம்பிரான் அடியவருடைமை எனக் கொள்ளும் உண்மையியலுக்குப் பகைமையில்லார் *(இயல் பகை யார் - உண்மை இயல்பிற்குப் பகையாக மாட்டார்)* எனவும் எதிர்மறையிலும் உடன்பாட்டிலும் ஆகப் பொருந்தும்படி இயற்பகையார் என்ற பெயர் அமைந்துள்ளது என்பர் சிவக்கவிமணியார் *(பெரிய.பு.உரை)*. இந்நுண்மை அறிந்து போற்றத் தக்கது. ஏகாரம் - அசைநிலை.

ஆறு சூடிய ஐயர்மெய் யடிமை
அளவி லாததோர் உளம்நிறை யருளால்
நீறு சேர்திரு மேனியர் மனத்து
நினைத்த யாவையும் வினைப்பட முடித்து
மாறி லாதநன் னெறியினில் விளங்கும்
மனைய றம்புரி மகிழ்ச்சியின் வந்த
பேறெ லாம்அவ ரேவின செய்யும்
பெருமை யேயெனப் பேணிவாழ் நாளில். **#406**

கங்கையைத் தாங்கிய சிவபெருமானுக்கு மெய் யடிமை செய்தற்குக் காரணமாயும், உள்ளத்தில் நிறைந்த அளவற்ற திரு வருளின் வழித்தாயும், திருநீற்றினை அணிந்ததாயும் உள்ள திருவுடம் பினையுடைய அடியவர்கள், தம் திருவுள்ளத்தில் உளங்கொள்ளும் செயல்களையெல்லாம் அவர் திருவுள்ளம் நிறையுமாறு ஆற்றி, மாறு படுதல் இல்லாத ஒழுக்க நெறியில் நிலைபெற்று விளங்கும் இல்லறத்தை நடத்துகின்ற இன்பத்தால் வந்த பெரும்பேறெல்லாம் அவ்வடியவர்கள் அதனை விரும்பிச் செய்து வருகின்ற காலத்தில்.

விளக்கவுரை

`திரு வேடங்கண் டாலடியேன் செய்வதி யாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியும் இயற்றுவதிச் சரியை` (சிவஞா.சித். சுப. சூ.*9* பா.*19)*) என்னும் ஞான நூலும்.

ஆயும் நுண்பொரு ளாகியும் வெளியே
அம்ப லத்துள்நின் றாடுவா ரும்பர்
நாய கிக்குமஃ தறியவோ பிரியா
நங்கை தானறி யாமையோ அறியோம்
தூய நீறுபொன் மேனியில் விளங்கத்
தூர்த்த வேடமுந் தோன்றவே தியராய்
மாய வண்ணமே கொண்டுதம் தொண்டர்
மறாத வண்ணமுங் காட்டுவான் வந்தார். **#407**

சிவஞானத்தால் ஆய்ந்து தெளிவார்க்கும் நுண்ணிய பொருளாய் இருந்தும், யாவரும் காணத் திருச்சிற்றம்பலத்துள் நின்று ஆடுகின்றவராய இறைவர், தேவர்கட்கெல்லாம் முதல்வியாகிய உமையம்மையார் இவ்வாறு வருவதை அறிந்தோ, அல்லது தம் உடம்பினின்றும் வேறுபடாத அவ்வம்மையார் இவ்வாறு வெளிப் பட்டருளுவதை அறியாமையோ அறியோம்; தூயதான திரு வெண் ணீறு பொன்போன்ற திருமேனியில் விளங்க, அவ்வடிவோடு தூர்த்தற் குரிய வேடப் பொலிவும் காணுமாறு மறையவராய்ப் பிறர் தம்மை அறியக் கூடாத மாயையுடைய ஒரு திருவுருவம் கொண்டு, தம் அடியவராகிய அவ்வியற்பகையார் அடியவர்கள் கேட்ட பொருளை மறுக்காமல் கொடுக்கும் இயல்பை அனைவர்க்கும் காட்டுமாறு வந்தருளினார்.

விளக்கவுரை

உலகியல் வழி நின்றார்க்கு நோக்கரிய நோக்காயும், சிவஞானியர்க்கு நுணுக்கரிய நுண்ணுணர்வாயும் விளங்கும் திறம் பற்றி, `ஆயும் நுண் பொருளாயும்` என்றார். தூர்த்த வேடம் - கலவைப் பூச்சு, நகக்குறி, பற்குறி முதலியன உடம்பில் காணுமாறு இருப்பது.

`புள்ளிக்கள்வன் புனல்சேர் பொதுக்கம் போல்
வள்ளுகிர் போழ்ந்தனவும் வாள்எயிறு உற்றனவும
ு ஒள்ளிதழ் சோர்ந்த நின் கண்ணியும்
நல்லார் சிரனுபு சீறச் சிவந்தநின்
மார்பும் தவறாதல் சாலாவோ கூறு` -கலித். மருதம்
என வரும் கலித்தொகையும் நினைவு கூர்க. இறைவன் கொண்ட இவ்வேடம் மாயையின் வண்ணமேயன்றி, அவர் தம் திருவருளின் வண்ணம் ஆகாது என்பார், `மாய வண்ணமே கொண்டு` என்றார். அவ்வாறு வந்ததும் இயற்பகையார், தாம் கொண்டிருந்த குறிக்கோளுக்கு என்றும் மாறாதவர் என்பதைக் காட்டுதற்கன்றி, உலகியல் வகையால் பிறர் மனை நயந்து வந்தது அன்று என்பார் `தொண்டர் மறாத வண்ணமும் காட்டுவான் வந்தார்` என்றார். எனவே இயற்பகையாரின் திருத்தொண்டை அனைவரும் காணச் செய்தற்கே இவ்வாறு வந்தார் என்பது தெளிவு. இவ்வாற்றான் அவ் வன்பைச் சோதிக்க வந்தார் என்று கூறல் பொருந்தாமை விளங்கும்.

வந்து தண்புகார் வணிகர்தம் மறுகின்
மருங்கி யற்பகை யார்மனை புகுத
எந்தை யெம்பிரான் அடியவர் அணைந்தார்
என்று நின்றதோர் இன்பஆ தரவால்
சிந்தை யன்பொடு சென்றெதிர் வணங்கிச்
சிறப்பின் மிக்கவர்ச் சனைகள்முன் செய்து
முந்தை யெம்பெருந் தவத்தினால் என்கோ
முனிவர் இங்கெழுந் தருளிய தென்றார். **#408**

குளிர்ந்த காவிரிப்பூம் பட்டினத்தில் உள்ள வணிகர் வீதியினிடத்து வந்து, இயற்பகை நாயனார் வீட்டிற்கு எழுந்தருள, எம் தந்தையராயும் யாவர்க்கும் முதல்வராயும் உள்ள சிவபெருமானின் அடியவர் எழுந்தருளினார் என்று தம் உள்ளத்துத் தோன்றிய மகிழ்ச் சியோடு கூடிய ஒப்பற்ற பெரும் காதலினால் விளைந்த பேரன்போடு, அவர் எதிரே சென்று வணங்கிப் பத்திமைச் சிறப்புமிக்க வழிபாடு களை முற்படச் செய்து, `` முற்பிறப்பில் யாங்கள் செய்த பெருந்தவத் தின் பயன் என்று சொல்லுகேனோ! தவமுனிவர் இவ்விடத்து எழுந்தருளி வந்தது`` என்று சொன்னார்.

விளக்கவுரை

இப்பெருமுனிவர் அடியேனது இல்லத்திற்கு எழுந்தரு ளியது, முற்பிறப்பில் செய்த தவத்தினால் ஆகும் என்று வரையறைப் படுத்தாது தவம் என்கோ என்றது, இவ்வடியவர் எழுந்தருளுதற்கு அத்தவம் அன்றி மேலும் ஒரு திருவருட் குறிப்பும் இருத்தல் வேண்டும் என்பது பட

நின்றது.

என்று கூறிய இயற்பகை யார்முன்
எய்தி நின்றவக் கைதவ மறையோர்
கொன்றை வார்சடை யாரடி யார்கள்
குறித்து வேண்டின குணமெனக் கொண்டே
ஒன்று நீரெதிர் மறாதுவந் தளிக்கும்
உண்மை கேட்டுநும் பாலொன்று வேண்டி
இன்று நானிங்கு வந்தனன் அதனுக்கு
இசைய லாமெனில் இயம்பலா மென்றார். **#409**

இவ்வாறு கூறிய இயற்பகை நாயனார் முன்பு, எழுந்தருளி நின்றவராகிய அவ்வஞ்சனை வேடத்தவராகிய மறை யவர், ``கொன்றைப் பூமாலையை அணிந்த நீண்ட சடையினை யுடைய சிவபெருமானின் அடியவர்கள் எண்ணி வேண்டியவை எவையேனும் அவை குணமாம் எனக்கொண்டு, அவற்றை விரும்பிக் கொடுக்கின்ற உண்மைத் தன்மையைக் கேட்டு, உம்மிடத்தே ஒரு பொருளை வேண்டி, இந்நாளில் நான் இங்கு வந்தேன். கேட்கும் அப்பொருளை மறாது கொடுத்தற்கு உடன்படுவீராயின் அதனை இதுவெனச் சொல்லலாம்.`` என்று அருளிச் செய்தார்.

விளக்கவுரை

கைதவம் - சிறுமை உடையதவம். அஃதாவது நெஞ்சில் துறவாது துறந்தார் போல் வஞ்சித்து வாழும்தவம். கை சிறுமையாத லைக் கைக்கிளை எனும் சொல் வழக்கானும் அறியலாம். வந்த மறையவர், கேட்க இருக்கும் பொருள் பற்றி இவ்வாறு கூறியதல்லது, உண்மையில் அவர் அன்னர் அல்லர் என்பது பின்வரும் வரலாற்றால் அறியலாம். `குண மெனக் கொண்டே` என்பதால், குணமல்லா ததனையும் குணமாகக் கொள்ளும் குறிப்புடைமை வெளிப்படு கின்றது. ``இசையலாம் எனில் இயம்பலாம்`` என்றது, இசைதற்கும் இயம்புதற்கும் உரியதல்லாமை தோன்ற நின்றது. ஏ - அசை நிலை. ஒன்றும் - உம்மை முற்றும்மை.

என்ன அவ்வுரை கேட்டியற் பகையார்
யாதும் ஒன்றுஎன் பக்கலுண் டாகில்
அன்ன தெம்பிரான் அடியவர் உடைமை
ஐய மில்லைநீ ரருள்செய்யு மென்ன
மன்னு காதலுன் மனைவியை வேண்டி
வந்த திங்கென அந்தண ரெதிரே
சொன்ன போதிலும் முன்னையின் மகிழ்ந்து
தூய தொண்டனார் தொழுதுரை செய்வார். **#410**

என்று இவ்வாறு கூறிய மறையவர்தம் உரையை இயற்பகை நாயனார் கேட்டு,`` நீர் வேண்டும் பொருள் யாதாயினும் அப்பொருள் மட்டும் என்னிடத்து உள்ள பொருளாயின், அது எம் பெருமானுடைய அடியவர்க்கு உரியதாம். இதில் ஐயமில்லை, நீர் அருள் செய்யும், என்று சொல்ல, நிலை பெற்ற காதலையுடைய நின் மனைவியைப் பெற வேண்டி, நாம் இங்கு வந்தனம்`` என்று அம்மறையவர் அவர் எதிர் நின்று சொல்லியும், அதனால் ஒரு சிறிதும் வெகுளாது முன்னையினும் மிக்க மகிழ்ச்சியடைந்து, மனம் தூயரான அவ்வியற்பகையார் வணங்கிச் சொல்வாராயினர்.

விளக்கவுரை

பிறர் மனைவியை வேண்டுவதாக எவ்விடத்துக் கூறினும் ஏன்? நினையினும் கூடப் பிழையாம். அங்ஙனம் இருக்க ஒரு கணவனாரெதிர் அவர் மனைவியை வேண்டுதலும் அதனை வாயால் அவரிடத்தேயே கூறுதலும் எத்துணைப் பிழையாகும்! அப் பெரும் பிழையைச் செயினும் தம்மிடத்து உள்ள பொருளையே வேண் டினார் என்பதால், முன்னையினும் மகிழ்ந்தார் என்பது அவருக்கு அடியவரிடத்திருந்த ஆழங்கால்பட்ட பத்திமையையும் தம் குறிக்கோ ளினின்றும் பிழையாமையையும் விளக்குகின்றது. `எதிரே சொன்ன போதிலும்` எனும் தொடர், எதிர் நின்றும் வாயால் கூறத்தகாததுமான சொல் என்னும் குறிப்புத் தோன்ற நின்றது. யாதும் - உயர்வு சிறப் பும்மை. ஒன்றும் - முற்றும்மை. முன்னையினும் என்பது முன்னை யின் என நின்றது; சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது.

இதுவெ னக்குமுன் புள்ளதே வேண்டி
எம்பி ரான்செய்த பேறெனக் கென்னாக்
கதுமெனச் சென்று தம்மனை வாழ்க்கைக்
கற்பின் மேம்படு காதலி யாரை
விதிம ணக்குல மடந்தைஇன் றுனைஇம்
மெய்த்த வர்க்குநான் கொடுத்தனன் என்ன
மதும லர்க்குழல் மனைவியார் கலங்கி
மனந்தெ ளிந்தபின் மற்றிது மொழிவார். **#411**

இவ்வாறு பணித்தது அடியேனிடத்து முன்பு உள்ளதொரு பொருளையே விரும்பிய வகையால், எம்பிரான் எனக்கு அருளிய பேறு இது என்று சொல்லி, விரைந்து, அம்மனையில் போய் மனையறத்திலும் கற்பிலும் மிகச் சிறந்த மனைவியாரை, விதிமுறைப் படிமணம் செய்யப் பெற்ற குலமடந்தையே! இன்று உன்னை இங்கு வந்துள்ள உண்மைத் தவமுடைய இம்மறையவருக்கு நான் கொடுத்துவிட்டேன் என்று சொல்ல, தேன் பொருந்திய மலர் களை முடித்த கூந்தலையுடைய

மனைவியார் முன், கலக்கமடைந்து தெளிந்த பின் இவ்வாறு கூறுவாராயினார்.

விளக்கவுரை

கதுமெனச் சென்று - விரைவாகச் சென்று. மனையறத் திலும், கற்பிலும் சிறவாமலும், தம்மீது பெரும்பற்று இல்லாமலும், பலர் அறிய முறையாக மணக்காமலும் இருந்தவர் ஆனதால் மறையவர் கேட்டவுடன் மனைவியைக் கொடுத்திருப்பரோ எனும் ஐயம் சிலர்க்கு எழலாம். அவ்ஐயத்தின் நீங்கித் தெளியவே, `தம் மனை வாழ்க்கைக் கற்பின் மேம்படு` என்றும், `காதலியாரை` என்றும், `விதி மணக்குல மடந்தை` என்றும் கூறியருளினார். இயற்பகையாரின் மனைவியார் முன்னர்க் கலங்கியதற்கும் பின்னர் மனம். தெளிந்ததற்கும் சிவக்கவி மணியார் (பெரிய.பு. உரை) கூறும் விளக்கம் ஈண்டு அறியத்தக்கதாம். விதிவழிநின்று மணம்செய் காலத்துக் கடைபோகக் கைக் கொண்டு காப்பேன் என்று நாயகன் கூறிய சொல்லுக்குக் கேடு நேருமோ என்றும், கற்பிலக்கணத்துடன் மாறுபடுமோ என்றும், ஐம் பெரும் பாவங்களில் ஒன்றாய் நூல்களால் விலக்கப்பட்டதாகிய பிறன் மனை நயந்தமை எனும் தீமை சிவயோகியாரைச் சாருமோ என்றும் கலங் கினார் என்க. மனந்தெளிந்த பின் - `கணவனார் ஆணைவழி நிற்றலே கடன்` என்றும், அவ்வாறு அதன்வழி நில்லாதிருப்பதே தவறான தென்றும் தெளிந்த பின்னர், என்பன அவர்தரும் விளக்கமாகும்.

இன்று நீரெனக் கருள்செய்த திதுவேல்
என்னு யிர்க்கொரு நாதநீ ருரைத்தது
ஒன்றை நான்செயு மத்தனை யல்லால்
உரிமை வேறுள தோவெனக் கென்று
தன்த னிப்பெருங் கணவரை வணங்கத்
தாழ்ந்து தொண்டனார் தாமெதிர் வணங்கச்
சென்று மாதவன் சேவடி பணிந்து
திகைத்து நின்றனள் திருவினும் பெரியாள். **#412**

``இற்றைக்கு நீர் அடியேனுக்கு அருளியது இவ் வாறாயின், என்னுடைய உயிர்க்குத் தனித்துணையாகிய முதல்வரே! நீர் கூறிய கட்டளை ஒன்றை நான் செயதலேயன்றி, அடியேனுக்கு வேறு உரிமை உண்டோ? `` என்று கூறித் தம்முடைய ஒப்பற்ற பெரு மைக்குரிய கணவனாரை வணங்க, இயற்பகையாரும் தாழ்ந்து அவரை வணங்கி நிற்ப, அங்கு எழுந்தருளியிருக்கும் சிவபெருமா னாகிய மறையவரிடம் சென்று, அவர் திருவடிகளை வணங்கித் திருமகளினும் சிறந்த பெருமையினையுடைய அவ்வம்மையார் திகைப்புடன் நின்றார்.

விளக்கவுரை

ஒரு பெண்ணிற்கு உயிரினும் சிறந்தது நாணமாகும். அந்நாணினும் சிறந்தது கற்பாகும். அக்கற்பின் முடிநிலையாய் நிற்பது கணவன் சொல் தவறாது நிற்றலாகும். இதுவே ஒரு மனைவியார்க் குரிய அறமாகும். `அவன் வரம்பு இறத்தல் அறம் தனக்கு இன்று` *(தொல். களவு. 29)* என்னும் தொல்காப்பியத் தொடரால் இவ்வுண்மை விளங்கும். இக்கற்பு நெறியில் நின்ற கண்ணகியாரும், `யாவதும் மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலின் ஏற்றெழுந்தனன்` *(சிலப்ப. மதுரை. கொலைக் 81-83)* எனக் கூறியதும் ஈண்டு நினைவு கூரத் தக்கதாகும். இவ்வறம் பற்றியே இயற்பகையார் மனைவியாரும், `நீர் உரைத்த தொன்றை நான் செய்யும் அத்தனையல்லால் உரிமை வேறுளதோ? என்றார்.மனைவியார் வணங்க இயற்பகையார் தாமும் வணங்கியது, `இம் மெய்த்தவர்க்கு நான் கொடுத்தனன்` என்றபோதே அவருக்கு அப் பெருமாட்டியார் உரிமையாகிவிட்டமையால் ஆகும். அம்மையார் திகைத்து நிற்றலுக்குக் காரணம் தாம் இதுகாறும் பயிலாத ஒருவரைச் சார்ந்து நிற்றல் பற்றிய நாண உணர்வாகும். இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

மாது தன்னைமுன் கொடுத்தமா தவர்தாம்
மனம கிழ்ந்துபே ருவகையின் மலர்ந்தே
யாது நானினிச் செய்பணி என்றே
இறைஞ்சி நின்றவர் தம்மெதிர் நோக்கிச்
சாதி வேதிய ராகிய தலைவர்
தையல் தன்னையான் தனிக்கொடு போகக்
காதல் மேவிய சுற்றமும் பதியுங்
கடக்க நீதுணை போதுக வென்றார். **#413**

தம்மனைவியாரை அவ்வடியவர் கேட்டவுட னேயே தடையின்றிக் கொடுத்த இயற்பகை நாயனார், இவ் வடியார்க்கு இது கொடுக்கப் பெற்றேன் என்னும் மனக்களிப்போடு முகமலர்ச்சி அடைந்து, இனிஅடியவன் செயத்தக்கது யாது? என்று வினவியவாறு வணங்கி நிற்க, மறையவர் வடிவில் வந்த சிவபெரு மான், `இப் பெண்ணை யான் தனியே அழைத்துக் கொண்டு போதற்கு இவளிடத்தும் நின்னிடத்தும் விருப்புடையராய சுற்றத்தாரையும், இவ்வூரையும் கடந்து செல்லுதற்கு நீ துணையாக வரவேண்டும்` என்று அருளிச் செய்தார்.

விளக்கவுரை

இது எனக்கு முன்பு உள்ளதே வேண்டி எம்பிரான் செய்த பேறு*!* என முன்னர்க் கூறியதற்கேற்ப, ஈண்டும் `மன மகிழ்ந்து பேரு வகையின்

மலர்ந்து` என்றார். காதல் மேவிய சுற்றம் என்பது இருவர்க்கும் பொருந்துமாறு அமைந்துள்ளது. `மனைவியார் சுற்றத் தாரும் வள்ளலார் சுற்றத்தாரும்` எனப்பின் *(பா.416)* வருதலும் காண்க. தாம், தான் என்பன அசைநிலைகள்.

என்றவர் அருளிச் செய்ய
யானேமுன் செய்குற் றேவல்
ஒன்றிது தன்னை யென்னை
யுடையவர் அருளிச் செய்ய
நின்றது பிழையா மென்று
நினைந்துவே றிடத்துப் புக்குப்
பொன்றிகழ் அறுவை சாத்திப்
பூங்கச்சுப் பொலிய வீக்கி. **#414**

இவ்வாறு அம்மறையவர் பணித்தருளக் கேட்ட நாயனார், இது இம்மாதவர் இதனை உரைக்கும் முன்பேயே அடியேன் மேற் கொண்டு செயத்தக்க குற்றேவலாகும்; இதனை என்னை ஆளுடைய இவ்வடியவர் பணித்தருளும் வரை தாழ்த்தி நின்றது அடியவனின் குற்றமேயாகும் என நினைந்து, வேறோர் இடத்துச் சென்று, பொன் மயமாய உடையினை உடுத்து, அதன் மீது பொலி வினை உடைய அரைக்கச்சை இறுகப்பிணித்து.

விளக்கவுரை

தாமே நினைந்து செய்ய வேண்டுவதை மாதவர் கூறச்செய்ய முற்பட்டது பிழையெனக் கருதினர் நாயனார். இது அவர்தம் பத்திமை மேம்பாட்டைக் காட்டுகின்றது. அறுவை - ஆடை*;* போர்புரிதற்கு உரித்தான ஆடை. `வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து உடீஇ` *(புறநா. 279)* எனவரும் சங்கப் பனுவலும் காண்க.

வாளொடு பலகை யேந்தி
வந்தெதிர் வணங்கி மிக்க
ஆளரி யேறு போல்வார்
அவரைமுன் போக்கிப் பின்னே
தோளிணை துணையே யாகப்
போயினார் துன்னி னாரை
நீளிடைப் படமுன் கூடி
நிலத்திடை வீழ்த்த நேர்வார். **#415**

வாளுடன் கேடயத்தையும் கையில் எடுத்துக் கொண்டு, அம்மறையவர் எதிர் வந்து, தொழுது, ஆண்சிங்கத்தை ஒத்த தோற்றத்தினையுடைய இயற்பகை நாயனார், அம்மறையவரையும் அவ்வம்மையாரையும் முன் போகச் செய்து, அவர் பின்பு தம் இரு தோள்களுமே துணையாகத்

தம்மோடு எதிர்த்து வந்தவர்களை நெடுந் தொலைவில் வரும் பொழுதே முற்பட்டு வளைத்து நிலத்தில் துணித்து வீழ்த்தும் விருப்புடையராய்ச் சென்றார்.

விளக்கவுரை

ஆள் அரிஏறு - பிறவிலங்குகளையும் ஆளும் தன்மை யுடைய ஆண் சிங்கம். `சாவாமூவாச் சிங்கமே` *(தி.6 ப.99 பா.2)* என அப்பரடிகள் இறைவனை அழைக்குமாறும் நினைவு கூரலாம். துன் னினார் - நெருங்கினார்; ஈண்டுப் பகைவராய் நெருங்குவாரைக் குறித்தது. படைக் கலங்களை விடுத்துத்தோள் வலிமையையே வலி மையாகக் கொண்டு செல்லல் அவர்தம் ஆண்மைச் சிறப்பை விளக் குகின்றது. `படை யறுத்துப் பாழி கொள்ளும் ஏமத்தானும்` *(*தொல். புறத். *17)* என்னும் தொல்காப்பியமும். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

மனைவியார் சுற்றத் தாரும்
வள்ளலார் சுற்றத் தாரும்
இனையதொன் றியாரே செய்தார்
இயற்பகை பித்தன் ஆனால்
புனையிழை தன்னைக் கொண்டு
போவதா மொருவ னென்று
துனைபெரும் பழியை மீட்பான்
தொடர்வதற் கெழுந்து சூழ்வார். **#416**

இயற்பகை நாயனாரின் மனைவியாருடைய உறவினர்களும், அந்நாயனாரின் உறவினர்களும், மனைவியைக் கொடுத்தலாகிய இச்செய்கையை இதற்குமுன் யாவர் செய்தார்? அவ்வியல்பிற்குப் பகையாக நிற்கும் இயற்பகையார் பித்துக்கொண் டவன் ஆனால், ஒருவன் அணிகளணிந்த இப் பெண்ணைக் கொண்டு போதலைச் செய்வானாம், என்று கூறியவராய், தம் குடும்பத்தைத் தொடர்ந்த பெரும் பழியை நீக்கிக்கொள்வதற்கு, மறையவரைத் தொடர்ந்து சூழ்வாராயினார்.

விளக்கவுரை

இயற்பகை பித்தனானாலும் நாம் வலியுடையோம் ஆதலின் இம்மறையவன் கொள்ள ஒட்டோம் என்னும் கருத்தால் `போவதாம் ஒருவன்` என்றார். போவது ஆம்*?* போதல் ஆகாது என்பது கருத்து. யாரே செய்தார் என்புழி ஏகாரம் எதிர் மறைக்கண் வந்தது.

வேலொடு வில்லும் வாளுஞ்
சுரிகையு மெடுத்து மிக்க
காலென விசையிற் சென்று

கடிநகர்ப் புறத்துப் போகிப்
பாலிரு மருங்கு மீண்டிப்
பரந்தஆர்ப் பரவம் பொங்க
மால்கடல் கிளர்ந்த தென்ன
வந்தெதிர் வளைத்துக் கொண்டார். **#417**

வேலுடன் வில்லையும் உடை வாளையும் சுரிகை யையும் எடுத்துக் கொண்டு பெருங்காற்றென விரைவாக நடந்து, காவலையுடைய அந்நகர்ப் புறத்துச் சென்று, வலம் இடமாகிய இரு பக்கத்தும் முன்னும் பின்னுமாகிய இரு பக்கத்தும், நெருங்கிப் பரந்த பேரொலி மிக, பெருமை பொருந்திய கடல் எழுந்ததுபோல அம்மை யாரை அழைத்துச் செல்லும் மறையவரையும், இயற்பகையாரையும் சூழ்ந்து கொண்டார்கள்.

விளக்கவுரை

சுற்றத்தார்கள் சென்ற விரைவிற்குக் காற்றும், பலராகப் பெருகிச் சென்றதற்குக் கடலும் உவமையாயின. சுரிகை - வாளைவிடச் சிறியதாய் அவ்வடிவில் அமைந்திருக்கும் கருவி; இதனைக் குற்றுடைவாள் என்பர். தொலைவில் இருப்பாரை வெட்டு தற்கும் குத்துதற்கும் பயன்படுவது வாள். அண்மையில் இருப்பார்மீது அவ்வகையில் பயன்படுத்தற்குரியது சுரிகை. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வழிவிடுந் துணைபின் போத
வழித்துணை யாகி யுள்ளார்
கழிபெருங் காதல் காட்டிக்
காரிகை யுடன்போம் போதில்
அழிதகன் போகேல் ஈண்டவ்
வருங்குலக் கொடியை விட்டுப்
பழிவிட நீபோ வென்று
பகர்ந்தெதிர் நிரந்து வந்தார். **#418**

தமக்கொரு தீங்கின்றியும், பிறர் இடைப் புகுதற் கின்றியும், துணையாக இயற்பகை நாயனார் பின் செல்ல, உயிர்கள் வீடுபேறடைதற்குத் துணையாய் உள்ள சிவபெருமானாகிய மறை யவர், அவ்வம்மையாருக்கு மிகப்பெரிய விருப்புடையராகத் தம்மைக் காட்டிக் கொண்டு, அவருடன் போகும் பொழுது, அறக்கழி வுடையவனே! நீ மேற்செல்லாதே! இவ்விடத்து எம் அருங்குலக் கொடி யாம் அம்மையை விட்டு, நின்னைத் தொடர்ந்துள்ள பழியையும் விட்டு, நீ போவாயாக! என்று கூறியவாறு அவர் எதிரே சுற்றத்தார்கள் சூழ்ந்து வந்தார்கள்.

விளக்கவுரை

வழிவிடுந்துணை - வழியில் தடையின்றி விடும் துணை; இயற்பகையார். வழித்துணை - வீடுபேற்றை அடைதற்குரிய துணை; மறையவராக வந்த சிவபெருமான். `புறம்புறந் திரிந்த செல்வமே!` *(தி.8 ப.37 பா.9)* என்பதால், பிறவிதோறும் உயிர்கள் துய்ப்பதற்கும் உய்ப்பதற்கும் துணையாக இருப்பினும், வினை முடிவின் பயனாக வீடு பேற்றை வழங்குதற்குரியவன் இறைவனே யாவன். வழிவிடும் துணை பின் போதக் காதல் காட்டி` என்பதால், அக்காதல் உடற்காதல் அன்றிப் பின் வழங்க இருக்கும் வீடுபேற்றிற்கு ஏதுவாய காதல் என்பது பெற்றாம். `சுவையமு தூட்டி யமரர்கள் சூழிருப்ப அளித்துப் பெருஞ்செல்வ மாக்குமை யாற னடித்தலமே` *(தி.4 ப.92 பா.7)* எனவரும் திருவாக்கினை நினைவு கூர்க. அழி தகன் - அறக்கழி வுடையவனே! அறநூல்களில் விதித்தன வொழித்து விலக்கியதைச் செய்பவன் என்பது பொருள். தகவு அழிந்தவன் என்பது அழிதகன் என மாறி நின்றது என்பர். ஆலாலசுந்தரம்பிள்ளை *(பெரிய.பு. உரை)*. அழிதகன் - மிகுந்த பாவத்தையுடையவன்; அழிது - கெட்டது, அகம் - பாவம். அகம் என்பதனோடு வினைமுதற் பொருளில் வந்த அன் விகுதி புணர்ந்து நிலைமொழியீற்று மகரமும் விகுதி அகரமும் கெட்டு அகன் என நின்றது என்பர் மகாலிங்கையர் *(பெரிய.பு. உரை)*.

மறைமுனி யஞ்சி னான்போல்
மாதினைப் பார்க்க மாதும்
இறைவனே அஞ்ச வேண்டா
இயற்பகை வெல்லு மென்ன
அறைகழ லண்ணல் கேளா
அடியனே னவரை யெல்லாம்
தறையிடைப் படுத்து கின்றேன்
தளர்ந்தருள் செய்யே லென்று. **#419**

மறையவராகிய முனிவர் அஞ்சுவது போலக் காட்டி அவ்வம்மையாரைப் பார்க்க, அவரும் `அஞ்சவேண்டா, இவ் வியற் பகையார் அவர்களை வெல்லுவர்` என்று சொல்ல, ஒலிக்கின்ற வீரக் கழலை அணிந்த இயற்பகை நாயனார் அதைக் கேட்டு, `அடியேன் ஈண்டு வந்தவர்களையெல்லாம் நிலத்தில் விழ இறக்கச் செய்கின்றேன்; இதற்காக மனம் தளர வேண்டா` என்று விண்ணப்பம் செய்து.

விளக்கவுரை

முன் *(பா.412)* `தையலார் தனிப்பெருங் கணவரை வணங்கத் தாமும் (இயற்பகையார்) எதிர் வணங்கினார்` என்றபோது, அவர்தமக்கு மனைவியாராதலைத் துறந்தமை வெளிப்படுகின்றது. இங்கு `இயற்பகை வெல்லும்` என அவர் பெயரை அம்மையார் கூறியதால்

அவர் அவ்வடியவரைத் துறந்தமை வெளிப்படுகின்றது. இன்றேல் `இயற்பகை வெல்லும்` என அவர் பெயரைக் கூறல் தகாத தாகும். `நின்பால் கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி கண்ணகி என் பெயரே` *(சிலப்ப. வழக். 62-63)* எனக் கண்ணகியார் கூறியதற் குக் காரணம் அவர்தம் கணவர் இறந்தமையினால் ஆகும். ஈண்டு அம்மையார் அவர் கணவர் பெயரைக் கூறியது அவரைத் துறந்தமை யினாலாகும் `ஆட்டனத்தியைக் காணீரோ` *(அகநா.236)* என ஆதிமந் தியார் வினவியதும் இவ்வம்மையார் நிலையோடு ஒத்ததாகும். எதுகை நோக்கித் தரை, தறை என நின்றது.

பெருவிறல் ஆளி என்னப்
பிறங்கெரி சிதற நோக்கிப்
பரிபவப் பட்டு வந்த
படர்பெருஞ் சுற்றத் தாரை
ஒருவரு மெதிர்நில் லாமே
ஓடிப்போய்ப் பிழையு மன்றேல்
எரிசுடர் வாளிற் கூறாய்த்
துடிக்கின்றீர் என்று நேர்ந்தார். **#420**

பெரிய, வலிய ஆண் சிங்கம் போலக் கண்களில் தீப்பொறி பறக்கச் சினந்து, தம் குலமானம் இழந்தமை காரணமாக வந்த பரந்த பெரிய சுற்றத்தார்களை நோக்கி `நீங்கள் ஒருவரும் என் எதிர் நில்லாமல் ஓடிப் பிழையுங்கள். அவ்வாறு செய்யாதொழியின் தீப்போல் ஒளி வீசுகின்ற என் வாளினால் துண்டாக வெட்டப்பட்டுத் துடிக்கப் போகின்றீர்` என்று சொல்லியவாறு அவர்கள் முன்னாகப் போர் முகத்தராய்ச் சென்றார்.

விளக்கவுரை

பரிபவம் - மானம் அழிதல். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஏடநீ யென்செய் தாயால்
இத்திறம் இயம்பு கின்றாய்
நாடுறு பழியும் ஒன்னார்
நகையையும் நாணாய் இன்ற
ு பாடவம் உரைப்ப துன்றன்
மனைவியைப் பனவற் கீந்தோ
கூடவே மடிவ தன்றிக்
கொடுக்கயாம் ஒட்டோ மென்றார். **#421**

இவ்வாறு இயற்பகையார் கூறிப் போய் அவர் எதிர் நிற்க, சுற்றத்தார்கள் ``ஏட! நீ என்ன காரியம் செய்தனை? இந் நாட்டவர்க்கு உன் செய்கையால் வருகின்ற பழியினையும் பகை வர்தம் நகையினையும் கண்டு நாணம் அடைகின்றாய் அல்லை. மனை வியை மறையவர்க்குக்

கொடுத்து விட்டோ நீ உனது வலிமையைப் புகழ்ந்து கூறுவது?
இச்செயலால் இறக்க நேரினும் ஒருசேர அனை வரும் இறந்து படுவோம்
அல்லாமல், நீ உன் மனைவியை மறையவ ருக்குக் கொடுக்க
விடமாட்டோம்`` என்று கூறினார்கள்.

விளக்கவுரை

ஏட - இகழ்ச்சிக் கண் வந்த விளி. பாடவம் - வலிமை; பெருமையுமாம். பனவற்கு - மறையவற்கு. ஆல் - அசைநிலை.

மற்றவர் சொன்ன மாற்றம்
கேட்டலும் மனத்தின் வந்த
செற்றமுன் பொங்க உங்கள்
உடற்றுணி யெங்குஞ் சிந்தி
முற்றுநும் உயிரை யெல்லாம்
முதல்விசும் பேற்றிக் கொண்டு
நற்றவர் தம்மைப் போக
விடுவன்என் றெழுந்தார் நல்லோர். **#422**

சுற்றத்தார் கூறிய அம்மொழியைக் கேட்ட வுடனே, மனத்தில் உதித்த
சினம் மிக, ``உங்களுடைய உடம்பின் துண்டுகளை எவ்விடத்தும் சிதறி
முழுமையாக உம் உயிர்களை யெல்லாம் விண்ணுலகை அடையச்
செய்து, அதன் பின் நல்ல தவத் தினையுடைய இம் மறையவரைத்
தடையில்லாமல் அழைத்துக் கொண்டு போகுமாறு செய்வேன்`` என
இயற்பகை நாயனார் மேற் கொண்டு எழுந்தார்.

விளக்கவுரை

முதல் விசும்பு - முன்னாகத் தோன்றிய விசும்பு. ஐம் பெரும் பூதங்களுள் முதற்கண் தோன்றியது இதுவே. `கருவளர் வானத்து இசையில் தோன்றி உருவறிவாரா ஒன்றன் ஊழி` என்னும் பரிபாடலும் *(பா.2 வரி, 5-6).*

நேர்ந்தவர் எதிர்ந்த போது
நிறைந்தவச் சுற்றத் தாரும்
சார்ந்தவர் தம்முன் செல்லார்
தையலைக் கொண்டு பெற்றம்
ஊர்ந்தவர் படிமேற் செல்ல
உற்றெதிர் உடன்று பொங்கி
ஆர்ந்தவெஞ் சினத்தால் மேற்சென்
றடர்ந்தெதிர் தடுத்தா ரன்றே. **#423**

இவ்வாறு சொல்லிக் கொண்டு அவர்களை அணுகி எதிர்த்த பொழுது,
திரளாக வந்திருந்த அவ்வுறவினரும் தம்முடன் மாறுபட்டு நிற்கும்
இயற்பகை நாயனாரை எதிர்க்காமல், அவ் வம்மையாரை அழைத்துக்

கொண்டு, ஆனேற்றை ஊர்தியாகக் கொண்ட சிவபெருமானாகிய மறையவர் நிலத்தில் நடந்து செல்ல, அவரை அணுகி, அவருக்கு எதிராக மாறுபட்டுத் தம் உள்ளத்தில் மிகுதியாகக் கொண்டிருந்த சினத்தால், மேற்கொண்டு சென்று, அத் தையலைக் கொண்டு போக ஒட்டோம் என்று அம்மறையவரைத் தடுத்தார்கள்.

விளக்கவுரை

இயற்பகையாரை எதிர்த்துப் போர் செய்யின் அதற்குள் அம் மறையவர் தம் தையலை அழைத்துச் சென்று விடுவர் என்று கருதிய சுற்றத்தார், அவரை விடுத்து அம்மறையவரை எதிர்க்கலானார்கள். அன்றே - அப்பொழுதே. அசைநிலை என்பாரும் உளர் என்பது சிவக்கவிமணியார் *(பெரிய.பு. உரை)* குறிப்பு.

சென்றவர் தடுத்த போதில்
இயற்பகை யார்முன் சீறி
வன்றுணை வாளே யாகச்
சாரிகை மாறி வந்து
துன்றினர் தோளுந் தாளுந்
தலைகளுந் துணித்து வீழ்த்து
வென்றடு புலியே றென்ன
அமர்விளை யாட்டின் மிக்கார். **#424**

அவ்வுறவினர்கள் இவ்வாறு மேற்சென்று அம்மறையவரைத் தடுத்தவிடத்து அதைக் கண்ட இயற்பகை நாயனார், அவர் முன் வெகுண்டு தமக்கு வலிய துணையான வாள்படையைக் கொண்டு, வலம் இடமாகச் சுற்றிவந்து, தம்மோடு எதிர்த்தவர்களின் தோள்களையும், கால்களையும், தலைகளையும் வெட்டி வீழ்த்தி, ஏனைய மிருகங்களை வென்று கொல்லும் ஆண்புலி போலப் போர்த் தொழில் செய்து வெற்றி மிக விளங்கினார்.

விளக்கவுரை

சாரி - சரித்தல்; கை - இடம்; தான் நிற்கும் இடத்தி னின்றும் வலமாயும், இடமாயும் சுற்றி வருதலின் சாரிகை ஆயிற்று. தான் குறித்த இலக்கில் தவறாது பாய்தற்குரிய வலிமை புலிக்கு உண்டு ஆதலின் `புலியேறு அன்ன` என்றார். `ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல`, `பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை வெரூஉம் புலி தாக்குறின்` *(குறள், 599)* எனவரும் இலக்கிய வழக்கும் காண்க.

மூண்டுமுன் பலராய் வந்தார்
தனிவந்து முட்டி னார்கள்
வேண்டிய திசைகள் தோறும்

வேறுவே றமர்செய் போழ்தில்
ஆண்டகை வீரர் தாமே
அனைவர்க்கும் அனைவ ராகிக்
காண்டகு விசையிற் பாய்ந்து
கலந்துமுன் துணித்து வீழ்த்தார். **#425**

போர் செய்தற்கென ஒருங்கு சேர்ந்து இயற்பகை நாயனாரின் முன் பலராய் வந்து எதிர்த்தவர்களும், தனியே வந்து எதிர்த்தவர்களுமாய்த் தாம் விரும்பிய திக்குகளிலெல்லாம் தனித் தனியே போர் செய்யும் சமயத்தில், ஆண் தன்மையில் மிக்க இயற்பகை நாயனார் தாம் ஒருவரே அவரவர்க்கும் ஈடு கொடுப்பாராகிக் கண்டார் மதிக்கத் தக்க விரைவோடு பாய்ந்து, அவரை அணுகி அவருக்கு முற் படத் தாம் வெட்டி வீழ்த்தினார்.

விளக்கவுரை

`வருவிசைப் புனலைக் கற்சிறைப் போல ஒருவன் தாங்கிய பெருமையானும்` *(தொல். புறத். 8)* என்றும், `ஒருகுடை மன் னனைப் பலகுடை நெருங்கச் செருவிடைத் தமியன் தாங்கற்குமுரித்தே` *(புறப்பொ. வெண். தும்பை)* என்றும் கூறப்பெறும் வீரத்தகைமையை இயற்பகைநாயனாரின் செயல் நினைவு கூர வைக்கின்றது.

சொரிந்தன குடல்க ளெங்குந்
துணிந்தன உடல்க ளெங்கும்
விரிந்தன தலைக ளெங்கும்
மிடைந்தன கழுகு மெங்கும்
எரிந்தன விழிக ளெங்கும்
எதிர்ப்பவ ரொருவ ரின்றித்
திரிந்தனர் களனில் எங்குஞ்
சிவன்கழல் புனைந்த வீரர். **#426**

இயற்பகை நாயனார் இவ்வாறு பகைவரை வாளால் வெட்டிக் குவித்த பொழுது, குடல்கள் எங்கும் சொரிந்து கிடந் தன. பல்வேறு உடலங்கள் எவ்விடத்தும் வெட்டுப்பட்டுக் கிடந்தன. தலைகள் பலவும் வெட்டுண்டு விரிந்து கிடந்தன. வீரர்கள் இறந்த பின் னும் அவர்கள் கண்கள் தீக்கனன்றுகொண்டிருந்தன. சிவபெருமா னின் திருவடிகளைத் தம் இதயத்துக் குடிகொள்ள வைத்திருந்த இயற்பகை நாயனார், மேலும் தம்மோடு எதிர்த்து வருவார் ஒருவரும் இல்லாமையால் போர்க்களத்தில் தாமேயாகத் திரிந்து வந்தனர்.,

விளக்கவுரை

`செறுவரை நோக்கிய கண்தன், சிறுவனை நோக்கியும், சிவப்பானாவே`

(புறநா. 100) என்புழிப்போல, வீரர் இறந்தபின்னும் அவர் கண்கள் நெருப்பைக் கனன்று கொண்டிருந்தன. இதனால் அவர்தம் சினம் மிகுதி தெரியவருகிறது.

மாடலை குருதி பொங்க
மடிந்தசெங் களத்தின் நின்றும்
ஆடுறு செயலின் வந்த
கிளைஞரோ டணைந்தார் தம்மில்
ஓடினார் உள்ளார் உய்ந்தார்
ஒழிந்தவர் ஒழிந்தே மாண்டார்
நீடிய வாளுந் தாமும்
நின்றவர் தாமே நின்றார். **#427**

அறுபட்ட உடல் துண்டங்களின் பக்கங்களிலெல் லாம், அலைபெருக இரத்த வெள்ளமானது மேன்மேல் பொங்க, செந்நிறமான அப்போர்க்களத்தினின்றும் வென்றிகொள்வதற்கென வந்த உறவினர்களோடு கூடவந்தவர்களில் ஓடினவர்கள் பிழைத் தார்கள். ஓடாது எதிர்த்தவர்கள் அனைவரும் இறந்தார்கள். நீண்ட வாட்படையும் தாமுமாக வந்துநின்ற இயற்பகை நாயனார் ஒருவரே அக்களத்தில் தனித்து நின்றார்.

விளக்கவுரை

மாடு - பக்கம். யாவரும் மடியஏற்பட்ட குருதியால் அக்களம் செங்களம் ஆயிற்று. ஆதலின் `மடிந்த செங்களம்` என்றார். ஆடு உறுசெயல் - பகைவரைக் கொன்று வெற்றி பெறுதற்கென வந்த செயல், அடுதல் ஆடுதல் என நீண்டது.

திருவுடை மனைவி யாரைக்
கொடுத்துஇடைச் செறுத்து முன்பு
வருபெருஞ் சுற்ற மெல்லாம்
வாளினால் துணித்து மாட்டி
அருமறை முனியை நோக்கி
அடிகள்நீர் அஞ்சா வண்ணம்
பொருவருங் கானம் நீங்க
விடுவனென் றுடனே போந்தார். **#428**

இவ்வாறு நின்றவராகிய இயற்பகை நாயனார், கற்புச் செல்வம் மிக்க மனைவியாரை மறையவருக்குக் கொடுத்து, அக் கொடை நிறைவேறுதற்கு இடையூறாக முற்பட்டு வந்த பெரும் சுற்றத் தாரை எல்லாம் வாட்படையால் கொன்றதற் பின், அரிய மறைகளை உணர்ந்த முனிவரைப் பார்த்து, அடிகளே! நீர் அஞ்சாதவாறு ஒப்பற்ற இக்காட்டைக் கடந்து செல்லுதற்குத் துணையாக உம்முடன் வந்து

அனுப்புகின்றேன் என்று அவருடன் போயினார்.

விளக்கவுரை

திரு-ஈண்டுக் கற்புத்திருவைக்குறித்தது. ஏ-அசை நிலை.

இருவரால் அறிய வொண்ணா
ஒருவர்பின் செல்லும் ஏழை
பொருதிறல் வீரர் பின்பு
போகமுன் போகும் போதில்
அருமறை முனிவன் சாய்க்கா
டதன்மருங் கணைய மேவித்
திருமலி தோளி னானை
மீளெனச் செப்பி னானே. **#429**

மால், அயன் என்னும் இருவரானும் தேடி அறிய இயலாமல் ஒளித்து நின்ற சிவபெருமானாகிய அம்மறையவர் பின்பு நடந்துவரும் அவ்வம்மையார் பின், போர்த்திறன் மிக்க வீரராய இயற் பகை நாயனார் வரத்தாம் முன் செல்லும் பொழுதில், அரிய அம்மறை முனிவர் திருச்சாய்க் காட்டினை அணுக அடைந்த அளவில், அழகு நிறைந்த தோள்களையுடைய இயற்பகை நாயனாரை `இனி மீள்க`. என்றருளிச் செய்தார்.

விளக்கவுரை

திரு - அழகு; வீரத்தாலாய அழகு. `போர்முகத்தில் எவர் வரினும் புறங்கொடாத தோள்` *(கலிங்கத். 485)* எனச் செயங் கொண்டார் இவ்வீர அழகைக் குறித்துக் காட்டுவர். `வசிந்து வாங்கு நிமிர்தோள்` *(தி.11 திருமுரு. 106)* என வரும் நக்கீரர் கூற்றால், ஈண் டைய அழகு உடல் அழகுமாம். மீள்க என எனற் பாலது, மீளென என நின்றது. மீளுதல் - இல்லத்திற்குத் திரும்பச் செல்லுதல். இல்லத் திற்கு மீள்க என்னாது வாளா மீள்க என்றது இப் பிறவியினின்றும் மீள்க எனும் குறிப்பும் புலப்படவாம்.

தவமுனி தன்னை மீளச்
சொன்னபின் தலையால் ஆர
அவன்மலர்ப் பதங்கள் சூடி
அஞ்சலி கூப்பி நின்று
புவனமூன் றுய்ய வந்த
பூசுரன் தன்னை யேத்தி
இவனருள் பெறப்பெற் றேன்என்
றியற்பகை யாரும் மீண்டார். **#430**

தவத்தினையுடைய அம்முனிவரர் தம்மை வீட்டிற்கு மீண்டு போகலாம்

என்று அருளிய பின்பு, அம்மறையவர் திருவடிகளைத் தம் தலைஆர வணங்கிக் கும்பிட்டு நின்று, மூவுலகும் உய்யுமாறு எழுந்தருளிய அம்மறையவரை வாழ்த்தி, இப்பெரு முனிவரது திருவருளைப் பெறும் பேற்றினை அடைந்தேன் என்று கூறி இயற்பகை நாயனார் தம் இல்லத்திற்குத் திரும்ப முற்பட்டார்.

விளக்கவுரை

பூசுரன் - நிலத் தேவன்; நிலத்தின் கண் வாழும் தேவன்; மறையவன் என்பது கருத்து, `பூசுரன் ஞானசம்பந்தன்` *(தி.2 ப.66 பா.11)* என ஞானசம்பந்தர் தம்மைக் குறிக்குமாறும் காண்க. இயற்பகையாரும் மீண்டார் எனவரும் உம்மை, அம்மறையவர் தாமும் செல்ல என நின்றமையின் உம்மை இறந்தது தழீஇயிற்றாம்.

செய்வதற் கரிய செய்கை
செய்தநற் றொண்டர் போக
மைதிகழ் கண்டன் எண்டோள்
மறையவன் மகிழ்ந்து நோக்கிப்
பொய்தரும் உள்ளம் இல்லான்
பார்க்கிலன் போனா னென்று
மெய்தரு சிந்தை யாரை
மீளவும் அழைக்க லுற்றார். **#431**

பொ-ரை: யாவரும் செய்தற்கருமையாம் செய்கையைச் செய்த நன்மை பெருக நின்ற இயற்பகை நாயனார் செல்ல, நீலநிறம் பொருந்திய கழுத்தையும் எட்டுத் திருத்தோள்களையும் உடைய சிவபெருமானாகிய மறையவர், அவரை மகிழ்வுடன் நோக்கிப் பொய்யில்லாத மனத்தினை உடையன் ஆதலின் திரும்பிப் பார்த்தல் கூடச் செய்யாது போயினன் என்று மெய்ம்மை நிறைந்த திருவுள்ளம் உடைய அவ்வியற்பகை நாயனாரை மீண்டும் அழைப்பாராயினார்.

விளக்கவுரை

கொடுத்தற்கரிய மனைவியைக் கொடுத்ததும், அவரை அழைத்துச் செல்லுதற்கு இடையில் ஏதும் இடையூறு வாராமல் காத்ததும், மீள்க எனச் செப்ப மீண்டும் ஒருமுறை பார்த்துச் செல்லுதல் கூடச் செய்யாது மீண்டதும், எவராலும் செய்தற்கரிய செயலாகும். இதனைச் செய்தற்குக் காரணம் மிக்க சீர்அடியார்கள் யார் எனினும் `வேண்டும் யாவையும் இல்லை என்னாதே இக்கடற்படி நிகழ முன் கொடுக்கும் இயல்பில் நின்ற` உளப்பாங்கேயாகும். அவ்வுள்ள நிலை புலப்படவே `பொய்தரும் உள்ளம் இல்லான் பார்க்கிலன் போனான்` என்றார்.

இயற்பகை முனிவா ஓலம்

ஈண்டுநீ வருவாய் ஓலம்
அயர்ப்பிலா தானே ஓலம்
அன்பனே ஓலம் ஓலம்
செயற்கருஞ் செய்கை செய்த
தீரனே ஓலம் என்றான்
மயக்கறு மறைஓ லிட்டு
மாலயன் தேட நின்றான். #432

உயிர்க்குற்ற மயக்கத்தை அறுத்தற்குக் காரணமாய மறைகளும் தம்மைக் காண வேண்டித் தேடவும், மால் அயன் ஆகிய இருவரும் அடிமுடிஅறியத் தேடவும் காணாது நின்ற சிவபெருமானா கிய மறையவர், `இயற்பகை முனிவனே, அடைக்கலம். இவ்விடத்து நீ விரைவில் வருவாய், அடைக்கலம், மெய்யடியார்க்குக் கொடுத்துத வுதலில் மறவாதவனே, அடைக்கலம், எம்மிடத்துப் பேரன்புடைய வனே, அடைக்கலம், அடைக்கலம், எவராலும் செய்தற்கரிய செய்கை செய்து பத்திமையில் உறைப்புடையவனே, அடைக்கலம்` என்று அழைத்தார்.

விளக்கவுரை

முனிதல் - வெறுத்தல். இயற்பகையார், மனைவியார், உறவினர், உலகம் கொண்டொழுகும் ஒழுக்கம் முதலிய அனைத் தையும் உவர்த்து நிற்றலின் அவரை `முனிவர்` என்றார். `அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை` என்புழிப்போல, உலகியல் ஒழுக்கத் தையும் கடந்து நிற்றலின் உலகியற் பகையாரானார். ஆதலின் முனிவர் என்றார். ஓலம் - தமக்கு நேர்ந்த அச்சம் நீங்கத் தம்மில் உயர்ந்தாரை அழைக்கும் சொல்: அயர்ப்பு - மறப்பு `அயரா அன்பின் அரன் கழல் செலுமே` என்ற விடத்தும் இப்பொருள் படுதல் காண்க. மறை களும், மால், அயனும் அறிதற்கரிய பெருமான், இயற்பகையாரை இவ்வகையில்அழைத்ததுஅப்பெருமானின் அருமையில் எளிய அழகை விளக்கி நிற்கின்றது.அவ்வெளிமையும் அவ்வடியவரை ஆட்கொள்ளவேயாம் என்பதைக் காண, அப்பெருமானின் கரு ணையை அறிய இயலுகின்றது.

அழைத்தேபே ரோசை கேளா
அடியனேன் வந்தேன் வந்தேன்
பிழைத்தவ ருளரே லின்னும்
பெருவலித் தடக்கை வாளின்
இழைத்தவ ராகின் றாரென்
றியற்பகை யார்வந் தெய்தக்
குழைப்பொலி காதி னானும்
மறைந்தனன் கோலங் கொள்வான். #433

இவ்வாறு அம்மறையவர் அழைத்த பேரோசை யைக் கேட்டு, `அடியேன் இவ்விடத்து வந்தேன், வந்தேன், உயிர் தாங்கி ஓடிப் பிழைத்த உறவினர்கள் உமக்குத் தீங்கு செய்தற்கு மேலும் இருப்பராயின் அவர்கள் மிகு வலிமையுடைய நீண்ட கையிலிருக்கும் வாட்படையினால் வெட்டப்படுவர் என்று சொல்லி, இயற்பகை நாயனார் விரைந்து அவ்விடத்திற்கு வர, குழைகள் விளங்கிய திருச்செவிகளை உடையனவாகிய மறையவராகிய சிவபெருமானும் அவருக்குத் தம் திருவுருவக் காட்சியைக் கொடுத்தருளுதற்கு மறைந் தருளினார்.

விளக்கவுரை

`விரை சொல்லடுக்கு மூன்று வரம்பாகும்` *(தொல். எச்ச. 27)* என்னும் தொல்காப்பியம். அவ்வரம்பிற்கேற்ப ஈண்டு இருமுறை அடுக்கி வந்தன. வருவேன் வருவேன் என்னாது வந்தேன் வந்தேன், என்றார் விரைவு தோன்ற. இழைத்தவர் - வாளினால் இழைக்கப் பெற்றவர்; அஃதாவது வெட்டப்பெற்றவர். செய்வினை, செயப்பாட்டு வினை யாய் நின்றது. இங்கும் இழைத்தவர் ஆவர் என்னாது ஆகின்றார் என நிகழ்காலத்தால் கூறியது, உறுதி பற்றியேயாம்.

`வாராக் காலத்து வினைச் சொற்கிளவி
இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்
இயற்கையும் தெளிவும் கிளக்கும் காலை`
-தொல். வினை. *48*

எனும் இலக்கண மரபில் வந்ததாகும். கோலங்கொள்வான் மறைந் தனன் என்பது மறைந்தமைக்குக் காரணம் கூறியவாறாம்.
முன்னர் `மாய வண்ணமே கொண்டுதம் தொண்டர் மறாத வண்ணமுங் காட்டுவான் வந்தார்` *(பா.407)* என அவர் வந்தமைக்கும் காரணம் கூறியதையும் ஈண்டு நினைவு கூர்க.

சென்றவர் முனியைக் காணார்
சேயிழை தன்னைக் கண்டார்
பொன்றிகழ் குன்று வெள்ளிப்
பொருப்பின்மேல் பொலிந்த தென்னத்
தன்றுணை யுடனே வானில்
தலைவனை விடைமேற் கண்டார்
நின்றிலர் தொழுது வீழ்ந்தார்
நிலத்தினின் றெழுந்தார் நேர்ந்தார். **#434**

இவ்வாறு கூறிக்கொண்டு மறையவரிடத்துச் சென்ற இயற்பகை நாயனார், அம் மறையவரைக் காணாமல், அங்கு அவ்வம்மையாரை மட்டும் கண்டார். அப்பொழுது ஒரு பொன் மலையானது

வெள்ளிமலையின் மேலிருந்து ஒளிசெய்வது போலத் தம் துணையாய
உமையம்மையாருடனே ஆனேற்றின்மீது எழுந் தருளியிருக்கும்
சிவபெருமானை விண்ணில் கண்டார். கண்டவர் காலம் தாழ்த்தலின்றி
உடனே அப்பெருமானை நிலமுற வீழ்ந்து வணங்கினார். உடனே
எழுந்து நின்று வழிபட்டார்.

விளக்கவுரை

வெள்ளி வெற்பின் மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளுபேரொளிபவளவெற்பென` எனப் பின்னர் *(தி.12 பு.21 பா.379)*
வருவதும் காண்க.
`பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளி வெற்பில் வாய்த் தனைய
தெய்வவடிவாகி` *(கந்தர். 31,32)* எனவரும் குமரகுருபரர் திருவாக்கும்
ஈண்டு நினைவு கூர்தற்குரியதாம்.

சொல்லுவ தறியேன் வாழி
தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி யென்னை
வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம்
எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடுஞ்
சேவடி போற்றி யென்ன. **#435**

`இவ்வாறு எழுந்தருளி வந்த கருணைப் பெருக் கின் திறத்தை எடுத்துச்
சொல்லுவதற்கு அறியேன். நும் பெருங் கருணை என்றும் வாழ்வதாகுக.
எளியேன் பொருட்டு இவ்வாறு எழுந்தருளிவந்த அம்மையப்பராகிய
திருக்கோலம் என்னால் என்றும் அயர்த்தலின்றி வழிபடுதற்குரியதாம்.
விரைவாக எழுந்தருளி அடியேனை வழிவழி அடியனாக அடிமை
கொண்ட பெருமானே! உன்னை என்றும் வணங்குகின்றேன். அளவற்ற
பேரானந்த வெள் ளத்தை அடியேனுக்கு வழங்கியருளிய பெருமானே!
நின்னை வணங் குகின்றேன். தில்லைப் பெருவெளியில் என்றும்
கூத்தியற்றுகின்ற பெருமானே! நின்னை வணங்குகின்றேன்`` என்று
பலவாறாகப் போற்றி வணங்கினார்.

விளக்கவுரை

வாழிய என்பதன் ஈற்று அகரம் கெட்டு நின்றது. வல்லை - விரைவாக.

விண்ணிடை நின்ற வெள்ளை
விடையவர் அடியார் தம்மை
எண்ணிய உலகு தன்னில்
இப்படி நம்பா லன்பு

பண்ணிய பரிவு கண்டு
மகிழ்ந்தனம் பழுதி லாதாய்
நண்ணிய மனைவி யோடு
நம்முடன் போது கென்று. **#436**

விண்ணின் கண், ஆனேற்றின்மீது இவர்ந்தருளிய சிவபெருமான், அடியவராகிய இயற்பகை நாயனாரை நோக்கி, `யாவரும் எண்ணி உய்தற்குரிய இந்நிலவுலகில் இவ்வாறு நம்மி டத்துக் கொண்டிருக்கும் அன்பின் தொடர்பைப் பார்த்து மகிழ்ச்சி யடைந்தோம். வினையின் நீங்கி விளங்கியவனே, நினக்குப் பொருந் திய மனைவியோடு நம்முடன் வருவாயாக` என்றருளினன்.

விளக்கவுரை

பரிவு - அன்பு. பழுது - இருவினை. சிவப்பேறு, வினை நீக்கம் பெற்ற வழியே எய்தற்குரியதாகும் ஆதலின் ஈண்டுப் பழுது, வினை என்பதாயிற்று.

திருவளர் சிறப்பின் மிக்க
திருத்தொண்டர் தமக்குந் தேற்றம்
மருவிய தெய்வக் கற்பின்
மனைவியார் தமக்குந் தக்க
பெருகிய அருளின் நீடு
பேறளித் திமையோ ரேத்தப்
பொருவிடைப் பாகர் மன்னும்
பொற்பொது அதனுட் புக்கார். **#437**

வீடுபேற்றினை அடைதற்குக் காரணமான சிறப்பு மிக்க இயற்பகை நாயனாருக்கும், தெளிவுபொருந்திய தெய்வக் கற் பினையுடைய அவர் மனைவியாருக்கும் தக்கவாறு பெருகிய அரு ளில் திளைத்து வாழ்தற்குரிய உயர்ந்த வீடு பேற்றினைக் கொடுத்து, இவ்வருட்டிறத்தினைத் தேவர்களும் எண்ணி ஏத்துமாறு உமையம் மையாரோடு ஆனேற்றில் எழுந்தருளி வந்தவராய சிவபெருமான், நிலை பெற்ற அழகிய தில்லைப் பொதுவிற்கு எழுந்தருளினார்.

விளக்கவுரை

இந்நான்குபாடல்களும் ஒரு முடிபின. திரு - முத்தித்திரு.

வானவர் பூவின் மாரி
பொழியமா மறைகள் ஆர்ப்ப
ஞானமா முனிவர் போற்ற
நலமிகு சிவலோ கத்தில்
ஊனமில் தொண்டர் கும்பிட்

டுடனுறை பெருமை பெற்றார்
ஏனைய சுற்றத் தாரும்
வானிடை யின்பம் பெற்றார். **#438**

தேவர்கள் பூமழை பொழியவும், பெருமை பொருந்திய மறைகள் ஒலிக்கவும், சிவஞானத்தில் திளைத்து நிற்கும் முனிவர்கள் போற்றவும், நலம் சிறக்கும் சிவலோகத்தின்கண் குற்ற மற்ற அவ்வியற்பகை நாயனார் தம் மனைவியாருடன் சிவபெருமானைத் தொழுது அவர் அருகில் வாழ்ந்திருக்கும் பெருமையைப் பெற்றார். அவரொடு பகைத்த மற்ற உறவினர்களும் விண்ணுலகை அடைந்து இன்பம் பெற்றார்கள்.

விளக்கவுரை

``நண்ணிய மனைவியோடு நம்முடன் போதுக`` என முற் கூறியமையின், ஈண்டுச் சிவலோகத்தில் உடனுறையும் பெருமை பெற்றார் இயற்பகையாரும் அவர்தம் மனைவியாரும். அறநெறிவழி நின்றமையாலும், நாயனாரிடத்தும், அம்மையாரிடத்தும் பழியும், பாவமும் சாராது காத்தலில் முனைந்து நின்றமையாலும், இயற்பகை நாயனாரின் வாளினால் ஒறுக்கப்பட்டமையாலும் அவருடன் பகைத்த சுற்றத்தாரும், வானிடை இன்பம் பெறுதற்கு உரியராயினர்.

இன்புறு தாரந் தன்னை
ஈசனுக் கன்ப ரென்றே
துன்புறா துதவுந் தொண்டர்
பெருமையைத் தொழுது வாழ்த்தி
அன்புறு மனத்தால் நாதன்
அடியவர்க் கன்பு நீடும்
மன்புகழ் இளைசை மாறன்
வளத்தினை வழுத்த லுற்றேன். **#439**

இல்லற இன்பத்தைப் பெறுதற்குக் காரணமாய மனையாளை, மறையவராக வந்தவர் சிவபெருமானின் அடியவர் என்றே கருதி ஒரு சிறிதும் வருந்தாது கொடுத்த இயற்பகை நாயனா ருடைய பெருமையை வணங்கி வாழ்த்தி, அன்புமிகுந்த தூய மனத்தால் சிவனடியார்களிடத்து அன்பு செலுத்தும் நிலைபெற்ற புகழினையுடைய இளையான்குடிமாற நாயனாரது பத்திமை நலத்தை வழுத்தத் தொடங்குகின்றேன்.

விளக்கவுரை

தாரம் - மனைவி. துன்புறாது உதவும் மனைவியைக் கொடுத்தற்கு நேர்ந்ததே எனும் துன்பமின்றிக் கொடுத்துதவிய. இளசை - இளையான் குடி; அது இளசை என மருவிநின்றது.

இளையான்குடிமாற நாயனார் புராணம்

அம்பொன் நீடிய அம்ப
லத்தினில் ஆடு வார்அடி சூடுவார்
தம்பி ரானடி மைத்தி றத்துயர்
சால்பின் மேன்மைத ரித்துளார்
நம்பு வாய்மையில் நீடு சூத்திர
நற்கு லஞ்செய்த வத்தினால்
இம்பர் ஞாலம் விளக்கி னார்இளை
யான்கு டிப்பதி மாறனார். **#440**

அழகிய பொன் வேயப்பெற்ற திருஅம்பலத்தின் கண் திருக்கூத்து இயற்றும் பெருமானின் திருவடிகளை எந்நாளும் தமது நெஞ்சத் திருத்தி வழிபாடாற்றி வருபவர். அப்பெருமானுக் குரிய அடிமைத் தன்மையில் சிறந்து விளங்கும் தகுதிப்பாட்டால் மேன்மை அடைந்தவர். விரும்புதற்குரிய மெய்ம்மையினால் உயர்ந்த வேளாண் குலம் செய்த தவத்தால், அக்குலத்தில் தோன்றி, இந்நிலவுல கில் தம் புகழை விளங்கச் செய்த பெருமையினார், அவர் இளையான் குடிப்பதியில் தோன்றியவர். மாறன் என்னும் பெயருடையார் என்பதாம்.

விளக்கவுரை

நம்புவாய்மை - எல்லோரானும் விரும்புதற்குரிய வாய்மை `யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும் வாய்மையின் நல்லபிற` *(குறள், 300),* `பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று` *(குறள், 296),* என்பவாதலின் வாய்மையே சிறந்ததும், எல்லோராலும் விரும்பத்தக்கதும் ஆகும். ஆதலின் `நம்பு வாய்மை` என்றார். வேளாண்குலத்தைச் சூத்திரர் என்னும் பெயரால் குறிக்கின்றார் ஆசிரியர். `சூத்ரா சுத்த குலோ தீபவா` என்பது சிவாகமம்,. இதனால் இம்மரபினர் தூய்மையும், உயர்வும் உடையவர் என்பது பெறுதும்.
இதுபற்றியே `சூத்திர நற்குலம்` என்றார் ஆசிரியர். இவ்வாறு ஈண்டுக் கூறிய தோடன்றி, வாயிலார் புராணத்தும் அவ்வடியவர் தோன்றிய இவ்வேளாண்குலத்தைத் `தொன்மை நீடிய சூத்திரத் தொல்குல நன்மை சான்ற நலம்` *(தி.12 பு.51 பா.6)* எனக் குறிப்பர். இதுவன்றி இச்சொற்குப் பிறவாறு உரைப்பன வெல்லாம் ஆசிரியருக் குக் கருத்தன்று. இனிச் சூத்திரர் என்பதற்கு ஆட்டுவிப்பவர் எனப் பொருள் கொண்டு, இவ்வுலகை உணவானும், அதன் வழியில் நற்பண்பாட்டானுமெலாம் இயக்குபவர் எனக் கூறலும் பொருந்துவ தாகும். `உழுவார் உலகத்தார்க்கு ஆணி` *(குறள், 1032),* `சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்`

(குறள், 1031), `பலகுடை நீழலும் தங்குடைக் கீழ்க்காண்பர்` *(குறள், 1034),*` என்றெல்லாம் திருவள்ளுவனார் குறித்தருள்வதும் ஈண்டு நினைவு கூரத்தக்கதாம்.
இளையான்குடி - இது சோழநாட்டிலுள்ள திருநள்ளாற்றுக்கு மேற்கே அமைந்துள்ளது என்றும், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பரமக்குடிக்கு வடகிழக்கில் உள்ளதொரு கிராமமே இது என்றும் இரு திறனாகக் கூறுவர்.
திருநள்ளாற்றுக்கு அண்மையில் உள்ள இளையான்குடியில் சிவபெருமானுக்குரிய திருக்கோயில் ஒன்று உள்ளது. இதற்குத் தெற் கில் `முளை வாரிக்குட்டை`, `முளை வாரி நாற்றங்கால்` என்ற பகுதிகள் உள்ளன. இதனால் இதுவே மாறனார் வாழ்ந்த பதி என்பர்.
இனி இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இளையான்குடியில், `முளைவாரி அமுதளித்த நாற்றங்கால்` என்றபெயரால் ஒரு சர்வ மானிய நிலம் வழங்கிவரப் பெறுகின்றது என்றும், இவ்வூரில் உள்ள பழைய சிவாலயத்தில் முளைவாரி அமுதளித்த விழாநடந்து வந்த தென்றும், மாறன் என்ற பெயர் பாண்டியர் மரபுக்குரியதாதலின் பாண்டி நாட்டிலுள்ள இப்பதியே அவர்தம் ஊராகும் என்றும், இதற்கு ஏற்பப் பாண்டி நாட்டவராயிருத்தல் குறிக்கத் தக்கதென்றும் கூறுவர்.
இனித் தொண்டை மண்டல சதகத்தார் இவ்வூர் தொண்டை நாட்டில் இருப்பதாகும் என்று கூறுவர். இவ்விடங்களுக் கெல்லாம் நேரில் சென்று மேலும் எண்ணித் துணிவது தக்கதாம். திருவருள் கூட்டுவிப்பதாகுக.

ஏரின் மல்குவ ளத்தி னால்வரும்
எல்லை இல்லதொர் செல்வமும்
நீரின் மல்கிய வேணி யார்அடி
யார்தி றத்துநி றைந்ததோர்
சீரின் மல்கிய அன்பின் மேன்மை
திருந்த மன்னிய சிந்தையும்
பாரின் மல்கவி ரும்பி மற்றவை
பெற்ற நீடுப யன்கொள்வார். **#441**

உழவுத் தொழிலால் நிறைந்து பெருகும் உணவு வளங்களினால் பெருக வரும் அளவில்லாத செல்வமும், கங்கை தங்கிய திருச்சடையையுடைய சிவபெருமானின் அடியவரிடத்து நிறைந்துள்ளதொரு சிறப்பின் மிக்க அன்பினது மேன்மை முழுமை யாக நிலைபெற்றிருக்கும் திருவுள்ளமும், உலகில் வளர்ந்து பயன்படு தற்கேற்ப, அவற்றைத் தாம் பெற்றதனாலாகிய நீடிய பயனை அடை வாராய்.

விளக்கவுரை

திருந்த மன்னிய - முழுமையாக நிலைபெற்ற.
செல்வமும், அன்புள்ளமும் ஒருங்குபெற்ற இளையான்குடி மாறனார் அவற்றைப் பெற்றதன் பயனையும் முழுமையாக அடை வாராய் வாழ்ந்தார் என்பது கருத்து.

ஆர மென்புபு னைந்த ஐயர்தம்
அன்பர் என்பதொர் தன்மையால்
நேர வந்தவர் யாவ ராயினும்
நித்த மாகிய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள்கு
வித்து நின்றுசெ விப்புலத்
தீர மென்மது ரப்ப தம்பரி
வெய்த முன்னுரை செய்தபின். **#442**

எலும்பினை மாலையாக அணிந்த சிவபெருமா னுடைய அடியவர் என்னும் முறைமையால், தம்மிடத்துப் பொருந்த வந்தவர்கள் யாவராயினும், தாம் நாளும் இயல்பாகச் செய்து வரும் பத்திமையால் முற்பட வந்து அவர்களை எதிர்கொண்டு, கை குவித்து வணங்கி, நின்று, அவர்தம் செவிகளில் குளிர்ந்த, மென்மை யான, இனிய மொழிகளை அவர் விரும்புமாறு முதற்கண் சொல்லிய பின்பு.

விளக்கவுரை

என்பு ஆரம் என மாறுக. நேர - தம்மிடத்துப் பொருந்த. பதம் - சொல். அடியவரை வரவேற்கும் சொற்கள் மூவகைப் பண்பினவாய் அமைய வேண்டும். முதலாவதாகக் குளிர்ந்த மொழி களாக இருத்தல் வேண்டும். ஈண்டுக் குளிர்ச்சி அன்பின் மேலதாம். `ஈரம் அளைஇ` *(குறள், 91)* என வருவதும் காண்க. இரண்டாவது மென்மையாக இருத்தல் வேண்டும். மூன்றாவது இனிமையை யுடையவாக இருத்தல் வேண்டும். இதுவே ``ஈரமென் மதுரப்பதம்`` எனப்படும்.
பரிவு எய்த - அவர்கள் விரும்புமாறு பொருந்த. எனவே முற்கூறிய மூவகை அமைப்பில் வரவேற்கும் மொழிகள் அமையினும், அவையும் அவர் விரும்புமாறு அமைதல் இன்றியமையாததாம்.
யாவராயினும் - உம்மை முற்றும்மை. அன்பர் என்பதோர் தன்மை - திருநீறும். கண்டிகையும் அணிந்து திருவைந்தெழுத்தை இடையறாது ஓதிவரும் தன்மையாம். `எவரேனும் தாமாக விலாடத் திட்ட திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி,` *(தி.6 ப.61 பா.3)* `ஆவுரித் துத் தின்றுழலும் புலைய ரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில் அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவு ளாரே!`*(தி.6 ப.95 பா.10)* என்றல் தொடக்கத்தனவாய திருவாக்குகளும் காண்க.

கொண்டு வந்தும னைப்பு குந்துகு

குலாவு பாதம்வி ளக்கியே
மண்டு காதலின் ஆத னத்திடை
வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலுவி தத்தி லாறுசு
வைத்தி றத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில்
அமுது செய்யஅ ளித்துளார். **#443**

இவ்வகையில் அடியவர்களை வரவேற்று அழைத் துக் கொண்டு வந்து, தாமும் அவரொடு மனையில் புகுந்து, யாவர்க் கும் அருள் விளக்கம் தருதற்குரிய அவர்தம் திருவடிகளைக் குளிர்ந்த தூய நீரால் கழுவி, நிறைந்த பெருவிருப்போடு, அவர்களைப் புனித இருக்கையில் அமர்வித்துத் திருவடி வழிபாட்டினைச் செய்த பின்பு, நால் வகையான உணவுகளை, அறுசுவையோடு, ஒப்பில்லாத தேவர் களுக்குத் தலைவனாய, சிவபெருமானுடைய அடியவர்களை மிக விருப்போடு உணவு உண்ணுமாறு நாள்தொறும் கொடுத்து வந்தவர்.

விளக்கவுரை

குலாவு பாதம் - விளக்கம் தருகின்ற திருவடி; ஈண்டு விளக்கம் அருள் விளக்கமாம். மண்டு காதல் - மீதூர்ந்த விருப்பம். ஆதனம் - இருக்கை. உண்டி நான்கு வகையாவன:- உண்டல், தின்றல், பருகுதல், நக்குதல் என்பன. ஆறுசுவை - தித்திப்பு, புளிப்பு, கைப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்பன. ஒப்பிலாநாயகர் எனக் கூட்டுக. இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

ஆளு நாயகர் அன்பர் ஆனவர்
அளவி லார்உளம் மகிழவே
நாளு நாளும்நி றைந்து வந்துநு
கர்ந்த தன்மையின் நன்மையால்
நீளு மாநிதி யின்ப ரப்புநெ
ருங்கு செல்வநி லாவியெண்
தோளி னார்அள கைக்கி ருத்திய
தோழ னாரென வாழுநாள். **#444**

தம்மை அடிமையாகக் கொள்ளும் சிவபெருமானு டைய அடியவர்கள் எண்ணிறந்தவர்களின் திருவுள்ளம் மகிழ்வடைய, அவர்களுக்கு நாள்தொறும் உணவு அருத்திய பேற்றின் நன்மையால், நாளும் பெருகி வரும் பொன், மணி முதலிய நிதிகளின் தொகுதி நிறைந்து வரும் செல்வத்தால் விளங்கி, எண் தோள்களையுடைய சிவபெருமான் அளகாபுரிக்கண் வைத்த குபேரன் என்னும் தோழனை யொத்து வாழ்ந்திருக்கும் நாளில்.

விளக்கவுரை

நல்ல அடியவர்களுக்கு நாளும் உணவளித்து வருதல் நீளும் செல்வத்திற்குக் காரணமாகும். `அகனமர்ந்து செய்யாள் உறையும்,` *(குறள், 84)* `வித்தும் இடல் வேண்டும் கொல்லோ` *(குறள், 85)* என வரும் திருக்குறட்பாக் களையும் காண்க. தோழனார் - குபேரன்.

செல்வம் மேவிய நாளி லிச்செயல்
செய்வ தன்றியும் மெய்யினால்
அல்லல் நல்குர வான போதினும்
வல்லர் என்றறி விக்கவே
மல்லல் நீடிய செல்வம் மெல்லம
றைந்து நாடொறு மாறிவந்
தொல்லை யில்வறு மைப்ப தம்புக
உன்னி னார்தில்லை மன்னினார். **#445**

தமக்குச் செல்வம் பெருகியிருந்த காலத்தில் இவ்வாறு அடியவர் வழிபாட்டைச் செய்துவந்ததன்றி, துன்பத்தை விளைவிக்கும் வறுமை உண்டாய விடத்தும், தமக்குரிய உண்மை யான பத்திமையால் இவ்வாறு செய்வரென்பதை யாவர்க்கும் அறிவிக்கும் பொருட்டு, வளத்தால் உயர்ந்த இவர் செல்வம் மெல்ல மெல்லக் குறைந்து நாள்தோறும் நிலைமை திரிய விரைவில் வறுமைத் தன்மையை அடையுமாறு, தில்லைமாநகரில் வீற்றிருந்தருளும் சிவ பெருமான் திருவுள்ளம் கொண்டருளினார்.

விளக்கவுரை

ஒல்லையில் - விரைவில். மல்லல் - வளம். ஏகாரம் - அசைநிலை. இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

இன்ன வாறுவ ளஞ்சு ருங்கவும்
எம்பி ரான்இளை யான்குடி
மன்னன் மாறன்ம னஞ்சு ருங்குத
லின்றி யுள்ளன மாறியுந்
தன்னை மாறியி றுக்க உள்ளக
டன்கள் தக்கன கொண்டுபின்
முன்னை மாறில்தி ருப்ப ணிக்கண்மு
திர்ந்த கொள்கைய ராயினார். **#446**

இவ்வாறு சிவபெருமான் திருவருளால் தமது செல்வம் நாளுக்கு நாள் குறையவும், எம் முதல்வராகிய இளையான் குடி என்னும் ஊரில் வாழும் அந்நாயனார், மனத்தில் பத்திமைக் குறைவின்றித் தம்மிடம் இருப்பனவற்றை விற்றும், கடன் பெற்று மீள அதனை

அடைத்தற்குரியவாகச் சிலவற்றை ஒற்றி வைத்தும், கொடுக் கத்தக்க கடன்களைத் தக்கவாறு வாங்கிக் கொண்டும், பின்னர் முன்பு போலத் தளர்வின்றி அடியவர்க்கு அமுது படைக்கும் திருத்தொண் டால் மேம்பட்டொழுகும் கடப்பாடு உடையவரானார்.

விளக்கவுரை

வளஞ்சுருங்க மனம் சுருங்குதல் பொதுவியல்பு. திருவருள் தோய்வால் அப்பொதுவியல்பு இன்றி வளஞ்சுருங்கவும், மனஞ் சுருங்காத சிறப்பியல்பை அடியவர் பெறுவாராயினர். உள்ளன மாறியும் - தமக்குள்ள பொருள்களில் சிலவற்றை விற்று அதற்குரிய பொருள்களைப் பெற்றும். தன்னை மாறி இறுக்கவுள்ள கடன்கள் - மீள அடைதற்கேற்ப ஒற்றி வைத்துக் கடனாகப் பெறத்தக்க பொருள்களைக் கடனாகப் பெற்றும். தம்மை என வேண்டுவது, எதுகை நோக்கித்தன்னை என நின்றது. எனவே விற்றற்குரியன வற்றை விற்றும், ஒற்றிவைத்தற்குரியனவற்றை ஒற்றி வைத்தும், பொருள் பெற்று, அதனால் முன்னைய திருத்தொண்டைத் தவறாது ஆற்றினர் என்பதாம். தன்னை மாறி - தன்னையே விற்று எனப் பொருள் காண்பாரும் உளர். அடியவர்க்கு உரியனவாக நிலனும், வீடும் இருத்தல் பின்னைய வரலாற்றால் தெரிதலானும், தன்னை விற்ற பின் தனக்குரிய அடிமைத் தொண்டைச் செய்தல் இயலாதாதலானும் இப்பொருள் கோடல் சாலாதாம். மாறுஇல் திருப்பணி - முன்செய்து வந்த திருத்தொண்டிற்கு மாறு இல்லாததாகிய திருப்பணி. எனவேமுன் செய்தபணியைத் தொடர்ந்து செய்து வந்தமை தெளிவாம்.

மற்ற வர்செய லின்ன தன்மைய
தாக மாலய னானஅக்
கொற்ற ஏனமும் அன்ன முந்தெரி
யாத கொள்கைய ராயினார்
பெற்ற மூர்வதும் இன்றி நீடிய
பேதை யாளுடன் இன்றியோர்
நற்ற வத்தவர் வேட மேகொடு
ஞால முய்ந்திட நண்ணினார். **#447**

அவ் இளையான்குடிமாற நாயனாரின் செய்கை இவ்வாறு இருக்க, மாலான பன்றியும் அயனான அன்னமும் தாம் காணச் சென்ற அடியையும், முடியையும் அறிய இயலாதவராகிய சிவ பெருமான், ஆனேற்றை ஊர்தியாகக் கொள்ளாமலும், உமையம்மை யாரை ஒரு மருங்கில் கொள்ளாமலும், ஒரு நற்றவ வேடமுடைய அடியார் வேடத்தைக் கொண்டு இவ்வுலகம் உய்யும் பொருட்டு எழுந் தருளினார்.

விளக்கவுரை

இறைவன் திருவடியைப் பன்றி வடிவுகொண்டு திருமால் அகழ்ந்தும் அறியாதவராகிப் பின், அப்பெருமானை வழுத்தியதன் பயனாக அறிந்தமையின் `கொற்றவேனம்` என்றார். அயன் இறை வனைக்காணா திருந்தே கண்டேன் எனப் பொய் கூறிச் சாபம் பெற்ற மையின், வாளா, `அன்னமும்` எனக்கூறினார். மற்று - அசைநிலை.

மாரிக் காலத் திரவினில் வைகியோர்
தாரிப் பின்றிப் பசிதலைக் கொள்வது
பாரித் தில்லம் அடைத்தபின் பண்புற
வேரித் தாரான் விருந்தெதிர் கொண்டனன். #448

மழைக்காலத்தில் ஓர் இரவில், தனியே இருந்து அடக்கற்கரிய பசி மீதூர்வதை அடக்கிக் கொண்டு, வீட்டை அடைந்து தாழிட்டுக் கொண்ட பின்னும், மணம் மிகத் தேன் சிந்தும் குவளை மாலையையுடைய நாயனாரின் இல்லத்திற்குச் சிவபெருமான் விருந் தாக வர, நாயனார் அவ்வடியவரை எதிர்கொண்டு வரவேற்றார்.

விளக்கவுரை

தரிப்பு, தாரிப்பு என முதல் நீண்டது. தரிப்பு - தாங்குதல். ஆதரித்தல் எனப் பொருள் கொண்டு, தம்மைத் தாங்கக் கூடியவர் யாவரும் இன்றி எனப்பொருள் காண்பர் சிவக்கவிமணியார் (பெரிய.பு. உரை). பாரித்து - மிகுந்து. தலைக்கொள்வது - வயிற்றகத் தடைவது. தலை - ஈண்டு இடப்பொருட்டு. வேரி - தேன். தார் - மாலை. ஈண்டுக்குவளை மாலையாம். வேளாளர்க்குக் குவளை மாலை உரியது. பண்புற எதிர் கொண்டனர் என இயைக்க. பண்பு - விருந்து ஏற்றற்குரிய பண்பு. இனிப்பண்புஉற என்பதற்குத்தாம் செய்த திருத்தொண்டின் பயனாகக் கிடைத்தற்குரிய வீடுபேறு அடையும் காலம் உற எனப் பொருள் கோடலும் ஒன்று.

ஈர மேனியை நீக்கி இடங்கொடுத்
தார வின்னமு தூட்டுதற் காசையால்
தார மாதரை நோக்கித் தபோதனர்
தீர வேபசித் தார்செய்வ தென்னென்று. #449

முதற்கண் விருந்தாக வந்த அவர்தம் திருமேனியில் உள்ள ஈரத்தைப் போக்கி, அவர் எழுந்தருளி இருத்தற் குரிய இடத்தைக் கொடுத்து, அதன்பின் அவர்தம் மனம் நிறைவு கொள்ளுமாறு உணவு ஊட்டுதற்கு விருப்புற்றாராக, தம் இல்லக் கிழத்தியாரை நோக்கி, இத்தவமுனிவர் மிகப் பசித்துள்ளார், நாம் என் செய்வது என்று கூறியவர், பின்னரும்.

விளக்கவுரை

ஆர - *(வந்த அடியவர்)* மனநிறைவு கொள்ளுமாறு. இனி விருந்தூட்டுதற்குரிய தம் மனம் நிறைவு கொள்ளுமாறு எனினும் ஆம். தாரம் - மனைவி. தீர - மிக.

நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு நாம்இன் னடிசில் தகவுற
அமைக்கு மாறெங்ங னேஅணங் கேயென. **#450**

மாதே! நம் வீட்டில் நமக்கு முன்னமேயே உணவின்றி வறுமையாக இருப்பினும், மலையரையன் மகளாகிய உமையம்மையை ஒரு கூற்றில் உடைய சிவபெருமானுக்குத் தொண்ட ராகிய இவ்வடியவருக்கு நாம் ஊட்டுதற்குரிய இனிய திருவமுதைத் தக்கவாறு அமைக்கும் வகை எவ்வாறு? என்று வினவ.

விளக்கவுரை

இமம் - பனி*:* அதனால் மூடப் பெற்றிருப்பது பற்றி இமயமலை எனப்பெயர் பெறுவதாயிற்று.

மாது கூறுவள் மற்றொன்றும் காண்கிலேன்
ஏதி லாரும் இனித்தரு வாரில்லை
போதும் வைகிற்றுப் போமிடம் வேறிலை
தீது செய்வினை யேற்கென் செயலென்று. **#451**

இதற்கு அவ்வம்மையார் விடை கூறுவாராய், `அடியவரை உண்பிப்பதற்கு வேறு வழியொன்றும் காண்கிலேன்; பிறர் எவரும் இனிக் கொடுப்பவர்களாயும் இல்லை, காலமும் கழிந்து நள்ளிரவாயிற்று, இவற்றையெல்லாம் விடுத்து இனிச்சென்று தேடுதற் குரிய இடமும் வேறில்லை, தீவினையேன் ஆகிய எனக்குமேற் கொண்டு செயத்தக்கதும் தெரிந்திலது` என்று கூறியவர், மேலும் எண்ணி.

விளக்கவுரை

ஏதிலார் - அயலார். `இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு` *(குறள், 81)* என்பர் திருவள்ளுவர். அவ்வறப்பயன் கிடைத்திலதே என்னும் கருத்தால் `தீது செய்வினை யேற்கு` என்றார். `விருந்து எதிர்கோடலும் இழந்த என்னை` *(சிலப்ப. கொலைக். 73)* எனக் கண்ணகியார் கூறு வதும் நினைவு கூர்தற்குரியது.

செல்லல் நீங்கப் பகல்வித்தி யசெந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக்கொ டுவந்தால்
வல்ல வாறமு தாக்கலும் ஆகுமற்
றல்ல தொன்றறி யேனென் றயர்வுற. **#452**

`நம் துன்பம் நீங்குமாறு இன்றைய பகற் பொழுதில் வயலில்

விதைத்திருந்த செழிப்பாக நீரில் முளைத்தற்குரிய நெல்லைத் தாங்கள் வாரிக் கொண்டுவந்தால், அடியேன், அதற்கேற்ற வகையில் உணவாக்கித் தருதலுமாகும், இதுவன்றி வேறொரு வழியில்லை` என்று வருந்தினாராக.

விளக்கவுரை

செல்லல் - துன்பம். `செல்லல் இன்னல் இன்னா மையே` *(தொல். உரி.6)* என்னும் தொல்காப்பியமும். மல்லல் - வளம்.

மற்றம் மாற்ற மனைவியார் கூறமுன்
பெற்ற செல்வம் எனப்பெரி துள்மகிழ்ந்
துற்ற காதலி னால்ஒருப் பட்டனர்
சுற்று நீர்வயல் செல்லத்தொ டங்குவார். **#453**

பின்பு அம்மொழிகளை மனைவியார் கூறக் கேட்டதும், நாயனார் முன்தேடி வைத்திருந்த செல்வம் தம் கையகத்துப் பெற்றவர் போன்று மிகவும் மனமகிழ்ந்து, பொருந்திய ஆசையினால் நீர்சூழ்ந்திருக்கும் தமது வயலில், முளைத்தற்குரிய நெல்லை வாரிக் கொண்டு வரப் போதற்கு ஒருப்படுவாராகி.

விளக்கவுரை

சுற்றுநீர் வயல்: நீர்சுற்று வயல் என மாறுக. நீர்சூழ்ந்த வயல் என்பது பொருள்.

பெருகு வானம் பிறங்கம ழைபொழிந்
தருகு நாப்பண் அறிவருங் கங்குல்தான்
கருகு மையிரு ளின்கணங் கட்டுவிட்
டுருகு கின்றது போன்ற துலகெலாம். **#454**

விண் வெளியினின்றும் மிகப்பெருமழை பொழி தலால், பக்கங்களும், இடைவெளிகளும் அறிய இயலாதவாறு இருண்ட நள்ளிரவில், கருகிய, மை போன்ற, இருள் கூட்டம் தனது செறிவை விட்டு உருகுகின்றது போன்று அந்நேரத்தே உலகெலாம் தோன்றி நிற்க.

விளக்கவுரை

அருகு நாப்பண் - அருகிலும் நடுவிடங்களிலும்; உம்மைத் தொகை. கருகும்மையிருளின் கணம் - கருமையை உடைய மை போன்ற இருட்கூட்டம். இவ்வாறு செறிந்திருந்த இருள், கட்டுவிட்டு உருகுகின்றது போன்று இராப்பொழுதில் பேரிருள் சூழநின்றது.

எண்ணு மிவ்வுல கத்தவர் யாவருந்
துண்ணெ னும்படி தோன்றமுன் தோன்றிடில்
வண்ண நீடிய மைக்குழம் பாம்என்று
நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து. **#455**

இதனை எண்ணுகின்ற இவ்வுலகினர் யாவரும் `துண்` என நடுக்கமுற, அவ்வாறு அவ்விருள் பெருகி முன்னே தோன்றும் காலத்தில், மைக்குழம்பு இதுவாம் என வெளியில் எவரும் இயங்காதவாறு இருள் மிகுந்த நடுயாமத்தில்.

விளக்கவுரை

மைவண்ணம் நீடிய குழம்பு எனக் கூட்டுக.

உள்ள மன்புகொண் டூக்கவோர் பேரிடாக்
கொள்ள முன்கவித் துக்குறி யின்வழிப்
புள்ளு றங்கும் வயல்புகப் போயினார்
வள்ள லார்இளை யான்குடி மாறனார். **#456**

கொடையில் சிறந்தவராகிய இளையான் குடிமாற நாயனார், தம் மனத்தில் விளைந்த அன்பானது ஈர்த்துக் கொண்டு செலுத்த, ஒரு பெரிய கூடையைத் தம் தலையில் அடங்குமாறு முன்னே மூடிக்கொண்டு, தாம் முன்பு பழகிய மனக்குறிப்பின் வழியே பறவைகள் துயிலும் வயலினிடத்துச் சென்றார்.

விளக்கவுரை

இவ்வெட்டுப் பாடல்களும் ஒருமுடிபின. பேர் இடா - பெரிய கூடை.

காலி னால்தட விச்சென்று கைகளால்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன
கோலி வாரி யிடாநிறை யக்கொண்டு
மேலெ டுத்துச் சுமந்தொல்லை மீண்டனர். **#457**

முளைத்தற்கென நெல் விட்டிருக்கும் இடத்தைக் காலால் தடவிப் பார்த்துப் பின்பு சென்று கைகளினால் சம்பா நெல்லின் வெள்ளிய முளைகள் நீர்வழிஒதுங்கி இருந்தவற்றைச் சேர்த்து, வாரிக் கூடை நிறையக் கொண்டு, தலைமீது எடுத்துச் சுமந்து கொண்டு விரைவாகத் தம் இல்லத்திற்கு மீண்டார்.

விளக்கவுரை

கோலி வாரி - சேர்த்து வாரி.

வந்தபின் மனைவி யாரும்
வாய்தலின் நின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரில்
சேற்றினை யலம்பி யூற்றி
வெந்தழல் அடுப்பின் மூட்ட
விறகில்லை யென்ன மேலோர்
அந்தமின் மனையில் நீடும்
அலக்கினை யறுத்து வீழ்த்தார். **#458**

இவ்வாறு நாயனார் முளைகளை வாரிக் கொண்டு வீட்டிற்கு வந்தபோது, அவர் மனைவியாரும், வீட்டு வாயிலில் நின்று அதனை வாங்கிக் கொண்டு, தம் மனத்தில் விருப்பம் உடையராய்த் தண்ணீரால் நெல்லில் கலந்த சேற்றைக் கழுவி, அந்நெல்லைப் பக்குவப்படுத்தி அரிசியாக்குதற்கு அடுப்பினிடத்து நெருப்பை மூட்டுதற்கு விறகு இல்லை என்று கூற, அவ் இளையான்குடிமாற நாயனாரும் பழங்கூரையாய் இருக்கும் தம் வீட்டின்கண் கட்டப்பெற்ற மேற்கழிகளை அறுத்து வீழ்த்தினார்.

விளக்கவுரை

வாய்தல் - வீட்டுவாயில். தம் கணவனார் கடிய இரவில் வீட்டிலிருந்து வயல் வரை சென்று முளைகளை வாரிக் கொண்டு வந்தது அவர் அடியவரிடத்துக் கொண்டிருந்த அன்பின் பத்திமை யைக் காட்டுகின்றது. நெல்முளையை வாரி வர, இவர் வாயிலில் நின்று வாங்கியது இவர்தம் கணவரிடத்துக் கொண்ட அன்பு மேம்பாட்டையும் அடியவரிடத்துக் கொண்டிருக்கும் பக்தி மேம்பாட் டையும் ஒருங்கு காட்டுகின்றன.

முறித்தவை அடுப்பின் மாட்டி
முளைவித்துப் பதமுன் கொள்ள
வறுத்தபின் அரிசி யாக்கி
வாக்கிய உலையிற் பெய்து
வெறுப்பில்இன் அடிசி லாக்கி
மேம்படு கற்பின் மிக்கார்
கறிக்கினி யென்செய் கோமென்
றிறைஞ்சினார் கணவ னாரை. **#459**

அம்மனையிடத்துப் பெற்ற அலக்குகளை ஒடித்து அடுப்பில் சேர்த்து, முளை நெல் விதையை, முதற்கண் அரிசியாகும் பக்குவத்தை அடைதற்கு வறுத்துப் பின்பு அதனைக் குத்தி அரிசியாகச் செய்து, அவ்வரிசியை நீர் வார்த்த உலையிடத்து இட்டு, விரும்பி உண்ணக் கூடிய இனிய திருவமுதாக்கி, பெண்டிற்குரிய நாணினும் மேம்பட்ட கற்பிற் சிறந்த மனைவியார், `உணவொடு கூட்டி உண்ணுதற்குரிய கறியமுதிற்கு இனியாம் என் செய்வோம்` என்று தம் கணவனாரிடம் விண்ணப்பித்தார்.

விளக்கவுரை

பதம் - அரிசியாதற்குரிய பக்குவம். உணவாக்குதற் கென வறுத்துக் கொள்ளப்படும் நெல் வறுத்தலில் மிகுதலும் குறைதலும் இன்றிப் பக்குவமாக அமைதல் வேண்டும். அப்பக்குவம் வாய்த்தாலன்றி

முழுமையாக அரிசி எடுத்தல் ஆகாது. அந்நிலையில் தவறாது அமைக்கப்பட்டது என்பார் `பதமுன்கொள்ள வறுத்தபின்` என்றார். மகளிர்க்கு உயிரினும் சிறந்ததது நாண், அந்நாணினும் சிறந்தது கற்பாகும் *(தொல். கள. 22)* என்னும் தொல்காப்பியம், ஆத லின் `மேம்படு கற்பின்` என்றார். இறைஞ்சினார் - தலைதாழ்த்தி விண் ணப்பித்துக் கொண்டார்.

வழிவரும் இளைப்பி னோடும்
வருத்திய பசியி னாலே
அழிவுறும் ஐயன் என்னும்
அன்பினிற் பொலிந்து சென்று
குழிநிரம் பாத புன்செய்க்
குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப்
பறித்தவை கறிக்கு நல்க. **#460**

வழி நடந்து வந்த இளைப்போடு, வருத்துகின்ற பசியினாலும் மனம் வருந்தி நிற்பார் எம் ஐயன் என்னும் அன்பினால் மீதூர்ந்தவராய், சென்று குழிகளினின்றும் உயர்ந்துமேற்செல்லாத புன்செய் நிலத்தில் முளைத்திருக்கும் கீரைவகைகளைத் தடவி, அக்கீரைகளில் சிலவற்றைத் தம் பாசத்தின் வேரைக் களைவார் போலப் பறித்துக் கறியமுதுக்குக் கொடுக்க.

விளக்கவுரை

ஐயன் - தலைவன்; தம் இல்லத்திற்கு வந்தவராகிய அடியவர். குழி நிரம்பாத - தாம் முளைத்திருக்கும் குழியினின்றும் மேற்செல்லாத கீரை. அவ்வப்பொழுதும் அக்கீரைகளையே பறித்தும் தண்டுடன் ஈர்த்தும் பயன்படுத்தி வந்திருந்தமையால், `குழி நிரம்பாத பயிர்` என்றார். `குப்பைக் கீரை கொய்கண் அகைத்த முற்றா இளந்தளிர் கொண்டு` *(புறநா.159)* என்னும் சங்க இலக்கியமும். உலகியற் பொருள்களில் பாசம் சிறிதளவே இருப்பினும் அதன் வாயிலாக மயங்கிப் பிறவி வலைப் படுதற்கு ஏதுவாதலின், அதனை முற்றக்களைய வேண்டு மென்பார், `பாசப்பழிமுதல் பறிப்பார் போல` என்றார். `அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கே` *(மீனாட்சி பி.த. 62)* என்பர் குமரகுருபரரும். சிவப் பேற்றிற்கு ஆளாகும் பெற்றிமை தோன்ற இவ்வுவமை கூறினார்.

மனைவியார் கொழுநர் தந்த
மனமகிழ் கறிக ளாய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க
புனிதபாத் திரத்துக் கைம்மை

வினையினால் வேறு வேறு
கறியமு தாக்கிப் பண்டை
நினைவினால் குறையை நேர்ந்து
திருவமு தமைத்து நின்று. **#461**

அம்மனைவியாரின் கணவராய நாயனார் கொடுத்த கீரைகளை, மனம் களிக்கத்தக்க வகையில் அவற்றின் வேர் களையும் நரம்புகளையும் களைந்து, தண்ணீரில் கழுவி, அவற்றைத் தகுதியும் தூய்மையும் உடைய கலத்தில் (பாத்திரத்தில்) தம் கைத் தொழிலின் திறத்தால் அவற்றை வெவ்வேறு கறியமுதாக்கி, தாம் முன் செல்வம் பெற்ற நன்னாளில் செய்யும் பக்குவங்களை நினைந்து வருந்தியவராகி, அவற்றைத் திருவமுதாக்கி.

விளக்கவுரை

பல்வேறு கீரைகளைக் கொண்டு தக்க கறியமுதுகளைச் சமைத்திருப்பினும், திருப்பெற்றிருந்த பண்டை நாளை நோக்க அவை சிறிதாகியும், வேண்டுவன செய்து பக்குவப்படுத்தாமையுமாகக் கருதுகின்றார் ஆதலின், `பண்டை நினைவினால் குறையை நேர்ந்து` என்றார்.

கணவனார் தம்மை நோக்கிக்
கறியமு தான காட்டி
இணையிலா தவரை ஈண்ட
அமுதுசெய் விப்போ மென்ன
உணர்வினால் உணர ஒண்ணா
ஒருவரை உணர்த்த வேண்டி
அணையமுன் சென்று நின்றங்
கவர்துயில் அகற்ற லுற்றார். **#462**

இவ்வாறு சமைத்து அமைத்த அம்மையார், தம் கணவரைப் பார்த்து, அக்கீரை அமுதுகளைக் காட்டி, ஒப்பில்லாத அவ்வடியவரை முறையாகத் திருவமுது செய்விப்போம் என்று கூற, உயிர்கள் தம் அறிவால் உணர ஒண்ணாத சிவபெருமானாகிய அவ் வடியவர் அமுது செய்ய வேண்டி, அவரை அணுகச் சென்று அவர் தம் துயிலை அகற்ற முற்படும் பொழுதில்.

விளக்கவுரை

****

அழுந்திய இடருள் நீங்கி
அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய் ஈண்ட

அமுதுசெய் தருள்க வென்று
தொழும்பனா ருரைத்த போதில்
சோதியா யெழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாரும்
தொண்டருந் திகைத்து நின்றார். #463

`பிறவிப் பெருங்கடலில் அழுந்தி நிற்கும் அத் துன்பத்தினின்றும் நீங்கி, அடியனேன் உய்வதற்குத் திருவுளங் கொண்ட பெரியவரே! திருவமுது செய்தருள வேண்டும்` என்று அடி யவர், அப்பெரியவரிடத்தில் விண்ணப்பம் செய்ய, அடியவர் வேடங் கொண்ட சிவபெருமானும் ஒளிவடிவாய் விண்ணகத்தே தோன்ற, அவ்வரிய காட்சியைச் செம்மையான குணங்கொண்ட அடியவரின் மனைவியாரும், அவ்வடியவரும் கண்டு வணங்கித் திகைத்து நின்றார்கள்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

மாலயற் கரிய நாதன்
வடிவொரு சோதி யாகச்
சாலவே மயங்கு வார்க்குச்
சங்கரன் தான்ம கிழ்ந்தே
ஏலவார் குழலாள் தன்னோ
டிடபவா கனனாய்த் தோன்றிச்
சீலமார் பூசை செய்த
திருத்தொண்டர் தம்மை நோக்கி. #464

மாலும், அயனும், காண்டற்கியலாத அடியவராய் வந்த சிவபெருமான், ஒளிவடிவாய் நின்று, மனைவியாருடன் கண்டு திகைத்து நிற்கும் அவ்வடியவர்க்கு, பெருமகிழ்வுடன் மயிர்ச்சாந் தணிந்த நீண்ட திருமுடியையுடைய உமையம்மையாரோடு ஆனேற் றில் எழுந்தருளி, தமக்குச் சிறந்த முறையில் வழிபாடாற்றிய அவ் வடியவரை நோக்கி.

விளக்கவுரை

நாதன் என்பதோடு சங்கரன் என்பதை இயைத்துப் பொருள் கொள்க. சாலவே - மிகுதியாகவே. ஏலம் - மயிர் சாந்து. ஏ, தான் என்பன அசைநிலைகள்.

அன்பனே அன்பர் பூசை
அளித்தநீ அணங்கி னோடும்
என்பெரும் உலகை எய்தி
யிருநிதிக் கிழவன் தானே
முன்பெரு நிதியம் ஏந்தி

மொழிவழி ஏவல் கேட்ப
இன்பமார்ந் திருக்க என்றே
அருள்செய்தான் எவர்க்கும் மிக்கான். **#465**
அடியவனே! அடியவர்களுக்கு வழுவாது வழிபாடு செய்து
உணவளித்துவந்த நீ, உன்மனைவியோடும் என்னு டைய பெருமை
பொருந்திய சிவலோகத்தையடைந்து, குபேரனே தனக்குரிய நிதிகளைக்
கையில் ஏந்தி, உன் ஆணை வழிநின்று நீ பணித்த பணிகளைச் செய்து
வர, இன்புற்று இருப்பாயாக என்று யாவர்க்கும் மேலோனாய
சிவபெருமான் அருளிச் செய்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

இப்பரி சிவர்க்குத் தக்க
வகையினால் இன்பம் நல்கி
முப்புரஞ் செற்றா ரன்பர்
முன்பெழுந் தருளிப் போனார்
அப்பெரி யவர்தந் தூய
அடியிணை தலைமேற் கொண்டு
மெய்ப்பொருட் சேதி வேந்தன்
செயலினை விளம்ப லுற்றேன். **#466**
இவ்வாறாய அருட்கொடையைத் தக்க வகையால் வழங்கியருளி,
முப்புரம் எரித்தவராய சிவபெருமான் இவர் முன்னே எழுந்தருளிச்
செல்ல, இவர்களும் சென்று அப் பேற்றைப் பெற்றனர்.
அப்பெருமானின் திருவருளுக்கு இலக்கான இளையான் குடிமாற
நாயனாரின் தூய திருவடிகளைத் தலைக்கொண்டு வணங்கி, இனி,
மெய்ப்பொருள் நாயனாரின் வரலாற்றைச் சொல்லத் தொடங்கு
கின்றேன்.

விளக்கவுரை

****

மெய்ப்பொருள் நாயனார் புராணம்

சேதிநன் னாட்டு நீடு
திருக்கோவ லூரின் மன்னி
மாதொரு பாகர் அன்பின்
வழிவரு மலாடர் கோமான்
வேதநன் னெறியின் வாய்மை
விளங்கிட மேன்மை பூண்டு
காதலால் ஈசர்க் கன்பர்
கருத்தறிந் தேவல் செய்வார். **#467**

நன்மை மிகுந்த சேதி நாட்டின்கண் உள்ள மேன்மை பொருந்திய திருக்கோவலூரின்கண் வாழ்ந்தருளி, உமையம்மை யாரை ஒரு கூற்றில் வைத்தருளும் சிவபெருமானிடத்துப் பத்திமை செய்தொழுகும் மலையமான் நாட்டிற்குரிய அரசர், நன்மை மிகுந்த மறைவழியில் உலகம் விளங்குதற்கு ஏதுவான பெருமை மிக்க நற் குணங்களைத் தாங்கி, பெருவிருப்போடு சிவபெருமானின் அடியவர் கட்கு அவர்தம் திருவுள்ளக் குறிப்புணர்ந்து பணிவிடை செய்து வருவார்.

விளக்கவுரை

தொண்டை நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் நடுவில் உள்ள பகுதியை நடு நாடு என்பர். இந்நாட்டின் உட்பகுதியாக விளங்குவது இச்சேதி நாடாகும். இந்நாட்டினைச் சேதிபர் என்னும் அரச மரபினர் ஆண்டு வந்தமையால் இஃது இப்பெயர் பெற்றது. திரு விசைப்பா ஆசிரியர்களுள் ஒருவரான சேதிராயர் இம்மரபினராவர். திருக்கோவலூர் - சிவபெருமானின் வீரம் விளங்கும் இடங்கள் எட்டனுள் இதுவும் ஒன்றாகும். அந்தகாசுரனை அழித்த வரலாறு படைத்தது. இந்நகரில் வாழ்ந்தவர் மெய்ப்பொருள் நாயனார். மலாடர் கோமான் - மலையமான் நாட்டிற்குரிய அரசர். மலையமான்+ நாடு=மலாடு எனமருவிற்று. இவ்வரசர் வழியில் வந்தவர்கள் மலையமான், நத்தமான், சுருதிமான் எனும் மூவகைப் பிரிவினராவர். இவர்களுள் மலையமான் வழி வந்தவர் நம் மெய்ப்பொருள் நாயனாராவர். மேன்மை பூண்டு - மறைவழி வந்த ஒழுக்கமாம் மேன்மை பூண்டு. சொல்லிச் செய்தலினும், கருத்தறிந்து ஏவல் செய்தல் மேன்மை உடையதாகும். அந்நெறியில் நின்றவர் இவர். `குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள் யாது கொடுத்தும் கொளல்` *(குறள், 703)* என்னும் தமிழ் மறையும்.

அரசியல் நெறியின் வந்த
அறநெறி வழாமல் காத்து

வரைநெடுந் தோளால் வென்று
மாற்றலர் முனைகள் மாற்றி
உரைதிறம் பாத நீதி
ஓங்குநீர் மையினின் மிக்கார்
திரைசெய்நீர்ச் சடையான் அன்பர்
வேடமே சிந்தை செய்வார். **#468**

அவர், நல்லாட்சி செலுத்துதற்குரிய அரசியல் நெறியில் நின்றும், வழிவழியாகப் போற்றி வரும் அறநெறியைத் தவறாமல் பாதுகாத்தும், மலையனைய நெடிய தம் தோள்வலியால் பகைவரை வென்று அப்பகைவரின் படைவலியை அழித்தும், தாம் கூறிய சொற்களினின்றும் வேறுபடாது நன்னெறிகளைப் போற்றி வரும் குணங்களால் உயர்ந்தும், அலைவீசுகின்ற கங்கையைத் தாங் கிய திருச்சடையையுடைய சிவபெருமானின் அடியவர் திருவேடத் தையே சிந்தை செய்தும் வருவார்.

விளக்கவுரை

வந்த - அரசாட்சிக்குரிய நெறிமுறைகள் இவையென வழி வழியாக வந்த. வழாமல் காத்து - அந்நெறி முறைகளைத் தவறாமல் பாதுகாத்து. `அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன் இழுக்கா மானம் உடையது அரசு` *(குறள், 384)* எனத் திருவள்ளுவர் கூறுமாறும் காண்க. உரை - தாம் கூறிய சொல். திறன் அறிந்து சொல்லும் சொல்லிற்கு மாறுபடாது நடப்பது அறனாயிற்று. அன்பர் வேடமே சிந்தை செய்வார் - சிவனடியார்களாயுள்ளார் எத்திறத்தினராயினும் அவர் தம் திருவேடம் கருதியே வழிபடும் திறத்தார்; அவர்தம் குலம், குணம் முதலிய எவையும் கருதார்.

மங்கையைப் பாக மாக
வைத்தவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசை நீடி
ஏழிசைப் பாட லாடல்
பொங்கிய சிறப்பின் மல்கப்
போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கள்நா யகருக் கன்பர்
தாளலால் சார்பொன் றில்லார். **#469**

உமையம்மையாரை ஒரு கூற்றில் வைத்த சிவ பெருமான் வீற்றிருந்தருளும் திருக்கோயில்கள் அனைத்தினும் நாள் வழிபாடும், சிறப்பு வழிபாடும் குறையாது நடத்தி, ஏழிசையோடு கூடிய பாடல்களும், ஆடல்களும் மேன்மேலும் சிறப்பாக ஓங்க அவற்றைப் பாதுகாத்து வாழ்கின்றவர். தம் தலைவராகிய சிவபெரு மானின்

அடியவர் திருவடிகளையன்றி வேறொரு பற்றுக் கோடும் இல்லாதவர்.

விளக்கவுரை

தாவர லிங்கம் பறித்தொன்றில் தாபித்தால்
ஆவதன் முன்னே அரசு நிலைகெடும்
சாவதன் முன்னே பெருநோய் அடுத்திடும்
காவலன் பேர்நந்தி கட்டுரைத் தானே. *9; -தி.10 பா.507*
கட்டுவித் தார்மதில் கல்லொன்று வாங்கிடில்
வெட்டுவிக் கும்அபி டேகத் தரசரை
முட்டவிக் கும்முனி வேதிய ராயினும்
வெட்டுவித் தேவிடும் விண்ணவன் ஆணையே.*-தி.10 பா.508*
ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே. *-தி.10 பா.509*
முன்னவ னார்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னம் களவு மிகுத்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே. *9; -தி.10 பா.510*
எனவரும் திருமந்திரங்களால் அரசராயினாருக்கு அமைந்த தெய்விகக் கடமைகள் இவையென அறியலாம்.

தேடிய மாடும் நீடு
செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்
காவன ஆகும் என்று
நாடிய மனத்தி னோடு
நாயன்மார் அணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக்
குறைவறக் கொடுத்து வந்தார். **#470**

அவர், தாம் தேடிய செல்வங்களும், தம் முன்னோ ரால் ஈட்டப் பெற்று வழிவழியாகக்காத்துவரும் மற்ற செல்வங்களும் தில்லைப் பொன்னம்பலத்தில் ஆடல் செய்தருளுகின்ற பெருமானின் அடியவர்களுக்கே உரியனவாம் என்று விரும்பிய மனத்தினோடு, சிவனடியார்கள் தம்மிடத்திற்கு எழுந்தருளும் பொழுது, தம் உள்ளத் தில் நிறைந்த அன்பின் மகிழ்ச்சி மிக, வேண்டிய பொருள்களை யெல்லாம் குறைவின்றிக் கொடுத்து வந்தார்.

விளக்கவுரை

ஒருவர்க்கு ஒன்றைக் கொடுக்குங்கால் மகிழ்ச்சியோடு கொடுத்தல் வேண்டும் என்பார். `கூடிய மகிழ்ச்சி பொங்க` என்றார். `அகனமர்ந்து ஈதல்` *(குறள், 92)*, `ஈத்துவக்கும் இன்பம்` *(குறள், 228)* என்றெல்லாம் திருவள்ளுவனார் கூறுவனவும் ஈண்டு எண்ணற்குரியவாம்.

இன்னவா றொழுகு நாளில்
இகல்திறம் புரிந்ததோர் மன்னன்
அன்னவர் தம்மை வெல்லும்
ஆசையால் அமர்மேற் கொண்டு
பொன்னணி யோடை யானை
பொருபரி காலாள் மற்றும்
பன்முறை இழந்து தோற்றுப்
பரிபவப் பட்டுப் போனான். **#471**

இவ்வாறாக இவ்வடியவர் தம் கடமைகளைச் செய்து வரும் நாளில், அவரொடு பகைத்து நின்ற ஓர் அரசன், அவரைத் தான் போரில் வெல்லக் கருதும் ஆசை மிகுதியால், போர் செய்தலை மேற்கொண்டு, பொன்னால் செய்த நெற்றிப் பட்டத்தை உடைய யானைகளையும், போர் செய்தற்குரிய குதிரைகளையும், காலாட் படைகளையும், பலகாலும் இழந்து தோற்றுவிட, அதனால் மானம் இழந்து போனான்.

விளக்கவுரை

இகல் - மாறுபடுதல், பகைத்தல். மக்களாயினும், மன்ன ராயினும் தமக்குள் இகல் கொள்ளுதல் தீதாம். இதனை `இகல் என்னும் எவ்வநோய்` *(குறள், 853)* என்றும், `இகலின் மிகல் இனிது என்பவன் வாழ்க்கைத் தவலும் கெடலும் நணித்து` *(குறள், 856)* என்றும் திருவள்ளுவர் கூறுவனவும் ஈண்டு நினைவு கூர்தற்குரியவாம். ஓடை - நெற்றிப்பட்டம். பரிபவம்- மானம் இழத்தல்.

இப்படி இழந்த மாற்றான்
இகலினால் வெல்ல மாட்டான்
மெய்ப்பொருள் வேந்தன் சீலம்
அறிந்துவெண் ணீறு சாத்தும்
அப்பெரு வேடங் கொண்டே
அற்றத்தில் வெல்வா னாகச்
செப்பரு நிலைமை எண்ணித்
திருக்கோவ லூரிற் சேர்வான். **#472**

இவ்வாறு பலகாலும் தோல்வியடைந்த அப் பகைவன், தன்வலியினால் வெல்ல இயலாதனவாகி, மெய்ப்பொருள் நாயனாருக்கு அடியவர்மீது இருக்கும் பத்திமையை உணர்ந்து, வெண் ணீறு அணிதலாகிய

அடியவர்களின் பெருமையான திரு வேடத்தை வஞ்சனையாக மேற்கொண்டு, அவ்வஞ்சனையைப் பிறர் அறியாத வாறு, காலமறிந்து வெல்லும் கருத்துடையனாக வாயினாற் சொலற்கரிய தீமையைச் செய்யக் கருதித் திருக்கோவலூரை அடைவானாயினன்.

விளக்கவுரை

அற்றம் - வஞ்சனை.

மெய்யெலாம் நீறு பூசி
வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த
புத்தகக் கவளி யேந்தி
மைபொதி விளக்கே யென்ன
மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு
புகுந்தனன் முத்த நாதன். **#473**

தன் உடல் முழுமையும் திருநீற்றை அணிந்து கொண்டு, சடைகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி, தன் கையிடத்து, உடைவாளை உள்ளே மறைத்த புத்தகச் சுவடிகளைத் தாங்கிக் கொண்டு, கருமையான நிறத்தைத் தன்னுள் வைத்திருக்கும் ஒளி விளக்குப் போலத் தன் மனத்தில் சினத்தை வைத்துக் கொண்டு பொய் யாகிய ஒரு தவவேடத்தைக் கொண்டு சென்றான். அவன் முத்த நாதன் எனும் பெயரினன்.

விளக்கவுரை

வேணிகள் - சடைகள். புத்தகக் கவளி-புத்தகப் பை. ஒளிவிளக்குத் தன்னைச் சுற்றிலுமுள்ள இடத்திற்கு விளக்கம் தரினும், அவ்விளக்குத் தரும் சுடருக்கடியில் கறுப்பு நிறத்தைப் பெற்றிருக்கும். அதுபோல முத்தநாதனும் புறத்தால் தவமுடையான் போலக் காட்டிக் கொள்ளினும், தன்னகத்தே வஞ்சனை உடையவனாக இருந்தான். முத்தநாதன்: முக்தன் - விடுபட்டவன்: அஃதாவது அறிவினின்றும் விடுபட்டவன் எனக் கொண்டு, இப்பெயர் அப்பகைவனின் செயல் நினைந்து தந்த பெயர் என்று கூறுவர் சிலர். எனினும் அவ்வாறு கொள் வதால் ஒருபெரும் பயன் இன்மையின் இப்பெயரை அப்பகைவனின் இயற்பெயர் என்று கோடலே சாலும் என்பர் சிவக்கவிமணியார் (பெரிய.பு. உரை). இங்குத் திருநீறு எரிக்கும் தன்மையாலே மாயா மலத்தையும், விரிந்த சடையை முடித்தலால் விரிந்து செல்லும் கன்ம மலத்தையும், ஞானத்தின் உறையுளாகிய புத்தகத்தால் அறியாமை யாகிய ஆணவமலத்தையும் போக்குவதாகிய ஞானாசாரிய

அடையாளங்களைத் தாங்குவதே இத் தவவேடமாம். இவனுடைய தீயபண்புகளையே முன்னிரு பாடல்களிலும் கூறிவந்த ஆசிரியர், இப்பாடலில், அத் தீய பண்புகளை முடிக்குங்கால் அவன் பெயர் கூறினார், அவன் பெயர் கூறலும் தகாமை கருதி.

மாதவ வேடங் கொண்ட
வன்கணான் மாடந் தோறும்
கோதைசூழ் அளக பாரக்
குழைக்கொடி யாட மீது
சோதிவெண் கொடிகள் ஆடும்
சுடர்நெடு மறுகிற் போகிச்
சேதியர் பெருமான் கோயில்
திருமணி வாயில் சேர்ந்தான். **#474**

பெருமை பொருந்திய தவவேடத்தைத் தாங்கிக் கொண்டு வந்த கொடியவனாகிய முத்தநாதன், மேல் மாடங்கள் தொறும் மாலைகள் சூழ்ந்த கூந்தலையும் குழைகளையும் உடைய கொடிபோலும் அசைதலை யுடைய மகளிர்கள் நடனமாட, அவற்றின் மீது வெண்மையாக ஒளி விளங்கும் கொடிகள் அசைய, காண்டற்கு இடனாய ஒளிபொருந்திய நீண்ட வீதியில் சென்று, சேதி நாட்டு அரசராய மெய்ப்பொருள் நாயனாரது அழகிய மணிகள் பொருந்திய அரண்மனை வாயிலை அடைந்தான்.

விளக்கவுரை

வன்கணான் - கொடியவன். `நெஞ்சில் துறவார் துறந்தார் போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணார் இல்` *(குறள், 276)* எனத் திருவள்ளுவனாரும் இத்தகையாரை வன்கணார் என அழைத் தல் கருதத் தக்கது. மாடங்கள்தொறும் பெண்களாகிய கொடிகள் அசைய, அம் மாடங்களின் மீது கட்டப்பட்டிருக்கும் ஒளிமிக்க வெண்கொடிகளும் ஆடுகின்றன. மாடங்களில் ஆடும் பெண்களின் கூந்தல் கருநிற முடையதாகும் அது அசைய அவர்கள் ஆடுவது முத்தநாதனை வாரற்க எனக் கூறித் தடுப்பது போல் இருந்தது என்றும், அக்கொடிகளுக்கு *(பெண்கள்)* மேலாக அம்மாடங்களில் கட்டப் பெற்றிருக்கும் வெண்மையான கொடிகள் அசைவது வஞ்சனையாகிய உட்கறுப்பின் மேல் விளங்கும் வெண்ணீறும் சடை முடியுமாகிய திருவேடமே வெற்றிபெறும் எனக் கூறுவது போன்று இருந்தது என்றும் உட்பொருள் காண்பர் சிவக்கவிமணியார் *(பெரிய.பு. உரை)*. வராமல் தடுத்தற்குக் கறுப்புக் கொடி காட்டல் இன்றும் பழக்கமாகவுள் ளது. கோவலனை மதுரையிலும், துரியோதனனைத் துவாரகையிலும் உள்ள கொடிகள் தடுத்ததாக இளங்கோவடிகளும் *(சிலப்ப. புறந். 190)*, வில்லிபுத்தூராரும்

(வில்லி. வாசு. படைத்.6) கூறுதலும் ஈண்டு ஒப்பிட்டுக் காணலாம்.

கடையுடைக் காவ லாளர்
கைதொழுதேற நின்றே
உடையவர் தாமே வந்தார்
உள்ளெழுந் தருளும் என்னத்
தடைபல புக்க பின்பு
தனித்தடை நின்ற தத்தன்
இடைதெரிந் தருள வேண்டும்
துயில்கொளும் இறைவ னென்றான். **#475**

அரண்மனை வாயில்கள் தொறும் காவல் செய்து கொண்டிருப்பவர்கள் கைகுவித்து வணங்கி விலகிநின்று நம்மை ஆட்கொள்ளும் சிவபெருமானின் அடியார் ஒருவர், தாமே வலிய எழுந்தருளினார் என்று கூறி, உள்ளே எழுந்தருள வேண்டும் என வேண்டிக் கொள்ள, இவ்வாறாய வாயில்கள் பலவற்றையும் கடந்து சென்ற பின்பு இறுதியாக உள்ள தனிவாயிலில் காவல்புரிந்து நிற்கும் தத்தன் என்பான், `உட்செல்லுதற்குரிய அமையம் தெரிந்து எழுந்தருள வேண்டும்; இதுபொழுது அரசர் துயில் கொள்கின்றார்` என்று கூறினான்.

விளக்கவுரை

தடை - அரண்மனை வாயில். இஃது இப்பொருளாதல் ``உமைபாகரருள் செய்த ஒழுக்கமல்லால் தீங்கு நெறியடையாத தடையுமாகி`` *(தி.12 பு.19 பா.88)* என வரும் ஆசிரியர் கூற்றானும் அறியலாம். அரசன் இருக்கும் அந்தப்புரத்திற்குச் செல்லின் பல வாயில்களைக் கடந்து செல்லவேண்டும். அவ்வாயில்கள் தொறும் காவலாளர் காத்துநிற்பர். அவர்களையே `கடையுடைக் காவலாளர்` என்றார். ஈண்டுக் கடை என்பது குறிப்பு மொழியாக `அறிவறை போகியவர்` *(சிலப்ப. வழக்குரை, 25)* என்பதையும் விளக்கி நின்றது. இன்றேல் இவர்களில் ஒருவரேனும் இரவு நேரத்தில் முன்பின் தெரியாதவராய் உள்ள ஒருவரை எவ்வகையான ஆய்வு செய்தலும் இல்லாது வரவேற்று உட்செல்ல விடுத்திருக்க மாட்டார்கள். ஆதலின் இத்தகைய குறிப்புப் பொருள் கோடலில் இழுக்கில்லை. ஏற - விலக. தனித்தடை - இறுதியாக உள்ளதொரு வாயில். எனவே இவ்வாயிலே அந்தப்புரத்தின் உட்செல்லுதற்குரிய வாயில் என்பது தெரிகின்றது. இங்கு நிற்போன் ஏனைய வாயிலோரினும் கூர்த்த அறிவும், அரசர் மீதுபெரும் பற்றும் உடையனாய தத்தன் என்பவன் ஆவான். இவனொருவனே உட்செல்லுதற்குத் தடுத்தமையின் இவனைத் `தனித் தடை` என்றாருமாம். தனித் தடை - ஒப்பற்ற தடை. இடை - அமையம்: சமயம்.

உட்செல்லுதற்குரிய காலம். இஃது இப்பொருளாதல் `இடை தெரிந்து நன்கு உணர்ந்து சொல்லுக சொல்லின் நடை தெரிந்த நன்மை யவர்` *(குறள், 712)*. என வருமாற்றானும் அறியலாம். `துயில் கொளும் இறைவன்` என்பதால் உட்செல்லுதற்கு இது தக்க காலமன்று என்பது பெற வைத்தானாயிற்று. ஏகாரம் இரண்டனுள் முன்னையது அசைநிலை; பின்னையது தேற்றமாம்.

என்றவன் கூறக் கேட்டே
யானவற் குறுதி கூற
நின்றிடு நீயு மென்றே
அவனையும் நீக்கிப் புக்குப்
பொன்றிகழ் பள்ளிக் கட்டிற்
புரவலன் துயிலு மாடே
மன்றலங் குழல்மென் சாயல்
மாதேவி இருப்பக் கண்டான். **#476**

தத்தன் இவ்வாறு கூறக் கேட்டமுத்தநாதன், `யான் அவ்வரசனுக்கு உறுதி கூற வந்துள்ளேன், ஆதலின் நீ தடை செய்யாது இங்கு நிற்பாயாக` என்று கூறியவாறு, அத்தத்தனை விலக்கிக் கொண்டு உள்ளே சென்று பொன்னாலாய விளக்கம் பொருந்திய பள்ளிக் கட்டிலில் மெய்ப்பொருள் நாயனார் துயிலவும், அவர் அருகில் நறுமணம் பொருந்திய கூந்தலையும் மென்மையையும் உடைய அவர் மனைவியார் இருக்கவும் கண்டான்.

விளக்கவுரை

தத்தன் மிகச் சிறந்த மதிநுட்பமும், அரசர் மீது மீதூர்ந்த பற்றும் உடையனாயினும், வந்தவரின் தவவேடமும் அவர் உறுதிப் பொருள் கூறவந்ததாகக் கூறியதும் அவனைத் தடுக்க இயலாதவாறு தகைத்து விட்டன. அவ்வன்னெஞ்சனும் தன் தவவேடத்தையும் தான் கூறிய பொய்க் காரணத்தையும் காட்டி `நின்றிடு நீயும்` என ஏவலாக விதித்தனன். `நீயும் நின்றிடு` என்பது அவ்வவ்வாயிலினின்றும் ஏனையோர் நின்றது போல நீயும் நின்றிடு எனக் கூறலின் இறந்தது தழீஇய எச்ச உம்மையாயிற்று. `புரவலன் துயில மாதேவி இருப்ப` என்றார் அவ்வரசியார் துயிலாதிருந்தமை பற்றி. தன் தலைவன் துயிலும் வரை அவனுக்கு அடிவருடல் விசிறுதல் போன்ற இனிய தொண்டுகளைச் செய்து பின்தான் துயிலுதல், அறமும், மரபும் ஆதலின் `மாதேவி இருப்ப` என்றார். `அடிவருடிப் பின் தூங்கிமுன் எழும் பேதையே` எனவரும் பழம்பாடலும் காண்க. `மன்னு மலை மகள் கையால் வருடின` *(தி.4 ப.100 பா.1)* `செருடக் கடிமலர்ச் செல்விதன் செங்கம லக்கரத்தால் வருடச் சிவப்பன` *(தி.4 ப.108 பா.2)*

என்பனவாகிய திருவாக்குகளால் உலகத் தலைவியாம் உமையம்மை யாரும் இவ்வறத்தைச் செய்து காட்டிய திறத்தை அறியலாம்.

கண்டுசென் றணையும் போது
கதுமென எழுந்து தேவி
வண்டலர் மாலை யானை
எழுப்பிட உணர்ந்து மன்னன்
அண்டர்நா யகனார் தொண்ட
ராம்எனக் குவித்த செங்கை
கொண்டு எழுந்து எதிரே சென்று
கொள்கையின் வணங்கி நின்று. #477

மன்னவன் துயிலவும் அருகில் மாதேவி இருக் கவும் கண்டும், திரும்பாமல் மேலே சென்று, அக்கட்டிலை நெருங்க வும், விரைந்து எழுந்த அத்தேவியார், வண்டுகள் மொய்த்தற்கு இடனாக அலர்ந்த மாலையை அணிந்த மெய்ப்பொருளாராய தம் தலைவரை எழுப்பிடத் துயிலுணர்ந்த அம்மன்னர், `சிவபெருமானின் அடியவர் இவர்` என்று தலைமீது குவித்த சிவந்த திருக்கரங்ளை உடையவராய்ப் பள்ளிக் கட்டிலினின்றும் எழுந்து நின்று.

விளக்கவுரை

கண்டும் என்றவிடத்துள்ள உம்மை தொக்கு நின்றது. தத்தன் `துயில் கொளும் இறைவன்` என்றபொழுதே முத்தநாதன் தான் உட்செல்லுவதை விடுத்திருக்க வேண்டும். மாறாக உட்சென்றான். பள்ளிக்கட்டிலில் அரசன் துயில்வதையும் அத்தேவியார் இருப்பதை யும் கண்டபின்னரேனும் மேலும் செல்லாது வெளிப் போந்திருக்க வேண்டும்.

அவ்வாறன்றி அந்நிலையைக் கண்டும், மேலும் சென்றனன், அக்கட்டிலையும் நெருங்கினன் என்பதைப் படிப்படியாக ஆசிரியர் கூறியிருக்கும் சொல்லாட்சிகள் அம் முத்தநாதனின் வன்கண்மையை அணுவணுவாக உணரவைக்கின்றன. `குவித்த செங்கை கொண்டு, எழுந்து` எனவே மெய்ப்பொருளார் தொழுது கொண்டே எழுந்தமை புலனாகின்றது. தேவியார் எழுப்பிய அளவிலேயே மன்னருக்கு இச் செயல் நிகழ்தலின் எழுந்தபின் தொழுதனரா? தொழுதபின் எழுந்த னரா? என்ற ஆராய்ச்சிக்கு இடனில்லாது போயிற்று. உணர்தல் - மனம் முதலிய அகக்கருவிகளின் செயல். எழுதல்கை முதலிய புறக்கருவி களின் செயல். எனவே மனத்தால் தொழுது கொண்டே எழுதலில் இழுக்கில்லை. இழிந்து - பள்ளிக் கட்டிலினின்றும் இறங்கி,

மங்கலம் பெருக மற்றென்
வாழ்வுவந் தணைந்த தென்ன

இங்கெழுந் தருளப் பெற்ற
தென்கொலோ என்று கூற
உங்கள்நா யகனார் முன்னம்
உரைத்த ஆகம நூல் மண்மேல்
எங்குமில் லாத தொன்று
கொடுவந்தேன் இயம்ப வென்றான். **#478**

`மங்கலம் பெருக என்வாழ்வே ஓர் உருவெடுத்து வந்தாற்போல, இவ்விடத்திற்கு எழுந்தருளப் பெற்றது யாது கருதியோ?` என்று மெய்ப்பொருளார் வினவ, முத்தநாதன், `உங்கள் தலைவர் முற்காலத்தே அருளிச் செய்த சைவ ஆகம நூல்களுள் உலகில் வேறு எங்கும் கிடைத்திராத அரியதொரு நூலைக் கொண்டு வந்தேன்; உமக்கு உபதேசிப்பதற்காக` என்றனன்.

விளக்கவுரை

`மங்கலம் பெருக மற்று என் வாழ்வு வந்து அணைந்தது` என்பது, எஞ்ஞான்றும் இன்பமே பெறுதற்கு ஏதுவாய முத்திச் செல்வத்தைப் பெற இப் பிறவியாகிய வாழ்வு இன்றோடு முடிந்தது எனும் குறிப்புப் பொருளும் தரநின்றது. `உங்கள் நாயனார்` என்றது மெய்ப்பொருளாரின் பத்திமையும், அடிமையும் தோன்ற நின்றது. மாறாக, முத்திநாதனின் பத்தியின்மையையும் தோன்ற நின்றது. ``இசையாழ் உங்களிறைவருக் கிங்கியற்றும்`` *(தி.12 பு.28 பா.134);* `அப்பர்! உங்கள் தம்பிரானாரை நீர் பாடீரென்ன` *(தி.12 பு.21 பா.186)* எனவருவன, இந்நிகழ்விற்கு மாறாகப் பாணான் பத்திமையும் காவலர்களின் பத்திமையும் தோன்ற நின்றது. இதுவன்றி இறைவனுக்கும், தனக்கும் தொடர்பில்லாமையைக் குறிக்க முத்த நாதன் `உங்கள் நாயனார்` என்றல் பொருந்துவதாகின்றது. `இயம்பக் கொடுவந்தேன்` என்னாது `கொடுவந்தேன் இயம்ப` என்றது முத்த நாதனின் வஞ்சனையால் எழுந்த சொல்தடுமாற்றம் ஆகும். மற்று, கொல் என்பன அசை நிலைகள். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பேறெனக் கிதன்மேல் உண்டோ
பிரானருள் செய்த இந்த
மாறில்ஆ கமத்தை வாசித்
தருள்செய வேண்டு மென்ன
நாறுபூங் கோதை மாதுந்
தவிரவே நானும் நீயும்
வேறிடத் திருத்தல் வேண்டும்
என்றவன் விளம்ப வேந்தன். **#479**

இவ்வாறு எழுந்தருளி உபதேசிப்பதினும் உயர்ந்த பேறு வேறு அடியேனுக்கு உண்டோ? (இல்லை). சிவபெருமான் அருளிச் செய்த

குற்றமற்ற இச்சிவாகம நூலை வாசித்து அதன் பொருள் விளங்க அருளிச் செய்ய வேண்டும் என்று வேண்ட, நறுமணம் கமழ் கின்ற மலரணிந்த கூந்தலையுடைய உன் தேவி இவ்விடத்தினின்றும் நீங்க, நானும் நீயும் தனியிடத்து இருக்கவேண்டும் என அம்முத்த நாதன் சொல்ல மெய்ப்பொருள் நாயனாரும்.

விளக்கவுரை

மாறுஇல் ஆகமம் - தமக்குள் மாறுபாடு இல்லாதனவும் இணை இல்லாதனவுமான ஆகமம். மாது தவிரவே எனப் பிரித்துப் பின் வரும் வரலாற்றை நினைவு கொள்ளுதலும் ஒன்று. நானும் நீயும் வேறி டத்து இருக்க என்பதற்கு, நீ இறைவனின் பேரின்ப நிழலில் இருக்க வும், நான் எரிவாய் நரகில் இருக்கவும் ஆக வெவ்வேறு இடங்களில் இருத்தல் வேண்டும் எனப்பொருள் கோடற்கும் இயைய உள்ளமை அறிந்து இன்புறுதற்குரியதாம்.

திருமக ளென்ன நின்ற
தேவியார் தம்மை நோக்கிப்
புரிவுடன் விரைய அந்தப்
புரத்திடைப் போக ஏவித்
தருதவ வேடத் தானைத்
தவிசின்மேல் இருத்தித் தாமும்
இருநிலத் திருந்து போற்றி
இனியருள் செய்யும் என்றார். **#480**

திருமகளைப் போல அங்கு நிற்கும் தம் மனைவியாரைப் பார்த்து, அருளுரை கேட்கும் பெருவிருப்பால், அவரை விரைவாக அந்தப்புரத்திற்குப் போகுமாறு பணித்து, இயல் பாகவன்றி வலிய எடுத்துக்கொண்ட தவவேடமுடைய முத்தநாதனை ஓர் இருக்கையின்மீது இருக்கச் செய்து, தாம் வெறுநிலத்திலிருந்து வழி பட்டவாறு, இனி அருள் செய்ய வேண்டு மென்று விண்ணப்பித்துக் கொண்டார்.

விளக்கவுரை

புரிவுடன் - விருப்புடன்: ஆகமம் கேட்கும் விருப் புடன். தருதவ வேடம் - இயல்பாக அன்றி, வஞ்சனையால் எடுத்துக் கொண்ட தவவேடம். உபதேசம் பெறுங்கால் குருமூர்த்திகளைத் தக்க இருக்கையில் இருக்கச் செய்து தாம் வெறு நிலத்தில் இருந்து கேட்டல் மரபு. இம்மரபிற்கு ஏற்பவே `தருதவ வேடத்தானைத் தவிசின் மேல் இருத்தித்தாமும் இருநிலத்து இருந்து` என்றார். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

கைத்தலத் திருந்த வஞ்சக்

கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று
புரிந்தவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன்
நினைந்தஅப் பரிசே செய்ய
மெய்த்தவ வேட மேமெய்ப்
பொருளெனத் தொழுது வென்றார். **#481**

அவன், தன் கையில் வைத்திருந்த வஞ்சனையாகக் கொண்ட புத்தகப் பையைத் தன் மடியின் மேல் வைத்து, உள்ளிருந்த அப்புத்தகத்தைத் திறப்பவனைப்போல, விரும்பி அந்நாயனார் வணங்கும் சமயத்தில், அதனுள் மறைத்து வைத்திருந்த உடை வாளை எடுத்துத்தான் முன் கருதியவாறே செய்ய, அவ்வடியவர் தாமும், மெய்ம்மையான பொருளாகக் கொண்ட தவவேடத்தையே மெய்ப்பொருளாகக் கருதி வணங்கி வென்றார்.

விளக்கவுரை

பத்திரம் - உடைவாள். தான்முன் நினைந்த அப்பரிசு - எதிர்த்து நின்று கொல்ல இயலாமையின், அவரை அடுத்து நின்று கொல்ல நினைந்த நினைவு. மங்கலம் இன்றிச் சொல்லல் இவர் மரபில்லையாதலின், `தான் முன் நினைந்த அப்பரிசே செய்ய` என்றார். `மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம் தம் தகுதியான் வென்று விடல்` *(குறள், 158)* அறனாதலின் `வென்றார்` என்றார். இதனையே `வெல்லுமா மிக வல்ல மெய்ப் பொருள்` *(தி.7 ப.39 பா.1)* எனத் திருத்தொண்டத் தொகையும் குறிப்பதாயிற்று. ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது.

மறைத்தவன் புகுந்த போதே
மனம்அங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கட் கூடி
வாளினால் எறிய லுற்றான்
நிறைத்தசெங் குருதி சோர
வீழ்கின்றார் நீண்ட கையால்
தறைப்படும் அளவில் தத்தா
நமரெனத் தடுத்து வீழ்ந்தார். **#482**

உள்ளத்தில் கொண்டிருந்த வஞ்சனையை மறைத்துத் தவவேடம் பூண்ட அம்முத்த நாதன் உள்ளே சென்ற பொழுதே, தன் மனத்தை அவனுடன் போக நிறுத்திய தத்தன் என்பான், ஒரு நொடிப் பொழுதில் சென்று, வாட்படையால் அவனை எறியத் தொடங்கினான். தம் திருமேனியில் இரத்தம் சோர நிலத்தில் வீழ்கின்ற அந்நாயனார், `தத்தனே! அவர் நம்மவர்` என்றுகூறித் தம் நீண்ட கையினால் தடுத்து வீழ்ந்தார்.

விளக்கவுரை

மறைத்தவன் - மறைநெறியில் வந்த தவத்தவன், தவ வேடத்தில் தன்னை மறைத்துக் கொண்டவன், என இரு பொருளும் பட நின்றது. பின்னயது தவம் மறைந்து அவம் செய்யும் குறிப்பானது. `நின்றிடு நீயும்` என்றதால் தத்தனை மறைத்தவன் என்றலும் ஒன்று. `நமர்` என்றது தீங்கு செய்தற்குரியர் அல்லர் எனும் குறிப்பில் நின்றது. `நந்தமர் ஊரனென்றான்` *(தி.7 ப.100 பா.9)* எனவரும் திருவாக்கை யும் நினைவு கூர்க.

வேதனை யெய்தி வீழ்ந்த
வேந்தரால் விலக்கப் பட்ட
தாதனாந் தத்தன் தானும்
தலையினால் வணங்கித் தாங்கி
யாதுநான் செய்கே னென்ன
எம்பிரா னடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம்
கொண்டுபோய் விடுநீ யென்றார். **#483**

இக்கொடுஞ்செயலால் வருத்தப்பட்டு நிலத்தில் வீழ்ந்த மெய்ப்பொருள் நாயனாரால் `தத்தா நமர்` என்றுகூறித் தடுக்கப் பெற்ற அவரை, (வேந்தரை) அடியவனாகிய தத்தன் என்பவனும் தலையால் வணங்கி, அவர்தம் தலையைத் தம் கையால் தாங்கிய வண்ணம் `அடியேன் செய்யும் பணி யாது?` என்று வினவ, `எம் தலை வனாய சிவபெருமானின் அடியவராகிய இவர் (முத்தநாதன்) செல்லும் பொழுது இடையில் எவரும் மேற்சென்று விலக்காதவாறு இவரைக் கொண்டுபோய் விடுவாயாக என்று கட்டளையிட்டார்.

விளக்கவுரை

தாதன் - அடிமை. மீது - இவர் *(முத்தநாதன்)* மீது. இடை விலக்காவண்ணம் - இவரிடத்துச் சென்று வழி மறித்து ஊறு செய்யா வண்ணம்.

அத்திறம் அறிந்தார் எல்லாம்
அரசனைத் தீங்கு செய்த
பொய்த்தவன் தன்னைக்
கொல்வோம் எனப்புடை சூழ்ந்த போது
தத்தனு மவரை எல்லாம்
தடுத்துடன் கொண்டு போவான்
இத்தவன் போகப் பெற்ற
திறைவன தாணை என்றான். **#484**

அச் செய்கையை அறிந்தவர்கள் எல்லாரும், நம் அரசனுக்கு தீங்கு செய்த பொய்ம்மையான தவ வேடத்தையுடைய இவனைக் கொல்வோம் என்று அவர் அருகில் சூழ்ந்த பொழுது, தத்தன் என்பான், அவர்களை யெல்லாம் தடுத்துத் தன்னுடன் அவனைக் கொண்டு போகின்றவனாய், அவர்களை நோக்கி, இப் பொய்த் தவத்தினை உடையான் உயிருடன் போதல் இறைவனது ஆணை யாம் என்று கூறினன்.

விளக்கவுரை

புடை - பக்கம்.

அவ்வழி அவர்க ளெல்லாம்
அஞ்சியே அகன்று நீங்கச்
செவ்விய நெறியில் தத்தன்
திருநகர் கடந்து போந்து
கைவடி நெடுவா ளேந்தி
ஆளுறாக் கானஞ் சேர
வெவ்வினைக் கொடியோன் தன்னை
விட்டபின் மீண்டு போந்தான். **#485**

இறைவன் ஆணையென்று கூறியதும் அவனைச் சூழ்ந்தவர்களெல்லாம் அஞ்சி அவ்விடத்தினின்றும் பெயர்ந்து செல்ல, செல்லுதற்குப் பாதுகாப்பாய வழியில் தத்தன் என்பான் அந்நகரத்தைக் கடந்து சென்று, கையிடத்துக் கூரிய நீண்ட வாளை ஏந்திய வண்ணம், மனிதர்கள் இயங்காத காட்டை அடைந்து தீத்தொழிலினனாய அக் கொடியவனை விடுத்து மீண்டு வந்தான்.

விளக்கவுரை

செவ்விய நெறியில் தத்தன் - செந்நெறியில் தலை நின்றவனாகிய தத்தன் எனக் கோடலும் ஒன்று. இறைவனின் எண் வகை வீரச் செயல்களுள் ஒன்று நிகழ்ந்த இடமாதலானும், மெய்ப் பொருளாரும் தத்தனும் போன்ற அடியவரும், அருங்குணச் சீலர்களும் வாழ்ந்து வரும் இடமாதலானும் `திருநகர்` என்றார்.

ஆள் உறாக் கானம் - இவன் நிலை அறிந்து இவனுக்கு ஊறு பாடு செய்வார் இல்லாத காடு. மனிதர்களன்றி ஏனைய விலங் கினங்கள் வாழும் கானம் எனப் பொருள் கோடல் மெய்ப்பொருளா ரின் ஆணை வழி நிற்கும் தத்தன் செயற்குப் பொருந்தாததாகும். ஏகாரம் - அசைநிலை.

மற்றவன் கொண்டு போன
வஞ்சனை வேடத் தான்மேல்
செற்றவர் தம்மை நீக்கித் தீ

திலா நெறியில் விட்ட
சொற்றிறங் கேட்க வேண்டிச்
சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவன் முன்பு சென்றான்
கோமகன் குறிப்பில் நின்றான். **#486**

தத்தன் தான் அழைத்துக் கொண்டு சென்ற வஞ்சனையான வேடத்தையுடைய முத்தநாதனை, சினந்து எதிர்த்த வர்களை விலக்கி, குற்றம் நேராதவாறு விட்ட நற்சொல்லின் வகைமை யைக் கேட்க விரும்பி, உடலை விட்டு நீங்குதற்குரிய உயிரைத் தாங்கிக் கொண்டிருக்கும் மெய்ப்பொருள் நாயனார் முன்பு, அவர்தம் குறிப்பில் நிற்கும் தத்தன் போய் நின்றான்.

விளக்கவுரை

சொல்திறம் - அப் பொய்த்தவனை அழைத்துச் சென்ற மையும், இடையில் நேர்ந்த தடையையும், அதனை விலக்கிச் சென்று அவனை விட்டு வந்ததுமாகிய நற்செய்திகள். மற்று - அசைநிலை,

சென்றடி வணங்கி நின்று
செய்தவ வேடங் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி
விட்டனன் என்று கூற
இன்றெனக் கையன் செய்த
தியார்செய வல்லா ரென்று
நின்றவன் தன்னை நோக்கி
நிறைபெருங் கருணை கூர்ந்தார். **#487**

தத்தன் மெய்ப்பொருள் நாயனாரிடத்து அணுகச் சென்று, அவர் திருவடிகளை வணங்கி நின்று, செயற்கையாக மேற் கொண்ட தவவேடத்தைத் தாங்கித் தன்னளவில் வென்றதாகக் கருதிய அம் முத்தநாதனுக்கு, யாதொரு இடையூறுமின்றித் தொலைதூரத்தில் கொண்டு சென்று விட்டனன், என்று விண்ணப்பிக்க, நாயனாரும், இன்று என் தலைவனாக விளங்கும் நீ செய்த உதவியை யாவர் செய்ய வல்லவர்? என்று கூறி, தன்முன் நின்ற தத்தனைப் பார்த்துத்தம் மனம் நிறைந்த பெருங் கருணையைச் செய்தார்.

விளக்கவுரை

செய்தவம் - இயல்பாகக் கொண்ட தவமன்றிச் செயற்கையாகச் செய்து கொண்ட தவம். ஐயன் - தலைவன். ஆணை வழங்குதல் அரசர் கண்ணதேனும், அதனைநிறைவேற்றுதல் அவன் கீழ்வாழும் அலுவலர்கண்ணதேயாம். அவ்வகையிலேயே, இதுகாறும் ஆணை

வழங்கி வந்த மெய்ப்பொருள் நாயனார், தற்பொழுது அதனை நிறைவேற்றித் தந்த தத்தனைப் பார்த்து `ஐயன்` என்றார். மெய்ப்பொருள் நாயனார் தம்கால எல்லையில் இதுவே தமக்கு அவர் செய்த பேருதவியாகவும், காலத்தினால் செய்த நன்றியாகவும் கொணடமை, அச்சொல்லருமையால் விளங்குகின்றது. நிறைபெருங் கருணை - தம் உள்ளத்தில் நிறைந்த பெருங்கருணை. இனி அவர் கருணை வழங்கவோ, தத்தன் உள்ளிட்ட பிறர் எவரும் அதனை ஏற்கவோ இயலாத நிலையில் வழங்கிய கருணையாதலின் `நிறை வான பெருங்கருணை` என்றலும் ஆம். இனித் தத்தன் தன் வாழ்வில் நிறைவு பெறுதற்குக் காரணமான கருணை என்று கோடலும் ஒன்று. `இன்று எனக்கு ஐயன் செய்தது யார் செயவல்லார்?` என்று கூறியதால் மொழியாலும், `நோக்கி` என்பதால் மெய்யாலும், `கருணை கூர்ந்தார்` என்பதால் மனத்தாலும் அவர் அருளிய அருளிப்பாடு பெறப்படுதலின் தத்தன் பெறுதற்குரிய அருளிப்பாடு இதுவன்றி வேறு இல்லையாம்.

அரசிய லாயத் தார்க்கும்
அழிவுறுங் காத லார்க்கும்
விரவிய செய்கை தன்னை
விளம்புவார் விதியி னாலே
பரவிய திருநீற் றன்பு
பாதுகாத் துய்ப்பீர் என்று
புரவலர் மன்று ளாடும்
பூங்கழல் சிந்தை செய்தார். **#488**

தம் வழி அரசு இயற்றுதற்குரிய இளவரசர், அமைச்சர் முதலியவர்க்கும், தம் பிரிவால் வருந்தி நிற்கும் அரசமா தேவியார், ஏனைய சுற்றத்தார் முதலியோர்க்கும் தம் உள்ளத்தில் கருக்கொண்டு நிற்கும் கொள்கையைக் கூறுபவராய், `முறையாகப் போற்றிக் காக்கத் தக்க திருநீற்றினிடத்து வைத்து வாழும் அன்பில் சோர்வு வாராது அதனை என்றும் பாதுகாத்து, இவ்வுலகில் கொண்டு செலுத்தக் கடவீர்` எனும் கட்டளையைக் கூறியபின், மெய்பொரு ளார், திருமன்றில் அருட்கூத்து இயற்றுகின்ற பெருமானின் அழகிய வீரக்கழலினை அணிந்த திருவடியை மனத்தகத்து எண்ணியிருந்தார்.

விளக்கவுரை

ஆயத்தார் - மன்னன் ஆணை வழிநின்று மக்களுக்கு நலம் செய்யும் அமைச்சர் முதலாயினார். காதலார் - தம்மைப்பிரிய நேர்வதால் வருந்தி நிற்கும் அரசமாதேவியார் உள்ளிட்ட சுற்றத்தார். விரவிய செய்கை - தம்திரு உள்ளத்தில் எஞ்ஞான்றும் பொருந்தி நிற்கும் செய்கை. திருநீற்றையும் அதனை அணிந்து நிற்கும் அடியவர் பெருமக்களையும்

பேணிப் போற்றுவதே அவர்தம் திருவுள்ளமாகும். விதியினாலே - ஆகமம் விதித்த வழியினாலே. பாதுகாத்து உய்ப்பீர் - திருநீற்றினிடத்தும், அதனை அணிவார் தம் திருவேடத்தினிடத்தும் சோர்வுபடாது பெரும்பற்றைச் செய்து, நும் வழிவழி வருவாரும் ஏற்றுப் போற்றுமாறு செய்வீர். உடலை விட்டு உயிர் நீங்கும் பொழுது இறை சிந்தனை ஒன்றே உயிரிடத்து அமைதல் வேண்டும் அதனை நாயனார் செய்திருந்தமையான் ``பூங்கழல் சிந்தை செய்தார்`` என் றார். `நாகைக் காரோணநின் நாமம் பரவி நமச்சிவாய வென்னும் அஞ்செழுத்தும் சாமன் றுரைக்கத் தருதிகண் டாயெங்கள் சங்கரனே!` *(தி.4 ப.103 பா.3)*, `துஞ்சும் போழ்துநின் னாமத் திருவெழுத் தஞ்சும் தோன்ற அருளுமை யாறரே` *(தி.5 ப.27 பா.3)* என வரும் திருமுறைத் திருவாக்குகளும் காண்க.

தொண்டனார்க் கிமையப் பாவை
துணைவனார் அவர்முன் தம்மைக்
கண்டவா றெதிரே நின்று
காட்சிதந் தருளி மிக்க
அண்டவா னவர்கட் கெட்டா
அருட்கழல் நீழல் சேரக்
கொண்டவா றிடைய றாமல்
கும்பிடுங் கொள்கை ஈந்தார். **#489**

அம்மெய்ப்பொருள் நாயனாருக்கு உமையம்மை யாரின் கணவராகிய சிவபெருமான், அவர்தம்மை மனத்தகத்து எண்ணியிருந்த வடிவே வடிவாக, அவர் முன்னிலையில் வெளிப் பட்டருளி, அவரை மேலான விண்ணுலகின்கண் வாழும் தேவர் களுக்கும் எட்டாத அருள் வடிவான தம் திருவடி நிழலில் கலந்து இன்புறுமாறு அருள் செய்து, அவர் தம்மை இடைவிடாது வணங்கி வாழும் பேற்றினையும் வழங்கியருளினார்.

விளக்கவுரை

`அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர், அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர்` *(திருக்களிற்றுப். கட.1)* என்னும் ஞானநூல். அதற்கேற்ப இறைவன் காட்சி கொடுத்தாரேனும், அவ்வடிவும் மெய்பொருள் நாயனார் உள்ளத்துக் கொண்டு வழிபட்ட வடிவேயாகும் என்பார். `அவர் முன் தம்மைக் கண்டவாறு எதிரே நின்று` என்றார். அண்டம் - விண்ணுலகம். மிக்க வானவர் - மேலான வானவர்: நீண்ட வாழ்நாள், பெருமை இன்பம் முதலியவற்றால் மக்களினும் சிறந்திருத்தலின் `மிக்க வானவர்` என்றார். இனி இதனை மிக்க அண்டம் என இயைத்துக் கூறினும் அமைவதாகும். `அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம் அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி, ஒன்றனுக் கொன்று

நின்றெழில் பகரின், நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன` *(தி.8 ப.3 வரி 1-4)* என வரும் திருவாக்கால் அண்டத்தின் அருமை தெரியலாம்.

இன்னுயிர் செகுக்கக் கண்டும்
எம்பிரான் அன்ப ரென்றே
நன்னெறி காத்த சேதி
நாதனார் பெருமை தன்னில்
என்னுரை செய்தே னாக
இகல்விறன் மிண்டர் பொற்றாள்
சென்னிவைத் தவர்முன்
செய்த திருத்தொண்டு செப்ப லுற்றேன். **#490**

தம் இன்னுயிர் நீங்குமாறு உடைவாளால் சிதைக்கக் கண்டும், எம் சிவபெருமானுடைய அடியாரென்ற திருவேடமே மெய்ப்பொருள், எனத்தாம் கொண்ட நெறியைப் பாதுகாத்த சேதி நாட்டின் அரசராகிய மெய்பொருள் நாயனார் பெருமையில் என்னால் இயன்றவகையில் ஒரு சிறிது சொன்னேன்: இனி வலிமை யுடைய விறன் மிண்ட நாயனாரின் அழகிய திருவடிகளைத் தலைமேற் கொண்டு அவர் முன் செய்த திருத்தொண்டைச் சொல்லத் தொடங்கு கின்றேன்.

விளக்கவுரை

என்னுரை - ஒன்றற்கும் பற்றாத என்னால் கூற இயன்ற உரை; `யான் அறி அளவையின் ஏத்தி` என்புழிப் போல.

விறன்மிண்ட நாயனார் புராணம்

விரைசெய் நறும்பூந் தொடையிதழி
வேணி யார்தங் கழல்பரவிப்
பரசு பெறுமா தவமுனிவன்
பரசு ராமன் பெறுநாடு
திரைசெய் கடலின் பெருவளனும்
திருந்து நிலனின் செழுவளனும்
வரையின் வளனும் உடன்பெருகி
மல்கு நாடு மலைநாடு. **#491**

நறுமணம் கமழ்கின்ற அழகிய கொன்றை மாலையை அணிந்த சடையினை உடைய சிவபெருமானின் திருவடி களைவழிபட்டு, மழுப்படையைப் பெற்ற அரிய தவத்தையுடைய முனிவராகிய பரசுராமன், வருணனிடத்தில் பெற்ற நாடாயும், அலை வீசுகின்ற கடலின்கண் உள்ள முத்து, பவளம் முதலிய வளங்களும், திருந்திய மருத நிலத்தின் செழுமையான வளங்களும், மலை வளங் களும் ஒருங்கு நிறைந்து வளம் மிகுந்திருக்கும் நாடாயும் உள்ளது மலைநாடாகும்.

விளக்கவுரை

பரசுராமன்: இச்சொல், பரசும் இராமன், பரசு பெற்ற இராமன் என இருபொருளும் பட நின்றது. இம்முனிவனின் தந்தையாகிய சமதக்கினி முனிவனைக் கார்த்தவீரியன் கொன்றுவிட, அவனை மீளக் கொல்லுதற் பொருட்டுச் சிவபெருமானை நோக்கி வரம் கிடந்தனன் என்றும், அதற்கிரங்கிய பெருமானும் பரசு என்னும் கருவியை வழங்கினர் என்றும், அதனால் அக் கார்த்தவீரியனைக் கொன்று தம் தந்தையையும், அவரின் மூதாதையரையும் மகிழ்வித் தனன் என்றும் காஞ்சிப் புராணம் முதலியவற்றால் அறிகிறோம். ஆதலின் வேணியார்தம் கழல் பரசி, பரசு பெறும் மாதவன்` எனச் சேக்கிழார் குறித்தார். இம்முனிவன், கார்த்தவீரியனைக் கொன்ற தோடன்றி அவனொடு சேர்ந்த பிறரையும் கொன்றனன் என்றும், அதனால் நேர்ந்த பழிக்காகத் தன் பரசினைக் கடலில் எறிந்தனன் என்றும், அவ் வாறு எறிந்த இடத்தில் நீர் விலக ஒரு நாடு உண்டாயிற்று என்றும், அதனை வருணனிடத்திலிருந்து இவன் பெற்றனன் என்றும் ஒரு வரலாறு கூறப்படுகின்றது. அதனை எண்ணியே ஆசிரியரும் `பரசுராமன் பெறுநாடு` என்றார். இந்நாடே மலை நாடாகும். மலைகள் மிகுந் துள்ளமை பற்றி இப்பெயர் பெறினும், இது கடல் வளம், மருத வளம், மலைவளம் ஆகிய மூன்றும் உடையதாகும். திருந்துநிலம் - திருந்திய நிலம்; மருத நிலம். `நீர் இன்றியமையாது உலகெனில் யார் யார்க்கும் வானின்றமையாது

ஒழுக்கு` *(குறள், 20)* எனவரும் திருக் குறளால் வானால் நீரும், நீரால் ஒழுக்கமும் சிறந்து நிற்கும் என்பது தெரியவருகிறது. இவ்வாற்றான் நிலவளனும், பண்பு வளனும் ஒருங்கமைந் திருத்தலின் `திருந்து நிலன்` எனப்பட்டது.

வாரி சொரியுங் கதிர்முத்தும்
வயல்மென் கரும்பிற் படுமுத்தும்
வேரல் விளையுங் குளிர்முத்தும்
வேழ மருப்பின் ஒளிர்முத்தும்
மூரல் எனச்சொல் வெண்முத்த
நகையார் தெரிந்து முறைகோக்குஞ்
சேரர் திருநாட் டூர்களின்முன்
சிறந்த மூதூர் செங்குன்றூர். **#492**

கடல் அலைகளால் கரையில் ஒதுக்கப்பட்ட ஒளி வீசுகின்ற முத்துக்களையும், வயலில் உள்ள மென்மையான கரும்பு களினின்றும் உதிர்ந்த முத்துக்களையும், மூங்கிலிலிருந்து வெளிப்ப டும் குளிர்ந்த முத்துக்களையும், யானைக் கொம்பினின்றும் உதிர்ந்த முத்துக்களையும், இவர்களின் பல்வரிசைகள் என்று சொல்லத் தக்க வெள்ளிய பற்களையுடைய பெண்கள் ஆராய்ந்தெடுத்து வேறு, வேறு மாலைகளாகக் கோக்கும், சிறப்பினை உடைய சேரர்களது செல்வம் மிக்க நாட்டிலுள்ள சிறந்த ஊர்களில், முற்படச் சிறந்து நிற்பது செங்குன்றூர் ஆகும்.

விளக்கவுரை

வாரி - கடல். வேரல் - மூங்கில். மூரல் - பல், இம் மலை நாட்டில் உள்ள பெண்கள், முத்துக்களே பற்களென நிற்பன எனக் கூறுமாறமைந்த பற்களை உடையவர்கள். முத்தன்ன வெண்ணகை யார் என்பது கருத்து. முன்னைய பாடலில் கடல், நிலன், மலை ஆகிய மூன்றன் வளங்களும் அமைந்தது மலைநாடு என்பதற்கேற்ப, இப்பாடலில் வாரி, வயல், வேரல், வேழம் ஆகியவற்றில் விளையும் முத்துக்களைக் கூறியுள்ளார். இவற்றில் பின்னைய இரண்டும் மலைபடு பொருள்களாம். மலைகள் மிக்கதாதலின் இந்நாட்டிற்கென இவ்விரு பொருள்களையும் கூறி, ஏனைய இருநாடுகளும் இதற்கு அயலாதலின் ஒவ்வொன்றே கூறினார். செங்குன்றூர் - இது, கேரளம், திருவிதாங்கூர் மாவட்டத்தில் கொல்லம் என்னும் ஊருக்கு அண்மை யில் உள்ளது.

என்னும் பெயரின் விளங்கியுல
கேறும் பெருமை யுடையதுதான்
அன்னம் பயிலும் வயலுழவின்
அமைந்த வளத்தா லாய்ந்தமறை

சொன்ன நெறியின் வழியொழுகும்
தூய குடிமைத் தலைநின்றார்
மன்னுங் குலத்தின் மாமறைநூல்
மரபிற் பெரியோர் வாழ்பதியாம். **#493**

திருச்செங்குன்றூர் என்னும் பெயரால் விளக்கம் பெற்று உலகில் மதிக்கத்தக்க பெருமையை உடையது இப்பதியாகும். இப்பதியானது, அன்னங்கள் வாழ்கின்ற வயல்களில் உழவினால் அமைந்த நிலவளத்தாலும், தெளிந்த பொருள்களையுடைய மறைகள் கூறியவாறு ஒழுகும் தூய்மையாலும், சிறந்த குடிப்பிறப்பினை உடைய வேளாண்மக்களும், நிலைபெற்ற குலத்தினையுடைய பெருமை பொருந்திய நான்மறைவழி ஒழுகுகின்ற மறையவர்களும் சிறந்து வாழ்கின்ற ஊராகும்.

விளக்கவுரை

இப்பாடலில் குறிக்கப்பெற்ற மரபினர் வேளாளரும், மறையவரும் ஆவர். இவர்கள் இருவரும் மறைவழி ஒழுகலில் ஒத்தவர்கள். ஆயினும் வேளாளர் உழுதொழிலை மேற்கொண்டிருப் பவர்கள். மறையவர் மறைவழி ஒழுகும் ஒழுக்கத்தை மேற்கொண் டிருப்பவர்கள். இவ்விரு மரபினரும் வாழ்கின்ற ஊர் இதுவாகும். தில்லையில் மூவாயிரவர் வேதியர்கள் இருந்தமை போல, இப்பதியிலும் மூவாயிரவர் வேதியர்கள் இருந்தனர் என நம்மாழ்வார் குறித்துள்ளார். `மனக்கொள்சீர் மூவாயிரவர் வண்சிவனு மயனுந் தானு மொப்பார் வாழ், கனக்கொள்திண் மாடத் திருச்செங்குன்றூரிற் றிருச்சிற்றாற்றங்கரை யானை, யமர்ந்த சீர்மூவாயிரவர் வேதியர்கள் தம்பதியவனி தேவர் வாழ்வார்,` *(திருவாய்.4 பா.6,10)* என்பது நம்மாழ்வார் திருவாக்காகும். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

அப்பொற் பதியி னிடைவேளாண்
குலத்தை விளக்க அவதரித்தார்
செப்பற் கரிய பெருஞ்சீர்த்திச்
சிவனார் செய்ய கழல்பற்றி
எப்பற் றினையும் அறஎறிவார்
எல்லை தெரிய ஒண்ணாதார்
மெய்ப்பத் தர்கள்பாற் பரிவுடையார்
எம்பி ரானார் விறன்மிண்டர். **#494**

அத்தன்மைத்தாகிய அழகிய ஊரின்கண் வேளாண் குலத்தை விளக்குதற்கு ஏதுவாகத் தோன்றியவர். சொலற்கரிய பெருஞ்சிறப்பினையுடைய சிவபெருமானின் சிவந்த நிறமுடைய திரு வடிகளை எப்பொழுதும் எண்ணிய வண்ணம் இருத்தலின் எவ்வகைப்

பற்றையும் அறுமாறு செய்பவர். யாவராலும் அளந்தறியக் கூடாத பெருமையுடையவர். மெய்யடியார்களிடத்துப் பேரன் புடையவர். இவர் எம் தலைவராகிய விறன்மிண்ட நாயனார் ஆவர்.

விளக்கவுரை

பற்றற்றானைப் பற்றப் பற்று விடுமென்பர் திருவள்ளுவ னாரும் (குறள், *350)*. ஆதலின் `சிவனார் செய்ய கழல்பற்றி எப்பற்றி னையும் அற எறிவார்` என்றார். அகப்புறப் பற்றுக்களின் வழிவரும் பற்றுக்கள் பலவாதலின் `எப்பற்றினையும்` என்றார். உம்மை - முற்றும்மை.

`சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றிஇப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய்`

எனவரும் திருவாசகத் *(தி.8 ப.8 பா.20)* திருவாக்கும் ஈண்டறியத் தக்கதாம்.

நதியும் மதியும் புனைந்தசடை
நம்பர் விரும்பி நலஞ்சிறந்த
பதிக ளெங்குங் கும்பிட்டுப்
படருங் காதல் வழிச்செல்வார்
முதிரும் அன்பிற் பெருந்தொண்டர்
முறைமை நீடு திருக்கூட்டத்
தெதிர்முன் பரவும் அருள்பெற்றே
இறைவர் பாதந் தொழப்பெற்றார். **#495**

அவர், கங்கையையும், இளம்பிறையையும் அணிந்த சடைமுடியையுடைய சிவபெருமான் திருவுளம்கொண்டு எழுந்தருளியிருக்கும் திருப்பதிகள் பலவற்றையும் வணங்கி, அப் பெருமானிடத்து மேன்மேலும் தழைத்துவரும் அன்பின்வழிச் செல் கின்றவர், முதிர்ந்த அன்புடைய பெருமை மிகுந்த அடியவர்கள் தாம் ஆற்றிவரும் திருத்தொண்டின் முறைமை தொடர்ந்து நீடு மாறு வழிபாடற்றிவரும் திருக்கூட்டத்தின்முன்பு சென்று வணங்கப் பெற்ற பின்னர் சிவபெருமான் திருவடிகளை வணங்கும் ஒழுக்கமுடையவர்.

விளக்கவுரை

இறைவன் எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளை முறை யாக வணங்கி மகிழ்வது அடியவர்களிடத்து இருக்கும் சீரிய பழக்கமாகும்

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மான்என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்தைக் கோயிலாக் கொள்வனே. -*தி.10 பா.1427*

எனத் திருமூலர் ஆற்றுப்படுத்தியிருக்கும் அருமையும் காண்க. வேட மாத்திரத்தால் வணங்குதலன்றி முதிரும் அன்புடையாரையே வணங் குவர் என்பது தோன்ற `முதிரும் அன்பில் பெரும்தொண்டர் முறைமை நீடு திருக்கூட்டம்` என்றார். நலம் சிறந்த பதி - இறைவன் அத்திருப்பதியில் கோயிலாகக் கொண்ட நாள்முதல் தன்னடைந் தார்க்கு இன்பங்களைத் தந்தருளிவரும் திருப்பதி. முன்பரவுதல் - இறைவனை வணங்குமுன் இவ்வடியவர்களை வணங்குதல். இனி அவ்வடியவர் வணங்குமுன்னர் தாம் அவர்களை வணங்கி எனினும் ஆம். இத்தகைய கொள்கையே, பின்னர் அடியவர் கூட்டத்தை வணங் கிச் செல்லாது இறைவனை வணங்கிச் சென்ற சுந்தரர் மீது சினக்கச் செய்தது.

பொன்தாழ் அருவி மலைநாடு
கடந்து கடல்சூழ் புவியெங்கும்
சென்றா ளுடையார் அடியவர்தம்
திண்மை ஒழுக்க நடைசெலுத்தி
வன்தாள் மேருச் சிலைவளைத்துப்
புரங்கள் செற்ற வைதிகத்தேர்
நின்றா ரிருந்த திருவாரூர்
பணிந்தார் நிகரொரோன் றில்லாதார். **#496**

பொன் திரளோடு விழுகின்ற அருவிகளையுடைய சேரநாட்டைக் கடந்து, கடல் சூழ்ந்த நிலவுலகத்தில் உள்ள பல திருப் பதிகளுக்கும் சென்று, தம்மை ஆளாகவுடைய சிவபெருமானின் அடியவர்கள் தாம் கொண்டிருக்கும் திட்பமான ஒழுக்கநெறியை வழுவாமல் நடக்கச் செய்து, வலிமை மிகுந்த அடிப்பாகத்தை உடைய மேருவாகிய வில்லை வளைத்து முப்புரங்களை எரித்தற்குக் காரண மான, நான்மறைகளாகிய குதிரைகளைப் பூட்டிய நிலமாகிய தேரில் நின்றருளிய சிவ பெருமான், வீற்றிருந்தருளும் திருவாரூரைத் தமக்கு வேறொருவரும் ஒப்பாகாதவராகிய விறன்மிண்டர் வணங்கினார்.

விளக்கவுரை

திண்மை ஒழுக்கம் - தாம் கொண்ட ஒழுக்கத்தில் உறு திப்பாடுடைமை. வைதிகத்தேர் - மறைகளாகிய குதிரைகள் பூட்டப் பெற்ற தேர். ஈர்த்துச் செல்லும் ஊர்தியால் தேர் இப்பெயர் பெற்றது. `வானோர் எல்லாமொரு தேராயயன் மறைபூட்டிநின் றுய்ப்ப` *(தி.1 ப.11 பா.6)*, `முப் புரம்வெந் தவியவை திகத்தேர் ஏறிய ஏறுசே வகனே` *(தி.9 ப.1 பா.10)*, எனவரும் திருமுறைத் திருவாக்குகளும் காண்க. திரிபுரம் எரித்த வரலாறு சங்க இலக்கியங்களில் ஆங்காங்கெல்லாம் பேசப்படுகிறது.
`செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி` *(தி.6 ப.32 பா.1)*,
`சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி` *(தி.6 ப.32 பா.3)*,

`புரமெரித்த முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே` *(தி.6 ப.34 பா.2)* எனவரும் திருவாரூர்த் திருத்தாண்டகங்களில் பெரிதும் இவ்வரலாறு இயைத்துப் பேசப்பெறுகின்றதாதலின் ஆசிரியரும், `புரங்கள் செற்ற வைதிகத்தேர் நின்றா ரிருந்த திருவாரூர்` எனக் குறிப்பாராயினர்.

திருவார் பெருமை திகழ்கின்ற
தேவா சிரிய னிடைப்பொலிந்து
மருவா நின்ற சிவனடியார்
தம்மைத் தொழுது வந்தணையா
தொருவா றொதுங்கும் வன்றொண்டன்
புறகென் றுரைப்பச் சிவனருளாற்
பெருகா நின்ற பெரும்பேறு
பெற்றார் மற்றும் பெறநின்றார். **#497**

மங்கலம் பொலிந்து நிற்கும், பெருமை மிக்க தேவா சிரியன் என்னும் காவணத்தில் சிவப்பொலிவு ததும்ப நிற்கும், சிவ பெருமானின் அடியவர்களைப் புறத்தே வணங்கிச் செல்லாது, இவ் வடியவர்க்கு அடியனாகும் நாள் எந்நாளோ? என அகத்து அன்பு செய்து, ஒருவாறாக ஒதுங்கிச் செல்லும் நம்பியாரூரர் இத்திருக் கூட்டத்திற்குப் புறகு என்று சொல்ல, சிவபெருமான் திருவருளால் பெருகி நிற்கும் பெரிய பேற்றினைப் பெற்றுக் கொண்டவர். மேலும் சிவபெருமானையும் அவ்வாறு `புறகு` என்று கூறும் பேறும் பெற்றவர்.

விளக்கவுரை

திரு - மங்கலம்: நன்மை பெருக நிற்கும் மங்கலம். திருநீறு, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து ஆகிய மூன்றையும், தமக் குரிய பொருளாகக் கொண்டிருக்கும் அடியவர் உளத்தில் இறைவனும் கோவில் கொண்டிருப்பன். எனவே அடியவரும் அவர் உளத்தில் நிற்கும் இறைவனும் எழுந்தருளியிருக்கும் இடம் இக்காவணமாதலின் திருவார் பெருமை திகழ்கின்ற தேவாசிரியன்` என்றார். விறன்மிண்டர் உள்ளத்தில் இறைவன் எழுந்தருளி இருப்ப அப்பெரும் பேற்றாலேயே நம்பியாரூரைப் புறகு என்றார். அவ்வருள் உந்துதலினாலேயே இறைவனையும் புறகு என்றார். அதுவும் இறைவன் தர வந்ததாதலின் `மற்றும் பெற நின்றார்` என்றார். தேவாசிரியன் காவணத்தில் நிற்கும் அடியவர்களை அணுகச் சென்று புறத்தே வணங்காது செல்லினும், அவர் அகத்தே அவர்களை வணங்கி வருதலின் `ஒருவாறு ஒதுங்கும்` என்றார். அவர் பெருமையும், தம் சிறுமையும் நோக்கி ஒதுங்கினா ரல்லது, ஒதுக்கினர் அல்லர். `திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்` என்றும், `விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற்

கடியேன்` *(தி.7 ப.39 பா.1, 10)* என்றும் இவர் பின் கூற இருக்கும் திருவாக்குகளால் இவ்வுண்மை அறியப்படும். மற்று, பிறிது என்னும் பொருளில் வந்தது.

சேணார் மேருச் சிலைவளைத்த
சிவனா ரடியார் திருக்கூட்டம்
பேணா தேகும் ஊரனுக்கும்
பிரானாந் தன்மைப் பிறைசூடிப்
பூணா ரரவம் புனைந்தார்க்கும்
புறகென் றுரைக்க மற்றவர்பாற்
கோணா வருளைப் பெற்றார்மற்
றினியார் பெருமை கூறுவார். **#498**

மிக உயர்ந்து விளங்கும் மேருவை வில்லாக வளைத்த சிவபெருமானின் அடியவர் திருக்கூட்டத்தை வணங்காது செல்கின்ற நம்பியாரூரருக்கும், எவ்வுயிர்க்கும் தலைவராம் தன்மை யையுடைய இளம்பிறையைச் சூடிய பாம்பையணிந்த ஆரூர்ப் பெருமானுக்கும் புறகு என்று சொல்ல, அப்பெருமானிடத்து மாறாத திருவருளைப் பெற்றார். அவ்வாறாயின் அவர் பெருமையைக் கூற வல்லார் யாவர்?

விளக்கவுரை

கோணா அருள் - கோடாத அருள்: நீங்காத அருள். அவர் பால் என்பதில் உள்ள சுட்டு இறைவனையன்றி நம்பியாரூர ரையும் குறிக்குமாறு அமைந்துள்ளது. மற்று என்பன அசைநிலைகள்.
இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஞால முய்ய நாமுய்ய
நம்பி சைவ நன்னெறியின்
சீல முய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பாடச் செழுமறைகள்
ஓல மிடவும் உணர்வரியார்
அடியா ருடனாம் உளதென்றால்
ஆலம் அமுது செய்தபிரான்
அடியார் பெருமை அறிந்தார்ஆர். **#499**

உலகினர் உய்யவும்,நாம் உய்யவும், நம்பியாரூ ரரின் நல்ல சைவநெறியின் ஒழுக்கம் வளர்ந்தோங்கவும் திருத் தொண்டத் தொகையைப் பாடியருள, வளம் மிக்க நான்மறைகளும் திருவடிக்கண் அடைக்கலம் எனக் கூறியும் உணர்தற்கு அரியவனாகிய சிவபெருமான், நாம் இருப்பது அடியார்களுடனேயாம் என்று சொல் வாரானால், நஞ்சை அமுதமாக்கிய இறைவனின் அடியவர் பெரு மையை யாவரே அறிந்தார்? ஒருவரும் இல்லை என்பதாம்.

விளக்கவுரை

நம்பியாரூரரைக் கொண்டு திருத்தொண்டத் தொகையை அருளிச் செய்தவரும், `வேதங்கள் ஐயா என ஓங்கி` *(தி.8 ப.1 வரி 34, 35)* ஓலமிடவும், அறிதற்கரியராய் நின்றவருமான சிவ பெருமான், நாம் இருப்பது அடியார்களுடனேயாம் என்று கூறுவா ராயின் அவ்வடியவர் பெருமையை முழுமையாக எவரால் கூறமுடி யும் என்பது கருத்து.

ஒக்க நெடுநாள் இவ்வுலகில்
உயர்ந்த சைவப் பெருந்தன்மை
தொக்க நிலைமை நெறிபோற்றித்
தொண்டு பெற்ற விறன்மிண்டர்
தக்க வகையால் தம்பெருமான்
அருளி னாலே தாள்நிழற்கீழ்
மிக்க கணநா யகராகும்
தன்மை பெற்று விளங்கினார். **#500**

இவ்வாறாகப் பலகாலம் இந்நிலவுலகின்கண் உயர்ந்த பெருமையும், நன்மையும், மிக்க உயரிய நெறிகள் பலவும் ஒருங்கமைந்த சைவ நெறியினைப் போற்றிப் பாதுகாத்துச் சிவ பெருமானுக்கு அடிமையாகும் தன்மையைப் பெற்ற விறன்மிண்ட நாயனார், தம் தொண்டிற்குப் பொருந்தும் முறைமையால் தமது முதல்வராகிய சிவபெருமானின் திருவருளால், அப்பெருமானின் திருவடி நீழலின்கண் மேலான கணநாதர் என்னும் மேன்மையைப் பெற்று விளங்கினார்.

விளக்கவுரை

ஒக்க - இதுகாறும் தாம் செய்துகொண்டு வந்த அடிமைத் திறத்திற்கு ஒப்ப. தொக்க நிலைமை - தொகுதியாகக் கூடிய நிலைமை: சைவப் பெருநெறிக்கென உரிய பண்புகளும், தொண்டுகளும் ஒருங்கு பொருந்திய நிலைமை. எனவே விறன்மிண்ட நாயனார் சைவநெறிக் கென அமைந்த அனைத்துப் பண்புகளையும் கொண்டு, அனைத்துத் தொண்டு களையும் செய்து வந்தவர் என்பது இதனால் போதரும். தக்க வகை - இதுகாறும் செய்துவந்த தொண்டினுக்குத் தக்க நிலை. கணநாயகர் - சிவகணங்களின் தலைவர்.

வேறு பிறிதென் திருத்தொண்டத்
தொகையால் உலகு விளங்கவரும்
பேறு தனக்குக் காரணராம்
பிரானார் விறன்மிண் டரின்பெருமை
கூறும் அளவெம் அளவிற்றே
அவர்தாள் சென்னி மேற்கொண்டே

ஆறை வணிகர் அமர்நீதி
அன்பர் திருத்தொண் டறைகுவாம். #501
பல சொல்லக் காமுறுவது ஏன்? திருத்தொண்டத் தொகை கிடைக்கப் பெற்றதனால் உலகினர் யாவரும் விளங்கவரும் பெரும் பேற்றிற்குக் காரணமாகும் நம் முதல்வராகிய விறன்மிண்ட நாயனாரின் பெருமையை, என்னளவில் கூறும் அளவிற்கு அமை யுமோ? அமையாது. அவர் திருவடியைத் தலைமேற்கொண்டு பழையாறையில் தோன்றிய வணிகராகிய அமர்நீதி நாயனாரின் திருத்தொண்டினை இனிக் கூறுவோம்.

விளக்கவுரை

வேறு பிறிது என் - வேறு வேறாக இவர் பெருமையைச் சொல்லிக் கொண்டு போவதேன்? `பலசொல்லக் காமுறுவர்` (குறள், 649) ஏன் என்றவாறு. எனவே இனிச் சொல்லப்போகும் பெருமை ஒன்றே அவருக்கு அமையும் என்பது கருத்து. தென்தமிழ்ப் பயனாய் உள்ளது திருத்தொண்டத்தொகையாகும். இது ஞாலம் உய்ய, நாம் உய்ய, நம்பி சைவ நன்னெறியின் சீலம் உய்ய அருளப் பெற்றதாகும். பத்திமை தழுவிய இவ்வரலாற்று நூல் ஒன்றே உயிர்களை உய்விக்கும் தகையது. அத்தகைய அருட்பனுவல் சுந்தரர் திருவாக்காக வருதற்கு விறன்மிண்டநாயனார் காரணமாக இருந்தார். ஆதலின் இப்பெருமை ஒன்றே அவருக்கு அமையும் என்றார். ஏகாரம் அசைல. `தூமொழி மடமான் இரக்கம் இன்மையன்றோ இவ்வுலகங்கள் இராமன் பரக்கும தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றதுவே` எனக் கம்பர் பெருமான் அருளுவது போல, விறன்மிண்ட நாயனார் புறகு என்றுரைத்த தன்றோ இவ்வுலகங்கள் பரக்கும் தொல்புகழ்த் திருத் தொண்டத் தொகையினைப் பருகுகின்றதுவே` எனக் கூறிமகிழலாம்.

அமர்நீதி நாயனார் புராணம்

சீரின் நீடிய செம்பியர் பொன்னிநன் னாட்டுக்
காரின் நீடிய களியளி மலர்ப்பொழில் சூழ்ந்து
தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து
பாரில் நீடிய பெருமைசேர் பதிபழை யாறை. **#502**

மிக்க புகழுடைய சோழர்கள் அரசாளுதற்குரிய புனித காவிரி பாயும் சோழநாட்டில், மேக மண்டலம் வரை ஓங்கிய களிப்பினை உடைய வண்டுகள் சூழும் மலர்களையுடைய சோலை களால் சூழப்பட்டு, தேரோடு பொருந்திய, செழுமையான மணிகள் இழைத்த வீதிகளால் சிறப்படைந்து, இவ்வுலகில் நிலைபெற்ற பெருமையினை உடைய நகரமாக விளங்குவது பழையாறை என்பதாம்.

விளக்கவுரை

செம்பியர் - சோழர். `சீரின் நீடிய செம்பியர்` என்பதால் அவர்தம் ஆட்சிச் சிறப்பும், `பொன்னி நன்னாட்டு` என்பதால் அவர்தம் நாட்டுச் சிறப்பும், ஒருங்கு விளங்குதல் காணலாம். `பொழில் சூழ்ந்து` என்பதால் புறச் சூழலும், `தேரின் மேவிய செழுமணி` என்பதால் அகச் சூழலும், பாரின் நீடிய பெருமை` என்பதால் வாழும் மக்கட்சிறப்பும் ஒருங்கு அமைந்த நகர்வளம் காணலாம். பழையாறை - இது திருப்பட்டீச்சரத்திற்குக் கிழக்கே உள்ள பதியாம். இதன் வடபகுதி பழையாறை வடதளி என்றும், அதன் தென்கிழக்கில் உள்ள பகுதி திருப்பழையாறை என்றும் அழைக்கப் பெறுகின்றன.

மன்னு மப்பதி வணிகர்தங் குலத்தினில் வந்தார்
பொன்னு முத்துநன் மணிகளும் பூந்துகில் முதலா
எந்நி லத்தினும் உள்ளன வருவளத் தியல்பால்
அந்நி லைக்கண்மிக் கவர்அமர் நீதியார் என்பார். **#503**

நிலைபெற்ற அப்பதியில் வணிகர் மரபில் தோன்றி யவரும், பொன், முத்து மற்றும் ஏனைய நன்மணிகளும், அழகிய பட்டாடை முதலியனவுமாக எவ்வெந் நாட்டின்கண் உள்ளனவோ, அவையனைத்தும் தம்பால் பெறுதற்கான வளமிக்க வாணிகத் தொழி லில் சிறந்து நிற்பவர் அமர்நீதியார் என்பவராவர்.

விளக்கவுரை

மன்னும் - நிலைபெற்றிருக்கும். அமர்நீதியார் பொன் முதலாகிய மணிகளின் வாணிகமும், பட்டாடை முதலிய துகில் வாணிகமும் ஒருங்குடையவர் என்பது இதனால் தெரியலாம்.

சிந்தை செய்வது சிவன்கழல் அல்லதொன் றில்லார்
அந்தி வண்ணர்தம் அடியவர்க் கமுதுசெய் வித்துக்

கந்தை கீளுடை கோவணங் கருத்தறிந் துதவி
வந்த செல்வத்தின் வளத்தினால் வரும்பயன் கொள் வார். **#504**
சிவபெருமான் திருவடிகளை அன்றிப் பிறி தொன்றையும் சிந்தியாதவராகிய அவர், மாலைக்காலத்துத் தோன்றும் செவ்வானத்தின் நிறத்தினை உடைய சிவபெருமானின் அடியார் களுக்கு அமுது செய்வித்துக் கந்தையையும், உடையையும், கோவணத்தையும் அவர் திருவுள்ளக் கருத்தறிந்து கொடுத்து, நல் வினைப் பயனால் தமக்குக் கிடைத்த செல்வப் பெருக்கால் அடையும் பயனை நாள்தொறும் பெற்று வருவாராயினர்.

விளக்கவுரை

அகக்கருவிகள் நான்கனுள் சிந்தையின் பயன் சிந்திப்ப தாகும். அவ்வாறு சிந்திப்பது சிவன் கழல் அல்லது ஒன்றில்லார் எனவே, அளப்பருங் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக வழிபட்டு வந்த நலம் தெரிகிறது. அந்திவண்ணம் - மாலைக் காலத்தில் தோன்றும் செவ்வானத்தின் நிறம்.கந்தை - கிழிந்ததும் பழையதும் ஆகிய ஆடை என்பது இக்காலத்து உரைக்கும் உரையாகும். எனினும் முழங்கால் மறையும் அளவிற்கான உயரம் குறைந்த ஆடை என்பதே இங்குக் கொள்ளத் தக்க பொருளாகும். நாவரசர், திருவுருவம் இவ்வளவின தாய ஆடையுடன் எங்கும் அமைந்திருப்பதைக் காணலாம். ஆனால் அவர் இவ்வளவான உடையையும், மிகை யெனக் கருதி வாழ்ந்தவர் என்பது `கந்தை மிகையாம் கருத்தும்` என்பதால் அறியலாம். சிறந்த ஞானியர்க்கு ஓடும் கவந்தியுமே உறவாகும் அன்றோ*?* இத்தகைய ஆடையையே அமர்நீதியார் புதிதாக நெய்து கொடுத்து வந்தார் . கீள் - அரைஞாணுக்கு மாற்றாகக் கட்டிக் கொள்வது. கோவணம் - அற்றம் மறைப்பதற்காகக் கீளுடன் இணைத்துப் பின்னால் போக்கிக் கட்டப் படும் ஆடையாம். இது நால்விரல் அல்லது ஐவிரல் அகலமுடைய தாம். தம்பால் வந்த அடியவர்களுக்கெல்லாம் உணவருத்தியும் இப்பொருள்களுள் வேண்டுவதொன்றையோ அன்றி அனைத்தை யுமோ அவ்வடியவர் விரும்புமாறு கொடுத்தும் வாழ்ந்து வந்தார். `செல்வத்துப் பயனே ஈதல்` *(*புறநா. *189)* ஆதலின் `செல்வத்தின் வளத்தினால் வரும் பயன் கொள்வார்` என்றார்.

முக்கண் நக்கராம் முதல்வனா ரவர்திரு நல்லூர்
மிக்க சீர்வளர் திருவிழா விருப்புடன் வணங்கித்
தக்க அன்பர்கள் அமுதுசெய் திருமடஞ் சமைத்தார்
தொக்க சுற்றமுந் தாமும்வந் தணைந்தனர் தூயோர். **#505**
மூன்று கண்களையும் ஆடையின்மையையும் உடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருநல்லூர் என்னும் திருப்பதியில், மிகச்சிறப்போடு

நடைபெற்றுவரும் திருவிழாவைப் பெருவிருப்போடு தொழுது, அவ்விடத்துத்தகுதிமிக்க அடியவர்கள் அமுது செய்வதற்கென ஒரு திருமடத்தையும் அமைத்தார். தம்மொடு சேர்ந்த உறவினரும் தாமுமாக அங்குச்சென்று வதிந்துவந்தார்.

விளக்கவுரை

முக்கண் - ஞாயிறு,திங்கள், தீ ஆகிய முக்கண். நக்கர் - ஆடையின்றி இருப்பவர்.

மருவும் அன்பொடு வணங்கினர் மணிகண்டர் நல்லூர்த்
திருவி ழாவணி சேவித்துத் திருமடத் தடியார்
பெருகும் இன்பமோ டமுதுசெய் திடஅருள் பேணி
உருகு சிந்தையின் மகிழ்ந்துறை நாளிடை ஒருநாள். **#506**

நீலமணி போலும் திருக்கழுத்தினை உடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருநல்லூர்த் திருவிழாச்சிறப்பைப் பொருந்திய பேரன்போடு வணங்கி வழிபட்டு, தம் திருமடத்தின் கண் இருக்கும் அடியவர்கள் மிக்க இனிமையோடு திருவமுது செய்யுமாறு அவர்தம் திருவருளை விரும்பிப் போற்றி, அவற்றால் கசிந்துருகும் திருவுள்ளத்தால் மகிழ்ச்சி மீதூர அங்குத் தங்கியிருக்கும் நாள்களில், ஒருநாள்.

விளக்கவுரை

இறைவழி பாட்டையும், அடியவர் வழிபாட்டையும் ஒருங்கு செய்து வருதலின் உவகை மீதூர அமர்நீதியார் திருமடத்தில் இருந்தார் என்பதாம். மருவும் அன்பு - உயிரொடு பொருந்திய அன்பு. அடியவர் இன்பத்தோடு அமுது செய்தற்கு அவர் அருளை விரும்பினர். எனவே அடியவர்க்கு அமுது வழங்குதலில் அவருக்கு இருந்த ஆர்வம் தெரிகிறது.

பிறைத்த ளிர்ச்சடைப் பெருந்தகைப் பெருந்திரு நல்லூர்க்
கறைக்க ளத்திறை கோவணப் பெருமைமுன் காட்டி
நிறைத்த அன்புடைத் தொண்டர்க்கு நீடருள் கொடுப்பான்
மறைக்கு லத்தொரு பிரமசா ரியின்வடி வாகி. **#507**

குளிர்ந்த திருச் சடையின் கண் பிறையை அணிந்த உயர்தவச் சீலராகிய, பெருமை பொருந்திய திருநல்லூரின்கண் வீற்றிருந்தருளும் கரிய கண்டத்தையுடைய சிவபெருமான், அடியவர் களுக்கு, இவ்வடியவர் இதுகாறும் கொடுத்துவந்த கோவணத்தின் பெருமையை உலகத்தாருக்குக் காட்டவும், நிறைந்த அன்பினராய இவருக்குப் பேரருள் வழங்கவும் ஒரு பிரமசாரியின் வடிவைத் தாங்கிக் கொண்டு.

விளக்கவுரை

தளிர்ச்சடைப் பிறைப் பெருந்தகை என மாறுக. தளிர் - குளிர்.

அறுகம்புல் எனக்கொண்டு பிறையையும், அறுகினையும் சடையில் கொண்டு என்று உரைத்தலும் ஒன்று. பிறையாகிய தளிரைத் திருச்சடையில் கொண்டு என்றுரைப்பர் சிவக்கவிமணியார் *(பெரிய.பு.உரை)*. பிரமசரியன் - ஆசாரியனிடத்து இருந்து ஓதுதலும் விரதம் காத்தலும் ஆகிய ஒழுக்க முடையவன்.

செய்ய ஒண்சடை கரந்ததோர் திருமுடிச் சிகையும்
சைவ வெண்திரு நீற்றுமுண் டகத்தொளித் தழைப்பும்
மெய்யின் வெண்புரி நூலுடன் விளங்குமான் தோலும்
கையின் மன்னிய பவித்திர மரகதக் கதிரும். **#508**

சிவந்த சிறந்த சடையை மறைத்த ஒப்பற்ற திரு முடிக்கண் முடித்த குடுமியும், சைவ நெறியினர்க்குக் காப்பாக விளங்கும் வெண்மையான திருநீற்றால் விளங்கும் மூவிரல் வடிவின தாய் அணிந்த ஒளி விளக்கமும், திருமேனியில் வெண்மையான முப் புரிநூலுடன் சேர்ந்து விளங்குகின்ற கருமானின் தோலும், திருக் கைகளில் விளங்கும் மோதிர விரலில் பச்சைத் தருப்பையால் முடிந்த முடிச்சின் பசிய ஒளியும்,

விளக்கவுரை

திருமுடிச்சிகை - திருமுடியின் கண் விளங்கும் குடுமி. பவித்திரம் - தருப்பையாலாய முடிச்சு.

முஞ்சி நாணுற முடிந்தது சாத்திய அரையில்
தஞ்ச மாமறைக் கோவண ஆடையின் அசைவும்
வஞ்ச வல்வினைக் கறுப்பறு மனத்தடி யார்கள்
நெஞ்சில் நீங்கிடா அடிமலர் நீள்நிலம் பொலிய. **#509**

தருப்பையைக் கயிறாகக் கட்டி அதனைக் கொப் பூழின் கீழ் அமையக் கட்டிய இடுப்பில் அதற்குப் பற்றுக் கோடாக விளங்கும் மறைவடிவான கோவணஆடையின் பிணிப்பும் கொண்ட வராகி, வஞ்சத்தாலாய வலிய தீவினையாம் களங்கத்தை அறுத்த மாசில் மனத்தவராகிய அடியார்களின் திருவுள்ளத்தே எக்காலமும் நீங்கிடாத திருவடிகள், நீண்ட இந்நிலவுலகில் பொருந்த.

விளக்கவுரை

முஞ்சி - தருப்பை. நாண்உற - கயிறாக முடித்து. தஞ்சமாம் மறை - தம்மையே ஓலமிட்டுத் தஞ்சமாகி வந்தவேதம். `மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத் தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ` *(தி.8 ப.12 பா.2)* எனவரும் திருவாசகமும் காண்க.

கண்ட வர்க்குறு காதலின் மனங்கரைந் துருகத்
தொண்டர் அன்பெனுந் தூநெறி வெளிப்படுப் பாராய்த்

தண்டின் மீதிரு கோவண நீற்றுப்பை தருப்பை
கொண்டு வந்தமர் நீதியார் திருமடங் குறுக. **#510**

தம் திருவடிவைப் பார்த்தவர்களுக்கு மிகும் விருப்பினால் அவர் மனம் கரைந்து உருகுமாறு, அமர்நீதியாரின் அன் பெனும் தூய அறநெறியை யாவர்க்கும் வெளிப்படுத்துவாராய், தம் கையில் தாங்கிய தண்டில் இரு கோவணங்களையும், திருநீற்றுப் பையையும் தருப்பையையும் கட்டிக்கொண்டு, அமர்நீதியாரின் திருமடத்திற்கு எழுதந்தருளி வர.

விளக்கவுரை

பிரமச்சாரியர்கள் தருப்பையில் துயில வேண்டும் என்பது மரபு. அம்மரபு காத்தற் பொருட்டும், வினை செய்யுங்கால் தருப்பை கொண்டு பவித்திரம் அணிதற் பொருட்டும், தண்டில் தருப்பையையும் தாங்கி வந்தனர். இறைவன் ஏற்று வந்த வடிவம் கண்டவர்களுக்கு அன்பு மீதூர்வையும், அதனால் அக நெகிழ்ந்து உருகும் மெய்ப் பாட்டையும் தருமாறு அமைந்தது. `கண்டதோர் வடிவால் உள்ளம் காதல் செய்து உருகா நிற்கும்` என்றார் *(தி.12 சரு.1-5 பா.42)* முன்னும். `கண்ணாரக் காண்பார்க்கோர் காட்சி யான்காண்` *(தி.6 ப.8 பா.11)* என்பர் நாவரசரும்.

வடிவு காண்டலும் மனத்தினும் முகம்மிக மலர்ந்து
கடிது வந்தெதிர் வணங்கிஇம் மடத்தினிற் காணும்
படியி லாதநீ ரணையமுன் பயில்தவ மென்னோ
அடிய னேன்செய்த தென்றனர் அமர்நீதி யன்பர். **#511**

இவ்வாறு தம்பால் அடைந்த அடியவர் திரு வடிவைக் கண்ட அளவில், மனத்தினும் முகத்தில் மிகு மலர்ச்சி அடைந்து, விரைய வந்து, அவர் திருமுன் வணங்கி, இத்திருமடத்தில் இதற்கு முன்பு ஒரு நாளும் வாராத நீர் இன்று எழுந்தருளப் பெற்றதற்கு அடியேன் முன்செய்ததவம் யாதோ? என அமர்நீதியார் கூறினார்.

விளக்கவுரை

`அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்` *(குறள், 706)* என்பர் திருவள்ளுவர். ஆனால் அமர்நீதியார் முகம் மனமகிழ்வினும் மகிழ்வு மீதூர்ந்து நிற்கின்றது என்றார். அமர்நீதியாரின் திருமடம் எத்தனையோ அடியவரை ஏற்று மகிழ்ந்திருப்பினும், இது பொழுது எழுந்தருளிய அடியவராய இவ் விறைவர் இதற்கு முன்பு எழுந்தருளவில்லை. இன்றும் அவ்வடிய வரின் அன்பை வெளிப்படுத்தவே வந்தருளியதன்றி வேறில்லை என்பது குறிப்பு. இவ்ஆறு பாடல்களும் ஒருமுடிபின.

பேணும் அன்பரை நோக்கிநீர் பெருகிய அடியார்க்
கூணும் மேன்மையில் ஊட்டிநற் கந்தைகீ ளுடைகள்

யாணர் வெண்கிழிக் கோவணம் ஈதல்கேட் டும்மைக்
காண வந்தனம் என்றனன் கண்ணுதற் கரந்தோன். **#512**
நெற்றிக் கண்ணை மறைத்துவந்த சிவ பெருமானாகிய அடியவர், தம்மை வணங்கி விருப்புறும் அமர்நீதி யாரைப் பார்த்து `திரளாகவரும் அடியவர்களுக்கு நீவிர் மேன்மையான திருவமுதை ஊட்டி, நல்ல கந்தைகீள் உடையாகிய இவற்றுடன் புதியவும் வெண்மையாயவும் ஆன உயர்ந்த கோவணத்தையும் கொடுத்தலைக் கேள்வியுற்று, உம்மைக் காண்டற்கு விரும்பி வந்தனம்` என்று அருளிச் செய்தார்.

விளக்கவுரை

உணவின் தன்மையாலும், உபசரிக்கும் தன்மையாலும் மேம்பட்டிருக்கும் நிலைமையால், `மேன்மையில் ஊட்டி`என்றார். யாணர் - புதிது. கிழி -புத்தாடையாகவே கிழித்த ஆடை.

என்று தம்பிரா னருள்செய இத்திரு மடத்தே
நன்று நான்மறை நற்றவர் அமுதுசெய் தருளத்
துன்று வேதியர் தூய்மையின் அமைப்பதும் உளதால்
இன்று நீருமிங் கமுதுசெய் தருளுமென் றிறைஞ்ச. **#513**
வ்வாறு வந்தஇறைவர் அருள, இத்திரு மடத்தின்கண் மறைகளை நன்குணர்ந்த நற்றவ மறையவர்கள் திருவமுது செய்தற்கு ஏற்ப, தூய்மையோடு கூடிய மறையவர்களால் சமைக்கப்பெறும் திருவமுதை ஏற்றருள வேண்டுமென்று விண்ணப் பித்துக் கொள்ள.

விளக்கவுரை

****

வணங்கும் அன்பரை நோக்கிஅம் மறையவர் இசைந்தே
அணங்கு நீர்ப்பொன்னி ஆடிநான் வரமழை வரினும்
உணங்கு கோவணம் வைத்துநீர் தாருமென் றொருவெண்
குணங்கொள் கோவணந் தண்டினில் அவிழ்த்தது கொடுப்பார். **#514**
அவ்வாறு வணங்கிய அன்பரைப் பிரமசாரியாக வந்த அவ்வேதியர் நோக்கி, அவர் வேண்டுதலுக்கு இசைந்தவராய்த் தெய்வத் தன்மை பொருந்திய காவிரியில் நீராடி நான் வரும் பொழுது, மழைவர நேரினும் அப்பொழுது உதவுவதற்காக உலர்ந்த இக் கோவணத்தை உம்மிடத்தில் வைத்துத் தருவீராக என்று கூறி, வெண்மை நிறம் அமைந்த சீரிய அக்கோவணத்தைத் தண்டிலிருந்து அவிழ்த்துக் கொடுக்குமவர்.

விளக்கவுரை

அணங்குநீர் - தெய்வத்தன்மை வாய்ந்த நீர். உணங்கு கோவணம் - உலர்ந்த கோவணம். வெண்குணங்கொள் கோவணம் - வெண்மையான நூலால் அமைந்த கோவணம். குணம் - சீரிய குணங்கள் எனக் கொண்டு,

அறப்பண்பின் வடிவாய கோவணம் எனக் கோடலும் பொருந்துவதாம். `மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத் தன்னையே கோவணமாச் சாத்தினன்` *(தி.8 ப.12 பா.2)* எனவரும் திருவாசகமுங் காண்க.

ஓங்கு கோவணப் பெருமையை உள்ளவா றுமக்கே
ஈங்கு நான்சொல்ல வேண்டுவ தில்லைநீ ரிதனை
வாங்கி நான்வரு மளவும்உம் மிடத்திக ழாதே
ஆங்கு வைத்துநீர் தாரும்என் றவர்கையிற் கொடுத்தார். **#515**

மேற்கூறிய குணநலம் சான்ற கோவணத்தின் பெருமையை உள்ளவாறு உமக்கு இங்கு நான் எடுத்துச் சொல்ல வேண்டுவதில்லை. நீர் இதை வாங்கி நான் நீராடி வரும் வரையில் உம்மிடத்தில் பாதுகாப்பாக வைத்துப் பின் திருப்பித் தருவீராக என்று சொல்லி, அதனை அந்நாயனார் கையில் கொடுத்தார்.

விளக்கவுரை

இகழாது வைத்து - அதன் சிறுமை கருதி இகழாது, பாதுகாப்பாக வைத்து. இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

கொடுத்த கோவணம் கைக்கொண்டு கோதிலா அன்பர்
கடுப்பில் இங்கெழுந் தருளும்நீர் குளித்தெனக் கங்கை
மடுத்த தும்பிய வளர்சடை மறைத்தஅம் மறையோர்
அடுத்த தெண்டிரைப் பொன்னிநீ ராடுதற்கு அகன்றார். **#516**

அம்மறையவர் கொடுத்த கோவணத்தை வாங்கிக் கொண்ட குற்றமற்ற அன்பராகிய நாயனார், நீர் குளித்து விரைவில் இங்கு எழுந்தருளுக என வேண்டிக் கொள்ள, ஆழமான நீர்ப் பெருக்குடைய கங்கை தங்கிய நீண்ட சடையை மறைத்து வந்தவ ராகிய அம்மறையவர், அடுத்திருக்கும் தெளிந்த அலைகளை யுடைய காவிரியில் ஆடுதற்கு அகன்றார்.

விளக்கவுரை

கடுப்பு - விரைவு. மடுத்ததும்பிய - ஆழமாகத் ததும்பி நிற்கும்.

தந்த கோவணம் வாங்கிய தனிப்பெருந் தொண்டர்
முந்தை அந்தணர் மொழிகொண்டு முன்புதாம் கொடுக்கும்
கந்தை கீளுடை கோவண மன்றியோர் காப்புச்
சிந்தை செய்துவே றிடத்தொரு சேமத்தின் வைத்தார். **#517**

மறையவராக வந்தவர் தந்த கோவணத்தை வாங்கிய ஒப்பற்ற பெருந்தொண்டர், முதன்மை பொருந்திய அந்தணராகிய அவர்தம் மொழியினை ஏற்றவராய், இதற்கு முன் தாம் அடியவர்களுக்குக் கொடுப்பதற்கென வைத்திருக்கும் கந்தை, கீள், உடை, கோவணம் எனும் இவற்றை வைத்திருக்கும் இடத்திலன்றிப் பாதுகாப்பான

இடத்தை எண்ணி, அவ்விடத்தில் அதனைக்காவல் பொருந்திய தொரு தனியிடத்தில் வைத்தார்.

விளக்கவுரை

காப்புச் சிந்தை செய்து - பாதுகாப்பாக வைத்தற்குரிய இடத்தை மனத்தில் எண்ணி. இவ் விடத்துள்ள காப்புப்பொது வகை யான் அமைந்ததாகும். பின்வரும் சேமம் என்பது சிறப்புவகையான் காவலும் தனியிடமுமாக அமைந்ததாகும்.

போன வேதியர் வைத்தகோ வணத்தினைப் போக்கிப்
பான லந்துறைப் பொன்னிநீர் படிந்துவந் தாரோ
தூந றுஞ்சடைக் கங்கைநீர் தோய்ந்துவந் தாரோ
வான நீர்மழை பொழிந்திட நனைந்துவந் தணைந்தார். **#518**

நீராடுதற்கெனச் செல்லும் மறையவர், பாதுகாப் பாக வைத்திருக்கும் அவ்வடியவரிடத்தினின்றும் கோவணத்தை அகலச் செய்து, குவளை மலர்தற்குரிய துறைகளையுடைய காவிரிநீரில் நீராடி வந்தாரோ? அன்றித் தூய நறுமணமுடைய சடையிலுள்ள கங்கை நீரில் தோய்ந்து வந்தாரோ? அறியோம், ஆனால் விண்ணிடத் தினின்றும் வரும் நீராகிய மழை பொழிய அதில் நனைந்து வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

பானல் - நீலம். கோவணத்தைக் கொடுத்தமறையவரே அதனை அகலவும் செய்தார். `முழுதும் யாவையும் வைச்சு வாங்குவாய்` *(தி.8 ப.5 பா.96)* ஆதலின். காவிரியில் படிந்துவந்தாரோ*?* அன்றித் தம்மிடத்திருக்கும் கங்கையில் படிந்து வந்தாரோ*?* எவ்வாறாக இருப்பினும் விரைவில் வந்தனர் என்றவாறாம்.

கதிரி ளம்பிறைக் கண்ணியர் நண்ணிய பொழுதின்
முதிரும் அன்புடைத் தொண்டர்தாம் முறைமையின் முன்னே
அதிக நன்மையின் அறுசுவைத் திருவமு தாக்கி
எதிரெ ழுந்துசென் றிறைஞ்சிட நிறைந்தநூன் மார்பர். **#519**

ஒளி பொருந்திய இளம்பிறையை மாலையாக அணிந்த இறைவராகிய மறையவர், அடியவர் இல்லத்தைச் சேர்ந்த பொழுது, முதிர்ந்த அன்புடைய தொண்டராகிய நாயனார், தாம் அவர் வருவதற்கு முன்னே முறையாக அம்மறையவர் உண்பதற்குரிய மிகத்தூய்மையான அறுசுவை அமுதை ஆக்குவித்து, அவர் வந்தணைந்ததும் எழுந்து, எதிர்கொண்டு வணங்கி நிற்க, அழகிய நூல் அணிந்த மார்பினையுடைய அவர்,

விளக்கவுரை

கதிர் - ஒளி*,* உணவு அறுசுவையோடு கூடியது மட்டு மன்றி*,* உடற்கு

வளமும், நலமும் மிக அமைக்கப்பட்ட தென்பார். `அதிக நன்மையின் அறுசுவைத் திருவமுதாக்கி` என்றார்.

தொண்டர் அன்பெனுந் தூயநீ ராடுதல் வேண்டி
மண்டு தண்புனல் மூழ்கிய ஈரத்தை மாற்றத்
தண்டின் மேலதும் ஈரம்நான் தந்தகோ வணத்தைக்
கொண்டு வாரும்என் றுரைத்தனர் கோவணக் கள்வர். **#520**

தொண்டர்தம் அன்பு எனும் தூய நீரினில் ஆட விரும்பி, அவரை நோக்கிச் செறிவும் குளிர்ச்சியும் மிக்க நீரில் ஆடி வந்ததால், ஈரமுடைய கோவணத்தை மாற்றுதற்குத் தண்டின் மேல் உள்ளதும் ஈரமாகிய கோவணம் ஆதலின், நான் தந்த கோவணத்தைக் கொண்டு வருவீராக என்றுரைத்தார் கோவணக் கள்வர்.

விளக்கவுரை

இடையில் கட்டிய கோவணம் நீராடியமையாலும், தண்டிலி ருந்த கோவணம் மழையாலும் நனைந்திருத்தலின் நும்மிடம் தந்த கோவணம் வேண்டுவதாயிற்று எனக் காரணம் கூறிக் கேட்பினும், அவ் வடியவரிடம் தந்த கோவணத்தை முன்னமேயே அகலப் போக்கி வந்த அடியவர் என்பார், `கோவணக் கள்வர்` என அறிமுகப்படுத்து கின்றார். வந்த அடியவர் ஆடியது காவிரியிலோ அன்றிக் கங்கை யிலோ? அதனை நாம் அறியமுடியவில்லை; ஆயினும் அடியவரின் அன்பு நீரில் ஆடுதலைக்கண்கூடாகக் காண்கின்றோம் என்பார் `அன்பெனும் தூய நீராடுதல் வேண்டி` என்றார். அடியவரிடம் தந்த கோவணத்தை மறைத்த கள்வர், மீண்டும் அக்கோவணத்தைக் கேட்பது எற்றுக்கு, எனவரும் வினாவிற்கும் இத்தொடர் விடையாக அமைந் துள்ளது. இதனால் இவ்வாறு செய்வதும், அடியவர் அன்பை வெளிப் படுத்துதற்கன்றிஅவரைச் சோதிக்கவோ அன்றித் துன்புறுத்துதற்கோ அன்று என்பது விளங்கும். ஞானசம்பந்தரிடத்து உள்ளத்தையும், திருமூலரிடத்து உடலையும், இவ்வடியவரிடத்து உடைமையையும் கவரினும், தம்மிடத்துப் பத்திமை கொண்ட உயிர்களிடத்து இம் மூன் றையுமே ஒருங்கு கவர்வது அவர்தம் இயல்பாகும். `அன்றே என்றன் ஆவியும், உடலும் உடைமை எல்லாமும் குன்றே அனையாய், என்னைஆட் கொண்ட போதே கொண்டிலையோ?` *(தி.8 ப.33 பா.7)* எனவரும் திருவாக்கும் காண்க.

ஐயர் கைதவம் அறிவுறா தவர்கடி தணுகி
எய்தி நோக்குறக் கோவணம் இருந்தவே றிடத்தின்
மையில் சிந்தையர் கண்டிலர் வைத்தகோ வணமுன்
செய்த தென்னென்று திகைத்தனர் தேடுவா ரானார். **#521**

வந்து கேட்கும் அப்பெரியவரின் வஞ்சத்தை அறியாதவராகிய நாயனார்,

விரைந்து உட்சென்று பார்க்க, தனியிடத் தில் மிகப்பாதுகாப்பாக வைத்திருந்த அவர்தம் கோவணத்தைக் கண்டிலர்; தாம் முன்பு காத்து வைத்த கோவணம் எங்குற்றது? என்று திகைத்து அதனைத் தேடுவாராயினர்.

விளக்கவுரை

கைதவம் - வஞ்சனை. ஐயர் - பெருமை மிக்கவர். அஃது அப்பொருள்படுதல் `இன்று எனக்கு ஐயன் செய்தது யார் செய வல்லார்? ` *(தி.12 பு.5 பா.21)*, `ஐயரே அம்பலவர் அருளால் இப் பொழுது அணைந்தோம்` *(தி.12 பு.18 பா.30)* என வருவனவற்றா லும் அறியலாம். பாதுகாப்பாக வைக்கப்பட்ட ஒரு பொருள் அவ் விடத்தில் காணவில்லையாயின் அஃது எங்கே போயிற்று? என்பது உலகியலிலும், கேட்கப்படுவது ஒன்று. அவ்வழக்கே `வைத்த கோவ ணம் என் செய்தது` என்றார். எனவே அது மறைந்தது தம்மால் அன்று; அது தானாக மறைந்தது எனும் குறிப்புப்பட நின்றது.

பொங்கு வெண்கிழிக் கோவணம் போயின நெறிமேல்
சங்கை யின்றியே தப்பின தென்றுதஞ் சரக்கில்
எங்கும் நாடியும் கண்டிலர் என்செய்வார் நின்றார்
அங்கண் வேதியர் பெருந்தொடக் கினில்அகப் பட்டார். **#522**

மேன்மை மிகுகின்ற வெண்மை ஆடையாகிய அக் கோவணம், ஐயமின்றித் தப்பிவிட்டது என முடிவு கொண்ட அவ் வடியவர், தாம் சரக்கு வைத்திருக்கும் இடத்தும் பிற விடத்தும் தேடியும் காணாதவராய் நின்றார். கருணை பொருந்திய அவ்வேதியரின் பெருங்கட்டில் அகப்பட்டவர் வேறு என் செய்வார்? செய்வதறியாது நின்றார்.

விளக்கவுரை

பொங்கு - மேன்மை மிகுகின்ற, போயின நெறி - மறைந்தது என்ற நிலை. சங்கையின்றி - ஐயம் இன்றி; எனவே கோவணம் மறைந்து விட்டது என்பதில் ஐயமில்லை என்பதாயிற்று. அக்கோவண மறைவிற்குத் தாமோ பிறரோ காரணமாகவில்லை என்பதும் குறிப்பாராயிற்று. எனினும் தம் சரக்குப் பொதியினுள்ளும் பிறாண்டும் தேடியது, ஓரோவழி அக்கோவணம் தான் சென்ற இடம் அதுவாக இருக்குமோ? என்பது பற்றியாம். எத்தனையோ அடியவர் களுக்குக் கோவணம் கொடுத்து மகிழும் தமக்குத் தம்மிடத்து, வந்த ஐயர் ஒருவர்தம் கோவணத்தைத் தந்ததும்,அதைப் பிழையாது தரவேண்டும் எனக் கட்டளையிட்டுக் கூற, அதனை ஏற்றதும், அது தற்பொழுது மறையத்திகைப்பதும், அவர்தம் கூற்றில் கட்டுப்பட்ட தேயாம் என்பார். `அங்கண் வேதியர் பெருந்தொடக்கினில் அகப்பட் டார் என் செய்வார்`

என்றார். அடியவர் பட்ட வருத்தமிகுதி ஆசிரியர் சேக்கிழாரையும் பிணித்து நிற்ப இவ்வரியதொடர் எழுந்தமை அறியத் தக்கது. `அம்மருங்கு நின்றயர்வார், அங்கு அருங்கனிக்கு என் செய் வார்?` *(தி.12 பு.24 பா.25)* என அம்மையார் வரலாற்றில் வரும் வருத்த மிகுதியும் இத்தகையதேயாம்.

மனைவி யாரொடு மன்னிய கிளைஞரும் தாமும்
இனைய தொன்றுவந் தெய்திய தெனஇடர் கூர்ந்து
நினைவ தொன்றிலர் வருந்தினர் நிற்கவு மாட்டார்
புனைய வேறொரு கோவணங் கொடுபுறப் பட்டார். **#523**

மனைவியாரும், மற்றும் பொருந்திய சுற்றத் தாரும், தாமும் ஆக இவ்வாறாயதொரு நிகழ்ச்சி வந்து சேர்ந்ததே என்று மிகுந்த வருத்தத்துடன் வேறு நினைத்தற்கு ஒன்றும் இல்லாதவர் களாய் வருந்தினர். இந்நிலையில் உள்நிற்கவும் மாட்டாராகி, அம் மறையவர் புனைதற்கென வேறொரு கோவணத்தை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

விளக்கவுரை

புறப்பட்டார் - மனையினுள் இருந்து வெளியே வந்தார் என்பதே கருத்தாயினும், முன் அகப்பட்டார் எனக் குறித்தவர் இதுபொழுது புறப்பட்டார் எனக் குறிப்பதை நோக்கின், அத்தொடக்கி னின்றும் அவர் வெளிவர இருக்கும் குறிப்பைப் புலப்படுத்தி நிற்குமாற் றையும் அறியலாம் . இனி அவர் இதுவரை நின்ற சித்தவிகாரக் கலக்கத் தினின்றும், புறப்பட்டார் என்னும் பொருள் போதரவும் நின்றது. எனவே மறையவராக வந்த இறையவர்பால் கட்டுண்ட தொடக்கு, இவர் உலகியல் கட்டி னின்றும் புறப்படுதற்குக் காரணமாயிற்றே அன்றி அகப்படுதற்குக் காரணமாகவில்லை என்பதும் குறிப்பாகப் பெறப் பெறுகின்றது. இந்நயம் சிவக்கவிமணியார் *(பெரிய.பு. உரை)* அவரின் உரையில் கண்டது.

அத்தர் முன்புசென் றடிகள்நீர் தந்தகோ வணத்தை
வைத்தி டத்துநான் கண்டிலேன் மற்றுமோ ரிடத்தில்
உய்த்தொ ளித்தனர் இல்லைஅஃ தொழிந்தவா றறியேன்
இத்த கைத்தவே றதிசயங் கண்டிலே னென்று. **#524**

எவ்வுயிர்க்கும் தந்தையாக விளங்கும் அம் மறையவர் முன் சென்று, `பெரியீர்! நீர் தந்த கோவணத்தைக் காப்பாக வைத்த இடத்தில் நான் கண்டிலேன்; அதனை வேறிடத்து வைத்து ஒளித்தார் எவரும் இல்லை; அக்கோவணம் மறைந்தவாறு அறிகி லேன்; இத்தகையதொரு அதிசயம் வேறு எங்கும் கண்ட தில்லை`, என்று கூறி.

விளக்கவுரை

அத்தர் - தந்தையாராக விளங்குகின்றவர்.

வேறு நல்லதோர் கோவணம் விரும்பிமுன் கொணர்ந்தேன்
கீறு கோவண மன்றுநெய் தமைத்தது கிளர்கொள்
நீறு சாத்திய நெற்றியீர் மற்றது களைந்து
மாறு சாத்தியென் பிழைபொறுப் பீரென வணங்க. **#525**

`வேறு நல்ல கோவணம் ஒன்றை நீர் ஏற்றற் கென மகிழ்வுடன் தங்கள் முன் கொணர்ந்துள்ளேன். இது ஓர் ஆடையி லிருந்து கிழித்துக் கொடுவந்ததன்று. கோவணமாகவே நெய்யப் பெற்றது. அழகு பொருந்திய திருநீற்றையணிந்த பெரியீர்! ஈரம் வாய்ந்த நும் கோவணத்தைக் களைந்து அதற்கு மாற்றாக இதனை ஏற்றுக் கொண்டு, அடியேன் செய்த பிழையையும் பொறுத்தருள்க` என்று கூறி வணங்க.

விளக்கவுரை

****

நின்ற வேதியர் வெகுண்டமர் நீதியார் நிலைமை
நன்று சாலவும் நாளிடை கழிந்ததும் அன்றால்
இன்று நான்வைத்த கோவணங் கொண்டதற் கெதிர்வே
றொன்று கொள்கென உரைப்பதே நீரென உரையா. **#526**

இதனைக் கேட்டு நின்ற அம்மறையவர் சினந்து. `அமர்நீதியாரே! உம் நிலைமை மிக நன்று, நான் நும்மிடத்துக் கோவணத்தை வைத்துச் சென்றபின் இடையில் நாள்கள் பல கழிந்தனவும் இல்லை. இன்றைய பொழுதில் நான் உம்மிடத்துக் கொடுத்து வைத்த கோவணத்தை நீரே ஏற்று, அதற்கு மாறாக வேறொரு கோவணமும் கொள்ளக் கொடுப்பதும் நன்றோ? நீரே உரைமின்!` என்று கூறியவர்.

விளக்கவுரை

கோவணம் காணாமல் போதற்கு நீர் பாதுகாப்பின்றி வைத்திருக்க வேண்டும், அல்லது நாள்கள் பலவேனும் சென்றிருக்க வேண்டும். இரண்டும் இல்லாத நிலையில் அக்கோவணம் மறைந்த தாகக் கூறி, மாற்றாக வேறொன்றைத் தருவது அறம் அன்று என்றார்.

நல்ல கோவணங் கொடுப்பன்என் றுலகின்மேல் நாளும்
சொல்லு வித்ததென் கோவணங் கொள்வது துணிந்தோ
ஒல்லை ஈங்குறு வாணிபம் அழகிதே உமக்கென்
றெல்லை யில்லவ னெரிதுள்ளி னாலென வெகுண்டான். **#527**

`நல்ல கோவணம் தருவேன், என்று உலகில் பலநாள்களும் சொல்லி வந்தது ஈண்டு எனது கோவணத்தைக் கொள்வதற்குத் துணிந்துதானோ? விரைவாக நீர் இங்குச் செய்த வாணிகம் உமக்கு அழகாமோ?` என்று

கூறி, என்றும் அழிவில்லாதவ ராகிய அம்மறையவர் நெருப்புச் சிதறியெழுந்தாற் போன்ற சினத்தைக் கொண்டார்.

விளக்கவுரை

மிக எளிய கோவணங்களை இதுகாறும் கொடுத்து வந்து அதன் வாயிலாக மிக உயர்ந்த தம் கோவணத்தைப் பெற்றமை தோன்ற `வாணிகம்` என வருணித்தார். எரிதுள்ளினாலென - நெருப்புச் சிதறினாலென. `இணர்எரி தோய்வன்ன இன்னா செயி னும்` *(குறள், 308)* எனவரும் திருக்குறள் தொடரும் காண்க. கொள்வதும் மிகை கொளாது, கொடுப்பதும் குறைகொடாது, செய் வதே வாணிகமாகும். ஆனால் நீரோ, அரிய பொருளாயஎன் கோவ ணத்தைப் பெறுதற்கு எளியவாகிய நும் கோவணங்களை இதுகாறும் கொடுத்து வந்துள்ளீர்! ஆதலின், *(நும்)* வாணிபம் அழகியதே என்றார். இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

மறிக ரந்துதண் டேந்திய மறையவர் வெகுளப்
பொறிக லங்கிய உணர்வின ராய்முகம் புலர்ந்து
சிறிய என்பெரும் பிழைபொறுத் தருள்செய்வீர் அடியேன்
அறிய வந்ததொன் றன்றென அடிபணிந் தயர்வார். **#528**

கையில் உள்ள மானை மறைத்து, அதற்கு மாறாகத் தண்டினை ஏந்தி வந்த மறையவர், இவ்வாறு சினந்து கூற, ஐம்பொறி களும் கலங்க உணர்விழந்தவராய், முகம் வாடி. சிறியவனாகிய இவ்வடியவனின் பெரும் பிழையைப் பொறுத்து அருள் செய்வீராக! இது பொழுது நேர்ந்த பிழை, யான்அறிய நிகழ்ந்த ஒன்றன்று எனக் கூறியவாறு அம்மறையவர் தம் திருவடிகளை வணங்கி வருந்துவாராய்.

விளக்கவுரை

மறி - மான். பொறி - ஐம்பொறிகள். நீர் இதுவரை கோவணம் கொடுத்து வந்தது என்போல்வாரது உயர்ந்த கோவணம் ஒன்றைப் பெறுவதற்கேயாம் எனச் சென்ற பாடலில் அம்மறையவர் கூறியதால், தாங்கள் கூறுமாறு போன்று நான் நினைந்து செய்த தவறு அன்று என்பார். `அடியேன் அறிய வந்தது ஒன்று அன்று` என்றார்.

செயத்த கும்பணி செய்வன்இக் கோவண மன்றி
நயத்த குந்தன நல்லபட் டாடைகள் மணிகள்
உயர்த்த கோடிகொண் டருளும்என் றுடம்பினி லடங்காப்
பயத்தொ டுங்குலைந் தடிமிசைப் பலமுறை பணிந்தார். **#529**

`அடியேன் செயத்தகும் பணி எதுவாயினும் அதனைச் செய்வேன். இக்கோவணமன்றி, விரும்பத்தக்கனவாய நல்ல பட்டாடைகளும், மணிகளும் ஆக மிகப் பலவாக விரும்பினும் அவற்றை ஏற்றுக்

கொண்டருளுவீர்`, என்று கூறி, உடம்பில் அடங் காது மீதூர்ந்து நிற்கும் அச்சம் உடையராகி, மனம் உடைந்து, அவர் திருவடிமேல் பன்முறையும் பணிந்தனர்.

விளக்கவுரை

யான் செய்த பெரும் பிழைக்கு என் உடம்பால் அடிமை செய்ய விரும்பினும் அல்லது என் உடைமைகளால் ஈடு செய்ய விரும்பினும், செய்தற்கு ஒருப்படுவேன் என அச்சமும் பத்திமையும் மிகக் கூறினார். குலைந்து - மனம் உடைந்து. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பணியும் அன்பரை நோக்கிஅப் பரம்பொரு ளானார்
தணியும் உள்ளத்த ராயினர் போன்றுநீர் தந்த
மணியும் பொன்னும்நல் லாடையும் மற்றுமென் செய்ய
அணியுங் கோவணம் நேர்தர அமையும்என் றருள. **#530**

இவ்வாறு கூறி வணங்கும் அன்பரைப் பார்த்து அப்பரம் பொருளாய மறையவர், சினம் தணிந்த உளம் உடையார் போலக் காட்டி, `நீர் தரும் மணியும், பொன்னும், ஆடைகளும் மற்றும் உளவாய பொருள்களும் எனக்கு என்ன பயனைத் தரும்? நான் அணிந்துவரும் கோவணத்திற்கு ஒப்பாயதொரு கோவணத்தைத் தருதலே எனக்கு அமையும்` என்று அருளிச் செய்ய,

விளக்கவுரை

தணியும் உள்ளத்தர் ஆயினார் போன்று - சினம் தணியும் உள்ளத்தாராயினார் போன்று. இப்பொருள்படும் ஆயினும், முன்னர்ச் சினம் இருந்தாலன்றோ பின் தணிதற்கு? முன்னர்ச் சினமும் இல்லை. ஆதலின் இதுபொழுது தணிதலும் இல்லை. இதனால், முன்னர்ச் சினந்தனவும் சினந்தனவல்ல; சினம் உடையார் போலக் காட்டவே என்பது புலப்படும். இவ்வாறு கருதுதற்கெல்லாம் காரணம் கோவணக் கள்வர், தொண்டர் அன்பெனும் தூய நீர் ஆடுதற்கு வந்தார் என்றெல்லாம் சேக்கிழார் குறித்துக் காட்டியமையேயாம்.

மலர்ந்த சிந்தைய ராகிய வணிகரே றனையார்
அலர்ந்த வெண்ணிறக் கோவணம் அதற்குநே ராக
இலங்கு பூந்துகில் கொள்வதற் கிசைந்தருள்செய்யீர்
நலங்கொள் கோவணந் தரும்பரி சியாதென நம்பர். **#531**

இதனைக் கேட்டு மலர்ந்த சிந்தையினை உடைய ராகிய வணிகரில் ஏறு போன்றவராகிய அந்நாயனார், `வெண்ணிறம் வாய்ந்த நும் கோவணத்திற்கு ஒப்பாக ஒளி பொருந்திய உயர்ந்த பட்டாடைகள் போல்வனவற்றை ஏற்பதற்கு இசைந்து அருள்செய்யீர் ஆயின் நன்மை மிக்க கோவணத்தைத் திரும்பத் தரும் வகைதான் யாது?` என்று

வணங்க.

விளக்கவுரை

காணாமல் போன கோவணமே வேண்டுமெனக் கூறிய மறையவர், இதுபொழுது அதற்கு ஒப்பானதொரு கோவணம் தர அமையும் எனக் கூறியதும் நாயனார் மகிழ்தற்கு ஏதுவாயிற்று. எனினும் நீர் தந்த மணியும் பொன்னும்,நல்லாடையும் எமக்கு என்செயும்? என முன் அருளியிருத்தலின், `நலங்கொள் கோவணம் தரும் பரிசு யாது` எனக் கேட்பாராயினர். முன், `ஈங்குஉறும் வாணிபம் அழகிதே` என மறையவர் இகழ்ந்ததற்கு ஏற்ப,ஈண்டு `வணிகர் ஏறு அனையார்` என்றார். எனவே இவர் செய்து வருவது பிறர் எவரும் செய்தற்கரிய பெருந்தொண்டேயன்றி, வாணிகம், அன்றென்றதும் கருத்தாயிற்று. ஆயினும் `வணிகர் ஏறு` என்றது இவர் தோன்றிய குலத்தில் இத்தகையதொரு வணிகர் இதுகாறும் தோன்றியிராமை யின், அத் தலைமையும் சிறப்பும் தோன்ற இங்ஙனம் கூறினார். `ஆறும் உடையான் அரசருள் ஏறு` *(குறள்,381)* எனும் திருக்குறளையும் ஈண்டு நினைவு கூரலாம்.

உடுத்த கோவண மொழியநாம் உங்கையில் தரநீர்
கெடுத்த தாகமுன் சொல்லும்அக் கிழித்தகோ வணநேர்
அடுத்த கோவண மிதுவென்று தண்டினில் அவிழா
எடுத்து மற்றிதன் எடையிடுங் கோவண மென்றார். **#532**

`நாம் உடுத்தியிருக்கும் கோவணம் தவிர, உம்கையில் நாம் தர, நீர் அதனைப் போக்கியதாக முன் கூறிய அக் கிழிந்த கோவணத்திற்கு ஒப்பாகும் கோவணம் இதுவாகும்` என்று கூறி, தண்டில் கட்டியிருந்த கோவணத்தினை அவிழ்த்து எடுத்து, `இக் கோவணத்திற்கு ஒத்த எடையுடைய கோவணத்தை இடுவீராக` என்றார்.

விளக்கவுரை

கெடுத்த கோவணம் என்னாது, `கெடுத்ததாக முன் சொல்லும் கோவணம்` என்றார், அவர் கூற்றைத் தாம் இன்னும் ஒப்புக்கொள்ளாமை தோன்ற. இங்கு மறையவர் தம் கோவணம் பெருகிய உயர்வுடையதன்று: ஆடையிலிருந்து கிழித்த கோவண மேயாம். அதற்கு ஒப்பான எடையுடைய கோவணம் கொடுத்தாலே போதும் என அதன் எளிமை தோன்றக் கூறுவார் போன்று அதன் உயர்வைக் கூறினார். `ஓங்கு கோவணப் பெருமையை உள்ளவாறு உமக்கு ஈங்கு நான் சொல்ல வேண்டுவதில்லை` என மறையவர் முன் *(பா.515)* மொழிந்தமையையும் நினைவுகூர்க. இம் மூன்று பாடல் களும் ஒருமுடிபின.

நன்று சாலவென் றன்பரும் ஒருதுலை நாட்டக்
குன்ற வில்லியார் கோவணம் ஒருதட்டில் இட்டார்
நின்ற தொண்டருங் கையினி னெய்தகோ வணந்தட்
டொன்றி லேயிட நிறைநிலா தொழிந்தமை கண்டார். **#533**

மிகவும் நன்று என்று இசைந்து நாயனாரும் ஒரு துலையினை நாட்ட, மலையை வில்லாக உடைய இறையவராகிய மறையவரும் தம் கோவணத்தை ஒரு துலைத்தட்டில் இட்டார். அங் கிருந்த அடியவரும் தம்கையில் நெய்து வைத்திருந்த கோவணத்தை மற்றைத் துலைத்தட்டில் இட, அது அக்கோவணத்திற்கு ஒப்பாக நில்லாமையைக் கண்டார்.

விளக்கவுரை

சாலநன்று என மாற்றுக.

நாடு மன்பொடு நாயன்மார்க் களிக்கமுன் வைத்த
நீடு கோவண மடையநே ராகவொன் றொன்றாக்
கோடு தட்டின்மீ திடஇடக் கொண்டெழுந் ததுகண்
டாடு சேவடிக் கடியரு மற்புத மெய்தி. **#534**

வந்த மறையவர்தம் அருளை நாடி நிற்கும் அன்போடு, தாம் அடியவர்களுக்கு அளித்தற்பொருட்டு முன்வைத் திருந்த நிறைந்த கோவணங்களை, அம்மறையவரின் கோவணத் தட்டிற்கு இணையாகவுள்ளதொரு தட்டில் இட அது அவற்றைக் கொண்டும் அத்தட்டு மேல் எழுந்தே நிற்பதைக் கண்டவராய், ஆடுகின்ற சிவந்த அடிகளையுடைய கூத்தப் பிரானுக்கு அடியவராய நாயனாரும் அற்புதம் அடைந்து.

விளக்கவுரை

நாடும் அன்பு - மறையவரின் அருளை நாடும் அன்பு. நீடு கோவணம் - நிறைந்திருந்த கோவணம். கொடு - கொண்டு.

உலகில் இல்லதோர் மாயையிக் கோவண மொன்றுக்
கலகில் கோவணம் ஒத்தில வென்றதி சயித்துப்
பலவும் மென்துகில் பட்டுடன் இடஇட உயர

இலகு பூந்துகிற் பொதிகளை யெடுத்துமே லிட்டார். **#535**

இது இவ்வுலகில் இல்லாததொரு மாயையாய் உள்ளது. இம்மறையவரின் கோவணம் ஒன்றினுக்கும் அளவற்ற கோவணங்கள் ஒத்தில என வியப்புற்று, மேலும் தம்பாலுள்ள மெல் லிய ஆடைகள், பட்டாடைகள், ஆகியவற்றையும் அத்தட்டின் மேல் இட இட, அத் தட்டு உயர்ந்து கொண்டே செல்லப் பின்னும் விளங்கு கின்ற பொலிவினையுடைய நல்ல ஆடைப் பொதிகளை எடுத்து

அவ்வாடைகளின் மேல் இட்டார்.

விளக்கவுரை

மாயை - அறிய முடியாத தன்மை. மறையவரின் ஒரு கோவணத்திற்கு, அடியவரிடத்துள்ள கோவணங்கள், பட்டாடைகள், மென்துகில்கள் ஆகிய அனைத்தும் ஒவ்வாமை, அறிவினால் அறிய முடியாத தன்மையதாய் இருத்தலின் அதனை `மாயை` என்றார். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

முட்டில் அன்பர்தம் அன்பிடுந் தட்டுக்கு முதல்வர்
மட்டு நின்றதட் டருளொடுந் தாழ்வுறும் வழக்கால்
பட்டொ டுந்துகி லநேககோ டிகளிடும் பத்தர்
தட்டு மேற்படத் தாழ்ந்தது கோவணத் தட்டு. **#536**

அயர்த்தலின்றிச் செய்யும் அன்பருடைய அன்பினை இடுகின்ற துலைத் தட்டினை நோக்க, எவ்வுயிர்க்கும் முதல்வராகிய இறையவராம் மறையவர் அளவில், அவர் கோவ ணத்தை மட்டும் தாங்கி நின்ற தட்டு, அவர்தம் அருளுடனே நிற்றலின் தாழுதல் வழக்காதலின், பட்டொடும் துகில் பலவுமான புத்தாடை களை இடும் அடியவர்தம் தட்டு மேற்பட, அம்மறையவரின் கோவணத் தட்டு தாழ்ந்ததாம்.

விளக்கவுரை

முட்டு - தடை. `முட்டுவயிற்கழறல்` *(தொல். மெய்ப். 23)* எனவரும் தொல்காப்பியத் தொடரும் காண்க. தடையற்ற அன்பெனவே அயர்த்தலில்லாத அன்பு என்பது பெறப்பட்டது. அன்பராய அடியவர் இடும் தட்டில் அன்பு இருக்க, அருள் முதல்வ ராகிய மறையவர் தட்டில் அருள் நிற்றலின் அது தாழ்ந்தது. காரணம் அன்புடைய அடியவரை, அருளுடைய இறைவன் தாங்கி நிற்பது பற்றியாம். `தன்கடன் அடியேனையும் தாங்குதல்` *(தி.5 ப.19 பா.9)* என வரும் திருவாக்கும் காண்க. தாங்கும் பொருள் தாழ இருப்பதும், தாங்கப்படும் பொருள்மேல் இருப்பதும் இயற்கையேயாம். ஆதலின் இதனை ஆசிரியர் `வழக்கே` என்றார். விறகு சுமந்தும், மண் சுமந்தும், சோறு சுமந்தும் அடியவர்களை எளிவந்து ஆட்கொண்டமை காண்க. இனி அன்பு மேலிட மேலிட அவ்வுள்ளத்தில் அருட் பதிவு ஏற்படும் என்பது ஞான நூல் கூற்றாதலின், அந்நிலையில் அடியவரின் அன்பாம் பொருள்கள் மேலிட மேலிட மறையவரின் அருளாம் தட்டுப் பதிந்தது; அதாவது, தாழ்ந்தது என்றலும் ஒன்று.

ஆன தன்மைகண் டடியவர் அஞ்சியந் தணர்முன்
தூந றும்துகில் வருக்கநூல் வருக்கமே முதலா
மான மில்லன குவிக்கவும் தட்டின்மட் டிதுவால்

ஏனை யென்தனம் இடப்பெற வேண்டுமென் றிறைஞ்ச. **#537**
இந்நிகழ்வினைக் கண்டு அடியவராகிய நாயனார், அவ்வந்தணர் முன்னே இத்தட்டில் தூயவும் இனியவுமான ஆடைத் தொகுதிகளையும், அவற்றை நெய்தற்கான நூல் பொதிகளையும் இவை முதலாகவுள்ள குற்றமற்ற பொருள்களையும் குவிக்கவும் இத் தட்டு இணையாகாது தாழ்ந்தே உள்ளது. ஆதலின், என் மாட்டிருக்கும் என் செல்வங்களையும் இத்தட்டில் இடுதற்கு அனுமதித்தல் வேண்டு மென வணங்க.

விளக்கவுரை

துகில் வருக்கம், நூல் வருக்கம் என்பன, அவ்வப் பொருள்களிலும் உள்ள பல்வேறு வகைகளைக் குறித்து நின்றன. மானம் - குற்றம். தனம் - செல்வம்.

மங்கை பாகராம் மறையவர் மற்றதற் கிசைந்தே
இங்கு நாமினி வேறொன்று சொல்லுவ தென்கொல்
அங்கு மற்றுங்கள் தனங்களி னாகிலும் இடுவீர்
எங்கள் கோவண நேர்நிற்க வேண்டுவ தென்றார். **#538**

உமையை ஒரு கூற்றில் உடைய இறைவராகிய மறையவர், அதற்கு இசைந்து இவ்விடத்து, இனி நாம் வேறு எதனைச் சொல்ல இருக்கின்றது? அங்குள்ள `உம் பொருள்களையாகிலும் இடுவீர்` எவ்வாற்றானும் எங்கள் கோவணத்திற்கு ஒப்பாக அப் பொருள்கள் அமைதல் வேண்டுமென்றார்.

விளக்கவுரை

அங்கு என்பது சேய்மைக் கண்ணதாய மாயா உலகப் பொருள்களையும், இங்கு என்பது மறையவர்உடன் நிற்றலின் சிவச் சார்பாய பொருள்களையும் குறிக்கும் என்றும். சிவச் சார்புடைய கோவணத்திற்கு மாயா உலகச் சார்பாய பொன்னும் மணியும், துகிலும் பிறவும் ஒப்பாகாவெனினும், வேறு வழியின்மையின் அவற்றை யேனும் இடுமின் என்பார். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

நல்ல பொன்னொடும் வெள்ளியும் நவமணித் திரளும்
பல்வ கைத்திறத் துலோகமும் புணர்ச்சிகள் பலவும்
எல்லை யில்தனம் சுமந்தவர் இடஇடக் கொண்டே
மல்கு தட்டுமீ தெழுந்தது வியந்தனர் மண்ணோர். **#539**

நல்ல பொன்னுடனே வெள்ளியும் ஒன்பான் இரத்தினத் தொகுதிகளும் மற்றும் பலவகையால் மேம்பட்ட இரும்பு செம்பு முதலாய உலோகங்களும் இவற்றின் சேர்க்கையாலாய வெண்கலம் முதலியனவான அளவற்ற பொருள்களும் ஆக அவர் சுமந்து வந்து, அத்தட்டில் இட இட, அவற்றைத் தன்னுட் கொண்ட அளவில் நிறைவு

பெற்றிருந்தும், அத்தட்டு மேல் எழுந்தவாறே நின் றது. உலகவர் அதைக் கண்டு வியப்படைந்தார்கள்.

விளக்கவுரை

புணர்ச்சிகள் பலவும் - உலோகங்கள் பலவற்றின் சேர்க்கையாலாய வெண்கலம் முதலிய உலோகங்கள். மல்குதட்டு- இடப்பட்ட பொருள்களால் நிரம்பப் பெற்றிருந்த தட்டு.

தவநி றைந்தநான் மறைப்பொருள் நூல்களாற் சமைந்த
சிவன்வி ரும்பிய கோவண மிடுஞ்செழுந் தட்டுக்
கவனி மேலமர் நீதியார் தனமெலா மன்றிப்
புவனம் யாவையும் நேர்நிலா என்பது புகழோ. **#540**

தவத்தால் நிரம்பிய நான்மறைப் பொருளாக உள்ள நூல்களால் அமைந்ததும், சிவபெருமான் விரும்புதற்குரியதா யுள்ளது மான கோவணம், இட்டமேலான தட்டுக்கு, இவ்வுலகில் வாழும் அமர் நீதியார் செல்வங்கள் மட்டுமேயன்றி, அனைத்துலகங் களும் கூட ஒப்ப நிற்கமாட்டா என்று சொல்வதும் அதற்கொரு புகழாமோ? ஆகாது என்பதாம்.

விளக்கவுரை

இறைவனின் கோவணம், `மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே` *(தி.8 ப.12 பா.2)* ஆதல் திருவாசகத்துள் கண்டது. எனவே அம்மறைகள் இறைவனின் கோவணம் ஆதற்கு உரிய தவம் செய்திருத்தல் வேண்டும். ஆதலின் `தவம் நிறைந்த நான்மறை` என் றார். பெருமானின் கோவணத்திற்கு அமர்நீதியார் செல்வங்கள் மட்டுமல்ல, அனைத்துலகங்களுமே ஒப்பு நில்லாவாம் என்பது புக ழாமோ? என்பது கவிக்கூற்றாம். எனவே உலகினர்தம் பொருள்களுக் கெல்லாம் அது மேம்பட்டு நிற்குமென்பதாம்.

நிலைமை மற்றது நோக்கிய நிகரிலார் நேர்நின்
றுலைவில் பல்தனம் ஒன்றொழி யாமைஉய்த் தொழிந்தேன்
தலைவ யானுமென் மனைவியும் சிறுவனும் தகுமேல்
துலையி லேறிடப் பெறுவதுன் னருளெனத் தொழுதார். **#541**

இந்நிலைமையை நோக்கிய ஒப்பற்றவராகிய நாயனார், மறையவர் முன் நேர்நின்று, கெடுதல் இல்லாத பல்வகைச் செல்வங்களையும் ஒன்று கூட விடாமல் தட்டில் வைத்துள்ளேன்; என்னுயிர்த் தலைவ! யானும் என், மனைவியும், சிறுவனும் ஒப்பாதற் குரிய பொருளாமேல், துலையில் ஏறப் பெறுதற்கு உன் அருள் முன்னிற்பதாகுக எனத் தொழுதனர்.

விளக்கவுரை

தகுமேல் துலையில் ஏறிடப் பெறுவது உன்னருள் என்றது, நும்

கோவணத்திற்கு யாங்கள் எவ்வாற்றானும் ஒப்பாகேம் என்பது கருதி. ஒருகால் ஒப்பாதற்குரிய பொருள் ஆகுவேமெனில், அது நின்கருணைத் தகுதி அன்றி எம் தகுதி அன்று என்பதும் கருத் தாயிற்று. உலைவு - கெடுதல்.

பொச்ச மில்லடி மைத்திறம் புரிந்தவ ரெதிர்நின்
றச்ச முன்புற உரைத்தலும் அங்கண ரருளால்
நிச்ச யித்தவர் நிலையினைத் துலையெனுஞ் சலத்தால்
இச்ச ழக்கினின் றேற்றுவார் ஏறுதற் கிசைந்தார். #542

குற்ற மற்ற அடிமைத் திறத்திலேயே திறம்பாது நிற்கும் நாயனார், எதிர்நின்று தம்முன் அச்சம் மீதூர இவ்வாறு கூறலும், அழகிய தண்ணளியினையுடைய மறையவர், அருளினால் அவர்தம் நிலையினை உறுதிப்படுத்தி, இத்துலையைத் தலைக்கீடாகக் கொண்டு, இவ்வுலகியல் நிலையினின்றும் அருள்இயல் உலகிற்கு ஏற்றுவாராய் அவரும், அவர்தம் மனைவியாரும், மைந்தரும் துலையில் ஏறுதற்கு இசைந்தனர்.

விளக்கவுரை

பொச்சம் - குற்றம். இச்சழக்கில் - வைத்த நிதிபெண்டிர் மக்கள் குலம் கல்வி என்னும் இப்பித்த உலகின் தொடக்கு.

மனம கிழ்ந்தவர் மலர்க்கழல் சென்னியால் வணங்கிப்
புனைம லர்க்குழல் மனைவியார் தம்மொடு புதல்வன்
தனைஇ டக்கொடு தனித்துலை வலங்கொண்டு தகவால்
இனைய செய்கையி லேறுவார் கூறுவா ரெடுத்து. #543

மனம் மகிழ்ந்து அம்மறையவர்தம் மலரனைய திருவடிகளைத் தம் தலையால் வணங்கி, மலரணிந்த கூந்தலையுடைய மனைவியாரொடு, மகனையும் துலையில் ஏற்றுதற்கு அழைத்துக் கொண்டு வருபவர். அவ்வொப்பற்ற துலையை வலம்கொண்டு தமக் குரிய தகுதி மேம்பாட்டால் இச்செய்கைக்குத் துணிந்து, அத்துலையில் ஏறும் பொழுது கூறுவார்.

விளக்கவுரை

இடக்கொடு - துலையில் இடுதற்காக அவர் இரு வரையும் கொண்டு வந்து.

இழைத்த அன்பினில் இறைதிரு நீற்றுமெய் யடிமை
பிழைத்தி லோமெனிற் பெருந்துலை நேர்நிற்க வென்று
மழைத்த டம்பொழில் திருநல்லூர் இறைவரை வணங்கித்
தழைத்த அஞ்செழுத் தோதினார் ஏறினார் தட்டில். #544

`இறைவரிடத்துக் கொண்ட அன்பினில், இறை யவர்தம் திருநீற்று

நெறியை இதுகாறும் யாம் உண்மையாகத் திறம் பாதிருப்பின், நாங்கள் மூவரும் இத்துலையில் ஏற, அக் கோவணம் உள்ள தட்டொடு ஒப்பாக நிற்பதாக` என்று கூறி, மழையினால் நிரம்பி நிற்கும் குளங்கள் சூழ்ந்தபொழிலையுடைய திருநல்லூரில் எழுந்தருளி யிருக்கும் இறையவரை வணங்கி,அன்பு தழைதற்குக் காரணமாய திரு வைந்தெழுத்தை ஓதியவாறு தட்டில் ஏறினார்.

விளக்கவுரை

தழைத்த அஞ்செழுத்து - உயிர் தழைத்தற்கு ஏதுவாகிய திருவைந்தெழுத்து.
இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மண்டு காதலின் மற்றவர் மகிழ்ந்துடன் ஏற
அண்டர் தம்பிரான் திருஅரைக் கோவண மதுவும்
கொண்ட அன்பினிற் குறைபடா அடியவர் அடிமைத்
தொண்டும் ஒத்தலால் ஒத்துநேர் நின்றதத் துலைதான். **#545**

மிகுந்த அன்பினால் மற்று அவர்கள் மகிழ்ந்து உடனே துலைத்தட்டில் ஏறினார்களாக, அண்டங்கள் அனைத்தையும் தமக்கு உடைமையாகக் கொண்டிருக்கும் பெருமானாகிய இறைவனது திருவரையில் சாத்தும் கோவணமும், அவரிடத்துக் கொண்ட அன்பி னில் குறைபடாத அடியவர் தம் தொண்டும் ஒப்புடையன ஆதலால் அத்துலைதானும் ஒத்து நின்றது.

விளக்கவுரை

மறைகள் - இறைவனைப் பொருளாகக் கொண்டவை. அவர்களின் அடியவர்களும் இறைவனைப் பொருளாக நெஞ்சத்துக் கொண்டவர்கள். ஆதலின் கோவணமும், அடிமைத் திறமும் ஒத்து நின்றவாம்.

மதிவி ளங்கிய தொண்டர்தம் பெருமையை மண்ணோர்
துதிசெய் தெங்கணும் அதிசய முறவெதிர் தொழுதார்
கதிர்வி சும்பிடைக் கரந்திட நிரந்தகற் பகத்தின்
புதிய பூமழை இமையவர் மகிழ்வுடன் பொழிந்தார். **#546**

தம் அறிவினில் அறிவாய் நிற்கும் இறைவரைக் கண்டு வழிபடும் அடியவர்தம் பெருமையை இவ்வுலகத்தோர் யாவரும் வழுத்தி எங்கும் அதிசயம் பொருந்தத் தொழுதார்கள். ஒளி பொருந்திய விண்ணிலிருந்து அவ்வொளி மறைவு பெறுமாறு ஒக்க மலர்ந்த புதிய இனிய கற்பக மலர்களை மழைபோலப் பொழிந்து வானவர் மகிழ்ச்சியுற்றனர்.

விளக்கவுரை

இறைவன் தம் அறிவினில் அறிவாய் இருந்து விளக்க அதனால் விளக்கம் பெற்ற அடியவர்கள் என்பார். `மதி விளங்கிய தொண்டர்`

என்றார். கதிர் விசும்பு - ஒளி பொருந்திய விண்ணகம்.

அண்டர் பூமழை பொழியமற் றதனிடை ஒளித்த
முண்ட வேதிய ரொருவழி யான்முதல் நல்லூர்ப்
பண்டு தாம்பயில் கோலமே விசும்பினிற் பாகம்
கொண்ட பேதையுந் தாமுமாய்க் காட்சிமுன் கொடுத்தார். **#547**

விண்ணுலகத்தவர்கள் கற்பகப் பூமழையை விசும்பு மறையப் பொழிந்தனராக, மற்று அதன் இடையில் ஒரு வழி யால் மறைந்தவராகிய முக்கீற்று வடிவில் நீறணிந்திருந்த அம்மறை யவர், முதன்மை வாய்ந்த திருநல்லூரில், ஒரு கூற்றில் வைத்த உமையம்மை யாரும் தாமுமாகப் பண்டு தொட்டே உயிர்கட்கு அருள் புரிந்து வரும் பாங்கில், அவ்வடியவர் முன் நின்று காட்சியருளினார்.

விளக்கவுரை

விண்ணவர் பூமழை பொழிய மறையவர் அதனிடைத் தாம் கொண்ட கோலத்தை மறைத்து, அம்மையப்பராகக் காட்சி தந்தனர். எனவே மழை பொழிந்தது, அவர் கொண்ட கோலத்தை மாற்றுதற்கு ஏற்ற இடனாயிற்று என்பது கருத்து.

தொழுது போற்றிஅத் துலைமிசை நின்றுநேர் துதிக்கும்
வழுவில் அன்பரும் மைந்தரும் மனைவியார் தாமும்
முழுதும் இன்னருள் பெற்றுத்தம் முன்தொழு திருக்கும்
அழிவில் வான்பதங் கொடுத்தெழுந் தருளினார் ஐயர். **#548**

வணங்கியும், வாழ்த்தியும் அத்துலையின் மேல் இருந்து வழிபடும் குற்றமற்ற அன்பரும், மைந்தனாரும், மனைவியார் தாமும் ஆக முழுமையாகவும் இனிமையாகவும் அருள் பெற்றுச் சிறக்க, தாம் எஞ்ஞான்றும் தொழுது இன்புற்று வரப் பெருமானும் பெரிய சிவபதத்தைக் கொடுத்து எழுந்தருளி நின்றார்.

விளக்கவுரை

அழிவில் வான்பதம் - அழிவற்ற சிறந்த பதம். சிவ பதம்.

நாதர் தந்திரு வருளினால் நற்பெருந் துலையே
மீது கொண்டெழு விமானம தாகிமேற் செல்லக்
கோதி லன்பரும் குடும்பமும் குறைவறக் கொடுத்த
ஆதி மூர்த்தியா ருடன்சிவ புரியினை யணைந்தார். **#549**

இறைவர் தம் திருவருளினால், நன்மையும், பெருமையும் மிக்க அத்துலையே அவர்களை மேலே அழைத்துச் செல்லுகின்ற விமானமாகி, மேற்செல்ல, குற்றமற்ற அன்பராகிய நாயனாரும் அவர்தம் மைந்தரும் மனைவியாருமாகிய குடும்பத் தாரும் எஞ்ஞான்றும் குறைவுபடாததும் அழிவு படாததுமாகிய சிவ பதத்தைக் கொடுத்த பெருமானுடன்

சிவபுரியை அணைந்தனர்.

விளக்கவுரை

திருவருளால் துலையே விமானமாக இறைவரோடு, தம் குடும்பத்தாருடன் அடியவர் சிவபதம் அடைந்தனர்.

மலர்மிசை அயனு மாலுங் காணுதற் கரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூர் ஆவணப் பழைமைகாட்டி
உலகுய்ய ஆண்டு கொள்ளப் பெற்றவர் பாதம்உன்னித்
தலைமிசை வைத்து வாழுந் தலைமைநந் தலைமை யாகும். **#550**

தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகனும், திருமாலும் காண்பதற்கு அரியவரான சிவபெருமான், பலரும் புகழும் திருவெண்ணெய் நல்லூரில் அடிமையாதற்குரிய ஓலையின் பழமை யைக் காட்டி, உலகம் உய்ய ஆட்கொள்ளப்பட்டவரான நம்பியாரூ ரரின் திருவடிகளை நினைந்து, அத் திருவடிகளின் கீழ்வாழும் தலை மையே நம் தலைமையாகும்.

விளக்கவுரை

வகைநூலில் ஆவணங் காட்டி இறைவன் ஆரூரரை ஆட்கொண்ட திறம் கூறியவாறே, விரிநூலிலும் கூறப்பட்டிருப்பது அறியத்தக்கது. நம்பிகள் ஆரூரரை எம்பிரான் என்றார், சேக்கிழார் அவர் திருவடிகளைத் தலைமிசை வைத்து வாழும் தலைமைநம் தலைமையாகும் என அவருக்கு வணக்கமும் கூறினார்.

எறிபத்த நாயனார் புராணம்

மல்லல்நீர் ஞாலந் தன்னுள்
மழவிடை யுடையான் அன்பர்க்
கொல்லைவந் துற்ற செய்கை
உற்றிடத் துதவும் நீரார்
எல்லையில் புகழின் மிக்க
எறிபத்தர் பெருமை எம்மால்
சொல்லலாம் படித்தன் றேனும்
ஆசையாற் சொல்ல லுற்றாம். **#551**

வளம் மிக்க கடலால் சூழப்பட்ட நிலவுல கத்தின்கண் இளமையான ஆனேற்றை ஊர்தியாகக் கொண்டருளும் சிவபெருமானின் அடியவர்களுக்குத் துன்பம் வந்த பொழுது விரைந்து வந்து அவர்களுக்கு வேண்டும் செய்கைகளைச் செய்கின்ற குணத்தை உடையவராய வரம்பிகந்த கீர்த்தியில் மேம்பட்ட எறிபத்த நாயனாரது பெருமை, எம்மால் சொல்லப்படும் தன்மை உடைத்தன்று. அவ்வாறிருப்பினும் அவர் மீதிருக்கும் மீதூர்ந்த ஆசையால் சொல்லத் தொடங்கினம்.

விளக்கவுரை

ஒல்லை - விரைந்து. உற்றிடத்து - துன்பம் வந்த விடத்து. `அளவில் ஆசை துரப்ப அறைகுவேன்` *(தி.12* பாயிரம் பா.*5)* என முன் பொதுவகையால் கூறிய ஆசிரியர், ஈண்டுச் சிறப்பு வகையானும் கூறினார், அடியவர் மீதிருக்கும் அன்பு மீதூர்வு தோன்ற.

பொன்மலைப் புலிவென் றோங்கப்
புதுமலை யிடித்துப் போற்றும்
அந்நெறி வழியே யாக
அயல்வழி யடைத்த சோழன்
மன்னிய அநபா யன்சீர்
மரபின்மா நகர மாகும்
தொன்னெடுங் கருவூ ரென்னும்
சுடர்மணி வீதி மூதூர். **#552**

இமய மலையினிடத்துக் கட்டிய புலிக்கொடி, பிற நாட்டு அரசர்களை வென்று மேம்பட்டபெருமையை விளக்கிநிற்ப, மலைகளை இடித்துத் தன்னால் உண்டாக்கப்படும் புதிதான அந்த வழியே செல்வோர்க்கு வழியாக, முன்னிருந்த சுற்று வழிகளை அடைத்த சோழர் மரபில் வந்த அரசனாகிய நிலை பெற்ற சிறப்பினை யுடைய அநபாயனின் மரபினருக்குப் பெரிய தலைநகரமாக விளங்குவது, பழமை மிக்க கருவூர் என்னும் ஒளி பொருந்திய மணிகள் பதித்த வீதிகளை உடைய

பழமையாகிய ஊராகும்.

விளக்கவுரை

பொன்மலை - இமயமலை. நம் இந்தியப் பெருநாடு வடக்கில் இமயமலையை எல்லையாக உடையது. அதுவே அரணா கவும் உள்ளது. அதில் பல வழிகள் இருப்பின் நாட்டிற்குப் பாதுகாப்பு இராது என்று கருதிய சோழப் பேரரசர்கள், முன்னிருந்த பலவழி களையும் அடைத்துப் புதிய வழி ஒன்றையுமே போக்குவரத்திற்கு உரியதாக அமைத்தனர். இது அவர்களின் நாடுகாக்கும் திறனை உணர்த்துகின்றது. சோழ அரசர்கள் முடிசூட்டிக் கொள்வதற்குரிய பெரு நகரங்களில் கருவூரும் ஒன்றாகும். மாநகர் - தலைநகர்.

மாமதில் மஞ்சு சூழும்
மாளிகை நிரைவிண் சூழும்
தூமணி வாயில் சூழும்
சோலையில் வாசஞ் சூழும்
தேமலர் அளகஞ் சூழும்
சிலமதி தெருவிற் சூழும்
தாமகிழ்ந் தமரர் சூழும்
சதமகன் நகரம் தாழ. **#553**

தேவர்கள் தாம் மகிழ்ந்து உறைகின்ற இந்திரனது பொன்னுலகமும், இந்நகரச் சிறப்பிற்குத் தாழ்ந்துள்ளது என்னுமாறு, அங்குள்ள பெரிய மதில்களில் மேகங்கள் சூழும். மாளிகைகளின் வரிசைகள், மேக மண்டலத்தை அளாவிநிற்கும். தூய்மையான இரத்தினங்கள் வாயில்களில் சூழ்ந்திருக்கும். தேன் கமழ்கின்ற மலர்கள், பெண்களின் கூந்தலில் சூழ்ந்திருக்கும். அம்மகளிரின் முக மாகிய சில மதிகள் தெருவில் சூழும்.

விளக்கவுரை

சூழும் எனும் சொல் அடுக்கி வந்து இப்பாடற்கு அணி செய்கின்றது. அளகம் - கூந்தல். பெண்களின் முகத்திற்கு மதி ஒப்பாதல் பற்றிச் `சில மதி தெருவில் சூழும்` என்றார். வானில் ஒரு மதியே இருக்க, இப்பெருநகரில் சில மதிகள் இருக்கின்றன, என்பது ஒரு நயம். சில மதி *(சில பெண்கள்)* தெருவில் சூழும் என்றது, தத்தம் செயற்பாட்டிற்கன்றி வறிதே, எப்பெண்மணிகளும், தெருவிடத்து வாரார் என்பது பற்றியாம். முன், `தனயரும் மனையிற் றப்பார்` *(தி.12 சரு.1-5)* என்பதனோடு இதனையும் ஒத்து நோக்கின் அக்காலத்து மகளிரும் மைந்தரும் எந்நிலையிலிருந்தனர் என்ற பண்பாடு தெரிய வரும். சதம் - நூறு; மகம் - வேள்வி, நூறு வேள்விகளைச் செய்தவன் இந்திரனாவான்.

அதுபற்றியே, அவன் `சதமகன்` என அழைக்கப் பட்டான்.

கடகரி துறையி லாடும்
களிமயில் புறவி லாடும்
சுடர்மணி யரங்கி லாடும்
அரிவையர் குழல்வண் டாடும்
படரொளி மறுகி லாடும்
பயில்கொடி கதிர்மீ தாடும்
தடநெடும் புவிகொண் டாடும்
தனிநகர் வளமை ஈதால். **#554**

மதம் பொழிகின்ற யானைகள் நீர்த்துறைகளில் விளையாடும். களிப்பினையுடைய மயில்கள் முல்லை நிலத்தில் விளையாடும். நெருங்கிய மணிகள் அடர்ந்த அரங்கில் நடிக்கின்ற பெண்கள் கூந்தலில் வண்டுகள் ஆடும். ஒளி படர்ந்திருக்கும் வீதிகளில் ஆடுகின்ற நெருங்கிய கொடிகள், கதிரவன் மண்டலத்தின் மேல் உயர்ந்தாடும். பரந்த நெடிய இந்நிலவுலகத்தில் அனைவராலும் பாராட்டத்தக்க ஒப்பற்ற அந்நகரின் வளம் இதுவாம்

விளக்கவுரை

புறவு - முல்லை நிலம். ஆல் - அசை.

மன்னிய சிறப்பின் மிக்க
வளநக ரதனின் மல்கும்
பொன்னியல் புரிசை சூழ்ந்து
சுரர்களும் போற்றும் பொற்பால்
துன்னிய அன்பின் மிக்க
தொண்டர்தஞ் சிந்தை நீங்கா
அந்நிலை யரனார் வாழ்வ
தானிலை யென்னுங் கோயில். **#555**

நிலைபெற்ற சிறப்பினால் உயர்ந்த வளத்தினை உடைத்தாகிய அந்நகரத்தின்கண் இருக்கும் பொன்னாலாகிய மதிலைச் சுற்றி அமரர்களும் வழிபடுதற்குரிய சிறப்பினால், தம் உள்ளத்துக் கலந்த அன்பிற்சிறந்த அடியவர்களின் இதயத்தை விட்டு என்றும் நீங்காத அந்நிலைமையினையுடைய சிவபெருமானார் மகிழ்ந் திருப்பது கருவூரில் இருக்கும் `ஆனிலை` என்னும் திருக்கோயி லாகும்.

விளக்கவுரை

`அரனார் வாழ்வது ஆனிலை` என்னும் கோயிலாகும்.
அவ்விடத்திலன்றி, அன்பு மிக்க அடியவர் உள்ளத்திலும் அவ்வரனார் அன்பு செய்து நிற்பர் என்பார் `அன்பின் மிக்க தொண்டர் தம் சிந்தை

நீங்காஅரனார்` என்றார். தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்ப போற்றி` *(தி.8 ப.5 பா.69)* என்னும் திருவாசகமும். அந்நிலை - அத்தகைய சிறப்பினையுடைய நிலை. அகரம் பண்டறிசுட்டாம். அகரமாகிய நிலையினையுடையார் என்றலும் ஒன்று. `அகரமுதல எழுத்தெல்லாம்` *(குறள், 1)* என வருவதும் காண்க. ஆன் + நிலை = ஆனிலை. காமதேனுவால் வழிபடப்பெற்ற பதியாதலின் இப்பெயர் பெற்றது. திருக்கோயிலின் பெயரும் இதுவாம்.

பொருட்டிரு மறைகள் தந்த
புனிதரை இனிதக் கோயில்
மருட்டுறை மாற்று மாற்றால்
வழிபடுந் தொழில ராகி
இருட்கடு வொடுங்கு கண்டத்
திறையவர்க் குரிமை பூண்டார்க்
கருட்பெருந் தொண்டு செய்வார்
அவர்எறி பத்த ராவார். **#556**

மெய்ப்பொருளைத் தருகின்ற அழகிய மறைகளை அருளிச் செய்த சிவபெருமானை, இனிதாக அக்கோயிலில், உலகியல் உணர்விற்கு ஏதுவாகிய மயக்க நெறிகளை நீக்குமாற்றால் வழிபாடு செய்கின்ற தொழிலை உடையவராய், கருநிறமுடைய நஞ்சு சேர்ந் திருக்கும் திருமிடற்றையுடைய முதல்வராகிய சிவபெருமானுக்கு உரிமையாகிய, அடிமை பூண்ட அன்பர்க்குத் தாம் கொண்ட அருள் நிறைந்த பெரிய திருத்தொண்டைச் செய்து வருகின்ற அடியவர் ஒருவர்; அவர் எறிபத்த நாயனார் என்று அழைக்கப்படுவர்.

விளக்கவுரை

மருள் - மெய்ப்பொருளல்லாதவற்றை மெய்ப்பொருள் என்று கருதுவது. சிறப்புக்கு வித்தாகும் புனிதர் - தூய்மையானவர்; இயல்பாகவே பாசங்களின் நீங்கியவர். மறைகள் தந்த என்பதன்றி மறைகடந்த என்றலுமாம்.

மழைவளர் உலகில் எங்கும்
மன்னிய சைவ மோங்க
அழலவிர் சடையான் அன்பர்க்
கடாதன அடுத்த போது
முழையரி யென்னத் தோன்றி
முரண்கெட எறிந்து தீர்க்கும்
பழமறை பரசுந் தூய
பரசுமுன் னெடுக்கப் பெற்றார். **#557**

அவர், மழையினால் செழிப்புற்று ஓங்கும் நில வுலகின்கண்,

எவ்விடத்தும் நிலைபெற்ற சைவசமயநெறி தழைத்து ஓங்கத் தீப்போல் ஒளிர்கின்ற சடைமுடியையுடைய சிவபெருமானின் அடியவர்களுக்கு, நேரத்தகாத தீங்குகள் நேர்ந்த பொழுது, மலை யிடத்து இருக்கும் குகையில் வாழும் சிங்க ஏறு போல வெளிப்பட்டு, அத்துன்பம் செய்தாரது வலிமை அழியுமாறு அவர்களை அழித்து, அத்துன்பத்தினின்றும் நீக்கும் பழமையான மறைகளும் போற்றுதற் குரிய தூய்மையான மழுப்படையைத் தம்முடைய திருக்கரத்தில் தாங்கப் பெற்றவர்.

விளக்கவுரை

வான்நின்று உலகம் வழங்கி வருதலின் `மழை வளர் உலகு` என்றார். நிலைபெற்ற சிவநெறியைப் போற்றி வருவது சைவம் ஆதலின் `மன்னிய சைவம்` என்றார். அழலின் செந்நிறத்தை ஒத்துத் திருச் சடைவிளங்குதல் பற்றி அதனொடு உவமித்தார். முழையரி - குகையிடத்து இருக்கும் சிங்கம். பதுங்கி இருத்தற்குரிய இடம் அதுவாத லின் `முழையரி` என்றார். அடியவர்க்கு உற்ற இடுக்கணை நீக்குதலின், பழமறைகளும் அவரிடத்து இருக்கும் அப்பரசினைப் பாராட்டுவன வாயின. பரசு என வருவனவற்றில் முன்னையது வழிபடுதல் எனும் பொருளது; பின்னையது கருவி எனும் பொருளது. அழல் - நெருப்பு.

அண்ணலார் நிகழும் நாளில்
ஆனிலை யடிக ளார்க்குத்
திண்ணிய அன்பு கூர்ந்த
சிவகாமி யாண்டா ரென்னும்
புண்ணிய முனிவ னார்தாம்
பூப்பறித் தலங்கல் சாத்தி
உண்ணிறை காத லோடும்
ஒழுகுவார் ஒருநாள் முன்போல். **#558**

பெருமையில் சிறந்த இவ் எறிபத்த நாயனார் இவ்வரிய பணியைச் செய்து வருகின்ற நாளில், ஆனிலை என்னும் திருக்கோவிலின்கண் எழுந்தருளியிருக்கும் பெருமானார்க்கு உறைப்பு மீதூர்ந்த அன்பினராய சிவகாமியாண்டார் என்னும் புண்ணிய முனிவனார், தாம் மலர்களைக் கொய்து இறைவற்கு ஏற்கும் மாலை களாகத் தொடுத்து, அணிவித்துத் தம் உள்ளத்து நிறைந்த பெரு விருப்போடு அப்பணியைச் செய்து வருகின்றவர், ஒரு நாள் தாம் நாளும் செய்துவருவது போல.

விளக்கவுரை

திண்ணிய அன்பு - உறைப்புடைய அன்பு. அஃதாவது தாம் மேற் கொண்டிருக்கும் தொண்டில் வழுவாத அன்பு. அலங்கல் - மாலை.

வைகறை யுணர்ந்து போந்து
புனல்மூழ்கி வாயுங் கட்டி
மொய்ம்மலர் நெருங்கு வாச
நந்தன வனத்து முன்னிக்
கையினில் தெரிந்து நல்ல
கமழ்முகை அலரும் வேலைத்
தெய்வநா யகர்க்குச் சாத்தும்
திருப்பள்ளித் தாமங் கொய்து. **#559**

விடியற்காலையில் துயில் எழுந்து, திருக்குளத் திற்குச்சென்று நீராடி, வாயையும் கட்டிக் கொண்டு, திரளான மலர்கள் நெருங்கிய நறுமணம் கமழும் திருநந்தனவனத்தை அடைந்து, கையி னால் ஆராய்ந்து, நல்ல மணமுடையனவாய் அன்று அலரும் பருவ முடைய அரும்புகளை, அவை அலர்தற்குரிய சமயத்தில் தெய்வங் களுக்கெல்லாம் தலைமையானவராகிய சிவபெருமானுக்கு அணிவித் தற்குரிய திருமாலைக்கு ஆகின்ற மலர்களைக் கொய்து.

விளக்கவுரை

வானில் உலவும் விண்மீன்களின் நிலையைக் கொண்டு காலத்தை உணர்தலின் `வைகறை உணர்ந்து` என்றார். காலக் கருவி கொண்டோ, பிறர் உணர்த்தல் கொண்டோ எழாது, தாமே உரிய நேரத்தை உணர்ந்து எழுதலின், `வைகறை உணர்ந்து` என்றார் என்ற லுமாம். மலர் பறிக்கும் பொழுதும், மாலையாகக் கட்டி இறைவற்கு அணிவிக்கும் பொழுதும் வாய் நீராவி, தும்மல், இருமல், உமிழ்நீர் முதலாயினவற்றால் தூய்மை இழக்காதவாறும், மலர்களின் மணம் மூக்கினால் நுகரப்படாதவாறும் இருத்தற்கு வாயைக் கட்டுதல் வேண்டுதலின், `வாயும் கட்டி` என்றார். மலர்களுள் மணமுடையன வும், அன்று அலரும் தன்மை உடையனவுமே இறைவற்கு உகந்தன ஆதலின் `வாச நந்தன வனத்து` என்றும், `நல்ல கமழ்முகை அலரும் வேலை` என்றும் கூறினார். ஏனைய உயிர்கள் போல ஒரொருகால் துன்பப்பட்டும் ஒரு கால எல்லையில் இறந்தும் வருகின்ற தெய்வங்களுக்கு எல்லாம் தலைவன் சிவபெருமானே ஆதலின் `தெய்வநாயகர்` என்றார். காரணம் அவன் சாவா மூவாச் சிங்கமாய் என்றும் இருத்தலினாலேயாம். `நம் மவரவரே மூவரென் றேஎம்பி ரானொடும் எண்ணிவிண் ணாண்டுமண்மேல் தேவரென் றேஇறு மாந்தென்ன பாவந் திரிதவரே` *(தி.8 ப.5 பா.4)*, `செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள செங்கீரை ஆடி அருளே` *(குமரகுரு. முத்துக். செங். 1)* எனவரும் திருவாக்குகளும் காண்க. இறைவற்கு ஆகும் மலர்கள், இலைகள், வேர்கள் முதலியவற்றைத் திருப்பள்ளித் தாமம் என்பர்.

கோலப்பூங் கூடை தன்னை
நிறைத்தனர் கொண்டு நெஞ்சில்
வாலிய நேசங் கொண்டு
மலர்க்கையில் தண்டுங் கொண்டங்
காலய மதனை நோக்கி
அங்கணர்க் கமைத்துச் சாத்தும்
காலைவந் துதவ வேண்டிக்
கடிதினில் வாரா நின்றார். **#560**

அழகிய திருப்பூங் கூடையில் அம் மலர்களை நிறைத்துக் கொண்டு, தம் உள்ளத்தில் தூய மெய்யன்பையுடைய வராய், மலர்போலும் திருக்கரத்தில், அம்மலர்க் கூடையைத் தொங்க விட்டிருக்கும் தண்டத்தையும் கொண்டு, அங்குள்ள திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குத் திருமாலை கட்டிச் சாத்தும் அமையத்து, அம்மலர்களைக் கொண்டு வந்து உரிய நேரத்தில் கொடுக்க விரும்பி விரைந்து வந்தார்.

விளக்கவுரை

கோலம் - அழகு. வாலிய நேசம் - தூயமெய்யன்பு. தண்டு - அலக்கு; இது தலைப்பில் ஒரு வளைவுடைதாக இருக்கும். அவ் வளைவு மலர்களையுடைய சிறு மரக்கிளைகளிலும் செடிகளிலும் உள்ள மலர்களை அவற்றிற்கு ஊறு நேராவாறு வண்ணம் வளைத்துப் பறிப்பதற்கு உதவுவது.

`வன் தனித்தண்டில் தூங்கும் மலர்கொள் பூங்கூடை` எனப் *(பா.563)* பின்னர் வருதலின் அத்தண்டில் பூக் கூடையை எடுத்துச் செல்லும் மரபும் இதனால் விளங்கும். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

மற்றவ ரணைய இப்பால்
வளநக ரதனில் மன்னும்
கொற்றவர் வளவர் தங்கள்
குலப்புகழ்ச் சோழ னார்தம்
பற்றலர் முனைகள் சாய்க்கும்
பட்டவர்த் தனமாம் பண்பு
பெற்றவெங் களிறு கோலம்
பெருகுமா நவமி முன்னாள். **#561**

அச் சிவகாமியாண்டார் இவ்வாறு வந்து கொண் டிருக்க, இப்பால் வளம் மிக்க அக்கருவூரில் வாழும் அரசரும், சோழர் குலத்தோன்றலாரும் ஆய புகழ்ச்சோழனார்தம் பகைவரது போர் முனையை அழிக்கும் பட்டவர்த்தனம் எனும் மேன்மை பெற்ற கொடிய யானையானது, விழாக் கொண்டாடுதற்கு உரிய நவமியின் முதல் நாளாகிய அட்டமியில்.

விளக்கவுரை

பட்டவர்த்தனம் - அரசர் இவர்ந்து வரும் மேன்மை பெற்ற பட்டத்து யானை. மாநவமி - மகாநவமி. புரட்டாசித் திங்களில் வளர்பிறை முதல்நாள் தொடங்கி *9* நாள்கள் முடிய இறைவியை நோக்கிச் செய்யப்படும் நவராத்திரிப் பெருவிழாவாகும். நவமியை அடுத்த தசமியில் இவ்விழா நிறைவு பெறுதலின் தசரா என அழைப்பர். நவமியன்று தெருவும், திருக்கோயில்களும் வீடுகளும் விழாக் கோலம் பூண்டிருக்கும் ஆதலின் `கோலம் பெருகும் மாநவமி` என்றார். நவமியில் நிகழும் இவ்விழாச் சிறப்பையும் குறிக்கவே, அட்டமி என்னாது `நவமி முன்னாள்` என்றார். மற்று - அசைநிலை.

மங்கல விழவு கொண்டு
வருநதித் துறைநீ ராடிப்
பொங்கிய களிப்பி னோடும்
பொழிமதஞ் சொரிய நின்றார்
எங்கணு மிரியல் போக
எதிர்பரிக் காரர் ஓடத்
துங்கமால் வரைபோல் தோன்றித்
துண்ணென அணைந்த தன்றே. **#562**

மங்கலம் பொருந்திய விழா நாளில் அணிதற்குரிய அணிகளைக் கொண்டு, நீர்மிகுந்து வருகின்ற ஆம்பிராவதி நதித் துறையில் நீராட்டப்பெற்று, மிகுந்த களிப்போடு பொழிகின்ற மதநீர் பெருக, வழிநிற்பார் எவரும் அஞ்சி எவ்விடத்தும் ஓடிப் போகவும், உடன்வந்த குத்துக் கோல்காரர்களும் எதிர் ஓடவும், உயர்ந்த பெருமை பொருந்திய மலையனைய தோற்றத்துடன் அவ்யானை, விரைவாக வந்தது.

விளக்கவுரை

ஆம்பிராவதி - இது கோவை மாவட்டத்தில் திரிமூர்த்தி மலைக் கருகில் தோன்றி, கிழக்காக ஓடி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கட்டளை என்னும் ஊருக்கு அருகிலுள்ள திருமுக் கூடலில் காவிரியொடு கலக்கும் ஆறாகும். ஆம்பிரம் - மாமரம். மாமரங்களின் நீழலிலேயே இவ்ஆறு பெரிதும் வருவதால் இப்பெயர் பெற்றது. குத்துக் கோல்காரர் - ஈட்டி முதலிய குத்துக் கோல்களைக் கொண்டு யானையை அடக்கிவருவோர். இவர்கள் யானையுடன் நடந்து வருவோராவர். அன்று ஓ, என்பன அசை நிலைகளாம். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

வென்றிமால் யானை தன்னை
மேல்கொண்ட பாக ரோடும்
சென்றொரு தெருவின் முட்டிச்

சிவகாமி யார்முன் செல்ல
வன்தனித் தண்டில் தூங்கும்
மலர்கொள்பூங் கூடை தன்னைப்
பின்தொடர்ந் தோடிச் சென்று
பிடித்துடன் பறித்துச் சிந்த. **#563**

வெற்றி பொருந்திய அப்பெரிய யானையானது தன் மீது இவர்ந்து வரும் பாகரோடும் சென்று, ஒரு தெருவில் அப்பாகர்களின் கட்டுக் கடங்காமல் தனக்கு முன் சென்று கொண்டிருக் கும் சிவகாமியாண்டாரைக் கண்ட அளவில், அவர்தம் வலிமை மிக்க ஒப்பற்ற தண்டில் தொங்குகின்ற மலர்கள் நிறைந்த திருப்பூங் கூடையை, அவர் பின் தொடர்ந்து ஓடிப் பற்றி, நிலத்தில் சிந்த.

விளக்கவுரை

அரசனுக்குரிய வெற்றியை யானை மீதேற்றி `வென்றிமால் யானை` என்றார். மால் யானை - பெரிய யானை; ஒரு தெருவில் முட்டி எனவே அவ்யானை பாகர்க்கு அடங்காத நிலையில் சென்றமை தெரிய வருகின்றது; தூங்கு - தொங்குகின்ற.

மேல்கொண்ட பாகர் கண்டு
விசைகொண்ட களிறு சண்டக்
கால்கொண்டு போவார் போலக்
கடிதுகொண் டகலப் போக
நூல்கொண்ட மார்பின் தொண்டர்
நோக்கினர் பதைத்துப் பொங்கி
மால்கொண்ட களிற்றின் பின்பு
தண்டுகொண் டடிக்க வந்தார். **#564**

அவ்யானையின் மேல் ஏறியிருக்கும் பாகர்கள் அதைக் கண்டு, விரைவாகச் செல்லுகின்ற யானையை ஊழிக் காற் றினைத் தம் வயப்படுத்திக் கொண்டு செல்வாரைப் போல விரைந்து, அதனை அகலக் கொண்டு சென்றுவிட்டார்களாக, முந்நூலை அணிந்த மார்பினையுடைய சிவகாமியாண்டார் அவ்யானையைப் பார்த்து, மனம் பதைத்துச் சினந்து, மயக்கம் கொண்ட அவ்யானையின் பின்னாக அதனைத் தம் தண்டு கொண்டு அடிக்க வந்தார்.

விளக்கவுரை

சண்டக்கால் - ஊழிக் காற்று. இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

அப்பொழு தணைய வொட்டா
தடற்களி றகன்று போக
மெய்ப்பெருந் தொண்டர் மூப்பால்

விரைந்துபின் செல்ல மாட்டார்
தப்பினர் விழுந்து கையால்
தரையடித் தெழுந்து நின்று
செப்பருந் துயரம் நீடிச்
செயிர்த்துமுன் சிவதா வென்பார். **#565**

அது பொழுது வலிய அவ்யானை அவரை அணு காதவாறு நீங்கிப் போக, மெய்ம்மையான பெருமையினை உடைய சிவகாமியாண்டார் தம்மூப்பினால் விரைந்து அதன்பின் செல்ல இயலாதவராய் நின்று விட்டவர், கீழே விழுந்து, கைகளினால் நிலத்தை அடித்து மோதிப், பின் எழுந்து நின்று, சொலற்கரிய துன்பத்தால் மிகுந்த சினமுடையவராய்ச் `சிவதா` என்பாராகி .

விளக்கவுரை

சிவதா - மங்கலத்தைச் செய்பவன் என்னும் பொருள்பட நின்ற விளிச் சொல். இச் சொல்லை அவர் நாளும் ஓதிவந்த பழக்கத்தால் இத்தகைய இடர் வந்த பொழுதும் அம்மங்கலச் சொல்லையே கூறுவா ராயினர். இறைவனை நினைத்து ஓலமிடும் ஓர் ஓலச் சொல் என்பர் சிவக்கவிமணியார் *(பெரிய.பு.உரை)*.

களியா னையின்ஈர் உரியாய் சிவதா
எளியார் வலியாம் இறைவா சிவதா
அளியார் அடியார் அறிவே சிவதா
தெளிவார் அமுதே சிவதா சிவதா. **#566**

மதத்தையுடைய யானையினின்றும் உரித்த தோலைப் போர்த்தவரே! சிவதா! எளியவர்களுக்குத் துணைநிற்கும் இறைவனே! சிவதா! அன்பு மீதூர்ந்த மெய்யடியார்களின் உயிர்க் குயிரே! சிவதா! இறைமைக் குணங்களைத் தெளிவார்க்கு அமுதமே! சிவதா! சிவதா!

விளக்கவுரை

களி - மதம். அளியார் - அன்பு மீதூர்ந்தவர்.

ஆறும் மதியும் அணியுஞ் சடைமேல்
ஏறும் மலரைக் கரிசிந் துவதே
வேறுள் நினைவார் புரம்வெந் தவியச்
சீறுஞ் சிலையாய் சிவதா சிவதா. **#567**

கங்கையையும் இளம் பிறையையும் அணிந்த சடைமுடியின்மேல் அணிதற்குரிய இம்மலரை, இவ்யானை சிந்தியது தகுமோ? பகைமை கருதிய அசுரர்களின் முப்புரங்களும் எரிந்து ஒழியச் சினந்து மேருவை வில்லாக வளைத்தவரே! சிவதா! சிவதா!

விளக்கவுரை

இறைவனைத் தமக்குற்ற துணையாகக் கொண்டு வழிபடுவதே இயல்பாக, அதற்கு மாறாகப் பகைமையை நினைத்தவர் என்பார் முப்புரத்தவரை, `வேறு உள்நினைவார்` என்றார். இறைவ னின் சீற்றத்தை வில்லில் ஏற்றிச் `சீறும் சிலையாய்` என்றார்.

தஞ்சே சரணம் புகுதுந் தமியோர்
நெஞ்சேய் துயரங் கெடநேர் தொடரும்
மஞ்சே யெனவீழ் மறலிக் கிறைநீள்
செஞ்சே வடியாய் சிவதா சிவதா. **#568**

தம்மை அடைக்கலமாகக் கொண்ட மார்க்கண்டே யரின் மனத்தின்கண் உள்ள துன்பம் நீங்க, எதிர்த்துத் தொடரும் மேகம் போல வந்த இயமனுக்குச் சிறிதே நீண்ட சிவந்த திருவடியை உடைய வரே! சிவதா! சிவதா!

விளக்கவுரை

தஞ்சம் - அடைக்கலம். நெஞ்சு ஏய்துயரம் - மனத்தின் கண் பொருந்திய துன்பம். மஞ்சு - மேகம். இயமனின் நிறம் அன்ன தாதலின் `மஞ்சே எனவீழ் மறலி` என்றார். இறை நீள் - சிறிது நீண்ட; இயமனை உதைக்கப் பெருமானின் திருவடி சிறிது நீண்டது என்பார். `இறை நீள் சேவடி` என்றார். செஞ்சேவடி சிவப்பானதும் வீடுபேற்றை வழங்குவதுமான திருவடி.

நெடியோன் அறியா நெறியா ரறியும்
படியால் அடிமைப் பணிசெய் தொழுகும்
அடியார் களில்யான் ஆரா அணைவாய்
முடியா முதலாய் எனவே மொழிய. **#569**

திருமாலும் தேடி அறிய இயலாதவாறு நீண்ட சிவபெருமானுக்குத், தாம் உணர்ந்த வகையில் அடிமைத் தொழில் பூண்டு நிற்கும் அடியவர்களில், யான் எவ்வகையினன்? (ஒன்றற்கும் பற்றாதவன்). அங்ஙனமிருக்க நீ இங்கு வந்து எவ்வாறு இடர் தீர்ப்பாய்! முடிவில்லாத முதற்பொருளே! எனச் சிவகாமியாண்டார் மொழியவே.

விளக்கவுரை

மெய்யடியார்களில் ஒருவனாக எண்ணத்தக்கவன் அல்லன் நான். அங்ஙனமிருக்க யான் ஓலமிடநீ எங்ஙனம் அணை வாய் என வினவுவார். `அடியார்களில் யான் ஆரா அணைவாய்` என் றார். எனவே இறைவன் தாம் அழைக்கும் பொழுது வாராதிருத்தற்குக் காரணம் தம் தகுதியின்மையேயன்றி, இறைவனின் கருணைக் குறை வன்று என்பது அவர் கருத்தாகின்றது. முடியா முதலாய் - அழிவில் லாத முதல்வனே, `பொன் னம்பலத்தெம் முடியா முதலே` *(தி.8 ப.21 பா.1)* எனவரும்

திருவாக்கும் காண்க. இப்பாடல் சில ஏட்டுப் படிகளில் இல்லையென்பர் சிவக்கவிமணியார் *(பெரிய.பு.உரை).*

என்றவ ருரைத்த மாற்றம்
எறிபத்தர் எதிரே வாரா
நின்றவர் கேளா மூளும்
நெருப்புயிர்த் தழன்று பொங்கி
மன்றவ ரடியார்க் கென்றும்
வழிப்பகை களிறே யன்றோ
கொன்றது வீழ்ப்ப னென்று
கொடுமழு எடுத்து வந்தார். **#570**

இவ்வாறு சிவகாமியாண்டார் முறையீடு செய்து கொண்டிருக்கும் சொற்களை அவர் எதிரில் வருகின்ற எறிபத்தர் கேட்டு, தன்னுள் மூளும் சினத்தீயோடு பெருமூச்சு விட்டு, மேலும் சினந்து, தில்லையில் கூத்தியற்றும் அடியவர்களுக்கு எந்நாளும் வழி வழியாகப் பகைமையாயுள்ளது யானையேயன்றோ? ஆதலால் அவ்யானையைக் கொன்று தரையில் வீழ்த்துவேன் என்று கொலை செய்தற்கு ஏது வாய கொடிய மழுப் படையை எடுத்துக் கொண்டு வந்தார்.

விளக்கவுரை

வாரா நின்றவர் - வந்து கொண்டிருப்பவர். கேளா - கேட்டு. வழிப் பகை - வழிவழியாகப் பகைமை கொண்டிருப்பது; கோச் செங்கட்சோழரின் வழிபாட்டிற்கு இடையூறு செய்ததும், துருவாச முனிவர் அளித்த சிவப்பிரசாதத்தை இந்திரன், யானையின் மத்தகத்து வைப்ப, அதனைச் சிந்தி அழித்துச் சாபம்பெற்றதும், அமணர் வழி வந்த யானை பாண்டியனுக்கு ஊறுவிளைத்ததும், முதலாய நிகழ்ச்சி களை நினைவுகூர்ந்து இங்ஙனம் கூறினார். இவ்வகைமை யெல்லாம் நீங்கவோ, இறைவர் தமக்கு வெள்ளையானை தந்து அழைத்தது எனச்சுந்தரர் பெருமான் நினைந்ததும் காண்க. `ஆனை உரித்தபகை அடியேனொடு மீளக்கொலோ` *(தி.7 ப.100 பா.2)* என்பது அவர் திருவாக்கு ஆகும். இனிக் களிறு என்பதை உருவமாகக் கொண்டு ஐம்புலக் களிறாகிய யானை என்பாரும் உளர் `தொண்டரஞ்சு களிறும் அடக்கி` *(தி.2 ப.114 பா.1)* `இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும் ஏழையேற் கென்னுடன் பிறந்த ஐவரும் பகையே` *(தி.9 ப.8 பா.2),* `பழியே விளைக்கும் பஞ்சேந்திரக் குஞ்சரம்` எனவரும் திருவாக்கு களை இது நினைவுகூர வைக்கின்றது. பொறிகள் யாவர்க்கும் பகை யேயாயினும், அடியவர் அப் பகைமையை உணர்ந்தும், அல்லாதார் அவற்றை நட்பென்று கொண்டும் ஒழுகுதலின் `மன்றுடை அடியார்க்கு என்றும் வழிப்பகை களிறு` என அடியவரை விதந்து கூறினாரென இதற்கு

மேலுமோர் நயமும் காண்பர் சிவக்கவிமணியார் *(பெரிய. பு.உரை).* இவற்றுக்கெல்லாம் மூலமாக `உரன் என்னும் தோட்டியால் ஓரைந்தும் காப்பான்` *(குறள், 24)* எனத் திருவள்ளுவனார் அருளி யிருத்தலும் மறத்தற்குரியதன்று. தீங்குசெய்தாரை அத்தீமையினின்றும் நீக்க அவரைக் கொலை செய்தலின் `கொலை மழு` என்றார். கொலை செய்தற்குரிய மழு என்பது இதன் பொருள்.

வந்தவ ரழைத்த தொண்டர்
தமைக்கண்டு வணங்கி உம்மை
இந்தவல் லிடும்பை செய்த
யானைஎங் குற்ற தென்ன
எந்தையார் சாத்தும் பூவை
என்கையில் பறித்து மண்மேல்
சிந்திமுன் பிழைத்துப் போகா
நின்றதித் தெருவே யென்றார். **#571**

வந்தவராகிய எறிபத்தர் சிவதா என முறையிட்டு அழைத்துவரும் சிவகாமியாரைக் கண்டு, தொழுது, `உமக்கு இக்கொடிய துன்பத்தை விளைத்த யானை எவ்விடத்தது?` என வினவ, `எம் சிவபெருமான் அணிதற்குரிய மலர்களையுடைய பூங் கூடையை என்கையினின்றும் பறித்து நிலத்தில் சிதறி, எனக்கு முன்னே தப்பி ஓடிய யானை இவ்வீதியினிடத்தேயாம்` என்று கூறினார்.

விளக்கவுரை

பிழைத்து - தப்பி

இங்கது பிழைப்ப தெங்கே
இனியென எரிவாய் சிந்தும்
அங்கையின் மழுவுந் தாமும்
அனலும்வெங் காலு மென்னப்
பொங்கிய விசையிற் சென்று
பொருகரி தொடர்ந்து பற்றும்
செங்கண்வாள் அரியிற் கூடிக்
கிடைத்தனர் சீற்ற மிக்கார். **#572**

இவ்விடத்துச் சென்ற யானை இனிப் பிழைப்பது எங்கே? என்று நெருப்பைத் தம் வாயினிடத்துச் சிதறுவதாய்க் கையில் ஏந்திய மழுவும் தாமும் ஆக, அனலும் கொடிய காற்றும் என விரை வாக ஓடிச் செல்பவராய் எறிபத்தநாயனார் போர் செய்தற்குரிய யானையைப் பின்தொடர்ந்து, பற்றுகின்ற சிவந்த கண்களையும் கூரிய நகங்களையுமுடைய சிங்கமென அவ்யானையைக் கிட்டினர்.

விளக்கவுரை

****

கண்டவர் இதுமுன்பு அண்ணல்
உரித்தஅக் களிறே போலும்
அண்டரும் மண்ணு ளோரும்
தடுக்கினு மடர்த்துச் சிந்தத்
துண்டித்துக் கொல்வே னென்று
சுடர்மழு வலத்தில் வீசிக்
கொண்டெழுந் தார்த்துச் சென்று
காலினாற் குலுங்கப் பாய்ந்தார். **#573**

அவ்யானையைக் கண்ட எறிபத்தர், இவ்யானை முன்பு சிவபெருமான் உரித்த அந்த யானை போன்றதாகும்; ஆயினும் விண்ணவரும் மண்ணவரும் வந்து தடுப்பினும் மேற்சென்று எதிர்த்துக் குருதி சிதறுமாறு வெட்டிக் கொன்றுவிடுவேன் என்று ஒளி பொருந் திய மழுவினை வலமாகத் திரித்து வீசிக் கொண்டு, மேலெழுந்து ஆர்த்து அவ்யானை குலுங்குமாறு பாய்ந்தார்.

விளக்கவுரை

மழுவினை வலமாகத் திரித்து வீசுவது விரைவாகவும் குறிதவறாமலும் எறிதற்காம். குலுங்குதலை எறிபத்தர் செயலாகக் கூறலும் ஆம்.

பாய்தலும் விசைகொண் டுய்க்கும்
பாகரைக் கொண்டு சீறிக்
காய்தழல் உமிழ்கண் வேழம்
திரிந்துமேற் கதுவ அச்சம்
தாய்தலை யன்பின் முன்பு
நிற்குமே தகைந்து பாய்ந்து
தோய்தனித் தடக்கை வீழ
மழுவினால் துணித்தார் தொண்டர். **#574**

அவ்வாறு பாய்ந்தவுடனே, மேலிருந்து செலுத்து கின்ற பாகர்களை மேற்கொண்டும், சினந்து எரிகின்ற தீயைக் கக்கும் கண்களைக் கொண்டும், இருப்பதான யானையானது, மாறுபட்டு இவர் மீது பாய, அச்சம் என்ற ஒன்று ஒரு தாயினது தலையாய அன்பின் முன்னே நிற்க வல்லதோ? நில்லாது; அதுபோன்றே அதனை மறித்துப் பாய்ந்து, நிலம் தோயத் தாழ்ந்து துதிக்கை விழுமாறு தம் படையினால் வெட்டி வீழ்த்தினார்.

விளக்கவுரை

தன்னைச் செலுத்தி நிற்கும் பாகர் மீதிருந்தும் அடிய வரை யானை பாய

வருதலின் அவர்களின் கட்டுக்கு அடங்காமை தெரிய வருகின்றது. அங்ஙனமிருந்தும் தம் உயிர்க்கு உறுதி எண்ணாது அவ்யானை மீது பாய்ந்து வெட்டும் அடியவரின் நிலையைக் கண்ட ஆசிரியர் அச்செயல் ஒல்லுமோ? என ஐயுறுவார்க்கு வழங்கும் விடையாக `அச்சம் தாய் தலையன்பின் முன்பு நிற்குமே` எனக் கூறினார். எனவே இவர் அடியாரிடத்துக் கொண்டிருக்கும் அன்பு தாயன்பு போல்வது என்பது கருத்து. இனி அச்சம் தாய் (தாவிச்சென்று: அஃதாவது அடியவர்மீது சென்று) தலையன்பின் முன் (தலையாய அன்பின்முன்) நிற்குமே என உரைகாண்டலும் ஒன்று.

கையினைத் துணித்த போது
கடலெனக் கதறி வீழ்ந்து
மைவரை யனைய வேழம்
புரண்டிட மருங்கு வந்த
வெய்யகோல் பாகர் மூவர்
மிசைகொண்டார் இருவ ராக
ஐவரைக் கொன்று நின்றார்
அருவரை அனைய தோளார். **#575**

இவ்வாறு துதிக்கையை வெட்டிய பொழுது கடல் முழங்கினாற் போலக் கதறி நிலத்தில் விழுந்து, கரிய மலைபோலும் அவ்யானையானது புரள, அருகில் வந்தவலிய குத்துக் கோல்காரர் மூவரும் அவ்யானையின் மேலிருந்த பாகர் இருவருமாக ஐவரையும், அரிய மலை போன்ற தோள்களையுடைய எறிபத்தர் கொன்று நின்றார்.

விளக்கவுரை

மலையனைய வேழம் கடல் போலக் கதறிற்று என்றது, உருவத்தால் மலையையும், ஓசையால் கடலையும், ஒப்புமை கொள நின்றது. ஐவரைக் கொன்று நின்றார் என்பது உரன் என்னும் தோட் டியால் ஓரைந்தும் காத்து நிற்கும் அவர் தகைமையையும் குறிக்கொள நின்றது.

வெட்டுண்டு பட்டு வீழ்ந்தார்
ஒழியமற் றுள்ளா ரோடி
மட்டவிழ் தொங்கல் மன்னன்
வாயிற்கா வலரை நோக்கிப்
பட்டவர்த் தனமும் பட்டுப்
பாகரும் பட்டா ரென்று
முட்டநீர் கடிது புக்கு
முதல்வனுக் குரையு மென்றார். **#576**

எறிபத்தரால் வெட்டுண்டு விழுந்த ஐவர் அல்லாமல் அங்கிருந்த வேறு சிலர், தேன் துளிக்கும் ஆத்தி மாலையை யணிந்த

புகழ்ச்சோழநாயனாரின் (தோராயமாக கி.பி. 400-600) அரண்மனைக்கு ஓடிச்சென்று, வாயில் காவலர்களைப் பார்த்து, பட்டத்து யானையும் இறந்து அதனைச் செலுத்தும் பாகரும் இறந் தார்கள் என்று, நீவிர் விரைவாகச் சென்று அரசருக்குத் தெரிவிப்பீராக என்று சொன்னார்கள்.

விளக்கவுரை

முட்ட - அனைவருமாகச் சேர: பலராகவும் விரைவாக வும் அரசரிடத்துச் சென்று கூறியது, அந்நிகழ்ச்சியை அரசர் விரைவில் அறியவும் விரைந்து மேற்கொண்டு செயல்படவுமாம்.

மற்றவர் மொழிந்த மாற்றம்
மணிக்கடை காப்போர் கேளாக்
கொற்றவன் தன்பால் எய்திக்
குரைகழல் பணிந்து போற்றிப்
பற்றலர் இலாதாய் நின்பொற்
பட்டமால் யானை வீழச்
செற்றனர் சிலரா மென்று
செப்பினார் பாக ரென்றார். **#577**

அவ்வாறு கூறிய சொற்களை, மணிகள் அழுந் திய வாயிலைக் காக்கின்றவர்கள் கேட்டு, புகழ்ச்சோழரிடத்துச் சென்று, ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடிகளை வணங்கி, வாழ்த்தி, `பகையின்றிப் புரந்து வரும் அரசர் ஏறே! உம்முடைய பொன்னாலாகிய நெற்றிப் பட்டத்தையுடைய யானை இறக்குமாறு சிலர் கொன்றார்கள் என்று பாகர் சொன்னார்கள்` எனக் கூறினார்கள்.

விளக்கவுரை

பற்றலர் - பகைவர். பற்றலர் இலாதாய் என்றது, இச் செயலும் அன்னோரால் செயப்பட்டதன்று என்னும் குறிப்புணர நின் றது. பாகர் - யானையோடு இறந்த ஐவர் போக, மேலும் எஞ்சி நின்றவர்கள். பாகர் - பொறுப்புள்ளவர்கள் என உரை காண்பர் சிவக் கவிமணியார் *(பெரிய.பு.உரை)*. குரைகழல் - ஒலிக்கின்ற வீரக்கழல். மற்று - அசைநிலை.

வளவனுங் கேட்ட போதில்
மாறின்றி மண்காக் கின்ற
கிளர்மணித் தோள லங்கல்
சுரும்பினங் கிளர்ந்து பொங்க
அளவில்சீற் றத்தி னாலே
யார்செய்தா ரென்றுங் கேளான்
இளவரி யேறு போல

எழின்மணி வாயில் நீங்க. **#578**

புகழ்ச் சோழனும் அதைக் கேட்ட அளவில், பகைமையின்றி ஆட்சி செய்கின்ற எழுச்சியும் அழகும் மிக்க தோள் களில் உள்ள மாலையில் வண்டுகள் களிப்புடன் ஒலிக்க, அளவற்ற சினம் கொண்டு, இது செய்தவர் யார்? என்றும் அவ்வாயில் காவல ரையும் கேளாதவனாய், இளைய ஆண் சிங்கம் போல, அழகு பொருந்திய இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற அரண்மனை வாயிலி னின்றும் வெளிப்பட்டு வர.

விளக்கவுரை

`இகலின் மிகல் இனிது என்பவன் வாழ்க்கை தவலும் கெடலும் நணித்து` *(குறள், 856)* என்பர் திருவள்ளுவர். `யாரொடும் பகை கொள்ளலன் என்றபின், போரொடுங்கும் புகழ் ஒடுங்காது` *(கம்பரா. அயோத். மந்த.1)* என்பர் கம்பர். இவ்வறத்திற்கேற்ப ஆண்டு வருதலின் `மாறின்றி மண்காக் கின்ற` என்றார். அரியேறு - ஆண் சிங்கம்.

தந்திரத் தலைவர் தாமும்
தலைவன்தன் நிலைமை கண்டு
வந்துறச் சேனை தன்னை
வல்விரைந் தெழமுன் சாற்ற
அந்தரத் தகல மெல்லாம்
அணிதுகிற் பதாகை தூர்ப்ப
எந்திரத் தேரு மாவும்
இடையிடை களிறு மாகி. **#579**

அருகிருந்து அரசருக்கு உறுதிகூறும் அமைச்சர் களும், போர் கருதிச் செல்லும் புகழ்ச்சோழனின் நிலையை அறிந்து, பொருந்திய சேனைகளை விரைவில் எழுமாறு முன்னே பறை அறை விக்க, விண்ணகமாகிய பரந்த இடங்களெல்லாம் அழகிய துகிற் கொடிகள் மறைக்கவும், இயந்திரப் பொறிகள் அமைந்திருக்கும் தேரும் குதிரையும் இவற்றின் இடைஇடையே யானைகளுமாகக் கூடி.

விளக்கவுரை

தந்திரம் - சூழ்ச்சி; ஆராய்ந்து தெளிவது. மதிநுட்பம் நூலோடுடைய அமைச்சர்களாதலின் `தந்திரத் தலைவர்` என்றார். `உறுதி உழையிருந்தான் கூறல் கடன்` *(குறள், 638)* என்றலுங் காண்க. பதாகை - துகிற் கொடிகள். தூர்ப்ப - மறைக்க. தந்திரத் தலைவர் - படைத்தலைவருமாம். போர்க் காலங்களில் இவர்களின் சூழ்ச்சித் திறனை நன்கறியலாம்.

வில்லொடு வேல்வாள் தண்டு
பிண்டிபா லங்கள் மிக்க

வல்லெழு முசலம் நேமி
மழுக்கழுக் கடைமுன் னான
பல்படைக் கலன்கள் பற்றிப்
பைங்கழல் வரிந்த வன்கண்
எல்லையில் படைஞர் கொட்புற்
றெழுந்தனர் எங்கு மெங்கும். **#580**

வில்லோடு வேலும், வாளும், தண்டும் பீலித் தண்டங்களும், மிகுந்த வலிய இருப்பு உலக்கைகளும், சக்கரங்களும் மழுவும், எறிகின்ற ஈட்டியும் முதலான பலபடைக் கலங்களைப் பற்றிப் பசுமையான பொன்னால் ஆய வீரக் கழலைக் கட்டிய வலிய எண்ணிறந்த படைவீரர்கள் யாண்டும் குதித்தெழ,

விளக்கவுரை

பிண்டிபாலம் - தலையில் பீலிகட்டி எறியத்தக்கதொரு படை என்பர். முசலம் - இருப்பு உலக்கை. கழுக்கடை - சூலம். எறிகின்ற ஈட்டி எனபாரும் உளர். மழு - பரசு. இது கோடரி போன்று இருக்கும். கொட்புற்று - எழுச்சி மிகக் குதித்து; சுழன்று என்றலும் ஒன்று.

சங்கொடு தாரை காளம்
தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரல் பம்பை கண்டை
வியன்துடி திமிலை தட்டி
பொங்கொலிச் சின்ன மெல்லாம்
பொருபடை மிடைந்த பொற்பின்
மங்குல்வான் கிளர்ச்சி நாண
மருங்கெழுந் தியம்பி மல்க. **#581**

சங்கு, தாரை, காளம் பேரொலியாக முழங்கும்; பேரி, பம்பை, கண்டை, திமிலை, தட்டி முதலாய பேரொலிகளை மிகுவிக்கும்; ஒலிக் கருவிகளோடு போர்ப் படைகள் நெருங்கிச் செல்லும்; அப் பேரொலிகள் விண்ணின்கண் எழும்; அத்தகைய பேரொலிகள் அனைத்தையும் கீழ்ப்படுத்தி, அரசர் செல்லும் வழியில் நாற்புறமும் இடி முழங்கியது.

விளக்கவுரை

காளம் - எக்காளம். பேரி - மிகுதியான பேரொலியைத் தரும் இசைக் கருவி, பம்பை - பரந்த இரு முகம் உடையதாயும் பெரிய உருவுடைய தாயும் உள்ள இசைக் கருவி. கண்டை, திமிலை என்பன ஒலிபெருக்கும் கருவிகள்.

தூரியத் துவைப்பும் முட்டுஞ்
சுடர்ப்படை ஒலியும் மாவின்

தார்மணி இசைப்பும் வேழ
முழக்கமும் தடந்தேர்ச் சீரும்
வீரர்தஞ் செருக்கி னார்ப்பும்
மிக்கெழுந் தொன்றாம் எல்லைக்
காருடன் கடைநாள் பொங்கும்
கடலெனக் கலித்த வன்றே. **#582**

ஒலிக் கருவிகளினுடைய ஒலியும், நெருங்கிய ஒளி பொருந்திய படைகள் ஒன்றோடு ஒன்று உரசுதலால் ஆகிய ஒலியும், குதிரையின் கழுத்தில் அணியும் கிண்கிணி மாலையின் ஒலி யும், யானைகளின் பிளிற்று ஒலியும், அகன்ற தேர் செல்லும் ஒலியும், படைவீரர்களின் எழுச்சியினால் உண்டாகிய ஒலியும் மிகுந்து எழுந்து ஒன்றாய்ச் சேர்ந்தபொழுது,ஊழிக்காலத்தில் தோன்றிநிற்கும் மேகத் துடன் கூடி நிற்கும் கடலைப் போல ஒலித்தன.

விளக்கவுரை

தூரியம் - இயங்களின் பொதுமை குறித்து நின்றது. துவைப்பு - ஒலி. முட்டும் சுடர்ப் படை - ஒன்றோடு ஒன்று உரசும் ஒளி பொருந்திய படை. துவைப்பு, ஒலிப்பு, இசைப்பு, முழக்கு, ஆர்ப்பு என்பன ஒலி என்னும் பொருளன. அன்று `ஒ` என்பன அசைநிலை. இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

பண்ணுறும் உறுப்பு நான்கில்
பரந்தெழு சேனை யெல்லாம்
மண்ணிடை யிறுகான் மேன்மேல்
வந்தெழுந் ததுபோல் தோன்றத்
தண்ணளிக் கவிகை மன்னன்
தானைபின் தொடரத் தானோர்
அண்ணலம் புரவி மேல்கொண்
டரசமா வீதி சென்றான். **#583**

நான்கு வகையாக வகைப்படுத்தப்பட்ட பரந்து எழுகின்ற சேனைகள் எல்லாம், நிலவுலகத்தில் அழிவினைச் செய்யும் ஊழிக் காற்றானது மேன்மேலும் வந்து எழுந்தது போலத் தோன்ற, அப் படைகள் உயிர்கள் மாட்டு வைத்த தண்ணளியாகிய கொடையை யுடைய புகழ்ச்சோழர் தம்மைப் பின் தொடர்ந்து வர, தாம் ஒப்பற்ற பெருமையினையுடைய அழகிய குதிரையின் மேல் ஏறிக் கொண்டு அரசமா வீதியில் சென்றார்.

விளக்கவுரை

பண்ணுறு - வகைப்படுத்தப்பட்ட; யானை, தேர், குதிரை, காலாள் என வகைப்படுத்தப்பட்ட. இறுகால் - அழிவைச் செய்யும் ஊழிக்காற்று.

அரசரின் தண்ணளியைக் குடைமேல் ஏற்றித் தண்ணளிக் கவிகை` என்றார். `கொங்கலர்தார்ச் சென்னிக் குளிர் வெண் குடை போன்று` *(சிலப்ப.புகார்.மங்கல.1)*என்னும் சிலம்பும்.

கடுவிசை முடுகிப் போகிக்
களிற்றொடும் பாகர் வீழ்ந்த
படுகளங் குறுகச் சென்றான்
பகைப்புலத் தவரைக் காணான்
விடுசுடர் மழுவொன் றேந்தி
வேறிரு தடக்கைத் தாய
அடுகளி றென்ன நின்ற
அன்பரை முன்பு கண்டான். **#584**

புகழ்ச்சோழர் மிகவிரைவாக, யானையோடு பாகர்கள் இறந்து கிடக்கின்ற போர்க்களத்திற்கு அணித்தாகச் சென்றார். அங்கு மாற்றார்கள் ஒருவரையும் காணாதவராய் ஒளி பொருந்திய மழுப்படை ஒன்றைக் கையில் கொண்டு, யானையின் துதிக்கையி னின்றும் வேறாய இரு பெருங் கைகளையுடைய கொலைத் தொழில் செய்யும் யானையை ஒத்துநின்ற எறிபத்தனாரைக் கண்டார்.

விளக்கவுரை

சுடர்விடு என மாற்றுக. `இருகை யானையை ஒத்திருந் தென்னுளக் கருவை யான்கண்டி லேன்` *(தி.8 ப.5 பா.41)* எனவரும் திருவாசகத்தை இப்பகுதி நினைவுகூர வைக்கின்றது.

பொன்தவழ் அருவிக் குன்றம்
எனப்புரள் களிற்றின் முன்பு
நின்றவர் மன்று ளென்றும்
நிருத்தமே பயிலும் வெள்ளிக்
குன்றவ ரடியா ரானார்
கொன்றவ ரிவரென் றோரான்
வென்றவர் யாவ ரென்றான்
வெடிபட முழங்குஞ் சொல்லான். **#585**

பொன் துகள் சேர்ந்து ஒழுகும் அருவியினை யுடைய மலை போலப் புரண்டு கொண்டிருக்கும் யானைக்கு முன்னே நிற்கின்ற இவர், திருச்சிற்றம்பலத்தின்கண் எப்பொழுதும் ஆனந்தக் கூத்தினை இயற்றிவருபவரும், கயிலை மலைக்கு இறைவருமாகிய சிவபெருமான் அடியவர் ஆனார். ஆதலின் யானையைக் கொன்ற வர், இவர் என்று தெளியாதவராய், இவ்யானையை வென்றவர் யாவர்? என்று வெடிபடமுழங்கும் சொற்களால் கேட்டார்.

விளக்கவுரை

குருதியோடுகிடக்கும் யானைக்கு, பொன்துகள் ஒழுகும் அருவியை உடைய மலைஉவமை ஆயிற்று.

அரசனாங் கருளிச் செய்ய
அருகுசென் றணைந்து பாகர்
விரைசெய்தார் மாலை யோய்நின்
விறற்களிற் றெதிரே நிற்குந்
திரைசெய்நீர் உலகின் மன்னர்
யாருளார் தீங்கு செய்தார்
பரசுமுன் கொண்டு நின்ற
இவரெனப் பணிந்து சொன்னார். **#586**

புகழ்ச்சோழர் அவ்விடத்து இவ்வாறு கேட்க, அருகிருந்த பாகர்கள் அவரை அணுகிச் சென்று, நறுமணம் கமழ்கின்ற மலர் மாலையையும், முத்து மாலையையும் உடைய அரசனே! உன்னுடைய வெற்றி பொருந்திய பட்டவர்த்தனத்தை எதிர்த்து நிற்கும் அலை வீசுகின்ற கடலால் சூழப்பட்ட இந்நிலவுகத்தின் கண்வாழும் அரசர்கள் யார் உளர்? ஒருவரும் இலர். அதைக் கொன்றவர் `மழுப்படையைக் கையில் கொண்டு நிற்கும் இவர்தாம்` என்று வணங்கிச் சொன்னார்கள்.

விளக்கவுரை

திரை - அலை. பரசு - மழுப்படை.

குழையணி காதி னானுக்
கன்பராங் குணத்தின் மிக்கார்
பிழைபடின் அன்றிக் கொல்லார்
பிழைத்ததுண் டென்றுட் கொண்டு
மழைமத யானை சேனை
வரவினை மாற்றி மற்ற
உழைவயப் புரவி மேல்நின்
றிழிந்தனன் உலக மன்னன். **#587**

சங்கக் குழையை அணிந்த திருச்செவியினை யுடைய சிவபெருமானுக்கு அடியவர் ஆகும் குணத்தால் மிக்க இவர், இவ்யானை பிழை செய்து இருந்தாலன்றிக் கொல்ல மாட்டார்; இஃது அவருக்குத் தீங்கு செய்தது உறுதி என்று தம் உள்ளத்தில் கருதிக் கொண்டு, மழை போலும் மதத்தைச் சொரிகின்ற யானையோடு கூடிய சேனைகளின் வரவினைத் தடுத்து, தாம் ஏறி வந்த வலிமை பொருந்திய குதிரையினின்றும் உலகை ஆளும் அரசராய புகழ்ச் சோழர் இறங்கினார்.

விளக்கவுரை

வயப்புரவி - வலிமையுடைய குதிரை. அடியவர் எனக் கண்ட பொழுதே அவர் கொல்ல மாட்டார் என்று கருதியதும், அவர் கொன்றார் என அறிந்ததும் அடியவராயினாருக்கு இவ்யானை தீங்கிழைத்து இருந்தாலன்றிக் கொல்லமாட்டார் எனக் கருதிப் போரொடு வந்த நிலையை மாற்றிக் கொண்டதும், அடியவர் மீது அவருக்கு இருந்த பத்திமையையும் அக்காலத்து அடியவர்க்கிருந்த தனிச் சிறப்பையும் அறிய உதவுகின்றன. மற்று - அசைநிலை.

மைத்தடங் குன்று போலும்
மதக்களிற் றெதிரே யிந்த
மெய்த்தவர் சென்ற போது
வேறொன்றும் புகுதா விட்ட
அத்தவ முடையேன் ஆனேன்
அம்பல வாண ரன்பர்
இத்தனை முனியக் கெட்டேன்
என்கொலோ பிழையென் றஞ்சி. **#588**

கருமையும், பெருமையும் உடைய மலை போன்ற மதத்தினையுடைய இவ்யானையின் எதிரே இந்த மெய்ம்மையான தவத்தினையுடைய அடியவர் சென்ற பொழுது, வேறோர் தீங்கும் அதனால் இவருக்கு நேராமல் இருக்கப் பெற்ற அத்தகைய பெருந் தவம் உடையவன் யான் ஆயினேன். சிவபெருமானின் அடியவரா கிய இவருக்கு நேர்ந்த தீங்கு காரணமாக இவர் இவ்வாறு வெகுளும் படிக்கு நேரிட்ட பிழை யாதோ? என்று அச்சமுற்று, `கெட்டேன்` என்று அஞ்சியவராய்,

விளக்கவுரை

மை - கருமை. அடியவரை இறக்கச் செய்யாது விட்ட மையை `வேறு ஒன்றும்புகுதாவிட்ட அத்தவம் உடையேன் ஆனேன்` என்றார். இத்தகைய தொரு பிழை நேர்ந்திருக்கக் கூடாது, ஆயினும் நேர்ந்து விட்டதே என வருந்துவார் `கெட்டேன்` என்றார்.

செறிந்தவர் தம்மை நீக்கி
அன்பர்முன் தொழுது சென்றீது
அறிந்திலே னடியேன் அங்குக்
கேட்டதொன் றதுதா னிற்க
மறிந்தஇக் களிற்றின் குற்றம்
பாகரோ டிதனை மாள
எறிந்ததே போது மோதான்
அருள்செயு மென்று நின்றார். **#589**

இவ்வாறு எண்ணிய புகழ்ச்சோழர் தம்மொடு நெருங்கி வரும் அமைச்சர் முதலாயினோரை விலகச் செய்து, அவ் எறிபத்த நாயனாருக்கு முன்பாக

வணங்கிப் போய், `இவ்யானை தங்களுக்குக் குற்றம் செய்தது என்பதை அறிய மாட்டாதவனாகிய நான், அங்குக் கேள்வியுற்றது ஒன்று; அது நிற்க. இறந்த இவ்யானை செய்த குற்றத்திற்குப் பாகரோடு இவ்யானையை இறக்குமாறு மழுவால் துணித்தது ஒன்றே அமையுமோ? மேலும் செயத்தக்கது உளதாயின் அதனையும் அருள் செய்ய வேண்டும்` என்று விண்ணப்பம் செய்தார்.

விளக்கவுரை

தான், என வருவன இரண்டும் அசைநிலை. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மன்னவன் தன்னை நோக்கி
வானவர் ஈசர் நேசர்
சென்னியித் துங்க வேழஞ்
சிவகாமி யாண்டார் கொய்து
பன்னகா பரணர்ச் சாத்தக்
கொடுவரும் பள்ளித் தாமம்
தன்னைமுன் பறித்துச் சிந்தத்
தரைப்படத் துணித்து வீழ்த்தேன். **#590**

தேவர்களுக்கு இறைவராகிய சிவபெருமானுக்கு அடிமை பூண்டொழுகும் எறிபத்த நாயனார், புகழ்ச்சோழரைப் பார்த்து, `சோழனே! இவ்வுயர்ந்த யானையானது சிவகாமி யாண்டார் என்னும் அடியவர், பாம்பினை அணியாகக் கொண்டிருக்கும் சிவபெரு மானுக்கு எனப் பறித்துச் சாத்துதற்குக் கொண்டு வந்த திருப்பள்ளித் தாமத்திற்குரிய மலர்களைப் பறித்து நிலத்தில் சிதற, யான் இதனை நிலத்தில் விழுமாறு துணித்து வீழ்த்தினேன்` என்றார்.

விளக்கவுரை

துங்க வேழம் - உயர்ந்த யானை. பன்னகம் - பாம்பு. `மழவிடை யுடையான் அன்பர்க் கொல்லைவந் துற்ற செய்கை உற்றிடத் துதவும் நீரார்` *(பா.551)* என்றதால் துணித்து வீழ்த்தினார்.

மாதங்கந் தீங்கு செய்ய
வருபரிக் காரர் தாமும்
மீதங்குக் கடாவு வாரும்
விலக்கிடா தொழிந்து பட்டார்
ஈதிங்கு நிகழ்ந்த தென்றார்
எறிபத்த ரென்ன அஞ்சிப்
பாதங்கள் முறையால் தாழ்ந்து
பருவரைத் தடந்தோள் மன்னன். **#591**

(மேலும்) இவ்யானையானது அவர் கையிலி ருந்து திருப்பூங்கூடையைப் பறித்து அம்மலர்களைச் சிந்த, உடன் வரும் குத்துக் கோல்காரரும் அதன் மேல் இருந்த அவ்யானையைச் செலுத்தும் பாகரும் விலக்காது ஒழிந்த காரணத்தால், அவர்களும் துணிக்கப்பட்டார்கள். இதுவே இவ்விடத்து நிகழ்ந்த செய்தியாம் என்று அருளிச் செய்தார். இவ்வாறு அருளியவர் இவ்வூரில் வாழும் எறிபத்த நாயனார் என்று புகழ்ச்சோழநாயனார் அச்சமுற்று, அவர் திருவடிகளை முறையாக வணங்கிப் பருத்த மலை போலும் பெரிய தோள்களையுடைய மன்னர்.

விளக்கவுரை

மாதங்கம் - யானை. முறையால் தாழ்ந்து - எண் வகை உறுப்புக்களாலும், ஐவகை உறுப்புக்களாலும் வணங்கி.

அங்கண ரடியார் தம்மைச்
செய்தஇவ் அபரா தத்துக்
கிங்கிது தன்னாற் போதா
தென்னையுங் கொல்லவேண்டும்
மங்கல மழுவாற் கொல்கை
வழக்குமன் றிதுவா மென்று
செங்கையா லுடைவாள் வாங்கிக்
கொடுத்தனர் தீர்வு நேர்வார். **#592**

அழகிய நெற்றிக் கண்ணையுடைய சிவபெரு மானின் அடியவர்க்கு, இவ்யானை செய்த தீங்கிற்குத் தீர்வு, இங்குப் பாகரோடு யானையையும் துணித்ததனால் அமையாது; இத்தீங்கு நேர்தற்குக் காரணமாகும் என்னையும் கொல்லவேண்டும்; மங்கலம் பொருந்திய மழுவினால் கொல்லுதல் முறைமையன்று; அதற்கு இதுவே தகுதியாகும் என்று, சிவந்த தம்திருக் கரத்தினால் இடையில் செருகியிருந்த வாளை எடுத்து, தம் பிழைக்குத் தீர்வு நேர்வாராய்க் கொடுத்தார்.

விளக்கவுரை

தீர்வு - பாவக்கழிவு. இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

வெந்தழற் சுடர்வாள் நீட்டும்
வேந்தனை நோக்கிக் கெட்டேன்
அந்தமில் புகழான் அன்புக்
களவின்மை கண்டே னென்று
தந்தவாள் வாங்க மாட்டார்
தன்னைத்தான் துறக்கு மென்று
சிந்தையால் உணர்வுற் றஞ்சி
வாங்கினார் தீங்கு தீர்ப்பார். **#593**

கொடிய தீப் போலும் ஒளி வீசுகின்ற உடை வாளை எடுத்துத்தம் கையில் கொடுக்கும் புகழ்ச்சோழரைப் பார்த்து, `தீவினையால் கெட்டேன், அளவற்ற புகழையுடைய புகழ்ச்சோழரின் அன்பிற்கு எல்லையில்லாமையைக்கண்டேன்` என்றுஅவர்கொடுத்த உடைவாளை வாங்காதவராய், வாங்காதொழியின் தம்முயிரைத் தாமே நீக்கிக் கொள்ளுவார் என்று தம் உள்ளத்தால் உணர்ந்து, அது காரணமாய் அச்சமுற்று, அத்தீங்கை நீக்கும் கருத்துடையராய், அதனை வாங்கினார்.

விளக்கவுரை

****

வாங்கிய தொண்டர் முன்பு
மன்னனார் தொழுது நின்றே
ஈங்கெனை வாளி னாற்கொன்
றென்பிழை தீர்க்க வேண்டி
ஓங்கிய உதவி செய்யப்
பெற்றனன் இவர்பா லென்றே
ஆங்கவர் உரைப்பக் கண்ட
எறிபத்தர் அதனுக் கஞ்சி. **#594**

(புகழ்ச்சோழர்) கொடுத்த உடைவாளைத் தம்கரத்தில் வாங்கிக் கொண்ட எறிபத்த நாயனார் முன்னர், புகழ்ச் சோழர் வணங்கிநின்று, `இவ்விடத்து அடியேனை இவ்வுடைவாளால் கொன்று யான்செய்த தீங்கைத் தீர்க்குமாறு கருதிய இந்நாயனாரால் மிகப் பேருதவியை அடியேன் பெற்றேன்` என்று அப்புகழ்ச் சோழ நாயனார் கூற, அவர்தம் நிலைமையைக் கண்ட எறிபத்த நாயனார், அப்பத்திமை நிலைக்கு அஞ்சி.

விளக்கவுரை

`ஏ` என வருவன அசை நிலை.

வன்பெருங் களிறு பாகர்
மடியவும் உடைவா ளைத்தந்
தென்பெரும் பிழையி னாலே
யென்னையுங் கொல்லு மென்னும்
அன்பனார் தம்மைத் தீங்கு
நினைந்தன னென்று கொண்டு
முன்பென துயிர்செ குத்து
முடிப்பதே முடிவென் றெண்ணி. **#595**

வலிமையும், பெருமையும் உடைய பட்டத்து யானையும், பாகர்களும் இறக்கவும் அதற்காக மனம் வருந்தாது, தம்முடைய உடைவாளை என்

கையில் கொடுத்து `யான் செய்த பெரும் பிழையால் அடியேனையும் கொல்ல வேண்டும் என்று கூறும், பேரன்புடைய இவரைக் குற்றமுடையவ ரெனக் கருதினேன்` என்று தம் உள்ளத்தில் கருதி, `அவருக்கு முன்னே எனது உடலை உடைவாளால், மாய்த்துக் கொள்வதே அப்பிழைக்குத் தீர்வாகும்` என்று கருதி.

விளக்கவுரை

தீங்கு நினைத்தனன் என்றது இவ்வரசன் நீதியை நிலைநிறுத்தும் முறையினின்றும் தவறியவன் என்று முன் கருதி யிருந்ததாம்.

புரிந்தவர் கொடுத்த வாளை
அன்பர்தங் கழுத்தில் பூட்டி
அரிந்திட லுற்ற போதில்
அரசனும் பெரியோர் செய்கை
இருந்தவா றிதுவென் கெட்டேன்
என்றெதிர் கடிதிற் சென்று
பெருந்தடந் தோளாற் கூடிப்
பிடித்தனன் வாளுங் கையும். **#596**

அப்புகழ்ச் சோழ நாயனார் விரும்பிக் கொடுத்த உடைவாளை எறிபத்த நாயனார், தம் கழுத்தில் சேர்த்து அறுக்கத் தொடங்கும் பொழுது, புகழ்ச் சோழநாயனாரும், `இப் பெரியவரின் செய்கை இவ்வாறிருக்க யானே கெட்டேன்` என்று கூறி, இரங்கி, அவர் எதிரே விரைந்து போய்த் தம் பெரிய கைகளினால் அவர் தம் வாளையையும், கையையும் தடுத்துப் பிடித்தார்.

விளக்கவுரை

இம் மூன்றும் குளகம். புரிந்து - விரும்பி. தோளால் - கையால். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

வளவனார் விடாது பற்ற
மாதவர் வருந்தி நிற்ப
அளவிலாப் பரிவில் வந்த
இடுக்கணை யகற்ற வேண்டிக்
களமணி களத்துச் செய்ய
கண்ணுதல் அருளால் வாக்குக்
கிளரொளி விசும்பின் மேல்வந்
தெழுந்தது பலருங் கேட்ப. **#597**

புகழ்ச் சோழநாயனார் தாம் கொண்ட வாளி னையும் கையையும் விடாமல் பற்றிக் கொள்ள, பெருந்தவத்தை யுடைய எறிபத்தநாயனார் அதனால் வருத்தமுற்று நிற்ப, அளவற்ற அன்பினால் இருவரிடத்தும்

நிகழ்ந்த துன்பத்தை நீக்குமாறு, தம் திரு வுள்ளத்தில் கருதிய நஞ்சைத் தாங்கிய கழுத்தையும், சிவந்த நெற்றிக் கண்ணையும் உடைய சிவபெருமான் திருவருளினால் ஒரு வான் ஒலி, விளக்கம் பொருந்திய விண்ணில் யாவரும் கேட்குமாறு எழுந்தது.

விளக்கவுரை

களம் - கறுப்பு; அந்நிறமுடைய நஞ்சுக்கு ஆனமையின் பண்பாகு பெயராகும். களம் - எனவருவனவற்றுள் முன்னையது கறுப்பும் பின்னையது கழுத்தும் ஆம்.

தொழுந்தகை யன்பின் மிக்கீர்
தொண்டினை மண்மேற் காட்டச்
செழுந்திரு மலரை யின்று
சினக்கரி சிந்தத் திங்கள்
கொழுந்தணி வேணிக் கூத்தர்
அருளினால் கூடிற் றென்றங்
கெழுந்தது பாக ரோடும்
யானையும் எழுந்த தன்றே. **#598**

யாவரும் தொழத்தக்க மேன்மையினை உடைய அன்பிற் சிறந்தவர்களே! உம்முடைய தொண்டின் பெருமையை உலகத்தவர்க்குக் காட்டுமாறு, செழுமையான திருப்பள்ளித் தாமத்திற் குரிய மலரை இன்று இச்சினமிக்க யானையால் சிதறுமாறு செய்தது, இளம் பிறையை அணிந்த சடைமுடியையுடைய சிவபெருமான் திருவருளால் நேர்ந்தது, என வான் ஒலி கேட்ப, அதுபொழுது, பாகர்களுடன் யானையும் எழுந்தது.

விளக்கவுரை

திங்கட்கொழுந்து - இளம்பிறை. அன்று, `ஏ` என்பன அசைநிலைகளாம். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

ஈரவே பூட்டும் வாள்விட்
டெறிபத்தர் தாமும் அந்த
நேரியர் பெருமான் தாள்மேல்
விழுந்தனர் நிருபர் கோனும்
போர்வடி வாளைப் போக
எறிந்துஅவர் கழல்கள் போற்றிப்
பார்மிசை பணிந்தார் விண்ணோர்
பனிமலர் மாரி தூர்த்தார். **#599**

தம் கழுத்தை அறுக்கக் கருதி எடுத்த உடை வாளை விடுத்த எறிபத்த நாயனாரும், சோழ மரபில் சிறந்த புகழ்ச்சோழ நாயனாருடைய

திருவடிகளில் வீழ்ந்தார். அரசருள் சிறந்த புகழ்ச் சோழநாயனாரும் தாம் கைப் பிடித்திருந்த உடைவாளைத் தொலை வில் எறிந்து, அவ் எறிபத்த நாயனாருடைய திருவடிகளைத் துதித்து, நிலம் உற வணங்கினார். இந்நிகழ்ச்சியைக் கண்ட தேவர்கள் குளிர்ந்த மலர் மழையைப் பொழிந்தார்கள்.

விளக்கவுரை

ஈர - அறுக்க. நேரியர் - சோழர்.

இருவரும் எழுந்து வானில்
எழுந்தபே ரொலியைப் போற்ற
அருமறைப் பொருளாய் உள்ளார்
அணிகொள்பூங் கூடை தன்னில்
மருவிய பள்ளித் தாம
நிறைந்திட அருள மற்றத்
திருவருள் கண்டு வாழ்ந்து
சிவகாமியாரும் நின்றார். **#600**

எறிபத்த நாயனாரும், புகழ்ச்சோழ நாயனாரும் ஒருவரை ஒருவர் வணங்கி, எழுந்து நின்று, வானில் எழுந்த ஒலி யைப் போற்ற, அரிய மறைப் பொருளாயுள்ள சிவபெருமானும், அழகிய திருப்பூங்கூடையில் முன்பிருந்த திருப்பள்ளித் தாமத்திற்குரிய மலர்கள் நிறையும்படி அருளிச் செய்ய, அத்தகைய திருவருளைக் கண்டு மகிழ்ந்து, சிவகாமி யாண்டாரும் அங்கு வந்து நின்றனர்.

விளக்கவுரை

மற்று - அசைநிலை.

மட்டவிழ் அலங்கல் வென்றி
மன்னவர் பெருமான் முன்னர்
உட்டரு களிப்பி னோடும்
உறங்கிய தெழுந்த தொத்து
முட்டவெங் கடங்கள் பாய்ந்து
முகிலென முழங்கிப் பொங்கும்
பட்டவர்த் தனத்தைக் கொண்டு
பாகரும் அணைய வந்தார். **#601**

தேன் சொரியும், ஆத்தி மாலையை அணிந்த வெற்றி பொருந்திய அரசர்க்கரசராகிய புகழ்ச் சோழநாயனாரின் முன், உள்ளத்தில் உண்டாகிய மகிழ்ச்சியோடும், துயிலினின்றும் எழுந்தாற் போல நாற்புறமும் நிறையும் படியாகக் கொடிய மதநீரைச் சொரிந்து மேக முழக்கம் போல் பிளிறிக் களித்து நிற்கும் பட்டவர்த்தனம் என் னும்

யானையை நடத்திக் கொண்டு பாகர்களும் அணுக வந்தார்கள்.

விளக்கவுரை

இறந்த யானை பிழைத் தெழுந்தது, உறங்கி விழித்தது போன்றது. `உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு` *(குறள், 339)* என்னும் திருக்குறளை நினைவுகூர வைக்கின்றது.

ஆனசீர்த் தொண்டர் கும்பிட்
டடியனேன் களிப்ப இந்த
மானவெங் களிற்றில் ஏறி
மகிழ்ந்தெழுந் தருளும் என்ன
மேன்மையப் பணிமேற் கொண்டு
வணங்கிவெண் குடையின் நீழல்
யானைமேல் கொண்டு சென்றார்
இவுளிமேல் கொண்டு வந்தார். **#602**

மேதக்க சிறப்பினையுடைய எறிபத்தநாயனார் புகழ்ச் சோழநாயனாரை வணங்கி, `அடியேன் மனம் மகிழ இந்த வீரம் பொருந்திய கொடிய யானையின் மீது ஏறி மகிழ்ச்சியோடு எழுந் தருளும்` என்று சொல்ல, மேதக்க அந்நாயனார் பணித்தவாறு, அவரை நிலமுற வணங்கி முன்குதிரையின் மீது இவர்ந்து வந்த புகழ்ச் சோழ நாயனார் வெண்கொற்றக் குடையின் நிழற்கீழ் யானையின் மீது ஏறிச் சென்றார்.

விளக்கவுரை

மான - சிறந்த; திருவருள் வழிபாட்டிற்கு இவ் யானையின் செயல் கருவியாக இருந்தமையின் `மான வெங்களிறு` என்றார். இவுளி - குதிரை.

அந்நிலை எழுந்த சேனை
ஆர்கலி ஏழு மொன்றாய்
மன்னிய ஒலியின் ஆர்ப்ப
மண்ணெலாம் மகிழ்ந்து வாழ்த்தப்
பொன்னெடும் பொதுவில் ஆடல்
நீடிய புனிதர் பொற்றாள்
சென்னியிற் கொண்டு சென்னி
திருவளர் கோயில் புக்கான். **#603**

அது பொழுது, அவ்விடத்தில் திரண்டு எழுந்த சேனைகள் எழுகடலும் ஒன்றாய்க் கூடி ஒலித்தன போன்று ஒலிக்க வும், நிலவுலகத்துள்ளார் யாவரும் மகிழ்ச்சி மீதூர வாழ்த்தவும், அழ கிய திருச்சிற்றம்பலத்தின்கண் ஆடியருளும் பெருமானின் அழகிய திருவடிகள் தம் தலையில் பொருந்த எண்ணிய வண்ணம் புகழ்ச்சோழ நாயனார் தம் அழகிய

அரண்மனைக்குச் சென்றார்.

விளக்கவுரை

ஆர்கலி - பொருந்திய பேரொலி; இங்கு அதனை யுடைய கடலைக் குறித்தது.

தம்பிரான் பணிமேற் கொண்டு
சிவகாமி யாருஞ் சார
எம்பிரான் அன்ப ரான எறிபத்தர்
தாமும் என்னே
அம்பலம் நிறைந்தார் தொண்டர்
அறிவதற் கரியார் என்று
செம்பியன் பெருமை உன்னித்
திருப்பணி நோக்கிச் சென்றார். **#604**

சிவபெருமானுக்குத் தாம் செய்யும் திருப்பணியை மேற்கொண்டு, சிவகாமியாண்டாரும் திருக்கோயிலை அடைய, சிவ பெருமானுக்கு அன்பு பூண்டு ஒழுகும் எறிபத்த நாய னாரும், `ஈதென்ன வியப்பு? சிற்றம்பலத்தின் கண் அழகுபெற விளங்கியருளும் கூத்தப் பெருமானின் அடியவர்களின் தொண்டு அளவிடற்கரியது` என்று புகழ்ச் சோழ நாயனாரின் பெருமையைத் தமது திருவுள்ளத்தில் கருதிக் கொண்டு, தம் திருப்பணிக்குச் சென்றரு ளினார்.

விளக்கவுரை

****

மற்றவர் இனைய தான
வன்பெருந் தொண்டு மண்மேல்
உற்றிடத் தடியார் முன்சென்
றுதவியே நாளும் நாளும்
நற்றவக் கொள்கை தாங்கி
நலமிகு கயிலை வெற்பில்
கொற்றவர் கணத்தின் முன்னாம்
கோமுதல் தலைமை பெற்றார். **#605**

அவ் எறிபத்த நாயனார், மேற்கூறிய முறையான வலிய பெருந்தொண்டை நாளும் இந் நிலவுலகத்தின்கண் அடியவர் களுக்குத் துன்பம் நேரிட்ட பொழுது அவர் முன் சென்று அத்துன் பத்தை நீக்கி, நாளும் நல்ல தவநெறியைப் பூண்டு, பின்பு மேன்மை மிக்க திருக்கயிலையில் வெற்றி பொருந்திய சிவகணங்கட்க்கு முன்னாக இருக்கும் முதன்மை பெற்றார்.

விளக்கவுரை

மற்று, ஏ,என்பன அசைநிலை.

ஆளுடைத் தொண்டர் செய்த
ஆண்மையுந் தம்மைக் கொல்ல
வாளினைக் கொடுத்து நின்ற
வளவனார் பெருமை தானும்
நாளுமற் றவர்க்கு நல்கும்
நம்பர்தாம் அளக்கி லன்றி
நீளுமித் தொண்டின் நீர்மை
நினைக்கில்ஆர் அளக்க வல்லார். **#606**

சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட எறிபத்த நாயனார் செய்த திருத்தொண்டின் வலிமையையும், தம் குற்றம் தீரத் தம்மைக் கொல்லுமாறு தம் உடைவாளை அவர் கையில் எடுத்துக் கொடுத்து நின்ற புகழ்ச் சோழநாயனார்தம் பெருமையையும், நாள் தோறும் அவ்விருவர்க்கும் அருள் செய்யும் சிவபெருமான் அளந்து அறிவதன்றி, நீண்ட இவர்தம் திருத்தொண்டின் பெருமையை நினைக்கு மிடத்து யாவர் வரையறுத்துக் கூறவல்லவர்கள்? ஒருவரும் இலர்.

விளக்கவுரை

தான் - அசைநிலை.

தேனாருந் தண்பூங் கொன்றைச்
செஞ்சடை யவர்பொற் றாளில்
ஆனாத காதல் அன்பர்
எறிபத்த ரடிகள் சூடி
வானாளுந் தேவர் போற்றும்
மன்றுளார் நீறு போற்றும்
ஏனாதி நாதர் செய்த
திருத்தொழி லியம்ப லுற்றேன். **#607**

தேன் நிறைந்த குளிர்ந்த அழகுடைத்தாகிய கொன்றைமாலையைச் சூடிய சிவந்த சடையையுடைய சிவபெரு மானின் அழகிய திருவடியில் குறையாத பேரன்பினையுடைய எறி பத்த நாயனாரின் திருவடிகளை என் தலைமேல் சூடிக்கொண்டு, விண்ணுலகை ஆளும் தேவர்கள் போற்றும் கூத்தப் பெருமானின் திருநீற்றை எந்நாளும் பேணிப்பத்திமை செய்து ஒழுகிய ஏனாதி நாதரின் திருத்தொண்டைச் சொல்லத் தொடங்குகின்றேன்.

விளக்கவுரை

ஏனாதி நாதரின் வரலாற்றில் நீறு போற்றி வாழும் திருத்தொண்டே அடித்தளமாக நிற்றலின் அந்நெறியையே ஈண்டுச் சிறப்பித்து

ஓதுவாராயினர்.

ஏனாதிநாத நாயனார் புராணம்

புண்டரிகம் பொன்வரைமேல்
ஏற்றிப் புவியளிக்கும்
தண்தரள வெண்கவிகைத்
தார்வளவர் சோணாட்டில்
வண்டறைபூஞ் சோலைவயல்
மருதத் தண்பணைசூழ்ந்
தெண்திசையும் ஏறியசீர்
எயின்மூதூர் எயினனூர். **#608**

புலிக்கொடியை இமயமலை மீது நாட்டி அவ்வெல்லை வரையிலும் தம் நாட்டைக் காவல் செய்யும் குளிர்ந்த வெண்மையான முத்துகள் நிறைந்த வெண்கொற்றக் குடையையும், வெற்றி பொருந்திய மாலையையும் உடைய சோழர்களது வளம் மிகுந்த சோழ நாட்டில், வண்டுகள் ஒலிக்கும் மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த வயல்களோடு கூடிய குளிர்ந்த மருதநிலம் சூழ்ந்து விளங்குவது, எட்டுத் திக்கிலும் பரந்த புகழையுடைய பழமையான காப்பமைந்த எயினனூராம்.

விளக்கவுரை

புண்டரிகம் - புலி, எயினனூர் - இஃது அரிசிலாற்றின் தென்கரையில், கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் உள்ளது.

வேழக் கரும்பினொடு
மென்கரும்பு தண்வயலில்
தாழக் கதிர்ச்சாலி
தானோங்குந் தன்மையவாய்
வாழக் குடிதழைத்து
மன்னியஅப் பொற்பதியில்
ஈழக் குலச்சான்றார்
ஏனாதி நாதனார். **#609**

வேழக் கரும்புகளோடு மெல்லிய கரும்புகளும் குளிர்ந்த வயல்களிடத்துத் தம் வளர்ச்சியில் தாழும்படி, கதிர்களை யுடைய செந்நெற்பயிர்கள் உயரும் தன்மை உடையவாய், அவற்றால் வாழ்வுபெறுகின்ற குடிமக்கள் ஓங்கி நிலைபெற்றிருக்கின்ற அவ் வழகிய எயினனூரில் வாழ்பவர், ஈழக்குலத்தில் தோன்றிய சான்றார் மரபினராய ஏனாதிநாதர் என்று சொல்லப்படுபவராவர்.

விளக்கவுரை

வேழக்கரும்பு - கரும்பில் ஒருவகையது; நாணற் கரும்பு என அழைக்கப்பெறும். உயர்ச்சியில் கரும்புதாழ, நெற்பயிர்கள் ஓங்கி

வளர்ந்துள்ளன ஆதலின், `தாழக்கதிர்ச் சாலி தான் ஓங்கும் தன்மைய வாய்` என்றார். ஈழம் - கள். அதனை இறக்கி விற்பவர் சான்றார் மரபின ராவர். இக்காலத்தே சாணார் என மருவி அழைக்கப்படுகின்றனர். தான் - அசைநிலை. வாழ்பவர் என்பது அவாய் நிலையால் வந்தது. ஏனாதி - பட்டப்பெயர்.

தொன்மைத் திருநீற்றுத்
தொண்டின் வழிபாட்டின்
நன்மைக்கண் நின்ற
நலமென்றும் குன்றாதார்
மன்னர்க்கு வென்றி
வடிவாள் படைபயிற்றும்
தன்மைத் தொழில்
விஞ்சையில்தலைமை சார்ந்துள்ளார். **#610**

இவ்வடியவர் பழமையாகிய திருவெண்ணீற்றின் மேல் அன்பு பூண்டு ஒழுகும் அடிமைத் திறத்தால், சிவபெருமானை வழிபடுதலினால் உண்டாகும் நன்னெறிக்கண் நிற்கும் தகுதிப்பாட்டில் எந்நாளும் குறையாதவர். அரசர்களுக்கு வெற்றி வழங்கும் கூரிய வாட்படையைப் பயிற்றுவிக்கின்ற தொழிலாகிய வித்தையில் முதன்மை பெற்றவர்.

விளக்கவுரை

தொன்மைத் திருநீறு - பழமையாக அணிந்து வரும் திருநீறு. இறைவன் தன் திருமேனியில் திருநீறுதரித்துக் கொண்டிருத்த லின் அவன் என்றோ அன்றே திருநீறும் இருந்து வருவதாயிற்று. இதன் பழமையும் சிறப்பும் இதனால் விளங்குவதாம். `மண்டமர் பல கடந்து மதுகையால் நீறணிந்து` *(கலித். கடவுள், 1)* என்னும் கலித்தொகையும்.

வாளின் படைபயிற்றி
வந்த வளமெல்லாம்
நாளும் பெருவிருப்பால்
நண்ணும் கடப்பாட்டில்
தாளும் தடமுடியும்
காணாதார் தம்மையுந்தொண்
டாளும் பெருமான்
அடித்தொண்டர்க் காக்குவார். **#611**

வாட்படை பயிற்றும் தொழிலினராகிய அவர் அதனால் வந்த பொருள் வருவாய் அனைத்தையும், பெருமை பொருந்திய திருமுடியையும் திருவடியையும் காண இயலாத மால் அயன் ஆகிய இருவரையும் தொண்டாளும் சிவபெருமானின் அடியவர்களுக்கு, நாளும் தம் உள்ளத்து எழும் பேரன்பினால் பொருந்தி, கொடை மிகுதியால்

கொடுத்துவரும் கடப்பாடுடையவர்.

விளக்கவுரை

`தாளும், தடமுடியும் காணாதார் தம்மையும்` அடிமை யாகக் கொண்டருளுவர் என்பதால், அப் பெருமானின் பேரருளு டைமை விளங்குகிறது. உம்மை - இழிவு சிறப்பும்மை.

நள்ளார் களும்போற்றும்
நன்மைத் துறையின்கண்
எள்ளாத செய்கை
இயல்பின் ஒழுகுநாள்
தள்ளாத தங்கள்
தொழிலுரிமைத் தாயத்தின்
உள்ளான் அதிசூரன்
என்பான் உளனானான். **#612**

பகைவர்களும் பாராட்டுதற்குரிய நன்னெறிக் கண், எவ்வகையாலும் இகழப்படாத செய்கையின் இயல்பில், இவர் ஒழுகுகின்ற காலத்து, விலக்குதற்கு அரிதாகத் தம்மொடு இணைந் துள்ள தொழிலில் உரிமை பெற்றிருக்கும் தாயத்தாரில் உள்ளவனாய் அதிசூரன் எனும் பெயருடைய ஒருவன் இருந்தான்.

விளக்கவுரை

நள்ளார் - பகைவர். `கேளாரும் வேட்பமொழிவதாம் சொல்` *(குறள், 643)* என்புழிப்போலப் பகைவரும் பாராட்டும் பண்பு என்றார். எள்ளாத செய்கை - பிறர் எவராலும் எவ்வாற்றானும் இகழப் படாத செயல். விலக்குதற்கரிய தாயத்தினன் எனவே, அவனுக்கும் தமக்கும் உள்ள உறவு உரிமை விளங்குவதாயிற்று. அரிசூரன் என்பதும் பாடம்.

மற்றவனும் கொற்ற
வடிவாட் படைத்தொழில்கள்
கற்றவர்கள் தன்னில்
கடந்துள்ளார் இல்லையெனும்
பெற்றிமையால் மாநிலத்து
மிக்க பெருமிதம்வந்
துற்றுலகில் தன்னையே
சால மதித்துள்ளான். **#613**

மேற் குறித்த அவ்வதிசூரன் என்பவனும், வெற்றி பொருந்திய கூரிய வாட்படை பயிற்றும் தொழில்களைக் கற்றவர் களில், தன்னினும் மேம்பட்டான் ஒருவன் எவனும் இல்லை என்று சொல்லும் செருக்கால், பெரிய இந்நிலவுலகத்தின்கண் மிகுந்த இறு மாப்படைந்து, உலகில்

தன்னைத்தானே மதித்தவனாய் வாழ்ந்தான்.

விளக்கவுரை

கொற்றம் - வெற்றி. வடிவாள் - வடிக்கப்பட்டகூரிய வாள். வாட்படையில் தன்னைவிடக் கற்றார் எவரும் இல்லை எனும் செருக்கால் தன்னையே மதிப்பவனாயினான், `தம்மின் கற்றாரை நோக்கிக் கருத்தழிதலே` *(குமர. நீதிநெறி, 14)* சால்பு. அதற்கு மாறாக இவன் பண்பு விளங்கிற்று. மற்று - அசைநிலை.

தானாள் விருத்திகெடத்
தங்கள்குலத் தாயத்தின்
ஆனாத செய்தொழிலாம்
ஆசிரியத் தன்மைவளம்
மேனாளுந் தான்குறைந்து
மற்றவர்க்கே மேம்படலால்
ஏனாதி நாதர்திறத்
தேலா இகல்புரிந்தான். **#614**

தான் செய்து வரும் பிழைப்பிற்குரிய தொழில் கெடுமாறு, தன் குலத்திற்குரியதாய உரிமையில் குறையாத செய்தொழி லாகிய வாட்படை பயிற்றும் ஆசிரியத் தொழிலால் வரும் வரு வாயானது நாளுக்கு நாள் குறைவடையவும், ஏனாதிநாதருக்கே அவ்வருவாய் மேம்படவும் கண்ட அதிசூரன், அவ் ஏனாதிநாதரிடத் துப் பொருந்தாத பகைமை பாராட்டுவானாயினான்.

விளக்கவுரை

விருத்தி - வாழ்தற்குரிய வழி: பிழைக்கும் வழி. வட நூலார், இதனைச் சீவனோபாயம் என்பர். தன் ஆசிரியர் வளர்ச்சியில் தனக்கு அழுக்காறு ஏற்படுதல் தகாது என்பார். `ஏலா இகல்` என்றார்.

கதிரோன் எழமழுங்கிக்
கால்சாயுங் காலை
மதிபோல் அழிந்துபொறா

மற்றவனும் சுற்றப்
பதியோ ருடன்கூடப்
பண்ணியமர் மேற்சென்
றெதிர்போர் விளைப்பதற்கே
எண்ணித் துணிந்தெழுந்தான். **#615**

கதிரவன் மேலே வரவரத் தன் ஒளி குறைந்து மங்கும் காலை மதியம் போலக் குறைவடைந்து, அழுக்காறு கொண்ட அந்த அதிசூரனும், தன்

சுற்றத்தாரையும் ஏனைய ஊரவரையும் ஒருங்கு அழைத்துக் கொண்டு, ஏனாதிநாதரிடத்துச் சென்று எதிர்த்துப் போர் செய்வதற்கு நினைந்து, அதுவே தக்கது எனத் துணிந்து எழுந் தான்.

விளக்கவுரை

கால் சாய்தல் - ஒளிகுன்றுதல். காலுதல் சாய்தல் என்பது கால் சாய்தல் என்றாயிற்று. காலுதல் - ஒளிவீசுதல். உடன் கூடப் பண்ணி - தம் சுற்றத்தாரும் ஊரவரும் தன்போல் ஏனாதிநாதர் மீது அழுக்காறு உடையர் அல்லர் எனினும், அவர்களையும் தன்னுடன் கூடுமாறு செய்து.

தோள்கொண்ட வல்லாண்மைச்
சுற்றத் தொடுந்துணையாம்
கோள்கொண்ட போர்மள்ளர்
கூட்டத் தொடும்சென்று
வாள்கொண்ட தாயம்
வலியாரே கொள்வதென
மூள்கின்ற செற்றத்தால்
முன்கடையில் நின்றழைத்தான். **#616**

தோளின் வலிய ஆண்மை கொண்ட சுற்றத் தாருடனே, தனக்குத் துணைவலியாகக் கொள்ளப்பட்ட போர் வீரர் களின் கூட்டத்தோடு சென்று, ஏனாதிநாதரின் வீட்டின் முன்னே நின்று, வாள் பயிற்றும் தொழில் உரிமையை நம்மில் வலியவராய் உள்ளவரே கொள்ளத் தக்கவர், என மிகவும் மூண்டு எழும் சினத்தால் போருக்கு அழைத்தான்.

விளக்கவுரை

வீரர்க்கு உரிய உடல் உறுப்புக்களில் தோளே வலிமை உடையது ஆதலின் `தோள் கொண்ட வல்லாண்மை` என்றார். `படை யறுத்துப் பாழி கொள்ளும் ஏமத்தானும்` *(தொல். புறத்.17)* என்னும் தொல்காப்பியமும். துணையாம் கோள்கொண்ட - துணை வலியாகக் கொள்ளப்பட்ட. கொள்ளப்பட்ட எனவே, அவ்வீரர்களுக்கு இவனுடன் வருதல், அவர்கள் உளத்தொடுபட்டது அன்று என்பது பெற்றாம்.

வெங்கட் புலிகிடந்த
வெம்முழையிற் சென்றழைக்கும்
பைங்கட் குறுநரியே
போல்வான் படைகொண்டு
பொங்கிப் புறஞ்சூழ்ந்து
போர்குறித்து நேர்நின்றே
அங்கட் கடைநின்

றழைத்தா னொலிகேளா. #617

கொடிய கண்களையுடைய புலியிருந்த கடிய குகையில் சென்று, அதனைப்போருக்கு அழைக்கும் சிறிய கண் களையுடைய குறுநரி போன்றவனாய அதிசூரன், தன் மனைப் புறத்தே சூழ்ந்து போர்குறித்து நிற்ப, அவ்வதிசூரனின் ஒலியைக் கேட்டு.

விளக்கவுரை

புலி இருந்த குகையில் சென்று நரி அழைத்தது போன்று, அதிசூரன் அடியவரின் மனைப்புறத்தே நின்று அழைத்தான் எனவே, அவனது வலியின்மையும் அடியவரின் வலிமிகுதியும் ஒருங்கு உணர நின்றன.

ஆர்கொல் பொரவழைத்தார்
என்றரியேற் றிற்கிளர்ந்து
சேர்வு பெறக்கச்சில்
செறிந்தவுடை மேல்வீக்கி
வார்கழலுங் கட்டி
வடிவாள் பலகைகொடு
போர்முனையில் ஏனாதி
நாதர் புறப்பட்டார். #618

போருக்கு இவ்வாறு வலிய அழைத்தவர் யாவரோ? என்று ஆண்சிங்கம் போல எழுச்சிமிக்கு, கச்சுக்கட்டிய உடையை இடையில் வரிந்து கட்டி, ஒளி மிக்க வீரக்கழலையும் கட்டி, கூரிய வாளினையும், கேடயத்தையும் கைக் கொண்டு, போர் மேற்கொள்ளத்தம் திருமனையினின்றும் ஏனாதி நாதர் புறப்பட்டார்.

விளக்கவுரை

கொல் - ஐயப் பொருட்டு. வாட்பலகை - கேடயம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

புறப்பட்ட போதின்கண்
போர்த்தொழில்வாள் கற்கும்
விறற்பெருஞ்சீர்க் காளையர்கள்
வேறிடத்தி னின்றார்
மறப்படைவாள் சுற்றத்தார்
கேட்டோடி வந்து
செறற்கரும்போர் வீரர்க்
கிருமருங்குஞ் சேர்ந்தார்கள். #619

இவ்வாறு அவர் புறப்பட்ட போது, இவரிடத்துப் போர்த்தொழில்களுள் ஒன்றான வாள் பயிற்சி பெற்றுக் கொண்டி ருக்கும் வலிய, பெரிய சிறந்த வீரர்களும், இதற்கு முன் இவரிடம் பயின்று அவ்விடங்களில் பணி

செய்து கொண்டிருப்பவர்களும், கொலை செய்தற்குரிய பல படைக்கலங்களையும் வாளையும் ஏந்திய சுற்றத்தவர்களும் இந்நிகழ்ச்சியைக் கேட்டு ஓடிவந்து வெல்லுதற்கரிய சிறந்த வீரராகிய ஏனாதிநாதருக்கு இருபக்கங்களிலுமாகச் சேர்ந் தார்கள்.

விளக்கவுரை

இதனால் ஏனாதி நாதரிடத்துப் பயின்றவர்கட்கும், பயிற்சி பெற்றுக் கொண்டிருப்பவர்களுக்கும், சுற்றத்தார்க்கும், இருந்த அன்புள்ளம் தெரிய வருகின்றது.

வந்தழைத்த மாற்றான்
வயப்புலிப்போத் தன்னார்முன்
நந்தமது வாட்பயிற்று
நற்றாயங் கொள்ளுங்கால்
இந்தவெளி மேற்கை
வகுத்திருவேம் பொருபடையும்
சந்தித் தமர்விளைத்தால்
சாயாதார் கொள்வதென. **#620**

தம் மனைப்புறத்தே வந்து போருக்கு அழைத்தவ னாகிய அதிசூரன், வலிமை மிகுந்த ஆண் புலி என நிற்கும் ஏனாதி நாதர் முன்நின்று, நாம் இருவரும், வாள் வித்தை பயிற்றுவித்துவரும் தொழில் உரிமையை நிலைநாட்ட, இந்த வெளியிடத்து அணிவகுத்து நிற்கும் நம் இருவரது படைகளும் தம்முள் பொர, இவர்களில் வெற்றி கொள்வார் யாவரோ, அவரே அத்தொழில் உரிமையைக் கொள்வது என்று கூறினான்.

விளக்கவுரை

புலிப்போத்து - ஆண்புலி.

என்றுபகைத் தோனுரைப்ப
ஏனாதி நாதரது
நன்றுனக்கு வேண்டுமேல்
நண்ணுவன்என் றுள்மகிழ்ந்து
சென்றவன்முன் சொன்ன
செருக்களத்துப் போர்குறிப்பக்
கன்றி யிருபடையும்
கைவகுத்து நேர்மலைவார். **#621**

இவ்வாறு பகைத்தவனாகிய அதிசூரன் சொல்ல, ஏனாதிநாதர், `அது நல்லது, நீ விரும்பின் நான் அதற்கு உடன் படுகின் றேன்`` என்று கூறி, மகிழ்ச்சி மிக்கவராய், அவன் குறித்த போர்க்களத் திடத்துச் சென்றபின் அணிவகுத்து நிற்கும் இரு படைகளுடன் போர் செய்பவராயினர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

மேக வொழுங்குகள் முன்கொடு
மின்னிரை தம்மிடை யேகொடு
மாக மருங்கினும் மண்ணினும்
வல்லுரு மேறெதிர் செல்வன
வாக நெடும்பல கைக்குல
மாள்வினை வாளுடை யாடவர்
காக மிடைந்த களத்திரு
கைகளின் வந்து கலந்தனர். **#622**

மேகக்கூட்டத்தினை முன் கொண்டும், மின்னல் கூட்டங்களைத்தமக்கு இடையிடையே கொண்டும், விண்ணிலும் மண்ணிலும் இடியொலி எதிர் எதிரே செல்வது போல, பெரிய கேடயங்களை ஆளும் தன்மையும், வாட்போர் செய்யும் வலிமையும் கொண்ட போர் வீரர்கள், காகங்கள் நிறைந்த போர்க்களத்தின் இரு பக்கங்களிலும் எதிர் எதிராக வந்து பொருதனர்.

விளக்கவுரை

கேடய வரிசைக்கு மேகமும், வாட்படைக்கு மின்னலும், வீரர் ஒலிக்கு இடியும் உவமைகளாயின. இடி ஏறு - இடி ஒலி. போர்க்களத்தில் இறப்போரின் தசைத் திரள்களை உண்பதற்கெனக் காகங்கள் நிறைதலின் `காகம் மிடைந்த களம்` என்றார்.

கால்கழல் கட்டிய மள்ளர்கள்
கைகளின் மெய்க ளடக்கிய
வாளொளி வட்ட முனைந்திட
வந்திரு கைகளின் முந்தினர்
வேலொடு வேலெதிர் நீள்வன
மேவிய பாதலம் விட்டுயர்
ஞாலமு றும்பணி வீரர்கள்
நாநிமிர் கின்றன வொத்தன. **#623**

கால்களில் வீரக்கழல்களைக் கட்டிய போர் வீரர்கள், தம் கைகளில் உடலை மறைக்கும் கேடயங்களையும், வாட்படைகளையும் கொண்டு இருமருங்குமாகப் போர்புரிய வந்து முந்தினர். இருசாராரின் வேற்படைகளும் தம்முள் எதிர்ந்து நீண்டன. அவை தாம் இருந்த கீழ் உலகை விட்டு இந்நில உலகத்தைப் பொருந்துகின்ற நாகவீரர்களின் நாக்குகள் மேல் நீள்கின்றவை போலத்தோன்றின.

விளக்கவுரை

ஒளிவட்டம் - கேடயம். பணி வீரர்கள் - நாக லோகத்தவர்.

வெங்கண் விறற்சிலை வீரர்கள்
வேறிரு கையிலும் நேர்பவர்
தங்கள் சிலைக்குலம் உந்தின
தாவில் சரங்கள் நெருங்குவ
பொங்கு சினத்தெரி யிற்புகை
போகு கொடிக்கள் வளைத்தெதிர்
செங்கண் விழிக்கனல் சிந்திய
சீறு பொறிச்செல வொத்தன. **#624**

கொடிய கண்களையுடைய வலிய விற்படையை ஏந்திய வீரர்கள், வேறிடத்தில் நின்று, இருவர் பக்கமாகப் போர் செய்வார்களாகித், தத்தம் விற்களினின்றும் வெளிச் சென்ற அம்புகள் ஒன்றையொன்று நெருங்கி முற்பட்டு நிற்கும் செயல், மிகுந்த சினத்தில் மூண்ட தீயினின்றும் புகை போகும் மண்டலங்கள் போல் வளைந்து, சிவந்த கண்களினின்றும் தெறிக்கும் பொறிகள் போல்வனவாய் இருந்தன.

விளக்கவுரை

கொடிகள் - புருவமாகிய கொடிகள். இவற்றின் வளைவு புகை மண்டலங்கள் செல்லும் வளைவை ஒத்தது. அம்புகள் சினத்தீயினின்றும் எழுந்த பொறிகள் போல்வனவாயின.

வாளொடு நீள்கை துடித்தன
மார்பொடு வேல்கள் குளித்தன
தோளொடு வாளி நிலத்தன
தோலொடு தோல்கள் தகைத்தன
தாளொடு வார்கழ லிற்றன
தாரொடு சூழ்சிர மற்றன
நாளொடு சீறி மலைப்பவர்
நாடிய போர்செய் களத்தினில். **#625**

தங்களுக்கென இழைக்கப்பட்ட நாள் எல்லை யோடு சீறிப்போர் புரிய வல்ல அவ்வீரர்கள், தாம் விரும்பிப் போர் செய்கின்ற அப் போர்க்களத்தில், வாள்களோடு அவற்றைப் பிடித்த நீண்ட கைகள் துண்டிக்கப் பெற்றுத் துடித்தன. அவர் தம் மார்புகளில் வேல்கள் பாய்ந்தன. தம்மால் அறுக்கப்பட்ட தோள்களோடு அம்புகள் தரையில் வீழ்ந்தன. வீரர்களின் உடலைத்தாக்கி அழுந்திய கேடயங்கள், அவ்வுடலுடன் ஒன்றாய்ப் பதிந்தன. கால்களில் கட்டிய வீரக் கழல்களும் அறுபட்டன. மாலைகளுடன் கூடிய தலைகளும் அற்றன.

விளக்கவுரை

ஈற்றடியை முன்னர்க் கூட்டி உரைக்க. போர் முனையில் நிற்கும் மறவர்கள், ஒன்று வெற்றி அல்லது இறப்பு என்ற உறைப்பில் நின்று போராடுகின்றமையின், வெற்றி பெறாத நிலையில் அவர்கள் இறப்பது உறுதியாதலின் `நாளொடு சீறி, மலைப்பவர்` என்றார். `இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே பிழைத்தது ஒறுக்கிற்பவர்` *(குறள், 779)* என்பர் திருவள்ளுவரும். இதற்கு முன்னைய மூன்று பாடல்களானும் வாள், வேல், வில் ஆகிய மூவகைப் படைகளின் விளைவுகளைக் குறித்த ஆசிரியர், இப்பாடலுள் அம்முறையே கூறுதல் எண்ணத்தக்கது. `தோளொடு வாளி நிலத்தன` என்றது விற்போரின் விளைவாம். தோள் என வருவனவற்றுள், முன்னையது உடலையும் பின்னையது கேடயங்களையும் குறித்தன.

குருதியின் நதிகள் பரந்தன
குறையுடல் ஓடி யலைந்தன
பொருபடை அறுதுணி சிந்தின
புடைசொரி குடருடல் பம்பின
வெருவர எருவை நெருங்கின
விசியறு துடிகள் புரண்டன
இருபடை தனினும் எதிர்ந்தவர்
எதிரெதிர் அமர்செய் பறந்தலை. **#626**

இரு மருங்கிலும் உள்ள படைகளில், முன் நின்ற வீர்கள் எதிர் எதிராக நின்று போர் செய்யும் போர்க்களத்தில், இரத்தப் பெருக்கு ஆறுகளென ஓடியது. உடலொடு துண்டிக்கப்பட்ட தலைகள் அங்கும் இங்குமாகச் சிதறின. படைவீரர்களின் உடல் துண்டங்களும் அவ்வாறே ஆங்காங்குச் சிதறின. வெளிவந்த குடல்களோடு கூடிய உடல்கள் பலவும் நிரம்பிக் கிடந்தன. பார்ப்பவர்கள் அஞ்சுமாறு கழுகுகள் நெருங்கின. அறுபட்ட துடிப்பறைகள் பலவும் உருண்டு கிடந்தன.

விளக்கவுரை

நான்காவது அடி முன்னர்க் கூட்டி உரைக்கப் பட்டது. குறை உடல் - உடல் குறைந்த தலைகள். அறுதுணி - அறுக்கப் பட்ட உடல் குறைகள். இவ்வாறு பின் வருதலின் குறை உடல் என முன் கூறியதற்கு, உடல்குறைபட்ட தலைகள் எனக் குறித்தல் பொருந்தும். விசி - கட்டும். ஈண்டு அங்ஙனம் கட்டப்பட்ட வாரைக் குறித்தது. பறந்தலை - போர்க்களம்.

நீளிடை முடுகி நடந்தெதிர்
நேரிரு வரில்ஒரு வன்றொடர்
தாளிரு தொடையற முன்பெயர்
சாரிகை முறைமை தடிந்தனன்

வாளொடு விழுமுடல் வென்றவன்
மார்பிடை அறமுன் எறிந்திட
ஆளியி னவனு மறிந்தனன்
ஆயினர் பலருள ரெங்கணும். **#627**

நீண்ட நேரமாக மிகச் சினந்து போர் புரிந்த வீரர் இருவரில் ஒருவன், தன்னைத் தொடர்ந்த பகைவனின் கால்கள் இரு தொடைகளோடு அறுந்து விழுமாறு வெட்டிக் கீழே விழச் செய்தான். இவ்வாறு வெட்டப்பட்ட உடல் கீழ் விழுவதற்கு முன்னமேயே, தான் கொண்ட போர் வாளால் தன்னை வென்றவன் மார்பு பிளந்து அறுமாறு வீச, சிங்கம் போன்ற அவனும் வீழ்ந்தனன். இவ்வாறாக இறந்த வீரர்கள் பலர் வீழ்ந்து கிடந்தனர்.

விளக்கவுரை

நீள் இடை - நீண்ட நேரம். முடுகி - மிகச் சினந்து நெருங்கி. சாரிகை முறைமை - வாட் போரை மேற்கொள்ளும் வீரர்கள், தற்காப்பிற்கென வாளைச் சுழற்றிப் போர் செய்யும் முறைமை.

கூர்முனை அயில்கொடு முட்டினர்
கூடிமுன் உருவிய தட்டுடன்
நேருரம் உருவ உரப்புடன்
நேர்பட எதிரெதிர் குத்தினர்
ஆருயிர் கழியவும் நிற்பவர்
ஆண்மையில் இருவரும் ஒத்தமை
போரடு படைகொ டளப்பவர்
போல்பவர் அளவிலர் பட்டனர். **#628**

கூரிய முனையையுடைய வேல் கொண்டு எதிர்ந் தவர்கள், பகைவர்கள் தாம் தாமும் நீட்டிய பலகையையும் மார்பையும் ஊடுருவிச் செல்லுமாறு தம் வேலினை எதிர்எதிராகக் குத்தினர். அவ்வகையில் அவர்கள் தத்தம் உயிர் நீங்கிய பின்பும், தாம் முன் நின் றவாறே நின்றனர். அவ்வாறு நின்றவர் தத்தமக்குள்ள போர்ப்படை களின் திறனை அளந்து, நிலையிடுவார் போல் விளங்கினர். இவ் வகையில் இறந்துபட்ட வீரர்கள் எண்ணிலர்.

விளக்கவுரை

உரப்புடன் - வீர உணர்வுடன். உயிர் நீங்கிய பின்னரும் உடல் வீழாது இருந்தமை அவர்களின் வீரஉணர்வைக் காட்டுகின்றது.

பொற்சிலை வளைய வெதிர்ந்தவர்
புற்றர வனைய சரம்பட
விற்படை துணியவும் நின்றிலர்

வெற்றிகொள் சுரிகை வழங்கினர்
முற்றிய பெருவளன் இன்றியும்
முற்படு கொடைநிலை நின்றிட
உற்றன உதவிய பண்பினர்
ஒத்தனர் உளர்சில கண்டர்கள். #629

பொன்னாலாய பூணினையிட்ட தம் விற்களை வளைத்துப் போர் செய்ய, புற்றிலிருந்து வெளிப்படும் பாம்பென மாற்றார் விட்ட அம்பினால் தம் விற்படை அழியவும் போர் புரிதலினின்றும் நீங்காதவராகி, வெற்றி பொருந்திய உடைவாளை உருவிப் போரிட்டனர். இவ்வகையில் முன்னிருந்த தம் பெரு வளங்கள் குன்றவும், பின்னரும் அக்கொடைநிலையினின்றும் தவறாதவராய்ப்பின் தம்மிடம் உள்ளவற்றையும் கொடுத்துதவும் வள்ளலைப் போன்றனர்.

விளக்கவுரை

சுரிகை - வாள். வள்ளல்கள், தம்மிடம் உள்ள பொருள்கள் நீங்கவும், இல்லையென்னாது உள்ளதைக் கொடுப்பர். அது போன்று, வீரர்களும் முன்பிருந்த படை நீங்கவும், தம்மிடத் திருக்கும் வேற்படை கொண்டு போர் புரிந்தனர்.

அடல்முனை மறவர் மடிந்தவர்
அலர்முகம் உயிருள வென்றுறு
படர்சிறை சுலவு கருங்கொடி
படர்வன சுழல்வன துன்றலில்
விடுசுடர் விழிக ளிரும்புசெய்
வினைஞர்தம் உலையின் முகம்பொதி
புடைமிடை கரியிடை பொங்கிய
புகைவிடு தழலை நிகர்த்தன. #630

போர் முனையில் இறந்த வீரர்களின் மலர்ந்த முகங்கள், உயிர் உள்ளன என நினைந்தமையால் சிறை விரித்துப் பறந்து வந்த காக்கைகள் அவற்றைத் தீண்டாது அருகே சுழன்றன. அந்நிலையில் ஒளிவிட்டு விளங்கும் வீரர்களின் கண்கள், இரும்பு வினை செய்யும் கருங்கொல்லர்கள் உலையில் மேல்பொதிந்து அதன் பக்கத்துச் சரிந்து நிறைந்து நிற்கும் கரியினிடத்துப் பொங்கிப் புகைவரும் தீயை ஒத்தன.

விளக்கவுரை

அடல் முனை - போர்முகம். கருங்கொடி - கரிய காக்கைகள். இறந்தும் கண்ணொளி கெடாத வீரர்களின் முகங்கள் ஒளிவிட்டு நிற்கின்றன. ஆதலின் அவ்வுடலைத் தீண்டாத காக்கைகள் அதன் மீதும் அருகுமாகச் சுழன்று திரிந்தன. கொல்லர் உலை - போர்க்களம். அவ்விடத்துக்

கனன்று எரியும் தீ - வீரர்களின் கண்கள். சுழலும் காக்கைகள் - அத்தீயினின்றும் மேல் எழும் புகை.

திண்படை வயவர் பிணம்படு
செங்கள மதனிடை முன்சிலர்
புண்படு வழிசொரி யுங்குடர்
பொங்கிய கழுகு பருந்தொடு
கொண்டெழு பொழுதினும் முன்செயல்
குன்றுத லிலர்தலை நின்றனர்
விண்படர் கொடிவிடு பண்பயில்
விஞ்சையர் குமரரை வென்றனர். **#631**

வலிமை மிக்க படைவீரர்கள் இறக்க, அப்போர்க் களத்தில் விழுந்து கிடக்கும் பிணங்கள் முன்னே சிலர், புண்பட்ட தம் வயிற்றிலிருந்து வெளிவந்து இருக்கும் குடர்களை மிகுதியாகப் பறந்து கொண்டிருக்கும் கழுகுகளும் பருந்துகளும் பற்றி மேலே எடுத்துச் செல்லும் காலத்திலும், தாம் முன்பு மேற்கொண்ட போர் முயற்சியைத் தவிராதவராய் இருந்தனர். இந்நிலையிலுள்ள அவர்கள் வானத்தில் காற்றாடியை விடும் வித்தியாதரச் சிறுவர்களை ஒத்தனர்.

விளக்கவுரை

விண்படர்கொடி - காற்றாடி. வீரர்கள் வித்தியாதரச் சிறுவர்களை ஒத்தனர். பறக்கும் கழுகுகளும் பருந்துகளும் காற்றாடி களை ஒத்தன. குடர்களை எடுத்துச் செல்லும் பொழுது வயிற்றிற்கும் பறவைகளுக்கும் ஆக இடைப்பட்டிருக்கும் குடர் நீட்சிகள் காற்றாடி யின் கயிற்றை ஒத்தன.

இம்முனைய வெம்போரில்
இருபடையின் வாள்வீரர்
வெம்முனையின் வீடியபின்
வீடாது மிக்கொழிந்த
தம்முடைய பல்படைஞர்
பின்னாகத் தாமுன்பு
தெம்முனையில் ஏனாதி
நாதர் செயிர்த்தெழுந்தார். **#632**

இவ்வாறு நிகழ்ந்த கொடிய போரில் இருசாரார் பக்கத்தும், வீரம் மிக்க மறவர்கள் கொடும் போர் செய்து பலர் இறந்தனர். இறவாது எஞ்சி நின்ற தம் படைவீரர்கள் பின்வர, தாம் முன்பு சென்று போர் செய்வாராகிய ஏனாதிநாதர் சினந்து எழுந்தனர்.

விளக்கவுரை

வீடாது - இறவாது.

வெஞ்சினவாள் தீயுமிழ
வீரக் கழல்கலிப்ப
நஞ்சணிகண் டர்க்கன்பர்
தாமெதிர்ந்த ஞாட்பின்கண்
எஞ்சியெதிர் நின்ற
இகல்முனையில் வேலுழவர்
தஞ்சிரமும் தோளுரமும்
தாளும் விழத்துணித்தார். **#633**

சினம் மிக்க வாளினின்றும் தீப்பறக்கவும், வீரக் கழல் ஒலிக்கவும், நஞ்சினை யுண்ட கழுத்தினை உடையவரான சிவ பெருமானுக்கு அன்பராய ஏனாதி நாதர், மேற்கூறியவாறு, போர்க் களத்தில் முன் வந்து, சினந்து எழுந்த பொழுது, முன்னர் இறவாது இருந்த வீரர்கள் பலரும் அவரை எதிர்த்து நிற்க, அவ்வீரர்களின் தலை களோடு தோள் வலிமையையும் தாள் வலிமையையும் அழித்தார்.

விளக்கவுரை

ஞாட்பு - போர். உரம் - வலிமை.

தலைப்பட்டார் எல்லாரும்
தனிவீரர் வாளில்
கொலைப்பட்டார் முட்டாதார்
கொல்களத்தை விட்டு
நிலைப்பட்ட மெய்யுணர்வு
நேர்பட்ட போதில்
அலைப்பட்ட ஆர்வமுதல்
குற்றம்போ லாயினார். **#634**

போரில் தம்முடன் எதிர்ந்தவர்கள் அனைவரும் ஒப்பில்லாத வீரரான ஏனாதிநாதரின் வாளால் கொல்லப்பட்டனர். அதைக்கண்டு அவரை எதிர்க்காத வீரர்கள் எல்லாம், போர்க்களத்தை விட்டு, நிலைத்த மெய்யுணர்வின் முன் அலைந்து ஒழியும் ஆர்வம் முதலிய குற்றங்களைப் போல் ஆனார்கள்.

விளக்கவுரை

தலைப்பட்டார் - போரில் தம்மை (ஏனாதி நாதரை) எதிர்ந்தவர்கள். முட்டாதார் - (ஏனாதிநாதருக்கு) அஞ்சி எதிர்க்காத வர்கள். நிலைப்பட்ட மெய்யுணர்வு - இறைவன் திருவடியிலேயே ஒன்றிநிற்கும் மெய்யுணர்வு. மெய்ப்பொருளை உணரும் உணர்வு மெய்யுணர்வாம். ஆர்வம் முதல் குற்றம் - காமம் வெகுளி மயக்கம் முதலாய குற்றங்கள். மெய்யுணர்வைத்

தலைப்பட்டார்க்கு இன்னோ ரன்ன குற்றங்கள் வாராவாம். மெய்யுணர்வு ஒரோவழி தவறும் பொழுது முற்கூறிய குற்றங்கள் வந்து விடும். இடையறாத ஞான யோகங்களின் முன்னர் இக்குற்றங்கள் மூன்றும் காட்டுத் தீ முன்னர்ப் பஞ்சுத்துய்ப் போலக் கெட்டு விடும் என வரும் பரிமேலழகர் உரையும் *(குறள், 360க்கு)* காண்க. இங்ஙனம் கூறவே ஏனாதிநாதருக்கு அஞ்சி இன்று அகன்றவர்கள் என்றும் அவரை அணுகார் என்பதும் போதரும்.

இந்நிலைய வெங்களத்தில்
ஏற்றழிந்த மானத்தால்
தன்னுடைய பல்படைஞர்
மீண்டார் தமைக்கொண்டு
மின்னொளிவாள் வீசி
விறல்வீரர் வெம்புலியே
றன்னவர்தம் முன்சென்
றதிசூரன் நேரடர்ந்தான். **#635**

இத்தகைய கொடிய போர்க்களத்தில் போர் புரிய வந்தோர் எல்லாம் அழிந்து போக, அவ்விழிவைப் பொறாது போரில் அழியாது மீண்டவர்களைச் சேர்த்துக் கொண்டு, மின்னலையொத்த ஒளியையுடைய வாளினை வீசி, கொடிய புலியையொத்த வலிமை யுடைய வீரராகிய ஏனாதிநாதரின் முன்பு எதிர்த்துச் சென்று அதிசூரன் போர் செய்தான்.

விளக்கவுரை

மானம் - தன் நிலையில் தாழாமையும் தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும் ஆம். போரில் எதிர்த்த வீரர்கள் ஒன்று வெற்றி பெற்றிருக்க வேண்டும். இன்றேல் உயிர் விட்டிருக்க வேண்டும். இவ்விரண்டுமின்றி எஞ்சி மீண்டமையின் அது மானத்திற்கு இழிவாயிற்று.

மற்றவர்தஞ் செய்கை
வடிவாள் ஒளிகாணச்
சுற்றிவரும் வட்டணையில்
தோன்றா வகைகலந்து
பற்றிஅடர்க் கும்பொழுதில்
தானும் படைப்பிழைத்துப்
பொற்றடந்தோள் வீரர்க்
குடைந்து புறகிட்டான். **#636**

வடிக்கப்பட்ட வாள் ஒளியையே அவன் காணுமாறும், வாளைச் சுழற்றிப் போரிடும் பொழுது, தம்மை அவன் காணாதவாறும், அதிசூரனை

எறிந்து துண்டிக்கும் செயலில் அவர் அமைந்த பொழுது, அவன் அதனின்றும் தப்பியவனாய்ப் பொன் னணிந்த பெரிய தோள்களையுடைய அவ்வடியவர்க்கு ஆற்றாது புற முதுகிட்டு ஓடினான்.

விளக்கவுரை

அடியவர் அவனைத் துணிக்க நேர்ந்த பொழுது, அவன் அவரிடத்தினின்றும் தப்பிப் புறமுதுகிட்டு ஓடினான்.

போன அதிசூரன்
போரி லவர்க்கழிந்த
மானம்மிக மீதூர
மண்படுவான் கண்படான்
ஆனசெயல் ஓரிரவும்
சிந்தித் தலமருவான்
ஈனமிகு வஞ்சனையால்
வெல்வனென எண்ணினான். **#637**

இவ்வாறு புறமுதுகிட்டு ஓடிய அதிசூரன் போர்க் களத்தில் அவ்வடியவர்க்கு ஆற்றாது, அழிந்த மானம் பெரிதும் மீதூரத் தரையில் படுத்தவன், உறங்காதவனாய்த் தனக்கு நேர்ந்த செயலை எண்ணி எண்ணி அந்த ஓர் இரவு முழுதும் சிந்தித்துத் துன்புறு கின்றவன், குறைபாடு மிகுந்த வஞ்சனைச் செயலால் அவ்வடியவரை வெல்வேன் என்று எண்ணியவனாய்,

விளக்கவுரை

மண்படுவான் - தரையில் படுப்பவன். கண் படான் - உறங்காதவனாகி.

சேட்டாருங் கங்குல்
புலர்காலைத் தீயோனும்
நாட்டாரைக் கொல்லாதே
நாமிருவேம் வேறிடத்து
வாட்டாயங் கொள்போர்
மலைக்க வருகவெனத்
தோட்டார்பூந் தாரார்க்குச்
சொல்லி வரவிட்டான். **#638**

அந்நீண்ட இரவு முழுவதும் கழிய, பொழுது புலரும் காலத்தில், தீயவனாகிய அதிசூரனும், `நாம் செய்யும் போரில் நம் பொருட்டு நமக்கு அயலவராகிய நாட்டார்களைக் கொல்லாமல், நாம் இருவரும் தனியிடத்தில் நின்று, வாள்பயிற்றும் உரிமையைக் கைக்கொள்வதற்கு உறுதிப்படுத்தும் போரினைச் செய்ய வருக` என மாலை அணிந்த

ஏனாதிநாதருக்குச் சொல்லிவர ஏவலாளனை அனுப்பினான்.

விளக்கவுரை

சேடு + ஆரும் = சேட்டாரும் என்றாயிற்று. சேய்மை பொருந்திய இரவு என்பது இதன் பொருளாகும். இரவு எப்பொழுதும் யார்க்கும் ஒரு படித்தாகவே அமையும். ஆனால் அதிசூரன் எப்பொழுது புலரும் எனக் கருதியவனாய் அவ்விரவை அநுபவித்து இருந்தமையின், அவன் அளவில் அக்காலம் நீட்டிப்பதாயிற்று. `ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேட் சென்றார் வருநாள் வைத்துஏங்கு பவர்க்கு` *(குறள், 1269)* எனத் திருவள்ளு வனார் கூறுவதும் இங்கு நினைவு கூர்தற்குரியதாம். வாள் தொழில் பயிற்று விக்கும் உரிமை, தம்மில் யாவர்க்கு உரியது என்பதை நிலைநாட்டவே இப்போரினை மேற்கொண்டான் அதிசூரன். அடிய வரும் அதற்கு இசைந்தனர். அவ்வகையில் வெற்றி கொள்வதோ தோல்வியுற்று அழிவதோ தமக்குள் இருக்க வேண்டும் என்று கருதி னான். ஆதலின் தம் இருவருள் எவருக்குத் துணைவரினும் அவர் அயலவராதலின் அவரை நாட்டார் எனக் குறித்தனன். தோடு - இதழ்கள். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

இவ்வாறு கேட்டலுமே
ஏனாதி நாதனார்
அவ்வாறு செய்த லழகி
தெனவமைந்து
கைவாள் அமர்விளைக்கத்
தான்கருதும் அக்களத்தே
வெவ்வாள் உரவோன்
வருகவென மேற்கொள்வார். **#639**

இவ்வாறு அதிசூரன் அவ்வடியவர்க்குச் சொல்லி விட, அவரும் அதைக்கேட்டு, அவ்வாறு செய்தலும் அழகியதே என ஏற்றுக் கொண்டு வாள் ஏந்திய கையுடன் அவன் குறித்த போர்க் களத்தில் நின்று கொண்டு, வலிய வாளினையுடைய அவ் அதி சூரனை வருக என அழைத்து, அச்செயலைச் செய்ய மேற் கொண்டவராய்.

விளக்கவுரை

உரவோன் - வலியோன். வலியன் அல்லனாயினும், தன் அளவில் வலியனாகக் கருதினானாதல் பற்றி இவ்வாறு கூறினார்.

சுற்றத்தார் யாரும்
அறியா வகைசுடர்வாள்
பொற்பலகை யுந்தாமே
கொண்டு புறம்போந்து

மற்றவன்முன் சொல்லி
வரக்குறித்த அக்களத்தே
பற்றலனை முன்வரவு
பார்த்துத் தனிநின்றார். **#640**

தம் உறவினர் முதலிய எவரும் அறியாதவாறு ஒளிபொருந்திய வாளினையும் அழகிய கேடயத்தையும் தாமே எடுத்துக் கொண்டு, வெளியே வந்து, அதிசூரன் முன் வருமாறு குறித்த அவ்விடத்தில், அவனுக்கு முன் சென்று, அவன் வருகையை எதிர் நோக்கித் தனித்து நின்றார்.

விளக்கவுரை

பற்றலன் - பகைவன்: அதிசூரன். இவ்விரண்டும் குளகம்.

தீங்கு குறித்தழைத்த
தீயோன் தீருநீறு
தாங்கிய நெற்றியினார்
தங்களையே எவ்விடத்தும்
ஆங்கவருந் தீங்கிழையார்
என்ப தறிந்தானாய்ப்
பாங்கில் திருநீறு
பண்டு பயிலாதான். **#641**

வஞ்சித்துத் தீங்கு இயற்றும் உள்நோக்குடன் போருக்கு அழைத்த அக்கொடியோன், திருநீறு அணிந்த நெற்றி யினாரை எவ்விடத்தும் எஞ்ஞான்றும் ஏனாதி நாதர் தீங்கு செய்யமாட்டார் என்பதை அறிந்தவனாதலின், உண்மையிலேயே இதற்கு முன் திருநீறு அணிந்து பழக்கம் இல்லாதவனாய் இருந்தும்.

விளக்கவுரை

பாங்கில் - திருநீற்றை அணியுமாறு அணிந்து நிற்கும் நிலையில்.

வெண்ணீறு நெற்றி
விரவப் புறம்பூசி
உண்ணெஞ்சில் வஞ்சக்
கறுப்பும் உடன்கொண்டு
வண்ணச் சுடர்வாள்
மணிப்பலகை கைக்கொண்டு
புண்ணியப்போர் வீரர்க்குச்
சொன்னவி டம்புகுந்தான். **#642**

திருவெண்ணீற்றைத்தன் நெற்றி முழுதும் பொருந்துமாறு புறத்தே பூசி, நெஞ்சில் வஞ்சனையாகிய கறுப்பையும் உடன் கொண்டு, அழகிய ஒளி

பொருந்திய வாளினையும் மணிக ளால் இழைக்கப் பெற்ற பலகையையும் கைகளில் கொண்டு, புண் ணியத்தன்மை வாய்ந்த போர் வீரராம் ஏனாதிநாதர் முன், தான் சொல் லிவிட்ட அவ்விடத்திற்குச் சென்றான்.

விளக்கவுரை

மணிப்பலகை - மணிகள் இழைக்கப் பெற்ற கேடயம்.
இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

வென்றி மடங்கல்
விடக்குவர முன்பார்த்து
நின்றாற் போல்நின்றார்
நிலைகண்டு தன்னெற்றி
சென்று கிடைப்பளவும்
திண்பலகை யால்மறைத்தே
முன்தனிவீ ரர்க்கெதிரே
மூண்டான் மறம்பூண்டான். **#643**

வெற்றி பொருந்திய சிங்கம் தன் உணவுக்குரிய விலங்கு வருதலை எதிர்பார்த்து நின்றாற் போல, அவ்வடியவர் நின்ற நிலை கண்டு, அவரிடத்துச் சென்று அணுகுமளவும் தன் நெற்றியை வலிய கேடயத்தால் மறைத்துக்கொண்டு, தனியே நின்றவரான அவ்வடியவர்க்கு எதிரே சென்று, பாவச் செயலைச் செய்தற்குரிய அவன் தோன்றினான்.

விளக்கவுரை

விடக்கு - தசை: இங்கு அதனையுடைய விலங்கைக் குறித்தது.

அடல்விடையே றென்ன
அடர்த்தவனைக் கொல்லும்
இடைதெரிந்து தாள்பெயர்க்கும்
ஏனாதி நாதர்
புடைபெயர்ந்த மாற்றான்
பலகை புறம்போக்கக்
கடையவன்தன் நெற்றியின்மேல்
வெண்ணீறு தாங்கண்டார். **#644**

வலிமை பொருந்திய ஆன் ஏறு என்ன எதிர்த்து, அவனைக் கொல்லத்தகும் அமையம் தெரிந்து, அடிபெயர்த்துச் செல்கின்ற போது, அருகில் வந்த அதிசூரன் தான் மறைத்து இருந்த பலகையை விலக்கவே, அக்கடையவன் நெற்றியிடத்து வெண்ணீறு அணிந்திருப்பதை அவர் கண்டார்.

விளக்கவுரை

இடை தெரிந்து - கொல்லுதற்குரிய சமயம் தெரிந்து. `புண்ணியர் பூசும் வெண்ணீறு` என்பார் ஞானசம்பந்தர் *(தி.2 ப.66 பா.6)*. அது இக்கடையவன் நெற்றியிலும் காணக் காண்டலின் இவ் வாறு கூறினார்.

கண்டபொழு தேகெட்டேன்
முன்பிவர்மேற் காணாத
வெண்திருநீற் றின்பொலிவு
மேற்கண்டேன் வேறினியென்
அண்டர்பிரான் சீரடியார்
ஆயினார் என்றுமனங்
கொண்டிவர்தங் கொள்கைக்
குறிவழிநிற் பேனென்று. **#645**

இவ்வாறு அவர் கண்டபொழுது `ஆ! கெட்டேன்! இதற்கு முன் எந்நாளும் இவர் நெற்றியில் காணப்படாத வெண்மை யான திருநீற்றின் பொலிவினைக் கண்டேன். இனி வேறு என்ன நினைக்க உள்ளது? தேவர்க்கும் தேவனாய சிவபெருமானின் சிறந்த அடியாராக இவர் ஆயினர் என்று எண்ணியவராய், இவர் மனம் கொண்ட கொள்கைக் குறிப்பின் வழி நிற்பேன்` என்று எண்ணி.

விளக்கவுரை

நெற்றியில் திருநீறு கண்ட அளவிலேயே இவர் அடிய ராயினார் என உறுதி கொண்டது. அடியவருக்கு இருக்கத்தகும் தகுதிகளுள் இது தலையாய தகுதி என்பதுபற்றியாம். `வெண்ணீ றணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே` *(தி.8 ப.35 பா.5)*, `எவரேனும் தாமாக` *(தி.6 ப.61 பா.3)* என்பனவாகிய திரு மறைத் திருவாக்குகளையும் நினைவு கூர்க.

கைவா ளுடன்பலகை
நீக்கக் கருதியது
செய்யார் நிராயுதரைக்
கொன்றா ரெனுந்தீமை
எய்தாமை வேண்டும்
இவர்க்கென் றிரும்பலகை
நெய்வா ளுடனடர்த்து
நேர்வார்போல் நேர்நின்றார். **#646**

அவனைக் கொல்வதற்கெனக் கொண்ட, கையில் ஏந்திய வாளினையும் பலகையையும் நெகிழவிட்டு விட முதலில் கருதினார் எனினும், கையில் படையற்றவரைக் கொன்றார் எனும் பழி இவருக்கு வாராது இருக்க

வேண்டும் என்று எண்ணி, அவ்வலிய பலகையினையும் நெய் பூசப்பெற்ற வாளினையும் உடன் ஏந்தி, எதிர்த்த அவ்வீரரோடு போர்செய்வார் போலக் காட்டி நின்றார்.

விளக்கவுரை

நிராயுதர் - கையில் படையற்றோர். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அந்நின்ற தொண்டர்
திருவுள்ளம் ஆரறிவார்
முன்னின்ற பாதகனும்
தன்கருத்தே முற்றுவித்தான்
இந்நின்ற தன்மை
யறிவார் அவர்க்கருள
மின்னின்ற செஞ்சடையார்
தாமே வெளிநின்றார். **#647**

அவ்வாறு நின்ற திருத்தொண்டரின் திரு வுள்ளத்தை அறியவல்லார் யாவர்? முன்னின்ற கொடியோனாகிய அதிசூரனும் தான் நினைத்தவாறே முடித்தனன். இத்தன்மையினை அறிவாராகிய இத்திருத்தொண்டருக்கு அருளும் பொருட்டு மின் போன்ற செஞ்சடையினையுடைய சிவபெருமானும் தாமே வெளிப் பட்டுத் தோன்றி நின்றருளினார்.

விளக்கவுரை

தன் கருத்தே முற்று வித்தான் - தான் முன் நினைந்த வாறே அவரைக் கொன்றான்.

மற்றினிநாம் போற்றுவதென்
வானோர் பிரானருளைப்
பற்றலர்தங் கைவாளால்
பாசம் அறுத்தருளி
உற்றவரை யென்றும்
உடன்பிரியா அன்பருளிப்
பொற்றொடியாள் பாகனார்
பொன்னம் பலமணைந்தார். **#648**

தேவர் தலைவனாய சிவபெருமானின் திருவருள் திறத்தை இனித் தனியாக நாம் போற்றுவது என்னவுள்ளது? பகை வரின் கைவாளினால் பாசத்தை அறுத்து அவ்வடியவரை என்றும் தம்முடன் பிரியாது இருக்குமாறு அருளி, அவர் இதுகாறும் கொண்டிருந்த அன்புக்குரிய நிலையை விளக்கி, உமையை ஒரு மருங்கு கொண்ட பெருமானார் பொன்னம்பலத்தினை அடைந்தார்.

விளக்கவுரை

பாசம் - கயிறு. இக்கயிறு இருவினைக் கயிறாம்.

தம்பெருமான் சாத்தும்
திருநீற்றுச் சார்புடைய
எம்பெருமான் ஏனாதி
நாதர் கழலிறைஞ்சி
உம்பர்பிரான் காளத்தி
உத்தமர்க்குக் கண்ணப்பும்
நம்பெருமான் செய்தபணி
நாம்தெரிந்த வாறுரைப்பாம். **#649**

தம் தலைவனாய சிவபெருமான் அணிந்து கொள்ளும் திருநீற்றின் சார்பைச் சார்பாகக் கொண்ட எம் தலைவரான ஏனாதிநாதரின் திருவடிகளை வணங்கி, தேவர்க்கும் தேவனான திருக் காளத்தியில் வீற்றிருந்தருளும் சிவபெருமானுக்கு, கண்ணை அப்புப வராகிய நம் தலைவர் செய்த பணிகளை நாம் அறிந்தவாறு கூறுவாம்.

விளக்கவுரை

****

கண்ணப்பநாயனார் புராணம்

மேவலர் புரங்கள் செற்ற
விடையவர் வேத வாய்மைக்
காவலர் திருக்கா ளத்திக்
கண்ணப்பர் திருநா டென்பர்
நாவலர் புகழ்ந்து போற்றும்
நல்வளம் பெருகி நின்ற
பூவலர் வாவி சோலை
சூழ்ந்தபொத் தப்பி நாடு. **#650**

பகை அசுரரின் முப்புரங்களை அழித்தவரும், ஆனேற்றை ஊர்தியாகக் கொண்டவரும், நான்மறைகளின் உட் பொருளாய் நிற்கும் காவலரும் ஆன திருக்காளத்தி மலையில் இருந்தருளும் புண்ணியருக்குத் தம் கண்ணினை அப்பிய கண்ணப்ப நாயனார் தோன்றிய திருநாடாவது, நாவன்மையுடைய புலவர்கள் புகழ்ந்து போற்றிடுகின்ற நல்ல வளங்கள் பலவும் பெருகி நிற்கும் பூக்கள் மலரும் குளங்களும், பூஞ்சோலைகளும் சூழ விளங்கி யிருக்கும் பொத்தப்பி நாடு என்பதாகும்.

விளக்கவுரை

பொத்தப்பி நாடு - காளத்தி மலைக்கு வடக்கே மலை நாடாகவுள்ள பகுதியாகும். இஃது இன்றும் இப்பெயரில் அழைக்கப் பெறுகிறது.

இத்திரு நாடு தன்னில்
இவர்திருப் பதியா தென்னில்
நித்தில அருவிச் சாரல்
நீள்வரை சூழ்ந்த பாங்கர்
மத்தவெங் களிற்றுக் கோட்டு
வன்றொடர் வேலி கோலி
ஒத்தபே ரரணஞ் சூழ்ந்த
முதுபதி உடுப்பூர் ஆகும். **#651**

இப்பொத்தப்பி என்னும் திருநாட்டில், கண்ணப்பர் தோன்றியருளிய திருவுடைய நகரம் யாதெனில், முத்துக் கொழித் திடும் அருவிகளின் நீர்வீழ்ச்சிகள் குறைவுபடாத நீண்ட பெரிய மலைகள் சூழ்ந்திருப்ப, அவற்றின் எல்லையில் மதம் பொழியும் கொடிய யானைகளின் கொம்புகளால் வேலியிட்டு, அதன் வலிய நீண்ட தொட ராய மதிலே அவ்வூருக்குக் காவலாக அமைந்த மிகவும் பழையதாகிய உடுப்பூர் என்னும் நகரமாகும்.

விளக்கவுரை

அவ்வூரின் எல்லையில் யானைக் கொம்புகளை வரிசையாக நாட்டி

அவையே வலியுடைய மதில் போன்று விளங்கிட அவ்வரணுள் விளங்கும் பதி உடுப்பூர் ஆகும்.காடுகள் சூழ்ந்த பதியாதலின், விலங்குகளும், தீயோரும் உட்புகாதவாறு யானைக் கொம்பால் வேலியினைக் காவலாக அமைத்தனர்.

குன்றவர் அதனில் வாழ்வார்
கொடுஞ்செவி ஞமலி ஆர்த்த
வன்றிரள் விளவின் கோட்டு
வார்வலை மருங்கு தூங்கப்
பன்றியும் புலியும் எண்கும்
கடமையும் மானின் பார்வை
அன்றியும் பாறை முன்றில்
ஐவனம் உணங்கு மெங்கும். **#652**

அவ்வுடுப்பூரில் வாழ்பவர்கள் வேடர்களாவர். பற்பல இடங்களிலும் கொடிய நீண்ட காதுகள் வளைந்து தொங்கும் வேட்டை நாய்களை வார்க்கயிற்றினால் கட்டி வைத்திருக்கும் பெருவிளாமரங்களின் கொம்புகளிலே, வாரினால் அமைந்த வலைகள் தொங்க விடப்பட்டிருக்கும். அவற்றின் புறத்து, வேடரின் வளர்ப்பு மிருகங்களாய பன்றி, புலி, கரடி, காட்டுப்பசு, மான் முதலிய பார்வை மிருகங்கள் கட்டப்பட்டிருக்கும். அன்றியும் அங்கு மலை நெல்லின் புழுங்கலும் முற்றத்தில் காய்ந்து கொண்டிருக்கும்.

விளக்கவுரை

பார்வை மிருகம் - வேட்டையாடுதற் பொருட்டு வேடர்கள் தங்கள் பதியிலே காட்டு விலங்குகளின் குட்டிகளைப் பிடித்து வந்து வளர்த்து அவைகளை வீட்டு விலங்குகளாக்கி வளர்ப்பர். இவையே பார்வை மிருகம் என்பர். இவற்றைக் கொண்டு அவ்வவ்வினமாய விலங்குகளைப் பிடிப்பர். விளவின் கோடு - விளாமரத்தின் கிளைகள், இம் மரத்தில் நாய் முதலியவற்றைக் கட்டி வைப்பர். `பார்வையாத்த பறைதாள் விளவின்` எனவரும் சிறு பாணாற்றுப்படையும் காண்க.

வன்புலிக் குருளை யோடும்
வயக்கரிக் கன்றி னோடும்
புன்தலைச் சிறும கார்கள்
புரிந்துடன் ஆட லன்றி
அன்புறு காதல் கூர
அணையுமான் பிணைக ளோடும்
இன்புற மருவி யாடும்
எயிற்றியர் மகளி ரெங்கும். **#653**

கொடிய புலிக்குட்டிகளோடும், வீரமுடைய யானைக் கன்றுகளோடும்,

முரட்டு மயிருடைய சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருப்பர். அன்றியும் தம்பால் அன்புடன் காதல் கொண்டு அணைகின்ற கன்னி மான்களுடன் இன்புற மகிழ்ந்து விளையாடும் வேடருடைய பெண்களும் எங்கும் அப்பதியில் காணப்படுவர்.

விளக்கவுரை

சிறுவரிடம் வீரமும், சிறுமியரிடம் அன்பும் தோன்ற விளையாட்டுக்கள் அமைந்துள்ளமை அறியத்தக்கது.

வெல்படைத் தறுகண் வெஞ்சொல்
வேட்டுவர் கூட்டந் தோறும்
கொல்எறி குத்தென் றார்த்துக்
குழுமிய வோசை யன்றிச்
சில்லரித் துடியுங் கொம்பும்
சிறுகண்ஆ குளியுங் கூடிக்
கல்லெனு மொலியின் மேலும்
கறங்கிசை யருவி யெங்கும். **#654**

வெல்லும் படைகளும், கொடுந்தன்மையும், கடிய சொல்லும் கொண்டிருக்கும் வேட்டுவருடைய கூட்டந் தோறும், `கொல்`, `எறி`, `குத்து` என்னும் பேரொலிகள் கேட்கும். அவ்வோ சையே அன்றி, சிறிய பரல்கள் உள்ளிட்ட உடுக்கும், ஊது கொம்பும், சிறுமுகமுடைய ஆகுளிப் பறையும் கூடிக் கலீரென ஒலித்திடும். இவ்வோசைகளுக்கு மேலாக அங்குள்ள மலைகளில் இரைந்தோடும் அருவி ஒலிகளும் ஆங்காங்குக் கேட்கும்.

விளக்கவுரை

வேடுவர் இயல்பைக் `கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் விரவ லாமைசொல்லித் திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண் டாறலைக்குமிடம்` *(தி.7 ப.49 பா.1)* எனவரும் சுந்தரர் திருவாக்காலும் அறியலாம்.

ஆறலைத் துண்ணும் வேடர்
அயற்புலங் கவர்ந்து கொண்ட
வேறுபல் உருவின் மிக்கு
விரவும்ஆன் நிரைக ளன்றி
ஏறுடை வானந் தன்னில்
இடிக்குரல் எழிலி யோடு
மாறுகொள் முழக்கங் காட்டும்
மதக்கைமா நிரைக ளெங்கும். **#655**

அப்பதிகளிலும், வழிப்பறிசெய்து களவினால் வரும் பொருள் கொண்டு

உண்ணும் தொழிலுடைய வேடர்கள், அயற் புலத்திற்குச் சென்று, களவினால் கொண்டுவந்த வெவ்வேறான பல வடிவங்களில் மிகுந்து காணப்படும் பசுவின் நிரைகளேயன்றி; வானத்தில் இடிக்கும் ஓசையுடைய முகில்களுடன் மாறு கொண்டு முழங்கும் பேரோசையைக் காட்டும் மதம் பொழியும் யானைகளின் நிரைகளும் காணப்படுவன.

விளக்கவுரை

ஆறலைத்தல் - பொருள் கொள வேண்டி வழிப் போவாரைத் தடுத்துத் துன்புறுத்துதல்.

மைச்செறிந் தனைய மேனி
வன்தொழில் மறவர் தம்பால்
அச்சமும் அருளும் என்றும்
அடைவிலார் உடைவன் தோலார்
பொச்சையி னறவும் ஊனின்
புழுக்கலும் உணவு கொள்ளும்
நச்சழற் பகழி வேடர்க்
கதிபதி நாக னென்பான். **#656**

மை செறிந்துள்ளது எனும்படி கரிய மேனியையும், கொடுந்தொழிலையும் உடைய அந்த ஊரில் வாழும் வேடர்கள், அச்சமும் அருளும் என்றுமே தம்மிடம் வந்து அடைதல் இல்லாதவர்கள். வலிய தோலின் உடையை உடையவர்கள். மலைத் தேனும் ஊன் கலந்த சோறும் உணவாக உண்பவர்கள். நஞ்சு ஊட்டிய கூரிய கொடிய நெருப்புப் போலும் அம்பினைக் கைக் கொண்டவர்கள். அத்தகைய வேடர்களுக்கெல்லாம் அரசன் `நாகன்` என்னும் பெயருடையான்.

விளக்கவுரை

பொச்சை - மலை; நறவு - தேன். பொச்சையில் நறவு - சிறப்பில்லாத தேன்; கள் என்பாரும் உளர்.

பெற்றியால் தவமுன் செய்தான்
ஆயினும் பிறப்பின் சார்பால்
குற்றமே குணமா வாழ்வான்
கொடுமையே தலைநின் றுள்ளான்
விற்றொழில் விறலின் மிக்கான்
வெஞ்சின மடங்கல் போல்வான்
மற்றவன் குறிச்சி வாழ்க்கை
மனைவியும் தத்தை யென்பாள். **#657**

இந்நாகன் என்பான், இப்பிறவி பெறுதற்கு முற்பிறப்பில் தவம் செய்துள்ளான் எனினும், பிறந்த இப்பிறப்பின் சார்பால் கொலை

முதலிய குற்றங்கள் செய்தலையேகுணம் எனக் கொண்டு வாழ்பவன். கொடுமையையே தன் தலையாய செய்கை யாகப் பேணி வாழ்பவன். விற்றொழிலில் மிகுந்த வலி யுடையவன். கொடிய சினமுடைய சிங்கத்தின் இயல்பை ஒத்தவன். அத்தகை யோனுக்கு அக்குறிஞ்சியில் அவனுடைய வாழ்க்கைத் துணைவியாக அமைந்தவள் `தத்தை` எனப்படுவாள்.

விளக்கவுரை

`மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி, இவன்தந்தை என்னோற்றான் கொல்எனுஞ் சொல்` *(குறள்,70)*, எனும் அருள்மொழிக் கிணங்க, நாகன் நன்மகவைப் பெறும் பேறு பெற்றவன் ஆதலின், `பெற்றியால் தவம்முன் செய்தான்` என்றார். குறிச்சி - குறிஞ்சிநிலத் துள்ள ஊர்களை இப்பெயரால் அழைப்பர்.

அரும்பெறல் மறவர் தாயத்
தான்றதொல் குடியில் வந்தாள்
இரும்புலி எயிற்றுத் தாலி
இடையிடை மனவு கோத்துப்
பெரும்புறம் அலையப் பூண்டாள்
பீலியுங் குழையுந் தட்டச்
சுரும்புறு படலை முச்சிச்
சூரரிப் பிணவு போல்வாள். **#658**

அத் தத்தை என்பாளும், பெறுதற்கரிய சிறப்புடைய வேடர் இனத்துள் ஒன்றாய உயர்ந்த பழங்குடியில் பிறந்தவள். பெரிய புலியின் பற்களால் ஆய மங்கலநாணில் இடையிடையே கோர்க்கப் பட்ட மணிகள் தனது பெரிய பிடரியில் அசைய அதனை மார்பில் அணிந்தவள். அவள் மயிற்பீலியும் இளந்தளிர்களும் சேரக்கொண்ட வண்டுகள் மொய்த்திடும் பூமாலையைக் கொண்டையில் அணிந்த வள். அச்சம் பொருந்திய பெண் சிங்கத்தைப் போன்றவள்.

விளக்கவுரை

புலிப்பற்களை மங்கலநாணில் கோத்து அணிவது மறவர்குல மரபாகும். இது அவர்களின் வீரத்தைக் காட்டுவதாகும். `புலிப்பல் கோத்த புலம்புமணித்தாலி` *(அகநா.18)* எனவரும் அகப்பாட்டும் காண்க. பெரும்புறம் - பிடரியை அடுத்துள்ள பக்கம்.

பொருவருஞ் சிறப்பின் மிக்கார்
இவர்க்கினிப் புதல்வர்ப் பேறே
அரியதென் றெவருங் கூற
அதற்படு காத லாலே

முருகலர் அலங்கற் செவ்வேல்
முருகவேள் முன்றிற் சென்று
பரவுதல் செய்து நாளும்
பராய்க்கடன் நெறியில் நிற்பார். #659

ஒப்பற்ற பெருஞ்சிறப்புமிக்க இவர்களுக்குத் திருமணமாகிப் பல்லாண்டுகள் ஆகியும், மக்கட் பேறிலதாக, அங்குள் ளார் அனைவரும் இனி இவர்க்கு மக்கட்பேறே அரிது எனக்கூறிவரும் அமையத்தில், தமக்கு ஒரு மகன் வேண்டுமெனும் காதலால், அப் பேற்றைப் பெற விரும்பி, தம் குலதெய்வமான நறுமணம் கமழும் மலர்மாலையைச் சூடிய செவ்விய வேலேந்திய முருகப்பெருமா னுடைய திருமுன்னிலையில் சென்று நாளும் வழிபாடு புரிந்து வருவாராய்,

விளக்கவுரை

வேண்டுநர் வேண்டியாங்கு எய்துதற்கு அருள்புரியும் கருணையானும், குறிஞ்சிநிலத் தெய்வமுமான முருகனே தம்குல தெய்வமாக விளங்கும் சிறப்பால் முருகப் பெருமானை வழிபடு வாராயினர்.

வாரணச் சேவ லோடும்
வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச்
சுரும்பணி கதம்பம் நாற்றிப்
போரணி நெடுவே லோற்குப்
புகழ்புரி குரவை தூங்கப்
பேரணங் காடல் செய்து
பெருவிழா எடுத்த பின்றை. #660

சேவற்கோழிகளையும், வரிகளை உடைய அழகிய மயில்களையும் காணிக்கையாக விடுத்தும், மணிமாலை களின் தோரணங்களைத் தூக்கியும், வண்டுகள் மொய்க்கும் கடப்ப மாலைகளைத் தூக்கியும், போரில் அழகும், வெற்றிகாணும் திருவு முடைய நெடிய வேலையுடைய முருகப் பெருமானின் புகழ்பாடிடும் குரவையாடலைச் செய்தும், பெரிய திருவிழா நடத்தி, அதன் பின்னர்.

விளக்கவுரை

சேவலும் மயிலுமாகிய இனங்களைக் காணிக்கையாகக் கொடுத்ததன்றி, அவற்றைப் பலி கொடுத்திலர் என்பது அறியத்தக்கது.

பயில்வடுப் பொலிந்த யாக்கை
வேடர்தம் பதியாம் நாகற்
கெயிலுடைப் புரங்கள் செற்ற
எந்தையார் மைந்த ரான

மயிலுடைக் கொற்ற வூர்தி
வரையுரங் கிழித்த திண்மை
அயிலுடைத் தடக்கை வென்றி
அண்ணலார் அருளி னாலே. **#661**

வேட்டையாடுதலினாலும், போரினாலும் ஏற்பட்ட வடுக்கள் நிறைந்த உடலுடைய வேடர்களின் தலைவனான நாகன் என்பானுக்கு, மதில்களையுடைய முப்புரங்களையும் எரித்த பெருமானின் மைந்தரும், சிறந்த மயிலினைத் தம் வெற்றிக்கு அறி குறியாக ஊர்தியாகக் கொண்டவரும், வஞ்சனையாய கிரவுஞ்ச மலையின் நீக்கமுடியாத வலியினைக் கிழித்த திண்மையுடைய வேலைத் திருக்கையில் கொண்டவருமான வெற்றிதரும் ஆறுமுகப் பெருமானின் திருவருளினாலே.

விளக்கவுரை

`விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள் வைக்கும் தன்னாளை எடுத்து` *(குறள், 776)* என்பது வீரரின் மரபாதலின் `பயில் வடுப் பொலிந்த யாக்கை` என்றார்.

கானவர் குலம்வி ளங்கத்
தத்தைபால் கருப்பம் நீட
ஊனமில் பலிகள் போக்கி
உறுகடன் வெறியாட் டோடும்
ஆனஅத் திங்கள் செல்ல
அளவில்செய் தவத்தி னாலே
பான்மதி உவரி ஈன்றால்
எனமகப் பயந்த போது. **#662**

வேடருடைய குலம் சிறந்து விளங்கிடத் தத்தை என்பாளிடத்துக் கருத்தங்கி வளர்ந்திட, அதுகண்ட நாகன், தாய்க்கும் கருவிற்கும் ஊனம் இல்லையாகச் செய்யும் கடன்களை முருகப் பெருமானுக்குக் கொடுத்து, மேலும் செயத்தக்க கடன்களுடன் வெறியாடலும் நிகழ்வித்து வர, அக்கருவினுக்கு உற்ற பத்துத் திங்களும் நிறைவெய்த, இவ்வுலகம் செய்த அளவிலாத நற்றவத்தினாலே, நிறைமதியை உவர்க்கடல் பெற்றெடுத்தது போல, கரிய மேனியை யுடைய ஓர் ஆண்குழந்தையைத் தத்தை பெற்றெடுத்த பொழுது.

விளக்கவுரை

பால்மதி:*- நல்ல குளிர்ச்சியையும், நிறைவையும் உடையமதி, வினையும் பயனும் பற்றி வந்த உவமை; நிறம்பற்றிய தன்று.*

கரிப்பரு மருப்பின் முத்தும்

கழைவிளை செழுநீர் முத்தும்
பொருப்பினின் மணியும் வேடர்
பொழிதரு மழையே யன்றி
வரிச்சுரும் பலைய வானின்
மலர்மழை பொழிந்த தெங்கும்
அரிக்குறுந் துடியே யன்றி
அமரர்துந் துபியும் ஆர்த்த. **#663**

யானைக் கொம்பினின்றும் அரிந்தெடுத்த முத்துக்களையும், மூங்கிலில் விளைந்த நீரோட்டமுடைய நன் முத்துக்களையும், மலையில் விளையும் மணிகளையும் வேடர்கள் தம் மகிழ்வால் அள்ளிப் பொழியும் மழையே அன்றி, வரிகளையுடைய வண்டுகளும் தேனுக்கு அலைந்திட வானின்று எங்கும் பூமழையும் பொழிந்தது. சிறு ஓசையுடைய வேடரின் உடுக்குகளுடன் வானில் உள்ள தேவர்களுடைய துந்துபிகளும் முழங்கின.

விளக்கவுரை

இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

அருவரைக் குறவர் தங்கள்
அகன்குடிச் சீறூ ராயம்
பெருவிழா எடுத்து மிக்க
பெருங்களி கூருங் காலைக்
கருவரை காள மேகம்
ஏந்திய தென்னத் தாதை
பொருவரைத் தோள்க ளாரப்
புதல்வனை யெடுத்துக் கொண்டான். **#664**

அரிய மலையில் வாழும் பெருகிய சுற்றத்தை யுடைய குறவர்கள் வாழ்கின்ற அச்சிற்றூர் மக்கள். மகிழ்வால் பெரு விழா எடுத்து, மிக்கதொரு பெருமகிழ்வு எய்தும் காலையில், கரிய தொரு பெருமலை கருமுகில் ஒன்றை ஏந்திக்கொண்டது எனும்படி யாக, தந்தையான நாகன் மலைபோன்ற தன்தோள்கள் இனிமை கூரத் தன் மகனைத் தூக்கி எடுத்து அணைத்துக் கொண்டான்.

விளக்கவுரை

காளமேகம் - நீர்முகந்து மழைபொழிதற்குரியதான கரியமேகம் .

கருங்கதிர் விரிக்கு மேனிக்
காமரு குழவி தானும்
இரும்புலிப் பறழின் ஓங்கி
இறவுள ரளவே யன்றி

அரும்பெறல் உலகம் எல்லாம்
அளப்பரும் பெருமை காட்டித்
தருங்குறி பலவுஞ் சாற்றுந்
தன்மையில் பொலிந்து தோன்ற. **#665**

கரிய ஒளியைப் பரப்பிடும் அழகில் சிறந்த அக்குழவிதானும், பெரியதொரு புலிக்குட்டியின் வனப்பினைப்போல் சிறந்து, அவ்வூரில் உள்ள வேடர்கள் அளவே அன்றிப் பெறற்கரிய இவ்வுலகம் எங்கணும் பெறமுடியாத அளப்பரிய பெருமைகளைக் காட்டி, பெருஞ் சிறப்புகள் பின்விளைதற்கேற்ற குறிகள் பலவும் காண்டற்குரிய தன்மையில் பொலிந்து தோன்றிட ,

விளக்கவுரை

****

அண்ணலைக் கையில் ஏந்தற்
கருமையால் உரிமைப் பேரும்
திண்ணன்என் றியம்பும் என்னத்
திண்சிலை வேட ரார்த்தார்
புண்ணியப் பொருளா யுள்ள
பொருவில்சீர் உருவி னானைக்
கண்ணினுக் கணியாத் தங்கள்
கலன்பல வணிந்தா ரன்றே. **#666**

தலைமைசான்ற அக்குழந்தையை நாகன் கையில் எடுத்து ஏந்துவதற்கு அருமையாக இருத்தலால், இக்குழந்தைக்கு உற்றபேரும் ``திண்ணன்`` என்று அழையுங்கள் என்னலும், வலிமை பொருந்திய வில்வேடர் யாவரும் பேரொலி செய்து மகிழ்ந்தார்கள். அதுபொழுது புண்ணியத்தின் பொருளாய் நின்ற தனக்கு நிகரில்லாத சிறப்பினையுடைய அக்குழந்தைக்கு, அங்குள்ள வேடர்கள் தங்கள் கண்ணிற்கு அழகு பொருந்தத் தங்களிடத்துள்ள பல அணிகலன் களையும் அணிவித்தார்கள்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வரையுறை கடவுட் காப்பும்
மறக்குடி மரபில் தங்கள்
புரையில்தொல் முறைமைக்
கேற்ப பொருந்துவ போற்றிச் செய்து
விரையிளந் தளிருஞ் சூட்டி
வேம்பிழைத் திடையே கோத்த

அரைமணிக் கவடி கட்டி
அழகுற வளர்க்கும் நாளில். **#667**

மலையிடத்து வாழும் தம் தெய்வமாய முருகப் பெருமானுக்குக் கடவுட் காப்பாக, தமது வேடரின் குடி மரபிலே நிகழ்ந்து வரும் குற்றமற்ற பழைய முறைமைக் கேற்பப் பொருந்திடும் செயல்களை மிகச் சிறப்புடன் புரிந்து, நறுமணமுடைய இளந் தளிர்களும் சூட்டி, மலைவேம்பின் கொட்டைகளை இடையிடையே வைத்துக் கோத்த மணிகளாலாய அரைஞாண் மணிக்கோவையை அரையில்கட்டி, அழகுபொருந்திட வளர்த்து வரும்நாள்களில்.

விளக்கவுரை

`சேயோன்மேய மைவரையுலகு` *(தொல்.அகத்.5)* என்பதற்கு ஏற்ப `வரையுறை கடவுள்` என்றார். வேம்பு இழைத்து - மலைவேப்பங் கொட்டைகளை இடையிடையே கோர்த்து.

வருமுறைப் பருவந் தோறும்
வளமிகு சிறப்பில் தெய்வப்
பெருமடை கொடுத்துத் தொக்க
பெருவிறல் வேடர்க் கெல்லாம்
திருமலி துழனி பொங்கச்
செழுங்களி மகிழ்ச்சி செய்தே
அருமையிற் புதல்வர்ப் பெற்ற
ஆர்வமுந் தோன்ற உய்த்தார். **#668**

இவ்வண்ணம் வளர்ந்து வரும் முறையான பருவங்கள் தோறும், வளம் மிகுந்த சிறப்புக்களோடு, தெய்வங்கட்கு ஏற்றிடும் முறையான பெருமடைகளையும் கொடுத்து, தமது பெருக விளங்கும் கிளைகளான வேடர்களுக்கெல்லாம் மங்கலம் நிறையும் பெருகிய பூசை பொங்கிட, சிறக்கும் களியாட்டங்களை நிகழ்த்து வித்து அதனால் மகிழ்ச்சி பெறச் செய்து அருமையாக ஓர் ஆண் மகவைப் பெற்ற தம் அன்பின் மிகுதி வெளிப்பட அக் குழந்தையை வளர்த்து வந்தார்கள்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஆண்டெதிர் அணைந்து செல்ல
இடும்அடித் தளர்வு நீங்கிப்
பூண்திகழ் சிறுபுன் குஞ்சிப்
புலியுகிர்ச் சுட்டி சாத்தி
மூண்டெழு சினத்துச் செங்கண்
முளவுமுள் அரிந்து கோத்த

நாண்தரும் எயிற்றுத் தாலி
நலங்கிளர் மார்பில் தூங்க. #669

அவ்வாறு அன்புடன் வளர்த்திட வளரும் குழந்தைக்கு ஓராண்டு முன் அணைந்து சென்றிட, அடி எடுத்து வைத்தலில் தனக்குற்ற தளர்வு நீங்கிச் செப்பமாக நடந்திட வெள்ளிப் பூண் திகழும் புலிநகச் சுட்டியினைச் சிறு மயிராகத் திகழும் தலையில் சாத்தி, பகை காண மூண்டு எழும் சினமுடைய செங்கண் கொண்ட முள்ளம் பன்றியின் முள்களை அரிந்து இடையிடையே கோத்த நீண்ட புலிப்பல் மாலையை நெஞ்சினில் தொங்கும்படி அணிந்து,

விளக்கவுரை

****

பாசொளி மணியோ டார்த்த
பன்மணிச் சதங்கை ஏங்கக்
காசொடு தொடுத்த காப்புக்
கலன்புனை அரைஞாண் சேர்த்தித்
தேசுடை மருப்பில் தண்டை
செறிமணிக் குதம்பை மின்ன
மாசறு கோலங் காட்டி
மறுகிடை யாடும் நாளில். #670

பசிய ஒளியுடைய மணிகளுடன் ஏனைய மணிக ளும் இடைவைத்துக் கோத்த சதங்கைகள் ஒலிக்க, செப்புக் காசுகளு டனும் சிறுவளையங்களுடனும் சேரக் கொண்டு தொகுத்த அரை ஞாண் கயிற்றை அணிந்து, ஒளியுடைய யானைக் கொம்பினால் செய்த தண்டையையும் நல்மணிகளையுடைய குதம்பையையும் காலி லும் காதிலும் முறையே அணிந்து மின்னிட, இத்தகைய மாசற்ற கோலத் தைக் காட்டித் திண்ணனார் வீதியிடை விளையாடும் நாள்களில்.

விளக்கவுரை

****

தண்மலர் அலங்கல் தாதை
தாய்மனங் களிப்ப வந்து
புண்ணிய கங்கை நீரில்
புனிதமாந் திருவாய் நீரில்
உண்ணனைந் தமுதம் ஊறி
ஒழுகிய மழலைத் தீஞ்சொல்
வண்ணமென் பவளச் செவ்வாய்
குதட்டியே வளரா நின்றார். #671

குளிர்ந்த மலர் மாலை அணிந்த தந்தையும் தாயும் கண்டுமனம் களிகூரவந்து, புண்ணியம் நிறைந்த கங்கையினும் மிகப் புனிதமாய தம் திருவாய் நீரினால் உள் நனைந்து அமுதமாக ஊறி மேல் ஒழுகிய நிலையில் மழலைச் சொற்களை அழகிய மெல்லிய பவளம் போலும் தமது செவ்வாயினைக் குதட்டி மொழிந்து வளர்ந்து வருகின்றார்.

விளக்கவுரை

குதட்டுதல் - குழந்தைகள் மழலைச் சொற்களைக் கூறும்பொழுது வாயிதழ் கூட்டி ஒலிக்க முற்படும் நிலை. இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

பொருபுலிப் பார்வைப் பேழ்வாய்
முழையெனப் பொற்கை நீட்டப்
பரிவுடைத் தந்தை கண்டு
பைந்தழை கைக்கொண் டோச்ச
இருசுடர்க் குறுகண் தீர்க்கும்
எழில்வளர் கண்ணீர் மல்கி
வருதுளி முத்தம் அத்தாய்
வாய்முத்தங் கொள்ள மாற்றி. **#672**

வளரும் இக்குழந்தைப் பருவத்தில், பொருதற் குரிய பார்வை மிருகமாக அங்கிருந்த புலியின் வாயைத் திண்ணனார், அது ஒரு குகை எனக் கொண்டு, தமது பொற்கையை அப்புலி வாய்க் குள் நீட்ட, அன்புடைத் தந்தையான நாகன் அதுகண்டு, அப்படிச் செய் யாதே என்று பசிய இலையுடைய சிறு கொம்பினைக் கையில் எடுத்து வீச, அஞ்சி, விம்மி, கதிரவனும் மதியமும் ஆய இருசுடர்களையும் கண்களாகக் கொண்டு இலங்கும் சிவபெருமானின் கண்களில் பின்னர் நேர இருக்கும் தீங்கினை, தீர்க்க இருக்கும் அழகு வளரும் திண்ண னாரின் திருக்கண்களில் நீர் சொரிந்திட, அதுகண்டு ஓடிவந்த தாய் எடுத்தணைத்துக் கண்ணீராய அம்முத்துக்களை, தன்வாயால் முத்தம் கொடுத்தவாறு மாற்றியும்.

விளக்கவுரை

`தடித்த ஓர் மகனைத் தந்தை ஈண்டடித் தால் தாய் அணைப்பள்` *(திருவருட்பா, 6, பிள்ளைச். பா.1)* என்னும் மரபை இந்நிகழ்வு காட்டுகிறது. கண்ணிலிருந்து வரும் நீராகிய முத்தைத் தனது வாயால் கொள்ளும் முத்தத்தால் மாற்றினள் என்பது மிக அழகிதான காட்சியாகும்.

துடிக்குற டுருட்டி யோடித்
தொடக்குநாய்ப் பாசஞ் சுற்றிப்

பிடித்தறுத் தெயினப் பிள்ளைப்
பேதையர் இழைத்த வண்டல்
அடிச்சிறு தளிராற் சிந்தி
அருகுறு சிறுவ ரோடும்
குடிச்சிறு குரம்பை யெங்கும்
குறுநடைக் குறும்பு செய்து. **#673**

உடுக்குகளின் கட்டைகளை உருட்டி ஓடியும், நாய்களைக் கட்டி வைத்த வார்க்கயிற்றைப் பற்றிப்பிடித்து இழுத்து அறுத்தும், வேட்டுவச் சிறுமியர் விளையாட்டாகச் செய்திடும் சிறுவீடு களைத் தம் தளிர் போலும் மென்மையான அடிகளால் அழித்தும், அருகில் தம்மோடு விளையாடும் வேட்டுவச் சிறுவர்களுடன் அங்குள்ள சிறு குடில்களில் பல சிறு குறும்புகளைச் செய்தும்.

விளக்கவுரை

****

அனையன பலவும் செய்தே
ஐந்தின்மே லான ஆண்டில்
வனைதரு வடிவார் கண்ணி
மறச்சிறு மைந்த ரோடும்
சினைமலர்க் காவு ளாடிச்
செறிகுடிக் குறிச்சி சூழ்ந்த
புனைமருப் புழலை வேலிப்
புறச்சிறு கானிற் போகி. **#674**

இவ்வாறாய பல விளையாடல்களைச் செய்ய, வளர்ந்துற்ற ஆறாம் ஆண்டில், வலையினைப் போன்று வட்டமாகச் சுருக்கிட அமைத்தவாரையும், மயிர்க் கண்ணியையும் எடுத்துக் கொண்டு, வேட்டுவ மைந்தரோடும் கூடி, நல்ல மலர்கள் தோன்றும் கொம்பர்களுடைய சோலையுள் விளையாடியும், அப்பால் தங்கள் சிற்றூரின் எல்லையில் சூழ்ந்திருந்த யானைக் கொம்பினால் செய் தமைத்த வேலியின் புறத்தே உள்ள காட்டினிடத்துச் சென்று.

விளக்கவுரை

உழலை - மக்கள் குறிச்சியிலிருந்து வெளிப்போதுங் கால் அதற்கேற்ப வழிவிட்டும், பின், முன்னைய நிலையில் நின்று, எவ்விலங்குகளும் உள் நுழையாதவாறு காத்தற்குரியதாய் அமைந்து நிற்கவும் அடைத்த வேலி. ஒருவகைச் செடியானியன்ற தொரு வேலி என்பாருமுளர்.

கடுமுயற் பறழி னோடும்
கானஏ னத்தின் குட்டி

கொடுவரிக் குருளை செந்நாய்
கொடுஞ்செவிச் சாப மான
முடுகிய விசையி லோடித்
தொடர்ந்துடன் பற்றி முற்றத்
திடுமரத் தாளிற் கட்டி
வளர்ப்பன எண்ணி லாத. **#675**

மிக வேகமுடன் ஓடும் முயற்குட்டியுடன் காட்டுப் பன்றியின் குட்டியும், வளைந்த காதுகளைஉடைய செந்நாயின் குட்டியும் ஆகிய இவற்றை எல்லாம், தாம் ஓடக்கூடிய கடுகிய விசை யால் ஓடிப் பிடித்து வந்து, தங்கள் முற்றத்தில் உற்ற மரத்தின் அடியில் கட்டி,திண்ணனார் வளர்த்திடும் விலங்கினங்கள் எண்ணிலாதன.

விளக்கவுரை

பறழ் - முயற்குட்டி. பறழ், குட்டி, குருளை, சாபம் என்பன விலங்கு இனங்களின் இளமை குறித்த மரபுப் பெயர்கள் *(தொல். மரபு.1).* இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

அலர்பகல் கழிந்த அந்தி
ஐயவிப் புகையு மாட்டிக்
குலமுது குறத்தி யூட்டிக்
கொண்டுகண் துயிற்றிக் கங்குல்
புலரஊன் உணவு நல்கிப்
புரிவிளை யாட்டின் விட்டுச்
சிலமுறை யாண்டு செல்லச்
சிலைபயில் பருவஞ் சேர்ந்தார். **#676**

கதிரவன் ஒளி அலர்ந்திருக்கும் பகற்பொழுது கழிந்த மாலைக்காலத்தில், அவர் குலத்தில் மூத்தவளாய குறத்தி, திண்ணனாருக்கு வெண்சிறுகடுகின் புகையைச் சுற்றிக் காண்பித்து, அதன்பின் உணவு கொடுத்துத் துயில்வித்துப், பின்னர்ப் பாழுது புலர்ந்ததும், ஊன் உணவு கொடுத்துப், பின்னர் விளையாடச் செய்து, இவ்வாறு சில ஆண்டுகள் சென்றிட, வில்வித்தை பயிலும் பருவத்தை அடைந்தார்.

விளக்கவுரை

பன்னிரண்டு ஆண்டில் வில்வித்தை பயிற்றுவிக்கத் தொடங்குதல் அவர்கள் மரபாகும். மேல் *(பா.674)* திண்ணனாருக்கு ஆறாவது ஆண்டைக் குறித்த ஆசிரியர், அன்பின் அலர் விளையாடிய வகையால் இதுவரை கூறியமை கொண்டு மேலும் ஓர் யாண்டு சென்றிருக்கலாம். அப்பொழுது மேலும் சில முறை யாண்டு செல்ல எனக் குறித்திருப்பது, ஐந்தாண்டுகளின் வளர்ச்சியைக் குறித் தாகும். எனவே அவருக்கு வயது

பன்னிரண்டாயமை அறியலாம்.

தந்தையும் மைந்த னாரை
நோக்கித்தன் தடித்த தோளால்
சிந்தையுள் மகிழப் புல்லிச்
சிலைத்தொழில் பயிற்ற வேண்டி
முந்தையத் துறையின் மிக்க
முதியரை அழைத்துக் கூட்டி
வந்தநாட் குறித்த தெல்லாம்
மறவர்க்குச் சொல்லி விட்டான். **#677**

தந்தை நாகனும், தன் மைந்தன் திண்ணனாரை நோக்கி மகிழ்ந்து, தன் தடித்த தோளினாலே உள்ளம் மகிழ்ந்து கட்டித் தழுவி, வில்வித்தை பயிற்றவேண்டி, முன்னே அவ்வித்தையில் துறை போய முதிர்ந்த முதியோரைத் தன் முன்பு வரவழைத்து, அவருடன் ஆராய்ந்து, வித்தை தொடங்கற்குரிய நாளையும் குறித்து, அப்பயிற்சி குறித்த செய்தியைத் தன்குடியிலுள்ள வேடர்கட்கெல்லாம் அறியுமாறு சொல்லிவிடுத்தான்.

விளக்கவுரை

****

வேடர்தங் கோமான் நாகன்
வென்றிவேள் அருளாற் பெற்ற
சேடரின் மிக்க செய்கைத்
திண்ணன்விற் பிடிக்கின் றான்என்
றாடியல் துடியுஞ் சாற்றி
யறைந்தபே ரோசை கேட்டு
மாடுயர் மலைக ளாளும்
மறக்குலத் தலைவ ரெல்லாம். **#678**

வேடர்கட்கெல்லாம் தலைவனாகிய நாகன், வெற்றிவேற்பெருமான் அருளினால் பெற்ற, அறிஞரின் மிக்க பெருந்திறலுடைய திண்ணன், விற்பிடிக்கப் போகிறான் என்று அனை வரும் அறியுமாறு வெற்றிக்குரிய உடுக்கை ஒலிப்பித்து அறிவித்த பேரோசை கேட்டு, அருகிலுள்ள உயர்ந்த மலைநாட்டினை ஆளுகின்ற வேடர்குலத் தலைவர்கள் யாவரும்.

விளக்கவுரை

சேடர் - அறிவுடையார். `கலைமலிந்த சீர்நம்பி` *(தி.7 ப.39 பா.2)* எனத் தொகை நூல் குறித்தமையும் காண்க.

மலைபடு மணியும் பொன்னும்
தரளமும் வரியின் தோலும்

கொலைபுரி களிற்றின் கோடும்
பீலியின் குவையும் தேனும்
தொலைவில்பல் நறவும் ஊனும்
பலங்களுங் கிழங்குந் துன்றச்
சிலையுடை வேடர் கொண்டு
திசைதொறும் நெருங்க வந்தார். **#679**

மலையிடத்துள்ள பொருள்களான மணியும் பொன்னுமாகிய இவற்றையும், வேங்கைப் புலியின் தோலையும், கொலை செய்யும் யானைக் கொம்பையும், மயிற்பீலியின் குவை யையும், தேனையும், அளவற்ற பலவகைக் கள்ளையும், இறைச்சி, பழம், கிழங்கு முதலாயவற்றையும், வில் பயிலும் வேடர்கள் எடுத்துக் கொண்டு திரள் திரளாக எவ்விடமும் நெருங்கும்படி வந்தார்கள்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

மல்கிய வளங்கள் எல்லாம்
நிறைந்திட மாறில் சீறூர்
எல்லையில் அடங்கா வண்ணம்
ஈண்டினர் கொணர்ந்தா ரெங்கும்
பல்பெருங் கிளைஞர் போற்றப்
பராய்க்கடன் பலவும் நேர்ந்து
வில்விழா எடுக்க வென்று
விளம்பினன் வேடர் கோமான். **#680**

இங்ஙனமாகக் கொண்டு வரப்பெற்ற வளங்கள் எல்லாம் நிறைந்திடும்படி மாறில்லாத சிறிய உடுப்பூரின் எல்லையில், எங்கும் அடங்காத வண்ணம் வேடர்கள் பொலிவுற ஒன்றுகூடி எடுத்து வந்தனர். அதன்பின்னர், சுற்றத்தார் அனைவரும் பாராட்டத் தெய்வத் திற்கு முதற்கண் செய்யத்தகும் பூசனைகள் யாவும் செய்து, பின்னர் விற்பிடிக்கும் விழாவை நீங்கள் மேற்கொள்ளுங்கள்` என மொழிந்தனன் நாகன்.

விளக்கவுரை

****

பான்மையில் சமைத்துக் கொண்டு
படைக்கலம் வினைஞர் ஏந்தத்
தேனலர் கொன்றை யார்தம்
திருச்சிலைச் செம்பொன் மேரு
வானது கடலின் நஞ்சம்

ஆக்கிட அவர்க்கே பின்னும்
கானஊன் அமுத மாக்கும்
சிலையினைக் காப்புச் சேர்த்தார். #681

விழா எடுத்தற்குரிய முறையில் பணியாளர்கள் வில்லினை ஏந்த, தேன் பொருந்த அலரும் கொன்றையை அணிந்த சிவபெருமானுடைய சிவந்த பொன்மயமான மேருமலையானது முன்னர்ப் பாற்கடலில் மத்தாகக் கடைந்தபோது அவருக்கு நஞ்சை எடுத்து உண்ணும்படி கொடுத்ததற்குத் தீர்வாக, அப்பெருமானுக்குப் பின்னர், இம்மலையின்கண் ஊன் ஆகும் அமுதைக் கொடுக்க இப்பொழுது திண்ணனார் கையில் வில்லாயிற்று எனக் கூறுமாறு அமைந்த அவ் வில்லிற்குக் காப்புக்கட்டினர்.

விளக்கவுரை

மேருமலை, இறைவற்குமுன் நஞ்சு கொடுத்ததற்குத் தீர்வாக, இக்கானத்தில் காணும் இனிய ஊனைத் தருவோம் என வந்தாற் போல, திண்ணனார் கையில் வில் அமைந்திருந்தது எனவே திண்ணனாரிடத்துள்ள வில் மேருமலையென இருந்தது என்பது கருத்தாகின்றது. இவ்வாறு கூறல் தற்குறிப்பேற்ற அணியாம்.

சிலையினைக் காப்புக் கட்டும்
திண்புலி நரம்பிற் செய்த
நலமிகு காப்பு நன்னாள்
நாகனார் பயந்த நாகர்
குலம்விளங் கரிய குன்றின்
கோலமுன் கையிற் சேர்த்தி
மலையுறை மாக்க ளெல்லாம்
வாழ்த்தெடுத் தியம்பி னார்கள். #682

வில்லினைக் காப்புக் கட்டிடுவதற்காகக் கொண்ட திண்மையான புலியின் நரம்பினால் செய்த நலம் மிகுந்த காப்பு நாணினை, குறித்த நன்னாளில் நாகனார் பெற்ற, வேடர்குலம் விளங் கிட வந்து தோன்றிய கரியமலை போன்ற கோலமுடன் விளங்கும் திண்ணனார் கையில் சேர அணிவித்து, அங்கு மலை நாட்டில் வாழும் வேடர் யாவரும் கூடி நின்று வாழ்த்துக்கள் பலவும் எடுத்துக் கூறி மகிழ்ந்தார்கள்.

விளக்கவுரை

****

ஐவன அடிசில் வெவ்வே
றமைத்தன புற்பாற் சொன்றி
மொய்வரைத் தினைமென் சோறு

மூங்கில்வன் பதங்கள் மற்றும்
கைவினை எயின ராக்கிக்
கலந்தவூன் கிழங்கு துன்றச்
செய்வரை யுயர்ப்ப வெங்கும்
கலந்தனர் சினவில் வேடர். **#683**

காப்பணிந்து வாழ்த்தியபின், மலைநெற்சோறும், வேறுவகையாகச் சமைத்த பாலுடன்கலந்த புல்லரிசிச் சோறும், அடர்ந்த மலைபடுபொருளாய தினைமென்சோறும், மூங்கில் அரிசியின் சிறந்த பதங்களுடன் ஆக்கிய சோறும், மற்றும் இவ்வகை யான உணவு வகைகளைக், கைதேர்ந்துள்ள வேடப் பெண்கள் ஆக்கி, அவற்றுடன் ஊன் கலந்த கிழங்குகளும் பெருமளவில் சமைத்துச் செயற்கை மலைபோல் எங்கும் குவித்து வைத்திட, அவ் உணவுகளை இயல்பிலேயே சினமுடைய அவ்வில் வேடர்கள் பலரும் உண்ணக் கூடினார்கள்.

விளக்கவுரை

ஐவனம் - மலை நெல். தண்ணீர் பாய்ச்சுதலின்றி மழை வளத்தாலேயே வளர்ந்திடும் ஒருவகை நெல்.

செந்தினை இடியும் தேனும்
அருந்துவார் தேனில் தோய்த்து
வெந்தஊன் அயில்வார் வேரி
விளங்கனிக் கவளம் கொள்வார்
நந்திய ஈயல் உண்டி
நசையொடும் மிசைவார் வெவ்வே
றந்தமி லுணவின் மேலோர்
ஆயினர் அளவி லார்கள். **#684**

செந்தினை மாவுடன் தேனைக் குழைத்து அருந்து வாரும், தேனில் தோய்த்து வெந்த இறைச்சியினை உண்பாரும், தேனுடன் இனிய விளாம்பழத்தைக் குழைத்து உண்பாரும், ஈசல் உணவை மிகு விருப்புடன் உண்பாரும் ஆக இவ்வாறு தத்தமக்கு ஏற்ற உணவுகளை அருந்துவதில் வல்லவரானார்கள்.

விளக்கவுரை

****

அயல்வரைப் புலத்தின் வந்தார்
அருங்குடி யிருப்பின் உள்ளார்
இயல்வகை உணவி லார்ந்த
எயிற்றியர் எயின ரெல்லாம்

உயர்கதி ருச்சி நீங்க
ஒழிவில்பல் நறவு மாந்தி
மயலுறு களிப்பின் நீடி
வரிசிலை விழவு கொள்வார். #685

அயலாக உள்ள மலைப்பகுதியிலிருந்து வந்தவர் களும், உடுப்பூரில் குடியிருப்பாய் உள்ளவர்களும், தங்கள் இயல்பிற்கேற்ற வகையால் சமைக்கப் பெற்ற உணவினை உண்டு மகிழ்ந்த எயிற்றியரும் ஆக அனைவரும், வானில் உயரநின்ற கதிரவன், உச்சி நீங்கிய பிற்பகல் வேளையில், நிரம்ப இருந்த பலவகைக் கள்ளையும் குடித்து, அதனால் மயங்கும் களிப்பால் பெருகி, வில்விழாவைக் கொண்டாடுபவர்களாய்.

விளக்கவுரை

****

பாசிலைப் படலை சுற்றிப்
பன்மலர்த் தொடையல் சூடிக்
காசுடை வடத்தோல் கட்டிக்
கவடிமெய்க் கலன்கள் பூண்டு
மாசில்சீர் வெட்சி முன்னா
வருந்துறைக் கண்ணி சூடி
ஆசில்ஆ சிரியன் ஏந்தும்
அடற்சிலை மருங்கு சூழ்ந்தார். #686

பசிய இலைகளால் இழைத்த ஆடைபோலும் தழையைத் தன் மேனியில் சுற்றி அணிந்து, அதன்மேல் நல்ல பல வகைப் பூக்களின் மாலைகளை அணிந்து, அதன்மேல் காசின் மணிகள் பதித்த தோலினாலாய வடத்தைக் கட்டி, மணிகள் கோர்க்கப்பெற்ற கவடி எனப்படும் மாலையை மார்பில் அணிந்து, குற்றம் இல்லாத சிறப் புடைய வெட்சி முதலாக, ஆசிரியன் அணிவதற்கு ஏற்ற கண்ணிகளைச் சூடிய இந்தக் கோலம்கொண்டு, திண்ணனாருக்கு வில்வித்தை கற்பிப் பதற்கு உரிய குற்றமில்லாத ஆசிரியன், ஏந்திய அடல் கொண்ட வில்லின் மருங்காக வேடர்கள் வந்து சூழ்ந்தனர்.

விளக்கவுரை

திண்ணனாருக்கு வில்வித்தை பயிற்றுவிக்கும் ஆசிரியன் கொண்ட கோலம் இதுவாம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

தொண்டக முரசும் கொம்பும்
துடிகளுந் துளைகொள் வேயும்
எண்திசை நிறைந்து விம்ம
எழுந்தபே ரொலியி னோடும்

திண்திறல் மறவ ரார்ப்புச்
சேண்விசும் பிடித்துச் செல்லக்
கொண்டசீர் விழவு பொங்கக்
குறிச்சியை வலங்கொண் டார்கள். **#687**

பின் அவ்வேடர்கள், தொண்டகப் பறையும், கொம்பு வாத்தியமும், உடுக்குகளும், துளைகளையுடைய மூங்கில் குழலும் ஆய இவ்விசைக் கருவிகள் முழக்கம் செய்திட, எழுந்த பேரோசை எல்லாம் எட்டுத்திக்கிலும் நிறைந்து விம்மிட, அவ் ஓசை யுடன் திண்மையான வலியுடைய வேடர் ஒலித்திடும் ஓசை, உயர்ந்த வானையும் முட்டிச் செல்ல, இத்தகைய சீர் கொண்டவிழா பொங்கிடத் தமது குறிச்சியை வலங்கொண்டார்கள்.

விளக்கவுரை

****

குன்றவர் களிகொண் டாடக்
கொடிச்சியர் துணங்கை யாடத்
துன்றிய மகிழ்ச்சி யோடும்
சூரர மகளி ராட
வென்றிவில் விழவி னோடும்
விருப்புடை ஏழாம் நாளின்
அன்றிரு மடங்கு செய்கை
அழகுற அமைத்த பின்றை. **#688**

வேடர்கள் மகிழ்ச்சி கொண்டு கூத்தாட, எயிற்றியர்கள் துணங்கைக் கூத்தாட, இதுகண்டு பெரு மகிழ்ச்சியால் அச்சம் தருகின்ற தெய்வங்கள் ஆடிட, இத்தகையதான மகிழ்ச்சிமிக வெற்றியை யுடைய வில்லேந்தி, நகர்வலம் வரும் விழாவினை ஆறு நாள்கள் வரை கொண்டாடிய பின், ஏழாவது நாளின்கண், முன்னாள் களிலும் மேம்படச் சிறப்பும் களிப்பும் கொண்டு, அன்றைய விழாவிற்கு என அழகுற அமைத்த பின்பு.

விளக்கவுரை

****

வெங்கதிர் விசும்பின் உச்சி
மேவிய பொழுதில் எங்கும்
மங்கல வாழ்த்து மல்க
மருங்குபல் லியங்க ளார்ப்பத்
தங்கள்தொல் மரபின் விஞ்சைத்
தனுத்தொழில் வலவர் தம்பால்
பொங்கொளிக் கரும்போர் ஏற்றைப்

பொருசிலை பிடிப்பித் தார்கள். #689

வெய்ய கதிரவன் உச்சியில் வரும் நல் வேளையில், மங்கலமாய வாழ்த்துக்கள் எங்கும் பெருகி விளங்க, அருகில் பல இன்னியங்கள் முழங்க, தாங்கள் வழிவழியாகக் கற்று வந்த வில் தொழில் வித்தையில் வல்ல வீரர்களிடமாக, ஒளிமிகும் கரிய மேனியையுடைய அரியேறனைய திண்ணனாரைப் போரிடக் கொல்லும் வில்லை அவர் கைக் கொடுத்து ஒப்பற்ற வில்லினைப் பிடிப்பித்தார்கள்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பொற்றட வரையின் பாங்கர்ப்
புரிவுறு கடன்முன் செய்த
விற்றொழிற் களத்தில் நண்ணி
விதிமுறை வணங்கி மேவும்
அற்றைநாள் தொடங்கி நாளும்
அடற்சிலை யாண்மை முற்றக்
கற்றன ரென்னை யாளும்
கானவர்க் கரிய சிங்கம். #690

என்னை ஆளுகின்ற வேடர்குலச் சிங்கமாய திண்ணனார், விருப்பம் மிக அமைந்த மலையின் புறத்து, விற்பயில் வதற்கமைந்த ஏற்பாடுகளை முன் செய்து வைத்த களத்தில் சென்று, ஆசிரியனையும் கடவுளையும் முறைமையால் வணங்கி, விற்பயிலத் தொடங்கும் அன்றைய நாள் தொடக்கமாக, நாள்தோறும் வலியுடைய போர் வில்லைக் கைக்கொள்ளும் வீரம் முதிர்ந்து, தெளிவுற வில் வித்தை கற்றனர்.

விளக்கவுரை

கானவர்க்கு அரிய - வேடர்குலத்திற்குக் கிடைத் தற்கரிய.

வண்ணவெம் சிலையு மற்றப்
படைகளும் மலரக் கற்றுக்
கண்ணகன் சாயல் பொங்கக்
கலைவளர் திங்க ளேபோல்
எண்ணிரண் டாண்டின் செவ்வி
எய்தினார் எல்லை யில்லாப்
புண்ணியந் தோன்றி மேன்மேல்
வளர்வதன் பொலிவு போல்வார். #691

இவ்வாறு அழகிய கொடிய விற்பயிற்சியையும், பிறபடைகளின் பயிற்சியையும் சிந்தை மலரத் தெளிவுடன் கற்று, தமது மேனியின் வனப்புச் சிறந்து அழகுடன் அகன்று பழுத்த முழு அழகு பெற்றிட, நாள்

தோறும் கலைவளர்ந்த திங்கள் எனப் பதினாறாவது ஆண்டைப் பெற்றார் திண்ணனார். இவ்வளர்ச்சி எல்லையிலாத புண்ணியம் இவர் வடிவாகத் தோன்றி மேன்மேல் வளர்வதன் பொலிவு போல அமைந்தது.

விளக்கவுரை

மேல் *(பா.676)* விற்பயிற்சி பன்னிரண்டாவது ஆண்டில் தொடங்கியமையைக் குறிப்பால் உணர்த்திய ஆசிரியர், ஈண்டுப் பதினாறாவது ஆண்டில் நிறைவுற்றமையை வெளிப்படையாகத் தெரிவித்திருத்தலின் விற்பயிற்சிக்குரிய காலம் நான்காண்டு என அறியலாம்.

இவ்வண்ணந் திண்ணனார் நிரம்பு நாளில்
இருங்குறவர் பெருங்குறிச்சிக் கிறைவ னாய
மைவண்ண வரைநெடுந்தோள் நாகன் தானும்
மலையெங்கும் வனமெங்கும் வரம்பில் காலம்
கைவண்ணச் சிலைவேட்டை யாடித் தெவ்வர்
கணநிரைகள் பலகவர்ந்து கானங் காத்து
மெய்வண்ணந் தளர்மூப்பின் பருவ மெய்தி
வில்லுழவின் பெருமுயற்சி மெலிவா னானான். **#692**

இவ்வண்ணமாகத் திண்ணனார் பருவம் நிரம்பிய காலத்தில், வலிய வேடருடைய பெருங் குறிச்சிக்குத் தலைவனாய, கறுத்த மலையை ஒத்த நெடுந் தோள்களையுடைய நாகன் என்பானும், மலைகளிலும் காடுகளிலுமாக அளவிறந்த காலமாகக் கைவன்மை யால் வேட்டையாடிப் பகைவருடைய பசு நிரைகள் பலவற்றைக் கவர்ந்து, நாட்டைக் காத்து, தனது உடல் தளரும் படியான மூப்பின் பருவத்தை அடைந்து, வில்லால் வாழும் அத்தொழிலின் பெருமுயற்சி இனிக் கூடாத நிலை வந்தடையப் பெற்று, அம்முயற்சியில் குன்றியவ னாயினான்.

விளக்கவுரை

****

அங்கண்மலைத் தடஞ்சாரற் புனங்க ளெங்கும்
அடலேனம் புலிகரடி கடமை ஆமா
வெங்கண்மரை கலையொடுமான் முதலா யுள்ள
மிருகங்கள் மிகநெருங்கி மீதூர் காலைத்
திங்கள்முறை வேட்டைவினை தாழ்த்ததென்று
சிலைவேடர் தாமெல்லாம திரண்டு சென்று
தங்கள்குல முதற்றலைவ னாகி யுள்ள
தண்தெரியல் நாகன்பால் சார்ந்து சொன்னார். **#693**

அந்நிலையில், அங்குள்ள மலைகளின் பரந்த பக்கங்களிலும், பயிர்

விளையும் காடுகளிலுமாக எங்கும் கொடிய பன்றி, புலி, கரடி. காட்டுப்பசு, காட்டெருது, கொடுங்கண்ணுடைய மரை, கலைமான் ஆகிய இவைமுதலாக உள்ள விலங்குகள் மிகவும் நெருங்கிப் பெருமளவில் வந்து அழிவு செய்திட, அதுகண்டு, திங்கள் தோறும் செய்திடும் முறையான வேட்டையின் தொழில் இம்முறை தாழ்த்தமையின் இந்நிலை நேர்ந்ததென்று அங்குள்ள வில்லேந்திய வேடர்கள் அனைவரும் திரண்டு, தங்கள் குலத்தின் தலைவனாக வுள்ள நல்ல மாலை சூடிய நாகன்பால் அடைந்து, இவ்வழிவு பற்றிச் சொன்னார்கள்.

விளக்கவுரை

****

சொன்னவுரை கேட்டலுமே நாகன் தானும்
சூழ்ந்துவருந் தன்மூப்பின் தொடர்வு நோக்கி
முன்னவர்கட் குரைசெய்வான் மூப்பி னாலே
முன்புபோல் வேட்டையினின் முயல கில்லேன்
என்மகனை உங்களுக்கு நாத னாக
எல்லீருங் கைக்கொண்மி னென்ற போதில்
அன்னவரு மிரங்கிப்பின் மகிழ்ந்து தங்கோன்
அடிவணங்கி இம்மாற்றம் அறைகின் றார்கள். **#694**

இவ்வாறுகூறியவற்றைக் கேட்டலுமே நாகன் தானும், தன்னைப்பற்றி வரும் தன் மூப்பின் தொடர்ச்சியினை நோக்கி, சொன்ன அவர்க்கு முன்னாகச் சொல்வான், `என் மக்களே! மூப்பி னால் நான் முன்பு போலச் செப்பமாக வேட்டையினில் முயற்சி கொள்ள இயலாதாயிற்று. ஆதலின் என் மகன் திண்ணனை உங்கட்குத் தலைவனாக எல்லீரும் ஏற்றுக் கொள்ளுங்கள்` என, அது கேட்ட அவ்வேடர்களும் அவன் நிலை கண்டு இரங்கினர், எனினும் திண்ண னாரைத் தலைவராகக் கொள்ளும் பேற்றால் பெரிதும் மகிழ்ந்து தம் தலைவன் நாகன் அடி பணிந்து இம் மாற்றத்தைக் கூறுவார்களாய்.

விளக்கவுரை

திரண்ட தோளினன் இப்படிச் செப்பலும் சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய உவகையர் ஆங்கே
வெருண்டு மன்னவன் பிரிவெனும் விம்முறு துயரால்
இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆவென இருந்தார்.
*(கம்பரா. அயோத். மந்திரப். 31)*எனவரும் கம்பர் வாக்கும் ஈண்டு நினைவு கூரலாம்.

இத்தனைகா லமும்நினது சிலைக்கீழ்த் தங்கி

இனிதுண்டு தீங்கின்றி இருந்தோம் இன்னும்
அத்தநின தருள்வழியே நிற்ப தல்லால்
அடுத்தநெறி வேறுளதோ அதுவே யன்றி
மெய்த்தவிறல் திண்ணனைஉன் மரபில் சால
மேம்படவே பெற்றளித்தாய் விளங்கு மேன்மை
வைத்தசிலை மைந்தனைஈண் டழைத்து நுங்கள்
வரையாட்சி யருளென்றார் மகிழ்ந்து வேடர். **#695**

`இத்துணைக் காலமும் உனது வில்லாட்சியின் கீழ் நாங்கள் தங்கி இனிதுண்டு தீங்கின்றி இருந்தோம். இன்னமும் எம் ஐயனே! நீ எமக்கு ஆணையிட்டருளும் அருள்வழியே நிற்பதல்லாது அடுத்த ஒரு செயல் எமக்கு உளதோ? இதுவே அல்லாமல், மிகுவிறல் பூண்ட திண்ணனாரை உனது மரபில் மிகவும் மேம்படவே பெற்றுத் தந்திருக்கின்றாய், விளங்கிடும் மேன்மை கொண்ட வில்வீரனான உன்மைந்தனை இவ்விடத்து நீ அழைத்து, உங்கள் மலைநாட்டு அரசாட்சிப் பொறுப்பை முறைப்படி கொடுத்திடுவாய்` என்றனர் மகிழ்வு கொண்ட அவ்வேடர்கள்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

சிலைமறவ ருரைசெய்ய நாகன் தானும்
திண்ணனைமுன் கொண்டுவரச் செப்பி விட்டு
மலைமருவு நெடுங்கானிற் கன்னி வேட்டை
மகன்போகக் காடுபலி மகிழ வூட்டத்
தலைமரபின் வழிவந்த தேவ ராட்டி
தனையழைமின் என அங்குச் சார்ந்தோர் சென்று
நிலைமையவள் தனக்குரைப்ப நரைமூ தாட்டி
நெடிதுவந்து விருப்பினொடுங் கடிது வந்தாள். **#696**

வில்மறவர்கள் இவ்வாறு கூறக்கேட்ட நாகன் என்பானும், திண்ணனாரைத் தன் முன்பு கொண்டு வருமாறு கூறிவிட்டு, அதன்பின்பு, அங்கு நின்றார் சிலரைநோக்கி, மலையிட மாகப் பொருந்திய நெடிய காட்டில் தன் மகன் கன்னி வேட்டையாடப் போதற்கு, அக்காட்டிலுள்ள தெய்வங்கள் மகிழ்வுறுமாறு பலியூட்ட வேண்டி, அதனைப் புரிகின்ற தங்கள் குலத்தலைமை அமைந்த தேவ ராட்டியை அழையுங்கள்` எனலும், அதுகேட்ட வீரர்களும் அப் பெருமாட்டியிடத்துச் சென்று, அந்நிலையைஎடுத்துக் கூறிடலும், நரை யுடைய அம்மூதாட்டியும் பெரிதும் மகிழ்ந்து, விருப்பத்துடன் விரை வில் வந்தாள்.

விளக்கவுரை

****

கானில்வரித் தளிர்துதைந்த கண்ணி சூடிக்
கலைமருப்பின் அரிந்த குழை காதிற் பெய்து
மானின்வயிற் றரிதாரத் திலக மிட்டு
மயிற் கழுத்து மனவுமணி வடமும் பூண்டு
தானிழிந்து திரங்கிமுலை சரிந்து தாழத்
தழைப்பீலி மரவுரிமேற் சார வெய்திப்
பூநெருங்கு தோரைமல சேடை நல்கிப்
போர்வேடர் கோமானைப் போற்றி நின்றாள். **#697**

காட்டில் உள்ள பசுந் தளிர்களுடன் மலர்க் கண்ணி களும் சேரக்கட்டிய மாலையைச் சூடி, கலைமான் கொம்பிலிருந்து அரிந்து எடுத்து வளையமாகச் செய்த தோட்டைக் காதில் அணிந்து, மானின் வயிற்றினின்றும் எடுக்கப் பெற்ற அரிதாரத்தால் பொட்டிட்டு, மயிற்கழுத்துப் போன்ற வட்டமான நிறம்பொருந்திய சங்கு மணி வடமும் கழுத்தில் அணிந்து, மார்பகம் சுருங்கித் தாழ, இலையின் தழையும் மரப் பட்டையும் மயில் இறகும் சேரக் கொண்ட ஆடையை இடுப்பில் அணிந்து, வந்தவளாகிய தேவராட்டி, நாகன் முன் வந்து, மலர்கள் நிறைந்த நெல்லோடு கூடிய அரிசியைக் கொடுத்து, வேடர் தலைவனாய நாகனை அப்பெருமாட்டி வணங்கி நின்றாள்.

விளக்கவுரை

தோரை - மலைநெல். சேடை -ஆசிவழங்கும் முழு மணியான அரிசி (அட்சதை என்பர்).

நின்றமுது குறக்கோலப் படிமத் தாளை
நேர்நோக்கி அன்னைந நிரப்பு நீங்கி
நன்றினிதி னிருந்தனையோ என்று கூறும்
நாக னெதிர் நலம்பெருக வாழ்த்தி
நல்ல மென்தசையும் ஈயலொடு நறவும் வெற்பில்
விளைவளனும் பிறவளனும் வேண்டிற் றெல்லாம்
அன்றுநீ வைத்தபடி பெற்று வாழ்வேன்
அழைத்தபணி என்னென்றாள் அணங்கு சார்ந்தாள். **#698**

வணங்கி நிற்கும் முதிய தேவராட்டியைப் பார்த்து, \`அன்னையே! நீ வறுமை இன்றி என்றும் நன்றாக வாழ்கின்ற னையோ!\` எனக் கேட்கும் நாகன் முன்பு, அவன்பால் நலமெல்லாம் பெருகும்படி வாழ்த்தி,\`எனக்கு வேண்டிய மெல்லிய இறைச்சியும், ஈசல்களின் புழுக்கலும், தேனும், மலையிடத்து விளையும் பொருளும், இன்ன பிற பொருள்களும் எல்லாம்

எனக்கு இன்னவகையாகக் கொடுத்திட வேண்டுமென்று நீ சொல்லியவாறு நான் பெற்று வாழ்வேன்! அது நிற்க! இப்போது என்னை இங்கு அழைத்த பணியாது?`` எனக் கேட்டாள் அத்தேவராட்டி.

விளக்கவுரை

******

கோட்டமில்என் குலமைந்தன் திண்ணன் எங்கள்
குலத்தலைமை யான்கொடுப்பக் கொண்டு பூண்டு
பூட்டுறுவெஞ் சிலைவேடர் தம்மைக் காக்கும்
பொருப்புரிமை புகுகின்றான் அவனுக் கென்றும்
வேட்டைவினை யெனக்குமே லாக வாய்த்து
வேறுபுலங் கவர்வென்றி மேவு மாறு
காட்டிலுறை தெய்வங்கள் விரும்பி உண்ணக்
காடுபலி ஊட்டென்றான் கவலை யில்லான். **#699**

நடுவுநிலைமையினின்றும் பிறழாத என்குல மைந்தன் திண்ணன், எங்கள் குலத்தின் தலைமைப் பொறுப்பை நான் கொடுப்ப அதனையேற்று, வாரில் நாண் பூட்டிய வில்லைக் கைக் கொண்ட வேடர்களைக் காக்கும் மலைநாட்டரசு உரிமையைப் பெறு கின்றான். அவனுக்கு என்றும் வேட்டைச் செயல் எனக்கு மேலாக வாய்க்குமாறும், அயலிடங்களிலுள்ள பகைவரை வெற்றி கொள்ளு மாறும் `அருள்புரிந்திடக் காட்டில் உள்ள தெய்வங்கட்கு நல்ல பலி களை நீ கொடுப்பாயாக` என்றான், கவலை என்பதில்லாத நாகன்.

விளக்கவுரை

கோட்டம் - நடுவுநிலைமையினின்றும் பிறழ்தல். `கோவினுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது` *(தி.4 ப.11 பா.2)* எனவரும் திருவாக்கும் காண்க.

மற்றவன்தன் மொழிகேட்ட வரைச்சூ ராட்டி
மனமகிழ்ந்திங் கன்போடு வருகின் றேனுக்
கெற்றையினுங் குறிகள்மிக நல்ல வான
இதனாலே உன்மைந்தன் திண்ண னான
வெற்றிவரிச் சிலையோன்நின் அளவி லன்றி
மேம்படுகின் றான்என்று விரும்பி வாழ்த்திக்
கொற்றவன தெய்வங்கள் மகிழ வூட்ட
வேண்டுவன குறைவின்றிக் கொண்டு போனாள். **#700**

நாகனுடைய கருத்தைக் கேட்ட தேவராட்டியும், மனமகிழ்ந்து, அன்புடன் வந்த எனக்கு, எந்நாளிலும் இல்லாத நல் நிமித்தங்கள் பல காணப்பட்டன, இதனால் நின்மகன் திண்ணன் நின்னளவில் அன்றிமிக

மேம்படுகின்றான் என்று வாழ்த்தி, வெற்றி விளைவிக்கும் காட்டுத் தெய்வங்கள் மகிழுமாறு பலிகொடுத்தற்கு வேண்டிய பொருள்களைக் குறைவின்றிப் பெற்றுக் கொண்டு போயினாள்

விளக்கவுரை

****

தெய்வநிகழ் குறமுதியாள் சென்ற பின்பு
திண்ணனார் சிலைத்தாதை அழைப்பச்சீர்கொள்
மைவிரவு நறுங்குஞ்சி வாசக கண்ணி
மணிநீல மலையொன்று வந்த தென்னக்
கைவிரவு சிலைவேடர் போற்ற வந்து
காதல்புரி தாதைகழல் வணங்கும் போதில்
செவ்வரைபோல் புயமிரண்டுஞ் செறியப் புல்லிச்
செழும்புலித்தோ லிருக்கையின்முன் சேர வைத்தான். **#701**

தெய்வம் ஏறுதற்குரிய தேவராட்டியார் சென்ற பின்பு, திண்ணனார் வில் ஏந்திய தந்தையாய நாகன் அழைத்திட, சிறப் புடைய கரிய நறுமணமாலையையும், சிறந்த கரிய குடுமியினையும், உடைய நீலமலையொன்று வந்தது என்ன, வில்லுடைய வேடர் போற்றிட வந்து, நாகனின் கழலடிகளை வணங்கும் பொழுதில், நாகன், திண்ணனாரை அன்புடன் கையால் அணைத்தெடுத்து, செப்ப முடைய இரண்டுமலை போலும் தோள்களுடன் இறுக அணைத்து, தான்இருக்கும் இடத்து முன்பு உள்ள செழுமையான புலித்தோல் இருக்கையின் மீதுசேர இருத்தினான்.

விளக்கவுரை

வேடர்போற்ற வருவதும், தோளைப் புல்லித்தன்முன் ஒப்ப இருத்துவதும் வினைக்குரிமை நாடிய பின்றை அதற்குரியனாகச் செய்யும் அருமைப்பாடாம்.

நலங்கொள் மைந்தனைத் தழுவினன் என்பது என்? நளிநீர்
நிலங்கள் தாங்குறு நிலையினை நிலையிட நினைந்தான்
விலங்க லன்னதிண் டோளையுமெய்த்திரு விருக்கும்
அலங்கல் மார்பையும் தனது தோள் மார்பு கொண்டளந்தான்.

*(கம்ப. அயோ. மந்.59)*எனவரும் கம்பர் வாக்கையும் நினைவு கூர்க.

முன்னிருந்த மைந்தன்முகம் நோக்கி நாகன்
மூப்பெனைவந் தடைதலினால் முன்பு போல
என்னுடைய முயற்சியினால் வேட்டை யாட
இனிஎனக்குக் கருத்தில்லை எனக்கு மேலாய்
மன்னுசிலை மலையர்குலக் காவல் பூண்டு

மாறெறிந்து மாவேட்டை யாடி என்றும்
உன்னுடைய மரபுரிமை தாங்கு வாயென்
றுடைதோலும் சுரிகையுங்கைக் கொடுத்தா னன்றே. **#702**

நாகன், தன் முன்இருந்த தன் மைந்தனின் முகம் நோக்கி, `மூப்பு என்னை வந்து அடைந்து கொண்டமையால் முன் போல என் ஆற்றலுடன் விளங்கவும், அதுகொண்டு இனி வேட்டை யாடவும், எனக்கு எழுச்சியில்லை; எனக்கும் மேலாக இவ்வில்மறவர் குலத்தின் காவல் பொறுப்பை நீ ஏற்றுப் பகைவரை அழித்து,தீய விலங்குகளையும் பெரு வேட்டையாடி வென்று, உன் மரபுரிமை யாகிய தலைமையை நீ தாங்கிக் கொள்வாய், என மொழிந்து, தலைமைப் பொறுப்பிலுள்ளார் கொண்டு விளங்குதற்குரிய உடை தோலையும், வாளையும் தந்தனன்.

விளக்கவுரை

உன்னுடைய மரபுரிமை என்பது `ஐம்புல வேடரின் வளர்ந்து அயரும் நிலை நீங்கி, நின்தவத்தினால் உணரவிருக்கும் குருமொழிவரும் மரபைத் தாங்குவாய்` எனும் பொருள்படவும் நின்றது.

தந்தைநிலை உட்கொண்டு தளர்வு கொண்டு
தங்கள்குலத் தலைமைக்குச் சார்வு தோன்ற
வந்தகுறை பாடதனை நிரப்பு மாறு
மனங்கொண்ட குறிப்பினால் மறாமை கொண்டு
முந்தையவன் கழல்வணங்கி முறைமை தந்த
முதற்சுரிகை உடைதோலும் வாங்கிக் கொண்டு
சிந்தைபரங் கொளநின்ற திண்ண னார்க்குத்
திருத்தாதை முகமலர்ந்து செப்பு கின்றான். **#703**

தந்தையின் நிலையைத் திண்ணனார் மனத்தில் கொண்டு, அதனால் தம் மனத்தில் கவலை கொண்டு, பின்னர்த் தந்தை யின் தளர்வால் தங்கள் குலத்தலைமைக்கு வந்த குறைபாட்டை நிரப்ப வேண்டும் என்று மனத்தில் கொண்ட குறிப்பால், அப்பொறுப்பினை மறாது ஏற்றுக் கொண்டு, முன்னாகத் தந்தையின் திருவடிகளை முறைப்படி வணங்கி, முறைமையால் அவன் கொடுக்கும் சுழல் வாளையும் உடைத்தோலையும் வாங்கிக் கொண்டு, உளத்தில் அரசியல் பளுவைக் கொண்ட திண்ணனார்க்கு, சிறந்த தந்தையாகிய நாகன், மகன் நிலைகண்டு முகமலர்ந்து இதனைச் சொல்லுகின்றான்.

விளக்கவுரை

இனிச் `சிந்தை பரங்கொள நின்ற திண்ணனார்க்கு` என்பதற்குச் சிந்தையில் திருவருள் மீதூர நின்ற திண்ணனார்க்கு எனப் பொருள் கோடலும் ஒன்று. `காதல் உற்றிலன்,இகழ்ந்திலன் கடன் இது

என்றுணர்ந்தும், யாது கொற்றவன் ஏவியது அது செயலன்றோ நீதி எற்கு என நினைந்தும், அப் பணி தலை நின்றான்` *(கம்ப. அயோ. மந்.69)* எனவரும் கம்பர் திருவாக்கினையும் நினைவு கூர்க.

நம்முடைய குலமறவர் சுற்றத் தாரை
நான்கொண்டு பரித்த தன்மேல் நலமே செய்து
தெம்முனையி லயற்புலங்கள் கவர்ந்து கொண்டு
திண்சிலையின் வளமொழியாச் சிறப்பின் வாழ்வாய்
வெம்முனையின் வேட்டைகளும் உனக்கு வாய்க்கும்
விரைந்துநீ தாழாதே வேட்டை யாட
இம்முரண்வெஞ் சிலைவேடர் தங்க ளோடும்
எழுகவென விடைகொடுத்தான் இயல்பில் நின்றான். **#704**

`நம் குலத்து வேடர்கள், சுற்றத்தவர்கள் ஆகி யோரை நான் தாங்கிவந்த அத்தன்மையின் மேலாக, நீ நல்லனவே செய்து, கொடிய பகைமுனையில் வரும் பகைவர்களை வென்று, அயலில் உள்ள இடங்களை வெற்றி கொண்டு, எக்காலமும் குறைவில்லாத சிறப்பில் நீ வாழ்வாயாக! விரும்பத்தக்க வேட்டை முனையில் வேட்டைகளும் உனக்கு நன்கு வாய்க்கும். விரைந்து வேட்டையாட இந்த வலிய கொடியவில் வேடர்களுடன் எழுவாயாக` என விடை கொடுத்தான், மகனைச் சிறந்த தலைவனாக ஆக்கும் அவ்வியல்பில் நின்ற நாகன்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

செங்கண்வயக் கோளரியே றன்ன திண்மைத்
திண்ணனார் செய்தவத்தின் பெருமை பெற்ற
வெங்கண்விறல் தாதைகழல் வணங்கி நின்று
விடைகொண்டு புறம்போந்து வேட ரோடும்
மங்கலநீர்ச் சுனைபடிந்து மனையின் வைகி
வைகிருளின் புலர்காலை வரிவிற் சாலைப்
பொங்குசிலை அடல்வேட்டைக் கோலங் கொள்ளப்
புனைதொழிற்கை வினைஞருடன் பொலிந்து புக்கார். **#705**

சிவந்த கண்களையுடைய வீரமுடைய ஆண் சிங்கம்போலும் வலிமையுடைய திண்ணனார், தம்மைப் பெறுதற்குரிய பெருந் தவத்தினையுடைய, வலிமை மிகுந்த சிறந்த தந்தையின் கழல்களை வணங்கி, விடைபெற்றுக் கொண்டு, வெளியே வந்து, வேடருடன் வேட்டையாடப் புறப்படுதற்கு முன்னாக, மங்கலமுடைய சுனைநீரில் நீராடித், தம் மனையில் அன்று இரவு தங்கி, இரவு விடிகின்ற காலைப் பொழுதில், வரியையுடைய வில் இருக்கும் படைக்கலக் கொட்டிற்குச் சென்று, அங்குப் பொங்கும் வில்லாண்மை சிறந்திடும் கொலையுடைய

வேட்டையாடற்குரிய கோலத்தைக் கொண்டிட, கைவன்மை உடைய வில் தொழிலாளருடன் மகிழ்ந்து புகுந்தார்.

விளக்கவுரை

****

நெறிகொண்ட குஞ்சிச் சுருள்துஞ்சி நிமிர்ந்து பொங்க
முறிகொண்ட கண்ணிக்கிடை மொய்யொளிப் பீலி சேர்த்தி
வெறிகொண்ட முல்லைப் பிணைமீது குறிஞ்சி வெட்சி
செறிகொண்ட வண்டின்குலம் சீர்கொளப் பின்பு செய்து. **#706**

இயல்பாகச் சுருண்டிருக்கும் அவர் கூந்தலின் சுருள், நிமிர்ந்து பொலிவுறும்படி மேலே உச்சிக் கொண்டையாகத் தூக்கிக் கட்டி, அதன்மீது தளிர்களையும் மலர்க்கண்ணிகளையும் சேர்த்துக் கட்டிய மாலையை அணிந்து, அதற்கிடையே சிறந்த ஒளி யுடைய ஒரு மயிற்பீலியைச் செருகி, பின்னர் அவற்றின் கீழாக வாசனையுடைய முல்லை மாலையுடன் குறிஞ்சிப் பூவையும் வெட்சிப் பூவையும்,அவற்றின்மீது நிறைந்த வண்டின் கூட்டம் தேன் பொருட்டாக மொய்க்குமாறு சிறப்புறக் கொண்டை மாலையாகக் கட்டி.

விளக்கவுரை

****

முன்னெற்றி யின்மீது முருந்திடை வைத்த குன்றி
தன்னிற்புரி கொண்ட மயிர்க்கயி றாரச் சாத்தி
மின்னிற்றிகழ் சங்கு விளங்குவெண் டோடு காதின்
மன்னிப்புடை நின்றன மாமதி போல வைக. **#707**

முன் நெற்றியில், மயில் இறகின் அடியில், குன்றி மணிகளை இடை இடையே வைத்துச் சேரக்கட்டிய அழகுடைய மயிர்க்கற்றையை நெற்றியில் பொலிவுபெறச் சாத்தி, மின்னல் போல் ஒளிரும் சங்கினால் செய்து விளங்குகின்ற வெண்மையான தோடு காதின்புறத்தே இருநிறை நிலாக்கள் போல் பொலிவெய்த அணிந்து,

விளக்கவுரை

****

கண்டத்திடை வெண்கவ டிக்கதிர் மாலை சேரக்
கொண்டக்கொடு பன்மணி கோத்திடை ஏனக் கோடு
துண் டப்பிறை போல்வன தூங்கிட வேங்கை வன்தோல்
தண்டைச்செயல் பொங்கிய சன்னவீ ரந்த யங்க. **#708**

திருக்கழுத்தில், வெள்ளை நிறமான பலகறை களாலாய ஒளியுடைய மாலையைப் பொருந்த அணிந்து, சங்கு மணிகளோடு பலவகை மணிகளைக்கோர்த்து அவற்றின் இடை யிடையே பன்றிக் கொம்புகளை

இளம்பிறைத் துண்டங்கள் எனத் தொங்கவைத்து, அவற்றை வேங்கைப் புலியின் தோல் மேலாகப் பதித்து, தட்டை வடிவினதாக அமையப் பெற்ற சன்னவீரம் எனும் அணி சிறப்புடன் அமைய.

விளக்கவுரை

சன்னவீரம் - அரசர்கள் தம் வெற்றிக் குரிய மாலையாக அணிவது.

மார்பிற்சிறு தந்த மணித்திரள் மாலை தாழத்
தாரிற்பொலி தோள்வல யங்கள் தழைத்து மின்னச்
சேர்விற்பொலி கங்கண மீது திகழ்ந்த முன்கைக்
கார்விற்செறி நாணெறி கைச்செறி கட்டி கட்டி. **#709**

மார்பினிற் சிறிய யானைக் கொம்பின் முத்துக்களாலாய மணிமாலை சிறந்திடத், தோள்களில் மாலைகளால் பொலிவெய்தும் வாகு வலயங்கள் ஒளிதழைத்து மின்னிட, அழகிய ஒளி திகழும் காப்புக்கள் அணியப் பெற்று விளங்கிடும் முன் கையில், மழைமேகம் போல் அம்பு சொரியும் வில்லின் நாணினைப் பற்றிடும் கோதையைக் கட்டி.

விளக்கவுரை

கோதை - வில்லில் நாண் ஏற்றி இழுத்துச் சுண்டு தலால் விரல்கள் காயமடையாது கையில் பாதுகாப்பாக அணியும் உறைகள்.

அரையிற்சர ணத்துரி யாடையின் மீது பௌவத்
திரையிற்படு வெள்ளல கார்த்து விளிம்பு சேர்த்தி
நிரையிற்பொலி நீளுடை தோல்சுரி கைப்பு றஞ்சூழ்
விரையிற்றுவர் வார்விசி போக்கி அமைத்து வீக்கி. **#710**

திருவரையில் மயிற்பீலியமைந்த புலித்தோல் ஆடையை உடுத்தி, அதன் மேலாகக் கடலின் நீர்க் குமிழிகள் போன்ற முத்துக்கள் விளிம்பில் பதித்த நீண்ட உடைத் தோலினையும், அதனுடன் கூட விளங்கிய சிவந்த நிறம் கொண்ட உறையுள் செருகப் பெற்ற சுழல் வாளையும், சேர அணிந்து இறுகக் கட்டி,

விளக்கவுரை

சரணம் - மயிற்பீலி, உரியாடை - புலி முதலியவற்றின் தோலால் ஆன உடை. மரவுரி என்பாரும் உளர்.

வீரக்கழல் காலின் விளங்க அணிந்து பாதம்
சேரத்தொடு நீடு செருப்பு விருப்பு வாய்ப்பப்
பாரப்பெரு வில்வலங் கொண்டு பணிந்து திண்ணன்
சாரத்திருத் தாள்மடித் தேற்றி வியந்து தாங்கி. **#711**

வீரக்கழல்கள் காலில் விளங்கிட அணிந்து, பாதம் பொருந்தத்தொடுத்த தோல் செருப்புக் கெடாது நெடுக நிலவுவது தம் விருப்பத்திற்கு வாய்த்திடும் ஒன்றாக அணிந்து, பளுவான பெரியவில் ஒன்றினை

வலமாக வந்து வணங்கி எடுத்து, அதனைத்தம் இரு காலும் நிலத்தில் மடித்து நின்று ஊன்றி வளைத்து, அதன் நாணினை ஏற்றி அவ்வில்லை வளைத்திடுந்தோறும் அதன் சிறப்பை வியந்து நோக்கிக் கையில் எடுத்துக் கொண்டு.

விளக்கவுரை

****

அங்கப்பொழு திற்புவ னத்திடர் வாங்க ஓங்கித்
துங்கப்பெரு மாமழை போன்று துண்ணென் றொலிப்ப
வெங்கட்சின நீடு விலங்கு விலங்கி நீங்கச்
செங்கைத்தலத் தால்தட விச்சிறு நாண்எ றிந்தார். **#712**

அங்கு அவ்வமையத்தில், இந்நிலவுலகின் இடர் நீங்கவும், ஓங்கிடும் மேன்மையான பெருமழை முழக்கம் போன்று எங்கும் யாரும் திடுக்கிடும்படி ஓசை கொள்ளவும், கொடுந் தன்மையுடைய சினம் பெருகும் விலங்குகள் அவ்விடம் விட்டு நீங்கவும், தமது சிறந்த செங்கையினால் அவ்வில்லைத் தடவிச் சிறு நாணோசை செய்தார்.

விளக்கவுரை

பெரும் மழை பொழியுமுன் இடி இடித்திடும், அது பொழுது உலகத்தவர் நடுக்குறினும், அவ்வோசையால் பின் பெறுவது மழையே, அது போலத் திண்ணனார் கைக்கொண்ட வில்லில் அவர் எழுப்பிய நாண் ஓசை பெரிதும் உலகத்தவரை முன்னர் நடுக்குற வைப்பினும் அவ்வோசையால் பின்னர்ச் சிவவிளைவால் பெரு மகிழ்வு தருவதொன்றாக அமைய உள்ளமையின் `புவனத்திடர் வாங்க` எனக் கூறினார். திண்ணனாரின் திருமுடி முதலாகத் திருவடி ஈறாக வேடுவர்கள் வீரம் செறிய அணிவகைகளுடன் சிறப்பித்துக் கூறி இருப்பது ஆசிரியர் சேக்கிழாரின் அரும்பெரும் புலமைத் திறனோடு திண்ணனார் மீது கொண்ட பத்திமையையும் விளக்கி நிற்கின்றது, அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும், எனக்கூறும் அருமையுடைய தன்றோ அத்திருவுரு.

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பல்வேறு வாளிபுதை பார்த்துடன் போத ஏவி
வில்வேட ராயத் துடிமேவி ஒலிக்கு முன்றில்
சொல்வேறு வாழ்த்துத் திசைதோறுந் துதைந்து விம்ம
வல்லேறு போல்வார் அடல்வாளி தெரிந்து நின்றார். **#713**

வலிய சிங்கஏற்றைப் போன்ற திண்ணனார், மேற்கூறியவாறு நாணோசை செய்த பின்பு, பல்வேறு அம்புகளை அவற்றின் கூர்மைச் சிறப்பைப் பார்த்து, உடன் கொண்டு வருமாறு ஆணையிட்டு, வில்

ஏந்திய வேடர் கூட்டம் உடுக்கை அடித்து ஒலித்திடும் முன்றிலில் வந்து, பல்வேறு வகையான வாழ்த்துகள் திசைதோறும் பொலிந்து விம்மிடத் தாமும், கொலை புரியும் அம்புகளைத் தெரிந்து எடுத்து நின்றார்.

விளக்கவுரை

****

மானச்சிலை வேடர் மருங்கு நெருங்கு போதில்
பானற்குல மாமல ரிற்படர் சோதி யார்முன்
தேனற்றசை தேறல் சருப்பொரி மற்று முள்ள
கானப்பலி நேர்கட வுட்பொறை யாட்டி வந்தாள். **#714**

பெருமை பொருந்திய வில் வேடர்கள், அவர் அருகில் நெருங்க, நீலமலர் என விரிகின்ற ஒளி பொருந்திய முகத்தை யுடைய திண்ணனார் முன், தேன் தோய்ந்த தசைகளும், கள்ளும், பொரியும், மற்றுமுள்ள பிற பொருள்களும் கொண்டு, காட்டிலுள்ள தெய்வங்கட்குப் பலி கொடுத்துவந்த தேவராட்டி வந்தாள்.

விளக்கவுரை

பானற்குலமலர் - நீலமலர்.

நின்றெங்கு மொய்க்குஞ்சிலை வேடர்கள் நீங்கப் புக்குச்
சென்றங்கு வள்ளல்திரு நெற்றியிற் சேடை சாத்தி
உன்தந்தை தந்தைக்கும் இந்நன்மை கள்உள்ள வல்ல
நன்றும்பெரி துன்விறல் நம்மள வன்றி தென்றாள். **#715**

திண்ணனாரைச் சூழ நிற்கும் வில்வேடர்கள், அப்பெருமாட்டிக்கு வழிவிட்டு நிற்ப, உட்புகுந்து சென்று அவளும், அவர் திருநெற்றியில் முனை முரியாத மஞ்சளோடு கலந்த அரிசி யையும் மலரையும் சாத்தி, உன் தந்தை தந்தைக்கும் கன்னி வேட்டை யாடச் சென்றிடும் போது, இன்று உனக்கு வாய்த்திருக்கும் நன்மைகள் போல வாய்த்தில; உன்னுடைய வலிமை பெரிதாகும்; அது உரையிடற்கு அரிதாகும்; எனக் கூறி, ஆசி வழங்கினாள்.

விளக்கவுரை

சேடை - மஞ்சளொடு கலந்த அரிசியும் மலரும்.

அப்பெற்றியில் வாழ்த்தும் அணங்குடை
யாட்டி தன்னைச்
செப்பற்கரி தாய சிறப்பெதிர்
செய்து போக்கிக்
கைப்பற்றிய திண்சிலைக் கார்மழை
மேக மென்ன
மெய்ப்பொற்புடை வேட்டை யின்மேற்கொண்

டெழுந்து போந்தார். #716

அத்தன்மையில் வாழ்த்திய தேவராட்டிக்குச் சொலற்கரிய சிறப்புக்கள் பலவற்றையும் செய்து, அவளை அனுப்பு வித்து, கையில் பிடித்த திண்மையான வில்லுடன் மழைமேகம் என மெய்யழகு பெற்ற திண்ணனார், வேட்டையின் மேற்கொண்டு எழுந்து போயினார்.

விளக்கவுரை

மெய்ப் பொற்பு - மெய்யழகு.

தாளில்வாழ் செருப்பர்தோல்
தழைத்தநீடு தானையார்
வாளியோடு சாபம்மேவு
கையர்வெய்ய வன்கணார்
ஆளியேறு போலஏகும்
அன்ணலார்முன் எண்ணிலார்
மீளிவேடர் நீடுகூட்டம்
மிக்குமேல் எழுந்ததே. #717

இவ்வாறு ஆண்சிங்கம் என எழுந்த திண்ண னாரின் முன்பு, காலில் அணிந்து விளங்கும் செருப்பினை உடையவர் களும் தோல் ஆடைகளுடன் சேர உடுத்த நீண்ட மரஉரி ஆடையை உடுத்தியவர்களும், அம்புடன் வில்லும் கொண்ட கையினை உடைய வர்களும், தவிராது கொலை புரியும் கொடும் தன்மை உடையவர் களும் ஆன எண்ணற்ற வேடரின் கூட்டம் மிகுந்து மேற்கொண்டு எழுந்தது .

விளக்கவுரை

இப்பாடல் முதல் *727*ஆவது பாடல் வரை, சந்த நடை பொருந்த வேட்டைச் சிறப்பை விவரிப்பது காணத்தக்கது.

வன்தொடர்ப்பி ணித்தபாசம்
வன்கைமள்ளர் கொள்ளவே
வென்றிமங்கை வேடர்வில்லின்
மீதுமேவு பாதமுன்
சென்றுநீளு மாறுபோல்வ
செய்யநாவின் வாயவாய்
ஒன்றொடொன்று நேர்படாமல்
ஓடுநாய்கள் மாடெலாம். #718

வலிமையுடன் தொடுத்துக்கட்டிய வார்க் கயிற்றினைக் கொடிய கைகளையுடைய வேடர்கள் பற்றிக்கொண்டு வரவும், வெற்றிக்குரிய தெய்வமான கொற்றவையின் திருவடிமுன் போய் நீள்வது போன்ற சிவந்த நாக்குகளைத் தொங்கவிட்டிருக்கும் நாய்கள் இரு மருங்கும்

ஒன்றொடு ஒன்று பொருந்தாமல் ஓடும்.

விளக்கவுரை

வேட்டை நாய்களின் நாக்குகள் கொற்றவையின் திருவடிகள் என நீண்டிருந்தன.

போர்வலைச் சிலைத்தொழிற்
புறத்திலே விளைப்பவச்
சார்வலைத் தொடக்கறுக்க
ஏகும்ஐயர் தம்முனே
கார்வலைப் படுத்தகுன்று
கானமா வளைக்கநீள்
வார்வலைத் திறஞ்சுமந்து
வந்தவெற்பர் முந்தினார். **#719**

போர் வலைகள் கொண்டு வில்லும் கொண்ட வேட்டைத் தொழிலை வெளியிலே புரியுமாறு சென்றாலும், தம் உள்ளத்துள் சார்கின்ற பாசவலைகளின் தொடக்கறுக்க ஏகின்ற திண்ணனாருக்கு முன்னரே, மேகங்கள் பற்றிச் சூழும் பெருமலையின் இடைப்பட்ட அக்காட்டில் விலங்குகள் தப்பி ஓடாதபடி, காட்டை வளைத்திட, நீண்ட பெரிய வார் வலைகளின் பொதிகளைப் பல்வேறு வகையாகச் சுமந்து கொண்டு வருகின்ற வேடர்கள், தம் கூட்டத்தினரை முந்திக் கொண்டு ஓடினார்கள்.

விளக்கவுரை

வேட்டையாடும் பொழுது, காட்டிலுள்ள மிருகங்கள் தவறி வெளிப்போகாதபடி, காட்டை வலையால் சுற்றி வளைத்துச் சேமம் செய்தபின்புதான் , காட்டினுள் புகுந்து மிருகங்களை எழுப்பப் பண்ணி, வேட்டையாடுவது மரபாகும். ஆதலினால்தான் அக் காட்டினை வளைப்ப, வலைப் பொதிகளைச் சுமந்து கொண்டு வந்த வேடர்கள் முற்படச் சென்றனர். கார்வலைப்படுத்த குன்று - மேகங்களால் வளைக்கப் பட்டது போன்று மலையின் சூழல் அமைந்திருந்தது.

நண்ணிமாம றைக்குலங்கள்
நாடவென்று நீடுமத்
தண்ணிலா அடம்புகொன்றை
தங்குவேணி யார்தமைக்
கண்ணினீடு பார்வையொன்று
கொண்டு காணும் அன்பர்முன்
எண்ணில்பார்வை கொண்டுவேடர்
எம்மருங்கும் ஏகினார். **#720**

பெருமை பொருந்திய நான்மறைகளும் சென்று தேடிடும், அக்குளிர்ந்த

வெண்பிறையும் அடம்பும் கொன்றைமலரும் தங்கும் சடையையுடைய பெருமானை, முன்னைய தவத்தால் அகக் கண்ணினால் கண்டு மகிழ்கின்ற அன்பராம் திண்ணனார் முன்னே, எண்ணற்ற பார்வை மிருகங்களைக் கொண்டு வேடர்கள் எப்பக்கங் களிலும் சென்றனர்.

விளக்கவுரை

******

கோடுமுன் பொலிக்கவும்
குறுங்கணா குளிக்குலம்
மாடுசென் றிசைப்பவும்
மருங்குபம்பை கொட்டவும்
சேடுகொண்ட கைவிளிச்
சிறந்தவோசை செல்லவும்
காடுகொண் டெழுந்தவேடு
கைவளைந்து சென்றதே. **#721**

கொம்புகள் முன்பு ஒலிக்கவும், சிறு முகமுடைய ஆகுளிப் பறைகள் பக்கங்களில் ஒலிக்கவும், அவற்றின் அருகில் பம்பை முழக்கிடவும், அனைவரும் கூடிய வகையில் கைகளைத் தட்டுதலால் பேரோசை எழவும், பெருந்திரளாக வந்து எழுந்த வேட்டுவக் கூட்டம், அவ்வேட்டைக் காட்டினைப் பலபக்கமும் வளைந்து சென்றது.

விளக்கவுரை

******

நெருங்குபைந் தருக்குலங்கள்
நீடுகாடு கூடநேர்
வருங்கருஞ் சிலைத்தடக்கை
மானவேடர் சேனைதான்
பொருந்தடந் திரைக்கடல்
பரப்பிடைப் புகும்பெருங்
கருந்தரங்க நீள்புனல்
களிந்திகன்னி யொத்ததே. **#722**

நெருங்கிய பசிய மரங்களின் இனங்கள் நீள வளர்ந்த பெருங்காட்டினை அடைவதற்கு நேர்வரும் கரிய வில்பிடித்த பெருங்கைகளை உடைய பெருமை நிறைந்த வேடரின் சேனை தானும், அலை பொருந்தும் திரையுடைய கடலின் எல்லையில் புகு கின்ற கறுத்த நீளும் அலைகளையுடைய காளிந்தி நதி என்னும் ஆற்றைப் போன்றது.

விளக்கவுரை

காளிந்திநதி - யமுனை என்பர். இது கருநிறமுடையதா தலின் ஈண்டு

உவமையாயிற்று.காடு - கடல். சேனை - அதிற்புகும் யமுனை.

தென்றிசைப் பொருப்புடன்
செறிந்தகானின் மானினம்
பன்றிவெம் மரைக்கணங்கள்
ஆதியான பல்குலம்
துன்றிநின்ற வென்றடிச்
சுவட்டின்ஒற்றர் சொல்லவே
வன்தடக்கை வார்கொடெம்
மருங்கும் வேடரோடினார். **#723**

தென்திசையில் உள்ள மலையுடன் செறிந்த காட்டில் உள்ள மான் இனங்கள், பன்றிகள், கொடிய மரையினங்கள் முதலான பல மிருக இனங்கள் நெருக்கமுடன் நின்றன என்று அவற்றின் அடிச் சுவட்டினால் அறிந்துவந்து ஒற்றர்கள் அறிவிக்கவே, அவற்றை வளைப்ப, பெரும் கைகளில் வாரினைக் கொண்டு வேடர் கள் எப்பக்கங்களிலும் ஓடினார்கள்.

விளக்கவுரை

******

ஓடியெறிந்து வாரொழுக்கி
யோசனைப் பரப்பெலாம்
நெடியதிண் வலைத்தொடக்கு
நீளிடைப் பிணித்துநேர்
கடிகொ ளப் பரந்தகாடு
காவல்செய் தமைத்தபின்
செடிதலைச் சிலைக்கைவேடர்
திண்ணனார்முன் நண்ணினார். **#724**

அவ்வாறு ஓடிய வேடுவர்கள், காட்டின் மரக்கிளைகளை வெட்டி வீழ்த்தியும், வாரினைக் கட்டி, அவ்வெல்லை யெல்லாம் நீண்ட வலியுடைய அவ்வலையின் தொடர்ச்சி நீளிடை யாக ஒழுங்குடன் விளங்கப் பிணித்தும், அக் காட்டினில் விலங்குகள் தப்பிடாத வண்ணம் காவல் செய்து, அடைத்த பின், வில்லேந்திய கையினையுடைய வேடர்கள், திண்ணனார் முன்பாக வந்து சேர்ந்தார்கள்.

வெஞ்சிலைக்கை வீரனாரும்
வேடரோடு கூடிமுன்
மஞ்சலைக்கு மாமலைச்
சரிப்புறத்து வந்தமா
அஞ்சுவித் தடர்க்குநாய்கள்
அட்டமாக விட்டுநீள்

செஞ்சரத்தி னோடுசூழல்
செய்தகானுள் எய்தினார். **#725**

கொடிய வில்லைக் கையிலுடைய திண்ணனார், தம்முடன் வந்த வேடரோடும் கூடி, முன்பாக உள்ள மேகங்கள் படியும் பெரு மலையின் சாரலிடத்துத் தப்பி வரும் மிருகங்கள் யாவற்றையும் அச்சுறுத்திக் கலைத்துச் சென்று, பற்றிடும் நாய்களைக் கட்டிய வலையின் புறமாக நீள விடுத்து, நீண்ட அம்புகளினோடும் தாம் காவல் செய்த வேட்டைக் காட்டினுள் சென்றார்.

விளக்கவுரை

அட்டம் - வேடுவர்கள் தமக்குள் உரையாடிக் கொள் ளும் குழூஉக் குறி என்பர். நாய்களை அவிழ்த்து விட்டு, குறுக்காக வும் நெடுக்காகவும் செல்ல விடுத்து, ஏனைய விலங்குகளை மேற் செல்லாமல் தடுத்தல் எனப் பொருள் காண்பர் சிவக்கவிமணியார்.

வெய்யமா எழுப்பஏவி
வெற்பராயம் ஓடிநேர்
எய்யும்வாளி முன்தெரிந்து
கொண்டுசெல்ல எங்கணும்
மொய்குரல் துடிக்குலங்கள்
பம்பைமுன் சிலைத்தெழக்
கைவிளித் ததிர்த்துமா
எழுப்பினார்கள் கானெலாம். **#726**

கொடிய விலங்குகளை எழுப்பும்படி வேடர்களை ஏவ, அம்மலைநாட்டு வேடரெல்லாம் மிருகங்களை எய்வதற்கு ஏற்ற கூரிய அம்புகளை எடுத்துக் கொண்டு, எங்கும் ஓடிச் செல்ல, எப்பக்கங்களிலும் மொய்த்தெழுகின்ற உடுக்கின் கூட்டங்களின் ஓசை பெருக, பம்பைப் பறைமுன் முழங்க, கைகளைத் தட்டி, நிலம் அதிரும் ஓசை செய்து, காட்டிலுள்ள மிருகங்களை யெல்லாம் அவ்வேடர்கள் எழுப்பினார்கள்.

விளக்கவுரை

******

ஏனமோடு மானினங்கள்
எண்குதிண் கலைக்குலம்
கானமேதி யானைவெம்
புலிக்கணங்கள் கான்மரை
ஆனமாவ னேகமா
வெருண்டெழுந்து பாயமுன்
சேனைவேடர் மேலடர்ந்து

சீறிஅம்பில் நூறினார். #727

காட்டுப் பன்றிகளோடு, மானினங்கள், கரடி, திண்மையான கலைமான் கூட்டம், காட்டெருமைகள், யானைகள், கொடிய புலியின் வகைகள், காட்டு மரைகள் ஆன பெரு மிருகங்கள் பலவாக வெருண்டு எழுந்து பாய, திண்ணனாரின் முன் வந்த சேனையாய வேடர்கள், அம்மிருகங்கள் மேல் நெருங்கிச் சீறி அம்பினால் எய்து கொன்றார்கள்.

விளக்கவுரை

******

தாளறுவன இடைதுணிவன
தலைதுமிவன கலைமா
வாளிகளொடு குடல்சொரிதர
மறிவனசில மரைமா
நீளுடல்விடு சரமுருவிட
நிமிர்வனமிடை கடமா
மீளிகொள்கணை படுமுடலெழ
விழுவனபல உழையே. #728

கலைமான்கள் கால் அறுவனவும், இடை அறு வனவும், தலை முறிவனவும், தைத்த அம்புடன் குடல் சொரிந்திடப் புரண்டு வீழ்வனவும் ஆயின. சில காட்டுப் பசுக்கள் தமது நீண்ட உடல் மேல் விடப் பெறும் அம்பு வந்து பின்னால் உருவிச் செல்ல, உடல் பதைத்து நிமிர்வனவாயின. பலமான்கள் மிகக் கொடிய அம்புகள் வந்து தைக்க எழுந்து துள்ளி அறுபடலாயின.

விளக்கவுரை

******

வெங்கணைபடு பிடர்கிழிபட
விசையுருவிய கயவாய்
செங்கனல்பட அதனொடுகணை
செறியமுன்இரு கருமா
அங்கெழுசிர முருவியபொழு
தடலெயிறுற அதனைப்
பொங்கியசின மொடுகவர்வன
புரைவனசில புலிகள். #729

கொடிய அம்பு படப்பிடரி கிழியும்படி விசையுடன் உருவப்பட்ட சிறிய வாயினையுடைய மான், அவ்வம்பு முன் போதலால் வாயினில் குருதி பெருகிச் சிவந்த நெருப்பைப் போலக் காட்சி தர, அதன்பின் இன்னும் அம்புகள் விசையுடன் சென்று முன் வந்த பெரும் பன்றியின் தலையில்

அவை உருவிய பொழுது, அவ் வீச்சுடன் அப்பன்றி சென்று முன்னாக வந்த புலியின் வாய்க்குள் அம்புடன் சேரத் தைக்கப்பட்டு அம்பினால் புலியின் வாயும் பன்றியின் முகமும் ஒன்றாக்கப் பட்ட தன்மையினால் புலி,பன்றியைக் கௌவிக் கொண்டோடிய தன்மைபோல் இக்காட்சி ஒத்திருந்தது.

விளக்கவுரை

******

பின்மறவர்கள் விடுபகழிகள்
பிறகுறவயி றிடைபோய்
முன்னடுமுக மிசையுறுவிட
முடுகியவிசை யுடனக்
கொன்முனையடு சரமினமெதிர்
குறுகியமுக முருவத்
தன்னெதிரெதிர் பொருவனநிகர்
தலையனபல கலைகள். **#730**

பின்னின்று வேடர்கள் விடுகின்ற அம்புகள், பல கலைமான்களின் வயிற்றிடையே போய் முன்னாக வரும் முகத்தி னூடாகச் சென்று முடுகிடும் விசையோடு அக்கொலை முகமுடைய அம்பு, முன்னாக எதிருற்று வந்த இன்னொரு மானின் முகத்தில் தைத்து உருவ, அதனால் அவ்வம்பு தைக்கப்பட்ட இரு மான்களும் ஒன்றையொன்று தலையினால் இடிபட்டுப் போர் புரியும் நிலைபோலக் காணப்படுவன வாயின.

விளக்கவுரை

****

கருவரையொரு தனுவொடுவிசை
கடுகியதென முனைநேர்
குரிசில்முன்விடும் அடுசரமெதிர்
கொலைபயில்பொழு தவையே
பொருகரியொடு சினவரியிடை
புரையறவுடல் புகலால்
வருமிரவொடு பகலணைவன
எனமிடையுமவ் வனமே. **#731**

கரிய பெருமலை, கையில் ஒரு வில்லுடன் விரைவாக ஓடுகின்றதெனப், பொருந்தும் படியாக வனத்தின் முன்னாக நேர்ந்து வரும் திண்ணனார், முன் விடுகின்ற கொலை புரியும் அம்புகள் எதிர்வந்த மிருகங்களைக் கொலை செய்கின்ற அமையத்து, அவ்வம்புகள் போரிடும் யானையோடு

சினமுடைய சிங்கங்களின் வயிற்றிலும் இடையீடு இன்றிப் புகுதலால், இறந்து வீழ்ந்து கிடக்கும் அம்மிருகங்கள் இரவின் பின்னால் பகல் தொடர்கின்றது எனும்படி அவ்வனம் காட்சியளித்தது

விளக்கவுரை

யானை இரவுக்கும் சிங்கம் பகலுக்கும் உவமையாயின.

நீளிடைவிசை மிசைகுதிகொள
நெடுமுகில்தொட எழுமான்
தாளுறுகழல் மறவர்கள்விடு
சரநிரைதொடர் வனதாம்
வாள்விடுகதிர் மதிபிரிவுற
வருமெனவிழும் உழையைக்
கோளொடுபயில் பணிதொடர்நிலை
கொளவுளவெதிர் பலவே. **#732**

வேட்டை மிக்க நிலையில், அச்சத்தால் நீண்ட இடம்வரையும் கடிதோடி மேலே துள்ளிக் குதித்து, நெடிய முகிலைத் தொடும்படி எழுந்த மான்களைக் கொல்லுமாறு வீரக் கழலை அணிந்த வேடர்கள் விடுகின்ற அம்புகளின் நிரை, பின்னால் தொடர்கின்ற தன்மை, ஒளிவிடுகின்ற நிலாக்கதிரை விடுத்து, அதனிட மிருந்து கீழ்விழுகின்ற மானைப் பிடிப்பதற்கெனப் பின்பற்றச் செல்லும் பாம்புகளின் நிலையை ஒத்திருந்தது.

விளக்கவுரை

நிறைமதியிடத்துக் காணும் களங்கத்தை முயல் என்பதும் உண்டு. மான் என்பதும் உண்டு. விண்வரை சென்ற அம்பு, அவ் வெல்லைவரை துள்ளிய மானைத் தைத்து. மதியைப் பற்ற நினைந்த பாம்பு, அதனின்றும் பிரிந்து விழும் மானைப் பற்றியது போன்றது என்றார்.

கடல்விரிபுனல் கொளவிழுவன
கருமுகிலென நிரையே
படர்வொடுசெறி தழைபொதுளிய
பயில்புதல்வன மதன்மேல்
அடலுறுசரம் உடலுறவரை
அடியிடம்அல மரலால்
மிடைகருமரை கரடிகளொடு
விழுவனவன மேதி. **#733**

கொடிய அம்புகள் வந்து படுதலினால், அருகில் படர்ந்து செறிந்த தழைகள் பரப்பிய பெருமரங்கள் செறிந்த அக் காட்டினிடத்து, கரிய மரைகளுடனும், கரடிகளுடனும், காட்டெருமை களுடனும் அம்மலைச்

சாரலில் சுழன்று வீழ்கின்றமை, நீலக் கடல் மீது நீருண்ண வந்து படிகின்ற கருமுகிலின் நிரையை யொத்துள்ளது.

விளக்கவுரை

நிரை - வரிசை.

பலதுறைகளின் வெருவரலொடு
பயில்வலையற நுழைமா
உலமொடுபடர் வனதகையுற
உறுசினமொடு கவர்நாய்
நிலவியவிரு வினைவலையிடை
நிலைசுழல்பவர் நெறிசேர்
புலனுறுமன னிடைதடைசெய்த
பொறிகளின்அள வுளவே. **#734**

பல இடங்களிலும் கட்டியிருக்கின்ற வார்வலைகள் அறும்படி, மிகும் அச்சத்தால் ஓடி அவற்றுள் புகுகின்ற விலங்குகள், மிகுவலியுடன் தப்பித்தோடுவனவற்றைத் தடுத்திடும் நாய்கள், இந் நிலவுலகில் எவ்வுயிர்களிடத்தும் நிலவுகின்ற கொடிய இருவினை யின் வலியிடைச் சுழல்பவர்கள், அக்கொடிய வினையை விடுத்து நன்னெறிக்கண் சேர எண்ணும் மனத்தை, அவ்வாறு போகவிடாதபடி தடுத்து வைக்கும் ஐம்புலன்களை ஒத்தன.

விளக்கவுரை

விலங்குகள் - உயிர்கள். வலை - இருவினை. வலையி னின்றும் தப்பித்தோடும் விலங்குகளை நாய்கள் தடுப்பது இரு வினை யினின்றும் தப்ப முயலும் உயிர்களை ஐம்பொறிகளும் தடுப்பதை ஒத்தது.

துடியடியன மடிசெவியன
துறுகயமுனி தொடரார்
வெடிபடவிரி சிறுகுருளைகள்
மிகைபடுகொலை விரவார்
அடிதளர்வுறு கருவுடையன
அணைவுறுபிணை அலையார்
கொடியனஎதிர் முடுகியும்உறு
கொலைபுரிசிலை மறவோர். **#735**

எதிராக ஓடிச் சென்று ஒவ்வொரு விலங்கையும் கொலை புரிகின்ற அவ்வில் வேடர்கள், அம்மிருகக் கூட்டத்து, உடுக்கை போலும் காலுடையவும் மடிந்த செவியை உடையவுமாகிய யானைக் குட்டிகளைத் தீண்டாது தவிர்த்து விடுவர். துள்ளி ஓடுகின்ற சிறு மிருகக் குட்டிகள் மீதும் ஒருபோதும் கொலை செய்ய விரும்பார். கருமுதிர்ந்து

அத்தன்மையால் கால் தளர்வுற்று ஓட முடியாது தளர்ந்தோடும்
விலங்குகளைத் துயரம் செய்யார். இவ்வாறாகத் தாம் செய்யும்
கொலைத் தொழிலினும் அறம் பிறழச் செய்யாதவர்கள், வேடர்கள்.

விளக்கவுரை

வேடர்கள் கொலைத் தொழிலினராயினும், அவர்கள் மாட்டும் அறக் கருணையுடையதாதலை இப்பாடல் விளக்குகின்றது. மடிந்த உள்ளத்தோனையும் மகப்பெறாதோனையும் மயிர்குலைந்தோ னையும், அடிபிறக்கிட்டோனையும், பெண் பெயரோனையும், படையிழந்தோனையும், ஒத்த படையெடாதோனையும், பிறவும் இத்தன்மையுடையோரையும் கொல்லாது விடுதலுங் கூறிப் பொருதலும் அறமாம் *(தொல். புறத்.2)* என நச்சினார்க்கினியர் கூறுமாறுங் காண்க. இவ்வாறு வழிவழியாகக் கூறப்பெற்றுவந்த அறமே, இக்காலத்தில் விலங்கின வதைத் தடைச் சட்டம் முதலானசட்டங்கள் தோன்றக் காரணமாயிற்று.

இவ்வகைவரு கொலைமறவினை
எதிர்நிகழ்வுழி அதிரக்
கைவரைகளும் வெருவுறமிடை
கானெழுவதொர் ஏனம்
பெய்கருமுகி லெனஇடியொடு
பிதிர்கனல்விழி சிதறி
மொய்வலைகளை அறநிமிர்வுற
முடுகியகடு விசையில். **#736**

வேட்டையாடும் இவ்வகையில் கொலைச்செயல் அங்கே நிகழ்ந்து வரும் பொழுது, அக்காட்டிடத்து உள்ள மிருகங் களில் மலை போன்ற பெரிய துதிக்கையுடைய யானைகளும் அச்சமுற, அக்காடும் புழுதி பரவுமாறு ஒரு பன்றி எழுந்து, பெரிய மழை பெய்யும் கறுத்தமுகில் ஒன்று இடி இடித்துக் கொண்டு போகின்ற தன்மைபோல, தன்கண்களூடாகப் பிறக்கின்ற சினப் பொறிகளுடன் பாய்ந்தோடி, வேடர் கட்டிய வலைகள் எல்லாம் அறுந்திடும்படியாகப் புறப்பட்டு, நிமிர்கின்ற விசையோடு ஓடியது.

விளக்கவுரை

****

போமதுதனை அடுதிறலொடு
பொருமறவர்கள் அரியே
றாமவர்தொடர் வுறும்விசையுடன்
அடிவழிசெலும் அளவில்

தாமொருவரு ம் அறிகிலரவர்
தனிதொடர்வுழி அதன்மேல்
ஏமுனையடு சிலைவிடலைகள்
இருவர்கள்அடி பிரியார். #737

அவ்வாறு விசையுடன் ஓடுகின்ற அப்பன்றியைக் கொன்றிட உறுதியுடன் போரிடும் வேடர்களில் ஆண்சிங்கம் எனத் தகும் திண்ணனார், அப்பன்றி ஓடிடும் விசையுடன் தாமும் அதைத் தொடர்ந்து ஓடிடும் அளவில், அதைப் பிறர் எவரும் காணாது தாமே அதைத் தனித்துத் தொடர்ந்து சென்றிடும் போது, அப்பன்றி வேட்டையில் கொலை புரியும் வில் வீரர்கள் இருவர் திண்ணனாரைப் பிரியாது தாமும் தொடர்ந்தோடினர்.

விளக்கவுரை

பற்றித் தொடரும் இருவினையைப் போன்றவர் இவ்விரு வீரரும் எனலாம்.

நாடியகழல் வயவர்களவர்
நாணனும்நெடு வரிவில்
காடனும்எனும் இருவருமலை
காவலரொடு கடிதில்
கூடினர்விடு பகழிகளொடு
கொலைஞமலிகள் வழுவி
நீடியசரி படர்வதுதரு
நீழலின்விரை கேழல். #738

வீரக்கழல் அணிந்த அவ்வீரர்கள் `நாணன்` என்னும் பெயருடையவனும், நெடிய வரிவில்லைக் கையில் கொண்ட `காடன்` என்னும் பெயருடையவனும் ஆன இருவரும், மலைநாட்டின் காவலரான திண்ணனாரோடு மிகு விரைவுடன் கூடினராய்ப் பன்றியின் பின் தொடர்ந்து ஓடி, அவர்கள் விடுகின்ற அம்புகளை எல்லாம் தப்பியதுமன்றி, அப்பன்றியைத் தடுத்திடும் நாய்களையும் தப்பித்துக் கொண்டு, நீண்ட மலைச் சாரலில் உள்ள மரங்களின் நீழலில் விரைவுடன் தொடர்ந்தோடியது.

விளக்கவுரை

****

குன்றியைநிகர் முன்செறளரி
கொடுவிழிஇடி குரல்நீள்
பன்றியும்அடல் வன்றிறலொடு
படர்நெறிநெடி தோடித்

துன்றியதொரு குன்றடிவரை
சுலவியநெறி சூழல்
சென்றதனிடை நின்றதுவலி
தெருமரமரம் நிரையில். **#739**

குன்றி மணியைப் போலும் பொறிபறந்திட எரிகின்ற சிவந்த கண்களுடன் இடியை ஒத்த குரலையுடைய பன்றியும், மிக்க வலிமையுடன் நீண்டதூரம் ஓடி, எதிரே ஒரு மலை அடிவாரத்து நிலவுகின்ற ஒருமரச் சூழலில் சென்று, தன்வலி குன்றிக் களைப்புற்று அம்மரநிரையின் நிழலில் மறைந்து நின்றது.

விளக்கவுரை

****

அத்தருவளர் சுழலிடையடை
அதனிலையறி பவர்முன்
கைத்தெரிகணை யினிலடுவது
கருதலர்விசை கடுகி
மொய்த்தெழுசுடர் விடுசுரிகையை
முனைபெறஎதிர் உருவிக்
குத்தினருடல் முறிபடவெறி
குலமறவர்கள் தலைவர். **#740**

அம்மரங்கள் வளர்ந்துற்ற பகுதியில் அப் பன்றியின் நிலையை அறிபவராய திண்ணனார், சென்று தம் கையிடத்து வைத்திருந்த நெருப்புப் பொறி போன்ற அம்பால் எய்து, அதைக் கொல்வதை எண்ணாது மிகு வேகமுடன் ஓடி, எங்கும் பளிச்சிடும்படி எழுகின்ற சுடருடைய தன் சுழல் வாளை உறையி னின்றும் எடுத்து, அப்பன்றியின் உடலை இரு துண்டாக வெட்டினார்.

விளக்கவுரை

உயிர்க்குத் தப்பி ஓடும் விலங்குகள், அந்நிலை இயலாதபொழுது எதிர்த்துப் போராட எண்ணும், அந்நிலைக்கு அஞ்சித் தொலைவி லிருந்து அம்பினால் கொல்வது தம் வீரத்திற்கு இழுக்கென்று கருதி, நேர் முகமாக நின்று வெட்டி வீழ்த்தினார்.

வேடர்தங் கரிய செங்கண்
வில்லியார் விசையிற் குத்த
மாடிரு துணியாய் வீழ்ந்த
வராகத்தைக் கண்டு நாணன்
காடனே இதன்பின் இன்று
காதங்கள் பலவந் தெய்த்தோம்
ஆடவன் கொன்றான் அச்சோ
என்றவர் அடியில் தாழ்ந்தார். **#741**

கரிய மேனியும் சிவந்த கண்களும், வில்லும் கொண்ட வேடர் தலைவராய திண்ணனார், விரைந்து குத்தலும் இரு துண்டுகளாய் வீழ்ந்த அப்பன்றியைக் கண்டு, நாணன், ``காடனே! இப் பன்றியின் பின்னாக இன்று பல காததூரம் ஓடிவந்து களைத்து இளைத்தோம் ஆயினும் இவ் ஆடவனாய திண்ணன் அதனைக் கொன்றான் அச்சோ`` எனப் பாராட்டுக் கூறி, தம் தலைவர் திண்ண னார் திருவடிகளில் தாழ்ந்தார்கள்.

விளக்கவுரை

அச்சோ - வியந்து போற்றுதற்குரிய சொல்.

மற்றவர் திண்ண னார்க்கு
மொழிகின்றார் வழிவந் தாற்ற
உற்றது பசிவந் தெம்மை
உதவிய இதனைக் காய்ச்சிச்
சற்றுநீ அருந்தி யாமும்
தின்றுதண் ணீர்கு டித்து
வெற்றிகொள் வேட்டைக் காடு
குறுகுவோம் மெல்ல என்றார். **#742**

அவ்விருவரும் திண்ணனாரை நோக்கி `இத்துணைத் தொலைவும் நாம் ஓடிவந்தமையால், எமக்குப் பசி மிகவும் ஏற்பட்டுள்ளது. ஆதலின் உற்ற இடத்து உதவிய இப்பன்றியை நெருப்பில் காய்ச்சி நீயும் உண்டு, யாமும் தின்று தண்ணீரும் பருகிப் பின்பு இன்று பெருவெற்றி கொண்ட வேட்டைக் காட்டைச் சென்று சேர்வோம்` என்றனர்.

விளக்கவுரை

அருந்துதல் - அளவுபட உண்டல். தின்றல் - பெருக உண்டல்.
தலைவர் - உண்டபின் பணியாளர் உண்ணும் மரபும் குறித்த வாறு.

என்றவர் கூற நோக்கித்
திண்ணனார் தண்ணீர் எங்கே
நன்றுமிவ் வனத்தி லுள்ள
தென்றுரை செய்ய நாணன்
நின்றவிப் பெரிய தேக்கின்
அப்புறஞ் சென்றால் நீண்ட
குன்றினுக் கயலே ஓடும்
குளிர்ந்தபொன் முகலி என்றான். **#743**

என்று நாணனும், காடனும் மொழிந்திட, அவரைத் திண்ணனார் நோக்கி, `நல்ல தண்ணீர் எங்கே இக்காட்டில் உள்ளது` எனக் கேட்டலும், நாணனும், `இதோ நிற்கின்ற இப்பெரிய தேக்கு மரச்சோலையைக் கடந்து சென்றால், நீண்ட ஒரு மலை உண்டு; அம்மலைக்கு அருகே ஓடுகின்றது குளிர்ந்த பொன்முகலி என்னும் ஆறு, அது நல்ல நீராகும்` என்றான்.

விளக்கவுரை

திண்ணனார் அவ்விருவரையும் நோக்கிக் கேட்ட அளவில் நாணனே இம்மறுமொழி கூறுகின்றான்; காடனினும் இவன் அறிவும் எழுச்சியும் உடையனாதலின்.

பொங்கிய சினவில் வேடன்

சொன்னபின் போவோம் அங்கே
இங்கிது தன்னைக் கொண்டு
போதுமின் என்று தாமும்
அங்கது நோக்கிச் சென்றார்
காவதம் அரையிற் கண்டார்
செங்கண்ஏ றுடையார் வைகும்
திருமலைச் சாரற் சோலை. **#744**

பொங்கிடும் சினமுடைய வில் வேடனாகிய நாணன் இங்ஙனம் கூறத் திண்ணனாரும். `அவ்விடத்திற்கு நாம் போவோம், அங்கே இப்பன்றியின் உடலைக் கொண்டு வாருங்கள்` என்று கூறித் தாமும் அப்பொன்முகலியாற்றின் திசை நோக்கிச் சென்றார். சென்றிடும்போது அரைக்காவதத் தொலைவு சென்ற அளவில் திண்ணனார், சிவந்த கண்களையுடைய ஆனேற்றை ஊர்தியாக வுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்காளத்தி மலையைச் சார்ந்த சோலையைக் கண்டார்.

விளக்கவுரை

திருமலை என்பது கயிலை மலையைக் குறிக்கும். முன்னர்த் திருமலைச் சருக்கம் என்றதும் காண்க. திருக்காளத்தியும் அதனொடு ஒப்ப எண்ணுதற்குரியதாய்த் தென்கயிலை எனக் குறிக்கத்தக்கது ஆதலின் இதனையும் `திருமலை` என்றார்.

நாணனே தோன்றும் குன்றில்
நண்ணுவேம் என்ன நாணன்
காணநீ போதின் நல்ல
காட்சியே காணும் இந்தச்
சேணுயர் திருக்கா ளத்தி
மலைமிசை யெழுந்து செவ்வே
கோணமில் குடுமித் தேவர்
இருப்பர்கும் பிடலாம் என்றான். **#745**

கண்ட திண்ணனார், `நாணனே, இதோ தெரிகின்ற மலைமேல் செல்வோம்` என்னலும், நாணனும், `நீ அம்மலைக்குச் செல்வாயாயின் நல்ல காட்சியையே காண்பாய். வானுயர எழுந்த திருக்காளத்தி மலையின் மேல், எவர்க்கும் அருள் புரிதலில் மாறு படுதல் இல்லாத குடுமித்தேவர் என்னும் பெருமான் இருப்பர். கும்பிடலாம்` என்றான்.

விளக்கவுரை

கோணம் - குற்றம் எனப் பொருள் கொண்டு, எவ் வுயிர்க்கும் உற்ற குற்றங்களை இல்லையாகச் செய்யும் குடுமித் தேவர் என்றலும் ஆம்.

`யான்செய்தேன் பிறர் செய்தார் என்னாது யான் என்னும் இக்கோணை` நீக்குதலே குற்றம் இல்லையாகச் செய்வதாம். குடுமித்தேவர் - மலையின் உச்சியில் இருப்பவர். குடுமி - உபநிடதத்து உச்சி எனும் பொருள் கொண்டு, உபநிடதத்து உச்சியில் விரிந்த இறைவன் எனப் பொருள் கோடலும் ஒன்று.

ஆவதென் இதனைக் கண்டிங்
கணைதொறும் என்மேல் பாரம்
போவதொன் றுளது போலும்
ஆசையும் பொங்கி மேன்மேல்
மேவிய நெஞ்சும் வேறோர்
விருப்புற விரையா நிற்கும்
தேவரங் கிருப்ப தெங்கே
போகென்றார் திண்ண னார்தாம். **#746**

இவ்வாறு நாணன் சொல்லக்கேட்டு முன் சென்று கொண்டிருக்கும் திண்ணனாரும், `நாணனே! ஈதென்ன வியப்பு, இம்மலையை அணைந்து செல்லச்செல்ல என்மேல் உள்ள பளு வொன்று நீங்குவது போல் இருக்கின்றது. ஆசைமிக்கெழ என் நெஞ்சமும் இதுகாறும் இல்லாத வேறொரு வகையான விருப்பமுற விரைந்து செல்கின்றது. நீ சொன்ன தேவர்தாம் எங்கே இருக்கின்றார்? அங்குச் செல்வாயாக` என்றார்.

விளக்கவுரை

பாரம் - பளு, தத்துவக்கட்டு. `பேணுத்தத்துவங்கள் என்னும் பெருகு சோபானம் ஏறி` *(பா.752)*என்பர் பின்னும். வேறோர் விருப்பு - உலகியல் வயத்ததன்றி அருள் வயத்ததாய விருப்பு.

உரைசெய்து விரைந்து செல்ல
அவர்களும் உடனே போந்து
கரைவளர் கழையின் முத்தும்
காரகில் குறடுஞ் சந்தும்
வரைதரு மணியும் பொன்னும்
வயிரமும் புளினம் தோறும்
திரைகள்முன் திரட்டி வைத்த
திருமுக லியினைச் சார்ந்தார். **#747**

இவ்வாறு கூறியவாறு திண்ணனார்விரைந்து செல்ல. அவர்களும், இவர் விரைவுடன் ஒப்பச் சென்று, கரையில் வளரும் மூங்கிலின் முத்தும், கரிய அகில் மரத்தின் கட்டைகளும், மலை தரும் மணிகளும், பொன்னும், வயிரமும் மணற் பரப்புகள் எங்கும் திரைகள் முன்பு கொணர்ந்து திரட்டி வைக்கும் பெருந் திருவுடைய பொன்முகலி ஆற்றினைச் சேர்ந்தார்கள்.

விளக்கவுரை

பொன்முகலி - இப்பெயருடையது, இங்குள்ள ஆறு. அறிந்தோ, அறியாமலோ செய்த தீவினைகள் எல்லாம் இதன் கண் ஆடப்போம் என்பர் நக்கீரர் *(தி.11 கயிலை.காள. பா.74)* எனவே திருமுகலி என்பர் சேக்கிழார்.

ஆங்கதன் கரையின் பாங்கோர்
அணிநிழற் கேழ லிட்டு
வாங்குவிற் காடன் தன்னை
மரக்கடை தீக்கோல் பண்ணி
ஈங்குநீ நெருப்புக் காண்பாய்
இம்மலை யேறிக் கண்டு
நாங்கள்வந் தணைவோ மென்று
நாணனும் தாமும் போந்தார். **#748**

அவ்வாற்றங் கரையின்பாலாக ஓர் அழகிய மரத்தின் நிழலில், சுமந்து வந்த பன்றியைக் கிடத்தி நிற்கும் வில் வேடனாகிய காடனை நோக்கி, `மரக்கட்டையில் தீக்கடையும் கோல் செய்து அதனால் இங்கு நெருப்பு உண்டு பண்ணுவாய், நாங்கள் இம் மலையில் ஏறிச்சென்று கண்டு பின்னர் வந்து சேர்வோம்` எனக்கூறி, நாணனும் தாமுமாகச் சென்றார்கள்.

விளக்கவுரை

****

அளிமிடை கரைசூழ் சோலை
அலர்கள்கொண் டணைந்த ஆற்றின்
தெளிபுன லிழிந்து சிந்தை
தெளிவுறுந் திண்ண னார்தாம்
களிவரு மகிழ்ச்சி பொங்கக்
காளத்தி கண்டு கொண்டு
குளிர்வரு நதியூ டேகிக்
குலவரைச் சாரல் சேர்ந்தார். **#749**

வண்டினம் மொய்க்கும் கரையில் சூழ்வுற்ற சோலைகளின் பூக்களைத் திரையால் வாரிக்கொண்டு வந்த பொன்முகலி ஆற்றின் தெளிந்த நீரில் இறங்கி, சிந்தை தெளிவுறும் திண்ணனார் தாமும், மனத்தில் களிகூருகின்ற மகிழ்ச்சி பொங்கிடக், காளத்தி மலையைக் கண்டவாறே, குளிர்ந்து வரும் அப்பொன்முகலி ஆற்றினூடு சென்று, சிறந்த காளத்தி மலைச்சாரலை அடைந்தார்.

விளக்கவுரை

****

கதிரவ னுச்சி நண்ணக்
கடவுள்மால் வரையி னுச்சி
அதிர்தரு மோசை ஐந்தும்
ஆர்கலி முழக்கங் காட்ட
இதுவென்கொல் நாணா வென்றார்க்
கிம்மலைப் பெருந்தேன் சூழ்ந்து
மதுமலர் ஈக்கள் மொய்த்து
மருங்கெழும் ஒலிகொல் என்றான். **#750**

அது பொழுது கதிரவனும் உச்சியை அடைய, தெய்வத்தன்மையுடைய அம்மலையின் உச்சியில் ஒலித்து எழுகின்ற ஐந்து தேவதுந்துபிகளின் ஓசைகளும் ஒலிக்கின்ற கடலினைப் போன்ற முழக்கத்தைக் காட்ட, அதுகேட்ட திண்ணனாரும் நாணனை நோக்கி, ``நாணனே! இது என்ன ஓசை?` எனக் கேட்க, அவனும், `இம் மலையில் இருக்கும் பெருந்தேன் கூட்டினைச் சூழ்ந்து, பூவில் தேன் உண்ணும் ஈக்கள், அதில் மொய்த்துப் பக்கங்களில் மீண்டும் எழுவதால் விளைகின்ற ஓசையாக இருக்கும்போலும்` என்றான்.

விளக்கவுரை

திண்ணனார் கேட்டதற்கு நாணன் கூறிய விடை `கண்டானாம் தான் கண்டவாறு` *(குறள், 849)* என்ற அளவில் அமைந்தது, எனினும் அதனை ஐயுற மொழிந்தது, அவன் தன்மதி நுட்பத்தைக் காட்டுகிறது. ``கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற வல்ல தூஉம் ஐயம் தரும்`` *(குறள், 845)* எனும் குறளை நினைவு கூர்க.

முன்புசெய் தவத்தின் ஈட்டம்
முடிவிலா இன்ப மான
அன்பினை எடுத்துக் காட்ட
அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல் கூர வ
ள்ளலார் மலையை நோக்கி
என்புநெக் குருகி உள்ளத்
தெழுபெரு வேட்கை யோடும். **#751**

முற்பிறவியில் செய்து கொண்ட தவத்தின் தொகுதி, இப்பொழுது திரண்டு வந்து, முடிவில்லாத இன்பமாகும் அன்பினை எடுத்துக் காட்டிட, அதனாலே பெருமானைக் காண்பதற்கு அளவிலாத ஆர்வம் தமது உள்ளத்துள் பொங்கி மிக, வள்ளலாராய காளத்தியப்பர் இருந்தருளும் அம்மலையை நோக்கி எலும்பும் நெக்கு உருகத் தம் உள்ளத்து எழுவதொரு விருப்பத்துடன்,

விளக்கவுரை

முன்பு செய் தவத்தின் ஈட்டம் என்பது முற்பிறவியில் அருச்சுனனாய் இருந்து தவம் செய்தமையைக் குறித்தது என்பார்,

வாமான்தேர்வல்ல வயப்போர் விசயனைப் போல்
தாமார்உலகில் தவம் உடையார் - தாம்யார்க்கும்
காண்டற் கரியராய்க் காளத்தி ஆள்வாரைத்
தீண்டத்தாம் பெற்றமையாற் சென்று. *(தி.11 கயிலை.காள. பா.70)*

என வரும் நக்கீரர் திருவாக்கை இதற்கு மேற் கோளாகக் காட்டுவர். முடிவிலா இன்பம் - ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பம்.

நாணனும் அன்பும் முன்பு
நளிர்வரை ஏறத் தாமும்
பேணுதத் துவங்க ளென்னும்
பெருகுசோ பானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார
அணைபவர் போல ஐயர்
நீணிலை மலையை ஏறி
நேர்படச் செல்லும் போதில். **#752**

நாணனும் தமது அன்பும் தமக்கு முன்னராகக் குளிர்ந்த மலைமேல் ஏறிச் செல்லத் திண்ணனார், இவ்வுலகில் பேணுகின்ற தத்துவங்கள் என்னும் பெரும் படிகளை ஏறி, சத்தியே வடிவமாகிய சிவத்தைச் சேர அணைகின்ற முனிவர்களைப் போல, காளத்தி அப்பரின் நீண்ட நிலையாய மலையில் அப்பெருமானின் திருமுன்பாகச் சென்றிடும் போதில்,

விளக்கவுரை

தொண்ணூற்றாறு தத்துவங்களையும் கடந்த நிலையிலேயே இறைவன் காட்சியளிப்பன். ஆதலின் தத்துவங் களைப் படிகளாக உருவகித்தார். சிவத்தைச் சாரும் நிலையில் அவை வேண்டப்படாது நீங்கினும், அதுகாறும் இக்கூட்டு வேண்டியிருத்த லின் `பேணுதத்துவங்கள்` என்றார். ஆணை - சத்தி, `ஆணையின் நீக்கமின்றி நிற்குமன்றே` *(சிவஞானபோதம் சூ.2)* என்ற விடத்தும் இப்பொருள் படுதல் காண்க. சோபானம் - படிகள்.

திங்கள்சேர் சடையார் தம்மைச்
சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த
அருள்திரு நோக்க மெய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச்

சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல்
பொருவில்அன் புருவம் ஆனார். **#753**
சென்ற திண்ணனார், இளம் பிறையைச் சூடிய சடையராய பெருமானாரைக் காண்பதற்கு முன்னமேயே, அழகிய நெற்றிக் கண்களையுடைய பெருமானாரின் கருணை கூர்ந்த அருள் பார்வை அவர்மீது பொருந்த, இப்பிறவியில் முன்னர்ச் சார்ந்திருந்த பற்றுக்கள் அனைத்தும் நீங்க, பொங்கி எழும் ஒளியின் நீழலில் ஒப்பற்ற அன்புருவமாக ஆயினார்.

விளக்கவுரை

அருட்டிரு நோக்கு - திருக் கண்களால் நோக்கிய நோக்கு. திருமலையில் ஏறுங்கால் திண்ணனார் உடம்பினும் அவர் அன்பு முந்திச் சென்றது; அதுபோலப் பெருமானும், தன்வடிவுக் காட்சியினும், அருள் திருநோக்கை முந்த அருளினார். தீக்கை வகை யில் கண்ணால் நோக்கும் நோக்கமும் ஒன்று; இதனை நயன தீக்கை என்பர். நீழல் - திருவடி நிழல். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

மாகமார் திருக்கா ளத்தி
மலையெழு கொழுந்தா யுள்ள
எகநா யகரைக் கண்டார்
எழுந்தபே ருவகை அன்பின்
வேகமா னதுமேற் செல்ல
மிக்கதோர் விரைவி னோடு
மோகமா யோடிச் சென்றார்
தழுவினார் மோந்து நின்றார். **#754**
வானத்தை அளாவிய நீண்ட திருக்காளத்தி மலைமேல் எழுந்தருளியிருக்கும் சுடர்க் கொழுந்தாயுள்ள ஏகநாத ரைத் திண்ணனார் கண்டார். கண்டதும் எழுந்த பேருவகையால் அன்புமீதூர, அதனால் மிகுந்து எழுகின்ற விரைவினோடும் ஓடிச் சென்று, அப்பெருமானைக் கட்டித் தழுவினார். முகர்ந்து நின்றார்.

விளக்கவுரை

ஏக நாயகர் - ஒப்பற்ற தலைவர். ஒருவன் என்னும் ஒருவன். முகர்தல் பாசத்தின் அறிகுறி.

நெடிதுபோ துயிர்த்து நின்று
நிறைந்தெழு மயிர்க்கால் தோறும்
வடிவெலாம் புளகம் பொங்க
மலர்க்கண்ணீர் அருவி பாய

அடியனேற் கிவர்தாம் இங்கே
அகப்பட்டார் அச்சோ என்று
படியிலாப் பரிவு தானோர்
படிவமாம் பரிசு தோன்ற. **#755**

நெடிது நேரம் அப்பெருமானை மோந்துநின்று, மேனியின் மயிர்க்கால்கள் தோறும் மகிழ்வு நிறைந்து எழுந்து பொங்கிட, மலர் போலும் கண்களில் இருந்து அருவிநீர் பாய்ந்திட, அடியனேனுக்கு இவர்தாம் இங்கே அகப்பட்டார், அச்சோ! என்று தாம் கூறி, ஒப்பில்லாத அன்பு என்பது, தானே ஒரு வடிவு கொண்டாற் போல் நிற்க,

விளக்கவுரை

படியிலாப்பரிவு - ஒப்பற்ற அன்பு. அவ்வன்பே வடிவு கொண்டால் போல் நின்றார். ``கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்`` *(தி.8 ப.10 பா.4)*எனவரும் மணிவாசகர் திருவாக்கும் காண்க.

வெம்மறக் குலத்து வந்த
வேட்டுவச் சாதி யார்போல்
கைம்மலை கரடி வேங்கை
அரிதிரி கானந் தன்னில்
உம்முடன் துணையாய் உள்ளார்
ஒருவரு மின்றிக் கெட்டேன்
இம்மலைத் தனியே நீரிங்
கிருப்பதே என்று நைந்தார். **#756**

கொடிய வேட்டுவக் குலத்து வந்த வேட்டுவச் சாதியார் போல, யானைகள், கரடிகள், வேங்கைப்புலிகள், சிங்கங்கள், திரிகின்ற இக்காட்டில் உம்முடன் துணையாய் உள்ளார் ஒருவரும் இல்லாது, நீர் தனித்திருக்கக் கெட்டேன்! இம் மலையிடத்துத் தனியராகவும் நீர் இங்கு இருப்பதுவும் தகுமோ என்று உள்ளம் நெகிழ்ந்தார்.

விளக்கவுரை

சாதி - பெரும் பிரிவு. குலம் - உட்பிரிவு. `சாதிகுலம் பிறப்பு என்னும்` *(தி.8 ப.31 பா.5)* என வரும் திருவாக்கும் காண்க. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

கைச்சிலை விழுந்த தோரார்
காளையார் மீள இந்தப்
பச்சிலை யோடு பூவும்
பறித்திட்டு நீரும் வார்த்து
மச்சிது செய்தார் யாரோ
என்றலும் மருங்கு நின்ற

அச்சிலை நாணன் தானும்
நான் இது அறிந்தேன் என்பான். #757

இவ்வாறு மனம் நைந்துருகிய திண்ணனார், மெய்ம்மறக்கத் தமது கையிலுள்ள வில் விழுந்ததையும் உணராதவராய் இப்பச்சிலையோடு பூவையும் எம் பெருமான் மீது இட்டு, நீரையும் வார்த்து, இத்தகையதொரு நற்செயலைச் செய்தார் யார்? என்றலும், அருகில் நின்ற வில்லைக் கைக் கொண்டிருக்கும் நாணன் `நான் இதை அறிந்துள்ளேன்` என்று சொல்வானாய்,

விளக்கவுரை

மஞ்சு -அழகு: ஈண்டு நன்மையைக் குறித்தது. இத்தமிழ்ச் சொல் காலப்போக்கில் தெலுங்குச் சொல்லாக மாறியது. மற்றிது என்பது எதுகை நோக்கி மச்சிது என்றாயிற்று என்று கோடலும் ஒன்று.

வன்திறல் உந்தை யோடு
மாவேட்டை யாடிப் பண்டிக்
குன்றிடை வந்தோ மாகக்
குளிர்ந்தநீ ரிவரை யாட்டி
ஒன்றிய இலைப்பூச் சூட்டி
ஊட்டிமுன் பறைந்தோர் பார்ப்பான்
அன்றிது செய்தான் இன்றும்
அவன்செய்தா னாகு மென்றான். #758

வலியதிறல் உடைய உன் தந்தையோடு நாங்கள் கூடிப் பெருவேட்டையாடி, முன்னர் ஒருகால் இம் மலையிடத்து வந்தேமாக, அப்பொழுது குளிர்ந்த நீரால் இவரை நீராட்டி, ஒருமைப் பாட்டுடன் பூவும் இலையுமாம் இவற்றை இவர்மேல் சூட்டி, இவருக்கு உணவும் கொடுத்து, உண்பித்து, முன்நின்று, சில வார்த்தைகளையும் சொல்லி,ஒரு பிராமணன் இதனைச் செய்தான், ஆதலால் அவனே இன்று இதனைச் செய்தானாகும் என்றான்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

உண்ணிறைந் தெழுந்த தேனும்
ஒழிவின்றி ஆரா அன்பில்
திண்ணனார் திருக்கா ளத்தி
நாயனார்க் கினிய செய்கை
எண்ணிய இவைகொ லாமென்
றிதுகடைப் பிடித்துக் கொண்டவ்
அண்ணலைப் பிரிய மாட்டா

தளவில் ஆதரவு நீட. #759
உள்ளத்துள் நின்றும் சிவன்பால் எழுந்த அன்பின் பெருக்கம் ஒழிவின்றிப் பெருகி நின்றதென்றாலும், இன்னமும் அடங் கிடாத அவ் அன்பினால் எழும் ஆசை மிகுந்த திண்ணனாருக்குத், திருக்காளத்தியில் வீற்றிருக்கும் பெருமானுக்கு விருப்பமான இனிய செயல் இவைதாமாகும் என்று அச்செயலைக் கடைப்பிடித்துக் கொண்டு, தாமும் அதுபோலப் பூசை செய்ய முற்பட் டாலும், பெருமானை விட்டுப்பிரிய முடியாத அளவற்ற ஆதரவு பெருகுதலால்,

விளக்கவுரை

****

இவர்தமைக் கண்டே னுக்குத்
தனியராய் இருந்தார் என்னே
இவர்தமக் கமுது செய்ய
இறைச்சியும் இடுவா ரில்லை
இவர்தமைப் பிரிய ஒண்ணா
தென்செய்கேன் இனியான் சால
இவர்தமக் கிறைச்சி கொண்டிங்
கெய்தவும் வேண்டு மென்று. #760

இவரைக் கண்ட எனக்கு இவர் தனியராகவே இருந்தார், என்னே நான் செய்வது! இவர் தமக்கு உண்டருளும்படி இறைச்சியும் கொடுப்பார் யாரும் இல்லை, நானே அதுவும் கொண்டு வந்து கொடுத்தல் வேண்டும், ஆனால் தனித்திருக்கும் இவரைப் பிரிந்து செல்லவும் இயலவில்லை, இந்நிலையில் யான் என் செய்கேன்! இவர் பசித்திருப்ப, இறைச்சி கொடாது நிற்றலும் கூடாது! ஆதலால் எக்காரணத் தினாலும் சாலவும் இனியரான இவர்தமக்கு இறைச்சி கொண்டு இங்கு வரவும் வேண்டும் என்று எண்ணி.

விளக்கவுரை

****

போதுவர் மீண்டு செல்வர்
புல்லுவர் மீளப் போவர்
காதலின் நோக்கி நிற்பர்
கன்றகல் புனிற்றாப் போல்வர்
நாதனே அமுது செய்ய
நல்லமெல் லிறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு
கொண்டிங்கு வருவே னென்பார். #761

எம்பெருமானை விடுத்துப் போவர். மீண்டு வருவர். கட்டித் தழுவுவர். திரும்பிப்போவர். சிறிது தொலைவு சென்று நின்று எம்பெருமானைக் காதலால் நோக்கி நிற்பர். கன்றை விட்டகலும் பசுவினைப் போல்வர். நாதனே! அமுது செய்ய நல்ல மிருதுவான இறைச்சியைக் குற்றமற வேறாகத் தெரிந்தெடுத்துக் கொண்டு இங்கு வருவேன் என்பார்.

விளக்கவுரை

****

ஆர்தம ராக நீரிங்
கிருப்பதென் றகல மாட்டேன்
நீர்பசித் திருக்க இங்கு
நிற்கவுங் கில்லேன் என்று
சோர்தரு கண்ணீர் வாரப்
போய்வரத் துணிந்தா ராகி
வார்சிலை எடுத்துக் கொண்டு
மலர்க்கையால் தொழுது போந்தார். **#762**

உம்துணைவராக இங்கு யார் இருப்பதென்று நினைந்து, உம்மை விடுத்து நான் போகமாட்டேன் என்றாலும், நீர் பசித்திருக்க இங்கு நிற்கவும் மாட்டேன் என்று, இருதிறனாகவும் எண்ணி, அக்கவலை மிகுதியால், உள்ளம் வருந்திக் கண்ணீர் பெருகிட, ஒருவாறு தாம் இறைச்சி கொண்டு வருவதற்குப் போய்வரத் துணிந்தவராகி, வில்லைக் கையில் எடுத்துக் கொண்டு, மலர் போன்ற தம்கைகளைக் கூப்பி, பெருமானைத் தொழுது போயினார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

முன்புநின் றரிதில் நீங்கி
மொய்வரை யிழிந்து நாணன்
பின்புவந் தணைய முன்னைப்
பிறதுறை வேட்கை நீங்கி
அன்புகொண் டுய்ப்பச் செல்லும்
அவர்திரு முகலி ஆற்றின்
பொன்புனை கரையி லேறிப்
புதுமலர்க் காவிற் புக்கார். **#763**

பெருமானின் திருமுன்னிலையினின்றும் அருமைப் பாட்டுடன் நீங்கி, சீர்விளங்கிய அம்மலையினின்றும் நாணன் பின் வரக், கீழிறங்கி, இதற்கு முன்பாக உள்ள தமக்குற்ற பிற துறைகளின் விருப்புகள் யாவும் நீங்கப் பெற்று, தாம் கொண்ட அன்பே தம்மைச் செலுத்திடச் செல்கின்ற

திண்ணனார், திருவுடைய பொன் முகலி ஆற்றங் கரையில் வந்து சேர்ந்து, அங்குள்ள புதிய மலர்கள் மலர்ந்து சிறந்து நின்ற பூஞ்சோலையில் புகுந்தார்.

விளக்கவுரை

****

காடனும் எதிரே சென்று
தொழுதுதீக் கடைந்து வைத்தேன்
கோடுடை ஏனம் உங்கள்
குறிப்படி உறுப்பை யெல்லாம்
மாடுற நோக்கிக் கொள்ளும்
மறித்துநாம் போகைக் கின்று
நீடநீர் தாழ்த்த தென்னோ
என்றலும் நின்ற நாணன். **#764**

சோலையில் புகுந்த திண்ணனார் முன்பு, காடனும், எதிரே சென்று, தொழுது, ஐயனே! நீர் சொல்லியவாறு நெருப்புக் கடைந்து பற்ற வைத்துள்ளேன். கொம்புடைய அப் பன்றியின் உறுப்புகளையெல்லாம் உங்கள் குறிப்பின்படி வைத்துள் ளேன். திரும்பி நாம் வேட்டை ஒழிந்து போதற்கு இதுகாறும் காலம் தாழ்த்தது என்னோ? என்றலும், அது கேட்ட நாணன்,

விளக்கவுரை

****

அங்கிவன் மலையில் தேவர்
தம்மைக்கண் டணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப் போதா
வல்லுடும் பென்ன நீங்கான்
இங்குமத் தேவர் தின்ன
இறைச்சிகொண் டேகப் போந்தான்
நங்குலத் தலைமை விட்டான்
நலப்பட்டான் தேவர்க் கென்றான். **#765**

அங்கு அம்மலைமேல் இவன் சேறலும், அங்கிருந்த குடுமித் தேவரைக் கண்டு, அணைத்துக் கொண்டு, மரப் பொந்தைப் பற்றி அதை விடாது நிற்கும் வலிய உடும்பினைப் போன்று, அக்குடுமித்தேவரை விட்டு நீங்காது நின்றான். இதுபொழுதும் அத் தேவர் தின்ன இறைச்சி கொண்டு போகவே வந்துள்ளான். இவன் நம் குலத்தைக் காக்கும் தலைமைப் பொறுப்பை விட்டு விட்டான். இவன் அக்கடவுளுக்கே உரியனாய் நலம் பெற்று விட்டான் எனக் கூறி னான்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

என்செய்தாய் திண்ணா நீதான்
என்னமால் கொண்டாய் எங்கள்
முன்பெரு முதலி யல்லை
யோவென முகத்தை நோக்கார்
வன்பெரும் பன்றி தன்னை
எரியினில் வதக்கி மிக்க
இன்புறு தசைகள் வெவ்வே
றம்பினால் ஈர்ந்து கொண்டு. **#766**

திண்ணா! நீ என்ன காரியம் செய்தாய்! எங்கள் குலத்து முதல்வன் நீ அல்லையோ? இப்படியும் நீ செய்யலாமோ? எனக் கூறும் காடனது முகத்தையும் திரும்பிப் பாராதவராய் திண்ணனார், வலிய அப்பெரிய பன்றியினை நெருப்பினிலிட்டு வதக்கி, அதில் மிகவும் சுவைமிகுந்த தசைகளை வெவ்வேறாகத் தம் அம்பால் கோத்து எடுத்துக் கொண்டு.

விளக்கவுரை

****

கோலினிற் கோத்துக் காய்ச்சிக்
கொழுந்தசை பதத்தில் வேவ
வாலிய சுவைமுன் காண்பான்
வாயினில் அதுக்கிப் பார்த்துச்
சாலவும் இனிய எல்லாம்
சருகிலை யிணைத்த கல்லை
ஏலவே கோலிக் கூட
அதன்மிசை இடுவா ரானார். **#767**

அவைகளை ஓர் அம்பில் கோத்து, நெருப்பில் இட்டுக் காய்ச்சி, கொழுத்த அத்தசைகள் நல்ல பதத்தில் வெந்திட அவற்றின் இனிய சுவையை முன்னர்த் தாமே காணும் பொருட்டாக அத்தசைகளை வாயில் போட்டு அதுக்கிப் பதம் பார்த்து, மிகவும் இனிய எல்லாவற்றையும் முழுமையாகச் சருகினால் இணைத்துத் தைத்த தொன்னை ஒன்றினை அமைத்து, அதன்கண் இடுவாரானார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மருங்குநின் றவர்கள் பின்னும்
மயல்மிக முதிர்ந்தான் என்னே
அரும்பெறல் இறைச்சி காய்ச்சி

அதுக்கிவே றுமிழா நின்றான்
பெரும்பசி யுடைய னேனும்
பேச்சிலன் எமக்கும் பேறு
தரும்பரி சுணரான் மற்றைத்
தசைபுறத் தெறியா நின்றான். #768

அருகில் நின்ற நாணனும் காடனும் இவன் மேலும் மயக்கம் முதிர்ந்து விட்டான், சுவைமிக்க பன்றி இறைச்சியினைக் காய்ச்சி, வாயில் இட்டு அதுக்கிப் பின்னர் அதனை வேறாக உமிழ்ந்து நிற்கின்றான், இவன் பெரும் பசி உடையவன் என்றாலும் அதைப் பற்றி ஒரு பேச்சும் இல்லாதிருக்கின்றான். பசித்திருக்கும் நமக்கும் அவ்விறைச்சியைத் தரவேண்டும் என்பதை உணராதிருக்கின்றான். மற்றைத் தசைகளைப் புறத்தில் வீசிக் கொண்டிருக்கின்றான்.

விளக்கவுரை

****

தேவுமால் கொண்டான் இந்தத்
திண்ணன்மற் றிதனைத் தீர்க்கல்
ஆவதொன் றறியோந் தேவ
ராட்டியை நாக னோடு
மேவிநாங் கொணர்ந்து தீர்க்க
வேண்டும்அவ் வேட்டைக் கானில்
ஏவலாட் களையுங் கொண்டு
போதுமென் றெண்ணிப் போனார். #769

இத்திண்ணன் தெய்வமயக்கம் கொண்டான், நம் சொல்லை ஏற்கான், அன்றியும் நாம் யார் என்பதைக் கூட அம்மயக்கத் தால் அறியான், இதனை இங்கு நாம் தீர்த்திடக் கூடிய ஏது ஒன்றினை யும் அறியோம், நாம் ஊர் சென்று அங்குத் தேவராட்டியை நாகனோடு ஒருங்கு அழைத்து வந்து, இவன் மயக்கத்தைத் தீர்க்க வேண்டும். வேட்டைக் காட்டில் நம்மை எதிர்பார்த்திருக்கும் வேடுவர்களையும் கூட்டிக் கொண்டு போவோம் என எண்ணிப் போயினர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

கானவர் போன தோரார்
கடிதினில் கல்லை யின்கண்
ஊனமு தமைத்துக் கொண்டு
மஞ்சனம் ஆட்ட உன்னி
மாநதி நன்னீர் தூய

வாயினிற் கொண்டு கொய்த
தூநறும் பள்ளித் தாமம்
குஞ்சிமேல் துதையக் கொண்டார். **#770**

அவ்வேடர்கள் போனதைத் திண்ணனார் அறியார். விரைவினில் தேக்கிலைச் சருகினால் ஆய தொன்னையின் கண், ஊன் அமுதத்தை எடுத்துக்கொண்டு, பெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டப் பொன் முகலியாற்றின் நன்னீரைத் தன் வாயில் கொண்டு, அச்சோலையில் தாம் எடுத்த தூய நறுமனம் மிக்க பூக்களைத் தமது தலையில் எடுத்துக் கொண்டவராய்.

தனுவொரு கையில் வெய்ய
சரத்துடன் தாங்கிக் கல்லைப்
புனிதமெல் லிறைச்சி நல்ல
போனகம் ஒருகை யேந்தி
இனியஎம் பிரானார் சாலப்
பசிப்பரென் றிரங்கி யேங்கி
நனிவிரைந் திறைவர் வெற்பை
நண்ணினார் திண்ண னார்தாம். **#771**

வில்லை ஒரு கையில் கொடிய அம்பினுடன் சேர எடுத்துக் கொண்டு, புனிதமான மென் தசைகளாய இறைச்சியாம் திருவமுதினை ஒருகையில் ஏந்தியவராய், எம்பெருமான் மிகவும் பசித்திருப்பார் என்று இரங்கி, ஏங்கி, மிக விரைவுடன் மலையைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

இளைத்தனர் நாய னார்என்
றீண்டச்சென் றெய்தி வெற்பின்
முளைத்தெழு முதலைக் கண்டு
முடிமிசை மலரைக் காலில்
வளைத்தபொற் செருப்பால் மாற்றி
வாயில்மஞ் சனநீர் தன்னை
விளைத்தஅன் புமிழ்வார் போல
விமலனார் முடிமேல் விட்டார். **#772**

என் நாயனார் பசியால் இளைத்துவிட்டார் என்று அவர் அருகே சென்று, மலையில் முளைத்து எழுந்த சுடர்க் கொழுந்தாய முதல்வரைக் கண்டு, அவர்தம் முடிமீதிருந்த பூக்களைக் காலில் அணிந்த அழகிய செருப்பால் அகற்றி, தம் வாயில் உள்ள நீரினைத் தம் அன்பினை உமிழ்வார்போல வினையின் நீங்கி விளங்கி நிற்கும். பெருமானின் திருமுடிமேல் உமிழ்ந்து விட்டார்.

தலைமிசைச் சுமந்த பள்ளித்
தாமத்தைத் தடங்கா ளத்தி
மலைமிசைத் தம்பி ரானார்
முடிமிசை வணங்கிச் சாத்திச்
சிலைமிசைப் பொலிந்த செங்கைத்
திண்ணனார் சேர்த்த கல்லை
இலைமிசைப் படைத்த ஊனின்
திருவமு தெதிரே வைத்து. **#773**

வில்லைத் தாங்கிய திண்ணனார், தலைமீது சுமந்து வந்த பூக்களை மலை மீதிருந்த தமது பெருமானின் திருமுடிமீது வணங்கிச் சாத்திய பின்பு, தாம் சேர்த்த தேக்க இலைத் தொன்னை மீது படைத்த ஊன் ஆகும் திருவமுதினைப் பெருமானின் திருமுன்பாக வைத்து.

கொழுவிய தசைக ளெல்லாம்
கோலினில் தெரிந்து கோத்தங்
கழலுறு பதத்திற் காய்ச்சிப்
பல்லினா லதுக்கி நாவிற்
பழகிய இனிமை பார்த்துப்
படைத்தஇவ் விறைச்சி சால
அழகிது நாய னீரே
அமுதுசெய் தருளும் என்றார். **#774**

மிகவும் கொழுத்த பன்றியின் தசைகள் யாவற் றையும் வகிர்ந்து, அவற்றை அம்பில் கோத்து, நெருப்பில் உற்ற நல்ல பதத்தில் காய்ச்சிப், பின்னர் அவை இனிமையுடையனவோ எனப் பல்லினால் அதுக்கி, நாவில் சுவையை முன்னர்ப் பழகிய வகையால் இனிமை பார்த்து எடுத்துப் பெருமானாருக்கு இங்குப் படைத்த இறைச்சி மிகவும் நல்லது, சுவையுடையது, என் நாயனீரே! இதனை உண்டருளுவீராக! என்றார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அன்னவிம் மொழிகள் சொல்லி
அமுதுசெய் வித்த வேடர்
மன்னனார் திருக்கா ளத்தி
மலையினார்க் கினிய நல்லூன்
இன்னமும் வேண்டு மென்னும்
எழுபெருங் காதல் கண்டு
பன்னெடுங் கரங்கள் கூப்பிப்
பகலவன் மலையில் தாழ்ந்தான். **#775**

இத்தகைய நயமுடைய சொற்களைச் சொல்லிப் பெருமானுக்குத் தாம்

படைத்த ஊன் அமுதினை உண்பித்த வேடர் மன்னராய திண்ணனாருக்கு, திருக்காளத்தி மலையை இடனாகக் கொண்டிருக்கும் புண்ணியருக்கு இன்னமும் இதுபோன்ற நல்ல ஊன் அமுது கொடுக்க வேண்டுமே! என அவர் உள்ளத்து எழுகின்ற பெருங் காதலினைக் கண்டு, தன் பலவாகிய நெடிய ஒளிக்கதிர்களால் வணங்கிய கதிரவன். அம்மலையில் சென்று மறைந்தனன்.

விளக்கவுரை

கதிரவன் இயல்பில் மறைய, அதற்குக் கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறிய மையின், இது தற்குறிப்பேற்ற அணியாம்.

அவ்வழி யந்தி மாலை
அணைதலும் இரவு சேரும்
வெவ்விலங் குளவென் றஞ்சி
மெய்ம்மையின் வேறு கொள்ளாச்
செவ்விய அன்பு தாங்கித்
திருக்கையில் சிலையும் தாங்கி
மைவரை யென்ன ஐயர்
மருங்குநின் றகலா நின்றார். **#776**

கதிரவன் மறையவே அந்தியாய மாலைக்காலம் வருதலும், அது கண்டு, இனி இரவில் வரும் கொடிய விலங்குகள் இங்கு உள்ளன என அஞ்சி, உண்மையினின்றும் பிறழாத செப்பமாய அன்பினைக் கொண்டு, திருக்கையில் வில்லையும் பிடித்துக் கொண்டு, ஒரு கரிய மலையெனப் பெருமானின் அருகிலிருந்து நீங்காது நின்றார்.

சார்வருந் தவங்கள் செய்தும்
முனிவரும் அமரர் தாமும்
கார்வரை அடவி சேர்ந்தும்
காணுதற் கரியார் தம்மை
ஆர்வமுன் பெருக ஆரா
அன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார்
நீளிருள் நீங்க நின்றார். **#777**

முனிவர்களும், தேவர்களும், செயற்கரிய தவங்கள் செய்தும், மேகம் தவழும் மலை இடமாய காடு புகுந்தும், காணுதற்கரிய சிவபெருமானை, உள்ளத்து எழும் ஆர்வம் முன்னாகப் பெருகிட, அளவிலாத அன்பினில் கண்டு கொண்டு, அப் பெருமானையே நேர்பெற நோக்கியவாறு, நீண்ட இருள்பரந்த இரவு கழியும் வரை நின்றார் திண்ணனார்.

விளக்கவுரை

தவம் - தனித்தல், வாட்டுதல் எனும் பொருள்படும். கோடைக்கண் வெயிலிடை நிற்றல், பனியின்கண் நீரிடை நிற்றல் போல்வன செய்து உடலை ஒறுத்து. விரதம், யோகம் முதலியன பூணுதல் தவம் என்பர். புற *(சரியை),* அக *(கிரியை)* வழிபாடுகளைச் செய்து அவற்றின் பயனாக மனஒருமை பெற்று, இறையுணர்வில் திளைத்து நிற்றலை*(யோகம்)*த் தரும் *(சிவஞான சித்தி. -சுபக். 8சூ.18-22)* என்னும் ஞான நூல்கள். முனிவர்களும் தேவர்களும் இவ்வரிய தவத்தைச் செய்யினும், தன்முனைப் பற்றுச் செய்யாமை யின் இறைவர் அவர்களுக்கு அரியராயினர். `கங்குல் எல்லை காண்பளவும் நின்றான் இமைப்பிலன் நயனம் என்றான்` எனவரும் கம்பர் வாக்கும் ஈண்டு நினைவுகூரலாம்.

கழைசொரி தரளக் குன்றில்
கதிர்நில வொருபாற் பொங்க
முழையயர வுமிழ்ந்த செய்ய
மணிவெயில் ஒருபால் மொய்ப்பத்
தழைகதிர்ப் பரிதியோடும
சந்திரன் தலைஉ வாவில்
குழையணி காதர் வெற்பைக்
கும்பிடச் சென்றால் ஒக்கும். **#778**

அது பொழுது மூங்கில்களினின்றும் உதிரும் முத்துக்களின் ஒளியாய நிலவு ஒரு பாலாகப் பொங்கி எழவும், புற்றில் இருந்திடும் நாகங்கள் உமிழ்ந்த இரத்தினங்களின் சிவந்த ஒளி ஒருபால் விளங்கிடவும், இருக்கும் தோற்றத்தைக் காண, சந்திரன் தழைத்த ஒளியையுடைய கதிரவனோடு சேர்ந்து, மறைமதி (அமா வாசை) யன்று தோடணிந்த காதுடைய பெருமானைக் காளத்தியில் கண்டு கும்பிடச் சென்றாற் போன்றிருந்தது.

விளக்கவுரை

தரளம் - முத்து. இது நிலவொளிக்கு உவமை. செய்ய மணிவெயில் - சிவந்த மணிகளின் ஒளி. இது கதிரவன் ஒளிக்கு உவமை. கதிரவனும், சந்திரனும் நேர்படக்காணும் நாளும், அவை எதிர் எதிராகக் காணும் நாளும் உவா எனப்படும். இவற்றுள் முன்னையது மறைமதி *(அமாவாசை)* எனப்படும். பின்னையது நிறைமதி *(பௌர்ணமி)*எனப்படும்.

விரவுபன் மணிகள் கான்ற
விரிசுடர்ப் படலை பொங்க
மரகதம் ஒளிகொள் நீல
மணிகளும் இமைக்குஞ் சோதி
பொரவிரு சுடருக் கஞ்சிப்

போயின புடைகள் தோறும்
இரவிரு ளொதுங்கி னாலே
போன்றுள தெங்கும் எங்கும். **#779**

மேலும் அங்குப் பொருந்தியிருக்கும் முத்து, இரத்தினம் முதலிய பலவகை மணிகளும், விரிந்த ஒளியையுடைய மரகதப் பச்சைகளும், ஒளிகொண்ட நீலமணிகளும், மின்னிடும் பசிய கருமையாய ஒளியானது, கதிரவனும் சந்திரனும் தம்முடன்பொர, அஞ்சி, இரவும் இருளும் பக்கம் தோறும் ஒதுங்கி இருப்பது போன்று எங்கெங்கும் உள்ளது.

விளக்கவுரை

முத்தும் இரத்தினமும் கதிரவன் ஒளி போன்று ஒளிவிடுவன. மரகதமும், நீலமும் இரவின் ஒளிபோன்று கருமையாய் இமைப்பன.
விரிசுடர்ப்படலை - விரிந்து வீசுகின்ற ஒளிக்கூட்டம். கதிரவனுக்கு அஞ்சியது இருள். சந்திரனுக்கு அஞ்சியது இரவு.

செந்தழல் ஒளியில் பொங்கும்
தீபமா மரங்க ளாலும்
மந்திகள் முழையில் வைத்த
மணிவிளக் கொளிக ளாலும்
ஐந்தும்ஆ றடக்கி யுள்ளார்
அரும்பெருஞ் சோதி யாலும்
எந்தையார் திருக்கா ளத்தி
மலையினில் இரவொன் றில்லை. **#780**

செந்தழலின் ஒளிபோன்று விளங்கும் தீபமரங் களாலும், குரங்குகள் தம் கூட்டினில் விளக்காக வைத்திட்ட முத்து மணி களின் ஒளியாலும், ஐந்து புலன்களையும், ஆறு குற்றங்களையும் அடக்கிச் சிவயோக சாதனையில் நின்ற முனிவர்களின் அரும்பெரும் ஓளியினாலும் எந்தையாராகிய பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக் காளத்தி மலையில் இரவு என்பது பொருந்துதல் இல்லை.

விளக்கவுரை

எனவே காளத்தி மலை எஞ்ஞான்றும் ஒளிமயமாகவே விளங்கும்.
தீபமாமரங்கள் - சோதி விருட்சம் என அழைப்பர். பகலில் ஏனைய மரங்களைப் போல இருக்கும் இம்மரம், இரவில் நெடுந் தொலைவிலும் பேரொளி விளங்க நிற்கும் என்பர். ஐந்து - ஐம்பொறிகள். குற்றங்கள் ஆறாவன - செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பிறந்த மானம், மாணா உவகை. இரவு ஒன்று - இரவு பொருந்துதல். இம் மூன்று பாடல்களானும் இரவின் முதல்யாமத்து இருள் சூழ்ந்திருந்தமையையும், இடையாமத்து இரவும் இருளும் ஒதுங்கியமையையும், கடை யாமத்து

இரவு என்பதே இல்லையா யிற்று என்பதையும் ஆசிரியர் கூறுமாற்றான், திண்ணனார் அம்முப்போதும் கண் துயிலின்றி இறைவரைக் காத்து வந்தமையை உய்த்துணருமாறு செய்துள்ளார் என்பதை அறியலாம்.

வருங்கறைப் பொழுது நீங்கி
மல்கிய யாமம் சென்று
சுருங்கிட அறிந்த புள்ளின்
சூழ்சிலம் போசை கேட்டுக்
கருங்கட லென்ன நின்ற
கண்துயி லாத வீரர்
அரும்பெறல் தம்பி ரானார்க்
கமுதுகொண் டணைய வேண்டி. **#781**

சூழ்ந்து வரும் கரிய இருளான காலம் நீங்கி, அதனொடு தொடர்ந்த யாமங்களும் சென்று, இருள் சுருங்கிடும் வைகறை அணைய, அதனை உணர்ந்த பறவைகளின் கூட்டம் யாண்டும் ஒலிக்கக் கேட்டு, கருமையானதொரு கடலென அன்றிரவு முழுதும் கண்துயிலாது நின்ற வீரராகிய திண்ணனார், பெறுதற்கரிய தம் பெருமானுக்கு ஊனாய திருவமுது அமைத்துக் கொண்டு அங்கு வர வேண்டி,

விளக்கவுரை

****

ஏறுகாற் பன்றி யோடும்
இருங்கலை புனமான் மற்றும்
வேறுவே றினங்கள் வேட்டை
வினைத்தொழில் விரகி னாலே
ஊறுசெய் காலம் சிந்தித்
துருமிகத் தெரியாப் போதின்
மாறடு சிலையுங் கொண்டு
வள்ளலைத் தொழுது போந்தார். **#782**

மலையிடத்துக் குதித்தோடும் பன்றியுடன், பெருங் கலைமான், புனமான் எனும் இவைபோன்ற வேறு வேறு விலங் கினங்களை வேட்டையாடுதற்குரிய தந்திரத்தால், அதற்குரிய காலத் தைச் சிந்தித்து, உருவம் நன்றாகத் தெரியாத வைகறைப் பொழுதில், பகையை அழித்திடும் தமது வில்லையும் எடுத்துக் கொண்டு, எம் வள்ளலாராகிய காளத்தி நாதரைக் கைதொழுது, வேட்டையாடப் போயினார் திண்ணனார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மொய்காட்டும் இருள்வாங்கி
முகங்காட்டுந் தேர்இரவி
மெய்காட்டும் அன்புடைய
வில்லியார் தனிவேட்டை
எய்காட்டின் மாவளைக்க
இட்டகருந் திரையெடுத்துக்
கைகாட்டு வான்போலக்
கதிர்காட்டி யெழும்பொழுதில். #783

எங்கும் செறிந்து விளங்கும் இருளை நீக்கித் தன்முகத்தைக் காட்டும் பெருந் தேருடைய கதிரவன், தம் உடம்பின் வழி அன்பின் தன்மையைக் காட்டுகின்ற அன்புருவாய வில்லேந்திய திண்ணனார், தனியான வேட்டையாட, அம்பு எய்கின்ற அக் காட்டினை அடைந்து, மிருகங்களைச் சாய்த்திடற்கு அவைகளைக் காணமுடியாதவாறு தான் இட்ட பெரும் இருளாய கருந்திரையை எடுத்து, இனி உமது செயலைப் புரியும் எனக் கைகாட்டுவான் போலத் தன் கதிர்களை வெளிக்காட்டித் தோன்றிய பொழுதில்.

விளக்கவுரை

மொய் காட்டும் - இருட் செறிவு இது என்பதைக் காட்டும். முகம் காட்டுதல் - ஞாயிறு தோன்றல். எய்காடு - அம்பு எய்து விலங்குகளைப் பிடித்தற்குரிய காடு. கதிரவன் வைகறையில் தோன்றி ஒளி காட்டல் இயற்கையாக, அதனைத் திண்ணனார் செயலுக்கெனக் கை காட்டுவான் போல் எனக் கூறியது தற்குறிப்பேற்றமாம்.

எய்தியசீர் ஆகமத்தில்
இயம்பியபூ சனைக்கேற்பக்
கொய்தமல ரும்புனலும்
முதலான கொண்டணைந்தார்
மைதழையுங் கண்டத்து
மலைமருந்தை வழிபாடு
செய்துவருந் தவமுடைய
முனிவர்சிவ கோசரியார். #784

இருள் தழைக்கும் கண்டமுடைய காளத்தி மலையில் இருக்கும் மருந்தாய சிவபெருமானை வழிபாடு செய்துவரும் தவமுடைய முனிவராகிய சிவகோசரியார், அது பொழுது பெருஞ் சிறப்பினவாய சிவாகமங்களில் விதிக்கப்பட்ட பூசனை முறைகளுக்கு ஏற்ப,கொய்தெடுத்த நன்மலரும் நீரும் முதலான பூசனைப் பொருள்களைக்கொண்டு வந்தார்.

விளக்கவுரை

சிவகோசாரியார் - இவர் காளத்தி நாதரை நாளும் சிவாகம முறைப்படி வழிபட்டுவரும் ஆதிசைவர் ஆவர். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வந்துதிரு மலையின்கண்
வானவர்நா யகர்மருங்கு
சிந்தைநிய மத்தோடும்
செல்கின்றார் திருமுன்பு
வெந்தஇறைச் சியும்எலும்பும்
கண்டகல மிதித்தோடி
இந்தஅனு சிதங்கெட்டேன்
யார்செய்தார் என்றழிவார். **#785**

திருக்காளத்தி மலையின்கண்வந்து தேவர்களின் தலைவனாய சிவபரஞ்சுடரின் அருகே தூயதான சிந்தனையும், நியம மும் கொண்டு வருகின்றவராய அவ்வேதியர், பெருமானின் திரு முன்னிலையில் வெந்த இறைச்சியும் எலும்பும் கிடப்பக் கண்டு, அவற்றைத் தாண்டி ஓடிச் சென்று, ஓ கெட்டேன்! இவ்வருவருப் பிற்குரிய பொருள் நேர் இருக்க யார் செய்தார்? எனக் கூறி, மன மழிந்து தளர்வுறுவார்.

விளக்கவுரை

அநுசிதம் - அருவருப்பாகும் குற்றம்.

மேவநேர் வரஅஞ்சா
வேடுவரே இதுசெய்தார்
தேவதே வேசனே
திருமுன்பே இதுசெய்து
போவதே இவ்வண்ணம்
புகுதநீர் திருவுள்ளம்
ஆவதே எனப்பதறி
அழுதுவிழுந் தலமந்தார். **#786**

பெருமானின் திருமுன்பு நேர் வருவதற்கு அஞ் சாத வேடுவரே இதனைச் செய்தாராதல் வேண்டும். தேவாதி தேவனே! ஈசனே! உம் திருமுன்பிலும் வேடுவர் இவ்வருவருப்பைச் செய்து போவதோ? இக்கொடுமை நிகழ்வதும் பெருமானின் திருவுள்ளம் ஆவதோ? என்று பதறி அழுது விழுந்து துன்புற்றார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பொருப்பிலெழுஞ் சுடர்க்கொழுந்தின்
பூசனையும் தாழ்க்கநான்

இருப்பதினி என்னென்றவ்
இறைச்சியெலும் புடன்இலையும்
செருப்படியும் நாயடியும்
திருவலகால் மாற்றியபின்
விருப்பினொடுந் திருமுகலிப்
புனல்மூழ்கி விரைந்தணைந்தார். **#787**

காளத்திமலையில் எழுந்தருளியிருக்கின்ற சுடர்க் கொழுந்தாய சிவபெருமானின் பூசனைக்குக் காலம் தாழ்க்க, நான் இங்கு இருப்பது என்னே? என்று கருதியவராய், அவ்விறைச்சிகளை யும், எலும்புகளையும், உடன்கிடந்த இலைகளையும், செருப்படியும், நாயடியும் ஆயசுவடுகளையும், திரு அலகால் மாற்றி, எழுகின்ற பெருவிருப்பத்துடன், திருவுடைய பொன்முகலியாற்றில் மூழ்கி, தூய்மை உடையவராய், விரைவாக வந்தணைந்தார் சிவகோசரியார்.

விளக்கவுரை

`ஈங்கொரு வேடுவன் நாயொடும் புகுந்து... தொடர்ந்த நாயொடு தோன்றினன்` *(தி.11* கண். மறம். வரி *81-82)* என வரும் நக்கீர தேவரின் திருவாக்கால் திண்ணனாருடன் நாயொன்றும் தொடர்ந்து வந்தமை போதரும். இவ்வாறன்றித் திண்ணனார் இறைவற்குப் படைத்த இறைச்சியைத் தின்ன வேண்டி வந்த நாயடி என உரைகண்டனர் மகாலிங் கையர். நக்கீரதேவரின் வாக்கொடுபட்ட வரலாறே கொள்ளத் தக்கதாம்.

பழுதுபுகுந் ததுதீரப்
பவித்திரமாம் செயல்புரிந்து
தொழுதுபெறு வனகொண்டு
தூயபூ சனைதொடங்கி
வழுவில்திரு மஞ்சனமே
முதலாக வரும்பூசை
முழுதுமுறை மையின்முடித்து
முதல்வனார் கழல்பணிந்தார். **#788**

முன்னர் அங்கு நிகழ்ந்த குற்றம் தீருமாறு அலகிட்டு, நீரால் தூய்மை செய்து, தொழுது, பின் தூயதாகத் தாம் கொண்டிருக்கும் பொருள்களைக் கொண்டு, சிறந்த தமது பூசையைத் தொடங்கி, குறைவிலாத திருமுழுக்காட்டல் முதலாக அமைந்த வழிபாடுகளைச் செய்து, தம் முதல்வனார் திருவடிகளில் வணங்கினார் சிவகோசரியார்.

விளக்கவுரை

பவித்திரம் - தூய்மை பொருந்தத் தகும் செயல். தருப்பைப் புல்லை

முடித்துக் கையில் அணிந்து கொண்டு, இந்நற் செயலைச் செய்வது என்றுரைப்பாரும் உளர்.

பணிந்தெழுந்து தனிமுதலாம்
பரனென்று பன்முறையால்
துணிந்தமறை மொழியாலே
துதிசெய்து சுடர்த்திங்கள்
அணிந்தசடை முடிக்கற்றை
அங்கணரை விடைகொண்டு
தணிந்தமனத் திருமுனிவர்
தபோவனத்தி னிடைச்சார்ந்தார். **#789**

பணிந்து எழுந்து, ஒப்பற்ற முதல்வன் சிவ பெருமான் ஒருவனே என்று பன்முறையானும், போற்றிவழிபடும் மறைமொழிகளால் துதி செய்து, ஒளியையுடைய இளம்பிறை சூடிய சடைமுடிக் கற்றையுடன் நெற்றியில் கண்ணுடைய இறைவனை விடை கொண்டு, மீண்டு, அடக்கமும் அமைதியும் பெற்ற தவமுனிவராய சிவகோசரியார், தாம் தவம் செய்து கொண்டிருக்கும் காட்டினிடையே சென்றார்.

விளக்கவுரை

****

இவ்வண்ணம் பெருமுனிவர்
ஏகினார் இனியிப்பால்
மைவண்ணக் கருங்குஞ்சி
வனவேடர் பெருமானார்
கைவண்ணச் சிலைவளைத்துக்
கான்வேட்டை தனியாடிச்
செய்வண்ணத் திறம்மொழிவேன்
தீவினையின் திறம்ஒழிவேன். **#790**

இவ்வண்ணம் பெருமுனிவராய சிவகோசரியார் செல்ல, இனி இப்பால், மையின் நிறம் போலும் கரும் குடுமியினை உடைய வனவேடரான திண்ணனார், கைவண்ணம் மிகுந்த வில்லை வளைத்துக் காட்டில் வேட்டையாடிச் செய்கின்ற சிறப்பினை நான் சொல்லுகின்றேன். இதனால் என் தீவினையின் திறத்தினையும் ஒழித் திடுவேன்.

விளக்கவுரை

திறமொழிவேன் என வருவனவற்றுள், முன்னையது திறம் மொழிவேன் என்றும், பின்னையது திறம் ஒழிவேன் என்றும் பிரித்துப் பொருள் கொள நின்றன. திண்ணனார் இனிச் செய்யும் வேட்டையெல்லாம் தம்வயத்ததன்றிக் காளத்திநாதரின் அருள் வயத்ததாய நிலையில்

செயப்படுதலின், அச்செயலைக் கூறல், தீவினை ஒழிதற்குக் காரணமாயிற்று. வரும் பாடலிலும் கொன்றார் என்னாது, கொன்றருளி என அருளுவதும் காண்க.

திருமலையின் புறம்போன
திண்ணனார் செறிதுறுகல்
பெருமலைக ளிடைச்சரிவில்
பெரும்பன்றி புனம்மேய்ந்து
வருவனவுந் துணிபடுத்து
மானினங்கள் கானிடைநின்
றொருவழிச்சென் றேறுதுறை
ஒளிநின்று கொன்றருளி. #791

திருக்காளத்தி மலையினின்றும் வெளிப்போந்த திண்ணனார், சிறுசிறு பாறைகளாகச் செறிந்து பொருந்தி நிற்கின்ற பெருமலைகளின் இடையே சென்று, அங்குள்ள சாரல்களில் பெரும் பன்றிகள் காட்டில் மேய்ந்து வருவனவற்றைத் துண்டித்தும், மானி னங்கள் காட்டின் இடையாக நின்றுகூட்டமாகப் புறப்பட்டு ஒரு வழியில் வந்து ஏறுகின்ற அத்துறைகளில், தாம் ஒளிந்திருந்து அவற்றைக் கொன்றருளியும்,

விளக்கவுரை

****

பயில்விளியால் கலையழைத்துப்
பாடுபெற ஊடுருவும்
அயில்முகவெங் கணைபோக்கி
அடியொற்றி மரையினங்கள்
துயிலிடையிற் கிடையெய்து
தொடர்ந்துகட மைகளெய்து
வெயில்படுவெங் கதிர்முதிரத்
தனிவேட்டை வினைமுடித்தார். #792

மானினங்களை அழைத்தற்குரிய ஒலியால், திண்ணனார் கூவி அக்கலைமான்களை அழைத்து, அவற்றின் மீது, ஊடுருவும் வேல் முதலிய கொடிய அம்புகளை விடுத்தும், மரை இனங்களின் அடிச்சுவடுகளின்வழி தொடர்ந்து சென்று, அவை இருக்குமிடத்தே அம்பு எய்து, அம்மரை இனங்களைக் கைக்கொண்டும் கதிரவனின் வெப்பம் மிக அவ்வேளையில் தமது தனியான வேட்டையாடும் செயலை முடித்துக் கொண்டார் திண்ணனார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பட்டவன விலங்கெல்லாம்
படர்வனத்தில் ஒருசூழல்
இட்டருகு தீக்கடைகோல்
இருஞ்சுரிகை தனையுருவி
வெட்டிநறுங் கோல்தேனும்
மிகமுறித்துத் தேக்கிலையால்
வட்டமுறு பெருங்கல்லை
மருங்குபுடை படவமைத்தார். #793

கொலைப்பட்ட அம்மிருகங்கள் யாவற்றையும், படர்ந்த காட்டில் ஒரு மரச்சூழலில் கொண்டு வந்து இட்டு, தமது பெருஞ் சூழல் வாளை உருவி எடுத்து, அருகில் தீக்கடைக் கோலும் வெட்டி, நறுமணம் பொருந்திய கொம்புத் தேனுள்ள கிளையையும் முறித்து எடுத்து வந்த பின்னர், தேக்கமர இலையால் வட்டமாக வரும் விளிம்புடைய பெரிய தொன்னை ஒன்று அதன் உள்ளிடம் அகன் றிருக்குமாறு பெரிதாகத் தைத்தார்.

விளக்கவுரை

****

இந்தனத்தை முறித்தடுக்கி
எரிகடையும் அரணியினில்
வெந்தழலைப் பிறப்பித்து
மிகவளர்த்து மிருகங்கள்
கொந்திஅயில் அலகம்பாற்
குட்டமிட்டுக் கொழுப்பரிந்து
வந்தனகொண் டெழுந்தழலில்
வக்குவன வக்குவித்து. #794

விறகுகளை முறித்து அடுக்கித் தீக்கடையும் கோலில் கொடிய தழல் கொள்ளும் நெருப்பை உண்டாக்கி, விறகை மூட்டி, அதனை எரியும்படி வளர்த்து, மிருகங்களை அம்பால் குத்தி, அம்பின் அலகால் கொழுப்புள்ள தசைகளை வளைவாகக் குடைந்தெடுத்து, அவ்வாறு எடுத்தனவற்றை எழுகின்ற தழலில் வேக வைப்பனவற்றை வேக வைத்து,

விளக்கவுரை

இந்தனம் - விறகு. அரணி - தீயை உண்டாக்கும் கோல் வக்குவன - வதக்குவன. குட்டம் இட்டு - வளைவாகக் கொத்தி.

வாயம்பால் அழிப்பதுவும்
வகுப்பதுவும் செய்தவற்றின்
ஆயவுறுப் பிறைச்சியெலாம்
அரிந்தொருகல் லையிலிட்டுக்

காயநெடுங் கோல்கோத்துக்
கனலின்கண் உறக்காய்ச்சித்
தூயதிரு அமுதமைக்ககச்
சுவைகாணல் உறுகின்றார். #795

அவற்றில், அம்பின் வாயால் கடித்து அகற்றுவதை அகற்றிச் சேர்ப்பதைச் சேர்த்து, அவற்றில் சுவை மிக்க உறுப்பு இறைச்சி கள் எல்லாவற்றையும் அரிந்து, ஒரு தொன்னையில் வைத்துக் கொண்டு, மீண்டும் அவை பதமுறக் காயும்படி ஒரு கோலில் கோத்து, நெருப்பில் நன்றாகக் காய்ச்சி, காளத்தி அப்பருக்குத் தூய திருவமுது ஆக்கும்படி தமது வாயில் அந்த இறைச்சிகளை இட்டுச் சுவை பார்ப்பாராய்,

விளக்கவுரை

வகுப்பது - தூயவாக அமைத்துக் கொள்வது.

எண்ணிறந்த கடவுளருக்
கிடுமுணவு கொண்டூட்டும்
வண்ணஎரி வாயின்கண்
வைத்ததெனக் காளத்தி
அண்ணலார்க் காம்பரிசு
தாஞ்சோதித் தமைப்பார்போல்
திண்ணனார் திருவாயில்
அமைத்தார்ஊன் திருவமுது. #796

எண்ணிறந்த தெய்வங்கட்கு இடுகின்ற அவி யாகும் அமுதினைத் தான் ஏற்று, அவற்றை அவ்வத் தெய்வங்கட்குக் கொடுத்திடுகின்ற வேள்வித்தீபோல, காளத்தி மலையிலிருக்கும் தேவர்க்கு அமுதமாகத் தரும் தன்மையில், தாம் அவற்றைச் சுவை யுள்ளனவோ எனத் தேர்ந்து, அறிதற்குத் திண்ணனார் தம் திருவாயில் அவ்வூன் அமுதினை வாயில் இட்டுச் சுவை பார்த்தார்.

விளக்கவுரை

வேள்வியில் எரிவாய்ப்பட்ட அமுது அவ்வத் தெய்வங்கட்கும் உரியவாதல் போலத் திண்ணனார் தம் திருவாய்ப் பட்ட அமுதும், காளத்தியாருக்கு உரித்தாயிற்று. அவன் உகந்து, இட்ட இறைச்சி எனக்கு, `நன்மாதவர் இட்ட நெய் போல் அவியே` *(தி.11* கண். மறம். வரி *111-112)* எனவரும் நக்கீரர் திருவாக்கும் காண்க.

நல்லபத முறவெந்து
நாவின்கண் இடுமிறைச்சி
கல்லையினிற் படைத்துத்தேன்
பிழிந்துகலந் ததுகொண்டு

வல்விரைந்து திருப்பள்ளித்
தாமமுந்தூய் மஞ்சனமும்
ஒல்லையினின் முன்புபோல்
உடன்கொண்டு வந்தணைந்தார். #797
நல்ல பக்குவம் பொருந்த வெந்த, நாவின்கண் இட்டுச் சுவை கண்ட, இறைச்சியைத், தேக்க இலையாலாய தொன்னை யில் வைத்து, கொம்புத் தேனைப் பிழிந்து எடுத்த தேனையும் அதில் கலந்து, சுவைபட அமைத்த திருவமுதை எடுத்துக் கொண்டு, மிக விரை வுடன் திருப்பள்ளித் தாமம், திருமஞ்சனநீர் ஆகியவற்றையும் முன் போலக் கொண்டு விரைவாக வந்தனர்.

விளக்கவுரை

****

வந்துதிருக் காளத்தி
மலையேறி வனசரர்கள்
தந்தலைவ னார்இமையோர்
தலைவனார் தமையெய்தி
அந்தணனார் பூசையினை
முன்புபோ லகற்றியபின்
முந்தைமுறை தம்முடைய
பூசனையின் செயல்முடிப்பார். #798
வந்து திருக்காளத்தி மலையில் ஏறிய வேடர் களின் தலைவனாராய திண்ணனார், தேவர்களின் தலைவனாய பெருமானை அடைந்து, அங்குச் சிவகோசரியார் செய்த பூசையினை முன்புபோல் மாற்றி நீக்கிய பின், முன்னாளில் செய்த முறையாகவே தமது பூசையின் செயலைச்செய்து முடிப்பாராய்.

விளக்கவுரை

****

ஊனமுது கல்லையுடன்
வைத்திதுமுன் னையின்நன்றால்
ஏனமொடு மான்கலைகள்
மரைகடமை யிவையிற்றில்
ஆனவுறுப் பிறைச்சியமு
தடியேனுஞ் சுவைகண்டேன்
தேனுமுடன் கலந்ததிது
தித்திக்கும் எனமொழிந்தார். #799
: ஊன் அமுதை இறைவனின் திருமுன்னிலையில் வைத்து, எம் ஐயனே!

இது முன்னை நாளில் எடுத்து வந்ததினும் நன்றாகும், பன்றியுடன் மான் கலைகள், காட்டுப்பசு ஆகிய இவை களின் நல்லுறுப்புகளின் இறைச்சியும் உள்ளது, அடியேனும் சுவை பார்த்தேன், அத்துடன் தேனும் இவற்றுடன் கலந்துள்ளது, தித்திக்கும், என மொழிந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

இப்பரிசு திருவமுது
செய்வித்துத் தம்முடைய
ஒப்பரிய பூசனைசெய்
தந்நெறியில் ஒழுகுவார்
எப்பொழுதும் மேன்மேல்வந்
தெழும்அன்பால் காளத்தி
அப்பர்எதிர் அல்லுறங்கார்
பகல்வேட்டை யாடுவார். **#800**

இவ்வாறாக அன்பு ததும்பிய சொற்களை மொழிந்து, ஊனமுதினைப் பெருமானுக்கு உண்பித்துத்,தம்முடைய ஒப்பரிய இப் பூசனையைப் புரிந்து, அந்நெறியில் ஒழுகி வருபவராய திண்ணனார், மேன்மேலும் பெருகி எழுகின்ற அன்பினால், காளத்தி அப்பரின் திருமுன்பு நின்று, இரவில் உறங்காது காத்தும், ஊனாய திருவமுது அமைக்கப் பகலில் வேட்டையாடியும் வருவார்.

விளக்கவுரை

****

மாமுனிவர் நாள்தோறும்
வந்தணைந்து வனவேந்தர்
தாமுயலும் பூசனைக்குச்
சாலமிகத் தளர்வெய்தித்
தீமையென அதுநீக்கிச்
செப்பியஆ கமவிதியால்
ஆமுறையில் அருச்சனைசெய்
தந்நெறியில் ஒழுகுவரால். **#801**

பெருமுனிவரான சிவகோசரியாரும், நாள் தோறும் காளத்தி மலைக்குச் சென்று அங்கு வனவேடர்களின் அரச ராய திண்ணனார் தாம் அன்பின் முயற்சியால் புரிந்து வரும் அப் பூசனைக்கு மிகவும் தளர்வுற்று, அதனைத் தீமையுடையது எனநீக்கி, பின்னர் ஆகம வழி நின்று அம்முறையால் அருச்சனை செய்து, அந்நெறியில் ஒழுகி வருவாராயினார்.

விளக்கவுரை

இவ்விருவரின் வழிபாடும், `ஊனோடு உண்டல் நன் றென ஊனோடு உண்டல் தீதென, ஆன தொண்டர் அன்பினால் பேச நின்ற தன்மையான்` *(தி.3 ப.53 பா.9)* எனவரும் ஞானசம்பந்தரின் திருவாக்கினை நினைவு கூரவைக்கும்.

நாணனொடு காடனும்போய்
நாகனுக்குச் சொல்லியபின்
ஊணும்உறக் கமுமின்றி
அணங்குறைவா ளையுங்கொண்டு
பேணுமக னார்தம்பால்
வந்தெல்லாம் பேதித்துக்
காணுநெறி தங்கள்குறி
வாராமற் கைவிட்டார். **#802**

(இந்நிலையில் இவர்கள் நிலை அமைய) நாணனொடு காடனும் சென்று திண்ணனாருக்கு நிகழ்ந்த நிலைமையைச் சொல்ல, அதுகேட்ட நாகனும், அந்நாள் முதல் ஊணும் உறக்கமும் இல்லாதவனாய், வருந்தி, உடனாகத் தேவராட்டியையும் அழைத்துக் கொண்டு, காளத்திக்கு வந்து, அங்குத் தாம் பேணி வளர்த்த மகனாராய திண்ணனாரைத் தம் வழியில் மீள நிலைபெறு தற்கு ஆவனவெல்லாம் செய்தும், அவர் மீளாது தம் நெறியில் நின்றிட, இனித்தம் குறிக்கோளுக்கு ஏற்ப வாரான் எனக் கருதி, வந்த இருவரும் கை விட்டுச் சென்றனர்.

விளக்கவுரை

****

முன்புதிருக் காளத்தி
முதல்வனார் அருள்நோக்கால்
இன்புறுவே தகத்திரும்பு
பொன்னானாற் போல்யாக்கைத்
தன்பரிசும் வினையிரண்டும்
சாருமலம் மூன்றுமற
அன்புபிழம் பாய்த்திரிவார்
அவர்கருத்தின் அளவினரோ. **#803**

முன்பு திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கும் முதல்வனாரின் திருப்பார்வை எய்தியதால், இன்ப நிலையாய இரத குளிகையினால். இரும்பு பொன்னாக மாறியவாறுபோல், உடற் றன்மையும், இருவினைகளும் மும்மலங்களும் நீங்கியதால், அன்பே வடிவாய்த் திரியும் திண்ணனார் அவ்வேடர்களின் கருத்தளவில் அமைவரோ?

(அமையார்).

விளக்கவுரை

வேதகம் - வேறு படுத்துவது. இரச குளிகை - இரும்பை வேறுபடுத்திப் பொன்னாகச் செய்யும் செயல்.
அச்செயல் அனைவரும் இன்புறுதற்கு ஏதுவாதலின் இன்புறு வேதகம் என்றார்.
இறைவனின் அருள் நோக்கால் திண்ணனாரும், தமக்குற்ற உயிர்த்தன்மை (யான் எனது என நிற்கும் தன்மை) இருவினைகள், மும்மலங்கள் ஆகிய அனைத்தினின்றும் நீங்கினாராதலின் இங்ஙனம் கூறினார்.

அந்நிலையில் அன்பனார்
அறிந்தநெறி பூசிப்ப
மன்னியஆ கமப்படியால்
மாமுனிவர் அருச்சித்திங்
கென்னுடைய நாயகனே
இதுசெய்தார் தமைக்காணேன்
உன்னுடைய திருவருளால்
ஒழித்தருள வேண்டுமென. **#804**

அந்நிலையில் அன்பராய திண்ணனார் தாம் அறிந்த முறையில் பெருமானைப் பூசித்துவர, சிறப்புமிக்க ஆகம வழி நின்று ஒழுகும் சிவகோசரியாரும் பெருமானை வழிபட்டு வரும் நிலையால் என்னுடைய பெருமானே! நும் திருமுன்னிலையில், நாளும் இக் குற்றமுடைய பூசனை புரிந்து வருவாரை நான் கண்டிலேன்; இதனை இனி உம் முடைய திருவருளால் ஒழித்தருள வேண்டும் என விண்ணப்பிக்க,

விளக்கவுரை

****

அன்றிரவு கனவின்கண்
அருள்முனிவர் தம்பாலே
மின்திகழுஞ் சடைமவுலி
வேதியர்தா மெழுந்தருளி
வன்திறல்வே டுவன்என்று
மற்றவனை நீநினையேல்
நன்றவன்தன் செயல்தன்னை
நாமுரைப்பக் கேள்என்று. **#805**

அன்று இரவு, அரிய அம்முனிவரிடத்து, திகழும் சடைமுடியையுடைய

இறைவன் கனவில் எழுந்தருளி, வலிமை பொருந்திய வேடுவன் இது செய்தவன் என அவனை நீ எண்ணாதே! நலம் மிக்க அவன் தன் செயலை நான் கூறக் கேட்பாயாக என மொழிந்தருளிப் பின்னரும்.

விளக்கவுரை

****

அவனுடைய வடிவெல்லாம்
நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம்
நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம்
நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலைஇவ்வா
றறிநீயென் றருள்செய்வார். **#806**

அவனுடைய வடிவம் எல்லாம் நம்மிடத்து அன்பு கொண்ட வடிவம் என்றும், அவனுடைய அறிவு எல்லாம் நம்மையே அறிகின்ற அறிவு என்றும், அவனுடைய செயல்கள் எல்லாம் நமக்கு இனியவாகும் என்றும் கூறி, அவனுடைய நிலை இத்தன்மையானது அதனை நீ அறிவாயாக, என அருள்செய்வாராய்.

விளக்கவுரை

இதனையடுத்துப் `பொருப்பினில் வந்தவன்` என்பது முதலாக `மன் பெருமாமறை` எனவரும் பாடல் ஈறாக உள்ள ஐந்து பாடல்களும் சில பதிப்புகளில் காணப்பெறினும், அவை வெள்ளிப் பாடல்கள் எனச் சிவக்கவிமணியார் (பெரிய.பு.உரை) தெளிவாகக் கூறியிருத்தலின் அவற்றை இங்கு சேர்க்கவில்லை. எனினும், ஆராய்ச்சி முன்னுரையில் இடைச் செருகல்கள் எனும் தலைப்பில் அங்குச் சேர்க்கப்பட்டுள்ளன.

உனக்கவன்தன் செயல்காட்ட
நாளைநீ யொளித்திருந்தால்
எனக்கவன்தன் பரிவிருக்கும்
பரிசெல்லாம் காண்கின்றாய்
மனக்கவலை ஒழிகென்று
மறைமுனிவர்க் கருள்செய்து
புனற்சடிலத் திருமுடியார்
எழுந்தருளிப் போயினார். **#807**

உனக்கு அவ்வேடனுடைய அன்பின் செயலை நாம் காட்ட, நாளை நீ ஒளித்திருந்தால், அவன் என்னிடத்துக் கொண் டிருக்கும் அன்பின் சிறப்பையெல்லாம் நீ காண்பாய், ஆதலால் நீ கொண்டிருக்கும்

மனக்கவலையை ஒழித்திடுவாய், என்று கங்கை யைத் திருச்சடையில் கொண்டிருப்பவராகிய இறைவன் சிவகோசரி யாருக்கு அருளிச் செய்து மறைந்தருளினன்.

விளக்கவுரை

இவ்விரண்டுபாடல்களும் ஒரு முடிபு கொண்டன.

கனவுநிலை நீங்கியபின்
விழித்துணர்ந்து கங்குலிடைப்
புனைதவத்து மாமுனிவர்
புலர்வளவும் கண்துயிலார்
மனமுறும்அற் புதமாகி
வரும்பயமும் உடனாகித்
துனைபுரவித் தனித்தேர்மேல்
தோன்றுவான் கதிர்தோன்ற. **#808**

கனவு நிலையினின்றும் விழித்து உணர்ந்து, பின்னர் அன்றிரவு முழுவதும் துயிலாராய்த் தமது மனத்தில் கொண்ட அற் புதமும், அதன் விளைவால் எழுந்த அச்சமும் உடன் நிகழ, விரைந்து செல்லும் குதிரை பூண்ட தேரின் மீது, இவர்ந்து வரும் கதிரவனின் ஒளியும் தோன்ற.

விளக்கவுரை

துனை - விரைவு, அஃது அப் பொருளாதல் `கதழ்வும் துனைவும் விரைவின் பொருள` என்பதானும் அறியலாம்.

முன்னைநாள் போல்வந்து
திருமுகலிப் புனல்மூழ்கிப்
பன்முறையும் தம்பிரான்
அருள்செய்த படிநினைந்து
மன்னுதிருக் காளத்தி
மலையேறி முன்புபோல்
பிஞ்ஞகனைப் பூசித்துப்
பின்பாக ஒளித்திருந்தார். **#809**

முன்னை நாள்களைப் போலவே, திருவுடைய பொன்முகலியாற்றில் மூழ்கி எழுந்து, தம் பெருமான் கனவில் அருள் செய்ததை நினைந்த வண்ணம், நிலைபெற்று விளங்கும் திருக்காளத்தி மலைமீது ஏறி, முன்பு போல் பெருமானைப் பூசித்துப், பின்பாக ஓரிடத்துச்சென்று ஒளித்திருந்தார்.

விளக்கவுரை

****

கருமுகி லென்ன நின்ற

கண்படா வில்லி யார்தாம்
வருமுறை ஆறாம் நாளில்
வரும்இர வொழிந்த காலை
அருமறை முனிவ னார்வந்
தணைவதன் முன்னம் போகித்
தருமுறை முன்பு போலத்
தனிப்பெரு வேட்டை யாடி. **#810**

இப்பால், கரிய மேகத்தை யொத்த வடிவும், கண்துயிலாத பண்பும் உடைய திண்ணனார், தாம் இதுகாறும் வழிபாடாற்றி வரும் முறையில் ஆறாவது நாளில், இரவு நீங்கிய விடியற் காலத்தில், அரிய மறைநெறி நிற்கும் சிவகோசரியார் வருதற்கு முன்னாகத் தாம் புறப்பட்டுச் சென்று, பெருமானுக்குத் திருவமுது ஊட்டுதற்கு முன்னைய நாள்களில் செய்தது போலக் காட்டில் தனியாக இருந்து பெருவேட்டையாடி,

விளக்கவுரை

****

மாறில்ஊன் அமுதும் நல்ல
மஞ்சனப் புனலுஞ் சென்னி
ஏறுநாண் மலரும் வெவ்வே
றியல்பினில் அமைத்துக் கொண்டு
தேறுவார்க் கமுத மான
செல்வனார் திருக்கா ளத்தி
ஆறுசேர் சடையார் தம்மை
அணுகவந் தணையா நின்றார். **#811**

ஊன் அமைத்தலினும், சுவைபார்த்தல் முதலிய வற்றினும் மாறில்லாத நிலையில் அமைத்துக் கொண்ட இறைச்சி ஆகிய அமுதையும், நல்ல திருமுழுக்கிற்குரிய நீரையும், இறைவன் திருமுடியில் சாத்துதற்கான அன்றலர்ந்த மலர்களையும், வெவ் வேறான இயல்பில் இவற்றை அமைத்து எடுத்துக் கொண்டு, மெய்யுணர்ந்த அன்பர்களுக்கு அமுதமெனத் தித்திக்கும் செல்வராய, சுடர்க் கொழுந் தாய்த் திருக்காளத்தி மலைமீது கங்கை சேர்ந்த சடையை யுடையவராய், எழுந்தருளியிருக்கும் பெருமானாரை அணுக வருவாராகி.

விளக்கவுரை

****

இத்தனை பொழுதுந் தாழ்த்தேன்
எனவிரைந் தேகு வார்முன்
மொய்த்தபல் சகுன மெல்லாம்

முறைமுறை தீங்கு செய்ய
இத்தகு தீய புட்கள்
ஈண்டமுன் உதிரங் காட்டும்
அத்தனுக் கென்கொல் கெட்டேன்
அடுத்ததென் றணையும் போதில். #812

என் தலைவனுக்கு அமுது ஊட்ட இத்துணையும் காலந் தாழ்த்தேனே, என்று எண்ணி, விரைவாக வரும் திண்ணனார் முன்னே, அடுக்கி வரும் தீய நிமித்தம் பலவும் முறை முறையே தீங்கினைக் காட்ட, இத்தகைய நிமித்தங்கள் இரத்தக் கெடுதி வரும் என்பதைக் காட்டுவனவாகும் எனத் தேர்ந்த திண்ணனார், அந்தோ! என் அப்பனுக்கு என்ன நேர்ந்ததோ! கெட்டேன்! என விரைவாக வரும் பொழுதில்,

விளக்கவுரை

****

அண்ணலார் திருக்கா ளத்தி
அடிகளார் முனிவ னார்க்குத்
திண்ணனார் பரிவு காட்டத்
திருநய னத்தில் ஒன்று
துண்ணென உதிரம் பாய
இருந்தனர் தூரத் தேஅவ்
வண்ணவெஞ் சிலையார் கண்டு
வல்விரைந் தோடி வந்தார். #813

தலைமை சான்ற திருக்காளத்தியப்பர், சிவ கோசரியாருக்குத் திண்ணனார் தம்மீது கொண்ட அன்பின் திறத்தைக் காட்டிடத், தம் திருக்கண்கள் ஒன்றில், கதுமென இரத்தம் பெருகும்படி இருந்தனராக, தொலைவிலிருந்து வரும் வில் வீரராகிய திண்ணனார் அது கண்டு மிகு விரைவுடன் ஓடி வந்தார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

வந்தவர் குருதி கண்டார்
மயங்கினார் வாயில் நன்னீர்
சிந்திடக் கையில் ஊனும்
சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமங்
குஞ்சிநின் றலைந்து சோரப்
பைந்தழை அலங்கல் மார்பர்
நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார். #814

வந்தவர் இரத்தம் வருதலைக் கண்டார், மயங்கி னார்; வாயில் கொண்ட நல்ல மஞ்சன நீர் சிந்திடவும், கைகளில் இருந்த வில்லும் இறைச்சியும் சிதறி விழவும், கொத்தாக மலர்ந்த பூசனைக் குரிய மலர்கள் கொண்டையினின்றும் விழவும், பசிய தழை களாலாய மாலை சூடிய மார்புடைய திண்ணனார் நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார்.

விளக்கவுரை

****

விழுந்தவர் எழுந்து சென்று
துடைத்தனர் குருதி வீழ்வ
தொழிந்திடக் காணார் செய்வ
தறிந்திலர் உயிர்த்து மீள
அழிந்துபோய் வீழ்ந்தார் தேறி
யாரிது செய்தார் என்னா
எழுந்தனர் திசைக ளெங்கும்
பார்த்தனர் எடுத்தார் வில்லும். **#815**

விழுந்தவர், எழுந்து சென்று, எம்பிரான் திருக்கண்ணினின்றும் வடியும் இரத்தத்தைத் துடைத்தனர். துடைத்தும் அது பெருகுதல் ஒழிந்திடக் கண்டிலர், என் செய்வதென்று அறிந்திலர், பெருமூச்சு விட்டார், மீளவும் மயங்கி வீழ்ந்தார். பின் ஒருவாறு மயக்கம் நீங்கிய நிலையில் யார் இது என் தலைவருக்குச் செய்தார்? என்று எழுந்தார், திக்குகள் எங்கும் பார்த்தனர், வில்லையும் கையில் எடுத்துக் கொண்டார்.

விளக்கவுரை

****

வாளியுந் தெரிந்து கொண்டிம்
மலையிடை எனக்கு மாறா
மீளிவெம் மறவர் செய்தார்
உளர்கொலோ விலங்கின் சாதி
ஆளிமுன் னாகி யுள்ள
விளைத்தவோ அறியே னென்று
நீளிருங் குன்றச் சாரல்
நெடிதிடை நேடிச் சென்றார். **#816**

அம்பையும் தெரிந்து கூரியவாக எடுத்துக் கொண்டு, இம்மலையிடத்து எனக்கு மாறாகத் திண்மையுடைய கொடிய வேடர்கள் இதைச் செய்தனரோ? அல்லது ஆளி முதலிய கொடிய காட்டு மிருகங்கள் செய்தனவோ? என்று பலபட எண்ணிய வராய், அப்பெரு மலைச்சாரலெங்கும் நெடுந்தொலைவு வரையிலும் தேடிச் சென்றார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வேடரைக் காணார் தீய
விலங்குகள் மருங்கும் எங்கும்
நாடியுங் காணார் மீண்டும்
நாயனார் தம்பால் வந்து
நீடிய சோகத் தோடு
நிறைமலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு
கதறினார் கண்ணீர் வார. **#817**

தாம் நினைந்தவாறு ஒரு வேடரையும் காணார், கொடிய விலங்குகளையும் அப்பக்கங்கள் எங்கும் காணார், மீண்டும் தம் பெருமானிடம் வந்து, நீடிய பெரு வருத்தத்தோடு, அப் பெருமா னின் மலரனைய திருவடிகளைப் பற்றிக் கொண்டு, கண்ணீர் பெருகக் கதறுவாராய்.

விளக்கவுரை

****

பாவியேன் கண்ட வண்ணம்
பரமனார்க் கடுத்த தென்னோ
ஆவியின் இனிய எங்கள்
அத்தனார்க் கடுத்த தென்னோ
மேவினார் பிரிய மாட்டா
விமலனார்க் கடுத்த தென்னோ
ஆவதொன் றறிகி லேன்யான்
என்செய்கேன் என்று பின்னும். **#818**

பாவியேன் கண்ட தீய நிமித்தங்களுக்கு ஏற்ப என் தலைவருக்கு நேர்ந்தது என்னோ? என் உயிரினும் சிறந்த தந்தை யாருக்கு அடுத்தது என்னோ? தம்மைக் கண்டார் எவரும், பிரிதற்கு ஒருப்படாத விமலனாருக்கு அடுத்தது என்னோ? யான் செயத் தகுவது ஒன்றும் அறிந்திலேனே! நான் என் செய்கேன்! என்று எண்ணியவராய்.

விளக்கவுரை

****

என்செய்தால் தீரு மோதான்
எம்பிரான் திறத்துத் தீங்கு
முன்செய்தார் தம்மைக் காணேன்
மொய்கழல் வேட ரென்றும்

மின்செய்வார் பகழிப் புண்கள்
தீர்க்குமெய் மருந்து தேடிப்
பொன்செய்தாழ் வரையிற் கொண்டு
வருவன்நான் என்று போனார். #819

இதற்கு என்ன செய்தால் இக்கண்ணில் புண் தீருமோ? அறியேன்! எம்பிரானிடத்துத் தீங்கு செய்தார் ஒருவரையும் காணேன்! செறிந்த வீரக் கழல்களை அணிந்த வேடர்கள் என்றும் மின் ஒளி கொண்ட கூரிய அம்பு தைப்பதால் வரும் புண்களைத் தீர்க்க, உடலில் பூசிடும் நல்ல மருந்தாய மூலிகைகளைப் பொன் விளையும் சிறப்புடைய இம்மலைச் சாரலில் தேடி நான் கொணர்வேன் என்று கூறிப் போயினார் திண்ணனார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடலகளும் ஒருமுடிபின.

நினைத்தனர் வேறு வேறு
நெருங்கிய வனங்க ளெங்கும்
இனத்திடைப் பிரிந்த செங்கண்
ஏறென வெருக்கொண் டெய்திப்
புனத்திடைப் பறித்துக் கொண்டு
பூதநா யகன்பால் வைத்த
மனத்தினுங் கடிது வந்து
மருந்துகள் பிழிந்து வார்த்தார். #820

அச்சிந்தனையுடன் சென்ற திண்ணனார், மருந்துகளின் வகைகளை நினைந்து, அவற்றினைப் பெறுதற்கு, வேறு வேறான மரங்களும் செடி கொடிகளும் அமைந்த அவ்விடங்களி லெங்கும், தம் இனத்தைப் பிரிந்து நிற்கும் சிவந்த கண்களையுடைய காளையைப் போன்று அச்சம் கொண்டு சென்று, அம்மருந்துகளை அவ்வவ்விடங்களிலும் தேடிப் பறித்து எடுத்துக் கொண்டு, உயிர்கட் கெல்லாம் தலைவரான இறைவர்பால் வைத்த மனத்திலும் விரைவாக வந்து பெருமானாரின் கண்ணில் அம்மூலிகைகளைப் பிழிந்து அவற்றின் சாற்றை வார்த்தார்.

விளக்கவுரை

****

மற்றவர் பிழிந்து வார்த்த
மருந்தினால் திருக்கா ளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர்
குறைபடா திழியக் கண்டே
இற்றையின் நிலைமைக் கென்னோ
இனிச்செய லென்று பார்ப்பார்

உற்றநோய் தீர்ப்ப தூனுக்
கூனெனும் உரைமுன் கண்டார். #821

இவ்வாறு திண்ணனார் பிழிந்து வார்த்த மருந்தினால் திருக்காளத்திப் பெருமானின் திருக்கண்ணிலிருந்து வரும் இரத்தம் வடிதல் குறைவுபடாது பெருகிடக் கண்டு, இன்றைக்கு எம்பெருமானுக்கு நேர்ந்த இந்நிலைமைக்கு என்னோ இனிச் செயல்? என்று எண்ணிப் பார்ப்பவராய திண்ணனார், ஒருவருக்கு ஊனில் உற்ற நோயைத் தீர்ப்பதற்கு அதுபோன்ற ஊனையிடல் வேண்டும் என்னும் முதுமொழி ஒன்று தம் மனத்தில் தோன்ற உணர்ந்தார்.

விளக்கவுரை

மனிதனின் உடல் உறுப்புக்களில் யாதானும் ஒன்று பழு தாகி விடில், அதற்குமாறாகப் பிறமனித உயிர்களின் உறுப்புகளை எடுத்துப் பொருத்தின், அப்பழுது நீங்குதல் இன்று கண்கூடாகப் பார்ப்பது ஒன்று. இவ்வரிய மருத்துவக் கலையைத் திண்ணனார் அறிந்தது கேள்வி அளவிலேயாம் எனினும் அதன் நினைவு இது பொழுது அவருக்குப் பெரிதும் உதவியாயிற்று. `கற்றிலனாயினும் கேட்க அஃது ஒருவற்கு ஒற்கத்தின் ஊற்றாந்துணை` *(குறள், 414)* எனவரும் திருக்குறள் நோக்குக.

இதற்கினி என்கண் அம்பால்
இடந்தப்பின் எந்தை யார்கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர்
நிற்கவும் அடுக்கு மென்று
மதர்த்தெழும் உள்ளத் தோடு
மகிழ்ந்துமுன் னிருந்து தங்கண்
முதற்சர மடுத்து வாங்கி
முதல்வர்தங் கண்ணில் அப்ப. #822

இதற்கு இனி, எனது கண்ணை நான் அம்பால் இடந்து எம்பிரானின் புண்ணுடைய கண்ணில் அப்பினால், அக்கண்ணிற்கு எனது இக்கண் மருந்தாகிக் குருதி நிற்கவும் கூடும் என்று உள்ளத்து எழுந்த அந்நினைவால், பெருமிதம் கொண்டு, மகிழ்ந்து, திண்ணனார் ஓர் அம்பினை எடுத்துத் தம் கண்ணினை இடந்து, கையிடத்துக் கொண்டு, தம் முதல்வராய காளத்தியப்பரின் கண்மீது அப்பிடலும்.

விளக்கவுரை

கண்முதல் - கண்ணின் அடிப்பகுதி. சரம் மடுத்து - அம்பினால் இடந்து.

நின்றசெங் குருதி கண்டார்
நிலத்தினின் றேறப் பாய்ந்தார்

குன்றென வளர்ந்த தோள்கள்
கொட்டினார் கூத்து மாடி
நன்றுநான் செய்த இந்த
மதியென நகையும் தோன்ற
ஒன்றிய களிப்பி னாலே
உன்மத்தர் போல மிக்கார். **#823**

கண்ணில் நின்றும் வடிந்த குருதி நிற்பதைக் கண்டார், உடன் நிலத்தில் நின்றும் உயரத்துள்ளிப் பாய்ந்தார். மலை போன்று வளர்ந்த தம் தோள்களைக் கொட்டினார். கூத்தும் ஆடி, நான் செய்த இத்தீர்வு நன்று என்று புன்முறுவல் பூப்ப மனத்தில் பொருந்திய மகிழ்ச்சியாலே, தாம் ஓர் உன்மத்தன் (பித்துற்றவர்) போலாகி, அதில் மேம்பட்ட நிலையரானார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வலத்திருக் கண்ணில் தங்கண்
அப்பிய வள்ள லார்தம்
நலத்தினைப் பின்னும் காட்ட
நாயனார் மற்றைக் கண்ணில்
உலப்பில்செங் குருதி பாயக்
கண்டனர் உலகில் வேடர்
குலப்பெரும் தவத்தால் வந்து
கொள்கையின் உம்பர் மேலார். **#824**

பெருமானின் வலத் திருக்கண்ணில் தமது வலக்கண்ணை இடந்து அப்பிய வள்ளலாராய திண்ணனார், தம்பால் கொண்ட அன்பின் நலத்தை, மேலும் காட்டிடக் காளத்தி மலை யின்கண் எழுந்தருளியிருக்கும் பெருமான், தமது மற்றைக் கண் ணாகிய இடக் கண்ணிலும் ஒழிவின்றிப் பெருகிடும் குருதி பாய்ந்திடச் செய்தனர். அதனைக் கண்ட இவ்வுலகில் வேடர்குலம் செய்த பெருந் தவத்தினால் வந்து தோன்றிய உயர்ந்த கோட்பாடுடைய தேவரின் மேம்பட்ட திண்ணனாரும்,

விளக்கவுரை

உயர்ந்த கோட்பாடு - பெருமானிடத்துக் கொண்டிருக் கும் பேரன்பு, `அன்பின் வழியது உயிர்நிலை` *(குறள், 80)* ஆதலின் உயிர்கள் கொள்ளத்தக்க கொள்கைகளில் தலையாயது அன்பாம், எனவே இங்கு உயர்ந்த கோட்பாடு எனக் குறிப்பது அன்பேயாம்.

கண்டபின் கெட்டேன் எங்கள்
காளத்தி யார்கண் ணொன்று

புண்தரு குருதி நிற்க
மற்றைக்கண் குருதி பொங்கி
மண்டும்மற் றிதனுக் கஞ்சேன்
மருந்துகைக் கண்டே னின்னும்
உண்டொரு கண்அக் கண்ணை
இடந்தப்பி யொழிப்பே னென்று. #825

இதைக் கண்டதும்,அந்தோ! நான் கெட்டேன்! எங்கள் காளத்தியார் தம் கண்களில் ஒன்றான வலத் திருக்கண்ணில் குருதி வருதல் நின்றிட, மற்றைக்கண்ணாய இடக் கண்ணில் குருதி பொங்குகின்றதே! என்று எண்ணியவராய், இதற்கு யான் அஞ்ச மாட்டேன், மருந்து கையில் இருக்கக் கண்டேன், இன்னும் என்னி டத்தில் ஒரு கண் உண்டு, அக்கண்ணை நான் அம்பால் இடந்து எம் பெருமானுடைய கண்ணில் அப்பி, அக்கண்ணிலிருந்து வரும் குருதி யையும் ஒழிப்பேன் என்றார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

கண்ணுதல் கண்ணில் தங்கண்
இடந்தப்பிற் காணும் நேர்பா
டெண்ணுவார் தம்பி ரான்தன்
திருக்கண்ணில் இடக்கா லூன்றி
உண்ணிறை காத லோடும்
ஒருதனிப் பகழி கொண்டு
திண்ணனார் கண்ணி லூன்றத்
தரித்திலர் தேவ தேவர். #826

நெற்றிக் கண்ணுடைய பெருமானின் இடத் திருக் கண்ணில் தமது இடக்கண்ணினை இடந்து அப்பிடற்கு, அக் கண்ணுள்ள இடம் மாறாது நேர்படுதற்காக, பெருமானின் இடத் திருக்கண்ணில், தமது இடக்காலை ஊன்றி, உளமகிழ்வுடன், ஒரு அம்பினை எடுத்துத் தம் இடக்கண்ணில் இடந்திட, அது கண்டு, தேவதேவராய பெருமான் தரித்திலராகி,

விளக்கவுரை

வலக்கண்ணை இழந்தநிலையில், இடக்கண்ணையும் இழந்து விடின், பெருமானின் இடக்கண் இருக்கும் இடம் தெரியாது. ஆதலின் அவ்விடத்தை அடையாளம் காண்டற்கு, ஏதுவாக இடக்காலை அவ்விடத்து ஊன்றினாராதலின் `காணும் நேர்பாடு எண்ணுவார்` என்றார்.

செங்கண்வெள் விடையின் பாகர்
திண்ணனார் தம்மை ஆண்ட

அங்கணர் திருக்கா ளத்தி
அற்புதர் திருக்கை யன்பர்
தங்கண்முன் னிடக்குங் கையைத்
தடுக்கமூன் றடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்குக்
கண்ணப்ப நிற்க வென்றே. **#827**

சிவந்த கண்களையுடைய ஆனேற்றின் மீது எழுந்தருளுவோரும், திண்ணனார் தம்மை ஆண்ட அருளாளரு மாகிய இறைவராய, திருக்காளத்தி மலையில் வியத்தகு நிலையில் எழுந்தருளியிருக்கும் பெருமானாரின் திருக்கை தோன்றி, திண்ண னார் தம் கண்ணை இடந்து தோண்டும் கையைத் தடுத்து நிற்ப, பாம்பினைத் திருக்கையில் அணிந்த அப்பெருமானின், அமுதமாய வாக்கு, `கண்ணப்ப நிற்க! கண்ணப்ப நிற்க! கண்ணப்ப நிற்க!` என மும்முறை மொழிந்தருளுமாற்று.

விளக்கவுரை

`இன்னுரை யதனொடும் எழிற்சிவ லிங்கம் தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையா லன்னவன் தன்கை யம்பொடு மகப்படப், பிடித் தருளினன், ஆண்டகை, ஒருகை யாலுமிருகை பிடித்து, நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என்அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப!` *(தி.11 கண்.மறம்.வரி 147-152)* என வரும் திருவாக்கினைக் காண்க. `விரைசொல் அடுக்கே மூன்று வரம்பாகும்` என வரும் மரபிற்கேற்ப, மும்முறை அடுக்கி வந்தது.

கானவர் பெருமா னார்தங்
கண்ணிடந் தப்பும் போதும்
ஊனமு துகந்த ஐயர்
உற்றுமுன் பிடிக்கும் போதும்
ஞானமா முனிவர் கண்டார்
நான்முகன் முதலா யுள்ள
வானவர் வளர்பூ மாரி
பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப. **#828**

வேடர் பெருமானாராம் திண்ணனார். தமது கண்ணை இடந்து அப்பும் பொழுதும், அவர் படைத்த ஊனை அமுதாக உண்டு உகந்த அப்பெருமான், தன் அன்பர் அம்பால் இடக் கண்ணையும் இடக்கும்படி எடுத்த அவர் கையைப் பிடிக்கும் பொழுதும், ஞானம் மிகுந்த சிவகோசரியார் என்னும் பெருமுனிவர் கண்டார். நான்முகன் முதலாயுள்ள தேவர்கள் மகிழ்ந்து, பெருகும் கற் பகப் பூக்களாம் மழையினைச் சொரிந்தனர். நான்மறைகளும் முழங்கின.

விளக்கவுரை

கண்ணப்பர் வரலாற்றைப் போற்றும் வண்ணம், கண்ணப்பர் திருமறம் என்ற பெயரில் நக்கீரதேவர், கல்லாடதேவர் ஆகிய இருவரும் இருநூல்கள் செய்துள்ளனர். இவற்றுள் நக்கீரதேவர் திருமறமே *(தி.11)* இவ்வரலாற்றிற்குப் பெரிதும் துணை நின்றுள்ளது. எடுத்துக்காட்டாக,

தத்தையாம் தாய்தந்தை நாகனாம் தன்பிறப்புப்
பொத்தப்பி நாட்டுடுப்பூர் வேடுவனாம் - தித்திக்கும்
திண்ணப்ப னாஞ்சிறுபேர் செய்தவத்தாற் காளத்திக்
கண்ணப்பனாய் நின்றான் காண்.

(தி.11 கண்ணப். மறம். இறுதி வெண்பா.)

என வரும் நக்கீரதேவரின் திருவாக்கினைக் காண்க.

பேறினி யிதன்மேல் உண்டோ
பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்கண்
இடந்தப்ப உதவுங் கையை
ஏறுயர்த் தவர் தங் கையால்
பிடித்துக்கொண் டென்வ லத்தின்
மாறிலாய் நிற்க வென்று
மன்னுபே ரருள்பு ரிந்தார். **#829**

பெருமானார் திருக்கண்ணில் வந்த ஊறாய புண்ணைக் கண்டு அஞ்சி, அதற்காகத் தமது இடக்கண்ணை இடக்க எடுத்த கண்ணப்ப நாயனாரின் கையை, ஆனேற்றுக் கொடியை உயர்த்தியருளிய பெருமானார் தம் கையால் பிடித்துக் கொண்டு, `ஒப்பில்லாத அன்பனே! என் வலப் பக்கத்தில் என்றும் நீ நிற்பாயாக` என எக்காலமும் குன்றாத சீர்மன்னி விளங்கும் பெரிய அருள் புரிந்தார். ஆதலின் இப்பேற்றினும் பெறத்தக்கதொரு பெரும்பயன் இல்லை என்பதாம்.

விளக்கவுரை

****

மங்குல்வாழ் திருக்கா ளத்தி
மன்னனார் கண்ணில் புண்ணீர்
தங்கணால் மாற்றப் பெற்ற
தலைவர்தாள் தலைமேற் கொண்டே
கங்கைவாழ் சடையார் வாழும்
கடவூரிற் கலய னாராம்
பொங்கிய புகழின் மிக்கார்
திருத்தொண்டு புகல லுற்றேன். **#830**

மேகங்கள் வாழுதற்கு இடனாய திருக்காளத்தி மலையில் எழுந்தருளியிருக்கும் இறைவரின் திருக்கண்களில் கண்ட குருதியை, தமது கண்களினால் மாற்றும் பேறு பெற்ற தலைவராகிய கண்ணப்ப நாயனாரின் திருவடிகளை என் தலைமேற்கொண்டு, கங்கை வாழும் திருச்சடையையுடைய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் திருக்கடவூரில் வாழ்ந்த கலயனாராகிய புகழ் மேம்பட்டவரின் திருத்தொண்டினை, இனிக் கூறத் தொடங்குகின்றேன்.

விளக்கவுரை

****

குங்குலியக்கலயநாயனார் புராணம்

வாய்ந்தநீர் வளத்தா லோங்கி
மன்னிய பொன்னி நாட்டின்
ஏய்ந்தசீர் மறையோர் வாழும்
எயிற்பதி யெறிநீர்க் கங்கை
தோய்ந்தநீள் சடையார் பண்டு
தொண்டர்மேல் வந்த கூற்றைக்
காய்ந்தசே வடியார் நீடி
யிருப்பது கடவூ ராகும். **#831**

பொருந்திய நீர்வளத்தால் ஓங்கி நிலைபெற்று விளங்கிய காவிரியாற்றின் வளம் சிறந்த சோழ நாட்டில், பொருந்திய சிறப்பு மிக்க அந்தணர்கள் வாழும் மதில் சூழ்ந்ததொரு நகரமாக விளங்குவது,அலையெறியும் கங்கை சிறந்து விளங்கும் நீண்ட சடையையுடையாரும் முன்னொரு காலத்துத் தன் அடியவராகிய மார்க்கண்டேயர் மேல் பற்றும் படியாக வந்த காலனை உதைத்த சேவடியையுடையாருமாய பெருமான் என்றும் எழுந்தருளி யிருப்பதான திருக்கடவூர் என்னும் திருப்பதியாகும்.

விளக்கவுரை

எயில் - மதில். தொண்டர் - மார்க்கண்டேயர். பொன்னி நாடு என்பதால் நீர்*(தீர்த்த)*ச் சிறப்பும், மறையோர் வாழும் எயிற்பதி என்பதால் பதி*(தல)*ச் சிறப்பும், \`எறிநீர்க் கங்கை.....சூடியிருப்பது\` என்பதால் மூர்த்திச் சிறப்பும் குறித்தவாறாம். \`கங்கை தோய்ந்த சடையார்\` என்பதால் பொது வகையானும், \`தொண்டர்மேல் வந்த கூற்றைக் காய்ந்தவர்\` என்பதால் சிறப்பு வகையானும் உலகைக் காத்தல் தோன்ற நின்றது.

வயலெலாம் விளைசெஞ் சாலி
வரம்பெலாம் வளையின் முத்தம்
அயலெலாம் வேள்விச் சாலை
அணையெலாங் கழுநீர்க் கற்றை
புயலெலாங் கமுகின் காடப்
புறமெலாம் அதன்சீர் போற்றல்
செயலெலாந் தொழில்க ளாறே
செழுந்திருக் கடவூ ரென்றும். **#832**

அங்குள்ள வயல்கள் யாவற்றிலும் செஞ்சாலி என்னும் வகையான நெல் விளைந்துளது. வரம்புகள் (வரப்புகள்) யாவற்றிலும் சங்குகள் ஈன்ற முத்துகள் காணப்படுகின்றன. அவ்வயல்களின் அயலிடங்கள் யாவிலும் வேள்விச் சாலைகள் நிறைந்து விளங்குகின்றன. நீரை மடுத்து நிற்கும்

அணைகள் யாவிலும் செங்கழுநீர்ப்பூக்கள் திரட்சியாக உள. அங்குள்ள கமுகஞ் சோலைகள் யாவின் மேலும் மேகங்கள் படிந்துள. அவ்வூர்ப் புறத்து இருக்கும் ஊர்கள் யாவும் திருக்கடவூரின் சீரைப் போற்றி மகிழும் சிறப்பினை உடையன. அங்குளோரின் செயல்கள் யாவும் அறநெறி திறம்பாதனவாகும். அத்தகைய ஊரே திருக்கடவூராகும்.

விளக்கவுரை

வளை - சங்கு. கமுகு - பாக்கு மரம்

குடங்கையின் அகன்ற உண்கண்
கடைசியர் குழுமி யாடும்
இடம்படு பண்ணை தோறும்
எழுவன மருதம் பாடல்
வடம்புரி முந்நூல் மார்பின்
வைதிக மறையோர் செய்கைச்
சடங்குடை இடங்கள் தோறும்
எழுவன சாமம் பாடல். **#833**

அகங்கையினும் அகன்று மை தீட்டப் பெற்ற கண்களுடன் வயலில் களையெடுக்கும் பெண்கள், எழிலுடன் கூடியாடும் இடமாய வயல்தோறும், மருதப் பாடல்கள் எழுவன. வடம்போல முறுக்கப்பெற்ற முப்புரிநூலைச் சிறப்புடன் அணிந்த மார்பினையுடைய வைதிக நெறிநின்ற அந்தணர்களுடைய செயல்களாகிய வேள்விகள் நடைபெறும் இடந்தோறும், சாமகானம் எனும் மறையோசையின் இசை எழும்.

விளக்கவுரை

****

துங்கநீள் மருப்பின் மேதி
படிந்துபால் சொரிந்த வாவிச்
செங்கயல் பாய்ந்து வாசக்
கமலமும் தீம்பால் நாறும்
மங்குல்தோய் மாடச் சாலை
மருங்கிறை யொதுங்கு மஞ்சும்
அங்கவை பொழிந்த நீரும்
ஆகுதிப் புகைப்பால் நாறும். **#834**

மேன்மைபொருந்திய உயர்வுடன் நீண்ட கொம்பினையுடைய எருமைகள் தாமாகப் பால்சொரிந்த குளங்களில், செங்கயல் மீன்கள் பாய்ந்தோடலால், அங்கு அவைகளால் தெளித்திடப் பெறுகின்ற பாலுடன் சேர்ந்த நீர், தாமரை மலர்களில் பட, அதனால்

நறுமணமுடைய தாமரை மலர்களும், இனிய பால் மணம் கமழ்ந்து நிற்கும். அதுவன்றியும், மேகங்கள் தோயும் மாடங்களின் மருங்கில் ஒரு சிறிது நேரம் படிந்திடும் மேகங்களும் அவை பொழிந்த நீரும், அந்தணர் வேள்வியில் வளர்த்திடும் ஓமப்புகையில் தோயலால், அவ் ஓமப்புகையின் இனிய மணம் அவற்றில் கமழ்ந்து நிற்கும்.

விளக்கவுரை

தாமரையில் எருமைப்பாலின் மணமும், மேகத்தினின் றும் பொழிகின்ற நீரில் ஓம நறும் புகையின் மணமும் கமழுகின்றன.

மருவிய திருவின் மிக்க
வளம்பதி அதனில் வாழ்வார்
அருமறை முந்நூல் மார்பின்
அந்தணர் கலயர் என்பார்
பெருநதி அணியும் வேணிப்
பிரான்கழல் பேணி நாளும்
உருகிய அன்பு கூர்ந்த
சிந்தையார் ஒழுக்க மிக்கார். **#835**

பொருந்திய திருவின் சிறப்பினால் மிக்க வளமு டைய அத்திருப்பதியில் வாழ்பவராகிய அரிய மறை வழி நிற்கும் கலயனார் என்னும் பெயருடைய அந்தணர், கங்கையை அணிந்த சிவபெருமான் திருவடிகளைப் பேணி நாள்தொறும் வணங்குபவர்; அன்பு கூர்ந்த சிந்தையர்; ஒழுக்கத்தில் மிக்கவர்.

விளக்கவுரை

கலயம் - கலசம் அல்லது குடம் என்று பொருள்படும். தேவர்கள் கொணர்ந்த அமிர்த கலசமே சிவலிங்கத் திருமேனி கொண்டு வீற்றிருந்தருளும் இடமாகிய திருக்கடவூர் ஆகும். அங்குள்ள பெருமானின் திருப்பெயர் அமிர்தகடேசுவரர் என்பதாம். அப்பெருமானின் திருப்பெயரின் சுருக்கமாகவே கலயனார் எனும் பெயர் அமைந்தது.

பாலனாம் மறையோன் பற்றப்
பயங்கெடுத் தருளு மாற்றால்
மாலுநான் முகனுங் காணா
வடிவுகொண் டெதிரே வந்து
காலனார் உயிர்செற் றார்க்குக்
கமழ்ந்தகுங் குலியத் தூபம்
சாலவே நிறைந்து விம்ம
இடும்பணி தலைநின் றுள்ளார். **#836**

அவர், பாலரும் மறையவருமாகிய மார்க்கண்டேயர், தம்மைப் பறறிக் கொள்ள அவருக்கு நேர்ந்த அச்சத்தைக் கெடுத்து, மாலும் அயனும் தேடிக் காணாத வடிவு கொண்டு அவர் முன்பு எழுந்தருளிவந்து, இயமனை உதைத்தருளி, அவன் அரிய உயிரைத் தொலைத்திட்ட சேவடியை உடையவராய பெருமானுக்கு, நாள் தொறும் நறுமணமுடைய குங்குலியத் தூபம் இடுகின்ற பணியையே தலையாயதொரு பணியாகச் செய்துவரும் பேறுடையவர்.

விளக்கவுரை

இயமனை உதைத்தருளிய திருவுருவம் கால சம்கார மூர்த்தி எனப் போற்றப் பெற்று வருகிறது.

கங்கைநீர் கலிக்கும் சென்னிக்
கண்ணுதல் எம்பி ராற்குப்
பொங்குகுங் குலியத் தூபம்
பொலிவுறப் போற்றிச் செல்ல
அங்கவ ரருளி னாலே
வறுமைவந் தடைந்த பின்னும்
தங்கள்நா யகர்க்குத் தாமுன்
செய்பணி தவாமை யுய்த்தார். **#837**

கங்கையாறு ஒலித்திடும் திருச்சடையுடன், நெற்றியில் கண்ணும் கொண்ட பெருமானுக்கு, மேன்மேலும் நறுமணம் சிறக்கும் குங்குலிய மணம் கமழ்ந்து பொலிவுறும்படி, நாள்தோறும் பணிசெய்து வரும் அவருக்கு, பெருமானார் திருவருளினாலே அங்கு வறுமை வந்து அடைய, அதன்பின்பும் தம் தலைவராய பெருமானுக்குத் தாம் முன்பிருந்து செய்துவரும் குங்குலியத் தூபம் இடும் பணியைத் தவறாமல் செய்து வந்தார்.

விளக்கவுரை

கலிக்கும் - ஒலிக்கும்.

இந்நெறி ஒழுகு நாளில்
இலம்பாடு நீடு செல்ல
நன்னிலம் முற்றும் விற்றும்
நாடிய அடிமை விற்றும்
பன்னெடுந் தனங்கள் மாளப்
பயில்மனை வாழ்க்கை தன்னின்
மன்னிய சுற்றத் தோடு
மக்களும் வருந்தி னார்கள். **#838**

இந்நெறியில் ஒழுகிவரும் காலத்தில், இவர்க்குற்ற வறுமை மேலும்

பெருக, இவர் தம் நல்ல நிலங்கள் யாவற்றையும் விற்றும், தமக்குரிய அடிமைகளை விற்றும், இவ்வாறாகப் பெருஞ் செல்வங்கள் யாவும் தீர்ந்து போக, இவர் நடத்திவரும் இல்வாழ்க்கை யில், இவருடன் இருந்து வரும் சுற்றத்தாருடன் மக்களும் உணவில் லாமல் பசியால் வருந்தினார்கள்.

விளக்கவுரை

****

யாதொன்றும் இல்லை யாகி
இருபக லுணவு மாறிப்
பேதுறும் மைந்த ரோடும்
பெருகுசுற் றத்தை நோக்கிக்
காதல்செய் மனைவி யார்தங்
கணவனார் கலய னார்கைக்
கோதில்மங் கலநூல் தாலி
கொடுத்துநெற் கொள்ளு மென்றார் **#839**

யாதொரு பொருளும் இவர் பால் இலதாக, இரு பொழுதுகளும் தொடர்ந்து உணவு அருந்தாமையின் வாடி, தம் மக்களுடன் பெருகுகின்ற தம் சுற்றத்தவரையும் கண்டு, அவர்க்குற்ற பசிப் பிணியினை நீக்கிட வேண்டுமென நினைவுற்று, கலயனார் பால் காதலுடைய மனைவியார், தம் கணவனார் கையில், குற்றமிலாத தமது திருமங்கல நாணைக் கழற்றிக் கொடுத்து, `நீர் இதைக் கொண்டு நெல்வாங்கி வாரும்` என விடுத்தார்.

விளக்கவுரை

திருமங்கல நாண் எந்நிலையிலும் கொடுத்தற் கரியது. `ஈதற்கரிய இழையணி` *(புறநா. 127)* என்னும் புறநானூறும். அதனை யும் உணவிற்காகக் கொடுத்தனள் எனவே பசிப்பிணி என்னும் பாவியது கொடுமையை அறிய இயலுகிறது.

அப்பொழு ததனைக் கொண்டு
நெற்கொள்வான் அவரும் போக
ஒப்பில்குங் குலியங் கொண்டோர்
வணிகனும் எதிர்வந் துற்றான்
இப்பொதி யென்கொல் என்றார்
உள்ளவா றியம்பக் கேட்டு
முப்புரி வெண்ணூல் மார்பர்
முகமலர்ந் திதனைச் சொன்னார். **#840**

அப்பொழுது அத்திருமங்கல நாணை வாங்கிக் கொண்டு,

நெற்கொள்வதற்கு எனக் குங்குலியக்கலய நாயனார் போதலும், ஒப்பில்லாத குங்குலியப் பொதியினைச் சுமந்துகொண்டு ஒரு வணிகனும்எதிர்வரக் கண்ணுற்ற நாயனார், `இப்பொதியில் என்ன?` என வினவலும், `அது புகைத்தற்குரிய நறுமணமுடைய குங்குலியம்` என்று அவ்வணிகன் சொல்லலும், அது கேட்ட முப்புரிகளாலான வெண்மையான நூலணிந்த மார்பராகிய குங்குலியக்கலய நாயனாரும் முகம் மலர்ந்து பின்வருமாறு சொல்வாராயினர்

விளக்கவுரை

****

ஆறுசெஞ் சடைமேல் வைத்த
அங்கணர் பூசைக் கான
நாறுகுங் குலியம் ஈதேல்
நானின்று பெற்றேன் நல்ல
பேறுமற் றிதன்மே லுண்டோ
பெறாப்பேறு பெற்று வைத்து
வேறினிக் கொள்வ தென்னென்
றுரைத்தெழும் விருப்பின் மிக்கார். **#841**

கங்கையாற்றைச் செஞ்சடைமேல் வைத்த நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானின் பூசனைக்கு ஏற்றதான நல்ல மணம் தரும் குங்குலியம் ஈதெனில், நான் எந்நாளும் பெறாததொரு பேறு இன்று பெற்றேன். இதனினும் இன்னொரு பேறு மேலானது ஒன்று எனக்கு உண்டோ? பெறுதற்குரிய பேற்றினைப் பெற்றும் வேறு, இனிப் பெறத்தக்கது என்? என்று கூறி, அக் குங்குலியத்தை வாங்குதற்குப் பெரு விருப்புடையராய்.

விளக்கவுரை

****

பொன்தரத் தாரு மென்று
புகன்றிட வணிகன் தானும்
என்தர விசைந்த தென்னத்
தாலியைக் கலயர் ஈந்தார்
அன்றவன் அதனை வாங்கி
அப்பொதி கொடுப்பக் கொண்டு
நின்றிலர் விரைந்து சென்றார்
நிறைந்தெழு களிப்பி னோடும். **#842**

வணிகனை நோக்கி, `நான் பொன் தர நீர் இக்குங்குலியத்தைத் தாரும்` என்றலும், வணிகனும் அவரை நோக்கி, `எவ்வளவு பொன் இதற்குக் கொடுப்பீர்` என்ன, கலயனாரும் தம் மனைவியாரின் தாலியைக்

கொடுத்தலும், அவ்வணிகன், அதனை வாங்கிக் கொண்டு அப்பொதியினைக் கொடுப்பக் கொண்டு, அங்கு நில்லாது தம் மனத்தில் நிறைந்து எழும் மகிழ்ச்சியோடு விரைந்து சென்றார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

விடையவர் வீரட் டானம்
விரைந்துசென் றெய்தி என்னை
உடையவர் எம்மை யாளும்
ஒருவர்தம் பண்டா ரத்தில்
அடைவுற ஒடுக்கி யெல்லாம்
அயர்த்தெழும் அன்பு பொங்கச்
சடையவர் மலர்த்தாள் போற்றி
இருந்தனர் தமக்கொப் பில்லார். **#843**

ஆனேற்றை ஊர்தியாகக் கொண்ட பெருமானாரின் வீரட்டானத்திற்கு விரைந்து சென்று, எம்மை அடியவராக உடையவரும், முழுமையாக என்னை ஆட்கொண் டருளி வருகின்ற ஒப்பற்ற பெருமையுடையவருமாகிய பெருமானின் பண்டாரத்தில் (களஞ்சியத்தில்) அப்பொதியினை முழுமையாகச் சேமித்து வைத்து, உலகியற் செயல்கள் யாவற்றையும் மறந்து, எழுகின்ற அன்பு பொங்கிட, திருச்சடையையுடைய பெருமானின் திருவடி மலர்களைப் போற்றுதல் புரிந்து, தமக்கு ஒப்பில்லாத குங்குலியக்கலய நாயனார் அங்கு இருந்தார்.

விளக்கவுரை

`பாரம் ஈசன் பணியலது ஒன்றிலார்` *(தி.12 சரு. 1-4 பா.9)* என்பதற்கு ஏற்ப, நாயனாரின் திருவுள்ளம் அமைந்திருந்தமை யின் உலகியலுணர்வு தானே தூர்வதாயிற்று.

அன்பரங் கிருப்ப நம்பர்
அருளினால் அளகை வேந்தன்
தன்பெரு நிதியந் தூர்த்துத்
தரணிமேல் நெருங்க எங்கும்
பொன்பயில் குவையும் நெல்லும்
பொருவில்பல் வளனும் பொங்க
மன்பெரும் செல்வ மாக்கி
வைத்தனன் மனையில் நீட. **#844**

பேரன்பினராய குங்குலியக்கலய நாயனார் இவ்வாறு கோயிலில் இருப்ப, பெருமானின் திருவருளினாலே அளகை வேந்தனாகிய குபேரன், தன்பெருநிதியைத் தனதுலகில் முழுவதும் இல்லையாகச்

செய்து இந்நிலவுலகில் நெருங்குமாறு, பொற்குவியலும் நெல்லும் ஒப்பற்ற பிற பொருள்களாலான பல வளங்களும் பெருகிப் பொலியுமாறு, அவர்தம் திருமனையில் நிரப்பி வைத்தனன்.

விளக்கவுரை

`நம்செயல் அற்று இந்த நாம் அற்றபின், நாதன் தன்செயல் தானே என்று உந்தீபற` *(திருவுந். 6)* என்ற ஞான நூற் கருத்தும் நோக்குக.

மற்றவர் மனைவி யாரும்
மக்களும் பசியால் வாடி
அற்றைநா ளிரவு தன்னில்
அயர்வுறத் துயிலும் போதில்
நற்றவக் கொடிய னார்க்குக்
கனவிடை நாதன் நல்கத்
தெற்றென உணர்ந்து செல்வங்
கண்டபின் சிந்தை செய்வார். **#845**

(கணவனார் கையில் தனது தாலியைக் கொடுத்து நெல்லுக்காகக் காத்திருந்த) மனைவியாரும் மக்களும் பசியால் வாடி அன்றைய நாள் இரவு பசியின் சோர்வால் துயிலுங்கால், நல்ல தவத்தின் கொடிபோன்ற அம் மனைவியாரின் கனவில், பெருமான் தோன்றி, இத்திருவெல்லாம் வழங்கியருளியமையை அறிவுறுத்தலும், உடன் மனைவியார் உணர்ந்து விழித்து, தம் மனை நிறையப் பொலியும் செல்வத்தைக் கண்டு, பின் மேலும் செய்யத் தக்கதை எண்ணுவாராய்.

விளக்கவுரை

****

கொம்பனா ரில்ல மெங்கும்
குறைவிலா நிறைவிற் காணும்
அம்பொனின் குவையும் நெல்லும்
அரிசியும் முதலா யுள்ள
எம்பிரான் அருளாம் என்றே
இருகரங் குவித்துப் போற்றித்
தம்பெருங் கணவ னார்க்குத்
திருவமு தமைக்கச் சார்ந்தார். **#846**

பூங்கொடியையொத்த பேரழகுடைய அம்மையார் `தமது மனையில், எவ்விடமும் குறைவிலாது நிறைவா கக் காணப் பெறும் அழகிய பொற்குவியலும் நெல்லும் அரிசியும் முதலாக உள்ள இவையாவும் எம்பெருமான் எமக்கு அருள் புரிந்தவையாகும்` என்று இருகைகளையும் கூப்பி, ஈசன் அருளை வணங்கித், தமது பெருங் கணவனாருக்குத்

திருவமுது சமைத்திடத் தொடங்கலுற்றார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

காலனைக் காய்ந்த செய்ய
காலனார் கலய னாராம்
ஆலுமன் புடைய சிந்தை
அடியவ ரறியு மாற்றால்
சாலநீ பசித்தாய் உன்தன்
தடநெடு மனையில் நண்ணிப்
பாலின்இன் அடிசில் உண்டு
பருவரல் ஒழிக வென்றார். **#847**

இயமனை உதைத்து வீழ்த்திய செவ்விய திருவடி களை உடைய பெருமானும், தம் திருவடியின்கண் பெரும் பற்றினைக் கொண்டிருக்கும் கலயனார் அறியும் படியாக, `அன்பனே ! நீ மிகவும் பசித்தாய், உன்னுடைய விரிந்த நீண்ட பெருமனைக்குச் சென்று பால் சுவையுடன் கூடிய இனிய அமுதை உண்டு, உனது பசித் துன்பத்தி னின்றும் நீங்குவாயாக!` என்று அருள் புரிந்தார்.

விளக்கவுரை

****

கலயனார் அதனைக் கேளாக்
கைதொழு திறைஞ்சிக் கங்கை
அலைபுனற் சென்னி யார்தம்
அருள்மறுத் திருக்க அஞ்சித்
தலைமிசைப் பணிமேற் கொண்டு
சங்கரன் கோயில் நின்று
மலைநிகர் மாட வீதி
மருங்குதம் மனையைச் சார்ந்தார். **#848**

குங்குலியக் கலயனாரும் அதனைக் கேட்டுப், பெருமானைக் கைதொழுது வணங்கி, அலைகளையுடைய கங்கை யாற்றின் நீரைச் சடைமீது கொண்ட சிவபெருமானின் அருளை, மறுத்து அங்கிருக்க அஞ்சி, இறைவனின் அருளாணையைத் தலைமேல் கொண்டு, கோயிலினின்றும் நீங்கி, மலையை நிகர்த்த மாடங்களுடன் கூடிய வீதியின் அருகிலிருக்கும் தம் மனையைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

****

இல்லத்தில் சென்று புக்கார்

இருநிதிக் குவைகள் ஆர்ந்த
செல்வத்தைக் கண்டு நின்று
திருமனை யாரை நோக்கி
வில்லொத்த நுதலாய் இந்த
விளைவெலாம் என்கொல் என்ன
அல்லொத்த கண்டன் எம்மான்
அருள்தர வந்த தென்றார். **#849**

தமது மனையில் குங்குலியக் கலயனார் சென்று புகுந்தார். அப்பொழுது குபேரனின் நிதிக்குவியல் எங்கும் பொலிந்திருப்பதைக் கண்டு, நின்று, பேரழகுடைய தம் மனைவியாரை நோக்கி, `வில்லை ஒத்த அழகிய நெற்றியையுடையவளே! இவ்வரிய விளைவுகள் எல்லாம் எங்ஙனம் வந்தது?` என்று வினவ, அவரும், `கரிய கழுத்தினையுடைய பெருமானது அருளினால் கிட்டியது` என்றார்.

விளக்கவுரை

****

மின்னிடை மடவார் கூற
மிக்கசீர்க் கலய னார்தாம்
மன்னிய பெருஞ்செல் வத்து
வளமலி சிறப்பை நோக்கி
என்னையும் ஆளுந் தன்மைத்
தெந்தைஎம் பெருமான் ஈசன்
தன்னருள் இருந்த வண்ணம்
என்றுகை தலைமேற் கொண்டார். **#850**

மின்னல் போலும் சிற்றிடையையுடைய அம்மையார் இவ்வாறு கூறலும், மிக்க சிறப்பையுடைய குங்குலியக் கலயனாரும், தமது மனையில், விளங்கிய பெருஞ் செல்வத்தின் வளம் மலிந்த சிறப்பை நோக்கி, ஒன்றற்கும் பற்றாத என்னையும் ஆண்டு கொள்ளும் தன்மைக்கு, எந்தையும் எம் பெருமானுமான ஈசனின் அருள் இருந்த வண்ணம் தான் என்னே? என இறைவனின் அருளை நினைந்து களி கூர்ந்து நிற்பார், தம் கரங்களை உச்சிமீது கூப்பிய நிலையில் நின்று போற்றினார்.

விளக்கவுரை

****

பதுமநற் றிருவின் மிக்கார்
பரிகலந் திருத்திக் கொண்டு
கதுமெனக் கணவ னாரைக்

கண்ணுதற் கன்ப ரோடும்
விதிமுறை தீபம் ஏந்தி
மேவும்இன் அடிசில் ஊட்ட
அதுநுகர்ந் தின்பம் ஆர்ந்தார்
அருமறைக் கலய னார்தாம். **#851**

தாமரை மலரில் இருக்கும் திருமகளினும் அழகு மிக்கவராய அம்மனைவியார், உணவு அருந்துதற்குரிய வாழை யிலையைத் திருந்த அமைத்து, விரைவுடன் தமது கணவனாரை அங் கிருந்த சிவனடியார்களுடன் சேரக் கூட்டி, விதிமுறை மாறாது விளக்கு ஏற்றித், தாம் சமைத்து வைத்திருந்த இனிய சோற்றினை உண்பிக்க, அவ்வமுதை உண்டு, இன்பமுற விளங்கினார் அழியாத மறை நெறி நின்ற குங்கிலியக் கலயனார்.

விளக்கவுரை

பரிகலம் - உண்கலம்: வாழையிலை.

ஊர்தொறும் பலிகொண் டுய்க்கும்
ஒருவன தருளி னாலே
பாரினில் ஆர்ந்த செல்வம்
உடையராம் பண்பில் நீடிச்
சீருடை அடிசில் நல்ல
செழுங்கறி தயிர்நெய் பாலால்
ஆர்தரு காதல் கூர
அடியவர்க் குதவும் நாளில். **#852**

ஊர்தொறும் பிச்சை ஏற்றுத்தன் அடியார்களை உய்யக் கொள்ளும் ஒப்பற்ற சிவபரஞ்சுடரின் இனிய நல் அருளி னாலே, இந்நிலவுலகில் நிறைந்த செல்வமுடையவர் இவர் எனும்படி, குங்கிலியக் கலயர் பண்பால் பெருகி, சீருடைய சோறு, நல்ல சுவை யான கறி, தயிர், நெய், பால், ஆகிய சிறந்த சுவைமிக்க உணவு வகை களால் மேல்மேல் வளரும் அன்புகூர்ந்திடச் சிவனடியார்களுக்கு உதவி வருகின்ற நாள்களில்.

விளக்கவுரை

****

செங்கண்வெள் ளேற்றின் பாகன்
திருப்பனந் தாளின் மேவும்
அங்கணன் செம்மை கண்டு
கும்பிட அரசன் ஆர்வம்
பொங்கித்தன் வேழம் எல்லாம்
பூட்டவும் நேர்நில் லாமைக்

கங்குலும் பகலும் தீராக்
கவலையுற் றழுங்கிச் செல்ல. #853

சிவந்த கண்களையுடைய ஆனேற்றினை ஊர்தியாகக் கொண்டு, உமையொரு கூறராய் வீற்றிருப்பவரும் திருப்பனந்தாளில் தாடகை யீச்சரம் என்னும் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் நெற்றிக் கண்ணையுடைய பெருமானும் ஆன இறைவரின் திருவுருவம் சாய்ந்திருத்தலை நீக்கி, அவரை நேர் நிற்கக் கண்டு வணங்கிட வேண்டும் என்னும் ஆர்வம் கொண்ட அரசன், தன் அன்புமீதூர தன் நாட்டிலுள்ள யானைகள் எல்லா வற்றையும் பூட்டி இழுக்கவும், அத்திருமேனி நேர்நில்லாமை கண்டு, இரவும் பகலுமாகத் தீராத கவலையடைந்து, வருத்தமுற்று வருதலும்.

விளக்கவுரை

தாடகையெனும் பத்திமையுடைய பெண் ஒருத்தி, நாளும் பெருமானை வழிபட்டுவர, ஒருநாள் அப்பெருமானுக்கு மாலை யணிந்து மகிழ விருப்புற்ற நிலையில், தன் ஆடை நெகிழ, அதுகண்ட இறைவன் அவள் பெண்மைக்கு இழுக்கு நேரா வண்ணம், தலை சாய்த்து, அம்மாலையை ஏற்றனன். அன்று சாய்ந்த திருமேனி அப் படியே இருக்கக் கண்ட அரசன், நிமிர்த்த எண்ணி, இவ்வாறு செய் தனன்.

மன்னவன் வருத்தங் கேட்டு
மாசறு புகழின் மிக்க
நன்னெறிக் கலய னார்தாம்
நாதனை நேரே காணும்
அந்நெறி தலைநின் றான்என்
றரசனை விரும்பித் தாமும்
மின்னெறித் தனைய வேணி
விகிர்தனை வணங்க வந்தார். #854

அரசனுடைய இவ்வருத்தத்தைக் கேட்டமாசற்ற புகழ் மிகுந்த நன்னெறியைக் கடைப்பிடித்து வரும் கலயனார் தாமும், அப்பெருமானை நேராக நிலைபெறக் கண்டு கும்பிட வேண்டும் எனும் விருப்புடன் நிற்கும் அரசனைத் தாமும் காணப் பெரிதும் விரும்பியதோடு, மின்னல் என விளங்கும் நீண்ட சடையையுடைய கருணையுடையவரான சிவபெருமானை வணங்க வந்தார்.

விளக்கவுரை

இம் மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

மழுவுடைச் செய்ய கையர்
கோயில்கள் மருங்கு சென்று

தொழுதுபோந் தன்பி னோடும்
தொன்மறை நெறிவ ழாமை
முழுதுல கினையும் போற்ற
மூன்றெரி புரப்போர் வாழும்
செழுமலர்ச் சோலை வேலித்
திருப்பனந் தாளிற் சேர்ந்தார். **#855**

மழுப்படையை ஏந்திய செழுமையான கையினை உடையவரான பெருமானாரின் திருக்கோவில்கள் பல, தாம் செல்லும் வழியிடையில் இருப்பக் கண்டு, தொழுது, அன்பினோடும் வணங்கிச் செல்பவர், மறைநெறிவழாமலும், மூவுலகங்களும் போற்ற முத்தீயை ஓம்பியும் வரும் அந்தணர்கள் வாழும் சோலைகள் சூழ்ந்த திருப்பனந்தாளுக்கு வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

****

காதலால் அரசன் உற்ற
வருத்தமுங் களிற்றி னோடும்
தீதிலாச் சேனை செய்யும்
திருப்பணி நேர்ப டாமை
மேதினி மிசையே எய்த்து
வீழ்ந்திளைப் பதுவும் நோக்கி
மாதவக் கலயர் தாமும்
மனத்தினில் வருத்தம் எய்தி. **#856**

பெருமானை நேர்காண வேண்டும் எனும் காதலால், அவ்வரசன் கொண்டிருக்கும் வருத்தத்தினையும், யானை யோடு குற்றமற்ற தானையும், தாம் செய்துவரும் திருப்பணியால் திருவுருவம் நேர்படாமை கண்டு, நிலத்தின்மீது களைத்து வீழ்ந்து, இளைப்பதனையும் பார்த்து, பெருந் தவமுடைய குங்குலியக் கலயனார் தாமும் மனத்தினில் மிகு வருத்தம் கொண்டு.

விளக்கவுரை

திருப்பணி - பெருமானின் திருமேனியில் கயிறிட்டு அது நிமிரும் வண்ணம் அக்கயிற்றைத் தானையும் யானைகளுமாக இழுத்துக் கொண்டிருக்கும் பணி.

சேனையும் ஆனை பூண்ட
திரளுமெய்த் தெழாமை நோக்கி
யானுமிவ் விளைப்புற் றெய்க்கும்
இதுபெற வேண்டு மென்று

தேனலர் கொன்றை யார்தம்
திருமேனிப் பூங்கச் சேய்ந்த
மானவன் கயிறு பூண்டு
கழுத்தினால் வருந்த லுற்றார். **#857**

சேனையும் யானைகளும் இழுத்துக் களைத்து நிலத்தில் வீழ்ந்து அவை எழமுடியாதபடி கிடந்திடும் அந்நிலையைக் கலயனார் நோக்கி, `நானும் இவ்விளைப்பினைப் பொருந்தி மெலியும் பேற்றைப் பெற வேண்டும்,` என்று தேன் நிறைந்த கொன்றை மாலை சூடிய சிவபெருமானின் சிவலிங்கத் திருமேனியில் அழகிய கச்சி னோடு பூட்டியிருந்த பெருங்கயிற்றைப் பூட்டித்தம் கழுத்தினால் இழுக் கலுற்றார்.

விளக்கவுரை

சேனையும் ஆனையும் பெற்ற இளைப்பினைப்பெற வேண்டும் என நினைத்தனரேயன்றித், தாம் நிமிர்த்துவிடுவோம் எனும் முனைப்புடன் அப்பணியைச் செய்ய முற்பட்டார் அல்லர். அவ்வரிய பண்பே திருமேனி நிமிரக் காரணமாயிற்று. `தாழ்வெனும் தன்மை யோடு சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறல் அரிது,` *(சிவ. சித்தி. சுபக். சூ.2, 91)* `யான் எனது என்று அற்ற இடமே திருவடியார்` *(குமர. கந்தர். 34)* எனவரும் திருவாக்குகளும் காண்க. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

நண்ணிய ஒருமை யன்பின்
நாருறு பாசத் தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி
இளைத்தபின் திறம்பி நிற்க
ஒண்ணுமோ கலய னார்தம்
ஒருப்பாடு கண்ட போதே
அண்ணலார் நேரே நின்றார்
அமரரும் விசும்பில் ஆர்த்தார். **#858**

கலயனார், பொருந்திய ஒரு நெறிய மனம் கொண்டு அன்பு என்னும் திண்ணிய நாரால் கழுத்தில் பூட்டி இழுத்து வருத்தமுற்ற பின்னரும், பெருமான் தம் திருஉருவத்தைச் சாய்த்து நிற்க முடியுமோ? கலயனாரின் ஒருமை அன்பின் திறத்தைக் கண்ட அமையத்தேயே பெருமான் நேராக நின்றார். தேவர்களும் அது கண்டு மகிழ்வொலி செய்தனர்.

விளக்கவுரை

****

பார்மிசை நெருங்க எங்கும்
பரப்பினர் பயில்பூ மாரி
தேர்மலி தானை மன்னன்

சேனையும் களிறும் எல்லாம்
கார்பெறு கானம் போலக்
களித்தன கைகள் கூப்பி
வார்கழல் வேந்தன் தொண்டர்
மலரடி தலைமேல் வைத்து **#859**

நிலவுலகெங்கும் மலர் மழை பொழிந்தனர். இதனைக் கண்ணுற்ற தேர்ப்படை மிகுந்த அரசனது சேனையும் யானையும் எல்லாம் மழையைப் பெற்றுத் தளிர்த்து மலரும் சோலைகளைப் போல உளம் குளிர்ந்து களித்தன. அதுபொழுது, வீரக் கழலை அணிந்த அரசன் தன் கைகளைக் கூப்பித் தொழுது குங்குலியக் கலய நாயனாரின் மலரடிகளைத் தன் தலைமேல் கொண்டு.

விளக்கவுரை

****

விண்பயில் புரங்கள் வேவ
வைதிகத் தேரின் மேருத்
திண்சிலை குனிய நின்றார்
செந்நிலை காணச் செய்தீர்
மண்பகிர்ந் தவனுங் காணா
மலரடி யிரண்டும் யாரே
பண்புடை யடியார் அல்லால்
பரிந்துநேர் காண வல்லார். **#860**

`வானில் நிலவும் முப்புரங்களும் எரியுண்ண, நான்மறைகளாய தேர்மீது இவர்ந்து, மேருமலை என்னும் வில்லை வளையுமாறு செய்த சிவபெருமானின் செப்பமாய நிலையை நாம் காணும்படி செய்தீர்! திருமால் பன்றி வடிவு கொண்டு மண்ணை ஊடுருவிச் சென்று தேடியும் காணமுடியாத பெருமானின் மலரனைய திருவடிகள் இரண்டையும், பண்புடைய அடியவர் அல்லாது உளம் மகிழ்ந்து நேர்காண வல்லவர் யாவர்? (ஒருவராலும் காணமுடியாது).`

விளக்கவுரை

****

என்றுமெய்த் தொண்டர் தம்மை
ஏத்தியங் கெம்பி ரானுக்
கொன்றிய பணிகள் மற்றும்
உள்ளன பலவும் செய்து
நின்றவெண் கவிகை மன்னன்
நீங்கவும் நிகரில் அன்பர்

மன்றிடை யாடல் செய்யும்
மலர்க்கழல் வாழ்த்தி வைகி. **#861**
என்று உண்மைநெறி நின்ற தொண்டராய குங்குலியக் கலயனாரை அரசன் போற்றி, அங்குப் பெருமானுக்குப் பொருந்திய அன்பால், நீடிய பெரும் பணிகள் பலவற்றையும் செய்து, பின்பு, வெண்கொற்றக் குடையுடைய அரசன் அவ்விடம் விடுத்து நீங்கவும், ஒப்பற்ற அன்பராகிய குங்குலியக் கலயநாயனார் திருவம்பலத்தில் ஆடல் செய்கின்ற தாமரைமலர் போன்ற திருவடி களை வாழ்த்தி அங்குத் தங்கியிருந்து.
சிலபகல் கழிந்த பின்பு
திருக்கட வூரில் நண்ணி
நிலவுதம் பணியில் தங்கி
நிகழுநாள் நிகரில் காழித்
தலைவராம் பிள்ளை யாரும்
தாண்டகச் சதுர ராகும்
அலர்புகழ் அரசும் கூட
அங்கெழுந் தருளக் கண்டு. **#862**
சில நாள்கள் கழிந்த பின்பு, திருக்கடவூருக்கு மீண்டும் வந்து, என்றும் நிலவிய தமது பணியான குங்குலியத்தூபம் இடுவதைப் பெருமான் திருமுன்னிலையில் சாலவும் நிறைந்து பெருகச் செய்து வருகின்ற நாள்களில், ஒப்பற்ற சீர்காழிப் பதியின் தலைவராய திருஞானசம்பந்தரும் திருத்தாண்டகம் பாடுவதில் பேராற்றல் படைத்த பெரும்புகழுடைய திருநாவுக்கரசரும் ஒருங்கு எழுந்தருளக் கண்டு.
மாறிலா மகிழ்ச்சி பொங்க
எதிர்கொண்டு மனையில் எய்தி
ஈறிலா அன்பின் மிக்கார்க்
கின்னமு தேற்கும் ஆற்றால்
ஆறுநற் சுவைகள் ஓங்க
அமைத்தவர் அருளே அன்றி
நாறுபூங் கொன்றை வேணி
நம்பர்தம் அருளும் பெற்றார். **#863**
ஒப்பற்ற மகிழ்ச்சி பொங்கிட, அவ்விரு பெருமக்களையும் எதிர்கொண்டு, தம்மனைக்கு அழைத்துச் சென்று, ஈறில்லாத அன்பின் மிகுந்த அவ்விருவர்க்கும், அவருடன் அங்குப் போந்த அடியவர்க்கும் இனிய அமுது ஏற்கும்படியாக அறுசுவை மிக்க அமுதூட்டி, அத்தகைய பேற்றால் அவ்விருவரது அருளே அல்லாமல், மணம் கமழும் கொன்றைமலரைச் சூடிய சடையையுடைய சிவ பெருமானுடைய

அருளையும் பெற்றார்.

விளக்கவுரை

இவ் ஆறு பாடல்களும் ஒருமுடிபின.

கருப்புவில் லோனைக் கூற்றைக்
காய்ந்தவர் கடவூர் மன்னி
விருப்புறும் அன்பு மேன்மேல்
மிக்கெழும் வேட்கை கூர
ஒருப்படும் உள்ளத் தன்மை
உண்மையால் தமக்கு நேர்ந்த
திருப்பணி பலவும் செய்து
சிவபத நிழலில் சேர்ந்தார். **#864**

கரும்பை வில்லாக உடைய மன்மதனையும் இயமனையும் ஒறுத்த பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கடவூரில் வாழ்ந்து வந்த கலயனார், மிக்கெழுகின்ற காதல் கூர்ந்திட ஒருமைப் பாடுற்ற நிலையில், தமக்குப் பொருந்துவதாய திருப்பணிகள் பலவுஞ் செய்து, சிவபெருமானின் திருவடி நீழலில் சேர்ந்தருளினார்.

தேனக்க கோதை மாதர்
திருநெடுந் தாலி மாறிக்
கூனல்தண் பிறையி னார்க்குக்
குங்குலி யங்கொண் டுய்த்த
பான்மைத்திண் கலய னாரைப்
பணிந்தவர் அருளி னாலே
மானக்கஞ் சாறர் மிக்க
வண்புகழ் வழுத்த லுற்றேன். **#865**

தேன்சொரியும் மலர்மாலையணிந்த தம் மனைவியாரது திருவுடைய நெடுந் தாலியைக் கொடுத்தும், வளைந்து குளிர்ந்த இளம் பிறையைச் சூடிய சிவபெருமானுக்குப் பொருந்திய குங்குலியம் இடுதலைத் தவறாது செய்து வந்த உறைப்புடைய குங்கு லியக் கலயனாரைப் பணிந்து, அவர்தம் அருளினாலே, மானக் கஞ்சாற நாயனாருடைய வண்மை நிறைந்த திருத்தொண்டினை இனி எடுத்துப் போற்றத் தொடங்குகின்றேன்.

மானக்கஞ்சாற நாயனர் புராணம்

மேலாறு செஞ்சடைமேல்
வைத்தவர்தாம் விரும்பியது
நூலாறு நன்குணர்வோர்
தாம்பாடும் நோன்மையது
கோலாறு தேன்பொழியக்
கொழுங்கனியின் சாறொழுகும்
காலாறு வயற்கரும்பின்
கமழ்சாறூர் கஞ்சாறூர். **#866**

மேன்மை பொருந்திய கங்கை ஆற்றினைச் செஞ் சடைமேல் வைத்த பெருமான், தான் என்றும் விரும்பி எழுந்தருளி இருப்பதும், நூல்களைக் கற்று அதன்வழி ஒழுகும் நன்குணர்ந்தோராய புலவர்கள், தாங்கள் அன்பினால் சிறப்பித்துப் பாடும் சிறப்பினை உடையதுமாயதொருநகரம், மரக் கொம்பரில் கட்டிய தேன்கூடுகள் தேனை முறையாகப் பொழிந்திடக், கொழுத்த பழங்களின் சாறுகளும் ஒழுகி, ஒன்றாய்ச் சேர்ந்து, வாய்க்கால் வழி ஓடி, வயல் புகுந்து, அங்குள்ள கரும்பின் சாற்றொடு கலந்திடத் தேன் சுவையும் பழச்சுவையும் உடன் கலந்து மணம் நிறைந்து விளங்குவது கஞ்சாறூர் என்பதாகும்.

விளக்கவுரை

நோன்மையது - சிறப்பினையுடையது. கோல் - மரக்கிளை. கஞ்சாறூர் - இது பொழுது ஆனதாண்டவபுரம் என வழங்கி வருகிறது. இது ஆனந்த தாண்டவபுரம் என்பதன் மரூஉவாகும். மயிலாடுதுறைக்குக் கிழக்கே அமைந்துள்ளது.

கண்ணீலக் கடைசியர்கள்
கடுங்களையிற் பிழைத்தொதுங்கி
உண்ணீர்மைப் புணர்ச்சிக்கண்
உறைத்துமலர்க் கண்சிவக்கும்
தண்ணீர்மென் கழுநீர்க்குத்
தடஞ்சாலி தலைவணங்கும்
மண்ணீர்மை நலஞ்சிறந்த
வளவயல்கள் உளஅயல்கள். **#867**

நீல மலர்போலும் கண்ணழகுடைய பெண்கள் களை எடுக்கும்பொழுது தப்பி ஒதுங்கி, புணர்ச்சி வயத்தால் சிவந் துள்ள கண்போலச் சிவந்து நிற்கும். செங்கழுநீர் மலரை, பெருத்த செஞ்சாலியின் நெற்கதிர்கள் தலைசாய்த்து வணங்கி நிற்கும். அத்தகைய மண்வளம் நிறைந்த

வயல்கள், கஞ்சாறூரின் குடிமனைகள் நீங்கிய அயல் இடங்களில் எங்கும் உள்ளன.

விளக்கவுரை

கடைசியர் - மருத நிலத்துப் பெண்கள். நீலமலர்கள் இயல் பிலேயே சிவந்து இருப்பினும் மண் வளத்தாலும் நீர்வளத்தாலும் மேலும் சிவப்புற்றுள்ளன. கதிர் முற்றிய நெற்பயிர் சாய்தல் இயற்கை எனி னும் அவை நீலமலர்களை வணங்கின எனக் கூறல் தற்குறிப்பேற்றமாம்.

புயல்காட்டுங் கூந்தல்சிறு
புறங்காட்டப் புனமயிலின்
இயல்காட்டி இடைஒதுங்க
இனங்காட்டும் உழத்தியர்கண்
முயல்காட்டும் மதிதோற்கும்
முகங்காட்டக் கண்மூரிக்
கயல்காட்டுந் தடங்கள்பல
கதிர்காட்டுந் தடம்பணைகள். **#868**

மேகம் என வளர்ந்த கருங்கூந்தலைக் கடைசி யர்களின் பின்முதுகு காட்ட, கானில் உள்ள மயிலின் இயல்பினை அவர்களின் இடைகாட்ட, வயலில் காணும் பெண்கள், முயற்கறையை யுடைய நிறைநிலவின் அழகைத் தோற்கச் செய்யும் முகங்களைக் காட்ட, கொழுத்த கயல்மீன்கள் அவர்களின் கண்களைக் காட்டும் குளங்கள் பலவாக இடையிடையே அமைய, நெற்கதிர்களை நீளக் காட்டவல்ல வயல் நிலங்கள் பல கஞ்சாறூரில் உள்ளன.

விளக்கவுரை

காட்ட எனும் சொல் பன்முறையும் வந்து சொல்லழகு பெற நின்றது.

சேறணிதண் பழனவயல்
செழுநெல்லின் கொழுங்கதிர்போய்
வேறருகு மிடைவேலிப்
பைங்கமுகின் மிடறுரிஞ்சி
மாறெழுதிண் குலைவளைப்ப
வண்டலைதண் டலையுழவர்
தாறரியும் நெடுங்கொடுவாள்
அனையவுள தனியிடங்கள். **#869**

சேற்றினையுடைய குளிர்ந்த அழகிய வயலி னின்றும் எழுந்த நெல்லின் செழுமையான கதிர் நீண்டு சென்று, அதன் அயலே வேலியாக உள்ள பசிய கமுக மரத்தின் கழுத்து வரை உராய்ந்து வளைந்து, தனக்கு மாறாக எழுந்த திண்ணிய கமுகம் குலையை வளைத்திருப்பவை, வண்டுகள்

சூழ்ந்த சோலையில் வாழும் உழவர்கள், நெல்லின் தாளை அறுத்தற்கென வைத்திருக்கும் வளைந்த அரிவாளை ஒத்திருப்பனவாகும். இனைய பல இடங்கள் ஆங்காங் குள்ளன.

விளக்கவுரை

உரிஞ்சி - உராய்ந்து. நெற்பயிர்கள் கமுக மரத்தை வளைத்து நிற்கும் தோற்றம் அரிவாளை ஒத்துள்ளது என்றது, வடிவு பற்றிய உவமையாம்.

பாங்குமணிப் பலவெயிலும்
சுலவெயிலும் உளமாடம்
ஞாங்கரணி துகிற்கொடியும்
நகிற்கொடியும் உளவரங்கம்
ஓங்குநிலைத் தோரணமும்
பூரணகும் பமும்உளவால்
பூங்கணைவீ தியில்அணைவோர்
புலமறுகுஞ் சிலமறுகு. **#870**

அருகிலுள்ள மாடங்கள், மணிகளின் ஒளியுடை யனவாயும், சூழ்ந்துள்ள மதில்களையுடையனவாயும் உள்ளன. அவற்றின் அருகிருக்கும் ஆடரங்குகள், துகிலால் ஆகிய கொடி களையும், அழகிய மார்பகங்களையுடைய பூங்கொடிகளையும் (பெண்களையும்) உடையனவாயுள்ளன. மன்மதனின் மலர்க் கணைகள், சிறந்து விளங்கும் மாட வீதியின் வழியாகச் செல்வோரின் புலன்களைத் தம் காட்சியானும் மாட்சியானும் மயங்க வைக்கும் வீதிகளில், மேலோங்கிய தோரணமுகப்புகளும், நிறை குடங்களும் உள்ளன.

விளக்கவுரை

சுலவு எயில் - சூழவுள்ள மதில்கள். நகில்கொடி - மார்பகங்களையுடைய கொடிகள் (பெண்கள்). ஏகதேச உருவகம். பூங்கணை - மன்மதனின் மலர்க்கணைகள்.

மனைசாலும் நிலையறத்தின்
வழிவந்த வளம்பெருகும்
வினைசாலும் உழவுதொழில்
மிக்கபெருங் குடிதுவன்றிப்
புனைசாயல் மயிலனையார்
நடம்புரியப் புகல்முழவங்
கனைசாறு மிடைவீதிக்
கஞ்சாறு விளங்கியதால். **#871**

நிறைவான மனையறத்தை வழிவழியாக ஏற்று வளம் பெருக வாழும் உழவர்கள் தழைத்து ஓங்கி வாழ்ந்திருப்பதும், அழகு பொருந்திய

சாயலையுடைய பெண்கள் நடம் செய்ய, அதற்கு இசைய முழங்கும் முழவின் மிகு ஓசை பரந்திருக்கும் வீதிகளை யுடையதும் ஆனது கஞ்சாறூர் எனும் பதியாம்.

விளக்கவுரை

ஆல் - அசை.

அப்பதியிற் குலப்பதியாய்
அரசர்சே னாபதியாம்
செப்பவருங் குடிவிளங்கத்
திருஅவதா ரஞ்செய்தார்
மெய்ப்பொருளை அறிந்துணர்ந்தார்
விழுமியவே ளாண்குடிமை
வைப்பனைய மேன்மையினார்
மானக்கஞ் சாறனார். **#872**

அத்தகைய கஞ்சாறூர் எனும் பதியில், வேளாண் குலத்தலைவராயும், அரசனுடைய தானைத் தலைவராய் விளங்கு தற்கு என்றும் வழிவழி உரிமையுடையவராயும் உள்ளார் ஒருவர் தோன்றினார். அவர் இவ்வுலகில் உண்மைப் பொருள் எது என்பதை அறிந்து உணர்ந்தவர். மிகவும் விழுமிய வேளாண் குடிக்குச் சேம வைப்பாக விளங்குபவர். அவர் மானக்கஞ்சாறனார் எனும் பெயரினர்.

விளக்கவுரை

****

பணிவுடைய வடிவுடையார்
பணியினொடும் பனிமதியின்
அணிவுடைய சடைமுடியார்க்
காளாகும் பதம்பெற்ற
தணிவில்பெரும் பேறுடையார்
தம்பெருமான் கழல்சார்ந்த
துணிவுடைய தொண்டர்க்கே
ஏவல்செயுந் தொழில்பூண்டார். **#873**

அவர், தாழ்வெனும் தன்மையோடு வாழ்தலை வெளிப்படுத்தும் வடிவு உடையவர். பாம்பினொடு குளிர்ந்த இளம் பிறையை அணிந்த சடையுடைய பெருமானுக்கு முழுமையாக அடிமையாகும் பேறுபெற்று, அப்பேற்றில் என்றும் குன்றாது நிற்கும் திறத்தினர். தம் பெருமானின் திருவடிகளைச் சார்ந்து நிற்கும் துணிவுடைய தொண்டர்கட்கே ஏவல் செய்யும் தொழிலை மேற் கொண்டவர்.

விளக்கவுரை

****

மாறில்பெருஞ் செல்வத்தின்
வளம்பெருக மற்றதெலாம்
ஆறுலவுஞ் சடைக்கற்றை
அந்தணர்தம் அடியாராம்
ஈறில்பெருந் திருவுடையார்
உடையாரென் றியாவையுநேர்
கூறுவதன் முன்னவர்தம்
குறிப்பறிந்து கொடுத்துள்ளார். **#874**

ஒப்பற்ற பெருஞ் செல்வத்தின் வரும் வளங்கள் யாவும் பெருகிவர, அப்பொருள்கள் எல்லாவற்றையும், கங்கை நிலவிய சடையையுடைய அறவாழி அந்தணனாம் சிவபெருமானின் அடியவராக விளங்கும் முடிவிலாத பெருந்திரு உடையவர்களே, தம்மை அடிமைகொள்ளுதற்குரியராவர் என்று கருதி, அவ்வடிய வர்கள் நேராக எதனையும் வேண்டும் முன்பே, அவர்களின் குறிப் பறிந்து கொடுத்து வரும் பாங்கினர்.

விளக்கவுரை

****

விரிகடல்சூழ் மண்ணுலகில்
விளக்கியஇத் தன்மையராம்
பெரியவர்க்கு முன்சிலநாள்
பிள்ளைப்பே றின்மையினால்
அரியறியா மலர்க்கழல்கள்
அறியாமை யறியாதார்
வருமகவு பெறற்பொருட்டு
மனத்தருளால் வழுத்தினார். **#875**

விரிந்த கடல் சூழ்ந்த இம்மண்ணுலகில் விளங்கிய இத்தன்மை உடையராய மானக்கஞ்சாறர், வாழ்நாளில் முன் சில நாள்களாகப் பிள்ளைப்பேறு இல்லாமையால், திருமாலும் அறிய இயலாத பெருமானுடைய மலரடிகளைத் தான் அறியாமல் இருத்தலை அறியாராய தமக்கு, ஒரு குழந்தை வேண்டும் எனத் தம் மனத்தில் பெருமானை வழுத்தினார்.

விளக்கவுரை

அறியாமை அறியாதார் எனவே என்றும் அறிந்தவராய் வாழ்ந்தார் என்பதாம்.

குழைக்கலையும் வடிகாதில்

கூத்தனார் அருளாலே
மழைக்குதவும் பெருங்கற்பின்
மனைக்கிழத்தி யார்தம்பால்
இழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த
இப்பிறவிக் கொடுஞ்சூழல்
பிழைக்குநெறி தமக்குதவப்
பெண்கொடியைப் பெற்றெடுத்தார். **#876**

குழையை ஏற்று அசைகின்ற அழகிய காது களையுடைய கூத்தப் பெருமானின் திருவருளால், மழை வேண்டும் பொழுது, அதனை உடன் உதவுதற்குரிய பெருங் கற்பினையுடைய தம் மனைவியார் திருவயிற்றில், ஒழிவின்றிப் பெருகிவரும் வினைப் பயன்களால் வரும் பிறவி என்னும் கொடிய சுழற்சியினின்றும் தப்பிப் பிழைக்கின்ற நல்நெறியினைத் தமக்கு உதவ வல்லதொரு பூங்கொடி போலும் சாயலுடைய பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார்.

விளக்கவுரை

குழைக்கு அலையும் - குழைகளால் அசைகின்ற. வடிகாது-வளைந்தகாது. பிழைக்கு நெறி - உயிர் இப்பிறவியினின்றும் பிழைத்தற்குரிய நெறி*:* வீட்டு நெறி. இதனால் ஆண்மகவினாலன்றி வீடுபேறு எய்தலரிது எனும் கருத்து மறுக்கப்பட்டமை அறியலாம். `மழைக்குதவு பெருங்கற்பு` எனும் தொடர், `பெய்யெனப் பெய்யும் மழை` *(குறள் 55)* எனவரும் திருக்குறட் கருத்தை உட்கொண்டதாம். `கருமழை தரவேண்டில் தருகிற்கும் பெருமையளே`*(கலித்.குறிஞ்.3)* `வான்தரு கற்பின்`*(மணிமேகலை சிறைசெய்-53)* எனப் பிறாண்டும் இவ்வுண்மை கூறப்படுதல் காணலாம். இவற்றிற்கெல்லாம் மாறாக இத்திருக்குறட்கு இக்காலத்தார் பிறவாறெல்லாம் உரை விரிப்பர். அஃது ஆசிரியர் திருவள்ளுவர் கருத்திற்கு மாறானதாம்.

பிறந்தபெரு மகிழ்ச்சியினால்
பெருமூதூர் களிசிறப்பச்
சிறந்தநிறை மங்கலதூ
ரியம்முழங்கத் தேவர்பிரான்
அறந்தலைநின் றவர்க்கெல்லாம்
அளவில்வளத் தருள்பெருக்கிப்
புறந்தருவார் போற்றிசைப்பப்
பொற்கொடியை வளர்க்கின்றார். **#877**

தமக்கொரு பெண் குழந்தை பிறந்த பெரு மகிழ்ச்சி யினால், பெரிய அம் முதிய ஊராய கஞ்சாறூர் மக்கள் களிப்புடன் சிறக்க, சிறப்புடன் நிறைகின்ற மங்கல இயங்கள் முழங்கிட,தேவர் தலைவனாய

பெருமானின் தலையாய தொண்டினில் நின்ற அடியவர் களுக்கெல்லாம் அளவில்லாத கொடைகளை அருள் சிறக்கக் கொடுத்து, அக்குழந்தையைப் போற்றிப் பாதுகாத்து வரும் தாதியர் வாழ்த்தெடுப்பப், பொன்னின் கொடி போன்ற அக்குழந்தையை வளர்த்து வருவாராயினர்.

விளக்கவுரை

****

காப்பணியும் இளங்குழவிப்
பதம்நீங்கிக் கமழ்சுரும்பின்
பூப்பயிலும் சுருட்குழலும்
பொலங்குழையும் உடன்தாழ
யாப்புறுமென் சிறுமணிமே
கலையணிசிற் றாடையுடன்
கோப்பமைகிண் கிணியசையக்
குறுந்தளிர்மெல் லடியொதுங்கி. **#878**

காப்பு அணிதற்குரிய இளம் பருவத்தைக் கடந்து, நறுமணம்மிக்க வண்டுகள் மொய்த்திடும் பூக்களை முடிக்கும் சுருண்ட கூந்தலும், அழகிய பொன்னின் தோடும் உடன் தாழ்ந்து விளங்கிட, மெல்லிய சதங்கைகள் கட்டிய சிறிய மேகலை அணிந்த சிற்றாடை யுடன் கோக்கப்பட்ட மணிகளையுடைய கிண்கிணிகள் அசைந்திட, குறுகிய தளிர்போலும் மென்மையான அடிகளால் ஒதுங்கி நடந்து.

விளக்கவுரை

காப்பு குழந்தைக்குப் பிணி முதலியன வராதவாறு காத்தற்கு இறைவனை வேண்டுதல். குழந்தை பிறந்த இரண்டாந் திங்களில் இவ்வேண்டுதற்காகச் செய்தல் மரபு என்பர்.
பிள்ளைத் தமிழில் காப்புப் பருவம் என வருவதும் இம்மரபுப் பற்றியேயாம்.

புனைமலர்மென் கரங்களினால்
போற்றியதா தியர்நடுவண்
மனையகத்து மணிமுன்றில்
மணற்சிற்றில் இழைத்துமணிக்
கனைகுரல்நூ புரம்அலையக்
கழல்முதலாப் பயின்றுமுலை
நனைமுகஞ்செய் முதற்பருவம்
நண்ணினள்அப் பெண்ணமுதம். **#879**

அமுதனைய அப்பெண், செங்காந்தள் மலர் போலும் அழகிய

மென்மையான கைகளினால் பாதுகாத்து வளர்த்து வரும் தாதியர் நடுவுள், மனையகத்திருக்கும் மணி பதித்த முற்றத்தில், சிறு சோறாக்கிச், சிறுவீடு கட்டி விளையாடியும், ஒலித்திடும் சிலம் புகள் இசைத்தலைந்திடக் கழங்காடல் முதலிய ஆடல்களைப் பயின் றும், முலைகள் அரும்பெனத் தோன்றும் பெதும்பைப் பருவத்தினை அடைந்தாள்.

விளக்கவுரை

நனை - அரும்பு. முதல் - முதன்மையான. பெண்மை தோன்றற்கு முதன்மையான பருவம் பெதும்பைப் பருவம் ஆதலின் இதனை `முதற் பருவம்` என்றார். `நனைமுகஞ்செய் முதற்பருவம்` என்ற பின், இது பேதைப் பருவமாகாமை அறிக. இவ்விரு பாடல் களும் ஒரு முடிபின.

உறுகவின்மெய்ப் புறம்பொலிய
ஒளிநுசுப்பை முலைவருத்த
முறுவல்புறம் அலராத
முகிண்முத்த நகையென்னும்
நறுமுகைமென் கொடிமருங்குல்
நளிர்ச்சுருள்அம் தளிர்ச்செங்கை
மறுவில்குலக் கொழுந்தினுக்கு
மணப்பருவம் வந்தணைய. **#880**

பொருந்திய அழகு, புற உடம்பில் மலர்ந்து பொலிந்திட வளர்ந்து, ஒளியுடைய இடையை மார்பகங்கள் பளுவாகி வருத்திட, எப்பொழுதும் முறுவல் புறத்துத் தெரியாதவகை முத்துப் போல் முகிழ்த்த பற்கள், முல்லை அரும்பு மலர்வது போல் புன்முறுவல் செய்திட, பூங்கொடி போலும் இடையினையும் அழகிய கருங்கூந்தலை யும் மாந்தளிரின் வனப்புடைய செங்கையையும் உடையவளாய், வளர்ந்து வரும் மறுவிலாத அக்குலக் கொழுந்தாய அப்பெண்ணிற்குத் திருமணம் புரியும் பருவம் வந்து அணைந்திடலும்.

விளக்கவுரை

****

திருமகட்கு மேல்விளங்குஞ்
செம்மணியின் தீபமெனும்
ஒருமகளை மண்ணுலகில்
ஓங்குகுல மரபினராய்க்
கருமிடற்று மறையவனார்
தமராய கழல்ஏயர்
பெருமகற்கு மகட்பேச

வந்தணைந்தார் பெருமுதியோர். **#881**
திருமகளுக்கு மேலாக விளங்குகின்ற செவ்விய மணிவிளக்கின் ஒளி எனும்படியாய அரும்பேறுடைய அந்த ஒரு மகளாரை இம்மண்ணுலகில் மேலோங்கிய வேளாண் குலத்தில் தோன்றிய நன்மரபினராய், கரிய கழுத்தினையுடைய இறைவற்கு ஆளாய அடியவராய் உள்ள வீரக்கழல் அணிந்த ஏயர்கோன் கலிக் காம நாயனாருக்கு மணம் பேசும் பொருட்டாகப் பெருமுதியோர்கள் அங்கு வந்தார்கள்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வந்தமூ தறிவோரை
மானக்கஞ் சாறனார்
முந்தைமுறை மையின்விரும்பி
மொழிந்தமணத் திறங்கேட்டே
எந்தமது மரபினுக்குத்
தகும்பரிசால் ஏயுமெனச்
சிந்தைமகிழ் வுறஉரைத்து
மணநேர்ந்து செலவிட்டார். **#882**

இவ்வாறு மணம் பேசுதற்கென வந்த முதிய பெரியோரை, மானக்கஞ்சாற நாயனார், முன்னின்றவர்கள் பேணி வரும் அன்பின் முறைமையால் விரும்பி, அவர்கள் சொல்லிய மணத்தின் வரலாற்றைக் கேட்டு, இம் மண நிகழ்வு எங்களுடைய மரபிற்கு ஏற்ற முறையினால் பொருந்துவதாகின்றது என்று தமது மனம் மகிழ்வுறக் கூறித் திருமணத்திற்கு இசைவு கொடுத்து, அப்பெரியோரை வழியனுப்பினர்.

விளக்கவுரை

****

சென்றவருங் கஞ்சாறர்
மணமிசைந்த படிசெப்பக்
குன்றனைய புயத்தேயர்
கோனாரும் மிகவிரும்பி
நின்றநிலை மையினிரண்டு
திறத்தார்க்கும் நேர்வாய
மன்றல்வினை மங்கலநாள்
மதிநூல்வல் லவர்வகுத்தார். **#883**

மீண்டுசென்ற அவர்களும், ஏயர்கோன் கலிக்காமனாரிடம் சென்று, மானக்கஞ்சாறர் திருமணத்திற்கு இசைவு கொண்டமையைக் கூற, மலைபோன்ற வலிய தோள்களையுடைய ஏயர்கோன் கலிக்காமரும்

மிகவும் விரும்பி நின்ற நிலைமையில், இருதிறத்தார்க்கும் ஏற்பதொரு திருமண நாளை மிக்க மதிநுட்ப முடைய வல்லுநர்கள் வகுத்தார்கள்.

விளக்கவுரை

****

மங்கலமாம் செயல்விரும்பி
மகட்பயந்த வள்ளலார்
தங்குலநீள் சுற்றமெலாம்
தயங்குபெருங் களிசிறப்பப்
பொங்கியவெண் முளைப்பெய்து
பொலங்கலங்கள் இடைநெருங்கக்
கொங்கலர்தண் பொழில்மூதூர்
வதுவைமுகங் கோடித்தார். **#884**

மங்கலம் நிறைந்த அத்திருமணச் செயலை விரும்பிப் பெண்ணைப் பெற்ற வள்ளலாராகிய மானக்கஞ்சாறர், தம் குலத்திலுள்ள சுற்றத்தவர் எல்லோரும் பெருமகிழ்ச்சி எய்த, பொங்கிய வெண்முளையாய பாலிகை இட்டு வைத்த அழகிய பொற்பாத்திரங்கள் எங்கும் இடை இடை நெருங்கிட, நறுமணம் மிகுந்த மலர்தரும் குளிர்ந்த சோலையினை உடைய அம்முதிய ஊராகும் கஞ்சாறூரைத் திருமணப்பொலிவிற்கு ஏற்ப அழகு செய்தார்.

விளக்கவுரை

வதுவைமுகம் கோடித்தல் - மனையகத்தில் திருமணம் நிகழ்வதற்கேற்ப, முன்புறத்திருக்கும் முகப்பை அணிசெய்து, மண மனையாகப் பார்வை பெறச் செய்தல்.

கஞ்சாறர் மகட்கொடுப்பக்
கைப்பிடிக்க வருகின்ற
எஞ்சாத புகழ்ப்பெருமை
ஏயர்குலப் பெருமானும்
தஞ்சால்பு நிறைசுற்றந்
தலைநிறைய முரசியம்ப
மஞ்சாலும் மலர்ச்சோலைக்
கஞ்சாற்றின் மருங்கணைய. **#885**

மானக் கஞ்சாறர் தம் மகளாரை மகட் கொடையாகக் கொடுப்ப, அப்பெண்மகளைக் கைப்பிடிக்க வருகின்ற குறைவிலாத புகழையும், பெருமையையும் உடைய ஏயர்குலத்தி னராய கலிக்காமரும், அவர்தம் சால்பு நிறைந்த சுற்றத்தார் அனை வரும் திரண்டுவர, இன்னியங்கள் முழங்கிட, மேகங்கள் வந்து உறையும் மலர்ச்சோலையையுடைய

கஞ்சாறூரின் அருகில்வர.

விளக்கவுரை

****

வள்ளலார் மணமவ்வூர்
மருங்கணையா முன்மலர்க்கண்
ஒள்ளிழையைப் பயந்தார்தம்
திருமனையில் ஒருவழியே
தெள்ளுதிரை நீருலகம்
உய்வதற்கு மற்றவர்தம்
உள்ளநிலைப் பொருளாய
உம்பர்பிரான் தாமணைவார். **#886**

வள்ளலாராய ஏயர்கோன் கலிக்காமனாரின் திருமண எழுச்சி கஞ்சாறூரின் அருகில் வந்தணைவதற்கு முன்பாக, பெண்ணினைப் பெற்ற மானக்கஞ்சாறனாரின் திருமனையிடத்துப் பிறிதொரு வழியாக, தெள்ளிய திரையுடைய கடல்சூழ்ந்த இவ்வுலகம் உய்வதற்காக, மானக்கஞ்சாற நாயனாரின் உள்ளத்து நிலையாய பொருளாக விளங்கும் சிவபெருமான் அங்கு வருவாராய்.

விளக்கவுரை

மணம் காணவரும் மக்கள் வரும் வழியில் அன்றிப் பிறி தொரு வழியாக வந்தார் என்பார். `ஒருவழியே` என்றார். பொறிகள் தத்தம் புலன்வழிச் செல்லாது சிவமாம் தன்மைப் பெருவாழ்வு பெறும் ஒருவழியே வந்தார் என்பார், `ஒருவழியே` என்றார் என்றலும் ஒன்று.

முண்டநிறை நெற்றியின்மேல்
முண்டித்த திருமுடியில்
கொண்டசிகை முச்சியின்கண்
கோத்தணிந்த எற்புமணி
பண்டொருவன் உடலங்கம்
பரித்தநாள் அதுகடைந்த
வெண்தரளம் எனக்காதின்
மிசையசையுங் குண்டலமும். **#887**

மூன்று கீற்றாகத் திருநீற்றை அணிந்த நெற்றி யின்மேல், மழித்த திருமுடியில், ஓரிடம் மட்டும் உள்ள மயிரை எடுத்து உச்சி மீது கட்டிய குடுமியில் கோத்தணிந்த எலும்பின் மணியும், முன்பு ஒரு காலத்துத் திருமாலின் எற்புக் கூட்டினைத் தாங்கிய பொழுது, அவ் வெலும்புக் கூட்டைக் கடைந்து எடுத்த வெண்முத்துக்கள் என விளங்கும் திருக்காதில் அணிந்து அசைகின்ற குண்டலங்களும்,

விளக்கவுரை

முண்டித்த - மழித்த. வெண்தரளம் என அசையும் குண்டலமும் எனக் கூட்டுக. பரித்த - தாங்கிய. முச்சி - நுனி, குடுமியின் நுனி.

அவ்வென்பின் ஒளிமணிகோத்
தணிந்ததிருத் தாழ்வடமும்
பைவன்பேர் அரவொழியத்
தோளிலிடும் பட்டிகையும்
மைவந்த நிறக்கேச
வடப்பூணு நூலும்மனச்
செவ்வன்பர் பவமாற்றுந்
திருநீற்றுப் பொக்கணமும். **#888**

அத்திருமாலின் எலும்பில் கடைந்தெடுத்த ஒளியையுடைய மணிகளைக் கோத்து அணிந்த திருவுடைய நீண்ட பெருமாலையும், நச்சுப்பையையுடைய கொடிய நாகத்தை நீக்கிய திருத்தோளில் அணிந்த யோகப்பட்டையும், மைபோலும் கருநிறம் வாய்ந்த அழகிய மயிர்க் கயிறாய பூணூலும், செவ்விய மணமுடைய அன்பர்களது பாவங்களை மாற்றுகின்ற திருநீற்றுப்பையும்,

விளக்கவுரை

பை - நச்சுப்பை. வன் - வலிய. மை வந்த நிறம் - கரிய நிறம். திருநீற்றுப் பொக்கணம் - திருநீற்றுப்பை.

ஒருமுன்கைத் தனிமணிகோத்
தணிந்தவொளிர் சூத்திரமும்
அருமறைநூற் கோவணத்தின்
மிசையசையும் திருவுடையும்
இருநிலத்தின் மிசைதோய்ந்த
எழுதரிய திருவடியும்
திருவடியில் திருப்பஞ்ச
முத்திரையுந் திகழ்ந்திலங்க. **#889**

ஒருகையின் முன்கையில், தனியாய ஓர் எலும்பு மணியைக் கோத்து அணிந்து ஒளிர்கின்ற காப்பும், அரிய மறைகளாய கோவண ஆடையின் மேல் அசைகின்ற திருவுடையும், இந்நிலவுலகில் தோயும்படி நடந்தருளிவரும் எழுதரிய திருவடியும், திருமேனியில் திகழ்ந்து விளங்கும் திருவுடைய ஐங்குறிகளும் (பஞ்சமுத்திரைகளும்) மிக விளங்க,

விளக்கவுரை

சூத்திரம் - எலும்பு கோக்கப்பட்ட கயிறு; காப்பு. ஐங்குறிகள்: தாமரை,

சங்கு, மீன், சக்கரம், தண்டம் என்பன. இவை ஞானியர்களின் திருமேனியில் வரைக் கீற்றுகளாக அமைந்திருக்கும் என்பர். இனித் தண்டு, வாள், சங்கு, சக்கரம், வில் எனும் ஐங்கருவிகள் என்றும் உரைப்பர். இவை திருமேனியிலன்றி திருவடியிலேயே அமைந்திருக்கும் என்றும் கூறுப. இவ்வாறுரைப்பார் `திருவடியில்` எனப் பாடங்கொள்வர்.

பொடிமூடு தழலென்னத்
திருமேனி தனிற்பொலிந்த
படிநீடு திருநீற்றின்
பரப்பணிந்த பான்மையராய்க்
கொடிநீடு மறுகணைந்து
தம்முடைய குளிர்கமலத்
தடிநீடும் மனத்தன்பர்
தம்மனையி னகம்புகுந்தார். **#890**

சாம்பற்பொடியால் மூடப்பெற்ற நெருப்பைப் போல, திருநீற்றின் ஒளியமைந்த திருமேனியையுடையராய்க் கொடி கள் நெடுகிலும் நாட்டப் பெற்ற கஞ்சாறூர் வீதியினூடாக வந்து, தம்முடைய குளிர்ந்த தாமரை போலும் திருவடிகளையே நீளநினையும் மனமுடைய அன்பராம் மானக்கஞ்சாறரது திருமனையின் உள்ளே புகுந்தார்.

விளக்கவுரை

பொடி - சாம்பல். மேல் ஆறு பாடல்களும் ஒருமுடிபின.

வந்தணைந்த மாவிரத
முனிவரைக்கண் டெதிரெழுந்து
சிந்தைகளி கூர்ந்துமகிழ்
சிறந்தபெருந் தொண்டனார்
எந்தைபிரான் புரிதவத்தோர்
இவ்விடத்தே யெழுந்தருள
உய்ந்தொழிந்தேன் அடியேன்என்
றுருகியஅன் பொடுபணிந்தார். **#891**

இவ்வாறாய கோலத்துடன் வந்தணைந்த மாவிரத முனிவரைக் கண்டு, எதிர் எழுந்து, சிந்தை மலர்ந்து, களி கூர்ந்த சிறந்த பெருந் தொண்டராய மானக்கஞ்சாறனார், `எந்தையாம் பெருமானைப் பேணிடும் பெரும் முனிவர் ஒருவர் இவ்விடத்தே இன்று எழுந்தருளி வர அடியேன் உய்ந்து வாழ்ந்தேன்,` என்று உள்ளம் உருகிய அன்புடன் எம்பெருமானைப் பணிந்தார்.

விளக்கவுரை

****

நற்றவராம் பெருமானார்
நலமிகும்அன் பரைநோக்கி
உற்றசெயல் மங்கலமிங்
கொழுகுவதென் எனஅடியேன்
பெற்றதொரு பெண்கொடிதன்
வதுவையெனப் பெருந்தவரும்
மற்றுமக்குச் சோபனம்ஆ
குவதென்று வாய்மொழிந்தார். **#892**

நல்ல தவக்கோலத்துடன் வந்த பெருமானும், மிகு நலம் பெற்ற மானக்கஞ்சாறனாரைப் பார்த்து, `இங்கு நடைபெறும் மங்கலச் செயல்களுக்குக் காரணம் என்ன?` என வினவ, அவரும், `அடியேன் பெற்றதொரு பெண்கொடியின் திருமணம் இன்று நிகழ் கிறது` எனலும், அது கேட்ட மாவிரதியாரும், `உமக்கு மங்கலம் உண்டாகட்டும்,` என ஆசி வழங்கியருளினார்.

விளக்கவுரை

சோபனம் - மங்கலம்: நன்மை.

ஞானச்செய் தவரடிமேற்
பணிந்துமனை யகம்நண்ணி
மானக்கஞ் சாறனார்
மணக்கோலம் புனைந்திருந்த
தேனக்க மலர்க்கூந்தல்
திருமகளைக் கொண்டணைந்து
பானற்கந் தரமறைத்து
வருமவரைப் பணிவித்தார். **#893**

இவ்வாறு அருளிய ஞானச்சுடராய் விளங்கி யருளும் தவமுனிவரின் திருவடிகளில் வணங்கித், தம் மனையில் சென்று, அங்கு மணக் கோலத்துடன் இருக்கும் தேன் சொட்டும் மலர்மாலை சூடிய கூந்தலையுடைய திருவுடைய தம் மகளாரை அழைத்துக் கொண்டு அம்முனிவர் பெருமான் இடமாக வந்து, நீலகண்டத்தை மறைத்து வந்த மாவிரதியாராய பெருமானாரைப் பணிவித்தார்.

விளக்கவுரை

****

தஞ்சரணத் திடைப்பணிந்து
தாழ்ந்தெழுந்த மடக்கொடிதன்
மஞ்சுதழைத் தெனவளர்ந்த

மலர்க்கூந்தற் புறம்நோக்கி
அஞ்சலிமெய்த் தொண்டரைப்பார்த்
தணங்கிவள்தன் மயிர்நமக்குப்
பஞ்சவடிக் காமென்றார்
பரவஅடித் தலங்கொடுப்பார். **#894**

தம்மைப் பணிவார்க்குத் தம் திருவடிகளைக் கொடுத்து ஆட்கொள்ளும் பெருமான், தம் திருவடிகளைப் பணிந்து எழுந்த மடம் எனும் குணம் நிறைந்த பெண்ணின், மேகம் தளிர்த்துத் தழைத்தது என நீண்டு வளர்ந்த மலர் சூடிய கூந்தலின் புறத் தோற்றத்தைப் பார்த்து, பின்னர்த் தம்மை வணங்கியவாறு நிற்கும் மெய்த்தொண்டராய மானக்கஞ்சாறரை நோக்கி, `இப்பேரழகுடைய இவளது கூந்தல் நமக்குப் பூணூலாய வடத்தினுக்கு (பஞ்சவடிக்கு) உதவும்` என்றார், தம்மைப் பரவி வருவாருக்குத் தம் திருவடிப் பேற்றை வழங்கியருளும் தன்மையினராய பெருமான்.

விளக்கவுரை

பஞ்சவடம்: பஞ்ச - அகலமான; வடம் - கயிறு. மயிராய கயிற்றால் இயன்ற நீண்ட வடம். மாவிரதியர் இதனை அணியும் இயல்பினர். `சவந்தாங்கு மயானத்துச் சாம்ப லென்பு தலையோடு மயிர்க்கயிறு தரித்தான் தன்னை`*(தி.6 ப.50 பா.2)* எனவரும் அப்பர் திருவாக்கும் காண்க.

அருள்செய்த மொழிகேளா
அடற்சுரிகை தனையுருவிப்
பொருள்செய்தா மெனப்பெற்றேன்
எனக்கொண்டு பூங்கொடிதன்
இருள்செய்த கருங்கூந்தல்
அடியிலரிந் தெதிர்நின்ற
மருள்செய்த பிறப்பறுப்பார்
மலர்க்கரத்தி னிடைநீட்ட. **#895**

இவ்வாறு அவர் அருள் செய்ததைக் கேட்ட மானக் கஞ்சாறர், உடனே, வலிமைமிகுந்த தனது சுழல்வாளை உறையி னின்றும் உருவி எடுத்து, `நான் இன்று கிடைத்தற்கரிய பெரும் பொருள் பெற்றேன்`, எனும் நினைவு கொண்டு, பூங்கொடி போலும் தம் மகளா ரின் இருள் நிறைந்த கருங் கூந்தலைப் பிடரி அளவுடன் அடியில் அரிந்து, கையில் எடுத்துத் தமது எதிர்நின்ற மயக்கம் செய்திடும் பிறப்பினை அறுத்துச் சீர்மைபெற வைத்திடும் மாவிரதியாரின் மலர்க்கரத்தில் கொடுத்திட

விளக்கவுரை

****

வாங்குவார் போல்நின்ற
மறைப்பொருளாம் அவர்மறைந்து
பாங்கின்மலை வல்லியுடன்
பழையமழ விடையேறி
ஓங்கியவிண் மிசைவந்தார்
ஒளிவிசும்பின் நிலம்நெருங்கத்
தூங்கியபொன் மலர்மாரி
தொழும்பர்தொழு தெதிர்விழுந்தார். **#896**

அதனை வாங்குவார் போல்நின்ற மறையின் பொருளாய பெருமானார் மறைந்தருளி, தம் இடமருங்கில் பார்வதி அம்மையாருடன், மிகவும் பழமையாய ஆனேற்றில் ஓங்கிய வானத்தின்மீது எழுந்தருளி வந்தார். ஒளியுடைய வானமும், நிலமும் கற்பகமலர் மழை பொழிந்தது. தொண்டராய மானக்கஞ்சாறர் அத்திருவுருவைக் கண்குளிரக் கண்டு தொழுது நிலமுறப் பணிந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

விழுந்தெழுந்து மெய்ம்மறந்த
மெய்யன்பர் தமக்குமதிக்
கொழுந்தலைய விழுங்கங்கை
குதித்தசடைக் கூத்தனார்
எழும்பரிவு நம்பக்கல்
உனக்கிருந்த பரிசிந்தச்
செழும்புவனங் களிலேறச்
செய்தோமென் றருள்செய்தார். **#897**

வீழ்ந்து எழுந்து மெய்ம்மறந்து நிற்கும் மெய்த்தொண்டருக்கு, இளம்பிறை அச்சத்தால் அலைந்திட, வந்து வீழ்ந்திடும் கங்கையாறு பொங்கி நிற்கும் திருச்சடையையுடைய கூத்தனார், `உமக்கு எம்பால் எழுகின்ற அன்பின் பெருமையைச் செழித்து நிற்கும் உலகெங்கும் தெரிந்திடுமாறு செய்தோம்` என்று மொழிந்து அருள் செய்தார்.

விளக்கவுரை

****

மருங்குபெருங் கணநாதர்
போற்றிசைப்ப வானவர்கள்
நெருங்கவிடை மேல்கொண்டு
நின்றவர்முன் நின்றவர்தாம்

ஒருங்கியநெஞ் சொடுகரங்கள்
உச்சியின்மேற் குவித்தையர்
பெருங்கருணைத் திறம்போற்றும்
பெரும்பேறு நேர்பெற்றார். **#898**

அருகிருந்த கணநாதர்கள் போற்றி இசைத்திடவும், தேவர்கள் வணங்கி நெருங்கவும், ஆனேற்றின்மீது எழுந்தருளிய பெருமான்முன் நின்றவராய மானக்கஞ்சாறர் தாமும், ஒருநெறிய மனத்துடன் கைகளை உச்சியின் மேல் குவித்துப் பெருமானின் பெருங் கருணைத் திறத்தை நேராகக் கண்டு போற்றும் பெரும்பேற்றைப் பெற்றார்.

விளக்கவுரை

****

தொண்டனார் தமக்கருளிச்
சூழ்ந்திமையோர் துதிசெய்ய
இண்டைவார் சடைமுடியார்
எழுந்தருளிப் போயினார்
வண்டுவார் குழற்கொடியைக்
கைப்பிடிக்க மணக்கோலங்
கண்டவர்கள் கண்களிப்பக்
கலிக்காம னார்புகுந்தார். **#899**

தொண்டராய மானக்கஞ்சாற நாயனாருக்கு இவ்வகையால் அருள் புரிந்தபின், தேவர்கள் யாவரும் சூழ்ந்து போற்ற, இண்டை மாலையை அணிந்த சடைமுடியுடைய பெருமானார் மறைந்தருளினார். வண்டுகள் மொய்த்திடும் மலர்க் கூந்தலுடன் அழகிய பூங்கொடிபோல் விளங்கும் மணமகளாரை மணக்க வருகின்ற மணக் கோலத்தினைக் கண்டவர்கள் கண்களிக்கும்படியாக ஏயர் கோன் கலிக்காமரும் மானக்கஞ்சாறர் மனையின் உட்புகுந்தார்.

விளக்கவுரை

****

வந்தணைந்த ஏயர்குல
மன்னவனார் மற்றந்தச்
சிந்தைநினை வரியசெயல்
செறிந்தவர்பால் கேட்டருளிப்
புந்தியினில் மிகவுவந்து
புனிதனார் அருள்போற்றிச்
சிந்தைதளர்ந் தருள்செய்த
திருவாக்கின் திறங்கேட்டு. **#900**

அங்கு வந்த ஏயர்குல மன்னரான கலிக்காமனார், சிந்தையால் நினைவரிய செயலினை அங்கு நின்றார்கள்பால் கேட்டருளி, மனத்தில் மிகவும் மகிழ்வுற்று, புனிதராய பெருமானின் திருவருளினைப் போற்றிசெய்து, அத்தகைய திருவருட்பேறுடைய மகளாரைத் தாம் திருமணம் புணர்தற்குத் தமது மனம் தளர்வுற்ற பொழுது, பெருமான் அருள் செய்த நல்வாக்கின் திறத்தினைக் கேட்டு,சிந்தை தளர்ந்து.

விளக்கவுரை

(1) இச்செயல் மணம் நிகழ்ந்தபின் நிகழ்ந்திருப் பின் தமக்கும் அந்நிகழ்வைப் போற்றி வணங்கும் பேறு கிடைத்திருக்குமே எனும் கருத்தால் மனந்தளர்ந்து என்றும், *(2)* பெருமானால் கூந்தல் விரும்பிக் கொள்ளப்பட்ட பெண்ணை எவ்வாறு மணப்பது என்று மனந்தளர்ந்து என்றும், *(3)* முண்டிதமான பெண்ணை எவ்வாறு மணப்பதென மனந்தளர்ந்து என்றும், *(4)* மனைவியின் மயிர் அரியுண்டமைக்கு மனந்தளர்ந்து என்றும், *(5)* பேரடியாராகிய மானக்கஞ்சாறனார் தமது மணத்துக்கு இல்லாமல் சிவபெருமானை அணைந்தது பற்றியும் அதனால் சுற்றத்தார் வருந்துதல் பற்றியும் மனந்தளர்ந்து என்றும், மற்றும் பலவாறும் உரை கூறுவாருமுளர். இவற்றுள் முன்னையதொன்றே கருதற்குரியதாம். ஏனையவை எண்ணற்குரியனவல்ல.

மனந்தளரும் இடர்நீங்கி
வானவர்நா யகரருளால்
புனைந்தமலர்க் குழல்பெற்ற
பூங்கொடியை மணம்புணர்ந்து
தனம்பொழிந்து பெருவதுவை
உலகெலாந் தலைசிறப்ப
இனம்பெருகத் தம்முடைய
எயின்மூதூர் சென்றணைந்தார். **#901**

மனந்தளர்ந்த நிலையினின்றும் நீங்கியவராய், தேவர்களின் தலைவரான இறைவனின் இன்னருளால், மீளவும் பழமைபோல் வளரப்பெற்ற கூந்தலையுடைய பூங்கொடியாய அப்பெண்ணைத் திருமணம் செய்து, யாவர்க்கும் பொருள் வழங்கி, அனைவரும் இன்புறும்படியாகப் பெரிய இத்திருமண நிகழ்வை உலகெலாம் போற்ற, தம் சுற்றத்தார் பலரும் பெருகிச் சூழ்ந்து வர மதிலுடைய தன்முதிய நகரம் சென்று சேர்வுற்றார்.

விளக்கவுரை

மூதூர் - திருப்பெருமங்கலம் என்னும் ஊர். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஒருமகள் கூந்தல் தன்னை
வதுவைநாள் ஒருவர்க் கீந்த
பெருமையார் தன்மை போற்றும்
பெருமைஎன் அளவிற் றாமே
மருவிய கமரிற் புக்க
மாவடு விடேலென் னோசை
உரிமையால் கேட்க வல்லார்
திறமினி யுரைக்க லுற்றேன். **#902**

தம் ஒரே ஒரு மகளின் கூந்தலைத் திருமண நாளன்று ஒப்பற்ற மாவிரதியாருக்கு அரிந்து கொடுத்த பெருமை யுடைய மானக்கஞ்சாற நாயனாரின் பெருமையைப் போற்றுதல் என் அளவில் இயலுவதாகுமோ? ஆகாது. பொருந்திய நில வெடிப்பிலே சிதறுண்டு சிந்திய மாவடுவைக் கடித்திடும் போது கேட்கப்படும் `விடேல்` என்னும் ஓசையை அன்பு மீதூர்ந்த உரிமையால் கேட்க வல்லாராய அரிவாட்டாய நாயனாரின் திறம் பற்றி இனிச் சொல்ல லுற்றேன்.

விளக்கவுரை

****

அரிவாட்டாய நாயனார் புராணம்

வரும்பு னற்பொன்னி நாட்டொரு வாழ்பதி
சுரும்பு வண்டொடு சூழ்ந்து முரன்றிட
விரும்பு மென்க ணுடையவாய் விட்டுநீள்
கரும்பு தேன்சொரி யுங்கண மங்கலம். **#903**

பருவம் மாறாது வரும் நீர் நிறைந்த காவிரி ஆற்றின் வளம் சிறந்த சோழ நாட்டின்கண், பெருவாழ்வு பெற்றதொரு நகரமாக விளங்குவதும், பெண் வண்டுகள் ஆண் வண்டுகளுடன் சூழ்ந்து பண் பாடி விரும்பும், மென்மையான கணுக்கள் வாய் திறந்து தேன் பொழி யும் நீண்ட கரும்புகளின் சோலைகளை உடையதுமான கணமங்கலம் என்னும் ஓர் ஊர் ஆகும்.

விளக்கவுரை

சுரும்பு - ஆண்வண்டு. வண்டு - பெண் வண்டு. மென்கண் - மெல்லிய கணுக்கள். கரும்பின் கணுக்கள் பொதுவாக வன்மையுடையன எனினும், அவற்றகத்துத் தேன் நிரம்பி நிற்றலின் அவை மென்மையுடையவாயின. கணமங்கலம் - சோழ நாட்டில் திருத்துறைப்பூண்டியின் வடபால் உள்ளது.

செந்நெ லார்வயற் கட்டசெந் தாமரை
முன்னர் நந்துமிழ் முத்தம் சொரிந்திடத்
துன்னு மள்ளர்கைம் மேற்கொண்டு தோன்றுவார்
மன்னு பங்கய மாநிதி போன்றுளார். **#904**

செந்நெற்பயிர்கள் நிறைந்து வளர்ந்திருக்கும் வயல்களில், களையாகப் பிடுங்கப்பட்ட செந்தாமரை மலர்களில், முன்னர் அத்தாமரையிலிருந்து சங்குகள் உதிர்த்த முத்துக்களும் இருத்தலின், அவற்றைக் கைக்கொண்டிருக்கும் உழவர்கள், பொருந் திய பதுமநிதியைக் கைக்கொண்டவர் போன்றுளார்.

விளக்கவுரை

பதுமநிதி - தாமரை வடிவுடையதொரு நிதி. இது குபேரன் கையிலுள்ளது என்பர். சங்கு வடிவுடையதொரு நிதியும் இவன் கையில் இருக்கும் என்பர்.

வளத்தில் நீடும் பதியதன் கண்வரி
உளர்த்தும் ஐம்பா லுடையோர் முகத்தினும்
களத்தின் மீதுங் கயல்பாய் வயல்அயல்
குளத்தும் நீளுங் குழையுடை நீலங்கள். **#905**

வளத்தினால் நீடித்த கணமங்கலம் என்னும் அப்பதியில், வண்டுகள் மொய்த்துக் குடைகின்ற ஐந்து வகையாகச் சிறப்பித்துச்

சொல்லப்பெறும் கூந்தலையுடைய பெண்கள் முகத்திலும், கழுத்தின் மீதும், கயல்மீன்கள் பாய்ந்து ஓடும் வயலின் அயலில் உள்ள குளத்தும், நீண்ட குழையுடைய நீலங்கள் நீள்வன.

விளக்கவுரை

பெண்களின் நீலமலர் போன்ற வரிவிழிகள் தோடளவும் (குழை) சென்று நீண்டிருக்கும். மற்றும் அவர்களது கழுத்திலும் நீலமணியினாலாய நெகிழ்ந்த மாலைகள் நீண்டிருக்கும். வயல்கள் அயலே உள்ள குளத்தின் கண்ணும் நீண்ட தளிர்களையுடைய நீல மலர்கள் வளர்ந்து நிற்கும். `நீளும் குழையுடை நீலங்கள்: இத்தொடர், பெண்களின் முகம், கழுத்து, குளம், ஆகிய மூவிடங்களிலும் சென்று பொருள் கொள நிற்கின்றது. பெண்களின் முகத்திற்கு ஆகும்பொழுது நீண்டிருக்கும் குழைகள் வரை, கண்கள் நீண்டு செல்லும் எனப் பொருள்படும். அவர்களின் கழுத்திற்கு ஆகும் பொழுது நீண்ட குழைவான (மென்மையான) நீல மணிகளையுடைய அணிகலன் களை உடையவாயின எனப் பொருள்படும். குளத்திற்கு ஆகும் பொழுது தளிர்களையுடைய நீலமலர்கள் பூத்து நிற்கும் எனப் பொருள்படும். கூந்தலை ஐம்பால் என்றார் ஐவகையாக முடித்தலான்.

அக்கு லப்பதி தன்னில் அறநெறித்
தக்க மாமனை வாழ்க்கையில் தங்கினார்
தொக்க மாநிதித் தொன்மையில் ஓங்கிய
மிக்க செல்வத்து வேளாண் தலைமையார். **#906**

இவ்வாறாய வளம் சிறந்து விளங்கும் கணமங்கலம் என்னும் பதியின்கண், அறநெறி தவறாத தகவுடைய இல்வாழ்க் கையில் நின்று ஒழுகி வருபவரும், பண்டு தொட்டே மேலோங்கிச் சீர்மையும் பெருக்கமும் உற்ற பெருநிதியில் மிகுந்த செல்வத்துடன் விளங்கிய வேளாண் குலத்தில் தோன்றி வளர்ந்த வரும், ஆகிய ஒருவர் இருந்தனர்.

விளக்கவுரை

குலம்-ஈண்டு வளத்தின் மேற்று.

தாய னாரெனும் நாமந் தரித்துளார்
சேய காலந் தொடர்ந்தும் தெளிவிலா
மாய னார்மண் கிளைத்தறி யாதஅத்
தூய நாண்மலர்ப் பாதந் தொடர்ந்துளார். **#907**

அவர், தாயனார் என்னும் திருபெயரைப் பெற்றவர். பல காலமாகத் தொடர்புடையராய் இருந்தும், அறிதற்கரியராய திருமால், பன்றியாய் மண் கிளைத்து நின்றும் அறிய இயலாத இறை வனின் திருவடிமலர்களிடத்து அவர் தொடர்ந்து நின்ற பத்திமை பூண்டொழுகி

வருவார்.

விளக்கவுரை

****

மின்னு செஞ்சடை வேதியர்க் காமென்று
செந்நெல் இன்னமு தோடுசெங் கீரையும்
மன்னு பைந்துணர் மாவடு வுங்கொணர்ந்
தன்ன வென்றும் அமுதுசெய் விப்பரால். **#908**

அவர், விளங்குகின்ற செஞ்சடையை உடைய அறவாழி அந்தணராய சிவபெருமானுக்கு ஆகும் என்று, நாளும் செந்நெல்லின் இனிய உணவுடன் செங்கீரையும் சிறந்த கொத்தாக விளங்கும் மாவடுவையும் கொணர்ந்து, அவற்றைப் பெருமானுக்கு அமுது செய்வித்து வருவார்.

விளக்கவுரை

****

இந்த நன்னிலை இன்னல்வந் தெய்தினும்
சிந்தை நீங்காச் செயலின் உவந்திட
முந்தை வேத முதல்வ ரவர்வழி
வந்த செல்வம் அறியாமை மாற்றினார். **#909**

இவ்வரிய திருத்தொண்டினை வறுமையாய இன்னல் வந்தடைந்த பொழுதும், தமது சிந்தையில் நீங்காத செயலாய், மகிழ்வுடன் செய்து, விழுமிய பேறடைதற்கு வாயிலாக, பழையதாகிய நான்மறைகட்கெல்லாம் முதல்வராய சிவபெருமான், இத்தாயனா ரிடத்து இதுகாறும் பெருகி வந்த செல்வம் குறைந்திடும்படியாகச் செய்து, அவர் செல்வ வளத்தை மாற்றினார்.

விளக்கவுரை

****

மேவு செல்வங் களிறுண் விளங்கனி
ஆவ தாகி அழியவும் அன்பினால்
பாவை பாகர்க்கு முன்பு பயின்றஅத்
தாவில் செய்கை தவிர்ந்திலர் தாயனார். **#910**

தம்மிடத்துப் பொருந்திய செல்வம், யானை உண்ட விளங்கனி போன்று அழியவும், அன்பினாலே உமையொரு கூறராய சிவபெருமானுக்கு, முன் செய்து வந்த அக்குறைவிலாத செயலினைத் தாயனார் தவிராது செய்து வந்தனர்.

விளக்கவுரை

வேழம் உண்ட விளங்கனி அதன் வயிற்றகத் திருப்பினும், அதன் உள்ளீடு அழியுமே தவிர, அதன் மேற்பகுதியாய ஓடு சிதை வின்றி

அப்படியேயிருக்குமாம். அதுபோன்று நாயனாரிடத்து இருந்த பொருள் அழியினும், அவர்தம் அன்பு குறைவற்று *(சிதைவின்றி)* இருந்ததாம். என விளக்கம் காண்டல் பண்டைய மரபு. யானையுண்ட விளங்கனி என்பது விளவிற்கு வரும் ஒருவகை நோய் என்றும், அந்நோய் வாய்ப்பட்ட விளங்கனி தன் அளவில் ஏதும் சிதைவு தெரியாதாயினும் அதன் உள்ளீடாய்ச் சதைப்பகுதி ஏதும் இல்லாதிருக்கும். இவ்வாறாய விளங்கனியென விளங்கினார் நாயனார் என்றலே பொருந்துவதாகும். நச்சினார்க்கினியரும் `வேழம் - விளவிற்கு வருவது ஒரு நோய்` எனக் கூறுவர். *(சிந்தாமணி - 232).*

அல்லல் நல்குர வாயிடக் கூலிக்கு
நெல்ல றுத்துமெய்ந் நீடிய அன்பினால்
நல்ல செந்நெலிற் பெற்றன நாயனார்க்
கொல்லை யின்னமு தாக்கொண் டொழுகுவார். **#911**

துன்பத்திற்கேதுவாய வறுமை மிகுந்திடக், கூலிக்கு நெல் அறுத்தும், இதன் வருவாயாகப் பெருமானிடத்து உண்மை நீடிய அன்பினால் தாம் நல்ல செந்நெல்லாகப் பெற்றன யாவற்றையும் சிவ பெருமானுக்கு உடன் இனிய அமுதாக்கிப் படைத்து ஒழுகி வருவாராய்.

விளக்கவுரை

****

சாலி நேடி அறுத்தவை தாம்பெறும்
கூலி யெல்லாந் திருவமு தாக்கொண்டு
நீல நெல்லரி கூலிகொண் டுண்ணுநாள்
மால யற்கரி யாரது மாற்றுவார். **#912**

நல்ல செஞ்சாலி நெல் அறுவடை செய்யும் இடம் சென்று கூலிக்கு அறுத்துத் தாம் பெறும் அச்செந்நெல் எல்லாம் பெருமானுக்குத் திருவமுதாகக் கொண்டும், இப்பால், தரத்தில் குறைந்த நெல் அறுவடை செய்யும் இடத்திற்குச் சென்று, தாம் கூலிக்காக அரிந்த அந்நெல்லைத் தமது உணவிற்காக எடுத்துக் கொண்டும் தம் வாழ்வை அமைத்துக் கொண்டவராய் வாழும் நாள்களில், மாலும் அயனும் காண்டற்கரியராய சிவபெருமான் அந்நிலையையும் மாற்றுவாராகி.

விளக்கவுரை

நாயனார் இறைவற்குத் தரம் நிறைந்ததும் இனியது மாய செந்நெல்லைக் கொடுத்தும், தமக்குத்தரமும் இனிமையும் குன்றியதை உணவாகக் கொண்டும் வாழ்ந்த நிலை எண்ணற்குரியது. இக்காலத்து இறைவற்கு நிவேதனம் படைப்போர், இந்நிலையை எண்ணிக் கடைப் பிடிப்பாராக.

நண்ணிய வயல்கள் எல்லாம்

நாடொறும் முன்னங் காண
வண்ணவார் கதிர்ச்செஞ் சாலி
ஆக்கிட மகிழ்ந்து சிந்தை
அண்ணலார் அறுத்த கூலி
கொண்டிஃ தடியேன் செய்த
புண்ணிய மென்று போத
அமுதுசெய் விப்பா ரானார். **#913**

நாள்தோறும் தாயனார் நெல் அரியச் செல்லும் வயல்களில் எல்லாம், இவர் முன்னதாகக் காணுமாறு வண்ணமுடன் சிறந்து விளைந்த கதிருடைய செஞ்சாலி நெல்லேயாக ஆக்கிட, அது கண்டு மனம் மகிழ்வுற்ற தாயனார், தாம் கூலியாகப் பெற்ற செஞ்சாலி நெல் அனைத்தையும் கொண்டு, `இது அடியேன் செய்த புண்ணியம்` என்று அதனை முழுமையாகத் திருவமுதாக ஆக்கிப் பெருமானை நாளும் அமுது செய்விப்பாராயினார்.

விளக்கவுரை

இம் மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

வைகலும் உணவி லாமை
மனைப்படப் பையினிற் புக்கு
நைகர மில்லா அன்பின்
நங்கையார் அடகு கொய்து
பெய்கலத் தமைத்து வைக்கப்
பெருந்தகை யருந்தித் தங்கள்
செய்கடன் முட்டா வண்ணந்
திருப்பணி செய்யும் நாளில். **#914**

(அறுப்பதெல்லாம் செஞ்சாலி நெல் ஆயிட, அதனால் தமக்கு உணவாகக் கொள்ளும் நெல் இல்லாமையால்) நாளும் உணவிற்கு வகையிலாமையால், அவரின் குறைவுபடாத நல்ல அன்புடைய மனைவியாரும், தங்கள் மனையின் கொல்லையில் (தோட்டம்) புகுந்து, அங்கு உண்ணுதற்குரிய கீரைவகைகளைப் பறித்துப் பரிவுடன் சமைத்து, அதனை அமுது படைக்கும் கலத்தில் இட்டுக் கணவனாருக்குப் படைக்க, அவரும் அருந்தி, இவ்வகையில் இருவரும் பெருமானுக்குச் செய்து வரும் தொண்டு குறைவுபடாத வண்ணம் அத்திருப்பணியைச் செய்து வரும் நாள்களில்,

விளக்கவுரை

நைகரம் இல்லா அன்பு - குறைவற்ற அன்பு.

மனைமருங் கடகு மாள

வடநெடு வான மீனே
அனையவர் தண்ணீர் வார்க்க
அமுதுசெய் தன்ப னாரும்
வினைசெயல் முடித்துச் செல்ல
மேவுநா ளொருநாள் மிக்க
முனைவனார் தொண்டர்க் கங்கு
நிகழ்ந்தது மொழியப் பெற்றேன். **#915**

வீட்டின் புறத்தாக முளைத்து நின்ற கீரைகளும் ஒழிந்திட, வடதிசைக்கண் தோன்றும் நெடுவானத்து ஒளிர்கின்ற கற்புடைய அருந்ததியை யொத்த அம்மையாரும், தம் கணவனாருக்கு உண்ணும்படி தண்ணீர் வார்க்க, அதனை உண்டு, தாயனாரும் தமது தொண்டின் செயலை இனிது செய்து வாழ்ந்து வரும் காலத்து, ஒருநாள், முனைவராய சிவபெருமானின் தொண்டருக்கு அங்கு நிகழ்ந்ததை எடுத்து மொழிந்திட, அடியேன் வாழ்வு பெற்றேன்.

விளக்கவுரை

முனைவனார் - அளவிலாற்றல் உடையார். `ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள்தருவாய், போக்குவாய், என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்`*(தி.8 ப.1 வரி42)* என வரும் திருவாக்கால் அளவிலாற்றல் அறியப்படும். முனைவனை முன்னோன் எனத் தொல்காப்பியர் கூறுவதும் காண்க. இனிவரும் செயல் இவ்வடியவரை உய்விக்கும் செயலாக அமைதலின், அவ்வருமை தோன்ற ஈண்டு நுதலிப் புகுகின்றார்.

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

முன்புபோல் முதல்வ னாரை
அமுதுசெய் விக்க மூளும்
அன்புபோல் தூய செந்நெல்
அரிசிமா வடுமென் கீரை
துன்புபோம் மனத்துத் தொண்டர்
கூடையிற் சுமந்து போகப்
பின்புபோம் மனைவி யார்ஆன்
பெற்றஅஞ் சேந்திச் சென்றார். **#916**

அத்தகைய வறுமையிலும், முன்புபோல முதல்வ னாரை அமுது செய்விக்கத் தம்மிடத்து மூளுகின்ற அன்பு போலவே தூயதான செந்நெல்லின் அரிசியையும், மாவடுவையும், மென்மை யான செங்கீரையையும், துன்பம் நீங்கிய மனத்தையுடைய தொண் டர், தமது கூடையில் சுமந்து போக, அவர்பின்பு செல்லும் மனைவி யார் திருமுழுக்காட்டுதற்குரிய ஆனைந்தையும் மட்கலத்தில் தமது கையில்

கொண்டு சென்றார்.

விளக்கவுரை

ஆன்பெற்ற அஞ்சு - பசுவினிடமாகத் தோன்றிய பால், தயிர், நெய், ஆவின்நீர், ஆவின் சாணம் என்பன.

போதரா நின்ற போது
புலர்ந்துகால் தளர்ந்து தப்பி
மாதரார் வருந்தி வீழ்வார்
மட்கல மூடு கையால்
காதலால் அணைத்தும் எல்லாங்
கமரிடைச் சிந்தக் கண்டு
பூதநா யகர்தந் தொண்டர்
போவதங் கினிஏன் என்று. #917

இவ்வாறு செல்லும் பொழுது பல நாள்கள் உணவில்லாமையால் வந்த சோர்வால் வாடி, கால்தளர்ந்து, நடை தப்பி, வருந்தி, வீழ்கின்ற நாயனாரை, அவர் மனைவியார், ஆவி னிடமாகத் தோன்றிய ஐந்தினையும், கொண்ட மண்ணின் கலத்தை மூடி வைத்த கையால், காதலுடன் அணைத்தும், தாயனார் கையில் எடுத்துச் சென்ற செந்நெல் அரிசியும், செங்கீரையும், மாவடுவும் தாம் சென்று கொண்டிருக்கும் நில வெடிப்பில் சிந்திடக் கண்டு, உயிர்கட் கெல்லாம் தலைவரான சிவபெருமானின் தொண்டராய தாயனாரும், இனிப் பெருமானின் திருமுன்பிற்குப் போதல் எற்றுக்கு? என்று,

விளக்கவுரை

****

நல்லசெங் கீரை தூய
மாவடு அரிசி சிந்த
அல்லல்தீர்த் தாள வல்லார்
அமுதுசெய் தருளும் அப்பே
றெல்லையில் தீமை யேனிங்
கெய்திடப் பெற்றி லேனென்
றொல்லையி லரிவாள் பூட்டி
ஊட்டியை அரிய லுற்றார். #918

நல்ல செங்கீரையும், தூய மாவடுவும், அரிசியும் சிந்திப் போயதால், `எம்மை அல்லல் தீர்த்து ஆட்கொள வல்லாராகிய பெருமான் இன்று திருவமுது செய்திடும் அப்பேற்றை, எல்லை யில்லாத தீமையுடைய அடியேன் இங்குப் பெற்றிலேனே` என்று சொல்லி, இதற்கு இதுவே தீர்வாகும் என்று உடனாக இடுப்பில் செருகியிருந்த தம் அரிவாளை

எடுத்துத் தமது கழுத்தில் மாட்டித் தன் மிடற்றினை அரியல் உற்றார்.

விளக்கவுரை

ஊட்டி - கழுத்து.

ஆட்கொள்ளும் ஐயர் தாமிங்
கமுதுசெய் திலர்கொ லென்னாப்
பூட்டிய அரிவாள் பற்றிப்
புரையற விரவு மன்பு
காட்டிய நெறியி னுள்ளந்
தண்டறக் கழுத்தி னோடே
ஊட்டியும் அரியா நின்றார்
உறுபிறப் பரிவார் ஒத்தார். **#919**

என்னை ஆட்கொள்ளும் பெருமானார் இன்று அமுது செய்திடப் பெற்றிலரே! என்று, கழுத்தில் பூட்டிய அரிவாளினைக் கையால் பிடித்துத் தம்மிடம் உள்ள குற்றம் அற்ற அன்பு இது எனக் காட்டிய அந்நெறியில், உள்ளிருந்த முதுகெலும்புத் தண்டு கழுத்தினோடு அறுந்திட அரிந்து நின்றார்; இதனால் தமக்கு உற்ற பிறப்பினை அரிந்திடும் தன்மை உடையர் போன்றார்.

விளக்கவுரை

இச்செயல் அடியவரின் பாச நீக்கத்திற்கும் சிவப்பேற்றிற்கும் ஏதுவாய் அமைதலின் `உறுபிறப்பு அரிவார் ஒத்தார்` என்றார்.

மாசறு சிந்தை யன்பர்
கழுத்தரி அரிவாள் பற்றும்
ஆசில்வண் கையை மாற்ற
அம்பலத் தாடு மையர்
வீசிய செய்ய கையும்
மாவடு விடேல்வி டேலென்
றோசையுங் கமரி னின்றும்
ஒக்கவே எழுந்த வன்றே. **#920**

குற்றம் அற்ற சிந்தையுடைய அன்பர், தமது கழுத்தை அரிந்திட, அரிவாளைப் பிடிக்கும் குற்றம் இலாத அக் கையைத் தடுத்து மாற்றிட, அம்பலத்து ஆடும் பெருமானது வீசி நின்றாடிய இடத் திருக்கையும், மாவடுவைக் கடித்திடும்போது `விடேல்` `விடேல்` என்று எழும் ஓசையும் அங்குள்ள நிலவெடிப் பினின்றும் ஒருங்கு எழுந்தன.

விளக்கவுரை

கமர் - நிலவெடிப்பு. மாவடுவினை இறைவர் கடிக்குங் கால் எழும் ஓசையை, விடேல் எனும் சொற்களால் எடுத்துக்காட்டு கின்றார்.

திருக்கைசென் றரிவாள் பற்றுந்
திண்கையைப் பிடித்த போது
வெருக்கொடங் கூறு நீங்க
வெவ்வினை விட்டு நீங்கிப்
பெருக்கவே மகிழ்ச்சி நீடத்
தம்பிரான் பேணித் தந்த
அருட்பெருங் கருணை நோக்கி
அஞ்சலி கூப்பி நின்று. **#921**

இறைவனின் திருக்கை சென்று, தாயனாருடைய அரிவாளைப் பிடித்திடும் திண்ணிய கையினைப் பற்றும்போது, அவர் அற்புதம் உற, வாள்பட்டதால் அவருடைய கழுத்தில் ஏற்பட்ட புண் நீங்க, அவரிடத்திருந்த கொடிய வினையும் நீங்க, பெருகும்படியான மகிழ்ச்சி நீடித்திட, தம் பெருமான் தமக்காக அருளிய பெருங் கருணையினைத் தாயனார் நேரில் கண்டு தாம் தம் கைகளைக் கூப்பி நின்று,

விளக்கவுரை

****

அடியனேன் அறிவி லாமை
கண்டும்என் னடிமை வேண்டிப்
படிமிசைக் கமரில் வந்திங்
கமுதுசெய் பரனே போற்றி
துடியிடை பாக மான
தூயநற் சோதி போற்றி
பொடியணி பவள மேனிப்
புரிசடைப் புராண போற்றி. **#922**

அடியேனின் அறிவிலாமை கண்டும், என் அடிமை வேண்டி, இந்நிலத்தின் கண் உள்ள வெடிப்பில் வந்து, இங்குச் சிந்திய அமுதினை உண்டருளிய செல்வனே! வணக்கம். உடுக்குப் போன்ற சிறிய இடையையுடைய உமையம்மையாரை ஒரு மருங்கில் கொண்ட தூய நல்ல பேரொளியே! வணக்கம். நீறணிந்த பவளம் போன்ற திருமேனியையும் முறுக்கிய மென்மையான சடையையு முடைய முன்னைப் பழம் பொருட்கும் முன்னவனே! வணக்கம்.

விளக்கவுரை

****

என்றவர் போற்றி செய்ய
இடபவா கனராய்த் தோன்றி
நன்றுநீ புரிந்த செய்கை

நன்னுத லுடனே கூட
என்றும்நம் உலகில் வாழ்வாய்
என்றவ ருடனே நண்ண
மன்றுளே ஆடும் ஐயர்
மழவிடை உகைத்துச் சென்றார். **#923**

என்று அவர் போற்றி வணங்க அவர்முன், ஆனேற்றின்மீது தோன்றியருளி, `நீபுரிந்த செயல் நன்று. நல்ல நெற்றியினையுடைய உனது மனைவியுடன் என்றும் நீங்காது நமது உலகில் வாழ்வாயாக` என அருள் புரிந்து, அவரும் தம்முடன் வந்திடத் திருமன்றுள் ஆடியருளும் முதல்வனாய பெருமானும் அறக்கடவுளாம் ஆனேற்றின் மீது எழுந்தருளிச் சென்றார்.

விளக்கவுரை

இம் மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

பரிவுறு சிந்தை யன்பர்
பரம்பொரு ளாகி யுள்ள
பெரியவ ரமுது செய்யப்
பெற்றிலே னென்று மாவின்
வரிவடு விடேலெ னாமுன்
வன்கழுத் தரிவாள் பூட்டி
அரிதலால் அரிவாட் டாயர்
ஆயினார் தூய நாமம். **#924**

அன்பு ததும்பிய சிந்தையுடைய அன்பராய தாயனார், மேலாய பொருளாயுள்ள பெருமானார், அமுது செய்யப் பெற்றிலேன் என்று, வரியினையுடைய மாவடுவினை உண்ணுத லாலாய `விடேல்` எனும் ஓசையைக் கேட்பதன் முன், தமது வலிமை பொருந்திய கழுத்தில் அரிவாளைப் பூட்டி அரிய முற்பட்டதால், `அரிவாள் தாயர்` என்னும் தூயதொரு பெயரினைப் பெறுவா ராயினார்.

விளக்கவுரை

****

முன்னிலை கமரே யாக
முதல்வனார் அமுது செய்யச்
செந்நெலின் அரிசி சிந்தச்
செவியுற வடுவி னோசை
அந்நிலை கேட்ட தொண்டர்
அடியிணை தொழுது வாழ்த்தி
மன்னும்ஆ னாயர் செய்கை

அறிந்தவா வழுத்த லுற்றேன். **#925**

தமது முன்னிலையாய இடம் நிலவெடிப்பேயாக, முதல்வனாராய சிவபெருமான் அமுது செய்திடக் கொண்டுவரச் சென்ற செந்நெல்லின் அரிசி சிந்திடவும், மாவடுவினைக் கடித்தலால் ஆய `விடேல்` எனும் ஓசை தம் செவியில் கேட்கப் பெற்றிடவும் வல்ல தொண்டராய அரிவாட்டாயரின் திருவடிமலர்களைத் தொழுது, வாழ்த்தி, திருவருள் சிறந்து என்றும் வாழ்ந்திருக்கும் ஆனாய நாயனாரின் செயலினை யான் அறிந்தவாறு போற்றத் தொடங்கு கின்றேன்.

விளக்கவுரை

செய்யில் உகுத்த திருப்படி மாற்றதனை
ஐயஇது அமுது செய்கென்று - பையஇருந்து
ஊட்டி அறுத்தவர்க்கே ஊட்டி அறுத்தவரை
நாட்டியுரை செய்வதென்னோ நாம்.

எனவரும் திருக்களிற்றுப்படியார் *(பாடல் 20)* இவ் வரலாற்றைச் சுருங்கவும் சுவைபடவும் கூறியிருக்கும் திறம் அறிந்து இன்புறுதற்குரியதாம்.

ஆனாய நாயனார் புராணம்

மாடு விரைப்பொலி சோலையின் வான்மதி வந்தேறச்
சூடு பரப்பிய பண்ணை வரம்பு சுரும்பேற
ஈடு பெருக்கிய போர்களின் மேகம் இளைத்தேற
நீடு வளத்தது மேன்மழ நாடெனும் நீர்நாடு. **#926**

பக்கங்களில் உள்ள நறுமணம் மிக்க சோலைகளில், வானில் உள்ள நிறைமதி வந்து ஏறவும், நெல் முழுமையாக உதிராத வைக்கோல் போர்களைப் பரப்பிய பண்ணைகளில் உள்ள வரம்பு களில் வண்டினங்கள் ஏறவும் (ஒலி செய்யவும்), நெல் முழுமையாக எடுக்கப்பெற்ற உயர்ந்த வைக்கோல் போர்களில் மேகங்கள் இளைத்து ஏறவும், இங்ஙனமாக நீண்ட பெருவளம் உடையது மேல் மழநாடு எனும் நீர்நாடு ஆகும்.

விளக்கவுரை

சூடு - நெல் முழுமையாக உதிராத வைக்கோல் போர்கள். ஈடு - நெல் முழுமையாக உதிர்க்கப்பெற்ற வைக்கோல் போர்கள். மழநாடு - மழவர் என்பார் வாழும் நாடு. இதன் மேற்குப் பகுதியை மேல் மழநாடு என்பர். இது திருச்சிக்கு வடக்கே உள்ள கொள்ளிடத்தின் வடபகுதியாகும். கிழக்குப் பகுதியைக் கீழ்மழநாடு என்பர். இது திருப்பாச்சிலாச்சிராமத்தை உள்ளடக்கிய பகுதியாகும். இப்பகுதியை ஆண்ட குறுநில மன்னனே கொல்லிமழவன் ஆவன்.

நீவி நிதம்ப உழத்தியர் நெய்க்குழல் மைச்சூழல்
மேவி யுறங்குவ மென்சிறை வண்டு விரைக்கஞ்சப்
பூவி லுறங்குவ நீள்கயல் பூமலி தேமாவின்
காவின் நறுங்குளிர் நீழ லுறங்குவ கார்மேதி. **#927**

கொய்சகம் வைத்து அழகுற உடுத்திய ஆடையால் மூடப்பெறும் அல்குலையுடைய உழத்தியரது நெய்பூசிய கூந்தலின் கருமையின் செறிவைப் பொருந்தி, மென்சிறகுடைய வண்டுகள் உறங்குவன. வாசனையுடைய தாமரைப் பூவில் நீண்ட கயல்மீன்கள் உறங்குவன. பூக்கள் நிறைந்த தேமாவின் சோலையின் நறுமணம் மிக்க குளிர்ந்த நிழலில் மேகத்தை ஒத்த கரிய எருமைகள் உறங்குவன.

விளக்கவுரை

`நிழ லிடை உறங்கும் மேதி` *(கம்ப. பால.37)* என்பர் கம்பரும்.

வன்னிலை மள்ளர் உகைப்ப வெழுந்த மரக்கோவைப்
பன்முறை வந்தெழும் ஓசை பயின்ற முழக்கத்தால்
அன்னம் மருங்குறை தண்டுறை வாவி யதன்பாலைக்
கன்னல் அடும்புகை யால்முகில் செய்வ கருப்பாலை. **#928**

வலிமை மிக்க உழவர்கள், கரும்பு ஆலையை இயக்கும்படி பலமுறை சுற்றிவரப் பண்ணும் இணைமரங்கள் இரையும் ஓசையாலும், அன்னப் பறவைகள் உறைகின்ற குளிர்ந்த நீர்த் துறைகளை யுடைய குளங்களின் அருகாகக் கருப்பஞ் சாற்றைக் காய்ச்சுகின்றமையால் எழுந்த புகை பரத்தலாலும், கரும்பினைச் சர்க்கரையாக்கும் தொழில் கொண்ட சாலைகள், மேகம் சூழ இருக்கும் காட்சியை உண்டாக்குவன.

விளக்கவுரை

கரும்பாலையிலிருந்து எழும் ஓசை இடிமுழக் குப் போன்றது. அதனைக் காய்ச்சுதலால் எழும் புகை, மேகத்தைப் போன்றது.

பொங்கிய மாநதி நீடலை உந்து புனற்சங்கம்
துங்க விலைக்கத லிப்புதல் மீது தொடக்கிப்போய்த்
தங்கிய பாசடை சூழ்கொடி யூடு தவழ்ந்தேறிப்
பைங்கமு கின்தலை முத்தம் உதிர்க்குவ பாளையென. **#929**

பெருகி ஓடும் பேராற்றில் நீண்ட அலைகளால் உந்தப்பெற்ற நீர்ச்சங்குகள், ஊர்ந்து சென்று, உயர்வுடைய வாழைத் தோட்டத்தில் புகுந்து, அங்குஅவ் வாழையில் சுற்றிய பசும்கருங் கொடிகளின் மேலாக ஊர்ந்து ஏறிப்போய், பசிய கமுகின் உச்சியில் ஏறிச்சேர்ந்து, அங்குள்ள பாளைகள் பூக்களை உதிரச் செய்வனபோல முத்துக்களைச் சொரிவன.

விளக்கவுரை

ஆற்றிலிருந்த சங்குகள், வாழையைச் சுற்றி நிற்கும் கொடி களின் வழி ஏறிப் பாக்குமரத்தைச் சேர்ந்து முத்துக்களை உதிர்த்தன. அம்முத்துக்கள் பாக்குமரத்திலிருந்து பூக்கள் உதிர்வன போன்று இருந்தன. நீரிடை உறங்கும் சங்கம் *(கம்பரா. பால. 37)* என்பார் கம்பர்.

அல்லி மலர்ப்பழ னத்தயல் நாகிள ஆன்ஈனும்
ஒல்லை முழுப்பை உகைப்பின் உழக்கு குழக்கன்று
கொல்லை மடக்குல மான்மறி யோடு குதித்தோடும்
மல்கு வளத்தது முல்லை யுடுத்த மருங்கோர்பால். **#930**

உள் இதழ் அகன்ற நல்ல நீர்ப் பூக்கள் மலர்ந் திருக்கும் வயல்களின் மேற்பரப்பில், மரங்களும் செடிகளும் அடர்ந்த முல்லைக் காட்டில் உள்ள ஆன்கன்றுகள் துள்ளிய வண்ணம் அங்குள்ள பெண்மான் குட்டிகளோடும் சேர்ந்து குதித்து ஓடும் வளம் பொருந்தியது.

விளக்கவுரை

முழுப்பு - உச்சி. வயல் அருகேயுள்ள காட்டில் ஆன் கன்று மான்கன்றுகளோடும் குதித்து விளையாடுகின்றன. ஒல்லை - விரைந்து.

கண்மலர் காவிகள் பாய இருப்பன கார்முல்லைத்
தண்ணகை வெண்முகை மேவு சுரும்பு தடஞ்சாலிப்

பண்ணை எழுங்கயல் பாய விருப்பன காயாவின்
வண்ண நறுஞ்சினை மேவிய வன்சிறை வண்டானம். **#931**
கார்காலத்தில் செழித்து வளர்ந்த முல்லைக் கொடிகளில் குளிர்ந்த பற்கள் என மலரும்வெண்பூக்களில் தங்கிய வண்டுகள், பெண்களின் கண்களை ஒத்த நீலோற்பல மலரில் பாய இருப்பன; காயா மரங்களின் அழகிய செழித்த பூங்கொம்புகளில் பொருந்திய சிறகுகளையுடைய நாரைகள், அகன்ற இளஞ்சாலி நெற்பயிர்களையுடைய வயல்களில் உள்ள நீரில் துள்ளி எழுகின்ற கயல் மீன்களைப் பிடித்தற்கெனப் பாய இருப்பன.

விளக்கவுரை

****

பொங்கரில் வண்டு புறம்பலை சோலைகள் மேலோடும்
வெங்கதிர் தங்க விளங்கிய மேன்மழ நன்னாடாம்
அங்கது மண்ணின் அருங்கல மாக அதற்கேயோர்
மங்கல மானது மங்கல மாகிய வாழ்மூதூர். **#932**
சோலைகளில் தளிர்த்து உயர்ந்த மரக் கொம்பரில் அலைந்தாடும்படி இருந்திடும் வண்டுகள் சூழ்ந்த அச்சோலைகளின் உச்சியில், கதிரவனின் வெப்பம் மிகுந்த ஒளிக்கதிர்கள் தங்குமாறு விளங்கிய நன்மைகள் சிறந்த மேல்மழநாடு எனும் நாடானது, இந்நிலவுலகிற்கு ஓர் அரிய அணியாக விளங்குவது; அதற்கு ஒப்பற்ற மங்கலமாக விளங்குவது திருமங்கலம் என்னும் ஊராகும்.

விளக்கவுரை

சோலைகளில் கதிரவனின் கதிர்கள் தங்குகின்றன. எனவே, அக்கதிர்கள் அச் சோலைகள் உட்புக இயலாவாயின என்பது விளங்கும்.
`வெயில் நுழைபு அறியாக் குயில் நுழைபொதும்பர்` *(பெரும்பாணா. - 374)* எனப் பிறரும் கூறல் காண்க.

ஒப்பில் பெருங்குடி நீடிய தன்மையில் ஓவாமே
தப்பில் வளங்கள் பெருக்கி அறம்புரி சால்போடும்
செப்ப வுயர்ந்த சிறப்பின் மலிந்தது சீர்மேவும்
அப்பதி மன்னிய ஆயர் குலத்தவர் ஆனாயர். **#933**
ஒப்பற்ற பெருங்குடிகள் நெடுங்காலமாகத் தழைத்துச் செழித்திருக்கும் தன்மையில் ஓயாது, தீதின்றி நன்னெறி யில் ஈட்டிய பொருள் வளத்துடன் அறமே நிலவிய சிறப்புடன் விளங்க இருப்பது அக்கணமங்கலம் என்னும் ஊராகும். அப்பதியில் வாழ்ந் திருப்பவர் இடையர் குலத்துத் தோன்றிய ஆனாயர் என்பார்.

விளக்கவுரை

****

ஆயர் குலத்தை விளக்கிட வந்துத யஞ்செய்தார்
தூய சுடர்த்திரு நீறு விரும்பு தொழும்புள்ளார்
வாயினில் மெய்யின் வழுத்து மனத்தின் வினைப்பாலில்
பேயுட னாடு பிரானடி யல்லது பேணாதார். **#934**
அவர், இடையர் குலத்தை விளக்கிட வந்து தோன்றியவர். ஒளியுடைய திருவெண்ணீற்றை விரும்பும் தொண்டில் நிற்பவர். சொல்லாலும், உண்மையான மனத்தினாலும், செயலினா லும் பேயுடன் நடமாடும் பெருமானாய சிவபெருமானின் திருவடி களை அல்லது வேறு எதனையும் பேணாதவர்.

விளக்கவுரை

****

ஆனிரை கூட அகன்புற விற்கொடு சென்றேறிக்
கானுறை தீய விலங்குறு நோய்கள் கடிந்தெங்கும்
தூநறு மென்புல் அருந்தி விரும்பிய தூநீருண்
டூனமில் ஆயம் உலப்பில பல்க அளித்துள்ளார். **#935**
அவர், பசுக்களின் நிரைகளை அகன்ற முல்லை நிலத்தில் ஒருங்கு கொண்டு சென்று, காடுகளில் உறையும் கொடிய மிருகங்களாலும், பொருந்தும் நோய்களாலும் துன்பம் வாராதபடி பாதுகாத்து, எங்கும் நல்ல மிருதுவான புற்களை அப்பசுக்கள் மேயும் படி செய்வித்து, அப்பசுக்கள் விரும்பிடும் தூய நீரையும் அருந்தச் செய்து, குற்றமில்லாதவாறு நற்பசுக்கள் அளவுகடந்தன நாளும் பெருகும்படி பேணிவந்தார்.

விளக்கவுரை

****

கன்றொடு பால்மறை நாகு கறப்பன பாலாவும்
புன்தலை மென்சினை ஆனொடு நீடு புனிற்றாவும்
வென்றி விடைக்குல மோடும் இனந்தொறும் வெவ்வேறே
துன்றி நிறைந்துள சூழ லுடன்பல தோழங்கள். **#936**
கன்றுகளும், பால்கறத்தல் மாறிய இளம் மாடுக ளும், பால் கறக்கும் பசுக்களும், சிறிய அழகிய தலையும் மெல்லிய மயிரும் உடைய கருவுற்று விளங்கும் பசுக்களும், ஈன்று அணிய பசுக்களும் ஆகிய இவைகள், வெற்றி விளைவிக்கும் ஆனேறுகளின் கூட்டத்தோடு, வெவ்வேறு தங்கி இருப்பதற்கென நிறைந்துள்ள பல தொழுவங்கள் உள்ளன.

விளக்கவுரை

இவ்வினங்கள் ஓரினத்தன எனினும், உணவு முதலிய வற்றால்

பேணற்கும், காத்தற்கும் அவ்வவற்றிற்கும் ஏற்ற சூழல் வேண்டுதலின், இவற்றைத் தனித்தனியாகவுள்ள தொழுவங்களில் வைத்துப் பேணற்குரிய இவ்வருமை எண்ணத்தக்கது.

ஆவின் நிரைக்குலம் அப்படி பல்க அளித்தென்றும்
கோவலர் ஏவல் புரிந்திட ஆயர் குலம்பேணும்
காவலர் தம்பெரு மானடி அன்புறு கானத்தின்
மேவு துளைக்கரு விக்குழல் வாசனை மேற்கொண்டார். **#937**

பசுக் கூட்டங்கள் இவ்வண்ணமே பெருகிடப் பேணிக் காத்து, இடையர் ஏவல் புரிந்திட, ஆயர்குலத்தைப் பேணி வரும் காவலர் பெருமானாய ஆனாயர், சிவபெருமான் திருவடி களில் பெருவிருப்புற்றுக் குழலில் இசை பொருந்த வாசித்து வரும் செயலை மேற்கொண்டார்.

விளக்கவுரை

****

முந்தைமறை நூன்மரபின்
மொழிந்தமுறை யெழுந்தவேய்
அந்தமுதல் நாலிரண்டில்
அரிந்துநரம் புறுதானம்
வந்ததுளை நிரையாக்கி
வாயுமுதல் வழங்குதுளை
அந்தமில்சீ ரிடையீட்டின்
அங்குலியெண் களின்அமைத்து. **#938**

பழமையான நான்மறைகளில் இசைக்கலையைப் பற்றிச் சொல்லிய வகையில், வளர்ந்து நின்ற மூங்கிலின் நுனியில் நான்கு பங்கிலும், அடியில் இரண்டு பங்கிலுமாக அரிந்து அவற்றை விடுத்து, இடைப்பட்ட பாகத்தை எடுத்து, சுரங்கள் ஏழும் அவ்வவ் விடங்களிலும் அமைக்கும் துளைகளின் வழிவர வரிசையாகச் செய்து, முதலில் காற்று உண்டாக்கும் துளையையும், கேடில்லாத சிறப் பினையுடைய இடைவெளி ஒவ்வொரு அங்குல அளவில், ஏழு துளைகள் செய்து,

விளக்கவுரை

உயர்ந்ததும் ஒத்ததுமாய நிலத்தில் தோன்றியதும், இளையதும் முதியதும் ஆய பருவத்ததன்றி நடுநிலையதாகிய பருவத்ததுமாகிய மூங்கிலில் நுனிப்பகுதியையும் அடிப்பகுதியையும் விடுத்து, நடுப்பகுதியை நிழலிலிட்டு வைத்து, ஓராண்டு சென்றபின் அதனை வேய்ங்குழலாகச் செய்யவேண்டும் *(சிலப்பதி. அரங்கேற்று காதை)* என்பர் அடியார்க்கு நல்லார்.

முந்தை மறை - ஆயுள் வேதம், தநுர் வேதம், காந்தருவ வேதம்,

அர்த்தவேதம் எனக் கூறப் பெறும் உப வேதங்கள் நான்கினும் காந்தருவ வேத முறைப்படி, சந்தனம், செங்காலி, கருங்காலி, வெண்கலம் ஆகியவற்றுள் அமைக்கும் குழல்களினும், மூங்கிலால் செய்யப்பெறும் குழற்கருவியே சிறந்தது என்பர்.

அங்குலி - அங்குலம்.

எடுத்தகுழற் கருவியினில்
எம்பிரான் எழுத்தைந்தும்
தொடுத்தமுறை யேழிசையின்
சுருதிபெற வாசித்துத்
தடுத்தசரா சரங்களெலாம்
தங்கவருந் தங்கருணை
அடுத்தஇசை யமுதளித்துச்
செல்கின்றார் அங்கொருநாள். **#939**

இவ்வாறு திருத்தமுற எடுத்த வேய்ங்குழல் என்னும் இசைக் கருவியினில், எம்பெருமானின் ஐந்து எழுத் தினையும், தொடுத்த முறையாக, ஏழு சுரவரிசைகளின் சுருதி விளங்கிட வாசித்து, அதனால் வேறு வழியில் செல்லாமல் இசையினால் தடுக்கப் பெற்ற இயங்கியற்பொருள், நிலையியற் பொருள் ஆகிய எல்லாமும் பொருந்த வரும், தம் கருணையுடன் கூடிய இசையாய அமுதினை, கேட்போர் செவியாரக் கொடுத்து வருபவரான ஆனாயர் ஆங்கு ஒரு நாள்.

விளக்கவுரை

சரம் - இயங்கியற் பொருள், அசரம் - நிலையியற் பொருள்.

வாசமலர்ப் பிணைபொங்க
மயிர்நுழுதி மருங்குயர்ந்த
தேசுடைய சிகழிகையில்
செறிகண்ணித் தொடைசெருகிப்
பாசிலைமென் கொடியின்வடம்
பயிலநறு விலிபுனைந்து
காசுடைநாண் அதற்கயலே
கருஞ்சுருளின் புறங்கட்டி. **#940**

நறுமணமுடைய மலர்மாலை விளங்கிக்காட்டத், தலையில் நாற்புறமும் உள்ள மயிரினைக் கோதி, தூக்கி மேலே கொண்டையாக முடித்து, அதன் மீது நெருங்கக் கட்டிய கண்ணி மாலையைச் செருகி; அதனுடன் பசிய இலையுடைய கொடியால் மிருதுவான வடமாக முறுக்கி, அவ்வடத்தில் நறுவிலி மலர்களை இடைச்செருகி; அதன்பின் பொன் காசுகள் கட்டிய மாலைக் கயிற்றைக் கரிய கூந்தலின் புறமாகச் சுற்றிக் கட்டி.

விளக்கவுரை

நறுவிலி - முல்லை நிலத்து மலர்களில் ஒருவகையது.

வெண்கோடல் இலைச்சுருளிற்
பைந்தோட்டு விரைத்தோன்றித்
தண்கோல மலர்புனைந்த
வடிகாதின் ஒளிதயங்கத்
திண்கோல நெற்றியின்மேல்
திருநீற்றின் ஒளிகண்டோர்
கண்கோடல் நிறைந்தாராக்
கவின்விளங்க மிசையணிந்து. **#941**

வெண்காந்தள் மரத்தின் நல்ல இலைச்சுருளின் நடுவிலே, பசிய இதழ்களையுடைய நறுமணம் மிக்க செங்காந்தள் மலரை அணிந்த வளைந்த காதின் ஒளி விளங்கத், திண்மையான கோலமுடைய நெற்றியின் மீது அணிந்த திருநீற்றின் ஒளியானது, கண்டோர் கண்கொண்டு காண நிறைவுற்று, இன்னமும் ஆராத வகையாகத் திருமேனி முழுவதும் நிறைய நீறு அணிந்து.

விளக்கவுரை

****

நிறைந்தநீ றணிமார்பின்
நிரைமுல்லை முகைசுருக்கிச்
செறிந்தபுனை வடந்தாழத்
திரள்தோளின் புடையலங்கல்
அறைந்தசுரும் பிசையரும்ப
அரையுடுத்த மரவுரியின்
புறந்தழையின் மலிதானைப்
பூம்பட்டுப் பொலிந்தசைய. **#942**

திருநீறு அணிந்த நிறைவுடைய மார்பில், நிரை யாக முல்லை மலரினைக் கட்டிய நீண்ட வடம் போலும் மாலை தாழ்ந்து விளங்க, பருத்த தோள்களின் மேல் அணிந்த நல்ல மலர் மாலைகளில் மொய்த்து இரையும் வண்டினங்கள் நிறைந்து இசைபாட, திருவரையில் உடுத்த மர உரி ஆடையில், சேர அணிந்த தழைகள் மீது விளங்கிடும் உடையாகிய பூம்பட்டுப் பொலிவுற்று அசைய.

விளக்கவுரை

****

சேவடியில் தொடுதோலும்
செங்கையினில் வெண்கோலும்

மேவுமிசை வேய்ங்குழலும்
மிகவிளங்க வினைசெய்யும்
காவல்புரி வல்லாயர்
கன்றுடைஆன் நிரைசூழப்
பூவலர்தார்க் கோவலனார்
நிரைகாக்கப் புறம்போந்தார். #943

சிவந்த திருவடிகளிற் செருப்பாகப் பொலிகின்ற தோலும், சிவந்த அழகுடைய கைகளிலே வெண்மை நிறமான கோலும், விளங்கிடும் இசையுடைய புல்லாங்குழலும் மிகு விளக்கம் செய்ய, அவரிடத்து ஏவல் புரிகின்ற வலிமையுடைய இடையர்களும், கன்றினை உடைய பசுக் கூட்டமும் சூழ்ந்திட, பூக்கள் மலர்கின்ற மாலையணிந்த கோவலனாராய ஆனாயர், பசுக்களின் நிரைகளை மேய்த்துக் காவல் கொள்ளும்படி வெளியே வந்தருளினார்.

விளக்கவுரை

உச்சி மீது கண்ணியும் மாலையும் சூடி, நறுவிலி புனைந்து, காதில் செங்காந்தள் மலருடன் இணைந்த வெண்காந்தள் இலை அணிந்து, நெற்றியில் திருநீற்றொளி, காண்பார் கண்கொள் ளாக் கவினுடன் திருமேனி முழுவதும் விளங்க, அரையில் மரவுரியும் இலையும் சேர உடுத்த ஆடையில் பூம்பட்டுப் பொலிந்தசைய, கைகளில் வெண்தண்டும் வேய்ங்குழலும் விளங்க, திருவடியில் தோற்செருப்பு அணிந்த சிறந்த கோலமுடன் ஆனாய நாயனார் ஆனிரைகளை மேய்த்துக் காத்திட வெளிப்போந்தார்.

இதனையடுத்து `நீல மாமஞ்ஞை` எனத் தொடங்கும் பாடல், யாப்பு வகையானும், பொருள் வேறுபட்டானும், இடைச் செருகல் எனத் தெளிவாகத் தெரிதலால் அப்பாடல் இப்பதிப்பில் கொள்ளப்படவில்லை.
இந்த ஆறு பாடல்களும் ஒருமுடிபின.

எம்மருங்கும் நிரைபரப்ப
எடுத்தகோல் உடைப்பொதுவர்
தம்மருங்கு தொழுதணையத்
தண்புறவில் வருந்தலைவர்
அம்மருங்கு தாழ்ந்தசினை
அலர்மருங்கு மதுவுண்டு
செம்மருந்தண் சுரும்புசுழல்
செழுங்கொன்றை மருங்கணைந்தார். #944

எப்பக்கத்திலும் பசுக்களின் நிரைகளைப் பரப்பிடும்படி எடுத்த தண்டினையுடைய இடையர் தம் அருகில் தொழுதவாறு வந்திட, குளிர்ந்த முல்லை நிலத்தில் வரும் எம் தலைவ னாராய ஆனாயர், அதன்

அருகில், தாழ்ந்த கொம்பர்களில் அலர்ந்த பூக்களில் தேனை உண்டு களிப்பால் மிகுந்து, குளிர்ந்த வண்டுகள் சுழன்று திரியுமாறு செழித்து வளர்ந்துற்றதொரு கொன்றை மரத்தின் அயலே வந்துற்றார்.

விளக்கவுரை

செம்மரும் - மிகக் களித்து.

சென்றணைந்த ஆனாயர்
செய்தவிரைத் தாமமென
மன்றல்மலர்த் துணர்தூக்கி
மருங்குதாழ் சடையார்போல்
நின்றநறும் கொன்றையினை
நேர்நோக்கி நின்றுருகி
ஒன்றியசிந் தையிலன்பை
உடையவர்பால் மடைதிறந்தார். **#945**

சென்று சேர்ந்த ஆனாய நாயனார், கையால் தொடுத்துச் செய்யப்பட்ட நறுமணமுடைய மாலையினைப் போன்று, நல்ல வாசனையுடைய பூக்கள் மலரும் கொத்துக்களைத் தொங்க விட்டுப், பக்கங்களில் தாழ்ந்து விளங்கும் சடையையுடைய சிவ பெருமானைப் போல் நின்ற நறுமணமிக்க கொன்றை மரத்தின் மலர்ச்சி யின் செவ்விகண்டு, உள்ளம் உருகி, ஒருமைப்பாடு கொண்ட சிந் தையில் பெருகும் அன்பைத், தம்மை உடைய பெருமான்பால் வெள்ள மடைதிறப்பது போன்று திறந்தார்.

விளக்கவுரை

அழகிய நீண்ட தண்டில் கொத்தாக மலர்ந்த பூக்களுடன் எம் மருங்கும் பூமாலை தூக்கியது போல் நின்ற கொன்றை மரத்தின் தன்மையை நோக்கில், அது இறைவனைப் போன்றிருத்தலால், அதனை நேர் நோக்கிய ஆனாயரும், தாமும் உள்ளம் உருகி, அன்பு மலர்ந்து, அன்பாகும் தமது அமுத இசையைத் தம்மை உடையவர் பால் செலவிடுத்தார்.

அன்பூறி மிசைப்பொங்கும்
அமுதஇசைக் குழலொலியால்
வன்பூதப் படையாளி
எழுத்தைந்தும் வழுத்தித்தாம்
முன்பூதி வருமளவின்
முறைமையே யெவ்வுயிரும்
என்பூடு கரைந்துருக்கும்
இன்னிசைவேய்ங் கருவிகளில். **#946**

அன்பு ஊறி, அது, மேலும் பொங்கி எழுகின்ற அமுதம் போலும்

இசையைத் தரும் குழல் ஓசையால், பெரிய பூதங் களின் படைகளையுடைய தலைவனான சிவபெருமானின் எழுத்து கள் ஐந்தையும் போற்றி செய்து, தாம் முன்பு ஊதிவரும் அவ்வளவின் முறையாக, இவ்வுலகில் உள்ள எவ்வுயிர்களின் என்பும் உள்ளே கரைந்து உருகுமாறு செய்யும் இனிய இசையுடைய வேய்ங் குழலாய இசைக் கருவிகளில்.

விளக்கவுரை

****

ஏழுவிரல் இடையிட்ட
இன்னிசைவங் கியமெடுத்துத்
தாழுமலர் வரிவண்டு
தாதுபிடிப் பனபோலச்
சூழுமுரன் றெழநின்று
தூயபெருந் தனித்துளையில்
வாழியநந் தோன்றலார்
மணியதரம் வைத்தூத. **#947**

ஏழு விரல்கள் இடையீடுபடத் துளையிட்ட இனிய ஓசையையுடைய வேய்ங்குழலினை ஆனாய நாயனார் எடுத்துப் பூக்களில் தேனை உண்டிடப் படியும் வண்டு எழுவதும் இருப்பதும் போல, அங்குள்ள துளைகளில் தமது விரல்களை வைத்து, எடுத்துச் சுருதி பெற நிற்றலும் எழுதலும் ஆகிய இத்தன்மைகளைச் செய்து, தூய பெரிய துளையில் பெருவாழ்வுடையராய நம் தலைவர் ஆனாயர், தமது வாயிதழ் மேல் வைத்து ஊத,

விளக்கவுரை

ஏழு விரல்களாவன - இடக்கைப் பெருவிரலும் சிறுவிரலும் நீக்கி, மற்றைமூன்று விரல்களும், வலக்கையில் பெருவிர லொழிந்த நான்கு விரல்களுமாம். ஏழு துளையினும் ஏழு சுரங்களும் ஏழு எழுத்துகளாற் பிறக்கும். அவ்வெழுத்துகளாவன: ச - ரி - க - ம - ப - த - நி - என்பனவாம். இவ்வேழெழுத்தினையும் மாத்திரைப் படுத்தித் தொழில் செய்ய, இவற்றுள்ளே ஏழிசையும் பிறக்கும். முதற்குறிப்பாக அமைந்த இந்த ஏழு எழுத்துகளை விரிப்பின்: சட்சம், இடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் என வரும். மணியதரம் - அழகிய உதடு.

முத்திரையே முதலனைத்தும்
முறைத்தானஞ் சோதித்து
வைத்ததுளை ஆராய்ச்சி
வக்கரனை வழிபோக்கி

ஒத்தநிலை யுணர்ந்ததற்பின்
ஒன்றுமுதல் படிமுறையால்
அத்தகைமை ஆரோசை
அமரோசை களின்அமைத்தார். #948

முத்திரை முதலாக உள்ள ஏழுசுரங்கள் பிறக்கும் இடங்களை முறைப்படி ஆய்ந்து, இசை நூல்களில் விதித்த அளவில், அமைத்து வைத்த ஏனைய துளைகளை ஆராய்ச்சி செய்வதாகிய வக்கரனையின் வழியாக விரல்களை அடிக்கடி எடுத்தும், சமன் செய்தும், இப்படிப் போக்கி, இசை சரியாக ஒத்திருப்பதை உணர்ந்ததற்பின், சட்சம் முதல் நிடாதம் வரையும் ஒன்றின்மேல் ஒன்றாக உயர்ந்து தாழ்ந்திடும் அத்தகைய ஆரோசை அமரோசைகளில் அமைத்தருளி,

விளக்கவுரை

வக்கரனை வழிபோக்கி - எல்லா இராகங்களும் குழ லின் ஏழு துவாரங்களாலேயே உண்டாகும்படி விரல்களை முறையே செலுத்திச் சமன்செய்து சோதித்தல். ஒன்றுமுதல் படிமுறை - சட்சம் முதல் நிடாதம்வரை உள்ள ஏழு சுரங்களின் படி முறையாகிய வரிசை. முத்திரைக் கடுத்த துளை சட்சம். ஆரோசை ஏற்றுதல், அம ரோசை இறக் குதல். இவற்றை முறையே ஆரோகணம் அவரோகணம் என்பர்.

மாறுமுதற் பண்ணின்பின்
வளர்முல்லைப் பண்ணாக்கி
ஏறியதா ரமும்உழையும்
கிழமைகொள இடுந்தானம்
ஆறுலவுஞ் சடைமுடியார்
அஞ்செழுத்தி னிசைபெருகக்
கூறியபட் டடைக்குரலாங்
கொடிப்பாலை யினில்நிறுத்தி. #949

மாறிவரும் சுரங்களையுடைய குறிஞ்சிப் பண்ணின் பின், முல்லைப் பண்ணாகச் சுரங்களை அமைத்துப், பாலை யாழுக்கமைந்த தாரமும், உழையும் இசைக் கிழமை கொள்ளும்படி இடுகின்ற தானங்களில், கங்கையாறு உலவுகின்ற சடைமுடியையுடைய சிவபெருமானது ஐந்து எழுத்தாய திருப்பெயரின் இசை பெருகும்படிச் சொல்லப்பெறும் இளியைக் குரலாக உடைய கொடிப் பாலையில் நிறுத்தி.

விளக்கவுரை

தாரம் - உச்ச விசை. அது மூக்காலுண்டாவது. உழை - தலையை இடமாக உடைய இசை. கொடிப்பாலை - நெஞ்சை இடமாக உடைய இசை. கொடிப்பாலையினில் நிறுத்தி - கொடிப்பாலை என்பது

பாலையாழ் வகைபலவற்றுள் ஒன்று. அவை குரல் குரலாயது செம் பாலை; துத்தங்குரலாயது படுமலைப் பாலை; கைக்கிளை குரலாயது செவ்வழிப் பாலை; உழை குரலாயது அரும்பாலை; இவற்றினை அமைத்துப் பின்னர் இளி குரலாய கொடிப் பாலையினில் இடுந்தானம் நிறுத்தி என விளக்குவர் சிவக்கவிமணியார் *(பெ-உரை).*

ஆயஇசைப் புகல்நான்கின்
அமைந்தபுகல் வகையெடுத்து
மேயதுளை பற்றுவன
விடுப்பனவாம் விரல்நிரையில்
சேயவொளி யிடையலையத்
திருவாள னெழுத்தஞ்சுந்
தூயஇசைக் கிளைகொள்ளுந்
துறையஞ்சின் முறைவிளைத்தார். **#950**

சொல்லப் பெறும் சிறந்த இசையின் புகல் நான்கி லும் கொடிப்பாலைக்கமைந்த கூறுபாட்டை எடுத்துச் சுரம் எழும்பும் ஏழு துளைகளிலும், விரல்களைப் பொத்துவதும், விடுப்பதுமாகிய வரிசையாகும் செயலினால், இசையின் செவ்விய ஒலி இடையே மேலோங்கி விளங்கிட, சிவபெருமானின் திருவைந்தெழுத்தினையும் தூய்மையான இசையின் ஏற்ற பகுப்பினைக் கொள்கின்ற ஆயத்தம், எடுப்பு, உற்கிரகம், சஞ்சாரம், இடாயம் எனும் ஐந்து துறைகளும் இனிமையுடன் விளங்கிட முறைமைப்படுத்தி.

விளக்கவுரை

இசைப்புகல் நான்கு - பண், பண்ணியல், திறம், திறத்திறம் என்பன. ஆயத்தம் - மந்தரத்தினின்றும் அனுமந்தரமாகிய கீழ்ஸ்தாயி வரை சென்று முன் தானத்தில் வந்து முடிவது. எடுப்பு - மந்தரத் திலிருந்து பஞ்சமம் வரை போய் மீண்டும் மந்தரத்தில் வந்து முடிவது. உற்கிரகம் - மந்தரம் முதல் தாரத்தானம் வரை போய் மீண்டும் மந்திரத்தில் வந்து முடிவது. சஞ்சாரம் - மந்தரத்திலிருந்து மத்திமம், தாரம் ஆகிய இரண்டினும்போய் இறங்கிக் கீழ்ஸ்தாயியான அனுமந்தரத்திற் சென்று மீண்டு மந்தரத்தில் வந்து நிற்பது. இடாயம் - மந்தரத் தானத்தையே முதன்மையாகச் செய்து கொண்டு, மத்திமம், தாரம் இரண்டினும் சென்று, பின்பு மந்தரத்தையே வலியுறுத்தி அனுமந் தரத்தில் சென்று மீண்டும் மந்தரத்தில் வந்து முடிவது என விளக்கம் காண்பர் சிவக்கவிமணியார் *(பெ-உரை).*

மந்தரத்தும் மத்திமத்தும்
தாரத்தும் வரன்முறையால்
தந்திரிகள் மெலிவித்தும்

சமங்கொண்டும் வலிவித்தும்
அந்தரத்து விரல்தொழில்கள்
அளவுபெற அசைத்தியக்கிச்
சுந்தரச்செங் கனிவாயும்
துளைவாயும் தொடக்குண்ண. #951

மந்தரம், மத்திமம், தாரம் இவைகளில் வரன் முறை யாக அவைகளுக்கு ஏற்றபடி, சுரத்தானத்திற்குரிய துளைகளை மெலி வித்தும் சமன் கொண்டும் வலிஉடையதாகச் செய்வித்தும், இடைப் பட்ட துளைகளில் கொண்ட விரல்களின் போக்கினை அளவுபெற அமைத்து இயக்கியும், அழகிய அவரது செங்கனிபோலும் வாயை யும், துளைவாயையும் வைத்து ஒன்றாகக் கூட்டி இணங்க.

விளக்கவுரை

மந்தரம் - மெலிவு. மத்திமம் - சமன். தாரம் - வலிவு. இவை ஓசை பேதங்கள். இவற்றை முறையே படுத்தலோசை, நலித லோசை, எடுத்தலோசை என்றும் கூறுவர். தந்திரி என்றது இங்குக் குழலிசைக் கருவிக்கேற்பத் துளைகளைக் குறித்தது; ஆகுபெயர். அந்தரம் - இடையிட்ட துளைகள். துளைவாய் - குழலின் துளைவாய். குழலின் எட்டுத் துளைகளில் விரல்கள் வைத்து இயக்கி, சுரங்களைக் காட்டும் ஏழு துளைகள் போக, வாய் வைத்து ஊதும் எட்டாவது துளை. இவையும் சிவக்கவிமணியார் (பெ-உரை) உரையில் கண்டது.

எண்ணியநூற் பெருவண்ணம்
இடைவண்ணம் வனப்பென்னும்
வண்ணஇசை வகையெல்லாம்
மாதுரிய நாதத்தில்
நண்ணியபா ணியலும்
தூக்குநடை முதற்கதியில்
பண்ணமைய எழுமோசை
எம்மருங்கும் பரப்பினார். #952

இசைநூல்களில் அளவுபடுத்திய பெருவண்ணம்,- இடைவண்ணம், வனப்பு வண்ணம் எனும் இசைக்குரிய வண்ணங் களின் வகை எல்லாவற்றையும் சேர விளக்கிடும் பெரிய இனிய நாதத்தில் அமைந்த தாளமும், இசையும், தூக்கும், நடை முதலான கதிகளுடன், பண் அமைந்திடும்படி வரும் ஓசையை எப்பக்கங்களிலும் பரவச் செய்தார்.

விளக்கவுரை

பெருவண்ணம், நெட்டெழுத்துக்களையே தொடுத்துப் பாடுவது எனவும், இடைவண்ணம் இடையெழுத்து மிகுதியும் வருவது எனவும், வனப்பு

வண்ணம், எழுத்துக்கள் ஒன்றினோ டொன்று பிளவு படாமல் இசைந்து அழகு பொருந்த வருவது எனவும் கூறுப. இவ்வேழு பாடல்களும் ஒருமுடிபின.

வள்ளலார் வாசிக்கும்
மணித்துளைவாய் வேய்ங்குழலின்
உள்ளுறைஅஞ் செழுத்தாக
ஓங்கியெழும் மதுரவொலி
வெள்ளநிறைந் தெவ்வுயிர்க்கும்
மேலமரர் தருவிளைதேன்
தெள்ளமுதின் உடன்கலந்து
செவிவார்ப்ப தெனத்தேக்க. **#953**

வள்ளலாராய ஆனாயர் வாசிக்கின்ற அழகிய துளையாய வாயினையுடைய வேய்ங்குழலில், திருவைந்தெழுத்தினை உள்ளுறையாகக் கொண்டு, ஓங்கி எழுகின்ற இனிய ஒலியின் வெள்ளம், எங்கும் பரந்து நிறைந்து எவ்வுயிர்கட்கும் மேலான வானில் உள்ள தேவர்களது கற்பக மரத்தில் விளைகின்ற தேனினைத் தெள்ளிய அமுதத்துடன் கலந்து அவர்களது செவியில் வார்ப்பது போலத் தேக்கிடலும்.

விளக்கவுரை

****

ஆனிரைகள் அறுகருந்தி
அசைவிடா தணைந்தயரப்
பானுரைவாய்த் தாய்முலையில்
பற்றுமிளங் கன்றினமும்
தானுணவு மறந்தொழியத்
தடமருப்பின் விடைக்குலமும்
மான்முதலாம் கான்விலங்கும்
மயிர்முகிழ்த்து வந்தணைய. **#954**

முன், புல் அருந்திய பசுக்கூட்டங்கள் இவ்வோசை யைக் கேட்ட அளவில், பின் அசை விடாமல் ஆனாயர்பால் அணைந்து மெய்ம்மறப்ப, தாய்ப்பசுவிடம் பால் உண்ணும் நுரை யுடைய வாயால் தாயின் மடியைப் பற்றி உண்கின்ற இளங் கன்று களின் இனமும் தமது மிக இன்பமாய தாய்ப்பால் உணவினை மறந்து நீங்கி இசையின் வயப் பட, வலிய கொம்பினை உடைய காளை களும், மான்முதலாக உள்ள காட்டு விலங்குகளும் இவ்விசையைக் கேட்டு மயிர் முகிழ்த்து வந்து அணைய.

விளக்கவுரை

****

ஆடுமயில் இனங்களும்அங்
கசைவயர்ந்து மருங்கணுக
ஊடுசெவி யிசைநிறைந்த
உள்ளமொடு புள்ளினமும்
மாடுபடிந் துணர்வொழிய
மருங்குதொழில் புரிந்தொழுகும்
கூடியவன் கோவலரும்
குறைவினையின் துறைநின்றார். #955

ஆடுகின்றமயில் இனங்களும் தம் ஆடலை மறந்து அணையவும், காதூடு சென்ற இசையமுதம் நிறைந்த உள்ளத்துடன் பறவைகளின் இனமும் பக்கத்தில் வந்து தமது உணர்வு ஒழிந்திடவும், அவர் அருகில் கோல்தொழில் புரிந்து பசுநிரைகாக்கும் வலிமையுடன் கூடிய இடையர்களும் தாம் எடுத்த செயலை மறந்து குறைவினையாக விடுத்து நின்ற நிலையில், இசை கேட்டு மெய்ம் மறந்து உருகி நின்றனர்.

விளக்கவுரை

இம்மூன்றுபாடல்களும் ஒருமுடிபின.

பணிபுவனங் களிலுள்ளார்
பயில்பிலங்கள் வழியணைந்தார்
மணிவரைவாழ் அரமகளிர்
மருங்குமயங் கினர்மலிந்தார்
தணிவிலொளி விஞ்சையர்கள்
சாரணர்கின் னரர்அமரர்
அணிவிசும்பில் அயர்வெய்தி
விமானங்கள் மிசையணைந்தார். #956

நாகர் உலகில் உள்ளார்கள், தாங்கள் முன்பு மேல் எழுந்து வரப் பயின்ற பாதாள வழிகள் ஊடாக இங்கு வந்தார்கள். மணிகள் விளையும், மலையில் வதிகின்ற தேவமகளிர் இசையால் மயங்கியவாறு வந்து பலராகத் திரண்டனர். குறைவிலாத ஒளி வடிவாய விஞ்சையர்கள், சாரணர், கின்னரர், தேவர்கள் யாவரும் தாம் தாமும் வாழும் இடங்களிலிருந்து இசை வயப்பட்டவர்களாய் மெய்ம்மறந்து தமது வான ஊர்திகளின் வழியாக இங்கு வந்தார்கள்.

விளக்கவுரை

பயில்பிலங்கள் - பழகியவழிகள். பணிபுவனம் - நாக லோகம். விஞ்சையர்கள் - வித்தியாதரர். சாரணர் - இயக்கர்; பதி னெண் வகை தேவகணத்தவருள் ஒருவகையினர்.

கின்னரர் - இசை வல்ல தேவ கணங்களில் ஒரு வகையினர்.

சுரமகளிர் கற்பகப்பூஞ்
சோலைகளின் மருங்கிருந்து
கரமலரின் அமுதூட்டுங்
கனிவாய்மென் கிள்ளையுடன்
விரவுநறுங் குழலலைய
விமானங்கள் விரைந்தேறிப்
பரவியஏழ் இசையமுதஞ்
செவிமடுத்துப் பருகினார். **#957**

தேவப் பெண்கள் கற்பகப் பூஞ்சோலைகளின் அருகில் இருந்து மலர் போன்ற தம் கைகளில் வைத்து அமுதூட்டு கின்ற சிவந்த வாயையுடைய கிளிகளுடன், திகழும் நறுமணமிக்க கூந்தல் அவிழ்ந்திட, வானவூர்தியில் ஏறி, ஆனாயர்பால் வந்து, அவர் பெருக்கிப் பரப்பிய ஏழிசையின் அமுதத்தைப் பருகினர்.

விளக்கவுரை

****

நலிவாரும் மெலிவாரும்
உணர்வொன்றாய் நயத்தலினால்
மலிவாய்வெள் ளெயிற்றரவம்
மயில்மீது மருண்டுவிழும்
சலியாத நிலைஅரியுந்
தடங்கரியும் உடன்சாரும்
புலிவாயின் மருங்கணையும்
புல்வாய புல்வாயும். **#958**

உலகத்தில் வலிமையுடையவராய்ப் பிறரைத் துன்புறுத்துவாரும், அவரால் துன்பப்படுவாரும், தமது உணர்வு எல்லாம் இசை மயமாய் அதனையே நயத்தலினால், நஞ்சு மலிந்த வெண்பற்களை உடைய பாம்புகள் தமது பகையான மயிலின் மீது மருண்டு விழும். சலிப்படையாத சிங்கமும், அதன் பகையாய பெருத்த யானையும் உடன் சேர்ந்து வரும். புலிவாயின் அருகில், புல்லை மேய்ந்து அதனை வாயில் கொண்ட சிறுமானும் அணையும்.

விளக்கவுரை

புல்வாய - புல்லைவாயிலுடைய. புல்வாய் - மான்.

மருவியகால் விசைத்தசையா
மரங்கள்மலர்ச் சினைசலியா

கருவரைவீழ் அருவிகளுங்
கான்யாறுங் கலித்தோடா
பெருமுகிலின் குலங்கள்புடை
பெயர்வொழியப் புனல்சோரா
இருவிசும்பி னிடைமுழங்கா
எழுகடலு மிடைதுளும்பா. **#959**

நிலவி வரும் காற்று விரைவாக வீசாது. மரங்களில் உள்ள கிளைகளும் அசையா. கருமலையில் நின்றும் வீழ்கின்ற அருவி யாறுகளும், காட்டாறுகளும், ஒலித்து ஓடாவாயின. பெருமுகிலின் குலங் கள் யாவும் பெயர்ந்து எழுகின்ற தமது செயல் ஒழிய, மழை பொழியா வாயின. பெருவானத்திடையே இடி முதலிய முழக்கங்கள் எழாவாயின. எழுகடலின் இடையாக யாதோர் அலையும் தோன்றாது அசைவற்று நின்றன.

விளக்கவுரை

****

இவ்வாறு நிற்பனவுஞ்
சரிப்பனவும் இசைமயமாய்
மெய்வாழும் புலன்கரண
மேவியவொன் றாயினவால்
மொய்வாச நறுங்கொன்றை
முடிச்சடையார் அடித்தொண்டர்
செவ்வாயின் மிசைவைத்த
திருக்குழல்வா சனையுருக்க. **#960**

மணம் பொருந்திய அழகிய கொன்றை மாலை யைச் சூடிய சடையையுடைய பெருமானின் திருவடித் தொண்டராய ஆனாயர், தம் செவ்விய திருவாயின்மீது வைத்து ஊதிய திருவுடைய வேய்ங்குழலின் வாசனையாய இசையமுதம், உள்ளங்களை உருக்கி ஒன்றாக்கியமையால், இவ்வாறு நிற்பனவும் இயங்குவனவுமாய உயிரினங்கள் யாவும், இசை மயமாய்த் தத்தம் உடம்பில் வாழ்கின்ற பொறிகள், கரணங்கள் யாவும் ஒன்றாக இசையப் பெற்றன.

விளக்கவுரை

****

மெய்யன்பர் மனத்தன்பின்
விளைத்தஇசைக் குழலோசை
வையந்தன் னையும்நிறைத்து
வானந்தன் வயமாக்கிப்

பொய்யன்புக் கெட்டாத
பொற்பொதுவில் நடம்புரியும்
ஐயன்தன் திருச்செவியின்
அருகணையப் பெருகியதால். #961

மெய்யன்பராய ஆனாயரின் மனத்தில் பொருந்திய அன்பால் விளைந்த இசையையுடைய குழல் ஓசையானது, இந்நில வுலகம் முழுவதையும் நிறைத்து, வான் உலகத்தினையும் தனது வசமாக் கிப் பொய்ம்மையான அன்பினால் எட்டுதற்கரிய பொற் சபையில் நடனம் செய்யும் எம் ஐயனுடைய திருச்செவியின் அருகில் அணை யுமாறு பெருகிற்று.

விளக்கவுரை

ஒலியலைகள் யாண்டும் பரவி நிறைந்து பின் நுண்மையவாய் அடங்கும். இவ்வாறு உலகியல் வயப்பட்ட ஒலிகள் உலகில்பரவி ஒடுங்கும். ஆனாயரின் குழலோசையோ, அன்பு மீதூர எழுந்த ஐந்தெழுத்து ஓசையாதலின், மண்ணுலகிலும், விண்ணுலகிலும் மட்டுமன்றி இறைவனின் திருச்செவியிலும் பெருகிற்று.

ஆனாயர் குழலோசை
கேட்டருளி அருட்கருணை
தானாய திருவுள்ளம்
உடையதவ வல்லியுடன்
கானாதி காரணராம்
கண்ணுதலார் விடையுகைத்து
வானாறு வந்தணைந்தார்
மதிநாறும் சடைதாழ. #962

ஆனாய நாயனாரின் குழலிசையைக் கேட்டருளி, அருள் வயத்ததாய கருணையையே திருவுள்ளமாகக் கொண்டிருக் கும் தவக் கொடியாய உமையம்மையாருடன், இசைக்கலைக் கெல் லாம் மூலகாரணராய கண்ணுதற் கடவுள், தமது ஆனேற்றைச் செலுத்தி, தமது அழகுடைய இனிமை மணக்கும் இளம்பிறை அணிந்த திருச்சடை தாழ்ந்திட, வான்வழியாக அவ்விடத்து வந்தணைந்தார்.

விளக்கவுரை

****

திசைமுழுதுங் கணநாதர்
தேவர்கட்கு முன்நெருங்கி
மிசைமிடைந்து வரும்பொழுது
வேற்றொலிகள் விரவாமே
அசையவெழுங் குழல்நாதத்

தஞ்செழுத்தால் தமைப்பரவும்
இசைவிரும்புங் கூத்தனார்
எழுந்தருளி யெதிர்நின்றார். **#963**

எல்லாத் திசைகளினின்றும் கணநாதர்கள் தேவர்களுக்கு முன்னாக நெருங்கி வானிடமாக வரும் பொழுது, வேறோசைகள் அங்கு அணுகாதவாறு தம் உள்ளம் உருகி இசைக்கும் குழல் ஒலியில், ஐந்தெழுத்தை அமைத்துத் தம்மைப் போற்றிடும் ஆனாய நாயனாரின் முன்பு, இசையை விரும்பும் கூத்தப் பெருமான் எழுந்தருளி அவர் எதிர் நின்றார்.

விளக்கவுரை

****

முன்னின்ற மழவிடைமேல்
முதல்வனார் எப்பொழுதும்
செந்நின்ற மனப்பெரியோர்
திருக்குழல்வா சனைகேட்க
இந்நின்ற நிலையேநம்
பாலணைவாய் எனஅவரும்
அந்நின்ற நிலைபெயர்ப்பார்
ஐயர்திரு மருங்கணைந்தார். **#964**

முன்னாக ஆனேற்றின்மீது அமர்ந்தருளிவந்த முதல்வனாராய சிவபெருமான், செவ்விதாய மனமுடைய ஆனாய நாயனாரின் வேய்ங்குழலின் வாசித்தலை எக்காலத்தும் கேட்டருள விரும்பி, அவரை நோக்கி, `இங்கு நீ நின்ற இந்நிலையேயாக எம் முடன் அணைந்து வந்திடுவாய்`, எனத் திருவருள் புரிந்திடலும், அதனைக் கேட்டருளிய ஆனாய நாயனாரும் தாம் அங்கிருந்தும் பெயர்ந்து, தலைவராய பெருமானாரின் அருகணைந்தார்.

விளக்கவுரை

****

விண்ணவர்கள் மலர்மாரி
மிடைந்துலக மிசைவிளங்க
எண்ணிலரு முனிவர்குழாம்
இருக்குமொழி எடுத்தேத்த
அண்ணலார் குழற்கருவி
அருகிசைத்தங் குடன்செல்லப்
புண்ணியனார் எழுந்தருளிப்
பொற்பொதுவின் இடைப்புக்கார். **#965**

இந்த அற்புதம் கண்டு, தேவர்கள் சொரியும் மலர் மழை நெருங்கி உலகிடத்து விளங்கவும், எண்ணற்கரிய முனிவர் கூட்டம், மறைமொழி கொண்டு போற்றிடவும், ஆனாயர் தமது வேய்ங் குழலிசையை இசைத்த வண்ணம் உடன் செல்லவும், புண்ணி யராய பெருமானார் அவ்விடத்தினின்றும் எழுந்தருளிச் சென்று பொன்னம்பலத்தின் புகுந்தருளினார்.

விளக்கவுரை

****

தீதுகொள் வினைக்கு வாரோம்
செஞ்சடைக் கூத்தர் தம்மைக்
காதுகொள் குழைகள் வீசும்
கதிர்நில விருள்கால் சீப்ப
மாதுகொள் புலவி நீக்க
மனையிடை இருகாற் செல்லத்
தூதுகொள் பவராம் நம்மைத்
தொழும்புகொண் டுரிமை கொள்வார். **#966**

செஞ்சடை மிளிர நின்றாடும் கூத்தனை, அன்று ஒருநாள் அவர் தம் திருக்காதில் அணிந்த தோடுகள் வீசும் ஒளியின் நிலவு, இருளை அகற்ற, பரவையார்பால் கொண்ட புலவியை நீக்குதற்கு, அவர்தம் திருமாளிகைக்கு இருமுறை தூது செல்லுமாறு எம்பெருமானை வேண்டிக்கொள்பவராய சுந்தரமூர்த்தி சுவாமிகள், உண்மையில் எம்மைத் தொண்டு கொண்டு தமக்கு ஆளாய எம்மை உரிமை கொள்பவராயிருத்தலின், இனி, தீமைகொண்டு எம்மை இன்னமும் பிறவி வயப்படுத்தித் துன்பப்படுத்தும் ஒரு வினையை முடித்துள்ளதை நாம் புரிந்து, அதனால் மேலும் ஒரு பிறவி எடுக்கும் நிலைக்கு ஒருபோதும் வரமாட்டோம்.

விளக்கவுரை

வகை நூலில் `பித்தா பிறைசூட` *(தி.7 ப.1 பா.1)* எனத் தொடங்கும் திருப்பதிகக் கருத்தை நினைவு கூர்ந்து வணக்கங் கூறியிருப்ப, விரிநூலில் இறைவன் அவருக்குத் தூது கொண்ட எளிமையை நினைந்து வணக்கங் கூறப்பட்டுள்ளது.

மூர்த்தி நாயனார் புராணம்

சீர்மன்னு செல்வக் குடிமல்கு
சிறப்பின் ஓங்கும்
கார்மன்னு சென்னிக் கதிர்மாமணி
மாட வைப்பு
நார்மன்னு சிந்தைப் பலநற்றுறை
மாந்தர் போற்றும்
பார்மன்னு தொன்மைப் புகழ்பூண்டது
பாண்டி நாடு. **#967**

சீர் விளங்கும் செல்வக் குடிகள் விளங்கும் சிறப்பில் ஓங்கியதும், மேகங்கள் தங்கும் உச்சியையும் உயர்ந்த ஒளியை யுடைய மணிமாடங்களால் சிறந்து விளங்குவதும், அன்பு பொருந்திய சிந்தையுடையவரும் பல நல்ல அறிவுத் துறைகளில் துறைபோய புலமை சான்றவர்களும் ஆய மாந்தர்கள் வாழ்வதும், பலரும் போற்றும் பெரும் புகழைப் பண்டு தொட்டே பெற்றுச் சிறந்திருப்பதும் பாண்டிநாடாகும்.

விளக்கவுரை

தொன்மையாய புகழ் - `பாண்டி நாடே பழம்பதி யாகவும்`*(தி.8 ப.2 வரி 118)* என்றருளிய புகழ்.

சாயுந் தளிர்வல்லி மருங்குல்
நெடுந்த டங்கண்
வேயும் படுதோளியர் பண்படும்
இன்சொற் செய்ய
வாயும் படும்நீள்கரை மண்பொரும்
தண்பொ ருந்தம்
பாயுங் கடலும்படும் நீர்மை
பணித்த முத்தம். **#968**

அன்பின் தன்மை வாய்ந்த முத்தம், தளிர்களை யுடைய சாயும் கொடிபோலும் சிற்றிடையையும், நெடிய பெரிய கண் களையும், மூங்கிலின் வனப்புடைய மிருதுவாய தோள்களையும் உடைய பெண்களின் பண்ணின் இசை கொண்ட மெல்லிய இன் சொற்களையுடைய வாயினிடத்தும் பொருந்துவன. அதுவன்றி, நீண்ட கரையில் உள்ள மண்ணுடன் பொருது புரளும் அலைகளை யுடைய தாமிரபரணி ஆறு பாயும் கடலினிடத்தும் உண்டாகின்றன.

விளக்கவுரை

தண் பொருந்தம் - தண்பொருநை என்கிற தாமிரபரணி ஆறு. நீர்மை பணித்த முத்தம் - பெண்களுக்கு ஆகும் பொழுது அன்பின் நீர்மை

கொண்ட முத்தங்கள் எனப் பொருள்படும். கடலுக்கு ஆகும் பொழுது நீரோட்டம் உடைய குளிர்ந்த முத்துக்கள் எனப் பொருள் படும். மக்களின் இன்ப வளமும் பொருள் வளமும் குறித்தவாறு.

மொய்வைத்த வண்டின் செறிசூழல்
முரன்ற சந்தின்
மைவைத்த சோலை மலையந்தர
வந்த மந்த
மெய்வைத்த காலும் தரும்ஞாலம்
அளந்த மேன்மைத்
தெய்வத்தமி ழுந்தருஞ் செவ்வி
மணஞ்செய் ஈரம். **#969**

நறுமணம் பொருந்திய குளிர்ச்சியை, நெருங்கிய வண்டினங்கள் திரண்டு தங்கி இரைகின்ற சந்தன மரங்கள் அடர்ந்த கருமை படர்ந்த சோலைகளையுடைய பொதியமலை தர வந்த மென்மை யாக வீசுகின்ற தென்றற் காற்றும் தரும்; நன்மணத்தை விளைவித்தற் குரிய அன்பினை இந்நிலவுலகை அளந்த மேன்மையுடைய தெய்வத் தமிழும் தரும்.

விளக்கவுரை

செவ்வி மணம் செய் ஈரம் என்பது தென்றற் காற்றுக்கு ஆங்கால், நறுமணம் பொருந்திய குளிர்ச்சி எனும் பொருள்படும். தமிழுக்கு ஆங்கால் நன்மணத்தை விளைவித்ததற்குரிய அன்பு எனப் பொருள்படும். தென்றற் காற்றால் உடலும், தமிழால் உணர்வும் தழைக்குமாறு பெறுதும். புறத்தும், அகத்தும் பொருந்தி நிற்கும் சூழல் குறித்தவாறாம். நன்மணம் - நன்கு கலத்தல்: அன்பின் வழியது உயிர் நிலை யாதலின், ஒருவர், ஒருவரோடு நன்கு மனம் பொருந்தி வாழ் தற்கு அன்பே கருவியாகும். அகவாழ்விற்கு இது பெருங் கருவியாதல் போல, இறையுணர்விற்கும் இதுவே பெருங்கருவியாகும். இதனைப் பெரிதும் விளைவிப்பதும் தமிழேயாகும். ஆதலின் `தெய்வத் தமிழும் தரும் செவ்வி மணம் செய் ஈரம்` என்றார்.

சூழுமிதழ்ப் பங்கய மாகஅத்
தோட்டின் மேலாள்
தாழ்வின்றி யென்றுந் தனிவாழ்வதத்
தையல் ஒப்பார்
யாழின் மொழியிற் குழலின்னிசை
யுஞ்சு ரும்பும்
வாழும் நகரம் மதுராபுரி
என்ப தாகும். **#970**

இத்தகைய பெருமை வாய்ந்த பாண்டிநாட்டில் இதழ்கள் சூழ்ந்த தாமரை

மலர் போல் (அந்நகர் அமைய), அம்மலரில் இடங்கொண்டிருக்கும் திருமகள் போல், அந்நகரில் வாழும் பெண் களது யாழ்போலும் மொழியிலும், கூந்தலிலும், முறையே இசையும் வண்டும் சிறந்து வாழ்கின்ற நகரம் மதுராபுரி என்பதாகும்.

விளக்கவுரை

தாமரை மலர்போல மதுரை விளங்க, அத்தாமரையில் வீற்றிருக்கும் திருமகள் போல அங்குள்ள பெண்கள் வாழ்கின்றனர். அவர்கள் பேச்சு யாழினும் இனியது. அவர்கள் கூந்தலில் வண்டுகள் பொருந்தி வாழ்கின்றன. குலசேகர பாண்டியன் சொக்கநாதரின் ஆணைவழி கடம்பவனத்தில் தோன்றியருளிய சிவலிங்கத் திருமேனி யைக் கண்டு, அவ்விடத்தைக் காடு கெடுத்து நாடாக்கித் திருநகரம் கண்டபோது, சிவபெருமான் திருச்சடையில் தரித்த பிறையினிடத்து உள்ள அமுதைத் *(மதுவை)* தெளித்துத் தூய்மையாக்கிய காரணத் தால் மது எனப் பெயர் பெற்றது என்பர்.

பொன்மயமான சடைமதிக் கலையின் புத்தமு துகுத்தன ரதுபோய்ச்
சின்மயமான தம்மடி யடைந்தார்ச் சிவமய மாக்கிய செயல்போல்
தன்மயமாக்கி யந்நகர் முழுதுஞ் சாந்திசெய் ததுஅது மதுர
நன்மயமான தன்மையான் மதுரா நகரென வுரைத்தனர் நாமம்.
(திருநகரம்கண்ட பட.42) என வரும் திருவிளையாடற் புராணத்தால் இவ்வரலாறு அறியப்படும். இதனால் இத்திருப்பதி மேற்குறித்த மணங்க ளோடு தெய்வமணமுங் கமழும் இயல்பினது என்பதும் பெறப்படும்.

சால்பாய மும்மைத் தமிழ்தங்கிய
அங்கண் மூதூர்
நூல்பா யிடத்தும் உளநோன்றலை
மேதி பாயப்
பால்பாய் முலைதோய் மதுப்பங்கயம்
பாய எங்கும்
சேல்பாய் தடத்தும் உளசெய்யுள்மிக்
கேறு சங்கம். **#971**

புலவர் பெருமக்களால் பாடப்பெறும் செய்யுள்கள் பலவும் அவ்வப்பொழுது சிறப்பாக அரங்கேற்றம் செய்தற்கு இடனாய சங்கங்கள், சிறந்த பண்பாட்டை விளைவிக்கும் இயல், இசை, நாடக மாய முத்தமிழும் நிலைபெற்ற அழகிய அப் பழமையான திருப்பதி யின்கண் நூல்கள் பயிலப் பெறும் இடங்களிலும் உள்ளன. அங்குள்ள வயல்களில் மிகுந்து தவழ்கின்ற சங்குகள், வலிமையுடைய எருமைகள் பாய, அவற்றின் மடியில் இருந்து பெருகிய பால் தேன் தோய்ந்த தாமரைகளில் பாயச் சேல்மீன்கள் எங்கும் பாய்தற்கு இட மாய

குளங்களும் உள்ளன.

விளக்கவுரை

`செய்யுள் மிக்கு ஏறு சங்கம்` - எனும் தொடர் மதுரைக்கு ஆங்கால், செய்யுள்கள் பலவும் ஆராய்தற்கு இடனாய சங்கங்கள் எனப் பொருள்படும். மீன்கள் பாய்கின்ற குளத்திற்கு ஆங்கால், (செய்+உள்+ஏறு+சங்கம்) வயல்களில் பொருந்தி ஏறுகின்ற சங்குகள் எனப் பொருள்படும்.

மந்தாநிலம் வந்தசை பந்தரின்
மாட முன்றில்
பந்தாடிய மங்கையர் பங்கயச்
செங்கை தாங்கும்
சந்தார்முலை மேலன தாழ்குழை
வாள்மு கப்பொற்
செந்தாமரை மேலன நித்திலம்
சேர்ந்த கோவை. **#972**

முத்துக்கள் சேர்த்துக் கோத்த மாலைகள், இனிய தென்றற் காற்று மெல்லிதாக வந்து அசைகின்ற பூப்பந்தராய்ச் சிறந்த மாடங்களின் முற்றத்தில் பந்தாடிய பெண்களுடைய தாமரை மலர் போன்ற செங்கைகள் தாங்கி அப்பிய சந்தனக் குழம்பு சேர்ந்திருக்கும் முலைகள் மேலும் உள்ளன. அதுவன்றித் தாழ்கின்ற குண்டலங்களின் சிறப்பினுடன் ஒளியுடைய பொன்னின் செந்தாமரை போலும் வனப்புடைய அவர்தம் முகத்தின் மேலும் முத்துப் போன்ற வியர்வைத் துளிகள் உள்ளன.

விளக்கவுரை

பெண்கள் மார்பில் முத்து மாலைகளும், அவர் முகத்தில் வியர்வைத் துளிகளும் உள்ளன என்பது கருத்து. நித்திலம் சேர்ந்த கோவை எனும் தொடர் பெண்களின் மார்புக்கு ஆங்கால், முத்துக்கள் சேர்த்துக் கோத்த மாலை என்று பொருள்படும். அவர் முகத்திற்கு ஆங்கால், முத்துப் போன்ற வியர்வைத் துளிகள் என்று பொருள்படும்.

மும்மைப் புவனங்களின் மிக்கதன்
றேஅம் மூதூர்
மெய்ம்மைப் பொருளாந் தமிழ்நூலின்
விளங்கு வாய்மைச்
செம்மைப் பொருளுந் தருவார்திரு
வால வாயில்
எம்மைப் பவந்தீர்ப் பவர்சங்கம்

இருந்த தென்றால். **#973**

அத்தகைய மதுரை மூதூரில், உலகில் மெய்ம்மைப் பொருள் இதுவென்பதை உணர்தற்குரிய தமிழ் நூல்களில் விளங்கும் அழிவற்ற உறுதி பயக்கும் செம்மைப் பொருளைத் தருபவரான இறை வர் எழுந்தருளியிருக்கும் திருவாலவாயில், எம்பிறப்பைத் தீர்ப்பவ ராய அவ்விறைவர் தாமே தலைவராக விளங்கிய தமிழ்ச் சங்கம் இருந்ததென்றால், அந்நகர் மேல் (சொர்க்கம்), நடு (மத்தியம்), அடி (பாதாளம்) யாகிய மூவுலகங்களிலும் சிறந்தது அன்றோ?

விளக்கவுரை

மதுரையில் சங்கம் இருந்தமையை இறையனார் களவியல் உரையாலும், *(இறையனார் - சூ.1 பாயிரம்)* `நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக்கிழி தருமிக் கருளினோன்காண்`*(தி.6 ப.76 பா.3)* என வரும் திருமுறைத் திருவாக்காலும் அறியலாம். தமிழ் நூல்கள், நிலையுடைப் பொருள், நிலையில் பொருள் ஆகிய இரண்டி னையும் விளக்குதற்குப் பெருந்துணையாய் நிற்றலின் `மெய்ம்மைப் பொருளாம் தமிழ்` என்றார். இனி அந்நூற்கள் சிறப்பென்னும் செம் பொருளை அடைதற்கும் துணை நிற்றலின் `தமிழ் நூலின் விளங்கு வாய்மைச் செம்மைப் பொருளும் தருவார்` என்றார். மதுரை ஊர்ப் பெயர். திருஆலவாய் இறைவன் வீற்றிருந்தருளும் திருக்கோயிலின் பெயர்.

அப்பொற் பதிவாழ் வணிகர்குலத்
தான்ற தொன்மைச்
செப்பத் தகுசீர்க் குடிசெய்தவம்
செய்ய வந்தார்
எப்பற் றினையும்அறுத் தேறுகைத்
தேறு வார்தாள்
மெய்ப்பற் றெனப்பற்றி விடாத
விருப்பின் மிக்கார். **#974**

அத்தகைய பொற்புடைய நகரத்தில் வாழும் வணிகர்களது குலத்தில், மிகவும் சிறந்ததென நெடுங்காலமாகச் செப்பத் தகுந்த சீருடைய குடியிலுள்ளோர், செய்த தவத்தின் பயனாகத் தோன்றியவர் ஒருவர். அவர் உலகியல் இன்பமாய எவ்விதப் பற்றி னையும் முற்றும் அறுத்து, ஆனேற்றின்மீது எழுந்தருளியிருக்கும் சிவ பெருமானின் திருவடிகளையே உண்மையான பற்று எனப் பற்றிக் கொண்டு அதனை விடாத விருப்பில் மிகுந்தவர்.

விளக்கவுரை

குலம் -பெரும் பிரிவு; குடி - அதனுட் பிரிவு.

நாளும் பெருங்கா தல்நயப்புறும்
வேட்கை யாலே
கேளுந் துணையும் முதற்கேடில்
பதங்க ளெல்லாம்
ஆளும் பெருமான் அடித்தாமரை
அல்ல தில்லார்
மூளும் பெருகன் பெனும்மூர்த்தியார்
மூர்த்தி யார்தாம். **#975**

அவர், நாளும் பெருமான் மீது பெருங்காதல் சிறக்கும் விருப்பாலே, தம் சுற்றமும் துணைவரும் முதலாய கேடில்லாத பொருள்கள் யாவும், தம்மை முழுமையாக ஆட்கொண்டருளிய சிவபெருமானின் திருவடித் தாமரைகளே என்று கருதியவர், வேறொன்றையும் பற்றாகக் கொண்டவரல்லர். அந்நிலையில் அவர் சிவபெருமானிடத்து மூளும் அன்பு என்னும் வடிவினர். அவர்தம் திருப்பெயர் மூர்த்தியார் என்பதாகும்.

விளக்கவுரை

அவர் வடிவமும் அன்பின் வடிவு *(மூர்த்தி)*, அவர்தம் திருப்பெயரும் மூர்த்தியார் என்பதாம். மூர்த்தி என வருவனவற்றுள் முன்னையது வடிவையும், பின்னையது பெயரையும் குறித்தன. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அந்திப் பிறைசெஞ் சடைமேல்அணி
ஆல வாயில்
எந்தைக் கணிசந் தனக்காப்பிடை
என்றும் முட்டா
அந்தச் செயலி னிலைநின்றடி
யாரு வப்பச்
சிந்தைக் கினிதாய திருப்பணி
செய்யும் நாளில். **#976**

மாலையில் மிளிரும் இளம் பிறையின் கீற்றைச் செஞ்சடைமேல் அணிந்து வீற்றிருந்தருளும் பெருமானுக்கு, அழகிய திருமேனி அணியாக விளங்கச் சந்தனக் காப்பை என்றும் தவறாது சாத்தி, அந்த அற்புதமாய தொண்டின் நிலையில் நின்று, நாள்தோறும் அவர் செய்யும் தொண்டினைக் கண்டுஅடியார்கள் உவந்திடத், தம் மனத்திற்கு இனியதாய அத்திருப்பணியைச் செய்து வரும் நாள்களில்.

விளக்கவுரை

சந்தனக்காப்பு - சந்தனம் கொண்டு இறைவன் திருமேனி முழுவதும்

அணிவது.

கானக் கடிசூழ் வடுகக்கரு
நாடர் காவன்
மானப் படைமன்னன் வலிந்து
நிலங்கொள் வானாய்
யானைக் குதிரைக் கருவிப்படை
வீரர் திண்தேர்
சேனைக் கடலும் கொடுதென்றிசை
நோக்கி வந்தான். **#977**

காட்டினையே தனக்குப் பெரும் அரணாகக் கொண்டு,படை திரட்டி வைத்திருந்த பொல்லாங்கு நிறைந்த கர்நாடக மன்னன் ஒருவன், பாண்டி நாட்டினைக் கைப்பற்ற நினைந்தவனாய், அதற்கெனத் தன் யானை, குதிரை, காலாட்படை, வலிமையுடைய தேர்ப்படை ஆகிய கடல் போன்ற பெருஞ் சேனைகளுடன் தென்திசை நோக்கி வந்தான்.

விளக்கவுரை

வடுகு - ஒரு மொழி*:* அது பேசப்படும் நாடு வடுக நாடு ஆகும். கரிய மண்ணாகிய களிமண் பரப்பினையுடையதாதலின் கருநாடு எனப்பெயர் பெற்றது. இங்குக் குறிக்கப்படும் கர்நாடக மன்னன் களப்பிரனாக இருத்தல் வேண்டும் என்றும்*,* இவனை வென்றவன் பாண்டியன் கடுங்கோன் என்றும்*,* இம்மன்னனின் காலம் கி.பி. *575- 600* வரையிலாகும் என்றும் தி. வி. சதாசிவ பண்டாரத்தார் *(*பாண்டியர் வரலாறு பக்கம் *10,11)* கூறுவர். இராசமாணிக்கனாரும் இக்கருத்தை ஏற்பர். கருவிப்படை - போர் செய்தற்குரிய கருவிகளைக் கொண்ட படை.

வந்துற்ற பெரும்படை மண்புதை
யப்ப ரப்பிச்
சந்தப் பொதியில்தமிழ் நாடுடை
மன்னன் வீரம்
சிந்தச் செருவென்று தன்னாணை
செலுத்து மாற்றால்
கந்தப் பொழில்சூழ் மதுராபுரி
காவல் கொண்டான். **#978**

இவ்வாறு வந்துற்ற பெரும்படையை நிலம் தெரியாதவாறு நெருங்க அணியாகப் பரப்பி, சந்தனச் சோலைகள் நிரம்பிய பொதிய மலையையுடைய தமிழ்நாட்டினை ஆண்டுவந்த பாண்டிய அரசனின் வீரம் சிந்திடுமாறு, போரில் அவனை வென்று, பின்னர்ப் பாண்டிய நாட்டில் தனது ஆணையைச் செலுத்தும் வகையில் மணம் நிறைந்த

சோலை சூழும் மதுரை மாநகரைத் தான் ஆட்சி கொண்டான்.

விளக்கவுரை

சந்தப் பொதியில் - சந்தன மரங்கள் நிறைந்த பொதிய மலை.

வல்லாண் மையின்வண் டமிழ்நாடு
வளம்ப டுத்து
நில்லா நிலையொன்றிய இன்மையின்
நீண்ட மேரு
வில்லான் அடிமைத் திறமேவிய
நீற்றின் சார்பு
செல்லா தருகந்தர் திறத்தினில்
சிந்தை தாழ்ந்தான். **#979**

தன் படையின் வலியால் வண்மை நிறைந்த தமிழ் கொழிக்கும் பாண்டி நாட்டின் வளத்தைப் பெருக்குதலின்றி இவ்வுலகில் நெடிதுவாழ்தலில்லாத நிலைமையைப் பொருந்திய அவ்வன்மையாலே, அவன் நீண்ட மேருமலையை வில்லாக உடைய பெருமானின் அடிமைத் திறம் பொருந்திய திருநீற்றின் சார்பில் தான் ஒழுகிச் சென்றிடாது, சமணர்களது சமயத்தில் தனது சிந்தை தாழ்வுற அதனை மேற்கொண்டான்.

விளக்கவுரை

நில்லாநிலை - இவ்வுலகில் நெடிது வாழ்தலில்லாத நிலை. கருநாடக அரசனாய அவனுக்கு நெடிது வாழும் நிலையின்மை யும், உண்மைப் பொருளாய சிவபெருமானிடம் அன்பு கொள்ளு தற்கு நற்சார்பு, நற்சிந்தனை ஆகியன இன்மையும் உளவாகச், சமண சமயத்தைச் சார்ந்தனன்.

தாழுஞ் சமண்கையர் தவத்தைமெய்
யென்று சார்ந்து
வீழுங் கொடியோன் அதுவன்றியும்
வெய்ய முன்னைச்
சூழும் வினையால் அரவஞ்சுடர்த்
திங்க ளோடும்
வாழுஞ் சடையா னடியாரையும்
வன்மை செய்வான். **#980**

கீழ்நிலையில் செல்லும் சமணர்களாய வஞ்சகரது தவத்தினை மெய் என்று கருதி, அச்சமயத்தில் வீழும் அந்தக் கொடி யோன், தான் கெட்டது மன்றியும், கொடிதாய ஊழ்வினை வயத்தால் பாம்பும், ஒளி பொருந்திய இளம்பிறையும் உடன் வாழும் சடையை யுடைய சிவபெருமானின்

அடியாரையும் வன்செயல்களால் கொடுமை செய்வானாய்,

விளக்கவுரை

****

செக்கர்ச் சடையார் விடையார்திரு
வால வாயுள்
முக்கட் பரனார் திருத்தொண்டரை
மூர்த்தி யாரை
மைக்கற் புரைநெஞ் சுடைவஞ்சகன்
வெஞ்ச மண்பேர்
எக்கர்க் குடனாக இகழ்ந்தன
செய்ய எண்ணி. **#981**

செவ்வானம் போன்ற செஞ்சடையையுடைய வரும், ஆனேற்றை ஊர்தியாகக் கொண்டு ஆலவாயில் அமர்ந் தருளியிருப்பவருமாய முக்கட் செல்வருக்கு அடிமை பூண்ட திருத் தொண்டராம் மூர்த்தியாருக்கு, கறுத்த கல்லை ஒத்த நெஞ்சுடைய வஞ்சகனான கருநாடக அரசன், கொடிய சமணராம் ஈனர்கட்கு உடந்தையாக, அவர்கள் மகிழ்ந்திடுமாற்றால், தனது ஆணையின் வலியால் இகழ்ச்சியான பல செயல்களைச் செய்திட நினைந்து,

விளக்கவுரை

மை கல் புரை - கரிய பெருங்கல்லை ஒத்த. எக்கர் - ஈனர்.

அந்தம் இலவாம் மிறைசெய்யவும்
அன்ப னார்தாம்
முந்தைம் முறைமைப் பணிமுட்டலர்
செய்து வந்தார்
தந்தம் பெருமைக் களவாகிய
சார்பில் நிற்கும்
எந்தம் பெருமக் களையாவர்
தடுக்க வல்லார். **#982**

அதனால் முடிவிலாத பல இழிந்த செயல்களைச் செய்யவும், மூர்த்தியார் தாம், முன்னர்த் தொண்டு புரிந்து வந்த அம்முறையான தம் பணிகளைத் தளர்ச்சியின்றிச் செய்து வந்தார். தாந்தாமும், தத்தம் பெருமைக்கு உற்ற அளவில் தம் பணிகளைத் தலையான செயல்களாகக் கொண்டு செய்துவரும் எந்தம் பெரு மக்களை, அவர்களின் கடமைகளைச் செய்ய விடாது, யார்தாம் தடுத்து விடமுடியும்? ஒருவராலும் தடுக்க இயலாது.

விளக்கவுரை

அறிவிலும் உறுதிப் பாட்டிலும் குறையுடையவன் யாதா னும் ஒரு

பணியை மேற்கொண்டு செய்து வரின், அதனைப் பிறர் கூறும் இகழ்ச்சியாலோ, புறங்கூற்றினாலோ அன்றிப் பிற காரணங்களி னாலோ, அவருக்குச் சலிப்பும், தளர்ச்சியும், ஏற்படச் செய்து அப் பணியைத் தடுத்து விடலாம். மாறாக, உறுதிப்பாடும், பேரறிவும், கருமமே கண்ணாகக் கொள்ளும் கடப்பாடும் உடையாரை எவ்வாற் றானும் அவர் செய்யும் பணியினின்றும் தடுத்து விட முடியாது, ஆதலால் `எந்தம் பெருமக்களை யாவர் தடுக்க வல்லார்?` என்றார். அன்னோரின் பெருமையும், தமக்கு அவர்கள் பால் இருக்கும் ஈடுபாடும் தோன்ற `எந்தம் பெருமக்கள்` என்றார். இம்மூன்று பாடல் களும் ஒருமுடிபின.

எள்ளுஞ்செயல் வன்மைகள் எல்லையில்
லாத செய்யத்
தள்ளுஞ்செய லில்லவர் சந்தனக்
காப்புத் தேடிக்
கொள்ளுந்துறை யும்அடைத் தான்கொடுங்
கோன்மை செய்வான்
தெள்ளும்புனல் வேணியர்க் கன்பரும்
சிந்தை நொந்து. **#983**

இகழ்தற்குரிய வன்மையான கொடுஞ் செயல்கள் பலவற்றையும் அரசன் எல்லையின்றிச் செய்து வந்தும், தம் பணியைக் குறைவின்றிச் செய்துவந்த மூர்த்தியார், இறைவற்குச் சந்தனக் காப்பு அணிவித்தற்கு வேண்டும் சந்தனம் பெறுகின்ற வழிகளையும் அவர் பெற முடியாதவாறு கொடுங்கோல் மன்னனாய அவன், தன் ஆணையால் தடை செய்தான். இத்தகைய நிலையைக் கண்டு கங்கையைச் சடையில் சூடிய பெருமானுக்கு அன்பராய மூர்த்தியாரும் மிகவும் மனம் நொந்து,

விளக்கவுரை

****

புன்மைச் செயல்வல் அமண்குண்டரிற்
போது போக்கும்
வன்மைக் கொடும்பா தகன்மாய்ந்திட
வாய்மை வேத
நன்மைத் திருநீற் றுயர்நன்னெறி
தாங்கு மேன்மைத்
தன்மைப் புவிமன் னரைச்சார்வதென்
றென்று சார்வார். **#984**

கீழான செயல் செய்வதில் வல்லமையுடைய சமணருடன் கூடித், தனது பொழுதினைப் போக்குகின்ற வன்மையான கொடும் பாதகன் மாய்ந்திட, மெய்யான நான்மறைகளில் கூறப்பட்ட நன்மையுடைய

திருநீற்றின் நன்னெறியைத் தாங்கும் மேன்மையாய தன்மையுடைய ஆளும் அரசரை இப்பாண்டி நாடு என்று பெறவுள் ளதோ? என்ற எண்ணமுடையராய்,

விளக்கவுரை

****

காய்வுற்ற செற்றங்கொடு கண்டகன்
காப்ப வுஞ்சென்
றாய்வுற்ற கொட்பிற் பகலெல்லை
அடங்க நாடி
ஏய்வுற்ற நற்சந் தனமெங்கும்
பெறாது சிந்தை
சாய்வுற்றிட வந்தனர் தம்பிரான்
கோயில் தன்னில். **#985**

சுடுதலையுடைய சினங்கொண்ட, கொடிய கரு நாடக அரசன், சந்தனக் கட்டை பெறுதற்கும் இயலாதவாறு செய்யவும், மூர்த்தியார் சென்று, சந்தனக் கட்டை தேடுதலில் அன்றைய பகல் முழு தும் கழிந்தும், எங்கும் பெறமுடியாத நிலையில், தமது மனம் தளர்ந் திடச் சோர்ந்து, தம் பெருமானின் திருக்கோவிலுக்கு வந்தணைந்தார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

நட்டம்புரி வார்அணி நற்றிரு
மெய்ப்பூச் சின்று
முட்டும்பரி சாயினுந் தேய்க்குங்கை
முட்டா தென்று
வட்டந்திகழ் பாறையின் வைத்து
முழங்கை தேய்த்தார்
கட்டும்புறந் தோல்நரம் பென்பு
கரைந்து தேய. **#986**

`அருட் கூத்தியற்றும் பெருமான் அணிதற்குரிய திருமேனிப் பூச்சாகிய சந்தனக் காப்பு அணியும் தொண்டிற்கு, இன்று எனக்குத் தடை நேர்ந்திடினும், கல்லில் தேய்ப்பதற்கு உரிய என் கை தடையின்றி உள்ளது` என்று நினைந்து, வட்டமாகத் திகழ்ந்திருக்கும் சந்தனக் கல்லில் தம் முழங்கையைப் போர்த்த தோல், நரம்பு, எலும்பு எல்லாம் உராய்ந்து கரைந்து தேயுமாறு தேய்த்தார்.

விளக்கவுரை

****

கல்லின்புறந் தேய்த்த முழங்கை
கலுழ்ந்து சோரி
செல்லும்பரப் பெங்கணும் என்பு
திறந்து மூளை
புல்லும்படி கண்டு பொறுத்திலர்
தம்பி ரானார்
அல்லின்கண் எழுந்த துவந்தருள்
செய்த வாக்கு. **#987**

சந்தனக் கல்லின்மேல் வைத்துத் தேய்த்த அவர்தம் முழங்கை குருதி பெருகத், தேய்த்துச் செல்லும் இடம் எங்கும் எலும்பு நொறுங்கி அதனுள் இருந்த (மூளையில் இருந்து வரும்) நரம்பும் வெளிப்படக் கண்ட பெருமான், பொறுத்திலர். அப்பெருமானின் திருவருளால், அவ்விரவின்கண் எழுந்தது வான் வழியாக வருவ தொரு வாக்கு,

அன்பின்துணி வால்இது செய்திடல்
ஐய உன்பால்
வன்புன்கண் விளைத்தவன் கொண்டமண்
எல்லாங் கொண்டு
முன்பின்னல் புகுந்தன முற்றவும்
நீத்துக் காத்துப்
பின்புன்பணி செய்துநம் பேருல
கெய்து கென்ன. **#988**

`ஐயனே! அன்பின் துணிவால் இதனைச் செய்யற்க! உனக்குக் கொடிய துன்பத்தைச் செய்வித்த அக்கொடி யோன் வலிந்து கொண்ட நாடு முழுவதையும் நீயே கொண்டு, முன்பு அவனால் இந்நாட்டில் புகுந்த இன்னல் யாவற்றையும் நீக்கி, உயிர்களைச் செப்பமுறக் காத்து, இதுவரை மேற்கொண்டிருந்த பணியையும் செய்து, பின் நமது பேருலகை அடைந்திடுவாய்,` என்று அருள.

இவ்வண்ணம் எழுந்தது கேட்டெழுந்
தஞ்சி முன்பு
செய்வண்ணம் ஒழிந்திடத் தேய்ந்தபுண்
ஊறு தீர்ந்து
கைவண்ணம் நிரம்பின வாசமெல்
லாங்க லந்து
மொய்வண்ண விளங்கொளி எய்தினர்
மூர்த்தி யார்தாம். **#989**

இவ்வண்ணம் எழுந்த அவ்வானொலியை மூர்த்தியார் கேட்டு, அஞ்சி, முன்செய்த அச்செயலை விடுத்திடலும், அவர் கையில் இருந்த

புண்ணின் ஊறுபாடு எல்லாம் தீர்ந்து முன்பு போல் வனப்பும் மணமும் கமழ நிரம்பியது. அது பொழுது மூர்த்தியார் பேரொளி வடிவாக விளங்கினார்

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

அந்நாள்இர வின்கண் அமண்புகல்
சார்ந்து வாழும்
மன்னாகிய போர்வடு கக்கரு
நாடர் மன்னன்
தன்னாளும் முடிந்தது சங்கரன்
சார்பி லோர்க்கு
மின்னாமென நீடிய மெய்ந்நிலை
யாமை வெல்ல. **#990**

சிவபெருமானிடத்துச் சார்ந்து வாழாதவர்க்கு இவ்வுலக வாழ்வு மின்னல் என யாக்கை நிலையாமை அடையும் என்பது விளங்க, அன்றைய நாள் இரவின் கண், சமணரை அடைக்கல மாகச் சார்ந்து வாழ்கின்ற அரசனாகும் கருநாடக மன்னனும், தன் வாழ்நாள் முடிந்து இறந்தான்.

விளக்கவுரை

`மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ் வார்`(குறள், 3) என்பது அறநூல் துணிபாதலின், இறைவ னைப் பற்றுக் கோடாகக் கொண்டு வாழ்வார்க்கு வாழ்நாள் நீடிக்கும் என்பது பெறுதும்

இவ்வா றுலகத்தின் இறப்ப
உயர்ந்த நல்லோர்
மெய்வா ழுலகத்து விரைந்தணை
வார்க ளேபோல்
அவ்வா றரனார் அடியாரை
அலைத்த தீயோன்
வெவ்வாய் நிரயத் திடைவீழ
விரைந்து வீந்தான். **#991**

மிக உயர்ந்த நல் ஒழுக்கமும், இறையன்பும் உடையார், அழிவிலாத சிவபுரத்திற்கு விரைந்து செல்வாரைப் போல, சிவனடியார்களுக்கு மிகு துன்பத்தை விளைவித்த தீயவனான கரு நாடக மன்னனும், கொடிய நெருப்பின் தன்மை ஒத்த வாயை யுடைய நரகத்திடை வீழ்தற்கு விரைந்து இறந்தான்.

விளக்கவுரை

உயர்ந்த சீலமுடைய நல்லோர், அழிவற்ற பேரின்ப உலகினை

அடைதற்கு விரைந்து போவது போல, கொடியவனான கருநாடக அரசனும், கீழாய நரக உலகத்துப் போதற்கென விரைவில் இறந்தான்.

முழுதும் பழுதே புரிமூர்க்கன்
உலந்த போதின்
எழுதுங் கொடிபோல் பவருட்பட
ஏங்கு சுற்றம்
முழுதும் புலர்வுற் றதுமற்றவன்
அன்ன மாலைப்
பொழுதும் புலர்வுற் றதுசெங்கதிர்
மீது போத. **#992**

வாழ்நாள் முழுமையும் தீய செயல்களையே செய்து வந்த மூர்க்கன் இறக்க, எழுதப் பெறும் கொடி போன்ற எழிலுடைய அவன் தேவியர் உட்பட, கவலையால் சுற்றம் முழுதும் வாடலுற்றனர். மற்று அக்கொடியவினைபோன்று மயங்குதற்குரிய இரவும், சிவந்த ஒளியையுடைய கதிரவன் வரக் கழிந்தது.

விளக்கவுரை

புலர்வுற்றது என வருவனவற்றுள், முன்னையது வருத்தமுற்றது எனப் பொருள்படும். பின்னையது பொழுது புலர்ந்தது எனப் பொருள்படும்.

அவ்வேளையில் அங்கண் அமைச்சர்கள்
கூடித் தங்கள்
கைவேறுகொள் ஈம வருங்கடன்
காலை முற்றி
வைவேலவன் தன்குல மைந்தரும்
இன்மை யாலே
செய்வேறு வினைத்திறஞ் சிந்தனை
செய்து தேர்வார். **#993**

அது பொழுது, அவ்விடத்து அமைச்சர்கள் கூடித், தங்கள் கடமையாகக் கொண்ட இறுதிக் கடன்களைக் காலையில் செய்து, கூரிய வேலையுடைய அவ்வரசனுக்கு மைந்தர்களும் இல்லாமையால், தாம் செய்கின்ற வேறு செயல் திறன்களை ஆராய்ந்தவர்களாய்.

தாழுஞ் செயலின் றொருமன்னவன்
தாங்க வேண்டும்
கூழுங் குடியும் முதலாயின
கொள்கைத் தேனும்
சூழும் படைமன் னவன்தோளிணைக்
காவ லின்றி
வாழுந் தகைத்தன் றிந்தவையகம்

என்று சொன்னார். **#994**

உலகில் ஒழுக்கம் கெட்டு, குடிகள் தாழ்வாகிய செயல்களைச் செய்யாதவாறு, அக்குடிகளைக் கண்காணிக்க ஓர் அரசன் வேண்டும். காரணம், விளைவின் பெருக்கமும் குடிகளின் சிறப்பும் முதலாயின சிறந்திருக்கின்ற நாடாயினும் நீதியை நிலைநாட்ட ஒரு பெரும் படையையுடைய அரசனுடைய தோளிணை களின் காவல் இருந்தாலன்றி இவ்வுலகம் நல்வாழ்வு பெறும் தகைமையுடையதன்று என்று சொன்னார்கள்.

விளக்கவுரை

\`ஆங்கமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே வேந்தமைவு இல்லாத நாடு\` *(குறள், 740)* எனவரும் திருக்குறளை இப்பாடல் நினைவு கூர வைக்கின்றது. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பன்முறை உயிர்கள் எல்லாம் பாலித்து
ஞாலங் காப்பான்
தன்னெடுங் குடைக்கீழ்த் தத்தம் நெறிகளில்
சரித்து வாழும்
மன்னரை யின்றி வைகும் மண்ணுல
கெண்ணுங் காலை
இன்னுயி ரின்றி வாழும் யாக்கையை
ஒக்கும் என்பார். **#995**

பல்வேறு வகையானும் உயிர்கள் எல்லா வற்றையும் காத்து, இந்நிலவுலகைக் காக்கும் தனது வெண்கொற்றக் குடைக்கீழ் உயிர்களைத் தத்தமக்குரிய நெறிகளுக்கு ஏற்ப வாழச் செய்யும் அரசரையின்றி இருக்கும் இம்மண்ணுலகத்தை நினையின், இனிய உயிர் இன்றி வாழும் உடம்பினை ஒத்திருக்கும் இந்த உலகம் எனக் கருதியவர்களாய்.

விளக்கவுரை

\`நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்\` என்னும் புறநானூறு *(புறநா.186)*. \`செயிரிலா உலகினில் சென்று நின்று வாழ், உயிரெலாம் உறைவதோர் உடம்புமாயினான்\` *(கம்பரா.பால.-அரசியல்,10)*எனக் கம்பர், அரசனை உடம்பாகவும் மக்களை உயிராகவும் கூறுவர். உடல் இயங்குதற்கு, உயிர் காரணமாதல் போல, உயிருண்மை தெரிதற்கும் உடல் காரணமாகின்றது. வீட்டு நிலையில் உயிர் தனித்து நின்று பேரின்பம் அடையினும், கட்டு நிலையில் உயிர், உடல் ஆகியவை இரண்டும் ஒன்று; ஒன்றற்கு இன்றியமையாது வேண்டடப் படுவதா யுள்ளன.

`உடம்பொடு உயிரிடையென்ன மற்றன்ன மடந்தையொடு எம்மிடை நட்பு` *(குறள்,1123)* எனத் திருவள்ளுவர் கூறுமாற்றானும் இவ்வுண்மை அறியலாம்.

இவ்வகை பலவும் எண்ணி
இங்கினி அரசர் இல்லை
செய்வகை யிதுவே யென்று
தெளிபவர் சிறப்பின் மிக்க
மைவரை யனைய வேழங்
கண்கட்டி விட்டால் மற்றக்
கைவரை கைக்கொண் டார்மண்
காவல்கைக் கொள்வார் என்று. **#996**

இவ்வகையாக எண்ணியவர்கள், இனி இங்கு அதற்குரிய அரசரும் இல்லை; ஆதலின் இனிச் செய்திடும் வகை இதுவே என்று தெளிந்தவராய்ச், சிறப்பின் மிக்கதொரு கரியமலை போலும் யானையைக் கண்கட்டிவிட்டால், மற்று அப்பெருந் துதிக்கையையுடைய யானையால், கைக்கொள்ளப் பெற்றவரே, இம் மண்ணுலகக் காவலைச்செய்யும் அரசராவர் என அவ்வமைச்சர்கள் துணிந்து.

விளக்கவுரை

பொருட் சிறப்பு அற்ற இவ்விரு பாடல்களும் *(995, 996)* யாப்பு வகையான் வேறு பட்டும், இவற்றின் பொருள் முறையே *994, 997* ஆகிய பாடல்களாலேயே பெறப்பட்டும் இருத்தலின் இவை இடைச் செருகல்களாக இருக்கலாம் எனக் கருதுவர் சிவக்கவிமணி யார் *(பெரிய.பு.உரை).*

செம்மாண்வினை யர்ச்சனை நூன்முறை
செய்து தோளால்
இம்மாநிலம் ஏந்தஒர் ஏந்தலை
யேந்து கென்று
பெய்ம்மாமுகில் போன்மதம் பாய்பெரு
கோடை நெற்றிக்
கைம்மாவை நறுந்துகில் கொண்டுகண்
கட்டி விட்டார். **#997**

சிறந்த நூல்களில் கூறப்பட்டவாறு போற்றி, மழை பொழியும் கருமேகம் போன்ற வடிவுடையதாய மதம் பொழிகின்ற பெருத்த நெற்றிப் பட்டத்தையணிந்த பெரிய யானையை, வெள்ளிய ஆடை கொண்டு அவ்யானையின் கண்ணைக் கட்டி, `இம்மாநிலத்தின் அரசாட்சியைத் தம் தோள் வலியால் தாங்குதற்குரிய ஒரு பெரு மகனாரை ஏந்தி வருக`

எனக் கூறி விடுத்தார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

கண்கட்டி விடுங்களி யானைஅக்
காவல் மூதூர்
மண்கொட்புற வீதி மருங்கு
திரிந்து போகித்
திண்பொற்றட மாமதில் சூழ்திரு
வால வாயின்
விண்பிற்பட வோங்கிய கோபுரம்
முன்பு மேவி. **#998**

கண்கட்டி விடப்பட்ட மதக் களிப்புடைய அவ் யானையும், காவலுடைய மதுரை மூதூரில், மண் எழப் பல வீதிகளின் பக்கமாகச் சுழன்று வந்து, திண்மையான பொற்புடைய பெரு மதில் சூழ்ந்த திருவாலவாய்க் கோயிலில், வானமும் பிற்பட உயர ஓங்கிய கோபுரத்தின் முன்பு சென்று.

விளக்கவுரை

****

நீங்கும்இர வின்கண் நிகழ்ந்தது
கண்ட தொண்டர்
ஈங்கெம்பெரு மான்அரு ளாம்எனில்
இந்த வையம்
தாங்குஞ்செயல் பூண்பன்என் றுள்ளம்
தளர்வு நீங்கிப்
பூங்கொன்றை மிலைந்தவர் கோயிற்
புறத்தின் நிற்ப. **#999**

கழிந்து போன இரவின் கண் நிகழ்ந்த அற்புதச் செய்தியை அறிந்தவராய மூர்த்தி நாயனார், ஈங்கு எம்பெருமானின் அருள் இதுவென்றால், அப்பெருமானின் அருள் வழியே இவ்வுல கினைத் தாங்கி, அரசாளும் செயலை ஏற்றுக் கொள்வேன் என்று, முன்தாம் கொண்ட உள்ளத் தளர்ச்சி நீங்கப் பெற்று, கொன்றைப் பூவைச் சூடிய சடையையுடைய சிவபெருமானின் திருக்கோயிலின் புறத்து நிற்றலும்.

விளக்கவுரை

****

வேழத் தரசங்கண் விரைந்து
நடந்து சென்று

வாழ்வுற் றுலகஞ்செய் தவத்தினின்
வள்ள லாரைச்
சூழ்பொற் சுடர்மாமணி மாநிலந்
தோய முன்பு
தாழ்வுற் றெடுத்துப் பிடர்மீது
தரித்த தன்றே. **#1000**

யானைகளின் அரசாய பட்டத்து யானை, அவ் விடத்திற்கு விரைந்து சென்று, வாழ்வு கொண்ட இவ்வுலகம் செய் திட்ட தவத்தின் பெரும் பேறாகவுள்ள அம்மூர்த்தியாரைத், தனது முகத்தில் சூழ இடப்பெற்ற மணிகள் பதித்த நெற்றிப்பட்டம், இப்பெரு நிலத்தில் தோயுமாறு வணங்கி, தனது துதிக்கையால், அவரை எடுத்துத் தனது பிடரி மீது வைத்துக் கொண்டது.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

மாதங்கம் எருத்தினில் வைத்தவர்
தம்மைக் காணா
ஏதங்கெட எண்ணிய திண்மை
அமைச்ச ரெல்லாம்
பாதங்களின் மீது பணிந்தெழுந்
தார்கள் அப்போ
தோதங்கிளர் வேலையை ஒத்தொலி
மிக்க தவ்வூர். **#1001**

யானை தனது பிடரி மீதில் வைத்த மூர்த்தி நாயனாரைக் கண்டு, தம் நாட்டில் உற்ற தீங்குகள் கெட நினைந்த அமைச்சர்கள் யாவரும், அவர்தம் திருவடிகளில் பணிந்து எழுந் தார்கள். அது பொழுது அவ்வூர், கடல் பொங்கி ஒலிப்பது போன்று மகிழ்ச்சியால் ஒலி மிக்கது.

விளக்கவுரை

மாதங்கம் - யானை.

சங்கங்கள் முரன்றன தாரைகள்
பேரி யோடும்
எங்கெங்கும் இயம்பின பல்லியம்
எல்லை யில்ல
அங்கங்கு மலிந்தன வாழ்த்தொலி
அம்பொற் கொம்பின்
பங்கன்அரு ளால்உல காள்பவர்
பாங்கர் எங்கும். **#1002**

அழகிய பூங்கொடி போலும் சாயலையுடைய அங்கயற் கண்ணியாரை ஒரு கூற்றில் கொண்ட சோமசுந்தரப் பெரு மானின் பேரருளின் திறத்தால், உலகாள்பவராக ஏற்றுக் கொள்ளப் பெற்ற மூர்த்தியாரைச் சூழ, எங்கும் சங்குகள் ஒலித்தன. தாரைகள் ஊதப் பெற்றன. பெரு முரசுப் பறையுடன் எங்கெங்கும் இயங்கள் பல இயம்பின. வாழ்த்தொலிகள் நாற்புறமுமாக மலிந்தன.

விளக்கவுரை

****

வெங்கட்களிற் றின்மிசை நின்றும்
இழிச்சி வேரித்
தொங்கற்சுடர் மாலைகள் சூழ்முடி
சூடு சாலை
அங்கட்கொடு புக்கரி யாசனத்
தேற்றி ஒற்றைத்
திங்கட்குடைக் கீழ்உரி மைச்செயல்
சூழ்ந்து செய்வார். **#1003**

கொடிய கண்களையுடயை யானை மீதிருந்த மூர்த்தியாரை இறக்கித், தேன்பொழியும் நீண்ட ஒளியையுடைய பூமாலைகள் சூழ்வுறும் முடிசூடும் சாலையினிடத்து அழைத்துச் சென்று, அங்கு அழகிய அரியணையில் அவரை அமரச் செய்து, ஒப்பற்ற சந்திர வட்டக் குடைக் கீழ் இருந்து, அவர் அரசாளற்கு உரிய உரிமைச் செயல்கள் பலவற்றையும் எண்ணிச் செய்வார்களாய்,

விளக்கவுரை

****

மன்னுந் திசைவேதியில் மங்கல
ஆகு திக்கண்
துன்னுஞ் சுடர்வன்னி வளர்த்துத்
துதைந்த நூல்சூழ்
பொன்னின் கலசங்கள் குடங்கள்
பூரித்த தூநீர்
உன்னும் செயல்மந் திரயோகர்
நிறுத்தி னார்கள். **#1004**

அரியணையில் அமர்ந்திருக்கும் மூர்த்தியாருக்கு முன்பு உற்ற, கிழக்குத் திசையில் அமைந்த மங்கலம் நிரம்பிய வேள்வி யில், விளங்கிடும் சுடருடைய தீயை வளர்த்து, நூல் சுற்றிய பொற் கலசங்களிலும், குடங்களிலும் நிரப்பப் பெற்ற தூய நீரை, மந்திரங் களை ஓதும் சிறந்த

தேசிகர்கள் நிறுத்தினார்கள்.

விளக்கவுரை

****

வந்துற்றெழு மங்கல மாந்தர்கள்
தம்மை நோக்கிச்
சிந்தைச்சிவ மேதெளி யுந்திரு
மூர்த்தி யார்தாம்
முந்தைச்செய லாம்அமண் போய்முதற்
சைவ மோங்கில்
இந்தப்புவி தாங்கிஇவ் வின்னர
சாள்வ னென்றார். **#1005**

அவண் வந்துற்ற மங்கலச் செயல் புரியும் அம்மக்களை, நோக்கி, சிந்தையில் சிவமே நிலவுகின்ற திருவுடைய அரசர் பெருமானாய மூர்த்தியார், `இதற்குமுன் இங்கு இருந்த சமணக் கொள்கை மறைந்து, எவற்றிற்கும் முதற் பொருளாய சிவபெருமானை அடைதற்குரிய சைவம் ஓங்குவதாயின், இவ்வுலகை ஏற்றுத் தாங்கி இவ்வினிய அரசினை ஆள்வேன்,` என்றார்.

விளக்கவுரை

****

அவ்வாறு மொழிந்தது கேட்ட
அமைச்ச ரோடு
மெய்வாழ்தரு நூலறி வின்மிகு
மாந்தர் தாமும்
எவ்வாறருள் செய்தனை மற்றவை
யன்றி யாவர்
செய்வார் பெரியோய் எனச்சேவடி
தாழ்ந்து செப்ப. **#1006**

அவ்வாறு மூர்த்தியார் மொழிந்தமை கேட்ட அமைச்சர்களுடன், மெய்ம்மையாய நூல்களில் மேம்பட்ட புலமை மிகுந்தோரும் அவரை நோக்கிப் `பெரியீர்! எவ்வாறு நடந்திட வேண்டும் என நீர் அருள் செய்கின்றீரோ மற்று அதனையே அல்லாது வேறு ஒன்றினை இங்கு யார் செய்வார்கள்?` (எவரும் செய்யார்) என்று மூர்த்தியார் சேவடிகளில் தாழ்ந்து வணங்கிக் கூற.

விளக்கவுரை

****

வையம் முறைசெய் குவனாகில்

வயங்கு நீறே
செய்யும் அபிடே கமுமாக
செழுங்க லன்கள்
ஐயன் அடையா ளமுமாக
அணிந்து தாங்கும்
மொய்புன் சடைமா முடியேமுடி
யாவ தென்றார். **#1007**

`இவ்வுலகை யான் அரசு செய்வேன் எனில், பெருமானின் திருமேனியில் விளங்கும் திருநீறே எனக்குச் செய்யும் திருமுழுக்கு (அபிடேகம்) ஆகவும், சிவபெருமானின் அடையாள மாய உருத்திராக்கமாலையே எனக்குச் சிறந்த அணிகலன்கள் ஆகவும், இறைவனின் சிறப்புடைய திருச்சடைமுடியே அணியும் திருவுடைய முடியாகவும், அமையத் தக்கன` என்றார்.

விளக்கவுரை

`மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கு மடியேன்` *(தி.7 ப.39 பா.3)* எனத் தொகை நூல் கூறிய மும்மையை இவ்விரி நூலின்கண் விளங்கக் காண்கின்றோம்.

என்றிவ்வுரை கேட்டலும் எல்லையில்
கல்வி யோரும்
வன்திண்மதி நூல்வளர் வாய்மை
அமைச்சர் தாமும்
நன்றிங்கருள் தானென நற்றவ
வேந்தர் சிந்தை
ஒன்றும்அர சாள்உரி மைச்செய
லான உய்த்தார். **#1008**

என்று கூறிய இவ்வுரையைச் கேட்ட எல்லை யிலாத கல்வி அறிவினை உடையவர்களும், வலிய திண்மையாய மதிநுட்பம் உடையவர்களுமான அமைச்சர்களும், `அரசே! இங்கு அருளிச் செய்த அருளிப்பாடு நன்றேயாம்` என்று கூறி, நற்றவ வேந்தராம் மூர்த்தியாரின் திருவுளப்படி அவர் அரசாள்வதற்குரிய உரிமைச் செயல்கள் யாவற்றையும் செய்தனர்.

விளக்கவுரை

****

மாடெங்கும் நெருங்கிய மங்கல
ஓசை மல்கச்
சூடுஞ்சடை மௌலி யணிந்தவர்
தொல்லை ஏனம்

தேடுங்கழ லார்திரு வாலவாய்
சென்று தாழ்ந்து
நீடுங்களிற் றின்மிசை நீள்மறு
கூடு போந்தார். **#1009**

எப்பக்கமும் நெருங்கிய மங்கலவோசை பெருகிட, சடையையே முடியாகக் கொண்ட மூர்த்தியார், முற்படப் பன்றி வடிவு கொண்டு திருமாலும் தேடிய திருவடிகளையுடைய பெருமானாரின் திருவாலவாய் சென்று தொழுது வணங்கி, அரசாள்வதற்கு உரிமை கொண்டு, நீண்ட பெரும் பட்டத்து யானை மீது ஏறி, பெருவீதி வழியாக உலாப் போந்தனராகி.

விளக்கவுரை

****

மின்னும்மணி மாளிகை வாயிலின்
வேழ மீது
தன்னின்றும் இழிந்து தயங்கொளி
மண்ட பத்திற்
பொன்னின்அரி மெல்லணைச் சாமரைக்
காமர் பூங்கால்
மன்னுங்குடை நீழல் இருந்தனர்
வையந் தாங்கி. **#1010**

மின்னுகின்ற மணிகள் பதித்த மாளிகையின் வாயிலை அடைந்து, யானையினின்று இறங்கி, ஒளி விளங்கும் கொலு மண்டபத்துட் புகுந்து, பொன்னாலாய அரியணையின் மேல், இரு புறமும் வெண்சாமரைகளின் காற்று வீச, இவ்வுலகை ஏற்று, வெண் கொற்றக் குடை நீழலில் அரசு வீற்றிருந்தார் மூர்த்தியார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

குலவுந்துறை நீதி யமைச்சர்
குறிப்பின் வைகக்
கலகஞ்செய் அமண்செய லாயின
கட்டு நீங்கி
நிலவுந்திரு நீற்று நெறித்துறை
நீடு வாழ
உலகெங்கும் நிரம்பிய சைவம்
உயர்ந்து மன்ன. **#1011**

விளங்குகின்ற பல நல்ல அறிவியல் துறைகளில் பயின்று விளங்கிய

அமைச்சர்கள், தம்குறிப்புணர்ந்து ஒழுக, உலகில் இதுகாறும் கலகம் செய்த சமணரின் செயல்களாகும் கட்டுகள் யாவும் நீங்கிட, உலகில் நிலவிய திருநீற்றின் நெறியாய ஒழுக்கம் சிறந்து வாழ, உலகம் எங்கும் நிரம்பிய சைவம், தமது சீலத்தால் உயர்ந்து விளங்கிட.

விளக்கவுரை

****

நுதலின்கண் விழித்தவர் வாய்மை
நுணங்கு நூலின்
பதமெங்கும் நிறைந்து விளங்கப்
பவங்கள் மாற
உதவுந்திரு நீறுயர் கண்டிகை
கொண்ட வேணி
முதன்மும்மையி னால்உல காண்டனர்
மூர்த்தி யார்தாம். #1012

நெற்றிக்கண்ணையுடைய பெருமானின் திருவாயினின்றும் மலர்ந்த நான்மறைகளாய நூல்கள் சிறந்து விளங்க, பிறவிப் பிணி நீங்க உதவும் திருநீறு, உயர்ந்த உருத்திராக்க மாலை, முடிகொண்ட சடை ஆகிய மும்மைப் பொருளாலும் மூர்த்தி நாயனார் உலகினை ஆண்டார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஏலங்கமழ் கோதையர் தந்திறம்
என்றும் நீங்குஞ்
சீலங்கொடு வெம்புலன் தெவ்வுடன்
வென்று நீக்கி
ஞாலந்தனி நேமி நடாத்தி
நலங்கொள் ஊழிக்
காலம்உயிர் கட்கிட ரான
கடிந்து காத்து. #1013

நறுமணம் கமழும் மயிர்ச்சாந்தின் மணம் கொண்ட கூந்தலையுடைய பெண்களிடத்துக் கொள்ளும் விருப்பினை என் றுமே நீங்கியவராய், கொடிய ஐம்புல இன்பங்களையும் பகைவர்களை யும் வென்று நீக்கி, இவ்வுலகம் முழுவதையும் தனியாகச் செலுத்தும் ஆணையில் நிறுத்தி, ஊழிக் காலங்களிலும் உயிர்கட்கு வரும் துயரம் இலவாகப் பாதுகாத்து.

விளக்கவுரை

`மூர்த்தியார் அப்பர் நல்ல துறவறம்` எனத் திருத்தொண்டர் புராணம் கூறுதற்கேற்ப, இவர் நல்ல துறவு நெறியில் வாழ்ந்து அரசளித்தவர்

என்பது இதனால் போதரும்.

பாதம்பர மன்னவர் சூழ்ந்து
பணிந்து போற்ற
ஏதம்பிணி யாவகை இவ்வுல
காண்டு தொண்டின்
பேதம்புரி யாஅருட் பேரர
சாளப் பெற்று
நாதன்கழற் சேவடி நண்ணினர்
அண்ண லாரே. **#1014**

தம்முடைய திருவடிகளை வேற்று நாட்டு அரசர் களும் பணிந்து போற்றிட, இவ்வுலகினைத் துயரம் பற்றாத வகையில் நன்னெறியில் ஆண்டு, திருத்தொண்டினின்றும் மாறிலாத வகையில் அருளரசாகவும் இருந்து, பின்னர்த் தலைவரான சிவபெருமானின் சேவடிகளை அடைந்தனர்.

விளக்கவுரை

****

அகல்பாறையின் வைத்து முழங்கையை
அன்று தேய்த்த
இகலார்களிற் றன்பரை யேத்தி
முருக னாராம்
முகில்சூழ்நறுஞ் சோலையின் மொய்யொளி
மாட வீதிப்
புகலூர்வரும் அந்தணர் தந்திறம்
போற்ற லுற்றாம். **#1015**

அகன்ற சந்தனப் பாறையில் வைத்துத் தம் முழங்கையை அன்று தேய்த்தவரும், வலிமையுடைய போர் வீரம் விளங்கும் யானையால் உலகாளுதற்கெனத் தேர்ந்தெடுக்கப் பெற்ற வருமான அன்பர் மூர்த்தியார் திருவடிகளை வணங்கி, மேகங்கள் சூழும் நறுமணமுடைய சோலைகள் சூழ்ந்த மாடங்களைக் கொண்ட வீதிகளையுடைய திருப்புகலூர் என்னும் பதியில் தோன்றிய அந்தணர் பெருமானாம் முருக நாயனாரின் தொண்டினை இனிப் போற்றல் செய்கின்றேன்.

விளக்கவுரை

****

முருக நாயனார் புராணம்

தாது சூழுங் குழல்மலையாள்
தளிர்க்கை சூழுந் திருமேனி
மீது சூழும் புனற்கற்றை
வேணி நம்பர் விரும்புபதி
சோதி சூழும் மணிமௌலிச்
சோழர் பொன்னித் திருநாட்டுப்
போது சூழும் தடஞ்சோலைப்
பொய்கை சூழும் பூம்புகலூர். #1016

தாதுக்களையுடைய மலர்களைச் சூடிய கூந்தலை யுடைய உமையம்மையாரின் தளிர் போன்ற மென்மையான கைக ளால் சுற்றித் தழுவப்பட்ட திருமேனியையும், கங்கை ஆற்றின் சிறப்புடன் சூழ்ந்து விளங்கிடும் தொகுதியான திருச்சடையையும் உடைய பெருமான் விரும்பி வீற்றிருக்கும் பதியாவது, ஒளிமிக்க மணிமுடியை உடைய சோழஅரசர்களின் காவிரியாற்றின் வளஞ் சிறந்த சோழ நாட்டில், மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த குளங்கள் அமைந்துள்ள புகலூர் என்னும் பதியாகும்.

விளக்கவுரை

பூம்புகலூர் - அழகிய புகலூர். மலர்கள் நிறைந்த திருக் குளங்களால் சூழப் பெற்று அதன் நடுவிற் பூத்த தாமரையெனத் திருக் கோவில் விளங்குதலின் இப்பெயர் பெற்றது என்றலுமாம். இது நன்னிலத்தின் கிழக்கே ஏறத்தாழ ஆறு கிமீ. தொலைவில் உள்ளது.

நாம மூதூர் மற்றதனுள்
நல்லோர் மனம்போல் அவரணிந்த
சேம நிலவு திருநீற்றின்
சிறந்த வெண்மைத் திருந்தொளியால்
யாம இருளும் வெளியாக்கும்
இரவே யல்ல விரைமலர்மேற்
காமர் மதுவுண் சிறைவண்டுங்
களங்க மின்றி விளங்குமால். #1017

புகழ்மிக்க பூம்புகலூரில், நல்ல அடியவர்களின் மனம் போல, அவர்கள் அணிந்த பாதுகாப்பான திருநீற்றின் சிறந்த வெண்மையான திருந்திய ஒளியால், யாமங்களின் கொடிய இரு ளைப் பரப்பிடும் இரவு மட்டுமன்று; வாசனையுடைய மலர்மேல் நல்ல அழகிய தேன் உண்ணும் சிறகுடைய வண்டுகளும் தமது கருமையான களங்கமின்றி விளங்கும்.

விளக்கவுரை

நாமம் - புகழ். `பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்` என்றார் முன்பு;*(தி.12 சரு.1-4 பா.6)* இங்கு, அப் புனிதர்கள் உள்ளம் போல் அணிந்த திருநீறு` என்கின்றார். இங்ஙனம் யாத்திருக்கும் திறம் அறிந்து இன்புறத் தக்கதாகும்.

நண்ணும் இசைதேர் மதுகரங்கள்
நனைமென் சினையின் மருங்கலைய
வண்ண மதுரத் தேன்பொழிவ
வாச மலர்வா யேயல்ல
தண்ணென் சோலை எம்மருங்கும்
சாரும் மடமென் சாரிகையின்
பண்ணின் கிளவி மணிவாயும்
பதிகச் செழுந்தேன் பொழியுமால். **#1018**

பொருந்திய இசையைத் தேர்கின்ற வண்டினங்கள், மலருடைய மென்மையான கொம்பர்களின் அருகில் பறந்திட, இனிமையான தேன் பொழிவன, நறுமணமுடைய அம்மலர்களின் வாய்கள் மட்டுமல்ல; குளிர்ந்த அச்சோலையின் எப்பக்கமும் சார் கின்ற இளமையும் மென்மையும் நிறைந்த நாகணவாய்ப் பறவைகளின் பண்ணிசை பொருந்திய அழகிய வாய்களும், பதிகங்களின் செழுமை மிக்க தேனைப் பொழியும்.

விளக்கவுரை

மலர்கள் தேனைப் பொழிவன, நாகணவாய்ப் பறவை களோ, திருப்பதிகங்களாய தேனைப் பொழிவன. முன்னையது உடற்கும், பின்னையது உயிர்க்கும் பயன் தருவனவாம். சாரிகை - நாகணவாய்பறவை. `தெள்ளும் ஓசைத் திருப்பதிகங்கள் பைங் கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்` *(தி.12 சரு.1-3 பா.8)* என்றார் முன்பு, இங்கு அப்பூவைகள் தாமே பாடுகின்றன என்று கூறுகின்றார். எனவே பறவை இனங்களும் பதிகம் பாட வல்லனவாதலை அறிகின்றோம்.

வண்டு பாடப் புனல்தடத்து
மலர்ந்து கண்ணீர் அரும்புவன
கொண்ட வாச முகையவிழ்ந்த
குளிர்பங் கயங்க ளேயல்ல
அண்டர் பெருமான் திருப்பாட்டின்
அமுதம் பெருகச் செவிமடுக்குந்
தொண்டர் வதன பங்கயமுந்
துளித்த கண்ணீர் அரும்புமால். **#1019**

வண்டுகள் சூழ்ந்து பாடக் குளங்களில் மலர்ந்து கண்ணீர் (கள் + நீர் = கண்ணீர்: தேன்) அரும்புவன, வாசனை கொண்ட முகை அவிழ்ந்து

மலர்ந்த குளிர்ந்த தாமரை மலர்கள் மட்டுமேயல்ல, தேவர் பெருமானாம் சிவபெருமானின் திருமுறைத் திருப்பாடல் களின் அமுதம் பெருகிட, அதனைக் காதால் கேட்டு இன்புறும் தொண் டர்களுடைய முகங்களாய தாமரை மலர்களும் துளித்த கண்ணீரை அரும்புவனவாம்.

விளக்கவுரை

பூம்புகலூரில் உள்ள தாமரை மலர்களேயன்றித் தொண்டர்களின் முகத்தாமரைகளும் கண்ணீர் பொழிவன எனக்கூறு மாற்றான், அவ்வூரின் இயற்கை வளமும், இறையுணர்வும் ஒருங்கு விளங்குகின்றன. கண்ணீர் என வருவனவற்றுள் முன்னையது தேனை யும் பின்னையது கண்களில் வழியும் நீரையும் குறித்தன.

ஆன பெருமை வளஞ்சிறந்த
அந்தண் புகலூ ரதுதன்னில்
மான மறையோர் குலமரபின்
வந்தார் முந்தை மறைமுதல்வர்
ஞான வரம்பின் தலைநின்றார்
நாகம் புனைவார் சேவடிக்கீழ்
ஊன மின்றி நிறையன்பால்
உருகு மனத்தார் முருகனார். **#1020**

இவ்வாறான பெருமையின் வளஞ்சிறந்த புகலூர் எனும் நகரில், பெருமை நிறைந்த மறையவர் குலத்தில் தோன்றியவர், அவர் பழமையான நான்மறைகளின் முதல்வர், ஞானத்தின் முடிவில் நிற்பவர், பாம்பினை அணிந்த சிவபெருமானின் திருவடிக் கீழ் குற்றம் இல்லாத நிறைகின்ற அன்பினால் உருகும் மனத்தினை உடையவர், அவர், முருகனார் எனும் திருப்பெயருடையவர்.

விளக்கவுரை

மோனம் என்பது ஞானவரம்பு *(கொன்றைவேந்.80)* என்பர். எனவே திருவடிகளில் அழுந்தி நிற்பவர் என்பதாம்.

அடைமேல் அலவன் துயிலுணர
அலர்செங் கமல வயற்கயல்கள்
மடைமே லுகளுந் திருப்புகலூர்
மன்னி வாழுந் தன்மையராய்
விடைமேல் வருவார்க் காளான
மெய்ம்மைத் தவத்தால் அவர்கற்றைச்
சடைமேல் அணியத் திருப்பள்ளித்
தாமம் பறித்துச் சாத்துவார். **#1021**

தாமரை இலை மேல் உறங்கிய நண்டு, தனது துயில் நீங்கிட அலரும்

செந்தாமரைகள் மலரும் வயலின்கண், கயல் மீன்கள் மடையின் மீது பாய்ந்திட விளங்கும் திருப்புகலூரில் நிலைபெற்று வாழ்கின்றவராய இம்முருகநாயனார், ஆனேற்றின்மீது இவர்ந்து வரும் சிவபெருமானுக்கு ஆளாகின்ற மெய்ம்மைத் தவத்தின் விளைவால், அவர் தொகுதியான திருச்சடை மேல் அணிவதற்கெனத், திருப்பள்ளித் தாமமாய மலர்களைக் கொய்தெடுத்துச் சாத்திவருவா ராய்,

புலரும் பொழுதின் முன்னெழுந்து
புனித நீரில் மூழ்கிப்போய்
மலருஞ் செவ்வித் தம்பெருமான்
முடிமேல் வான்நீர் ஆறுமதி
உலவு மருங்கு முருகுயிர்க்க
நகைக்கும் பதத்தின் உடன்பறித்த
அலகில் மலர்கள் வெவ்வேறு
திருப்பூங் கூடை களில்அமைப்பார். **#1022**

பொழுது விடிவதற்கு முன்பாக எழுந்து, தூய நீரில் மூழ்கிச் சென்று, தம் பெருமானின் திருமுடிமேல் பிறையுலவும் திருச் சடையிடத்து முகையவிழ்ந்து மலர்கின்ற செவ்வி பார்த்து, எடுத்த அள வற்ற மலர்களை வெவ்வேறாகத் திருப்பூங்கூடைகளில் சேர்ப்பாராய்.

விளக்கவுரை

நகைக்கும் பதம் - மலரும் பதம். மலர் பறிப்பார் கொளத்தக்க நியதிகளைச் சிவகாமியாண்டார் வாயிலாக எறிபத்த நாயனார் வரலாற்றில் *(தி.12. ப.8 பா.9)* விரித்துக் கூறிய ஆசிரியர், இங்குச் சுருங்கக் கூறும் பாங்கு அறியத்தக்கது.

கோட்டு மலரும் நிலமலரும்
குளிர்நீர் மலரும் கொழுங்கொடியின்
தோட்டு மலரும் மாமலருஞ்
சுருதி மலருந் திருவாயில்
காட்டு முறுவல் நிலவலரக்
கனக வரையிற் பன்னகநாண்
பூட்டும் ஒருவர் திருமுடிமேல்
புனைய லாகும் மலர்தெரிந்து. **#1023**

மரத்தின் கொம்பர்களில் மலரும் பூக்களும், நிலத் தில் படர்ந்திருக்கும் செடிகளில் மலரும் பூக்களும், குளிர்ந்த நீரில் மலரும் பூக்களும், செழித்த கொடிகளில் மலரும் பூக்களும், ஆகப் பெருமை பொருந்திய இவ்வகையான மலர்களை எல்லாம், மறைகள் மலரும் திருவாயில் காட்டிடும் சிறந்த புன்முறுவலின் நிலவு அலர்ந் திடக் காட்டி, அம்முறுவலுடன், பாம்பாகும் நாணினைப் பூட்டி, முப் புரம் எரிசெய்த

ஒருவராய பூம்புகலூர்ப் பெருமானின் திருமுடிமேல், சூட்டுதற்காம் மலர் வகைகளைத் தெரிந்தெடுத்து,

விளக்கவுரை

கோடு - கொம்பு. கோட்டுமலர் - மரங்களிற் பூக்கும் மலர்கள்: கொன்றை, மந்தாரம், வேங்கை, சண்பகம் முதலியன. இதனுள் வில்வமும் அடங்கும். நிலமலர் - செடிகளிற் பூக்கும் மலர்கள்: நந்தியாவட்டம், வெள்ளெருக்கு, அலரி, கரந்தை, தும்பை முதலியன. கொடியின் தோட்டு மலர் - கொடிகளிற் பூக்கும் மலர்கள்: மல்லிகை, முல்லை, சாதி முதலியன. நீர் மலர் - நீரிற் பூக்கும் மலர்கள்: தாமரை, நீலம், செங்கழுநீர் முதலியன.

கொண்டு வந்து தனியிடத்தில்
இருந்து கோக்குங் கோவைகளும்
இண்டைச் சுருக்கும் தாமமுடன்
இணைக்கும் வாச மாலைகளுந்
தண்டிற் கட்டுங் கண்ணிகளும்
தாளிற் பிணைக்கும் பிணையல்களும்
நுண்டா திறைக்குந் தொடையல்களும்
சமைத்து நுடங்கு நூன்மார்பர். **#1024**

நுணங்கும் நூல் அணிந்த திருவுடைய மார்பராய முருகனார், கொண்டு வந்து தனியாக ஓரிடத்தில் இருந்து, கோக்கின்ற கோவை மாலைகளும், இண்டை எனும் சுருக்கு மாலைகளும், மலர் களை இணைக்கும் வாசமலர் மாலைகளும், தண்டு போலக் கட்டும் கண்ணிமாலைகளும், மலர்த்தாள்களைச் சேரக்கட்டும் செறிந்த மாலை களும், நுண்ணிய மகரந்தப்பொடி பறக்கும் மலரினைப் பெருகச் சேரக் கட்டும் பெருமாலைகளும் ஆகக் கட்டி அமைத்து.

விளக்கவுரை

கோவை, இண்டை, தாமம், கண்ணி, பிணையல், தொடையல் - இவை மாலைகளின் வகைகளாம்.

ஆங்கப் பணிகள் ஆனவற்றுக்
கமைத்த காலங் களில்அமைத்துத்
தாங்கிக் கொடுசென் றன்பினொடுஞ்
சாத்தி வாய்ந்த அர்ச்சனைகள்
பாங்கிற் புரிந்து பரிந்துள்ளார்
பரமர் பதிகப் பற்றான
ஓங்கிச் சிறந்த அஞ்செழுத்தும்
ஓவா நாவின் உணர்வினார். **#1025**

அவ்விடத்து இவ்வகைகளாலான மாலைகட்டும் பணிகளை உரிய

காலங்களில் அமைத்து, அவற்றைச் சுமந்து சென்று அன்பினோடும் இறைவற்குச் சாத்தி, பொருந்திய நல்ல போற்றி யுரைகளை (அர்ச்சனைகளை) முறைப்படி செய்துவந்தார். அப்பணி யோடு அவர் இறைவனின் பதிகப் பற்றாக விளங்கும் சிறந்த திருவைந் தெழுத்தினை ஓவாது நாளும் ஓதி உணரும் நாவினை உடையவர்.

விளக்கவுரை

ஆறு காலங்களாவன: *(1)* உஷக் காலம் - மறைப்பாற்ற லால் மறைக்கப் பட்டிருக்கும் உயிர்களை அம்மறைப்பினின்றும் *(*இருளினின்றும்*)* வெளிப்படுத்துங் காலம். *(2)* உதய காலம் - உயிர்களுக்கு இருவினைத் தொழில்களைக் காட்டி அவற்றில் விடுங் காலம். *(3)* உச்சிக் காலம் - அவற்றாலாகிய பொருள்களை நுகர்விக்குங் காலம். *(4)* பிரதோட காலம் - நுகர்ந்ததில் செலவானவை போக மிகுதியைக் கணக்கிட்டு வைக்குங் காலம். *(5)* சாயுங் காலம்- கணக்கிட்டு வைத்தவற்றை நீக்குங் காலம். *(6)* அர்த்தயாமம் - தன்வயமிழந்து செயலற்று இருக்குங் காலம். இவ்வாறு விளக்கம் காண்பர் ஆலாலசுந்தரம்பிள்ளையார். பதிகப் பற்றான - திருப்பதிகங் களின் அடிநிலையான, உள்ளுறையான. `வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது நாதன் நாமம் நமச்சி வாயவே`*(*தி.*3* ப.*49* பா.*1)* என்புழிப் போல, திருப்பதிகங்களின் மெய்ப் பொருளாக விளங்குவது திருவைந்தெழுத்தேயாம். இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

தள்ளும் முறைமை ஒழிந்திடஇத்
தகுதி யொழுகு மறையவர்தாம்
தெள்ளு மறைகள் முதலான
ஞானஞ் செம்பொன் வள்ளத்தில்
அள்ளி அகிலம் ஈன்றளித்த
அம்மை முலைப்பால் உடனுண்ட
பிள்ளை யார்க்கு நண்பருமாம்
பெருமை யுடையா ராயினார். **#1026**

நான்மறைகளில் விலக்கியன ஒழித்து, விதித்தவற்றைச் செய்து ஒழுகி வரும் அந்தணர் பெருமானாகிய முருக நாயனார் தாமும், உலகிற்கு உண்மைப் பொருளைத் தெளிவிக்கும் மறைகளில் முதன்மையாகக் கூறப்பட்டிருக்கும் சிவஞானத்தைச் செம்பொன் வள்ளத்தில் எடுத்து, உலகம் யாவற்றையும் பெற்றுக் காத்து வரும் உமையம்மையாரின் திருமுலைப்பாலுடன் சேர உண்ட திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு நண்பராகின்ற பெருமையும் உடையவரானார்.

விளக்கவுரை

****

அன்ன வடிவும் ஏனமுமாய்
அறிவான் இருவர் அறியாமே
மன்னும் புகலூர் உறைவாரை
வர்த்த மான வீச்சுரத்து
நன்னர் மகிழ்ச்சி மனங்கொள்ள
நாளும் பூசை வழுவாமே
பன்னும் பெருமை அஞ்செழுத்தும்
பயின்றே பணிந்து பரவினார். **#1027**

அவர், அன்னப் பறவையின் வடிவும் பன்றியின் வடிவும் கொண்டு அறியத் தலைப்பட்ட அயனும், மாலும் ஆகிய இருவரும் அறியாதவாறு நீண்ட ஒளிவடிவாய் விளங்கிய பெருமான் வீற்றிருக்கும் திருப்புகலூரில் உள்ள வர்த்தமானீச்சரம் என்னும் திருக்கோயிலுக்குள் சென்று, அப்பெருமானைத் தமது உள்ளத்து எழும் நல்ல மகிழ்ச்சியுடைய மனம் கொள்ள, நாள்தோறும் மலர் மாலை தொடுத்து அணிவித்துச் செய்து வரும் வழிபாட்டைத் தவறின்றி நிகழ்த்தியும், பெருமையுடைய திருவைந்தெழுத்தை ஓதியும் வணங்கி வருவாராயினார்.

விளக்கவுரை

வர்த்தமானீச்சரம் - திருப்புகலூர்த் திருக்கோயிலில் இறைவர் கோவிலின் வட கிழக்கில் உள்ள தனிக்கோயில். இது முருக நாயனார் வழிபட்டு வந்த திருக்கோயிலாகும்.
இத் திருக்கோயிலில் முருக நாயனார், திருமாலை தொடுத்து நிற்கும் திருவுருவம் உள்ளது.

அங்கண் அமருந் திருமுருகர்
அழகார் புகலிப் பிள்ளையார்
பொங்கு மணத்தின் முன்செய்த
பூசை அதனாற் புக்கருளிச்
செங்கண் அடலே றுடையவர்தாஞ்
சிறந்த அருளின் பொருளளிக்கத்
தங்கள் பெருமான் அடிநீழற்
தலையாம் நிலைமை சார்வுற்றார். **#1028**

அவ்விடத்து வாழ்கின்ற முருக நாயனார் அழகிய சீகாழியில் தோன்றிய திருஞானசம்பந்தரின் சிவம் பெருக்கும் திரு மணத்தில், தாம் முன் செய்த பூசையின் விளைவால் புகுந்தருளி, சிவந்த கண்களை உடைய ஆனேற்றின் மீது அமர்ந்தருளும் பெருமானின் சிறந்த பொருளாகிய திருவருட் பேற்றை வழங்கும் அப் பெருமானின் திருவடிநிழற்கீழ்ச் சென்று பேரின்பப் பெருவாழ்வைப் பெற்றார்.

விளக்கவுரை

****

அரவம் அணிந்த அரையாரை
அருச்சித் தவர்தங் கழல்நிழற்கீழ்
விரவு புகலூர் முருகனார்
மெய்ம்மைத் தொண்டின் திறம்போற்றிக்
கரவில் அவர்பால் வருவாரைக்
கருத்தில் உருத்தி ரங்கொண்டு
பரவு மன்பர் பசுபதியார்
பணிந்த பெருமை பகர்வுற்றேன். **#1029**

பாம்பணிந்த திருவரையையுடைய பெருமானைப் போற்றி வழிபட்டதன் பயனாக, அவருடைய திருவடிநிழற்கீழ் இன்புற்றிருக்கும் முருக நாயனாரின் உண்மைத் தொண்டின் நெறி யினை வணங்கி, இனி வஞ்சனையிலாத நெஞ்சுடையவர்பால் தோன்றி நிற்கும் சிவபெருமானைத் தமது கருத்தில் கொண்டு, உருத்திர மந்திரம் கொண்டு வழிபட்ட அன்பர் உருத்திர பசுபதி நாயனார் பணிந்த பெருமையைச் சொல்கின்றேன்.

விளக்கவுரை

****

உருத்திரபசுபதி நாயனார் புராணம்

நிலத்தின் ஓங்கிய நிவந்தெழும் பெரும்புனல் நீத்தம்
மலர்த்த டம்பணை வயல்புகு பொன்னிநன் னாட்டுக்
குலத்தி னோங்கிய குறைவிலா நிறைகுடி குழுமித்
தலத்தின் மேம்படு நலத்தது பெருந்திருத் தலையூர். **#1030**

இந்நிலவுலகில் அகன்று மிகப் பரந்து ஓங்கியதாய்ச் சிறந்து எழுகின்ற பெரும் பெருக்குடைய தன் நீரானது, மலர்கள் நிறைந்த குளங்களிலும், பெருகிய நிலமாய வயல்களிலும் சென்று வளம் பெருக்கும் காவிரி ஆற்றின் வளஞ்சிறந்த நல்ல சோழ நாட்டின் கண், குலத்தில் சிறந்தவையாயும் குறைவு ஏதும் இலாத நிறைவுடையவாயும் விளங்கும் குடிகள் நிறைந்திருத்தலாய மேம்பட்ட நலம் சிறந்தது பெரிய திருத்தலையூர் என்னும் ஊராகும்.

விளக்கவுரை

திருத்தலையூர் - இது மயிலாடுதுறையிலிருந்து பேரளத் திற்குப் பேருந்தில் செல்லும் வழியில் உள்ள கொல்லுமாங்குடிக்குக் கிழக்கில் உள்ளது. உருத்திரபசுபதியார் திருவுருத்திரம் எண்ணிய திருக்குளமும் இவ்வூரில் உள்ளது. பணை - பெருமை. `பணையே பிழைத் தல் பெருப்பும் ஆகும்` *(தொல். உரி-41)* என்னும் தொல்காப்பியமும்.

வான்அ ளிப்பன மறையவர் வேள்வியின் வளர்தீ
தேன்அ ளிப்பன நறுமலர் செறிசெழுஞ் சோலை
ஆன்அ ளிப்பன அஞ்சுகந் தாடுவார்க் கவ்வூர்
தான்அ ளிப்பன தருமமும் நீதியுஞ் சால்பும். **#1031**

இப்பதியில் வாழும் அந்தணர் வளர்த்திடும் வேள்வித் தீ, மழையைத் தருவன. நறுமணமுடைய மலர்கள் நிறைந்த செழுஞ் சோலைகள், தேனைக் கொடுப்பன. ஆனினங்கள், மகிழ்ந்து திருமுழுக்குக் கொள்ளும் சிவபெருமானுக்குத் தம் வழிப் பெறத் தரும் ஐம்பொருள்களையும் தருவன. அவ்வூர், அறத்தையும் சால்பையும் அளிக்கின்றன.

விளக்கவுரை

****

அங்கண் மாநகர் அதனிடை அருமறை வாய்மைத்
துங்க வேதியர் குலத்தினில் தோன்றிய தூயோர்
செங்கண் மால்விடை யார்செழும் பொன்மலை வல்லி
பங்க னார்அடி மைத்திறம் புரிபசு பதியார். **#1032**

அருள் நிரம்பிய அப்பெருநகரில், அரிய மறைப் பொருளையுணர்ந்த உயர்ந்த மறையவர் குலத்தினில் தோன்றிய தூய வாழ்வுடையார் ஒருவர்; அவர் சிவந்த கண்களையுடைய ஆனேற்றில்

இவர்ந்தருள்பவரும், செழித்த பொன்மலையான இமயத்தில் பூங் கொடி போலும் வடிவுடைய பார்வதியம்மையாரை ஒரு கூற்றில் உடையவருமான சிவபெருமானுக்குத் தொண்டு புரியும் தன்மை உடைய பசுபதியார் என்னும் பெயருடையவர்.

விளக்கவுரை

துங்கம் - உயர்வு

ஆய அந்தணர் அருமறை உருத்திரங் கொண்டு
மாய னார்அறி யாமலர்ச் சேவடி வழுத்தும்
தூய அன்பொடு தொடர்பினில் இடையறாச் சுருதி
நேய நெஞ்சின ராகிஅத் தொழில்தலை நின்றார். **#1033**

அத்தகைய நாயனார், அரிய மறைப் பொருளாய உருத்திர மந்திரத்தைக் கொண்டு, திருமாலும் பன்றியாய்ச் சென்று உணராச் சேவடியைப் போற்றிடும் தூயதான அன்புடன், இடையறாது அவ்வுருத்திர மந்திரத்தை எண்ணுதலையே விரும்பிய நெஞ்சினராகி, அதனையே ஓதுகின்ற பணியில் தலை நின்றார்.

விளக்கவுரை

ருத் - துன்பம்: திரன் - நீக்குபவன். எனவே உயிர்கட் குற்ற துன்பத்தை நீக்குபவன் உருத்திரன் என்பது விளங்கும். மும்மூர்த் திகளுள் உருத்திரர் ஒருவராயினும், ஈண்டு அப்பெயர் சிவபெரு மானையே குறிக்கின்றது. அப்பெருமானைப் பற்றிய மந்திரமே திரு வுருத்திரமாகும். மறைகள் நான்கேனும், அதர்வணத்தை நீக்கி மூன் றென்றலே மரபு. அம்மும்மறைகளுள் யசுர் நடுவணதாகும். இது ஏழு காண்டங்கள் உடையது. இவற்றுள் நடுவணதாய பதினோராவது அநுவாகத்தின் நடுவணதாய ஆறாவது சூக்தத்தில் விளங்குவது இவ் வுருத்திரமந்திரமாகும். இதன் நடுவுள் விளங்குவதே சிவாயநம எனும் திருவைந்தெழுத்தாகும். இதன் நடுவாக இருப்பது `சிவ` என்ப தாகும். இதுபோன்ற நம் தமிழ்மறையும் தேவாரமும் திருவாசகமு மாகும். இவற்றையருளிய ஆசிரியன்மார்கள் நால்வராவர். இவர்கள் அருளியனவும் நான்மறை எனப்படும். இவற்றுள் தேவாரம் மும் மறைகள் எனப்படும். இவற்றின் இடையில் உள்ளது திருக் குறுந்தொகையாகும். இதன் நடுவில் இருக்கும் *51*ஆவது திருப்பதிகம் திருப்பாலைத் துறைப் பதிகமாகும். இதன் நடுவுள் இருக்கும் ஆறாவது திருப்பாடல்,

விண்ணினார் பணிந்தேத்த வியப்புறும்
மண்ணினார் மறவாது சிவாய என்று
எண்ணினார்க்கு இடமா எழில் வானகம்

பண்ணினார் அவர் பாலைத் துறையரே. -*தி.5 ப.51 பா.6*
என்பதாகும். இவ்வரிய மந்திரத்தை உள்ளடக்கிய திருவுருத் திரத்தையே இவர் வழுத்தி வருவாராயினர். இதுபற்றியே உருத்திர பசுபதியார் எனவும் அழைக்கப் பெற்றார்.

கரையில் கம்பலை புள்ளொலி கறங்கிட மருங்கு
பிரச மென்சுரும் பறைந்திடக் கருவரால் பிறழும்
நிரைநெ டுங்கயல் நீரிடை நெருப்பெழுந் தனைய
விரைநெ கிழ்ந்தசெங் கமலமென் பொய்கையுள் மேவி. **#1034**

பறவைகளின் ஒலிகள் அளவற்று ஒலிக்க, அருகே மெல்லிய ஓசையுடன் தேன் உண்ணும் வண்டினம் பாட, கரிய வரால் மீன்கள் வரிசை பெறச் செல்கின்ற கயல் மீன்களுடன் பிறழ்ந்திட, நீரிடை நெருப்பு எழுந்தால் போலும் நறுமணம் நிகழும் மென்மை யான செந்தாமரை மலர்களையுடைய குளத்துள் இறங்கிச் சென்று.

விளக்கவுரை

நீரிடை நெருப்பெழுந்தனைய செங்கமலம், நிறப் பண்பால் உவமையாயிற்று. `நீத்துடை நெடுங்கயம், தீப்பட மலர்ந்த, கடவுள் ஒண்பூ அடைதல் ஓம்பி` *(பெரும்பாண் - 289, 290),(தி.1 பதி.82 பா.6)* `சேலாகிய பொய்கைச் செழுநீர்க் கமலங்கள், மேலால் எரிகாட்டும் வீழிமிழலையே` என வருவனவும் காண்க.

தெள்ளு தண்புனல் கழுத்தள வாயிடைச் செறிய
உள்ளு றப்புக்கு நின்றுகை யுச்சிமேல் குவித்துத்
தள்ளு வெண்டிரைக் கங்கைநீர் ததும்பிய சடையார்
கொள்ளு மன்பினி லுருத்திரங் குறிப்பொடு பயின்றார். **#1035**

தெளிந்த குளிர்ந்த குளத்தின் நீரில், கழுத்தின் அளவாயிடும் ஆழத்தில் நின்று, கைகளை உச்சிமேற்குவித்து, வெண் திரைகளையுடைய கங்கை நீர் பொங்கி நிறைந்த சடையையுடைய சிவபெருமானை அளவற்ற உருத்திர மந்திரங்களை எண்ணிய குறிப் புடன் ஓதி நின்றார்.

விளக்கவுரை

இடுப்பளவு நீரில் நிற்றலே இயல்புக்கு மாறாயதாம். இதனினும் மேலாகக் கழுத்தளவு நீரில் நின்று இந்நாயனார் எண்ணி யது யோக நிலையின் சித்தியாலாம் என்பர் சிவக்கவிமணியார் *(பெரிய.பு.உரை).*

அரும றைப்பய னாகிய உருத்திர மதனை
வருமு றைப்பெரும் பகலும்எல் லியும்வழு வாமே
திரும லர்ப்பொகுட் டிருந்தவன் அனையவர் சிலநாள்
ஒருமை உய்த்திட உமையிடம் மகிழ்ந்தவர் உவந்தார். **#1036**

அரிய மறைகளின் பயனாய உருத்திர மந்திரத்தை விதிப்படி பகலும்

இரவும் தவறுதல் இலாது, திருவுடைய தாமரை மலரில் இருக்கும்
நான்முகனை ஒத்த அப்பெரியவர் சில நாள்கள் ஒருமையுணர்வுடன்
எண்ணிட, அதனை உமையம்மையை ஒரு கூற்றில் வைத்து
மகிழ்ந்திருக்கும் சிவபெருமான் திருவுளம்பற்றி மகிழ்ந்தார்.

விளக்கவுரை

ஷ்ரீருத்ரம் எனவட மொழியில் அழைக்கப் பெறுவது, தமிழில்
திருவுருத்திரம் என அழைக்கப் பெறுவதாயிற்று.

காதல் அன்பர்தம் அருந்தவப் பெருமையுங் கலந்த
வேத மந்திர நியதியின் மிகுதியும் விரும்பி
ஆதி நாயகர் அமர்ந்தருள் செய்யமற் றவர்தாம்
தீதி லாநிலைச் சிவபுரி எல்லையில் சேர்ந்தார். **#1037**

தம்மீது பெருங்காதலுடைய அன்பர் பசுபதியாரின் அரிய தவத்தின்
பெருமையையும், தன்னுட் கலந்த மறையாய உருத்திரம் ஓதிடும்
நியதியின் வளர்ச்சியையும் திருவுளம் பற்றிய, முதற்பொருளான
சிவபெருமான், விரும்பி அருள் செய்ய, அந் நாயனாரும் தீதிலாத
சிவபுரியின் எல்லையைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

அமர்ந்து - விரும்பி: \`அமர்தல்மேவல்\` *(*தொல்.உரி *82).*

நீடும் அன்பினில் உருத்திரம் ஓதிய நிலையால்
ஆடு சேவடி அருகுற அணைந்தன ரவர்க்குப்
பாடு பெற்றசீர் உருத்திர பசுபதி யாராங்
கூடு நாமமும் நிகழ்ந்தது குவலயம் போற்ற. **#1038**

நீண்ட அன்பினால் உருத்திர மந்திரம் ஓதிய நிலை யால் இறைவனின்
திருவடிகளை அணுக அணைந்தனர். அந்நிலை யில், இதுகாறும் அவர்
உருத்திர மந்திரத்தை நாளும் தவறாது ஓதி வந்தமையால், உலகம் புகழ
அவருக்கு உருத்திர பசுபதியார் எனும் பெயரும் உளதாயிற்று.

விளக்கவுரை

****

அயில்கொள் முக்குடு மிப்படை யார்மருங் கருளால்
பயில்உ ருத்திர பசுபதி யார்திறம் பரசி
எயில்உ டைத்தில்லை யெல்லையில் நாளைப்போ வாராம்
செயல்உ டைப்புறத் திருத்தொண்டர் திறத்தினை மொழிவாம். **#1039**

கூர்மை பொருந்திய முத்தலைச் சூலப்படையை யுடைய
சிவபெருமானின் அருகே, அருளால் விளங்கி வாழ்கின்ற
உருத்திரபசுபதியார் தம் தொண்டின் சீர்மையை வணங்கி, இப்பால்
ஒளியுடைய மதில் சூழ்ந்த தில்லைப் பதியின் எல்லையில் \`நாளைப்

போவேன்` எனச் சொல்லி வாழ்வு பெற்ற திருநாளைப் போவாரின் திறத்தினை இனி மொழிகின்றாம்.

விளக்கவுரை

****

திருநாளைப்போவார் நாயனார் புராணம்

பகர்ந்துலகு சீர்போற்றும்
பழையவளம் பதியாகுந்
திகழ்ந்தபுனல் கொள்ளிடம்பொன்
செழுமணிகள் திரைக்கரத்தால்
முகந்துதர இருமருங்கும்
முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணைநீர் நன்னாட்டு
மேற்கானாட் டாதனுர். **#1040**

உலகம் அதன் சிறப்பினை எடுத்துப் போற்றிடும் படியாக உள்ள பழையதாகிய வளம் மிக்கதோர் ஊர், இடம் அகன்ற வயல் வளமுடைய சோழநாட்டில் மேற்கா நாட்டின்கண் உள்ள ஆதனூர் ஆகும். பெருகிவரும் நீரையுடைய கொள்ளிடப் பேராறு, பொன்னையும், சிறந்த மணிகளையும் தன் அலைகளாகிய கைகளால் அள்ளித்தர, அவற்றை இருமருங்கிலும் மலர்ந்து நிற்கும் தாமரை மலர்கள், தமது இதழ்களாகிய கரங்களால் ஏற்றுச் சிறக்கும் வள முடையதாகும்.

விளக்கவுரை

மேற்காநாடு - சோழ நாட்டின் உள்நாடுகளுள் ஒன்று. கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள கானாட்டுமுள்ளூர், ஓமாம்புலியூர் ஆகிய சிவப்பதிகளுக்கு அருகில் உள்ளது. இன்று ஆதமங்கலம் என வழங்கப் பெறுகிறது. திருப்புன்கூருக்கு அருகிலுள்ள ஊராகக் கொள்வர் சிவக்கவிமணியார் *(பெரிய.பு.உரை).*

நீற்றலர்பே ரொளிநெருங்கும்
அப்பதியில் நிறைகரும்பின்
சாற்றலைவன் குலைவயலிற்
தகட்டுவரால் எழப்பகட்டேர்
ஆற்றலவன் கொழுக்கிழித்த
சால்வழிபோய் அசைந்தேறிச்
சேற்றலவன் கருவுயிர்க்க
முருகுயிர்க்கும் செழுங்கமலம். **#1041**

திருநீற்றின் ஒளி நெருங்கிப் பரந்து காணப் பெறும் அத்திருவுடைய ஆதனூர் என்னும் பதியில், நிறைந்த கருப்பஞ் சாற்றி னால் அலைக்கப்படும் வன்மையான வரம்புகளை (வரப்பு என்பர்) உடைய வயலில், தகட்டு வரால் மீன்கள் துள்ளி எழும்படி, எருமைகள் பூட்டிய கலப்பை செல்லும் வழியில், அக்கலப்பையின் கொழுவினால் கிழிக்கப்பட்ட சால் வழியாக ஊர்ந்து சென்று, சேற்றில் வாழும்

நண்டுகள் தமது கருவினை ஈன, அங்குள்ள தாமரைகள் பூந்தாதுகளைச் சொரிந்து நறுமணத்தை உயிர்க்கும்.

விளக்கவுரை

சாற்று அலைவன் குலை - கருப்பஞ் சாற்றினால் அலைக்கப்பட்ட வரம்பு. குலை - வரம்பு: கரை. குலை - நெற்குலைகள் எனக் கொண்டு, நெல்லும் கரும்பும் வயல்களில் அடுத்தடுத்து மிக விளையும் செழித்த மருத நிலமாதலின் நெற்குலைகள் கருப்பங் காற்றில் அலையும் வயல்கள் என்று உரைப்பாரும் உளர்; சிவக்கவி மணியார் (பெரிய.பு.உரை). நண்டுகள் கருவுயிர்த்தலாலாய தீய மணத்தினை, அங்குள்ள தாமரைகள் போக்கி, நறுமணத்தை உண்டாக் கும். புலைச்சேரியில் தோன்றிய திருநாளைப் போவாரால், அச்சேரி நறுமணம் பெற்றமையைக் குறிப்பால் இந்நிகழ்ச்சி உணர்த்துகின்றது.

நனைமருவும் சினைபொதுளி
நறுவிரைசூழ் செறிதளிரில்
தினகரமண் டலம்வருடும்
செழுந்தருவின் குலம்பெருகிக்
கனமருவி அசைந்தலையக்
களிவண்டு புடைசூழப்
புனல்மழையோ மதுமழையோ
பொழிவொழியா பூஞ்சோலை. **#1042**

அரும்புகள் நிறைந்த கொம்புகள் படர்ந்து, நறு மணம் சூழ்ந்து செறியும் தளிர்களினால், கதிரவனின் மண்டலத்தைத் தடவுவன போன்று உயர்ந்த செழுமை மிக்க மரங்களின் கூட்டங்கள் பெருகி, அவைமீது மேகங்களும் தவழ, அம்மரக் கொம்புகள் அசைந்து அலைவதால், தேன் உண்டு களித்திடும் வண்டுகள் புடையில் சூழ்ந்திட, இத்தகுதியினால் அம்மரங்கள் தம்மிடமுள்ள பூவில் தேனைச் சொரிவனவோ அல்லது மேலுள்ள மேகங்கள் நீரான மழையைப் பொழிவனவோ? என்று ஐயுறற்கு இடனாக, அப்பூஞ் சோலைகள் விளங்குகின்றன.

விளக்கவுரை

தினம் - நாள்: கரன் - செய்பவன்: நாள்தொறும் ஒளி யைச் செய்பவன்; கனம் - மேகம். மேகம் சூழ நிற்றலின் புனல் மழையும், தேன் நிரம்பியிருத்தலின் மது மழையும் ஒருங்கு பொழிய நிற்றலை, ஐயப் பொருள்பட ஆசிரியர் விளக்கியிருக்கும் திறம் அறிந்து இன்புறுதற்குரியதாம்.

பாளைவிரி மணங்கமழும்
பைங்காய்வன் குலைத்தெங்கின்

தாளதிர மிசைமுட்டித்
தடங்கிடங்கின் எழப்பாய்ந்த
வாளைபுதை யச்சொரிந்த
பழம்மிதப்ப வண்பலவின்
நீளமுதிர் கனிகிழிதேன்
நீத்தத்தில் எழுந்துகளும். **#1043**

பாளைகள் விரிந்து கமழ்கின்ற பசிய இளநீர் களையுடைய குலைகள் கொண்ட தென்னை மரங்களின் அடிப் பாகத்தில், அம்மரம் அசையத், தாக்கிய வாளை மீன்கள், தாம் கீழே புதையுமாறு சொரிந்த அத்தென்னை மரத்தில் பழுத்த காய்கள், வளமை நிறைந்த இனிய கனிதரும் பலாமரங்களின் நீண்ட பெரிய பழங்கள் பழுத்து ஒழுகிய சுவையான சாறுகள் நிரம்பிய வெள்ளத்தில் மிதந்திட, அந்த வாளை மீன்கள், மீள அவ்வெள்ளத்தில் குதித்துப் புரளும்.

விளக்கவுரை

வாளை மீன் தன்வலியொன்றுமே கருதித் தன்னினும் உயர்ந்த தென்னை மீது தாக்க, அத்தென்னை தன் முற்றிய காய்களால் அதனை அங்குள்ள சேற்றில் புதையுமாறு செய்தது. அதுகண்ட பலா, தன் கருணை மீதூர்வால் தன் இனிய வளம்மிக்க சாற்றைப் பெருக்கி, அத்தென்னையின் நெற்றை மிதக்கச் செய்து, வாளைமீனைக் காப்பாற் றியது. தப்பிய வாளை, மகிழ்வால், மீண்டும் அச்சாற்று வெள்ளத்தில் குதித்து விளையாடுவதாயிற்று. வலிமையற்றவர்கள் வலிமையுள்ள வர்களிடத்துப் போர் தொடங்கின், அவர் அழிவர் என்பதை, வாளை மீனின் செயல் விளக்கி நிற்கின்றது. `கூற்றத்தைக் கையால் விளித் தற்றால் ஆற்றுவார்க் காற்றாதார் இன்னா செயல்` *(குறள், 894)* எனவரும் திருக்குறட் கருத்தும் காண்க. வாளை, இவ்வாற்றான் துன்புறுதலைக்கண்ட பலா, தன் வளம்மிக்க சாற்றால் பெருக்கெடுத்துத் தேங்காயை மிதக்கச் செய்து அம்மீனைக் காப்பாற்றியது,காலத்தினால் செய்த பேருதவியாகும். அது சிறிது எனினும், ஞாலத்தின் மாணப் பெரிது என்பர் திருவள்ளுவர் *(குறள் 102)*. ஆனால் வாளைக்குப் பலா செய்திருப்பது கைம்மாறு வேண்டாத மிகப்பெரிய உதவியாகும். `என்ஆற்றுங் கொல்லோ உலகு` *(குறள் 211)* என்ற அளவில் நினைக் கத் தகுந்ததாகும். இயற்கை வருணனையினூடே, இத்தகைய அற வுணர்களை அறிவுறுத்தியிருக்கும் திறம் அறிந்து இன்புறத்தக்கதாம்.

வயல்வளமுஞ் செயல்படுபைந்
துடவையிடை வருவளமும்
வியலிடம்எங் கணும்நிறைய
மிக்கபெருந் திருவினவாம்

புயலடையும் மாடங்கள்
பொலிவெய்த மலிவுடைத்தாய்
அயலிடைவே றடிநெருங்கக்
குடிநெருங்கி யுளதவ்வூர். **#1044**

வயலில் வரும் வளங்களும், கைத்தொழில் முயற்சி யினாலாய தோட்டங்களில் வருகின்ற வளங்களும், அகன்ற இடம் எங்கணும் நிறைய, அவற்றால் பெருந் திருவுடையதாகி, மேகங்கள் தங்கும் பெரிய மாடங்கள் பொலிவெய்திட, அவற்றின் அயல் இடங்களில், ஒன்றுடன் ஒன்று நெருங்கிக் காணப்படும் மனைகளுடன் கூடிய குடிகள் நெருங்கிட உள்ளது, அவ் ஆதனூர் என்னும் நகராகும்.

விளக்கவுரை

****

மற்றவ்வூர்ப் புறம்பணையின்
வயல்மருங்கு பெருங்குலையில்
சுற்றம்விரும் பியகிழமைத்
தொழிலுழவர் கிளைதுவன்றிப்
பற்றியபைங் கொடிச்சுரைமேற்
படர்ந்தபழங் கூரையுடைப்
புற்குரம்பைச் சிற்றில்பல
நிறைந்துளதோர் புலைப்பாடி. **#1045**

அவ் ஆதனூரின் வெளிப்புறத்தில் உள்ள வயல் களின் அருகில், சுற்றமுடன் வாழ்வதை விரும்பிய உழவர்களின் கிளைகள் பெருகி, அவ்விடத்துப் பற்றிப் படர்ந்திடும் பசிய கொடி யான சுரை மேலாகக் கூரையில் படர்ந்திட்ட பழங்கூரைகளையுடைய புல்லினால் வேயப்பட்ட சிறிய வீடுகள் பல நிறைந்துள்ளது ஒரு பறையருடைய சேரியாகும்.

விளக்கவுரை

****

கூருகிர்மெல் லடியளகின்
குறும்பார்ப்புக் குழுச்சுழலும்
வார்பயில்முன் றிலில்நின்ற
வள்ளுகிர்நாய்த் துள்ளுபறழ்
காரிரும்பின் சரிசெறிகைக்
கருஞ்சிறார் கவர்ந்தோட
ஆர்சிறுமென் குரைப்படக்கும்
அரைக்கசைத்த இருப்புமணி. **#1046**

அக்குடிசைகளின் ஊடே, கூரிய நகங்களையும் மென்மையான அடியின் அழகினையும் உடைய சிறு கோழிக் குஞ்சுகள் தாய்க் கோழியுடன் சுழன்று இரையுண்டு திரியும். தோல் வார்கள் நீள விரித்திருத்தற்கிடமாகிய முற்றங்களில் வளைந்த நகமுடைய துள்ளி ஒடும் நாய்க் குட்டிகளைக், காப்புக்கள் அணிந்த கைகளையுடைய கறுத்த மேனியையுடைய சிறுவர்கள் பிறர் காணா மல் பிடித்து ஒட, அதனாலே அந்நாய்க்குட்டிகளின் சிறிய ஒசையான குரைப்பின் ஒசையை அடக்கும்படி குலுங்குவன, அப்பிள்ளைகள் அரையில் கட்டிய இரும்பின் மணிச் சதங்கைகள்.

விளக்கவுரை

****

வன்சிறுதோல் மிசையுழத்தி
மகவுறக்கும் நிழன்மருதுந்
தன்சினைமென் பெடையொடுங்குந்
தடங்குழிசிப் புதைநீழல்
மென்சினைய வஞ்சிகளும்
விசிப்பறைதூங் கினமாவும்
புன்றலைநாய்ப் புனிற்றுமுழைப்
புடைத்தெங்கும் உடைத்தெங்கும். **#1047**

வலிய சிறு தோலின் மேலாகக் கிடத்தி, உழத்தியர் தமது குழந்தையை உறங்கும்படி செய்விக்கும் பெரிய நிழல் தரும் மருத மரங்களையும், தனது முட்டைகளை அடைகாக்கும் பெட்டைக் கோழிகள் ஒதுங்குதற்கு இடனாய பானைகள் புதைக்கப்பட்ட நல்ல நிழல் தரும் மென் கொம்பருடைய வஞ்சி மரங்களும், வார் கட்டிய பறைகளைத் தொங்க விடுத்த மாமரங்களும், சிறிய தலையையுடைய நாய்க் குட்டிகள் தரையைப் பறித்து உறங்குதற்கு இடனாய தென்னை மரங்களும் அங்கு எவ்விடத்தும் உளவாம்.

விளக்கவுரை

கோழிகள் தம் முட்டைகளைச் சிதைவுறாது காத்தற்கு இடனாக அகன்றவாயினையுடைய பானைகளை மரநிழலிற் புதைத்து வைப்பர். அவ்வாறு வைத்திருக்கும் பானைகளில் முட்டையிட்டுக் கோழிகள் அடை காத்து நிற்கும். தடங் குழிசி - வாயகன்ற பானைகள்.

செறிவலித்திண் கடைஞர்வினைச்
செயல்புரிவை கறையாமக்
குறியளக்க அழைக்குஞ்செங்
குடுமிவா ரணச்சேக்கை

வெறிமலர்த்தண் சினைக்காஞ்சி
விரிநீழல் மருங்கெல்லாம்
நெறிகுழற்புன் புலைமகளிர்
நெற்குறுபாட் டொலிபரக்கும். **#1048**

தத்தமது வயலில் உரிய செயலினைச் செய்தற்கென வலி செறிந்த திண்மையான உழவர்கள், எழுந்துபோதற்கு, விடியற் காலையின் கால அளவை அளந்து கூவி அழைத்திடும் சிவந்த கொண்டையினை உடைய சேவல்கள் இரவில் தங்கி இருக்கும், தேன் பெருக்கும் மலருடைய குளிர்ந்த கொம்பருடைய காஞ்சி மரத்தின் பரந்த நீழலின் எல்லையின் மருங்கெல்லாம், நெறித்த கூந்தலுடன் சிறப்பாகப் பேணப்படாத தலையையுடைய புலை மகளிர் நெற்குற்றும் பாட்டுக்களின் ஓசை பரந்திடும்.

விளக்கவுரை

நெற்குறு பாட்டு - நெல்லைக் குற்றும்பொழுது பாடும் பாட்டு.

புள்ளுந்தண் புனற்கலிக்கும்
பொய்கையுடைப் புடையெங்கும்
தள்ளும்தாள் நடையசையத்
தளையவிழ்பூங் குவளைமது
விள்ளும்பைங் குழற்கதிர்நெல்
மிலைச்சியபுன் புலைச்சியர்கள்
கள்ளுண்டு களிதூங்கக்
கறங்குபறை யுங்கலிக்கும். **#1049**

பறவைகளும் குளிர்ந்த நீரில் தங்கும் மகிழ்வால் ஒலிக்கும். பெருந் தாமரைக் குளங்களின் பக்க மெங்கும் தள்ளாடு கின்ற தங்கள் காலின் நடை அசைந்திட, முன்பு பறித்துச் செருகிய கருங்குவளை மலர் இதழ் அவிழ்ந்து தேன் சொரியும் கூந்தலில், நெற்கதிர்களைச் சேர அணிந்த புன்மையான பழக்கமுடைய புலையர் பெண்கள்: தாங்கள் இயல்பில் கள்ளுண்டு மகிழ்ந்து ஆடிட, அதற்கிசைய அடித்திடும் பறைகளும் ஓசைமிகுந்து நிற்கும்.

விளக்கவுரை

****

இப்படித்தா கியகடைஞர்
இருப்பின்வரைப் பினின்வாழ்வார்
மெய்ப்பரிவு சிவன்கழற்கே
விளைத்தஉணர் வொடும்வந்தார்
அப்பதியில் ஊர்ப்புலைமை

யான்றதொழில் தாயத்தார்
ஒப்பிலவர் நந்தனார்
எனவொருவர் உளரானார். #1050

இவ்வாறமைந்த புலையர்கள் வாழ்கின்ற அவ்விருப்பிடத்தில் வாழ்பவரும், தம் உண்மையான அன்பைச் சிவ பெருமான் திருவடிக்கே வைத்து வாழும் முன் உணர்வுடையவரும், அப்பதியில் வாழும் ஊரவர்க்கெல்லாம் தம் தொழில் வகையால் உரிமையான நிலமுடைவருமான குற்றமற்ற நந்தனார் என்ற சிறந்த பெயருடைய ஒருவர் வாழ்ந்து வந்தார்.

விளக்கவுரை

****

பிறந்துணர்வு தொடங்கியபின்
பிறைக்கண்ணிப் பெருத்தகைபால்
சிறந்தபெருங் காதலினால்
செம்மைபுரி சிந்தையராய்
மறந்தும்அயல் நினைவின்றி
வருபிறப்பின் வழிவந்த
அறம்புரிகொள் கையராயே
அடித்தொண்டின் நெறிநின்றார். #1051

அவர், தாம் இவ்வுலகில் பிறந்து தமக்கு உணர்வு தெரியத் தொடங்கிய காலமுதலாக, இளம் பிறையையுடைய பெருந் தகையாராகிய சிவபெருமானிடத்துச் சிறந்த பெருங்காதலினால் செம்மை விளைவிக்கும் சிந்தனை உடையவராய், சிவபெருமானை யுணர்கின்ற நினைவன்றி, மறந்தும் வேறொரு நினைப்பின்றி, தாம் முற்பிறவி தோறும் செய்து வந்த நல்வினைத் தொடர்பால், அதன் வழிவந்த அறமே புரிகின்ற கொள்கையராய்ப் பெருமானாருடைய திருவடித் தொண்டின் உண்மை நெறியில் நின்றார்.

விளக்கவுரை

`பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து நின்சேவடியே சேர்ந்தேன்`*(தி.11 அற்புதத். 1)* எனவரும் திருவாக் கும் காண்க.

ஊரில்விடும் பறைத்துடவை
உணவுரிமை யாக்கொண்டு
சார்பில்வருந் தொழில்செய்வார்
தலைநின்றார் தொண்டினால்
கூரிலைய முக்குடுமிப்
படையண்ணல் கோயில்தொறும்

பேரிகையே முதலாய
முகக்கருவி பிறவினுக்கும். #1052

தமக்கென அவ்வூரார் விட்டிருக்கும் பறைத் தொழிலிற்குரிய நிலத்தின் வருவாயைத் தம் உணவிற்கு உரிமையாகக் கொண்டு, அதன் சார்பில் வரும் தமது கடமையைச் செய்வார். பெருமானுக்குச் செய்திடும் தொண்டில் தலையானவர். கூரிய இலை போலும் முத்தலைச் சூலப்படையை ஏந்திய சிவபெருமானுடைய கோயில் தோறும் அங்குள்ள பேரிகை முதலாய தோல் முகமுடைய கருவிகளுக்கும் (மத்தளம் இன்னும் வேறு) பிறவற்றிற்கும்.

விளக்கவுரை

****

போர்வைத்தோல் விசிவார்என்
றினையனவும் புகலுமிசை
நேர்வைத்த வீணைக்கும்
யாழுக்கும் நிலைவகையில்
சேர்வுற்ற தந்திரியும்
தேவர்பிரான் அர்ச்சனைகட்
கார்வத்தி னுடன்கோரோ
சனையும்இவை அளித்துள்ளார். #1053

போர்வைத்தோலும், இழுத்துக் கட்டும் வாரும், மற்றும் இவ்வாறான பொருள்களும், இசையை வழங்கும் சிறப்பு அமைந்த வீணைக்கும், யாழுக்கும் அவ்வவற்றிற்கேற்ற வகையில் சேர்வுற்ற நரம்புகளும், தேவர் பெருமானின் வழிபாட்டிற்கு ஆர்வத்தி னுடன் கோரோசனையும் ஆகிய இவற்றைக் கொடுத்து வந்தார்.

விளக்கவுரை

தந்திரி - இசைக்கருவிகளுக்குரிய நரம்புகள். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

இவ்வகையால் தந்தொழிலின்
இயன்றவெலாம் எவ்விடத்தும்
செய்வனவுங் கோயில்களிற்
திருவாயிற் புறநின்று
மெய்விரவு பேரன்பு
மிகுதியினால் ஆடுதலும்
அவ்வியல்பிற் பாடுதலு
மாய்நிகழ்வார் அந்நாளில். #1054

இவ்வகையாகத் தம் தொழில் வழிப் பெறத் தக்கவான எல்லாவற்றையும்

கோவில்களுக்குச் செய்து, திருக் கோவிலின் திருப்புறவாயிலில் நின்றே பெருமானிடத்துப் பெருகிய பேரன்பின் மிகுதியினால் ஆடுதலும், அவ்வன்பின் மிகுதியால் பாடுதலும் ஆகப் போற்றி வருகின்ற அந்நாள்களில்.

விளக்கவுரை

****

திருப்புன்கூர்ச் சிவலோகன்
சேவடிகள் மிகநினைந்து
விருப்பினொடுந் தம்பணிகள்
வேண்டுவன செய்வதற்கே
அருத்தியினால் ஒருப்பட்டங்
காதனூர் தனில்நின்றும்
வருத்தமுறுங் காதலினால்
வந்தவ்வூர் மருங்கணைந்தார். **#1055**

திருப்புன்கூர் எனும் திருப்பதியின்கண் எழுந் தருளியிருக்கும் சிவலோகநாதப் பெருமானின் திருவடிகளில் மிக அன்பூறி நினைவுற்று அங்குச் சென்று, விருப்பினொடும் தமது பணி களுள் வேண்டுவனவற்றை அங்குச் செய்வதற்கு மனத்தில் கொண்ட காதலினால், சிந்தை ஒருமைப்பட்டு, ஆதனூரினின்றும் புறப்பட்டுச் சென்று, அவ்வூரின் அருகே வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

சீரேறும் இசைபாடித்
திருத்தொண்டர் திருவாயில்
நேரேகும் பிடவேண்டும்
எனநினைந்தார்க் கதுநேர்வார்
காரேறும் எயிற்புன்கூர்க்
கண்ணுதலார் திருமுன்பு
போரேற்றை விலங்கஅருள்
புரிந்தருளிப் புலப்படுத்தார். **#1056**

திருப்புன்கூர் மருங்கே அணைந்த நந்தனார், தாம் கோயிலின் திருவாயிலின் முன்பு நின்று சீர்பெருகும் இசைபாடி, கண்ணால் நேர்பெறக் கண்டு கும்பிட வேண்டும் என நினைந்த வருக்கு, வேண்டியவர்க்கு வேண்டியவாறே அருள் கொடுப்பவராய, மேகம் தவழும் பெருமதில் சூழ்ந்த திருப்புன்கூரின்கண் எழுந்தருளி யிருக்கும் கண்ணுதற் கடவுள், தம் திருமுன் மறைத்திருந்த போர் ஏற்றைச்

(நந்தியை) சிறிது விலகி இருக்குமாறு அருள் செய்து, அதனால் அவருக்குத் தாம் நேரில் காணுமாறு அருள் புரிந்தார்.

விளக்கவுரை

****

சிவலோகம் உடையவர்தம்
திருவாயில் முன்னின்று
பவலோகங் கடப்பவர்தம்
பணிவிட்டுப் பணிந்தெழுந்து
சுவலோடு வாரலையப்
போவார்பின் பொருசூழல்
அவலோடும் அடுத்ததுகண்
டாதரித்துக் குளந்தொட்டார். **#1057**

சிவலோக நாதருடைய திருக்கோவிலின் திருவாயில் முன்னாக நின்று, உலகியற் பிறப்பைக் கடந்திடும் நந்த னார், தாம் இதுகாறும் இறைவனைப் பாடியாடிடும் பணியை நிறைவு செய்து கொண்டு எழுந்து, முதுகில் தூக்கிய வார்களின் பொதி அலையும்படி செல்லும் அவர் அத்திருக்கோயிலின் பின்புறமாக உள்ள ஓர் இடம் பள்ளமாக இருப்பதைக் கண்டு, தம் பெருவிருப்பால் அப்பள்ளத்தினைத் திருக்குளமாக்கினார்.

விளக்கவுரை

தம் பணி - பெருமானைக்கண்ட அளவில் மீதூர்ந்த அன்பினால் பாடியும், ஆடியும் செய்து வரும்பணி. சுவல் - முதுகு. அவல் - பள்ளம்.

வடங்கொண்ட பொன்னிதழி
மணிமுடியார் திருவருளால்
தடங்கொண்ட குளத்தளவு
சமைத்ததற்பின் தம்பெருமான்
இடங்கொண்ட கோயில்புறம்
வலங்கொண்டு பணிந்தெழுந்து
நடங்கொண்டு விடைகொண்டு
தம்பதியில் நண்ணினார். **#1058**

மாலை போன்று பொன்மயமாக மலரும் கொன்றை மலரைச் சூடிய அழகிய முடியுடைய சிவபெருமான் திருவருளால், அகன்ற குளமாக அகழ்ந்து அமைத்த பின், தம் பெருமான் இடம் கொண்ட கோயிலின் புறமாக வலம் கொண்டு பணிந்து எழுந்து கூத் தும் ஆடிப், பெருமானிடம் விடை பெற்றுக்கொண்டு தம் பதியிடத்துச் சேர்ந்தார்.

விளக்கவுரை

வடம் - மாலை.

இத்தன்மை ஈசர்மகிழ்
பதிபலவுஞ் சென்றிறைஞ்சி
மெய்த்ததிருத் தொண்டுசெய்து
விரவுவார் மிக்கெழுந்த
சித்தமொடுந் திருத்தில்லைத்
திருமன்று சென்றிறைஞ்ச
உய்த்தபெருங் காதலுணர்
வொழியாது வந்துதிப்ப. **#1059**

இவ்வாறாக நந்தனார், சிவபெருமான் மகிழ்ந்து உறையும் திருப்பதிகள் பலவும் சென்று வணங்கி, உண்மை நிறைந்த திருத்தொண்டினைச் செய்து வருபவர், ஒருநாள், தம் உள்ளத்துத் தம்மையறியாது மிகுந்து எழுகின்ற வேட்கையால், திருவுடைய தில்லையம்பலத்திற்குச் சென்று வணங்குதற்கு எழுகின்ற பெருங்காதல் ஒழியாது தோன்ற,

விளக்கவுரை

****

அன்றிரவு கண்துயிலார்
புலர்ந்ததற்பின் அங்கெய்த
ஒன்றிஅணை தருதன்மை
உறுகுலத்தோ டிசைவில்லை
என்றிதுவும் எம்பெருமான்
ஏவலெனப் போக்கொழிவார்
நன்றுமெழுங் காதல்மிக
நாளைப்போ வேன்என்பார். **#1060**

அன்று இரவு முழுவதும் கண்துயிலாது இருந்தவர், விடிந்ததும்,தாம் புறப்படலாமென நினைவுற்றபொழுதுபெருமானின் திருமுன்பு சென்று ஒன்றி வழிபடும் பேறு `இக்குலத்திற்குப்பொருந்து வதாயில்லை` என்னும் இந்நினைவும் அப் பெருமானின் அருள்வழி யதே, என்று எண்ணியவர், தாம் அங்குச் செல்வதை விடுத்தார். ஆயினும், தில்லைப் பெருமன்றில் பெருமானைக்கண்டு வழிபடும் உணர்வு மேல் எழ, `நாளைப் போவேன்` என்பார்.

விளக்கவுரை

`போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்` *(தி.8 ப.1* வரி *43)* என்பதற்கேற்பத், தாம் வழிபடும் எண்ணத்தை இவ்வகையில் அமைதிப் படுத்திக் கொண்டார். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

நாளைப்போ வேன்என்று

நாள்கள்செலத் தரியாது
பூளைப்பூ வாம்பிறவிப்
பிணிப்பொழியப் போவாராய்ப்
பாளைப்பூங் கமுகுடுத்த
பழம்பதியி னின்றும்போய்
வாளைப்போத் தெழும்பழனம்
சூழ்தில்லை மருங்கணைவார். **#1061**

இவ்வாறு `நாளைப் போவேன்` என்று நாளும் நந்தனார் சொல்லிவர நாள்களும் கழிதலால், பூளைப் பூப்போன்ற நிலையாத இப்பிறவிச் சூழல் ஒழியப்போதற்கு ஒருப்படுவாராய், பூம் பாளைகள் நிறைந்த கமுக மரங்கள் செறிந்த சோலைகளையுடைய ஆதனூரினின்றும் புறப்பட்டு, வாளைமீன்கள் துள்ளி எழுந்து பாய்வதற்கு ஏற்ற நல்ல நீர்வளமுடைய வயல் சூழ்ந்த தில்லையின் பக்கத்தினை அணைவாராய்.

விளக்கவுரை

பூளைப்பூ - இது மிக மென்மையானது; எந்நேரத்திலும் அழிதற்குரியது. அதனால் இதனைப் பிறவிக்கு ஒப்பிட்டார், `மாருதம் அறைந்த பூளையாயின கண்டனை` *(கம்பரா. யுத்த. முதற்போர். பா.255)* எனவரும் கம்பர் திருவாக்கும் காண்க.

செல்கின்ற போழ்தந்தத்
திருவெல்லை பணிந்தெழுந்து
பல்குஞ்செந் தீவளர்த்த
பயில்வேள்வி எழும்புகையும்
மல்குபெருங் கிடையோதும்
மடங்கள்நெருங் கினவுங்கண்
டல்குந்தங் குலம்நினைந்தே
அஞ்சியணைந் திலர்நின்றார். **#1062**

நந்தனார் தாம் செல்கின்ற போது, அத்திருத் தில்லையின் எல்லையினை வணங்கி எழுந்து நின்று, அங்குப் பெருக எழும் செந்தீயை வளர்த்திடும் வேள்விச் சாலையில் எழுகின்ற ஓமப் புகையையும் பெருகும் ஓசையையுடைய நான்மறைகளும் ஓதப் பெறும் மடங்கள் நெருங்கியிருப்பனவற்றையும் கண்ணுற்று, அத் தகைய புண்ணிய விளைவு மிகும் தூய இடத்திற்குச் செல்வதற்குத் தமது குறைவுடைய குலத்தின் தகைமையை எண்ணிப் பயந்து, அங்கு மேலும் உட்செலாது புற எல்லையில் நின்றார்.

விளக்கவுரை

அல்கும் தங்குலம் - குறைவுடைய தமது குலம். இந்நான்கு பாடல்களும்

ஒருமுடிபின.

நின்றவர்அங் கெய்தரிய
பெருமையினை நினைப்பார்முன்
சென்றிவையுங் கடந்தூர்சூழ்
எயில்திருவா யிலைப்புக்கால்
குன்றனைய மாளிகைகள்
தொறுங்குலவும் வேதிகைகள்
ஒன்றியமூ வாயிரம்அங்
குளவென்பார் ஆகுதிகள். **#1063**

இவ்வாறு அங்கு நின்ற நந்தனார் அங்குத்தாம் சென்று அடைதற்கு அரிய பெருமைகளை நினைப்பாராய், முன்சென்று எல்லையைக் கடந்து, தில்லையைச் சூழ்ந்து இருக்கும் மதிலின் திருவாயிலில் புகுந்தால், அப்பால் அங்கு மலை போன்ற பெரிய மாளிகைகள் தோறும் நிலவி இருக்கும் வேள்விச் சாலைகள் மூவாயிரம் அங்கு இருக்கும் எனச் சொல்வார்கள்.

விளக்கவுரை

****

இப்பரிசா யிருக்கவெனக்
கெய்தலரி தென்றஞ்சி
அப்பதியின் மதிற்புறத்தின்
ஆராத பெருங்காதல்
ஒப்பரிதாய் வளர்ந்தோங்க
உள்ளுருகிக் கைதொழுதே
செப்பரிய திருவெல்லை
வலங்கொண்டு செல்கின்றார். **#1064**

இந்நிலையில், `எனக்கு இவ்வெல்லையினின்றும் உட்போதல் அரிது` என்று மிகவும் அஞ்சி, அம்மதிலின் புறத்தே பெருமானின் திருவடிகளில் ஆராத பெருவிருப்பாய், அன்பு தனக்கு வேறு ஒப்பரிதாய் வளர்ந்து ஓங்கிட உள்ளம் உருகி, அங்கு நின்றவாறே கை தொழுது, சொலற்கரிய பெருமை வாய்ந்த தில்லைப் பதியின் திருஎல்லையைப் பலகாலும் வலங்கொண்டு வந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

இவ்வண்ணம் இரவுபகல்
வலஞ்செய்தங் கெய்தரிய
அவ்வண்ணம் நினைந்தழிந்த

அடித்தொண்ட ரயர்வெய்தி
மைவண்ணத் திருமிடற்றார்
மன்றில்நடங் கும்பிடுவ
தெவ்வண்ணம் எனநினைந்தே
ஏசறவி னொடுந்துயில்வார். **#1065**

இவ்வண்ணமாக இரவும் பகலும் வலம் செய்து, அங்குத்தாம் தமது குலத்தின் தன்மையால் உட்போதற்கு அரிய தன்மையை நினைந்து மனம் அழிந்த நிலையில், நந்தனார் உள்ளம் அயர்ச்சி கொண்டு, மையின் கருமை நிறமுடைய கண்டத்துச் செல் வனின் திருக்கூத்தை எவ்வாறு கும்பிடுவதென்று நினைந்தவாறே வருந்தித் துயில்வாராக,

விளக்கவுரை
****

இன்னல்தரும் இழிபிறவி
இதுதடையென் றேதுயில்வார்
அந்நிலைமை அம்பலத்துள்
ஆடுவார் அறிந்தருளி
மன்னுதிருத் தொண்டரவர்
வருத்தமெலாந் தீர்ப்பதற்கு
முன்னணைந்து கனவின்கண்
முறுவலொடும் அருள்செய்வார். **#1066**

துன்பத்தைத் தருகின்ற இழிந்த இப்பிறவி தடையா யுள்ளதை உட்கொண்டவாறே அன்றிரவு துயில் கொள்ளும் நந்த னாரின் நிலையினை, அம்பலத்துள் நிறைந்து ஆடுகின்ற பெருமானார் அறிந்தருளி, சீர்மை வாய்ந்த அத்திருத்தொண்டரின் வருத்தங்கள் யாவற்றையும் தாம் தீர்த்திடற்கு, அவர் கனவின்கண் சென்று புன் முறுவலுடன் அவருக்கு அருளிச் செய்வாராகி.

விளக்கவுரை
****

இப்பிறவி போய்நீங்க
எரியினிடை நீமூழ்கி
முப்புரிநூல் மார்பருடன்
முன்னணைவாய் எனமொழிந்
தப்பரிசே தில்லைவாழ்
அந்தணர்க்கும் எரியமைக்க
மெய்ப்பொருளா னார்அருளி
அம்பலத்தே மேவினார். **#1067**

`இப்பிறவி நீங்கிட நெருப்பிடத்தே நீ முழ்கி எழுந்து, பின்பு முப்புரிநூல் அணிந்த மார்பையுடைய தில்லைவாழ் அந்தணருடன் என்முன்பு வந்திடுவாய்` என மொழிந்தருளி, அத் தன்மையாகவே தில்லைவாழ் அந்தணர்க்கும் அன்று இரவின்கண் அவர்கள் கனவில் `நந்தனார்க்கு நெருப்பு அமைத்துக் கொடுத் திடுக` என மெய்ப்பொருளாகிய சிவபெருமானும் அருள்புரிந்து தில்லையம் பலத்துள் மேவினார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

தம்பெருமான் பணிகேட்ட
தவமறையோர் எல்லாரும்
அம்பலவர் திருவாயில்
முன்பச்ச முடன்ஈண்டி
எம்பெருமான் அருள்செய்த
பணிசெய்வோம் என்றேத்தித்
தம்பரிவு பெருகவருந்
திருத்தொண்டர் பாற்சார்ந்தார். **#1068**

கனவின்கண் தம் பெருமான் தமக்கு இட்ட பணி யினைக் கேட்ட தவமறையோர்களான தில்லைவாழ் அந்தணர்கள், பெருமானின் திருவாயில்முன் அச்சத்துடன் அணைந்து, `எம் பெருமான் நமக்கு அருள் செய்தவாறு நாம் செய்வோம்` என்று பெருமானைப் போற்றித், தம் ஈசன்பால் அன்பு பெருகிட வருகின்ற திருத்தொண்டராய நந்தனாரிடத்து வந்துற்றார்கள்.

விளக்கவுரை

****

ஐயரே அம்பலவர்
அருளால்இப் பொழுதணைந்தோம்
வெய்யஅழல் அமைத்துமக்குத்
தரவேண்டி எனவிளம்ப
நையுமனத் திருத்தொண்டர்
நானுய்ந்தேன் எனத்தொழுதார்
தெய்வமறை முனிவர்களும்
தீயமைத்த படிமொழிந்தார். **#1069**

`ஐயரே! நாங்கள் அம்பலவர் அருளால், கொடிய தழலாய நெருப்பினை உமக்கு அமைத்துத் தருதற்காக இங்கு வந்துள்ளோம் என்று கூறுதலும், அதுகேட்டு, நைந்துருகும் மனமுடைய திருத்தொண்டராய நந்தனாரும், `நான் உய்ந்தேன்` எனத் தொழுதார். அதுபொழுது தெய்வமறையின்

நெறிநிற்கும் தில்லைவாழ் அந்தணர் களும் தாங்கள் நெருப்பமைத்த தன்மையைச் சொன்னார்கள்.

விளக்கவுரை

****

மறையவர்கள் மொழிந்ததற்பின்
தென்றிசையின் மதிற்புறத்துப்
பிறையுரிஞ்சும் திருவாயில்
முன்னாகப் பிஞ்ஞகர்தம்
நிறையருளால் மறையவர்கள்
நெருப்பமைத்த குழியெய்தி
இறையவர்தாள் மனங்கொண்டே
எரிசூழ வலங்கொண்டார். **#1070**

தில்லைவாழ் அந்தணர்கள் நெருப்பமைத் தமையை மொழிந்ததும், தென்திசை மதிலின் புறத்தில் பிறைவந்து உராயுமாறு உயர்ந்த திருவாயில் முன்னாகத், தில்லைப் பெருமான் திருவருளின் நிறைவால், அத்தில்லைவாழ் அந்தணர்கள் நெருப்பு அமைத்த தீக்குழியை நந்தனார் வந்தடைந்து, எம்பெருமான் திருவடிகளை மனத்தில் எண்ணிக்கொண்டு எரியைச் சூழ்ந்து வலமாக வந்தருளி.

விளக்கவுரை

****

கைதொழுது நடமாடும்
கழலுன்னி அழல்புக்கார்
எய்தியஅப் பொழுதின்கண்
எரியின்கண் இம்மாயப்
பொய்தகையும் உருவொழித்துப்
புண்ணியமா முனிவடிவாய்
மெய்திகழ்வெண் ணூல்விளங்க
வேணிமுடி கொண்டெழுந்தார். **#1071**

கைகளைக் கூப்பித் தொழுது கூத்தியற்றும் சேவடி களை மனத்தில் நினைந்து, அந்நெருப்பினுள் புகுந்தார். புகுந்த அப்பொழுதின்கண், அந்நெருப்பிடத்து மாயையின் விளைவாய பொய்ம்மை நிரம்பிய ஊன் உடம்பை நீக்கிப் புண்ணியம் நிறைந்த பெருமுனிவரின் வடிவாகி, திருமேனியில் திகழ்கின்ற வெண்ணூல் விளங்கிட, சடைமுடி கொண்ட ஒரு தவமுனிவராக மேலே எழுந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

செந்தீமேல் எழும்பொழுது
செம்மலர்மேல் வந்தெழுந்த
அந்தணன்போல் தோன்றினார்
அந்தரதுந் துபிநாதம்
வந்தெழுந்த துயர்விசும்பில்
வானவர்கள் மகிழ்ந்தார்த்துப்
பைந்துணர்மந் தாரத்தின்
பனிமலர்மா ரிகள்பொழிந்தார். **#1072**

சிவந்த நிறமுடைய நெருப்பினின்றும் எழும் போது, செந்தாமரை மலர்மேல் இருக்கும் நான்முகனைப் போன்ற அழகிய வனப்புடன் தோன்றினார். அது பொழுது வானினின்றும் துந்துபிகளின் முழக்கம் எழுந்தது. உயர்ந்த வானிடத்தே தேவர்கள் கண்டு மகிழ்ந்து ஆர்த்து, பசிய மகரந்தப் பொடி பரக்கும் இதழுடைய மந்தார மரத்தின் மலர்ந்த பூக்களின் மழையினைச் சொரிந்தனர்.

விளக்கவுரை

****

திருவுடைய தில்லைவாழ்
அந்தணர்கள் கைதொழுதார்
பரவரிய தொண்டர்களும்
பணிந்துமனங் களிபயின்றார்
அருமறைசூழ் திருமன்றில்
ஆடுகின்ற கழல்வணங்க
வருகின்றார் திருநாளைப்
போவாராம் மறைமுனிவர். **#1073**

திருவுடைய தில்லைவாழ் அந்தணர்களும் கண்டு கைகூப்பித் தொழுதார்கள். போற்றற்கரிய சிறப்புடைய அடியார்களும் பணிந்து, தங்கள் மனத்தில் பெருமகிழ்ச்சி கொண்டனர். இப்பால் அரிய மறைகள் சூழ்கின்ற திருவுடைய அம்பலத்தே ஆடுகின்ற சேவடி களை வணங்குதற்குத் திருநாளைப் போவாராம் மறைமுனிவர் வந்து கொண்டிருக்க.

விளக்கவுரை

****

தில்லைவாழ் அந்தணரும்
உடன்செல்லச் சென்றெய்திக்
கொல்லைமான் மறிக்கரத்தார்
கோபுரத்தைத் தொழுதிறைஞ்சி

ஒல்லைபோய் உள்புகுந்தார்
உலகுய்ய நடமாடும்
எல்லையினைத் தலைப்பட்டார்
யாவர்களுங் கண்டிலரால். #1074

தில்லைவாழ் அந்தணரும் உடன்வர, முல்லை நிலத்தே வாழும் மானைத் திருக்கரத்து ஏந்திய பெருமானாரின் திருக்கோவில் கோபுரத்தைத் தொழுது வணங்கி, விரைந்து உட்புகுந்தார். அங்கு உலகம் உய்ய நடமாடும் அவ்வெல்லையினைச் சென்று அடைந்த அளவில், அவரை யாரும் கண்டிலர்.

விளக்கவுரை

ஆல் - அசைநிலை.
இவ்விரண்டு பாடல்களும் ஒருமுடிபின.

அந்தணர்கள் அதிசயித்தார்
அருமுனிவர் துதிசெய்தார்
வந்தணைந்த திருத்தொண்டர்
தம்மைவினை மாசறுத்துச்
சுந்தரத்தா மரைபுரையும்
துணையடிகள் தொழுதிருக்க
அந்தமிலா ஆனந்தப்
பெருங்கூத்தர் அருள்புரிந்தார். #1075

அந்தணர்கள் அதிசயித்தனர். அரிய முனிவர்கள் வழிபட்டனர். தம்மை வந்தடைந்த திருத்தொண்டராய திருநாளைப் போவாரை, வினை மாசு கழிய, அழகிய தாமரை மலர் போன்ற இரு திருவடிகளையும் எஞ்ஞான்றும் தொழுது கொண்டு இருக்குமாறு அழிவில்லாத ஆனந்தப் பெருங்கூத்தர் திருவருள் புரிந்தார்.

விளக்கவுரை

அருமுனிவர் - புலனடக்கமாகிய அரிய செயற்பாடு உடைய முனிவர்.
மாசறுத்து - குற்றங்களை நீக்கி, மும்மலங்களால் வந்த குற்றங்கள்.
`மாசறு பொன்னே` *(சிலப்பதிகாரம்)* இம்மியளவு குற்றமும் இல்லாத தங்கம்.

மாசுடம்பு விடத்தீயில்
மஞ்சனஞ்செய் தருளிஎழுந்
தாசில்மறை முனியாகி
அம்பலவர் தாளடைந்தார்
தேசுடைய கழல்வாழ்த்தித்
திருக்குறிப்புத் தொண்டர்வினைப்

பாசம்அற முயன்றவர்தம்
திருத்தொண்டின் பரிசுரைப்பாம். **#1076**
குற்றம் பொருந்திய உடலை விடும் பொருட்டுத் தீயில் குளித்தருளி, மேல் எழுந்து, குற்றமற்ற மறை முனிவர் ஆகி, கூத்தப் பெருமானின் திருவடிகளை அடைந்த திருநாளைப்போவாரின் ஒளி பொருந்திய திருவடிகளை வாழ்த்தி, அவர்தம் துணை கொண்டு, இருவினையாம் கயிற்றை அறுக்க முயன்றவராகிய திருக்குறிப்புத் தொண்டர்தம் திருத்தொண்டின் இயல்பை இனி உரைப்பாம்.

விளக்கவுரை

****

திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம்

ஏயு மாறுபல் உயிர்களுக் கெல்லையில் கருணைத்
தாய னாள்தனி யாயின தலைவரைத் தழுவ
ஆயு நான்மறை போற்றநின் றருந்தவம் புரியத்
தூய மாதவஞ் செய்தது தொண்டைநன் னாடு. **#1077**

பல உயிர்களுக்கும் எல்லையற்ற கருணையைப் பொருந்துமாறு செய்தருளும் தாயை ஒப்பவரான உமையம்மையார், ஒப்பற்ற தம் தலைவரைத் தழுவிக் கொள்வதற்காக, இறைவரின் தனித்தன்மையினை ஆய்ந்து கொண்டிருக்கும் நான்மறைகளும் போற்ற, அரிய தவத்தைச் செய்திடற்கு, தூய பெரும்தவத்தைச் செய்தது தொண்டை நன்னாடு என்பதாகும்.

விளக்கவுரை

ஏயுமாறு - பொருந்துமாறு.

நன்மை நீடிய நடுநிலை ஒழுக்கத்து நயந்த
தன்மை மேவிய தலைமைசால் பெருங்குடி தழைப்ப
வன்மை ஓங்கெயில் வளம்பதி பயின்றது வரம்பின்
தொன்மை மேன்மையில் நிகழ்பெருந் தொண்டைநன் னாடு. **#1078**

உலகில் நன்மை விளைதற்கு ஏதுவாக, நீடித்த நடுவுநிலைமையான ஒழுக்கத்தில் தலைநின்று வாழும் தன்மை பொருந்திய தலைமை சான்ற பெருங்குடிகள் தழைத்து வாழ்வுபெற, வலிய பெரிய மதில்கள் சூழும் வளம் கொண்ட நகரங்கள் பலவும் விளங்கிடப் பெற்றதாய், எல்லை காண்பரிய பழம் பெருமையால் திகழ்ந்து வருவது பெரிய தொண்டைநாடு ஆகும்.

நற்றி றம்புரி பழையனூர்ச் சிறுத்தொண்டர் நவைவந்
துற்ற போதுதம் முயிரையும் வணிகனுக் கொருகால்
சொற்ற மெய்ம்மையுந் தூக்கிஅச் சொல்லையே காககப்
பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது பெருந்தொண்டை நாடு. **#1079**

நற்செயல்களையே தம் வாழ்வில் செய்து வரும் பழையனூரில் வாழ்ந்த வேளாண் மக்கள், தம்மேல் ஒரு குற்றம் வந்து சூழ்ந்த போது, தம் உயிரையும், ஒரு வணிகனுக்கு ஒருகால் தாம் கொடுத்த வாய்மையையும் சீர்தூக்கிப் பார்த்து, தாம் சொன்ன வாய்மையையே உயிரினும் சிறந்ததாய்க் காக்கப் பெற்ற மேன்மை சிறந்தது அத்தொண்டை நாடு ஆகும்.

விளக்கவுரை

பரத்தை வயப்பட்ட வணிகன் ஒருவன் தன்னைத் திருத்த முயன்ற தன்மனைவியைத் தனிவழிப் படுத்திக் கொன்று விட்டனன்.

அத்தீயசெயலால் அவள், நீலி என்னும் பேயாக, மறுபிறவியில் அவனை அலைத்து வந்தாள். அதனின்றும் தப்ப, மந்திர வலியுடைய வாளைக் கொண்டு தன்னைத்தான் காத்து வந்தான். அவ்வணிகன் தொண்டை நாட்டிலுள்ள பழையனூருக்கு வந்தான். அதுகாறும் அவனை அலைத்து வந்த பேயும், ஒரு பெண்வடிவம் கொண்டு, கள்ளிக்கொம்பு ஒன்றைக் குழந்தை வடிவாக்கி, அதனையும் தூக்கிக் கொண்டு, அவ்வணிகனைப் பின் தொடர்ந்து வந்தாள். அஞ்சிய அவ்வணிகன் வேளாளர் பெருமக்கள் எழுபது பேர் கொண்ட அவ்வூரவையாரிடத்துத் தன்னைக் காக்க வேண்டி, விண்ணப்பித்துக் கொண்டான். உடன் வந்த நீலி, இவன் `என் கணவன்` என்றும், `இக்குழந்தையும் எங்கள் குழந்தை` என்றும் கூறி, பரத்தை வயப்பட்ட இவன் எங்களை வெறுத்துக் கைவிட்டு வந்தான், அவையோராகிய தாங்கள் `எங்களை ஒன்று படுத்தி மனையறம்படுத்த வேண்டும்` என விண்ணப்பித்துக் கொண்டனள். வணிகன், `அவள் கூற்று உண்மை யன்று` என்ன, நீலி தன் இடுப்பில் இருந்த குழந்தையைக் கீழே விடுக்க, அக்குழந்தையும் அவ் வணிகனை `அப்பா` என்று அழைத்து அவனி டம் செல்ல, அதுகண்ட அவையோர், `இவ் வழக்கை நாளை தீர்ப் போம், இன்றிரவு இவ் விடத்தில் நீங்கள் ஒருங்கு இருங்கள்` என்று கூற, நீலி `இவன் கையிலிருக்கும் வாளைக் கொண்டு இன்றிரவு எங்களைக் கொன்றுவிடவும் கூடும்; ஆதலின் அதனை அவன் கையி னின்றும் வாங்கிவிடுக` என்று அவையோரிடத்துக் கூற, வணிகன், `இவ்வாள் இன்றேல் பேயாக வந்த இவள் என்னைக் கொன்று விடு வாள்` என்று கூற அவையோரும், `வாளை விடுத்து இவளுடன் தங் குக; உன் உயிர்க்குக் கேடுவரின் எங்கள் எழுபது பேர் உயிரையும், அதற்கு ஈடாகத் தருவோம்` என உறுதி மொழி தந்து ஒருப்படுத்தினர். அவர்கள் ஒருங்கு தங்கிய அவ்விரவில், நீலியாக வந்த பேய், அவ னைக் கொன்று தன் பழியைத் தீர்த்துக் கொண்டது. மறுநாள் காலை அதை அறிந்த அவையோர், தாம் அவ்வணிகனுக்கு முன் கொடுத்த உறுதி மொழிப்படி, தீ வளர்த்துத் தங்கள் எழுபது பேரின் உயிர் களையும் போக்கிக் கொண்டனர். இதுவே இப் பாடற்கண் குறிக்கப் பட்ட வரலாறாகும். அவையோர் தீக்குளித்த இடம், நீலிகுளம் என இன்றும் வழங்குகிறது. அதன் கரையில் அவையோர் எழுபதின்மரின் திருவுருவங்களும், நீலியின் உருவமும் உள்ளன.

ஆணை யாமென நீறுகண் டடிச்சேரன் என்னும்
சேணு லாவு சீர்ச் சேரனார் திருமலை நாட்டு
வாணி லாவுபூண் வயவர்கள் மைத்துனக் கேண்மை
பேண நீடிய முறையது பெருந்தொண்டை நாடு. **#1080**

சிவபெருமானின் அருள் வடிவமே திருநீறாகும் எனக் கருதி வழிபட்டு

வரும் நாளில், உவர் மண் பட்ட உடலுடன் வந்த ஒரு வண்ணானைக் கண்டு, அம்மண் திருநீற்றின் நிறத்தோடு ஒன்று பட்டிருந்தமையின், அவ்வண்ணானை அடியவர் என்று கருதி வணங்க, அவனும் `அடி வண்ணான்` என, நாயனாரும் `அடிச் சேரன்` என வணங்க, இவ்வரலாறு வானுலகமெலாம் நிலவ ஆண்ட சேர அரசரின் திருவுடைய மலை நாட்டில் வாழும் ஒளி நிரம்பிய அணிகளை அணிந்த வீரர்களுக்குப் பெண் கொடுத்து, மைத்துனர் முறை கொண்டாடற்கு நீண்ட மரபுடையது அப்பெருந்தொண்டை நாடு ஆகும்.

விளக்கவுரை

சேரனார் - சேரமான் பெருமாள் நாயனார். திருநீறே பொருளெனப் போற்றிவந்த இந்நாயனார், உவர்மண் பட்ட உடலுடன் வந்த ஒரு வண்ணானைக் கண்டு, அம்மண் திருநீற்றின் நிறத்தொடு ஒன்று பட்டிருந்தமையின், அவ்வண்ணானை அடியவர் என்று கருதி வணங்க, அவரும் நான் `அடி வண்ணான்` என்ன, நாயனாரும் `அடிச் சேரன்` என்றுகூறி, `திருநீற்றின் வாரவேடம் நினைப்பித்தீர் வருந்தாது ஏகும்` என்றருளினர். இவ்வரலாறு, கழறிற்றறிவார் புராணத்தால் அறியலாகும். ஒரு காலத்தில் சேர நாட்டில் ஏற்பட்ட பூசல் காரணமாக, அங்குள்ளோர் பலரும் சிதறிஓட, அவர்களுள் ஒருவணிகப் பெண் தொண்டை நாட்டில் வேளாளர் மனையில் அடைக்கலம் புக, அவர்களும் அப்பெண்ணைத் தம் மகள் என வளர்த்து வந்தனர். பூசல் அடங்கியபின், அப்பெண்ணிற்குரிய பெற்றோர்கள் தேடிவர, அவ் வேளாளரும் தம் மகள் என வளர்த்து வந்த தன்மையால், மகட் கொடை நிரம்ப வழங்கி மணஞ்செய்வித்து அனுப்பினர். இதனால் சேர நாட்டினர் தொண்டை நாட்டினர்க்கு மைத்துனர் முறைமை யாயினர், இவ்வரலாறே இங்குக் குறிக்கப்படுவதாகும். இனிக் காஞ்சியைக் காடு கெடுத்து நாடாக்கிய கரிகாலன், தானும் தன் வழி யினரும் சேரர் குலப் பெண்களை மணஞ்செய்து வாழ்ந்தமை பற்றிச் சேரர் மைத்துனர் முறைமையாயினர் என்ற வரலாறும் கூறப்படுகிறது.

கறைவி ளங்கிய கண்டர்பால் காதல்செய்ம் முறைமை
நிறைபு ரிந்திட நேரிழை அறம்புரிந் ததனால்
பிறையு ரிஞ்செயிற் பதிபயில் பெருந்தொண்டை நாடு
முறைமை யாமென உலகினில் மிகுமொழி உடைத்தால். **#1081**

கருமை பொருந்திய கழுத்தையுடைய பெருமான் பால் தான் அன்பினால் செய்திடும் வழிபாட்டினை நிறை வாக்க விரும்பிய உமையம்மையார் ஒப்பில்லாத நல் அறம்புரிந்த அத்தன் மையால், பிறை உலாவிய உயர்ந்த மதில் சூழும் காஞ்சியம்பதியைத் தன்னகத்துக் கொண்டு விளங்கும் தொண்டை நாடு, உலகில் சிவ நெறிச்சார்பால் மிகுபுகழ்

பெற்றிருக்கும் முறைமை யுடையது.

தாவில் செம்மணி அருவியா றிழிவன சாரல்
பூவில் வண்டினம் புதுநற வருந்துவ புறவம்
வாவி நீள்கயல் வரம்பிற உகைப்பன மருதம்
நீவி நித்திலம் பரத்தியர் உணக்குவ நெய்தல். **#1082**

மலைச் சாரல் எனும் குறிஞ்சி இடங்களில், உள்ள குறைவிலாத செந்நிற மணிகள், அங்குள்ள அருவிகளிலும், ஆறுகளி லும் வழிந்தோடுவன. அங்குள்ள முல்லை நிலங்களின் செழிப்பு மிகுதியால் மலர்ந்துள்ள பூக்களில் வண்டினங்கள், என்றும் புதுத்தேன் உண்பன. மருத நிலத்தில் உள்ள குளங்களில் கயல் மீன்கள், வயல் களின் வரம்புகள் உடைந்திடப் பாய்வன, கடற்கரையோரப் பகுதியாய நெய்தல் நிலங்களிலுள்ள பரத்தியர்கள், முத்துக்களை நீரில் கழுவி உலர்த்துவதற்கு இடனாயுள்ளன.

விளக்கவுரை

தாஇல் - குற்றமற்ற.

குறவர் பன்மணி அரித்திதை விதைப்பன குறிஞ்சி
கறவை ஆன்நிரை மானுடன் பயில்வன கானம்
பறவை தாமரை யிருந்திற வருந்துவ பழனஞ்
சுறவ முள்மருப் பணங்கயர் வனகழிச் சூழல். **#1083**

குறிஞ்சி நிலங்கள், வேடர்கள் பல மணிகளையும் அரித்து எடுத்துப் போக்கிக், காராமணிப் பயற்றினை விதைப்பதற்கு ஏற்ப அமைந்துள்ளன. முல்லை நிலங்கள், பால் கறக்கும் பசுக்களின் நிரைகள் மான்களுடன் பயில்வனவாகவுள்ளன. மருத நிலங்கள், பறவைகள் தாமரை மலரில் இருந்து கொண்டு இறால் மீன்களை உண்ணுதற்கிடனாக அமைந்துள்ளன. நெய்தல் நிலங்கள், சுறாமீன் களின் கொம்பு போலும் முட்களை அரிந்து தெய்வமெனக் கொண்டு விழா எடுக்கும் இடங்களாக அமைந்துள்ளன.

விளக்கவுரை

நெய்தல் நிலத்தில் நுளையர்க்கு வலை வளந்தப்பின் அம் மகளிர் கிளையுடன் குழீஇச் சுறவுக் கோடு நட்டுப் பரவுக் கடன் கொடுத்தலின், ஆண்டு வருணன் வெளிப்படுமென்றார் எனவரும் நச்சினார்க்கினியர் உரையும் காண்க. `சினைச் சுறவின் கோடு நட்டு மனைச் சேர்த்திய வல்லணங்கினான்` *(பட்டினப்பாலை, வரி 86,87).*

கொண்டல் வானத்தின் மணிசொரி வனகுல வரைப்பால்
தண்டு ணர்க்கொன்றை பொன்சொரி வனதள வயற்பால்
வண்டல் முத்தநீர் மண்டுகால் சொரிவன வயற்பால்

கண்டல் முன்துறைக் கரிசொரி வனகலங் கடற்பால். #1084

மலையிடங்களில், மேகங்கள் வானத்தினின்றும் மணிகளை மழையுடன் சொரிவன. முல்லை நிலத்தின் அயலிடங்களில், நீண்ட தண்டின் கணுக்களில் மலரும் கொன்றைகள் பொன் சொரிவன. வயலிடங்களில் சேற்று நீருடன் புகும் வாய்க்கால்கள், முத்துக்களைச் சொரிவன. தாழை மரங்களை முன்னாகக் கொண்ட கடற்கரைத் துறை முகங்களில், கப்பல்கள் யானைகளைக் கொண்டுவந்து சொரிவன.

விளக்கவுரை

குலவரை - நீண்ட பெருமலைகள். தளவு - முல்லை. கண்டல் - தாழை. வண்டல் - உரம் கலந்த சேறு.

தேனி றைந்தசெந் தினையிடி தருமலைச் சீறூர்
பானி றைந்தபுற் பதத்தன முல்லைநீள் பாடி
தூநெ லன்னம்நெய் கன்னலின் கனியதண் டுறையூர்
மீனி றைந்தபே ருணவின வேலைவைப் பிடங்கள். #1085

குறிஞ்சி நிலத்திலுள்ள சீறூர்கள் தேன் நிறையக் கலந்த செந்தினை மாவைத் தருவன. முல்லை நிலத்திலுள்ள பாடிகள், பால் நிறைந்த வரகுச்சோற்றைத் தருவன. மருத நிலத்திலுள்ள குளிர்ந்த நீர் நிறைந்துள்ள ஊர்கள், தூய செந்நெலின் அமுது, நெய், கரும்பின் கட்டி, பழம், ஆகியவற்றைத் தருவன, நெய்தல் நிலத்திலுள்ள பாக்கங் கள், மீன் நிறைந்த பேருணவைத் தருவன. ஒவ்வொரு நிலத்திலும் அவ்வவ்நிலத்துக்குரிய உணவுப்பொருள்களைச் சேமித்து வைக்கும் களஞ்சியங்கள் இருந்தன.

விளக்கவுரை

புற்பதம் - வரகு. வைப்பிடங்கள் - பொருள் சேமித்து வைக்கும் இடங்கள். நானிலங்களில் வாழும் மக்களின் உணவுப் பொருள்கள் இவையெனவும் அவற்றை அங்கங்கே பொதுவான வைப்பிடங்களில் சேமித்து வைத்ததையும் இதனால் அறியலாம்.

குழல்செய் வண்டினங் குறிஞ்சியாழ் முரல்வன குறிஞ்சி
முழவு கார்கொள முல்லைகள் முகைப்பன முல்லை
மழலை மென்கிளி மருதமர் சேக்கைய மருதம்
நிழல்செய் கைதைசூழ் நெய்தலங் கழியன நெய்தல். #1086

குறிஞ்சி நிலத்தில் குழல் என ஒலிக்கின்ற வண்டி னங்கள், குறிஞ்சிப் பண்களைப் பாடுவன. முல்லை நிலத்தில் முழவப் பறைகள் மேகம் என முழங்க, முல்லை மலர்களை அரும்புவன. மருத நிலத்தில், மழலைச் சொற் பயிலும் மிருதுவான கிளி மருத மரங்களைத் தமக்குத் துயிலிடமாகக் கொள்வன. நெய்தல் நிலத்தில் உள்ள கழிகள், நிழல்

செய்யும்படி உயர்ந்து செழித்து வளர்ந்த தாழைகள் சூழ்ந்து நெய்தல் மலர்களையுடையன.

விளக்கவுரை

நானிலங்களுக்குரிய மலர்களும், குறிஞ்சி, மருதத்திற் குரிய பறவைகளும் இப்பாடலால் அறியக் கிடக்கின்றன.

மல்கும் அப்பெரு நிலங்களில் வரைபுணர் குறிஞ்சி
எல்லை எங்கணும் இறவுளர் ஏனல்முன் விளைக்கும்
பல்பெ ரும்புனம் பயில்வன படர்சிறைத் தோகை
சொல்லும் அப்புனங் காப்பவுஞ் சுரிகுழல் தோகை. **#1087**

வளம் சிறந்து விளங்கும் அந்நால் வகைப் பெரு நிலங்களிலும், மலையைச் சேர்ந்த குறிஞ்சி நிலத்தின் எல்லை எங்கணும், வேடர்கள் முன்னாகத் தினையை விதைப்ப, அவை பெருக்கமாக வளர்ந்தோங்கிய புனங்களில், படரும் சிறகுடைய தோகை மயில்கள் தங்கியிருப்பன. சொல்லப்பெறும் அப்புனங்களைக் காத்தற்கெனப் பரண் மீது இருப்பவர்களும், அழகால் நிறைந்து நெளிந்த கூந்தலையுடைய வேடப் பெண்கள் ஆவர்.

விளக்கவுரை

இறவுளர் - குறிஞ்சி நிலத்திற்குரிய மக்கட்பெயர். தோகை என வருவனவற்றுள் முன்னையது மயிலையும், பின்னையது பெண்களையும் குறிக்கும். இவ்வேறுபாடு அறிய அவ்விரண்டிற்கும் கொடுக்கப் பெற்றிருக்கும் அடைமொழிகள் அருமை உடையனவாம்.

அங்கண் வான்மிசை அரம்பையர் கருங்குழற் சுரும்பு
பொங்கு பூண்முலைக் கொடிச்சியர் குழல்மூழ்கிப் போகாச்
செங்கண் மால்விடை யார்திருக் காளத்தி யென்னும்
மங்குல் சூழ்வரை நிலவிய வாழ்வினால் மல்கும். **#1088**

அழகிய இடம் அகன்ற வானுலகில் வாழும் தேவ மகளிரின் கூந்தலில் தங்கிய வண்டுகள், ஒளி பொங்கும் அணிகளை யணிந்த மார்பகங்களையுடைய குறப் பெண்களின் கூந்தலில் மூழ்கி, அவை அவ்விடத்தினின்று மீண்டு போகாது இருந்திடுதற்கு இடனாய, சிவந்த கண்களையுடைய பெரிய ஆனேற்றை ஊர்தியாக உடைய பெருமானின் திருக்காளத்தி என்னும் மேகம் சூழும் திருமலை நிலை பெற்றிருக்கும் பெருவாழ்வால், அக்குறிஞ்சி நிலம் மேம்பட்டிருக்கும்.

பேறு வேறுசூழ் இமையவர் அரம்பையர் பிறந்து
மாறில் வேடரும் மாதரு மாகவே வணங்கும்
ஆறு சூழ்சடை அண்ணலார் திருவிடைச் சுரமுங்
கூறு மேன்மையின் மிக்கதந் நாட்டுவண் குறிஞ்சி. **#1089**

அந்நாட்டில் உள்ள வளமை மிக்க குறிஞ்சி நிலமானது, சிறப்பாய நற்பேறு பெற்ற தேவர்களும், தேவ மகளிர் களும், ஒப்பற்ற வேடர்களும், வேடப் பெண்களுமாக வந்து பிறந்து வணங்கிடும், ஆறு சூழ்ந்த சடையையுடைய அண்ணலார் எழுந் தருளியிருக்கும் திருவிடைச்சுரம் என்னும் திருப்பதியும், பெருஞ் சிறப்புடன் நிலவி விளங்கும் சிறப்புடையதாகும்.

விளக்கவுரை

திருவிடைச்சுரம் - தொண்டைநாட்டிலுள்ள திருப்பதி களுள் ஒன்று. மலைகளின் இடையில் கற்சுரத்தின் இடையில் உள்ள மையின் இப்பெயர் பெற்றது. உம்மை இறந்தது தழீஇய எச்ச உம்மை.

அம்பொன் வார்குழல் கொடிச்சியர் உடன்அர மகளிர்
வம்பு லாமலர்ச் சுனைபடிந் தாடுநீள் வரைப்பின்
உம்பர் நாயகர் திருக்கழுக் குன்றமும் உடைத்தால்
கொம்பர் வண்டுசூழ் குறிஞ்சிசெய் தவங்குறை யுளதோ. **#1090**

அழகிய பொன்போலும் சிறப்புடைத்தாய மலர் களையணிந்த நீண்ட கூந்தலையுடைய வேட்டுவப் பெண்களுடன், தேவப் பெண்களும் நறுமணம் உலவிடும் நீர்ச்சுனைகளில் படிந்து நீராடுகின்ற நீண்ட மலைப்பக்கங்களையுடைய, தேவர்களின் தலை வரான சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கழுக்குன்றம் என்னும் திருப்பதியும், அக்குறிஞ்சி நிலத்தில் உள்ளது என்றால், பூ மரக் கொம்பர்களில் வண்டுகள் சூழும் சோலைகள் நிலவிய குறிஞ்சி நிலம் செய்தவப்பேறு குறைவாமோ? அன்று என்பதாம்.

விளக்கவுரை

திருக்கழுக்குன்றம் - கழுகுகள் முறையே நான்கு யுகங்களிலும் வந்து வழிபடும் சிறப்பால் இப்பெயர் பெற்றது. தொண்டை நாட்டுத் திருப்பதிகங்களுள் *28*ஆவது திருப்பதியாகும்.

கோல முல்லையுங் குறிஞ்சியு மடுத்தசில் லிடங்கள்
நீல வாட்படை நீலிகோட் டங்களும் நிரந்து
கால வேனிலிற் கடும்பகற் பொழுதினைப் பற்றிப்
பாலை யுஞ்சொல லாவன உளபரல் முரம்பு. **#1091**

அழகு மிகுந்த முல்லை நிலத்தையும், குறிஞ்சி நிலத்தையும் அடுத்த சில இடங்கள், நீல நிறத்தளாய் வாட்படை ஏந்திய கையையுடைய கொற்றவையின் கோயில்கள் பல நிறையப் பெற்று, வேனிற்காலத்துக் கடும்பகல் பொழுதினைப் பற்றி நிற்கும் பாலை என்று சொல்லும்படியாக அப்பதிகள் இருப்பன.

விளக்கவுரை

`முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து, நல்லியல்பு இழந்து நடுங்கு துயர் உறுத்துப், பாலை என்பதோர் படிவங் கொள்ளும்` *(சிலப்ப. மதுரைக். காடுகாண். 64-65)* எனச் சிலப்பதிகாரம் கூறுவதற்கிணங்க, `முல்லையும், குறிஞ்சியும், அடுத்த சில இடங்கள்` என்றார்.
நீலி - கொற்றவை. பண்டைச் சான்றோர் நிலம் பகுத்து ஓதுங் கால் பாலையைத் தனித் தன்மை வாய்ந்ததாகக் கொண்டிலர். நால் வகை நிலங்களும் ஆகாது, அவற்றின் வேறும் ஆகாது நடுநிகர்த்ததாய் நிற்றல் பற்றி இதனைத் தொல்காப்பியர் நடுவு நிலைத்திணை என்றார். `நடுவு நிலைத்திணையே நண்பகல் வேனிலொடு, முடிவு நிலை மருங்கின் முன்னிய நெறித்தே`` *(தொல்.பொருள்.அகத்.955)* என்ப வாகலின், `காலவேனிலில் மிகும் பகற் பொழுதினைப் பற்றிய பாலை யும்` என்றார் ஆசிரியரும்.

சொல்லும் எல்லையின் புறத்தன
துணர்ச்சுரும் பலைக்கும்
பல்பெ ரும்புனல் கானியா
றிடையிடை பரந்து
கொல்லை மெல்லிணர்க் குருந்தின்மேல்
படர்ந்தபூம் பந்தர்
முல்லை மென்புதல் முயலுகைத்
தடங்குநீள் முல்லை. **#1092**

பூங்கொத்துக்களில் உள்ள வண்டுகளை அலைத் துக் கொண்டு வரும் காட்டாறுகள், இடைஇடையே ஓடிப் பரந்து, புனக்கொல்லையின் மெல்லிய தண்டுகளுடன் இலைகள் மலிந்த குருந்த மரமேற் படர்ந்த பூம்பந்தர் போல் பரந்திருக்கும் முல்லைக் கொடிகளின் மெல்லிய புதரில் மறைந்திருக்கும் முயல்களை, உகைத்துப் பின் அடங்குதற்கு இடனான முல்லை நிலங்கள், மேற் சொல்லிய எல்லையின் புறத்தே உள்ளன.

விளக்கவுரை

சொல்லும் எல்லையில் - சான்றோர் கூறிய நானில வரைப்பின்படி குறிஞ்சியை அடுத்து முல்லை உள்ளது. அவ்வெல்லை யில் காட்டாறுகள் பல பரந்து ஓடி, முயல்களை உகைத்துப்பின் அடங்கி நிற்கும் என இயைக்க.

பிளவு கொண்டதண் மதிநுதற் பேதையர் எயிற்றைக்
களவு கொண்டது தளவெனக் களவலர் தூற்றும்
அளவு கண்டவர் குழல்நிறங் கனியும்அக் களவைத்
தளவு கண்டெதிர் சிரிப்பன தமக்குமுண் டென்று. **#1093**

பிளவுபட்ட குளிர்ந்த பிறை மதியைப் போன்ற நெற்றியினையுடைய

அழகிய இடைச்சியர்தம் பற்களின் அழகை, முல்லை அரும்புகள் களவு கொண்டன என்று, களாச் செடிகள் தம் பூக்களைக் கொண்டு அலர் தூற்றுவன. அவ்வியல்பினை அறிந்த அம் முல்லைகள், அவ் இடைச்சியரின் கூந்தலின் கருமையைத் தம் பழத் தால் களவு கொண்டன என்று அக் களாச் செடியினைப் பார்த்து, `எம் தன்மை உமக்கும் உண்டு` என்று சிரிப்பன.

விளக்கவுரை

முல்லை மலர்கள் இடைச்சியரின் பற்களைக் களவாடின என்று களாச் செடிகள் அலர்தூற்ற, களாச் செடிகள் அவ் இடைச்சிய ரின் கூந்தல் நிறத்தைக் களவாடின என்று முல்லை மலர்கள் அலர் தூற்று கின்றனவாம். இடைச்சியரின் பற்களும் கூந்தலும் முறையே முல்லை யையும், களாவின் பழத்தையும் ஒத்தன என்பது கருத்தாகும். களவின் பழம் கருநிறம் உடைத்தாதலைக் `களங்கனியைக் கார் எனச் செய்தா ரும் இல்` *(நாலடி. 103)* எனக் கூறுமாற்றானும் அறியலாம்.
ஒருபுறம் இடைச்சியரின் அழகு, பிறிதொருபுறம் முல்லை நிலச் சிறப்பு ஆகிய இரண்டும் ஒருங்கு தோன்ற அமைத்துள்ள அழகு காணத் தக்கது. அம்மட்டோ*!* `பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும் திறன்தெரிந்து கூறப் படும்`*(குறள், 186)* `ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின் தீதுஉண்டோ மன்னும் உயிர்க்கு` *(குறள், 190)* எனவரும் அறப் பண்புகளையும் இதன் வழிப் புலப்படுத்தியிருக் கும் சேக்கிழாரின் அரிய புலமை நலமும் வெளிப்படுகின்றது. அளவு கண்டு - அவ்வியல்பினை அறிந்து.

மங்கை யர்க்குவாள் விழியிணை
தோற்றமான் குலங்கள்
எங்கும் மற்றவர் இடைக்கிடை
மலர்க்கொடி யெங்கும்
அங்கண் முல்லையின் தெய்வமென்
றருந்தமிழ் உரைக்கும்
செங்கண் மால்தொழும் சிவன்மகிழ்
திருமுல்லை வாயில். **#1094**

அம்முல்லை நிலத்து இடைச்சியர்களின் கூரிய வாள் போலும் இணைவிழிகளுக்குத் தோற்ற மான் கூட்டங்கள் எங்கும் காணப்படுவன. மற்று அவ் இடைச்சியரின் சிறிய இடையின் அழகிற்குத் தோற்று வாடுவ போன்று முல்லைக் கொடிகள் எங்கும் காணப்படுவன. அவ்விடத்து முல்லை நிலத்தின் தெய்வம் என அரிய தமிழ் நூல்களில் சொல்லப்பெறும் சிவந்த கண்களையுடைய திருமால் வழிபட்ட, சிவபெருமான் மகிழ்ந்து உறையும் திருமுல்லைவாயில் என்னும்

திருப்பதியும் உளது.

விளக்கவுரை

திருமுல்லைவாயில் - சிவபெருமான் முல்லைக் கொடி யின் கீழ் எழுந்தருளி இருக்கும் சிறப்பால் இப்பெயர் பெற்றது. பெரும்புகழுடைய தொண்டைமான் என்னும் அரசன் பட்டத்து யானை மீது வரும்பொழுது, யானையின்கால் முல்லைக் கொடியால் பிணிப்புண்டு வருந்த, அவன் அக்கொடிகளை வெட்டினான். வெட்டுதலும், அது அவ்விடத்து மறைந்திருந்த பெருமானின் திருமேனியில் பட, அவ்விறைவனும் வெளிப் பட்டருளினன் என்பது வரலாறு.

இத்திருப்பதி சோழநாட்டிலுள்ள திருமுல்லைவாயில் என்னும் திருப்பதியின் வேறாயது. இவ்வேற்றுமை தோன்ற இதனை வட திருமுல்லைவாயில் என அழைப்பர். சென்னையை அடுத்த அம்பத்தூருக்கு வடமேற்கில் இத்திருப்பதி உள்ளதாகும். முல்லையின் தெய்வம் என்னாது `தெய்வம் என்று உரைக்கும்` என்றது, அந்நிலத் தெய்வமாகிய பெருமானும் இறைவனின் ஏவல் வழி நின்றே காத்து வருகின்றான் என்பது தோற்றவரும். `படைத்தவை காப்போற் காக்கும் கடவுள்`*(தி.8 ப.3 வரி 13,14)* என வரும் மணிமொழியும் காண்க.

அருந்தமிழ் என்றது அகத்தியம், தொல்காப்பியம் முதலிய அருந்தமிழ் நூல்களைக் குறிக்கும். `மாயோன் மேய காடுறை யுலகமும்`*(தொல். அகத். 5)* எனவரும் தொல்காப்பியமும் காண்க.

நீறு சேர்திரு மேனியர் நிலாத்திகழ் முடிமேல்
மாறில் கங்கைதான் வாக்கும்மஞ் சனம்தர அணைந்தே
ஊறு நீர்தரும் ஒளிமலர்க் கலிகைமா நகரை
வேறு தன்பெரு வைப்பென விளங்குமா முல்லை. **#1095**

திருநீற்றின் ஒளி விளங்கும் திருமேனியை யுடைய பெருமானின் பிறை திகழும் திருமுடிமேல் விளங்கிடும் கங்கை ஆறானது, அப்பெருமானுக்குத் திருமுழுக்கிற்கு எனச் சொரியும் நீராக அமையுமாறு வந்து அணைந்து, ஊறுகின்ற நீரைத் தருகின்ற ஒளி விளங்கும் மலர்களையுடைய கலிகை மாநகர் எனப் படும் திருவூறல் எனும் திருப்பதியையும் இம்முல்லைநிலம் தனக் குரிய ஒரு சேமவைப்பாகக் கொண்டிருக்கின்றது.

விளக்கவுரை

`நீறுசேர்வதொர்மேனியர்`*(தி.1 ப.135 பா.1)* எனும் தொடர் ஆளுடைய பிள்ளையாரால் எடுத்தாளப் பெற்ற அரிய தொட ராகும். கலிகை மாநகர் - இது தக்கோலம் எனவும், திருவூறல் எனவும் வழங்கப்பெறும்.

வாச மென்மலர் மல்கிய முல்லைசூழ் மருதம்

வீசு தெண்டிரை நதிபல மிக்குயர்ந் தோடிப்
பாச டைத்தடந் தாமரைப் பழனங்கள் மருங்கும்
பூசல் வன்கரைக் குளங்களும் ஏரியும் புகுவ. **#1096**

நறுமணம் உடைய மெல்லிய முல்லைமலர்கள் சிறந்து விளங்கிடும் முல்லை நிலத்தை அடுத்த மருத நிலத்தில், வீசிடும் தெள்ளிய திரைகளையுடைய ஆறுகள் பல, மிக உயர்ந்த நீர்ப் பெருக் குடன் ஓடிச் சென்று, பசிய இலைகளையுடைய பெருந் தாமரைப் பூக் கள் மலர்தற்கிடமாகிய வயல்களின் பக்கங்களில், நீர்ப் பெருக்கின் ஒலி மிகுந்த பெரும் கரைகளையுடைய குளங்களிலும் நீர்த் தேக்கங்களி லும் புகுவன.

விளக்கவுரை

பாசடை - பசுமையான இலைகள். பூசல் - நீர்ப் பெருக் கின் ஒலி.

துங்க மாதவன் சுரபியின் திருமுலை சொரிபால்
பொங்கு தீர்த்தமாய் நந்திமால் வரைமிசைப் போந்தே
அங்கண் நித்திலஞ் சந்தனம் அகிலொடு மணிகள்
பங்க யத்தடம் நிறைப்பவந் திழிவது பாலி. **#1097**

மேலான பெருந்தவமுடைய வசிட்ட முனிவனின் பசுவாய காமதேனுவின் திருமுலை சொரிந்த பாலானது, பொங்கும் புனித நீராக (தீர்த்தமாய்) நந்திமலை எனும் பெருமலையினின்றும் அருவிகளாக உருக்கொண்டு, அங்குள்ள முத்துக்கள், சந்தனம், அகில், இவற்றோடு இன்னும் பல நல்ல மணிகளையும் அரித்துக் கொண்டு, பாலி எனும் பெயருடைய ஆறாகப் பெருகி வந்து, தாம ரைக் குளங்கள் பலவற்றையும் நிறைத்திட ஓடிவரும் சிறப்பினை யுடையது.

விளக்கவுரை

காமதேனுவின் பால் ஆறாக ஓடி வருதலின் பாலியாறு எனப் பெயர் பெற்றது.

நந்திமலையில் தவம் செய்து கொண்டிருந்த வசிட்டர் இருக் கையில், அங்குப் பணிபுரிந்து கொண்டிருக்கும் காமதேனு, பெருமா னின் ஆனேற்றுக் கடவுளை (இடபதேவர்) விரும்ப, அதனை அறிந்த வசிட்டர் ஒரு தருப்பையை எடுத்து எறிய, அது கன்றாக, அதனைக் கண்ட காமதேனு, பால் சொரியலாயிற்று. அப்பெருக்கே பாலியாறா யிற்று என்பது புராண வரலாறு.

பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்
மள்ளர் வேனிலின் மணல்திடர் பிசைந்துகை வருட
வெள்ள நீரிரு மருங்குகால் வழிமிதந் தேறிப்
பள்ள நீள்வயல் பருமடை உடைப்பது பாலி. **#1098**

சிறுபிள்ளை தனது கையால் தடவப் பெருகும் பாலைச் சொரியும் மார்பகங்களையுடைய தாய்போல, உழவர்கள் வேனிற்காலத்து வேளாண்மை செய்யும் பருவக் காலத்து மணல் திடர்களைக் கைகளால் பிசைந்து தோண்டி ஒழுங்கு செய்திட, அவ்வாய்க் கால் வழிவரும் வெள்ள நீர், அதன் இரு மருங்கும் வழிக்கொண்டு, பள்ளமாய பண்ணை வயல்களில் உள்ள பருத்த மடை வரம்புகளை உடைக்கும்.

விளக்கவுரை

வேண்டும் பொழுது நீரைச் சுரந்தும், வேண்டாத பொழுது தன்னுள் அடக்கியும் இருக்கும் பெருமையுடையது என்பது இதனால் விளங்கும்.

அனைய வாகிய நதிபரந்
தகன்பணை மருங்கில்
கனைநெ டும்புனல் நிறைந்துதிண்
கரைப்பொரும் குளங்கள்
புனையி ருங்கடி மதகுவாய்
திறந்திடப் புறம்போய்
வினைஞர் ஆர்ப்பொலி யெடுப்பநீர்
வழங்குவ வியன்கால். **#1099**

அவ்வாறாகிய பாலியாற்று நீர் பரந்து, அகன்ற வயல்களின் பக்கலில் இரைந்து பெருகவரும் திண்மையான பெரிய குளக்கரையில், அங்குள்ள சிறந்த அழகுபடுத்தப்பட்ட காவல் மதகு கள் வாய்திறந்திட, வெளியே சென்று பெருகும் தன்மை கண்டு, அவ் விடமுள்ள வீரராய உழவர்கள் தம் மகிழ்வால் ஒலிசெய, பெருவாய்க் கால்கள், நீர் பெருகி வரும்.

விளக்கவுரை

`உழவரோதை மதகு ஓதை உடைநீர் ஓதை தண்பதங் கொள்,
விழவரோதை சிறந்தார்ப்ப நடந்தாய்வாழி காவேரி`
(சிலப்ப.புகார்க்.கானல்- 4) என்னும் சிலப்பதிகாரமும்.

மாறில் வண்பகட் டேர்பல நெருங்கிட வயல்கள்
சேறு செய்பவர் செந்நெலின் வெண்முளை சிதறி
நாறு வார்ப்பவர் பறிப்பவர் நடுபவ ரான
வேறு பல்வினை யுடைப்பெருங் கம்பலை மிகுமால். **#1100**

இத்தகைய வளம் மிக்க மருதநிலத்தில், எருமைக் கடாக்களைப் பூட்டி ஏர்கள் பல நெருங்கிட வயலினைச் சேறுசெய் வாரும்,செந்நெல்லின் வெண் முளைகளைச் சிதறி நாற்று விடுவார் களும், நாற்றைப் பறிப்பார்களும், நடுபவர்களும் ஆகப் பல்வேறு செயல்களைச் செய்வோரின் பேரோசை அவ்வயல்கள் எங்கும் மிகுந்திருக்கும்.

விளக்கவுரை

****

வரும்பு னற்பெருங் கால்களை மறித்திட வாளை
பெருங்கு லைப்பட விலங்குவ பிறங்குநீர்ப் பழனம்
நெருங்கு சேற்குல முயர்த்துவ நீள்கரைப் படுத்துச்
சுருங்கை நீர்வழக் கறுப்பன பருவரால் தொகுதி. **#1101**

நீர் ஓடி வரும் பெரு வாய்க்கால்களை வாளை மீன்கள் குறுக்கிட்டுத் தடுத்திட, அத்தன்மையால் அவ்விடத்து நீர் தேங்கிக் கரைகள் உடைபடும்படி நீருடைய அவ்வாய்க்கால்கள் நீர் நிறைந்து விலகிப் போகின்றன. வயல்களில் நெருங்கி வரும் சேல் மீன்கள் பள்ளமாய வயல்களில், தம் தொகையால், கரையை உயர்த்துகின்றன. மதகுகளுட் புகுந்து வரும் நீர் வெளி வாராதபடி பெருத்த வரால் கூட்டங்கள் திரண்டு நின்று தடுக்கின்றன.

விளக்கவுரை

நீர்வளமும், அதன்கண் வாழும் வாளை, சேல், வரால் ஆகிய மூவினங்களின் வளமும் விளக்கியவாறு.

தளைத்த டம்பணை எழுந்தசெந் தாமரைத் தவிசின்
இளைத்த சூல்வளை கண்படுப் பனஇடை யெங்கும்
விளைத்த பாசொளி விளங்குநீள் விசும்பிடை யூர்கோள்
வளைத்த மாமதி போன்றுள மருதநீர் வைப்பு. **#1102**

நீர்வளத்தால் சிறந்த அகன்ற கரைகளையுடைய வயலில், முளைத்து எழுந்த செந்தாமரை மலர்களாகிய இருக்கை களில், சூல் முதிர்ந்து இளைப்புற்றுத் துயில் கொள்ளும் சங்குகள், பசிய நீல ஒளி விளங்கும் நீண்ட வானத்திடைச் சிவந்த ஒளி சூழ்ந்த நிறை மதியைப் போன்றுள்ளன.

விளக்கவுரை

தளை - வரம்பு (வரப்பு). பசுமையான பயிர்கள் நிறைந் திருப்பது நீல வானம் போல்வது.செந்தாமரையில் இருக்கும் சங்குகள், சிவப்பொளிசூழ்ந்த மதியைப் போல்வனவாயின. நீரிடை உறங்கும் சங்கம் *(கம்பரா.பால.நாட்.6)* என்பர் கம்பரும்.

ஓங்கு செந்நெலின் புடையன உயர்கழைக் கரும்பு
பூங்க ரும்பயல் மிடைவன பூகம்அப் பூகப்
பாங்கு நீள்குலைத் தெங்குபைங் கதலிவண் பலவு
தூங்கு தீங்கனிச் சூதநீள் வேலிய சோலை. **#1103**

ஓங்கி வளர்ந்த செந்நெல் பயிரின் பக்கமாக உயர்ந்த கழைக் கரும்புகள் உள்ளன. பூக்கள் நிறைந்த அக்கரும்பின் அயலே பாக்கு மரங்கள் உள்ளன. அக்கமுக மரங்களின் அருகே நீண்ட குலைகளுடன்

விளங்கிடும் தென்னைகள், பருத்துச் செழித்த வாழைகள், பழம் நிறைந்த பலா மரங்கள், தொங்குகின்ற தித்திப்பாய கனிகளையுடைய மாமரங்கள் ஆகியன அங்குள்ள சோலைகளின் வேலியாகவுள்ளன.

விளக்கவுரை

****

நீடு தண்பணை உடுத்தநீள் மருங்கின நெல்லின்
கூடு துன்றிய இருக்கைய விருந்தெதிர் கொள்ளும்
பீடு தங்கிய பெருங்குடி மனையறம் பிறங்கும்
மாட மோங்கிய மறுகின மல்லல்மூ தூர்கள். **#1104**

வளம் பொருந்திய பழமையான ஊர்கள், குளிர்ச்சி பொருந்திய பெரிய வயல்களால் சூழப்பெற்றுள்ளன. அவ் வூர்கள் நெற்கூடுகள் தங்கிய வீடுகளை உடையன. அவ்வீடுகள், விருந் தினரின் வருகையை எதிர்கொள்ளும் பெருமை தங்கிய பெருங் குடிகளையுடையன. அவ்வீடுகள், இல்லறம் சிறக்க வாழ்ந்திடும் மாடங்களாகத் திகழ, இருபுறமும் ஓங்கிய வீதிகளை உடையன.

விளக்கவுரை

****

தொல்லை நான்மறை முதற்பெருங் கலையொலி துவன்றி
இல்ல றம்புரிந் தாகுதி வேள்வியில் எழுந்த
மல்கு திண்புகை மழைதரு முகிற்குலம் பரப்பும்
செல்வ மோங்கிய திருமறை யவர்செழும் பதிகள். **#1105**

திருமறையவர் வாழும் ஊர்கள், பழமையான நான்மறைகள் முதலாய பெருங்கலைகளை ஓதுதலால் வரும் ஓசை பெருகி விளங்கிட, இல்லற நெறியில் நின்று செய்யும் வேள்வியில் எழுந்த பரந்திடும் திண்ணிய புகையால், அவ்விடத்து மழையைத் தரும் முகிற் கூட்டங்கள் நிறைந்திட, அப்பயனால் செல்வம் ஓங்கி நிற்பன.

விளக்கவுரை

வேள்வி நற்பயன் வீழ்புனலாவது என்பவாகலின், `மல்கு திண்புகை மழைதரும் முகிற் குலம்` என்றார்.

தீது நீங்கிடத் தீக்கலி யாம்அவு ணற்கு
நாதர் தாமருள் புரிந்தது நல்வினைப் பயன்செய்
மாதர் தோன்றிய மரபுடை மறையவர் வல்லம்
பூதி சாதனம் போற்றிய பொற்பினால் விளங்கும். **#1106**

தீது நீங்கும்படியாகத் தீக்காலி எனும் பெயரு டைய ஓர் அசுரனுக்கு, இறைவன் அருள் புரிந்ததும், நல்வினைப் பயனைச் செய்தற்கேற்ற பெண்கள் இருவரைப் பெற்ற மாதவமுடைய மறையவர்கள் வாழ்ந்து

வருவதுமான திருவல்லம் என்னும் திருப்பதி யானது, திருநீறும் உருத்திராக்கமும் ஆகிய சிவச்சின்னங்களைப் போற்றிவரும் சிறப்பினால் விளக்கம் பெற்றிருக்கும்.

விளக்கவுரை

தீக்காலி என்னும் அசுரன் திருமாலின் சக்கரத்தால் தான் இறவாதிருக்கப் பெருமானை வேண்ட, அவனுக்கு அருள் செய்த திருப்பதி தீக்காலிவல்லமாகும். மறையவன் ஒருவன் ஆண் மகவு வேண்ட, இறைவன் அவனுக்கு இரு பெண் மக்களை அருள, அவர் களை அவன் இறைத்தொண்டிற்கு ஆளாக்குமாறு வேண்ட, பெரு மானும் அருளினன் என்பது மற்றொரு வரலாறு.

அருவி தந்தசெம் மணிகளும் புறவில்ஆய் மலரும்
பருவி ஓடைகள் நிறைந்திழி பாலியின் கரையின்
மருவு கங்கைவாழ் சடையவர் மகிழ்ந்தமாற் பேறாம்
பொருவில் கோயிலுஞ் சூழ்ந்ததப் பூம்பணை மருதம். **#1107**

குறிஞ்சி நிலத்து அருவியிலிருந்து பெருகிய ஆறுகள் அரித்துத்தந்த செம்மணிகளும், முல்லைநிலச் சோலையில் அவ்ஆறுகள் வாரி வரும் மலர்களும் கலந்து, அவ்ஆற்று நீர் பரந்த ஓடைகளில் நிறைந்து வழிந்திட ஓடும் அப்பாலியாற்றின் கரையில், கங்கையாறு மருவி விளங்கிடும் சடையையுடைய சிவபெருமான் மகிழ்ந்து உறையும் திருமாற்பேறு என்னும் ஒப்பற்ற அருள் நிறைந்த கோவிலும் இருந்தருளும் பேறுடையது அவ்வழகிய வயல் சூழ்ந்த மருதநிலம் ஆகும்.

விளக்கவுரை

திருமாற்பேறு - திருமால் வழிபட்டுச் சக்கரம் பெற்றமை யினால் இப்பெயர் பெற்றது.

விரும்பு மேன்மையென் பகர்வது விரிதிரை நதிகள்
அருங்க ரைப்பயில் சிவாலயம் அனேகமும் அணைந்து
பருங்கை யானையை உரித்தவர் இருந்தஅப் பாசூர்
மருங்கு சூழ்தவம் புரிந்ததன் றோமற்ற மருதம். **#1108**

விரிந்த அலைகளையுடைய ஆறுகளின் அரிய கரைகளில் மருவி விளங்கிடும் சிவபெருமானின் திருக்கோவில்கள் பலவும் அங்குளவாய், பருத்த துதிக்கையையுடைய கயாசூரன் என்னும் யானை வடிவுடையானை உரித்த பெருமான் வீற்றிருந் தருளும் திருப்பாசூர் என்னும் திருப்பதியும், அம் மருத நிலத்தின் இடையில் இருத்தற்கு மற்று இந்த மருத நிலம் பெருஞ் சிறப்புடைய தவம் புரிந்ததன்றோ? அவ்வனமாக அனைவராலும் விரும்பப்படும் மருத நிலத்தின் மாண்பை என் என்று கூறுவது!

விளக்கவுரை

பாசூர் - இறைவன் மூங்கிலடியில் எழுந்தருளியதால் இப்பெயர் பெற்றது. பாசு - மூங்கில்.

பூம ரும்புனல் வயற்களம் பாடிய பொருநர்
தாம ருங்கிளை உடன்தட மென்மலர் மிலைந்து
மாம ருங்குதண் ணீழலின் மருதயாழ் முரலும்
காமர் தண்பணைப் புறத்தது கருங்கழி நெய்தல். **#1109**

மலர்கள் நிறைந்த நீர்சூழ்ந்த வயலின் வளத்தைச் சிறப்பிக்கும் மருதப் பண்ணைப் பாடுகின்ற பொருநர்கள், தாங்கள் தம் அரிய கிளைகளுடன் குளத்தில் மலரும் மிருதுவான நீர்ப்பூக்களைச் சூடிக்கொண்டு, பெரிய மாமரங்களின் நிழலில் இருந்து, தங்கள் கையில் கொண்ட மருத யாழை வாசித்து மகிழும், அழகிய குளிர்ந்த வயலுடைய மருத நிலத்தின் புறமாக உள்ளது, கறுத்த கழிநிலமாய நெய்தல் நிலம் ஆகும்.

தூய வெண்டுறைப் பரதவர் தொடுப்பன வலைகள்
சேய நீள்விழிப் பரத்தியர் தொடுப்பன செருந்தி
ஆய பேரளத் தளவர்கள் அளப்பன உப்பு
சாயல் மெல்லிடை அளத்தியர் அளப்பன தரளம். **#1110**

இந்நெய்தல் நிலத்தில், தூய வெண்மணற் பரப் புடைய துறைகளில் வாழும் பரதவர்களால் தொடுக்கப்படுவன மீன் பிடிக்கும் வலைகள். சிவந்து நீண்ட அழகிய கண்களையுடைய பரத்தியர்களால் தொடுக்கப்படுவன செருந்தி மலர் மாலைகள். பெரிய உப்பளங்களில் அளவர்களால் அளக்கப்படுவது உப்பு. அங்குள்ள சாயலையும் மெல்லிய இடையையும் உடைய அளத்தியர்களால் அளக்கப்படுவன முத்துகள்.

விளக்கவுரை

பரதவர், பரத்தியர், அளவர், அளத்தியர் என்பன நெய்தல் நிலத்து வாழும் மக்கட்குரிய பெயர்களாம்.

கொடுவி னைத்தொழில் நுளையர்கள் கொடுப்பன கொழுமீன்
படும ணற்கரை நுளைச்சியர் கொடுப்பன பவளம்
தொடுக டற்சங்கு துறையவர் குளிப்பன அவர்தம்
வடுவ கிர்க்கண்மங் கையர்குளிப் பனமணற் கேணி. **#1111**

கொடிய செயலாய மீன்பிடிக்கும் தொழிலை யுடைய நுளையர்களால் கொடுக்கப்படுவன கொழுத்த மீன்கள். நுளைச்சியர்களால் கொடுக்கப்படுவன கடற்கரையில் இருக்கும் மணலிடத்து வரும் பவளங்கள். தோண்டப்பெற்றதாய்ப் பரந்திடும் கடலிடத்து வாழும் துறையவர்களால் குளித்து எடுக்கப்படுவன சங்குகள். மாவடுவின் வனப்புடைய கண்களையுடைய அத்துறைய வர்களது பெண்களால்

குளிக்கப் படுவன மணற் கேணிகள்.

விளக்கவுரை

சகரரால் தோண்டப் பெற்றது கடல் என்பது பற்றித் தொடுகடல் என்றார். துறையர் - நெய்தல் நிலத்து மக்கட் பெயர்களில் ஒன்று. குளிப்பன என வருவனவற்றுள், முன்னையது கொழித்து எடுப்பன எனும் பொருள்படும்; பின்னையது நீருட் குளிப்பது *(நீராடுவது)* எனும் பொருள்படும்.

சுழிப்பு னற்கடல் ஓதமுன் சூழ்ந்துகொண் டணிய
வழிக்க ரைப்பொதிப் பொன்னவிழ்ப் பனமலர்ப் புன்னை
விழிக்கு நெய்தலின் விரைமலர்க் கண்சுரும் புண்ணக்
கழிக்க ரைப்பொதி சோறவிழ்ப் பனமடற் கைதை. **#1112**

சுழிகளுடன் கூடிய நீர் நிறைந்த கடல் சூழ்ந்து நிற்கும் இடத்தருகே உள்ள வழிக்கரையில், பல மலர்களையுடைய புன்னை மரங்கள், தம் மலர்களில் பொதிந்து கிடக்கும் மகரந்தப் பொடிகளை அவிழ்த்துக் கொடுப்பன. உடன் மலர்கின்ற நெய்தல் பூக்களில் தங்கி இருந்த வண்டினங்கள் உண்ணுமாறு, கழிக்கரையி னிடத்து இருக்கும் தாழை மரங்கள், தம்மிடத்துக் கொண்டிருக்கும் சோற்றினை அவிழ்த்துக் கொடுப்பன.

விளக்கவுரை

புன்னை மரங்களின் பொடி பொன்னிறமுடைய தாதலின் பொன்னைச் சொரிவன என்றார். நெய்தல் நிலம், தன் வழிக் கரையில் செல்வார்க்குப் *(உயர்திணை)* பொன்னும், கழிக்கரையில் இருப்பார்க்குச் *(வண்டினங்களுக்கு: அஃறிணை)* சோறும் தந்துதவு மாற்றான், எவ்வுயிரும் தன்னுயிர் போல் எண்ணியிரங்கும் தெய்வ அருட்கருணையுடைய தாதல் விளங்கும்.

காயல் வண்கரைப் புரைநெறி அடைப்பன கனிமுள்
சேய தண்ணறுஞ் செழுமுகை செறியும்முண் டகங்கள்
ஆய நுண்மணல் வெண்மையை மறைப்பன அன்னந்
தாய முன்துறைச் சூழல்சூழ் ஞாழலின் தாது. **#1113**

உப்புவிளையும் கடல் ஓரத்தில் விளங்கிடும் கரைகளில் உள்ள குற்றம் உடைய சிறுவழிகளை அடைப்பன, முதிர்ந்த முள்கள் பொருந்திய சிவந்த நறிய செழுமுகை கொண்ட முள்ளிச் செடிகள். அவ்விடத்தில் பரந்திருப்பதாய நுண்ணிய வெண் மணற் பரப்பின் வெள்ளை நிறத்தை, அன்னப் பறவைகள் தாவி விளையா டும் முன்கரையின் இடத்தினில் சூழ வளர்ந்திருக்கும் குங்கும மரங்கள், தம் மகரந்தப் பொடிகளைச் சொரிந்து மறைப்பன.

விளக்கவுரை

காயல் - கழிக்கானல் எனலுமாம். முண்டகங்கள் - முள்ளிச் செடிகள். ஆய - அவ்விடத்துள்ள.

கடற்கரையிலுள்ள சிறு வழிகள், அவ்வப்பொழுதும் அலைகளால் அரிக்கப்பெற்று உடைப்பும் சிறுசிறு துளைகளும் உடையனவாய் இருக்கும். இதுபற்றியே `புரை நெறி` *(குற்றமுடைய வழி)* என்றார். இவற்றை அங்குள்ள முட் செடிகள் மறைக்குமாற்றான், அற்ற மறைக்கும் பெருமை அவற்றிற்கு உளதாதல் பெறுதும். கடற் கரையில் உள்ள நுண்மணலின் வெண்மையை மறைக்குமாற்றான், அது அம்மணலின் புல்லறிவாண்மையை மறைத்து அதனைப் பெரிது படுத்தாமை விளங்குகின்றது.

வெண்மை - புல்லறிவாண்மை. இவ்வாறெல்லாம் அழகு படுத்திக் காட்ட வல்லவர் தெய்வச் சேக்கிழாரன்றி வேறு யார்தாம் செய்ய வல்லார்? யாரே அழகுக் கழகு செய்வார்?

வாம்பெ ருந்திரை வளாகமுன் குடிபயில் வரைப்பில்
தாம்ப ரப்பிய கயல்களின் விழிக்கயல் தவிரக்
காம்பின் நேர்வருந் தோளியர் கழிக்கயல் விலைசெய்
தேம்பொ திந்தசின் மழலைமென் மொழியசெவ் வழியாழ். **#1114**

தாவி அலைக்கின்ற பெருந்திரைகளையுடைய கடலின் முன்னாகவுள்ள குடிகளின் இருப்பிடங்களில், மூங்கிலின் வனப்புடைய பசிய தோள்களையுடைய பரதவப் பெண்கள், தாம் பரப்பியிருக்கும் கயல் மீன்களுள், கண்களாகிய மீன்களைத் தவிர, ஏனையவற்றை விலைபேசி விற்பனை செய்திடும், தேனின் இனிமை பொதிந்த தித்திப்புடைய மழலையான மெல்லிய சொற்களின் இனி மையை, நெய்தல் நிலச் செவ்வழியாழ் பெற்றிருக்கும்.

விளக்கவுரை

வாம் - தாவும். காம்பு - மூங்கில். விழிக்கயல், கழிக் கயல் என்பன சொல்லழகு தோன்ற நிற்பதுடன், விழிக்கயல் தவிரக் கழிக்கயலையே விற்பர் என்பதால், அவர்தம் கற்புத் திண்மை தோன்ற நிற்கும் பொருள் அழகும் தோன்ற நிற்கின்றது.

மருட்கொ டுந்தொழில் மன்னவன் இறக்கிய வரியை
நெருக்கி முன்திரு வொற்றியூர் நீங்கலென் றெழுதும்
ஒருத்தர் தம்பெருங் கோயிலின் ஒருபுறஞ் சூழ்ந்த
திருப்ப ரப்பையும் உடையதத் திரைக்கடல் வரைப்பு. **#1115**

மயக்க மிகுதியால் கொடுந்தொழில் செய்த ஓர் அரசன், கோவில் வழிபாடுகளில், அதற்கெனப் பொருளைக் குறைத் துக் கொள்ள எழுதிய

வரிகளில் `நெருக்கித் திருவொற்றியூர் நீங்கலாக` என்று எழுதிய ஒப்பற்றவராய பெருமானின் திருக்கோவிலும் சூழ்ந்திருக்கும் திருவுடைய பரந்த நிலத்தையுடையது, இக் கடல் சூழ்ந்த நெய்தல் நிலம் ஆகும்.

விளக்கவுரை

மன்னவன் - மாந்தாதா என்னும் அரசன். அயோத் தியில் அரசு செய்த இவன், மூப்பும், பிணியும் மிக வருத்திய நிலையில் இறக்க எண்ணினான். அது பொழுது அதற்கு ஏதுவாகச் செயத்தக்கது யாது? எனச் சிலரை வினவ, அவர்கள் புண்ணியச் செயல்களுக்கென முன் வகுத்துக் கொடுத்த பொருட்களைக் குறைத்துக் கொடுப்பின் அவ் வெண்ணம் நிறைவேறும் என, அவனும் அவ்வக்கோவில்களுக்கும் உள்ள அறக்கட்டளைகளைக் குறைத்து எழுதிக் கொடுத்தனன். மறு நாள் அவ்வேட்டினைப் பார்க்க நேர, தான் முன் எழுதிய ஆவணவரி களில் இடையிட்டுத் `திருவொற்றியூர் நீங்கலாக` என எழுதப் பெற்றிருந்தது. அது கண்ட அரசன் திருவொற்றியூர்ப் பெருமானின் திருவருளே எனக் கருதி, அப்பெருமானுக்கு மேலும் பல சிறப்பு வழிபாடுகளைச் செய்து பிணியும், மூப்பும் நீங்கப் பெற்றனன் எனும் வரலாற்றை இப்பாடல் உட்கொண்டதாகும். இறக்கிய- குறைத் தெழுதிய. நெருக்கி - `திருவொற்றியூர் நீங்கலாக` எனும் தொடரை, அவ்வாவண வரிகளில் வரிபிளந்து நெருக்கி எழுதிய.

மெய்த ரும்புகழ்த் திருமயி லாபுரி விரைசூழ்
மொய்த யங்குதண் பொழில்திரு வான்மியூர் முதலாப்
பைத ரும்பணி அணிந்தவர் பதியெனைப் பலவால்
நெய்தல் எய்தமுன் செய்தஅந் நிறைதவம் சிறிதோ. **#1116**

மெய்ம்மையை உறுதிப்படுத்தும் பெரும்புகழ் கொண்ட திருமயிலாபுரி எனும் திருப்பதியும், நறுமணம் கமழும் வண்டுகள் மொய்த்திடும் சிறந்த குளிர் தூங்கும் சோலைகளையுடைய திருவான்மியூர் என்னும் திருப்பதியும் முதலாக, நச்சுப்பை உடைய பாம்பினை அணிந்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருப்பதிகள் பலவும் அங்குள்ளன. ஆதலால் இனைய பல திருப்பதிகள் இங்கு இருத்தற்கு இந்நெய்தல் நிலம்முன் செய்த நிறைந்த தவம் சிறிதோ? அன்று; மிகப் பெரிதாகும்.

விளக்கவுரை

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் இறைவழிபாடும், அடியவர் வழிபாடுமே என்பது உண்மையானால் உலகர் முன் வருகவென ஞானசம்பந்தர் அருள, பூம்பாவை உருப்பெற்று உலகர் முன் வந்தமையின், மெய்ம்மையை நிலைநாட்டிய புகழுக்குரியது திரு

மயிலாப்பூர் ஆகும்.

கோடு கொண்டெழும் திரைக்கடற் பவளமென் கொழுந்து
மாடு மொய்வரைச் சந்தனச் சினைமிசை வளரும்
நீடு நெய்தலும் குறிஞ்சியும் புணர்நிலம் பலவால்
ஆடு நீள்கொடி மாடமா மல்லையே அனைய. **#1117**

சங்குகளைத் தம்மிடத்துக் கொண்டு எழுகின்ற திரைகளை உடைய கடலில் படர்ந்திடும் பவளமாகும் மெல்லிய கொடிகள், வளர்ந்து ஓங்கி, அருகில் இருக்கும் பெருமலை மீதில் நின்ற சந்தன மரத்தினில் படர்ந்து வளரும். இத்தகைய நீண்ட நெய்தல் நிலமும், குறிஞ்சி நிலமும் மயங்கி (கூடி) நிற்கும் இடங்கள் பலவற் றுள், ஆடுகின்ற நீண்ட கொடிகளுடன் விளங்கிடும் மாமல்லை நகரம் போன்றனவும் பலவாம்.

விளக்கவுரை

`திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே,நிலன் ஒருங்கு மயங்குதல் இன்றென மொழிப, புலன்நன் குணர்ந்த புலமை யோரே` `உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே`*(தொல். அகத். 12,13)* எனத் தொல்காப்பியம் கூறும் திணை மயக்கத்திற்கேற்ப, இப்பாடல் முதலாகத் திணை மயக்கம் கூறப் பெறுகின்றது. பவளக் கொடி நெய்தற் கருப்பொருள். சந்தனமரம் குறிஞ்சிக் கருப்பொருள். அப்பவளக் கொடிபடரச் சந்தனமரம் உள்ளது எனவே, நெய்தலும் குறிஞ்சியும் மயங்கியவாயின.

மலைவி ழிப்பன எனவயற் சேல்வரைப் பாறைத்
தலையு கைப்பவுந் தளைச்செறு விடைநெடுங் கருமான்
கலைகு திப்பன கரும்பகட் டேர்நிகர்ப் பவுமாய்
அலைபு னற்பணை குறிஞ்சியோ டணைவன அனேகம். **#1118**

மலைகள் கண் விழித்துப் பார்ப்பன போல, வயலில் நின்றும் துள்ளிப் பாய்ந்த சேல் மீன்கள், மலையிடத்துப் பாறையில் பாய்ந்து புரண்டு நிற்பனவும், வரம்புகளை உடைய வயல்களின் பகுதியில் கருமையுடைய எருமைகள் ஏரிற் பூட்டிப் போவதை ஒப்ப, நெடிய கருமையுடைய கலைமான் கலைகள் குதித்தோடுவனவும், ஆகிய இத்தன்மைகளால் நீர்ப்பெருக்குடைய மருதநிலம், குறிஞ்சியுடன் கலந்திருக்கும் இடங்கள் பலவாம்.

விளக்கவுரை

மலையும், மானும் குறிஞ்சி நிலத்தன. மீனும், எருமையும் மருத நிலத்தன. இவ்விரண்டும் மயங்கின.

புணர்ந்த ஆனிரைப் புறவிடைக் குறுமுயல் பொருப்பின்
அணைந்த வான்மதி முயலினை இனமென அணைந்து

மணங்கொள் கொல்லையில் வரகுபோர் மஞ்சன வரைக்கார்
இணைந்து முல்லையும் குறிஞ்சியும் கலப்பன எங்கும். **#1119**

பசுக் கூட்டங்களையுடைய முல்லை நிலத்திருந்த சிறுமுயல், மலையின் மீதாக வானில் அணைகின்ற முழுமதியின் முயற் கறையைத் தனது இனமாய முயல் என நினைந்து அதனை அணைந்திட மலை உச்சியில் செல்வதும், முல்லைப் பூவின் மணம் கொண்ட முல்லைக் கொல்லையில் இருந்த வரகின் போர்களில், கறுத்த மலைகளின் மீது நீரைப் பொழியும் மேகங்கள் வந்து படிந்து இருப் பதும் ஆய நிகழ்ச்சியினால் முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் கலந்த இடங்களும் பல உள.

விளக்கவுரை

ஆனிரைகளும், முயலும், வரகும் முல்லை நிலத்தன. மலை குறிஞ்சி நிலத்தது.

இவ்வகையில் இவ்விரு திணைகளும் மயங்கின.

கவரும் மீன்குவை கழியவர் கானவர்க் களித்துச்
சிவலுஞ் சேவலும் மாறியுஞ் சிறுகழிச் சியர்கள்
அவரை ஏனலுக் கெயிற்றியர் பவளமுத் தளந்தும்
உவரி நெய்தலுங் கானமுங் கலந்துள ஒழுக்கம். **#1120**

தாம் பிடிக்கின்ற மீனின் குவியலைப் பரதவர்கள், வேடர்களுக்குக் கொடுத்து, மாறாக அவரிடமிருந்து கௌதாரி யையும், கோழிச் சேவலையும் பெற்றுக் கொள்வதும், சிறிய பரதவப் பெண்கள், தாம் இடைச்சியர் பால் பெறும் அவரைக்கும் தினைக்கும் மாற்றாக, பவளத்தையும், முத்தையும் அளந்து கொடுப்பதும் ஆகிய நிகழ்ச்சிகளால், கடல்சூழ்ந்த நெய்தல் நிலமும், முல்லை நிலமும் கலந்துள்ள இடங்கள் பலவுள.

விளக்கவுரை

மீன், பவளம், முத்து ஆகியன நெய்தற் கருப்பொருள்கள். சிவல், சேவல், அவரை, தினை ஆகியன முல்லைக் கருப்பொருள்கள்.

இவ்வகையில் இவ்விரு திணைகளும் மயங்கின.

அயல்ந றும்புற வினில்இடைச் சியர்அணி நடையும்
வியன்நெ டும்பணை உழத்தியர் சாயலும் விரும்பி
இயலும் அன்னமும் தோகையும் எதிரெதிர் பயில
வயலும் முல்லையும் இயைவன பலவுள மருங்கு. **#1121**

அயலே உள்ள நறிய முல்லை நிலத்தினில் வாழும் இடைச்சியரது அழகிய நடையினையும், அகன்ற வயல்களில் வாழும் உழத்தியரது சாயலையும் விரும்பி, இயங்குகின்ற அன்னப் பறவையும், மயிலும் முறையே எதிர் எதிர் பயில்வதால், மருதமும் முல்லையும் இயைந்து

காணப்படும் இடங்கள் பலவுள.

விளக்கவுரை

இடைச்சியரும், உழத்தியரும் முறையே முல்லை நிலத் திற்கும் மருத நிலத்திற்கும் உரியவர்கள். மயிலும், அன்னமும் முறையே முல்லை நிலத்திற்கும் மருத நிலத்திற்கும் உரியன. இவற்றால் இவ்விரு திணைகளும் மயங்கின. அன்னம் நெய்தற்கும், மயில் குறிஞ்சிக்கும் உரிய வாயினும் முல்லைக்கும் சிறுபான்மை உரியவாம்.

மீளும் ஓதம்முன் கொழித்தவெண் தரளமும் கமுகின்
பாளை உக்கவும் விரவலிற் பரத்தியர் பணைமென்
தோளு ழத்தியர் மகளிர்மா றாடிமுன் தொகுக்கும்
நீளும் நெய்தலும் மருதமும் கலந்துள நிலங்கள். **#1122**

கடல் அலைகள் எழுந்து வந்து கரையில் மோதிப் பின் மீள இழுத்துப் புரளும் போது, கொழித்த வெண் முத்துக்களும், கமுகின் பாளைகள் உதிர்த்த மெல்லிய பூக்களும் சேர்வதனால், அவற்றைப் பரத்தியர்களும், பெருத்த மூங்கில் அனைய தோள்களை யுடைய உழத்தியர்களும் மாறாக, விளையாடலில் முன்னாக எடுத் தெடுத்து முத்துகளையும், கமுகம் பூவையும் மாலையாகக் கோக்கின்ற நீண்ட நெய்தல் நிலமும் மருத நிலமும் கலந்த நிலங்கள் பலவாக அங்கு உள்ளன.

விளக்கவுரை

முத்துக்களும், கமுகுகளும் முறையே நெய்தல் நிலத்திற்கும் மருதநிலத்திற்கும் உரியன. இவற்றை இவ்விரு நிலத்து மகளிரும் தத்தமக்கு உரியவாகத் தொடுத்தலின் திணை மயக்க மாயிற்று.

ஆய நானிலத் தமைதியில் தத்தமக் கடுத்த
மேய செய்தொழில் வேறுபல் குலங்களின் விளங்கித்
தீய வென்பன கனவிலும் நினைவிலாச் சிந்தைத்
தூய மாந்தர்வாழ் தொண்டைநாட் டியல்புசொல் வரைத்தோ. **#1123**

இவ்வாறாக, நானிலங்களிலும் அமைதியாக வாழும் மக்கள், தத்தமக்குப் பொருந்திய தங்கள் நிலத்துக்குரிய செய்தொழில்களைப் பல்வேறு வகையாகச் செய்து வரும் நற்குணங் களால் விளங்கி, தீய என்பன கனவிலும் நினைவிலாத சிந்தை யுடையராய் வாழும் இத் தொண்டை நாட்டின் இயல்பு என் சொல் லளவில் அடங்குவதோ? அடங்காது,

விளக்கவுரை

அமைதியானவாழ்வு,செய்தொழில் சிறப்பு, தீய என்பன கனவிலும் நினையாச் சிந்தை, தெய்வத் திருக்கோயில்களின் வளம் ஆகிய இவற்றைவிட ஒருநாட்டிற்குத் தேவையானதும் உண்டோ? இல்லை, ஆதலின் அந்நாட்டின் பெருமை என் சொல் அளவைத்தோ? அன்று

என்றார் ஆசிரியர்.

இவ்வ ளந்தரு பெருந்திரு நாட்டிடை என்றும்
மெய்வ ளந்தரு சிறப்பினால் உலகெலாம் வியப்ப
எவ்வு கங்களும் உள்ளதென் றியாவரும் ஏத்தும்
கைவி ளங்கிய நிலையது காஞ்சிமா நகரம். **#1124**

இவ்வாறான வளம் தரும் பெருமையுடைய திருநாடாகிய தொண்டை நாட்டில், என்றும் உண்மையான வளம் தரும் சிறப்பினால், உலகம் எல்லாம் கண்டு வியந்திடும்படி எல்லா உலகங்களின் நலனும் இங்கு உள்ள தென்று யாவரும் போற்றுகின்ற பெருமை விளங்கிய நிலைமையுடையது காஞ்சி மாநகரம்.

விளக்கவுரை

`அரும்பொருள் தரூஉம் விருந்திற்றேஎம் ஒருங்கு தொக்கன்ன உடைப் பெருஞ்செல்வம்` *(சிலப்பதிகாரம். புகார்க். மனைய. 5, 6)* என்புழிப் போல, இந்நகரத்தும் அச்சிறப்பு அமைய நின்றது.

ஆன தொன்னகர் அம்பிகை தம்பெரு மானை
மான அர்ச்சனை யாலொரு காலத்து வழிபட்
டூன மில்அறம் அனேகமும் உலகுய்ய வைத்த
மேன்மை பூண்டஅப் பெருமையை அறிந்தவா விளம்பில். **#1125**

இவ்வாறாய பழமை வாய்ந்த காஞ்சி மாநகரத் திடத்து எம் தாயாகிய உமையம்மையார், தம் தலைவராகிய பெரு மானை மேலான வழிபாடு செய்ததன் வாயிலாக, ஒரு காலத்து உலகம் உய்யக் குறைவில்லாத அறங்கள் பலவற்றையும் செய்து வளர்த்த அப்பெருமையை, நாம் அறிந்தவாறு சொல்லில்.

விளக்கவுரை

****

வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளித்
துள்ளு வார்புனல் வேணியார் அருள்செயத் தொழுது
தெள்ளு வாய்மையின் ஆகமத் திறனெலாம் தெளிய
உள்ள வாறுகேட் டருளினாள் உலகையா ளுடையாள். **#1126**

வெள்ளிமயமாகிய திருக்கயிலாய மலையில் வீற்றிருந்தருளி, பொங்கிடும் பெருந்திரைகளையுடைய கங்கையைச் சூடிய சிவபெருமான் அருளிச் செய்ய, உலகுயிர்களையெல்லாம் அடிமையாகவுடைய அம்மையார் வணங்கி, தெளிந்த உண்மைப் பொருளினைக் கூறும் சிவாகமங்களின் தன்மைகளை எல்லாம் முற்றிலும் தெளிய, அவ்வியல்புகளை உள்ளவாறு கேட்டருளினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள
அண்ண லார்தமை அர்ச்சனை புரியஆ தரித்தாள்
பெண்ணில் நல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து. **#1127**

அது பொழுது, எண்ணற்ற ஆகமங்களை மொழிந்தருளிய சிவபெருமான், தாம் விரும்பும் உண்மையாவது தம்மை முறைப்படி வழிபடுவதேயாகும் என்று அம்மையாருக்கு உரைத்தருள, பெண்களுக்கெல்லாம் நல்லவராய அப்பெருமாட்டியாரும், உயிர்கட் கெல்லாம் தலைவராய அப்பெருமானாரை வழிபாடாற்றத் தம் உள்ளத்து விருப்பம் கொண்டார்.

விளக்கவுரை

`ஆகமங்கள் இருபத்தெட்டு எனக் கூறப்பட்டிருக்க, ஈண்டு எண்ணில் ஆகமம் என்றது என்னை` என ஐயம் எழலாம். இதற்கு இருவகையாக அமைதி கண்டுள்ளனர் சிவக்கவிமணியார் *(பெ-ரை).*
(1) எண் - நில் ஆகமம் எனப் பிரித்து அளவுபடுத்தி நிறுத்தப் பட்ட ஆகமங்கள் எனப் பொருள் உரைத்து, மூல ஆகமங்கள் இருபத் தெட்டும் உபஆகமங்கள் *207*உம் ஆகிய இவையாம். *(2)* மூல ஆகமங்கள் ஒவ்வொன்றும் எண்ணற்ற கிரந்தங்களை உடைய வாதலின் `எண்ணில் ஆகமம்` என்றார் என்றலும் ஒன்று.

நங்கை உள்நிறை காதலை நோக்கி
நாய கன்திரு வுள்ளத்து மகிழ்ந்தே
அங்கண் எய்திய முறுவலுந் தோன்ற
அடுத்த தென்கொல்நின் பாலென வினவ
இங்கு நாதநீ மொழிந்தஆ கமத்தின்
இயல்பி னால்உனை அர்ச்சனை புரியப்
பொங்கு கின்றதென் னாசையென் றிறைஞ்சிப்
போக மார்த்தபூண் முலையினாள் போற்ற. **#1128**

பெருமாட்டியின் திருஉள்ளத்துத் தம்மை வழிபட இருக்கும் காதலின் நிறைவை நோக்கிப், பெருமானாரும் தம் திருவுளத்து மகிழ்ச்சி கொண்டு, அம்மீதூர்வால் வந்திட்ட புன்முறுவல் பூத்திட, `அம்மையே! நீ செயக் கருதும் செயற்பாடு யாது` எனக் கேட் டருள, அம்மையாரும் அவரை நோக்கி, `என் தலைவனே! இங்குத் தாங்கள் அருளிய ஆகமத்தின் இயல்பினால் உம்மை வழிபாடு புரிந் திட என் ஆசை மீதூர்கின்றது` எனக் கூறி வணங்கி, போகங்கள் யாவும் நிறைந்தவும், அணிகலன்கள் பலவற்றையுடையதுமான மார்பகங்களையுடைய பிராட்டியும் போற்றுதல் புரிந்துநிற்றலும்.

விளக்கவுரை

`போக மார்த்த பூண் முலையினாள்` *(தி.1 ப.49 பா.1)* எனவரும் இத் தொடர் ஞானசம்பந்தர், திருநள்ளாற்றுப் பதிகத்தில் எடுத்தாண்டதாகும்.

தேவ தேவனும் அதுதிரு வுள்ளஞ்
செய்து தென்திசை மிக்கசெய் தவத்தால்
யாவ ருந்தனை யடைவது மண்மேல்
என்று முள்ளது காஞ்சிமற் றதனுள்
மாஅ மர்ந்தநம் இருக்கையி லணைந்து
மன்னு பூசனை மகிழ்ந்துசெய் வாயென்
றேவ வெம்பெரு மாட்டியும் பிரியா
விசைவு கொண்டெழுந் தருளுதற் கிசைந்தாள். **#1129**

தேவர்களுக்கெல்லாம் தலைவரான பெருமானாரும் அதுகேட்டுத் திருவுள்ளம் பற்றி, `தென் திசையான தமிழ்நாடு செய்த மிக்க தவத்தால், யாவரும் தம்மிடத்து அடைவதற்கு இடனா யிருப்பதும், இந்நிலவுலகில் என்றும் நிலையாக இருப்பதுமான நகரம் காஞ்சியாகும், மற்று அந்நகரத்தில் மாமர நீழலின் கீழ் அமர்ந்த நம் இருப்பிடத்தினை நீ சேர்ந்து, விளங்கிடும் வழிபாட்டை மகிழ்ந்து செய்திடுவாய்` என்று அங்குச்செல்லுமாறு பணித்தருளினர். எம் பிராட்டியும் எம்பெருமானைப் பிரிய இயலாத நிலையில் விடை கொண்டு காஞ்சிமாநகருக்கு எழுந்தருள இசைந்தனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஏத மில்பல யோனிஎண் பத்து
நான்கு நூறாயி ரந்தனுள் வைத்த
பேத மும்புரந் தருளும்அக் கருணைப்
பிரான்மொ ழிந்தஆ கமவழி பேணிப்
போது நீர்மையில் தொழுதனள் போதப்
பொருப்பில் வேந்தனும் விருப்பில்வந் தெய்தி
மாத வம்புரிந் தருளுதற் கமைந்த
வளத்தொ டும்பரி சனங்களை விடுத்தான். **#1130**

உயிர்களின்பால் உள்ள மலக் குற்றம் நீங்குதற்கென அவ்வவ்வுயிர்கட்கும் வெவ்வேறாகக் கொடுக்கப் பெற்ற எண்பத்து நான்கு நூறு ஆயிரம் உயிர்வகைகளையும், பாதுகாத்தருளும் பெருங் கருணையுடைய சிவபெருமான் மொழிந்தருளிய ஆகம வழியே அப்பெருமானை வழிபடச் செல்வாராய், அம்மையார் தொழுது போதர, மலையரசனும், விருப்புடன் வந்தடைந்து, அப்பெருமாட்டியார்

பெருந்தவம் புரிந்தருளுதற்கு உரிய பொருள்களோடு, வேண்டிய ஏவல் மகளிரையும் உடன் செல விடுத்தான்.

விளக்கவுரை

யோனி - பிறப்பு. பரிசனம் - ஏவல்மகளிர்.

துன்னு பல்லுயிர் வானவர் முதலாச்
சூழ்ந்து டன்செலக் காஞ்சியில் அணையத்
தன்னை நேர்வரும் பதுமமா நாகந்
தம்பி ராட்டிதாள் தலைமிசை வைத்தே
அன்னை யாயுல கனைத்தையும் ஈன்றாய்
அடிய னேன்உறை பிலமத னிடையே
மன்னு கோயில்கொண் டருளுவாய் என்ன
மலைம டந்தைமற் றதற்கருள் புரிந்து. **#1131**

நெருங்கிய பல உயிர்களுள் வானவர் முதலாகப் பலரும் தம்மைச் சூழ்ந்து வர, அப்பெருமாட்டியார் காஞ்சியில் வந்து சேர, ஒப்பற்ற பெருமையுடைய பதுமன் என்னும் பெரிய நாக அரசன் எம்பிராட்டியாரின் திருவடிகளைத் தன் தலைமீது வைத்து வணங்கி, உலகு அனைத்தையும் ஈன்றவளே! அடியேன் உறைகின்ற இப்புற்றி னிடமாகக் கோயில் கொண்டருளுவாய் எனவேண்டலும், மலைஅரசன் மகளாரும் இசைந்தருளி.

விளக்கவுரை

திசைக் கொன்றாக எட்டு நாகங்கள் உள்ளன. அவை, வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன் என்பன. அவற்றுள் பதுமன் என்பது காஞ்சியின் நிலப்பிரிவில் வாழ்வதாகும்.

அங்கு மண்ணுல கத்துயிர் தழைப்ப
அளவில் இன்பத்தின் அருட்கரு விருத்தித்
திங்கள் தங்கிய புரிசடை யார்க்குத்
திருந்து பூசனை விரும்பினள் செய்ய
எங்கும் நாடவுந் திருவிளை யாட்டால்
ஏக மாமுதல் எதிர்ப்படா தொழியப்
பொங்கு மாதவஞ் செய்துகாண் பதற்கே
புரிவு செய்தனள் பொன்மலை வல்லி. **#1132**

அவ்விடத்தில் மண்ணுலகத்துள்ள உயிர்கள் யாவும் தழைத்துச் சிறந்திட, அளவற்ற இன்பத்தினாலாய அருளையே தன் உள்ளத்திற் கொண்டு, அங்கிருந்தே இளம்பிறை தங்கிய சடையை யுடைய பெருமானுக்குத் திருந்திடும் பூசனையை விருப்பமுடன் செய்தருள, அப்பெருமான்

கயிலைமலையில் அருளியவாறு அவர் திருவுருவம் இருந்தருளும்
இடத்தை, எங்கும் நாடிப் பார்க்கவும், தமது திருவிளையாட்டால்,
ஒப்பற்றவராக விளங்கும் பெருமானும் எதிர்ப்படாது மறைந்திருப்ப,
அருள் பொங்கும் பெருந் தவம் செய்து காண்பதற்கே மனத்தில் விருப்புக்
கொண்டனள் பொன்வடிவினதாய இமயமலை தந்த அப்பூங்கொடியாள்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

நெஞ்சம் ஈசனைக் காண்பதே விரும்பி
நிரந்த ரந்திரு வாக்கினில் நிகழ்வ
தஞ்செ ழுத்துமே யாகஆ ளுடைய
அம்மை செம்மலர்க் கைகுவித் திறைஞ்சித்
தஞ்ச மாகிய அருந்தவம் புரியத்
தரிப்ப ரேஅவள் தனிப்பெருங் கணவர்
வஞ்சம் நீக்கிய மாவின்மூ லத்தில்
வந்து தோன்றினார் மலைமகள் காண. **#1133**

அப்பெருமாட்டியின் நெஞ்சம் ஈசனைக் காண்பதையே விரும்ப,
திருவாக்கினில் நிகழ்வதும் ஐந்தெழுத்தேயாக, எம்மை ஆளுடைய
அம்மையார் செம்மை மிக்க தம்மலர்க் கைகளைக் குவித்து வணங்கி,
அவரையன்றி வேறொருவரையும் நாடாத அரிய தவத்தைச் செய்திட,
அதுகண்டும் தரித்திருக்க முடியுமோ? அப் பெருமாட்டியின் தனிப்பெருங்
கணவரும், உடனே வஞ்சம் நீங்கிய அம் மாமரத்தினடியில்
மலைமகளாய உமையம்மை காணத் தோன்றினார்.

விளக்கவுரை

மாவின் மூலம் - மாமரத்தின் அடியில்.

கண்ட போதிலப் பெருந்தவப் பயனாம்
கம்பம் மேவிய தம்பெரு மானை
வண்டு லாங்குழற் கற்றைமுன் தாழ
வணங்கி வந்தெழும் ஆசைமுன் பொங்கக்
கொண்ட காதலின் விருப்பள வின்றிக்
குறித்த பூசனை கொள்கைமேற் கொண்டு
தொண்டை யங்கனி வாயுமை நங்கை
தூய அர்ச்சனை தொடங்குதல் புரிவாள். **#1134**

எம்பிராட்டியார் கண்ட அமையத்துத் தாம் செய்த பெரும் தவப்பயனாக
விளங்கும் மாமரத்தின் அடியில் மேவிய தம் பெருமானை, வண்டுகள்
உலவும் தம் கூந்தலின் கற்றை முன் தாழத் தாம் வணங்கி, தமது
உள்ளத்துப் பெருகி வந்து எழுகின்ற ஆசை பெருக, கண்ட காதலினால்

விருப்பம் அளவின்றி மேலாக, தாம் எண்ணிய வழிபாட்டைப் புரிந்திடும் கொள்கையை மேற்கொண்டு கொவ்வைக் கனி அனைய சிவந்த வாயையுடைய அவர் எம்பிரானை, தூயஅருச்சனை புரிந்திடத் தொடங்குதல் செய்வாராய்.

விளக்கவுரை

தொண்டையங்கனி - கொவ்வைக்கனி.

உம்பர் நாயகர் பூசனைக் கவர்தாம்
உரைத்த ஆகமத் துண்மையே தலைநின்
றெம்பி ராட்டிஅர்ச் சனைபுரி வதனுக்
கியல்பில் வாழ்திருச் சேடிய ரான
கொம்ப னார்கள்பூம் பிடகைகொண் டணையக்
குலவு மென்தளி ரடியிணை யொதுங்கி
அம்பி காவன மாந்திரு வனத்தி
லான தூநறும் புதுமலர் கொய்தாள். **#1135**

தேவர்களின் தலைவனான சிவபெருமானின் பூசனைக்கு, அவர் தாம் சொன்ன ஆகமத்தின் உண்மையான நெறிப்படி அருச்சனை புரிதலையே தலையாய செயலாகக் கொண்டு, அதனைச் செய்தற்கு, இயல்பாக அப்பெருமாட்டியாருக்குப் பணி செய்து வாழும் திருவுடைய தோழியராய பூங்கொடி போலும் பெண்கள், பூங் கூடையை ஏந்தி உடன் வந்து சேர, எம்பிராட்டியார் விளங்கிடும் மென்மையான தளிர்போன்ற தம் திருவடிகள் ஒதுங்கிட நடந்து சென்று, அம்பிகாவனம் எனும் திருவுடைய நந்தனவனத்தில் சென்றருளி, அங்கு முகையவிழ்ந்து சிறந்திருக்கும் தூய நறுமணமுடைய புதுமலர்களைக் கொய்தாள்.

விளக்கவுரை

அம்பிகாவனம் - பெருமாட்டியார் தாமே அமைத்த திருநந்தனவனம் ஆதலின் இப்பெயர் பெற்றது. பூம்படகை - பூங்கூடை.

கொய்த பன்மலர் கம்பைமா நதியில்
குலவு மஞ்சனம் நிலவுமெய்ப் பூச்சு
நெய்த ருங்கொழுந் தூபதீ பங்கள்
நிறைந்த சிந்தையில் நீடிய அன்பின்
மெய்த ரும்படி வேண்டின வெல்லாம்
வேண்டும் போதினில் உதவமெய்ப் பூசை
எய்த ஆகம விதியெலாம் செய்தாள்
உயிர்கள் யாவையும் ஈன்றவெம் பிராட்டி. **#1136**

உயிர்கள் யாவையும் ஈன்றவரான உமையம் மையார், தாம் கொய்த பல மலர்களும், கம்பையாற்றில் எடுத்த நீராட்டு நீரும், ஒளிநிலவும்

திருமேனிப் பூச்சாகும் சந்தனமும், நெய்விட் டேற்றிய செழுமைமிக்க சுடருடைய விளக்குகளும், நறுமணப் புகைகளும் ஆகிய இவையாவும் நிறைவுடைய சிந்தையில்,நீளப் பெருகிய அன்பினால், அங்கு உண்மையான வழிபாட்டிற்கு வேண்டிய பொருள் எல்லாவற்றையும் எம்பெருமாட்டியார் வேண்டியபோது அவரிடம் எடுத்துத் தோழியர் கொடுத்திட, அது மெய்ம்மையான வழி பாடாக விளங்கிட, ஆகமத்தில் சொல்லியவாறு எம்பிராற்குப் பூசனை செய்துவந்தார்.

விளக்கவுரை

மெய்தரும் படி - வழிபாட்டிற்கென அமைத்துக் கொண்ட பொருள்கள்.

கரந்த ரும்பயன் இதுவென உணர்ந்து
கம்பம் மேவிய உம்பர்நா யகர்பால்
நிரந்த காதல்செய் உள்ளத்த ளாகி
நீடு நன்மைகள் யாவையும் பெருக
வரந்த ரும்பொரு ளாம்மலை வல்லி
மாறி லாவகை மலர்ந்தபே ரன்பால்
சிரம்ப ணிந்தெழு பூசைநா டோறுந்
திருவு ளங்கொளப் பெருகிய தன்றே. **#1137**

எம் கைகள் தரும் பயன் இதுவாம் என உணர்ந்து, ஏகம்பம் மேவிய தேவர் தலைவராம் சிவபெருமானிடத்து நிறைந்த காதல் செயும் உள்ளத்தினராகி, அவ்வழிபாட்டின் பயனால் நன்மை கள் யாவும் உலகில் பெருகிட, வரம் தரும் பொருளாய மலையரசன் மகளாம் எம்பிராட்டியார், மாறில்லாதவகை இவ்வாறு தமது உள்ளத்து மலரும் பேரன்பினால் எம்பெருமானைத் தலையால் வணங்கிப் புரிந்திடும் பூசை நாடொறும் எம் ஐயர் திருவுளங் கொள்ளும்படி பெருகியது.

நாத ரும்பெரு விருப்பொடு நயந்து
நங்கை யர்ச்சனை செய்யுமப் பொழுதில்
காதல் மிக்கதோர் திருவிளை யாட்டில்
கனங்கு ழைக்கருள் புரிந்திட வேண்டி
ஓத மார்கடல் ஏழும்ஒன் றாகி
ஓங்கி வானமும் உட்படப் பரந்து
மீது செல்வது போல்வரக் கம்பை
வெள்ள மாந்திரு உள்ளமுஞ் செய்தார். **#1138**

பெருமாட்டியாரின் தலைவரான சிவபெருமானும், அப்பெருமாட்டியாரின் பூசையினைப் பெருவிருப்பத்துடன் மகிழ்வுற ஏற்று வரும்பொழுது, காதல் மிகுந்ததொரு திருவிளையாட்டால், அழகிய குண்டலங்களை அணிந்த அம்மையாருக்கு அருள் புரிந்திட வேண்டி, ஒலி பொருந்திய கடல் ஏழும் ஒன்றாகத் திரண்டு பெருகி ஓங்கி, வான்

உலகுகளும் தன்னுள் அடங்கிடுமாறு பரந்து, மேல் செல்வது போன்று பெருகி வரும்படி, கம்பையாற்றை வெள்ளமாகப் பெருகும்படி தமது திருவுள்ளத்து நினைந்தருளினார்.

விளக்கவுரை

பால், தயிர், நெய், தேன், கரும்பு, உப்பு, தூயநீர் ஆகியவற்றையுடைய கடல்கள், ஏழு உள என்பர்.

அண்ண லாரருள் வெள்ளத்தை நோக்கி
அங்க யற்கண்ணி தம்பெரு மான்மேல்
விண்ணெ லாங்கொள வரும்பெரு வெள்ளம்
மீது வந்துறும் எனவெருக் கொண்டே
உண்ணி லாவிய பதைப்புறு காதல்
உடன்தி ருக்கையால் தடுக்கநில் லாமை
தண்ணி லாமலர் வேணி யினாரைத்
தழுவிக் கொண்டனள் தன்னையே ஒப்பாள். **#1139**

தலைவரான சிவபெருமான், அருளிய அக் கம்பையாற்றின் பெருவெள்ளத்தினை, அழகிய கயல் மீன் போலும் கண்களையுடைய பெருமாட்டியார் நோக்கித், தாம் பூசனை புரிந்தருளும் தம் பெருமான்மேல், வானும் அடங்குமாறு பெருகி வரும் பெருவெள்ளம் வந்து அலைக்கும் என அச்சம் கொண்டு, தம் திருவுள்ளத்து நிலவுகின்ற பதைப்புடைய காதலுடன், தம் திருக்கையால் அவ்வெள்ளத்தைத் தடுத்திடவும், அவ்வெள்ளம் நில்லாமையைக் கண்டு, பின்னர்ச் செயல் வேறின்றி, குளிர்ந்த பிறையினைச் சடையில் உடையாரைத் தம்மையே தமக்கு ஒப்பான பிராட்டியார், இறுகத் தழுவிக் கொண்டார்.

மலைக்கு லக்கொடி பரிவுறு பயத்தால்
மாவின் மேவிய தேவநா யகரை
முலைக்கு வட்டொடு வளைக்கையால் நெருக்கி
முறுகு காதலால் இறுகிடத் தழுவச்
சிலைத்த னித்திரு நுதல்திரு முலைக்கும்
செந்தளிர்க் கரங்க ளுக்கும்மெத் தெனவே
கொலைக்க ளிற்றுரி புனைந்ததம் மேனி
குழைந்து காட்டினார் விழைந்தகொள் கையினார். **#1140**

மலையரசன் மகளாராகிய பூங்கொடி போன்ற பெருமாட்டியார், தம் திருவுள்ளத்துப் பெருமானார் மீது கொண்ட அன்பு கெழுமிய அச்சத்தால், மாமரத்தின் அடியின் மேவி இருந் தருளும் தேவர் தவைரைத் தம் மார்பகமாகிய மலையோடு வளை யணிந்த கைகளால் இறுகத் தழுவிக் கொள்ளலும், அப்பெருமாட்டி யாரின் அன்பினை விரும்பும் சிவபெருமான் அதுபொழுது வில்லின் வனப்புடைய

திருநெற்றியையுடையவரான பெருமாட்டியாரின் திருமுலைக்கும், சிவந்த தளிர்போலும் அப்பெருமாட்டியாரின் திருக்கரங்களுக்கும், மெத்தென்று இருக்குமாறு, கொலை செயும் யானைத் தோல் போர்த்த தமது திருமேனியைக் குழைந்து காட்டினார்.

விளக்கவுரை

ஏகாரம் தேற்றப் பொருளது.

கம்பர் காதலி தழுவமெய் குழையக்
கண்டு நிற்பவுஞ் சரிப்பவு மான
உம்ப ரேமுதல் யோனிக ளெல்லாம்
உயிரும் யாக்கையும் உருகியொன் றாகி
எம்பி ராட்டிக்கு மெல்லிய ரானார்
என்றும் ஏகம்பர் என்றெடுத் தேத்த
வம்பு லாமலர் நிறையவிண் பொழியக்
கம்பை யாறுமுன் வணங்கிய தன்றே. **#1141**

தம் காதலியார் தம்மைத் தழுவிட, ஏகம்பர் தமது திருமேனி குழைந்திடக் கண்டபோது, நிற்பனவும் இயங்குவனவும் ஆகிய தேவர்கள் முதலாக உள்ள எழுவகைத் தோற்றத்து எண்பத்து நான்கு நூறாயிரம் வகைப்பட்ட உயிர்கள் எல்லாம், தம் உயிரும் உடலும் உருகி ஒன்றாகி எம்பெருமாட்டியாருக்கு என்றும் மெல்லிய ரானார் எம்பெருமான் என்று எடுத்து மொழிந்து போற்றிட, நறுமணம் பொருந்திய மலர்களை வானம் பொழிந்திட, அது பொழுது கம்பை யாறும் வணங்கித் தன் வெள்ளம் தணிந்தது.

விளக்கவுரை

வம்பு - நறுமணம்.

பூதி யாகிய புனிதநீ றாடிப்
பொங்கு கங்கைதோய் முடிச்சடை புனைந்து
காதில் வெண்குழை கண்டிகை தாழக்
கலந்த யோகத்தின் மருவிய கருத்தால்
ஆதி தேவனா ராயுமா தவஞ்செய்
அவ்வ ரங்கொலோ அகிலம்ஈன் றளித்த
மாது மெய்ப்பயன் கொடுப்பவே கொண்டு
வளைத்த ழும்புடன் முலைச்சுவ டணிந்தார். **#1142**

சிறந்த செல்வமாகிய தூய நீற்றினை அணிந்து, பொங்கிடும் கங்கை ததும்பும் முடியையுடைய சடையை அணிந்து, திருக்காதில் வெண்தோடும் திருமார்பில் உருத்திராக்கமாகிய கண்டி கையும் தாழ அணிந்து, தாம் அருளுடன் கலந்த யோகத்தில் பொருந்திய திருவுள்ளம் உடையராக, அவர் தோற்றமில் காலத் தவராக நின்றாலும், பெருமாட்டியாரின் பெருந்தவத்தால் ஆய வரம் தானோ பிறிதோ அறியோம்; உலகம் யாவற்றையும் உளவாக்கிய அம்மையார் தம் உடலின் பயனைக் கொடுப்பவே அதனைக் கொண்டு, அப் பெருமாட்டியாரின் அடையாளங்களாகிய வளைத் தழும்புடன் முலைச் சுவடும் அணிந்து கொண்டார் பெருமான்.

விளக்கவுரை

மெய்ப்பயன் - தழுவிக்கொள்ளுதல்

கோதி லாஅமு தனையவள் முலைக்குக்
குழைந்த தம்மண வாளநற் கோலம்
மாது வாழவே காட்டிமுன் நின்று
வரங்கள் வேண்டுவ கொள்களன் றருள
வேத காரண ராயஏ கம்பர்
விரைம லர்ச்செய்ய தாமரைக் கழற்கீழ்
ஏதம் நீங்கிய பூசனை முடிந்த
தின்மை தானறி விப்பதற் கிறைஞ்சி. **#1143**

குற்றத்தை நீக்கும் அமுது அனைய அம்மையாரின் முலைக்குக் குழைந்திட்ட தமது மணவாளக் கோலத்தினை, எம் பெருமாட்டியார் வாழ்ந்திட முன்னின்று காட்டி, அம்மையே! `உனக்கு வேண்டிய வரங்களைக் கொள்க` என்று அருள் செய்திடலும், அதுபொழுது எம் பெருமாட்டியாரும், குற்றம் நீங்கிய பூசனை இன்னமும் நிறைவு பெறாமையால், விண்ணப்பிப்பதற்காக, நான் மறைகளுக்கும் மூலகாரணராய பெருமானாரின், நறுமணம் கமழும் செவ்விய திருவடிக் கீழ், வணங்கி.

அண்டர் நாயகர் எதிர்நின்று கூறும்

அளவி னால்அஞ்சி அஞ்சலி கூப்பிக்
கொண்ட இற்றையென் பூசனை யின்னும்
குறைநி ரம்பிடக் கொள்களென் றருள
வண்டு வார்குழல் மலைமகள் கமல
வதனம் நோக்கிஅம் மலர்க்கண்நெற் றியின்மேல்
முண்ட நீற்றர்நின் பூசனை யென்றும்
முடிவ தில்லைநம் பாலென மொழிய. **#1144**

தேவர்கட்கெல்லாம் தேவனான பெருமானாரின் எதிர் நின்று கூறுகின்ற அத்தன்மைக்கு அஞ்சி, இருகைகளையும் கூப்பி, எம்பிரானே! இன்று கொண்ட என்னுடைய இப்பூசனையில், இன்னும் எஞ்சிய பகுதியையும் நிறைவாகச் செய்தற்கு அருள்செய வேண்டும் என வேண்டியருளலும், வண்டுகள் சூழ்ந்த கூந்தலை யுடைய மலையரசன் மகளாரின் தாமரை போலும் வனப்புடைய திருமுகத்தைப் பார்த்து, அழகிய மலரனைய கண்களையுடைய நெற்றி யின்மேல் மூன்று குறியாக நீறணிந்த எம்பெருமான், `நம்பால் உனது பூசனை என்றும் முடிவதில்லை` என்று அருள் செய்திடலும்,

மாறி லாதஇப் பூசனை யென்றும்
மன்ன எம்பிரான் மகிழ்ந்துகொண் டருளி
ஈறி லாதஇப் பதியினு ளெல்லா
அறமும் யான்செய அருள்செய வேண்டும்
வேறு செய்வினை திருவடிப் பிழைத்தல்
ஒழிய இங்குளார் வேண்டின செயினும்
பேறு மாதவப் பயன்கொடுத் தருளப்
பெறவும் வேண்டும்என் றனள்பிறப் பொழிப்பாள். **#1145**

அதுகேட்ட அன்னையாரும், ஐயனை நோக்கி, `மாறு ஏதும் இல்லாத இப்பூசனை என்றும் இங்கு விளங்கிட எம்பிரான் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டருளி, முடிவிலாத இப்பதியினுள் இருந்து எல்லா அறங்களையும் யான் செய்திட, திருவருள் செய்திடல் வேண்டும்; இத்திருப்பதியிலுள்ளார் திருவடிக்குப் பிழை செயும் ஒன்றினை ஒழிய, வேறு பிற தீங்குகள் செய்யினும், அச் செயல்கட் குரிய பேறாக மாபெருந் தவத்தின் பயனைக் கொடுத் தருளவும் வேண்டும்` எனப் பிறப்பறுக்கும் பெருஞ் செல்வியராகிய பெருமாட்டி யார் கேட்டருளினார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

விடையின் மேலவர் மலைமகள் வேண்ட
விரும்பு பூசனை மேவிவீற் றிருந்தே
இடைய றாஅறம் வளர்க்கும்வித் தாக

இகப ரத்திரு நாழிநெல் லளித்துக்
கடைய ராகியும் உயர்ந்தவ ராயுங்
காஞ்சி வாழ்பவர் தாஞ்செய்தீ வினையுந்
தடைப டாதுமெய்ந் நெறியடை வதற்காம்
தவங்க ளாகவும் உவந்தருள் செய்தார். #1146

ஆனேற்றின் மீது எழுந்தருளி வரும் மேலாய பெருமானை மலைமகளார் இவ்வாறு வேண்டுதலும், அப்பெரு மாட்டியார் விரும்பியவாறு பூசனையை ஏற்றிடப் பொருந்தி அவ் விடத்தில் வீற்றிருந்தருளி, அம்மையாருக்கு இடையறாது அறத்தை வளர்த்திடும் வித்தாக, இம்மை மறுமை ஆகிய இரண்டிற்கும் ஏதுவாக இருநாழி நெல்லைக் கொடுத்தருளி, கடையவராயினும் உயர்ந்தவரா யினும் காஞ்சியில் வாழ்பவர்கள் தாங்கள் செய்கின்ற தீய வினை களும், தடையின்றி மெய்ந்நெறியை அடைதற்காய தவங்களாகப் பயன் கொள்ளுமாறும் உவந்து அருள் புரிந்தார்.

விளக்கவுரை

உயிர்களின் இம்மைக்கு ஒரு நாழியும், மறுமைக்கு ஒரு நாழியுமாக இரு நாழி நெல் வழங்கப்பட்டது. உயர்ந்தவர் - சாதி, குலம், கல்வி, செல்வம் முதலியவற்றால் உயர்ந்தவர்.

எண்ண ரும்பெரு வரங்கள்முன் பெற்றங்
கெம்பி ராட்டிதம் பிரான்மகிழ்ந் தருள
மண்ணின் மேல்வழி பாடுசெய் தருளி
மனைய றம்பெருக் குங்கரு ணையினால்
நண்ணும் மன்னுயிர் யாவையும் பல்க
நாடு காதலில் நீடிய வாழ்க்கைப்
புண்ணி யத்திருக் காமக்கோட் டத்துப்
பொலிய முப்பதோ டிரண்டறம் புரக்கும். #1147

இவ்வாறு எண்ணற்ற பெரு வரங்களைப் பெற்று, அங்கு எம்பெருமாட்டியார் தம் பெருமான் மகிழ்ந்து அருளிட, இம்மண்ணின் மேல் அவரை அங்கு வழிபாடு செய்தருளி, இல்லறம் இனிது பெருக, கருணையினால் உலகில் தோற்றும் உயிர்கள் யாவும் பெருக உற்ற காதலினால், நீடி நிலைத்திருக்கும் தம் வாழ்க்கையைப் புண்ணியம் நிறைந்த திருக்காமக்கோட்டம் என்னும் கோயிலில் மேற்கொண்டருளிப் பொலிந்திட, அங்கிருந்து தம் முப்பத்திரண்டு அறங்களையும் நிகழ்த்தி ஆண்டருளுவாளாயினள்.

விளக்கவுரை

திருக்காமக் கோட்டம் - காமாட்சியம்மையார் வீற்றிருந் தருளும்

திருக்கோவில். அம்மையார் இறைவரைத் தாம் விரும்பி வழி பட்ட இடமாதலின் இப் பெயர் பெற்றது. இனி அம்மையார் உயிர்கள் மீது வைத்த கருணையால் அங்கு எழுந்தருளி முப்பத்திரண்டு அறங்களையும் பேணி வளர்த்தமையால் அப்பெயர் பெற்றது என்றலும் ஒன்று. இக்கோயில் நீங்கலாகக் காஞ்சியிலுள்ள சிவ பெருமான், திருக்கோவில்கள் எவற்றிலும் அம்மையாருக்கெனத் தனிக்கோவில் இல்லை என்பதும் குறிக்கத்தக்கதாகும் .

காஞ்சி காமாட்சி அம்மையார் இறைவர் வழங்கிய இருநாழி நெல் கொண்டு வளர்த்த முப்பத்திரண்டு அறங்கள்:

1. துன்புற்றோர்க்கு உணவும் உறையுளும் வழங்கும் சாலை.
2. கற்பவர்க்குணவு
3. அறுசமயத்தார்க்கு உண்டி
4. பசுவிற்கு வாயுறை
5. சிறைச் சோறு
6. ஐயம்
7. தின் பண்டம் நல்கல்
8. பற்றுக்கோடற்றவருக்குச் சோறு
9. மகப்பேறு அற்றோர் சிவபுண்ணியப் பேற்றிற்கு ஆளாதல்
10. மகவு வளர்த்தல்
11. மகவுக்குப் பால் வார்த்தல்
12. பற்றுக்கோடற்றார்க்கு இறுதிக் கடன் செய்தல்
13. பற்றுக்கோடற்றார்க்கு ஆடை வழங்குதல்
14. சுண்ணம் வழங்குதல்
15. நோய்க்கு மருந்து.
16. வண்ணார்க்கு உதவல்
17. நாவிதர் உதவி
18. கண்ணாடி வழங்கல்
19. காதோலை நல்கல்
20. கண்மருந்து கொடுத்தல்
21. தலைக்கெண்ணெய் வழங்கல்
22. பெண் போகம் நுகர்தற்காம் சூழலை வழங்கல்
23. பிறர்துயர் காத்தல்
24. தண்ணீர்ப்பந்தல் அமைத்தல்
25. மடம் அமைத்தல்
26. குளம் தோண்டல்
27. சோலைகளை உண்டாக்கல்
28. ஆவுராய்ஞ்சு தறி அமைத்தல்

29. விலங்கிற் குணவு தருதல்
30. ஏறு விடுத்தல்.
31. விலை கொடுத்து உயிர் காத்தல்
32. மகட் கொடை.

அலகில் நீள்தவத் தறப்பெருஞ் செல்வி
அண்ட மாந்திரு மனைக்கிடுந் தீபம்
உலகில் வந்துறு பயனறி விக்க
ஓங்கும் நாண்மலர் மூன்றுட னொன்று
நிலவ ஆண்டினுக் கொருமுறை செய்யும்
நீடு தொன்மையால் நிறைந்தபே ருலகம்
மலர்பெ ருந்திருக் காமக்கோட் டத்து
வைத்த நல்லறம் மன்னவே மன்னும். **#1148**

அளவிலாது நீடிய தவத்தினைச் செய்யும் அறப் பெருஞ்செல்வியாராகிய அம்மையார், அண்டமாகிய தமது திரு மனைக்கு ஏற்றுகின்ற விளக்குகளான முச்சுடர்களுமே, அம்மையார் உலகில் வந்த பயனை அறிவித்தற்கு வந்தாற் போல, பண்டு தொட்டே சிறந்த புதிய ஒருதண்டினில் மலரும் நீல மலர்கள் மூன்று ஆண்டிற்கு ஒருமுறை மலர நிகழ்ந்துவரும் இச்செயலினால், இப்பேருலகெலாம் ஒளிதரும் திருக்காமக்கோட்டத்தில் நிலவும் நல்லறங்கள் பலவும் விளங்க வீற்றிருந்தருளுவர்.

விளக்கவுரை

****

தீங்கு தீர்க்குநல் தீர்த்தங்கள் போற்றுஞ்
சிறப்பி னால்திருக் காமக்கோட் டத்தின்
பாங்கு மூன்றுல கத்தினுள் ளோரும்
பரவு தீர்த்தமாம் பைம்புனற் கேணி
வாங்கு தெண்டிரை வேலைமே கலைசூழ்
வைய கந்தனக் கெய்திய படியாய்
ஓங்கு தன்வடி வாய்நிகழ்ந் தென்றும்
உள்ள தொன்றுல காணியென் றுளதால். **#1149**

உயிர்களிடத்துள்ள தீங்கினைத் தீர்த்திடும் நல்ல புண்ணிய நீர்நிலைகள் பலவும் (தீர்த்தங்கள்) போற்றிடுகின்ற சிறப் பினால், திருவுடைய காமக்கோட்டத்தின் அருகில், மேல் நடு கீழ் ஆகிய மூவுலகத்துளாரும் வணங்கிடும் சிறப்புடைய பசிய நீர் நிறைந் துள்ள கேணியாக, தெள்ளிய திரைகளை உடைய கடலை ஆடையாக அணிந்த இந்நிலவுலகில் வாழ்வார் வீடு பேறடைதற்கு ஏணி போன்று விளங்கும் சிறப்பால் ஓங்கி அருளுடைய நீர் வடிவாய் என்றும் நிகழ்ந் திருக்கும் ஒரு நீர்நிலை,

உலகாணி என்னும் பெயருடன் விளங்குவதாகும்.

விளக்கவுரை

`உழுவார் உலகத்தார்க்கு ஆணி` *(குறள், 1032)* என்பர் வள்ளுவர். அதுபோல இந்நீர்நிலை உயிர்கட்கு ஆணியாக விளங்குகின் றது. ஆல் - அசைநிலை.

அந்த மின்றிநல் லறம்புரிந் தளிக்கும்
அம்மை தன்திருக் காமக்கோட் டத்தில்
வந்து சந்திர சூரியர் மீது
வழிக்கொ ளாததன் மருங்குபோ தலினால்
சந்த மாதிர மயங்கியெம் மருங்குஞ்
சாயை மாறிய தன்றிசை மயக்கம்
இந்த மாநிலத் தவரெலாங் காண
என்றும் உள்ளதொன் றின்றுமங் குளதால். **#1150**

நல்ல அறங்கள் பலவற்றையும் எல்லையின்றிச் செய்து உலகினைக் காத்து வரும் எம் அம்மைவாழும் திருக்காமக் கோட்டத்தில், ஞாயிறும் திங்களும் மேலாக வழிக்கொண்டு சென்றி டாது காமக்கோட்டத்தின் அருகாகப் போதலினால், நேரான திக்குகள் மாறுபட்டு, அதனால், எப்பக்கங்களிலும் நிழல்கள் மாறி இருக்கும் திசை மயக்கம், இந்தப் பெரிய நிலவுலகில் உள்ளார் எல்லோரும் காணும் படி என்றும் உள்ளது. இன்றும் அங்கு உள்ளது.

விளக்கவுரை

சந்த மாதிரம் - அழகிய வடதிசை முதலாக நான்கு திசைகள். திசை மயக்கம் - திசை தெரியாது மயங்கும் மயக்கம்.

கன்னி நன்னெடுங் காப்புடை வரைப்பில்
காஞ்சி யாந்திரு நதிக்கரை மருங்கு
சென்னி யிற்பிறை யணிந்தவர் விரும்பும்
திருப்பெ ரும்பெய ரிருக்கையில் திகழ்ந்து
மன்னு வெங்கதிர் மீதெழும் போதும்
மறித்து மேல்கடல் தலைவிழும் போதும்
தன்னி ழற்பிரி யாதவண் காஞ்சித்
தானம் மேவிய மேன்மையும் உடைத்தால். **#1151**

காளியின் நன்மையமைந்த காப்புடைய அக்காஞ்சி நகர எல்லையில், காஞ்சி என்னும் ஆற்றின் அருகில், சடைமுடியின்கண் பிறையணிந்த இறைவன் விரும்பி வீற்றிருக்கும் திருப்பெரும்பெயர் இருக்கை என்னும் கோயிலில், பொருந்திய வெப்பமான கதிர்களை உடைய ஞாயிறு, மேலெழும்பொழுதும் மீளத் திரைக்கடலில் வீழ்ந்திடும் பொழுதும், தன்

நிழல்தன்னை விட்டுப் பிரியாத காஞ்சி என்னும் மரம் நிலைபெற்றிருக்கும் இடச் சிறப்பு உடையது காஞ்சி மாநகரம் ஆகும்.

விளக்கவுரை

கன்னி - காளி. இறைவர் ஒரு காலத்தில் உமையம்மை யாரைக் காளி என்று அழைத்தனர். அதனைப் பொறாத அம்மையார் இறைவரை வழிபட்டு அக் காளி வடிவத்தினின்றும் நீங்கினர் என்பது வரலாறு. அவ்வாறு அவ்வடிவினின்றும் நீங்குங்கால், அதனின்றும் ஒருபெண் தோன்றி அம்மையாரை வணங்கித் தன்னைப் பணிகொள வேண்டினள். அம்மையாரும் அவள் வேண்டுகோளுக்கு இரங்கிச் `சும்பன், நிசும்பன் ஆகிய இரு அவுணர்களையும் அழித்துக் கவுசிகி எனும் பெயர் பூண்டு, காஞ்சி மாநகரைக் காவல் புரிந்து வருக` எனப் பணித்தனர். இன்றும் அவள் காவல் செய்கின்றாள் என்பர். இதனால் காஞ்சி மாநகருக்குக் `கன்னி காப்பு` எனும் பெயரும் உளதாயிற்று.
திருப்பெரும் பெயர் இருக்கை - இது கோவிலின் பெயர். பெரும் பெயர் - மகாவாக்கியம். இவ்வாக்கியத்தினால் பேசப்பட்ட கடவுள் சிவபெருமானாராதலின் அவர் எழுந்தருளியிருக்கும் கோவி லைத் திருப்பெரும் பெயர் இருக்கை என்றனர். `பெரும்பெயர் இயவுள்`*(தி.11* திருமுருகா. வரி *274)* எனத் திருமுருகாற்றுப்படை யும், `பெரும் பெயர்க் கடவுளிற் கண்டு` எனச் சிவஞானபோதமும் *(பாயிரம், வரி 4)* குறித்தல் காண்க. காஞ்சித் தானம் - காஞ்சி என்னும் மரமுடைய இடம்.

மறைக ளால்துதித் தருந்தவம் புரிந்து
மாறி லாநிய மந்தலை நின்று
முறைமை யால்வரும் பூசனை செய்ய
முனிவர் வானவர் முதலுயி ரெல்லாம்
நிறையும் அன்பினால் அர்ச்சனை செய்ய
நீடு காமங்கள் அவரவர்க் கருளி
இறைவர் தாமகிழ்ந் தருளிய தளிகள்
எண்ணி றந்தஅத் திருநக ரெல்லை. **#1152**

மறைகளால் போற்றப்பெற்று, அரிய தவம் புரிந்து, மாறிலாத நியமங்களின் தலைநின்று, ஆகமநெறிப்படி வழிபாடு புரிந் திடற்கு முனிவர்கள் தேவர்கள் முதலான உயிர்கள் அனைத்தும், நிறை கின்ற அன்பினால் எம்பெருமானைப் போற்றல் புரிந்திட, அவர்கள் மனத்தில் வேண்டிய வேண்டியாங்கு எய்த, அருள் புரிந்து, பெருமான் மகிழ்ந்தருளும் திருக்கோயில்கள் பலவும், அக்காஞ்சி நகரின் எல்லை யுள் எண்ணிறந்தனவாய் உள்ளன.

விளக்கவுரை

அபிராமீசம், ஆதிபதீசம், இரணீசம், இரேணுகீச்சரம், ஓணகாந்தன்தளி, கச்சபேசம், கச்சிமேற்றளி, கண்ணீசம், சலந்தரீசம், சித்தீசம், சுரகரீசம், தக்கேசம், நவக்கிரகீசம், நாரசிங்கீசம், பணாதரீச்சரம், பராசரேசம், பரசுராமீசம், பலபத்திரராமீசம், பாண்டவீசம், மக்கீசம், மணிகண்டேச்சரம், முத்தீசம், வயிரவீசம், வாணீசம், விடுவச்சேனீசம், வீரராகேவீசம், முதலான கோவில்கள் பல உள்ளன. இவையனைத் தும் வழிபட்டோரின் பெயர்களை நிலைக்களனாகக் கொண்டு விளங்குகின்றன.

மன்னு கின்றஅத் திருநகர் வரைப்பில்
மண்ணில் மிக்கதோர் நன்மையி னாலே
துன்னும் யானையைத் தூற்றில்வாழ் முயல்முன்
துரக்க வெய்திய தொலைவில்ஊக் கத்தால்
தன்னி லத்துநின் றகற்றுதல் செய்யும்
தான மன்றியும் தனுவெழுந் தரணி
எந்நி லத்தினுங் காண்பரும் இறவாத்
தானமென் றிவைஇ யல்பினில் உடைத்தால். **#1153**

நிலைபெற்ற அக்காஞ்சித் திருநகர் எல்லையில், இம்மண்ணில் மிக்கதோர் நன்மையினால் விளங்கிடும் பேற்றால், நெருங்கிக் கொலை புரியும் யானையைத் தூற்றில் வாழும் ஒரு முயல், தன் ஊக்கத்தால் அவ்யானையை ஓடிடச் செய்த இடமும், இறந்த உடம் புகள் மீளவும் உயிர் பெற்று எழுகின்ற ஓர் இடமும், எந்நிலத்திலும் காண்டற்கரிய இறவாத்தானம் என்ற இடமும் உள்ளன.

விளக்கவுரை

****

ஈண்டு தீவினை யாவையும் நீக்கி
இன்ப மேதரும் புண்ணிய தீர்த்தம்
வேண்டி னார்தமக் கிட்டசித் தியதாய்
விளங்கு தீர்த்தம்நன் மங்கல தீர்த்தம்
நீண்ட காப்புடைத் தீர்த்தம்மூன் றுலகில்
நிகழ்ந்த சாருவ தீர்த்தமும் முதலா
ஆண்டு நீடிய தீர்த்தம் எண் ணிலவும்
அமரர் நாட்டவர் ஆடுதல் ஒழியார். **#1154**

தம்முடன் தொடருகின்ற தீவினையாவற்றையும் நீக்கி, இன்பமே தருகின்ற புண்ணிய நீர்நிலையும், வேண்டுநர் வேண்டியாங்கு எய்துதற்குரிய புண்ணிய நீர்நிலையும், நன்மையைத் தரும் மங்கல நீர்நிலையும், தேவர்களின் காவல்மிக்க நீர்நிலையும், மூவுலகிலும் உள்ள புண்ணிய நீர்நிலைகள் எல்லாம் ஒருங்கு கூடிய புண்ணிய நீர் நிலையும்,

முதலாக உள்ள அவ்விடத்து நீண்ட பெருஞ் சிறப்புடையனவாய எண்ணற்ற நீர்நிலைகள் உள்ளன. அவற்றில் தேவர்கள் நாளும் நீராடுதலை ஒழியார்.

விளக்கவுரை

****

தாள தொன்றினில் மூன்றுபூ மலரும்
தமனி யச்செழுந் தாமரைத் தடமும்
நீள வார்புனல் குடதிசை யோடி
நீர்க ரக்குமா நதியுடன் நீடு
நாள லர்ந்துசெங் குவளைபைங் கமலம்
நண்ப கல்தரும் பாடலம் அன்றிக்
காள மேகம்ஒப் பாள்உறை வரைப்பிற்
கண்ப டாதகா யாப்புளி உளதால். **#1155**

தண்டு ஒன்றில் மூன்றுமலர்கள் மலரும் பொன் னிறமாய செழுமை மிக்க தாமரைக் குளமும், நீண்ட பெருக்குடைய நீர் மேற்குப் புறமாக ஓடிப் பின் மறைந்து போகும் பேராறும், அதனுடன் நெடுகவும் பகலில் மலரும் செங்குவளை மலரும், இரவில் மலரும் தாமரையும், நண்பகலில் மலரும் பாதிரியும், இவையன்றிக் கருமேகம் போலும் நீலநிறமுடைய பெருமாட்டியார் எழுந்தருளியிருக்கும் எல்லையில், இரவில் உறங்காத காயாத புளிய மரமும் உள்ளன.

விளக்கவுரை

பகலில் தாமரையும், இரவில் குவளையும், மாலையில் பாதிரியும் மலர்வதே இயற்கை. மாறாக இருப்பன இந்நிலத்தமைந்த வியத்தகு செயல்களாம். கண்படாத புளி - உறங்காத புளி. இரவில் இம்மரத்தின் இலைகள் குவிவதில்லை ஆதலின் இங்ஙனம் கூறினார். காயாப்புளி - காய்த்தல் இலாத புளி. காய்த்தல் இல்லை ஆகவே பழமும் இன்று, விதையும் இன்று, என்பதும் பெறுதும். எனவே மீள முளைத்தலும் இன்று என்பது புலனாகும். கோவை மாவட்டத்தில் உள்ள திருப்பேரூரில் பிறவாப்புளி என்பது ஒன்று உண்டு என அப்புராணம் கூறுவதும் நினைவு கூர்தற்குரியது.

சாயை முன்பிணிக் கும்கிண றொன்று
தஞ்சம் உண்ணில்நஞ் சாம்தடமொன்று
மாயை யின்றிவந் துள்ளடைந் தார்கள்
வான ரத்துரு வாம்பிலம் ஒன்று
மேய அவ்வுரு நீங்கிடக் குளிக்கும்
விளங்கு பொய்கையும் ஒன்றுவிண் ணவரோ

டாய இன்பம்உய்க் கும்பிலம் ஒன்றோ
டனைய ஆகிய அதிசயம் பலவால். **#1156**

தன்னுள் மூழ்கினோரது உருவ நிழலை வெளித் தோன்றாதவாறு மறைக்கும் கிணறு ஒன்றும், சிறிது நீர் உண்டாலும் நஞ்சாகும் நீர் உடைய குளம் ஒன்றும், ஒரு வஞ்சமும் இன்றித் தன்னுள் புகினும் குரங்கு வடிவாகும் ஆழ்கிணறு ஒன்றும், பொருந்திய அக்குரங்கு வடிவம் நீங்கக் குளித்தற்குரிய பொய்கை ஒன்றும், தேவர்களோடு கூட்டி இன்பம் நுகரச் செய்யும் ஆழ்கிணறு ஒன்றும் ஆக இத்தகைய வியத்தகு குளங்கள் பலஉள்ளன.

விளக்கவுரை

`தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே` *(*தொல். இடை. *18)* என்னும் தொல்காப்பியம் ஈண்டு அச் சொல் சிறிது என்னும் பொருட்டாய நின்றது.
பிலம் - ஆழமான நீர்நிலை.

அஞ்சு வான்கரத் தாறிழி மதத்தோர்
ஆனை நிற்கவும் அரையிருள் திரியும்
மஞ்சு நீள்வது போலுமா மேனி
மலர்ப்ப தங்களில் வண்சிலம் பொலிப்ப
நஞ்சு பில்கெயிற் றரவவெற் றரையின்
நாம மூன்றிலைப் படையுடைப் பிள்ளை
எஞ்ச லின்றிமுன் திரியவுங் குன்றம்
எறிந்த வேலவன் காக்கவும் இசையும். **#1157**

அருளுடைய ஐந்து கைகளும், ஆறு போல் பாயும் மதமும், ஆனைமுகமுமுடைய மூத்த பிள்ளையார் நின்று காக்கவும், நள்ளிருளில், மலர்போலும் திருவடிகளில் சிலம்புகள் ஒலித்திடத் திரிகின்ற மேகம் போலும் நீண்ட பெரும் திருமேனியையும், நஞ்சு வரும் பற்களை உடைய நாகத்தை யணிந்த வெற்றுத் திருவரையை யும் உடைய சூலப்படையை ஏந்திய பிள்ளையாகிய வைரவக்கடவுள் ஓய்வின்றிக் காக்கவும், கிரவுஞ்ச மலையைப் பிளவுபடுத்திய வேற் படையுடைய பிள்ளையார் (முருகன்) காக்கவும், காஞ்சி நகரம் பேறுற்றுச் சிறந்துள்ளது.

விளக்கவுரை

****

சத்தி தற்பர சித்தயோ கிகளும்
சாத கத்தனித் தலைவ ரும் முதலா
நித்தம் எய்திய ஆயுள்மெய்த் தவர்கள்

நீடு வாழ்திருப் பாடியும் அனேகஞ்
சித்தர் விஞ்சையர் இயக்கர்கந் தருவர்
திகழ்ந்து மன்னுவார் செண்டுகை யேந்தி
வித்த கக்கரி மேல்கொளுங் காரி
மேவு செண்டணை வெளியுமொன் றுளதால். **#1158**

சத்தியாய பெருமாட்டியை மனத்தகத்து ஒருமைப் பட எண்ணி, அதனால் பல பேறுகளையடைந்த யோகிகளும், சிவ பரம்பொருளை இவ்வகையில் எண்ணிப் பேறுபேற்ற சிவயோகிகள் முதலாக உள்ள தவத்தவர்களும், அழிவற்று, நிலமிசை நீடுவாழும் இருக்கைகளும் பல உள்ளன. சித்தர்கள், விஞ்சையர்கள், இயக்கர்கள், கந்தருவர்கள் மகிழ்வுடன் தங்கிடச், செண்டினைத் திருக்கரத்து ஏந்தி வித்தகமுடைய வெள்ளை யானை மீது எழுந்தருளி உலா வரும் ஐய னார் வந்து சேரும் செண்டணை வெளி என்பதோர் இடமும் அக் காஞ்சியில் உளது.

விளக்கவுரை

தற்பரசித்தி - உயிர்கட்குத் தலைவியாராகிய இறை வியார். சிவசத்தியே பரம்பொருள் எனக் கொண்டு வழிபடுவாரின் மதம் சுத்தசாத்த மதமாகும். செண்டு அணை வெளி - யானை, குதிரைகளை நடத்தும் வெளி. மதுரையில் இத்தகைய வீதியை வெளி வீதி என்பர். இமயம் வரை சென்று தன் கொடியைப் பொறித்து மீள நினைந்த கரிகாற் பெருவளத்தான், இக்காரிக் கடவுளை வழிபட்டு இச் செண்டினைப் பெற்றான் என்பர். நித்தம் எய்திய ஆயுள் மெய்த்தவர் கள் - மந்திரம், மருந்து, யோகம் முதலியவற்றால் உடலை வலிதாக்கி நீடுவாழும் நிலைபெற்றவர்கள்.

வந்த டைந்தவர் தம்முரு மாய
மற்று ளாரைத்தாங் காண்பிட முளது
சிந்தை யோகத்து முனிவர்யோ கினிகள்
சேரும் யோகபீ டமும்உள தென்றும்
அந்த மில்அறம் புரப்பவள் கோயில்
ஆன போகபீ டமும்உள தாகும்
எந்தை யார்மகிழ் காஞ்சிநீ டெல்லை
எல்லை யில்லன உள்ளஆ ரறிவார். **#1159**

அப்பெருநகரில் தன்னிடத்து வந்து அடைந்தவ ரின் உருவம் மற்றவருக்குத் தோற்றாது, மற்றையோரைத் தாம் காணத் தெரியப் பண்ணும் இடம் ஒன்றுளது. சிந்தையில் சிவமே தெளிகின்ற யோக வாழ்வுடைய முனிவர்களும், யோகினிகளாய பெண்களும் சேரும் யோக பீடமும் அங்கு உளது. எல்லையற்ற அறங்களை என்றும் புரிந்து காப்பவராய பிராட்டியார் வாழும் போகபீடமும் அங்கு உளதாகும்.

எந்தை பெருமானாகிய ஏகம்பர் மகிழ்ந்து வீற் றிருக்கும் காஞ்சியம்பதியில் அத்தகைய வியத்தகு செயல்கள் புரியும் இடங்கள் பலவும் உள்ளன. இவற்றை முழுமையாக யார் அறிவர்? ஒருவரும் இலர் என்பது கருத்து.

விளக்கவுரை

யோகினிகள் - யோகர் என்பதற்குரிய பெண்பால். அறம் வளர்க்கும் பெருமாட்டியாராக இருத்தலின், அன்னையார் இருந்த இடத்தைப் போகபீடம் என்றார். போகபீடம் - திருக்காமக் கோட்டம். `போகியா யிருந் துயிர்க்குப் போகத்தைப் புரித லோரார்` (சிவஞா. சித்தியார் - சூ.*1* பா.*50)* எனவரும் திருவாக்கை நினைவு கூரலாம்.

தூண்டு சோதியொன் றெழுந்திருள் துரக்கும்
சுரர்கள் வந்துசூழ் உருத்திர சோலை
வேண்டி னார்கள்தம் பிறப்பினை யொழிக்கும்
மெய்ந்நெ றிக்கண்நின் றார்கள்தாம் விரும்பித்
தீண்டில் யாவையுஞ் செம்பொனாக் குவதோர்
சிலையும் உண்டுரை செய்வதற் கரிதால்
ஆண்ட நாயகி சமயங்க ளாறும்
அகில யோனியும் அளிக்கும்அந் நகரம். **#1160**

விளங்குகின்ற ஓர் ஒளிப்பிழம்பானது இரவில் தோன்றி இருளை நீக்குதற்கு இடனாகவும், தேவர்கள் வந்து சூழ்வுறுதற்கு ஏதுவாகவும் உள்ள உருத்திர சோலையென்னும் பூங்கா வனமும், வேண்டுநர்களுடைய பிறவிப் பிணியைப் போக்க வல்ல அருள் வலிமையுடைய மெய்ஞ்ஞானியர்கள் வந்து விரும்பித் தீண்டி னால் அவர் தீண்டிய அப்பொருள் யாவற்றையும் செம்மையான பொன்னாக்குவதோர் கற்சிலையும் அங்கு உண்டு. இத்தகைய சிறப் புடன் எம்மை ஆட்கொள்ளும் காமாட்சி அம்மையார் வீற்றிருந்து ஆறு சமயங்களையும் அனைத்துயிர்களையும் பாதுகாத்தருளும் அக்காஞ்சி நகரம் உளது.

விளக்கவுரை

****

என்றும் உள்ளவிந் நகர்கலி யுகத்தில்
இலங்கு வேற்கரி காற்பெரு வளத்தோன்
வன்றி றற்புலி இமயமால் வரைமேல்
வைக்க ஏகுவோன் தனக்கிதன் வளமை
சென்று வேடன்முன் கண்டுரை செய்யத்
திருந்து காதநான் குட்பட வகுத்துக்

குன்று போலுமா மதில்புடை போக்கிக்
குடியி ருத்தின கொள்கையின் விளங்கும். **#1161**
என்றும் அழிவின்றி உள்ள இக்காஞ்சிநகரமா னது கலியுகத்தில், ஒளி
பொருந்திய வேல் ஏந்திய கரிகாற் பெருவளத் தான் என்னும்
பெருவளமுடைய சோழ அரசன், திக்கெலாம் வெற்றி கொண்டு
உலகினை ஒரு குடைக்கீழ் ஆண்டிட, வன்மையாய திறல் உடைய
புலிக்கொடியை இமயம் என்னும் பெருமலை மேல் நாட்டச் செல்பவன்,
தனக்கு இக்காஞ்சி நகரின் வளச் சிறப்பை முன் அங்குச் சென்று கண்ட
வேடன் ஒருவன் சொல்லிட, அது கேட்ட அரசன், உடன் அங்குச் சென்று
காடாக இருந்த இப்பகுதியைத் திருத்தி, நான்கு காத அளவிலான ஒரு
நகரையமைத்து, அதனைச்சூழ மலை போலும் உயர்ந்த பெரு
மதிலையும் அமைத்து, அங்கு மக்களைக் குடியிருத்திய சிறந்த
கொள்கையால் பெருமை மிக விளங்குவது காஞ்சிநகரம் ஆகும்.

விளக்கவுரை

பாண்டியன் மதுரைத் திருநகரம் கண்டமையை இங்கு நினைவு கூரலாம். *சிலப்பதிகாரம், இந்திரவிழாக் காதை, வரி 95-98,* அடி யார்க்கு நல்லார் எழுதிய உரையும் காண்க.

தண்காஞ்சி மென்சினைப்பூங் கொம்ப ராடல்
சார்ந்தசைய அதன்மருங்கு சுரும்பு தாழ்ந்து
பண்காஞ்சி இசைபாடும் பழன வேலிப்
பணைமருதம் புடையுடைத்தாய்ப் பாரில் நீடும்
திண்காஞ்சி நகர்நொச்சி இஞ்சி சூழ்ந்த
செழுங்கிடங்கு திருமறைக ள் ஒலிக்குந் தெய்வ
வண்காஞ்சி அல்குல்மலை வல்லி காக்க
வளர்கருணைக் கடலுலகஞ் சூழ்ந்தால் மானும். **#1162**
குளிர்ந்த காஞ்சி மரத்தின் மெல்லிய கிளைமேல்,
பூங்கொத்துக்களையுடைய அக்கொம்புகளைக் காற்று அசைத்திட,
அதன் அருகில் தேன்உண்ணும் வண்டினங்கள் காஞ்சிப் பண்ணின்
இசையை முரல்கின்ற மாஞ்சோலையை வேலியாக உடைய அகன்ற
வயல்நிலத்தை அருகில் உடையதாய், இந்நிலவுலகில் நீடிய இயல்
புடைய திண்மை மிக்க காஞ்சி நகரின் வலியால் மிகுந்த புறமதி லினைச்
சூழும் செழுமை மிக்க அகழியானது, சிறந்த நான்மறைகளும் ஒலித்
திடும் தெய்வத் தன்மையுடைய காஞ்சி என்னும் மேகலையை அணிந்த
அல்குலையுடைய மலையரசன் மகளார் உலகினைக் காத்திடற்கு,
அவர்பால் வளர்கின்ற கருணைக்கடல் உலகினைச் சூழ்ந்திருப்பது
போல் விளங்கும்.

விளக்கவுரை

அம்மையாரின் கருணைப் பெருக்கெனச் சூழ்ந்த அகழி அமைந்துள்ளது என்பது கருத்து.

கொந்தலர்பூங் குழல்இமயக் கொம்பு கம்பர்
கொள்ளும்பூ சனைகுறித்த தானங் காக்க
மந்திரமா மதிலகழி அவர்தாந் தந்த
வாய்மைஆ கமவிதியின் வகுப்புப் போலும்
அந்தமில்சீர்க் காஞ்சியைவந் தடைந்தார்க் கன்றி
அடைகளங்கம் அறுப்பரிதென் றறிந்து சூழ
வந்தணைந்து தன்கறுப்பும் உவர்ப்பும் நீக்கும்
மாகடலும் போலுமலர்க் கிடங்கு மாதோ. **#1163**

நல்ல மலர்கள் நிரம்ப உள்ள இவ்வகழியானது, கொத்தாக அலர்ந்த மலர்களைச் சூடிய கூந்தலையுடைய இமயத்தின் பூங்கொடி போலும் சாயலை உடைய அம்மையார், ஏகம்பர் ஏற்றருளுகின்ற வழிபாட்டைப் புரிந்திடும் இவ்விடத்தைக் (காஞ்சியை) காத்திட, அப்பெருமான் உலகுய்ய மொழிந்த உண்மையாய ஆகமத்தின் நெறிப்படி அமைக்கப் பெற்ற மந்திர வடிவாய மதிலைச் சூழ்ந்த அகழியைப் போன்றது. அதுவன்றி எல்லையற்ற சீர்மையையுடைய காஞ்சியை வந்து அடைந்தார்க் கல்லது, தங்களிடத்து அடைகின்ற குற்றங்களை அறுத்தல் அரிது என்று அறிந்து இக்காஞ்சியைச் சூழவந்து அணைந்து, தனது கருமை நிறத்தையும் உப்புத் தன்மையையும் நீக்கிக் கொள்ளும் பெருங்கடலை யும் ஒத்திருக்கும்.

விளக்கவுரை

சிவவழிபாடு ஆற்றுவார் செயத்தக்க ஐவகைத் தூய்மை களுள், இடத் தூய்மை (தான சுத்தி) என்பதும் ஒன்றாகும். வழிபாடு ஆற்றும் இடத்திற்கு வரும் இடையூறுகளைப் போக்கி, நான்கு மூலை களிலும் தீயொளியுடன் விளங்கும் மும்மதில்களும், அவற்றைச் சூழ மூவகழிகளும் உண்டாக்கி, சத்தியாகிய காவலை மேலும் கீழும் உளவாக்கி, இவ்வாறு எல்லா வகையான காவலும் பொருந்தச் செய்து கொள்ளுதல் இடத் தூய்மையாகும். காஞ்சியைச் சூழ்ந்த அகழியும், மதிலும் அந்நகரைக் காக்க அமைந்தனவே எனினும், ஆசிரியர் சேக்கிழார் தம் பத்திமை மீதூர்வால் தற்குறிப்பேற்றமாக அம்மதிலும், அகழியும் அமைந்தவை, அம்மையார் தாம் வழிபாடு ஆற்றுதற்கென அமைத்துக் கொண்ட வழிபாட்டு இடத்திற்குக் (பூசைத் தானம்) காவலாக ஆகம விதிப்படி அமைத்துக் கொண்ட அகழியும் மதிலும் போன்றனவாம் எனக் குறிக்கின்றார். பக்திச் சுவை நனிசொட்டச்

சொட்டப் பாடிய இடங்களுள் இதுவும் ஒன்று.
திருவாயில்

ஆங்குவளர் எயிலினுடன் விளங்கும் வாயில்
அப்பதியில் வாழ்பெரியோர் உள்ளம் போல
ஓங்குநிலைத் தன்மையவாய் அகிலம் உய்ய
உமைபாகர் அருள்செய்த ஒழுக்க மல்லால்
தீங்குநெறி அடையாத தடையு மாகிச்
செந்நெறிக்கண் நிகழ்வாய்மை திருந்து மார்க்கம்
தாங்குலவ நிலவிவளர் ஒளியா லென்றும்
தடநெடுவான் அளப்பனவாந் தகைய வாகும். **#1164**

அவ்விடத்துக் காஞ்சியில் மதிலுடன் விளங்கு கின்ற வாயில்கள், அப்பதியில் வாழ்கின்ற பெரியோர்களது உள்ளம் போல் உயர்ந்து ஓங்கியும், நிலைத்தும் இருப்பனவாய், உலகம் உய்ய அம்மையப்பராகிய பெருமான் அருளிச் செய்திட்ட நல்லொழுக்கம் அல்லாது, தீங்கு நெறிகள் அடையாத தடையுமாகிச், செம்மை நெறி யுடன் விளங்கும் ஆகமநெறிகள் நிலவ, வளர்கின்ற ஒளியினால் வானினை அளக்கும் தன்மையும் வாய்ந்தவையாகும்.

விளக்கவுரை

`அருளுடையார் உளம் அனைய தண்ணளித்தாய்` *(தி.12 பு.25 பா.5)* என அப்பூதியடிகளாரின் தண்ணீர்ப்பந்தரைப் பின்னும் குறிப்பிடுவர்.

மாறுபெறல் அருங்கனக மாடம் நீடு
மணிமறுகும் நெடுந்தெருவும் வளத்தில் வந்த
ஆறுபயில் ஆவணவீ திகளும் மற்றும்
அமைந்தநகர் அணிவரைகள் நடுவு போக்கிக்
கூறுபடு நவகண்ட மன்றி மல்கக்
கொண்டஅனே கங்கண்ட மாகி யன்ன
வேறொருமண் ணுலகுதனில் உளதாம் என்ன
விளங்கியமா லோகநிலை மேவிற் றன்றே. **#1165**

ஈடு இணையற்ற பொன்னாலான மாடங்களை இரு புறமும் கொண்ட அழகிய வீதிகளும், நெடிய தெருக்களும், பல்லாற்றானும் வந்த வளங்கள் மிக்க கடை வீதிகளும், மற்றும் அந் நகரின் அமைப்பு, அழகிய மலைகளை நடுவே கொண்டு, பல கூறாக விளங்கிடும் ஒன்பது கண்டங்களே அல்லாமல், அவை போல் பல கண்டங்களாகி விளங்க, அக்காஞ்சி வேறொரு மண்ணுலகு இதனில் உளதாம் என்ன விளங்கிய பெரியதோர் உலகம் போல் விளங்கியது.

விளக்கவுரை

ஒன்பான் கண்டங்கள் - பரத கண்டம், கிம்புரு கண்டம், அரிவருட கண்டம், இளாவிரத கண்டம், இரமிய கண்டம், இரணிய கண்டம், குரு கண்டம், கேதுமால கண்டம், பத்தாரசுவ கண்டம் என்பன. கோள்கள் ஒவ்வொன்றிற்கும், ஒவ்வொரு கண்டமாக வகுத்துக் கூறல் மரபு. கண்டங்களைப் பிரிப்பன மலைகளேயாம். அவை போலக் காஞ்சியைப் பிரிப்பன உயர்ந்த மாடங்களைக் கொண்ட வீதிகளாகும். அவற்றைச் சூழ இருப்பன, உலகிலுள்ள ஒன்பான் கண்டங்களேயன்றி, மேலும் பல கண்டங்களும் சூழ அமைந்திருப்பன போல்வதாம். மாலோகம் - மேல் உள்ள ஏழுலகங் களில் ஒன்று எனினும் அமையும். அன்று , ஏ என்பன அசைநிலை.

பாகமருங் கிருபுடையும் உயர்ந்து நீண்ட
படரொளிமா ளிகைநிரைகள் பயில்மென் கூந்தல்
தோகையர்தங் குழாமலையத் தூக்கு முத்தின்
சுடர்க்கோவைக் குளிர்நீர்மை துதைந்த வீதி
மாகமிடை யொளிதழைப்ப மன்னி நீடு
மருங்குதா ரகைஅலைய வரம்பில் வண்ண
மேகமிடை கிழித்தொழுகுந் தெய்வக் கங்கை
மேல்நதிகள் பலமண்மேல் விளங்கி ஓங்கும். **#1166**

வீதிகளின் இருபுறங்களிலும் உள்ள உயர்ந்த நீண்ட ஒளி வீசும் மாளிகையின் வரிசைகளில் பயிலும் மிருதுவான கூந்தலையுடைய பெண்களின் கூட்டங்கள், ஓடி ஆடி நடந்து திரிதலினால், அவர்களது மார்பில் தொங்கவிடப்பெற்ற முத்து மாலைகளின் குளிர்ச்சியாய ஒளி வீசும் வீதிகள், வானத்தின் மீது ஒளிதழைத்திட விளங்கி, நீள நிலவிய அயற் புறங்களில் உள்ள விண்மீன்கள் அலைவுற, அளவில்லாத வண்ணமுடைய மேகங்கள் இடையாகக் கிழித்துக் கொண்டு இந்நிலவுலகில் ஓடும் தெய்வ நதியாய கங்கை முதலிய வானின் மேல் உள்ள ஆறுகள் பலவும் இந்நிலவுலகில் திரண்டு விளங்குவதை ஒத்திருக்கும்.

விளக்கவுரை

மாளிகை ஒளி - விண் ஒளி தழைப்ப நிற்பது: பெண் களின் கூந்தல் அலைவு - மேகங்கள் அலைவு: முத்தின் கோவை - விண்மீன்களின் கோவை: குளிர்ந்த தன்மை துதைந்த வீதி - கிழித்து வரும் தெய்வ கங்கை முதலிய நதிகள் இந்நிலவுலகில் பலவாக விளங்குவன.

கிளரொளிச்செங் கனகமயந் தானாய் மாடு
கீழ்நிலையோர் நீலச்சோ பானம் பூணக்
கொளவமைத்து மீதொருபாற் கன்ன சாலை
குலவயிரத் தாலமைத்த கொள்கை யாலே

அளவில்சுடர்ப் பிழம்பானார் தம்மைத் தேடி
அகழ்ந்தேனம் ஆனானும் அன்ன மாகி
வளர்விசும்பில் எழுந்தானும் போல நீடும்
மாளிகைகள் உளமற்ற மறுகு தோறும். **#1167**

வீதிகள் தோறும் விளங்குகின்ற சில மாடங்கள் ஒளியுடைய செம்பொன்னின் மயமாய்ச் செய்யப்பட்டு, அருகி லுள்ள கீழ் நிலையில் நீல மணிகளினால் ஆய படிகளையுடையவாய், மேல்நிலையில் ஒரு பக்கத்தில் வயிரமணிகளால் அமைந்த சாளரத் தைக் கொண்டிருப்பன, அளவற்ற ஒளிப்பிழம்பாகி நின்றருளும் சிவபெருமானின் திருவடியையும், திருமுடியையும் தேடிக் காண்டற்கு முற்பட்ட பன்றி வடிவான திருமாலும், அன்ன வடிவான அயனும் போல்வனவாய் உள்ளன.

விளக்கவுரை

மாடங்கள் செம்பொன் மயமாய் இருப்பன சிவபெரு மானையும், அவற்றின் கீழுள்ள நீல நிறமுடைய படிகள் திருமாலை யும், அவற்றின் மேல் நிலையிலுள்ள வயிரவொளி நிலவும் சாளரம் அயனையும் ஒத்துள்ளன. சோபானம் - படிகள்.

மின்பொலிபன் மணிமிடைந்த தவள மாட
மிசைப்பயில்சந் திரகாந்தம் விசும்பின் மீது
பொன்புரையுஞ் செக்கர்நிறப் பொழுது தோன்றும்
புனிற்றுமதி கண்டுருகிப் பொழிந்த நீரால்
வன்புலியி னுரியாடைத் திருவே கம்பர்
வளர்சடையும் இளம்பிறையுங் கண்டு கும்பிட்
டன்புருகி மெய்பொழியக் கண்ணீர் வாரும்
அடியவரும் அனையவுள அலகி லாத. **#1168**

ஒளி விளங்கும் பல மணிகள் நெருங்கிய வெள்ளிய மாடங்கள் மேலாக விளங்கிடும் சந்திர காந்தக் கற்கள், வானத்தின் மீது பொன்னை ஒத்த செக்கர் நிறமான மாலைப் பொழுதில் தோன்றிடும் இளம்பிறையைக் கண்டு உருகிச் சொரிந்திருக்கும் நீர்மை, வலிய புலியின் தோலை ஆடையாக உடைய திரு ஏகம்பப் பெருமானின் வளர்கின்ற சடையையும் இளம்பிறையையும் கண்டு, கும்பிட்டு, அன்பு உருகி மேனியில் வடிந்திடக் கண்ணீர் சொரிந்திடும் அடியவரை ஒத்திருப்பனவாய் உள்ளன.

விளக்கவுரை

வெண்மையான மாடங்கள் திருநீறணிந்த அடியவர் கள். சந்திரகாந்தக்கல் - அவ்வடியவரின் கண்கள். செக்கர்வானமும் பிறையும்

- இறைவனின் திருச்சடையும், அதன் கண் விளங்கிடும் பிறையும்.
சந்திரகாந்தக் கற்கள் நீர் பொழிதல்-அடியவர்கள் இறைவ னைக் கண்டு கண் நீர் பொழிதல்.

முகிலுரிஞ்சுங் கொடிதொடுத்த முடிய வாகும்
முழுப்பளிங்கின் மாளிகைக்கள் முற்றுஞ் சுற்றும்
நிகரில்சரா சரங்களெல்லாம் நிழலி னாலே
நிறைதலினால் நிறைதவஞ்செய் இமயப் பாவை
நகிலுழுத சுவடும்வளைத் தழும்பும் பூண்ட
நாயகனார் நான்முகற்குப் படைக்க நல்கும்
அகிலயோ னிகளெல்லாம் அமைத்து வைத்த
அரும்பெரும்பண் டாரநிலை யனைய வாகும். **#1169**

மேகங்கள் உராய்கின்ற கொடிகள் நாட்டிய சிகரங் களை உடையவான பளிங்கினால் ஆகிய மாளிகைகள் முற்றும், அவற் றைச் சுற்றி இருக்கும் நிகரற்ற சிறப்புடைய இயங்குவனவும் நிற்பனவு மாகிய உயிர்த் தொகைகளின் நிழல் படுவதால், அம்மாளிகைகள் நிறைகின்ற தவம் செய்திடும் மலையரசன் மகளாரான காமாட்சி அம்மையாருடைய முலைபதிந்த சுவடும் வளையல்களின் தழும்பும் பூண்ட தலைவனார், நான்கு முகங்களையுடைய அயனது படைப்புத் தொழிலைப் புரிந்திடற்குக் கொடுத்திடும் உயிர்வகைகள் எல்லாவற் றையும் சேர அமைத்து வைத்த அரிய பெருங் கருவூலத்தின் சேமிப் புகள் போன்று விளங்குவன.

விளக்கவுரை

பளிங்குக் கண்ணாடியால் நிலைபெறச் செய்த மாளிகை களில் அவற்றைச் சூழ இருந்திடும் பொருள்கள் பலவும் தெரிதலால், அவை, ஏகம்பர் அயனாருக்குப் படைப்பினைச் செய்தற்கென ஆக்கி வைத்த முன்னோடியான படைப்பைப் போன்றுள்ளன.

பொற்களப மாளிகைமேல் முன்றில் நின்று
பூங்கழங்கும் மணிப்பந்தும் போற்றி யாடும்
விற்புருவக் கொடிமடவார் கலன்கள் சிந்தி
விழுவனவும் கெழுவுதுணை மேவு மாதர்
அற்புமுதிர் கலவியினிற் பரிந்து சிந்தும்
அணிமணிச்சே டியர்தொகுக்கும் அவையு மாகி
நற்கனக மழையன்றிக் காஞ்சி யெல்லை
நவமணிமா ரியும்பொழியும் நாளும் நாளும். **#1170**

பொன்னால் செய்து கலவைச் சாந்தால் மெழுகிய மாளிகைகளின் மேன் முற்றத்தில் நின்று, பூங்கழங்குகளையும் மணிப் பந்துகளையும் இறைவனின் பொருள் சேர் புகழைப் போற்றி ஆடு கின்ற வில்போலும்

அழகிய புருவமுடைய பூங்கொடி போன்ற பெண்கள், தம் பொன்னின் அணிகலன்கள் விளையாட்டின் விரை வால் சிந்தப்பெற்று விழுவனவும், தம் உயிர்த் துணையான கணவ ருடன் அன்பு முதிர்வால் கொண்ட கலவியினில் அன்பின் விளைவால் சிந்திடுகின்ற அழகிய மணிகளைத் தோழியர் எடுத்து மீளவும் தொகுத் திடும் மணிகளுமாகி இவ்வகையால் அங்கு நல்ல பொன் மழையே பொழிவதன்றிக் காஞ்சி நகர எல்லையில் நவரத்தினங்களின் மழையும் நாளும் பொழியும்.

விளக்கவுரை

மேல் மாடத்தில் தோழியர்களுடன் ஆடும் விளை யாட்டானும், தம்புலவியானும் கழன்று சிந்திடும் பொன் அணிகளும், மணிகளும் கீழ் வீழ்தல், பொன் மழையும் மணி மழையும் போல்வன வாயின.

பூமகளுக் குறையுளெனுந் தகைய வான
பொன்மாடத் தரமியங்கள் பொலிய நின்று
மாமகரக் குழைமகளிர் மைந்தர் அங்கண்
வந்தேறு முன்நறுநீர் வண்ட லாடத்
தூமணிப்பொன் புனைநாளத் துருத்தி வீசும்
சுடர்விடுசெங் குங்குமநீர்த் துவலை தோய்ந்த
காமர்மணி நாசிகையின் மருங்கு தங்கும்
கருமுகில்கள் செம்முகில்க ளாகிக் காட்டும். **#1171**

திருமகளுக்கு உறைவிடம் எனும் தகவுடையதான பொன்னாலாய மாடங்களின் மேல், நிலாமுற்றத்தில் பொலிவுற நின்று, பெரிய மகர குண்டலங்களை அணிந்த பெண்கள், அங்குத் தங்கள் கணவர் வந்து ஏறிடு முன்னர், அவர்மேல் நறிய வாசனையுடைய நீரைச் சொரிந்து வண்டல் என்னும் விளையாடல் புரிதற்காக, அவர்கள் கையில் கொண்ட தூய மணியும் பொன்னும் சேரப்புனைந்து செய்த உள் துளைகளையுடைய நீர்தாவும் துருத்தியினின்றும் வீசும் ஒளியையுடைய செங்குங்கும நீரின் துளிகள் தோய்ந்துள்ள, அம் மாளிகைகளின் அழகிய மணிகள் பதித்த நாசிகைகளின் அருகில் தங்கும் கருமேகங்கள், சிவந்த மேகங்களாகித் தோன்றும்.

விளக்கவுரை

நாசிகை - மாடங்கள் மேல், மூக்குப் போல் அமைந்த நீண்ட பகுதிகள். இதனால் உள்ளிடம் காற்று இயக்கத்திற்கு ஏதுவாகும். நாளம் - துருத்தி. மகளிர் தம் கணவர் மீது சொரிதற்கென வைத்திருந்த செங்குங்கும நீர், ஆங்காங்குச் சிந்திக்கிடப்ப, அந்நீர் மேல் படிந்த மேகங்கள் செந்நிறம் உடையனவாய்க் காட்டின.

இமமலிய வெடுத்தநெடு வரைகள் போல

இலங்குசுதைத் தவளமா ளிகைநீள் கோட்டுச்
சிமையடையுஞ் சோபான நிரையும் விண்ணும்
தெரிவரிய தூய்மையினால் அவற்றுள் சேர்ந்து
தமர்களுடன் இழிந்தேறு மைந்தர் மாதர்
தங்களையும் விசும்பிடைநின் றிழியா நிற்கும்
அமரரையும் அரமகளிர் தமையும் வெவ்வே
றறிவரிதாந் தகைமையன அனேகம் அங்கண். **#1172**

பனி மூடுமாறு உயர்ந்து நீண்ட மலைகளைப் போல் விளங்குகின்ற சுண்ணச் சாந்து பூசிய வெள்ளிய மாளிகைகளின் நீண்ட சிகரங்களின் உச்சியை அடைவதற்காக அமைந்த படிகளின் நிரையையும், வானுலகினையும் வேறாகப் பிரித்து அறிய முடியாத வாறு உள்ள தூய்மையினால், அப்படிக்கட்டினில் இருந்து தம் சுற்றத் தவர்களுடன் இறங்கி ஏறும் ஆண்களையும் பெண்களையும், வானில் நின்றும் இழிந்து இந்நிலவுலகில் வருகின்ற தேவர்களையும் தேவப் பெண்களையும் பிரித்து அறிதற்கு அரிதாக, மாளிகைகள் பல அமைந் துள்ளன.

விளக்கவுரை

இமம் - பனி. இடப்பொலிவானும், அவ்விடத்து இயங் கும் ஆடவர், மகளிர் தோற்றப் பொலிவாலும், தேவர் இவர், மண்ணுல கத்தவர் இவர் என வேறுபிரித்தறிய இயலாதவாறு மாடங்கள் உள.

அரவநெடுந் தேர்வீதி அருகு மாடத்
தணிமணிக்கோ புரத்தயலே வியல்வாய் நீண்ட
விரவுமர கதச்சோதி வேதித் திண்ணை
விளிம்பினொளி துளும்பமுறைப் படிமீ தேறுங்
குரவமரும் குழல்மடவா ரடியி லூட்டும்
குழம்படுத்த செம்பஞ்சின் சுவட்டுக் கோலம்
பரவைநெடுந் தரங்கமிசை விளங்கித் தோன்றும்
பவளநறுந் தளிரனைய பலவும் பாங்கர். **#1173**

ஒலி நிரம்பிய நெடுந்தேர்கள் ஓடிடும் வீதியின் அருகில் விளங்கும் மாடத்தில், மணிகள் பதித்த கோபுரத்தின் அயலே அகன்று நீண்டு விளக்கமுறும் பச்சை நிற ஒளிபரப்பிடும் மரகதத் தினாலான திண்ணைகளின் விளிம்பில், ஒளியமைந்த படிகள் மீது முறையாக மேலேறுகின்ற குரவமலர்களைச் சூடிய கூந்தலையுடைய பெண்கள், தம் காலில் பூசிய செம்பஞ்சுக் குழம்பின் சுவடுகள் பதித்த கோலமானது, கருநெடுங்கடலின் மீது விளங்கித் தோன்றும் பவளக் கொடியின் வாசனையுடைய தளிர்களைப் போன்று விளங்குகின்றன.

விளக்கவுரை

வியல்வாய் - அகன்ற இடம். `வியலென் கிளவி அக லப் பொருட்டே` *(தொல்.சொல்.உரி.66)* என்னும் தொல்காப்பியமும். திண்ணைகளின் மரகத ஒளி படிகளில் வீச, அவை கடல் நிறமானது. அப்படிகளில் ஏறிய பெண்களின் அடிச்சுவடுகளின் செம்பஞ்சுக் குழம்பினால் அவை பவளக் கொடிகளின் தளிர் போல்வன ஆயின.

வெம்புசினக் களிற்றதிர்வும் மாவின் ஆர்ப்பும்
வியனெடுந்தேர்க் காலிசைப்பும் விழவ றாத
அம்பொன்மணி வீதிகளில் அரங்கி லாடும்
அரிவையர்நூ புரஒலியோ டமையும் இம்பர்
உம்பரின்இந் திரன்களிற்றின் முழக்குந் தெய்வ
உயர்இரவி மாக்கலிப்பும் அயனூர் தித்தேர்
பம்பிசையும் விமானத்துள் ஆடுந் தெய்வப்
பாவையர்நூ புரஅரவத் துடனே பல்கும். **#1174**

சினம் மிகுந்த யானைகளின் அதிர்வும், குதிரை களின் கனைப்பும், அகன்ற பெரும் தேர் உருள்களின் (சக்கரங்கள்) ஓசையும், விழாக்கோலம் நீங்காத அழகிய பொன் வீதிகளில் அமைந்துள்ள நாட்டிய மேடைகளில் ஆடுகின்ற பெண்களுடைய சிலம்போசையுடன் இந்நகரம் இங்கு அமைந்திருக்கும். வானுலகி லுள்ள தேவேந்திரனது ஐராவத யானையின் ஓசையும், தெய்வத் தன்மை வாய்ந்த ஞாயிற்றினது தேரிற்பூட்டிய குதிரைகளின் கனைப் பும், நான்முகனது ஊர்தியாகிய தேர் உருளையின் ஓசையும், தேவ விமானங்கள் மீதுநின்று ஆடுகின்ற தெய்வப் பெண்களுடைய சிலம் பின் ஓசையுடன் இந்நகரின் மேலுள்ள தேவலோகம் விளங்கி நிற்கும்.

விளக்கவுரை

காஞ்சியில் யானை, குதிரை, தேர் ஆகியவற்றின் ஒலிகளுடன், நாட்டிய மேடையில் காணும் சிலம்போசையும் இணைந்து ஒலிக்கின்றன. இவை இம்பரில் *(இவ்வுலகில்)* கேட்பன. இவற்றுடன் உம்பரில் *(தேவலோகத்தில்)* இந்திரனின் ஐராவத ஓசையும், கதிரவனின் குதிரை ஒலியும், அயனது தேர் உருளின் ஓசையும், தேவப் பெண்கள் நடன மாடுங்கால் ஏற்பட்ட சிலம்போசை யுடன் கூடி ஒலிக்கின்றன. இவ்வாற்றான் காஞ்சியும் விண்ணுலகும் ஒலிவகையானும் ஒப்ப விளங்குமாற்றை அறியலாம்.

அருமறைஅந் தணர்மன்னும் இருக்கை யான
ஆகுதியின் புகையடுத்த அம்பொன் மாடப்
பெருமறுகு தொறும்வேள்விச் சாலை யெங்கும்
பெறுமவிப்பா கங்கொடுக்கும் பெற்றி மேலோர்
வருமுறைமை அழைத்துவிடு மந்திரம்எம் மருங்கும்

வானவர்நா யகர்திருவே கம்பர் முன்றில்
திருமலிபொற் கோபுரத்து நெருங்கும் எல்லாத்
தேவரையும் அணித்தாகக் கொண்டு செல்லும். **#1175**

அரிய மறைகளை ஓதிடும் அந்தணர்கள் வாழும் இருப்பிடங்களாய, வேள்விப்புகை பரந்திடும் அழகிய பொன் மாடங் கள் நிறைந்த பெருவீதிகள் தோறும், வேள்விச் சாலைகளில் எங்கும் தேவர்கள் பெறத்தகும் அவிர்பாகத்தைக் கொடுத்திடும் தகுதியை உடைய பெரியோர்கள், அவ்வத் தேவரையும் அங்கு வருமாறு முறை மையாக அழைத்திடச் சொல்லப்படும் மந்திரங்கள், எப்பக்கங்களிலும் சென்று, தேவர் தலைவரான ஏகம்பப் பெருமானின் திருமுற்றத்தில் திருமலிந்த பொற்கோபுரத்து வாய்தலில், நெருங்கி இருக்கின்ற எல்லாத் தேவரையும் தம் பக்கமாக உள்ள வேள்விச் சாலைக்கு அழைத்துக் கொண்டு செல்லும்.

விளக்கவுரை

வழிபடுதற்கும் திருத்தொண்டு செய்தற்குமாகத் திருக்கோயிலின் திருமுன்பு இருக்கும் தேவர்களில், உரியவர்களை வேள்விச் சாலையில் ஒலிக்கக் காணும் மந்திரங்கள் அழைத்துச் செல்லும். வேள்வியில் இடப்படும் உணவு அவி எனப்படும். அவ் வுணவு அவ்வத் தேவருக்கும் பகிர்ந்து கொடுக்கப் பெறுதலின் அவிர்ப்பாகம் எனப்படும
இது முதலாக வரும் மூன்று பாடல்களும் கூறியது கூறலும், யாப்பு அமைதி கெட்டிருப்பதும், சொல்வழக்குச் சிறப் பின்மையும் கொண்டு வெள்ளிப் பாடல்களாக இருக்கலாம் எனச் சிவக்கவிமணி யார் *(பெரிய.பு.உரை)* கருதுவர்.

அரசர்குலப் பெருந்தெருவும் தெற்றி முற்றத்
தாயுதங்கள் பயிலும்வியல் இடமு மங்கண்
புரசைமதக் கரிகளொடு புரவி யேறும்
பொற்புடைய வீதிகளும் பொலிய வெங்கும்
விரைசெய்நறுந் தொடையலங்கல் குமரர் செய்யும்
வியப்புறுசெய் தொழில்கண்டு விஞ்சை விண்ணோர்
நிரைசெறியும் விமானவூர் திகளின் மேலும்
நிலமிசையும் பலமுறையும் நிரந்து நீங்கார். **#1176**

அரச மரபினர்கள் வாழும் பெரிய வீதிகளிலும் சித்திர கூடங்களிலுள்ள முற்றங்களில் போர்க் கருவிகளைப் பயிலும் பெரிய இடங்களிலும், அவ்விடத்துக் கயிற்றையுடைய மதயானை களையும் குதிரைகளையும் ஏறி நடாத்தும் பொற்புடைய வீதிகளிலும், பிறவிடங்களிலும் பொலிவுமிகுமாறு, அழகு பொருந்திய வாசனை யுடைய இனிய மலர் மாலைகளையும், மணி மாலைகளையும் சூடிய அரசிளங் குமரர்கள்

செய்திடும் வியக்கத்தக்க படைத் தொழில்களைக் கண்டு, விஞ்சையர்களும் வானோர்களும் நிரையாக வந்து தாம் ஊர்ந்து வரும் விமானங்களின் மேலும், ஊர்திகளின் மேலும் நிலத்திலும் பல முறையும் நின்று வியப்புடன் நோக்கியவர்களாய்க் கூடி நீங்காது நிற்பர்.

விளக்கவுரை

தெற்றி - சித்திர கூடங்கள். புரசை - யானையின் கழுத்தில் கட்டப்படும் கயிறு.

வெயிலுமிழும் பன்மணிப்பூண் வணிக மாக்கள்
விரவுநிதி வளம்பெருக்கும் வெறுக்கை மிக்க
வயினிலவு மணிக்கடைமா நகர்கள் எல்லாம்
வனப்புடைய பொருட்குலங்கள் மலிதலாலே
கயிலைமலை யார்கச்சி ஆலயங்கள் பலவுங்
கம்பமுமே வியதன்மை கண்டு போற்றப்
பயிலுமுருப் பலகொண்டு நிதிக்கோன் தங்கப்
பயில்அளகா புரிவகுத்த பரிசு காட்டும். **#1177**

ஒளிமிகுந்த பல மணிகளால் விளங்கிய அணி கலன்களை அணிந்த வணிகமக்கள், தம்பால் பொருந்திய செல்வங் களின் வளத்தினைப் பெருக்கும் செல்வம் மிகுந்த இடங்கள் மிக்க, மணிகள் பதித்த முதல் வாயிலையுடைய மாளிகைகள் எல்லாம், வனப் புடைய பொன் மணி முதலாய பொருட் குவியல்கள் விளங்கி மலிந் திருப்பதால், அவை, திருக்கயிலாய மலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான், காஞ்சியில் உள்ள பல திருக்கோவில்களிலும் ஏகம் பத்திலும் வீற்றிருக்கும் தன்மையைக் கண்டு, நிதியின் தலைவனான குபேரன், தான் அங்கு வந்து தங்குவதற்காக, தனது அளகாபுரி எனும் உலகைக் காஞ்சியில் பல வடிவில் வணிகர் வீதியில் வகுத்து வைத்தான் எனும் தன்மையைக் காட்டுவன.

விளக்கவுரை

வெயில் - ஒளி. வெறுக்கை - செல்வம்.

விழவுமலி திருக்காஞ்சி வரைப்பின் வேளாண்
விழுக்குடிமைப் பெருஞ்செல்வர் விளங்கும் வேணி
மழஇளவெண் திங்கள்புனை கம்பர் செம்பொன்
மலைவல்லிக் களித்தவள ருணவின் மூலந்
தொழவுலகு பெறுமவள்தான் அருளப் பெற்றுத்
தொன்னிலத்து மன்னுபயிர் வேத வாய்மை
உழவுதொழி லாற்பெருக்கி உயிர்க ளெல்லாம்
ஓங்கவருந் தருமவினைக் குளரால் என்றும். **#1178**

திருவிழாக்கள் எந்நாளும் மலிந்த திருவுடைய காஞ்சியம்பதியின் எல்லையில், வேளாளர்கள் எனப்படும் உயர்ந்த குடியில் தோன்றிய பெருஞ் செல்வர்கள், விளங்கிடும் சடையில் இள வெண் திங்களைச் சூடிய ஏகம்பர், செம்பொன் வடிவான இமய மலையில் தோன்றிய அம்மையாருக்குக் கொடுத்தருளிய இரு நாழி நெல்லையும் அப்பெருமாட்டியைத் தொழுதலினால் உவந்து தம்மிடம் கொடுத்தருள, அதனை வித்தாகக் கொண்டு, பழமையாக நீடித்த உலகத்து விளங்கிய பயிர்களை, மறைகளால் சிறப்பிக்கப்பெறும் உழவின் தொழிலாற் பெருகச் செய்து, உயிர்கட்கெல்லாம் உணவு கொடுத்துப் பேணிவரும் அறச்செயலுக்கு என்றும் உரியவர்களாவர்.

விளக்கவுரை

தருமவினை - வேளாண்மை. ஆல் அசைநிலை. பெரு மாட்டியார் இறைவரிடம் பெற்ற இரு நாழி நெல்லையும், அப்பெரு மாட்டியின் அருளால், தாம் பெற்றவர்கள் வேளாளர்கள். அத்தகைய சிறப்பால் உழவுத்தொழிலைப் பேணிவளர்த்து, உயிர்கட்கு ஊட்டி வரும் சிறப்புடையர்.

ஓங்கியநாற் குலத்தொவ்வாப் புணர்வில் தம்மில்
உயர்ந்தனவும் இழிந்தனவும் ஆன சாதி
தாங்குழுமிப் பிறந்தகுல பேத மெல்லாம்
தந்தகைமைக் கேற்றதனி யிடங்கள் மேவி
ஆங்குநிறை கிளைபயின்று மரபி னாற்ற
அடுத்தவினைத் தொழில்முறைமை வழாமை நீடு
பாங்குவளர் இருக்கைநிலை பலவும் எல்லாம்
பண்புநீ டியவுரிமைப் பால அன்றே. **#1179**

உயர்வான இந்நான்கு மரபிலும், தத்தம் குலத்திற்கு ஒவ்வாத கூட்டுறவால் தோன்றிய ஆணும் பெண்ணும், உயர்ந்தனவும் இழிந்தனவும் ஆன சாதிகளாகி, தத்தம் தகைமைக் கேற்ற தனியான இடங்களில் பொருந்தி, அங்குத் தம் சுற்றத்தாருடன் சேர்ந்து, தத்தமக்கு ஏற்ற தொழில்களைச் செய்து, குணம் பெருக வாழ்ந்து வரும் உரிமையுடையவர்களாய் விளங்கினர்.

விளக்கவுரை

`இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்` *(குறள், 133)* என்பர் திருவள்ளுவர். இவ்வகையால் இம்மக்கள் உயர்வும் தாழ்வும் பெறலாயினர்.

ஆதி மூதெயில் அந்நகர் மன்னிய
சோதி நீள்மணித் தூபமுந் தீபமும்
கோதில் பல்லிய முங்கொடி யும்பயில்

வீதி நாளும் ஒழியா விழாவணி. **#1180**

தோற்றமில் காலத்தவரான இறைவரின் முதிய மதில் சூழ்ந்த அக்காஞ்சி எனும் நகரில் விளங்கும் வீதிகள், நீண்ட ஒளியையுடைய மணித்தூபமும், விளக்கும், குறைவிலாத இசைக் கருவிகளும், கொடியும் நிறைந்து, நாளும் விழாக் கோலம் பூண்டு நிற்பன.

விளக்கவுரை

நறுமணம் புகைத்தற்குரிய தூபங்களும், ஒளி விளக்கு களும் மணிகளால் செய்யப்பட்டிருத்தலின், `சோதிநீள் மணித் தூபமும் தீபமும்` என்றார்.

வாயில் எங்கணுந் தோரணம் மாமதில்
ஞாயில் எங்கணுஞ் சூழ்முகில் நாள்மதி
தோயில் எங்கணும் மங்கலம் தொண்டர்சூழ்
கோயில் எங்கணும் உம்பர் குலக்குழாம். **#1181**

அந்நகர மாளிகையின் வாயில்கள் எங்கும் தோரணங்கள் சிறப்புற உள்ளன. பெருமதிலின் உறுப்புகள் எங்கணும் மேகங்கள் சூழ்வன. இளம் பிறை தோயும் மாடங்கள் எங்கும் மங்கலம் நிரம்பிய நற்செயல்கள் நிகழ்வன. தொண்டர்கள் சூழ்ந்து வலம் வரும் கோயில்கள் எங்கும், தேவர்களின் கூட்டங்கள் வந்து சேர்வன.

விளக்கவுரை

****

வேத வேதியர் வேள்வியே தீயன
மாத ரோதி மலரே பிணியன
காதல் வீதிவி லக்கே கவலைய
சூத மாதவி யேபுறஞ் சூழ்வன. **#1182**

மறையவர்கள் இயற்றும் வேள்விகளே தீயினைக் கொண்டிருப்பன. மகளிர் தம் கூந்தல்களில் உள்ள மலர்களே பிணிப் புடையன. விருப்பமிகும் வீதிகளில் குறுக்கிடும் சிறுசிறுவீதிகளே கவலையுடையன. மாமரங்களும், குருக்கத்தி மலர்களுமே புறஞ் சூழ்வன.

விளக்கவுரை

தீயன என்னும் தொடர், தீமை உடையன, நெருப்பை யுடையன என இருபொருள்பட நின்றது. இவற்றுள் வேள்வித் தீயே *(தீயன)* நெருப்புடையன என்பதால் பிற தீமைகள் எவையும் இல்லை என்பது பெறப்படுகிறது. பிணியன என்பது கட்டப்படுவன, பிறரால் கட்டுப்படுத்தப்படுவன என இருபொருள்பட நின்றது. பெண்களின் கூந்தலில் உள்ள மலர்களே *(பிணியன)* கட்டப்பட்டன என்பதால் பிறர் எவராலும் அந்நாட்டு மக்கள் கட்டுப்படுத்தப்படவில்லை என்பது

விளங்குகின்றது. எனவே `நாமார்க்கும் குடியல்லோம்`*(தி.6 ப.98 பா.1)* எனும் உணர்வோடு வாழ்கின்றார்கள் என்பது கருத்தாகின்றது. கவலைய என்பது கவலைக்கு உரியன, கவர்த்த வழிகளையுடையன என இருபொருள் பட நின்றது. இங்கு வீதிகளில் ஆங்காங்கு குறுக் கிடும் சிறுசிறு வீதிகளே வழிச்செல்வார்க்கு கவர்த்தலைத் தருவன என்பதால் இந்நகரில் உள்ளார் எவரும் மனக்கவலையின்றி வாழ்கின் றனர் என்பது தெரிகின்றது. புறஞ்சூழ்வன என்பது நகரின் புறத்தே இருப்பன, புறங்கூறுதலுடையன என இரு பொருள்பட நின்றது. இங்கு மாதவியும், குருக்கத்தியுமே நகர்ப்புறத்து *(புறம்சூழ்வன)* இருப்பன என்பதால், இந் நகரில் புறங்கூறுவார் எவரும் இலர் என்பது புலனாகின்றது.

சாய லார்கள் நுசுப்பே தளர்வன
ஆய மாடக் கொடியே அசைவன
சேய ஓடைக் களிறே திகைப்பன
பாய சோலைத் தருவே பயத்தன. **#1183**

மயிலின் சாயலையுடைய பெண்களின் இடை களே தளர்ச்சியுடையன. அப்பெண்கள் மாடங்களில் நாட்டிய கொடிகளே அசைவன. சிவந்த நெற்றிப் பட்டங்களையுடைய யானை களே மயங்குவன. பரவியிருக்கும் நல்ல சோலைகளில் உள்ள மரங் களே பயனுடையன.

விளக்கவுரை

தளர்தல் என்பது இளைத்தல், வருந்துதல் என இரு பொருள்பட நின்றது. இங்கு மகளிரின் இடைகளே இளைத்திருப்பன. *(தளர்வன)* என்பதால், இவையன்றி அந்நாட்டில் உள்ளார் எவரும் வேறுபிற காரணங்களால் இளைத்தலிலர் என்பது பெறப்படுகின்றது. அசைவன என்பது அசைதல், வருந்துதல் என இரு பொருள்பட நின்றது. இங்கு மாடத்திலுள்ள கொடிகளே அசைகின்றன என்பதால் அந்நகரிலுள்ளார் எவருக்கும் வேறு பிற வருத்தமே இல்லை என்பது பெறப்படுகின்றது. அசைதல் பண்டை நிலைமை கெட்டு வேறொரு வாறாகி வருந்துதல் *(தொல்.பொருள்.மெய்ப்.5)* எனப் பேராசிரியர் உரைத்தமையும் காண்க. திகைப்பன என்பது அவ்வத் திசைகள், மயங்குதல் என இரு பொருள் பட நின்றது. இங்கு யானைகளே அவ்வத் திசைகளிலும் *(திகைப்பன)* இருப்பன என்பதால், அந்நகரிலுள்ளார்க்கு வேறு பிற மயக்க நிலை இல்லை என்பது பெறப்படுகின்றது. பயத்தன என்பது பயனை உடையது, பயத்தை உடையது என் இரு பொருள்பட நின்றது. இங்கு மரங்களே பயன் தருவனவாய் *(பயத்தன)* உள்ளன என்பதால் இந்நகரிலுள்ளார் எவர்க்கும் அச்சப்படுத்தற்குரிய எதுவும் இன்று என்பது பெறப் படுகின்றது. பயன் - காய்கனி முதலாயின. `பயன்மரம்` *(குறள், 216)* என்றும், `மருந்தாகித் தப்பா மரத்தற்றால்` *(குறள், 217)*

என்றும் திருவள்ளுவர் கூறுவனவும் இங்கு நினைவு கொளற்குரியன.

அண்ண லார்அன்பர் அன்பேமுன் ஆர்த்தன
தண்ண றுஞ்செழுந் தாதே துகளன
வண்ண நீள்மணி மாலையே தாழ்வன
எண்ணில் குங்குமச் சேறே இழுக்கின. **#1184**

சிவபெருமானிடத்து அன்பு பூண்டொழுகும் அன்பர்களின் அன்பே முதன்மையாக ஆர்ப்பன. குளிர்ந்த நறிய செழுமை மிக்க மகரந்தப் பொடிகளே துகளாவன. அழகிய நீண்ட மணி மாலைகளே தாழ்வன; அளவற்ற குங்குமக் குழம்பின் சேறே வழுக்கு தலையுடைய.

விளக்கவுரை

ஆர்த்தல் என்பது ஒலித்தல், கட்டப்படுதல் என இரு பொருள்பட நின்றது. இங்குப் பெருமானின் அன்பர்களிடத்திலேயே ஒலி எழுந்தன என்பதால், அங்குள்ள உயிர்கள் எவையும் வினை யால் கட்டப்படுவனவல்ல என்பது பெறப்படுகின்றது. அன்பர்கள் ஆர்த்தல் என்பது அன்புமீதூர்வினால் பெருமானை நோக்கி ஆடுத லும், பாடுதலுமாய் நிற்பதேயாம். ஆர்த்தல் கட்டப்படுதல், `ஆர்த்த பிறவித் துயர்கெட`*(தி.8 ப.7 பா.12)* எனவரும் திருவாக்கும் காண்க. துகள் என்பது பொடி, புழுதி என இருபொருள்பட நின்றது. இங்குப் பூந்தாதுக்களே பொடியாக உதிர்ந்து கிடக்கின்றன என்பதால் வேறு பிறவற்றால் வரும் புழுதிகள் இல்லை என்பது பெறப்படுகின்றது. தாழ்வன என்பது தொங்குதல், கீழ்நிலைப் படுதல் என இருபொருள் பட நின்றது. இங்கு மணிகளால் ஆய மாலைகளே தொங்குகின்றன என்பதால், ஏனைய உயிரினங்கள் தம்நிலையில் தாழ்ந்து நிற்க வில்லை என்பது பெறப்படுகின்றது. இழுக்குதல் என்பது வழுக்குதல், குற்றமுடையதாதல் என இருபொருள்பட நின்றது. இங்குத் தெருவில் உள்ள குங்குமச் சேறே வழுக்குகின்றன என்பதால், வேறு இழுக் குடைய *(குற்றமுடைய)* பொருள்கள் எவையும் இல்லை என்பது பெறப்படுகின்றது.

வென்றி வானவர் தாம்விளை யாடலும்
என்றும் உள்ளவர் வாழும் இயற்கையும்
நன்றும் உள்ளத்து நண்ணினர் வேட்கைகள்
ஒன்றும் அங்கொழி யாவகை உய்ப்பது. **#1185**

வெற்றி பொருந்திய தேவர்களைப் போல விளை யாட்டயர்தலையும், உடல் அழிவின்றி (காயசித்தி) என்றுமுள்ளவர் களாயிருக்கும் சித்தர்களைப்போல வாழும் இயல்பினையும், நன்மைகள் பலவும் பெற விரும்பும் திருவுள்ளமுடையவர்கள் தாம் வேண்டியவாறு பெற வழங்கும் வள்ளன்மையும் உடையது அக் காஞ்சி மாநகரம் ஆகும்.

விளக்கவுரை
****

புரங்க டந்தவர் காஞ்சி புரம்புகழ்
பரம்பு நீள்புவ னம்பதி னான்கினும்
வரம்பில் போக வனப்பின் வளமெலாம்
நிரம்பு கொள்கலம் என்ன நிறைந்ததால். **#1186**

முப்புரங்களையும் வென்றவராய சிவபரஞ்சுடர் வீற்றிருக்கும் காஞ்சிபுரம், புகழ் விளங்கும் பதினான்கு உலகங்களி லும் காணப்படும் அளவுகடந்த போகங்களுக்குரிய வனப்புமிகுந்த வளங்கள் யாவற்றையும் கொண்டிருக்கும் ஒரு கொள்கலமாக விளங்குவதாகும்.

விளக்கவுரை
****

அவ்வகைய திருநகரம்
அதன்கண்ஒரு மருங்குறைவார்
இவ்வுலகில் பிறப்பினால்
ஏகாலிக் குலத்துள்ளார்
செவ்வியஅன் புடைமனத்தார்
சீலத்தின் நெறிநின்றார்
மைவிரவு கண்டரடி
வழித்தொண்டர் உளரானார். **#1187**

அவ்வகையான திருவுடைய காஞ்சி நகரின் ஒரு புறமாக வாழ்பவர், இவ்வுலகத்தில் பிறப்பினால் ஏகாலியர் குலத்தில் தோன்றியவர், செப்பமாய அன்புடைய மனமுடையவர், சிவ பெருமானை உளங்கொண்ட சீலமுடையவர், கருமை பொருந்திய கழுத்தினையுடைய சிவபெருமானின் திருவடிகளில் வழிவழியாகத் தொண்டு செய்து வரும் வழியடிமைத் தொண்டராக வாழ்பவர் ஒருவர் உளரானார்.

விளக்கவுரை

ஏகாலியர்குலம் - வண்ணார் மரபு.

மண்ணின்மிசை வந்ததற்பின்
மனமுதலா யினமூன்றும்
அண்ணலார் சேவடியின்
சார்வாக அணைவிப்பார்
புண்ணியமெய்த் தொண்டர்திருக்
குறிப்பறிந்து போற்றுநிலைத்
திண்மையினால் திருக்குறிப்புத்
தொண்டர்எனுஞ் சிறப்பினார். **#1188**

இவர் இந்நிலவுலகில் தோன்றிய பின்னர், மனம், மொழி, மெய் ஆகிய முக்கருவிகளையும் சிவபெருமானின் திருவடி களிலேயே அணைவிப்பார். எம்பிராற்கு ஆளாகும் புண்ணியமுடைய மெய்யடியார்களின் திருக்குறிப்பைத் தாமாகவே உணர்ந்து, அவர்க் குத் தொண்டு செய்து போற்றிடும் நிலையாய திண்மையினால், திருக் குறிப்புத்தொண்டர் என்று அழைக்கப்படும் சிறப்பினை உடையவர்.

விளக்கவுரை

திருக்குறிப்புத்தொண்டர் என்பது காரணப் பெயராம். இயற்பெயர் தெரிந்திலது.

தேரொலிக்க மாவொலிக்கத்
திசையொலிக்கும் புகழ்க்காஞ்சி
ஊரொலிக்கும் பெருவண்ணார்
எனவொண்ணா உண்மையினார்
நீரொலிக்க அராவிரைக்க
நிலாமுகிழ்க்குந் திருமுடியார்
பேரொலிக்க உருகுமவர்க்
கொலிப்பர்பெரு விருப்பினொடும். **#1189**

தேர்கள் ஒலிக்கவும், குதிரைகள் கனைத்து ஒலி செய்யவும், திசைகளில் எல்லாம் சென்று பறக்கின்ற புகழுடையதாய காஞ்சி நகரில் உள்ளார்தம் உடைகளையெல்லாம் அழுக்கு நீக்கித் தந்துதவும் வண்ணார் என அழைக்கப்பெறும் தொழிற் சிறப்புடைய இவர், கங்கை நீர் ததும்பி ஒலித்திடப், பாம்பு இரைந்திட, இளம்பிறை யின் ஒளி ொபாருந்திய திருச்சடையையுடைய பெருமானின் திருப் பெயர் ஒலித்திட, உருகுகின்ற அடியார்களுக்கு அவர்களின் உடை களை அழுக்கு நீங்க ஒலித்துக் கொடுக்கும் விருப்பினொடும்.

விளக்கவுரை

****

. தேசுடைய மலர்க்கமலச்
சேவடியார் அடியார்தம்
தூசுடைய துகள்மாசு
கழிப்பார்போல் தொல்லைவினை
ஆசுடைய மலம்மூன்றும்
அணையவரும் பெரும்பிறவி
மாசுதனை விடக்கழித்து
வருநாளில் அங்கொருநாள். **#1190**

ஒளி பொருந்திய தாமரை மலர் போலும் சேவடி களையுடைய

சிவனடியார்களின் அழுக்குடைய ஆடைகளின் மாசி னைத் தாம் நீக்குவார் போன்றே, பழையதாகிய பழவினை பற்றிவரும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் பொருந்துவதால் வருகின்ற பெரும் பிறவியாய கட்டினைத் தமது தொண்டால் நெகிழக் கழித்து வருகின்ற நாள்களில், ஒருநாள்.

விளக்கவுரை

தொல்லைவினை - மூலகன்மம். இது மும்மலவினை யால் வருவது, பிறவிக்கு ஏதுவாயது. தூசு - ஆடை. துகள் மாசு கழிப் பார் என்னாது கழிப்பார் போல் என்றது அவர் கழித்து வந்தது புறப் பார்வைக்கு ஆடையின் மாசாகத்தோன்றினும், அகப்பார்வையில் பிறவிமாசேயாம் என்பது தோன்ற நின்றது.

பொன்னிமயப் பொருப்பரையன்
பயந்தருளும் பூங்கொடிதன்
நன்னிலைமை அன்றளக்க
எழுந்தருளும் நம்பெருமான்
தன்னுடைய அடியவர்தம்
தனித்தொண்டர் தம்முடைய
அந்நிலைமை கண்டன்பர்க்
கருள்புரிவான் வந்தணைவார். **#1191**

பொன் போல் விளங்கிடும் இமயமலை அரசரின் திருமகளாராய பூங்கொடி போன்ற உமையம்மையாரது தவநிலையை உலகவர் அறிய எழுந்தருளிவந்த பெருமான், தன்னுடைய அடியவர் களின் தனித்தொண்டரான திருக்குறிப்புத்தொண்டரின் அன்புமிகுந்த நிலையினைக் கண்டு, அவ்வன்பருக்கு அருள் புரிந்திட வேண்டி வந் தணைந்தார்.

விளக்கவுரை

****

சீதமலி காலத்துத்
திருக்குறிப்புத் தொண்டர்பால்
ஆதுலராய் மெலிந்துமிக
அழுக்கடைந்த கந்தையுடன்
மாதவவே டந்தாங்கி
மாலறியா மலரடிகள்
கோதடையா மனத்தவர்முன்
குறுநடைகள் கொளக்குறுகி. **#1192**

குளிர் மலிந்த மாரிக்காலத்தில், திருக்குறிப்புத் தொண்டரிடத்து, யாவரும்

பேணுதல் இன்றித் தனித்து வாழ்வோர் போன்று மெலிந்து, மிகவும் அழுக்கடைந்த கந்தையுடன் பெருந்தவ வேடத்தைத் தாங்கி, திருமாலும் பன்றியாய்ச் சென்று உணராத திருவுடைய மலரடிகள், குற்றம் அடையாத மனமுடைய அன்பராம் திருக்குறிப்புத்தொண்டர் முன்பாக மெதுவாக நடந்தருளி வந்து அணைய.

விளக்கவுரை

****

திருமேனி வெண்ணீறு
திகழ்ந்தொளிருங் கோலத்துக்
கருமேக மெனஅழுக்குக்
கந்தையுடன் எழுந்தருளி
வருமேனி அருந்தவரைக்
கண்டுமனம் மகிழ்ந்தெதிர்கொண்
டுருமேவும் மயிர்ப்புளகம்
உளவாகப் பணிந்தெழுந்தார். #1193

திருமேனியில் வெண்ணீறு திகழ்ந்து ஒளிர, கரிய மேகம் போன்று அழுக்கேறிக் கறுத்த ஆடையுடன் எழுந்தருளி வரு கின்ற திருமேனியையுடைய அரிய தவத்தினரைக் கண்டு, திருக் குறிப்புத்தொண்டர் மனம் மகிழ்ந்து எதிர் கொண்டு, தன்வயமிழந்து மயிர் சிலிர்க்க, உடன் அவரைப் பணிந்து எழுந்தார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

எய்துமவர் குறிப்பறிந்தே
இன்மொழிகள் பலமொழிந்து
செய்தவத்தீர் திருமேனி
இளைத்திருந்த தென்னென்று
கைதொழுது கந்தையினைத்
தந்தருளும் கழுவஎன
மைதிகழ்கண் டங்கரந்த
மாதவத்தோர் அருள்செய்வார். #1194

தம் முன்பு வந்தருளும் அவ்வடியாரின் குறிப் பினைத் திருக்குறிப்புத்தொண்டர் அறிந்து, அவரை நோக்கி, இனியன வாகப் பலமுகமன் மொழிந்து, செப்பமுடன் நற்றவத்தினைப் புரிந் தருளும் தவச்சீலரே! உம் திருமேனி வாட்ட முற்றிருப்பதேனோ? என்று கூறிக் கைதொழுது, `உமது கந்தையாய ஆடையைத் தந்தரு ளுக! நான் அதைத் தோய்த்து அழுக்கு நீக்கித் தருவேன்` என்று கேட் டருளலும், அது

பொழுது கருமை திகழும் கழுத்தை மறைத்து வந்த அத்தவமுனிவரும், திருக்குறிப்புத்தொண்டரை நோக்கி, இவ்வாறு அருள் செய்வாராய்.

விளக்கவுரை

****

இக்கந்தை அழுக்கேறி
எடுக்கவொணா தெனினும்யான்
மெய்க்கொண்ட குளிர்க்குடைந்து
விடமாட்டேன் மேல்கடற்பால்
அக்குன்றம் வெங்கதிரோன்
அணைவதன்முன் தருவீரேல்
கைக்கொண்டு போய்ஒலித்துக்
கொடுவாருங் கடிதென்றார். **#1195**

`இக்கந்தை மிகவும் அழுக்கேறி, அதனை நான் எடுத்து அணிவதற்கு உதவாது என்றாலும், என்மேனியில் தாக்கிடும் குளிருக்கு அஞ்சி அதைவிட மாட்டாதவனாயுள்ளேன். எனினும் மேற்குக் கடலின் அருகாயுள்ள மலையில் கதிரவன் சேர்தற்குமுன், நீர் அதனைத் தோய்த்து தூய்மையாக்கித் தரமுடியும் எனில் இதனைக் கையில் கொண்டு சென்று தோய்த்து விரைவில் உலர்த்திக் கொண்டு வாரும்` என்றார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

தந்தருளும் இக்கந்தை
தாழாதே ஒலித்துமக்கின்
றந்திபடு வதன்முன்னம்
தருகின்றேன் எனஅவரும்
கந்தையிது ஒலித்துணக்கிக்
கடிதின்றே தாரீரேல்
இந்தவுடற் கிடர்செய்தீர்
என்றுகொடுத் தேகினார். **#1196**

என்று கூறிய அடியவரை நோக்கித் தொண்டனார், எம்பிரானே! இக்கந்தையைச் சிறிதும் காலந் தாழ்த்தலின்றிக் கொண்டு சென்று தோய்த்து உமக்கு இன்று மாலைக்காலம் வருமுன்பு தருகின்றேன் என்று கூறலும், அவ்வடியவரும் அவரை நோக்கி, `இக்கந்தையை நீர் தோய்த்து உலரவைத்து, இன்றே தாரீராகில், இவ்வுடம்பிற்கு நீர் தீங்கிழைத்தீர் ஆவீர்` என்று கூறிக் கந்தையைக் கொடுத்துப் போயினார்.

விளக்கவுரை

****

குறித்தபொழு தேயொலித்துக்
கொடுப்பதற்குக் கொடுபோந்து
வெறித்தடநீர்த் துறையின்கண்
மாசெறிந்து மிகப்புழுக்கிப்
பிறித்தொலிக்கப் புகுமளவில்
பெரும்பகல்போய்ப் பின்பகலாய்
மறிக்கரத்தார் திருவருளால்
மழையெழுந்து பொழிந்திடுமால். **#1197**

அடியவருக்குத் தாம் கூறியவாறு குறித்த அக் காலத்தில் கொடுப்பதற்காக, நறுமணமுடய மலர்கள் நிறைந்த குளத்தின் கண்ணுள்ள நீர்த்துறைக்குச் சென்று, அக்கந்தையைத் தோய்த்து அழுக்கினை நீக்குதற்காகப் பின்னர் உவர்மண் சேர்த்து மிகவும் புழுங்கும்படி வெள்ளாவியில் வைத்து வேறாக எடுத்து அதனைத் தோய்த்திடத் தொடங்கிய அளவில், நண்பகல் கழிந்து, பிற்பகலாய மாலைவேளை அணுகும் காலமுமாயிட, அக்காலத்தே மான் ஏந்திய கையையுடைய இறைவனின் திருவருளால் மழை பொழிந்திடலாயிற்று.

விளக்கவுரை

****

திசைமயங்க வெளியடைத்த
செறிமுகிலின் குழாமிடைந்து
மிசைசொரியும் புனல்தாரை
விழிநுழையா வகைமிடைய
அசைவுடைய மனத்தன்பர்
அறிவுமறந் தருந்தவர்பால்
இசைவுநினைந் தழிந்தினியான்
என்செய்கேன் எனநின்றார். **#1198**

திசைகள் தெரியாதவாறு வெளியினை அடைத் துப் பரந்து எங்கும் செறிந்த மேகங்களின் கூட்டம் நெருங்கி எழுந்து, மேல் பொழியும் மழைத்தாரைகள் கண்பார்வை நுழைய முடியாதபடி நெருங்கிப் பெய்திட, அது கண்டு இரக்கம் உடைய மனத்து அன்பராய திருக்குறிப்புத்தொண்டர் ஏங்கி, அறிவும் மறந்து, அரிய தவத்தினர் பால் தான் சொன்ன உறுதியை நினைந்து, மனம் அழிந்து, அந்தோ! இனியான் என்செய்கேன் எனச் செயலற்று நின்றார்.

விளக்கவுரை

****

ஓவாதே பொழியுமழை
ஒருகால்விட் டொழியுமெனக்
காவாலி திருத்தொண்டர்
தனிநின்றார் விடக்காணார்
மேவார்போல் கங்குல்வர
மெய்குளிரும் விழுத்தவர்பால்
ஆஆ என் குற்றேவல்
அழிந்தவா எனவிழுந்தார். **#1199**

ஓயாது பொழிகின்ற மழை, ஒருகால் பெய்தலை விட்டு ஓயும் என்று, கையில் கபாலத்தையுடைய சிவபெருமானின், திருத்தொண்டர் தனித்து நின்றார். மழைவிடக் காணார். இந்நேரம் மாலையும் நீங்கிப் பகைவர் போல இரவும் வந்திட, அது கண்டு இக்குளிர்க்கு அவர் மேனி தளர்வுறும் நிலையை நினைந்து, அந்தோ! நான் இன்று செய்யும் குற்றேவல் அழிந்து விட்டதே எனக் கலங்கித் துயர் மிகுதியால் மயங்கி வீழ்ந்தார்.

விளக்கவுரை

****

விழுந்தமழை ஒழியாது
மெய்த்தவர்சொல் லியஎல்லை
கழிந்ததுமுன் பொலித்துமனைக்
காற்றேற்க அறிந்திலேன்
செழுந்தவர்தந் திருமேனி
குளிர்காணுந் தீங்கிழைத்த
தொழும்பனேற் கினியிதுவே
செயலென்று துணிந்தெழுவார். **#1200**

அந்தோ! பெய்யும் இம்மழை இனி ஒழியாது. மெய்ம்மைத் தவமுடைய அப்பெரியவர் சொன்ன எல்லையும் கழிந்து விட்டது. இக்கந்தையை முன்னமேயே தோய்த்து என் மனையில் காற்றில் உலவும்படி செய்யாது ஒழிந்தேன். செழுமை மிக்க அத்தவப் பெரியார் திருமேனி குளிரால் தாக்கப்பட்டுத் துன்புறுமாறு தீங்கினைச் செய்த தொண்டனாகிய எனக்கு, அடுத்த செயல் இனி இதுதான், என்று அதைச் செய்திடத் துணிவு கொண்டு எழுந்தார் திருக்குறிப்புத்தொண் டனார்.

விளக்கவுரை

****

கந்தைபுடைத் திடஎற்றுங்

கற்பாறை மிசைத்தலையைச்
சிந்தவெடுத் தெற்றுவன்என்
றணைந்துசெழும் பாறைமிசைத்
தந்தலையைப் புடைத்தெற்ற
அப்பாறை தன்மருங்கு
வந்தெழுந்து பிடித்ததணி
வளைத்தழும்பர் மலர்ச்செங்கை. #1201

கந்தையை ஒலித்தற்காக இருக்கும் கற்பாறையில் தீங்கிழைத்த என் தலை சிதறுண்ண எற்றுவன் என்று கற்பாறையிடத்துச் சென்று அச்செழுமை மிகுந்த கந்தை தோய்த்திடும் பாறையில், தம் தலையை முட்டிய நிலையில், அப்பாறையின் அருகில் வந்து, அழகிய வளையல்களின் தழும்பைக் கொண்டவராகிய சிவபெருமானின் மலர் போலும் சிவந்த கைகள் வந்து எழுந்து, அத்தலையைப் பிடித்துக் கொண்டன.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வானிறைந்த புனல்மழைபோய்
மலர்மழையாய் இடமருங்கு
தேனிறைந்த மலரிதழித்
திருமுடியார் பொருவிடையின்
மேனிறைந்த துணைவியொடும்
வெளிநின்றார் மெய்த்தொண்டர்
தானிறைந்த அன்புருகக்
கைதொழுது தனிநின்றார். #1202

வானில் நிறைந்த நீராய மழை போய், மலராய மழை பொழிந்திடத், திருக்குறிப்புத் தொண்டரின் அருகில், தேன் நிறைந்த மலர்க் கொன்றையை அணிந்த திருமுடியையுடைய பெரு மான், ஆனேற்றின்மீது அருள் நிறைந்த உமையம்மையாருடன் வெளிப்பட்டு முன் நின்றார். மெய்ம்மை தவறாத திருக்குறிப்புத் தொண்டர், தாமும் கண்ணால் கண்டு, உள்ளம் நிறைந்த அன்பு உருக்கிட அம்மையப்பரைக் கைதொழுது கொண்டு தனியே நின்றார்.

விளக்கவுரை

****

முன்னவரை நேர்நோக்கி
முக்கண்ணர் மூவுலகும்
நின்னிலைமை அறிவித்தோம்

நீயும்இனி நீடியநம்
மன்னுலகு பிரியாது
வைகுவாய் எனஅருளி
அந்நிலையே எழுந்தருளி
அணிஏகாம் பரம்அணைந்தார். **#1203**

தம்முன்பு நின்ற அடியவரை முக்கண்களை யுடைய இறைவன், `மூவுலகும் உனது அன்பின் நிலையை அறியுமாறு அறிவித்தோம், நீயும் இனி நீடிய வாழ்வுடைய நம் பேருலகை வந்த டைந்து எம்முடன் பிரியாது இருந்திடுவாய் என அருள் புரிந்து, அந் நிலையே தாம் எழுந்து மறைந்தருளி, அழகுடைய ஏகாம்பரம் என்னும் திருக்கோவிலைச் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

****

சீர்நிலவு திருக்குறிப்புத்
தொண்டர்திருத் தொழில்போற்றிப்
பார்குலவத் தந்தைதாள்
அறஎறிந்தார் பரிசுரைக்கேன்
பேரருளின் மெய்த்தொண்டர்
பித்தனெனப் பிதற்றுதலால்
ஆருலகில் இதனுண்மை
அறிந்துரைக்க இசைந்தெழுவார். **#1204**

சிறப்புமிக்க திருக்குறிப்புத் தொண்டனார் செய் தருளிய திருத்தொண்டினை அடியேன் வணங்கி, உலகம் உய்யத் தந்தையாரின் கால்கள் அறுமாறு வாளால் வெட்டிய சண்டேசுவர நாயனாரின் திறத்தைச் சொல்கின்றேன். பேரருளின் திறங்கொண்ட மெய்யடியார்கள் எம் பெருமானைப் பித்தன் என்றே தாமும் பிதற்று கின்றமையால், அப்பெருமானின் உண்மைத் தன்மையை முற்றும் அறிந்து சொல்ல இசைந்து எழுவார் யாவர்? ஒருவரும் இலர் என்பதாம்.

விளக்கவுரை

பித்தர் என்றவர் ஆளுடைய நம்பியார் ஆவர். அவருக்கு முன்னரும் அப்பெயரால் அழைத்தவர்கள் ஞான சம்பந்தரும் நாவரசரும் ஆவர். `பித்தா பிறைசூடீ` *(தி.1 ப.89 பா.3) (ஞானசம்பந்தர் - திருஎருக்கத்தம்புலியூர்)* `பித்தன் தன்னை` *(தி.6 ப.74 பா.6) (அப்பர் - திருநாரையூர்த் திருத்தாண்டகம்)* என வருவன காண்க. `ஒத்தொவ் வாதன செய்துழல் வாரொரு பித்தர் காணும் பெருமா னடிகளே`*(தி.5 ப.38 பா.5)* எனவரும் அப்பர் அடிகளின் திருவாக்கும் காண்க.

சண்டேசுர நாயனார் புராணம்

பூந்தண் பொன்னி எந்நாளும்
பொய்யா தளிக்கும் புனல்நாட்டு
வாய்ந்த மண்ணித் தென்கரையில்
மன்ன முன்னாள் வரைகிழிய
ஏந்தும் அயில்வேல் நிலைகாட்டி
இமையோர் இகல்வெம் பகைகடக்கும்
சேந்தன் அளித்த திருமறையோர்
மூதூர் செல்வச் சேய்ஞலூர். **#1205**

அழகு பொருந்திய குளிர்ந்த நீர்தரும் காவிரியாறு, என்றும் பொய்யாது நீர் கொடுத்து வரும் நீர்நாடாகிய சோழ நாட்டில், வாய்ப்புடைய மண்ணியாற்றின் தென்கரையில் விளங்கி அமைய, முன்னாளில் கிரவுஞ்சம் என்னும் மலைகிழிய விடுத்திட்ட தமது திருக்கரத்து ஏந்தியருளிய வேலின் நிலையினைக் காண்பித்துப், பின் தேவர்களை வருத்திய வலிய அசுரப் பகையினை நீக்கிய முருகப் பெருமானின் திருவாக்கால் சிறப்பிக்கப் பெற்ற, அந்தணாளர் வாழ்ந் திடும் பழைய ஊர் அருட் செல்வம் நிறைந்த சேய்ஞலூராகும்.

விளக்கவுரை

இறைவனின் ஆணையால் `பதுமன்` முதலானோரை அழிக்க வந்த முருகன், தம் படையுடன் வரத், தென் திசையில் குறுக்கிட்ட தாரகனின் கிரௌஞ்ச மலையை வேற்படையால் அழித்து, மண்ணியாற்றின் தென்கரையில் வந்து தங்கினர். அதுபொழுது இறைவனை வழிபட்ட இடமே அப்பெருமானின் பெயரால் சேய் ஞலூர் என அழைக்கப் பெறுவதாயிற்று. `சேய் அடைந்த சேய்ஞலூர்` *(தி.1 ப.48 பா.11)* எனக் காழிப்பிள்ளையாரும் அருளுவர். கந்தபு ராணத்துக் குமாரபுரிப் படலத்து இந்நகர் இப்பெயரால் அழைத்தற் குரிய காரணமும் குறிக்கப்பட்டிருப்பது அறியத்தக்கது.

செல்லும் மாமுகில் செறிந்திடு காம்பின்
மல்லல் மாநகர் வளந்தனை நோக்கி
எல்லை யில்அறிவன் யாம்உறை தற்கு
நல்ல மாநகர் இதுஎன்று நவின்றான்.
வீரவேள் இது விளம்புத லோடும்
ஆகும் வானவர்கள் அம்மொழி கேளா
ராகலாம் உடைய இந்நகர் சேய்ந
லூரது என்று பெயர் ஓதினர் அன்றே.

எனக் கச்சியப்ப சிவாசாரியார் கூறுவர். *(கந்தபு.குமார- 14,15).*

செம்மை வெண்ணீற் றொருமையினார்
இரண்டு பிறப்பின் சிறப்பினார்
மும்மைத் தழலோம் பியநெறியார்
நான்கு வேதம் முறைபயின்றார்
தம்மை ஐந்து புலனும்பின் செல்லுந்
தகையார் அறுதொழிலின்
மெய்ம்மை யொழுக்கம் ஏழுலகும்
போற்றும் மறையோர் விளங்குவது. **#1206**

செம்பொருளை அடைதற்குக் காரணமாகிய திரு வெண்ணீற்றில் ஒன்றுபட்ட ஒழுக்கம் உடையவராய், இரு பிறப்பின் சிறப்புடையவராய், ஆகவனீயம், காருகபத்தியம், தக்கிணாக்கினியம் என்னும் மூவகைத்தீயையும் வளர்த்து வரும் நன்னெறியுடையவராய், நான்மறைகளையும் முறையாகப் பயின்றவராய், ஐம்புலன்களும் தம் வழிநிற்கும் தகுதியுடையராய்த், தாம் செய்யும் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறு தொழில்களிலும் உண்மை நிறைந்த ஒழுக்கத்தை மேற்கொண்டு ஏழுலகமும் போற்றும் சீலமுடையவராய் வாழும் அந்தணர்கள் வதியும் சிறப்புடையது அவ்வூர்.

விளக்கவுரை

இருபிறப்பு - தாய்தந்தையர் வழிப்பிறந்ததொரு பிறப்பும், முந்நூல் அணிந்தபின் வாய்த்ததொரு பிறப்புமாகிய இருபிறப்பு. `அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்` *(தொல்.புறத்.20)* என வரும் தொல்காப்பியப் பகுதியும் இங்கு நினைவு கூர்தற்கு உரிய தாகும். ஒன்று முதல் ஏழு வகையிலான எண்கள் இடம் பெற அமைந்த அணியழகு கண்டு மகிழ்தற்குரியதாம்.

கோதில் மான்தோல் புரிமுந்நூல்
குலவும் மார்பில் குழைக்குடுமி
ஓது கிடைசூழ் சிறுவர்களும்
உதவும் பெருமை ஆசானும்
போதின் விளங்குந் தாரகையும்
மதியும் போலப் புணர்மடங்கள்
மீது முழங்கு முகிலொதுங்க
வேத ஒலிகள் முழங்குவன. **#1207**

குற்றமிலாத மான் தோலையுடைய முப்புரி நூலை அணிந்து விளங்கிடும் மார்பினையும், மிருதுவான மயிர் செறிந்த குடுமியையும் உடைய, நான்மறைகளைக் கூட்டாகச் சூழ்ந்து ஓதிப் பயில்கின்ற சிறுவர்களும், அந்நான்மறைகளையும் கற்பித்து வரும் சிறந்த ஆசிரியரும், இரவில் விளங்கிடும் விண்மீன்களும், நிறை மதியும் போலப்பொருந்திய

மடங்களில், அவற்றின் மீது வந்து முழுங்குகின்ற முகில்களின் முழக்க ஓசை தாழ்ந்திட அவர்கள் ஓதிடும் மறை ஓசையின் ஒலி மிகுந்து விளங்கும்.

விளக்கவுரை

கிடை - தொகுதி; கிட்டுதல் (சேர்தல், கூடுதல்) என்ப தன் பகுதியாக நின்றது. ஆசிரியன் குறித்த காலத்திற்கு முன் வந்து. குறித்தகால அளவு வரை மாணவர்கள் கிடத்தலின்(இருத்தலின்) கிடை எனப்பட்டது.

யாகம் நிலவும் சாலைதொறும்
மறையோர் ஈந்த அவியுணவின்
பாகம் நுகர வருமாலும்
அயனும் ஊரும் படர்சிறைப்புள்
மாகம் இகந்து வந்திருக்கும்
சேக்கை யெனவும் வானவர்கோன்
நாகம் அணையுங் கந்தெனவும்
நாட்டும் யூப ஈட்டமுள. **#1208**

அந்நகரில் வேள்விகள் நடைபெறும் சாலை தோறும், அங்குள்ள வேதியர் கொடுத்திடும் அவியுணவை உண்டிட வரும் மாலும் அயனும் ஊர்ந்து வரும் படர்ந்த சிறகுடைய கருடனும் அன்னமுமாகிய பறவைகள் விண்ணிடத்திருந்து வந்து தங்குதற்குரிய இருப்பிடம் போலவும், தேவேந்திரனின் ஊர்தியான ஐராவத யானை யைக் கட்டுதற்குரிய கட்டுத்தறி போலவும், நாட்டப்பெற்ற வேள்வித் தூண்கள் உள்ளன.

விளக்கவுரை

படர்சிறைப்புள் - கருடனும் அன்னமும். படரும் சிறகு கள் இரண்டற்கும் உள்ளமையிள் அவ்விரண்டையும் குறிப்பதாயிற்று. புள் - பன்மை குறித்த ஒருமை. நாகம் - யானை; ஐராவதம். கந்து - யானை கட்டும் தறி. யூபம் - வேள்விப் பசுத் தூண். வேள்வித் தூணின் உச்சியில் பறவைகள் தங்கவும், அவற்றின் அடிப்பகுதியில் யானை யைக் கட்டவும் இடமுள்ளன.

தீம்பால் ஒழுகப் பொழுதுதொறும்
ஓம தேனுச் செல்வனவும்
தாம்பா டியசா மங்கணிப்போர்
சமிதை யிடக்கொண் டணைவனவும்
பூம்பா சடைநீர்த் தடம்மூழ்கி
மறையோர் மகளிர் புகுவனவும்
ஆம்பான் மையினில் விளங்குவன

அணிநீள் மறுகு பலவுமுள. #1209

வேள்வியில் இடுதற்குரிய பொருள்களுள் ஒன்றான தித்திப்பாய பால் ஒழுகிடும்படி, காலை மாலையாய பொழுது தோறும் செல்லும் பசுக்கள் செல்வனவும்; தாங்கள் கற்ற மறைப் பகுதிகளை மனமுறக் கணித்திடும் மாணவர்கள், வேள்வி செய்தற்குரிய மரச்சுள்ளிகளை (சமித்துடன்) ஈட்டிக் கொண்டு வருபவரும், மலர்கள் நிறைந்த பசிய இலையுடன் மலிந்த குளத்தில் நீராடிய மறையவர்களின் பெண்கள் தத்தம் இல்லத்திற்கு மீள்பவரும் ஆக, இப்பான்மை நிறைந்த காட்சிகள் பலவும் அந்நகரில் உள்ள அழகிய தெருக்களில் விளங்குவன.

விளக்கவுரை

ஓமதேனு - வேள்விக்குப் பால்தரும் பசுக்கள். கணிப் போர் - தாம் கற்ற மனனப் பகுதிகளைப் பன்முறையும் சொல்லிக் கணக்கிடும் மறைச் சிறுவர்.

வாழ்பொற் பதிமற் றதன்மருங்கு
மண்ணித் திரைகள் வயல்வரம்பின்
தாழ்வில் தரளஞ் சொரிகுலைப்பால்
சமைத்த யாகத் தடஞ்சாலை
சூழ்வைப் பிடங்கள் நெருங்கியுள
தொடங்கு சடங்கு முடித்தேறும்
வேள்வித் தலைவர் பெருந்தேர்கள்
விண்ணோர் ஏறும் விமானங்கள். #1210

பெருவாழ்வுபடைத்த அழகிய பதியாய அந்நகரின் அருகே, மண்ணியாற்றின் அலைகள், வயல்களின் வரம்பின் அடியில் முத்துக்களைச் சொரிய, அக்கரையின் அருகில் வேள்வி புரிதற்குரிய இடமகன்ற சாலைகள் பல நெருங்கி இருப்பன. அவ்வேள்விகள் நிறை வுற, அவற்றைச் செய்து உதவிய வேள்வித் தலைவர்கள் தத்தம் இருப் பிடத்திற்குச் செல்வதற்கான தேர்களும், அவியை ஏற்ற தேவர்கள் தம் உலகிற்குச் செல்வதற்கான விமானங்களும் அங்கு நெருங்கி இருப்பன.

விளக்கவுரை

குலைப்பால் - கரையின் அருகில்.

மடையில் கழுநீர் செழுநீர்சூழ்
வயலில் சாலிக் கதிர்க்கற்றை
புடையில் சுரும்பு மிடைகமுகு
புனலில் பரம்பு பூம்பாளை
அடையில் பயிலுந் தாமரைநீள்
அலரில் துயிலும் கயல்கள்வழி

நடையில் படர்மென் கொடிமௌவல்
நனையில் திகழுஞ் சினைக்காஞ்சி. #1211

வாய்க்கால் வழிவரும் நீர் மடைகளில் செங்கழுநீர் மலர்களும், செழுமை மிக்க நீர் சூழ்ந்த வயலில் விளைந்த செஞ்சாலி நெல்லின் திரள்களும், அவற்றின் அயலே வண்டுகள் நெருங்கி மொய்த்திடும் கமுக மரத்தில் நீரின் செழிப்பால் வளர்ந்த பெரும் பாளைகளும், செழித்த நல்ல இலைகளிடையே மலர்ந்த தாமரையின் நீண்ட பூவின் மீது துயிலும் கயல் மீன்களும், வழி நடைப் பாதைகளில் படர்கின்ற மெல்லிய முல்லைக் கொடிகளும், அரும்புகள் நிறைந்த மெல்லிய கிளைகளையுடைய காஞ்சி மரங்களும் அவ்வூரில் சிறந்து விளங்குவன.

விளக்கவுரை

அடை - இலை; தாமரை இலை.

சென்னி அபயன் குலோத்துங்கச்
சோழன் தில்லைத் திருவெல்லை
பொன்னின் மயமாக் கியவளவர்
போரே றென்றும் புவிகாக்கும்
மன்னர் பெருமான் அநபாயன்
வருந்தொல் மரபின் முடிசூட்டுந்
தன்மை நிலவு பதிஐந்தின்
ஒன்றாய் விளங்குந் தகைத்தவ்வூர். #1212

சோழ மரபில் அபயன் என்றும், குலோத்துங்க சோழன் என்றும் போற்றப்பெற்றவரும், தில்லையில் கூத்தப் பெருமான் வீற்றி ருந்தருளும் பேரவையைப் பொன்னின் மயமாகப் புனைவித்த வரும், இந்நிலவுலகைக் காத்துவரும் போரேறாய மன்னர் மன்னனும் ஆன அநபாயரின் மரபினர் வழிவழியாக முடி சூடற்குப் பொருந்திய ஐந்து பதிகளுள் ஒன்றாய் விளங்குவது இத்திரு நகரமாகும்.

விளக்கவுரை

சோழ அரசர்கள் முடி சூட்டிக் கொள்ளும் பதிகள் ஐந்தாவன; காவிரிப்பூம்பட்டினம், திருவாரூர், உறையூர், சேய்ஞலூர், கருவூர் என்பனவாம்.
இங்குக் குறிக்கப் பெற்ற சோழர் இரண்டாம் குலோத்துங்க சோழராவார் என முன்னரும் கூறப்பட்டது.

பண்ணின் பயனாம் நல்லிசையும்
பாலின் பயனாம் இன்சுவையும்
கண்ணின் பயனாம் பெருகொளியும்
கருத்தின் பயனாம் எழுத்தஞ்சும்

விண்ணின் பயனாம் பொழிமழையும்
வேதப் பயனாம் சைவமும்போல்
மண்ணின் பயனாம் அப்பதியின்
வளத்தின் பெருமை வரம்புடைத்தோ. **#1213**

பண்ணின் பயனாகும் இனிய நல் இசையும், பாலின் பயனாகும் இனிய நற்சுவையும், கண்ணின் பயனாகும் பெருகிய ஒளியும், கருத்தின் பயனாகும் திருவைந்தெழுத்தும், விண்ணின் பயனாகும் பொழிகின்ற பெரு மழையும், நான்மறைகளின் பயனாகும் சீலமுடைய சைவ சமயமும் விளங்குவன போல, இம் மண்ணின் பயனாக விளங்கும் சேய்ஞலூர் என்னும் அத்திருத்தகு பதியின் வளத்தின் பெருமை ஓர் எல்லைக்கு உட்படுத்திச் சொல்லப்படும் தன்மையதோ? அன்று என்பதாம்.

விளக்கவுரை

பண், பால், கண், கருத்து, விண், வேதம் ஆகிய ஆற னுக்கும் உரிய பயன்களைக் கூறி, அவையாவும் அவ்வப் பயன்களால் சிறந்து விளங்குவன போன்று, இம்மண்ணும், இத்திருப்பதியால் சிறந்து விளங்குகின்றது எனக் கூறியிருக்கும் திறம் அறிந்து இன் புறற்குரியதாம்.

நகர் வளங்களுள் இத்திருப்பதிக்குச் சொல்லப்பட்ட வளம் தனித் தன்மை வாய்ந்தது. ஓகாரம் எதிர் மறைக்கண் வந்தது.

பெருமை பிறங்கும் அப்பதியின்
மறையோர் தம்முள் பெருமனைவாழ்
தருமம் நிலவு காசிபகோத்
திரத்துத் தலைமை சால்மரபில்
அருமை மணியும் அளித்ததுவே
நஞ்சும் அளிக்கும் அரவுபோல்
இருமை வினைக்கும் ஒருவடிவாம்
எச்ச தத்தன் உளனானான். **#1214**

இத்தகைய பெருமைமிக்க அப்பதியில் வாழும் மறையவர்களில், சிறப்புடைய இல்லற நெறியில், அறம் நிலவிய காசிப கோத்திரத்தின் தலைமை சான்ற நன்மரபினில், அருமையான இரத் தினத்தையும் தந்து, அதுவே நஞ்சினையும் தரும் பாம்பைப் போல நல்வினை தீவினை எனும் இருவினைகளையும் செய்யும் ஒருவனாக எச்சதத்தன் என்னும் பெயருடைய ஓர் அந்தணன் வாழ்ந்து வந்தான்.

விளக்கவுரை

எச்சம் - யக்ஞம் என்னும் வட சொல் தமிழில் இவ்வாறு திரிந்தது. `தக்கனையும் எச்சனையும்` *(தி.8 ப.12 பா.5)* என வரும் திருவாசகமும்

காண்க. எச்சன் என்னும் பெயர், வேள்வி செய்பவன் என்னும் பொருட்டாதலை அருணைவடிவேலனாரும் அப்பாடல் உரையுள் குறித்துள்ளார். எச்சதத்தன், விசாரசருமரைப் பெற்றெடுத்த தால் நல்வினையையும், இவர் செய்த வழிபாட்டைக் குறைக்க முற்பட்டமையின் தீவினையையும் உடையனாயினான். இவ்வாற்றான் இருமை வினைக்கும் ஒரு வடிவாயினன்.

மற்றை மறையோன் திருமனைவி
வாய்ந்த மரபின் வந்துதித்தாள்
சுற்றம் விரும்பும் இல்வாழ்க்கைத்
தொழிலாள் உலகில் துணைப்புதல்வற்
பெற்று விளங்குந் தவஞ்செய்தாள்
பெறும்பே றெல்லைப் பயன்பெறுவாள்
பற்றை யெறியும் பற்றுவரச்
சார்பா யுள்ள பவித்திரையாம். **#1215**

அம்மறையவனின் திருமனைவிதானும் அவன் மரபிற்கு ஒத்த நன்மரபில் தோன்றியவள். அவள் சுற்றம் தழுவுதலை விரும்புபவளாய், இல்வாழ்க்கையை இனிது நடத்தி வருபவள். உலகில் பெறத்தகும் நற்றுணையாய ஆண் மகவைப் பெற்று, அதனால் சிறப்புறும் தவம் செய்து கொண்டவள். அப்பேற்றால் இனித்தான் பெறத் தகும்பெரும் பேறு ஒன்றும் இன்றாக, முடிந்த பயனைப் பெறும் பேறு பெற்றவள். பற்றுக்கள் அனைத்தையும் அறுக்கின்ற சிவப்பற்று தனக்கு வந்திட, அதன் சார்பு வழி நடந்திடும் தன்மையளாயுள்ள பவித் திரை என்னும் திருப்பெயருடையவள்.

விளக்கவுரை

பவித்திரம் - தூய்மை. பற்றை எறியும் பற்று - சிவ பெருமான்; இப்பெருமானிடத்து அன்பு செலுத்துதலாலேயே பற்றை யறுக்க முடியும். `பற்றுக பற்றற்றான் பற்றினை` *(குறள், 350)* எனவரும் திருவாக்கும் காண்க.

நன்றி புரியும் அவர்தம்பால்
நன்மை மறையின் துறைவிளங்க
என்றும் மறையோர் குலம்பெருக
ஏழு புவனங் களும்உய்ய
மன்றில் நடஞ்செய் பவர்சைவ
வாய்மை வளர மாதவத்தோர்
வென்றி விளங்க வந்துதயம்
செய்தார் விசார சருமனார். **#1216**

நன்மைகள் பலவற்றுள்ளும் தலையாய நன்மை யான இறையன்பு

பூண்டொழுகும் அவர்கள் பால், நன்மையை விளை விக்கும் நான்மறைகளின் துறைகள் பலவும் விளங்கிடவும், அந்தணர் களின் அரிய ஒழுக்கம் இவ்வுலகில் பெருகிடவும், ஏழுலகங்களும் உய்ந்திடவும், பொற் பொதுவில் நடனம் புரிபவரான கூத்தப் பெருமா னையே உறுதிப் பொருளாகக் கொண்டு வணங்கிடும் சைவ மெய்ந் நெறி வளர்ந்தோங்கவும், மாதவத்தினர் புரியும் அரிய செயல்கள் பலவும் வெற்றியுடன் விளங்கிடவும் தோன்றினார் ஒருவர்; அவர் விசாரசருமனார் என்னும் பெயரினர் ஆவர்.

விளக்கவுரை

விசாரம் - இறை, உயிர், தளை பற்றிய ஆய்வு. சரித்தல் - தங்குதல். அதாவது உயிர் கடைத் தேறுதற்குரிய சிந்தனையையே கொண்டிருத்தல் இவர் வரலாற்றால் அறியப்படும். சருமர் - மறைய வர்கள் கொளற்குரிய மரபுப் பெயர்.

ஐந்து வருடம் அவர்க்கணைய
அங்கம் ஆறும் உடன்நிறைந்த
சந்த மறைகள் உட்படமுன்
தலைவர் மொழிந்த ஆகமங்கள்
முந்தை யறிவின் தொடர்ச்சியினால்
முகைக்கும் மலரின் வாசம்போல்
சிந்தை மலர உடன்மலரும்
செவ்வி யுணர்வு சிறந்ததால். #1217

ஐந்து வயது நிரம்பிய அளவில், அவருக்கு அங்கங்கள் ஆறுடன் நிறைந்த சிறப்புடைய நான்மறைகள் முதலாக, அனைத்துயிர்களுக்கும் தலைவராய சிவபெருமான் அருளிய ஆக மங்கள் யாவும், முன்னைய பிறவியில் பெற்ற அறிவின் தொடர்ச்சி யால் முகையவிழும் மலரினின்றும் வெளிவரும் நறுமணம் போல, அவர்தம் சிந்தை மலர, உடன் இவைகளும் மலருமாறு அமைந்த உணர்வு இவர்பால் சிறந்து விளங்கியது.

விளக்கவுரை

`ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து` *(குறள், 398)* என்பதால், முன்னைப் பிறப்பில் பெற்ற அறிவின் தெளிவால், இப்பிறப்பில் ஓதாதுணர்ந்திடும் பேரறிவு விளங்கப் பெறுவதாயிற்று. சிந்தை - அகக் கருவிகள் நான்கனுள் ஒன்று. அது மலரவே சிவச்சார்படைதற்காம் பக்குவமும் உளதாயிற்று.

நிகழும் முறைமை ஆண்டேழும்
நிரம்பும் பருவம் வந்தெய்தப்

புகழும் பெருமை உபநயனப்
பொருவில் சடங்கு முடித்தறிவின்
இகழு நெறிய அல்லாத
எல்லாம் இயைந்த வெனினும்தம்
திகழு மரபின் ஓதுவிக்கும்
செய்கை பயந்தார் செய்வித்தார். **#1218**

இவ்வாறு வளர்ந்து வரும் முறைமையில் ஏழு ஆண்டுகள் நிரம்பிட, புகழும் பெருமையும் அமைந்து முந்நூல் அணியும் கலியாணமும் நிகழ்ந்திட, இவரது அறிவிலே இகழத்தக்க தீங்காய நெறிகள் அல்லாத வெல்லாம் இவருக்குத் தாமாகவே விளக்கமுறும் சிறப்பு அடையப் பெற்றிருந்தும், தங்கள் குலமுறைக்கு ஏற்ப விளங்கும் மரபால், மறைகளை ஓதுவிக்கும் செய்கையையும் செய்வித்தார்கள்.

விளக்கவுரை

ஐந்துவயதில் கலைபயிலத் தொடங்குதலும், ஏழுவயதில் முந்நூல் அணியும் கலியாணம் செய்வித்தலும் மரபாதல் இவர் வரலாற்றாலறியலாம்.

குலவு மறையும் பலகலையும்
கொளுத்து வதன்முன் கொண்டமைந்த
நிலவும் உணர்வின் திறங்கண்டு
நிறுவும் மறையோர் அதிசயித்தார்
அலகில் கலையின் பொருட்கெல்லை
ஆடுங் கழலே எனக்கொண்ட
செலவு மிகுந்த சிந்தையினில்
தெளிந்தார் சிறிய பெருந்தகையார். **#1219**

அறிவு மேலிடுதற்கு ஏதுவான மறைகளையும், பல கலைகளையும் உணர, ஆசிரியர்கள் ஓதிக் கொடுப்பதன் முன்னமேயே அவற்றின் நிலையை விசாரசருமர் உளம் கொண்டு, அதனால் விளக்கமுற்று நிலவும் அவர்தம் ஆற்றலின் திறமை கண்டு, அக்கலைகளை அவர்பால் ஓதி ஒழுக வைத்திடும் ஆசிரியர்கள் வியப் புற்றனர். இவ்வாறு பலகலைகளையும் தேர்ந்து, அளவில்லாத கலைகளின் பொருள்களுக்கெல்லாம் எல்லையாவது, ஆடுகின்ற கூத்தப் பெருமானின் சேவடிகளேயாகும் எனக் கொண்ட உண்மை யைச், செயற்பாடு மிக்க தம் சிந்தையில் தெளிந்தார் சிறிய பெருந் தகையாராய விசாரசருமர் என்பார்.

விளக்கவுரை

கொளுத்துதல் - கொள்ளச் செய்தல். அறிவுறுத்துதல். கற்றதன் பயன்

வாலறிவன் நற்றாள் தொழுதலே யாதலின், `அலகில் கலையின் பொருட்கெல்லை` என்றார். வடிவால் சிறுவராய் இருந்தும் அறிவாலும் பண்பாலும் பெரியராய் இருத்தலின் சிறிய பெருந்தகை யார் என அழைக்கப் பெற்றார். ஞானசம்பந்தரும் இப்பெயரால் அழைக்கப் பெற்றிருத்தல் அவர் வரலாற்றால் அறியலாம். *(தி.12 பு.28 பா.73)*

நடமே புரியும் சேவடியார் நம்மை
உடையார் எனும்மெய்ம்மை
உடனே தோன்றும் உணர்வின்கண்
ஒழியா தூறும் வழியன்பின்
கடனே இயல்பாய் முயற்றிவருங்
காதல் மேன்மேல் எழுங்கருத்தின்
திடநேர் நிற்குஞ் செம்மலார்
திகழு நாளில் ஆங்கொருநாள். **#1220**

நள்ளிருளிலும் நட்டம் புரியும் திருவடிகளை உடையவரே நம்மை அடிமையாக உடையார் என்கின்ற உண்மை, எண்ணும் தொறும் தோன்றுகின்ற உணர்வின் கண்ணே, ஒழிவின்றி ஊறிவரும் வழிவழியடிமையாய அன்பின் பெருக்கத்தால், இயல் பாகவே எழும் காதல் மேன்மேலும் எழும் நிலையில், நாளும் அசைவின்றி அச்செம்பொருளிலேயே தலைப்பட்டு நிற்கும் விசாரசருமர், ஒரு நாள்.

விளக்கவுரை

****

ஓது கிடையின் உடன்போவார்
ஊர்ஆன் நிரையின் உடன்புக்க
போது மற்றங் கொருபுனிற்றா
போற்றும் அவன்மேன் மருப்போச்ச
யாது மொன்றுங் கூசாதே
யெடுத்த கோல்கொண் டவன்புடைப்ப
மீது சென்று மிகும்பரிவால்
வெகுண்டு விலக்கி மெய்யுணர்ந்து. **#1221**

மறைகளை ஓதிவரும் மாணவர் கூட்டத்துடன் செல்பவர், ஊரவரின் பசுக் கூட்டத்துடன் சென்ற பொழுது, ஈன்றணிமையையுடைய ஒரு பசு, தன்னை மேய்க்கும் இடையன்மேல் தன் கொம்பை அசைத்துச் செல்ல, அவ்வளவில் அவ்விடையன், யாதும் கூச்சம் இல்லாதவனாய்த், தான் கொண்டிருந்த தடி கொண்டு அப் பசுவை நைய அடித்திட, அதுகண்ட விசாரசருமர், அவனிடம் சென்று அப்பசுமேல் கொண்ட மிகுந்த அன்பால் இடையனைச் சினந்து, அவன் அப்பசுவை மேலும் அடிக்காதவாறு விலக்கி, தாம் உண்மையை உணர்ந்தவராய்.

விளக்கவுரை

புனிற்று ஆ - ஈன்ற அணிமையையுடைய பசு. அதனால் தன் கன்றைப் பிரிய மனம் இல்லாமையால் கொம்பையசைத்து முட்டச் சென்றது போலும் எனக் கருதுவர் சிவக்கவிமணியார் (பெரிய.பு. உரை). அவ்வளவிலேயே அவன் அப்பசுவை நையப் புடைத்தனன். தனக்குப் பெரிய ஊறு செய்யாத நிலையில், ஈன்ற அணிமையை உடைய பசுவென்றும் கருதாது நையப்புடைத்தனன் ஆதலின், `யாதும் ஒன்றும் கூசாதே` என்றார்.

பாவுங் கலைகள் ஆகமநூல்
பரப்பின் தொகுதிப் பான்மையினால்
மேவும் பெருமை அருமறைகள்
மூல மாக விளங்குலகில்
யாவுந் தெளிந்த பொருளின்நிலையே
எய்த உணர்ந்த உள்ளத்தால்
ஆவின் பெருமை உள்ளபடி
அறிந்தார் ஆயற் கருள்செய்வார். **#1222**

பரந்த கலைகளாலும், ஆகமநூலின் விரிந்த பாங்கினாலும், பொருந்திய பெருமையுடைய அரிய மறைகளின் வழி உலகினில் யாவற்றையும் தெளிந்த உண்மை நிலையாலும், பசுவின் பெருமையை உள்ளபடி அறிந்த விசாரசருமர், ஆயனுக்கு அருளு வாராய்.

விளக்கவுரை

தங்கும் அகில யோனிகட்கும்
மேலாம் பெருமைத் தகைமையன
பொங்கு புனித தீர்த்தங்கள்
எல்லா மென்றும் பொருந்துவன
துங்க அமரர் திருமுனிவர்
கணங்கள் சூழ்ந்து பிரியாத
அங்கம் அனைத்துந் தாமுடைய
அல்ல வோநல் ஆனினங்கள்.

தங்கும் அகில யோனிகட்கும்
மேலாம் பெருமைத் தகைமையன
பொங்கு புனித தீர்த்தங்கள்
எல்லா மென்றும் பொருந்துவன
துங்க அமரர் திருமுனிவர்
கணங்கள் சூழ்ந்து பிரியாத
அங்கம் அனைத்துந் தாமுடைய

அல்ல வோநல் ஆனினங்கள். #1223
உலகில் விளங்கும் பிறப்புக்களுள் எவ்வகையினவாய உயிர்கட்கும் மேலான பெருமை உடையன; அருள் மிகுந்திடும் புனிதமான நீர்நிலைகள் எல்லாம் பொருந்தி இருக்கப் பெறுவன; உயர்ந்த தேவர்களும் திருமுனிவர்களும், சிவகணங்களும் சூழ்ந்து பிரியாதிருக்கின்ற உறுப்புக்கள் அனைத்தையும் உடையனவல்லவோ இப் பசுக்கள்!

விளக்கவுரை

பசுக்களின் உறுப்புக்களில் தேவர்களும் முனிவர்களும் தங்கியிருப்பர் என்றல் மரபு. பசுவின் உறுப்புக்களில் தலையில் - சிவபெருமான், நடுநெற்றியில் - உமையம்மையார், கொம்பின் அடியில் - மாலும் அயனும், கொம்பின் நுனியில் - கோதாவரி முதலிய தீர்த்தங்கள், மூக்கின் நுனியில் - முருகன், உள்மூக்கில் - திக்குப் பாலகர்கள், செவிகளில் - அசுவினி தேவர்கள், கண்களில் - ஞாயிறும், திங்களும், பற்களில் - காற்றின் தலைவன், நாவில் - வருணன், இருதயத்தில் - கலைமகள், கபோலத்தில் - இயமனும் இயக்கர்களும், உதட்டில் - காலை நண்பகல் மாலை எனும் மூன்று காலத்திற்குமுரிய அதிதெய்வங்கள், கழுத்தில் - இந்திரன், இடையில் - அருக்கதேவன், நெஞ்சில்- சாத்தியர், நான்கு கால்களில் - அநில வாயு, முழங்காலில் - மருத்துக்கள், குளம்பில் - நாகலோகத்தர், குளம்பின் நடுவில் - கந்தருவர், மேற்குளம்பில் - தேவமாதர், முதுகில் - உருத்திரர்கள், சந்துகளில் - வசுக்கள் எண்மர், அரையில் - பிதிர் தேவர்கள், பக்கத்தில் - ஏழு கன்னியர்கள், குறியில் - திருமகள், அடிவாலில் - தேவர்கள், வால் மயிரில் - கதிரவனின் ஒளி, நீரில் - வான கங்கை, சாணத்தில் - யமுனை, வயிற்றில் - நிலமகள், மடியில் - ஏழுகடல்கள், அடிவயிற்றில் - காருக பத்தியம், இதயத்தில் - ஆகவனியம், முகத்தில் - தென்திசைத் தீ, எலும்பிலும் கருப்பையில் ஊறும் நீரிலும் - வேள்விகள், அனைத்து உறுப்புக்கள் - கற்புடைய மாதர்கள், இருப்பர் என்றல் நூல் துணிபு.

ஆய சிறப்பி னால்பெற்ற
அன்றே மன்றுள் நடம்புரியும்
நாய னார்க்கு வளர்மதியும்
நதியும் நகுவெண் டலைத்தொடையும்
மேய வேணித் திருமுடிமேல்
விரும்பி யாடி அருளுதற்குத்
தூய திருமஞ் சனம்ஐந்தும்
அளிக்கும் உரிமைச் சுரபிகள்தாம். #1224

அத்தகைய சிறப்பினால் கன்றினை ஈன்ற அன்றே, பொற்சபையில்

நடனம் புரியும் பெருமானுக்கு, வளரும் பிறையும் கங்கையும் நகு வெண்தலை மாலையும் பொருந்திய சடையின் திரு முடிமேல், அவர் விரும்பித் திருமுழுக்காடியருளுவதற்கு உரியவான தூயதான பால், தயிர், நெய், சாணம், நீர் என்னும் ஐந்தினையும் கொடுத்திடும் உரிமையுடைய பசுக்கள் அல்லவோ இவை?

விளக்கவுரை

****

சீலம் உடைய கோக்குலங்கள்
சிறக்குந் தகைமைத் தேவருடன்
கால முழுதும் உலகனைத்தும்
காக்கும் முதற்கா ரணராகும்
நீல கண்டர் செய்யசடை
நிருத்தர் சாத்து நீறுதரும்
மூலம் அவதா ரஞ்செய்யும்
மூர்த்தம் என்றால் முடிவென்னோ. **#1225**

சீலம் உடைய இப்பசுக் குலங்கள், சிறப்புமிக்க தேவர்களுடன் காலம் முழுமையும் உலகம் அனைத்தையும் காக்கின்ற முழுமுதற் காரணராகும் நீலகண்டமும், சிவந்த சடையும் உடைய கூத்தப்பெருமானார் தம் திருமேனியில் விளங்கிடும் திருவெண்ணீறு தோன்றுவதற்கு மூலமாய மலம் (கோமயம்) தோன்றுவதற்கு இடனாய் இருப்பவை என்றால், இவற்றினும் சிறந்த புண்ணியப் பேறு யாதுளது?

விளக்கவுரை

****

உள்ளுந் தகைமை இனிப்பிறவே
றுளவே உழைமான் மறிக்கன்று
துள்ளுங் கரத்தார் அணிபணியின்
சுடர்சூழ் மணிகள் சுரநதிநீர்
தெள்ளுஞ் சடையார் தேவர்கள்தம்
பிராட்டி யுடனே சேரமிசைக்
கொள்ளுஞ் சினமால் விடைத்தேவர்
குலமன் றோஇச் சுரபிகுலம். **#1226**

சிறிய பெண்மானின் கன்று துள்ளிடும் திருக் கைகளையுடையவரும், அழகிய பாம்பின் மணிகளைக் கங்கை நீரானது எற்றிட விளங்கிடும் சடையையுடையவருமாய சிவ பெருமான், தேவர்களுக்குத் தலைவியாய பெருமாட்டியுடனே எழுந்தருளும் ஆனேற்றின் குலம் அன்றோ இப்பசுக்கள் குலம்? இவ்வகையில் எண்ணத்தக்க சிறப்புகள் வேறு

பிறவும் உளவோ? இல்லை.

விளக்கவுரை

ஆனேற்றைச் சூழ்ந்துள்ள தெய்வப் பசுக்கள் ஐந்து என்றும், அவை நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்பன என்றும் கூறுப. இவற்றினிடமாகவே உலகில் பசுக்குலம் பெருகிற்று என்றும், இவ்வைந்து பசுக்களும் பாற்கடலில் தோன்றியன என்றும் கூறுப.

என்றின் னனவே பலவும்நினைந்
திதத்தின் வழியே மேய்த்திந்தக்
கன்று பயில்ஆன் நிரைகாக்கும்
இதன்மே லில்லை கடனிதுவே
மன்றுள் ஆடுஞ் சேவடிகள்
வழுத்து நெறியா வதும்என்று
நின்ற ஆயன் தனைநோக்கி
நிரைமேய்ப் பொழிக நீயென்பார். **#1227**

என்று இனைய பல தன்மைகளையும் விசார சருமர் நினைந்தருளி, இப்பசுக்களை இவைகட்கு இன்பமான வழியில் நின்று மேய்த்து, கன்றுகளுடன் கூடிய பசுக்களின் கூட்டங்களைக் காத்திடும் செயலின் மேலாக இனிச் சிறந்ததொரு கடமையும் எனக்கில்லை என்றும், இச்செயல்தான் தில்லையில் ஆடும் பெருமா னின் சேவடிகளைப் போற்றும் திருத்தொண்டாகும் என்றும் கூறி, அவ்விடம் நின்ற இடையனை நோக்கி, `இன்றுடன் நீ இப்பசுவின் நிரைகளை மேய்த்திடும் தொழிலை ஒழித்திடுவாய்` என்று கூறி.

விளக்கவுரை

****

யானே இனியிந் நிரைமேய்ப்பன்
என்றார் அஞ்சி இடைமகனும்
தானேர் இறைஞ்சி விட்டகன்றான்
தாமும் மறையோர் இசைவினால்
ஆனே நெருங்கும் பேராயம்
அளிப்பா ராகிப் பைங்கூழ்க்கு
வானே யென்ன நிரைகாக்க
வந்தார் தெய்வ மறைச்சிறுவர். **#1228**

`யானே இனி இப்பசுக்களின் கூட்டத்தினை மேய்ப்பேன்` எனக் கூறினார் விசாரசருமர். அது கேட்டு அஞ்சிய இடையனும் அவரை வணங்கி, அப்பசு மேய்த்தலை விட்டு நீங்கி னான். இப்பால், மறைவழி நிற்கும் அச்சிறுவராய விசாரசருமர் தாமும், அங்குள்ள மறையவரின்

இசைவு பெற்றுப், பசுக்கள் நெருங்க இருக்கும் அப்பெருங் கூட்டத்தினை மேய்த்திடுவாராகி, பசிய பயிர் களுக்கு வானின் மழை, இன்பம் பயக்குமதுபோல, அப்பசுக்களின் நிரைகளைக் காத்திட முற்பட்டார்;

விளக்கவுரை

இவ்வொன்பது பாடல்களும் ஒருமுடிபின.

கோலும் கயிறும் கொண்டுகுழைக்
குடுமி அலையக் குலவுமான்
தோலும் நூலுஞ் சிறுமார்பில்
துவள அரைக்கோ வணஞ்சுடரப்
பாலும் பயனும் பெருகவரும்
பசுக்கள் மேய்க்கும் பான்மையினால்
சாலும் புல்லின் அவைவேண்டுந்
தனையும் மிசையுந் தலைச்சென்று. **#1229**

திருக்கையில் கோலும் கயிறும் கொண்டு, சிறிய மிருதுவான குடுமி அசைந்திட, மான் தோலும் நூலும் சிறிய மார்பிலே துவண்டு அழகு செய்ய, திருவரையில் கோவண ஆடை ஒளி விளங்கிக் காண, பாலும் கன்றுகளும் பெருக வருகின்ற பசுக்களை மேய்த்திடும் தன்மையில், நல்ல புல்லில் அப்பசுக்கள் வேண்டும் அளவும் மேய்ந் திடற்கு மேற்சென்று,

விளக்கவுரை

****

பதவு காலங் களின்மேய்த்தும்
பறித்தும் அளித்தும் பரிவகற்றி
இதமுண் துறையுள் நற்றண்ணீர்
ஊட்டி அச்சம் எதிர்நீக்கி
அதர்நல் லனமுன் செலநீழல்
அமர்வித் தமுத மதுரப்பால்
உதவும் பொழுது பிழையாமல்
உடையோர் இல்லந் தொறுமுய்த்தார். **#1230**

புல் மிகுதியாயுள்ள காலங்களில் அவ்விடத்தில் மேய்த்தும், புல் குறைவாயுள்ள காலங்களில் தம் திருக்கையால் பறித்து உண்ணச் செய்தும், இதமாக அப் பசுக்கள் தண்ணீர் பருகிடும் நல்ல நீர்த்துறைகளில் தண்ணீர் பருகச் செய்தும், அப்பசுக்களுக்குப் பிற விலங்குகளால் ஏற்படும் துயரனைத்தையும் வருமுன் காத்தும், நல்ல நீழலில் அவைகளை இளைப்பாறுமாறு செய்தும், அமுதமாய இனிய

பால் உதவும் காலங்களில் தவறாமல் அவற்றை உடைமையாகக் கொண்டிருக்கும் மறையவர்களின் இல்லங்களில் கொண்டு சென்று விடுத்தும், இனிய அச்செயலைச் செய்து வந்தார் விசாரசருமர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மண்ணிக் கரையின் வளர்புறவின்
மாடும் படுகர் மருங்கினிலும்
தண்ணித் திலநீர் மருதத்தண்
டலைசூழ் குலையின் சார்பினிலும்
எண்ணிற் பெருகு நிரைமேய்த்துச்
சமிதை யுடன்மேல் எரிகொண்டு
நண்ணிக் கங்குல் முன்புகுதும்
நன்னாள் பலவாம் அந்நாளில். **#1231**

மண்ணியாற்றங்கரையில் புல் செழித்து வளரும் முல்லை நிலச்சோலையின் பக்கங்களிலும், ஆற்றின் பள்ளத்தாக்கு களின் வளர்ந்த புல் உள்ள இடங்களிலும், குளிர்ந்த முத்துகளையு டைய மருத நிலத்தின் சோலைகள் சூழ்ந்த புல்லுள்ள வெளிகளிலும், எண்ணிக்கையில் பெருகி வருகின்ற பசு நிரைகளை மேய்த்து, அக் கால இடைவெளியில் சமித்துக்களுடன் தீக்கடை கோலும் தேடிச் சுமந்து கொண்டு, இரவு வரும் முன்னம், பசுக்களையும் மீளக் கொண்டு, வந்து அவைகளை இல்லந்தோறும் விடுத்து வரும் நல்ல நாள்கள் பலவாகும். அந்நாள்களில்.

விளக்கவுரை

மரச்சுள்ளிகள் சமிதை நாளும் மனையில் செய்யப் படும் வேள்விக்குரிய சிறுவிறகுகள் இவற்றையும், தீக்கடைதற்குரிய மரக்கோலையும் தேடிக்கொண்டு வருதல் இப்பருவத்தார்க்கு (பிரம சாரியர்) உரிய கடமையாம்.

ஆய நிரையின் குலமெல்லாம்
அழகின் விளங்கி மிகப்பல்கி
மேய இனிய புல்லுணவும்
விரும்பு புனலும் ஆர்தலினால்
ஏய மனங்கொள் பெருமகிழ்ச்சி
எய்த இரவும் நண்பகலும்
தூய தீம்பால் மடிபெருகிச்
சொரிய முலைகள் சுரந்தனவால். **#1232**

இவ்வாறு விசாரசருமர் அன்பும் ஆர்வமும் கொண்டு மேய்த்து வரலால்,

அப்பசுக்களின் குலம் யாவும் அழகால் விளங்கி, புல்லின் உணவும் தாம் விரும்பிடும் நீரும் நிறைய உண்டு வரும் காரணத்தினால் எய்திய பெருமகிழ்ச்சிமிக்கு, இரவும் நண்பக லும், தூய தித்திப்பான பால் தம் மடியிற் பெருகிச் சொரியுமாறு அவற்றின் காம்புகள் பால் சுரந்தன.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பூணுந் தொழில்வேள் விச்சடங்கு
புரிய ஓம தேனுக்கள்
காணும் பொலிவில் முன்னையினும்
அனேக மடங்கு கறப்பனவாய்ப்
பேணுந் தகுதி அன்பால்இப்
பிரம சாரி மேய்த்ததற்பின்
மாணுந் திறத்த வானவென
மறையோர் எல்லாம் மனமகிழ்ந்தார். **#1233**

மறையவர்கள் தாம் மேற்கொண்டிடும் தொழிலாய வேள்விச் சடங்குகள் புரிந்திடப் பால்தரும் இந்தப் பசுக்கள், காண்டற் கினியனவாய், முன்னையினும் பன்மடங்குபால் கறப்பனவாக, இப் பசுக்களைத் தக்கவாறு பேணி வளர்த்திடும் அன்புடைய இப்பிரமசாரி, மேய்க்க முற்பட்டபின்பே, மிகவும் நற்றிறத்தவாயின எனக்கூறி, அம் மறையவர்கள் அனைவரும் மனம் மகிழ்ந்தனர்.

விளக்கவுரை

பூணும் தொழில் - தம்மரபுரிமையாகப் பேணிவரும் தொழில்.

அனைத்துத் திறத்தும் ஆனினங்கள்
அணைந்த மகிழ்ச்சி அளவின்றி
மனைக்கண் கன்று பிரிந்தாலும்
மருவுஞ் சிறிய மறைக்கன்று
தனைக்கண் டருகு சார்ந்துருகித்
தாயாந் தன்மை நிலையினவாய்க்
கனைத்துச் சுரந்து முலைக்கண்கள்
கறவா மேபால் பொழிந்தனவால். **#1234**

இவ்வாறாக எவ்வகையிலும் இப்பசுவினங்கள் விசாரசருமர் மேய்க்கத் தொடங்கிய பின் கொண்ட மகிழ்ச்சி இவ் வளவு என அளவின்றிப் பெருகுவதால், அவர்பால் அன்பூறி, தமது மனையிடத்துள்ள கன்றை விட்டுப் பிரிந்தாலும் தம்மை அணையும் சிறிய மறைக் கன்றாய விசாரசருமரைக் கண்டு, அருகு சென்று உருகி, அவருக்குத் தாயாம் தன்மையினை உடைய நிலையினவாய், கனைத்து மடிசுரந்து

முலைக்கண்களைக் கறவாமே தாமாகப் பால் சொரிந்தன.

விளக்கவுரை

மனைக்கட் கன்றை மறந்தாலும், மறைக்கன்றினை மற வாமே பால் சொரிந்தன எனக்கூறும் நயப்பாடு நனிமகிழ்வு தருகிறது.

தம்மை அணைந்த ஆன்முலைப்பால்
தாமே பொழியக் கண்டுவந்து
செம்மை நெறியே உறுமனத்தில்
திருமஞ் சனமாங் குறிப்புணர்ந்தே
எம்மை உடைய வள்ளலார்
எய்த நினைந்து தெளிந்ததனில்
மெய்ம்மைச் சிவனார் பூசனையை
விரும்பும் வேட்கை விளைந்தெழலும். **#1235**

தம்மை அணைந்த பசுக்கள் பாலைத் தாமே பொழிந்திடக் கண்டு, விசாரசருமர் உவந்து, செம்பொருளாய சிவ பெருமான் வழியே உற்ற தமது மனத்தில், இப்பால் எம்பெருமாற்குத் திருமுழுக்கிற்குத் தகும் என்னும் குறிப்பை உணர்ந்து, எம்மை உடைய வள்ளலார் அதன் பயனைத்தாம் அடைந்திட நினைந்து, தெளிந்து, அத னால் என்றும் உண்மைப் பொருளாய சிவபெருமானாரின் பூசனையை விரும்பிடும் வேட்கை உள்ளத்தில் தோன்றி எழலும்.

விளக்கவுரை

பசுக்கள் பாலினைத் தாமே பொழியக் கண்ட சிறிய பெருந்தகையார், அஃது இறைவற்குத் திருமஞ்சனமாகும் என உளங் கொண்டதும் திருவருள் குறிப்பினாலேயாகும். ஆதலின் அச்செயல் தானும், அவர் செயல் அன்று, திருவருட்செயலே ஆகும் என்பது அறியத்தக்கது.

அங்கண் முன்னை அர்ச்சனையின்
அளவின் தொடர்ச்சி விளையாட்டாப்
பொங்கும் அன்பால் மண்ணிமணற்
புளினக் குறையில் ஆத்தியின்கீழ்ச்
செங்கண் விடையார் திருமேனி
மணலால் ஆக்கிச் சிவாலயமும்
துங்க நீடு கோபுரமுஞ் சுற்றா
லயமும் வகுத்தமைத்தார். **#1236**

அங்கு முன்னைப் பிறவிகளில் தாம் புரிந்து வரும் வழிபாட்டின் தொடர்ச்சியால், விளையாட்டாக எழுந்து பொங்கிடும் அன்பால், மண்ணியாற்றின் கரையில் மணல் குவிந்து பரந்து இருக்கும் இடத்தில் நின்ற ஓர் ஆத்தி மரத்தின் கீழ்ச், சிவந்த கண்களையுடைய ஆனேற்றின்

மீது இவர்ந்தருளும் எம்பிரானாகிய சிவபெருமானின் திருமேனியை மணலால் சமைத்துத், திருக்கோயிலும், உயர்ந்த கோபுரமும், திருச்சுற்றில் அமைத்தற்குரிய கடவுளர்க்கு வேண்டிய திருக்கோயில்களுமாக வகுத்து அமைத்தார்.

விளக்கவுரை

மணலைக்குவித்து இறைவன் எனக் கருதி வழிபடல், சிறுவர்கள் விளையாட்டாகச் செய்யும் செயலாகும். அவ்வகையில் வைத்து எண்ணற்குரியது போலத் தெரியினும், ஈது முன்னைத் தொடர்ச்சியால் எழுந்த அன்பேயாகும் என்பார், `விளையாட்டாகப் பொங்கும் அன்பால்` என்றார்.

இனி இறைவன் பால் அன்பு செலுத்துதல் பிறர்க்கெல்லாம் அரிதாக, இவரளவில் மிக எளிதாகத் தோன்றியது மட்டுமன்று; பொங்கியது மிக எளிதாயிற்றென்பார் `விளையாட்டாப் பொங்கும் அன்பு` என்றார் எனினும் ஆம். விளையாட்டு எளிதாதல் என்னும் பொருள்படுதல், `காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி`*(தி.8 ப.7 பா.12)* என்பதாலும் அறிக. இங்குக் குறிக்கப்படும் ஆத்திமரம் திருவாய்ப்பாடிக் கோயிலினுள் தென்மேற்கில் உள்ளது.

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஆத்தி மலரும் செழுந்தளிரும்
முதலா அருகு வளர்புறவில்
பூத்த மலர்கள் தாந்தெரிந்து
புனிதர் சடிலத் திருமுடிமேல்
சாத்த லாகுந் திருப்பள்ளித்
தாமம் பலவுந் தாங்கொய்து
கோத்த இலைப்பூங் கூடையினில்
கொணர்ந்து மணந்தங் கிடவைத்தார். **#1237**

நல்ல ஆத்தி மலரும் செழுமையான தளிரும் முதலாக அருகில் வளர்ந்துள்ள சோலையில் பூத்த மலர்களை நன்குடையனவாய்த் தெரிந்து, தூய கங்கையை அணிந்த சிவ பெருமானின் திருமுடிமேல் சாத்துதற்கு ஏற்புடைத்தாகும் மலர்கள் பலவற்றையும் கொய்து, தாம் முன்பே கோத்து எடுத்துச் சென்ற இலைகளால் ஆய பூக்கூடையில் இட்டுக் கொண்டு வந்து, அவை மணம் தங்கிடும்படி காற்றுப்படாது சேமித்து வைத்தார்.

விளக்கவுரை

****

நல்ல நவகும் பங்கள்பெற

நாடிக் கொண்டு நாணற்பூங்
கொல்லை இடத்துங் குறைமறைவும்
மேவுங் கோக்கள் உடன்கூட
ஒல்லை யணைந்து பாலாக்கள்
ஒன்றுக் கொருகா லாகவெதிர்
செல்ல அவையுங் கனைத்துமுலை
தீண்டச் செழும்பால் பொழிந்தனவால். **#1238**

பின்னர் நல்ல ஒன்பது கும்பங்கள் பெறுதற்கு நாட்டம் கொண்டு அதற்கென ஒன்பது குடங்களை எடுத்துச் சென்று, நல்ல நாணல் புல் வளர்ந்துள்ள பூஞ்சோலையிடத்தும் ஆற்றிடைப் பள்ளத்தில் புல்லின் மறைவிலும் மேயநின்ற பசுக்கள் உடன்வந்து கூடிட, விரைவில் அவற்றை அணைந்து, ஒரு பசுவுக்கு ஒரு முலைக் காம்பில் பால் பெறுவாராக எதிர் செல்ல, அவைகளும் கனைத்து இவர் முலை தீண்டலும் செழுமையான பாலைச் சொரிந்தன.

விளக்கவுரை

ஒரு பசுவிற்கு ஒரு முலைக்காம்பில் மட்டும் பால் பெறுவாராகச் சென்றார் எனவே, இச்செயல் அப்பசுவை உடையார்க் கும் கன்றிற்கும் பால் குறைதற்கு ஏதுவாகாமை அறியலாம். அன்றி யும், இச்செயல் திருவருட்குறிப்பினதாய் நிகழ்தலின் மனையிலுள் ளார்க்கு மேலும் பால் பெருகவும் காரணமாயிற்று.

கொண்டு மடுத்த குடம்நிறையக்
கொணர்ந்து விரும்புங் கொள்கையினால்
அண்டர் பெருமான் வெண்மணல்ஆ
லயத்துள் அவைமுன் தாபித்து
வண்டு மருவுந் திருப்பள்ளித்
தாமங் கொண்டு வரன்முறையே
பண்டைப் பரிவால் அருச்சித்துப்
பாலின் திருமஞ் சனமாட்டி. **#1239**

கறந்த அப்பாலைக் கொணர்ந்து தாம் விரும்பும் கொள்கையினால் தேவர்பெருமானுக்கென அமைத்த மணல் கோயி லில், அப்பாற்குடங்களை முன்னாக வைத்து, வண்டுகள் மருவிடும் மலர்களை எடுத்துக் கொண்டு, வரன்முறையாக முற்பிறவி வழிவந்த அன்பால், எம்பிரானைப் போற்றி செய்து, பின்னர்ப் பாலினாலாய திருமுழுக்கு ஆட்டி.

விளக்கவுரை

திருமுழுக்காட்டுதற்கு முன் அருச்சனைபுரிந்து, தாம் கொண்ட

மணலிடமாக இறைவெளிப்பாடு தோன்றற்குரிய மந்திரம், பாவனை, செயல் ஆகியவற்றைச் செய்தலான் மணலால் குவிக்கப் பெற்றிருப்பினும் அவ்வடிவில் இறைவெளிப்பாடு தோன்ற நிற்றலி னாலாம்.

மீள மீள இவ்வண்ணம்
வெண்பால் சொரிமஞ் சனமாட்ட
ஆள உடையார் தம்முடைய
அன்ப ரன்பின் பாலுளதாய்
மூள அமர்ந்த நயப்பாடு
முதிர்ந்த பற்று முற்றச்சூழ்
கோளம் அதனில் உள்நிறைந்து
குறித்த பூசை கொளநின்றார். **#1240**

மீண்டும் மீண்டும் இவ்வண்ணமே வெண்மை நிற முடைய பாலைத் திருமுழுக்கு ஆட்டிட, அவரை அடிமையாகக் கொண்டிருக்கும் பெருமானும், தம் அன்பர் விசாரசருமரின் அன்பின் பாலராக நின்று, அவர் பூசனையால் அமர்ந்த நயப்பாடு முதிர்ந்த பற்று முற்றிட, அங்கு ஆத்திமர நீழலின் கீழாக அமைந்த, வெண்மணலின் சிவலிங்கத் திருமேனியின் உள் நிறைந்து நின்று, அவர் புரியும் பூசனையை ஏற்றருளினார்.

விளக்கவுரை

கோளம் - சிவலிங்கம்

பெருமை பிறங்குஞ் சேய்ஞ்ஞலூர்ப்
பிள்ளை யார்தம் உள்ளத்தில்
ஒருமை நினைவால் உம்பர்பிரான்
உவக்கும் பூசை உறுப்பான
திருமஞ் சனமே முதலவற்றில்
தேடா தனஅன் பினில்நிரப்பி
வரும்அந் நெறியே அர்ச்சனைசெய்
தருளி வணங்கி மகிழ்கின்றார். **#1241**

பெருமை பொருந்திய சேய்ஞலூர்ப் பிள்ளையார் தம் உள்ளத்தில் ஒருமையுணர்வுடன் தேவர்பெருமான் உவந்தருளும் வழிபாட்டின் உறுப்புக்களான திருமுழுக்காட்டல் முதலானவற்றில் தாம் தேடாத பொருள்கள் யாவற்றையும் தமது அன்பினால் நிரப்பி, அந்நெறியாக வரும் முறையால் வழிபாடு செய்தருளி வணங்கி மகிழலானார்.

விளக்கவுரை

****

இறையோன் அடிக்கீழ் மறையவனார்
எடுத்துத் திருமஞ் சனமாட்டும்
நிறைபூ சனைக்குக் குடங்கள்பால்
நிரம்பச் சொரிந்து நிரைக்குலங்கள்
குறைபா டின்றி மடிபெருகக்
குவிந்த முலைப்பால் குறைவின்றி
மறையோர் மனையின் முன்புதரும்
வளங்கள் பொலிய வைகுமால். **#1242**

பெருமானின் திருவடிக்கீழ்த் தொண்டு புரியும் அந்தணச் சிறுவர், திருமுழுக்கு ஆட்டுகின்ற நிறைவுடைய பூசனைக் குக் குடங்களில் பால் நிரம்பச்சொரிந்தும், அப்பசுக்குலங்கள் குறை பாடின்றித் தமது மடிபெருகும்படிக் குவிந்திடும் முலைப்பாலை, அவைகளை உடைமையாகக் கொண்டிருக்கும் அந்தணர்கள் மனை யிலும் குறைவின்றி முன்பு போல் பால் கொடுக்கும் அளவால், குறை வின்றிப் பெருகவே தந்து நின்றன.

விளக்கவுரை

****

செயலிப் படியே பலநாளும்
சிறந்த பூசை செய்வதற்கு
முயல்வுற் றதுவே திருவிளையாட்
டாக முந்நூல் அணிமார்பர்
இயல்பில் புரியும் மற்றிதனைக்
கண்டித் திறத்தை யறியாத
அயல்மற் றொருவன் அப்பதியில்
அந்த ணாளர்க் கறிவித்தான். **#1243**

இவ்வாறாக நாளும் சிறந்த பூசை செய்வதற்கு முயல்வுற்று அதுவே திருவிளையாட்டாக, முப்புரிநூல் அணிந்தமார் புடைய விசாரசருமர் இயல்பாய் இதனைப் புரிந்து வர, ஒருநாள் அவர் தம் அன்பு மயமான பூசனையினைக் கண்டு, அதன் உண்மைத் திறத்தை அறியாத அயலான் ஒருவன், அச்சேய்ஞலூரில் வாழும் அந்தணாளர்க்கு, இவர் செயலை அறிவித்தான்.

விளக்கவுரை

அவ்வூரில் வாழும் அந்தணர்களுக்கு அறிவித்தான் எனப் பொதுவகையால் கூறினும், வரும் செய்யுளால் அவர்கள் அவையத்தார் என்பது பெறுதும். முன்னர்விளையாட்டாக என்று கூறியவர், ஈண்டுத் திருவிளையாட்டாக என்றார், ஈது திருவை அடைவிக்கும்

விளையாட்டாகையால்.

அச்சொற் கேட்ட அருமறையோர்
ஆயன் அறியான் என்றவற்றின்
இச்சை வழியே யான்மேய்ப்பேன்
என்றெம் பசுக்கள் தமைக்கறந்து
பொச்சம் ஒழுகு மாணவகன்
பொல்லாங் குரைக்க அவன்தாதை
எச்ச தத்தன் தனையழைமின்
என்றார் அவையில் இருந்தார்கள். **#1244**

அவனுடைய சொல்லைக் கேட்ட அரிய மறைவழி நின்ற அந்தணாளர்கள், `இடையன் பசு மேய்க்கும் விதம் அறியான்` என்று சொல்லி, `அப்பசுக்களின் இச்சைவழி யான் மேய்ப்பேன்` என்று எம் பசுக்களை எல்லாம் பால் கறந்து பொய்மையான தனது விளையாட்டிற்குப் பாவித்து வருகின்ற அவ்விசாரசருமன் செய்யும் தவறான ஒழுக்கத்தினை எடுத்துச் சொல்ல, `அப்பிள்ளையின் தந்தையான எச்சதத்தனை இங்கு நீர் அழையுங்கள்` என்றார்கள் அவையில் கூடி இருந்த அந்தணர்கள்.

விளக்கவுரை

****

ஆங்கு மருங்கு நின்றார்கள்
அவ்வந் தணன்தன் திருமனையின்
பாங்கு சென்று மற்றவனை
அழைத்துக் கொண்டு வரப்பகர்ந்த
ஓங்கு சபையோர் அவனைப்பார்த்
தூர்ஆன் நிரைமேய்த் துன்மகன்செய்
தீங்கு தன்னைக் கேளென்று
புகுந்த பரிசு செப்புவார். **#1245**

அவர்கள் அருகில் இருந்தவர்கள், அவ்வந்தணன் எச்சதத்தனுடைய திருமனையிடத்துச் சென்று அவனிடம் அவையோர் அழைப்பதைக் கூறி, உடன் அழைத்துக் கொண்டு வருதலும், அது பொழுது அவையோர் அவ்வெச்சதத்தனைப் பார்த்து `ஊராருடைய பசுக்களைத்தான் மேய்ப்பேன் எனச் சொல்லி அதனை மேய்த்து வரும் உன் மகன் செய்யும் தீங்கினைக் கேள்` என்று அயலான் ஒருவன் தம்மிடம் முறைப்பட்டுக் கொண்ட வரலாற்றைச் சொல்லத் தொடங்குவார்.

விளக்கவுரை

****

அந்தண் மறையோர் ஆகுதிக்குக்
கறக்கும் பசுக்க ளானவெலாம்
சிந்தை மகிழ்ந்து பரிவினால்
திரளக் கொடுபோய் மேய்ப்பான்போல்
கந்தம் மலிபூம் புனல்மண்ணி
மணலில் கறந்து பாலுகுத்து
வந்த பரிசே செய்கின்றான்
என்றான் என்று வாய்மொழிந்தார். **#1246**

அழகிய தண்ணளியையுடைய அந்தணர்கள் தங்கள் வேள்விக்குப் பால் கறக்கும் பசுக்களை எல்லாம் மனம் மகிழ்ந்து அன்பால் அவைகளைத் திரட்டிக் கொண்டு சென்று, மேய்ப்பான் போல் நின்று, நறுமணம் கமழும் பூம்புனல் நிறைந்த மண்ணியாற்றின் மணலில், அப்பசுக்களின் பாலைக் கறந்து ஊற்றி விளையாடித், தனது எண்ணப்படி செய்து வருகின்றான் என்று ஒருவன் கூறக் கேட்டோம் என்றனர்.

விளக்கவுரை

****

மறையோர் மொழியக் கேட்டஞ்சிச்
சிறுமா ணவகன் செய்தஇது
இறையும் நான்முன் பறிந்திலேன்
இதற்கு முன்பு புகுந்ததனை
நிறையும் பெருமை அந்தணர்காள்
பொறுக்க வேண்டும் நீங்களெனக்
குறைகொண் டிறைஞ்சி இனிப்புகுதில்
குற்றம் எனதே யாம்என்றான். **#1247**

அவையோர் மொழிந்ததைக் கேட்ட எச்சதத் தனும், அஞ்சிப், `பெருமை மிக்க அவையோர்களே! என் சிறுபையன் செய்த தீங்கினை, ஒருசிறிதும் இதற்கு முன் அறிந்திலேன். இதற்கு முன்பு நடந்த இதனைப் பொறுக்க வேண்டும்` என்று குறை இரந்து வேண்டி, `இனி இச்செயல் நிகழுமாயின் குற்றம் என்னுடைய தேயாம்` என்றான்.

விளக்கவுரை

இவ்வாறு கூறக்கேட்ட எச்சதத்தன், உடனே இதனை அவன் செய்திருக்கமாட்டான் என்று கூறவோ, அன்றி அவனை உடன் சினந்து ஒறு
க்கவோ அமையாது, இனி இக்குற்றம் நிகழுமாயின் என் பொறுப்பு என்றனன். அவன் தன் மகன்பால் வைத்திருந்த நம்பிக்கையையும்

அவன் தன் அற உணர்வையும் எச்சதத்தனின் கூற்றுக் காட்டுகின்றது.

அந்த ணாளர் தமைவிடைகொண்
டந்தி தொழுது மனைபுகுந்து
வந்த பழியொன் றெனநினைந்தே
மகனார் தமக்கு வாய்நேரான்
இந்த நிலைமை அறிவேனென்
றிரவு கழிந்து நிரைமேய்க்க
மைந்த னார்தாம் போயினபின்
மறைந்து சென்றான் மறைமுதியோன். **#1248**

அவையோரிடம் விடைபெற்றுக் கொண்டு, மாலைக் கால வழிபாடாற்றித் தனது இல்லத்திற் சென்ற எச்சதத்தனும், எனக்கு இப்படிஒர் பழிவந்ததே என்று நினைந்து, தன் மகனாருக்கு இதைக் கூறானாய், இதன் உண்மையை நேரில் யானே அறிவேன் என நினைந்து, இரவு கழிந்ததும், தனது மைந்தனார் பசு மேய்த்திடப் போயபின், அவருக்குத் தெரியாது அவர் பின் மறைந்து போயினான்.

விளக்கவுரை

****

சென்ற மறையோன் திருமகனார்
சிறந்த ஊர்ஆன் நிரைகொடுபோய்
மன்றல் மருவும் புறவின்கண்
மேய்ப்பார் மண்ணி மணற்குறையில்
அன்று திரளக் கொடுசென்ற
அதனை யறிந்து மறைந்தப்பால்
நின்ற குரவின் மிசையேறி
நிகழ்வ தறிய ஒளித்திருந்தான். **#1249**

அவ்வாறு சென்ற அவனும், தன் திருமகனாரான விசாரசருமர் சிறந்த ஊராரின் பசுக் கூட்டங்களைக் கொண்டுபோய், நறுமணம் கமழும் சோலையிடத்து மேய்ப்பாராய், அன்று மண்ணி யாற்றங்கரையில் உள்ள மணல் பரந்த இடத்தில் அப்பசுக்களைத் திரளாகக் கொண்டு சென்றார் என்பதை அறிந்து, அயலில் நின்ற ஒரு குரா மரத்தின் மேல் ஏறி, அங்கு நிகழ்வதை அறிய ஒளித்திருந்தான்.

விளக்கவுரை

****

அன்பு புரியும் பிரமசா
ரிகளும் மூழ்கி அரனார்க்கு
முன்பு போல மணற்கோயில்

ஆக்கி முகைமென் மலர்கொய்து
பின்பு வரும்ஆன் முலைபொழிபால்
பெருகுங் குடங்கள் பேணுமிடந்
தன்பாற் கொணர்ந்து தாபித்துப்
பிறவும் வேண்டு வனசமைத்தார். #1250

இறைவனிடத்து அன்பு செய்யும் அப்பிரம சாரியாம் விசாரசருமரும், நீரில் மூழ்கிப், பின் எம்பெருமானுக்கு முன்பு போல் மணலால் கோவிலும் சுற்றுக் கோயில்களும் ஆக்கி, முகை அவிழும் மென்மையான மலர் கொய்து, பின்பு தன்பால் வரும் பசுவின் முலைபொழியும் பாலை, குடங்கள் நிறையக் கொணர்ந்து, அவற்றைத் தக்க இடத்து வைத்துப், பூசனைக்கு வேண்டிய பிற பொருள்களையும் அமைத்துக் கொண்டவராய்.

விளக்கவுரை

பிரமசாரிகள் எனப் பன்மைபடக் கூறியது, அவர் தம் தகுதி நோக்கியாம்.

நின்ற விதியின் விளையாட்டால்
நிறைந்த அரும்பூ சனைதொடங்கி
ஒன்றும் உள்ளத் துண்மையினால்
உடைய நாதன் திருமுடிமேல்
மன்றல் விரவுந் திருப்பள்ளித்
தாமம் சாத்தி மஞ்சனமா
நன்று நிறைதீம் பாற்குடங்கள்
எடுத்து நயப்புற் றாட்டுதலும். #1251

இவரை இறைவன் ஆட்கொள்ளுமாறு நின்ற விதியின் விளையாட்டால், அன்பால் நிறைந்த அரிதாய பூசனையைத் தொடங்கி, ஒருமைப்பாடுகொள்ளும் உள்ளத் தன்மையால், வெண் மணலாலாய சிவலிங்கத்தின் மீது நறுமணம் மிக்க மலர்களைச் சாத்திப், பின்னர்ப் பெரிதும் நிறைந்த தித்திப்பாய பாற்குடங்களை எடுத்து உள்ளத்துக் கொண்ட பெருவிருப்புடன் பெருமானுக்குத் திருமுழுக் காட்டிடலும்,

விளக்கவுரை

****

பரவ மேன்மேல் எழும்பரிவும்
பழைய பான்மை மிகும்பண்பும்
விரவ மேதக் கவர்தம்பால்
மேவும் பெருமை வெளிப்படுப்பான்
அரவம் மேவுஞ் சடைமுடியார்
அருளாம் என்ன அறிவழிந்து

குரவு மேவும் முதுமறையோன்
கோபம் மேவும் படிகண்டான். #1252

பெருமானைப் பரவுதற்கு மேன்மேலும் எழும் விருப்பும், முன்னைப் பிறப்பால் ஒருங்குவாய்ந்த வழிபாடாற்றும் பண்பும் பொருந்த, விசாரசருமர் தம்பால் கொண்ட அன்பின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில், பாம்பையணிகின்ற சடை முடியையுடைய சிவபெருமானின் அருளே இது என்னுமாறு, குராமரத்தின் மீது இருந்த முதிய எச்சதத்தனும், இவர் பூசையைக் கண்டு அறிவழிந்து சினம் மிகப் பார்த்தான்.

விளக்கவுரை

****

கண்ட போதே விரைந்திழிந்து
கடிது சென்று கைத்தண்டு
கொண்டு மகனார் திருமுதுகில்
புடைத்துக் கொடிதாம் மொழிகூறத்
தொண்டு புரியுஞ் சிறியபெருந்
தோன்ற லார்தம் பெருமான்மேல்
மண்டு காதல் அருச்சனையில்
வைத்தார் மற்றொன் றறிந்திலரால். #1253

அவ்வாறு பார்த்த அளவிலே குரா மரத்தினின்றும் இறங்கி, விரைந்து சென்று, கையில் கொண்ட தண்டால் மகனார் திருமுதுகில் புடைத்துக் கடுஞ்சொற்களைக் கூறிய பொழுதும், பெருமானுக்குத் தொண்டுபுரிந்து கொண்டிருக்கும் சிறிய பெருந் தகையார், தம் பெருமானுடைய வழிபாட்டில் திளைத்திருந்தமையால் வேறொன்றும் அறிந்திலராயினர்.

விளக்கவுரை

நெறிவழி யேசென்று நேர்மையுள் ஒன்றித்
தறிஇருந்தாற் போலத் தம்மை இருத்திச்
சொறியினும் தாக்கினும் துண்ணெனன் றுணராக்
குறிஅறி வாளர்க்குக் கூடலு மாமே.

எனவரும் திருமந்திரமும் *(தி.10 பா.1438)* ஈண்டு நினைவு கொள்க.

மேலாம் பெரியோர் பலகாலும்
வெகுண்டோன் அடிக்க வேறுணரார்
பாலார் திருமஞ் சனமாட்டும்
பணியிற் சலியா ததுகண்டு
மாலா மறையோன் மிகச்செயிர்த்து
வைத்த திருமஞ் சனக்குடப்பால்

காலா லிடறிச் சிந்தினான் கையாற்
கடமைத் தலைநின்றான். **#1254**

சிறுமைத் தொழிலில் தலைநின்ற அம்மறையவர் சினம் கொண்டு மேன்மேலும் அடித்திடவும், மேலாம் பெரியவராய விசாரசருமர் அதனை அறியாராய், மீளவும் பாலால் திருமுழுக்கு ஆட்டிடும் அப்பணியில் நீங்கிடாமை கண்ட, உலகியலுணர்வாய மயக்க உணர்வு கொண்ட எச்சதத்தன், மேலும் சினம் கொண்டு அவர் வைத்திருந்த பாற்குடங்களை இழிசெயல் செய்தலில் தலைநின்ற வனாய்க், காலால் இடறிச் சிந்தினான்.

விளக்கவுரை

`தாபரத்தைக் கண்டவன் தாதை பாய்வான்`*(தி.4 ப.48 பா.4)* என அப்பரடிகளும், `சிவன்றன்மேற் சென்ற தாதை` *(தி.7 ப.55 பா.3)* எனச் சுந்தரரும் கூறுவர். எச்சதத்தனின் நோக்கம் அதுவா யினும், அவனால் இடற இயன்றது பாற்குடமேயாதல் சேக்கிழார் திருவாக்கால் அறிய இயலுகிறது. இறைவற்கு என வைக்கப்பெற்ற பாற்குடத்தைக் காலால் இடறுதல் மிக இழிவுடைத்தாதல் தோன்ற அதனைக் `கடைமைத் தொழில்` என்றார்.

சிந்தும் பொழுதில் அதுநோக்கும்
சிறுவர் இறையில் தீயோனைத்
தந்தை யெனவே அறிந்தவன்தன்
தாள்கள் சிந்துந் தகுதியின ல்
முந்தை மருங்கு கிடந்தகோல்
எடுத்தார்க் கதுவே முறைமையினால்
வந்து மழுவா யிடஎறிந்தார்
மண்மேல் வீழ்ந்தான் மறையோனும். **#1255**

பாற்குடங்களைக் காலால் இடற அவற்றினின்றும் பால் சிந்தும் பொழுதில், அதனை நோக்கிய சிறுவராய விசாரசரும னார், ஓர் இறைப்பொழுதில் அத்தீயவன் தம் தந்தை என உணர்ந்ததும், அப்பெரும்பிழை செய்தானின் கால்களைத் தடிய, முன்னாகக் கிடந்ததொரு தண்டினை எடுத்த போது, அதுவே ஒரு மழுவாக, தந்தையின் கால்களை வெட்டினார். அவ்வந்தணனும் மண் மேல் வீழ்ந்தான்.

விளக்கவுரை

****

எறிந்த அதுவே அர்ச்சனையில்
இடையூ றகற்றும் படையாக

மறிந்த தாதை இருதாளும்
துணித்த மைந்தர் பூசனையில்
அறிந்த இடையூ றகற்றினராய்
முன்போல் அருச்சித் திடப்புகலும்
செறிந்த சடைநீள் முடியாரும்
தேவி யோடும் விடையேறி. **#1256**

தந்தையின் காலை வெட்டிய அம்மழுவே, வழிபாட்டில் தந்தையால் வந்த இடையூற்றை அகற்றிடும் படையாகி விடத், தம் பூசனையில் வந்த இடையூற்றை அகற்றினராய், முன்பு போலத் தாம் பெருமானை வழிபாடு புரிந்திடப் போதலும், அழகுடன் செறிந்த நீண்ட சடை முடியையுடைய சிவபெருமானும் உமையம்மை யாருடன் வெள்ளேற்றின் மீது எழுந்தருளி.

விளக்கவுரை

****

பூத கணங்கள் புடைசூழப்
புராண முனிவர் புத்தேளிர்
வேத மொழிகள் எடுத்தேத்த
விமல மூர்த்தி திருவுள்ளம்
காதல் கூர வெளிப்படலும்
கண்டு தொழுது மனங்களித்துப்
பாத மலர்கள் மேல்விழுந்தார்
பத்தி முதிர்ந்த பாலகனார். **#1257**

அருகில் பூதகணங்கள் சூழ்ந்து வரவும், பழைய முனிவர்களும் தேவர்களும் மறைமொழிகளை எடுத்துப் போற்றி டவும், வினையின் நீங்கி விளங்கியவராகிய பெருமானார் அன்பு மீதூர வெளிப்பட்டுத் தோன்றி நின்றார். பத்திமை நிரம்பிய அச் சிறுவரும் அது கண்டு கை கூப்பித் தொழுது மனங்களித்துப் பெருமானின் திருவடிகளில் விழுந்து வணங்கினார்.

விளக்கவுரை

****

தொடுத்த இதழி சூழ்சடையார்
துணைத்தாள் நிழற்கீழ் விழுந்தவரை
எடுத்து நோக்கி நம்பொருட்டால்
ஈன்ற தாதை விழவெறிந்தாய்
அடுத்த தாதை இனியுனக்கு
நாம்என் றருள்செய் தணைத்தருளி

மடுத்த கருணை யால்தடவி
உச்சி மோந்து மகிழ்ந்தருள. #1258

மாலையாகத் தொடுத்த கொன்றைப்பூவைச் சூடிய சடையையுடைய பெருமான், தம் திருவடிகளில் வீழ்ந்த விசாரசருமரைத் திருக்கரத்தால் எடுத்து நோக்கி, `எம்பொருட்டால் உன்னைப் பெற்ற தந்தை வீழ வெட்டினாய். அடுத்த தந்தை இனி உனக்கு நாம்` என்று கூறி, அருள் செய்து, மகனாரை அணைத்தருளி, பெருகும் கருணையால் அவர் திருமுதுகைத் தடவி, உச்சியில் முத்த மிட்டு மகிழ்ந்தருளலும்.

விளக்கவுரை

****

செங்கண் விடையார் திருமலர்க்கை
தீண்டப் பெற்ற சிறுவனார்
அங்கண் மாயை யாக்கையின்மேல்
அளவின் றுயர்ந்த சிவமயமாய்ப்
பொங்கி யெழுந்த திருவருளின்
மூழ்கிப் பூமேல் அயன்முதலாம்
துங்க அமரர் துதிசெய்யச்
சூழ்ந்த ஒளியில் தோன்றினார். #1259

சிவந்த கண்களையுடைய ஆனேற்றின் மீது இவர்ந்தருளும் இறைவர் திருக்கை தீண்டப் பெற்ற சிறுவனாராய அவ் விசாரசருமரும், மாயையின் விளைவாய உடல்மாறி, அதன் மேலாக அளவிலாது உயர்ந்த சிவமயமாகிப் பொங்கி எழுகின்ற திருவருளில் மூழ்கிச் சிறந்து, தாமரை மலரில் வீற்றிருக்கும் அயன் முதலாய பெருங் கடவுளர் யாவரும் போற்றிடத், தம்மைச் சூழ்ந்து விளங்கிய சிவ ஒளி யின் வடிவாகித் தோன்றினார்.

விளக்கவுரை

****

அண்டர் பிரானும் தொண்டர்தமக்
கதிபன் ஆக்கி அனைத்துநாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடு வனவும் உனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோம்
என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார். #1260

அண்டங்களுக்கெல்லாம் தலைவராகிய சிவ பெருமானும், சூழ்ந்த ஒளி

வடிவில் தோன்றி நிற்கும் விசாரசருமரைத் தொண்டர்களுக்கெல்லாம் தலைவனாக ஆக்கி, `நாம் உண்ட திருவமுதின் மிகுதியும் உடுப்பனவும் சூடுவனவும் ஆன இவை யாவும் உனக்காகும்படி தந்து, அவற்றுடன் சண்டீசன் எனும் பதமும் தந்தோம்` என்று திருவாய் மலர்ந்து தம் இளம்பிறை விளங்கும் சடைமீதிருந்த கொன்றை மாலையை எடுத்து, அவருடைய அழகிய நீண்ட திருமுடிமீது சூட்டியருளினார்.

விளக்கவுரை

****

எல்லா உலகும் ஆர்ப்பெடுப்ப
எங்கும் மலர்மா ரிகள்பொழியப்
பல்லா யிரவர் கணநாதர்
பாடி ஆடிக் களிபயிலச்
சொல்லார் மறைகள் துதிசெய்யச்
சூழ்பல் லியங்கள் எழச்சைவ
நல்லா றோங்க நாயகமாம்
நங்கள் பெருமான் தொழுதணைந்தார். **#1261**

எல்லா உலகங்களிலும் உள்ளவர்களும் கண்டு வியத்தகு உணர்வுடன் அர கரவொலி எழுப்ப, எங்கும் மலர் மழை பொழிந்திடப், பல்லாயிரமான சிவகணநாதர்களும் பாடி ஆடி மகிழ்ச்சி கொள்ள, சொற்கள் நிறைந்த நான்மறைகள் போற்றிட, நாற்புறமும் சூழ இயங்கும் இயங்கள் ஒலித்திடச், சைவ நல் ஒழுக்கம் ஓங்கிடச், சண்டீசுவரர் எனும் தகுதிபெற்ற சிறிய பெருந்தகையாரும் பெருமானாரைத் தொழுது பின் சென்றார்.

விளக்கவுரை

****

ஞாலம் அறியப் பிழைபுரிந்து
நம்பர் அருளால் நான்மறையின்
சீலந் திகழுஞ் சேய்ஞலூர்ப்
பிள்ளை யார்தந் திருக்கையில்
கோல மழுவால் ஏறுண்டு
குற்றம் நீங்கிச் சுற்றமுடன்
மூல முதல்வர் சிவலோகம்
எய்தப் பெற்றான் முதுமறையோன். **#1262**

இந்நிலவுலகில் உள்ளார் யாவரும் அறியப் பிழை செய்த எச்சதத்தனும், சிவபெருமானின் திருவருளால், நான் மறை களின் சிறந்த ஒழுக்கம் திகழ்ந்து விளங்கும் சேய்ஞலூர்ப் பிள்ளை யார் தம் திருக்கையில்

கொண்ட அழகு நிறைந்த மழுவால் கால் வெட்டுண்டமையால், தான் செய்த குற்றம் நீங்கித், தன் சுற்றத்தவருடன் ஆதிமுதல்வராய சிவபெருமானின் உலகத்தை அடையப் பெற்றான்.

விளக்கவுரை

****

வந்து மிகைசெய் தாதைதாள்
மழுவால் துணித்த மறைச்சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே
அரனார் மகனார் ஆயினார்
இந்த நிலைமை அறிந்தாரார்
ஈறி லாதார் தமக்கன்பு
தந்த அடியார் செய்தனவே
தவமா மன்றோ சாற்றுங்கால். **#1263**

தம்பால் வந்து மிகவும் கொடிய செயலைச் செய்த தந்தையின் கால்களை, மழுவாயுதத்தால் வெட்டிய மறைச்சிறுவர், அவ்வுடலுடனேயே சிவபெருமானின் திருமைந்தர் ஆயினார். இந் நிலைமையை யாவரே அறிந்தார்? ஒருவரும் அறியார். இவ் வரலாற்றால் செய்யத் தக்கது ஒன்று உண்டு என்றால் அஃது, ஈறில்லாத சிவபெருமானிடத்து முழு அன்பினையும் செலுத்திய அடியவர்கள் செய்தனயாவும் தவமாகும் என்பதேயாம்.

விளக்கவுரை

`சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்` என மணிவாசகர் அருளுவதும் காண்க.

நேசம் நிறைந்த உள்ளத்தால்
நீலம் நிறைந்த மணிகண்டத்
தீசன் அடியார் பெருமையினை
எல்லா உயிரும் தொழவெடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம் **#1264**

அன்பு நிறைந்த திருவுள்ளத்தால் நஞ்சு பொருந்திய திருக்கழுத்தினையுடைய சிவபெருமானின் அடியவரது பெருமையினை, எல்லாவுயிர்களும் அறிந்து போற்றுமாறு, இந் நிலவுலகு அனைத்தும் உய்யத் திருத்தொண்டத் தொகையெனும் அரிய பதிகத்தை அருளிச் செய்த ஆளுடைய நம்பிகளின் நறுமணம் பொருந்திய மென்மையான

திருவடிகளை வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்.

விளக்கவுரை

****

திருநாவுக்கரசு நாயனார் புராணம்

திருநாவுக் கரசுவளர்
திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர்
வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவல்
உறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய
ஒண்ணாமை உணராதேன். **#1265**

திருநாவுக்கரசர் எனவும், சிவபெருமானின் திருத் தொண்டு வளர்வதற்குக் காரணமான நெறியில் நின்று உலகம் வாழும் பொருட்டு வரும் ஞானத்தவ முனிவரான வாகீசர் எனவும், வாய்மை விளங்குவதற்கு ஏதுவான பெருமையுடைய திருப்பெயரின் சிறப்பு களை, இப்பேருலகின்கண் எடுத்துக் கூறுதற்கு ஒரு நாவுக்கும் இய லாமையை உணராதவனாகிய எளியேன், போற்றத் துணிகின்றேன்.

விளக்கவுரை

திருத்தொண்டு வளர்தற்கு ஏதுவாய நெறி, புற வழிபாடு *(சரியை)* முதலாய நான்குமாம். வாகீசர் - நாவரசர். வாய்மை - ஈண்டு ஞானத்தை உணர்த்திற்று. திருநாவுக்கரசு எனும் பெயரைச் சொல்லியும் எழுதியுமே துன்பில் பதம் பெற்ற அப்பூதி அடிகளாரை நினைவு கொள்ள இவ்வாய்மை விளங்கும். ஒருநாவுக்கு - ஒருநாவுக்கு, ஒருநாவுக்கும் என இருநிலையிலும் கொள்ளலாம். உரைசெய்ய ஒண்ணாமை உணராதேன், பெருநாமச் சீர்பரவல் உறு கின்றேன் எனக்கூட்டுக.

தொன்மைமுறை வருமண்ணின்
துகளன்றித் துகளில்லா
நன்மைநிலை ஒழுக்கத்தின்
நலஞ்சிறந்த குடிமல்கிச்
சென்னிமதி புனையவளர்
மணிமாடச் செழும்பதிகள்
மன்னிநிறைந் துளதுதிரு
முனைப்பாடி வளநாடு. **#1266**

திருமுனைப்பாடி என்னும் வளமை பொருந்திய நாடு, பழைய முறைப்படி வருகின்ற மண்ணின் துகளான புழுதியே அல்லாது, வேறு குற்றம் இல்லாத ஒழுக்கத்தின் நன்மையால் நிலை பெற்ற குடிமக்கள் பெருகி, உச்சியில் பிறைச்சந்திரன் தவழுமாறு, உயர்ந்த அழகிய மாளிகைகளை உடைய செழும்பதிகள் நிலைத்து நிறைந்துள்ளதாகும்.

விளக்கவுரை

`துகள்` என வருவனவற்றுள் முன்னையது புழுதி யையும், பின்னையது குற்றத்தையும் குறிப்பன. மண்ணின் புழுதி இயற்கையாக எங்கும் இருப்பது; இந்நாட்டிலும் அது உள்ளது இயற்கையே ஆதலின் `தொன்மைமுறை வருமண்ணின் துகள்` என்றார். ஆனால் மக்கள் முதலானோர் செய்யும் குற்றம் என்பதோ ஈண்டு அறவே இல்லை என்பதாம்.

புனப்பண்ணை மணியினொடும்
புறவின்நறும் புதுமலரின்
கனப்பெண்ணில் திரைசுமந்து
கரைமருங்கு பெரும்பகட்டேர்
இனப்பண்ணை உழும்பண்ணை
எறிந்துலவி எவ்வுலகும்
வனப்பெண்ண வரும்பெண்ணை
மாநதிபாய் வளம்பெருகும். **#1267**

குறிஞ்சி நிலத்தில் உள்ள மூங்கில்களில் உள்ள முத்துக்களுடன், முல்லைப் புறவத்திலுள்ள மணம் பொருந்திய புதிய மலர்களின் தொகுதியை அளவில்லாத அலைகளால் சுமந்து, இரு பக்கங்களிலுமுள்ள கரைகளில் பெரிய எருமைகள் பூட்டிய அள வொத்த கூட்டமான உழவுத் தொழில் செய்வதற்கு இடமான வயல் களிலே எறிந்து, எங்கும் பரவி, உலவி, எல்லா உலகங்களிலும் தன் அழகை மேலாக நினைக்கத்தக்கதாக ஓடி வரும் `பெண்ணை` என்கின்ற பெரிய ஆறு பாய்தலால் அந்நாட்டில் வளமானது பெருகி நிற்கும்.

விளக்கவுரை

புனம் - குறிஞ்சி, பண்ணை - மூங்கில்: பணை என்பது பண்ணையெனச் செய்யுள் நோக்கி வந்தது. மலரின் கனப்பு - மலரின் தொகுதி. ஏர் இனப்பண்ணை - தம்மில் ஒத்த ஏர்களின் தொகுதி. உழும் பண்ணை - உழுதற்குரிய வயல், பண்ணை என வருவனவற்றுள், முன்னையது மூங்கிலைக் குறித்தது, இரண்டாவது, கூட்டம் என்ற பொருளைக் குறித்தது. மூன்றாவது வயல் எனும் பொருளைக் குறித்தது.

காலெல்லாந் தகட்டுவரால்
கரும்பெல்லாங் கண்பொழிதேன்
பாலெல்லாங் கதிர்ச்சாலி
பரப்பெல்லாங் குலைக்கமுகு
சாலெல்லாந் தரளநிரை
தடமெல்லாஞ் செங்கழுநீர்

மேலெல்லாம் அகில்தூபம்
விருந்தெல்லாந் திருந்துமனை. **#1268**

வாய்க்கால் எங்கும் தகடு போன்ற வரால் மீன்கள் காணப்படுவன. கரும்புகளின் கணுக்கள் எங்கும் பொழியும் தேன் விளங்கும். பக்கங்களில் எங்கும் கதிர்களையுடைய நெற்பயிர்கள் விளங்குவன. இடம் அகன்ற நிலம் எங்கும் குலைகளையுடைய பாக்கு மரங்கள் வளர்ந்திருப்பன. ஏர் உழுது பண்படுத்தப்பட்ட நிலங்கள் எங்கும் முத்துக்களின் கூட்டம் பொருந்தி விளங்குவன. பொய்கைகள் எங்கும் செங்கழுநீர் மலர்கள் மலர்ந்திருப்பன. விருந்துள்ள மனைகள் எங்கும் எப்பொழுதும் அகில் தூபம் கமழ்ந்து நிற்கும்.

விளக்கவுரை

கால் - நீர் செல்லுதற்குரிய வாய்க்கால்கள். சால் - உழுது பண்படுத்தப்பட்ட நிலம்.

கடைஞர்மிடை வயற்குறைத்த
கரும்புகுறை பொழிகொழுஞ்சா
றிடைதொடுத்த தேன்கிழிய
இழிந்தொழுகு நீத்தமுடன்
புடைபரந்து ஞிமிறொலிப்பப்
புதுப்புனல்போல் மடையுடைப்ப
உடைமடையக் கரும்படுகட்
டியினடைப்ப ஊர்கள்தொறும். **#1269**

ஊர்கள் தோறும், உழவர்களால் வெட்டப்பட்ட நெருங்கிய கரும்புகள் பொழிகின்ற சாறு, அக்கரும்புகளின் இடை யிலே கட்டப்பட்டிருந்த தேன்கூடுகள் அழிவதால் ஒழுகும் தேனின் பெருக்குடனே கூடிப் பக்கங்களில் பரவி, வண்டுகள் மொய்த்து ஒலிக்கப் புதிய வெள்ள நிரை போல் மடையை உடைக்கவே, அவ்வாறு உடைக்கப்பட்ட மடைகளை அக்கருப்பஞ் சாற்றினால் காய்ச்சப்பட்ட வெல்லக்கட்டிகளைக் கொண்டு அடைப்பர்.

விளக்கவுரை

கரும்போடு கூடிய தேன் கூட்டிலிருந்த தேன், கருப்பஞ் சாற்றுடன் கலந்து மடையை உடைத்தது. அவ்வெள்ளத்தை அக் கருப்பஞ் சாற்றினாலாய வெல்லக்கட்டியே அடைத்தது. இக்குறிப்பு திலகவதியாருடன் தோன்றிய மருணீக்கியார் சமண் சமயஞ்சார, பின் திலகவதியாரே அவரைத் தடுத்துச் சிவநெறிக்கு ஆளாக்கினமையைக் குறிப்பால் உணர்த்துவதாயுள்ளது.

கருங்கதலிப் பெருங்குலைகள்

களிற்றுக்கைம் முகங்காட்ட
மருங்குவளை கதிர்ச்செந்நெல்
வயப்புரவி முகங்காட்டப்
பெருஞ்சகடு தேர்காட்ட
வினைஞர்ஆர்ப் பொலிபிறங்க
நெருங்கியசா துரங்கபல
நிகர்ப்பனவாம் நிறைமருதம். **#1270**

கருங்கதலி என்ற வாழையின் பெருங்குலைகள், யானைகளின் நீண்ட துதிக்கையையுடைய முகத்தைப் போன்று விளங்க, அவற்றின் அருகில் வளர்ந்த கதிர்களை உடைய நெற் பயிர்கள், வெற்றியையுடைய குதிரைகளின் முகம்போல் தோன்ற, பெருகிய வண்டிகள் தேர்களைப் போல் திகழ, உழவர்களின் பேரொலி, காலாட்படைகளின் ஒலியென விளங்க, மருதநிலக்காட்சிகள் நெருங் கிய நால்வகைப்படைகளைப் போன்றனவாயின.

விளக்கவுரை

கருங்கதலி - வாழையின் ஒரு வகை. சாதுரங்கம் - நால்வகைப் படை. கதிர்களையுடைய நெற் பயிர்கள் வளைந்து கீழ் நோக்கியிருத்தலின், குதிரைகளை ஒப்பவாயின.

நறையாற்றுங் கமுகுநவ
மணிக்கழுத்தி னுடன்கூந்தல்
பொறையாற்றா மகளிரெனப்
புறம்பலைதண் டலைவேலித்
துறையாற்ற மணிவண்ணச்
சுரும்பிரைக்கும் பெரும்பெண்ணை
நிறையாற்று நீர்க்கொழுந்து
படர்ந்தேறு நிலைமையதால். **#1271**

ஒன்பான் மணிகளும் பதித்த அணிகள் அணிந்த கழுத்துடன் கூந்தலின் சுமையைப் பொறுக்க இயலாது அசைகின்ற மகளிரைப் போல, மணம் மிகவுடைய பாக்குமரங்கள், வெளியே அசைகின்ற சோலைகள் சூழ்ந்துள்ள இடங்களில், மிகுந்த அழகுடைய உடலையுடைய வண்டுகள் ஒலிக்கும் பெண்ணையின் நிறைந்த ஆற்று அலை மேலே படர்ந்து ஏறுகின்ற தன்மை உடையதாகும்.

விளக்கவுரை

நறையாற்றும் கமுகு - நறுமணம் கமழும் பாக்கு மரம். பாக்கு மரங்களில் இருக்கும் மலரும், காயும், பழமும், பெண்களின் கழுத்தில் இருக்கும் ஒன்பான் மணிகளைப் போன்றுள்ளன. பாக்கு மரத்தின் இலைகள்

பெண்களின் கூந்தலைப் போல்வதாயிற்று. அம்மரங்களின் அசைவு, மகளிர் அசைவு போன்றிருந்தது. புறம்பு அலை தண்டலை - புறம்பே அசைகின்ற சோலைகள். துறை - ஈண்டு இடம் எனும் பொருளது. பெண்ணை நிறையாற்றும் நீர்க் கொழுந்து - பெண்ணையாற்றில் பெருகி வரும் நீர் அலைகள் மேல் எழ எழுச்சி பெறும் அந்நீரின் தன்மை தாவரங்களின் கொழுந்தென நிற்கும்.

மருமேவு மலர்மேய
மாகடலின் உட்படியும்
உருமேகம் எனமண்டி
உகைத்தகருங் கன்றுபோல்
வருமேனிச் செங்கண்வரால்
மடிமுட்டப் பால்சொரியுங்
கருமேதி தனைக்கொண்டு
கரைபுரள்வ திரைவாவி. #1272

கரிய கடலில் படியும் வடிவுடைய மேகங்களைப் போல மணம் கமழும் மலர்களை மேய்வதற்காகக் கரிய எருமைகள் உட்புக, நெருங்கிக் கரிய கன்றுகள் போல் வரும் பெருவடிவும் சிவந்த கண்களும் கொண்ட வரால் மீன்கள் மடியில் முட்டப், பாலைச் சொரி யும் கரிய எருமைகளால், குளங்களின் அலைகள் கரையில் புரளும்.

விளக்கவுரை

எருமைகள் பாலைச் சொரிவதால், குளங்கள் நீர்ப் பெருக்குடன், நல்ல பாற்பெருக்கும் பெருகி விளங்குகின்றன. அப் பெருக்கின் அலைகள் கரைகளில் புரளும் பொழுது, அங்குள்ள எருமைகளும் புரளுகின்றனவாம். நீர்வளமும், அந்நிலத்து வாழும் உயிர்வளமும் ஒருங்கு குறித்தவாறு. மாகடலின் உட்படியும் உருமேக மென்னக் கருமேதி மருமேவு மலர்மேய எனக் கூட்டிப் பின், ஆற்றொழுக்காகப் பொருள் கொள்க.

மொய்யளிசூழ் நிரைநீல
முழுவலயங் களின்அலையச்
செய்யதளிர் நறுவிரலிற்
செழுமுகையின் நகஞ்சிறப்ப
மெய்யொளியின் நிழற்காணும்
ஆடியென வெண்மதியை
வையமகள் கையணைத்தால்
போலுயர்வ மலர்ச்சோலை. #1273

நெருங்கிய வண்டுகள் சூழ்ந்த மர வரிசைகள், முழு நீல மணிகள் பதித்த வளையல்களை அணிந்த மண்மகளின் கைகள் என விளங்கவும்,

அம்மரங்களிலுள்ள சிவந்த தளிர்களும் அரும்பு களும் அம்மகளின் விரல்களும் நகங்களும் என விளங்கவும், அம் மரங்கள் வானளவும் உயர்ந்து அங்குள்ள பிறையைத் தழுவுவது, அம்மண்மகள், தன் மெய் ஒளியின் நிழலைக் காணும் கண்ணாடி இதுவாகும் என்று கருதுமாறு அமையவும் மதில்களையுடைய மலர்ச் சோலைகள் விளங்குகின்றன.

விளக்கவுரை

உருவகமும் தற்குறிப்பேற்றமும் அமைந்த பாடல் இதுவாகும். வையம் - நிலமகள். சோலையில் நீண்டு நிற்கும் மரங்கள் அவள் கைகள். மரங்களைச் சூழ நிற்கும் வண்டுகள் - வளையல்கள். மரத்தளிர்கள் - கை விரல்கள். அரும்புகள் - விரலின் நகங்கள். மரங்கள் வானுற ஓங்கிப் பிறையைத் தொட்டு நிற்றல் - தன் ஒளியைக் காணக் கண்ணாடியைப் பார்ப்பது போல்வது. மரக்கிளைகள் பிறைதவழ அணைத்து நிற்றல், மண்மகள் தன்வடிவைத் தான் காணக் கண்ணாடி கொண்டு பார்ப்பது போலும் என்றது அரிய தற்குறிப்பேற்றமாம்.

எயிற்குலவும் வளம்பதிகள்
எங்குமணந் தங்கும்வயல்
பயிர்க்கண்வியல் இடங்கள்பல
பரந்துயர்நெற் கூடுகளும்
வெயிற்கதிர்மென் குழைமகளிர்
விரவியமா டமும்மேவி
மயில்குலமும் முகிற்குலமும்
மாறாட மருங்காடும். **#1274**

மதில்கள் சூழ விளங்கும் வளமைமிக்க நகரங்களில், மணம் பொருந்திய வயல்களில் பயிர் செய்யப்பட்ட மிக அகன்ற இடங்கள் பலவற்றின் கண்ணும் பரந்து உயர்ந்திருக்கும் நெல் கூடுகளிலும், ஒளி பொருந்திய காதணிகளை அணிந்த மென்மையான மகளிர் தங்கும் மாடங்களிலும், பொருந்திய மயில் கூட்டங்களும் மேகங்களும் எதிர் எதிராக ஒன்றை ஒன்று விஞ்சுவது போல், பக்கங்களிலே அசைவுற்று நிற்கும்.

விளக்கவுரை

எயில் - மதில். நெற்கூடுகளில் முகிற் குலமும், மாடங் களில் மயில் குலமும் ஆடி நிற்கும் (அசைந்து நிற்கும்) என எதிர் நிரல் நிறையாகப் பொருள் கொள்க.

மறந்தருதீ நெறிமாற
மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தருநா வுக்கரசும்
ஆலால சுந்தரரும்

பிறந்தருள உளதானால்
நம்மளவோ பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித்
திறம்பாடுஞ் சீர்ப்பாடு. **#1275**

பாவத்தை விளைவிக்கும் தீயநெறியானது மாறுமாறு, கரியகழுத்தைக் கொண்ட சிவபெருமானின் மெய்ம்மை யான சிவநெறியை உலகிற்கு விளக்க வரும் திருநாவுக்கரசரும், ஆலாலசுந்தரரும் தோன்றியருளியது இந்நாடு என்றால், இப் பேருலகில் சிறந்த திருமுனைப்பாடி நாட்டின் திறத்தைப் பாடும் இயல், நம் அறிவளவில் அடங்குவதோ? அடங்காது.

விளக்கவுரை

மறம் நீங்கவும், சிவநெறி தழையவும் இருவரும் தோன்றினர் என்பதால், உயிர் பாச நீக்கமும் சிவப்பேறும் ஒருங்கு பெறத் தோன்றியமை புலனாம்.

இவ்வகைய திருநாட்டில்
எனைப்பலவூர் களுமென்றும்
மெய்வளங்கள் ஓங்கவரும்
மேன்மையன ஆங்கவற்றுள்
சைவநெறி ஏழுலகும்
பாலிக்குந் தன்மையினால்
தெய்வநெறிச் சிவம்பெருக்குந்
திருவாரூர் திருவாரூர். **#1276**

இத்தகைய திருமுனைப் பாடி நாட்டில் பலவாக விளங்கும் எல்லா ஊர்களும், எக்காலத்தும் உண்மையைத் தரும் வளங்கள் பெருகும் மேன்மையைக் கொண்டவை; அவற்றுள் சிவ நெறியை ஏழுஉலகங்களுக்கும் அளிக்கும் தன்மையினால், தெய்வ நெறியின் விளைவாய சிவத்தைப் பெருக்கும் அருளாகிய திரு ஆகின்ற ஊர், திருவாரூர் என்பதாம்.

விளக்கவுரை

திரு என்பது பல பொருள் குறிக்கும் ஒருசொல் ஆகும். அது ஈண்டுச் சிவம் பெருக்கும் `திரு` என ஆசிரியர் குறிப்பிடுவதால், சிவம் பெருக்குதலையே திருவாகக் கொண்டிருக்கும் ஊர் என்பது விளங்குகின்றது.

சிவம் பெருக்குதல் அனைத்துயிர்களும் சிவநெறி யைப் பேணி அந்நெறியில் ஒழுகுதற்கு இடனாக நிற்றல்.

திருஆம் ஊர் - திருவாரூர் என்பதாம்.

ஆங்குவன முலைகள்சுமந்

தணங்குவன மகளிரிடை
ஏங்குவன நூபுரங்கள்
இரங்குவன மணிக்காஞ்சி
ஓங்குவன மாடநிரை
யொழுகுவன வழுவிலறம்
நீங்குவன தீங்குநெறி
நெருங்குவன பெருங்குடிகள். **#1277**

அத்திருவாமூரில் வருந்துவன அழகான கொங்கைகளைச் சுமந்து நிற்கும் மகளிரின் இடைகளேயாம். அங்கு ஒலிப்பன அவர்கள் அணிந்த காலணிகளேயாம். அங்கு ஏங்குவன அவர்கள் அணிந்த மணிகள் பதித்த மேகலையேயாம். அங்கு ஓங்கி நிற்பன மாளிகை வரிசைகளேயாம். அங்கு ஒழுகுவன குற்றம் இல்லாத அறங்களேயாம். அங்கு நீங்கி நிற்பன தீமையுடைய நெறிகளேயாம். அங்கு நெருங்கி இருப்பன பெருங்குடிமக்களின் இருக்கைகளேயாம்.

விளக்கவுரை

அணங்குதல் - வருந்துதல்; எனவே இவ்வகையால் வருந்துதலும் இரங்குதலும் உடையன மகளிரின் அணிகளேயன்றி மக்கள் மாட்டு இவ்வவலங்கள் இல்லை என்பது பெறப்படுகின்றது. இவை போன்றே பளுவாக அமைந்து நிற்பனவும், அவற்றைச் சுமந்து நிற்பனவும் மகளிரின் மார்பகங்களும் இடைகளும் அன்றிப் பிற இலவாம். அங்கு ஒழுகுவது அறங்களும், நீங்கி நிற்பன அதற்கு மாறாய தீய நெறிகளும் அன்றிப் பிற இலவாம். ஒழுகுதல் - நற் பொருள்களைவிட்டு நெகிழ்தல், ஒழுக்கமுடன் வாழ்தல் என இரு பொருளையும் தரும்.

மலர்நீலம் வயல்காட்டும்
மைஞ்ஞீலம் மதிகாட்டும்
அலர்நீடு மறுகாட்டும்
அணியூசல் பலகாட்டும்
புலர்நீலம் இருள்காட்டும்
பொழுதுழவர் ஒலிகாட்டும்
கலநீடு மனைகாட்டும்
கரைகாட்டாப் பெருவளங்கள். **#1278**

வயல்கள் நீல மலர்களைப் பெற்று விளங்கும். மைபூசப் பெற்ற நீலம் போன்ற கண்களையும், பிறைச் சந்திரன் போன்ற நெற்றியையும் உடைய தாமரை மலர் போலும் முகமுடைய மங்கையர்கள் நெருங்கி இருக்கும் தெருக்கள், அவர்கள் ஏறி உந்தும் மணிகள் பதித்த பல ஊசல்களைக் காட்டும். இருள் புலர்தற்குரிய நீல நிறம் காட்டும் வைகறைப் பொழுதானது, உழவுத் தொழிற்குச் செல் வோரின் ஒலியைப்

புலப்படுத்தும். பற்பல பண்டங்களும் நிறைந்து விளங்கும் மனைகள், அளவற்ற வளங்களைக் காட்டும்.

விளக்கவுரை

மைந்நீலம் - மைதீட்டப் பெற்ற நீலமலர் போன்ற கண்கள். கலம் நீடும் - பல பண்டங்களும் நிறைந்திருக்கும். காட்டும் எனும் சொல் பல்காலும் வருதலின் சொற்பின் வருநிலையணியாம்.

தலத்தின்கண் விளங்கியஅத்
தனிப்பதியில் அனைத்துவித
நலத்தின்கண் வழுவாத
நடைமரபிற் குடிநாப்பண்
விலக்கின்மனை ஒழுக்கத்தின்
மேதக்க நிலைவேளாண்
குலத்தின்கண் வரும்பெருமைக்
குறுக்கையர்தங் குடிவிளங்கும். **#1279**

உலகில் விளங்கும் அவ்வொப்பற்ற பதியில், எவ்வகையான நன்மையினின்றும் வழுவாத ஒழுக்கத்தின் கண் நிற்கும் குடிகளுள், குற்றம் இல்லாத இல்லறத்தில் மேம்பட்ட நிலையில் உள்ள வேளாளர் குலத்துள் வரும் பெருமையுடைய குறுக்கையர் குடியானது சிறப்புற்றிருந்தது.

விளக்கவுரை

நடை மரபில் குடி - ஒழுக்கத்தில் நிற்கும் குடிகள். குலம் - பெரும் பிரிவு; குடி - அதன் உட்பிரிவு. குறுக்கையர் குடி - வேளாண் மரபில் வரும் குடிகளுள் ஒன்று.

அக்குடியின் மேல்தோன்றல்
ஆயபெருந் தன்மையினார்
மிக்கமனை அறம்புரிந்து
விருந்தளிக்கும் மேன்மையினார்
ஒக்கல்வளர் பெருஞ்சிறப்பின்
உளரானார் உளரானார்
திக்குநில வும்பெருமை
திகழவரும் புகழனார். **#1280**

எல்லாத்திசைகளிலும், நிலைபெற்று விளங்கும் பெருமை பொருந்திய `புகழனார்` என்ற சான்றோர், அக்குடியின் பெருந்தலைவராவவர், மேன்மை மிக்க இல்லறத்தை நடத்தி, விருந்து அளிக்கும் மேன்மை உடையவர். சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகும் பெருஞ்சிறப்பில் உள்ளவரானார். ஆதலால் அவரே இல்லற நெறிக் கண் கூறப்பெறும்

அறங்கள் பலவும் உள்ளவர் (உடையவர்) ஆனார்.

விளக்கவுரை

உளரானார் என வருவனவற்றுள், முன்னையது சுற்றச் சிறப்பையும், பின்னையது அவர்தம் பண்பும் பயனுமாய வளச் சிறப்பையும் குறித்தன.

புகழனார் தமக்குரிமைப்
பொருவில்குலக் குடியின்கண்
மகிழவரு மணம்புணர்ந்த
மாதினியார் மணிவயிற்றில்
நிகழுமலர்ச் செங்கமல
நிரையிதழின் அகவயினில்
திகழவருந் திருவனைய
திலகவதி யார்பிறந்தார். **#1281**

புகழனாருக்கு உரிமையான ஒப்பில்லாத குலமும் குடியும் கூடிய மரபில், மகிழ்ச்சி விளைதற்கு ஏதுவாய திருமணம் செய்து கொண்ட `மாதினியார்` என்னும் அம்மையாரின் அழகிய வயிற்றில், செந்தாமரையின் நிரல்பட அமைந்த இதழ்களினிடையே உள்ள பொகுட்டில் விளங்கவரும் திருமகளைப் போன்று, `திலக வதியார்` என்பவர் பிறந்தருளினார்.

விளக்கவுரை

அகவயினில் - அழகிய இதழ்களினிடையே உள்ள பொகுட்டில்.

திலகவதி யார்பிறந்து
சிலமுறையாண் டகன்றதற்பின்
அலகில்கலைத் துறைதழைப்ப
அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில்வரும் இருள்நீக்கி
ஒளிவிளங்கு கதிர்போல்பின்
மலருமருள் நீக்கியார்
வந்தவதா ரஞ்செய்தார். **#1282**

திலகவதியார் பிறந்தபின், முறையாகச் சில ஆண்டுகள் கழிந்த பின்பு, அளவில்லாத கலைகளின் துறைகள் தழைக்கவும், அரியதவத்தவர் நெறி வாழவும், உலகில் புற இருளை நீக்கி வருகின்ற ஒளியுடைய ஞாயிற்றைப் போலப் பின்னர் அக இருளை நீக்கி மலர்விக்கும் `மருள்நீக்கியார்` தோன்றி அருளினார்.

விளக்கவுரை

புற இருளை ஞாயிறன்றிச் சந்திரனும் நீக்குமாயினும் அவ்வொளி ஞாயிற்றின் ஒளியேயாதலின் அதனை வேறுபட விதவாது கதிர் என

ஒருமையால் கூறினார். மலரும் - மலர்விக்கும். ஞாயிறு தோன்றிய பொழுதன்றி அதுமேல் இவர்ந்து வர இருள் முழுமையாக நீங்குதலின் `பின் மலரும்` என்றார். மருள் நீக்கியாரும் சமண் சமயத்தினின்றும் நீங்கிச் சைவ நெறியில் தலைப்பட்ட பின்னரே அந்நெறியை மலர்வித்தார் என்பதும் அறியத்தக்கதாம். திலகவதியார் பிறந்து சிலமுறை ஆண்டு அகன்றதற்பின் இவர் தோன்றினார் எனவே அவ்விடைவெளி ஐந்தாண்டு வரை ஆகலாம் என எண்ணலாம். `சிலமுறை ஆண்டு செல்லச் சிலைபயில் பருவம்` *(தி.12 பு.10 பா.27)* எனக் கண்ணப்பர் வரலாற்றில் முன்னும் இவ்வரிய தொடர் இடம் பெற்றிருக்குமாற்றான் இவ்வாண்டெல்லையை அறிய இயலுகிறது. மகப் பெற்றார், பின்பொரு மகவைப் பெறுதற்குப் போதிய இடை வெளி உளவாதல் வேண்டும் என்பது இதனால் அறியத்தக்கதாம். மருள் - பொருள் அல்லவற்றைப் பொருள் என்றுணர்வது. மருள்நீக்கியார் எனப் பெயர் பெற்றதற்கேற்ப, உலகவர் மருளைத் தம் வாழ்வானும் வாக்கானும் நீக்கிய நீர்மையைப் பின்வரும் அவர்தம் வரலாற்றால் அறியலாம்.

மாதினியார் திருவயிற்றின்
மன்னியசீர்ப் புகழனார்
காதலனார் உதித்ததற்பின்
கடன்முறைமை மங்கலங்கள்
மேதகுநல் வினைசிறப்ப
விரும்பியபா ராட்டினுடன்
ஏதமில்பல் கிளைபோற்ற
இளங்குழவிப் பதங்கடந்தார். **#1283**

மாதினியாரின் அழகிய திருவயிற்றில், தோன்றிய பின்னர், செயத்தகும் செயல் முறைமையால் வரும் மங்கலச் செயல்கள் பலவற்றையும் செய்து, மேம்பட்ட அச்செயல்கள் சிறக்குமாறு, விரும்பிய பாராட்டுடன், குற்றமில்லாத உறவினர் செய்திட, புகழனார் தம் திரு மகனாரான மருள்நீக்கியார் இளம் குழவிப்பருவத்தைக் கடந்தார்.

விளக்கவுரை

கடன் முறைமை மங்கலங்கள் - செயத்தகும் நற் செயல்கள்; அவை இறைவழிபாடு செய்தல், பெயர் சூட்டுதல், சோறு ஊட்டுதல் முதலாயினவாம், விரும்பிய பாராட்டு - சுற்றத்தினரும் ஊரவரும் செய்யும் சிறப்புகள்.

மருணீக்கி யார்சென்னி
மயிர்நீக்கும் மணவினையுந்
தெருணீர்ப்பன் மாந்தரெலாம்

மகிழ்சிறப்பச் செய்ததற்பின்
பொருணீத்தங் கொளவீசிப்
புலன்கொளுவ மனமுகிழ்த்த
சுருணீக்கி மலர்விக்குங்
கலைபயிலத் தொடங்குவித்தார். **#1284**

மருணீக்கியார் என்று பெயர் சூட்டப் பெற்ற அவருக்கு, தலைமயிரை நீக்குதலான மணவினையையும் அறி வுடைய மக்கள் பலரும் மகிழ்ச்சிமிகுமாறு செய்த பின்பு, தம் பொருள்களை வெள்ளம் என ஆசிரியருக்குப் பெருக உதவி, அறிவைப் பெருக்கச் செய்தலால், உள்ளம் சுருண்டிருந்த நிலையை நீக்கி மலரச் செய்கின்ற கலைகளைப் பயிலத்தொடங்குவிக்கும் நற் செயலையும் செய்தனர்.

விளக்கவுரை

குழந்தை பிறந்தபொழுது நின்ற தலைமயிரை உரிய பருவத்தில் களைதல் மரபு. இது தெய்வம் பராவியும் பலர் கூடியும் செய்யப் பெறும் நல்வினையாதலின் இதனை மணவினை என்றார். நீத்தம் கொள - வெள்ளம் என. மனம் முகிழ்த்த சுருள் - இதழ்கள் சுருண்டு குவிந்த மொட்டென இருக்கும் மனம். அம்மனம் விரிதலாவது, கற்கப்படும் பொருளை ஐயந்தீரக் கற்றலும் அதன் வழிநிற்கும் உணர்ச்சியும் எழுச்சியும் பெறுதலுமாம். `உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் ..... கற்றல் நன்றே` *(புறநா. 183)* என்பதால், அப்பொருள் வெள்ளம் எனத் தொடர்ந்து ஆசிரியருக்கு வழங்கப் பெற்றமை அறியலாம். கலை பயிலத் தொடங்கும் நாளில், பலர்க்கும் பொருள் வழங்கி அவர்களின் மகிழ்வும் ஆசியும் பெற்றுத் தொடங்கல் மரபு, அந்நிலையில் பொருளை வெள்ளம் என வழங்கினர் என்றலும் ஒன்று.

தந்தையார் களிமகிழ்ச்சி
தலைசிறக்கும் முறைமையினால்
சிந்தைமலர்ந் தெழும்உணர்வில்
செழுங்கலையின் திறங்களெல்லாம்
முந்தைமுறை மையிற்பயின்று
முதிரஅறி வெதிரும்வகை
மைந்தனார் மறுவொழித்த
இளம்பிறைபோல் வளர்கின்றார். **#1285**

தந்தையார் கொண்ட பெருமகிழ்ச்சி மேன் மேலும் வளரும் முறைமையால், சிந்தை மலர்ந்து எழும் உணர்வால், செழுமையான கலைகள் எல்லாவற்றையும் முன்னைய தொடர்பினால் எளிதில் கற்று, முதிர்ந்த அறிவு வெளிப்படும் தன்மையால், மைந்தனாரான மருணீக்கியார் களங்கம் நீங்கப் பெற்ற இளம்பிறை போல வளர்ந்து

வருவாராயினர்.

விளக்கவுரை

`சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே`, *(புறநா. 312)* `தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து முந்தி யிருப்பச் செயல்` *(குறள், 67)* எனவரும் திருவாக்குகளால் `தந்தையார் களி மகிழ்ச்சி தலைசிறக்க` என விதந்தோதினார். `ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்` *(குறள், 69)* என்பவாகலின் தாய் களி மகிழ்ச்சி கோடலும் இயல்பேயாம். `ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்பு உடைத்து` *(குறள், 398)* என்பவாகலின், `முந்தை முறைமையிற் பயின்று` என்றார். இம்முறை மையால் எளிதாகவும் நிறைவாகவும் இனிதாகவும் கற்றமை புலனாகும்.

அந்நாளில் திலகவதி
யாருக்காண் டாறிரண்டின்
முன்னாக ஒத்தகுல
முதல்வேளாண் குடித்தலைவர்
மின்னார்செஞ் சடையண்ணல்
மெய்யடிமை விருப்புடையார்
பொன்னாரும் மணிமவுலிப்
புரவலன்பால் அருளுடையார். **#1286**

அக்காலத்தே திலகவதி அம்மையாருக்குப் பன்னிரண்டு ஆண்டுகள் நெருங்கிவர, குலம், குணம் முதலியவற்றால் ஒப்புடைய முதன்மையான வேளாண் குலத்திலும் குடியிலும் வந்த தலைவரும், மின்போல் ஒளிவிடும் சிவந்த சடையையுடைய அண்ண லாரான பெருமானாரிடம் மெய் அடிமைத் திறம் செய்வதில் விருப்பம் உடையவரும், பொன்னால் ஆகிய மணிகள் பதிக்கப் பெற்ற முடி தாங்கிய மன்னரிடம் அருள் உடையவரும்.

விளக்கவுரை

`முறையுறக் கிளந்த ஒப்பினது வகை` *(தொல். மெய்ப். 25)* பத்தானும் ஒத்தவர் என்பார், `ஒத்தகுலம்` என அதற்குத் தோற்றுவாய் செய்தார்.

ஆண்டகைமைத் தொழிலின்கண்
அடலரியே றெனவுள்ளார்
காண்டகைய பெருவனப்பிற்
கலிப்பகையார் எனும்பெயரார்
பூண்டகொடைப் புகழனார்
பாற்பொருவின் மகட்கொள்ள
வேண்டியெழுங் காதலினால்

மேலோரைச் செலவிட்டார். **#1287**

வீரம் மிக்க போர்த் தொழிலில் வலிய ஆண் சிங்கத்தைப் போன்றவரும், காண்டற்கினிய தக்க பேரழகுடையவரும், ஆன கலிப்பகையார், கொடைத்தன்மை பூண்ட புகழனாரிடம் அவரு டைய ஒப்பில்லாத மகளாரைத் தாம் மணமகனாராகக் கொள்ளும் பொருட்டு விரும்பி எழும் காதலால் உரிய பெரியோர்களை அனுப்பினார்.

விளக்கவுரை

பூண்ட கொடை - கொடை செய்தலையே விரதமாகக் கொண்ட.
பூணுதல் - விரதமாகக் கோடல்;
`ஈண்டுஅறம் பூண்டார்` *(குறள் - 23)* என்புழிப்போல.
இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அணங்கனைய திலகவதி
யார்தம்மை யாங்கவர்க்கு
மணம்பேசி வந்தவரும்
வந்தபடி அறிவிப்பக்
குணம்பேசிக் குலம்பேசிக்
கோதில்சீர்ப் புகழனார்
பணங்கொளர வகல்அல்குல்
பைந்தொடியை மணம்நேர்ந்தார். **#1288**

அங்ஙனம் மணம் பேச வந்த மேலோர், திருமகளைப் போன்ற திலகவதியாரை, அங்கு அக்கலிப்பகையாருக்கு மணம் செய்யும் திறத்தைப் பேசித் தாம் வந்த செய்தியைத் தெரிவிக்க, குணங்களையும் குல முறைமையையும் பேசிக் குற்றமற்ற சிறப்புடைய புகழனார், பாம்பின் படத்தைப் போன்ற அல்குலையுடைய பசுமை யான வளையல்களை அணிந்த தம் மகளாரை, மணம் செய்து தர இசைவு அளித்தார்.

விளக்கவுரை

****

கன்னிதிருத் தாதையார்
மணமிசைவு கலிப்பகையார்
முன்னணைந்தார் அறிவிப்ப
வதுவைவினை முடிப்பதன்முன்
மன்னவற்கு வடபுலத்தோர்
மாறேற்க மற்றவர்மேல்
அன்னவர்க்கு விடைகொடுத்தான்
அவ்வினைமேல் அவரகன்றார். **#1289**

இளம் கன்னியராய திலகவதியாரின் தந்தையார், இங்ஙனம் மணம் கொள இசைந்ததை, அவரிடம் முன் வந்தவர்கள் சென்று கலிப்பகையாரிடம் அறிவிக்க, அங்ஙனமே மணச் செய்கை முடிப்பதற்கு முன்னமேயே, மன்னனுடன் வட நாட்டரசர்கள் பகை மேற்கொண்டு போர் செய்ய வந்தனராக, அப்பகைவருடன் போர் செய்யும் பொருட்டாகக் கலிப்பகையாருக்கு விடைதந்து அனுப்பி னான் அரசன். அக்கலிப்பகையாரும் அவ்வினைமேற் சென்றார்.

விளக்கவுரை

இங்குக் குறிக்கப் பெற்ற மன்னன் மகேந்திரவர்மன் அல்லது அவன் கீழ் வாழ்ந்த குறுநில மன்னன் ஆகலாம் என்பர் சிவக்கவிமணியார் *(பெரிய.பு.உரை).*

வேந்தற்குற் றுழிவினைமேல்
வெஞ்சமத்தில் விடைகொண்டு
போந்தவரும் பொருபடையும்
உடன்கொண்டு சிலநாளில்
காய்ந்தசினப் பகைப்புலத்தைக்
கலந்துநெடுஞ் சமர்க்கடலை
நீந்துவார் நெடுநாள்கள்
நிறைவெம்போர்த் துறைவிளைத்தார். **#1290**

மன்னனுக்கு என இவ்வாறு போர் செய்ய நேர்ந்ததால், போர் மேற் சென்ற கலிப்பகையாரும் விடை பெற்றுக் கொண்டு, போரியற்றும் படைகளையும் உடன் கொண்டு சென்று, சில நாள்களில் சினத்துடன் அடர்த்து வந்த பகைவரை அடைந்து, அவர்களுடன் பொரும் போர்க் கடலை நீந்தி, வெற்றி பெறும் எண்ணத்தினராய் நெடு நாள்கள் நிறைவான கொடிய போரைச் செய்தார்.

விளக்கவுரை

``வேந்துவினை இயற்கை, வேந்தனின் ஒரீஇய
ஏனோர் மருங்கினும் எய்திடன் உடைத்தே.``
-தொல்.-அகத்., *32*
``மன்னர் பாங்கின் பின்னோ ராகுப.`` -தொல்.-அகத்., *30*
என்பவாகலின், அரசன் பகைமேற் சென்று பொரும் போரை அவனுக்கு உற்றுழி உதவும், வேளாண் மக்களும் செய்துவந்தனர் எனத் தெரிகிறது. அவ்வகையிலேயே கலிப்பகையாரும் சென்றார்.

ஆயநா ளிடைஇப்பால்
அணங்கனையாள் தனைப்பயந்த
தூயகுலப் புகழனார்

தொன்றுதொடு நிலையாமை
மேயவினைப் பயத்தாலே
இவ்வுலகை விட்டகலத்
தீயஅரும் பிணியுழந்து
விண்ணுலகில் சென்றடைந்தார். **#1291**

அத்தகைய நாள்களில், இங்குத் திருமகள் அனைய திலகவதியாரைப் பெற்ற, தூய குலத்தில் தோன்றிய புகழனார், வழிவழி வரும் நிலையாமையைப் பொருந்திய வினைப் பயனால், இவ்வுலகத்தை விட்டு நீங்குமாறு, தீயதாய நீக்குதற்கரிய நோயினால் வருந்தி, விண்ணுலகத்தைச் சென்று அடைந்தார்.

விளக்கவுரை

``பாங்கரும் சிறப்பின் பல்லாற்றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே`` -தொல்.-புறத்., *23*
நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு. -திருக்குறள், *336*
என்பனவாகிய திருவாக்குகளை உட்கொண்டு, `தொன்று தொடு நிலையாமை` என்றார்.

மற்றவர்தாம் உயிர்நீப்ப
மனைவியார் மாதினியார்
சுற்றமுடன் மக்களையும்
துகளாக வேநீத்துப்
பெற்றிமையால் உடனென்றும்
பிரியாத உலகெய்தும்
கற்புநெறி வழுவாமல்
கணவனா ருடன்சென்றார். **#1292**

அந்நிலையில் அவர் உயிர்துறக்க, அவருடைய மனைவியாரான மாதினியாரும், சுற்றத்தாருடன் மக்களையும் தூசா கவே கருதி, நீத்து, மேன்மையுடைய தன்மையினால் என்றும் உடன் பிரியாத உலகில் அடைதற்குரிய கற்பு நெறியினின்றும் திறம்பாமல், கணவனாருடன் சென்றார். (உயிர் துறந்தார்).

விளக்கவுரை

`உடம்பொடு உயிரிடை என்ன` *(குறள், 1122)*, `வாழ்தல் உயிர்க் கன்னள் ஆயிழை`*(குறள், 1124)*, `இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனா`*(குறள், 1315)* என்பனவாகிய குறட்பாக்களை நினைவு கூருமாறு, இந்நிகழ்ச்சி அமைந்து உள்ளது.

தாதையா ரும்பயந்த

தாயாரும் இறந்ததற்பின்
மாதரார் திலகவதி
யாரும்அவர் பின்வந்த
காதலனார் மருணீக்கி
யாரும்மனக் கவலையினால்
பேதுறுநற் சுற்றமொடும்
பெருந்துயரில் அழுந்தினார். **#1293**

தந்தையாரும் பெற்ற தாயாரும் இறந்த பின்பு, மங்கையாரான திலகவதி அம்மையாரும், அவருக்குப் பின்பு தோன்றிய மருணீக்கியாரும் உள்ளத்தில் கொண்ட கவலையினால் வருந்தும் நல்ல சுற்றத்துடனே பெருந்துன்பத்தில் ஆழ்ந்தனர்.

விளக்கவுரை

****

ஒருவாறு பெருங்கிளைஞர்
மனந்தேற்றத் துயரொழிந்து
பெருவானம் அடைந்தவர்க்குச்
செய்கடன்கள் பெருக்கினார்
மருவார்மேல் மன்னவற்கா
மலையப்போங் கலிப்பகையார்
பொருவாரும் போர்க்களத்தில்
உயிர்கொடுத்துப் புகழ்கொண்டார். **#1294**

அருகிருந்த பெருஞ்சுற்றத்தார், அவர்தம் உள்ளத்தைத் தேற்ற, ஒருவகையால் வருத்தம் நீங்கிய அவ்விருவரும் பெரிய விண்ணுலகை அடைந்த பெற்றோர்க்குச் செய்ய வேண்டிய கடன்கள் எல்லாம் செய்தனர். மன்னனுக்காகப் போர் செய்யச் சென்ற கலிப்பகையார், பகைமை நிறைந்த போர்க்களத்தில் உயிரைக் கொடுத்துப் புகழைக் கைக்கொண்டார் (இறந்தார்).

விளக்கவுரை

`புகழெனில் உயிரும் கொடுப்பர்`*(புறநா.182)* `இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே பிழைத்தது ஒறுக்கிற் பவர்?` *(குறள்,779)* எனவரும் திருவாக்குகளால், `உயிர்கொடுத்துப் புகழ்கொண்டார்` என்றார்.

வெம்முனைமேற் கலிப்பகையார்
வேல்வேந்தன் ஏவப்போய்
அம்முனையில் பகைமுருக்கி
அமருலகம் ஆள்வதற்குத்
தம்முடைய கடன்கழித்த

பெருவார்த்தை தலஞ்சாற்றச்
செம்மலர்மேல் திருவனைய
திலகவதி யார்கேட்டார். **#1295**

கலிப்பகையார் அரசன் ஏவலின் படியே பகைவர் மீது சென்று, அப்போர் முகத்தில் பகைவரை அழித்து, விண்ணு லகத்தை ஆட்சி கொள்வதற்காகத் தம் கடனை நிறைவேற்றிய பெரு வார்த்தையை ஊரார் கூறச், செந்தாமரை மீது இருக்கும் திருமகள் போன்ற திலகவதியார் கேட்டறிந்தார்.

விளக்கவுரை

பெருவார்த்தை - இறந்தார் என்பதைக் கூறும் மங்கல வழக்கு.

எந்தையும்எம் அனையும்அவர்க்
கெனைக்கொடுக்க இசைந்தார்கள்
அந்தமுறை யால்அவர்க்கே
உரியதுநான் ஆதலினால்
இந்தவுயிர் அவருயிரோ
டிசைவிப்பன் எனத்துணிய
வந்தவர்தம் அடியிணைமேல்
மருணீக்கி யார்விழுந்தார். **#1296**

`என்னுடைய தந்தையாரும் தாயாரும் என்னை அவர்க்குத் தர இசைந்தனர். அம் முறையால் நான் அவர்க்காக உரியது (உரியவள்) ஆதலால், இந்த என் உயிரை அவருடைய உயிருடன் சேரச் செய்வேன்` என்று துணிவுகொள்ள, அவருடைய திருவடிகளில் மருணீக்கியார் விழுந்தனராகி.

விளக்கவுரை

அவர்க்கே உரியவள் நான் எனக் கூறாது, அவர்க்கே உரியது நான் என்றது, தான் என்றோ, தனக்கென ஒன்றுடையது என்றோ கருதுதல் இன்றித் தன்னைத் தன் கணவருக்கே முற்றிலும் உடைமையாக்கிக் கொண்டிருத்தலினாலேயாம். `இவனுக்காகத் தாங்கிய உடம்பு`*(தி.12 பு.24 பா.49)* எனப் பின் காரைக்கால் அம்மையார் அருளுவதும் காண்க.

அந்நிலையில் மிகப்புலம்பி
அன்னையும்அத் தனும்அகன்ற
பின்னையுநான் உமைவணங்கப் பெறுதலினால் உயிர்தரித்தேன்
என்னையினித் தனிக்கைவிட்
டேகுவீர் எனில்யானும்
முன்னம் உயிர் நீப்பனென
மொழிந்திடரின் அழுந்தினார். **#1297**

அந்நிலையில் மிகவும் புலம்பித் தாயும் தந்தையும் இறந்த பின்னும் நான் உம்மை வணங்கப் பெறுவதனால் உயிர் வாழ்ந்தேன். இனி என்னைத் தனியாக விட்டு நீவிர் செல்வீராயின் நானும் உமக்கு முன்னர் உயிர் விடுவேன் எனக் கூறித் துன்பத்தால் வருந்தினார்.

விளக்கவுரை

தனிக் கைவிட்டு - தனித்திருக்குமாறு நீத்து.

தம்பியார் உளராக
வேண்டுமென வைத்ததயா
உம்பருல கணையவுறு
நிலைவிலக்க உயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்கா
தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து
திலகவதி யாரிருந்தார். **#1298**

தம் தம்பியார் உயிர் வாழ வேண்டும் என்று உளம் கொண்ட கருணையானது, தேவர் உலகம் செல்லும் துணிவு கொண்ட நிலையை விலக்க, உயிரைத் தாங்குவாராகி, அழகிய பொன்னும் மணியும் உடைய மணிமாலைகளைத் தாங்காது, எவ்வுயிரும் தம் முயிர் போல் இரங்கியருளும் அருளைத் தாங்கி, நின்று, இவ்வுலகத்தில் மனையில் இருந்து தவத்தைச் செய்து கொண்டு திலகவதியார் இருந்தார்.

விளக்கவுரை

அழகிய பொன்னும் மணியும் செறிந்த திருமங்கல நாணைத் தாங்காது, எல்லா உயிர்களுக்கும் அருளைத் தாங்கி என்றார், இரக்க மீதூர்வு தோன்ற. மனைத் தவம் - மனையைவிட்டுப் புறம் போதலன்றி, சிவ வழிபாட்டையும் உரிய நோன்புகளை மேற்கொண்டும் ஒருமையுணர்வு கொண்டு திருவைந்தெழுத்தை எண்ணியும் வாழும் நிலை. இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

மாசின்மனத் துயரொழிய
மருணீக்கி யார்நிரம்பித்
தேசநெறி நிலையாமை
கண்டறங்கள் செய்வாராய்க்
காசினிமேல் புகழ்விளங்க
நிதியளித்துக் கருணையினால்
ஆசில்அறச் சாலைகளும்
தண்ணீர்ப்பந் தரும்அமைப்பார். **#1299**

குற்றமற்ற தம் உள்ளத்தின் துன்பம் நீங்க, பின் மருணீக்கியார் வயது

நிரம்பி வளர்ச்சி பெற்ற அளவில், உலக வாழ்க்கை நிலையாமையுடையது என்பதை உணர்ந்து, அறங்களைச் செய்வாராய், உலகில் புகழ் விளங்குமாறு செல்வத்தைத் தந்து, குற்றமற்ற அறச்சாலைகளையும் தண்ணீர்ப் பந்தலையும் அருளுடன் அமைப்பாராகி.

விளக்கவுரை

நிரம்பி - வயது நிரம்பிய அளவில். `அன்றுஅறிவாம் என்னாது அறஞ்செய்க` *(குறள், 36)* `நாளைச் செய்குவம் அறம் எனில்` `இன்றே கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்` *(சிலப். வஞ்சிக்.நடுகல்., 179-180)* என்பன வாய்மையாதலின், `நிலையாமை கண்டு அறங்கள் செய்வாராய்` என்றார். உணவு, உடை, மருத்துவம், அறிவு முதலான அனைத்தையும் வழங்க, அவ்வவற்றிற்குரிய அறச் சாலைகள் வைத்தமை தோன்ற `ஆசில் அறச்சாலைகள்` என்றார்.

காவளர்த்தும் குளந்தொட்டும்
கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன
மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக
நல்கியும்நா னிலத்துள்ளோர்
யாவருக்குந் தவிராத
ஈகைவினைத் துறைநின்றார். **#1300**

பூஞ்சோலைகளை வளர்த்தும், குளங்களைத் தோண்டியும், நேர்மையில் தவறாது ஒழுகி வருவார்க்கு வேண்டும் பொருள்களைத் தந்தும், விருந்தினரைப் பேணியும், நாவலர்களுக்கு வளம் பெருகுமாறு செல்வம் முதலியவற்றைக் கொடுத்தும், இன்னும் இவ்வுலகில் உள்ளார் யாவர்க்கும் பாகுபாடின்றித் தவிராத ஈகைச் செயலில் காணும் துறைதொறும் ஒழுகி மாறாது நின்றார்.

விளக்கவுரை

தொடுதல் - தோண்டுதல், `தொட்டனைத்து ஊறும் மணற்கேணி` *(குறள், 396)* எனவருவதும் காண்க. ஈகை பற்றிக் கூறுபவர் பலர். அதனை வகைப்படுத்திப் பல துறைகளாக அமைத்து, அவற்றை `ஈகை வினைத் துறை` என்று குறித்த பெருமை சேக்கிழாரையே சாரும். காவளர்த்தலும் குளம் தொடுதலும், மனித இனத்திற்கன்றி ஏனைய மன்னுயிர்களுக்கும் பயன்படவாம். வீட்டிற்கு ஒரு மரம் நடுவோம் என ஆரவார நீர்மையில் விளங்கும் இந்நாளைய உலகு, நாவரசரின் இவ்வரிய தொண்டுகளை நினைவு கூர்க.

நில்லாத உலகியல்பு
கண்டுநிலை யாவாழ்க்கை
அல்லேன்என் றறத்துறந்து
சமயங்க ளானவற்றின்
நல்லாறு தெரிந்துணர
நம்பர்அரு ளாமையினால்
கொல்லாமை மறைந்துறையும்
அமண்சமயம் குறுகுவார். **#1301**

நிலையில்லாத இவ்வுலகியல்பைக் கண்டு, `நிலையற்ற இந்த நிலவுலக வாழ்வில் நின்று உழலகில்லேன்` என முற்றத் துறந்து, சமயங்களின் நல்ல நெறியைத் தெரிந்து உணர்வதற்கு நம்பரான சிவபெருமான் அருள் செய்யாமையால், கொல்லாமையை மேற்கொண்டு அதனுள் மறைந்து வாழும் சமண சமயத்தைச் சார்பவர் ஆகி.

விளக்கவுரை

`அவன் அருளாலே அவன் தாள் வணங்கி` *(தி.8 ப.1 வரி.18)* என்பர் மணிவாசகர். ஆதலின் சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறவும் பெருமானின் திருவருள் வேண்டும். அந்நிலை கைகூடாமையின் `நம்பர் அருளாமையினால்` என்றார்.

பாடலிபுத் திரமென்னும்
பதிஅணைந்து சமண்பள்ளி
மாடணைந்தார் வல்லமணர்
மருங்கணைந்து மற்றவர்க்கு
வீடறியும் நெறியிதுவே
எனமெய்போல் தங்களுடன்
கூடவரும் உணர்வுகொளக்
குறிபலவுங் கொளுவினார். **#1302**

பாடலிபுத்திரம் என்ற பதியைச் சேர்ந்து, அதன்கண் உள்ள சமண்பள்ளியைச் சென்றடைந்தார். வலியச் சமணர்கள் அவரைச் சூழ்ந்து, அவருக்கு, வீடுபேற்றை அறியும் நெறி இதுவேயாகும் என வெளிப்பார்வையில் மெய்போல் காட்டி, தம்முடன் அவர் கூடவரும் உணர்ச்சியுண்டாகத் தக்கவாகப் பல செய்திகளையும் அவருக்குப் புகட்டினர்.

விளக்கவுரை

பாடலிபுத்திரம் - இப்பெயரால் அமைந்த நகரம் இதுபொழுது அழிந்துவிட்டது.இதற்கு அண்மையில் உள்ள நகரம் திருப்பாதிரிப்புலியூர் ஆகும். பாடலம் - பாதிரி. இம்மரப் பெயரால்

இப்பதி அழைக்கப்பெற்று வருகிறது. அசோக மன்னன், பாடலி புத்திரம் எனும் பெயர் அமைந்த தலைநகரில் ஆண்டான் என்றும், அப்பெயரால் தமிழகத்தில் கண்ட பதியே இப்பாடலிபுத்திரம் என்றும் கூறுவார் சிவக்கவிமணியார் (பெரிய.பு.உரை).

அங்கவரும் அமண்சமயத்
தருங்கலைநூ லானவெலாம்
பொங்கும்உணர் வுறப்பயின்றே
அந்நெறியிற் புலன்சிறப்பத்
துங்கமுறும் உடற்சமணர்
சூழ்ந்துமகிழ் வார்அவர்க்குத்
தங்களின்மே லாந்தரும
சேனரெனும் பெயர்கொடுத்தார். **#1303**

மருணீக்கியாரும் அங்குச் சமண சமயத்தின் கண்ணுள்ள அரிய நூல்களாய் உள்ளவற்றையெல்லாம், பெருகி எழும் உணர்ச்சியால் நன்கு பயின்றவராயும், அந்நெறியின் அறிவிற் சிறந்தவராயும் விளங்கினார். அதனால் பருத்த உடலை உடைய அச்சமணர்கள், மருணீக்கியாரைச் சூழ்ந்து மகிழ்வாராகி, அவருக்குத் தங்களின் மேம்பட்ட `தருமசேனர்` என்ற பட்டத்தைத் தந்தனர்.

விளக்கவுரை

நீதி நூல்கள், மந்திர நூல்கள், புராண நூல்கள் முதலிய பலவும் அவர்கள் செய்திருத்தலின் அவற்றை `அருங்கலை நூல்` என் றார். துங்கம் - பெரிது; உடலால் பெரியர். எனவே பருத்தவுடல் என்ற வாறாயிற்று.

அத்துறையின் மீக்கூரும்
அமைதியினால் அகலிடத்தில்
சித்தநிலை அறியாத
தேரரையும் வாதின்கண்
உய்த்தவுணர் வினில்வென்றே
உலகின்கண் ஒளியுடைய
வித்தகராய் அமண்சமயத்
தலைமையினில் மேம்பட்டார். **#1304**

அவ்வத் துறையிலும் மிக்குப் பெருகிய சிறப்பி னால், அகன்ற உலகத்தில், உயிரது நிலையை அறியாத புத்தர்களை யும், வாதில் ஆராய்ந்து தெளிந்த உணர்வினால் வெற்றி கண்டு, உலகத்தில் அறிவொளி மிக்க பெரியோராய்ச் சமண சமயத் தலைமை யில் அவர் மேம்பட்டனர்.

விளக்கவுரை

சித்த நிலை - உயிரது நிலை: சித்தமும், அதன் உட்பகுதி யாய அகக் கருவிகளின் கூட்டமுமே உயிர் என்பர் புத்தர். ஆதலின் அவரைச் `சித்த நிலை அறியாத தேரர்` என்றார்.

அந்நெறியின் மிக்கார்
அவரொழுக ஆன்றதவச்
செந்நெறியின் வைகும்
திலகவதி யார்தாமும்
தொன்னெறியின் சுற்றத்
தொடர்பொழியத் தூயசிவ
நன்னெறியே சேர்வதற்கு
நாதன்தாள் நண்ணுவார். **#1305**

அவர் அவ்வாறு அந்நெறியில் மேம்பட்டவராய் ஒழுக, பொருந்திய தவமாய செந்நெறியில் நின்ற திலகவதி அம்மை யாரும், பழமையான சுற்றத் தொடர்பு நீங்கத், தூய்மை தரும் சிவ நன்னெறியையே சேர்வதற்குச் சிவபெருமானின் திருவடிகளை வணங்குவாராகி,

விளக்கவுரை

தூய சிவநன்னெறி - மெய்யுணர்வு; இதனை ஞானம் என்பர். பாசநீக்கமும் சிவப் பேறுமே ஞானத்தின் பயனாகப் பெறத் தக்கனவாம். அவற்றைப் பெறும் நிலையில் திலகவதியார் நின்றார்.

பேராத பாசப்
பிணிப்பொழியப் பிஞ்ஞகன்பால்
ஆராத அன்புபெற
ஆதரித்த அம்மடவார்
நீராரும் கெடிலவட
நீள்கரையில் நீடுபெருஞ்
சீராரும் திருவதிகை
வீரட்டா னஞ்சேர்ந்தார். **#1306**

நீங்காத பாசக் கட்டு நீங்குமாறு, சிவபெரு மானிடத்தே மீதூர்ந்த அன்பு கொண்ட அவ்வம்மையார், புண்ணியத் தன்மை வாய்ந்த, `திருக்கெடிலம்` என்ற ஆற்றின் நீண்ட வடகரையில் அமைந்திருக்கும் நீடும் பெருஞ்சிறப்பு மிக்க திருவதிகை வீரட் டானத்தை அடைந்தார்.

விளக்கவுரை

இப்பேராறு, `தென் திசையில் கங்கை எனும் திருக் கெடிலம்` *(தி.12 சரு.1-5 பா. 89)* எனச் சிறப்பிக்கப்படுவது.

நீர்மை ஆகும் என்பது நீராகும் என நின்றது. நீர்மை - புண்ணியத் தன்மை.

சென்றுதிரு வீரட்டா
னத்திருந்த செம்பவளக்
குன்றை அடிபணிந்து
கோதில் சிவசின்னம்
அன்று முதல்தாங்கி
ஆர்வமுறத் தம்கையால்
துன்று திருப்பணிகள்
செய்யத் தொடங்கினார். **#1307**

திலகவதியார் அங்குச் சென்று வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் செம்பவள மலை என விளங்கும் வீரட்டா னேசுவரரை அடிபணிந்து, குற்றம் இல்லாத சிவசின்னங்களை அன்று முதல் அணிந்து கொண்டு, அன்பு பொருந்தத் தம் கையால் பொருந் திய திருப்பணிகளைச் செய்யத் தொடங்கினார்.

விளக்கவுரை

சிவசின்னம்: திருநீறும், கண்டிகையும். துன்று - பொருந்திய; பெண்பால் ஆதலின் தமக்கியன்ற பணியைச் செய்தார் என்பார்; பொருந்திய பணி என்றார்.

புலர்வதன்முன் திருவலகு
பணிமாறிப் புனிறகன்ற
நலமலிஆன் சாணத்தால்
நன்குதிரு மெழுக்கிட்டு
மலர்கொய்து கொடுவந்து
மாலைகளும் தொடுத்தமைத்துப்
பலர்புகழும் பண்பினால்
திருப்பணிகள் பலசெய்தார். **#1308**

பொழுது விடிவதற்கு முன், அக்கோயில் திரு முற்றத்தில் திருவலகு இடுதல் முதலான திருப்பணியைச் செய்தும், ஈன்றணியதல்லாத நல்ல பசுவின் சாணத்தால் நன்கு திருமெழுக் கிட்டும், மலர்களைக் கொய்து கொண்டு வந்து, மாலைகள் தொடுத்து அமைத்துக் கொடுத்தும், அன்பர் பலரும் பாராட்டுகின்ற பண்பினால் இவ்வாறு பல திருப்பணிகளையும் செய்து வந்தார்.

விளக்கவுரை

திருவலகு பணிமாறுதல் - திருக்கோயிலின் திரு முற்றத்தைப் பெருக்கித் தூய்மைப் படுத்துதல். திருமெழுக்கிடுதல் - பசுவின் சாணத்தால் எவ்வுயிர்க்கும் ஊறுபாடு நேராதவாறு மெழுகுதல். புனிறு அகன்ற - கன்று ஈன்ற அண்மைக் காலம் அல்லாத; அஃதாவது கன்று ஈன்று 10

நாள்கள் வரை அப்பசுவின் பாலையோ சாணத்தையோ பயன்படுத்தலாகாது ஆதலின், கன்று ஈன்ற *10* நாள்கள் ஈன்ற அணிமைக் காலம் ஆகும். நலம் மலி ஆன் - நன்மை அமைந்த பசு. அஃதாவது மலட்டுப் பசு, சினைப்பசு, மலந்தின்னும் பசு அல்லாத பசுக்களாம். இப்பாடற்கண் கூறப்பெறும் நெறி சரியை நெறியாகும். `நிலைபெறுமாறு எண்ணுதியேல்` *(தி.6 ப.31 பா.3)* எனத் தொடங்கும் அப்பர் திருவாக்கில் இச்சரியைநெறி நன்கு விளக்கப்பட் டுள்ளது. எனவே இப்பணியைத் தம்பியாருக்கு முன் செய்து காட்டியவர் திலகவதியார் ஆவர். `தாச மார்க்கம் சாற்றின்` *(சிவஞா. சித்தி. சுபக்.சூ.8 பா.19)* எனத் தொடங்கும் சித்தியார் திருவாக்கு, அப்பர், சேக்கிழார் ஆகிய இருவர் தம் திருவாக்கையும் நிலைக் களனாகக் கொண்டு விளக்கப்பட்டதாகும்.

நாளும்மிகும் பணிசெய்து
குறைந்தடையும் நன்னாளில்
கேளுறும்அன் புறவொழுகுங்
கேண்மையினார் பின்பிறந்தார்
கோளுறுதீ வினைஉந்தப்
பரசமயங் குறித்ததற்கு
மூளுமனக் கவலையினால்
முற்றவரும் துயருழந்து. **#1309**

சிவனடியார்களான சுற்றத்தார்களிடம் அன்பு மீதூர்ந்து ஒழுகும் கேண்மையுடைய திலகவதியார், நாள்தோறும் இவ்வாறாய பணிகளைச் செய்து, தாழ்வெனும் தன்மையுடன் ஒழுகி வரும் நாள்களில், தமக்குப் பின் பிறந்தவரான மருணீக்கியார் தம்மைப் பற்றிய தீவினையின் விளைவால் சமண் சமயம் புகுந்ததால் உண்டான மனக் கவலையால் மிக்க பெருந்துன்பத்தை அடைந்து.

விளக்கவுரை

குறைந்தடைதல் - அடியார்களிடம் மிகப் பணிவுடன் சார்தல். கேள் - சுற்றம், இங்கு அடியவர்களாகிய சுற்றம். அடியவர் களையே சுற்றமாகக் கருதியது, அவர்தம் அருளியல் வயப்பட்ட அன்பை விளக்கும். `சுற்றம் மாசிலா ஈசன் அன்பர்` *(திருவிளை. வாதவூர். 84)* எனவரும் பரஞ்சோதியார் திருவாக்கும் காண்க.

தூண்டுதவ விளக்கனையார்
சுடரொளியைத் தொழுதென்னை
ஆண்டருளின் நீராகில்
அடியேன்பின் வந்தவனை
ஈண்டுவினைப் பரசமயக்

குழிநின்றும் எடுத்தருள
வேண்டுமெனப் பலமுறையும்
விண்ணப்பஞ் செய்தனரால். #1310

திருவருள் சார்பிலேயே திளைக்குமாறு தூண்டப் படும் தவ விளக்கைப் போன்ற அவ்வம்மையார், வீரட்டானத்து எழுந் தருளி இருக்கும் இறைவரை வணங்கித், தொழுது, `பெருமானே! என்னை ஆண்டருளுவீராகில், எனக்குப் பின் தோன்றியவனைச், சேர்கின்ற தீவினையையுடைய சமண் சமயமான படுகுழியினின்றும் எடுத்தருளி அடிமை கொள்ள வேண்டும்` என்று பல முறையும் விண் ணப்பம் செய்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

தவமென்று பாயிடுக்கித்
தலைபறித்து நின்றுண்ணும்
அவமொன்று நெறிவீழ்வான்
வீழாமே அருளுமெனச்
சிவமொன்று நெறிநின்ற
திலகவதி யார்பரவப்
பவமொன்றும் வினைதீர்ப்பார்
திருவுள்ளம் பற்றுவார். #1311

`தவத்தை மேற்கொண்டதாக எண்ணிக் கொண்டு, பாயை உடுத்தியும், தலைமயிரைப் பறித்தும், நின்றவாறே உணவு உண்டும் வருந்துகின்ற அவநெறியாய சமண நெறியில் விழுந்த என் தம்பியை, அவ்வாறு விழாமல் அருள் செய்ய வேண்டும்` என்று சிவத்தையே சார்ந்து நிற்கும் திருநெறியில் வாழும் திலகவதியார் வேண்ட, பிறவி வயப்பட்டு உழலும் வினைகளைத் தீர்ப்பவரான சிவபெருமானும் அதனைத் திருவுள்ளம் பற்றுவாராய்,

விளக்கவுரை

சிவம் ஒன்று நெறி - ஈண்டுச் சரியை நெறியைக் குறிக்கும்.

மன்னுதபோ தனியார்க்குக்
கனவின்கண் மழவிடையார்
உன்னுடைய மனக்கவலை
ஒழிநீஉன் உடன்பிறந்தான்
முன்னமே முனியாகி
எமையடையத் தவம்முயன்றான்
அன்னவனை இனிச்சூலை

மடுத்தாள்வம் எனஅருளி. #1312

நிலைபெற்ற தவமுடைய அப்பெருமாட்டி யார்தம் கனவில், இளமையான ஆனேற்றை உடைய சிவபெருமான் எழுந்தருளி, `நீ உன்னுடைய மனக் கவலையை ஒழிவாயாக, உன் தம்பி முன்னமே ஒரு முனிவனாக இருந்து எம்மை அடைவதற்குத் தவம் செய்தனன், இனி அவனுக்குச் சூலை நோய் தந்து ஆட் கொள் வோம்` என அருளிச் செய்து,

பண்டுபுரி நற்றவத்துப்
பழுதினள விறைவழுவும்
தொண்டரைஆ ளத்தொடங்கும்
சூலைவே தனைதன்னைக்
கண்தருநெற் றியரருளக்
கடுங்கனல்போல் அடுங்கொடிய
மண்டுபெருஞ் சூலைஅவர்
வயிற்றினிடைப் புக்கதால். #1313

முற்பிறவியில் செய்த நற்றவத்தில் சிறிதளவு பிழை செய்த தொண்டரான மருணீக்கியாரை, ஆட்கொள்ளத் தொடங்கும் சூலை நோயை, நெற்றிக் கண்ணராகிய சிவபெருமான் அருள் செய்ய, கொடிய தீயைப் போல் சுடுகின்ற அம்மிகப் பெருஞ் சூலைநோய் அவருடைய வயிற்றுள் புகுந்தது.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களாலும், நாவரசர் முற்பிறவியில் ஒரு முனிவராய்த் தவம் இயற்றி இருந்தமையும், அதில் நேர்ந்த ஒரு சிறு பிழையால் இப்பிறவி பெற நேர்ந்தமையும் புலனாகின்றன. இறை வழு - சிறிதளவிலான குற்றம். இது, சுதபா முனிவராக இருந்த பொழுது, கயிலையைப் பெயர்த்த இராவணனுக்கு உய்யும் வழி காட்டியமை என்பர் ஒரு சாரார். உண்மையுணர வந்த சாந்தர் எனும் முனிவருக்குச் சமணமே பெரிது என்று அறிவுறுத்தியமை என்பர் ஒருசாரார். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

அடைவில்அமண் புரிதரும
சேனர்வயிற் றடையும்அது
வடஅனலுங் கொடுவிடமும்
வச்சிரமும் பிறவுமாம்
கொடியவெலாம் ஒன்றாகும்
எனக்குடரின் அகங்குடையப்
படருழந்து நடுங்கிஅமண்
பாழியறை யிடைவீழ்ந்தார். #1314

சேரத் தகாத சமண சமயத்தை விரும்பி ஒழுகிய தருமசேனரின் வயிற்றுள் புக்க அச்சூலை நோய், வடவைத் தீயும், கொடிய நஞ்சும், வயிரமும் ஆகிய இவை போன்ற கொடுமை செய் யும் மற்றவை எல்லாமும் ஒன்றுகூடி வந்தனவோ என எண்ணுமாறு குடரின் உள்ளே குடைய, அவர் துன்புற்று வருந்திச் சமணர் பாழியில் உள்ள அறையில் விழுந்தார்.

விளக்கவுரை

அடைவு - சேர்தல்; இல் - இல்லாத. எனவே சேரத்தகாத என்பதாயிற்று. வடவனல் - வடவா எனும் பெயருடைய தீ. இது குதிரை முகமாகக் கடலகத்து இருப்பது என்றும், ஊழிக் காலத்தில் இது பெரிதும் பரவிக் கடலையும் உலகையும் அழிக்கும் என்றும் கூறுவர். வச்சிரம் - வயிரம். ஒன்பான் மணிகளுள் ஒன்று. இதனைப் பொடி யாக்கி உண்ண உயிர் நீங்கும்.

அச்சமயத் திடைத்தாம்முன்
அதிகரித்து வாய்த்துவரும்
விச்சைகளால் தடுத்திடவும்
மேன்மேலும் மிகமுடுகி
உச்சமுற வேதனைநோய்
ஓங்கியெழ ஆங்கவர்தாம்
நச்சரவின் விடந்தலைக்கொண்
டெனமயங்கி நவையுற்றார். **#1315**

அச்சமண் சமயத்தில், தாம் முன்பு பழகிப்பயன் தந்துள்ள மந்திரம் முதலான வித்தைகளால் தடுக்கவும், அந்நோய் குறையாது மேன்மேலும் மிகவும் வளர்ந்து பெருகித் துன்பம் தரும்படி மிக்கு எழுந்ததால், ஆண்டிருந்த தருமசேனரும், பாம்பினிடமுள்ள நஞ்சு தலைக்கொண்டாற் போல மயங்கிச் சோர்ந்தார்.

விளக்கவுரை

அதிகரித்து - பயின்றுவந்து. வாய்த்து வரும் - பயன் பட்டு வரும். ஊட்டுவான் - உணவு சமைத்துப் படைக்கும் ஏவலா ளன். திலகவதியாரிடத்துச் சேர்ப்பிக்கும் நல்லூழ்ப்பயனை ஊட்டு வான் எனவும் இச்சொல் குறிப்பால் உணர்த்தி நிற்பதை அறிந்து மகிழலாம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அவர்நிலைமை கண்டதற்பின்
அமண்கையர் பலர்ஈண்டிக்
கவர்கின்ற விடம்போல்முன்
கண்டறியாக் கொடுஞ்சூலை
இவர்தமக்கு வந்ததினி

யாதுசெயல் என்றழிந்தார்
தவமென்று வினைபெருக்கிச்
சார்பல்லா நெறிசார்வார். **#1316**

தருமசேனரின் நிலையைக் கண்ட அளவில், தவம் என்று கூறிக் கொண்டு, தீவினையையே பெருக்கி, நல்ல பற்றுக் கோடற்ற, சமண நெறியினைச் சார்ந்த கீழ்மக்கள் பலரும் கூடி, `உயி ரைக் கவரும் நஞ்சைப் போல், முன் எங்கும், எவரும் கண்டறியாத இக் கொடிய சூலை நோய் இவருக்கு வந்ததே; இனி என் செய்வோம்` என்று மனம் வருந்தினர்.

விளக்கவுரை

****

புண்தலைவன் முருட்டமணர்
புலர்ந்துசெயல் அறியாது
குண்டிகைநீர் மந்திரித்துக்
குடிப்பித்தும் தணியாமை
கண்டுமிகப் பீலிகொடு
கால்அளவுந் தடவிடவும்
பண்டையினும் நோவுமிகப்
பரிபவத்தால் இடருழந்தார். **#1317**

புண்ணுடைய தலையையும், வலியமுரட்டுத் தன்மையையும் உடைய சமணர் மனம் அழிந்து, செய்வதறியாது, தம் குண்டிகையில் இருந்த நீரை மந்திரித்துக் குடிக்கச் செய்தும், நோய் தணியாததைக் கண்டு, மேலும் மயிற் பீலிகொண்டு உடல் முழுதும் தடவிவிடவும், முன்னை விட நோய் மிகுதியானது. அதனால் அவர்கள் மனம் வருந்தினர்.

விளக்கவுரை

****

தாவாத புகழ்த்தரும
சேனருக்கு வந்தபிணி
ஓவாது நின்றிடலும்
ஒழியாமை உணர்ந்தாராய்
ஆஆநாம் என்செய்கோம்
என்றழிந்த மனத்தினராய்ப்
போவார்கள் இதுநம்மால்
போக்கரிதாம் எனப்புகன்று. **#1318**

கெடுதல் இல்லாத புகழையுடைய தரும சேனருக்கு வந்தநோய் நீங்காதாகவே, அத்தன்மையை உணர்ந்து, `ஆ! ஆ! நாம் இனி என்

செய்வோம்?` என்று வருந்திய மனத்துடன், `இது நம்மால் நீக்குதல் அரிதாகும்` என்று அகன்று செல்வாராய்,

விளக்கவுரை

****

குண்டர்களுங் கைவிட்டார்
கொடுஞ்சூலை கைக்கொண்டு
மண்டிமிக மேன்மேலும்
முடுகுதலால் மதிமயங்கிப்
பண்டையுற வுணர்ந்தார்க்குத்
திலகவதி யார்உளராக்
கொண்டவர்பால் ஊட்டுவான்
தனைவிட்டார் குறிப்புணர்த்த. **#1319**

சமணர்களும் கைவிட்டனர். கொடிய சூலை நோய் தம்மைப் பற்றிக் கொண்டு மேன்மேலும் வருத்துவதால், செய்வது அறியாது, அறிவு மயங்கிய நிலையில், முன்னைய உறவினரை நினைத்து. உணரப்புகுந்த அவருக்குத் திலகவதியாராய தமக்கையார் இருக்கிறார் எனும் நினைவு வர, அவரிடம் தம் எண்ணத்தை உணர்த்தும் பொருட்டுத் தம்மை ஊட்டுவிக்கும் ஏவலாளனை அனுப்பி வைத்தார்.

விளக்கவுரை

****

ஆங்கவன்போய்த் திருவதிகை
தனையடைய அருந்தவத்தார்
பூங்கமழ்நந் தனவனத்தின்
புறத்தணையக் கண்டிறைஞ்சி
ஈங்கியான் உமக்கிளையார்
ஏவலினால் வந்ததெனத்
தீங்குளவோ எனவினவ
மற்றவனும் செப்புவான். **#1320**

அனுப்பப்பட்ட அவனும் சென்று திருவதிகை யினைச் சேர, அதுபொழுது அரிய தவத்தவரான திலகவதியார், நறுமணம் வீசும் மலர்களையுடைய நந்தனவனத்தின் புறத்தே வர, அவரைக் கண்டு `நான் உம் இளையாரின் (தம்பியார்) ஏவலால் இங்கு வந்தேன்` எனக் கூற, அது கேட்ட திலகவதியார், `தீங்கு உளவோ?` என வினவ, அவனும் கூறுபவனாய்.

விளக்கவுரை

நறுமணம் மிக்க மலர்களை உடைய நந்தவனத்தின் புறத்தே அம்மையார்

வரக் கண்டனன் எனவே, அவன் இரவுப் பொழுது புறப்பட்டு விடியற் காலத்தே அம்மையாரைக் கண்டமை பெறப்படுகின்றது.

கொல்லாது சூலைநோய்
குடர்முடக்கித் தீராமை
எல்லாரும் கைவிட்டார்
இதுசெயல்என் முன்பிறந்த
நல்லாள்பால் சென்றியம்பி
நான்உய்யும் படிகேட்டிங்
கல்லாகும் பொழுதணைவாய்
என்றார்என் றறிவித்தான். **#1321**

`சூலை நோயானது கொல்வது மட்டும் செய்யாது, குடலை முடக்கித் தீராத நோயாக அவருக்கு வந்துள்ளது. அதனைத் தீர்க்க முயன்ற அனைவரும் கைவிட்டனர். இச்செய்தியை என் முன் பிறந்த நல்லாரிடம் போய்ச் சொல்லி, நான் உய்யும் வகையை அவரிடம் கேட்டு, இங்கு இரவுப் போதில் வருவாயாக! என்றார்` எனத் தெரிவித்தான்.

விளக்கவுரை

முன் பாடலில் ஊட்டுவான் இரவில் வந்தமை குறிப்பால் அறியப்பட்டது. ஈண்டு வெளிப்படையாகவே மருள் நீக்கியார் மறுநாள் இரவு வருக என்றமை புலப்படுகின்றது. எனவே, இச்செயல் அங்கிருந்த சமணர்க்கு அறியாமற் செய்தமை தெரியவருகின்றது. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

என்றவன்முன் கூறுதலும்
யான்அங்குன் னுடன்போந்து
நன்றறியார் அமண்பாழி
நண்ணுகிலேன் எனும்மாற்றம்
சென்றவனுக் குரையென்று
திலகவதி யார்மொழிய
அன்றவனும் மீண்டுபோய்ப்
புகுந்தபடி அவர்க்குரைத்தான். **#1322**

இவ்வாறு அவன் தம் முன்னின்று உரைக்கவும், `நான் அங்கு உன்னுடன் வந்து, நன்மை நெறி அறியாத சமணர் பாழியை அடைய மாட்டேன் என்று, என் சொல்லை நீ சென்று அவனிடம் கூறுவாய்` எனத் திலகவதியார் உரைக்க, அன்று அவனும் திரும்பிப் போய், நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறே அவருக்குச் சொன்னான்.

விளக்கவுரை

திருவருள் இதுவென உணர்ந்திருந்தமையாலும், தம்பியார் சிவநெறிச்

சார்படைய வேண்டும் எனும் உறுதிப்பாட் டானும் இங்ஙனம் திலகவதியார் கூறுவாராயினர்.

அவ்வார்த்தை கேட்டலுமே
அயர்வெய்தி இதற்கினியான்
எவ்வாறு செய்வன்என
ஈசரருள் கூடுதலால்
ஒவ்வாஇப் புன்சமயத்
தொழியாஇத் துயரொழியச்
செவ்வாறு சேர்திலக
வதியார்தாள் சேர்வனென. **#1323**

அப்பணியாளன் திலகவதியார் உரைத்ததைத் தெரிவிக்க, அதைக் கேட்டதும், தருமசேனர் தளர்ச்சி அடைந்து, இதற்கு யான் என் செய்வேன்! என்று மயங்கிய போது, சிவபெருமான் திருவருள் கூட்டப், `பொருந்தாத இப்புன்மைச் சமயத்தில் ஒழியாத இத்துன்பம், ஒழியுமாறு செந்நெறியில் சேர்ந்த திலகவதியார் சேவடி களைச் சேர்வேன்` என்று மனத்தில் நினைத்து,

விளக்கவுரை

****

எடுத்தமனக் கருத்துய்ய
எழுதலால் எழுமுயற்சி
அடுத்தலுமே அயர்வொதுங்கத்
திருவதிகை அணைவதனுக்
குடுத்துழலும் பாயொழிய
உறியுறுகுண் டிகையொழியத்
தொடுத்தபீ லியும்ஒழியப்
போவதற்குத் துணிந்தெழுந்தார். **#1324**

மனத்தில் எழுந்த கருத்துத் தாம் பிழைத்தற் குரியதாய் இருக்க, மனத்து எழும் முயற்சியும் கூட, தளர்ச்சி நீங்கிய அளவில், திருவதிகையினை அடைவதற்கு, உடுத்தி உழன்ற பாய் ஒழியவும், உறியில் தூக்கிய குண்டிகை ஒழியவும், கொண்ட மயிற்பீலி ஒழியவும் போவதற்குத் துணிந்து எழுந்தாராகி.

விளக்கவுரை

ஒழித்து என்னாது ஒழிய என்றார். அவை நாவரசர் தம் குறிப்பாலன்றித் தாமே நீங்கியமை தோன்ற.

பொய்தருமால் உள்ளத்துப்
புன்சமணர் இடங்கழிந்து

மெய்தருவான் நெறியடைவார்
வெண்புடைவை மெய்சூழ்ந்து
கைதருவார் தமையூன்றிக்
காணாமே இரவின்கண்
செய்தவமா தவர்வாழுந்
திருவதிகை சென்றடைவார். #1325

பொய்யைத் தரும் மயக்கமுடைய உள்ளத்தராகிய இழிந்த சமணர்கடளித்தினின்றும் நீங்கி, மெய்யுணர்வை வழங்கி அதனால் வீடுபேற்றைத் தருபவனாகிய சிவபெருமானின் நன்னெறியை அடைபவராய், அதற்கேற்றவாறு வெண்மையான ஆடையை உடலில் உடுத்திக் கொண்டு, கைகொடுத்துத் தம்மைத் தாங்கி வருவார்மீது ஊன்றியவாறு, சமணர் காணாத வண்ணம், தவம் செய்யும் மாதவர் வாழ்கின்ற திருவதிகையை இரவில் சென்று அடைவாராய்,

விளக்கவுரை

மெய்தருவான் - சிவபெருமான். வெண்புடைவை மெய் சூழ்ந்து - சமணரின் காவி உடையை நீக்கிச் சைவருக்குரிய வெண்மையான உடையை அணிந்து.

சுலவிவயிற் றகம்கனலுஞ்
சூலைநோ யுடன்தொடரக்
குலவியெழும் பெருவிருப்புக்
கொண்டணையக் குலவரைபோன்
றிலகுமணி மதிற்சோதி
எதிர்கொள்திரு வதிகையினில்
திலகவதி யார்இருந்த
திருமடத்தைச் சென்றணைந்தார். #1326

சுழற்றிச் சுழற்றி வயிற்றுள் பற்றி எரியும் சூலை நோய் தம்முடனே தொடர, பொருந்தி எழும் விருப்பம் தம்மைக் கொண்டு செலுத்த, பெரிய மலை போன்று விளங்கும் மதிலின் ஒளி எதிர் தோன்றத், திருவதிகையில் திலகவதியார் இருந்த திருமடத்தைச் சென்று அடைந்தார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

வந்தணைந்து திலகவதி
யார்அடிமே லுறவணங்கி
நந்தமது குலஞ்செய்த
நற்றவத்தின் பயன்அனையீர்
இந்தவுடல் கொடுஞ்சூலைக்

கிடைந்தடைந்தேன் இனிமயங்கா
துய்ந்துகரை யேறுநெறி
உரைத்தருளும் எனவுரைத்து. **#1327**
வந்து அடைந்து திலகவதியாரின் திருவடிகளில் பொருந்த விழுந்து வணங்கி, `நம் குலம் செய்த நற்றவத்தின் பயன் போன்றவரே! இவ்வுடலில் பற்றிய கொடிய சூலை நோய்க்கு மிகவும் வருந்தி, உம்மை வந்து சேர்ந்தேன். இனி மயங்காமல் உய்ந்து கரை சேரும் வழியைத் தாங்கள் கட்டளையிட்டருளல் வேண்டும்` எனக் கூறி

தாளிணைமேல் விழுந்தயருந்
தம்பியார் தமைநோக்கி
ஆளுடைய தம்பெருமான்
அருள்நினைந்து கைதொழுது
கோளில்பர சமயநெறிக்
குழியில்விழுந் தறியாது
மூளும்அருந் துயர்உழந்தீர்
எழுந்திரீர் எனமொழிந்தார். **#1328**
தம் அடிகளில் விழுந்து வருந்தும் தம்பியாரைப் பார்த்துத், தம்மை அடிமையாக உடைய சிவபெருமானின் திரு வருளை எண்ணித் தொழுது, `நல்ல குறிக்கோள் இல்லாத பிற சமயக் குழியில் விழுந்து பெருகிய கொடிய துன்பத்தில் வருந்தினீர்! இனி எழுந்திருப்பீராக!` எனக் கூறியருளினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மற்றவ்வுரை கேட்டலுமே
மருணீக்கி யார்தாமும்
உற்றபிணி உடல்நடுங்கி
எழுந்துதொழ உயர்தவத்தோர்
கற்றைவே ணியர்அருளே
காணுமிது கழலடைந்தோர்
பற்றறுப்பார் தமைப்பணிந்து
பணிசெய்வீர் எனப்பணித்தார். **#1329**
அவர் உரைத்த அவ்வுரையைக் கேட்டதும், மருணீக்கியார் பொருந்திய நோயுடனே நிலத்தில் விழுந்த நிலையி னின்றும் எழுந்து தொழவே, உயர் தவத்தவரான திலகவதியார், `இது தொகுதியான சடையையுடைய சிவபெருமானின் திருவருளாகும், தம் திருவடிச் சார்பை அடைந்தவரின் பற்றுக்களை அறுப்பவரான அப் பெருமானைப் பணிந்து பணி செய்வீராக!` என்று பணித்தார்.

என்றபொழு தவரருளை
எதிரேற்றுக் கொண்டிறைஞ்ச
நின்றதபோ தனியாரும்
நின்மலன்பேர் அருள்நினைந்து
சென்றுதிரு வீரட்டம்
புகுவதற்குத் திருக்கயிலைக்
குன்றுடையார் திருநீற்றை
அஞ்செழுத்தோ திக்கொடுத்தார். **#1330**

எனத் திலகவதியார் அருள, அவர்தம் அருளை ஏற்றுக்கொண்டு மருணீக்கியார் வணங்க, அவர் போய்த் திருவீரட்டம் புகுவதற்குத் தகுதியுடையவராக ஆக்குவதற்குத் திலகவதியார் திருக் கயிலை மலையினுடைய இறைவரின் ஐந்தெழுத்தை ஓதித் திருநீற்றை வழங்கினார்.

விளக்கவுரை

`உனதருளால் திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன் தருவாய் சிவகதி நீ` *(தி.4 ப.94 பா.6)* என அடிகளே பின்னர் அருளுவதால், சிவநெறியைச் சார்தற்குத் திருநீறும் ஐந்தெழுத்தும் அரிய பற்றுக்கோடாகும் என அம்மையார் திருவுளம் பற்றி வழங்கியருளினார்.

திருவாளன் திருநீறு
திலகவதி யார்அளிப்பப்
பெருவாழ்வு வந்ததெனப்
பெருந்தகையார் பணிந்தேற்றங்
குருவார அணிந்துதமக்
குற்றவிடத் துய்யுநெறி
தருவாராய்த் தம்முன்பு
வந்தார்பின் தாம்வந்தார். **#1331**

சிவபெருமானின் திருநீற்றைத் திலகவதியார் அளிக்க, `எனக்குப் பெருவாழ்வு வந்தது` என எண்ணிப் பெருந் தகையாரான மருணீக்கியார் பணிந்து ஏற்றுக் கொண்டார். அதைத் தம் திருமேனி முழுதும் பொருந்த நிறைய அணிந்து கொண்டு, தமக்குத் தீங்குற்ற இடத்தில் உய்யும் வழிதருபவராகித் தம்முன்வந்த அத் திலகவதியாரின் பின்பு, அவரும் வந்தார்.

விளக்கவுரை

தமக்கையார் திருநீறு வழங்கியதும் அவர் திருமுன்பு அணிதல் மரபன்று என்று கருதியவர், சிறிது விலகியிருந்து உருவார அணிந்து கொண்டபின், அப்பெருமாட்டியாரின் பின் வந்தார். இஃது அவர்தம்

நெறியையும் நீர்மையையும் காட்டுகின்றது.

நீறணிந்தார் அகத்திருளும்
நிறைகங்குல் புறத்திருளும்
மாறவருந் திருப்பள்ளி
எழுச்சியினில் மாதவஞ்செய்
சீறடியார் திருவலகுந்
திருமெழுக்குந் தோண்டியுங்கொண்
டாறணிந்தார் கோயிலினுள்
அடைந்தவரைக் கொடுபுக்கார். **#1332**

அவ்வாறு திருநீற்றை அணிந்தவரின் உள்ளத்தில் உள்ள அக இருளும், வெளியே சூழ்ந்திருந்த இரவின் புற இருளும் மாறும்படி வரும் திருப்பள்ளி எழுச்சிக் காலத்தில், `மாதவம் செய்யும் திலகவதியம்மையார், திருவலகும், திருமெழுக்கிற்குரிய ஆவின் சாணமும் தோண்டியும் ஆகிய இவற்றை எடுத்துக் கொண்டு, கங்கை யாற்றை அணிந்த இறைவரின் கோயிலுள் தம்மை வந்தடைந்த நாய னாரையும் அழைத்துக் கொண்டு சென்றார்.

விளக்கவுரை

தம்மைப் பிரிந்திருந்த தமக்கையார் இதுகாறும் செய்து வந்த திருத்தொண்டைத் தம்பியார் கண்டு மகிழும் புண்ணியம் வாய்த்தது.

திரைக்கெடில வீரட்டா
னத்திருந்த செங்கனக
வரைச்சிலையார் பெருங்கோயில்
தொழுதுவலங் கொண்டிறைஞ்சித்
தரைத்தலத்தின் மிசைவீழ்ந்து
தம்பிரான் திருவருளால்
உரைத்தமிழ்மா லைகள்சாத்தும்
உணர்வுபெற உணர்ந்துரைப்பார். **#1333**

அலைகளையுடைய `கெடிலம்` என்ற ஆற்றின் கரையில் உள்ள வீரட்டானத்தில் இருந்த, சிவந்த பொன்மலையை வில்லாகக் கொண்ட சிவபெருமானின் பெருங்கோயிலைத் தொழுது வலமாக வந்து வணங்கி, நிலத்தில் விழுந்து வணக்கம் செய்து, தம் பெருமானின் திருவருளால் அவர் புகழைக் கூறும் தமிழ் மாலையைச் சாத்தும் உணர்வு வர உள் உணர்ந்து உரைப்பவராகி.

விளக்கவுரை

கோயில் தொழுது - தொலைவில் இருந்து பார்க்கை யில் தெரிவது கோயிலின் கோபுரம். முதலில் அதையே அடியவர் தொழுவர்.

திருக்கோயில் வழிபாட்டுமுறை குறித்துமேலும் தெளிவுற யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலரின் சைவவினாவிடை, *(சிவாலய தரிசன இயல்)* பார்க்க.

நீற்றால்நிறை வாகிய மேனியுடன்
நிறையன்புறு சிந்தையில் நேசமிக
மாற்றார்புரம் மாற்றிய வேதியரை
மருளும்பிணி மாயை அறுத்திடுவான்
கூற்றாயின வாறு விலக்ககிலீர்
எனநீடிய கோதில் திருப்பதிகம்
போற்றாலுல கேழின் வருந்துயரும்
போமாறெதிர் நின்று புகன்றனரால். **#1334**

திருநீற்றினால் நிறைந்த மேனியுடன், மிகுந்த அன்பு பொருந்திய மனத்தில் விருப்பம் மிகப், பகைவரின் முப்புரங் களை எரித்த வேதியரான வீரட்டானத்து இறைவரை, மயக்கத்தையும் சூலையையும், மாயையும் அறுக்கும் பொருட்டுக் `கூற்றாயினவாறு விலக்ககலீர்` எனத் தொடங்கும் பெருமையுடைய குற்றம் இல்லாத திருப்பதிகத்தைப் போற்றுவதால், உலகத்தில் ஏழு பிறப்புக்களிலும் வரும் துன்பமும் நீங்குமாறு திருமுன்பு நின்று பாடினார்.

விளக்கவுரை

மருள் - பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணர்வது. மாயை - உலகியல் வழிப்பட்டு நிற்கும் பிறவிச் சூழல். நாவரசரால் முதற்கண் அருளப்பெற்ற பதிகம் `கூற்றாயினவாறு` *(தி.4 ப.1)* எனத் தொடங்கும் பதிகமாகும். இது கொல்லிப் பண்ணில் அமைந்ததாகும். சூலைநோயின் துன்பத்தைப் பலபட எடுத்து விண் ணப்பித்து அதனை நீக்கியருளவேண்டும் எனும் குறிப்புடையது இப்பதிகமாகும். கோது இல் திருப்பதிகம் - உடற்குற்றமாய சூலையை யும், உயிர்க்குற்றமாகிய பிறவிப்பிணியையும் இல்லையாகச் செய்யும் திருப்பதிகம்.

மன்னும்பதி கம்அது பாடியபின்
வயிறுற்றடு சூலை மறப்பிணிதான்
அந்நின்ற நிலைக்கண் அகன்றிடலும்
அடியேன்உயி ரோடருள் தந்ததெனாச்
செந்நின்ற பரம்பொரு ளானவர்தம்
திருவாரருள் பெற்ற சிறப்புடையோர்
முன்னின்ற தெருட்சி மருட்சியினால்
முதல்வன்கரு ணைக்கடல் மூழ்கினரே. **#1335**

நிலைபெறும் அப்பதிகத்தை அவர் அருளிய பின்பு, அவரது வயிற்றில் தங்கி வருத்திய கொடிய சூலை நோயும் அக்கணமே நீங்கிடவும்,

சிறப்பென்னும் செம்பொருளான சிவ பெருமானின் திருநிறைந்த அருளைப் பெறுதற்கான சிறப்புடைய நாயனார், பொருந்தி நின்ற ஞான மயக்கத்தால் இறைவரின் அருள் ஆகிய கடலுள் மூழ்கி நின்றார்.

விளக்கவுரை

திருவார் அருள் - முத்திப் பேற்றை அடைதற்குரிய அருள்.

அங்கங்கள் அடங்க உரோமமெலாம்
அடையப்புள கங்கண் முகிழ்த்தலரப்
பொங்கும்புனல் கண்கள் பொழிந்திழியப்
புவிமீது விழுந்து புரண்டயர்வார்
இங்கென்செயல் உற்ற பிழைப்பதனால்
ஏறாத பெருந்திடர் ஏறிடநின்
தங்குங்கரு ணைப்பெரு வெள்ளமிடத்
தகுமோவென இன்னன தாமொழிவார். **#1336**

மகிழ்ச்சியினால் திருமேனி முழுதும் மயிர் சிலிர்த்து நிற்க, கண்களினின்று இடையறாது பொங்கும் ஆனந்தக் கண்ணீர் வழிந்து பெருக, தரையின் மீது விழுந்து புரண்டு மகிழ்ச்சியில் திளைத்த நாயனார், `இவ்விடத்து என் செய்கையால் உண்டான பிழை பெரிதும் இருந்தும், ஏறாத பெரிய மேட்டிலும் ஏறுமாறு உம் நிலை பெற்ற அருளான பெருவெள்ளத்தைப் பெருக்குதலும் தகுதி யாகுமோ?` என இத்தகைய சொற்களைத் தாமே கூறுபவராய்,

விளக்கவுரை

அடியேன் செய்திருக்கும் பிழைக்கு, நீர் செய்த கருணைப் பெருக்குத் தகுமோ? என்றது, தமது சிறுமையையும், இறைவரின் பெருமையையும் நினைந்து கூறியதாகும்.

பொய்வாய்மை பெருக்கிய புன்சமயப்
பொறியில்சமண் நீசர் புறத்துறையாம்
அவ்வாழ்குழி யின்கண் விழுந்தெழுமா
றறியாது மயங்கி அவம்புரிவேன்
மைவாச நறுங்குழல் மாமலையாள்
மணவாளன் மலர்க்கழல் வந்தடையும்
இவ்வாழ்வு பெறத்தரு சூலையினுக்
கெதிர்செய்குறை யென்கொல் எனத்தொழுதார். **#1337**

பொய்யை மெய் என்று பெருக்கிய இழிந்த சமயமாய், நல்வினையற்ற இழிந்த சமணர் சார்ந்து நிற்கும் புறச் சமயமான ஆழமான படுகுழியில் விழுந்து, மேலே எழுகின்ற வழியறியாது, மயங்கிப் பயனற்ற தொழிலைச் செய்து வந்த யான், மயிர்ச் சாந்தினால் மணம் கமழும் நறிய

கூந்தலையுடைய உமை யம்மையாரின் கணவரான சிவபெருமானின் மலர்போன்ற அடிகளை வந்து அடையும் இப்பெருவாழ்வினைப் பெறத்தந்த இச்சூலை நோய்க்குக் கைம்மாறாகச் செய்யக்கூடிய உதவி என்ன இருக்கின்றது? என அச்சூலை நோயை நினைந்து வணங்கினார்.

விளக்கவுரை

`குடரோடு துடக்கிமுடக்கியிட ஆற்றேன்`, `நஞ்சாகி வந்து என்னை நலிவது` என்றெல்லாம் கூறுமாறு வருத்திய சூலைக்கு `எதிர்செய் குறை என் கொல்?` எனக் கூறியது, வரவரக் கண்டு ஆராய்ந்தமையால் வந்த அருட்குறிப்பாகும். ``நன்றாய் வந்த வொருபொரு ளொருவற்கு
நன்றே யாகி நந்தினு நந்தும்
நன்றாய் வந்த வொருபொரு ளொருவற்
கன்றாய் மற்றஃ தழுங்கினு மழுங்கும்
தீதாய் வந்த வொருபொரு ளொருவற்குத்
தீதே யாகித் தீயினுந் தீயும்
தீதாய் வந்த வொருபொரு ளொருவற்
காசில் பெரும்பொரு ளாகினு மாமெனச்
சேயவ ருரைத்ததை....`` -பெருங்கதை, *2 - 1 : 58 - 66*
எனக் கொங்குவேளிர் குறிக்கும் அநுபவங்களில் நாவரசருக்கு, இது நான்காவது அநுபவ உணர்வாய் அமைவதாயிற்று. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மேவுற்றஇவ் வேலையில் நீடியசீர்
வீரட்டம் அமர்ந்த பிரானருளால்
பாவுற்றலர் செந்தமி ழின்சொல்வளப்
பதிகத்தொடை பாடிய பான்மையினால்
நாவுக்கர சென்றுல கேழினும்நின்
நன்னாமம் நயப்புற மன்னுகஎன்
றியாவர்க்கும் வியப்புற மஞ்சுறைவா
னிடையேயொரு வாய்மை எழுந்ததுவே. **#1338**

பொருந்திய அவ்வமையத்தில், சிறப்பால் மிக்க திருவீரட்டானத்து அமர்ந்திருக்கும் இறைவரின் திருவருளால், பாடற்கு இயைந்து அலர்ந்த செந்தமிழின் இனிய சொல்வளம் கொண்ட திருப்பதிக மாலையைப் பாடியருளிய முறையினால், `திருநாவுக்கரசு` என்று உனது பெயர் பலரும் விரும்புமாறு ஏழு உலகங்களிலும் நிலைபெறுவதாகுக! என எல்லார்க்கும் வியப்பு உண்டாகுமாறு மேகம் தவழும் வானில் ஓர் ஒலி எழுந்தது.

விளக்கவுரை

`கொல்லியாம் பண்ணுகந்தார் குறுக்கை வீரட்டனாரே` *(தி.4 ப.49 பா.6)*
என நாவரசர் பின் அருளுதற்கு இவ்வநுபவமும் ஏதுவாகுமோ எண்ணுக.

இத்தன்மை நிகழ்ந்துழி நாவின்மொழிக்
கிறையாகிய அன்பரும் இந்நெடுநாள்
சித்தந்திகழ் தீவினை யேன்அடையுந்
திருவோஇது என்று தெருண்டறியா
அத்தன்மைய னாய இராவணனுக்
கருளுங்கரு ணைத்திற மானஅதன்
மெய்த்தன்மை யறிந்து துதிப்பதுவே
மேல்கொண்டு வணங்கினர் மெய்யுறவே. **#1339**

இவ்வருட் செயல் நிகழ்ந்தவாற்றால் நாவின் மொழிக்கு அரசரான அன்பரும், `இத்தனை நீண்ட காலமும் சித்தத் தினுள் விளங்கிய தீவினையை உடைய நான், அடையத்தக்க பெரும்பேறு இதுவோ!` என்று நினைந்தவராய், தெளிந்தறியாத அவ்வியல்பையுடைய இராவணனுக்கும் அருளும் அருளின் பெருமையான அதன் மெய்த்தன்மையை அறிந்து, அத்திறத்தை நினைந்து வணங்குதலையே மேற்கொண்டு மெய்யுற வீழ்ந்து வணங்கினார்.

விளக்கவுரை

இராவணன் செயத்தகாத, கயிலை மலையைப் பெயர்க்க நினைந்தும், அது நிறைவேறாத நிலையில் பெருமான் தனக்கு அளித்த மறக்கருணையை நினைந்து வழுத்தினன். பெருமா னும் அவனுக்கு இரங்கியருளினன். இது போன்றதே இறைவன் தம்மளவில் அருளியதும் என்றருளுகின்றார் நாவரசர்.

பரசுங்கரு ணைப்பெரி யோன்அருளப்
பறிபுன்தலை யோர்நெறி பாழ்படவந்
தரசிங்கருள் பெற்றுல குய்ந்ததெனா
அடியார்புடை சூழதி கைப்பதிதான்
முரசம்பட கந்துடி தண்ணுமையாழ்
முழவங்கிளை துந்துபி கண்டையுடன்
நிரைசங்கொலி எங்கும் முழங்குதலால்
நெடுமாகடல் என்ன நிறைந்துளதே. **#1340**

`வணங்கத்தக்க பேரருளையுடைய பெரியவரான சிவபெருமான் அங்ஙனம் அருள் செய்ய, மயிர்பறித்த இழிந்த தலையையுடைய சமணர்களின் சமய நெறி பாழ்பட்டு அழியத், திருநாவுக்கரசர் இங்குவந்து அருள்பெற்ற அதனால் உலகம் உய்ந்தது` என்று, சிவனடியார்கள் எம்மருங்கும் சூழ்ந்த திருவதிகை நகரமானது, முரசும், தம்பட்டமும், உடுக்கையும், மத்தளமும், யாழும், முழவும், கிளையும்,

துந்துபியும், மணியும் என்ற இவற்றின் முழக்கத்துடனே நிரல்பட ஒலிக்கும் சங்கங்களும் எங்கும் ஒலித்தலால், நீண்ட பெருங் கடல் போல் நிறைந்து விளங்கியது.

விளக்கவுரை

திருவதிகைப்பதி கடல் என விளங்கியது. தண்ணுமை - மத்தளம். கிளை - வேய்ங்குழல்.

மையற்றுறை யேறி மகிழ்ந்தலர்சீர்
வாகீசர் மனத்தொடு வாய்மையுடன்
மெய்யுற்ற திருப்பணி செய்பவராய்
விரவுஞ்சிவ சின்னம் விளங்கிடவே
எய்துற்ற தியானம் அறாவுணர்வும்
ஈறின்றி எழுந்திரு வாசகமும்
கையில்திக ழும்உழ வாரமுடன்
கைத்தொண்டு கலந்து கசிந்தனரே. **#1341**

மயக்கத்தைத் தரும் சமண் சமயத் துறையினின்றும் மேல் ஏறி மகிழும் சிறப்புடைய திருநாவுக்கரசர், உள்ளத்தாலும் சொல்லாலும் உடலாலும் பொருந்திய சிவப்பணியைச் செய்பவராய், அதற்கு ஏற்றவாறு பொருந்தும் சிவச் சின்னங்களான திருநீற்றையும் கண்டிகையையும் விளங்கப் பூண்டு, இடையீடில்லாது உள்ளத்தில் தோய்ந்து நிற்கும் திருவருள் உணர்வையும், தடைப்படாது மேன்மேலும் எழும் திருப்பதிகங்கள் பொருந்திய திருவாக்கையும், கையில் விளங்கும் உழவாரப் படையினையும் கொண்டவராய்த் தம் கைத் தொண்டை மனம் கலந்து கசிந்து செய்து வந்தார்.

விளக்கவுரை

மனத்தொடு வாய்மையுடன் மெய்யுற்ற திருப்பணி - மனம், மொழி, மெய் ஆகிய முக்கருவிகளாலும் செயத்தக்க திருப்பணி. மனத்தொடு பொருந்திய பணி - தியானம் அறாத உணர்வு. மொழியொடு பொருந்திய திருப்பணி - ஈறின்றி எழும் திருவாசகம். மெய்யொடுபட்ட திருப்பணி - சிவச்சின்னம் விளங்கிட உழவாரப் பணி செய்தமை. `மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு தானம்செய் வாரின் தலை` *(குறள்,295)* எனும் குறளையும் நினைவு கூர்க.

மெய்ம்மைப்பணி செய்த விருப்பதனால்
விண்ணோர்தனி நாயக னார்கழலில்
தம்மிச்சை நிரம்ப வரம்பெறும்அத்
தன்மைப்பதி மேவிய தாபதியார்
பொய்ம்மைச்சம யப்பிணி விட்டவர்முன்

போதும்பிணி விட்டரு ளிப்பொருளா
எம்மைப்பணி கொள்கரு ணைத்திறமிங்
கியார்பெற்றனர் என்ன இறைஞ்சினரே. **#1342**

தேவர்கட்கெல்லாம் ஒப்பற்ற தலைவரான வீரட்டானத் தமர்ந்திருக்கும் இறைவரின் திருவடிகளில் உள்ளம் வைத்து விரும்பி, மெய்ம்மை குன்றாத திருப்பணிகளைச் செய்து, விண்ணப்பம் செய்ததால், தம் இச்சை நிரம்புமாறு வரம்பெற்ற அத்தெய்வத் தன்மை வாய்ந்த, திருவதிகையில் வாழும் தவத்தவரான திலகவதியார், `பொய்ம்மையான சமண் சமயத் தொடக்கை விட்டு, அவர் (தம்பியார்), இறைவர் திருமுன்பு வந்து புகுதற்கு ஏதுவான சூலை நோயைத் தந்து, மிகச் சிறிய எம்மையும் ஒருபொருளாக ஆட்கொண்ட பெருங்கருணைத் திறத்தைப் போல் இங்கு வேறு எவர் பெற்றார்?` என்று எண்ணிப் போற்றி வணங்கினார்.

விளக்கவுரை

தம்மிச்சை நிரம்ப வரம் பெறும் .... தாபதியார் என்றது திலகவதியாரையாகும். ஈண்டுப் பெற்ற வரம் `என்னை ஆட்கொண்டருளுவீராகில் அடியேன்பின் வந்தவனை ... ... பரசமயக் குழியினின்றும் எடுத்தருள வேண்டும்` என் முன் தாம் வேண்டியதற்கு ஏற்ப இறையருள் கருணை பாலித்தமையேயாகும். மேலும், `விண்ணணோர்தனி நாயகனார் கழலில் தம்மிச்சை நிரம்ப வரம் பெறும்` என ஈண்டுக் கூறுவதையும் இணைத்துக் காண, அவர் வீடு பேறடைந்தமையையும் குறிப்பால் உணர்த்துவதை அறியலாம் என்பர் சிவக்கவிமணியார் *(பெரிய.பு.உரை)*.

இன்ன தன்மையில் இவர்சிவ
நெறியினை யெய்தி
மன்னு பேரருள் பெற்றிடர்
நீங்கிய வண்ணம்
பன்னு தொன்மையிற் பாடலி
புத்திர நகரில்
புன்மை யேபுரி அமணர்தாம்
கேட்டது பொறாராய். **#1343**

இவ்வகையில் இவர் சிவநெறியினை அடைந்து, நிலைபெற்ற பேரருளைப் பெற்றுத் துன்பத்தினின்றும் நீங்கியவாற்றை, புகழ்ந்து பேசப்பெறும் பழமை பொருந்திய பாடலிபுத்திரம் என்னும் நகரத்தில் இருந்த, இழி செயலையே செய்கின்ற சமணர்கள் கேள்வியுற்ற நிலையில், அதைப் பொறுத்துக் கொள்ள இயலாதவராய்,

விளக்கவுரை

திலகவதியார் வீடுபேறடைந்தமையை, இப்பாடலில் முதல் அடியின் பொருளாக அமைக்கலாம். காரணம் சென்ற பாடல் திலகவதியாரைப் பற்றியது. இப்பாடலின் முதல் அடியில் `இன்ன தன்மையில் இவர் சிவநெறியினை எய்தி` என அண்மைச் சுட்டான இகரச் சுட்டு ஈரிடத்து அமைந்துள்ளது. இச் சுட்டுக்கள் இதற்கு முன்னுள்ள பாடலைத் தழுவலே இயற்கையாகும். இவ்வகையில் எண்ணில் மேற்பாடலோடு இயைந்தவாறு திலகவதியார் இவ் வகையில் திருவருளைப் போற்றியவாறு வீடுபேற்றை அடைய என முதல் அடியின் பொருளை நிறைவுபடுத்தி, அடுத்த அடியிலிருந்து வரும் பொருள் நாவரசர் வரலாறாக அமைத்துக் கொள்ளின் சாலச் சிறக்கும். இவ்வாறு கொள்ளுதற்கு ஏற்ப, எய்தி என்பதை எய்த எனத் திரித்துக் கொள்ளல் வேண்டும். செய்தெனெச்சம் செயவெனெச்ச மாகத் திரிதல் இலக்கணமேயாம்.

தரும சேனர்க்கு வந்தஅத்
தடுப்பருஞ் சூலை
ஒருவ ராலும்இங் கொழிந்திடா
மையின்அவர் உயப்போய்ப்
பெருகு சைவராய்ப் பெயர்ந்துதம
பிணியொழித் துய்ந்தார்
மருவு நம்பெருஞ் சமயம்வீழ்ந்
ததுவென மருள்வார். **#1344**

`தருமசேனருக்கு வந்த, தடுத்தற்கு அரிய அச்சூலைநோய், இங்கு ஒருவராலும் தீர்க்கப்படாமையால், உய்யும் பொருட்டு, அவர் சென்று சிறந்த சைவராகித், தம்பிணி நீங்கப் பெற்றார். இதனால் நாம் மேற்கொண்டிருக்கும் சமண் சமயம் பாழ்பட்டது` என்று மயங்குவாராகி.

விளக்கவுரை

மருள்வார் - மயங்குவாராய்.

மலையும் பல்சம யங்களும்
வென்றுமற் றவரால்
நிலையும் பெற்றஇந் நெறிஇனி
அழிந்ததென் றழுங்கிக்
கொலையும் பொய்ம்மையும் இலமென்று
கொடுந்தொழில் புரிவோர்
தலையும் பீலியும் தாழவந்
தொருசிறை சார்ந்தார். **#1345**

`மாறுபடுகின்ற பல்வேறு சமயங்களையும் வென்று, மற்று அவரால் நிலைக்கவும் பெற்ற இச்சமண் சமயநெறி, இனி அழிந்தது என வருந்தி,

கொலை செய்வதும் பொய் பேசுவதும் இலோம்!' எனக் கூறிக் கொண்டு, அக்கொடுஞ் செயல்களையே செய்பவராகித் தம் மயிர் பறித்த தலைகளும், கைக்கொண்ட பீலியும் தாழ, ஒரு மருங்கு அடைந்தனர்.

விளக்கவுரை

சிறை - மருங்கு: பக்கம். இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

இவ்வ கைப்பல அமணர்கள்
துயருடன் ஈண்டி
மெய்வ கைத்திறம் அறிந்திடில்
வேந்தனும் வெகுண்டு
சைவ னாகிநம் விருத்தியும்
தவிர்க்கும்மற் றினிநாம்
செய்வ தென்னென வஞ்சனை
தெரிந்துசித் திரிப்பார். **#1346**

இம்மனநிலையில் பல சமணர்களும் துன்பம் பெருக ஒருங்கு கூடி, `நம்மையும், நாம் கொண்டிருக்கும் சமய உண்மையையும் அறிந்தால், அரசன் வெகுண்டு, சைவனாகி, நமது வாழ்வையும் போக்குவான்; ஆதலால் இனி நாம் என் செய்வோம்?' என்று வஞ்சனையுடன் ஆராய்வாராகி,

விளக்கவுரை

விருத்தி - நாம் வாழ்ந்து வரும் வாழ்வு. சித்திரித்தல் - இல்லதை உள்ளது போலவும், உள்ளதை இல்லது போலும் காட்டும் வல்லமை.

தவ்வை சைவத்து நிற்றலின்
தருமசே னருந்தாம்
பொய்வ குத்ததோர் சூலைதீர்ந்
திலதெனப் போயிங்
கெவ்வ மாகஅங் கெய்திநஞ்
சமயலங் கனமும்
தெய்வ நிந்தையும் செய்தனர்
எனச்சொலத் தெளிந்தார். **#1347**

`தமக்கையார் சைவசமயத்தில் நிற்றலால், தருமசேனரும் தாம் பொய்யாய் உண்டாக்கிக் கொண்ட ஒரு சூலை நோய் இங்குத் தீர்ந்திலது என்று இச்சமண் சமயத்திற்கு ஒரு கேட்டினை ஏற்படுத்தி, அங்குச் சென்றதால், நம் சமய வரம்பைத் துறந்தும், தெய்வத் தன்மையை இகழ்ந்தும் போந்தார், என்று மன்னனிடம் சொல்வோம்' என்று முடிவு செய்தனர்.

விளக்கவுரை

சமயலங்கனம் - சமயத்தைத் துறத்தல். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

சொன்ன வண்ணமே செய்வது
துணிந்ததுன் மதியோர்
முன்னம் நாஞ்சென்று முறைப்படு
வோமென முயன்றே
இன்ன தன்மையில் இருட்குழாஞ்
செல்வது போல
மன்ன னாகிய பல்லவன்
நகரில்வந் தணைந்தார். **#1348**

`சொல்லியவாறே செய்வோம்!' எனத் துணிந்த கெடுமதியினரான அச்சமணர்கள், `நாம் முன்னர்ச் சென்று அரசனிடம் கூறுவோம்' என முயன்று, இந்நிலையில் இருட்கூட்டம் செல்வது போல் சென்று, பல்லவ மன்னர் இருக்கும் நகரத்திற்கு வந்து சேர்ந்தனர்.

உடையொ ழிந்தொரு பேச்சிடை
யின்றிநின் றுண்போர்
கடைய ணைந்தவன் வாயில்கா
வலருக்கு நாங்கள்
அடைய வந்தமை அரசனுக்
கறிவியும் என்ன
இடைய றிந்துபுக் கவருந்தம்
இறைவனுக் கிசைப்பார். **#1349**

உடை இல்லாதவராயும், உண்கின்ற போது ஒன்றையும் பேசாதிருப்பவராயும் உள்ள அச்சமணத் துறவியர்கள் அரசனின் வாயிலை அடைந்து, அங்குள்ள காவலர்க்கு `நாங்கள் வந்திருக்கும் செய்தியை மன்னனுக்குத் தெரிவியுங்கள்' எனக் கூற, அவரும் சமயமறிந்து தம் மன்னனுக்குச் சொல்வாராய்,

அடிகண்மார் எல்லாரும்,
ஆகுலமாய் மிகவழிந்து
கொடிநுடங்கு திருவாயில்
புறத்தணைந்தார் எனக்கூற
வடிநெடுவேல் மன்னவனும்
மற்றவர்சார் பாதலினால்
கடிதணைவான் அவர்க்குற்ற
தென்கொல்எனக் கவன்றுரைத்தான். **#1350**

`சமணத் துறவியர் எல்லாரும் ஒருங்கே துன்பத்தால் அழிந்து, கொடி அசையும் திருவாயிலின் புறத்தே அணைந்துள்ளனர்' எனக் கூற, கூரிய

நெடிய வேலையுடைய அவ்வரசனும், அவர்களின் சார்புடையவன் ஆதலால், `இவ்வாறு விரைந்து கூடி வருவதற்கு அவர்களுக்கு என்ன நேர்ந்தது?', என்று கவலையுடன் கேட்டான்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

கடைகாவல் உடையார்கள்
புகுதவிடக் காவலன்பால்
நடையாடுந் தொழிலுடையார்
நண்ணித்தாம் எண்ணியவா
றுடையாரா கியதரும
சேனர்பிணி யுற்றாராய்ச்
சடையானுக் காளாய்நின்
சமயம்அழித் தாரென்றார். **#1351**

வாயில் காவலர்களும் சமணர்களை உள்ளே போகும்படிவிட, உயிருடன் நடந்து செல்லும் தொழில் ஒன்றையே உடையவராய அச்சமணர்களும் மன்னனிடம் சேர்ந்தனர். சேர்ந்து, `நம் தலைவரான தருமசேனர் சூலை நோய் உற்றதாய்க் கூறிச் சென்று, சிவனுக்கு ஆளாகி, நின் சமயத்தை அழித்தனர்' எனக் கூறினர்.

விளக்கவுரை

கடை - வாயிலின் முன்புறம். நம் சமயம் என்னாது நின் சமயம் என்றார், அவ்வுரிமை அவனுக்கு மேலும் சினம் மிகுவிக்கும் என்பது பற்றி.

விரையலங்கல் பல்லவனும்
அதுகேட்டு வெகுண்டெழுந்து
புரையுடைய மனத்தினராய்ப்
போவதற்குப் பொய்ப்பிணிகொண்
டுரைசிறந்த சமயத்தை
அழித்தொழியப் பெறுவதே
கரையில்தவத் தீர்இதனுக்
கென்செய்வ தெனக்கனன்றான். **#1352**

மணம் பொருந்திய மலர் மாலையையுடைய பல்லவ மன்னனும், அச்செய்தியைக் கேட்டுச் சினம் கொண்டு, எழுந்து, `குற்றமுடைய மனத்தினராய்ப் போதற் பொருட்டுப் பொய்யாகப் பிணிவந்தது' என்று கூறி, `பலவாறும் புகழப் பெறும் நம் சமண் சமயத்தை அழித்து நீங்கப் பெறுவதோ? அளவற்ற தவத்தை யுடையவர்களே! இதற்கு இனி என்ன செய்தல் வேண்டும்?' எனச் சினந்து வினவினான்.

தலைநெறியா கியசமயந்

தன்னையழித் துன்னுடைய
நிலைநின்ற தொல்வரம்பில்
நெறியழித்த பொறியிலியை
அலைபுரிவாய் எனப்பரவி
வாயால்அஞ் சாதுரைத்தார்
கொலைபுரியா நிலைகொண்டு
பொய்யொழுகும் அமண்குண்டர். **#1353**

கொல்லாமையை மேற்கொண்டவர்கள் எனக் கூறிக்கொண்டு ஒழுகும் பாவியர்களாய அச்சமணர்கள், `மேலாய நெறியாய சமண சமயத்தை அழித்து, அதனால், உன் ஆணையில் நின்ற பழைய ஒழுக்க நெறியையும் அழித்த அறிவற்ற அவரை வருத்துவாயாக!' என்று வேண்டித் தம் வாயால் ஒரு சிறிதும் அஞ்சாது உரைத்தனர்.

விளக்கவுரை

பொறி - அறிவு. அலைபுரிவாய் - அரசன் என்ற முறை யில் துன்புறுத்துவாய். அலை - கோல் கொண்டு அலைத்தல் முதலா யின *(தொல்.மெய்ப்.10)* எனவரும் பேராசிரியர் உரையும் காண்க. `கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு அல்லவை செய்தொழுகும் வேந்து' *(குறள்,551)* என வரும் திருக்குறளும் காண்க.

அருள்கொண்ட உணர்வின்றி
நெறிகோடி அறிவென்று
மருள்கொண்ட மன்னவனும்
மந்திரிகள் தமைநோக்கித்
தெருள்கொண்டோர் இவர்சொன்ன
தீயோனைச் செறுவதற்குப்
பொருள்கொண்டு விடாதென்பால்
கொடுவாரும் எனப்புகன்றான். **#1354**

அருள் உணர்ச்சி இல்லாது, அறிவு என எண்ணி மயக்கத்தை மேற்கொண்ட அரசனும், அமைச்சர்களைப் பார்த்து, `அறிவுடையோர்களான இவர்கள் சொன்ன தீயவனை, பொருள் பெற்றுக் கொண்டு விட்டு விடாது, ஒறுப்பதற்காக என் இடத்திற்குக் கொண்டு வாருங்கள்!' எனச் சொன்னான்.

விளக்கவுரை

பொருள் கொண்டு விடுதல் - கையூட்டுப் பெற்றுக் கொண்டு விட்டு விடுதல். அவனை அறவோன் எனப் பொருட்படுத்தி விட்டுவிடாமல் எனப்பொருள் கொள்வர் ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் *(பெரிய.பு.உரை)*. ஒறுப்புத் தண்டம் *(அபராதம்)* கொண்டு விட்டு

விடாமல் என்றுரைப்பாரும் உளர். தெருள் கொண்டோர் - அறிவினால் தெளிவுற்றவர்.

அரசனது பணிதலைநின்
றமைச்சர்களும் அந்நிலையே
முரசதிருந் தானையொடு
முன்சென்று முகில்சூழ்ந்து
விரைசெறியுஞ் சோலைசூழ்
திருவதிகை தனைமேவிப்
பரசமயப் பற்றறுத்த
பான்மையினார் பாற்சென்றார். **#1355**

அரசனின் ஏவலை மேற்கொண்ட அமைச்சர் களும் அவ்வாறே முரசுகள் ஒலிக்கும் படைகளோடும் முற்பட்டுச் சென்று, மேகங்கள் தவழ்ந்தும், மணம் செறிந்தும் விளங்கும் சோலை கள் சூழ்ந்த திருவதிகையை அடைந்து, புறச்சமயப் பற்றுக்களை அறுத்த பண்பினராய திருநாவுக்கரசரிடம் சென்றனர்.

விளக்கவுரை

தலை நின்று - அரசனின் ஏவலைத் தலைமேற்கொண்டு.

சென்றணைந்த அமைச்சருடன்
சேனைவீ ரருஞ்சூழ்ந்து
மின்தயங்கு புரிவேணி
வேதியனார் அடியவரை
இன்றுநுமை அரசன்அழைத்
தெமைவிடுத்தான் போதுமென
நின்றவரை நேர்நோக்கி
நிறைதவத்தோர் உரைசெய்வார். **#1356**

சென்று சேர்ந்த அமைச்சர்களுடன் படைவீரரும் சூழ்ந்து மின்னல் என விளங்கும் சடையையுடைய சிவபெருமானின் அடியவரான திருநாவுக்கரசரை, `இன்று மன்னன் உம்மைத் தன்னிடம் அழைத்து வருமாறு கூறி எம்மை ஏவி விடுத்தான். வாருங்கள்!` எனக் கூறினர். அவ்வாறு கூறிநின்ற அவர்களைப் பார்த்து, நிறைந்த தவத்தையுடைய திருநாவுக்கரசர் சொல்வாராக,

விளக்கவுரை

****

நாமார்க்குங் குடியல்லோம்
என்றெடுத்து நான்மறையின்
கோமானை நதியினுடன்

குளிர்மதிவாழ் சடையானைத்
தேமாலைச் செந்தமிழின்
செழுந்திருத்தாண் டகம்பாடி
ஆமாறு நீரழைக்கும்
அடைவிலமென் றருள்செய்தார். **#1357**

`நாமார்க்குங் குடியல்லோம்` எனத் தொடங்கி, நான்மறையின் தலைவரும், கங்கையுடன் குளிர்ந்த பிறைச் சந்திரனும் வாழும் சடையையுடையவருமான சிவபெருமானை இனிய செந் தமிழின் மாலையாய செழுமையான திருத்தாண்டகத் திருப் பதிகத் தைப் பாடி, `உம் அரசனின் ஏவல் வழி, நீவிர் அழைக்கும் நிலையில் நாம் இல்லை!` என்று உரைத்தார்.

விளக்கவுரை

இவ்வமையத்துப் பாடியது `நாமார்க்கும் குடியல் லோம்` *(தி.6 ப.98)* எனத் தொடங்கும் திருத்தாண்டகம் ஆகும். அரசன் அழைத்ததற்கு, மறு மொழியாக இப்பதிகம் அமைந்திருப்பதால் இதனை மறுமாற்றுத் தாண்டகம் என அழைப்பர். சிவபெருமானுக்கே மீளா ஆளாய் அவர் திருவடிக்கண் நிற்றலான் நாமார்க்கும் குடியல் லோம் என்றார். பத்திமை நெறியில் தலைநின்ற ஒரு அடியவர், ஒரு பேரரசை அதுவும் அக்காலத்திருந்த பேரரசைத் துச்சமாக நினைந்து இம்மாற்றத்தை அருளியது, நாவரசரின் உறைப்பை விளக்குகின்றது. பெருமிதம் தவழ இங்ஙனம் கூறியதற்குக் காரணம், திருவருளின்பால் உறைப்புடைமையும், பற்றற்று நிற்கும் உள்ளம் உடைமையுமாம்.

ஆண்டஅர சருள்செய்யக்
கேட்டவரும் அடிவணங்கி
வேண்டியவர்க் கொண்டேக
விடையுகைத்தார் திருத்தொண்டர்
ஈண்டுவரும் வினைகளுக்கெம்
பிரானுளனென் றிசைந்திருந்தார்
மூண்டசினப் போர்மன்னன்
முன்னணைந்தங் கறிவித்தார். **#1358**

ஆளுடைய அரசர் இங்ஙனம் சொல்லக் கேட்டு, அவ்வமைச்சர்களும் அவருடைய அடிகளில் விழுந்து, வணங்கி, வேண்டி விண்ணப்பித்து, அவரை உடன் கொண்டு செல்ல, ஆன் ஏற்றுக் கொடியை உயர்த்திய இறைவனின் திருத்தொண்டரான அவர், `இவ்விடத்து வரும் வினைகளுக்கு எம்பெருமானார் துணையாவார்` என அதற்கு இசைவுடன் இருந்தார். அவர்களும் மூண்ட சினமுடைய போரில் வல்ல அரசன் முன்பு அழைத்துச் சென்று அவனுக்கு அறிவித்தனர்.

விளக்கவுரை

அரசன் ஏவல் வழித் தங்களை அழைத்துக் கொண்டு செல்லாவிடில், அவன் எங்களை ஒறுப்பன்; ஆதலின் உடன் வந்தருள வேண்டும் என வேண்ட, நாவரசரும் அவர்கள் பொருட்டு இசைந் தனர். இதனால் நாவரசரின் திருவுள்ளம் இருந்தமை அறியத்தக்கது.

பல்லவனும் அதுகேட்டுப்
பாங்கிருந்த பாயுடுக்கை
வல்அமணர் தமைநோக்கி
மற்றவனைச் செய்வதினிச்
சொல்லுமென அறந்துறந்து
தமக்குறுதி அறியாத
புல்லறிவோர் அஞ்சாது
நீற்றறையில் இடப்புகன்றார். **#1359**

பல்லவ மன்னனும் அதைக்கேட்டு அருகில் இருந்த பாய் உடுக்கையை யுடைய வலிய சமணத் துறவியர்களிடம் `இனி அவனை என்ன செய்வது? கூறுக` எனக் கூற, அறத்தையும், உறுதியையும் அறியாத கீழான அறிவுடைய அச்சமணர்கள், சற்றும் அஞ்சாது, நீற்றறையில் இடுமாறு கூறினர்.

விளக்கவுரை

****

அருகணைந்தார் தமைநோக்கி
அவ்வண்ணஞ் செய்கவெனப்
பெருகுசினக் கொடுங்கோலான்
மொழிந்திடலும் பெருந்தகையை
உருகுபெருந் தழல்வெம்மை
நீற்றறையின் உள்ளிருத்தித்
திருகுகருந் தாட்கொளுவிச்
சேமங்கள் செய்தமைத்தார். **#1360**

அருகில் இருந்தவரைப் பார்த்து, `அவ்வண்ணமே செய்க` என்று சினம் கொண்ட அம்மன்னன் கூறிய அளவில், உருகச் செய்யும் பெருந்தீயின் வெம்மையுடைய நீற்றறையினுள், பெருந்தகையாரை இருக்கச் செய்து, கதவை மூடி, இருப்புத் தாழிட்டுக் காவல் செய்து அமைத்தனர்.

விளக்கவுரை

****

ஆண்டஅர சதனகத்துள்
அணைந்தபொழு தம்பலத்துத்

தாண்டவமுன் புரிந்தருளுந்
தாள்நிழலைத் தலைக்கொண்டே
ஈண்டுவருந் துயருளவோ
ஈசனடி யார்க்கென்று
மூண்டமனம் நேர்நோக்கி
முதல்வனையே தொழுதிருந்தார். **#1361**

ஆளுடைய அரசர் அந்நீற்றறையுள் சேர்ந்த போது, அம்பலத்தில் கூத்தியற்றும் இறைவனின் திருவடியின் நிழலையே தம் தலைமேற் கொண்டு, `சிவபெருமானின் அடியவர்க் குத் துன்பங்கள் வருதலும் உளவோ?` என்று திருப்பதிகம் பாடி, உறுதி கொண்ட மனத்தால் நேர் நோக்கி முதல்வனையே தொழுது அமர்ந் திருந்தார்.

விளக்கவுரை

****

வெய்யநீற் றறையதுதான்
வீங்கிளவே னிற்பருவந்
தைவருதண் தென்றல்அணை
தண்கழுநீர்த் தடம்போன்று
மொய்யொளிவெண் ணிலவலர்ந்து
முரன்றயாழ் ஒலியினதாய்
ஐயர்திரு வடிநீழல்
அருளாகிக் குளிர்ந்ததே. **#1362**

வெப்பத்தை உடைய அந்நீற்றறையே மிக்க இளவேனிற் காலத்தில் வீசி வருகின்ற குளிர்ந்த தென்றல் அணை கின்ற, தண்ணிய கழுநீர் மலர்கள் நிறைந்த வாவி போன்று ஒளிமிக்க வெண்மையான முழுமதியின் ஒளிவிரிந்து, ஒலிக்கின்ற யாழின் ஒலியுடன் கூடியதாய் இறைவரின் திருவடி நீழலினது அருள் மயமாய்க் குளிர்ந்தது.

விளக்கவுரை

திருநாவுக்கரசர் இங்குப் பாடி அருளியது, `மாசில் வீணையும்` (தி.5 ப.90) எனத் தொடங்கும் பதிகம் ஆகும். இப்பதிகத் தின் பாடற்குரிய விளக்கமாகவே சேக்கிழார் இப்பாடலை அருளி யுள்ளார். நீற்றறை, வெய்யதாய்த் துன்பம் தருவது. ஆனால் ஆளு டைய அரசருக்கோ அது அருளாகிக் குளிர்ந்தது. காரணம் தம் உணர்வில் நேர்பெற நிற்கும் சிவத்தோடு இணைந்திருத்தலினால் ஆம்.
மாசில் வீணை - முரன்ற யாழ் ஒலி. மாலை மதியம் - மொய்யொளி வெண்ணிலவு அலர்ந்தது. வீசு தென்றல் - தைவரு தண்தென்றல், வீங்கிள வேனில் - வீங்கிள வேனில் (நாவரசர் திருவாக்கைச்

சேக்கிழாரும் பொன் போல் பொதிய வைத்தார்). மூசு வண்டறைப் பொய்கை - தண் கழுநீர்த் தடம்; நாவரசர் வண்டுகள் மொய்க்கும் பொய்கை என்றார். சேக்கிழார் அவை மொய்த்தற் கேதுவாய கழுநீர்ப் பூ உளவாதலைக் குறித்தார். இவ்வகையில் ஒப்பு நோக்கி மகிழலாம். நிலவின் ஒளி கண்ணிற்கும், யாழின் ஒலி காதிற்கும், தண் கழுநீர்த் தடம் உண்டற்கும், தைவருதென்றல் உயிர்த் தற்கும், வீங்கிளவேனில் ஊற்றுணர்விற்கும் ஏதுவாய் அமைய, உணர்வில் நேர் பெற நிற்கும் ஐம்புல இன்பங்களும் அருளாகிக் குளிர் வனவாயின. `கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள` *(குறள்,1101)* என்பர். இது உலகியல் உணர்வால் அமைவது. இவற்றாலாய பயன் தெரிந்து, அவற்றை அருளியல் வழி அறிந்து துய்ப்பது அருளாளர்கண் ஆதலின், நாவரசர் அவ்வகையில் இவ்வருளநுபவத்தைப் பெறுகின்றார். `சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்று ஐந்தின் வகைதெரிவான் கட்டே உலகு` *(குறள், 27)* என்பவாகலின் இவ்வநுபவம் நாவுக்கரசர் வகை தெரிந்து துய்த்த அநுபவமாயிற்று.

மாசில்மதி நீடுபுனல்
மன்னிவளர் சென்னியனைப்
பேசஇனி யானையுல
காளுடைய பிஞ்ஞகனை
ஈசனைஎம் பெருமானை
எவ்வுயிருந் தருவானை
ஆசையில்ஆ ராவமுதை
அடிவணங்கி இனிதிருந்தார். **#1363**

குற்றமில்லாத மதியும், பெருகிய கங்கையாறும், நிலைபெறப் பொருந்தி வளர்வதற்கு இடமான சென்னியை உடைய வனை, பேசுவதற்கு இனியவனை, உலகுயிர்களை எல்லாம் ஆளாக உடைய தவக்கோலம் உடையவனை, ஈசனை, எம்பெருமானை, எவ்வுயிர்களையும் தோற்றுவிப்பவனை, அன்பில் விளையும் ஆரா அமுதை, அடிவணங்கி நாவுக்கரசர் இனிதாக இருந்தார்.

விளக்கவுரை

****

ஓரெழுநாள் கழிந்ததற்பின்
உணர்வில்அம ணரையழைத்துப்
பாருமினி நீற்றறையை
எனவுரைத்தான் பல்லவனுங்
காரிருண்ட குழாம்போலும்

உருவுடைய காரமணர்
தேருநிலை இல்லாதார்
நீற்றறையைத் திறந்தார்கள். #1364

ஓர் ஏழு நாள்கள் கழிந்தபின்பு, நல்லுணர்வு இல்லாத அவ்வமணர்களைப் பல்லவ மன்னனும் அழைத்து, `இனி நீங்கள் நீற்றறையைத் திறந்து பாருங்கள்` எனப் பகன்றான். கருமை யானது செறிந்து இருண்டு கூடிய கூட்டம் போல வடிவுடைய சமணர், தெளியும் அறிவு இல்லாதவராய் நீற்றறையைத் திறந்தனர்.

விளக்கவுரை

****

ஆனந்த வெள்ளத்தின்
இடைமூழ்கி யம்பலவர்
தேனுந்து மலர்ப்பாதத்
தமுதுண்டு தெளிவெய்தி
ஊனந்தான் இலராகி
உவந்திருந்தார் தமைக்கண்டு
ஈனந்தங் கியதிலதாம்
என்னஅதி சயம்என்றார். #1365

சிவானந்தப் பெருக்கினுள் மூழ்கி அம்பல வாணருடைய தேனைச் சொரியும் மலர் அனைய திருவடிகளின் அமுதத்தை உண்டு, தெளிவடைந்து, எவ்வகையான குறைபாடும் இல்லாதவராய், மகிழ்வுடன் வீற்றிருந்த திருநாவுக்கரசரைப் பார்த்து, `கெடுதி சிறிதும் அடைந்திலது! என்ன வியப்பு!` என்று சமணர் உரைத்தனர்.

விளக்கவுரை

நீராடல் உடல் வளத்திற்கும், உணவு அருந்துதல் உயிர் வளத்திற்கும் பயன்படுவன. உலகியல் வழிப்பட்டார்க்கு நீராடல் ஆறு, குளம், கடல் போன்றவற்றிலாகலாம். அருளியல் வழிப்பட்டவர் நாவரசர் ஆதலின் சிவானந்தப் பெருக்கில் நீராடல் அவருக்கு இயல்பாயிற்று. அது போன்றே உலகியல் வழிப்பட்டார்க்குச் சோறும் நீருமே உணவு ஆகும். நாவரசருக்குப் பெருமானாரின் திருவடிகளில் பெருகி வரும் அருளமுதமே உணவாயிற்று. இவ்வருளநுபவத்தால் ஒரு சிறுகுறைபாடும் இன்றி அவர் மகிழ்ந்திருந்தார்.

அதிசயம்அன் றிதுமுன்னை
அமண்சமயச் சாதகத்தால்
இதுசெய்து பிழைத்திருந்தான்
எனவேந்தற் குரைசெய்து

மதிசெய்வ தினிக்கொடிய
வல்விடம்ஊட் டுவதென்று
முதிரவரும் பாதகத்தோர்
முடைவாயால் மொழிந்தார்கள். **#1366**

`இஃது அதிசயம் அன்று! முன்பு சமண் சமயத்தைச் சார்ந்திருந்த சார்பில் பெற்ற சாதகத்தால் இதைச் செய்து, இறவாது பிழைத்திருந்தான்` என்று அரசனுக்குக் கூறி, `இனி அறிவால் செய்யக் கடவது, கொடிய வலிய நஞ்சை இவனுக்கு ஊட்டுவதேயாகும்` என்று மேன்மேலும் தீமைசெய்வதில் முதிர்ச்சியடையந்துள்ள அச்சமணர்கள் நாற்றம் கொண்ட தம் வாயால் உரைத்தனர்.

விளக்கவுரை

****

ஆங்கதுகேட் டலுங்கொடிய
அமண்சார்பாற் கெடுமன்னன்
ஓங்குபெரு மையலினால்
நஞ்சூட்டும் எனவுரைப்பத்
தேங்காதார் திருநாவுக்
கரசரைஅத் தீயவிடப்
பாங்குடைய பாலடிசில்
அமுதுசெயப் பண்ணினார். **#1367**

அங்கு அதனைக் கேட்டதும், தீய சமண்சமயச் சார்பினால் கெடுகின்ற அரசனும், மிகப் பெரிய மயக்கத்தால் `நஞ்சை ஊட்டுங்கள்` எனக் கூற, அதற்குச் சிறிதும் தயங்காத சமணர்கள், திருநாவுக்கரசரை அங்ஙனமே தீய நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்ணுமாறு செய்தனர்.

விளக்கவுரை

****

நஞ்சும்அமு தாம்எங்கள்
நாதனடி யார்க்கென்று
வஞ்சமிகு நெஞ்சுடையார்
வஞ்சனையாம் படியறிந்தே
செஞ்சடையார் சீர்விளக்குந்
திறலுடையார் தீவிடத்தால்
வெஞ்சமணர் இடுவித்த
பாலடிசில் மிசைந்திருந்தார். **#1368**

சிறந்த சடையையுடைய சிவபெருமானுடைய சீர்களை உலகத்தில் விளக்கும் ஆற்றலுடைய நாவரசர், வஞ்சனை மிகுந்த மனமுடைய

சமணர்களின் வஞ்சனையால் அமைக்கப்பட்டது என்பதை அறிந்தே, `எம் இறைவனின் அடியவர்க்கு நஞ்சும் அமுத மாகும்` என்ற உறுதிப்பாடு உடையவராய், கொடிய சமணர்களால் கொடுக்கப்பெற்ற நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்டு யாதொரு குறை பாடும் இல்லாது இருந்தார்.

விளக்கவுரை

இந்நிகழ்ச்சிக்கு அகச்சான்றாக, *(தி.4 ப.70 பா.5)*

துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்தி ராதே
அஞ்செழுத் தோதி னாளு மரனடிக் கன்ப தாகும்
வஞ்சனைப் பாற்சோ றாக்கி வழக்கிலா வமணர் தந்த
நஞ்சமு தாக்கு வித்தார் நனிபள்ளி யடிக ளாரே.

எனவரும் திருப்பாடல் உளது என்பதுடன், ஆசிரியர் `வஞ்சமிகும் நெஞ்சுடையார் வஞ்சனையாம் படியறிந்தே` எனவழிமொழியவும் காரணமாக விளங்குகின்றது.

பொடியார்க்குந் திருமேனிப்
புனிதர்க்குப் புவனங்கள்
முடிவாக்குந் துயர்நீங்க
முன்னைவிடம் அமுதானால்
படியார்க்கும் அறிவரிய
பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சமுதம்
ஆவதுதான் அற்புதமோ. **#1369**

திருநீறு விளங்குகின்ற திருமேனியையுடைய புனிதரான இறைவற்கு, உலகங்களை எல்லாம் அழிக்கவல்ல துன்பம் நீங்கும்படி முன்பு நஞ்சானது அமுதமாகுமானால், யாவர்க்கும் அறிதற்கரிய தன்மையராய இறைவரின் அடியார்க்கு நஞ்சு அமுத மாவதும் ஒரு அற்புதமோ? ஆகாது என்பதாம்.

விளக்கவுரை

யார்க்கும் அறிவறிய படி என இயைக்க. படி - தன்மை; `இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே` *(தி.6 ப.97 பா.10)* என்றவிடத்தும் இப்பொருள் படுதல் காணலாம்.

அவ்விடத்தை ஆண்டஅர
சமுதுசெய்து முன்னிருப்ப
வெவ்விடமும் அமுதாயிற்
றெனஅமணர் வெருக்கொண்டே

இவ்விடத்தில் இவன்பிழைக்கில்
எமக்கெல்லாம் இறுதியெனத்
தெவ்விடத்துச் செயல்புரியுங்
காவலற்குச் செப்புவார். **#1370**

அந்நஞ்சை ஆளுடைய அரசர் உண்டும், அவர் முன்போலவே துன்பம் இன்றி இனிது இருக்கக், `கொடிய நஞ்சும் அமுதம் ஆயிற்றே!` என்று சமணர் அச்சம் கொண்டவராகி, `இங்கு இவன் சாதல் இன்றி உயிர் பிழைத்திருப்பானாயின், எமக்கெல்லாம் இறுதி நேர்ந்துவிடும்` எனத்துணிந்து, பகைவர்களிடத்துச் செய்தற் குரிய தொழிலை இவ்வருந்தவரிடத்தும் செய்யுமாறு மன்னனுக்குச் சொல்வாராய்,

விளக்கவுரை

தெவ் - பகைமை.

நஞ்சுகலந் தூட்டிடவும்
நஞ்சமயத் தினில்விடந்தீர்
தஞ்சமுடை மந்திரத்தால்
சாதியா வகைதடுத்தான்
எஞ்சும்வகை அவற்கிலதேல்
எம்முயிரும் நின்முறையும்
துஞ்சுவது திடமென்றார்
சூழ்வினையின் துறைநின்றார். **#1371**

`நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்ணச்செய்தும், நம் சமயத்தில் கொண்ட நஞ்சு நீக்கும் மந்திரத்தால், அதன்பயன் விளையாதவாறு தடுத்து விட்டான். அவன் இறக்கும் வகை இலதேல் எங்கள் உயிர்களும் உனது ஆட்சியும் அழியும்` எனத் தீமையை விளைவிக்கும் வஞ்சகத் தொழிலின் வழியில் நின்ற அச்சமணர்கள் உரைத்தனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

மற்றவர்தம் மொழிகேட்டு
மதிகெட்ட மன்னவனும்
செற்றவனை இனிக்கடியும்
திறமெவ்வா றெனச்செப்ப
உற்றவரு மந்திரசா தகநாங்கள்
ஒழித்திடநின்
கொற்றவயக் களிறெதிரே
விடுவதெனக் கூறினார். **#1372**

அவர்களின் சொல்லைக் கேட்ட அறிவுகெட்ட அரசனும், `நம் நெறியை

அழித்த அவனை இனி ஒறுக்கும் வகை யாது?` என வினவ, அச்சமணர்களும் ` மந்திர சாதகங்களை நாங்கள் நீக்க, உன் வெற்றி பொருந்திய வலிய யானையை அவன் முன்னே விட்டு இடறச் செய்வதே தகுந்த வழியாகும்` என்று உரைத்தனர்.

விளக்கவுரை

****

மாபாவிக் கடைஅமணர்
வாகீசத் திருவடியாங்
காபாலி அடியவர்பாற்
கடக்களிற்றை விடுகென்னப்
பூபாலர் செயன்மேற்கொள்
புலைத்தொழிலோன் அவர்தம்மேற்
கோபாதி சயமான
கொலைக்களிற்றை விடச்சொன்னான். **#1373**

பெரும் பாவிகளுள்ளும் கீழானவர்களான அச்சமணர்கள், வாகீசத் திருவடிகளான சிவபெருமானின் அடியவர் மீது, `மதயானையை ஏவி விடுக` என்று சொல்ல, உலகைக் காவல் கொண்டும் புலைத்தொழில் செய்வோனான அவ்வரசன், வியக்கத் தக்க சினம் கொண்ட கொலைத் தொழிலைச் செய்யும் யானையை அவர் மீது விடுமாறு ஏவினான்.

விளக்கவுரை

மாபாவிக்கடை அமணர் - பாவிகளினும் கடையவராய சமணர்கள். வாகீசத் திருவடி - நாவுக்கரசர் எனும் பெயர் பெற்ற அடியவர். திருவடி - அடிமைத் திறத்தில் தலைநிற்கும் பெரியவர் களுக்கு வழங்கக் கூடிய உயர்ந்த பெயர்; மரபுப் பெயர். காபாலி - நான்முகனின் தலையோட்டைக் கையில் ஏந்தியவர்; சிவபெருமான். அதிசயம் - வியப்பு; சினம் கொள்வதில் வியப்படையுமாறு அமைந் திருத்தல்.

கூடத்தைக் குத்தியொரு
குன்றமெனப் புறப்பட்டு
மாடத்தை மறித்திட்டு
மண்டபங்கள் எடுத்தெற்றித்
தாடத்திற் பரிக்காரர்
தலையிடறிக் கடக்களிற்றின்
வேடத்தால் வருங்கூற்றின்
மிக்கதொரு விறல்வேழம். **#1374**

ஒப்பற்ற வன்மையுடைய அவ்யானையானது, யானை கட்டும் தறிகளைப் பிடுங்கிக் கொண்டு மலையெனப் புறப் பட்டு, மாடங்களை இடித்து, மண்டபங்களைப் பெயர்த்து, அழித்துக், குத்துக் கோற்காரரின் தலைகளைக் காலால் இடறி, மதயானையின் வடிவத்துடன் வருகின்ற ஓர் இயமனைப் போலக் கொடிதாயிருந்தது.

விளக்கவுரை

தாடத்தில் - கால் வீச்சினால்

பாசத்தொடை நிகளத்தொடர்
பறியத்தறி முறியா
மீசுற்றிய பறவைக்குலம்
வெருவத்துணி விலகா
ஊசற்கரம் எதிர்சுற்றிட
உரறிப்பரி உழறா
வாசக்கட மழைமுற்பட
மதவெற்பெதிர் வருமால். **#1375**

கழுத்தில் கட்டிய கயிறும், சங்கிலித் தொடரும் அறுமாறு கட்டுத் தறியை முறித்து, மேலே வட்டம் இடும் பறவைக் கூட்டங்களும் அஞ்சுமாறு, எதிர்க்கும் தடைகளுக்குச் சற்றும் விலகாது, ஊசல் என அசையும் துதிக்கையானது முன்னே சுற்றப், பெரு முழக்குடன் ஓடிக் கலக்கி, மணம் கமழும் மதநீரான மழை முன்னே பெருக, மலை போன்ற யானை எதிரில் வந்தது.

விளக்கவுரை

நிகளம் - காலில் கட்டப் பெற்ற சங்கிலிப் பிணிப்பு. துணி - களிமண் உருண்டை; யானை செல்லும் வழியில் பக்கத் துள்ளோர், அது தம்மிடமாகத் திரும்பி வராதபடி எறியும் களிமண் உருண்டை என்பது சிவக்கவிமணியார் தரும் விளக்கமாகும். (பெரிய.பு.உரை). பிறர் தடுத்தற்குச் செய்யும் எத்தடைகளையும் மீறிச் செல்லும் யானை என்பார் `துணிவிலகா` என்றார்.

இடியுற்றெழும் ஒலியில்திசை
இபமுட்கிட அடியில்
படிபுக்குற நெளியப்படர்
பவனக்கதி விசையில்
கடிதுற்றடு செயலிற்கிளர்
கடலிற்படு கடையின்
முடிவிற்கனல் எனமுற்சினம்
முடுகிக்கடு கியதே. **#1376**

இடி போன்று எழுகின்ற ஓசையால் திக்கு யானைகள் அஞ்சக், காலால் மிதித்த சுவடு நிலத்தில் பொருந்த, அது, நெளியவும், ஓடும் காற்றைப் போன்று மிக விரைவாய்ப் போய், அழிக்கும் செயலில், பொங்கும் கடலுள் ஊழி முடிவில் தோன்றும் வடவைத் தீயைப் போல், மிக்க சினம் கொண்டு வேகத்துடன் அவ் யானை வந்தது.

விளக்கவுரை

பவனக்கதி:- காற்றின் விரைவு, திசை இபம் - எட்டுத் திக்கில் உள்ள யானைகள்; அவ்யானைகளின் பெயர்கள்; கிழக்கில் - ஐராவதம்; தென்கிழக்கில் - புண்டரிகம்; தெற்கில் - வாமனம்; தென்மேற்கில் - குமுதம்; மேற்கில் - அஞ்சனம்; வடமேற்கில் - புட்பதந்தம்; வடக்கில் - சாருவபூமம்; வடகிழக்கில் - சுப்பிர தீபம் என்பன.

மாடுற்றணை இவுளிக்குலம்
மறியச்செறி வயிரக்
கோடுற்றிரு பிளவிட்டறு
குறைகைக்கொடு முறியச்
சாடுற்றிடு மதில்தெற்றிகள்
சரியப்புடை அணிசெற்
டாடுற்றகல் வெளியுற்றதவ்
வடர்கைக்குல வரையே. #1377

கொலை செய்யும் கையையுடைய மலை போன்ற அவ்யானை, அருகில் வருகின்ற குதிரைக் கூட்டங்கள் அழிய வும், திண்ணிய வயிரம் வாய்ந்த மரக்கொம்பினை இரண்டு பிரிவாகக் கூறுபடுத்தி அவ்வாறு ஒடிந்த துண்டைக் கையில் எடுத்துப் பின் அது முறியும்படியாக அழிவு செய்தும், மதிலும் திண்ணைகளும் சரியுமாறு அழகுடைய அவற்றின் உறுப்புக்களை அழித்தும், இத்தகைய அழிவுச் செயலைச் செய்து பரந்த வெளியிடத்தைச் சேர்ந்தது.

விளக்கவுரை

வயிரக் கோடு - வயிரம் பொருந்திய மரக்கிளை.

பாவக்கொடு வினைமுற்றிய
படிறுற்றடு கொடியோர்
நாவுக்கர செதிர்முற்கொடு
நணுகிக்கரு வரைபோல்
ஏவிச்செறு பொருகைக்கரி
யினையுய்த்திட வெருளார்
சேவிற்றிகழ் பவர்பொற்கழல்
தெளிவுற்றனர் பெரியோர். #1378

பாவம் பொருந்திய கொடுஞ் செயல் முதிரும் பொருட்டு வஞ்சனையை மேற்கொண்டு, கொலை செய்ய நினைத்த கொடிய சமணர்கள், திருநாவுக்கரசர் எதிரே முற்பட அணுகி வந்து, பகைவரைப் போரிட்டுக் கொல்கின்ற துதிக்கையையுடைய யானையைக் கரிய மலை ஒன்றை ஏவுவது போல, ஏவிச் செலுத்தவும், திருநாவுக்கரசர் சற்றும் அஞ்சாமல், ஆனேற்றின் மேல் விளங்கும் சிவ பெருமானின் பொன் போன்ற திருவடிகளையே தெளிந்த உள்ளத்தில் நினைத்திருந்தார்.

விளக்கவுரை

சேவில் - ஆனேற்றில்.

அண்ணல் அருந்தவ வேந்தர்
ஆனைதம் மேல்வரக் கண்டு
விண்ணவர் தம்பெரு மானை
விடையுகந் தேறும் பிரானைச்
சுண்ணவெண் சந்தனச் சாந்து
தொடுத்த திருப்பதி கத்தை
மண்ணுல குய்ய வெடுத்து
மகிழ்வுட னேபாடு கின்றார். **#1379**

பெருமை பொருந்திய அரிய தவ வேந்தர், அவ்யானை தம்மீது வருவதைப் பார்த்துத் தேவர்களின் தலைவரும் ஆனேற்றில் இவர்ந்து மகிழ்ந்தருளுபவருமான சிவபெருமானைப் போற்றி, `சுண்ணவெண் சந்தனச் சாந்து` (தி.4 ப.2) எனத் தொடங்கும் பதிகத்தை இவ்வுலகவர் உய்யும்படி எடுத்து மிக்க மகிழ்வுடன் பாடுவாராகி.

விளக்கவுரை

****

வஞ்சகர் விட்ட சினப்போர்
மதவெங் களிற்றினை நோக்கிச்
செஞ்சடை நீள்முடிக் கூத்தர்
தேவர்க்குந் தேவர் பிரானார்
வெஞ்சுடர் மூவிலைச் சூல
வீரட்டர் தம்அடி யோம்நாம்
அஞ்சுவ தில்லைஎன் றென்றே
அருந்தமிழ் பாடி அறைந்தார். **#1380**

வஞ்சனையுடைய சமணர்கள் விடுத்த, மதமும் சினமும் உடைய யானையை நோக்கிச், `சிவந்த சடை பொருந்திய நீண்ட முடியையுடைய கூத்தரும், தேவர்க்கெல்லாம் தேவரும், வெண்மையான ஒளிபொருந்திய மூவிலைகளையுடைய சூலத்தை ஏந்தியவருமான திருவீரட்டானத்தில்

எழுந்தருளியிருக்கும் பெரு மானின் அடியவர் யாம்! அதனால் அஞ்ச வருவது ஏதும் இல்லை.` என்று அரிய தமிழ்ப் பதிகத்தைப் பாடினார்.

விளக்கவுரை

இங்கு அருளிய பதிகம் `சுண்ணவெண்` *(தி.4 ப.2)* எனத் தொடங்கும் பதிகம் ஆகும். இப்பதிகத்தின் முதற் குறிப்பினை இதற்கு முன்னுள்ள பாடலால் குறித்த ஆசிரியர், இப்பதிகப் பாடல்தொறும் வரும் நிறைவுக் குறிப்பினை இப்பாடலில் விளக்குகிறார். இப்பதிகம் பாடலிபுத்திரத்தில் அருளப் பெற்றதாயினும், திருவதிகைப் பெருமா னின் அடியவன் ஆதலின் அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதுமில்லை எனப் பாடல்தொறும் அருளப் பெற்றிருத்தலின் திருவதிகைப் பதிகம் என வழங்கப் பெறுவதாயிற்று. இது போன்றே `மாசில் வீணை` *(தி.5 ப.90)* எனத் தொடங்கும் பதிகமும் பாடலிபுத்திரத்தில் பாடப்பெற்றதாயினும், திருவதிகை இறைவனை நோக்கிய குறிப்பில் அமையாமையின் இதனையும், கடலிலிருந்து பாடிய `சொற்றுணை வேதியன்` *(தி.4 ப.11)* எனும் பதிகம், `நாமார்க்கும் குடியல்லோம்` *(தி.6 ப.98)* எனத் தொடங்கும் பதிகம் ஆகிய இரண்டோடும் கூட்டிப் பொதுப் பதிகங்கள் எனும் பெயரில் குறித்தனர்.

மலையே வந்து வீழினும் மனிதர்காள்
நிலையில் நின்று கலங்கப் பெறுதிரேல்
தலைவ னாகிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே. *(தி.5 ப.91 பா.5)*

எனவரும் அப்பரின் திருவாக்கு இந்நிகழ்ச்சிக்கு அகச் சான்றாய் அமைவதாகும்.

தண்டமிழ் மாலைகள் பாடித்
தம்பெரு மான்சர ணாகக்
கொண்ட கருத்தில் இருந்து
குலாவிய அன்புறு கொள்கைத்
தொண்டரை முன்வல மாகச்
சூழ்ந்தெதிர் தாழ்ந்து நிலத்தில்
எண்டிசை யோர்களுங் காண
இறைஞ்சி எழுந்தது வேழம். **#1381**

குளிர்ந்த தமிழ் மாலைகளைப் பாடித் தம் இறை வரையே சரணாகக் கொண்ட கருத்துடன் இருந்து விளங்கிய அன்பு பொருந்திய கொள்கையுடைய திருத்தொண்டரை, அவர் முன்பு வலமா கச் சுற்றி வந்து, எதிரில் தாழ்ந்து, எல்லாத் திக்குகளில் உள்ள வரும் காணும்படி அவ்யானை நிலத்தில் விழுந்து வணங்கி எழுந்து நின்றது.

விளக்கவுரை

தண்டமிழ் மாலைகள் எனக் குறிப்பது, பதிகத்தில் வரும் பாடல்களை நோக்கியதாகும். இப்பாடல்தொறும் அப்பர் தம்மை, `உடையார் ஒருவர்தமர் நாம்` *(தி.4 ப.2)* எனக் குறித்திருப்ப னவே, ஆசிரியர் சேக்கிழார், `தம்பெருமான் சரணாகக் கொண்ட கருத்தினிலிருந்து குலாவிய அன்புறு கொள்கை` எனக் குறித்தற்கு ஏதுவாயிற்று.

ஆண்ட அரசை வணங்கி
அஞ்சிஅவ் வேழம் பெயரத்
தூண்டிய மேன்மறப் பாகர்
தொடக்கி அடர்த்துத் திரித்து
மீண்டும் அதனை அவர்மேல்
மிறைசெய்து காட்டிட வீசி
ஈண்டவர் தங்களை யேகொன்
றமணர்மேல் ஓடிற் றெதிர்ந்தே. **#1382**

ஆளுடைய அரசரை வணங்கி, அவ்யானை அஞ்சி அங்கிருந்து பெயர்ந்து போக, அதனை அவர்மீது ஏவுதலை மேற் கொண்டிருந்த கொடிய பாகர்கள் வளைத்தும், அடர்த்தும், திரும்பவும் அதனை அவர்மீது போகுமாறு செய்து காட்டிட, அவ்வாறு செய்யாது, நெருங்கிய அவர்களையே கொன்று, சமணர்களையும் அழிக்க எதிர்ந்து வந்தது.

விளக்கவுரை

மிறை செய்து காட்டிட - கொலை செய்யுமாறு ஏவ.

ஓடி அருகர்கள் தம்மை
உழறி மிதித்துப் பிளந்து
நாடிப் பலரையுங் கொன்று
நகரங் கலங்கி மறுக
நீடிய வேலை கலக்கும்
நெடுமந் தரகிரி போல
ஆடியல் யானைஅம் மன்னற்
காகுலம் ஆக்கிய தன்றே. **#1383**

ஓடிச், சமணர்களைப் பற்றி உழறி அழித்தும், மிதித்தும், பிளந்தும், தேடிச் சென்று பலரையும் கொன்றும், அந்நகர் கலக்கம் அடைந்து வருந்த, நீண்ட கடலைக் கலக்கும் கொடிய மந்தர மலையைப் போல அழிக்கும் தன்மை பூண்ட அவ்யானை, அந்த அரசனுக்குத் துன்பத்தை உண்டாக்கியது

விளக்கவுரை

அடும் இயல்புடைய ஆனை என்பது ஆடியல் யானை என நீண்டது.

மந்தரகிரி - மாமேரு. அன்றே - அசைநிலை.

யானையின் கையிற் பிழைத்த
வினைஅமண் கையர்கள் எல்லாம்
மானம் அழிந்து மயங்கி
வருந்திய சிந்தைய ராகித்
தானை நிலமன்னன் தாளில்
தனித்தனி வீழ்ந்து புலம்ப
மேன்மை நெறிவிட்ட வேந்தன்
வெகுண்டினிச் செய்வதென் என்றான். **#1384**

யானையின் கையினின்றும் தப்பிய தீவினை யாளரான சமண்சமய மக்கள் எல்லாரும், மானம் அழிந்து, மயங்கி, வருத்தம் அடைந்த மனம் உடையவராய், வலிமை மிக்க படைகளை யுடைய உலகம் காக்கும் மன்னவனின் காலில் தனித்தனியே விழுந்து வருத்த முற்றாராக, அவர்களின் சொல்லைக்கேட்டு நன்னெறியைக் கைவிட்ட அரசன் சினந்து, `இனிச் செய்யக் கூடியது யாது?` என வினவினான்.

விளக்கவுரை

****

நங்கள் சமயத்தின் நின்றே
நாடிய முட்டி நிலையால்
எங்கள் எதிரே றழிய
யானையால் இவ்வண்ணம் நின்சீர்
பங்கப் படுத்தவன் போகப்
பரிபவந் தீரும் உனக்குப்
பொங்கழல் போக அதன்பின்
புகையகன் றாலென என்றார். **#1385**

`நம் சமயத்தினின்றும் தெரிந்து கொண்ட மந்திர சாதனையால் ஏவுதல் கெடுமாறு, இங்ஙனம் யானையால், உன்புகழை அழித்தவன் இறக்க, பொங்கும் தீ போகவே அதன்பின் புகை நீங்கு வதைப் போல, உனக்கு வந்த இழிநிலையும் நீங்கும்` என்றனர்.

விளக்கவுரை

முட்டி நிலை - மந்திர சாதனை, ஏகாரம் தேற்றப் பொரு ளில் வந்தது.

அல்லிருள் அன்னவர் கூற
அரும்பெரும் பாவத் தவன்பின்
தொல்லைச் சமயம் அழித்துத்
துயரம் விளைத்தவன் தன்னைச்
சொல்லும் இனிச்செய்வ தென்னச்

சூழ்ச்சி முடிக்குந் தொழிலோர்
கல்லுடன் பாசம் பிணித்துக்
கடலிடைப் பாய்ச்சுவ தென்றார். **#1386**

இரவில் காணும் இருளைப் போன்ற சமணர்கள் இங்ஙனம் கூற, அரும்பெரும் பாவச் செயலையுடைய அரசன், அதன் பின் `பழமையான நம் சமயத்தை அழிவு செய்து துன்பம் விளைத்த தருமசேனனை இனிச் செய்வதென்?` என வினவ, தாங்கள் கருதிய வஞ்சனையையே முடிக்கும் செயலையுடைய அவ்வமணர்கள் கல்லுடன் சேர்த்துக் கயிற்றால் கட்டிக் கடலில் வீசி யெறிதல் இனிச் செய்யத்தக்கது எனக் கூறினர்.

விளக்கவுரை

அல் - இரவு.

ஆங்கது கேட்ட அரசன்
அவ்வினை மாக்களை நோக்கித்
தீங்கு புரிந்தவன் தன்னைச்
சேமம் உறக்கொடு போகிப்
பாங்கொரு கல்லில் அணைத்துப்
பாசம் பிணித்தோர் படகில்
வீங்கொலி வேலையில் எற்றி
வீழ்த்துமின் என்று விடுத்தான். **#1387**

அதனைக் கேட்ட மன்னன், அத்தகைய தொழிலைச் செய்யும் மக்களைப் பார்த்து, `தீமைசெய்த தருமசேன னைத் தப்ப விடாது கொண்டு போய், பக்கத்தில் ஒரு கல்லுடன் சேர்த்துக் கயிற்றால் கட்டி, ஒரு படகில் ஏற்றி, மிகவும் ஒலிக்கின்ற கடலில் வீசி வீழ்த்தி விடுங்கள்` என அனுப்பினான்.

விளக்கவுரை

****

அவ்வினை செய்திடப் போகும்
அவருடன் போயரு கந்த
வெவ்வினை யாளருஞ் சென்று
மேவிட நாவுக் கரசர்
செவ்விய தம்திரு உள்ளஞ்
சிறப்ப அவருடன் சென்றார்
பவ்வத்தின் மன்னவன் சொன்ன
படிமுடித் தார்அப் பதகர். **#1388**

அச்செயலைச் செய்யப்போகும் அவர்களோடு, கொடு வினை செய்யும் மற்ற அமணர்களும் செல்ல, நாவுக்கரசரும் செம்மையான தம் திருவுள்ளம் சிறப்படைய அவர்களுடன் சென்றார். அரசன்

ஆணையிட்டவாறே அவ்விழிந்தோர் தம் செயலைச் செய்து முடித்தனர்.

விளக்கவுரை

****

அப்பரி சவ்வினை முற்றி
அவர்அகன் றேகிய பின்னர்
ஒப்பரும் ஆழ்கடல் புக்க
உறைப்புடை மெய்த்தொண்டர் தாமும்
எப்பரி சாயினு மாக
ஏத்துவன் எந்தையை யென்று
செப்பிய வண்டமிழ் தன்னால்
சிவன்அஞ் செழுத்துந் துதிப்பார். **#1389**

அவர்கள் அத்தகைய செயலைச் செய்து நீங்கிய பின்பு, ஒப்பற்ற ஆழமுடைய கடலுள் வீழ்ந்த உண்மைத் தொண்டின் உறைப்பு உடையவரான திருநாவுக்கரசரும், `எத்தகைய நிலையிலும் நான் என் தலைவனாகிய சிவபெருமானை வணங்குவன்` எனத் துணிவு பூண்டு, சொல்லிய வளப்பமுடைய தமிழ்ப் பாக்களினால் அப் பெருமானின் ஐந்தெழுத்தைப் போற்றுபவராய்.

விளக்கவுரை

****

சொற்றுணை வேதியன்
என்னுந் தூமொழி
நற்றமிழ் மாலையா
நமச்சி வாயவென்
றற்றமுன் காக்கும்அஞ்
செழுத்தை அன்பொடு
பற்றிய உணர்வினால்
பதிகம் பாடினார். **#1390**

`சொற்றுணை வேதியன்` எனத் தொடங்கும் தூய திருமொழிகளை முதலில் வைத்துத் தொடங்கிய நல்ல தமிழ் மாலை யாக, `நமச்சிவாய` எனத் துன்பக் காலத்தில் உடனிருந்து காக்கும் திருவைந்தெழுத்தை, நிரம்பிய அன்புடன் விடாது பற்றிய நிலையில் திருப்பதிகத்தைப் பாடினார்.

விளக்கவுரை

அற்றம் - குற்றம்: தீவினை. `பாவத்தை நண்ணிநின்று அறுப்பது நமச்சிவாயவே` *(தி.4 ப.11 பா.4)* எனவரும் திருவாக்கும் காண்க. இப்பதிகம், `நமச்சிவாயப் பதிகம்` என அழைக்கப் பெறும். தூமொழி -

தூய்மையைத் தரும் மொழி. நற்றமிழ் மாலை - நன்மையைத் தரும் பதிகம். தூய்மை பாசநீக்கமும், நன்மை சிவப்பேறுமாம். `கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்` *(தி.4 ப.11 பா.1)* என்பது இவ்வரலாற்றிற்கு அகச் சான்றாகும். பாய்ச்சினும் என்னும் உம்மை தீமை மிகுதி குறித்தது. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பெருகிய அன்பினர்
பிடித்த பெற்றியால்
அருமல ரோன்முதல்
அமரர் வாழ்த்துதற்
கரியஅஞ் செழுத்தையும்
அரசு போற்றிடக்
கருநெடுங் கடலினுட்
கல்மி தந்ததே. **#1391**

பெருகிய அன்பின் திறத்தவராகிப் பெருமா னையே பற்றி நிற்கும் தன்மையினால், அரிய நான்முகன் முதலான அமரர்களாலும் போற்றற்கு அரிய திருவைந்தெழுத்தைத் திருநாவுக் கரசர் போற்ற, கரிய நெடிய கடலுள் அக்கல்லானது மிதக்கலாயிற்று.

விளக்கவுரை

முன்னைய பாடலில் `அஞ்செழுத்தை அன்பொடு பற்றிய உணர்வினால்` என்றார். இப்பாடலில் பிடித்த பெற்றியால் என்று அருள்கின்றார். ஐந்தெழுத்தின் மீது நாவரசர்க்குள்ள உறைப்பு இவற்றால் அறியலாம். `இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்` *(தி.8 ப.37 பா.3)* எனவரும் திருவாக்கும் காண்க. கடலில் கல் மிதத்தல் உலகியல் நிலையில் அரிதெனினும் அருளியல் நிலையில் எளிதினும் எளிதாம்.

அப்பெருங் கல்லும்அங்
கரசு மேல்கொளத்
தெப்பமாய் மிதத்தலில்
செறித்த பாசமும்
தப்பிய ததன்மிசை
இருந்த தாவில்சீர்
மெய்ப்பெருந் தொண்டனார்
விளங்கித் தோன்றினார். **#1392**

அப்பெரிய கல்லும், அங்குத் திருநாவுக்கரசர் அதன்மீது வீற்றிருக்கத் தெப்பமாக மிதக்க, அவரது திருமேனியைப் பிணித்திருந்த கயிறும் அறுபட்டது. அக்கல்லாகிய தெப்பத்தின் மேல் வீற்றிருந்த கெடுதல் இல்லாத சிறப்பினையுடைய மெய்ப் பெரும் தொண்டரான நாவரசரும்

விளங்கித் தோன்றினார்.

விளக்கவுரை

****

இருவினைப் பாசமும்
மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ்
மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத்
தரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல்
உரைக்க வேண்டுமோ. **#1393**

நல்வினை, தீவினை என்ற கயிறு, ஆணவம் என்ற கல்லுடன் இறுகப் பிணித்தலால் உளவாகும் பிறவிக் கடலுள் விழும் மாக்கள், அதனுள் அழுந்திவிடாது மேலே ஏறுமாறு துணை நிற்கும் திருவைந்தெழுத்து, திருநாவுக்கரசரை இச்சிறு கடலுள் ஆழாது ஒரு சிறிய கல்மீது ஏற்றுவதும் ஒருவியப்பாக உரைக்கப்படுமோ? படாது என்பதாம்.

விளக்கவுரை

`வல்வினையேன் தன்னை,
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை`
(தி.8 சிவபுரா. வரி 51-54) எனத் திருவாசகம் உருவகித்துக் காட்டுவதும் ஈண்டு நினைவு கூரத் தகும். இனி `மும்மலக் கல்` எனக் கொண்டு, ஆணவம் முதலாய மும் மலக் கற்கள் எனக் கூறலும் அமைவுடைத்தாம். நல்வினையும் பிறத்தற்கு ஏதுவாகலின் இருவினைகளையும் கயிறு என்றார். `ஐந்தெழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை` *(தி.8 ப.5 பா.27)* என வரும் திருவாக்கும் நினைவு கூர்தற்குரியது.

கல்லினொடு எனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்க என்வாக்கினால்
நெல்லுநீள் வயல் நீலக்குடியரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேன் அன்றே. *(தி.5 ப.72 பா.7)*

என வரும் நாவரசர் திருவாக்கு இதற்கு அகச்சான்றாய் விளங்கும்.

அருள்நயந் தஞ்செழுத்
தேத்தப் பெற்றஅக்
கருணைநா வரசினைத்

திரைக்க ரங்களால்
தெருள்நெறி நீர்மையின்
சிரத்தில் தாங்கிட
வருணனுஞ் செய்தனன்
முன்பு மாதவம். **#1394**

திருவருள் கூட்ட, திருவைந்தெழுத்தினால் தாங்கப் பெற்ற அக்கருணையே உருவான நாவுக்கரசரை, தன் அலை களாகிய கைகளால் ஏந்தி, அவர் தம் பெருமையை அறிந்த முறையால், தன் தலைமீது தாங்கிக் கொள்ள, முன் காலத்தில் வருணனும் பெருந் தவத்தைச் செய்திருந்தனன்.

விளக்கவுரை

கருணை நாவரசு என்றார், தன்னுயிர் நீங்க நேரும் செயல்கள் எதிர்வரினும், தான்பிறிது இன்னுயிர் நீக்கும் செயலையோ, அன்றிச் சொல்லையோ, அன்றி நினைவையோ கூடச் செய்திலர் என்பது பற்றியாம்.

வாய்ந்தசீர் வருணனே வாக்கின் மன்னரைச்
சேர்ந்தடை கருங்கலே சிவிகை ஆயிட
ஏந்தியே கொண்டெழுந் தருளு வித்தனன்
பூந்திருப் பாதிரிப் புலியூர்ப் பாங்கரில்.
#1395

திருவருள் பெற்ற வருணனே, நாவுக்கரசரைச் சேர்ந்து அடைந்த கருங்கல்லே சிவிகையாய் ஆகிடத், தன்கைகளால் ஏந்தியவாறே கொண்டுவந்து, அழகிய திருப்பாதிரிப்புலியூர் எனும் திருப்பதியின் அருகே, கரையேறச் செய்தான்.

விளக்கவுரை

நாவரசர் கரையேறிய இடம், கரையேற விட்ட குப்பம் என்ற பெயரில் அழைக்கப்பெற்று வருகிறது. இது திருப்பாதிரிப் புலியூருக்கு அருகில் தென்திசையில் உள்ளது.

அத்திருப் பதியினில்
அணைந்த அன்பரை
மெய்த்தவக் குழாமெலாம்
மேவி ஆர்த்தெழ
எத்திசை யினும்அர
வென்னும் ஓசைபோல்
தத்துநீர்ப் பெருங்கடல்
தானும் ஆர்த்ததே. **#1396**

அத்திருப்பதியில் அங்ஙனம் வந்து சேர்ந்த அன்பரான திருநாவுக்கரசரை, உண்மையான தவத்தைச் செய்த அடியவர் கூட்டம் எல்லாம் கூடி, மகிழ்ச்சியால் பேரொலி செய்து எதிர்கொள்ளுதலால், எல்லாத் திசைகளிலும் `அரகர` என்று ஒலிக்கும் பேரொலி போல அலைகளையுடைய கடலும் ஒலித்தது.

விளக்கவுரை

தத்துநீர் - ஒலிக்கின்றநீர்.

தொழுந்தகை நாவினுக்
கரசுந் தொண்டர்முன்
செழுந்திருப் பாதிரிப்
புலியூர்த் திங்கள்வெண்
கொழுந்தணி சடையரைக்
கும்பிட் டன்புற
விழுந்தெழுந் தருள்நெறி
விளங்கப் பாடுவார். **#1397**

யாவராலும் தொழத்தக்க திருநாவுக்கரசரும், அடியவர்களின் முன்னே, செழுமையான திருப்பாதிரிப்புலியூரில் வீற்றிருக்கும் வெண்மையான பிறைச்சந்திரனைச் சூடிய சடையை யுடைய சிவபெருமானை வணங்கி, அன்பு கூர்ந்து கீழே வீழ்ந்து வணங்கிப் பின் எழுந்து நின்று, திருவருள் நெறி உலகில் விளங்குமாறு பாடுவாராய்,

விளக்கவுரை

அருள்நெறி - ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணங்களும் ஆதிமாண்பும் ஆம்.

ஈன்றாளு மாய்எனக் கெந்தையு
மாகி யெனவெடுத்துத்
தோன்றாத் துணையாய் இருந்தனன்
தன்அடி யோங்கட்கென்று
வான்தாழ் புனல்கங்கை வாழ்சடை
யானைமற் றெவ்வுயிர்க்குஞ்
சான்றாம் ஒருவனைத் தண்டமிழ்
மாலைகள் சாத்தினரே. **#1398**

`ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய்` எனத் தொடங்கித் `தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்னடியோங் கட்கே` என்று நிறைவுறும் அக்கருத்துக் கொண்ட பாடல் முதலாக, வானினின்று உலகில் தாழும் நீரையுடைய கங்கை வாழ்கின்ற சடையை உடைய இறைவரை, எவ்வுயிர்களுக்கும் சான்றாய் இருக் கும் ஒருவரை, குளிர்ந்த தமிழால்

ஆன மாலைகளைக் கொண்டு சாத்தினார்.

விளக்கவுரை

நாவரசர் இதுபொழுது அருளியது `ஈன்றாளுமாய்` எனத் தொடங்கும் பதிகமாகும் *(தி.4 ப.94)*. இப்பதிகத்துவரும் முதல்பாடலின் முதலடியையும் நான்காம் அடியையும் இயைத்துக் கூறினார், அப்பாடல் பொருண்மை அவ்வாறாக அமைதலின். உரை சேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேதங்களையும் படைத்து அவற்றின் உயிர்க்குயிராய் இறைவன் நிற்றலின் `எவ்வுயிர்க் கும் சான்றாம் ஒருவன்` என்றார். `எங்கும் உளன் ஒருவன் காணுங் கொல் என்று அஞ்சி அங்கம் குலைவது அறிவு` *(குமர-நீதிநெறி.94)* என்பர் குமரகுருபர அடிகளும். ஈண்டும் தண் தமிழ் மாலைகள் என்றது, பாடற் பன்மை நோக்கியாம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மற்றும் இனையன வண்டமிழ்
மாலைகள் பாடிவைகி
வெற்றி மழவிடை வீரட்டர்
பாதம்மிக நினைவில்
உற்றதொர் காதலின் அங்குநின்
றேகிஒன் னார்புரங்கள்
செற்றவர் வாழுந் திருவதி
கைப்பதி சென்றடைவார். **#1399**

மேலும், இவை போன்ற செழுமையான தமிழ்ப் பதிகங்களைப் பாடி, அப்பதியில் தங்கிப் பின், வெற்றியும் இளமையும் மிக்க ஆனேற்றினையுடைய திருவதிகை வீரட்டானத்தில் வீற்றிருக் கும் இறைவரின், திருவடிகளில் தம் நினைவில் மிகவும் பொருந்திய தோர் காதல் எழுந்ததால், அங்கு நின்றும் சென்று, பகைவரின் முப்புரங் களையும் எரித்த வீரட்டானத்து இறைவர் வீற்றிருந்தருளும் திருவதி கைப் பதியினைச் சென்று அடைபவராய்,

விளக்கவுரை

`மற்றும் இனையன வண்டமிழ் மாலைபாடி` என்பதால் மேலும் பல பதிகங்கள், இத்திருப்பதியின்கண் அருளப்பெற்றிருக் கலாம் எனத் தெரிகின்றது. எனினும் அவை கிடைத்தில.

தேவர் பிரான்திரு மாணி
குழியுந் தினைநகரும்
மேவினர் சென்று விரும்பிய
சொன்மலர் கொண்டிறைஞ்சிப்
பூவலர் சோலை மணமடி

புல்லப் பொருள்மொழியின்
காவலர் செல்வத் திருக்கெடி
லத்தைக் கடந்தணைந்தார். #1400

மெய்ப்பொருள் மொழிதலில் வேந்தராய நாவரசர், தேவரின் தலைவரான இறைவரின் திருமாணிகுழி, திருத்தினைநகர் ஆகிய திருப்பதிகளுக்கும் விரும்பிச் சென்று, எவ்வுயிர்களும் விரும்புதற்குரிய சொல் மாலைகளால் போற்றி செய்து, மலர்கள் மலர்கின்ற சோலைகளின் மணமானது தம் திருவடியில் பொருந்தும் படி நடந்து சென்று, திருக்கெடிலத்தைக் கடந்து வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

திருமாணி குழியிலும், திருத்தினை நகரிலும் அருளப் பெற்ற பதிகங்கள் கிடைத்தில.

வெஞ்சமண் குண்டர்கள் செய்வித்த
தீய மிறைகளெல்லாம்
எஞ்சவென் றேறிய இன்றமிழ்
ஈசர் எழுந்தருள
மஞ்சிவர் மாடத் திருவதி
கைப்பதி வாணர்எல்லாந்
தஞ்செயல் பொங்கத் தழங்கொலி
மங்கலஞ் சாற்றலுற்றார். #1401

கொடிய சமணர்கள் செய்வித்த தீய துன்பங்கள் எல்லாம் அழிய, வெற்றி பெற்று மேலேறி வந்த இனிய தமிழரசர் இங்ஙனம் எழுந்தருள, மேகம் தவழுமாறு உயர்ந்த மாடங்களை யுடைய திருவதிகை நகரில் வாழ்பவர்கள் எல்லாரும், தாங்கள் எதிர் கொண்டு இன்னுரை வழங்கும் செயல்கள் சிறக்க, ஒலிக்கும் முரசு முதலிய இயங்களை இசைத்து, இச்செய்தியை ஊரவர் அறிய எடுத்துக் கூறினர்.

விளக்கவுரை

தீயமிறை - கொடிய துன்பங்கள். `பெருமிறை தானே தனக்கு` *(குறள், 847)* என்ற இடத்தும் இப்பொருள்படுதல் காணலாம். எஞ்ச - ஒழிய.

மணிநெடுந் தோரணம் வண்குலைப்
பூகம் மடற்கதலி
இணையுற நாட்டி எழுநிலைக்
கோபுரந் தெற்றியெங்குந்
தணிவில் பெருகொளித் தாமங்கள்
நாற்றிச்செஞ் சாந்துநீவி
அணிநகர் முன்னை அணிமேல்

அணிசெய் தலங்கரித்தார். #1402
அழகிய நீண்ட தோரணங்களையும், வளமிக்க பாக்குக் குலைகளையும், மடலையுடைய வாழைகளையும் பொருந்த நாட்டியும், ஏழு நிலைகளையுடைய கோபுரத்தும் திண்ணையிலும் பெருகிய ஒளியையுடைய மாலைகளைத் தொங்கவிட்டும், சிவந்த சாந்து பூசியும், அழகிய அந்நகரத்தை முன்னைய அழகை விட மேலும் அழகுபடுத்தினர்.

விளக்கவுரை

****

மன்னிய அன்பின் வளநகர்
மாந்தர் வயங்கிழையார்
இன்னிய நாதமும் ஏழிசை
ஓசையும் எங்கும்விம்மப்
பொன்னியல் சுண்ணமும் பூவும்
பொரிகளுந் தூவியெங்குந்
தொன்னக ரின்புறஞ் சூழ்ந்தெதிர்
கொண்டனர் தொண்டரையே. #1403

நிலைபெற்ற அன்புடைய அவ்வளமான நகரத்து மக்களும், ஒளிபொருந்திய அணிகளை அணிந்த பெண்களும், இனிய ஒலியை உண்டாக்கும் இயங்களின் ஓசையையும், ஏழிசைப் பாடலின் ஒலியையும், எங்கும் பெருகச் செய்து, பொன்னிறமான பொடிகளையும், மலர்களையும் பொரிகளையும் கலந்து எங்கும் தூவிப், பழமையான அந்நகரின் எல்லையில் வந்து சூழ்ந்து, திருத் தொண்டரான திருநாவுக்கரசு நாயனாரை எதிர்கொண்டனர்.

விளக்கவுரை

****

தூயவெண் ணீறு துதைந்தபொன்
மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ்
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வதுபோல் அன்புநீர் பொழிகண்ணும்
பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார்
புகுந்தனர் வீதியுள்ளே. #1404

தூயதும் வெண்மையதுமான திருநீற்றை நிறைய அணியப் பெற்ற பொன்போன்ற மேனியையும், உருத்திராக்க மாலையணிந்த திருவடிவத்தையும், தம் உயிர்த் தலைவரான சிவ பெருமானின்

சேவடிகளைச் சிந்திக்கும் மனத்தையும், உள்ளம் நைந்து உருகுவது போன்ற அன்பு நீரை இடைவிடாது பொழிகின்ற திருக்கண் களையும், தேவாரத் திருப்பதிகமான செவ்விய சொற்களை இடை விடாது இசைத்து வரும் சிவந்த வாயையும் உடைய திருநாவுக்கரசு நாயனார் திருவீதியுள் புகுந்தார்.

விளக்கவுரை

துதைதல் - செறிந்திருத்தல்: தன்னளவினும், தன்னை அணிந்தார் அளவினும் தூய்மை நிலைபெற அமையும் பாங்குடைய தாதலின் `தூய வெண்ணீறு` என்றார். நாவரசரின் சிவவேடப் பொலி வழகை முதன் முதல் ஆசிரியர் காட்டி மகிழ்விக்கும் இடம் இதுவாம். தைவருதல் - தடவுதல்: சிந்தித்தல்.

கண்டார்கள் கைதலை மேற்குவித்
திந்தக் கருணைகண்டால்
மிண்டாய செய்கை அமண்கையர்
தீங்கு விளைக்கச்செற்றம்
உண்டா யினவண்ணம் எவ்வண்ணம்
என்றுரைப் பார்கள்பின்னுந்
தொண்டாண்டு கொண்ட பிரானைத்
தொழுது துதித்தனரே. **#1405**

பார்த்தவர்கள் கைகளைத் தலைமீது குவித்துக் கொண்டு `கருணையே உருவமாக விளங்கும் நாவரசரைக் கண்களால் கண்ட பின்பும், கொடுஞ் செயலர்களாகிய சமணர்கள் இவருக்குத் தீங்கு விளைக்கும்படி சினம் கொண்டதுதான் எவ்வாறு` என்று உரைப்பார்களாய், மேலும் தொண்டரை ஆட்கொண்டு அடிமையாக ஏற்றுக் கொண்ட பெருமானையும் வணங்கிப் போற்றினர்.

விளக்கவுரை

மிண்டாய செய்கை - கொடுமையும் செருக்கும். கொண்டு செய்த செயல்: `மிண்டு மனத்தவர் போமின்கள்` *(தி.9 ப.29 ப1)* எனவரும் திருவாக்கும் காண்க.

இவ்வண்ணம் போல எனைப்பல
மாக்கள் இயம்பியேத்த
மெய்வண்ண நீற்றொளி மேவும்
குழாங்கள் விரவிச்செல்ல
அவ்வண்ணம் நண்ணிய அன்பரும்
வந்தெய்தி அம்பவளச்
செவ்வண்ணர் கோயில் திருவீரட்

டானத்தைச் சேர்ந்தனரே. #1406

இவ்வாறு அளவற்ற மக்கள் சொல்லிப் போற்ற, என்றும் அழிதல் இல்லாத அழகிய திருநீற்றின் ஒளி உடலில் மிளிர்ந்துள்ள அடியார் கூட்டங்கள் உடன் செல்லவும், அங்ஙனம் அடைந்த அன்பரான திருநாவுக்கரசு நாயனாரும் வந்து சேர்ந்து அழகான பவளம் போன்ற சிவந்த நிறத்தினரான சிவபெருமான் எழுந்தருளியுள்ள கோயிலான திருவீரட்டானத்தை அடைந்தார்.

விளக்கவுரை

****

உம்பர்தங் கோனை உடைய
பிரானைஉள் புக்கிறைஞ்சி
நம்புறும் அன்பின் நயப்புறு
காதலி னால்திளைத்தே
எம்பெரு மான்தனை ஏழையேன்
நான்பண் டிகழ்ந்ததென்று
தம்பரி வால்திருத் தாண்டகச்
செந்தமிழ் சாற்றிவாழ்ந்தார். #1407

தேவர்களின் தலைவரும், தம்மை அடிமையாக உடையவருமான இறைவரைத் திருக்கோயிலுக்குள் புகுந்து வணங்கி, விரும்புதற்குரிய அன்பும் விருப்பம் மிக்க காதலும் பெருகச், சிவா னந்தத்தினுள் இடையறாது மூழ்கிநின்று, `எம்பெருமானை ஏழை யேன் பண்டு இகழ்ந்தவாறே` என்ற கருத்துடன் தம் பரிவினால் திருத் தாண்டகத் தமிழ்த் திருப்பதிகத்தைப் பாடிப் பெருவாழ்வு அடைந்தனர்.

விளக்கவுரை

இவ்விடத்து அரசு அருளியது `வெறிவிரவு` *(தி.6 ப.3)* எனத் தொடங்கும் பதிகமாகும். இப்பதிகப் பாடல்கள் அனைத்தும் `ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தவாறே` என முடிவுறுகின்றன. அவ்வரிய தொடரையே ஆசிரியர் சேக்கிழார் நினைவு கூர்கின்றார்.

அரிஅயனுக் கரியானை
அடியவருக் கெளியானை
விரிபுனல்சூழ் திருவதிகை
வீரட்டா னத்தமுதைத்
தெரிவரிய பெருந்தன்மைத்
திருநாவுக் கரசுமனம்
பரிவுறுசெந் தமிழ்ப்பாட்டுப்
பலபாடிப் பணிசெயுநாள். #1408

அறிதற்கு அரிய பெருந்தகையாரான திருநாவுக் கரசு நாயனார்,
திருமாலுக்கும், நான்முகனுக்கும் அரியவராயினும் அடியவர்க்கு
எளியவரான, பரந்த புனலால் சூழப்பட்ட திரு வீரட்டானத்துள்
எழுந்தருளியிருக்கும் அமுதமானவரை, உள்ளத்தில் மீதூர்ந்த அன்பைப்
பெருக்கும் செந்தமிழ்ப் பாடல்கள் பலவற்றையும் பாடித்
திருப்பணிசெய்துவரும் அந்நாள்களில்.

விளக்கவுரை

திருவதிகையில் மனம் பரிவுறுபாட்டாகப் பாடியருளியன: *1.* இரும்பு: திருநேரிசை. *2.* வெண்ணிலா: திருநேரிசை. *3. 9;* நம்பனே: திருநேரிசை. *4.* மடக்கினார்: திருநேரிசை. *5.* முன்பெலாம்: திருநேரிசை. *6.* மாசில்ஒண்: திருவிருத்தம். *7.* முளைக்கதிர்: காந்தார பஞ்சமம். *9; 8. 9;* கோணல்: திருக்குறுந்தொகை. *9.* எட்டுநாள்: திருக்குறுந்தொகை. *10.* சந்திரனை: அடையாளத் திருத்தாண்டகம். *11.* எல்லாம்சிவன்: போற்றித் திருத்தாண்டகம். *12.* அரவணையான்: திருவடித் திருத்தாண்டகம். *13.* செல்வப்புனல்: காப்புத் திருத்தாண்டகம். இவற்றுள் முன்னைய ஆறும் நான்காம் திருமுறையில் வரு வன. *(தி.4 ப.24, 25, 26, 27, 28, 104, 110)* ஏழும் எட்டும் ஒன்பதும் ஐந்தாம் திருமுறையில் வருவன *(தி.5 ப.50, 51)*. பத்து முதல் பதின்மூன்று வரையில் உள்ளன ஆறாம் திருமுறையில் வருவன *(தி.6 ப.4, 5, 6, 7)*. இப்பதின்மூன்று பதிகங்களும் முன்னைய பாட்டில் குறித்த `வெறிவிரவு` *(தி.6 ப.3)* எனத் தொடங்கும் பதிகம் ஒன்றுமாகப் பதினான்கு பதிகங்களும் இதுபொழுது பாடியனவாகும். `கூற்றாயின வாறு` *(தி.4 ப.1)* எனத் தொடங்கும் பதிகம் தமக்கையாருடன் முதன் முறையாகச் சென்று வழிபட்ட பொழுது பாடியதாகும். `சுண்ணவெண் சந்தனச் சாந்தும்` *(தி.4 ப.2)* என்ற பதிகம் பாடலிபுரத்தில் கெடில வாணரை நினைந்து பாடியதாகும். `நாமார்க்கும் குடியல்லோம்` *(தி.6 ப.98)* என்பது திருவதிகை இறைவன்முன் பாடியதன்று. பல்லவனின் அமைச்சர்கள் முன் பாடியதாகும்.

புல்லறிவிற் சமணர்க்காப்
பொல்லாங்கு புரிந்தொழுகும்
பல்லவனுந் தன்னுடைய
பழவினைப்பா சம்பறிய
அல்லல்ஒழிந் தங்கெய்தி
ஆண்டஅர சினைப்பணிந்து
வல்அமணர் தமைநீத்து
மழவிடையோன் தாளடைந்தான். **#1409**

புல்லிய அறிவையுடைய சமணர்களுக்காகப் பெரும் தீங்குகளையே

இடைவிடாது செய்துவருபவனாகிய மகேந்திர வர்மனாகிய பல்லவ மன்னனும், தன் பழவினைத் தொடர்பு நீங்கவே, அத்துன்பத்தினின்றும் நீங்கித் திருவதிகையை அடைந்து, ஆளுடைய அரசரை வணங்கி, வலியச் சமணர்களை விட்டு இளைய ஆனேற்றை யுடைய சிவபெருமானின் திருவடிகளைச் சாரும் நெறியாகிய சைவப் பெருநெறியைச் சேர்ந்தான்.

விளக்கவுரை

சிவநெறிச் சார்பில் நிற்கலானான் என்பதாம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வீடறியாச் சமணர்மொழி
பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனும் திருவதிகை
நகரின்கட் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்தில்அமண்
பள்ளியொடு பாழிகளுங்
கூடஇடித் துக்கொணர்ந்து
குணபரவீச் சரம்எடுத்தான். **#1410**

வீடுபேற்றிற்குரிய நெறியை அறியாத சமணர்களின் மொழிகள் பொய்யென்று கண்டு, உண்மையுணர்ந்த பல்லவ மன்னனும் பாடலிபுத்திரத்திலிருந்த சமணர் பள்ளிகளையும் பாழிகளையும் ஒருங்கே இடித்துக் கொண்டு வந்து, திருவதிகை நகரில் நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானுக்குக் `குணபர ஈச்சரம்` என்னும் கோயிலை எடுப்பித்தான்.

விளக்கவுரை

மகேந்திரவர்மனின் *(கி. பி. 615 - 630)* சிறப்புப் பெயர்களுள் ஒன்று குணபரன் என்பதாகும். திருவருளாலும், நாவரசரின் வரலாற்றையும் அவர்தம் பத்திமை உறைப்பையும் கண்ட நற்பேற்றாலும், சைவ சமயத்தைச் சார்ந்து, திருவதிகை, திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் தன் பெயரால் சிவபெருமானுக்குக் கோயில் எடுப்பித்தும் நாவரசரின் திருவடிகளை வணங்கியும் நற்பேறு பெற்றான். இச் செய்தி அவன்தன் கல்வெட்டுக்களால் அறியத் தக்கனவாய் உள்ளன. பள்ளி - சமண்சமயத்தைச் சார்ந்த குருமார்கள் தங்கியிருக்கும் இடம். பாழி - சமணக் கோயில்.

இந்நாளில் திருப்பணிகள்
செய்கின்ற இன்றமிழ்க்கு
மன்னான வாகீசத்

திருமுனியும் மதிச்சடைமேல்
பன்னாகம் அணிந்தவர்தம்
பதிபலவுஞ் சென்றிறைஞ்சிச்
சொன்னாமத் தமிழ்புனைந்து
தொண்டுசெய்வான் தொடர்ந்தெழுவார். **#1411**

இத்தகைய நாள்களில், திருப்பணிசெய்கின்ற, இனிய தமிழுக்கு அரசரான வாகீச முனிவரும், பிறைச் சந்திரனைச் சூடிய சடையின்மீது பாம்பை அணிந்த சிவபெருமான் வீற்றிருக்கும் திருப்பதிகள் பலவற்றையும் சென்று வணங்கி, அவர்தம் திருப் பெயரைப் புகழ்ந்து போற்றும் திருப்பதிகங்களைப் பாடித், தொண்டு செய்யும் பொருட்டு, எழுவாராயினார்.

விளக்கவுரை

பதி பலவும் என்பன அடுத்த பாடலில் குறிக்கப் பெறுகின்றன.

திருவதிகைப் பதிமருங்கு
திருவெண்ணெய் நல்லூரும்
அருளுதிரு ஆமாத்தூர்
திருக்கோவ லூர்முதலா
மருவுதிருப் பதிபிறவும்
வணங்கிவளத் தமிழ்பாடிப்
பெருகுவிருப் புடன்விடையார்
மகிழ்பெண்ணா கடம்அணைந்தார். **#1412**

திருவதிகையின் அருகிலுள்ள திருவெண்ணெய் நல்லூரும், அருள் தருகின்ற திருவாமாத்தூரும், திருக்கோவலூரும் முதலாகப் பொருந்திய பதிகள் பலவற்றையும் வணங்கி, செழுமை யுடைய தமிழ்ப்பதிகங்களைப் பாடி, ஆனேற்றை ஊர்தியாக உடைய சிவபெருமான் விரும்பி வீற்றிருக்கும் திருப்பெண்ணாகடத்தைப் பெருவிருப்புடன் அடைந்தார்.

விளக்கவுரை

திருவெண்ணெய் நல்லூரில் அருளிய பதிகம் கிடைத் திலது.
திருஆமாத்தூரில் அருளிய பதிகங்கள் இரண்டாம், அவை:
1. திருக்குறுந்தொகை: `மாமாத்தாகிய ஈசனை` *(தி.5 ப.44)* எனத் தொடங்குவது. *2.* திருத்தாண்டகம்: `வண்ணங்கள் தாம்பாடி` *(தி.6 ப.9)* எனத் தொடங்குவது.
திருக்கோவலூரில் அருளிய பதிகம், `செத்தையேன்` *(தி.4 ப.69)* எனத் தொடங்கும் திருநேரிசைப் பதிகமாகும். `முதலாமருவு திருப்பதிகள்` எனக் குறிப்பன, திருவிடையாறு, திருநெல்வெண்ணெய் முதலாயினவாம். பதிகங்கள் எவையும் கிடைத்தில. திருமுண்டீச்சரம்

என்ற பதியை இவ்விடத்துக் குறிப்பிட்டு, அப்பதியில் அருளியது, `ஆர்த்தான்` *(தி.6 ப.85)* எனத் தொடங்கும் பதிகமாகும் எனக் க.வெள்ளைவாரணனார் கூறுவர்.

கார்வளரும் மாடங்கள்
கலந்தமறை ஒலிவளர்க்குஞ்
சீருடைஅந் தணர்வாழுஞ்
செழும்பதியின் அகத்தெய்தி
வார்சடையார் மன்னுதிருத்
தூங்கானை மாடத்தைப்
பார்பரவுந் திருமுனிவர்
பணிந்தேத்திப் பரவினார். **#1413**

மேகங்கள் தவழ்வதற்கு இடமான மாளிகை களில், பொருந்திய மறையொலியை வளர்க்கின்ற சிறப்பையுடைய மறையவர்கள் வாழ்கின்ற அச்செழும் பதியுள் போய், நீண்ட சடையை யுடைய சிவபெருமான் நிலைபெற்று விளங்கும் திருத்தூங்கானை மாடக் கோயிலை, உலகவர் போற்றும் திருநாவுக்கரசர் பணிந்து போற்றிப் பரவினார்.

விளக்கவுரை

ஒருயானை படுத்திருப்பதுபோலும் வடிவில் இக் கோயிலின் கருவறை விமானம் அமைந்திருத்தலின் தூங்கானை மாடம் எனப் பெயர் பெறுவதாயிற்று. இதுகோயிலின் பெயர். பெண்ணாகடம் என்பது ஊரின் பெயர்.

புன்னெறியாம் அமண்சமயத்
தொடக்குண்டு போந்தவுடல்
தன்னுடனே உயிர்வாழத்
தரியேன்நான் தரிப்பதனுக்
கென்னுடைய நாயகநின்
இலச்சினையிட் டருளென்று
பன்னுசெழுந் தமிழ்மாலை
முன்னின்று பாடுவார். **#1414**

`இழிவான சமண் சமயப் பிணிப்புடைய இவ் வுடலுடனே உயிர் வாழ்வதற்கு மனமிசையேன் ஆதலின் என் உயிர்த் தலைவரே! நான் உயிர் வாழ்வதற்கு உமது இலச்சினையை இட்டருள வேண்டும்` என்னும் கருத்தமைவுடைய செந்தமிழ் மாலையைத் திருமுன்பு நின்று பாடுவாராய்.

விளக்கவுரை

****

பொன்னார்ந்த திருவடிக்கென்
விண்ணப்பம் என்றெடுத்து
முன்னாகி எப்பொருட்கும்
முடிவாகி நின்றானைத்
தன்னாகத் துமைபாகங்
கொண்டானைச் சங்கரனை
நன்னாமத் திருவிருத்தம்
நலஞ்சிறக்கப் பாடுதலும். **#1415**

`பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப் பம்` (தி.4 ப.109) எனத் தொடங்கி, எப்பொருட்கும் முதலும் முடிவுமாகி நின்று அருளுகின்ற இறைவரை, தம் திருமேனியில் ஒரு மருங்கில் உமையம்மையாரைக் கொண்டவரை, சங்கரரை, அவரு டைய நல்ல திருப்பெயர்களைப் பாடும் திருவிருத்தப் பதிகத்தை நலம் சிறக்கப் பாடவும்,

விளக்கவுரை

****

நீடுதிருத் தூங்கானை
மாடத்து நிலவுகின்ற
ஆடகமே ருச்சிலையான்
அருளாலோர் சிவபூதம்
மாடொருவர் அறியாமே
வாகீசர் திருத்தோளில்
சேடுயர்மூ விலைச்சூலம்
சினவிடையி னுடன்சாத்த. **#1416**

செல்வம் நிலைபெறும் திருத்தூங்கானை மாடத்தில் நிலவும் பொன்னான மேருமலையை வில்லாக உடைய பெருமானின் திருவருளால், ஒரு சிவ பூதமானது, அருகிலுள்ளார் யாரும் அறியாதவாறு வந்து, திருநாவுக்கரசரின் திருத்தோள்களில் ஒளி மிக்க மூவிலைச்சூலக் குறியைச் சினமுடைய ஆனேற்றின் குறியுடனே சாத்த,

விளக்கவுரை

இவ்விடத்து அருளப் பெற்ற திருப்பதிகம் `பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்` *(தி.4 ப.109)* எனத் தொடங்கும் திருவிருத்தமாகும். இப்பதிகத்துள் கிடைத்துள்ள பாடல்கள் மூன்றேயாம். முதற்பாடலில் `சூலமென் மேற்பொறி` என்றும், இரண்டாவது பாடலில் `திருவடி நீறென்னைப் பூசு` என்றும், மூன்றாவது பாடலில், `இடவம் பொறித்தென்னை யேன்று கொள்`

என்றும் வேண்டிக்கொண்டுள்ளார் நாவரசர். இப்பாடலில் ஆசிரியர் சேக் கிழார், சூலமும் இடபமும் பொறித்தமையைக் குறிக்கின்றார். இவ்விலச்சினைகளை இறைவன் சிவபூதத்தின் வழி இட்டதாகவும் ஆசிரியர் கூறுகிறார். இரண்டாவது பாடலில் வேண்டிக் கொண்ட விண்ணப்பம், திருவடி நீறென்னைப் பூசு என்பதாம். இது இறைவனே செய்தருள வேண்டுதலானும், அவ்வண்ணம் பெருமான் வழங்கிய அருட்கொடையைப் பிறர் அறியச் சொல்லுதல் தகவன்று ஆதலானும். அதனை விடுத்து ஏனையிரண்டனையும் ஆசிரியர் சேக்கிழார் கூறுவாராயினர் எனக் கருதலாம். `அருளுடையார் அளித்தருளும் செவ்விய பேர் அருள் விளம்பும் திறமன்று` *(தி.12 பு.24 பா.27)* எனக் காரைக்கால் அம்மையார் வரலாற்றில் அருளுமாற்றான் இறைவனின் அருட்செயல் பிறர் அறியச் சொல்லல் அறமன்று என்பது அறியலாம். எனினும் அவர் செய்தபடி சொல்லுவதே அறம், எனக்கருதி அம்மை யார் வரலாற்றில் அவ்வருட்பேற்றைச் சொன்னதற்குக் காரணம், கணவனுரை காத்தமையேயாம் என்பது ஆண்டு அறியப்படுவ தொன்றாகும். ஈண்டு அத்தகையதோர் இடர்ப்பாடு ஆசிரியர் சேக்கிழாருக்கு நேராமையின் அவ்வருட் செயலைக் கூறாராயினர் எனக் கருதலாம். எனினும் இத்தகைய அருட்பேற்றில் ஒன்றான இறைவன் திருவடி சூட்டினமையைப் பின் திருநல்லூரில் ஆசிரியர் சேக்கிழார் விதந்து கூறுகிறார் ஆதலின் இக்கருத்து மேலும் எண்ணத் தக்கதாயுள்ளது.

உமையம்மையார் தக்கன் மகளாக இருந்த உடலை நீக்க வேண்டியதும், திருநாளைப் போவார் தம் இழிபிறப்பினை நினைந்து தில்லைக் கூத்தனை வழிபடல் தக்கதன்று எனக் கருதியதும், தத்தமக்கு ஏற்பட்ட இழிதகைமை கருதியமையேயாம். நாவரசர் ஈண்டு வேண்டிக் கொண்டதும் அன்னதோர் இழிதகைமை நீங்கவேண்டியே யாம்.

ஆங்கவர்தந் திருத்தோளில்
ஆர்ந்ததிரு இலச்சினையைத்
தாங்கண்டு மனங்களித்துத்
தம்பெருமான் அருள்நினைந்து
தூங்கருவி கண்பொழியத்
தொழுதுவிழுந் தார்வத்தால்
ஓங்கியசிந் தையராகி
உய்ந்தொழிந்தேன் எனவெழுந்தார். **#1417**

அவர் தம் திருத்தோளில் நிறைந்த திரு இலச்சினைகளைக் கண்டு, மனம் மகிழ்ந்து, தம்பெருமானின் திருவருளை நினைந்து, இழிந்து வரும் அருவி எனக் கண்களில் நீர் வடிய, வணங்கி, நிலத்தில் விழுந்து, மீதூர்ந்த

அன்பால் நிரம்பி, மேல் எழுந்த சிந்தையராய் `நான் உய்ந்தேன்` எனக் கூறி எழுந்தார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

தூங்கானை மாடத்துச்
சுடர்க்கொழுந்தின் அடிபரவிப்
பாங்காகத் திருத்தொண்டு
செய்துபயின் றமருநாள்
பூங்கானம் மணங்கமழும்
பொருவில்திரு அரத்துறையுந்
தேங்காவின் முகிலுறங்குந்
திருமுதுகுன் றமும்பணிந்து. **#1418**

திருத்தூங்கானை மாடத்தில் வீற்றிருக்கும் சுடர்க் கொழுந்தான பெருமானின் திருவடிகளைப் போற்றி செய்து, இயன்ற முறையில் திருப்பணிகளும் செய்து, அத்திருப்பதியில் விரும்பி எழுந்தருளியிருக்கும் நாள்களில், அழகிய காட்டுப் பூக்களின் மணம் கமழ்கின்ற ஒப்பற்ற திருவரத்துறையினையும், தேன் பொருந்திய சோலைகளில் மேகங்கள் தவழும் திருமுதுகுன்றத்தையும் வணங்கி.

விளக்கவுரை

திருமுறைகளில் திருநெல்வாயில் அரத்துறை எனக் குறிக்கப் பெறும் இத்திருப்பதி, இக்காலத்துத் திருவரத்துறை, திரு வட்டுறை, என்று வழிமொழியப் பெறுகிறது. நெல்வாயில் ஊர்ப் பெயரும், அரத்துறை கோயில் பெயருமாம். திருவரத்துறையில் அருளிய பதிகம் `கடவுளை` எனத் தொடங்கும் திருக்குறுந்தொகைப் பதிகமாகும்.
திருமுதுகுன்றத்தில் அருளிய பதிகம் `கருமணியை` எனத் தொடங்கும் திருத்தாண்டகம் ஆகும். திருமுதுகுன்றம் என்பது இன்று விருத்தாசலம் என அழைக்கப்பெறுகிறது. திருமுதுகுன்றம் என்பதே பழமையும் தகுதியும் உடைய பெயராகும்.

வண்டமிழ்மென் மலர்மாலை
புனைந்தருளி மருங்குள்ள
தண்டுறைநீர்ப் பதிகளிலுந்
தனிவிடையார் மேவியிடங்
கொண்டருளுந் தானங்கள்
கும்பிட்டுக் குணதிசைமேல்
புண்டரிகத் தடஞ்சூழ்ந்த
நிவாக்கரையே போதுவார். **#1419**

வளமான தமிழால் ஆய மென்மையான மலர் மாலைகளைப் புனைந்து, அருகில் உள்ள குளிர்ந்த துறைகளையுடைய நீர்வளம் மிக்க திருப்பதிகளிலும், ஒப்பில்லாத ஆனேற்றூர்தியை யுடைய சிவபெருமான் அவ்வவ்விடங்களிலும் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்களையும் வணங்கிக் கிழக்குத் திசையை நோக்கி, தாமரைக் குளங்களால் சூழப்பட்ட நிவாநதியின் கரைவழியாய்ச் செல்பவராய்,

விளக்கவுரை

இங்குக் குறிக்கப் பெற்ற திருப்பதிகள் திருஎருக்கத்தம் புலியூர், திருக்கூடலையாற்றூர் முதலியனவாகலாம் என்பர் சிவக்கவி மணியார் *(பெரிய.பு.உரை)*. எனினும் பதிகங்கள் கிடைத்தில.
பதிகளிலும் என்பதன்கண் உள்ள உம்மை இறந்து தழீஇயிற்று. நிவாநதி தில்லைக்கு வடக்கே ஓடும் வெள்ளாறு ஆகும்.

ஆனாத சீர்த்தில்லை
அம்பலத்தே ஆடுகின்ற
வானாறு புடைபரக்கும்
மலர்ச்சடையார் அடிவணங்கி
ஊனாலும் உயிராலும்
உள்ளபயன் கொளநினைந்து
தேனாரும் மலர்ச்சோலைத்
திருப்புலியூர் மருங்கணைந்தார். **#1420**

அமையாத சிறப்பையுடைய தில்லை அம்பலத்தில் கூத்தியற்றும், கங்கையாறு அருகில் பரவும் மலர் பொருந்திய சடையை உடையவரான பெருமானின் திருவடிகளை வணங்கி, ஊனாலும் உயிராலும் கொளத்தக்க பயனைப் பெற எண்ணி யவராய்த் தேன் பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருப்புலியூரை அணுக அடைந்தார்.

விளக்கவுரை

புலியூர் - புலிக்கால் முனிவர் வழிபட்டமையின் இப்பெயர் பெற்றது.
இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

நாவுக் கரசரும் இருவர்க் கரியவர்
நடமா டியதிரு எல்லைப்பால்
மேவித் தலமுற மெய்யில் தொழுதபின்
மேன்மேல் எழுதரும் விழைவோடுங்
காவிற் களிமயில் மகிழ்வுற் றெதிரெதிர்
ஆடக் கடிகமழ் கமலஞ்சூழ்
வாவித் தடமலர் வதனம் பொலிவுறு
மருதத் தண்பணை வழிவந்தார். **#1421**

திருநாவுக்கரசரும், நான்முகனுக்கும், திரு மாலுக்கும் எட்டாத சிவபெருமான் அருட் கூத்தாடுகின்ற தில்லையின் எல்லையைச் சேர்ந்து, நிலம் பொருந்த மெய்யால் தொழுதபின், மேன் மேலும் பொங்கி எழுகின்ற ஆசையுடனே சோலைகளில் களிப்புடைய மயில்கள், மகிழ்ந்து எதிர் எதிராக ஆட, மணம் கமழும் தாமரைகள் நிரம்பிய பொய்கைகளின் மலர்களாகிய முகங்கள் விளங்கும் மருத நிலத்தைச் சார்ந்த குளிர்ந்த வயல்களின் அருகிருக்கும் வழியே வந்தார்.

விளக்கவுரை

மருதத் தண்பணை - மருத நிலத்திலுள்ள குளிர்ந்த வயல்கள்.

முருகிற் செறியிதழ் முளரிப் படுகரில்
முதுமே திகள்புது மலர்மேயும்
அருகிற் செறிவன மெனமிக் குயர்கழை
அளவிற் பெருகிட வளரிக்குப்
பெருகிப் புடைமுதிர் தரளஞ் சொரிவன
பெரியோர் அவர்திரு வடிவைக்கண்
டுருகிப் பரிவுறு புனல்கண் பொழிவன
எனமுன் புளவள வயலெங்கும். **#1422**

மணம் செறிந்த நெருங்கிய இதழ்களையுடைய தாமரை மலர்கள் உள்ள பள்ளங்களில், முதிய எருமைகள் புதிய பூக் களை மேய்கின்ற இடங்களின் அருகில், நெருங்கிக் காடுபோல மிக உயர்ந்த மூங்கிலின் அளவாக உயர்ந்து பெருக வளரும் கரும்புகள், பெருத்து முதிர்ந்த கணுக்களில் முத்துக்களைச் சொரிந்தவையாய்ப் பெரியவரான திருநாவுக்கரசு நாயனாரின் திருவேடத்தைக் கண்டு உள் உருகி, அன்பு மிகுதியால் கண்ணீர் பொழிவது போல் வயல்கள் எங்கும் விளங்கும்.

விளக்கவுரை

கரும்பிலிருந்து உதிர்ந்த முத்துக்கள், அரசின் வேடங் கண்டு உருகும் கண்ணீர்த் துளிகள் போல விளங்கும் எனக் கூறியது, ஒரு மருங்கு நிலவளத்தையும், பிறிதொரு மருங்கு பத்திமை மேம் பாட்டையும் புலப்படுத்துகின்றது.

அறிவிற் பெரியவர் அயல்நெற் பணைவயல்
அவைபிற் படும் வகை அணைகின்றார்
பிறவிப் பகைநெறி விடுவீர் இருவினை
பெருகித் தொடர்பிணி உறுபாசம்
பறிவுற் றிடஅணை யுமின்என் றிருபுடை
பயில்சூழ் சினைமிசை குயில்கூவுஞ்
செறிவிற் பலதரு நிலையிற் பொலிவுறு

திருநந் தனவனம் எதிர்கண்டார். **#1423**

அறிவில் பெரியவரான திருநாவுக்கரசு நாயனார் அருகில் உள்ள நெல்வயல்கள் பின்னாகுமாறு கடந்து முன் சென்று, அணைகின்றார். ஆதலின் பகையாய பிறவியை அடைவிக்கும் நெறி களைக் கைவிடும் கருத்துடையவர்களே! இரு வினைகளும் பெருகித் தொடர்ந்து பிணிக்கும் பாசம் நீங்குமாறு அங்கு அணையுங்கள் எனச் சூழ்ந்த மரக்கிளைகளின் மேலே பயின்ற குயில்கள் கூவுவதற்கு இடமான பலமரங்கள் நெருங்கி, நிலைத்து, அழகாக விளங்கும் திரு நந்தனவனங்களை எதிரில் கண்டார்.

விளக்கவுரை

அரசரின் வருகை கண்ட குயில்கள் `பிறவியை நீங்கும் கருத்துடையவர்களே! நாவரசர் இங்கு அணைகின்றார். நம்பாவம் நீங்க வேண்டின் இங்கு அவரைக் கண்டு உய்ய அணையுங்கள்` எனக்கூவி அழைப்பனவாகக் கூறுகின்றார். `நேயம் மிகுந்தவர் வேடமும் ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே` *(சிவஞானபோதம், சூத். 12)* எனவரும் ஞானநூல் கருத்தும் நினைக. இறைவற்கு அணியத் தகும் நால்வகை மலர்களில், கோட்டுப்பூவும் ஒன்றாதலின் அப்பூக்கள் நிறைந்த மரங் களை உடைய சோலையைத் திருநந்தனவனம் என்றார்.

அவர்முன் பணிவொடு தொழுதங் கணைவுற
அணிகொம் பரின்மிசை அருகெங்கும்
தவமுன் புரிதலில் வருதொண் டெனுநிலை
தலைநின் றுயர்தமிழ் இறையோராம்
இவர்தந் திருவடி வதுகண் டதிசயம்
எனவந் ததிர்அர கரவென்றே
சிவமுன் பயில்மொழி பகர்கின் றனவளர்
சிறைமென் கிளியொடு சிறுபூவை. **#1424**

அந்நந்தன வனங்களை முன் பணிவுடன் தொழுது நாயனார் அங்குச் சேர, அழகான மரக்கொம்புகளின் மேல் பக்கங்களில் எங்கும், முன் நாளில் தவம் செய்தலால் வரும் திருத் தொண்டில் தலை சிறந்து நிற்கும் உயர்ந்த தமிழ் அரசரான இவரது வடிவைக் கண்டு, `இஃது அதிசயம்` எனக் கூறி, சிறைகளையுடைய மென்மையான கிளிகளும், சிறிய நாகணவாய்ப் பறவைகளும் அவர் எதிரே வந்து, `அரகர` என்று முன் பயின்ற மொழிகளை உரைக்கும்.

விளக்கவுரை

கிளிகளும் நாகணவாய்ப் பறவைகளும், அரசரது வடிவைக் கண்டதும், முன் தாம் பயின்றிருந்த `அரகர` என்னும் ஒலியைச் செய்யுமாம்.

அடியவரைக் கண்டு போற்றவும் வரவேற்க வும், அங்குள்ள பறவையினங்களும் தெரிந்திருந்தன என்பது இத னால் போதரும். அரசரின் வடிவு பறவைகளையும் ஈர்த்தாட் கொள்ளு மாற்றை இதனால் அறியலாம்.

அஞ்சொல் திருமறை யவர்முன் பகர்தலும்
அவருந் தொழுதுமுன் அருள்கூரும்
நெஞ்சிற் பெருகிய மகிழ்வும் காதலும்
நிறைஅன் பொடும்உரை தடுமாறச்
செஞ்சொல் திருமறை மொழிஅந் தணர்பயில்
தில்லைத் திருநகர் எல்லைப்பால்
மஞ்சிற் பொலிநெடு மதில்சூழ் குடதிசை
மணிவா யிற்புறம் வந்துற்றார். **#1425**

அழகிய சொற்களையுடைய, அரகர என்னும் திருமறைகளை அவர் முன் அக்கிளிகள் சொல்லவும், அவரும் வணங்கி, முன்னமே அருள் நிறைந்த தம் உள்ளத்தில் மேலும் பெருகிய மகிழ்ச்சியும், காதலும், நிறைந்த அன்புமாகிய இவற்றால் சொற்கள் தடுமாறச், செம்மையான சொற்களையுடைய மறைகளை ஓதும் அந்தணர்கள் பயில்கின்ற நகரின் எல்லைப் புறத்தில், மேகங் களால் விளங்கும் நீண்ட மதிலால் சூழ்ந்த மேற்குத் திசையில் அமைந்த மணிவாயிலின் புறத்தே வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

அரகர என்ன அரியதொன் றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப் பன்றே. *; -தி.10 பா.899*

எனவரும் திருமூலர் திருவாக்கால் இம்மறையின் பெருமை விளங்கும்.

அல்லல் பவம்அற அருளுந் தவமுதல்
அடியார்எதிர்கொள அவரோடும்
மல்லற் புனல்கமழ் மாடே வாயிலின்
வழிபுக் கெதிர்தொழு தணைவுற்றார்
கல்வித் துறைபல வருமா மறைமுதல்
கரைகண் டுடையவர் கழல்பேணுஞ்
செல்வக் குடிநிறை நல்வைப் பிடைவளர்
சிவமே நிலவிய திருவீதி. **#1426**

தீங்கு தரும் பிறவிப்பிணி நீங்குமாறு தம்மை வழிபடுவாருக்கு அருள்செய்யும் தவத்தையே தம் செல்வமாகக் கொண்ட அடியவர், நாவரசரை எதிர் கொண்டழைக்க, வளமான நீரில் பூக்கள் மணம் கமழும் பக்கங்களை உடைய மேற்றிசை வாயில் வழியே அவர்களோடு புக்கு,

கல்வித்துறைகள் பலவற்றையும், அவற் றோடு அடிப்படையாக இருக்கும் சிறப்பு வளரும் மறைகளையும் கரைகண்டு சிவபிரானுடைய திருவடிகளை விரும்பி வணங்கும் அருட்செல்வம் வாய்ந்த இல்லங்கள் நிறைந்த நல்ல இருப்பிடங்களில் மங்கலங்கள் வளர்கின்ற மேம்பட்ட வீதிகளை எதிரே தொழுது அடைந்தார்.

விளக்கவுரை

தவமுதலடியார் - தவத்தையே வாழ்முதலாகக் கொண்ட அறம் வளர்த்தோர். வருமுதல் மாமறை - வடுவில் கொள்கை உயர்ந் தோர் ஆய்ந்த கெடுவில் கேள்வி எனப் போற்றப்பட்டு, எல்லாக் கலைக ளுக்கும் அப்பாற்பட்டதான வேதம். இவ்வேதம் கரைகண்டதன் பயன், சிவபிரான் கழல் பேணி அவருடைய அருட்செல்வத்தால் மங்கலம் பொலிய வாழ்த்துதல். சுந்தரர் வடதிசை வாயில் வழியாக வும், நாவரசர் குடதிசை வாயில் வழியாகவும் ஞானசம்பந்தர் தென்திசை வாயில் வழியாகவும் தில்லையை அடைந்தனர். மாணிக்க வாசகர் குணதிசை வாயில் வழியாகச் சென்றனர் போலும்.

நவமின் சுடர்மணி நெடுமா லையுநறு
மலர்மா லையுநிறை திருவீதிப்
புவனங் களின்முதல் இமையோர் தடமுடி
பொருதுந் தியமணி போகட்டிப்
பவனன் பணிசெய வருணன் புனல்கொடு
பணிமா றவுமவை பழுதாமென்
றெவருந் தொழுதெழும் அடியார் திருவல
கிடுவார் குளிர்புனல் விடுவார்கள். **#1427**

தத்தம் உலகங்களுக்குத் தலைவரான தேவர்களின் பெரிய முடிகள் ஒன்றுடன் ஒன்று மோதுவதால் சிந்திய மணிகளும், ஒளிவீசும் நவமணிகளால் ஆய மாலைகளும், நல்ல மணம் வீசும் மலர் மாலைகளும் நிறைந்த திருவீதியினின்றும், காற்றின் கடவுள், அவற்றை வாரி எறிந்து திருவலகுப் பணி செய்யவும், அதனையடுத்து வருணன் நீர் கொண்டு திருமெழுக்குப் பணி செய்ய வும், அத்திருப்பணிகள் முழுமையும் செம்மைபெறாமையும் கண்டு, அனைவரும் தொழுது எழும் தன்மை வாய்ந்த அடியார்கள், அவற் றின்மேல் தாம் திருவலகு இடுவார்களும், குளிர்ந்த நீரை விடுபவரு மாய் இருந்தனர்.

விளக்கவுரை

திருவீதிகளில் காற்றின் கடவுளும் வருணனும் செய்த பணிகள் செம்மை பெறாமை கண்டு, அவற்றை அடியவர் நீக்கி நிறை வும் அழகும் பெறுமாறு செய்தனர். தேவர்களின் மணிமுடிகள் சிதறிக் கிடக்க,

அவற்றை முதற்கண் அகற்றினர். அதன்பின்பு அலகு இடவும் மெழுக்கிடவும் செய்தனர். போக அட்டு - அகற்றும் பணியைச் செய்து.

மேலம் பரதலம் நிரையுங் கொடிகளில்
விரிவெங் கதிர்நுழை வரிதாகுங்
கோலம் பெருகிய திருவீ தியைமுறை
குலவும் பெருமையர் பணிவுற்றே
ஞாலந் திகழ்திரு மறையின் பெருகொலி
நலமார் முனிவர்கள் துதியோடும்
ஓலம் பெருகிய நிலையேழ் கோபுரம்
உறமெய் கொடுதொழு துள்புக்கார். **#1428**

பொருந்திய பெருமையுடைய நாவரசர், மேலே வானவெளியிடம் எங்கும் நிறையும் கொடிகளூடே, பரவும் வெம்மை யான கதிரவனின் கதிர்கள் நுழைவதற்கு அரிதான அழகு பெருகிய திருவீதியை முறையாகப் பணிந்து, உலகில் விளங்கும் திருமறைகளின் பெருகிய ஒலியானது நன்மையுடைய முனிவர் செய்யும் போற்றி யுரைகளுடன் பெருகிய எழுநிலை மேலைக் கோபுரத்தையும், நிலம் உற வணங்கித் தொழுது உள்ளே புகுந்தனர்.

விளக்கவுரை

`வெயில் நுழைபு அறியாக் குயில் நுழை பொதும்பர்` *(பெரும்பாண்.-374)* என்றாற் போல, இங்கு வெயில் நுழைவு அறியா கொடி நுடங்கும் வீதிகளைக் காட்டுகின்றார் ஆசிரியர்.

வளர்பொற் கனமணி திருமா ளிகையினை
வலம்வந் தலமரும் வரைநில்லா
அளவிற் பெருகிய ஆர்வத் திடையெழும்
அன்பின் கடல்நிறை உடலெங்கும்
புளகச் செறிநிரை விரவத் திருமலி
பொற்கோ புரமது புகுவார்முன்
களனிற் பொலிவிடம் உடையார் நடநவில்
கனகப் பொதுஎதிர் கண்ணுற்றார். **#1429**

அழகு வளர்கின்ற பொன்மாளிகையை வலமாக வந்து, வருத்தம் தருவதும் ஓரெல்லைக்குட்படாது பெருகியதுமான ஆர்வத்திடை எழுகின்ற அன்பான கடல் நிறைந்த மேனி முழுதும் மயிர்ப்புளகம் மிகுந்து கலக்க, திருமிகுந்த பொன்வயத்ததாய கோபுரத்தில் உள்ளே புகும் நாயனார், கழுத்தில் விளங்கும் நஞ்சை யுடைய கூத்தப் பெருமான் நடமாடுகின்ற பொன்னம்பலத்தை எதிரே கண்டார்.

விளக்கவுரை

தாம் விரும்பும் பொருள்கள் கிடைக்கத் தாழ்க்கினும், கிடையாதொழியினும் வருத்தம் நேர்தலின் `அலமரும் .. ஆர்வம்` என்றார்.

நீடுந் திருவுடன் நிகழும் பெருகொளி
நிறைஅம் பலம்நினை வுறநேரே
கூடும் படிவரும் அன்பால் இன்புறு
குணமுன் பெறவரு நிலைகூடத்
தேடும் பிரமனும் மாலுந் தேவரும்
முதலாம் யோனிகள் தெளிவொன்றா
ஆடுங் கழல்புரி அமுதத் திருநடம்
ஆரா வகைதொழு தார்கின்றார். **#1430**

நிலைபெறும் வீடுபேறான திருவுடன் பொருந்தி யுள்ள மேன்மேலும் வளர்கின்ற ஞான ஒளி நிறையும் அம்பலமானது, முன்னம் தம் மனத்தில் பொருந்தியிருந்தவாறே எதிரிலும் கூடுமாறு வரும் அன்பால் இன்பம் பொருந்தும் குணச்சிறப்பு மிகும் நிலை கைகூடியதால், தேடுகின்ற அயனும் மாலும் முதலிய தேவர்களும், பிறவிகள் இடனாக வரும் ஏனைய உயிர்களும் தெளிய இயலாத, ஆடும் திருவடியால் நிகழ்த்தும் அமுதமான கூத்தை ஆசை நிறைவு பெறாத வகையில், தொழுது துய்க்கலாயினர்.

விளக்கவுரை

****

கையுந் தலைமிசை புனைஅஞ் சலியன
கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யுந் தகையன கரணங் களுமுடன்
உருகும் பரிவின பேறெய்தும்
மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரும்
மின்தாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடுமவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால். **#1431**

அவருடைய கைகளும் தலையின்மீது அஞ்சலி யாகக் குவிந்தன. கண்களும் இடைவிடாமல் பொழியும் மழைபோல் நீரைப் பொழிவனவாயின. மனம் முதலிய அகக் கருவிகளும் உடன் உருகும் அன்பினையுடையவாயின. பேறு பெறும் திருமேனியும் நிலத்தின் மீது விழுமுன்னரே எழுதரும். மின்போல் தாழ்ந்து விளங்கும் சடையுடன், நின்று ஆடுகின்ற இறைவரின் திருக்கூத்தை அவர் கும்பிடும் ஆர்வம் இவ்வாறு பெருகும் நிலையில் அளவிடற் கரிதாயது.

விளக்கவுரை

பத்திமை மீதூர்வால் எழும் மெய்ப்பாடுகளை இத் திருப்பாடல் சித்தரித்துக் காட்டுகிறது.

இத்தன் மையர்பல முறையுந் தொழுதெழ
என்றெய் தினையென மன்றாடும்
அத்தன் திருவருள் பொழியுங் கருணையின்
அருள்பெற் றிடவரும் ஆனந்தம்
மெய்த்தன் மையினில் விருத்தத் திருமொழி
பாடிப் பின்னையும் மேன்மேலும்
சித்தம் பெருகிய பரிவால் இன்புறு
திருநே ரிசைமொழி பகர்கின்றார். **#1432**

இத்தகைய தன்மையுடையவராய, நாவரசர், பல முறையும் தொழுது எழலும், `என்று வந்தாய்?` எனும் குறிப்புடன் பேரவையில் நடமாடும் அத்தனாரின் திருவருள் பொழிகின்ற கருணையால் அருளைப் பெறுமாறு வரும் ஆனந்தமான உண்மைப் பாட்டினால் திருவிருத்தத் திருமொழியைப் பாடி, பின்னரும் மேன் மேலும் சித்தத்தினுள்ளே பெருகி வளரும் அன்பு மிகுதியால் இன்பம் அடையும் திருநேரிசைத் திருப்பதிகத்தையும் அருளிச் செய்வராய்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய திருவிருத்தப் பதிகம் `கருநட்ட கண்டனை` எனத் தொடங்கும் திருப்பதிகமாகும். *(தி.4 ப.81)* இப் பதிகத்தில் வரும் இரண்டாவது பாடல், `என்று வந்தாய் என்னும் எம்பெருமான் தன் திருக்குறிப்பே` என நிறைவு பெறுகிறது. இதுவே ஆசிரியர் திருவுள்ளத்தில் `என்றெய்தினை` எனும் குறிப்புப்படக் கூற ஏதுவாயிற்று;

இதனையடுத்துப் பாடிய திருப்பதிகம், `பத்தனாய்ப் பாட மாட்டேன்` *(தி.4 ப.23)* எனத் தொடங்கும் திருநேரிசைத் திருப்பதிக மாகும். இத்திருப்பதிகத்தில் வரும் `அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே` எனும் கருத்தமைவு, என்று வந்தாய்? எனப் பெருமான் வினவியதற்கு விடையாக அமைந்துள்ளமை அறியத் தக்கது. இதனை ஆசிரியர் அடுத்த திருப்பாடலில் எடுத்துப் மொழி கின்றார்.

பத்தனாய்ப் பாட மாட்டேன்
என்றுமுன் னெடுத்துப் பண்ணால்
அத்தாஉன் ஆடல் காண்பான்
அடியனேன் வந்த வாறென்
றித்திறம் போற்றி நின்றே

இன்தமிழ் மாலை பாடிக்
கைத்திருத் தொண்டு செய்யுங்
காதலிற் பணிந்து போந்தார். **#1433**

`பத்தனாய்ப்பாட மாட்டேன்` என முன்னம் தொடங்கிப் பண்ணிசை பொருந்த `அத்தா உன்ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறு` என்று முடியும் ஈற்றினை உடையதான பதிகம் முதலானவற்றை இத்திறத்தில் போற்றி நின்றே இனிய தமிழ் மாலையைப் பாடிக் கைத்தொண்டு செய்கின்ற ஆசையால் வெளியே வந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

நீடிய மணியின் சோதி
நிறைதிரு முன்றின் மாடும்
ஆடுயர் கொடிசூழ் பொற்றேர்
அணிதிரு வீதி யுள்ளுங்
கூடிய பணிகள் செய்து
கும்பிடுந் தொழில ராகிப்
பாடிய புனித வாக்கின்
பணிகளும் பயிலச் செய்வார். **#1434**

மணிகளின் ஒளி நிறைந்த திருமுன்றிலின் பக்கத்திலும், ஆடுகின்ற உயர்ந்த கொடிகள் சூழ்ந்த அழகிய தேர் ஓடும் அழகிய வீதிகளினுள்ளும், பொருந்திய திருப்பணிகள் செய்து, கும்பிடும் தொழிலை உடையவராகிப் பாடும் தூய திருவாக்காகிய பணிகளும் செய்வாராயினார்.

விளக்கவுரை

****

அருட்பெரு மகிழ்ச்சி பொங்க
அன்னம்பா லிக்கும் என்னும்
திருக்குறுந் தொகைகள் பாடித்
திருவுழ வாரங் கொண்டு
பெருத்தெழு காத லோடும்
பெருந்திருத் தொண்டு செய்து
விருப்புறு மேனி கண்ணீர்
வெண்ணீற்று வண்டல் ஆட. **#1435**

கூத்தப் பெருமானின் அருளைப் பெற்றதால் உண்டான பெருமகிழ்ச்சி மேன்மேலும் பெருக, `அன்னம் பாலிக்கும்` எனத் தொடங்குகின்ற திருக்குறுந்தொகைப் பதிகத்தைப் பாடிப், பெருகி எழுகின்ற அன்போடு

பெரிய தொண்டைச் செய்து, விருப்ப முடைய மேனியில் வடியும் கண்ணீரால் கரைந்த திருவெண்ணீற் றாலாகிய வண்டல் பொருந்த,

விளக்கவுரை

இங்குக் குறிக்கப்பெற்ற `அன்னம் பாலிக்கும்` *(தி.5 ப.1)* எனத் தொடங்கும் திருக்குறுந்தொகைப்பதிகம் திரு உழவாரப் பணி செய்து கொண்டிருந்த பொழுது பாடியதாகும். இன்று மாகேசுவர வழிபாட்டில் பாடப் பெற்றுவருகின்றது. அன்னம் - சோறு; வீடுபேறு மாம்: `பாதகமே சோறு பற்றின வா தோணோக்கம்` *(தி.8 ப.15 பா.7)* எனவரும் திருவாசகமும் காண்க. `திருக்குறுந்தொகைகள் பாடி` என்ற பன்மையால், பல திருக்குறுந்தொகைப் பதிகங்கள் பாடியிருக்க வேண் டும் எனத் தெரிகிறது, எனினும் இப்பொழுது பாடிய இக்குறுந் தொகைப் பதிகமும், பின்னர்ப் பாடவுள்ள *(தி.5 ப.2)* திருக்குறுந் தொகைப் பதிகம் ஒன்றும் ஆக, இருபதிகங்களுமே இதுபொழுது கிடைத்துள்ளன.

மேவிய பணிகள் செய்து
விளங்குநாள் வேட்க ளத்துச்
சேவுயர் கொடியார் தம்மைச்
சென்றுமுன் வணங்கிப் பாடிக்
காவியங் கண்டர் மன்னுந்
திருக்கழிப் பாலை தன்னில்
நாவினுக் கரசர் சென்று
நண்ணினார் மண்ணோர் வாழ. **#1436**

திருநாவுக்கரசர் இவ்வாறு தமக்குப் பொருத்தமான பணிகளைச் செய்து வந்த நாள்களில், `திருவேட் களத்தில்` எழுந்தருளியிருப்பவரும், உயரிய ஆனேற்றுக் கொடியை உடையவருமான இறைவரைத் திருமுன் சென்று வணங்கிப்பாடி, நீலமலர் போன்ற நிறமுடைய, அழகிய கழுத்தினையுடைய பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கழிப்பாலைக்கு, மண்ணுலகத்தவர் வாழும் பொருட்டுச் சென்று அடைந்தார்.

விளக்கவுரை

திருவேட்களத் திருக்குறுந்தொகையில் *(தி.5 ப.42 பா.1)* `என்று மின்பந் தழைக்கவி ருக்கலாம்` எனக் கூறியவர். திருக்கழிப்பாலைப் பதிகத்தில் `துஞ்சும் போதும் துணையென லா குமே` *(தி.5 ப.40 பா.10)* என்று அருளுமாற்றான் அதனை வலியுறுத்துகின்றார்.

சினவிடைஏ றுகைத்தேறும் மணவாள
நம்பிகழல் சென்று தாழ்ந்து
வனபவள வாய்திறந்து வானவர்க்குந்

தானவனே என்கின் றாள்என்
றனையதிருப் பதிகமுடன் அன்புறுவண்
டமிழ்பாடி அங்கு வைகி
நினைவரியார் தமைப்போற்றி நீடுதிருப்
புலியூரை நினைந்து மீள்வார். **#1437**

சினத்தையுடைய ஆனேற்றை ஊர்கின்ற மணக்கோலத்துடன் வீற்றிருக்கும் இறைவரின் திருவடிகளை வணங்கி, அழகிய பவளம் போன்ற வாயைத் திறந்து `வானவர் களுக்கும் தானவன் ஆகியவரே என்று கூறுகின்றார்` என்று அத்தன்மையுடைய திருப்பதிகத்துடனே, அன்பு பொருந்திய வளம் மிக்க தமிழ் மாலைகளைப் பாடி அப்பதியில் தங்கி, நினைதற்கரிய சிவபெருமானைப் போற்றிச் செல்வம் நிலைபெறும் புலியூரை நினைந்து திரும்புவராகி.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகங்களில் முன்னையது, `வனபவள வாய்திறந்து வானவர்க்கும் தானவனே என்கின்றா ளால்`*(தி.4 ப.6)* எனத்தொடங்கும் காந்தாரப் பண்ணிலமைந்த பதிகமாகும். இது முதலாக அன்புறு வண்தமிழ் மாலை பாடி, எனவே பலபதிகங்கள் பாடியிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இன்று கிடைத்துள்ள பதிகங்கள், இப்பதிகத்தோடு *(1)* ஐந்தாம். அவை *(2)* வண்ணமும் வடிவும்- திருக்குறுந்தொகை *(தி.5 ப.40). (3)* நங்கையைப்பாகம் - திருநேரிசை *(தி.4 ப.30). (4)* நெய்தற்குருகு - திருவிருத்தம் *(தி.6 ப.106). (5)* ஊனுடுத்தி - திருத்தாண்டகம் *(தி.6 ப.12).*

மனைப்படப்பிற் கடற்கொழுந்து வளைசொரியுங்
கழிப்பாலை மருங்கு நீங்கி
நனைச்சினைமென் குளிர்ஞாழற் பொழிலூடு
வழிக்கொண்டு நண்ணும் போதில்
நினைப்பவர்தம் மனங்கோயில் கொண்டருளும்
அம்பலத்து நிருத்த னாரைத்
தினைத்தனையாம் பொழுதுமறந் துய்வனோ
எனப்பாடித் தில்லை சார்ந்தார். **#1438**

இல்லங்களின் முற்றங்களில் எல்லாம் கடலின் அலைகள் சங்குகளைக் கொணர்ந்து சேர்க்கின்ற திருக்கழிப் பாலையினை நீங்கி, அரும்புகளையுடைய கொம்புகளுடன் கூடிய குளிர்ந்த புன்னைமரங்கள் அடர்ந்த சோலைகளின் வழியாய்ச் சென்று சேர்கின்ற போதில், நினைப்பவர் தம் மனத்தையே கோயிலாகக் கொண்ட கூத்தப் பெருமானைச் சிறுபொழுதும் மறந்தால் நான் உய்வனோ (தி.5 ப.2 பா.1) எனும் கருத்தையுடைய திருப்பதிகத்தைப் பாடியவாறே

திருத்தில்லையை அடைந்தார்.

விளக்கவுரை

திருக்கழிப்பாலையிலிருந்து தில்லைக்கு வரும்
இடைவெளியில் பாடப் பெற்ற திருப்பதிகம்,
பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ. *(தி.5 ப.2 பா.1)*
.

அரியானை என்றெடுத்தே அடியவருக்
கெளியானை அவர்தஞ் சிந்தை
பிரியாத பெரியதிருத் தாண்டகச்செந்
தமிழ்பாடிப் பிறங்கு சோதி
விரியாநின் றெவ்வுலகும் விளங்கியபொன்
அம்பலத்து மேவி ஆடல்
புரியாநின் றவர்தம்மைப் பணிந்துதமி
ழாற்பின்னும் போற்றல் செய்வார. **#1439**

`அரியானை` எனத் தொடங்கி, அடியவர்க்கு எளியவரான சிவபெருமானை, அவ்வடியவர் உள்ளத்தினின்றும் பிரியாத பெருமானை எனும் கருத்தமைந்த பெரிய திருத்தாண்டக மான செந்தமிழ்ப் பதிகத்தைப் பாடி, விளங்கும் ஒளி மிகுதியால் எவ்வுலகங்களிலும் நிறைவாக விளங்கும் பொன்னம்பலத்தில் பொருந்திக் கூத்தாடுகின்ற இறைவரை வணங்கித் தமிழ்ப் பதிகங்களினால் மேலும் போற்றுவாராய்,

விளக்கவுரை

`அரியானை அந்தணர்தம் சிந்தையானை` எனத் தொடங்கும் இப்பதிகம் பெரியதிருத்தாண்டகம் *(தி.6 ப.1)* ஆகும். அந்தணர் என்பார் அழகிய தட்பத்தையுடைய அடியவரே யாதலின், `அடியவருக்கு எளியானை அவர்தம் சிந்தை பிரியாத` எனக் கருத்தமைதி கண்டார். அந்தணர் என்பதோடு ஈரநெஞ்சினர்*(தி.12 சரு.1-4 பா.9)* எனும் தொடரை இயைபுபடுத்திக் காண்க.

செஞ்சடைக் கற்றைமுற்றத் திளநிலா
எறிக்குமெனுஞ் சிறந்த வாய்மை
அஞ்சொல்வளத் தமிழ்மாலை அதிசயமாம்
படிபாடி அன்பு சூழ்ந்த
நெஞ்சுருகப் பொழிபுனல்வார் கண்ணிணையும்

பரவியசொல் நிறைந்த வாயும்
தஞ்செயலியன் ஒழியாத திருப்பணியும்
மாறாது சாரும் நாளில். **#1440**

`செஞ்சடைக்கற்றை முற்றத்திள நிலாஎறிக்கும்` எனத் தொடங்கும் சிறப்புடைய வாய்மைச் சொற்களால் ஆய தமிழ்ப் பதிகத்தை வியப்புறுமாறு பாடி, அன்பு கெழுமிய மனம் கரைந்து உருகப்பெய்யும் மழை போன்ற நீர் பொழிகின்ற இரண்டு திருக்கண்களும், சிவபெருமானை வணங்கும் பதிகச் சொல் நிறைந்த திருவாயும், தம் செயலில் நீங்காத திரு உழவாரத் திருப்பணியும் கொண்டு மாறாமல் செய்து வரும் நாள்களில்.

விளக்கவுரை

`செஞ்சடைக் கற்றை` எனத் தொடங்கும் திருநேரிசைத் திருப்பதிகத்தில், பாடல் தொறும் பெருமானின் ஆடற் சிறப்பை வியந்து பாடிய அப்பர் பெருமான் திருக்கடைக்காப்பில்,

``மதியந்தோய் தில்லை தன்னுள் மல்குசிற் றம்பலத்தே
அதிசயம் போல நின்று வனலெரி யாடு மாறே.``
(தி.4 ப.22 பா.11)

எனக் கூறி நிறைவு செய்கின்றார். இதனையுளங் கொண்டே ஆசிரியர் சேக்கிழார், `அஞ் சொல் வளத் தமிழ்மாலை அதிசயமாம்படி பாடி` என்றருளிச் செய்கின்றார். இப்பதியில் இருந்தருளிய பொழுது பாடிய பதிகங்கள் மேலும் இரண்டுள்ளன. *1)* `பாளையுடை` *(தி.4 ப.80 பா.1)* எனத் தொடங்கும் திருவிருத்தம், *2)* `மங்குல் மதிதவழும்` *(தி.6 ப.2 பா.1)* எனத் தொடங்கும் புக்க திருத்தாண்டகம்.

கடையுகத்தில் ஆழியின்மேல் மிதந்ததிருக்
கழுமலத்தின் இருந்த செங்கண்
விடையுகைத்தார் திருவருளால் வெற்பரையன்
பாவைதிரு முலைப்பா லோடும்
அடையநிறை சிவம்பெருக வளர்ஞானங்
குழைத்தூட்ட அமுது செய்த
உடையமறைப் பிள்ளையார் திருவார்த்தை
அடியார்கள் உரைப்பக் கேட்டார். **#1441**

ஊழி முடிவில் பொங்கி எழும் கடல் வெள்ளத்தில் மிதந்த திருக்கழுமலத்தில் (சீகாழியில்) வீற்றிருக்கின்ற ஆனேற்றை ஊர்தியாய்க் கொண்ட தோணியப்பரின் திருவருளால், மலையரச னின் மகளாரான உமையம்மையார், திருமுலைப்பாலுடனே நிறைகின்ற சிவம் பெருகுமாறு வளர்கின்ற ஞானத்தையும் குழைத்து ஊட்ட, அதை உண்டருளிய ஆளுடைய பிள்ளையாரின் வரலாற்றை அடியவர்

உரைப்பக் கேட்டார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

ஆழிவிடம் உண்டவரை அம்மைதிரு
முலைஅமுதம் உண்ட போதே
ஏழிசைவண் டமிழ்மாலை இவன்எம்மான்
எனக்காட்டி இயம்ப வல்ல
காழிவரும் பெருந்தகைசீர் கேட்டலுமே
அதிசயமாங் காதல் கூர
வாழியவர் மலர்க்கழல்கள் வணங்குதற்கு
மனத்தெழுந்த விருப்பு வாய்ப்ப. **#1442**

திருநிலைநாயகி அம்மையாரின் திருமுலைப் பாலமுதத்தை ஞானத்துடன் உண்ட அப்பொழுதே, ஏழிசை பொருந் தும் வளமான தமிழ் மாலையால் கடலில் தோன்றிய நஞ்சை உண்டருளிய சிவபெருமானை `எமது பெம்மான் இவன்` எனச் சுட்டிக் காட்டிப் பாடியருள வல்ல, சீகாழியில் தோன்றியருளிய பெருந்தகையாளரான ஞானசம்பந்தப் பெருமானின் சிறப்புகளைக் கேட்டவுடனே, வியத்தகு உணர்வுடன் கூடிய காதலால், வாழ்வு அளிக்கும் அவருடைய மலர் போன்ற திருவடிகளை வணங்குதற்குத் தம் உள்ளத்தில் எழுந்த விருப்பம் பொருந்த,

விளக்கவுரை

****

அப்பொழுதே அம்பலத்துள் ஆடுகின்ற
கழல்வணங்கி அருள்முன் பெற்றுப்
பொய்ப்பிறவிப் பிணியோட்டுந் திருவீதி
புரண்டுவலங் கொண்டு போந்தே
எப்புவனங் களும்நிறைந்த திருப்பதியின்
எல்லையினை இறைஞ்சி ஏத்திச்
செப்பரிய பெருமையினார் திருநாரை
யூர்பணிந்து பாடிச் செல்வார். **#1443**

அதுபொழுதே பொன்னம்பலத்தில் கூத்தாடும் இறைவரின் திருவடியை வணங்கி அருளைப் பெற்றுக் கொண்டு, பொய்யான இப்பிறவி நோயைப் போக்கும் இயல்பு கொண்ட தில்லையின் வீதியை நிலம் பொருந்தப் புரண்டு வலமாக வந்து, பின் எவ்வுலகங்களிலும் நிறைவுடைய அப்பதியினது எல்லையை வணங்கிப் போற்றிச், சொல்வதற்கரிய பெருமையுடைய சிவபெரு மானின் திருநாரையூரைப்

போய்ப் பணிந்து பாடி மேலே செல்வராய்.

விளக்கவுரை

இது பொழுது திருநாரையூரில் பாடியருளிய பதிகங்கள் இரண்டாம். *(1)* `வீறுதானுடை` *(தி.5 ப.54)*எனத் தொடங்கும் திருக்குறுந்தொகைப் பதிகம். *(2)* `சொல்லானைப் பொருளானை` *(தி.6 ப.74)* எனத் தொடங்கும் திருத்தாண்டகம். இத்திருப்பதியி லிருந்து சீகாழிக்குச் செல்லும் பொழுது இடையில் திருஓமாம்புலியூர், கடம்பூர் ஆகிய திருப்பதிகளுக்கும் சென்றிருக்கலாம் எனத் தெரிகிறது. இப்பதிகளில் அருளிய பதிகங்கள் மூன்றாம்*: 1.* திரு ஓமாம்புலியூர்த் திருப்பதிகம்*:* `ஆராரும் மூவிலை வேல்` - திருத் தாண்டகம் *(தி.6 ப.88). 2.* கடம்பூர்த் திருப்பதிகங்கள்*:* அ*)* `தளரும் கோளரவ` - திருக்குறுந்தொகை *(தி.5 ப.19) (ஆ)* `ஒருவராய்` - திருக்குறுந் தொகை *(தி.5 ப.20).*

தொண்டர்குழாம் புடைசூழத் தொழுதகரத்
தொடுநீறு துதைந்த கோலங்
கண்டவர்தம் மனங்கசிந்து கரைந்துருகுங்
கருணைபுறம் பொழிந்து காட்டத்
தெண்டிரைவாய்க் கல்மிதப்பில் உகைத்தேறுந்
திருநாவுக் கரசர் தாமும்
வண்டமிழால் எழுதுமறை மொழிந்தபிரான்
திருப்புகலி மருங்கு சார்ந்தார். **#1444**

அடியவர் கூட்டம் தம்மைச் சூழ்ந்துவர, வணங்கும் கைகளுடன், திருநீற்றால் நிறைவுற்ற திருக்கோலமானது கண்டவரின் உள்ளங்களையெல்லாம் கரைந்து உருகுமாறு அருள் பொழிந்திட, தெளிவான அலைகளையுடைய கடலில் கல்லையே மிதவையாகக் கொண்டு ஊர்ந்து கரை ஏறிய நாவுக்கரசர் பெருமா னும், வளம் பொருந்திய தமிழால் எழுதப் பெறும் தமிழ் மறையைக் கூறியருளிய திருஞானசம்பந்தப் பெருமானின் சீகாழிப் பதியின் அருகில் வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

வண்டமிழால் எழுதும் மறை எனவே, வடமொழி மறை எழுதாக் கிளவி என்பது பெறுதும். `எல்லையிலா மறைமுதல் மெய்யுடன் எடுத்த எழுதும் மறை மல்லல்நெடுந் தமிழால் இம் மாநிலத்தோர்க்கு உரை சிறப்ப` என்பர் பின்னும். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

நீண்டவரை வில்லியார் வெஞ்சூலை
மடுத்தருளி நேரே முன்னாள்
ஆண்டஅர செழுந்தருளக் கேட்டருளி

ஆளுடைய பிள்ளை யாருங்
காண்தகைய பெருவிருப்புக் கைம்மிக்க
திருவுள்ளக் கருத்தி னோடு
மூண்டஅருள் மனத்தன்பர் புடைசூழ
எழுந்தருளி முன்னே வந்தார். **#1445**

நீண்ட மேருமலையை வில்லாகக் கொண்ட சிவபெருமான் கொடிய சூலைநோயைத் தந்தருளி நேரே ஆண்டரு ளிய நாவுக்கரசர் வருகின்றார் என்ற செய்தியைக் கேட்டருளிய ஞானசம்பந்தரும், அவரைக் காண்டற்குப் பெருவிருப்பு மீதூர, அருள் கொண்ட மனமுடைய அடியார்கள் பலரும் சூழ்ந்து வர, எழுந்தருளி அவர் முன்னர் வந்தார்.

விளக்கவுரை

****

தொழுதணைவுற் றாண்டஅர சன்புருகத்
தொண்டர் குழாத் திடையே சென்று
பழுதில்பெருங் காதலுடன் அடிபணியப்
பணிந்தவர்தங் கரங்கள் பற்றி
எழுதரிய மலர்க்கையால் எடுத்திறைஞ்சி
விடையின்மேல் வருவார் தம்மை
அழுதழைத்துக் கொண்டவர்தாம் அப்பரே
எனஅவரும் அடியேன் என்றார். **#1446**

நாவரசரும் தொழுதவாறே அவரையடைந்து, சூழ்ந்து நிற்கும் தொண்டர் கூட்டத்தின் இடையே சென்று, அன்பின் மிகுதியால் உள்ளம் உருக, குற்றம் இல்லாத மீதூர்ந்த காதலுடன் காழிப் பிள்ளையாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்க, அங்ஙனம் விழுந்து வணங்கிய அவர்தம் கைகளைப் பிடித்துக் கொண்டு, எழுதற்கு அரிய மலர் போன்ற தம் திருக்கைகளால் எடுத்து, அவரைத் தாமும் வணங் கியவராய், ஆனேற்றை ஊர்தியாகவுடைய சிவபெருமானை அழுது அழைத்துத் தம்முன் வெளிப்பட்டு வரக்கண்ட ஞானசம்பந்தரும், `அப்பரே!` என்று கூறிட அவரும் `அடியேன்!` என்றார்.

விளக்கவுரை

`கருத்திற் பரவு மெய்க்காதல் தொண்டர் திருவேடம் நேரே தோன்றியது என்று தொழுதே, அண்டரும் போற்ற அணைந்து அங்கு அரசும் எதிர்வந்திறைஞ்சி` என ஞானசம்பந்தர் புராணத்து *(தி.12 பு.28 ப. 271)* வருதலின், வந்து கொண்டிருந்த நாவரசரைப் பிள்ளையார் முன் தொழ, அரசும் எதிர் தொழ அவரைத்தம் திருக் கரங்களால் எடுத்துத் தழுவி `எம் அப்பரே` என்று மனம் நெகிழ்ந்து போற்றி மகிழ்வாராயினர்.

அம்பிகைசெம் பொற்கிண்ணத் தமுதஞா
னங்கொடுப்ப அழுகை தீர்ந்த
செம்பவள வாய்ப்பிள்ளை திருநாவுக்
கரசரெனச் சிறந்த சீர்த்தி
எம்பெருமக் களும்இயைந்த கூட்டத்தில்
அரனடியார் இன்பம் எய்தி
உம்பர்களும் போற்றிசைப்பச் சிவம்பெருகும்
ஒலிநிறைத்தார் உலகம் எல்லாம். **#1447**

உமையம்மையார் செம்பொன் கிண்ணத்தில் ஞான அமுதத்தை ஊட்ட, அதனால் அழுகை நீங்கிய பவளம் போலும் திருவாயினையுடைய ஞானசம்பந்தரும், திருநாவுக்கரசு நாயனாரும் ஆகிய பெருஞ்சிறப்புடைய எம் இரு பெருமக்களும் சேர்ந்த இத்திருக் கூட்டத்தைக் காணும் பேற்றைப் பெற்றதால், சிவனடியார்கள் இன்பம் அடைந்து, தேவர்களும் போற்றி வழிபடுமாறு உலகம் எல்லாம் சிவத்தைப் பெருகுவிக்கும் `அரகர` என்ற ஒலியை நிறைத்தனர்.

விளக்கவுரை

****

பிள்ளையார் கழல்வணங்கப் பெற்றேன்என்
றரசுவப்பப் பெருகு ஞான
வள்ளலார் வாகீசர் தமைவணங்கப்
பெற்றதற்கு மகிழ்ச்சி பொங்க
உள்ளநிறை காதலினால் ஒருவர்ஒரு
வரிற்கலந்த உண்மை யோடும்
வெள்ளநீர்த் திருத்தோணி வீற்றிருந்தார்
கழல் வணங்கும் விருப்பின் மிக்கார். **#1448**

`ஆளுடைய பிள்ளையாரின் திருவடிகளை வணங்கும் பேற்றைப் பெற்றேன்` என்று திருநாவுக்கரசு நாயனார் மகிழ்ச்சியடைய, திருநாவுக்கரசு நாயனாரை வணங்கப் பெற்றதால் பெருகும் பெருமகிழ்ச்சியை ஞான வள்ளலார் ஆகிய பிள்ளையார் அடைய, உள்ளத்தில் நிறைந்த ஆசையுடன் ஒருவர் மற்றொருவர் உள்ளத்திற் கலந்த உண்மை நிலையோடும், வெள்ளப் பெருக்கில் மிதந்த திருத்தோணியில் வீற்றிருக்கும் இறைவரின் கழல் அணிந்த திருவடிகளை வணங்கும் விருப்பம் மிக்கவராகி,

விளக்கவுரை

****

அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம்

அன்புசெறி கடலுமாம் எனவும் ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் ணிரண்டெனவும் புவனம் உய்ய
இருட்கடுவுண் டவர்அருளும் உலகம் எல்லாம்
ஈன்றாள்தன் திருவருளும் எனவும் கூடித்
தெருட்கலைஞா னக்கன்றும் அரசும் சென்று
செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தார் அன்றே. **#1449**

`அருளால் பெருகி நிற்கும் ஒப்பில்லாத கடலும், உலகனைத்தும் அன்பினால் நிறைவதொரு கடலும், சேர்ந்தன போல வும், உயர்ந்து விளங்கும் பொருண்மையமைந்த சமயங்களில் முதன்மை பெற்று நிற்கும் சைவ நன்னெறியானது பெற்ற புண்ணியக் கண்கள் இரண்டு எனவும், உலகம் உய்தற்காகக் கரிய நஞ்சினை யுண்ட சிவபெருமானது திருவருளும், உலகனைத்தையும் ஈன்ற அன்னையாரது திருவருளும் ஒருங்கிருந்தாற் போலவும், விளங்கிய உயிர்கள் தெளிவடைதற்கேதுவாய கலைஞானத்தையும் அதன் பயனாய சிவஞானத்தையும் ஒருங்கு பெற்ற பிள்ளையாரும், அரசும், பிள்ளையார் இருந்தருளிய திருமாளிகையினின்றும் புறப்பட்டுச் சிவந்த சடையினையுடைய தேவர் தலைவராய சிவபெருமானின் திருக்கோயிலை அடைந்தார்கள்.

விளக்கவுரை

அருட்கடல் - பிள்ளையார், அன்புக்கடல் - நாவரசர், அருள் என்னும் அன்பு ஈன் குழவி என்பதால் அன்பு தாயாகும்; அருள் அதன் குழந்தையாகும். பிள்ளையார் அரசரை ஈண்டு அப்பரே என்றழைத்தற்கேற்ப அரசர் பிள்ளையாரைப் பிள்ளாய் எனப் *(தி.12 பு.28 பா.616)* பின்னர் அழைக்க இருப்பதும் நினைவு கூர்தல் தக்கதாம். ஆதலின் ஈண்டு அவ்விருவரையும் அருட் கடல் என்றும் அன்புக் கடல் என்றும் அழைத்தார். அடுத்துப் புண்ணியக் கண் இரண்டு என்றார். `காகத்திரு கண்ணிற்கு ஒன்றே மணி கலந்தாங்கு` *(தி.8 திருக்கோவையார், 71)* என்பதால் காண்டலில் இரு கண்களும் ஒரு நோக்குடையவாகும். பெருமானைக் கண்டு மகிழ்தலிலும், சைவ நன்னெறியைக் காத்தலிலும் இருவரும் ஒரு நோக்கினராதலை அவரவர் தம் வரலாற்றால் அறியத்தகும். அடுத்து, இருட்கடுவுண்டவர் அருளும் உலகம் எல்லாம் ஈன்றாள் தன் திருவருளும் எனக்குறிப்பிடு கின்றார். இறைவி இறைவனின் வேறல்லள். `அருளது சத்தியாகும் அரன் தனக்கு` *(சித்தியார், சூ.5 பா.9)* என்னும் ஞான நூலும் ஆதலின் பிள்ளையாரும் நாவரசரும் மெய்வடிவில் வேறாகத் தோன்றினும், உணர்வில் ஒன்றாவர் என்பது பெறப்படும். `இருவரே மெய்வடிவில் ஏந்திழை நல்லார் ஒருவரே

தம்மில் உயிர்` என வருவதும் காண்க. இவ்வாற்றான் இம்மூவகை உவமைகளும், உள்ள நிறைகாதலினால் ஒருவர் ஒருவரிற் கலந்து நிற்கும் உண்மையை விளக்கி நிற்பனவாதல் அறியலாம். வரலாற்றில் இவர்கள் இருவரும் மும்முறை கூடுதற்கு ஏற்ப, மூவகை உவமைகள் அமைந்திருப்பதும் அறிந்து மகிழ்தற்குரியதாம்.

பண்பயில்வண் டறைசோலை சூழுங் காழிப்
பரமர்திருக் கோபுரத்தைப் பணிந்துள் புக்கு
விண்பணிய ஓங்குபெரு விமானந் தன்னை
வலங்கொண்டு தொழுதுவிழுந் தெழுந்த எல்லைச்
சண்பைவரு பிள்ளையார் அப்பர் உங்கள்
தம்பிரா னாரைநீர் பாடீர் என்னக்
கண்பயிலும் புனல்பொழிய அரசும் வாய்மைக்
கலைபயிலும் மொழிபொழியக் கசிந்து பாடி. **#1450**

இசை பாடுகின்ற வண்டுகள் ஒலிக்கின்ற சோலை கள் சூழ்ந்த சீகாழியில் இறைவரின் திருக்கோபுரத்தை வணங்கி, உள்ளே புகுந்து, வானமும் பணியத் தக்கவாறு உயர்ந்து விளங்கும் விமானத்தை வலமாக வந்து வணங்கிக் கீழே விழுந்து எழுந்தபோது, சீகாழிப்பதியில் தோன்றிய ஆளுடைய பிள்ளையார் `அப்பரே! நீவிர் உங்கள் தம்பிரானரைப் பாடுங்கள்` என்று கூற நாவுக்கரசரும் பெருகிய நீர் கண்களில் பொழிய, மெய்ப்பொருளாய திருவருள் நலம் பொருந்திட, மெய்த்திரு மொழிகளை உள்ளம் உருகப் பாடி.

விளக்கவுரை

****

பெரியபெரு மாட்டியுடன் தோணி மீது
பேணிவீற் றிருந்தருளும் பிரான்முன் நின்று
பரிவுறுசெந் தமிழ்மாலை பத்தி யோடும்
பார்கொண்டு மூடியெனும் பதிகம் போற்றி
அரியவகை புறம்போந்து பிள்ளை யார்தம்
திருமடத்தில் எழுந்தருளி அமுது செய்து
மருவியநண் புறுகேண்மை அற்றை நாள்போல்
வளர்ந்தோங்க உடன்பலநாள் வைகும் நாளில். **#1451**

உமையம்மையாருடன் திருத்தோணியில் வீற்றி ருக்கும் தோணியப்பரின் திருமுன்பு நின்று, அன்புகூரும் செந்தமிழ் மாலையாகப் பத்திமை மிகப் `பார் கொண்டு மூடி` எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி, அங்கிருந்து நீங்குதற்கரிய வகையால் வெளியில் வந்து, திருஞானசம்பந்தரின் திருமடத்தில் இருந்து அமுது உண்டருளிப் பொருந்திய நண்புடன் கூடிய கேண்மையானது அன்று போலவே

என்றும் வளருமாறு உடனாகப் பல நாள்கள் இருந்த காலத்தில்.

விளக்கவுரை

இறைவன் திருமுன்பு பாடியருளியது `பார் கொண்டு மூடி` *(தி.4 ப.82)* எனத் தொடங்கும் திருவிருத்தப் பதிகமாகும்.

அத்தன்மை யினில்அரசும் பிள்ளை யாரும்
அளவளா வியமகிழ்ச்சி அளவி லாத
சித்தநெகிழ்ச் சியினோடு செல்லும் நாளில்
திருநாவுக் கரசர்திரு வுள்ளந் தன்னில்
மைத்தழையும் மணிமிடற்றார் பொன்னி நாட்டு
மன்னியதா னங்களெல்லாம் வணங்கிப் போற்ற
மெய்த்தெழுந்த பெருங்காதல் பிள்ளை யார்க்கு
விளம்புதலும் அவரும்அது மேவி நேர்வார். **#1452**

அங்ஙனம் நாவரசரும் ஞானசம்பந்தரும் ஒருவ ருடன் ஒருவர் உரையாடியதால் அடைந்த மகிழ்ச்சி அளவின்றிப் பெருக, மன நெகிழ்ச்சியுடன் செல்லும் நாள்களில், நஞ்சு பொருந்திய அழகான கழுத்தையுடைய சிவபெருமான், காவிரி பாயும் சோழ நாட்டில் நிலை பெற இருந்தருளும் பதிகளை எல்லாம் வணங்கிப் போற்றவேண்டும் எனும் உள்ளத்தெழுந்த பெருங்காதலை நாவரசர் ஞானசம்பந்தருக்குக் கூறுதலும், அவரும் அதனை ஏற்பாராய்.

விளக்கவுரை

இவர்கள் இருவரும் இப்பதியிலிருந்த பொழுது அப்பர் பாடிய பிற பதிகங்கள்*: 1.* `படையார் மழு` *(தி.4 ப.83)* எனத் தொடங்கும் திருவிருத்தம். *(இப்பதிகத்துள் இப்பாடல் ஒன்றே கிடைத்துள்ளது) 2.* `மாதியன்று` *(தி.5 ப.45)* எனத் தொடங்கும் திருக்குறுந்தொகை.

ஆண்டஅர செழுந்தருளக் கோலக் காவை
அவரோடும் சென்றிறைஞ்சி அன்பு கொண்டு
மீண்டருளி னார்அவரும் விடைகொண் டிப்பால்
வேதநா யகர்விரும்பும் பதிக ளான
நீண்டகருப் பறியலூர் புன்கூர் நீடூர்
நீடுதிருக் குறுக்கைதிரு நின்றி யூரும்
காண்தகைய நனிபள்ளி முதலா நண்ணிக்
கண்ணுதலார் கழல்தொழுது வணங்கிச் செல்வார். **#1453**

திருநாவுக்கரசர் எழுந்தருளவே அவருடன் சென்று திருக்கோலக்காவைப் பணிந்து அன்பு விடைபெற்று ஞானசம்பந்தர் திரும்பினார். நாவுக்கரசரும் ஞானசம்பந்தரிடம் விடைபெற்றுக் கொண்டு மேலும் மறைமுதல்வரான சிவபெருமான் விரும்பி எழுந்தருளியிருக்கும்

பதிகளாய பெருமைமிக்க திருக்கருப் பறியலூர், திருப்புன்கூர், திருநீடுர், திருக்குறுக்கை வீரட்டம், திருநின் றியூர், காணும் தகைமையுடைய திருநனிபள்ளி என்ற இவை முதலான பதிகளைச் சேர்ந்து நெற்றிக்கண் உடையவரின் திருவடிகளை வணங்கி மேற்செல்பவராய்.

விளக்கவுரை

திருக்கோலக்காவில் அப்பர் அருளிய பதிகம் கிடைத் திலது. இனி இப்பாடலில் குறிக்கப்பட்ட திருப்பதிகள் ஆறனுள் திருக் கருப்பறியலூரில் அருளிய பதிகம் கிடைத்திலது. அடுத்து இருக்கும் திருப்புன்கூர், திருநீடுர் ஆகிய இரு பதிகளுக்கும் ஒருங்கியைந்தவாறு ஒரு பதிகம் உள்ளது. அது `பிறவாதே தோன்றிய`*(தி.6 ப.11)* எனத் தொடங்கும் திருத்தாண்டகம் ஆகும். திருக்குறுக்கை வீரட்டத்திற்கு இரு பதிகங்கள் கிடைத்து உள்ளன. *1.* `ஆதியிற் பிரமனார்` *(தி.4 ப.49)-* திருநேரிசை*; 2.* `நெடியமால்` *(தி.4 ப.50) -* திருநேரிசை. இவற்றுள் முன்னைய பதிகத்தில் பாடல் தோறும் வரலாறுகள் அமைந்துள்ளன. இரண்டாவது பதிகத்தில் இரண்டே பாடல்கள் உள்ளன. திருநின்றியூரில் அருளிய திருக்குறுந்தொகைப் பதிகம் `கொடுங்கண் வெண்டலை` *(தி.5 ப.23)* என்பதாம். திருநனிபள்ளியில் அருளிய பதிகம் `முற்றுணை ஆயினானை` *(தி.4 ப.70)* எனத் தொடங்கும் திருநேரிசையாம். இனி, இப்பாடற்கண் நனிபள்ளி முதலா நண்ணி என வருதலின் வேறு பிற பதிகளும் தொழுது சென்றமை விளங்குகின்றது. அப்பதிகளும் பாடி யருளிய பதிகங்களும்*: 1.* திருக்குரக்குக்கா*:* `மரக்கொக்காம்` *(தி.5 ப.75) -* திருக்குறுந்தொகை. *2.* புள்ளிருக்கு வேளூர்*: (அ).* `வெள்ளெருக்கு` *(தி.5 ப.79) -* திருக்குறுந்தொகை*; (ஆ).* `ஆண்டானை` *(தி.6 ப.54) -* திருத்தாண்டகம். *3.* திருவெண்காடு*: (அ).* `பண்காட்டி` *(தி.5 ப.49) -* திருக்குறுந்தொகை *(ஆ).* `தூண்டுசுடர்` *(தி.6 ப.35) -* திருத்தாண்டகம். *4.* திருச்சாய்க்காடு*: (அ)* `தோடுலாமலர்` *(தி.4 ப.65) -* திருநேரிசை. *(ஆ).* `வானத்து இளமதியும்` *(தி.6 ப.82) -* திருத்தாண்டகம். *5.* திருவலம்புரம்*: (அ).* `தெண்டிரை` *(தி.4 ப.55) -* திருநேரிசை *(ஆ).* `மண்ணளந்த` *(தி.6 ப.58) -* திருத்தாண்டகம்.

மேவுபுனற் பொன்னிஇரு கரையும் சார்ந்து
விடையுயர்த்தார் திருச்செம்பொன் பள்ளி பாடிக்
காவுயரு மயிலாடு துறைநீள் பொன்னிக்
கரைத்துருத்தி வேள்விக்குடி எதிர்கொள் பாடி
பாவுறு செந் தமிழ்மாலை பாடிப் போற்றிப்
பரமர்திருப் பதிபலவும் பணிந்து போந்தே
ஆவுறும்அஞ் சாடுவார் கோடி காவில்
அணைந்துபணிந் தாவடுதண் டுறையைச் சார்ந்தார். **#1454**

நீர் இடையறாது பொருந்திய காவிரி ஆற்றின் இரு கரைகளிலும் சேர்ந்து, ஆனேற்றுக் கொடியை உயர்த்திய சிவ பெருமானின் திருச்செம்பொன்பள்ளியினைப் பாடிச் சோலைகள் உயர்ந்து சூழ்ந்த திருமயிலாடுதுறையையும், காவிரியின் இரு கரைகளிலும் உள்ள திருத்துருத்தி - திருவேள்விக்குடியையும், திருஎதிர்கொள்பாடியையும் தொழுது செந்தமிழ்ப் பதிகங்களான பாமாலைகளால் போற்றி, இறைவரின் திருப்பதிகள் பலவற்றையும் பணிந்து சென்று, ஆன் ஐந்தையும் ஆடும் சிவபெருமானின் திருக் கோடிக்காவை அடைந்து, வணங்கிச் சென்று, திருவாவடுதுறையைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

இங்கு முதற்கண் குறிக்கப்பட்ட திருப்பதிகள் ஐந்தாம். இவ்விடங்களில் பாடப்பெற்ற திருப்பதிகங்கள்: *1.* திருச்செம்பொன் பள்ளி: இது இக்காலத்துச் செம்பொனார்கோயில் என வழங்கப் பெறுகிறது. *(அ).* \`ஊனினுள் உயிரை\` *(தி.4 ப.29)* - திருநேரிசை. *(ஆ)* \`கானறாத\` *(தி.5 ப.36)* - திருக்குறுந்தொகை. *2.* திருமயிலாடுதுறை: \`கொள்ளும் காதல்\` *(தி.5 ப.39)* - திருக்குறுந்தொகை. *3+4.* திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்: இறைவன் பகலில் திருத்துருத்தியிலும் இரவில் வேள்விக்குடியிலும் எழுந்தருளியிருப்பர். இதனால் இவ்விரு திருப்பதிகளையும் இணைத்தே ஞானசம்பந்தரும் சுந்தரரும் பாடியுள்ளனர். நாவரசர் திருத்துருத்தி ஒன்றற்கே பதிகம் பாடியுள்ளார். \`பொருத்திய\` *(தி.4 ப.42)* - திருநேரிசை. *5.* திருஎதிர்கொள்பாடிக்கு உரிய பதிகம் கிடைத்திலது. இனி, இப்பதிகளோடு \`பரமர் திருப்பதி பலவும் பணிந்து போந்தே\` என ஆசிரியர் அருளுவதால், இதுபொழுது பாடிய பதிகள் வேறு பிறவும் உளவாம் எனத் தெரிகிறது. அவையாவன: *1.* திருஅன்னியூர் : \`பாறலைத்த\` *(தி.5 ப.8)* - திருக்குறுந்தொகை. *2.* திருமணஞ்சேரி: \`பட்டநெற்றியர்\` *(தி.5 ப.87)* - திருக்குறுந்தொகை. இப்பாடலில் ஆசிரியர் நிறைவாக இரு பதிகளைக் குறிக்கின் றார். அவை: *1.* திருக்கோடிக்கா: *(அ).* \`நெற்றிமேல்\` *(தி.4 ப.51)* - திருநேரிசை. *(ஆ).* \`சங்குலாம்\` *(தி.5 ப.78)* - திருக்குறுந்தொகை. *(இ).* கண்டலஞ்சேர் *(தி.6 ப.81)* - திருத்தாண்டகம். *2.* திருவாவடு துறை: இப்பதியில் அருளிய பதிகங்கள் வரும் பாடலில் குறிக்கப் பெறுகின்றன.

ஆவடுதண் டுறையாரை அடைந்துய்ந் தேன்என்
றளவில் திருத் தாண்டகமுன் அருளிச் செய்து
மேவுதிருக் குறுந்தொகைநே ரிசையும் சந்த
விருத்தங்க ளானவையும் வேறு வேறு
பாவலர்செந் தமிழ்த்தொடையால் பள்ளித் தாமம்
பலசாத்தி மிக்கெழுந்த பரிவி னோடும்

பூவலயத் தவர்பரவப் பலநாள் தங்கிப்
புரிவுறுகைத் திருத்தொண்டு போற்றிச் செய்வார். **#1455**

`திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் இறைவரை அடைந்து உய்ந்தேன்` என்ற கருத்துடைய அளவுபடாத திருத் தாண்டகத்தை முதலில் பாடிப், பின் திருக்குறுந்தொகையும், திரு நேரிசையும், சந்த விருத்தங்களும் வெவ்வேறு பாக்களின் தன்மை மிக்க செந்தமிழ் மாலைகளாலாய திருப்பள்ளித் தாமங்கள் பலவற் றையும் சாத்தி, மிகுதியாய் மேன் மேலும் எழுந்த அன்பினோடும் உலகம் போற்றுமாறு பல நாள்கள் அங்குத் தங்கி, இடை விடாது நினைந்து செய்யும் திருத்தொண்டான உழவாரப் பணியையும் போற்றிச் செய்து வந்தார்.

விளக்கவுரை

திருவாவடுதுறை: இத்திருப்பதிக்கு நாவரசர் இருமுறை எழுந்தருளியுள்ளார் *(தி.12 பு.21 பா.191, 293)* இதுபொழுது எழுந்தரு ளுவது முதன் முறையாகும். *(அ).* `நம்பனை நால்வேதம்` *(தி.6 ப.46)* - திருத்தாண்டகம் *(ஆ).* `நிறைக் கவாலியள்` *(தி.5 ப.29)* - திருக்குறுந் தொகை. *(இ).* `மஞ்சனே` *(தி.4 ப.57)* - திருநேரிசை. *(ஈ).* `திருவே யென் செல்வமே` *(தி.6 ப.47)* - திருத்தாண்டகம். இவற்றுள் முன்னையதான `நம்பனை` எனத் தொடங்கும் திருத்தாண்டகம், `ஆவடு தண்டுறையுள் மேய அரனடியே அடி நாயேன் அடைந்துய்ந்தேனே` என நிறைவு பெறுவதால் இதுவே முதற்கண் பாடப்பட்டதாகும். ஆதலின் ஆசிரி யரும் `முன்னருளிச் செய்து` என்றார். சந்த விருத்தங்கள் ஆனவையும் `வேறு வேறு ...... சாத்தி` என ஆசிரியர் குறிப்பதற்கேற்ப உள்ள பதிகங்கள் எவையும் கிடைத்தில.

எறிபுனல்பொன் மணிசிதறுந் திரைநீர்ப் பொன்னி
இடைமருதைச் சென்றெய்தி அன்பி னோடு
மறிவிரவு கரத்தாரை வணங்கி வைகி
வண்டமிழ்ப்பா மாலைபல மகிழச் சாத்திப்
பொறியரவம் புனைந்தாரைத் திருநாகேச் சுரத்துப்
போற்றியருந் தமிழ்மாலை புனைந்து போந்து
செறிவிரைநன் மலர்ச்சோலைப் பழையா றெய்தித்
திருச்சத்தி முற்றத்தைச் சென்று சேர்ந்தார். **#1456**

பின், அலை எறியும் நீரால் பொன்னையும் மணிகளையும் கொழிக்கும் அலைகளையுடைய காவிரிக் கரையில் உள்ள திருவிடைமருதூரைச் சென்றடைந்து, மான் கன்றைக் கையில் உடைய இறைவரை அன்பு மிக வணங்கி, அங்கே தங்கி, இசையாலும், பொருண்மையாலும் வளமை மிக்க தமிழ்ப் பதிக மாலை பலவற்றை யும் மகிழ்ந்து பாடிப் போற்றி, புள்ளிகளையுடைய பாம்புகளை அணிந்த இறைவரைத்

திருநாகேச்சுரத்தில் வணங்கி அரிய தமிழ் மாலை பாடிச் சென்று, மணம் நிரம்பிய நல்ல மலர்களையுடைய பூஞ்சோலைகள் சூழ்ந்த பழையாறை எனும் திருப்பதியை அடைந்து பின் திருச்சத்திமுற்றத்தை அடைந்தார்.

விளக்கவுரை

இப்பாடலில் திருச்சத்திமுற்றத்தை அடைதற்கு முன் குறிக்கப் பெற்ற திருப்பதிகள் மூன்றாம். இவற்றில் அருளிய திருப்பதிகங்கள்: 1. திருவிடைமருதூர்: (அ). `காடுடை` (தி.4 ப.35)- திருநேரிசை. (ஆ). `பாசம் ஒன்று இலராய்` (தி.5 ப.14) - திருக்குறுந்தொகை. (இ). `பறையின் ஓசையும்` (தி.5 ப.15) - திருக்குறுந்தொகை. (ஈ). `சூலப்படை உடையார்` (தி.6 ப.16)- திருத்தாண்டகம். (உ). `ஆறுசடைக்கணிவர்` (தி.6 ப.17) - திருத்தாண்டகம். 2. திருநாகேச்சரம்: (அ). `கச்சைசேர்` (தி.4 ப.66)- திருநேரிசை. (ஆ). `நல்லர்`(தி.5 ப.52) - திருக்குறுந்தொகை. (இ). `தாயவனை`(தி.6 ப.66) - திருத்தாண்டகம். 3. திருப்பழையாறை: இத்திருப்பதிக்கு நாவரசர் இருமுறை எழுந்தருளுகின்றார்.(தி.12 திருநாவுக்கரசர் புராணம், 215) இதுபொழுது பதிகம் அருளப் பெறவில்லை.

சென்று சேர்ந்து திருச்சத்தி
முற்றத் திருந்த சிவக்கொழுந்தைக்
குன்ற மகள்தன் மனக்காதல்
குலவும் பூசை கொண்டருளும்
என்றும் இனிய பெருமானை
இறைஞ்சி இயல்பில் திருப்பணிகள்
முன்றில் அணைந்து செய்துதமிழ்
மொழிமா லைகளும் சாத்துவார். **#1457**

சென்றவர், திருச்சத்திமுற்றம் என்ற பதியில் வீற்றிருக்கும் சிவக்கொழுந்தீசரை, மலையரசன் மகளாரான உமை அம்மையாரின் உள்ளத்தில் எழுந்த அன்பால் விளங்கும் பூசனையை என்றும் ஏற்றருளுகின்ற இனியவரான இறைவரைத் தொழுது, திருமுற்றத்தினை அடைந்து, தம் இயல்பாய்ச் செய்துவரும் திருப் பணிகளான உழவாரப் பணிகளைச் செய்து, சொல் மாலைகளையும் சாத்துவாராய்,

கோவாய் முடுகி என்றெடுத்துக்
கூற்றம் வந்து குமைப்பதன்முன்
பூவார் அடிகள் என்தலைமேற்
பொறித்து வைப்பாய் எனப்புகன்று
நாவார் பதிகம் பாடுதலும்
நாதன் தானும் நல்லூரில்
வாவா என்றே அருள்செய்ய

வணங்கி மகிழ்ந்து வாகீசர். #1458

`கோவாய் முடுகி` எனத் தொடங்கிக் கூற்றம் வந்து உயிரைக் கொண்டு போதற்கு முன்பு, பூவார்ந்த உம் திருவடியை என் தலைமேற் பொறித்து வைத்தருளுக! என விண்ணப்பிக்கும் நாவில் நிறைந்த திருப்பதிகத்தைப் பாடவும், இறைவரும் `நீ திருநல்லூருக்கு வா` எனக் கூறியருள, திருநாவுக்கரசரும் மகிழ்ந்து வணங்கி.

விளக்கவுரை

இவ்வாறு விண்ணப்பித்த பதிகத்தின் முதற்பாடல்:

கோவாய் முடுகி யடுதிறற் கூற்றங் குமைப்பதன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை போகவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண் டாய்முழங் குந்தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே.

-*தி.4 ப.96 பா.1* என்பதாம். இப்பாடற் கருத்தையே ஆசிரியர் சேக்கிழார் `கூற்றம் வந்து குமைப்பதன் முன் பூவாரடிகளென்றலை மேற்பொறித்து வைப்பாய்` எனக் குறித்தருளுகின்றார். பூவார் அடிகள் - மலரனைய திருவடிகள், அடியார்கள் இட்ட மலர்கள் பொருந்திய திருவடிகள் என இருபொருள் பட நின்றது. `கோவாய் முடுகி` என வழங்கும் இத்திருப்பதிகம் திருச்சத்திமுற்றத்திலும், `திருவடி என் தலைமேற் வைத்தார்` எனும் குறிப்புடைய பதிகம் திருநல்லூரிலும் இருத்தலின், `நல்லூருக்கு வா வா` என்று அருளினன் என வரலாற்றை அமைப்பாராயினர் ஆசிரிரியர் சேக்கிழார். வா வா என்ற அடுக்கு விரைவு குறித்து நின்றது.

நன்மைபெரு கருள்நெறியே
வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார்
வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை
முடிக்கின்றோம் என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர்
சூட்டினான் சிவபெருமான். #1459

உலகுயிர்களுக்கெல்லாம் நன்மை பெருகுதற் கேதுவாய திருவருளின் வழியே நல்லூருக்கு வந்து சேர்ந்து, நிலையான திருத்தொண்டை ஆற்றிவரும் நாவரசரும் வணங்கி மகிழ்ந்து எழும் பொழுதில் சிவபெருமானாரும், `உம் நினைவை யாம் முடிக்கின்றோம்` என்று அருள் செய்து, திருநாவுக்கரசரின் தலைமீது தம் திருவடிகளைச் சூட்டியருளினார்.

நனைந்தனைய திருவடிஎன்

தலைமேல்வைத் தார்என்று
புனைந்ததிருத் தாண்டகத்தால்
போற்றிசைத்துப் புனிதர்அருள்
நினைந்துருகி விழுந்தெழுந்து
நிறைந்துமலர்ந் தொழியாத
தனம்பெரிதும் பெற்றுவந்த
வறியோன்போல் மனம்தழைத்தார். **#1460**

`நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார்` எனும் பொருள் அமைந்த திருத்தாண்டகத்தால் போற்றித் துதித்துப், புனிதரான இறைவரின் திருவருளை எண்ணி மனம் உருகி, நிலத்தில் விழுந்து வணங்கி எழுந்து, உள்ள நிறைவும் மலர்ச்சியும் பெற்றுக், குறையாத செல்வத்தைப் பெரிதும் பெற்றுக் களிக்கும் வறியவன் போல மனம் மகிழ்ந்தார்.

விளக்கவுரை

`நனைந்தனைய திருவடி என்தலைமேல் வைத்தார்` *(தி.6 ப.14 பா.1)* எனும் குறிப்புடைய பாடல், நினைந்துருகும் அடி யாரை எனத் தொடங்கும் திருப்பாடலாகும், இத்தொடக்கத் திருத் தாண்டகத்தில் வரும் பதினொரு பாடல்களிலும் திருவடிச் சிறப்பும் அதனைத் தம் தலைமேல் வைத்த கருணைக்குறிப்பும் காணக்கிடக் கின்றன. தம் இல்லத்திற்கு வந்தவர் வாகீசர் என அறிந்து வணங்கிய அப்பூதிஅடிகளார், தம் மகிழ்ச்சிப் பெருக்கிற்கு `அற்றவர்கள் அருநிதி யம் பெற்றார்போல்` *(தி.12 பு.2பா.18)* எனப் பின்னர்ச் சேக்கிழார் அருளுவதும் இங்கு நினைவு கூரத் தக்கதாம்.

நாவுக்கு மன்னர்திரு
நல்லூரில் நம்பர்பால்
மேவுற்ற திருப்பணிகள்
மேவுறநா ளும்செய்து
பாவுற்ற தமிழ்மாலை
பலபாடிப் பணிந்தேத்தித்
தேவுற்ற திருத்தொண்டு
செய்தொழுகிச் செல்லுநாள். **#1461**

நாவரசர், திருநல்லூரில் வீற்றிருக்கும் சிவ பெருமானிடம் மனம் பொருந்தத் திருப்பணிகள் பலவற்றை நாளும் செய்தும், தமிழ்மாலை பலவற்றையும் பாடி வணங்கிப் போற்றியும், தெய்வத் திருத்தொண்டைச் செய்துவரும் நாள்களில்,

விளக்கவுரை

தமிழ்மாலை பல பாடிய குறிப்பு இதனால் பெறப்படு கின்றது எனினும் `அட்டுமின்` *(தி.4 ப.97)*எனத் தொடங்கும் திருவிருத்தப் பதிகம் ஒன்றே இதுபொழுது கிடைக்கப் பெற்றுள்ளது.

கருகாவூர் முதலாகக்
கண்ணுதலோன் அமர்ந்தருளும்
திருவாவூர் திருப்பாலைத்
துறைபிறவும் சென்றிறைஞ்சிப்
பெருகார்வத் திருத்தொண்டு
செய்துபெருந் திருநல்லூர்
ஒருகாலும் பிரியாதே
உள்ளுருகிப் பணிகின்றார். **#1462**

நெற்றியில் திருவிழியையுடைய சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருக்கருகாவூர் முதலாகவுள்ள திருஆவூர், திருப் பாலைத்துறை முதலாய பிற பதிகளுக்கும் சென்று வணங்கி, ஆர்வம் பெருகும் திருத்தொண்டுகளைச் செய்து, திருநல்லூரை ஒரு காலமும் பிரியாது உள்ளம் நெகிழ்ந்துருகி அங்குத் தங்கியிருப்பவர்.

விளக்கவுரை

இப்பாடற்கண் குறிக்கப் பெற்ற திருப்பதிகளுள் திரு ஆவூருக்கு உரிய பதிகம் கிடைத்திலது. ஏனைய இரண்டாம்: *1.* திருக் கருகாவூர்: `குருகாம்` *(தி.6 ப.15)* - திருத்தாண்டகம். *2.* திருப்பாலைத் துறை: `நீலமாமணி` *(தி.5 ப.51)* - திருக்குறுந்தொகை.

இனிப் `பிறவும் சென்றிறைஞ்சி` என்பதால் குறிக்கத்தகும் பதிகள் மூன்றாம்: *1.* திருஅவளிவண நல்லூர்: - `தோற்றினான்` *(தி.4 .59)*- திரு நேரிசை. *2.* திருவெண்ணியூர்: *(அ).* `முத்தினை` *(தி.5 ப.17)* - திருக்குறுந்தொகை. *(ஆ).* `தொண்டிலங்கும்` *(தி.6 ப.59)* - திருக்குறுந் தொகை. *3.* திருப்பூவனூர்: `பூவனூர்ப் புனிதன்` *(தி.5 ப.65)* - திருக்குறுந்தொகை.

ஆளுடைய நாயகன்தன்
அருள்பெற்றங் ககன்றுபோய்
வாளைபாய் புனற்பழனத்
திருப்பழன மருங்கணைந்து
காளவிடம் உண்டிருண்ட
கண்டர்பணிக் கலன்பூண்டு
நீள்இரவில் ஆடுவார்
கழல்வணங்க நேர்பெற்றார். **#1463**

தம்மை ஆளாகவுடைய இறைவரின் திருவருளைப் பெற்று, அங்கிருந்தும் புறப்பட்டுச் சென்று, வாளை மீன்கள் பாயும் நீர்வளமுடைய

திருப்பழனத்தைச் சேர்ந்து, திருநீலகண்டரும், பாம்புகளை அணிந்து ஊழிக் காலத்தில் ஆடுபவருமான இறைவரின் திருவடிகளை நேரே வணங்கும் பேற்றை அடைந்தார்.

விளக்கவுரை

இங்கு அருளிய திருப்பதிகங்கள் ஐந்தாம்.
1. `ஆடினார் ஒருவர்` *(தி.4 ப.36)* - திருநேரிசை. *2.* `மேவித்து நின்று` *(தி.4 ப.87)* - திருவிருத்தம். *3.* `அருவனாய்` *(தி.5 ப.35)* - திருக்குறுந்தொகை. *4.* `அலையார் கடல்` *(தி.6 ப.36)* - திருத்தாண் டகம்.*5.* பழந்தக்க ராகத்தில் அமைந்த `சொன்மாலை` *(தி.4 ப.12)* என்ற பதிகம் திங்களூருக்குச் சென்று திரும்பியபின்னர்ப் பாடப் பெற்றதாம்.

அப்பதியைச் சூழ்ந்ததிருப்
பதியில்அர னார்மகிழும்
ஒப்பரிய தானங்கள்
உள்ளுருகிப் பணிந்தணைவார்
மெய்ப்பொருள்தேர்
நாவினுக்கு வேந்தர்தாம் மேவினார்
செப்பருஞ்சீர் அப்பூதி
அடிகளூர் திங்களூர். **#1464**

திருப்பழனத்தைச் சார்ந்துள்ள திருப்பதிகளில் சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருக்கும் ஒப்பற்ற திருக்கோயில்கள் பல வற்றையும் உள்ளம் உருகிப் பணிந்து செல்லும் மெய்ப் பொருளைத் தேர்ந்து தெளிந்தவரான நாவரசர், சொலற்கரிய சிறப்புடைய அப்பூதி அடிகளார் வாழ்ந்திருக்கும் திங்களூரை அடைந்தார்.

விளக்கவுரை

இங்குக் குறிக்கப் பெறும் கோயில்கள் பல எவையென அறியக் கூடவில்லை.

அந்தணரின் மேம்பட்ட
அப்பூதி அடிகளார்
தந்தனய ருடன்சாலை
கூவல்குளந் தருதண்ணீர்ப்
பந்தர்பல ஆண்டஅர
செனும்பெயரால் பண்ணினமை
வந்தணைந்த வாகீசர்
கேட்டவர்தம் மனைநண்ண. **#1465**

அந்தணர்களுக்கெல்லாம் மேம்பட்ட அப்பூதி அடிகளார், தம் மைந்தர்களுடன், சாலைகள், கிணறு, குளம், மரம், தண்ணீர்ப்பந்தல்

முதலான பல அறங்களையும், `ஆண்ட அரசு` என்னும் திருப்பெயரால் அமைத்தமையை, அங்கு வந்து சேர்ந்த நாவரசர் கண்டும் கேட்டும் அறிந்து அவரது திருமனையை அடைய.

விளக்கவுரை

அந்தணரின் மேம்பட்ட அப்பூதி அடிகளார் என்ற அளவில் ஈண்டுக் கூறிய ஆசிரியர், அவர்தம் மேம்பாடுகளையும் தொண்டுகளையும் அவர் வரலாற்றில் பின் அறிய வைத்துள்ளார்.

மற்றவரும் மனமகிழ்ந்து
மனைவியார் மைந்தர்பெருஞ்
சுற்றமுடன் களிகூரத்
தொழுதெழுந்து சூழ்ந்துமொழிக்
கொற்றவரை அமுதுசெயக்
குறைகொள்வார் இறைகொள்ளப்
பெற்றபெருந் தவத்தொண்டர்
திருவுள்ளம் பெறப்பெற்றார். **#1466**

அப்பூதி அடிகளாரும் உள்ளம் மகிழ்ந்து, மனைவி, மைந்தர், முதலாய பெருஞ்சுற்றத்துடன் மகிழ்ச்சி மீதூரத் தொழுது எழுந்து, சூழ வந்து, நாவுக்கரசரைத் தம் திருமனையில் அமுது செய்யுமாறு வேண்டிக் கொள்வாராய், அவர்தம் இசைவை வேண்டி நிற்க, தாமே வந்து அரிதில் கிடைக்கப் பெற்ற பெரிய தவமுடையரான நாவரசரின் இசைவைப் பெறும் பேற்றை அடைந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

காண்டகைமை இன்றியும்முன்
கலந்தபெருங் கேண்மையினார்
பூண்டபெருங் காதலுடன்
போனகமுங் கறியமுதும்
வேண்டுவன வெவ்வேறு
விதங்கள்பெற விருப்பினால்
ஆண்டஅர சமுதுசெயத்
திருவமுதாம் படிஅமைத்து. **#1467**

இதுகாறும் நேரிடையாய் முன் காணும் தன்மை இல்லாதிருந்தும், உணர்ச்சிவயத்தால் ஒன்றுபட்ட பெருங்காதலுடன், திருவமுதும், கறியமுது வகைகளும் முதலாக வேண்டுவனவற்றை வெவ்வேறு வகையில் விருப்பத்தால், ஆண்ட அரசுகள் உண்பதற் குரிய வகையில் உணவாகும்படியாய்ச் சமைத்து,

விளக்கவுரை

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும். -திருக்குறள், *785*

என்பர் திருவள்ளுவர். அவ்வகையில் அப்பூதியார் நாவரசரைக் கண் டும், கலந்தும் மகிழார் ஆயினும் உணர்ச்சி வயத்தால் ஒன்று பட்ட வராய் அவர்மீது பத்திமை கொண்டிருந்தார். முன் காண்தகைமை யின்றியும் என மாறிக் கூட்டுக. சங்ககாலப் புலவர் பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழர் மேல் வைத்த அன்பு ஈண்டு நினைவுகூரத் தக்கதாம்.

திருநாவுக் கரசமுது
செய்தருள மற்றவர்தம்
பெருநாமஞ் சாத்தியஅப்
பிள்ளைதனை அழைத்தன்பு
தருஞானத் திருமறையோர்
தண்டலையின் வண்கதலிக்
குருநாளக் குருத்தரிந்து
கொண்டுவரத் தனிவிட்டார். **#1468**

அன்பு பொருந்திய ஞானத் திருமறையவரான அப்பூதி அடிகள், நாவுக்கரசர் அமுது செய்தருள்வதற்காக, அவர்தம் திருப்பெயர் சூட்டப் பெற்ற மூத்த பிள்ளையை அழைத்துத் தோட் டத்தில் வளம் வாய்ந்த வாழையின் நிறம் பொருந்திய தண்டினை யுடைய குருத்தை அரிந்து கொண்டு வருமாறு பணிப்பவர், உடன் எவரையும் அனுப்பாது தனித்துச் சென்று வருமாறு அனுப்பினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

ஆங்கவனும் விரைந்தெய்தி
அம்மருங்கு தாழாதே
பூங்கதலிக் குருத்தரியப்
புகும்அளவில் ஒருநாகம்
தீங்கிழைக்க அதுபேணான்
திருவமுது செய்தருள
ஓங்குகத லிக்குருத்துக்
கொண்டொல்லை வந்தணைந்தான். **#1469**

அதுபொழுது மூத்த திருநாவுக்கரசான அம் மகனும் விரைவாகத் தோட்டத்திற்குச் சென்று, அச்செயலில் காலம் தாழ்த்தாமல் அழகான வாழைக் குருத்தை அரியப்புகும் அளவில், பாம்பு ஒன்று தீண்டிட,

அதைப் பொருட்படுத்தாது, அரசர் உணவு உண்பதற்காக அரிந்த வாழைக் குருத்தைக் கொண்டு, விரைவில் வந்து சேர்ந்தான்.

விளக்கவுரை

****

தீயவிடந் தலைக்கொள்ளத்
தெருமந்து செழுங்குருத்தைத்
தாயர்கரத் தினில்நீட்டித்
தளர்ந்துதனைத் தழல்நாகம்
மேயபடி உரைசெய்யான்
விழக்கண்டு கெட்டொழிந்தேம்
தூயவரிங் கமுதுசெயத்
தொடங்கார்என் றதுஒளித்தார். **#1470**

அங்ஙனம் விரைவாக வந்த அம்மைந்தன் தீய நஞ்சு தன் தலைக்கேற மயங்கிச் செழுமையான குருத்தைத் தன் தாயாரின் கையில் தந்து, தளர்ந்து, தன்னைத் தீயனைய பாம்பு தீண்டிய செய்தியைக் கூறாதவனாய்க் கீழே விழுந்தான். அதனைத் தாயாரும், தந்தையாரும் கண்டு, `கெட்டொழிந்தோம்! புனிதரான நாவுக்கரசர் இதனால் இங்கு அமுது செய்யத் தொடங்கார்!` என்று மனத்தில் எண்ணிப் பாம்பு தீண்டிய செய்தியை மறைத்தவராய்,

விளக்கவுரை

****

தம்புதல்வன் சவம்மறைத்துத்
தடுமாற்றம் இலராகி
எம்பெருமான் அமுதுசெய
வேண்டுமென வந்திறைஞ்ச
உம்பர்பிரான் திருத்தொண்டர்
உள்ளத்தில் தடுமாற்றம்
நம்பர்திரு வருளாலே
அறிந்தருளி நவைதீர்ப்பார். **#1471**

தம் மைந்தனின் சடலத்தை மறைத்து அதனால், எவ்வித மனத் தடுமாற்றமும் இல்லாதவராய், நாவுக்கரசரிடம் வந்து `எம்பெருமானே! அமுது உண்டருள வேண்டும்` என வணங்கிச் சொல்ல, நாவரசரும், திருவருளால் தேவர் தம் தலைவரான சிவ பெருமானின் தொண்டரான அப்பூதியடிகளாரின் திருவுள்ளத்தில் ஒரு தடுமாற்றம் இருப்பதை அறிந்து, அத்துன்பத்தை நீக்குவாராய்.

விளக்கவுரை

****

அன்றவர்கள் மறைத்ததனுக்
களவிறந்த கருணையராய்க்
கொன்றைநறுஞ் சடையார்தங்
கோயிலின்முன் கொணர்வித்தே
ஒன்றுகொலாம் எனப்பதிகம்
எடுத்துடையான் சீர்பாடப்
பின்றைவிடம் போய்நீங்கிப்
பிள்ளையுணர்ந் தெழுந்திருந்தான். **#1472**

அன்று அவர்கள் இவ்வாறு தம் மைந்தனின் இறந்த உடலை மறைத்துச் செய்த அன்பின் திறத்துக்கு அளவற்ற கருணை உடையவராய், அச்சடலத்தைக் கொன்றை மலர்மாலையைச் சூடிய மணமுடைய திருச்சடையாரின் திருக்கோயில் முன்பு கொணரச் செய்து, `ஒன்றுகொலாம்` எனத் தொடங்கிய திருப்பதிகத்தில் சிவபெருமானின் திருவருளைப் பாடப், பின்னர் வந்து தங்கிய நஞ்சானது நீங்கிப்போகவே, அம்மகன் உறக்கத்தினின்றும் விழித்து எழுந்தவன் போன்று எழுந்திருந்தான்,

விளக்கவுரை

`ஒன்றுகொலாம்` *(தி.4 ப.18)* எனத் தொடங்கும் இத்திருப்பதிகம் ஒன்று, இரண்டு, மூன்று எனப் பத்து வரை அடுக்கி நிற்கும் அழகும் பெருமானின் திருவருட் செயலைப் பலபட எடுத் துரைக்கும் அருமையும் உடையதாம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அருந்தனயன் உயிர்பெற்ற
அதுகண்டும் அமுதுசெயா
திருந்ததற்குத் தளர்வெய்தி
இடருழந்தார் துயர்நீங்க
வருந்துமவர் மனைப்புகுந்து
வாகீசத் திருமுனிவர்
விருந்தமுது செய்தருளி
விருப்பினுடன் மேவுநாள். **#1473**

தம் அரிய மகன் உயிர் பெற்று எழுந்த அதனைப் பார்த்தும் தாம் அமுது உண்ணாமல் தாழ்த்து இருக்க நேர்ந்தமைக்கு உள்ளம் தளர்ந்து வருந்தும் அப்பூதியார், அவர்தம் மனைவியார் முதலியவரின் துன்பம் நீங்கும் பொருட்டு, அவர்தம் இல்லத்திற்கு வந்து, நாவுக்கரசரான முனிவர், அவர்கள் அன்புடனே அளித்த விருந்து அமுதை உண்டருளி அவர்களுடன் விருப்புடன் தங்கி யிருந்தார். அந்நாள்களில்.

விளக்கவுரை

****

திங்களூர் தனில்நின்றும்
திருமறையோர் பின்செல்லப்
பைங்கண்விடைத் தனிப்பாகர்
திருப்பழனப் பதிபுகுந்து
தங்குபெருங் காதலொடுந்
தம்பெருமான் கழல்சார்ந்து
பொங்கியஅன் பொடுவணங்கி
முன்னின்று போற்றிசைப்பார். **#1474**

அப்பூதியார் திங்களூரினின்றும் தம்மைப் பின் பற்றி வரப், பசுமையான கண்களையுடைய ஆனேற்றை ஊர்தியாக உடைய ஒப்பற்ற சிவபெருமானின் திருப்பழனப் பதியுள் புகுந்து, நாவுக்கரசர் பெருங்காதலுடன் தம் பெருமானின் திருவடிகளைச் சார்ந்து, மீதூர்ந்த அன்புடன் வணங்கித் திருமுன்பு நின்று வணங்கியவராய்.

விளக்கவுரை

****

புடைமாலை மதிக்கண்ணிப்
புரிசடையார் பொற்கழற்கீழ்
அடைமாலைச் சீலமுடை
அப்பூதி அடிகள்தமை
நடைமாணச் சிறப்பித்து
நன்மைபுரி தீந்தமிழின்
தொடைமாலைத் திருப்பதிகச்
சொல்மாலை பாடினார். **#1475**

மாலைக்காலத்தில் தோன்றும் பிறைமதியின் மாலையை ஒரு மருங்கில் கொண்ட சடையையுடைய இறைவரின் அழகிய திருவடிகளின் கீழ், அடைதற்குரிய தன்மையாகும் பெரும் பேற்றினையுடைய அப்பூதியடிகளாரின் நாள் ஒழுக்கத்தை (வேள்வி செய்து வரும் பாங்கினை) உயர்வாகப் பாராட்டி, நலம் மிகுந்த இனிய தமிழின் மாலையான திருப்பதிகச் சொன் மாலையைப் பாடினார்.

விளக்கவுரை

இத்திருப்பதிகம் `சொல் மாலை பயில்கின்ற` *(தி. 4 ப.12)* எனத் தொடங்கும் பழந்தக்கராகப் பதிகமாகும். இப்பதிகத்தில் பத்தாவது பாடலில்,

`அஞ்சிப் போய்க் கலிமெலிய வழலோம்பு மப்பூதி

குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே.`
(தி. 4 ப.12 பா.10) என வரும் பகுதியை நினைவு கூர்ந்து, `அடைமாலைச் சீலமுடை அப்பூதியடிகள் தமை நடைமாணச் சிறப்பித்து` என ஆசி ரியர் கூறுகின்றார். அடைமாலைச் சீலம் - அடைதற்குரிய இயல்பாகிய சீலம். நடைமாணச் சிறப்பித்து - நாள்தொறும் மேற்கொண்டு வரும் ஒழுக்கத்தைச் சிறப்பித்து. இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

எழும்பணியும் இளம்பிறையும்
அணிந்தவரை எம்மருங்குந்
தொழும்பணிமேற் கொண்டருளித்
திருச்சோற்றுத் துறைமுதலாத்
தழும்புறுகேண் மையில்நண்ணித்
தானங்கள் பலபாடிச்
செழும்பழனத் திறைகோயில்
திருத்தொண்டு செய்திருந்தார். **#1476**

எழுகின்ற படத்தையுடைய பாம்புகளையும் இளம் பிறையையும் அணிந்த சிவபெருமானை, எங்கும் எல்லாப் பதிக ளிலும் வணங்கும் பணியைத் தலைமேற் கொண்டு, திருச்சோற்றுத் துறை முதலான பதிகளை அடைந்து, அவ்வவ்விடத்தும் உள்ள கோயில்கள் பலவற்றையும் பாடி வணங்கிச், செழுமையான திருப் பழனத்தை அடைந்து, அங்கு இறைவரின் திருக்கோயிலில் செயத்தக்க திருத்தொண்டுகளைச் செய்து வந்தார்.

விளக்கவுரை

திருச்சோற்றுத்துறையில் அருளிய பதிகங்கள்*: 1.*`பொய் விரா` *(தி.4 ப.41)* - திருநேரிசை. *2.* `காலை எழுந்து` *(தி.4 ப.85)* - திருவிருத்தம். *3.*`கொல்லை ஏற்றினர்` *(தி.5 ப.33)* - திருக்குறுந்தொகை. *4.*`மூத்தவனாய்` *(தி.6 ப.44)* - திருத்தாண்டகம் . இனி, `தானங்கள் பலபாடி` என்பதால் குறிக்கத் தகும் பதிகள் திருக்கண்டியூர், திருவேதிகுடி, திருச் சக்கரப்பள்ளி, திருவாலந்துறை ஆகலாம். *1.* திருக்கண்டியூர், `வானவர் தானவர்` *(தி.4 ப.93)* - திருவிருத்தம். *2.* திருவேதிகுடி `கையது காலெரி` *(தி.4 ப.90)* - திருவிருத்தம். ஏனைய இருபதிகளுக்குத் திருப்பதிகங்கள் இதுபொழுது கிடைத்தில.

சாலநாள் அங்கமர்ந்து
தந்தலைமேல் தாள்வைத்த
ஆலமார் மணிமிடற்றார்
அணிமலர்ச்சே வடிநினைந்து
சேலுலாம் புனற்பொன்னித்
தென்கரையே றிச்சென்று

கோலநீள் மணிமாடத்
திருநல்லூர் குறுகினார். **#1477**

பலநாள்கள் அப்பழனத்தில் தங்கியிருந்து, தம்முடியின் மீது திருவடி சூட்டிய திருநீலகண்டரின் அழகிய மலர்ச் சேவடிகளை எண்ணியவாறு, சேல்மீன்கள் உலவும் நீர் நிறைந்த காவிரியின் தென்கரை வழியே சென்று, அழகு மிக்க நீண்ட மாடக் கோயிலான திருநல்லூரை நாவுக்கரசர் அடைந்தார்.

விளக்கவுரை

****

அங்கணைந்து தம்பெருமான்
அடிவணங்கி ஆராது
பொங்கியஅன் பொடுதிளைத்துப்
போற்றிசைத்துப் பணிசெயுநாள்
தங்குபெருங் காதலினால்
தாமரைமேல் விரிஞ்சனொடு
செங்கண்மால் அறிவரியார்
திருவாரூர் தொழநினைந்தார். **#1478**

அங்குச் சேர்ந்து தம் இறைவரின் திருவடிகளை வணங்கி, மீதூர்ந்த அன்புடன் திளைத்துப் போற்றித் திருப்பணி செய்து வந்தார். அந்நாளில், ஓங்கிய பெருங்காதலால், தாமரையில் இருக்கும் அயனும் சிவந்த கண்களையுடைய திருமாலும் அறிவதற்கரிய சிவ பெருமானின் திருவாரூரைத் தொழுவதற்குத் திருவுளம் கொண்டார்.

விளக்கவுரை

`அன்பொடு திளைத்துப் போற்றிசைத்து` என்பதால் இது பொழுது பாடிய பதிகங்கள் பலவாகலாம் எனினும், இதுபொழுது எவையும் கிடைத்தில.

நல்லூரில் நம்பரருள்
பெற்றுப்போய்ப் பழையாறை
பல்லூர்வெண் தலைக்கரத்தார்
பயிலுமிடம் பலபணிந்து
சொல்லூர்வண் டமிழ்பாடி
வலஞ்சுழியைத் தொழுதேத்தி
அல்லூர்வெண் பிறையணிந்தார்
திருக்குடமூக்
கணைந்திறைஞ்சி. **#1479**

திருநல்லூர் இறைவரிடம் அருள் விடை பெற்றுக் கொண்டு,

பழையாறை முதலாக உள்ள பல ஊர்களுக்கும் சென்று, வெண்மையான தலையோட்டைக் கையில் கொண்ட இறைவர் எழுந்தருளியிருக்கும் பல கோயில்களையும் வணங்கி, நல்ல சொற்கள் நிரம்பிய பாக்களைப் பாடி, அதன்பின் திருவலஞ்சுழியை அடைந்து தொழுது ஏத்திச் சென்று, மாலையில் தோன்றும் வெண்பிறையைச் சூடிய இறைவர் எழுந்தருளிய திருக்குடமூக்கினை அணைந்து பணிந்து.

விளக்கவுரை

பழையாறையில் இது பொழுது பாடிய பதிகம் கிடைத் திலது. *1.* திருவலஞ்சுழி *(அ)* \`அலையார்\` *(தி.6 ப.72)* - திருத்தாண் டகம். *(ஆ)* \`ஓதமார்\` *(தி.5 ப.66)* - திருக்குறுந்தொகை. *2.* திருவலஞ் சுழியும் திருக்கொட்டையூரும் - \`கருமணிபோல்\` *(தி.6 ப.73)* - திருத் தாண்டகம். *3.* திருக்குட மூக்கு - \`பூவணத்தவன்\` *(தி.5 ப.22)* - திருக் குறுந்தொகை. *4.* குடந்தைக் கீழ்க்கோட்டம் - \`சொல்மலிந்த\`*(தி.6 ப.75)* - திருத்தாண்டகம்.

நாலூர்தென் திருச்சேறை
குடவாயில் நறையூர்சேர்
பாலூரும் இன்மொழியாள்
பாகனார் கழல்பரவி
மேலூர்தி விடைக்கொடியார்
மேவுமிடம் பலபாடிச்
சேலூர்தண் பணைசூழ்ந்த
தென்திருவாஞ் சியம்அணைந்தார். **#1480**

திருநாலூரும், அழகான திருச்சேறையும் திருக் குடவாயிலும், திருநறையூரும் என்ற இத்திருப்பதிகளில் எல்லாம் வீற்றிருக்கின்ற பால்போன்ற இனிய சொற்களையுடைய உமையம் மையாரை ஒரு கூற்றில் கொண்ட இறைவரின் திருவடிகளைப் பணிந்து போற்றிச் சென்று, விடையை ஊர்தியாகவும் கொடியாகவும் கொண்ட இறைவர் வீற்றிருக்கும் பல இடங்களையும் பாடிச் சென்று, சேல் மீன்கள் உலாவும் தண்ணிய வயல்கள் சூழ்ந்த அழகான திருவாஞ்சியத்தை அடைந்தார்.

விளக்கவுரை

முதற்கண் குறிக்கப்பட்டிருக்கும் நான்கு திருப்பதிகளுள் திருச்சேறைக்கு மட்டுமே பதிகம் கிடைத்துள்ளது. \`பெருந்திரு\` *(தி.4 ப.73)*- திருநேரிசை. \`பூரியாவரும்\` *(தி.5 ப.77)* - திருக்குறுந்தொகை \`விடைக்கொடியார் மேவுமிடம் பலபாடி\` என்பதால், கடுவாய்க் கரைப்புத்தூர் என்ற பதியை இங்குக் கொள்ளலாம். பதிகம்: \`ஒருத் தனை\` - திருக்குறுந்தொகை. திருநாலூர் மயானம், பேணு பெருந்துறை முதலிய பதிகளும் ஆகலாம் என்பர் சிவக்கவிமணியார் *(பெரிய.பு. உரை)*. இதுபொழுது பதிகங்கள்

எவையும் கிடைத்தில. திருவாஞ்சி யத்தை அணைந்தார் என்பதால், கிடைத்துள்ள பதிகம் பின்னர்ப் போற்றிப் பாடியதாம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பெருவாச மலர்ச்சோலைப்
பெருவேளூர் பணிந்தேத்தி
முருகாரும் மலர்க்கொன்றை
முதல்வனார் பதிபிறவும்
திருவாரும் விளமருடன்
சென்றிறைஞ்சி வாகீசர்
மருவாரூர் எரித்தவர்தந்
திருவாரூர் வந்தடைந்தார். **#1481**

நாவரசர் நறுமணம் பொருந்திய பூஞ்சோலை கள் சூழ்ந்த திருப்பெருவேளூரைப் போற்றி, வாசனையுடைய கொன்றை மலர்களை அணிந்த இறைவரின் பிற பதிகளையும், திருவிளமரையும் சென்று வணங்கிப், பகைவரின் முப்புரங்களையும் எரித்த சிவபெருமான் வீற்றிருக்கும் திருவாரூருக்கு வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

1. திருப்பெருவேளூர் - `மறையணிநாவினானை` *(தி.4 ப.60)*- திருநேரிசை. *2.* திருவிளமர் - இப்பதிக்குரிய பதிகம் கிடைத்திலது. பிற பதிகள் என்பன திருக்கரவீரம் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார் *(*பெரிய.பு. உரை*)*. பதிகம் கிடைத்திலது.

ஆண்டஅர செழுந்தருள
ஆரூரில் அன்பர்கள்தாம்
நீண்டசடை முடியார்பால்
நிறைந்தஅருள் பெற்றுடையார்
காண்டகுமா ளிகைமாடங்
கவின்சிறந்தோங் கிடஎங்குஞ்
சேண்திகழ்வீ திகள்பொலியத்
திருமலிமங் கலஞ்செய்தார். **#1482**

நாவரசர் எழுந்தருள, அதனை அறிந்த திருவா ரூரில் இருந்த அடியவர்கள் பலரும் நீண்ட சடையையுடைய இறைவ ரின் நிறைந்த திருவருளைப் பெற்றவர்களாதலால், காண்பதற்கு இனிய மாளிகைகளையும் மாடங்களையும் முன்னைவிட அழகு சிறக்க அணிசெய்து, அவ்வழகு தொலைவிலும் விளங்குமாறு வீதிகளை விளக்கமுறச் செய்து திருவுடைய மங்கல அணிகளைச் செய்தனர்.

விளக்கவுரை

திருவாரூரில் பிறந்த அடியவர்கள் இறைவனுடைய திருவருளைப் பெற்றவர்களாதலைத் `திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்` *(தி.7 ப.39 பா.10)* என்னும் திருவாக்கால் அறியலாம்.

வல்அமண் குண்டர்தம் மாயை
கடந்து மறிகடலில்
கல்லே மிதப்பாகப் போந்தவர்
வந்தார் எனுங்களிப்பால்
எல்லையில் தொண்டர் எயிற்புறஞ்
சென்றெதிர் கொண்டபோது
சொல்லின் அரசர் வணங்கித்
தொழுதுரை செய்தணைவார். **#1483**

கொடிய மனவன்மையுடைய சமணர்கள் செய்த மாயையைக் கடந்து, அலைமறிக்கும் கடலில் கல்லையே மிதவை யாகக் கொண்டு கரை ஏறி வந்தவரான பெரியவர் வந்தார் என்ற மகிழ்ச்சியால், அளவற்ற தொண்டர்கள், நகரமதிலின் வெளியே வந்து எதிர்கொண்டபோது, நாவுக்கரசர் அத்தொண்டர்களைத் தொழுது, போற்றி அணைபவராய்,

விளக்கவுரை

****

பற்றொன் றிலாவரும் பாதகர்
ஆகும் அமணர்தம்பால்
உற்ற பிணியொழிந் துய்யப்போந்
தேன்பெற லாவதொன்றே
புற்றிடங் கொண்டான்தன் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமென்
றற்ற உணர்வொடும் ஆரூர்த்
திருவீதி உள்ளணைந்தார். **#1484**

புற்றைத்தமக்கு இடனாகக் கொண்டு வீற்றிருக்கும் வன்மீக நாதரின் தொண்டர்களுக்குத் தொண்டராகும் புண்ணிய மாவது, ஒன்றாலும் பற்றத் தகாதவர்களாய்ப் பெரும் பாதகர்களான அமணர்களிடத்திலிருந்துப் பொருந்தியதான நோய் நீங்கி உய்யும் பொருட்டாக வந்து புகுந்தயானும், பெறத்தக்கது ஒன்று ஆகுமோ? என்று சொல்லித் தம் செயல் அற்றவராய்த் திருவாரூர்த் திருவீதியைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

இக்கருத்தமைவுடையது `குலம்பலம்பா` *(தி.4 ப.101 பா.1)* எனத் தொடங்கும் திருவிருத்தமாகும், இப் பதிகத்தமைந்த பாடல்கள் பத்திலும் சிறுமையுடைய தமக்கு இவ்வருமையுடைய தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் பெறத் தகுமோ? எனக் கனிந்து பாடுகின்றார் நாவுக்கரசர். இப் பொருளமைதியை நினைவு கூர்ந்தே ஆசிரியர் இவ்வாறு அருள்வாராயினர். பிணி - பிணிப்பு; தொடர்பு. அதுவே பெரு நோயானது.

சூழுந் திருத்தொண்டர் தம்முடன்
தோரண வாயில்நண்ணி
வாழி திருநெடுந் தேவா
சிரியன்முன் வந்திறைஞ்சி
ஆழி வரைத்திரு மாளிகை
வாயில் அவைபுகுந்து
நீள்சுடர் மாமணிப் புற்றுகந்
தாரைநேர் கண்டுகொண்டார். **#1485**

தம்மைச் சூழ்ந்து வந்த அத்தொண்டர்களுடன் தோரணங்கள் தொங்கவிடப்பட்ட வாயிலை அடைந்து, வாழ்வை யுடைய திருவினால் மிக்க தேவாசிரிய மண்டபத்தின் முன்வந்து வணங்கிச், சக்கரவாள

மலைபோன்ற திருமாளிகையின் வாயிலுள் புகுந்து, ஒளிவீசும் பெரிய அழகான புற்றில் வீற்றிருக்கும் இறைவரை நேரே கண்டு மகிழ்ந்தார்.

விளக்கவுரை

****

கண்டு தொழுது விழுந்து
கரசர ணாதிஅங்கங்
கொண்ட புளகங்க ளாக
எழுந்தன்பு கூரக்கண்கள்
தண்டுளி மாரி பொழியத்
திருமூலட் டானர்தம்மைப்
புண்டரி கக்கழல் போற்றித்
திருத்தாண் டகம்புனைந்து. **#1486**

கண்டு, தொழுது, நிலம் பொருந்த விழுந்து வணங்கிக் கைகால் முதலிய உறுப்புக்கள் எல்லாம் மயிர்க் கூச்சல் ஏற்பட எழுந்து, அன்பு மிகுதலால் கண்களினின்றும் நீர் மழை போலப் பொழியத், திருமூலட்டான இறைவரின் தாமரை போன்ற திரு வடிகளை வழுத்திப் போற்றித் திருத்தாண்டகப் பதிகத்தையும் பாடி,

விளக்கவுரை

அருளிய பதிகம் `கற்றவர்கள்` *(தி.6 ப.32)* எனத் தொடங்கும் திருத்தாண்டகமாகும். இப்பதிகம் முழுதும் போற்றி போற்றி என வருதலின் போற்றித் திருத்தாண்டகமாயிற்று. இதில் போற்றி என்ற தொடர் *108* முறை வருகின்றது.

காண்ட லேகருத் தாய்நினைந்
தென்னுங் கலைப்பதிகம்
தூண்டா விளக்கன்ன சோதிமுன்
நின்று துதித்துருகி
ஈண்டு மணிக்கோயில் சூழ
வலஞ்செய் திறைஞ்சியன்பு
பூண்ட மனத்தொடு நீள்திரு
வாயிற் புறத்தணைந்தார். **#1487**

அதன்பின்னர்க் `காண்டலே கருத்தாய் நினைந்து` (தி.4 ப.20) எனும் தொடக்கமுடைய மெய்யுணர்வைத்தரும் பதிகத்தைத் தூண்டா விளக்கைப் போன்ற தன்வயத்தாய ஒளிமிக்க புற்றிடம் கொண்ட பெருமானின் திருமுன்பு நின்று, போற்றி, உள்ளம் உருக அழகிய கோயிலை வலமாகச் சுற்றி வந்து, இறைஞ்சி, அன்பு கொண்ட உள்ளத்துடன் நீண்ட திருவாயிலின் பக்கத்தை அடைந்தார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய `காண்டலே கருத்தாய்` *(தி.4 ப.20)* எனத் தொடங்கும் பதிகம் சீகாமரப் பண்ணில் அமைந்ததாகும். கலைப் பதிகம் - மெய்யுணர்வை வழங்கும் பதிகம். இவ்விரு பாடல் களும் ஒருமுடிபின.

செய்யமா மணியொளிசூழ் திருமுன்றின்
முன்தேவா சிரியன் சார்ந்து
கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலும் ஆரூ ராரைக்
கையினால் தொழாதொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வ னேன்என்
றெய்தரிய கையறவாந் திருப்பதிகம்
அருள்செய்தங் கிருந்தார் அன்றே. **#1488**

பின்னர் அவர், சிவந்த மணிகளின் பேரொளி விளங்கும் திருமுற்றத்தின் முன் உள்ள தேவாசிரிய மண்டபத்தைச் சேர்ந்து, அரும்புகள் நிறைந்த பூஞ்சோலைகளில் குயில்கள் கூவவும், மயில்கள் அகவவும் உள்ள திருவாரூரில் வீற்றிருக்கின்ற பெருமா னைக் கைகளைக் கூப்பி வணங்காததால், நான் கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வன் ஆனேன் எனும் கருத்தால், அடைதற்கு அரிய மிக்க துன்பத்தின் மிகுதியால் திருப்பதிகத்தைப் பாடி, அங்குத் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

கொய் - மலர் அரும்புகள். இப் பதிகத்தில் காணப்படும் பாடல் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பழமொழி அருளப் பெற்றிருப் பதால் இதனைப் பழமொழித் திருப்பதிகம் என அழைப்பர். இவற்றுள் முதல் பாடலில் வரும் பழமொழியே `கனியிருப்பக் காய் கவர்ந்த கள்வனேன்` என்பதாகும். இப்பாடலின் பின்னிரண்டடிகளை அப்படியே ஆசிரியர் முகந்தெடுத்து மொழிந்துள்ளார். `மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த` *(தி.4 ப.5)* எனும் பதிகம் காந்தாரப் பண்ணில் அமைந்ததாகும். இவ்விருபாடல்களும் ஒரு முடிபுடையன.

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந்
திருவடிவும் மதுர வாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின்
மாலைகளுஞ் செம்பொற் றாளே
சார்வான திருமனமும் உழவாரத்
தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச் செல்வார். **#1489**

மார்பு நிறைய வடியும் கண்ணீர் மழையென ஒழுகுகின்ற திருவடிவமும், இனிமையான சொற்களைக் கொண்ட தீந்தமிழ்ப் பதிகம் சேரும் திருவாயும், இறைவரின் சிவந்த பொன் போன்ற திருவடிகளையே சார்பாகக் கொண்ட திருமனமும், திரு உழவாரமான ஒப்பற்ற படையும் ஆகிய இவற்றைக் கொண்டு தாமும் இவையுமேயாய், உலகம் எல்லாம் வாழும் பொருட்டுத் திருவீதிப் பணிகளைச் செய்து வணங்கிப் போற்றிப் பரவி வருவாராய்,

விளக்கவுரை

****

நீடுபுகழ்த் திருவாரூர் நிலவுமணிப்
புற்றிடங்கொள் நிருத்தர் தம்மைக்
கூடியஅன் பொடுகாலங் களில்அணைந்து
கும்பிட்டுக் கோதில் வாய்மைப்
பாடிளம்பூ தத்தினான் எனும்பதிகம்
முதலான பலவும் பாடி
நாடியஆர் வம்பெருக நைந்துமனங்
கரைந்துருகி நயந்து செல்வார். **#1490**

புகழ்மிக்க திருவாரூரின்கண் மணிப்புற்றினை இடமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் கூத்தரைப், பொருந்திய அன்புடன் எல்லாக் காலங்களிலும் சென்று வணங்கி, குற்றம் இல்லாத வாய்மையுடைய `பாடிளம் பூதத்தினான்` எனத் தொடங்கும் பதிகத் தையும், மற்றும் பல பதிகங்களையும் பாடி, உள்ளத்தால் நாடிய ஆசையில் மனங் குழைந்து கரைந்து உருகுபவாராய்,

விளக்கவுரை

இது பொழுது அருளிய பதிகங்கள் பன்னிரண்டு. *1.* `பாடிளம் பூதத்தினானும்` *(தி.4 ப.4)* - காந்தாரம். *2.* `சூலப்படையானை` *(தி.4 ப.19)* - சீகா மரம். *3.* `குழல் வலம்` *(தி.4 ப.53)* - திருநேரிசை. *4.* `எப்போதும்` *(தி.5 ப.6)* - திருக்குறுந் தொகை. *5.* `கொக்கரை` *(தி.5 ப.7)* - திருக்குறுந்தொகை. *6.* `உயிராவணம்` *(தி.6 ப.25)* - திருத்தாண்டகம். *7.* `பாதித்தன்` *(தி.6 ப.26)* - திருத்தாண்டகம். *8.* `நீற்றினையும்` *(தி.6 ப.28)* - திருத்தாண்டகம். *9.* `திருமணியை` *(தி.6 ப.29)* - திருத்தாண்டகம். *10.* `எம்பந்த` *(தி.6 ப.30)* - திருத்தாண்டகம். *11.*`இடர்கெடுமாறு` *(தி.6 ப.31)* - திருத்தாண்டகம். *12.* ஒருவனாய் *(தி.6 ப.34)* - திருத்தாண்டகம்.

நான்மறைநூற் பெருவாய்மை நமிநந்தி
அடிகள்திருத் தொண்டின் நன்மைப்
பான்மைநிலை யால்அவரைப் பரமர்திரு

விருத்தத்துள் வைத்துப் பாடித்
தேன்மருவுங் கொன்றையார் திருவாரூர்
அரனெறியில் திகழுந் தன்மை
ஆனதிற மும்போற்றி அணிவீதிப்
பணிசெய்தங் கமரும் நாளில். **#1491**

நான்மறைகளிலும் மற்ற ஞான நூல்களிலும் பேசப்படும் பெருமை வாய்ந்த வாய்மையால் சிறந்த நமிநந்தி அடிகளின் தொண்டின் நன்மையமைந்த சிறப்பால், பரமரையே போற்றுகின்ற திருவிருத்தப் பதிகத்துள் அவரை வைத்துப் பாடி, தேன் பொருந்திய கொன்றை மலர்களுடைய சிவபெருமான், திருவாரூர் அரன் நெறியில் விளங்க வீற்றிருக்கும் சிறப்பையும் போற்றி, அழகிய திருவீதிப்பணியையும் செய்து அங்கு விரும்பித் தங்கியிருக்கும் காலத்தில்.

விளக்கவுரை

`வேம்பினைப் பூசி` எனத் தொடங்கும் திருவிருத்தத்தில் வரும் இரண்டாவது பாடல்,

ஆராய்ந் தடித்தொண்ட ராணிப்பொ னாரூ ரகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி யுத்திரம் பாற்படுத்தான்
நாரூர் நறுமலர் நாத னடித்தொண்டன் நம்பிநந்தி
நீராற் றிருவிளக் கிட்டமை நீணா டறியும்மன்றே.

-தி.*4* ப.*102* பா.*2* என்பதாகும். இதன்கண் நமிநந்தியடிகள் போற்றப் பெறுவதையே ஆசிரியர் ஈண்டுக் குறித்தருளுகின்றார். திருவாரூர் அரனெறித் திருப் பதிகங்கள்*: 1.* `எத்தீப் புகினும்` *(*தி.*4* ப.*17) -* இந்தளம். *2.* `பொருங்கை` *(*தி.*6* ப.*33) -* திருத்தாண்டகம். இவற்றுள் இரண்டாவது பதிகம் திருவாரூர் திருமூலட்டானத்துப் பெருமானையும் நினைவு கூர்ந்து அருளியதாகும்.

நீராருஞ் சடைமுடியார் நிலவுதிரு
வலிவலமும் நினைந்து சென்று
வாராரு முலைமங்கை உமைபங்கர்
கழல்பணிந்து மகிழ்ந்து பாடிக்
காராருங் கறைக்கண்டர் கீழ்வேளூர்
கன்றாப்பூர் கலந்து பாடி
ஆராத காதலினால் திருவாரூர்
தனில்மீண்டும் அணைந்தார் அன்றே. **#1492**

கங்கையாறு தங்கிய சடைமுடியையுடைய பெருமானின் திருவலிவலத்தையும் நினைந்து சென்று, கச்சை அணிந்த மார்பகத்தையுடைய மங்கையான உமையை ஒரு கூற்றில் கொண்டவரின் திருவடிகளை வணங்கி, மகிழ்ந்து பாடித், திருநீல

கண்டரது திருக்கீழ்வேளூர், திருக்கன்றாப்பூர் முதலிய பதிகளுக்கும் சென்று, மனம் கலந்த ஒருமைப்பாட்டுடன் பாடி, நிறைவுறாத ஆசை மிகுதியால் திருவாரூருக்குத் திரும்பவும் வந்தார்.

விளக்கவுரை

இத்திருப்பதிகளில் அருளிய பதிகங்கள்: *1.* திருவலி வலம்: `நல்லான்காண்` *(தி.6 ப.48)* - திருத்தாண்டகம். *2.* திருக்கீழ் வேளூர்: `ஆளான` *(தி.6 ப.67)* - திருத்தாண்டகம். *3.* திருக்கன்றாப் பூர்: `மாதினையோர்` *(தி.6 ப.61)* - திருத்தாண்டகம். இத்திருப்பதிக ளோடு, பின்வரும் திருப்பதிகளுக்கும் சென்று பணிந்து திருவாரூ ருக்குச் சென்றிருக்கவேண்டும் என இதுபொழுது இருக்கும் திருப்பதி கங்கள் கொண்டு அறிய முடிகின்றது. அவை *1.* திருக்கோளிலி: *(அ).* `மைக்கொள்` *(தி.5 ப.56)* - திருக்குறுந்தொகை. *(ஆ)* `முன்னமே` *(தி.5 ப.57)* - திருக்குறுந்தொகை. *2.* திருப்பேரெயில்: `மறையும்` *(தி.5 ப.16)* - திருக்குறுந்தொகை. மீண்டும் திருவாரூரை அணைந்து, ஐம்பொறிக ளோடு வாழ இயலாமையை நினைந்து அருளிய திருப்பதிகம். `படுகுழிப் பவ்வத்தன்ன` *(தி.4 ப.52)* எனத் தொடங்கும் திருநேரிசைப் பதிகம்.

மேவுதிரு வாதிரைநாள் வீதிவிடங்
கப்பெருமாள் பவனி தன்னில்
தேவருடன் முனிவர்கள்முன் சேவிக்கும்
அடியார்க ளுடன்சே வித்து
மூவுலகுங் களிகூர வரும்பெருமை
முறைமையெலாங் கண்டு போற்றி
நாவினுக்குத் தனியரசர் நயக்குநாள்
நம்பர்திரு அருளி னாலே. **#1493**

பொருந்தும் திருவாதிரைத் திருநாளில் வீதிவிடங்கப் பெருமான் எழுந்தருளிவரும் திருவுலாவில், தேவர்க ளுடனே முனிவர்களுமாகிய கூட்டத்தில் அவர்களுக்கெல்லாம் முன் நின்று வணங்கும் அடியார்களுடனே கூடி வணங்கி, மூன்று உலகங் களும் மகிழ்ச்சி அடைந்திட வருகின்ற அவ்விழாவின் நெறிமுறை களை எல்லாம் கண்டு போற்றி, ஒப்பில்லாத நாவுக்கரசர் விரும்பித் தங்கியிருக்கும் நாள்களில், இறைவரின் திருவருளால்.

விளக்கவுரை

****

திருப்புகலூர் அமர்ந்தருளுஞ் சிவபெருமான்
சேவடிகள் கும்பிட் டேத்தும்
விருப்புடைய உள்ளத்து மேவியெழுங்

காதல்புரி வேட்கை கூர
ஒருப்படுவார் திருவாரூர் ஒருவாறு
தொழுதகன்றங் குள்ளம் வைத்துப்
பொருப்பரையன் மடப்பாவை இடப்பாகர்
பதிபிறவும் பணிந்து போந்தார். **#1494**

திருப்புகலூரில் எழுந்தருளியிருக்கும் சிவ பெருமானின் திருவடிகளைப் போற்றுதற்குரிய விருப்பம் வரப் பெற்ற திருவுள்ளத்தில் பொருந்தி எழுகின்ற காதல் மிக, அங்ஙனமே செல்வ தற்கு எண்ணியவராய்த், திருவாரூரை ஒருவாறாகத் தொழுது, நீங்கித், தம் கருத்தைத் திருவாரூரில் வைத்து, மலையரசன் பாவையாரான உமையம்மையாரை ஒரு கூற்றில் வைத்த பெருமான் எழுந்தருளி யிருக்கும் இடைப்பட்ட பிற பதிகளையும் வணங்கிச் சென்றார்.

விளக்கவுரை

திருவாரூரில் தம் கருத்தை வைத்தமைக்கு அடையாளமாகப் பாடப்பெற்ற திருப்பதிகம்: `கைம்மான` *(தி.6 ப.24)* எனத் தொடங்கும் திருத்தாண்டகம் ஆகும். பிறபதிகளாவன: திருப்பள்ளியின் முக்கூடல், திருவிற்குடி, திருப்பனையூர் முதலாயினவாகலாம். இவற்றுள் முன்னுள்ள பதியொன்றற்கே திருப்பதிகம் உள்ளது. திருப்பள்ளியின் முக்கூடல் : `ஆராத` *(தி. 6 ப.69)* - திருத்தாண்டகம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அந்நாளில் ஆளுடைய பிள்ளையார்
திருப்புகலி அதன்கண் நின்றும்
பன்னாகப் பூணணிவார் பயின்றதிருப்
பதிபலவும் பணிந்து செல்வார்
புன்னாக மணங்கமழும் பூம்புகலூர்
வந்திறைஞ்சிப் பொருவில் சீர்த்தி
மின்னாரும் புரிமுந்நூல் முருகனார்
திருமடத்தில் மேவுங் காலை. **#1495**

அதுபொழுது ஞானசம்பந்தர் சீகாழியினின்றும் புறப்பட்டுப் பாம்புகளை அணிந்த சிவபெருமான் வீற்றிருக்கும் திருப்பதிகள் பலவற்றையும் அடைந்து பணிந்து செல்வார், சுரபுன்னை மலர்களின் மணம் கமழும் பூம்புகலூரில் சென்று இறைவனைக் கண்டு ஒப்பற்ற சிறப்புடைய முப்புரிநூல் அணிந்த முருக நாயனாரின் திரு மடத்தில் வீற்றிருக்கும் காலத்தில்.

விளக்கவுரை

****

ஆண்டஅர செழுந்தருளி அணியாரூர்
மணிப்புற்றில் அமர்ந்து வாழும்
நீண்டசுடர் மாமணியைக் கும்பிட்டு
நீடுதிருப் புகலூர் நோக்கி
மீண்டருளி னாரென்று கேட்டருளி
எதிர்கொள்ளும் விருப்பி னோடும்
ஈண்டுபெருந் தொண்டர்குழாம் புடைசூழ
வெழுந்தருளி எதிரே சென்றார். **#1496**

சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட நாவுக் கரசர் எழுந்தருளிப் போந்து, அழகு பொருந்திய திருவாரூரில் மணிப் புற்றில் விரும்பி வீற்றிருக்கும் நீண்ட ஒளி பொருந்திய மாமணியினை வணங்கிப் பூம்புகலூருக்கு வந்தருளும் இனிய செய்தியை, ஞான சம்பந்தர் கேட்டறிந்து, அவரை எதிர் கொண்டு வரவேற்கும் விருப்பத்தால், நெருங்கிய தொண்டர் கூட்டம் தம்மைச் சூழ்ந்து வர, எழுந்தருளி எதிரே சென்றார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

கரண்டமலி தடம்பொய்கைக் காழியர்கோன்
எதிரணையுங் காதல் கேட்டு
வரன்றுமணிப் புனற்புகலூர் நோக்கிவரும்
வாகீசர் மகிழ்ந்து வந்தார்
திரண்டுவருந் திருநீற்றுத் தொண்டர்குழாம்
இருதிறமுஞ் சேர்ந்த போதில்
இரண்டுநில வின்கடல்கள் ஒன்றாகி
அணைந்தனபோல் இசைந்த அன்றே. **#1497**

நீர்க் காக்கைகள் நிறைந்த பெரிய நீர்நிலைகளை யுடைய சீகாழியில் தோன்றிய ஞானசம்பந்தர், அங்ஙனம் தம்மை எதிர்கொண்டு அணைகின்ற அன்புச் செயலைக் கேட்டு, மணிகளைக் கொழித்து வரும் நீர்வளம் கொண்ட திருப்புகலூரை நோக்கி வருகின்ற நாவரசரும், மனமகிழ்ச்சியுடன் எழுந்தருளி வந்தனர். கூடிப் பெருகி வருகின்ற திருநீற்றுத் தொண்டர் கூட்டம் இருமருங்கும் திரண்ட போதில், நிலவுக்கடல்கள் இரண்டு, ஒன்று கூடி அணைந்தன போல், பொருந்தின. அப்பொழுது.

விளக்கவுரை

****

திருநாவுக் கரசரெதிர் சென்றிறைஞ்சத்

சிரபுரத்துத் தெய்வ வாய்மைப்
பெருஞான சம்பந்தப் பிள்ளையார்
எதிர்வணங்கி அப்ப ரேநீர்
வருநாளில் திருவாரூர் நிகழ்பெருமை
வகுத்துரைப்பீர் என்று கூற
அருநாமத் தஞ்செழுத்தும் பயில்வாய்மை
அவரு மெதிர் அருளிச் செய்வார். **#1498**

எதிர் சென்ற நாவுக்கரசர் வணங்க, சீகாழியில் வந்தருளிய கடவுள்தன்மை பொருந்திய பெருமையுடைய திருஞான சம்பந்தப் பெருமானும் எதிர் வணங்கி, `அப்பரே! நீர் வரும் நாளில் திருவாரூரில் நிகழும் பெருமையை வகுத்துக் கூறுவீராக!` எனக் கூறச் சிவபெருமானின் திருப்பெயரான திருவைந்தெழுத்தை மிகவும் பயில்கின்ற வாய்மை கொண்ட நாவுக்கரசரும் அருளுவாராய்,

விளக்கவுரை

****

சித்தம் நிலாவுந் தென்திரு
வாரூர் நகராளும்
மைத்தழை கண்டர் ஆதிரை
நாளின் மகிழ்செல்வம்
இத்தகை மைத்தென் றென்மொழி
கேனென் றுரைசெய்தார்
முத்து விதான மணிப்பொற்
கவரி மொழிமாலை. **#1499**

உள்ளத்தில் நிலவும் திருவாரூர் நகரத்தை ஆளுகின்ற நீலகண்டரான சிவபெருமானின் திருவாதிரைத் திருநாளில் நிகழும் மகிழ்ச்சிப் பெருக்குடைய செய்திச் செல்வத்தை, இத்தகைய தன்மை கொண்டது என எவ்வாறு கூறுவேன்! என்று, `முத்து விதான மணிப் பொற்கவரி` (தி.4 ப.21) எனத் தொடங்கும் பதிகமான சொல்மாலையைப் பாடினார்.

விளக்கவுரை

`முத்து விதானம்` *(தி.4 ப.21)* எனத் தொடங்கும் இக்குறிஞ்சிப் பண்ணாலாய பதிகம் திருவாரூரில் நிகழ்ந்து வரும் திருவாதிரைச் சிறப்பை மிக அழகாக விளக்கி நிற்பதாகும். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

அம்மொழி மாலைச் செந்தமிழ்
கேளா அணிசண்பை
மைம்மலி கண்டத் தண்டர்

பிரானார் மகனாரும்
கொய்ம்மலர் வாவித் தென்திரு
வாரூர் கும்பிட்டே
உம்முடன் வந்திங் குடன்அமர்
வேன்என் றுரைசெய்தார். **#1500**

அந்தச் சொல்மாலையான தமிழ்ப்பதிகத்தைக் கேட்ட அழகிய சீகாழியில் தோன்றிய, கருமை பொருந்திய கழுத் தினையுடைய தேவர் தலைவரின் மகனாரான ஞானசம்பந்தரும், `அரும்புகள் மலரும் பொய்கைகளையுடைய தென் திருவாரூருக்குச் சென்று வணங்கி, அதன்பின்பு மீண்டு வந்து, உம்முடன் கூடி உடன் அமர்வேன்` என இயம்பினார்.

விளக்கவுரை

மேற்கூறப்பட்ட `முத்து விதானம்` *(தி.4 ப.21)* எனத் தொடங்கும் பதிகத்தைக் கேட்ட அளவிலேயே ஞானசம்பந்தர் திருவாரூருக்குச் சென்று வருவதை மேற்கொண்டார், இதனால், அப்பதிகச் சிறப்பும் அதன்வழி அவருக்கு ஏற்பட்ட ஆர்வச் சிறப்பும் ஒருங்கு விளங்குகின்றன.

மாமதில் ஆரூர் மன்னரை
அங்கு வணங்கச்செந்
தாமரை யோடைச் சண்பையர்
நாதன் தான்ஏக
நாமரு சொல்லின் நாதரும்
ஆர்வத் தொடுபுக்கார்
பூமலர் வாசத் தண்பணை
சூழும் புகலூரில். **#1501**

பெரிய மதில் சூழ்ந்த திருவாரூர்த் தியாகராசரை அங்குச் சென்று வணங்குதற்குச் செந்தாமரை மலர்கள் நிறைந்த குளங்களையுடைய சீகாழித் தலைவரான ஞானசம்பந்தர் செல்ல, நாவில் பொருந்தும் வாக்கின் தலைவரான நாவுக்கரசரும் மலர்களின் நறுமணம் கமழும் குளிர்ந்த வயல்களால் சூழப்பட்ட புகலூருக்கு, மீதூர்ந்த விருப்பத்துடன் சென்றார்.

விளக்கவுரை

****

அத்திரு மூதூர் மேவிய
நாவுக் கரசுந்தம்
சித்தம் நிறைந்தே அன்பு

தெவிட்டுந் தெளிவெள்ளம்
மொய்த்திழி தாரைக் கண்பொழி
நீர்மெய்ம் முழுதாரப்
பைத்தலை நாகப் பூண்அணி
வாரைப் பணிவுற்றார். **#1502**

அப்பழமையான ஊரில் வீற்றிருக்கும் திருநாவுக் கரசரும், தம் உள்ளத்தில் நிறைவாகத் தேக்கித் தெளிந்த வெள்ளமாகத் திரண்டு தாரை தாரையாகக் கண்களினின்றும் பொழியும் நீர், உடல் முழுதும் நிரம்பப் பொருந்த, நச்சுப்பையைக் கொண்ட தலையை யுடைய பாம்பை அணிகலனாக அணிந்த சிவபெருமானைப் பணிந்தார்.

விளக்கவுரை

****

தேவர் பிரானைத் தென்புக
லூர்மன் னியதேனைப்
பாவியல் மாலைச் செந்தமிழ்
பாடிப் பரிவோடும்
மேவிய காலந் தோறும்
விருப்பிற் கும்பிட்டே
ஓவுதல் ஓவு திருப்பணி
செய்தங் குறைகின்றார். **#1503**

தேவர்களுக்கெல்லாம் தலைவராய், அழகிய புகலூரில் நிலைபெற்று எழுந்தருளியிருக்கும் தேன் போன்றவரைப், பாக்களின் இயல்பு முற்றும் பொருந்திய தமிழ் மாலைகளைப் பாடி, அன்புடனே பொருந்திய காலங்களில் எல்லாம் விருப்புடன் வணங்கி, நீங்குதல் இல்லாத திருப்பணிகளைச் செய்து கொண்டு, அங்குத் தங்குவாராகி,

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகங்கள்*: 1. `*பகைத்திட்டார்*` (*தி.*4* ப.*54) -* திருநேரிசை. *2. `*செய்யர்*` (*தி.*4* ப.*16) -* இந்தளம். *3. `*துன்னக்கோவணம்*` (*தி.*5* ப.*46) -* திருக்குறுந்தொகை.

சீர்தரு செங்காட் டங்குடி
நீடுந் திருநள்ளா
றார்தரு சோலை சூழ்தரு
சாந்தை அயவந்தி
வார்திகழ் மென்முலை யாளொரு
பாகன் திருமருகல்
ஏர்தரும் அன்பால் சென்று

வணங்கி இன்புற்றார். **#1504**

அப்பெருமான் எழுந்தருளியிருக்கும் சிறப்பு உடைய திருச்செங்காட்டங்குடி, செல்வம் மிகும் திருநள்ளாறு, பூமரங்கள் நிறைந்த சோலைகள் சூழந்த திருச்சாத்தமங்கையிலுள்ள அயவந்தி, கச்சுப் பொருந்திய மார்பகங்களையுடைய அம்மையை ஒரு கூற்றில் கொண்டருளும் சிவபெருமானின் திருமருகல் ஆகிய திருப்பதிகளை எல்லாம் அன்புடன் சென்று வணங்கி இன்பம் அடைந்தார்.

விளக்கவுரை

இப்பதிகளில் அருளிய பதிகங்கள்: *1.* திருச்செங் காட்டங்குடி: \`பெருந்தகையை\` *(தி.6 ப.84)* - திருத்தாண்டகம். *2.* திருநள்ளாறு: *(அ).* \`உள்ளாறாத\` *(தி.5 ப.68)* - திருக்குறுந்தொகை. *(ஆ).* \`ஆதிக்கண்\` *(தி.6 ப.20)* - திருத்தாண்டகம். *3.* திருமருகல்: \`பெருகலாம்\` *(தி.5 ப.88)* - திருக்குறுந்தொகை. திருச்சாத்தமங்கைக்குரிய பதிகம் கிடைத்திலது. இவ்விரு பாடல்களும் ஒரு முடிபு உடையன.

அப்படிச் சின்னாள் சென்றபின்
ஆரூர் நகராளும்
துப்புறழ் வேணிக் கண்ணுத
லாரைத் தொழுதிப்பால்
மெய்ப்பொருள் ஞானம் பெற்றவர்
வேணு புரத்தெங்கள்
பொற்புரி முந்நூல் மார்பரும்
வந்தார் புகலூரில். **#1505**

அவ்வகையில் சிலநாள்கள் சென்றனவாகப், பின்பு திருவாரூர்த் திருநகரை ஆளும் பவளம் போன்ற சடையை யுடைய நெற்றிக்கண்ணரான இறைவரைத் தொழுது கொண்டு, மெய்ப் பொருளாய ஞானத்தை உண்டருளிய சீகாழியில் தோன்றிய முப்புரி நூல் அணிந்த மார்பினரான எம் ஆளுடைய பிள்ளையாரும், திருப் புகலூருக்கு வந்தருளினார்.

விளக்கவுரை

****

பிள்ளையார் எழுந்தருளப்
பெருவிருப்பால் வாகீசர்
உள்ளம்மகிழ்ந் தெதிர்கொண்டங்
குடனுறையு நாளின்கண்
வள்ளலார் சிறுத்தொண்டர்
மற்றவர்பால் எழுந்தருள

எள்ளருஞ்சீர் நீலநக்கர்
தாமும்எழுந் தருளினார். #1506
ஞானசம்பந்தர் அங்ஙனம் வந்தருள, பெரு விருப்புடன் நாவுக்கரசரும் உள்ளம் மகிழ்ந்து அவரை எதிர் கொண்டு அழைத்து வந்து திருப்புகலூரில் அவருடன் தங்கியிருந்தார். அந் நாள்களில், வள்ளலாரான சிறுத்தொண்டர் அவ்விரு பெருமக்கள் இடத்தும் வந்தருள, பின் கெடுதல் இல்லாத சிறப்புடைய நீலநக்க நாயனாரும் அங்கு வந்தருளினார்.

விளக்கவுரை

****

ஆங்கணையும் அவர்களுடன்
அப்பதியில் அந்தணராம்
ஓங்குபுகழ் முருகனார்
திருமடத்தில் உடனாகப்
பாங்கில்வரும் சீரடியார்
பலருமுடன் பயில்கேண்மை
நீங்கரிய திருத்தொண்டின்
நிலையுணர்ந்து நிகழ்கின்றார். #1507
அவ்வாறு வந்த சிறுத்தொண்ட நாயனார், திருநீலநக்க நாயனார், ஆகிய இருவரோடும், அத் திருப்பதியில் வாழும் அந்தணரான மிக்க புகழையுடைய முருக நாயனாரின் திருமடத்தில், ஒன்று கூடியவராய், அத் திருக்கூட்டத்தில் ஒருங்கிருக்கும் சிறப்பையுடைய அடியவர் பலரும் உடன் இருக்க, அன்பின் சிறப்பால் வரும் நீங்குதற்கரிய திருத்தொண்டின் நிலைமையுணர்ந்து போற்றுவாராய்.

விளக்கவுரை

****

திருப்பதிகச் செழுந்தமிழின்
திறம்போற்றி மகிழ்வுற்றுப்
பொருப்பரையன் மடப்பாவை
இடப்பாகர் பொற்றாளில்
விருப்புடைய திருத்தொண்டர்
பெருமையினை விரித்துரைத்தங்
கொருப்படுசிந் தையினார்கள்
உடனுறைவின் பயன்பெற்றார். #1508
திருப்பதிகங்களான செழுந்தமிழின் இசைத் திறனைப் பாடி மகிழ்ந்து, மலையரசனின் மகளாரான உமையம்மையாரை இட மருங்கில்

கொண்டருளும் சிவபெருமானின் பெருமையை விரிவாகப் பேசி,
அதனால் ஒன்றிய மனம் உடையவராய், அடியார் உடன் உறைதலால்
வரும் சிவசிந்தனையாகிய பெரும் பயனைப் பெற்றனர்.

விளக்கவுரை

பெருமானின் பொருள்சேர் புகழை நினைந்தும், உரைத்தும் திருவடிகளை வணங்கியும் வாழ்தலே, அடியவர்களின் செய்கையாகும். அச் செய்கையை அடியவர் பலருடனும் இருந்து செய்தல் உடனுறைவின் பயனாகும். `சிரிப்பார், களிப்பார்` *(தி.8 ப.21 பா.9)* எனவரும் திருவாசகமும் காண்க. இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

அந்நாளில் தமக்கேற்ற
திருத்தொண்டின் நெறியாற்ற
மின்னார்செஞ் சடைஅண்ணல்
மேவுபதி எனைப்பலவும்
முன்னாகச் சென்றேத்தி
முதல்வன்தாள் தொழுவதற்குப்
பொன்னாரும் மணிமாடப்
பூம்புகலூர் தொழுதகன்றார். **#1509**

அத்தகைய நாள்களில் தங்களுக்கு ஏற்றதான திருத்தொண்டினைச்
செய்வதற்காக, மின்னல் என விளங்கும் சிவந்த சடையையுடைய
சிவபெருமான் வீற்றிருக்கும் திருப்பதிகள் பல வற்றிற்கும் முற்படச்
சென்று போற்றிப் பெருமானின் திருவடிகளைத் தொழுவதன் பொருட்டு,
அழகிய மணிகளையுடைய மாளிகைகள் நிறைந்த பூம்புகலூரைத்
தொழுது புறப்படுவாராய்,

விளக்கவுரை

****

திருநீல நக்கடிகள்
சிறுத்தொண்டர் முருகனார்
பெருநீர்மை அடியார்கள்
பிறரும்விடை கொண்டேக
ஒருநீர்மை மனத்துடைய
பிள்ளையா ருடன்அரசும்
வருநீர்செஞ் சடைக்கரந்தார்
திருஅம்பர் வணங்கினார். **#1510**

திருநீலநக்கரும், சிறுத்தொண்ட நாயனாரும் பெருமையுடைய மற்ற
அடியார்களும் மற்றவர்களும் விடைபெற்றுக் கொண்டு செல்ல,
ஒன்றுபட்ட உள்ளத்தவர்களான ஆளுடைய பிள்ளையாரும், ஆளுடைய

அரசும், வானினின்று இறங்கிவரும் கங்கைப் பெருக்கைச் சிவந்த சடையில் மறைந்து வைத்த இறைவரின் திருஅம்பர்த் திருப்பதியை வணங்கினர்.

விளக்கவுரை

திருவம்பருக்குரிய திருப்பதிகம் கிடைத்திலது. இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

செங்குமுத மலர்வாவித்
திருக்கடவூர் அணைந்தருளிப்
பொங்கியவெங் கூற்றடர்த்த
பொன்னடிகள் தொழுதேத்திக்
குங்குலியக் கலயனார்
திருமடத்தில் குறைவறுப்ப
அங்கவர்பால் சிவனடியா
ருடன்அமுது செய்தார்கள். **#1511**

சிவந்த ஆம்பல் மலர்கள் மலரும் பொய்கைகளை யுடைய திருக்கடவூரினைச் சேர்ந்து, சினம் மிகுந்து வந்த கூற்றுவனை உதைத்த இறைவரின் அழகிய திருவடிகளை வணங்கி, குங்குலியக் கலய நாயனாரின் திருமடத்தில் எழுந்தருள, அவருடன் இருந்தருளிய ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும், சிவனடியார்களுடன் உணவு கொண்டருளினர்.

விளக்கவுரை

இது பொழுது பாடியருளிய பதிகங்கள்: *1.* `பொள்ளத்த` *(தி.4 ப.31) -* திருநேரிசை. *2.* `மருட்டுயர்` *(தி.4 ப.107) -* திருவிருத்தம். *3.* `மலைக்கொளானை` *(தி.5 ப.37) -* திருக்குறுந்தொகை.

சீர்மன்னுந் திருக்கடவூர்த்
திருமயா னமும்வணங்கி
ஏர்மன்னும் இன்னிசைப்பாப்
பலபாடி இனிதமர்ந்து
கார்மன்னுங் கறைக்கண்டர்
கழலிணைகள் தொழுதகன்று
தேர்மன்னும் மணிவீதித்
திருவாக்கூர் சென்றணைந்தார். **#1512**

அவ்விருவரும், சீர்மை பொருந்திய திருக் கடவூர்த் திருமயானம் என்ற திருப்பதிக்கும் சென்று வணங்கி, அழகு உடைய இனிய இசை கொண்ட தேவாரப் பாடல்கள் பலவற்றையும் பாடி வணங்கி, இனிதாய் அங்கு வீற்றிருந்தருளி, மேகத்தின் தன்மை பொருந்திய நீலகண்டரின்

திருவடிகளை வணங்கி, அங்கிருந்து புறப்பட்டுத் தேர் பொருந்திய திருஆக்கூரைச் சென்று சேர்ந்தனர்.

விளக்கவுரை

திருக்கடவூர்த் திருமயானத்தில் `இன்னிசையாப் பலபாடி` என்றாரேனும் இதுபொழுது ஒரு திருப்பதிகமே கிடைத்து உள்ளது. `குழைகொள்` *(தி.5 ப.38)* - திருக்குறுந்தொகை.

சார்ந்தார்தம் புகலிடத்தைத்
தான்தோன்றி மாடத்துக்
கூர்ந்தார்வம் உறப்பணிந்து
கோதில்தமிழ்த் தொடைபுனைந்து
வார்ந்தாடுஞ் சடையார்தம்
பதிபலவும் வணங்கியுடன்
சேர்ந்தார்கள் தம்பெருமான்
திருவீழி மிழலையினை. **#1513**

தம்மைவந்து அடைந்தவர்க்கு அடைக்கலந் தந்து ஆட்கொள்ளும் சிவபெருமானை, அப்பதியில் உள்ள `தான் தோன்றி மாடம்` என்னும் கோயிலினுள் கண்டு, மிகுந்த அன்பு பொருந்த வணங்கி, குற்றம் இல்லாத தமிழ்த் தொடை மாலை பாடி, அங்கிருந்து புறப்பட்டு, அசைந்து ஆடும் சடையுடைய இறைவர் வீற்றிருந்தருளும் பதிகள் பலவற்றையும் போய் வணங்கிப், பின்னர் அவ்விருவரும் தம் பெருமானின் திருவீழிமிழலையைச் சேர்ந்தனர்.

விளக்கவுரை

இப்பதிகளில் அருளிய பதிகம்: `முடித்தாமரை` - திருத் தாண்டகம். பதிபலவும் என ஆசிரியர் கூறுதற்கு இயைய திருமீயச் சூர், திருவன்னியூர் ஆகிய பதிகளைக் கொள்ளலாம். *1.* திருமீயச்சூர் இளங்கோயில்: `தோற்றும் கோயிலும்` *(தி.5 ப.11)*- திருக்குறுந் தொகை. *2.*திருவன்னியூர்: `காடு கொண்டரங்கா` *(தி.5 ப.26)* - திருக் குறுந்தொகை.

வீழி மிழலை வந்தணைய
மேவு நாவுக் கரசினையும்
காழி ஞானப் பிள்ளையையும்
கலந்த உள்ளக் காதலினால்
ஆழி வலவன் அறியாத
அடியார் அடியார் அவர்களுடன்
வாழி மறையோர் எதிர்கொண்டு
வணங்க வணங்கி உள்புக்கார். **#1514**

திருவீழிமிழலையில் வந்து, முதற்கண் சேர்ந்த நாவுக்கரசரையும், பின்னால் வந்த ஞானசம்பந்தப் பெருமானையும் அன்பு கலந்த உள்ளத்தில் எழுந்த ஆசையால், சக்கரப் படையை உடைய திருமாலும் அறியாத சிவபெருமானின் அடியார்களும் அவர் தம் அடியார்களும் மறையோர்களும் நகர்ப் புறத்து வந்து எதிர்கொண்டு வணங்கத், தாங்களும் அவர்களை வணங்கித் திருப்பதியுள் புகுந்தனர்.

விளக்கவுரை

வாழி - அசைநிலை.

மாட வீதி அலங்கரித்து
மறையோர் வாயின் மணிவிளக்கு
நீடு கதலி தழைப்பூகம்
நிரைத்து நிறைபொற் குடமெடுத்துப்
பீடு பெருகும் வாகீசர்
பிள்ளை யாரும் தொண்டர்களும்
கூட மகிழ்ந்து விண்ணிழிந்த
கோயில் வாயில் சென்றணைந்தார். **#1515**

அந்தணர்கள் மாட வீதியினை அணிசெய்து, தம் மாளிகையின் வாயில்களில் மணி விளக்குகளையும், வாழைகளையும், இலை செறிந்த பாக்குகளையும் நிரல்பட வைத்தும், நீர் நிறைந்த பொற் குடங்களை ஏந்தியும், பெருமை மிக்க நாவுக்கரசர், ஆளுடைய பிள்ளையார், தொண்டர்கள் ஆகியோர் அங்கு வந்து கூடும்படி மகிழ்ந்து, விண்ணிழி விமானத்தையுடைய திருக்கோயி லின் வாயிலை அடைந்தார்கள்.

விளக்கவுரை

****

சென்றுள் புகுந்து திருவீழி
மிழலை அமர்ந்த செங்கனகக்
குன்ற வில்லி யார்மகிழ்ந்த
கோயில் வலமா வந்துதிரு
முன்றில் வணங்கி முன்னெய்தி
முக்கட் செக்கர்ச் சடைமவுலி
வென்றி விடையார் சேவடிக்கீழ்
விழுந்தார் எழுந்தார் விம்மினார். **#1516**

சென்று, திருவீழிமிழலையை விரும்பி வீற்றிருக் கும் செம்பொன் மேருமலையை வில்லாகவுடைய சிவபெருமான் மகிழ்ந்த கோயிலை வலமாக வந்து, முற்றத்தே வணங்கி, திருமுன்பு சேர்ந்து, மூன்று கண்களையும் சிவந்த வானம் போன்ற சடைமுடி யையும் வெற்றி

பொருந்திய ஆனேற்றூர்தியையும் உடைய அப்பெருமானின்
திருவடியின் கீழே விழுந்து எழுந்து நாவுக்கரசர் விம்மினார்.

விளக்கவுரை

****

கைகள் குவித்துக் கழல்போற்றிக்
கலந்த அன்பு கரைந்துருக
மெய்யில் வழியுங் கண்ணருவி
விரவப் பரவுஞ் சொல்மாலை
செய்ய சடையார் தமைச்சேரார்
தீங்கு நெறிசேர் கின்றார்என்
றுய்யு நெறித்தாண் டகம்மொழிந்தங்
கொழியாக் காதல் சிறந்தோங்க. **#1517**

இரு கைகளையும் தலைமீது குவித்து, திருவடிகளை வணங்கி, உள்ளமானது நிரம்பிக் கலந்த அன்பால் கரைந்து உருகத், திருமேனியில் வழியும் கண்ணீர் அருவியைப் போல் ஆக, துதிக்கின்ற சொல்மாலையான பதிகம், `சிவந்த சடையையுடைய பெருமானை அடையாதவர் தீ நெறிக்கே சேர்கின்றார்` என்னும் கருத்துடையதாய உய்யும் நெறியைக் காட்டும் திருத்தாண்டகத்தைப் பாடி, அங்கிருந்து நீங்க முடியாத காதல் மேலே ஓங்கி எழ.

விளக்கவுரை

இம்முடிபு உடைய திருப்பதிகம் `போரானை` *(தி.6 ப.50)* எனத் தொடங்கும் திருத்தாண்டகமாகும். பாடல்தொறும் `திருவீழிமிழலை யானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே` எனும் முடிபு உடைமையின் அதனையே போந்த கருத்தாக ஆசிரியர் ஈண்டுக் கூறுவாராயினர்.

முன்னாள் அயனுந் திருமாலும்
முடியும் முதலும் காணாத
பொன்னார் மேனி மணிவெற்பைப்
பூநீர் மிழலை யினில்போற்றிப்
பன்னாள் பிரியா நிலைமையினால்
பயிலக் கும்பிட் டிருப்பாராய்
அந்நாள் மறையோர் திருப்பதியில்
இருந்தார் மெய்ம்மை அருந்தவர்கள். **#1518**

முற்காலத்தில் நான்முகனும் திருமாலும் முடியும் அடியும் அறிய இயலாத, நீண்ட பொன்னார் மேனியையுடைய மணி மலையான இறைவரை, அழகிய நீர்வளம் கொண்ட திருவீழிமிழலை யில் வணங்கிப், பல

நாள்களும் பிரியாது இருக்கும் பண்பால், நாவுக் கரசர், நாளும் வழிபட்டுக் கொண்டிருக்கும் அக்காலத்தில் மறையவர் வாழும் அப்பதியில் மெய்த்தவர்களான அவ்விருவரும், அடியார் களும் தங்கியிருந்தனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

சீரின் விளங்குந் திருத்தொண்டர்
இருந்து சிலநாள் சென்றதற்பின்
மாரி சுருங்கி வளம்பொன்னி
நதியும் பருவம் மாறுதலும்
நீரின் இயன்ற உணவருகி
நிலவும் பலமன் னுயிர்களெலாம்
பாரின் மலிந்த இலம்பாட்டில்
படர்கூர் வறுமை பரந்ததால். **#1519**

சீர்மை மிக்க திருத்தொண்டர்கள் இவ்வாறு சில நாள்கள் இருந்து கழிந்த பின்னர், மழைவளம் சுருங்கியதால், வளம் உடைய காவிரி நீர், வரும் பருவத்தில் வாராது மாறுதல் அடைய, அதனால் நீரால் விளையத்தக்க உணவுப் பொருள்கள் குறைய, உணவை முதன்மையாகக் கொண்டு வாழ்கின்ற உயிர்கள் எல்லாம், வறுமை காரணமாகத் துன்ப மிகுதியை அடையுமாறு வறுமை பரவியது.

விளக்கவுரை

ஆல் - அசைநிலை,

வையம் எங்கும் வற்கடமாய்ச்
செல்ல உலகோர் வருத்தமுற
நையும் நாளில் பிள்ளையார்
தமக்கும் நாவுக் கரசருக்கும்
கையில் மானும் மழுவுமுடன்
காணக் கனவில் எழுந்தருளிச்
செய்ய சடையார் திருவீழி
மிழலை உடையார் அருள்செய்வார். **#1520**

உலகம் எங்கும் பஞ்சம் நிலவ, உலகத்துயிர்கள் பசியால் வருந்தத் துன்புற்று வாழும் நாளில், சிவந்த சடையை யுடையவரான திருவீழிமிழலையில் வீற்றிருக்கும் இறைவர், தம் கைகளில் மானும் மழுவும் காணும்படியாக, ஞானசம்பந்தருக்கும் நாவுக்கரசருக்கும் கனவில் தோன்றி அருள் செய்வாராய்.

விளக்கவுரை

****

காலநிலைமை யால்உங்கள்
கருத்தில் வாட்ட முறீர்எனினும்
ஏல உம்மை வழிபடுவார்க்
களிக்க அளிக்கின் றோம்என்று
கோலங் காண எழுந்தருளிக்
குலவும் பெருமை இருவர்க்கும்
ஞாலம் அறியப் படிக்காசு
வைத்தார் மிழலை நாயகனார். **#1521**

வறுமை காரணத்தால் உண்டாகும் வேறுபாட்டால் உங்கள் கருத்தில் வாட்டமடைய மாட்டீர்கள் எனினும், உங்களை வழிபட்டு வரும் அடியார்களுக்குத் தருவதற்காக உங்களுக்கு அளிக்கின்றோம் எனக் கூறி, தம் திருக்கோலம் முழுமை யும் அவர்கள் கண்டு கொண்டிருக்கும் பொழுதே மறைந்து, திருவீழி மிழலை இறைவர், விளங்கும் பெருமையுடைய பெருமக்களுக்காக உலகம் அறியும்படி படிக்காசு வைத்தருளினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபுடையன.

விண்ணின் றிழிந்த விமானத்தின்
கிழக்கும் மேற்கும் பீடத்தில்
அண்ணல் புகலி ஆண்டகையார்
தமக்கும் ஆண்ட அரசினுக்கும்
நண்ணும் நாள்கள் தொறுங்காசு
படிவைத் தருள நானிலத்தில்
எண்ணில் அடியா ருடன்அமுது
செய்தங் கிருந்தார் இருவர்களும். **#1522**

வானத்தினின்றும் இறங்கிய விமானமான அக்கோயிலின் கிழக்கிலும் மேற்கிலுமாக இறைவன் திருமுன்பு உள்ள பீடங்களில், முறையே ஞானசம்பந்தருக்கும், நாவுக்கரசருக்கும், வணங்க வரும் நாள்தோறும் பெருமையுடைய வீழிமிழலை நாதர், படியாகக் காசை வைத்தருள, இவ்வுலகத்தில் உள்ள எண்ணற்ற அடி யார்களுடன் உணவு உண்டு அவ்விருவரும் அங்குத் தங்கியிருந்தனர்.

விளக்கவுரை

கிழக்கில் உள்ள பீடம் இறைவரின் திருமுன்பு உள்ளதாகும்.
மேற்கிலுள்ள பீடம் இறைவர் திருமுன்பிற்கு நேராகப் பின்புறம் உள்ளதாகும்,

அல்லார் கண்டத் தண்டர்பிரான்
அருளால் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப்
பரமன் அடியா ரானார்கள்
எல்லாம் எய்தி உண்கவென
இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறிட்டார்
துயர்கூர் வறுமை தொலைத்திட்டார். **#1523**

கரிய கழுத்தையுடைய தேவ தேவரான இறைவரின் திருவருளால், படியாய்ப் பெற்ற காசினால் பலவாறாகப் பொருந்திய வளங்கள் பலவும் நிறைந்திருப்ப, `முழுமுதற் கடவுளான சிவபெருமானின் அடியவர் எல்லாரும் வந்து உணவு உண்ணுக` என நாளின் இருபோதும் பறைசாற்றி உணவு இட்டனர். அதனால் துன்பம் மிகும் வறுமை நோயைத் தொலைத்திட்டனர்.

விளக்கவுரை

எல்லாரும் என்பது எல்லாம் என நின்றது.

ஈசர் மிழலை இறையவர்பால்
இமையப் பாவை திருமுலைப்பால்
தேசம் உய்ய உண்டவர்தாம்
திருமா மகனார் ஆதலினால்
காசு வாசி யுடன்பெற்றார்
கைத்தொண் டாகும் அடிமையினால்
வாசி யில்லாக் காசுபடி
பெற்று வந்தார் வாகீசர். **#1524**

திருஞானசம்பந்தர் உமையம்மையாரின் திருமுலைப் பாலை, உலகம் உய்யும் பொருட்டு உண்ட திருமா மகனார் ஆதலால், ஈசரான மிழலை நாதரிடத்துக் குற்றம் உடைய காசினைத் திருஞானசம்பந்தர் பெற்றார். கைத் திருத்தொண்டு செய் கின்ற அடிமையானவர் ஆதலால் அக்குற்றம் இல்லாத காசினைத் திருநாவுக்கரசர் பெற்றார்.

விளக்கவுரை

வாசி - குற்றம்; வட்டம் கொடுத்தல். அதனைக் கொடுத் துப் பெறுதலாவது உரிய தொகையில் சிறுதொகை யொன்றைக் கழித்துக் கொண்டு பெறுதல், `கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும்` எனத் தம்மையும் உளப்படுத்திக் கொண்டு கூறுதலின் ஆளுடைய பிள்ளையாரும் கைத்தொண்டு செய்துவரும் பான்மையர் எனத் தெரியவருகிறது. எனினும் அத்தொண்டை நாவரசருக்கே உரித்தாக்கிக்

கூறுதல், அக் கைத்தொண்டில் உழவாரப் பணிசெய்து வந்த வல்வினை நோக்கிக் கூறியதாம். அன்னதோர் வல்வினை யின்றி மலர்தூவல் வழிபடல் போன்ற மெல் வினைகளையே பிள்ளையார் செய்து வந்தமையின் இங்ஙனம் கூறினார்.

ஆதியை அர்ச்சித்தற் கங்கமும் அங்கங்கே
தீதில் திறம்பலவும் செய்வனவும் - வேதியனே
நல்வினையாம் என்றேம் நமக்கும்எளி தானவற்றை
மெல்வினையே என்றதுநாம் வேறு. -திருக்களிற். *17*

எனவரும் ஞானநூற் கூற்றும் காண்க.

ஆறு சடைமேல் அணிந்தருளும்
அண்ணல் வைத்த படிக்காசால்
ஈறி லாத பொருளுடைய
இருவ ருடைய திருமடங்கள்
சோறு நாளுந் தொண்டர்மகிழ்ந்
துண்ண உண்ணத் தொலையாதே
ஏறு பெருமை புவிபோற்ற
இன்புற் றிருக்கும் அந்நாளில். **#1525**

கங்கையாற்றைச் சடைமீது அணிந்து விளங்கும் பெருமையுடைய இறைவர் வைத்த படிக்காசின் பேரருளால், முடிவு இல்லாத பொருளைப் பெற்றவர்களான இரு பெருமக்களின் மடங் களிலும், தொண்டர்கள் மகிழ்ந்து நாளும் சோறு உண்ண உண்ணக் குறைவின்றி ஓங்கி வளரும் பெருமையை உலகம் போற்ற இன்பம் அடைந்திருந்த அந்த நாள்களில்,

விளக்கவுரை

****

காலந் தவறு தீர்ந்தெங்கும்
கலிவான் பொழிந்து புனல்கலந்து
ஞாலம் எல்லாம் குளிர்தூங்கி
உணவு பெருகி நலஞ்சிறப்ப
மூல அன்பர் இருவர்களும்
மொழிமா லைகளும் பலசாத்தி
நீல கண்டர் உறைபதிகள்
பிறவும் வணங்க நினைவுற்றார். **#1526**

கால நிலைமையால் ஏற்பட்ட வறுமை நீங்கி, ஒலிக்கும் மேகம் மழை பொழிந்து நீர் பெருகிப் பரவி உலகம் எங்கும் குளிர்ச்சி மிகுந்து, உணவுப் பொருள்கள் பெருக விளைந்து, நன்மை பெருக, அதனால் உலகம் நன்மை அடைவதற்குக் காரணமாக நின்ற அப்பெருமக்கள் இருவரும், மொழிமாலையான தேவாரப் பதிகங்கள் பலவற்றையும்

பாடிச் சாத்தித், திருநீலகண்டரான இறைவர் எழுந் தருளியிருக்கும் பிற திருப்பதிகளுக்கும் சென்று வணங்க வேண்டும் என்று எண்ணினர்.

விளக்கவுரை

இது பொழுது நாவரசர் சாத்திய மொழி மாலைகள்: *1.*`பூதத்தின்` *(தி.4 ப.64)* - திருநேரிசை *2.* `வான்சொட்ட` *(தி.4 ப.95)* - திருவிருத்தம் *3.*`என்பொனே` *(தி.5 ப.13)* - திருக்குறுந்தொகை *4.*`கயிலாய` *(தி.6 ப.51)* - திருத்தாண்டகம் *5.* `கண்ணவன் காண்` *(தி.6 ப.52)* - திருத்தாண்டகம் *6.* `மானேறு` *(தி.6 ப.53)* - திருத்தாண்டகம் *7.* `கரைந்து` *(தி.5 ப.12)* - திருக்குறுந்தொகை. இவ்விரு பாடல்களும் ஒரு முடிபுடையன.

வாய்ந்த மிழலை மாமணியை
வணங்கிப் பிரியா விடைகொண்டு
பூந்தண் புனல்சூழ் வாஞ்சியத்தைப்
போற்றிப் புனிதர் வாழ்பதிகள்
ஏய்ந்த அன்பி னாலிறைஞ்சி
இசைவண் டமிழ்கள் புனைந்துபோய்ச்
சேர்ந்தார் செல்வத் திருமறைக்கா
டெல்லை இல்லாச் சீர்த்தியினார். **#1527**

அரிதில் கிடைக்கப் பெற்ற திருவீழிமிழலையின் பெருமணியாம் இறைவரை வணங்கிப் பிரிய இயலாத நிலையில் விடை பெற்றுக் கொண்டு, அழகான குளிர்ந்த நீரினாலே சூழப்பட்ட திருவாஞ்சியத்திற்குச் சென்று வழிபட்டு, வினையின் நீங்கி விளங்கிய அறிவினனாய சிவபெருமான் வெளிப்பட நிலையாய் எழுந்தருளிய மற்ற திருப்பதிகளையும் அன்பினால் இறைஞ்சித் தொழுது, இசையும் வளமையுமுடைய தமிழ்ப் பதிகங்களைப் பாடி, மேற் சென்று, அளவில்லாத சிறப்புடையராய அப்பெருமக்கள் இருவரும், செல்வம் மிக்க திருமறைக்காட்டைச் சென்றடைந்தனர்.

விளக்கவுரை

நாவரசர் திருவாஞ்சியத்திற்கு முன்னரும் *(பா.216)* எழுந்தருளியிருப்பினும், ஆசிரியர் சேக்கிழார் ஆங்கு அணைந்தார் என்ற அளவிலேயே கூறியுள்ளனர். இம்முறை எழுந்தருளிய பொழுது திருவாஞ்சியத்தைப் போற்றி என்பதால் இதுபொழுது பதிகத்தைப் பாடினர் என்றலே பொருந்துவதாம். அப்பதிகம்: `படையும் பூதமும்` *(தி.5 ப.67)* - திருக்குறுந்தொகை. `புனிதர் வாழ்பதிகள் ........ வண் டமிழ்கள் புனைந்து` என்பதால் திருவாஞ்சியத்திற்கும் திருமறைக் காட்டிற்கும் இடையில் உள்ள பல பதிகளையும் ஞானசம்பந்தரொடு இவரும் சேர்ந்து சென்றிருப்பதால், அங்கெல்லாம் பதிகங்கள் பாடியே சென்றிருக்க

வேண்டும். அப்பதிகளாக அறிவன: திருத்தலையாலங் காடு, திருச்சாத்தங்குடி, திருக்கரவீரம், திருவிளமர், திருக்காறாயில், திருத்தேவூர், திருநெல்லிக்கா, திருக்கைச்சினம், திருத்தெங்கூர், திருக்கொள்ளிக்காடு, திருக்கோட்டூர், திருவெண்டுறை, திருத்தண் டலை நீணெறி, திருக்களர் என்பனவாம். *(தி.12 பு.28 பா.575)* எனி னும் இப்பதிகளுள் திருத்தலையாலங்காடு என்ற பதிக்கு மட்டுமே திருப்பதிகம் கிடைத்துள்ளது, அப்பதிகம்: `தொண்டர்க்கு` *(தி.6 ப.79)* - திருத்தாண்டகம்.

மன்றல் விரவு மலர்ப்புன்னை
மணஞ்சூழ் சோலை உப்பளத்தின்
முன்றில் தோறுஞ் சிறுமடவார்
முத்தங் கொழிக்கும் மறைக்காட்டுக்
குன்ற வில்லி யார்மகிழ்ந்த
கோயில் புகுந்து வலங்கொண்டு
சென்று சேர்ந்தார் தென்புகலிக்
கோவும் அரசுந் திருமுன்பு. **#1528**

மணம் கமழும் மலர்களையுடைய புன்னையின் நறுமணம் பொருந்திய சோலைகளையுடைய உப்பளத்தின் முற்றங்கள் எங்கும், சிறுமியர் முத்துக்களைக் கொழிக்கும் சிறப்புடைய திருமறைக் காட்டில், பொன்மயமான மேருமலையை வில்லாகக் கொண்ட இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கின்ற கோயிலுள் புகுந்து, வலமாக வந்து, அழகிய சீகாழித் தலைவரான ஞானசம்பந்தரும், நாவரசரும் திரு வாயில் திருமுன்பு அடைந்தனர்.

விளக்கவுரை

****

பரவை ஓதக் கழிக்கானற்
பாங்கு நெருங்கும் அப்பதியில்
அரவச் சடைஅந் தணனாரை
அகில மறைகள் அர்ச்சனைசெய்
துரவக் கதவந் திருக்காப்புச்
செய்த அந்நாள் முதல்இந்நாள்
வரையும் அடைத்தே நிற்கின்ற
மணிநீள் வாயில் வணங்குவார். **#1529**

கடற்கரையில் நீரைக் கொண்ட கழிக்கானல் சூழ நெருங்கியுள்ள அத்திருப்பதியில், பாம்பு ஆடுகின்ற திருச்சடையை யுடைய மறையவரான சிவபெருமானை மறைகள் வழிபட்டு வலிய கதவினைத் திருக்காப்பிட்டு மூடிய அந்நாள் முதலாக, இந்நாள் வரையிலும் திறவாது

அடைத்தவாறே இருக்கின்ற அழகிய நீண்ட திருவாயிலை வணங்குபவர்கள்,

விளக்கவுரை

கானல் - மணற்பரப்பும் அங்குள்ள தாவரமும்.

தொல்லை வேதந் திருக்காப்புச்
செய்த வாயில் தொடர்வகற்ற
வல்ல அன்பர் அணையாமை
மருங்கோர் வாயில் வழியெய்தி
அல்லல் தீர்ப்பார் தமையருச்சிப்
பார்கள் தொழுவா ராம்படிகண்
டெல்லை யில்லாப் பெரும்புகழார்
இதனை அங்குக் கேட்டறிந்தார். **#1530**

பழைய மறைகள் திருக்காப்பிட்ட திருவாயில் பூட்டிய நிலையை நீக்கவல்ல அன்பர்கள் வாராததால், அதன் அருகேயுள்ள ஒரு வாயிலின் வழியே சென்று, உயிர்க்குற்ற துயர் அனைத்தையும் நீக்க வல்ல சிவபெருமானை, அன்பர்களாய்த் தொழுவார்கள் மேற்கொள்ளும் முறைமையைப் பார்த்து, அளவற்ற பெரும் புகழையுடைய ஞானசம்பந்தரும், நாவரசரும் அச் செய்தியை அங்குள்ளவர்கள் கூறக் கேட்டு அறிந்தனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபுடையன.

ஆங்கப் பரிசை அறிந்தருளி
ஆழித் தோணி புரத்தரசர்
ஓங்கு வேதம் அருச்சனைசெய்
உம்பர் பிரானை உள்புக்குத்
தேங்கா திருவோம் நேர்இறைஞ்சத்
திருமுன் கதவந் திருக்காப்பு
நீங்கப் பாடும் அப்பரென
நீடுந் திருநா வுக்கரசர். **#1531**

அதுபொழுது அவ்வியல்பை அவர்கள் அறிந்து, கடல் வெள்ளத்தில் மிதந்த திருத்தோணிபுரத்து மன்னரான ஆளுடைய பிள்ளையார், `அப்பரே உயர்ந்த மறைகள் வழிபட்ட தேவ தேவரான இறைவனைக் காணக் கோயிலுள் புகுந்து, தடையின்றி நாம் இருவரும் நேர் வாயிலில் வணங்குதற்காகத், திருமுன்புள்ள கதவு திருக்காப்பு நீங்குமாறு பாடியருளுக` எனச் சொல்ல, புகழ்மிக்க நாவரசரும்,

விளக்கவுரை

****

உண்ணீர் மையினால் பிள்ளையார்
உரைசெய் தருள அதனாலே
பண்ணி னேரு மொழியாள்என்
றெடுத்துப் பாடப் பயன்துய்ப்பான்
தெண்ணீர் அணிந்தார் திருக்காப்பு
நீக்கத் தாழ்க்கத் திருக்கடைக்காப்
பெண்ணீர் இரக்கம் ஒன்றில்லீர்
என்று பாடி இறைஞ்சுதலும். **#1532**

ஞானசம்பந்தப் பெருமான் உள்ளத்தில் பொருந் திய அன்பால் இவ்வாறு உரைத்தருள, அதனை ஏற்று, `பண்ணின் நேர் மொழியாள்` (தி.5 ப.10) எனத் தொடங்கிப் பாடவும் இறைவன் அப்பதிகப் பாடலின் பயனைத் துய்க்கும் பொருட்டுத் திருக்கதவைத் திருக்காப்பு நீக்கித் திறப்பதற்குத் தாழ்க்கத், திருக்கடைக் காப்பில், `எண்ணீர்! இரக்கம் ஒன்று இல்லீர்` என்று நாவரசர் பாடி வணங்கிய அளவில்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகம் `பண்ணின் நேர் மொழியாள்` *(தி.5 ப.10)* எனத் தொடங்கும் திருக்குறுந்தொகைப் பதிகமாகும். இப்பதிகத்தில் வரும் பத்துப் பாடல்களிலும் கதவு திறந்தருள வேண்டிய குறிப்புக்கள் உள்ளன. பதினோராவது பாடல் `அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர் இரக்கம் ஒன்றிலீர்` எனும் குறிப்போடு அமைந்துள்ளது. இத்தொடரே ஆசிரியர் சேக்கிழார், பத்துப் பாடல்கள் வரையிலும் கதவம் திறக்கப்படவில்லை என உணரக் கருவியாயிற்று. இனி அவர் கதவம் திறவாமைக்குரிய காரணத்தைத் திரு வருட் குறிப்பால் உணர்ந்த நிலையில், `பயன் துய்ப்பான் தெண்ணீர் அணிந்தார் திருக்காப்பு நீக்கத் தாழ்க்க` என்றருளினார். பயன் துய்ப்பான் - நாவரசரின் பாடற் சுவையைத் துய்த்துக் கொண்டிருந் தமையின். அவ்வகையில் திருவுள்ளம் பற்றியிருந்தார்க்கு `இரக்கம் ஒன்றிலீர்` எனும் வலியதொரு தொடர் திருச்செவிபடக் கதவு திறக்கத் திருவுள்ளம் பற்ற நேர்ந்தது. நாளும் தம் வழிபாட்டு நிறைவில் திருச்சிலம்போசை கேட்டுவந்த சேரமான் பெருமாள் நாயனாருக்கு ஒரு நாள் அவ்வோசை காலந்தாழ்த்துக் கேட்ப, நாயனாரும் அதற்குரிய காரணத்தை அறிதற்கு இறைவனிடம் விண்ணப்பிக்க, இறைவனும்,
`மன்றி னிடைநங் கூத்தாடல் வந்து வணங்கி வன்றொண்டன்
ஒன்றும் உணர்வால் நமைப் போற்றி உரைசேர் பதிகம்
பாடுதலால், நின்று கேட்டு வரத் தாழ்த்தோம்` *(தி.12 பு.37 பா.44)*
என்று அருளினார் என்பது அவர் வரலாற்றால் அறியப்படுவ

தொன்றாம். அவ்வரலாறு இங்கு நினைவு கூரத்தக்கதாம். இவ்வாறன்றிப் பண்ணின் நேர் மொழியாளாய உமை அம்மையாரின் மொழிகளின் பயனைத் துய்த்துக் கொண்டிருந்தமை யின் இறைவன் கதவு திறக்கத் திருவுளம் பற்றவில்லை என்றல் எள்ளளவும் பொருந்தாதாம்.

வேத வனத்தின் மெய்ப்பொருளின்
அருளால் விளங்கு மணிக்கதவங்
காதல் அன்பர் முன்புதிருக்
காப்பு நீங்கக் கலைமொழிக்கு
நாதர் ஞான முனிவருடன்
தொழுது விழுந்தார் ஞாலத்துள்
ஓத ஒலியின் மிக்கெழுந்த
தும்பர் ஆர்ப்பும் மறையொலியும். **#1533**

திருமறைக்காட்டில் விளங்கும் மெய்ப்பொருளாகிய இறைவரின் திருவருளினால், விளங்கும் மணிக்கதவமானது, பத்திமையுடைய அன்பர்களின் முன் திருக்காப்பு நீங்கவே, கலை மொழியின் வேந்தரான ஞான முனிவர் சம்பந்தருடன் தொழுது, விழுந்து பணிந்தார். உலகில் கடலோசையை விடத் தேவர்களின் மகிழ்வொலியும் மறைஒலியும் கூடி மேலே எழுந்தன.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபுடையன.

அன்பர் ஈட்டங் களிசிறப்ப
ஆண்ட அரசும் சிவக்கன்றும்
இன்ப வெள்ளத் திடைமூழ்கி
எழுந்துள் புகுந்து தம்பெருமான்
முன்பு பணிந்து போற்றிசைத்துப்
பரவி மொழிமா லைகள்பாடி
என்பு கரைய உள்ளுருகி
இறைஞ்சி அரிதிற் புறத்தணைந்தார். **#1534**

அடியவர்கள் கூட்டமானது பெருமகிழ்ச்சி அடைய, ஞானசம்பந்தரும் நாவரசரும் பேரின்பப் பெருக்கில் திளைத்து, எழுந்து உள்ளே புகுந்து, தம் பெருமானின் திருமுன்பு பணிந்து போற்றிப் பதிகங்களைப் பாடி, எலும்பும் கரைய மனம் உருகிப் பணிந்து, அங்கிருந்து அரிதாய் நீங்கிக் கோயில் வாயிலின் வெளியே வந்தனர்.

விளக்கவுரை

இதுபொழுது நாவரசர் அருளிய பதிகம்: `ஓதமால் கடல்`*(தி.5 ப.9)*

என்பது திருக்குறுந்தொகை.

புறம்பு நின்ற வாகீசர்
புனிதர் அருளால் இக்கதவந்
திறந்தும் அடைத்துஞ் செல்லுநெறி
திருந்த மலையாள் திருமுலையிற்
கறந்த ஞானங் குழைத்தமுது
செய்த புகலிக் கவுணியரை
நிறைந்த கதவம் அடைக்கும்வகை
நீரும் பாடி அருளுமெனா. **#1535**

கோயிலின் வாயில் புறத்து வந்தணைந்த நாவரசர், இறைவரின் திருவருளால் இக்கதவு திறக்கவும் அடைக்கவுமாய நெறியில் இயங்கத் திருவுளம் கொண்டவராய், உமையம்மையாரின் திருமுலைப் பாலில் சிவஞானம் குழைத்துண்ட சீகாழியில் தோன்றிய ஞானசம்பந்தரைப் பார்த்து, அருளால் நிறைந்த இக்கதவம் அடைக்கும் வகையை நீரும் அருளுக எனக் கூற.

விளக்கவுரை

****

சண்பை ஆளுந் தமிழ்விரகர்
தாமும் திருநா வுக்கரசர்
பண்பின் மொழிந்த உரைகொண்டு
பதிகம் பாடும் அவ்வளவில்
கண்பொற் பமைந்த நுதற்காள
கண்டர் அருளால் கடிதுடனே
திண்பொற் கதவந் திருக்காப்புச்
செய்த தெடுத்த திருப்பாட்டில். **#1536**

சீகாழித் தலைவரான ஞானசம்பந்தரும் நாவுக்கரசர் அன்பால் கூறியருளியவாறே, பதிகம் பாடிய அவ்வள வில், கண்ணின் அழகமைந்த நெற்றியினையுடைய இறைவரின் அருளால், மிகுந்த விரைவுடன் பதிகம் தொடங்கிய முதல் திருப் பாட்டிலேயே, திண்மையும் அழகும் உடைய திருக்கதவு திருக்காப்புக் கொண்டது.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபுடையன.

அதுகண் டுடைய பிள்ளையார்
தாமும் ஆண்ட அரசும்மகிழ்ந்
திதுநம் பெருமான் அருள்செய்யப்
பெற்றோம் என்றங் கிறைஞ்சியபின்

பதிகம் நிரம்பப் பிள்ளையார்
பாடித் தொழுது பணிவுற்றார்
எதிர்பொற் றிருவா யிலின்வழக்கம்
என்றும் நிகழ்ச்சி எய்தியதால். **#1537**

அவ்வளவில் திருக்காப்புக் கொண்டமையைப் பார்த்து, ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் மகிழ்ந்து, `நம் இறைவன் இதனை அருள் செய்ய நாம் பெற்றோம்` என வணங்கினர். பின்பு, ஞானசம்பந்தர் தொடங்கிய பதிகத்தைப் பாடி முடித்தார். இறைவரின் திருமுன்பு உள்ள அவ்வாயிற் கதவம் திறக்கவும், மூடவுமான நிலையில் அன்று முதல் என்றும் நிகழலாயிற்று.

விளக்கவுரை

****

அங்கு நிகழ்ந்த அச்செயல்கண்
டடியார் எல்லாம் அதிசயித்துப்
பொங்கு புளகம் எய்திடமெய்
பொழியுங் கண்ணீர் பாய்ந்திழிய
எங்கும் நிகரொன் றில்லாத
இருவர் பாதம் இறைஞ்சினார்
நங்கள் புகலிப் பெருந்தகையும்
அரசும் மடத்தில் நண்ணியபின். **#1538**

அவ்விடத்து நிகழ்ந்த அச்செயலைப் பார்த்த தொண்டர்கள் எல்லோரும் அதிசயம் அடைந்து, உடல் முழுவதும் மயிர்க் கூச்செறியக், கண்களினின்றும் அன்பு நீர் பொழிந்து வழிய, எங்கும், எந்த ஒன்றாலும் ஒப்பில்லாத அவ்விரு பெருமக்களின் திருவடிகளையும் வணங்கினர். பின் நம் சீகாழித் தலைவரும் நாவரசரும் திருமடத்தைச் சேர்ந்தனர்.

விளக்கவுரை

****

அரிதில் திறக்கத் தாம்பாட
அடைக்க அவர்பா டியஎளிமை
கருதி நம்பர் திருவுள்ளம்
அறியா தயர்ந்தேன் எனக்கவன்று
பெரிதும் அஞ்சித் திருமடத்தில்
ஒருபால் அணைந்து பேழ்கணித்து
மருவும் உணர்வில் துயில்கொண்டார்
வாய்மை திறம்பா வாகீசர். **#1539**

தாம் கதவு திறக்குமாறு மிக அரிதில் முயன்று பாடவும், கதவு

திருக்காப்புக் கொள்ள ஞானசம்பந்தர் பாடியதன் எளிமையையும் பார்த்து `இறைவரின் திருவுள்ளக் கிடக்கையை அறியாமல் அயர்ந்தேன்` என்று கவலையடைந்து, மிகவும் அச்சம் கொண்டு, அம் மடத்தின் ஒரு பக்கத்தில் அணைந்து, கண்களை மூடிக் கொண்டு, உணர்வுடைய நிலையில் துயில்வாரான உண்மை நிலையின் வழுவாத நாவரசர்.

விளக்கவுரை

இப்பாடல் முதல் `பாடும் தமிழ்` எனத் தொடங்கும் பா.*1546*ஆவது வரை உள்ள வரலாற்றை ஆசிரியர் சேக்கிழார், கூறியிருப்பதற்கு அடித்தளமாயிருப்பது, நாவரசர் அருளிய `எங்கே என்னை` எனத் தொடங்கும் திருவாய்மூர்த் திருப்பதிகமே ஆகும். அப்பதிகத்தில் வரும் இரண்டாவது பாடலில் `உன்னி யுன்னி உறங்கு கின்றேனுக்கு` *(தி.5 ப.50 பா.2)* எனவரும் தொடரே `திருவுள்ளம் அறியா தயர்ந்தேன் எனக் கவன்று .... துயில்கொண்டார்` *(பா.275)* எனச் சேக்கிழார் அருளுதற்குக் காரணமாயிற்று.

மன்னுஞ் செல்வ மறைக்காட்டு
மணியின் பாதம் மனத்தின்கண்
உன்னித் துயிலும் பொழுதின்கண்
உமையோர் பாகம் உடையவர்தாம்
பொன்னின் மேனி வெண்ணீறு
புனைந்த கோலப் பொலிவினொடுந்
துன்னி அவர்க்கு வாய்மூரில்
இருப்போந் தொடர வாவென்றார். **#1540**

செல்வம் பொருந்திய திருமறைக்காட்டின் மணியைப் போன்றவரான இறைவனின் திருவடிகளை மனத்தில் கொண்டு உறங்கும் பொழுது, பொன்னார்ந்த மேனியில் வெண்ணீறு பூசிய திருக்கோலப் பொலிவுடனே உமையம்மையாரை ஒரு கூற்றில் கொண்ட இறையவர் தாமே எழுந்தருளி `நாம் திருவாய்மூரில் இருப்போம். அங்குத் தொடர்ந்து வா!` எனத் திருவாய் மலர்ந் தருளினார்.

விளக்கவுரை

எங்கே யென்னை யிருந்திடந் தேடிக்கொண்
டங்கே வந்தடை யாள மருளினார்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனா ரதென்கொலோ.

(தி.5 ப.50 பா.1) எனவரும் திருக்குறுந்தொகைப் பதிகமே இவ்வாறு வரலாறு அமைதற்கு அடித்தளம் ஆயிற்று.

போதம் நிகழ வாஎன்று
போனார் என்கொல் எனப்பாடி
ஈதெம் பெருமான் அருளாகில்
யானும் போவேன் என்றெழுந்து
வேத வனத்தைப் புறகிட்டு
விரைந்து போக அவர்முன்னே
ஆதி மூர்த்தி முன்காட்டும்
அவ்வே டத்தால் எழுந்தருள. **#1541**

நாவரசர் அறிதுயிலினின்று விழிப்பு நிலை எய்த, `என்னை அங்கே வா என்று சொல்லிச் சென்றார். அஃது என்னவோ!` என்ற கருத்துக் கொண்ட திருக்குறுந்தொகைப் பதிகம் பாடி `இதுவே எம்பெருமானின் அருளாக அமையுமாயின் அவ்வாணையின் படியே நானும் போவேன்!` என்று துணிந்து எழுந்து, திருமறைக்காடு புறகிடுமாறு விரைவாகச் சென்றார். செல்ல, ஆதி முதல்வரான இறைவர் தாம் முன்பு காட்டிய அதே திருவடிவோடு அவர்தம் முன்பு எழுந்தருளிப் போக,

விளக்கவுரை

தஞ்சே கண்டேன் தரிக்கிலா தாரென்றேன்
அஞ்சே லுன்னை யழைக்கவந் தேனென்றார்
உஞ்சே னென்றுகந் தேயெழுந் தோட்டந்தேன்
வஞ்சே வல்லரே வாய்மூ ரடிகளே. *(தி.5 ப.50 பா.3)* எனவரும் மூன்றாவது பாடல் இறைவன் முன்செல, நாவரசர் பின் சென்றமைக்கு அரணாகின்றது.

சீரார் பதியி னின்றெழுந்து
செல்லுந் திருநா வுக்கரசர்
ஆரா அன்பில் ஆரமுதம்
உண்ண எய்தா வாறேபோல்
நீரார் சடையார் எழுந்தருள
நெடிது பின்பு செல்லுமவர்
பேரா ளரைமுன் தொடர்ந்தணையப்
பெறுவார் எய்தப் பெற்றிலரால். **#1542**

சிறந்த அத்திருப்பதியினின்றும் புறப்பட்டுச் செல்லும் நாவரசர், அயராத அன்பினால் நிறைந்த அமுதம் கையில் கிடைக்கப் பெற்றும் வாயில் உண்ணக் கிடைக்காதவாறு போலக், கங்கை பொருந்திய சடையுடைய பெருமான் முன்னே செல்ல, நெடுந் தொலைவு பின்னே தொடர்ந்து செல்பவர், பெருமையுடைய அவரை அணைய முயன்றும் எய்தப் பெற்றிலர்.

விளக்கவுரை

கைக் கெட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பது முதுமொழி. அதனை வைத்தே இங்ஙனம் ஆசிரியர் கூறுவாராயினர். பெருமான் திருவடிவு கொண்டு தம் முன்பு செல்ல, இவரும் அவரை யணைய முயன்றும், எய்த முடியவில்லை என்பது கருத்து.

கழியக் கண்டிலேன் கண்ணெதிரே கண்டேன்
ஒழியப் போந்திலே னொக்கவே யோட்டந்தேன்
வழியிற் கண்டிலேன் வாய்மூ ரடிகள்தம்
சுழியிற் பட்டுச் சுழல்கின்ற தென்கொலோ. *(தி.5 ப.50 பா.4)* எனவரும் நான்காவது பாடல் முதல் ஏழாவது பாடல் வரை உள்ள பகுதி இப்பாடற் கருத்தமைவதற்கு நிலைக்களனாய் உள்ளன.

அன்ன வண்ணம் எழுந்தருளி
அணித்தே காட்சி கொடுப்பார்போல்
பொன்னின் கோயில் ஒன்றெதிரே
காட்டி அதனுட் புக்கருளத்
துன்னுந் தொண்டர் அம்மருங்கு
விரைந்து தொடரப் போந்தபடி
மன்னும் புகலி வள்ளலார்
தாமுங் கேட்டு வந்தணைந்தார். **#1543**

சிவபெருமான் அங்ஙனம் எழுந்தருளி, அருகில் காட்சி தருபவர் போல் பொன்மயமான திருக்கோயில் ஒன்றை அவருக்கு முன்னதாகத் தோற்றுவித்து, அதற்குள் புகுந்தருளினார். அவரை அடைய நெருங்கி வரும் நாவரசர் விரைவாக அவரைத் தொடரவும் இவ்வாறு அவர் சென்றதை நிலை பெற்ற சீகாழித் தலைவரான ஞானசம்பந்தரும் கேட்டு அங்கு வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

****

அழைத்துக் கொடுபோந் தணியார்போல்
காட்டி மறைந்தார் எனஅயர்ந்து
பிழைத்துச் செவ்வி அறியாதே
திறப்பித் தேனுக் கேயல்லால்
உழைத்தா மொளித்தால் கதவந்தொண்
டுறைக்கப் பாடி அடைப்பித்த
தழைத்த மொழியார் உப்பாலார்
தாமிங் கெப்பால் மறைவதென. **#1544**

`என்னை வா என்று அழைத்துக் கொண்டு வந்து அருகில் கூட

வருபவரைப் போலக் காட்டி மறைந்து விட்டார்` என எண்ணித், `தங்கள் செவ்வியை அறியாமல் கதவு திறக்கச் செய்த பிழையுடைய எனக்குப் பக்கத்திலிருந்து தாங்கள் மறைந்து அருள லாமே அல்லாது, திருத்தொண்டின் உறைப்பு விளங்கப் பாடி அக் கதவைக் காப்புக் கொள்ளுமாறு செய்த, செழுமை வாய்ந்த செஞ்சொற் களையுடைய ஞானசம்பந்தர் இடையே உள்ளார், அவருக்குத் தாங்கள் இனி மறைந்தருளுவது எங்ஙனம்?`` என்று பாட,

விளக்கவுரை

உப்பால் - தொலைவுக்கும் அருகிற்கும் இடைப்பட்ட இடம்.
திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி யடைப்பித்தா ருந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே. *(தி.5 ப.50 பா.8)* என வரும் பாடல் இக்கருத்தமைவிற்கு அரணாகின்றது.

மாட நீடு திருப்புகலி
மன்னர் அவர்க்கு மாலயனும்
நேடி இன்னங் காணாதார்
நேரே காட்சி கொடுத்தருள
ஆடல் கண்டு பணிந்தேத்தி
அரசுங் காணக் காட்டுதலும்
பாட அடியார் என்றெடுத்துப்
பரமர் தம்மைப் பாடினார். **#1545**

மாளிகைகள் பொருந்திய சீகாழியின் மன்னவ ரான ஞானசம்பந்தருக்கு, மாலும் அயனும் தேடி இன்னமும் காண முடியாதவரான சிவபெருமான் வெளிப்பட்டு நேரே காட்சி தந்தருள, அக்கூத்தைப் பிள்ளையார் பார்த்துப் பணிந்து, துதித்து, நாவுக்கரசரும் காணுமாறு காட்டியருளுதலும், நாவரசர் கண்டு `பாட அடியார்` எனத் தொடங்கி இறைவனைப் பாடிட.

விளக்கவுரை

உடன்வந்த தமக்கு இறைவன் மறையினும், பிள்ளை யாருக்கு மறைக்கத் தகுமோ? என நாவரசர் விண்ணப்பிக்க, இறைவனும் அவருக்குக் காட்சி கொடுத்தருளினன். கண்ட பிள்ளையார் தாமும் அத்திருவடிவைக் கண்டமையைக் காட்ட அரசரும் மீண்டும் கண்டு மகிழ்ந்தனர். அந்நிலையில் `பாட அடியார்` *(தி.6 ப.77)* எனத் தொடங்கும் அரிய பதிகத்தைப் பாடினர். திருமறைக்காட்டிலிருந்து திருவாய்மூர் வரை நாவரசரை அழைத்து வந்த இறைவனே, திருவாய்மூர் அணுக

மறைந்தருளினன். அந்நிலையிலேயே, இறைவன் தனக்கு மறைப்பினும் இடையில் வந்திருக்கும் பிள்ளையாருக்கும், மறைக்கப் போமோ என விண்ணப்பிக்க, இறைவனும் அவருக்குக் காட்ட, அவரும் தாம் கண்டமையை இவருக்குக் காட்ட நேர்ந்தது.

பாடுந் தமிழ்மா லைகள்கொண்டு
பரமர் தாமும் எழுந்தருள
நீடுந் திருவாய் மூரடைந்து
நிலவுங் கோயில் வலஞ்செய்து
சூடும் பிறையார் பெருந்தொண்டர்
தொழுது போற்றித் துதிசெய்து
நாடுங் காதல் வளர்ந்தோங்க
நயந்தந் நகரில் உடனுறைந்தார். **#1546**

இவ்வகையில் பாடிய தமிழ்ப் பதிகங்களை ஏற்றுக் கொண்டருளிய சிவபெருமான் எழுந்தருள, பிறையைச் சூடும் சிவபெருமானின் தொண்டரான நாவரசர், நீடும் திருவாய்மூரை அடைந்து, நிலை பெற்ற கோயிலை வலம் வந்துதொழுதும் போற்றியும் துதி செய்தும் அன்பு பெருக விரும்பி அத்திருநகரில் ஞானசம்பந் தருடன் வீற்றிருந்தார்.

விளக்கவுரை

****

ஆண்ட அரசும் பிள்ளையார்
உடனே அங்கண் இனிதமர்ந்து
பூண்ட காதல் பொங்கியெழ
வாய்மூர் அடிகள் அடிபோற்றி
மூண்ட அன்பின் மொழிமாலை
சாத்தி ஞான முனிவரொடு
மீண்டு வந்து திருமறைக்காட்
டெய்தி விமலர் தாள்பணிந்தார். **#1547**

நாவரசர் ஞானசம்பந்தருடனே அத்திருப் பதியில் இனிதாய் வீற்றிருந்து பொருந்திய காதல் மேன்மேல் எழுந்து பொங்கத் திருவாய்மூர்ப் பெருமானின் திருவடிகளை வணங்கி, மிக்க அன்பால் திருப்பதிகத் தமிழ் மாலைகளைப் பாடியருளி, ஞான முனிவரான சம்பந்தரோடும் போந்தருளித் திருமறைக்காட்டை அடைந்து, வினையின் நீங்கி விளங்கியருளும் இறைவரின் திருவடி களைப் பணிந்தார்.

விளக்கவுரை

இதுபொழுது திருவாய்மூரில் அருளிய பதிகம் கிடைத்திலது.

ஆதி முதல்வர் தமைப்பணிந்தங்

கான பணிசெய் தமருநாள்
சீத மதிவெண் குடைவளவர்
மகளார் தென்னன் தேவியார்
கோதில் குணத்துப் பாண்டிமா
தேவி யார்முன் குலச்சிறையார்
போத விட்டார் சிலர்வந்தார்
புகலி வேந்தர் தமைக்காண. **#1548**

ஆதி முதல்வரான திருமறைக்காட்டு இறைவரை வணங்கித், தம்மால் இயன்ற திருப்பணிகளைச் செய்து கொண்டு அங்கு அரசர் வீற்றிருக்கும் நாள்களில், குளிர்ந்த சந்திரன் போன்ற வெண்கொற்றக் குடையினையுடைய சோழருக்கு மகளாரும், பாண்டி மன்னருக்கு மனைவியாரும் ஆன குற்றம் இல்லாத குணத்தில் சிறந்த பாண்டிமா தேவியாராலும், அவர் திருமுன்பு பணி செய்துவரும் குலச்சிறையாராலும் செல்ல விடுக்கப்பட்ட சிலர், சீகாழித் தலைவரான ஞானசம்பந்தரைக் காண்பதற்காக வந்தனர்.

விளக்கவுரை

****

வந்து சிவனார் திருமறைக்கா
டெய்தி மன்னு வேணுபுரி
அந்த ணாளர் தமக்கறிவித்
தவர்பால் எய்தி அடிவணங்கச்
சிந்தை மகிழ்ந்து தீதின்மை
வினவத் தீங்கும் முளவாமோ
இந்த உலகம் உயவந்தீர்
இருதாள் நினைவார்க் கென்றுரைப்பார். **#1549**

அங்ஙனம் அனுப்பப்பட்டவர்கள் வந்து, சிவபெருமான் விரும்பி எழுந்தருளியிருக்கும் திருமறைக் காட்டில் ஞானசம்பந்தரின் திருமடத்தை அடைந்து, நிலைபெற்ற சீகாழியின் மறையவர் பெருமானான ஆளுடைய பிள்ளையாருக்குத் தாம் வந்த செய்தியைத் தெரிவித்து, அவர் ஆணையின் வண்ணம் அவர் முன்பு சேர்ந்து, அவருடைய திருவடிகளை வணங்க, அவர் திருவுள்ளம் மகிழ்ந்து \`அனைவரும் தீதிலராய் உள்ளனரோ?\` என்று வினவ, \`இவ்வுலகம் உய்யத் தோன்றியருளிய தங்கள் திருவடிகளை நினைப் பவர்க்குத் தீமையும் உண்டோ?\` எனத் தொடங்கிச் சொல்பவர் ஆகி.

விளக்கவுரை

****

சைவ நெறிவை திகம்நிற்கச்
சழக்கு நெறியைத் தவமென்னும்
பொய்வல் அமணர் செயல்தன்னைப்
பொறுக்க கில்லோம் எனக்கேட்டே
அவ்வன் தொழிலோர் செயல்மாற்றி
ஆதி சைவ நெறிவிளங்கத்
தெய்வ நீறு நினைந்தெழுந்தார்
சீர்கொள் சண்பைத் திருமறையோர். **#1550**

`மறைகளில் சொல்லப்பட்ட சைவ நெறியானது என்றும் விளங்கி நிற்க, குற்றம் உடைய அவநெறியைத் தவநெறி என்று கூறும் பொய்ம்மையில் வல்ல சமணர்களின் கொடிய செயல் களைப் பொறுக்க இயலாதவர் ஆனோம்` என்று கூறக் கேட்ட பிள்ளையார், அக்கொடிய செயல்களை மாற்றி முதன்மையான சைவநெறி விளங்க வேண்டும் என்று, தெய்வ நீற்றின் துணையை நினைந்து கொண்டு, சிறப்புடைய சீகாழித் தலைவரான ஞானசம்பந்தர் அங்குச் செல்லத் துணிந்தாராக.

விளக்கவுரை

****

ஆய பொழுது திருநாவுக்
கரசு புகலி ஆண்டகைக்குக்
காய மாசு பெருக்கியுழல்
கலதி அமணர் கடுவினைசெய்
மாயை சாலம் மிகவல்லார்
அவர்மற் றென்னை முன்செய்த
தீய தொழிலும் பலகெட்டேன்
செல்ல இசையேன் யான்என்றார். **#1551**

அவ்வமயத்தில் நாவரசர், சீகாழி ஆண் டகையாரான ஞானசம்பந்தரிடம் `உடலின் அழுக்கைக் கழுவாமல் பெருக்கியவாறே திரியும் தீயவரான சமணர்கள், கொடுமை செய்யும் வஞ்சனைகளில் மிகவும் வல்லவர்கள்; அவர்கள் எனக்கு முன் நாள்களில் செய்த கொடுமைகளும் பல ஆகும். ஆதலின் தாங்கள் அங்குச் செல்ல நான் ஒருப்படேன்` என்று அருள் செய்தார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபுடையன.

என்று கூற எல்லையிலா
நீறு போற்றும் இருவரையும்
சென்று காணும் கருத்துடையேன்

அங்குத் தீங்கு புரிஅமணர்
நின்ற நிலைமை அழிவித்துச்
சைவ நெறிபா ரித்தன்றி
ஒன்றுஞ் செய்யேன் ஆணைஉம
தென்றார் உடைய பிள்ளையார். #1552

நாவரசர் இவ்வாறு கூறக்கேட்ட ஞானசம்பந்தர், `அளவில்லாத பெருமை பொருந்திய திருநீற்றைப் போற்றுகின்ற அவ்விரு பெருமக்களையும் அங்குச் சென்று காணும் கருத்து டையேன். அத்தீமைகளைச் செய்கின்ற சமணர்களின் நிலைமையை அழிவித்துச் சைவ நெறியை வளர்த்தன்றி வேறு ஒரு செயல் செய்ய மாட்டேன்! உம் ஆணை!` என்று அருளிச் செய்தவராய்,

விளக்கவுரை

`நனிபள்ளி உள்க வினை கெடுதல் ஆணை நமதே` *(தி.2 ப.84 பா.11)* என முன்னரும், `ஆன சொல் மாலை ஓதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே` *(தி.2 ப.85 பா.11)* எனப் பின்னரும் கூறியருளும் பிள்ளையார், ஈண்டு ஆணை உமதே என அரசர் மீது வைத்துக் கூறியது, தாம் மதுரைக்குப் போதற்கு ஒருப்படாத அவரை ஒருப்படுத்தவும், அவ்வாறு செல்வதும், உம் ஆணை வழியன்றி என்னளவிலன்று என்பதன் மூலம் அவர்தம் ஆணையைப் பெறவுமாம். உமது ஆணை துணைநிற்கும் என்பது கருத்து.

போமா துணிந்து நீர்அங்குப்
போதப் போதா அவ்வமணர்
தீமா யையினை யானேபோய்ச்
சிதைத்து வருகின் றேன்என்ன
ஆமா றெல்லாம் உரைத்தவரை
மறுக்க மாட்டா தரசிருப்பத்
தாமா தரவால் தமிழ்நாட்டில்
போனார் ஞானத் தலைவனார். #1553

பாண்டி நாட்டுக்குச் செல்ல ஒருப்பட்ட ஞான சம்பந்தர், நீவிரும் அங்கு வருதல் வேண்டா, அச்சமணர்களின் தீய வஞ்சனைகயெல்லாம் யானே சென்று அழிவித்து வருகின்றேன் என்று கூற, அவர்தம் எழுச்சியையும் உணர்ச்சியையும் மறுக்க மாட்டாதவர் ஆகி, நாவுக்கரசர் அங்குத் தங்க, சிவஞானத் தலைவர் ஆன சம்பந்தர் அவரைப் பிரிந்து தாம் மட்டும் பெருகிய அன்புடன் பாண்டி நாட்டிற்குச் சென்றார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபுடையன.

வேணு புரக்கோன் எழுந்தருள
விடைகொண் டிருந்த வாகீசர்
பூணும் அன்பால் மறைக்காட்டில்
புனிதர் தம்மைப் போற்றிசைத்துப்
பேணி இருந்தங் குறையுநாள்
பெயர்வார் வீழி மிழலையமர்
தாணு வின்தன் செய்யகழல்
மீண்டுஞ் சார நினைக்கின்றார். **#1554**

சீகாழித் தலைவரான ஞானசம்பந்தர் அந்நிலை யில் பாண்டி நாட்டிற்கு எழுந்தருளவே, அவரிடம் விடை கொண்டு அங்குத் தங்கியிருந்த திருநாவுக்கரசரும், தாம் கொண்ட அன்பினால் திருமறைக்காட்டில் வீற்றிருக்கும் இறைவனை வணங்கிப் போற்றி செய்து, அங்கு வீற்றிருந்த அமயத்து, அங்கிருந்தும் புறப்பட்டுச் செல்வாராகித் திருவீழிமிழலையில் வீற்றிருக்கும் சிவபெருமானின் சிறந்த திருவடிகளை மீளவும் அடைந்து வணங்க நினைப்பவராய்.

விளக்கவுரை

இதுபோது மறைக்காட்டுப் புனிதர் தம்மைப் போற்றிசைத்த பதிகங்கள்: *1.* `இந்திரனோடு` *(தி.4 ப.33) -* திருநேரிசை. *2.* `தேரையும் மேல் கடாவி` *(தி.4 ப.34) -* திருநேரிசை. *3.* `தூண்டு சுடரனைய` *(தி.6 ப.23) -* திருத்தாண்டகம்.

சோலை மறைக்காட் டமர்ந்தருளுஞ்
சோதி அருள்பெற் றகன்றுபோய்
வேலை விடமுண் டவர்வீழி
மிழலை மீண்டுஞ் செல்வன் என
ஞாலம் நிகழ்ந்த நாகைக்கா
ரோணம் பிறவுந் தாம்பணிந்து
சாலு மொழிவண் டமிழ்பாடித்
தலைவர் மிழலை வந்தடைந்தார். **#1555**

சோலைகள் சூழ்ந்த திருமறைக்காட்டில் விரும்பி வீற்றிருக்கும் பேரொளிப் பிழம்பாய சிவபெருமானின் திருவருளைப் பெற்று, அங்கிருந்து நீங்கிச் சென்று, கடலில் தோன்றிய நஞ்சினை உண்ட சிவபெருமானின் திருவீழிமிழலையை மீண்டும் அடைவேன் என்று எண்ணிய நிலையில், உலகில் விளங்கிய திருநாகைக்காரோ ணத்தையும், அப்பதி முதலாய பிற பதிகளையும் வணங்கிச் சால்பு டைய மொழிகளால் ஆய திருப்பதிகங்களைப் பாடித் தலைவரின் திருவீழிமிழலையை அடைந்தார்.

விளக்கவுரை

திருநாகைக்காரோணத்தில் அருளிய பதிகங்கள்: *1.* `மனைவிதாய்` *(தி.4 ப.71)* - திருநேரிசை. *2.* `வடிவுடை மாமலை` *(தி.4 ப.103)* - திருவிருத்தம். *3.* `பாணத்தான்` *(தி.5 ப.83)* - திருக்குறுந்தொகை. *4.* `பாரார் பரவும்` *(தி.6 ப.22)* - திருத்தாண்டகம். பிற பதிகளாவன: *1.* திருப்பயற்றூர் - `உரித்திட்டார்` *(தி.4 ப.32)* - திருநேரிசை. *2.* திருக்கொண்டீச்சரம்: `வரைகிலேன்` *(தி.4 ப.67)* - திருநேரிசை. `கண்ட பேச்சினில்` *(தி.5 ப.70)* - திருக்குறுந்தொகை. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபுடையன.

வீழி மிழலை தனைப்பணிந்து
வேத முதல்வர் தாமிருப்ப
ஆழி வலமேந் தியஅரியால்
ஆகா சத்தின் நின்றிழிந்த
வாழி மலர்ந்த கோயில்தனில்
மன்னும் பொருளைப் போற்றிசைத்துத்
தாழும் நாளிற் பிறபதியும்
பணியுங் காதல் தலைநிற்பார். **#1556**

திருவீழிமிழலையை அடைந்த நாவரசர், அப் பதியின் புறத்திருந்தவாறே வணங்கிச் சென்று, மறையின் முதல்வரான சிவபெருமான் வீற்றிருப்பதற்காகத் திருமாலால் விண்ணுலகத்தில் நின்றும் விமானத்தோடு கீழே கொணரப்பட்டு நிலைபெற விளங்கிய கோயிலில் விளங்கும் இறைவரைப் போற்றி விரும்பியிருந்த அக் காலத்தில், அவர் அங்குள்ள பிறபதிகளையும் வணங்க வேண்டும் என்ற ஆசையுடையராய்,

விளக்கவுரை

****

பூவிற் பொலியும் புனற்பொன்னிக்
கரைபோய்ப் பணிவார் பொற்பமைந்த
ஆவுக் கருளும் ஆவடுதண்
டுறையார் பாதம் அணைந்திறைஞ்சி
நாவுக் கரசர் ஞானபோ
னகர்க்குச் செம்பொன் ஆயிரமும்
பாவுக் களித்த திறம்போற்றிப்
போந்து பிறவும் பணிகின்றார். **#1557**

இவ்வுலகத்தில் விளங்கும், நீரையுடைய காவிரி யாற்றின் கரை வழியாய்ச் சென்று, பல பதிகளையும் வணங்கியவாறே செல்பவரான நாவுக்கரசர், பசு வடிவத்துடன் பூசித்த உமையம்மையா ருக்கு அருள்

செய்த திருவாவடுதுறை இறைவரின் திருவடிகளைச் சேர்ந்து வணங்கி, ஞான அமுதுண்ட காழிப்பெருமானுக்கு அவரது பாடலுக்காக அங்கே இறைவர் ஆயிரம் பொற்காசுகளை வழங்கி யருளிய திறத்தை வைத்துப் போற்றி, அங்கிருந்து புறப்பட்டுப் பிற பதிகளையும் வணங்கிச் செல்லலானார்.

விளக்கவுரை

திருவாவடுதுறையில் அருளிய பதிகம், `மாயிரு ஞாலம் எல்லாம்` எனத் தொடங்கும் திருநேரிசைப் பதிகமாகும். இப்பாடலில், ``காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க் கம்பொன் ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே.`` *(தி.4 ப.56 பா.1)* என வருவதை நினைவு கூர்ந்தே ஆசிரியர் சேக்கிழார், `ஞானபோன கர்க்குச் சொம்பொன் ஆயிரமும் பாவுக்களித்த திறம் போற்றி` என்று அருளுகின்றார். பிற பதிகளாவன: *1.* திருக்கோழம் பம்: `வேழம் பத்தைவர்` *(தி.5 ப.64) -* திருக்குறுந்தொகை. *2.* திரு நல்லம்: `கொல்லத் தான்` *(தி.5 ப.43) -* திருக்குறுந்தொகை.இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

செய்ய சடையார் பழையாறை
எய்த அதனில் செல்பொழுதின்
மையல் அமணர் மறைத்தவட
தளியின் மன்னுஞ் சிவனாரைக்
கைகள் கூப்பித் தொழுதருளக்
கண்ட வாற்றால் அமணர்கள்தம்
பொய்கொள் விமானம் எனக்கேட்டுப்
பொறாத உள்ளம் மிகப்புழுங்கி. **#1558**

அங்ஙனம் செல்பவரான நாவரசர், சிவந்த சடையையுடைய சிவபெருமான் எழுந்தருளிய பழையாறை என் னும் பதியைச் சேரச் செல்லும் பொழுது, மயக்கமுடைய சமணர்கள் மறைத்த பழையாறை வடதளிக் கோயிலில் வீற்றிருந்தருளும் சிவ பெருமானை, நாவரசர் கைகூப்பித் தொழுத அளவில், திருவருட் குறிப்பால் திருவுள்ளத்துள் உணர்ந்த உணர்வுமீதூர, அது சமணர்கள் வஞ்சனையால் செய்த விமானம் என்று அங்குள்ளவரிடம் கேட்டுப், பொறுக்க இயலாத திருவுள்ளத்தில் புழுக்கம் அடைந்து.

விளக்கவுரை

****

அந்த விமானந் தனக்கருகா
ஆங்கோர் இடத்தின் பாங்கெய்திக்

கந்த மலருங் கடிக்கொன்றை
முடியார் செய்ய கழலுன்னி
மந்த அமணர் வஞ்சனையால்
மறைத்த வஞ்சம் ஒழித்தருளிப்
பந்தங் கொண்ட குண்டர்திறம்
பாற்றும் என்று பணிந்திருப்பார். **#1559**

அங்ஙனம் அறிந்த அளவில், பொய்மை கொண்ட விமானத்தின் அண்மையில், ஆங்கு ஓரிடத்தின் அருகாகச் சேர்ந்து, நறுமணமுடைய இதழ்கள் விரிந்த கொன்றை மாலையைச் சூடிய முடியையுடைய சிவபெருமானின் திருவடிவை நினைந்து, `அறிவற்ற சமணர்கள் வஞ்சனையால் மறைத்த வஞ்சகத்தை ஒழித்து, உலகியல் வழிக்கட்டுண்டு கிடக்கும் அச்சமணர்களின் திறத்தை அழிப்பீராக!` என வேண்டி வணங்கியிருப்பவர்,

விளக்கவுரை

****

வண்ணங் கண்டு நான்உம்மை
வணங்கி யன்றிப் போகேனென்
றெண்ண முடிக்கும் வாகீசர்
இருந்தார் அமுது செய்யாதே
அண்ண லாரும் அதுவுணர்ந்தங்
கரசு தம்மைப் பணிவதற்குத்
திண்ண மாக மன்னனுக்குக்
கனவில் அருளிச் செய்கின்றார். **#1560**

`நான் உம் திருமேனியினைக் கண்ணால் கண்டால் அன்றி அப்பால் செல்ல மாட்டேன்` என்று முறையிட்டு, உறுதி கொண்டு, தம் நினைவை எண்ணியபடி முடிக்கும் நாவரசர் உணவு கொள்ளாமல் இருப்ப, இறைவரும் அதனைத் தம் திருவுள்ளத்துள் கொண்டு, அத்திருப்பதியில் நாவரசர் வணங்குவ தற்காக, மன்னனுக்குக் கனவில் தோன்றி உறுதிபெற அருள் செய் கின்றவராய்,

விளக்கவுரை

****

அறிவில் அமணர் நமைமறைப்ப
இருந்தோம் என்றங் கடையாளக்
குறிகள் அறியச் செய்தருளி
நம்மை அரசு கும்பிடுவான்
நெறியில் அமணர் தமையழித்து

நீக்கிப் போக்கென் றருள்புரியச்
செறிவில் அறிவுற் றெழுந்தவனுஞ்
செங்கை தலைமேற் குவித்திறைஞ்சி. **#1561**
`அறிவற்ற சமணர்கள் நம் கோயிலை மறைக்க நாம் அதனுள்ளே இருந்தோம்` என்றருளி, அவ்விடத்தைக் காணக் கூடிய அடையாளக் குறிகளையும் அருள் செய்து, `நம்மை நாவரசு வணங்குவதற்காக, நன்னெறியில் ஒழுகாத சமணர்களை அழித்து, அங்கிருந்து அகலச் செய்வாயாக!` என்று அருள் செய்தார். துயில் நீங்கி எழுந்த அரசனும் அதனை உளங்கொண்ட அளவில் தன் செங் கையைத் தலைமீது கூப்பி வணங்கிப் பின்.

விளக்கவுரை

****

கண்ட வியப்பு மந்திரிகட்
கியம்பிக் கூடக் கடிதெய்தி
அண்டர் பெருமான் அருள்செய்த
அடையா ளத்தின் வழிகண்டு
குண்டர் செய்த வஞ்சனையைக்
குறித்து வேந்தன் குலவுபெருந்
தொண்டர் தம்மை அடிவணங்கித்
தொக்க அமணர் தூர்அறுத்தான். **#1562**
தான் கனவில் கண்ட வியப்பான காட்சியை அமைச்சர்களுக்குச் சொல்லி, அவர்களுடன் தானும் விரைவாய் அவ் விடத்திற்குச் சென்றவன், கனவில் பெருமான் அருளிய அடையாளங் களின் வழியே சென்று, அங்குச் சிவ வடிவத்தைப் பார்த்தான்; சமண ராகிய கீழானவர்கள் செய்த வஞ்சனையை வெளிப்படச் செய்த நாவரசரின் திருவடிகளை வணங்கி, அங்கிருந்த சமணர்களான தூருகளை அழித்தான்.

விளக்கவுரை

`மூக்கினால் முரன்று ஓதி அக்குண்டிகை, தூக்கினார் குலந்தூ ரறுத்தே தனக்கு ஆக்கினார் அணி ஆறை வடதளி` *(தி.5 ப.58 பா.2)* எனவரும் பகுதி இவ்வரலாற்றிற்கு அரணாகின்றது. அரசன் பெயர், நாடு, காலம் ஆகியன அறிதற்கியன்றில.

ஆனை இனத்தில் துகைப்புண்ட
அமணா யிரமும் மாய்ந்ததற்பின்
மேன்மை அரசன் ஈசர்க்கு
விமான மாக்கி விளக்கியபின்

ஆன வழிபாட் டர்ச்சனைக்கு
நிபந்தம் எல்லாம் அமைத்திறைஞ்ச
ஞான அரசும் புக்கிறைஞ்சி
நாதர் முன்பு போற்றுவார். **#1563**

யானையினால் அழிக்கப்பட்ட சிறிய புதர்போல் மன்னனின் பணியாளர்களினால் அழிக்கப்பட்ட அச்சமணர் பள்ளியில் தங்கிய ஆயிரம் சமணர்களும் அழிந்த பின்பு, மன்னன் சிவபெருமானுக்கு உரிய விமானத்தையும் ஆக்கி உரியவாறு விளங்கச் செய்து, சிவாகமத்தில் விதித்த முறைப்படி வழிபடுதற்கான பூசனைக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் அறக்கட்டளைகளாக வகுத்து அமைத்துப் பின் நாவரசரை வணங்கினான். ஞான வள்ளலான நாவரசரும் அக் கோயிலுக்குள் சென்று இறைவரின் திருமுன்பு நின்று போற்றுவாராய்,

விளக்கவுரை

`வாயிருந் தமிழே படித்து ஆளுறா ஆயிரம் சமணும் அழிவாக் கினான் பாயிரும் புனல் ஆறை வடதளி` *(தி.5 ப.58 பா.9)* என வரும் பாடற் பகுதியே இவ்வரலாற்றிற்கு அரணாகின்றது.

தலையின் மயிரைப் பறித்துண்ணுஞ்
சாதி அமணர் மறைத்தாலும்
நிலையி லாதார் நிலைமையினால்
மறைக்க ஒண்ணு மோஎன்னும்
விலையில் வாய்மைக் குறுந்தொகைகள்
விளம்பிப் புறம்போந் தங்கமர்ந்தே
இலைகொள் சூலப் படையார்சேர்
இடங்கள் பிறவுந் தொழஅணைவார். **#1564**

`தம் தலை மயிரைப் பறித்தலும், நின்று உண்ணும் இயல்பும் கொண்ட கூட்டத்தவரான சமணர்கள் மறைத்தாலும், மெய்ம்மையுணராத அவர்கள் தம் சிற்றறிவினால் மறைத்து வைத்திட முடியுமோ!` என்னும் கருத்துக் கொண்ட விலை மதிப்பதற்கரிய வாய்மையுடைய திருக்குறுந்தொகையைப் பாடியருளினார். பின்பு அங்குத் தங்கியிருந்த நாவரசரும் மூவிலை வடிவான சூலப்படை ஏந்திய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பிற பதிகளையும் வணங்கச் செல்லலானார்.

விளக்கவுரை

இது பொழுது பாடிய திருப்பதிகம்: திருக்குறுந்தொகை. தலையெ
லாம்பறிக் குஞ்சமண் கையருள்
நிலையி னான்மறைத் தால்மறைக் கொண்ணுமே
அலையி னார்பொழி லாறை வடதளி

நிலையி னானடி யேநினைந் துய்ம்மினே. -*தி5 ப.58 பா.1*
என வரும் இப்பதிக முதற் பாடலை இப்பாடல் முகந்து நிற்கின்றது. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பொங்கு புனலார் பொன்னியினில்
இரண்டு கரையும் பொருவிடையார்
தங்கும் இடங்கள் புக்கிறைஞ்சித்
தமிழ்மா லைகளுஞ் சாத்திப்போய்
எங்கும் நிறைந்த புகழாளர்
ஈறில் தொண்டர் எதிர்கொள்ளச்
செங்கண் விடையார் திருவானைக்
காவின் மருங்கு சென்றணைந்தார். **#1565**

பொங்கி வருகின்ற காவிரியின் இருமருங்கும் உள்ள, போர் செய்யவல்ல ஆனேற்றை ஊர்தியாகக் கொண்ட சிவபெருமான் நிலைபெற்று விளங்கி வீற்றிருக்கும், பல பதிகளுக்கும் சென்று வணங்கி, தமிழ் மாலைகளையும் சாத்தி வரும் எங்கும் நிறைந்த புகழையுடைய அவர், மேலும் சென்று அளவற்ற தொண்டர்கள் பலரும் வந்து எதிர் கொள்ளச், செங்கண் விடையையுடைய இறை வரின் திருவானைக்கா என்ற பதியின் அருகே சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

இத்திருப்பதியிலிருந்து திருவானைக்காவிற்குச் செல் லும் வரையிலும் பொன்னியின் இருகரைகளிலும் உள்ள திருப் பதிகளை வணங்கிச் சென்றார் என ஆசிரியர் குறித்தருளுகின்றார். அத்திருப் பதிகளாவன*: 1.* திரு இன்னம்பர்*: (அ)* `விண்ணவர்` *(தி.4 ப.72) -* திருநேரிசை. *(ஆ)* `மன்னும்மலை` *(தி.4 ப.100) -* திரு விருத்தம். *(இ)* `என்னிலாரும்` *(தி.5 ப.21) -* திருக்குறுந்தொகை. *(ஈ)* `அல்லிமலர்` *(தி.6 ப.89) -* திருத்தாண்டகம். *2.* திருப்புறம்பயம்*:* `கொடிமாட` *(தி.6 ப.13) -* திருத்தாண்டகம். *3.* திருவிசயமங்கை*:* `குசையும்` *(தி.5 ப.71) -* திருக்குறுந்தொகை. *4.* திருவாப்பாடி*:* `கடலகம்` *(தி.4 ப.48) -* திரு நேரிசை. *5.* திருப்பந்தணை நல்லூர்*:* `நோதங்கம்` *(தி.6 ப.10) -* திருத் தாண்டகம். *6.* திருக்கஞ்சனூர்*:* `மூவிலைநல்` *(தி.6 ப.90) -* திருத்தாண்டகம். *7.* திருமங்கலக்குடி*:* `தங்கலப்பிய` *(தி.5 ப.73) -* திருக்குறுந்தொகை. *8.* தென்குரங்காடு துறை*:* `இரங்கா` *(தி.5 ப.63) -* திருக்குறுந்தொகை. *9.* திருநீலக்குடி*:* `வைத்தமாடும்` *(தி.5 ப.72) -* திருக்குறுந்தொகை. *10.* திருக்கருவிலிக் கொட்டிட்டை*:* `மட்டிட்ட` *(தி.5 ப.69) -* திருக்குறுந்தொகை. *11.* திரு அரிசிற்கரைப்புத்தூர்*:* `முத்தூரும்` *(தி.5 ப.61) -* திருக்குறுந்தொகை. *12.* திருச்சிவபுரம்*:* `வானவன்காண்` *(தி.6 ப.87) -* திருத்தாண்டகம். *13.* திருக்கானூர்*:* `திருவின் நாதனும்` *(தி.5*

ப.76) - திருக்குறுந் தொகை. 14. திருஅன்பில்ஆலந்துறை: `வானம் சேர்` (தி.5 ப.80) -திருக்குறுந்தொகை 15.திருஆலம்பொழில்: `கருவாகி` (தி.6 ப.86) - திருத்தாண்டகம். 16. மேலைத்திருக்காட்டுப்பள்ளி: `மாட்டுப்பள்ளி` (தி.5 ப.84) - திருக்குறுந்தொகை.

சிலந்திக் கருளுங் கழல்வணங்கிச்
செஞ்சொல் மாலை பலபாடி
இலங்கு சடையார் எறும்பியூர்
மலையும் இறைஞ்சிப் பாடியபின்
மலர்ந்த சோதி திருச்சிராப்
பள்ளி மலையுங் கற்குடியும்
நலங்கொள் செல்வத் திருப்பராய்த்
துறையுந் தொழுவான் நண்ணினார். **#1566**

நாவரசர் திருவானைக்காவில் சிலந்திக்கு அரு ளிய இறைவரின் திருவடிகளை வணங்கி, பலசெஞ்சொல் மாலை களைப் பாடி, விளங்கும் சடையையுடைய சிவபெருமான் எழுந்த ருளியிருக்கும் திருவெறும்பியூர் மலையையும் வணங்கித் திருப் பதிகம் பாடினார். பின்பு விரிந்த பேரொளியையுடைய திருச்சிராப் பள்ளி மலையையும், திருக்கற்குடி மலையையும், நன்மையுடைய திருப்பராய்த்துறையையும் வணங்கும் பொருட்டுச் செல்லலானார்.

விளக்கவுரை

1. திருவானைக்காவில் அருளிய பதிகங்கள்: (அ) `கோனைக்காவி` (தி.5 ப.31) - திருக்குறுந்தொகை. (ஆ) `எத்தாயர்` (தி.6 ப.62) - திருத்தாண்டகம். (இ) `முன்னானை` (தி.6 ப.63) - திருத் தாண்டகம். 2. திருவெறும்பியூர்: (அ) `விரும்பியூறு` (தி.5 ப.74) - திருக்குறுந்தொகை. (ஆ) `பன்னிய செந்தமிழ்` (தி.6 ப.91) - திருத் தாண்டகம். 3. திருச்சிராப்பள்ளி: `மட்டுவார்` (தி.5 ப.85) - திருக்குறுந் தொகை. 4. திருக்கற்குடி: `மூத்தவனை` (தி.6 ப.60) - திருத்தாண்டகம். 5. திருப்பராய்த்துறை: `கரப்பர்` (தி.5 ப.30) - திருக்குறுந் தொகை.

மற்றப் பதிகள் முதலான
மருங்குள் ளனவுங் கைதொழுது
பொற்புற் றமைந்த திருப்பணிகள்
செய்து பதிகங் கொடுபோற்றி
உற்ற அருளால் காவிரியை
ஏறி ஒன்னார் புரமெரியச்
செற்ற சிலையார் திருப்பைஞ்ஞீ
லியினைச் சென்று சேர்கின்றார். **#1567**

திருப்பராய்த்துறையை வணங்கியவராய், மேலும் அத்திருப்பதியின்

அருகிலுள்ள பிறபதிகளையும் வணங்கி, அழகமைந்த கைத்தொண்டுகளையும் ஆற்றி, திருப்பதிகம் பாடிப் போற்றித், திருவருளால் காவிரியாற்றைக் கடந்து, முப்புரங்களும் அழியுமாறு எரித்த இறைவர் வீற்றிருக்கும் திருப்பைஞ்ஞீலியைச் சென்று சேர்கின்ற நாவரசர்.

விளக்கவுரை

அருகிலுள்ள பிறபதிகள்: *1.* திருக்கடம்பந்துறை: `முற்றிலா` *(தி.5 ப.18) -* திருக்குறுந்தொகை. *2.* திருவாட்போக்கி: `காலபாசம்` *(தி.5 ப.86) -* திருக்குறுந்தொகை.

வழிபோம் பொழுது மிகஇளைத்து
வருத்தம் உறநீர் வேட்கையொடும்
அழிவாம் பசிவந் தணைந்திடவும்
அதற்குச் சித்தம் அலையாதே
மொழிவேந் தருமுன் எழுந்தருள
முருகார் சோலைப் பைஞ்ஞீலி
விழியேந் தியநெற் றியினார்தந்
தொண்டர் வருத்தம் மீட்பாராய். **#1568**

வழியில் செல்லும் பொழுது மிகவும் இளைப் படைந்து வருத்தம் உற, நீர் வேட்கையுடன் அழிவு செய்யும் பசியும் வந்துறவும் அதற்கு மனந்தளராது நாவரசர் முன்னோக்கிச் செல்ல, நறுமணம் பொருந்திய சோலைகளையுடைய திருப்பைஞ்ஞீலி என்ற பதியுள் வீற்றிருக்கும் நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான், தம் தொண்டரின் வருத்தத்தை நீக்குபவராய்,

விளக்கவுரை

****

காவுங் குளமும் முன்சமைத்துக்
காட்டி வழிபோங் கருத்தினால்
மேவுந் திருநீற் றந்தணராய்
விரும்பும் பொதிசோ றுங்கொண்டு
நாவின் தனிமன் னவர்க்கெதிரே
நண்ணி இருந்தார் விண்ணின்மேல்
தாவும் புள்ளும் மண்கிழிக்குந்
தனிஏ னமுங்காண் பரியவர்தாம். **#1569**

விண்ணில் பறக்கும் அன்னப்பறவையும், மண்ணைத் தோண்டும் பன்றியுமான அயனும் மாலும் காண்பதற்கு அரியவரான அப்பெருமான், ஒரு சோலையையும் ஒரு குளத்தையும் படைத்து, வழிகாட்டிச் செல்லும்

எண்ணம் உடையவராய், திருநீற்றை அணிந்த அந்தணராகி, விரும்பும் கட்டுச் சோற்றினையும் எடுத்துக் கொண்டு, நாவரசர் வரும் வழியில் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

****

அங்கண் இருந்த மறையவர்பால்
ஆண்ட அரசும் எழுந்தருள
வெங்கண் விடைவே தியர்நோக்கி
மிகவும் வழிவந் திளைத்திருந்தீர்
இங்கென் பாலே பொதிசோறுண்
டிதனை உண்டு தண்ணீர்இப்
பொங்கு குளத்தில் குடித்திளைப்புப்
போக்கிப் போவீர் எனப்புகன்றார். **#1570**

அவ்வாறு அங்கிருந்த அந்தணரிடம் நாவரசரும் வந்து சேர, கொடிய கண்களையுடைய ஆனேற்றினை ஊர்தியாக வுடைய இறைவர், அவரைப் பார்த்து, `வழி வந்த வருத்தத்தால் மிகவும் இளைப்பை அடைந்தீர்; இங்கு என்னிடத்தில் உள்ள கட்டுச் சோற் றினை உண்டும், இக் குளத்தின் நீரைப் பருகியும் உம் இளைப்பைப் போக்கிக் கொள்வீர்!` எனக் கூறியருளினாராக.

விளக்கவுரை

****

நண்ணுந் திருநா வுக்கரசர்
நம்பர் அருள்என் றறிந்தார்போல்
உண்ணும் என்று திருமறையோர்
உரைத்துப் பொதிசோ றளித்தலுமே
எண்ண நினையா தெதிர்வாங்கி
இனிதா அமுது செய்தினிய
தண்ணீர் அமுது செய்தருளித்
தூய்மை செய்து தளர்வொழிந்தார். **#1571**

வந்தடைந்த நாவரசரும், `இது இறைவரின் திருவருள்!` எனக் கொண்டு, முன்னம் அறிமுகமானவர் போல் காட்டி `உண்பீராக` எனக் கூறி வேதியரான இறைவர், கட்டுச் சோற்றை அளித்தவுடனே, மேற்கொண்டு எதனையும் எண்ணாதவராய் ஏற்றுக் கொண்டு, இனிய உணவையுண்டு, நீரையும் பருகித் தூய்மையும் செய்து, தம் தளர்வை நீக்கிக் கொண்டார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

எய்ப்பு நீங்கி நின்றவரை
நோக்கி இருந்த மறையவனார்
அப்பால் எங்கு நீர்போவ
தென்றார் அரசும் அவர்க்கெதிரே
செப்பு வார்யான் திருப்பைஞ்ஞீ
லிக்குப் போவ தென்றுரைப்ப
ஒப்பி லாரும் யான்அங்குப்
போகின் றேன்என் றுடன்போந்தார். #1572

இளைப்பு நீங்கிய நாவரசரை அங்கு வந்திருந்த அந்தணரான இறைவர் பார்த்து, `இனி நீவிர் எங்குச் செல்கின்றீர்?` என வினவினார். நாவரசரும் அதற்கு மறுமொழி கூறுவாராய், `யான் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லவுள்ளேன்` எனக் கூற, ஒப்பில்லாத இறைவரான அந்தணரும், `யானும் அவ்விடத்திற்கே செல்கின்றேன்` என்று கூறி உடன் சென்றார்.

விளக்கவுரை

****

கூட வந்து மறையவனார்
திருப்பைஞ் ஞீலி குறுகியிட
வேடம் அவர்முன் மறைத்தலுமே
மெய்ம்மைத் தவத்து மேலவர்தாம்
ஆடல் உகந்தார் அடியேனைப்
பொருளா அளித்த கருணைஎனப்
பாடல் புரிந்து விழுந்தெழுந்து
கண்ணீர் மாரி பயில்வித்தார். #1573

உடன் வந்த மறையவர், திருப்பைஞ்ஞீலியை அணுக, அதுவரையில் காட்டி வந்த உருவத்தை அவர் முன்பு மறைத்துக் கொள்ளவும், மெய்த்தவமுடைய நாவரசர், `கூத்தை விரும்பிச் செய்யும் பெருமான் அடியேனையும் ஒரு பொருளாக வைத்து இவ்வாறு எனக்கு அளித்த பெருங்கருணை இருந்தவாறு தான் என்னே!` எனப் பதிகம் பாடிக் கீழே விழுந்து வணங்கி எழுந்து, கண்ணீர் மழை பொழிய இன்ப வெள்ளத்துள் திளைத்தனர்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய திருப்பதிகம் கிடைத்திலது.

பைஞ்ஞீ லியினில் அமர்ந்தருளும்
பரமர் கோயில் சென்றெய்தி
மைஞ்ஞீ லத்து மணிகண்டர்

தம்மை வணங்கி மகிழ்சிறந்து
மெய்ஞ்ஞீர் மையினில் அன்புருக
விரும்புந் தமிழ்மா லைகள்பாடிக்
கைஞ்ஞீ டியதந் திருத்தொண்டு
செய்து காதல் உடனிருந்தார். **#1574**

திருப்பைஞ்ஞீலியில் விரும்பி எழுந்தருளி யிருக்கும் இறைவரின் கோயிலை அடைந்து, கரிய அழகிய நீல நிறம் பொருந்திய கழுத்தினையுடைய இறைவரை வணங்கி, மிகக் களிப் படைந்து, உண்மைப் பண்பின் நீடிய அன்பானது உள்ளுருக விரும்பும் தமிழ் மாலைகளைப் பாடிச் சிறப்புடைய கைத்திருத்தொண்டைச் செய்து அன்பு மீதூர அப்பதியில் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

தமிழ் மாலைகள் பாடி என்றாரேனும் இது பொழுது கிடைத்திருக்கும் திருப்பதிகம் ஒன்றேயாம். அஃது, `உடையர் கோவணம்` *(தி.5 ப.41)* எனும் திருக்குறுந்தொகையாகும்.

நாதர் மருவுந் திருமலைகள்
நாடும் பதிகள் பலமிகவும்
காதல் கூரச் சென்றிறைஞ்சிக்
கலந்த இசைவண் டமிழ்பாடி
மாதொர் பாகர் அருளாலே
வடபால் நோக்கி வாகீசர்
ஆதி தேவர் அமர்ந்ததிரு
வண்ணா மலையை நண்ணினார். **#1575**

நாவரசர் இறைவர் வீற்றிருந்தருளும் திருமலைகளையும், வழிபடுதற்குரியவெனக் குறிக்கொளத்தக்க மிகப் பலவாய பதிகளையும், மிக்க அன்பு பொருந்தச் சென்று வணங்கி, இசை கலந்த விருப்பம் மிக்க தமிழ்ப் பதிகங்களைப் பாடி, உமையொரு கூறனாம் பெருமானின் திருவருளால், வடக்குத் திக்கு நோக்கிச் சென்று, முதன்மையுடைய தேவரான சிவபெருமான் வீற்றிருந்தரு ளும் திருவண்ணாமலையை அடைந்தார்.

விளக்கவுரை

இங்குக் குறிக்கப்படும் திருமலைகள்: திருஈங்கோய் மலை, கொல்லி மலையில் அறப்பள்ளி, நயினார் மலை, கஞ்ச மலை, பச்சை மலையில் இருக்கு வேளூர், தீர்த்த மலை முதலாயினவாகலாம். பதிகள் பல என்று குறிக்கத் தகுவன: புலிவலம், திருத்தலையூர், நெற்குன்றம். தோழூர், ஏழூர் முதலானவையாகலாம் என்றும், நாடும் என்பதற்கு நாடுகள் எனப்

பொருள் கொண்டு, கொங்கு நாடு, திருமுனைப்பாடி நாடு முதலியனவாகலாம் என்றும் சிவக்கவிமணி யார் *(பெரிய.பு.உரை)* கருதுவர். எனினும் குறிப்பாக அறியத்தக்க நிலையில் பதிகம் பெற்றிருந்தன எவை எனத் தெரிந்தில. கொங்கு நாட்டிலுள்ள திருப்பாண்டிக் கொடுமுடிக்கு நாவரசர் பதிகம் ஒன்றுள் ளது. அதனை ஈண்டுக் கொள்ளலாம். அப்பதிகம்: *`சிட்டனைச் சிவன்` (தி.5 ப.81)* எனத் தொடங்கும் திருக்குறுந்தொகை.

செங்கண் விடையார் திருவண்ணா
மலையைத் தொழுது வலங்கொண்டு
துங்க வரையின் மிசையேறித்
தொண்டர் தொழும்புக் கெதிர்நிற்கும்
அங்கன் அரசைப் பணிந்தெழுந்து
திளைத்துத் திருநா வுக்கரசர்
தங்கு பிறப்பே வீட்டினுக்கு
மேலாம் பெருமை சாதித்தார். **#1576**

நாவுக்கரசர் சிவந்த விழிகளையுடைய ஆனேற்றை ஊர்தியாகக் கொண்ட சிவபெருமானின் திருவண்ணா மலையை வணங்கி, பெருமை பொருந்திய மலைமீது ஏறித் தொண் டர்கள் அன்பு கூர்ந்து செய்யும் அடிமைத் திறத்திற்கு முன்னின்றருளும் அருளுடைய அரசரான சிவபெருமானை வணங்கி எழுந்து இன்பத் தில் மூழ்கி, இங்ஙனம் வழிபட்டு உலகில் தங்கும் பிறவியே இவ் வுலகை நீங்கித் தங்கும் வீடு பேற்றிற்கும் மேலானது என்ற பெருமை யைத் திருவுளம் கொண்டார்.

விளக்கவுரை

துங்கம் - பெருமை. `மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாம்` *(தி.12 சரு.1-5 பா.107)* எனவரும் திருவாக்கும் காண்க. இதுபொழுது அருளிய பதிகம்: *`பட்டிஏறுகந்து` (தி.5 ப.5) -* திருக்குறுந்தொகை.

அண்ணா மலைமேல் அணிமலையை
ஆரா அன்பின் அடியவர்தங்
கண்ணார் அமுதை விண்ணோரைக்
காக்கக் கடலில் வந்தெழுந்த
உண்ணா நஞ்சம் உண்டானைக்
கும்பிட் டுருகுஞ் சிந்தையுடன்
பண்ணார் பதிகத் தமிழ்பாடிப்
பணிந்து பரவிப் பணிசெய்தார். **#1577**

அண்ணாமலையின் மீது அழகிய மலையாக விளங்கியருளும் பெருமானை, அடங்காத அன்புடைய அடியவர்கள் தம் கண்ணால்

அநுபவிக்கும் அமுதம் போன்றவரைத், தேவர்களைக் காத்தற்காகப் பாற்கடலில் எழுந்து வந்த யாவராலும் உண்ணத்தகாத நஞ்சை உண்டருளிய பெருமானை, வணங்கி உருகும் உள்ளத் தோடும் பண் நிறைந்த தமிழ்த் திருப்பதிகத்தைப் பாடிப் பணிந்து போற்றி செய்து திருப்பணிகள் செய்தார்.

விளக்கவுரை

`கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடி`*(தி.8 ப.7 பா.4)*, `கண்ணகத் தேநின்று களிதரு தேனே` *(தி.8 ப.20 பா.9)* எனவரும் திருவாக்குகளும் காண்க. இது பொழுது பாடிய பதிகத் தமிழ் மாலைகள்:
1. `ஓதிமாமலர்கள்` *(தி.4 ப.63)* - திருநேரிசை. *2.* `வட்டனை` *(தி.5 ப.4)* - திருக்குறுந்தொகை.

பணியார் வேணிச் சிவபெருமான்
பாதம் போற்றிப் பணிசெயுநாள்
மணியார் கண்டத் தெம்பெருமான்
மண்மேல் மகிழும் இடமெங்கும்
தணியாக் காதல் உடன்சென்று
வணங்கித் தக்க பணிசெய்வார்
அணியார் தொண்டைத் திருநாட்டில்
அருளால் அணைவார் ஆயினார். **#1578**

பாம்புகளை அணிந்த சிவபெருமானின் திருவடி களை வணங்கித் திருப்பணிகளைச் செய்து வரும் நாள்களில், நீலநிறத்தைக் கழுத்தில் உடைய எம் இறைவர், இந்நிலவுலகில் மகிழ்ந்து வீற்றிருக்கும் பதிகள் எங்கும் போய்த் தணியாத காதலுடன் வணங்கி, ஏற்ற திருப்பணிகளைச் செய்பவரான நாவரசர், அழகிய திருத்தொண்டை நாட்டில் திருவருள் செலுத்தச் செல்பவராய்.

விளக்கவுரை

`இடம் எங்கும்` என்பதால் அத்திருப்பதிகள், திருக் கோவலூர் வீரட்டம், திருவாமாத்தூர், திருமுண்டீச்சுரம், முதலியன வாகலாம் என்பர் சிவக்கவிமணியார் *(பெரிய.பு.உரை)*. இவற்றை வணங்கியமை *148*ஆவது பாடலிலும் குறிக்கப்பெற்றுளது.

காதல் செய்யுங் கருத்தினுடன்
காடும் மலையும் கான்யாறும்
சூத மலிதண் பணைப்பதிகள்
பலவுங் கடந்து சொல்லினுக்கு
நாதர் போந்து பெருந்தொண்டை
நன்னாட் டெய்தி முன்னாகச்

சீத மலர்மென் சோலைசூழ்
திருவோத் தூரில் சென்றடைந்தார். #1579

அன்பு மிகும் பணிகள் பலவற்றையும் செய்யும் கருத்துடனே, காடுகளையும் மலைகளையும் காட்டாறுகளையும் மாஞ்சோலைகள் நிறைந்த குளிர்ந்த வயல்களையுடைய நகரங்கள் பலவற்றையும் கடந்து, நாவரசர், பெரிய தொண்டை நாட்டை அடைந்து, முதலில் குளிர்ந்த மென்மையான மலர்கள் நிறைந்த பூஞ்சோலைகளால் சூழப்பட்ட திருவோத்தூரைச் சென்றடைந்தார்.

விளக்கவுரை

காடு என்பன, நடு நாட்டின் வடபாகத்திலும் அதனை அடுத்துத் தொண்டை நாட்டுத் தென்மேற்குப் பாகத்திலும் உள்ள சிறு காடுகள் என்றும், மலைகள் செஞ்சிமலை, நெடுங்குன்றம், வெண் குன்றம் ஆகியன என்றும், ஆறுகள் துரிஞ்சிலாறு, வராகநதி, சேயாறு முதலியன என்றும் சிவக்கவிமணியார் (பெரிய.பு.உரை) குறிப்பர். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபுடையன.

செக்கர்ச் சடையார் திருவோத்தூர்த்
தேவர் பிரானார் தங்கோயில்
புக்கு வலங்கொண் டெதிர்இறைஞ்சிப்
போற்றிக் கண்கள் புனல்பொழிய
முக்கட் பிரானை விரும்புமொழித்
திருத்தாண் டகங்கள் முதலாகத்
தக்க மொழிமா லைகள்சாத்திச்
சார்ந்து பணிசெய் தொழுகுவார். #1580

சிவந்த சடையை உடையவரான சிவபெருமா னின் திருவோத்தூரில் வீற்றிருந்தருளுகின்ற இறைவரின் கோயிலுக்குள் புகுந்து வலமாக வந்து, திருமுன்பு வணங்கி, போற்றி செய்து, கண்கள் இன்பக் கண்ணீர் சொரிய நின்று, மூன்று கண்களை யுடைய அப்பெருமானை விரும்பிப் பாடுகின்ற தாண்டகங்கள் முதலான தகுந்த சொன்மாலைகளைப் பாடிச் சாத்தி, சிவபெருமானுக் குத் திருப்பணிகளைச் செய்து வருவாராய்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய திருத்தாண்டகம் முதலான சொல்மாலைகள் எவையும் கிடைத்தில.

செய்ய ஐயர் திருவோத்தூர்
ஏத்திப் போந்து செழும்புவனம்
உய்ய நஞ்சுண் டருளும்அவர்
உறையும் பதிகள் பலவணங்கித்

தையல் தழுவக் குழைந்தபிரான்
தங்குந் தெய்வப் பதியென்று
வையம் முழுதும் தொழுதேத்தும்
மதில்சூழ் காஞ்சி மருங்கணைந்தார். **#1581**

(நாவரசர்) சிவந்த சடையையுடைய இறைவரின் திருவோத்தூரினை வணங்கி, அங்கிருந்து புறப்பட்டுச் சென்று, செழுமையான உலகங்கள் எல்லாம் உய்யுமாறு நஞ்சை உண்டருளிய அப்பெருமான் இனிதாய் அமர்ந்தருளியிருக்கும் பல திருப்பதிகளை யும் போற்றிச் சென்று, உமையம்மையார் தழுவத் திருமேனியைக் குழைந்து காட்டிய சிவபெருமான் வீற்றிருக்கும் தெய்வத் திருப்பதி என உலகங்கள் எல்லாம் வணங்கிப் போற்றுகின்ற மதில் சூழ்ந்த காஞ்சி நகரத்தினை அடைந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபுடையன.

ஞாலம் உய்யத் திருவதிகை
நம்பர் தம்பேர் அருளினால்
சூலை மடுத்து முன்னாண்ட
தொண்டர் வரப்பெற் றோமென்று
காலை மலருங் கமலம்போற்
காஞ்சி வாணர் முகமெல்லாம்
சால மலர்ந்து களிசிறப்பத்
தழைத்த மனங்கள் தாங்குவார். **#1582**

உலகம் உய்யும் பொருட்டுத் திருவதிகைப் பெருமானார் தம் பேரருளினால் சூலை நோயைத் தந்து நேரே ஆட் கொள்ளப்பட்ட அடியவரான நாவரசர், `இங்கு எழுந்தருளி வரும் பேறு பெற்றோம்` என்று எண்ணிய காஞ்சி நகரத்தில் உள்ள அடியவர்கள், தம் முகங்கள் எல்லாம் காலை மலரும் தாமரை என மிக மலர்ந்து மகிழ்ச்சி மீதூரத் தழைத்த மனத்துடன்.

விளக்கவுரை

****

மாட வீதி மருங்கெல்லாம்
மணிவா யில்களில் தோரணங்கள்
நீடு கதலி யுடன்கமுகு
நிரைத்து நிறைபொற் குடந்தீபம்
தோடு குலவு மலர்மாலை
சூழ்ந்த வாசப் பந்தர்களும்
ஆடு கொடியு முடனெடுத்தங்

கணிநீள் காஞ்சி அலங்கரித்தார். #1583
மாட வீதிகள் பக்கங்களில் உள்ள அழகிய வாயில்களில் எங்கும், தோரணங்களையும் பொருந்தும் வாழை மரங்களுடனே பாக்கு மரங்களையும் நிரல்படக் கட்டி, நிறைகுடங் களையும், விளக்குகளையும், இதழ்கள் பொருந்திய மலர் மாலைகளை யுடைய நறுமணப்பந்தர்களையும் ஆடும் கொடிகளையும் எடுப்பித்து, அங்கு அழகிய நீண்ட காஞ்சிமாநகரத்தை மேலும் அழகுபடுத்தினர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபுடையன.

தொண்டர் ஈண்டி எதிர்கொள்ள
எழுந்து சொல்லுக் கரசர்பால்
கொண்ட வேட்கைப் பொலிவினொடுங்
குலவும் வீதிப் பணிசெய்யும்
அண்டர் அறிதற் கரியதிரு
அலகு முதலாம் அவையேந்தி
இண்டை புனைந்த சடைமுடியார்க்
கன்பர் தம்மை எதிர்கொண்டார். #1584

தாம் விரும்பி மேற்கொண்ட திருவேடப் பொலிவழகுடன் வரவேற்பதற்காக, நாவுக்கரசர் வரும் வழியில் தொண்டர்கள் பலரும் திரண்டு சென்று, விளங்கும் திருவீதிப் பணி செய்யும் தேவரும் அறிவதற்கு அரிய திருவலகு முதலியவற்றை எடுத் துக் கொண்டு, இண்டை மாலை சூடிய சடையையுடைய பெருமா னுக்கு அன்பரான அவரை எதிர்கொண்டனர்.

விளக்கவுரை

எதிர்கொள்வதற்குரிய மங்கலப் பொருள்களில் திருவலகையும் கொள்ளல் பண்டைய மரபாகும்.

எதிர்கொண் டிறைஞ்சுஞ் சீரடியார்
தம்மை இறைஞ்சி எழுந்தருளி
மதில்கொண் டணிந்த காஞ்சிநகர்
மறுகுட் போந்து வானநதி
குதிகொண் டிழுந்த சடைக்கம்பர்
செம்பொற் கோயில் குறுகினார்
அதிர்கொண் டலைநேர் மணிமிடற்றார்
ஆண்ட திருநா வுக்கரசர். #1585

ஒலிக்கும் மேகம் போன்ற அழகிய கழுத்தினை யுடைய இறைவரால் ஆட்கொள்ளப்பட்ட நாவரசர், எதிர் கொண்டு வரவேற்று வணங்கும்

சிறந்த அடியவரைத் தாமும் எதிரே வணங்கி, மதில் சூழ்ந்த அழகிய காஞ்சி நகரத்தின் திருவீதியுள் புகுந்து வானத் திருக்கும் கங்கை மேல் எழும் சடையை உடைய ஏகம்பருடைய செம்பொன் கோயிலை அடைந்தார்.

விளக்கவுரை
****

திருவா யிலினைப் பணிந்தெழுந்து
செல்வத் திருமுன் றிலைஅணைந்து
கருவார் கச்சி ஏகம்பர்
கனக மணிமா ளிகைசூழ்ந்து
வருவார் செம்பொன் மலைவல்லி
தழுவக் குழைந்த மணிமேனிப்
பெருவாழ் வினைமுன் கண்டிறைஞ்சிப்
பேரா அன்பு பெருகினார். **#1586**

கோபுரத்தின் கண்ணுள்ள திருவாயிலில், கீழே விழுந்து வணங்கி எழுந்து, உள்ளே சென்று, செல்வம் நிறைந்த முற்றத்தை அடைந்து, அருட்கருவையுடைய கச்சி மாநகரத்தின் ஏகம்பநாதரின் அழகிய பொன் மாளிகையினை வலம் வருபவரான நாவுக்கரசர், செம்பொன் மலையரசனின் மகளாரான காமாட்சி யம்மையார் தழுவக் குழைந்து காட்டிய அழகிய திருமேனியை யுடைய பெருவாழ்வான ஏகம்பரை முன்பு கண்டு வணங்கிப் பேராத அன்பு மிக்கவரானார்.

விளக்கவுரை
****

வார்ந்து சொரிந்த கண்ணருவி
மயிர்க்கால் தோறும் வரும்புளகம்
ஆர்ந்த மேனிப் புறம்பலைப்ப
அன்பு கரைந்தென் புள்ளலைப்பச்
சேர்ந்த நயனம் பயன்பெற்றுத்
திளைப்பத் திருவே கம்பர்தமை
நேர்ந்த மனத்தில் உறவைத்து
நீடும் பதிகம் பாடுவார். **#1587**

பெருகி வழியும் கண்ணீர் மழையானது மயிர்க்கால் எங்கும் நிறைந்து திருமேனியின் புறத்தை அலைக்கவும், அன்பு மேலீட்டினால் உள்ளமானது கரைந்து எலும்பினுள்ளும் அலைக்கவும், பொருந்திய கண்கள் தமக்குரிய தக்க பயனைப் பெற்றுத் திளைக்கவும், ஏகம்பநாதரைப் பொருந்திய மனத்தினுள் வைத்துக் கொண்டு, நீடும்

திருப்பதிகம் அருளுவாராகி.

விளக்கவுரை

`கரவாடும் வன்னெஞ்சர்க்கு` *(தி.4 ப.7)* எனத் தொடங்கும் பதிகம் காந்தாரப் பண்ணில் அமைந்ததாகும். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபுடையன.

கரவாடும் வன்னெஞ்சர்க்
கரியானை என்றெடுத்துப்
பரவாய சொல்மாலைத்
திருப்பதிகம் பாடியபின்
விரவார்தம் புரம்எரித்த
விடையவனார் வெள்ளெயிற்றின்
அரவாரம் புனைந்தவர்தந்
திருமுன்றிற் புறத்தணைந்தார். **#1588**

`கரவாடும் வன்நெஞ்சர்க் கரியானை` என்று எடுத்துத் தொடங்கிப் போற்றுதலான சொன்மாலைத் திருப்பதிகத்தைப் பாடிய பின்னர், பகைவரின் முப்புரங்களை எரித்தவரும் வெண்மை யான பற்களையுடைய பாம்பு மாலையை அணிந்தவருமான இறைவர் கோயிலின் முன் பக்கத்தை நாவரசர் அடைந்தார்.

விளக்கவுரை

****

கையார்ந்த திருத்தொண்டு
கழியமிகுங் காதலொடும்
செய்யாநின் றேஎல்லாச்
செந்தமிழ்மா லையும்பாடி
மையார்ந்த மிடற்றர்திரு
மயானத்தை வலங்கொண்டு
மெய்யார்வ முறத்தொழுது
விருப்பினொடு மேவுநாள். **#1589**

கையால் நிரம்பச் செய்துவரும் உழவாரத் திருத் தொண்டை மிகப் பெரும் பத்திமையுடன் செய்து கொண்டே, பற்பல யாப்பு வகையானும் பண் வகையானும் ஆய எல்லா வகையான தமிழ்ப் பதிகங்களையும் பாடி, திருநீலகண்டரின் கச்சித் திருமயானத் தையும் வலமாக வந்து, மெய்மை நிரம்பிய ஆர்வம் பெருகத்தொழுது, விருப்புடன் அங்குத் தங்கியிருந்த நாள்களில்.

விளக்கவுரை

இது பொழுது அருளிய பதிகங்கள்*: 1.* `நம்பனை` *(தி.4 ப.44) -* திருநேரிசை*. 2.* `ஓதுவித்தாய்` *(தி.4 ப.99) -* திருவிருத்தம்*. 3.* `பண்டு செய்த` *(தி.5 ப.47) -* திருக்குறுந்தொகை*. 4.* `பூமேலானும்` *(தி.5 ப.48) -*

திருக்குறுந்தொகை. சென்ற பாடலில் காந்தாரப் பண்ணுடைய பதிகம் பாடினமையும், *328*ஆவது பாடலில் தாண்டகம் பாடினமையும் குறிக்கப்படுகின்றன. இப்பாடலில் எஞ்சிய மூவகை யாப்பு அமைவும் பாடியமை குறிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் எல்லாச் செந்தமிழ் மாலையும் பாடியுள்ளமை அறிய இயலுகின்றது. இவையன்றித் திருமுறைகள் ஏழனுள்ளும் போற்றப்பட்டுள்ள சிறப்பு இப்பதிக்குரிய தாகும். இவ்வாறான சிறப்புத் திருவாரூருக்கும் உண்டு.

சீர்வளரு மதில்கச்சி
நகர்த்திருமேற் றளிமுதலா
நீர்வளருஞ் சடைமுடியார்
நிலவியுறை ஆலயங்கள்
ஆர்வமுறப் பணிந்தேத்தி
ஆய்ந்ததமிழ்ச் சொல்மலரால்
சார்வுறுமா லைகள்சாத்தித்
தகுந்தொண்டு செய்திருந்தார். **#1590**

சீர்மை மிக்க மதில்களையுடைய திருக்கச்சி மேற்றளி முதலாகக் கங்கை தங்கிய சடைமுடியார் நிலைபெற வீற்றிருக்கும் கோயில்கள் பலவற்றையும் ஆர்வத்துடன் வணங்கி, ஆய்ந்த தமிழ்ச் சொல் மாலைகளால் ஆய திருப்பதிகங்களைச் சாத்தித் தக்க தொண்டுகளைச் செய்த வண்ணம் அங்கே தங்கியிருந்தார்.

விளக்கவுரை

திருக்கச்சித் திருமேற்றளியில் அருளிய பதிகம் `மறை யது பாடி` *(தி.4 ப.43)* எனத் தொடங்கும் திருநேரிசைப் பதிகம் ஆகும். ஆலயங்கள் - எவ்வெக் கோயில்கள் எனத் தெரியவில்லை. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபுடையன.

அந்நகரில் அவ்வண்ணம்
அமர்ந்துறையும் நாளின்கண்
மன்னுதிரு மாற்பேறு
வந்தணைந்து தமிழ்பாடிச்
சென்னிமிசை மதிபுனைவார்
பதிபலவுஞ் சென்றிறைஞ்சித்
துன்னினார் காஞ்சியினைத்
தொடர்ந்தபெருங் காதலினால். **#1591**

இவ்வாறு காஞ்சி நகரத்தில் நாவரசர் இருந்தருளிய பொழுது, நிலை பெற்ற திருமாற்பேற்றுக்குச் சென்று திருப்பதிகம் பாடி, தலையில் பிறைச்சந்திரனை அணிந்த சிவபெரு மானின் திருப்பதிகள் பலவற்றிற்கும் சென்று வணங்கி, முன் தொடர்ந்த பெருங்காதல்

காரணமாக மீளவும் காஞ்சி நகரத்தை வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

திருமாற்பேற்றில் அருளிய பதிகங்கள்: *1.* `மாணிக் குயிர்` *(தி.4 ப.108) -* திருவிருத்தம். *2.* `பொருமாற்றின்` *(தி.5 ப.59) -* திருக்குறுந்தொகை. *3.* `எதும் ஒன்றும்` *(தி.5 ப.60) -* திருக்குறுந் தொகை. *4.* `பாரானை` *(தி.6 ப.80) -* திருத்தாண்டகம். பதிபலவும் எனக் குறிப்பன திருவூறல், திருவிற்கோலம், இலம்பையங்கோட்டூர் முதலாயனவாகலாம் என்பர் சிவக்கவிமணியார் *(*பெரிய.பு.உரை*).* பதிகங்கள் எவையும் கிடைத்தில.

ஏகம்பன் காண்அவனென்
எண்ணத்தான் எனப்போற்றிப்
பாகம்பெண் ணுருவானைப்
பைங்கண்விடை உயர்த்தானை
நாகம்பூண் உகந்தானை
நலம்பெருகுந் திருநீற்றின்
ஆகந்தோய் அணியானை
அணைந்துபணிந் தின்புற்றார். **#1592**

`கச்சி ஏகம்பன் காண் அவன் என் எண்ணத் தானே` என்று போற்றி இடமருங்கில் உமையம்மையாரையுடைய இறைவரைப், பசிய கண்களையுடைய ஆனேற்றை ஊர்தியாக வுடையவரை, பாம்புகளை அணிந்தவரை, நன்மை பெருகும் திருநீற்றை நிறையப் பூசிய திருமேனியின் அழகு உடையவரைச் சேர்ந்து வணங்கி, நாவுக்கரசர் இன்பம் அடைந்தார்.

விளக்கவுரை

`ஏகம்பன் காண் அவன் என் எண்ணத்தானே` என நிறைவுறும் குறிப்புடைய திருத்தாண்டகங்கள் இரண்டாம். அவை: *1.* `கூற்றுவன் காண்` *(தி.6 ப.64) -* திருத்தாண்டகம். *2.* `உரித்தவன் காண்` *(தி.6 ப.65) -* திருத்தாண்டகம்.

திருக்கச்சி ஏகம்பம்
பணிந்தேத்தித் திங்களார்
நெருக்கச்செஞ் சடைக்கணிந்தார்
நீடுபதி தொழநினைவார்
வருக்கைச்செஞ் சுளைபொழிதேன்
வயல்விளைக்கும் நாட்டிடைப்போய்ப்
பருக்கைத்திண் களிற்றுரியார்
கழுக்குன்றின் பாங்கணைந்தார். **#1593**

திருக்காஞ்சியிலுள்ள ஏகம்பரை வணங்கிப் போற்றி, பிறைச்சந்திரனைத்

தம் செறிந்த செஞ்சடைக் கற்றையில் அணிந்த இறைவர் நிலைபெற எழுந்தருளியுள்ள மற்றப் பதிகளுக்கும் சென்று தொழுது வணங்க எண்ணியவராய்ப், பலாவின் கனிகளின் செம்மையான சுளைகள் பொழிந்த தேன் பெருகி வயலில் உள்ள பயிரை விளையச் செய்யும் அந்நாட்டில் சென்று, பருத்த கையை உடைய வலிய யானையின் தோலையுடையவரின் திருக்கழுக் குன்றத்தின் அருகே சேர்ந்தார்.

விளக்கவுரை

****

நீடுதிருக் கழுக்குன்றில்
நிருத்தனார் கழல்வணங்கிப்
பாடுதமிழ்த் தொடைபுனைந்து
பாங்குபல பதிகளிலுஞ்
சூடுமிளம் பிறைமுடியார்
தமைத்தொழுது போற்றிப்போய்
மாடுபெருங் கடலுடுத்த
வான்மியூர் வந்தணைந்தார். **#1594**

நாவரசர் நிலைத்த செல்வம் உடைய கழுக் குன்றத்தில் வீற்றிருக்கும் கூத்தப் பெருமானின் திருவடிகளை வணங்கி, அருந்தமிழ் மாலையைப் பாடி, அருகிலுள்ள பல திருப்பதி களுக்கும் சென்று, பிறையைச் சூடும் திருமுடியினையுடைய இறைவரை வணங்கிப் போற்றி, மேலும் சென்று, கடலால் சூழப்பட்ட திருவான்மியூர் என்னும் திருப்பதியைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

திருக்கழுக்குன்றத்தில் அருளிய பதிகம் `மூவிலை வேல்` *(தி.6 ப.92)* எனத் தொடங்கும் திருத்தாண்டகம் ஆகும். பாங்கு பலபதிகள் என்பன, திருவன் பார்த்தான் பனங்காட்டூர், திருமாகறல், திருவிடைச்சுரம், திருக்கச்சூராலக்கோயில் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார் *(பெரிய.பு.உரை)*. பதிகங்கள் எவையும் கிடைத்தில.

திருவான்மி யூர்மருந்தைச்
சேர்ந்துபணிந் தன்பினொடும்
பெருவாய்மைத் தமிழ்பாடி
அம்மருங்கு பிறப்பறுத்துத்
தருவார்தங் கோயில்பல
சார்ந்திறைஞ்சித் தமிழ்வேந்தர்
மருவாரும் மலர்ச்சோலை
மயிலாப்பூர் வந்தடைந்தார். **#1595**

திருவான்மியூரில் வீற்றிருக்கும் மருந்தீசரைச் சேர்ந்து பணிந்து,

அன்புடன் பெருவாய்மை பொருந்திய தமிழ்ப் பதிகம் பாடி, அதன் அருகிலுள்ள பிறவியை அறுத்து வீடு பேற்றை அருளுதற்குரிய இறைவரின் பல திருப்பதிகளையும் அடைந்து, வணங்கி, தமிழ் மன்னரான நாவுக்கரசர் மணம் நிறைந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த மயிலாப்பூரை வந்தடைந்தார்.

விளக்கவுரை

திருவான்மியூரில் அருளியது `விண்ட மாமலர்` *(தி.5 ப.82)* எனத் தொடங்கும் திருக்குறுந்தொகைப் பதிகமாகும். இறைவர் பெயர் மருந்தீசர் ஆதலின் மருந்து நாதர் என்றார். கோயில் பல என்பன நெடுங்குன்றம், குன்றத்தூர், திருநின்றவூர், திருவேற்காடு, நெற்குன்றம், திருவலிதாயம் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவி மணியார் *(பெரிய.பு.உரை)*. பதிகங்கள் எவையும் கிடைத்தில.

வரைவளர்மா மயிலென்ன
மாடமிசை மஞ்சாடும்
தரைவளர்சீர்த் திருமயிலைச்
சங்கரனார் தாள்வணங்கி
உரைவளர்மா லைகள்அணிவித்
துழவாரப் படையாளி
திரைவளர்வே லைக்கரைபோய்த்
திருவொற்றி யூர்சேர்ந்தார். **#1596**

மலைமீது வளரும் பெரிய மயிலைப் போல மாடங்களின் மீது மேகம் தவழ்கின்ற, உலகில் வளரும் சிறப்பை உடைய திருமயிலாப்பூரில் வீற்றிருக்கின்ற பெருமானின் திருவடி களை வணங்கி, உரை பெருகும் தமிழ் மாலைகளைச் சாத்தி, உழ வாரப் படையையுடைய நாவரசர், அலைகள் தவழ்கின்ற கடற்கரை வழியே சென்று திருவொற்றியூரை அடைந்தார்.

விளக்கவுரை

மயிலாப்பூரில் `உரைவளர் மாலைகள் அணிவித்து` என்பதற்கேற்பப் பல பதிகங்களை நாவரசர் அருளியிருத்தல் வேண் டும். எனினும் இதுபொழுது எவையும் கிடைத்தில.

ஒற்றியூர் வளநகரத்
தொளிமணிவீ திகள்விளக்கி
நற்கொடிமா லைகள்பூகம்
நறுங்கதலி நிரைநாட்டிப்
பொற்குடங்கள் தூபங்கள்
தீபங்கள் பொலிவித்து

மற்றவரை எதிர்கொண்டு
கொடுபுக்கார் வழித்தொண்டர். #1597

வளமை வாய்ந்த திருவொற்றியூர் நகரின் ஒளிபொருந்திய அழகிய வீதிகளை விளக்கி, நல்ல கொடிகளையும், மாலைகளையும், பாக்கும் வாழைகளுமான இவற்றையும் நிரல்பட நாட்டி, பொன்னால் ஆன நிறைகுடங்களையும், நறுமணப் புகை களையும், விளக்குகளையும் அழகுற அமைத்துத் தொண்டர்கள் நாவுக்கரசரை வரவேற்று நகரினுள்ளே அழைத்துச் சென்றனர்.

விளக்கவுரை

****

திருநாவுக் கரசரும்அத்
திருவொற்றி யூர்அமர்ந்த
பெருநாகத் திண்சிலையார்
கோபுரத்தை இறைஞ்சிப்புக்
கொருஞானத் தொண்டருடன்
உருகிவலங் கொண்டடியார்
கருநாமந் தவிர்ப்பாரைக்
கைதொழுது முன்வீழ்ந்தார். #1598

திருநாவுக்கரசரும் அந்தத் திருவொற்றியூரில் அமர்ந்தருளும் பெரிய மலையாகிய வலியவில்லை உடைய பெரு மானின் கோபுரத்தை வணங்கி, உள்ளே புகுந்து, ஒருமையுணர்வாய ஞானத்தையுடைய அத்தொண்டர்களுடன், உள்ளம் உருகி, வலம் வந்து, அடியவரின் பிறவிப் பிணிப்பைத் தவிர்க்கும் பெருமானைக் கைதொழுது திருமுன்பு விழுந்து வணங்கியவர்.

விளக்கவுரை

****

எழுதாத மறைஅளித்த
எழுத்தறியும் பெருமானைத்
தொழுதார்வ முறநிலத்தில்
தோய்ந்தெழுந்தே அங்கமெலாம்
முழுதாய பரவசத்தின்
முகிழ்த்தமயிர்க் கால்மூழ்க
விழுதாரை கண்பொழிய
விதிர்ப்புற்று விம்மினார். #1599

எழுதாத மறைகளை வழங்கியருளிய எழுத் தறியும் பெருமானைத் தொழுது, அன்புமிகப் பெற்று, நிலம் தோய வணங்கி, எழுந்து உடல்

முழுதும் மயிர்க் கூச்செறியத் திளைத்துக் கண்கள் தாரையாய் நீரைப் பொழிய, உடல் விதிர்த்து விம்மியவராய்.

விளக்கவுரை

****

வண்டோங்கு செங்கமலம்
எனஎடுத்து மனமுருகப்
பண்தோய்ந்த சொற்றிருத்தாண்
டகம்பாடிப் பரவுவார்
விண்தோய்ந்த புனற்கங்கை
வேணியார் திருவுருவங்
கண்டோங்கு களிசிறப்பக்
கைதொழுது புறத்தணைந்தார். **#1600**

`வண்டோங்கு செங்கமலம்`(தி.6 ப.45) எனத் தொடங்கி, உள்ளுருகப் பண் பொருந்திய சொற்களான திருத்தாண் டகப் பதிகத்தைப் பாடிப் போற்றுபவர், வானிலுள்ள கங்கையைச் சடையில் வைத்த இறைவரின் திருவடிவைக் கண்டு, பெருகிய இன்பம் மிகக் கைதொழுது கோயிலின் புறத்தை அடைபவராய்.

விளக்கவுரை

`வண்டோங்கு செங்கமலம்` *(தி.6 ப.45)* எனத் தொடங்கும் இத்திருப்பதிகம் இறைவன் திருமுன்னிலையில் அருளியதாகும்.

விளங்குபெருந் திருமுன்றில்
மேவுதிருப் பணிசெய்தே
உளங்கொள்திரு விருத்தங்கள்
ஓங்குதிருக் குறுந்தொகைகள்
களங்கொள்திரு நேரிசைகள்
பலபாடிக் கைதொழுது
வளங்கொள்திருப் பதியதனில்
பலநாள்கள் வைகினார். **#1601**

விளங்கும் பெருமையையுடைய திருமுற்றத்தில் பொருந்திய திருப்பணிகள் செய்து, உளங்கொண்ட திருவிருத்தங் களும், பொருட்பொதிவால் ஓங்கி நிற்கும் திருக்குறுந்தொகைகளும், மிடற்றை இடனாகக் கொண்டு பாடப்படும் திருநேரிசைகளும் ஆகிய பலவற்றையும் பாடிக், கைகளால் தொழுது, வளம் பொருந்திய அத் திருவொற்றியூரில் பல நாள்கள் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

திருவிருத்தங்கள், திருக்குறுந்தொகைகள், திருநேரிசை கள் பலபாடி என

ஆசிரியர் பன்மைச் சொற்களால் குறித்திருப்பதால் ஒவ்வொரு யாப்பு அமைவிலும் பற்பல பதிகங்களை அருளியிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. எனினும் இதுபொழுது கிடைத்திருக்கும் பதிகங்கள் நான்கேயாம். அவை: *1.* \`வெள்ளத்தை\` - *(தி.4 ப.45)* திருநேரிசை. *2.* \`ஓம்பினேன்\` *(தி.4 ப.46)* - திருநேரிசை. *3.* \`செற்றுக் களிற்று\` *(தி.4 ப.86)* - திருவிருத்தம். *4.* \`ஒற்றியூரும்\` *(தி.5 ப.24)* - திருக்குறுந்தொகை. இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

அங்குறையு நாளின்கண்
அருகுளவாம் சிவாலயங்கள்
எங்குஞ்சென் றினிதிறைஞ்சி
ஏத்துமவர் இறையருளால்
பொங்குபுனல் திருவொற்றி
யூர்தொழுது போந்துமையாள்
பங்குடையார் அமர்ந்ததிருப்
பாசூராம் பதியணைந்தார். **#1602**

அங்குத் தங்கியிருந்த நாள்களில் அருகிலுள்ள சிவபெருமானின் திருக்கோயில்கள் எங்கும் சென்று, வணங்கி, வழி படுகின்ற அவர், பெருமானின் அருளால் பெரிதும் நீரையுடைய திரு வொற்றியூரைத் தொழுது போய், உமையை ஒரு கூற்றில் கொண்ட சிவ பெருமான் வீற்றிருக்கின்ற \`திருப்பாசூர்\` என்ற பதியை அடைந்தார்.

விளக்கவுரை

அருகுளவாம் சிவாலயங்கள் வடதிருமுல்லைவாயில், திருக்கள்ளில், புண்ணியகோடீசுவரர் கோயில், ஞாயிறு முதலாயின வாகலாம் என்பர் சிவக்கவிமணியார் (பெரிய.பு.உரை). பதிகங்கள் எவையும் கிடைத்தில.

திருப்பாசூர் நகரெய்திச்
சிந்தையினில் வந்தூறும்
விருப்பார்வம் மேற்கொள்ள
வேயிடங்கொண் டுலகுய்ய
இருப்பாரைப் புரமூன்றும்
எரித்தருள எடுத்ததனிப்
பொருப்பார்வெஞ் சிலையாரைத்
தொழுதெழுந்து போற்றுவார். **#1603**

\`திருப்பாசூர்\` என்ற பதியை அடைந்து, உள்ளத்தில் ஊறுகின்ற விருப்பம் மீதூர, உலகம் உய்யும் பொருட்டு அப்பதியில் மூங்கிலை இடனாகக் கொண்டு வெளிப்பட எழுந்தருளி யிருப்பவரான இறைவரை, முப்புரங்கள் எரிந்திடவும், அதில் அன்பர் மூவர்க்கும் அருள்செய்யவும் எடுத்த ஒப்பற்ற மேரு என்ற வில்லை யுடையவரைக், காலுற வணங்கித்

தொழுபவராய்.

விளக்கவுரை

****

முந்திமூ வெயில்எய்த
முதல்வனார் எனவெடுத்துச்
சிந்தைகரைந் துருகுதிருக்
குறுந்தொகையும் தாண்டகமும்
சந்தநிறை நேரிசையும்
முதலான தமிழ்பாடி
எந்தையார் திருவருள்பெற்
றேகுவார் வாகீசர். **#1604**

`முந்தி மூவெயில் எய்த முதல்வனார்` எனத் தொடங்கி, உள்ளம் கரைந்துருகும் தன்மையுடைய திருக்குறுந் தொகைப் பதிகத்தையும், திருத்தாண்டகப் பதிகத்தையும், சந்தம் நிறைந்த திருநேரிசை முதலான தமிழ்ப் பதிகங்களையும் பாடி, நாவுக்கரசர், எம் இறைவரின் திருவருளைப் பெற்றவராய்ச் செல் கின்றார்.

விளக்கவுரை

சந்த நிறை நேரிசையும் முதலான தமிழ் பாடி - எனவே, திருநேரிசை, திருவிருத்தம், திருத்தாண்டகம், திருக்குறுந்தொகை முதலாய பதிகங்களும் பிற பண்ணமைவான பதிகங்கள் பலவும் அருளியிருக்கலாம் எனத் தெரிகிறது.
எனினும் இதுபொழுது கிடைத்திருக்கும் பதிகங்கள் இரண்டேயாம். அவை: *1.* `முந்திமூவெயில்` *(தி.5 ப.25)* - திருக்குறுந் தொகை. *2.* `விண்ணாகி` *(தி.6 ப.83)* - திருத்தாண்டகம்.

அம்மலர்சீர்ப் பதியைஅகன்
றயல்உளவாம் பதிஅனைத்தின்
மைம்மருவுங் களத்தாரை
வணங்கிமகிழ் வொடும்போற்றி
மெய்ம்மைநிலை வழுவாத
வேளாள விழுக்குடிமைச்
செம்மையினார் பழையனூர்த்
திருஆல வனம்பணிந்தார். **#1605**

அவ்வழகிய சிறந்த திருப்பதியை நீங்கி, அருகில் உள்ள பதிகள் எல்லாவற்றிற்கும் சென்று நஞ்சு விளங்கும் கழுத்தினை உடைய இறைவரை வணங்கி, மகிழ்வோடும் போற்றிப் பின்னர், மெய்ம்மை நிலையினின்றும் சற்றும் தவறாத மேன்மையும், நெறியில் வாழும் தூய

குடிமையும் செம்மையும் உடையவர்களான வேளாளர் கள் வாழ்கின்ற பழையனூர்த் திருவாலங்காட்டைப் பணிந்தவராய்.

விளக்கவுரை

அயலுளவாம் பதிகளாவன திருவள்ளூர், திருவெண் பாக்கம் முதலியனவாகலாம் என்பர் சிவக்கவிமணியார் *(பெரிய.பு. உரை).* பதிகங்கள் கிடைத்தில.

திருவாலங் காடுறையுஞ்
செல்வர்தாம் எனச்சிறப்பின்
ஒருவாத பெருந்திருத்தாண்
டகம்முதலாம் ஓங்குதமிழ்ப்
பெருவாய்மைத் தொடைமாலை
பலபாடிப் பிறபதியும்
மருவார்வம் பெறவணங்கி
வடதிசைமேல் வழிக்கொள்வார். **#1606**

`திருவாலங்காடு உறையும் செல்வர் தாமே` என நிறைவுறும், என்றும் நீங்காத சிறப்பையுடைய பெருந்திருத் தாண்டகப் பதிகம் முதலாக ஓங்கும் பெருவாய்மைத் தமிழ் மாலைகள் பலவற் றையும் பாடிப் பிறபதிகளையும் பொருந்திய ஆர்வம் மீதூர வணங்கி, அங்கிருந்து வடதிசை நோக்கிச் செல்வாராய்.

விளக்கவுரை

`திருவாலங்காடுறையும் செல்வர் தாமே` என நிறைவுறும் திருப்பதிகம் `ஒன்றா வுலகனைத்தும்` *(தி.6 ப.78)* எனத் தொடங்கும் திருத்தாண்டகமாகும். இத் தாண்டகம் முதலாகத் `தொடை மாலை பல பாடி` என்றாரேனும் இதுபொழுது கிடைத்திருக்கும் பதிகம் ஒன்றேயாம். அது `வெள்ளநீர்` *(தி.4 ப.68)* எனத் தொடங்கும் திருநேரிசைப் பதிகம் ஆகும். பெருந்திருத்தாண்டகம் எனச் சேக்கிழார் குறிப்பன இத் திருப்பதிகமும், `அரியானை` *(தி.6 ப.1)* எனத் தொடங்கும் தில்லைத் திருத்தாண்டகமுமாம்.

பல்பதியும் நெடுங்கிரியும்
படர்வனமுஞ் சென்றடைவார்
செல்கதிமுன் அளிப்பவர்தந்
திருக்காரிக் கரைபணிந்து
தொல்கலையின் பெருவேந்தர்
தொண்டர்கள்பின் உம்பர்குழாம்
மல்குதிருக் காளத்தி
மாமலைவந் தெய்தினார். **#1607**

பல பதிகளிலும், பெரிய மலைகளிலும், படர்ந்த காடுகளிலும் சென்று அடைவாராகி, உயிர்க்குரிய வீடுபேற்றை வழங்கியருளுபவராய இறைவர் வீற்றிருந்தருளுகின்ற திருக்காரிகரை என்ற பதியை வணங்கிப், பழமையான கலை ஞானங்களின் வேந்தரான நாயனார், தேவர் கூட்டங்கள் தொண்டர்களின் பின்னே நிறைவுற வரும் திருக்காளத்தி என்ற பெரிய மலையைச் சென்று அடைந்தார்.

விளக்கவுரை

பல்பதி என்பன திருத்தணிகை, வளைகுளம் முதலி யன. நெடுங்கிரி என்பன நகரி மலை, குன்றவர்த்தனம், இராசி குண்டாமலை முதலியன. படர்வனம் என்பது இம் மலைகளினி டையே உள்ள பரந்த காடுகள். இவ்வாறு விளக்குவர் சிவக்கவிமணி யார் (பெரிய.பு.உரை). இவை ஐந்து பாடல்களும் ஒரு முடிபுடையன. பதிகம் கிடைக்காத திருக்காரிக்கரை வைப்புத் திருப்பதியாம்.

பொன்முகலித் திருநதியின்
புனிதநெடுந் தீர்த்தத்தில்
முன்முழுகிக் காளத்தி
மொய்வரையின் தாழ்வரையில்
சென்னியுறப் பணிந்தெழுந்து
செங்கண்விடைத் தனிப்பாகர்
மன்னுமலை மிசையேறி
வலங்கொண்டு வணங்குவார். **#1608**

நாவரசர் பொன்முகலி என்ற ஆற்றின் தூய நீரில் முழுகித், திருக்காளத்தித் தொடர் மலைகளின் தாழ்வரையில், தலையானது நிலம் பொருந்த வணங்கி எழுந்து, சிவந்த கண்களை உடைய ஆனேற்றினை ஊர்தியாகக் கொண்ட ஒப்பற்ற சிவபெருமான் நிலையாய் எழுந்தருளியிருக்கும் அம்மலையின் மீது ஏறி வலம் கொண்டு வணங்குபவராய்,

விளக்கவுரை

****

காதணிவெண் குழையானைக்
காளத்தி மலைக்கொழுந்தை
வேதமொழி மூலத்தை
விழுந்திறைஞ்சி எழுந்துபெருங்
காதல்புரி மனங்களிப்பக்
கண்களிப்பப் பரவசமாய்
நாதனைஎன் கண்ணுளான்

எனுந்திருத்தாண் டகம்நவின்றார். **#1609**

காதில் அணிந்த வெண்மையான சங்கினாலாய குழையை உடையவரைத், திருக்காளத்தி மலையின் கொழுந்து போல்பவரை, மறை மொழியின் மூலமானவரைக் கீழே விழுந்து வணங்கி எழுந்து, மீதூர்ந்த அன்புடைய மனம் களிப்படையவும், கண்கள் களிக்கவும் தம்வயம் இழந்த நிலையில் இறைவரை வணங்கி, `என் கண் உளான்` என்ற நிறைவுடைய திருத்தாண்டகத்தைப் பாடி யருளினார்.

விளக்கவுரை

இங்குக் குறிக்கப் பெற்ற தாண்டகம், `விற்றூண் ஒன்றில் லாத` *(தி.6 ப.8)* எனும் முதற் குறிப்புடையதாகும்.

மலைச்சிகரச் சிகாமணியின்
மருங்குறமுன் னேநிற்கும்
சிலைத்தடக்கைக் கண்ணப்பர்
திருப்பாதம் சேர்ந்திறைஞ்சி
அலைத்துவிழுங் கண்ணருவி
ஆகத்துப் பாய்ந்திழியத்
தலைக்குவித்த கையினராய்த்
தாழ்ந்துபுறம் போந்தணைந்தார். **#1610**

மலையுச்சியில் முடிமணியாய் முளைத்து எழுந்தருளிய இறைவரின் அருகில், பொருந்த முன்பு நிற்கும் வில் ஏந்திய கையையுடைய கண்ணப்ப நாயனார் திருவடிகளை அணைந்து வணங்கிப், பெருகி வரும் கண்ணீர், அருவி எனத் திருமேனியில் பாய்ந்து இழியத், தலைமீது கூப்பிய கைகளுடன் வணங்கி வெளியே வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

மேற்கூறிய திருத்தாண்டகத்தில் *(தி.6 ப.8),* பதினொன் றாவது பாடலில் `கண்ணாரக் காண்பார்க்கோர் காட்சியான் காண்` எனக் கூறப் பெறும் அநுபவம் கண்ணப்பர் கண்ட அநுபவமாயிருத் தலும் அறியத் தக்கது.

சேணிலவு திருமலையில்
திருப்பணியா யினசெய்து
தாணுவினை அம்மலைமேல்
தாள்பணிந்த குறிப்பினால்
பேணுதிருக் கயிலைமலை
வீற்றிருந்த பெருங்கோலம்
காணுமது காதலித்தார்
கலைவாய்மைக் காவலனார். **#1611**

மிகவும் உயர்ந்த அம்மலையில் திருத் தொண்டுகளைச் செய்து

இறைவரை வழிபட்ட குறிப்பின் காரணமாக, எல்லோராலும் விரும்பத் தகும் திருக்கயிலையில் வீற்றிருந்தருளும் பெருமானார் திருக்கோலத்தைக் கண்டு மகிழ விரும்பினார், கலை களையும் அவற்றின் உண்மையையும் உணர்ந்த நாவரசர்.

விளக்கவுரை

காழிப் பிள்ளையாருக்கும் சுந்தரருக்கும் இத்திருப் பதியே தம் செலவு நயப்பில் வடபுல எல்லையாயிற்று. நாவுக்கரசருக்கு இத் திருப்பதியிலிருந்து திருக்கயிலாயம் சென்று வணங்கும் விருப்பம் உளவாகத் திருக்கயிலைக் காட்சியைத் திருவையாற்றில் காணநேர்ந் தது. சுந்தரருக்குத் திருவருளால் வெள்ளை யானையின் மீது திருக் கயிலை செல்லவும், பெருமானை வணங்கித் மகிழவும் நேர்ந்தது. ஞானசம்பந்தருக்கு மண்ணுலகத்தில் உள்ள திருநல்லூர்ப் பெருமணத் திலேயே இறைக்காட்சியைக் காணவும், இறை ஒளியுடன் ஒன்றவும் நேர்ந்தது. `ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பான் புகில் அளவில்லை` *(தி.3 ப.54 பா.4)* என்பதே அறியத் தக்கதாம்.

அங்கண் மாமலை மேல்ம ருந்தை
வணங்கி யாரரு ளான்மிகப்
பொங்கு காதலின் உத்த ரத்திசை
மேல்வி ருப்பொடு போதுவார்
துங்க மால்வரை கானி யாறு
தொடர்ந்த நாடு கடந்தபின்
செங்கண் மால்விடை அண்ணல் மேவு
திருப்ப ருப்பதம் எய்தினார். **#1612**

அருள்நோக்கம் மீதூர்ந்த அத்திருமலையின் மீது வீற்றிருக்கும் மருந்தான இறைவரை வணங்கி, அவருடைய நிறைந்த திருவருள் பெற்றமையால், மேன்மேல் மிகவும் பொங்கும் காதலால் வடதிசை நோக்கிச் செல்வாராய்ப் பெரியனவாய மலை களையும் காட்டாறுகளையும் தம்மகத்துக் கொண்ட நாடுகளைக் கடந்து சென்று பின், சிவந்த கண்களையுடைய ஆனேற்றின் மீது வீற்றிருந்தரு ளும் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பருப்பதத்தைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

திருப்பருப்பதம் - இது ஷ்ரீபர்வதம் எனவும் , ஷ்ரீசைலம் எனவும் வழங்கும்; ஆந்திர மாநிலத்தில் கர்நூல் மாவட்டத்தில் நந்தியாற்றுக்கு அருகில் உள்ளது. திருப்பதியிலிருந்து *500* கிமீ. தொலைவில் உள்ளது. பன்னிரண்டு ஜோதிலிங்கத் திருப்பதி களுள் இதுவும் ஒன்று. மூவர்

பதிகங்களும் பெற்ற சிறப்புடையது. சுந்தரர் சீபர்ப்பதம் எனக் குறிப்பர்.

மான விஞ்சையர் வான நாடர்கள்
வான்இ யக்கர்கள் சித்தர்கள்
கான கின்னரர் பன்ன காதிபர்
காம சாரிக ளேமுதல்
ஞான மோனிகள் நாளும் நம்பரை
வந்தி றைஞ்சி நலம்பெறுந்
தான மான திருச்சி லம்பை
வணங்கி வண்டமிழ் சாற்றினார். **#1613**

வன்மை பொருந்திய வித்தியாதரரும், விண்ணுலகத் தேவர்களும், வானத்தில் இயங்கும் இயக்கர்களும், சித்தர்களும், பாடுதலில் வல்ல கின்னரர்களும், நாக உலகத்தவரும், தம் விருப்பின்படி உலவுகின்ற தேவ இனத்தவரும் என்றிவர்கள் முதலாகச் சிவஞானிகளும் நாள்தோறும் வந்து இறைவரை வணங்கி நன்மை அடைகின்ற இடமான திருப்பருப்பதத்தை வணங்கி, வளம் மிக்க தமிழ் மாலையைப் பாடியருளினார்.

விளக்கவுரை

இத்திருப்பதியில் அருளிய பதிகம் - `கன்றினார்` *(தி.4 ப.58)* எனத் தொடங்கும் திருநேரிசைப்பதிகமாகும். மானவிஞ்சை - வலிமை பொருந்திய வித்தைகள். அவற்றில் வல்லுநராதலின் `விஞ்சை யர்` எனப்பட்டனர். இயக்கர் - யக்ஷர் என்பது வடமொழித் திரிபு. இவர்கள் விண்ணிலியங்குபவர். உயிர்களைப் பிணித்துத் தம் இச்சை வழி இயக்குபவர். கானம் - இசை; கானகின்னரர் - இசையில் வல்ல வர்; தேவ இனத்தவருள் ஒருசாரார். காம சாரிகள் - தம் இச்சைவழி உலவ வல்லவர்கள். இவர்களும் தேவ இனத்தவருள் ஒருவர் ஆவர்.

அம்ம ருங்குக டந்து போமவர்
ஆர்கொள் சூல அயிற்படைச்
செம்மல் வெண்கயி லைப்பொ ருப்பைநி
னைந்தெ ழுந்ததொர் சிந்தையால்
எம்ம ருங்குமொர் காத லின்றி
இரண்டு பாலும் வியந்துளோர்
கைம்ம ருங்கணை யுந்தெ லுங்கு
கடந்து கன்னடம் எய்தினார். **#1614**

அங்கிருந்து அகன்றுபோகின்றவர் முத்தலைச் சூலமான படையை ஏந்திய, ஆத்தி மாலையைச் சூடிய இறைவரின் வெண்மையான திருக்கயிலாய மலையையே நினைந்து எழுந்ததொரு ஒருப்பட்ட சிந்தையினால், வேறுபிற பற்றுகள் எவையும் இன்றி இருமருங்கிலும்

தம் ஆர்வம் கண்டு வியப்புக் கொண்ட அடியார்கள் அருகில் வந்து சேர, தெலுங்கு நாட்டைக் கடந்து கருநாடக (கன்னட) நாட்டை அடைந்தவராய்.

விளக்கவுரை

கன்னட நாட்டில் திருக்கோகரணத்தை வணங்கி அருளிய பதிகம் `சந்திரனும் தண்புனலும்` *(தி.6 ப.49)* எனத்தொடங்கும் திருத்தாண்டகமாகும்.

கருந டங்கழி வாகஏகிய
பின்க லந்தவ னங்களும்
திருந தித்துறை யாவை
யும்பயில் சேண்நெ டுங்கிரி
வட்டையும் பெருந லங்கிளர்
நாடும் எண்ணில பிற்ப
டச்செறி பொற்பினால் வருநெ
டுங்கதிர் கோலு சோலைய
மாள வத்தினை நண்ணினார். **#1615**

அந்நாட்டின் எல்லை முடிந்த பின், அவ்வவ் விடத்தும் வந்துள்ள நாடுகளும் ஆற்றின் துறைகள் எல்லாமும் பயின்று, நெடுந்தொலைவாக நீண்டு செல்கின்ற மலை வழிகளும், பெருநலங்களைத் தரும் நாடுகளும் ஆகிய இவை எண்ணில்லாதவை பிற்பட்டொழியுமாறு, மரங்கள் செறிந்து அழகுற வளர்ந்த இயல்பால் மேல்வரும் ஞாயிறு வலமாகச் செல்கின்ற பூஞ்சோலைகளை உடைய மாளவ நாட்டை அடைந்தவராய்.

விளக்கவுரை

****

அங்கு முற்றிஅ கன்று போகி
அருஞ்சு ரங்கள் இகந்துசென் றெங்கு மிக்க அறங்கள் நீடும்
இலாட பூமி யிகந்துபோய் மங்குல் சுற்றிய வெற்பி னோடு
வனங்கள் யாறு கடந்தயற் பங்க யப்பழ னத்து மத்திம
பைதி ரத்தினை எய்தினார். **#1616**

அவ்விடத்தை முழுமையாகக் கடந்து பின் அரிய பல காடுகளைக் கடந்து சென்று, எங்கெங்கும் மிகுதியான அறச் சாலைகள் அமைந்துள்ள இலாட நாட்டையும் கடந்து சென்று, மேகங்கள் சூழ்ந்த உயர்ந்த மலைகளுடனே காடுகளையும் ஆறுகளை யும் கடந்து, அருகில் தாமரைகள் மலரும் வயல்களை யுடைய மத்திம பைதிரம் என்னும் நாட்டை அடைந்தவராய்,

விளக்கவுரை

இலாட நாடு - வங்காள நாட்டின் தென் மேற்குப் பகுதியாகும். இந்

நாட்டிலுள்ளாரின் அறச்செயல் கண்டு மகிழ்தற் குரியது. மத்திம பைதிரம் - மத்தியப் பிரதேசம்.

அன்ன நாடுக டந்து கங்கை
அணைந்து சென்று வலங்கொளும்
மின்னு வேணியர் வார ணாசி
விருப்பி னோடு பணிந்துடன்
பின்ன ணைந்தவர் தம்மை அங்கண்
ஒழிந்து கங்கை கடந்துபோய்
மன்னு காதல்செய் நாவின் மன்னவர்
வந்து கற்சுரம் முந்தினார். #1617

அந்நாட்டையும் கடந்து, கங்கையாறு அணுகி வலமாக வரும் ஒளி பொருந்திய சடையையுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ள வாரணாசியை (காசியை) விருப்புடன் வணங்கி வழிபட்டுத், தம்முடன் பின்பற்றி வந்த அடியவர்களை அவ்விடத்தில் விடுத்துக், கங்கைக் கரையை விட்டு மேற்சென்று, மீதூர்ந்த பத்திமை பூண்ட நாவுக்கரசர் மலைப் பகுதியை அடைந்தார்.

விளக்கவுரை

வாரணாசி - வரணை, அசி என்னும் இருநதிகள், இப்பதியை வடக்கும் தெற்குமாகச் சூழ்ந்து வருவதால் இப்பெயர் பெற்றதென்பர். விருப்பினோடு பணிந்தவர் பதிகம் அருளி இருத்தல் வேண்டும் என்றாலும் அது கிடைத்திலது. உடன் வந்தவர்களின் இளைப்பும் மேலும் அவர்கள் வர இயலாமையும் கருதி அவர்களை விடுத்துத் தாமே செல்லத் திருவுள்ளங் கொண்டார். இந்நான்கு பாடல்களும் ஒரு முடிபுடையன.

மாக மீதுவ ளர்ந்த கானக
மாகி எங்கும் மனித்தரால்
போக லாநெறி யன்றி யும்புரி
கின்ற காதல் பொலிந்தெழச்
சாக மூலப லங்கள் துய்ப்பன
வுந்த விர்ந்து தனித்துநேர்
ஏகி னாரிர வும்பெ ருங்கயி
லைக்கு லக்கிரி எய்துவார். #1618

வானளாவ உயர்ந்த பெருங்காடாகி எங்கும் மனிதர்களால் சேரற்கு அரிய வழியாய் இருந்தபோதும், இடைவிடாது எழும் காதல் மிகுந்து மேல் ஓங்குவதால், இலைகளும் சருகுகளும், கிழங்குகளும் பழங்களும் என்னும் இவற்றை உண்பதையும் விடுத்துத் தனியாய், நேரே பெரிய கயிலாயமான ஒப்பில்லாத மலையை அடை யும் பொருட்டு, இரவிலும்

தங்காது மேற்செல்வாராகி.

விளக்கவுரை

சாகம் - இலை; உதிர்சருகு, மூலம் - வேர், கிழங்குகள். பலம் - கனிகள்.

ஆய வாரிரு ளின்கண் ஏகுமவ்
அன்பர் தம்மைஅ ணைந்துமுன்
தீய வாயவி லங்கு வன்தொழில்
செய்ய அஞ்சின நஞ்சுகால்
வாய நாகம ணிப்ப ணங்கொள்வி
ளக்கெ டுத்தன வந்துகால்
தோய வானவ ராயி னுந்தனி
துன்ன ருஞ்சுரம் முன்னினார். **#1619**

அத்தகைய செறிந்த இருளில் மேற்செல்லும் அன்பரைத், தீய விலங்குகள் நெருங்கிக் கொடுஞ்செயலைச் செய்ய அஞ்சின. நஞ்சை உமிழும் வாயையுடைய பாம்புகள் தம் படங்களில் உள்ள மணிகளை ஏந்தி விளக்கெடுத்தன. தேவர்களே எனினும் இங்கு வந்து கால் வைத்துப் பெயர்த்துத் தனியே சேர்வதற்கு அஞ்சுகின்ற காடுகளை நாவரசர் முன் அடைந்தனராக,

விளக்கவுரை

ஆர் இருள் - செறிந்த இருள், நிலப் பிளப்புக்களில் நிழல் புகும் இடம் என்றது தற்குறிப்பேற்றம். பகலவனின் கதிர்கள் அப்பிளப்பில் நுழைவது, அங்குச் சென்றும் அந்நிழலைத் தவிர்க்கக் கருதியது போலும். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

வெங்க திர்ப்பக லக்க டத்திடை
வெய்ய வன்கதிர் கைபரந்
தெங்கு மிக்கபி ளப்பி னாகர்தம்
எல்லை புக்கெரி கின்றன
பொங்க ழல்தெறு பாலை வெந்நிழல்
புக்க சூழல் புகும்பகல்
செங்க திர்க்கனல் போலும் அத்திசை
திண்மை மெய்த்தவர் நண்ணினார். **#1620**

அக்காட்டில், கொடிய பகலில், கதிரவனின் கதிர்கள், மிகவும் எப்பக்கமும் பரவுவதால் எங்கும் மிகுதியாய் உள்ள நிலப் பிளவுகளிடையே, கீழே நாகர் உலக எல்லை வரை புகுந்து எரிக்கின்றன. பொங்கும் வெப்பத்தினால் அழிவு செய்யும் பாலையினது வெவ்விய புகுந்த இடத்தில் புகும் அப்பகலோனின் செவ்விய கதிர்களின் வெம்மையை ஒத்துள்ள அத்திசையில் திண்மையுடைய

மெய்த்தவத்தவரான நாவரசர் சென்றடைந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

இங்ங னம்இர வும்ப கற்பொழு
தும்ம ருஞ்சுரம் எய்துவார்
பங்க யம்புரை தாள்ப ரட்டள
வும்ப சைத்தசை தேயவும்
மங்கை பங்கர்தம் வெள்ளி மால்வரை
வைத்த சிந்தை மறப்பரோ
தங்க ரங்க ளிரண்டு மேகொடு
தாவி ஏகுதல் மேவினார். #1621

இவ்வாறு இரவும் பகலும் கடப்பதற்கரிய பெருஞ் சுரத்தில் செல்பவரான நாவரசர், தாமரை மலர் போன்ற தம் திருவடிகள் கணைக்கால்வரை தேய்ந்து போகவும், உமையொரு கூறரின் பெரிய வெள்ளி மலையின் மீது ஊன்றிய நினைவை மறந்து விடுவரோ? மறவாத நிலையில் தம் இரு கைகளையுமே கொண்டு தாவிச் செல்வாராகி.

விளக்கவுரை

பரடு - கணைக்கால்.

கைக ளும்மணி பந்த சைந்துற
வேக ரைந்து சிதைந்தபின்
மெய்க லந்தெழு சிந்தை அன்பின்
விருப்பு மீமிசை பொங்கிட
மொய்க டுங்கனல் வெம்ப ரற்புகை
மூளு மத்த முயங்கியே
மைகொள் கண்டர்தம் அன்பர் செல்ல
வருந்தி உந்தினர் மார்பினால். #1622

கைகளும் மணிக்கட்டுகளும் அசைந்து போகும் படி தேய்ந்து சிதைந்த பின்பு, மெய்யுடன் கலந்து எழும் அன்பு மிகுதியால் ஆய பெருவிருப்பம் மீதூர, நெருங்கிய தீப்போலும் பரற் கற்களின் புகை எழும் வழியை அடைந்து, கருநிறம் பொருந்திய திருக் கழுத்தினையுடைய சிவபெருமானின் அடியவரான நாவரசர், மேலும் செல்வதற்காக மார்பால் வருத்தத்துடன் உந்திச் சென்றவராய்,

விளக்கவுரை

மீமிசை - மேன் மேலும்.

மார்ப முந்தசை நைந்து சிந்தி
வரிந்த என்பு முரிந்திட

நேர்வ ருங்குறி நின்ற சிந்தையின்
நேசம் ஈசனை நேடுநீடு
ஆர்வம் அங்குயிர் கொண்டு கைக்கும்
உடம்ப டங்கவும் ஊன்கெடச்
சேர்வ ரும்பழு வம்பு ரண்டு
புரண்டு சென்றனர் செம்மையோர். **#1623**

மார்புத் தசைகள் தேய்ந்து சிதற, ஒன்றுடன் ஒன்று வரிந்து கட்டப்பட்ட எலும்புகளும் முரிந்த நிலையில், அடைதற்கரிய குறிக்கோளினின்றும் தளராத உள்ளத்தே கொண்டிருந்த அன்பினால், சிவபெருமானை நாடிக் காண வேண்டும் என்ற நிலைத்த ஆர்வ மானது, அங்கு உயிரால் செலுத்துகின்ற உடல் முழுதும் தசைகள் கெடும் படியாய்ச் சேர்வதற்கு அரிய காட்டில் செம்மை நெறி நிற்பவரான நாவுக்கரசர் புரண்டு புரண்டு செல்வாராய்.

விளக்கவுரை

பழுவம் - மலைக்காடு.

அப்பு றம்புரள் கின்ற நீளிடை
அங்கம் எங்கும் மரைந்திடச்
செப்ப ருங்கயி லைச்சி லம்படி
சிந்தை சென்றுறு மாதலால்
மெய்ப்பு றத்தில் உறுப்ப ழிந்தபின்
மெல்ல உந்து முயற்சியுந்
தப்பு றச்செய லின்றி அந்நெறி
தங்கி னார்தமி ழாளியார். **#1624**

அதன்பின்பு, மேலும் புரண்டு செல்கின்ற நீண்ட வழியின் இடையில், உடல் முழுதும் தேய்ந்து போகவே, செல்வதற் கரிய கயிலாயமலையில் திருவுள்ளம் போய்ச் சேருமாதலால், திரு மேனியின் புறத்து உறுப்புக்கள் அழிந்த பின்பு மெல்ல மெல்ல உந்திச் செல்லும் முயற்சியும் நீங்கிட, வேறு செய்யும் செயல் அற்றவராய் அந்நெறியில் தமிழ் வல்லுநரான நாவுக்கரசு நாயனார் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒரு முடிபின.

அன்ன தன்மையர் கயிலையை
அணைவதற் கருளார்
மன்னு தீந்தமிழ் புவியின்மேற்
பின்னையும் வழுத்த
நன்னெ டும்புனல் தடமும்ஒன்

றுடன்கொடு நடந்தார்
பன்ன கம்புனை பரமரோர்
முனிவராம் படியால். #1625

அத்தன்மையினரான நாவுக்கரசர், நிலையான இனிய தமிழ்ப் பதிகங்களால் உலகில் மேலும் தம்மைப் போற்றி செய்யும் பொருட்டாகக் கயிலையைச் சென்று அடைவதற்கு அருள் செய்யாதவராய், நல்ல பெரிய நீர் மிக்க ஒரு பொய்கையையும் உளவாக்கிக் கொண்டு தாம் முனிவர் வடிவில் பாம்பைச் சூடிய சிவ பெருமான் நடந்து வந்தாராய்,

விளக்கவுரை

****

வந்து மற்றவர் மருங்குற
அணைந்துநேர் நின்று
நொந்து நோக்கிமற் றவர்எதிர்
நோக்கிட நுவல்வார்
சிந்தி இவ்வுறுப் பழிந்திட
வருந்திய திறத்தால்
இந்த வெங்கடத் தெய்திய
தென்என இசைத்தார். #1626

நாவரசர் அருகில் பொருந்தச் சேர்ந்து, நேரே நின்று வருந்தி, அவரைப் பார்த்து, அவரும் தம்மை எதிர் நோக்கச் சொல்பவராய், `உம் உடல் உறுப்புகள் எல்லாம் சிந்தி அழிந்திடுமாறு வருந்திய நிலையில், இக்கொடிய பாலையில் வந்தது என்ன காரணம் பற்றி?` என வினவினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

மாசில் வற்கலை ஆடையும்
மார்பில்முந் நூலுந்
தேசு டைச்சடை மவுலியும்
நீறும்மெய் திகழ
ஆசின் மெய்த்தவ ராகிநின்
றவர்தமை நோக்கிப்
பேச உற்றதோர் உணர்வுற
விளம்புவார் பெரியோர். #1627

அழுக்கற்ற மரவுரி ஆடையும், திருமார்பில் முப் புரிநூலும், ஒளி பொருந்திய சடைமுடியும், திருமேனியில் விளங்கும் திருநீறும் ஆக,

குற்றமில்லாத மெய்ம் முனிவராய் நின்ற இறைவரைப் பார்த்துப் பெரியோரான நாவுக்கரசர் பேசுதற்குப் பொருந்திய ஓர் உணர்ச்சி தோன்ற உரைப்பாராய்.

விளக்கவுரை

****

வண்டு லாங்குழல் மலைமக
ளுடன்வட கயிலை
அண்டர் நாயகர் இருக்கும்அப்
பரிசவர் அடியேன்
கண்டு கும்பிட விருப்பொடுங்
காதலின் அடைந்தேன்
கொண்ட என்குறிப் பிதுமுனி
யேஎனக் கூற. **#1628**

`வண்டுகள் உலவும் கூந்தலையுடைய உமை யம்மையாருடன் கயிலை மலையில் சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் அத்தன்மையை, அவருடைய அடியவனான நான் கண்டு வணங்க வேண்டும் என்ற விருப்புடன், வந்துள்ளேன், முனிவரே! என் உளம் கொண்ட குறிப்பு இதுவாகும்` என்று சொல்ல.

விளக்கவுரை

****

கயிலை மால்வரை யாவது
காசினி மருங்கு
பயிலும் மானுடப் பான்மையோர்
அடைவதற் கெளிதோ
அயில்கொள் வேற்படை அமரரும்
அணுகுதற் கரிதால்
வெயில்கொள் வெஞ்சுரத் தென்செய்தீர்
வந்தென விளம்பி. **#1629**

`பெரிய கயிலை மலையானது இவ்வுலக மக்கள் சென்றடைதற்கு எளியதோ? கூர்மையான வேற்படையையுடைய தேவர் முதலியவரும் சென்று அடைய இயலாத அருமையுடைய தாகும். வெம்மை மிக்க கொடிய இப்பாலை நிலத்திடை வந்து என்ன செயல் செய்து விட்டீர்!` என்பாராய்,

விளக்கவுரை

****

மீளும் அத்தனை உமக்கினிக்

கடன்என விளங்கும்
தோளும் ஆகமும் துவளுமுந்
நூல்முனி சொல்ல
ஆளும் நாயகன் கயிலையில்
இருக்கைகண் டல்லால்
மாளும் இவ்வுடல் கொண்டுமீ
ளேன்என மறுத்தார். **#1630**

இங்கிருந்து மீண்டு செல்வதே இனி உமக்குக் கடனாகும் என்று, விளங்கும் தோளிலும் மேனியிலும் கிடந்து துவள்கின்ற முப்புரி நூலையுடைய முனிவரான இறைவர் உரைக்க, `என்னை அடிமையாகவுடைய தலைவராய், சிவபெருமான் திருக் கயிலையில் இருக்கும் கோலத்தைக் கண்டு வணங்கியபின் அல்லது அழியும் இயல்புடைய இவ்வுடலுடன் திரும்பிச் செல்ல ஒருப்படேன்` என்று திருநாவுக்கரசர் மறுத்தனராக.

விளக்கவுரை

****

ஆங்கு மற்றவர் துணிவறிந்
தவர்தமை அறிய
நீங்கு மாதவர் விசும்பிடைக்
கரந்துநீள் மொழியால்
ஓங்கு நாவினுக் கரசனே
எழுந்திர்என் றுரைப்பத்
தீங்கு நீங்கிய யாக்கைகொண்
டெழுந்தொளி திகழ்வார். **#1631**

அவ்விடத்தே அவர் கொண்டிருக்கும் துணிவை உலகம் அறிந்து உய்யுமாறு தாம் எண்ணி, அவர், தம்மை இன்னார் என அறிந்து கொள்ளுமாறு நீங்குகின்ற முனிவரான இறைவர், விண்ணில் மறைந்து, நீண்ட தம் மொழியில் வான்வழியாக, `உயர்ந்த நாவுக் கரசனே! எழுந்திரு!` எனக் கூறினர். அந்நிலையில் ஊறுகள் எல்லாம் நீங்கிய உடலுடனே எழுந்து ஒளியில் விளங்குவார் ஆகி,

விளக்கவுரை

****

அண்ண லேஎனை ஆண்டுகொண்
டருளிய அமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி
வேதநா யகனே

கண்ணி னால்திருக் கயிலையில்
இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள்
புரிஎனப் பணிந்தார். **#1632**

`பெருமை பொருந்திய தலைவரே! எனை ஆண்டு கொண்டருளிய அமுதே! விண்ணினிடமாக மறைந்து அருள் செய்யும் நான்மறையின் தலைவனே! திருக்கயிலை மலையில் வீற்றிருந்தருளும் நும் திருக்கோலத்தை நான் கண்ணால் கண்டு வணங்கும்படியாக விரும்பி அருள் செய்வீராக!` என வேண்டியவாறு கீழே விழுந்து பணிந்தாராக,

விளக்கவுரை

****

தொழுதெ ழுந்தநற் தொண்டரை
நோக்கிவிண் தலத்தில்
எழுபெ ருந்திரு வாக்கினால்
இறைவர்இப் பொய்கை
முழுகி நம்மைநீ கயிலையில்
இருந்தஅம் முறைமை
பழுதில் சீர்த்திரு வையாற்றிற்
காண்எனப் பணித்தார். **#1633**

அவ்வாறு வணங்கி எழுந்து நின்ற நல்தொண்ட ரான அரசரைப் பார்த்து, வான் ஒலியாய தம் பெருவாக்கினால், `இப்பொய்கையில் மூழ்கி, நாம் திருக்கயிலையில் வீற்றிருக்கும் அம்முறையை, குற்றம் இல்லாத சிறப்புடைய திருவையாற்றிலே சென்று காண்பாயாக!` என்று பெருமானாரும் பணித்தருளினார்.

விளக்கவுரை

இவ்வேழு பாடல்களும் ஒரு முடிபின.

ஏற்றி னார்அருள் தலைமிசைக்
கொண்டெழுந் திறைஞ்சி
வேற்று மாகிவிண் ணாகிநின்
றார்மொழி விரும்பி
ஆற்றல் பெற்றவர் அண்ணலார்
அஞ்செழுத் தோதிப்
பாற்ற டம்புனற் பொய்கையில்
மூழ்கினார் பணியால். **#1634**

மேற்கூறியவாறு அருளிய ஆனேற்றினை ஊர்தி யாக உடைய சிவபெருமானின் திருவருளைத் தலைமேற் கொண்டு, எழுந்து வணங்கி,

`வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி` எனத் தொடங்கும் திருப்பதிகங்கொண்டு விருப்புடன் வழிபட்டுத் திருவருள் வன்மை பெற்ற நாயனார், இறைவரின் திருவைந்தெழுத்தை ஓதியவாறு, இறைவர் தம் ஆணைப்படி புனித நீர்ப் பொய்கையில் மூழ்கினார்.

விளக்கவுரை

`வேற்றாகி, விண்ணாகி`` *(தி.6 ப.55)* எனத் தொடங் கும் இத் தாண்டகம், பாடல் தொறும் `கயிலை மலையானே போற்றி போற்றி` எனும் நிறைவுடையதாகும். ஒவ்வொரு பாடலிலும் போற்றி எனும் சொல் ஒன்பது இடங்களில் இடம் பெற்றுள்ளது. இதனால் இத்திருப்பதிகம் போற்றித் திருத்தாண்டகம் எனப் பெயர் பெற்றது. இவ்வகையில் அமைந்த தாண்டகங்கள் மேலும் இரண்டுள. அவை திருவையாற்றில் பாடப் பெற்றனவாம். *(பா. 381 காண்க.)*

ஆதி தேவர்தந் திருவருள்
பெருமையார் அறிவார்
போத மாதவர் பனிவரைப்
பொய்கையில் மூழ்கி
மாதொர் பாகனார் மகிழுமை
யாற்றிலோர் வாவி
மீது தோன்றிவந் தெழுந்தனர்
உலகெலாம் வியப்ப. **#1635**

முதல் தேவரான சிவபெருமானின் திருவருட் பெருமையை எவர் அறிவார்? உலகமெல்லாம் வியப்பு அடையுமாறு ஞானத்தவமுனிவரான நாவுக்கரசு நாயனார் பனிமலையில் விளங் கிய அப்பொய்கையில் முழ்கி, உமையம்மையாரை ஒரு கூற்றில் கொண்ட சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருக்கும் திருவையாற்றில் ஒரு பொய்கையின் மேல் வந்து எழுந்தார்.

விளக்கவுரை

கயிலைச் சாரலிலுள்ள ஒரு பொய்கையில் முழ்கிய வர், ஐயாற்றில் உள்ள ஒரு பொய்கையில் தோன்றவந்தது, மனித முயற்சிக்கும் நினைவிற்கும் அப்பாற்பட்ட, திருவருள் வயப்பட்ட தாகும். ஆதலின் ஆசிரியர் `ஆதிதேவர் தம் திருவருட் பெருமை யாரறிவார்` எனத் தொடங்கி, இவ்வருட் செயலைக் கூறுவாராயினர்.

இப்பொய்கை, திருவையாற்றில் திருக்கோயிலின் வடமேற் கில் உள்ளதாகும். சமுத்திர தீர்த்தம், உப்பங்குட்டைப் பிள்ளையார் கோயில் குளம் என்றெல்லாம் இக்காலத்தே அழைக்கப் பெறுகிறது.

வம்பு லாமலர் வாவியின்

கரையில்வந் தேறி
உம்பர் நாயகர் திருவருட்
பெருமையை உணர்வார்
எம்பி ரான்தருங் கருணைகொல்
இதுஎன இருகண்
பம்பு தாரைநீர் வாவியிற்
படிந்தெழும் படியார். **#1636**

மணம் கமழும் மலர்கள் பொருந்திய பொய்கை யின் கரையில் வந்து மேல் ஏறி, சிவபெருமானின் பெருமையைத் தம் அநுபவத்தின் உணர்பவராகி, ``எம் இறைவர் அருளும் கருணையோ இது`` என்று இரு கண்களினின்றும் பொங்கித் தாரையாய் வழிகின்ற கண்ணீரின் பொய்கையுள் மூழ்கி எழுகின்ற தன்மை உடையவர் போன்றவராய் ஆகி,

விளக்கவுரை

இதுகாறும் நாவரசர் இறைவனின் அருட்பொய்கை யில் மூழ்கி வந்தது, தாம் இறைவரிடத்துச் செலுத்தும் அன்புப் பொய்கையில் மூழ்கி வந்த வகையினாலாம். இறைவர் இவருக்கு அருளியது அருளாக, இவர் அவருக்குக் கொடுத்தது அன்பாக அமைந்தமை எண்ணி மகிழ்தற்குரியது.

மிடையும் நீள்கொடி வீதிகள்
விளங்கிய ஐயா
றுடைய நாயகர் சேவடி
பணியவந் துறுவார்
அடைய அப்பதி நிற்பவுஞ்
சரிப்பவு மான
புடைஅ மர்ந்ததந் துணையொடும்
பொலிவன கண்டார். **#1637**

நெருங்கிய நீண்ட கொடிகள் கட்டிய வீதிகளால் சிறப்புற்று விளங்கும் திருவையாற்றில் எழுந்தருளியிருக்கும் இறை வரின் திருவடிகளை வணங்கும் குறிப்பில் வருகின்ற நாவுக்கரசர், அது பொழுது நிற்பனவும் நடப்பனவுமாய உயிர்கள் அனைத்தும், அருகில் விளங்கி நிற்கும் தத்தம் துணையுடன் கூடி விளங்கும் தோற்றத்தைக் கண்டனராகி.

விளக்கவுரை

துணை என்றது பெண்ணும் ஆணும் ஒருவற்கு மற்றவர் துணை எனக் கருதத்தக்கது.

பொன்ம லைக்கொடி யுடன்அமர்

வெள்ளியம் பொருப்பில்
தன்மை யாம்படி சத்தியுஞ்
சிவமுமாஞ் சரிதைப்
பன்மை யோனிகள் யாவையும்
பயில்வன பணிந்தே
மன்னு மாதவர் தம்பிரான்
கோயில்முன் வந்தார். **#1638**

அழகிய திருக்கயிலை மலையில், கொடி என விளங்கும் பார்வதியம்மையாருடன் விரும்பி வீற்றிருக்கும் தன்மையை, இங்கும் காணும் வண்ணம், சத்தியும் சிவமும் ஆகிய தன்மையில், பற்பல உயிர்களின் பிறப்பு விளங்கும் முறைமையைக் கண்டு வணங்கியவாறே, நிலை பெற்ற முனிவரான திருநாவுக்கரசர் தம் இறைவரது திருக்கோயில் முன் வந்தார்.

விளக்கவுரை

முன்னைய பாடலில், நாவரசர் அனைத்துயிர்களையும் ஆணும் பெண்ணுமாகக் கண்ட அநுபவத்தைக் கூறினார்; இப்பாடலில் அவை சத்தியும் சிவமுமாகக் காணும் அநுபவத்தைக் கூறினார்.

சத்தியுஞ் சிவமு மாய தன்மையிவ் வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியு மாகி
வைத்தன னவளால் வந்த வாக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையு மறியார் பீட லிங்கத்தி னியல்பு மோரார்.
-சிவஞானசித்தி.சுபக்.சூ.*1* பா.*69* எனவரும் மெய்ந்நூற் கருத்தையும் காண்க.

காணும் அப்பெருங் கோயிலுங்
கயிலைமால் வரையாய்ப்
பேணு மால்அயன் இந்திரன்
முதற்பெருந் தேவர்
பூணும் அன்பொடு போற்றிசைத்
தெழும்ஒலி பொங்கத்
தாணு மாமறை யாவையுந்
தனித்தனி முழங்க. **#1639**

தோன்றும் அப்பெரிய கோயிலே பெரிய கயிலாய மலையாக, இறைவரின் தொண்டிற்கு ஆளாக எதிர் நோக்கி இருக்கும் திருமால், நான்முகன், இந்திரன் முதலான தேவர்கள் அனைவரும் உள்ளத்துக் கொண்டு அன்புடன் வழிபட, அதனால் எழுகின்ற ஒலிகள் எங்கும் தனித் தனியே ஒலிக்கவும், நிலைபெற்ற மறைகள் யாவும் தனித் தனியே முழங்கவும்.

விளக்கவுரை

தாணு - நிலைபெற்ற பொருள்.

தேவர் தானவர் சித்தர்விச்
சாதரர் இயக்கர்
மேவு மாதவர் முனிவர்கள்
புடையெலாம் மிடையக்
காவி வாள்விழி அரம்பையர்
கானமும் முழவும்
தாவில் ஏழ்கடல் முழக்கினும்
பெருகொலி தழைப்ப. **#1640**

தேவர்களும், அசுரர்களும், சித்தர்களும், வித்தியாதரர்களும், இயக்கர்களும், பொருந்தும் மாதவர்களும், மாமுனிவர்களும் என்னும் இவர்கள், பக்கங்களில் எங்கும் திரண்டு நிறைந்து விளங்கவும், குவளை மலரையும் வாளையும் போன்ற கண்களையுடைய தேவ அரம்பையர்களின் பாடலும் முழவு ஒலியும் அழிவில்லாத ஏழு கடல்களின் ஒலியினும் மிகுதியாகப் பேரொலி செய்யவும்.

விளக்கவுரை

****

கங்கை யேமுதல் தீர்த்தமாங்
கடவுள்மா நதிகள்
மங்க லம்பொலி புனற்பெருந்
தடங்கொடு வணங்க
எங்கும் நீடிய பெருங்கண
நாதர்கள் இறைஞ்சப்
பொங்கி யங்களால் பூதவே
தாளங்கள் போற்ற. **#1641**

கங்கை முதலான தூய தெய்வத் தன்மையுடைய பெரிய நதிகள் பலவும் மங்கல நீர் நிறைந்த பெரும் பொய்கைகளாக வந்து வணங்கவும், எவ்விடத்தும் பரந்த பெரிய சிவகணத் தலைவர் கள் வணங்கவும், ஒலியால் மிகும் பலவகை இயங்களையும் முழக்கிப் பூத கணங்களும் பேய்க்கணங்களும் போற்றவும்.

விளக்கவுரை

வேதாளம் - பேய்க்கணங்கள்: இவை சிவகணங்களுள் ஒருவகையின. சிவபுண்ணியச் செயலுடையன.

அந்தண் வெள்ளிமால் வரையிரண்
டாம்என அணைந்தோர்

சிந்தை செய்திடச் செங்கண்மால்
விடைஎதிர் நிற்ப
முந்தை மாதவப் பயன்பெறு
முதன்மையால் மகிழ்ந்தே
நந்தி எம்பிரான் நடுவிடை
யாடிமுன் நணுக. #1642

அழகும் குளிர்ச்சியும் பொருந்திய பெரிய வெள்ளி மலைகள் இரண்டாம் என்று அங்கு வந்தவர்கள் எண்ணுமாறு சிவந்த கண்களையுடைய பெரிய ஆனேறு முன்னே நிற்கவும் முன்னாளில் அத்திருப்பதியில் செய்த பெருந்தவப் பயனாகப் பெறும் முதன்மையால் மகிழ்ந்து நந்தியெம் பெருமான், சிவபெருமானுக்கும் அவரை வழிபட வரும் அடியவர்களுக்கும் நடுவில் நடந்து இறைவன் திருமுன்னிலையில் நிற்கவும்.

விளக்கவுரை

நந்தியெம் பெருமான் இறைவனின் ஆணைவழி நின்று வருபவர்க்கு வழிபாடு செய்விக்கும் பொறுப்புடையர் ஆதலின், அவரை `நடு இடை யாடி` என்றார். நடு - இறைவர்க்கும் வழிபடு வார்க்கும் நடு. இடையாடி - இருதிறத்தார் தம் குறிப்பிற்கும் ஏற்பப் பணிபுரிதல், `வந்து இறை அடியிற் றாழும்` *(திருவிளை. கடவுள், 5)* எனவரும் பரஞ்சோதியார் திருவாக்கும் காண்க. வெள்ளி வெற்பு இரண்டு. *1.* ஆனேற்றூர்தி. *2.*கயிலை மலை. உயர்வும் தகவும் பெற நிற்றல் பற்றி இங்ஙனம் கூறினார்.

வெள்ளி வெற்பின்மேல் மரகதக்
கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற்
பெனஇடப் பாகம்
கொள்ளு மாமலை யாளுடன்
கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர்
வாக்கின்மன் னவனார். #1643

வெள்ளி மலைமீது மரகதக் கொடியுடனே விளங்கும் தெளிந்த பேரொளியுடைய பவளமலை என்று கூறும் படியாய் இட மருங்கில் உமையம்மையாருடன் வீற்றிருந்தருளும் வள்ளலாரான சிவபெருமானைத் திருநாவுக்கரசு நாயனார் தம் கண் முன்னம் கண்டார்.

விளக்கவுரை

வெள்ளி வெற்பு - கயிலைமலை. மரகதக் கொடி - உமை யம்மையார்.

பவள மலை - சிவபெருமான். இவ்வைந்து பாடல்களும் ஒரு முடிபுடையன.

கண்ட ஆனந்தக் கடலினைக்
கண்களால் முகந்து
கொண்டு கைகுவித் தெதிர்விழுந்
தெழுந்துமெய் குலைய
அண்டர் முன்புநின் றாடினார்
பாடினார் அழுதார்
தொண்ட னார்க்கங்கு நிகழ்ந்தன
யார்சொல வல்லார். **#1644**

அவ்வாறு கண்ட ஆனந்தக் கடலைத் தம் இருகண்களாலும் முகந்து கொண்டவராய்க் கைகளைத் தம் தலைமீது குவித்துத், திருமுன்பு விழுந்து, பின் எழுந்து உடலெல்லாம் அசையும் படி உலகுயிர்கட்கெல்லாம் தலைவரான சிவபெருமான் திருமுன்பு நின்று கொண்டு, திருநாவுக்கரசு நாயனார் ஆடினார், பாடினார், அழுதார். அத்தொண்டருக்கு அங்கு அதுபொழுது நிகழ்ந்தனவாகிய வியத்தகு மெய்ப் பாடுகளைச் சொல்ல வல்லார் யார்? எவரும் இலர்.

விளக்கவுரை

இதுபோது பாடிய நேரிசை, `கனகமா வயிரமுந்து` *(தி.4 ப.47)* எனத் தொடங்கும் பதிகமாம்.

முன்பு கண்டுகொண் டருளின்ஆர்
அமுதுண்ண மூவா
அன்பு பெற்றவர் அளவிலா
ஆர்வம்முன் பொங்கப்
பொன்பி றங்கிய சடையரைப்
போற்றுதாண் டகங்கள்
இன்பம் ஓங்கிட ஏத்தினார்
எல்லையில் தவத்தோர். **#1645**

தம்முன் நேரே கண்டு கொண்டு, திருவருளாய அவ்வரிய அமுதத்தை உண்ணுதற்கேற்ற அளவற்ற அன்பையுடைய வரும், எல்லையற்ற தவத்தையுடையவருமான நாயனார், அளவில் லாத ஆசை முன்னே ததும்பப் பொன் நிறமாய சடையை யுடைய சிவபெருமானைப் போற்றும் திருத்தாண்டகங்களை இன்பம் பெருகப் பாடியருளினார்.

விளக்கவுரை

இது பொழுது பாடிய திருத்தாண்டகங்கள் இரண்டாம். *1.* `பொறையுடைய` *(தி.6 ப.56) 2.* `பாட்டான நல்ல` *(தி.6 ப.57)* ஆகிய

இவ்விரு திருத்தாண்டகங்களும் கயிலைக் காட்சியை இறை யருளால் திருவையாற்றில் கண்டு மகிழ்ந்தபொழுது அருளியவையாம். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபுடையன.

ஆய வாறுமற் றவர்மனங்
களிப்புறக் கயிலை
மேய நாதர்தந் துணையொடும்
வீற்றிருந் தருளித்
தூய தொண்டனார் தொழுதெதிர்
நிற்கஅக் கோலம்
சேய தாக்கினார் திருவையா
றமர்ந்தமை திகழ. **#1646**

இவ்வாறாக, நாயனாரின் உள்ளம் மகிழுமாறு திருக்கயிலையில் வீற்றிருக்கும் இறைவர் தம் துணைவியாருடன் வீற்றிருந்தருள, தூயவரான திருத்தொண்டனார் வணங்கிய வண்ணம் நின்று கொண்டிருக்க, திருவையாற்றில் எழுந்தருளியிருக்கும் தன்மை வெளிப்பட விளங்குமாறு, முன் காட்டியருளிய அக்கயிலைக் கோலத்தைச் சேய்மையாகுமாறு மறைத்தருளினார்.

விளக்கவுரை

****

ஐயர் கோலம்அங் களித்தகன்
றிடஅடித் தொண்டர்
மையல் கொண்டுளம் மகிழ்ந்திட
வருந்திமற் றிங்குச்
செய்ய வேணியர் அருளிது
வோஎனத் தெளிந்து
வையம் உய்ந்திடக் கண்டமை
பாடுவார் மகிழ்ந்து. **#1647**

சிவபெருமான் இவ்வாறாகத் திருக்கயிலையில் இருந்த கோலத்தை அங்குக் காணும்படி அளித்து மறைத்தருளினாராக, திருவடித் தொண்டை மேற்கொண்டிருந்த திருநாவுக்கரசு நாயனார் மயங்கி, உள்ளத்தில் முன்போலவே இன்னும் மகிழ்ச்சி பெற்றிருக்கும் வண்ணம் வேண்டி, வருந்தி `இனி இங்குச் சிவந்த சடையையுடைய இறைவரின் திருவருள் இவ்வகையதோ?` என்று தெளிவு கொண்டு, உலகம் உய்யும் பொருட்டுத் தாம் கண்ட அவ்வருட் செய்தியை மகிழ்வுடன் பாடுவாராகி.

விளக்கவுரை

****

மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் என்னும்
கோதறு தண்டமிழ்ச் சொல்லால்
குலவு திருப்பதி கங்கள்
வேத முதல்வர்ஐ யாற்றில்
விரவுஞ் சராசரம் எல்லாங்
காதல் துணையொடுங் கூடக்
கண்டேன் எனப்பாடி நின்றார். **#1648**

`மாதர்ப் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்` எனத் தொடங்குகின்ற, குற்றம் அற்ற தண்ணிய தமிழ்ச் சொல்லால் ஆய திருப்பதிகத்தை `மறை முதல்வரான இறைவரைத் திருவையாற்றிலே, பொருந்தி நடப்பனவும் நிற்பனவுமான உயிர்கள் யாவும் காதல் பொருந்திய தம் துணைகளுடனே இயைந்து வரக் கண்டேன்` என்னும் கருத்துப் படப் பாடினார்,

விளக்கவுரை

`மாதர்ப் பிறைக் கண்ணியானை` *(தி.4 ப.3 பா.1)* எனத் தொடங்கும் பதிகம் காந்தாரப் பண்ணில் அமைந்ததாகும். இப்பாடலில் `யாதும் சுவடுபடாமல் ஐயாறு அடைகின்ற போது` எனவரும் பகுதி, கயிலையிலிருந்து திருவையாற்றிற்குச் சுவடு படாமல் வந்த அருமையைப் புலப்படுத்துகின்றது.
சரம் - இயங்குவன. அசரம் - நிற்பன. இவ்வரிய திருப்பதிகத் தில் வரும் உயிர்ப் பெயர்கள் யாவும் இயங்குவனவே. இவையனைத் தும் அம்மையும் அப்பனுமாக நாவரசருக்குக் காட்சியளிப்பதோடு, இவை இயங்கும் திருவையாற்றுத் திருக்கோயிலும் பிறதிருக்கோயில் களும் ஆகிய அனைத்தும் உலகமே உருவமாக யோனிகள் உறுப்ப தாக விளங்கும் அம்மையப்பரின் திருக்கோலமாகக் காட்சி தருகின்றன. நோக்குவ அனைத்தும் அவையே போல்வதான நிலை பேரின்பக் காட்சிக்கும் உண்டு ஆதலின் சராசரங்கள் எல்லாம் காதல் துணையொடும் கூடக் கண்டேன் என்றார்.
இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

கண்டு தொழுது வணங்கிக்
கண்ணுத லார்தமைப் போற்றிக்
கொண்ட திருத்தாண் டகங்கள்
குறுந்தொகை நேரிசை அன்பின்
மண்டு விருத்தங்கள் பாடி
வணங்கித் திருத்தொண்டு செய்தே
அண்டர் பிரான்திரு வையா

றமர்ந்தனர் நாவுக் கரசர். **#1649**

இவ்வாறு திருநாவுக்கரசு நாயனார் கண்டும் தொழுதும் வணங்கியும் நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானைப் போற்றியும், திருத்தாண்டகங்களும் திருக்குறுந்தொகையும், திருநேரி சையும் அன்புடைய திருவிருத்தங்களும் முதலான பதிகங்களைப் பாடியும் திருத்தொண்டுகளைச் செய்த வண்ணம் திருவையாற்றில் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

இது பொழுது அருளிய பதிகங்கள்: *1.* தாண்டகங்கள்: *(அ)* \`ஆரார் திரிபுரங்கள்\` *(தி.6 ப.37) (ஆ)* \`ஓசை ஒலியெலாம்\` *(தி.6 ப.38) 2.* குறுந்தொகைகள்: *(அ)* \`சிந்தைவாய்தல்\` *(தி.5 ப.27) (ஆ)* \`சிந்தை வண்ணத்த ராய்\` *(தி.5 ப.28) 3.* திருநேரிசை: *(அ)* \`கங்கையை\` *(தி.4 ப.38) (ஆ)* \`குண்டனாய்\` *(தி.4 ப.39) (இ)* \`தானலாது\` *(தி.4 ப.40) 4.* விருத்தங்கள்: *(அ)* \`அந்திவட்டத்து\` *(தி.4 ப.98) (ஆ)* \`குறுவித்தவா\` *(தி.4 ப.91) (இ)* \`சிந்திப் பரியன\` *(தி.4 ப.92) 5.* பண்: \`விடகிலேன்\` *(தி.4 ப.13) -* பழந்தக்கராகம்.

நீடிய அப்பதி நின்று
நெய்த்தான மேமுத லாக
மாடுயர் தானம் பணிந்து
மழபாடி யாரை வணங்கிப்
பாடிய செந்தமிழ் மாலை
பகர்ந்து பணிசெய்து போற்றித்
தேடிய மாலுக் கரியார்
திருப்பூந் துருத்தியைச் சேர்ந்தார். **#1650**

நிலைபெற்ற அப்பதியாய திருவையாற்றில் இருந்தும், திருநெய்த்தானம் முதலாக அருகில் உள்ள பதிகளை எல்லாம் வணங்கித், திருமழபாடிக்குச் சென்று இறைவரை வணங்கிச் செந்தமிழ் மாலையாகிய திருப்பதிகம் பாடித் திருப்பணிகளையும் செய்து போற்றி, பின்பு தேடிய மாலுக்கும் அரியவரான சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருப்பூந்துருத்தியை அடைந்தார்.

விளக்கவுரை

திருநெய்த்தானத்தில் அருளிய பதிகங்கள்: *1.* \`கால னை\` *(தி.4 ப.37) -* திருநேரிசை. *2.* \`பாரிடம்\` *(தி.4 ப.89) -* திரு விருத்தம். *3.* \`கொல்லியான்\` *(தி.5 ப.34) -* திருக்குறுந்தொகை. *4.* \`வகையெலாம்\` *(தி.6 ப.41) -* திருத்தாண்ட கம். *5.* \`மெய்த்தானத்து\` *(தி.6 ப.42) -* திருத்தாண்டகம். நெய்த்தானமே முதலாக மாடுயர்தானம் என்பதால் கொள் ளப்படும்

திருப்பதிகள், திருப்பெரும்புலியூர் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார் (பெரிய.பு.உரை). எனினும் திருப்பதிகங் கள் கிடைத்தில.

சேர்ந்து விருப்பொடும் புக்குத்
திருநட மாளிகை முன்னர்ச்
சார்ந்து வலங்கொண் டிறைஞ்சித்
தம்பெரு மான்திரு முன்பு
நேர்ந்த பரிவொடுந் தாழ்ந்து
நிறைந்தொழி யாஅன்பு பொங்க
ஆர்ந்தகண் ணீர்மழை தூங்க
அயர்வுறுந் தன்மைய ரானார். **#1651**

அப்பதியை அடைந்த நாவரசர் விருப்புடன் அதனுள் புகுந்து, இறைவர் அருட்கூத்து இயற்றி வெளிப்பட எழுந் தருளியிருக்கும் கோயிலைச் சார்ந்து, வலம் வந்து வணங்கி, தம் பெருமானின் முன் தாழ்ந்து வணங்கி, உள் நிறைந்து நீங்காத அன்பு மீதூரப் பெருக, அதனால் நிறைந்து வெளியாகும் கண்ணீர் மழை பொழிய, தம் வயமிழந்த நிலையை அடைந்தவராய்,

விளக்கவுரை

****

திருப்பூந் துருத்தி அமர்ந்த
செஞ்சடை யானைஆன் ஏற்றுப்
பொருப்பூர்ந் தருளும் பிரானைப்
பொய்யிலி யைக்கண்டேன் என்று
விருப்புறு தாண்டகத் தோடு
மேவிய காதல் விளைப்ப
இருப்போந் திருவடிக் கீழ்நாம்
என்னுங் குறுந்தொகை பாடி. **#1652**

திருப்பூந்துருத்தியில் விரும்பி வீற்றிருந்தருளும் சிவந்த சடையை உடைய சிவபெருமானை, `ஆனேறாய பெரு மலையின் மீது எழுந்தருளி வரும் பெருமானை, `பொய்யிலியைக் கண்டேன்` (தி.6 ப.43) என்று விருப்பம் பொருந்தும் திருத்தாண்டகத் துடன், பொருந்திய அன்பு மேன்மேல் விளைய `இருப்போம் சேவடிக் கீழ் நாம்` எனும் கருத்துடைய (தி.5 ப.32) பதிகத்தைப் பாடி.

விளக்கவுரை

`பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே` எனும் நிறைவுத் தொடரைப் பாடல்தொறும் பெற்றுவரும் திருத் தாண்டகம் `நில்லாத நீர்`

(தி.6 ப.43) எனத் தொடங்கும் திருப்பதிக மாகும்.
`கொடிகொள்` *(தி.5 ப.32)* எனத் தொடங்கும் பதிகம், பாடல் தொறும் திருப்பூந்துருத்தியில் எழுந்தருளியிருக்கும் பெருமானின் `சேவடிக் கீழ் நாம் இருப்பதே` எனும் தொடரை நிறைவாகக் கொண் டுள்ளதாகும். இதனையே சேக்கிழார், `இருப்போம் சேவடிக் கீழ் நாம்` எனும் கருத்தமைவுபடக் குறிக்கின்றார்.

அங்குறை யுந்தன்மை வேண்டி
நாமடி போற்றுவ தென்று
பொங்கு தமிழ்ச்சொல் விருத்தம்
போற்றிய பாடல் புரிந்து
தங்கித் திருத்தொண்டு செய்வார்
தம்பிரா னார்அருள் பெற்றுத்
திங்களும் ஞாயிறும் தோயும்
திருமடம் அங்கொன்று செய்தார். **#1653**

அத்திருப்பதியில், சிலகாலம் தங்கியிருக்க வேண்டும் என்னும் உட்குறிப்பு நிகழ, `நாமடி போற்றுவதே` என்ற கருத்துடன், பொங்கும் தமிழ்ச் சொற்களால் ஆய திருவிருத்தப் பதிகத் தைப் பாடி, அப்பதியில் கைத் தொண்டு செய்வாராகி, தம் பெருமா னின் அருளைப் பெற்று, திங்களும் ஞாயிறும் தோயும் உயர்வான தொரு திருமடத்தை அவ்விடத்துச் சமைத்தார்.

விளக்கவுரை

`நாமடி போற்றுவது` எனப் பாடல்தொறும் நிறைவு கொள்ளும் திருவிருத்தம், `மாலினை` *(தி.4 ப.88)* எனத் தொடங்கும் திருப்பதிகமாகும். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின

பல்வகைத் தாண்டகத் தோடும்
பரவுந் தனித்தாண் டகமும்
அல்லல் அறுப்பவர் தானத்
தடைவு திருத்தாண் டகமும்
செல்கதி காட்டிடப் போற்றுந்
திருஅங்க மாலையும் உள்ளிட்
டெல்லையில் பன்மைத் தொகையும்
இயம்பினர் ஏத்தி இருந்தார். **#1654**

பலவகைப் பொருளுடைய தாண்டகத்துடன் சிவபெருமானைப் போற்றுகின்ற தனித்திருத்தாண்டகமும், பிறவித் துன்பத்தைப் போக்குகின்ற சிவபெருமான் விளக்கமாக எழுந்தருளும் இடங்களைக் கூறும் அடைவுத் திருத்தாண்டகமும், உயிர்கள் நிறைவாகச் சேர்தற்குரிய கதியை அடைதற்காக வழிபடத்தக்க `திருவங்க

மாலையும்` என்னும் இவை உள்ளிட்ட அளவில்லாத பலவகைத் தொகைப் பதிகங்களையும் அருளிச் செய்தவராய்ப் போற்றி அங்கே எழுந்தருளியிருந்தார்.

விளக்கவுரை

1. பலவகைத் திருத்தாண்டகம்: `நேர்ந்து ஒருத்தி` *(தி.6 ப.93)* எனத் தொடங்குவதாகும். இதில் பூந்துருத்தி, நெய்த்தானம் முதலிய ஒன்பது பதிகளிலும் எழுந்தருளியிருக்கும் இறைவனை வணங்கி வழிபட, உயிர், பாச நீக்கமும் சிவப்பேறும் பெறல் எளிதாம் எனும் கருத்து வலியுறுத்தப்படுகின்றது. ஒரு திருப்பதியன்றி ஒன்பது திருப்பதிகள் குறிக்கப் பெறுதலானும், பல கருத்துகளைக் கூறுவதாலும் இறுதிப்பாட்டில் அஞ்செழுத்து ஓதப்பெறுவதாலும் பலவகைத் திருத்தாண்டகமாயிற்று.

2. தனித் திருத்தாண்டகம்: `அப்பன் நீ அம்மை நீ` *(தி.6 ப.95)* இத்திருத் தாண்டகத்தில் வரும் பொருள் அமைவு, தனித்தனியாக ஒன்று ஒன்றோடு வரும் பொருள் இயைபு இன்றி வருதலின் தனித் திருத்தாண்டகமாயிற்று.

3. அடைவுத் திருத்தாண்டகம்: `பொருப் பள்ளி` *(தி.6 ப.71)* எனத் தொடங்குவது. இறைவன் எழுந்தருளியிருக்கும் திருப்பதிகள் பலவற் றுள்ளும் பெயரால் ஒருமையுற்றிருக்கும் திருப்பதிகளைப் பாடல் தொறும் குறித்துப் போற்றியிருத்தலின் அடைவுத் திருத்தாண்டகம் எனப் பெயர் பெறுவதாயிற்று. அடைவு ஒருமையுற்ற பதிகளின் அடைவு.

4. திருஅங்கமாலை: `தலையே நீ வணங்காய்` *(தி.4 ப.9)* எனத் தொடங்கும் சாதாரிப் பண் அமைந்த திருப்பதிகமாகும். உடலு றுப்புகள் பலவற்றையும் இறைவனை வணங்குமாறு பணித்தலின் இப் பெயர் பெறுவதாயிற்று.

5. பன்மைத் தொகைப் பதிகங்கள்: *(அ)* மனத் தொகைத் திருக்குறுந்தொகை: `பொன்னுள்ளத் திரள்` *(தி.5 ப.96) (ஆ)* சித்தத் தொகைத் திருக்குறுந்தொகை: `சிந்திப்பார்` *(தி.5 ப.97) (இ)* உள்ளத் தொகைத் திருக்குறுந்தொகை: `நீறலைத்ததோர்` *(தி.5 ப.98) (ஈ)* காலபாசத் திருக் குறுந்தொகை: `கண்டுகொள்ளரி` *(தி.5 ப.92) (உ)* மறக்கிற்பனே எனும் குறுந்தொகை: `காசனைக் கனலை` *(தி.5 ப.93) (ஊ)* தொழற்பாலதே எனும் குறுந்தொகை: `அண்டத்தானை` *(தி.5 ப.94) (எ)* இலிங்கபுராணக் குறுந்தொகை: `புக்கணைந்து` *(தி.5 ப.95) (ஏ)* ஆதிபுராணக் குறுந்தொகை: `வேதநாயகன்` *(தி.5 ப.100) (ஐ)* பாவநாசத் திருக்குறுந்தொகை: `பாவமும் பழிபற்றற` *(தி.5 ப.99) (ஒ)* தனித்திருக்குறுந்தொகை: *(1)* `ஒன்று பிறை` *(தி.5 ப.89) (2)*

`ஏயிலானை(*தி.5 ப.91*).` இவை பொருட்டொடர் பின்றித் தனித்த னியே பல் வகைப் பொருண்மையிலமைந்த கருத்துக்களைக் கூறுதலா னும், குறுந்தொகை யாப்பமைவில் உள்ளதாலும் பன்மைத் தொகை எனப் பெயர் பெறுவனவாயின.

பொன்னிவலங் கொண்டதிருப்
பூந்துருத்தி அவர்இருப்பக்
கன்மனத்து வல்அமணர்
தமைவாதில் கட்டழித்துத்
தென்னவன்கூன் நிமிர்த்தருளித்
திருநீற்றின் ஒளிகண்டு
மன்னியசீர்ச் சண்பைநகர்
மறையவனார் வருகின்றார். **#1655**

காவிரியாறு வலமாகச் சூழ்கின்ற திருப்பூந் துருத்தியில் அவர் இருப்ப, கல் போன்ற மனமுடைய கடிய மனத்தை யுடைய வலிய சமணர்களை வாதில் வென்று, அவர்களின் பொய்ம் மையான சூழ்ச்சிகளை அழித்துப், பாண்டியனின் கூனை நிமிர்த்தி, அருளுரை வழங்கி, திருநீற்றின் விளக்கம் ஓங்கச் செய்து, நிலையான சிறப்புக் கொண்ட சீகாழியில் தோன்றியருளிய மறையவரான திரு ஞானசம்பந்தர் வருவாராய்.

விளக்கவுரை

****

தீந்தமிழ்நாட் டிடைநின்றும்
எழுந்தருளிச் செழும்பொன்னி
வாய்ந்தவளந் தருநாட்டு
வந்தணைந்தார் வாக்கினுக்கு
வேந்தர்இருந் தமைகேட்டு
விரைந்தவர்பால் செல்வன்எனப்
பூந்துருத்தி வளம்பதியின்
புறம்பணையில் வந்தணைந்தார். **#1656**

இனிய தமிழ் நாடான பாண்டி நாட்டினின்றும் புறப்பட்டு, செழிப்பையுடைய காவிரியாற்றின் வளத்தால் வளங்கள் பலவற்றையும் தரும் சோழநாட்டில் வந்து சேர்ந்தவரான ஞான சம்பந்தர், திருநாவுக்கரசு நாயனார் திருப்பூந்துருத்தியில் வீற்றிருக்கும் செய்தியைக் கேட்டு விரைவாய் அங்குச் சென்று சேர்வேன்! என்று எண்ணித், திருப்பூந்துருத்தியின் புறத்தேயுள்ள வயல்கள் சூழ்ந்த இடத்தில் வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

இவ்விருபாடல்களும் ஒருமுடிபுடையன.

சண்பைவருந் தமிழ்விரகர்
எழுந்தருளத் தாங்கேட்டு
மண்பரவும் பெருங்கீர்த்தி
வாகீசர் மனமகிழ்ந்து
கண்பெருகுங் களிகொள்ளக்
கண்டிறைஞ்சுங் காதலினால்
எண்பெருகும் விருப்பெய்த
எழுந்தருளி எதிர்சென்றார். **#1657**

சீகாழிப் பதியில் தோன்றிய தமிழ் வல்லுநரான ஞானசம்பந்தர் எழுந்தருளி வர, அந் நற்செய்தியை உலகம் போற்றும் புகழையுடைய நாவரசர் தாம் கேட்டு, மனம் மகிழ்ந்து கண்களால் காணும் களிப்பு மிக, நேரில் கண்டு கும்பிட வேண்டும் என்னும் அவாவினால் உள்ளத்தில் பெருகும் விருப்பம் பொருந்த எதிரே சென்றார்.

விளக்கவுரை

****

காழியர்கோன் வரும்எல்லை
கலந்தெய்திக் காதலித்தார்
சூழுமிடைந் திடுநெருக்கிற்
காணாமே தொழுதருளி
வாழியவர் தமைத்தாங்கும்
மணிமுத்தின் சிவிகையினைத்
தாழும்உடல் இதுகொண்டு
தாங்குவன்யான் எனத்தரித்தார். **#1658**

சீகாழியின் தலைவரான ஞானசம்பந்தர் வருகின்ற அதுபொழுது, திருக்கூட்டத்துடன் கூடிச்சேர்ந்து அன்பு உடையவராகிச் சூழ்ந்து, நெருங்கிய கூட்டத்தின் நெருக்கத்துள் ஞானப்பிள்ளையார் தம்மைக் காணாத வண்ணம், அவரை வணங்கி, உலகினர்க்கு வாழ்வு தரவந்த பிள்ளையாரைத் தாங்கும் முத்துச் சிவிகையைத் தாங்கி வருபவருடன் தாழ்ந்த இவ்வுடலைக் கொண்டு `நானும் சுமப்பன்` எனும் நினைவுடையராய்.

விளக்கவுரை

****

வந்தொருவர் அறியாமே
மறைத்தவடி வொடும்புகலி
அந்தணனார் ஏறியெழுந்

தருளிவரும் மணிமுத்தின்
சந்தமணிச் சிவிகையினைத்
தாங்குவா ருடன்தாங்கிச்
சிந்தைகளிப் புறவருவார்
தமையாருந் தெளிந்திலரால். **#1659**

பிள்ளையாருடன் வந்து கொண்டிருக்கும் எவரும் அறியாதவாறு, மறைத்த வடிவுடன், சீகாழி அந்தணரான ஞானசம்பந்தர் எழுந்தருளிவரும் அழகான மணிச் சிவிகையைச் சுமப்பவர்களுடன் தாமும் ஒருவராய்த் தாங்கித், தம் உள்ளம் மிக மகிழ்ச்சி பொருந்த வருவாரான திருநாவுக்கரசு நாயனாரை ஒருவரும் அறிந்து கொண்டாரிலர்.

விளக்கவுரை

இவ்விருபாடல்களும் ஒருமுடிபுடையன.

திருஞான மாமுனிவர்
அரசிருந்த பூந்துருத்திக்
கருகாக எழுந்தருளி
எங்குற்றார் அப்பர்என
உருகாநின் றுஉம்அடியேன்
உம்அடிகள் தாங்கிவரும்
பெருவாழ்வு வந்தெய்தப்
பெற்றிங்குற் றேன்என்றார். **#1660**

திருஞானப் பெருமுனிவராகிய சம்பந்தர், திருநாவுக்கரசு நாயனார் வீற்றிருந்த திருப்பூந்துருத்திக்கு அருகில் எழுந்தருளிச் சிவிகையில் இருந்தவாறே அப்பர் எங்குற்றார்? என்று வினவ, உள்ளம் மிகவுருகி, `உம் அடியவன் உம் திருவடிகளைச் சுமக்கும் பெருவாழ்வு பெற்று இங்கு இருக்கின்றேன்` என்று சிவிகையைத் தாங்கி வரும் அந் நிலையிலேயே விடை பகர்ந்தார்.

விளக்கவுரை

****

பிள்ளையார் அதுகேளாப்
பெருகுவிரை வுடன்இழிந்தே
உள்ளமிகு பதைப்பெய்தி
உடையஅர சினைவணங்க
வள்ளலார் வாகீசர்
அவர்வணங்கா முன்வணங்கத்
துள்ளுமான் மறிக்கரத்தார்

தொண்டரெலாந் தொழுதார்த்தார். #1661
திருஞானசம்பந்தர் அம்மொழிகளைக் கேட்ட அளவில், மிகுவிரைவுடன், கீழே இழிந்தருளித், திருவுள்ளத்தில் அச்சத்துடன் பொருந்திய பதைப்பை அடைந்து, ஆளுடைய அரசரை வணங்க, வள்ளலாரான திருநாவுக்கரசரும் அவர் வணங்குவதற்கு முன்னம் தாம் அவரை வணங்க, அவ்வருள் நிகழ்ச்சியைக் காணும் பேறு பெற்ற, துள்ளும் மானைக் கையில் ஏந்திய சிவபெருமானின் அடியவர் அனைவரும் வணங்கி `அரகர` என்ற ஒலியை எழுப்பினர்.

விளக்கவுரை

****

கழுமலக்கோன் திருநாவுக்
கரசருடன் கலந்தருளிச்
செழுமதியந் தவழ்சோலைப்
பூந்துருத்தித் திருப்பதியின்
மழுவினொடு மான்ஏந்து
திருக்கரத்தார் மலர்த்தாள்கள்
தொழுதுருகி இன்புற்றுத்
துதிசெய்தங் குடனிருந்தார். #1662

சீகாழித் தலைவரான ஞானசம்பந்தர் திருநாவுக் கரசு நாயனாருடன் கூடிப் பிறைச்சந்திரன் தவழும் வளமுடைய சோலைகள் சூழ்ந்த திருப்பூந்துருத்தி எனும் திருப்பதியில் எழுந் தருளியிருக்கும் மழுவுடன் மானை ஏந்தும் திருக்கையையுடைய இறைவரின் மலரடிகளை வணங்கி, மனம் உருகி இன்பம் அடைந்து, போற்றிசெய்து, அப் பதியில் உடன் எழுந்தருளியிருந்தார்.

விளக்கவுரை

****

வல்அமணர் தமைவாதில்
வென்றதுவும் வழுதிபால்
புல்லியகூன் நிமிர்த்ததுவும்
தண்பொருந்தப் புனல்நாட்டில்
எல்லையிலாத் திருநீறு
வளர்த்ததுவும் இருந்தவத்தோர்
சொல்லஅது கேட்டுவந்தார்
தூயபுகழ் வாகீசர். #1663

கொடிய சமணர்களை வாதில் வென்றதையும், பாண்டியனிடத்தில் முன்பு பொருந்தி இருந்த கூனை நிமிர்த்தியமை யையும், தண்ணிய

வைகை ஆற்றின் நீர் பாயும் பாண்டிய நாட்டில் அள வில்லாத
சிறப்புடைய திருநீற்றின் நெறியைப் பெருகச் செய்ததையும்,
பெருந்தவத்தையுடைய பிள்ளையார் எடுத்துக் கூற, அதனைத் தூய
புகழையுடைய திருநாவுக்கரசர் கேட்டுத் திருவுள்ளம் மகிழ்ந்தார்.

விளக்கவுரை

****

பண்புடைய பாண்டிமா
தேவியார் தம்பரிவும்
நண்புடைய குலச்சிறையார்
பெருமையும்ஞா னத்தலைவர்
எண்பெருக வுரைத்தருள
எல்லையில்சீர் வாகீசர்
மண்குலவு தமிழ்நாடு
காண்பதற்கு மனங்கொண்டார். **#1664**

கற்பும் பத்திமையும் உடைய மங்கையர்க் கரசியாரின் அன்பின்
திறத்தையும், அடியவரிடத்துப் பெருநட்புக் கொண்டுவாழும்
குலச்சிறையாரின் பெருமையையும் ஞானசம்பந்தர் விருப்பம் மிகக்
கூறியருள, நாவரசர், அளவற்ற சிறப்பினையுடைய தமிழ்நாடு எனக்
கூறப்படும் பாண்டி நாட்டைப் போய்க் காண்பதற்கு விருப்பம்
கொண்டவர் ஆனார்.

விளக்கவுரை

****

பிரமபுரத் திருமுனிவர்
பெருந்தொண்டை நன்னாட்டில்
அரனுறையுந் தானங்கள்
அணைந்திறைஞ்சிப் பாடுவதற்
குரனுடைய திருநாவுக்
கரசர் உரை செய்தருளப்
புரமெரித்தார் திருமகனார்
பூந்துருத்தி தொழுதகன்றார். **#1665**

காழியில் தோன்றிய ஞானசம்பந்தரிடம் பெருமை வாய்ந்த தொண்டை
நாட்டில் சிவபெருமான் விரும்பி எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளை
அணைந்து வணங்கித் தேவாரப் பதிகங்களைப் பாடியருளுமாறு,
திருத்தொண்டின் உறைப்புடைய திருநாவுக்கரசர் சொல்லியருள,
அதன்படி இசைந்து, முப்புரங்களை எரித்த சிவபெருமானின் மகனாரான
ஞானசம்பந்தரும் திருப்பூந் துருத்தியை வணங்கிப் புறப்பட்டார்.

விளக்கவுரை

****

ஆண்டஅர சங்கணர்சீர்
அருள்பெற்றப் பதிநின்றும்
பாண்டிநாட் டெழுந்தருளும்
பான்மையராய்த் தென்திசைபோய்க்
காண்டகைய திருப்புத்தூர்
பணிந்தேத்திக் கதிர்மதியம்
தீண்டுகொடி மதில்மதுரைத்
திருவால வாய்சேர்ந்தார். **#1666**

இறைவரால் ஆட்கொள்ளப்பட்ட நாவுக்கரசர் சிவபெருமானின் அருளைப் பெற்றவாறு, அத்திருப்பூந்துருத்தியி னின்றும் நீங்கிப் பாண்டி நாட்டிற்குச் செல்லத் திருவுளம் கொண்டவ ராய்த் தென்திசை நோக்கிச் சென்று, காணத்தக்க சிறப்பையுடைய திருப்புத்தூரினை வணங்கிப் போற்றி, திங்களின் கதிர்கள் தங்குதற்கு இடமான கொடிகள் கட்டப்பட்டு விளங்கும் மதிலையுடைய திருவாலவாயினை அடைந்தார்.

விளக்கவுரை

திருப்புத்தூரில் அருளிய பதிகம் `புரிந்தமரர்` *(தி.6 ப.76)* எனத் தொடங்கும் திருத்தாண்டகமாகும்.

சென்றணைந்து மதுரையினில்
திருந்தியநூற் சங்கத்துள்
அன்றிருந்து தமிழாராய்ந்
தருளியஅங் கணர்கோயில்
முன்றிலினை வலங்கொண்டு
முன்னிறைஞ்சி உள்புக்கு
வன்றனிமால் விடையாரை
வணங்கிமகிழ் வொடுந்திளைத்தார். **#1667**

இவ்வாறு சென்று சேர்ந்த திருநாவுக்கரசர் மதுரை நகரத்துள் சென்று, திருத்தகு நூல்களில் வல்லுநர்களான புலவர் பெருமக்கள் கூடிய சங்கத்தினுள், முன் நாளில் வீற்றிருந்து தமிழை ஆராய்ந்தருளிய இறைவரின் திருக்கோயிலின் திருமுற்றத்தை வலமாகச் சூழ்ந்து, வெளியே திருமுன்பு விழுந்து வணங்கிக் கோயிலுக்குள் புகுந்து, வலிய ஒப்பில்லாத பெரிய ஆனேற்றை யுடைய சொக்கநாதப் பெருமானை வணங்கி மகிழ்ச்சியுள் மூழ்கி, இன்பப் பெரு வெள்ளத்துள் திளைத்தார்.

விளக்கவுரை

****

எய்தியபே ரானந்த
இன்பத்தின் இடைஅழுந்தி
மொய்திகழுஞ் சடையானை
முளைத்தானை என்றெடுத்துச்
செய்தவத்தோர் தாண்டகச்செந்
தமிழ்பாடிப் புறத்தணைவார்
கைதொழுது பணிந்தேத்தித்
திருவுள்ளங் களிசிறந்தார். **#1668**

அங்ஙனம் தாம் பொருந்திய இன்ப அநுபவமான பெருவெள்ளத்துள் முழுகித், தொகுதியாக இணைந்து விளங்கும் திருச்சடையை உடைய பெருமானை `முளைத்தானை`(தி.6 ப.19) எனத் தொடங்கும் திருத்தாண்டகத் தமிழ்ப் பதிகத்தால் போற்றிப், புறத்தே செல்பவராகி, செய்யும் தவத்தை உடையவரான நாயனார் கைகளால் தொழுது வணங்கித் துதித்துத் திருவுள்ளத்தில் பெரு மகிழ்ச்சி அடைந்தார்.

விளக்கவுரை

****

சீர்திகழும் பாண்டிமா
தேவியார் திருநீற்றின்
சார்வடைய கூன்நிமிர்ந்த
தென்னவனார் தம்முடனே
பார்பரவுங் குலச்சிறையார்
வாகீசர் தமைப்பணிவுற்
றாரகிலாக் காதல்மிக
அடிபோற்ற அங்கிருந்தார். **#1669**

சிறப்புடன் விளங்கும் மங்கையர்கரசியாருடன் திருநீற்றின் சார்பு அடைந்ததால் கூன் நிமிரப் பெற்ற நின்றசீர் நெடுமாறனார் என்னும் இவர்களுடனே, உலகம் போற்றும் குலச் சிறையாரும் தம்மை வந்து பணிந்து அளவிலாது பெருகிய காதல் மிகத் தம் திருவடிகளைப் போற்றி நிற்கத், திருநாவுக்கரசு நாயனார் அங்கு வீற்றிருந்தருளினார்.

விளக்கவுரை

****

திருவால வாய்அமர்ந்த
செஞ்சுடரைச் செழும்பொருள்நூல்
தருவானை நேரிசையும்
தாண்டகமும் முதலான
பெருவாய்மைத் தமிழ்பாடிப்

பேணுதிருப் பணிசெய்து
மருவார்தம் புரம்எரித்தார்
பூவணத்தை வந்தடைந்தார். **#1670**
திருவாலவாயில் வீற்றிருக்கும் செஞ்சுடரைச், செழுமையான
அகப்பொருள் நூலை வழங்கியருளியவரைத் திரு நேரிசையும்,
திருத்தாண்டகமும் முதலான பெருவாய்மை பொருந்திய தமிழ்ப்
பதிகங்களைப் பாடி, விரும்பும் திருப்பணிகளைச் செய்து அதன்பின்
பகைவரின் முப்புரங்களை எரித்த சிவபெருமானின் திருப்பூவணத்தை
அடைந்தவராய்.

விளக்கவுரை

இறைவர் அருளிய அகப்பொருள் நூல் இறையனார் களவியலாகும். நேரிசையும், தாண்டகமும் முதலாய பல பதிகங்களை அருளினார் என்றாரேனும், இது பொழுது கிடைத்து இருக்கும் பதிகம் ஒன்றேயாம்: அது `வேதியா` *(தி.4 ப.62)* எனத் தொடங்கும் திருநேரிசைப் பதிகமாகும்.

கொடிமாடம் நிலவுதிருப்
பூவணத்துக் கோயிலினுள்
நெடியானுக் கறிவரியார்
நேர்தோன்றக் கண்டிறைஞ்சி
வடிவேறு திரிசூலத்
தாண்டகத்தால் வழுத்திப்போய்ப்
பொடிநீடு திருமேனிப்
புனிதர்பதி பிறபணிவார். **#1671**
கொடிகள் நிலவும் மாடங்கள் நிறைந்த திருப் பூவணத்தின் கோயிலுள்,
திருமாலுக்கும் அரியவரான சிவபெருமான் வெளிப்பட்டருளக் கண்டு
வணங்கி, `வடிவேறு திரிசூலம்` எனத் தொடங்கும் திருத்தாண்டகப்
பதிகத்தால் போற்றி செய்து, திருநீறு நிறைந்த திருமேனியையுடைய
புனிதரான சிவபெருமானின் திருப்பதி கள் பிறவற்றையும் போய்ப்
பணிவாராய்,

விளக்கவுரை

`வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்` *(தி.6 ப.18)* எனத் தொடங்கும் அப்பதிகத்தில், பூவணத்தின் புனிதனாரைத் தாம் கண்டவாறு போற்றி மகிழ்கின்றார் நாவரசர். அவற்றுள் `பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்` என வருவதைப், `பொடிநீடு புனிதர்` என இப்பாடற்கண் வைத்து நினைவு கூருகின்றார் ஆசிரியர்.

தென்னிலங்கை இராவணன்தன்
சிரம்ஈரைந் துந்துணித்த

மன்னவனாம் இராமனுக்கு
வரும்பெரும்பா தகந்தீர்த்த
பிஞ்ஞகரைத் தொழுவதற்கு
நினைந்துபோய்ப் பெருமகிழ்ச்சி
துன்னிமனங் கரைந்துருகத்
தொழுதெழுந்தார் சொல்லரசர். **#1672**

தென்திசையில் உள்ள இலங்கை மன்னனான இராவணனின் தலைகள் பத்தையும் துண்டித்து விழச் செய்த மன்ன னான இராமனுக்கு, அதனால் விளைய வரும் தீங்கினைத் தீர்த்தரு ளிய திருஇராமேச்சுரத்துப் பெருமானைப் போய் வணங்க நினைந்து சென்று, மகிழ்ச்சி மீதூர மனம் கரைந்து உருகித் திருநாவுக்கரசர் தொழுது எழுந்தவராய்.

விளக்கவுரை

****

தேவர்தொழுந் தனிமுதலைத்
திருவிரா மீச்சுரத்து
மேவியசங் கரனைஎதிர்
நின்றுவிருப் புறுமொழியால்
பாவுதிரு நேரிசைகள்
முதலான தமிழ்பாடி
நாவரசர் திருத்தொண்டு
நலம்பெருகச் செய்தமர்ந்தார். **#1673**

வானவர் வணங்கும் ஒப்பில்லாத முதல்வரை, திருஇராமேச்சுரத்தில் வீற்றிருக்கும் சங்கரரைத் திருமுன்பு நின்று விருப்பம் மிக்க சொற்களால் நிறைந்த திருநேரிசை முதலான தமிழ்ப் பதிகங்களைப் பாடித் திருநாவுக்கரசர், நன்மை பொருந்தும் திருத் தொண்டைச் செய்து, அங்குத் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

சங்கரன் என்றார், ஆன்மாவுக்கு உள்ளிருக்கும் தீங்கினை நீக்கி, இன்பம் அளித்தலின். தமிழ்ப் பதிகங்கள் பலபாடி, என்றாரேனும் இது பொழுது கிடைத்திருக்கும் திருப்பதிகம் ஒன்றே யாம். அது `பாசமும் கழிக்க` *(தி.4 ப.61)* எனத் தொடங்கும் திரு நேரிசைப் பதிகம் ஆகும்.
இராமாயணத்தைக் கம்பர் பாடுதற்கு, வால்மீகியாரின் வாக்கின்றிச் சங்க இலக்கியங்கள் முதலாக நம் திருமுறைகள் ஈறாகவுள்ள நூல்களும் முன்னோடியாக அமைந்து உள்ளமை, இத்திருப்பதிக்குரிய திருப்பதிகத்தானும், இதுபோன்று வரும் பிற பதிகப் பாடல்களாலும் அறியலாம். இந்நான்கு பாடல் களும் ஒருமுடிபின.

அங்குறைந்து கண்ணுதலார்
அருள்சூடி அகன்றுபோய்ப்
பொங்குதமிழ்த் திருநாட்டுப்
புறம்பணைசூழ் நெல்வேலி
செங்கண்விடை யார்மன்னுந்
திருக்கானப் பேர்முதலா
எங்குநிகழ் தானங்கள்
எல்லாம்புக் கிறைஞ்சுவார். #1674

அவ்விராமேச்சுரத்தில் பலநாள்கள் தங்கி இருந்து, சிவபெருமானின் திருவருளைப் ஏற்றவாறு விடைபெற்று, அங்கிருந்து நீங்கிப் போய்ப், பொங்கும் தமிழ்த் திருநாட்டில் புறமெல்லாம் மருத நிலம் சூழப்பட்ட திருநெல்வேலிக்கும், சிவந்த கண்களையுடைய ஆனேற்று ஊர்தியினரான இறைவர் வீற்றிருந் தருளும் `திருக் கானப்பேர்` முதலாக, அந்நாட்டில் உள்ள திருப்பதிகள் பலவற்றிற்கும் சென்று தொழுபவராகி.

விளக்கவுரை

திருநெல்வேலி, திருக்கானப்பேர் ஆகிய இடங்களில் பாடிய பதிகங்கள் எவையும் கிடைத்தில. எங்கும் `நிகழ்தானங்கள்` என்பதற்கேற்ப, நாவரசர் வணங்கிப் போற்றிய பிறபதிகள் எவை எனத் தெரிந்தில.

தொழுதுபல வகையாலும்
சொற்றொடைவண் டமிழ்பாடி
வழுவில்திருப் பணிசெய்து
மனங்கசிவுற் றெப்பொழுதும்
ஒழுகியகண் பொழிபுனலும்
ஓவாது சிவன்தாள்கள்
தழுவியசிந் தையில்உணர்வுந்
தங்கியநீர் மையிற்சரித்தார். #1675

பல திருப்பதிகளுக்கும் சென்று வணங்கிப் பல வகையாலும் அமைந்த சொற்றொடைகளான வளமுடைய தமிழ்ப் பதிகங்களைப் பாடிக், குற்றமற்ற திருப்பணிகளைச் செய்து, உள்ளம் உருகி, எக்காலத்திலும் நீர் ஒழுகும் கண்களையும் சிவபெருமானின் திருவடிகளை இடைவிடாது உணர்ச்சியில் தழுவிக் கொண்ட சிந்தையுமாக இவ்வாறு ஒழுகி வந்தார்.

விளக்கவுரை

சரித்தார் - ஒழுகினார். இதுபொழுது வணங்கிய பதிகள் எவை எனத் தெரிந்தில. இவ்விரு பாடலகளும் ஒருமுடிபின.

தேம்பொழில்சூழ் செந்தமிழ்நாட்

டினில்எங்குஞ் சென்றிறைஞ்சிப்
பாம்பணிவார் தமைப்பணிவார்
பொன்னிநா டதுஅணைந்து
வாம்புனல்சூழ் வளநகர்கள்
பின்னும்போய் வணங்கியே
பூம்புகலூர் வந்தடைந்தார்
பொய்ப்பாசம் போக்குவார். **#1676**

தேன் நிறைந்த பொழில்கள் சூழ்ந்த செந்தமிழ் நாட்டில் எவ்விடத்திற்கும் சென்று, ஆங்காங்குள்ள பாம்பு அணியும் இறைவரை வணங்கியவராய், பொன்னியாறு பாயும் சோழ நாட்டைச் சேர்ந்து, முன்பு வணங்கி மகிழ்ந்த, தாவும் நீரையுடைய வளநகர்கள் பலவற்றிற்கும் இது பொழுதும் சென்று வணங்கி, பொய்யான பற்றை ஒழிப்பவரான திருநாவுக்கரசர் பூம்புகலூர் என்னும் திருப்பதிக்கு வந்தடைந்தார்.

விளக்கவுரை
****

பொய்கைசூழ் பூம்புகலூர்ப்
புனிதர்மலர்த் தாள்வணங்கி
நையுமனப் பரிவோடு
நாள்தோறுந் திருமுன்றில்
கைகலந்த திருத்தொண்டு
செய்துபெருங் காதலுடன்
வைகுநாள் எண்ணிறந்த
வண்டமிழ்மா லைகள்மொழிவார். **#1677**

நீர் நிலைகள் சூழ்ந்த பூம்புகலூரில் வீற்றிருந் தருளும் இறைவரின் மலரடிகளை வணங்கி, நெகிழ்ந்து கரையும் மனத்து எழும் அன்புடனே, நாள்தோறும், திருமுற்றத்தில் அன்புடைய கைத்திருத்தொண்டுகள் பலவற்றையும் செய்து, மிக்க காதலுடன் தங்கி யிருந்த நாள்களில், எண் இல்லாத வளப்பம் மிக்க தமிழ் மாலைகளை அருளிச் செய்வாராகி.

விளக்கவுரை
****

நின்றதிருத் தாண்டகமும்
நீடுதனித் தாண்டகமும்
மன்றுறைவார் வாழ்பதிகள்
வழுத்துதிருத் தாண்டகமும்
கொன்றைமலர்ச் சடையார்பால்
குறைந்தடைந்த நேரிசையுந்

துன்றுதனி நேரிசையும்
முதலான தொடுத்துரைத்தார். **#1678**
நின்ற திருத்தாண்டகமும், நீடிய தமிழ்த் திருத்தாண்டகப் பதிகங்களும், திருச்சபையில் கூத்தியற்றும் இறைவர் வீற்றிருக்கின்ற திருப்பதிகளை வணங்கிப் போற்றும் கேஷத்திரக் கோவைத் திருத்தாண்டகமும், கொன்றை மலர் சூடிய சடையை யுடைய சிவபெருமானிடம் குறைந்து அடையும் கருத்தினை உட்கொண்ட குறைந்த திருநேரிசைப் பதிகங்களும், பொருந்திய தனித்திரு நேரிசைப் பதிகங்களும் இவை முதலிய பலவற்றையும் பாடி அருளினார்.

விளக்கவுரை

இது பொழுது அருளிய பதிகங்கள்: *1.* நின்ற திருத்தாண்டகம்: \`இருநிலனாய்\` *(*தி*.6* ப*.94). 2.* தனித் திருத்தாண் டகம்: \`ஆமயம் தீர்த்து\` *(*தி*.6* ப*.96). 3.* திருத்தலக் கோவைத் திருத்தாண் டகம் *(*க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம்*):* \`தில்லைச் சிற்றம்பல மும்\` *(*தி*.6* ப*.70). 4.* குறைந்த திருநேரிசை: *(*அ*)* \`வென்றிலேன்\` *(*தி*.4* ப*.78). (*ஆ*)* \`தம்மானம்\` *(*தி*.4* ப*.79). 5.* நினைந்த திருநேரிசை*:* \`முத்தினை\` *(*தி*.4* ப*.74). 6.* தனித்திரு நேரிசை*: (*அ*)* \`தொண்டனேன்\` *(*தி*.4* ப*.75). (*ஆ*)* \`மருளவாம்\` *(*தி*.4* ப*.76). (*இ*)* \`கடும்பகல்\` *(*தி*.4* ப*.77).* இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஆருயிரின் திருவிருத்தம்
தசபுரா ணத்தடைவும்
பார்பரவும் பாவநா
சப்பதிகம் பன்முறையும்
நேர்படநின் றறைகூவுந்
திருப்பதிகம் முதற்பிறவும்
பேரருளின் கடல்அளிக்கும்
பெருமானைப் பாடினார். **#1679**
\`ஆருயிர்த் திருவிருத்தமும்\`, \`தசபுராணத்\` திருப்பதிகமும், உலகம் போற்றி உய்யும் \`பாவநாசத்\` திருப்பதிகமும் பலமுறையும் நேர்படும்படி நின்று இறைவரைக் கருதிச் \`சரக்கறையோ\` என்று அறை கூவும் \`சரக்கறைத் திருப்பதிகமும்\` என்று இவை முதலான பதிகங்களால், பேரருட்கடலாம் அடியார்க்கு அளிக்கும் சிவபெருமானைப் பாடியருளினார்.

விளக்கவுரை

1. ஆருயிர்த் திருவிருத்தம் - \`எட்டாந் திசைக்கும்\` *(*தி*.4* ப*.84). 2.* தசபுராணத் தடைவு - \`பருவரை\` *(*தி*.4* ப*.14),* பண்: பழம்பஞ்சுரம். *3.*

பாவநாசப் திருப்பதிகம் - `பற்றற்றார்சேர்.` *(தி.4 ப.15)* பண்: பழம்பஞ்சுரம். *4.* அறைகூவும் திருப்பதிகங்கள்: *(அ)* `சிவனெனும் ஓசை` *(தி.4 ப.8)* பண்: பியந்தைக் காந்தாரம். *(ஆ)* பசுபதித்திருவிருத்தம்: `சாம்பலைப் பூசி` *(தி.4 ப.110). (இ)* சரக்கரைத் திருவிருத்தம்: `விடையும் விடைப்பெரும்` *(தி.4 ப.111). (ஈ)* தனித் திருவிருத்தங்கள்: *(1)* `பவளத் தடைவரை` *(தி.4 ப.113) (2)* `வெள்ளிக் குழை` *(தி.4 ப.112) (உ)* வினாவிடைத் திருத்தாண்டகம்: `அண்டம் கடந்த` *(தி.6 ப.97).*

அந்நிலைமை தனில்ஆண்ட
அரசுபணி செய்யஅவர்
நன்னிலைமை காட்டுவார்
நம்பர்திரு மணிமுன்றில்
தன்னில்வரும் உழவாரம்
நுழைந்தவிடந் தானெங்கும்
பொன்னினொடு நவமணிகள்
பொலிந்திலங்க அருள்செய்தார். **#1680**

அந்நிலைமையில் திருநாவுக்கரசர் திருப் பணிசெய்ய, அவருடைய நன்னிலைமையை உலகறியக் காட்டுவார் ஆகச் சிவபெருமான் அழகிய திருமுற்றத்தில் திருப்பணிக்காக உழவாரம் நுழைந்த இடம் எல்லாம் பொன்னினோடு நவமணிகளும் வெளிப்பட்டு விளங்குமாறு அருள் செய்தார்.

விளக்கவுரை

****

செம்பொன்னும் நவமணியும்
சேண்விளங்க ஆங்கெவையும்
உம்பர்பிரான் திருமுன்றில்
உருள்பருக்கை யுடன்ஒக்க
எம்பெருமான் வாகீசர்
உழவாரத் தினில்ஏந்தி
வம்பலர்மென் பூங்கமல
வாவியினில் புகஎறிந்தார். **#1681**

செம்பொன்னும் நவமணிகளும் நெடுந் தொலைவிலும் ஒளி வீச, எம் தலைவரான திருநாவுக்கரசர், சிவ பெருமானின் திருமுன்றிலில் உருள்கின்ற மற்றப் பருக்கைக் கற்களு டன் ஒத்தலால், அவ்விடத்தில் விளங்கிய அவை எல்லாவற்றையும் உழவாரத்தில் ஏந்திச் சென்று, மணம் வீச மலர்கின்ற பூக்களான தாமரைகள் மலரும் பொய்கையில் புகும்படி வீசி ஏறிந்தார்.

விளக்கவுரை

****

புல்லோடும் கல்லோடும்
பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபா
டிலாநிலைமை துணிந்திருந்த
நல்லோர்முன் திருப்புகலூர்
நாயகனார் திருவருளால்
வில்லோடு நுதல்மடவார்
விசும்பூடு வந்திழிந்தார். **#1682**

புல்லுடனும் கல்லுடனும் பொன்னுடனும் மணிகளுடனும் வேறுபாடு இல்லாமையைத் துணிந்து, மனம் சிறிதும் மாறுதல் இல்லாது இருந்த நல்லோரான நாயனாரின் முன்பு, திருப்புகலூர் இறைவரின் திருவருளால், வில்லைத் தோற்கடிக்கும் புருவங்கள் வளைந்து அசைவதற்கு இடமான நெற்றியையுடைய பெண்கள், வான் உலகத்தினின்றும் வந்து இறங்கினர்.

விளக்கவுரை

****

வானகமின் னுக்கொடிகள்
வந்திழிந்தால் எனவந்து
தானநிறை சுருதிகளில்
தகும்அலங்கா ரத்தன்மை
கானஅமு தம்பரப்பும்
கனிவாயில் ஒளிபரப்பப்
பானல்நெடுங் கண்கள்வெளி
பரப்பிஇசை பாடுவார். **#1683**

விண்ணிலிருந்து மின்னற் கொடிகள் கீழ் இறங்கியவை போல வந்து, உரிய இசைபிறக்கும் இடங்களினின்றும் நிறைந்து வரும் இசையால் உண்டாகும் தக்க இனிமை பொருந்திய இசையமுதத்தைப் பரவச் செய்கின்ற, கொவ்வைக் கனியைப் போன்ற வாயில் ஒளி விளங்க, நீல மலர் போன்ற நீண்ட கண்களை வெளியில் பரப்பி, இசையைப் பாடலானார்.

விளக்கவுரை

தாளம் - இசை பிறக்கும் இடம். பானல் - நீலமலர்.

கற்பகப்பூந் தளிரடிபோங்
காமருசா ரிகைசெய்ய

உற்பலமென் முகிழ்விரல்வட்
டணையோடுங் கைபெயரப்
பொற்புறும்அக் கையின்வழி
பொருகயற்கண் புடைபெயர
அற்புதப்பொற் கொடிநுடங்கி
ஆடுவபோல் ஆடுவார். **#1684**

கற்பக மரத்தின் இளந்தளிர்கள் போன்ற அடிகளைப் பெயர்த்து, வட்டமாய்ச் சுழன்று, செங்காந்தள் மலரின் அரும்பு போல் மென்மையான விரல்களின் செயல்களால் கைகள் பெயரவும், அழகு பொருந்தும் அக்கைகளின் வழியே பொரும் கயல் மீன் போன்ற கண்கள் புடை பெயர்ந்து செல்லவும், பொன்னால் ஆன கொடிகள் அசைந்து ஆடுவன போல ஆடுவாராகி.

விளக்கவுரை

சாரிகை - ஆடல் வகையில் ஒன்று; வட்டமாகச் சுழன்று வருதல். உற்பலம் - செங்கழுநீர். வட்டணை - விரல்களால் காட்டப் படும் அபிநயம்; விரல்களைக் குவித்தும் விரித்தும் சுழற்றியும் காட்டும் நிலை.

ஆடுவார் பாடுவார்
அலர்மாரி மேற்பொழிவார்
கூடுவார் போன்றணைவார்
குழல்அவிழ இடைநுடங்க
ஓடுவார் மாரவே
ளுடன்மீள்வர் ஒளிபெருக
நீடுவார் துகிலசைய
நிற்பாரும் ஆயினார். **#1685**

ஆடுபவர்களும், பாடுபவர்களும், மலர்களை மழையென மேலே பொழிபவர்களும், தழுவுவார் போல் அருகில் வந்து சேர்பவர்களும், கூந்தல் அவிழவும் இடை துவளவும் ஓடுபவர் களும், மன்மதனுடன் மீள்பவர்களும், காம ஒளி பெருகக் காணும்படி நீண்ட உடை நழுவ நிற்பவர்களும் இவ்வாறு பல திறப்பட்ட செயல் களைச் செய்பவர்கள் ஆயினர்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

இத்தன்மை அரம்பையர்கள்
எவ்விதமும் செயல்புரிய
அத்தனார் திருவடிக்கீழ்
நினைவகலா அன்புருகும்

மெய்த்தன்மை உணர்வுடைய
விழுத்தவத்து மேலோர்தம்
சித்தநிலை திரியாது
செய்பணியின் தலைநின்றார். **#1686**

இங்ஙனம் அரம்பையர்கள் எல்லா வகையாலும் காமச்செயல்களைச் செய்யவும், பெருமானின் திருவடிக் கீழ்ப்பதிய வைத்த நினைவு நீங்காத அன்பினால் உருகும் மெய்த்தன்மையுடைய தூயதவத்தில் நிற்கும் மேலோரான நாவுக்கரசர், தம் உள்ளத்தின் நிலைமையினின்று மாறுபடாமல், தாம் செய்துவரும் பணியில் உறைத்து நிற்பாராகி,

விளக்கவுரை

****

இம்மாயப் பவத்தொடக்காம்
இருவினைகள் தமைநோக்கி
உம்மால்இங் கென்னகுறை
உடையேன்யான் திருவாரூர்
அம்மானுக் காளானேன்
அலையேன்மின் நீர்என்று
பொய்ம்மாயப் பெருங்கடலுள்
எனுந்திருத்தாண் டகம்புகன்றார். **#1687**

இம் மாயையின் விளைவாய பிறவிப் பிணைப் பில் வீழ்த்தும் இருவினைகளின் வடிவாய் வந்த அந்நங்கையரைப் பார்த்து, `உம்மால் இங்கு எனக்கு ஆக வேண்டிய குறை யாது உளது? நான் திருவாரூர்ப் பெருமானுக்கு ஆளானேன். நீங்கள் வலிதே அலைய வேண்டா!` என்ற கருத்துடைய `பொய்ம் மாயக் கடலுள்` எனத் தொடங்கும் திருத்தாண்டகத் திருப்பதிகத்தைப் பாடினார்.

விளக்கவுரை

`பொய்ம் மாயப் பெருங்கடலில்` *(தி.6 ப.27)* எனத் தொடங்கும் இத்திருத்தாண்டகம், அப்பர் பெருமானின் அரிய பத்திமையையும் உரனுடைமையையும் ஒருங்கு விளக்குவதாகும்.
இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

மாதரவர் மருங்கணைய
வந்தெய்தி மதனவசக்
காதலவர் புரிந்தொழுகுங்
கைதவங்கள் செய்திடவும்
பேதமிலா ஒருணர்விற்
பெரியவரைப் பெயர்விக்க

யாதும்ஒரு செயலில்லா
மையில்இறைஞ்சி எதிரகன்றார். #1688

அத்தேவ மங்கையர்கள் நாயனாரின் அருகில் வந்து காம வயப்பட்ட காதலை உடையவர் செய்யும் வஞ்சனைகளை யெல்லாம் செய்யவும், தம் நிலையினின்று பிறழாத ஒருமைப்பட்ட உணர்வையுடைய பெரியவரான நாயனாரை, அந்நிலையினின்றும் ஒரு சிறிதும் மாற்றுதற்கு வேறு எவ்விதமான செயலும் செய்ய இயலாமையால், இறைஞ்சி அங்கிருந்தும் அகன்று சென்றனர்.

விளக்கவுரை

****

இந்நிலைமை உலகேழும்
எய்தஅறிந் தியல்பேத்த
மன்னியஅன் புறுபத்தி
வடிவான வாகீசர்
மின்னிலவும் சடையார்தம்
மெய்ப்பொருள்தான் எய்தவரும்
அந்நிலைமை அணித்தாகச்
சிலநாள்அங் கமர்ந்திருந்தார். #1689

இந்நிலைமையை ஏழுலகமும் அறிந்து வழிபட நிலைபெற்ற அன்பு பொருந்திய பத்தியின் வடிவாய திருநாவுக்கரசர், ஒளி பொருந்திய சடையையுடைய சிவபெருமானின் மெய்ப் பொருளைப் பொருந்த வருகின்ற அந்நிலைமை அணிமையுடையதாக, சிலநாள்கள் அத்திருப்பதியில் வீற்றிருந்தருளினர்.

விளக்கவுரை

****

மன்னியஅந் தக்கரணம்
மருவுதலைப் பாட்டினால்
தன்னுடைய சரணான
தமியேனைப் புகலூரன்
என்னையினிச் சேவடிக்கீழ்
இருத்திடும்என் றெழுகின்ற
முன்னுணர்வின் முயற்சியினால்
திருவிருத்தம் பலமொழிந்தார். #1690

இறைவரின் திருவடியில் நிலைபெற்ற அறிவு இச்சை செயற்பாடுகளின் சேர்க்கையால், `தம்மைப் புகலாக அடைந்த தமியேனான என்னைப் புகலூர் இறைவர் இனித் தமது சேவடியின் கீழ் இருக்கச் செய்வார்`

என்ற கருத்துடன் முன்னைப் பிறவியின் உணர்வு சார, அவ்வுள்ள எழுச்சியினால் பல திருவிருத்தங்களைப் பாடினார்.

விளக்கவுரை

இக் கருத்துடைய திருப்பதிகம் `தன்னைச் சரண் என்று` *(தி.4 ப.105)* எனத் தொடங்கும் திருவிருத்தமாகும். இது பொழுது அருளிய திருவிருத்தங்கள் பல எனினும், எவையும் கிடைத்தில.

மண்முதலாம் உலகேத்த
மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா உன்னடிக்கே
போதுகின்றேன் எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த
ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ்
ஆண்டஅர சமர்ந்திருந்தார். **#1691**

இம் மண்ணுலகம் முதலான எல்லா உலகங் களும் போற்றுமாறு நிலைபெறும் திருத்தாண்டக யாப்பிலமைந்ததும், `புண்ணியா! உன் அடிக்கே போதுகின்றேன்!` எனும் நிறைவு உடையதுமான பதிகத்தைப் பாடிச், சென்று அடைதற்கரிய சிவப் பேறாகும் மேலாய ஞானவடிவேயான சிவபெருமானின் சேவடிக்கீழ் திருநாவுக்கரசர் மிகு விருப்புடன் இருந்தருளினார்.

விளக்கவுரை

இந்நிறைவுடைய திருத்தாண்டகம் `எண்ணுகேன்` *(தி.6 ப.99)* எனத் தொடங்கும் முதல் திருப்பாடல்ஆகும். இப்பதிகப் பாடல் தொறும் அடிகள் `உன்னடிக்கே போதுகின்றேன்` என்னும் தொடரை அமைத்துப் பாடியுள்ளார். அவர்தம் திருவாக்காக நிறைவாக அமைந்த திருப்பதிகம் இதுவாகும்.

திருநாவுக்கரசர் செய ஆண்டு பங்குனித் திங்கள் உரோகிணி விண்மீன் கூடிய நன்னாளில் *(கி.பி.575 மார்ச்சு, ஏப்ரல்)* தோன்றினார் எனவும், நள ஆண்டு சித்திரைத் திங்கள் *12* ஆம் நாள் *(கி.பி.656 ஏப்ரல் 24*ஆம் நாள்*)* தேய்பிறை *10* ஆம் நாள் ஞாயிறு சதய விண்மீன் நாள் அன்று திருப்புகலூர்ப் புண்ணியனார் அடிசேர்ந்தார் எனவும் சாமிக்கண்ணு பிள்ளை அவர்களின் எபிமரீஸ் கூறுகின்றது என, நாயன்மார்கள் வரலாற்றில் பல்வகைச் செய்திகள் என்ற நூலில் வித்துவான் மா.சிவகுருநாதபிள்ளை எழுதியுள்ளார்.

வானவர்கள் மலர்மாரி
மண்நிறைய விண்ணுலகின்

மேனிறைந்த ஐந்துபே
ரியவொலியும் விரிஞ்சன்முதல்
யோனிகளா யினஎல்லாம்
உளநிறைந்த பெருமகிழ்ச்சி
தானிறைந்த சித்திரையிற்
சதயமாந் திருநாளில். **#1692**

இவ்வாறு திருநாவுக்கரசர் அமர்ந்திருந்த சித்திரைத் திங்கள் சதயத் திருநாளில், தேவர்கள் சொரிந்த மலர் மழையானது இவ்வுலகில் நிறைய விண்ணுலகில் எங்கும் ஐவகைத் துந்துபிகளின் ஒலிகளும் ஒலிக்கலாயின. நான்முகன் முதலாக அமைந்த எழுவகைப் பிறப்புள் தோன்றிய எல்லா உயிர்களும் தமக்குள் உயிர்க்கு உயிராய் நிறைவாகப் பெற்ற பெருமகிழ்ச்சி தழைய நின்றன.

விளக்கவுரை

****

அடியனேன் ஆதரவால்
ஆண்டஅர சின்சரிதப்
படியையான் அறிந்தபடி
பகர்ந்தேன்அப் பரமுனிவன்
கடிமலர்மென் சேவடிகள்
கைதொழுது குலச்சிறையார்
முடிவில்புகழ்த் திருத்தொண்டின்
முயற்சியினை மொழிகின்றேன். **#1693**

ஆண்ட அரசின் வரலாற்றை, அம்முனிவர் பெரு மானின் மணமுடைய மலர் என மென்மையான சிவந்த திருவடி களைக் கையாரத் தொழுது அத்துணையினால் அவருடைய அடிய வனாகிய யான் அறிந்த வகையால் எடுத்துரைத்தேன். அம்மேலான முனிவரின் மணமுடைய மலர் போன்ற மென்மையான திருவடி களைக் கையாரத் தொழுது, இனிக் குலச்சிறை நாயனாரின் அளவற்ற பெருமையுடைய திருத்தொண்டின் செயற்றிறனைச் சொல்லத் தொடங்குகின்றேன்.

விளக்கவுரை

****

குலச்சிறை நாயனார் புராணம்

பன்னு தொல்புகழ்ப் பாண்டிநன் னாட்டிடைச்
செந்நெ லார்வயல் தீங்கரும் பின்னயல்
துன்னு பூகப் புறம்பணை சூழ்ந்தது
மன்னு வண்மையி னார்மண மேற்குடி. **#1694**

சான்றோர்களால் எடுத்துச் சொல்லப்பட்ட பழமையான புகழினை உடைய நன்மை மிக்க பாண்டி நாட்டில், செந்நெல் நிரம்பிய வயல்களும், இனிய கரும்புகளும், அவற்றின் அருகே செறிந்து நிற்கும் கமுகும் (பாக்கு மரங்களும்) கொண்ட பிற இடங்களும் சூழ உள்ளதும் நிலைபெற்ற வள்ளன்மையுடையார் இருந்தருள்வதுமாய நகரம், மணமேற்குடி என்பதாகும்.

விளக்கவுரை

பன்னு - எடுத்துச் சொல்லப்படுகின்ற, புறம்பணை - நகர்ப்புறத்தே அமைந்துள்ள இடம். வண்மையினார் - வள்ளன்மை யுடையார். மணமேற்குடி - புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அறந்தாங்கி வட்டத்தில் உள்ளது.

அப்ப திக்கு முதல்வர்வன் றொண்டர்தாம்
ஒப்ப ரும்பெரு நம்பிஎன் றோதிய
செப்ப ருஞ்சீர்க் குலச்சிறை யார்திண்மை

வைப்பி னால்திருத் தொண்டில் வழாதவர்.
#1695

அந்நகரின் முதல்வர், செயற்கரிய சிறப்பினை யுடைய குலச்சிறையார் ஆவர். அவர் `வன்றொண்டன்` எனும் பெயருடைய நம்பியாரூரரால், ஒப்பற்ற `பெரு நம்பி` எனப் போற்றப் பெற்றவர். தம்திருமனத்து இருக்கும் உறைப்பினால் (திண்மையால்) திருத்தொண்டு புரியும் திறத்தினின்றும் வழுவாதவர்.

விளக்கவுரை

நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகையில் `பெருநம்பி குலச்சிறை தன் அடியார்க்கும் அடியேன்` *(தி.7 ப.39 பா.4)* எனப் போற்றப் பெற்ற சிறப்பை நினைவு கூர்ந்து சேக்கிழார் கூறிய பகுதி இதுவாகும். பெருநம்பி - குலத் தலைமைப் பெயர் என்பர். திண்மை வைப்பினால்- மனத்தின்கண் கொண்ட திண்மையால் *(உறைப்பினால்)*.

கார ணங்கண் ணுதற்கன்பர் என்னவே
வார மாகி மகிழ்ந்தவர் தாள்மிசை
ஆரும் அன்பொடு வீழ்ந்தஞ் சலிமுகிழ்த்

தீர நன்மொழி எய்த இசைத்துளார். **#1696**

அவர், இறைவனின் இன்னருளைப் பெறுதற்குச் சிவனடியார்களே காரணமாவர் எனும் துணிவால், அவ்வடியவர்க ளிடத்து அன்பு கொண்டு மகிழ்ந்து, அவர்களுடைய திருவடிகளில் மிகுந்த அன்பொடும் வணங்கி, கைகள் கூப்பித் தொழுது, அன்புகலந்த இனிய நன்மொழிகளைப் பொருந்தச் சொல்லி வாழ்பவர்.

விளக்கவுரை

வாரமாகி - அன்புகொண்டு. ஈரநன்மொழி - அன்பு கலந்த இனியமொழி. `இன்சொலால் ஈரம் அளைஇப்` *(குறள், 91)* என்னும் திருக்குறளும்.

குறியில் நான்கு குலத்தினர் ஆயினும்
நெறியின் அக்குலம் நீங்கினர் ஆயினும்
அறிவு சங்கரற் கன்பர் எனப்பெறில்
செறிவு றப்பணிந் தேத்திய செய்கையார். **#1697**

வினைவழிப்பட்ட நிலையில் தோன்றிய நான்கு குலத்தவர்களாக இருப்பினும், அவ்வவ்வொழுக்க நெறியினின்றும் நீங்கியவர்களாக இருப்பினும், சிவபெருமானிடத்தில் நிலைபெற்ற அறிவுடையவர்கள் என அறியப் பெறின், அவர்களை மனம் பொருந் தப் பணிந்து வணங்கும் செய்கையினை உடையார்.

விளக்கவுரை

குறி- குறிக்கொள்ளப்பட்ட; அதாவது வினைவழிப் பட்ட குறிப்பின்படி. எனவே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனக் குறிக்கப்படும் நால்வகைக் குலங்களில் அவ்வவ் உயிர்களும் தோன்றுதற்குக் காரணம் வினை வழியேயாம். `தவம் செய்சா தியினில் வந்து, பரசம யங்கள் செல்லாப் பாக்கியம் பண்ணொ ணாதே` *(சிவ. சித்தி. சூ.2 பா.90)* என்னும் ஞானநூலும். உயர் குலத்தில் தோன்றி னால் மட்டும் அக்குலத்தவர் என மதிப்பதற்கில்லை. அவ்வக் குலத்திற் குரிய பண்புகளைக் கொண்டிருக்கும் பொழுதே அவ்வக் குலத்தவர் என மதிக்கப்படுவர். `ஒழுக்கம் உடைமை குடிமை` *(குறள், 133)* `நலத்தின்கண் நார்இன்மை தோன்றின் அவனைக் குலத்தின்கண் ஐயப் படும்` *(குறள், 958)* எனவரும் திருக்குறள்களும் காண்க. சங்கரன் எனும் பெயர் சிவபெருமானைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்றாகும். சம் - சுகம், கரன் - தருபவன். எனவே இன்பம் தருதலால் சங்கரன் எனப்படுவன். அறிவு சங்கரர்க்கு அன்பர் எனப் பெறின் - தம் அறிவைச் சங்கரன் இடத்திலேயே வைத்து அன்பு செலுத்துவோர் எனில். செறிவுற - மனம் பொருந்த. பணிதல் மனத்தானும், சொல்லா னும், உடலானும் பணிதல்.

உலகர் கொள்ளும் நலத்தினர் ஆயினும்

அலகில் தீமையர் ஆயினும் அம்புலி
இலகு செஞ்சடை யார்அடி யாரெனில்
தலமு றப்பணிந் தேத்துந் தகைமையார். **#1698**

உலகினர் தாம் சிறந்தனவெனக் கொள்ளும் நலங்களை உடையவராயினும், அந்நலங்களின்றி அளவற்ற தீமை களை உடையராயினும், பிறை விளங்கும் செஞ்சடையினை உடைய சிவபெருமானின் அடியவர்களாய் இருப்பின், அன்னோரை நிலம் உற வீழ்ந்து வணங்கிப் போற்றும் தன்மையினை உடையார்.

விளக்கவுரை

உலகர் - ஈண்டு உயர்ந்தோர் மேற்றாம். அவர்கள் கொள்ளும் நலங்களாவன: `ஒழுக்கம், அன்பு, அருள் முதலாய நலங்களாம்`.

ஒழுக்கமன் பருளா சாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம்தா னங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவ டக்கம் அறிவொடர்ச் சித்த லாதி
இழுக்கிலா அறங்க ளானால் இரங்குவான் பணிய றங்கள்.

(சிவஞா. சித்தி.சூ.2 பா.23) எனவரும் ஞானநூற் கூற்றும் காண்க.

நலமில ராக நலமதுண் டாக
நாடவர் நாடறி கின்ற
குலமில ராகக் குலமதுண் டாகத்
தவம்பணி குலச்சிறை பரவும்
கலைமலி கரத்தன் மூவிலை வேலன்
கரியுரி மூடிய கண்டன்
அலைமலி புனல்சேர் சடைமுடி யண்ண
லாலவா யாவது மிதுவே. *(தி.3 ப.120 பா.6)*

எனவரும் திருஞானசம்பந்தர் திருவாக்கினை இவ்விருபாடல்களும் முகந்து நிற்கின்றன.

பண்பின் மிக்கார் பலராய் அணையினும்
உண்ப வேண்டி ஒருவர் அணையினும்
எண்பெ ருக்கிய அன்பால் எதிர்கொண்டு
நண்பு கூர்ந்தமு தூட்டும் நலத்தினார். **#1699**

இப்பெருந்தகையார், குணத்தில் மிக்கவர்கள் பெருங் கூட்டத்தாராய் உணவு வேண்டி வரினும், அன்றி ஒருவராய் உணவு வேண்டி வரினும், எண்ணுதற்கரிய அன்பினால் எதிர் கொண்டு அழைத்து, அவரொடு நட்புமிக்குத் திருவமுது ஊட்டும் நலத்தினை உடையவர்.

விளக்கவுரை

உண்பவேண்டி எனும் தொடரை முன்னரும் கூட்டி உரைக்க.

எண்பெருக்கிய - எண்ணுதலில் மிகுதிப்பட்ட; எண்ணற்கரிய,
கணங்களாய் வரினுந் தமியராய் வரினு
மடியவர் தங்களைக் கண்டால்
குணங்கொடு பணியுங் குலச்சிறை குலாவுங்
கோபுரஞ் சூழ்மணிக் கோயில்
மணங்கமழ் கொன்றை வாளரா மதியம்
வன்னிவன் கூவிள மாலை
அணங்குவீற் றிருந்த சடைமுடி யண்ண
லாலவா யாவது மிதுவே. *(தி.3 ப.120 பா.4)*
எனவரும் திருஞானசம்பந்தரின் திருவாக்கினை இப்பாடல் முகந்து நிற்கின்றது.

பூதி கோவணம் சாதனத் தாற்பொலிந்
தாதி தேவர்தம் அஞ்செழுத் தாமவை
ஓது நாவணக் கத்தால் உரைப்பவர்
பாதம் நாளும் பரவிய பண்பினார். **#1700**

அடியவர், திருநீறு, கோவணம், உருத்திராக்கம், ஆகிய சிவவேடத்தால் பொலிவு பெற்று, யார்க்கும் மூல காரணமாய் நிற்கும் சிவபெருமானின் திருவைந்தெழுத்தை நாவணங்கி, ஓதி உரைப்பவராயின், அவர் திருவடிகளை நாளும் போற்றிவரும் பண்பினை உடையவர்.

விளக்கவுரை

பூதி - திருநீறு. இதன் சிறப்புக் கருதி `வி` என்னும் எழுத் துடன் கூட்டி, `விபூதி` என்றும் அழைப்பர். விபூதி - சிறப்பு மிக்க செல்வம் :அஃதாவது வீடு பேற்றுச்செல்வம்.
சாதனம்- உருத்திராக்கம்.
திருவைந்தெழுத்து ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைக் குறித் தலின் `அஞ்செழுத்தாம் அவை` எனப் பன்மைப்படக் கூறினார். `அஞ்சுபதம்` *(தி.7 ப.83 பா.1)* என ஆளுடையநம்பிகளும் குறிப்பர்.
`சிவனரு ளாவி திரோதமல மைந்தும்
அவனெழுத் தஞ்சி னடைவாம்` -உண்மை வி. *42*
எனவரும் உண்மை விளக்கம் இதற்குப் பொருள் விளக்கம் தரும்.
நாவணங் கியல்பா மஞ்செழுத் தோதி
நல்லராய் நல்லியல் பாகும்
கோவணம் பூதி சாதனங் கண்டாற்
றொழுதெழு குலச்சிறை போற்ற
ஏவணங் கியல்பா மிராவணன் றிண்டோ
ளிருபது நெரிதர வூன்றி
ஆவணங் கொண்ட சடைமுடி யண்ண

லாலவா யாவது மிதுவே. *(தி.3 ப.120 பா.8)*
எனவரும் திருஞானசம்பந்தரின் திருவாக்கினை இப்பாடல் முகந்து நிற்கின்றது.

இன்ன நல்லொழுக் கத்தினார் ஈறில்சீர்த்
தென்ன வன்நெடு மாறற்குச் சீர்திகழ்
மன்னு மந்திரி கட்குமே லாகியார்
ஒன்ன லர்ச்செற் றுறுதிக்கண் நின்றுளார். **#1701**

இவ்வாறாகிய நல்லொழுக்கத்தில் தலைநின்ற வராய குலச்சிறையார், முடிவில்லாத சிறப்பினையுடைய பாண்டி மன்னராம் நின்றசீர் நெடுமாறனாருக்கு அமைந்த சிறப்பு மிக்க அமைச்சர்களுள் மேம்பட்டவராய் வாழ்ந்தவராவர். இவர் பகை வர்களை அழித்து அரசருக்கு உறுதிபயக்கும் நிலையில் பணிபுரிந்து வருபவர்.

விளக்கவுரை

ஞானசம்பந்தரின் திருக்கரம்படத் திருநீறு பூசப்பெறும் பாங்கும், வைகைக் கரையில், `வாழ்க அந்தணர்` எனத் தொடங்கும் திருப்பாசுரத்தைச் செவிமடுக்கும் தவமும், பெண்ணிற் பெருந்தக்க மங்கையர்க்கரசியாரை வாழ்க்கைத் துணை நலமாகக் கொண்டிருக்கும் பெரும்பேறும், உழையிருந்து உறுதி கூறும் குலச்சிறையாரை அமைச் சராகக் கொண்டிருக்கும் பேறும், இவற்றின் பயனாக வீடு பேற்றை அடைந்துய்யும் பெருவாழ்வினைப் பெறும் புண்ணியமும் உடைய ராதல் பற்றி, `ஈறில் சீர்த் தென்னவன்` என்றார். இம்மன்னன் நின்றசீர் நெடுமாறன் காலம் கி.பி. *640-680* வரை ஆகும். ஒன்னலார் - பகைவர்.

ஆய செய்கைய ராயவர் ஆறணி
நாய னார்திருப் பாதம் நவின்றுளார்
பாய சீர்புனை பாண்டிமா தேவியார்
மேய தொண்டுக்கு மெய்த்தொண்டர் ஆயினார். **#1702**

இவ்வாறாய செயற்பாட்டினை உடையராகிய அப்பெருந்தகையார், கங்கையைத் திருச்சடையில் கொண்ட சிவபெரு மானாரின் திருவடிகளையே போற்றிவரும் இயல்பினை உடையார். யாண்டும் நிலவிய சிறப்பினை உடைய மங்கையர்க்கரசியாரின் பொருந்திய திருத்தொண்டினுக்கு உறுதுணையாக நிற்கும் உண்மைத் தொண்டரும் ஆவர்.

விளக்கவுரை

பாய - பரந்த: நிலவிய.

புன்ன யத்தரு கந்தர்பொய் நீக்கவும்
தென்னன் நாடு திருநீறு போற்றவும்

மன்னு காழியர் வள்ளலார் பொன்னடி
சென்னி சேர்த்தி மகிழ்ந்த சிறப்பினார். **#1703**

இழிந்த குணம் உடைய சமணர்களின் பொய்ம்மைகளை நீக்கவும், பாண்டியநாடு திருநீற்றுநெறியினைப் போற்றி வளர்க்கவும், பொருந்திய காழிப்பதியின் வள்ளலாராகிய திருஞானசம்பந்தரின் அழகிய திருவடிமலர்களைத் தம் தலையில் சூடி மகிழவும் வாழ்ந்த சிறப்பினை உடையவர்.

விளக்கவுரை

புன்னயம் - இழிந்த குணம். அருகந்தர் - சமணர்.

வாதில் தோற்ற அமணரை வன்கழுத்
தீது நீங்கிட ஏற்றுவித் தார்திறம்
யாது போற்றினேன் மேலினி ஏத்துகேன்
வேத நீதி மிழலைக் குறும்பர்தாள். **#1704**

பாண்டியன் உற்ற வெப்பு நீக்கம் முதலாக நேர்ந்த மூவகை வாதங்களிலும் தோல்வியுற்ற சமணர்களை, வலிய கழுமரத்தில், அவர்கள் இதுகாறும் செய்து வந்த தீமைகளினின்றும் நீங்க, அதன்கண் ஏற்றுவித்த குலச்சிறையாரின் ஆற்றலை, இதுகாறும் எவ்வகையில் போற்றி செய்து வணங்கினேன்? ஒருவகையிலும் போற்றி செய்தேனல்லேன். இனி நான்மறைகளிலும் கூறப்பெற்ற அறங்களைப் போற்றி மகிழும் பெருமிழலைக் குறும்பரின் திருவடிகளைப் போற்றத் தொடங்குகின்றேன்.

விளக்கவுரை

சமணர்கள் ஞானசம்பந்தரோடு ஏற்ற வாதங்கள் மூன்றாம். அவை பாண்டியனின் வெப்பு நீக்கலுற்றமை, நெருப்பி லிட்ட ஏடு பசுமையாக இருக்கச் செய்தமை, ஆற்றிலிட்ட ஏடு எதிர் வரச் செய்தமை ஆகிய மூன்றுமாம். இம்மூன்று வாதங்களிலும் தோற்ற தோடன்றி, அவர்களின் எண்ணமும் சொற்களும் செய்கைகளும் கொடியனவாகவும் இருத்தலின் அத்தகைய தீங்குகளினின்றும் அவர்கள் நீங்குதற்கு அவர்களே தாம் கூறியவாறு கழுவேற்றுவித் தமையின், `தீது நீங்கிட ஏற்றுவித்தார்` என்றார். `நினைந்துருகும் அடியாரை நையவைத்தார், நில்லாமே தீவினைகள் நீங்கவைத்தார்` *(தி.6 ப.14 பா.1)* எனவரும் திருவாக்கும் காண்க.

பெருமிழலைக்குறும்ப நாயனார் புராணம்

சூத நெருங்கு குலைத்தெங்கு
பலவு பூகஞ் சூழ்புடைத்தாய்
வீதி தோறும் நீற்றினொளி
விரிய மேவி விளங்குபதி
நீதி வழுவா நெறியினராய்
நிலவுங் குடியால் நெடுநிலத்து
மீது விளங்கும் தொன்மையது
மிழலை நாட்டுப் பெருமிழலை. **#1705**

மாவும், நெருங்கிய குலைகளையுடைய தென்னை மரங்களும், பலாவும், பாக்கு மரங்களும், சூழ்ந்த சுற்றுச் சூழலை உடையதாயும். வீதிகள் தோறும் திருநீற்றின் ஒளி மிகப்பொருந்தி விளங்குவதாயும், அறநெறியினின்றும் வழுவாது விளங்கும் குடி மக்கள் தன்பால் நிரம்ப இருப்பதாயும் உள்ள ஊர், மிகப் பழையதான மிழலை நாட்டின்கண் உள்ள பெருமிழலை என்னும் ஊராகும்.

விளக்கவுரை

பெருமிழலை - புதுக்கோட்டைக்குத் தென்மேற்கே, ஏறத்தாழப் பதினைந்து கிமீ. தொலைவில், பேரையூருக்கு அருகில் வெள்ளாற்றின் தென்கரையில் உள்ளது. சோழ நாட்டில் திருவீழி மிழலை என்ற பதி ஒன்று உள்ளது. அதனின்றும் வேறு பிரித்தறிய, `மிழலை நாட்டுப் பெருமிழலை` என்றார். சூதம் - மாமரம். குறும்பர் - மரபுப் பெயர். இயற்பெயர் தெரிந்திலது.

அன்ன தொன்மைத் திருப்பதிக்கண்
அதிபர் மிழலைக் குறும்பனார்
சென்னி மதியம் வைத்தவர்தம்
அடியார்க் கான செய்பணிகள்
இன்ன வண்ணம் என்றவர்தாம்
உரையா முன்னம் எதிரேற்று
முன்னம் உவந்து செய்வாராய்
முதிரும் அறிவின் பயன்கொள்வார். **#1706**

அத்தகைய பழமையாகிய திருநகரத்திற்குக் குறுநில மன்னராக விளங்குபவர் மிழலைக் குறும்பனார் ஆவர். அவர், தலை யில் பிறையைச் சூடிய இறைவனின் அடியவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளையெல்லாம் இவையிவை இக் காலத்திற்கு வேண்டு மென அவர்தாம் கூறும் முன்னமேயே குறிப்பறிந்து, விருப்புடன் ஏற்றுச் செய்து வருவாராய்த், தம்மிடத்துள்ள முதிர்ந்த அறிவின் பயனை

அடைவார்.

விளக்கவுரை

`அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய் தந்நோய்போல் போற்றாக் கடை` *(குறள், 315)* `அறிவுடையார் ஆவ தறிவார்` *(குறள், 427)* என்றெல்லாம் வள்ளுவர் கூறுதற்கிணங்கச் செய் வார் என்பார். `அறிவின் பயன் கொள்வார்` என்றார். இவ்வரிய பணி களையும் அவ்வவ்வடியவர் தம் குறிப்பறிந்து செய்து வருபவர் என் பார் `அவர் தாம் உரையா முன்னம் எதிரேற்றுச் செய்வார்` என்றார்.

தொண்டர் பலரும் வந்தீண்டி
உண்ணத் தொலையா அமுதூட்டிக்
கொண்டு செல்ல இருநிதியம்
முகந்து கொடுத்துக் குறைந்தடைவார்
வண்டு மருவுங் குழலுமையாள்
கேள்வன் செய்ய தாளென்னும்
புண்ட ரீகம் அகமலரில்
வைத்துப் போற்றும் பொற்பினார். **#1707**

அடியவர் பலரும் வந்து கூடி உண்ண உண்ணத் தொலையாதவாறு அமுது ஊட்டியும், அவர்கள் தத்தமக்கெனக் கொண்டு செல்லுதற்கு வேண்டிய பெருஞ்செல்வங்களை முகந்து கொடுத்தும், தம்மைச் சிறியராக வைத்து நடந்து கொள்ளுமவர், வண்டுகள் பொருந்திய கூந்தலையுடைய உமையம்மையாரின் கணவராகிய சிவபெருமானின் சிவந்த திருவடிகளாகிய தாமரை மலர்களை, மனமாகிய மலரில் வைத்துப் போற்றும் பெற்றியார்.

விளக்கவுரை

குறைந்து அடைவார் - தாழ்வெனும் தன்மையொடு அடியவரிடத்துப் பணிந்து நடப்பார்.

இத்தன் மையராய் நிகழுநாள்
எல்லை இல்லாத் திருத்தொண்டின்
மெய்த்தன் மையினை உலகறிய
விதியால் வணங்கி மெய்யடியார்
சித்தம் நிலவுந் திருத்தொண்டத்
தொகைபா டியநம் பியைப்பணிந்து
நித்தன் அருள்பெற் றவர்பாதம்
நினைக்கும் நியமத் தலைநின்றார். **#1708**

இவ்வாறாய தன்மையுடையவராய் வாழ்கின்ற நாள்களில், எல்லையற்ற திருத்தொண்டின் உண்மை நிலையினை உலகர் அறியும் பொருட்டு,

அடியவர்தம் திருவுள்ளத்தில் நீங்காது நிலைபெற்று விளங்கும் `திருத்தொண்டத் தொகை` என்னும் திருப் பதிகத்தினை அருளிய நம்பியாரூரரைப் பணிந்தும் பெருமானின் திருவருளைப் பெற்று நிற்கும் அப்பெருமகனாரின் திருவடிகளை நாளும் நினைந்தும் வரும் கடப்பாடுடையராயினார்.

விளக்கவுரை

நித்தன் - என்றும் அழியாத சிவபெருமான்.

மையார் தடங்கண் பரவையார்
மணவா ளன்தன் மலர்க்கழல்கள்
கையால் தொழுது வாய்வாழ்த்தி
மனத்தால் நினைக்குங் கடப்பாட்டில்
செய்யாள் கோனும் நான்முகனும்
அறியாச் செம்பொன் தாளிணைக்கீழ்
உய்வான் சேர உற்றநெறி
இதுவே என்றன் பினில்உய்த்தார். **#1709**

கரிய மைபொருந்திய, பெரிய கண்களை உடைய பரவையாரின் கணவராகிய நம்பியாரூரரின் மலரனைய திருவடி களைக் கைகளால் தொழுதும், வாயினால் வாழ்த்தியும், மனத்தினால் நினைந்தும் வரும் கடப்பாட்டில் நின்று, திருமகளின் கணவராய திருமாலும், அவர்தம் மகனாரான நான்முகனும் அறிய இயலாத சிவந்த பொன் போன்ற திருவடிகளை அடைதற்கு, உரிய நெறி இதுவேயாகும் என்று உட்கொண்டு, அன்பினால் அவரைப் போற்றி வருவாராயினார்.

விளக்கவுரை

செய்யாள் - திருமகள்.

நாளும் நம்பி ஆரூரர்
நாமம் நவின்ற நலத்தாலே
ஆளும் படியால் அணிமாதி
சித்தி யான அணைந்ததற்பின்
மூளும் காத லுடன்பெருக
முதல்வர் நாமத் தஞ்செழுத்தும்
கேளும் பொருளும் உணர்வுமாம்
பரிசு வாய்ப்பக் கெழுமினார். **#1710**

நாள்தோறும் நம்பியாரூரரின் திருப்பெயரைப் போற்றி வந்த நன்மையின் காரணமாக, தாம் எவற்றையும் ஏவல் கொள்ளும் தன்மையால், அணிமா முதலிய எண்வகைச் சித்திகளும் கைவரப் பெற்றவராய், அதன்பின் மேன்மேலும் மூண்டு எழும் அன்பு

மேலீட்டால், முழுமுதற் பெருமானாகிய சிவபெருமானின் திருப் பெயராகிய திருவைந்தெழுத்தையே தமக்குரிய சுற்றமும் பொருளும் உணர்வும் ஆகும் எனக்கொண்டு வாழ்ந்து வரும் பெற்றியரு மாயினார்.

விளக்கவுரை

நம்பியாரூரரின் திருப்பெயரைப் போற்றி வந்த நலத்தால் எண்வகைச் சித்திகளும் கைவரப் பெற்றதோடு, இறைவ னின் திருவைந்தெழுத்தே சுற்றமும் பொருளும் உணர்வுமாம் எனும் மனநலத்தையும் பெற்றார். நம்பியாரூரர் எனும் திருப்பெயரில் ஒற்றெழுத்தை நீக்க ஐந்தெழுத்தாகின்றது. இவ்வாற்றான் அத்திருப் பெயர் இவ்வடியவர்க்கு இத்துணைப்பேற்றையும் நல்கியது.

எண்வகைச் சித்திகள்: 1. அணிமா - மிகப் பெரியதாய ஒன்றை அணுவாக்குதல். 2. மகிமா - மிகச் சிறியதாகிய ஒன்றை மிகப் பெரிதாக் குதல். 3.லகிமா - எடுப்பதற்குக் கனமாக இருப்பதொன்றை எளிதாக் குதல் (இலகுவாக்குதல்). 4. கரிமா - எடுப்பதற்கு மிக எளிதாக இருப்ப தொன்றை மிகப்பளுவாக்குதல். 5. பிராப்தி - வேண்டுவன அடைதல். 6. பிராகாமியம் - விரும்பியவாறு நுகர்தல். 7. ஈசத்துவம் - யாவரையும் ஆட்சி கொள்ளுதல். 8. வசித்துவம் - எவற்றையும் தன்வயமாக்குதல். சுற்றம் - உடற்சார்பு. பொருள் - உலகச் சார்பு. உணர்வு - உயிர்ச் சார்பு. இம்முச் சார்புகளுக்கும் துணையாயது திருவைந்தெழுத்தேயாம் எனக் கொண்டு ஒழுகினார் என்பார். `அஞ்செழுத்தும், கேளும், பொருளும், உணர்வும் ஆம் பரிசு வாய்ப்பக் கெழுமினார்` என்றார்.

இன்ன வாறே இவர்ஒழுக
ஏறு கொடிமேல் உயர்த்தவர்தாம்
பொன்னின் கழல்கள் மண்ணின்மேல்
பொருந்த வந்து வழக்குரைத்து
மன்னும் ஓலை அவைமுன்பு
காட்டி ஆண்ட வன்றொண்டர்
சென்னி மதிதோய் மாடமலி
கொடுங்கோள் ஊரைச் சேர்வுற்றார். **#1711**

இவ்வாறான நெறியில் இவ்வடியவர் ஒழுகிவர, ஆனேற்றுக் கொடியை உயர்த்தி நிற்கும் சிவபெருமான், தம் பொன் போன்ற இனிய திருவடிகள் இம்மண்ணில் பொருந்த வந்து வழக்குரைத்து, நிலைபெற்ற மூல ஓலையை அவையத்தார் முன் காட்டித், தடுத்தாட்கொள்ளப் பெற்ற வன்றொண்டர், பிறை தோயுமாறு உயர்ந்த மாடங்கள் நிறைந்த கொடுங்கோளூரை அடைந்தார்.

விளக்கவுரை

****

அஞ்சைக் களத்து நஞ்சுண்ட
அமுதைப் பரவி அணைவுறுவார்
செஞ்சொல் தமிழ்மா லைகள்மொழியத்
தேவர் பெருமான் அருளாலே
மஞ்சில் திகழும் வடகயிலைப்
பொருப்பில் எய்த வரும்வாழ்வு
நெஞ்சில் தெளிய இங்குணந்தார்
நீடு மிழலைக் குறும்பனார். **#1712**

கொடுங்கோளூரைச் சேர்ந்த வன்றொண்டர், அங்குள்ள திருவஞ்சைக்களத்தில் எழுந்தருளியிருக்கும் நஞ்சுண்ட பெருமானை வழிபட்டு வருபவர், செஞ்சொல் தமிழ் மாலையாகிய தேவாரத் திருப்பதிகத்தைப் பாடியருளித், தேவர்க்கும் தேவனாய பெருமானின் திருவருளினால் மேகங்கள் சூழும் வடகயிலைமலை யைச் சேர இருக்கும் வாழ்வினை, பெருமிழலைக் குறும்பனார் தாம் இருந்த இடத்தில் இருந்தவாறே தம் யோக நெறியால் உணர்ந்தார்.

விளக்கவுரை

திருவஞ்சைக்களம் சென்ற ஆரூரர், திருக்கோயிலை வலம் வருங்கால் பாடிய பதிகம், `தலைக்குத் தலைமாலை` *(தி.7 ப.4)* எனத் தொடங்கும் திருப்பதிகமாகும். அப்பதிகத்தில், `வெறுத்தேன் மனை வாழ்க்கை` *(தி.7 ப.100)* என விண்ணப்பித்துக் கொண்டமை யைத் திருவுளம் பற்றி இறைவன் வெள்ளையானையை அனுப்ப, அதன்மீது இவர்ந்து கயிலைக்குச் சென்றார். இவ்வரலாற்றை வெள்ளானைச் சருக்கத்தில் *(தி.12 சரு.13 பா.39, 40)* விரிவாகக் காணலாம்.

இதுபொழுது பாடிய பதிகம் ஒன்றாயினும் அது கொண்டிருக் கும் பாடல்கள் பத்தாதல் நோக்கி, `செஞ்சொல் தமிழ் மாலைகள்` என்றார். ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு மாலையாக அமையும் சிறப்புடையதாம்.

மண்ணில் திகழும் திருநாவல்
ஊரில் வந்த வன்றொண்டர்
நண்ணற் கரிய திருக்கயிலை
நாளை எய்த நான்பிரிந்து
கண்ணிற் கரிய மணிகழிய
வாழ்வார் போல வாழேன்என்
றெண்ணிச் சிவன்தாள் இன்றேசென்
றடைவன் யோகத் தாலென்பார். **#1713**

இம்மண்ணில் போற்றுதற்குரிய திருநாவலூரில் தோன்றிய வன்றொண்டர், `உயிர்கள் தம்மளவில் சென்று, அடை தற்கரிய

திருக்கயிலையினை நாளைப் பொழுதில் சென்றடையுமாறு இருக்க, நான் அப்பெருமானைப் பிரிந்து கண்ணகத்திருக்கும் கருமணி கழிந்த பின்னும் இவ்வுலகில் வாழ்வார்கள் போல வாழேன்` என எண்ணி, கயிலையகத்திருக்கும் சிவபெருமானின் திருவடிகளை இன்றே, யோக வலியால் சென்றடைவேன் எனத் துணிந்தாராய்.

விளக்கவுரை

`நாதனுக்கு ஊர் நமக்கு ஊர், நரசிங்க முனையரையர் ஆதரித்து ஈசனுக்கு ஆட்செயும் ஊர் அணிநாவலூர்` *(தி.7 ப.17 பா.11)* என ஆரூரர் பாராட்டி மகிழ்தற்கும், அவர் தோன்றுவதற்கும் வாய்ந்த சிறப்பினையுடையது திருநாவலூர்.

ஆதலின், `மண்ணில் திகழும் திருநாவலூர்` என்றார். உயிர்கள் தம் நினைவாலும் செயலாலும் அடைதற்கரிய திருக்கயிலை எனவே, அவனருளாலே அவன் தாள் வணங்க நேர்தல் போல, அக்கயிலை சென்று வணங்குதற்கும் அவன் அருள் முன்னின்றருள வேண்டும் என்பது பெற்றாம்.

கண்ணகத்திருக்கும் மணி கழியின் எதனையும் காண்டற்கிய லாது, எனவே அக்கண்ணின் மணியே கண்பார்வைக்குப் பெரிதும் இன்றியமையாததாகும். நம்பியாரூரரைப் பிரிதற்கு ஆற்றாத பெருமிழலைக் குறும்பரை, இவ்வுவமை கொண்டு உரைத்திருப்பது அவருக்கு நம்பியாரூரர் மீதிருந்த ஆழ்ந்த பத்திமையை வெளிப்படுத் துகின்றது.

நாலு கரணங் களும்ஒன்றாய்
நல்ல அறிவு மேற்கொண்டு
காலும் பிரம நாடிவழிக்
கருத்துச் செலுத்தக் கபாலநடு
ஏல வேமுன் பயின்றநெறி
எடுத்த மறைமூ லந்திறப்ப
மூல முதல்வர் திருப்பாதம்
அடைவார் கயிலை முன்னடைந்தார். **#1714**

மனம் முதலிய அகக்கருவிகள் நான்கும் சிந்தையே ஆக, அகப்புறக் கருவிகளுக்கு ஆட்படாத தூய அறிவை மேற்கொண்டு, உணர்ச்சியானது சுழுமுனைவழியே உயிர்க் காற்றைச் செலுத்த, உச்சித் துளையின் வழி அக்காற்றுப் பொருந்துமாறு முன் பயின்ற நெறியினால் எடுத்த பிரணவ மந்திரமானது அவ்வாயிலைத் திறக்க, அவ்வழி மூலம் அடைவாராகி, நம்பியாரூரர் திருக்கயிலையை அடையும் முன்பே இவர் அடைந்தார்.

விளக்கவுரை

நாலுகரணங்கள் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அகக் கருவிகள். பிரம நாடி - சுழு முனை நாடி. கபால நடு - உச்சித் தலையின் நடுவிருக்கும் அடைக்கப் பட்ட துளை. எடுத்த மறை- எடுத்துச் சொல்லப்படும் திருவைந்தெழுத்து. இவ்விரண்டு பாடல்களும் ஒருமுடிபின.

பயிலச் செறிந்த யோகத்தால் பரவை கேள்வன் பாதமுறக்
கயிலைப் பொருப்பர் அடியடைந்த மிழலைக் குறும்பர் கழல்வணங்கி
மயிலைப் புறங்கொள் மென்சாயல் மகளிர் கிளவி யாழினொடுங்
குயிலைப் பொருவுங் காரைக்கால் அம்மை பெருமை கூறுவாம். **#1715**

உயிர்க் காற்றை வாங்கவும், நிறுத்தவும், விடவும் பயின்ற யோக முயற்சியால், பரவையாரின் கணவராய ஆரூரரின் திருவடிகளைப் பிரியாது பொருந்துதற்குத் திருக்கயிலையின்கண் வீற்றிருந்தருளும் சிவபெருமானின் திருவடிப் பேற்றை அடைந்த பெருமிழலைக்குறும்பரின் திருவடிகளை வணங்கிச், சாயலால் மயி லைப் புறங்கண்ட மெல்லிய மகளாராகிய, யாழையும் குயிலையும் ஒத்த சொற்களைப் பேசும் காரைக்கால் அம்மையாரது வரலாற்றை இனிக் கூறுவாம்.

விளக்கவுரை

பயிலச் செறிந்த - பல்காலும் பயின்ற பயிற்சியால் பெற்ற. இவ்வடியவரின் திருவுருவம் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருமயத்திற்கு மேற்கே அமைந்துள்ள தேவி மலையின் குடவறையில் உள்ளது. பெருமிழலைக்குறும்ப நாயனார் முத்திப்பேறு எய்திய நாள் சுந்தரர் கயிலைசென்ற நாளுக்கு முன் வரும் ஆடிச் சித்திரையாகும். இவர் காலம் சுந்தரர் காலமாகிய கி.பி. *8*ஆம் நூற்றாண்டாகும்.

காரைக்காலம்மையார் புராணம்

மானமிகு தருமத்தின்
வழிநின்று வாய்மையினில்
ஊனமில்சீர்ப் பெருவணிகர்
குடிதுவன்றி ஓங்குபதி
கூனல்வளை திரைசுமந்து
கொண்டேறி மண்டுகழிக்
கானல்மிசை உலவுவளம்
பெருகுதிருக் காரைக்கால். **#1716**

மானமிகும் அறநெறியின் வழிநின்று, வாய்மை யினின்றும் குறைவு படாத சிறப்பினை உடைய பெரு வணிகர்களின் குடிகள் நெருங்கி விளங்கும் பதி, வளைவுகளையுடைய சங்குகளைக் கடலலைகள் சுமந்து எடுத்துக் கொண்டுவர, அவை மேல் ஏறி அடுத்திருக்கும் கழிக் கானல்களில் உலவுகின்ற வளமிக்க அழகு பொருந்திய காரைக்கால் ஆகும்.

விளக்கவுரை

மானம் - பெருமை; அஃதாவது எஞ்ஞான்றும் தன் நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையுமாம்.
தருமம் - `கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதூஉம் குறை கொடாது பல்பண்டம் பகர்ந்து வீசி` *(பட்டினப். வரி 210, 211)* என்றும், `வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தமபோற் செயின்` *(குறள், 120)* என்றும் கூறப்படுகின்ற அறம்.
துவன்றி - நெருங்கி. ஊனம் - குறைவு. கூனல் வளை - வளைவுகளையுடைய சங்குகள்.

வங்கமலி கடற்காரைக்
காலின்கண் வாழ்வணிகர்
தங்கள்குலத் தலைவனார்
தனதத்த னார்தவத்தால்
அங்கவர்பால் திருமடந்தை
அவதரித்தாள் எனவந்து
பொங்கியபே ரழகுமிகப்
புனிதவதி யார்பிறந்தார். **#1717**

மரக்கலங்கள் நிறைந்த கடற்கரையிலுள்ள காரைக்காலில் வாழும் வணிகர் குலத்தலைவராகிய தனதத்தனாரின் தவத்தால், அவரிடத்தில் திருமகள் தோன்றினாள் எனக் கருதுமாறு, மேன்மேலும் மிகுகின்ற பேரழகு பொருந்திய புனிதவதியார் பிறந் தருளினார்.

விளக்கவுரை

பொங்கிய பேரழகு - வளர்ந்தமைந்த பருவத்தும் வளர்ந்து மாறியது அன்றி, மேலும் வளர்ந்து செல்லும் அழகு.

வணிகர்பெருங் குலம்விளங்க
வந்துபிறந் தருளியபின்
அணிகிளர்மெல் லடிதளர்வுற்று
அசையுநடைப் பருவத்தே
பணியணிவார் கழற்கடிமை
பழகிவரும் பாங்குபெறத்
தணிவில்பெரு மனக்காதல்
ததும்பவரும் மொழிபயின்றார். **#1718**

வணிகப் பெருமக்களின் குலம் மேலும் விளக்கம் அடையுமாறு இவ்வுலகில் வந்து பிறந்தருளிய பின்பு, அழகு பெருகும் மென்மையான திருவடிகள் தளர்நடை கற்கும் பருவத்தில், பாம்பு களை அணிந்த சிவபெருமான் திருவடிகளில் அடிமை செய்துவரும் தன்மை பெறுதற்கு அடங்காத பேரன்பு மேலோங்க வரும் மொழி களை, அவர் பயின்று வருவாராயினார்.

விளக்கவுரை

பணி - பாம்பு. பேசப்பழகும் பொழுதே இறைவனைப் பற்றிய பேச்சுக்களைப் பேசிப் பழகிவந்தார் என்பார். `மனக் காதல் ததும்பவரும் மொழி பயின்றார்` என்றார். `பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து நின்சேவடியே சேர்ந்தேன்`*(தி.11 அற்புதத்., 1)* என வரும் அம்மையாரின் திருவாக்கை முகந்து நிற்கும் பகுதி இது.

பல்பெருநற் கிளைஉவப்பப்
பயில்பருவச் சிறப்பெல்லாம்
செல்வமிகு தந்தையார்
திருப்பெருகுஞ் செயல்புரிய
மல்குபெரும் பாராட்டின்
வளர்கின்றார் விடையவர்பால்
அல்கியஅன் புடன்அழகின்
கொழுந்தெழுவ தெனவளர்வார். **#1719**

நிரம்பிய நல்ல சுற்றத்தார் அனைவரும் மகிழுமாறு, தொடர்ந்து முறையாகப் பருவங்கள் தோறும் செயத்தகும் சிறப்புகள் எல்லாவற்றையும், செல்வம் மிக்க தந்தையாராகிய தனதத்தனார் மங்கலம் பொருந்தச் செய்துவர, நிறைந்த பெரும் பாராட்டுகளுடனே வளர்கின்றவராகிய புனிதவதியார், ஆனேற்றை ஊர்தியாக உடைய,

இறைவரிடத்தில் மிகுந்த அன்புடனே கூடிய அழகின் கொழுந்து வளர்ந்தாற் போல வளர்ந்து வருவாராயினார்.

விளக்கவுரை

பருவச் சிறப்பெல்லாம் - தாலாட்டு முதல் நீராடல் வரை பெண்களின் பருவத்திற்கேற்பச் செயத்தகும் செய்கைகள். உயிர் உணர்வாக அமைவது அன்பாம். உடலளவாக அமைவது அழகாம். அம்மையாரின் வரலாற்றில் இளமையிலேயே இறைவனிடத்துக் கொண்ட அன்பு, இறவாத இன்ப அன்பாக வளர்ந்து செல்கின்றது. உடலழகோ ஒருகால எல்லையில், `இவனுக்காகத் தாங்கிய வனப்பு நின்ற தசைப் பொதி` எனக் கழிக்கப்பட்டு உதறித் தள்ளப்படுகிறது. இவ்வுயர்வு கருதியே `அன்புடன் அழகு` என ஒடு உருபை அன்புடன் சேர்த்துக் கூறினார். `ஒரு வினை ஒடுச் சொல் உயர்பின் வழித்தே` *(தொல். வேற். மயங். 8)* என்னும் தொல்காப்பியமும். அல்கிய அன்பு - நிலைபெற்ற அன்பு. `அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால், அற்குப ஆங்கே செயல்` *(குறள், 333)* என வருமிடத்தும் இப் பொருள் படுதல் காண்க.

வண்டல்பயில் வனஎல்லாம்
வளர்மதியம் புனைந்தசடை
அண்டர்பிரான் திருவார்த்தை
அணையவரு வனபயின்று
தொண்டர்வரின் தொழுதுதா
தியர்போற்றத் துணைமுலைகள்
கொண்டுநுசுப் பொதுங்குபதங்
கொள்கையினிற் குறுகினார். **#1720**

சிறுமியருடன் விளையாடும் விளையாட்டுக் களிலெல்லாம், வளரும் பிறைமதியைச் சூடிய சடையினை உடைய தேவர்களுக்குத் தலைவனாகிய சிவபெருமானின் திருவார்த்தை களையே வாயில் வருவனவாகப் பயின்றும், அடியவர்கள் வந்தால், அவர்களைத் தொழுதும், இவ்வாறாகத் தோழியர்கள் போற்ற, இணையான மார்பகங்களைக் கொண்டு இருத்தலின் இடையானது வருந்தும் பருவத்தினை அடைந்தார்.

விளக்கவுரை

வண்டல் - விளையாட்டு. திருவார்த்தை - இறைவனைப் பற்றியும், அடியவர்களைப் பற்றியும் வரும் புகழுரைகளும் போற்றி யுரைகளும் ஆம். `பேசத் திருவார்த்தையில் பெருநீளம் பெரும் கண்களே` *(தி.8 திருக்கோவையார், 109)* எனவரும் கோவையாரும் காண்க. ஒதுங்குபதம் - மார்பகங்களைத் தாங்கலாற்றாமையால் வரும் தளர்வுடைய பருவம்.

நல்லவென உறுப்புநூ
லவர்உரைக்கும் நலம்நிரம்பி
மல்குபெரு வனப்புமீக்
கூரவரு மாட்சியினால்
இல்லிகவாப் பருவத்தில்
இவர்கள்மர பினுக்கேற்குந்
தொல்குலத்து வணிகர்மகள்
பேசுதற்குத் தொடங்குவார். **#1721**

உடல் உறுப்புக்களின் இலக்கணங்களை நன்குணர்ந்த நூலவர், நல்லன என எடுத்துக் கூறுமாறு அமைந்த உறுப்பு நலங்கள் பலவும் நிரம்பப் பெற்றுப், பொருந்திய பேரழகு மேன்மேல் மிகப் பெருக, வளர்கின்ற மாட்சிமையால், வீட்டிலிருந்தும் வெளியே செல்லத் தகாத பருவம் வர, இவர்களின் மரபுக்குப் பொருந்தும் பழங்குடியில் வந்த வணிகப் பெருமக்கள் திருமணம் செய்தற்குத் தொடங்குவாராகி,

விளக்கவுரை

உறுப்பு நூலவர் - உடல் உறுப்புக்களின் இலக்கணங் களை அறிந்த நூல் வல்லுநர்கள். வடநூலார் உடலுறுப்புக்களின் நலம் கூறும் நூலை, `சாமுத்திரிகா லட்சணம்` என்பர். இல்இகவாப் பருவம்- இல்லத்தை விட்டு நீங்கத் தகாத பருவம், பெண்மை நலம் நிரம்பப் பெற்ற பருவம். இப்பருவம் வழக்கில் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டுவர, ஆசிரியர் சேக்கிழார், பண்பை நிலைக்களனாகக் கொண்ட பருவமாகக் குறித்திருப்பது எண்ணி மகிழ்தற்குரியது.

`முலை முகம் செய்தன, முள் எயிறு இலங்கின காப்பும் பூண்டிசின் கடையும் போகலை பேதை அல்லை மேதையங் குறுமகள்` *(அகநா. களிற்-7)* எனச் சங்க காலம் முதலே பாதுகாக்கப்பட்டு வந்தது இப்பண்பாம்.

நீடியசீர்க் கடல்நாகை
நிதிபதியென் றுலகின்கண்
பாடுபெறு புகழ்வணிகன்
பயந்தகுல மைந்தனுக்குத்
தேடவருந் திருமரபில்
சேயிழையை மகட்பேச
மாடமலி காரைக்கால்
வள நகரின் வரவிட்டார். **#1722**

சிறப்புமிக்க கடற்கரைப் பட்டினமாகிய நாகப் பட்டினத்தில், நிதிபதி எனும் பெயருடன் உலகில் பெருமை பெறும் புகழுடைய வணிகன், தான் பெற்ற குலமகனுக்கு ஒத்த மரபில் தேட வருகின்ற குலமரபில் பிறந்த

இவ்வம்மையாரை, மணம் நேரும் பொருட்டு மாடங்கள் நிறைந்த காரைக்கால் எனும் வளநகரில் அறிவுடைப் பெருமக்களை வரவிடுத்தனன்.

விளக்கவுரை

பாடு - பெருமை. பயந்த - பெற்ற. பின்வரும் வரலாற்றினை நோக்க, அஞ்சிய எனப் பொருள் கோடற்கும் அமைந்தமை எண்ணத்தக்கது. `தணிவரும் பயமேற் கொள்ள உள்ளமும் தடுமாறெய்தி` *(பா.1746)* எனப் பின்வரும் திருவாக்கும் காண்க. இவ்விரண்டு பாடல்களும் ஒருமுடிபின.

வந்தமூ தறிவோர்கள்
மணங்குறித்தம் மனைபுகுந்து
தந்தையாந் தனதத்தன்
தனைநேர்ந்து நீபயந்த
பைந்தொடியை நிதிபதிமைந்
தன்பரம தத்தனுக்கு
முந்தைமர பினுக்கேற்கும்
முறைமைமணம் புரிகென்றார். **#1723**

அவ்வாறு வந்த மூதறிஞர்கள், மணம் பேச நிற்கும் அழகிய மனையில் புகுந்து, பெண்ணின் தந்தையாராகிய தனதத்தரை அடைந்து, `நீ பெற்ற பசிய வளையலை அணிந்த பெண்ணை, நிதிபதியின் மகனான பரமதத்தனுக்கு, நம் முன்னோரின் மரபினுக்குப் பொருந்தும் முறையால் மணம் செய்து தருக என்று கூறினார்கள்.

விளக்கவுரை

முந்தை மரபு - மணம் செய்தற்கு முன்னும் பின்னு மாகவும், மணவினை செய்யும் முகமாகவும் செயத்தக்க மரபு.
புரிக என்றார் என்றது புரிகென்றார் என நின்றது.

மற்றவனும் முறைமையினால்
மணம்இசைந்து செலவிடச் சென்
றுற்றவர்கள் உரைகேட்ட
நிதிபதியும் உயர்சிறப்புப்
பெற்றனன் போல் உவந்துதனிப்
பெருமகற்குத் திருமலியுஞ்
சுற்றமுடன் களிகூர்ந்து
வதுவைவினைத் தொழில்பூண்டான். **#1724**

அவ்வுரையைக் கேட்ட தனதத்தனும், மணம் நேரு தற்குரிய முறைமையை எண்ணி, மனம் இசைந்து, அவர்களை அனுப்ப, சென்ற அப்பெருமக்களின் உரைகேட்ட நிதிபதியும், உயர்வும் சிறப்புமுடைய

அம்மணமே நிகழ்ந்துவிட்டது போல் மகிழ்ந்து, தன் ஒப்பற்ற மைந்தனுக்குச் செப்பம் நிறைந்த சுற்றத் தாருடன் கூடி, மகிழ்ந்து மணத்திற்குரிய செயல்களைஎல்லாம் செய்யத் தொடங்கினான்.

விளக்கவுரை

முறைமையினால் மணமிசைந்து - பெண்கொடுத்தற்கு முன் எண்ணத்தகும் முறைமைகளை எல்லாம் எண்ணி இசைந்து. பிறப்பு, குடிமை முதலாகத் தொல்காப்பியர் கூறும் (தொல்.மெய்ப் - *25)* பத்துவகைத் தகுதிகளையும் ஒப்ப எண்ணி என்பது கருத்து.
உயர்சிறப்பு - மணம் நிகழ்ந்த சிறப்பு. மணத்துக்கு இசைந்தனர் எனக் கேட்ட அளவிலேயே மணமே நிகழ்ந்தது போல் எண்ணினன் என்பது கருத்து.

மணமிசைந்த நாளோலை
செலவிட்டு மங்கலநாள்
அணையவது வைத்தொழில்கள்
ஆனவெலாம் அமைவித்தே
இணரலங்கல் மைந்தனையும்
மணவணியின் எழில்விளக்கிப்
பணைமுரசம் எழுந்தார்ப்பக்
காரைக்கால் பதிபுகுந்தார். **#1725**

பெண்வீட்டார் மணம் இசைந்ததனால் மண மகனின் பெற்றோரும், திருமணநாள் குறித்த ஓலையை அவர்களுக்கு அனுப்பியபின், திருமணநாளும் கூட, திருமணச் செயலுக்குரிய எல்லாவற்றையும் பொருந்த அமைத்து வைத்து, கொத்தாகப் பொருந்திய மலர் மாலையை உடைய மணமகனையும் மணக் கோலத்திற்குரிய அணிகளால் அழகுபெறச் செய்து, தொகுதியாக மண இயங்கள் முழங்கக் காரைக்கால் நகரில் புகுந்தனர்.

விளக்கவுரை

பணை முரசம் - மணத்திற்குரிய பல்வேறு வகையான இசைக் கருவிகள்.

அளிமிடைதார்த் தனதத்தன்
அணிமாடத் துள்புகுந்து
தெளிதருநூல் விதிவழியே
செயல்முறைமை செய்தமைத்துத்
தளிரடிமென் நகைமயிலைத்
தாதவிழ்தார்க் காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக்
கலியாணஞ் செய்தார்கள். **#1726**

இவ்வாறு காரைக்காலை அடைந்த மணமகனும் தாய் தந்தை முதலான சுற்றத்தார்களும், வண்டுகள் மொய்க்கும் மாலையை அணிந்த தனதத்தனாரின் அழகு பொருந்திய மாடத்தின் உள்ளே புகுந்து, மணவினை ஆற்றுதற்குரிய முறைமையினைக் கூறும் நூல்களில் கூறியவாறே, மணத்தின் முன் செயத்தகும் செயல்களை யெல்லாம் செய்து முடித்து, தளிர் போன்ற திருவடிகளையும், மென்மையான புன்முறுவலையும், மயில்போன்ற சாயலையும் உடைய புனிதவதியாரை, மாலையணிந்த காளை போன்ற பரமதத்த னுக்கு மகிழ்ச்சி பொருந்திய சுற்றத்தார் போற்றத் திருமணம் செய்வித்தார்கள்.

விளக்கவுரை

அளி - வண்டு. மயிலைக் காணின் காளை மருளும்; அது போல இவ்வம்மையாரைக் கண்டு பரமதத்தனும் மருள இருப்பது இவ்வரலாற்றில் பின்விளைவாகக் காணக்கிடப்பதாம். அந்நிகழ்வை முன்கூட்டி அறிவிப்பார் போல `மயிலை.... .... காளைக்குக் கலியாணம் செய்தார்கள்` என்றார்.

மங்கலமா மணவினைகள்
முடித்தியல்பின் வைகுநாள்
தங்கள்குடிக் கொருபுதல்வி
ஆதலினால் தனதத்தன்
பொங்கொலிநீர் நாகையினிற்
போகாமே கணவனுடன்
அங்கண்அமர்ந் தினிதிருக்க
அணிமாடம் மருங்கமைத்தான். **#1727**

மங்கலமாகிய திருமணத்தின் பின் செய்ய வேண்டிய பிற செயல்களையும் முடித்து, மனையறம் பூண்டு வாழும் நாளில், தனதத்தன் தங்கள் குடிக்குப் புனிதவதியார் ஒரே மகளாராக இருக்குங் காரணத்தால், தம்மைப் பிரிந்து ஒலிமிகுந்த கடல்சூழ்ந்த நாகப்பட்டினத்திற்கு அவர் போகாமல், கணவனுடனே அக் காரைக் காலிலேயே இருந்து இல்லறம் நடத்த, தம் இருக்கையின் அருகே அழகிய மாடம் ஒன்றை அமைத்தான்.

விளக்கவுரை

தனதத்தன், தன்குடிக்கொரு மகளாகப் புனிதவதியார் இருத்தலின், கணவனின் இருப்பிடத்திற்கு அனுப்பாமல், தம்மூரி லேயே இல்லறத்தை மேற்கொள்ளுமாறு செய்தான்.

அவ்வாறு கருதிய தனதத்தனும் தன்னுடனே இருக்க எண்ணாது அவர்களுக்கெனத் தனிமனை அமைத்து இருக்கச் செய்தது எண்ணத்தக்கது.

மகட்கொடையின் மகிழ்சிறக்கும்
வரம்பில்தனங் கொடுத்ததற்பின்
நிகர்ப்பரிய பெருஞ்சிறப்பில்
நிதிபதிதன் குலமகனும்
தகைப்பில்பெருங் காதலினால்
தங்குமனை வளம்பெருக்கி
மிகப்புரியுங் கொள்கையினில்
மேம்படுதல் மேவினான். **#1728**

தன் மகளை மணம் செய்து கொடுத்ததனால் மகிழ்ச்சி மீதூர இருக்கும் தனதத்தன், தம்பால் உள்ள அளவற்ற செல்வங்களைக் கொடுக்க, ஏற்ற ஒப்பற்ற பெருஞ்சிறப்பினை உடைய நிதிபதியின் மகனாய பரமதத்தனும், மிக்க பெருவிருப்பினால் அம் மனையில் தங்கித், தம்குல மரபிற்கேற்ப வாணிகம் புரிந்து, அத் துறையில் மேன்மை பெற்று விளங்கினான்.

விளக்கவுரை

கொள்கை - வாணிகம்.

ஆங்கவன்தன் இல்வாழ்க்கை
அருந்துணையாய் அமர்கின்ற
பூங்குழலார் அவர்தாமும்
பொருவிடையார் திருவடிக்கீழ்
ஓங்கியஅன் புறுகாதல்
ஒழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில்வரு மனையறத்தின்
பண்புவழா மையில்பயில்வார். **#1729**

அவ்விடத்து அவன்தன் இல்வாழ்க்கைக்கு அரிய துணையாய் விளங்குகின்ற அழகிய கூந்தலையுடைய புனிதவதியார் தாமும், சினமுடைய ஆனேற்றை ஊர்தியாக உடைய இறைவனின் திருவடிக்கீழ் மீதூர்ந்த அன்பு பொருந்திய பெருவிருப்பு இடையறாது நாளும் பெருக, மனையறத்தின் மாண்பு வழுவாது அதனைச் செய்து வருவாராய்.

விளக்கவுரை

இறைவன்பால் அன்பும், மனைத்தக்க மாண்பும் இடையீடின்றிப் பெருக இல்லறத்தை நடத்தி வந்தார் என்பது கருத்து. பொருவிடை - பொருதற்குரிய சினமுடைய ஏறு. `சாலவும் ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி ஏர்காட்டுங், கோதிலா ஏறாம் கொடி` *(தி.8 ப.19 பா.10)* எனவரும் திருவாசகமும் காண்க.

நம்பரடி யார்அணைந்தால்

நல்லதிரு அமுதளித்தும்
செம்பொன்னும் நவமணியுஞ்
செழுந்துகிலும் முதலான
தம்பரிவி னாலவர்க்குத்
தகுதியின்வேண் டுவகொடுத்தும்
உம்பர்பிரான் திருவடிக்கீழ்
உணர்வுமிக ஒழுகுநாள். **#1730**

எவ்வுயிர்களும் விரும்புதற்குரிய சிவ பெருமானின் அடியவர்கள் தம் இல்லத்திற்கு வரின், அவர்களுக்கு நல்ல திருவமுதினை அளித்தும், செம்பொன்னும், நவமணிகளும், வளமான சிறந்த ஆடைகளும் முதலான பொருள்களைத் தகுதி அறிந்து தம் அன்பினால் தொடர்ந்து அவ்வடியவருக்குக் கொடுத்தும், தேவர்க்குத் தலைவனாகிய சிவபெருமான் திருவடியின் கீழ் வைத்த உணர்வு மேன்மேலும் பெருகுமாறு ஒழுகிவரும் நாள்களில்.

விளக்கவுரை

நம்பர் - சிவபெருமான்: எவ்வுயிர்களும் விரும்புதற் குரியராதல் பற்றி நம்பர் என்றார்.
`நம்பும் மேவும் நசையாகும்மே` *(தொல்.உரி.31)* என்னும் தொல்காப்பியமும்.

பாங்குடைய நெறியின்கண்
பயில்பரம தத்தனுக்கு
மாங்கனிகள் ஓரிரண்டு
வந்தணைந்தார் சிலர்கொடுப்ப
ஆங்கவைதான் முன்வாங்கி
அவர்வேண்டுங் குறையளித்தே
ஈங்கிவற்றை இல்லத்துக்
கொடுக்கவென இயம்பினான். **#1731**

தான் ஏற்ற மனையறத்திற்கும் வாணிகத்திற்கும் ஏற்ற நெறிமுறைகளில் வாழ்ந்து வரும் பரமதத்தனிடம், அவனைக் காண வந்த சிலர் இரு மாங்கனிகளைக் கொடுக்க, அவற்றைப் பெற்றுக் கொண்ட அவன், அவர் விரும்பும் குறைகளை நிறைவேற்றிக் கொடுத்துப் பின், `இம்மாங்கனிகள் இரண்டையும் இல்லத்தில் கொடுக்க` என்று சொன்னான்.

விளக்கவுரை

தம்குறை முடிப்பாரிடத்தும், மேலோரிடத்தும் யாதானும் ஒருகையுறை கொடுத்துக் காண்டல் பண்டைய வழக்கம். அவ்வகையில்

கொடுக்கப்பட்ட கனிகளை அவர் குறை முடித்த பின் தன் பணியாளர் வழித் தன் இல்லத்திற்குக் கொடுத்தனுப்பினான்.
இம் மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

கணவன்தான் வரவிடுத்த
கனியிரண்டுங் கைக்கொண்டு
மணமலியும் மலர்க்கூந்தல்
மாதரார் வைத்ததற்பின்
பணஅரவம் புனைந்தருளும்
பரமனார் திருத்தொண்டர்
உணவின்மிகு வேட்கையினால்
ஒருவர்மனை உட்புகுந்தார். **#1732**

இவ்வாறு கணவன் அனுப்பிய இரு மாங்கனி களையும், கையில் பெற்றுக் கொண்ட நறுமணம் பொருந்திய மலர் களை அணிந்த கூந்தலையுடைய புனிதவதியார், அவற்றை ஓரிடத்தில் வைத்ததன் பின், படத்தையுடைய பாம்பினை அணிந்தருளும் சிவ பெருமானின் அடியவர் ஒருவர் உண்ணும் விருப்பத்தோடு அவர் திரு மனையுள் புகுந்தார்.

விளக்கவுரை

பணம் - படம்.

வேதங்கள் மொழிந்தபிரான்
மெய்த்தொண்டர் நிலைகண்டு
நாதன்தன் அடியாரைப்
பசிதீர்ப்பேன் எனநண்ணிப்
பாதங்கள் விளக்கநீர்
முன்னளித்துப் பரிகலம்வைத்
தேதந்தீர் நல்விருந்தா
இன்னடிசில் ஊட்டுவார். **#1733**

நான் மறைகளையும் அருளிய பெருமானின் மெய்யடியாரின் நிலையினைக் கண்டு, `சிவபெருமானின் அடியவ ராய இவர்தம் பசியைத் தீர்ப்பேன்` எனச் சென்று, அவர்தம் திருவடி களை விளக்க நீரை முன்னர்க் கொடுத்து, உண்கலமாகிய இலையை இட்டு, தம் பிறவியைத் தீர்க்கும் நல்விருந்தாகக் கொண்டு, இனிய உணவை ஊட்டுவாராகி.

விளக்கவுரை

பரிகலம் - உண்கலமாகிய வாழையிலை. உண்மை யான அடியவர்களுக்கு உணவளிப்பது, பிறவிப் பிணிக்கு மருந்தாதல் பற்றி `ஏதம் தீர் நல் விருந்தாய்` என்றார்.

கறிஅமுதங் குதவாதே
திருஅமுது கைகூட
வெறிமலர்மேல் திருவனையார்
விடையவன்தன் அடியாரே
பெறலரிய விருந்தானால்
பேறிதன்மேல் இல்லையெனும்
அறிவினராய் அவரமுது
செய்வதனுக் காதரிப்பார். #1734

நறுமணம் பொருந்திய தாமரை மீது இருக்கும் திருமகளை ஒத்த புனிதவதியார், அது பொழுது கறியமுது உதவாத நிலையில் திருவமுது மட்டும் செய்யப்பட்டிருக்க, ஆனேற்றையுடைய இறைவனின் அடியவரே தேடிப் பெறுதற்கரிய விருந்தாக இங்கு வருவாரானால், இதன் மேலும் பெறத்தக்கதொரு பேறு இல்லை எனும் கருத்தினராய், அவ்வடியவர் அமுது செய்வதற்குரிய செயலை ஏற்பாராய்,

விளக்கவுரை

அடியவர் மனைக்கு வந்த நேரம் காலையும் நண்பகலுமன்றி இடைப்பட்ட நேரமாகும். ஆதலால் அதுபொழுது திருவமுது மட்டுமே செய்யப்பட்டிருந்தது. கறிவகைகள் பக்குவப் படுத்தப்படாமல் இருந்தன. இந்நிலையில் இறைவனின் அடியவர் வர அவருக்கு உடன் அமுதூட்டும் பெருவிருப்பு ஏற்பட்டமையின் இவ்வாறு கருதினார்.

இல்லாளன் வைக்கவெனத்
தம்பக்கல் முன்னிருந்த
நல்லநறு மாங்கனிகள்
இரண்டினில்ஒன் றைக்கொண்டு
வல்விரைந்து வந்தணைந்து
படைத்துமன மகிழ்ச்சியினால்
அல்லல்தீர்ப் பவர்அடியார்
தமையமுது செய்வித்தார். #1735

கணவனால் இல்லத்தில் வைக்கவெனக் கொடுக் கப் பட்டுத் தம்மிடத்திருந்த நல்ல மணம் பொருந்திய மாங்கனிகள் இரண்டில் ஒன்றைக் கொண்டு, மிக விரைந்து வந்து இலையில் படைத்து, மகிழ்ச்சி மீதூர, துன்பத்தைத் துடைத்தருளும் அவ் வடியவர் தமக்கு அமுதுசெய்வித்தார்.

விளக்கவுரை

வல்விரைந்து - மிக விரைந்து. இல்லாள் என்பதற்கு ஏற்ற ஆண்பாற் பெயர் இல்லாளன் என்பதாகும். இல்லான் என ஒரோவழி வரினும்,

நேரிய ஆண்பாற் பெயர் ஈதேயாம். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

மூப்புறும்அத் தளர்வாலும்
முதிர்ந்துமுடு கியவேட்கைத்
தீப்பசியின் நிலையாலும்
அயர்ந்தணைந்த திருத்தொண்டர்
வாய்ப்புறுமென் சுவையடிசில்
மாங்கனியோ டினிதருந்திப்
பூப்பயில்மென் குழல்மடவார்
செயலுவந்து போயினார். #1736

மூப்பினால் வருகின்ற அத்தளர்ச்சியினாலும், முதிர்ந்து, விரைந்து, உணவுகொள்ளும் விருப்பத்தை எழுவிக்கும் வயிற்றுத் தீயாய பசியின் நிலையினாலும், அயர்ச்சியுற்று அங்கு வந்த மைந்த திருத்தொண்டர், வாய்ப்பாக அமைந்ததும் மென்மையானதும், சுவை பொருந்தியதுமான அவ்வுணவை மாங்கனியோடு இனிது உண்டு, மலர்கள் அணிந்த மென்மையான கூந்தலையுடைய அம்மை யாரது அன்பு மிக்க விருதோம்பலைப் பாராட்டிப் போயினார்.

விளக்கவுரை

முடுகிய - விரைந்த.

மற்றவர்தாம் போயினபின்
மனைப்பதியா கியவணிகன்
உற்றபெரும் பகலின்கண்
ஓங்கியபேர் இல்எய்திப்
பொற்புறமுன் நீராடிப்
புகுந்தடிசில் புரிந்தயிலக்
கற்புடைய மனையாருங்
கடப்பாட்டில் ஊட்டுவார். #1737

அந்நிலையில் அவ்வடியவர் போன பின்பு, அம்மனைக்குத் தலைவனாய பரமதத்தன், பொருந்திய நண்பகற் பொழுதில், நலத்தானும் வளத்தானும் சிறப்புற்று விளங்கும் தனது பெரிய இல்லத்திற்கு வந்து, முன்னம் பொலிவு பெற நீராடி, உட்புகுந்து, உணவினை விரும்பி உண்ண, கற்பினை உடைய மனையாராகிய அம்மையாரும் உணவை உண்பிக்கும் முறையில் உண்பிப்பாராகி.

விளக்கவுரை

மனைப்பதி - மனைக்குரிய தலைவன், இல்லாளன். பகற் பொழுதில் வந்து நீராடி எனவே காலைப் பொழுதில் நீராடாது சென்றமை

புலனாகிறது. இதனால் முறையான இறைவழிபாட்டு நெறி அவனிடத்து இல்லாமை பெறப்படுகின்றது. அன்றி, முப்போதும் நீராடி உண்பான், பகற் பொழுதிலும் நீராடினான் எனில், அத்தகைய பத்திமை நெறி அவன்பால் இன்மை, வரலாற்றால் விளங்கிக் கிடத் தலின் அவ்வாறு கோடற்கில்லை. கடப்பாட்டில் ஊட்டுதலாவது, செய்யவாய் இடையிடையே முகமனுரை இன்னமுது செவியூட்ட, அவன் விருப்பறிந்து உணவு படைத்து மகிழ்வதாகும். `தான் துழந்தட்ட தீம்புளிப் பாகர், இனிதெனக் கணவன் உண்டலின், நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே` *(குறுந். முல்லை - 167)* எனவரும் சங்கப் பாட்டும் காண்க.

இன்னடிசில் கறிகளுடன்
எய்துமுறை இட்டதற்பின்
மன்னியசீர்க் கணவன்தான்
மனையிடைமுன் வைப்பித்த
நன்மதுர மாங்கனியில்
இருந்ததனை நறுங்கூந்தல்
அன்னமனை யார்தாமும்
கொடுவந்து கலத்தளித்தார். **#1738**

இனிய உணவைக்கறிவகைகளுடன் வைக்கும் முறையில் வைத்ததன் பின், சிறப்புப் பொருந்திய கணவன் தான் முன்பு மனையிடத்து அனுப்பிவைத்த நல்ல சுவைமிக்க மாங்கனிகளில் எஞ்சியிருந்த ஒன்றை, நறுமணம் பொருந்திய கூந்தலையுடைய அன்னத்தை ஒத்த மனைவியார் தாமும், கொண்டு வந்து இலையில் இட்டனர்.

விளக்கவுரை

எய்தும் முறை - காய்கறி வகைகளை இலையில் வைக்கும் முறை. இவ்விரண்டு பாடல்களும் ஒருமுடிபின.

மனைவியார் தாம்படைத்த
மதுரமிக வாய்ந்தகனி
தனைநுகர்ந்த இனியசுவை
ஆராமைத் தார்வணிகன்
இனையதொரு பழம்இன்னும்
உளததனை இடுகவென
அனையதுதாங் கொண்டுவர
அணைவார்போல் அங்ககன்றார். **#1739**

மனைவியார் தாம் கொண்டு வந்து கலத்தில் (இலை) வைத்த மிகுந்த இனிமை வாய்ந்த அம்மாங்கனியை உண்ட சுவையினால், அதனை உண்ணும் விருப்பம் நிறைவு பெறாமையின், மாலையணிந்த

வணிகனாகிய பரமதத்தன், இக்கனி போல்வதொரு பழம் ஒன்று இன்னும் உளது; அதனையும் இடுக, என்று கூற, அப் பழத்தைத் தாம் கொண்டு வரச் செல்வார் போல அவ்விடத்தினின்றும் நீங்கினார்.

விளக்கவுரை

மதுரம் - இனிமை. இனிய கனிகளுள் ஒன்றைச் சுவைத்து அருந்திய பரமதத்தன், எஞ்சிய கனியைத் தன் மனைவியார் அருந்தச் ெசய்வதே அறமாகும்; இல்வாழ்வான் இயல்பும் ஆகும். ஆனால் இப்பெருமகனின் இயல்போ இச்சிறிய அறப்பண்பைக் கூடத் தெரியாதிருந்தது ஓராற்றான் வருந்துதற்குரியதே, எனினும் பிறிதோ ராற்றான் இப்பெருமகனின் அறியாமையே அம்மையாரின் அருள் நலத்தை வெளிப்படுத்தவும், அதன் வாயிலாக இறைவனின் இன்னருட் பேற்றைப் பெறவும் காரணமாயினமையின் இதுவும் திருவருட் குறிப்பென்றே கோடல் வேண்டும். கைகேயியின் `இரக்கம் இன்மையன்றோ இவ்வுலகங்கள் இராமன் பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றதுவே` *(கம்ப.அயோத்.மந்தரை, 86)* எனக் கம்பர் அருளுவதும் நினைவு கூர்தற்குரியதாம்.

அம்மருங்கு நின்றயர்வார்
அருங்கனிக்கங் கென்செய்வார்
மெய்ம்மறந்து நினைந்துற்ற
விடத்துதவும் விடையவர்தாள்
தம்மனங்கொண் டுணர்தலுமே
அவரருளால் தாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்த
ததிமதுரக் கனியொன்று. **#1740**

தன் கணவனார் உணவருந்திக் கொண்டிருக்கும் இடத்திற்கு அயலாகச் சென்று நின்று மனம் தளர்வார், அதுவன்றி அங்கு அரிய கனியைப் பெறுதற்கு வேறு என்செய்வார்? தம்மையும் மறந்து, நினைந்து, துன்பம் உற்றவிடத்து வந்து உதவியருளும் ஆனேற்று ஊர்தியராகிய சிவபெருமான் திருவடிகளைத் தம் மனத்தில் பொருந்த வைத்து, திருவருள் உணர்வே உணர்வாகக் கொண்டு உணரும் அளவில், அப்பெருமானின் திருவருளால், தாழ்ந்த கூந்தலை யுடைய, அம்மையாரது திருக்கையினிடத்து மிக இனிமை பொருந்திய தொரு மாங்கனி வந்து பொருந்தியது.

விளக்கவுரை

தம் கணவனார் பிறிதொரு மாங்கனியைக் கேட்டதுமே அதைக் கொணர்வார் போற்சென்றவர், பிறிதொரு மாங்கனி இன் மையின்

மனம் தளர்தல் அன்றி வேறு என்ன செய்யமுடியும்? என ஆசிரியர் வினா வடிவில் கேட்டருள்வது, அம்மையார் தம் கணவர் மீது வைத்திருந்த அயராஅன்பினையும் அவன் கேட்டவாறு கனியை இட இயைந்த அன்பையும் காட்டுவதாகும். உற்றவிடத்து - துன்பம் வந்துற்றவிடத்து. திருவருள் வயத் ததாக வந்த கனி ஆதலின் `அதிமதுரக்கனி` என்றார். அதிமதுரம் மருந்துப் பொருள்களில் ஒன்றாம். அது, நீர்வேட்கையைத் தவிர்க்க வல்லது. ஈண்டு அச்சொற்குறிப்பால் இக்கனியை உண்ட வணிகன் இப் பெருமாட்டியோடு வாழும் இல்லறவேட்கையைத் தணிக்கவும் வாயிலாயிற்று என நயம் காண்பர் சிவக்கவிமணியார் (பெரிய.பு. உரை).

மற்றதனைக் கொடுவந்து
மகிழ்ந்திடலும் அயின்றதனில்
உற்றசுவை அமுதினுமேற்
படவுளதா யிடஇதுதான்
முன்தருமாங் கனியன்று
மூவுலகிற் பெறற்கரிதால்
பெற்றதுவே றெங்கென்று
பெய்வளையார் தமைக்கேட்டான். **#1741**

இவ்வாறு தம் கையகத்து வந்திருந்த மாங்கனியைக் கொண்டு வந்து மகிழ்ச்சியுடன் இடுதலும், அதனை உண்ட அளவில், அதனிடத்துப் பொருந்திய சுவையானது அமிழ்தத் தினும் மேலாக இருக்க, `இது முன்பு நான் தந்த மாங்கனிகளில் ஒன்று அன்று; மூவுலகிலும் பெறுதற்கரிய கனியாகும் இது, இதனைப் பெற்றது வேறு எங்கு? என்று அம்மையாரைக் கேட்டனன்.

விளக்கவுரை

கனியினும் கட்டிபட்ட கரும்பினும் இனியன் இறைவன். அவன் அருள்வழிப்பட்ட கனியாதலின் அக்கனியின் சுவையும் மூவுலகிலும் பெறுதற்கரியதாயிற்று.

அவ்வுரைகேட் டலும்மடவார்
அருளுடையார் அளித்தருளும்
செவ்வியபேர் அருள்விளம்புந்
திறமன்றென் றுரைசெய்யார்
கைவருகற் புடைநெறியால்
கணவன்உரை காவாமை
மெய்வழியன் றெனவிளம்பல்
விடமாட்டார் விதிர்ப்புறுவார். **#1742**

அத்தகைய சொல்லைக் கேட்டதும் அம்மையார், தம்பால்

அருளினையுடையராய இறைவர் தமக்குச் செய்த பேரருள் திறனைப் பிறரிடத்துச் சொல்லத் தக்கதன்று எனும் கருத்தால், அதனைச் சொல்லவும் மாட்டாதவராய், எஞ்ஞான்றும் நிலை பெற்றிருக்கும் கற்பு மேம்பாட்டால், கணவன் கேட்ட மெய்ம்மையான வினாவிற்கு உரிய விடையைக் கூறாது பொய் கூறுதல் அறனன்று என அதனைச் சொல்லாது விடுக்கவும் மாட்டாராய் இவ்விருவகையானும் கவருற்ற நிலையில், ஒருபால் படாது வருந்துவாராயினர்.

விளக்கவுரை

கைவருகற்பு - தம்முடன் பழகிவந்த கற்பு; நிலைபெற்ற கற்பு. உரை காவாமை - கணவனார் கேட்ட வினாவிற்கு உண்மையைச் சொல்லாமை. மெய்வழியன்று - உண்மையான நெறியன்று. விளம் பல் விட மாட்டார் - உரை செய்யாது விடவும் மாட்டார்.

செய்தபடி சொல்லுவதே
கடனென்னுஞ் சீலத்தால்
மைதழையுங் கண்டர்சே
வடிகள்மனத் துறவணங்கி
எய்தவருங் கனியளித்தார்
யார்என்னுங் கணவனுக்கு
மொய்தருபூங் குழல்மடவார்
புகுந்தபடி தனைமொழிந்தார். **#1743**

எவ்வாறாயினும் உண்மையை உரைப்பதே கடமையாம் எனத்தகும் சீலத்தால், கருமைபொருந்திய கழுத்தினை உடைய பெருமானின் சிவந்த அடிகளை மனத்துட் பொருந்த வணங்கி, பெறுதற்கரிய கனியை அளித்தார் யார் எனக் கேட்ட கணவனாருக்குச், செறிந்த பூக்களை அணிந்த கூந்தலையுடைய அம்மையார் நடந்ததை நடந்தவாறே கூறினார்.

விளக்கவுரை

`புகுந்தபடிதனை மொழிந்தார்` என்றார், அவ்வுரை தானும் அம்மையார் கூற வல்லதன்றி, தாம் கூற வல்லது அன்று என்பது கருதி. இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

ஈசனருள் எனக்கேட்ட
இல்இறைவன் அதுதெளியான்
வாசமலர்த் திருவனையார்
தமைநோக்கி மற்றிதுதான்
தேசுடைய சடைப்பெருமான்
திருவருளேல் இன்னமும்ஓர்

ஆசில்கனி அவனருளால்
அழைத்தளிப்பாய் எனமொழிந்தான். #1744

இறையருளால் பெற்றகனி என அம்மையார் கூறக்கேட்ட இல்லத்துக்கு உடையவனாகிய கணவன், அச்செய்தியில் தெளிவு பெறாதவனாய், மணம் பொருந்திய தாமரை மலரில் எழுந் தருளியிருக்கும் திருமகளை ஒத்த அம்மையாரை நோக்கி, `இக்கனி ஒளிபொருந்திய சடையினையுடைய சிவபெருமானின் திருவருளால் பெற்றது உண்மையாயின், இன்னமும் குற்றமற்ற இது போன்றதொரு கனி ஒன்றை அவர் அருளால் அழைத்துத் தருவாயாக!`எனக் கூறினன்.

விளக்கவுரை

தேசு - ஒளி.

பாங்ககன்று மனைவியார்
பணியணிவார் தமைப்பரவி
ஈங்கிதளித் தருளீரேல்
என்னுரைபொய் யாம்என்ன
மாங்கனியொன் றருளால்வந்
தெய்துதலும் மற்றதனை
ஆங்கவன்கைக் கொடுத்தலுமே
அதிசயித்து வாங்கினான். #1745

அதுகேட்டு, அவ்விடத்தினின்றும் அகன்ற அம்மையார், பாம்பினை அணியாக அணிந்து நிற்கும் சிவபெரு மானை வணங்கி, `இவ்விடத்து இன்னுமொரு கனியதனை அளித்து அருள் செய்யீராயின் என்சொல்பொய்படும்` என வேண்ட. மாங்கனி ஒன்று திருவருளால் அவர் கையகத்து வந்து பொருந்துதலும், அக்கனியைத், தன் கணவன் கையில் கொடுத்தலும், அவனும் அதிசயித்து அதனை வாங்கினன்.

விளக்கவுரை

பாங்கு - இடம்; கணவன் உணவருந்திய இடம்.

வணிகனுந் தன்கைப் புக்க
மாங்கனி பின்னைக் காணான்
தணிவரும் பயமேற் கொள்ள
உள்ளமுந் தடுமா றெய்தி
அணிகுழல் அவரை வேறோர்
அணங்கெனக் கருதி நீங்குந்
துணிவுகொண் டெவர்க்குஞ் சொல்லான்
தொடர்வின்றி ஒழுகு நாளில். #1746

வாங்கிய வணிகனும் தன்கையில் இருந்த மாங்கனியைப்பின்பு

காணாதவனாகித் தணிதலில்லாத அச்சம் மீதூர, மனம் தடுமாறி, அழகிய கூந்தலையுடைய அம்மையாரை மானுடர் அல்லாத வேறொரு தெய்வம் என்று கருதி, அவரை விட்டு நீங்க வேண்டும் என்ற துணிவுடன், அதனை அங்குள்ள எவரிடத்தும் சொல்லாதவனாய், அம்மையாரிடம் உடல் தொடர்பின்றி, வாழ்ந்து வரும் நாள்களில்.

விளக்கவுரை

அணங்கு - தெய்வம்.

விடுவதே எண்ண மாக மேவிய
முயற்சி செய்வான்
படுதிரைப் பரவை மீது படர்கலங்
கொண்டு போகி
நெடுநிதி கொணர்வேன் என்ன
நிரந்தபல் கிளைஞ ராகும்
வடுவில்சீர் வணிக மாக்கள்
மரக்கலஞ் சமைப்பித் தார்கள். **#1747**

இத்தகைய அம்மையாரை விட்டு நீங்குதலே துணிவு என எண்ணி, அதற்கேற்ற முயற்சியைச் செய்வானாய், `அலைகளையுடைய கடல்மீது கப்பலைச் செலுத்திச் சென்று, பெருஞ் செல்வத்தைக் கொண்டு வருவேன்` என்று சொல்லவே, நெருங்கிய அவன் சுற்றத்தவராகிய குற்றமற்ற சிறப்பினை உடைய வணிகப் பெருமக்களும் மரக்கலத்தைச் செய்வித்தார்கள்.

விளக்கவுரை

இவ்வாறு கலத்திற்சென்று பொருளீட்டி வருதல் பண்டைய மரபேயாம். இவ்வாறு பிரிதலைக் கலத்திற் பிரிவு என்று கூறும் தொல்காப்பியம். காலிற் பிரிவு கொள்ளாது, கலத்திற் பிரிவு கொண்டது, மனைவியை விடுத்துச் செல்லுவதற்கேயாம். என்னை? `முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை` *(தொல். அகத். 34)* என்பது இலக்கணமாதலின், மரக்கலம் சமைப்பித்தார்கள் எனவே, கப்பல் கட்டும் தொழில் வல்லமை நம் தமிழர்பால் பண்டு தொட்டே இருந்தமை விளங்கும்.

கலஞ்சமைத் ததற்கு வேண்டும்
கம்மிய ருடனே செல்லும்
புலங்களில் விரும்பும் பண்டம்
பொருந்துவ நிரம்ப ஏற்றிச்
சலந்தரு கடவுட் போற்றித்
தலைமையாம் நாய்கன் தானும்
நலந்தரு நாளில் ஏறி

நளிர்திரைக் கடல்மேற் போனான். **#1748**

மரக்கலத்தைக் கட்டுவித்து முடித்து, அதனைச் செலுத்துதற்குரிய மீகாமன் முதலிய தொழில் தெரிந்தாருடனே தான் வாணிபம் செய்ய இருக்கும் நாடுகளில் விரும்பும் பண்டங்களில் தாம் ஏற்றிச் செல்வதற்கு ஏற்பவற்றை நிரம்ப ஏற்றிக் கொண்டு, கடல் தெய்வத்தை வழிபட்டு, வாணிகத் தலைவனாகிய அவ்வணிகனும் நல்ல நாளில் கப்பலில் ஏறி, குளிர்ந்த அலைகளை உடைய கடற் செலவை மேற்கொண்டான்.

விளக்கவுரை

கம்மியர் - கப்பல் செலுத்துவோர். அவ்வாறு செலுத்துங்கால் இடையில் அதற்குப் பழுது நேரின் அதனைச் செப்பனிடுதற்கும், உடன் இருந்து பற்பல தொழில்களைச் செய்தற்கும் உரிய அனைவரும் அடங்கக் `கம்மியர்` என்றார். தாம் செல்லும் இடங்களில் அவர்கள் விரும்புகின்ற பண்டங்களை ஏற்றிச் செல்லு தலே இனிமையும் எளிமையுமாக வாணிகஞ் செய்தற்கு ஏதுவாம். அப்பண்டங்களிலும் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்பனவற்றையே எடுத்துச் செல்ல வேண்டுமாதலின் `பொருந்துவ நிரம்ப ஏற்றி, என்றார். சலந்தரு கடவுள் - கடல் தெய்வம். வருணன் - `வருணன்மேய பெருமணல் உலகம்` *(தொல். அகத். 5)* என்னும் தொல்காப்பியமும்.

கடல்மிசை வங்கம் ஓட்டிக்
கருதிய தேயந் தன்னில்
அடைவுறச் சென்று சேர்ந்தங்
களவில்பல் வளங்கள் முற்றி
இடைசில நாள்கள் நீங்க
மீண்டும்அக் கலத்தில் ஏறிப்
படர்புனற் கன்னி நாட்டோர்
பட்டினம் மருங்கு சார்ந்தான். **#1749**

கடலின் மீது கப்பலை ஓட்டித் தான் எண்ணிய நாட்டில் சேருமாறு செலுத்தி, அங்குச் சென்று, அவ்விடத்தில் அளவற்ற பல வாழ்க்கை வளங்களையும் ஏற்படுத்திக் கொண்டு, இவ்வகையில் இடையில் சில நாள்கள் செல்ல, மீண்டும் அக்கப்பலில் ஏறி நீர் நிரம்பிய பாண்டி நாட்டில் ஒரு கடற்கரைப் பட்டினத்தின் பக்கத்தைச் சார்ந்தான்.

விளக்கவுரை

எனவே, தான் வாழ விரும்பிய இடத்திற்குச் செல்லுமுன், இடையில் ஒரு நாட்டிற்குச் சென்று தனக்கு வேண்டிய வளங்களை யெல்லாம் தேடிக்கொண்டு, பின் பாண்டிநாட்டிற்குச் சென்றனன் எனத் தெரிகிறது. அவ்வாறு இடையில் சென்ற நாடுகள் வங்காளம், மியான் மார் போன்ற

நாடுகளாகலாம் என்பர் சிவக்கவிமணியார் (பெரிய.பு. உரை). நிறைவாகச் சென்று தங்கிய இடம் தூத்துக்குடி, இராமேசுவரம், குலசேகரப் பட்டினம் ஆகியவற்றுள் ஒன்றாகலாம் என்றும் அவர் கூறுவர்.

அப்பதி தன்னில் எய்தி
அலகில்பல் பொருள்கள் ஆக்கும்
ஒப்பில்மா நிதியம் எல்லாம்
ஒருவழிப் பெருக உய்த்து
மெய்ப்புகழ் விளங்கும் அவ்வூர்
விரும்பவோர் வணிகன் பெற்ற
செப்பருங் கன்னி தன்னைத்
திருமலி வதுவை செய்தான். **#1750**

குறிப்பிட்ட அந்நகரத்தை அடைந்த அவ்வணிகன், தான் கொண்டு வந்த பலவகைப் பொருள்களால் கொண்ட ஒப்பற்ற பெருநிதியங்களை எல்லாம் ஒருங்கு திரட்டி, அதனைத் தன் வாழ்வின் வைப்பாக வைத்து, உண்மையான புகழ் விளங்கும் அவ்வூரவர் விரும்ப, ஒரு வணிகன் பெற்ற சொலற்கரிய நலம் வாய்ந்த பெண்ணொருத்தியை வளம் பெருகத் திருமணம் செய்து கொண்டான்.

விளக்கவுரை

ஒருவழிப் பெருக உய்த்தலாவது, திரட்டிய பலவகைப் பொருள்களாகிய பொன், மணி, வெள்ளி முதலிய பொருள்களை யெல்லாம் சேர்த்து, இனித் தான் வாழ்வதற்கு ஏற்ப, விளைநிலம், மனை, ஏனைய வாணிகத்துறை என இவைமுதலாகிய ஊதியம் பெறும் நிலைகளில் ஒரு முகமாக அமைத்துக் கொள்ளுதலாம்.

பெறலருந் திருவி னாளைப்
பெருமணம் புணர்ந்து முன்னை
அறலியல் நறுமென் கூந்தல்
அணங்கனார் திறத்தில் அற்றம்
புறமொரு வெளியு றாமற்
பொதிந்தசிந் தனையி னோடு
முறைமையின் வழாமை வைகி
முகமலர்ந் தொழுகு நாளில். **#1751**

பெறுதற்கரிய செல்வத்தைப் பெற்ற அப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்ட பின்னர், முன்பு புரிந்த கருமணலின் ஒழுங்கு போன்ற நறுமணம் பொருந்திய மென்மையான கூந்தலையுடைய தெய்வம் போன்ற புனிதவதியாரிடத்துத் தான் செய்த வஞ்சனை, புறத்தில் ஒரு சிறிதும் வெளிப்படாதவாறு மறைத்து வைத்த மனத்தோடு, ஏனைய

எல்லாவற்றிலும் முறைமை திறம்பாது வாழ்ந்து, முகமலர்ச்சியுடன் வாழ்ந்து வரும் நாளில்.

விளக்கவுரை

அற்றம் - வஞ்சித்து ஒழுகிய ஒழுக்கம்; முன் மணந்த மனைவியார் ஒருவர் உள்ளமையும், அவரிடத்துத் தெய்வத் தன்மை கண்டு அஞ்சி அப்பெருமாட்டியாரிடத்து, நிதி பெருக்க அருங்கலத்திற் பிரிவு மேற்கொள்வதாகச் சொல்லிவந்த பொய்ம்மையும் ஆகிய செயல்களாம்.

முருகலர் சோலை மூதூர்
அதன்முதல் வணிக ரோடும்
இருநிதிக் கிழவன் என்ன
எய்திய திருவின் மிக்குப்
பொருகடற் கலங்கள் போக்கும்
புகழினான் மனைவி தன்பால்
பெருகொளி விளக்குப் போலோர்
பெண்கொடி அரிதிற் பெற்றான். **#1752**

நறுமணம் வீசுகின்ற சோலைகளையுடைய பழமை யாகிய அவ்வூரில், தலைமைபெற்ற பெருவணிகர்களுடன் கூடி, குபேரனைப் போலப் பொருந்திய செல்வத்தால், மிகுந்த அலைகள் ஒன்றொடொன்று மோதும் கடலில் கப்பல்களைச் செலுத்தி வாணிகம் செய்து புகழ்படைத்த அவ்வணிகன், தன் மனைவியிடத்துப் பெருகிய ஒளி நிறைந்த விளக்குப் போல ஒரு பெண் மகவை அரிதாகப் பெற்றான்.

விளக்கவுரை

இருநிதிக் கிழவன் - பெருஞ்செல்வத்திற்கு உரியவன்; குபேரன். `இருநிதிக் கிழவன் மகன் ஈரெட்டாண் டகவையான்` *(சிலப்ப.மங்கலவாழ்த். வரி 34)* என்னும் சிலம்பும். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மடமகள் தன்னைப் பெற்று
மங்கலம் பேணித் தான்முன்
புடனுறை வஞ்சி நீத்த
ஒருபெரு மனைவி யாரைத்
தொடர்வற நினைந்து தெய்வத்
தொழுகுலம் என்றே கொண்டு
கடனமைத் தவர்தம் நாமங்
காதல்செய் மகவை இட்டான். **#1753**

இத்தகைய பெண்மகவைப் பெற்ற அவ்வணிகன், மங்கலம் பெருகப் பெயரிட எண்ணி, தான் முன்பு உடனுறைதலை அஞ்சி, நீத்து வந்த

ஒப்பற்ற பெருமை பொருந்திய மனைவியாரை, அவர் தம்மொடு மேலும் தொடர்பு கொள்வதை நீக்க, நிறைந்த தெய்வத்தன்மை பொருந்திய தொழுதற்குரிய தன்மை உடையார் அவர் என்று துணிந்து, பெயர் வைத்தற்குரிய செயற்பாடுகளைச் செய்து, புனிதவதியார் என்ற பெயரைத் தம் விருப்பம் பொருந்திய பெண் மகவின் பெயராகச் சூட்டினான்.

விளக்கவுரை

தொடர்வு அற - அம்மையாரொடு மேலும் இல்லறத் தொடர்பு கொள்ளுதலினின்றும் நீங்க. திருவருளால் இரண்டாவது முறையும் மாங்கனி பெற்ற பொழுதே தன்னளவில் இனி அவர் மனைவியாகார் எனக் கொண்டிருந்த நினைவு, இப்பெயரிட மேலும் நிலைபெற வேண்டுமென நினைந்தமையால் , `தொடர்வற நினைந்து` என்றார்.

இன்னிலை இவன்இங் கெய்தி
இருந்தனன் இப்பால் நீடும்
கன்னிமா மதில்சூழ் மாடக்
காரைக்கால் வணிக னான
தன்னிகர் கடந்த செல்வத்
தனதத்தன் மகளார் தாமும்
மன்னிய கற்பி னோடு
மனையறம் புரிந்து வைக. **#1754**

இவ்வகையில் இவ்வணிகன் இங்கு வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தனனாக, இப்பால் நீண்ட அழிவற்ற பெருமதில் கள் சூழ்ந்த மாடங்களையுடைய, காரைக்காலில் வாழும் தனதத்தனின் மகளாராகிய அம்மையாரும், நிலைபெற்ற கற்பின் திறத்தால் இல்லறம் நடத்தி வர,

விளக்கவுரை

கன்னிமாமதில் - நிலையான பெருமதில்; கன்னித் தமிழ் என்புழிப்போல. சமாதியணி.

விளைவளம் பெருக்க வங்க
மீதுபோம் பரம தத்தன்
வளர்புகழ்ப் பாண்டி நாட்டோர்
மாநகர் தன்னில் மன்னி
அளவில்மா நிதியம் ஆக்கி
அமர்ந்தினி திருந்தான் என்று
கிளரொளி மணிக்கொம் பன்னார்
கிளைஞர்தாங் கேட்டா ரன்றே. **#1755**

வாணிபத்தால் வளம் பெருக்கக் கப்பலில் இவர்ந்து சென்ற பரமதத்தன்,

புகழ்வளரும் பாண்டி நாட்டில் ஒரு பெரு நகரில் தங்கிச், செல்வ வளம் பெருக்கி, அங்கு நிலையாக அமர்ந்திருப் பதை, ஒளிபொருந்திய மணிகளையுடைய, ஒப்பற்றதொரு கொம்பு போன்ற அம்மையாரின் உறவினர்கள் கேள்வியுற்றனர்.

விளக்கவுரை

விளைவளம் - வாணிபத்தால் விளையும் வளம். அமர்ந்து இனிது இருந்தான் என்பது வாழ்க்கைத் துணையோடு இருந்தான் என்னும் குறிப்புத்தோன்ற நின்றது. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அம்மொழி கேட்ட போதே
அணங்கனார் சுற்றத் தாரும்
தம்முறு கிளைஞர்ப் போக்கி
அவன்நிலை தாமும் கேட்டு
மம்மர்கொள் மனத்த ராகி
மற்றவன் இருந்த பாங்கர்க்
கொம்மைவெம் முலையி னாளைக்
கொண்டுபோய் விடுவ தென்றார். **#1756**

அத்தகைய சொற்களைக் கேட்டவுடனேயே அம்மையாருடைய சுற்றத்தார்களும், தமக்குப் பொருந்திய உறவினர் களில் சிலரை விடுத்து, அவ்வணிகனின் உண்மை நிலையைத் தாமும் கேட்டு, துன்புற்ற மனத்தராகி, பின்பு அவன் இருக்கும் இடத்தேயே, பருத்த மார்பகங்களை உடைய அம்மையாரை அழைத்துச் சென்று விடத்துணிந்தனர்.

விளக்கவுரை

அவ்வணிகன் இல்லறம் ஏற்றிருக்கும் நிலையால் வருந்தினராயினும், அவன் இருக்கும் இடத்தேயே மனைவியாராகிய அம்மையார் இருப்பதும் பொருத்தம் எனக்கருதியது, அவர் தம் உள்ள நிலையையும் அக்கால வாழ்க்கை நிலையையும் காட்டுவ தாகும். நேர்முகமாகவோ அல்லது நீதிமன்றம் மூலமாகவோ வழக் கிடத் துணியாது, அவனிருக்கும் இடத்தில் அம்மையாரை இருக்கச் செய்தலே அறம் எனக் கருதியது, அவர்களின் அரிய பண்பைக் காட்டுவதாகும்.

மாமணிச் சிவிகை தன்னில்
மடநடை மயில்அன் னாரைத்
தாமரைத் தவிசில் வைகுந்
தனித்திரு என்ன ஏற்றிக்
காமரு கழனி வீழ்த்துக்
காதல்செய் சுற்றத் தாரும்
தேமொழி யவருஞ் சூழச்

சேணிடைக் கழிந்து சென்றார். #1757

மிக்க அழகு பொருந்திய சிவிகையில், மடப்பம் பொருந்திய நடையினை உடைய மயில் போன்ற அம்மையாரைத், தாமரை இருக்கையில் வீற்றிருக்கும் ஒப்பற்ற திருமகள் என ஏற்றிக் கொண்டு, விரும்புதற்குரிய திரைச் சீலையை அச்சிவிகையில் சூழக்கட்டி, விருப்பம் பொருந்திய சுற்றத்தார்களும் மாதர் கூட்டமும் சூழ, நெடுநாள்கள் நடந்து சென்றனர்.

விளக்கவுரை

கழனி - திரைச் சீலை. உள்ளிருப்பாரின் உருத்தெரி யாது இருத்தற்குத் திரைச் சீலை கொண்டு மறைத்துச் செலுத்தினர்.

சிலபகல் கடந்து சென்று
செந்தமிழ்த் திருநா டெய்தி
மலர்புகழ்ப் பரம தத்தன்
மாநகர் மருங்கு வந்து
குலமுதல் மனைவி யாரைக்
கொண்டுவந் தணைந்த தன்மை
தொலைவில்சீர்க் கணவ னுக்குச்
சொல்லிமுன் செல்ல விட்டார். #1758

இவ்வாறு சில நாள்கள் நடந்து சென்றவர்கள், செந்தமிழ்த் திருநாடாகிய பாண்டிய நாட்டைச் சேர்ந்து, யாண்டும் பரந்து நிற்கும் புகழினையுடைய பரமதத்தன் இருக்கும் பட்டினத்தின் பக்கம் வந்து, ஒப்பற்ற குலமுதல்வியாரைக் கொண்டு வந்து சேர்ந் திருக்கும் தன்மையை, அழிவற்ற கீர்த்தியையுடைய அவர் தம் கணவனாருக்குத் தெரிவிக்குமாறு சிலரை அனுப்பினர்.

விளக்கவுரை

`சிலபகல் கடந்து சென்று` எனவே அவ்வணிகன் சென்று வாழ்ந்திருக்கும் நகரம் முற்கூறியவாறு போலத் தரைவழிச் செல்லும் தகையதாதலும் விளங்கும். சேர்ந்திருக்கும் நகரம் `பலர் புகழ்ப் பரமதத்தன்` மாநகர் என்றது, அவன் தன் வாணிகத்தானாய வளத்தையும், `தொலைவில்சீர்க் கணவன்` என்றது, அவன்தன் முதலாவது வாழ்க்கைத் துணைவியாராய புனிதவதியாரால் ஆய சிறப்பையும் குறித்து நிற்பனவாம்.

வந்தவர் அணைந்த மாற்றங்
கேட்டலும் வணிகன் தானும்
சிந்தையில் அச்சம் எய்திச்
செழுமணம் பின்பு செய்த
பைந்தொடி தனையுங் கொண்டு

பயந்தபெண் மகவி னோடும்
முந்துறச் செல்வேன் என்று
மொய்குழ லவர்பால் வந்தான். #1759

அவ்வாறு வந்தவர்கள், தனது நகரை அணுகிய தனைக் கேட்டதும், பரமதத்தனாகிய வணிகனும், மனத்தில் அச்சம் கொண்டு, செழுமையான திருமணச் செய்கையுடன் பின்னால் செய்து கொண்ட மனைவியையும் பெற்றெடுத்த பெண் மகவையும் கொண்டு, `அவர்கள் என்னிடம் வருமுன் நானே அவர்பால் செல்வேன்` என்று கருதிய வண்ணம், அவ்வம்மையாரிடம் வந்தான்.

விளக்கவுரை

அவர்கள் வந்ததைக் கேட்ட பரமதத்தன், அச்சமுற் றதும், தன்குடும்பத்தோடு முந்துறச் சென்று தானே காணச் சென்றதும் அவன்தன் உள்ளக் கிடக்கையையும் உயர்ந்த பண்பையும் காட்டி நிற்கின்றன.

தானும்அம் மனைவி யோடும்
தளர்நடை மகவி னோடும்
மானிளம் பிணைபோல் நின்ற
மனைவியார் அடியில் தாழ்ந்தே
யான்உம தருளால் வாழ்வேன்
இவ்விளங் குழவி தானும்
பான்மையால் உமது நாமம்
என்றுமுன் பணிந்து வீழ்ந்தான். #1760

வந்த வணிகன் தானும், அழகிய அம்மனைவி யோடும் தளர்நடைப் பருவம் சார்ந்த பெண் மகவினோடும், இளமை யான பெண்மானைப் போல் நிற்கும் மனைவியார் அடிகளை வணங்கி, `நான் உமது அருளால் வாழ்வேன், பெற்ற இக்குழந்தைக்கும் முன்னர்த் தங்களிடத்துக் கண்ட தகவால், உமது பெயரைச் சூட்டியுள் ளேன்` என்று கூறியவாறு அவர் முன் பணிந்து வீழ்ந்தனன்.

விளக்கவுரை

`அடியில் தாழ்ந்தே` என்றது, நின்றவாறு வணங்கிய முதல் வணக்கமாகும். `என்று முன் பணிந்து வீழ்ந்தான்` என்றது நில முறப் பணிந்த இரண்டாவது வணக்கமாகும். `தளர் நடை மகவு` எனவே குழந்தை பிறந்து ஏறத்தாழ ஒன்றரை ஆண்டு ஆகலாம் எனத் துணியலாம். வரலாற்று நிகழ்வைக்காணின் அம்மையாரைப் பிரிந்த ஓரிரு ஆண்டுகளிலேயே பொருள் வளம் பெருக்கி மணம் செய்தி ருக்க வேண்டும் என அறியலாம். திருமணமாகி நீண்ட ஆண்டுகள்

செல்லுதலன்றித் திருமணம் ஆன அணிமைக் காலத்திலேயே இரண்டாவது மனைவியார் கருவுற்று இருக்க வேண்டும். இவ்வகையாலெல்லாம் எண்ணிப் பார்க்கும் பொழுது, அம்மையாரைப் பிரிந்து ஏறத்தாழ நான்கு ஆண்டுகளுக்குப் பின்பே இவ்வகையில் அவரைக் கண்டிருக்கலாம். எனவே தொலைத் தொடர்புகளும், ஊர் விட்டு ஊர் செல்லுதலும் மிகுதியாக இல்லாத அமைதியான அக் காலத்து இவ்வகையான அமைப்பு நேர்ந்துள்ளது என்பதை அறியலாம்.
பான்மையால் - உண்மைத் தெய்வமாகக் கொண்ட தன்மையால்.

கணவன்தான் வணங்கக் கண்ட
காமர்பூங்கொடிய னாரும்
அணைவுறுஞ் சுற்றத் தார்பால்
அச்சமோ டொதுங்கி நிற்ப
உணர்வுறு கிளைஞர் வெள்கி
உன்திரு மனைவி தன்னை
மணமலி தாரி னாய்நீ
வணங்குவ தென்கொல் என்றார். **#1761**

கணவனார் தம்மை வணங்கிடக் கண்ட அழகிய பூங்கொடி போன்ற புனிதவதி அம்மையாரும், அருகில் நின்ற சுற்றத்தாரிடத்து அச்சம் மீதூர ஒதுங்கி நிற்பத், தொடர்ச்சியாக நிகழ்ந்து வரும் இச்செய்கைகளைக் கண்டு நிற்கும் சுற்றத்தார்களும் நாணமுற்று, மணமிகுந்த மாலையணிந்த பரமதத்தனே! நீ உன் அழகிய மனை வியை வணங்குவது என்னவோ? என்று வியப்புறக் கேட்டனர்.

விளக்கவுரை

காமர் - அழகிய

மற்றவர் தம்மை நோக்கி
மானுடம் இவர்தாம் அல்லர்
நற்பெருந் தெய்வ மாதல்
நானறிந் தகன்ற பின்பு

பெற்றஇம் மகவு தன்னைப்
பேரிட்டேன் ஆத லாலே பொற்பதம் பணிந்தேன் நீரும்
போற்றுதல் செய்மின் என்றான். **#1762**

வணிகனும், மற்று அவ்வாறு வினவிய சுற்றத் தாரைப் பார்த்து, `இவர் மானுடப் பிறவி அல்லர், நன்மையும் பெருமை யும் பொருந்திய தெய்வமேயாவர் என்பதை நான் அறிந்து நீங்கி வந்தபின்பு, பெற்ற இக்குழந்தைக்கும் அவர் பெயரையே இட்டேன், ஆதலால் அவருடைய அழகிய திருவடிகளை வணங்கினேன். நீவிரும் அவ்வாறே வணங்குதல்

செய்மின்` என்றனன்.

விளக்கவுரை

மானுடம் - மனிதப்பிறப்பு.

என்றபின் சுற்றத் தாரும்
இதுவென்கொல் என்று நின்றார்
மன்றலங் குழலி னாரும்
வணிகன்வாய் மாற்றங் கேளாக்
கொன்றைவார் சடையி னார்தங்
குரைகழல் போற்றிச் சிந்தை
ஒன்றிய நோக்கில் மிக்க
உணர்வுகொண் டுரைசெய் கின்றார். **#1763**

என்று இவ்வாறு வணிகன் சொல்ல, அதனைக் கேட்ட சுற்றத்தார்களும், இன்னதென்று தெளியவாராத நிலையில் அதிசயித்து நின்றார்கள். மணம் பொருந்திய கூந்தலையுடைய அம்மையாரும் வணிகன் கூறிய சொற்களைக் கேட்டு, கொன்றை அணிந்த நீண்ட சடையினையுடைய சிவபெருமானின் ஒலிக்கின்ற கழலினை அணிந்த திருவடிகளைப் போற்றி, மனம் ஒன்றிய அகநோக்கின் மீதூர்வால் உரைசெய்வாராகி.

விளக்கவுரை

குரைகழல் - ஒலக்கின்ற சிலம்பையுடைய திருவடி.

ஈங்கிவன் குறித்த கொள்கை
இதுஇனி இவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற
தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும்
பேய்வடி வடியே னுக்குப்
பாங்குற வேண்டும் என்று
பரமர்தாள் பரவி நின்றார். **#1764**

இவ்விடத்து இவ்வணிகன் குறிக்கொண்ட கொள்கை இதுவாகும். இனி இவன் பொருட்டுத் தாங்கி நிற்கும் அழகு பொருந்திய தசைகளாலாய உடற்பளுவை இங்குக் கழித்துவிட்டு, உன்னிடத்து அவ்வுலகில் நின் திருவடிகளைப் போற்றுகின்ற பேய் வடிவத்தை அடியேனுக்கு நன்மை பொருந்த அருள வேண்டும் என்று இறைவனுடைய திருவடியை வணங்கி வேண்டினர்.

விளக்கவுரை

திருமணமான பெண்கள், கணவன் உடனிருக்கும் வரையிலேயே தம் உடலழகினைப் போற்றிப் பேணுவர். அவன் தன்னைவிட்டு நீங்க

நேரின் அவ்வழகினை விரும்பார். உலகியல் வழிப்பட்ட பெண்கள் இந்நிலையினராயின், அருள் வயப்பட்ட அம்மையாருக்கு அந்நிலை கூறவும் வேண்டுமோ? ஆதலின் அவ் வழகும் உடலும் சுமையாக அமைந்தன. `பிறப்பறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை?` *(குறள், 345)* எனத் திருவள்ளுவரும் கூறுதல் காணலாம். பேய் வடிவு - தசைகள் நீங்கிய எலும்புடம்பில் உயிர்க் காற்று ஒன்றுமே நிலவியிருக்கும் நிலை. இது வினைவயப் பட்டும், பிறவுயிர் களுக்குத் தீங்கிழைத்தும் வாழும் ஏனைய பேய் வடிவங்களின் வேறாய நிலையதாம்.இறைவனின் திருவடிகளைப் போற்றி வாழும் பொற்பு டைய வடிவாம். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

ஆனஅப் பொழுது மன்றுள்
ஆடுவார் அருளி னாலே
மேனெறி உணர்வு கூர
வேண்டிற்றே பெறுவார் மெய்யில்
ஊனடை வனப்பை எல்லாம்
உதறிஎற் புடம்பே யாக
வானமும் மண்ணும் எல்லாம்
வணங்குபேய் வடிவ மானார். **#1765**

இவ்வாறு வணங்கி நின்ற பொழுது, மன்றுள் ஆடிவரும், கூத்தப் பெருமானின் திருவருளினாலே, மேலாய நெறியை அடையும் உணர்வு மீதூர, தாம் வேண்டிய அதனையே பெறுவாராய், உடம்பில் தசையும் அதன்வழி வெளிப்பட்டு நிற்கும் அழகும் ஆகிய இவற்றையெல்லாம் உதறி, எலும்பே உடம்பாக வானுலகம் மண்ணுலகம் எல்லாம் வணங்கத்தக்க பேயாகிய சிவகணத்துள் ஒன்றாம் நிலைமையைப் பெற்றார்.

விளக்கவுரை

`பேயாய நற்கணத்தில் ஒன்றாய நாம்,` *(தி.11 அற்புதத். 11)*என அம்மையார் பின்னர் அருள இருத்தலின், பேயாகிய சிவகணத்துள் ஒன்றாகும் நிலையென விளக்கப் பெற்றது.

மலர்மழை பொழிந்த தெங்கும்
வானதுந் துபியின் நாதம்
உலகெலாம் நிறைந்து விம்ம
உம்பரும் முனிவர் தாமும்
குலவினர் கணங்கள் எல்லாம்
குணலையிட் டனமுன் னின்ற
தொலைவில்பல் சுற்றத் தாருந்
தொழுதஞ்சி அகன்று போனார். **#1766**

எங்கும் தெய்வத் தன்மை வாய்ந்த மலர்மழை பொழிந்தது. தெய்வதுந்துபி முழக்கம் உலகெலாம் நிறைந்து பெருகத் தேவர்களும் முனிவர்களும் ஒருங்கு கூடி மகிழ்ந்தனர். சிவகணங்கள் அனைத்தும், ஆடலும், பாடலும் நிகழ்த்தி அகமகிழ்வு பெற்றன. முன் இருந்த எண்ணற்ற பல சுற்றத்தார்களும் தொழுது, அஞ்சி அங்கு நின்றும் அகன்றனர்.

விளக்கவுரை

வானதுந்துபி - இறையருள் வெளிப்படும் பொழுது முழங்கும் ஒரு வகைக் கருவி. இஃது இயக்குவோரின்றித் தானே முழங்கும் தகையது. குணலை - மகிழ்ச்சி மீதூரப் பாடி ஆடும் ஒருவகைக் கூத்து.

உற்பவித் தெழுந்த ஞானத்
தொருமையின் உமைகோன் தன்னை
அற்புதத் திருவந் தாதி
அப்பொழு தருளிச் செய்வார்
பொற்புடைச் செய்ய பாத
புண்டரீ கங்கள் போற்றும்
நற்கணத் தினில்ஒன் றானேன்
நான்என்று நயந்து பாடி. **#1767**

உள்ளிருந்து எழுந்த ஞானத்தினால் உமையொரு கூறனாகிய சிவபெருமானை வணங்கி `அற்புதத் திருவந்தாதி` எனும் அரிய நூலை அதுபொழுது அருளிச் செய்வாராகி, `அழகிய சிவந்த திருவடிப் போதுகளைப் போற்றுகின்ற நல்ல சிவபூத கணங்களுள் நானும் ஒன்றானேன்` என விரும்பிப்பாடி.

விளக்கவுரை

உற்பவித்து - உள்ளத்தின் உள்ளே தோன்றி. ஞானத்து ஒருமை - ஞான மிகுதியால் அறிவு, அறிபவன், அறியப்படுவோன் என்ற நிலையன்றிச் சிவமேயாகிச் சிந்தித்தல். அற்புதம் - திருவரு ளிலேயே திளைத்து நிற்கும் அரிய பேறு. `யானே தவமுடை யேன்`*(தி.11 அற்புதத். 7)*, `உண்டே எனக்கு அரிய தொன்று` *(தி.11 அற்புதத். 10)*, `எந்தையார்க்கு ஆட் செய்யப் பெற்ற இது கொல்லோ, சிந்தையார்க்குள்ள செருக்கு` *(தி.11 அற்புதத். 79)* என்றெல்லாம் இவ்அந்தாதியில் அருளுவது காண்க. `பேயாய நற்கணத்தில் ஒன்றாய நாம்` *(தி.11 அற்புதத். 86)* என்றார் அம்மையார். பொற்புடைச் செய்ய பாதபுண்டரீகங்கள் போற்றும் பொற்பால் நற்கணம் என்றார் என இவ்வரிய தொடருக்குச் சேக்கிழார் விளக்கம் காணும் அருமையும் எண்ணற்குரியதாம்.

ஆய்ந்தசீர் இரட்டை மாலை

அந்தாதி யெடுத்துப் பாடி
ஏய்ந்தபேர் உணர்வு பொங்க
எயிலொரு மூன்றும் முன்னாள்
காய்ந்தவர் இருந்த வெள்ளிக்
கைலைமால் வரையை நண்ண
வாய்ந்தபேர் அருள்முன் கூர
வழிபடும் வழியால் வந்தார். **#1768**

சிவபெருமானின் நுண்ணிதான கீர்த்திகளைக் கூறும் இரட்டை மணிமாலையினையும், அந்தாதித் தொடை அமையப் பாடி, பொருந்திய பேருணர்வு மேன்மேலும் எழுதலால், மும்மதில் களையும் முன்னாளில் அழித்தவராகிய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் உயர்ந்த கயிலாய மலையினை அடைதற்குரிய பேரருள் கூடுதலால், அதனை அடையத் தக்க வழியை நினைந்து வந்தார்.

விளக்கவுரை

ஆய்ந்த - நுணுகிய. கட்டளைக் கலித்துறையும் வெண் பாவுமாக இரு வகையாப்பிலமைந்த சொல்மாலையாதலின் இரட்டை மணிமாலை எனப் பெயர் பெற்றது. இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

கண்டவர் வியப்புற் றஞ்சிக்
கையகன் றோடு வார்கள்
கொண்டதோர் வேடத் தன்மை
உள்ளவா கூறக் கேட்டே
அண்டர்நா யகனார் என்னை
அறிவரேல் அறியா வாய்மை
எண்டிசை மாக்க ளுக்கியான்
எவ்வுரு வாயென் என்பார். **#1769**

தம்மைக் கண்டவர்கள் வியந்து அச்சம் பொருந்த அவ்விடத்தினின்றும் ஓடுவார்களாகி நின்ற பேயாய வேடத்தின் தன்மையை, உலகினர் தாம் தாமும் கண்டவாறே சொல்லிக் கேட்கி னும், தேவர்களுக்கெல்லாம் தலைவனாய பெருமான் என்னை அறிவாராகில், இவ்வுலகினர்க்கு யான் எவ்வடிவைத் தாங்கினால் என்ன? ஒன்றுமில்லை என்பாராய்.

விளக்கவுரை

எனக்கு அருளும் பெருமான் என்னை அறிவர். அங்ஙனமாகப் பிறர் அறியில் என்? அறியாது ஒழியில் என்? எனும் பெருமிதத்தோடு அம்மையார் செல்வாராயினார். `மத்தமனத்தொடு மால் இவன் என்னமனநினைவில் ஒத்தன ஒத்தன சொல்லிட, ஊரூர் திரிந்து எவரும் தத்தம் மனத்தன பேச எஞ்ஞான்று கொல் சாவதுவே` *(தி.8 ப.5 பா.3)*

எனவரும் திருவாசகப் பகுதியையும், `பேய் ஒன்றும் தன்மை பிறக்கும் அளவும் நீ ஒன்றும் செய்யாது நில்`(திருவருட்பயன், 77) என வரும் ஞானநூற்கூற்றையும் நினைவு கூர்க

வடதிசைத் தேசம் எல்லாம்
மனத்தினும் கடிதிற் சென்று
தொடையவிழ் இதழி மாலைச்
சூலபா ணியனார் மேவும்
படரொளிக் கயிலை வெற்பிற்
பாங்கணைந் தாங்குக் காலின்
நடையினைத் தவிர்ந்து பார்மேல்
தலையினால் நடந்து சென்றார். **#1770**

வட திசையிலுள்ள தேயங்களை எல்லாம் மன வேகத்தினும் விரைந்து சென்று, மாலையென மலரும் கொன்றை மாலையை அணிந்தும், கையில் சூலத்தை ஏந்தியும், நின்றருளுகின்ற சிவபெருமான் வீற்றிருக்கும் பேரொளிப் பிழம்பாக விளங்கும் திருக் கயிலையின் அருகு சென்ற அம்மையார், மேலும் காலால் நடந்து செல்லுதலை விடுத்துத் தலையால் நடந்து சென்றார்.

விளக்கவுரை

இதழி - கொன்றை. அது மலருங்கால் மாலையெனத் தோற்றமளிக்கும் ஆதலின் `தொடை அவிழ் இதழி` என்றார். சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருமலையின் அருகே காலால் நடத்தல் தக்கதன்று எனக் கருதியவர், தலையால் நடந்து செல்ல லானார். தலையால் நடத்தலாவது, தலைதாழ இருகைகளையும் தரையில் ஊன்ற வைத்து நடப்பதாம். நாவரசர் கைத்தொண்டு செய்த இடம் திருவதிகையென நினைந்து அதனை மிதிக்க அஞ்சி, அருகிருந்த சித்த வடமடத்தில் சுந்தரர் வதிந்ததும், அம்மையார் தலையால் நடந்த இடம் திருவாலங்காடு என நினைந்து அதனை மிதிக்க அஞ்சி, அதன் புறத்தே சம்பந்தர் தங்கியதும் அவரவர் தம் வரலாற்றால் அறியப்பட்டனவாம். அவை இங்கு நினைவு கூர்தற்குரியன.

தலையினால் நடந்து சென்று
சங்கரன் இருந்த வெள்ளி
மலையின்மேல் ஏறும் போது
மகிழ்ச்சியால் அன்பு பொங்கக்
கலையிளந் திங்கட் கண்ணிக்
கண்ணுதல் ஒருபா கத்துச்
சிலைநுதல் இமைய வல்லி
திருக்கண்நோக் குற்ற தன்றே. **#1771**

தலையினால் நடந்து சென்று பெருமான் எழுந் தருளியிருக்கும் கயிலை மலையின் மேல் ஏறும் பொழுது, மகிழ்ச்சி மீதூர்வினால் அன்பு மேன்மேலும் பெருக, இளம் பிறையாகிய மாலையை அணிந்த வில்லைப் போன்ற நெற்றியினை உடைய இறைவனின் இட மருங்கில் அமர்ந்திருக்கும் பார்வதியம்மையின் திருக்கண் பார்வை அப்பொழுது பொருந்தியது.

விளக்கவுரை

அம்மையார் மலையின் மீது ஏறும் பொழுது உமையம்மையாரின் திருக்கண் நோக்கம் அவர்மேல் பட்டது. `புலைய னேனையும் பொருளென நினைந்துன் அருள்பு ரிந்தனை, புரிதலும் களித்துத் தலையி னால்நடந் தேன்விடைப் பாகா சங்கரா` *(தி.8 ப.23 பா.2)* எனவரும் திருவாசகப் பகுதியும் இங்கு நினைக்கத் தக்கது.

அம்பிகை திருவுள் ளத்தின்
அதிசயித் தருளித் தாழ்ந்து
தம்பெரு மானை நோக்கித்
தலையினால் நடந்திங் கேறும்
எம்பெரு மான்ஓர் எற்பின்
யாக்கைஅன் பென்னே என்ன
நம்பெரு மாட்டிக் கங்கு
நாயகன் அருளிச் செய்வான். **#1772**

வரும் அம்மையாரை நோக்கிய பார்வதி அம்மையாரும், தம் திருவுள்ளத்தில் வியப்புக் கொண்டருளி, விரும்பித் தம் பெருமானை நோக்கி, எம் பெருமானே! தலையினால், நடந்து இங்கு ஏறிவரும் ஓர் எலும்புடம்பு பெற்ற இவ்வடிவின் அன்பு என்னே! என்று கேட்க, நம் தலைவியாகிய அம்மைக்கு இறைவரும் அருளிச் செய்வாராய்,

விளக்கவுரை

தாழ்ந்து - வணங்கி.

வருமிவள் நம்மைப் பேணும்
அம்மைகாண் உமையே மற்றிப்
பெருமைசேர் வடிவம் வேண்டிப்
பெற்றனள் என்று பின்றை
அருகுவந் தணைய நோக்கி
அம்மையே என்னுஞ் செம்மை
ஒருமொழி உலகம் எல்லாம்
உய்யவே அருளிச் செய்தார். **#1773**

`உமையே! எலும்புக்கூடாக வரும் இவள் நம்மைப் போற்றி வரும்

அம்மையே ஆவள். மற்றும் இப்பேய் வடிவாம் பெருமை பொருந்திய வடிவத்தையும் நம்மிடம் வேண்டிப் பெற்றுக் கொண்டவள்` என்று கூறிய அளவில், அவ்வம்மையாரும் அருகில் வந்து சேரவே, அவரை நோக்கி, அம்மையே! என்னும் செம்மைதரும் ஒப்பற்ற ஒரு மொழியினை உலகமெல்லாம் உய்யும் பொருட்டு அருளிச் செய்தார்.

விளக்கவுரை

வரும் இவர் யாரெனக் கேட்ட உமையம்மையாருக்கு இறைவன் `அம்மை காண்` என்றருளியதும், பின் அப்பெருமாட் டியார் அருகில் வந்தணைய, `அம்மையே` என்றருளியதும் அப்பெரு மாட்டியை உலகமெல்லாம் `அம்மை` என்று அழைப்பதற்குக் காரண மாயிற்று. செம்மையொரு மொழி - செம்பொருளை அடைதற்குரிய ஒப்பற்றதொரு மொழி. எனவே காரைக்காலம்மையார் எனும் பெயரை நினைந்தும் சொல்லியும் வழிபட்டும் வரச் சிறப்பென்னும் செம்பொருள் காணலாம் என்பது கருத்து. பெருமாட்டியார் அருளிய இரு பிரபந்தங்களும் இரு பதிகங்களுமாய நான்கனுள், மூன்றில், தம்மைப் பேயென்றே குறித்துக் கொள்வதும், சுந்தரர் தம் திருத்தொண்டத் தொகையில் *(தி.7 ப.39 பா.4)* `பேயார்` என இவரைக் குறித்தருள்வதும் கொண்டே `மற்று இப் பெருமை சேர் வடிவும் வேண்டிப் பெற்றனள்` என்றார் ஆசிரியர்.

அங்கணன் அம்மை யேஎன்
றருள்செய அப்பா என்று
பங்கயச் செம்பொற் பாதம்
பணிந்துவீழ்ந் தெழுந்தார் தம்மைச்
சங்கவெண் குழையி னாருந் தா
மெதிர் நோக்கி நம்பால்
இங்குவேண் டுவதென் என்ன
இறைஞ்சிநின் றியம்பு கின்றார். **#1774**

இறைவன் அம்மையே! என்று அருளிச் செய்ய, அம்மையாரும் `அப்பா` என்று தாமரை மலரனைய அழகிய திருவடிகளில் விழுந்து எழுந்தவராகிய அவரை, சங்கினால் ஆகிய வெள்ளிய குழையை அணிந்த இறைவனும் எதிர் நோக்கி, `இவ் விடத்து நம்மிடம் நீ வேண்டும் வரம் யாது? என்றருள,` அவரும் வணங்கி நின்று சொல்வாராகி.

விளக்கவுரை

****

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்

பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார். #1775

என்றும் கெடுதலில்லாத இன்ப அன்பினை வேண்டிப் பின்னும் வேண்டுவாராய், `இனிப் பிறவாதிருக்கும் வரம் வேண்டும், மீண்டும் பிறவி உளதாயின் உன்னை என்றும் மறவாது இருக்கும் வரம் வேண்டும், இவற்றோடு இன்னும் ஒன்று வேண்டும், அது, அறவா! நீ ஆடும்போது, நான் மகிழ்ந்துபாடி உன் அடியின்கீழ் இருக்கவும் வேண்டும்` என்று வேண்டினார்.

விளக்கவுரை

இறைவனை அடைதற்கு அன்பே முதற்கண் வேண்டு தலின் `இறவாத இன்ப அன்பு வேண்டும்` என முன்னதாக அதனை வேண்டினார் `வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை` என்பதால் அடுத்துப் `பிறவாமை வேண்டும்` என்றார். பிறத்தலும் பிறவாமையும் அவ்வவ்வுயிரின் வினைவயத்தவாதலின் அவ்வினைவழி, `மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்` என்றார். `மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்` *(தி.8 ப.1 வரி 32)* என்பதால் உயிர் நிறைவாகச் சேர்தற்குரிய புகலிடம் இறைவனின் திருவடியே யாதலின் `இன்னும் வேண்டும்` என ஆராமை தோன்ற வேண்டி, உன்னடியின் கீழ் என்றும் இருக்க வேண்டும் என்றும் விண்ணப்பித்துக் கொண்டார்.

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

கூடுமா றருள்கொ டுத்துக்
குலவுதென் திசையில் என்றும்
நீடுவாழ் பழன மூதூர்
நிலவிய ஆலங் காட்டில்
ஆடுமா நடமும் நீகண்
டானந்தஞ் சேர்ந்தெப் போதும்
பாடுவாய் நம்மை என்றான்
பரவுவார் பற்றாய் நின்றான். #1776

அவ்விண்ணப்பத்தைக் கேட்டருளி, தம்மைப் போற்றி வருகின்றவர்களுக்குப் பற்றுக் கோடாய் நிற்கும் இறைவர், தமது திருவடிக்கண் இருக்கும் பேற்றினை வழங்குவாராய், விளக்க முடைய தென்திசையில் எப்போதும் அழியாத வாழ்வைத் தரும் பழையனூர்

என்னும் பழம் பதியில் உள்ள திருவாலங்காட்டில், நாம் ஆடுகின்ற பெருங்கூத்தைக் கண்டு, எப்பொழுதும் மகிழ்வுடன் கூடி எம்மைப்பாடிக் கொண்டு இருப்பாயாக! என்று அருளினார்.

விளக்கவுரை

கூடுமாறு - தன்திருவடிக்கண் கூடுமாறு.

அப்பரி சருளப் பெற்ற
அம்மையுஞ் செம்மை வேத
மெய்ப்பொரு ளானார் தம்மை
விடைகொண்டு வணங்கிப் போந்து
செப்பரும் பெருமை அன்பால்
திகழ்திரு வாலங் காடாம்
நற்பதி தலையி னாலே
நடந்துபுக் கடைந்தார் அன்றே. **#1777**

தாம் வேண்டியவாறு அருளைப் பெற்றவராகிய அம்மையாரும், நான்மறைகளின் முடிவாக என்றும் நிலைத்து நிற்பவர் என்று போற்றப்பெறும் இறைவரிடம் விடைபெற்றுக் கொண்டு, வணங்கிச் சென்று, சொலற்கரிய பேரன்பினால், விளங்கு கின்ற திருவாலங்காடு எனும் நல்ல திருப்பதியைத் தலையினால் நடந்துசென்று, கோயிலுள் புகுந்து, அப்பெருமானின் திருமுன்பு அடைந்தனர்.

விளக்கவுரை

இறைவனின் திருக்கூத்தை என்றும் பெற்று நிற்கும் பதியாதலின், அதனைக் காலால் மிதிக்க அஞ்சித் தலையால் நடந்து வந்து அடைந்தார்.

ஆலங்கா டதனில் அண்ட
முறநிமிர்ந் தாடு கின்ற
கோலங்காண் பொழுது கொங்கை
திரங்கிஎன் றெடுத்துத் தங்கு
மூலங்காண் பரியார் தம்மை
மூத்தநற் பதிகம் பாடி
ஞாலங்கா தலித்துப் போற்றும்
நடம்போற்றி நண்ணு நாளில். **#1778**

இவ்வாறு வந்தடைந்த திருவாலங்காட்டில், மேலுள்ள அண்டங்களைப் பொருந்த நிமிர்ந்து ஆடுகின்ற திருக் கோலத்தைக் கண்டபொழுது `கொங்கை திரங்கி` எனத் தொடங்கும் மூத்த நற்பதிகத்தை, எவ்வுயிர்க்கும் தாம் வாழ் முதலாய் இருப்பது அன்றித் தமக்கு ஒரு வாழ்முதல் இல்லாத இறைவரின் திருமுன்பு பாடி, உலகெலாம்

விரும்பிப் போற்றிவரும் திருக்கூத்தினைத் தொழுது வாழுகின்ற நாளில்.

விளக்கவுரை

மூத்தபதிகம் - தேவாரத் திருப்பதிகங்கள் எனப் போற்றப் பெறும் பின்னர் எழுந்த பதிகங்களுக்கெல்லாம் இதுவே மூத்தது ஆதலின், இது `மூத்த நற் பதிகம்` *(தி.11 பிரபந். 2)* என் றழைக்கப் பெறுவதாயிற்று.

மட்டவிழ்கொன் றையினார்தந்
திருக்கூத்து முன்வணங்கும்
இட்டமிகு பெருங்காதல்
எழுந்தோங்க வியப்பெய்தி
எட்டிஇல வம்ஈகை
எனஎடுத்துத் திருப்பதிகங்
கொட்டமுழ வங்குழகன்
ஆடுமெனப் பாடினார். **#1779**

நறுமணம் கமழ்கின்ற கொன்றை மாலையை அணிந்த சிவபெருமானின் திருக்கூத்தினை, அவர் திருமுன்பே வணங்கிப் போற்றும் நற்பேற்றால் பொங்கியெழும் விருப்பம். மேன் மேலும் எழ, வியப்பெய்தி `எட்டி இலவம் ஈகை` எனத் தொடங்கி முழவம் கொட்டக் குழகன் ஆடும் எனும் நிறைவுடைய திருப்பாட்டுக் களாலாய திருப்பதிகம் ஒன்றையும் அடுத்துப் பாடினார்.

விளக்கவுரை

`எட்டியிலவம்` *(தி.11 பிரபந். 3)* எனத் தொடங்கும் திருப்பாடலின் முதலும் இறுதியுமாகவுள்ள தொடர்களை முகந்து ஆசிரியர் அருளிச் செய்திருக்கும் திறம் எண்ணி மகிழ்தற்குரியதாம். இவ்வகையில், அம்மையார் அருளிச் செய்திருக்கும் நான்கு திருப் பதிகங்களுள், முன்குறித்த *(பா.1767, 1768)* இருபிரபந்தங்களும் கயிலை செல்லும் முன் பாண்டிநாட்டுப் பகுதியிலிருந்து பாடியருளி யவை என்பதும், இவ்விருபதிகங்களும் கயிலை சென்று வந்த பின் திருவாலங்காட்டிலிருந்து இறைவன் திருமுன்பு பாடியருளியவை என்பதும் விளங்குகின்றன. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மடுத்தபுனல் வேணியினார்
அம்மையென மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றாரைக்
குலவியதாண் டவத்திலவர்
எடுத்தருளுஞ் சேவடிக்கீழ்
என்றுமிருக் கின்றாரை
அடுத்தபெருஞ் சீர்பரவல்

ஆரளவா யினதம்மா. #1780
பெருக்கெடுத்த கங்கையைச் சடையில் கொண்ட சிவபெருமான், `அம்மையே` என இனிய மொழியால் அழைத்த ருளப் பெற்றாரை, அப்பெருமான் மகிழ்ந்தாடும் திருக்கூத்தில் எடுத்தருளுகின்ற திருவடிக்கீழ் என்றும் இருக்கின்றாரைப், பொருந் திய பெருஞ் சிறப்பினை எடுத்துப் போற்றும் செயல் எவருடைய அறிவில் அடங்கும்? ஒருவர் அறிவிலும் அடங்காது.

விளக்கவுரை

அம்மையாரின் சிறப்பு எவராலும் எடுத்துப் போற் றற்கரியது எனவே அந்நிலை தமக்கும் பொருந்துமாறு காட்டினார் ஆசிரியர்.

ஆதியோ டந்த மில்லான்
அருள்நடம் ஆடும் போது
கீதமுன் பாடும் அம்மை
கிளரொளி மலர்த்தாள் போற்றிச்
சீதநீர் வயல்சூழ் திங்க
ளூரில்அப் பூதி யாராம்
போதமா முனிவர் செய்த
திருத்தொண்டு புகலல் உற்றேன். #1781

முதலும் முடிவும் இல்லாத இறைவன் அருட்கூத்து இயற்றும் பொழுது, அவர் திருவடிக்கீழிருந்து பண்ணமைந்த பாடல் களைப் பாடிமகிழும் அம்மையாரின் ஒளி விளங்கும் மலரனைய திருவடிகளை வணங்கிக், குளிர்ந்த நீர் நிறைந்த வயல்கள் சூழ்ந்த திங்களூரில் வாழும் அப்பூதியாராம் ஞானப் பெருமுனிவர் செய்த திருத்தொண்டினை இனிச் சொல்லத் தொடங்குகின்றேன்.

விளக்கவுரை

பாதம் - ஞானம். ஞானமே வடிவாய முனிவர் என்பதாம்.

அப்பூதியடிகள் நாயனார் புராணம்

தாண்டவம் புரிய வல்ல
தம்பிரா னாருக் கன்பர்
ஈண்டிய புகழின் பாலார்
எல்லையில் தவத்தின் மிக்கார்
ஆண்டசீர் அரசின் பாதம்
அடைந்தவர் அறியா முன்னே
காண்டகு காதல் கூரக்
கலந்தஅன் பினராய் உள்ளார். **#1782**

ஐந்தொழிலையும் இயற்றுதற்குரிய திருக்கூத்தினை இயற்றுதலில் வல்லவரான சிவபெருமானுக்கு அன்புடையவர். பொருந்திய புகழினை உடையவர். அளவில்லாத தவத்தினில் மிக்கவர். சிவபெருமானால் ஆட்கொள்ளப்பெற்ற சீர்மை மிகுந்த திருநாவுக்கரசு நாயனாரின் திருவடிகளையே பெரும் பற்றாக அடைந்து, அவர்தம்மைக் கண்ணால் கண்டு அறியாததற்கு முன்ன மேயே, தாம் அவர்பால் மிகச் சிறந்த காதல் கொண்டு உளங்கலந்த அன்பினராய் உள்ளவர்.

விளக்கவுரை

தாண்டவம் - திருக்கூத்து. உயிர்களை ஆட்கொள் ளுதற் கென்றே செய்யும் கூத்து. காண்டகுகாதல் - விரும்பத்தகும் அன்பு.

களவுபொய் காமம் கோபம்
முதலிய குற்றங் காய்ந்தார்
வளமிகு மனையின் வாழ்க்கை
நிலையினார் மனைப்பால் உள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள்
ஆவொடு மேதி மற்றும்
உளவெலாம் அரசின் நாமஞ்
சாற்றும்அவ் வொழுகல் ஆற்றார். **#1783**

பிறர் பொருளை உள்ளத்தால் விரும்புதலும், அவர் அறியாதவாறு எடுத்தலும், பொய் கூறுதலும், அளவற்ற இன்ப உணர்வு கொள்ளுதலும், பிறரைச் சினத்தலும் முதலாய எவ்வகைக் குற்றங்களினின்றும் இயல்பாகவே நீங்கியவர். வளம் பொருந்திய இல்வாழ்க்கையின் நெறி நின்றவர். வீட்டிலுள்ள முகத்தல், நீட்டல் முதலிய அளத்தல் கருவிகளுக்கும், துலாக்கோல் முதலிய எடுத்தலளவைக் கருவிகளுக்கும், மக்கள், பசுக்கள், எருமைகள் மற்றும் உள்ள எல்லாப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசு எனும் திருப்பெயரைச் சூட்டி அழைக்கும் நெறிப்பாடுடையார்.

விளக்கவுரை

மேதி - எருமை. அளவைகள் அனைத்தும் உயிரற்றன. மக்கள், ஆன், எருமைகள் அனைத்தும் உயிருடையன. எனவே, உயிர்ப் பொருள், உயிரற்ற பொருள் ஆகிய, அனைத்திற்கும் நாவர சரின் திருப்பெயரையே இட்டு வழங்கியது, அப்பூதியாருக்கு நாவர சர் மீது இருந்த மீதூர்ந்த பத்திமையைக் காட்டுகின்றது. முதலாம் இராசராசன் தன் காலத்தில் நிறுத்தலளவைக் கருவிகளுக்குத் தட்சிண மேரு விடங்கன், ஆடவல்லான் என்றும் ஆடல்வல்லான் மரக்கால் என்றும் பெயரிட்டு வழங்கினமை ஈண்டு நினைவு கூர்தற்குரியது. *(முதலாம் இராசராச சோழன் - அளவைகள் என்ற தலைப்பு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வெளியீடு)*

வடிவுதாங் காணா ராயும்
மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையுந் தம்பி ரானார்
அருளுங்கேட் டவர்நா மத்தால்
படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப்
பந்தர்கள் முதலா யுள்ள
முடிவிலா அறங்கள் செய்து
முறைமையால் வாழும் நாளில். **#1784**

நாவரசரின் திருவடிவினைக் காணாதவராயினும், நிலைபெற்ற சிறப்பினை உடைய அப்பெருந்தகையாரின் திருத் தொண்டின் திறத்தினையும், இறைவன் அவருக்கு வழங்கிய இனிய அருளையும் கேட்டு, அவர்தம் திருப்பெயரால் திருமடங்களும், தண்ணீர்ப் பந்தலும் முதலாக உள்ள எல்லையற்ற அறங்களைச் செய்து, அம்முறைமையில் வாழும் நாளில்.

விளக்கவுரை

மடங்கள் - அடியவர், துறவியர் முதலாயினோர் உண் ணவும், இருக்கவும் அமைந்த இடங்கள். திங்களூரில் மட்டு மன்றித் திருப்பராய்த்துறை, திருவீழிமிழலை, திருவான்மியூர் முதலான இடங்களிலும் திருநாவுக்கரசர் பெயரால் திருமடங்கள் இருந்தன. திருவதிகையில் வாகீசர் மடம் இருந்தது.

நாவரசரின் வடிவினைப் பார்த்தறியார் எனினும், அவர்தம் பத்திமையும் தொண்டும் அறிந்தவாற்றான் அப்பூதியடிகளார் அவர் மீது அன்பு கொண்டார். `காண் தகைமை யின்றியும் முன் கலந்த பெருங்கேண்மையினார்` என்றார் முன்னும். `புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்புஆம் கிழமை தரும்` *(குறள், 785)* என்பர்

திருவள்ளுவர். இக்கேண்மைக்கு எடுத்துக்காட்டாகக் கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும் கொண்டிருந்த அன்புடைமையைக் காட்டுவர் பரிமேலழகர் (குறள்- *785* உரை). அவ் வரலாற்றையடுத்து அத்தகைய கேண்மைக்கு எடுத்துக் காட்டாகும் வரலாறு இதுவாகும்.

கேட்டல் மாத்திரை யல்ல தியாவதும்
காண்டல் இல்லாது யாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமைய ராகினும்
அரிதே தோன்றல் அதற்பட ஒழுகல் என்று
ஐயங் கொள்ளன்மின் ஆரறி வாளீர்!
இகழ்விலன் இனியன் யாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே
தன்பெயர் கிளக்குங் காலை என்பெயர்
பேதைச் சோழன் என்னும் சிறந்த
காதற் கிழமையும் உடையன் அதன்றலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவன் ஒழிக்க அவற்கு இடமே.-புறநானூறு, *216*

எனவரும் கோப்பெருஞ் சோழனாரின் அன்புடைமையைக் காண்க.

பொருப்பரையன் மடப்பிடியி
னுடன்புணருஞ் சிவக்களிற்றின்
திருப்பழனம் பணிந்துபணி
செய்திருநா வுக்கரசர்
ஒருப்படுகா தலிற்பிறவும்
உடையவர்தம் பதிவணங்கும்
விருப்பினொடுந் திங்களூர்
மருங்குவழி மேவுவார். **#1785**

மலையரசனின் மகளாராய இளைய பெண்யானை யைப் போன்ற உமையம்மையாருடன் ஒருங்கிருந்து அருளும் சிவக் களிற்றினது திருப்பழனத்தைப் பணிந்து, திருத்தொண்டு செய்துவரும் திருநாவுக்கரசர், ஒரு நெறிய மனங்கொண்ட பேரன்பினால் பிறபிற திருப்பதிகளையும் வணங்கும் விருப்போடு திங்களூர் என்னும் திருப்பதியின் அருகுவருவாராய்,

விளக்கவுரை

பொருப்பரையன் - இமவான். அம்மையாரைப்பிடி என்றதற் கேற்ப இறைவனைச் சிவக்களிறு என்றார்.

அளவில்சனஞ் செலவொழியா
வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய்

உறுவேனில் பரிவகற்றிக்
குளநிறைந்த நீர்த்தடம்போல்
குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளமருவும் நிழல்தருதண்
ணீர்ப்பந்தர் வந்தணைந்தார். **#1786**

எண்ணற்ற மக்கள் போந்தும் புகுந்தும் இருத்தலை நீங்காத நல்ல பெருவழியின் கரையில், அருள் நிறைந்த பெரியவர் களின் திருவுள்ளத்தைப் போலக் குளிர்ந்த கருணைத் தன்மை உடையதாய்ப் பொருந்திய வேனில் வெம்மையின் துன்பத்தை எல்லாம் போக்கிக் குளமும், நிறைந்த நீரினை உடைய தடமும் போலக் குளிர்ச்சி நீங்காது விளங்கும் பரப்பினை உடையதாய், வளமிக்க நிழலைத் தரும் தண்ணீர்ப் பந்தரை வந்தணைந்தார்.

விளக்கவுரை

ஜனம் - சனமாயிற்று. வழிக்கரை - திருநல்லூரிலிருந்து திருப்பழனம் வழியாக வரும் பாதையின்கரை. அப்பந்தரின் குளிர்ச் சிக்கு அருளுடையாரின் திருவுள்ளத்தை உவமை கூறியது உணர்ந்து இன்புறத்தக்கதாம். குளம் - இயற்கை அமைப்புக்களை யுடைய பெரு நீர்நிலை என்றும், தடம் - அவ்வப்பொழுது நீர் நிறைக்கப்படும் சிறு நீர்நிலை என்றும், இவற்றுள் முன்னையது பயிர்களுக்கும், பின் னையது ஏனைய மக்கள் முதலிய உயிர்களுக்கும் பயன்படுவன என் றும் விளக்கம் கொள்வர். இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபுடையன.

வந்தணைந்த வாகீசர்
மந்தமா ருதசீதப்
பந்தருடன் அமுதமாந்
தண்ணீ ரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார்
திருநாவுக் கரசெனும்பேர்
சந்தமுற வரைந்ததனை
எம்மருங்குந் தாங்கண்டார். **#1787**

அவ்விடத்துக்கு வந்து அடைந்த திருநாவுக்கரசர் குளிர்ச்சியும், மென்மையும் உடைய இளந் தென்றல் காற்று வீசும் குளிர்ந்த அப்பந்தருடன் அமுதமாகிய தண்ணீரும் இருப்பதைக் கண்டு, தம் திருமனத்தில் வியப்புப் பொருந்த வருவார். `திருநாவுக் கரசர்` என்னும் பெயர் எப்பக்கத்திலும் புகழ்பொருந்த எழுதியிருப் பதைக் கண்டார்.

விளக்கவுரை

மந்தமாருதம் - மென்மையாக வீசும் தென்றல் காற்று. சந்தமுற -

புகழ்பொருந்த; அஃதாவது வண்ணமும் சீர்மையும் பொருந்த.

இப்பந்தர் இப்பெயரிட்
டிங்கமைத்தார் யார்என்றார்க்
கப்பந்தர் அறிந்தார்கள்
ஆண்டஅர செனும்பெயரால்
செப்பருஞ்சீர் அப்பூதி
அடிகளார் செய்தமைத்தார்
தப்பின்றி எங்குமுள
சாலைகுளங் காவென்றார். **#1788**

இப்பந்தரை இப்பெயர் இட்டு இங்கு அமைத்தவர் யாவர்? என்று கேட்ட நாவரசருக்கு, அப்பந்தரின் வரலாற்றினை அறிந்த அங்கு இருந்தவர்கள், இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற திருநாவுக்கரசு எனும் பெயரினால், சொலற்கரிய சிறப்புப் பொருந்திய அப்பூதியடிகளார் என்பார் இப்பந்தரைச் செய்தமைத்தனர். இவ்வாறே தவறுதலின்றி அவர்க்கென இருக்கும் சாலை, குளம், சோலை ஆகிய வற்றிற்கும் அவ்வரிய பெயரை இட்டு அழைப்பார் என்றார்.

விளக்கவுரை

தப்பின்றி - தவறுதலின்றி; அஃதாவது தமக்கென உள வாகும் உயிர்ப்பொருள், உடைமைப் பொருள் ஆகிய அனைத்திற்கும் தவறாது திருநாவுக்கரசு எனும் பெயரையே இட்டு,

என்றுரைக்க அரசுகேட்
டிதற்கென்னோ கருத்தென்று
நின்றவரை நோக்கிஅவர்
எவ்விடத்தார் எனவினவத்
துன்றியநூல் மார்பரும்இத்
தொல்பதியார் மனையின்கண்
சென்றனர்இப் பொழுததுவும்
சேய்த்தன்று நணித்தென்றார். **#1789**

என்று அங்கு உள்ளவர்கள் கூற, அதைக் கேட்ட நாவரசர் இப்பெயரிட்டு அழைத்தற்கு என்ன காரணம் என எண்ணிய வராய், அங்கு நின்றவர்களை நோக்கி, அவர் எவ்விடத்து உள்ளார்? என்று கேட்க, நெருங்கிய பூணும் நூல் பொருந்திய மார்பினை உடைய அவரும் இப்பதியினரே ஆவர்; இப்பொழுதுதான் தம் மனைக்குச் சென்றனர்; அம்மனையும் தொலைவில் உள்ளதன்று; மிக அணிமையில் உள்ளது என்றார்கள்.

விளக்கவுரை

`அப்பந்தர், அறிந்தார்கள்` எனச் சென்ற பாடலிலும் `நின்றவரை நோக்கி` என இப்பாடலிலும் பொது வகையால் குறித்தார் எனினும், அவர்கள் அப்பூதியாரின் ஆணை வழிநின்று வருவாரை வரவேற்றும், அவர்க்குத் தண்ணீர் வழங்கியும் வந்த ஏவலாளர்களே ஆவர் என்பது உய்த்துணரத் தக்கதாம். அவர் எவ்விடத்தார்? எனக் கேட்ட நாவரசருக்கு, அவர் இல்லத்திலுள்ளார் எனக் கூறும் பணி யாளர்கள், அவர் அவ்வில்லத்திற்குச் சென்ற காலத்தின் அணிமை யையும், அவ்வில்லத்தின் இட அணிமையையும் ஒருங்கு கூறியது, அவர்கள் தம் தலைவர்பால் கொண்டிருக்கும் அடிமைத் திறத்தையும், தண்ணீர்ப் பந்தருக்கு வருவாரிடத்து நடந்துகொள்ளும் அறிவோடு கூடிய அன்புடைமையையும் ஒருங்கு காட்டுகின்றன.

அங்ககன்று முனிவரும்போய்
அப்பூதி அடிகளார்
தங்குமனைக் கடைத்தலைமுன்
சார்வாக உள்ளிருந்த
திங்களூர் மறைத்தலைவர்
செழுங்கடையில் வந்தடைந்தார்
நங்கள்பிரான் தமர்ஒருவர்
எனக்கேட்டு நண்ணினார். **#1790**

அவ்விடத்தினின்றும் நீங்கிய முனிவராகிய நாவரசரும் சென்று, அப்பூதியடிகளார் வாழும் இல்லத்தின் முன் சென் றாராக, உள்ளிருந்த திங்களூரிலுள்ள மறையவர்களின் தலைவராகிய அப்பூதியாரும், வளமுடைய தம்மனைமுன் நம் சிவபெருமானின் அடியவர் ஒருவர் வந்துள்ளார் என்று சொல்லக் கேட்டு, அம் மனையின் முன் வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

வேண்டுதலும் வேண்டாமையும் அற்ற திருவுள்ளம் உடையராதல் பற்றி நாவரசரை முனிவர் என்றார். கடைத்தலை - முன்றில்: வீட்டின் முன். செழுங்கடை - வளம் பொருந்திய திருமனை யின் முன்பு. செழுங்கடை என்றார், அவ்வீட்டு வாயிலின்முன், நாளும் அடியவர்களும் முனிவர்களும் வந்து உணவும் உபசரிப்பும் பெற்று வாழ்தலின்.

கடிதணைந்து வாகீசர்
கழல்பணிய மற்றவர்தம்
அடிபணியா முன்பணியும்
அரசின்எதிர் அந்தணனார்
முடிவில்தவஞ் செய்தேன்கொல்
முன்பொழியுங் கருணைபுரி

வடிவுடையீர் என்மனையில்
வந்தருளிற் றென்என்றார். #1791
மனையின் முன் அடியார் ஒருவர் வந்துள்ளார் என்பதைக் கேட்ட அளவிலேயே, விரைந்து வந்து மனையின் திருமுன்பு வந்த அப்பூதியாரும் நாவரசரின் திருவடிகளை வணங்க, அவர்தம் திருவடிகளில் வணங்குதற்கு முன்னமே தாமும் வணங்கு கின்ற திருநாவுக்கரசர் முன்பு, அந்தணராகிய அப்பூதியார் `திருமுகத் தில் கருணைபொழிகின்ற திருவடிவினை உடைய பெரியீரே! என் மனையில் வந்து அருளுதற்கு அடியேன் முன் முடிவில்லாத தவத்தைச் செய்திருந்தேன் போலும்` என்று வியந்த வண்ணம் கூறினார்.

விளக்கவுரை

`பத்தியின் பாலராகிப் பரமனுக்கு ஆளாம் அன்பர் தத்தமில்` *(தி.12 சரு.1-2 பா.22)* வணங்குமா போல், என முன் நெற் பயிர்களின் வளத்தை ஆசிரியர் காட்டுதற்குக் காரணம், இவ்வகையில் அடியார்கள் தத்தமக்குள் வணங்கி மகிழ்ந்த திறன் கண்டேயாம். கொல் - ஐயப் பொருளில் வந்த இடைச்சொல்.

ஒருகுன்ற வில்லாரைத்
திருப்பழனத் துள்ளிறைஞ்சி
வருகின்றோம் வழிக்கரையில்
நீர்வைத்த வாய்ந்தவளம்
தருகின்ற நிழல்தண்ணீர்ப்
பந்தருங்கண் டத்தகைமை
புரிகின்ற அறம்பிறவும்
கேட்டணைந்தோம் எனப்புகல்வார். #1792
ஒப்பற்ற மாமேரு மலையை வில்லாக வளைத்த சிவபெருமானைத் `திருப்பழனம்` என்னும் திருப்பதியில் வணங்கிய பின், இங்கு வருகின்றோம். வரும் வழியில் நீர் வைத்திருக்கும் வள மார்ந்த நிழல் தரும் தண்ணீர்ப் பந்தரைக் கண்டும், அத்தன்மையால் மேலும் செய்து வருகின்ற வேறு பிற அறங்களைக் கேட்டும் இத்திருமனைக்கு வந்தணைந்தோம் எனக் கூறுபவர்.

விளக்கவுரை

வழிக்கரையில் - வழியின் ஓரத்தில், `அளவில் சனம் செலவொழியா வழிக்கரையில்` என்றார் முன்னும்.

ஆறணியுஞ் சடைமுடியார்
அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந்

தரில்நும்பேர் எழுதாதே
வேறொருபேர் முன்னெழுத
வேண்டியகா ரணம்என்கொல்
கூறும்என எதிர்மொழிந்தார்
கோதில்மொழிக் கொற்றவனார். **#1793**

கங்கை தாங்கிய திருச்சடையை உடைய சிவ பெருமானின் அடியவர்களுக்கு நீர் வைத்திருக்கும் அளவற்ற பெருமையுடைய தண்ணீர்ப் பந்தலில், நும் பெயரை எழுதாமல் வேறொரு பெயரை முகப்பிலெல்லாம் எழுத வேண்டிய காரணம் என்னவோ? என்று குற்றமற்ற மொழி வேந்தராகிய நாவரசர் அவரிடத்துக் கேட்டனர்.

விளக்கவுரை

முன்னெழுதல் - முகப்புக்கள் தோறும் எழுதுதல்: வீடு, பந்தர், தொழுவம் முதலியவற்றின் முகப்பில். கோது - குற்றம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

நின்றமறை யோர்கேளா
நிலையழிந்த சிந்தையராய்
நன்றருளிச் செய்திலீர்
நாணில்அமண் பதகருடன்
ஒன்றியமன் னவன்சூட்சி
திருத்தொண்டின் உறைப்பாலே
வென்றவர்தந் திருப்பேரோ
வேறொருபேர் எனவெகுள்வார். **#1794**

நின்ற அப்பூதி அடிகளார், அம்மொழியைக் கேட்ட அளவில் மனம் அழிந்தவராகி, நீர் நன்மையான மொழிகளை அருளிச் செய்திலீர்! நாணம் இல்லாத சமணர்களாய கொடியவர்களுடன் சேர்ந்து பல்லவன் செய்த சூழ்ச்சிகளை எல்லாம், தாம் இறைவரின் திருத்தொண்டில் அழுந்தி நின்றமையையே துணையாகக் கொண்டு வென்ற, அப்பெருந்தகையாரின் திருப்பெயரோ வேறொருபேர்? என வெகுண்டவராய்,

விளக்கவுரை

மனம் அழிந்த நிலையிலும் `தீங்கு அருளினீர்` என்னாது `நன்று அருளிச் செய்திலீர்` என்றார், அடியவர் மாட்டு அவர் கொண்டிருந்த பத்திமையும், தீய சொற்களை மறந்தும் கூறாத அவர் பெற்றிமையும் தோன்ற. பதகர் - கொடியவர். சூழ்ச்சி - கொலை சூழ்ந்த செயல்கள். திருத்தொண்டின் உறைப்பு - இறைவரிடத்தும் அடியவரிடத்தும் செய்துவரும் தொண்டில் அழுந்திநிற்கும் நிலை. அரசன் ஆணை வழித்

தம்மை அழைக்க வந்தோரிடத்து, `நாமார்க்கும் குடியல்லோம்` *(தி.6 ப.98 பா.1)*என மறுமாற்றம் மொழிந்தமையும், அவர் மீண்டும் பணிந்து வேண்ட, `ஈண்டு வரும் தீவினைகளுக்கு எம்பிரான் உளன்`*(தி.12 பு.21 பா.94)* என்று கருதி அவர்களுடன் சென்றமையும், அவர்கள் ஒன்றன் பின் ஒன்றாகச் செய்த தீங்குகளுக் கெல்லாம் இறைவனின் திருவடியிலேயே மனம் வைத்தவராய், அவர்களை ஒறுத்தலின்றி அச்செயல்களை ஏற்றமையும் காண்க.

நம்மையுடை யவர்கழற்கீழ்
நயந்ததிருத் தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பதென
என்போல்வா ருந்தெளியச்
செம்மைபுரி திருநாவுக்
கரசர்திருப் பெயரெழுத
வெம்மைமொழி யான்கேட்க
விளம்பினீர் எனவிளம்பி. **#1795**

`நம்மை அடிமையாகக் கொண்டிருக்கும் இறைவ னின் திருவடிகளின் கீழ் விரும்பிச் செய்யும் திருத்தொண்டினால், இம்மையிலும் நாம் உய்திபெறுவோம் என்பதை என்போன்றவர் களும் தெளியுமாறு, சிவமாம் தன்மைப் பெருவாழ்விலேயே அழுந்தி நிற்கும் திருநாவுக்கரசரின் திருப்பெயரினை அடியேன் யாண்டும் எவர்க்கும் பெயராகக் கொண்டு நிற்ப, நீர் கொடுமை யானதொரு சொல்லை யான் கேட்கக் கூறினீர்! என்று சொல்லி,

விளக்கவுரை

செம்மை - சிவபரம் பொருளிடத்திலேயே அழுந்தி நிற்றல். புரிதல் - அத்தன்மையை இடைவிடாது மேற்கொண்டிருத்தல். `திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரையன்` *(தி.7 ப.39 பா.4)*, `செம்மையுள் நிற்பராகில்` *(தி.4 ப.76 பா.2)* என்பன வாகிய திருவாக்குகளும் காண்க.

பொங்குகடல் கல்மிதப்பில்
போந்தேறும் அவர்பெருமை
அங்கணர்தம் புவனத்தில்
அறியாதார் யாருளரே
மங்கலமாந் திருவேடத்
துடன்நின்றிவ் வகைமொழிந்தீர்
எங்குறைவீர் நீர்தாம்யார்
இயம்புமென இயம்பினார். **#1796**

அலைகள் மிக்கெழும் கடலில் கல்லையே தெப்பமாகக் கொண்டு கரை

ஏறிய அப்பெருந்தகையின் பெருமை யினைச் சிவபெருமானால் தோற்றுவிக்கப் பெற்ற இந்நில உலகில் அறியாதவர்கள் எவரும் உளரோ? மங்கலம் பொருந்திய சைவ மெய்த் திருவேடத்துடன் நின்றும், இவ்வகையாகக் கூறினீர்! நீர் எவ்விடத்தில் உள்ளீர்? நீர் தாம்யார்? சொல்வீராக என்று கூறினார்.

விளக்கவுரை

கல்மிதப்பு - கல்லாகிய தெப்பம். இம்மூன்று பாடல் களும் ஒரு முடிபுடையன.

திருமறையோர் அதுமொழியத்
திருநாவுக் கரசர்அவர்
பெருமையறிந் துரைசெய்வார்
பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினால்
ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும்உணர் வில்லாத
சிறுமையேன் யான்என்றார். **#1797**

சிவப் பொலிவுடைய மறையவராகிய அப்பூதி அடிகளார் அவ்வாறு கூறக்கேட்ட திருநாவுக்கரசர், அவர்தம் பெரு மையை அறிந்து விடை கூறுவாராய்ப், புறச் சமயத்துறையினின்றும் ஏறும் பொருட்டு அருள் பெறுவதற்கு ஏதுவாய சூலை நோயால் ஆட்கொள்ளப் பெற்றுப் பெருமானாரை மீண்டும் அடைந்து உய்தி பெற்ற தெளிந்த உணர்வில்லாத சிறுமையுடையேன் யானே என்றார்.

விளக்கவுரை

திரு - சைவமாம் பொலிவு. பிறதுறை எனப் பொது வகையால் கூறினரேனும் அவர் இருந்து வந்த சமயம் சமணமேயாம். `இச்சித்த தெய்வம் போற்றி`, `யாதொரு தெய்வம் கொண்டீர் ..... வருவர்` *(சிவஞா. சித்தி. இரண்டாம் 24, 25)* எனவரும் மெய்ந்நூற் கூற்றுகளுக் கிணங்க, அச்சமயத்தையும் `துறை` என்றார். இறைவன் அருளிய சூலையே, மீளச் சைவசமயம் சார்தற்கு ஏதுவாயினமையின், அச் சூலைதானும் `அருளு பெருஞ்சூலையா யிற்று.` இது போன்றே ஆளுடைய நம்பிகளால் முன்னர்க் கிழித்தெறி யப்பட்ட ஆவணமும் அற்புதப் பழ ஆவணம் ஆயிற்று. வரவரக் கண்டு ஆராய் மனமே` *(சிவபோக சாரம், 132)* எனவரும் தருமைக் குரு மூர்த்திகளின் அருள் மொழி எட்டுணையும் மறக்கப் போமோ*!*

தம் பெருமையை மனம் மொழி மெய் ஆகிய முக்கருவிகளா லும் ஏற்றுப் போற்றியும், அயராத பத்திமை பூண்டும் நிற்கும் அப்பூதி யடிகளாரின்

உரையைக் கேட்ட நாவரசர், ஒரு சிறிதும் தம்மை வியத்தலின்றித் தம் சிறுமை குறித்த பணி மொழிகளையே கூறிய ருளிய திறம் எஞ்ஞான்றும் நினைவு கொளற்குரியதாம். `தம் புகழ் கேட்டார் போல் தலைசாய்த்து மரம் துஞ்சி` *(கலித்தொகை, நெய். 2)* எனவரும் சங்கச் சான்றோரின் கூற்றிற்கு இஃது அரணாக நிற்கும் அருமைப் பாடும் காண்க.

அரசறிய உரைசெய்ய
அப்பூதி அடிகள்தாம்
கரகமல மிசைகுவியக்
கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெல்லாம்
உரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தஞ்
சரணகம லம்பூண்டார். **#1798**

இவ்வாறு நாவரசர், தம்மை அப்பூதியடிகளார் அறிய உரைத்தருளிச் செய்யவே, உண்மையுணர்ந்த அப்பூதியடிக ளார் கைமலர்கள் தாமே தலையின் மீது குவியவும், கண்களினின்றும் வரும் நீர் அருவிபோலப் பாய்ந்து வழியவும், மொழிதடுமாறி, உடல் முழுதும் மயிர்க்கூச் செறிந்து விளங்கவும், நிலத்தின்மீது உடல் பொருந்த விழுந்து, அவருடைய திருவடித் தாமரைகளைத் தலைமிசை பொருந்தப் பூண்டனர்.

விளக்கவுரை

அறிய - அப்பூதியடிகளார் அறிய. நாவரசர் என அறிந்த அளவிலேயே அவர்மீதிருந்த அன்பின் மீதூர்வால் அப்பூதி அடிகளார்க்கு நிகழ்ந்த மெய்ப்பாடுகள் ஐந்தாம். அவை: *1.* கைகள் தாமே தலைமீது குவிதல். *2.* கண்களில் அருவியென நீர் பெருகுதல். *3.* சொல் தடுமாறல். *4.* உடல் மயிர்க்கூச் செறிதல். *5.* தரைமிசை வீழ்தல். பல்காலும் தாம் எண்ணியும் வழிபட்டும் போற்றி வந்த நாவரசர் பெருமானாரை, எதிர்பாராமல் காணக்கிடைத்த பேறும் அப்பேற்றால் விளைந்த விளைவும் இவையாம். இம்மெய்ப்பாடுகள் நாவரசர் பெருமான் தில்லைப் பெருமானை வழிபட்ட பொழுது நிகழ்ந்த மெய்ப்பாடுகளோடு ஒப்பிட்டு மகிழ்தற்குரியன `கையும் தலைமிசை புனை அஞ்சலியன` *(தி.12 பு.21 பா.167)* எனவரும் திருப்பாடலை நினைவு கூர்க.

மற்றவரை எதிர்வணங்கி
வாகீசர் எடுத்தருள
அற்றவர்கள் அருநிதியம்
பெற்றார்போல் அருமறையோர்
முற்றவுளங் களிகூர
முன்னின்று கூத்தாடி

உற்றவிருப் புடன்சூழ
ஓடினார் பாடினார். **#1799**

அங்ஙனம் வீழ்ந்து திருவடிகளைப் பூண்டு கிடக்கும் அப்பூதியடிகளாரைத் திருநாவுக்கரசர், தாமும் எதிர் வணங்கி அவரை எடுத்தருளவே, அரிய மறையவராகிய அப்பூதியடிகளாரும் வறியவர்கள் பெரும் பொருளைப் பெற்றது போல, மனம் மகிழ்ச்சி மீதூர அவர் முன்பு நின்று ஆனந்தக் கூத்தாடியும் பெருவிருப்புடன் அவரைச் சூழ்ந்தும் ஓடினார், பாடினார்.

விளக்கவுரை

களிகூர - மகிழ்ச்சி மிக. `ஆசையொடும் அரனடியார் அடியாரை அடைந்திட்டு ...கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே` *(சிவஞா. சித்தி, பன்னிரண்.-2)* எனவரும் மெய்ந்நூற் கூற்று அப்பூதியடிகளாருக்கு அநுபவமாயிற்று.

மூண்டபெரு மகிழ்ச்சியினால்
முன்செய்வ தறியாதே
ஈண்டமனை அகத்தெய்தி
இல்லவர்க்கும் மக்களுக்கும்
ஆண்டஅர செழுந்தருளும்
ஓகைஉரைத் தார்வமுறப்
பூண்டபெருஞ் சுற்றமெலாங்
கொடுமீளப் புறப்பட்டார். **#1800**

நேர்ந்த பெருமகிழ்ச்சியால் முன்னர் செய்யத் தகுவது இது என்பதும் அறியாதவராகி, வீட்டிற்குள் விரைந்துசென்று, மனைவியாருக்கும், மக்களுக்கும், மற்றுமுள்ள சுற்றத்தாருக்கும், தம்மை ஆட்கொண்டருளும் நாவரசர் எழுந்தருளியிருக்கும் மகிழ்ச் சிச் செய்தியைச் சொல்லி, அன்பு மிக, மகிழ்ச்சி மிக்க சுற்றத்தார் அனை வரையும் உடன் அழைத்துக் கொண்டு வெளியில் வந்தார்.

விளக்கவுரை

ஈண்ட - விரைந்து. ஈண்ட எய்தி எனக் கூட்டுக. ஓகை - மகிழ்ச்சி. பூண்ட - அன்புமிகுந்த.

மனைவியா ருடன்மக்கள்
மற்றுமுள்ள சுற்றத்தோர்
அனைவரையுங் கொண்டிறைஞ்சி
ஆராத காதலுடன்
முனைவரைஉள் ளெழுந்தருளு
வித்தவர்தாள் முன்விளக்கும்

புனைமலர்நீர் தங்கள்மேல்
தெளித்துள்ளும் பூரித்தார். #1801

மனைவியாருடன் மக்களும் மற்றுமுள்ள சுற்றத் தார்களும் முதலாக உள்ள அனைவரையும் கொண்டு வந்து வணங்கச் செய்து, தணியாத ஆசையுடன் தலைவராகிய நாவரசரை மனைக்குள் எழுந்தருளுவித்து, அவருடைய திருவடிகளை முற்பட நீர் கொண்டு விளக்கி, மலர் நிறைந்த அப்புனித நீரைத் தங்கள் மீது தெளித்துக் கொண்டு அதனை உள்ளும் பருகினார்.

விளக்கவுரை

அடியவர்களை மனையகத்துள் எழுந்தருளுவித்த வுடன், முற்படச் செயத்தக்கது இதுவாம். `கொண்டு வந்து மனைப் புகுந்து குலாவு பாதம் விளக்கியே` *(தி.12 பு.4 பா.4)* என முன்னர்க் கூறியுள்ளமையும் நினைவு கூரத் தக்கது. `மலர்புனை நீர்` என மாறுக; மலர்களிட்ட நீர் என்பது கருத்து. இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

ஆசனத்தில் பூசனைகள்
அமர்வித்து விருப்பினுடன்
வாசநிறை திருநீற்றுக்
காப்பேந்தி மனந்தழைப்பத்
தேசம்உய்ய வந்தவரைத்
திருவமுது செய்விக்கும்
நேசம்உற விண்ணப்பம்
செயஅவரும் அதுநேர்ந்தார். #1802

தக்கதொரு பலகையிட்டு அதன்கண் எழுந்தருளு வித்துச் செய்ய வேண்டிய வழிபாட்டு முறைகளை மிகு விருப்போடு விரும்பிச் செய்து, மணம் நிரம்பிய திருநீற்று மடலை அவர் திருமுன் ஏந்தியவராய், மனமகிழ்ச்சி மீதூர, உலகம் உய்யத் தோன்றிய நாவரசரைத் திருவமுது செய்தருளுமாறு அன்பு பெருக அவரிடத்து விண்ணப்பம் செய்ய, அரசரும் அதற்கு இசைந்தருளினார்.

விளக்கவுரை

திருநீற்று மடலை ஏந்துதல் அவருக்குச் செய்யும் உபசாரமாகும். திருநீற்றுக் காப்பு - திருநீறாகிய காப்பு: அணிந்தாரைக் காத்தல் பற்றி இங்ஙனம் கூறினார். இதுபற்றியே வடநூலாரும் இதனை `ரட்ஷை` என்றழைப்பர். பூசனைகள் - நறுமணப் புகை காட்டுதலும், நல்விளக்குக் காட்டுதலும், போற்றி உரை செய்தலும் முதலாயினவாம். விரும்பி நல் விளக்குத் தூபம் விதியினால் இடுதல் இறைவற்கன்றி, அடியவர்க்குமாகும். இதனை மாகேசுவரபூசை என்பர்.

செய்தவர் இசைந்த போது
திருமனை யாரை நோக்கி
எய்திய பேறு நம்பால்
இருந்தவா றென்னே என்று
மைதிகழ் மிடற்றி னான்தன்
அருளினால் வந்த தென்றே
உய்தும்என் றுவந்து கொண்டு
திருவமு தாக்கல் உற்றார். **#1803**

தவத்தில் சிறந்த நாவரசர் திருவமுது செய்ய இசைந்தருளிய பொழுது, அப்பூதியடிகளார் தம் மனைவியாரைப் பார்த்து, நமக்குக் கிடைத்த பேறுதான் என்னே! எனக் கூறி, பின்னும் கருணை பொருந்திய திருக்கழுத்தினையுடைய சிவபெருமானின் திருவருளால், அப்பேறு நமக்கு வாய்த்தது என்று கூறி `நாம் இதனால் உய்தி பெறுவோம்` என்று மகிழ்ந்தவாறு உணவு அமைக்கத் தொடங் கினார்கள்.

விளக்கவுரை

நாவரசரைத் தம் திருமனையின் கண் ஏற்றுப் போற்றும் பேறு திருவருளால் வாய்த்தது என்றார், உயிர்கட்குக் கிட்டும் பேறெல்லாம் அப்பெருமானால் வாய்த்தல் பற்றி. `வகுத்தான் வகுத்த வகையல்லால் ... அரிது` *(குறள், 377)*, `பால்வரை தெய்வம்` *(தொல். கிளவி. 58)*, `செய்வினையின் பயனைச் சேர்ப்பான் ஒருவன் உளன்` *(திருவருட். 53)* என்றற் றொடக்கத்தனவாகிய கூற்றுக்களை நினைவு கூர்க.

தூயநற் கறிக ளான
அறுவகைச் சுவையால் ஆக்கி
ஆயஇன் னமுதும் ஆக்கி
அமுதுசெய் தருளத் தங்கள்
சேயவர் தம்மில் மூத்த
திருநாவுக் கரசை வாழை
மேயபொற் குருத்துக் கொண்டு
வாஎன விரைந்து விட்டார். **#1804**

தூய்மையான நல்ல பல கறிவகைகளை ஆறு சுவைகளும் பொருந்தச் சமைத்து, இனிமையான திருவமுதையும் அமைத்து, உணவு கொள்ளுதற்காகத் தம் மக்களுள் மூத்த திருநாவுக் கரசை நோக்கி வாழைக் குருத்தினுள் தக்கதொரு குருத்தை அரிந்து கொண்டுவா என விரைவுபடுத்தி அனுப்பினர்.

விளக்கவுரை

தூய நற்கறிகள் - தூய நிலத்தில் தோற்றுவிக்கப் பட்டனவும், உடற்கு

நன்மை பயப்பனவுமாய கறிவகைகள். கறிகளையும் உணவையும் ஆக்குதல் மனைவியார் செயலாக அமை யினும் அன்பினாலும் பத்திமையினாலும் தாமும் உடனிருந்தமை பற்றி அச்செயற்குத் தாமும் உடந்தை ஆயினார்.

நல்லதாய் தந்தை ஏவ
நான்இது செயப்பெற் றேன்என்
றொல்லையில் அணைந்து தோட்டத்
துள்புக்குப் பெரிய வாழை
மல்லவங் குருத்தை ஈரும்
பொழுதினில் வாள ராஒன்
றல்லல்உற் றழுங்கிச் சோர
அங்கையில் தீண்டிற் றன்றே. **#1805**

`நல்ல தாயும் தந்தையுமாகிய இருவரும் கட்டளையிட, அதனை ஏற்றுச் செய்யும் இப்பேற்றைப் பெற்றேன்` என்று மூத்த திருநாவுக்கரசும் உள் மகிழ்ந்து விரைந்து சென்று, வாழைத் தோட்டத்துள் புகுந்து, பெரியதும் வளப்பமானதுமான அழகிய குருத்தினை அரியும் பொழுது, ஒளியுடைய பாம்பு ஒன்று அத் திருமகன் துன்புற்று மயங்கிச் சோர்வடைய அவனது உள்ளங்கையில் தீண்டியது.

விளக்கவுரை

வாழைக் குருத்தை அரிந்து வரும் பணியைத் தம் இளவல்களில் ஒருவருக்குப் பணிக்காது, தனக்குப் பணித்தமையை நினைந்து அப்பெருமகன் தானும் `நல்ல தாய் தந்தை ஏவ` என்றான். வீட்டில் தாய் தந்தையர் ஏவும் பணியை உளம் மகிழ ஏற்றுச் செய்யும் மக்களே நன்மக்களாவர். அவர்கள் பணிகொள்வதற்கு ஏற்ப அம் மக்கள் பெரிதும் வீட்டிலேயே இருத்தலும் வேண்டும். அதுகருதியே `தனையரும் மனையில் தப்பார்` *(தி.12 சரு.1-2 பா.34)* என்றார் முன்னும். இளைஞர் சமுதாயம் இவ்வகையில் வாழ இறையருள் முன்னின்று அருளுமாக. அகம் + கை = அங்கை என்றாயிற்று: உள்ளங்கை.

கையினிற் கவர்ந்து சுற்றிக்
கண்ணெரி காந்து கின்ற
பையர வுதறி வீழ்த்துப்
பதைப்புடன் பாந்தள் பற்றும்
வெய்யவே கத்தால் வீழா
முன்னம்வே கத்தால் எய்திக்
கொய்தஇக் குருத்தைச் சென்று
கொடுப்பன்என் றோடி வந்தான். **#1806**

கையில் தீண்டி, அக்கையையே சுற்றிக் கொண்டு கண்களில் நெருப்பை

வீசுகின்ற நச்சுப்பையை உடைய அந்தப் பாம்பை, கையை உதறி வீழ்த்தி விட்டு, மனப்பதைப்புடனே `பாம்பு தீண்டியதால் உளதாய கொடிய விட வேகத்தால் தான் விழுவதற்கு முன்னே, மிக விரைவாகச் சென்று அரிந்த இவ்வாழைக் குருத்தைச் சென்று கொடுப்பேன்` என எண்ணி ஓடி வந்தவன்.

விளக்கவுரை

பைஅரா - நச்சுப்பையினையுடைய பாம்பு. பாந்தள் - பாம்பு. தன் உயிரினும், தாய் தந்தையர் ஏவிய பணியை முட்டின்றிச் செய்தலில், அத்திருமகனாருக்கு இருந்த ஆர்வத்தையும், வந்திருந்த அடியவர் மீது அவருக்கு இருந்த பத்திமையையும் நினைவு கூர்க.

பொருந்திய விடவே கத்தில்
போதுவான் வேகம் முந்த
வருந்தியே அணையும் போழ்து
மாசுணங் கவர்ந்த தியார்க்கும்
அருந்தவர் அமுது செய்யத்
தாழ்க்கயான் அறையேன் என்று
திருந்திய கருத்தி னோடுஞ்
செழுமனை சென்று புக்கான். **#1807**

தன்னிடத்துப் பொருந்தியவிடத்தின் வேகத்தினும், தான் விரைந்து செல்லும் செலவு பெருக, வருத்தத்துடன் மனை யிடத்துச் சேரும் பொழுது, பாம்பு தீண்டியதை நாவரசர் உணவு அருந்துவதற்கு இடையூறாகுமாறு தாய் தந்தையர் உள்ளிட்டவர்க்குச் சொல்ல மாட்டேன் என மனத்தில் எண்ணி, அவ்வுறுதிப்பாட்டுடன் வளமிக்க வீட்டிற்குள் புகுந்தவனாய்.

விளக்கவுரை

திருந்திய கருத்து - தம் இருமுது குரவர்களானும் போற்றி வணங்கி வரும் நாவரசர், உணவு அருந்துவதற்கு இடையூறு வாராதவாறு, தன் கொடுந்துன்பத்தை எவரிடமும் சொல்லாதிருத்தல் வேண்டும் எனும் கருத்து.தன் இறப்பினும், அடியவர் உணவு அருந்தக்காலம் தாழ்த் தலும், அதுபற்றித் தன் இருமுதுகுரவரும் கொள்ளும் பெருந்துன்ப முமே இன்னாது எனக் கருதும் உள்ளம் எத்துணை மேம்பட்ட உள்ளமாகும்? `சாதலின் இன்னாதது இல்லை இனிதுஅதூஉம் ஈதல் இயையாக் கடை` *(குறள், 230)* எனவரும் திருக்குறளை நினைவு கூருமாறு அமைந்தது மூத்த திருநாவுக்கரசின் திருவுள்ளம்.

எரிவிடம் முறையே ஏறித்
தலைக்கொண்ட ஏழாம் வேகம்

தெரிவுற எயிறும் கண்ணும்
மேனியும் கருகித் தீந்து
விரியுரை குழறி ஆவி
விடக்கொண்டு மயங்கி வீழ்வான்
பரிகலக் குருத்தைத் தாயார்
பால்வைத்துப் படிமேல் வீழ்ந்தான். #1808

அழிக்கும் நஞ்சானது முறையாக மேல் ஏறித் தலைக் கொண்ட ஏழாம் வேகத்தை அடைந்த நிலையினை, வெளித் தோற்றத்திலும் அறியுமாறு பற்களும் கண்களும் உடலும் கருகித் தீய்ந்து விளங்க, உரைக்கும் சொற்களும் தடுமாறி உயிர்விடும் நிலை வரவும் அதை விடாமல் தாங்கிக் கொண்டு, மயங்கி வீழ்கின்ற அவன், உணவு உண்ணுதற்கான அவ்வாழைக் குருத்தைத் தாயாரிடம் வைத்து நிலத்தில் வீழ்ந்தனன்.

விளக்கவுரை

தலைக் கொண்ட - உச்ச நிலையினையடைந்த. ஏழாம் வேகம் - இரத்த ஓட்டம் இருதயத்தில் தூய்மை செய்யப்பட்டு உடலில் பல உறுப்புக்களினும் சென்று பரவி மீளவும் தூய்மைபெற அங்குச் சேர்தல் ஒரு ஓட்டம் ஆகும். இவ்வாறு ஓடுதலை வேகம் என்றும் கூறுவர். இவ்வாறு ஓடிச் செல்லும் குருதியில் நஞ்சு பொருந்த அதனால் அது பரவப்பட்ட நிலையில் ஒருதாது அழியும், இவ்வகையில் ஏழாம் முறை பரவும் பொழுது ஏழு தாதுக்களும் அழிந்து உயிர் நீங்கும் என்பர். இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

தளர்ந்துவீழ் மகனைக் கண்டு
தாயருந் தந்தை யாரும்
உளம்பதைத் துற்று நோக்கி
உதிரஞ்சோர் வடிவும் மேனி
விளங்கிய குறியுங் கண்டு
விடத்தினால் வீந்தான் என்று
துளங்குதல் இன்றித் தொண்டர்
அமுதுசெய் வதற்குச் சூழ்வார். #1809

இந்நிலையில் தளர்ந்து வீழும் மகனைக் கண்ட தாயாரும் தந்தையாரும் உள்ளம் பதைபதைத்து, அவன் வீழ்தற்கான காரணத்தையும் உற்றுநோக்கி, குருதி வடிந்த நிலையையும் உடம்பில் விளங்கும் வேறு அடையாளங்களையும் கண்டு, இவன் கொடிய தோர் விடத்தால் உயிர் துறந்தான் எனத் துணிந்து, உளம் தடுமாற்றம் இன்றி, அடியவர் அமுது செய்வதற்கு வேண்டிய விளைவை ஆய்பவராய்.

விளக்கவுரை

துளங்குதல் - மனம் தடுமாறுதல். மகன் இறந்த வருத்தத் தினும், அடியவர் அமுது செய்யக் காலம் தாழ்க்கின்றமையே இருவர் உள்ளத்தும் இடம் பெற வருத்திற்று. இமயத்தினும் இவ்வுள்ளங்கள் உயர்ந்தன.

பெறலரும் புதல்வன் தன்னைப்
பாயினுள் பெய்து மூடிப்
புறமனை முன்றிற் பாங்கோர்
புடையினில் மறைத்து வைத்தே
அறஇது தெரியா வண்ணம்
அமுதுசெய் விப்போம் என்று
விறலுடைத் தொண்ட னார்பால்
விருப்பொடு விரைந்து வந்தார். **#1810**

பெறுதற்கரிய மைந்தனைப் பாயுள் வைத்து மூடி, மனையின் வெளிப் புறத்திலுள்ள முற்றத்தின் ஒரு புறத்தில் எவரும் காணா வண்ணம் மறைத்து வைத்து, `இச்செயல் முழுமையாக யாவரும் அறியாதவாறு இவ்வடியவர்க்கு நாம் அமுது செய்விப் போம்` எனக் கருதியவராய், ஆற்றல் பொருந்திய திருநாவுக்கரசர் இடத்து மிகுவிருப்பொடு விரைந்து வந்தனர்.

விளக்கவுரை

அற - சிறிதும். விறல் - ஆற்றல்: திருத்தொண்டின் உறைப் பாலே எதனையும் வெல்லும் ஆற்றல். `பொய்மாயப் பெருங்கடலில்` *(தி.6 ப.27)* எனவரும் திருப்பதிகமும் காண்க. விடம் தீண்டியமையை அப்பூதி அடிகளாரும் அவர்தம் மனைவியாரும் மறைத்த பொழுதும், ஐயப்படாது அவர்தம் அகத்தது உணரும் விதமும், சிவபெருமானின் திருவருளால் இறந்த உயிரை மீட்கும் விதமும் காண்க என்பர் சிவக் கவிமணியார் *(பெரிய.பு.உரை)*. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

கடிதுவந் தமுது செய்யக்
காலந்தாழ்க் கின்ற தென்றே
அடிசிலும் கறியும் எல்லாம்
அழகுற அணைய வைத்துப்
படியில்சீர்த் தொண்ட னார்முன்
பணிந்தெழுந் தமுது செய்தெங்
குடிமுழு துய்யக் கொள்வீர்
என்றவர் கூறக் கேட்டு. **#1811**

விரைந்து வந்து, உணவு உண்ணக்காலம் தாழ்க்கின்றமையை எண்ணியவராய், உணவும் கறிகளும் முதலாயின வற்றையெல்லாம் அழகுற அருகே வைத்து, அதன் பின்பு ஒப்பற்ற சிறப்பையுடைய

தொண்டராகிய நாவரசர் முன் விழுந்து வணங்கி, எழுந்து நின்று, அமுது செய்யும் வாயிலாக எம் குடிமுழுதும் உய்யு மாறு அருளல் வேண்டும் என்று கூற, நாவரசரும் அதனைக் கேட்டு,

விளக்கவுரை

படி - ஒப்பு.

அருந்தவர் எழுந்து செய்ய
அடியிணை விளக்கி வேறோர்
திருந்தும்ஆ சனத்தில் ஏறிப்
பரிகலந் திருத்து முன்னர்
இருந்துவெண் ணீறு சாத்தி
இயல்புடை இருவ ருக்கும்
பொருந்திய நீறு நல்கிப்
புதல்வர்க்கும் அளிக்கும் போழ்தில். **#1812**

அரிய தவத்தினரான நாவரசர் பெருமான், செம்மையான தம் அடிகளை விளக்கிக் கொண்டு, வேறொரு திருந்திய இருக்கையில் அமர்ந்து, அவர்கள் உண்ணும் இலையைத் திருத்தி முறைப்படி அமைப்பதற்கு முன்னர், திருநீற்றினையணிந்து கொண்டு, அடிமைத் திறத்தில் பிழையாது நிற்கும் அப்பூதியடிகளாருக்கும் அவர்தம் மனைவியாருக்கும் பொருந்திய திருநீற்றை அளித்து, அவர்களின் மைந்தர்களுக்கும் திருநீற்றை அளிக்க முற்பட்டபோது,

விளக்கவுரை

உணவு அருந்துமுன் கைகால் தூய்மை செய்து கொள்ளுதல் இன்றியமையாததாகும். அதன்பின் திருநீறு அணிந்து கொள்ளல் வேண்டும். அருளாளர்களும் சான்றோர்களுமாயிருப் பின் பிறருக்கும் திருநீற்றை வழங்க வேண்டும். இம்முறையிலேயே நாவரசரும் நின்று ஒழுகுகின்றார். இயல்புடைய இருவர் - அடிமைத் திறத்தில் பிறழாது நிற்கும் இயல்பினரான அப்பூதியடிகளாரும் அவர்தம் மனைவியாரும். இயல் என்னும் பொதுச் சொல் அவ்வவ் இடத்திற்கு ஏற்ற இயல்பைக் குறித்து நிற்கும். `இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன்` *(குறள், 47)* `இயல்புடைய மூவர்க்கும்` *(குறள், 41)* என வருமாற்றை நினைவுகூர்க. பொருந்திய நீறு - அடியவர்கள் என்பார்க்குப் பொருந்திய நீறு. `பொருத்தமதாவது நீறு` *(தி.2 ப.66 பா.6)* என்றலும் காண்க.

ஆதிநான் மறைநூல் வாய்மை
அப்பூதி யாரை நோக்கிக்
காதலர் இவர்க்கு மூத்த
சேயையுங் காட்டும் முன்னே

மேதகு பூதி சாத்த
என்றலும் விளைந்த தன்மை
யாதும்ஒன் றுரையார் இப்போ
திங்கவன் உதவான் என்றார். **#1813**

பழமையான நான் மறைகளிலும் நூல்களிலும் பயின்ற வாய்மை ஒழுக்கமுடைய அப்பூதியடிகளாரை நோக்கி, அன்பால் இம்மக்களுள் மூத்த பிள்ளையையும் முன்னே மேன்மை மிக்க வெண்ணீறணிதற்குக் காட்டுக என்றுரைக்க, நிகழ்ந்த செய்தியை உரைக்க மாட்டாதவராய், `இப்போது இங்கு அவன் உதவான்` என்றார்.

விளக்கவுரை

நீறு பெறுதற்கு அடிகளாரின் மக்கள் அனைவரும் முன்னிற்ப அவர்களுள் வயது முறைமையில் நீறு வழங்க வேண்டும் எனத் திருவுள்ளம் பற்றிய நாவரசர், மூத்த சேயையையும் முன்னே காட்டுக என்றனர். இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

அவ்வுரை கேட்ட போதே
அங்கணர் அருளால் அன்பர்
செவ்விய திருஉள் ளத்தோர்
தடுமாற்றஞ் சேர நோக்கி
இவ்வுரை பொறாதென் உள்ளம்
என்செய்தான் இதற்கொன் றுண்டால்
மெய்விரித் துரையும் என்ன
விளம்புவார் விதிர்ப்புற் றஞ்சி. **#1814**

அத்தகைய சொல்லைக் கேட்ட அளவிலேயே அழகிய கருணை பொருந்திய பெருமானின் திருவருளால் அப்பூதி அடிகளாரின் நேரிய திருவுள்ளத்தில் ஒரு தடுமாற்றம் நேரக் கண்டு, `இவ்வுரை என்னுள்ளத்தில் பொறுக்கலாற்றாது; அவன் என்செய் தனன்? ஏதோ ஒன்று நிகழ்ந்திருக்க வேண்டும்; அம்மெய்ம்மையை விரித்து உரைப்பீராக` என்று அரசர் கூறுதலும், உடல் நடுங்கிப் பயந்து.

பெரியவர் அமுது செய்யும்
பேறிது பிழைக்க என்னோ
வருவதென் றுரையா ரேனும்
மாதவர் வினவ வாய்மை
தெரிவுற உரைக்க வேண்டுஞ்
சீலத்தால் சிந்தை நொந்து
பரிவொடு வணங்கி மைந்தர்க்
குற்றது பகர்ந்தார் அன்றே. **#1815**

பெருமை மிக்கவரான நாவரசர் உணவு கொள்ளும் பெரும் பேறு

உடன்கிட்டாது இவ்வாறு நேருவதும் என்னோ? என்று எண்ணி உண்மையை உரைக்க முற்படாராயினும், உண்மையை உள்ளவாறு உரைப்பதே தகுதி எனக் கொண்ட சீலத்தால், மனம் உடைந்து வருந்தி, வணங்கித் தம் மூத்த பிள்ளைக்கு நேர்ந் ததைச் சொன்னார்.

விளக்கவுரை

அன்று, ஏ என்பன அசைநிலைகள். அன்று - அப் பொழுதே என உரை காண்பர் சிவக்கவிமணியார் *(பெரிய.பு.உரை)*. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

நாவினுக் கரசர் கேளா
நன்றுநீர் மொழிந்த வண்ணம்
யாவர்இத் தன்மை செய்தார்
என்றுமுன் எழுந்து சென்றே
ஆவிதீர் சவத்தை நோக்கி
அண்ணலார் அருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப்
பணிவிடம் பாற்று வித்தார். **#1816**

அவ்வாறு அவர் கூறியதைக் கேட்ட நாவரசர் `நீவிர் கூறியது மிக நன்றாய் இருந்தது. இவ்வாறு செய்தார் உலகில் யாவர் உளர்?` என்று உரைத்தவாறே, முன்னாக எழுந்து சென்று, உயிர் நீங்கிய அம்மைந்தனின் உடலை நோக்கிய வண்ணம், இறைவன் அருள வேண்டி இசைபொருந்திய பாவகையில் திருப் பதிகத்தைப் பாடிப் பாம்பின் நஞ்சை நீக்கி அருளினார்.

விளக்கவுரை

கேளா - கேட்டு. அப்பூதியடிகளார் தம் மூத்த பிள்ளைக்கு நேர்ந்ததைக் கூறியதோடு, அது திருவருள் வயத்தால் ஆகியது, அதுபற்றித் திருவுள்ளம் பற்றாது அமுது செய்ய வேண்டும் என்றும் வேண்டிக் கொள்ள, அதனை நினைந்தே நாவரசரும் `நன்று நீர் புரிந்தவண்ணம் யாவர் இத்தன்மை செய்தார்` என்று உரைக்க லாயினர். இச்செய்தி உய்த்துணர நின்றது. பாவிசைப் பதிகம் - `ஒன்று கொலாம்` *(தி.4 ப.18)* எனத் தொடங்கும் இந்தளப் பண்ணில் அமைந்த திருப்பதிகம். முன்னர் நாவரசர் வரலாற்றில், மறைத்து வைத்திருந்த மூத்த திருநாவுக்கரசரின் உடலைத் திருக்கோயிலின் முன் கொணர்வித்துப் பதிகம் பாடி நஞ்சை நீக்கி அப்பெருமகனை உய்வித்தார் என விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதனையே சுருங்க `ஆவிதீர் சவத்தை நோக்கி, அண்ணலார் அருளும் வண்ணம் பாடினார்`*(தி.12 பு.21 பா.207-209)* எனக் கூறுகின்றார். முன்னர் விரித்த ஒன்றைச் சுருக் கியும் சுருக்கிய

ஒன்றை விரித்தும் கூறல் ஆசிரியர் திருவுள்ளம் ஆதலின், ஈண்டும் அதனை விரித்துக் கூறாராயினர். மூத்த திருநாவுக்கரசின் உயிர் நீங்கிய உடல் புறமனைப் பக்கத்தே வைக்கப்பட்டிருந்தமை *1810*ஆம் பாடலானும், நாவரசரை உணவு ஏற்க வேண்ட அவரும் வந்து திருநீறு அளிக்குங்கால் இச்செயல் அவருக்குத் தெரிய வந்தமை அப்பாடலைத் தொடர்ந்து வரும் வரலாற்றானும் அறிய முடிகிறது. பின்வரும் *1819*ஆம் பாடலில் சொல்லரசர் `கூட ஓங்கிய மனையில் எய்தி` எனக் கூறப்படுகின்றது. ஆத லின் இடையில் அவ்வுடலைத் திருக்கோயிலின் முன் வருவித்துப் பதிகம் பாடி உய்வித்தருளியவர், பின் மனைக்கு வந்தமையை இத னால் அறிய முடிகிறது. `ஓங்கிய மனையில் எய்தி` எனவரும் தொட ரால் ஆசிரியர் இதனை நுட்பமாக அறிவித்தமை நோக்கத் தக்கது.

தீவிடம் நீங்க உய்ந்த
திருமறை யவர்தஞ் சேயும்
மேவிய உறக்கம் நீங்கி
விரைந்தெழு வானைப் போன்று
சேவுகைத் தவர்ஆட் கொண்ட
திருநாவுக் கரசர் செய்ய
பூவடி வணங்கக் கண்டு
புனிதநீ றளித்தார் அன்றே. **#1817**

அப்பதிகம் பாடிய அளவில் தீய நச்சுத் தன்மை நீங்கப் பிழைத்த அவ்வப்பூதியடிகளாரின் திருமகனாரான திருநாவுக் கரசும், பொருந்திய உறக்கத்திலிருந்தும் நீங்கி விரைவாய் எழுபவ னைப் போன்று எழுந்து, ஆனேற்றின் மீது இவர்ந்தருளும் பெருமா னால் ஆட்கொள்ளப் பெற்ற திருநாவுக்கரசரின் செவ்விய மலரனைய திருவடிகளை வணங்கக் கண்டு, புனிதமான திருநீற்றை வழங்கியரு ளுவாராயினர்.

விளக்கவுரை

உறக்கத்தினின்றும் நீங்கி எழுவானைப் போன்று, இறந்த அப்பிள்ளையும் எழுந்தான் என்றது `உறங்குவதுபோலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு` *(குறள், 339)* எனவரும் திருக்குறளை நினைவு கூரவைக்கும். சே - ஆனேறு.

பிரிவுறும் ஆவி பெற்ற
பிள்ளையைக் காண்பார் தொண்டின்
நெறியினைப் போற்றி வாழ்ந்தார்
நின்றஅப் பயந்தார் தாங்கள்
அறிவரும் பெருமை அன்பர்
அமுதுசெய் தருளு தற்குச்

சிறிதிடை யூறு செய்தான்
இவனென்று சிந்தை நொந்தார். #1818

பிரிந்த உயிரைத் திரும்பவும் பெற்ற பிள்ளையைக் காண்பவர் எல்லாம், தெய்வத் திருத்தொண்டின் செந்நெறிச் சிறப் பினைப் போற்றி இறைவரின் திருவருளைப் பெற்றனர். அங்குநின்ற அப்பெற்றோர்கள் அரிதற்கரிய பெருமையுடைய அன்பர் திருவமுது செய்வதற்கு இவன் சிறிது இடையூறு செய்தான் என்று மனம் நொந்தனர்.

விளக்கவுரை

வாழ்ந்தார் - இறைவன் திருவருள் பெற்றார். பயந் தார்- பெற்றோர். பெற்றோர்க்குப் பிள்ளை எழுந்தது மகிழ்ச்சி தரவில்லை; ஆனால் பெரியவர் அமுது செய்யப் பெறாமையே பெருந்துன்பம் தந்தது. இங்கும் அப்பூதிஅடிகளார்க்கும் அவர்தம் இல்லத்தரசியாருக்கும் அமைந்திருந்த திருவுள்ளம் அறியத்தக்கது.

ஆங்கவர் வாட்டந் தன்னை
அறிந்துசொல் அரசர் கூட
ஓங்கிய மனையில் எய்தி
அமுதுசெய் தருள வுற்ற
பாங்கினில் இருப்ப முந்நூல்
பயில்மணி மார்பர் தாமும்
தாங்கிய மகிழ்ச்சி யோடுந்
தகுவன சமைத்துச் சார்வார். #1819

அங்ஙனம் அவர்களின் மனவாட்டத்தை அறிந்த நாவரசர், அவர்களுடன் சிறந்த இல்லத்தை அடைந்து, அமுதுசெய் தற்குத் திருவுள்ளம் கொள்ளும் நிலையினில் இருப்ப, முந்நூல் அணிந்த மார்பினராய அப்பூதி அடிகளாரும் மீதூர்ந்த மகிழ்ச்சி யோடும் செய்யத்தகுவனவற்றையெல்லாம் செய்வாராய்,

விளக்கவுரை

ஓங்கிய மனை - செல்வத்தாலும் சீலத்தாலும் பத்திமைத் திறத்தாலும் செழித்திருக்கும் வீடு.

புகழ்ந்தகோ மயத்து நீரால்
பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்தவான் சுதையும் போக்கிச்
சிறப்புடைத் தீபம் ஏற்றி
நிகழ்ந்தஅக் கதலி நீண்ட
குருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய்

வலம்பட மன்னு வித்தார். #1820

சான்றோர் பலராலும் புகழப்பெற்ற ஆவின் சாணம் கலந்த நீரால், நிலத்தை விளக்கமுற மெழுகி, விளங்கும் வெண் பொடிகளைக் கொண்டு கோலமிட்டு, சிறப்பான திருவிளக்கை ஏற்றி, இவ்வரலாற்று நிகழ்ச்சிக்கு இடனாக இருந்த, அவ்வாழையின் நீண்ட குருத்தை விரித்து அதனை நீரில் கழுவி, அரிந்த பக்கம் வலப்பக்கமாக அமைய அதனை இட்டனர்.

விளக்கவுரை

ஆவின் சாணத்தொடு அதன் நீரையும் கலந்து மெழுகுதல் வழக்கமாக இருந்தது. அது பின் மாறி, நீர்மட்டும் கொண்டு மெழுகுதல் வழக்கமாயிற்று. இதுபொழுது அதுவும் அரிதாகி வருகிறது. `மெழு கும் ஆப்பி கண்கலுழ் நீரானே` *(புறநா. 249)* எனவரும் சங்கச் செய்யு ளால், ஆவின் சாணங்கொண்டு மெழுகுதல் பண்டைய மரபாதல் தெரியலாம். கோமயம் - பசுவின் சாணம். வான்சுதை - அழகிய பொடி. `வான்சுதை வண்ணம் கொளல்` *(குறள், 714)* என வரும் திருக்குற ளும் காண்க. நிகழ்ந்த அக்கதலி - இவ்வரலாற்றிற்கு அடிப்படையாக நேர்ந்த வாழை இலை. ஈர்வாய் - அரிந்த வாய். குருத்தை அரிந்த இடத்தை வலப்புறமாக வைத்து இலையை இடுதல் வேண்டும் என்பது குறிப்பு.
இம்முறைமைகளை முன்னர், *1810, 1811*ஆம் பாடல்களில் கூறாது ஈண்டுக் கூறினார், ஆண்டு நாவரசரை உணவு கொள்ள அழைக்க நேர்ந்ததன்றி, நாவரசர் உணவு கொள்ள நேராமையின். கோமயம் கிருமிகளை ஒழிக்க நல்லதோர் மருந்தும் ஆகும்.

திருந்திய வாச நன்னீர்
அளித்திடத் திருக்கை நீவும்
பெருந்தவர் மறையோர் தம்மைப்
பிள்ளைக ளுடனே நோக்கி
அரும்புதல் வர்களும் நீரும்
அமுதுசெய் வீர்இங் கென்ன
விரும்பிய உள்ளத் தோடு
மேலவர் ஏவல் செய்வார். #1821

செவ்விய மணமுடைய நல்ல நீரைக் கொடுக்க அதனைக் கொண்டு திருக்கரத்தைக் கழுவிய பெருந்தவமுனிவராகிய நாவரசரும், அப்பூதியடிகளாரையும் அவர்தம் பிள்ளைகளையும் ஒருங்கு நோக்கி `நும் அரும்புதல்வர்களும் நீரும் எம்முடன் உண்பீ ராக` என்றுகூற, அவர்களும் மிகு விருப்போடு மேலவராய அரசர் பெருமகனாரின் ஏவல் வழி நின்றார்கள்.

விளக்கவுரை

திருந்திய நன்னீர் - மணமும் தூய்மையும் உடையநீர்.
இத்திருத்தகுநிலை, நிலத்தானும் சுற்றுப் புறச் சூழலானும் அமைவ தாகும்.

மைந்தரும் மறையோர் தாமும்
மருங்கிருந் தமுது செய்யச்
சிந்தைமிக் கில்ல மாதர்
திருவமு தெடுத்து நல்கக்
கொந்தவிழ் கொன்றை வேணிக்
கூத்தனார் அடியா ரோடும்
அந்தமி ழாளி யார்அங்
கமுதுசெய் தருளி னாரே. **#1822**

மறையவராகிய அப்பூதியடிகள், தாமும் தம் மக்களுமாக நாவரசரின் அருகிலிருந்து உணவு உண்ண, மகிழ்வும் நிறைவும் கொண்ட இல்லத்தரசியார் திருவமுது எடுத்துப்படைக்க, கொத்தாக மலர்ந்த கொன்றை மலரை அணிந்த சிவபெருமானின் அடியார்களோடும், அழகிய தமிழைப் பாமாலையாக எடுத்துச் சமைப்பதில் வல்லவரான நாவரசரும் அவ்விடத்து உணவு கொண் டருளினார்.

விளக்கவுரை

கொந்து - கொத்து. அம்தமிழ் ஆளி - அழகிய தமிழைப் பொலிவுற எடுத்தாளுபவர். ஆதலால் தான் நாவரசர் எனும் பெயர் பெற்றார். ஆளி - சிங்கமெனக் கொண்டு தமிழை ஆள்வதில் சிங்கமாக இருப்பவர் என்றலும் ஒன்று.

மாதவ மறையோர் செல்வ
மனையிடை அமுது செய்து
காதல்நண் பளித்துப் பன்னாள்
கலந்துடன் இருந்த பின்றை
மேதகு நாவின் மன்னர்
விளங்கிய பழன மூதூர்
நாதர்தம் பாதஞ் சேர்ந்து
நற்றமிழ்ப் பதிகஞ் செய்தார். **#1823**

மாதவம் செய்த மறையவரான அப்பூதி அடிகளாரின் செல்வம் பொருந்திய இல்லத்தில், இவ்வாறு திருவமுது செய்தருளி, அன்பு பெருகிய நட்பின் பயனை வழங்கி அருளிப் பலநாள்கள் மனம் கலந்த ஒருமையோடு உடன் இருந்த பின்னர், மேதகவமைந்த நாவுக்கரசர், புகழ் மிக்க திருப்பழனம் என்னும் பழமையான ஊரில் எழுந்தருளியிருக்கும் இறைவரின் திருவடி களைச் சார்ந்து நலம் கமழும் தமிழ்ப் பதிகத்தை அருளிச் செய்வாராய்.

விளக்கவுரை

நண்பு அளித்து - நட்பின் பயனை வழங்கி; அஃதாவது தாம் உடன் இருந்ததனாலாய பயனை வழங்கி. அப்பயன் சிவசிந் தனையும், சிவத்தொண்டும் ஆம்.

அப்பூதி யடிக ளார்தம்
அடிமையைச் சிறப்பித் தான்ற
மெய்ப்பூதி அணிந்தார் தம்மை
விரும்புசொன் மாலை வேய்ந்த
இப்பூதி பெற்ற நல்லோர்
எல்லையில் அன்பால் என்றும்
செப்பூதி யங்கைக் கொண்டார்
திருநாவுக் கரசர் பாதம். **#1824**

அப்பூதி அடிகளாருடைய திருத்தொண்டின் பெருமையினைச் சிறப்பித்துப், பெருமை பொருந்திய திருமேனியில் திருநீற்றை அணிந்த சிவபெருமானை விரும்பும் சொல் மாலையி னைத் தொடுத்துச் சாத்திய இப்பெரும் செல்வத்தைப் பெறும் பேறு பெற்ற நல்லவராகிய அவ்வப்பூதி அடிகளார், திருநாவுக்கரசரின் திருவடிகளே தாம் பெறத்தகும் ஊதியம் என்று உறுதி கொண்டு, எல்லையில்லாத அன்பினால் எப்போதும் அவர் பெயரைச் சொல்லி வழிபட்டு வரும் ஒழுகலாற்றை உடையவராயினார்.

விளக்கவுரை

பூதி - திருநீறு, சொல்மாலை - சொற்களால் ஆகிய மாலை. இப்பதிகம் `சொல்மாலை பயில்கின்ற` *(தி.4 ப.12)* எனத் தொடங் குவது ஆகும். அம்முதற்குறிப்பை இத்தொடர் நினைவுபடுத் துவதாகவும் அமைந்துள்ளது. இப்பூதி - இத்தகைய செல்வம். இச் சொல்மாலை பெறுதலான செல்வம். இப்பதிகத்தில், `அஞ்சிப் போய்க் கலி மெலிய அழல் ஓம்பும் அப்பூதி குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய்க் கோடு இயையே` *(தி.4 ப.12 பா.10)* எனவரும் பகுதியே இவரைப் பற்றி வரும் குறிப்பு ஆகும். இதனால் நாளும் அழல் ஓம்பி (வேள்வி செய்து) வழிபடும் திறனும், தம் திருமுடிக்கு அணியாய்ப் பெருமானின் திருவடி மலர்களைக் கொண்டிருக்கும் பத்திமைச் சிறப்பும் விளங்குகின்றன. வேள்வி நற்பயன் வீழ்புனலாகும். இதனால் அவர் ஆற்றும் சமுதாயத் தொண்டும் புலனாகும். செப்பு ஊதியம் - நாவுக்கரசரின் திருப்பெய ரைத் தாம் இதுவரையிலும் சொல்லிவந்ததன் பயனாகப் பெற்ற ஊதியம். அது அவர்தம் திருவடிகளாம்.

இவ்வகை அரசின் நாமம்

ஏத்திளப் பொருளும் நாளும்
அவ்வருந் தவர்பொற் றாளே
எனவுணர்ந் தடைவார் செல்லும்
செவ்விய நெறிய தாகத்
திருத்தில்லை மன்றுள் ஆடும்
நவ்வியங் கண்ணாள் பங்கர்
நற்கழல் நண்ணி னாரே **#1825**

இவ்வகையாக அவர் திருநாவுக்கரசரின் திருப்பெயரையே போற்றியும், அவ்வரிய தவத்தினையுடைய அரச ரின் திருவடிகளையே அடைவதற்குரிய பொருள் எனக் கொண்டு ஒழுகியும் வந்த அந்நெறியே செந்நெறியாகக் கொண்டு, திருத்தில்லை யுள் என்றும் ஆடிக் கொண்டிருக்கும் உமையம்மையை ஒரு கூற்றில் கொண்டிருக்கும் கூத்தப் பெருமானின் திருவடிமலர்களை அடைந்தார்.

விளக்கவுரை

நவ்வியங் கண்ணாள் - மான் போன்ற அழகிய கண் களை உடையவள்: உமையம்மையார்.

மான்மறிக் கையர் பொற்றாள்
வாகீசர் அடைவால் பெற்ற
மேன்மைஅப் பூதி யாராம்
வேதியர் பாதம் போற்றிக்
கான்மலர்க் கமல வாவிக்
கழனிசூழ் சாத்த மங்கை
நான்மறை நீல நக்கர்
திருத்தொழில் நவிலல் உற்றேன். **#1826**

மான் கன்றைக் கையில் கொண்ட சிவபெரு மானின் திருவடிகளை, திருநாவுக்கரசரைத் தம் குரு முதல்வராகக் கொண்டமையால் பெற்ற மேன்மை பொருந்திய அப்பூதி அடிகளா ராம் மறையவரின் திருவடிகளைப் போற்றி, காடு போலப் பூத்திருக்கும் தாமரை மலர்களையுடைய குளங்களும் வயல்களும் சூழ்ந்த திருச் சாத்தமங்கையில் தோன்றியருளிய நான்மறையில் வல்ல திருநீலநக் கரின் திருத்தொண்டினை இனிச் சொல்லத் தொடங்குகின்றேன்.

விளக்கவுரை

மான்மறி- மான் கன்று. கான் - காடு.

திருநீலநக்க நாயனார் புராணம்

பூத்த பங்கயப் பொகுட்டின்மேற்
பொருகயல் உகளும்
காய்த்த செந்நெலின் காடுசூழ்
காவிரி நாட்டுச்
சாத்த மங்கைஎன் றுலகெலாம்
புகழ்வுறுந் தகைத்தால்
வாய்த்த மங்கல மறையவர்
முதற்பதி வனப்பு. **#1827**

மலர்ந்த தாமரைப் பொகுட்டின் மேல் கயல் மீன்கள் துள்ளவும், விளைந்து முதிர்ந்த நெற்பயிர்களாலாகிய வயல்கள் சூழ்ந்ததும் ஆன, காவிரி நதிபாயும் சோழ நாட்டில், மங்கலம் பொருந்திய மறையவர்களுக்கு இடமாகிய முதன்மையுடைய ஊர் திருச்சாத்தமங்கையாகும். இது உலகமெல்லாம் புகழ்கின்ற தகுதி யுடையதாகும்.

விளக்கவுரை

பொகுட்டு:- கொட்டை. காடு - வயல். செந்நெல் விளைந்து மண்டிக் கிடப்பதால் காடு என்றார். திருச்சாத்தமங்கை, திருப்புகலூருக்கு அண்மையில் உள்ள ஊராகும். இப்பாடலில் `மறையவர் முதற் பதி` என்று கூறியவர், பின்வரும் பாடல்களில் அவர்தம் வேள்விச் சிறப்பைக் கூறுவது, ஞானசம்பந்தர் இத்திருப்பதி பற்றிக் கூறியுள்ள திருவாக்கினை அடித்தளமாகக் கொண்டதாகும்.

நன்மை சாலும்அப் பதியிடை
நறுநுதல் மடவார்
மென்ம லர்த்தடம் படியமற்
றவருடன் விரவி
அன்னம் முன்துறை ஆடுவ
பாடுவ சாமம்
பன்ம றைக்கிடை யுடன்பயிற்
றுவபல பூவை. **#1828**

நலங்கள் பலவும் பொருந்திய அப்பதியின் மணம் பொருந்திய நெற்றியினையுடைய பெண்கள், மென்மையான மலர் களையுடைய குளங்களில் நீராட, அவர்களுடன் அந்நீர் நிலையின் முன் துறையில் அன்னப் பறவைகளும் தோய்ந்து நீராடுவன. மறை யோதும் சிறுவர்களின் இருக்கையில் சாம வேதத்தைப் பாடிக் கொண் டிருக்கும் பல நாகண வாய்ப்பறவைகள், அச்சிறுவர்களின் பிழைகளை நீக்கி

மறைகளைக் கற்கும்படி செய்வன.

விளக்கவுரை

கிடை - மறையோதும் சிறுவர்கள் தங்கி இருக்கும் இருப்பு. பயிற்றுவ - கற்றுக் கொடுப்பன. எனவே, மறைபயிலும் சிறு வர்களுக்கு அவர்களின் ஆசிரியன்மார்களன்றி, அங்குள்ள நாகண வாய்ப் பறவைகளும் கற்றுக் கொடுக்கின்றன என்பதாம். `பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோது மோசைகேட்டு வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட்சொல்லு மிழலையாமே` *(தி.1 ப.132 பா.1)* `பெரிதிலங்கும் மறைகிளைஞர் ஓதப் பிழைகேட்டலாற், கருதுகிள்ளைக் குலந்தெரிந்து தீர்க்குங்கடற் காழியே` *(தி.2 ப.113 பா.5)* எனவரும் திருமறை வாக்குகளும் ஈண்டு நினைவு கூரத்தக்கன.

ஆய்ந்த மெய்ப்பொருள் நீறென
வளர்க்கும்அக் காப்பில்
ஏய்ந்த மூன்றுதீ வளர்த்துளார்
இருபிறப் பாளர்
நீந்து நல்லறம் நீர்மையின்
வளர்க்கும்அத் தீயை
வாய்ந்த கற்புடன் நான்கென
வளர்ப்பர்கண் மடவார். **#1829**

ஆராய்ந்து தெளிந்த உண்மைப் பொருளாவது திருநீறே என்று எண்ணி, வளர்த்து வருகின்ற அக்காப்போடு, பொருந்திய முத்தீயை அங்குள்ள இரு பிறப்பாளர்கள் வளர்த்து வருவர், பிறவிப் பெருங் கடலினின்றும் நீந்தத் துணை நிற்கும் நல்ல அறங்களைப் போல, வளர்ந்து வரும் அத்தீயினை, தமக்கென அமைந்த கற்புத் தீயையும் கூட்டி அங்குள்ள பெண்கள் தீ நான்கென வளர்ப்பர்.

விளக்கவுரை

திருநீற்று நெறியைக் காத்து வருவதோடு தமக்குரிய முத்தீயையும் மறையவர் காத்து வருவர். அம்முத் தீயோடு கற்புத் தீயையும் கூட்டி நான்கென வளர்த்து வருவர் அவர் மனைவியர் என்பது கருத்து. மூன்று தீ - ஆகவனீயம், தட்சிணாக்கினியம், காருக பத்தியம் என்பன. கற்பைத் தீ என்றல் மரபு. கண்ணகியின் கற்புத் தீயால் மதுரையும், சீதையின் கற்புத் தீயால் இலங்கையும் அழிந்தமை காண லாம். ``சானகி எனும் பெயர் உலகீன்ற அம்மனை, ஆனவள் கற்பி னால் வெந்ததல்லது ஒரு வானரம் சுட்டது என்றுணர்தல் மாட்சியோ`` `கற்பினால் சுடுவன்` *(கம்ப.யுத்த.மந்திரப்.74-2)* என்பனவாகிய கம் பர் வாக்குகள் நினைவு கூர்தற்குரியன. `தற்காத்து` *(குறள்,56)* எனத் தொடங்கும் திருக்குறளில்

`தற்காத்து` எனவரும் தொடருக்கு, கற்பினால் தன்னைக் காத்து எனப் பரிமேலழகர் உரைப்பதும் காண்க.

சீலம் உய்த்தவத் திருமறை
யோர்செழு மூதூர்
ஞாலம் மிக்கநான் மறைப்பொருள்
விளக்கிய நலத்தார்
ஆலம் வைத்தகண் டத்தவர்
தொண்டராம் அன்பர்
நீல நக்கனார் என்பவர்
நிகழ்ந்துளார் ஆனார். **#1830**

சிறந்த நல்லொழுக்கத்தில் தலைநின்று ஒழுகும் மறையவர்கள் வாழும் செழுமையான அப்பழைய ஊரில், இந் நிலவுலகத்தில் சிறந்த நான்மறைப் பொருளைத் தம் ஒழுக்கத்தால் விளக்கிய நன்மை உடையவர். நஞ்சைக் கழுத்தில் வைத்த சிவபெரு மானுக்குத் தொண்டு செய்து வரும் அன்புடையவர்; அவர் நீலநக்கர் என அழைக்கப்படுபவர். அவர் உலகம் புகழச் சிறந்து வாழ்பவர்.

விளக்கவுரை

சீலம் - நல்லொழுக்கம். அது கொண்டு, மறைப்பொ ருளை விளக்குவதாவது, அதற்குத் தகநிற்கும் தம் தகைமையாம்.

வேத உள்ளுறை யாவன
விரிபுனல் வேணி
நாதர் தம்மையும் அவரடி
யாரையும் நயந்து
பாத அர்ச்சனை புரிவதும்
பணிவதும் என்றே
காத லால்அவை இரண்டுமே
செய்கருத் துடையார். **#1831**

அவர், நான்மறைகளின் உட்பொருளாக இருப் பவை, கங்கை தாங்கிய சடையை உடைய தலைவரான சிவபெருமா னையும் அப்பெருமானின் அடியவர்களையும், விரும்பித் திருவடி களைப் போற்றி மகிழ்வதும், வணங்குவதுமே ஆகும்` எனத் தெரிந்து, மீதூர்ந்த அன்பினால் அவ்விரு செயல்களையுமே செய்து வரும் கருத்துடையவர்.

விளக்கவுரை

உள்ளுறை - உட்பொருளாக விளங்குபவை.

மெய்த்த ஆகம விதிவழி
வேதகா ரணரை

நித்தல் பூசனை புரிந்தெழு
நியமமுஞ் செய்தே
அத்தர் அன்பருக் கமுதுசெய்
விப்பது முதலா
எத்தி றத்தன பணிகளும்
ஏற்றெதிர் செய்வார். **#1832**

அவர், மெய்ப்பொருளை வெளிப்படுத்தி நிற்கும் ஆகமங்களின் நெறிப்படியே நான்மறைகளின் முதல்வராய சிவபெரு மானை வணங்கி, நாள் தோறும் வழிபட்டு வரும் கடப்பாடு உடைய வராய், சிவனடியார்களுக்கு அமுது செய்விப்பது முதலான பிறபிற பணிகளையும் மேற்கொண்டு ஒழுகுபவராய் வாழ்ந்து வந்தார்.

விளக்கவுரை

ஆகமங்கள், இறை, உயிர், தளை ஆகிய முப்பொருள் உண்மைகளையும் இறைவழிபாட்டு நெறிமுறைகளையும் விளக்கு தலின் `மெய்த்த ஆகமம்` என்றார். எத்திறத்தன பணிகளும் - அடியவர்கள் வேண்டும் எவ்வகையான பணிகளும்.

ஆய செய்கையில் அமருநாள்
ஆதிரை நாளில்
மேய பூசனை நியதியை
விதியினால் முடித்துத்
தூய தொண்டனார் தொல்லைநீ
டயவந்தி அமர்ந்த
நாய னாரையும் அருச்சனை
புரிந்திட நயந்தார். **#1833**

இத்தகைய செயல்களில் வழுவாது ஒழுகி வருகின்ற நாள்களில், ஒரு திருவாதிரை நாளில், பொருந்திய சிவ வழிபாட்டை முறைப்படி செய்து நிறைவு பெற்ற பின்னர்த் தூய தொண்டரான நீலநக்கர், பழமையாய் நீடியுள்ள `அயவந்தி` என்னும் கோயிலில் விரும்பி எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானுக்கு அருச்சனை செய்ய எண்ணினார்.

விளக்கவுரை

அயவந்தி - சாத்தமங்கையிலுள்ள திருக்கோயிலின் பெயர்.

உறையு ளாகிய மனைநின்றும்
ஒருமைஅன் புற்ற
முறைமை யால்வரு பூசைக்கும்
முற்றவேண் டுவன

குறைவ றக்கொண்டு மனைவியார்
தம்மொடுங் கூட
இறைவர் கோயில்வந் தெய்தினர்
எல்லையில் தவத்தோர். #1834

எல்லை இல்லாத தவத்தையுடைய திருநீலநக்க நாயனார், தம் இருப்பிடமான வீட்டினின்றும், ஒன்றுபட்ட அன்பு டைய முறைமையினால் வரும் பூசையைச் செய்வதற்கு வேண்டிய பொருள்களை எல்லாம் குறைவில்லாமல் எடுத்துக் கொண்டு, தம் மனைவியாருடன் சிவபெருமானின் திருக்கோயிலுக்கு வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

உறையுள் - இல்லம்.

அணைய வந்துபுக் கயவந்தி
மேவிய அமுதின்
துணைம லர்க்கழல் தொழுதுபூ
சனைசெயத் தொடங்கி
இணைய நின்றங்கு வேண்டுவ
மனைவியார் ஏந்த
உணர்வின் மிக்கவர் உயர்ந்தஅர்ச்
சனைமுறை உய்த்தார். #1835

அவர் அயவந்தி என்ற கோயிலின் உள்ளே புகுந்து, அங்கு அமுதென வீற்றிருக்கும் சிவபெருமானின் இணையடிகளை வணங்கி, பூசை செய்யத் தொடங்கி, தம்முடன் இணைந்திருந்து அங்கு வேண்டுவனவற்றை எல்லாம் மனைவியார் எடுத்துத்தர, உணர்வின் மிக்க அவர், உயர்ந்த பூசனைகளை எல்லாம் முறையாகச் செய்தார்.

விளக்கவுரை

ஒத்து நிற்றல் - வழிபாட்டிற்குத் துணையாய் நிற்றல்.

நீடு பூசனை நிரம்பியும்
அன்பினால் நிரம்பார்
மாடு சூழ்புடை வலங்கொண்டு
வணங்கிமுன் வழுத்தித்
தேடு மாமறைப் பொருளினைத்
தெளிவுற நோக்கி
நாடும் அஞ்செழுத் துணர்வுற
இருந்துமுன் நவின்றார். #1836

தாம் இதுகாறும் ஆற்றிய வழிபாடு நிறைவுற்றும் அன்பு நிரம்பாதவராய அவர், இறைவர் வீற்றிருக்கும் உட்புறத்தை வலமாக வந்து வணங்கிப்

போற்றி நின்று, பெரிய மறைகளும் தேடு கின்ற பொருளை அகக்கண்ணால் நோக்கி, எண்ணத்தகும் திருவைந் தெழுத்தை உணர்ச்சியில் பொருந்தத் திருமுன்பு இருந்து விதிப்படி நினைந்தார்.

விளக்கவுரை

மாடு சூழ்புடை - (இறைவன் எழுந்தருளியிருக்கும் திருவறைக்கும்) அருகிலுள்ள உட்சுற்று: (உட்பிரகாரம்)

தொலைவில் செய்தவத் தொண்டனார்
சுருதியே முதலாங்
கலையின் உண்மையாம் எழுத்தஞ்சுங்
கணிக்கின்ற காலை
நிலையின் நின்றுமுன் வழுவிட
நீண்டபொன் மேருச்
சிலையி னார்திரு மேனிமேல்
விழுந்ததோர் சிலம்பி. **#1837**

அளவற்ற தவத்தைச் செய்த தொண்டரான அந்நீலநக்கர், நான்மறைகளை முதலாகக் கொண்ட எல்லாக் கலை களும் எடுத்துச் சொல்லும் உண்மைப் பொருளான திருவைந் தெழுத்தை எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது, சிலந்தியொன்று தான் நின்ற நிலையினின்றும் வழுவியதால், உயர்ந்த அழகிய மேரு மலையை வில்லாக வளைத்த இறைவரின் அருட் குறியான சிவலிங்கத் திருமேனி மீது விழுந்தது.

விளக்கவுரை

கலையின் உண்மை - கலைகளின் உட்பொருள்: திருவைந்தெழுத்து. `வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே` *(தி.3 ப.49 பா.1)* எனவரும் திருவாக்கும் காண்க.

விழுந்த போதில்அங் கயல்நின்ற
மனைவியார் விரைவுற்
றெழுந்த அச்சமோ டிளங்குழ
வியில்விழுஞ் சிலம்பி
ஒழிந்து நீங்கிட ஊதிமுன்
துமிப்பவர் போலப்
பொழிந்த அன்பினால் ஊதிமேல்
துமிந்தனர் போக. **#1838**

அங்ஙனம் சிலந்தி சிவலிங்கத் திருமேனியில் விழுந்த போது, அயலில் நின்றிருந்த மனைவியார், விரைவு மிக எழுந்த அச்சத்துடன், இளங் குழந்தையின் மீது விழுந்த சிலந்தி ஒழியு மாறும் அதன் நச்சுத் தன்மை

நீங்குமாறும் ஊதி முன் துமிக்கும் தாய் போன்று, பொங்கி, மீதூர்ந்த அன்பினால் ஊதித் திருமேனியினின்றும் அச்சிலந்தி நீங்குமாறு செய்தனர்.

விளக்கவுரை

துமித்தல் - காற்றுடன் துமியையொத்த உமிழ்நீர்த் துளிகளும் சேர்ந்து விழுமாறு வாயினால் ஊதுதல்.

பதைத்த செய்கையால் மனைவியார்
முற்செயப் பந்தஞ்
சிதைக்கு மாதவத் திருமறை
யவர்கண்டு தங்கண்
புதைத்து மற்றிது செய்ததென்
பொறியிலாய் என்னச்
சுதைச்சி லம்பிமேல் விழஊதித்
துமிந்தனன் என்றார். **#1839**

மனம் பதைத்தலால் உண்டாகிய செய்கையால் மனைவியார் தம் முன் இவ்வாறு செய்ய, மலங்கள் நீங்க மாதவம் செய்யும் மறையவரான திருநீலநக்கனார் அதைக் கண்டு ஆற்ற மாட்டாதவராய்த், தம் கண்களைப் பொத்திக் கொண்டு, `அறிவற்ற வளே! தகாத இச்செயலைச் செய்தது என்ன காரணம்?` என வினவ, `சுதைச் சிலம்பி இறைவரின் திருமேனி மீது விழ, அதனை நீக்க ஊதினன்` எனக் கூறினர் அம்மையார்.

விளக்கவுரை

பொறி - அறிவு. சுதைச் சிலந்தி - வெண்மையான சிலந்தி.

மனைவி யார்செய்த அன்பினை
மனத்தினில் கொள்ளார்
புனையும் நூல்மணி மார்பர்தம்
பூசனைத் திறத்தில்
இனைய செய்கைஇங் கநுசித
மாம்என எண்ணும்
நினைவி னால்அவர் தம்மைவிட்
டகன்றிட நீப்பார். **#1840**

மனைவியார் செய்த செயலில் உள்ள அன்பை மனத்தில் கொள்ளாதவராய முந்நூல் அணிந்த மார்பினராய திருநீல நக்கர், இது தகாத செயலாகும் என்ற எண்ணங் கொண்டதனால், அம்மனைவியார் தம்மை விட்டு நீங்குமாறு துறப்பவர்,

விளக்கவுரை

அநுசிதம் - தகாதது. இதன் மறுதலைச்சொல் உசிதம் என்பதாகும். உசிதம் - தக்கது.

மின்நெ டுஞ்சடை விமலர்மேல்
விழுந்தநூற் சிலம்பி
தன்னை வேறொரு பரிசினால்
தவிர்ப்பது தவிர
முன்அ ணைந்துவந் தூதிவாய்
நீர்ப்பட முயன்றாய்
உன்னை யான்இனித் துறந்தனன்
ஈங்கென உரைத்தார். **#1841**

`மின் என ஒளிவீசுகின்ற நீண்ட சடையுடைய குற்றமற்றவரான இறைவரின் திருமேனியின் மேல் விழுந்த நூல் சிலந்தியை, வேறு ஒருவகையினால் தவிர்க்காது முன் வந்து வாய் நீர் படுமாறு முயன்றாய்! ஆதலின் இனி நான் உன்னைத் துறந்தனன்` என மொழிந்தார்.

விளக்கவுரை

வேறுபரிசு - வேறு வகையால்: கையால் அல்லது வேறு கருவிகளால் அகற்றல். நூற்சிலம்பி - நூலை நூற்கும் இயல்பினதாய சிலந்தி. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபுடையன.

மற்ற வேலையிற் கதிரவன்
மலைமிசை மறைந்தான்
உற்ற ஏவலின் மனைவியார்
ஒருவழி நீங்க
முற்ற வேண்டுவ பழுதுதீர்
பூசனை முடித்துக்
கற்றை வேணியார் தொண்டருங்
கடிமனை புகுந்தார். **#1842**

அதுபொழுது கதிரவன் மேற்கு மலையில் மறைந்தான். கணவனார் இட்ட கட்டளையின் வழியே நின்ற மனைவி யார் ஒரு மருங்கு நீங்கத், தம் பூசை முற்றுதற்கு வேண்டிய குற்றம் நீங்கும் பூசை முறைகளைச் செய்து முடித்துக், கற்றையாக முடித்த சடையுடைய சிவபெருமானின் அடியாரான நீலநக்கரும் தம் இல்லத்துக்குள் புகுந்தார்.

விளக்கவுரை

பழுது தீர் பூசனை - தம் வழிபாட்டின் இடையே வாயுமிழ்ந்ததால் வந்த மாசு நீங்கச் செய்யும் பூசனை. கழுவாயாகச் செய்த வழிபாடு. வடநூலார் பிராயச் சித்தம் என்பர்.

அஞ்சும் உள்ளமோ டவர்மருங்

கணைவுற மாட்டார்
நஞ்சம் உண்டவர் கோயிலில்
நங்கையார் இருந்தார்
செஞ்சொல் நான்மறைத் திருநீல
நக்கர்தாம் இரவு
பஞ்சின் மெல்லணைப் பள்ளியிற்
பள்ளிகொள் கின்றார். **#1843**

நீலநக்கரின் மனைவியார் அஞ்சிய உள்ளத்துடன் அவரது அருகே சேராதவராய், நஞ்சை உண்ட பெருமானின் கோயிலில் தங்கியிருந்தார். செம்மையான சொற்களாலாய நான்மறை களில் வல்ல திருநீலநக்கர் தனியாய் அன்றிரவு பஞ்சு இட்ட மெல்லிய அணையில் துயிலலானார்.

விளக்கவுரை

இணைந்த உள்ளத்தினராய் வழிபாடாற்றிய இருவரில், ஒருவர் அதிலும் மனைவியார், திருக்கோயிலில் இருக்க, கணவனார் இல்லம் சென்றுதம் பள்ளியறையில் துயின்றார் என்றது, அவ்விருவர் மீதும் கொள்ளத்தகும் இரக்கவுணர்வு தோன்ற நின்றது.

பள்ளி கொள்பொழு தயவந்திப்
பரமர்தாங் கனவில்
வெள்ள நீர்ச்சடையோடுதம்
மேனியைக் காட்டி
உள்ளம் வைத்தெமை ஊதிமுன்
துமிந்தபால் ஒழியக்
கொள்ளும் இப்புறஞ் சிலம்பியின்
கொப்புள்என் றருள. **#1844**

அவ்வாறு அவர் உறங்கும் பொழுதில், அயவந்தி எனும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான், அவரது கனவில் எழுந்தருளிக், கங்கை தாங்கிய சடையுடன் தம் திருமேனி யைக் காட்டி, `மனத்தில் அன்பு வைத்து, நின்மனைவி எம்மை முன்பு ஊதித் துமிந்த பக்கம் ஒழிய, மற்ற இந்தப் பக்கம் எல்லாம் சிலந்தியின் கொப்புளங்கள் எழுந்துள்ளன, காண்பாயாக!` என்று உரைத்தருள.

விளக்கவுரை

துமிந்த பால் - உமிழ்நீர்த் துளிகள் கலந்த காற்றை ஊதிய பகுதி.

கண்ட அப்பெருங் கனவினை
நனவெனக் கருதிக்
கொண்ட அச்சமோ டஞ்சலி
குவித்துடன் விழித்துத்

தொண்ட னார்தொழு தாடினார்
பாடினார் துதித்தார்
அண்டர் நாயகர் கருணையைப்
போற்றிநின் றழுதார். **#1845**

தாம் கண்ட அக்கனவை நனவு என்றே எண்ணி, அடைந்த அச்சத்துடனே, அஞ்சலியாகத் தலை மேல் குவித்த கைகளுடனே விழித்து, எழுந்து, அடியவரான திருநீலநக்க நாயனார், தொழுது ஆடினார், பாடினார், தேவர் தலைவரான இறைவரின் பெருங்கருணையைப் போற்றி நின்று அழுதார்.

விளக்கவுரை

****

போது போயிருள் புலர்ந்திடக்
கோயிலுள் புகுந்தே
ஆதி நாயகர் அயவந்தி
அமர்ந்தஅங் கணர்தம்
பாத மூலங்கள் பணிந்துவீழ்ந்
தெழுந்துமுன் பரவி
மாத ராரையுங் கொண்டுதம்
மனையில்மீண் டணைந்தார். **#1846**

இருட்காலமாகிய இரவு புலர்ந்திட, திருக்கோயி லினுட் சென்று, ஆதி நாயகராய அயவந்தியில் எழுந்தருளியிருக்கும் இறைவரின் அடிகளில் வணங்கிக் கீழே விழுந்து, திருமுன்பு போற்றி செய்து, அம்மையாரையும் உடன் அழைத்துக் கொண்டு தம் வீட்டிற்கு மீண்டும் வந்து சேர்ந்தார். கு-ரை: ஆதிநாயகர் - உயிர்களின் வாழ் முதலாய தலைவர். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

விளக்கவுரை

****

பின்பு முன்னையிற் பெருகிய
மகிழ்ச்சிவந் தெய்த
இன்பு றுந்திறத் தெல்லையில்
பூசனை இயற்றி
அன்பு மேம்படும் அடியவர்
மிகஅணை வார்க்கு
முன்பு போலவர் வேண்டுவ
விருப்புடன் முடிப்பார். **#1847**

அதன்பின்பு, முன்பு இருந்ததைவிடப் பெரு மகிழ்ச்சி வந்து அடைய,

இன்பம் மிகுதற்குக் காரணமாய எண்ணில் லாத பூசனைகளை இறைவற்குச் செய்து, அன்புமிக்க அடியவர்கள் தம்பால் மிகுதியாக வர, அவர்க்கெல்லாம் முன்போலவே வேண்டிய வற்றையெல்லாம் விருப்புடன் கொடுப்பாராயினார்.

விளக்கவுரை

அன்பு மேம்படும் அடியவர் - இறைவனிடத்தும் ஏனைய உயிர்களிடத்தும் அன்பு மீதூர்ந்து நிற்கும் அடியவர்கள்.

அன்ன தன்மையில் அமர்ந்தினி
தொழுகும்அந் நாளில்
மன்னு பூந்தராய் வருமறைப்
பிள்ளையார் பெருமை
பன்னி வையகம் போற்றிட
மற்றவர் பாதம்
சென்னி வைத்துடன் சேர்வுறும்
விருப்பினிற் சிறந்தார். **#1848**

அங்ஙனம் அவர் ஒழுகி வந்த நாள்களில், நிலைபெற்ற சீகாழிப்பதியில் தோன்றியருளிய திருஞானசம்பந்தரின் பெருமைகளைப் பலவகையாய்ச் சொல்லி உலகம் பாராட்டிப் போற் றக் கேட்டு, அவருடைய திருவடிகளை மனத்தால் வணங்கி, அவரு டன் கூடியிருக்கும் விருப்பம் கொண்டார்.

விளக்கவுரை

பூந்தராய் - சீகாழி. ஊழிக்காலத்திலும் நீரில் அமிழ்ந்து விடாது மிதந்து நிலை பெற்று இருத்தலின் `மன்னு பூந்தராய்` என்றார். பன்னுதல் - பலபடப் பாராட்டிப் போற்றுதல். `பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும்` *(தி.2 ப.106 பா.1)* எனவரும் திருமுறைத் திரு வாக்கும் காண்க.

பண்பு மேம்படு நிலைமையார்
பயிலும்அப் பருவம்
மண்பெ ருந்தவப் பயன்பெற
மருவுநற் பதிகள்
விண்பி றங்குநீர் வேணியார்
தமைத்தொழ அணைவார்
சண்பை மன்னருஞ் சாத்தமங்
கையில்வந்து சார்ந்தார். **#1849**

பண்பினால் மேம்பட்ட திருநீலநக்கர் முற்கூறிய உணர்வுடன் வாழும் காலத்தில், உலகினர் பெருந்தவப் பயனை அடையும் பொருட்டு இறைவன் எழுந்தருளியிருக்கும் நற்பதிகள் பலவற்றிற்கும் சென்று,

விண்ணில் விளங்கும் கங்கை தங்கிய சடையை யுடைய சிவபெருமானைத் தொழுவதற்குச் சேர்வாராய்ச், சீகாழித் தலைவரான திருஞானசம்பந்தரும் திருச்சாத்தமங்கைக்கு வந்து அடைந்தார்.

விளக்கவுரை

சண்பை - சீகாழி

நீடு சீர்த்திரு நீலகண்
டப்பெரும் பாணர்
தோடு லாங்குழல் விறலியார்
உடன்வரத் தொண்டர்
கூடும் அப்பெருங் குழாத்தொடும்
புகலியர் பெருமான்
மாடு வந்தமை கேட்டுளம்
மகிழ்நீல நக்கர். **#1850**

சொலத்தகும் சிறப்புக்கள் மிக்க திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், மலர்கள் அணிந்த கூந்தலையுடைய பாணினி யான மதங்கசூளாமணியாருடன் வர, தொண்டர்கள் சூழும் அப் பெருங் கூட்டத்துடன் சீகாழித் தலைவரான திருஞானசம்பந்தர் தம் நகருக்கு அருகே எழுந்தருளுவதைக் கேட்டு, உளம் மகிழ்ந்த திருநீல நக்க நாயனார்,

விளக்கவுரை

தோடு - இதழ்கள்; அவற்றையுடைய மலர்க்காயிற்று. மாடு - தம் நகரின் அருகில்

கேட்ட அப்பொழு தேபெரு
மகிழ்ச்சியிற் கிளர்ந்து
தோட்ட லங்கலுங் கொடிகளும்
புனைந்துதோ ரணங்கள்
நாட்டி நீள்நடைக் காவண
மிட்டுநற் சுற்றத்
தீட்ட முங்கொடு தாமுமுன்
பெதிர்கொள எழுந்தார். **#1851**

கேள்வியுற்ற அப்பொழுதே, பெருமகிழ்ச்சி பொங்க, மலர் மாலைகளையும் கொடிகளையும் தூக்கி, தோரணங்கள் நாட்டி, நீண்ட தொலைவு வரை நடைப் பந்தர் இட்டு, நகரை அணி செய்து, உள்ளம் ஒன்றிய சுற்றத்தாரின் கூட்டத்தையும் உடன் அழைத் துக் கொண்டு அவர் முன்பு எதிர் கொள்ளும் பொருட்டு எழுந்த வராய்,

விளக்கவுரை

தோட்டு அலங்கல் - மலர் மாலைகள்.
நடைக்காவணம் - நடைப்பந்தர்.

சென்று பிள்ளையார் எழுந்தரு
ளுந்திருக் கூட்டம்
ஒன்றி அங்கெதிர் கொண்டுதங்
களிப்பினால் ஒருவா
றன்றி ஆடியும் பாடியும்
தொழுதெழுந் தணைவார்
பொன்ற யங்குநீள் மனையிடை
யுடன்கொடு புகுந்தார். #1852

சென்று, ஞானசம்பந்தர் எழுந்தருளும் அக் கூட்டத்தைச் சேர்ந்து, அங்கு அவரை எதிர் கொண்டு வரவேற்று, தம் மகிழ்ச்சியின் மேலீட்டால் ஒரு தன்மைத் தாகவன்றிப் பலவகையா னும் ஆடியும் பாடியும் தொழுது, எழுந்து, அணைபவராய்ப், பொன் மயமாக விளங்கும் பெரிய தம் மனையிடத்து உடனே அழைத்துக் கொண்டு புகுந்தார்.

விளக்கவுரை

ஆடுதலும் பாடுதலும் மகிழ்ச்சி மிகுதியால் எழுந்த மெய்ப் பாடுகளாகும். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

பிள்ளை யாரெழுந் தருளிய
பெருமைக்குத் தக்க
வெள்ள மாகிய அடியவர்
கூட்டமும் விரும்ப
உள்ளம் ஆதர வோங்கிட
ஓங்குசீர்க் காழி
வள்ள லாரைத்தம் மனையிடை
அமுதுசெய் வித்தார். #1853

திருஞானசம்பந்தர் எழுந்தருளியிருக்கும் பெருமைக்கு ஏற்றவாறு, பெருந்திரளாகக் கூடிய அடியவர் கூட்டமும் விரும்பி வர, மனத்தில் அன்பு மிகத் தம் இல்லத்தில், சீகாழியில் தோன்றிய வள்ளலாரான அத் திருஞானசம்பந்தரை உணவு உண்ணு மாறு செய்தார்.

விளக்கவுரை

நீலநக்கர் தாம் கொண்டிருந்த அன்பிற்கேற்பச் சம்பந்தர், தாமே வந்து தம்மைத் தலையளித்து ஆட்கொண்டமை பற்றி, வள்ளலார் என்றார்.

அமுது செய்தபின் பகலவன்
மேல்கடல் அணையக்
குமுத வாவியிற் குளிர்மதிக்

கதிரணை போதில்
இமய மங்கைதன் திருமுலை
அமுதுண்டார் இரவும்
தமது சீர்மனைத் தங்கிட
வேண்டுவ சமைத்தார். #1854

திருஞானசம்பந்தரும் அடியவர் கூட்டமும் திருவமுது செய்த பின்பு, கதிரவன் மேல்கடலினை அடைய, ஆம்பல் மலர்களையுடைய பொய்கைகளில் குளிர்ந்த மதியின் கதிர்கள் சேரும் இரவுக் காலத்தில், உமையம்மையாரின் முலைப் பாலையுண்ட அந்த ஞானசம்பந்தர் அன்றிரவும் சிறப்பு மிக்க தம் திருமனையில் தங்கு தற்கு வேண்டியவற்றை நீலநக்கர் அமைத்தார்.

விளக்கவுரை

இமய மங்கை - இமயத்தில் வளர்ந்த பெண்: இமவான் மகளாய்த் தோன்றியமையின் இவ்வாறு கூறினார்.

சீல மெய்த்திருத் தொண்டரோ
டமுதுசெய் தருளி
ஞாலம் உய்ந்திட நாயகி
யுடன்நம்பர் நண்ணும்
காலம் முற்பெற அழுதவர்
அழைத்திடக் கடிது
நீல நக்கனார் வந்தடி
பணிந்துமுன் நின்றார். #1855

தவ ஒழுக்கமுடைய மெய்த்தொண்டர்களுடனே திருவமுது செய்த பின்பு, உலகம் உய்தற் பொருட்டுப் பெரிய நாயகி அம்மையாருடன் தோணியப்பர் வெளிப்பட்டருளுமாறு முன் அழுதவரான திருஞானசம்பந்தர் அழைக்க, திருநீலநக்கர் விரைவில் வந்து அடிவணங்கித் திருமுன்பு நின்றார்.

விளக்கவுரை

****

நின்ற அன்பரை நீலகண்
டயாழ்ப் பாணர்க்
கின்று தங்களோர் இடங்கொடுத்
தருளுவீர் என்ன
நன்றும் இன்புற்று நடுமனை
வேதியின் பாங்கர்ச்
சென்று மற்றவர்க் கிடங்கொடுத்

தனர்திரு மறையோர். #1856
அங்ஙனம் வந்து நின்ற அடியவரான திருநீல நக்கரைப் பார்த்துத் `திருநீல கண்ட யாழ்ப்பாணருக்கு இன்று இங்குத் தங்குதற்குத் தக்கதொரு இடத்தை அளித்தருளுக` என்று திருஞான சம்பந்தர் கூற, மகிழ்ச்சியுற்று, அவ்வருளிப் பாட்டை ஏற்றுச் சென்று, அத்திருநீலகண்ட யாழ்ப்பாணருக்குத் தம் நடுமனையில், வேதிகையின் அருகில், மறையவரான திருநீலநக்கர் இடம் அமைத்துத் தந்தார்.

விளக்கவுரை

வேதி - வேள்வித் தீ வளர்த்தற்குரிய இடம்.

ஆங்கு வேதியில் அறாதசெந்
தீவலஞ் சுழிவுற்
றோங்கி முன்னையில் ஒருபடித்
தன்றியே ஒளிரத்
தாங்கு நூலவர் மகிழ்வுறச்
சகோடயாழ்த் தலைவர்
பாங்கு பாணியா ருடன்அரு
ளாற்பள்ளி கொண்டார். #1857

அவ்விடத்து அவ்வேதிகையில் என்றும் நீங்காது வளர்க்கப்பட்டு வரும் செந்தீயானது வலமாகச் சுழித்து எழுந்து, மேல் ஓங்கி, முன்னையினும் பலவகையாய் விளக்கம் செய்ய, சகோட யாழ்த் தலைவரான திருநீலகண்டர், தம் அருகிருக்கும் மதங்க சூளாமணியாருடனே திருவருள் சிந்தனையோடு பள்ளி கொண்டார்.

விளக்கவுரை

பேரியாழ், மகர யாழ், சகோட யாழ், செங்கோட்டியாழ் எனஅழைக்கப்படுவனவற்றுள், சகோடயாழ் 14 நரம்புகளை உடையது. இதுவே பாணனார் வைத்திருந்ததாகும். இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

கங்கு லிற்பள்ளி கொண்டபின்
கவுணியர் தலைவர்
அங்கு நின்றெழுந் தருளுவார்
அயவந்தி அமர்ந்த
திங்கள் சூடியை நீலநக்
கரைச்சிறப் பித்தே
பொங்கு செந்தமிழ்த் திருப்பதி
கத்தொடை புனைந்தார். #1858

கவுணியர் குலத் தலைவரான திருஞானசம்பந்தர் அன்று இரவு அங்குப்

பள்ளி கொண்ட பின், எழுந்து அங்கிருந்தும் புறப்படுவாராகித் திருநீலநக்கரைச் சிறப்பாக எடுத்துக் கூறி, அயவந்தியில் விரும்பி எழுந்தருளியுள்ள பெருமானைப் பொங்கும் செந்தமிழான திருப்பதிகமான மாலையைப் புனைந்து பாடினார்.

விளக்கவுரை

`கடி மணம் மல்கி, நாளும் கமழும் பொழில் சாத்த மங்கை அடிகள் நக்கன் பரவ, அயவந்தி அமர்ந்தவனே` *(தி.3 ப.58 பா.2)* எனவரும் திருஞானசம்பந்தர் வாக்கைக் காண்க.

பதிக நாண்மலர் கொண்டுதம்
பிரான்கழல் பரவி
அதிக நண்பினை நீலநக்
கருக்களித் தருளி
எதிர்தொ ழும்பதி களில்எழுந்
தருளினார் என்றும்
புதிய செந்தமிழ்ப் பழமறை
மொழிந்தபூ சுரனார். **#1859**

திருப்பதிகமான புதிய மலர் மாலை கொண்டு தம் இறைவரின் திருவடிகளைப் போற்றிப், பெருநட்பினை நீலநக்கருக் குத் தந்தருளி, பழமையுடைய மறைகளை என்றும் புதிதாய் உள்ள செந்தமிழால் கூறியருளிய அந்தணரான ஞானசம்பந்தர், மேலும் தொழச் செல்லும் பதிகளை நோக்கிச் செல்வாராயினர்.

விளக்கவுரை

பூ - நிலம், சுரர் - தேவர். நிலத்தேவர் - சம்பந்தர்.

பிள்ளை யார்எழுந் தருளஅத்
தொண்டர்தாம் பின்பு
தள்ளும் அன்புடன் கேண்மையும்
தவிர்ப்பில எனினும்
வள்ள லார்திரு வருளினை
வலியமாட் டாமை
உள்ளம் அங்குடன் போக்கிமீண்
டொருவகை இருந்தார். **#1860**

அவ்வகையில் அப்பதியினின்றும் திருஞான சம்பந்தர் எழுந்தருள, திருநீலநக்கரும் ஞானசம்பந்தரைத் தொடர்ந்து செல்லுமாறு தம்மை உந்திச் செலுத்தும் அன்பும், நட்பும் தவிர்க்க இய லாதவையாய் இருப்பினும், வள்ளலாரான ஆளுடைய பிள்ளையாரின் அருளிப் பாடான திருவாணையை மறுக்க இயலாததால், தம் மனத் தைத் தாம்

மீட்டு, ஒருவாறு மன அமைதி பெற்றுத் தங்கியிருந்தனர்.

விளக்கவுரை

திருநீலநக்கர் ஞானசம்பந்தருடன் செல்லவே ஒருப்பட்டாரேனும், அவர் தம் ஆணையால் அதனை மறுக்க இயலாத வராய்த் தங்கினார். இதனால் ஞானசம்பந்தரிடத்து அவருக்கு இருந்த பத்திமையும், பேரன்பும் நன்கு விளங்கும்.

மேவு நாளில்அவ் வேதியர்
முன்புபோல் விரும்புந்
தாவில் பூசனை முதற்செய்கை
தலைத்தலை சிறப்பச்
சேவின் மேலவர் மைந்தராந்
திருமறைச் சிறுவர்
பூவ டித்தலம் பொருந்திய
உணர்வொடும் பயின்றார். **#1861**

ஒருவாறு அமைதி பெற்று தம்பதியில் தங்கியிருந்த நாள்களில், அவ்வேதியரான நீலநக்கர், முன்புபோல் மறைகளால் போற்றப்பெறும் குற்றம் இல்லாத இறைவழிபாடாற்றல், அடியவரைப் பேணல் முதலான செயல்களை எல்லாம் மேன்மேலும் சிறப்பாக ஆற்றி, ஆனேற்றின் மீது இவர்ந்தருளும் இறைவரின் மைந்தரான ஞானசம்பந்தரின் அழகிய திருவடிகளை, பொருந்திய உணர்வுடன் வணங்கி வாழ்ந்து வருவாராயினார்.

விளக்கவுரை

சே - காளை, ஆனேறு.

சண்பை யாளியார் தாமெழுந்
தருளும்எப் பதியும்
நண்பு மேம்பட நாளிடைச்
செலவிட்டு நண்ணி
வண்பெ ரும்புக ழவருடன்
பயின்றுவந் துறைந்தார்
திண்பெ ருந்தொண்ட ராகிய
திருநீல நக்கர். **#1862**

இவ்வாறு வாழ்ந்து வந்த உறைப்புடைய நீலநக்கர், இடையிட்ட பல நாள்கள் செல, அன்பு மேலிடச் சீகாழியின் தலைவரான ஞானசம்பந்தர் எழுந்தருளும் திருப்பதிகளுக்கெல்லாம் தாமும் சென்று சேர்ந்து அவருடன் வழிபட்டுக், கொடைத் தன்மையும் பெரும்புகழும் உடைய காழிப் பிள்ளையாருடன் கூடியிருந்து, மீண்டும் தம்பதிக்கு வந்து

அமர்ந்திருந்தார்.

விளக்கவுரை

****

பெருகு காதலில் பின்நெடு
நாள்முறை பிறங்க
வருபெ ருந்தவ மறையவர்
வாழிசீ காழி
ஒருவர் தந்திருக் கல்லியா
ணத்தினில் உடனே
திரும ணத்திறஞ் சேவித்து
நம்பர்தாள் சேர்ந்தார். **#1863**

பெருகும் அன்பினால் பின்னர் நீண்ட நாள்கள் இவ்வாறு வாழ்ந்து வந்த பெருந்தவமுடைய வேதியரான திருநீல நக்கர், எந்நாளும் வாழ்வுடைய சீகாழிப் பதியில் தோன்றிய ஒப்பில் லாத ஞானசம்பந்தரின் திருமணச் சிறப்பில் கலந்து கொண்டு, மகிழ்ந்து, அப்பெருமகனாரை வணங்கிய நற்பேற்றால் அவருடன் கூடிச் சிவபெருமான் திருவடிகளை அடைந்தார்.

விளக்கவுரை

ஞானசம்பந்தர் திருமணத்தில் மறைவிதிப்படி வேள்விச் சடங்குகளைச் செய்வித்தும், அவரைவழிபட்டும் நின்ற குறிப்புத் தோன்றத் `திருமணத் திறம் சேவித்து` என்றார். சேவித்து - வழிபட்டு.

தருதொ ழில்திரு மறையவர்
சாத்தமங் கையினில்
வருமு தற்பெருந் திருநீல
நக்கர்தாள் வணங்கி
இருபி றப்புடை அந்தணர்
ஏறுயர்த் தவர்பால்
ஒருமை உய்த்துணர் நமிநந்தி
யார்தொழில் உரைப்பாம். **#1864**

அடிமைத் திறத்தில் சிறந்தவரான திருச்சாத்த மங்கையில் தோன்றியருளிய முதன்மையுடைய பெரிய திருநீல நக்கரின் திருவடிகளை வணங்கி, அத் துணையினால் இரு பிறப்பு டைய அந்தணராயும் விடைக்கொடியை உயர்த்திய சிவபெருமா னிடத்து மன ஒருமை கொண்டு உணர்கின்றவராயும் வாழ்ந்த நமிநந்தியார் செய்த திருத்தொண்டினைச் சொல்லத் தொடங்குவோம்.

விளக்கவுரை

ஒருமையுய்த்து உணர்தல் - மனம் ஒன்றியிருந்து உணர்தல்.

நமிநந்தியடிகள் நாயனார் புராணம்

வையம் புரக்குந் தனிச்செங்கோல்
வளவர் பொன்னித் திருநாட்டுச்
செய்ய கமலத் தடம்பணையும்
செழுநீர்த் தடமும் புடையுடைத்தாய்ப்
பொய்தீர் வாய்மை அருமறைநூல்
புரிந்த சீலப் புகழதனால்
எய்தும் பெருமை எண்திசையும்
ஏறூர் ஏமப் பேறூரால். **#1865**

இந்நிலவுலகைக் காவல் புரியும் தனிச் செங்கோலை உடைய சோழர்களின் காவிரித் திருநாட்டில், செந்தாமரை மலர்கள் நிறைந்த குளங்களையுடைய பெருவயல்களையும், செழுமையான நீர்ப் பொய்கைகளையும் எப்பக்கங்களிலும் கொண்டதாகி, பொய்ப் பொருளினின்றும் நீக்கி மெய்ப்பொருளைக் கூறும் அரிய நான்மறை களிலும் அவற்றின் வழிப்பட்ட நூல்களிலும் கூறப்பட்டுள்ள நெறி முறைகளை இடைவிடாமல் எண்ணிச் செய்யும் நல்ல ஒழுக்க முடையவரின், புகழால் வரும் பெருமையானது எல்லாத் திசைக ளிலும் பரவிச் செல்கின்ற ஊர், ஏமப்பேறூர் என்பதாகும்.

விளக்கவுரை

ஏமப்பேறூர் - திருவாரூருக்குத் தெற்கே *4* கி.மீ. தொலைவில் உள்ளது. இதுபோது திருமப்பற்று என்று வழங்கப் பெறுகிறது.
நெய் கிடையாத பொழுது நீரையே நெய்யாகக் கொண்டு விளக்கு எரித்த இவ்வடியவர் நினைவாக, நெய்ப்பேறு என வழங்கப் பெற்றுக் காலப்போக்கில், திருமப்பற்று என வழங்கலாயிற்று. அடியவர் வரலாற்றை நினைவு கூரும் திருப்பெயரை மீண்டும் அவ்வூர் பெறத் திருவருள் கூட்டுவிக்குமாக.

மாலை பயிலும் தோரணங்கள்
மருங்கு பயிலும் மணிமறுகு
வேலை பயிலும் புனல்பருகு
மேகம் பயிலும் மாடங்கள்
சோலை பயிலும் குளிர்ந்தஇருள்
சுரும்பு பயிலும் அரும்பூகம்
காலை பயிலும் வேதஒலி
கழுநீர் பயிலும் செழுநீர்ச்செய். **#1866**

அழகிய வீதிகளின் இருமருங்கும் மாலைகள் மிகத் தொங்கவிடப்பட்ட தோரணங்கள் விளங்கும். மாளிகைகளின் மீது, கடலில் நீரையுண்ணும்

மேகங்கள் தவழும். குளிர்ந்த இருண்ட நிழற் சோலைகளினூடே பெரிதும் விளங்கும் அரிய பாக்கு மரங்களில், வண்டுகள் மொய்க்கும். உரிய காலங்களில், நான்மறைகளின் ஒலி மிக்கு ஒலிக்கும். செழிப்பான நீர் நிறைந்த வயல்களில், கழுநீர் மலர்கள் விளங்கும்.

விளக்கவுரை

சோலைகளில் இருள் மிக்கிருப்பது அங்குள்ள மலர்ச் செடிகளின் நெருக்கத்தைக் காட்டும், `இருள் வளைப் புண்ட மருள்படு பூம் பொழில்` என வருவதும் காண்க.

பணையில் விளைந்த வெண்ணெல்லின்
பரப்பின் மீது படச்செய்ய
துணர்மென் கமலம் இடைஇடையே
சுடர்விட் டெழுந்து தோன்றுவன
புணர்வெண் புரிநூ லவர்வேள்விக்
களத்தில் புனைந்த வேதிகைமேல்
மணல்வெண் பரப்பின் இடைஇடையே
வளர்த்த செந்தீ மானுமால். **#1867**

வயல்களில் விளைந்த வெண்மையான நெற்பயிர் களினிடையே, சிவந்த பல மெல்லிதழ்களையுடைய தாமரைப் பூக்கள் இடையிடையே ஒளிவிட்டு மேல் எழுந்து தோன்றுவது, பொருந்திய வெண்மையான முப்புரிநூல் அணிந்த வேதியர்களின் வேள்விக் களத்தில் அழகுடன் அமைத்த வேதிகை மீது, வெண்மையான மணலைப் பரப்பி, இடையிடையே வளர்த்த செந்தீயை ஒத்திருக்கும்.

விளக்கவுரை

வயல் வேள்விச் சாலைக்கும், வெண்நெல் பரப்பு அதன்மீது பரப்பப்படும் வெண்மணலுக்கும், அதன்மீது இடை யிடையே படர்ந்திருக்கும் செந்தாமரை மலர்கள் அவ்வெண் மணலின் மீது வளர்க்கப் பட்ட தீயினுக்கும் உவமையாம். மானும் - ஒக்கும். ஆல் - அசைநிலை.

பெருமை விளங்கும் அப்பதியில்
பேணும் நீற்றுச் சைவநெறி
ஒருமை வழிவாழ் அந்தணர்தம்
ஓங்கு குலத்தி னுள்வந்தார்
இருமை உலகும் ஈசர்கழல்
இறைஞ்சி ஏத்தப் பெற்றதவத்
தருமை புரிவார் நமிநந்தி
அடிகள் என்பா ராயினார். **#1868**

பெருமையுடன் விளங்கும் அப்பதியில், போற்று கின்ற திருநீற்றுச்

சார்புடைய சைவ நெறியில் ஒன்றிய உணர்வுடன் வாழும் அந்தணர்களின் சிறந்த குலத்தில் தோன்றியவராய், இம்மை யிலும் அம்மையிலும் சிவபெருமான் திருவடிகளையே வணங்கி வாழ்த்தும் பேறுடைய தவத்தை இடைவிடாது மேற்கொண்டு ஒழுகி, அதனை அரிய வகையால் போற்றி வருபவராய், வாழ்ந்து வருபவர் நமிநந்தி அடிகள் என்பவராவர்.

விளக்கவுரை

இருமை உலகு - இம்மையும் அம்மையுமாகிய உலகு.

வாய்மை மறைநூல் சீலத்தால்
வளர்க்கும் செந்தீ எனத்தகுவார்
தூய்மைத் திருநீற் றடைவேமெய்ப்
பொருளென் றறியுந் துணிவினார்
சாம கண்டர் செய்யகழல்
வழிபட் டொழுகும் தன்மைநிலை
யாம இரவும் பகலும்உணர்
வொழியா இன்பம் எய்தினார். **#1869**

வாய்மை பொருந்திய மறை நூல்களிலும், அவற்றின் வழிவந்த நூல்களிலும் கூறப்பெற்றிருக்கும் ஒழுக்கத்தால் வளர்க்கப் படும் `செந்தீயாவார்` இவர் எனக் கூறப்படும் தகுதி உடையவர். தூய திருநீற்றின் சார்பே மெய்ப்பொருளாவது எனத் துணிந்து, அந்நெறியை மேற்கொண்டொழுகும் அறிவுடையவர். சாம வேதத்தை அருளியவரான சிவபெருமானின் சிவந்த திருவடி களையே வழிபட்டு ஒழுகும் தன்மையை, இரவிலும் பகலிலும் உணர்ச்சியில் கொள்வதால் வரும் இடைவிடாத இன்பத்தைப் பெற்றிருப்பவர்.

விளக்கவுரை

வேள்வித்தீயை இடைவிடாது வளர்த்து வருதலின் அவரை அத்தீயேயாவர் எனக் குறித்தார் ஆசிரியர்.

அவ்வூர் நின்றும் திருவாரூர்
அதனை அடைவார் அடியார்மேல்
வெவ்வூ றகற்றும் பெருமான்தன்
விரைசூழ் மலர்த்தாள் பணிவுறுவ
தெவ்வூ தியமும் எனக்கொள்ளும்
எண்ணம் உடையார் பலநாளும்
தெவ்வூர் எரித்த வரைச்சிலையார்
திருப்பா தங்கள் வணங்கினார். **#1870**

அவ் ஏமப்பேறூரினின்றும் திருவாரூரை அடைந்து, அங்கு

எழுந்தருளியிருக்கும், பகைவரின் முப்புரங்களையும் எரித்த மேருமலையான வில்லை ஏந்திய சிவபெருமானின் திருவடிகளை நாடொறும் வணங்கிவரும் பேறுடைய அவர், அடியவர் மேல் வரும் கொடிய தீமைகளைப் போக்கி அருளும் அப்பெருமானின் மணம் கமழும் மலர் போன்ற திருவடிகளைப் பணிவதே, உயிர் பெறுதற்குரிய எல்லா வகையான ஊதியமும் ஆகும் எனக் கொள்ளும் எண்ணம் உடையவர்.

விளக்கவுரை

வரதர் பொற்றாள் தொழ வந்த உடம்பின் பிறவியே தான் அடைந்த உறுதியைச் சாருமால் *(தி.12 பாயிரம் பா.2)* என்ப தால், உயிர்பெறும் ஊதியம் இறைவனை இடைவிடாது வணங்கி வருவதேயாம்.

செம்பொற் புற்றின் மாணிக்கச்
செழுஞ்சோ தியைநேர் தொழுஞ்சீலம்
தம்பற் றாக நினைந்தணைந்து
தாழ்ந்து பணிந்து வாழ்ந்துபோந்
தம்பொற் புரிசைத் திருமுன்றில்
அணைவார் பாங்கோர் அரனெறியின்
நம்பர்க் கிடமாங் கோயிலினுள்
புக்கு வணங்க நண்ணினார். **#1871**

சிவந்த பொன் போன்ற புற்றில் வீற்றிருக்கும் மாணிக்க ஒளியைப் போன்ற இறைவரை நேரில் கண்டு வழிபடும் நல் ஒழுக்கமே தமக்கு உறுதியாவது என்று எண்ணிச் சார்ந்து, நிலம் பொருந்த விழுந்து வணங்கி, அதனால் வாழ்வின் பயனை அடைந்து, வெளியே வந்து, பொன்மதில் சூழ்ந்த திருமுற்றத்தில் சிவபெரு மானுக்கு இடமான அரனெறி என்னும் திருக்கோயிலுள் புகுந்து வணங்குதற்குச் சென்றார்.

விளக்கவுரை

திருவாரூர்த் திருக்கோயிலின் முற்றத்தில் உள்ள `அரனெறி` என்பது தனிக் கோயிலாகும். திருவாரூர்க் கோயிலின் வேறாக வைத்துப் போற்றப் பெறுவது.

நண்ணி இறைஞ்சி அன்பினால்
நயப்புற் றெழுந்த காதலுடன்
அண்ண லாரைப் பணிந்தெழுவார்
அடுத்த நிலைமைக் குறிப்பினால்
பண்ணுந் தொண்டின் பாங்குபல
பயின்று பரவி விரவுவார்
எண்ணில் தீபம் ஏற்றுவதற்
கெடுத்த கருத்தின் இசைந்தெழுவார். **#1872**

சென்று வணங்கி, அன்பு மீதூர்ந்த பத்திமையுடன் பெருமையுடைய இறைவரைத் தாழ்ந்து எழுவார், அடுத்து நிகழ இருக்கும் விளைவின் அறிகுறியாக மனத்தில் எழுந்த குறிப்பால் தாம் செய்து வரும் திருத்தொண்டின் பாங்கு பலவும் செய்து போற்றி அங்குத் தங்குவாராய், எண்ணற்ற விளக்குகளை ஏற்றவேண்டும் என மனத்துள் ஏற்பட்ட கருத்திற்கு இயைய அதைச் செய்ய முற்படு வாராய்.

விளக்கவுரை

****

எழுந்த பொழுது பகற்பொழுதங்
கிறங்கு மாலை எய்துதலும்
செழுந்தண் பதியி னிடையப்பாற்
செல்லிற் செல்லும் பொழுதென்ன
ஒழிந்தங் கணைந்தோர் மனையில்விளக்
குறுநெய் வேண்டி உள்புகலும்
அழிந்த நிலைமை அமணர்மனை
ஆயிற் றங்கண் அவருரைப்பார். **#1873**

அவ்வாறு துணிந்து எழுந்த பொழுது, மாலைப் பொழுதாக அமைதலும், செழுமைமிக்க அத்திருவாரூருக்கு அப்பால் உள்ள தம் ஏமப்பேறூருக்குச் சென்றுவரின், பொழுது சென்றுவிடும் எனக் கருதி அந்நினைவை விடுத்துத் திருவாரூரிலேயேயிருந்து விளக்கிற்கு நெய் பெறுதலை வேண்டி, ஓர் இல்லத்துள் புகவும், அது மெய்யுணர்வற்ற சமணரின் இல்லமாய் இருக்க, அவரிடத்து வேண்ட அவரும் கூறுவாராய்.

விளக்கவுரை

பதியினிடை அப்பாற் செல்லின் - திருவாரூருக்கு அப்பாலுள்ள தம் ஏமப்பேறூருக்குச் செல்லின். ஒழிந்து - அங்குச் செல்லுதலை விடுத்து.

கையில் விளங்கு கனலுடையார்
தமக்கு விளக்கு மிகைகாணும்
நெய்யிங் கில்லை விளக்கெரிப்பீ
ராகில் நீரை முகந்தெரித்தல்
செய்யும் என்று திருத்தொண்டர்க்
குரைத்தார் தெளியா தொருபொருளே
பொய்யும் மெய்யு மாம்என்னும்
பொருள்மேல் கொள்ளும் புரைநெறியார். **#1874**

`தெளிவின்றி ஒரு பொருளே பொய்யும் மெய்யுமாகும்` என்ற கொள்கையுடன் குற்றமுடைய நெறியைப் பேணிவரும் அச்சமணரும், `கையில் விளங்கும் தீயை ஏந்திய சிவபெருமானுக்கு விளக்கு

மிகையாகும், விளக்குக்கு நெய் இங்கு இல்லை! நீவிர் விளக்கு எரிப்பீரானால் நீரை முகந்து எரிப்பீராக!` என்று திருத்தொண்டருக்குக் கூறினார்.

விளக்கவுரை

கடவுளாகிய ஒரு பொருளே உண்டு; இல்லையுமாம் என்பது அமணர் கொள்கை. இதனை அஸ்தி நாஸ்தி என்னும் தொடரால் கூறுவர். இறைவர் தம் திருக்கையில் நெருப்பைக் கொண்டிருப்பது உயிர்கட்குற்ற வினைகளைப் படிப்படியாகப் போக்கவும் அதனால் முழுமையாக வினைநீக்கம் பெறச் செய்து தம் திருவடிகளில் திளைக்கச் செய்தலுமாகிய அருட்கருணையினாலே யாம். இவ்வாறாய கருத்தை உணராத அச்சமணர்கள், இறைவர் அந்நெருப்பைத் தமக்கெனக் கொண்டதாகக் கருதியது அவர்தம் பேதைமையாலாம். `வல்வினையைச் சுட்டு` *(உண்மை விள.,37)* என்றும், `சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்`*(உண்மை விள., 36)*என்றும் கூறும் மெய்ந்நூற் கூற்றுக்களைக் காண்க. அன்றியும் இறைவன் ஒளிவளர் விளக்காக விளங்குபவன். அருநிலைய திங்களா கவும் ஞாயிறாகவும் விளங்குபவன். ஆதலின் அப்பெருமானுக்குத் தன் பொருட்டாக விளக்கோ பிறவோ எவையும் வேண்டுவனவல்ல. உயிர்களாகிய நாம் உய்யவும் விளக்கம் பெறவுமே விளக்கிடுதல் போன்றவற்றைச் செய்கின்றோம். இவையெல்லாம் அச்சமணர்கள் அறியப்போமோ*?* இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

அருகர் மதியா துரைத்தவுரை
ஆற்றா ராகி அப்பொழுதே
பெருக மனத்தில் வருத்தமுடன்
பெயர்ந்து போந்து பிறையணிந்த
முருகு விரியும் மலர்க்கொன்றை
முடியார் கோயில் முன்எய்தி
உருகும் அன்பர் பணிந்துவிழ
ஒருவாக் கெழுந்த துயர்விசும்பில். **#1875**

மேற்கூறியவாறு சமணர் மதியாமல் சொன்ன சொல்லைக் கேட்டுப் பொறுத்துக் கொள்ள இயலாதவராகி, அது பொழுதே மனத்தில் பொருந்தும் வருத்தத்துடன் அங்கிருந்து நீங்கிச் சென்று, பிறையைச் சூடியும் மணம் வீசும் கொன்றை மலரை அணிந்தும் விளங்கும் சடையையுடைய சிவபெருமானின் திருக்கோயில் முன்பு சேர்ந்து, உள்ளம் உருகிய நிலையில் நமிநந்தியடிகள் பணிந்து வீழ்ந்தார். அவ்வமையத்தில் வானத்தினின்றும் ஒரு திருவாக்கு எழுந்தது.

விளக்கவுரை

முருகு - நறுமணம்.

வந்த கவலை மாற்றும்இனி
மாறா விளக்குப் பணிமாற
இந்த மருங்கில் குளத்துநீர்
முகந்து கொடுவந் தேற்றுமென
அந்தி மதியம் அணிந்தபிரான்
அருளால் எழுந்த மொழிகேளாச்
சிந்தை மகிழ்ந்து நமிநந்தி
அடிகள் செய்வ தறிந்திலரால். **#1876**

`உமக்கு உண்டான கவலையை மாற்றிக் கொள்ளும்; இனி இடையீடின்றித் திருவிளக்குப் பணியைச் செய்வ தற்கு அருகில் உள்ள இக்குளத்தின் நீரை முகந்து கொணர்ந்து விளக்கை ஏற்றும்` என்று, மாலையில் தோன்றும் பிறைச் சந்திரனை அணிந்த சிவபெருமானின் அருளால் எழுந்த அத்திரு வார்த்தையைக் கேட்டு, நமிநந்தியடிகள் மனம் மகிழ்ந்து செய்வது அறியாமல் நின்றார்.

விளக்கவுரை

மாறா விளக்கு - இடையீடின்றி எரியும் விளக்கு. பணிமாற - பணி செய்தற்கு.

சென்னி மிசைநீர் தரித்தபிரான்
அருளே சிந்தை செய்தெழுவார்
நன்னீர்ப் பொய்கை நடுப்புக்கு
நாதர் நாமம் நவின்றேத்தி
அந்நீர் முகந்து கொண்டேறி
அப்பர் கோயில் அடைந்தகலுள்
முந்நீர் உலகம் அதிசயிப்ப
முறுக்குந் திரிமேல் நீர்வார்த்தார். **#1877**

தலையில் கங்கையை அணிந்த சிவபெருமானின் பேரருளை எண்ணியவாறு எழுவாராகி, நல்ல நீரை உடைய அக் குளத்தின் நடுவிற் சென்று, இறைவரின் திருப்பெயரான திருவைந் தெழுத்தைக் கூறிப் போற்றிய வண்ணம் நீரை முகந்து எடுத்துக் கொண்டு, மேல் ஏறி, இறைவன் எழுந்தருளியிருக்கும் அரன்நெறிக் கோயிலை அடைந்து, கடல் சூழ்ந்தவுலகத்து வாழ்வார் யாவரும் வியந்து காணும்படி, அகலுள் முறுக்கி இடப்பட்ட திரியின்மீது அந் நீரை வார்த்தார்.

விளக்கவுரை

நாமம் - திருவைந்தெழுத்து; `திருநாமம் ஐந்தெழுத் தும்` *(தி.6 ப.95 பா.6)* `நாதன் நாமம் நமச்சிவாயவே!` *(தி.3 ப.49 பா.1)* என்னும்

திருவாக்குகளை நினைவு கூர்க.

சோதி விளக்கொன் றேற்றுதலும்
சுடர்விட் டெழுந்த ததுநோக்கி
ஆதி முதல்வர் அரனெறியார்
கோயில் அடைய விளக்கேற்றி
ஏதம் நினைந்த அருகந்தர்
எதிரே முதிருங் களிப்பினுடன்
நாதர் அருளால் திருவிளக்கு
நீரால் எரித்தார் நாடறிய. **#1878**

நீர்வார்த்த அவ்வகல் விளக்கு ஒன்றில் தீயை ஏற்றலும், அது சுடர் விட்டு மேலோங்க எழுந்து எரிந்தது. அதைக்கண்டதும் ஆதி முதல்வரான அரனெறியப்பரின் திருக் கோயில் முழுவதும், அடாத மொழிகளைக் கூறிய சமணர்களின் எதிரில், மேலோங்கிய மகிழ்ச்சியுடன் எங்கும் நீர்வார்த்துத் திருவிளக் குகளை ஏற்றுவித்து, இறைவரின் திருவருளால் நாடு முழுவதும் அறியுமாறு அவ்வாறாய திருவிளக்கிடும் பணியைச் செய்து வந்தார்.

விளக்கவுரை

அடைய - முழுதுமாக. அத்திருக்கோயில் எங்கும்.

நிறையும் பரிசு திருவிளக்கு
விடியும் அளவும் நின்றெரியக்
குறையுந் தகளி களுக்கெல்லாம்
கொள்ள வேண்டும் நீர்வார்த்து
மறையின் பொருளை அர்ச்சிக்கும்
மனையின் நியதி வழுவாமல்
உறையும் பதியின் அவ்விரவே
அணைவார் பணிவுற் றொருப்பட்டார். **#1879**

விடியுமளவும் திருவிளக்குகள் அணையாமல் நின்று எரியும் பொருட்டு, எரியும் விளக்குகளில் நீர் குறையும் பொழுதெல்லாம் அந்நீர் நிறையும்தன்மையினால் நன்கு எரியும் அளவுக்கு ஏற்றவாறு கொள்ளத் தக்க நீரை வார்த்து, மறையின் பொருளாக விளங்கும் சிவபெருமானைத் தம் இல்லத்தில் எழுந்தரு ளச் செய்துவழிபாடாற்றி வரும் நியதி தவறாமல் தாம் வாழும் ஏமப்பேறூர் என்னும் ஊருக்குச் சென்று, இறைவரைத் தொழுது அன்றிரவே புறப்பட்டார்.

விளக்கவுரை

தகளி - அகல்; நமிநந்தி அடிகள் திருக்கோயிலில் விளக்கிடும் பணியைச் செய்து வருவதோடு, தம் இல்லத்திற்குச் சென்று நாளும்

சிவவழிபாட்டையும் தவறாது செய்துவரும் கடப்பா டுடையவர் என்பது இதனால் விளங்கும்.

இரவு சென்று தம்பதியில்
எய்தி மனைபுக் கென்றும்போல்
விரவி நியமத் தொழில்முறையே
விமலர் தம்மை அருச்சித்துப்
பரவி அமுது செய்தருளிப்
பள்ளி கொண்டு புலர்காலை
அரவம் அணிவார் பூசையமைத்
தாரூர் நகரின் மீண்டணைந்தார். **#1880**

அன்றிரவே தம்நகருக்குச் சென்று மனையுள் புகுந்து நாள்தோறும் தாம் ஆற்றிவரும் சிவவழிபாட்டை முறையாகச் செய்து, இறைவரை வழிபட்டுப் போற்றிப், பின்பு திருவமுது செய்தருளிப் பள்ளிகொண்டு, விடியலில் எழுந்து, பாம்பை அணிந்த இறைவரின் வழிபாட்டை முறையாக முடித்துக் கொண்டு, திருவாரூர்த் திருநகரத்தை மீண்டும் வந்து அடைந்தார்.

விளக்கவுரை

****

வந்து வணங்கி அரனெறியார்
மகிழுங் கோயில் வலங்கொண்டு
சிந்தை மகிழப் பணிந்தெழுந்து
புறம்பும் உள்ளுந் திருப்பணிகள்
முந்த முயன்று பகலெல்லாம்
முறையே செய்து மறையவனார்
அந்தி அமையத் தரியவிளக்
கெங்கும் ஏற்றி அடிபணிவார். **#1881**

வந்து அரனெறியப்பர் பெரிதும் மகிழ்ந்து வீற்றி ருக்கும் கோயிலை வலமாக வந்து, மனமகிழ்ச்சியுடன் கீழே விழுந்து வணங்கிப் பணிந்து எழுந்து, கோயிலின் உள்ளும் புறமுமாகச் செய் யக் கூடிய பல பணிகளையும் முன்னதாக அந்நாளின் பகற் காலத்தில் முழுமையாகவும் முறையாகவும் பொருந்தச் செய்து முடித்து, அந்தணரான நமிநந்தியடிகள் மாலைக்காலம் வர, அது பொழுது அரிய திருவிளக்குகளை ஏற்றித் திருவடிகளைப் பணிவாரானார்.

விளக்கவுரை

****

பண்டு போலப் பலநாளும்

பயிலும் பணிசெய் தவர்ஒழுகத்
தண்டி அடிக ளால்அமணர்
கலக்கம் விளைந்து சார்வில்அமண்
குண்டர் அழிய ஏழுலகும்
குலவும் பெருமை நிலவியதால்
அண்டர் பெருமான் தொண்டர்கழல்
அமரர் பணியும் அணியாரூர். **#1882**

முன்பு போலவே பல நாள்களிலும் பொருந்தும் பணிகள் பலவும் செய்து இவர் ஒழுகி வர, தண்டி அடிகளால் சமணர் களுக்குக் கலக்கம் நேர்ந்ததால், நற்சார்பு இல்லாத சமணர்களான கீழ்மக்கள் அழிந்தொழிந்தனர். தேவர்க்கும் தலைவரான இறைவனின் திருவடிகளை நாளும் தேவர்கள் போற்றுதற்கு இடமான திருவாரூரில், ஏழ் உலகங்களும் போற்றும் பெருமை விளங்கியது.

விளக்கவுரை

சமணர்கள், தண்டி அடிகளால் அழிந்தமை அவர் வரலாற்றான் அறியத்தக்கது. அவர் வரலாற்றை இயைத்துக் கூறுவதால் இவர்களிருவரும் ஒருகாலத்தவர் என உணரமுடிகின்றது.

நாத மறைதேர் நமிநந்தி
அடிக ளார்நற் றொண்டாகப்
பூத நாதர் புற்றிடங்கொள்
புனிதர்க் கமுது படிமுதலாம்
நீதி வளவன் தான்வேண்டும்
நிபந்தம் பலவும் அரியணையின்
மீது திகழ இருந்தமைத்தான்
வேதா கமநூல் விதிவிளங்க. **#1883**

ஒலி வளம் சான்ற நான்மறைகளையும் கற்றுத் தெளிந்த நமிநந்தியடிகளின் நல்ல தொண்டின் பயனாக, உயிர்களின் தலைவரான புனித இறைவற்கு, நாள்தோறும் திருவமுதுபடி முதலாக வேண்டியபடியே அறக்கட்டளைகள் பலவற்றையும், நான்மறைகளிலும் ஆகமங்களிலும் விதித்தவாறே விளங்கும்படி, அறவழி ஒழுகும் சோழன் தன் அரியணையில் வீற்றிருந்து அமைத்தான்.

விளக்கவுரை

நமிநந்தியடிகள் செய்துவந்த தொண்டின் பயனாகத் திருவருள் விளக்கம் கண்ட சோழ அரசனும் திருவாரூர்ப் பெருமா னுக்கு நாள் வழிபாடு நிகழப் பல அறக்கட்டளைகளை நிறுவினன். இவ்வரசன் பெயர் தெரிந்திலது.

வென்றி விடையார் மதிச்சடையார்
வீதி விடங்கப் பெருமாள்தாம்
என்றுந் திருவா ரூர்ஆளும்
இயல்பின் முறைமைத் திருவிளையாட்
டொன்றுஞ் செயலும் பங்குனிஉத்
திரமாந் திருநாள் உயர்சிறப்பும்
நின்று விண்ணப் பஞ்செய்த
படிசெய் தருளும் நிலைபெற்றார். **#1884**

வெற்றி பொருந்திய ஆனேற்றை உடையவரும் பிறைச் சந்திரனை அணிந்த சடையை உடையவரும் ஆன வீதிவிடங் கப் பெருமான் என்றும் திருவாரூரினை ஆட்சி செய்யும் இயல்பில், நெறி திறம்பாது அருளிய திருவிளையாடற் செயல்களையும், பங்குனி உத்தரத் திருநாளில் நிகழும் உயர்ந்த திருவிழாவையும், நிலைபெற விழாக் கொண்டருள வேண்டும் என்று இறைவனிடம் விண்ணப் பித்துக் கொள்ள, பெருமானும் திருவுளம் கொண்ட நிலையில் அவ்வாறே விழாக் கொண்டருளும் நிலைமையையும் நமிநந்தியடிகள் பெற்றார்.

விளக்கவுரை

ஆரூர்ப்பெருமான் அருளிய விளையாடல்களைத் தியாகராச லீலை என்பர். இவ்விளையாடல்களைத் திருக்கோயிலில் நிகழ்த்திக் காட்டவும் பங்குனி உத்தரப் பெருவிழா ஆண்டு தோறும் நிகழவும் திருவுள்ளம் கொள்ளுமாறு இறைவனிடம் நாயனார் விண் ணப்பித்துக் கொள்ள இறைவனும் ஏற்றார். இதற்கேற்ப அரசனும் நிபந்தம் அளித்தனன் எனத் தெரிகிறது. எனவே முன்பாடலில் கூறியவாறு நாள் (நித்தியம்) வழிபாட்டிற்கும், இப்பாடலிற் கூறியவாறு சிறப்பு (நைமித்தியம்) வழிபாட்டிற்கும் சோழ அரசன் நிபந்தம் அளித்தமை விளங்கும்.

இன்ன பரிசு திருப்பணிகள்
பலவுஞ் செய்தே ஏழுலகும்
மன்னும் பெருமைத் திருவாரூர்
மன்னர் அடியார் வழிநிற்பார்
அன்ன வண்ணந் திருவிளையாட்
டாடி அருள எந்நாளும்
நன்மை பெருக நமிநந்தி
அடிகள் தொழுதார் நாம்உய்ய. **#1885**

இவ்வாறு நமிநந்தியடிகள் பற்பல பணிகளையும் செய்து ஒழுகிவர, ஏழுலகங்களிலும் நிறையும் பெருமையுடைய திருவாரூர்ச் செல்வத் தியாகேசர், அடியவர்களின் அன்பின் வழியே நிற்பவராதலின், அப்பெருமானும் அடிகள் தம்மிடம் விண்ணப்பித்துக் கொண்ட

வண்ணமே திருவிளையாடல்களைக் கொண்டருள, அடிக ளும்
எந்நாளும் எல்லா நன்மைகளும் பெருக அவரை வணங்கி வந்தார்.

விளக்கவுரை

திருவிளையாட்டாடி வருதல் - இறைவன் செய்த திருவிளையாடல்களை விழாவாகக் கொண்டாடி வருதல். இதனை ஐதிகத் திருவிழா என்பர்.

தேவர் பெருமான் எழுச்சிதிரு
மணலிக் கொருநாள் எழுந்தருள
யாவ ரென்னா துடன்சேவித்
தெல்லாக் குலத்தில் உள்ளோரும்
மேவ அன்பர் தாமுமுடன்
சேவித் தணைந்து விண்ணவர்தம்
காவ லாளர் ஓலக்கம்
அங்கே கண்டு களிப்புற்றார். **#1886**

தேவரின் தலைவரான தியாகேசப் பெருமான் எழுச்சியாய் ஒருநாள்
திருமணலிக்கு எழுந்தருள, இவர் இன்னவர் என்று கண்டறிய
இயலாதவாறு எல்லாக் குலத்தில் உள்ளவர்களும் ஒருங்கு கலந்து
அவ்விழாவில் உடன்வர, நமிநந்தி அடிகள் அவர்க ளுடன் சென்று
வணங்கி, தேவர்களின் காவலரான தியாகேசரின் திருக்கோலத்தை
அங்கே கண்டு மகிழ்வு எய்தினார்.

விளக்கவுரை

திருவாரூர்க்கும் ஏமப்பேறூர்க்கும் அணித்தாக உள்ள ஊர் மணலியாகும். ஆண்டுக்கு ஒருமுறை தியாகேசர் அங்கு எழுந் தருளும் வழக்கம் முன் இருந்தது. காலப் போக்கில் அது நின்று விட்டது. மீண்டும் தொடரத் திருவருள் கூட்டுவதாக.

பொழுது வைகச் சேவித்துப்
புனிதர் மீண்டுங் கோயில்புகத்
தொழுது தம்மூர் மருங்கணைந்து
தூய மனையுள் புகுதாதே
இழுதும் இருள்சேர் இரவுபுறங்
கடையில் துயில இல்லத்து
முழுதுந் தருமம் புரிமனையார்
வந்துள் புகுத மொழிகின்றார். **#1887**

பகல் பொழுதெல்லாம் வணங்கி மகிழ்ந்த வண்ணம் இருந்த நமிநந்தி
அடிகள், இறைவன் மீளத் தம் கோயிலுக்கு எழுந்தருளவும் அவரைத்
தொழுது தம் பதியினை அடைந்து, தூய தம் திருமனைக்குள் புகாமல்
மைக்குழம்பெனச் செறிந்த இருள் மிக்க இரவில் இல்லத்தின் வெளியே

உறங்கினார். அதுபொழுது இல்லறக் கடன்களை முழுமையாகச் செய்துவரும் மனைவியார் வந்து தம் தலைவரை உள்ளே வருமாறு கூற.

விளக்கவுரை

இழுது - மைக்குழம்பு. `கருகுமையிருளின் கணம் கட்டு விட்டு உருகுகின்றது போன்றது` *(தி.12 பு.4 பா.15),*
`வண்ணம் நீடிய மைக்குழம் பாமென்று நண்ணல் செய்யா நடுஇருள்`*(தி.12 பு.4 பா.16)* எனவரும் ஆசிரியர் திருவாக்குகளை யும் காண்க.

திங்கள் முடியார் பூசனைகள்
முடித்துச் செய்யுங் கடன்முறையால்
அங்கி தனைவேட் டமுதுசெய்து
பள்ளி கொள்வீர் எனஅவர்க்குத்
தங்கள் பெருமான் திருமணலிக்
கெழுச்சி சேவித் துடன்நண்ண
எங்கும் எல்லா ரும்போத
இழிவு தொடக்கிற் றெனைஎன்று. **#1888**

`பிறைச் சந்திரனை அணிந்த திருச்சடையை யுடைய சிவபெருமானுக்கு ஆற்றிவரும் வழிபாடுகளை முடித்து, முறையாக ஆற்றிவரும் கடனான வேள்வியையும் செய்துபின் உறங்குவீராக` என்று கூறினார். இவ்வாறு உரைக்க, அவருக்கு, `தம் தலைவரான இறைவர் மணலிக்கு எழுந்தருளிய திருவிழாவிற்குச் சென்று வணங்கிய பொழுது எல்லாரும் கலந்து இருக்க நேர்ந்ததால் தூய்மை யிழந்துள்ளேன்` என்று கூறி.

விளக்கவுரை

இறைவனின் திருவிழாக்காணத் தூய்மை இல்லாத வரும், நெறி திறம்பியவரும், நோய் உற்றவரும் ஆகப் பலரும் வருதல் இயற்கை. அன்றியும் அக்கால நிலையில் சில சமூகத்தவரை வேறு சில சமூகத்தவர் தீண்டல், தூய்மைக்கு இழுக்கு என்னும் மரபும் இருந்து வந்தது. ஆதலின் அத்தகையோருடன் இவரும் கலந்துவர நேர்ந்தால் தூய்மை இழந்த நிலையில் மனையுட் புகுதல் இழுக்கு எனக் கருதினார்.

ஆத லாலே குளித்தடுத்த
தூய்மை செய்தே அகம்புகுந்து
வேத நாதர் பூசையினைத்
தொடங்க வேண்டும் அதற்குநீ
சீத நன்னீர் முதலான
கொண்டிங் கணைவாய் எனச்செப்பக்
காதல் மனையார் தாமும்அவை

கொணரும் அதற்குக் கடிதணைந்தார். **#1889**

`ஆதலால் நீராடிப் புறத்தூய்மை செய்த பின்னரே இல்லத்திற்குள் வந்து வழிபாடு செய்ய வேண்டும், எனவே அதற்கு நீ குளிர்ந்த நீர் முதலியவற்றைக் கொணர்வாயாக!` எனக்கூறினார். அவருடைய மனைவியாரும் அவற்றைக் கொண்டு வருதற்கு விரைவாகச் சென்றார்.

விளக்கவுரை

புறந்தூய்மை நீரானும் அகந்தூய்மை அதற்குரிய இறைவழிபாட்டானும் அமையும். இவ்விரண்டிலும் தூயராய் நின்ற வர் அடிகள். ஆதலால் இங்ஙனம் கூறினார். குளிர்ந்த நீரில் குளித்தலே உடற்கும் உள்ளத்திற்கும் ஏற்றதாகும். ஆதலின் `சீத நன்னீர்` என்றார். `சீதப்புனலாடிச் சிற்றம்பலம் பாடி`*(தி.8 ப.7 பா.14)* எனவரும் திருமுறையும் காண்க. நன்னீர் முதலான என்றார். உலர்ந்த ஆடை, திருநீறு, கண்டிகை முதலியனவும் அடங்க. இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபுடையன.

ஆய பொழுது தம்பெருமான்
அருளா லேயோ மேனியினில்
ஏயும் அசைவின் அயர்வாலோ
அறியோம் இறையும் தாழாதே
மேய உறக்கம் வந்தணைய
விண்ணோர் பெருமான் கழல்நினைந்து
தூய அன்பர் துயில்கொண்டார்
துயிலும் பொழுது கனவின்கண். **#1890**

அவ்வமையத்தில் தம் பெருமானின் திருவரு ளாலோ, அல்லது அவரது உடலில் வழிநடந்து வந்த களைப்பாலோ, இன்ன காரணத்தால் என்று அறியோம்! அச்சிறு பொழுதிலேயே உடன் உறக்கம் வந்து எய்த, தேவர் பெருமானாய சிவபெருமானின் திருவடிகளை நினைந்த வண்ணம் நமிநந்தி அடிகள் உறக்கம் கொண்டார். அங்ஙனம் உறங்கிய அமையத்து அவரது கனவில்,

விளக்கவுரை

அடிகள் கூறியவாறு அம்மையார் குளிர்ந்த நீரும் பிறவும் உடன் கொண்டுவரச் சென்றுள்ளார். அதற்கென அவர் எடுத்துக் கொள்ளும் காலம் மிகச் சிறிதெனினும், அதற்குள் அடிய வருக்கு உறக்கம் வந்தது வியப்பாக இருந்தமையின், இது திருவருள் நிகழ்ச்சியாம் என்றார் முன்னம்: பின்னர் உடல் அயர்வோ என்றார், உலகியலுணர்வை உளங்கொண்ட நிலையில்.

மேன்மை விளங்குந் திருவாரூர்

வீதி விடங்கப் பெருமாள்தாம்
மான அன்பர் பூசனைக்கு
வருவார் போல வந்தருளி
ஞான மறையோய் ஆரூரில்
பிறந்தார் எல்லாம் நங்கணங்கள்
ஆன பரிசு காண்பாய்என்
றருளிச் செய்தங் கெதிர்அகன்றார். **#1891**

மேதகவமைந்த திருவாரூரின்கண் எழுந்தருளி இருக்கும் வீதிவிடங்கப் பெருமானார் தாமே, பெருமை பொருந்திய நமிநந்தியடிகளின் வழிபாட்டை ஏற்பதற்கு வருபவர் போல் எழுந்தருளிவந்து `திருவாரூரில் பிறந்தவர்கள் எல்லாரும் ஞான மறையவராய் நம் சிவ கணங்களாம் தன்மையை நாம் காட்ட நீ காண் பாயாக!` என அருளிச் செய்து, அவர் எதிரே மறைந்தருளினார்.

விளக்கவுரை

நமிநந்தியடிகள் விழித்து எழுந்ததும் புறத்தூய்மை செய்து அகத் தூய்மையுடன் சிவவழிபாடாற்ற இருத்தலின் அவ் வழிபாட்டை ஏற்பதற்கு வருவார் போல் கனவில் இதுபொழுது வந்தார் என்றார். `திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்` *(தி.7 ப.39 பா.10)* எனத் தொகை நூல் கூறியதும் காண்க.

ஆதி தேவர் எழுந்தருள
உணர்ந்தார் இரவர்ச் சனைசெய்யா
தேதம் நினைந்தேன் எனஅஞ்சி
எழுந்த படியே வழிபட்டு
மாத ரார்க்கும் புகுந்தபடி
மொழிந்து விடியல் விரைவோடு
நாத னார்தந் திருவாரூர்
புகுத எதிர்அந் நகர்காண்பார். **#1892**

ஆதி தேவரான சிவபெருமான் மறைந்தருள, நமிநந்திஅடிகள் மெய்ம்மை உணர்ந்தவராகி உட்சென்று இரவில் செய்யத்தக்க பூசனையை உடன் செய்யாமல் பிழைபடக் காலம் தாழ்த்திச் செய்ய எண்ணினேன்! என்று அஞ்சி, வழிபாடாற்றி மனைவியாருக்கும் கனவில் நேர்ந்த செய்தியைத் தெரிவித்தார். விடியற்காலையில் விரைவுடன் இறைவர் எழுந்தருளி இருக்கும் திருவாரூக்குப் போதர, எதிரில் அப்பெருநகரைக் காண்பவரான அவர்.

விளக்கவுரை

****

தெய்வப் பெருமாள் திருவாரூர்ப்
பிறந்து வாழ்வார் எல்லாரும்
மைவைத் தனைய மணிகண்டர்
வடிவே யாகிப் பெருகொளியால்
மொய்வைத் தமர்ந்த மேனியராம்
பரிசு கண்டு முடிகுவித்த
கைவைத் தஞ்சி அவனிமிசை
விழுந்து பணிந்து களிசிறந்தார். **#1893**

தேவர்களின் தலைவராய தியாகேசரின் திருவாரூரில் பிறந்து வாழ்பவர் அனைவரும், கரிய திருக்கழுத்தை யுடைய சிவபெருமானின் திருவடிவை உடையராய்ப் பெருகும் ஒளி மிக்க திருமேனிகொண்டு இலங்கக் கண்டு, தலைமீது கூப்பிய கையின ராய், அஞ்சி, நிலத்தில் படிய விழுந்து வணங்கிப் பெருமகிழ்வு அடைந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபுடையன.

படிவம் மாற்றிப் பழம்படியே
நிகழ்வுங் கண்டு பரமர்பால்
அடியேன் பிழையைப் பொறுத்தருள
வேண்டும் என்று பணிந்தருளால்
குடியும் திருவா ரூரகத்துப்
புகுந்து வாழ்வார் குவலயத்து
நெடிது பெருகுந் திருத்தொண்டு
நிகழச் செய்து நிலவுவார். **#1894**

அந்நிலையில் இறைவர் காட்டிய திருக்கோலத்தை மறைக்க, அப்பெருமக்கள் முன் இருந்தபடியே இருப்பதையும் இயங்குவதையும் பார்த்து, இறைவரிடம் `அடியேன் பிழையைப் பொறுத்தருள வேண்டும்` என்று வேண்டி வணங்கித், திருவருளால் தம் திருப்பதியினின்றும் பெயர்ந்து திருவாரூரில் குடிபுகுந்து வாழ்வாராயினர். அங்குத் தங்கி, உலகத்தில் மேன்மேலும் வளர்தற் கான தொண்டுகள் பலவற்றையும் நிகழுமாறு செய்து வரலானார்.

விளக்கவுரை

****

நீறு புனைவார் அடியார்க்கு
நெடுநாள் நியதி யாகவே
வேறு வேறு வேண்டுவன
எல்லாஞ் செய்து மேவுதலால்

ஏறு சிறப்பின் மணிப்புற்றில்
இருந்தார் தொண்டர்க் காணியெனும்
பேறு திருநா வுக்கரசர்
விளம்பப் பெற்ற பெருமையினார். **#1895**

திருநீற்றினை அணிந்து விளங்குபவரான சிவபெருமானின் அடியவர்களுக்கு நீண்ட காலம் நியதியாக வேறு வேறாக வேண்டுவன பலவற்றையும் செய்து வந்தமையால், உயர்வாகிய சிறப்புடன் மணிப்புற்றை இடமாகக் கொண்டு வாழ்கின்ற இறைவரின் தொண்டர்க்கு ஆணிப் பொன்னாவார் இவர் என்று திருநாவுக்கரசுப் பெருமானின் பாராட்டும் பேற்றையும் பெற்ற பெருமையுடையராயினார்.

c

விளக்கவுரை

ஆராய்ந் தடித்தொண்ட ராணிப்பொ னாரூ
ரகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி யுத்திரம்
பாற்படுத்தான்
நாரூர் நறுமலர் நாத னடித்தொண்டன்
நமிநந்தி
நீராற் றிருவிளக் கிட்டமை நீணா
டறியுமன்றே. *(தி.4 ப.102 பா.2)*

என்பது நாவரசர் இவரைப்பற்றி அருளிய சொல் மாலையாகும். பொன்னை உரைத்துப் பார்த்து அதனை மதிப்பிடுங்கல் - `கட்டளைக் கல்' எனவருவதும் காண்க. அடிகள் நீரால் விளக்கெரித்தமைக்கு அகச்சான்றாய் அமைந்துள்ளது இப்பாடலாகும்.

இன்ன வகையால் திருப்பணிகள்
எல்லா உலகும் தொழச்செய்து
நன்மை பெருகும் நமிநந்தி
அடிகள் நயமார் திருவீதிச்
சென்னி மதியும் திருநதியும்
அலைய வருவார் திருவாரூர்
மன்னர் பாத நீழல்மிகும்
வளர்பொற் சோதி மன்னினார். **#1896**

இனைய பல நன்மைகளையெல்லாம் பெருகச் செய்து வந்த நமிநந்தியடிகள், எவ்வுலகும் தொழும்படியான திருப் பணிகள் பலவற்றையும் செய்து, சிவமணம் கமழும் திருவீதிகளை யுடைய திருவாரூரின் கண் எழுந்தருளியிருக்கும், தலையில் பிறையும் கங்கையும்

சூடும் இறைவரான தியாகேசப்பெருமானின் திருவடி +நிழலில் வளர்கின்ற அழகிய சோதியுள் நிலைபெறச் சேர்ந்தார்.

விளக்கவுரை

****

நாட்டார் அறிய முன்னாளில்
நன்னாள் உலந்த ஐம்படையின்
பூட்டார் மார்பிற் சிறியமறைப்
புதல்வன் தன்னைப் புக்கொளியூர்த்
தாள்தா மரைநீர் மடுவின்கண்
தனிமா முதலை வாய்நின்றும்
மீட்டார் கழல்கள் நினைவாரை
மீளா வழியின் மீட்பனவே. **#1897**

நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் நன்கு அறியு மாறு முன்னைய நாளில் சிறந்த ஐம்படைத்தாலியை அணிந்த மார்பையுடைய சிறிய மறையவர் மைந்தனைப், புக்கொளியூரில் தாளோடு கூடிய தாமரைகளையுடைய நீர் நிறைந்த பொய்கையில் பெரிய முதலை வாயினின்றும் நல்ல நாளில் மீட்டவரான சுந்தரமூர்த்தி நாயனாரின் திருவடிகளே தம்மை நினைவார்களை மீளாவழியினின் றும் மீட்பவையாம்!

விளக்கவுரை

ஆரூரரும் கழறிற்றறிவாரும் திருக்கண்டியூரிலிருந்து திருவையாற்றிற்குச் செல்ல நினைய, இடைப்பட்ட காவிரியின் பெருக்கு அதற்குத் தடையாக, ஐயாற்றுப் பெருமானை நோக்கிப் பாட அத்தடை நீங்கியது. இருவரும் ஐயாற்றுப் பெருமானை வழிபடும் பேறு பெற்றனர். இவ்வரலாற்றை வகைநூல் கூறி வணங்கிற்று. திருப்புக்கொளியூர் அவிநாசியில் முதலையுண்ட சிறுவனை மீட்ட வரலாற்றை நினைந்து விரிநூல் வணக்கம் கூறிற்று.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம்

வேதநெறி தழைத் தோங்க
மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம்ப ரைபொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித்
திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம். **#1898**

: இவ்வுலகில் நான்மறைகளின் நெறிகள் தழைத்து ஓங்கவும், அவற்றுள் மேலாய சைவத் துறைகள் நிலைபெற்று விளங் கவும், உலகுயிர்கள் வழிவழியாகத் தழைத்துச் செழித்து விளங்கவும், தூய திருவாய் மலர்ந்து அழுதவரான, குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த சீகாழிப் பதியில் தோன்றியருளிய திருஞானசம்பந்தரின் திருவடித் தாமரைகளைத் தலைமேற் கொண்டு போற்றி, அம்மலரடிகளின் துணையால் அப்பெருமான் செய்த திருத்தொண்டின் இயல்புகளை எடுத்துச் சொல்லுவோம்.

விளக்கவுரை

நான்மறைகள் என்பன அறம் முதலிய நாற்பொருள் களையும் பொதுப்படக் கூறுவன. சைவநெறி என்பது வீட்டு நெறியை அடைதற்குரிய புற *(சரியை)*, அக *(கிரியை)*, ஒன்றிய *(யோக)* வழிபாடுகளால் அடையத்தகும் ஞான நெறியைச் சிறப்பாக எடுத்துக் கூறுவது. ஆதலின் மறைகளைப் பொது என்றும், சைவ நெறியைச் சிறப்பு என்றும் கூறுவர். இனி, நான்மறைகள் உலகர்க்கும், சைவ நெறியை விளக்கிக் கூறும் ஆகமங்கள் அருள் பதிவுடையார்க்கும் *(சத்திநிபாதர்)* அருளப்பட்டன என்றும் கூறுவர். `வேதமொ டாகமம் மெய்யாம் இறைவன்நூல், ஓதும் பொதுவும் சிறப்பும்என் றுள்ளன' *(தி.10 பா.2362)* `வேதம் பசுஅதன்பால் மெய்யா கமம்' *(தனிப் பாடல்)* எனவரும் திருவாக்குகளும் காண்க.

மறைகள் இறைவனை இன்ன தன்மையன் என்றறியவொண் ணாதவன் என்றே கூற, சைவநெறி அப்பெருமானை இன்னதன்மை யன் என்றும், இவ்வகையில் அறிந்து உணர்தற்குரியவன் என்றும் கூறும் உயர்நெறியாக விளங்குவதென்றும் கூறுவர். அது பற்றியே `மிகுசைவத் துறை' என்றார். பூதம் - உயிர்க் கூட்டம்.

சென்னிவளர் மதியணிந்த
சிலம்பணிசே வடியார்தம்

மன்னியசை வத்துறையின்
வழிவந்த குடிவளவர்
பொன்னிவளந் தருநாடு
பொலிவெய்த நிலவியதால்
கன்னிமதில் மருங்குமுகில்
நெருங்குகழு மலமூதூர். #1899

வளருந் தன்மை வாய்ந்த பிறைச் சந்திரனைத் தலையிலும், சிலம்பைத் திருவடிகளிலும் சூடிய சிவபெருமானின் நிலைபெற்ற சைவத் துறையில், வழிவழியாய் வந்த குடியான சோழரின் காவிரியாறு வளம் செய்கின்ற நாடு பொலிவு பெறும்படி நிலை பெற்றுள்ள பதியே, அழியாத மதிலின் அருகே மேகங்கள் வந்து நெருங்கும் திருக்கழுமலம் என்னும் சீகாழிப் பதியாகும்.

விளக்கவுரை

கழுமலம் என்பது சீகாழியின் பன்னிரண்டு பெயர் களுள் ஒன்று.

அப்பதிதான் அந்தணர்தம்
கிடைகள்அரு மறைமுறையே
செப்பும்ஒலி வளர்பூகச்
செழுஞ்சோலை புறஞ்சூழ
ஒப்பில்நகர் ஓங்குதலால்
உகக்கடைநாள் அன்றியே
எப்பொழுதுங் கடல்மேலே
மிதப்பதென இசைந்துளதால். #1900

மறைகளை ஓதிவரும் சிறுவர்கள், அரிய மறை களை ஓதுகின்ற ஒலியுடன் வளர்கின்ற பாக்கு மரங்களின் செழுமை யான சோலைகள் புறத்தே சூழ, ஒப்பில்லாமல் ஓங்குதலால், அப் பதிதான், ஊழிக்காலத்தில் மிதப்பது மட்டுமன்றி எக்காலத்துமே கடலில் மிதப்பதாகும் என்ற தோற்றத்தைப் பொருந்தியுள்ளதாகும்.

விளக்கவுரை

சூழ்ந்துள்ள சோலைகளின் நிறத்தாலும், மறைகளின் முழக்காலும், கடலை ஒத்தலின், காழிப்பதி கடலில் மிதப்பது போல்வ தாயிற்று.

அரிஅயனே முதல்அமரர்
அடங்களழும் வெள்ளங்கள்
விரிசுடர்மா மணிப்பதணம்
மீதெறிந்த திரைவரைகள்
புரிசைமுதல் புறஞ்சூழ்வ
பொங்கோதம் கடைநாளில்

விரிஅரவ மந்தரஞ்சூழ்
வடம்போல வயங்குமால். #1901
திருமாலும், நான்முகனும் முதலிய தேவர்கள் அடங்குமாறு மேலே எழும் பல நீர்ப் பெருக்குகள், விரிந்த கதிர்களை யுடைய பெரிய மணிகள் அழுந்திய மேடைகளின் மீது வீசும் அலைகளால் உண்டான கீற்றுகள், புறமதிலின் மருங்கினில் நிரல்பட அமைந்திருப்பவை, பொங்கும் பாற்கடலைக் கடைந்த காலத்தில் மந்தர மலையை வரிவரியாகச் சுற்றிய வாசுகி என்ற பாம்பின் வடத்தைப் போல விளங்கும்.

விளக்கவுரை

காழி நகரிலுள்ள மதில்மேடைகள் மந்தர மலையை யும், அவற்றில் படிந்து நிற்கும் நீர்ப்பெருக்காலாய கீற்றுக்கள் அம் மலையைச் சுற்றிய பாம்பினையும் போன்றன. பதணம் - மதிலின் மேலிடமான மேடைகள்.

வளம்பயிலும் புறம்பணைப்பால்
வாசப்பா சடைமிடைந்த
தளம்பொலியும் புனற்செந்தா
மரைச்செவ்வித் தடமலரால்
களம்பயில்நீர்க் கடன்மலர்வ
தொருபரிதி யெனக்கருதி
இளம்பரிதி பலமலர்ந்தாற்
போல்பஉள இலஞ்சிபல. #1902
: கரிய நீர் நிறைந்த கடலில் மலர்கின்ற ஒரு கதிரவன் என எண்ணி, வளம் மிக்க மணம் கொண்ட மருத நிலத்தின் புறத்தே, மணம் கமழும் பசிய இலைகளிடையே, நெருங்கிய இதழ்களுடன் விளங்கும் நீர்ப் பூவான செந்தாமரை மலர்கள் மலர்ந்ததால், இள ஞாயிறு பல தோன்றினாற் போன்ற தோற்றம் கொண்டனவான பல நல்ல நீர்நிலைகள் அங்கு எங்கும் விளங்கின.

விளக்கவுரை

புறம்பணை - மருத நிலத்தில் வெளிப்பக்கம். தளம் - இதழ். இலஞ்சி - பொய்கை. இலஞ்சி கடல் எனவும், செந்தாமரை பரிதி எனவும் விளங்குகின்றன.

உளங்கொள்மறை வேதியர்தம்
ஓமதூ மத்திரவும்
கிளர்ந்ததிரு நீற்றொளியில்
கெழுமியநண் பகலுமலர்ந்
தளந்தறியாப் பல்லூழி
யாற்றுதலால் அகலிடத்து

விளங்கியஅம் மூதூர்க்கு
வேறிரவும் பகலும்மிகை. #1903

: மனத்தில் கொண்ட மறை ஒழுக்கத்தை உடைய மறையவர் செய்யும் ஓமப் புகைகளின் படலங்களால் இரவும், கிளர்ச்சி பெற்ற திருநீற்றின் ஒளியால் பொருந்திய நண்பகலுமாய் எக்காலத்தும் மிக்கு விளங்கி, எல்லை அளந்தறியப்படாத பல ஊழிகளிலும் நிலைபெற்றிருப்பதால், அகன்ற உலகில் பெருமை பொருந்த விளங்கிவரும் அப்பழம்பதிக்கு, வேறு இரவும் பகலும் வேண்டப்படாத மிகையாகும்.

விளக்கவுரை

இரவும் பகலுமாய காலநிலை உலகியல் வழிப்பட்டது. மாயையின் விளைவாயது. காழிப் பதியோ அருள் வழிப்பட்டதாகும். ஆதலின் அந்நகருக்கு அருள் வயத்ததாய ஓமப் புகையும், திருநீற்று ஒளியுமே இரவையும் பகலையும் விளைவிக்கத் தக்கன; ஆதலின் நாம் காணும் இரவும் பகலும் மிகை என்றார்.

பரந்தவிளை வயற்செய்ய
பங்கயமாம் பொங்கெரியில்
வரம்பில்வளர் தேமாவின்
கனிகிழிந்த மதுநறுநெய்
நிரந்தரம்நீள் இலைக்கடையால்
ஒழுகுதலால் நெடிதவ்வூர்
மரங்களும்ஆ குதிவேட்கும்
தகையவென மணந்துளதால். #1904

பரந்த விளைவுடன் கூடிய வயல்களில் தோன்றிய சிவந்த தாமரை மலராய பெருகிய தீயில், அவ்வயல் வரம்பில் வளர்ந்த தேமா மரத்தின் பழம் விண்டதால் வெளிப்படும் சாறான நறு நெய்யா னது, நீண்ட இலைநுனியின் மூலம் இடையீடின்றி ஒழுகுதலால், அங்குள்ள மக்களே அன்றி, மரங்களும் வேள்வியைச் செய்யும் இயல்புடையன என எண்ணுமாறு அத்திருப்பதி விளங்கியது.

விளக்கவுரை

விளைவயல் - வேள்வி செய்யும் இடம். தாமரை - வேள்வித் தீ. மரங்களில் சாறு - ஓமநெய். மாவிலையின் நுனி - ஓமத் துடுப்பு.

வேலையழற் கதிர்படிந்த
வியன்கங்குல் வெண்மதியம்
சோலைதொறும் நுழைந்துபுறப்
படும்பொழுது துதைந்தமலர்ப்
பாலணைந்து மதுத்தோய்ந்து

தாதளைந்து பயின்றந்தி
மாலையெழுஞ் செவ்வொளிய
மதியம்போல் வதியுமால். **#1905**

கதிரவன் கடலில் மறைந்த பின்பு, இரவில் தோன்றி விளங்கும் வெண்மையான மதியம், சோலைகள் தோறும் புகுந்து வெளிப்பட்டுத் தோன்றும் பொழுது, அடர்ந்த மரங்களினிடையே சேர்ந்து, அவற்றின் தேனில் தோய்ந்தும், மகரந்தங்களை அளாவியும் இங்ஙனம் நெடுநேரம் பயின்றதால், மாலையில் தோன்றும் சிவந்த ஒளியையுடைய சந்திரனைப்போல் தோன்றி விளங்கும்.

விளக்கவுரை

சந்திரன் மாலையில் தோன்றும் பொழுது சிவந்தும், பின் வெள்ளிதாயும் விளங்கும். ஆனால் இப்பதியில் தோன்றும் சந்தி ரனோ சோலைக்கண்ணுள்ள தேனையும் மகரந்தப் பொடிகளையும் அளாவி வருதலால், எஞ்ஞான்றும் சிவந்து விளங்குகின்றது.

காமர்திருப் பதியதன்கண்
வேதியர்போற் கடிகமழும்
தாமரையும் புல்லிதழும்
தயங்கியநூ லுந்தாங்கித்
தூமருநுண் துகளணிந்து
துளிவருகண் ணீர்ததும்பித்
தேமருமென் சுரும்பிசையால்
செழுஞ்சாமம் பாடுமால். **#1906**

அழகிய அத்திருப்பதியில், மணம் கமழும் தாமரை யும், அந்தணர்களைப் போல், புற இதழ்களையும், நூலையும் தாங்கிக் கொண்டு, தூய்மையுடைய நுண்மையான துகள்களை அணிந்து, துளித்து வருகின்ற நீர் ததும்பி, தேன் பொருந்த வரும் வண்டின் இசை யால் இனிய சாமவேத கீதத்தைப் பாடும்.

விளக்கவுரை

அந்தணர்களுக்கு உரிய அடையாள மாலை தாமரை மாலையாகும். அந்தணர்க்காகுங்கால்:- புல்லிதழ் - கருமை இதழ்களாலாய பவித்திரம்; நூல் - பூணூல்; நுண்துகள் - திருநீறு; கண்ணீர் - அன்பினால் இன்பமார்ந்திருப்பதால் வரும் கண்ணீர்; சாமம் பாடுதல் - சாம கீதத்தைப் பாடுதல். தாமரைக்காகுங்கால்:- புல்லிதழ் - புறவிதழ்; நூல் - அதன் தண்டின் நூல்; நுண்துகள் - மகரந்தம்; கண்ணீர்- (கள் + நீர்) தேனாகிய நீர்; சாமம் பாடுதல் - வண்டு இசைத்தல்.

புனைவார்பொற் குழையசையப்

பூந்தானை பின்போக்கி
வினைவாய்ந்த தழல்வேதி
மெழுக்குறவெண் சுதையொழுக்கும்
கனைவான முகிற்கூந்தல்
கதிர்செய்வட மீன்கற்பின்
மனைவாழ்க்கைக் குலமகளிர்
வளம்பொலிவ மாடங்கள். **#1907**

அணிந்த நீண்ட பொன்னால் ஆய குழைகள் காதில் அசைய, அழகிய பட்டுடையின் தானையினைப் பின் பக்க மாய்ச் செருகி, அந்தணர்கள் தமக்குரிய தொழிலாய தீ வளர்க்கும் வேதிகையினை மெழுகியும், வெண்மை நிறமுடைய பொடியைக் கொண்டு கோலம் இட்டும், ஒலி பொருந்திய வானில் எழும் மேகம் போன்ற கூந்தலையுடைய, ஒளி பொருந்திய அருந்ததியின் கற்பு வாய்க்கப் பெற்ற வாழ்க்கைத் துணைவியாராகிய குலமகளிர் நிரம்பிய நல்வளத்தால் மாளிகைகள் விளக்கம் பெற்று விளங்கின.

விளக்கவுரை

மனைக்கு விளக்கம் மடவார் ஆவர். அவர் தாமும் கண வரின் கருத்தின் வழி நின்றொழுகும் கற்பினராயின், அவ்வில்வாழ்க் கையின் நலமும் வளமும் சொல்லப் போமோ? இவ்வரிய விளக் கத்தை அப்பதி பெற்று நிற்கின்றது.

வேள்விபுரி சடங்கதனை
விளையாட்டுப் பண்ணைதொறும்
பூழியுற வகுத்தமைத்துப்
பொன்புனைகிண் கிணியொலிப்ப
ஆழிமணிச் சிறுதேரூர்ந்து
அவ்விரதப் பொடியாடும்
வாழிவளர் மறைச்சிறார்
நெருங்கியுள மணிமறுகு. **#1908**

அப்பதியிலுள்ள தெருக்கள் தொறும், வேள்வி வேட்குங்கால், தத்தம் பெற்றோர்கள் செயத்தகும் செயற்பாடுகளைத் தாம் விளையாடும் இடங்களில் எல்லாம் மண்ணாகிய புழுதி பொருந்தச் செய்து, பொன்னால் ஆன கிண்கிணிகள் ஒலிக்க, உருள் (சக்கரம்) பூட்டிய அழகிய சிறு தேர்களை ஊர்ந்து, அதனால் எழும் பிய மண் தூசி படிய விளையாடும் சிறுவர்கள் நெருங்கியுள்ளனர்.

விளக்கவுரை

பண்ணை - விளையாடும் இடம். பூழி - புழுதி : மண்.

விடுசுடர்நீள் மணிமறுகின்
வெண்சுதைமா ளிகைமேகம்
தொடுகுடுமி நாசிதொறும்
தொடுத்தகொடி சூழ்கங்குல்
உடுஎனும்நாண் மலர்அலர
உறுபகலிற் பலநிறத்தால்
நெடுவிசும்பு தளிர்ப்பதென
நெருங்கியுள மருங்கெல்லாம். **#1909**

ஒளி பொருந்திய நீண்ட மணிகள் பதித்த தெருக்களின் வெண்ணிறச் சுண்ணச் சாந்தால் இயன்ற மாளிகைகள், மேக மண்டலத்தைத் தொடுமாறு நீண்ட நாசிகள் தோறும் கட்டிய கொடிகளால் இருள் பரவியுள்ள இரவில், விண்மீன்கள் என்னும் புதிய பூக்கள் பூப்பதற்குப் பொருந்திய பகற் பொழுதில் பல நிறங்களுடன் நீண்ட வானத்தில் தளிர்ப்பதைப் போன்று பக்கங்களில் எல்லாம் நெருங்கியுள்ளன.

விளக்கவுரை

நாசி - மாளிகையின் உச்சியில் கொடிகள் கட்டுதற்கென அமைந்த உறுப்பு. மாளிகைகள் வெண்சுதையால் இயன்றவை. அவற் றில் மணிகள் பதிக்கப்பட்டுள்ளன. அம்மாளிகைகளின் உச்சியில் பல் வேறு நிறமுடைய கொடிகள் கட்டப்பெற்றுள்ளன. இவையே இப் பாடற் கருவாம். மாளிகைகளின் வெண்ணிறச் சாந்து பகல் செய்கின் றது. அதன் கண் பதிக்கப்பட்டிருக்கும் மணிகள் விண்மீன்களென உள்ளன. இவை இரவிலேயே காண்பதற்குரியன. இவ்விண்மீன் களாய மலர்கள் பலவும் இரவில் மலர்தற்கு ஏதுவாக அக்கொடிகள் விசும்பில் தளிர்த்துள்ளன என்கின்றார் ஆசிரியர்.

மடையெங்கும் மணிக்குப்பை
வயலெங்கும் கயல்வெள்ளம்
புடையெங்கும் மலர்ப்பிறங்கல்
புறமெங்கும் மகப்பொலிவு
கிடையெங்கும் கலைச்சூழல்
கிளர்வெங்கும் முரலளிகள்
இடையெங்கும் முனிவர்குழாம்
எயிலெங்கும் பயிலெழிலி. **#1910**

அப்பதியின் நீர் மடைகள் எங்கும், மணிகளின் குவியல்கள் உள்ளன. வயல்களில் எங்கும் நீர் வெள்ளத்துடன் கயல் மீன்களின் கூட்டங்கள் உள்ளன. அங்குள்ள வயல்களின் அருகி லுள்ள இடங்களில் பூக்குவியல்கள் உள்ளன. அவற்றின் வெளியில் எங்கும் வேள்விகளின் பொலிவுகள் நிரம்பியுள்ளன. சிறுவர்க்கு மறை பயிற்றும் பள்ளிகள்

எங்கும், கலைகளின் சூழல்கள் விளங்கியுள்ளன. எழுச்சிமிக்க சோலைகள் எங்கும், ஒலிக்கும் வண்டுகளின் கூட்டங்கள் உள்ளன. இச்சோலைகளின் இடம் எங்கும், மறை முனிவர்களின் கூட் டங்கள் உள்ளன. மதில்கள் எங்கும், தவழ்கின்ற மேகங்கள் உள்ளன.

விளக்கவுரை

மடை - வயல்களிலுள்ள நீர் பாய்தற்கும் வடிதற்கும் உரிய மடைகள்.

பிரமபுரம் வேணுபுரம்
புகலிபெரு வெங்குருநீர்ப்
பொருவில்திருத் தோணிபுரம்
பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர்
வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம்
பன்னிரண்டு திருப்பெயர்த்தால். **#1911**

அத்திருப்பதியானது, பிரமபுரம், வேணுபுரம், பெரியபுகலி, வெங்குரு, நீரினுள் ஒப்பில்லாது விளங்கும் திருத் தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், முன்வரும் புறவம், சண்பை நகர், வளரும் காழி, கொச்சை வயம், போற்றுகின்ற திருக்கழுமலம் என்னும் பன்னிரண்டு திருப்பெயர்களைக் கொண்டதாகும்.

விளக்கவுரை

****

அப்பதியின் அந்தணர்தங்
குடிமுதல்வர் ஆசில்மறை
கைப்படுத்த சீலத்துக்
கவுணியர்கோத் திரம்விளங்கச்
செப்புநெறி வழிவந்தார்
சிவபாத விருதயர்என்று
இப்புவிவா ழத்தவஞ்செய்
இயல்பினார் உளரானார். **#1912**

அப்பதியில் அந்தணர்களின் குடியில் வந்த முதன்மை உடையவரும், குற்றம் தீர்ந்த மறைகள் கூறியவாறு ஒழுகும் ஒழுக்கத்தை உடையவரும், கவுணியர் கோத்திரமும் அதன் உள் நெறி வகைகளாகக் கூறப் பெறுவனவும் மேன்மை அடையுமாறு தோன்றிய வருமான `சிவபாத இருதயர்' என்பார். அவர் இவ்வுலகம் வாழும் பொருட்டுத் தவம் செய்யும் இயல்புடையவராய் வாழ்ந்து வந்தார்.

விளக்கவுரை

அந்தணர் - குடி மரபு. கவுணியர் கோத்திரம் - அதன் உட்பிரிவு. செப்புநெறி - அதன் உட்பிரிவுகளாகக் கூறப்பெறும் சூத்திரம், பிரவரம் முதலியன.

மற்றவர்தந் திருமனையார்
வாய்ந்தமறை மரபின்வரு
பெற்றியினார் எவ்வுலகும்
பெறற்கரிய பெருமையினார்
பொற்புடைய பகவதியார்
எனப்போற்றும் பெயருடையார்
கற்புமேம் படுசிறப்பால்
கணவனார் கருத்தமைந்தார். **#1913**

அவருடைய மனைவியார், அவருக்குப் பொருந் திய அந்தணர் மரபில் வந்தவர். எல்லாவுலகமும் பெறுதற்கு அரிய பெருமையையுடையவர். அழகுடைய `பகவதியார்' என்று போற்றப் படுகின்ற பெயரையுடையவர். கற்பால் மேன்மையுறும் சிறப்பால் தம் கணவரின் கருத்துக்கு ஏற்ப அமைந்து ஒழுகுபவர்.

விளக்கவுரை

`வாய்ந்த மறைமரபு' என்றார், சிவபாத இருதயரின் குலம், குணம் முதலானவற்றுக்கெல்லாம் பொருந்தியிருத்தல் பற்றி. கணவர் கருத்தமைதல் - கணவனார்தம் திருவுள்ளத்திற்கு ஏற்ப அமைந்து ஒழுகும் வாழ்க்கையராய் வாழ்தல்.

மரபிரண்டும் சைவநெறி
வழிவந்த கேண்மையினார்
அரவணிந்த சடைமுடியார்
அடியலால் அறியாது
பரவுதிரு நீற்றன்பு
பாலிக்குந் தன்மையராய்
விரவுமறை மனைவாழ்க்கை
வியப்பெய்த மேவுநாள். **#1914**

தாய்வழி தந்தைவழி ஆகிய இருமரபுகளும் சைவ நெறிவந்த உரிமையுடைமையின், அவ்விருவரும், பாம்பை அணிந்த சடையையுடைய சிவபெருமானின் திருவடிகளை அன்றி மற்றொன் றையும் பொருள் என்று உணராதவராய், மறை நெறிப்படி மனை வாழ்க்கைத் திறத்தில் யாவரும் வியக்குமாறு வாழ்ந்து வரும் நாள்களில்,

விளக்கவுரை

****

மேதினிமேற் சமண்கையர்
சாக்கியர்தம் பொய்ம்மிகுத்தே
ஆதியரு மறைவழக்கம்
அருகிஅர னடியார்பால்
பூதிசா தனவிளக்கம்
போற்றல்பெறா தொழியக்கண்
டேதமில்சீர்ச் சிவபாத
இருதயர்தாம் இடருழந்தார். #1915

உலகில் கீழ்மக்களான சமணர், புத்தர் என்ற இவர்களின் பொய்ச் சமயங்கள் மிகுதியாய் வளர, அதனால் பழைய அரிய மறை வழக்கங்கள் சுருங்கி, அடியார்களிடத்து, திருநீற்றுச் சாதனத்தின் விளக்கமானது போற்றப்பெறாது மறையக் கண்டு, குற்றம் இல்லாத சிறப்புடைய சிவபாத இருதயர் பெரிதும் வருத்தம் அடைந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபுடையன. பல்லவன் ஒரு புறமும், பாண்டியன் ஒரு புறமுமாக இருந்து, சமண சமயச் சார்பினால் தாக்குண்டு, தம்மையும், தம் நாட்டையும் கீழ்ப்படுத்தி யிருந்தமை சம்பந்தர், நாவரசர் ஆகியோர்தம் வரலாற்றால் அறிய முடிகின்றது. புத்தச் சார்பும் இருந்தமை புத்த நந்தியால் அறிய முடிகின்றது. இவ்வகையிலேயே சிவபாத இருதயர் பெரிதும் வருந்த லாயினர்.

மனையறத்தில் இன்பமுறு
மகப்பெறுவான் விரும்புவார்
அனையநிலை தலைநின்றே
ஆடியசே வடிக்கமலம்
நினைவுறமுன் பரசமயம்
நிராகரித்து நீறாக்கும்
புனைமணிப்பூண் காதலனைப்
பெறப்போற்றுந் தவம்புரிந்தார். #1916

இல்வாழ்க்கையில் இன்பம் அளிக்கும் மகவைப் பெறும் விருப்பத்தைக் கொண்ட சிவபாத இருதயர் அந்நிலையில் ஊன்றி நின்று, சிவபெருமானின் ஆடும் திருவடிப்போதுகளை நினைந்து, முன்னர்ப் பரசமயங்களின் தீமையைப் போக்கித் திருநீற் றின் விளக்கத்தை மிகுதிப் படுத்தும் அழகிய அணிகளை அணியும் திருமகனைப் பெறும் பொருட்டுத் தவத்தைச் செய்தார்.

விளக்கவுரை

: `இட்டுந் தொட்டும் கவ்வியும் துழந்தும், நெய்யுடை அடிசில் மெய்பட

விதிர்த்தும், மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறையில்லைத் தாம் வாழுநாளே' (புறநா.188) என்பதால் தமக்கும் உலகுயிர்க்கும் பேரின்பம் கிட்ட மகவு இருத்தல் இன்றி யமையாததாயிற்று.

பெருத்தெழும்அன் பாற்பெரிய
நாச்சியா ருடன்புகலித்
திருத்தோணி வீற்றிருந்தார்
சேவடிக்கீழ் வழிபட்டுக்
கருத்துமுடிந் திடப்பரவும்
காதலியார் மணிவயிற்றில்
உருத்தெரிய வரும்பெரும்பே
றுலகுய்ய உளதாக. **#1917**

பெருகி எழும் அன்பால், திருநிலை நாயகி அம் மையாருடன் திருத்தோணியில் வீற்றிருந்தருளுபவரான தோணியப் பரின் சேவடிகளின் கீழ் வணங்கி, கணவரின் கருத்து முற்றுப் பெறும்படி பரவும் பகவதியாரின் மணிவயிற்றில், உருவம் தெரிய வரும் கருப்பமான பெரும் பிள்ளைப் பேறு உலகம் உய்ய உளதாக,

விளக்கவுரை

****

ஆளுடையா ளுடன்தோணி
அமர்ந்தபிரான் அருள்போற்றி
மூளுமகிழ்ச் சியில்தங்கள்
முதன்மறைநூல் முறைச்சடங்கு
நாளுடைய ஈரைந்து
திங்களினும் நலஞ்சிறப்பக்
கேளிருடன் செயல்புரிந்து
பெரிதின்பங் கிளர்வுறுநாள். **#1918**

ஆளும் தன்மையுடைய திருநிலை நாயகியா ருடன் தோணியப்பரின் திருவருளையும் போற்றிக் கருக்கொண்ட காரணத்தினால் மனத்தில் பெருகும் மகிழ்ச்சியுடன், தங்களுக்குரிய மறையின் முறைப்படி செய்யும் செயற்பாடுகளையெல்லாம், நாளினை முதன்மையாகக் கொண்ட பத்துத் திங்களிலும் நன்மை உண்டாகுமாறு உறவினர் மகிழ்ந்து செய்ய, இன்பம் உண்டாகும் அத்தகைய நாள் களில்,

விளக்கவுரை

****

அருக்கன்முதற் கோளனைத்தும்
அழகியஉச் சங்களிலே

பெருக்கவலி யுடன்நிற்கப்
பேணியநல் லோரையெழத்
திருக்கிளரும் ஆதிரைநாள்
திசைவிளங்கப் பரசமயத்
தருக்கொழியச் சைவமுதல்
வைதிகமுந் தழைத்தோங்க. **#1919**

கதிரவன் முதலான கோள்கள் எல்லாம் தத்தமக் குரிய வலிமை மிகும் இராசிகளில் நிற்கவும், சோதிட நூலார் விரும்பும் நல்ல வேளை வரவும், செம்மை மிக்க திருவாதிரை நாள் எண்திசையும் விளக்கம் அடையவும், மற்ற சமயங்களின் தருக்கிய நிலை ஒழியவும், முதன்மையான சைவத் துறையும் வைதிகத் துறையும் தழைத்து ஓங்கவும்,

விளக்கவுரை

அருக்கன் - கதிரவன். ஓரை பொழுது: இரண்டரை நாழிகையைக் கொண்டது. திரு - சிவம். கிளரும் - உவந்தருளும்: `ஆதிரை நாள் உகந்தான்' *(தி.4. ப. 4 பா.6)* எனச் சிவபெருமானைக் குறிப்பதும் காண்க. திசைவிளங்க - பிள்ளையார் அந்நாளில் தோன்றி இருத்தலின் அவர் புகழ் எண் திசைகளிலும் விளக்கம் பெறுவதாயிற்று.

தொண்டர்மனங் களிசிறப்பத்
தூயதிரு நீற்றுநெறி
எண்டிசையுந் தனிநடப்ப
ஏழுலகுங் களிதூங்க
அண்டர்குலம் அதிசயிப்ப
அந்தணர்ஆ குதிபெருக
வண்டமிழ்செய் தவம்நிரம்ப
மாதவத்தோர் செயல்வாய்ப்ப. **#1920**

அடியவர்களின் உள்ளம் களிப்படையவும், தூய திருநீற்றின் நெறியானது எண்திசைகளிலும் இணையின்றி நடக்கவும், ஏழ் உலகங்களில் உள்ள உயிர்கள் எல்லாம் மகிழ்ச்சியில் திளைக் கவும், தேவரினத்தவர் மிகுவியப்புடன் நோக்கவும், அந்தணர்களின் வேள்விகள் பெருகவும், வண்மையுடைய தமிழ்செய்த தவம் முற்றுப் பெறவும், பெரிய தவத்தைச் செய்பவர்களின் செயல் முற்றுப் பெறவும்,

விளக்கவுரை

****

திசையனைத்தின் பெருமையெலாம்
தென்றிசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும்

மேதினியே தனிவெல்ல
அசைவில்செழுந் தமிழ்வழக்கே
அயல்வழக்கின் துறைவெல்ல
இசைமுழுதும் மெய்யறிவும்
இடங்கொள்ளும் நிலைபெருக. #1921

எண்திசைகளின் பெருமைகள் எல்லாவற்றிலும், தென்திசையின் பெருமையே வெற்றி பெற்று மேன்மை அடையவும், மேல் உலகம், கீழ் உலகம் என்பனவற்றில், இம்மண்ணுலகமே சிறப் படைந்து வெல்லவும், அசைதல் இல்லாத செழுந்தமிழே மற்ற மொழித் துறைகளின் வழக்குகளை வெல்லவும், இசையறிவும் மெய்யறிவும் பொருந்தும் நிலை பெருகவும்,

விளக்கவுரை

****

தாளுடைய படைப்பென்னுந்
தொழில்தன்மை தலைமைபெற
நாளுடைய நிகழ்காலம்
எதிர்கால நவைநீங்க
வாளுடைய மணிவீதி
வளர்காழிப் பதிவாழ
ஆளுடைய திருத்தோணி
அமர்ந்தபிரான் அருள்பெருக. #1922

உயிர்கள் உய்தி பெறுதற்கென இறைவன் செய்யும் ஐந்தொழில்களில் அடிநிலையான படைப்புத் தொழில் தலைமையும் தகவும் பெறவும், காலக் கூறுபாட்டில் நிகழ்விலும் எதிர்விலும் வருகின்ற குற்றங்கள் நீங்கவும், ஒளிபொருந்திய மணிகளையுடைய வீதிகள் சிறந்தோங்கும் சீகாழிப் பதி வாழவும், உயிர்களை அடிமை யாகக் கொண்டு திருத்தோணிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெரு மானின் அருளானது மேன்மேலும் தழையவும்,

விளக்கவுரை

அடி; முதல். இறைவன் செய்யும் ஐந்தொழில்க ளில் அடிநிலையான படைப்பு, உயிர்களின் வினை வயத்தாலேயாம். ஆனால் பிள்ளையார் தோன்றியது அருள் வயத்தாலேயாம். அவர்தம் வாழ்வின் நிறைவில் ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக! என்றருளித் தம்மோடு பிறரையும் சிவச் சார்பு பெற அழைத்துச் சென்றமையால் அப்பிறப்புத் தலைமையும் தகவும் பெறுவதாயிற்று.

அவம்பெருக்கும் புல்லறிவின்

அமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள்
பாழ்படநல் லூழிதொறும்
தவம்பெருக்குஞ் சண்பையிலே
தாவில்சரா சரங்கள்எலாம்
சிவம்பெருக்கும் பிள்ளையார்
திருஅவதா ரஞ்செய்தார். **#1923**

பயனில் செயல்களையே செய்து வரும் புல்ல றிவை உடைய சமண் சமயம் முதலிய பிற சமயங்களானவை எல்லாம் பிறப்பதற்கே தொழிலாக்கும் தீயநெறிகள் பலவும் பாழ்படவும், நல்ல ஊழிக்காலந் தோறும் தான் அழியாமல் மிதந்து நின்று தவநெறியைப் பெருகச் செய்கின்ற சண்பைத் திருநகரில், குற்றம் அற்ற இயங்கும் பொருள், இயங்காப் பொருள் என்ற வகையில் நிலவுகின்ற உயிர்கள் எல்லாம் சிவத்தன்மை பெருகச் செய்யும் ஆளுடைய பிள்ளையாரான ஞானசம்பந்தர் தோன்றியருளினார்.

விளக்கவுரை

இயங்கும் பொருள், இயங்காப் பொருள்களில் எல் லாம் பிள்ளையார் சிவம்பெருக்கி வாழ்ந்தமை `ஞாலம் நின் புகழே மிகவேண்டுந் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே' *( தி.3 ப.108)* `எங்கும் அரன் நாமமே சூழ்க' *(தி.3 ப.54. பா.1)* எனவரும் அவர்தம் திருவாக்குகளானும், திருவோத்தூரில் இருந்த ஆண்பனை, பெண்பனை களெல்லாம் நிறைவாகச் சிவமே கூடிய பெற்றியினாலும் அறியலாம். காழிப் பிள்ளையார் தோன்றியருளியதால் இன்ன இன்ன வளங்கள் வாய்ந்தன எனப் போற்றும் சேக்கிழார், இவ்வைந்து பாடல்களிலும் இருபத்தொரு வளங்களைக் குறித்தருளுகின்றார். இவற்றால் பிள்ளை யார் யாண்டும் சிவம்பெருக்கி வாழ்ந்தமை அறியலாம். இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

அப்பொழுது பொற்புறு திருக்கழு மலத்தோர்
எப்பெயரி னோரும்அயல் எய்தும்இடை யின்றி
மெய்ப்படு மயிர்ப்புளகம் மேவியறி யாமே
ஒப்பில்களி கூர்வதொர் உவப்புற உரைப்பார். **#1924**

அதுபொழுது அழகிய அக்கழுமலத்தில் எந்நெறி யிலிருப்பவர்களும் பக்கங்களில் பொருந்தும் வேறு இடம் இன்றி உடல் முழுதும் மயிர்க் கூச்செறியத் தம்மை அறியாமல் ஒப்பற்ற மகிழ்ச்சி மிகுவதாய ஓர் உவகை தோன்றக் கூறுவாராய்,

விளக்கவுரை

: எப்பெயரினோரும் - அறுவகைச் சமயத்தைச் சார்ந்த வர்களும் பிற இனத்தவர்களும்.

சிவனருள் எனப்பெருகு சித்தமகிழ் தன்மை
இவண்இது நமக்குவர எய்தியதென் என்பார்
கவுணியர் குலத்திலொரு காதலன் உதித்தான்
அவன்வரு நிமித்தம்இது என்றதி சயித்தார். **#1925**

: சிவபெருமானின் திருவருளெனப் பெருகும் மனம் மகிழ்கின்ற தன்மை இங்கு இவ்வாறு நமக்கு வருவதற்குக் காரணம் யாது? என வினவுவார், கவுணியர் கோத்திரத்தில் ஒரு மகன் தோன்றினான், அங்ஙனம் அவன் அவதரித்ததன் நன்னிமித்தம் இது வாகும் என்று மனம் தெளிந்து அதிசயித்தார்.

விளக்கவுரை

முன், மனமகிழ்ச்சி பெருகுதற்குக் காரணம் என்ன? எனத் தமக்குள் வினவியவர்கள், பின் அதன் உண்மை தெரிந்து அதிசயித்தார்கள். இவ்விரண்டு பாடல்களும் ஒருமுடிபின.

பூமுகை அவிழ்ந்துமணம் மேவுபொழில் எங்கும்
தேமருவு தாதொடு துதைந்ததிசை யெல்லாம்
தூமருவு சோதிவிரி யத்துகள் அடக்கி
மாமலய மாருதமும் வந்தசையு மன்றே. **#1926**

: பூக்களின் மொட்டு அலர்வதால் தோன்றிய மணம் நிரம்பிய சோலைகள் எங்கும் தேன் பொருந்திய மகரந்தம் பரவுதலால் நெருங்கிய திசைகளிலெல்லாம் தூய்மையுடைய ஒளி விரியுமாறு அத்துகளை அடக்கிப் பெருமை பொருந்திய பொதிய மலையினின்றும் வருகின்ற தென்றல் காற்றும் அதுபொழுதே வந்து மென்மையாக வீசும்.

விளக்கவுரை

மகரந்தத்தால் ஒளிகுன்றிய சோலையில் தென்றல் வீசி, அம்மகரந்தத் துகளை யடக்கி ஒளிமிகச் செய்தது.

மேலையிமை யோர்களும் விருப்பொடு கரப்பில்
சோலைமலர் போலமலர் மாமழை சொரிந்தே
ஞாலமிசை வந்துவளர் காழிநகர் மேவும்
சீலமறை யோர்களுடன் ஓமவினை செய்தார். **#1927**

விண்ணுலகத்தவர்களும் மிகு விருப்புடன் ஒழி வில்லாது, பூஞ்சோலைகள் பூக்களைச் சொரிவதைப் போல மலர் மழையைப் பொழிந்து, நிலவுலகத்தில் வந்து, சீலம் வளரும் சீகாழிப் பதியில், பொருந்திய ஒழுக்கமுடைய அந்தணருடன் கூடி வேள்விச் செயல்களைச் செய்தனர்.

விளக்கவுரை

****

பூதகண நாதர்புவி வாழஅருள் செய்த
நாதனரு ளின்பெருமை கண்டுநலம் உய்ப்பார்
ஓதுமறை யோர்பிறி துரைத்திடினும் ஓவா
வேதமொழி யால்ஒளி விளங்கியெழு மெங்கும். **#1928**

சிவகணத் தலைவர்கள் உலகு உய்தற்கென ஞானசம்பந்தரைத் தோன்றச் செய்த சிவபெருமானின் திருவருளின் பெருமையைக் கண்டு, அதற்கு ஏற்ப நலங்கள் பலவற்றையும் செய்வாராயினர். மறை ஓதுபவர்கள், பிற பிற சொற்களைச் சொல்வா ராயினும், இடைவிடாது தாமே பெருகி எழும் மறை ஒலிகள் அவற் றின் மிக்கு எழும்.

விளக்கவுரை

****

பயன்தருவ பஃறருவும் வல்லிகளும் மல்கித்
தயங்குபுன லுந்தெளிவு தண்மையுடன் நண்ணும்
வயங்கொளி விசும்புமலி னங்கழியு மாறா
நயம்புரிவ புள்ளொலிகள் நல்லதிசை யெல்லாம். **#1929**

எல்லாத் திசைகளிலும் பலவகையான மரங்களும் கொடிகளும் பெருகித் தத்தம் பயன்களைத் தரலாயின. கலக்கமுடைய நீர்நிலையங்களும் தெளிவுடனும் குளிர்ச்சியுடனும் விளங்கின. விளங்கும் ஒளிகளையுடைய வானமும் களங்கம் நீங்கினது. மாறுபாடில்லாத பெரிய திசைகளில் எல்லாம் பறவைகளின் ஒலியே மிக்கிருப்பன. இங்ஙனம் எல்லாம் நன்மை பெருக விளங்கின.

விளக்கவுரை

****

அங்கண்விழ விற்பெருகு சண்பையகல் மூதூர்ச்
சங்கபட கங்கருவி தாரைமுத லான
எங்கணும் இயற்றுபவர் இன்றியும் இயம்பும்
மங்கல முழக்கொலி மலிந்தமறு கெல்லாம். **#1930**

அழகிய இடங்கள் தோறும் இவ்வாறான விழாவின் மங்கலங்களால் பெருகும் சீகாழிப் பதியில், சங்குகள், ஒருமுகப் பறை, இருமுகப் பறை, வேறு பிற நரம்புக் கருவிகள், தாரை, சின்னம் முதலாய இசைக் கருவிகள், எங்கும் இயக்குபவர் இல்லாம லேயே ஒலித்தன. தெருக்களில் எல்லாம் நிறைந்த மங்கல ஒலிகளே ஒலிப்பனவாயின.

விளக்கவுரை

படகம் - பேரி முதலிய ஒருமுகப் பறைகளும், முழவு முதலிய இருமுகப்

பறைகளும்.

இரும்புவனம் இத்தகைமை எய்தஅவர் தம்மைத்
தருங்குல மறைத்தலைவர் தம்பவன முன்றில்
பெருங்களி வியப்பொடு பிரான்அருளி னாலே
அருந்திரு மகப்பெற வணைந்தஅணி செய்வார். **#1931**

இப்பேருலகானது இத்தகைய பெருமகிழ்வை அடைய, அப்பிள்ளையாரைப் பெற்ற அந்தணரின் தலைவரான சிவபாத இருதயர், தம் இல்லத்தின் முன் பெருங்களிப்பும் வியப்பும், பொருந்த, இறைவர் அருளால் அரிய அழகிய மகனாரைப் பெற்றமை யால் பொருந்திய அணிகளைச் செய்வார் ஆயினார்.

விளக்கவுரை

****

காதல்புரி சிந்தைமகி ழக்களி சிறப்பார்
மீதணியும் நெய்யணி விழாவொடு திளைப்பார்
சூதநிகழ் மங்கல வினைத்துழனி பொங்கச்
சாதக முறைப்பல சடங்குவினை செய்வார். **#1932**

விருப்பம் மிக்க தம் மன மகிழ்ச்சியால் களிப்பு அடைவார். மேலே பூசப்படுகின்ற நெய்யாட்டு விழாச் செய்து மகிழ்ச்சி அடைவார். மகன் தோன்றியதன் காரணமாகச் செய்யத் தகும் மங்கலச் செயல்களின் ஒலிகளோடு, அவற்றிற்குரிய செயல்கள் பல வற்றையும் செய்வார்.

விளக்கவுரை

மகப்பேற்றின் பின் அத்தொடக்கு நீங்க நெய் அணி வித்து நீராடச் செய்வர். `புதல்வர்ப் பயந்த புனிறுசேர் பொழுதின் நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி, ஐயர் பாங்கினும் அமரர் சுட்டியும், செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற்கண்ணும்' (தொல். கற்பி யல். *5*); `கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி' (தொல். கற்பியல். *6*); `கரும்புடைக் கடுஞ்சூல் நம்குடிக்கு உதவி, நெய்யோடு இமைக்கும் ஐயவித் திரள்காழ், விளங்குநகர் விளங்கக் கிடந்தோள்' (நற்றிணை *370*); `ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணிப் பசு நெய் கூர்ந்த மென்மை யாக்கை' (நற்றிணை *40*) என வருங் கூற்றுக்களால் இச் செயல் முறை, பண்டு தொட்டே இருந்தமை புலனாகும். இதுவன்றி இறைவனிடத்தும் முனிவர் தேவர் முதலானோரிடத்தும் தாயும் சேயும் நலம் பெற்று வாழ வழிபாடு நிகழ்த்துதலும் அக்கால வழக்கமாகும். புதல்வன் முகங்காண்டல், ஐம்படைத் தாலி சூட்டடல், பெயரிடுதல் போல்வனவும் அக்காலத்துச் செய்து வந்தமை தொல்காப்பியம் இளம்பூரணர்உரையால் அறிய முடிகின்றது. சாதக முறைப் பல சடங்கு - ஆண் மகவுக்குரிய *16*

சடங்குகளுள் ஒன்று. சாத கன்மம் என்பர். அத்திர மந்திரத்தால் நூறு முறை ஓமம் செய்து, வாம மந்திரத்தால் மகவை முகமெதிர் நோக்கிப் பஞ்சப் பிரம மந்திரத்தால் உச்சி மோந்து, தற்புருடத்தினை வலக்காதிற் செலுத்துதல் இச்செயல் முறையாகும்.

மாமறை விழுக்குல மடந்தையர்கள் தம்மில்
தாமுறு மகிழ்ச்சியொடு சாயல்மயி லென்னத்
தூமணி விளக்கொடு சுடர்க்குழைகள் மின்னக்
காமர்திரு மாளிகை கவின்பொலிவு செய்வார். **#1933**

சிறந்த அந்தணர் குல மங்கையர்கள் தம்மில் கலந்த பெருமகிழ்ச்சியுடன் சாயலையுடைய மயிலைப் போல, தூய அழகு டைய விளக்குகளால் ஒளியுடைய குழை முதலிய அணிகள் மின்ன, அழகான தம் மாளிகையை அழகுபெறச் செய்வார்கள்.

விளக்கவுரை

****

சுண்ணமொடு தண்மலர் துதைந்ததுகள் வீசி
உண்ணிறை விருப்பினுடன் ஓகையுரை செய்வார்
வெண்முளைய பாலிகைகள் வேதிதொறும் வைப்பார்
புண்ணிய நறும்புனல்கொள் பொற்குடம் நிரைப்பார். **#1934**

நறுமணப் பொடிகளுடன் குளிர்ந்த மலர்த் தாதுக்களை வீசி உள்ளத்தில் நிறைந்த விருப்பத்துடன் பிள்ளையார் இந்நிலவுலகில் தோன்றியமையை மகிழ்வுடன் எங்கும் உரைப்பர். வெண்மையான முளைப் பாலிகைகளை மேடைதோறும் வைப்பார் கள். மணமுடைய புண்ணியப் புதுநீர் கொண்ட புதுக்குடங்களை நிரல்பட வைப்பர்.

விளக்கவுரை

****

செம்பொன்முத லானபல தானவினை செய்வார்
நம்பர்அடி யார்அமுது செய்யநலம் உய்ப்பார்
வம்பலர் நறுந்தொடையல் வண்டொடு தொடுப்பார்
நிம்பமுத லானகடி நீடுவினை செய்வார். **#1935**

செம்பொன் முதலியவற்றை ஈந்து உவப்பார்கள். சிவனடியார்கள் அமுது செய்தற்கு வேண்டும் நலங்கள் பலவற்றை நாடிச் செய்வார்கள். புதிதாய் மலர்ந்த மணமலர் மாலைகளை அவற்றில் மொய்க்கும் வண்டுகளுடன் சேர்த்துக் கட்டுவார்கள். வேம் பின் தழை செருகுதல் முதலான காப்புத் தொழிலைச் செய்வார்கள்.

விளக்கவுரை

வண்டுகள், மலர்களில் அவற்றைத் தொடுக்கும் நிலை யிலும்

இருந்தமை, மலர்களிலும் தேனையும் அவற்றில் வதிந்திருக் கும் இருக்கைச் சுவையையும் கருதியாம். அகலகில்லேன் இறையும் என்று அலர் மேல் வதியும் வண்டுகளும் இருக்கும் போலும்! நிம்பம் - வேம்பு: அதன் இலைகளை வீட்டில் செருகுதல் காப்புக் கருதியாம்.

ஐயவி யுடன்பல அமைத்தபுகை யாலும்
நெய்யகில் நறுங்குறை நிறைத்தபுகை யாலும்
வெய்யதழல் ஆகுதி விழுப்புகையி னாலும்
தெய்வமணம் நாறவரு செய்தொழில் விளைப்பார். **#1936**

வெண்கடுகு முதலானவற்றைச் சேர்த்து அமைத்த புகையினாலும், நெய்யுடன் நல்ல மணமுடைய அகில் துண்டுகளால் உண்டாக்கப்பட்ட புகையாலும், விருப்பம் அளிக்கும் வேள்வித் தீயின் சிறந்த புகையாலும் கடவுள் தன்மை கமழ்கின்ற செயலைச் செய் வார்கள்.

விளக்கவுரை

ஐயவி - வெண் சிறுகடுகு, இதன் சாற்றை உடலில் தடவலும், இதன் புகையை நுகர்தலும் தீமை நீங்குதற்கு ஏதுவாம். நெய்யோடு ஐயவி அப்பி ஐதுரைத்து *(தி.11 திருமுருகா. வரி 234)* `ஐயவிப் புகையும் ஆட்டி' என வருவனவற்றான் இவ்வழக்கம் பண்டு தொட்டே இருந்தமை புலனாகும்.

ஆயபல செய்தொழில்கள் அன்றுமுதல் விண்ணோர்
நாயகன் அருட்பெருமை கூறுநலம் எய்தத்
தூயதிரு மாமறை தொடர்ந்தநடை நூலின்
மேயவிதி ஐயிரு தினத்தினும் விளைத்தார். **#1937**

அத்தகைய நற்செயல்கள் பலவற்றையும் தேவரின் தலைவரான சிவபெருமான் திருவருளின் பெருமை மிகுமாறு, நன்மை பொருந்த, நான்மறைகளிலும் அவற்றுடன் தொடர்புடைய கற்ப சூத்திரம் முதலிய ஒழுக்க நூல்களிலும் பொருந்திய முறைப்படி, பிள்ளையார் தோன்றிய நாள் முதல் பத்து நாள்களிலும் செய்வித் தார்கள். கு-ரை: வேதங்களின் வழிவந்த ஒழுக்க நூல்களைக் கற்ப சூத்திரம் என்பர்.

விளக்கவுரை

****

நாமகர ணத்தழகு நாள்பெற நிறுத்திச்
சேமவுத யப்பரிதி யில்திகழ் பிரானைத்
தாமரை மிசைத்தனி முதற்குழவி யென்னத்
தூமணி நிரைத்தணிசெய் தொட்டில்அமர் வித்தார். **#1938**

பெயர்சூட்டும் அழகிய நல்வினையைப் பிள் ளையார் தோன்றிய நாளிற்கு ஏற்பச் செய்வித்து, உலகிற்கு நலம் செய்யத் தோன்றும்

இளஞாயிற்றைப் போலவும், தாமரையில் எழுந் தருளியிருக்கும் தனி முதலாம் முருகப் பெருமானைப் போலவும் விளங்கும் அப்பிள்ளையாரைத் தூய மணிகளை நிரல்பட அழுத்தி அழகு செய்யப்பட்ட தொட்டிலில் இட்டனர்.

விளக்கவுரை

நாள்பெற - தோன்றிய நாளிற்கு *(விண்மீன்)* ஏற்ப, இவ்வாறு பெயரிடுதல் வழக்கு எனினும் அப்பெயர் இன்னது என அறிதற்கு இயன்றிலது. சேம உதயப் பரிதி - உலகிற்கு நலம் தர எழும் கதிரவன். நலம் - ஒளியும் வெப்பமும். தாமரை மிசைத் தனிக்குழவி - முருகன். `அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தில் வெறிகமழ் கமலப் போதில் வீற்றிருந் தருளினானே' *(கந்த புரா. திருவவ. பா.96)* எனவரும் கச்சியப்பர் திருவாக்கும் காண்க.

பெருமலை பயந்தகொடி பேணுமுலை யின்பால்
அருமறை குழைத்தமுது செய்தருளு வாரைத்
தரும் இறைவி யார்பரமர் தாள்பரவும் அன்பே
திருமுலை சுரந்தமுது செய்தருளு வித்தார். **#1939**

மிகப் பெரிய இமயமலையின் அரசன் பெற்ற கொடி போன்ற பார்வதியம்மையார், ஞானத்தை வழங்கியருளும் திருமார்பகத்தில் உளவாய இனிய பாலுடன் கலந்த அரிய சிவஞா னத்தைக் குழைத்து ஊட்டி அமுது செய்தருளவுள்ள அப்பிள்ளை யாரைப் பெற்ற அந்தணர் குல மாதரான பகவதியார், சிவபெரு மானின் திருவடிகளைப் போற்றும் அன்பே தம் திருமார்பகத்தில் பாலாய்ச் சுரக்க, அதனைத் திருவமுது செய்து அருளுமாறு பால் ஊட்டினார்.

விளக்கவுரை

உயிர்களுக்கு ஞானம் வழங்கும் மார்பகமாதலின் `பேணுமுலை' என்றார். `போகமார்த்த பூண்முலையாள்' *(தி.1 ப.49 பா.1)* எனவரும் திருவாக்கும் காண்க.

ஆறுலவு செய்யசடை ஐயர்அரு ளாலே
பேறுலகி னுக்கென வரும்பெரி யவர்க்கு
வேறுபல காப்புமிகை என்றவை விரும்பார்
நீறுதிரு நெற்றியில் நிறுத்திநிறை வித்தார். **#1940**

கங்கையாறு நிலவும் சடையை உடைய சிவ பெருமான் திருவருளால் உலகைக் காத்தற்குரியார் இவராவர் எனத் தோன்றிய பெரியவரான பிள்ளையாருக்கு, மற்றும் பல காப்புகள் மிகையாகும் என, அவை எவற்றையும் விரும்பாதவராய்த் திருநீற்றை அவரின் நெற்றியில் அணிவித்து, அதனையே காப்பாகுமாறு செய்தார் பகவதியார்.

விளக்கவுரை

: `மந்திரமாவது நீறு', *(தி.2 ப.66 பா.1)* `ஏலவுடம் பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு' *(தி.2 ப.66 பா.9)* என இப்பிள்ளையார் பின்னர் அருளி இருப்பதும் காண்க. `குழவி மருங்கினும் கிழவதாகும்' *(தொல். புறத். 29)* எனும் நூற்பாவால் பிள்ளைத் தமிழுக்குத் தோற் றுவாய் செய்தது தொல்காப்பியம். அம்மரபு வழிவந்த பிள்ளைத் தமிழும், ஆண்பாற்கென வகுத்த பருவங்கள் பத்தாம். அவற்றுள் ஆசிரியர் ஈண்டுக் குறிப்பன - காப்பு *(பா.43)*, தால் *(பா.44)*, செங் கீரை *(பா.45)*, சப்பாணி *(பா.46)*, வருகை *(பா.48)*, சிறுதேர், சிற்றில் *(பா.52)* ஆகிய பருவங்களேயாம்.

தாயர்திரு மடித்தலத்தும்
தயங்குமணித் தவிசினிலும்
தூயசுடர்த் தொட்டிலினும்
தூங்குமலர்ச் சயனத்தும்
சேயபொருள் திருமறையும்
தீந்தமிழும் சிறக்கவரு
நாயகனைத் தாலாட்டு
நலம்பலபா ராட்டினார். **#1941**

சிறந்த பொருண்மையைக் கொண்டிருக்கும் மறைகளும், இனிய தமிழும் சிறப்புப் பெற வந்து தோன்றிய தலை வரான அப்பிள்ளையாரை, நற்றாய் முதலியோர் தம் மடியிலும், விளங்கும் மணிகளையுடைய இருக்கைகளிலும், தூய ஒளிவீசும் தொட்டிலிலும், உறங்குதற்கேற்ற மலர்ப் படுக்கையிலும் தாலாட்டுங் கால், அவர் தோன்றலாய் வாய்த்த பல நலங்களையும் எடுத்துப் பாராட்டி மகிழ்ந்தனர்.

விளக்கவுரை

: நற்றாய், செவிலித்தாய், கைத்தாய், பாலூட்டும் தாய், சீராட்டும் தாய் என அழைக்கப் பெறும் ஐவகைத் தாயரும் அடங்கத் `தாயர்' எனக்கூறினார். ஆட்டுவாள், ஊட்டுவாள், ஓல் உறுத்துவாள், நொடிபயிற்றுவாள் கைத்தாய் எனச் செவிலியர் ஐவர் என்பர் நச்சி னார்க்கினியர்.

வருமுறைமைப் பருவத்தின்
வளர்புகலிப் பிள்ளையார்
அருமறைகள் தலையெடுப்ப
ஆண்டதிரு முடியெடுத்துப்
பெருமழுவர் தொண்டல்லால்
பிறிதிசையோம் என்பார்போல்
திருமுகமண் டலமசையச்

செங்கீரை யாடினார். #1942

முறையாக வளர்ந்து வருகின்ற பருவந்தோறும் உரியவாறு வளர்ச்சி பெற்றுவரும் பிள்ளையார், அரிய மறைகள் தலையெடுக்குமாறு தலைமுடியை மேல் எடுத்துப் பெருமழுவைக் கையில் ஏந்திய சிவபெருமானுடைய திருத்தொண்டினை அல்லாது வேறொன்றையும் யாம் காணோம் எனக் காட்டுவார் போல், திருமுகமண்டலம் அசையச் செங்கீரை ஆடியருளினார்.

விளக்கவுரை

குன்றியிருந்த மறைவழக்குகள் மீண்டும் பொலிவு பெறப் பிள்ளையாரின் தோற்றம் காரணமாயிருத்தலின், `அருமறை கள் தலை எடுப்ப' என்றார். `ஒருதாள் உந்திஎழுந் திருகையும் ஒருங்கு பதித்து நிமிர்ந்து அருள் பொழிதிருமுகம் அசைய அசைந்தினிது ஆடுக செங்கீரை' (முத்துக். செங்கீரைப். *8)* எனவரும் குமரகுருபர அடிக ளின் திருவாக்கால் செங்கீரை ஆடுதலின் இலக்கணம் விளங்கும்.

நாமறியோம் பரசமயம்
உலகிலெதிர் நாடாது
போமகல என்றங்கை
தட்டுவதும் புனிதன்பால்
காமருதா ளம்பெறுதற்
கொத்துவதுங் காட்டுவபோல்
தாமரைச்செங் கைகளினால்
சப்பாணி கொட்டினார். #1943

: `யாம் சைவசமயம் அன்றிப் பிற சமயங்களை அறியோம்! ஆதலின் புறச் சமயத்தவர்களே! இவ்வுலகில் எதிர்ப்பட நாடாது அகன்று செல்லுங்கள்' என்று அழகிய கைகளைக் கொட்டுவதையும் சிவபெருமானிடத்து விருப்பம் மிகும் தாளத்தைப் பெறுவதற்காகக் கைகளை ஒத்துவதையும் காட்டுவன போல், தாமரை போன்ற சிவந்த கைகளால் அப்பிளையார் சப்பாணி கொட்டினார்.

விளக்கவுரை

பாணி - கை: சக - சேர்த்து. கைகள் இரண்டையும் சேர்த்துக் கொட்டுவது சப்பாணி எனப்படும்

விதிதவறு படும்வேற்றுச்
சமயங்க ளிடைவிழுந்து
கதிதவழ இருவிசும்பு
நிறைந்தகடி வார்கங்கை
நதிதவழுஞ் சடைமுடியார்

ஞானம்அளித் திடவுரியார்
மதிதவழ்மா ளிகைமுன்றில்
மருங்குதவழ்ந் தருளினார். #1944

இறைவனின் மறைநெறிகளுக்கு மாறுபட்ட புறச் சமயங்கள் வீழ்ந்து நிலை குலையுமாறு, பெரிய வானத்தினின்றும் போந்த பெரிய கங்கையாறு பொருந்திய சடையையுடைய சிவபெரு மான் ஞானம் தந்தருளுதற்குரிய அப்பிள்ளையார், சந்திரன் தவழும் மாளிகையின் முன் பக்கத்தில் தவழ்ந்தருளினார்.

விளக்கவுரை

கதிதவழ்தல் - ஓங்கிநின்ற நிலையிலிருந்து மாறி, கீழே தாழ்ந்து செல்லும் நிலை பெறல். பிறசமயங்கள் தளர்வுற்றுத் தாழப் பிள்ளையார் தவழ்ந் தருளினார்.

சூழவரும் பெருஞ்சுற்றத்
தோகையரும் தாதியரும்
காழியர்தஞ் சீராட்டே
கவுணியர்கற் பகமேஎன்
றேழிசையும் பலகலையும்
எவ்வுலகும் தனித்தனியே
வாழவரும் அவர்தம்மை
வருகவரு கெனவழைப்ப. #1945

தம்மைச் சூழநிற்கும் அந்தண மகளிரும் தோழியரும் `சீகாழிப் பதியினர் யாவர்க்கும் சிறப்புச் செய்யும் செல் வமே! கவுணிய குலத்தவரின் கற்பகமே!' எனப் பாராட்டி, ஏழிசையும், மறைகள் முதலான பல கலைகளும், எவ்வுயிர்களும், தனித்தனியே வாழுமாறு வந்து தோன்றிய அப் பிள்ளையாரை `வருக வருக' என்று அழைக்க,

விளக்கவுரை

****

திருநகையால் அழைத்தவர்தம்
செழுமுகங்கள் மலர்வித்தும்
வருமகிழ்வு தலைசிறப்ப
மற்றவர்மேற் செலவுகைத்தும்
உருகிமனங் கரைந்தலைய
உடன்அணைந்து தழுவியும்முன்
பெருகியஇன் புறஅளித்தார்
பெரும்புகலிப் பிள்ளையார். #1946

காழிப்பிள்ளையார் அங்ஙனம் அழைத்தவரின் செழுமையான

முகங்களைத் தம் புன்முறுவலால் மலரச் செய்தும், அதனால் உண்டாகும் மகிழ்ச்சி மேன்மேலும் பெருக, அவர்களின் உடல் மீது பொருந்துமாறு உந்தியும், உள்ளம் உருகிக் கரைந்து நிலை கொள்ளாது இளகும்படி உடன் அணைத்துத் தழுவியும், பெருக் கெடுக்கும் இன்பம் பொருந்துமாறு அளித்தருளினர்.

விளக்கவுரை

முகம் நோக்கல், திருவடியால் உந்தல், மெய் தீண்டல் ஆகியன காண்பார்க்கு மகிழ்ச்சி ஊட்டுவனவாகும். `மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம், மற்றுஅவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு' *(குறள், 65)* எனவரும் திருவாக்கும் காண்க.

வளர்பருவ முறையாண்டு
வருவதன்முன் மலர்வரிவண்
டுளர்கருமென் சுருட்குஞ்சி
உடனலையச் செந்நின்று
கிளர்ஒலிகிண் கிணியெடுப்பக்
கீழ்மைநெறிச் சமயங்கள்
தளர்நடையிட் டறத்தாமும்
தளர்நடையிட் டருளினார். **#1947**

முற்கூறியவாறு வளரும் பருவங்களின் முறை யாக ஓராண்டு நிறைவதற்குள், மலர்களில் வரிவண்டுகள் ஒலிக்கும் கருமையான மெல்லிய சுருண்ட தலைமயிருடன் அசையச் செம்மை யாக நேர் நின்று விளங்கும் ஒலியைக் கிண்கிணிகள் ஒலிக்கக் கீழான நெறிகளைக் காட்டுகின்ற சமயங்கள் தள்ளாடி ஒழியுமாறு தாமும் தளர்நடை பயின்றருளினார்.

விளக்கவுரை

****

தாதியர்தங் கைப்பற்றித்
தளர்நடையின் அசைவொழிந்து
சோதியணி மணிச்சதங்கை
தொடுத்தவடம் புடைசூழ்ந்த
பாதமலர் நிலம்பொருந்தப்
பருவமுறை ஆண்டொன்றின்
மீதணைய நடந்தருளி
விளையாடத் தொடங்கினார். **#1948**

வளர்ப்புத்தாயரின் கைகளைப் பற்றி நடத்தலால், தளர் நடையின் தளர்ச்சி நீங்கி, ஒளியும் அழகும் கொண்ட மணிகள் இழைத்த

சதங்கைகள் கட்டிய வடம் சுற்றிய சிறிய அடிகள் நிலத்திற் பொருந்தும்படி, பருவமுறையில் ஓராண்டு நிறைந்து மேற்செல்ல, பிள்ளையார் நடந்து சென்றருளவும் விளையாடவும் தொடங்கினார்.

விளக்கவுரை

****

சிறுமணித்தேர் தொடர்ந்துருட்டிச்
செழுமணற்சிற் றில்கள்இழைக்கும்
நறுநுதற்பே தையர்மருங்கு
நடந்தோடி அடர்ந்தழித்தும்
குறுவியர்ப்புத் துளியரும்பக்
கொழும்பொடியா டியகோல
மறுகிடைப்பே ரொளிபரப்ப
வந்துவளர்ந் தருளினார். #1949

அழகிய சிறுதேரைப் பற்றித் தொடர்ந்து உருட்டிச் செல்ல, செழிய மணலால் சிற்றில் கட்டி விளையாடும் நல்ல நெற்றியை உடைய பேதைப் பெண்களிடத்தில் நடந்தும் ஓடியும் அச்சிற்றில்களை அழித்து விளையாடியும், சிறிய வியர்வைத் துளிகள் உடற்கண் அரும்ப, அதனுடன் திருநீற்றை அணிந்து விளங்கும் திருமேனி அவ்வீதியில் ஒளிபரப்ப வந்து, இவ்வாறாக அவர் வளர்ந்து வரும் நாளில்,

விளக்கவுரை

****

மங்கையோ டுடனாகி
வளர்தோணி வீற்றிருந்த
திங்கள்சேர் சடையார்தம்
திருவருட்குச் செய்தவத்தின்
அங்குரம்போல் வளர்ந்தருளி
அருமறையோ டுலகுய்ய
எங்கள்பிரான் ஈராண்டின்
மேல்ஓராண் டெய்துதலும். #1950

திருநிலை நாயகியாருடன் இருந்து, வளர்ந்து வரும் சீகாழியில் வீற்றிருந்தருளும் மதி நிலவும் சடையையுடைய சிவபெருமானின் திருவருட்பயனுக்குச் செய்யும் தவத்தின் வழித் தோன்றிய முளையைப் போன்று வளர்ந்து, அரிய மறைகளால் உலகம் உய்யுமாறு எம்பெருமானான பிள்ளையாருக்கு இரண்டாண்டின் மேல் ஓராண்டு நிறை வெய்தவும்.

விளக்கவுரை

****

நாவாண்ட பலகலையும்
நாமகளும் நலஞ்சிறப்பப்
பூவாண்ட திருமகளும்
புண்ணியமும் பொலிவெய்தச்
சேவாண்ட கொடியவர்தம்
சிரபுரத்துச் சிறுவருக்கு
மூவாண்டில் உலகுய்ய
நிகழ்ந்ததனை மொழிகின்றேன். **#1951**

திருநிலை நாயகியாருடன் இருந்து, வளர்ந்து வரும் சீகாழியில் வீற்றிருந்தருளும் மதி நிலவும் சடையையுடைய சிவபெருமானின் திருவருட்பயனுக்குச் செய்யும் தவத்தின் வழித் தோன்றிய முளையைப் போன்று வளர்ந்து, அரிய மறைகளால் உலகம் உய்யுமாறு எம்பெருமானான பிள்ளையாருக்கு இரண்டாண்டின் மேல் ஓராண்டு நிறை வெய்தவும்.

விளக்கவுரை

மறை, எழுதாக் கிளவி ஆதலின் `நாவாண்ட பல கலையும்' என்றார். இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

பண்டுதிரு வடிமறவாப்
பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதவ மறைக்குலத்தோர்
வழிபாட்டின் அளித்தருளத்
தொண்டின்நிலை தரவருவார்
தொடர்ந்தபிரி வுணர்வொருகால்
கொண்டெழலும் வெருக்கொண்டாற்
போல்அழுவார் குறிப்பயலாய். **#1952**

முன்னைய நிலையில் திருவடியை மறவாத பாங்கு உடையவரை, மிகுதவத்தோராய சிவபாத இருதயருக்கு இறைவன் தந்தருளினாராக, அதன்வழி வாய்த்த திருத்தொண்டின் நிலையை உலகத்துக்கு அருள்வதற்கெனத் தோன்றிய அப்பிள்ளை யார், சிவபெருமானையே தொடர்ந்து நின்ற நிலை நீங்காது இருந்தமையின், பிரிந்து போந்த பிரிவுணர்வு ஒரொருகால் எழ, அதனால் அச்சம் கொண்டவரைப் போல் அயலான ஒரு குறிப்புடன் அழுவார்.

விளக்கவுரை

`................திருந்தடி மறக்குமா றிலாதவென்னை, மையல்செய்திம் மண்ணின்மேல் பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படு முடம்புவிட்

டிறக்குமாறு காட்டினாய்க் கிழுக்குகின்ற தென்னையே' *(தி.2 ப.98 பா.5)* எனவரும் பிள்ளையார் திருவாக்கு இவ்வரலாற்றிற்கு அகச்சான்றாய் அமைந்துள்ளது. வெருக்கொள்ளுதல் - விரைந்து தோன்றி மறைவ தொரு அச்சக்குறிப்பு.

மேதகைய இந்நாளில்
வேறொருநாள் வேதவிதி
நீதிமுறைச் சடங்குநெறி
முடிப்பதற்கு நீராடத்
தாதையார் போம்பொழுது
தம்பெருமான் அருள்கூடச்
சோதிமணி மனைமுன்றில்
தொடர்ந்தழுது பின்சென்றார். **#1953**

மேதக்க நிலையில் வளர்ந்து வரும் இந்நாள்களில் ஒருநாள், மறைவழிப்பட்ட நெறியில் செயத்தகும் காலை வழிபாடு களை முடிப்பதற்காக முதலில் நீராடும் பொருட்டுத் தந்தையார் புறப்படும் பொழுது, தம் பெருமானின் அருள்கூடப் பெறுதலால், திருமனையின் ஒளியும் அழகும் உடைய முன்றிலில், பிள்ளையார் தாமும் தந்தையாரைத் தொடர்ந்து அழுதவாறு பின்சென்றார்.

விளக்கவுரை

****

பின்சென்ற பிள்ளையார்
தமைநோக்கிப் பெருந்தவத்தோர்
முன்செல்கை தனையொழிந்து
முனிவார்போல் விலக்குதலும்
மின்செய்பொலங் கிண்கிணிக்கால்
கொட்டியவர் மீளாமை
உன்செய்கை இதுவாகில்
போதுஎன்றுஅங் குடன்சென்றார். **#1954**

தம் பின் தொடர்ந்து வந்த பிள்ளையாரைத் தந்தையாரான சிவபாத இருதயர் பார்த்து, தாம் மேற் செல்வதை நிறுத்திச் சினம் கொண்டவர் போல் காட்டி, தம் பின் வருவதை விலக்கவும், ஒளி மிக்க பொன்னால் ஆய சிறு கிண்கிணிகள் அணிந்த திருவடிகளை நிலத்தில் கொட்டி, மீளாது நிற்க, `உன் செயல் இதுவானால், வருக' எனக் கூறித் தம்முடனே அழைத்துச் சென்றார்.

விளக்கவுரை

தம் இச்சையில் விடாது பற்றி நிற்கும் ஞானக் குழந்தை, தன் செயலை

மிகு அன்புடன் (செல்லமாகத்) தெரிவித்துக்கொள்ளும் நிலை இதுவாகும்.

கடையுகத்தில் தனிவெள்ளம்
பலவிரிக்குங் கருப்பம்போல்
இடையறாப் பெருந்தீர்த்தம்
எவற்றினுக்கும் பிறப்பிடமாய்
விடையுயர்த்தார் திருத்தோணிப்
பற்றுவிடா மேன்மையதாம்
தடமதனில் துறையணைந்தார்
தருமத்தின் தலைநின்றார். **#1955**

அறநெறியில் சிறந்த சிவபாத இருதயர், ஊழி முடிவில் தோன்றும் பெரு வெள்ளங்கள் பலவற்றையும் தன்னிடத்தில் இருந்து விரியுமாறு தோற்றுவிக்கும் கருப்பம் போல், இடையறாது நிற்கும் பெரிய புனித நீர் நிலைகள் எல்லாவற்றுக்கும் பிறப்பிடமாய், ஆனேற்றுக் கொடியை உயர்த்தியருளிய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் திருத்தோணிபுரத்தின் தொடர்ச்சியை நீங்காத மேலான நீர்நிலையின் துறையை அடைந்தார்.

விளக்கவுரை

நீர் அளவாக இருக்கும் பொழுது அக்குளத்தின் அளவில் நின்று திருத்தோணிபுரத்தைச் சார்ந்தும், ஊழிமுடிவில் நீர் பெருகிய பொழுது அத்தோணிபுரம் தன்மேல் மிதக்க அதனோடு இயைந்தும் நிற்றலின், திருத்தோணி பற்றுவிடாது அக்குளம் அமைந்தி ருப்பதாயிற்று.

பிள்ளையார் தமைக்கரையில்
வைத்துத்தாம் பிரிவஞ்சித்
தெள்ளுநீர்ப் புகமாட்டார்
தேவியொடுந் திருத்தோணி
வள்ளலார் இருந்தாரை
எதிர்வணங்கி மணிவாவி
உள்ளிழிந்து புனல்புக்கார்
உலகுய்ய மகப்பெற்றார். **#1956**

உலகுய்ய மகப்பெற்ற சிவபாத இருதயர் பிள்ளை யாரை அப்புனித நீர்க்கரையில் இருக்கச்செய்து, தாம் பிரிவதற்கு அஞ்சி, தெளியும் நீரில் நீராடமாட்டாதவராகிப் பின் திருநிலைநாயகி உடனாய திருத்தோணிபுரத்தில் வீற்றிருக்கும் வள்ளலாரை முன் நின்று வணங்கிப் பின்பு அக்குளத்தில் இறங்கி நீராடச் சென்றார்.

விளக்கவுரை

பிள்ளையாரைக் கரையில் இருக்கச் செய்து தாம் நீரா டற்குச் செல்ல ஒருப்படாத சிவபாத இருதயர், பின் அம்மையப் பராகிய தோணியப்பரை வணங்கி நீராடப்புகுந்தார். இந்நிலை, உடல் தந்தையாம் தம் பொறுப்பினின்றும் நீங்க, உயிர்த் தந்தையாம் தோணியப்பரின் திருவருளில் அப்பிள்ளையார் திளைத்தும் உய்ந்தும் அருள்பெற இருக்கும் பாங்கைக் குறிப்பால் உணர்த்தும் தகையதாய் உள்ளது.

நீராடித் தருப்பித்து
நியமங்கள் பலசெய்வார்
சீராடும் திருமகனார்
காண்பதன்முன் செய்ததற்பின்
ஆராத விருப்பினால்
அகமருடம் படியநீர்
பேராது மூழ்கினார்
பெருங்காவல் பெற்றாராய். **#1957**

நீரில் ஆடித் தருப்பணம் செய்து, பின் மறைவழிச் செயத்தகும் செயல்கள் பலவற்றையும் செய்பவரான சிவபாத இருதயர், பலரும் பாராட்டவுள்ள மகனார் தம்மைத் தேடிக் காண்பதற்கு முன்னம் அச்செயல்களை யெல்லாம் செய்து முடித்துப் பின், தம் மகனாருக்குத் தம்மை விடப் பெரிய காவல் பெற்றாராகி, அடங்காத விருப்பத்தால் அதன்பின் அகமருட ஸ்நாநம் செய்யும் பொருட்டுத் தாம் நின்ற இடத்தினின்றும் அடிபெயராது நீருள் மூழ்கினார்.

விளக்கவுரை

அகமருடம் - பாவத்தைக் கெடுப்பது. இருக்கு வேதத்துள் தொண்ணூறாவது சூக்தம் அகமருட சூக்தமாகும். நீரில் நின்று இதனை மும்முறை கூறி மூழ்குதல் நியமமாகும். தாம் நீராடி வரும்வரை பிள்ளையாரைக் காப்பதற்குத் தம்மினும் மேலான காப்பான திருவருள் துணையே துணையாயிருத்தலின், சிறிதும் தளர்வின்றி, அச்செயற்பாட்டினைச் செய்பவரானார்.

மறைமுனிவர் மூழ்குதலும்
மற்றவர்தம் மைக்காணா
திறைதரியார் எனும்நிலைமை
தலைக்கீடா ஈசர்கழல்
முறைபுரிந்த முன்னுணர்வு
மூளஅழத் தொடங்கினார்
நிறைபுனல்வா விக்கரையில்
நின்றருளும் பிள்ளையார். **#1958**

மறை முனிவராய சிவபாத இருதயர் நீருள் முழுகவும், அவரைக் கண்ணால் காணாமையால் சிறிது பொழுதும் தரித்திருக்க மாட்டார் என்ற காரணத்தைக் காட்டி, சிவபெருமானின் திருவடிகளை முறையாக இடைவிடாமல் எண்ணியிருந்த முன் நினைவு எழுந்ததால், நிறைந்த நீரையுடைய பொய்கைக் கரையில் நின்றிருந்த பிள்ளையார் அழத் தொடங்கினார்.

விளக்கவுரை

தலைக்கீடு - காரணமாக.

கண்மலர்கள் நீர்ததும்பக்
கைம்மலர்க ளாற்பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய்
மணியதரம் புடைதுடிப்ப
எண்ணில்மறை ஒலிபெருக
எவ்வுயிரும் குதூகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம்
பொருமிஅழு தருளினார். **#1959**

கண்களாகிய மலர்களிலிருந்து நீர் வெளிப்படக் கைம்மலர்களால் அவற்றைப் பிசைந்து, அழகிய தாமரை மலரும் சிவந்த கொவ்வைக் கனி போன்ற திருவாயில் அழகிய உதடுகள் துடிக்க, எண்ணில்லாத மறைகளின் ஒலி பெருகவும், எல்லா உயிர் களும் களிப்படையவும், புண்ணியக் கன்றைப் போன்ற பிள்ளையார் பொருமி அழலானார்.

விளக்கவுரை

மணிஅதரம் - அழகிய உதடுகள்.

மெய்ம்மேற்கண் துளிபனிப்ப
வேறெங்கும் பார்த்தழுவார்
தம்மேலைச் சார்புணர்ந்தோ
சாரும்பிள் ளைமைதானோ
செம்மேனி வெண்ணீற்றார்
திருத்தோணிச் சிகரம்பார்த்து
அம்மேஅப் பாஎன்றென்று
அழைத்தருளி அழுதருள. **#1960**

தம் திருமேனியின் மீது கண்ணீர்த் துளிகள் வீழ, தம்மைச் சூழவுள்ள இடங்களை யெல்லாம் பார்த்து அழும் பிள்ளை யார், தம் முன்னைச் சார்பை உணர்ந்தமையாலோ அல்லது அது பொழுது இருந்த பிள்ளைமைச் சார்பாலோ, அறியோம். செம்மேனி யில் வெண்ணீற்றையுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருத்

தோணிபுரத்தின் சிகரத்தைப் பார்த்து `அம்மே! அப்பா!' என்று அழுத ருளியவாறே அழைத்தருளினாராக,

விளக்கவுரை

மேலைச் சார்பு - முன்னைய தொடர்பு. மறக்குமாறு இலாதிருந்த உணர்வு: `சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின்' *(குறள், 359)* என வரும் திருமறையும் காண்க, பாடல் *55*ஐயும் காண்க. திருத் தோணிபுரச் சிகரம் - தோணிபுரக் கோயிலின் உச்சி. தோணிபுரத் தின்கண் வீற்றிருக்கும் சிகரம் என்றலுமாம். சிகரம் - சிவபெருமான்: திருவைந்தெழுத்துள் சிகரம் சிவபெருமானைக் குறிக்குமாற்றான் இவ்வாறு பொருள் கோடலுமொன்று. அழைத்தருளி அழுதருள என ஈரிடத்தும் அருள எனும் சொற் பெய்தார்: உயிர்களனைத்தும் இறை வனை நோக்கி அழவும் வேண்டும், அழைக்கவும் வேண்டும் என்பதை அருளுரையாகக் கோடற்கு. `அழுகேன் நின்பால்', `ஆரூரா என் றென்றே அலறா நில்லே' *(தி.6 ப.31 பா.3,)* எனவரும் திருவாக்கு களையும் காண்க.

அந்நிலையில் திருத்தோணி
வீற்றிருந்தார் அருள்நோக்கால்
முன்நிலைமைத் திருத்தொண்டு
முன்னியவர்க் கருள்புரிவான்
பொன்மலைவல் லியுந்தாமும்
பொருவிடைமே லெழுந்தருளிச்
சென்னியிளம் பிறைதிகழச்
செழும்பொய்கை மருங்கணைந்தார். **#1961**

அதுபொழுது திருத்தோணியில் வீற்றிருக்கும் சிவபெருமான் அருள் நோக்கம் செய்தலால், முன்னைநிலையை நினைந்த அவருக்கு அருள்செய்யும் பொருட்டாக, பொன்மலை வல்லியான திருநிலைநாயகி அம்மையாரும் தாமும், பொருந்துதற் குரிய விடையின் மேல் இவர்ந்தருளி, தலையில் சூடிய இளம்பிறை விளங்கித் தோன்ற, செழுமையான அப்பொய்கையின் அருகில் அடைந்தருளினார்.

விளக்கவுரை

இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

திருமறைநூல் வேதியர்க்கும்
தேவியர்க்கும் தாங்கொடுத்த
பெருகுவரம் நினைந்தோதான்
தம்பெருமைக் கழல்பேணும்
ஒருநெறியில் வருஞானங்
கொடுப்பதனுக் குடனிருந்த

அருமறையா ளுடையவளை
அளித்தருள அருள்செய்வார். #1962

நான்மறைகளில் வல்ல அந்தணரான சிவபாத இருதயருக்கும் அவருடைய மனைவியாரான பகவதியாருக்கும், தாம் முன் வழங்கியருளிய பெருவரத்தை நிறைவு செய்ய எண்ணியதனால் போலும், தம் பெருமையுடைய திருவடிகளையே போற்றுகின்ற ஒருமையான நெறியில் நிற்க வரும் சிவஞானத்தைக் கொடுப்பதற் காகத் தம்முடன் இருந்த, அரிய மறைகளையே தம் வடிவமாகக் கொண்டு உயிர்களை ஆட்கொண்டருளுகின்ற ஞான முதல்வியா ரான திருநிலை நாயகி அம்மையாரை அளித்தருளுமாறு அருள் செய்வாராகி,

விளக்கவுரை

முன்வரம் அருளியது *19, 20*ஆவது பாடல்களில் காண்க. ஒருநெறியில் வருஞானம் - இறைவனை ஒரு நெறிய மனத்துடன் வழிபட்டதால் வரும் ஞானம், `ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன்' *(தி.1 ப.1 பா.11)* எனப் பிள்ளையார் தாமே அருளி இருப்பதும் காண்க. மறைவடிவு கொள்ளுதலும் உயிர்களை ஆட் கொள்ளுதலும் இறைவன் தன் அருள் வயத்தாலாம். அவ்வருளே அம்மையாதலின் `அருமறை யாளுடையவளை' என்றார். `பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை' *(தி.8 ப.7 பா.14)* `அவளால் வந்த ஆக்கம்இவ் வாழ்க்கை யெல்லாம்' *(சித்தி யார், சுப. முதற்சூத்.69)* எனவரும் திருவாக்குகளையும் காண்க.

அழுகின்ற பிள்ளையார்
தமைநோக்கி அருட்கருணை
எழுகின்ற திருவுள்ளத்
திறையவர்தாம் எவ்வுலகும்
தொழுகின்ற மலைக்கொடியைப்
பார்த்தருளித் துணைமுலைகள்
பொழிகின்ற பாலடிசில்
பொன்வள்ளத் தூட்டென்ன. #1963

அழுகின்ற பிள்ளையாரைப் பார்த்து, திருவருட் கருணை பொழியும் உள்ளம் கொண்டவராய சிவபெருமான், எவ்வு லகும் தொழநிற்கும் கொடிபோன்ற திருநிலைநாயகி அம்மையாரைப் பார்த்தருளி, `இரு மார்பகங்களிலிருந்தும் பொழியும் பாலைப் பொற் கிண்ணத்தில் ஏற்று இப் பிள்ளைக்கு ஊட்டுக!' என்று அருளிச் செய்ய,

விளக்கவுரை

****

ஆரணமும் உலகேழும்
ஈன்றருளி அனைத்தினுக்கும்
காரணமாய் வளம்பெருகு
கருணைதிரு வடிவான
சீரணங்கு சிவபெருமான்
அருளுதலும் சென்றணைந்து
வாரிணங்கு திருமுலைப்பால்
வள்ளத்துக் கறந்தருளி. **#1964**

மேற் சொன்னவாறு பெருமான் கூறியருளவும், மறைகளையும் ஏழுலகங்களையும் பெற்றருளி எப்பொருளுக்கும் மூலகாரணமாய் நிற்பவரும், வளம் பெருகும் கருணையே தம் வடி வமாய்க் கொண்டவருமான சிறப்புடைய திருநிலை நாயகி அம்மை யார், பிள்ளையார் அருகில் சென்று, கச்சணிந்த தம் திருமுலைப் பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்தருளி,

விளக்கவுரை

அம்மையார் உண்ணா முலையார் ஆதலின், `பாலடி சில் பொன் வள்ளத் தூட்டென்ன' இறைவனும் அருள் செய்தார்; அம்மையாரும் அவ்வாறே செய்தருளினார்.

எண்ணரிய சிவஞானத்
தின்னமுதம் குழைத்தருளி
உண்ணடிசில் எனவூட்ட
உமையம்மை எதிர்நோக்கும்
கண்மலர்நீர் துடைத்தருளிக்
கையிற்பொற் கிண்ணமளித்
தண்ணலைஅங் கழுகைதீர்த்
தங்கணனார் அருள்புரிந்தார். **#1965**

திருநிலை நாயகி அம்மையார், நினைத்தற்கு அரிய சிவஞானமாய இனிய அமுதத்தைப் பாலுடனே குழைத்தருளி, தம்மை நோக்கி நிற்கும் பிள்ளையாரின் கண்ணீரைத் துடைத்தருளி, `பாலமுதத்தை உண்பாயாக!' என்று உண்ணச் செய்ய, பெருமை யுடைய பிள்ளையாரை அங்கு அழுகை தீர்த்துச் சிவபெருமான் அருள் செய்தார்.

விளக்கவுரை

`போதையார் பொற்கிண்ணத்து அடிசில்' *(தி.3 ப.24 பா.2)* எனப் பிள்ளையாரும்; `ஞான போனகம் அருளட்டிக் குழைத்த' *(தி.11 ப.27 பா.1 வரி 26)* எனப் பட்டினத்து அடிகளும், `பொற்கிண் ணத்தின் ஞான வமிர்தளித்த' *(தி.11 ப.34 பா.73)* என நம்பியாண்டார் நம்பிகளும்

அருளிய திருவாக்குகள் இவ்வரலாற்றிற்கு அரணா கின்றன. இந்நான்கு பாடல்களும் ஒரு முடிபின.

யாவருக்குந் தந்தைதாய்
எனுமிவர்இப் படியளித்தார்
ஆவதனா லாளுடைய
பிள்ளையா ராய்அகில
தேவருக்கும் முனிவருக்குந்
தெரிவரிய பொருளாகும்
தாவில்தனிச் சிவஞான
சம்பந்த ராயினார். #1966

எவ்வுயிர்க்கும் தந்தையும் தாயுமாக விளங்கும் அம்மையப்பர் வெளிப்பட்டுத் தாமே இவ்வாறு அளித்தமையின், `ஆளுடைய பிள்ளையார்' என்னும் திருப்பெயரை உடையவராகி தேவர்கள் முனிவர்கள் முதலிய யாவரும் தெளிந்து அறிய இயலாத, மெய்ப் பொருளாகிய, எக்காலத்தும் கெடுதல் இல்லாத, ஒப்பில்லாத சிவத்தை உணரும் நிலையாய சிவஞானத்தை உணர்ந்து வாழும் அருள் பெற்றவராய நிலையில், சிவஞானசம்பந்தர் என்ற திருப் பெயரை உடையவராயினார்.

விளக்கவுரை

****

சிவனடியே சிந்திக்குந்
திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும்
பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம்
உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர்
தாம்உணர்ந்தார் அந்நிலையில். #1967

சிவபெருமான் திருவடிகளைச் சிந்தித்து நிற்குமாற்றான் சிவமாந்தன்மை பெருகச் செய்யும் ஒப்பில்லாத கலை ஞானத்தையும், பிறவிக்குக் காரணமாய மலக்குற்றத்தை வாராமல் தடுக்கும் மேலாய ஞானமான உணர்வரிய மெய்ஞ்ஞானத்தையும் தவ முதல்வரான சிவஞானசம்பந்தர் அந்நிலையில் உணர்ந்தார்.

விளக்கவுரை

சிவத்தைப் பெறவும் பவத்தை விடவும் பெறுவதே ஞானமாகும். சிவபரம்பொருளே மேலாய பொருள் என்றுணரவும் அதனோடு

இடையீடின்றி ஒன்றுபட்டு நிற்கவும் கலைஞானம் துணைபுரிவதாகும். ஆதலின் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானத்தை உவமையிலாக் கலைஞானம் என்றார். உலகியல் அறிவையுணர்த்தும் நூல்களினும் மெய்ப்பொருளையுணர்த்தும் நூல்கள் உயர்வும் சிறப்பும் உடையவாதலின் அவற்றை `உவமை யிலாக் கலைஞானம்' என்றார். பிறவிப் பிணியை அறுத்தற்குரிய மெய்யுணர்வு இருப்பினும் அதனை விடுதற்குக் காலம் வேண்டும். பழக்கம் தவிரப் பழகுதல் அத்துணை எளிதன்று. ஆதலின் `அறமாற்றும்' என்ற தொடரால் குறித்துக் காட்டினார். ஆதலின், இதனை `உணர்வரிய மெய்ஞ்ஞா னம்' என்றார். இவ்வாறு நிரல் நிரையாகக் கொண்டு உரைசெய்தற்கு,
மேவரு ஞானம் இரண்டவற் றொன்று விமலனார் பாததா மரையே
ஓவறு மன்பின் உணர்திரு வளிக்கும் ஒப்பிலா உயர்கலை ஞானம்
தாவரும் பவத்தை வேரொடுங் களையும் தக்கமெய்ஞ் ஞானமொன்
றிவற்றால் சாவதும் பிறப்புந் தணப்புறச் சிவத்தைச் சார்ந்தது
வாய்நிற்றல் யோகம். -திருத்தணிகைப் புராணம், பா - *353* எனவரும் பாடல் துணை செய்கின்றது.

எப்பொருளும் ஆக்குவான்
ஈசநே எனுமுணர்வும்
அப்பொருள்தான் ஆளுடையார்
அடியார்கள் எனுமறிவும்
இப்படியா லிதுவன்றித்
தம்மிசைவு கொண்டியலும்
துப்புரவில் லார்துணிவு
துகளாகச் சூழந்தெழுந்தார். **#1968**

எப்பொருள்களையும் இயக்குபவன் ஈசனே என் னும் உணர்வும், அப்பொருளாவது ஆளுடையாரும் அவருடைய அடியார்களும் ஆவர் என்ற அறிவும் இன்றித் தத்தம் அறிவிற்கு ஏற்றவாறு எண்ணி இயல்கின்ற தூய்மையில்லாதவரின் துணிவுகளை எல்லாம் தூளாகுமாறு எண்ணி எழுந்தார்.

விளக்கவுரை

இப்பாடற்கண் குறித்த உணர்வும் அறிவும் முன்னைய பாடலில் முதற்கண் குறிக்கப்பட்ட இருவகை ஞானங்களின் பயனாய், முறையே விளைவனவாம். எப்பொருளும் என்பதால் உயிரும் தளைகளும், ஆக்குவான் ஈசனே என்பதால் இறையும் ஆகிய முப்பொருள்களும் குறிக்கப் பட்டன. ஆக்குதல் - உயிரைப்பற்றிய மலம் முதலிய குற்றங்களைப் படைத்தல் முதலிய ஐந்தொழில்களானும் நீக்கிச் சிவப்பேறும் நல்வாழ்வும் பெறச் செய்தலாம். அப்பொருள்தாம் எனும்

அறிவு, `மால்அற நேயமும் மலிந்தவர் வேடமும் ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே' (*சிவஞானபோதம், சூ.12*) என்னும் ஞானநூல் கூற்றான் அறியலாம். இவ்வுணர்வும் அறிவுமே சிவஞானபோதத்தின் பயனியலில் குறிக்கப் பெற்றுள்ளன. சிவப்பேற்றையடையும் பேரு ணர்வு *11*ஆவது நூற்பாவிலும், மலநீக்கமாம் பயன் *10, 12*ஆம் நூற் பாக்களிலும் குறிக்கப் பெறுகின்றன.

சீர்மறையோர் சிவபாத
இருதயரும் சிறுபொழுதில்
நீர்மருவித் தாஞ்செய்யும்
நியமங்கள் முடித்தேறிப்
பேருணர்விற் பொலிகின்ற
பிள்ளையார் தமைநோக்கி
யார்அளித்த பாலடிசில்
உண்டதுநீ எனவெகுளா. **#1969**

சிறப்புடைய சிவபாத இருதயரும் சிறிது நேரத்தில் நீராடித் தாம் செய்யும் கடமைகளை எல்லாம் முடித்துக் கொண்டு, கரையில் ஏறிப் பேருணர்வில் விளங்கும் தம் மகனாரைப் பார்த்து `நீ யார் தந்த பாலை உண்டாய்' எனச் சினக்க,

விளக்கவுரை

****

எச்சில்மயங் கிடவுனக்கீ
திட்டாரைக் காட்டென்று
கைச்சிறியது ஒருமாறு
கொண்டோச்சக் காலெடுத்தே
அச்சிறிய பெருந்தகையார்
ஆனந்தக் கண்துளிபெய்
துச்சியின் மேல் எடுத்தருளும்
ஒருதிருக்கை விரற்சுட்டி. **#1970**

`எச்சில் உண்டாக உனக்கு இதை அளித்தவரை எனக்குக் காட்டு' எனச் சிவபாத இருதயர் உரைத்துச் சிறிய ஒரு கோலைக் கையில் எடுத்து அடிப்பவரைப் போல் ஓச்சிட, அச்சிறிய பெருந்தகையாரான பிள்ளையாரும், ஒருகாலை எடுத்து நின்று கண்களினின்றும் இன்பவெள்ளம் பொழிய உச்சிமேல் தூக்கிய திருக்கையில் ஒருவிரலால் சுட்டிக் காட்டி,

விளக்கவுரை

****

விண்ணிறைந்த பெருகொளியால்
விளங்குமழ விடைமேலே
பண்ணிறைந்த அருமறைகள்
பணிந்தேத்தப் பாவையுடன்
எண்ணிறைந்த கருணையினால்
நின்றாரை எதிர்காட்டி
உண்ணிறைந்து பொழிந்தெழுந்த
உயர்ஞானத் திருமொழியால். **#1971**

விண்ணில் நிறைந்து பெருகும் ஞானஒளி கொண்டு, ஆனேற்றின்மீது, பண்சுமந்த அரிய மறைகள் வணங்கிப் போற்ற, உமையம்மையாருடன் எண்ணிறந்த கருணைப் பெருக்கால் எழுந்தருளி நிற்கும் திருத்தோணிபுரத்து இறைவரை எதிரே காட்டி, உள் நிறைந்து தேக்கி மேல் எழுந்து பொழிந்த சிவஞானத் திருவாக் கினால்,

விளக்கவுரை

****

எல்லையிலா மறைமுதல்மெய்
யுடன்எடுத்த எழுதுமறை
மல்லல்நெடுந் தமிழாலிம்
மாநிலத்தோர்க் குரைசிறப்பப்
பல்லுயிருங் களிகூரத்
தம்பாடல் பரமர்பால்
செல்லுமுறை பெறுவதற்குத்
திருச்செவியைச் சிறப்பித்து. **#1972**

எண்ணிறந்த மறைகளின் முதல் எழுத்தை மெய்யுடனே தொடங்கி எழுதும் மறையை, வளம் வாய்ந்த நெடுந் தமிழால் இப்பேருலகில் உள்ளவர்க்கு உரை சிறந்து பயனளிக்க, பல உயிர்களும் இன்பம் அடைய, தம் திருப்பாடல் இறைவரிடம் செல்கின்ற வகையைப் பெறும் பொருட்டாய்த் திருச்செவியைச் சிறப்பித்து,

விளக்கவுரை

மறைமுதல் - ஓங்காரம். மெய் - த் என்னும் மெய்; சிவசக்தியின் உண்மைநிலை. இது காயத்திரி மந்திரங்களின் இறுதி எழுத்தாகவும், சாந்தோக்கியம் முதலிய உபநிடதங்களில் பிரமப் பொருளைக் குறிக்கும் சொல்லாகவும் அமைந்துள்ளது. சத் என்பதன் இறுதி மெய்யாகிய `த்' என்பது சிவமூலம் என வாயு சங்கிதை குறிக்கும் என்பர். த் + ஓ = தோ என்பதாகும். மல்லல் - வளம்; உயிர் உய்திபெறுதற்குரிய வளம். `தோடுடைய செவியன்' எனச் சிறப்பித் தது பிள்ளையார் தம்

திருப்பாடலை ஏற்கும் இறைவனின் உடற்கருவி யாய செவியாய் இருத்தல் பற்றியாம் என்பது ஆசிரியர் தரும் விளக்க மாகும். `திருவுலாப் புறம் பாடினேன்; திருச்செவிசாத் திடப் பெறல் வேண்டும்' *(தி.12 சரு.13 பா.47)* எனவரும் திருவாக்கும் காண்க.

செம்மைபெற எடுத்ததிருத்
தோடுடைய செவியன்எனும்
மெய்ம்மைமொழித் திருப்பதிகம்
பிரமபுரம் மேவினார்
தம்மையடை யாளங்க
ளுடன்சாற்றித் தாதையார்க்
கெம்மையிது செய்தபிரான்
இவனன்றே எனவிசைத்தார். **#1973**

செம்மை பொருந்தும்படி தொடங்கிய, `தோடு டைய செவியன்' என்ற மெய்ம் மொழியான திருப்பதிகத்தில், திருப் பிரமபுரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை அடையா ளங்களுடன் சொல்லி `எம்மை இது செய்தவன் இப்பெருமான் அன்றே' (தி.1 ப.1) என்று தந்தையாருக்குக் கூறியருளினார்.

விளக்கவுரை

அடையாளங்கள் - தோடுடைய செவியன், விடை யேறி, மதிசூடி, பொடிபூசி என்பனவாம். திருமுறைகளில் மூத்த திருப்பதிகம் எனக் காரைக்கால் அம்மையாரால் அருளப்பெற்ற `கொங்கை திரங்கி' *(தி.11 மூத்த.1)* எனும் பதிகம் நட்டபாடைப் பண்ணில் அமைந்தது போல, சிவஞானசம்பந்தரின் இம்முதற்பதிகமும் நட்டபாடைப் பண்ணில் அமைந்தது திருவருட் செயலாகும். இவ்வைந்து பாடல்களும் ஒரு முடிபின.

மண்ணுலகில் வாழ்வார்கள்
பிழைத்தாலும் வந்தடையின்
கண்ணுதலான் பெருங்கருணை
கைக்கொள்ளும் எனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்கன்
எடுத்துமுறிந் திசைபாட
அண்ணலவற் கருள்புரிந்த
ஆக்கப்பா டருள்செய்தார். **#1974**

இம்மண்ணுலகத்தில் வாழும் உயிர்கள் பிழையைச் செய்தாலும், அவை தம்மை வந்து அடையின் நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் தம் பெருங்கருணையினால் அவற்றை மன்னித்தருளிக் கைகொடுத்து ஆள்வார் என்பதைக் காட்டவே, நல்லுணர்வு இல்லாதவன் ஆன

வன்கண்மையுடைய அரக்கனான இராவணன் திருக்கயிலை மலையை எடுக்க, உடல் முறிவுபட்டுப் பின் இசையைப் பாடப் பெருமையுடைய இறைவர் அவனுக்கும் அருள்செய்த ஆக்கப்பாடுகளை அந்தத் திருப்பதிகத்துள் வைத்துப் பாடினார்.

விளக்கவுரை

பதிகந்தொறும் வரும் எட்டாவது பாடலில் இறைவன் இராவணனுக்குச் செய்த அருளிப்பாட்டைக் குறிப்பிடுவர் பிள்ளை யார். இதற்குக் காரணம் தவறு செய்த உயிர்கள் உண்மையிலேயே அத்தவறை உணர்ந்து, தவறு செய்தமைக்குப் பொறுத்தற்கும், இனித் தவறு செய்யாமைக்கு உறுதிப்பாடும் கொண்டு இறைவனை உள்ளன் போடு வேண்டின், இறைவன் மன்னித்தருளுவன் என்பதை நன்குணர் வாம். எனவே பாவமன்னிப்பு என்பது நம் நெறிக்கு இன்று நேற்றன்று தோற்றமில் காலத்தேயே உண்டு எனினும், பிறபிற மதம் போல அத்துணை எளிமையுடையதன்று. `எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல் மற்றன்ன செய்யாமை நன்று' *(குறள், 655)* என்பதே நம் அறமாம்.

தொழுவார்க்கே அருளுவது
சிவபெருமான் எனத்தொழார்
வழுவான மனத்தாலே
மாலாய மாலயனும்
இழிவாகுங் கருவிலங்கும்
பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்தும்
துதித்துய்ந்த படிவிரித்தார். **#1975**

தம்மை வணங்குபவருக்கே அருளுவர் இறைவர் என்பதைத் தெரிந்து கொண்டும் தொழாதவராகி, தவறான மனத்தால் மயக்கம் கொண்ட மாலும் அயனும், இழிந்த பன்றியும் அன்னப் பற வையுமாய்க் கீழும் மேலும் போய்க் காண மாட்டாமல் விழுவார்க ளாய்ப் பின்னர் திருவைந்தெழுத்தைப் போற்றி உய்தி பெற்றமையை மேலே விரிவாய் எடுத்து உரைத்தார்.

விளக்கவுரை

இது பதிகந்தொறும் வரும் ஒன்பதாவது பாடலின் கருத்தாகும். வழுவான மனம் - யான் காண்பேன் என முனைப்புடன் சென்ற மனம். உயிர்கள் இவ்வநுபவத்தைக் கருதி, யான் எனது என்னும் செருக்கற வேண்டும் என்பதே இப்பாடற் கருத்தாகும். யான்செய்தேன் பிறர்செய்தா ரென்னதியா னென்னும் இக்கோணை ஞானஎரி யால்வெதுப்பி

நிமிர்த்துத் தான்செவ்வே நின்றிடஅத் தத்துவன்தான் நேரே
தனையளித்து முன்னிற்கும் வினையொழித் திட்டோடும் நான்செய்தே
னெனுமவர்க்குத் தானங் கின்றி நண்ணுவிக்கும் போகத்தைப்
பண்ணுவிக்குங் கன்மம் ஊன்செய்யா ஞானந்தா னுதிப்பி னல்லால்
ஒருவருக்கும் யானெனதிங் கொழியா தன்றே. -சித்தி. பத்தாம் சூத்.*2*
எனவரும் சித்தியார் கூற்றும் காண்க.

வேதகா ரணராய
வெண்பிறைசேர் செய்யசடை
நாதன்நெறி அறிந்துய்யார்
தம்மிலே நலங்கொள்ளும்
போதமிலாச் சமண்கையர்
புத்தர்வழி பழியாக்கும்
ஏதமே யெனமொழிந்தார்
எங்கள்பிரான் சம்பந்தர். **#1976**

மறைகளை அருளிய முன்னவரான பிறைச் சந்திரனை அணிந்த சிவந்த சடையையுடைய சிவபெருமானின் நெறியை, அறிந்து அடைந்து உய்தி பெறாதவரான புறச் சமயத்தாருள், நன்மையில்லாத சமணர்களும், புத்தர்களும் ஆன இவர்களின் நெறி கள் பழியை விளைக்கும் கேடுகளேஆம் என எம்பெருமானாகிய ஞானசம்பந்தர் மொழிந்தருளினார்.

விளக்கவுரை

இது பதிகந்தொறும் வரும் பத்தாம் பாடற்கருத்தாகும். `பரசமயங்கள் செல்லாப் பாக்கியம் பண்ணொணாதே' *(சிவஞா. சித்தி. சூ.3 பா.90)* எனவரும் ஞானநூற் பொருளைத் தெரிந்து தெளிந்து கடைப்பிடித்தல் கடனாம்.

திருப்பதிகம் நிறைவித்துத்
திருக்கடைக்காப் புச்சாத்தி
இருக்குமொழிப் பிள்ளையார்
எதிர்தொழுது நின்றருள
அருட்கருணைத் திருவாள
னார்அருள்கண் டமரரெலாம்
பெருக்கவிசும் பினிலார்த்துப்
பிரசமலர் மழைபொழிந்தார். **#1977**

திருப்பதிகத்தை நிறைவாகப் பாடித் திருக்கடைக் காப்பையும் அருளிய மறைமொழியையுடைய பிள்ளையார் இறைவ னைத் தொழுது நின்றாராக, அருட் கருணையுடைய சிவபெருமா னின் நிறைந்த அருளைக் கண்டு, தேவர்கள் விரிந்த விண்ணில் மகிழ் வொலி எழுப்பித்

தேனைச் சொரியும் தெய்வ மலர்களை மழையாய்ப் பொழிந்தனர்.

விளக்கவுரை

இறைவன் அருளியது திருமறையாதல் போலப் பிள் ளையார் அருளியதும் மறைமொழியேயாம். பதிகம் நிறைவு பெற்ற தும், அதனை முடித்துக் காட்டும் வகையில், தமது பெயர், பதிகப் பயன் முதலியவற்றைத் தம் இலச்சினையாகக் கூறியருளும் பாடல் திருக் கடைக்காப்பாகும்.

வந்தெழும்மங் கலமான
வானதுந் துபிமுழக்கும்
கந்தருவர் கின்னரர்கள்
கானவொலிக் கடல்முழக்கும்
இந்திரனே முதல்தேவர்
எடுத்தேத்தும் இசைமுழக்கும்
அந்தமில்பல் கணநாதர்
அரஎனுமோ சையின்அடங்க. **#1978**

அழிவற்ற சிவகணநாதர்கள் பலர் முழக்கும் `அரகர' என்ற ஓசையுள் அடங்குமாறு, மங்கலமான தேவமுழக்கும், கந்தருவர், கின்னரர் முதலான தேவ இனத்தாரின் கடல் போன்று முழங்கும் ஒலியும், இந்திரன் முதலிய தேவர்கள் எடுத்துப் போற்றும் இசைகளின் ஒலியும் ஆகிய இத்தகைய ஒலிகளின் தொகுதி இது பொழுது ஒலிப்பதாயின.

விளக்கவுரை

****

மறைகள் கிளர்ந்தொலி வளர
முழங்கிட வானோர்தம்
நிறைமுடி உந்திய நிறைமணி
சிந்திட நீள்வானத்
துறையென வந்துல கடைய
நிறைந்திட ஓவாமெய்ப்
பொறைபெரு குந்தவ முனிவர்
எனுங்கடல் புடைசூழ. **#1979**

மறைகள் எழுந்து ஒலிபெருக முழங்கவும், தேவர் களின் நிறைந்த தலையணிகள் (கிரீடங்கள்) ஒன்றுடன் ஒன்று நெருக் குண்டு நிரல்பட அமைந்த மணிகள் சிதற, அவை நீண்ட வானத்தினின் றும் விழும் பனிநீர்த் துளிகள் போல் வந்து உலகெங்கும் நிறையவும், இடையறாது மெய்ம்மைக்கண் நிற்றலும் அமைதி பெருகவும் வாழும் தவமுனிவர்களின் கூட்டமாகிய கடல் இருமருங்கும் சூழவும்,

விளக்கவுரை

****

அணைவுற வந்தெழும் அறிவு
தொடங்கின அடியார்பால்
இணையில் பவங்கிளர் கடல்கள்
இகந்திட இருதாளின்
புணையருள் அங்கணர் பொருவிடை
தங்கிய புணர்பாகத்
துணையொ டணைந்தனர் சுருதி
தொடர்ந்த பெருந்தோணி. **#1980**

தம்மை வந்து அடையும் பக்குவமும் பத்திமையும் உடைய அடியவரிடத்தினின்றும் ஒப்பில்லாத வலிமையுடைய பிறவியாகிய பெருங்கடல்கள் நீங்குமாறு தம் இரு திருவடிகளான இனிய புணையை அருளும் கருணையுடைய திருத்தோணியப்பர், போர் செய்தற்குரிய வலிமையுற்ற ஆனேற்றின் மேல் தம்முடன் அமர்ந்தருளும் துணைவியாருடனே, மறைகள் தொடர்ந்து முழங்கும் திருத்தோணிச் சிகரத்திற்கு எழுந்தருளினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அண்ணல் அணைந்தமை கண்டு
தொடர்ந்தெழும் அன்பாலே
மண்மிசை நின்ற மறைச்சிறு
போதகம் அன்னாரும்
கண்வழி சென்ற கருத்து
விடாது கலந்தேகப்
புண்ணியர் நண்ணிய பூமலி
கோயிலின் உட்புக்கார். **#1981**

சிவபெருமான் திருக்கோயிலில் எழுந்தருளப் பெற்றதைப் பார்த்து, அப்பெருமானைத் தொடர்ந்து எழும் அன்பி னால், கண்களின் வழியே சென்ற கருத்துவிடாது கலந்ததால், பொய் கைக் கரையில் நின்றருளிய மறைச் சிறுவரான யானைக்கன்று போன்ற பிள்ளையாரும், புண்ணிய மூர்த்தியாய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் அழகிய திருத்தோணித் திருக்கோயிலுக்குள் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

அம்மையப்பராய்க் காட்சி கொடுத்து ஞானப்பாலும் ஊட்டியதால்
கண்வழிப் புகுந்த அக்காட்சி, உள்ளத்தே பதிந்தும் கவர்ந்தும்

இருந்தமையினால் அவ்வம்மையப்பர் எழுந்தருளியிருக் கும், தோணிக்குள் சென்று, மீண்டும் கண்டு வணங்கி மகிழ எண் ணினார். `கண்வழிப் புகுந்த அக்கள்வனே கொலாம்' எனவரும் திருவாக்கும் காண்க.

ஈறில் பெருந்தவம் முன்செய்து
தாதை யெனப்பெற்றார்
மாறு விழுந்த மலர்க்கை
குவித்து மகிழ்ந்தாடி
வேறு விளைந்த வெருட்சி
வியப்பு விருப்போடும்
கூறும் அருந்தமி ழின்பொரு
ளான குறிப்போர்வார். **#1982**

அளவற்ற தவத்தைச் செய்து இவருடைய தந்தை என அழைத்தற்குரிய சிவபாத இருதயர், பிள்ளையாரை அடிக்க ஓச்சிய சிறுகோலும் நெகிழ, அம்மலர்க் கைகளைக் கூப்பியவாறு மகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடி, வேறாக விளைந்தனவாய வெருட்சி, வியப்பு, விருப்பு என்ற இவற்றுடன் கூடியவராய்த் தம் பிள்ளையார் எடுத்துச் சொல்லும் அருந்தமிழின் பொருளான குறிப்பை எண்ணு வாராகி,

விளக்கவுரை

மாறு - சிறிய கோல். விழுந்த - தானே கையினின்றும் விழ; `விற்கையினின்று இடைவீழ' என்புழிப்போல. வேறு விளைந்த - முன் இருந்த மனநிலைக்கு வேறாக. வெருட்சி - அச்சம், சினம் கொண்டதனால் ஆயது. வியப்பு - தாம் இதுகாறும் கண்டறியாத இறைக் காட்சியைப் பிள்ளையார் காட்டக் கண்ட வியப்பு. விருப்பு - உலகியற் பாங்கால் கொண்ட விருப்பினும், அருளியற் பாங்கால் தோன்றிய பெரு விருப்பு.

தாணு வினைத்தனி கண்டு
தொடர்ந்தவர் தம்மைப்போல்
காணுதல் பெற்றில ரேனும்
நிகழ்ந்தன கண்டுள்ளார்
தோணி புரத்திறை தன்னரு
ளாதல் துணிந்தார்வம்
பேணு மனத்தொடு முன்புகு
காதலர் பின்சென்றார். **#1983**

சிவபெருமானைத் தாமே தனியே கண்டு அவரைத் தொடர்ந்தவரான பிள்ளையாரைப் போல், தாம் அவ் இறைவரைக் காணாராயினும், நிகழ்ந்தனவான அடையாளக் குறிக ளையும் திருப்பதிகத் தமிழ்பாடிச்

சுட்டிக் காட்டியதையும் கண்டவராத லால், இது தோணிபுர இறைவரின் திருவருள் என்பதை உணர்ந்து, மீதூர்ந்த அன்பு பொருந்திய மனத்துடன் தம்முன்பு சென்று கொண்டிருக்கும் திருமகனாரைத் தொடர்ந்து சென்றார்.

விளக்கவுரை

****

அப்பொழுது அங்கண் அணைந்தது
கண்டவர் அல்லாதார்
முப்புரி நூன்மறை யோர்கள்
உரோம முகிழ்ப்பெய்தி
இப்படி யொப்பதொர் அற்புதம்
எங்குள தென்றென்றே
துப்புறழ் வேணியர் கோயிலின்
வாயில் புறஞ்சூழ. **#1984**

அதுபொழுது அங்கு நிகழ்ந்தனவற்றைக் கண்டவர்களும், காணாதநிலையில் கேட்டவர்களும், முப்புரிநூல் அணிந்த மறையவர்களும் `இவ்வாறாய அற்புத நிகழ்ச்சி வேறு யாண்டு நிகழ்ந்துள்ளது?' எனக் கூறியவாறு, பவளம் போன்ற சிவந்த சடையையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருத்தோணிக் கோயிலின் திருவாயில் புறத்தில் வந்து சூழ்ந்தனராக,

விளக்கவுரை

****

பொங்கொளி மால்விடை மீது
புகுந்தணி பொற்றோணி
தங்கி இருந்த பெருந்திரு
வாழ்வு தலைப்பட்டே
இங்கெனை யாளுடை யானுமை
யோடும் இருந்தான்என்
றங்கெதிர் நின்று புகன்றனர்
ஞானத் தமுதுண்டார். **#1985**

ஞான அமுதை உண்ட பிள்ளையார் தாமும், பொங்கும் ஒளியையுடைய ஆனேற்று ஊர்தியில் இவர்ந்து அழகிய பொலிவுமிக்க திருத்தோணியுள் எழுந்தருளியிருக்கும் பெருந்திரு வாழ்வைச் சென்று கூடி, `என்னை ஆளுடைய பெருமான் உமையம் மையாருடன் இங்கு எழுந்தருளியிருந்தான்' என்னும் கருத்துடைய திருப்பதிகத்தை இறைவன் திருமுன்னிலையில் நின்று போற்றி வணங்கினார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகம் தக்கேசிப் பண்ணில் அமைந்த `நறவம் நிறை வண்டு' *(தி.1 ப.74)* எனத் தொடங்கும் பதிகமாகும். இப்பதிகம் முழுதும் `உமையோடு இருந்தானே' என நிறைவு பெறுவதைத் திரு உளம் பற்றியே, ஆசிரியர் இத்தொடரை எடுத்து இயம்புவார் ஆயினர்.

இன்னிசை ஏழும் இசைந்த
செழுந்தமிழ் ஈசற்கே
சொன்முறை பாடு தொழும்பருள்
பெற்ற தொடக்கோடும்
பன்மறை வேதியர் காண
விருப்பொடு பால்நாறும்
பொன்மணி வாயினர் கோயிலின்
நின்று புறப்பட்டார். **#1986**

அன்புடன் ஞான அமுதத்தின் மணம் கமழும் திருவாயையுடைய திருஞானசம்பந்தர், மறைகளை ஓதும் வேதியர் பலரும் காண, இனிய ஏழிசைகளும் பொருந்திய செழுந்தமிழ்த் திருப்பதிகங்களைச் சொன்முறையாகச் சிவபெருமானுக்கே உரியவா கப் பாடுகின்ற திருத்தொண்டாகிய அடிமைத் திறத்தையும் அருளை யும் பெற்ற பிணைப்புடனே கோயிலினின்றும் புறப்பட்டார்.

விளக்கவுரை

****

பேணிய அற்புத நீடருள்
பெற்ற பிரான்முன்னே
நீணிலை யில்திகழ் கோபுர
வாயிலின் நேரெய்தி
வாணில வில்திகழ் வேணியர்
தொண்டர்கள் வாழ்வெய்துந்
தோணி புரத்தவர் தாமெதிர்
கொண்டு துதிக்கின்றார். **#1987**

விரும்பிய அற்புதமான நீடிய திருவருளைப் பெற்ற ஞானப் பிள்ளையாரின் முன்பு, ஒளிபொருந்திய சந்திரனை விடச் சிறந்து விளங்குகின்ற சடையையுடைய சிவபெருமானின் தொண்டர்களும், வாழ்வடையும் திருத்தோணிபுரத்தில் உள்ளவர்க ளும், நீண்ட நிலைகளுடன் விளங்குகின்ற கோயிலின் வாயிலை அடைந்து தாம் கூடி எதிர்கொண்டு பின்வருமாறு போற்றத் தொடங் கினர்.

விளக்கவுரை

****

காழியர் தவமே கவுணியர்
தனமே கலைஞானத்
தாழிய கடலே அதனிடை
யமுதே அடியார்முன்
வாழிய வந்திம் மண்மிசை
வானோர் தனிநாதன்
ஏழிசை மொழியாள் தன்திரு
வருள்பெற் றனையென்பார். **#1988**

`காழிப்பதியில் உள்ளார் தம் தவப்பயனாய்த் தோன்றியவரே! கவுணியரின் செல்வமே! கலைஞானம் நிறைந்த ஆழ்ந்த கடல் போன்றவரே! அக்கடலின் அமுதம் போன்றவரே! அடியார் கண்டு வாழும் பொருட்டு இம்மண்ணுலகத்தின் மீது தோன்றி, வானவரின் ஒப்பற்ற தலைவரான சிவபெருமானும், ஏழிசை மொழியாளாய உமையம்மையாரும் ஆகிய இருவர்தம் திருவருளை யும் ஒருங்கே பெற்றீர்!' என உரைப்பாரும்,

விளக்கவுரை

****

மறைவளர் திருவே வைதிக
நிலையே வளர்ஞானப்
பொறையணி முகிலே புகலியர்
புகலே பொருபொன்னித்
துறைபெறு மணியே சுருதியின்
ஒளியே வெளியேவந்
திறையவன் உமையா ளுடன்அருள்
தரஎய் தினையென்பார். **#1989**

`மறைகளை வளர்க்கும் செல்வமே! மறை நெறியின் நிலையான பொருளே! வளர்கின்ற ஞானம் என்ற கருத் தாங்கிய மேகமே! புகலி நகரத்தவரின் புகலிடமே! அலைமோதும் காவிரித்துறையில் பெறத்தக்க மணியே! மறைகளில் விளங்கும் ஒளியே! சிவபெருமான் உமையம்மையாருடன் எழுந்தருளி வந்து அருள் வழங்கப்பெறும் பேறு பெற்றீர்! என்பாரும்,

விளக்கவுரை

****

புண்ணிய முதலே புனைமணி
அரைஞா ணொடுபோதும்

கண்ணிறை கதிரே கலைவளர்
மதியே கவின்மேவும்
பண்ணியல் கதியே பருவம
தொருமூ வருடத்தே
எண்ணிய பொருளாய் நின்றவர்
அருள்பெற் றனையென்பார். **#1990**

`புண்ணியங்களின் முதலே! மணியணிந்த அரை ஞாணுடன் போந்து காட்சியளிக்கும் கண் நிறைந்த கதிரே! கலைகள் வளரும் சந்திரனே! அழகு பொருந்தும் பண்களுக்கும் பெறற்கரிய கதியே! பருவம் மூன்றாண்டி,ல் மனத்தகத்தது என்றறிவார்களுக்கு உள்நின்று அருளும் பொருளாய் நின்ற சிவபெருமானின் திருவரு ளைப் பெற்றீர்!' என்பாரும் ஆனார்கள்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

என்றினைய பலகூறி இருக்குமொழி
அந்தணரும் ஏனை யோரும்
நின்றுதுதி செய்தவர்தாள் நீள்முடிக்கண்
மேல்ஏந்தி நிரந்த போது
சென்றணைந்த தாதையார் சிவபாத
இருதயர்தாம் தெய்வ ஞானக்
கன்றினைமுன் புக்கெடுத்துப் பியலின்மேற்
கொண்டுகளி கூர்ந்து செல்ல. **#1991**

என இவ்வாறெல்லாம் கூறியருளி, மறை மொழி களையுடைய அந்தணர்களும் மற்ற அடியவர்களும் நின்று போற்றி, அப்பிள்ளையாரின் திருவடிகளைத் தம்முடியில் அணிந்து, நிரல்பட நின்றபோது, தாமே முன்சென்ற தந்தையாரான சிவபாத இருதயர் தெய்வத்தன்மை வாய்ந்த சிவஞானக் குழந்தையான பிள்ளையாரை எடுத்துத் தோளில் சுமந்து பெருமகிழ்வுடனே செல்ல,

விளக்கவுரை

பியலில் - தோளில்.

மாமறையோர் குழாத்தினுடன் மல்குதிருத்
தொண்டர்குழாம் மருங்கு சூழ்ந்து
தாமறுவை உத்தரியந் தனிவிசும்பில்
எறிந்தார்க்குந் தன்மை யாலே
பூமறுகு சிவானந்தப் பெருக்காறு
போத அதன்மீது பொங்கும்

காமர்நுரைக் குமிழியெழுந் திழிவனபோல்
விளங்குபெருங் காட்சித் தாக. **#1992**

சிறந்த மறையவர் கூட்டத்துடன் பெருகிய அடியார்தம் கூட்டமும் சூழ்ந்து, தம் உடையின் மேல் உள்ள ஆடைகளையும் உத்தரியங்களையும் விண்ணில் வீசி மகிழ்வொலி செய்கின்ற தன்மையினால், சீகாழியின் அழகிய தெரு, சிவானந்தமாய வெள்ளம் பெருக்கெடுத்துச் செல்ல, அதன் மேல் பொங்கும் நுரைக் குமிழிகள் மேலெழுவதும் இறங்குவதும் போன்ற காட்சியுடையதாக,

விளக்கவுரை

அறுவை - தம் உடைமீது கட்டப்பெற்றிருக்கும் ஆடை. உத்தரியம் - மேலாடை. மறையவரும் அடியவரும் வீதியில் பெருகச் செல்வது சிவானந்த ஆறு செல்வது போன்றிருந்தது. அவர்கள் தம் மகிழ்ச்சி மீதூர்வால் அறுவையையும் மேலாடையையும் விண்ணில் வீசி மகிழ்வது, அவ்வாற்றின் நுரைகள் மேல் எழுவதும் இறங்குவதும் போன்றிருந்தன.

நீடுதிருக் கழுமலத்து நிலத்தேவர்
மாளிகைமேல் நெருங்கி அங்கண்
மாடுநிறை மடவார்கள் மங்கலமாம்
மொழிகளால் வாழ்த்தி வாசத்
தோடுமலி நறுமலருஞ் சுண்ணமும்வெண்
பொரியினொடுந் தூவி நிற்பார்
கோடுபயில் குலவரைமேல் மின்குலங்கள்
புடைபெயருங் கொள்கைத் தாக. **#1993**

நீடும் சீகாழியில் அந்தணர்களின் மாளிகைமேல் நெருங்கி, அவ்விடத்தின் பக்கத்தில் நிறைந்த மறையோரின் மங்கை யர், உயர்ந்த உச்சியையுடைய பெரிய மலைகளின் மேலே மின்னல் கூட்டம் புடைபெயர்ந்து போகின்ற காட்சியைக் கொண்டதைப் போல், மங்கலமான பெருஞ்சொற்களால் வாழ்த்தியும், மணமுடைய இதழ் களையுடைய புதிய குளிர்ந்த பூக்களையும் சுண்ணப் பொடிகளையும் வெண்ணெல் பொரியுடனே தூவியும் நிற்பாராய்,

விளக்கவுரை

கோடு - மலை. மங்கையர்கள் சுண்ணமும் பொடியும் தூவி மங்கல வாழ்த்தெடுத்து அடைவது, மின் எழும்பொழுது தோன் றும் ஒளி போன்றது என்றார்.

மங்கலதூ ரியந்துவைப்பார் மறைச்சாமம்
பாடுவார் மருங்கு வேதிப்

பொங்குமணி விளக்கெடுத்துப் பூரணகும்
பமும்நிரைப்பார் போற்றி செய்வார்
அங்கவர்கள் மனத்தெழுந்த அதிசயமும்
பெருவிருப்பும் அன்பும் பொங்கத்
தங்குதிரு மலிவீதிச் சண்பைநகர்
வலஞ்செய்து சாருங் காலை. **#1994**

மற்றும் சிலர், மங்கல இயங்களை இசைப்பார்கள். சிலர், சாம கானங்களைப் பாடுவார்கள். சிலர், அருகில் உள்ள திண் ணைகளில் பொங்கும் அழகிய விளக்குகளை ஏந்தி நிறைகுடங்களை நிரல்பட வைப்பார்கள். இங்ஙனம் அந்நகரத்தவர்கள் தத்தம் மனத்தில் எழுந்த அதிசயமும் பெருவிருப்பும் அன்பும் பெருகப் போற்றி மகிழ, அவ் வழகிய வீதிகளின் வழியே சண்பை நகரை வலமாக வரும்பொழுது,

விளக்கவுரை

****

தந்திருமா ளிகையின்கண் எழுந்தருளிப்
புகும்பொழுது சங்க நாதம்
அந்தரதுந் துபிமுதலா அளவில்பெரு
கொலிதழைப்ப அணைந்து புக்கார்
சுந்தரப்பொற் றோணிமிசை இருந்தபிரான்
உடன்அமர்ந்த துணைவி யாகும்
பைந்தொடியாள் திருமுலையின் பாலறா
மதுரமொழிப் பவள வாயார். **#1995**

அழகிய பொன்மயமான திருத்தோணியின் மேல் எழுந்தருளியிருக்கும் இறைவருடன் கூடிய துணைவியாரான திரு நிலைநாயகி அம்மையாரின் திருமுலைப்பாலின் மணம் மாறாத இனிய மொழியை உடைய பவளம் போன்ற வாயையுடைய பிள்ளை யார், தம் திருமாளிகைக்கு எழுந்தருளி உட்செல்லும் பொழுது, சங்கு ஒலிகளும் தேவதுந்துபி முதலாய அளவில்லாத பெருகிய ஒலிகளும் மிக, உள்ளே புகலானார்.

விளக்கவுரை

இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

தூமணிமா ளிகையின்கண் அமர்ந்தருளி
அன்றிரவு தொல்லை நாத
மாமறைகள் திரண்டபெருந் திருத்தோணி
மன்னிவீற் றிருந்தார் செய்ய
காமருசே வடிக்கமலங் கருத்திலுற

இடையறாக் காதல் கொண்டு
நாமநெடுங் கதிர்உதிப்ப நண்ணினார்
திருத்தோணி நம்பர் கோயில். **#1996**
தூயதும் அழகியதுமான திருமாளிகையில் அமர்ந்திருந்து சிவஞானம் வழங்கப்பெற்ற அன்றிரவில், பழமை யான ஒலிவடிவாய பெருமறைகள் திரண்டு உருவெடுதாற் போன்ற திருத்தோணியில் நிலைபெற்று எழுந்தருளியிருக்கும் சிவபெருமா னின் திருவடித் தாமரைகள் தம் கருத்தில் பொருந்த நீங்காத காதல் கொண்டவராகி, ஒளிபெருகும் ஞாயிறு தோன்றும் முன், திருத்தோணி யப்பரின் திருக்கோயிலைச் சென்று அடைந்தார்.

விளக்கவுரை

****

காதலுடன் அணைந்துதிருக் கழுமலத்துக்
கலந்துவீற் றிருந்த தங்கள்
தாதையா ரையும்வெளியே தாங்கரிய
மெய்ஞ்ஞானந் தம்பால் வந்து
போதமுலை சுரந்தளித்த புண்ணியத்தா
யாரையும்முன் வணங்கிப் போற்றி
மேதகைய அருள்பெற்றுத் திருக்கோலக்
காஇறைஞ்ச விருப்பிற் சென்றார். **#1997**
பெருகிய அன்புடன் சேர்ந்து திருக்கழுமலம் எனும் அத்திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் தம் தந்தையாரையும், தம்மிடம் வெளிப்பட்டு வந்து யாவராலும் காண்டற்கரிய மெய்ஞ் ஞானத்ததைத் திருமுலைசுரந்து வரும் பாலுடன் கலந்து தமக்கு ஊட் டிய புண்ணிய வடிவான திருத்தாயாரையும் முன் வணங்கிப் போற்றி, மேன்மையான அருளைப் பெற்றுத் `திருக்கோலக்கா' என்ற திருப் பதியை வணங்கும் பொருட்டு விருப்புடன் சென்றார்.

விளக்கவுரை

வணங்கிப் போற்றிய திருப்பதிகம், `எம்பிரான்' *(தி.2 ப.40)* எனத் தொடங்கும் சீகாமரப் பண்ணில் அமைந்ததாகும்.

பெருக்குஓலிட் டலைபிறங்கும் காவிரிநீர்
பிரசமலர் தரளம் சிந்த
வரிக்கோல வண்டாட மாதரார்
குடைந்தாடும் மணிநீர் வாவித்
திருக்கோலக் காவெய்தித் தேவர்பிரான்
கோயில்வலஞ் செய்து முன்னின்

றிருக்கோலிட் டறிவரிய திருப்பாதம்
ஏத்துவதற் கெடுத்துக் கொள்வார். **#1998**

நீர்ப்பெருக்கால் ஒலிமிகுந்து அலைகள் பெருகும் காவிரியாறு, நல்ல நீருடன் தேன் மிகுந்த மலர்களையும் முத்துக் களையும் சொரிய, அம்மலர்களைச் சூழ்ந்து வண்டுகள் மொய்க்க, மங்கையர் குடைந்து நீராடுகின்ற நீரையுடைய வாவிகள் பொருந்திய `திருக்கோலக்கா' என்ற பதியையடைந்து, தேவர்களின் தலைவரான இறைவரின் திருக்கோயிலை வலமாக வந்து, திருமுன்நின்று, மறை கள் முறையிட்டும் அறிதற்கு அரிய இறைவரின் திருவடிகளைப் போற் றத் தொடங்கியவராய்,

விளக்கவுரை

****

மெய்ந்நிறைந்த செம்பொருளாம் வேதத்தின்
விழுப்பொருளை வேணிமீது
பைந்நிறைந்த அரவுடனே பசுங்குழவித்
திங்கள்பரித் தருளு வானை
மைந்நிறைந்த மிடற்றானை மடையில்வா
ளைகள்பாய என்னும் வாக்கால்
கைந்நிறைந்த ஒத்துஅறுத்துக் கலைப்பதிகம்
கவுணியர்கோன் பாடுங் காலை. **#1999**

மெய்ம்மை நிறைந்த செம்பொருள் எனப் படுகின்ற நான்மறைகளில் கூறப்படும் பொருளாய் உள்ளவரை, திருச்சடையின் மேல் பாம்புடன் பசுமையான பிறைச் சந்திரனைத் தாங்குபவரை, நஞ்சுடைய திருமிடற்றையுடையவரை, `மடையில் வாளைகள் பாய' என்ற திருப்பதிகத் திருவாக்கினால், திருக்கரங் களைக் கொண்டு அமைக்கும் காலவரையறையினைச் செய்யும் தாள ஒத்துச் செய்து, கலைகள் நிரம்பிய திருப்பதிகத்தைக் கவுணியர் பெருமானான சம்பந்தர் பாடிய போது,

விளக்கவுரை

கைந்நிறைந்த ஒத்து அறுத்து - பாட்டின் இசைக்கு ஏற்றவாறு கைகளைத் தட்டுதல், நிறுத்தல், எடுத்தல் ஆகிய தொழில் களால் தக்கவாறு அளவுபடுத்துவது. இதுபொழுது பாடி அருளிய பதிகம் `மடையில் வாளை' *(தி.1 ப.23)* எனத் தொடங்கும் தக்கராகப் பதிகம் ஆகும்.

கையதனால் ஒத்தறுத்துப் பாடுதலும்
கண்டருளிக் கருணை கூர்ந்த
செய்யசடை வானவர்தம் அஞ்செழுத்தும்

எழுதியநற் செம்பொற் றாளம்
ஐயரவர் திருவருளால் எடுத்தபா
டலுக்கிசைந்த அளவால் ஒத்த
வையமெலாம் உய்யவரு மறைச்சிறுவர்
கைத்தலத்து வந்த தன்றே. **#2000**

அங்ஙனம் திருக்கைகளால் தாள ஒத்து அறுதி யிட்டுப் பாடவும் (இறைவர்) கண்டு, அருள் செய்ய, கருணை கூர்ந்த தேவர் பெருமானின் திருவைந்தெழுத்துப் பொறித்த நல்ல செம்பொன் தாளங்கள், இறைவரின் அருளால் எடுத்த அத்திருப்பதிகத்திற்குப் பொருந்திய அளவுபட, வரும் மறைச் சிறுவரான பிள்ளையாரின் திருக்கைகளில் அது பொழுதே வந்து சேர்ந்தன.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின. சென்ற பாடலில் கூறியவாறு `மடையில் வாளை' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைக் கையினால் ஒத்தறுத்துப் பாடுமளவில் இறையருளால் திருவைந்தெ ழுத்துப் பொறித்த பொற்றாளம் பிள்ளையார் கையில் வரப் பெற்றன. இவ்வரலாற்றிற்கு, `நாளும் இன்னிசை யால்தமிழ் பரப்பும் ஞான சம்பந்த னுக்குல கவர்முன் தாளம் ஈந்த' *(தி.7 ப.62)* எனவரும் சுந்தரர் திருவாக்கும், `எழுத் தஞ்சும் இட்டசெம்பொற்றாளங்கள் ஈய' *(தி.11 ப.34 பா.82)*, `பெற்றது ... செம்பொன் தாளம் அவையே' *(தி.11 ப.36 பா.4)* எனவரும் நம்பியாண்டார் நம்பிகள் வாக்குகளும் அரணாகின்றன.

காழிவரும் பெருந்தகையார் கையில்வருந்
திருத்தாளக் கருவி கண்டு
வாழியதந் திருமுடிமேற் கொண்டருளி
மனங்களிப்ப மதுர வாயில்
ஏழிசையுந் தழைத்தோங்க இன்னிசைவண்
தமிழ்ப்பதிகம் எய்தப் பாடித்
தாழுமணிக் குழையார்முன் தக்கதிருக்
கடைக்காப்புச் சாத்தி நின்றார். **#2001**

சீகாழியில் வந்து தோன்றிய பெருந்தகையார் ஆன ஆளுடைய பிள்ளையார், தம் திருக்கையில் வந்த தாளத்தைப் பார்த்துப் பெரும் பேறு எனக் கருதி அதனைத் தம்திருமுடிமீது வைத்து, மனம் மகிழ, இனிமை மிக்க திருவாக்கால் ஏழிசைகளும் தழைத்து ஓங்க, இனிய இசை பொருந்திய அத்தமிழ்ப் பதிகத்தைப் பொருத்த மாகப் பாடி, விரும்பி ஏற்றருளிய குழை அணிந்த சிவபெருமானின் திருமுன்னிலையில் தக்க திருக்கடைக் காப்புச் சாத்தி நின்றார்.

விளக்கவுரை

நலங்கொள் காழி ஞானசம் பந்தன் குலங்கொள் கோலக் காவு ளானையே வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார் உலங்கொள் வினைபோ யோங்கி வாழ்வரே. *(தி.1.ப.23.பா.11)* என்பது திருக்கடைக்காப்பாக அமைந்த திருப் பாடலாகும். `வினை போய்' என்பதால் பாச நீக்கமும் `ஓங்கி வாழ் வரே' என்பதால் சிவப் பேறும் பெறுதலின், இதனினூங்கு உயிர் பெறத் தக்க தொருபயன் இல்லையாதலின் இதனைத் `தக்க திருக்கடைக் காப்பு' என்றார்.

உம்பருல கதிசயிப்ப ஓங்கியநா
தத்தளவின் உண்மை நோக்கித்
தும்புருநா ரதர்முதலாம் சுருதியிசைத்
துறையுள்ளோர் துதித்து மண்மேல்
வம்பலர்மா மழைபொழிந்தார் மறைவாழ
வந்தருளும் மதலை யாரும்
தம்பெருமான் அருள்போற்றி மீண்டருளிச்
சண்பைநகர் சாரச் செல்வார். **#2002**

விண்ணுலகத்தவரும் வியப்படைய ஓங்கிய அத்தாளத்தின் ஒலியின் மேன்மையை நோக்கி, தும்புரு நாரதர் முதலிய மறை பயில்கின்ற இசைத்துறை வல்லவர் யாவரும் போற்றி, தேன் மிகுந்த மலர்மழையைப் பொழிந்தனர். மறைகள் வாழத் தோன் றியருளிய பெருமகனாரும், தம் இறைவரின் அருளைப் போற்றி அங்கு நின்றும் விடைபெற்றுச் சீகாழிப் பதியை நோக்கிச் செல்பவராகி,

விளக்கவுரை

****

செங்கமல மலர்க்கரத்துத் திருத்தாளத்
துடன்நடந்து செல்லும் போது
தங்கள்குலத் தாதையார் தரியாது
தோளின்மேல் தரித்துக் கொள்ள
அங்கவர்தந் தோளி ன்மிசை எழுந்தருளி
அணைந்தார்சூழ்ந் தமர ரேத்தும்
திங்களணி மணிமாடத் திருத்தோணி
புரத்தோணிச் சிகரக் கோயில். **#2003**

செந்தாமரை மலர்போன்ற திருக்கைகளில் பொன்னாலாய தாளத்தைக் கொண்டு நடந்து செல்லும் அமையத்தில், தம் குலத் தந்தையார், அவர் நடந்து வருதலைப் பொறாதவராய், அவரைத் தம்தோள்மீது அமர்த்தியபடி, சுற்றிச் சூழ்ந்து தேவர்கள் போற்றுகின்ற, திங்கள் தங்கும்

அழகிய மாடங்களையுடைய திருத் தோணிபுரக் கோயிலை வந்து அடைந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

திருப்பெருகு பெருங்கோயில் சூழவலங்
கொண்டருளித் திருமுன் நின்றே
அருட்பெருகு திருப்பதிகம் எட்டொருகட்
டளையாக்கி அவற்று ளொன்று
விருப்புறுபொற் றிருத்தோணி வீற்றிருந்தார்
தமைப்பாட மேவுகாதல்
பொருத்தமுற அருள்பெற்றுப் போற்றியெடுத்
தருளினார் பூவார் கொன்றை. **#2004**

திருத்தகவிற்றாகிய பெருங்கோயிலை வலமாக வந்து, இறைவரின் திருமுன்நின்று, அருள் பெருகும் திருப்பதிகத்தைத் தக்கராகப் பண்ணிலமைந்ததாய்ப் பிற்காலத்தார் வகுத்தவாறு, எட்டுக் கட்டளைகளுள் ஒன்றில், தோணியப்பரைப் பாடவேண்டும் என்ற விருப்பம் மீதூர, அப்பெருமானின் அருள் பெற்றுப் `பூவார் கொன்றை' (தி.1 ப.24) எனத் தொடங்கிப் பாடினார்.

விளக்கவுரை

பண் என்பது இசையாகும். இசையமைப்பின் வேறு பாட்டால் பண்களும் பலவாயின. அவற்றுள்ளும் ஒவ்வொரு பண் ணிலும் பலகட்டளைகள் அமைந்துள்ளன. கட்டளை என்பது அவ் வப்பதிகத்து வரும் சொற்களின் நீட்சியும் குறுக்கமும் குறித்தும், யாப் பமைப்பு குறித்தும் தாள அமைப்பு குறித்தும் இசையமைப்பு வேறு படும் நிலையாகும். இவ்வாறமைந்த கட்டளைகள் தொறும் பாடும் இசையமைப்பு வேறுபடினும், அவற்றின் அடித்தளமாக அமையும் பண் வேறுபடாது.

எடுத்ததிருப் பதிகத்தின் இசைதிருத்தா
ளத்தினால் இசைய வொத்தி
அடுத்தநடை பெறப்பாடி ஆர்வமுற
வணங்கிப்போந் தலைநீர்ப் பொன்னி
மடுத்தவயற் பூந்தரா யவர்வாழ
மழவிளங்கோ லத்துக் காட்சி
கொடுத்தருளி வைகினார் குறைவிலா
நிறைஞானக் கொண்ட லார்தாம். **#2005**

மேற்கூறிய வண்ணம் தொடங்கிய அப் பதிகத்தின் இசையமைதியைத்

திருவருளால் பெற்ற அத்தாளத்தால் பொருந்துமாறு, தாள வரையறை செய்து, முன்பாடிய அத்திருப் பதிகத்தினை அடுத்து, அதைப் போன்றே நிகழும்படி பாடியருளி, பேரன்பு பொருந்த வணங்கிப் போய்க் குறைவில்லாத நிறைவான ஞானமழை கருக்கொண்ட மேகத்தைப் போன்ற காழிப் பிள்ளையார், அலைகளையுடைய நீர் பெருகும் காவிரி பாயும் வயல்கள் சூழ்ந்த சீகாழிப் பதியிலுள்ளோர் பெருவாழ்வு அடையுமாறு இளங்குழவி யின் திருவுருவாகத் தோற்றம் கொண்டிருந்தார்.

விளக்கவுரை

****

அந்நிலையில் ஆளுடைய பிள்ளையார்
தமைமுன்னம் அளித்த தாயார்
முன்னுதிக்க முயன்றதவத் திருநன்னி
பள்ளிமுதன் மறையோர் எல்லாம்
மன்னுபெரு மகிழ்ச்சியுடன் மங்கலதூ
ரியந்துவைப்ப மறைகள் ஓதிக்
கன்னிமதிற் சண்பைநகர் வந்தணைந்து
கவுணியர்கோன் கழலில் தாழ்ந்தார். **#2006**

அவ்வாறு இருக்கும் நாளில் பிள்ளையாரை முன் ஈன்றெடுத்த தாயாரான பகவதியார், முதற்கண் தன்னிடத்தே தோன்றி யருள முயன்ற தவம் உடைய திருநனிபள்ளியில் உள்ள முதன்மை யுடைய மறையவர் அனைவரும், நிலைபெற்ற மகிழ்ச்சியுடன் மங்கல இயக்கமுடன் மறைகளையும் ஓதியவாறு, அழியாத மதில் சூழ்ந்த சீகாழி என்ற நகருக்கு வந்து சேர்ந்து, கவுணியர் பெருமானின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர்.

விளக்கவுரை

பகவதியார் தன்னிடத்தே தோன்றத் தவம் செய்த இடம் திருநனிபள்ளியாகும். இசை நிறைவு கருதி நன்னி பள்ளி என்றாயிற்று.

மங்கலமாம் மெய்ஞ்ஞானம் மண்களிப்பப்
பெற்றபெரு வார்த்தை யாலே
எங்கணும்நீள் பதிமருங்கில் இருபிறப்பா
ளரும்அல்லா ஏனை யோரும்
பொங்குதிருத் தொண்டர்களும் அதிசயித்துக்
குழாங்கொண்டு புகலி யார்தம்
சிங்கஇள வேற்றின்பால் வந்தணைந்து
கழல்பணியுஞ் சிறப்பின் மிக்கார். **#2007**

பேரின்பப் பெருவாழ்வை வழங்கும் சிவ மெய்ஞ்ஞானத்தை, உலகம் மகிழப் பெற்ற பெருவார்த்தை கேட்ட லால், நீண்ட அத்திருப்பதியின் அருகிலுள்ள இருபிறப்பாளர்கள் யாவ ரும், அவ்வினத்தவரல்லாத மற்றவரும், பெருகும் தொண்டர்களும் வியப்புற்றுத் திரண்டு, சீகாழியில் இளஞ்சிங்கமென விளங்கும் பிள் ளையாரிடத்து வந்து சேர்ந்து, அவருடைய திருவடிகளில் வணங்கும் சிறப்பில் மிக்கவர் ஆனார்கள்.

விளக்கவுரை

மங்கலம் - பேரின்பம். எனவே பேரின்பப் பெரு வாழ்வை யடைவிப்பது மங்கல மாயிற்று.

வந்ததிருத் தொண்டர்கட்கும் மல்குசெழு
மறையவர்க்கும் மற்று ளோர்க்கும்
சிந்தைமகிழ் வுறமலர்ந்து திருவமுது
முதலான சிறப்பின் செய்கை
தந்தம்அள வினில்விரும்புந் தகைமையினால்
கடனாற்றுஞ் சண்பை மூதூர்
எந்தைபிரான் சிவலோகம் எனவிளங்கி
எவ்வுலகும் ஏத்து நாளில். **#2008**

அங்ஙனம் திரண்டுவந்த திருத்தொண்டர்களுக் கும், அந்தணர்களுக்கும் மற்றவர்கட்கும் மனமகிழ்ந்து முகமலர்ந்து உண்பித்தல் முதலான சிறப்புடைய செய்கைகளைத் தத்தம் அளவிலும் நன்றாற்றிவரும் நன்மக்களையுடைய சீகாழிப் பதியானது எம் இறைவரின் சிவலோகமே என விளக்கம் பெற்று எவ்வுலகமும் போற்ற நிற்கும் அந்நாளில்.

விளக்கவுரை

****

செழுந்தரளப் பொன்னிசூழ் திருநன்னி
பள்ளியுள்ளோர் தொழுது திங்கள்
கொழுந்தணியுஞ் சடையாரை யெங்கள்பதி
யினிற்கும்பிட் டருள அங்கே
எழுந்தருள வேண்டும்என இசைந்தருளித்
தோணிவீற் றிருந்தார் பாதம்
தொழுந்தகைமை யாலிறைஞ்சி அருள்பெற்றுப்
பிறபதியும் தொழமுன் செல்வார். **#2009**

செழுமையான முத்துக்களைத் தரும் காவிரியாறு சூழ்ந்த நனிபள்ளியில் உள்ளவர்கள், பிள்ளையாரை வணங்கிப் `பிறைச் சந்திரனை அணியும் சடையையுடைய சிவபெருமானை எங்கள் பதியில் வணங்கும் பொருட்டுத் தாங்கள் எழுந்தருள வேண் டும்' என வேண்டிக் கொள்ள,

அவரும் அதற்கு இசைந்து, திருத் தோணியில் வீற்றிருக்கும் சிவபெருமானின் திருவடிகளை முறைப்படி வணங்கி, விடைபெற்று, நனிபள்ளியே யன்றி மற்றத் திருப்பதிகளுக் கும் தொழுவதற்கு எண்ணிச் செல்வார்,

விளக்கவுரை

****

தாதவிழ்செந் தாமரையின் அகவிதழ்போல்
சீறடிகள் தரையின்மீது
போதுவதும் பிறரொருவர் பொறுப்பதுவும்
பொறாஅன்பு புரிந்த சிந்தை
மாதவஞ்செய் தாதையார் வந்தெடுத்துத்
தோளின்மேல் வைத்துக் கொள்ள
நாதர்கழல் தம்முடிமேற் கொண்டகருத்
துடன்போந்தார் ஞான முண்டார். **#2010**

ஞானப் பாலமுது உண்ட பிள்ளையாரின், இதழ் கள் விரியும் செந்தாமரையின் அக இதழ்கள் போன்ற சிறிய திருவடி கள் தரையில் பொருந்த நடந்து செல்வதையும், பிறர் எவரும் தாங்கு தலையும் பொறுக்காத அன்புகொண்ட மனமுடைய மாதவம் செய்த தந்தையாரான சிவபாத இருதயர், வந்து எடுத்துத் தம் தோளின் மீது சுமந்தவாறு கொண்டு செல்ல, தாம் சிவபெருமானின் திருவடிகளைத் தம் முடிமீது கொண்ட உள்ளத்தவராய்ப் பிள்ளையார் செல்லலானார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

தேனலருங் கொன்றையினார் திருநன்னி
பள்ளியினைச் சாரச் செல்வார்
வானணையும் மலர்ச்சோலை தோன்றுவதெப்
பதியென்ன மகிழ்ச்சி யெய்திப்
பானல்வயல் திருநன்னி பள்ளியெனத்
தாதையார் பணிப்பக் கேட்டு
ஞானபோ னகர்தொழுது நற்றமிழ்ச்சொல்
தொடைமாலை நவில லுற்றார். **#2011**

தேன் பொழியும் கொன்றை மலரை அணிந்த சிவபெருமான் வீற்றிருக்கும் திருநனிபள்ளியைச் சேரச் செல்பவரான பிள்ளையார், `வானளாவும் மலர்ச் சோலைகளுடன் தோன்றும் இது எப்பதி?' என்று வினவ, தந்தையார் மகிழ்ச்சி அடைந்து, `அது குவளை மலர்கள் நிறைந்த வயல்களையுடைய திருநனிபள்ளியாகும்' எனக் கூற, அதைக் கேட்ட

பிள்ளையார், நன்மை தரும் தமிழ்ப் பாமாலையான திருப்பதிகத்தை அருளிச் செய்வார்,

விளக்கவுரை

****

காரைகள் கூகை முல்லை
எனநிகழ் கலைசேர் வாய்மைச்
சீரியற் பதிகம் பாடித்
திருக்கடைக் காப்புத் தன்னில்
நாரியோர் பாகர் வைகும்
நனிபள்ளி உள்கு வார்தம்
பேரிடர் கெடுதற் காணை
நமதெனும் பெருமை வைத்தார். **#2012**

`காரைகள் கூகை முல்லை' (தி.2 ப.84) எனத் தொடங்கிச் செல்லும் கலை ஞானமும் சிவஞானமும் விளங்கும் சிறப் புக் கொண்ட இயற் பதிகத்தைப் பாடி, திருக்கடைக்காப்பில் `உமை யம்மையாரை ஒரு கூற்றில் கொண்ட சிவபெருமான், நிலையாய் எழுந்தருளியுள்ள திருநனிபள்ளியை நினைப்பவரின் பெரிய இடர் கள் யாவும் கெடுவதற்கு ஆணை நமதாகும்' என்ற பெருமையி னையும் குறித்து அருளினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின. `கலைசேர் பதிகம்', `வாய்மைச் சீர் இயற் பதிகம்' எனத் தனித்தனியே கூட்டுக. கலை - நூலறிவு. வாய்மை - சிவஞானம். `காரைகள் கூகை'*(தி.2 ப.84)* எனத் தொடங்கும் இப்பதிகம் பியந்தைக் காந்தாரத்தில் அமைந்ததாகும். இத்திருப்பதிகத்தின் திருக் கடைக்காப்பு, `இசையா லுரைத்த பனுவல் நடுவிரு ளாடுமெந்தை நனிபள்ளி யுள்க வினை கெடுதலாணை நமதே.' என நிறைவுறுகிறது. இதனையே ஆசிரியர் கொண்டெடுத்து மொழிவாராயினர்.

அம்பிகை அளித்த ஞானம்
அகிலமும் உய்ய வுண்ட
நம்பெருந் தகையார் தம்மை
எதிர்கொண்டு நண்ண வேண்டி
உம்பரும் வணங்கு மெய்ம்மை
உயர்தவத் தொண்ட ரோடு
தம்பெரு விருப்பால் வந்தார்
தலைசைஅந் தணர்க ளெல்லாம். **#2014**

உமையம்மையார் அருளிய ஞான அமுதத்தை உலகுய்ய உண்ட நம்

பெருந்தகையாரான பிள்ளையாரை எதிர் கொள்ள, தேவர்களும் வணங்கும் மெய்ம்மையுடைய தவத்தில் சிறந்த தொண்டர்களுடனே, திருத்தலைச்சங்காட்டில் வாழும் அந்த ணர்கள் அனைவரும் தம் மிகுவிருப்பத்தால் வந்தார்கள்.

விளக்கவுரை

தலைசை - திருத்தலைச்சங்காடு.

காவணம் எங்கும் இட்டுக்
கமுகொடு கதலி நாட்டிப்
பூவணத் தாமந் தூக்கிப்
பூரண கும்ப மேந்தி
ஆவண வீதி எல்லாம்
அலங்கரித் தண்ண லாரை
மாவண மலர்மென் சோலை
வளம்பதி கொண்டு புக்கார். **#2015**

அந்தணர் முதலியவர்கள், எங்கும் பந்தல் இட்டுக் கமுகு மரங்களையும் வாழை மரங்களையும் நிறுத்தியும், மலர் மாலைகளைத் தொங்கவிட்டும், நிறைகுடங்கள் வைத்தும், வாணிகம் மிக்க தெருக்களை எல்லாம் அணிசெய்தும், பெருமையுடைய பிள் ளையாரை, வண்டுகள் மொய்க்கும் மலர்கள் நிறைந்த மென்மையான சோலைகள் சூழ்ந்த வளமான தம் பதிக்குள் அழைத்துப் போயினர்.

விளக்கவுரை

****

திருமறை யோர்கள் சூழ்ந்து
சிந்தையின் மகிழ்ச்சி பொங்கப்
பெருமறை ஓசை மல்கப்
பெருந்திருக் கோயில் எய்தி
அருமறைப் பொருளா னாரைப்
பணிந்தணி நற்சங் கத்தில்
தருமுறை நெறியக் கோயில்
சார்ந்தமை அருளிச் செய்தார். **#2016**

அந்தணர்கள் சூழ இருந்து தத்தம் உள்ளத்தில் மகிழ்ச்சி மிக மறைகளை ஒலிக்க, பெரிய திருமாடக் கோயிலை அடைந்து, அரிய மறைகளின் பொருளாய் உள்ளவரை வணங்கி, அழகிய வலம்புரிச் சங்கின் வடிவில் அமைக்கப்பட்ட அக்கோயிலில், அவ்விறைவர் விரும்பி வீற்றிருக்கும் தன்மை பற்றித் திருப்பதிகத்தைப் பாடினார்.

விளக்கவுரை

இம்மாடக் கோயில் கோச்செங்கட் சோழரால் கட்டப் பெற்றதாகும். முற்பிறவிச் சார்பால், யானை ஏறாதவாறு கட்டப் பெற்றுள்ள கோவிலாகும். வலமாகச் சுழிந்து வரும் திருச்சுற்றுக்களு டன், நடுவில் கருவறையும், அதன் நடுவில் உயர்ந்த நிலையில் இறை வர் விளங்குவதும் வலம்புரிச் சங்குகள் விளங்கும் தோற்றத்தைக் காட் டுவதாகும். இதுபொழுது பாடிய திருப்பதிகம் `நலச் சங்க' *(தி.2 ப.55)* எனும் காந்தாரப் பண்ணில் அமைந்த திருப்பதிகமாகும்.

கறையணி கண்டர் கோயில்
காதலால் பணிந்து பாடி
மறையவர் போற்ற வந்து
திருவலம் புரத்து மன்னும்
இறைவரைத் தொழுது பாடும்
கொடியுடை ஏத்திப் போந்து
நிறைபுனல் திருச்சாய்க் காடு
தொழுதற்கு நினைந்து செல்வார். **#2017**

நஞ்சின் கருமை கொண்ட கழுத்தையுடைய சிவபெருமானது கோயிலைப் பெருவிருப்பால் பணிந்து திருப்பதிகம் பாடியபின், அந்தணர்கள் தம்மைச் சூழ நின்று போற்ற, வெளியே வந்து, `திருவலம்புரம்' என்ற திருப்பதியில் சிவபெருமானைத் தொழுது `கொடியுடை மும்மதில்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தால் போற்றி, வெளியே வந்து, நிறைந்த நீரையுடைய திருச்சாய்க்காட்டுப் பதியைத் தொழுதற்கு நினைந்து செல்பவராய்,

விளக்கவுரை

திருவலம்புரத்தில் அருளிய பதிகம் `கொடியுடை மும்மதில்' *(தி.3 ப.103)* எனத் தொடங்கும் பழம்பஞ்சுரப் பதிகமாகும்.

பன்னகப் பூணி னாரைப்
பல்லவ னீச்ச ரத்துச்
சென்னியால் வணங்கி ஏத்தித்
திருந்திசைப் பதிகம் பாடிப்
பொன்னிசூழ் புகாரில்நீடு
புனிதர்தம் திருச்சாய்க் காட்டு
மன்னுசீர்த்தொண்ட ரெல்லாம்
மகிழ்ந்தெதிர் கொள்ளப் புக்கார். **#2018**

பாம்புகளை அணியாய்ப் பூண்ட சிவபெரு மானைத் திருப்பல்லவனீச்சரத்தில் தலையினால் வணங்கிப் போற்றி, திருந்தும் இசையையுடைய இரு திருப்பதிகங்களைப் பாடி, காவிரி யாறு சூழும் புகார் நகரத்தில் என்றும் எழுந்தருளியிருக்கும் புனிதரான இறைவர்

வீற்றிருக்கும் திருச்சாய்க்காட்டில் நிலைபெற்ற பெருஞ்சிறப் பினையுடைய திருத்தொண்டர்கள் மகிழ்வுடன் எதிர்கொள்ளப் புகுந்தனர்.

விளக்கவுரை

திருப்பல்லவனீச்சரத்தில் அருளிய பதிகங்கள் இரண்டு. *1.* அடையார்தம் புரங்கள் - தக்கேசி *(தி.1 ப.65), 2.* பரசு பாணியர் - பழம் பஞ்சுரம் *(தி.3 ப.112).* இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வானள வுயர்ந்த வாயில்
உள்வலங் கொண்டு புக்குத்
தேனலர் கொன்றை யார்தம்
திருமுன்பு சென்று தாழ்ந்து
மானிடந் திரித்தார் தம்மைப்
போற்றுவார் மண்பு கார்என்
றூனெலாம் உருக ஏத்தி
உச்சிமேற் குவித்தார் செங்கை. **#2019**

புகுந்த பிள்ளையார், அக்கோயிலை வலம் கொண்டு, வானளாவ உயர்ந்த திருவாயிலுள் புகுந்து, தேன் சொரிய மலர்கின்ற கொன்றை மலர் மாலையை அணிந்த சிவபெருமானின் திருமுன் தாழ்ந்து, மானை இடக்கையிற் கொண்ட சிவபெருமானைப் போற்றுபவராய் `மண்புகார்' என்ற பதிகத்தைத் தொடங்கி, ஊன் எல்லாம் உருகும்படி ஏத்தி, தம் சிவந்த திருக்கைகளை உச்சியிற் கொண்டு கூப்பி வணங்கினார்.

விளக்கவுரை

இது பொழுது அருளிய பதிகம் `மண்புகார்'*(தி.2 ப.41)* எனத் தொடங்கும் சீகாமரப் பண்ணில் அமைந்ததாகும்.

சீரினில் திகழ்ந்த பாடல்
திருக்கடைக் காப்புப் போற்றிப்
பாரினில் பொலிந்த தொண்டர்
போற்றிடப் பயில்வார் பின்னும்
ஏரிசைப் பதிகம் பாடி
ஏத்திப்போந் திறைவர் வெண்கா
டாருமெய்க் காத லோடும்
பணிவதற் கணைந்தா ரன்றே. **#2020**

சிறப்புடன் விளங்கும் பாடலால் திருக்கடைக் காப்புச் செய்து போற்றி, உலகில் விளங்கிய திருத்தொண்டர்கள் போற்ற அங்கு இருந்த பிள்ளையார், மேலும், அழகும் இசையும் கொண்ட பதிகத்தைப் பாடிப் போற்றிப் பின், இறைவர் எழுந்தருளி இருக்கும் திருவெண்காட்டினை

நிறைந்த மெய்யன்புடன் பணிய, அதுபொழுதே புறப்பட்டார்.

விளக்கவுரை

நொம்பைந்து புடைத்தொல்கு நூபுரஞ்சேர் மெல்லடியார் அம்பந்தும் வரிக்கழலு மரவஞ்செய் பூங்காழிச் சம்பந்தன் றமிழ்பகர்ந்த சாய்க்காட்டுப் பத்தினையும் எம்பந்த மெனக்கருதி யேத்துவார்க் கிடர்கெடுமே. *(தி.2 ப.41.பா.11)* என்பது இங்குப் போற்றப் பெறும் திருக்கடைக்காப் பாகும். பிள்ளையார் தாம் அருளிய இத்திருப்பாட்டில் உயிர் உறுதி பெறுதற்கு எனக் கொளத்தகும் பிணிப்பாகும் இறைவன் என அருளப் பெற்றிருத்தலின், இப்பதிகம் சீரினில் திகழ்ந்த பாடல் திருக்கடைக் காப்புப் போற்றி என்றார். இத்திருப்பதியில் பின்னும் பாடிய பதிகம் `நித்தலும் நியமம் செய்து' *(தி.2 ப.38)* எனத் தொடங்கும் இந்தளப் பண்ணில் அமைந்த பதிகம் ஆகும்.

பொன்னிதழ்க் கொன்றை வன்னி
புனலிள மதியம்நீடு
சென்னியர் திருவெண் காட்டுத்
திருத்தொண்டர் எதிரே சென்றங்
கின்னதன் மையர்க ளானார்
எனவொணா மகிழ்ச்சி பொங்க
மன்னுசீர்ச் சண்பை யாளும்
மன்னரைக் கொண்டு புக்கார். **#2021**

பொன்போன்ற இதழ்களையுடைய கொன்றை மலரும், வன்னியும், கங்கையும், பிறைச் சந்திரனும் ஆகிய இவற்றை அணிந்துள்ள தலைமை பொருந்திய சிவபெருமானின் திருவெண் காட்டில் உள்ள தொண்டர்கள், திருமுன்வந்து, இன்னதன்மை ஆனார் என்று இயம்பலாகாதவாறு மேன்மேலும் மகிழ்ச்சி பெருக, நிலை பெற்ற சிறப்பினையுடைய சீகாழியை ஆண்டு வரும் தலைவரான பிள்ளையாரை வரவேற்று, அழைத்துக் கொண்டு அந்நகரத்துள் புகுந்தனர்.

விளக்கவுரை

****

முத்தமிழ் விரகர் தாமும்
முதல்வர்கோ புரத்து முன்னர்ச்
சித்தநீ டுவகை யோடும்
சென்றுதாழ்ந் தெழுந்து புக்குப்
பத்தராம் அடியார் சூழப்
பரமர்கோ யிலைச்சூழ் வந்து
நித்தனார் தம்முன் பெய்தி

நிலமுறத் தொழுது வீழ்ந்தார். **#2022**
முத்தமிழ் வித்தகரான பிள்ளையார், சிவபெரு மானின் திருக்கோபுரத்தை, உள்ளத்தில் பெருகிய மகிழ்ச்சியுடன் முன் தாழ்ந்து வணங்கி, எழுந்து, உட்சென்று, பத்திமை மிக்க தொண்டர்கள் சூழ, இறைவரின் திருக்கோயிலை வலம் வந்து, என்றும் நிலைபெற் றிருக்கும் இறைவரின் திருமுன்பு சென்று, நிலம் பொருந்தத் தொழுது விழுந்தார்.

விளக்கவுரை

****

மெய்ப்பொரு ளாயி னாரை
வெண்காடு மேவி னாரைச்
செப்பரும் பதிக மாலை
கண்காட்டு நுதன்முன் சேர்த்தி
முப்புரம் செற்றார் பாதம்
சேரும்முக் குளமும் பாடி
ஒப்பரும் ஞானம் உண்டார்
உளமகிழந் தேத்தி வாழ்ந்தார். **#2023**

மெய்ப்பொருளாக விளங்கியருளும் திருவெண் காட்டில் வீற்றிருக்கும் இறைவற்குச் சொலற்கரிய சிறப்புடைய திருப் பதிகமான `கண்காட்டு நுதலானும்' (தி.2 ப.48) எனத் தொடங்கும் சீகாமரப் பண்ணில் அமைந்த பதிகத்தை மாலையாகச் சாத்தி, முப்புரங் களையும் எரித்த இறைவர் திருவடிகளைச் சேரும் முக்குளங்களையும் அப்பதிகத்தில் அமைத்துப் பாடி, ஒப்பில்லாத ஞானப் பாலமுது உண்ட பிள்ளையார், மனம் மகிழ்ந்து போற்றி அங்கு வீற்றிருந்தருளினார்.

விளக்கவுரை

முக்குளங்கள்: மதி - (சோம குண்டம்), ஞாயிறு - (சூரிய குண்டம்), நெருப்பு - (அக்கினி குண்டம்) ஆகிய மூவர் பெயரானும் அமைந்திருக்கும் குளங்கள். இம்மூன்றனுள் முன்னிரு குளங்களின் சிறப்பை, `இருகாமத்திணையேரி' (பட்டினப். வரி 39) எனப் பட்டினப்பாலையும், `சோம குண்டம், சூரிய குண்டம் துறை மூழ்கிக் காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடும் தாம் இன் புறுவர் உலகத்துத் தையலார் போகம் செய் பூமியினும் போய்ப் பிறப் பர்' (சிலப். புகார்க் கனாத். 59-63) எனச் சிலம்பும் நவிலும். இம்முக்குளச் சிறப்பினைப் பிள்ளையார் 2, 7 ஆகிய பாடல்களில் போற்றியுள்ளார். பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும் வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர் தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே. (தி.2 ப.48 பா.2) `....வினைதுரக்கும் முக்குளநன் குடையானு முக்கணுடை யிறையவனே' (தி.2 ப.48 பா.7) என்பன அப்போற்றி உரைகளாம். இப்பதிகப் பயனாகவே மெய்கண் டார் தோன்றியருளினார் என்பதும் இங்கு நினைவுகூரத் தக்கதாம்.

அருமையாற் புறம்பு போந்து
வணங்கிஅங் கமரும் நாளில்
திருமுல்லை வாயில் எய்திச்
செழுந்தமிழ் மாலை சாத்தி
மருவிய பதிகள் மற்றும்
வணங்குவார் மறையோர் ஏத்தத்
தருமலி புகலி வந்து
ஞானசம் பந்தர் சார்ந்தார். **#2024**

அக்கோயிலினின்றும் பிரிதற்கரிய வகையில் வெளிப்போந்து வணங்கிச் சென்று, அத்திருப்பதியில் அவர் எழுந் தருளியிருந்த அந்நாள்களில், தென் திருமுல்லைவாயிலை அடைந்து செந்தமிழ் மாலையான திருப்பதிகத்தைப் பாடி, அவ்விடத்தினின்றும் அணுகப் பொருந்திய மற்றைய திருப்பதிகளையும் வணங்குவாராய், அந்தணர் போற்ற வந்த ஞானசம்பந்தர், அருட்செல்வம் மிக்க சீகாழியை அடைந்தார்.

விளக்கவுரை

`திருமுல்லைவாயில்' எனும் பெயருடைய பதிகள் தொண்டை நாட்டிலும் சோழ நாட்டிலுமாக ஈரிடத்தும் உள்ளன. இப்பதி, சோழ நாட்டில் உள்ளதாகும். இவ்வேறுபாடு அறிய இதனைத் தென்திருமுல்லைவாயில் என அழைத்தனர். இங்கு அருளிய பதிகம் `துளிமண்டி' (தி.2 ப.88) எனத் தொடங்கும் பியந்தைக் காந்தாரப் பண்ணமைந்த பதிகமாகும். இங்கு மருவிய பதிகள் எனக் குறிப்பன இவையிவை எனத்தெரிந்தில.

தோணிவீற் றிருந்தார் தம்மைத்
தொழுதுமுன் நின்று தூய
ஆணியாம் பதிகம் பாடி
அருட்பெரு வாழ்வு கூரச்
சேணுயர் மாட மோங்குந்
திருப்பதி அதனிற் செய்ய
வேணியார் தம்மை நாளும்
போற்றிய விருப்பின் மிக்கார். **#2025**

திருத்தோணியில் வீற்றிருக்கும் சிவபெருமானை வணங்கி, திருமுன்பு நின்று, தூய்மை பொருந்திய உரையாணியான திருப்பதிகத்தைப் பாடி, அருள் பெருக்கும் நல்வாழ்வு பெருக, வானளாவ உயர்ந்த மாளிகைகள் சூழ்ந்த அப்பெரும் பதியில், வீற்றிருந்தருளும் சிவந்த சடையையுடைய சிவபெருமானை நாளும் போற்றிவரும் விருப்பம் மிக்கவராயினர்.

விளக்கவுரை

தூய ஆணி - தூயதாய பொன்னாலாய ஆணி *:* அச் சாணி இறைவன். உருள் பெருந்தேருக்கு அச்சாணி இன்றியமையா தாதல் போல, உலகுயிர்களின் இயக்கத்திற்கு இறைவன் இன்றியமை யாத அச்சாணியாக விளங்குதலின், அப்பெருமானைத் `தூய ஆணி' என்றார். `உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து' *(குறள்,1032)* எனவரும் குறளும் நினைவு கூரத் தகும். இவ்வாறு இறைவனை உருவகித்துக் கூறும் பதிகம், `அன்ன மென்னடை' *(தி.2 ப.102)* எனத் தொடங்கும் நட்டராகப் பண்ண மைந்த திருப்பதிக மாகும். இப்பதிகத்தில் வரும் நான்காவது பாடலில் `சிரபுரத் தமர்கின்ற ஆணிப் பொன்னினை அடிதொழு மடியவர்க் கருவினை யடையாவே' என வருதலின், இப்பதிகமே இதுபொழுது அருளிய பதிகமாகும். இதுவன்றிச் சிவக்கவிமணியாரும், வ. சு. செ. யும் குறிக்கும் `வண்டரங்க' *(தி.1 ப.60)* எனவரும் பதிகமோ, அன்றி `எம்பிரான்' *(தி.2 ப.40)* எனவரும் பதிகமோ ஈண்டுப் பாடப்பட்டு இருக்கலாம் என்பது அத்துணைப் பொருத்தம் இன்றாம்.

வைகுமந் நாளிற் கீழ்பால்
மயேந்திரப் பள்ளி வாசம்
செய்பொழில் குருகா வூரும்
திருமுல்லை வாயில் உள்ளிட்
டெய்திய பதிக ளெல்லாம்
இன்புற இறைஞ்சி ஏத்தித்
தையலாள் பாகர் தம்மைப்
பாடினார் தமிழ்ச்சொல் மாலை. **#2026**

இவ்வாறு அப்பதியில் வாழ்ந்து வந்த நாள்களில் இப்பதியின் கீழ்த் திசையில் உள்ள திருமயேந்திரப்பள்ளியையும், மணம் கமழ்கின்ற சோலை சூழ்ந்த திருக்குருகாவூரையும், திருமுல்லை வாயில் உள்ளிட்ட முன்பு சென்று வணங்கிய திருப்பதிகள் பலவற்றை யும் இன்பம் பொருந்தப் போற்றி, உமையம்மையை ஒரு கூற்றில் கொண்ட சிவபெருமான் மீது தமிழ்ச் சொல் மாலைகளைப் பாடினார்.

விளக்கவுரை

திருமயேந்திரப்பள்ளியில் அருளிய பதிகம்: `திரைதரு' - பண் : கொல்லி *(தி.3 ப.31)*. திருக்குருகாவூரில் அருளிய பதிகம் : `சுண்ணவெண்' - பண்: அந்தாளிக் குறிஞ்சி *(தி.3 ப.124)*. திருமுல்லைவாயில் உள்ளிட்ட பதிகளாவன: திருக்கலிக்காமூர், திருவெண்காடு, கீழைத் திருக்காட்டுப்பள்ளி முதலியனவாகலாம். இவற்றுள் திருமுல்லைவாயிலுக்குப் பாடிய பதிகம் ஒன்றே இருத் தலின், அது முதல்முறை சென்ற பொழுது பாடியது என முன்னர்க் குறிக்கப்பட்டது. இது பொழுது பாடிய பதிகம் கிடைத்திலது. திருக்கலிக்காமூரில் அருளிய பதிகம்: `மடல்வரையின்' - பண்: பழம்பஞ்சுரம் *(தி.3 ப.105)*. திருவெண்காட்டில் அருளிய பதிகங்கள்: `உண்டாய் நஞ்சை' - பண்: காந்தாரம் *(தி.2 ப.61)*. `மந்திர மறையவை' - பண்: காந்தார பஞ்சமம் *(தி.3 ப.15)*. கீழைத்திருக்காட்டுப்பள்ளியில் அருளிய பதிகம்: `செய்யருகே' - பண் : நட்டபாடை *(தி.1 ப.5)*.

அவ்வகை மருங்கு சூழ்ந்த
பதிகளில் அரனார் பொற்றாள்
மெய்வகை ஞானம் உண்ட
வேதியர் விரவிப் போற்றி
உய்வகை மண்ணு ளோருக்கு
உதவிய பதிகம் பாடி
எவ்வகை யோரும் ஏத்த
இறைவரை ஏத்து நாளில். **#2027**

அங்ஙனமே அருகிலுள்ள திருப்பதிகளுக்குச் சென்று, இறைவரின் அழகிய திருவடிமலர்களை, மெய்ஞ்ஞானப் பாலமுது உண்ட பிள்ளையார் போற்றி, இந்நிலவுலகத்தில் உள் ளவருக்கு உய்யும் வகை உதவும் பொருட்டுத் திருப்பதிகங்களைப் பாடி, எவ்வகையோர்களும் போற்றுமாறு சிவபெருமானை வணங்கி வதிந்திருக்கும் நாள்களில்,

விளக்கவுரை

மருங்கு சூழ்ந்துள்ள பதிகள் செம்பங்குடி, திருக் கொண்டல், திருமயிலாடி, நல்லூர்ப்பெருமணம், நல்லூர் முதலாயின ஆகலாம்

என்பர் சிவக்கவிமணியார். எனினும் இப்பதிகளுக்கு உரிய பதிகங்கள் கிடைத்தில. நல்லூர்ப்பெருமணத்திற்கு இதுபொழுது கிடைத்திருக்கும் பதிகம் இவ்வமையத்தில் அருளப்பெற்றதன்று.

திருநீல கண்டத்துப்
பெரும்பாணர் தெள்ளமுதின்
வருநீர்மை இசைப்பாட்டு
மதங்கசூ ளாமணியார்
ஒருநீர்மையுடன் உடைய
பிள்ளையார் கழல்வணங்கத்
தருநீர்மை யாழ்கொண்டு
சண்பையிலே வந்தணைந்தார். **#2028**

திருநீலகண்டத்துப் பெரும்பாணரும், தெள்ளிய அமுதமாய இசைப்பாடலைப் பாடும் மதங்க சூளாமணியாரும், ஒன்றுபட்ட அன்பின் திறத்தால், ஆளுடைய பிள்ளையாரின் திருவடி களை வணங்குவதற்கு, இசையால் இன்பம் பயக்கும் யாழினைக் கொண்டு, சீகாழிப் பதிக்கு வந்து சேர்ந்தனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பெரும்பாணர் வரவறிந்து
பிள்ளையார் எதிர்கொள்ளச்
சுரும்பார்செங் கமலமலர்த்
துணைப்பாதந் தொழுதெழுந்து
விரும்பார்வத் தொடும்ஏத்தி
மெய்ம்மொழிக ளால்துதித்து
வரும்பான்மை தருவாழ்வு
வந்தெய்த மகிழ்சிறந்தார். **#2029**

`திருநீலகண்டத்து யாழ்ப்பாண நாயனாரும்' தெள்ளிய அமுதமாய இசைப் பாடலைப் பாடும் `மதங்க சூளாமணி யாரும்' வருதலை அறிந்து, ஞானசம்பந்தப் பிள்ளையார் எதிரேற்று வரவேற்க, வண்டுகள் பொருந்திய செந்தாமரை மலர் போன்ற அவருடைய இரு திருவடிகளையும் இருவரும் வணங்கி எழுந்து, விரும்பும் ஆர்வத்தோடும் ஏத்தி, மெய்ம்மொழிகளால் போற்றிவரும் பான்மையினால் கிடைக்கப் பெற்ற பெருவாழ்வு வந்து பொருந்த, மகிழ்ச்சியில் திளைத்தனர்.

விளக்கவுரை

****

அளவிலா மகிழ்ச்சியினார்

தமைநோக்கி ஐயர்நீர்
உளமகிழ இங்கணைந்த
உறுதியுடை யோமென்றே
இளநிலா நகைமுகிழ்ப்ப
இசைத்தவரை உடன்கொண்டு
களநிலவு நஞ்சணிந்தார்
பாலணையுங் கவுணியனார். **#2030**

அளவற்ற மகிழ்ச்சியுடைய அவ்விருவரையும் நோக்கி, `ஐயரே! தாங்கள் மனம் மகிழ இங்குச் சேர்ந்ததனால் ஆன உறுதிப் பொருளைப் பெற்றவர் ஆனோம்' என்று இளநிலா ஒளிவீசும் புன்னகையுடன் கூறி, அவர்களையும் தம்முடனே கொண்டு, கருமை பொருந்திய நஞ்சுடைய கழுத்தினரான சிவபெருமானிடம் சேரும் கவுணியரான பிள்ளையார்,

விளக்கவுரை

****

கோயிலினிற் புறமுன்றிற்
கொடுபுக்குக் கும்பிடுவித்
தேயுமிசை யாழ்உங்கள்
இறைவருக்கிங் கியற்றும்என
ஆயபுகழ்ப் பிள்ளையார்
அருள்பெற்ற அதற்கிறைஞ்சி
மேயதொடைத் தந்திரியாழ்
வீக்கிஇசை விரிக்கின்றார். **#2031**

திருக்கோயிலின் புறத்தேயுள்ள திருமுற்றத்தில் புகுந்து வணங்கச் செய்து `பொருந்திய இசையையும் யாழையும் உம் இறைவற்கு இங்கிருந்து இயக்குங்கள்' என்று கூறியருள, அவர்களும் புகழ் பொருந்திய பிள்ளையாரின் திருவருளைப் பெற்றதால் வணங்கிப் பொருந்திய தொடை நரம்புகளை வீக்கி, இசையை வாசிப்பார்களாகி,

விளக்கவுரை

திருக்கோயிலின் புறமுற்றத்தே நின்று வணங்கச் செய்தது அக்கால மரபு பற்றியதாம்.

தானநிலைக் கோல்வடித்துப்
படிமுறைமைத் தகுதியினால்
ஆனஇசை ஆராய்வுற்
றங்கணர்தம் பாணியினை
மானமுறைப் பாடினியா
ருடன்பாடி வாசிக்க

ஞானபோ னகர்மகிழ்ந்தார்
நான்மறையோர் அதிசயத்தார். **#2032**

இசையிடங்கள் உரிய நிலையில் உண்டாகுமாறு கருவியினால் அமைத்து, நரம்பு படியும் முறைமையின் தகுதியால் ஆன, எடுத்தும் படுத்தும் இசைக்கும் வகையில் இசையைத் தெரிந்து, இறைவரின் திருப்பாட்டினை அளவுபடும் முறையில் பாடினவரான மதங்க சூளாமணியாருடன் ஒன்றிப் பாடி யாழ் வாசிக்கக் கேட்டு, ஞானப் பால் உண்டவரான சம்பந்தர் மகிழ்ச்சியடைந்தார். மறையவர்களும் வியப்புற்றனர்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

யாழிலெழும் ஓசையுடன்
இருவர்மிடற் றிசையொன்றி
வாழிதிருத் தோணியுளார்
மருங்கணையும் மாட்சியினைத்
தாழுமிரு சிறைப்பறவை
படிந்ததனி விசும்பிடைநின்
றேழிசை நூற் கந்தருவர்
விஞ்சையரும் எடுத்திசைத்தார். **#2033**

யாழினின்று எழும் ஓசையோடு இருவர் மிடற் றின் இசையும் ஒன்றித் திருத்தோணியில் உள்ளாரிடம் அணையும் பெருமையை, தாழ்ந்து வரும் கின்னர மிதுனங்களான இரு பறவை களும், சூழ்ந்த ஒப்பற்ற விசும்பில் நின்று, ஏழிசை நூலில் வல்ல கந்தருவர், வித்தியாதரர் என்பவர்களும் பாராட்டினர்.

விளக்கவுரை

கின்னர மிதுனங்கள் - இவை சந்திர மண்டலத்தில் வாழும் பறவை இனத்தவை என்றும், இசை கேட்டு மகிழும் இயல்பு உடையவை என்றும் கூறுப. இப்பறவைகளோடு, கந்தருவர், வித்தியாதரர்களும் இருந்து இவர்கள் இசையை வியந்து கேட்டு மகிழ்ந்தனர் என்பதாம்.

எண்ணருஞ்சீர்த் திருத்தோணி
எம்பெருமான் கழல்பரவிப்
பண்ணமையா ழிசைகூடப்
பெரும்பாணர் பாடியபின்
கண்ணுதலார் அருளினால்
காழியர்கோன் கொடுபோந்து
நண்ணிஉறை யிடஞ்சமைத்து

நல்விருந்து சிறந்தளிப்ப. #2034
நினைத்தற்கு அரிய சிறப்புடைய திருத்தோணி யில் வீற்றிருக்கும் இறைவரின் திருவடிகளைப் போற்றி, பண்பொருந் திய யாழும், மிடற்று இசையும் பொருந்துமாறு திருநீலகண்டப் பெரும் பாணரும் அவர்தம் மனைவியாரும் பாடி நிறைவுசெய்த பின்பு, நெற்றிக் கண்ணையுடைய இறைவரின் அருளால் சீகாழித் தலைவர் ஆன ஞானசம்பந்தர், அவர்களை அழைத்துக் கொண்டு சென்று, அவர்கள் தங்கியிருப்பதற்குத் தனியிடம் அமைத்து, நல்ல விருந்தை யும் சிறப்பாக அளிக்க,

விளக்கவுரை

****

பிள்ளையார் அருள்பெற்ற
பெரும்பாணர் பிறையணிந்த
வெள்ளநீர்ச் சடையாரை
அவர்மொழிந்த மெய்ப்பதிகம்
உள்ளபடி கேட்டலுமே
யுருகுபெரு மகிழ்ச்சியராய்த்
தெள்ளமிர்தம் அருந்தினர்போற்
சிந்தைகளிப் புறத்தொழுதார். #2035

காழிப் பிள்ளையாரின் அருளைப் பெற்ற பெரும் பாணரும், பிறைச்சந்திரனை அணிந்த கங்கையாறு தங்கிய சடையுடை யவரை, அவர் பாடிய மெய்ப் பதிகங்களை உள்ளவாறு அடியார்கள் சொல்லக் கேட்டு மனமுருகும் பெருமகிழ்ச்சி உடையவராய், தெளிந்த அமுதத்தை உண்டவர் போல உள்ளம் களிப்புக் கொள்ள வணங்கினர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

காழியார் தவப்பயனாம்
கவுணியர்தம் தோன்றலார்
ஆழிவிட முண்டவர்தம்
அடிபோற்றும் பதிகஇசை
யாழின்முறை மையின்இட்டே
எவ்வுயிரு மகிழ்வித்தார்
ஏழிசையும் பணிகொண்ட
நீலகண்ட யாழ்ப்பாணர். #2036

சீகாழிப் பதியினர் செய்த தவப்பயனாய் உள்ள கவுணியர் குலத்தில் தோன்றிய சம்பந்தர், கடலில் தோன்றிய நஞ்சை உண்ட இறைவரின் திருவடிகளைப் போற்றும் பதிகங்களின் இசையை ஏழிசைகளையும்

ஏவல் கொண்ட திருநீலகண்ட யாழ்ப்பாணர், யாழ் முறைமையால் வாசித்து எவ்வுயிர்களையும் மகிழ்வித்தார்.

விளக்கவுரை

ஏழிசையும் பணிகொண்ட நீலகண்ட யாழ்ப்பாணர் என்பார், அப்பண்கள் தாமும் தம் ஏவல்வழி நிற்கும் பெற்றியவாய் நிற்றலின். அப்பண்கள் அமையப் பாடத் தாம் அரிதில் இசைப்பதின்றி, இவர் இசைக்கும் அளவில் அவை வந்து அமையும் என்பது கருத்தாம்.

சிறியமறைக் களிறளித்த
திருப்பதிக இசையாழின்
நெறியிலிடும் பெரும்பாணர்
பின்னுநீர் அருள்செய்யும்
அறிவரிய திருப்பதிக
இசையாழில் இட்டடியேன்
பிறிவின்றிச் சேவிக்கப்
பெறவேண்டும் எனத்தொழுதார். **#2037**

சிறிய மறைக் களிறாய பிள்ளையார் அருளிய திருப்பதிக இசையினை யாழிசையின் நெறியில் வாசித்த பெரும் பாணர், மேலும் அவரை நோக்கி, `தாங்கள் ஆணையிட்டருளும் அறிதற்கரிய பெருமையுடைய திருப்பதிகங்களது இசையை யாழில் இசைத்து, அடியேன் தங்களைப் பிரியாமல் வணங்கி, உடன் இருக்கும் பேறு பெற வேண்டும்' என்று வேண்டி வணங்கினார்.

விளக்கவுரை

சிறிய களிறு, மறைக்களிறு எனத் தனியே கூட்டுக. அவை அவர்தம் இளமைப் பருவத்தையும் தமிழ் மறைசாற்றி வரும் தகைமையையும் குறித்தன.

மற்றதற்குப் பிள்ளையார்
மனமகிழ்வுற் றிசைந்தருளப்
பெற்றவர்தாம் தம்பிரான்
அருளிதுவே யெனப்பேணிச்
சொற்றமிழ்மா லையின்இசைகள்
சுருதியாழ் முறைதொடுத்தே
அற்றைநாட் போலென்றும்
அகலாநண் புடன்அமர்ந்தார். **#2038**

அவ்விண்ணப்பத்திற்கு மகிழ்ந்த பிள்ளையார் உள்ளம் மகிழ்ந்து இசைந்தருள, அத்தகைய பேற்றைப் பெற்ற பாண னார், `இது நம் பெருமானின் அருளேயாம்' என்று விருப்பத்துடன் பேணி,

பிள்ளையாருடைய திருப்பதிகங்களான தமிழ் மாலைகளைப் பண்ணமைந்த யாழிசையின் முறையில் வைத்து வாசித்துக் கொண்டே அந்நாள் போன்றே என்றும் பிரியாதவராய் உடன் இருந்து வந்தனர்.

விளக்கவுரை

****

சிரபுரத்தில் அமர்ந்தருளுந்
திருஞான சம்பந்தர்
பரவுதிருத் தில்லைநடம்
பயில்வாரைப் பணிந்தேத்த
விரவியெழும் பெருங்காதல்
வெள்ளத்தை உள்ளத்தில்
தரஇசையுங் குறிப்பறியத்
தவமுனிவர்க்கு அருள்செய்தார். **#2039**

சீகாழியில் இருந்தருளும் திருஞானசம்பந்தர், யாவரும் வணங்கிப் போற்றும் திருத்தில்லையில் திருக்கூத்தியற்றும் இறைவரைப் பணிந்து போற்றிட, பொருந்தி எழும் விருப்பமான பெருவெள்ளத்தைத் தம் உள்ளத்தில் கொள்ள, அதற்கு இசையும் அருட் குறிப்பும் நிகழ்ந்ததாக, அவ்வருட் குறிப்பைத் தவ முனிவராம் தந்தையாரான சிவபாத இருதயருக்குக் கூறினார்.

விளக்கவுரை

பிள்ளையாருக்குத் தில்லைக்குச் செல்ல வேண்டும் எனும் விருப்பமும், குறிப்பும் உள்ளத்தில் தோன்றுதற்கேற்ற திருவருட் குறிப்பு நிகழ, அதனைத் தம் தந்தையாரிடம் தெரிவித்தார்.

பிள்ளையார் அருள்செய்யப்
பெருந்தவத்தாற் பெற்றெடுத்த
வள்ளலார் தாமும்உடன்
செல்வதற்கு மனங்களிப்ப
வெள்ளிமால் வரையென்னத்
திருத்தோணி வீற்றிருந்த
புள்ளிமா னுரியாரைத்
தொழுதருளாற் புறப்பட்டார். **#2040**

காழிப்பிள்ளையார் இவ்வாறு அருள்செய்ய, பெருந்தவத்தின் பயனாய்ப் பிள்ளையாரைத் தமக்கு மகனாராகப் பெற்ற வள்ளலாரான சிவபாத இருதயர், தாமும், அவருடன் செல்ல மன மகிழ்ச்சியுடன் ஒருப்பட்டாராக, பெரிய வெள்ளி மலைபோல் விளங்கும் திருத்தோணியில் வீற்றிருந்தருளும் புள்ளிமான் தோலை உடைய

இறைவரை வணங்கி, அருள் விடை பெற்றுச் சீகாழியில் இருந்தும் புறப்பட்டனர்.

விளக்கவுரை

****

தாவில்யாழ்ப் பாணரொடும்
தாதையார் தம்மோடும்
மேவியசீ ரடியார்கள்
புடைவரவெங் குருவேந்தர்
பூவின்மே லயன்போற்றும்
புகலியினைக் கடந்துபோய்த்
தேவர்கள்தம் பெருந்தேவர்
திருத்தில்லை வழிச்செல்வார். **#2041**

குற்றம் இல்லாத யாழ்ப்பாணரோடும், தந்தை சிவபாத இருதயருடனும் பொருந்திய சிறப்புடைய அடியவர்கள் இருமருங்கும் சூழ்ந்து வர, மண்ணுலகில் வந்து நான்முகன் வழிபட்ட சீகாழிப் பதியைக் கடந்து, தேவர்களுக்கெல்லாம் பெருந்தலைவராய கூத்தப் பெருமானின் திருத்தில்லையை நோக்கிச் செல்வாராயினர்.

விளக்கவுரை

****

நள்ளி ருட்கண்நின் றாடுவார்
உறைபதி நடுவுகண் டனபோற்றி
முள்ளு டைப்புற வெள்ளிதழ்க்
கேதகை முகிழ்விரி மணஞ்சூழப்
புள்ளு டைத்தடம் பழனமும்
படுகரும் புடைகழிந் திடப்போந்து
கொள்ளி டத்திரு நதிக்கரை
அணைந்தனர் கவுணியர் குலதீபர். **#2042**

நள்ளிருளில் நட்டம் பயின்று ஆடுகின்ற இறை வர் எழுந்தருளியிருக்கும் தில்லைத் திருப்பதிக்கு இடையில் கண்ட வற்றை வழிபட்டு, அடியில் முள்களுடன் கூடிய புற இதழ்களைக் கொண்ட தாழைகளின் மொட்டுகள் மலருகின்றதால் மணம் கமழ் கின்ற, நீர்ப் பறவைகளையுடைய இடம் அகன்ற வயல்களும், பள்ள மான நிலங்களும் இருமருங்கிலும் கழிந்திடச் சென்று, கவுணியர் குல விளக்கான ஞானசம்பந்தர் கொள்ளிடத்தின் தென்கரையை அடைந்தார்.

விளக்கவுரை

`உறைபதி நடுவு கண்டன போற்றி' எனவரும் பதிக ளும் பதிகங்களும்

இவை எனத் தெரிந்தில. இவ்விரு பாடல்களும் ஒரு முடிபுடையன.

வண்டி ரைத்தெழு செழுமலர்ப்
பிறங்கலும் மணியும் ஆரமும்உந்தித்
தண்ட லைப்பல வளத்தொடும்
வருபுனல் தாழ்ந்துசே வடிதாழத்
தெண்டி ரைக்கடற்பவளமும்
பணிலமும் செழுமணித் திரள்முத்தும்
கொண்டு இரட்டிவந்து ஓதமங்கு
எதிர்கொளக் கொள்ளிடங் கடந்தேறி. **#2043**

வண்டுகள் ஒலித்து எழுகின்ற செழுமையான மலர்களின் கூட்டத்தையும், மணிகளையும், சந்தனக் கட்டைகளையும் வாரிக் கொண்டு, சோலைகளின் வளங்கள் பலவற்றுடன் வருகின்ற ஆற்றின் நீர், தாழ்ந்த தம் அடிகளை வணங்கவும், தெளிவான அலை களையுடைய தன்னிடத்தினின்றும் பவளங்கள், சங்குகள் ஆகியவற் றையும், மற்ற மணிகளையும், திரண்ட முத்துக்களையும் அலைகளால் வாரிக் கொண்டு வீசி வரும் கடல்நீர் எதிர் கொள்ளவும், கொள்ளிடத் திருநதியினைக் கடந்து வடகரையின் மேல் ஏறி,

விளக்கவுரை

இப்பாடல் ஆற்று வளமும், கடல் வளமும் ஒருங்கு உளங்கொள அமைந்துள்ளது.

பல்கு தொண்டர்தங் குழாத்தொடும்
உடன்வரும் பயில்மறை யவர்சூழச்
செல்க திப்பயன் காண்பவர்
போல்களி சிந்தைகூர் தரக்கண்டு
மல்கு தேவரே முதலனைத்
துயிர்களும் வணங்கவேண் டினவெல்லாம்
நல்கு தில்லைசூழ் திருவெல்லை
பணிந்தனர் ஞானஆ ரமுதுண்டார். **#2044**

நிறைந்த அடியவர் திருக்கூட்டத்துடன் பழகி வரும் அந்தணர்கள் சூழ்ந்துவர, செல்லும் கதியின் பயனைக் காண பவரைப் போல் உளமகிழ்வு கொண்டு, பெருகிய தேவர் முதலான எவ்வுயிர்களும் வணங்க, அவரவர் வேண்டிய வரங்களையெல்லாம் தரும் தில்லையைச் சூழ்ந்த திருவெல்லையினை, ஞானம் நிறைந்த பால் அமுது உண்ட பிள்ளையார் நிலத்தில் விழுந்து வணங்கினார்.

விளக்கவுரை

செல்கதி - சிவகதி. `எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலை'

*(தி.3 ப.24 பா.1)*எனவரும் திருவாக்கும் காண்க. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

செங்கண் ஏற்றவர் தில்லையே
நோக்கிஇத் திருந்துல கினிற்கெல்லாம்
மங்க லந்தரு மழவிளம்
போதகம் வரும்இரு மருங்கெங்கும்
தங்கு புள்ளொலி வாழ்த்துரை
எடுத்துமுன் தாமரை மதுவாசப்
பொங்கு செம்முகை கரங்குவித்
தலர்முகங் காட்டின புனற்பொய்கை. **#2045**

இத்திருந்திய உலகுக்கெல்லாம் மங்கலம் தரும் இளமையுடைய யானைக் கன்றான ஞானசம்பந்தர் வரும் இருமருங் கிலும், எங்கும் உறையும் பறவைகளின் ஒலியான வாழ்த்துகள், வழங்க, தாமரை மலர்களின் செம்முகையான கைகள் குவிய, நீர்ப் பொய்கைகள் மலர்ந்த முகத்தைக் காட்டி வரவேற்றன.

விளக்கவுரை

மங்கலம் தருதல் - சிவம் பெருக்குதல். மழ, இளஎன்பன இளமை யென்னும் ஒரு பொருள் குறித்த பல சொற்களாம். பிள்ளை யாரை அங்குள்ள பொய்கைகள் வரவேற்கும் திறனை இப்பாடல் கூறுகின்றது.

கலவ மென்மயில் இனங்களித்
தழைத்திடக் கடிமணக் குளிர்கால்வந்
துலவி முன்பணிந் தெதிர்கொளச்
கிளர்ந்தெழுந் துடன்வருஞ் சுரும்பார்ப்ப
இலகு செந்தளிர் ஒளிநிறந்
திகழ்தர இருகுழை புடையாட
மலர்மு கம்பொலிந் தசையமென்
கொம்பர்நின் றாடுவ மலர்ச்சோலை. **#2046**

மலர்ச் சோலைகளில், தோகைகளையுடைய மென்மையான மயில் இனங்கள் மகிழ்வுடன் அழைக்கவும், புதிய மணமுடைய குளிர்ந்த தென்றல் காற்று எதிர் கொண்டு வரவேற்கவும், பெயர்ந்து எழுந்து உடன்வரும் வண்டுகள் ஒலிக்கவும், விளங்கும் செந்தளிர்கள் ஒளியுடைய நிறம் விளங்கவும், இருகுழைகள் இரு மருங்கும் ஆடவும், மலர்கள் முகம் பொலிந்து அசையவும், மென்மை யான கொம்புகள் நின்று ஆடின.

விளக்கவுரை

இருகுழை - பெரிய தளிர்கள்: பெண்களுக்கு ஆகுங்கால், காதணியாம்.

இதனால், சோலைகள் பிள்ளையாரை வரவேற்கும் காட்சி புலனாகும்.

இழைத்த டங்கொங்கை இமயமா
மலைக்கொடி இன்னமு தெனஞானம்
குழைத்த ளித்திட அமுதுசெய்
தருளிய குருளையார் வரக்கண்டு
மழைத்த மந்தமா ருதத்தினால்
நறுமலர் வண்ணநுண் துகள்தூவித்
தழைத்த பொங்கெழில் முகஞ்செய்து
வணங்கின தடம்பணை வயற்சாலி. **#2047**

இடம் அகன்ற வயல்களில் உள்ள நெற்பயிர்கள், அணிகள் அணிந்த மார்பகங்களையுடைய, இமயமலையில் தோன் றிய கொடிபோன்ற பார்வதியம்மையார் இனிய அமுதச் சிவஞானத் தைக் குழைத்து அளிக்க, அதை உண்டருளிய ஞானசம்பந்தர் வரக் கண்டு, குளிர்ந்த மென்மையான காற்றினால் மணம் கமழும் மலர் களின் அழகிய நுண்ணிய பூந்தாதுக்களான சுண்ணத்தைத் தூவித் தழைத்த எழில் முகம் செய்து வணங்கின.

விளக்கவுரை

நெற்பயிர்கள், பிள்ளையாரை வரவேற்ற காட்சி இதனால் விளக்கப் பெறுகின்றது.

ஞாலம் உய்ந்திட ஞானமுண்
டவர்எழுந் தருளும்அந் நலங்கண்டு
சேல லம்புதண் புனல்தடம்
படிந்தணை சீதமா ருதம்வீசச்
சால வும்பல கண்பெறும்
பயன்பெறுந் தன்மையிற் களிகூர்வ
போல சைந்திரு புடைமிடைந்
தாடின புறம்பணை நறும்பூகம். **#2048**

வயல்களின் அருகேயுள்ள மணம் கமழும் பாக்கு மரங்கள், உலகம் உய்யும் பொருட்டாக ஞான அமுதையுண்டவர் எழுந்தருளும் திருத்தகைமையைக் கண்டு, சேல் மீன்கள் அலம்பும் குளிர்ந்த நீரையுடைய பொய்கைகளில் படிந்து அணைகின்ற குளிர்ந்த காற்று வீச, மிகப் பல கண்கள் பெற்ற பயன் பெறும் தன்மையினால் மகிழ்ச்சி அடைவன போல், இருமருங்கிலும் அசைந்து நெருங்கி ஆடின.

விளக்கவுரை

பூகம்: கமுகு என்கின்ற பாக்கு மரங்கள். பிள்ளையார் வரவு கண்டநிலையில் அம்மரங்கள் அவரை ஆடி வரவேற்றனவாம்.

பவந்த விர்ப்பவர் தில்லைசூழ்
எல்லையில் மறையவர் பயில்வேள்விச்
சிவந்த ரும்பய னுடையஆ
குதிகளின் செழும்புகைப் பரப்பாலே
தவந்த ழைப்பவந் தருளிய
பிள்ளையார் தாமணை வுறமுன்னே
நிவந்த நீலநுண் துகில்விதா
னித்தது போன்றது நெடுவானம். **#2049**

தவம் தழையத் தோன்றியருளிய ஞானசம்பந்தப் பெருமான் வந்தருள, அவரை வரவேற்று மகிழும் பொருட்டுப் பிற விியை ஒழித்தருளுபவரான கூத்தரின் திருத்தில்லை நகரத்தைச் சூழ்ந்த எல்லையில், மறையவர் பயிலும் வேள்வியில், சிவத்தன்மையை விளக்கும் பயன் கொண்ட வேள்வித் தீயினின்றும் எழுகின்ற செழும் புகையினது பரப்பினால், பெரிய வானம், உயர்ந்த நீலநிறமான நுட்ப மான துகிலை மேற் கட்டியாய்க் கட்டினதைப் போல் விளங்கியது.

விளக்கவுரை

சிவம் தரும் பயன் - பாச நீக்கம் செய்து சிவத்தை அடை விக்கும் பயன்: வீடு பேறாம் பயன். கொள்ளிடத்தின் தென்கரையை அடைந்து தில்லையை நோக்கிவரும் பிள்ளையாரை, இருமருங்கிலு முள்ள பொய்கைகளும் *(பா.148),* சோலைகளும் *(பா.149),* நெற் பயிர்களும் *(பா.150),* பாக்குமரங்களும் *(பா.151),* வானமும் *(பா.152)* மகிழ்ச்சி மீதூர எதிர்கொண்டவாற்றைத் தொடர்ந்து கூறி யிருக்கும் திறம் அறிந்து போற்றுதற்குரியதாம்.

கரும்பு செந்நெல்பைங் கமுகொடு
கலந்துயர் கழனியம் பணைநீங்கி
அரும்பு மென்மலர் தளிர்பல
மூலமென் றனைத்தின் ஆகரமான
மருங்கில் நந்தன வனம்பணிந்
தணைந்தனர் மாடமா ளிகையோங்கி
நெருங்கு தில்லைசூழ் நெடுமதில்
தென்திரு வாயில் நேரணித்தாக. **#2050**

கரும்பும் செந்நெல்லும் பசுமையான பாக்கு மரங்களுடன் கலந்து உயர்தற்கு இடமான வயல்களைக் கொண்ட மருத நிலத்தைக் கடந்து, அரும்புகளும் மென்மையான தளிர்களும், பழங்களும், வேர்களும் என்றிவை முதலான எல்லாவற்றிற்கும் பிறப்பிடமாக உள்ள திருநந்தன வனங்களை வணங்கி, மாடமாளிகை கள் ஓங்கிச் செறியும் தில்லை மாநகரைச் சூழ்ந்த மதிலின் தென்திசை வாயிலின் அருகில்,

ஞானசம்பந்தர் வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

பொய்கை முதலாக உள்ள இயற்கைப் பொருள்கள் யாவும் பிள்ளையாரை வணங்கி வரவேற்கத் திருநந்தனவனத்தை மட்டும் இவர் வணங்கி வந்தனர் என்றது, அஃது இறைவற்குப் பயன் படும் தகவும் பயனும் கருதியாம். `பன்மலர்ப் புனித நந்த வனங்கள் பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான்' எனச் சுந்தரர் வரலாற்றில் *(தி.12 சரு.1-5 பா.94)* வருமாறும் காண்க.

பொங்கு கொங்கையிற் கறந்தமெய்ஞ்
ஞானமாம் போனகம் பொற்குன்ற
மங்கை செங்கையா லூட்டவுண்
டருளிய மதலையார் வந்தார்என்
றங்கண்வாழ் பெருந்திருத் தில்லை
அந்தண ரன்பர்களுடன் ஈண்டி
எங்கும்மங்கல அணிமிக அலங்கரித்
தெதிர் கொள அணைவார்கள். **#2051**

`பால் பெருகிய மார்பகங்களில் கலந்த மெய்ஞ் ஞானப் பாலமுதினைப் பொன்மலையின் மங்கையாரான உமையம் மையார் தம் கையினால் எடுத்து ஊட்ட, அதனை உண்டருளிய பிள்ளையார் வந்தார்' என்று அங்கு வாழ்கின்ற தில்லைவாழ் அந்தணர்கள் அடியார்களுடன் கூடி நிறைந்து, யாண்டும் நகரை அணி செய்து, பிள்ளையாரை எதிர்கொள்ள அணைவாராய்,

விளக்கவுரை

****

வேத நாதமும் மங்கல
முழக்கமும் விசும்பிடை நிறைந்தோங்கச்
சீத வாசநீர் நிறைகுடந்
தீபங்கள் திசையெலாம் நிறைந்தாரச்
சோதி மாமணி வாயிலின் புறஞ்சென்று
சோபன வாக்கமுஞ் சொல்லிக்
கோதி லாதவர் ஞானசம்
பந்தரை எதிர்கொண்டு கொடுபுக்கார். **#2052**

மறைகளின் ஒலியும், மங்கல முழக்கமும் வானத் தில் நிறைந்து ஒலிக்கவும், குளிர்ச்சியும் மணமும் உடைய நீர் நிரம்பிய குடங்களும் நல்விளக்குகளும் நிறைந்து பொருந்தவும், ஒளி பொருந்திய பெரிய மணிகளையுடைய திருவாயிலின் வெளியே நின்று, மங்கலம் பெருக,

`நல் வரவாகுக' என்ற நன் மொழிகளையும் வாழ்த்துரைகளையும் சொல்லித் தீது நீங்கப் பெற்று வாழ்ந்தவர்களாகி, ஞானசம்பந்தரை எதிர் ஏற்று அழைத்துச் சென்றனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

செல்வம் மல்கிய தில்லைமூ
தூரினில் தென்றிசைத் திருவாயில்
எல்லை நீங்கியுள் புகுந்திரு
மருங்குநின் றெடுக்கும்ஏத் தொலிசூழ
மல்லல் ஆவண மறுகிடைக்
கழிந்துபோய் மறையவர் நிறைவாழ்க்கைத்
தொல்லை மாளிகை நிறைத்திரு
வீதியைத் தொழுதணைந் தனர்தூயோர். **#2053**

செல்வம் நிரம்பிய தில்லை மூதூரில் தெற்கு வாயிலின் வழி உட்புகுந்து, இருமருங்கிலும் எடுத்துப் போற்றும் ஒலி சூழ, வளமையுடைய அங்காடித் தெருவினைக் கடந்துபோய், அந் தணர்களின் நிறைவுடைய வாழ்க்கையைக் காண்டற்குரிய திருமாளி கைகள் நிரல்பட அமைந்து நிற்கும் திருவீதியைத் தொழுது, பிள்ளை யாரான தூயவர் திருநகரத்துள் சென்றனர்.

விளக்கவுரை

****

மலர்ந்த பேரொளி குளிர்தரச்
சிவமணங் கமழ்ந்துவான் துகள்மாறிச்
சிலம்ப லம்புசே வடியவர்
பயில்வுறுஞ் செம்மையால் திருத்தொண்டு
கலந்த அன்பர்தஞ் சிந்தையில்
திகழ்திரு வீதிகண் களிசெய்யப்
புலங்கொள் மைந்தனார் எழுநிலைக்
கோபுரம் பணிந்தெழுந் தனர்போற்றி. **#2054**

உலகெலாம் மலர்ந்த பேரொளி தண்ணிதாக அமைய, சிவ மணம் கமழ நிற்பதால் வானளவாய தூசுகள் நீங்கப் பெற்று, சிலம்பு ஒலிக்கும் சேவடிகளையுடைய கூத்தப் பெருமான் வீற்றிருக்கப் பெற்றதால் திருத்தொண்டின் உறைப்புப் பெற்ற அடிய வர்களின் உள்ளம் போல் விளங்கும் அவ்வீதியானது தம் கண்களை மகிழச் செய்ய, இவ்வுலகம் பயன் கொள்வதற்குரிய ஞானசம்பந்தப் பிள்ளையார் எழுநிலைக் கோபுரத்தைப் போற்றிப் பணிந்து எழுந்தார்.

விளக்கவுரை

அடியவர்களின் திருவுள்ளம் எனத் திருவீதி திகழ்ந்தது: திருவீதிக்கு ஆங்கால்: ஒளிதிகழ்தல் - சந்திரகாந்தக் கற்களாலாய மாடங்கள், திருவிளக்குகள் ஒளிதருதல். சிவமணம் கமழ்தல் - பெரு மானுக்குரிய தூபம் முதலாய நறுமணப் பொருள்கள் கமழ்தல். வான் துகள் - வானளாவிய தூசுகள். சிலம்பு அலம்ப சேவடியவர் பயில் வுறல் - பெருமான் திருவுலாப்போதருதல். அடியவர்களின் திருவுள் ளத்திற்கு ஆங்கால்: மலர்ந்த பேரொளி திகழ்தல் - உயிராவணம் இருந்து உற்று நோக்கிய நிலையில் உள்ளத்துள் சிவமுளைதழைதல். சிவ மணம் - சிவயோகத்தால் பெற்ற சிவமணம். வான்துகள் - நீள இருந்த ஆணவம் முதலாய தூசுகள். சேவடிபயில்வுறல் - சிவப் பேற்றை அடைதல்.

நீடு நீள்நிலைக் கோபுரத்
துள்புக்கு நிலவிய திருமுன்றில்
மாடு செம்பொனின் மாளிகை
வலங்கொண்டு வானுற வளர்திங்கள்
சூடு கின்றபே ரம்பலம்
தொழுதுபோந் தருமறை தொடர்ந்தேத்த
ஆடு கின்றவர் முன்புற
அணைந்தனர் அணிகிளர் மணிவாயில். **#2055**

நீண்டுயர்ந்த நிலைகளைக் கொண்ட தெற்குக் கோபுரத்துள் புகுந்து, நிலைபெற்ற திருமுற்றத்தின் அருகேயுள்ள செம்பொன் மாளிகையைச் சூழ வலமாக வந்து, வானுற ஓங்கிய திங்களைச் சூடிடும் உயர்ந்த பேரம்பலத்தை வணங்கி, மேலும் சென்று, அரிய மறைகள் தொடர்ந்து போற்றத் திருக்கூத்து இயற்றும் கூத்தப் பெருமானின் திருமுன்பு சேர்வதற்கு, அழகு மிகும் மணிகளையுடைய திருவணுக்கன் திருவாயிலை அடைந்தார் ஞானசம்பந்தர்.

விளக்கவுரை

****

நந்தி யெம்பிரான் முதற்கண
நாதர்கள் நலங்கொள்பன் முறைகூட
அந்த மில்லவர் அணுகிமுன்
தொழுதிரு அணுக்கனாந் திருவாயில்
சிந்தை யார்வமும் பெருகிடச்
சென்னியிற் சிறியசெங் கையேற
உய்ந்து வாழ்திரு நயனங்கள்
களிகொள்ள உருகுமன் பொடுபுக்கார். **#2056**

நந்தி தேவரான நம்பெருமானைத் தலைவராகக் கொண்ட சிவகணநாதர்கள், நலம்மிக நிரல்படக் கூடி நிற்க, எண்ணி றந்த அடியவர்கள், முனிவர்கள், தேவர்கள் முதலியவர்கள் அவர்க ளின் பின்நின்று தொழுகின்ற திருவணுக்கன் வாயிலில், உள்ளத்தில் ஆர்வம் பெருகவும், தலைமீது சிறிய சிவந்த கைகள் ஏறிக் குவியவும், கண்கள் மகிழ்ச்சி பொருந்தவும், உருகிய அன்புடன் உட்புகுந்தார் காழிப் பிள்ளையார்.

விளக்கவுரை

****

அண்ண லார்தமக் களித்தமெய்ஞ்
ஞானமே யானஅம் பலமுந்தம்
உண்ணி றைந்தஞா னத்தெழும்
ஆனந்த வொருபெருந் திருக்கூத்தும்
கண்ணில் முன்புறக் கண்டுகும்
பிட்டெழுங் களிப்பொடுங் கடற்காழிப்
புண்ணி யக்கொழுந் தனையவர்
போற்றுவார் புனிதரா டியபொற்பு. **#2057**

தலைமையமைந்த இறைவர் தமக்குத் தந்த மெய்ஞ்ஞானமேயாய திருவம்பலத்தையும், தமதுள்ளத்தே நிறைந் துள்ள அச்சிவஞானத்துள் எழுகின்ற சிவானந்தமான ஒப்பில்லாத பெருமை பொருந்திய திருக்கூத்தையும், கண்களின் முன் வெளிப்படக் கண்டு வணங்கியதால் உண்டான பெருமகிழ்வுடன், கடல் சூழ்ந்த சீகா ழியில் தோன்றிய சிவ புண்ணியக் கொழுந்து போன்ற பிள்ளையார், தூயவரான இறைவரின் திருக்கூத்து இயற்றும் அழகைப் போற்று பவராய்,

விளக்கவுரை

மெய்ஞ்ஞானம் - மெய்யுணர்வு : தன்னறிவானும் தனக்குற்ற கருவிகளானும் அறிதற்கரியதாகலின் உணர்வரிய மெய்ஞ் ஞானம் என முன்னர்க் குறித்தார். இவ்வுணர்வின் பயன் இறையைக் கண்டு மகிழ்தலாம்.

உணர்வின் நேர்பெற வருஞ்சிவ
போகத்தை ஒழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி அளவினும்
எளிவர அருளினை எனப்போற்றி
இணையில் வண்பெருங் கருணையே
ஏத்திமுன் எடுத்தசொற் பதிகத்திற்
புணரு மின்னிசை பாடினர்

ஆடினர் பொழிந்தனர் விழிமாரி. #2058

`உள் உணர்வால் உணர வருகின்ற சிவபோ கத்தை, வெளிப்படப் புலப்படுத்தி நிற்கும் ஐம்பொறிகளின் அளவி லும் எளிதில் கண்டு மகிழும் வண்ணம் அருள்செய்தீர்' எனப் போற்றி ஒப்பில்லாத கருணைத் திறத்தை முன்னர்த் தொடங்கிய சொற் பதிகத் தில் பொருந்தும் இனிய இசையுடன் பாடுபவராய், மகிழ்ச்சி மீதூரக் கூத்தாடுபவராய்க் கண்களினின்றும் அவ்வின்பப் பெருக்கைப் பொழிந்தவராய்,

விளக்கவுரை

இக்கருத்தமைவுடைய திருப்பதிகம் கிடைத்திலது.

ஊழி முதல்வர்க்
குரிமைத் தொழிற்சிறப்பால்
வாழிதிருத் தில்லைவாழ்
அந்தணரை முன்வைத்தே
ஏழிசையும் ஓங்க
எடுத்தார் எமையாளும்
காழியர்தங் காவலனார்
கற்றாங் கெரியோம்பி. #2059

ஊழிகளின் முதல்வரான கூத்தப் பெருமானுக்கு உரிய அகம்படிமைத் தொழில் புரிந்துவரும் சிறப்பால், தில்லையில் வாழும் அந்தணரை முதலில் வைத்து, ஏழிசையும் பொருந்தி விளங்கக் `கற்றாங்கு எரியோம்பி' என்ற முதற்குறிப்பை உடைய திருப்பதிகத்தை எம்மை ஆளும் சீகாழிக் காவலர் தொடங்கியவராய்,

விளக்கவுரை

தொடர்ந்து வரும் பிறப்பு இறப்பின் தொடர்பால் இளைப்புற்று நிற்கும் உயிர்களுக்கு அவ்விளைப்பு நீங்குதற்காக அவற்றைத் தன்பால் ஒடுக்கியும், வினை நீக்கத்தின் பொருட்டு மீளத் தோற்றுவித்தும் வரும் பாங்கால், இறைவனை, `ஊழி முதல்வன்' என்றார். `ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனையே' *(தி.8 ப.7 பா.8)* என வரும் திருவாக்கும் காண்க. இவ்வாறு அந்தத்தைச் செய்யும் பெருமானே ஆதியாதல் பற்றி `அந்தம் ஆதி' என மெய்ந்நூல்கள் குறிப்பதாயின. `கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே, செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய' என இப் பதிகம் *(தி.1 ப.80)*. தொடங்கி வருதலின், `தில்லைவாழ் அந்தணரை முன்வைத்தே' எனக் கூறினார். இப்பதிகம் குறிஞ்சிப் பண்ணில் அமைந்துள்ளது

பண்ணார் பதிகத்
திருக்கடைக்காப் புப்பரவி

உண்ணாடும் என்பும்
உயிருங் கரைந்துருக்கும்
விண்ணா யகன்கூத்து
வெட்டவெளி யேதிளைத்துக்
கண்ணா ரமுதுண்டார்
காலம் பெறஅழுதார். **#2060**

காலம் உண்டாகவே காதல் செய்து அழுது அழைத்தவரான பிள்ளையார், பண் நிரம்பிய திருப்பதிகத்தின் திருக்கடைக்காப்பினை நிறைவித்துப் போற்றி, உடற்கு நிலைக்கள னாய எலும்பும், உயிரும் கரையுமாறு உருக்குகின்ற இறைவரின் அருட்கூத்தை வெட்ட வெளியில் நுகர்ந்து, கண்ணகத்தே நின்று களிதரும் அமுதை உட்கொண்டார்.

விளக்கவுரை

இப்பதிகப் பண் குறிஞ்சியாம். இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

முன்மால் அயன்அறியா
மூர்த்தியார் முன்னின்று
சொன்மாலை யாற்காலம்
எல்லாந் துதித்திறைஞ்சிப்
பன்மா மறைவெள்ளம்
சூழ்ந்து பரவுகின்ற
பொன்மா ளிகையைவலங்
கொண்டு புறம்போந்தார். **#2061**

முற்காலத்தில் திருமாலும் நான்முகனும் அறியாத இறைவரின் திருமுன் நின்று, சொல் மாலையான திருப்பதிகங்களால் எல்லாக் காலங்களிலும் போற்றி வணங்கி, அளவற்ற பெருமறை களின் வெள்ளங்கள் சூழ்ந்து வணங்குகின்ற செம்பொன் மாளிகை யான பொன்னம்பலத்தை வலமாக வந்து புறத்தே போந்தார்.

விளக்கவுரை

`சொல்மாலையால் கால மெல்லாம் துதித்து' எனவே, இக்கால எல்லையில் பிள்ளையார், பல்வேறு பண்களில், பல பதிகங் களை அருளிச் செய்திருத்தல் வேண்டும். எனினும் அவை கிடைத் தில. பன்மாமறை வெள்ளம் - அளவற்ற மறைகள். அம்மறைகளை ஓதிவரும் அளவற்ற அந்தணர் கூட்டம் என்றும் அமையும். இனி அம்மாளிகையின் தூண்கள், பலகணிகள், மேல்வேய்ந்த ஓடுகள் பலவும் மறைகளின் மந்திர உறுப்புக்களாக அமைந்திருத்தல் பற்றி இங்ஙனம் கூறினார் எனலுமாம்.

செல்வத் திருமுன்றில்

தாழ்ந்தெழுந்து தேவர்குழாம்
மல்குந் திருவாயில்
வந்திறைஞ்சி மாதவங்கள்
நல்குந் திருவீதி
நான்குந் தொழுதங்கண்
அல்குந் திறம்அஞ்சு
வார்சண்பை ஆண்டகையார். **#2062**

செல்வம் பொருந்திய திருமுன்றிலின் கீழே விழுந்து வணங்கி எழுந்து, விண்ணவர் கூட்டம் நிறைந்திருக்கும் திருவாயிலில் வந்து வணங்கி, மாதவங்களைத் தரும் நான்கு வீதிக ளையும் வணங்கி, அவ்விடத்தில் தங்கியிருத்தற்கும் பிள்ளையார் அஞ்சுபவராய்,

விளக்கவுரை

செல்வத் திருமுன்றில் - செல்வராய பெருமானும் அவரை வணங்கும் செல்வமாய செல்வமும் நிலைபெற்றிருக்கும் திருமுன்றில். தவத்தின் பயன் சிவத்தை அடைதலாம். இவ்வீதிகள் சிவமே நிலவிய திருவீதிகளாதலின் அப்பயனை அவ்வீதிகளே நல்குதலின் `மாதவங்கள் நல்கும் திருவீதி' என்றார். அவ்விடத்துத் தங்குதற்கும் அஞ்சினார் என்பதால் அப்பதியின் பெருமையுணர நின்றது. அன்றியும் தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சார்ந்து நிற்கும் பிள்ளையாரின் பெருமையும் உணர நின்றது.

செய்ய சடையார்
திருவேட் களஞ்சென்று
கைதொழுது சொற்பதிகம்
பாடிக் கழுமலக்கோன்
வைகி அருளுமிடம்
அங்காக மன்றாடும்
ஐயன் திருக்கூத்துக்
கும்பிட் டணைவுறுநாள். **#2063**

ஞானசம்பந்தர் சிவந்த சடையையுடைய சிவபெருமானின் திருவேட்களத்துக்குச் சென்று, கையால் தொழுது சொல்பதிகத்தைப் பாடி, எழுந்தருளியிருக்கும் இடம் அவ்விடமாக, நாளும் அப்பேரம்பலத்தில் வீற்றிருந்தருளும் பெருமானாரின் திருக் கூத்தையும் சென்று கண்டு மகிழ்ந்து மீண்டு போந்திருக்கும் அந்நாளில்,

விளக்கவுரை

திருவேட்களத்தில் பாடிய சொற்பதிகம் `அந்தமும் ஆதியும்' *(தி.1 ப.39)* என்று தொடங்கும் தக்கராகப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

கைம்மான் மறியார்
கழிப்பாலை யுள்ளணைந்து
மெய்ம்மாலைச் சொற்பதிகம்
பாடிவிரைக் கொன்றைச்
செம்மாலை வேணித்
திருவுச்சி மேவியுறை
அம்மானைக் கும்பிட்
டருந்தமிழும் பாடினார். **#2064**

தம் திருக்கையில் மான் கன்றைக் கொண்டி ருக்கும் சிவபெருமான் எழுந்தருளிய திருக்கழிப் பாலையைச் சேர்ந்து மெய்ம்மை பொருந்திய சொற்பதிகத்தைப் பாடி, மணமுடைய கொன்றை மலராலாய அழகான மாலையைச் சூடிய திருச்சடையை உடைய `திருவுச்சி' என்னும் பதியில் எழுந்தருளிய இறைவரைக் கும்பிட்டு அரிய தமிழ்ப்பதிகத்தையும் பாடினார் காழிப் பிள்ளையார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின. திருக்கழிப்பாலையில் அருளிய பதிகங்கள்: *1.* `புனலாடிய' *(தி.2 ப.21)* - பண், இந்தளம். *2.* `வெந்தகுங்கிலியப்புகை' *(தி.3 ப.44)* - பண், கௌசிகம்.
திருநெல்வாயிலில் அருளிய பதிகம்: `புடையினார்' *(தி.2 ப.26)* - பண், இந்தளம். இத்திருப்பதி திருவுச்சி என்றும், சிவபுரி என்றும் அழைக்கப்பெறும். இப்பதிகப் பாடல் தொறும் இறைவன் `உச்சியாரே' எனக் குறிக்கப் பெறுதலும் காணலாம். உச்சியார் - தலை மீது உள்ளவர் எனும் பொருள்படவும் வரும். `தலைமே லான்' *(தி.6 ப.8 பா.5)* என வரும் அப்பர் திருவாக்கும் காண்க.

பாடும் பதிகஇசை
யாழ்ப்பாண ரும்பயிற்றி
நாடுஞ் சிறப்பெய்த
நாளும்நடம் போற்றுவார்
நீடுந் திருத்தில்லை
அந்தணர்கள் நீள்மன்றுள்
ஆடுங் கழற்கணுக்க
ராம்பே றதிசயிப்பார். **#2065**

பாடப்பட்ட பதிகத்தின் இசையினைத் திரு நீலகண்ட யாழ்ப்பாணரும் யாழில் இசைத்து வேண்டத்தகும் சிறப் பைப் பெற்றார். நாளும் தில்லையில் சென்று இறைவரின் திருக்கூத் தைப் போற்றிவரும் பிள்ளையார், தில்லைவாழ் அந்தணர்கள் நீளும் திருவம்பலத்தில் ஆடும் திருவடிகளுக்கு அணுக்கத் தொண்டர்களாக இருக்கும் பேற்றைப்

பார்த்து வியப்படைந்து வந்தனர்.

விளக்கவுரை

****

ஆங்கவர்தஞ் சீலத்
தளவின் மையும்நினைந்தே
ஓங்கியெழுங் காதல்
ஒழியாத உள்ளத்தார்
தேங்கமழுஞ் சோலைத்
திருவேட் களங்கடந்து
பூங்கிடங்கு சூழ்புலியூர்ப்
புக்கணையும் போழ்தின்கண். **#2066**

அங்கு வாழும் அந்தணர்கள் தம் ஒழுக்கத்தில் அளவில்லாத சிறப்புடன் நிற்கும் நிலைமையும் எண்ணி, மேல் கிளர்ந்து எழும் ஆசை நீங்காத மனத்துடன், ஒருநாள் மணம் வீசும் சோலை சூழ்ந்த திருவேட்களத்தைக் கடந்து, மலர்கள் நிரம்பிய அகழி சூழ்ந்த திருப்புலியூரினுள் புகுந்து சேர்கின்ற போழ்தில்,

விளக்கவுரை

****

அண்டத் திறைவர்
அருளால் அணிதில்லை
முண்டத் திருநீற்று
மூவா யிரவர்களும்
தொண்டத் தகைமைக்
கணநாத ராய்தோன்றக்
கண்டஅப் பரிசுபெரும்
பாணர்க்கும் காட்டினார். **#2067**

எவ்வுலகிற்கும் இறைவரான கூத்தப் பெருமான் திருவருளால், அழகிய தில்லையில் வாழ்கின்ற, நெற்றியில் திருநீற்றை அணிந்த அந்தணர் மூவாயிரவரும் திருத்தொண்டின் தன்மையுடைய சிவகண நாதர்களாய்த் தோன்றக் கண்டு, அதனை ஞானசம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கும் காட்டினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

செல்வம் பிரிவறியாத்
தில்லைவாழ் அந்தணரும்
எல்லையில்சீர்ச் சண்பை

இளவே றெழுந்தருளி
ஒல்லை இறைஞ்சாமுன்
தாமும் உடனிறைஞ்சி
மல்லல் அணிவீதி
மருங்கணைய வந்தார்கள். #2068

அருட்செல்வம் என்றும் நீங்கப் பெறாத தில்லை வாழ் அந்தணர்களும், அளவற்ற சிறப்பையுடைய சீகாழியில் தோன் றிய இளஞ்சிங்க ஏற்றைப் போன்ற ஞானசம்பந்தர் எழுந்தருளி வந்து விரைந்து தம்மை வணங்குதற்கு முன்பே, தாமும் உடனே வணங்கிச் செழுமையும் பொலிவும் கொண்ட வீதியில் அவர் அருகே சூழ வந்தனர்.

விளக்கவுரை

****

பொங்கி யெழுங்காதல்
புலனாகப் பூசுரர்தம்
சிங்கம் அனையார்
திருமுடியின் மேற்குவித்த
பங்கயத்தின் செவ்வி
பழித்து வனப்போங்கும்
செங்கை யொடுஞ்சென்று
திருவாயி லுட்புக்கார். #2069

மேன்மேலும் பெருகி எழும் மிக்க ஆசையானது வெளித் தோன்றுமாறு அந்தணர்களின் சிங்கம் போன்ற ஆளுடைய பிள்ளையார், தலைமீது கூப்பிய தாமரை மலரின் அழகையும் வென்று அவ்வழகாலே ஓங்கும் கையுடனே சென்று திருவாயிலுள் புகுந்தார்.

விளக்கவுரை

****

ஒன்றிய சிந்தை
உருக உயர்மேருக்
குன்றனைய பேரம்
பலமருங்கு கும்பிட்டு
மன்றுள் நிறைந்தாடும்
மாணிக்கக் கூத்தர்எதிர்
சென்றணைந்து தாழ்ந்தார்
திருக்களிற் றுப்படிக்கீழ். #2070

இறைவரிடம் ஒன்றுபட்ட மனம் உருக, உயர்ந்த மேரு மலையைப் போன்ற பேரம்பலத்துள் நிறைந்து அருள்கூத்து இயற்றுகின்ற

மாணிக்கக் கூத்தரின் திருமுன்பு திருக்களிற்றுப் படியின் கீழே நின்று தாழ்ந்து எழுந்தார்.

விளக்கவுரை

****

ஆடி னாய்நறு நெய்யொடு
பால்தயிர் என்றெடுத் தார்வத்தால்
பாடி னார்பின்னும் அப்பதி
கத்தினிற் பரவிய பாட்டொன்றில்
நீடு வாழ்தில்லை நான்மறை
யோர்தமைக் கண்டஅந் நிலையெல்லாம்
கூடு மாறுகோத்து அவர்தொழு
தேத்துசிற் றம்பலம் எனக்கூறி. **#2071**

`ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர்' என்று தொடங்கி, மிகுந்த ஆசையுடன் பாடினார். மேலும் அப்பதிகத்தில் போற்றியதொரு திருப்பாட்டில், தில்லைவாழ் அந்தணர்களை அன்று தாம் கணநாதராய்க் கண்ட அந்நிலைகள் எல்லாம் பொருந்துமாறு கோத்து, அத்தகைய தன்மையுடையவர் தொழுது, வணங்கும் திருச்சிற்றம்பலமாகும் என்று எடுத்துக் கூறி,

விளக்கவுரை

`ஆடினாய் நறு நெய்யொடு பால் தயிர்' *(தி.3 ப.1)* எனத் தொடங்கும் பதிகம், காந்தார பஞ்சமப் பண்ணில் அமைந்தது. தில்லைவாழ் அந்தணர்களைச் சிவகணநாதர்களாகப் பிள்ளையார் கண்டு போற்றிய குறிப்பை, இப்பதிகத்துள் *3*ஆவது பாடல் கூறும்.

`நீலத் தார்கரி யமிடற் றார்நல்ல
நெற்றி மேலுற்ற கண்ணி னார்பற்று
சூலத் தார்சுட லைப் பொடி நீறணி வார்சடையார்
சீலத் தார்தொழு தேத்துசிற் றம்பலஞ்
சேர்த லாற்கழற் சேவடி கைதொழக்
கோலத் தாயரு ளாயுன காரணங் கூறுதுமே' *(தி.3 ப.1 பா.3)*

என்பது அப்பாடலாகும். இதன்கண் தில்லைவாழ் அந்தணர்களைச் சிவகணநாதரின் தோற்றமாகக் கண்டிருப்பதைக் காணலாம். நீலநிறம் பொருந்திய கழுத்தும், நெற்றிக் கண்ணும், சூலமும் தில்லைவாழ் அந்த ணர்களுக்கு இயல்பில் அமைந்தனவல்ல. ஆயினும் அவை அவர்களி டத்துக் கண்டது சிவகணங்களாக இறைவர் காட்டிய நிலையிலேயாம். திருவாரூர்ப் பிறந்தார்களைச் சிவகணங்களாக நமிநந்தி அடிகட்கு இறைவர் காட்டியமையும் ஈண்டு நினைவு கூரலாம். *(தி.12 பு.27 பா.27).*

இன்ன தன்மையில் இன்னிசைப்
பதிகமும் திருக்கடைக் காப்பேற்றி
மன்னும் ஆனந்த வெள்ளத்தில்
திளைத்தெதிர் வந்துமுன் நின்றாடும்
பின்னு வார்சடைக் கூத்தர்பே
ரருள்பெறப் பிரியாத விடைபெற்றுப்
பொன்னின் அம்பலஞ் சூழ்ந்துதாழ்ந்
தெழுந்துபோந் தணைந்தனர் புறமுன்றில். **#2072**

இவ்வாறாய நிலையில் இனிய இசை பொருந்திய பதிகத்தைத் திருக்கடைக் காப்புச் சொல்லி நிறைவாக்கிப் போற்றி, நிலைபெற்ற ஆனந்த வெள்ளத்துள் முழுகித் திளைத்து, எதிரில் வந்து நின்றாடும் பின்னிய நீண்ட சடையையுடைய கூத்தரின் திருவருளைப் பெறுமாறு பிரியா விடை பெற்றுப் பொன்னம்பலத்தை வலம் வந்து வெளிமுற்றத்தை அடைந்தார் பிள்ளையார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

அப்பு றத்திடை வணங்கிஅங்
கருளுடன் அணிமணித் திருவாயில்
பொற்பு றத்தொழு தெழுந்துடன்
போதரப் போற்றிய புகழ்ப்பாணர்
நற்ப தந்தொழு தடியனேன்
பதிமுதல்நதி நிவாக் கரை மேய
ஒப்பில் தானங்கள் பணிந்திட
வேண்டும்என் றுரைசெய அதுநேர்வார். **#2073**

அத்திரு முற்றத்தைப் புறத்தில் வணங்கி, அங்குத் திருவருள் பெற்று அழகிய மணிகள் பதித்த திருவாயிலில் தொழுது, வணங்கி, எழுந்தார் பிள்ளையார். அது பொழுது தம்முடன் வரப் பெறும் பேற்றைப் பெற்ற புகழையுடைய திருநீலகண்ட யாழ்ப்பாணர் தம் திருவடிகளை வணங்கி, அடியவனின் பதியான `திருஎருக்கத்தம் புலியூர்' முதலாக `நிவா நதியின் கரையில் உள்ள ஒப்பில்லாத திருப்பதிகளைச் சென்று வணங்க வேண்டும்' என்று வேண்டிக் கொள்ளப் பிள்ளையாரும் அதற்கு உடன்பட்டவராய்,

விளக்கவுரை

நிவாநதி - வட வெள்ளாற்றை இன்றும் சிற்சில இடங்களில் நிவா நதி என அழைப்பர். திருமுறைகளில் நிவா நதி எனும் பெயரே பெரிதும் குறிப்பிடப்படுகின்றது.

பொங்கு தெண்திரைப் புனிதநீர்
நிவாக்கரைக் குடதிசை மிசைப்போந்து
தங்கு தந்தையா ருடன்பரி
சனங்களும் தவமுனி வருஞ்செல்லச்
செங்கை யாழ்திரு நீலகண்
டப்பெரும் பாணனா ருடன்சேர
மங்கை யார்புகழ் மதங்கசூ
ளாமணி யார்உடன் வரவந்தார். **#2074**

நீர் பெருகுகின்ற தெளிந்த அலைகளையுடைய, தூய நீர் நிரம்பிய, நிவா நதிக்கரையின் வழியே, மேற்குத் திசையில் சென்று, தம்முடன் வந்தருளும் தந்தையாரான சிவபாத இருதயர், அடியவர்கள், தவமுனிவர்கள், செவ்விய கையில் யாழையுடைய திருநீலகண்ட யாழ்ப்பாணர், அவர் மனைவியாரான மதங்க சூளா மணியாரும் யாவரும் உடன்வர ஆளுடைய பிள்ளையார் சென் றருளினார்.

விளக்கவுரை

கொல்லி மலை, பச்சைமலை ஆகிய இம்மலைகளி லிருந்து வரும் கானாரியாறு, எழுமூர் ஆறு, என்பனவும், கல்விராயன் மலையிலிருந்து பல சிற்றாறுகளாகப் பெருகி, ஆற்றூர், ஆறகனூர், சின்ன சேலம் வழியாக வரும் இப்போது வசிஷ்ட நதி என்று வழங்கும் ஆறும், கல்விராயன் மலை, மற்றும் சில சரிவுகளிலிருந்து வரும் மயூர நதி, திருமணிமுத்தாறு (திருமுதுகுன்றம் வழியாக வருவது), தேனாறு முதலியவைகளும் ஆங்காங்கு வந்து கூடி, வடவெள்ளாறு என்ற பெயரால் பெருகி வரும் சிறப்புடையது நிவா நதியாகும். ஆதலின் ஆசிரியர், `பொங்கு தெண்டிரைப் புனிதநீர் நிவா' என்றார் (சிவக் கவிமணியவர்கள் குறிப்பு). இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

இருந்த டங்களும் பழனமும்
கடந்துபோய் எருக்கத்தம் புலியூரின்
மருங்கு சென்றுற நீலகண்
டப்பெரும் பாணனார் வணங்கிக்கார்
நெருங்கு சோலைசூழ் இப்பதி
அடியனேன் பதியென நெடிதின்புற்
றருங்க லைச்சிறு மழஇளங்
களிறனார் அங்கணைந் தருள்செய்வார். **#2075**

பெரிய நீர் நிலைகளையும் வயல்களையும் கடந்து சென்று திருஎருக்கத்தம்புலியூரின் அருகில் சென்று சேர, திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருமுன் வந்து வணங்கி நின்று, மேகங்கள் நெருங்கிய தும் பூஞ்சோலைகள் சூழ்ந்ததுமான இத்திருப்பதி, அடியேனின் பதியா கும்

என்று விண்ணப்பித்துக் கொள்ள, மிகவும் மகிழ்ச்சியடைந்து, அரிய
மறை முதலிய கலைகள் யாவும் விளங்குதற்கு இடமான அத்
திருப்பதியை சிறிய இளைய யானைக் கன்றைப் போன்ற பிள்ளை யார்
அணைந்து அருள் செய்பவராய்,

விளக்கவுரை

****

ஐயர் நீரவ தரித்திட
இப்பதி அளவில்மா தவமுன்பு
செய்த வாறெனச் சிறப்புரைத்
தருளிஅச் செழும்பதி இடங்கொண்ட
மைகொள் கண்டர்தங் கோயிலி
னுட்புக்கு வலங்கொண்டு வணங்கிப்பார்
உய்ய வந்தவர் செழுந்தமிழ்ப்
பதிகம்அங் கிசையுடன் உரைசெய்தார். **#2076**

`ஐயரே! நீர் இங்குத் தோன்றுதற்கு இத்திருப்பதி யானது அளவற்ற
பெருந்தவத்தைச் செய்திருந்தது எனச் சிறப்பித்துக் கூறி, அச்
செழிப்புடைய திருப்பதியில் இடம் கொண்டு எழுந்தருளி இருக்கும்
திருநீலகண்டரான இறைவரின் திருக்கோயிலுக்குள் சென்று வணங்கி,
உலகுய்யத் தோன்றிய பிள்ளையார் செழுந்தமிழ்ப் பதி கத்தை
இசையுடன் அருள்செய்தார்.

விளக்கவுரை

இத்திருப்பதியில் பாடியருளியது `படையார் தரு' *(தி.1 ப.89)* என்று தொடங்கும் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த பதிகமாகும். சிறந்த அடியவர்கள் உடன் இருக்கப் பாடுங்கால் அவர்களை அப்பதி கப் பாடல்களுள் ஒன்றிலோ அல்லது பதிகம் முழுமையாகவோ கூடச் சிறப்பித்துப் பாடுவது சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய பெருமக்களின் இயல்பாகும். இதனை அவரவர் வரலாற்றிலும் ஆங்காங்குக் காண இயலுகின்றது. அந்நிலையில், யாழ்ப்பாணர் தில்லையில், தம்பதி முதலாயவற்றிற்கு வரவேண்டும் என விண்ணப்பித்துக் கொண்டும், உடன் வந்தும், திருப்பதிகங்களை யாழிலிட்டு இசைத்தும் வர, அவரைச் சம்பந்தர் அவர்தம் திருப்பதியில் அருளிய இப்பதிகத்துள் ஓரிடத்தேனும் வைத்துப் பாடாதிரார் என்றே நினைய வேண்டியுள் ளது. இப்பதிகத்துள் ஏழாவது பாடல் கிடைத்திலது. ஒருகால் அப்பாடலில் இயைத்துப் பாடி இருக்கலாம் அன்றி இத்திருப்பதிக்கு, இப்பதிகம் தவிரப் பிறபதிகங்கள் இருந்து, அவற்றில் வைத்துப் பாடப்பெற்று, அவை இன்று கிடைக்காமலும் இருக்கலாம், திருவருள். இவ்விரு பாடல்களும்

ஒருமுடிபின.

அங்கு நின்றெழுந் தருளிமற்
றவருடன் அம்பொன்மா மலைவல்லி
பங்கர் தாமினி துறையுநற்
பதிபல பரிவொடும் பணிந்தேத்தித்
துங்க வண்டமிழ்த் தொடைமலர்
பாடிப்போய்த் தொல்லைவெங் குருவேந்தர்
செங்க ணேற்றவர் திருமுது
குன்றினைத் தொழுதுசென் றணைகின்றார். **#2077**

அப்பதியினின்றும் புறப்பட்டு மேற்சென்று, அழகிய பொன்மலையில் தோன்றியருளிய உமையம்மையை ஒரு கூற்றில் கொண்ட சிவபெருமான் இனிதாய் உறைகின்ற பதியாகிய பலவற்றிற்கும் சென்று பணிந்து ஏத்தி, உயர்ந்த வண்டமிழ்ப் பாமா லைகள் பாடிச் சென்று, பழமையான சீகாழித் தலைவரான பிள்ளை யார் சிவந்த கண்களையுடைய ஆனேற்றை ஊர்தியாகக் கொண்ட சிவபெருமானின் `திருமுதுகுன்றத்தை' வணங்கிச் சென்று அணைப வராய்,

விளக்கவுரை

`பதிபல பரிவோடும் பணிந்தேத்தி' என்பதால், திருஎருக்கத்தம்புலியூரிலிருந்து திருமுதுகுன்றம் வரையிலுள்ள பல பதிகளுக்கும் சென்று பற்பல திருப்பதிகங்களையும் பாடியருளியிருக் கலாம். எனினும் அப்பதிகங்கள் எவையும் கிடைத்தில.

மொய்கொள் மாமணி கொழித்துமுத்
தாறுசூழ் முதுகுன்றை அடைவோம்என்று
எய்து சொன்மலர் மாலைவண்
பதிகத்தை இசையொடும் புனைந்தேத்திச்
செய்த வத்திரு முனிவருந்
தேவருந் திசையெலாம் நெருங்கப்புக்
கையர் சேவடி பணியுமப்
பொருப்பினில் ஆதர வுடன்சென்றார். **#2078**

`பெருமணிகளை மிகுதியாகக் கொழித்துக் கொண்டு வரும் திருமணிமுத்தாறு சூழும் திருமுதுகுன்றத்தைச் சென்ற டைவோம்' என்று பொருந்தும் சொல்மலர்களாலாய பதிகத்தை இசையுடன் பாடிப் போற்றி, சிறந்த தவத்தையுடைய முனிவர்களும் தேவர்களும் திசையனைத்தும் நெருங்கப் புகுந்து, இறைவரின் சேவடி களை வணங்குகின்ற அப்பழமலையினிடத்து அன்பு மீதூரச் சென்ற டைந்தார்.

விளக்கவுரை

`முதுகுன்றடைவோமே' எனும் தொடர், பதிகம் முழுதும் அமைந்துள்ளது. அப்பதிகம் `மத்தா வரை' *(தி.1 ப.12)* எனத் தொடங்கும் நட்டபாடைப் பண்ணாலாமைந்த பதிகம் ஆகும். இஃது திருப்பதியை அணையும் பொழுது அருளியதாகும். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

வான நாயகர் திருமுது
குன்றினை வழிபட வலங்கொள்வார்
தூந றுந்தமிழ்ச் சொல்லிருக்
குக்குறட் டுணைமலர் மொழிந்தேத்தி
ஞான போனகர் நம்பர்தங்
கோயிலை நண்ணியங் குள்புக்குத்
தேன லம்புதண் கொன்றையார்
சேவடி திளைத்தஅன் பொடுதாழ்ந்தார். **#2079**

தேவதேவரான சிவபெருமானின் திருமுதுகுன் றத்தை வழிபடும் பொருட்டு, அதை வலமாய் வருகின்றவராய்த் தூய நல்ல தமிழ்ச் சொற்களால் திருவிருக்குக்குறட் பதிகமாகிய துணை மலர்களை மொழிந்து, போற்றிச் சிவபெருமானின் கோயிலை அடைந்து, உட்சென்று, தேன்சிந்தும் குளிர்ந்த கொன்றை மலர்மாலை அணிந்த சிவபெருமானின் அடிகளில், ஞான அமுதத்தை உண்ட பிள்ளையார், மிகுந்த அன்புடனே தாழ்ந்து வணங்கினார்.

விளக்கவுரை

திருக்கோயிலை வலம் வரும் பொழுது அருளிய திருவிருக்குக்குறள் பதிகம், `நின்று மலர்தூவி' *(தி.1 ப.93)* எனத் தொடங் கும் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த திருப்பதிகமாகும்.

தாழ்ந்தெ ழுந்துமுன் முரசதிர்ந்
தெழும்எனுந் தண்டமிழ்த் தொடைசாத்தி
வாழ்ந்து போந்தங்கண் வளம்பதி
அதனிடை வைகுவார் மணிவெற்புச்
சூழ்ந்த தண்புனல் சுலவுமுத்
தாற்றொடு தொடுத்தசொல் தொடைமாலை
வீழ்ந்த காதலாற் பலமுறை
விளம்பியே மேவினார் சிலநாள்கள். **#2080**

வணங்கி எழுந்து, இறைவன் திருமுன்பு நின்று, `முரசதிர்ந்தெழுதரு' என்ற தண்ணார் தமிழ் மாலையைப் பாடி, இன்புற்று வெளிப்போந்து, வளம் மிக்க அத்திருப்பதியில் தங்கி யிருந்தார். அவர் மணிகளையுடைய அந்தத் திருமுதுகுன்றத்தைச் சூழ்ந்த நீருடைய `முத்தாற்றினுடனே' சேர்த்து இயற்றிய திருப்பதிக மாலையை விரும்பிய அன்புடனே பலமுறையும் கூறி, அங்குச் சில நாள்கள் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

இறைவன் திருமுன்பு அருளியது `முரசதிர்ந்தெழுதரு' *(தி.3 ப.99)* எனத் தொடங்கும் சாதாரிப் பண்ணிலமைந்த பதிகமாகும். இப்பதியில் வாழ்ந்தருளிய பொழுது, மணிமுத்தாறு நதியுடன் இணைந்த பல பதிகங்களை அருளிச் செய்தார் என ஆசிரியர் அருளுகின்றார். இப் பதிக்கென இவ்வமையத்து அருளியனவாகக் காணக் கிடைக்கும் பிற பதிகங்கள் நான்காம். அவை:

1. `தேவராயும்' *(தி.1 ப.53)* - பழந்தக்கராகம்
2. `மெய்த்தாறு' *(தி.1 ப.131)* - மேகராகக் குறிஞ்சி
3. `தேவாசிறியோம்' *(தி.2 ப.64)* - காந்தாரம்
4. `வண்ண மாமலர்' *(தி.3 ப.34)* - கொல்லி.

*2*ஆவது பதிகத்தில் *1, 11* ஆகிய இருபாடல்களிலும், *4*ஆவது பதிகத்தில் *4*ஆவது பாடலிலும் மணிமுத்தாறு பேசப்படுகின்றது. சேக்கிழார் திருவாக்கை நோக்கின், மணிமுத்தாற்றினை இணைத்துப் பாடிய மேலும் சில பதிகங்கள் இருக்கலாம் எனக் கருத இடனுண்டு.

ஆங்கு நாதரைப் பணிந்துபெண்
ணாகடம் அணைந்தரு மறையோசை
ஓங்கு தூங்கானை மாடத்துள்
அமர்கின்ற வொருதனிப் பரஞ்சோதிப்
பாங்க ணைந்துமுன் வலங்கொண்டு
பணிவுற்றுப் பரவுசொல் தமிழ்மாலை
தீங்கு நீங்குவீர் தொழுமின்கள்
எனும்இசைப் பதிகமும் தெரிவித்தார். **#2081**

அங்கு வீற்றிருக்கும் தலைவரை வணங்கி, விடை பெற்றுச் சென்று `திருப்பெண்ணாகடம்' என்ற பதியை அடைந்து, அரிய மறைகளின் ஓசை முழங்கும் `திருத்தூங்கானைமாடம்' என்ற அக்கோயிலுள் விரும்பி வீற்றிருக்கின்ற ஒப்பற்ற மேலாய ஒளியான இறைவரின் அருகணைந்து, வலம் வந்து, திருமுன்பு பணிந்து, எழுந்து, போற்றும் சொல் தமிழ் மாலையான, `தீங்கினின்றும் நீங்கும் கருத்துடையீர்களே! இங்குத் தொழுமின்கள்' என்ற கருத்துடைய இசைப் பதிகத்தைப் பாடியருளினார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகம் `ஒடுங்கும்' *(தி.1 ப.59)* எனத் தொடங்கும் பழந்தக்கராகப் பதிகம் ஆகும். இப்பதிகத்துள்ள பாடல்கள் பத்தும், `உலகியலை விடுத்து வீட்டுலகம் அடையக் கருதுவீர் திருத்தூங்கானை மாடம் தொழுமின்களே' என ஆற்றுப் படுத்துகின்றன. அவற்றை உளங்

கொண்டே ஆசிரியர் சேக்கிழாரும், இவ்வாறு மொழிந்தருளுகின்றார்.

கருவ ரைப்பிற் புகாதவர் கைதொழும்
ஒருவ ரைத்தொழு துள்ள முவந்துபோய்ப்
பெருவ ரத்தினிற் பெற்றவர் தம்முடன்
திருவ ரத்துறை சேர்தும்என் றேகுவார். **#2082**

பிறவியின் எல்லைக்கு உட்படாத அடியவர்கள் கை தொழுகின்ற சுடர்க் கொழுந்தீசரை வணங்கி, மனம் மகிழ்ந்து, விடைபெற்றுக் கொண்டவர், தோணியப்பரிடம் தவம் கிடந்து பெற்ற வரத்தால் தம்மை ஈன்ற தந்தையாருடன் `திருவரத்துறையைச்' சேர்வோம் எனச் செல்பவராய்,

விளக்கவுரை

****

முந்தை நாள்கள் ஒரோவொரு கால்முது
தந்தை யார்பியல் மேலிருப் பார்தவிர்ந்
தந்த ணாளர் அவரரு கேசெலச்
சிந்தை செய்விருப் போடுமுன் சென்றனர். **#2083**

முன்நாள்களில் செல்லும் பொழுதெல்லாம் முதுமைப் பருவம் உடைய தந்தையாரின் தோள் மீது ஓரொருகால் எழுந்தருளிச் சென்ற அப்பிள்ளையார், இதுபொழுது அந்நிலையை விடுத்து, அந்தணர்களும் அத்தந்தையாரும் தம்மைச் சூழ்ந்துவர மனத்திற் கொண்ட பெருவிருப்போடு, முன்னே நடந்து சென்றார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

ஆதி யார்தம் அரத்துறை நோக் கியே
காத லால்அணை வார்கடி தேகிடத்
தாதை யாரும் பரிவுறச் சம்பந்தர்
பாத தாமரை நொந்தன பைப்பய. **#2084**

பழைமையுடையவரான சிவபெருமானின் திருவரத்துறையினை நோக்கி, மிக்க விருப்புடன் அணைபவராய், விரைவாய்ச் செல்லவும், தந்தையாரும் வருந்த, ஞானசம்பந்தரின் திருவடித் தாமரைகளும் சிறிதளவு நொந்தன.

விளக்கவுரை

பைப்பய - பையப்பைய; சிறிது சிறிதாக; மிகப் பெரிதாக இன்றிச் சிறிய அளவில் வருந்தின. திருவடி வருந்தவும் தாம் வருந்தவில்லை என்பார், அத்திருவடிகள் மீது வைத்துக் கூறினார்.

மறைய னைத்தும் ஒருவடி வாமென
நிறைம திப்பிள்ளை நீள்நிலஞ் சேர்ந்தெனத்

துறைய லைக்கங்கை சூடும் அரத்துறை
இறைவ ரைத்தொழு வான்விரைந் தேகினார். **#2085**
மறைகள் யாவும் ஒருவடிவம் கொண்டாற்போல் நிறையும் திங்கள்
ஒன்று, நீண்ட இம்மண்ணுலகத்தில் வந்து சேர்ந்தாற் போலச் சென்று,
நீர்த் துறைகளில் அலைகளை வீசும் கங்கை சூடும் திருவரத்துறையில்
வீற்றிருக்கும் இறைவரைத் தொழுவதற்காக விரைந்து சென்றனர்

விளக்கவுரை

மறைகள் திரண்டு ஒரு வடிவு எடுத்தாற் போலக் கலைகள் பதினாறும் திரண்டு ஒரு முழுத் திங்களாய் நிறைவு பெற, அத்திங்கள் மண்ணுலகத்திற்கு வந்தாற் போலக் காழிப் பிள்ளையார் வரலாயினார்.

பாச மற்றில ராயினும் பார்மிசை
ஆசை சங்கரற் காயின தன்மையால்
தேசு மிக்க திருவுரு வானவர்
ஈச னைத்தொழு தேதொழு தேகினார். **#2086**
உலகியல் பாசம் சிறிதும் இல்லாதவராயினும் இறைவனிடத்துப் பாசம்
கொண்ட தன்மையால் சிவ ஒளி மிக்க திரு உருவான பிள்ளையார்
சிவபெருமானை வணங்கியவாறு சென்றார்.

விளக்கவுரை

****

இந்த மாநிலத் தின்இருள் நீங்கிட
வந்த வைதிக மாமணி யானவர்
சிந்தை ஆரமு தாகிய செஞ்சடைத்
தந்தை யார்கழல் தாழ்ந்தெழுந்து ஏகினார். **#2087**
இப்பேருலக இருள் நீங்கத் தோன்றிய வேதியர் குல மணியான
சம்பந்தர், மனத்தில் ஊறும் அமுதமான சிவந்த சடையையுடைய
தந்தையாம் சிவபெருமானின் திருவடிகளைத் தாழ்ந்து வணங்கி எழுந்து
சென்றார்.

விளக்கவுரை

இவற்றால் பிள்ளையாருக்குத் திருவரத்துறைப் பெருமானைக் கண்டு வணங்குதற்குரிய உள்ள மிகுதியும் உடல் பெற்றியும் ஒருங்கு புலனாகின்றன. இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

மாறன் பாடி யெனும்பதி வந்துற
ஆறு செல்வருத் தத்தின் அசைவினால்
வேறு செல்பவர் வெய்துறப் பிள்ளையார்
ஏறு மஞ்செழுத் தோதிஅங் கெய்திட. **#2088**
`மாறன் பாடி' என்ற ஊரில் வந்து சேர, வழி நடந்து செல்லும்

வருத்தத்தால் உண்டான சோர்வால் தம்மைச் சூழ வரும் அடியார்கள் இளைப்படைய, சிறந்ததான ஐந்தெழுத்தைப் எண்ணியவாறு பிள்ளையார் அங்குச் சேர,

விளக்கவுரை

****

உய்ய வந்தசம் பந்த ருடன்வந்தார்க்
கெய்து வெம்மை இளைப்பஞ்சி னான்போலக்
கைக ளாயிரம் வாங்கிக் கரந்துபோய்
வெய்ய வன்சென்று மேல்கடல் வீழ்ந்தனன். **#2089**

உலகு உய்வதற்காக வந்த ஞானசம்பந்தருடன் வந்தவர்க்கு, வழிநடந்து வந்ததன் வெம்மையினால் உண்டான இளைப்பைப் பார்த்து, அச்சம் கொண்டவனைப் போல் தன் அளவற்ற கைகளையும் உள்ளே இழுத்துக் கொண்டு, மறைந்து போய்க் கதிரவன் மேலைக் கடலில் விழுந்தான்.

விளக்கவுரை

ஒளி நீங்கி இருள் சேர வந்ததைத் தற்குறிப்பேற்றமாக ஆசிரியர் இங்ஙனம் கூறுவாராயினர். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

அற்றை நாள்இர வப்பதி யின்னிடைச்
சுற்று நீடிய தொண்டர்கள் போற்றிடப்
பெற்ற மூர்ந்த பிரான்கழல் பேணுவார்
வெற்றி மாதவத் தோருடன் மேவினார். **#2090**

அன்றிரவில் அப்பதியில் தம்மைச் சூழ இருந்த திருத்தொண்டர்கள் போற்ற, ஆனேற்றை ஊர்தியாகக் கொண்ட சிவ பெருமானின் திருவடிகளையே போற்றுபவரான பிள்ளையார், உள் ளொளி பெருக்கும் வெற்றி பொருந்திய மாதவத்தவருடன் அங்குத் தங்கியிருந்தனர்.

விளக்கவுரை

****

இந்நி லைக்கண் எழில்வளர் பூந்தராய்
மன்ன னார்தம் வழிவருத் தத்தினை
அன்ன மாடுந் துறைநீர் அரத்துறைச்
சென்னி யாற்றர் திருவுளஞ் செய்தனர். **#2091**

இந்நிலையில் அழகு மிக்க சீகாழித் தோன் றலாரின் வழி வருத்தத்தை, அன்னப் பறவைகள் பொருந்திய நீர்த் துறைகளையுடைய திருவரத்துறையில் எழுந்தருளியிருக்கும் தலை யில் கங்கையாற்றையுடைய இறைவர், தம் திருவுள்ளத்தில் கொண்டார்.

விளக்கவுரை

****

ஏறுதற்குச் சிவிகை இடக்குடை
கூறி ஊதக் குலவுபொற் சின்னங்கள்
மாறில் முத்தின் படியினால் மன்னிய
நீறு வந்த நிமலர் அருளுவார். **#2092**

பிள்ளையார் ஏறிச் செல்வதற்குச் சிவிகையும், மேலே கவித்துக் கொள்வதற்குக் குடையும், அவர்தம் பொருள்சேர் புகழை எடுத்துக் கூறி ஊதுவதற்கு விளக்கம் கொண்ட அழகிய சின்னங்களும் ஆகிய இவற்றை முத்துக்கள் பதிய அமைத்த சிறப்புடன் வழங்க, ஒப்பில்லாத திருநீற்றை விரும்பும் அரத்துறை இறைவர் அருள்வாராய்,

விளக்கவுரை

****

நீடு வாழ்பதி யாகும்நெல் வாயிலின்
மாட மாமனை தோறும் மறையோர்க்குக்
கூடு கங்குற் கனவிற் குலமறை
தேடு சேவடி தோன்றமுன் சென்றுபின். **#2093**

பெருவாழ்வு பெற்ற திருப்பதியான திருநெல் வாயில்அரத்துறையில் மாடங்களைக் கொண்ட பெரிய இல்லங்கள் தோறும் உள்ள மறையவர்களுக்கு அன்றிரவு கனவில், பெருமையு டைய நான்மறைகளும் தேடும் செவ்விய திருவடிகள் தோன்றுமாறு, அவர் முன்போய்,

விளக்கவுரை

****

ஞான சம்பந்தன் நம்பால் அணைகின்றான்
மான முத்தின் சிவிகை மணிக்குடை
ஆன சின்னம்நம் பாற்கொண் டருங்கலைக்
கோன வன்பா லணைந்து கொடும்என. **#2094**

`ஞானசம்பந்தன் நம்மிடம் வருகிறான். அரிய கலைகளுக்கெல்லாம் தலைவனான அவனிடம் நீங்கள் பெரிய முத்துச் சிவிகையையும் அழகிய குடையையும், பொருந்திய சின்னங்களை யும் நம்மிடம் பெற்றுக் கொண்டு போய்க் கொடுங்கள்' என்று இறைவர் உரைத்தருள,

விளக்கவுரை

****

அந்த ணாளர் உரைத்தஅப் போழ்தினில்
வந்து கூடி மகிழ்ந்தற் புதமுறுஞ்
சிந்தை யோடும் செழுநீர் அரத்துறை
இந்து சேகரர் கோயில்வந் தெய்தினர். **#2095**

இறைவர் உரைத்த அளவில், அந்தணர்கள் வந்து ஒன்றாகக் கூடி, தாம் தாமும் கண்ட கனவைச் சொல்லி மகிழ்ந்து, அற்புதமான சிந்தையுடன் செழுமையான நீர்வளம் பொருந்திய திருவரத்துறையில் எழுந்தருளிய பிறை சூடிய சடையையுடைய பெருமானின் கோயிலின் வாயிலில் வந்து கூடினர்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

ஆங்கு மற்ற அருளடி யாருடன்
ஓங்கு கோயிலுள் ளார்க்கும்உண் டாயிட
ஈங்கி தென்ன அதிசயம் என்பவர்
தாங்கள் அம்மறை யோர்கள்முன் சாற்றினார். **#2096**

அங்கு முன் சொன்ன வண்ணம் இறைவர் அருள் அங்குள்ள அடியாருடன் ஓங்கு கோயிலுள் உள்ளவர்களுக்கும் உண்டாகியது. உண்டாகவே `இங்கு இது என்ன பேரதிசயம்' என்று வியந்தவர்கள், அங்குவந்து கூடிய அம்மறையவர்களுக்குத் தாங்கள் முதலில் கூறினர்.

விளக்கவுரை

****

சால மிக்க வியப்புறு தன்மையின்
பால ராதலும் பள்ளி யெழுச்சியின்
காலம் எய்திடக் காதல் வழிப்படுஞ்
சீலம் மிக்கார் திருக்காப்பு நீக்கினார். **#2097**

மிகப் பெரிய வியப்பை அடைந்த நிலையில், அச்சமயத்தில் திருப்பள்ளி எழுச்சிக்குரிய காலம் வரவும் அன்பு வழிப்பட்ட சீலம் உடைய அவர்கள் கோயிலின் கதவைத் திறந்தனர்.

விளக்கவுரை

****

திங்கள் நீர்மைச் செழுந்திரள் முத்தினால்
துங்க வெண்குடை தூய சிவிகையும்
பொங்க வூதும் பொருவருஞ் சின்னமும்
அங்கண் நாதர் அருளினாற் கண்டனர். **#2098**

சந்திரன் போன்ற தண்ணிய செழுமையான முத்துக்கள் இழைத்த பெரிய வெண்குடையும், தூய சிவிகையும், ஒலி மிகுமாறு ஊதப்பெறும் ஒப்பிலாத சின்னங்களும் ஆகிய இவற்றை அங்கு இறைவரின் திருவருளால் அவர்கள் பார்த்தனர்.

விளக்கவுரை

****

கண்ட பின்னவர் கைதலை மேற்குவித்
தெண்டி சைக்கும் விளக்கிவை யாம்எனத்
தொண்ட ரோடும் மறையவர் சூழ்ந்தெழுந்
தண்டர் நாடும் அறிவுற ஆர்த்தனர். **#2099**

அவற்றைக் கண்ட அவர்கள் தம் கைகளைத் தலைமீது குவித்து, `இவை எண்திசைக்கும் விளக்காகும்' எனக் கூறி, தொண்டர்களுடன் சூழ்ந்து, வணங்கி, எழுந்து, தேவர் உலகமும், அறியும்படி மகிழ்வைப் பெருக்கினர்.

விளக்கவுரை

பிள்ளையாரின் அடிமைத் திறனும், அவருக்கு அரத்துறை இறைவர் வழங்கிய அருள் பெருக்குமாகியவற்றை எண் திசையிலுள் ளாரும் அறிதலின், இவ்வியத்தகு நிகழ்ச்சி எண் திசைக்கும் விளக் காயிற்று.

சங்கு துந்துபி தாரைபே ரிம்முதல்
பொங்கு பல்லிய நாதம் பொலிந்தெழ
அங்க ணன்அரு ளால்அவை கொண்டுடன்
பொங்கு காதல் எதிர்கொளப் போதுவார். **#2100**

சங்கு, துந்துபி, தாரை, பேரிகை முதலியவாகப் பேரொலி பெருக்கும் இயங்களின் ஓசை பொலிவு பெற்று எழுமாறு செய்து, இறைவரின் திருவருளால் வரப்பெற்ற அச்சிவிகை, குடை, சின்னங்கள் என்ற இவற்றை உடன் கொண்டு, மேன் மேலும் எழு கின்ற ஆசை எதிர்கொள்ளப் போவாராய்,

விளக்கவுரை

****

மாசில் வாய்மைநெல் வாயில் மறையவர்
ஆசில் சீர்ச்சண்பை ஆண்டகை யார்க்கெதிர்
தேசு டைச்சிவி கைமுத லாயின
ஈசர் இன்னரு ளால்தாங்கி ஏகினார். **#2101**

குற்றம் இல்லாத வாய்மையுடைய திருநெல் வாயிலில் உள்ள அந்தணர்கள், குற்றமற்ற சிறப்பையுடைய சீகாழியில் தோன்றிய பிள்ளையாருக்கு, ஒளியுடைய சிவிகை முதலியவற்றை இறைவரின் திருவருளால் தாங்கிச் சென்றனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

இத்த லைஇவர் இன்னணம் ஏகினார்
அத்த லைச்சண்பை நாதர்க்கும் அவ்விரா
முத்த நற்சிவி கைமுத லாயின

உய்த்த ளிக்கும் படிமுன் உணர்த்துவார். #2102
இவ்விடத்திலுள்ள இவர்கள் இவ்வாறு சென்ற னர். அங்குச் சீகாழித் தலைவரான பிள்ளையாருக்கும் அன்றைய இரவே நல்ல முத்துக்கள் பதித்து வைத்த சிவிகை முதலானவற்றை ஏற்றுப் பயன் கொள்ளுமாறு முன் உணர்த்துவாராய்,

விளக்கவுரை

இத்தலை அத்தலை என்பன இவ்விடம் அவ்விடம் எனும் பொருள் குறித்தன.

அள்ளல் நீர்வயல் சூழும் அரத்துறை
வள்ள லார்நாம் மகிழ்ந்தளிக் கும்மவை
கொள்ள லாகும்கொண் டுய்த்தல் செய் வாய்என
உள்ள வாறருள் செய்ய வுணர்ந்தபின். #2103

சேறுமிக்க நீர்வளம் வாய்ந்த வயல்கள் சூழ்ந்த திருவரத்துறையில் எழுந்தருளியிருக்கும் வள்ளலாரான சிவபெரு மான், `நாம் மகிழ்ந்தளிக்கும் இச்சிவிகை முதலானவை ஏற்றுக் கொள்ளத் தக்கவையாகும் ஆதலின், அவற்றை ஏற்றுப் பயன் கொள்வாயாக!' என்று பிள்ளையாருக்கு அருளிச் செய்ய, அவ்வரு ளிப்பாட்டை அறிந்து உறக்கம் நீங்கிய பின்பு,

விளக்கவுரை

****

சண்பை யாளியார் தாங்கண்ட மெய்யருள்
பண்பு தந்தையார் தம்முடன் பாங்கமர்
தொண்ட ருக்கருள் செய்து தொழாமுனம்
விண்பு லப்பட வீங்கிருள் நீங்கலும். #2104

சீகாழித் தலைவரான சம்பந்தர், தாம் கனவில் கண்ட மெய்யருளின் தன்மையைத் தந்தையாருக்கும் அருகிலிருந்த தொண்டர்களுக்கும் கூறியருளித் திருவருளைத் தொழுவதற்கு முன்னமேயே, வானம் வெளிப்பட்டுத் தோன்ற, இருள் நீங்கவும்,

விளக்கவுரை

****

மாலை யாமம் புலர்வுறும் வைகறை
வேலை செய்வினை முற்றிவெண் ணீறணி
கோல மேனிய ராய்க்கைம் மலர்குவித்
தேல அஞ்செழுத் தோதி எழுந்தனர். #2105

முன்னர் இருந்த மாலையும் யாமமும் முறையே நீங்க, பொழுது புலரும் விடியற்காலையில் செயத்தக்க கடன்களை முடித்து, வெண்மையான

திருநீற்றினை அணிந்த சிவப்பொலிவு கொண்ட அழகிய திருமேனியராகி, கைம்மலர்களைத் தலைமேல் குவித்துப் பொருந்துமாறு திருவைந்தெழுத்தை ஓதி எழுந்தருளி யிருந்தார்.

விளக்கவுரை

`வெய்யவன் சென்று மேல்கடல் வீழ்ந்தனன்' என முன்னர் *(பா. 192)* வந்த மாலையும், அதனைத் தொடர்ந்து வந்த யாமமும் நீங்க, பொழுது புலர்வுறும் வேளையில் என வரலாற்றியைபு அறிய, `மாலையாமம் புலர்வுறும் வைகறை' என்றார். இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

போத ஞானப் புகலிப் புனிதரைச்
சீத முத்தின் சிவிகைமே லேற்றிடக்
காதல் செய்பவன் போலக் கருங்கடல்
மீது தேரின்வந் தெய்தினன் வெய்யவன். **#2106**

மெய்யுணர்தலாகிய ஞானம் பெற்ற தூயவரான சீகாழித் தலைவரைக் குளிர்ந்த முத்துக்களையுடைய சிவிகையில் ஏற்றி வணங்க, மிக்க அன்பு கொண்டவன் போலக் கதிரவனும் கரிய கடல் மீது தோன்றித் தன்தேர் மீது ஏறிவந்தனன்.

விளக்கவுரை

கதிரவன் வந்தமையைத் தற்குறிப்பேற்ற அணி நலம் பொதுளக் கூறியவாறு.

ஆய போழ்தின் அரவெனும் ஆர்ப்புடன்
தூய முத்தின் சிவிகை சுடர்க்குடை
மேய சின்னங்கள் கொண்டுமெய் யன்பரோ
டேய அந்தணர் தாமெதிர் தோன்றினார். **#2107**

அதுபொழுது `அரகர' என்ற முழக்கத்துடன் தூய முத்தினால் ஆய சிவிகையையும், ஒளிபொருந்திய குடையையும், பொருந்திய சின்னங்களையும் தாங்கிக் கொண்டு மெய்யன்பர்கள் உடனே பொருந்திய அந்தணர்களும், அங்கிருந்த பிள்ளையாரின் எதிரே வந்து தோன்றினர்.

விளக்கவுரை

****

வந்து தோன்றிய அந்தணர் மாதவர்
கந்த வார்பொழில் காழிநன் னாடர்முன்
அந்த மில்சீர் அரத்துறை ஆதியார்
தந்த பேரருள் தாங்குவீர் என்றனர். **#2108**

வந்து தோன்றிய அந்தணர்களும் மெய் அன்பர்களும் மணம் மிக்க பொழில்களையுடைய சீகாழித் தலைவர் ஆன சம்பந்தர்

திருமுன்புநின்று, `அழிவற்ற சிறப்பையுடைய திருவரத் துறை இறைவர் அளித்தருளிய பேரருள் வடிவான இப்பொருள்களை ஏற்றுக்கொள்வீராக' என வேண்டினர்.

விளக்கவுரை

****

என்று தங்களுக் கீச ரருள்செய்த
தொன்றும் அங்கொழி யாமை உரைத்துமுன்
நின்று போற்றித் தொழுதிட நேர்ந்தது
மன்று ளார்அருள் என்று வணங்கினார். **#2109**

ஈசர் தமக்குக் கனவில் அருளியதும் நனவில் வழங்கியதுமான அருளிச் செயல்களுள் ஒன்றையும் விடாமல் எடுத்துக் கூறிப் பிள்ளையாரின் முன் நின்று போற்றி வணங்கினர். `இவ்வருஞ் செயல்கள் எல்லாம் பெருமன்றுள் ஆடும் பெருமானின் திருவருளேயாகும்.' எனப் பிள்ளையார் கூறி வணங்கினர்.

விளக்கவுரை

****

மெய்ம்மை போற்றி விடாத விருப்பினால்
தம்மை யுன்னும் பரிசுதந் தாள்பவர்
செம்மை நித்தில யானச் சிறப்பருள்
எம்மை யாளுவப் பானின் றளித்ததே. **#2110**

உள்ளவாறு போற்றிப் பற்றுவிடாத விருப்பத்தால் தம்மை நினைத்திருக்கும் தன்மையைக் கொடுத்து அருளுகின்ற இறைவர், செம்மையான முத்துச் சிவிகையாம் சிறப்பை அளித்தல் எம்மைத் தம் அடியவராக உவந்து ஆட்கொள்ளும் பொருட்டாய் இன்று அளித்த பேறுதான் என்னே! என வியந்தனராய்,

விளக்கவுரை

இப்பாடல், அடுத்திருக்கும் `எந்தையீசன்' எனத் தொடங்கும் பாடலை அடுத்துச் சில பதிப்புக்களிலும், `பொடியணிந்த' எனும் பாடலை அடுத்துச் சில பதிப்புக்களிலும் காணப்படுகின்றது. இவ்வீரமைவுகளும் வரலாற்றுத் தொடர்ச்சிக்குப் பொருந்துமாறில்லை என்பர் சிவக்கவிமணியார்.

எந்தை ஈசன் எனஎடுத்து இவ்வருள்
வந்த வாறுமற்று இவ்வண மோஎன்று
சிந்தை செய்யும் திருப்பதி கத்துஇசை
புந்தி யாரப் புகன்றெதிர் போற்றுவார். **#2111**

`எந்தை ஈசன்' எனத் தொடங்கிச் சிவபெருமா னின் திருவருள் இருந்த

வண்ணம் இவ்வண்ணமோ என்று சிந்தை செய்யும் இத்திருப்பதிகத்து இசையை உள்ளம் நிறைவு கொள்ளும் வரை புகன்று எதிரே நின்று போற்றுவாராய்,

விளக்கவுரை

எதிர்போற்றி - இறைவன் அருளிய அருங் கொடை களை அப்பெருமானது திருமுன்னிலையில் நின்று போற்றி `எந்தை ஈசன்'(*தி.2 ப.90)* எனத் தொடங்கும் இப்பதிகம் பியந்தைக் காந்தாரப் பண்ணில் அமைந்ததாகும். அரத்துறை அடிகள் தம் அருள் அப்பெரு மானை நாளும் மனம், மொழி, மெய்களால் வணங்கி நிற்பார்க்கல் லாது கிட்டாது எனப் பாடல்தொறும் கூறப்பட்டுள்ளது.

பொடிய ணிந்த புராணன் அரத்துறை
அடிகள் தம்மரு ளேயிது வாமெனப்
படியி லாதசொல் மாலைகள் பாடியே
நெடிது போற்றிப் பதிகம் நிரப்பினார். **#2112**

திருநீற்றை அணிந்த முன்னைப் பழம்பொருட் கும் முன்னைப்பழம் பொருளாய் திருவரத்துறை இறைவரின் திரு வருளே இதுவாகும் என ஒப்பற்ற சொல்மாலைகளைப் பாடி, நீள நினைந்து வணங்கித் திருப்பதிகத்தை நிறைவு செய்தார்.

விளக்கவுரை

இப்பதிகப் பாடல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சொல் மாலை ஆகும். ஆதலின் பன்மை வாசகம் படக் கூறினார். இம் மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்
றாதி யார்அரு ளாதலின் அஞ்செழுத்
தோதி யேறினார் உய்ய வுலகெலாம். **#2113**

ஒளிபொருந்திய முத்துச் சிவிகையினைச் சூழ்ந்து வலமாக வந்து, நிலத்தின் மேல் விழுந்து வணங்கி, அதன் வெண்ணீற்று ஒளியைப் போற்றி நின்று, அது இறைவரின் அருள் என வியந்து திருவைந்தெழுத்தை ஓதிப் பிள்ளையார் உலகம் எல்லாம் உய்தற் கென அதில் ஏறியருளினார்.

விளக்கவுரை

`உலகெலாம்' எனும் தொடர் இறைவர் ஆசிரியருக்கு எடுத்துக் கொடுத்த தொடராகும். அதனை ஈண்டுத் தம் காப்பியத்தில் நடுவிடமாய ஈண்டும் வைத்துப் போற்றியுள்ளமை அறியத் தக்கது.

தொண்டர் ஆர்த்தனர் சுருதிகள்

ஆர்த்தன தொல்லை
அண்டர் ஆர்த்தனர் அகிலமும்
ஆர்ப்புடன் எய்தக்
கொண்டல் ஆர்த்தன முழவமும்
ஆர்த்தன குழுமி
வண்ட றாப்பொலி மலர்மழை
ஆர்த்தது வானம். **#2114**

அடியவர் மகிழ்வொலி செய்தனர். மறைகள் முழங்கின. பழைமையுடைய தேவர்கள் மகிழ்வொலி செய்தனர். மேகங்கள் உலகம் உவக்குமாறு முழங்கின. முழவு இயங்கள் ஒலித் தன. கூட்டமாய்ச் சேர்ந்து வண்டுகள் நீங்காத அழகிய மலர் மழையை வானம் சொரிந்தது.

விளக்கவுரை

****

வளையும் ஆர்த்தன வயிர்களும்
ஆர்த்தன மறையின்
கிளையும் ஆர்த்தன திளைஞரும்
ஆர்த்தனர் கெழுவும்
களைகண் ஆர்த்ததொர் கருணையின்
ஆர்கவின் முத்தின்
விளையு மாக்கதிர் வெண்குடை
ஆர்த்தது மிசையே. **#2115**

சங்குகள் ஒலித்தன, ஊது கொம்புகள் ஒலித்தன, மறை வேள்விகள் ஒலித்தன, உறவினர் மகிழ்வொலி செய்தனர், உயிர்க்கு உயிராக இருந்தருளும் இறைவரின் கருணையினால் பிணிக்கப்பட்ட முத்துக்களினின்று வீசும் பெருங்கதிர்களுடன் வெண் குடை மேலே கவிழ்க்கப்பட்டு விளக்கம் பெற்றது.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பல்கு வெண்கதிர்ப் பத்திசேர்
நித்திலச் சிவிகைப்
புல்கு நீற்றொளி யுடன்பொலி
புகலிகா வலனார்
அல்கு வெள்வளை அலைத்தெழு
மணிநிரைத் தரங்கம்
மல்கு பாற்கடல் வளர்மதி
உதித்தென வந்தார். **#2116**

பெருகும் வெண்கதிர்களின் ஒழுங்குடைய முத்துச் சிவிகையின் மீது திருநீற்று ஒளியுடன் விளங்கும் சீகாழித் தலைவர், தங்கும் வெண்மையான சங்குகளை வாரி எழுகின்ற அழ கிய வரிசையான அலைகள் நிறைந்த பாற்கடலில் வளரும் திங்கள் தோன்றினாற் போல எழுந்தருளி வந்தார்.

விளக்கவுரை

பாற்கடல் முத்துச் சிவிகைக்கும், திங்கள் அதன் மீது இயங்கிவரும் பிள்ளையாருக்கும் உவமையாயின. `பான்மதி உவரி ஈன்றால் எனமகப் பயந்த போது' *(தி.12 பு.10 பா.33)* என ஆசிரியர் முன் அருளிய திருவாக்கும் நினைவு கூர்க.

நீடுதொண்டர்கள் மறையவர்
ஏனையோர் நெருங்கி
மாடு கொண்டெழு மகிழ்ச்சியின்
மலர்க்கைமேல் குவித்தே
ஆடு கின்றனர் அயர்ந்தனர்
அளவில் ஆனந்தம்
கூடு கின்றகண் பொழிபுனல்
வெள்ளத்தில் குளித்தார். **#2117**

நிறைந்த தொண்டர்களும், அந்தணர்களும் மற்றவர்களும் நெருங்கி வந்து, தங்கள் உள்ளத்தில் மீதூர்ந்து எழுகின்ற மகிழ்ச்சியினால் மலர்க்கைகளை மேலே குவித்துத் தன் வயம் இழந்த நிலையில் ஆடினர்; அளவற்ற மகிழ்ச்சி பொருந்திய கண்களினின்று பொழியும் கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கினர்.

விளக்கவுரை

****

செய்ய பொன்புனை வெண்தர
ளத்தணி சிறக்கச்
சைவ மாமறைத் தலைவர்பால்
பெறுந்தனிக் காளம்
வையம் ஏழுடன் மறைகளும்
நிறைதவத் தோரும்
உய்ய ஞானசம் பந்தன்வந்
தான்என ஊத. **#2118**

சிவந்த பொன்னாலாய வெண்முத்துக்களின் அழகு சிறக்குமாறு உள்ளதும் சைவத்திற்கும் நான்மறைகட்கும் தலை வர் ஆன சிவபெருமானிடத்தில் பெற்றதும், ஒப்பில்லாததுமான எக்காளம் என்ற

சின்னம், உலகு ஏழும் நான்மறைகளும் நிறைந்த தவத்தை உடையவர்களும் உய்யுமாறு `திருஞானசம்பந்தன் வந்தான்' என்று கூறி ஊதவும்,

விளக்கவுரை

செய்யபொன் புனை வெண் தரளத்து அணி சிறக்கும் காளம், சைவமாமறைத் தலைவர் பாற்பெறுங் காளம், தனிக் காளம் எனத் தனித் தனியே கூட்டுக. ஏனைய காளங்கள் வெறும் உலகியல் பற்றிய நிகழ்ச்சிகளையே ஊதுவன. இதுவோ ஞானசம்பந்தரைப் பற்றியும் அவருக்கு அருளிய இறைவரைப் பற்றியுமான செய்திக ளைக் கூறுவதாகும். ஆதலின் அதன் சிறப்புத் தோன்ற இங்ஙனம் கூறினார்.

சுற்று மாமறைச் சுருதியின்
பெருகொலி நடுவே
தெற்றி னார்புர மெரித்தவர்
தருதிருச் சின்னம்
முற்று மானவன் ஞானமே
முலைசுரந் தூட்டப்
பெற்ற பாலறா வாயன்வந்
தான்எனப் பிடிக்க. **#2119**

சூழ்ந்து ஒலிக்கும் பெருமறைச் சுருதிகளின் பெருமுழக்கத்தினிடையே பகைவரின் முப்புரங்களையும் எரித்த இறைவர் அளித்தருளிய திருச்சின்னம் `ஞானமே வடிவாய அம்மையார் தம் ஞானத் திருமுலை சுரந்து ஞான அமுது ஊட்டப் பெற்ற பாலறாவாயன் வந்தான்' என ஊதவும்,

விளக்கவுரை

****

புணர்ந்த மெய்த்தவக் குழாத்தொடும்
போதுவார் முன்னே
இணைந்த நித்திலத் திலங்கொளி
நலங்கிளர் தாரை
அணைந்த மாமறை முதற்கலை
அகிலமும் ஓதா
துணர்ந்த முத்தமிழ் விரகன்வந்
தானென ஊத. **#2120**

சூழவரும் மெய்த்தவ முனிவர் குழுவுடன் செல்கின்றவர் முன்பு, இணைந்த முத்துக்களின் விளங்கும் ஒளிப் பெருமை சூழ்ந்து கிளர்தற்கு இடமான தாரை என்ற சின்னம் `பெரு மறைகளையும் அவற்றின்

வழித்தாய் வரும் எல்லாக் கலைகளையும் ஓதாமல் உணர்ந்த முத்தமிழ் விரகன் வந்தான்' என ஊதவும்,

விளக்கவுரை

****

தெருளும் மெய்க்கலை விளங்கவும்
பாருளோர் சிந்தை
இருளும் நீங்கவும் எழுதுசொன்
மறையளிப் பவர்தாம்
பொருளும் ஞானமும் போகமும்
போற்றியென் பாருக்
கருளும் அங்கணர் திருவரத்
துறையைவந் தணைந்தார். **#2121**

தெளிவைத்தரும் உண்மைக் கலைகள் விளங் கும்படியும், அதனுடன் உலகத்தில் உள்ளவரின் சிந்தையில் தங்கிய இருள் நீங்கும்படியும் எழுதும் சொல் மறையை அளிப்பவரான ஆளுடைய பிள்ளையார், `போற்றி' என்று வழிபடுவோர்க்குப் பொரு ளையும், ஞானத்தையும், இன்பத்தையும் அளிக்கும் சிவபெருமானின் திருவரத்துறையை வந்து அடைந்தார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

வந்து கோபுர மணிநெடு
வாயில்சேய்த் தாகச்
சந்த நித்திலச் சிவிகைநின்
றிழிந்துதாழ்ந் தெழுந்து
சிந்தை ஆர்வமும் மகிழ்ச்சியும்
பொங்கிமுன் செல்ல
அந்தி நாண்மதி அணிந்தவர்
கோயிலுள் அடைந்தார். **#2122**

அத்திருப்பதிக்கு அணுக வந்தருளிய பிள்ளை யார், கோபுரவாயில் தொலைவிலே தோன்றிய அளவில், அழகிய முத்துச் சிவிகையினின்றும் கீழே இறங்கி நிலத்தில் விழுந்து பருவடி வாக விளங்கும் இலிங்கத்திருமேனியாகிய அக்கோபுரத்தை வணங்கி எழுந்து, உள்ளத்தில் எழுந்த ஆசையும் மகிழ்ச்சியும் மேலும் மேலும் பொங்கித் தமக்கு முன் செல்ல, மாலைக் காலத்தில் தோன்றும் பிறைச் சந்திரனைச் சூடிய திருவரத்துறை இறைவரின் திருக்கோயிலின் உள் அடைந்தனர்.

விளக்கவுரை

****

மன்னுகோயிலை வலங்கொண்டு
திருமுன்பு வந்து
சென்னி யிற்கரங் குவித்துவீழ்ந்
தன்பொடு திளைப்பார்
என்னை யும்பொரு ளாகஇன்
னருள்புரிந் தருளும்
பொன்ன டித்தலத் தாமரை
போற்றி என் றெழுந்தார். #2123

நிலைபெற்ற அக்கோயிலை வலம் வந்து, திருமுன்பு வந்து, தலைமீது கைகளைக் குவித்து நிலத்தில் விழுந்து, அன்பில் திளைப்பவராய் `என்னையும் ஒருபொருளாகக் கொண்டு இனிய அருளைச் செய்யும் பொன்னடித் தாமரைகளுக்கு என்றும் வணக்கம் செலுத்தும் கடப்பாடுடையேன்' என்று எழுந்து போற்றினார்.

விளக்கவுரை

****

சூடி னார்கர கமலங்கள்
சொரிந்திழி கண்ணீர்
ஆடி னார்திரு மேனியில்
அரத்துறை விரும்பி
நீடி னார்திரு அருட்பெருங்
கருணையே நிகழப்
பாடி னார்திருப் பதிகம்ஏ
ழிசையொடும் பயில. #2124

கைம்மலர்களைத் தலைமேல் சூடிக்கொண்டார், பெருகி வழிகின்ற கண்ணீர் ஒழுக்கால் திருமேனி நனைய ஆடினார். திருவரத்துறையை விரும்பித் தொன்றுதொட்டு வீற்றிருந்தருளும் இறைவரின் கருணையை நினைந்து ஏழிசையுடன் பொருந்தத் திருப் பதிகம் பாடினார்.

விளக்கவுரை

இவ்வரிய பதிகம் கிடைத்திலது.

இசைவி ளங்கிட இயல்பினில்
பாடிநின் றேத்தி
மிசைவி ளங்குநீர் வேணியார்
அருளினால் மீண்டு
திசைவி ளங்கிடத் திருவருள்
பெற்றவர் சிலநாள்

அசைவில் சீர்த்தொண்டர் தம்முடன்
அப்பதி அமர்ந்தார். **#2125**

ஏழ் இசையும் பொருந்துமாறு திருவருட் கருணையைத் திருப்பதிகத்தால் போற்றிப் பாடி நிறைவாக்கி, நின்று வழிபட்டு, மேலே கங்கை நீர் விளங்குவதற்கு இடமான சடையை உடைய சிவபெருமானின் திருவருள் பெற்று, அங்கு நின்று மீண்டும் எழுந்தருளி, எத்திசையில் உள்ளவர்களும் சிவஞானம் பெற்றுய் யும்படி திருவருள் பெற்றவரான பிள்ளையார், தம்நிலையில் தாழாத சிறப்புடைய தொண்டர்களுடன், சில நாள்கள் அத்திருப்பதியில், விரும்பி எழுந்தருளி இருந்தார்.

விளக்கவுரை

****

தேவர் தம்பிரான் திருவரத்
துறையினில் இறைஞ்சி
மேவு நாள்களில் விமலனார்
நெல்வெண்ணெய் முதலாத்
தாவில் அன்பர்கள் தம்முடன்
தொழுதுபின் சண்பைக்
காவ லார்அருள் பெற்றுடன்
கலந்துமீண் டணைந்தார். **#2126**

தேவரின் தலைவரான சிவபெருமானைத் திருவரத்துறையில் இருந்து வணங்கி அங்கிருந்தருளிய நாள்களில், சிவபெருமானின் திருநெல்வெண்ணெய் முதலான திருப்பதிகளைக் குற்றம் அற்ற அன்பர்களுடனே தொழுது, பின் சீகாழித் தலைவரான பிள்ளையார் இறைவரின் திருவருளைப் பெற்று உடன் கலந்திருந்து மீண்டும் திருவரத்துறையில் வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

திருநெல்வெண்ணெய் முதலாக உள்ள திருப்பதிகளை வணங்கினார் எனக் குறிக்கப்பெறினும், அப்பதிகள் எவையென அறிதற்கில்லை. திருநெல்வெண்ணெய்க்கு உரிய பதிகம் மட்டுமே கிடைத்துள்ளது. பதிகம் - நல்வெணெய் விழுது *(தி.3 ப.96)* பண் : சாதாரி.

விளங்கு வேணுபு ரத்திருத்
தோணிவீற் றிருந்த
களங்கொள் கண்டர்தங்
காதலி யாருடன்கூட
உளங்கொ ளப்புகுந் துணர்வினில்
வெளிப்பட உருகி

வளங்கொள் பூம்புனற் புகலிமேற்
செலமனம் வைத்தார். **#2127**

பிள்ளையார் வணங்கி வரும் வேணுபுரமான சீகாழியில், திருத்தோணிக் கோயிலில் வீற்றிருந்தருளும் திருநீலகண்ட ரான இறைவர் தம் துணைவியாராகிய திருநிலைநாயகி அம்மையா ருடன், தம் உள்ளத்தே இடம் கொள்ள நிறைந்து உள்புகுந்து உணர்வில் வெளிப்படக் கண்டு, உள்ளம் உருகி, வளம் உடைய அழகிய நீர் பொருந்திய சீகாழிக்குச் செல்ல உள்ளம் கொண்டார்.

விளக்கவுரை

****

அண்ண லார்திரு வரத்துறை
அடிகளை வணங்கி
நண்ணு பேரரு ளால்விடை
கொண்டுபோய் நடங்கொண்
டுண்ணி றைந்தபூங் கழலினை
உச்சிமேற் கொண்டே
வெண்ணி லாமலர் நித்திலச்
சிவிகைமேற் கொண்டார். **#2128**

பெருமையுடைய திருவரத்துறை இறைவரை வணங்கி, பொருந்திய அவரது பெருந் திருவருளினால் விடைபெற் றுக் கொண்டு சென்று, உள்ளத்தில் ஆனந்தக் கூத்தியற்றி ஆட்கொண் டருளிவரும் அழகிய திருவடிகளைத் தலைமீது கொண்ட வண்ணம், வெண்மையான நிலவு ஒளி வீசும் முத்துச் சிவிகையின் மீது இவர்ந் தருளினார்.

விளக்கவுரை

****

சிவிகை முத்தினிற் பெருகொளி
திசையெலாம் விளக்கக்
கவிகை வெண்மதிக் குளிரொளி
கதிர்செய்வான் கலப்பக்
குவிகை மேற்கொண்டு மறையவர்
குணலையிட் டாடப்
புவிகைம் மாறின்றிப் போற்றவந்
தருளினார் போந்தார். **#2129**

சிவிகையில் பதிக்கப்பெற்ற முத்துக்களினின்றும் பெருகும் ஒளி எத்திசைகளையும் விளக்கவும், மேலே கவித்த முத்துக் குடையின் வெண்மையான மதிபோன்ற ஒளி, கதிரவனின் ஒளி பரவு கின்ற

வானத்தில் கலக்கவும், குவித்த கைகளைத் தலை மேற்கொண்டு தம்மைச் சூழ்ந்துவரும் அந்தணர்கள் மகிழ்ச்சி மீதூர்வால் குணலைக் கூத்து இட்டு மகிழ்ந்து ஆடிவரவும், கைம்மாறு வேண்டாக் கடப்பாட் டுடன் உலகைக் காப்பதற்கு என்றே தோன்றிய பிள்ளையார் எழுந் தருளினர்.

விளக்கவுரை

குணலை - மகிழ்ச்சி மீதூர ஆடும் ஒருவகைக் கூத்து.

மறைமு ழங்கின தழங்கின
வண்தமிழ் வயிரின்
குறைந ரன்றன முரன்றன
வளைக்குலங் காளம்
முறையி யம்பின இயம்பல
ஒலித்தன முரசப்
பொறை கறங்கின பிறங்கின
போற்றிசை அரவம். **#2130**

மறைகள் முழுங்கின; வளமையுடைய தமிழ் மறைகள் ஒலித்தன; பல்வேறு வகையான ஊதுகொம்புகளின் ஒலிகள் ஒலித்தன; சங்கின் கூட்டங்கள் முழங்கின; எக்காளங்கள் பிள்ளையா ரின் முறையான மெய்க்கீர்த்திகளைக் கூறி ஒலித்தன; மற்றும் பலவகை இயங்களும் ஒலித்தன; முரசுபோன்ற பெரிய இயங்கள் பலவும் ஒலித்தன; அடியார்தம் போற்றியுரைகளின் ஒலி, இவ்வொலிகளுக் கெல்லாம் மேலாக ஒலித்தது.

விளக்கவுரை

வயிரின் குறைகள் - ஊதுகொம்புகள் நீண்டனவாயும், சிறுசிறு துண்டுகளாகவும் இருத்தலைக் குறைகள் என்றார்.

உடைய பிள்ளையார் வருமெல்லை
யுள்ளஅப் பதியோர்
புடையி ரண்டினுங் கொடியொடு
பூந்துகில் விதானம்
நடைசெய் காவணம் தோரணம்
பூகநற் கதலி
மிடையு மாலைகள் நிறைகுடம்
விளக்கொடு நிரைத்தார். **#2131**

ஆளுடைய பிள்ளையார் வரும் இடங்களில் எல்லாம், ஆங்காங்குள்ள ஊரவர்கள் இருமருங்கிலும் கொடிகளுடன் அழகிய துகில்களையும், நடைக்காவணங்களையும், தோரணங்களை, பாக்கு, வாழை, நெருங்கிய மாலைகள் போன்ற இவற்றால் செய்யும் அணிவகைகளையும்,

விளக்குடன் நீர்நிறை குடங்களையும் நிரல்பட வைத்து எதிர்கொண்டார்கள்.

விளக்கவுரை

****

அனைய செய்கையால் எதிர்கொளும்
பதிகளா னவற்றின்
வினைத ரும்பவந் தீர்ப்பவர்
கோயில்கள் மேவிப்
புனையும் வண்டமிழ் மொழிந்தடி
பணிந்துபோந் தணைந்தார்
பனைநெ டுங்கைமா வுரித்தவர்
மகிழ்பெரும் பழுவூர். **#2132**

அவ்வகையில் தம்மை எதிர்கொண்ட திருப்பதி களில் வினைவயத்தால் வரும் பிறவிகளை நீக்கியருளும் இறைவரின் திருக்கோயில்களுக்குச் சென்று புனையும் வளமை கொண்ட தமிழ்ப் பதிகங்களைப் பாடி, இறைவரின் திருவடிகளை வணங்கிச் சென்று, பனை போன்ற நீண்ட கையையுடைய யானையை உரித்த சிவபெரு மான் வீற்றிருக்கும் `திருப்பழுவூர்' என்ற திருப்பதியைப் பிள்ளையார் அடைந்தார்.

விளக்கவுரை

எதிர் கொண்ட பதிகள் எவை எனத் தெரிந்தில.

அங்கணைந் திளம்பிறை அணிந்த சென்னியார்
பொங்கெழிற் கோபுரந் தொழுது புக்கபின்
துங்கநீள் விமானத்தைச் சூழ்ந்து வந்துமுன்
பங்கயச் சேவடி பணிந்து பாடுவார். **#2133**

அங்குச் சென்று பிறைச் சந்திரனைச் சூடிய திருச்சடையையுடைய இறைவரின் பெருகும் அழகுடைய திருக் கோபுரத்தை வணங்கிக் கோயிலுள் புகுந்து, பின்பு, பெரிய விமா னத்தைச் சூழ்ந்து வலம் வந்து, திருமுன்பு சென்று, தாமரை போன்ற திருவடிகளைத் தொழுது பாடுவாராய்,

விளக்கவுரை

****

மண்ணினிற் பொலிகுல மலையர் தாந்தொழு
தெண்ணில்சீர்ப் பணிகள்செய் தேத்துந் தன்மையில்
நண்ணிய வகைசிறப் பித்து நாதரைப்
பண்ணினில் திகழ்திருப் பதிகம் பாடினார். **#2134**

இந்நிலவுலகில் சிறந்து விளங்கும் அந்தணர் குலத்தில் வந்த

மலையாளர்கள் தொழுது, எண்ணற்ற பல சிறந்த பணிகளைச் செய்து போற்றி வரும் பான்மையைச் சிறப்பித்து, இறை வரைப் போற்றிப் பண் இசையால் விளங்கும் திருப்பதிகத்தைப் பாடினார்.

விளக்கவுரை

இவ்விடத்தருளிய பதிகம் `முத்தன்மிகு மூவிலைநல்' *(தி.2 ப.34)* என்ற தொடக்கம் உடைய இந்தளப் பண்ணமைந்த பதிகம் ஆகும்.
இப்பதிகத்தில் *4, 5, 7, 9, 11* ஆகிய பாடல்களில் மலையா ளர்கள் வழிபட்டமை சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. `அந்தணர்க ளானமலை யாளரவ ரேத்தும், பந்தமலி கின்றபழு வூரரனை' *(தி.2 ப.34)* எனவரும் திருக்கடைக்காப்பில் இவர்களின் பணி தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

பாவின திசைவழி பாடி அங்ககன்
றியாவருந் தொழுதுட னேத்த எய்தினார்
மூவுல குய்யநஞ் சுண்ட மூர்த்தியார்
மேவிய பெருந்திரு விசய மங்கையில். **#2135**

இத்திருப்பதிகத்தை இசை வழியே பாடி, அங்கு நின்று சென்று, யாவரும் உடன்கூடி வணங்குமாறு, மூவுலகங்களும் உய்ய நஞ்சை உண்டருளிய இறைவர் விரும்பி எழுந்தருளியுள்ள பெரிய `திருவிசயமங்கை' என்ற பதியைச் சேர்ந்தனர்.

விளக்கவுரை

****

அந்தணர் விசயமங் கையினில் அங்கணர்
தந்தனி ஆலயஞ் சூழ்ந்து தாழ்ந்துமுன்
வந்தனை செய்துகோ தனத்தை மன்னிய
செந்தமிழ் மாலையிற் சிறப்பித் தேத்தினார். **#2136**

`மறையவர் வாழ்கின்ற விசயமங்கை என்ற திருப்பதியில் சிவபெருமானின் ஒப்பற்ற திருக்கோயிலை வலம் வந்து வணங்கி, திருமுன் வணங்கி நின்று, அங்குப் பசுக்கள் வழிபட்ட செயலை, நிலைபெறச் செந்தமிழ்ப் பதிகத்தில் வைத்துச் சிறப்பித்துப் போற்றி வழிபட்டனர்.

விளக்கவுரை

இப்பதியில் பாடப்பட்டது `மருவமர் குழலுமை' *(தி.3 ப.17)* எனத் தொடங்கும் காந்தார பஞ்சமப் பண்ணிலமைந்த பதிகமாகும். `கோதனம் வழிபடக் குலவு நான்மறை வேதியர் தொழு தெழு விசய மங்கையே' எனவரும் *2*ஆவது பாடலை உளங்கொண்டு ஆசிரியர் அருளிச் செய்துள்ளார். கோதனம் - பசுக்களாகிய செல்வம்.

விசயமங் கையினிடம் அகன்று மெய்யர்தாள்
அசைவில்வை காவினில் அணைந்து பாடிப்போந்
திசைவளர் ஞானசம் பந்தர் எய்தினார்
திசையுடை ஆடையர் திருப்பு றம்பயம். **#2137**

விசயமங்கை என்ற பதியினின்றும் நீங்கிச் சென்று, இறைவரின் திருவடி என்றும் நிலைபெற்றிருக்கும் திருவைகா வூர் என்னும் திருப்பதியை அடைந்து திருப்பதிகம் சாத்தியருளினார். பின் அப்பதியினின்றும் சென்று, நாளும் இன்னிசையால் தமிழ் வளர்க்கும் திருஞானசம்பந்தர், எண் திசைகளையே ஆடையாகக் கொண்ட இறைவரின் `திருப்புறம்பயம்' என்ற பதியை அடைந்தார்.

விளக்கவுரை

திருவைகாவூரில் இவர் பாடிய பதிகம் `கோழைமிட றாககவி' *(தி.3 ப.71)* என்று தொடங்கும் சாதாரிப் பண்ணமைந்த பதிக மாகும்.

புறம்பயத் திறைவரை வணங்கிப் போற்றிசெய்
திறம்புரி நீர்மையிற் பதிகச் செந்தமிழ்
நிறம்பயி லிசையுடன் பாடி நீடிய
அறந்தரு கொள்கையார் அமர்ந்து மேவினார். **#2138**

திருப்புறம்பயத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வணங்கிப் போற்றும் பண்ணியல் திறம் அமைந்த செந்தமிழை, வண்ணம் மிகும் இசையுடன் பாடி, நீடிய அறத்தை உதவும் கொள்கையினரான பிள்ளையார், அங்கு விருப்புடன் எழுந் தருளி இருந்தார்.

விளக்கவுரை

இப்பதியில் பாடிய பதிகம் `மறம்பய மலைந்தவர்' *(தி.2 ப.30)* எனும் தொடக்கம் உடைய இந்தளப் பண்ணிலமைந்த பதிகமாகும். திறம்புரிநீர்மையில் - பண்ணியல் திறம் பொருந்திய தன்மையில். பண், பண்ணியல், திறம், திறத்திறம் எனப் பண் வகை நான்கென்பர். இவற்றுள் திறம் பொருந்திய நீர்மையில் இப்பதிகத்தை அருளினர். நீடிய அறமாவது உயிர் பெறுதற்குரிய நிலைத்த பயனாய வீட்டுலகைப் பெறும் அறமாம். இவ்வறத்தைக் கூற வந்தவரே ஞானசம்பந்தர் ஆவர் `சிவம் பெருக்கும் பிள்ளையார்' என்றதும் இதுபற்றியேயாம்.

அத்திருப் பதிபணிந் தகன்று போய்அனல்
கைத்தலத் தவர்பதி பிறவுங் கைதொழு
முத்தமிழ் விரகராம் முதல்வர் நண்ணினார்
செய்த்தலைப் பணிலமுத்து ஈனுஞ் சேய்ஞலூர். **#2139**

அத்திருப்புறம்பயம் என்ற பதியைப் பணிந்து சென்று, தீயை ஏந்திய கையையுடைய இறைவரின் திருப்பதிகள் பலவற்றையும் வணங்கும்

முத்தமிழ் வல்லவரான பிள்ளையார் வயல் களில் சங்குகள் முத்துக்களை ஈனுவதற்கு இடமான `திருச்சேய்ஞ லூரை' வந்தடைந்தார்.

விளக்கவுரை

`பதிபிறவும் கைதொழுது' என்பதால் அப்பதிகள் திருவியலூர், திருந்துதேவன்குடி முதலாயினவாகலாம் எனக் கூறி, அவற்றிற்குரிய பதிகங்களையும் ஈண்டுக் காட்டினர் சிவக்கவிமணியார். எனினும் பின்வரும் *294, 295*ஆம் பாடல்களில் இத்திருப்பதிகளை வணங்கினார் பிள்ளையார் என விதந்து கூறும் இடத்தையே இப்பதி கங்கள் அருளியமை சேக்கிழாரால் குறித்துப் போற்றப்படுகின்றது. ஆதலின் இப்பதிகங்களைப் பின்வரும் அவ்விடங்களின் அணியன வாகக் குறிப்பதே பொருந்துவதாகும்.

திருமலி புகலிமன் சேரச் சேய்ஞலூர்
அருமறை யவர்பதி அலங்க ரித்துமுன்
பெருமறை யொடுமுழ வொலிபி றங்கவே
வருமுறை எதிர்கொள வந்து முந்தினார். **#2140**

செல்வம் மிக்க சீகாழிப் பதியின் தலைவர் இங்ஙனம் எழுந்தருள, சேய்ஞலூரில் வாழ்கின்ற அந்தணர்கள், தம் பதியை அணிசெய்து, முன்பாக மறை முழக்கத்துடன் மங்கல முழவுகளின் ஒலிகளும் விளங்க முறைமை வழாது பிள்ளையாரை எதிர்கொள்ளும் பொருட்டு வந்தனர்.

விளக்கவுரை

****

ஞானசம் பந்தரும் நாய னார்சடைத்
தூநறுந் தொடையல்முன் சூட்டும் பிள்ளையார்
பான்மையில் வரும்பதி என்று நித்தில
யானமுன் இழிந்தெதிர் இறைஞ்சி எய்தினார். **#2141**

திருஞானசம்பந்தப் பெருமானும், `இறைவர் தம் சடையில் சாத்திய தூய நறிய கொன்றை மலர் மாலையை முன்னர்த் தம் தலையில் சூட்டப் பெறும் பேறுடைய சண்டீசர், எழுமையும் ஏமாப்புடைய நல்லுணர்வோடு வந்து தோன்றிய திருப்பதி இது' என்று மனத்துள் எண்ணி, முத்துப் பல்லக்கினின்றும் இழிந்து, அப் பதியை வணங்கி வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

****

மாமறை யாளர்வண் புகலிப் பிள்ளையார்
தாம்எழுந் தருளிடத் தங்கள் பிள்ளையார்
காமரும் பதியில்வந் தருளக் கண்டன

ராமகிழ் வுடன்பணிந் தாடி ஆர்த்தனர். #2142
பெருமை மிகுந்த அந்தணர்கள், அருட் கொடை யாளரான சீகாழிப் பிள்ளையார் அங்ஙனம் எழுந்தருளிவர, தங்க ளின் சண்டீசப் பிள்ளையாரே அழகிய தம்பதியின் மீண்டும் எழுந் தருளி வரக்கண்டது போன்ற மகிழ்வுடன் வணங்கியும் ஆடியும் மகிழ் வொலி செய்தும் எதிர் கொண்டனர்.

விளக்கவுரை

****

களித்தனர் புண்ணியக் கரக வாசநீர்
தெளித்தனர் பொரிகளும் மலருஞ் சிந்தினர்
துளித்தனர் கண்மழை சுருதி யாயிரம்
அளித்தவர் கோயிலுள் அவர்முன் பெய்தினார். #2143
அவ்வூரவர் இங்ஙனம் மகிழ்ச்சியடைந்து புண்ணியக் குடத்திலுள்ள மணம் கொண்ட நீரைத் தெளித்தனர். பொரிகளையும், மலர்களையும் சொரிந்தனர். ஆனந்தக் கண்ணீர் பொழிந்தனர். அளவற்ற மறைகளை வழங்கியருளிய சிவபெருமா னது திருக்கோயிலில் புகுந்து அப்பிள்ளையாரின் முன்னர்ச் சென்றனர்.

விளக்கவுரை

****

வெங்குரு வேந்தரும் விளங்கு கோயிலைப்
பொங்கிய விருப்பினால் புடைவ லங்கொடு
செங்கைகள் சென்னிமேற் குவித்துச் சென்றுபுக்
கங்கணர் முன்புற அணைந்து தாழ்ந்தனர். #2144
வெங்குரு என்னும் சீகாழித் தலைவரான பிள்ளையாரும், விளங்கும் கோயிலை மிக்க விருப்பத்துடன் வலமாக வந்து, சிவந்த கைகளைத் தலைமேல் குவித்து, உள்ளே புகுந்து, இறைவரின் திருமுன்பு சேர்ந்து வணங்கினர்.

விளக்கவுரை

****

வேதியர் சேய்ஞலூர் விமலர் தங்கழல்
காதலிற் பணிந்தவர் கருணை போற்றுவார்
தாதைதாள் தடிந்தசண் டீசப் பிள்ளையார்
பாதகப் பயன்பெறும் பரிசு பாடினார். #2145
அந்தணர் வாழ்தற்கு இடமான சேய்ஞலூரில் எழுந்தருளியிருக்கும், இயல்பாகவே வினையின் நீங்கியவராய இறைவரின் திருவடிகளை வணங்கி, அப்பெருமானின் அருள் திறத்தைப் போற்றுபவராய

பிள்ளையார், தம் தந்தையின் காலை வெட்டிய சண்டீசப் பிள்ளையார், கொடுஞ்செயலான அதற்குப் பய னாய் இறைவரின் மகனார் ஆன தன்மையைப் போற்றிப் பாடினார்.

விளக்கவுரை

இத்திருப்பதியில் அருளிய பதிகம் `நூலடைந்த' *(தி.1 ப.48)* எனத் தொடங்கும் பழந்தக்கராகப் பதிகமாகும். இப்பதிகத்தில்,

பீரடைந்த பாலதாட்டப் பேணாத வன்றாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்த்தடிந் தான்றனக்குத்
தாரடைந்த மாலை சூட்டித் தலைமைவ குத்ததென்னே
சீரடைந்த கோயில்மல்கு சேய்ஞலூர் மேயவனே.

-தி.1 ப.48 பா.7 எனவரும் ஏழாவது திருப்பாடலை நினைவு கூருகின்றார் ஆசிரியர் சேக்கிழார்.

இன்னிசை வண்டமிழ் பாடி ஏத்தியே
நன்னெடும் பதியுளோர் நயக்க வைகிய
பின்னர்வெண் பிறையணி வேணிப் பிஞ்ஞகர்
மன்னிய திருப்பனந் தாள்வ ணங்கினார். **#2146**

பிள்ளையார், இனிய இசையமைப்புடைய இவ் வண்டமிழ்ப் பதிகத்தைப் பாடிப் போற்றினார்; மிகுந்த பழைமை யுடைய அத்திருப்பதியில் உள்ளவர்கள் விரும்பியதால் அங்குத் தங்கினார்; பின்பு வெண்மையான பிறையைச் சூடிய செஞ்சடையார் எழுந்தருளியிருக்கும் திருப்பனந்தாளுக்குச் சென்று வணங்கினார்.

விளக்கவுரை

****

ஆங்கணி சொல்மலர் மாலை சாத்திஅப்
பாங்குபந் தணைநலூர் பணிந்து பாடிப்போய்த்
தீங்குதீர் மாமறைச் செம்மை அந்தணர்
ஓங்கும்ஓ மாம்புலி யூர்வந் துற்றனர். **#2147**

அத்திருப்பதியில் அழகிய சொல்மலர்களால் ஆன பதிகமாலையைச் சாத்தியபின், அருகில் உள்ள `திருப்பந்தணை நல்லூரைப்' பணிந்து பாடிப் போற்றி, மேற்செல்கின்றவர், தீமையை நீக்கும் பெருமறைபயிலும் வேதியர்கள் விளங்கி உயர்வதற்கு இடமான `திரு ஓமாம்புலியூரினில்' வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

திருப்பனந்தாளில் இறைவர் திருமுன்பு அருளியது, `கண்பொலி நெற்றியினான்' *(தி.3 ப.62)* எனத் தொடங்கும் பஞ்சமப் பண்ணிலமைந்த பதிகமாகும். தாடகையீச்சரம் என்றது அப்பெயரு டைய பெருமாட்டி

வழிபட்டமையால் ஏற்பட்ட கோயில் பெயர் ஆகும். பந்தணைநல்லூரில் பாடியது, `இடரினார் கூற்றை'*(தி.3 ப.121)* எனத் தொடங்கும் புறநீர்மைப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

மற்றநற் பதிவட தளியின் மேவிய
அற்புதர் அடிபணிந் தலர்ந்த செந்தமிழ்ச்
சொற்றொடை பாடிஅங் ககன்று சூழ்மதில்
பொற்பதி வாழ்கொளி புத்தூர் புக்கனர்**. #2148**

அந்நற்பதியில் வடதளிக் கோயிலில் எழுந்தரு ளிய, அற்புதமான சிவபெருமானின் திருவடிகளை வணங்கி விளங் கும் செந்தமிழால் ஆன பதிகத்தைப் பாடினார்; அங்கிருந்து புறப்பட்டுச் சென்று, சூழ்ந்த மதிலை உடைய அழகிய பதியான திருவாழ்கொளிப் புத்தூரில் வந்து புகுந்தனர்.

விளக்கவுரை

திருஓமாம்புலியூரில் பாடிய பதிகம் `பூங்கொடி மடவாள்' *(தி.3 ப.122)* எனத் தொடங்கும் புறநீர்மைப் பண்ணி லமைந்த பதிகம் ஆகும். வடதளி - ஊரின் வடபுறத்துள்ள கோயில். இது கோயிலின் பெயர். ஓமம் - வேள்வி. ஓமமாம் புலியூர் - வேள்வி ஓவாத புலியூர்.

சீர்வளர் கோயிலை அணைந்து தேமலர்க்
கார்வளர் கண்டர்தாள் பணிந்து காண்பவர்
பார்புகழ் பதிகங்கள் பாடி நீடுவார்
வார்புகழ்க் கடம்பையும் வணங்கி வாழ்ந்தனர். **#2149**

சிறப்பு மிக்க அத்திருக்கோயிலை அடைந்து, தேன்பொருந்திய கருங்குவளை மலர் போன்ற கரிய நிறம் வளர் வதற்கு இடமான கழுத்தையுடைய இறைவரின் திருவடிகளை வணங்கி, பெருமானாரைக் கண்டு மகிழ்பவர், உலகம் புகழும் திருப்பதிகங்களைப் பாடியருளி, நிறைந்த புகழைக் கொண்ட `திருக் கடம்பூரை'யும் வணங்கினார்.

விளக்கவுரை

திருவாழ்கொளிப்புத்தூரில் பாடிய பதிகம் `பொடி யுடை மார்பினர்' *(தி.1 ப.40)* எனத் தொடங்கும் தக்கராகப் பண்ணில மைந்த பதிகமாகும். இப்பதிகத்து வரும் பாடல் தொறும், அப்பெரு மான் அடியைக் காண்போம், சேர்வோம், சார்வோம் என உலகினரை உளப்படுத்திக் கூறுவதால், `பார் புகழ் பதிகங்கள்' என்றார். பாரோடு சேர்ந்து புகழும் பதிகங்கள் என்றவாறு. பதிகங்கள் என்ற பன்மையால் மேலும் பல பதிகங்கள் இருந்திருக்கலாம். எனினும் இதனையடுத்து வரும் ஒரு பதிகமே இன்று காணக் கிடைக்கின்றது. இப்பதிகம், `சாகையாயிரம்' என்பது: பண் - பியந்தைக் காந்தாரம் *(தி.2 ப.94)*. அடுத்துவணங்கிய திருக்கடம்பூர் கரக்கோயிலில் அருளியது `வானமர் திங்கள்' *(தி.2 ப.68)* எனத் தொடங்கும் காந்தாரப் பண்ணி லமைந்த பதிகமாம்.

நம்பரை நலந்திகழ் நாரை யூரினில்
கும்பிடும் விருப்பொடு குறுகிக் கூடிய
வம்பலர் செந்தமிழ் மாலை பாடிநின்
றெம்பிரான் கவுணியர் தலைவர் ஏத்தினார். **#2150**

இறைவரை நன்மை விளங்கும் திருநாரையூரில் வழிபடும் விருப்புடன் சென்று சேர்ந்து, சிவமணம் கமழ்ந்து விரிகின்ற மாலைகளான திருப்பதிகங்களைப் பாடி நின்று, எம் தலைவரான கவு ணியர் குலத்தலைவர் வணங்கினர்.

விளக்கவுரை

வம்பு: சிவமணம். கூடிய - கமழ்கின்ற. இத்திருப்பதி யில் இதுபொழுது பாடிய பதிகங்கள் பல இருத்தல் வேண்டும். எனினும் கிடைத்திருக்கும்

பதிகங்கள் மூன்றேயாம். இவற்றுள் முன்னர்ப் பாடியது, பின்னர்ப் பாடியன எவையெனப் பிரித்தறிய இயலாதுள்ளன. எனினும், `உரையினில் வந்தபாவம்' *(தி.2 ப.86)* எனத் தொடங்கும் பியந்தைக் காந்தாரப் பண்ணிலமைந்த பதிகத்தை முன்னர் அருளியதாகக் கொள்ளலாம். அடுத்துப் பாடிய பதிகங்கள்:

1. `காம்பினை வென்ற' *(தி.3 ப.102)* - பழம்பஞ்சுரம்
2. `கடலிடை வெங்கடு' *(தி.3 ப.107)* - பழம்பஞ்சுரம்

அப்பதி பணிந்தருந் தமிழ்பு னைந்துதம்
மெய்ப்படு விருப்பொடு மேவு நாள்அரன்
பொற்பதி பலவுமுன் பணிந்து போந்தனர்
பைப்பணி யவர்கருப் பறிய லூரினில். **#2151**

அத்திருப்பதியின் கண்ணுள்ள இறைவரை வணங்கி அரிய தமிழ்ப் பதிகங்களைப் பாடித் தம் உள்ளன்பு நிறைந்த விருப்புடன் தங்கியிருந்த அந்நாள்களில், அருகிலிருக்கும் இறைவ ரின் அழகிய பதிகள் பலவற்றையும் சென்று பணிந்து போந்தவர், பையையுடைய பாம்பைச் சூடிய இறைவர் வீற்றிருக்கும் திருக்கருப் பறியலூர் வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

திருநாரையூரில் தங்கியிருந்த நாள்களில், அருகில் இருக்கும் பதிகள் பலவற்றையும் வணங்கித் திருப்பதிகங்கள் பாடிப் போந்ததாக ஆசிரியர் குறித்தருளுகின்றார். அப்பதிகள், குரக்குக்கா முதலியன போலும் எனக் குறிக்கின்றார் சிவக்கவிமணியார். எனினும் அப்பதிக்கு, பிள்ளையார் பாடிய பதிகம் காணக் கிடைத்திலது.

பரமர்தந் திருக்கருப் பறிய லூரினைச்
சிரபுரச் சிறுவர்கை தொழுது செந்தமிழ்
உரையிசை பாடிஅம் மருங்கி னுள்ளவாம்
சுரர்தொழும் பதிகளுந் தொழுது பாடினார். **#2152**

சிவபெருமானின் திருக்கருப்பறியலூரை வணங்கிச் செந்தமிழ்ப் பதிகத்தைப் பாடியருளிய சீகாழிப் பிள்ளையார், அதற்கு அருகிலுள்ள தேவர்கள் வணங்குகின்ற பிற திருப்பதிகளையும் வணங்கிப் பாடினார்.

விளக்கவுரை

திருக்கருப்பறியலூரில் பாடிய பதிகம் `சுற்றமொடு பற்றவை' *(தி.2 ப.31)* என்று தொடங்கும் இந்தளப் பண்ணிலமைந்த பதிகமாகும். அருகிலுள்ள பதிகளையும் வணங்கினார் என ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அப்பதிகள் திருப்புன்கூர், திருப்புள்ளிருக்கு வேளூர் முதலாயினவாகலாம் எனக் கருதுவர் சிவக்கவிமணியார்.

மண்ணுலகு செய்ததவப் பயனா யுள்ள

வள்ளலார் அப்பதிகள் வணங்கி ஏகி
எண்ணில்முர சிரங்கியெழப் பணிலம் ஆர்ப்ப
இலங்கியகா ளம்சின்னம் எங்கும்ஊதக்
கண்வளர்மென் கரும்புமிடை கதிர்செஞ் சாலி
கதலிகமு குடன்ஓங்குங் கழனி நாட்டுத்
தெண்ணிலவு சூடியதம் பெருமான் வைகுந்
திருப்பிரம புரஞ்சாரச் செல்லும் போது. **#2153**

இம்மண்ணுலகம் செய்த தவப் பயனால் தோன்றிய வள்ளலாரான பிள்ளையார், அப்பதிகள் பலவற்றையும் வணங்கி, அப்பால் சென்று அளவற்ற முரசுகள் எழுந்து ஒலிக்கவும், சங்குகள் முழங்கவும், விளங்கும் எக்காளங்களும் சின்னங்களும் எங்கும் இயம்பவும், கணுக்கள் வளரும் மென்மையான கரும்புகளும் நெருங்கிய கதிர்களையுடைய செந்நெல்லும், வாழைகளும், கமுகு களும் ஒருங்கே ஓங்கும் வயல்கள் பொருந்திய சோழ நாட்டில், தெளிந்த பிறையைச் சூடிய தம் இறைவர் எழுந்தருளியுள்ள திருப் பிரமபுரம் என்ற சீகாழியைச் சாரச் செல்லும் போது,

விளக்கவுரை

****

பிள்ளையார் எழுந்தருளக் கேட்ட செல்வப்
பிரமபுரத் தருமறையோர் பெருகு காதல்
உள்ளமகிழ் சிறந்தோங்கத் தோணி மேவும்
உமைபாகர் கழல்வணங்கி உவகை கூர
வெள்ளமறை ஒலிபெருகு மறுகு தோறும்
மிடைமகர தோரணங்கள் கதலி பூகம்
தெள்ளுபுனல் நிறைகுடங்கள் தீப தூபம்
செழுங்கொடிகள் நிறைத்தெதிர்கொள் சிறப்பிற் செல்வார். **#2154**

பிள்ளையார் தம்பதிக்கு வருகின்றார் என்பதைக் கேட்ட செல்வம் பொருந்திய பிரமபுரத்தில் வாழ்கின்ற அந்தணர்கள், பெருகுங் காதலால் தம் உள்ளங்களில் மகிழ்ச்சி பெருகி எழுதலால், திருத்தோணியில் எழுந்தருளியிருக்கும் திருநிலை நாயகியாரை ஒரு கூற்றில் கொண்ட இறைவரின் திருவடிகளை வணங்கி, மகிழ்ச்சி மிக, மறைகளின் ஒலி பெருகும் திருவீதிகளில் எல்லாம், நெருங்கிய மாதோரணங்கள், வாழை, பாக்கு தெளிந்த நீர் உடைய குடங்கள், விளக்குகள், நறும் புகை, செழுங்கொடிகள் என்னும் இவற்றை நிரல் பட அமைத்து வரவேற்றற்குரிய சிறப்புக்களை மிகுதியாய்ச் செய்து,

விளக்கவுரை

****

ஆரணங்கள் மதுரவொலி எழுந்து பொங்க
அரசிலையுந் தருப்பையும்பெய் தணிந்த வாசப்
பூரணகும் பங்கள்நிறை கரகம்ஏந்திப்
புதுமலரும் நறுந்துகளும் பொரியுந் தூவி
வாரணங்கு முலைஉமையாள் குழைத்த செம்பொன்
வள்ளத்தில் அமுதுண்ட வள்ள லாரைச்
சீரணங்கு மணிமுத்தின் சிவிகை மீது
செழுந்தரளக் குடைநிழற் கீழ்ச்சென்று கண்டார். **#2155**

நான்மறைகளின் இனிய ஒலி எழுந்து பெருக, அரசிலையையும் தருப்பையையும் இட்டு அணி செய்யப்பட்ட மண முடைய நிறை குடங்களையும் நிறைந்த கரகங்களையும் தாங்கி, புதிய மலர்களையும் நறுமண மிக்க பொடிகளையும் பொரியையும் தூவி, கச்சணிந்த மார்பகங்களையுடைய உமையம்மையார் தந்த செம்பொன் கிண்ணத்தில் சிவஞானத்துடன் குழைத்த பால் அமுதத்தை உண்ட வள்ளலாரான பிள்ளையாரைச் சிறந்த முத்துக் குடை நிழற்றும் முத்துச் சிவிகையின் மீது கண்டனர்.

விளக்கவுரை

****

கண்டபொழு தேகைகள் தலைமேற் கொண்டு
கண்களிப்ப மனங்களிப்பக் காதல் பொங்கித்
தொண்டர்களும் மறையவரும் சென்று சூழ்ந்து
சொல்லிறந்த மகிழ்ச்சியினால் துதித்த ஓசை
எண்திசையும் நிறைவித்தார் ஆடை வீசி
இருவிசும்பின் வெளிதூர்த்தார் ஏறு சீர்த்தி
வண்டமிழ்நா யகரும்இழிந் தெதிரே சென்று
வணங்கியவ ருடன்கூடி மகிழ்ந்து புக்கார். **#2156**

பார்த்தவுடனே தலைகள் மீது கைகளைக் குவித்துக் கண்கள் களிப்படையவும், உள்ளம் மகிழவும், காதல் பெருகத் தொண்டர்களும் அந்தணர்களும் சென்று பிள்ளையாரைச் சூழ்ந்து, சொலற்கரிய மகிழ்ச்சியால் போற்றிய ஓசை எண்திசை களிலும் நிறையுமாறு செய்தனர். தம் மேலாடைகளை வீசி வானத்தை மறைத்தனர். மேன்மேலும் பெருகும் புகழையுடைய தமிழ்த் தலை வரான ஆளுடைய பிள்ளையாரும் சிவிகையினின்றும் இறங்கி, அவர்கள் எதிரே சென்று வணங்கி, அவர்களுடன் கூடி மகிழ்ந்து அந் நகரத்துள் புகுந்தார்.

விளக்கவுரை

****

திங்களணி மணிமாடம் மிடைந்தவீதி
சென்றணைந்து தெய்வமறைக் கற்பின் மாதர்
மங்கலவாழ்த் திசையிரண்டு மருங்கும் மல்க
வானவர்நா யகர்கோயில் மருங்கு சார்ந்து
துங்கநிலைக் கோபுரத்தை இறைஞ்சிப் புக்குச்
சூழ்ந்துதிருத் தோணிமிசை மேவி னார்கள்
தங்கள்திரு முன்புதாழ்ந் தெழுந்து நின்று
தமிழ்வேதம் பாடினார் தாளம் பெற்றார். **#2157**

சந்திரனைத் தாங்குமாறு உயர்ந்த அழகிய மாளிகைகள் நிறைந்த தெருவில் சென்று அணைந்து, கடவுட்டன்மை கொண்ட மறைவழி வந்த கற்புடைய மங்கையர் முழக்கும் மங்கல வாழ்த்து இருமருங்கிலும் நிறைய, இறைவரது பெரிய நிலைகளை உடைய கோபுரத்தை வணங்கிக் கோயிலுள் புகுந்து, வலம் வந்து, திருத்தாளம் பெற்றவரான பிள்ளையார், திருத்தோணியில் எழுந் தருளிய இறைவரின் திருமுன்பு வீழ்ந்து வணங்கி எழுந்து, தமிழ் மறையான பதிகத்தைப் பாடினார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகம், இப்பொழுது காணப் பெறும் பதிகங்களுள் ஒன்றோ, அன்றிப் பிறவோ என அறுதியிட்டுக் கூறுதற்கு இல்லை.

பரவுதிருப் பதிகஇசை பாடி நீடும்
பரங்கருணைத் திருவருளின் பரிசு போற்றி
விரவுமலர்க் கண்பனிப்பக் கைகள் கூப்பி
வீழ்ந்தெழுந்து புறம்போந்து வேத வாய்மைச்
சிரபுரத்துப் பிள்ளையார் செல்லும் போது
திருநீல கண்டயாழ்ப் பாணர் பின்னே
வரஅவரை வளம்பெருகு மனையிற் போக
அருள்செய்து தந்திருமா ளிகையின் வந்தார். **#2158**

போற்றுதற்குரிய இசை பொருந்திய திருப்பதிகத் தைப் பாடிப் பெருங்கருணை செய்த திருவருளின் தன்மையைப் போற்றிப் பொருந்திய மலர் போன்ற கண்கள் இன்ப நீரைப் பொழியக் கைகளைத் தலைமேல் குவித்து, வீழ்ந்து வணங்கி, வெளியே வந்து, மறையின் வாய்மை விளங்கும் காழிப் பிள்ளையார் சென்றருளும் பொழுது, திருநீலகண்ட யாழ்ப்பாணர் தம்பின்னே வர, வளம் பெரு கும் அவர்தம் இருக்கைக்குச் செல்லுமாறு அருள் செய்து, தம் மாளிகை யின் அருகில் வந்தாராக.

விளக்கவுரை

யாழ்ப்பாணர் தம் மனைவியுடன் தம்மைக் காணவந்த பொழுதே, அவருக்கெனத் தனி மனையொன்று அமைத்து அதில் இருக்கச் செய்தது முன்னர்க் கூறப்பட்டது. அம்முறையிலேயே இது பொழுதும் அவரைத் தம் துணைவியாருடன் இருக்கச் செய்தனர்.

மறையவர்கள் அடிபோற்றத் தந்தை யாரும்
மருங்கணைய மாளிகையில்அணையும் போதில்
நிறைகுடமும் மணிவிளக்கும் முதலா யுள்ள
நீதிமறைக் குலமகளிர் நெருங்கி யேந்த
இறைவர்திரு நீற்றுக்காப் பேந்தி முன்சென்
றீன்றதா யார்சாத்தி இறைஞ்சி ஏத்த
முறைமையவர்க் கருள்செய்து மடத்தில் புக்கார்
முதல்வர்பால் மணிமுத்தின் சிவிகை பெற்றார். **#2159**

அங்கிருந்த அந்தணர்கள் தம் அடிகளை வணங்கத் தந்தையாரும் தம் அருகில் நெருங்கி வரத் தம் திருமாளி கையை அடையும் பொழுது, மரபு வழாத மறைக்குல மடந்தையர் நிறை குடத்தையும் அழகிய விளக்குகளையும் ஏந்தி நிற்க, அவரன்பைப் பெற்றவரான பகவதியார், சிவபெருமானின் திருநீற்றுக் காப்பினை ஏந்தி முன்வந்து சாத்திப் பணிந்து பாராட்ட, முறைமையாக அவரவர்க்கும் அருள் செய்து பெருமானிடம் மணிமுத்துச் சிவிகை பெற்றவரான பிள்ளையார், திருமடத்துள் புகுந்தார்.

விளக்கவுரை

பிள்ளையாரின் நெற்றியில் நீறு சாத்தியது, தாயார் எனவந்த உலகியல் நிலையிலாம். அவரைப் பணிந்தது, திருவருள் நலத்தால் ஞானம் பெற்ற அருளியல் நிலையிலாம். இவ்விரு நிலைக ளையும் காண நேருவது நாம் பெற்ற புண்ணியமாகும். இது போன்றே பிள்ளையார் இருந்தருளும் இடத்தை ஒருகால் மாளிகை என்றும், பிறிதொருகால் மடம் என்றும் குறிப்பதுமாகும். மாளிகை என்றது அதன் வளத்தைக் காட்டி நிற்கும். மடம் என்றது அதன்கண் ஆற்றி வந்த அறச் செயலையும் அருட்செயலையும் காட்டி நிற்கும்.

செல்வநெடு மாளிகையில் அமர்ந்து நாளுந்
திருத்தோணி மிசையாரைச் சென்று தாழ்ந்து
மல்குதிருப் பதிகங்கள் பலவும் பாடி
மனமகிழ்ந்து போற்றிசைத்து வைகு நாளில்
ஒல்லைமுறை உபநயனப் பருவ மெய்த
உலகிறந்த சிவஞானம் உணரப் பெற்றார்

தொல்லைமறை விதிச்சடங்கு மறையோர் செய்யத்
தோலொடுநூல் தாங்கினார் சுரர்கள் போற்ற. #2160

செல்வம் பெருகும் நீண்ட தம் திருமாளிகையில் இருந்து ஒவ்வொரு நாளும், திருத்தோணியில் எழுந்தருளியிருக்கும் இறைவரைச் சென்று பணிந்து, பொருந்திய பதிகங்கள் பலவற்றையும் பாடி மனமகிழ்வுடன் இருந்து வரும் நாள்களில், விரைவாக முறைப்படி செயத்தக்க உபநயனப் பருவம் வந்துசேர, உலகியலுக்கு அப்பாற்பட்ட சிவஞானத்தை அறியப் பெற்ற பிள்ளையார், தொன்று தொட்டு வரும் மறைநெறிப்படி உபநயனத்துக்குரிய செயற்பாடுகளை அந்தணர்கள் செய்யத் தேவர்களும் போற்றுமாறு பிள்ளையார் அந் நிலையில் தோலுடனே நூலையும் தாங்கிக் கொண்டார்.

விளக்கவுரை

செல்வம் பெருகும் நீண்ட தம் திருமாளிகையில் இருந்து ஒவ்வொரு நாளும், திருத்தோணியில் எழுந்தருளியிருக்கும் இறைவரைச் சென்று பணிந்து, பொருந்திய பதிகங்கள் பலவற்றையும் பாடி மனமகிழ்வுடன் இருந்து வரும் நாள்களில், விரைவாக முறைப்படி செயத்தக்க உபநயனப் பருவம் வந்துசேர, உலகியலுக்கு அப்பாற்பட்ட சிவஞானத்தை அறியப் பெற்ற பிள்ளையார், தொன்று தொட்டு வரும் மறைநெறிப்படி உபநயனத்துக்குரிய செயற்பாடுகளை அந்தணர்கள் செய்யத் தேவர்களும் போற்றுமாறு பிள்ளையார் அந் நிலையில் தோலுடனே நூலையும் தாங்கிக் கொண்டார்.

ஒருபிறப்பும் எய்தாமை உடையார் தம்மை
உலகியல்பின் உபநயன முறைமை யாகும்
இருபிறப்பின் நிலைமையினைச் சடங்கு காட்டி
எய்துவிக்கும் மறைமுனிவ ரெதிரே நின்று
வருதிறத்தின் மறைநான்குந் தந்தோம் என்று
மந்திரங்கள் மொழிந்தவர்க்கு மதுர வாக்கால்
பொருவிறப்ப ஓதினார் புகலி வந்த
புண்ணியனார் எண்ணிறந்த புனித வேதம். #2161

எப்பிறவியிலும் வாராத இயல்புடைய பிள்ளை யாரை, உலகில் மற்றவர் இயல்பில் அவரை வைத்து உபநயன முறையான இருபிறப்பின் நிலையை அதற்குரிய செயற்பாடுகளால் காட்டிச் செய்கின்ற அந்தணர்கள் எதிரில் நின்று, `வழிவழியாகக் கூறப்பெற்று வரும் தன்மையில் நான்மறைகளையும் தந்தோம்' என்று உரிய மந்திரங்களைச் சொல்லும் அவர்களுக்குத் தம் இனிய வாக்கினால் சீகாழியில் தோன்றிய புண்ணியமே வடிவான பிள்ளை யார் ஒப்பற்ற நிலையில் நின்று எண்ணற்ற புனித மறைகளையும் ஓதினார்.

விளக்கவுரை

`மறக்குமா றிலாதவென்னை மையல்செய்திம் மண் ணின்மேல் பிறக்குமாறு காட்டினாய்' *(தி.2 ப.98 பா.5)* என வருந்தி நின்றவர் பிள்ளையார். தம் திருமணத்தின் பொழுது யாவரும் புகுக எனத் தம்முடன் வந்தார் அனைவரையும் வீடுபேறு பெற அழைத்துச் சென்றவர். அப்பெருமை உடையாருக்கு இனிப் பிறப்பு என்பது ஏது? ஒன்றுமில்லை. ஆதலின் `ஒரு பிறப்பும் எய்தாமை யுடையார்' என் றார். அத்தகைய ஞானச் செம்மலுக்கு இருபிறப்பின் நிலைமையினை உணர்த்தவேண்டி, அவ்வந்தணர்கள் நான்மறைகளையும் தந்தோம் என்றது உலகியல் வயப்பட்டதன்றிப் பிறிதன்று என்பார், அவர்க ளுக்கு `எண்ணிறந்த புனித வேதம்' இப்பிள்ளையார் ஓதினார் என் றார். இதனால் அவ்வந்தணர்களுக்குப் பிள்ளையார், தம் தியானப் பொருள் ஆகவும் (குருமூர்த்திகளாக) ஆனார் என, வரும் பாடலில் ஆசிரியர் சேக்கிழார் கூறுவாராயினர். இந்நிலைகளை யெல்லாம் ஆழமாக நினைதல் இன்றியமையாததாகும்.

சுருதியா யிரம்ஓதி அங்க மான
தொல்கலைகள் எடுத்தியம்புந் தோன்ற லாரைப்
பரிதிஆ யிரகோடி விரிந்தால் என்னப்
பரஞ்சோதி அருள்பெற்ற பான்மை மேன்மை
கருதிஆ தரவோடும் வியப்புற் றேத்துங்
கலைமறையோர் கவுணியனார் தம்மைக் கண்முன்
வருதியா னப்பொருள்என் றிறைஞ்சித் தாமுன்
வல்லமறை கேட்டையந் தீர்ந்து வாழ்ந்தார். **#2162**

எண்ணிறந்த பல மறைகளையும் ஓதியதுடன் அவற்றின் அங்கமான பழைய கலைகளையும் எடுத்துக் கூறிய பெருமை வாய்ந்த பிள்ளையாரை, எண்ணற்ற கதிரவர்கள் ஒருங்கு கூடித் தம் கதிர்களை விரித்தாற் போல மேலாக விளங்கும் ஒளிப் பிழம்பாய இறைவரின் திருவருளைப் பெற்ற பான்மையின் மேன் மையை எண்ணி, அன்பும் வியப்பும் கொண்டு போற்றும் அவ்வந் தணர்கள், கவுணியர் பெருமானான பிள்ளையாரைத் `தங்கள் கண் முன் வெளிப்பட்டு வரும் தியானப் பொருள் ஆவார்' என்று எண்ணி வணங்கித் தாங்கள் முன்னே கொண்ட மறைகளில் ஏற்பட்ட தமக் குள்ள ஐயங்களையும் கேட்டுத் தெளிந்தனர்.

விளக்கவுரை

அங்கமான தொல்கலைகள் தருக்கம், வியாகரணம், முதலிய ஆறு அங்கங்கள். இறைவனின் பேரொளிக்கு ஆயிரங் கோடி கதிரவர்களின்

ஒளி உவமை. ஈண்டு ஆயிரங் கோடி என்பது எண்ணற் றவை எனும் பொருளில் நின்றது. கதிரவனுக்கு ஒளி தருபவனே இறைவன் ஆவன். `அருக்கனிற் சோதி அமைத்தோன் காண்க' *(தி.8 ப.3 வரி.20)* என வரும் திருவாசகமும் காண்க. ஆதலின் அக்கதிரவர்களின் ஒளி ஒரு புடை ஒப்புமையாகவே அமையும். தியானப் பொருள் - தியானிக்கப்படும் பொருள்: குருவாகவும் சிவமாகவும் எண்ணிப்போற்றப்படும் பொருள்.

மந்திரங்க ளானவெலாம் அருளிச் செய்து
மற்றவற்றின் வைதிகநூற் சடங்கின் வந்த
சிந்தைமயக் குறும்ஐயந் தெளிய எல்லாஞ்
செழுமறையோர்க் கருளியவர் தெருளும் ஆற்றால்
முந்தைமுதன் மந்திரங்கள் எல்லாந் தோன்றும்
முதலாகும் முதல்வனார் எழுத்தஞ் சென்பார்
அந்தியினுள் மந்திரம் அஞ்செழுத்து மேயென்
றஞ்செழுத்தின் திருப்பதிகம் அருளிச் செய்தார். **#2163**

மறைவழிப்பட்ட மந்திரங்கள் எல்லாவற்றையும் சொல்லியருளியபின், அம்மறைவழிப்பட்ட வேள்விச் செயற்பாடுக ளில் அவர்களின் சிந்தையில் வந்த ஐயங்களையெல்லாம் தெளியு மாறு அவ்வந்தணர்களுக்கு எடுத்துக் கூறியதுடன், அவர்கள் மனம் தெளியுமாறு தொன்மையும் முதன்மையும் பெற்ற எல்லா மந்திரங் களும் தோன்றுவதற்குக் காரணம் சிவபெருமானின் திருவைந்தெ ழுத்தே யாகும் என அருளுவாராய் `முப்போதும் ஓதுதற்குரிய மந்திரம் திருவைந்தெழுத்தே யாகும்' என ஐந்தெழுத்தின் திருப்பதிகத்தையும் அருள் செய்தார்.

விளக்கவுரை

இப்பதிகம் `துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்' *(தி.3 ப.22)* எனத் தொடங்கும் காந்தார பஞ்சமப் பண்ணிலமைந்த பதிக மாகும். இப்பதிகத்தில்,

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்று அவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே.

-தி.3 ப.22 பா.2 எனவரும் இரண்டாவது பாடலின் *4*ஆவது அடியே ஆசிரியரால் எடுத்துக் கூறப்பட்டதாகும். அந்தி - முப்பொழுதும். இதனால் அவ்வந் தணர்களுக்குக் குரு உபதேசமும் பெற வாய்ப்பாயிற்று.

அத்தகைமை பிள்ளையார் அருளிச் செய்ய
அந்தணர்கள் அருள்தலைமேற் கொண்டு தாழ்ந்து

சித்தமகிழ் வொடுசிறப்பத் தாமும் தெய்வத்
திருத்தோணி அமர்ந்தாரைச் சென்று தாழ்ந்து
மெய்த்தஇசைப் பதிகங்கள் கொண்டு போற்றி
விரைமலர்த்தாள் மனங்கொண்டு மீண்டுபோந்து
பத்தருடன் இனிதமரும் பண்பு கூடப்
பரமர்தாள் பணிந்தேத்திப் பயிலும் நாளில். **#2164**

அவ்வாறான பதிகத்தைப் பிள்ளையார் பாடி அரு ளவே, அம்மறையவர்கள் அவ்வருளிப்பாட்டினை உபதேசமாகக் கொண்டு, சிரமேல் தாங்கி வணங்கி மனம் மகிழ்ந்தனராக, பிள்ளை யார் தாமும் தெய்வத் திருத்தோணியில் எழுந்தருளியிருக்கும் இறை வரைச் சென்று பணிந்து பாடற் பொருளுக்கு இசைந்த இசையுடன் கூடிய திருப்பதிகங்களால் போற்றி, அவருடைய மணம் கமழும் மலர் போன்ற திருவடிகளை உள்ளத்தில் வைத்து, வெளிப் போந்து அடியார்களுடன் இனிதாய் அமரும் தன்மை கூடுமாறு இறைவரின் திருவடிகளைப் பணிந்து போற்றி இருந்தருளிய அந்நாள்களில்,

விளக்கவுரை

இதுபொழுது அருளப் பெற்ற மெய்த்த இசைத் திருப்பதிகங்கள் எவை எனத் தெரிந்தில.

பந்தணை மெல்விர லாளும்
பரமரும் பாய்விடை மீது
வந்துபொன் வள்ளத் தளித்த
வரம்பில்ஞா னத்தமு துண்ட
செந்தமிழ் ஞானசம் பந்தர்
திறங்கேட்டி றைஞ்சுதற் காக
அந்தணர் பூந்தராய் தன்னில்
அணைந்தனர் நாவுக் கரையர். **#2165**

பந்தொடு பழகிய மென்மையான விரலையுடைய உமையம்மையாரும் இறைவரும் ஆனேற்றின் மீது எழுந்தருளி வெளிப்பட்டு வந்து, பொற்கிண்ணத்தில் அளித்த எல்லையில்லாத ஞானப் பாலையுண்ட செந்தமிழ்த் தலைவரான திருஞானசம்பந்தரின் திறங்களைக் கேட்டு, அவரை வணங்குதற்காக, அந்தணர்கள் சிறப்பு டன் இருக்கும் சீகாழிப் பதிக்குத் திருநாவுக்கரசு நாயனார் வந்தருளினார்.

விளக்கவுரை

மூன்றாண்டில் ஞானம் பெற்ற பிள்ளையாரின் அருள் திறங்களை, அவர் உபநயனம் பெற்ற ஏழாவது ஆண்டிற்குப் பிறகே நாவரசர் அறிய நேர்ந்தமை இதனால் புலனாகின்றது. எத்துணை அரிய செய்திகளும்

நிகழ்ந்த அவ்வவ்விடத்தே போற்றப் பெற்று வந்ததல்லது நாடெங்கிலும் அவை தெரிதற்குப் போதிய சூழலும் வாய்ப்பும் அக்காலத்தே இல்லாதிருந்தமை விளங்குகின்றன. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வாக்கின் பெருவிறல் மன்னர்
வந்தணைந் தாரெனக் கேட்டுப்
பூக்கமழ் வாசத் தடஞ்சூழ்
புகலிப் பெருந்தகை யாரும்
ஆக்கிய நல்வினைப் பேறென்
றன்பர் குழாத்தொடும் எய்தி
ஏற்கும் பெருவிருப் போடும்
எதிர்கொள எய்தும் பொழுதில். **#2166**

பேராற்றலை யுடைய சொல்லரசர் வந்துள்ளார் என்பதைக் கேட்டு, நீர்ப்பூக்கள் மணம் கமழும் பொய்கைகள் சூழ்ந்த சீகாழியில் வந்தருளிய பெருந்தகையாரான பிள்ளையாரும், `இது முன் நல்வினையினால் நேர்ந்த பேறாகும்' என்று மனத்துள் கொண்டு, அன்பர்கள் சூழ அவரை வரவேற்கும் பெருவிருப்பத்துடனே எதிர் கொள்ளச் சென்ற போழ்தில்,

விளக்கவுரை

****

சிந்தை இடையறா அன்பும்
திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும்
கையுழ வாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும்
வடிவிற் பொலிதிரு நீறும்
அந்தமி லாத்திரு வேடத்
தரசும் எதிர்வந் தணைய. **#2167**

உள்ளத்தில் இடையறாது பெருகும் அன்பும், திருமேனியில் அசைவும், கந்தையும் மிகையாம் என்ற கருத்தும், கையில் உழவாரப் படையும், வெளிப்பட்டுப் பெருகி வழிகின்ற கண்ணீர் மழையும், திருமேனியில் விளங்கும் திருநீறுமாய், அந்தம் இல்லாத திருவேடத்தையுடைய திருநாவுக்கரசரும் எதிரே வந்தாராக,

விளக்கவுரை

நாவரசரின் திருவேடப் பொலிவழகை உள்ளக் கிழியில் உரு எழுதிக் காண்டற்கு ஏதுவாக ஆசிரியர் மூன்று இடங்க ளில் அவ்வழகு பொலி திருவடிவைக் குறித்துள்ளார். அவற்றுள் இஃது ஒன்றாகும். சிந்தை இடையறா அன்பை வந்திழி கண்ணீர் மழை வெளிப் படுத்தி

நிற்கின்றது. அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லையன்றோ? அசைவு - தளர்ச்சி. இதனால் அடிகளின் வயதறிய வாய்ப்புண்டு. ஞானசம்பந்தரின் முதல் முறைச் சந்திப்பு இது. திருப்புகலூரில் இரண்டாவது முறையாகவும், திருப்பூந்துருத்தியில் மூன்றாவது முறையாகவும் சந்திக்கவுள்ளார் இவர். இம் முதல்முறைச் சந்திப்பிலேயே `திருமேனி அசைவு' குறிப்பிடப்படுகின்றது. காத்தாள் பவர் காவல் இகழ்ந்து, சமண் சமயத்தில் சார்ந்தது ஏறத்தாழ இருபத்தைந்திலிருந்து முப்பது வயதுக்குள் இருக்குமானால் இவர் மீண்டும் சைவ சமயம் சார்ந்தது அறுபத்தைந்து வயதுக்கு மேல் இருக்கலாம். இந்நிலையில் இதுபொழுது இவர்தம் வயது 70 ஆகலாம் என எண்ண இடம் உண்டு. இவ்வரையறை முன்பின்னுமாகலாம் . ஞானியர்க்கு ஓடும் கவந்தியுமே உறவாகும் ஆதலால் அவருக்குக் கந்தையும் மிகையாயிற்று.
பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பே மிகை என்பர் திருவள்ளுவர்.

கண்ட கவுணியக் கன்றும்
கருத்திற் பரவுமெய்க் காதல்
தொண்டர் திருவேடம் நேரே
தோன்றிய தென்று தொழுதே
அண்டரும் போற்ற அணைந்தங்
கரசும் எதிர்வந் திறைஞ்ச
மண்டிய ஆர்வம் பெருக
மதுர மொழியருள் செய்தார். **#2168**

அங்ஙனம் அவர் வருதலைக் கண்ட ஞானசம்பந் தரும் `உள்ளத்தில் பரவி வருகின்ற உண்மையன்பின் பெருக்குக் கிடனான தொண்டர் திருவேடம் நேரேவந்து தோன்றியது' எனக் கொண்டு தொழுதபடியே தேவர்களும் போற்றுமாறு அங்குச் சேர, அது பொழுது நாவுக்கரசரும் எதிரே வந்து வணங்க, மிகுந்த ஆசைபெருக, அவருக்கு இனிய மொழிகளைக் கூறியருளினார்.

விளக்கவுரை

அடியவர் எனில் எப்படியிருக்க வேண்டும் என்பதைச் சம்பந்தர் உள்ளத்தில் தெளிந்து, அதற்கு ஒரு வடிவங் கொண்டு தொழுது வந்துள்ளார். இதுவரை அவர் அவ்வாறு உருக்கொண்ட திருவேடம் நாவரசர் திருவேடமேயாக இருக்கக் கண்ட நிலையில், மீதூர்ந்த அன்பினால் அவரை வணங்கினார். இவ்வாற்றான் நாவரச ரின் திருவேடப் பொலிவழகு எவ்வளவு போற்றற்குரியது என்பது புலனாகும். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

பேரிசை நாவுக் கரசைப்
பிள்ளையார் கொண்டுடன் போந்து

போர்விடை யார்திருத் தோணிப்
பொற்கோயி லுள்புகும் போதில்
ஆர்வம் பெருக அணையும்
அவருடன் கும்பிட் டருளால்
சீர்வளர் தொண்ட ரைக்கொண்டு
திருமா ளிகையினில் சேர்ந்தார். **#2169**

மிகு புகழுடைய நாவுக்கரசரைப் பிள்ளையார் உடன் வரவேற்றுச் சென்று, ஆனேற்றூர்தியையுடைய இறைவரின் திருத்தோணி என்ற அழகிய கோயிலுள் புகும்போது, ஆர்வம் மிகுதி யால் அணையும் அவருடனே கூடி, இறைவரை வணங்கித் திருவரு ளால், சிறப்பு மிகச் செய்யும் திருத்தொண்டரான அரசைத் தம்முடன் அழைத்துக் கொண்டு தம் திருமாளிகைக்குச் சென்றார்.

விளக்கவுரை

****

அணையுந் திருந்தொண்டர் தம்மோ
டாண்ட அரசுக்கும் அன்பால்
இணையில் திருவமு தாக்கி
இயல்பால் அமுதுசெய் வித்துப்
புணரும் பெருகன்பு நண்பும்
பொங்கிய காதலில் கும்பிட்
டுணருஞ்சொல் மாலைகள் சாத்தி
உடன்மகிழ் வெய்தி உறைந்தார். **#2170**

சூழவரும் திருத்தொண்டர்களுடன் ஆளுடைய அரசர்க்கும் ஒப்பில்லாத உணவை, ஏற்ற இயல்பால் ஆக்குவித்து உண்ணச் செய்தருளிப் பொருந்திய பேரன்பும் நட்பும் மேன்மேலும் மிக வணங்கிச் சிவபெருமானை உள்ளத்தில் கண்டு மகிழும் திருப்பதி கங்களைப் பாடி, மகிழ்ச்சி பொருந்த உடன் இருந்தனர்.

விளக்கவுரை

இங்கு அருளிய சொல்மாலைகள் எவைஎன உறுதியாக அறிதற்கியலாதுள்ளது.

அந்நாள் சிலநாள்கள் செல்ல
அருள்திரு நாவுக் கரசர்
மின்னார் சடையண்ணல் எங்கும்
மேவிடங் கும்பிட வேண்டிப்
பொன்மார்பின் முந்நூல் புனைந்த
புகலிப் பிரானிசை வோடும்

பின்னாக வெய்த விறைஞ்சிப்
பிரியாத நண்பொடும் போந்தார். #2171

அங்ஙனமாக, நாள்கள் சில செல்ல, திருவருள் பெற்றிலங்கும் திருநாவுக்கரசர், மின்னல் போல ஒளிவிடும் சடையை உடைய இறைவர் வீற்றிருக்கும் ஏனைய திருப்பதிகளுக்கும் சென்று கும்பிட விரும்பி அழகிய மார்பில் முப்புரிநூல் அணிந்த சீகாழிச் செம்மலான பிள்ளையாரின் இசைவுடன் பின்னரும் வந்து பழகி இன்புறும் நட்புரிமையுடன் பிரிந்து சென்றனர்.

விளக்கவுரை

****

வாக்கின் தனிமன்னர் ஏக
மாறாத் திருவுளத் தோடும்
பூக்கமழ் பண்ணைகள் சூழ்ந்த
புகலியில் மீண்டும் புகுந்து
தேக்கிய மாமறை வெள்ளத்
திருத்தோணி வீற்றிருந் தாரைத்
தூக்கின் தமிழ்மாலை பாடித்
தொழுதங் குறைகின்ற நாளில். #2172

ஒப்பில்லாத திருநாவுக்கரசர் செல்ல, மாறுபாடு இல்லாத திருவுள்ளத்துடன் மலர்கள் மணம் கமழும் வயல்கள் சூழ்ந்த சீகாழிப் பதியுள் பிள்ளையார் மீண்டு வந்து புகுந்து, நிறைந்த மறைக ளின் வடிவாய்த் திருத்தோணியில் வீற்றிருக்கின்ற தோணியப்பரை அழகிய செய்யுள்களாலாகிய இனிய தமிழ் மாலைகளைப் பாடி வணங்கி அங்கு இருந்துவரும் நாள்களில்,

விளக்கவுரை

பிள்ளையார் மீண்டுவந்து புகுந்து என்றார், நாவரசருடன் காழி எல்லைவரை சென்று அவரை வழியனுப்பியமை தோன்ற. இதுபொழுது பாடிய பதிகங்களும் இவை எனத் தெரிந்தில. தூக்கு - செய்யுள்.

செந்தமிழ் மாலை விகற்பச்
செய்யுட்க ளான்மொழி மாற்றும்
வந்தசொற் சீர்மா லைமாற்று
வழிமொழி எல்லா மடக்குச்
சந்த இயமகம் ஏகபாதம்
தமிழிருக்குக் குறள் சாத்தி
எந்தைக் கெழுகூற் றிருக்கை
ஈரடி ஈரடி வைப்பு. #2173

பல்வேறு வகைப்பட்ட செய்யுள்களாலான செந்தமிழ் மாலைகளாகத் `திருமொழி மாற்று' என்ற பதிகமும் வழிமொழித் `திருவிராகப் பதிகமும், `எல்லா அடிகளிலும் எல்லாச் சீர்களிலும் மடங்கி வருகின்ற இயமகமாகிய `திரு ஏகபாதப் பதிகமும்' தமிழில் சிறந்த `இருக்குக் குறள்' பதிகமும், ஆகிய இவற்றைப் பாடிச் சாத்தியதுடன், எம் தந்தைக்கு அருளிய `எழுகூற்றிருக்கையும்' `ஈரடி' என்ற திருப்பதிகமும், `ஈரடிமேல் வைப்பு' என்னும் திருப்பதிகமும்,

விளக்கவுரை

விகற்பச் செய்யுள்கள் - சொல்லணிநேர் பயின்ற பல்வேறு வகைப்பட்ட செய்யுள்கள். காழிப் பிள்ளையார் திருப்பதிகள் தோறும் சென்று வழிபட்டு வரும் முறையில், இந்நான்காவது செலவு நயப்பு நிறைவுற்றதும் காழியில் தங்கிய நாள்கள் மிகுதியாகும். ஆதலின் இதுபொழுது அருளிய பதிகமும் மிகுதியாகவுள்ளன.

இவ்வகையில் அமைந்த பதிகங்கள்:

1. `மொழிமாற்று': காடதணி (தி.1 ப.117) - வியாழக்குறிஞ்சி
2. `மாலைமாற்று': யாமாமாநீ (தி.3 ப.117) - கௌசிகம்
3. `வழிமொழி': சுரருலகு (தி.3 ப.67) - சாதாரி
4. `ஏகபாதம்': பிரமபுரத்துறை (தி.1 ப.127) - வியாழக்குறிஞ்சி
5. `இருக்குக்குறள்': அரனை உள்குவீர் (தி.1 ப.90) - குறிஞ்சி
6. `எழுகூற்றிருக்கை': ஓருருவாயினை (தி.1 ப.128) - வியாழக்குறிஞ்சி
7. `ஈரடி': வரமதே கொளா (தி.3 ப.110) - பழம்பஞ்சுரம்
8. `ஈரடி மேல்வைப்பு' : தக்கன்வேள்வி (தி.3 ப.5) - காந்தார பஞ்சமம்

1. மொழிமாற்று: பாடலில் வரும் சொற்கள் பொருள் அமைவிற்கு ஏற்ப மாற்றிக் கொள்ளுதல் இதன் இலக்கணமாகும்.

2. மாலை மாற்று: ஒரு மாலைக்கு அமைந்த இரு தலைப்புகளுள், எதனை முதலாகக் கொண்டு நோக்கினாலும் அம்மாலை ஒரே தன்மை யதாய்த் தோன்றுமாறு போல, ஒரு செய்யுளை முதலிலிருந்தோ, இறுதி யிலிருந்தோ எவ்வகையில் தொடர்ந்து வாசித்தாலும் அதே செய்யு ளாக அமையுமாறு ஒத்த எழுத்துக்களை நிரலே பெற்றிருப்பது மாலைமாற்றுச் செய்யுளாம்.

3. வழிமொழித் திருவிராகம்: குற்றெழுத்துப் பயின்று வரும் முடுகிய ஓசையுடையதாய் அடிமுதற் சீரின் இரண்டாம் எழுத்து சீர்தோறும் ஒன்றி வழியெதுகையால் வரத்தொடுப்பது இவ்வகையதாம்.

4. ஏகபாதம்: ஓரடியுள் வரும் சொற்சீர்களே நான்கு அடிகளிலும் மடக்கி வரப் பாடுவதாம். ஏகம் - ஒன்று; பாதம் - அடி = ஒரே அடி.

5. இருக்குக்குறள்: இரு சீரால் இயன்ற நான்கு அடிகளையுடைய பாட்டாம்.

6. திருமுக்கால்: ஒரு பாடலில் இரண்டாவது அடி மடங்கி மூன்றாவது அடியாகவும் வரப்பாடுவது இவ்வகையதாகும். இரண் டாம் அடியே மூன்றாவது அடியாக வருதலின் இப்பாடல் மூன்றடி உடையதாகிறது. ஆதலின் இதனை முக்கால் என்றனர்.
7. எழுகூற்றிருக்கை: ஒன்று முதல் ஏழு வரையிலான எண்கள் தொடர, அவ்வெண்கள் ஒவ்வொன்றும் நிறைவுறும்பொழுது, நிரல் பட ஒன்றுவரைக் கீழிறங்கி நிற்கப் பாடுவதாம்.
8. ஈரடி: இரண்டடிகளால் இயன்ற பாடல் வகையதாம்.
9. ஈரடி மேல் வைப்பு: ஈரடியால் இயன்ற செய்யுளாய் அதன் மேலும் ஈரடிகள் வைத்துப் பாடின் அது ஈரடி மேல் வைப்பாம்.
பின்னிரண்டடியாக வரும் வைப்புப் பதிகம் முழுமையும் ஒன்றேயாக அமைவதும் உண்டு, வெவ்வேறாக அமைவதும் உண்டு. இது அடுத்து வரும் நாலடி வைப்பிற்கும் பொருந்தும்.

நாலடி மேல்வைப்பு மேன்மை
நடையின் முடுகும் இராகம்
சால்பினிற் சக்கரம் ஆதி
விகற்பங்கள் சாற்றும் பதிக
மூலஇலக்கிய மாக எல்லாப்
பொருள் களும் முற்ற
ஞாலத் துயர்காழி யாரைப்
பாடினார் ஞானசம் பந்தர். **#2174**

`நாலடி மேல் வைப்பு' என்ற திருப்பதிகமும், மேன்மையுடைய முடுகும் நடையில் அமைந்த `திருவிராகம்' என்ற பதிகங்களும், மேன்மை கொண்ட `திருச்சக்கரமாற்று' முதலான திருப்பதிகங்களும் ஆகிய இவை மூல இலக்கியங்களாக உலகத்திற்கு வழிகாட்டி நிற்குமாறு, எல்லாப் பொருள்களும் நிரம்பி இருக்கக் காணுமாறு, உலகத்தில் உயரும் சீகாழி இறைவரைத் திருஞானசம் பந்தர் பாடியருளினார்.

விளக்கவுரை

இவ்வகையில் அமைந்த பதிகங்கள்:

1. `நாலடி மேல் வைப்பு'*:* இயலிசை *(தி.3 ப.3)* - காந்தாரபஞ்சமம்.
2. `முடுகும் இராகம்'*:* முன்னிய கலை *(தி.2 ப.29)* - இந்தளம்
3. `முடுகும் இராகம்'*:* சங்கமரு *(தி.3 ப.81)* - சாதாரி
4. `முடுகும் இராகம்'*:* பெண்ணியல் *(தி.3 ப. 84)* - சாதாரி
5. `முடுகும் இராகம்'*:* எந்தமது சிந்தை *(தி.3 ப.75)* - சாதாரி
6. `முடுகும் இராகம்'*:* பிறையணி *(தி.1 ப.19)* - நட்டபாடை
7. `சக்கரம்' *:* விளங்கியசீர் *(தி.2 ப.73)* - காந்தாரம்
8. `ஆதிவிகற்பம் முக்கால்'*:* விண்ணவர் தொழு *(தி.3 ப.94)* - சாதாரி

9. `திருத்தாளச்சதி'*:* பந்தத்தால் *(*தி*.1* ப*.126) -* வியாழக்குறிஞ்சி
10. `ஆவின் பாய்ச்சல்' *(*கோமூத்திரி*):* பூமகனூர் - காந்தாரம்
11. `பல்பெயர்ப்பத்து'*:* எரியார் - தக்கேசி
1. முடுகும் இராகம்*:* நெகிழ்ந்த ஓசையவாகிய நெட்டெழுத்துக்கள் விரவாது குற்றெழுத்துக்களால் இயன்று இடையறவு படாது பாடப்படுவது.
2. திருச்சக்கர மாற்று*:* உருள் *(*சக்கரம்*)* வடிவாக அடைத்துச் சுழன்று வருவது போலச் சீகாழியின் பன்னிரு பெயர்களும் மாறி மாறிச் சுழன்று வரப் பாடியருளிய பதிகம் இப்பெயர் அமைய அமைந்துள்ளது.
3. திருமுக்கால்*:* முழுவதும் தொடர், முடுகிய ஓசையுடையதாய் வரும் பாடல் இவ்வகையதாகும்.
இவ்வாறு முடுகி வரும் ஓசை யமைப்பை அராகம் என்பர்.
காலப்போக்கில் அது இராகம் என மாறிற்று.
4. திருத்தாளச் சதி*:* ஆடரங்குகளில் மகளிர் பாடியவாறு நடித்தற்குப் பொருந்திய தாளச் சொற்கட்டுக்களாக அமைந்திருப்பது இவ்வகையாலாய பாடலாம்.
5. கோமூத்திரி*:* நடையன் பசு, நீர்க்கழிவு செய்யும்பொழுது, நிலத்தில் வளைந்து வளைந்து விழும் பாங்குபோலச் செய்யுளை அமைப்பது இவ்வகையதாகும்.
6. திருஇயமகம்*:* `யமகம்' என்பது வடசொல். தமிழ் வழக்குப்படி யகரம் மொழிமுதற்கண் வாராமையின் இகரம் பெற்று இயமகம் ஆயிற்று. ஓரடியில் முன் வைத்த சொல்லோ தொடரோ வேறொரு பொருள்பட மீண்டும் அதே அடியில் மடக்கி வருவது இவ்வகையதாம். இதனை `மடக்கு' என்றும் கூறுவர்.
7. பல்பெயர்ப் பத்து*:* சீகாழிப் பதியின் பன்னிருபெயர்களை தனித் தனியே ஒவ்வொரு பாடலில் குறிக்கும் இப்பதிகம் அகப்பொருள் துறையில் அமைந்துள்ளது.
இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

இன்னிசை பாடின எல்லாம்
யாழ்ப்பெரும் பாணனார் தாமும்
மன்னும் இசைவடி வான
மதங்கசூ ளாமணி யாரும்
பன்னிய ஏழிசை பற்றிப்
பாடப் பதிகங்கள் பாடிப்
பொன்னின் திருத்தா ளம்பெற்றார்
புகலியிற் போற்றி யிருந்தார்**. #2175**

இனிய இசையில் முற்கூறியவாறு பாடிய எல்லாப் பதிகங்களையும்

பெரும்பாணரும், பொருந்திய இசை, ஓர் உருவு எடுத்தாற் போன்ற மதங்கசூளாமணியாரும், போற்றப்படும் ஏழிசைகளும் அமையப் பாடி இறைவரைப் போற்றப் பொன் தாளம் பெற்ற பிள்ளையார் சீகாழியில் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

****

அங்கண் அமர்கின்ற நாளில்
அருந்தமிழ்நா டெத்தி னுள்ளும்
திங்கட் சடையண்ண லார்தம்
திருப்பதி யாவையுங் கும்பிட்
டெங்குந் தமிழ்மா லைபாடி
ஏத்திஇங் கெய்துவன் என்று
தங்குலத் தாதையா ரோடுந்
தவமுனி வர்க்கருள் செய்தார். **#2176**

அப்பதியில் விருப்பத்துடன் எழுந்தருளி இருக்கும் நாள்களில், `அரிய தமிழ் நாட்டிலும், மற்றுமுள்ள நாடுகளி லும், திங்களை அணிந்த சடையையுடைய சிவபெருமான் எழுந்தரு ளியிருக்கும் திருப்பதிகள் பலவற்றிற்கும் சென்று கும்பிட்டு, எங்கும் தமிழ் மாலைத் திருப்பதிகங்களைப் பாடிப் போற்றிய பின் இங்கு வந்து சேர்வன்' எனத் தம் பெருமையுடைய தந்தையார் சிவபாத இருதயருக் கும் தவ முனிவர்களான அடியவர் மற்றும் அந்தணர்க்கும் கூறினார்.

விளக்கவுரை

****

பெருகு விருப்புடன் நோக்கிப்
பெற்ற குலத்தாதை யாரும்
அருமையால் உம்மைப் பயந்த
அதனாற் பிரிந்துறை வாற்றேன்
இருமைக்கும் இன்ப மளிக்கும்
யாகமும் யான்செய வேண்டும்
ஒருமையால் இன்னஞ் சிலநாள்
உடன்எய் துவேன்என் றுரைத்தார். **#2177**

மேன்மேலும் பெருகும் விருப்பத்தோடு பிள்ளை யாரைப் பார்த்து, அவரை ஈன்ற சிவபாத இருதயர், `அரிய தவம் செய்து அதன் பயனாக உம்மை ஈன்றெடுத்தேன், ஆதலால் உம்மைப் பிரிந்து இங்கிருப்பதற்கு ஒருப்படேன், இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் பயக்கும் சிவவேள்வியையும் யான் செய்தல் வேண்டும், ஆதலால் இன்னும் சில

நாள்கள் உம்முடன் வருவன்' எனக் கூறினார்.

விளக்கவுரை

****

ஆண்டகை யாரும் இசைந்தங்
கம்பொற் றிருத்தோணி மேவும்
நீண்ட சடையார் அடிக்கீழ்ப்
பணிவுற்று நீடருள் பெற்றே
ஈண்டு புகழ்த்தாதை யார்பின்
எய்திட யாழ்ப்பாண ரோடும்
காண்தகு காழி தொழுது
காதலி னால்புறம் போந்தார். **#2178**

ஆண் தகையாளரான சம்பந்தரும் அதற்கு இசைந்து, அங்கு அழகிய பொன்னார்ந்த திருத்தோணியில் எழுந்த ருளி நீண்ட சடையையுடைய இறைவரின் திருவடிக்கீழ் விழுந்து வணங்கி, நீடிய திருவருளைப் பெற்று, மிகுந்த புகழையுடைய தந்தை யார் பின்தொடர்ந்துவர, திருநீலகண்ட யாழ்ப்பாணர் தம் உடனே வரக் காணத் தக்க சீகாழிப் பதியை வணங்கி, நீங்காத பத்திமையுடன் புறம் போந்தார்.

விளக்கவுரை

****

அத்திரு மூதூரின் உள்ளார்
அமர்ந்துடன் போதுவார் போத
மெய்த்தவர் அந்தணர் நீங்கா
விடைகொண்டு மீள்வார்கள் மீள
முத்தின் சிவிகைமேல் கொண்டு
மொய்யொளித் தாமம் நிரைத்த
நித்தில வெண்குடை மீது
நிறைமதி போல நிழற்ற. **#2179**

அப்பழம் பதியில் உள்ளவர்களுள் உண்மைத் தவத்தவர்கள் உடன் வருவாராய்ப் பின் தொடர்ந்து செல்லவும், அந்தணர்கள் பிரியா விடைபெற்றுப் பதியில் மீண்டு செல்பவர்கள் மீளவும், முத்துச் சிவிகையின் மேல் பிள்ளையார் எழுந்தருளி, நெருங் கிய முத்து மாலைகளை நிரல்படக் கட்டிய வெண்மையான முத்துக் குடையானது மேலே முழுச்சந்திரன் போல் நிழலைச் செய்யவும்,

விளக்கவுரை

****

சின்னந் தனிக்காளந் தாரை

சிரபுரத் தாண்டகை வந்தார்
என்னுந் தகைமை விளங்க
ஏற்ற திருப்பெயர் சாற்ற
முன்எம் மருங்கும் நிரந்த
முரசுடைப் பல்லிய மார்ப்ப
மன்னுந் திருத்தொண்ட ரானார்
வந்தெதிர் கொண்டு வணங்க. #2180

முத்துச் சின்னமும், ஒப்பில்லாத முத்துக் காளமும், முத்தால் ஆன தாரையும், `சீகாழியில் தோன்றிய ஆளுடைய பிள்ளையார் வந்தருளினார்' என்னும் தன்மையை உலகுக்கு விளங்கு மாறு அவருடைய பற்பல பெயர்களையும் எடுத்துச் சொல்லி ஊதிப் பிடிக்கவும், திருமுன்பு எம்மருங்கிலும் வரிசையாய் முரசுகளும் மற்றும் பல இயங்களும் முழங்கவும், நிலைபெற்ற திருத்தொண்டர்கள் வந்து எதிர் கொண்டு வணங்கவும்,

விளக்கவுரை

****

சங்க நாதங்கள் ஒலிப்பத்
தழங்குபொற் கோடு முழங்க
மங்கல வாழ்த்துரை எங்கும்
மல்க மறைமுன் இயம்பத்
திங்களும் பாம்பும் அணிந்தார்
திருப்பதி எங்கும்முன் சென்று
பொங்கிய காதலிற் போற்றப்
புகலிக் கவுணியர் போந்தார். #2181

சங்கின் ஒலிமுழங்கவும், விளங்கும் அழகிய கொம்புகள் ஒலிக்கவும், மங்கலமான வாழ்த்துரை எங்கும் பெருக வும், முன்னே மறைகள் முழங்கவும், பிறைச் சந்திரனையும் பாம் பையும் அணிந்த இறைவரின் திருப்பதிகள் எங்கும் உள்ளனவற்றின் முன்சென்று, மேன்மேலும் பெருகும் விருப்பத்துடன் போற்றியும் சீகாழிக் கவுணியர்தம் செல்வத் தோன்றலார் எழுந்தருளிச் சென்றார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

திருமறைச் சண்பைய ராளி
சிவனார் திருக்கண்ணார் கோயில்
பெருவிருப் பாலணைந் தேத்திப்
பிஞ்ஞகர் கோயில் பிறவும்

உருகிய அன்பால் இறைஞ்சி
உயர்தமிழ் மாலை கொண் டேத்தி
வருபுனற் பொன்னி வடபால்
குடதிசை நோக்கி வருவார். **#2182**

அந்தணர்தம் பதியான சீகாழிப் பதியின் தலைவ ரான ஆளுடைய பிள்ளையார், இறைவர் எழுந்தருளியுள்ள திருக் கண்ணார் கோயில் என்னும் பதியைப் பெருகும் விருப்பத்துடன் அணைந்து, திருப்பதியைப் பாடிப் போற்றி, இறைவர் எழுந்தருளி இருக்கும் திருக்கோயில்கள் பலவற்றையும் உருகும் அன்புடன் சென்று வணங்கி, உயரும் தமிழ் மாலைகளாகிய தேவாரத் திருப் பதிகங்களைப் பாடித் துதித்துப் பெருகிவரும் நீரையுடைய காவிரியின் வழியாய் மேற்றிசை நோக்கி வருவாராய்,

விளக்கவுரை

திருக்கண்ணார் கோயிலில் பாடிய பதிகம் `தண்ணார் திங்கள்' (தி.1 ப.101) எனத் தொடங்கும் குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகமாகும். குறுமாணக்குடி என இக்காலத்தில் இவ்வூரை அழைப்பர். கோயில் பலவும் என்றது திருக்கடைமுடி, திருநாங்கூர் முதலியனவாக லாம். இவற்றில் திருக்கடைமுடிக்கு அமைந்த திருப்பதிகம் `அருத்தனை' (தி.1 ப.111) எனத் தொடங்கும் வியாழக் குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

போற்றிய காதல் பெருகப்
புள்ளிருக் குந்திரு வேளூர்
நாற்றடந் தோளுடை மூன்று
நயனப்பிரான் கோயில் நண்ணி
ஏற்றஅன் பெய்தவ ணங்கி
இருவர்புள் வேந்தர் இறைஞ்சி
ஆற்றிய பூசனை சாற்றி
அஞ்சொற் பதிக மணிந்தார். **#2183**

உள்ளத் தெழும் விருப்பம் மேன்மேலும் மிக, `திருப்புள்ளிருக்கு வேளூரில்' நான்கு பெருந்தோள்களையுடைய முக்கண்ணுடைய பெருமான் வீற்றிருக்கும் கோயிலை அடைந்து, உரிய பேரன்பு பொருந்த வணங்கி, பறவையரசர்களான சம்பாதி சடாயு என்பவர்கள் வணங்கிச் செய்த வழிபாட்டின் பெருமையைப் பாராட்டிப் போற்றி, அழகான சொற்களால் அமைந்த திருப்பதிகத்தை இறைவர்க்கு அணிவித்தார்.

விளக்கவுரை

இத்திருப்பதியில் அருளிய பதிகம் `கள்ளார்ந்த' (தி.2 ப.43) எனத்

தொடங்கும் சீகாமரப் பண்ணிலமைந்த பதிகமாகும். புள் - சம்பாதி, சடாயு எனும் பறவைகள். இருக்கு - மறைகள். வேள் - முருகன். இவர்கள் வழிபட்ட பதியாதலின் இப்பெயர் பெற்றது. முதற் பத்துப் பாடல்களிலும் இப்பறவைகள் ஆற்றிய இறைவழிபாட்டுச் சிறப்பும், இராவணனுடன் செய்த போர்ச் சிறப்பும் குறிக்கப்பட் டுள்ளன. `யோசனைபோய்ப் பூக்கொணர்ந்து அங்கு, பூசனை செய்து இனிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே'! என வரும் பகுதி அவர்களின் ஆழ்ந்த பத்திமையை விளக்குவது ஆகும்.

நீடு திருநின்றி யூரின்
நிமலர்தம் நீள்கழல் ஏத்திக்
கூடிய காதலில் போற்றிக்
கும்பிட்டு வண்டமிழ் கூறி
நாடுசீர் நீடூர் வணங்கி
நம்பர்திருப் புன்கூர் நண்ணி
ஆடிய பாதம் இறைஞ்சி
அருந்தமிழ் பாடிஅ மர்ந்தார். **#2184**

திரு என்றும் நிலைபெற்றிருக்கும் திருநின்றியூரில் இறைவரின் பெருமைமிக்க திருவடிகளைப் போற்றி மிக்க பத்திமை யுடன் வணங்கிக் கும்பிட்டு, வளமையான திருப்பதிகத்தைப் பாடி அருளி, நாளும் சிறப்புடைய திருநீடூரை வணங்கி, இறைவரின் திருப் புன்கூரை அடைந்து, அருட்கூத்து இயற்றும் திருவடிகளை வணங்கி, அருந்தமிழ்ப் பதிகம் பாடி ஆங்கே விருப்பத்துடன் வதிந்தருளினார்.

விளக்கவுரை

திருநின்றவூரில் பாடிய பதிகம், `சூலம்படை' *(தி.1 ப.18)* என்று தொடங்கும் நட்டபாடைப் பண்ணிலமைந்த பதிகமாகும். திருநீடூரில் சுந்தரர் பதிகம் ஒன்றே உள்ளது. திருப்புன்கூரில் அருளிய பதிகம், `முந்தி நின்ற' *(தி.1 ப.27)* எனத் தொடங்கும் தக்கராகப் பண் ணிலமைந்த பதிகமாகும்.

அங்குநின் றேகிஅப் பாங்கில்
அரனார் மகிழ்கோயி லான
எங்கணுஞ் சென்று பணிந்தே
ஏத்தி இமவான் மடந்தை
பங்கர் உறைபழ மண்ணிப்
படிக்கரைக் கோயில் வணங்கித்
தங்கு தமிழ்மாலை சாத்தித்
திருக்குறுக் கைப்பதி சார்ந்தார். **#2185**

அத்திருப்பதியினின்றும் புறப்பட்டுச் சென்று அருகி லிருக்கும், இறைவர்

வீற்றிருக்கும், கோயில்கள் எங்கணும் சென்று, பணிந்து போற்றி, உமையம்மையாரை ஒரு கூற்றில் கொண்ட சிவபெரு மான் வீற்றிருக்கும் `திருப்பழமண்ணிப்படிக்கரைக்' கோயிலை வணங்கி, தமிழ் மாலை பாடி, `திருக்குறுக்கைப்' பதியை அடைந்தார்.

விளக்கவுரை

அருகிலிருக்கும் கோயில்களாவன: திருக்குரக்குக்கா, முதலாயினவாகலாம். ஆண்டு அப்பர் அருளிய பதிகமே கிடைத்துள் ளது. திருப்பழமண்ணிப்படிக்கரைக்குடியில் சுந்தரர் அருளிய பதிகம் ஒன்றே உள்ளது. பிள்ளையார் அருளிய பதிகங்கள்கிடைத்தில.

திருக்குறுக் கைப்பதி மன்னித்
திருவீரட் டானத் தமர்ந்த
பொருப்புவில் லாளரை ஏத்திப்
போந்தன்னி யூர்சென்று போற்றிப்
பருக்கை வரையுரித் தார்தம்
பந்தணை நல்லூர் பணிந்து
விருப்புடன் பாடல் இசைத்தார்
வேதம் தமிழால் விரித்தார். **#2186**

திருக்குறுக்கைப் பதியை அடைந்து, அங்குள்ள திருவீரட்டானக் கோயிலில் விரும்பி எழுந்தருளியிருக்கும், மேரு மலையை வில்லாகக் கொண்ட இறைவரைப் போற்றி, அங்கிருந்தும் புறப்பட்டுச் சென்று, `திரு அன்னியூர்' என்ற பதியை வழிபட்டு, பெரிய கையையுடைய மலை போன்ற யானையை உரித்த சிவபெருமானின் `திருப்பந்தணைநல்லூரைப்' பணிந்து, மறைகளைத் தமிழால் விரித்துப் பாடினார்.

விளக்கவுரை

அன்னியூரில் பாடிய பதிகம் `மன்னியூரிறை' *(தி.1 ப.96)* எனத் தொடங்கும் குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகமாகும். திருப்பந்தணைநல்லூரில் அருளிய பதிகம் முன்னர் *250*ஆம் பாடலில் குறித்தாயிற்று. இப்போது அருளிய பதிகம் காணக் கிடைத்திலது.

அப்பதி போற்றி அகல்வார்
அரனார் திருமணஞ்சேரி
செப்பருஞ் சீர்த்தொண்ட ரோடும்
சென்று தொழுதிசை பாடி
எப்பொரு ளுந்தரும் ஈசர்
எதிர்கொள்பா டிப்பதி எய்தி
ஒப்பில் பதிகங்கள் பாடி

ஓங்குவேள் விக்குடி யுற்றார். #2187

அத்திருப்பதியைப் போற்றி மேற்செல்பவராய், இறைவரின் `திருமணஞ்சேரியைச்' சொலற்கரிய திருத்தொண்டர்கள் உடன்வரச் சென்று வழிபட்டுத் திருப்பதிகத்தைப் பாடி, உயிர்க்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் வழங்கும் இறைவரின் `திரு எதிர்கொள்பாடி' என்ற பதியை அடைந்து, ஒப்பில்லாத திருப்பதிகங் களைப் பாடி, உயர்ந்த `வேள்விக்குடியை' அடைந்தார்.

விளக்கவுரை

திருமணஞ்சேரியில் அருளிய பதிகம் `அயிலாரும்' *(தி.2 ப.16)* எனத் தொடங்கும் இந்தளப் பண்ணிலமைந்த பதிக மாகும்.
திருஎதிர்கொள்பாடியில் அருளிய பதிகங்கள் கிடைத்தில.

செழுந்திரு வேள்விக் குடியில்
திகழ்மண வாளநற் கோலம்
பொழிந்த புனற்பொன்னி மேவும்
புனிதத் துருத்தி இரவில்
தழும்பிய தன்மையும் கூடத்
தண்டமிழ் மாலையிற் பாடிக்
கொழுந்துவெண் திங்கள் அணிந்தார்
கோடி காவிற்சென் றடைந்தார். #2188

அம்மையப்பராகிய பெருமான், வளம் மிக்க `திருவேள்விக்குடியில்' வீற்றிருக்கும் மணவாளத் திருக்கோலத்தை, பொய்யாமல் வருகின்ற நீர் வளம் கொண்ட தூய `திருத்துருத்தியில்' பகலில் காணக் காட்டி, இரவில் இவ்வேள்விக்குடியில் அக்கோலத்துட னேயே எழுந்தருளிய தன்மையையும் சேர்த்துக் குளிர்ந்த தமிழ்மாலை பாடி, முளைக்கும் கொழுந்தைப் போன்ற வெண்மையான பிறைச் சந்திரனைச் சூடிய இறைவரின் `திருக்கோடிகா' என்ற திருப்பதிக்குச் சென்று அடைந்தார்.

விளக்கவுரை

திருத்துருத்தியையும் திருவேள்விக்குடியையும் இணைத்து ஒரே பதிகத்தில் பாடப் பெற்றுள்ளன. காரணம், இறைவன் உமையம்மையாருக்குப் பகலில் திருத்துருத்தியிலும், இரவில் திரு வேள்விக்குடியிலுமாக வீற்றிருந்தருளிக் காட்சி கொடுத்தருளியமை யாகும். இவ்வகையில் அமைந்த திருப்பதிகம், `ஓங்கி மேலுழிதரு' *(தி.3 ப.90)* எனத் தொடங்கும் சாதாரிப் பண்ணிலமைந்த திருப் பதிகமாகும்.

ஓங்கிமே லுழிதரு மொலிபுனற் கங்கையை யொருசடைமேல்
தாங்கினா ரிடுபலி தலைகல னாக்கொண்ட தம்மடிகள்
பாங்கினா லுமையொடு பகலிடம் புகலிடம் பைம்பொழில்சூழ்

வீங்குநீர்த் துருத்தியா ரிரவிடத் துறைவர்வேள் விக்குடியே.
எனவரும் முதல்பாடல், இவ்வீரிடங்களிலும் உறையுமாற்றை விளக்கி நிற்றலும் காண்க. தழும்பிய தன்மை - விளங்க வெளிப்பட்டிருக்கும் நிலை.

திருக்கோடி காவில் அமர்ந்த
தேவர் சிகாமணி தன்னை
எருக்கோ டிதழியும் பாம்பும்
இசைந்தணிந் தானைவெள் ளேனப்
பருக்கோடு அணிந்த பிரானைப்
பணிந்துசொல் மாலைகள் பாடிக்
கருக்கோடி நீப்பார்கள் சேரும்
கஞ்சனூர் கைதொழச் சென்றார். **#2189**

திருக்கோடிகாவில் அமர்ந்திருக்கும் தேவர்களின் தலைவரான இறைவரை, எருக்கு மலருடனே கொன்றை மலரையும் அணிந்தவரை, வெள்ளைப் பன்றியான திருமாலின் பருத்த கொம் பைப் பூண்ட பெருமானாரைப் பணிந்து சொல்மாலைகளாலான திருப் பதிகங்களை பாடி, பிறப்பு அறுக்கலுற்றோர் அடைவதற்கு இடமான திருக்கஞ்சனூரை வணங்குவதற்குச் சென்றார்.

விளக்கவுரை

இத்திருப்பதியில் அருளியது, *`இன்று நன்று' (தி.2 ப.99)* எனத் தொடங்கும் நட்டராகப் பண்ணிலமைந்த பதிகமாகும். சொல்மாலை கள் எனப் பன்மைப்படக் கூறினும் கிடைத்துள்ளது ஈதொன்றேயாம்.

கஞ்சனூ ராண்டதங் கோவைக்
கண்ணுற் றிறைஞ்சிமுன் போந்து
மஞ்சணை மாமதில் சூழும்
மாந்துறை வந்து வணங்கி
அஞ்சொல் தமிழ்மாலை சாத்தி
அங்ககன் றன்பர்முன் னாகச்
செஞ்சடை வேதியர் மன்னும்
திருமங் கலக்குடி சேர்ந்தார். **#2190**

திருக்கஞ்சனூரை ஆண்டருளுகின்ற தம் இறைவரைக் கண்டு கும்பிட்டு மேற்சென்று, மேகம் தவழ்கின்ற மதில் சூழ்ந்த `திருமாந்துறை' என்ற பதிக்குச் சென்று வணங்கிச் சொல் மாலைபாடி, அங்கிருந்து புறப்பட்டு அன்பர்கள் எதிர்கொள்ளச் சிவந்த சடையையுடைய அந்தணரான சிவபெருமான் நிலையாக வீற்றிருக்கின்ற `திருமங்கலக்குடியை' அடைந்தார்.

விளக்கவுரை

திருக்கஞ்சனூர், திருமாந்துறை ஆகிய பதிகளுக்குரிய திருப்பதிகங்கள் கிடைத்தில. திருமங்கலக்குடியில் அருளிய பதிகம் `சீரினார் மணியும்' *(தி.2 ப.10)* எனத் தொடங்கும் இந்தளப் பண்ணி லமைந்த பதிகமாகும்.

வெங்கண் விடைமேல் வருவார்
வியலூர் அடிகளைப் போற்றித்
தங்கிய இன்னிசை கூடுந்
தமிழ்ப்பதி கத்தொடை சாத்தி
அங்க ணமர்வார்தம் முன்னே
அருள்வே டங்காட்டத் தொழுது
செங்கண்மா லுக்கரி யார்தந்
திருந்துதே வன்குடி சேர்ந்தார். **#2191**

அப்பதியினின்றும் புறப்பட்ட பிள்ளையார், கொடிய கண்களையுடைய ஆனேற்றின் மீது எழுந்தருளும் `திரு வியலூர்' இறைவரை வணங்கித் தங்கி, இனிய இசையுடைய தமிழ் மாலை பாடி, இத்திருப்பதியில் விரும்பி எழுந்தருளியுள்ள இறைவர், தம்முன்பு அருள் திருவேடம் நேரே காட்டத் தொழுது, செங்கண் மாலுக்கு அரியவரான இறைவரின் திருந்துதேவன் குடியினைச் சென்று அடைந்தார்.

விளக்கவுரை

திருவியலூரில் அருளிய பதிகம் `குரவம் கமழ்' *(தி.1 ப.13)* எனத் தொடங்கும் நட்டபாடைப் பண்ணிலமைந்த பதிகமாகும். இப்பதிகத்து வரும் 5ஆவது பாடலில் `கண்ணார்தரு முருவாகிய கடவுள்ளிடம்' என வருவது கொண்டு, `அருள்வேடம் காட்டத் தொழுது' என ஆசிரியர் அருளியிருப்பர் போலும்.

திருந்துதே வன்குடி மன்னும்
சிவபெரு மான்கோயில் எய்திப்
பொருந்திய காதலிற் புக்குப்
போற்றி வணங்கிப் புரிவார்
மருந்தொடு மந்திர மாகி
மற்றும் இவர்வேட மாம்என்
றருந்தமிழ் மாலை புனைந்தார்
அளவில்ஞா னத்தமு துண்டார். **#2192**

உயிர்கள் பிறவியலையாற்றினின்றும் திருந்து தற்கு ஏதுவாய தேவன்குடி என்ற திருப்பதியில் நிலையாக வீற்றிருக் கும் இறைவனின் கோயிலை அடைந்து, பொருந்திய அன்பு மீதூரச் சென்று போற்றி வணங்கி நினைவாராகி, இவர்தம் வேடம் மருந்தும் மந்திரமும் ஆகும்

என்று அளவில்லாத ஞானப் பாலையுண்ட பெற்றி மையால்,
பிள்ளையார் அரிய தமிழ் மாலையைச் சாத்தினார்.

விளக்கவுரை

இப்பதியில் அருளிய பதிகம் `மருந்து வேண்டில் இவை' *(தி.3 ப.25)* எனத் தொடங்கும் கொல்லிப் பண்ணிலமைந்த திருப்பதிகமாகும்.

மருந்துவேண் டில்இவை மந்திரங் கள்இவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்இவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே.*(தி.3 ப.25 பா.1)*

எனவரும் முதற்பாடலை முகந்தவாறு சேக்கிழார் இத்திருப்பதிகக் கருத்தை அருளுகின்றார். `தேவன்குடி' என்பது ஊர்ப் பெயர். திருந்து என்பது அதற்கு அடையாய் நின்றது.

மொய்திகழ் சோலையம் மூதூர்
முன்னகன் றந்நெறி செல்வார்
செய்தரு சாலிக ரும்பு
தெங்குபைம் பூகத்தி டைபோய்
மைதிகழ் கண்டர்தங் கோயில்
மருங்குள்ள எல்லாம் வணங்கி
எய்தினர் ஞானசம் பந்தர்
இன்னம்பர் ஈசர்தம் கோயில். **#2193**

அரும்புகள் விளங்கும் சோலைகள் சூழ்ந்த அப்பழமையான ஊரினின்றும் நீங்கி, அவ்வழியில் செல்பவராகி, வயல்களில் விளைந்து நிற்கும் நெல்லும் கரும்பும் தென்னையும் பசிய கமுகும் என்ற இவற்றிடையே சென்று, நஞ்சு விளங்கும் கழுத்தை உடைய இறைவரின் கோயில்களுள், அம்மருங்கில் உள்ளனவற்றை யெல்லாம் வணங்கிக்கொண்டு, திருஇன்னம்பர் இறைவரின் கோயி லைத் திருஞானசம்பந்தர் அடைந்தார்.

விளக்கவுரை

மொய் - அரும்பு. மருங்குள்ள கோயில்கள் எல்லாம் என்பன திருக்கொட்டையூர், திருவிசயமங்கை, திருபுறம்பயம், திரு வைகாவூர் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். எனினும் பதிகங்கள் எவையும் கிடைத்தில.

இன்னம்பர் மன்னும்பி ரானை
இறைஞ்சி இடைமடக் கான
பன்னுந்த மிழ்த்தொடை மாலைப்
பாடல்பு னைந்து பரவிப்

பொன்னங்க ழலிணை போற்றிப்
புறம்போந்த ணைந்து புகுந்தார்
மன்னுந்த டங்கரைப் பொன்னி
வடகுரங் காடு துறையில். **#2194**

திருஇன்னம்பரில் வீற்றிருந்தருளும் இறைவனை வணங்கி, இடைமடக்கான யாப்பால் அமைந்த `திருமுக்கால்' என்ற இறைவரின் புகழைப் பரவும் திருப்பதிகத் தமிழ்ப் பாடல் மாலைகளைச் சாத்தி, வணங்கி, இறைவரின் பொன்னடிகளைப் போற்றிப் புறப்பட் டுச் சென்று, நிலை பெற்ற பெரிய கரையையுடைய காவிரியின் வட கரையில் உள்ள வடகுரங்காடுதுறையில் வந்து அணைந்தார்.

விளக்கவுரை

திருஇன்னம்பரில் அருளிய பதிகம் `எண்டிசைக்கும்' *(தி.3 ப.95)* எனத் தொடங்கும் சாதாரிப் பண்ணிலமைந்த பதிகமாகும். பாடற்குரிய நான்கடிகளில் இடையிலுள்ள இரண்டாவது அடி மடங்கி மீண்டும் மூன்றாவது அடியாகவும் வருவது இடைமடக்காகும். இவ் வகையில் நான்கடிகளில் இரண்டும் மூன்றுமாக அமைந்த அடிகள், சொல்லானும் பொருளானும் ஒரு நிலையவாய் இருத்தலின் அவற்றை ஓரடியாகக் கொள்ள, மூன்றடிகளாக அமைதலின் முக்கால் என்றனர்.

வடகுரங் காடு துறையில்
வாலியார் தாம்வழி பட்ட
அடைவுந் திருப்பதி கத்தில்
அறியச் சிறப்பித் தருளிப்
புடைகொண் டிறைஞ்சினர் போந்து
புறத்துள்ள தானங்கள் போற்றி
படைகொண்ட மூவிலை வேலார்
பழனத் திருப்பதி சார்ந்தார். **#2195**

வடகுரங்காடுதுறையில் வந்து, வாலி வழிபட்டுப் புகலிடமாகக் கொண்ட வரலாற்றைத் திருப்பதிகத்தில் உலகம் அறியச் சிறப்பித்துப் பாடி, திருக்கோயிலை வலம் வந்து வணங்கிப் புறப்பட்டு அதன் அருகில் உள்ள திருப்பதிகளை யெல்லாம் வணங்கிய வண் ணம் மூவிலைச் சூலத்தைக் கைக்கொண்ட இறைவர் எழுந்தருளிய திருப்பழனத் திருப்பதியைச் சென்றடைந்தார்.

விளக்கவுரை

வடகுரங்காடுதுறையில் அருளிய பதிகம் `கோங்கமே' *(தி.3 ப.91)* எனத் தொடங்கும் சாதாரிப் பண்ணிலமைந்த பதிகமாகும். `கோவமா மலரொடு தூபமுஞ் சாந்தமுங் கொண்டுபோற்றி வாலியார் வழிபடப்

பொருந்தினார்' `நீலமா மணிநிறத் தரக்கனை யிருபது கரத்தொடொல்க வாலினாற் கட்டிய வாலியார் வழிபட மன்னு கோயில்' என இப்பதிகத்து ஆறாவதும் எட்டாவதும் ஆக வரும் பாடல்களை உளங்கொண்டு சேக்கிழார் இவ்வாறு அருளுகின்றார். புறத்துள்ள தலங்கள் என்பன திங்களூர் முதலாயினவாகலாம். பதிகங் கள் எவையும் கிடைத்தில.

பழனத்து மேவிய முக்கண்
பரமேட்டி யார்பயில் கோயில்
உடைபுக் கிறைஞ்சிநின் றேத்தி
உருகிய சிந்தைய ராகி
விழைசொற் பதிகம் விளம்பி
விருப்புடன் மேவி யகல்வார்
அழனக்க பங்கய வாவி
ஐயாறு சென்றடை கின்றார். **#2196**

திருப்பழனத்தில் வீற்றிருக்கும் முக்கண்களை உடைய சிவபெருமான் திருக்கோயிலுள் புகுந்து நின்று போற்றி உருகிய உள்ளத்தையுடையவராகி, விரும்புதற்குரிய தமிழ்ச் சொல் பதிகத்தைப் பாடிப் பெருவிருப்புடன் அங்குத் தங்கியிருந்து, பின் அங்கிருந்தும் நீங்குபவராய்த் தீயைப் பழித்த செந்தாமரை மலர்கள் மலர்ந்த நீர்நிலைகளையுடைய திருவையாற்றை அடைபவர்.

விளக்கவுரை

திருப்பழனத்தில் அருளிய பதிகம் `வேதமோதி' *(தி.1 ப.67)* எனத் தொடங்கும் தக்கேசிப் பண்ணிலமைந்த பதிகமாகும். அழல் நக்க பங்கயம் - நிறத்தால் தீயைப் பழித்த செந்தாமரை மலர்கள், `யாழைப் பழித்தன்ன மொழி' எனவரும் திருவாக்கினை நினைவு கூர வைக்கின்றது. அழல் நக்க - செம்மை நிறத்தால் நெருப்பினும் மேம்பட விளங்கல்.

மாடநிரை மணிவீதித் திருவையாற்
றினில்வாழு மல்கு தொண்டர்
நாடுய்யப் புகலிவரு ஞானபோ
னகர்வந்து நண்ணி னாரென்
றாடலொடு பாடலறா அணிமூதூர்
அடையஅலங் காரஞ் செய்து
நீடுமனக் களிப்பினொடும் எதிர்கொள்ள
நித்திலயா னத்து நீங்கி. **#2197**

நிரல்பட அமைந்த மாடங்களைக் கொண்ட திரு வையாற்றில் வாழ்கின்ற அடியவர்கள், உலகம் உய்யும் பொருட்டுச் சீகாழியில் தோன்றி ஞான அமுதம் உண்ட பிள்ளையார் வருகின்றார் என்னும்

பதைப்பு உளங்கொண்ட ஆர்வத்தால், ஆடலொடு பாடல் அறாத அழகிய அப்பழமையான நகரை முழுமையாக அணிசெய்து, பெருகிய உள்ள மகிழ்வுடன் வரவேற்கப் பிள்ளையாரும் முத்துச் சிவி கையினின்றும் இறங்கிவந்து,

விளக்கவுரை

நித்திலயானம் - முத்துச் சிவிகை.

வந்தணைந்து திருத்தொண்டர் மருங்குவர
மானேந்து கையர் தம்பால்
நந்திதிரு வருள்பெற்ற நன்னகரை
முன்னிறைஞ்சி நண்ணும் போதில்
ஐந்துபுலன் நிலைகலங்கும்இடத்தஞ்சல்
என்பார்தம் ஐயா றென்று
புந்திநிறை செந்தமிழின் சந்தஇசை
போற்றிசைத்தார் புகலி வேந்தர். **#2198**

திரண்டுவந்த தொண்டர்கள் தம்மைச் சூழ்ந்து வர, மானை ஏந்திய கையையுடைய இறைவனிடத்தில் நந்தியெம் பெருமான் அருளைப் பெற்ற அத்திருப்பதியை வணங்கி, புலனைந்தும் பொறிகலங்கி நெறி மயங்கியவிடத்து, `அஞ்சற்க' என்று அருளுரை வழங்கும் இறைவரது திருவையாறு இதுவாகும் எனும் திருவுளத் துடன், மனம் நிறைந்து எழுந்த செந்தமிழினது சந்த இசைப் பதிகத்தால் வணங்கிப் போற்றினார், சீகாழித் தலைவரான சம்பந்தர்.

விளக்கவுரை

திருவையாற்றை நண்ணிய அளவில் அருளிய பதிகம் `புலனைந்தும்' *(தி.1 ப.130)* எனத் தொடங்கும் மேகராகக் குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகமாகும். `புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைம்மேலுந்தி, அலமந்த போதாக வஞ்சேலென் றருள்செய்வா னமருங்கோயில்' எனவரும் இப்பதிகத்தின் முதற்பாட் டினை முகந்து நின்று, ஆசிரியர் சேக்கிழார் இவ்வாறு அருளிச் செய் கின்றார். இம் மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

மணிவீதி இடங்கடந்து மாலயனுக்
கரியபிரான் மன்னுங் கோயில்
அணிநீடு கோபுரத்தை அணைந்திறைஞ்சி
உள்ளெய்தி அளவில் காதல்
தணியாத கருத்தினொடும் தம்பெருமான்
கோயில்வலங் கொண்டு தாழ்ந்து
பணிசூடும் அவர்முன்பு பணிந்துவீழ்ந்

தெழுந்தன்பாற் பரவு கின்றார். #2199
அழகிய திருவீதிகளைக் கடந்து சென்று திருமாலுக்கும் நான்முகனுக்கும் அறிதற்கு அரிய சிவபெருமான் நிலையாய் வீற்றிருக்கும் கோயிலின் அழகு பொருந்திய கோபுரத்தைச் சார்ந்து பணிந்து கோயிலுள் சென்று அளவில்லாத ஆசையானது பெருகித் தணியாத மனத்துடன் இறைவரின் திருக்கோயிலை வலமாய் வந்து பாம்பை அணிந்த அப்பெருமானின் திருமுன்பு வணங்கி நிலமுற விழுந்து, எழுந்து, அன்பால் போற்றுவாராய்,

விளக்கவுரை

****

கோடல்கோங் கங்குளிர்கூ விளம்என்னுந்
திருப்பதிகக் குலவு மாலை
நீடுபெருந் திருக்கூத்து நிறைந்ததிரு
வுள்ளத்து நிலைமை தோன்ற
ஆடுமா றதுவல்லான் ஐயாற்றெம்
ஐயனே என்று நின்று
பாடினார் ஆடினார் பண்பினொடும்
கண்பொழிநீர் பரந்து பாய. #2200

`கோடல்கோங் கங்குளிர் கூவிளம்' ( தி.2 ப.6) எனத் தொடங்கும் திருப்பதிகமான சிறந்த சொல்மாலையை, நீடிய பெருந் திருக்கூத்தின் சிறப்பு நிறைவாகத் தம் உள்ளத்திலே தோன்ற `ஆடு மாறுவல் லானும்ஐ யாறுடை யையனே' என்ற கருத்தை நிறை வாகக் கொண்ட பதிகத்தைப் பாடி, அன்பினால் இன்பமார்ந்திருக்கும் விழிகளிலிருந்து ஆனந்தக் கண்ணீர் இடையீடின்றிப் பரந்து பாய்ந் திடப் பாடினார்; ஆடினார்.

விளக்கவுரை

கோடல் கோங்கம்' எனத் தொடங்கும் இப்பதிகம் இந்தளப் பண்ணிலமைந்ததாகும். இத்தொடக்கமுடைய பதிகத்தின் முதற் பாடல், `ஆடு மாறுவல் லானுமை யாறுடை யையனே' என நிறைவு பெறுகிறது. பதிகம் முழுதும் இவ்வாறமைந்த முடிபு கொண்ட தொடர்களை முகந்த நிலையில் சேக்கிழார் இவ்வாறு அருளிச் செய்கின்றார்.
இஃதன்றிப் பிள்ளையார் திருவையாற்றில் ஆடிப் பாடியவாறு அருளிய பதிகங்கள் மூன்று:

1. `கலையார்மதி': (தி.1 ப.36) -தக்கராகம்.
2. `பணிந்தவர்': (தி.1 ப.120) - வியாழக்குறிஞ்சி.
3. `திருத்திகழ்': (தி.2 ப.32) - இந்தளம்.

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

பலமுறையும் பணிந்தெழுந்து புறம்போந்து
பரவுதிருத் தொண்ட ரோடு
நிலவுதிருப் பதியதன் கண்நிகழுநாள்
நிகரிலா நெடுநீர்க் கங்கை
அலையுமதி முடியார்தம் பெரும்புலியூர்
முதலான அணைந்து போற்றிக்
குலவுதமிழ்த் தொடைபுனைந்து மீண்டணைந்து
பெருகார்வங் கூரு நாளில். **#2201**

பலமுறையும் வணங்கி எழுந்து வெளியே வந்து, வணங்கி எழும் திருத்தொண்டர்களுடன் நிலை பெற்று அத்திருப்பதி யில் இருந்தருளிய அந்நாள்களில், ஒப்பில்லாத பெருகிய நீரையுடைய கங்கை அலைதற்கு இடமான முடியில் பிறைச் சந்திரைனைச் சூடிய இறைவரது `பெரும் புலியூர்' முதலான பதிகளுக்கும் சென்று போற்றித் தமிழ் மாலைகளைப் பாடி, மீண்டும் திருவையாற்றை அடைந்து, பெரு கும் ஆசை மிக அங்கிருந்து வரும் நாள்களில்,

விளக்கவுரை

திருப்பெரும்புலியூரில் அருளிய பதிகம் `மண்ணுமோர்' *(தி.2 ப.67)* எனத் தொடங்கும் காந்தாரப் பண்ணிலமைந்த பதிகமாகும். இத்திருப்பதி முதலான பதிகளுக்கும் சென்றார் எனக் குறிப்பதற்கேற்ப அப்பதிகள் இவை என அறிதற்கு இல்லை.

குடதிசைமேற் போவதற்குக் கும்பிட்டங்
கருள்பெற்றுக் குறிப்பி னோடும்
படருநெறி மேலணைவார் பரமர்திரு
நெய்த்தானப் பதியில் நண்ணி
அடையுமனம் உறவணங்கி அருந்தமிழ்மா
லைகள்பாடி அங்கு நின்றும்
புடைவளர்மென் கரும்பினொடு பூகமிடை
மழபாடி போற்றச் சென்றார். **#2202**

இப்பதியின் மேற்குத் திசையில் செல்வதற்கு விடை பெறக் கும்பிட்டுத் திருவருளைப் பெற்று, அங்ஙனம் பெற்ற அவ்வருட் குறிப்பின் வழியே செல்கின்றவர் திருநெய்த்தானத்தை அடைந்து மனம் பொருந்த வணங்கி, அரிய தமிழ் மாலைகளைப் பாடி, அங்கிருந்த இருமருங்கும் வளரும் கரும்புடன் பாக்கு மரங்களும் நெருங்கியுள்ள `திருமழபாடியை' வணங்கச் செல்லலானார்.

விளக்கவுரை

திருநெய்த்தானத்தில் அருளிய பதிகம் `மையாடிய கண் டன்' *(தி.1 ப.15)*

எனத் தொடங்கும் நட்டபாடைப் பண்ணிலமைந்த பதிகம் ஆகும். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

செங்கைமான் மறியார்தந் திருமழபா
டிப்புறத்துச் சேரச் செல்வார்
அங்கையார் அழலென்னுந் திருப்பதிகம்
எடுத்தருளி அணைந்த போழ்தில்
மங்கைவாழ் பாகத்தார் மழபாடி
தலையினால் வணங்கு வார்கள்
பொங்குமா தவமுடையார் எனத்தொழுது
போற்றிசைத்தே கோயில் புக்கார். **#2203**

சிவந்த மான் கன்றை ஏந்திய சிவபெருமான் எழுந்தருளி இருக்கும் திருமழபாடியின் புறத்தே செல்பவரான பிள் ளையார், `அங்கையாரழல்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைத் தொடங்கி, மேலும் அப்பதியை அணுகும் பொழுது `உமையம்மையை ஒரு கூற்றில் கொண்ட இறைவர் வீற்றிருக்கும் திருமழபாடியைத் தலை யினால் வணங்குபவர்கள் மேன்மேலும் பெருகும் தவம் பெற்றவர் கள்' எனப் பாடிப் போற்றித் தொழுதவாறே கோயிலுள் புகுந்தார்.

விளக்கவுரை

`அங்கையார் அழல்' *(தி.3 ப.48)* எனத் தொடங்கும் கௌசிகப் பண்ணிலமைந்த இப்பதிகத்தில் வரும் நான்காவது பாடல், `திருமழ பாடியைத் தலையி னால்வணங் கத்தவ மாகுமே' என நிறைவு பெறுகிறது. இக்குறிப்பை உளங்கொண்ட வகையில், இவ்வாறு அருளுகின்றார் சேக்கிழார்.

மழபாடி வயிரமணித் தூணமர்ந்து
மகிழ்கோயில் வலங்கொண் டெய்திச்
செழுவாச மலர்க்கமலச் சேவடிக்கீழ்ச்
சென்றுதாழ்ந் தெழுந்து நின்று
தொழுதாடிப் பாடிநறுஞ் சொல்மாலைத்
தொடையணிந்து துதித்துப் போந்தே
ஒழியாத நேசமுடன் உடையவரைக்
கும்பிட்டங் குறைந்தார் சின்னாள். **#2204**

அத்திருமழபாடியில் அழகிய வயிரமணித் தூண் ஆக வீற்றிருந்தருளும் பெருமானாரின் கோயிலை வலம் வந்து, செழுமையான மணம் பொருந்திய தாமரை மலர் போன்ற திருவடிக் கீழே விழுந்து வணங்கி எழுந்து நின்று, தொழுதும் ஆடியும் பாடியும் நல்ல சொல்மாலைத் தொடை பாடிப் போற்றியும் வெளிப்போந்த நிலையில், இடையறாத அன்புடன் தம் தலைவரான இறைவரைக் கும்பிட்டு, அத்திருப்பதியில்

சில நாள்கள் தங்கியிருந்தார் பிள்ளையார்.

விளக்கவுரை

இத் திருப்பதியில் சாற்றியருளிய பதிகங்கள் இரண்டு: *1.* `களையும்' *:* *(தி.2 ப.9)* - இந்தளம். *2.* `காலையார்' *: (தி.3 ப.28)* - கொல்லி. இவற்றுள் முன்னையது இதுபொழுதும், பின்னையது இங்கிருந்த நாள்களிலுமாகப் பாடியிருக்கலாம். இப்பதியில் இருந் தருளும் இறைவனின் திருப்பெயர் வயிரமணித்தூண்நாதர் என்ப தாகும். `மழபாடி வயிரத்தூணே' என்பது அப்பர் திருவாக்காகும்.

அதன்மருங்கு கடந்தருளால் திருக்கானூர்
பணிந்தேத்தி ஆன்ற சைவ
முதன்மறையோர் அன்பிலா லந்துறையின்
முன்னவனைத் தொழுது போற்றிப்
பதநிறைசெந் தமிழ்பாடிச் சடைமுடியார்
பலபதியும் பணிந்து பாடி
மதகரட வரையுரித்தார் வடகரைமாந்
துறையணைந்தார் மணிநூல் மார்பர். **#2205**

அப்பதியைக் கடந்து சென்றவர், திருக்கா னூரைப் பணிந்து போற்றி, பெருமை பெற்ற ஆதிசைவர் இருக்கும் திரு அன்பிலாலந்துறை இறைவரை வணங்கிப் போற்றி, வளம் மிக்க சொற்களமைந்த செந்தமிழ்ப் பதிகத்தைப் பாடி, சிவபெருமானின் பல பதிகளையும் வணங்கிப் போற்றி, அருவியென மதத்தைச் சொரியும் மலையனைய யானையை உரித்த இறைவரின் `வடகரை மாந்துறையை' அழகிய முப்புரிநூல் அணிந்த மார்பையுடைய சம்பந்தர் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

திருக்கானூரில் அருளிய பதிகம், `வானார் சோதி' *(தி.1 ப.73)* எனத் தொடங்கும் தக்கேசிப் பண்ணிலமைந்ததாகும்.
திருஅன்பிலாலந்துறையில் அருளிய பதிகம், `கணை நீடெரி' *(தி.1 ப.33)* எனத் தொடங்கும் தக்கராகப் பண்ணிலமைந்ததாகும். `சடை முடியார் பல பதியும் பாடி' என்பதற்கேற்பப் பிள்ளையார் வணங்கிய திருப்பதிகள் எவை என அறிதற்கியன்றிலது. பதம் - வளம் மிக்க சொற் கள்: மந்திரம் என்றலுமாம். மாந்துறை - ஊர்ப்பெயர். காவிரியின் வட கரையில் அமைந்திருத்தல் பற்றி அஃது அதற்கு அடைமொழியாயிற்று.

சென்றுதிரு மாந்துறையில் திகழ்ந்துறையும்
திருநதிவாழ் சென்னி யார்தம்
முன்றில்பணிந் தணிநெடுமா ளிகைவலஞ்செய்
துள்புக்கு முன்பு தாழ்ந்து

துன்றுகதிர்ப் பரிதிமதி மருத்துக்கள்
தொழுதுவழி பாடு செய்ய
நின்றநிலை சிறப்பித்து நிறைதமிழின்
சொல்மாலை நிகழப் பாடி. **#2206**

சென்றவர், திருமாந்துறையில் விளக்கம் பெற வீற்றிருந்தருளும் கங்கையாறு தங்கப் பெற்று வாழ்வு அடைந்த சடையை உடைய இறைவரின் திருமுற்றத்தை வணங்கி, அழகிய நீண்ட திருமாளிகையை வலம் வந்து, உட்சென்று, திருமுன் விழுந்து பணிந்து, செறிந்த ஒளிர்க் கதிர்களையுடைய ஞாயிறும், சந்திரனும், தேவ மருத்துவர்களும் தொழுது வழிபட, இறைவர் எழுந்தருளிய நிலையைச் சிறப்பித்த சொல்மாலையை நிலவி நிற்கும்படியாகப் பாடி,

விளக்கவுரை

திருமாந்துறையில் அருளியது, `செம்பொனார் தரு' *(தி.2 ப.110)* எனத் தொடங்கும் நட்டராகப் பண்ணிலமைந்ததாகும். பரிதி, மதி, தேவ மருத்துவர்களும் வழிபட்டமை இப்பதிகத்துள் வரும் ஆறாவது பாடலில் காணும் குறிப்பாகும்.

அங்கணகன் றம்மருங்கில் அங்கணர்தம்
பதிபிறவும் அணைந்து போற்றிச்
செங்கமலப் பொதியவிழச் சேல்பாயும்
வயல்மதுவால் சேறு மாறாப்
பொங்கொலிநீர் மழநாட்டுப் பொன்னிவட
கரைமிசைப் போய்ப் புகலி வேந்தர்
நங்கள்பிரான் திருப்பாச்சி லாச்சிரா
மம்பணிய நண்ணும் போதில். **#2207**

அவ்விடத்தினின்றும் நீங்கி அருகில் உள்ள சிவ பெருமானின் பிற திருப்பதிகளையும் வணங்கி, செந்தாமரை மலர்க ளின் மொட்டு அவிழ, சேல்மீன் பாய, தேன் பொழிவதால் சேறு உலராத வயல்களையுடைய, பொங்கும் ஒலிமிக்க நீரையுடைய மழநாட்டில், காவிரியின் வடகரை வழியாகச் சென்ற சீகாழித் தலைவர், நம் இறைவரின் திருப்பாச்சிலாச்சிராமத்தைத் தொழுவதற்குச் சேரும் பொழுதில்,

விளக்கவுரை

பாச்சில் - ஊரின் பெயர். ஆச்சிராமம் - கோயிலின் பெயர். `பதி பிறவும்' என்பன திருத்தவத்துறை, பூவாளூர், திருமங் கலம் முதலியன வாகலாம் என்பர் சிவக்கவிமணியார். பதிகங்கள் கிடைத்தில.

அந்நகரிற் கொல்லிமழ வன்பயந்த
அரும்பெறல்ஆர் அமுத மென்சொல்

கன்னிஇள மடப்பிணையாங் காமருகோ
மளக்கொழுந்தின் கதிர்செய் மேனி
மன்னுபெரும் பிணியாகும் முயலகன்வந்
தணைவுறமெய் வருத்த மெய்தித்
தன்னுடைய பெருஞ்சுற்றம் புலம்பெய்தத்
தானும்மனந் தளர்வு கொள்வான். **#2208**

அந்நகரத்தில் கொல்லி மழவன் தான் பெற் றெடுத்த அரிய அமுதம் போன்ற மென்மையான சொல்லையுடைய கன்னியான இளமான் போன்ற அழகான இளங்கொழுந்தினுடைய ஒளி பொருந்திய உடம்பில், முயலகன் வந்து சார்ந்ததால், உடல் வருந்தித் தனது உறவினர் வருந்தத் தானும் உள்ளத் தளர்ச்சி அடைந்தவனாய்,

விளக்கவுரை

முயலகன் - உடலில் வலிப்பு ஏற்பட உணர்வற்றுக் கிடக்கும் நோய். இக்காலத்தில் வலிப்பு எனக் கூறப் படுவதொரு நோய்.

மற்றுவே றொருபரிசால் தவிராமை
மறிவளரும் கையார் பாதம்
பற்றியே வருங்குலத்துப் பான்மையினான்
ஆதலினாற் பரிவு தீரப்
பொற்றொடியைக் கொடுவந்து போர்க்கோலச்
சேவகராய்ப் புரங்கள் மூன்றும்
செற்றவர்தங் கோயிலினுள் கொடுபுகுந்து
திருமுன்பே இட்டு வைத்தான். **#2209**

எவ்வாற்றானும் நீக்க மாட்டாமையால், மான் கன்றினையுடைய திருக்கையைக் கொண்ட சிவபெருமானின் திருவடிகளைப் பற்றி வாழ்தலையே வழிவழியாகக் கொண்டு நிற்கும் தன்மையனாதலின், அத்துன்பம் நீங்கும் பொருட்டுப் பொன் வளையல் அணிந்த அப்பெண்ணை அழைத்து வந்து, போர்க்கோலம் கொண்ட வீரராய், முப்புரங்களையும் எரித்த இறைவரின் திருக் கோயிலில், அவர் திருமுன்பு இட்டு வைத்தான்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

அவ்வளவில் ஆளுடைய பிள்ளையார்
எழுந்தருளி அணுக வெய்தச்
செவ்வியமெய்ஞ்ஞானமுணர் திருஞான
சம்பந்தன் வந்தான் என்றே
எவ்வுலகுந் துயர்நீங்கப் பணிமாறுந்

தனிக்காளத் தெழுந்த வோசை
வெவ்வுயிர்க்கும் அவன்கேளா மெல்லியலை
விட்டெதிரே விரைந்து செல்வான். **#2210**

அந்நிலையில் ஆளுடைய பிள்ளையார் அத்திருப்பதிக்கு எழுந்தருளி, அப்பதியினை அணுகிவரச் `செம்மை தரும் மெய்ஞ்ஞானத்தை உணர்ந்த திருஞானசம்பந்தன்' என எவ்வுலகும் துன்பம் நீங்குமாறு ஒலிக்கின்ற திருக்காளம் முதலான இயங்கள் ஒலிக்க, துன்ப மிகுதியால் பெருமூச்சு விட்டுக் கொண்டு இருக்கும் அக்கொல்லி மழவன், அதனைக் கேட்டு, மென்மைத் தன்மை வாய்ந்த அப்பெண்ணை அங்கே விட்டுப் பிள்ளையாரை எதிர் கொள்ள விரைந்து செல்வானாகி,

விளக்கவுரை

****

மாநகரம் அலங்கரிமின் மகரதோ
ரணம்நாட்டும் மணிநீர் வாசத்
தூநறும்பூ ரணகும்பம் சோதிமணி
விளக்கினொடு தூபம் ஏந்தும்
ஏனையணி பிறவுமெலாம் எழில்பெருக
இயற்றும்என ஏவித் தானும்
வானவர்நா யகர்மகனார் வருமுன்பு
தொழுதணைந்தான் மழவர் கோமான். **#2211**

`பெரிய இந்நகரை அணிசெய்யுங்கள். மகர தோரணங்களைக் கட்டுங்கள்! மணிகளை இட்ட மணநீர் நிறைந்த நிறை குடங்களையும் ஒளியுடைய அழகிய விளக்குகளுடன் நறுமணப் புகையையும் ஏந்துங்கள்! இன்னும் பிறபிற அணிகளையெல்லாம் பெருகச் செய்யுங்கள்!' என ஆணையிட்டு, அக்கொல்லி மழவன் தானும் தேவதேவரான சிவபெருமானின் மகனாரான பிள்ளையாரின் திருமுன்பு தொழுதபடியே சென்றணைந்தான்.

விளக்கவுரை

அம்மையப்பராய் வந்து ஞானப்பால் ஊட்டியமை யின், பிள்ளையார் அவர் திருமகனார் எனக் கருதப் பெற்றனர். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

பிள்ளையார் எழுந்தருளப் பெற்றேனென்
றானந்தம் பெருகு காதல்
வெள்ளநீர் கண்பொழியத் திருமுத்தின்
சிவிகை யின்முன் வீழ்ந்தபோது
வள்ளலார் எழுகவென மலர்வித்த
திருவாக்கால் மலர்க்கை சென்னி
கொள்ளமகிழ்ந் துடன்சென்று குலப்பதியின்
மணிவீதி கொண்டு புக்கான். **#2212**

சென்றவன் `பிள்ளையார் எழுந்தருளப் பேறு பெற்றேன்!' என எண்ணி, மேன்மேலும் பெருகும் அன்பினால் வெள்ளமாய்க் கண்கள் நீரைப் பொழிய, முத்துச் சிவிகையின் முன்பு விழுந்த பொழுது, வள்ளலாரான பிள்ளையார் `எழுக' என்ற திரு வாக்கால் அருள, அவன் தன் மலர்க் கைகளைத் தலைமேல் குவித்துக் கொண்டு எழுந்து, அவருடனே சென்று பழமையான அப்பதியின் திருவீதி வழியே அழைத்துக் கொண்டு வந்து நகரினுள் புகுந்தான்.

விளக்கவுரை

****

மங்கலதூ ரியம்முழங்கு மணிவீதி
கடந்துமதிச் சடையார் கோயிற்
பொங்குசுடர்க் கோபுரத்துக் கணித்தாகப்
புனைமுத்தின் சிவிகை நின்றும்
அங்கண்இழிந் தருளுமுறை இழிந்தருளி
அணிவாயில் பணிந்து புக்குத்
தங்கள்பிரான் கோயில்வலங் கொண்டுதிரு
முன்வணங்கச் சாருங் காலை. **#2213**

மங்கல இயங்கள் ஒலிக்கும் அவ்வீதியைக் கடந்து சென்று, பிறைச் சந்திரனை அணிந்த சடையையுடைய இறைவரின் திருக்கோயிலின் பொங்கும் ஒளி வீசும் கோபுரத்துக்கு அருகில், அழகிய முத்துச் சிவிகையினின்றும் இறங்கிய பிள்ளையார், அழகிய வாயிலை வணங்கி உள்ளே புகுந்து, தம் இறைவரின் கோயிலை வலம் வந்து, அப்பெருமானைத் திருமுன்பு சென்று வணங்கச் செல் லும் பொழுது,

விளக்கவுரை

****

கன்னியிளங் கொடியுணர்வு கழிந்துநிலன்
சேர்ந்ததனைக் கண்டு நோக்கி
என்இதுவென் றருள்செய்ய மழவன்தான்
எதிர்இறைஞ்சி அடியேன் பெற்ற
பொன்இவளை முயலகனாம் பொருவிலரும்
பிணிபொருந்தப் புனிதர் கோயில்
முன்னணையக் கொணர்வித்தேன் இதுபுகுந்த
படியென்று மொழிந்து நின்றான். **#2214**

கன்னியாகிய இளங்கொடிபோன்ற ஒரு பெண், உணர்வின்றி நிலத்தில் கிடப்பதைப் பார்த்து, இஃது என்ன? எனப் பிள்ளையார் கேட்க, அதனைக் கேட்ட கொல்லி மழவன், அவர் எதிரே வணங்கி, `அடியேன் பெற்ற பொன் போன்ற இப் பெண்ணை ஒப்பில் லாத தீர்ப்பதற்கு அரிய `முயலகன்' என்ற நோய் பற்ற, அதனைத் தீர்க்க இயலாது இறைவர் தம் திருக்கோயிலில் அவர் திருமுன்பு கொணர்ந்து இவ்வகையில் கிடத்தியுள்ளேன்! இதுவே நிகழ்ந்தது!' எனக் கூறி நின்றான்.

விளக்கவுரை

****

அணிகிளர் தாரவன் சொன்னமாற்றம்
அருளொடுங் கேட்டுஅந் நிலையின்நின்றே
பணிவளர் செஞ்சடைப் பாச்சின்மேய
பரம்பொரு ளாயினா ரைப்பணிந்து
மணிவளர் கண்டரோ மங்கையைவாட
மயல்செய்வ தோஇவர் மாண்பதென்று
தணிவில் பிணிதவிர்க் கும்பதிகத்
தண்டமிழ் பாடினார் சண்பைநாதர். **#2215**

அழகிய மாலையை அணிந்த மழவன் சொல் லியவற்றை அருளோடும் கேட்டருளி, அந்நிலையில் நின்றவாறே, பாம்பு வாழ்தற் கிடனாய சிவந்த சடையினையுடைய திருப்பாச்சிலாச் சிராமத்தில் வீற்றிருக்கும்

மேலாய பெருமானைப் பணிந்து, நஞ்சு வளர்தற் கிடனாய கழுத்தினை யுடையவரோ, இம்மங்கையை வாடும்படி மயக்கம் செய்வதோ இவர்தம் மாண்பு என்று எடுத்துத் தீர்த்தற்கரிய அந்நோயினைத் தீர்க்கும் தண்தமிழ்ப் பதிக மாலையைப் பாடியருளினார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகம் `துணிவளர் திங்கள்' *(தி.1 ப.44)* எனத் தொடங்கும் தக்கராகப் பண்ணிலமைந்த பதிகமாகும். இப்பதிகத்தின் முதற் பாடல், `மணிவளர்கண்டரோ மங்கையைவாட மயல்செய்வதோ விவர்மாண்பே' என நிறைவு பெறுகிறது. இதனையே ஆசிரியர் எடுத்து மொழிகின்றார். இப்பதிகப் பாடல்கள் பத்தும் இறைவனின் அரும் பண்புகள் பலவற்றையும் விரித்துக் கூறி, `இவ்வரும் பண்பு உடையவரோ இந்நங்கையை இடர் செய்வதா இவர் மாண்பு' என எடுத்து மொழிகின்றன. இப்பதிக முதற் பாடலில் `சுடர்ச்சடை சுற்றி முடித்து' எனக் கூறுதற்கேற்ப இத்திருக் கோயிலில் உள்ள கூத்தப் பெருமானின் திருமுடி இன்றும் காட்சி அளிக்கின்றது.

பன்னு தமிழ்மறை யாம்பதிகம்
பாடித் திருக்கடைக் காப்புச்சாத்தி
மன்னுங் கவுணியர் போற்றிநிற்க
மழவன் பயந்த மழலைமென்சொல்
கன்னி யுறுபிணி விட்டுநீங்கக்
கதுமெனப் பார்மிசை நின்றெழுந்து
பொன்னின் கொடியென ஒல்கிவந்து
பொருவலித் தாதை புடையணைந்தாள். **#2216**

புகழ்ந்து பேசப்படுகின்ற தமிழ் மறையான திருப்பதிகத்தைப் பாடி, நிறைவில் திருக்கடைக்காப்பும் அருளிச் செய்து, நிலைபெற்ற கவுணியர் தலைவரான சம்பந்தர் வணங்கி நிற்ப, அதுபொழுது மழவன் பெற்ற மழலையாகிய மென்மையான சொற் களையுடைய அக்கன்னி, நோய் நீங்கப் பெற்று, மிக விரைவாக நிலத் தினின்றும் எழுந்து பொற்கொடிபோல் ஒதுங்கி நடந்து வந்து, போர் வன்மை கொண்ட தந்தையின் அருகே அடைந்தனள்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபுடையன. இவ்வர லாற்றை நினைவு கூரும் வகையில் இப்பதியிலுள்ள கூத்தப் பெரு மானின் திருவடிக்கீழ் முயலகன் இல்லாதுள்ளது. எனினும் முயலகன் என்னும் நோய் வேறு; திருவடிக்கீழ் இருக்கும் முயலகன் வேறு.

வன்பிணி நீங்கு மகளைக்கண்ட

மழவன் பெருகு மகிழ்ச்சிபொங்கத்
தன்தனிப் பாவையும் தானுங்கூடச்
சண்பையர் காவலர் தாளில்வீழ
நின்ற அருமறைப் பிள்ளையாரும்
நீரணி வேணி நிமலர்பாதம்
ஒன்றிய சிந்தை யுடன்பணிந்தார்
உம்பர்பிரான் திருத் தொண்டர்ஆர்த்தார். #2217

கொடிய முயலகன் என்ற நோய் நீங்கிய மக ளைக் கண்ட மழவன், பெருகிய மகிழ்ச்சிமீதூர, தன்னுடைய ஒப்பில் லாத மகளும் தானும் சீகாழித் தலைவரான பிள்ளையாரின் திருவடி களில் விழுந்து வணங்க, அங்கு நின்ற பிள்ளையாரும் கங்கை நீரைத் தரித்த சடையையுடைய குற்றமற்ற இறைவரின் திருவடிகளை ஒரு நெறியாகக் கொண்டு பணிந்தார்; தேவ தேவரான இறைவரின் அடிய வர்கள் மகிழ்வொலி செய்தனர்.

விளக்கவுரை

****

நீடு திருவாச் சிராமம்மன்னும்
நேரிழை பாகத்தர் தாள்வணங்கிக்
கூடும் அருளுடன் அங்கமர்ந்து
கும்பிடும் கொள்கைமேற் கொண்டுபோந்தே
ஆடல் பயின்றார் பதிபிறவும்
அணைந்து பணிந்தடி போற்றியேகிச்
சேடர்கள் வாழுந் திருப்பைஞ்ஞீலிச்
சிவபெருமானை இறைஞ்சச் சென்றார். #2218

என்றும் அருள் நீடுகின்ற திருப்பாச்சிலாச் சிராமத்தில் நிலையாய் எழுந்தருளியிருக்கும் உமையம்மையை ஒரு கூற்றில் கொண்ட இறைவரின் திருவடிகளை வணங்கி, பெருகிவரும் சிவபெருமானின் அருளுடனே அங்கிருந்த பிள்ளையார், மேலும் பல பதிகளை வணங்கும் திருக்குறிப்பால் சென்று, ஆடலில் மகிழ் வுடைய இறைவரின் திருப்பதிகள் பலவற்றையும் அடைந்து வணங்கித் திருவடிகளைப் போற்றி, மேலும் சென்று அறிவால் சிறந்தவர் உறைகின்ற `திருப்பைஞ்ஞீலிச்' சிவபெருமானை வணங்குவதற்காகச் சென்றருளினார்.

விளக்கவுரை

இங்குப் பதிபிறவும் என்றது திருப்புலிவலம், திருத்துறையூர் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். பதிகங்கள் எவையும்

கிடைத்தில.

பண்பயில் வண்டினம் பாடுஞ்சோலைப்
பைஞ்ஞீலி வாணர் கழல்பணிந்து
மண்பர வுந்தமிழ் மாலைபாடி
வைகி வணங்கி மகிழ்ந்து போந்து
திண்பெருந் தெய்வக் கயிலையில்வாழ்
சிவனார் பதிபல சென்றிறைஞ்சிச்
சண்பை வளந்தரு நாடர்வந்து
தடந்திரு ஈங்கோய் மலையைச்சார்ந்தார். **#2219**

பண்களைப் பயிலும் வண்டினங்கள் பாடுதற்கு இடனான சோலைகள் சூழ்ந்த திருப்பைஞ்ஞீலி இறைவர் திருவடி களை வணங்கி, உலகத்தவர் போற்றும் தமிழ் மாலையான திருப் பதிகத் தைப் பாடி, அத்திருப்பதியில் தங்கி வணங்கி மகிழ்ந்து, மேற்சென்று, திண்ணிய பெரிய தெய்வத் தன்மை வாய்ந்த திருக்கயிலை மலையில் வாழ்கின்ற சிவபெருமானின் பதிகள் பலவற்றையும் சென்று வணங்கி, வளம் தருகின்ற சீகாழிப் பதிக்குத் தலைவரான பிள்ளையார், `திரு ஈங்கோய்' மலையைச் சார்ந்தார்.

விளக்கவுரை

திருப்பைஞ்ஞீலியில் அருளியது, `ஆரிடம் பாடிலர்' *(தி.3 ப.14)* எனத் தொடங்கும் காந்தாரபஞ்சமப் பண்ணிலமைந்த திருப்பதிகமாகும். பதிபல என்றது திருத்தலையூர், திருநெற்குன்றம், முசிறி முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். பதிகங்கள் எவையும் கிடைத்தில.

செங்கட் குறவரைத் தேவர்போற்றுந்
திகழ்திரு ஈங்கோய் மலையின்மேவுங்
கங்கைச் சடையார் கழல்பணிந்து
கலந்த இசைப்பதி கம்புனைந்து
பொங்கர்ப் பொழில்சூழ் மலையும்மற்றும்
புறத்துள்ள தானங்க ளெல்லாம்போற்றிக்
கொங்கிற் குடபுலஞ் சென்றணைந்தார்
கோதின் மெய்ஞ் ஞானக் கொழுந்தனையார். **#2220**

சிவந்த கண்களை உடைய குறவரைத் தேவர்கள் வந்து வணங்குவதற்கு இடனான, `திருஈங்கோய்' மலையில் வீற்றிருக்கும் கங்கையைச் சடையில் கொண்ட சிவபெருமானைப் பணிந்து, இசையுடன் பொருந்திய திருப்பதிகத்தைப் பாடி, பெருகிய சோலைகள் சூழ்ந்த மலையையும் மற்றும் அயலில் உள்ள இடங்கள் எல்லாவற்றையும் வணங்கிக் கொங்கு நாட்டின் மேல்பகுதியில், குற்றம் இல்லாத

மெய்ஞ்ஞானக் கொழுந்தனைய ஆளுடைய பிள்ளையார் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

இவ்விடத்துப் பாடியருளியது, `வானத்துயர் தண்' *(தி.1 ப.70)* எனத் தொடங்கும் தக்கேசிப் பண்ணிலமைந்த பதிகம் ஆகும். இங்கு மலை எனக் குறிப்பது திருவாட்போக்கி *(ஐயர் மலை)* யாகலாம். ஆனால் இதனைப் பின்னர் வந்து வணங்குவதாக ஆசிரி யர், *339*ஆம் பாடலிலும் குறிக்கின்றார்.

அண்டர்பிரான் ஆலயங்கள்
அம்மருங்குள் ளனபணிந்து
தெண்டிரைநீர்த் தடம்பொன்னித்
தென்கரையாங் கொங்கினிடை
வண்டலையும் புனற்சடையார்
மகிழ்விடங்கள் தொழுதணைந்தார்
கொண்டல்பயில் நெடும்புரிசைக்
கொடிமாடச் செங்குன்றூர். **#2221**

தேவர்களின் தலைவரான சிவபெருமான் திருக்கோயில்கள் அப்பக்கங்களில் உள்ளவற்றையெல்லாம் வணங்கிச் சென்று, தெளிவான அலைகளையுடைய நீர் கொண்ட காவிரியின் தெற்குக் கரையில் உள்ள கொங்கு நாட்டில், வண்டுகள் அலைதற்கு இடனாகப் பெருகும் நீரையுடைய சடையார் மகிழ்ந்து வீற்றிருக்கும் திருப்பதிகள் பலவற்றையும் வணங்கி, மேகங்கள் தவழும் நீண்ட மதிலையுடைய திருக்கொடிமாடச் செங்குன்றினை அடைந்தார் பிள் ளையார்.

விளக்கவுரை

தென்கரையாம் கொங்கினிடை எனப் பின்னர் விதந்து கூறுவதால் அண்டர்பிரான் ஆலயங்கள் என முன்னர்க் கூறுவது காவிரியின் வடகரையிலுள்ள திருப்பதிகள் பலவுமாகும். இவ்வகை யில் ஈங்கோய் மலையிலிருந்து ஏறத்தாழ நாமக்கல், சேலம் வரையில் உள்ள திருப்பதிகள் பலவுமாகலாம். இதுபோன்றே காவிரித் தென் கரையிலும் கடம்பந்துறை முதல் கரூர் வரையிலுள்ள திருப்பதிகள் பலவுமாகலாம். கருவூரில் வணங் குவதைப் பின் *339*ஆம் பாடலில் ஆசிரியர் குறித்தருளுகின்றார். காழிச்செல்வர் இவ்வகையில் வணங்கிச் சென்ற அத்திருப்பதிகளைப் பெயரளவில் அறிதற்கியலாதுள்ளது. திருவருளாக, கொடிமாடச் செங்குன்றூர் இக்காலத்துத் திருச் செங்கோடு என வழங்கப் பெறுகின்றது.

அந்நகரில் வாழ்வாரும்

அடியவரும் மனமகிழ்ந்து
பன்னெடுந்தோ ரணமுதலாப்
பயிலணிகள் பலஅமைத்து
முன்னுறவந் தெதிர்கொண்டு
பணிந்தேத்தி மொய்கரங்கள்
சென்னியுறக் கொண்டணைந்தார்
சினவிடையார் செழுங்கோயில். **#2222**

அந்த நகரத்தில் வாழ்பவர்களும் சிவனடியார் களும் மகிழ்ந்து, நீண்ட பல தோரணங்கள், வாழை மரங்கள், பாக்கு மரங்கள் முதலானவற்றை அமைத்து அணிசெய்து, எதிர்கொண்டு வணங்கிப் போற்றி, இருகைகளையும் தலைமீது பொருந்த ஏற்றி, சினமுடைய ஆனேற்றை ஊர்தியாகவுடைய இறைவர் எழுந்தருளிய கோயிலின்கண் பிள்ளையாரை அழைத்துக் கொண்டு சென்றனர்.

விளக்கவுரை

****

தம்பெருமான் கோயிலினுள்
எழுந்தருளித் தமிழ்விரகர்
நம்பரவர் திருமுன்பு
தாழ்ந்தெழுந்து நலஞ்சிறக்க
இம்பரும்உம் பருமேத்த
இன்னிசைவண் டமிழ்பாடிக்
கும்பிடும்ஆ தரவுடன்அக்
கோநகரில் இனிதமர்ந்தார். **#2223**

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர், தம் இறைவர் கோயிலுள் சென்று, அவரது திருமுன்பு தாழ்ந்து வணங்கி, இம்மண் ணுலகத்தவரும், விண்ணுலகத்தவரும் நலம்பெற இனிய இசையுடன் வளம் பொருந்திய தமிழ்ப் பதிகத்தைப் பாடி, மேலும் கும்பிட வேண் டும் என்ற ஆசையால் அந்நகரத்தில் இனிதாக வீற்றிருந்தார்.

விளக்கவுரை

இறைவன் திருமுன்பு அருளிய பதிகம் `வெந்த வெண் ணீறணிந்து' (தி.1 ப.107) எனத் தொடங்கும் வியாழக் குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகம் ஆகும்.

அப்பாலைக் குடபுலத்தில்
ஆறணிந்தார்அமர்கோயில்
எப்பாலுஞ் சென்றேத்தித்
திருநணா வினைஇறைஞ்சிப்

பைப்பாந்தள் புனைந்தவரைப்
பரவிப்பண் டமர்கின்ற
வைப்பான செங்குன்றூர்
வந்தணைந்து வைகினார். **#2224**

அப்பகுதியில் மேற்குத் திசையில், கங்கையைச் சூடிய இறைவர் விரும்பி எழுந்தருளியிருக்கும் கோயில்களை உடைய எல்லா இடங்களிலும் சென்று வணங்கி, `திருநணா' என்ற பதியை அடைந்து, பாம்பை அணிந்த இறைவரை வணங்கி, முன்னர்த் தாம் விரும்பி எழுந்தருளியிருந்த கொடிமாடச் செங்குன்றூரில் சென்று வீற்றிருந்தார்.

விளக்கவுரை

குடபுலத்திலுள்ள கோயில்கள் எல்லாம் சென்றிறைஞ்சி என்றது, பேரூர், அவிநாசி, கொல்லிமலை, மாட்டூர், சேவூர், தோழூர், ஏழூர், திருமுருகன்பூண்டி, குரக்குத்தளி, குமரிகொங்கு முதலியன வாகலாம் என்பர் சிவக்கவிமணியார். பதிகங்கள் எவையும் கிடைத் தில. திருநணா என்பது இக்காலத்தில் பவானி என அழைக்கப் பெறுகிறது. இத்திருப்பதியில் அருளிய பதிகம் `பந்தார்விரல்' *(தி.2 ப.72)* எனத் தொடங்கும் காந்தாரப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

ஆங்குடைய பிள்ளையார்
அமர்ந்துறையும் நாளின்கண்
தூங்குதுளி முகிற்குலங்கள்
சுரந்துபெய லொழிகாலை
வீங்கொலிநீர் வைப்பெல்லாம்
வெயில்பெறா விருப்புவரப்
பாங்கர்வரை யுங்குளிரும்
பனிப்பருவ மெய்தியதால். **#2225**

அவ்விடத்தில் ஆளுடைய பிள்ளையார் விரும் பித் தங்கியிருந்த நாள்களில், பெய்யும் துளிகளையுடைய மேகக் கூட்டங்கள் மழை சுரத்தலின்றும் நீங்கப் பெருகிய ஒலியுடைய நீரால் சூழப்பட்ட உலகில் எல்லாரும் வெயில் பெறாததனால், அவ் விருப்பம் மேலிட அருகிலுள்ள மலைகளும் குளிர்ச்சி அடையத்தக்க முன்பனிப் பருவம் வந்து சேர்ந்தது.

விளக்கவுரை

மழைபொழியும் காலம் கூதிர்க் காலம் ஆகும். அது நீங்க முன்பனிக் காலம் வந்தது. இக்கால இயற்கையைத் தொல்காப்பியம் முதலாகவுள்ள இலக்கண நூல்கள் தொடர்ந்து குறித்து வந்துள்ளன. இவ்வாறு மழையும், அது நீங்கியபின் பனியும் தொடர்ந்தமையின், வெயில் வேண்டும் விருப்பைப் பெற்றனர் மக்கள்.

அளிக்குலங்கள் சுளித்தகல
அரவிந்தம் முகம்புலரப்
பளிக்குமணி மரகதவல்
லியிற்கோத்த பான்மையெனத்
துளித்தலைமெல் லறுகுபனி
தொடுத்தசையச் சூழ்பனியால்
குளிர்க்குடைந்து வெண்படாம்
போர்த்தனைய குன்றுகளும். **#2226**

வண்டின் கூட்டங்கள் வெறுத்து நீங்க, தாமரைகள் முகம் கருக, பளிங்கு மணியை மரகதக் கொடியில் கோத்தது போல மெல்லிய அறுகம்புல்லின் நுனியில் பனித் துளிகள் சேர்ந்து அசைய, சூழ்ந்த பனியினால் நேர்ந்த குளிருக்கு ஆற்றாது உடைந்து, குன்றுகளும் வெண்மையான போர்வை போர்த்தன போல விளங்கின.

விளக்கவுரை

இதில் வரும் உவமைகள் இரண்டும், வருணனைக்கு அழகுக்கு அழகு செய்வன போல் விளங்குகின்றன.

மொய்பனிகூர் குளிர்வாடை
முழுதுலவும் பொழுதேயாய்க்
கொய்தளிர்மென் சோலைகளும்
குலைந்தசையக் குளிர்க்கொதுங்கி
வெய்யவனும் கரநிமிர்க்க
மாட்டான்போல் விசும்பினிடை
ஐதுவெயில் விரிப்பதுவும்
அடங்குவது மாகுமால். **#2227**

மிக்க பனி செறிந்த குளிரையுடைய வாடைக் காற்று முழுமையாக வீசும் காலமானதால், பறித்தற்குரிய தளிர்கள் தழைத்த மெல்லிய சோலைகளும் குளிர்ச்சி பெற்றுத் தடுமாற, குளிரால் ஒருமருங்கு ஒதுங்கி நிற்கும் கதிரையுடைய சூரியனும் தன் கதிர்களை நிமிர்ந்து

விளக்கவுரை

****

நீடியஅப்பதிகளெலாம்
நிரைமாடத் திறைகள்தொறும்
பேடையுடன் பவளக்கால்
புறவொடுங்கப் பித்திகையின்
தோடலர்மென் குழன்மடவார்
துணைக்கலச மென்முலையுள்

ஆடவர்தம் பணைத்தோளும்
மணிமார்பும் அடங்குவன. #2228

பழமையால் நீடிய அங்குள்ள திருப்பதிகள் எங் கும் நிரல்பட அமைந்த மாடங்களின் வீட்டு இறப்புகள்தொறும், தம் பெடைகளுடன் பவளம் போன்ற கால்களை உடைய புறாக்கள் ஒடுங்கியிருக்கும்; சிறுசண்பக மலரின் இதழ்கள் விரிவதற்கு இடமான மென்மையான கூந்தலையுடைய தம் பெண்களின் இணைக் கலசம் போன்ற விரும்பத்தக்க மார்பகங்களில், ஆடவர்களின் பருத்த தோள்களும் அழகிய மார்புகளும் அடங்குவனவாம்.

விளக்கவுரை

****

அரிசனமும் குங்குமமும்
அரைத்தமைப்பார் அயலெல்லாம்
பரியஅகிற் குறைபிளந்து
புகைப்பார்கள் பாங்கெல்லாம்
எரியுமிழ்பேழ் வாய்த்தோணி
இரும்பீர்ப்பார் இடையெல்லாம்
விரிமலர்மென் புறவணிந்த
மீப்புலத்து வைப்பெல்லாம். #2229

விரியும் மென்மையான மலர்களையுடைய மலை சார்ந்த நிலங்களில் எங்கும், அருகில் மஞ்சளும் குங்குமமும் சேர அரைத்து வைப்பர்; பக்க இடங்கள் எங்கும் பெரிய அகில் துண்டு களைப் பிளந்து புகை எழுப்புவர்; இடை இடங்களில் தீயை உமிழ் கின்ற பெரிய வாயை உடைய தோணி வடிவில் அமைந்த இரும்புச் சட்டியைக் குளிர் காய்வதன் பொருட்டுத் தம் அருகில் இழுத்துக் கொள்வர்.

விளக்கவுரை

மஞ்சளும், குங்குமமும் சேர அரைத்து வைத்து அன லூட்டி அகில் பொடி தூவி சூடான நறுமணப்புகை கொள்ள குளிருக்கு இதமாம். இந்நான்கு பாடல்களும் முன்பனிப் பருவத்தைச் சித்தரித்துக் காட்டும் அழகு எண்ணி மகிழ்தற்குரியதாம்.

அந்நாளில் கொடிமாடச்
செங்குன்றூர் அமர்ந்திருந்த
மெய்ஞ்ஞானப் பிள்ளையா
ருடன்மேவும் பரிசனங்கள்
பன்னாளும் அந்நாட்டில்
பயின்றதனால் பனித்தகுளிர்

முன்னான பிணிவந்து
மூள்வதுபோல் முடுகுதலும். **#2230**

அந்நாள்களில் கொடிமாடச் செங்குன்றூரில் தங்கியிருந்த பிள்ளையாருடன் உள்ள அடியவர்கள், பல நாள்கள் அங்குத் தங்கியிருந்ததால், நடுங்குதற்கு ஏதுவாய குளிரை முன்னே காணும் மலைச்சுரம் வந்து மேல் அடர்வதைப் போல் வருத்தவே,

விளக்கவுரை

குளிர் முன்னரும், சுரம் பின்னரும் வருதலின், முன்னான பிணி வந்து என்றார். மலைநாட்டியற்கையில் வரும் சுரம் மலைச்சுரம் ஆகும்.

அந்நிலைமை ஆளுடைய
பிள்ளையார்க் கவர்களெலாம்
முன்னறிவித் திறைஞ்சுதலும்
முதல்வனார் அருள்தொழுதே
இந்நிலத்தின் இயல்பெனினும்
நமக்கெய்தப் பெறாஎன்று
சென்னிமதி யணிந்தாரைத்
திருப்பதிகம் பாடுவார். **#2231**

அந்நிலைமையை அங்குச் சூழவுள்ளார்கள் எல்லாம் பிள்ளையாரின் திருமுன் போந்து, அவரிடம் கூறி விண்ணப் பித்துக் கொள்ளவும், இறைவரின் திருவருளைத் தொழுது, `இந் நாட்டின் இயல்பே இது; ஆயினும் இதன் கொடுமைகள் நமக்கு வந்து சேர மாட்டா' என்ற கருத்துடன், சென்னியில் சந்திரனை அணிந்த இறைவரைத் திருப்பதிகம் பாடுவாராய்,

விளக்கவுரை

****

அவ்வினைக் கிவ்வினை
என்றெடுத் தையர்அமுதுசெய்த
வெவ்விடம் முன்தடுத்
தெம்மிடர் நீக்கிய வெற்றியினால்
எவ்விடத்தும்அடி யார்இடர்
காப்பது கண்டமென்றே
செய்வினை தீண்டா திருநீல
கண்டம் எனச்செப்பினார். **#2232**

`அவ்வினைக்கு இவ்வினை' (தி.1 ப.116) என்று தொடங்கி, `இறைவர் உண்ட கொடிய நஞ்சைத் தடுத்து எம் துன்பங்களை யெல்லாம் வராமல் காத்தது அவரது திருநீலகண்டமே ஆகும்' என்ற கருத்தினை வைத்துச்

`செய்வினை எம்மைத் தீண்டப் பெறா' என்று திருநீலகண்டத்தினிடம் ஆணை என அருளினார்.

விளக்கவுரை

`அவ்வினைக்கு இவ்வினையாம்' *(தி.1 ப.116)* எனத் தொடங்கும் பதிகம் வியாழக்குறிஞ்சிப் பண்ணிலமைந்ததாகும். நீலகண்டம் - கருமை பொருந்திய கழுத்து. பிறவுயிர்கட்கு இறுதிவாரா வண்ணம் காக்க இறைவர் தாம் நஞ்சையுண்டார். அதனால் அவர் கழுத்துக் கருமை பொருந்தியதாயிற்று; இவ்வருஞ் செயலுக்கு இடனாய உறைப்பின் சிறப்புக் கருதி `திரு' என்னும் அடைமொழி கூட்டித் `திருநீலகண்டம்' என அழைக்கப் பெறுவதாயிற்று. உயிர்க்கு வரும் வினை இயல்பைப் பாடல்தொறும் குறித்து, அவை திருநீல கண்டத்தை நினைவதால் உயிர்களைத் தீண்டா எனும் கருத்து அமைவை ஈற்றில் காட்டி அருளுகின்றார். பிள்ளையார், `ஆணை நமதே' என்று அருளிய இடங்களில் இஃது இரண்டாவதாகும். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

ஆய குறிப்பினில் ஆணை
நிகழ அருளிச்செய்து
தூய பதிகத் திருக்கடைக்
காப்புத் தொடுத்தணிய
மேயஅப் பொற்பதி வாழ்பவர்க்
கேயன்றி மேவும்அந்நாள்
தீய பனிப்பிணி அந்நாடு
அடங்கவும் தீர்ந்ததன்றே. **#2233**

அத்தகைய அருட் குறிப்புடன் திருஆணை நிகழும்படி செய்து, தூய திருப்பதிகத்திற்குத் திருக்கடைக் காப்பும் தொடுத்து அணிந்தருளவே, பொருந்திய அத்திருப்பதியில் வாழ்பவர்க்கு மட்டுமன்றி, அந்நாளில் அந்நாடு முழுமையும் இருந்த மலைச் சுரம் அப்பொழுதே நீங்கியது.

விளக்கவுரை

****

அப்பதி யின்கண் அமர்ந்து
சிலநாளில் அங்ககன்று
துப்புறழ் வேணியர் தானம்
பலவும் தொழுதருளி
முப்புரி நூலுடன் தோலணி
மார்பர் முனிவரொடும்
செப்பருஞ் சீர்த்திருப் பாண்டிக்

கொடுமுடி சென்றணைந்தார். #2234

மான்தோலுடன் கூடிய முப்புரிநூல் அணிந்த மார்பையுடைய பிள்ளையார், அந்நகரத்தில் சில நாள்கள் விரும்பி இருந்தருளியவர், பின் அப்பதியினின்றும் புறப்பட்டுச் சென்று, பவ ளம் போன்ற சிவந்த சடையையுடைய இறைவர் எழுந்தருளி இருக் கும் இடங்கள் பலவற்றையும் வணங்கி, சொல்வதற்கு அரிய சிறப்பை யுடைய திருப்பாண்டிக்கொடுமுடியை உடன்வரும் அந்தணர்களுடன் சென்று அடைந்தார்.

விளக்கவுரை

`தானம்பலவும்' என்றது திருச்செங்கோட்டிற்கும் கொடுமுடிக்கும் இடைப்பட்ட திருப்பதிகளாகும். பதிகங்கள் எவை யும் கிடைத்தில.

பருவம் அறாப்பொன்னிப் பாண்டிக்
கொடுமுடி யார்தம்பாதம்
மருவி வணங்கி வளத்தமிழ்
மாலை மகிழ்ந்துசாத்தி
விரிசுடர் மாளிகை வெஞ்சமாக்
கூடல் விடையவர்தம்
பொருவில்தா னம்பலபோற்றிக்
குணதிசைப் போதுகின்றார். #2235

காலம் தவறாது நீரைத்தரும் காவிரிக்கரையில் உள்ள திருப்பாண்டிக்கொடுமுடியில் இறைவர் திருவடிகளை வணங்கி, வளம் தரும் தமிழ்ப் பதிகத்தைப் பாடிச் சாத்தி, ஒளி வீசும் மாடங்களையுடைய `வெஞ்சமாக்கூடல்' முதலாகச் சிவபெருமானின் ஒப்பற்ற இடங்கள் பலவற்றையும் வணங்கிப் போற்றிக் கிழக்குத் திசையில் செல்ல ஒருப்பட்டவராய்,

விளக்கவுரை

திருப்பாண்டிக் கொடுமுடியில் அருளிய பதிகம், `பெண்ணமர் மேனியி னாரும்' *(தி.2 ப.69)* எனத் தொடங்கும் காந்தாரப் பண்ணில் அமைந்த பதிகமாகும். திருவெஞ்சமாக்கூடலில் அருளிய பதிகம் கிடைத்திலது. இப்பதியிலிருந்து கருவூர் வரையில், பிள்ளையார் வணங்கி வந்த பதிகளும் பாடியருளிய பதிகங்களும் இவை என அறியக் கூடவில்லை.

செல்வக் கருவூர்த் திருவா
னிலைக்கோயில் சென்றிறைஞ்சி
நல்லிசை வண்தமிழ்ச் சொற்றொடை
பாடிஅந் நாடகன்று
மல்கிய மாணிக்க வெற்பு

முதலா வணங்கிவந்து
பல்கு திரைப்பொன்னித் தென்கரைத்
தானம் பலபணிவார். #2236

செல்வ வளம் பொருந்தி கருவூரில் `திருவானிலை' என்ற கோயிலில் சென்று வணங்கி, நல்ல இசையுடன் கூடிய வளமான தமிழ்ச் சொல் மாலையான திருப்பதிகத்தைப் பாடி, கொங்கு நாடான அதைவிட்டு அகன்று, பொருந்திய மாணிக்க மலை (இரத்தினகிரி) எனும் `திருவாட்போக்கியினை' முதலில் வணங்கி, மேற்சென்று, பெருகும் அலைகளை உடைய காவிரியின் தென்கரைப் பதிகள் பலவற்றையும் வணங்குபவராய்,

விளக்கவுரை

திருக்கருவூர்த் திருவானிலையில் அருளிய பதிகம் `தொண்டெலாமலர்' எனத் தொடங்கும் இந்தளப் பண்ணிலமைந்த பதிகமாகும். பொன்னித் தென்கரைத் தானங்கள் என்பன கருவூருக் கும் திருவாட்போக்கிக்கும் *(இரத்தினகிரிக்கும்)* இடைப்பட்ட திருப் பதிகளாகும். இவை எவையென அறியக் கூடவில்லை. திருவாட் போக்கியில் அருளிய பதிகமும் கிடைத்திலது.

பன்னெடுங் குன்றும் படர்நெடுங்
கானும் பலபதியும்
அந்நிலைத் தானங்க ளாயின
எல்லாம் அமர்ந்திறைஞ்சி
மன்னு புகலியில் வைதிக
வாய்மை மறையவனார்
பொன்னியல் வேணிப் புனிதர்
பராய்த்துறை யுட்புகுந்தார். #2237

பல பெரிய குன்றுகளிலும் பரந்த பெரிய காடுக ளிலும் பல பதிகளிலும் அங்கங்கும் இறைவர் நிலையாய் வீற்றிருக்கும் பதிகளிலுள்ள கோயில்களை எல்லாம் விருப்புடன் சென்று வணங்கி, நிலைபெற்ற சீகாழியில் தோன்றிய மறையுண்மையை நிலை நாட்டும் மறையவரான பிள்ளையார், பொன் போன்ற சடையையுடைய தூயவரான சிவபெருமான் வீற்றிருக்கும் `திருப்பராய்த்துறை' என்ற பதியுள் புகுந்தார்.

விளக்கவுரை

`பன்னெடுங் குன்றும் படர் நெடுங்கானும் *(பெருங்கா னும் என்றும் பாடம்)* பலபதியும்' எனக் குறிப்பன திருவாட்போக்கிக் கும் திருப்பராய்த்துறைக்கும் இடைப்பட்ட இடங்களாகும். அவை, இவை

எனத் தெரிந்தில. இம் மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

நீடும் பராய்த்துறை நெற்றித்
தனிக்கண்ணர் கோயில்நண்ணிக்
கூடுங் கருத்தொடு கும்பிட்டுக்
கோதில் தமிழ்ச்சொல்மாலை
பாடுங் கவுணியர் கண்பனி
மாரி பரந்திழியச்
சூடுங் கரதலத் தஞ்சலி கோலித்
தொழுது நின்றார். **#2238**

சிறப்புமிக்க திருப்பராய்த்துறை என்ற பதியில் வீற்றிருக்கும் நெற்றிக் கண்ணையுடைய இறைவரின் திருக்கோயிலை அடைந்து, ஒருமையுணர்வுடன் வணங்கி, குற்றம் இல்லாத தமிழ் மாலையைப் பாடுகின்ற கவுணியக் குலத்தலைவரான பிள்ளையார், கண்களினின்றும் நீர் மழை பெருக, கைகளைத் தலை மீது கூப்பித் தொழுது நின்றார்.

விளக்கவுரை

திருப்பராய்த்துறையில் அருளியது, `நீறு சேர்வதொர்' *(தி.1 ப.135)* எனத் தொடங்கும் மேகராகக் குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

தொழுது புறம்பணைந் தங்குநின்
றேகிச் சுரர்பணிவுற்
றெழுதிரு வாலந் துறைதிருச்
செந்துறை யேமுதலா
வழுவில் கோயில்கள் சென்று
வணங்கி மகிழ்ந்தணைவார்
செழுமலர்ச் சோலைத் திருக்கற்
குடிமலை சேரவந்தார். **#2239**

வணங்கி வெளிப்போந்து, அத்திருப்பதியினின் றும் நீங்கித் தேவர்கள் வந்து வணங்கி எழுகின்ற திருவாலந்துறை திருச்செந்துறை முதலான குற்றம் அற்ற பல கோயில்களையும் வணங்கி, மகிழ்வுடன் அணைபவரான சம்பந்தர், செழுமை பொருந்திய மலர்ச் சோலைகளையுடைய `திருக்கற்குடிமலை'யைச் சேரச் சென்றார்.

விளக்கவுரை

திருவாலந்துறை, திருச்செந்துறை ஆகிய பதிகளுக்கு உரிய பதிகங்கள் கிடைத்தில. இப்பதிகளுக்கும் திருக்கற்குடிக்கும் இடைப்பட்ட இடங்களும் இவை என அறியக் கூடவில்லை.

கற்குடி மாமலை மேலெழுந்த
கனகக் கொழுந்தினைக் கால்வளையப்

பொற்றிரள் மேருச் சிலைவளைத்த
போர்விடை யாளியைப் போற்றிசைத்து
நற்றமிழ் மாலை புனைந்தருளி
ஞானசம் பந்தர் புலங்கள்ஐ ந்தும்
செற்றவர் மூக்கீச் சரம்பணிந்து
திருச்சிராப் பள்ளிச் சிலம்பணைந்தார். **#2240**

திருக்கற்குடி மாமலையின் மீது வீற்றிருக்கும் பொற்கொழுந்து போன்றவரை, பொன்மேரு மலையை வளைத்த ஆனேற்றை ஊர்தியாகக் கொண்டவரைப் போற்றி, நல்ல தமிழ் மாலையைச் சூட்டி, ஞானசம்பந்தர், பொறிவாயில் ஐந்துஅவித்த புனி தரின் `திருமூக்கீச்சரத்தினைப்' பணிந்து சென்று, `திருச்சிராப்பள்ளி' மலையை அடைந்தார்.

விளக்கவுரை

திருக்கற்குடியில் அருளியது, `வடந்திகழ் மென்முலை' *(தி.1 ப.43)* எனத் தொடங்கும் தக்கராகப் பண்ணிலமைந்த பதிகமா கும்.

திருமூக்கீச்சரத்தில் அருளிய பதிகம் `சாந்தம் வெண்ணீறென' *(தி.2 ப.120)* எனத் தொடங்கும் செவ்வழிப் பண்ணிலமைந்த பதிகமா கும்.

திருமூக்கீச்சரம் இதுபொழுது உறையூர் என வழங்கப் பெறுவதாம்.

செம்மணி வாரி அருவிதூங்கும்
சிராப்பள்ளி மேய செழுஞ்சுடரைக்
கைம்மலை ஈருரி போர்வை சாத்தும்
கண்ணுத லாரைக் கழல்பணிந்து
மெய்ம்மகிழ் வெய்தி உளங்குளிர
விளங்கிய சொற்றமிழ் மாலைவேய்ந்து
மைம்மலர் கண்டர்தம் ஆனைக்காவை
வணங்கும் விருப்பொடு வந்தணைந்தார். **#2241**

செந்நிறமான மணிகளை வாரிக் கொணரும் அருவிகள் பாய்தற்கு இடனான `திருச்சிராப்பள்ளி' மலையின் மேல் வீற்றிருக்கும், யானையின் தோலை உரித்து அதைப் போர்த்திக் கொண்ட, நெற்றிக் கண்ணையுடைய இறைவரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, உண்மையான மகிழ்ச்சியை அடைந்து, மனம் குளிர்ந்து விளங்கிய சொல் தமிழ் மாலையைப் புனைந்து, கருமை விளங்கும் கழுத்தினையுடைய இறைவரின் `திருவானைக்கா' என்ற பதியை வணங்கும் விருப்புடனே பிள்ளையார் வந்து அடைந்தார்.

விளக்கவுரை

திருச்சிராப்பள்ளியில் அருளியது, `நன்றுடையானை' *(தி.1 ப.98)* எனத்

தொடங்கும் குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகம்.

விண்ணவர் போற்றிசெய் ஆனைக்காவில்
வெண்ணாவல் மேவிய மெய்ப்பொருளை
நண்ணி யிறைஞ்சிமுன் வீழ்ந்தெழுந்து
நாற்கோட்டு நாகம் பணிந்ததுவும்
அண்ணல்கோச் செங்க ணரசன்செய்த
அடிமையும் அஞ்சொல் தொடையில்வைத்துப்
பண்ணுறு செந்தமிழ் மாலைபாடிப்
பரவிநின் றேத்தினர் பான்மையினால். **#2242**

தேவர்கள் வணங்கும் திருவானைக்காவில் வெண்ணாவல் மரத்தின் கீழ் எழுந்தருளியுள்ள மெய்ப் பொருளான இறைவரை அடைந்து, வணங்கி எழுந்து, நான்கு கொம்புகளை யுடைய வெள்ளை யானை பணிந்த இயல்பையும், பெருமையுடைய கோச்செங்கட் சோழ அரசர் செய்த அடிமைத் திறத்தையும், அழகிய சொற்றொடையில் வைத்துப் பண் பொருந்திய செந்தமிழ் மாலையான திருப்பதிகத்தை அடிமைத் திறம் பிழையாது நின்ற பான்மையினால் போற்றினார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளியது, `மழையார் மிடறா' *(தி.2 ப.23)* எனத் தொடங்கும் இந்தளப் பண்ணிலமைந்த பதிகம். இப் பதிகத்தின் *4*ஆவது பாடலில், வெள்ளை யானைக்கு அருள் செய்த மையையும், *5*ஆவது பாடலில் கோச்செங்கட் சோழருக்கு அருள் செய்தமையையும் பிள்ளையார் குறித்தருளுகின்றார்.

நாரணன் நான்முகன் காணாவுண்மை
வெண்ணாவல் உண்மை மயேந்திரமும்
சீரணி நீடு திருக்கயிலை
செல்வத் திருவாரூர் மேயபண்பும்
ஆரணத் துட்பொரு ளாயினாரை
ஆனைக்கா வின்கட் புகழ்ந்துபாடி
ஏரணியும் பொழில் சூழ்ந்தசண்பை
ஏந்தலார் எல்லையில் இன்பமுற்றார். **#2243**

திருமாலும் நான்முகனும் காணாத உண்மைப் பொருளாயவரும் வெண்ணாவலிலும், உண்மைப் பொருளை அருளிய மயேந்திரத்திலும், சிறப்பும் அழகும் பொருந்திய திருக் கயிலையிலும், செல்வத் திருவாரூரிலும் எழுந்தருளியிருக்கும் பண்பு டையவருமான மறைகளின் உட்பொருளாய் உள்ள இறைவரைத் திருவானைக்கா என்ற பதியில் பாடி, அழகு பொருந்திய சோலைகள் சூழ்ந்த சீகாழித் தலைவரான பிள்ளையார் எல்லையற்ற இன்பத்தைப் பெற்றார்.

விளக்கவுரை

இந்நான்கு திருப்பதிகளையும் ஒருங்கு இணைத்துக் கூறிய பதிகம், `மண்ணது வுண்ட' *(தி.3 ப.109)* எனத் தொடங்கும் பழம்பஞ்சுரப் பண்ணிலமைந்த பதிகமாகும். மயேந்திர மலை இமயத் தின் ஒரு பகுதி என்பாரும், குமரிக் கடலிலிருந்து நீரில் மூழ்கியதொரு மலை என்பாரும் ஆக இருதிறத்தார் உளர். `ஒலிதரு கயிலை உயர் கிழவோனே' *(தி.8 ப.2 வரி.146)* என்றும் `மன்னு மாமலை மகேந்திர மதனுள் சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்' *(தி.8 ப.2 வரி.9)* என்றும் திருவாசகத்துட் காணும் திருவாக்குகளால் இவற்றுள் முன்னைய கருத்தே வலியுடைத்தாகலாம். ஆகமம் அருளிச் செய்யப்பட்ட இடம் ஆதலின் `உண்மை மயேந்திரம்' என்றார்.

கைதொழு தேத்திப் புறத்தணைந்து
காமர் பதியதன் கட்சிலநாள்
வைகி வணங்கி மகிழ்ந்தணைவார்
மன்னுந் தவத்துறை வானவர்தாள்
எய்தி இறைஞ்சி எழுந்துநின்றே
இன்தமிழ் மாலைகொண் டேத்திப்போந்து
வைதிக மாமணி அம்மருங்கு
மற்றுள்ள தானம் வழுத்திச் செல்வார். **#2244**

கையால் தொழுது போற்றி வெளியே வந்து, அழகிய அப்பதியில் சிலநாள்கள் தங்கி வணங்கி மகிழ்ந்து, மேல் செல்பவராய், நிலை பெற்ற `தவத்துறை' (இலால்குடி)யில் உள்ள இறைவரின் திருவடிகளை நிலத்தில் விழுந்து வணங்கி எழுந்து நின்று, இனிய தமிழ் மாலை பாடிப் போற்றி, மேற்சென்று வைதிக நெறியின் மணிபோன்ற அப்பிள்ளையார், அம் மருங்கில் மற்றும் உள்ள திருப் பதிகளையும் வணங்கிச் செல்வாராய்,

விளக்கவுரை

திருவானைக்காவில், சில நாள் வதிந்த பொழுது அரு ளிய பதிகம் `வானைக்காவல்' *(தி.3 ப.55)* எனத் தொடங்கும் கௌசி கப் பண்ணிலமைந்த பதிகமாகும். திருத்தவத்துறையில் அருளிய பதிகம் கிடைத்திலது. மற்றுள்ள தானம் வழுத்திச் செல்வார் என்றது, திருமங்கலம், திருமாந்துறை முதலியினவாகலாம். பதிகங்கள் கிடைத்தில.

ஏறுயர்த் தார்திருப் பாற்றுறையும்
எறும்பியூர் மாமலை யேமுதலா
வேறுபதி கள்பல வும்போற்றி

விரவுந் திருத்தொண்டர் வந்துசூழ
ஈறில்புகழ்ச் சண்பை ஆளியார்தாம்
எண்திசை யோரும் தொழுதிறைஞ்ச
நீறணிசெம் பவளப் பொருப்பில்
நெடுங்கள மாநகர் சென்றுசேர்ந்தார். **#2245**

விடைக்கொடியை உடைய இறைவரின் திருப் பாற்றுறையும், திருவெறும்பியூர் மாமலையும் முதலான பிற பதிகளை வணங்கி, மனமியைந்து பரவி வரும் தொண்டர்கள் பலரும் சூழவரும் எல்லையற்ற புகழையுடைய சீகாழித் தலைவர், எண்திசையில் உள்ள வர்களும் தொழுது வணங்கத் திருநீற்றை அணிந்த செம்பவள மலை போன்ற சிவபெருமானின் திருநெடுங்கள மாநகரைச் சென்று அடைந் தார்.

விளக்கவுரை

திருப்பாற்றுறையில் அருளியது, `காரார் கொன்றை' *(தி.1 ப.56)* எனத் தொடங்கும் பழந்தக்கராகப் பண்ணிலமைந்த பதிகமாகும்.
திருஎறும்பியூரில் அருளிய பதிகம் கிடைத்திலது. வேறு பதிகள் பலவும் போற்றி என்பதில் குறிக்கத்தக்க பதிகள் இவை என அறியக் கூடவில்லை.

நெடுங்களத் தாதியை அன்பால்நின்பால்
நெஞ்சம் செலாவகை நேர்விலக்கும்
இடும்பைகள் தீர்த்தருள் செய்வாய்என்னும்
இன்னிசை மாலைகொண் டேத்தியேகி
அடும்பணிச் செஞ்சடை யார்பதிகள்
அணைந்து பணிந்து நியமம்போற்றிக்
கடுங்கை வரையுரித் தார்மகிழ்ந்த
காட்டுப்பள் ளிப்பதி கைதொழுவார். **#2246**

திருநெடுங்களத்தில் வீற்றிருக்கின்ற மூலமூர்த்தி யான இறைவரை, `அன்பால் உம்மிடம் உள்ளம் செல்லாதவாறு தகைக்கும் இடும்பைகளையெல்லாம் தீர்த்து அருள் செய்வீராக!' என வேண்டிக் கொள்ளும் குறிப்பைக் கொண்ட இன்னிசைத் திருப்பதிக மான மாலையினால் போற்றி, மேற்சென்று, கொல்லும் இயல்புடைய பாம்பைச் சூடிய சிவந்த சடையினரான சிவபெருமானாருடைய திருப்பதிகளை வணங்கி, திருநியமத்தைப் போற்றி, வலிய துதிக் கையை உடைய யானையை உரித்த இறைவர் மகிழ்வுடன் வீற்றிருக் கும் `திருக்காட்டுப்பள்ளி' என்னும் திருப்பதியைக் கைதொழுவாராய்,

விளக்கவுரை

திருநெடுங்களத்தில் அருளியது, `மறையுடையாய்' *(தி.1 ப.52)* எனத்

தொடங்கும் பழந்தக்கராகப் பண்ணிலமைந்த பதிகமாகும். இப்பதிகப் பாடல்தொறும் `இடர்களையாய்' என வருவது பற்றி, நம்மனோர்க்கெல்லாம் அவ்வப்பொழுதும், அடுக்கி வரும் உலகியல் துன்பங்களை யெல்லாம் நீக்க வேண்டும் எனும் குறிப்புடையதாக, இப்பதிகத்தைப் பன்முறையும் ஓதி வருகின்றோம். இதுவும் வாய்மை எனினும், ஆசிரியர் சேக்கிழார் தரும் விளக்கம் வேறாகும் என்பது அறியத்தக்கது. பெருமானிடத்துக் கொள்ளும் அன்புள்ளத்திற்கும் ஆற்றிவரும் வழிபாட்டிற்கும் இடையூறாக வரும் இடர்ப்பாடுகளை நீக்க வேண்டும் எனும் குறிப்பில் அருளுவதாகவே குறிக்கின்றார் சேக்கிழார். பதிகத்து வரும் பாடல்களை ஊன்றிப் படிப் பின் அவர்தம் திருவுள்ளக் கருத்தே உண்மை என்பது தெளியலாம். திருநியமம் என்னும் தலத்தில் அருளிய பதிகம் கிடைத்திலது. `செஞ்சடையார் பதிகள் அணைந்து போற்றி' என்பது, திருநெடுங்களத் திற்கும் திருநியமத்திற்கும் இடைப்பட்ட பதிகளைக் குறிக்கும். கடையக் குடி முதலியனவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். இவ்வாறு வரும் இடங்களைக் குறித்துக் கொண்டு, அவ்வவ் விடங்களில் உள்ள பதி களை நேரில் சென்று தெளிவு பெறல் நலம் பயக்கும்.

சென்று திகழ்திருக் காட்டுப்பள்ளிச்
செஞ்சடை நம்பர்தங் கோயில்எய்தி
முன்றில் வலங்கொண் டிறைஞ்சிவீழ்ந்து
மொய்கழற் சேவடி கைதொழுவார்
கன்றணை ஆவின் கருத்துவாய்ப்பக்
கண்ணுத லாரைமுன் போற்றிசெய்து
மன்றுள்நின் றாடல் மனத்துள்வைப்பார்
வாருமன் னும்முலை பாடிவாழ்ந்தார். **#2247**

சென்று விளங்கும் மேலைத் திருக்காட்டுப் பள்ளியில் வீற்றிருக்கும் செஞ்சடையை உடைய சிவபெருமானின் கோயிலை அடைந்து, திருமுன்றிலை வலமாக வந்து வணங்கி, வீழ்ந்து எழுந்து வலிய கழலை அணிந்த திருவடிகளை வணங்குவாராய், கன்றைச் சேர்ந்த பசுவின் கருத்தையுடைய அன்பு உள்ளத்தில் பொருந்த நெற்றிக் கண்ணையுடைய இறைவரைத் திருமுன்பு நின்று வணங்கி, மன்றினுள் இருந்து இயற்றும் அருட்கூத்தைத் தம் உள்ளத் தில் கொண்டு, `வாரு மன்னும்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி வாழ்வு பெற்றார்.

விளக்கவுரை

`வாரு மன்னும்' (தி.3 ப.29) எனத் தொடங்கும் பதிகம் கொல்லிப் பண்ணிலமைந்ததாகும்.

அங்கப் பதிநின் றெழுந்தருளி

அணிதிரு வாலம் பொழில்வணங்கிப்
பொங்கு புனற்பொன்னிப் பூந்துருத்திப்
பொய்யிலி யாரைப் பணிந்துபோற்றி
எங்கும் நிகழ்திருத் தொண்டர்குழாம்
எதிர்கொள்ள எப்பதி யும்தொழுது
செங்கயல் பாய்வயல் ஓடைசூழ்ந்த
திருக்கண்டி யூர்தொழச் சென்றணைந்தார். **#2248**

அவ்விடத்தே அப்பதியினின்றும் புறப்பட்டுச் சென்று, அழகிய திருஆலம்பொழிலினை வணங்கிப் பொங்கும் நீர் வளம் வாய்ந்த காவிரி நடுவிலுள்ள `திருப்பூந்துருத்தி' என்ற பதியுள் வீற்றிருக்கும் `பொய்யிலியப்பரைப் ` பணிந்து போற்றி, எங்கும் நிலவி வரும் திருத்தொண்டர் கூட்டம் எதிர் வந்து அழைத்துச் செல்ல, அம்மருங்குள்ள பலபதிகளையும் வணங்கிச் சென்று, செங்கயல்கள் பாய்வதற்கு இடமான வயல்களும் ஓடைகளும் சூழ்ந்த `திருக் கண்டியூரை' வணங்குவதற்குச் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

திருவாலம்பொழிலிற்கும் திருப்பூந்துருத்திக்கும் பதிகங்கள் கிடைத்தில. எப்பதியும் என்பன திங்களூர் திருநெய்த்தானம் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார்.

கண்டியூர் வீரட்டர் கோயிலெய்திக்
கலந்தடி யாருடன் காதல்பொங்கக்
கொண்ட விருப்புடன் தாழ்ந்திறைஞ்சிக்
குலவு மகிழ்ச்சியின் கொள்கையினால்
தொண்டர் குழாத்தினை நோக்கிநின்று
தொடுத்த இசைத்தமிழ் மாலைதன்னில்
அண்டர் பிரான்தன் அருளின்வண்ணம்
அடியார் பெருமையிற் கேட்டருளி. **#2249**

திருக்கண்டியூர் வீரட்டனாரின் கோயிலை அடைந்து, சூழவந்த அடியார்களுடன் அன்பு மேலிட, விருப்பத்துடன் கீழே விழுந்து வணங்கி, பொருந்திய மகிழ்ச்சியினால் திருத்தொண்டர் குழாத்தினைப் பார்த்து நின்று, தாம் பாடிய இசைத் தமிழ் மாலையான திருப்பதிகத்தில், சிவபெருமானின் திருவருள் வண்ணங்கள் பலவற் றையும் அடியவர் வாயிலாக வெளிப்படுத்தும் வகையால் வினவியருளி,

விளக்கவுரை

திருக்கண்டியூரில் அருளியது, `வினவினேன் அறியா மையில்' *(தி.3 ப.38)* எனத் தொடங்கும் கொல்லிப் பண்ணிலமைந்த பதிகமாகும். இப்பதிகம்

முழுமையும் பெருமானின் திருமேனியிற் காணும் அணிகலன்கள் பற்றியும், அவன்மேற் கொண்ட அருட்செயல் களில் சிலவற்றைப் பற்றியும் அடியவர்களிடம் அவற்றிற்கான காரணங்களை வினவுவதாக அமைந்துள்ளது. இவ்வாறான பதி கத்தை வினாவுரைப் பதிகம் என்பர்.

வினவி எடுத்த திருப்பதிகம்
மேவு திருக்கடைக் காப்புத்தன்னில்
அனைய நினைவரி யோன்செயலை
அடியாரைக் கேட்டு மகிழ்ந்ததன்மை
புனைவுறு பாடலில் போற்றிசெய்து
போந்து புகலிக் கவுணியனார்
துனைபுனற் பொன்னித் திரைவலங்கொள்
சோற்றுத் துறைதொழச் சென்றடைவார். **#2250**

அங்ஙனம் `வினவினேன்' எனத் தொடங்கிய திருப்பதிகத்தில் பொருந்திய திருக்கடைக்காப்பினில் நினைத்தற்கரிய சிவபெருமானின் அருட்செயலின் திறங்களை, அடியாரைக் கேட்டு மகிழ்ந்த இயல்பைக் கூறிய பாடலால் துதித்து, மேற்சென்று, சீகாழியில் தோன்றிய கவுணியர் குலத் தேன்றலார் விரைவாய்ச் செல்லும் நீரையுடைய காவிரியின் அலைகள் வலம் கொண்டு செல்கின்ற திருச்சோற்றுத்துறையினைச் சென்று அணைவாராகி,

விளக்கவுரை

திருக்கண்டியூர் பதிகத் திருக்கடைக்காப்பில் `கருத் தனைப்பொழில் சூழுங்கண்டியூர் வீரட்டத்துறை கள்வனை அருத் தனைத்திறம் அடியார்பால்மிகக் கேட்டுகந்த வினாவுரை' என வரு வது கொண்டு ஆசிரியர் இவ்வாறு அருளிச் செய்வாராயினர்.

அப்பர்சோற் றுத்துறை சென்றடை வோம்என்
றொப்பில் வண்டமிழ் மாலை ஒருமையால்
செப்பி யேசென்று சேர்ந்தனர் சேர்விலார்
முப்புரம் செற்ற முன்னவர் கோயில்முன். **#2251**

`அப்பரின் திருச்சோற்றுத் துறையைச் சென்று அடைவோம்' என்று முடியும் கருத்துடையதாய், ஒப்பிகந்த வளமை மிகுந்த தமிழ் மாலையை உள்ளத்தில் கொண்ட ஒருமைப் பாட்டுடன் பாடிச் சென்று, பகைவரின் முப்புரங்களையும் எரித்த முதல்வரின் கோயில் முன்பு பிள்ளையார் சென்றனர்.

விளக்கவுரை

இப்பதியை அணுகவரும் நிலையில் அருளிய பதிகம் `செப்ப நெஞ்*(தி.1 ப.28)* எனத் தொடங்கும் தக்கராகப் பண்ணில் அமைந்த பதிகமாகும்.

பாடல்தொறும் திருச்சோற்றுத்துறை சென்றடை வோம் எனும் குறிப்புடையதாய் அமைந்துள்ளது. முதற்பாடலில் `அப்பர் சோற்றுத்துறை சென்றடைவோம்' என வருவதை ஆசிரியர் எடுத்து மொழிந்துள்ளார்.

தொல்லை நீள்திருச் சோற்றுத் துறையுறை
செல்வர் கோயில் வலங்கொண்டு தேவர்கள்
அல்லல் தீர்க்கநஞ் சுண்ட பிரானடி
எல்லை யில்அன்பு கூர இறைஞ்சினார். **#2252**

நீண்ட பழமையுடைய திருச்சோற்றுத்துறையுள் எழுந்தருளிய அருட் செல்வரான சிவபெருமானின் கோயிலை வலம் வந்து, வணங்கித் தேவர்களின் துன்பங்களைத் தீர்க்கும் பொருட்டு நஞ்சினை உண்ட பெருமானின் திருவடிகளை அளவற்ற அன்பு பெருக வணங்கினார்.

விளக்கவுரை

****

இறைஞ்சி ஏத்தி எழுந்துநின் றின்னிசை
நிறைந்த செந்தமிழ் பாடி நிலாவிஅங்
குறைந்து வந்தடி யாருட னெய்தினார்
சிறந்த சீர்த்திரு வேதி குடியினில். **#2253**

வணங்கிப் போற்றி எழுந்து நின்று இனிய பண் ணிசை நிறைந்த செந்தமிழ்ப் பதிகம் பாடி, அப்பதியில் தங்கியவர், அடியவருடன் கூடிச் சிறந்த சீர்மை மிகுந்த திருவேதிகுடியில் வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

திருச்சோற்றுத்துறை இறைவர் திருமுன்பு அருளிய பதிகம் கிடைத்திலது.

வேத வேதியர் வேதி குடியினில்
நாதர் கோயில் அணைந்து நலந்திகழ்
பாத பங்கயம் போற்றிப் பணிந்தெழுந்
தோதி னார்தமிழ் வேதத்தின் ஓங்கிசை. **#2254**

மறைகளை ஓதும் மறையவர் வாழும் திருவேதி குடியில் முதல்வரின் கோயிலை அடைந்து, நன்மை பெருகும் திருவடி மலர்களை வணங்கி எழுந்து நின்று, தமிழால் மறைகளினும் சிறந்த இசையையுடைய திருப்பதிகத்தை அருளினார்.

விளக்கவுரை

இவ்விடத்து அருளிய பதிகம், `நீறுவரி' *(தி.3 ப.78)* எனத் தொடங்கும் சாதாரிப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

எழுது மாமறை யாம்பதி கத்திசை
முழுதும் பாடி முதல்வரைப் போற்றிமுன்

தொழுது போந்துவந் தெய்தினார் சோலைசூழ்
பழுதில் சீர்த்திரு வெண்ணிப் பதியினில். **#2255**

எழுகின்ற பெருமறையான இசையுடைய திருப்பதிகத்தை நிறைவாகப் பாடி, இறைவரை வணங்கி, மேற்சென்று அழகிய சோலைகளால் சூழப்பட்ட குற்றம் அற்ற சிறப்புடைய `திரு வெண்ணி' என்னும் திருப்பதியை அடைந்தார்.

விளக்கவுரை

****

வெண்ணி மேய விடையவர் கோயிலை
நண்ணி நாடிய காதலில் நாள்மதிக்
கண்ணி யார்தங் கழலிணை போற்றியே
பண்ணில் நீடும் பதிகமும் பாடினார். **#2256**

திருவெண்ணிப் பதியில் எழுந்தருளியிருக்கும் ஆனேற்றினையுடைய இறைவரின் திருக்கோயிலை அடைந்து, உள் ளம் பொருந்தி அன்பால் இளம்பிறைக் கண்ணியை அணிந்த இறை வரின் திருவடியைப் போற்றிப் பண்ணால் மிக்க திருப்பதிகத்தையும் பாடினார்.

விளக்கவுரை

திருவெண்ணியூரில் அருளியது `சடையானை' *(தி.2 ப.14)* எனத் தொடங்கும் இந்தளப் பண்ணிலமைந்த பதிகமாகும். பதிகமும் - பதிகமுன் என்றும் பாடம்.

பாடி நின்று பரவிப் பணிந்துபோய்
ஆடும் அங்கணர் கோயில்அங் குள்ளன
மாடு சென்று வணங்கி மகிழ்ந்தனர்
நீடு சண்பை நிறைபுகழ் வேதியர். **#2257**

பதிகம் பாடி நின்று போற்றி வணங்கி, மேற் சென்று அருட்கூத்தியற்றும் இறைவர் வீற்றிருக்கும் அம்மருங்கில் உள்ளனவாகிய கோயில்களைச் சென்று வணங்கிச் சீகாழியில் தோன் றிய நிறைந்த புகழையுடைய பிள்ளையார் மகிழ்ச்சி அடைந்தார்.

விளக்கவுரை

கோயில் அங்குள்ளன என்றது, திருவெண்ணியூரில் இருந்து திருச்சக்கரப்பள்ளி வரையிலான இடங்களில் உள்ள கோயில் களாம். பதிகங்கள் எவையும் கிடைத்தில. வெண்ணிக் குயத்தியார் எனும் சங்க காலப் பெண்பாற் புலவர் இவ்வூரினர் என்பதும் குறிப் பிடத்தக்கதாம்.

மொய்தருஞ் சோலைசூழ் முளரிமுள் ளடவிபோய்
மெய்தரும் பரிவிலான் வேள்வியைப் பாழ்படச்
செய்தசங் கரர்திருச் சக்கரப் பள்ளிமுன்

பெய்தவந் தருளினார் இயலிசைத் தலைவனார். **#2258**
நெருங்கிய சோலைகள் சூழ்ந்த தாமரைத் தண்டுகளின் முட்காடு எனப்படுகின்ற பொய்கைகள் மிக்க மருத நிலத் தில் சென்று, மெய்ப்பொருளை உணர்ந்து செய்யும் அறிவும் அன்பும் இல்லாத தக்கனின் வேள்வியை அழியச் செய்த சிவபெருமான் வீற் றிருக்கும் `திருச்சக்கரப்பள்ளி' என்ற பதியில், இயல் இசை வல்ல பிள்ளையார் வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

`வெள்ளத் தனைய மலர்நீட்டம்' *(குறள், 595)* என்பவாகலின், அத்தண்டுகள் காடாக மண்டிக் கிடக்கும் காடுகள் குளங்கள் எனப்பட்டன.

சக்கரப் பள்ளியார் தந்தனிக் கோயிலுள்
புக்கருத் தியினுடன் புனைமலர்த் தாள்பணிந்
தக்கரைப் பரமர்பால் அன்புறும் பரிவுகூர்
மிக்கசொல் தமிழினால் வேதமும் பாடினார். **#2259**

திருச்சக்கரப் பள்ளியில் வீற்றிருக்கும் இறைவ ரின் ஒப்பற்ற கோயிலுள் புகுந்து, விருப்பத்துடன் அழகிய மலரனைய திருவடிகளை வணங்கி, எலும்பு மாலையைச் சூடிய அரையை உடைய இறைவரிடத்து, அன்புமிகும் ஆற்றல் மிக்க சொற்களாலான தமிழால், நான்மறைப் பொருள்களையும் உள்ளீடாகக் கொண்ட திருப்பதிகத்தையும் பாடியருளினார்.

விளக்கவுரை

திருசக்கரப்பள்ளியில் அருளிய பதிகம் `படையினார்' *(தி.3 ப.37)* என்று தொடங்கும் கொல்லிப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

தலைவர்தம் சக்கரப் பள்ளிதன் னிடையகன்
றலைபுனற் பணைகளின் அருகுபோய் அருமறைப்
புலனுறும் சிந்தையார் புள்ளமங் கைப்பதி
குலவும் ஆலந்துறைக் கோயிலைக் குறுகினார். **#2260**

அரிய மறையின் உட்பொருளான ஞானத்தைத் தம் அறிவில் நிரம்பப் பெற்ற பிள்ளையார், சிவபெருமானின் திருச் சக்கரப் பள்ளியினின்றும் நீங்கி, அலையும் நீர் பரந்த வயல்களின் அருகாகச் சென்று, `திருப்புள்ளமங்கை' என்ற திருப்பதியில் விளங் கும் `திருவாலந்துறை' எனப் பெயர் பெறும் கோயிலை அடைந்தார்.

விளக்கவுரை

திருப்புள்ளமங்கை ஊர்ப்பெயர். ஆலந்துறை கோயில் பெயர்.

மன்னும்அக் கோயில்சேர் மான்மறிக் கையர்தம்

பொன்னடித் தலம்உறப் புரிவொடுந் தொழுதெழுந்
தின்னிசைத் தமிழ்புனைந் திறைவர்சே லூருடன்
பன்னுபா லைத்துறைப் பதிபணிந் தேகினார். #2261

நிலைபெற்ற அக்கோயிலில் எழுந்தருளி இருக் கும் மான் கன்றை ஏந்திய கையையுடைய இறைவரின், பொன்னார் திரு வடிகளை அன்புடன் தொழுது, எழுந்து, இனிய இசையையுடைய தமிழ்ப் பதிகத்தைப் பாடி, இறைவர் வீற்றிருக்கின்ற திருச்சேலூரை வணங்கிப் புகழ்ந்து, சொல்லப் பெறும் `திருப்பாலைத் துறை' என்ற பதியையும் வணங்கினார்.

விளக்கவுரை

திருப்புள்ளமங்கையில் அருளியது, `பாலுந்துறு திரளா யின' (தி.1 ப.16) எனத் தொடங்கும் நட்டபாடைப் பண்ணிலமைந்த பதிகமாகும். திருச்சேலூரிலும், திருப்பாலைத்துறையிலும் அருளிய பதிகங்கள் கிடைத்தில.

காவின்மேல் முகிலெழுங் கமழ்நறும் புறவுபோய்
வாவிநீ டலவன்வாழ் பெடையுடன் மலர்நறும்
பூவின்மேல் விழைவுறும் புகலியார் தலைவனார்
சேவின்மேல் அண்ணலார் திருநலூர் நண்ணினார். #2262

பொய்கைகளில் பொருந்திய ஆண் நண்டுகள், பெண் நண்டுகளுடன், மலரும் நல்ல மணமுடைய தாமரை மலரின் மேல் விரும்பி இருத்தற்கிடனாய சீகாழித் தலைவரான பிள்ளையார், சோலைகளின் மீது மேகங்கள் தவழ்கின்ற மணம் கமழும் நல்ல முல்லை நிலத்தின் வழியிலே சென்று, ஆனேற்று ஊர்தியின் மேல் எழுந்தருளும் இறைவரின் திருநல்லூரை வந்து அடைந்தார்.

விளக்கவுரை

****

மன்றலங் கழனிசூழ் திருநலூர் மறைவலோர்
துன்றுமங் கலவினைத் துழனியால் எதிர்கொளப்
பொன்தயங் கொளிமணிச் சிவிகையிற் பொலிவுறச்
சென்றணைந் தருளினார் சிரபுரச் செம்மலார். #2263

பிள்ளையார், மணம்கமழும் அழகிய வயல்கள் சூழ்ந்த திருநல்லூரில் வாழும் மறையவர்கள், நெருங்கிய மங்கலப் பொருள்களின் நிறைவுடனே வரவேற்கப் பொன் விளங்கும் ஒளி பொருந்திய முத்துச் சிவிகையின் மீது அழகு விளங்கச் சென்று அடைந்தார்.

விளக்கவுரை

****

நித்திலச் சிவிகைமேல் நின்றிழிந் தருளியே

மொய்த்தஅந் தணர்குழாம் முன்செலப் பின்செலும்
பத்தரும் பரிசனங் களுமுடன் பரவவே
அத்தர்தங் கோபுரந் தொழுதணைந் தருளினார். **#2264**

முத்துச் சிவிகையினின்றும் இழிந்த பிள்ளையார், சூழ இருந்த அந்தணர்கள் முன் செல்லப் பின் செல்கின்ற அடியவர் களும் அருகிருந்து பணிசெய்து வரும் தொண்டர்களும் தம்முடன் ஒருங்கிருந்து போற்றிவர, இறைவரின் கோபுரத்தை வணங்கிக் கோயிலுக்குள் சென்றார்.

விளக்கவுரை

****

வெள்ளிமால் வரையைநேர் விரிசுடர்க் கோயிலைப்
பிள்ளையார் வலம்வரும் பொழுதினில் பெருகுசீர்
வெள்ளஆ னந்தமெய் பொழியமே லேறிநீர்
துள்ளுவார் சடையரைத் தொழுதுமுன் பரவுவார். **#2265**

வெள்ளி மலையைப் போல விளங்கும் ஒளியை யுடைய அக்கோயிலைப் பிள்ளையார் வலம் வரும் பொழுது, பெரு கிய சிறப்பு மிக்க ஆனந்தக் கண்ணீர் வழிந்து திருமேனி எங்கும் பொழிய, அம்மாடக் கோயிலின் மேல் ஏறிச் சென்று, கங்கை நீர் பெரு கப் பொருந்திய சடையையுடைய இறைவரை வணங்கித் திருமுன்பு நின்று வணங்குவாராய்,

விளக்கவுரை

****

பரவுசொற் பதிகமுன் பாடினார் பரிவுதான்
வரவயர்த் துருகுநேர் மனனுடன் புறம்அணைந்
தரவுடைச் சடையர்பே ரருள்பெறும் பெருமையால்
விரவும்அப் பதியமர்ந் தருளியே மேவினார். **#2266**

போற்றத்தகும் சொற்களாலான பதிகத்தினைப் பாடியவராய், மிக்க அன்புடன் மேலிட்டதால் தம்மையும் மறந்து உருகும் நேர்மைபெற்ற உள்ளத்துடன் கோயில் புறத்தை அடைந்து பாம்புகளைப் பூண்ட சடையையுடைய இறைவரின் திருவருளைப் பெறும் பெருமையால், இறைவர் வீற்றிருக்கும் அத்திருப்பதியில் விரும்பி வீற்றிருந்தார்.

விளக்கவுரை

திருநல்லூரில் பாடியது, `வண்டிரிய' *(தி.3 ப.83)* எனத் தொடங்கும் சாதாரிப் பண்ணிலமைந்த பதிகமாகும். இவ்விரு பாடல் களும் ஒரு முடிபின.

அன்ன தன்மையில் அப்பதி
யினில் அமர்ந் தருளி
மின்னு செஞ்சடை விமலர்தாள்

விருப்பொடு வணங்கிப்
பன்னும் இன்னிசைப் பதிகமும்
பலமுறை பாடி
நன்னெ டுங்குல நான்மறை
யவர்தொழ நயந்தார். **#2267**

அவ்வாறு அப்பதியில் தங்கி, மின் போன்ற சிவந்த சடையையுடைய இறைவரின் திருவடிகளை விருப்புடன் வணங்கிப் புகழ்ந்து சொல்லப்படுகின்ற இனிய இசையுடன் கூடிய பல்வேறு யாப்பமைவுகளும்இசைக் கட்டளைகளும் பொருந்தப் பாடி, நன்மை நீடிய மறையவர்கள் வணங்கி நிற்ப, அங்குத் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

இவ்வாறாய இன்னிசைப் பதிகம் பல பாடி என்றாரே னும், இதுபொழுது இசைத்தருளியனவாகக் கிடைத்துள்ள பதிகங்கள் இரண்டேயாம். *1. `கொட்டும் பறை': (தி.1 ப.86)* - குறிஞ்சிப் பண். *2.`பெண்ணமரும்': (தி.2 ப.57)* - காந்தாரப் பண்.

நீடும் அப்பதி நீங்குவார்
நிகழ்திரு நல்லூர்
ஆடுவார் திரு அருள்பெற
அகன்றுபோந் தங்கண்
மாடு முள்ளன வணங்கியே
பரவிவந் தணைந்தார்
தேடும் மால்அயற் கரியவர்
திருக்கரு காவூர். **#2268**

நிலை பெற்ற அப்பதியினின்றும் நீங்குபவரான பிள்ளையார், விளங்கும் அத்திருநல்லூரில் எழுந்தருளிக் கூத்தியற்றும் இறைவரின் திருவருளைப் பெற்று, அவ்விடத்தினின்றும் புறப்பட்டுச் சென்று, அருகிலுள்ள திருப்பதிகளை வணங்கிய வண்ணம், தம்மைத் தேடிய திருமாலுக்கும் நான்முகனுக்கும் அரியவரான இறைவரின் திருக்கருகாவூரில் வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

மாடும் உள்ளன பதிகள் எவை எனத் தெரிந்தில.

வந்து பந்தர்மா தவிமணங்
கமழ்கரு காவூர்ச்
சந்த மாமறை தந்தவர்
கழலிணை தாழ்ந்தே
அந்த மில்லவர் வண்ணம்ஆர்

அழல்வண்ணம் என்று
சிந்தை இன்புறப் பாடினார்
செழுந்தமிழ்ப் பதிகம். **#2269**

வந்து, பந்தலில் படர்ந்து ஏறிய முல்லைகள் மணம் கமழ்கின்ற `திருக்கருகாவூரில்' எழுந்தருளியிருக்கும் இசையமைதி உடைய பெருமறைகளைத் தந்த இறைவரின் திருவடிகளை வணங்கி, என்றும் அழியாமல் நிலைபெற்றிருக்கும் சிவபெருமானின் நிறம் தீயின் நிறமேயாம் என்ற கருத்தும் முடிபும் உடையதாய செந்தமிழ்ப் பதிகத்தை உள்ளம் மகிழப் பாடினார்.

விளக்கவுரை

இப்பதியில் பாடியருளிய பதிகம் `முத்தி லங்கும்' *(தி.3 ப.46)* எனத் தொடங்கும் கௌசிகப் பண்ணிலமைந்ததாகும். பதிகப் பாடல்தொறும் `இறைவனின் வண்ணம் அழல் வண்ணமே' என்னும் கருத்து முடிபுடையதாக அமைந்திருத்தலின், ஆசிரியர் சேக்கிழார் இவ்வாறு அருளிச் செய்வாராயினார்.

பதிக இன்னிசை பாடிப்போய்ப்
பிறபதி பலவும்
நதிய ணிந்தவர் கோயில்கள்
நண்ணியே வணங்கி
அணைந்தனர் மன்றுள்
அதிர்சி லம்படி யார்மகிழ்
அவளிவ ணல்லூர். **#2270**

இவ்வாறாய இன்னிசைப் பதிகங்களைப் பாடிச் செல்பவர் பிற பதிகளிலுள்ள கங்கையாற்றை அணிந்த சிவபெரு மானின் கோயில்களை அடைந்து வணங்கிப் பொன்னம்பலத்தில் கூத்தாடுகின்ற ஒலிக்கும் சிலம்பினையுடைய இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கின்ற `திருஅவள்இவள்நல்லூரை' இனிய முத்தமிழும் பொருந்திய திருவாக்கையுடைய பிள்ளையார் அணைந்தார்.

விளக்கவுரை

`பிற பதிபலவும்' எனக் குறிக்கப்பட்டன தென்குடித் திட்டை முதலாயினவாகலாம். தென்குடித்திட்டையில் அருளிய பதிகம் `முன்னை நான்மறை' *(தி.3 ப.35)* எனத் தொடங்கும் கொல்லிப் பண்ணில் அமைந்த பதிகமாகும்.

மன்னும் அப்பதி வானவர்
போற்றவும் மகிழ்ந்த
தன்மை யார்பயில் கோயிலுள்

தம்பரி சுடையார்
என்னும் நாமமும் நிகழ்ந்திட
ஏத்திமுன் இறைஞ்சிப்
பன்னு சீர்ப்பதி பலவும்அப்
பாற்சென்று பணிவார். **#2271**

நிலைபெற்ற அத்திருப்பதியில் தேவர்களும் போற்ற மகிழ்ந்து எழுந்தருளும் இயல்பு கொண்ட இறைவரின் கோயிலுக்குள் புகுந்து, `தம்பரிசு உடையார்' என்ற பெயரும் வெளிப் பட வைத்துப் போற்றித் திருமுன்பு வணங்கிச் சொல்லுதற்குரிய சிறப்புடைய பதிகள் பலவற்றிலும் சென்று வணங்குபவராய்,

விளக்கவுரை

திருஅவள்இவள்நல்லூரில் அருளிய பதிகம் `கொம்பிரிய' *(தி.3 ப.82)* எனத் தொடங்கும் சாதாரிப் பண்ணி லமைந்த பதிகமாகும். இப்பதிகத்தில் வரும் முதற் பாடலில் தம்பரிசி னோடு சுடுநீறு தரவந்து இடபம் ஏறி, எனவருவதால் தம்பரிசுடையார் என்ற நாமமும் வெளிப்பட என்றார். இறைவர், தம்பரிசுடையார் சாட்சிநாதர் என்ற பெயர்களால் அழைக்கப் பெறுகின்றார்.. ஈண்டுப் பன்னுசீர்ப் பதிபலவும் என்றவை எவை எனத் தெரிந்தில.

பழுதில் சீர்த்திருப் பரிதிநன்
னியமமும் பணிந்தங்
கெழுது மாமறை யாம்பதி
கத்திசை போற்றி
முழுது மானவர் கோயில்கள்
வணங்கியே முறைமை
வழுவில் சீர்திருப் பூவனூர்
வணங்கிவந் தணைந்து. **#2272**

குற்றங்கள் இல்லையாகச் செய்யும் சிறப்புடைய `திருப்பரிதி நியமத்ததை' வழிபட்டு, அங்கே எழுதும் மறையாகும் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றி, எல்லாமாய் இருக்கும் சிவபெருமானின் திருக்கோயிலை வணங்கி, முறைமையினின்றும் தவறாத சிறப்புடைய `திருப்பூவனூரை' வந்து சேர்ந்து,

விளக்கவுரை

திருப்பரிதி நியமத்தில் அருளிய பதிகம் `விண் கொண்ட' *(தி.3 ப.104)* எனத் தொடங்கும் பழம்பஞ்சுரப் பதிகமாகும். வழுவில் சீர் - வழுவி லார் எனவும் பாடம்.

பொங்கு காதலிற் போற்றிஅங்

கருளுடன் போந்து
பங்க யத்தடம் பணைப்பதி
பலவுமுன் பணிந்தே
எங்கும் அன்பர்கள் ஏத்தொலி
எடுக்கவந் தணைந்தார்
அங்க ணர்க்கிட மாகிய
பழம்பதி ஆவூர். **#2273**

வளரும் விருப்ப மிகுதியினால் போற்றி அவ் விடத்தினின்றும் நீங்கிச் சென்று, தாமரை மலர்களையுடைய பெரிய வயல்கள் சூழ்ந்த பதிகள் பலவும் போற்றி, அன்பர்கள் யாண்டும் ஒலிபெருக வாழ்த்தி வரச் சிவபெருமான் அமர்ந்தருளும் பழைய பதியான `திரு ஆவூரினை' அடைந்தார்.

விளக்கவுரை

திருப்பூவனூரில் அருளிய பதிகம் கிடைத்திலது. பதிகள் பலவும் என்பன திருவெண்ணியூர், திருஅரதைப்பெரும்பாழி முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். திருவெண்ணி யூருக்கு முன்னரே சென்று தொழுததாக *228*ஆவது பாடலில் காணலாம்.
திருஅரதைப்பெரும்பாழியைப் பின்னரும் வழிபட்டதாக *403*ஆவது பாடலில் காணலாம். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

பணியும் அப்பதிப் பசுபதீச்
சரத்தினி திருந்த
மணியை உள்புக்கு வழிபடும்
விருப்பினால் வணங்கித்
தணிவில் காதலில் தண்டமிழ்
மாலைகள் சாத்தி
அணிவி ளங்கிய திருநலூர்
மீண்டும்வந் தணைந்தார். **#2274**

பணியும் அப்பதியில், பசுபதீச்சரக் கோயிலில் இனிதாக வீற்றிருந்தருளும் மணியான இறைவரைக் கோயிலுள் புகுந்து வழிபடும் விருப்பத்தினால் வணங்கிக் குறைவில்லாத அன்புடன் குளிர்ந்த தமிழ் மாலைகள் பாடிச் சாத்தி, அழகுடைய திருநல்லூரின்கண் மீண்டும் வந்தடைந்தார்.

விளக்கவுரை

திருஆவூர் - ஊர்ப்பெயர். பசுபதீச்சரம் - கோயில் பெயர். இங்கு அருளிய பதிகம் `புண்ணியர்' *(தி.1 ப.8)* எனத் தொடங்கும் நட்டபாடைப் பண்ணிலமைந்த பதிகம் ஆகும்.

மறை விளங்கும்அப் பதியினில்
மணிகண்டர் பொற்றாள்
நிறையும் அன்பொடு வணங்கியே
நிகழ்பவர் நிலவும்
பிறைய ணிந்தவர் அருள்பெறப்
பிரசமென் மலர்வண்
டறைந றும்பொழில் திருவலஞ்
சுழியில்வந் தணைந்தார். **#2275**

மறைகள் விளங்குதற்கு இடமான அப்பதியில் கரிய கழுத்தினையுடையவரான இறைவரின் பொன்னடிகளை நிறைவான அன்புடன் வணங்கியவாறே எழுந்தருளும் ஆளுடைய பிள்ளையார், பிறைசூடிய இறைவரின் நிலைபெற்ற திருவருளைப் பெற்று, உலகம் உய்வு பெற, தேன் பொருந்திய மலர்களில் வண்டுகள் ஒலிக்கின்ற மணம் வீசும் சோலைகள் சூழ்ந்த திருவலஞ்சுழியின்கண் வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

****

மதிபு னைந்தவர் வலஞ்சுழி
மருவுமா தவத்து
முதிரும் அன்பர்கள் முத்தமிழ்
விரகர்த முன்வந்
தெதிர்கொள் போழ்தினில் இழிந்தவர்
எதிர்செல மதியைக்
கதிர்செய் வெண்முகிற் குழாம்புடை
சூழ்ந்தெனக் கலந்தார். **#2276**

பிறைச் சந்திரனைச் சூடிய இறைவர் திருவலஞ் சுழியில் வாழ்கின்ற பெருந்தவத்தின் முதிர்ச்சியுடைய அன்பர்கள் திரண்டு முத்தமிழ்ச் செல்வரான பிள்ளையாரின் முன்வந்து, மதியை ஒளி பொருந்திய வெண்மேகங்கள் சுற்றிச் சூழ்ந்தது போல, எதிர் கொண்டனர்.

விளக்கவுரை

****

கலந்த அன்பர்கள் தொழுதெழக்
கவுணியர் தலைவர்
அலர்ந்த செங்கம லக்கரம்
குவித்துடன் அணைவார்
வலஞ்சு ழிப்பெரு மான்மகிழ்
கோயில்வந் தெய்திப்
பொலங்கொள் நீள்சுடர்க் கோபுரம்
இறைஞ்சியுட் புகுந்தார். **#2277**

திரண்டு வந்த அன்பர்கள் கீழே வீழ்ந்து தொழுது எழுந்து நிற்க, கவுணியர் தலைவரான பிள்ளையார், அப்பொழுது அலர்ந்த செந்தாமரை மலர் போன்ற கைகளைக் கூப்பி அணைபவ ராய்த் திருவலஞ்சுழி இறைவர் மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் கோயிலைச் சேர்ந்து, பொன்மயமாக ஒளிவிட்டு விளங்கும் கோபு ரத்தை வணங்கி உள்ளே புகுந்தனர்.

விளக்கவுரை

****

மருவலார்புரம் முனிந்தவர்
திருமுன்றில் வலங்கொண்
டுருகும் அன்புடன்உச்சிமேல்
அஞ்சலி யினராய்த்

திருவ லஞ்சுழி யுடையவர்
சேவடித் தலத்தில்
பெருகும்ஆதர வுடன்பணிந்
தெழுந்தனர் பெரியோர். **#2278**

பகைவரின் முப்புரங்களையும் எரித்த இறை வரின் திருமுற்றத்தை வலம் வந்து, உளம் உருகும் அன்புடனே, தலையின் மேல் கைகுவித்து வணங்கித் திருவலஞ்சுழி இறைவரின் திருவடிகளில் பெருகும் அன்புடனே பெரியவரான சம்பந்தர் பணிந்து எழுந்தார்.

விளக்கவுரை

****

ஞானபோனகர் நம்பர்முன்
தொழுதெழு விருப்பால்
ஆனகாதலில் அங்கண
ரவர்தமை வினவும்
ஊனமில்இசை யுடன்விளங்
கியதிருப் பதிகம்
பானலார்மணி கண்டரைப்
பாடினார் பரவி. **#2279**

ஞானப்பாலையுண்ட பிள்ளையார் சிவபெரு மானின் திருமுன்பு தொழுது எழும் விருப்பத்தினால் விளைந்த ஆசையினால் இறைவரை முன்னிலைப்படுத்தி, வினவுகின்ற கருத்தை உடைய குற்றம் அற்ற இசையுடனே விளங்கும் திருப்பதிகத்தைக் குவளை மலர் போன்ற கரிய கழுத்தினையுடைய இறைவரை வணங் கிப் போற்றினார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகம் `விண்டெலாமலர்' *(தி.2 ப.2)* எனத் தொடங்கும் இந்தளப் பண்ணிலமைந்த பதிகமாகும். பிள்ளையார் இறைவரை நோக்கியும், அடியவரை நோக்கியும் வினவும் வினாவுரைப் பதிகங்கள் பல. அவ்வினாக்களுள் ஒன்றாய் வருவதும், வேறு வேறாய் வருவனவுமாக அமையும். இப்பதிகத்தில் இறைவரை நோக்கிப் பாடல் தொறும் பலிதேர்ந்து உழல்வது எற்றுக்கு? என ஒரே வினாவாய் அமைந்திருக்கும் பாங்கு அறியத்தக்கது.

புலங்கொள் இன்தமிழ் போற்றினர்
புறத்தினில் அணைந்தே
இலங்கு நீர்ப்பொன்னி சூழ்திருப்
பதியினி லிருந்து
நலங்கொள் காதலின் நாதர்தாள்

நாள்தொறும் பரவி
வலஞ்சு ழிப்பெருமான் தொண்டர்தம்
முடன் மகிழ்ந்தார். **#2280**

உளங்கொளற்குரிய அருளுரையாக நன்மக்கள் உள்ளத்தில் கொள்ளும் இனிய இசைத் தமிழ்ப் பதிகங்ளைச் சாத்தி வணங்கியவராய்க் கோயிலின் வெளியே போந்து, பெருகிவரும் நீரையுடைய காவிரி சூழ்ந்த அப்பதியில் தங்கியிருந்து, நன்மை பொருந்திய அன்பினால் இறைவரின் திருவடிகளை நாள்தோறும் வணங்கிப் பெருமானின் தொண்டர்களுடனே கூடி மகிழ்வுடனிருந்து வந்தார்.

விளக்கவுரை

இப்பதியில் இருந்தருளிய பொழுது பாடியருளிய பதிகங்கள் இரண்டாம். *1)* `என்ன புண்ணியம் செய்தனை' *(தி.2 ப.106)* - நட்டராகம். *2)* `பள்ளமதாய' *(தி.3 ப.106)* - பழம்பஞ்சுரம். இவ்விரு பதிகங்களிலும் வரும் முதற் பாடல்கள், பிள்ளையார் தம் நெஞ்சிற்கும் நம்மனோர்க்குமாகக் கூறிய அருளுரைகளாக அமைந் துள்ளன. இரண்டாவது பதிகத்தில் *3* முதல் *6* முடிய உள்ள பாடல்களும் அவ்வாறே அமைந்துள்ளன. ஆதலின் `புலங்கொள் இன்தமிழ்' எனப் போற்றினர் ஆசிரியர்.

மகிழ்ந்த தன்தலை வாழும்அந்
நாளிடை வானில்
திகழ்ந்த ஞாயிறு துணைப்புணர்
ஓரையுட் சேர்ந்து
நிகழ்ந்த தன்மையில் நிலவும்ஏழ்
கடல்நீர்மை குன்ற
வெகுண்டு வெங்கதிர்பரப்பலின்
முதிர்ந்தது வேனில். **#2281**

மகிழ்வுடன் அப்பதியில் அவர் வாழ்ந்து வரு கின்ற நாள்களில், வானத்தில் விளங்கிய கதிரவன், மிதுன ஓரையுள் சேரப் பொருந்தி, ஏழ்கடலும் தம் நீர்மை குறையுமாறு சினத்துடன் வெம்மையான கதிர்களைப் பரப்புதலால் அக்காலம் முதுவேனிற் பருவமாகச் சிறந்தது.

விளக்கவுரை

வானவீதியிற் செல்லும் கதிரவன் அவ்வவ்விடத்தும் பொருந்திவரும் ஓரைகளாலேயே திங்கள் பெயர்கள் வேறுபடுகின் றன; பருவநிலைகள் மாறுபடுகின்றன. அவ்வகையில் கதிரவன் மிதுன ஓரையில் சேரும்பொழுது வரும் பருவம் முதிர்வேனிற் பருவமாகும். முதிர்ந்தது வேனில் - முதுவேனில் வந்தது. முதிர்ந்தது வேனில் என்றது சமாதியணியாம். இப்பருவத்திற்குரிய திங்கள் ஆனியும் ஆடியுமாகும்.

`ஏழ்கடல் நீர்மை குன்ற' என்றது `நெடுங்கட லும் தன்நீர்மை குன்றும்' *(குறள், 17)* எனும் குறளை முகந்து நிற்ப தாகும்.

தண்பு னற்குறிர் கால்நறுஞ்
சந்தனத் தேய்வை
பண்பு நீடிய வாசமென்
மலர்பொதி பனிநீர்
நண்பு டைத்துணை நகைமணி
முத்தணி நாளும்
உண்ப மாதுரி யச்சுவை
உலகுளோர் விரும்ப. **#2282**

குளிர்ச்சியுடைய நீர்க் கலப்பால் குளிர்ந்து வீசும் காற்றையும், மணம் பொருந்திய சந்தனத்தையும், மணத்தால் ஊறுபாடு அற்ற நறுமணமுடைய பூக்களுள் பொதிந்த பனிநீரையும், ஒன்றற் கொன்று இயைபுடைய ஒளிபொருந்திய இணைமணிகளால் இயைந்த முத்து மாலைகளையும், உண்ணக் கூடிய சுவைப் பண்டங்களையும் உலகத்தவர் விரும்புமாறு வேனில்காலம் முதிர்ந்தது.

விளக்கவுரை

ஒன்றற் கொன்று இயைபுடைய இணையான மணிகள். நண்புடைத் துணை மணி - அன்புடைய வாழ்க்கைத் துணை என்றலும் ஒன்று. முதுவேனிற்காலத்தில் விரும்புதற்குரிய நுகர்ச்சிப் பொருள்களை ஒருங்கு குறித்திருக்கும் அருமை எண்ணற்குரியதாம்.

அறல்மலியுங் கான்யாற்றின்
நீர்நசையால் அணையுமான்
பெறலரிய புனலென்று
பேய்த்தேரின் பின்தொடரும்
உறையுணவு கொள்ளும்புள்
தேம்பஅயல் இரைதேரும்
பறவைசிறை விரித்தொடுங்கப்
பனிப்புறத்து வதியுமால். **#2283**

கரியமணல் மிக்க காட்டினிடம் நீர்பெறும் விருப்பத்தால் சேர்ந்த மான் கூட்டம் (அங்கே நீரைப் பெறாததால்) பெறுதற்கு அரிய நீர் என்ற தோற்றம் பற்றி மயங்கிக் கானல்நீரின் பின்னால் தொடர்ந்து செல்லும்; மழைத் துளிகளை உணவாகக் கொள்ளும் சாதகப் பறவைகள், உணவு பெறாது வருந்தி வேறு உணவைத் தேடித் திரியும். பறவைகள் சிறகுகளை விரித்துக் கொண்டு வெம்மை பொறுக்க இயலாது தாம் ஒடுங்குவதற்குத் தக்க குளிர்ந்த இடங்களில் தங்கும்.

விளக்கவுரை

****

நீணிலைமா ளிகைமேலும்
நிலாமுன்றின் மருங்கினிலும்
வாணிழனற் சோலையிலும்
மலர்வாவிக் கரைமாடும்
பூணிலவு முத்தணிந்த
பூங்குழலார் முலைத்தடத்தும்
காணும்மகிழ்ச் சியின்மலர்ந்து
மாந்தர்கலந் துறைவரால். **#2284**

உயர்ந்தோங்கும் மாளிகைகளின் மீதும், நிலா முற்றங்களின் அருகிலும், ஒளியுடைய நிழலைப் பரப்பும் சோலை யிலும், மலர்ப் பொய்கைகளின் கரைகளிலும், முத்துக்களைக் கொண்ட பூங்குழலையுடைய மாதர்களின் கொங்கைத் தடங்களிலும், ஆடவர் மகிழ்ந்துறைவர்.

விளக்கவுரை

****

மயிலொடுங்க வண்டாட
மலர்க்கமல முகைவிரியக்
குயிலொடுங்காச் சோலையின்மெல்
தளிர்கோதிக் கூவியெழத்
துயிலொடுங்கா உயிரனைத்தும்
துயில்பயிலச் சுடர்வானில்
வெயிலொடுங்கா வெம்மைதரும்
வேனில்விரி தருநாளில். **#2285**

மயில்கள் ஒடுங்கவும், வண்டுகள் சூழ்ந்து முரலவும், தாமரை அரும்புகள் மலரவும், வளங்குன்றாத சோலை களின் மெல்லிய தளிரைக் கோதிக் குயில்கள் கூவி எழவும், துயில் கொள்ளாத உயிர்கள் எல்லாம் துயில் கொள்ளவும், வானத்தில் விளங்கும் ஒளிக் கதிர்களையுடைய கதிரவன், தன் வெம்மையான கதிர்களை ஒடுக்காமல் வெம்மை தருகின்ற முதுவேனிற் பருவத் திற்குரிய நாள்களில்,

விளக்கவுரை

****

சண்பைவரும் பிள்ளையார்
சடாமகுடர் வலஞ்சுழியை
எண்பெருகத் தொழுதேத்திப்
பழையாறை எய்துதற்கு

நண்புடைய அடியார்கள்
உடன்போத நடந்தருளி
விண்பொருநீள் மதிளாறை
மேற்றளிசென் றெய்தினார். **#2286**

காழிப்பதியில் தோன்றியருளிய பிள்ளையார், சடையை முடியணியாகக் கொண்ட சிவபெருமானின் திருவலஞ்சுழி என்ற அப்பதியினை எண்ணம் பெருகப் போற்றி, பழையாறை என்ற பதியைச் சார்வதற்காக, நட்புக் கொண்டிருக்கும் அடியவர்களுடன் போவதை விரும்பி, நடந்து சென்று, வான் அளாவிய நீண்டுயர்ந்த மதிலையுடைய திருப்பழையாறைமேற்றளியை அடைந்தார்.

விளக்கவுரை

****

திருவாறை மேற்றளியில்
திகழ்ந்திருந்த செந்தீயின்
உருவாளன் அடிவணங்கி
உருகியஅன் பொடுபோற்றி
மருவாரும் குழல்மலையாள்
வழிபாடு செய்யஅருள்
தருவார்தந் திருச்சத்தி
முற்றத்தின் புறஞ்சார்ந்தார். **#2287**

பழையாறைமேற்றளியில் வீற்றிருந்தருளும் செந்தீ நிறத்தவரான இறைவரின் திருவடிகளை உருகிய அன்புடனே வணங்கிப் போற்றி, மணம் பொருந்திய கூந்தலையுடைய மலையரசன் மகள் வழிபட அருள் செய்த இறைவரின் `திருச்சத்தி முற்றம்' என்ற பதியின் புறத்தே அடைந்தருளினர் பிள்ளையார்.

விளக்கவுரை

பழையாறைமேற்றளியில் அருளிய பதிகம் கிடைத்திலது.

திருச்சத்தி முற்றத்தில்
சென்றெய்தித் திருமலையாள்
அருச்சித்த சேவடிகள்
ஆர்வமுறப் பணிந்தேத்திக்
கருச்சுற்றில் அடையாமல்
கைதருவார் கழல்பாடி
விருப்புற்றுத் திருப்பட்டீச்
சரம்பணிய மேவுங்கால். **#2288**

திருச்சத்திமுற்றத்தினைச் சென்றடைந்து திரு மலைவல்லியார் போற்றி

வழிபட்ட அழகிய திருவடிகளை ஆர்வத் துடனே வணங்கி, பிறவிச் சுழலில் அகப்படாமல் கைதந்து ஈடேற்று பவரான இறைவரின் திருவடிகளைப் பாடி, விருப்புக் கொண்டு `திருப்பட்டீச்சரத்தை' வணங்கச் சென்ற போழ்து,

விளக்கவுரை

****

வெம்மைதரு வேனிலிடை
வெயில்வெப்பந் தணிப்பதற்கு
மும்மைநிலைத் தமிழ்விரகர்
முடிமீதே சிவபூதம்
தம்மைஅறி யாதபடி
தண்தரளப் பந்தரெடுத்
தெம்மைவிடுத் தருள்புரிந்தார்
பட்டீசர் என்றியம்ப. **#2289**

வெப்பத்தை மிகுதியாய் அளிக்கும் முதுவேனிற் காலத்தின் வெம்மையைத் தணித்து ஆற்றும் பொருட்டு, முத்தமிழ் வல்லுநரான சம்பந்தரின் திருமுடியின் மீது, தம்மை அறியாத வகையால் சிவபூதம் குளிர்மை தரும் முத்துப் பந்தரை எடுத்துப் பிடித்து, `பட்டீசர் எங்களை இதனுடன் சென்று தருமாறு திருவாய் மலர்ந்தருளினார்' எனக் கூற,

விளக்கவுரை

****

அவ்வுரையும் மணிமுத்தின்
பந்தரும்ஆ காயமெழச்
செவ்விய மெய்ஞ் ஞானமுணர்
சிரபுரத்துப் பிள்ளையார்
இவ்வினைதான் ஈசர்திரு
வருளாகில் இசைவதென
மெய்விரவு புளகமுடன்
மேதினியின் மிசைத்தாழ்ந்தார். **#2290**

அச்சொற்களும் அழகிய முத்துப் பந்தரும் வானத்தில் எழுந்தனவாக, செம்மையான சிவஞானத்தை உணர்ந்த ஆளுடைய பிள்ளையார், `இச்செயல்தானும் இறைவரின் திருவருளா யின் நமக்கு இயைவதாகுக!' என்று உள்ளத்தில் எண்ணி மேனியில் மயிர்க் கூச்சல் உண்டாக, நிலத்தில் வீழ்ந்து வணங்கினார்.

விளக்கவுரை

****

அதுபொழுதே அணிமுத்தின்
பந்தரினை அருள்சிறக்கக்
கதிரொளிய மணிக்காம்பு
பரிசனங்கள் கைக்கொண்டார்
மதுரமொழி மறைத்தலைவர்
மருங்கிமையோர் பொழிவாசப்
புதுமலரால் அப்பந்தர்
பூம்பந்த ரும்போலும். **#2291**

அதுபோழ்து உடன் வந்த ஏவலர் அழகிய முத்துப் பந்தரைத் திருவருள் சிறக்க ஒளிவீசும் அழகிய காம்புகளைக் கையில் பிடித்தனர். இனிய மொழியையுடைய தமிழ் மறைத் தலைவர் ஆன பிள்ளையாரின் அருகில், தேவர்கள் பொழிந்த மணமுடைய தெய்வப் பூக்களால், அம்முத்துப் பந்தர், பூம் பந்தர் போலவும் விளங்கியது.

விளக்கவுரை

****

தொண்டர்குழாம் ஆர்ப்பெடுப்பச்
சுருதிகளின் பெருந்துழனி
எண்திசையும் நிறைந்தோங்க
எழுந்தருளும் பிள்ளையார்
வெண்தரளப் பந்தர் நிழல்
மீதணையத் திருமன்றில்
அண்டர்பிரான் எடுத்ததிரு
வடிநீழல் எனஅமர்ந்தார். **#2292**

தொண்டர் கூட்டமானது மகிழ்வொலி செய்யவும், மறைகளின் பேரொலி எண்திசைகளிலும் நிறைந்து எழவும் எழுந்தருளி வருகின்ற பிள்ளையார், வெண்மையான முத்துப் பந்தரின் நிழலானது தம் முடியின் மீது நிழற்றுவதால், பொன்னம் பலத்தில் கூத்தப்பிரானின் தூக்கிய திருவடி நீழலில் அமர்ந்திருத் தலைப் போல் அமர்ந்திருந்தார்.

விளக்கவுரை

****

பாரின்மிசை அன்பருடன்
வருகின்றார் பன்னகத்தின்
ஆரம்அணிந் தவர்தந்த
அருட்கருணைத் திறம்போற்றி
ஈரமனங் களிதழைப்ப
எதிர்கொள்ள முகமலர்ந்து

சேரவரும் தொண்டருடன்
திருப்பட்டீச் சரம்அணைந்தார். **#2293**
நிலத்தின் மீது தொண்டர்களுடன் வருகின்ற பிள்ளையார்,
பாம்புகளையே மாலையாகச் சூடிய இறைவர் அளித்த பெருங்கருணைத்
திறத்தைப் போற்றிய வண்ணமே, அன்பு நிறைந்த உள்ளம் களிப்புக்
கொள்ள எதிர்கொள்ளும் பொருட்டு முகமலர்ந்து வருகின்ற
திருத்தொண்டர்களுடன் திருப்பட்டீச்சரத்தை அடைந்தனர்.

விளக்கவுரை

****

சென்றணைந்து திருவாயில்
புறத்திறைஞ்சி உள்புக்கு
வென்றிவிடை யவர்கோயில்
வலங்கொண்டு வெண்கோட்டுப்
பன்றிகிளைத் தறியாத
பாததா மரைகண்டு
முன்தொழுது விழுந்தெழுந்து
மொழிமாலை போற்றிசைத்தார். **#2294**
சென்று சேர்ந்து வாயிலின் வெளியில் வணங்கி, உள்ளே புகுந்து,
வெற்றி பொருந்திய ஆனேற்றை ஊர்தியாக உடைய சிவபெருமானின்
திருக்கோயிலை வலம் வந்து, வெள்ளைக் கொம்பு டைய பன்றி
உருவெடுத்த திருமால் நிலத்தைத் தோண்டியும் காண இயலாத
திருவடித் தாமரைகளைக் கண்டு, திருமுன்பு வணங்கி, நிலத்தில் வீழ்ந்து
எழுந்து சொல்மாலை கொண்டு போற்றினார்.

விளக்கவுரை

இறைவன் திருமுன்பு அருளிய பதிகம் `பாடல்மறை' *(தி.3 ப.73)* எனத்
தொடங்கும் சாதாரிப் பண்ணில் அமைந்த பதிகமாகும்.

அருள்வெள்ளத் திறம்பரவி
அளப்பரிய ஆனந்தப்
பெருவெள்ளத் திடைமூழ்கிப்
பேராத பெருங்காதல்
திருவுள்ளப் பரிவுடனே
செம்பொன்மலை வல்லியார்
தருவள்ளத் தமுதுண்ட
சம்பந்தர் புறத்தணைந்தார். **#2295**
திருக்கருணைப் பெருக்கின் திறத்தைப் போற்றி அதனால்
அளவிடற்கரிய இன்ப வெள்ளத்தில் திளைத்து, மாறாத பெருங்காதல்

கொண்ட உளம் பெருகிய அன்புடன், செம்பொன் மலையரசனின் மகளாரான உமையம்மையார், பொற்கிண்ணத்தில் தந்தருளிய ஞான அமுது உண்டருளிய பிள்ளையார் திருக்கோயில் புறத்தே அடைந்தார்.

விளக்கவுரை

****

அப்பதியில் அமர்கின்ற
ஆளுடைய பிள்ளையார்
செப்பருஞ்சீர்த் திருவாறை
வடதளியில் சென்றிறைஞ்சி
ஒப்பரிய தமிழ்பாடி
உடனமரும் தொண்டருடன்
எப்பொருளு மாய்நின்றார்
இரும்பூளை எய்தினார். **#2296**

அப்பதியில் விரும்பி எழுந்தருளிய ஆளுடைய பிள்ளையார் சொலற்கரிய சிறப்பினையுடைய பழையாறைவடதளி யில் சென்று வணங்கி, ஒப்பில்லாத தமிழ்ப் பதிகத்தைப் பாடித் தாம் உடனாய் விரும்பிய தொண்டர்களுடனே எல்லாப் பொருள்களுமாய் நின்ற சிவபெருமானின் `திருவிரும்பூளையினை' அடைந்தார்.

விளக்கவுரை

பழையாறை வடதளியில் அருளிய பதிகம் கிடைத்திலது.

தேவர்பிரா னமர்ந்ததிரு
இரும்பூளை சென்றெய்தக்
காவணநீள் தோரணங்கள்
நாட்டியுடன் களிசிறப்பப்
பூவணமா லைகள்நாற்றிப்
பூரணபொற் குடநிரைத்தங்கு
யாவர்களும் போற்றிசைப்பத்
திருத்தொண்டர் எதிர்கெண்டார். **#2297**

பிள்ளையார், தேவர்களின் தலைவரான சிவபெருமான் விரும்பி வீற்றிருக்கும் திருவிரும்பூளையினைச் சென்றடையப் பந்தல்களைத் தோரணங்களுடன் நிறுத்திப் பெருகிய மகிழ்ச்சி ஓங்குதலால் நிறம்பொருந்திய மலர்களால் அமைந்த அழகிய பெரிய மாலைகளைத் தொங்கவிட்டு, நீர்நிறைந்த குடங்களை நிரல்பட அமைத்து, அனைவரும் போற்றத் தொண்டர்கள் அங்கு எதிர் கொண்டனர்.

விளக்கவுரை

****

வண்டமிழின் மொழிவிரகர்
மணிமுத்தின் சிவிகையினைத்
தொண்டர்குழாத் தெதிர்இழிந்தங்
கவர்தொழத்தா முந்தொழுதே
அண்டர்பிரான் கோயிலினை
அணைந்திறைஞ்சி முன்நின்று
பண்டரும்இன் னிசைப்பதிகம்
பரம்பொருளைப் பாடுவார். #2298

வளம் பொருந்திய தேவாரத் தமிழையருளும், முகனமர்ந்து இன்சொற்களைப் பேசும் தலைவரான பிள்ளையார், அழகிய முத்துச் சிவிகையினின்றும் தம்மை எதிர்கொண்டு வரவேற்ற தொண்டர் கூட்டத்தின் எதிரே இறங்கி, அவர்கள் தம்மை வணங்கத் தாமும் அவர்களை வணங்கி, தேவர் தலைவரின் திருக்கோயிலை அடைந்து, வணங்கித் திருமுன் நின்று, பண்ணிசையை வெளிப்படுத் தும் இனிய இசையுடைய திருப்பதிகத்தால், மேலாய பொருளான இறைவரைப் பாடுவாராய்,

விளக்கவுரை

****

நிகரிலா மேருவரை
அணுவாக நீண்டானை
நுகர்கின்ற தொண்டர்தமக்
கமுதாகி நொய்யானைத்
தகவொன்ற அடியார்கள்
தமைவினவித் தமிழ்விரகர்
பகர்கின்ற அருமறையின்
பொருள்விரியப் பாடினார். #2299

ஒப்பற்ற பெரிய மேருமலையும் ஓர் அணுவாகு மாறு நீண்ட பெருமையுடையவராகியும், துய்ப்பனவும், உய்ப்பனவும் எல்லாம் தாமேயாகத் துய்க்கின்ற தொண்டர்களுக்கு அமுதமாயும் எளியராயும் விளங்கி நிற்கும் அம்மேலாய பொருளைத் தகுதி மிக்க அடியவரை வினவும் தன்மையில், தமிழ் வல்லுநரான பிள்ளையார், சொல்லப்படுகின்ற அரிய மறைகளின் உட்பொருள் விளங்கப் பாடினர்.

விளக்கவுரை

திருஇரும்பூளையில் பாடியருளிய பதிகம் `சீரார் கழலே' எனத் தொடங்கும் இந்தளப் பண்ணில் அமைந்த பதிகமாகும். இப்பதிகம் முழுவதும் அடியவர்களிடம் பலபட அமைந்த வினாக்க ளைக் கேட்டு

மகிழும் வினவுரைப் பதிகமாக அமைந்துள்ளது.

பாடும் அரதைப்பெரும்
பாழியே முதலாகச்
சேடர்பயில் திருச்சேறை
திருநாலூர் குடவாயில்
நாடியசீர் நறையூர்தென்
திருப்புத்தூர் நயந்திறைஞ்சி
நீடுதமிழ்த் தொடைபுனைந்தந்
நெடுநகரில் இனிதமர்ந்தார். **#2300**

போற்றப் பெறுகின்ற `அரதைப் பெரும்பாழி' முதலாக அறிவுடையவர்கள் வாழ்கின்ற `திருச்சேறையும்', `திரு நாலூரும்', `திருக்குடவாயிலும்', சிறப்புகள் பலவும் தாமே நாடி வருதற் குரிய `திருநறையூரும்', `தென் திருப்புத்தூரும்' ஆகிய இப்பதிகளை விருப்புடன் வழிபட்டு, நீண்ட தமிழ் மாலைகளைப் பாடி, அத்தென் திருப்புத்தூரில் இனிதே வீற்றிருந்தார் பிள்ளையார்.

விளக்கவுரை

இப்பதிகளில் அருளிய பதிகங்கள்: பதியின் பெயர் பாட்டுமுதற்குறிப்பு பண் அரதைப்பெரும்பாழி பைத்தபாம்போடரை கொல்லி - *தி.3 ப.30* திருச்சேறை முறியுறு சாதாரி - *தி.3 ப.86* திருநாலூர்மயானம் பாலூரும் *சீகாமரம் - தி.2 ப.46* திருக்குடவாயில் *1.*திகழுந்திருமாலொடு இந்தளம் - *தி.2 ப.22 2.*கலைவாழும் காந்தாரம் - *தி.2 ப.58* திருநறையூர்ச்சித்தீச்சரம் *1.*ஊருலாவு தக்கராகம் - *தி.1 ப.29 2.*பிறைகொள்சடையர் தக்கேசி - *தி.1 ப.71 3.*நேரியனாகும் பியந்தைக் - *தி.2 ப.87* காந்தாரம் தென் திருப்புத்தூர் மின்னும் சடைமேல் காந்தாரம் - *தி.2 ப.63* திருஅரதைப்பெரும்பாழி இதுபொழுது அரித்துவாரமங்க லம் என வழங்கப்பெறுகிறது. திருநாலூர்மயானம், திருநாலூர் எனவும், நாலூர் மயானம் எனவும் இரு பதிகளாகவுள்ளன. இப்பதி கம் நாலூர் மயானத்திற்குரிய பதிகமாகும். குடவாயில், குடவாசல் என வழங்கப்படுகிறது. திருநறையூர் - பதியின் பெயர். சித்தீச்சரம் - திருக்கோயிலின் பெயர். தென்திருப்புத்தூர், அரிசில்கரைப்புத்தூர் என வழங்கப்பெறுகிறது.

அங்கண்இனி தமருநாள்
அடல்வெள்ளே னத்துருவாய்ச்
செங்கண்நெடு மால்பணியும்
சிவபுரத்துச் சென்றடைந்து
கங்கைசடைக் கரந்தவர்தங்
கழல்வணங்கிக் காதலினால்
பொங்குமிசைத் திருப்பதிகம்

முன்நின்று போற்றிசைத்தார். #2301
அவ்வரிசில்கரைப் புத்தூரில் பிள்ளையார் எழுந்தருளியிருந்த பொழுது, வன்மையுடைய வெண்மையான பன்றி வடிவைக் கொண்ட சிவந்த கண்களையுடைய திருமால் வணங்கும் சிவபுரத்திற்குச் சென்று, கங்கையைச் சடையில் அடக்கிய இறைவரின் திருவடிகளை வணங்கி, மிக்க விருப்பத்தால் இசை பெருகும் திருப்பதிகங்களைத் திருமுன்பு நின்று பாடினார்.

விளக்கவுரை

இப்பதியில் அருளிய பதிகங்கள் மூன்று. *1.* புவம்வளி *: தி.1* ப*.21 -* நட்டபாடை *2.* இன்குரல் *: தி.1* ப*.112 -* வியாழக்குறிஞ்சி *3.* கலைமலி *: தி.1* ப*.125 -* வியாழக்குறிஞ்சி

போற்றிசைத்துப் புனிதரருள்
பெற்றுப்போந்து எவ்வுயிரும்
தோற்றுவித்த அயன்போற்றுந்
தோணிபுரத் தந்தணனார்
ஏற்றுமிசை ஏற்றுகந்த
இறைவர்தமை ஏத்துதற்கு
நாற்றிசையோர் பரவுதிருக்
குடமூக்கு நண்ணினார். #2302

போற்றி, இறைவரின் திருவருளைப் பெற்று, எவ்வுயிர்களையும் இறைவரின் ஆணையின் வண்ணம் பிறவியில் புகுத்தும் நான்முகன் வணங்கும் திருத்தோணிபுரத்தில் தோன்றிய பிள்ளையார், ஆனேற்றின் மீது வருதலை விரும்பிய இறைவரைப் போற்றுதற்காக, நாற்றிசையில் உள்ளவரும் வணங்கும் திருக்குட மூக்கை அடைந்தார்.

விளக்கவுரை

****

தேமருவு மலர்ச்சோலைத்
திருக்குடமூக் கினிற்செல்வ
மாமறையோர் பூந்தராய்
வள்ளலார் வந்தருளத்
தூமறையின் ஒலிபெருகத்
தூரியமங் கலமுழங்கக்
கோமுறைமை எதிர்கொண்டு
தம்பதியில் கொடுபுக்கார். #2303

தேன் பொருந்திய மலர்கள் நிறைந்த திருக்குட மூக்கினில் வாழ்கின்ற செல்வப் பெருமறையோர், காழி வள்ளலார் ஆகிய பிள்ளையாரை

மறையொலி பெருகவும், மங்கல இயங்கள் ஒலிக்கவும், மன்னரை எதிர் கொள்ளும் முறையில் எதிர் கொண்டு, தம் பதியினிடத்து அழைத்துச் சென்றனர்.

விளக்கவுரை

****

திருஞான சம்பந்தர்
திருக்குடமூக் கினைச்சேர
வருவார்தம் பெருமானை
வண்டமிழின் திருப்பதிகம்
உருகாநின் றுளமகிழக்
குடமூக்கை உகந்திருந்த
பெருமான்எம் இறையென்று
பெருகிசையால் பரவினார். **#2304**

திருக்குடமூக்கினைச் சேர வருபவரான திருஞான சம்பந்தர், தம் இறைவரை வளமையுடைய தமிழ்ப் பதிகத்தால் உள்ளம் உருகி மகிழத் திருக்குடமூக்கை உவந்து விரும்பி வீற்றிருந்த பெரு மான் எம் இறைவர் என்று பெருகிய இசையால் பாடினார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகம் `அரவிரி' *(தி.3 ப.59)* எனத் தொடங்கும் பஞ்சமப் பண்ணிலமைந்த பதிகமாகும். பாடல் தொறும் `குடமூக்கை உவந்திருந்த பெருமான் எம்மிறை' என நிறைவு பெறுதலின், அக்குறிப்பினை எடுத்து மொழியலானார் ஆசிரியர்.

வந்தணைந்து திருக்கீழ்க்கோட்
டத்திருந்த வான்பொருளைச்
சிந்தைமகிழ் வுறவணங்கித்
திருத்தொண்ட ருடன்செல்வார்
அந்தணர்கள் புடைசூழ்ந்து
போற்றிசைப்ப அவரோடும்
கந்தமலர்ப் பொழில்சூழ்ந்த
காரோணஞ் சென்றடைந்தார். **#2305**

மேற்கூறியவாறு போற்றி வந்து, திருக்கீழ்க் கோட் டத்தில் வீற்றிருந்த இறைவரை மனம் மகிழ வணங்கித் தொண்டர் கூட்டத்துடன் செல்பவரான சம்பந்தர், அந்தணர்கள் சூழப் போற்றி வர, அவரோடும் கூடி, மணம் பொருந்திய பூஞ்சோலைகள் சூழ்ந்த திருக்காரோணத்தைச் சென்று அடைந்தார். கு-ரை: திருக்குடந்தைக் கீழ்க்கோட்டத்தில் அருளிய பதிகம் கிடைத்திலது.

விளக்கவுரை

****

பூமருவும் கங்கைமுதல்
புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந்தான் ஆடுதற்கு
வந்துவழி படுங்கோயில்
தூமருவு மலர்க்கையால்
தொழுதுவலங் கொண்டணைந்து
காமர்கெட நுதல்விழித்தார்
கழல்பணிந்து கண்களித்தார். **#2306**

மலர்கள் பொருந்திய கங்கை முதலான தூய நதிகள் பலவும், தத்தம் இடங்களிலிருந்து இப்பதியிலுள்ள குளத்தில் மாமகத்தன்று ஆடும் பொருட்டாக வந்து வழிபடுகின்ற பெருமை உடைய அக்கோயிலைத் தூய்மையான மலர்போன்ற கைகளால் தொழுது, வலம் வந்து, மன்மதனை நெற்றிக் கண்ணால் எரித்த இறை வரின் திருவடிகளை வணங்கிக் கண்டுகளித்தனர்.

விளக்கவுரை

`தாவி முதற் காவிரிநல் யமுனை கங்கை சரசுவதி பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்க் கோவியொடு குமரிவரு தீர்த்தம் சூழ்ந்த குடந்தைக் கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே' *(தி.6 ப.75 பா.10)* எனவரும் அப்பர் அடிகளின் திருவாக்கை யுளங்கொண்டு ஆசிரியர் சேக்கிழார் இப்பாடலை அருளிச் செய்துள்ளார்.

கண்ணாரும் அருமணியைக்
காரோணத் தாரமுதை
நண்ணாதார் புரமெரித்த
நான்மறையின் பொருளானைப்
பண்ணார்ந்த திருப்பதிகம்
பணிந்தேத்திப் பிறபதியும்
எண்ணார்ந்த சீரடியா
ருடன்பணிவுற் றெழுந்தருளி. **#2307**

கண்ணகத்தே நின்று களிதரும் அரிய மணி போன்றவரும், திருக்குடந்தைக் காரோணத்தில் எழுந்தருளியிருக்கும் அமுதம் போன்றவரும், பகைவரின் முப்புரங்களை எரித்த நான்மறை களின் பொருளாக விளங்குபவருமான இறைவரை வணங்கிப் பண்ணமைந்த திருப்பதிகத்தைப் பாடிப் பணிந்து, போற்றிப் பிற பதிகளையும் வணங்க எண்ணி, எண்ணிறந்த அடியவர்களுடன் பணிந்து, அங்கிருந்து

மேற்செல்வார்.

விளக்கவுரை

திருக்குடந்தைக் காரோணத்தில் அருளிய பதிகம் `வாரார் கொங்கை' *(தி.1 ப.72)* எனத் தொடங்கும் தக்கேசிப் பண்ணிலமைந்த பதிகமாகும். பிறபதிகள் என்றது திருக்குடமூக்கில் உள்ள பிற திருக்கோயில்களான, திருக்கருக்குடி, திருக்கொட்டையூர், திருக்கலயநல்லூர் முதலியனவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். திருக்கருக்குடியில் அருளிய பதிகம் `நனவிலும் கனவிலும்' *: (தி.3 ப.21)* எனத் தொடங்கும் காந்தாரபஞ்சமப் பண்ணிலமைந்ததாகும். பிற பதிகளின் பதிகங்கள் எவையும் கிடைத்தில.

திருநாகேச் சரத்தமர்ந்த
செங்கனகத் தனிக்குன்றைக்
கருநாகத் துரிபுனைந்த
கண்ணுதலைச் சென்றிறைஞ்சி
அருஞானச் செந்தமிழின்
திருப்பதிகம் அருள்செய்து
பெருஞான சம்பந்தர்
பெருகார்வத் தின்புற்றார். **#2308**

திருநாகேச்சரத்தில் வீற்றிருக்கும் செம்பொன் மலை போன்ற கரிய யானையின் தோலைப் போர்த்துக் கொண்ட பெருமானை வணங்கி, அரிய ஞானம் விளங்கும் செந்தமிழின் இனிய திருப்பதிகத்தைப் பாடி அருள் செய்து, பெருகும் அன்பினால் இன்பம் ஆர்ந்திருந்தார்.

விளக்கவுரை

இப்பதியில் இதுபொழுது அருளிய பதிகம் `தழை கொள்' *(தி.2 ப.119)* எனத் தொடங்கும் செவ்வழிப் பண்ணில் அமைந்த பதிகமாகும். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

மாநாகம் அருச்சித்த
மலர்க்கமலத் தாள்வணங்கி
நாணாளும் பரவுவார்
பிணிதீர்க்கும் நலம்போற்றிப்
பானாறும் மணிவாயர்
பரமர்திரு விடைமருதில்
பூநாறும் புனற்பொன்னித்
தடங்கரைபோய்ப் புகுகின்றார். **#2309**

ஆதிசேடன் வழிபட்ட தாமரை போன்ற திருவடிகளை வணங்கி, நாளும் வணங்குபவர்களின் பிணிகளைப் போக்கும் நன்மையினைப் போற்றி,

ஞானப்பாலமுதின் மணம் கமழும் திருவாயினையுடைய பிள்ளையார், மலர்கள் மலர்ந்து மணம் வீசும் காவிரியின் வடகரை வழியாகச் சென்று, இறைவரின் `திருவிடை மருதூரில்' புகுகின்றவர்,

விளக்கவுரை

திருநாகேச்சரத்தில் பாடிய பதிகம் `பொன்னேர் தரு' *(தி.2 ப.24)* எனத் தொடங்கும் இந்தளப் பண்ணிலமைந்த பதிகமாகும். `வல்வினை மாய்ந்தறும்' இன்புறும் என்பனவாகிய குறிப்பு கள் அமைந்திருத்தலின், `நாள் நாளும் பரவுவார் பிணி தீர்க்கும் நலம் போற்றி' என்றார்.

ஓங்குதிருப் பதிகம்ஓ
டேகலன்என் றெடுத்தருளித்
தாங்கரிய பெருமகிழ்ச்சி
தலைசிறக்குந் தன்மையினால்
ஈங்கெனையா ளுடையபிரான்
இடைமரு தீதோஎன்று
பாங்குடைய இன்னிசையால்
பாடிஎழுந் தருளினார். **#2310**

உயர்ந்த திருப்பதிகத்தை `ஓடேகலன்' எனத் தொடங்கித் தாங்குதற்கரிய மகிழ்ச்சி மேன்மேலும் பெருகுதலால், `இங்கு என்னை ஆளுடைய இறைவர் வீற்றிருக்கும் திருவிடைமருது இதுதானோ?' என்ற கருத்துடன் நல்ல இயல்புடைய இசை பொருந்தப் பாடி அந்தப் பதியினுள் புகுந்தார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளியது `ஓடேகலன்' *(தி.1 ப.32)* எனும் தொடங்கும் தக்கராகப் பண்ணிலமைந்த பதிகமா கும். பாடல்தொறும் `இடைமருது ஈதோ' என வரும் தொடர் அமைந்து இருத்தலின் அதனை ஆசிரியர் குறிப்பிடுவாராயினர். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அடியவர்கள் எதிர்கொள்ள
எழுந்தருளி அங்கணைந்து
முடிவில்பரம் பொருளானார்
முதற்கோயில் முன்னிறைஞ்சிப்
படியில்வலங் கொண்டுதிரு
முன்பெய்திப் பார்மீது
நெடிதுபணிந் தெழுந்தன்பு
நிறைகண்ணீர் நிரந்திழிய. **#2311**

அப்பதியிலுள்ளார் எதிர்கொள்ளச் சென்று, அப்பதியை அடைந்து, நிலைபெற்ற பரம்பொருளான இறைவரின் பெருங்கோயிலை முன்னே வணங்கி, வலம் வந்து, திருமுன்பு அடைந்து, தரையில் விழுந்து அன்பு

நிறைவதால் பொழியும் கண்ணீர் இடையறாது வழிய,

விளக்கவுரை

****

பரவுறுசெந் தமிழ்ப்பதிகம்
பாடிஅமர்ந் தப்பதியில்
விரவுவார் திருப்பதிகம்
பலபாடி வெண்மதியோ
டரவுசடைக் கணிந்தவர்தம்
தாள்போற்றி ஆர்வத்தால்
உரவுதிருத் தொண்டருடன்
பணிந்தேத்தி உறையுநாள். **#2312**

இறைவரைப் போற்றுகின்ற செந்தமிழ்ப் பதிகம் பாடி, விருப்பத்துடன் அப்பதியில் இருந்தருளும் சம்பந்தர், மேலும் பல திருப்பதிகங்களையும் பாடி, வெண்மையான பிறைச் சந்திரனுடன் பாம்பையும் சடையில் அணிந்த பெருமானாரின் திருவடிகளைப் போற்றி, உறைப்புடைய திருத்தொண்டர்களுடன் இறைவரை வணங் கிப் போற்றி, அன்பு மிகுதியால் அங்குத் தங்கியிருந்த காலத்தில்,

விளக்கவுரை

இறைவரின் திருமுன்பு அருளிய பதிகம் `பொங்கு நூல்' எனத் தொடங்கும் காந்தாரப் பண்ணிலமைந்த பதிகமாகும். மேலும் இப்பதியில் அருளிய பதிகங்கள் நான்குள்ளன. அவை*: 1. `தோடோர்' : தி.1 ப.95 - குறிஞ்சி 2. `மருந்தவன்' : தி.1 ப.110 - வியாழக்குறிஞ்சி 3. `நடை மரு' : தி.1 ப.121 - வியாழக்குறிஞ்சி 4. `விரிதரு' : தி.1 ப.122 -* வியாழக்குறிஞ்சி

மருங்குளநற் பதிகள்பல
பணிந்துமா நதிக்கரைபோய்க்
குரங்காடு துறையணைந்து
குழகனார் குரைகழல்கள்
பெருங்காத லால்பணிந்து
பேணியஇன் னிசைபெருக
அருங்கலைநூல் திருப்பதிகம்
அருள்செய்து பரவினார். **#2313**

அருகில் உள்ள பலபதிகளையும் வணங்கிக் காவிரிப் பெருங்கரை வழியே சென்று, திருத்தென்குரங்காடுதுறை யினைச் சேர்ந்து, இறைவரின் ஒலிக்கும் கழல் பூண்ட திருவடிகளைப் பெருங் காதலால் வணங்கி, விரும்பிய இனிய இசை பெருகவுள்ள அரிய கலை நூல்களின்

பொருள்களை விரிக்கும் திருப்பதிகத்தைப் பாடி வணங்கினார்.

விளக்கவுரை

தென்குரங்காடுதுறையில் அருளிய பதிகம் `பரவக் கெடும்' *(தி.2 ப.35)* எனத் தொடங்கும் இந்தளப் பண்ணில் அமைந்த பதிகமாகும். `மருங்குள நற்பதிகள்' என்பன இன்னவென அறிதற் கியன்றிலது. இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

அம்ம லர்த்தடம் பதிபணிந்
தகன்றுபோந் தருகு
மைம்ம லர்க்களத் திறைவர்தங்
கோயில்கள் வணங்கி
நம்ம லத்துயர் தீர்க்கவந்
தருளிய ஞானச்
செம்ம லார்திரு ஆவடு
துறையினைச் சேர்ந்தார். **#2314**

அழகிய தாமரை மலர்கள் நிறைந்த குளங்களை உடைய அத்திருப்பதியை வணங்கிப் பின், அதனின்றும் நீங்கிச் சென்று அருகிலுள்ள கருநிறக்கண்டத்தையுடைய இறைவரின் கோயில்களை வணங்கி, நம் பாசத்துன்பங்களை நீக்குவதற்கென்றே தோன்றிய ஞானச் செம்மலாம் சம்பந்தர், திருவாவடுதுறையைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

இறைவரின் கோயில்கள் என்றது சாத்தனூர் முதலா யினவாகலாம்.

மூவ ருக்கறி வரும்பொரு
ளாகிய மூலத்
தேவர் தந்திரு வாவடு
துறைத்திருத் தொண்டர்
பூவ லம்புதண் பொருபுனல்
தடம்பணைப் புகலிக்
காவ லர்க்கெதிர் கொள்ளும்ஆ
தரவுடன் கலந்தார். **#2315**

அயன் முதலிய மூவர்க்கும் அறிதற்கு அரிய மூலப் பொருளாய தேவரான சிவபெருமானின் திருவாவடுதுறையில் வாழ்கின்ற தொண்டர்கள், மலர்களை வாரிக் கொண்டு பொங்கி வரும் குளிர்ந்த அலைகளையுடைய நீர் நிரம்பிய பொய்கைகளையும் வயல்களையும் உடைய சீகாழித் தலைவரான பிள்ளையாரை எதிர் கொள்வதற்கென மிக்குப் பெருகும் அன்புடனே வந்து சேர்ந்தனர்.

விளக்கவுரை

திருமூல நாயனார் வழிபட்ட குறிப்பும் தோன்றத் திருவாவடுதுறைப் பெருமானை `மூலத்தேவன்' என்றார் ஆசிரியர் சேக்கிழார்.

வந்த ணைந்தவர் தொழாமுனம்
மலர்புகழ்ச் சண்பை
அந்த ணர்க்கெலாம் அருமறைப்
பொருளென வந்தார்
சந்த நித்திலச் சிவிகைநின்
றிழிந்தெதிர் தாழ்ந்தே
சிந்தை இன்புற இறைவர்தங்
கோயில்முன் சென்றார். #2316

அங்ஙனம் வந்த தொண்டர்கள் தம்மை வணங்கு வதற்கு முன்னம், விரியும் புகழையுடைய சீகாழி அந்தணர்களுக்கு எல் லாம் அரிய மறையின் பொருளாக உள்ளவர் இவர் என்று தியானப் பொருளாகக் கொள்ளும்படி தோன்றிய பிள்ளையார், அழகான முத் துச் சிவிகையினின்றும் இறங்கி, அவர்களின் எதிரில் வணங்கிப் பின், மனம் இன்பம் அடைய இறைவரின் திருக்கோயில் முன் சென்றார்.

விளக்கவுரை

****

நீடு கோபுரம் இறைஞ்சியுள்
புகுந்துநீள் நிலையான்
மாடு சூழ்திரு மாளிகை
வலங்கொண்டு வணங்கி
ஆடும் ஆதியை ஆவடு
துறையுள்ஆர் அமுதை
நாடு காதலில் பணிந்தெழுந்
தருந்தமிழ் நவின்றார். #2317

உயர்ந்த கோபுரத்தை வணங்கி, உட்சென்று நீண்ட வரிசையாக அருகில் சுற்றிலும் உள்ள மாளிகையை வலமாக வந்து வணங்கி, அருட்பெருங் கூத்தை இயற்றுகின்ற ஆதிமூர்த்தியும், திருவாவடுதுறையுள் எழுந்தருளியுள்ள நிறைந்த அமுதம் போன்ற வருமான இறைவரை, நாடும் பேரன்பினால் வணங்கி எழுந்து அரிய தமிழால் திருப்பதிகத்தைப் பாடினார்.

விளக்கவுரை

இவ்வருந் தமிழ்ப்பதிகம் கிடைத்திலது.

அன்பு நீடிய அருவிகண்
பொழியும்ஆர் வத்தால்

முன்பு போற்றியே புறம்பணை
முத்தமிழ் விரகர்
துன்பு போமனத் திருத்தொண்டர்
தம்முடன் தொழுதே
இன்பம் மேவிஅப் பதியினில்
இனிதமர்ந் திருந்தார். **#2318**

அன்பால் பெருகிய கண்ணீர் அருவிபோல் பொழிகின்ற ஆர்வத்தால், திருமுன்பு போற்றி, பின்பு வெளியே வந்த பிள்ளையார், துன்பம் இல்லாத உள்ளம் கொண்ட தொண்டர்களுடன் தொழுது, இன்பம் பொருந்த அப்பதியில் இனிதாய் விரும்பி வீற்றிருந்தார்.

விளக்கவுரை

****

மேவி அங்குறை நாளினில்
வேள்வி செய்வதனுக்
காவ தாகிய காலம்வந்
தணைவுற அணைந்து
தாவில் சண்பையர் தலைவர்க்குத்
தாதையார் தாமும்
போவ தற்கரும் பொருள்பெற
எதிர்நின்று புகன்றார். **#2319**

விரும்பி, அத்திருப்பதியில் வீற்றிருக்கும் காலத் தில், வேள்வி செய்வதற்குரிய காலம் வந்து சேர, குற்றம் இல்லாத சீகாழியின் தலைவரான பிள்ளையாரிடம் வந்து, தந்தையாரான சிவபாத இருதயரும் விடைபெற்றுச் சீகாழிக்குச் செல்லும் பொருட்டு, வேள்வி செய்தற்குரிய பொருளைப் பெறுதல் வேண்டும் என்று அவரிடத்துக் கூறினார்.

விளக்கவுரை

****

தந்தை யார்மொழி கேட்டலும்
புகலியார் தலைவர்
முந்தை நாளிலே மொழிந்தமை
நினைந்தருள் முன்னி
அந்த மில்பொரு ளாவன
ஆவடு துறையுள்
எந்தை யார்அடித் தலங்கள்
அன்றோஎன எழுந்தார். **#2320**

தம் தந்தையாரின் சொல்லைக் கேட்டதும் சீகாழித் தலைவரான

பிள்ளையார், முன் நாளில் கூறியதையும் நினைவு கூர்ந்து, திருவருளை எண்ணி, `அந்தம் இல்லாத பொருளாய் உள்ளவை எம் இறைவரின் திருவடிகளே அல்லவோ?' என்று மனத்துள் எண்ணி எழுந்தார்.

விளக்கவுரை

முன்நாளில் கூறியது `இருமைக்கும் இன்பம் அளிக்கும் யாகமும் யான்செயவேண்டும்' *(பா.278)* என்பதாகும்.

சென்று தேவர்தம் பிரான்மகிழ்
கோயில்முன் பெய்தி
நின்று போற்றுவார் நீள்நிதி
வேண்டினார்க் கீவ
தொன்றும் மற்றிலேன் உன்னடி
அல்லதொன் றறியேன்
என்று பேரருள் வினவிய
செந்தமிழ் எடுத்தார். **#2321**

பிள்ளையார் தேவ தேவரான இறைவர் மகிழும் கோயிலில் சென்று, திருமுன்பு நின்று வணங்குபவராகி, `பெருஞ் செல்வம் வேண்டிய தந்தையார்க்கு ஈவதற்கு என்னிடம் ஒரு பொருளும் இல்லை, பொருளாகும் உன் திருவடியன்றி வேறொன்றும் அறியேன்?' என்று இறைவரின் பேரருளை வினவிய கருத்துடைய செந்தமிழ்ப் பதிகத்தைத் தொடங்கிப் பாடலானார்.

விளக்கவுரை

****

எடுத்த வண்டமிழ்ப் பதிகநா
லடியின்மே லிருசீர்
தொடுத்த வைப்பொடு தொடர்ந்தஇன்
னிசையினால் துதிப்பார்
மடுத்த காதலில் வள்ளலார்
அடியிணை வழுத்தி
அடுத்த சிந்தையால் ஆதரித்
தஞ்சலி அளித்தார். **#2322**

தொடங்கி வளம் கொண்ட தமிழ்ப் பதிகத்தை நான்கடியின் மேலும் இரண்டு அடிகள் தொடுத்த மேல் வைப்பாய்த் தொடர்பு பெற அமைத்த இனிய இசைப் பதிகத்தால் வணங்குபவராய், நிரம்பக் கொண்ட காதலால், வள்ளலாரான இறைவரின் திருவடி களைப் போற்றிப் பொருந்திய சிந்தையால் அன்புமிக்குக் கைகள் கூப்பித் தொழுதார்.

விளக்கவுரை

நான்கடிகளின் மேலும் இரண்டடிகள் வைக்கப் பெற்றிருத்தலின் `நாலடி மேல் வைப்பு' என யாப்பமைவு கூறப் பெறுவதாயிற்று. இப்பதிகம் `இடரினும் தளரினும்' *(தி.3 ப.4)* எனத் தொடங்கும் காந்தார பஞ்சமப் பண்ணில் அமைந்ததாகும். `இதுவோ எமையாளுமாறு ஈவதொன்றெமக் கில்லையேல்' எனப்பாடல் தொறும் வரும் கருத்தை நினைவு கூர்ந்தே ஆசிரியர் `பேரருள் வினவிய செந்தமிழ்' எனக் குறிப்பாராயினர்.

நச்சி இன்தமிழ் பாடிய
ஞானசம் பந்தர்
இச்சை யேபுரிந் தருளிய
இறைவர்இன் னருளால்
அச்சி றப்பருள் பூதமுன்
விரைந்தகல் பீடத்து
உச்சி வைத்தது பசும்பொன்ஆ
யிரக்கிழி யொன்று. **#2323**

விரும்பிய இனிய தமிழ்ப் பதிகத்தைப் பாடிய ஞானசம்பந்தரின் விருப்பப்படியே, முன்பு அருள்செய்த இறைவரின் திருவருளால், அச்சிறப்பை அருளும் சிவபூதம் ஒன்று விரைவில் வந்து, இடம் அகன்ற பலிபீடத்தின் உச்சியின்மேல், ஆயிரம் பசும் பொன் கொண்ட முடிப்பு ஒன்றை வைத்தது.

விளக்கவுரை

கிழி - பொன் முடிப்பு. `கழுமலவூரர்க்கு அம்பொன் ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனாரே' *(தி.4 ப.56 பா.1)* எனவரும் அப்பர் அடிகளின் திருவாக்கு இதற்கு அகச் சான்றாய் அமைகிறது.

வைத்த பூதம்அங் கணைந்துமுன்
நின்றுநல் வாக்கால்
உய்த்த இக்கிழி பொன்னுல
வாக்கிழி உமக்கு
நித்த னாரருள் செய்ததென்
றுரைக்கநேர் தொழுதே
அத்த னார்திரு வருள்நினைந்
தவனிமேற் பணிந்தார். **#2324**

அங்ஙனம் வைத்த அப்பூதம் அங்குப் பிள்ளை யார் முன் நின்று, நல்ல வாக்கினால் பிள்ளையாரை நோக்கி, `வைத்த இம் முடிப்பு பொன்னைக் கொண்டதாகும். எடுக்க எடுக்கக் குறையாத நிதியுமாகும். இறைவர் உமக்கு அருள் செய்தது இது' என்று உரைக் கப், பிள்ளையார் இறைவரை நேராகத் தொழுது, தந்தையாரான பெரு மானின் திருவருளினை நினைந்து நிலத்தில் விழுந்து வணங்கினார்.

விளக்கவுரை

****

பணிந்தெ ழுந்துகை தொழுதுமுன்
பனிமலர்ப் பீடத்
தணைந்த ஆடகக் கிழிதலைக்
கொண்டரு மறைகள்
துணிந்த வான்பொருள் தரும்பொருள்
தூயவாய் மையினால்
தணிந்த சிந்தைஅத் தந்தையார்க்
களித்துரை செய்வார். **#2325**

வணங்கி எழுந்து கைகளைக் கூப்பித் தொழுது, குளிர்ந்த மலர்கள் சூழ்ந்த பலிபீடத்தில் வைக்கப்பட்ட பொன் முடிப்பை எடுத்துத் தலைமீது கொண்டு, அரிய மறைகளால் துணிய நின்ற பெரும் பொருளான இறைவர் அளித்த அப்பொருளைத் தூய வாய்மையால் தணிந்த மனமுடைய தந்தையாருக்குத் தந்து சொல்லலானார்.

விளக்கவுரை

தணிந்த சிந்தை - செருக்கு, சினம் முதலாய அறுவகைக் குற்றங்களும் நீங்க அடங்கிய சிந்தை. இது தூய வாய்மையால் ஆயது. தூய வாய்மை - `அவரவருக்கு உள்ளபடி ஈசனருளாலே.... எல்லாம் சிவன்செயல் என்று எண்' *(சிவபோகசாரம்)* என எண்ணும் வாய்மை.

ஆதிமாமறை விதியினால்
ஆறுசூழ் வேணி
நாத னாரைமுன் னாகவே
புரியுநல் வேள்வி
தீது நீங்கநீர் செய்யவும்
திருக்கழு மலத்து
வேத வேதியர் அனைவரும்
செய்யவும் மிகுமால். **#2326**

`பழமையும் பெருமையும் வாய்ந்த மறைகளில் விதித்த முறைப்படி, கங்கையை முடித்த சடையையுடைய முழுமுதற் பொருளான சிவபெருமானையே தலைமையாகக் கொண்டு செய் கின்ற நல்ல சிவ வேள்வியைத் தீமை நீங்கி இன்பம் அடையும் பொருட்டு நீவிர் செய்திடவும், சீகாழியில் உள்ள மறையவர் அனை வரும் செய்திடவும் குறைவில்லாமல் மிகும்'.

விளக்கவுரை

தந்தையாரை இவ்வாறு செய்க என்று பணிப்பதும் தவறு; தாம்

நினைந்ததைக் கூறாதிருப்பதும் தவறு. இந்நிலையிலே சிவபெருமானை தலைமையாகக் கொண்டு செய்கின்ற வேள்வியைத் தாங்கள் செய்யவும் என்று தொடங்கிக் கூறுவாராயினர். காமியத் தழுந்திச் செத்துப் பிறக்கின்ற தெய்வங்களைத் தலைமையாகக் கொண்டு வேள்வி செய்தல் தக்கதன்று என்பது பிள்ளையாரின் திருவுள்ளமாகும். `எரிபெருக்குவர் அவ்வெரி ஈசனது உருவென அறிகிலார்' *(தி.5 ப.100 பா.7)* என்பது அப்பர் திருவாக்காகும்.

என்று கூறிஅங் கவர்தமை
விடுத்தபின் அவரும்
நன்றும் இன்புறு மனத்தொடும்
புகலிமேல் நண்ண
வென்றி ஞானசம் பந்தரும்
விருப்பொடு வணங்கி
மன்றல் ஆவடு துறையினில்
மகிழ்ந்தினி திருந்தார். **#2327**

என்று கூறி அவ்விடத்தினின்றும் தம் தந்தை யாரை விடைகொடுத்து அனுப்பிய பின்பு, அச்சிவபாத இருதயரும் பெருகும் இன்பம் பெற்றுச் சீகாழியை நோக்கிச் செல்ல, ஞான வெற்றியையுடைய திருஞானசம்பந்தரும் விருப்புடனே வணங்கி, மணம் மிகுந்த திருவாவடுதுறையில் மகிழ்வுடன் இனிதாய் அமர்ந்து இருந்தார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

அண்ண லார்திரு வாவடு
துறையமர்ந் தாரை
உண்ணி லாவிய காதலி
னால்பணிந் துறைந்து
மண்ணெ லாம்உய வந்தவர்
போந்துவார் சடைமேல்
தெண்ணி லாஅணி வார்திருக்
கோழம்பஞ் சேர்ந்தார். **#2328**

திருவாவடுதுறையில் வீற்றிருந்தருளும் இறை வரை உளம் நிறைந்த காதலால் வணங்கி, அங்குத் தங்கி, உலகெலாம் உய்யும் பொருட்டுத் தோன்றிய பிள்ளையார் அங்கிருந்து சென்று, நீண்ட சடையில் தெளிந்த பிறைச்சந்திரனைச் சூடுபவரின் திருக் கோழம்பத்தினைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

****

கொன்றை வார்சடை முடியரைக்
கோழம்பத் திறைஞ்சி
என்றும் நீடிய இன்னிசைப்
பதிகம் முன் இயம்பி
மன்று ளார்மகிழ் வைகல்மா
டக்கோயில் மருங்கு
சென்று சார்ந்தனர் திருவளர்
சிரபுரச் செல்வர். **#2329**

கொன்றை மலரைச் சூடிய நீண்ட சடையை உடைய இறைவரைத் திருக்கோழம்பத்தில் வணங்கி, என்றும் அழி யாது நிலைபெற்றிருத்தற்கு ஏதுவாய இன்னிசை உடைய திருப்பதி கத்தைத் திருமுன்பு நின்று பாடி, பொன்னம்பலம் உடைய இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கும் `திருவைகல் மாடக் கோயிலின்' அருகே முத்திச் செல்வம் வளர்தற்கு இடனான சீகாழித் தலைவர் சென்று அடைந்தார்.

விளக்கவுரை

திருக்கோழம்பத்தில் அருளிய பதிகம், `நீற்றானை' *(தி.2 ப.13)* எனத் தொடங்கும் இந்தளப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

வைகல் நீடுமா டக்கோயில்
மன்னிய மருந்தைக்
கைகள் அஞ்சலி கொண்டுதாழ்ந்
தெழுந்துகண் ணருவி
செய்ய இன்னிசைச் செந்தமிழ்
மாலைகள் மொழிந்து
நையும் உள்ளத்த ராய்த்திர
நல்லத்தில் நண்ணி. **#2330**

வைகலில் நீண்ட மாடக் கோயிலில் பொருந்திய பெருமருந்தான இறைவரைத் தம் கைகள் கூப்பி, விழுந்து வணங்கி, எழுந்து, கண்களினின்றும் நீர் அருவியாய்ச் சொரிய, இனிய இசையை உடைய செந்தமிழ் மாலைகளால் போற்றி, உருகி இளகும் மனத்தை உடையவராகித் `திருநல்லம்' என்ற பதியை அடைந்து,

விளக்கவுரை

திருவைகல் மாடக்கோயிலில் அருளிய பதிகம், `துளமதியுடை' *(தி.3 ப.18)* எனத் தொடங்கும் காந்தார பஞ்சமப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

நிலவு மாளிகைத் திருநல்லம்
நீடுமா மணியை
இலகு சேவடி இறைஞ்சிஇன்

தமிழ்கொடு துதித்துப்
பலவும் ஈசர்தந் திருப்பதி
பணிந்துசெல் பவர்தாம்
அலைபு னல்திரு வழுந்தூர்மா
டக்கோயில் அடைந்தார். **#2331**

நிலைபெற்ற மாளிகைகளைக் கொண்ட திருநல் லத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவரின் விளங்கும் திருவடிகளை வணங்கி, இனிய தமிழ் மாலை பாடி, அருகிலுள்ள திருப்பதிகள் பலவற்றையும் வணங்கிச் செல்லும் பிள்ளையார், அலைகளை உடைய நீர் சூழ்ந்த திருஅழுந்தூர் மாடக் கோயிலைச் சென்றடைந்தார்.

விளக்கவுரை

திருநல்லத்தில் அருளிய பதிகம் `கல்லானிழல்' (தி.1 ப.85) எனத் தொடங்கும் குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகமாகும். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மன்னு மாமடம் மகிழ்ந்தவான்
பொருளினை வணங்கிப்
பன்னு பாடலில் பதிகஇன்
னிசைகொடு பரவிப்
பொன்னி மாநதிக் கரையினில்
மீண்டும்போந் தணைந்து
சொன்ன வாறறி வார்தமைத்
துருத்தியில் தொழுதார். **#2332**

நிலையான மாமடம் என்று திருப்பாட்டினுள் குறிக்கப்பெற்ற கோயிலில் மகிழ்ந்து வீற்றிருக்கின்ற பெரும் பொருள் ஆன இறைவரை, போற்றி ஏத்தும் திருப்பதிகத்தைப் பண்ணுடன் பாடி, வணங்கி, காவிரிக் கரையில் மீளவும் வந்து சேர்ந்து, சொன்னவாறு அறிவாரைத் திருத்துருத்தியில் பிள்ளையார் வணங்கினார்.

விளக்கவுரை

திருவழுந்தூரில் அருளிய பதிகம், `தொழுமாறு' (தி.2 ப.20) எனத் தொடங்கும் இந்தளப் பண்ணில் அமைந்த பதிகமாகும். இப்பதிகத்தில் 5ஆவது பாடல் நீங்கலாக மற்றப் பாடல்களில் எல்லாம் `மாமடம் மன்னினையே' என அருளப் பெறும் நிலைகண்டு, `மன்னுமாமடம் மகிழ்ந்த வான் பொருளினை' என்றார். ஏழாவது பாடலில் `மாநகர்' என்று அருளுகின்றார்.

திரைத்த டம்புனல் பொன்னிசூழ்
திருத்துருத் தியினில்

வரைத்த லைப்பசும் பொன்எனும்
வண்டமிழ்ப் பதிகம்
உரைத்து மெய்யுறப் பணிந்துபோந்
துலவும்அந் நதியின்
கரைக்கண் மூவலூர்க் கண்ணுத
லார்கழல் பணிந்தார். **#2333**

அலைகளையுடைய காவிரி நீர் சூழ்ந்த திருத்துருத்தியில் `வரைத்தலைப் பசும் பொன்' எனத் தொடங்கும் வளமை உடைய திருப்பதிகத்தைப் பாடி, உடல் நிலம் பொருந்தப் பணிந்து, சென்று உலவுகின்ற அக்காவிரி ஆற்றின் கரையில் திருமூவ லூரில் இறைவரை வணங்கினார்.

விளக்கவுரை

`வரைத்தலைப் பசும்பொன்' *(தி.2 ப.98)* எனத் தொடங்கும் பதிகம் நட்டராகப் பண்ணிலமைந்ததாகும்.

மூவ லூருறை முதல்வரைப்
பரவிய மொழியால்
மேவு காதலில் ஏத்தியே
விருப்பொடும் போந்து
பூவ லம்புதண் புனற்பணைப்
புகலியர் தலைவர்
வாவி சூழ்திரு மயிலாடு
துறையினில் வந்தார். **#2334**

மூவலூரில் வீற்றிருக்கும் இறைவரைப் போற்று கின்ற சொற்களால் மிகுந்த விருப்புடன் போற்றி நின்று, காதல் மிக மலர் களைக் கொண்டு வரும் குளிர்ந்த நீரையுடைய வயல்கள் சூழ்ந்த சீகாழித் தலைவரான சம்பந்தர், பொய்கைகள் சூழ்ந்த `மயிலாடு துறைக்கு' வந்தார்.

விளக்கவுரை

மூவலூரில் அருளிய பதிகம் கிடைத்திலது.

மல்கு தண்டலை மயிலாடு
துறையினில் மருவும்
செல்வ வேதியர் தொண்டரோ
டெதிர்கொளச் சென்று
கொல்லை மான்மறிக் கையரைக்
கோயில்புக் கிறைஞ்சி
எல்லை இல்லதோர் இன்பம்முன்
பெருகிட எழுந்தார். **#2335**

நிறைந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த மயிலாடு துறையில் திருவுடை

அந்தணர்கள் தொண்டர்களுடன் சூழ எதிர் கொண்டு நிற்பப் புகுந்து, கொல்லையில் வாழும் மான்கன்றைக் கையில் உடையவரைக் கோயிலுள் புகுந்து வணங்கி, அளவில்லாத ஒப்பற்ற மகிழ்ச்சி பெருக எழுந்தார்

விளக்கவுரை

****

உள்ளம் இன்புற உணர்வுறும்
பரிவுகொண் டுருகி
வெள்ளந் தாங்கிய சடையரை
விளங்குசொற் பதிகத்
தெள்ளும் இன்னிசைத் திளைப்பொடும்
புறத்தணைந் தருளி
வள்ள லார்மற்ற வளம்பதி
மருவுதல் மகிழ்ந்தார். **#2336**

உள்ளத்தில் வைத்து, இன்பம் அடைய, அவ் வுணர்ச்சியுடன் கூடிய அன்பு மிகுதியால் உருகி, கங்கை வெள்ளத் தையுடைய சடையினரான இறைவரையே விளங்கும் சொல் பதிகத் தில் வைத்துப் பாடி, அத்தெளிந்த இனிய இசையுடன் கூடிய மகிழ் வுடன் வெளியே வந்து அவ்வளமுடைய பதியில் மகிழ்ந்து இருந்தார்.

விளக்கவுரை

திருமயிலாடுதுறையில் இறைவரின் திருமுன்பு அரு ளிய பதிகம் `கரவின்றி' *(தி.1 ப.38)* எனத் தொடங்கும் தக்கராகப் பண் ணிலமைந்த பதிகமாகும். இங்கிருந்த நாள்களில் பாடிய பிறிதொரு பதிகம், `ஏனஎயிறு' *(தி.3 ப.70)* எனத் தொடங்கும் சாதாரிப் பண்ணி லமைந்த பதிகமாகும்.

அத்தி ருப்பதி யகன்றுபோய்
அணிகிளர் சூலக்
கைத்த லப்படை வீரர்செம்
பொன்பள்ளி கருதி
மெய்த்த காதலில் விளநகர்
விடையவர் பாதம்
பத்தர் தம்முடன் பணிந்திசைப்
பதிகம்முன் பகர்ந்தார். **#2337**

அத்திருப்பதியினின்றும் நீங்கிச் சென்று, அழகு விளங்கும் சூலப்படையைக் கையில் கொண்ட வீரரான இறைவரின் திருச்செம்பொன்பள்ளியைக் கருதிச் சென்று பணிந்து, மெய்ம்மை யான பெருவிருப்பால் `திருவிளநகரில்' எழுந்தருளிய விடையை உடைய இறைவரின் திருவடிகளை அடியார்களுடனே கூடிப் பணிந்து இசையுடைய திருப்பதிகத்தினைத் திருமுன்பு பாடினார்.

விளக்கவுரை

திருச்செம்பொன்பள்ளியில் அருளிய பதிகம் `மருவார் குழலி' *(தி.1 ப.25)* எனத் தொடங்கும் தக்கராகப் பண்ணிலமைந்த பதிகம் ஆகும். திருவிளநகரில் அருளிய பதிகம் `ஒளிரிளம் பிறை' *(தி.2 ப.78)* எனத் தொடங்கும் காந்தாரப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

பாடும் அப்பதி பணிந்துபோய்ப்
பறியலூர் மேவும்
தோடு லாமலர் இதழியும்
தும்பையும் அடம்பும்
காடு கொண்டசெஞ் சடைமுடிக்
கடவுளர் கருது

நீடு வீரட்டம் பணிந்தனர்
நிறைமறை வேந்தர். #2338

நிறைவான மறைத் தலைவரான பிள்ளையார் முற்கூறியவாறு திருப்பதிகம் பாடிய திருவிளநகர் என்ற அப்பதியை வணங்கிச் சென்று, `திருப்பறியலூரில்' வீற்றிருக்கும் இதழ்களை யுடைய கொன்றையையும் தும்பையையும் கடம்ப மலரையும் அணிந்த சிவந்த சடையையுடைய சிவபெருமான் விரும்பி வீற்றிருக் கும் திருவீரட்டானத்தை அடைந்து வணங்கினார்.

விளக்கவுரை

****

பரமர் தந்திருப் பறியலூர்
வீரட்டம் பரவி
விரவு காதலின் வேலையின்
கரையினை மேவி
அரவ ணிந்தவர் பதிபல
அணைந்துமுன் வணங்கிச்
சிரபு ரத்தவர் திருத்தொண்டர்
எதிர்கொளச் செல்வார். #2339

சிவபெருமானின் திருப்பறியலூர் வீரட்டத்தைப் பணிந்து, பொருந்திய அன்பால் அங்கு நின்றும் கடலின் கரையை அடைந்து, பாம்பை அணிந்த இறைவரின் பல திருப்பதிகளையும் சென்று வணங்கிச் சீகாழித் தலைவரான பிள்ளையார், அங்கங்கும் தொண்டர்கள் சூழ வந்து வரவேற்கச் செல்பவராய்,

விளக்கவுரை

திருப்பறியலூரில் அருளிய பதிகம் `கருத்தன் கடவுள்' (தி.1 ப.134) எனத் தொடங்கும் மேகராகக் குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகமாகும். இங்குப் பதி பல என்றது *திருவிடைக்கழி, திருஅளப்பூர்* முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். பதிகங்கள் எவை யும் கிடைத்தில.

அடியவர்கள் களிசிறப்பத் திருவேட்டக்
குடிபணிந்தங் கலைவாய்ப் போகிக்
கடிகமழும் மலர்ப்பழனக் கழனிநாட்
டகன்பதிகள் கலந்து நீங்கிக்
கொடிமதில்சூழ் தருமபுரம் குறுகினார்
குண்டர்சாக் கியர்தங் கொள்கை
படியறியப் பழுதென்றே மொழிந்துய்யும்
நெறிகாட்டும் பவள வாயர். #2340

அடியவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடையத் திரு வேட்டக்குடியைச் சென்று வணங்கி, அவ்விடத்தினின்றும் கடற்கரை வழியே சென்று மணம் கமழும் மலர்களையுடைய வயல்கள் நிறைந்த சோழநாட்டின் பெரும்பதிகளை அடைந்து, உள்ளம் குளிர வணங்கி, அவற்றினின்றும் நீங்கிச் சமண சாக்கியர்களின் கொள்கைகள் குற்றம் உடையவை என்று உலகம் அறிய எடுத்துக் காட்டி, உய்யும் நெறி யைக் காட்டும் பவள வாயை உடைய பிள்ளையார் கொடிகள் கட்டப் பட்ட மதில்கள் சூழ்ந்த தருமபுரத்தை அடைந்தார்.

விளக்கவுரை

திருவேட்டக்குடியில் அருளிய பதிகம்: `வண்டிரைக் கும்' *(தி.3 ப.66),* பண் - பஞ்சமம். `அகன் பதிகள் கலந்து' என்பதற் கேற்பப் பிள்ளையார் வணங்கிய பதிகள் எவை எனத் தெரிந்தில. இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

தருமபுரம் பெரும்பாணர் திருத்தாயர்
பிறப்பிடமாம் அதனாற் சார
வருமவர்தஞ் சுற்றத்தார் வந்தெதிர்கொண்
டடிவணங்கி வாழ்த்தக் கண்டு
பெருமையுடைப் பெரும்பாணர் அவர்க்குரைப்பார்
பிள்ளையா ரருளிச் செய்த
அருமையுடைப் பதிகந்தாம் யாழினால்
பயிற்றும்பே றருளிச் செய்தார். **#2341**

தருமபுரம் திருநீலகண்டயாழ்ப்பாண நாயனா ரின் தாயாரது பிறப்பிடம் ஆதலால், அப்பதியைச் சாரவரும் அவரு டைய சுற்றத்தார் வந்து எதிர்கொண்டு அவர் திருவடியை வணங்கி வாழ்த்தினார்களாக, அதைப் பார்த்துப் பெருமை பொருந்திய திரு நீலகண்ட யாழ்ப்பாணர் அவர்களுக்குத் தாம் செய்து வரும் பணியை எடுத்துக் கூறுவாராய், ஆளுடைய பிள்ளையார் அருளிய அரிய திருப்பதிகங்களைத் தாம் யாழில் இட்டுப் பயிற்றப் பெற்ற பேற்றை அருளிச் செய்தார்.

விளக்கவுரை

****

கிளைஞரும்மற் றதுகேட்டுக் கெழுவுதிருப்
பதிகத்திற் கிளர்ந்த ஓசை
அளவுபெறக் கருவியில்நீர் அமைத்தியற்றும்
அதனாலே அகில மெல்லாம்
வளரஇசை நிகழ்வதென விளம்புதலும்
வளம்புகலி மன்னர் பாதம்

உளம் நடுங்கிப் பணிந்துதிரு நீலகண்டப்
பெரும்பாணர் உணர்த்து கின்றார். #2342

உறவினரும்அதைக் கேட்டு, பொருந்திய திருப் பதிகத்தில் பொதிந்த ஓசையானது அளவு பெறும்படி யாழாகிய இசைக் கருவியில் நீவிர் பொருந்தும்படி வைத்து வாசிப்பதானால், உலகம் எல்லாம் அவ்விசை வளரும்படி நிகழ்கின்றது எனக் கூறியதும், திருநீலகண்ட யாழ்ப்பாணர் உள்ளம் நடுக்கம் கொண்டு, வளமுடைய சீகாழித் தலைவரான பிள்ளையாரின் திருவடிகளில் விழுந்து வணங் கிச் சொல்வாராய்,

விளக்கவுரை

பிள்ளையார் அருளிவரும் பதிகங்களை யாழிலிட்டு வாசிப்பதால், யாழிசைக்குப் பெருமையாகுமேயன்றி, அப்பதிகங்க ளுக்குப் பெருமையாதல் இல்லை. உண்மை இதுவாகவும் மாறுபடச் சொன்னமையால் உள்ளம் நடுங்கினார். பதிகங்கள் இசைநுட்பம் உடையன மட்டுமன்றி, இறைவனின் பொருள்சேர் புகழையும் பலபட விரித்துரைப்பன. எனவே அப்பதிகங்கள் பெரிதும் போற்றப்படுகின் றன. யாழிசை, கேட்கும் அளவில் நின்றுவிடுவது என்பதை உள்ளவாறு உயர்ந்த நிலையாலும், தம் தன்னடக்கத்தாலும் இவ்வாறு கருதுவராயினர் பெரும்பாணர்.

அலகில்திருப் பதிகஇசை அளவுபடா
வகைஇவர்கள் அன்றி யேயும்
உலகிலுளோ ருந்தெரிந்தங் குண்மையினை
அறிந்துய்ய உணர்த்தும் பண்பால்
பலர்புகழுந் திருப்பதிகம் பாடியரு
ளப்பெற்றால் பண்பு நீடி
இலகுமிசை யாழின்கண் அடங்காமை
யான்காட்டப் பெறுவ னென்றார். #2343

`அளவற்ற திருப்பதிக இசைக் கூறுகளைக் கருவியில் அளவுபடாதவாறு, இவர்களே அன்றி இன்னும் உலகில் உள்ளவரும் அறிந்து அவ்வுண்மையை உணர்ந்து உய்யுமாறு உணர்த்தும் தன்மையினால், பலதிறத்தவரும் புகழும் ஒரு திருப்பதி கத்தைப் பாடியருளுகின்ற பேறுபெறுவேனானால், பண்பினால் நீண்டு விளங்கும் அவ்விசையானது யாழில் அடங்காத நிலையை நான் அவர்க்கு எடுத்துக் காட்டப் பெறுவேன்' என்று பிள்ளையாரிடம் பாணர் விண்ணப்பித்துக் கொண்டார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

வேதநெறி வளர்ப்பவரும் விடையவர்முன்
தொழுதுதிருப் பதிகத் துண்மை
பூதலத்தோர் கண்டத்துங் கலத்தினிலும்
நிலத்தநூல் புகன்ற வேத
நாதவிசை முயற்சிகளால் அடங்காத
வகைகாட்ட நாட்டு கின்றார்
மாதர்மடப் பிடிபாடி வணங்கினார்
வானவரும் வணங்கி ஏத்த. **#2344**

மறைகளின் நெறியை வளர்ப்பவரான பிள்ளை யாரும் ஆனேற்றை ஊர்தியாகக் கொண்ட இறைவர் திருமுன்பு நின்று, திருப்பதிகத்தின் உண்மைத் திறமானது, உலகத்தவரின் மிடற்றிலும் கருவியிலும், உலகினர் மறைவழிவகுத்த இசைநூல்களின் நாத வகை களினாலும் அடங்காத வகையினை அறியக் காட்டுமாறு நிலைநாட்டு பவராய்த் தேவர்களும் வணங்கிப் போற்றும்படி `மாதர் மடப்பிடி' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி வணங்கினார்.

விளக்கவுரை

மாதர் மடப்பிடி' *(தி.1 ப.136)* எனத் தொடங்கும் இவ்வரிய பதிகம் மேகராகக் குறிஞ்சியில் அமைந்த பதிகமாகும். வியாழக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்தது என்றும் சிலர் கருதுவர். யாழ்மூரி என்பது பண்ணன்று, பாணர்தம் வேண்டுகோளால் பாடி, யாழை முரிக்க நேர்ந்த வரலாற்றைக் குறிக்க வந்த தொடருமன்று. யாழில் இசைக்க இயலாதவாறு அமைந்த இசையமைப்பாகும்.

வண்புகலி வேதியனார் மாதர்மடப்
பிடியெடுத்து வனப்பிற் பாடிப்
பண்பயிலுந் திருக்கடைக்காப் புச்சாத்த
அணைந்துபெரும் பாண னார்தாம்
நண்புடையாழ்க் கருவியினில் முன்புபோல்
கைக்கொண்டு நடத்தப் புக்கார்க்
கெண்பெருகும் அப்பதிகத் திசைநரம்பில்
இடஅடங்கிற் றில்லை யன்றே. **#2345**

வளம் மிக்க சீகாழியில் தோன்றிய பிள்ளையார் `மாதர் மடப்பிடி' எனத் தொடங்கி அழகு பொருந்தப்பாடிப் பண் பயில்கின்ற திருக்கடைக்காப்புச் சாத்தி நிறைவு செய்யத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் அங்கு நின்று யாழ்க் கருவியில் அமைத்து முன் போல் அப்பதிக இசையினை இசைக்கப் புகுந்த அளவில், அவருக்கு அப்பதி கத்தின் இசை, யாழ் நரம்பில் வைத்து வாசிக்க அடங்காமல் போயிற்று.

விளக்கவுரை

****

அப்பொழுது திருநீல கண்டஇசைப்
பெரும்பாணர் அதனை விட்டு
மெய்ப்பயமும் பரிவுமுறப் பிள்ளையார்
கழலிணைவீழ்ந் தெழுந்து நோக்கி
இப்பெரியோர் அருள்செய்த திருப்பதிகத்
திசையாழி லேற்பன் என்னச்
செப்பியதிக் கருவியைநான் தொடுதலின்அன்
றோஎன்று தெளிந்து செய்வார். **#2346**

அதுபொழுது திருநீலகண்ட யாழ்ப்பாணர், யாழ் வாசிப்பதைக் கைவிட்டு, உடலில் நடுக்கமும், உள்ளத்தில் வருத்தமும் பொருந்தப் பிள்ளையாரின் திருவடிகளில் விழுந்து வணங்கி எழுந்து நின்று, அவரைப்பார்த்து, `இந்தப் பெரியவர் அருளிச் செய்த திருப் பதிகத்தின் இசையை யாழில் இசைப்பேன் என்று மேற்கொள்ளச் செய்த இந்த யாழ்க் கருவியை நான் தொடுதலால் விளைந்ததன்றோ!' என்று உள்ளத்தில் தெளிந்து, அதற்குத்தக, மேற்கொண்ட செயலைச் செய்வாராய்,

விளக்கவுரை

****

வீக்குநரம் புடையாழி னால்விளைந்த
திதுவென்றங் கதனைப் போக்க
ஓக்குதலும் தடுத்தருளி ஐயரே
உற்றஇசை யளவி னால்நீர்
ஆக்கியஇக் கருவியினைத் தாருமென
வாங்கிக்கொண் டவனி செய்த
பாக்கியத்தின் மெய்வடிவாம் பாலறா
வாயர்பணித் தருளு கின்றார். **#2347**

`முறுக்கிக் கட்டப்பட்ட நரம்பையுடைய யாழால் இக்குற்றம் உண்டானது' எனக் கூறி, அதனை முரிப்பதற்குத் திருநீல கண்ட யாழ்ப்பாணர் முயன்ற போது, உலகம் செய்த நற்பேற்றின் வடிவாய் உள்ள பிள்ளையார், பாணரின் அச்செயலைத் தடுத்து `ஐயரே! பொருந்திய இசை நூலில் விதித்த அளவுப்படி நீவிர் இயற்றும் இந்த யாழ்க்கருவியைத் தாரும்' என்று, அதனைத் தம் கையில் பெற்றுக் கொண்டு, மேலும் ஆணையிடுபவராய்,

விளக்கவுரை

****

ஐயர்நீர் யாழ்இதனை முரிக்கும தென்
ஆளுடையா ளுடனே கூடச்
செய்யசடை யார்அளித்த திருவருளின்
பெருமையெலாம் தெரிய நம்பால்
எய்தியஇக் கருவியினில் அளவுபடு
மோநந்தம் இயல்புக் கேற்ப
வையகத்தோர் அறிவுறஇக் கருவிஅள
வையின்இயற்றல் வழக்கே என்றார். **#2348**

`ஐயரே! இந்த யாழை முரிப்பது ஏன்? ஆளு டைய பிராட்டியாருடன் எழுந்தருளியிருக்கும் சிவந்த சடையை உடைய சிவபெருமான் அளித்த திருவருளின் பெருமையெல்லாம், நம்மிடத்தில் பொருந்திய இக் கருவியின் அளவில் அடங்குமோ? நம் இயல்புக்குத் தக்கவாறு இவ்வுலகத்தவர் மகிழ, இந்தக் கருவியின் அளவுக்குள் அமையும் நிலையில் இயற்றுவதே ஏற்றதாகும்' என்று அருளி,

விளக்கவுரை

****

சிந்தையால் அளவுபடா இசைப்பெருமை
செயலளவில் எய்து மோநீர்
இந்தயா ழினைக்கொண்டே இறைவர்திருப்
பதிகஇசை இதனில் எய்த
வந்தவா றேபாடி வாசிப்பீர்
எனக்கொடுப்பப் புகலி மன்னர்
தந்தயா ழினைத்தொழுது கைக்கொண்டு
பெரும்பாணர் தலைமேற் கொண்டார். **#2349**

`மனத்தானும் அளவுபடுத்தற்கியலாத இசையின் பெருமையைச் செயலுள் பொருந்தச் செய்ய வருமோ? இந்த யாழைக் கருவியாகக் கொண்டு இறைவர் திருப்பதிகத்தை இதனுள் பொருந்த வந்த அளவில் இயைத்து இசைப்பீராக!' எனப் பிள்ளையார் பணித்துக் கொடுத்த யாழை, அவரைத் தொழுது ஏற்ற திருநீலகண்ட யாழ்ப்பாணர், அதனைத் தலைமீது வைத்துப் போற்றிக் கொண்டார்.

விளக்கவுரை

பாணரின் வேண்டுகோளுக்கு ஏற்பவே, பிள்ளையார் பதிகம் அருளினார்; ஆனால் அப்பதிகம் தம் யாழில் இயைத்து இசைக்க இயலாததாயிற்று. அங்ஙனமாகப் பாணனார் யாழை முரிப்பானேன்? என்ற வினா எழலாம். பதிகப் பெருமை, பெரு மானின் அருள் வழிநின்று

பாடிவரும் பிள்ளையாருடையதாகத் தம்யாழ் வழியதே எனக் கருதிய சுற்றத்தார்க்கு அது பொய்ம்மை யாதலைக் காட்ட விரும்பியே, பிள்ளையாரிடம் அத்தகையதொரு பதிகம் பாடவேண்டினர். அவ்வளவில் அவரே, அதனைத் தாம் இசைக்க இயலாத நிலையில் மேலும் ஓர் எண்ணம் அவருக்குத் தோன்றியது. இவ்யாழ் இருந்தமையால் அன்றோ முன்னர் *(பா.140)* பிள்ளையார் அருள் செய்யும் அறிவரிய திருப்பதிகத்தை யாழிலிட்டு வாசிக்க வேண்டிக் கொள்ள நேர்ந்தது. இஃது இன்றேல் அவ்வெண் ணமே தோன்றியிராதன்றோ எனக் கருதவே அவ் யாழை முரிக்க ஒருப்பட்டார் என்பது எண்ணத் தக்கதாம். இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

அணைவுறும்அக் கிளைஞருடன் பெரும்பாணர்
ஆளுடைய பிள்ளை யார்தம்
துணைமலர்ச்சே வடிபணிந்து துதித்தருளத்
தோணிபுரத் தோன்ற லாரும்
இணையில் பெருஞ் சிறப்பருளித் தொண்டருடன்
அப்பதியில் இனிது மேவிப்
பணைநெடுங்கை மதயானை உரித்தவர்தம்
பதிபிறவும் பணியச் செல்வார். **#2350**

சூழ இருந்த சுற்றத்தாருடன் பெரும்பாணர், ஆளுடைய பிள்ளையாரின் இரு மலர் அனைய திருவடிகளையும் வணங்கிப் போற்றிட, சீகாழியில் தோன்றிய தலைவரும், ஒப்பில்லாத பெருஞ்சிறப்புக்களை அவர்களுக்கு அளித்து, தம் தொண்டர்களு டனே அப்பதியில் இனிதாய் அமர்ந்திருந்த பின், அவர் பெரிய நீண்ட துதிக்கையையுடைய யானையை உரித்த இறைவரின் பிற பதிகளை யும் வணங்கச் செல்பவராய்,

விளக்கவுரை

பிள்ளையார் பாணனாரின் சுற்றத்தாருக்கு அருளிய பெருஞ்சிறப்புக்களாவன, அன்புரைகளும் அருளாசியுமாம். பதி பிறவும் என்பன எவை எனத் தெரிந்தில.

பங்கயப்பா சடைத்தடஞ்சூழ் பழனநாட்
டகன்பதிகள் பலவும் நண்ணி
மங்கையொரு பாகத்தார் மகிழ்கோயில்
எனைப்பலவும் வணங்கிப் போற்றித்
தங்கிசையாழ்ப் பெரும்பாண ருடன்மறையோர்
தலைவனார் சென்று சார்ந்தார்
செங்கைமான் மழுவேந்துஞ் சினவிடையார்
அமர்ந்தருளுந் திருநள் ளாறு. **#2351**

இலைகள் பொருந்திய தாமரைப் பொய்கைகள் சூழ்ந்த

வயல்களையுடைய சோழ நாட்டின் பெரிய பதிகள் பலவற் றையும் அடைந்து, உமையம்மையாரை ஒருகூற்றில் கொண்ட இறை வர் மகிழ்ந்து வீற்றிருக்கும் பதிகள் பலவற்றையும் வணங்கிப் போற்றிச் சிவந்த கைகளில் மானையும் மழுவையும் ஏந்தும் சினமுடைய விடை யினரான இறைவர் விரும்பி எழுந்தருளியிருக்கும் `திருநள்ளாற் றினை' இசை பொருந்திய பாணருடனே அந்தணர் தலைவரான பிள்ளையார் சென்று அடைந்தார்.

விளக்கவுரை

`பதிகள் பலவும் நண்ணி' என்றும், `கோயில் எனைப் பலவும் வணங்கி' என்றும் ஆசிரியர் குறிப்பதால், பிள்ளையார் வணங்கிய பதிகளும் கோயில்களும் மிகப்பலவாம் எனத் தெரிகிறது. எனினும் அவை இவை என அறிதற்கு இயன்றிலது. திருத்தக்களூர் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். தருமபுரத்திலிருந்து திருநள்ளாற்றிற்கு இடைப்பட்டும், அப்பகுதியைச் சூழவும் இருக்கும் திருப்பதிகளையும் கோயில்களையும் நேரில் சென்றோ அல்லது தக்கார்வாய்க் கேட்டோ அறிதல் தக்கதாம். திருவருள் முன்னிற்க.

நள்ளாற்றில் எழுந்தருள நம்பர்திருத்
தொண்டர்குழாம் நயந்து சென்று
கொள்ளாற்றி லெதிர்கொண்டு குலவியுடன்
சூழ்ந்தணையக் குறுகிக் கங்கைத்
தெள்ளாற்று வேணியர்தந் திருவளர்கோ
புரமிறைஞ்சிச் செல்வக் கோயில்
உள்ளாற்ற வலங்கொண்டு திருமுன்பு
தாழ்ந்தெழுந்தார் உணர்வின் மிக்கார். **#2352**

திருநள்ளாற்றில் வீற்றிருக்கும் இறைவரின் அடியவர் கூட்டமானது விரும்பிச் சென்று, முறையாக எதிர்கொண்டு, மகிழ்வுடன் சூழ்ந்து வரச் சென்று அடைந்து, தெளிவான கங்கை ஆற்றைச் சூடிய சடையையுடைய இறைவரின் செல்வம் வளரும் கோபுரத்தை வணங்கி, அருட்செல்வம் மிக்க கோயிலுள்ளே பன் முறையும் வலம்வந்து, ஞானவுணர்வுடைய பிள்ளையார், பெருமான் திருமுன்பு வணங்கி எழுந்தார்.

விளக்கவுரை

****

உருகியஅன் புறுகாதல் உள்ளுருகி
நனைஈரம் பெற்றாற் போல
மருவுதிரு மேனியெலாம் முகிழ்த்தெழுந்த

மயிர்ப்புளகம் வளர்க்கு நீராய்
அருவிசொரி திருநயனத் தானந்த
வெள்ளம்இழிந் தலைய நின்று
பொருவில்பதி கம்போக மார்த்தபூண்
முலையாள்என் றெடுத்துப் போற்றி. **#2353**

உருகுதற்குக் காரணமான அன்பு மீதூர்ந்த பெருவிருப்பத்தால் மனம் உருக, அதனால் பெருகும் ஈரத்தைப் பெற்றது போல், பொருந்திய திருமேனி முழுதும் எழுந்த மயிர்க் கூச்சலை வளர்க்கும் நீர்போல அருவி போன்று வழிகின்ற ஆனந்தக் கண்ணீர்ப் பெருக்குப் பெருகி அலைய நின்று, ஒப்பில்லாத பதிகத்தைப் \`போகமார்த்த பூண் முலையாள்' என்று தொடங்கிப் போற்றினார்.

விளக்கவுரை

\`போகம் ஆர்த்த' *(தி.1 ப.49)* எனத் தொடங்கும் பதிகம், பழந்தக்கராகப் பண்ணில் அமைந்த பதிகமாகும்.

யாணரம்பில் ஆரஇயல் இசைகூடப்
பாடியே எண்ணில் கற்பச்
சேண்அளவு படவோங்குந் திருக்கடைக்காப்
புச்சாத்திச் செங்கண்நாகப்
பூண்அகலத் தவர்பாதம் போற்றிசைத்துப்
புறத்தணைந்து புவன மேத்தும்
பாணனார் யாழிலிடப் பாலறா
வாயர்அருள் பணித்த போது. **#2354**

யாழ்நரம்பில் பொருந்த இயல் தமிழும் இசைத் தமிழும் கூடுமாறு பாடி, எண்ணிறந்த காலப் பகுதிகளிலும், விண் ணுக்கு அப்பாலும் நிலைபெறுமாறு, ஓங்கும் திருக்கடைக்காப்புச் சாத்தியருளிச் சிவந்த கண்ணையுடைய பாம்பணியையுடைய மார்பர் ஆன இறைவரின் திருவடிகளைப் போற்றி செய்து, புறமுற் றத்தை அடைந்து, பாலறா வாயரான ஞானசம்பந்தர், உலகம் போற்றும் பெரும்பாணனாரை யாழில் இயற்றும்படி ஆணையிட்டருளினார்.

விளக்கவுரை

பின்னர்ப் பிள்ளையார் சமணரொடு வாதிடும் பொழுது, நெருப்பில் இட்டும் வேகாதிருந்த பச்சைப் பதிகம் இதுவாக அமைதல் நோக்கி, \`எண்ணில் கற்பச் சேணளவு பட வோங்கும் திருக்கடைக்காப்புச் சாத்தி' என எதிரது போற்றியுரைத்தார் ஆசிரியர்.

பிள்ளையார் திருத்தாளங் கொடுபாடப்
பின்புபெரும் பாண னார்தாம்

தெள்ளமுத இன்னிசையின் தேம்பொழிதந்
திரியாழைச் சிறக்க வீக்கிக்
கொள்ளஇடும் பொழுதின்கண் குவலயத்தோர்
களிகூரக் குலவு சண்பை
வள்ளலார் திருவுள்ளம் மகிழ்ந்துதிருத்
தொண்டருடன் மருவுங் காலை. **#2355**

ஞானப் பிள்ளையார் திருத்தாளத்தைக் கொண்டு அளவு ஒத்து அறுத்து அப்பதிகத்தைப் பாட, அதைப் பின்தொடர்ந்து பெரும்பாணனாரும் தெள்ளிய அமுதமான இனிய இசைத்தேன் பொழியும் நரம்புகளையுடைய யாழைப் பண் அமைதி மிகுமாறு செய்து, பதிக இசையை அமைத்துப் பாடும் போது, உலகத்தவர் யாவ ரும் மகிழ்ச்சியடைய, விளங்கும் சீகாழிப் பெருவள்ளலாரான பிள் ளையார் திருவுள்ளம் கொண்டு மகிழ்ந்து தொண்டர்களுடனே அங்குத் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

யாழ்மூரிப் பதிகத்தை அடுத்துப் பாடிய பதிகம் இது வாதலின், பிள்ளையாரின் திருத்தாளத்தோடு பாணனாரின் யாழிசையும் சிறக்க இப்பதிகம் அமைந்ததாகக் குறிக்கின்றார் ஆசிரியர் சேக்கிழார்.

மன்னுதிரு நள்ளாற்று மருந்தைவணங்
கிப்போந்து வாச நன்னீர்ப்
பொன்னிவளந் தருநாட்டுப் புறம்பணைசூழ்
திருப்பதிகள் பலவும் போற்றிச்
செந்நெல்வயற் செங்கமல முகமலருந்
திருச்சாத்த மங்கை மூதூர்
தன்னிலெழுந் தருளினார் சைவசிகா
மணியார்மெய்த் தவத்தோர் சூழ. **#2356**

பின், நிலைபெற்ற திருநள்ளாற்றில் வீற்றிருக்கும் மருந்தான இறைவரை வணங்கி, விடைபெற்றுச் சென்று, மணமுடைய நல்லநீர் பொருந்திய காவிரியாறானது பல வளங்களையும் தருகின்ற சோழ நாட்டின் புறம்பணை சூழ்ந்த பல திருப்பதிகளையும் வணங்கி வழிபட்டு, மெய் அடியார்கள் சூழச் சைவசிகாமணியாரான பிள்ளையார் செந்நெல் வயல்களிலே செந்தாமரை மலர்கள் மாதர் முகம் என மலர்தற்கு இடமான `திருச்சாத்தமங்கை' என்ற பழம் பதியை அணுகினார்.

விளக்கவுரை

புறம்பணைசூழ் திருப்பதிகள் பிறவும் என்றது, அருகி லிருக்கும் பழம் பதிகளைக் குறிப்பினும், அவை இவை எனத் தெரிந்தில. எனினும்

திருக்கோட்டாறு எனும் பதி இடைப்படவுள்ளது. அங்கு அருளிய பதிகங்கள் இரண்டாம். *1. `கருந்தடங்கண்ணின்' : (தி.2 ப.52)* - சீகாமரம் *2. `வேதியன் விண்ணவர்' : (தி.3 ப.12)* - காந்தார பஞ்சமம்.

நிறைசெல்வத் திருச்சாத்த மங்கையினில்
நீலநக்கர் தாமுஞ் சைவ
மறையவனார் எழுந்தருளும் படிகேட்டு
வாழ்ந்துவழி விளக்கி யெங்குந்
துறைமலிதோ ரணங்கதலி கமுகுநிறை
குடந்தூப தீப மாக்கி
முறைமையில்வந் தெதிர்கொள்ள உடன்அணைந்து
முதல்வனார் கோயில் சார்ந்தார். **#2357**

நிறைந்த செல்வத்தையுடைய சாத்தமங்கையில் வாழ்கின்ற திருநீலநக்க நாயனாரும், சைவ அந்தணரான பிள்ளையார் எழுந்தருளும் நற்செய்தியைக் கேட்டுப் பெருவாழ்வு அடைந்தவராய், அவர் வரும் வழி எல்லாம் விளக்கம் செய்து, எங்கும் இடையிடையே நெருங்கிய தோரணங்களையும் வாழை பாக்கு மரங்களையும் கட்டி, அங்கங்கே நிறைகுடம், நறுமணப் புகை, ஒளிவிளக்கு முதலான வற்றையும் அமைத்து, முறையாக வந்து எதிர்கொள்ள, ஞானசம்பந்தர் இறைவரது கோயிலை அடைந்தார்.

விளக்கவுரை

****

அயவந்தி அமர்ந்தருளும் அங்கணர்தங்
கோயில்மருங் கணைந்து வானோர்
உயவந்தித் தெழுமுன்றில் புடைவலங்கொண்
டுட்புக்கா றொழுகுஞ் செக்கர்
மயவந்தி மதிச்சடையார் முன்தாழ்ந்து
மாதவம் இவ்வைய மெல்லாம்
செயவந்த அந்தணனார் செங்கைமேல்
குவித்தெழுந்து திருமுன் னின்றார். **#2358**

`அயவந்தி' என்னும் அக் கோயிலில் விரும்பி வீற்றிருக்கும் இறைவரின் திருக்கோயிலின் பக்கத்தைச் சார்ந்து, தேவர்கள் உய்யும் பொருட்டு வழிபாடு செய்து வருகின்ற திருமுன் றிலின் பக்கமாக வந்து, உட்புகுந்து, கங்கையாறு ஒழுகுவதற்கு இடமான, சிவப்பு மயமான அந்தி மாலையில் தோன்றும் மதியினைச் சூடிய சடையையுடைய சிவபெருமானின் திருமுன்பு தாழ்ந்து வணங்கி, இப்பூவுலகம் முழுவதும் பெருந்தவம் செய்ததன் பயனாய், இங்கு வந்து தோன்றிய அந்தணராம் சம்பந்தர் தம் செங்கையினைத் தலைமீது குவித்து வணங்கி எழுந்து நின்றார்.

விளக்கவுரை

சாத்த மங்கை - ஊர்ப்பெயர். அயவந்தி - கோயிலின் பெயர்.

போற்றிசைக்கும் பாடலினால் பொங்கியெழும்
ஆதரவு பொழிந்து விம்ம
ஏற்றின் மிசை இருப்பவர்தம் எதிர்நின்று
துதித்துப்போந் தெல்லை இல்லா
நீற்றுநெறி மறையவனார் நீலநக்கர்
மனையிலெழுந் தருளி அன்பால்
ஆற்றும்விருந் தவர்அமைப்ப அன்பருடன்
இன்புற்றங் கமுது செய்தார். **#2359**

ஆனேற்றை ஊர்தியாகக் கொண்டு வீற்றிருக்கும் இறைவர் திருமுன்பு நின்று, போற்றிசெய்கின்ற பாடல்களால், மேன் மேலும் பொங்கியெழும் அன்புபெருகிக் கண்ணீர்விட்டுப் போற்றி செய்து, ஆனேற்றின் மீது இருந்தருளும் இறைவனின் எதிர் நின்று வெளியே வந்து அளவுபடாத திருநீற்று நெறியான சைவ நெறியை விளக்கும் அந்தணரான பிள்ளையார், திருநீலநக்க நாயனாரின் இல்லத்தில் தங்கி இருந்து, அன்பால் செய்யப்படுகின்ற விருந்து இயல்புக்கு உரியவற்றை அவர் அமைக்க, அன்பர்களோடு இன்பம் பொருந்த உண்டருளினார்.

விளக்கவுரை

இது பொழுது அருளிய பதிகம் கிடைத்திலது.

நீடுதிருநீலநக்கர் நெடுமனையில்
விருந்தமுது செய்து நீர்மைப்
பாடும்யாழ்ப் பெரும்பாண ருந்தங்க
அங்கிரவு பள்ளி மேவி
ஆடுமவர் அயவந்தி பணிவதனுக்கு
அன்பருடன் அணைந்து சென்று
நாடியநண் புடைநீல நக்கடிக
ளுடன்நாதர் கழலில்தாழ்ந்து. **#2360**

அன்பு நீடும் திருநீலநக்க நாயனாரின் பெரிய இல்லத்தில் விருந்து அமுது உண்டு, நல்ல நீர்மையுடன் பாடும் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் உடன்தங்க அன்று அங்குப் பள்ளி அமர்ந்து, கூத்தியற்றும் இறைவரின் `அயவந்தியினைப்' பணிவதற்கு, அன்பர்களுடனே சேர்ந்து சென்று, நாடிய நட்பையுடைய நீலநக்க நாயனாருடன் இறைவன் திருவடிகளில் விழுந்து வணங்கினார்.

விளக்கவுரை

****

கோதிலா ஆரமுதைக் கோமளக்கொம்
புடன்கூடக் கும்பிட் டேத்தி
ஆதியாம் மறைப்பொருளால் அருந்தமிழின்
திருப்பதிகம் அருளிச் செய்வார்
நீதியால் நிகழ்கின்ற நீலநக்கர்
தம்பெருஞ்சீர் நிகழ வைத்துப்
பூதிசா தனர்பரவும் புனிதஇயல்
இசைப்பதிகம் போற்றி செய்தார். **#2361**

குற்றம் அற்ற அரிய அமிழ்தத்தைப் போன்ற இறைவரை, அழகிய இளம் கொம்பைப் போன்ற அம்மையாருடன் வணங்கி ஏத்தி, பழைய மறைகளின் பொருள் விளங்க அரிய தமிழின் திருப்பதிகம் பாடுவார், மறைவழி ஒழுகும் திருநீலநக்கரின் பெருஞ் சிறப்புகள் விளங்க வைத்து, திருநீற்று நெறியைப் போற்றி வரும் தொண்டர்கள் போற்றுமாறு, தூய இயல் இசை உடைய பதிகத்தை அருளிச் செய்தார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகம் `திருமலர்க் கொன்றை மாலை' *(தி.3 ப.58)* எனத் தொடங்கும் பஞ்சமப் பண்ணிலமைந்த பதிகமாகும். `கோமளக் கொம்புடன் கூடக் கும்பிட்டேத்தி' என்றது, இப்பதிகப் பாடல் தொறும் வரும் முன்னிரண்டு அடிகளில் அம்மையுட னாதலைப் போற்றியிருக்கும் குறிப்பை உளங்கொண்டதாகும். `நிறை யினால் நீலநக்கன் நெடுமா நகர் என்று தொண்டர் அறையும் ஊர் சாத்த மங்கை' எனவரும் திருக்கடைக் காப்பில் நீலநக்கர் சிறப்பிக்கப் பெறுகின்றார்.

பரவியகா தலிற்பணிந்து பாலறா
வாயர்புறத் தணைந்து பண்பு
விரவியநண் புடையடிகள் விருப்புறுகா
தலில்தங்கி மேவும் நாளில்
அரவணிந்தார் பதிபிறவும் பணியஎழும்
ஆதரவா லணைந்து செல்வார்
உரவுமனக் கருத்தொன்றாம் உள்ளம்உடை
யவர்க்குவிடை உவந்து நல்கி. **#2362**

பாலறா வாயரான திருஞானசம்பந்தர், பெருகிய அன்பு மிகுதியால் கோயிலின் வெளியே வந்து, அன்புடன் பொருந் திய நட்புக்கொண்ட திருநீலநக்க அடிகளின் விருப்புடைய ஆசையி னால் அங்குத் தங்கியிருந்த நாள்களில், பாம்பை அணிந்த இறைவரின் மற்றப் பதிகளையும் வணங்க எழுந்த அன்பினால், அவ்வப் பதிகளுக் கும் செல்வாராய், அறிவால் உள்ளத்தில் எழும் கருத்து ஒன்றேயான மனத்தையுடைய திருநீலநக்கரிடம் மகிழ்ச்சியுடன் விடைபெற்றுப்

புறப்பட்டார்.

விளக்கவுரை

****

மற்றவர்தம் பெருங்கேண்மை மகிழ்ந்து கொண்டு
மாலயனுக் கரியபிரான் மருவு தானம்
பற்பலவும் சென்றுபணிந் தேத்திப் பாடிப்
பரமர்திருத் தொண்டர்குழாம் பாங்கின் எய்தக்
கற்றவர்வாழ் கடல்நாகைக் காரோ ணத்துக்
கண்ணுதலைக் கைதொழுது கலந்த ஓசைச்
சொற்றமிழ்மா லைகள் பாடிச் சிலநாள் வைகித்
தொழுதகன்றார் தோணிபுரத் தோன்ற லார்தாம். **#2363**

பிள்ளையார், அந்நீலநக்கரின் பெருநட்பை மகிழ்ந்து மனத்துட் கொண்டு, நான்முகன், திருமால் என்பவர்க்கும் அரிய சிவபெருமானின் பதிகள் பலவும் சென்று வணங்கிப் போற்றி, இறைவரின் தொண்டர் கூட்டமானது உடன் சூழ்ந்து வரச்சென்று கற்றவர் வாழும் `திருநாகைக் காரோணம்' என்ற பதியில் வீற்றிருக்கும் இறைவரை வணங்கி, இசையுடன் கூடிய சொல் நிறைந்த தமிழ் மாலை களைப் பாடிச் சிலநாள்கள் அங்குத் தங்கி, வணங்கி விடைபெற்று நீங்கினார்.

விளக்கவுரை

மருவுதானம் பற்பலவும் என்றது இறையான்சேரி முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். எனினும் தெளி வாக எவையும் தெரிந்தில. திருநாகைக்காரோணத்தில் அருளிய பதிகங்கள்*: 1.* `புனையும் விரி*' : (*தி*.1* ப*.84) -* குறிஞ்சி *2.* `கூனல் திங்கள்*' : (*தி*.2* ப*.116) -* செவ்வழி. இப்பாடற்கு முன்னும் பின்னும் உள்ள சந்தத்திற்கும் இப் பாடல் சந்தத்திற்கும் இடையறவு இருத்தல் கண்டு இதனை இடைச் செருகல் என்பர் சிவக்கவிமணியார். எனினும் இப்பாடலில் கடல்நாகைக் காரோணப் பெருமானை வணங்கினார் எனக் கூறி, அடுத்து வரும் பாடலில் `அந்நாகைக்காரோணத்தினின்றும் நீங்கி' என வருதலின் பொருளியைபு காணத்தகும் இப்பாடலை இடைச் செருகலாகக் கொள்ள வேண்டுவது இல்லை என்றே தெரிகிறது.

கழிக்கானல் மருங்கணையுங் கடல்நாகை
யதுநீங்கிக் கங்கை யாற்றுச்
சுழிக்கானல் வேணியர்தம் பதிபலவும்
பரவிப்போய்த் தோகை மார்தம்
விழிக்காவி மலர்பழனக் கீழ்வேளூர்
விமலர்கழல் வணங்கி ஏத்தி

மொழிக்காதல் தமிழ்மாலை புனைந்தருளி
அங்ககன்றார் மூதூர் நின்றும். **#2364**

உப்பங்கழிகள் நிறைந்த சோலைகளின் பக்கங் களில் உள்ள நாகப்பட்டினத்தை நீங்கிச் சென்று, கங்கையாற்றின் சுழிகளில் ஒலித்தல் பொருந்திய சடையையுடைய இறைவரின் பதிகள் பலவும் வணங்கிச் சென்று, மயில் போன்ற சாயலை உடைய மகளிரின் கண்கள் போன்ற கருங்குவளை மலர்கள் மலர்வதற்கு இடனான வயல்கள் சூழந்த திருக்கீழ்வேளூரில் வீற்றிருக்கும் இறைவரின் திரு வடிகளை வணங்கிப் போற்றி, அன்பு மிகுதியால் தமிழ்ப் பதிகங்க ளான மாலைகளைப் பாடி, அப்பழைய பதியினின்றும் புறப்பட்டார்.

விளக்கவுரை

பதிகள் பலவும் என்றது திருச்சிக்கல், திருக்கண்ணங் குடி, திருவாழியூர் முதலாயினவாகலாம். இப்பதிகளுள் திருச்சிக்க லுக்கு மட்டும் ஒருபதிகம் கிடைத்துள்ளது. அப்பதிகம் `வானுலாவும் மதி' *(தி.2 ப.8)* எனத் தொடங்கும் இந்தளப் பண்ணிலமைந்த பதிகமாகும். திருக்கீழ்வேளூரில் அருளிய பதிகம் `மின்னுலாவிய' *(தி.2 ப.105)* எனத் தொடங்கும் நட்டராகப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

அருகணையுந் திருப்பதிகள் ஆனவெலாம்
அங்கணரைப் பணிந்து போற்றிப்
பெருகியஞா னம்பெற்ற பிள்ளையார்
எழுந்தருளும் பெருமை கேட்டுத்
திருமருவு செங்காட்டங் குடிநின்றும்
சிறுத்தொண்டர் ஓடிச் சென்றங்
குருகுமனங் களிசிறப்ப எதிர்கொண்டு
தம்பதியுட் கொண்டு புக்கார். **#2365**

பெருகிய ஞானத்தைப் பெற்ற பிள்ளையார், அருகிலுள்ள பதிகளில் எல்லாம் இறைவரை வணங்கிப் போற்றி, எழுந்தருளி வருகின்ற செய்தியைச் செவியேற்றுச் செல்வம் பொருந் திய திருச்செங்காட்டங்குடி என்ற பதியினின்றும், சிறுத்தொண்ட நாயனார், அங்கு ஓடிச் சென்று, அன்பால் உருகும் மனம் மகிழ்ச்சி மிக, எதிர் கொண்டு வரவேற்றுத் தம்பதியுள் அழைத்துக் கொண்டு சென்றார்.

விளக்கவுரை

அருகிலுள்ள பதிகள் எவை எனத் தெரிந்தில.

சிறுத்தொண்ட ருடன் கூடச் செங்காட்டங்
குடியிலெழுந் தருளிச் சீர்த்தி
நிறுத்தெண்திக் கிலும்நிலவுந் தொண்டரவர்

நண்பமர்ந்து நீல கண்டம்
பொறுத்தண்டர் உயக்கொண்டார் கணபதீச்
சரத்தின்கட் போக மெல்லாம்
வெறுத்துண்டிப் பிச்சைநுகர் மெய்த்தொண்ட
ருடன்அணைந்தார் வேதகீதர். **#2366**

சிறுத்தொண்ட நாயனாருடன் கூடத் திருச்செங் காட்டங்குடிக்கு எழுந்தருளிச் சென்று, தம் சிறப்பை எண்திசையிலும் நிலை நிறுத்திவரும் பெருந்தொண்டரான அவருடைய நட்பை விரும்பி, உலகியல் இன்பங்களை எல்லாம் வெறுத்துத் துறந்து பிச்சை ஏற்ற உண்டியைத் துய்த்துவரும் மெய்த்தொண்டர்களுடனே சேர்ந்து, நீலகண்டத்தைத் தாம் தாங்கித் தேவர்களை உய்யுமாறு கொண்ட இறைவரின் `கணபதீச்சரம்' என்ற கோயிலில், மறைப்பொருளை இசைப் பாடல்களாகப் பாடும் சம்பந்தர் சென்று அடைந்தார்.

விளக்கவுரை

****

அங்கணைந்து கோயில்வலங் கொண்டருளி
அரவணிந்தார் அடிக்கீழ் வீழ்ந்து
செங்கண்அரு விகள்பொழியத் திருமுன்பு
பணிந்தெழுந்து செங்கை கூப்பித்
தங்கள்பெருந் தகையாரைச் சிறுத்தொண்டர்
தொழவிருந்த தன்மை போற்றிப்
பொங்கியெழும் இசைபாடிப் போற்றிசைத்தங்
கொருபரிசு புறம்பு போந்தார். **#2367**

சென்றவர் கணபதியீச்சரக் கோயிலைச் சேர்ந்து, அதனை வலமாக வந்து, பாம்பை அணிந்த இறைவரின் திருவடிகளில் விழுந்து வணங்கிக் கண்களிலிருந்து கண்ணீர் அருவி இழிய, திரு முன்பு பணிந்து எழுந்து, சிவந்த கைகளைக் குவித்து வணங்கி, தம்மை ஆண்ட இறைவரைச் சிறுத்தொண்ட நாயனார் தொழுமாறு வீற்றிருந்த தன்மையைப் போற்றி, மேலும் மேலும் பொங்கி எழுகின்ற பதிகத்தைப் பாடிப் பரவி, அங்கிருந்து ஒருவாறாக அரிதின் நீங்கி வெளியே வந்தார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகங்கள் இரண்டாம். *1. `பைங்கோட்டு மலர்ப் புன்னை' : (தி.3 ப.63) - பஞ்சமம் 2. `நறை கொண்ட' : (தி.1 ப.61) - பழந்தக்கராகம்.*

போந்துமா மாத்திரர்தம் போரேற்றில்
திருமனையிற் புகுந்து சிந்தை

வாய்ந்தமா தவரவர்தா மகிழ்ந்தருள
அமர்ந்தருளி மதில்கள் மூன்றும்
காய்ந்தமால் விடையார்தங் கணபதீச்
சரம்பரவு காதல் கூர
ஏந்துநூ லணிமார்பர் இன்புற்றங்
கன்பருடன் இருந்த நாளில். **#2368**

கோயிலினின்றும் வெளிப்போந்த பிள்ளையார், மாமாத்திரர் மரபில் அவதரித்த போர் ஏறு போன்ற சிறுத்தொண்ட நாயனாரின் இல்லத்தில் புகுந்து, மாதவம் வாய்ந்த அவர் மனத்தில் மகிழ்ச்சி பொங்க விரும்பி அங்குத் தங்கியிருப்ப, முப்புரங்களையும் எரித்த, திருமாலை ஊர்தியாகக் கொண்ட இறைவரின் கணபதீச் சரத்தைப் போற்றி மகிழும் அன்பு மேன்மேலும் மீதூரப் பூணூலை அணிந்த அழகிய மார்பினையுடைய பிள்ளையார், இன்பம் பெருக அங்கு அன்பர்களுடன் தங்கியிருந்த நாள்களில்,

விளக்கவுரை

****

திருமருகல் நகரின்கண் எழுந்தருளித்
திங்களுடன் செங்கட் பாம்பு
மருவுநெடுஞ் சடைமவுலி மாணிக்க
வண்ணர்கழல் வணங்கிப் போற்றி
உருகியஅன் புறுகாத லுள்ளலைப்பத்
தெள்ளுமிசை யுடனே கூடப்
பெருகுதமிழ்த் தொடைசார்த்தி அங்கிருந்தார்
பெரும்புகலிப் பிள்ளை யார்தாம். **#2369**

`திருமருகல்' என்ற நகரத்திற்கு எழுந்தருளிப் பிறைச் சந்திரனுடன் சிவந்த கண்களுடைய பாம்பு தங்குவதற்கு இடமான நீண்ட சடையையுடைய மாணிக்க வண்ண நாதரின் திருவடிகளை வணங்கிப் போற்றி, உருகிய அன்பு பெருகிய ஆசையானது உள்ளத்தில் பொருந்தி அலைக்க, தெளிந்த இசையுடன் பொருந்தப் பெருகும் தமிழ் மாலையைச் சாத்தி, அப்பதியில் சீகாழித் தலைவர் எழுந்தருளியிருந்தார்.

விளக்கவுரை

இதுபோது அருளிய பதிகம் கிடைத்திலது. மாணிக்க வண்ணர் - இறைவரின் பெயர். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

அந்நாளில் ஒருவணிகன் பதிக னாகி
அணைவானோர் கன்னியையும் உடனே கொண்டு
பொன்னார்மே ருச்சிலையார் கோயில் மாடு

புறத்திலொரு மடத்திரவு துயிலும் போது
மின்னார்வெள் ளெயிற்றரவு கவ்வுதலும் கிளர்ந்த
விடவேகங் கடிதுதலை மீக்கொண் டேறத்
தன்னாவி நீங்குமவன் தன்மை கண்டு
சாயல்இளங் கன்னிநிலை தளர்ந்து சோர்வாள். **#2370**

அந்நாள்களில் வணிகன் ஒருவன் நடந்து செல்பவனாய்த் தன்னுடன் ஒரு கன்னிப் பெண்ணையும் அழைத்துக் கொண்டு செல்பவன், பொன்மலையான மேருவை வில்லாக உடைய சிவபெருமானின் கோயிலின் அருகில் உள்ள ஒரு மடத்தில் இரவில் தங்கி உறங்கும் போழ்தில், ஒளிபொருந்திய பற்களையுடைய பாம்பு அவனைத் தீண்டியதால், நஞ்சின் வேகமானது விரைவாய்த் தலை யில் ஏறிடத் தன் உயிர் நீங்கும் அவனுடைய நிலைமையைப் பார்த்து, அவனுடன் வந்த மென்மையான சாயலைக் கொண்ட இளங்கன்னி நிலை கலங்கித் தளர்ந்து சோர்பவளாய்,

விளக்கவுரை

****

வாளரவு தீண்டவும்தான் தீண்ட கில்லாள்
மறுமாற்றம் மற்றொருவர் கொடுப்பா ரின்றி
ஆளரியே றனையானை அணுக வீழ்ந்தே
அசைந்தமலர்க் கொடிபோல்வாள் அரற்றும் போது
கோளுருமும் புள்ளரசும் அனையார் எல்லாக்
கொள்கையினா லுந்தீர்க்கக் குறையா தாக
நீள்இரவு புலர்காலை மாலை வாச
நெறிகுழலாள் நெடிதயர்ந்து புலம்பு கின்றாள். **#2371**

ஒளியுடைய பாம்பானது அவனைத் தீண்டவும், தான் தீண்டாதவளாகிய அப்பெண், தனக்கு ஆறுதல் கூறுவார் எவரும் இல்லாதவளாய், ஆண்சிங்கம் போன்ற அவ்வணிகனை அணுகிய நிலையில், அருகில் விழுந்து, அசைந்து வீழ்ந்த மலர்க்கொம்பைப் போல்வாள் ஆன அவள் புலம்பும் போது, வலிய இடியையும் பறவை மன்னனான கருடனையும் போன்ற மந்திரவாதிகள் எல்லாவகையான கொள்கையின் மூலமாகவும் தீர்க்க முயலவும், அந்நஞ்சு குறையா தாக, நீண்ட அவ்விரவில் விடியற்காலம் வரையிலும் மணமுடைய மாலைசூடிய நெறிந்த கூந்தலையுடைய அப்பெண், பெரிதும் தளர்ந்து புலம்புகின்றவள்,

விளக்கவுரை

தீண்டத் தகாதது பாம்பு, தீண்டும் உரிமையுடையவள் இவள். எனினும் அது தீண்டவும் தான் தீண்டாதிருந்தது மணமாகாத நிலையில்

அவனைத் தீண்டல் தகாது எனும் பண்பாடு பற்றியாம். தீண்டாத நிலை மட்டும் அன்று, துன்பம் மீதூர்ந்த நிலையில் அவனை யன்றி ஒரு பற்றுக்கோடும் இல்லாத நிலையிலும் தளர்ந்து வீழ்ந்து அரற்றும் அவள். உடலின் மீதன்றி, அவனருகேயே வீழ்ந்து அரற்று கின்றாள். இவை எல்லாம் நினைந்து நினைந்து போற்றற்குரிய பண்பாடாகும். இவ்வரிய பண்பாடுகளையெல்லாம் நினைந்து இக்காலவுலகம் கடைப்பிடித்துப் போற்றத் திருவருள் முன்னின்றருள வேண்டுவோம். இடி, பாம்பு போன்றவற்றால் தாக்குண்டவர்கள், அவ்வத் துன்பங்களினின்றும் நீங்கவேண்டும் எனில், அவ்விடி, கருடன் போல்வதொரு வலிமையைப் பெறுதல் வேண்டும். மந்திர வலிமை யால் அத்தன்மைகளைப் பெற்றோர், அத்துன்பங்களை நீக்க இயலும், இதுபற்றி மாதவச் சிவஞானமுனிவர் உரைத்தருள்வதும் ஈண்டு நினைவு கொள்ளற்குரியதாம். கருட பாவனை யென்றது யாதெனிற் கூறுதும்: ஆதிபௌதிக கருடன், ஆதிதைவிக கருடன், ஆத்தியான்மிக கருடன் எனக் கருடன் மூன்று வகைப்படும். இவ்வாறு பொருள்தோறும் கண்டுகொள்க. அவற்றுள், உலகத்திற் காணப்படும் கருடன் ஆதிபௌதிக கருடன். அதற்கு அதிதெய்வமாய் மாந்திரிகர் உள்ளத்தில் அது போல வைத்துத் தியானஞ்செய்து கணிக்கப்படும் மந்திரம் ஆதிதைவிக கருடன். அம் மந்திரத்தினிடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான்மிக கருடனெனப்படும். அவற்றுள், ஈண்டுக் கருடன் என்றது கருடனுக்கதிதெய்வமாய் மாந்திரிகனுளத்திற் காணப் படும் மந்திரரூபமாகிய ஆதிதைவிக கருடனை. அதனைப் பாவித்த லாவது நாடோறும் பயின்று வந்த பயிற்சி விசேடத்தால் அம்மந்திர ரூபமே தானாக அநந்நிய பாவனை செய்து தன்னறிவு அதன் வசமாம்படி உறைத்து நிற்றல். அங்ஙனம் நின்று அம்மந்திரக் கண் கொண்டு பார்க்கவே, அஃது அவ் விடவேகத்தை மாற்றுதல் ஒருதலை யாதலின், அப்பாவனை ஈண்டைக்கு உவமையாயிற்று. இதனானே கருட பாவனை சத்தியமா மென்பதூஉம், அதனை அசத்திய மென்பார் மதம், போலியென்பதூஉம் தெற்றென உணர்க. புள், விலங்கு, மரம் முதலிய சராசரங்களுக்கெல்லாம் அதிதெய்வ மந்திரம் உளவென்பதூஉம், படிகம் போல அதுவதுவா மியல்புடைய ஆன்மா அவற்றுள் எவ்வெவ் மந்திரங்களைக் கணிப்பினும் அவ்வம் மந்திர சொரூபியாவான் என்பதூஉஞ் சர்வ ஞானோத்தர முதலியவற்றுட் காண்க. சிவஞானப் போதப் பேருரை; *9 - 2.*

அன்னையையும் அத்தனையும் பிரிந்து நின்னை
அடைவாக உடன்போந்தேன் அரவால் வீடி

என்னையுயிர் விட்டகன்றாய் யான்என் செய்கேன்
இவ்விடுக்கண் தீர்க்கின்றார் யாரும் இல்லை
மன்னியசீர் வணிகர்குல மணியே யானும்
வாழேன்என் றென்றயர்வாள் மதியினாலே
சென்னியிளம் பிறையணிவார் கோயில் வாயில்
திசைநோக்கித் தொழுதழுதாள் செயலொன் றில்லாள். **#2372**

`அன்னையையும் தந்தையையும் பிரிந்து உன்னையே சார்வாய் அடைந்து உன்னுடனே வந்தேன், பாம்பு தீண்டப் பெற்று உயிர் நீங்க என்னை விட்டு அகன்றாய்! நான் என் செய்வேன்? இத் துன்பத்தைத் தீர்ப்பார் எவரும் இல்லையே! நிலை பெற்ற சிறப்பையுடைய வணிகர் குலமணியே! நானும் இனி வாழேன்!' என்று பலவாறாக வருந்தும் அப்பெண், தன் அறிவால், தலையில் இளம்பிறையை அணிந்த இறைவரின் திருக்கோயில் வாயில் திசையை நோக்கி, வேறு செயல் ஒன்றும் இல்லாதவளாய்க் கைகூப்பித் தொழுது அழுவாளாய்,

விளக்கவுரை

இரவெல்லாம் அழுதபோதும், மனித முயற்சியால் எத்துணையும் செய்தபொழுதும் துன்பம் நீங்கப் பெற்றிலாத சூழலில், இனி இறைவனே பற்றுக் கோடாவன்; அவன் எத்துன்பத்தையும் நீக்கவல்லன் எனக் கருதிக் கோயில் வாயிலைத் திசைநோக்கி அழுதாள். அவ்வாறழுததுவே `அவள் மதியினால்' என்றார். பற்றி நின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்றா நில்லே.

(தி.6 ப.31 பா.7) எனவரும் திருவாக்கும் காண்க. காழிப்பிள்ளையாரும் திருத்தோணிச் சிகரம் பார்த்து அழவே ஞானம்பெற்றார் என்பதும் நினைவு கூரத்தக் கதாம்.

அடியாராம் இமையவர்தங் கூட்டம் உய்ய
அலைகடல்வாய் நஞ்சுண்ட அமுதே செங்கண்
நெடியானும் நான்முகனுங் காணாக் கோல
நீலவிட அரவணிந்த நிமலாவெந்து
பொடியான காமன்உயிர் இரதி வேண்டப்
புரிந்தளித்த புண்ணியனே பொங்கர் வாசக்

கடியாரும் மலர்ச்சோலை மருங்கு சூழும்
கவின்மருகற் பெருமானே காவாய் என்றும். **#2373**
`அடியவர்களாகிய தேவர்களின் கூட்டம் முழுதும் உய்யும் பொருட்டாய் அலைபொருந்திய பாற்கடலினி டத்துத் தோன்றிய நஞ்சையுண்டருளிய அமுதமே! சிவந்த கண் களையுடைய நீண்ட திருமாலும் நான்கு முகங்களையுடைய நான்முக னும் காணாத கோலம் உடைய நீலநிறமுடைய நச்சுப் பாம்புகளை அணியாய் அணிந்த விமலனே! வெந்து சாம்பலாகிவிட்ட காமனின் உயிரை அவன் மனைவியான இரதியின் வேண்டுதலுக்கு இணங்க மீண்டும் அளித்த புண்ணியனே! மலர்களின் மணம் மிக்க சோலைகள் எங்கும் சூழவுள்ள அழகுடைய திருமருகலில் வீற்றிருக்கும் இறை வனே! காப்பாயாக!' என்று கூறியவள் பின்னும்,

விளக்கவுரை

இறைவனை அழைத்துக் கூறும் இவ்வழைப்பு விண் ணப்பங்கள் ஆழமும் அருமையும் உடையன. அமரரும் அசுரரும் தத்தம் நலங்கருதி, வாசுகி என்ற பாம்பை வருத்தியதால் எழுந்தது அப்பெருவிடம். இங்கோ அடியவளாய யானும், முறைமையுடைய வனாய் ஏமாற்றப்பட்டவனுமாய என் தாய்மாமனின் வருத்தங்கண்டு, அதனை நீக்க விண்ணப்பித்துக் கொள்கின்ற தகவாகும். அந்நிலையில் அப்பெருமகனை நஞ்சுண்டது தகுமோ? அன்றியும் அங்கெழுந்ததோ அலைகடல்வாய் எழுந்த பெருவிடம். இங்கு ஏற்பட்டதோ ஒருசிறு பாம்பினால் ஏற்பட்ட விடம். அந்நிலையில் இந்நஞ்சை நீக்கலா காதோ? என்பாள், `அடியாராம் இமையவர்தம் கூட்டம் உய்ய அலைகடல்வாய் நஞ்சுண்ட அமுதே' என்றாள். அந்நஞ்சு பாற்கடலில் தோன்றிய ஒருபெருவிடம் எனினும், அது வாசுகியாம் பாம்பால் ஏற்பட்ட விடமே யாகும். நீயோ அப்பாம்பையே அணிகலனாக அணிந்தவன். அந்நிலையில் இப்பாம்பினாலாய விடத்தை நீக்கல் ஆகாதோ என்பாள், `நீல விட அரவு அணிந்த விமலா' என்றாள். அமரரும் அசுரரும் விடம் தாக்கும் முன்னமேயே காப்பாற்றப் பெற்றனர். நின்நிலை அதுவன்றே எனின், இரதி, தன் கணவன் வெந்து பொடியான பின்னும் அவள் வேண்ட, நீ உயிர் கொடுத்தவன். அந் நிலையில் உயிர்நீத்த எம்மாமன் உயிரையும் அளித்தருள இயலுமே என்பாள், `வெந்து பொடியான காமன் உயிர் இரதி வேண்டப் புரிந் தளித்த புண்ணியனே!' என்றாள். நின்மகிழ்வு மட்டுமன்றி, நீ வீற்றிருக் கும் திருமருகலும் மணமும் மலரும் சூழ அழகு பொலிந்திருக்க, யான் மட்டும் அவலத்தில் அழுந்திநிற்பது அறமோ என்பாள், `பொங்கர் வாசக் கடியாரும் மலர்ச்சோலை மருங்கு சூழும் கவின் மருகற் பெருமானே! காவாய்' என்றாள்.

வந்தடைந்த சிறுமறையோன் உயிர்மேற் சீறி
வருங்காலன் பெருங்கால வலயம் போலும்
செந்தறுகண் வெள்ளெயிற்றுக் கரிய கோலம்
சிதைந்துருள வுதைத்தருளுஞ் செய்ய தாளா
இந்தவிடக் கொடுவேகம் நீங்கு மாறும்
யான்இடுக்கட் குழிநின்றும்ஏறு மாறும்
அந்திமதிக் குழவிவளர் செய்ய வேணி
அணிமருகற் பெருமானே அருளாய் என்றும். **#2374**

`உம்மிடம் வந்தடைந்த சிறு மறையவனான மார்க்கண்டேயனின் உயிர்மீது சினந்து வந்த இயமனின் பெரிய நஞ்சின் வடிவனைய சிவந்த கொடுங்கண்ணையும், வெண்மையான பற்களையும் கொண்ட கரிய கோலம் சிதைந்து உருளுமாறு உதைத் தருளிய சிவந்த திருவடியை யுடையவரே! இந்த நஞ்சின் கொடிய வேகம் நீங்குமாறும், நான் துன்பமான குழியினின்றும் மேல் ஏறுமாறும் பிறைச் சந்திரன் வளர்வதற்கு இடமான சிவந்த சடையை உடைய அழகிய மருகலில் வீற்றிருந்தருளும் பெருமானே! அருள் செய்வீராக! என்றாள். மேலும்,

விளக்கவுரை

நின் தலைவனின் உயிர் கவர்ந்தவன் இயமன். அவனோ என் ஆணைவழி நின்றே அச்செயலைச் செய்து வருகின்றவன். அந்நிலையில் அவனிடத்திருக்கும் உயிரை மீட்பது அறமோ? எனின், நீ முன்னொருகால், ஒரு சிறுமறையோன் (மார்க்கண்டேயன்) உயிர் நீங்கும் காலம் வர, நின் ஆணைவழி நிற்கும் அவ்இயமனே அவ் வுயிரைக் கவர வர, நீ முற்பட்டு நின் காலால் அவனை உதைத்தருளி, அச்சிறுமறையோனைக் காத்தது பலரறிந்த வரலாறன்றோ? அங்ஙன மாக என் தலைவன் உயிரையும் அவ்இயமன் வழிப்படாது மீட்டல் அறனுடையதாகாதோ? என்பாள், `வந்தடைந்த சிறுமறையோன் உயிர்மேற் சீறிவருங்காலன் பெருங்காலவலயம் போலும் செந்தறு கண் வெள்ளெயிற்றுக் கரிய கோலம் சிதைந்தருள உதைத்தருளுஞ் செய்யதாளா!' என்றாள். இவ்வாறெல்லாம் குறிப்பின் வேண்டும் பெறற்கருந் தொடர்களால் முறையிட்டுக் கொண்ட அப்பெண், இனி வெளிப்படையாகவும் தன் வேண்டுகோளை விண்ணப்பித்து அருள வேண்டுவாள், `இந்தவிடக் கொடுவேகம் நீங்குமாறும் யான்இடுக் கண் குழியினின்றும் ஏறுமாறும், அந்திமதிக் குழவிவளர் செய்ய வேணி அணிமருகற் பெருமானே! அருளாய்!' என்றாள்.

இத்தன்மை சிவனருளே சிந்தித் தேங்கும்
இளங்கொடிபோல் நுடங்கும்இடை ஏழை ஏத்தும்
அத்தன்மை ஓசையெழுந் தெங்கள் சண்பை

ஆண்டகையார் கும்பிடவந் தணைகின்றார்தம்
மெய்த்தன்மை விளங்குதிருச் செவியிற் சார
மேவுதலும் திருவுள்ளக் கருணை மேன்மேல்
வைத்தன்ன மெனஅயர்வாள் மாடுநீடு
மாதவத்தோர் சூழஎழுந் தருளி வந்தார். **#2375**

இங்ஙனம் சிவபெருமானின், அருளையே எண்ணிய வண்ணமாய் வருந்தும் இளங்கொடியைப் போன்ற துவ ளும் இடைகொண்ட ஏழையான அம்மங்கையின் துன்பத்தின் வயப்பட்ட முறையீடு, எம் இறைவரான சீகாழி ஆண்டகையார் இறை வரைக் கும்பிடும் பொருட்டு வந்து சேர்கின்றவரின் மெய்த்தன்மை யுடைய செவிகளில் சேரப் பொருந்தவும், திருவுள்ளத்தில் கருணை மிகக் கொண்டு, அன்னப் பறவை போன்று வருந்துகின்றவள் பக்கத் தில், அடியார்கள் சூழ்ந்து வர எழுந்தருளி வந்தார்.

விளக்கவுரை

இவ் ஆறு பாடல்களும் ஒருமுடிபின.

சிரபுரத்து மறையவனார் சென்று நின்று
சிவபெருமான்அருள்போற்றிச் சிந்தை நைந்து
பரவுறுவாள் தனைநோக்கிப் பயப்ப டேல்நீ
பருவுரலும் நும்பரிசும்பகர்வாய் என்னக்
கரமலர்க ளுச்சியின்மேற் குவித்துக் கொண்டு
கண்ணருவி சொரிந்திழியக் காழி வேதப்
புரவலனார் சேவடிக்கீழ் வீழ்ந்து தாங்கள்
போந்ததுவும் புகுந்ததுவும் புகல லுற்றாள். **#2376**

சீகாழியில் தோன்றிய அந்தணரான பிள்ளை யார், அப்பெண்ணின் அருகே சென்று, சிவபெருமானின் அருளையே எண்ணித் துன்புற்று அத்திருவருளையே நினைந்து போற்றும் அப் பெண்ணை நோக்கி, `நீ அஞ்ச வேண்டா! உன் துன்பத்தையும் அதற் குரிய சூழலையும் கூறுவாயாக!' என்று கேட்க, கையாகிய மலர்களைத் தலைமீது குவித்து வணங்கிக் கண்களினின்று நீர் அருவி சொரிந்து வழியச் சீகாழியிலிருந்து வந்த அந்தணரின் சேவடியில் விழுந்து வணங்கி, தாங்கள் அங்கு வந்த வரலாற்றையும் அத்துன்பம் புகுந்தவாற்றையும் கூறுவாளாயினாள்,

விளக்கவுரை

****

வளம்பொழில்சூழ் வைப்பூர்க்கோன் தாமன் எந்தை
மருமகன்மற் றிவன்அவற்கு மகளிர்நல்ல

இளம்பிடியார் ஒரெழுவர் இவரில் மூத்தாள்
இவனுக்கென் றுரைசெய்தே ஏதி லானுக்
குளம்பெருகத் தனம்பெற்றுக் கொடுத்த பின்னும்
ஓரொருவ ராகஎனை யொழிய ஈந்தான்
தளர்ந்தழியும் இவனுக்காத் தகவு செய்தங்
கவரைமறைத்து இவன் தனையே சார்ந்து போந்தேன். **#2377**

வளம் சூழ்ந்த வைப்பூரின் தலைவரான `தாமன்' என் தந்தையாவான். இவன் அவனுடைய மருமகன். என் தந்தைக்கு இளம்பிடி போன்ற ஏழு பெண் மக்கள். அவ்வேழு பெண்களில் மூத்த வளை இவனுக்கு மணம் செய்வதென்று சொல்லி, அயலவனிடம் இருந்து நிறையப் பணம் பெற்றுக் கொண்டு, அயலவனுக்கு மணம் செய்து தந்து, அதன் பின்னரும் ஒவ்வொருவராய் என்னைத் தவிர மற்றப் பெண்கள் ஐவரையும் அங்ஙனமே மணம் செய்து தந்து விட்டான். மனம் தளர்ந்து வருந்தும் இவனுக்காக அன்பு பூண்டு அங்கு அவர்களை விட்டு நீங்கி இவனையே சார்பாகக் கொண்டு நான் வந்தேன்,

விளக்கவுரை

****

மற்றிவனும் வாளரவு தீண்ட மாண்டான்
மறிகடலில் கலங்கவிழ்த்தார் போல நின்றேன்
சுற்றத்தா ரெனவந்து தோன்றி யென்பால்
துயரமெலாம் நீங்கஅருள் செய்தீர் என்னக்
கற்றவர்கள் தொழுதேத்துங் காழி வேந்தர்
கருணையினாற் காரிகையாள் தனக்கு நல்கப்
பற்றியவாள் அரவுவிடம் தீரு மாறு
பணைமருகற் பெருமானைப் பாட லுற்றார். **#2378**

`என்னுடன் வந்த இவனும் கொல்லுதலை யுடைய பாம்பு தீண்டப் பெற்று இறந்தான். மடிந்து விழும் அலை களையுடைய கடலின் நடுவில் கப்பல் கவிழ்ந்தது போல் நிற்கின்றேன். என் உறவினர்போல் தோன்றி என்னிடம் உற்ற துன்பங்கள் எல்லாம் நீங்குமாறு அருள் செய்தீர்!' எனக் கூறினாள். கற்றவர்கள் வணங்கிப் போற்றும் காழித் தலைவரான பிள்ளையார், அருள் மிக்கதனால் அப்பெண்ணுக்கு நல்குமாறு, தீண்டிய பாம்பின் நஞ்சு தீருமாறு வயல்கள் சூழ்ந்த திருமருகல் இறைவரைப் பாடலானார்.

விளக்கவுரை

****

சடையானை எவ்வுயிர்க்குந் தாயா னானைச்

சங்கரனைச் சசிகண்ட மவுலி யானை
விடையானை வேதியனை வெண்ணீற் றானை
விரவாதார் புரமூன்றும் எரியச் செற்ற
படையானைப் பங்கயத்து மேவி னானும்
பாம்பணையில் துயின்றானும் பரவுங் கோலம்
உடையானை உடையானே தகுமோ இந்த
ஒள்ளிழையாள் உண்மெலிவுஎன் றெடுத்துப் பாட. **#2379**

சடையை உடையவரை, எல்லா உயிர்களுக்கும் தாயானவராகிய சங்கரரை, பிறைச் சந்திரன் தங்கும் முடி உடைய வரை, ஆனேற்றை ஊர்தியாக உடையவரை, வேதியரை, திருவெண் ணீற்றை உடையவரை, பகைவரின் முப்புரங்கள் எரியுமாறு அழித்த படைக்கலமுடையவரை, தாமரையில் வீற்றிருக்கும் நான்முகனும், பாம்பணையில் துயிலும் திருமாலும் போற்றுகின்ற கோலம் உடைய வரை, திருவாயால் அழைத்து, `பெருமானே! இந்த ஒளி பொருந்திய அணிகளை அணிந்த பெண்ணின் உள்ளம் மெலிவதான துன்பம் உனக்குத் தகுதியாமோ?' என்று தொடங்கிப் பாடினார்.

விளக்கவுரை

இவ்வமைப்பில் அருளிய பதிகம் `சடையாய் எனு மால்' *(தி.2 ப.18)* எனத் தொடங்கும் இந்தளப் பண்ணிலமைந்ததாகும். இப்பதிகத்தில் வரும் ஒவ்வொரு தொடரும் கருத்துடை அடை மொழியாய் நின்று, அப்பெண்ணின் துயரத்தையும், அதனை அகற் றுதற்குரிய குறிப்பையும் கொண்டு நிற்கின்றன. முதற்பாடலின் நான்காவது அடியையே இங்கு எடுத்து மொழிந்துள்ளார்.

பொங்குவிடந் தீர்ந்தெழுந்து நின்றான் சூழ்ந்த
பொருவில்திருத் தொண்டர்குழாம் பொலிய ஆர்ப்ப
அங்கையினை யுச்சியின்மேற் குவித்துக் கொண்டங்
கருட்காழிப் பிள்ளையார் அடியில் வீழ்ந்த
நங்கையவள் தனைநயந்த நம்பி யோடு
நானிலத்தில் இன்புற்று வாழும் வண்ணம்
மங்குல்தவழ் சோலைமலிபுகலி வேந்தர்
மணம்புணரும் பெருவாழ்வு வகுத்து விட்டார். **#2380**

அவ்வளவில், வணிகன் நஞ்சு நீங்கப்பெற்று எழுந்து நின்றான். சூழ இருந்த ஒப்பில்லாத அடியவர்களின் கூட்டம் மிகுந்த மகிழ்வொலி செய்தது. கைகளை உச்சிமீது குவித்துக் கொண்டு அங்கு அருளுடைய பிள்ளையாரின் திருவடிகளில் வீழ்ந்த நங்கை யான அப்பெண்ணை, அன்பு செய்த நம்பியான அந்த வணிகனோ டும் இவ்வுலகத்தில் இன்பம் பொருந்தி வாழுமாறு, மேகம் தவழும் சோலை மிகச் சூழ்ந்த சீகாழித்

தலைவர், மணம் புணர்கின்ற பெரு வாழ்வைச் செய்து இல்வாழ்வில் இயைவித்தார்.

விளக்கவுரை

இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

மற்றவர்க்கு விடைகொடுத்தங் கமரு நாளில்
மருகல்நக ரினில்வந்து வலிய பாசம்
செற்றபுகழ்ச் சிறுத்தொண்டர் வேண்ட மீண்டும்
செங்காட்டங் குடியிலெழுந் தருள வேண்டிப்
பற்றியெழுங் காதல்மிக மேன்மேற் சென்று
பரமனார் திறத்துன்னிப் பாங்க ரெங்கும்
சுற்றும் அருந் தவரோடும் கோயி லெய்திச்
சுடர்மழுஆண் டவர்பாதந் தொழுவான் புக்கார். **#2381**

வணிகனுக்கும் அப்பெண்ணுக்கும் விடைதந்து, சீகாழித் தலைவர், திருமருகலில் தங்கி இருக்கும் நாள்களில் வலிய ஆணவ மலத் திண்மையினை அழித்த புகழுடைய சிறுத்தொண்ட நாயனார், திருமருகல் நகரில் வந்து வேண்டிக் கொள்ள, மீண்டும் பிள்ளையார் திருச்செங்காட்டாங்குடியில் எழுந்தருளுவதற்கான, மேன் மேலும் தொடர்ந்து எழுகின்ற பெருவிருப்புமிக, இறைவரின் திருவருளைப் பெற எண்ணி, சூழ்ந்திடும் அடியார் கூட்டத்தோடும் திருக்கோயிலை அடைந்து, ஒளியுடைய மழுப் படையை உடைய இறைவரின் திருவடிகளைத் தொழுவதற்காக உள்ளே புகுந்தார்.

விளக்கவுரை

வலிய பாசம் - ஆணவ மலம்; மலக்கல் என உரு வகிப்பதும் காண்க. அதனை யழித்த புகழாவது சிறுத்தொண்டர் என அழைக்கப் பெற்றமையாகும். `மேதகையார் அவர்முன்பு மிகச் சிறிய ராய் அடைந்தார், ஆதலினால் சிறுத்தொண்டர் எனத் திகழ்ந்தார் அவனியின் மேல்' *(தி.12 சிறுத். 15)* எனப் பின்னர் அருள இருப்பதும் காண்க.

புக்கிறைஞ்சி எதிர்நின்று போற்று கின்றார்
பொங்குதிரை நதிப்புனலும் பிறையுஞ் சேர்ந்த
செக்கர்முடிச் சடைமவுலி வெண்ணீற் றார்தம்
திருமேனி ஒருபாகம் பசுமை யாக
மைக்குலவு கண்டத்தார் மருகற் கோயில்
மன்னுநிலை மனங்கொண்டு வணங்கு வார்முன்
கைக்கனலார் கணபதீச் சரத்தின் மேவும்
காட்சிகொடுத் தருளுவான் காட்டக் கண்டார். **#2382**

கோயிலுக்குள் புகுந்து வணங்கிப் போற்றுகின்ற பிள்ளையார்,

பொங்கும் அலைகளையுடைய நீர் நிறைந்த கங்கையும் பிறைச் சந்திரனும் கூடிய சிவந்த சடையான மகுடமுடைய திரு வெண்ணீற்றை அணிந்த இறைவரின் திருமேனி ஒருபாகம் பசுமை யாக, நஞ்சு விளங்கும் கழுத்தையுடைய இறைவர், திருமருகல் கோயி லில் எழுந்தருளியிருந்த நிலைமையினை உள்ளத்தில் எண்ணிக் கொண்டு வணங்குவாராக அவர் முன்பு, கையில் தீயையுடைய இறைவர், கணபதீச்சரத்தில் பொருந்திய காட்சியை இங்குத் தந்தருளும் பொருட்டுக் காட்டியருளக் கண்டார்.

விளக்கவுரை

`ஒருபாகம் பசுமையாக' என்றது அம்மையாரை இடனாகக் கொண்டிருப்பது பற்றியாம். திருமருகலில் வணங்குவாருக் குத் திருச்செங்காட்டாங்குடியில் வீற்றிருந்தருளும் திருக்கோலத்தைக் காட்டியது, அவரை அங்கு வருமாறு அருளிய திருக்குறிப்பாகும்.

மருகல் அமர்ந்து நிறைந்த கோலர்
மல்குசெங் காட்டங் குடியின் மன்னிப்
பெருகு கணபதி ஈச்ச ரத்தார்
பீடுடைக் கோலமே யாகித் தோன்ற
உருகிய காதலும் மீது பொங்க
உலகர்முன் கொள்ளும் உணர்வு நீட
அருவிகண் வார்வுறப் பாட லுற்றார்
அங்கமும் வேதமும் என்றெ டுத்து. **#2383**

திருமருகலில் விரும்பி நிறைந்த கோலமானது, பொருந்திய திருச்செங்காட்டங்குடியில் நிலைபெற்றுக் காணத்தகும் கணபதீச்சரத்தாரின் பெருமையுடைய கோலமேயாகித் தோன்ற, உள் ளம் உருகுவதால் உள்ளதான காதல் மேன்மேலும் பொங்கவும், உலகத் தார்க்கு அறிவுறுத்தும் கருணை உணர்வு நீடவும், கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் அருவி போல வடிய, `அங்கமும் வேதமும்' எனத் தொடங்கிப் பாடுவாராய்,

விளக்கவுரை

இத்தொடக்கமுடைய பதிகம் நட்டபாடைப் பண்ணில மைந்த பதிகமாகும் *(தி.1 ப.6)*. பாடல்தொறும், `கணபதியீச்சரம் காமுறவே, மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்' என வருவதே இவ்வகையில் ஆசிரியர் கூறுதற்குக் காரணமாயிற்று. `மைந்த சொல் லாய்' எனப் பதிகம் முழுதும் அமைந்திருத்தலின் வினாவுரைப் பதிகமாயிற்று.

கண்டெதிர் போற்றி வினவிப் பாடிக்
கணபதி ஈச்சரங் காத லித்த

அண்டர் பிரானை வணங்கி வைகும்
அப்பதி யிற்சில நாள்கள் போற்றித்
தொண்ட ருடனருள் பெற்று மற்றத்
தொல்லைத் திருப்பதி யெல்லை நீங்கிப்
புண்டரி கத்தடஞ் சூழ் பழனப்
பூம்புக லூர்தொழப் போது கின்றார். **#2384**

அவ்வகையில் தோன்றப் பார்த்து, நேரே போற்றி, இவ்வாறு அருளுதற்குக் காரணம் என்ன? என வினவிய கருத்துப்படப் பாடி, கணபதீச்சரத்தில் விரும்பி எழுந்தருளியிருக்கும் தேவதேவரைச் சென்று வணங்கி, அத்திருச்செங்காட்டங்குடியில் சில நாள்கள் தங்கிப் போற்றித் தொண்டர்களுடன் விடைபெற்று, அப் பழைய பதியை நீங்கி, தாமரைப் பொய்கைகள் சூழ்ந்த வயல்களை யுடைய பூம்புகலூரினைச் சென்று வணங்குதற்கு எழுந்தருளுவாராகி,

விளக்கவுரை

****

சீரின் மலிந்த சிறப்பின் மேவும்
சிறுத்தொண்டர் நண்புடன் செல்ல நல்ல
வேரி நறுந்தொங் கல்மற் றவரும்
விடையரு ளப்பெற்று மீண்ட பின்பு
நீரின் மலிந்த சடையர் மேவி
நிகழும் பதிகள் பலப ணிந்து
பாரின் மலிந்து நிறைந்த செல்வம்
பயில்புக லூர்நகர்ப் பாங்க ணைந்தார். **#2385**

சீர்மை மிகுந்த சிறப்புடைய சிறுத்தொண்டர் நட்பின் பிணிப்பால் தம்மோடு வர, நல்ல தேன் பொருந்திய மணம் உடைய மாலையைச் சூடிய அந்நாயனாரும் விடைகொடுக்கப் பெற் றுத் தம் நகருக்குத் திரும்பிய பின்பு, கங்கை பொருந்திய சடையை யுடைய இறைவர் எழுந்தருளியிருக்கும் பல பதிகளையும் பணிந்து சென்று பிள்ளையார், உலகில் பெருகி நிறைந்த செல்வம் மிக்க புகலூர் நகரின் அருகணைந்தார்.

விளக்கவுரை

`விடையருளப் பெற்று' என்றார், சிறுத்தொண்டருக்கு உடன் வரும் விருப்பே மீதூர்ந்திருந்தமை தோன்ற. பதிகள் பல என்பன, திருஇராமனதீச்சரம், திருப்பனையூர் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். இராமனதீச்சரப் பதிகம் ஒன்றேயுள்ளது. அது `சங்கொளிர்' (தி.1 ப.115) எனத் தொடங்கும் வியாழக்குறிஞ்சிப்

பண்ணிலமைந்த பதிகமாகும். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

திருப்புக லூர்த்திருத் தொண்ட ரோடும்
செம்மை முருகனார் மெய்ம்ம கிழ்ந்த
விருப்பொடு சென்றெதிர் கொள்ள வந்து
வேத முதல்வர்தங் கோயி லெய்திப்
பொருப்புறழ் கோபுரத் துட்பு குந்து
பூமலி முன்றில் புடைவ லம்கொண்
டொருப்படு சிந்தையொ டுள்ள ணைந்தார்
ஓதாது ஞானமெ லாமு ணர்ந்தார். **#2386**

திருப்புகலூரில் வாழ்கின்ற தொண்டர்களுடன் கூடிச் செம்மை மிக்க முருக நாயனார், மெய்ம்மை மிக்க விருப்பத் துடன் நகரின் வெளியே வந்து தம்மை எதிர்கொண்டு வரவேற்க, நகரத்தின் உள்ளே வந்து, மறைகளை ஓதாதுணர்ந்த ஞானசம்பந்தர், அவற்றையருளிய முதல்வரான சிவபெருமானின் கோயிலை அடைந்து, மலைபோன்ற கோபுரத்துள் புகுந்து, அழகிய திருமுன்றி லின் அருகே வலமாக வந்து, ஒன்றுபட்ட உள்ளத்துடன் கோயிலுக் குள் புகுந்தார்.

விளக்கவுரை

செம்மை முருகனார் - திருநின்ற செம்மையே செம்மை யாகக் கொண்ட முருகனார்.

புக்கெதிர் தாழ்ந்து விழுந்தெ ழுந்து
பூம்புக லூர்மன்னு புண்ணி யரை
நெக்குரு குஞ்சிந்தை அன்பு பொங்க
நிறைமலர்க் கண்ணீ ரருவி செய்ய
மிக்க தமிழ்த்தொடை மாலை சாத்தி
மேவிய ஏழிசை பாடிப் போந்து
திக்கு நிறைசீர் முருகர் முன்பு
செல்ல அவர்மடஞ் சென்று புக்கார். **#2387**

கோயிலுக்குள் புகுந்து இறைவரின் திருமுன்பு வணங்கி, நிலத்தில் விழுந்து எழுந்து, பூம்புகலூரில் நிலைபெற எழுந்தருளியிருக்கும் புண்ணியரான சிவபெருமானை நெகிழ்ந்து உருகும் உள்ளத்தில் அன்பானது பெருக, மலர்க் கண்களில் நிறைந்த நீர், அருவிபோல் வடிய, சொற் சுவையானும், பொருள் திறத்தானும் மிக்க தமிழ்த் திருப்பதிகத்தைப் பொருந்திய ஏழிசையுடன் பாடி, வெளியே வந்து, எண் திசையிலும் நிறையும் சிறப்பையுடைய முருக நாயனார் முன்னே அழைத்துச் செல்ல அவரது திருமடத்தில் சம்பந்தர் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

இப்பதியில் அருளிய பதிகம் `வெங்கள் விட்டு' *(தி.2 ப.115)* எனத் தொடங்கும் செவ்வழிப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

ஆங்கவர் போற்றுஞ் சிறப்பின் மேவி
அப்பதி தன்னில்அமரு நாளில்
வாங்கு மலைச்சிலை யார்ம கிழ்ந்த
வர்த்தமா னீச்சரந் தான்வ ணங்கி
ஓங்கிய அன்பின் முருக னார்தம்
உயர்திருத் தொண்டு சிறப்பித் தோங்கும்
பாங்குடை வண்டமிழ் பாடி நாளும்
பரமர்தம் பாதம் பணிந்தி ருந்தார். **#2388**

அத்திருமடத்தில் பிள்ளையார், அவர் வழிபட்டு விருந்தேற்கும் சிறப்பைப் பெற்றுத் தங்கியிருக்கும் நாள்களில், வளைத்த மலையான வில்லையுடைய இறைவர் மகிழ்ந்து எழுந் தருளுகின்ற வர்த்தமானீச்சரத்தை வணங்கி, பெருகிய அன்பினால் முருகநாயனார் அங்குச் செய்துவருகின்ற உயர்ந்த தொண்டைச் சிறப்பித்துப் பாராட்டி, ஓங்கிய பண்பையுடைய வளமான தமிழ்ப் பதிகத்தைப் பாடி, சிவபெருமான் திருவடிகளை வணங்கி மகிழ்ந் திருந்தார்.

விளக்கவுரை

வர்த்தமானீச்சரம் - திருப்புகலூர்த் திருக்கோயிலில் உள்ள தனிக்கோயில். இவ்விடத்து அருளிய பதிகம் `பட்டம் பால்நிற' *(தி.2 ப.92)* எனத் தொடங்கும் பியந்தைக் காந்தாரப் பண்ணிலமைந்த பதிகமாகும். `குறிப்பறி முருகன் செய்கோலம்' *(3)* `முருகன் முப்போதும் செய்முடிமேல் வாசமாமலருடையார்' *(5)* என இப்பதிகத்து முருக நாயனார் இருமுறை பாராட்டப் பெறுகிறார்.

மற்றத் திருப்பதி வைகு நாளில்
வாக்கின் பெருவிறல் மன்ன னார்தாம்
புற்றிடங் கொண்டாரை வந்தி றைஞ்சிப்
பொன்மதில் ஆரூர் புகழ்ந்து போற்றிச்
சிற்றிடைப் பொற்றொடிப் பங்கர் தங்கும்
திருப்புக லூர்தொழச் சிந்தை செய்து
கொற்றவ னாரருள் பெற்ற தொண்டர்
குழாத்துடன் அவ்வூர் குறுக வந்தார். **#2389**

அப்பதியில் பிள்ளையார் தங்கியிருக்கும் நாள்களில், திருநாவுக்கரசர் புற்றிடங்கொண்ட இறைவரை வணங்கி, அழகிய மதில்களையுடைய திருவாரூரைப் புகழ்ந்து போற்றி, சிறிய இடையையும், பொன்னாலான அணியையும் உடைய உமையம்மை யாரை ஒரு கூற்றில் கொண்ட இறைவர் வீற்றிருக்கின்ற திருப்புகலூ ரைச் சென்று வணங்க உள்ளம்

கொண்டு, இறைவரின் திருவருள் பெற்ற தொண்டர் கூட்டத்துடன் அவ்வூரை அணுக வந்தார்.

விளக்கவுரை

****

நாவுக் கரசர் எழுந்த ருளும்
நல்லதிரு வார்த்தை கேட்ட போதே
சேவில் திகழ்ந்தவர் மைந்த ரான
திருஞான சம்பந்தர் சிந்தை அன்பு
மேவுற்ற காதல் மிகப் பெருக
விரைந்தெதிர் கொள்ளமெய் யன்ப ரோடும்
பூவிற் பொலிபொய்கை சூழ்புக லூர்ப்
புறம்பணை எல்லை கடந்து போந்தார். **#2390**

திருநாவுக்கரசர் அப்பதிக்கு வருகின்றார் என்ற நல்ல திருவார்த்தையைக் கேட்டபொழுதே, ஆனேற்று ஊர்தியை யுடைய சிவபெருமானின் மகனாரான திருஞானசம்பந்தர், தம் உள்ளத்தில் அன்பு பொங்கிய ஆசை மிகுதியால் விரைவாய் எதிர் கொள்ளும் பொருட்டு மெய்யன்பர்களுடனே மலர்களால் நிறைந்து விளங்குகின்ற வாவிகள் சூழ்ந்த திருப்புகலூரின் நகர்ப்புறத்து எல் லையைக் கடந்து சென்றார்.

விளக்கவுரை

புறம்பணை - நகர்ப்புறத்திருக்கும் பகுதிகள்.

அங்கணர் ஆரூர் வணங்கிப் போந்த
அரசும் எதிர்வந் தணைய வாசப்
பொங்கு புனல்தண் புகலி வந்த
பூசுரர் சிங்கமும் பொற்பி னெய்தித்
தங்களின் அன்பின் முறைமை யாலே
தாழ்ந்து வணங்கித் தனித்த னியே
மங்கல மாகிய நல்வ ரவின்
வாய்மை வினவி மகிழும் போது. **#2391**

சிவபெருமானின் திருவாரூரை வணங்கிவந்த திருநாவுக்கரசரும் எதிரில் வந்து சேர, மணம் கமழும் நீர் நிறைந்த சீகாழியில் தோன்றிய அந்தணர்களின் தலைவரான திருஞானசம்பந் தரும் அணிதிகழக் கூடி, ஒருவருக்கொருவர் தம் அன்பின் முறைமை யால் எதிர்கொண்டு தாழ்ந்து வணங்கி, அவரவரும் தனித் தனியே மங்கலம் பொருந்திய நல்வரவின் மெய்ம்மையான நிகழ்ச்சியினைக் கேட்டு மகிழ்ந்தபோது,

விளக்கவுரை

****

மெய்த்திரு ஞானசம் பந்தர் வாக்கின்
வேந்தரை நோக்கி விருப்பினாலே
அப்பரை இங்கணை யப்பெ றும்பே
ரருளுடை யோம்யாம் அந்தணாரூர்
எப்பரி சால்தொழு துய்ந்த தென்று
வினவிட ஈறில் பெருந்த வத்தோர்
செப்பிய வண்டமிழ் மாலை யாலே
திருவா திரைநிகழ் செல்வஞ் சொன்னார். **#2392**

மெய்ம்மையின் வடிவான திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரை நோக்கி, `விருப்பினால் அப்பராகிய தங்களை இங்கு வந்து அணையப் பெறுவதான பேற்றினைப் பெற்றோம். அழகிய குளிர்ச்சியையுடைய திருவாரூரினை வணங்கிவந்த பான் மையை அருள வேண்டும்' என்று கேட்டருள, எல்லையில்லாத பெருந்தவத் தையுடைய திருநாவுக்கரசர் அதற்கு விடையாகக் கூறியருளிய வள மான தமிழ்மாலைத் திருப்பதிகத்தினால் திருவாரூரில் திருவாதிரைத் திருவிழா நிகழும் சிறப்புச் செய்தியை எடுத்துக் கூறினார்.

விளக்கவுரை

நாவரசர் இது பொழுது அருளிய பதிகம், `முத்து விதானம்' *(தி.4 ப.21)* எனத் தொடங்கும் குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகமாகும். கி.பி.ஏழாம் நூற்றாண்டிலேயே திருவாரூரில் திருவா திரைப் பெருவிழா நிகழ்ந்து வந்த சிறப்புச் செய்தியை, இப்பதிக வழி நன்கு அறியலாம். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

அரசரு ளிச்செய்த வாய்மை கேட்ட
அப்பொழு தேஅருள் ஞான முண்ட
சிரபுர வேந்தருஞ் சிந்தை யின்கண்
தென்திரு வாரூர் வணங்கு தற்கு
விரவிய காதலிற் சென்று போற்றி
மீண்டும்வந் தும்முடன் மேவு வன்என்
றுரவு கடற்கல் மிதப்பின் வந்தார்க்
குரைத்துடன் பாடுகொண் டொல்லை போந்தார். **#2393**

திருநாவுக்கரசரும் திருப்பதிகத்தால் விடை கூறி யதைக் கேட்ட அப்பொழுதே அவ்விடத்தில், திருவருளால் ஞானவ முது உண்டருளிய சீகாழித் தலைவரான பிள்ளையாரும், தென்திரு வாரூரையடைந்து வணங்குதற்கு மனத்திலுண்டான காதலால் அங்குச் சென்று போற்றி மீண்டும் வந்து உம்மைக் கூடுவன் என்று, வலிய கடலைக் கல்லான மிதவையால் கடந்து வந்த அரசர் பெருமகனார் இடத்துச் சொல்லி, அவரது உடன்பாட்டைப் பெற்று விரைந்து சென் றருளினார்.

விளக்கவுரை

****

சொற்பெரு வேந்தருந் தோணி மூதூர்த்
தோன்றல்பின் காதல் தொடரத் தாமும்
பொற்புக லூர்தொழச் சென்ற ணைந்தார்
புகலிப் பிரானும் புரிந்த சிந்தை
விற்குடி வீரட்டஞ் சென்று மேவி
விடையவர் பாதம் பணிந்து போற்றிப்
பற்பல ஆயிரந் தொண்ட ரோடும்
பாடல னான்மறை பாடிப் போந்தார். **#2394**

திருநாவுக்கரசரும் சீகாழிப் பதியில் தோன்றிய பெருந்தகையாரான சம்பந்தரின் பின்னால் தம் காதல் தொடர்ந்து செல்லத் திருப்புகலூரில் தொழுவதற்குச் சென்று சேர்ந்தார். சீகாழித் தலைவரான பிள்ளையாரும் இடைவிடாத நினைவுடைய மனத்துடன் திருவிற்குடி வீரட்டானத்தை அடைந்து, ஆனேற்றூர்தியையுடைய சிவபெருமானின் திருவடிகளை வணங்கிய பின்பு, பற்பல ஆயிரம் தொண்டர்களுடனே `பாடலன்நா மறை' (தி.1 ப.104) எனத் தொடங் கும் பதிகத்தைப் பாடியவாறு திருவாரூரை நோக்கிச் சென்றார்.

விளக்கவுரை

பிள்ளையார் விடைபெற்றுச் சென்றதும், நாவரசரின் மனம் அவர்பின் தொடர, அவர் திருப்புகலூர் தொழச் சென்றார். பிள்ளையாரிடத்தும் பெருமானிடத்தும் அரசர் கொண்டிருந்த அன்பு மீதூர்வை விளக்கியவாறு. திருவிற்குடி வீரட்டத்தில் அருளிய பதிகம் `வடிகொள் மேனியர்' *(தி.2 ப.108)*எனத் தொடங்கும் நட்டராகப் பண்ணிலமைந்த பதிகமாகும். திருவாரூர்ப் பெருமானை நினைந்து `பாடலன் நான் மறை' *(தி.1 ப.104)*எனத் தொடங்கும் வியாழக்குறிஞ் சிப் பண்ணிலமைந்த திருப்பதிகத்தைப் பாடியவாறே சென்றருளினார். `வெள்ளேற்றான் மேய அள்ளலகன் கழனி ஆரூர் அடைவோமே' என இப்பதிகத்து வரும் மூன்றாவது பாடற் கருத்தை யுளங்கொண்டே ஆசிரியர் இப்பதிகத்தைப் பாடியவாறே திருவாரூர்த் தொழப் போந் தார் என்றருளினார். இதனை வரும் பாடலில் அவரே விளக்குமாற் றானும் அறியலாம்.

துணரிணர்ச் சோலையுஞ் சாலி வேலித்
துறைநீர்ப் பழனமுஞ் சூழ்க ரும்பின்
மணமலி கானமும் ஞானம் உண்டார்
மருங்குற நோக்கி மகிழ்ந் தருளி
அணைபவர் அள்ளற் கழனி ஆரூர்

அடைவோம் எனமொழிந் தன்பு பொங்கப்
புணரிசைச் செந்தமிழ் கொண்டு போற்றிப்
பொன்மதி லாரூர்ப் புறத்த ணைந்தார். #2395

மலர்க்கொத்துகளையுடைய சோலைகளையும், நெல்லை வேலியெனக் கொண்ட நீர்த் துறைகளையுடைய வயல்களை யும், மணம் பொருந்திய கரும்புக் காடுகளையும் ஞானமுண்ட பிள் ளையார், இரு மருங்கும் கண்டு மகிழ்ந்து, அணைபவராய் `அள்ள லகன் கழனியாரூர் அடைவோமே' எனக் கூறி, அன்பு மேன்மேல் பொங்க இசையுடன் கூடிய செந்தமிழ்ப் பதிகத்தால் போற்றி, அழகிய மதிலையுடைய திருவாரூரின் புறத்தே அடைந்தார்.

விளக்கவுரை

****

வானுயர் செங்கதிர் மண்டலத்து
மருங்கணை யுங்கொடி மன்னும்ஆரூர்
தானொரு பொன்னுல கென்னத் தோன்றும்
தயங்கொளி முன்கண்டு சண்பை வந்த
பானிற நீற்றர் பருக்கை யானைப்
பதிகத் தமிழிசை பாடி ஆடித்
தேனொடு வண்டு முரலுஞ் சோலைத்
திருப்பதி மற்றதன் எல்லை சேர்ந்தார். #2396

வானத்தே உயரச் செல்கின்ற சிவந்த கதிர் களையுடைய ஞாயிற்று மண்டலத்தின் பக்கத்தில் அணையும் நீண்ட கொடிகள் பொருந்திய திருவாரூர் நகர், ஒருபொன் உலகு என்ன விளங்கக் கண்டு, சீகாழியில் தோன்றிய பால் போன்ற வெண்மையான திருநீற்றினை அணிந்த சம்பந்தர், `பருக்கையானை' எனத் தொடங் கும் திருப்பதிகத் தமிழ் இசையினைப் பாடியும் ஆடியும் சென்று, தேனுடன் வண்டுகள் ஒலிக்கின்ற சோலைகள் சூழ்ந்த அப்பதியின் எல்லையை அடைந்தார்.

விளக்கவுரை

திருவாரூர்த் திருநகரின் ஒளியைக் கண்ட பிள்ளையார் `பருக்கையானை' *(தி.2 ப.101)* எனத் தொடங்கும் நட்டராகப் பண்ணிலமைந்த பதிகத்தைப் பாடியருளினர். இப்பதிக முதற்பாடலில் `அருக்கன் மண்டலத் தணாவும் அந்தண்ஆரூர்' *(தி.2 ப.101 பா.1)* எனப் பிள்ளையார் அருளிய குறிப்பை உளங்கொண்டே ஆசிரியர் சேக்கிழாரும், இப்பாடலை அருளிச் செய்வாராயினர். தேனீ - ஈக்க ளில் ஒரு வகை; தேன் எடுப்பதால் தேன்+ஈ = தேனீ.

பொங்கிய சிந்தை விருப்பின் வெள்ளம்

பொழிந்து புவிமேற் பொலிவ தென்ன
எங்குங் குளிரொளி வீசு முத்தின்
இலங்கு சிவிகை இழிந்த ருளிச்
செங்கை நிறைமலர் கொண்டு தூவித்
திருவிருக் குக்குறள் பாடி ஏத்தித்
தங்கள் பிரான்அர சாளும் ஆரூர்
தனைப்பணி வுற்றார் தமிழ் விரகர். **#2397**

உள்ளத்தினின்றும் பெருகிய பெருங்காதலாகிய வெள்ளத்தைச் சொரிந்து நிலவுலகத்தின் மீது விளங்குவதைப் போன்று எல்லாப் பக்கமும் குளிர்ந்த ஒளியை வீசும் முத்துப் பல்லக்கினின்றும் இறங்கி, தமிழ் வல்லுநரான பிள்ளையார், சிவந்த திருக்கைகளில் நிறைய மலர்களைக் கொண்டு தூவி வழிபட்டு உய்யுமாறு ஆற்றுப் படுத்தும் திருவிருக்குக்குறட் பதிகத்தைப் பாடி வணங்கி, தம் பெரு மான் ஆட்சி செய்கின்ற திருவாரூர் நகரைப் பணிந்தார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய திருவிருக்குக்குறட் பதிகம் `சித்தம் தெளிவீர்காள்' *(தி.1 ப.91)* எனத் தொடங்கும் குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகமாகும். ஆரூரை மலர்தூவி வழிபடல் வேண்டும் என்னும் குறிப்பை, இப்பதிகத்தின் *1, 3, 5, 6, 7* ஆகிய பாடல்களில் அருளுகின்றார். இத னையுளங் கொண்டே ஆசிரியர் சேக்கிழாரும் `நிறைமலர் கொண்டு தூவிப்... பாடி... பணிவுற்றார் தமிழ்விரகர்' என்றருளுவாராயினர்.

படியில் ஞானமுண் டருளிய
பிள்ளையைப் பணிதற்
கடியர் சென்றெதிர் கொளஎழுந்
தருளும்அஞ் ஞான்று
வடிகொள் சூலத்தர் மன்னிய
பொன்மதில் ஆரூர்க்
கடிகொள் பேரணிப் பொலிவையார் முடிவுறக் காண்பார். **#2398**

ஒப்பில்லாத ஞான அமுதத்தை உண்ட சம்பந்தரைப் பணிவதற்காக அடியவர்கள் சென்று எதிர்கொள்ள எழுந்தருளும் அந்நாளில், வடித்தலைக் கொண்ட சூலத்தையுடைய இறைவர் நிலையாய் எழுந்தருளிய பொன்மதிலைக் கொண்ட திரு வாரூரின் ஒளி பொருந்திய அணிநலன்களை முழுமையாகக் காண வல்லவர் யாவர்? ஒருவரும் இலர்.

விளக்கவுரை

காழிப் பிள்ளையாரின் வருகையறிந்த ஆரூர் அடிய வர்கள், அந்நகரை அணி செய்து புனைவித்த பாங்கை யாவரே முழு மையாகக் காணவல்லார்? என்பதால், அந்நகரைத் தோள் கண்டார் தோளே கண்டார் என்புழிப் போல, தாம் தாமும் ஒவ்வொரு பகுதி யைக் கண்டு மகிழ இயலுமேயன்றி முழுமையாகக் கண்டு மகிழ இயலாது என்பதாம்.

நான மான்மத நளிர்பெருஞ்
சேற்றிடை நறும்பொன்v தூந றுந்துகள் சொரிதலிற்
சுடரொளிப் படலை
ஆன வீதிகள் அடிவலித்
தவைகரைந் தலைய
வான மாரியிற் பொழிந்தது
மலர்மது மாரி. **#2399**

புனுகும் கத்தூரியும் கலந்த குளிர்ந்த பெருஞ் சேற்றில் உயர்ந்த பொன்னைப் போன்ற தூய சுண்ணப் பொடிகளைத் தூவுவதால், ஒளி பொருந்த அணிசெய்யப்பட்ட அத்தெருக்கள், அடி வழுக்குமாறு அந்தச் சேறும் துகளும் கரைந்து போக, வானத்தினின்று விழும் மழை போல் பூக்களிலிருந்து தேன்மாரி பொழிந்தது.

விளக்கவுரை

நறுமணக் கலவைகளைத் தெளித்தலும், அவற்றின்மீது சுண்ணம் தெளித்தலும், வீதிகளை அழகுபடுத்தவாம். எனினும் அவ் வழிதொறும் செல்வோர்க்கு வழுக்குதலை ஏற்படுத்த, அச்சேறு கரைய மலர்களிலிருந்து தேன்மழை பொழிகின்றதாம்.

ஆடல் நீடுவ துகிற்கொடி
கொடிகள் அணிகுழற்
தோடு சூழ்வன சுரும்பொடு
தமனியத் தசும்பு
காடு கொண்டன கதலிதோ
ரணநிரைக் கமுகு
மாட மாளிகை மண்டபங்
களின்மருங் கெல்லாம். **#2400**

மாடங்கள், மாளிகைகள் மண்டபங்கள் ஆகிய இவற்றின் பக்கங்கள் எல்லாம், துணிக் கொடிகளும், அழகான கூந்த லையுடைய பெண் கொடிகளும் ஆடலில் நீடுவன, வண்டுகளும், பொன் குடங்களும் மலர் இதழ்களில் சூழ்வன, வாழைகளும் தோர ணங்களும் வரிசையான பாக்குகளும் காட்டைப் போன்ற காட்சியுடன் விளங்குவன.

விளக்கவுரை

`ஆடலில் நீடுவன' என்றது துணிக் கொடிகளும் ஆட லில் தவிர்வனவாயில்லை; பெண்கொடிகளும் தம் ஆடலில் தவிர் பவராய் இல்லை என்பதை விளக்குகின்றன. பொற்குடங்களில் மலர்கள் வைக்கப்பட்டிருத்தல் எதிர்கொள்வதற்குரிய மங்கலப் பொருள்களில் ஒன்றாக இருத்தல் பற்றியாம்.

மாலை சூழ்புறங் கடைகளின்
மணிநிரை விளக்கின்
கோல நீள்சுடர் ஒளியுடன்
கோத்திடை தூக்கும்
நீல மாமணி நிழல்பொர
நிறம்புகர் படுக்கும்
பால வாயின பவளவே
திகைமலர்ப் பந்தர். **#2401**

அத்தகைய பக்கங்களைச் சூழ்ந்த புறவாயில் களில், மாலைப் பொழுதில், மணிகளையுடைய வரிசையாய்த் தொங்க விடப்பட்ட விளக்குகளின் அழகிய நீண்ட சுடர் ஒளியுடன் தொடர்பு படுமாறு கோவை செய்து இடையிடையே தொங்கவிடப்பட்ட பெரிய நீலமணிகளின் நிழலானது கூடி அலைத்தலால், பவள நிறமுடைய திண்ணைகளின் மேல் உள்ள பூம்பந்தல்களின் செந்நிறம் கருமை நிறத்தையுடையனவாய் ஆயின.

விளக்கவுரை

திண்ணைகளின் செந்நிறத்தை, அங்குத் தொங்கவிடப் பட்டிருக்கும் மணிகளின் ஒளி கருமைப்படக் கலக்கின்றது என்பது கருத்து. புகர் - கருநிறம்.

தழைம லர்த்தடஞ் சாலைகள்
தெற்றிகள் சதுக்கம்
குழைமு கத்தவர் ஆடரங்
கிமையவர் குழாமும்
விழைசி றப்பின வியலிடம்
யாவையு மிடைந்து
மழைமு ழக்கென இயம்பின
மங்கல இயங்கள். **#2402**

தழைத்த பூம்பொய்கைகளும், சாலைகளும், தெற்றிகளும், சதுக்கங்களும், காதணிகளை அணிந்த பெண்கள் ஆடும் அரங்குகளும், தேவர் கூட்டமும் விரும்பும் சிறப்புடைய அகன்ற இடங்களும் ஆகிய எவ்விடங்களிலும் நெருங்கி மழை ஒலிபோல மங்கல இயங்கள்

இயம்பின.

விளக்கவுரை

****

விரவு பேரணி வேறுவே
றின்னன விளங்கும்
பிரச மென்மலர்ச் சோலைசூழ்
பெருந்திரு வாரூர்
அரச ளிப்பவர் அருளினால்
அடியவர் குழுவும்
புரிச னங்களும் புறத்தணைந்
தெதிர்கொளும் பொழுது. **#2403**

மேல் கூறப்பட்டவாறு பொருந்திய வெவ்வேறு வகைப்பட்ட இத்தகைய பேரணிகலன்கள் விளங்கும், தேனையுடைய மென்மையான மலர்கள் நிறைந்த பூஞ்சோலைகளின் பெருமையைக் கொண்ட திருவாரூரில், அரசாளும் தியாகராசப் பெருமான் திருவரு ளால் அடியவர் கூட்டமும் மற்ற மக்களும் நகரத்தின் வெளியே வந்து அணைந்து பிள்ளையாரை எதிர்கொள்கின்ற அளவில்.

விளக்கவுரை

பரிசனங்கள் - அடியவர்களைச் சார்ந்து பணிபுரிந்து வரும் நகர மக்கள்.

வந்தி றைஞ்சு மெய்த் தொண்டர்தங்
குழாத்தெதிர் வணங்கிச்
சந்த முத்தமிழ் விரகராம்
சண்பையர் தலைவர்
அந்த மாயுல காதியாம்
பதிகமங் கெடுத்தே
எந்தை தானெனை ஏன்றுகொ
ளுங்கொல்என் றிசைத்தார். **#2404**

தம் எதிரே வணங்கும் மெய்த்தொண்டர் கூட்டத் தின் முன்னம் தாமும் எதிர் வணங்கி; சந்தமுடைய முத்தமிழ் வல்லுநர் ஆன சீகாழித் தலைவர், `அந்தமாயுல காதியாம்' எனத் தொடங்கு கின்ற திருப்பதிகத்தை அங்குத் தொடங்கி, `எம்பெருமானார்தாம் என்னை ஏற்றுக் கொள்வாரோ?' என்ற கருத்துடன் பாடி நிறைவு செய்தார்.

விளக்கவுரை

`அந்தமாயுல காதியாம்' *(தி.3 ப.45)* எனத் தொடங்கும் பதிகம் கௌசிகப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

ஆன அத்திருப் பதிகம்முன்

பாடிவந் தணையும்
ஞான வித்தகர் மெய்த்தவர்
சூழஅந் நகரார்
தூந றுஞ்சுண்ண மலர்பொரி
தூஉய்த்தொழு தேத்த
வான நாயகர் கோயில்வா
யிலின்மருங் கணைந்தார். **#2405**

அத்திருப்பதிகத்தைப் பாடி வந்து சேருகின்ற ஞானவித்தகரான பிள்ளையார், மெய்யடியார்கள் தம்மைச் சூழ்ந்து வரவும், அத்திருவாரூர் நகர மக்கள் தூய்மையான மணமுடைய சுண்ணப் பொடியையும், மலர்களையும் பொரியினையும் தூவித் தொழுது வணங்கவும், இவ்வாறு நகரத் தெருக்களைக் கடந்து சென்று தேவர் தலைவரான சிவபெருமானின் கோயில் வாயிலை அடைந்தார்.

விளக்கவுரை

****

மன்னு தோரண வாயில்முன்
வணங்கியுள் புகுவார்
தன்னுள் எவ்வகைப் பெருமையும்
தாங்கிய தகைத்தாம்
பன்னெ டுஞ்சுடர்ப் படலையின்
பரப்பினைப் பார்த்துச்
சென்னி தாழ்ந்துதே வாசிரி
யன்தொழு தெழுந்தார். **#2406**

தோரணங்கள் நிலைபெற அமைக்கப்பட்டு விளங்கும் வாயிலின் முன்பு வணங்கிக் கோயிலுக்குள் புகுந்தவரான பிள்ளையார், தனக்குள் எல்லா வகையான பெருமையும் கொண்ட நீண்ட ஒளி வரிசையின் பரப்பினைக் கண்டு, தலை வணங்கித் தேவா சிரிய மண்டபத்தை வணங்கினார்.

விளக்கவுரை

இங்குக் குறிக்கப் பெற்ற ஒளி சிவஒளியாகும். ஞானம் உண்ட பெரும் பேற்றால் இவ்வொளி அவருக்குத் தோன்றலாயிற்று.

மாடு சூழ்திரு மாளிகை
வலங்கொண்டு வணங்கிக்
கூடு காதலிற் கோபுரம்
பணிந்துகை குவித்துத்
தேடு மாலயற் கரியராய்ச்
செழுமணிப் புற்றில்

நீடு வார்முன்பு நிலமுறப்
பலமுறை பணிந்தார். **#2407**

அம்மண்டபத்தின் அருகே, சுற்றிலும் சூழ்ந்த திருமாளிகையை வலங்கொண்டு வந்து வணங்கிக் கூடும் அன்பு மிகுதியால் கோபுரத்தைப் பணிந்து கைகூப்பித் தொழுது, தம்மைத் தேடிய திருமாலுக்கும், நான்முகனுக்கும் அறிதற்கு அரிய செழுமை யான மணிப்புற்றுள் இடம் கொண்டு நிலையாக எழுந்தருளியுள்ள இறைவரைப் பன்முறையும் நிலத்தில் விழுந்து வணங்கினார்.

விளக்கவுரை

****

பணிந்து வீழ்ந்தனர் பதைத்தனர்
பரவிய புளகம்
அணிந்த மேனியோ டாடினர்
பாடினர் அறிவில்
துணிந்த மெய்ப்பொரு ளானவர்
தமைக்கண்டு துதிப்பார்
தணிந்த சிந்தையின் விரைந்தெழு
வேட்கையில் தாழ்ந்தார். **#2408**

பணிந்து விழுந்தார்; பதைத்தார்; உடல் முழுதும் மயிர்க்கூச்செறியப் பரவிய நிலையில் ஆடினார்; பாடினார் தம் அறிவினுள்ளே தெளிவாகக் கண்டு கொண்டிருந்த மெய்ப் பொரு ளான சிவபெருமானை வெளியேயும் பார்த்துப் போற்றுபவராய்த் தம் உள்ளத்துள் விரைந்து எழும் விருப்புடன் வணங்கினார்.

விளக்கவுரை

****

செஞ்சொல் வண்தமிழ்த் திருப்பதி
கத்திசை யெடுத்து
நஞ்சு போனகம் ஆக்கிய
நம்பர்முன் பாடி
மஞ்சு சூழ்திரு மாளிகை
வாயிலின் புறம்போந்
தஞ்செ ழுத்தின்மெய் யுணர்ந்தவர்
திருமடத் தணைந்தார். **#2409**

செஞ்சொல்லாலான வண்தமிழ்ப் பதிகத்தைத் தொடங்கி, நஞ்சை அமுதமாய் ஆக்கிய இறைவர் திருமுன்பு போற்றி, மேகங்கள் சூழ்கின்ற மாளிகையின் வாயில் பக்கத்தை அடைந்து, திரு வைந்தெழுத்தின்

மெய்ப்பொருளை உணர்ந்தவரான பிள்ளையார் திருமடத்தைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

இவ்வரிய திருப்பதிகம் கிடைத்திலது.

அங்க ணைந்தமர்ந் தருளுவார்
அரனெறி அமர்ந்த
செங்க ணேற்றவர் சேவடி
வணங்கிமுன் திளைத்துப்
பொங்கு பேரொளிப் புற்றிடங்
கொண்டவர் புனிதப்
பங்க யப்பதந் தொழுதுகா
லந்தொறும் பணிந்தார். **#2410**

அத்திருமடத்தில் தங்கியிருந்த பிள்ளையார் `திருஆரூர்அரனெறி' என்ற கோயிலில் விரும்பி எழுந்தருளியுள்ள சிவந்த கண்களையுடைய ஆனேற்று ஊர்தியை உடைய இறைவரின் சேவடிகளை வணங்கித் திளைத்து, பெருகும் பேரொளியை உடைய புற்றிடங்கொண்ட பெருமானின் தூய்மையான தாமரை போன்ற திருவடிமலர்களைக் காலந்தோறும் தொழுதுவந்தார்.

விளக்கவுரை

திருவாரூர் அரனெறியில் அருளிய பதிகம் கிடைத்திலது.

புற்றி டங்கொளும் புனிதரைப்
போற்றிசை பெருகப்
பற்றும் அன்பொடு பணிந்திசைப்
பதிகங்கள் பாடி
நற்ற வத்திருத் தொண்டர்க
ளொடுநலஞ் சிறப்ப
மற்ற வண்பதி தன்னிடை
வைகுமந் நாளில். **#2411**

புற்றிடங்கொண்டருளும் தூயவரான இறைவ ரைப் பணிந்து போற்றி இசைபெருகுமாறு பற்றும் அன்புடனே வணங்கி, இனிய இசையால் திருப்பதிகங்களைப் பாடி நல்ல தவத் தினை மேற்கொண்ட தொண்டர்களுடன், நன்மை சிறந்து ஓங்குமாறு, அவ்வளமுடைய பதியில் தங்கியிருக்கும் நாள்களில்,

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகங்கள் எவையும் கிடைத்தில. `ளொடுநலம்' என்பது `ளுடன்நலம்' என்றும் பாடம்.

மல்லல் நீடிய வலிவலங்
கோளிலி முதலாத்
தொல்லை நான்மறை முதல்வர்தம்
பதிபல தொழுதே
எல்லை யில்திருப் பதிகங்க
ளாற்பணிந் தேத்தி
அல்லல் தீர்ப்பவர் மீண்டும்
ஆரூர்தொழ அணைந்தார். **#2412**

உலகின் துன்பங்களைத் தீர்க்க வந்த பிள்ளை யார், திருவருள் செழிப்பால் சிறந்த `திருவலிவலம்', `திருக்கோளிலி' முதலாக உள்ள நான்மறைகளின் முதல்வரான இறைவரின் திருப்பதி கள் பலவற்றையும் தொழுது, அளவில்லாத திருப்பதிகங்ளைப் பாடி, மீண்டும் திருவாரூரின்கண் தொழுவதன் பொருட்டாக வந்தார்.

விளக்கவுரை

இப்பதிகளில் அருளிய பதிகங்கள்*:* திருவலிவலம்*: 1.*பூவியல் புரிகுழல் *(தி.1 ப.123) -* வியாழக்குறிஞ்சி *2.*ஒல்லையாறி *(தி.1 ப.50) -* பழந்தக்கராகம். திருக்கோளிலி*: 1.*நாளாயபோகாமே *(தி.1 ப.62) -* பழந்தக்கராகம். இவை முதலான பல பதிகள் என்பன திருஏமப்பேறூர், திருச் சாட்டியக்குடி முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். பதி கங்கள் எவையும் கிடைத்தில. `தொழுதே*'* என்பது `தொழல்*'* என்றும் பாடம்.

ஊறு காதலில் ஒளிவளர்
புற்றிடங் கொண்ட
ஆறு லாவிய சடைமுடி
ஐயரைப் பணிந்து
நீறு வாழ்வென நிகழ்திருத்
தொண்டர்க ளோடும்
ஈறி லாத்திரு ஞானசம்
பந்தர்அங் கிருந்தார். **#2413**

மிகுகின்ற அன்பால், ஒளிவீசும் புற்றில் வீற்றி ருக்கும், கங்கை உலாவுதற்கு இடமான சடையை உடைய தலைவரான இறைவரை வணங்கித் `திருநீறே தம் வாழ்வாகும்' என்னும் திருவுள் ளமுடைய திருத்தொண்டர்களுடனே இறுதியில்லாத சிவஞானம் உடைய ஞானசம்பந்தர் திருவாரூரில் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

****

அங்கு நன்மையில் வைகும்அந்
நாள்சில அகல
நங்கள் தந்திரு நாவினுக்
கரசரை நயந்து
பொங்கு சீர்ப்புக லூர்தொழ
அருளினாற் போவார்
தங்கும் அப்பதிப் புறம்பணை
சார்ந்தருள் செய்வார். **#2414**

அவ்வாறு இருந்தருளிய நாள்கள் சில கழிய, திருநாவுக்கரசரை விரும்பி, பொங்கும் சிறப்பைக் கொண்ட திருப் புகலூரினை வணங்குவதற்கு விடைபெற்றுக் கொண்டு செல்பவராய்த் தங்கிய அத்திருவாரூர்ப் பதியின் புறம்பணையைச் சேர்ந்து அருள் செய்பவராய்,

விளக்கவுரை

****

புவனவா ரூரினிற் புறம்புபோந்
ததனையே நோக்கிநின்றே
அவமிலா நெஞ்சமே அஞ்சல்நீ
உய்யுமா றறிதிஅன்றே
சிவனதா ரூர்தொழாய் நீமற
வாதென்று செங்கைகூப்பிப்
பவனமாய்ச் சோடையாய் எனுந்திருப்
பதிகமுன் பாடினாரே. **#2415**

மண் உலகத்தில் சிறந்த திருவாரூரின் நகர்ப் புறத்தின் மருதநிலத்தில் போய்ச் சேர்ந்து, அந் நகரத்தையே நோக்கி நின்ற வண்ணம், `பயனில்லாது கழிந்து போகாத மனமே! நீ அஞ்சாதே! உய்யும் வகையினை அறிவாய் அல்லையோ! சிவபெருமானின் திருவாரூரை நீ மறக்காது தொழுவாயாக!' எனச் சொல்லி சிவந்த கைகளைத் தலைமீது குவித்துக் கொண்டு, `பவனமாய்ச் சோடையாய்' எனத் தொடங்கும் பதிகத்தை அந்நகரின் முன்பாடி அருளினார்.

விளக்கவுரை

இப்பதிகம் `பவனமாய்' *(தி.2 ப.79)* எனத்தொடங்கும் காந்தாரப் பண்ணிலமைந்த பதிகமாகும். நெஞ்சறிவுறுத்தலாக அமைந்த இப்பதிகம், பிள்ளையார் தம் அளவில் பிரிவாற்றாமை யாகவும், நம்மனோர் அளவில் அறவுரையாகவும் அமைந்த பதிகமா கும். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின. `பதிகமுன் பாடினாரே' என்பது `பதிகமே பாடிநின்றார்' என்றும் பாடம்.

காழியார் வாழவந் தருள்செயும்
கவுணியப் பிள்ளை யார்தாம்
ஆழியான் அறியொணா அண்ணல்
ஆரூர்பணிந் தரிது செல்வார்
பாழிமால் யானையின் உரிபுனைந்
தார்பனை யூர்ப ணிந்து
வாழிமா மறையிசைப் பதிகமும்
பாடிஅப் பதியில் வைகி. **#2416**

சீகாழியிலுள்ளார் வாழ்வதன் பொருட்டாய்த் தோன்றிய கவுணியர், திருமாலும் அறியமுடியாத இறைவரின் திரு வாரூரினைப் பணிந்து மேற்செல்பவராய், வலிமையும் மதமயக்கமும் உடைய யானையின் தோலைப் போர்த்த சிவபெருமானின் `திருப் பனையூரைப்' பணிந்து, வாழ்வுடைய பெரிய மறைகளின் பொருளை யும் இசையினையும் உடைய திருப்பதிகத்தையும் பாடி அப்பதியில் தங்கியிருந்து,

விளக்கவுரை

திருப்பனையூரில் அருளிய பதிகம் `அரவச் சடைமேல்' *(தி.1 ப.37)* எனத் தொடங்கும் தக்கராகப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

அங்குநின் றரிதெழுந் தருளுவார்
அகிலகா ரணரும் ஆனார்
தங்குநற் பதிகளும் பிறபணிந்
தருளிவண் தமிழ்பு னைந்தே
எங்குமெய்த் தவர்குழா மெதிர்கொளத்
தொழுதெழுந் தருளி வந்தார்
பொங்குதண் பாசடைப் பங்கயப்
புனல்வயற் புகலூர் சார. **#2417**

அப்பதியினின்றும் அரிதாய்ப் புறப்பட்டுச் செல்வாராய், உலகம் எல்லாவற்றிற்கும் காரணர் ஆன சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் நன்மையுடைய பிற பதிகளையும் வணங்கித் திருப்பதிகம் பாடி, எவ்விடத்தும் உண்மைத் தவமுடைய அடியவர்கள் தம்மை எதிர்கொள்ளத் தொழுது, பொங்கும் குளிர்ச்சியான இலை களை உடைய தாமரைப் பொய்கைகள் சூழ்ந்த திருப்புகலூரை அணு கச் சென்றார்.

விளக்கவுரை

பிறபதிகளும் என்பன, எவையெனத் தெரிந்தில. `காரண ரும்' என்பது `காரணமும்' என்றும் பாடம்.

நாவினுக் கரசரும் நம்பிசீர்

முருகரும் மற்று நாமச்
சேவுகைத் தவர்திருத் தொண்டரா
னவர்கள்முன் சென்று சீதப்
பூவினிற் பொலிபுனற் புகலியார்
போதகத் தெதிர்ப ணிந்தே
மேவமற் றவருடன் கூடவே
விமலர்கோ யிலைஅ டைந்தார். **#2418**

திருநாவுக்கரசரும், நம்பி எனத்தகும் முருக நாயனாரும் மற்றும் விடைக் கொடியையுடைய உயர்ந்த சிவபெரு மானின் திருத்தொண்டர்களும் எதிர்கொண்டு, முன்போய்க் குளிர்ந்த பூக்களால் பொலிவுபெற்ற நீர்வளம் கொண்ட சீகாழித் தலைவராம் ஆனைக் கன்றின் திருமுன்பு பணிந்து சேர, அவர்களுடன் தாமும் சென்று இறைவரின் திருக்கோயிலைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

****

தேவர்தந் தலைவனார் கோயில்புக் கனைவரும்
சீர்நிலத் துறவ ணங்கிப்
பாவருந் தமிழிசைப் பதிகமும் பாடிமுன்
பரவுவார் புறம்ப ணைந்தே
தாவில்சீர் முருகனார் திருமனைக் கெய்திஅத்
தனிமுதல் தொண்டர் தாமே
யாவையுங் குறைவறுத் திடஅமர்ந் தருளுவார்
இனிதின்அங் குறையு நாளில். **#2419**

தேவரின் தலைவர்தம் கோயிலுள் புகுந்து அனைவரும் நிலத்தில் பொருந்த விழுந்து வணங்கி, பாக்களின் பாகுபாட்டுக்கு இணங்க அமைந்த தமிழிசை பொருந்திய திருப் பதிகத்தைப் பாடித் திருமுன்பு நின்று போற்றுபவரான ஞானசம்பந்தர், வெளியில் வந்து, குற்றமற்ற சிறப்பையுடைய முருக நாயனாரின் இல்லத்தில் சேர்ந்து, ஒப்பில்லாத முதன்மை கொண்ட அத்திருத் தொண்டரே திருவமுது, உறையுள் முதலான எல்லாவற்றையும் குறைவில்லாது அமைக்க, அங்கு விரும்பித் தங்கியிருந்த நாள்களில்,

விளக்கவுரை

இதுபொழுது அருளிய திருப்பதிகம் கிடைத்திலது.

நீலநக் கடிகளும் நிகழ்சிறுத் தொண்டரும்
உடன்அணைந் தெய்து நீர்மைச்
சீலமெய்த் தவர்களுங் கூடவே கும்பிடுங்

செய்கைநேர் நின்று வாய்மைச்
சாலமிக் குயர்திருத் தொண்டின்உண் மைத்திறந்
தன்னையே தெளிய நாடிக்
காலமுய்த் தவர்களோ டளவளா விக்கலந்
தருளினார் காழி நாடர். **#2420**

இந்நற் செய்தியைக் கேட்டு வந்த நீலநக்க நாயனாரும் புகழையுடைய சிறுத்தொண்ட நாயனாரும் கூடிப் பொருந்திய நீர்மையுடைய சீலமுடைய மற்ற மெய்த்தவர்களான தொண்டர்களும் தம்முடன் இறைவரை வழிபடும் செய்கையில் ஒருப்பட்டு நின்று, வாய்மையில் மிகவும் உயர்வுடைய திருத்தொண் டின் உண்மைத் திறங்களையே தெளிவாக நாடி, சீகாழித் தலைவரான பிள்ளையார் அவர்களுடன் கூடிக் கலந்து, காலம் உண்டாகவே காதல் செய்தவாறு அளவளாவியிருந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின. `சாலமிக்கு' என்பது `சால்பின்மிக்கு' என்றும் பாடம்.

கும்பிடுங் கொள்கையிற் குறிகலந் திசையெனும்
பதிகமுன் னான பாடல்
தம்பெருந் தலைமையால் நிலைமைசால் பதியதன்
பெருமைசால் புறவி ளம்பி
உம்பரும் பரவுதற் குரியசொற் பிள்ளையார்
உள்ளமெய்க் காதல் கூர
நம்பர்தம் பதிகளா யினஎனைப் பலவும்முன்
நண்ணியே தொழந யந்தார். **#2421**

கும்பிடும் கொள்கையின் குறிப்பை உள்ளடக்கிக் `குறிகலந்த எனத் தொடங்கும் திருப்பதிகத்தைத் தம் பெருந்தலைமைப் பாட்டினால் நன்னிலைமை நிறைந்த அப்பதியின் பெருமையை எடுத்துக் கூறி, தேவர்களும் போற்றுதற்குரிய சொல் வன்மையுடைய பிள்ளையார், உள்ளத்தில் உண்மை அன்பு பெருகி யதால் இறைவரின் பதிகளான பிறபதிகளுக்கும் சென்று வணங்க விருப்பம் கொண்டார்.

விளக்கவுரை

குறிகலந்த *(தி.1 ப.2)* எனத்தொடங்கும் பதிகம் நட்டபாடைப் பண்ணிலமைந்ததாகும். பதிகப் பாடல்தொறும், திருப் புகலூரில் பெருமான் வீற்றிருக்கும் பெருமையையும், அதன் நீர் வளம், நிலவளம், மக்கள் நலம் முதலாய வளங்களையும் குறித்துப் போற்றியிருத்தலின், `பதியதன் பெருமை சால்புற விளம்பி' என்றார்.

புள்ள லம்புதண் புனற்புக

லூருறை புனிதனார் அருள்பெற்றுப்
பிள்ளை யாருடன் நாவினுக்
கரசரும் பிறபதி தொழச்செல்வார்
வள்ள லார்சிறுத் தொண்டரும்
நீலநக் கரும்வளம் பதிக்கேக
உள்ளம் அன்புறு முருகர்அங்கு
ஒழியவும் உடன்பட இசைவித்தார். **#2422**

நீர்ப்பறவை ஒலித்தற்கு இடமான குளிர்ந்த நீர் நிலை சூழ்ந்த திருப்புகலூரில் எழுந்தருளிய புனித இறைவரின் அருளைப் பெற்று, பிள்ளையாருடன் திருநாவுக்கரசரும் இறைவரின் மற்றப் பதிகளையும் தொழும் பொருட்டுச் செல்பவராய், வள்ளலா ரான சிறுத்தொண்ட நாயனாரும், திருநீலநக்க நாயனாரும் தத்தம் வளம் பொருந்திய பதிகளுக்குச் செல்லவும், உள்ளத்தில் அன்பு கொண்ட முருக நாயனார் அங்கே தங்கியருக்கவும் அவர்கள் உடன் படத் தாமும் இசைந்தார்கள்.

விளக்கவுரை

ஒழிதல் - தங்குதல். `இசைவித்தார்' என்பது `இசைந்தார் கள்' என்றும் பாடம். இப்பாடல் முதல் *2515*ஆவது பாடல் வரை ஞான சம்பந்தரும், நாவரசரும் சேர்ந்து வழிபட்ட சிறப்பினை விவரிக்கின்றன.

கண்ண கன்புக லூரினைத்
தொழுதுபோம் பொழுதினிற் கடற்காழி
அண்ண லார்திரு நாவினுக்
கரசர்தம் அருகுவிட் டகலாதே
வண்ண நித்திலச் சிவிகையும்
பின்வர வழிக்கொள உறுங்காலை
எண்ணில் சீர்த்திரு நாவினுக்
கரசரும் மற்றவர்க் கிசைக்கின்றார். **#2423**

இடம் அகன்ற திருப்புகலூரைத் தொழுது மேற் செல்கின்ற போதில், கடற்கரையில் உள்ள சீகாழிப் பதியில் தோன்றிய பிள்ளையார், திருநாவுக்கரசரை விட்டு நீங்காது அழகிய முத்துச் சிவிகை பின் வரச் செலவு நயப்பைத் தொடங்கிய பொழுது, ஞானி யரின் உளத்தில் நிற்கும் சிறப்புடைய திருநாவுக்கரசர், சம்பந்தருக்கு எடுத்துக் கூறுபவராய்,

விளக்கவுரை

****

நாயனார்உமக் களித்தருள்
செய்தஇந் நலங்கிளர் ஒளிமுத்தின்
தூய யானத்தின் மிசையெழுந்

தருளுவீர் என்றலும் சுடர்த்திங்கள்
மேய வேணியார் அருளும்இவ்
வாறெனில் விரும்புதொண் டர்களோடும்
போய தெங்குநீர் அங்குயான்
பின்வரப் போவதென் றருள்செய்தார். **#2424**

`இறைவன் உமக்கு அருள் செய்த இந்த நன்மை பொருந்திய அழகிய ஒளிபொருந்திய தூய முத்துச் சிவிகையில் இவர்ந்து வருவீராக!' என்று அருளுதலும், `ஒளி பொருந்திய பிறைச் சந்திரனை அணிந்த சடையையுடைய இறைவரின் திருவருளும் இவ்வாறே இருக்குமாயின், விரும்பும் தொண்டர்களுடனே நீவிர் முன் செல்வது எப்பதியோ? அப்பதிக்கு யானும் பின்தொடர்ந்து வரும்படியாகப் போவது' என விடையளித்தார்.

விளக்கவுரை

இவ்வரிய திருபாடலால் நாவரசரின் திருவுள்ளமும், ஞானசம்பந்தரும் தாமும் ஆகச் செல்லும் செலவு நயப்பை அமைத்துக் கொண்ட பாங்கும் அறிய முடிகின்றன. ஞானசம்பந்தரும் முத்துச் சிவிகையில் வருதலை இறைவர் அருளிய அருளிப்பாடு என்பதால், மறுக்க இயலாது ஏற்பாராயினர். நாவரசர், `நாயனார் உமக்கு அளித்து அருள் செய்த ... தூய யானத்தின் மிசை எழுந்தருளுவீர்' என்றது அதனை வெல்லும் சொல் இன்றி வெளிப்படுத்திய திறனுடையதாகும். இதனால் நாவரசர் நாவரசரேயாயினர். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

என்று பிள்ளையார் மொழிந்தருள்
செய்திட இருந்தவத் திறையோரும்
நன்று நீரருள் செய்ததே
செய்வன்என் றருள்செய்து நயப்புற்ற
அன்றை நாள்முத லுடன்செலு
நாளெலாம் அவ்வியல் பினிற்செல்வார்
சென்று முன்னுறத் திருஅம்பர்
அணைந்தனர் செய்தவக் குழாத்தோடும். **#2425**

என்று சம்பந்தர் உரைத்திடவும், பெரிய தவவேந்த ரான திருநாவுக்கரசரும் `நல்லது! நீவிர் அருளியவாறே செய்வேன்' என்று அருள் செய்து, விரும்பிய அந்நாள் முதற் கொண்டு, பிள்ளை யாருடன் செல்லும் எல்லா நாள்களிலும் அவ் வியல்பில் செல்பவ ராய், செய்தவக் கூட்டமான தொண்டர்களோடும் முன் செல்ல, திருவம்பர் என்ற நகரை அடைந்தார்.

விளக்கவுரை

****

சண்பை மன்னருந் தம்பிரான்
அருள்வழி நிற்பது தலைச்செல்வார்
பண்பு மேம்படு பனிக்கதிர்
நித்திலச் சிவிகையிற் பணிந்தேறி
வண்பெ ரும்புக லூரினைக்
கடந்துபோய் வரும்பரி சனத்தோடும்
திண்பெ ருந்தவர் அணைந்ததெங்
கென்றுபோய்த் திருஅம்பர் நகர்புக்கார். **#2426**

சீகாழிப் பதியில் தோன்றிய பிள்ளையாரும், தம் இறைவரின் அருள் வழியே ஒழுகுவதை மேற்கொண்டு செல்வாராய்ச் சிவப் பண்பினால் மேம்படும் குளிர்ந்த ஒளியையுடைய முத்துச் சிவிகையில் அமர்ந்து, வண்மையும் பெருமையும் கொண்ட திருப் புகலூரைக் கடந்து சென்று, `தண்ணிய பெருமையையுடைய தவமுனி வரான அரசு எங்குச் சென்றனர்?' எனக் கேட்டுத் தாமும் சென்று, அவர் சேர்ந்த திருவம்பர் நகரத்தை அடைந்து புகுந்தார்.

விளக்கவுரை

****

அம்பர் மாநகர் அணைந்துமா
காளத்தில் அண்ணலார் அமர்கின்ற
செம்பொன் மாமதிற் கோயிலை
வலங்கொண்டு திருமுன்பு பணிந்தேத்தி
வம்பு லாம்மலர் தூவிமுன்
பரவியே வண்டமிழ் இசைமாலை
உம்பர் வாழநஞ் சுண்டவர்
தமைப்பணிந் துருகும்அன் பொடுதாழ்ந்தார். **#2427**

திருவம்பர் என்ற பதியை அடைந்து மாகாளத் தில் இறைவர் விரும்பி எழுந்தருளியிருக்கும் செம்பொன்னால் ஆன பெருமதிலையுடைய கோயிலை வலம் வந்து, இறைவரின் திருமுன்பு தாழ்ந்து வணங்கிப் போற்றி, மணமுடைய மலர்களைத் தூவியும் முறைப்படி வழிபட்டும், வண்மையுடைய தமிழிசை மாலை பாடிப் போற்றித் தேவர் வாழும் பொருட்டு நஞ்சையுண்ட இறைவரை வணங்கி, உள்ளம் உருகிய அன்பினால் நிலத்தில் விழுந்து வணங் கினார்.

விளக்கவுரை

அம்பர் - பதியின் பெயர். மாகாளம் - கோயிலின் பெயர். இதுபொழுது அருளிய பதிகம் கிடைத்திலது.

தாழ்ந்து நாவினுக் கரசுடன்
தம்பிரான் கோயில்முன் புறமெய்திச்
சூழ்ந்த தொண்டரோ டப்பதி
அமர்பவர் சுரநதி முடிமீது
வீழ்ந்த வேணியர் தமைப்பெறுங்
காலங்கள் விருப்பினாற் கும்பிட்டு
வாழ்ந்தி ருந்தனர் காழியார்
வாழவந் தருளிய மறைவேந்தர். **#2428**

சீகாழியினர் வாழ்வு அடையுமாறு தோன்றிய மறைத் தலைவரான பிள்ளையார் வணங்கிப் பின் திருநாவுக்கரசு நாயனாருடன் திருக்கோயிலின் வெளியே வந்து, தம்மைச் சூழ்ந்த தொண்டருடனே அப்பதியில் விரும்பித் தங்குபவராய், கங்கை தாங்கிய தாழ்ந்த சடையையுடைய சிவபெருமானைப் பெருகும் காலங்கள் தோறும் விருப்பத்துடன் கும்பிட்டுப் பெருவாழ்வு அடைந்திருந்தார்.

விளக்கவுரை

****

பொருவி லாதசொற் புல்குபொன்
னிறமுதற் பதிகங்க ளாற்போற்றித்
திருவினார்ந்தகோச் செங்கணான்
அந்நகர்ச் செய்தகோ யிலைச் சேர்ந்து
மருவு வாய்மைவண் டமிழ்மலர்
மாலைஅவ் வளவனைச் சிறப்பித்துப்
பெருகு காதலிற் பணிந்துமுன்
பரவினார் பேணிய உணர்வோடும். **#2429**

ஒப்பற்ற சொற்களையுடைய `புல்கு பொன்னிறம்' எனும் தொடக்கம் உடைய பதிகம் முதலாய பல பதிகங்களினால் போற்றி செய்து, சைவமெய்த்திருவால் நிறைவுடைய கோச்செங்கட் சோழர், அத்திருஅம்பர் நகரத்தில் செய்த மாடக் கோயிலை அடைந்து, வாய்மையுடைய வண்மையான தமிழ்மாலையில் அச்சோழர் பெருமானாரைச் சிறப்பித்து, பெருகும் ஆசையினால் பணிந்து, பேணிக் கொண்ட உணர்வுடன் திருமுன்பு நின்று போற்றினார்.

விளக்கவுரை

`புல்கு பொன்னிறம்' *(தி.2 ப.103)* எனத் தொடங்குவது நட்டராகப் பண்ணிலமைந்த பதிகம் ஆகும். இவ்வாறு காலங்கள் தொறும் வழிபட்டுப் போற்றிய பதிகங்கள் மேலும் இரண்டுள. அவை*: 1.* `அடையார்புரம்' *(தி.1 ப.83) - குறிஞ்சி. 2.* `படியுளார்' *(தி.3 ப.93) -*

சாதாரி. கோச்செங்கணார் இப்பதியில் எடுப்பித்த கோயில் திரு அம்பர்பெருந் திருக்கோயிலாகும், இப்பெருமானின் திருமுன்பு அருளிய பதிகம் `எரிதர' *(தி.3 ப.19)* எனத் தொடங்கும் காந்தார பஞ்ச மப் பண்ணிலமைந்த பதிகமாகும். இத்திருக்கோயில் கோச்செங்கட் சோழரால் எடுப்பிக்கப் பெற்றது என்பதை இப்பதிகத்தில் *1, 2, 5, 9* ஆகிய பாடல்களில் குறித்துப் போற்றுகின்றார் பிள்ளையார்.

இன்ன வாறுசொல் மாலைக
ளால்துதித் திறைஞ்சிஅங் கமர்நாளில்
கன்னி மாமதில் திருக்கட வூர்தொழக்
காதல்செய் தருளிப் போய்
மன்னு கோயில்கள் பிறபதி
வணங்கியே வாக்கின்மன் னவரோடும்
அந்நெ டும்பதி அணைவுறக்
கலயரோ டடியவர் எதிர்கொண்டார். **#2430**

இங்ஙனம் சொல்மாலைகளினால் போற்றிப் பணிந்து, அங்கு எழுந்தருளியிருக்கும் நாள்களில், பகைவரால் அழிக் கப்படாத பெருமதில் சூழ்ந்த திருக்கடவூரினைத் தொழுவதற்கு மிகவும் விருப்பம் கொண்டு சென்று, வழியில் பிற பதிகளில் உள்ள கோயில்களில் இறைவரை வணங்கிய வண்ணம், திருநாவுக்கரச ருடனே அப்பெரும்பதியான `திருக்கடவூரை' அடையும்போது, குங்குலியக் கலைய நாயனாருடன் அடியார்கள் வந்து வரவேற்றனர்.

விளக்கவுரை

பிறபதிமன்னும் கோயில்கள் என்பன வழுவூர், வீரட் டம், திருவிடைக்கழி முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவி மணியார். எனினும் பதிகங்கள் எவையும் கிடைத்தில.

மற்றவ் வண்பதி அணைந்துவீ
ரட்டத்து மழவிடை யார்கோயில்
சுற்று மாளிகை வலங்கொண்டு
காலனை உதைத்துருட் டியசெய்ய
பொற்சி லம்பணி தாமரை வணங்கிமுன்
போற்றிஉய்ந் தெதிர்நின்று
பற்ற றுப்பவர் சடையுடை
யானெனும் பதிகஇன் னிசைபாடி. **#2431**

முற்கூறிய அந்த வளம் பொருந்திய பதியைச் சேர்ந்து, இளமை பொருந்திய ஆனேற்றையுடைய இறைவரின் வீரட்டத் திருக்கோயிலின் சுற்று மாளிகையை வலமாக வந்து, இயமனை உதைத்து உருட்டிய செம்பொன் சிலம்பணிந்த திருவடித் தாமரைகளைத் தொழுது, துதித்து,

உய்ந்து, இனிய இசையுடன் `சடையுடையானெனும்' (தி.3 ப.8) எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி,

விளக்கவுரை

`சடையுடையானெனும்' *(தி.3 ப.8)* எனத் தொடங்கும் பதிகம் காந்தார பஞ்சமப் பண்ணிலமைந்ததாகும்.

பரவி ஏத்திஅங் கரிதினிற்
போந்துபார் பரவுசீர் அரசோடு
விரவு நண்புடைக் குங்குலி
யப்பெருங் கலயர் தம் மனைமேவிக்
கரையில் காதல்மற் றவர்அமைத்
தருளிய விருந்தினி தமர்ந்தங்குச்
சிரபு ரத்தவர் திருமயா
னமும்பணிந் திருந்தனர் சிறப்பெய்தி. **#2432**

வணங்கிப் போற்றி, அங்கிருந்து அரிதாக வெளியே வந்து, உலகம் போற்றும் சிறப்புடைய திருநாவுக்கரச ருடனே, பொருந்திய நட்புடைய குங்குலியக்கலய நாயனாரின் இல்லத்தில் எழுந்தருளி, எல்லையில்லாத அன்பினால் அவர் அமைத் தளித்த விருந்தை இனிதாய் உண்ட பிள்ளையார், அருகிலுள்ள திருக்கடவூர்த் திருமயானத்தையும் பணிந்து சிறப்பெய்தித் தங்கி யிருந்தார்.

விளக்கவுரை

திருக்கடவூர் மயானத்தில் அருளிய பதிகம் `வரிய மறையார்' *(தி.2 ப.80)* எனத் தொடங்கும் காந்தாரப் பண்ணிலமைந்த பதிகம் ஆகும். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

சிறப்பு டைத்திருப் பதியத
னிடைச்சில நாளமர்ந் தருளோடும்
விறற்பெ ருங்கரி யுரித்தவர்
கோயில்கள் விருப்பொடுந் தொழச் செல்வார்
மறைப்பெ ருந்திருக் கலயரும்
உடன்பட வணங்கிய மகிழ்வோடும்
அறப்பெ ரும்பயன் அனையஅத்
தொண்டரோ டணைந்தனர் திருவாக்கூர். **#2433**

சிறந்த அத் திருப்பதியில் சில நாள்கள் விரும்பித் தங்கி, வலிய பெரிய யானையை உரித்த சிவபெருமான் எழுந் தருளியிருக்கும் பிறகோயில்களையும் தொழுவதற்கு அருள் பெற்றுச் செல்பவராய், மறைகளைப் பயின்ற பெரிய சைவ மெய்வடிவுடைய குங்குலியக்கலய நாயனாரும் உடன்பட, வணங்கும் பொருட்டுக் கொண்ட

பெருமகிழ்வுடன், அறத்தின் பெரும்பயன் போன்ற நாவரச ருடன் திருவாக்கூரினைச் சென்றடைந்தார் பிள்ளையார்.

விளக்கவுரை

கலயனாரும் உடன்பட - பிற திருக்கோயில்களுக்குச் சென்று தாமும் அரசரும் வழிபடக் கலயரும் உடன்பட.

தக்க அந்தணர் மேவும்அப்
பதியினிற் தான்தோன்றி மாடத்துச்
செக்கர் வார்சடை அண்ணலைப்
பணிந்திசைச் செந்தமிழ்த் தொடைபாடி
மிக்க கோயில்கள் பிறவுடன்
தொழுதுபோய் மீயச்சூர் பணிந்தேத்திப்
பக்கம் பாரிடம் பரவநின்
றாடுவார் பாம்புர நகர்சேர்ந்தார். **#2434**

தகுந்த அந்தணர்கள் வாழ்கின்ற அப்பதியில், தான் தோன்றிமாடக் கோயிலில் சிவந்த நீண்ட சடையையுடைய இறைவ ரைப் பணிந்து, இசையையுடைய செந்தமிழ்ப் பதிக மாலையைப் பாடி, பெருமை பொருந்திய பிற கோயில்களையும் உடனே தொழுது சென்று, `திருமீயச்சூரினையும்' வணங்கி, பூத கணங்கள் அருகிலி ருந்து போற்ற நின்று ஆடும் இறைவரின் `திருப்பாம்புர' நகரத்தை அடைந்தார்.

விளக்கவுரை

தான் தோன்றிமாடம் - இறைவன் தானே தோன்றி எழுந்தருளியிருக்கும் மாடக் கோயில். சுயம்பு என்பதற்குரிய தமிழ்ச் சொல் தான்தோன்றி என்பதாகும். இவ்விடத்து அருளிய பதிகம் `அக்கிருந்த' *(தி.2 ப.42)* எனத் தொடங்கும் சீகாமரப் பண்ணிலமைந்த பதிகமாகும். `பரவுநின்' என்பது `பாடநின்' என்றும் பாடம். பிறகோயில்கள் என்பன திருச்செம்பொன்பள்ளி, திருப்பறிய லூர் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். திருமீயச்சூரில் அருளிய பதிகம் `காயச் செவ்வி' *(தி.2 ப.62)* எனத் தொடங்கும் காந்தாரப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

பாம்பு ரத்துறை பரமரைப்
பணிந்துநற் பதிகஇன் னிசைபாடி
வாம்பு னற்சடை முடியினார்
மகிழ்விடம் மற்றும்உள் ளனபோற்றிக்
காம்பி னில்திகழ் கரும்பொடு
செந்நெலின் கழனியம் பணைநீங்கித்
தேம்பொ ழில்திரு வீழிநன்
மிழலையின் மருங்குறச் செல்கின்றார். **#2435**

பிள்ளையார் திருப்பாம்புரத்தில் வீற்றிருக்கும் இறைவரை வணங்கி நல்ல இனிய இசை பொருந்திய திருப்பதிகத் தைப் பாடியருளி, தாவும் அலைகளையுடைய கங்கை ஆற்றைச் சூடிய முடியையுடைய இறைவர் மகிழ்ந்து எழுந்தருளியுள்ள பிற பதிக ளையும் போற்றி, மூங்கில் போல் விளங்கும் கரும்பும் செந்நெல்லும் விளைந்த வயல் இடங்களைக் கடந்து, தேனையுடைய சோலைகள் சூழ்ந்த திருவீழிமிழலையின் அருகே செல்கின்றவராகி,

விளக்கவுரை

திருப்பாம்புரத்தில் அருளிய பதிகம் `சீரணி திகழ்' *(தி.1 ப.41)* எனத் தொடங்கும் தக்கராகப் பண்ணிலமைந்த பதிகமாகும். பிற பதிகளாவன திருச்சிறுகுடி, திருவன்னியூர் முதலாயினவாகலாம். திருச்சிறுகுடிக்கு உரிய பதிகம் `திடமலி' *(தி.3 ப.97)* எனத் தொடங்கும் சாதாரிப் பண்ணிலமைந்த பதிகமாகும். திருவன்னியூர்ப் பதிகம் கிடைத்திலது.

அப்பொழுதின் ஆண்ட
அரசை எதிர்கொண்ட
மெய்ப்பெருமை அந்தணர்கள்
வெங்குருவாழ் வேந்தனார்
பிற்படவந் தெய்தும்
பெரும்பேறு கேட்டுவப்பார்
எப்பரிசி னால்வந்
தணைந்தங் கெதிர்கொண்டார். **#2436**

அவ்வாறு பிள்ளையார் செல்லும் பொழுது முன் வந்த திருநாவுக்கரசரை எதிர்கொண்ட வாய்மையில் மிக்க பெருமை உடைய அந்தணர்கள், சீகாழித் தலைவர் பின்னர் வந்து சேர இருக்கும் செய்தியைக் கேட்டு மகிழ்ந்து, வரவேற்றற்குரிய எல்லா வகையாலும் குறைவின்றி ஒருங்கு கூடிவந்து அங்கு எதிர் கொள்வார்களாய்,

விளக்கவுரை

எப்பரிசினால் - வரவேற்றற்குரிய எல்லா வகையாலும். உம்மை தொக்கது.

நிறைகுடந்தூ பந்தீபம்
நீடநிரைத் தேந்தி
நறைமலர்ப்பொற் சுண்ணம்
நறும்பொரியுந் தூவி
மறையொலிபோய் வானளப்ப
மாமுரசம் ஆர்ப்ப
இறைவர்திரு மைந்தர்தமை

எதிர்கொள்வர வேற்றார். #2437

நிறைகுடம், நறுமணப்புகை, ஒளிவிளக்கு என்ற இவற்றைத் தொடர்ந்து வரிசை பெற ஏந்திய வண்ணம், தேன் பொருந் திய புதிய மலர்களையும் பொன்சுண்ணத்தையும் மணமுடைய பொரி களையும் தூவி, மறையின் ஒலிமிகுந்த வானத்தில் நிறையவும், பெரிய முரசுகள் ஒலிக்கவும், இவ்வாறாக இறைவரின் மகனாரான பிள்ளை யாரை எதிர் கொள்ளும் வகையால் வரவேற்றனர்.

விளக்கவுரை

`எதிர்கொள் வரவேற்றார்' என்பது `எதிர்கோ ளேற்றார்' என்றும் பாடம். இம் மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

வந்துதிரு வீழி
மிழலை மறைவல்ல
அந்தணர்கள் போற்றிசைப்பத்
தாமும் மணிமுத்தின்
சந்தமணிச் சிவிகைநின்
றிழிந்து தாழ்ந்தருளி
உய்ந்த மறையோ
ருடன்அணைந்தங் குள்புகுவார். #2438

திருவீழிமிழலை என்ற பதியில் உள்ள மறை களில் வல்ல அந்தணர்கள் வந்து போற்ற, பிள்ளையார் தாமும் மணிகளுள் சிறந்த முத்துகளால் ஆன புகழத்தக்க அழகிய சிவிகையினின்றும் இறங்கி, வணங்கி, தம் வருகையால் உய்வு பெற்ற அந்தணர்களுடனே சேர்ந்து அந் நகரத்துள் புகுபவராய்,

விளக்கவுரை

****

அப்போ தரையார்
விரிகோ வணவாடை
ஒப்போ தரும்பதிகத்
தோங்கும் இசைபாடி
மெய்ப்போதப் போதமர்ந்தார்
தங்கோயில் மேவினார்
கைப்போது சென்னியின்மேற்
கொண்டு கவுணியனார். #2439

அப்போது, `அரையார் விரிகோவண ஆடை' எனத் தொடங்கும் ஒப்புக் கூற இயலாத திருப்பதிகத்தில், ஓங்கும் இசையைப் பாடியருளி, கைம்மலர்களைத் தலைமீது குவித்துக் கொண்டு, உண்மையான

ஞானத்தால் வழிபடப் பெறும் தத்துவம் முப்பத்தாறாலும் அமைந்த இதய தாமரையில் விரும்பி வீற்றிருக்கும் இறைவரின் திருக்கோயிலுள் சென்றார்.

விளக்கவுரை

`அரையார் விரிகோவணம்' *(தி.1 ப.35)* எனத் தொடங்கும் பதிகம் தக்கராகப் பண்ணிலமைந்ததாகும். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

நாவின் தனிமன்னர்
தாமும் உடன்நண்ண
மேவிய விண்ணிழிந்த
கோயில் வலங்கொள்வார்
பூவியலும் உந்தியான்
போற்றப் புவிக்கிழிந்த
தேவியலு மெய்கண்டு
சிந்தைவியப் பெய்தினார். **#2440**

நாவால் ஒப்பற்ற அரசரான திருநாவுக்கரசர் தம்முடன் கூடியிருக்க, நான்முகன் தோன்றுதற்கிடனாய கொப்பூழ்த் தாமரையை உடைய திருமால் வணங்கி வழிபடும் பொருட்டு, விண் ணுலகத்தினின்றும் இம்மண்ணுலகத்தில் இறங்கிய தெய்வ வடிவாய்த் திகழும் அப்பெருமானைக் கண்டு, உள்ளத்தில் பெருவியப்பை அடைந்தார் ஆளுடைய பிள்ளையார்.

விளக்கவுரை

****

வலங்கொண்டு புக்கெதிரே
வந்து வரநதியின்
சலங்கொண்ட வேணித்
தனிமுதலைத் தாழ்ந்து
நிலங்கொண்ட மேனியராய்
நீடுபெருங் காதல்
புலங்கொண்ட சிந்தையினால்
பொங்கியிசை மீப்பொழிந்தார். **#2441**

அப்பிள்ளையார், வலமாக வந்து கோயிலுக் குள்ளே புகுந்து, திருமுன்பு சென்று, வானின்றிழிந்த கங்கை நீரைத் தாங்கிய சடையையுடைய ஒப்பில்லாத முழுமுதலான இறைவரைத் திருமேனி முழுதும் நிலத்திலே பொருந்த விழுந்து வணங்கிப் பெருகிய அன்பு வெள்ளமானது மெய்ம் முழுதும் வழிவதைப் போன்று இசையால் பொழிவார் ஆனார்.

விளக்கவுரை

`வந்து வரநதியின்' என்பது `நின்று வானநதியின்' என்றும் பாடம்.

போற்றிச் சடையார்
புனலுடையான் என்றெடுத்துச்
சாற்றிப் பதிகத்
தமிழ்மாலைச் சந்தவிசை
ஆற்ற மிகப்பாடி
ஆனந்த வெள்ளத்தில்
நீற்றழகர் சேவடிக்கீழ்
நின்றலைந்து நீடினார். **#2442**

அவ்வாறு போற்றுமவர், `சடையார் புனல் உடை யான்' எனத் தொடங்கிப் பெருமானின் புகழ் நவிலும் பதிகமான தமிழ் மாலையைப் பாடி, நீற்று அழகரான இறைவரின் திருவடிகளின் கீழ் ஆனந்த வெள்ளத்தினுள் நின்று அதன் கரைகாண மாட்டாது அதனுள் நிலைத்திருந்தார்.

விளக்கவுரை

`சடையார் புனல் உடையான்' *(தி.1 ப.11)* எனத் தொடங் குவது நட்டபாடைப் பண்ணிலமைந்த பதிகம் ஆகும்.

நீடியபே ரன்புருகி
உள்ளலைப்ப நேர்நின்று
பாடியெதி ராடிப்
பரவிப் பணிந்தெழுந்தே
ஆடிய சேவடிகள்
ஆர்வமுற உட்கொண்டு
மாடுயர் கோயில்
புறத்தரிது வந்தணைந்தார். **#2443**

நிலையான பேரன்பு உருகுதலால் திளைத்து நிற்கும் அவர், திருமுன்பு நின்று பாடியும், ஆனந்தக் கூத்தாடியும், போற்றியும், பணிந்தும், எழுந்தும், அருட்பெருங்கூத்து இயற்றும் திருவடிகளை அன்பு பொருந்த மனத்துள் வைத்தவராய், உயர்ந்த திருக்கோயிலின் புறத்தே அரிதாய் வந்து, (ஆளுடைய பிள்ளையாரும், ஆளுடைய அரசரும்) சேர்ந்தனர்.

விளக்கவுரை

திருமுன்பு நின்று இதுபொழுது பாடிய பதிகம் கிடைத் திலது.

வந்தணைந்து வாழ்ந்து
மதிற்புறத்தோர் மாமடத்துச்
செந்தமிழ்சொல் வேந்தரும்
செய்தவரும் சேர்ந்தருளச்

சந்தமணிக் கோபுரத்துச்
சார்ந்தவட பாற்சண்பை
அந்தணர்சூ ளாமணியார்
அங்கோர் மடத்தமர்ந்தார். **#2444**

அங்ஙனம் வந்து சேர்ந்து பெருவாழ்வு பெற்றுத் திருமதில் புறத்திலுள்ள ஒரு பெருமடத்தில் செந்தமிழ்ச் சொல் அரச ரான திருநாவுக்கரசரும் தவத்தையுடைய திருத்தொண்டர்களும் சேர்ந் திருப்ப, சீகாழியில் தோன்றிய அந்தணர் பெருமானான சம்பந்தர் அழகிய மணிகளையுடைய கோபுரத்தைச் சார்ந்த வடபகுதியில் அங்கு ஒரு திருமடத்தில் விரும்பி எழுந்தருளினார்.

விளக்கவுரை

****

அங்கண் அமர்வார்
அரனார் அடியிணைக்கீழ்த்
தங்கிய காதலினாற்
காலங்கள் தப்பாமே
பொங்குபுகழ் வாகீச
ருங்கூடப் போற்றிசைத்தே
எங்கும் இடர்தீர்ப்பார்
இன்புற் றுறைகின்றார். **#2445**

அங்கு விரும்பி எழுந்தருளியிருப்பவர், சிவ பெருமான் திருவடிகளின் கீழ்ப் பொருந்திக் கிடந்த விருப்பத்தினால் வழிபாட்டிற்குரிய காலம்தோறும், தவறாமல், பொங்கும் புகழை உடைய திருநாவுக்கரசரும் கூடச் சென்று, வழிபட்டுப் போற்றி, எங் கும் துன்பம் தீர்ப்பவர்களாய் இன்பமுடன் விரும்பித் தங்கியிருந்தனர்.

விளக்கவுரை

காலந்தொறும் சென்றிசைத்த பதிகங்கள் எவையும் கிடைத்தில.

ஓங்குபுனற் பேணு
பெருந்துறையும் உள்ளிட்ட
பாங்கார் திலதைப்
பதிமுற்ற மும்பணிந்து
வீங்கொலிநீர்வீழி மிழலையினில்
மீண்டும் அணைந்
தாங்கினிது கும்பிட்
டமர்ந்துறையும் அந்நாளில். **#2446**

பெருகும் நீர்வளம் கொண்ட திருப்பேணு பெருந்துறையையும் அதனை

உள்ளிட்ட அருகிலுள்ள திலதைப் பதிமதிமுத்தத்தினையும் போய் வணங்கிப் பெருகும் ஒலியுடைய நீர் சூழ்ந்த திருவீழிமிழலையினில் மீண்டும் எழுந்தருளி, அங்கு இனிதாய் வணங்கி விருப்பமுடனே இருந்து வரும் நாள்களில்,

விளக்கவுரை

பேணுபெருந்துறையில் அருளிய பதிகம் `பைம்மா நாகம்' *(தி.1 ப.42)* எனத் தொடங்கும் தக்கராகப் பண்ணிலமைந்த பதிகமாகும்.
திலதைப்பதிமதிமுத்தத்தில் அருளிய பதிகம் `பொடிகள் பூசி' *(தி.2 ப.118)* எனத் தொடங்கும் செவ்வழிப்பண்ணிலமைந்த பதிகமாகும்.
`டமர்ந்துறையும்' என்பது `டமர்ந்தொழுகும்' என்றும் பாடம்.

சேணுயர் மாடப் புகலி யுள்ளார்
திருஞான சம்பந்தப் பிள்ளை யாரைக்
காணும் விருப்பிற் பெருகு மாசை
கைம்மிகு காதல் கரை யிகப்பப்
பூணும் மனத்தொடு தோணி மேவும்
பொருவிடை யார்மலர்ப் பாதம் போற்றி
வேணு புரத்தை யகன்று போந்து
வீழி மிழலையில் வந்த ணைந்தார். **#2447**

வானளாவ உயர்ந்த மாடங்களை உடைய சீகாழியில் வாழ்கின்ற மறையவர்கள், திருஞானசம்பந்தப் பிள்ளை யாரைச் சென்று காணவேண்டும் என்ற விருப்பத்தால், பெருகும் ஆசைமீதூரத் திருத்தோணியில் வீற்றிருக்கும் இறைவரின் மலரடி களை வணங்கி, விடைபெற்றுச் சீகாழியினின்றும் திருவீழிமிழலையை அடைந்தார்கள்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஊழி முடிவில் உயர்ந்த வெள்ளத்
தோங்கிய காழி உயர் பதியில்
வாழி மறையவர் தாங்க ளெல்லாம்
வந்து மருங்கணைந் தார்கள் என்ன
வீழி மிழலையின் வேதி யர்கள்
கேட்டுமெய்ஞ் ஞானமுண் டாரை முன்னா
ஏழிசை சூழ்மறை எய்த வோதி
எதிர்கொள் முறைமையிற் கொண்டு புக்கார். **#2448**

ஊழிக்காலத்தில் பெருகும் நீர் வெள்ளத்தில் ஆழாமல் மிதந்த சீகாழியில், பெருவாழ்வை உடைய அந்தணர்கள் எல்லாம் வந்து, தம் பதியின் அருகே சேர்ந்தனர் எனத் திருவீழி மிழலையில் வாழும் மறையோர்கள்

கேள்வியுற்று, மெய்ஞ்ஞான அமுது உண்ட பிள்ளையாரை எண்ணி மனத்துள் கொண்டு, ஏழிசை சூழும் மறைகளில் வல்ல அந்தச் சீகாழி மறையவர்பால் சேர்ந்து, முறைப்படி எதிர்கொண்டு வரவேற்று, அவர்களை அழைத்துக் கொண்டு நகரத்துள் புகுந்தனர்.

விளக்கவுரை

****

சண்பைத் திருமறை யோர்கள் எல்லாம்
தம்பிரா னாரைப் பணிந்து போந்து
நண்பிற் பெருகிய காதல் கூர்ந்து
ஞானசம் பந்தர் மடத்தில் எய்திப்
பண்பிற் பெருகுங் கழும லத்தார்
பிள்ளையார் பாதம் பணிந்து பூண்டே
எண்பெற்ற தோணி புரத்தில் எம்மோ
டெழுந்தரு ளப்பெற வேண்டும் என்றார். **#2449**

சீகாழியினைச் சேர்ந்த மறையவர்களெல்லாம் கோயிலுள் சென்று, தம் இறைவரை வணங்கிச் சென்று, நட்பால் பெருகிய பெரு விருப்பம் மிக்கு, ஞானசம்பந்தரின் திருமடத்தைச் சேர்ந்து, நற்பண்பினால் பெருகும் சீகாழியில் உள்ளவர்களுக்கு உரிமை உடைய சம்பந்தரின் திருவடிகளை வணங்கித் தலைமீது கொண்டு, `மேன்மையுடைய திருத்தோணிபுரத்தில் எம்முடனே எழுந்தருளும் பேறு யாங்கள் பெற வேண்டும்' என வேண்டிக் கொண்டனர்.

விளக்கவுரை

****

என்றவர் விண்ணப்பஞ் செய்த போதில்
ஈறில் சிவஞானப் பிள்ளை யாரும்
நன்றிது சாலவுந் தோணி மேவும்
நாதர் கழலிணை நாம் இறைஞ்ச
இன்று கழித்து மிழலை மேவும்
இறைவர் அருள்பெற்றுப் போவ தென்றே
அன்று புகலி அரும றையோர்க்
கருள்செய் தவர்க்கு முகமளித்தார். **#2450**

என அவர்கள் வேண்டிக்கொண்டபோது எல்லையில்லாத சிவஞானம் பெற்ற சம்பந்தரும் `மிகவும் நல்லது' ஆனால் திருத்தோணியில் எழுந்தருளியிருக்கும் இறைவரின் திருவடி களை நாம் வணங்குவதற்கு இன்று கழிந்து நாளைத் திருவீழிமிழலை இறைவரின் அருளைப் பெற்று நாம் போகலாம்!' எனக் கூறி, அன்று அவர் சீகாழி மறையவர்களுக்கு

அருள் செய்தார்.

விளக்கவுரை

****

மேற்பட்ட அந்தணர் சண்பை மேவும்
வேதியர்க் காய விருந்த ளிப்பப்
பாற்பட்ட சிந்தைய ராய்ம கிழ்ந்து
பரம்பொரு ளானார் தமைப் பரவும்
சீர்ப்பட்ட எ ல்லை யினிது செல்லத்
திருத்தோணி மேவிய செல்வர் தாமே
கார்ப்பட்ட வண்கைக் கவுணி யர்க்குக்
கனவிடை முன்னின் றருள்செய் கின்றார். **#2451**

மேன்மையுடைய திருவீழிமிழலை அந்தணர்கள், சீகாழியினின்றும் வந்த அந்தணர்களுக்கு விருந்தளிக்க, ஏற்ற அவர் களும் அன்பு கொண்ட உள்ளம் உடையராகி, மகிழ்ந்து இறைவரை வழிபட்டுப் போற்றும் சீர்மை பொருந்திய கால எல்லை இனிதாய்க் கழியத் திருத்தோணியில் வீற்றிருக்கும் இறைவர், தாமே மேகம் போன்ற வண்மையுடைய பிள்ளையாருக்குக் கனவில் தோன்றி அருள் செய்வாராய்,

விளக்கவுரை

****

தோணியில் நாம்அங் கிருந்த வண்ணம்
தூமறை வீழிமிழலை தன்னுள்
சேணுயர் விண்ணின் றிழிந்த இந்தச்
சீர்கொள் விமானத்துக் காட்டு கின்றோம்
பேணும் படியால் அறிதி என்று
பெயர்ந்தருள் செய்யப் பெருந்த வங்கள்
வேணு புரத்தவர் செய்ய வந்தார்
விரவும் புளகத் தொடும் உணர்ந்தார். **#2452**

அச் சீகாழியில் `தோணியில் தாம் இருந்த காட்சியை இங்குத் தூய மறைவடிவாகிய திருவீழிமிழலையுள் விண் ணினின்றும் இழிந்த இந்தச் சிறப்புடைய விமானத்திடம் காணும்படி காட்டுகின்றோம். கண்டு வழிபடும் வகையினால் அறிவாயாக!' என்று கூறி மறைந்து போக, சீகாழிப் பதியினர் முன் செய்த தவத்தால் தோன்றிய பிள்ளையார், தம் உடலில் தோன்றிய மயிர்க்கூச்சலுடன் துயிலுணர்ந்து எழுந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அறிவுற்ற சிந்தைய ராய்எ ழுந்தே

அதிசயித் துச்சிமேல் அங்கை கூப்பி
வெறியுற்ற கொன்றையி னார்ம கிழ்ந்த
விண்ணிழி கோயிலிற் சென்று புக்கு
மறியுற்ற கையரைத் தோணி மேல்முன்
வணங்கும் படியங்குக் கண்டு வாழ்ந்து
குறியிற் பெருகுந் திருப்ப திகம்
குலவிய கொள்கையிற் பாடு கின்றார். **#2453**

விழிப்புற்ற சிந்தையுடையவராய் எழுந்து அதிசயம் அடைந்து, தலையின் மேலே அழகிய கைகளை வைத்துக் கூப்பித் தொழுது, மணம் பொருந்திய கொன்றை மலரைச் சூடிய இறைவர் மகிழ்ந்து எழுந்தருளும் விண்ணிழி விமானமுடைய கோயிலுள் புகுந்து மானேந்திய கையையுடைய இறைவரைத் திருத்தோணியின் மேல் முன் வணங்கும் அந்த வண்ணமே அங்குக் கண்டு, வாழ்வடைந்து, அக்குறிநிலையின் பெருமை காட்டும் திருப்பதிகத்தைப் பொருந்திய கொள்கையால் பாடுபவராய்,

விளக்கவுரை

****

மைம்மரு பூங்குழல் என்றெ டுத்து
மாறில் பெருந் திருத்தோணி தன்மேற்
கொம்மை முலையினாள் கூட நீடு
கோலங் குலாவும் மிழலை தன்னில்
செம்மை தருவிண் ணிழிந்த கோயில்
திகழ்ந்த படிஇது என்கொல் என்று
மெய்ம்மை விளங்குந் திருப்ப திகம்
பாடி மகிழ்ந்தனர் வேத வாயர். **#2454**

`மைம்மரு பூங்குழல்' (தி.1 ப.4) எனத் தொடங்கி ஒப்பில்லாத பெருந் திருத்தோணி மீது இளங் கொங்கையையுடைய திருநிலைநாயகி அம்மையாருடன் கூடநீடும் திருக்கோலம், விளக்கம் உடைய திருவீழிமிழலையில் செம்மை தருகின்ற விண்ணிழி விமானத் தில் விளங்க இருந்த வண்ணம் இது என்? என வினவும் பொருளுடன் உண்மை விளங்கும் திருப்பதிகத்தை, மறைவாயினரான சம்பந்தர் பாடியருளினார்.

விளக்கவுரை

*`மைம்மரு பூங்குழல்' (தி.1 ப.4)* எனத் தொடங்கும் திருப்பதிகம் நட்டபாடைப் பண்ணிலமைந்த பதிகமாகும். `புகலி நிலாவிய புண்ணியனே, மிழலை விண்ணிழி கோயில் விரும்பியது என்கொல்?

சொல்லாய்' எனும் பொருண்மை பாடல் தொறும் அமைந்திருத்தலின், அதுகொண்டு இவ்வரலாற்றுப் பின்னணியை ஆசிரியர் அமைத்துக் கூறுவாராயினர்.

செஞ்சொல் மலர்ந்த திருப்ப திகம்
பாடித் திருக்கடைக் காப்புச் சாத்தி
அஞ்சலி கூப்பி விழுந்தெ ழுவார்
ஆனந்த வெள்ளம் அலைப்பப் போந்து
மஞ்சிவர் சோலைப்புகலி மேவும்
மாமறை யோர்தமை நோக்கி வாய்மை
நெஞ்சில் நிறைந்த குறிப்பில் வந்த
நீர்மைத் திறத்தை அருள்செய் கின்றார். #2455

செம்மையான சொற்கள் பொருந்திய திருப்பதிகத்தைப் பாடித் திருக்கடைக்காப்பும் பாடி நிறைவுசெய்து, கைகளைக் கூப்பி, நிலத்தில் விழுந்து எழுபவரான பிள்ளையார், பெருகிய ஆனந்தம் தம்மை அலைப்ப வெளியே வந்து, மேகங்கள் தவழும் சோலைகள் சூழ்ந்த சீகாழியினின்றும் வந்த மறையவர்களை நோக்கி, உண்மைவடிவாய்த் தம் உள்ளத்தில் நிறைந்த திருவருள் குறிப்பால் உணர்த்தப் பெற்ற அருளியல்பை அருளிச் செய்பவராய்,

விளக்கவுரை

****

பிரம புரத்தி லமர்ந்த முக்கட்
பெரிய பிரான்பெரு மாட்டி யோடும்
விரவிய தானங்கள் எங்குஞ் சென்று
விரும்பிய கோயில் பணிந்து போற்றி
வருவது மேற்கொண்ட காதல் கண்டங்
கமர்ந்த வகையிங் களித்த தென்று
தெரிய வுரைத்தருள் செய்து நீங்கள்
சிரபுர மாநகர் செல்லும் என்றார். #2456

சீகாழியில் வீற்றிருக்கின்ற முக்கண்களை உடைய பெருமான், தம் பெருமாட்டியுடன் வீற்றிருக்கும் இடங்கள் எங்கும் சென்று, விரும்பிப் பணிந்து போற்றி வருதலை அப்பெருமான் தாம் அறிந்துகொண்டு, அங்குத் திருத்தோணியில் வீற்றிருந்த வகையினை இங்குக் காணுமாறு அளித்தார்' என்று விளங்கக் கூறி, `நீங்கள் சீகாழிக்குச் செல்லுங்கள்' என்றுரைத்தார்.

விளக்கவுரை

காழிக்காட்சியை வீழியிற் காட்டியது, காழிக்குத் தாம் வருதலைத்

தவிர்க்கும் திருவுளக் குறிப்பாதலை யுணர்ந்த பிள்ளை யார், அங்கிருந்து அழைக்க வந்தார்க்குக் கூறி அனுப்பி வைத்தார். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

என்று கவுணியப் பிள்ளை யார்தாம்
இயம்பப் பணிந்தருள் ஏற்றுக் கொண்டே
ஒன்றிய காதலின் உள்ளம் அங்கண்
ஒழிய ஒருவா றகன்று போந்து
மன்றுள் நடம்புரிந் தார்ம கிழ்ந்த
தானம் பலவும் வணங்கிச் சென்று
நின்ற புகழ்த்தோணி நீடு வாரைப்
பணியும் நியதிய ராய் உறைந்தார். **#2457**

என்று கவுணியர்குலத் தோன்றலான பிள்ளை யார் அருள, வணங்கி அவர் உரைத்த கட்டளையை ஏற்றுக் கொண்டு, பொருந்திய பெருவிருப்பத்தால் தங்கள் மனம் அங்கு நிற்க, நீங்காத இயல்பிலே ஒருவாறாக அரிதின் நீங்கிச் சென்றார்கள். நீங்கிச் சென்று, திருக்கூத்தியற்றும் பெருமான் மகிழ்ந்து வீற்றிருக்கும் பதிகள் பலவற் றையும் வணங்கிச் சென்று, நிலையான புகழையுடைய தோணிபுரத் தில் வீற்றிருக்கும் இறைவரை நாளும் பணியும் நியதி உடையவராய் விளங்கினர்.

விளக்கவுரை

****

சிரபுரத் தந்தணர் சென்ற பின்னைத்
திருவீழி மேவிய செல்வர் பாதம்
பரவுதல் செய்து பணிந்து நாளும்
பண்பின் வழாத்திருத் தொண்டர் சூழ
உரவுத் தமிழ்த்தொடை மாலை சாத்தி
ஓங்கிய நாவுக் கரச ரோடும்
விரவிப் பெருகிய நண்பு கூர
மேவி இனிதங் குறையும் நாளில். **#2458**

சீகாழி மறையவர்கள் விடைபெற்றுச் சென்றபின்பு, திருவீழிமிழலையில் மேவிய இறைவரின் திருவடிகளை வணங்கி, எந்நாளும் அடிமைப் பண்பினின்றும் நீங்காமல் ஒழுகும் திருத்தொண் டர் சூழ்ந்திருக்க, சிறந்த தமிழால் தொடுக்கப்பட்ட திருப்பதிகங்களைச் சாத்தி, அன்புமிக்க திருநாவுக்கரசருடன் கூடிப் பெருகிய நட்புமிக்கு ஓங்கப் பொருந்தி இனிதாய் அப் பதியில் தங்கி இருந்தனர். அந்நாள் களில்,

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகங்கள் பல. அவற்றுள் கிடைத்தவை: *1.* *`தடநிலவிய' (தி.1 ப.20)* - நட்டபாடை. *2.* *`இரும்பொன்மலை' (தி.1 ப.82)* - குறிஞ்சி. *3.* *`அலர்மகள் மலிதர' (தி.1 ப.124)* - வியாழக்குறிஞ்சி. *4.* *`ஏரிசையும்' (தி.1 ப.132)* - மேகராகக் குறிஞ்சி. *5.* *`கேள்வியர்' (தி.3 ப.9)* - காந்தார பஞ்சமம். *6.* *`சீர்மருவு' (தி.3 ப.80)* - சாதாரி. *7.* *`மட்டொளி' (தி.3 ப.85)* - சாதாரி. *8.* *`வெண்மதி' (தி.3 ப.98)* - சாதாரி. *9.* *`வேலின் நேர்தரு' (தி.3 ப.111)* - பழம் பஞ்சுரம். *10.* *`துன்று கொன்றை' (தி.3 ப.116)* - பழம் பஞ்சுரம். *11.* *`புள்ளித் தோலாடை' (தி.3 ப.119)* - புறநீர்மை.

மண்ணின் மிசை வான்பொய்த்து நதிகள் தப்பி
மன்னுயிர்கள் கண்சாம்பி உணவு மாறி
விண்ணவர்க்குஞ் சிறப்பில்வரும் பூசை யாற்றா
மிக்கபெரும் பசியுலகில் விரவக் கண்டு
பண்ணமரும் மொழியுமையாள் முலையின் ஞானப்
பாலறா வாயருடன் அரசும் பார்மேல்
கண்ணுதலான் திருநீற்றுச் சார்வி னோர்க்கும்
கவலைவரு மோஎன்று கருத்திற் கொண்டார். **#2459**

இம்மண்ணுலகில் மழை மறுத்ததனால் ஆறுகளில் பருவவெள்ளம் பாயாது தவறி, அது காரணமாய் உலகத்து உயிர்கள் வருந்தி, உணவின்றி நின்றமையால், தேவர்களுக்கும் சிறப்பு வழி பாடுகளும் நாள்வழிபாடுகளும் செய்யப்படாமல் மிக்க பெரும் பசியின் கொடுமை உலகில் பொருந்திய நிலையைக் கண்டு, பண் பொருந்திய சொல்லையுடைய உமையம்மையாரின் கொங்கையின் பால் நீங்காதவாயினரான பிள்ளையாருடன் திருநாவுக்கரசரும் `உலகில் நெற்றிக் கண்ணரான திருநீற்றுச் சார்புடைய தொண்டர் களுக்கும் கவலை வருமோ?' என்று தம் உள்ளங்களில் எண்ணினர்.

விளக்கவுரை

பெருமழையாலும் பஞ்சம் வரும், மழையின்மை யாலும் பஞ்சம் வரும். இப்பஞ்சந்தானும் மழையின்மையால் வந்ததாகும். இப்பாடலின் முன்னிரண்டடிகள், திருக்குறட் கருத்து களைப் பெரிதும் முகந்து நிற்கின்றன. *`வான் பொய்த்து'* - விண் ணின்று பொய்ப்பின் *(குறள், 13); `நதிகள் தப்பி'* - நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் *(குறள், 17); `மன்னுயிர்கள் கண் சாம்பி'* - விசும்பில் துளி வீழின் அல்லால் *(குறள், 16); `உணவு மாறி'* - ஏரின் உழாஅர் உழவர் *(குறள், 14); `விண்ணவர்க்கும் சிறப்பில் வரும் பூசையாற்றா'* - சிறப்பொடு பூசனை செல்லாது *(குறள், 18)* - மிக்க பெரும்பசி உலகில் விரவக் கண்டு - உள் நின்று உடற்றும் பசி என ஒப்பிட்டுக் காண்க. எனினும் இதனாலாய வறுமை நெற்றிக்கண் உடைய பெருமானின் திருநீற்றுச்

சார்புடையோர்க்கும் வருமோ? வராது என்ற நிலையில் அவர்கள் கருதினர். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வானாகி நிலனாகி அனலு மாகி
மாருதமாய் இருசுடராய் நீரு மாகி
ஊனாகி உயிராகி உணர்வு மாகி
உலகங்கள் அனைத்துமாய் உலகுக் கப்பால்
ஆனாத வடிவாகி நின்றார் செய்ய
அடிபரவி அன்றிரவு துயிலும் போது
கானாடு கங்காளர் மிழலை மூதூர்
காதலித்தார் கனவில்அணைந் தருளிச் செய்வார். **#2460**

வானமும், மண்ணும், தீயும், காற்றும், கதிரவன், சந்திரன் ஆகிய இருசுடர்களும், நீரும் ஆகியும், ஊனும் உயிரும் உணர்வுமாகியும், உலகங்கள் எல்லாம் ஆகியும்அவற்றின் அப்பாற் பட்டதாகியும், கேடில்லாத வடிவாகி நின்ற இறைவரின் சிவந்த திருவடிகளைப் போற்றி உறங்கும் போது, சுடுகாட்டில் எலும்பணிந்து கூத்தியற்றுபவராய் இருந்தருளும் திருவீழிமிழலைப் பெருமான் கனவில் தோன்றி அருள்செய்வாராய்,

விளக்கவுரை

****

உலகியல்பு நிகழ்ச்சியால் அணைந்த தீய
உறுபசிநோய் உமையடையா தெனினும் உம்பால்
நிலவுசிவ நெறிசார்ந்தோர் தம்மை வாட்டம்
நீங்குதற்கு நித்தம் ஒரோர் காசு நீடும்
இலகுமணிப் பீடத்துக் குணக்கும் மேற்கும்
யாமளித்தோம் உமக்கிந்தக் காலந் தீர்ந்தால்
அலகில்புக ழீர்தவிர்வ தாகும் என்றே
அருள்புரிந்தார் திருவீழி மிழலை ஐயர். **#2461**

`உலக இயல்பு நிகழ்வினால் வந்து அணைந்த தீமை பொருந்திய பசிநோய், உங்களை அடையாது என்றாலும், உங்களைச் சேர்ந்த அடியவர்களின் வருத்தம் நீங்குதற்காக, நித்தமும் ஒவ்வொரு பொற் காசினைக் கிழக்கிலும் மேற்கிலும் விளங்கும் அழகிய பலிபீடங்களில் உங்களுக்கு அளிப்போம்; அளவற்ற புகழை உடையவர்களே, இப்பஞ்சகாலம் நீங்கினால் அது நிறுத்தப்படும்' எனத் திருவீழிமிழலை இறைவர் உரைத்தருளினார்.

விளக்கவுரை

இறைவன் வழங்கும் பொருளை நாளும் ஒரு காசாக அருளியமைக்குக் காரணம், அவ்வடியவர் பெருமக்கள் இருவரின் திருப்பாடல்களை நாளும் செவிமடுத்து ஏற்கவாம் என்பர் சுந்தரர். `இருந்து நீர் தமிழோடிசை கேட்கும் இச்சையால் நித்தல் காசு நல்கினீர்' *(தி.7 ப.88 பா.8)* என்பது அவர் திருவாக்காகும். இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

தம்பிரான் அருள் புரிந்து கனவின் நீங்கச்
சண்பையார் இளவேறு தாமு ணர்ந்து
நம்பிரான் அருள்இந்த வண்ணம் என்றே
நாவினிசை யரசரொடுங் கூட நண்ணி
வம்புலா மலரிதழி வீழி நாதர்
மணிக்கோயில் வலஞ்செய்யப் புகுந்த வேலை
அம்பிகா பதியருளால் பிள்ளை யார்தாம்
அபிமுகத்துப் பீடிகைமேற் காசு கண்டார். **#2462**

தம் இறைவர் இங்ஙனம் கனவில் உரைத்து நீங்கவும், சீகாழியின் தலைவரான இளைய ஏறு போன்ற சம்பந்தர், துயில் உணர்ந்து, `நம் இறைவரின் அருள் இருந்த வண்ணம் இவ் வாறு!' என்று வியப்புக் கொண்டவராய், அவ்வாறே இறைவர் அரு ளப் பெற்றுத் துயிலுணர்ந்த நாவுக்கரசரோடு கூடச் சேர்ந்து, மணம் கம ழும் கொன்றை மலரைச் சூடிய திருவீழிமிழலை நாதரின் மணிக் கோயிலை வலமாக வரப் புகுந்தபோது, உமையம்மையாரை ஒரு கூற்றில் கொண்ட இறைவரின் திருவருளால், பிள்ளையார் தாம் கிழக் குத் திசையில் உள்ள

பலிபீடத்தின் மீது ஒரு பொற் காசைக் கண்டார்.

விளக்கவுரை

****

காதலொடுந் தொழுதெடுத்துக் கொண்டு நின்று
கைகுவித்துப் பெருமகிழ்ச்சி கலந்து பொங்க
நாதர்விரும் படியார்கள் நாளும் நாளும்
நல்விருந்தா யுண்பதற்கு வருக வென்று
தீதில்பறை நிகழ்வித்துச் சென்ற தொண்டர்
திருவமுது கறிநெய்பால் தயிரென் றின்ன
ஏதமுறா தினி துண்ண ஊட்டி அங்கண்
இருதிறத்துப் பெருந்தவரும் இருந்த நாளில். **#2463**

பத்திமையோடு வணங்கி அப்பொற்காசை எடுத்துக் கொண்டு, நின்று கைகளைக் குவித்து வணங்கிப் பெரு மகிழ்ச்சி உள்நிறைந்து பொங்க, `இறைவர் விரும்பும் அடியார்கள் ஒவ்வொரு நாளும் நல்ல விருந்தாய் உணவு உண்பதற்கு வருக!' என்று தீமையில்லாத பறையறைந்து, அங்ஙனம் வந்த தொண்டர்கள் திருவமுதும், கறிகளும், நெய்யும், பாலும், தயிரும் என்று உள்ள இவற்றைக் குறைவில்லாதபடி இனிதாய் உண்ணும்படி உண்பித்து, அத்திருநகரில் இருபெருமக்களும் தங்கியிருந்தனர். அந்நாள்களில்,

விளக்கவுரை

நாவரசருக்கும் இறைவர் இவ்வாறே மேற்குப் பீடத்தில் பொற்காசு வைத்து வழங்கினார். இதனை அவர் வரலாற்றில் *(தி.12 பு.21 பா.247)* விளங்க உரைத்திருப்பதால், இங்கு இவ்வளவே கூறு வாராயினர்.

நாவினுக்கு வேந்தர்திரு மடத்திற் தொண்டர்
நாட்கூறு திருவமுது செய்யக் கண்டு
சேவுகைத்தார் அருள்பெற்ற பிள்ளை யார்தந்
திருமடத்தில் அமு தாக்கு வாரை நோக்கித்
தீவினைக்கு நீர்என்றும் அடைவி லாதீர்
திருவமுது காலத்தால் ஆக்கி இங்கு
மேவுமிக்க அடியவருக் களியா வண்ணம்
விளைந்தவா றென்கொலோ விளம்பும் என்றார். **#2464**

திருநாவுக்கரசரின் மடத்தில் தொண்டர்கள், நாள் தொறும் ஒளிநிறைவாக விளங்கும் உச்சிப் போதளவில் திருவமுது செய்து முடிப்பதைப் பார்த்த விடையுடைய சிவபெருமானின் திரு வருள் பெற்ற சம்பந்தர், தமது மடத்தில் உணவு சமைக்கும் பரி வாரங்களை நோக்கி, `தீய தொழிலுக்கு நீங்கள் எப்போதும் இடம் அளிக்க மாட்டீர்

அல்லீரோ! ஆதலால் காலத்தால் உணவு சமைத்து இங்கு வரும் அடியவர்களுக்கு அளிக்காதமைக்கு உரிய காரணம்தான் என்ன? சொல்லுங்கள்!' என வினவினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

திருமறையோர் தலைவர்தாம் அருளிச் செய்யத்
திருமடத்தில் அமுதமைப்போர் செப்பு வார்கள்
ஒருபரிசும் அறிந்திலோம் இதனை உம்மை
உடையவர்பாற் பெறும்படிக்கா சொன்றுங் கொண்டு
கருதியஎல் லாங்கொள்ள வேண்டிச் சென்றால்
காசுதனை வாசிபட வேண்டும் என்பார்
பெருமுனிவர் வாகீசர் பெற்ற காசு
பேணியே கொள்வரிது பிற்பா டென்றார்.. **#2465**

அந்தணர்களின் தலைவரான பிள்ளையார் மேற்கண்ட வண்ணம் உரைசெய்ய, `இதன் மெய்ம்மையை நாங்கள் ஒருவிதத்திலும் அறியோம்! உம்மை அடிமையாக உடைய இறைவரிடம் பெறுகின்ற படிக்காசு ஒன்றைக் கொண்டு அமுது சமைக்க வேண்டிப் பொருள்களை வாங்குதற்குச் சென்றால், கடைவீதியில் உள்ள வணிகர்கள் காசுக்கு வட்டம் தரவேண்டும் என்று உரைக்கின் றனர்; பெருமுனிவரான திருநாவுக்கரசர் பெற்ற காசுக்கு அங்ஙனம் கூறாது மிக்க விருப்புடனே ஏற்றுக் கொள்கின்றனர். இதுவே காலம் தாழ்தற்குக் காரணம்' என்று உரைத்தனர்.

விளக்கவுரை

வாசிபட - வட்டம் கொடுக்க; அதாவது குறையுடைய காசு ஆதலின், உரிய தொகையின்றிக் குறைத்துக் கொடுப்பது.

திருஞான சம்பந்தர் அதனைக் கேட்டுச்
சிந்திப்பார் சிவபெருமான் நமக்குத் தந்த
ஒருகாசு வாசிபட மற்றக் காசு
நன்றாகி வாசிபடா தொழிவான் அந்தப்
பெருவாய்மைத் திருநாவுக் கரசர் தொண்டால்
பெறுங்காசாம் ஆதலினாற் பெரியோன் தன்னை
வருநாள்கள் தருங்காசு வாசி தீரப்
பாடுவன்என் றெண்ணிஅது மனத்துட் கொண்டார். **#2466**

திருஞானசம்பந்தர், அதனைக் கேட்டு, எண்ணுப வராய், `இறைவர் நமக்குத் தந்த ஒரு காசு வாசிபட, மற்ற ஒருகாசு வாசிபடாததற்குக் காரணம், அப்பெருவாய்மையுடைய திருமுனிவ ராய திருநாவுக்கரசர் தம்

கைத் தொண்டினால் பெறும் காசாகும்; ஆதலால் இனிவரும் நாளில், வழங்கப்பெறும் காசு வாசி நீங்கியதாக அமைய இறைவரைப் பாடுவன்!' எனத் துணிந்து, தம் மனத்துள் கொண்டார்.

விளக்கவுரை

****

மற்றைநாள் தம்பிரான் கோயில் புக்கு
வாசிதீர்த் தருளும்எனப் பதிகம் பாடிப்
பெற்றபடி நற்காசு கொண்டு மாந்தர்
பெயர்ந்துபோய் ஆவணவீ தியினிற் காட்ட
நற்றவத்தீர் இக்காசு சால நன்று
வேண்டுவன நாந்தருவோம் என்று நல்க
அற்றைநாள் தொடங்கிநாட் கூறு தன்னில்
அடியவரை அமுதுசெய்வித் தார்வ மிக்கார். **#2467**

அடுத்த நாளில் ஞானசம்பந்தர் தம் இறைவரின் கோயிலுள் புகுந்து, `வாசிதீர்த்தருளும்' என்று வேண்டிப் பதிகம் பாட, அதன் பயனாகப் பிள்ளையார் பெற்ற நல்ல படிக் காசினைக் கைக் கொண்டு பணியாளர்கள் கடைத்தெருவுக்குச் சென்று வணிகர்களிடம் காட்டினர், அதைக் கண்ட வணிகர், நல்ல தவத்தைச் செய்தவர்களே! இக்காசு மிக நல்லது! நீங்கள் வேண்டுவனவற்றை நாங்கள் தருவோம்!' எனச் சொல்லி அங்ஙனமே வேண்டும் எல்லாப் பண்டங்களும் தர, அந்நாள் தொடங்கி நாள் பகுதியாக நண்பகலில் அடியவர்களுக்கு உணவு உண்ணும்படி செய்வித்து அன்பு பெருக்கினர்.

விளக்கவுரை

வாசி தீரப் பாடிய பதிகம், `வாசிதீரவே' *(தி.1 ப.92)* எனத் தொடங்கும் குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

அருவிலையிற் பெறுங்காசும் அவையே யாகி
அமுதுசெய்யத் தொண்டர்அள விறந்து பொங்கி
வருமவர்கள் எல்லார்க்கும் வந்தா ருக்கும்
மகிழ்ந்துண்ண இன்னடிசில் மாளா தாகத்
திருமுடிமேல் திங்களொடு கங்கை சூடும்
சிவபெருமான் அருள்செய்யச் சிறப்பின் மிக்க
பெருமைதரு சண்பைநகர் வேந்தர் நாவுக்
கரசர்இவர் பெருஞ்சோற்றுப் பிறங்கல் ஈந்தார். **#2468**

அரிய விலைக்கும் பெறுவதற்குரிய காசும் அவைகளேயாகி, அமுதுசெய்வதற்குரிய தொண்டர்கள் அளவு இல்லாது மேன்மேலும் பெருக, வருபவர்கள் எல்லோருக்கும் முன்பு வந்தவர்களுக்கும்

மகிழ்ச்சியுடன் உணவு உண்ண, இனிய அடிசில் குறைவின்றி இருக்குமாறு, சடையில் திங்களும், பாம்பும், அணியும் இறைவர் திருவருள் செய்ய, சிறப்பால் மிக்க சீகாழி நகரின் அரசரான பிள்ளையாரும், வாக்கின் அரசரான திருநாவுக்கரசரும் என்ற இருவரும் பெருஞ்சோற்று மலைகளை அமுதமாய்த் தந்தருளினர்.

விளக்கவுரை

****

அவனிமிசை மழைபொழிய உணவு மல்கி
அனைத்துயிருந் துயர்நீங்கி அருளி னாலே
புவனமெலாம் பொலிவெய்துங் காலம் எய்தப்
புரிசடையார் கழல்பலநாள் போற்றி வைகித்
தவமுனிவர் சொல்வேந்த ரோடுங் கூடத்
தம்பிரான் அருள்பெற்றுத் தலத்தின் மீது
சிவன்மகிழுந் தானங்கள் வணங்கப் போவார்
தென்திருவாஞ் சியமூதூர் சென்று சேர்ந்தார். **#2469**

உலகில் மழை பெய்ததால் உணவுப் பொருள்கள் பெருகி, அதனால் எல்லா உயிர்களும் துன்பம் நீங்கித் திருவருளி னால் உலகம் முற்றும் செழிப்படையும் நற்காலம் வரவே, பிள்ளையார் சுருண்ட சடையையுடைய இறைவரின் திருவடிகளைப் பலநாள்கள் போற்றி, அங்கு எழுந்தருளியிருந்த பின்பு, தவ முனிவரான நாவுக் கரசரோடு கூடத் தம் இறைவரின் திருவருள் பெற்றுக் கொண்டு, உலகத் தில் சிவபெருமான் எழுந்தருளியுள்ள இடங்கள் பலவற்றையும் வணங்கிச் செல்பவராய் அழகிய திருவாஞ்சியம் என்ற பழைய பதியைச் சென்று அடைந்தனர்.

விளக்கவுரை

****

நீடுதிரு வாஞ்சியத்தில் அமர்ந்த முக்கண்
நீலமிடற் றருமணியை வணங்கிப் போற்றிப்
பாடொலிநீர்த் தலையாலங் காடு மாடு
பரமர்பெரு வேளூரும் பணிந்து பாடி
நாடுபுகழ்த் தனிச்சாத்தங் குடியில் நண்ணி
நம்பர்திருக் கரவீரம் நயந்து பாடித்
தேடுமறைக் கரியார்தம் விளமர் போற்றித்
திருவாரூர் தொழநினைந்து சென்று புக்கார். **#2470**

நிலைபெறும் `திருவாஞ்சியத்தில்' விரும்பி எழுந்தருளியிருக்கும், மூன்று கண்களும் திருநீலகண்டமும் உடைய அரிய மணியான இறைவரை

வணங்கிப் போற்றிப் பெருமை பொருந் திய ஒலியையுடைய நீர் சூழ்ந்த திருத்தலையாலங்காடும், அதன் அருகிலுள்ள இறைவரின் திருப்பெருவேளூரும் பாடி, நாடும் புகழை உடைய ஒப்பில்லாத திருச்சாத்தங்குடியில் சென்று அடைந்து, இறை வரின் திருக்கரவீரத்தையும் விரும்பிப் பாடியருளித் தேடுகின்ற மறைக ளுக்கும் எட்டாத இறைவரின் திருவிளமரையும் போற்றிப் பின் திருவா ரூரைத் தொழுவதற்கு நினைந்து சென்று அந்நகரில் புகுந்தார்.

விளக்கவுரை

இப்பதிகளில் அருளிய பதிகங்கள்: திருவாஞ்சியம் - வன்னிகொன்றை *(தி.2 ப.7)* - இந்தளம். திருப்பெருவேளூர் - அண்ணாவும் *(தி.3 ப.64)* - பஞ்சமம். திருக்கரவீரம் - அரியும் நம்வினை *(தி.1 ப.58)*- பழந்தக்கராகம். திருவிளமர் - மத்தகம் அணிபெற *(தி.3 ப.88)* - சாதாரி. திருத்தலையாலங்காட்டிலும் திருச்சாத்தங்குடியிலும் அருளிய பதிகங்கள் கிடைத்தில.

நம்பர்மகிழ் திருவாரூர் வணங்கிப் போந்து
நலங்கொள்திருக் காறாயில் நண்ணி யேத்தி
பைம்புனல்மென் பணைத்தேவூர் அணைந்து போற்றி
பரமர்திரு நெல்லிக்காப் பணிந்து பாடி
உம்பர்பிரான் கைச்சினமும் பரவித் தெங்கூர்
ஓங்குபுகழ்த் திருக்கொள்ளிக் காடும் போற்றிச்
செம்பொன்மதில் கோட்டூரும் வணங்கி யேத்தித்
திருமலிவெண் டுறைதொழுவான் சென்று சேர்ந்தார். **#2471**

சிவபெருமான் மகிழும் திருவாரூரை வணங்கிச் சென்று, நன்மைகொண்ட திருகாறாயிலைச் சேர்ந்து வணங்கி, பசுமை யான நீரை உடைய மென்மையான வயல்கள் சூழ்ந்த திருத்தேவூ ரினை அணைந்து போற்றி, இறைவரின் திருநெல்லிக்காவைப் பணிந்து திருப்பதிகம் பாடிச் சென்று, தேவதேவரின் கைச்சினமும் போற்றி, தெங்கூரும் மிக்க புகழையுடைய திருக்கொள்ளிக்காடும் போற்றி, மேற்சென்று, செம்பொன்னால் அழகுபடுத்தப்பட்ட மதில் களையுடைய திருக்கோட்டூரினை வணங்கிச் சென்று, திருமலிகின்ற திருவெண்துறையினைத் தொழும் பொருட்டுச் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

இத் திருப்பதிகளில் அருளிய பதிகங்கள்: திருக்காறாயில் - நீரானே *(தி.2 ப.15)* - இந்தளம். திருத்தேவூர் - *1.* பண்ணிலாவிய *(தி.2 ப.82)* - காந்தாரம். - *2.* காடுபயில் *(தி.3 ப.74)* - சாதாரி. திருநெல்லிக்கா - அறத்தாலுயிர் *(தி.2 ப.19)* - இந்தளம். திருக்கைச்சினம் - தையலோர் *(தி.2*

ப.*45)* - சீகாமரம். திருத்தெங்கூர் - புரைசெய் *(தி.2 ப.93)* - பியந்தைக் காந்தாரம். திருக்கொள்ளிக்காடு - நிணம்படு *(தி.3 ப.16)* - காந்தாரபஞ்சமம். திருக்கோட்டூர் - நீலமார்தரு *(தி.2 ப.109)* - நட்டராகம்.

மற்றவ்வூர் தொழுதேத்தி மகிழ்ந்து பாடி
மாலயனுக் கரியபிரான் மருவுந் தானம்
பற்பலவும் சென்று பணிந் தேத்திப் பாடிப்
பரவுதிருத் தொண்டர்குழாம் பாங்கின் எய்தக்
கற்றவர்வாழ் தண்டலைநீள் நெறியுள் ளிட்ட
கனகமதில் திருக்களருங் கருதார் வேள்வி
செற்றவர்சேர் பதிபிறவும் சென்று போற்றித்
திருமறைக்காட் டதன் மருங்கு சேர்ந்தா ரன்றே. **#2472**

திருவெண்துறை என்ற நகரத்தை வணங்கிப் போற்றி மகிழ்ந்து பதிகம்பாடி, நான்முகன் திருமால் இவர்களுக்கு அறிவதற்கு அரியவரான இறைவர் வீற்றிருக்கும் திருப்பதிகள் பலவற்றையும் சென்று போற்றிப் பதிகங்களும் பாடிப் பரவும் தொண் டர் கூட்டம் அருகில் வர, கற்றவர் வாழ்வதற்கு இடமான திருத்தண் டலை நீள்நெறி முதலான திருப்பதிகளும், பொன்மதிலை உடைய திருக்களரும், பகைவரின் வேள்வியை அழித்த இறைவர் எழுந்த ருளிய மற்றப் பதிகளையும் சென்று போற்றி, அதுபொழுதே திரு மறைக்காடு என்ற பதியின் அருகே சேர்ந்தனர்.

விளக்கவுரை

திருவெண்துறையில் அருளிய பதிகம், \`ஆதியன்' *(தி.3 ப.61)* எனத் தொடங்கும் பஞ்சமப் பண்ணிலமைந்த பதிகம் ஆகும் \`மருவும் தானம் பற்பலவும்' என்பது குன்றியூர், திருச்சிற்றேமம், மணலி முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். திருச்சிற் றேமத்தில் அருளிய பதிகம், \`நிறை வெண்திங்கள்' *(தி.3 ப.42)* எனத் தொடங்கும் கொல்லிக் கௌவாணப் பண்ணிலமைந்த பதிகமாகும். மற்ற இரண்டு பதிகளில் அருளிய பதிகங்கள் கிடைத்தில. திருத்தண்டலைநீள்நெறியில் அருளிய பதிகம் \`விரும்பும் திங்களும்' *(தி.3 ப.50)* எனத் தொடங்கும் கௌசிகப் பண்ணில் அமைந்ததாகும். திருக்களரில் அருளிய பதிகம் \`நீருளார்' *(தி.2 ப.51)* எனத் தொடங்கும் சீகாமரப் பண்ணில் அமைந்ததாகும். பதி பிறவும் என்பதால், மங்களம், திருமுகத்தலை, களப்பாள் தகட்டூர், திருக்குன்றளூர், திருக்கடிக்குளம், திருஇடும்பாவனம், திருஉசாத்தானம், முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். இவற்றில் முதல் ஐந்து பதிகட்குப் பதிகங்கள் கிடைத்திலது. மற்ற மூன்று பதிகளை வணங்கிய செய்தியைப் பின்னர் *623, 624*ஆம் பாடல்களில் ஆசிரியர் சேக்கிழார் குறிக்கின்றார்.

கார்அமண்வெஞ் சுரமருளாற் கடந்தார் தாமும்
கடற்காழிக் கவுணியர்தந் தலைவர் தாமும்
சேரஎழுந் தருளியஅப் பேறு கேட்டுத்
திருமறைக்காட் டகன்பதியோர் சிறப்பிற் பொங்கி
ஊரடைய அலங்கரித்து விழவு கொள்ள
உயர்கமுகு கதலிநிறை குடந்தீ பங்கள்
வார்முரச மங்கலநா தங்கள் மல்க
எதிர்கொள்ள அடியருடன் மகிழ்ந்து வந்தார். **#2473**

கரிய சமணரான கொடிய பாலை நிலத்தைத் திருவருள் துணைக் கொண்டு கடந்து வந்த திருநாவுக்கரசரும், கடலின் சார்பை உடைய சீகாழிப் பதியினர்க்குத் தலைவரான பிள்ளையாரும் ஒருங்கு எழுந்தருளி வருவதைச் செவியேற்ற திருமறைக்காடு என்ற பதியில் உள்ளவர்கள், சிறப்பால் மிக்கவராய், ஊரை முற்றும் அணி செய்து திருவிழாக் கொள்வதென எதிர்கொள்ள, உயர்ந்த பாக்கு மரங்களும், வாழை மரங்களும், நிறைந்த நீர்க் குடங்களும், விளக்கு களும் சிறக்க, வார்முரசு முதலான மங்கல ஒலிகளும் பெருக, வர வேற்க, அடியார்களுடனே கூட மகிழ்ந்து வந்தனர்.

விளக்கவுரை

கடத்தற்கு அருமையும் கொடுமையும் தோன்ற, அமணரை வெஞ்சுரம் என உருவகித்தார்.

முன்னணைந்த திருநாவுக் கரசர் தம்மை
முறைமையால் எதிர்கொண்டு களிப்பின் மூழ்கிப்
பின்னணைய எழுந்தருளும் பிள்ளை யார்தம்
பெருகியபொற் காளத்தின் ஓசை கேட்டுச்
சென்னிமிசைக் கரங்குவித்து முன்பு சென்று
சேணிலத்து வணங்குதலுந் திருந்து சண்பை
மன்னவரும் மணிமுத்தின் சிவிகை நின்று
வந்திழிந்து வணங்கியுடன் மகிழ்ந்து போந்தார். **#2474**

அந்நகரில் முன்பு வந்த திருநாவுக்கரசரை முறைப்படி எதிர்கொண்டு வரவேற்றுப் பெருமகிழ்ச்சியடைந்து, பின்னால் சேரவருகின்ற சம்பந்தரின் பெருகிய காளம் முதலான சின்னங்களின் ஓசையினைக் கேட்டுத் தலைமீது கைகளைக் குவித்துக் கொண்டு சென்று, தொலைவில் நிலத்தின் மேல் விழுந்து வணங்கு தலும், திருந்தும் சீகாழித் தலைவரான ஞானசம்பந்தரும் அழகான முத்துச் சிவிகையினின்றும் இறங்கி வணங்கி, அவர்களுடன் மகிழ்ச்சி யுடன் சென்றார்.

விளக்கவுரை

****

சொல்லரச ருடன்கூடப் பிள்ளை யாரும்
தூமணிநீர் மறைக்காட்டுத் தொல்லை மூதூர்
மல்குதிரு மறுகின்கட் புகுந்த போது
மாதவர்கள் மறையவர்கள் மற்று முள்ளோர்
எல்லையில்லா வகைஅரஎன் றெடுத்த ஓசை
இருவிசும்பும் திசையெட்டும் நிறைந்து பொங்கி
ஒல்லொலிநீர் வேலையொலி அடக்கி விண்மேல்
உம்பர்நாட் டப்புறத்தும் உற்ற தன்றே. **#2475**

திருநாவுக்கரசருடன் ஞானசம்பந்தரும் தூய மணிகளையுடைய நீர் சூழ்ந்த திருமறைக்காடு என்ற பழம் பதியின் திருவீதியில் புகுந்தபோது, மாதவர்களும் அந்தணர்களும் மற்றும் உள்ளார்களும் `அரகர' என்று முழங்கிய பேரொலியானது, பெரிய வானமும் எண் திசைகளும் நிறைந்து, மேல் எழுந்து, ஒலி பொருந்திய நீரையுடைய கடல் ஒலியையும் அடக்கி, வானத்தின் மேல் உள்ள விண்உலகத்தின் அப்பாலும் அப்போதே சென்றது.

விளக்கவுரை

****

அடியவரும் பதியவரும் மருங்கு போற்ற
அணிமறுகின் ஊடெய்தி அருகு சூழ்ந்த
கொடிநுடங்கு செழுந்திருமா ளிகையின் முன்னர்க்
கோபுரத்தைத் தாழ்ந்திறைஞ்சிக் குறுகிப் புக்கு
முடிவிலிமை யவர்முனிவர் நெருங்குந் தெய்வ
முன்றில்வலம் கொண்டுநேர் சென்று முன்னாள்
படியின்மறை அருச்சித்துக் காப்புச் செய்த
பைம்பொன்மணித் திருவாயிற் பாங்கு வந்தார் **#2476**

அடியவர்களும் அவ்வூர் மக்களும் அருகில் இருந்து போற்றிவர, அழகிய தெருக்களின் வழியே வந்து சேர்ந்து, பக்கத்தில் சுற்றியுள்ள கொடிகள் திகழும் செழிப்பான திருமாளிகை யின் முன் உள்ள பெரிய கோபுரத்தின் முன் தாழ்ந்து, வணங்கி, உள்ளே புகுந்து, எண்ணற்ற தேவர்களும் முனிவர்களும் நெருங்கும் தெய்வத் தன்மையுடைய திருமுன்றிலை வலமாய் வந்து, திருமுன்பு நேராகச் சென்று, முற்காலத்தில் இம் மண்ணுலகத்தில் மறைகள் வழிபாடு செய்து திருக்காப்புச் செய்துவைத்த பசும்பொன் அணிந்த மணிகளை உடைய வாயிலின் பக்கத்தில் வந்தனர்.

விளக்கவுரை

****

அருமறைகள் திருக்காப்புச் செய்து வைத்த
அக்கதவந் திறந்திடஅம் மறைகளோதும்
பெருகியஅன் புடைஅடியார் அணைந்து நீக்கப்
பெறாமையினால் அன்றுமுத லாகப் பின்னை
ஒருபுடைஓர் வாயில்அமைத் தொழுகுந் தன்மை
உள்ளபடி கேட்டருளி உயர்ந்த சண்பைத்
திருமறையோர் தலைவர்வியப் பெய்தி நின்று
திருநாவுக் கரசருக்குச் செப்பு கின்றார். **#2477**

அருமறைகள் காப்புச் செய்து மூடிவைத்த அத்திருக்கதவைத் திருக்காப்பு நீக்கித் திறப்பதற்கு, மறைகள் ஓதும் பெருமையுடைய அன்புடைய அடியவர்கள் வந்து சேர்ந்து, முயன் றும், கதவின் காப்பு நீக்கப் பெறாத காரணத்தால், அந்நாள் தொடங்கி, அவ்வாயிலின் அருகே வேறு ஒரு வாயில் அமைத்துக் கொண்டு வழிபட்டு ஒழுகும் இயல்பை உள்ளவாறு கேட்டு, உயர்வான சீகாழித் தலைவர் ஆன ஞானசம்பந்தர் வியப்புக் கொண்டு திருநாவுக்கரசரிடம் சொல்லுவாராய்,

விளக்கவுரை

****

அப்பரே வேதவனத் தையர் தம்மை
அபிமுகத் திருவாயில் திறந்து புக்கே
எப்பரிசும் நாம்இறைஞ்ச வேண்டும் நீரே
இவ்வாயில் திருக்காப்பு நீங்குமாறு
மெய்ப் பொருள்வண் டமிழ்பாடி அருளும் என்ன
விளங்குமொழி வேந்தரது மேற்கொண் டென்னை
இப்பரிசு நீரருளிச் செய்தீ ராகில்
இதுசெய்வேன் எனப்பதிகம் எடுத்துப் பாட. **#2478**

`அப்பரே! திருமறைக்காட்டின் இறைவரை, நேராக அமைந்துள்ள திருவாயிலைத் திறந்து புகுந்து, எவ்வகை யானும் நாம் வணங்கிட வேண்டும். இந்த வாயில் காப்பு நீங்கும்படி நீரே மெய்ப்பொருளில் அமைந்த வண்மையுடைய தமிழைப் பாடி யருளவேண்டும்' என்ன, விளங்கும் சொல்லரசும் இசைந்து `என்னை இது செய்யும்படி கூறுவீரானால் இதனைச் செய்வேன்' எனக் கூறித் திருப்பதிகத்தைத் தொடங்க,

விளக்கவுரை

அபிமுகத்துத் திருவாயில் - இறைவரின் திருமுன்புள்ள திருவாயில்.
பாடத் தொடங்கியருளிய பதிகம் `பண்ணின் நேர் மொழி யாள்' *(தி.5*

ப.*10)* எனத் தொடங்கும் திருக்குறுந்தொகைப் பதிகமாகும்.

பாடியஅப் பதிகப்பாட் டான பத்தும்
பாடல்நிரம் பியபின்னும் பைம்பொன் வாயிற்
சேடுயர்பொற் கதவுதிருக் காப்பு நீங்காச்
செய்கையினால் வாகீசர் சிந்தை நொந்து
நீடுதிருக் கடைக்காப்பில் அரிது வேண்டி
நின்றெடுக்கத் திருக்காப்பு நீக்கங் காட்ட
ஆடியசே வடியார்தம் அடியார் விண்ணோர்
ஆர்ப்பெழுந்த தகிலாண்டம் அனைத்தும் மூழ்க. **#2479**

பாடிய அத்திருப்பதிகத்தின் தொகையான பத்துப் பாடல்களும் நிரம்பிய பின்னும், பசும்பொன் அணிந்த திருவாயிலின் பெருமையையுடைய பொன்கதவு நீங்காதிருந்த செய்கையால், அப்பதிகத்தின் திருக்கடைக்காப்பில், அரிதாக வருந்தி வேண்டி நின்று பாடத் திருக்காப்பு நீங்கவே, அருள் திருக்கூத்து இயற்றும் திருவடி களையுடைய சிவபெருமானின் அடியவர்களும் விண்ணவர்களும் எழுப்பிய அரவொலி முழக்கம் அண்டங்கள் எல்லாம் மூழ்குமாறு எழுந்தது.

விளக்கவுரை

பதிகத்திற்குரிய பத்துப் பாடல்களையும் பாடிய பின் பும், திருக்கதவம் திறவாதாகத் திருக்கடைக்காப்பில் அரிதில் வேண்டத் திருக்கதவம் திறந்தது என்றருளுகின்றார் ஆசிரியர். எனவே இப் பதிகம் பதினொரு பாடல்களையுடையதாய், இப்பொழுதுள்ள பத்தா வது பாடல் பதினோராவது பாடலாய் அமைய, இடையில் ஒருபாடல் இருந்து சிதைந்திருத்தல் வேண்டுமோ என எண்ணத் தக்கதாயுள்ளது. அரிது வேண்டி நின்றெடுக்க என்றது `அரக்கனை விரலால் அடர்த் திட்ட நீர், இரக்கம் ஒன்றிலீர் எம்பெருமானிரே' *(தி.5 ப.10 பா.11)* எனவரும் பகுதியை உளங்கொண்ட குறிப்பாகும். இப்பாடல் திருக்கடைக் காப்பாதல் நாவரசர் புராணத்தாலும் *(தி12 பு.21 பா.268)* அறியப்படும். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

மற்றது கண்ட போதே வாக்கின்மன்
னவரை நோக்கிப்
பொற்புறு புகலி மன்னர் போற்றிட
அவரும் போற்றி
அற்புத நிலையி னார்கள் அணிதிரு
மறைக்கா டாளுங்
கொற்றவர் கோயில் வாயில் நேர்வழி
குறுகிப் புக்கார். **#2480**

பொ-ரை: இறைவர் திருக்கதவம் திறந்தமையைக் கண்ட பொழுதே, நாவுக்கரசரை நோக்கி, அழகிய சீகாழி அரசர் போற்ற அரசரும் அவரைப் போற்ற, அற்புதம் அடைந்த நிலையுடையவர்கள் ஆகி, திருமறைக்காட்டில் ஆளும் இறைவரின் திருமுன்புள்ள நேர்வழி யால் உள்ளே சென்றனர்.

விளக்கவுரை

****

கோயிலுட் புகுவார் உச்சி
குவித்தசெங் கைக ளோடும்
தாயினும் இனிய தங்கள்
தம்பிரா னாரைக் கண்டார்
பாயுநீர் அருவி கண்கள்
தூங்கிடப் படியின் மீது
மேயின மெய்ய ராகி
விதிர்ப்புற்று விரைவின் வீழ்ந்தார். **#2481**

அங்ஙனம் கோயிலினுள் புகுந்த இருபெருமக் களும், தலைமீது கூப்பிய கைகளுடன் சென்று, தாயினும் இனிய தம் இறைவரைக் கண்டனர். அவர்களின் கண்களினின்றும் அருவியைப் போல் பாயும் நீர் வழிந்திட, நிலத்தின் மீது பொருந்திய திருமேனியை உடையவர்களாய் உடல் விதிர்த்து விரைவாக எழுந்து வணங்கினர்.

விளக்கவுரை

****

அன்பினுக் களவு காணார்
ஆனந்த வெள்ளம் மூழ்கி
என்புநெக் குருக நோக்கி
இறைஞ்சிநேர் விழுந்த நம்பர்
முன்புநிற் பதுவும் ஆற்றார்
மொழிதடு மாற ஏத்தி
மின்புரை சடையார் தம்மைப்
பதிகங்கள் விளம்பிப் போந்தார். **#2482**

அன்பிற்கு எல்லை காணாதார் ஆகி, ஆனந்த வெள்ளத்துள் மூழ்கி, எலும்பும் நெகிழ்ந்து உருக நோக்கி, மீண்டும் எழுவதும் திருமுன்பு விழுவதுமாய்ப் பின் இறைவரின் திருமுன்பு நிற்பது கூட இயலாதவராய்ச் சொல் தடுமாறும் நிலையில் போற்றி, மின்னல் என விளங்கும் சடையையுடைய இறைவரைத் திருப்பதிகங் களால் போற்றி வெளிப்போந்தனர்.

விளக்கவுரை

அன்பு மீதூர்வால் இத்தகைய மெய்ப்பாடுகளுடன் அருளிய இருவர் பதிகங்களும் இது பொழுது கிடைத்தில.

புறம்புவந் தணைந்த போது
புகலிகா வலரை நோக்கி
நிறங்கிளர் மணிக்க பாடம்
நீக்கமும் அடைப்பும் நிற்கத்
திறந்தவா றடைக்கப் பாடி
யருளும்நீர் என்றார் தீய
மறம்புரி அமணர் செய்த
வஞ்சனை கடக்க வல்லார். **#2483**

வெளியே வந்து சேர்ந்த அமயத்து, சீகாழித் தலைவரான பிள்ளையாரை நோக்கி, பொல்லாத மறச் செயல்களைச் செய்கின்ற சமணர்கள் செய்த வஞ்சனைகளை எல்லாம் கடக்க வல்லவரான நாவுக்கரசர், `பல நிறங்களையுடைய மணிகள் பதித்த கதவு திறத்தலும் அடைத்தலுமாகிய செயல்கள் எப்போதும் வழங்கும் பொருட்டாய்த் திறந்தவாறே அடைக்கவும் பாடியருளுக!' என்று கூறியருளினார்.

விளக்கவுரை

****

அன்றர சருளிச் செய்ய
அருமறைப் பிள்ளை யாரும்
வென்றிவெள் விடையார் தம்மை
விருப்பினாற் சதுரம் என்னும்
இன்றமிழ்ப் பதிகப் பாடல்
இசைத்திட இரண்டு பாலும்
நின்றஅக் கதவு காப்பு
நிரம்பிட அடைத்த தன்றே. **#2484**

அவ்வாறு நாவுக்கரசர் கூறியருள, அரிய மறை யில் வல்ல சம்பந்தரும் வெற்றி பொருந்திய ஆனேற்றை ஊர்தியாகக் கொண்ட இறைவரை வேண்டிய விருப்பத்துடன் `சதுரம் மறை' எனத் தொடங்கும் இனிமையான தமிழ்ப் பதிகத்தின் முதல் பாடலை அருளிச் செய்த அளவில், இரண்டு பக்கத்தும் திறந்து நின்ற அக்கதவுகள் காப்பு நிரம்பிட அடைத்தன.

விளக்கவுரை

இத்தொடக்கம் உடைய திருப்பாடல், சதுரம்மறை தான்துதி செய்து வணங்கும் மதுரம்பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா

இதுநன்கிறை வைத்தருள் செய்க எனக்குன் கதவம்திருக் காப்புக் கொளும் கருத்தாலே. *(தி.2 ப.37 பா.1)* என்பதாகும். கதவம் திருக்காப்புக் கொள்ளவேண்டிய பாடல் ஈதொன் றேயாக ஏனைய பாடல்கள் எல்லாம் வேறுவேறு வினாக்களை உடைய வினாவுரைப் பாடல்களாய் அமைந்திருத்தலின், இப்பாடல் இசைப்பவே திருக்கதவம் காப்பு நிரம்பிடக் கொண்டது என ஆசிரியர் கூறுவாராயினர்.

அடைத்திடக் கண்டு சண்பை
ஆண்டகை யாரும் அஞ்சொல்
தொடைத்தமி ழாளி யாருந்
தொழுதெழத் தொண்டர் ஆர்த்தார்
புடைப்பொழிந் திழிந்த தெங்கும்
பூமழை புகலி வேந்தர்
நடைத்தமிழ்ப் பதிக மாலை
நிரம்பிட நவின்று போற்றி. **#2485**

அவ்வாறு அடைபடக் கண்டு, சீகாழிப் பெருந் தகையாரான ஞானசம்பந்தரும் அழகிய சொல்தொடைத் தமிழை ஆள்கின்றவராகிய நாவுக்கரசரும் தொழுது எழுந்து நிற்க, அது பொழுது அடியவர்கள் மகிழ்வொலி செய்தனர். அருகெங்கும் கற்பக மலர் மழை பெய்தது. சீகாழித் தலைவரான சம்பந்தரும் சீரிய ஒழுக் கத்தை உணர்த்தும் தம் தமிழ்த் திருப்பதிக மாலையை மேல் பத்துப் பாடல்களும் நிரம்புமாறு அருளிப் போற்ற,

விளக்கவுரை

****

அத்திரு வாயில் தன்னில்
அற்றைநாள் தொடங்கி நேரே
மெய்த்திரு மறைகள் போல
மேதினி புக்குப் போற்ற
வைத்தெதிர் வழக்கஞ் செய்த
வரம்பிலாப் பெருமை யோரைக்
கைத்தலங் குவித்துத் தாழ்ந்து
வாழ்ந்தது கடல்சூழ் வையம். **#2486**

அன்றுமுதல் அத்திருவாயில் வழியாக நேரே சென்று மெய் வடிவான மறைகளைப் போலவே உலகத்தவர்களும் புகுந்து வணங்குமாறு நிகழ்வித்து, எதிர்காலத்திலும் இவ்வாறு வழங் குமாறு செய்த எல்லையில்லாத பெருமையுடைய அவ்விரு பெருமக் களையும் கைகூப்பி வணங்கிக் கடல் சூழ்ந்த உலகம் பெரு வாழ்வை அடைந்தது.

விளக்கவுரை

இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

அருமறை யான வெல்லாம்
அகலிரு விசும்பில் ஆர்த்துப்
பெருமையின் முழங்கப் பஞ்ச
நாதமும் பிறங்கி ஓங்க
இருபெருந் தகையோர் தாமும்
எதிரெதிர் இறைஞ்சிப் போந்து
திருமடங் களின்முன் புக்கார்
செழும்பதி விழவு கொள்ள. **#2487**

அரிய மறைகளும் அவற்றின் அங்கமான நூல் களும் ஆகிய எல்லாம் இடம் அகன்ற பெரிய வானத்தில் மகிழ்ச்சி மீதூரப் பெருமையுடன் முழங்க, தேவ துந்துபிகள் ஐந்தும் ஒலிக்க, பெருந்தகையாரான அவ்விரு பெரியார்களும் எதிர் எதிர் வணங்கிச் சென்று, செழுமையான அந்நகரம் விழாக் கொள்ளத் தத்தமக்கு அமைந்த மடங்களிலே புகுந்தனர்.

விளக்கவுரை

****

வேதங்கள் எண்ணில் கோடி
மிடைந்துசெய் பணியை மிக்க
ஏதங்கள் நம்பால் நீப்பார்
இருவருஞ் செய்து வைத்தார்
நாதங்கொள் வடிவாய் நின்ற
நதிபொதி சடையார் செய்ய
பாதங்கள் போற்றும் மேலோர்
பெருமையார் பகரும் நீரார். **#2488**

எண்ணற்ற மறைகள் ஒன்று கூடி நெருங்கிச் செய்த பணியை (திறக்கவும் அடைக்கவுமான பணியை) உயிர்களான நம்மிடம் வரும் குறைபாடுகளையெல்லாம் நீக்குபவர்களாகிய அரச ரும், பிள்ளையாரும் செய்து வைத்தனர். ஒலிவடிவான கங்கை தங்கிய சடையையுடைய இறைவரின் திருவடிகளைப் போற்றும் இப்பெரியவர்களின் பெருமையை யாரே அளவிட்டுச் சொல்ல வல்லார்? எவருமிலர்!

விளக்கவுரை

****

திருமறை நம்பர் தாமுன்
பருள்செய்த அதனைச் செப்பும்
ஒருமையில் நின்ற தொண்டர்

தம்பிரா னார்பால் ஒக்க
வரும்அருட் செய்கை தாமே
வகுத்திட வல்லோ ரென்றால்
பெருமறை யுடன்மெய்த் தொண்டர்க்
கிடையீடு பெரிதா மன்றே. **#2489**

நான்மறைகளின் இறைவர் முன்பு தாம் வழங்கி யருளிய அருளிப்பாட்டின் வழி நின்று, அவ்வருட்டிறத்தையே நினைந்தும் வாழ்த்தியும் வரும் ஒருமையுணர்வுடைய தொண்டர்கள், தம் பெருமான் அருளிச் செய்யும் அருள்செயல்களைப் போலத் தாமும் செய்ய வல்லவர் என்றார். அவ்வரிய மறைகளுடன் மெய்த் தொண்டர்களுக்கு உள்ள ஒற்றுமை மிகவும் பெரிதேயாம் அன்றோ?

விளக்கவுரை

மறைகள் திறக்கவும் அடைக்கவும் பாடிய அருள்நிலை யுடையன திருக்கதவுகள். அக்கதவுகள் ஞானசம்பந்தர் ஒருபாடல் பாடிய அளவிலேயே அடைக்கப்பட்டன. என்றால் அம்மறைகட்கும் ஞானசம்பந்தரின் திருவாக்கிற்கும் வேற்றுமை பெரிதேயன்றோ எனப் பாராட்டி மகிழ்கின்றார் நாவரசர். மனம் மொழி மெய்களால் தன் னையே சார்ந்திருக்கும் ஞானியர்க்கு இறைவன் தான் செய்யும் தன்மைகளை அவர்க்கும் ஆக்கியருளுவன். இதனைத் `துரியங்கடந்த சுடர்த் தோகையுடன், என்றும் பிரியாதே நிற்கின்ற பெம்மான் - துரியத்தைச் சாக்கிரத்தே செய்தருளித் தான் செய்யும் தன்மைகளும், ஆக்கியிடும் அன்பர்க்கு அவன்' *(திருக்களிற்றுப்படியார் - 69)* என வரும் ஞானநூற் கூற்றும் காண்க. இடையீடு - வேற்றுமை.

இவ்வகை திரும றைக்காட்
டிறையவர் அருளை யுன்னி
மெய்வகை தெரிந்த வாக்கின்
வேந்தர்தாம் துயிலும் போதில்
மைவளர் கண்டர் சைவ
வேடத்தால் வந்து வாய்மூர்
அவ்விடை யிருத்தும் அங்கே
வாஎன அருளிப் போக. **#2490**

இவ்வாறு நினைத்துத் திருமறைக் காட்டு இறைவரின் திருவடிகளின் இயல்பை நினைந்து கொண்டு மெய்ம் மைத் திறம் தெரிந்து ஒழுகும் நாவுக்கரசர் உறங்கும் போதில், திருநீல கண்டரான சிவபெருமான் சைவக் கோலத்தில் எழுந்தருளி, அவருக்குக் காட்சியளித்துத் `திருவாய்மூரில் நாம் இருப்போம்! அங் குத் தொடர வா!' எனக் கூறி முன்னே போக,

விளக்கவுரை

****

கண்டஅப் போதே கைகள்
குவித்துடன் கடிது செல்வார்
மண்டிய காத லோடு
மருவுவார் போன்றுங் காணார்
எண்டிசை நோக்கு வாருக்
கெய்துவார் போல எய்தா
அண்டர்தம் பிரானார் தம்பின்
போயினார் ஆர்வத் தோடும். #2491

அவ்வாறு கனவில் கண்ட பொழுதே, எழுந்து கைகளைக் கூப்பி விரைவாக உடன் செல்பவரான நாவுக்கரசர், நிரம்பிய பேரன்புடன் பொருந்துவார் போன்றிருந்தும் காணாத வராய், எட்டுத் திசையிலும் தேடிப் பார்த்தவருக்குக் கிட்டுவார் போலிருந்து கிட்டாதவராய் நின்ற தேவ தேவரான பெருமானின் பின்பு மிகுந்து எழும் அன்புடனே தொடர்ந்து சென்றார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அங்கவர் ஏகச் சண்பை
ஆண்டகை யாரும் அப்பர்
எங்குற்றார் என்று கேட்ப
எய்தினார் திருவாய் மூரில்
பொங்கிய காத லால்என்று
உரைத்திடப் போன தன்மை
சங்கையுற் றென்கொல் என்று
தாமும்அங் கணையப் போந்தார். #2492

திருநாவுக்கரசர் அவர்பின் செல்லச் சீகாழித் தலைவரான சம்பந்தரும், அப்பர் எங்குச் சென்றனர்? என்று வினவ, அறிந்தவர் `மேன்மேல் பொங்கிய அன்பின் மேலீட்டால் திருவாய் மூருக்குச் சென்றார்' என்று கூற, அப்பர் அங்ஙனம் சென்ற காரணம் தான் என்னவோ? என்று ஐயுற்று அங்குத் தாமும் சேரச் செல்ல லானார்.

விளக்கவுரை

****

அந்நிலை அணைந்த போதில்
அம்பிகை யுடனே கூட
மன்னிய ஆடல் காட்டத்

தளரிள வளரும் பாடிச்
சென்னியால் வணங்கி வாய்மூர்
அரசொடுஞ் சென்று புக்கங்
கின்னியல் புறமுன் கூடி
இருவரும் போற்றி செய்தார். **#2493**

அவ்வாறு சென்றவர், நாவுக்கரசர் இருந்த இடத்தை அடைந்தபோது, இறைவர் அம்மையப்பராக இருந்து தம் திருக்கூத்தைக் காட்டியருளவே, அதுகண்ட பிள்ளையார் அரசருக்குக் காட்டி மகிழ்ந்து `தளிரிளவளர்' எனத் தொடக்கமுடைய பதிகத்தைப் பாடியருளி, தலை தாழ்த்தி வணங்கி, அரசரோடும் திருவாய்மூருக்குச் சென்று, திருத்தொண்டின் இனிய இயல்பு பொருந்தக் கூடி இருவரும் இறைவரைப் போற்றியிருந்தனர்.

விளக்கவுரை

`தளிரிளவளர்' *(தி.3 ப.87)* எனத் தொடக்கமுடையது நட்டராகப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

நீடுசீர்த் திருவாய் மூரில்
நிலவிய சிவனார் தம்மைப்
பாடுசொற் பதிகந் தன்னால்
பரவியப் பதியில் வைகிக்
கூடுமெய் அன்பு பொங்க
இருவருங் கூடி மீண்டு
தேடுமா மறைகள் கண்டார்
திருமறைக் காடு சேர்ந்தார். **#2494**

திருவாய்மூரில் நிலைபெற்றெழுந்தருளிய இறைவரைப் பாடும் சொல் பதிகத்தால் போற்றி, அப்பதியில் தங்கி, பொருந்திய அன்பு மேலும் மீதூர, இருபெரு மக்களும் கூடித் தங்கி யிருந்து, பின் அங்கிருந்து மீண்டு, தேடும் பெரிய மறைகளினால் வணங்கிக் காணப் பெற்ற இறைவரின் திருமறைக்காட்டில் சேர்ந்தனர்.

விளக்கவுரை

பாடுசொற்பதிகம் என்று குறிக்கப் பெற்ற பதிகம் இதுபொழுது கிடைத்திலது. அன்றி முற்கூறிய `தளிரிள வளர்' என்ற பதிகத்தையே மீண்டும் கொண்டு போற்றுவாராயினர் என்றலும் ஒன்று எனக் கூறி, இதுபோன்று முற்கூறிய பதிகத்தையே மீண்டும் எடுத்து ஆண்டமைக்குப் `போக மார்த்த' எனத் தொடங்கும் பதிகத்தையே அனல் வாதத்திற்கு மீண்டும் எடுத்தாண்டமையையும், திருமறைக் காட்டில் சுந்தரருடன் சென்ற கழறிற்றறிவார் அருட்சேரர் சிறந்த அந் தாதியிற்

சிறப்பித்தனவே ஓதித் திளைத்தெழுந்தார் எனக் கூறுதற் கேற்ப, வழிபட்டமையையும் சான்றாகக் காட்டுவர் சிவக்கவிமணி யார். *(பெ.பு. திருஞா.பு.உரை, பா.597)*

சண்பைநா டுடைய பிள்ளை
தமிழ்மொழித் தலைவ ரோடு
மண்பயில் கீர்த்திச் செல்வ
மாமறைக் காட்டு வைகிக்
கண்பயில் நெற்றி யார்தங்
கழலிணை பணிந்து போற்றிப்
பண்பயில் பதிகம் பாடிப்
பரவிஅங் கிருந்தா ரன்றே. **#2495**

சீகாழிப் பதியினரான ஞானசம்பந்தர், தமிழ் மொழித் தலைவரான நாவுக்கரசருடன் கூடி, உலகில் பொருந்திய பெருஞ் சிறப்புடைய செல்வம் நிறைந்த திருமறைக்காட்டில் தங்கி இருந்து, நெற்றிக் கண்ணையுடைய பெருமானின் திருவடிகளை வணங்கிப் பண் பொருந்திய திருப்பதிகங்களைப் பாடிப் போற்றி யவாறே அங்கு எழுந்தருளியிருந்தனர்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய திருப்பதிகங்கள்: *1.* `சிலைதனை நடுவிடை' *(தி.1 ப.22)* - நட்டபாடை *2.* `பொங்குவெண்மணல்' *(தி.2 ப.91)* - பியந்தைக் காந்தாரம். *3.* `கற்பொலி சுரத்தின்' *(தி.3 ப.76)* - சாதாரி.

இவ்வகை இவர்கள் அங்கண்
இருந்தனராக இப்பால்
செய்வகை இடையே தப்பும்
தென்னவன் பாண்டி நாட்டு
மெய்வகை நெறியில் நில்லா
வினைஅமண் சமய மிக்குக்
கைவகை முறைமைத் தன்மை
கழியமுன் கலங்குங் காலை. **#2496**

இங்ஙனம் இவ்விருபெரு மக்களும் அவ்விடத்தே இருந்தனராக, இனி இதுகாறும் கொண்டொழுகிய நல்லொழுக்க நெறியினின்றும் இடைக் காலத்தே தவறிய பாண்டிய நாட்டில், உண்மை நெறியில் நில்லா தீவினைப் பயனான சமண சமயம் மிகுந்து, நல்லொழுக்க நெறிமுறை நீங்கியதால் அனைவரும் கலங்கிய காலத்தில்,

விளக்கவுரை

****

தென்னவன் தானும் முன்செய்
தீவினைப் பயத்தி னாலே
அந்நெறிச் சார்வு தன்னை
அறமென நினைந்து நிற்ப
மன்னிய சைவ வாய்மை
வைதிக வழக்க மாகும்
நன்னெறி திரிந்து மாறி
நவைநெறி நடந்த தன்றே. **#2497**

பாண்டியனும் முன்செய்த தீவினையின் பயனால், அச்சமண நெறியின் சார்பையே நல்லறம் என எண்ணி, அவ்வழியிலேயே ஒழுகினானாக, நிலைபெற்ற வைதிக வழக்கமாகும் சைவத்தின் மெய்ம்மையுடைய நன்னெறி, மக்களிடம் வழக்கில் இல்லாது மாறி, அதுபொழுது குற்றம் பொருந்திய தீநெறியாய ஒழுக்கம் பரவியது.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பூழியர் தமிழ்நாட் டுள்ள
பொருவில்சீர்ப் பதிக ளெல்லாம்
பாழியும் அருகர் மேவும்
பள்ளிகள் பலவு மாகிச்
சூழிருட் குழுக்கள் போலத்
தொடைமயிற் பீலி யோடு
மூழிநீர் கையிற் பற்றி
அமணரே யாகி மொய்ப்ப. **#2498**

பாண்டியரின் நாடான தண்தமிழ் நாட்டில் ஒப்பில் லாத சிறப்பை உடைய எல்லாத் திருப்பதிகளிலும் சூழ்ந்த இருள் கூட்டம் போல் கட்டிய மயில் பீலியுடன் நீர்க் கமண்டலங்களையும் கையில்கொண்டு சமணர்களே எங்கும் காணுமாறு திரள,

விளக்கவுரை

சீர்ப்பதிகளாவன - திருபுவனம், திருநெல்வெலி, திருக் குற்றாலம் முதலாயின என்பர் சிவக்கவிமணியார்.

பறிமயிர்த் தலையும் பாயும்
பீலியும் தடுக்கும் மேனிச்
செறியுமுக் குடையு மாகித்
திரிபவ ரெங்கு மாகி
அறியும்அச் சமய நூலின்
அளவினில் அடங்கிச் சைவ

நெறியினிற் சித்தஞ் செல்லா
நிலைமையில் நிகழுங் காலை. #2499
மயிர் பறித்த தலையுடனே பாயையும் தடுக் கையும் தாங்கி, கையிற் செறிந்த முக்குடையையும் கொண்டு திரியும் சமணர்கள் எங்கும் நிறைந்து, தத்தம் அறிவில் அறிந்தவாறே அச் சமயத்தின் நூல் அறிவில் அடங்கிச் சைவநெறியிலே நாட்டம் செல் லாத நிலையில் அந்த நாட்டில் உள்ளவர்கள் வாழும் அமையத்தில்,

விளக்கவுரை

****

வரிசிலைத் தென்ன வன்தான்
உய்தற்கு வளவர் கோமான்
திருவுயிர்த் தருளுஞ் செல்வப்
பாண்டிமா தேவி யாரும்
குரைகழல் அமைச்ச னாராங்
குலச்சிறை யாரும் என்னும்
இருவர்தம் பாங்கு மன்றிச்
சைவம்அங் கெய்தா தாக. #2500
கட்டப்பட்ட வில்லையுடைய பாண்டிய மன்னன் உய்யும் பொருட்டுச் சோழர் பெருமான் மங்கலமாகப் பெற்ற செல்வம் பொருந்திய பாண்டிமா தேவியாரான மங்கையர்க்கரசியாரும், ஒலிக் கும் வீரக்கழலை அணிந்த அமைச்சரான குலச்சிறையாரும் ஆகிய இவ் விருவர் பாலன்றி அந்நாட்டில் சைவநெறி எங்கும் வழங்காதாக.

விளக்கவுரை

****

ஆங்கவர் தாங்கள் அங்கண்
அரும்பெறல் தமிழ்நா டுற்ற
தீங்கினுக் களவு தேற்றாச்
சிந்தையிற் பரிவு கொண்டே
ஓங்கிய சைவ வாய்மை
ஒழுக்கத்தில் நின்ற தன்மை
பூங்கழற் செழியன் முன்பு
புலப்படா வகைகொண் டுய்த்தார். #2501
அந்நிலையில் அவ்விருபெருமக்களும் பெறு தற்கு அரிய தமிழ்நாடு அடைந்த தீமையின் பொருட்டுத் தங்கள் உள் ளத்தில் அளவற்ற துன்பம் கொண்டவர்களாகித் தாங்கள் ஓங்கிய சைவ நெறியில் நின்று ஒழுகிய தன்மை, கழலை அணிந்த பாண்டியன் முன்பு வெளிப்படா வகையில்

கொண்டு செலுத்தினர்.

விளக்கவுரை

அறநெறியோடு, அரன் நெறியையும் காத்துவந்த மரபு பாண்டியர் மரபாகும். கண்ணுதற் பெருங்கடவுளே பாண்டி மன்னன் ஆகவும், கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த புலவர் தலைமகனாகவும் நின்று காத்த பெருமையுடைய பாண்டியநாடு. அந்நாட்டின் தலைவனாய பாண்டி மன்னனும் தொடக்கத்தே சிவ நெறி நின்றவனாயிருந்து இடைக்காலத்தேயே மாறி நின்றனன். இந் நிலையில் அவனைப் புறம் போகாது காத்தற்குரிய கடமை அவன் தன் வாழ்க்கைத் துணைவியார் மேலும், அமைச்சர் மேலும் நிற்பதாயிற்று. அக்கடமையுணர்வில் நின்றமையாலேயே, `கடைக் கொட்கச் செய்தக் கது ஆண்மை' *(குறள், 663)* எனும் அறவுரைப்படி அவரிருவரும் சைவ ஒழுக்கத்தில் நின்ற தன்மை, பாண்டியன் முன்பு புலப்படாவகை கொண்டுய்க்க நேர்ந்தது. இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

இந்நெறி யொழுகு கின்றார்
ஏழுல குய்ய வந்த
மன்னிய புகலி வேந்தர்
வைதிக வாய்மைச் சைவச்
செந்நெறி விளக்கு கின்றார்
திருமறைக் காடு சேர்ந்த
நன்னிலை கன்னி நாட்டு
நல்வினைப் பயத்தாற் கேட்டார். **#2502**

இவ்வாறு ஒழுகி வந்த மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும், ஏழுலகம் உய்யுமாறு தோன்றிய நிலைபெற்ற சீகாழியில் தோன்றிய ஞானசம்பந்தர், நிலையான மறையின் உள் ளுறையைக் கொண்ட சைவமான செந்நெறியை உலகில் விளங்கச் செய்பவராய் விளங்கித் திருமறைக் காட்டில் அதுபொழுது வீற்றிருந் தருளும் நன்மை தரும் நிலையைத் தம் பாண்டி நாட்டின் நல்வினைப் பயனால் கேட்டு அறிந்தனர்.

விளக்கவுரை

****

கேட்டஅப் பொழுதே சிந்தை
கிளர்ந்தெழு மகிழ்ச்சி பொங்க
நாட்பொழு தலர்ந்த செந்தா
மரைநகை முகத்த ராகி
வாட்படை அமைச்ச னாரும்

மங்கையர்க் கரசி யாரும்
சேட்படு புலத்தா ரேனுஞ்
சென்றடி பணிந்தார் ஒத்தார். **#2503**

அங்ஙனம் கேட்டபோதே, வாட்படையை உடைய குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும், உள்ளத்தில் பொங்கி எழுகின்ற மகிழ்ச்சி மீதூர, அப்பொழுது அலர்ந்த செந்தாமரை போன்ற முகத்தையுடையவர்களாகி, தொலைவில் உள்ளவர்கள் ஆயினும் நேரில் சென்று அவருடைய திருவடிகளை வணங்கிய வரைப் போன்றவர் ஆயினர்.

விளக்கவுரை

`சேணன் ஆயினும் கேள் என மொழிந்து' *(பதிற்.44)* எனவரும் சங்கச் செய்யுளையும் நினைவு கூர்க.

காதலால் மிக்கோர் தாங்கள்
கைதொழு கருத்தி னாலே
போதவிழ் சோலை வேலிப்
புகலிகா வலனார் செய்ய
பாதங்கள் பணிமின் என்று
பரிசன மாக்கள் தம்மை
மாதவஞ் சுருதி செய்த
மாமறைக் காட்டில் விட்டார். **#2504**

பெருவிருப்பம் கொண்ட அவ்விருவரும் தாங்கள் நேரே கண்டு தொழும் கருத்தால், மலர்கள் மலர்தற்கு இட மான சோலைகள் சூழ்ந்த சீகாழித் தலைவரான சம்பந்தரின் திருவடிகளைச் சென்று வணங்கி வேண்டிக் கொள்ளுங்கள் என்று தம் ஏவலர்களை மறைவழிபட்ட திருமறைக் காட்டிற்குச் செல்லுமாறு அனுப்பினர்.

விளக்கவுரை

****

ஆங்கவர் விடமுன் போந்த
அறிவுடை மாந்தர் அங்கண்
நீங்கிவண் தமிழ்நாட் டெல்லை
பிற்பட நெறியின் ஏகி
ஞாங்கர்நீர் நாடும் காடும்
நதிகளும் கடந்து வந்து
தேங்கமழ் கைதை நெய்தல்
திருமறைக் காடு சேர்ந்தார். **#2505**

அங்ஙனம் விடுக்கப்பட்ட அறிவுடைய ஏவல் செய்யும் மக்களும் அவ்விடத்தினின்றும் நீங்கிச் சென்று, வளமை உடைய தமிழ்நாட்டின்

எல்லை, பின்நிற்குமாறு வழிச்சென்று, இடைப் பட்ட சோழ நாட்டிலுள்ள மருத நிலங்களையும் காடுகளையும் ஆறு களையும் கடந்து, தேன் பொருந்திய தாழைகள் மலரும் நெய்தல் நிலப் பகுதியான திருமறைக்காட்டின் புறத்தே அடைந்தனர்.

விளக்கவுரை

ஞாங்கர் - இடைப்பட்ட நிலம்.

திருமறைக் காடு நண்ணிச்
சிரபுர நகரில் வந்த
அருமறைப் பிள்ளையார் தாம்
அமர்ந்தினி தருளுஞ் செல்வப்
பெருமடத் தணைய வந்து
பெருகிய விருப்பில் தாங்கள்
வருமுறைத் தன்மை எல்லாம்
வாயில்கா வலர்க்குச் சொன்னார். **#2506**

திருமறைக்காட்டில் சேர்ந்து, சீகாழிப் பதியில் தோன்றிய மறையவரான பிள்ளையார் விரும்பி இனிதாய் எழுந் தருளி இருக்கும் செல்வப் பெருமடத்தை அடைந்து, மேன்மேல் பெரு கிய விருப்பினால் தாங்கள் வரும் முறைமை உடைய தன்மை களையெல்லாம் அறியுமாறு வாயிற் காவலர்களிடம் கூறினர்.

விளக்கவுரை

****

மற்றவர் சென்று புக்கு
வளவர்கோன் மகளார் தென்னர்
கொற்றவன் தேவி யாரும்
குலச்சிறை யாரும் ஏவப்
பொற்கழல் பணிய வந்தோம்
எனச்சிலர் புறத்து வந்து
சொற்றனர் என்று போற்றித்
தொழுதுவிண் ணப்பஞ் செய்தார். **#2507**

அவ்வாயிற் காவலர்கள் திருமடத்தின் உட்புகுந்து திருஞானசம்பந்தரிடம் `சோழன் மகளாரும் பாண்டிய மன்னரின் தேவியாரும் ஆன மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் அனுப்பத் தங்களின் பொற்கழல் அணிந்த திருவடி களை வணங்குதற்கு வந்தோம் என்று சிலர் வெளியே வந்து கூறினர்' என்று வணங்கி விண்ணப்பம் செய்து கொண்டனர்.

விளக்கவுரை

****

புகலிகா வலர்தாங் கேட்டுப்
பொருவிலா அருள்முன் கூர
அகமலர்ந் தவர்கள் தம்மை
அழையும்என் றருளிச் செய்ய
நகைமுகச் செவ்வி நோக்கி
நற்றவ மாந்தர் கூவத்
தகவுடை மாந்தர் புக்குத்
தலையினால் வணங்கி நின்றார். **#2508**

சீகாழிப்பதியில் தோன்றிய ஞானசம்பந்தர், வாயிற் காவலர் கூறியதைச் செவியேற்று ஒப்பில்லாத அருள்மிகு தலால் உள்ளம் மிக மகிழ்ந்து `அவர்களை இங்கு அழைத்து வாருங்கள்' என்று ஆணையிட, ஞானசம்பந்தரின் புன்முறுவலோடு கூடிய திரு முகச் செவ்வியைப் பார்த்து, நல்ல தவமக்களான தொண்டர்கள் சென்று அழைக்க, நல்ல தன்மை பொருந்திய பாண்டிய நாட்டு ஏவலர் உட்புகுந்து சம்பந்தரைத் தலையால் வணங்கி எழுந்து நின்றனர்.

விளக்கவுரை

****

நின்றவர் தம்மை நோக்கி
நிகரில்சீர்ச் சண்பை மன்னர்
மன்றலங் குழலி யாராம்
மானியார் தமக்கும் மானக்
குன்றென நின்ற மெய்ம்மைக்
குலச்சிறை யார்த மக்கும்
நன்றுதான் வினவக் கூறி
நற்பதம் போற்று வார்கள். **#2509**

வணங்கி, எழுந்து நின்ற அவர்களைப் பார்த்துச் சீகாழித் தலைவரான ஞானசம்பந்தர், மங்கையர்கரசியாருக்கும் பெருமையுடைய மலைபோன்று மெய்யடிமைத் திறத்தில் ஒழுகி நிற்கும் குலச்சிறையாருக்கும் நன்மை பொருந்திய நிலையைப் பற்றி வினவ, விடையிறுத்த அப்பணியாளர்கள் பின் பிள்ளையாரின் நல்ல திருவடிகளைப் போற்றுவார்களாய்,

விளக்கவுரை

****

கன்னிநா டமணர் தம்மாற்
கட்டழிந் திழிந்து தங்கள்

மன்னனும் அவர்கள் மாயத்
தழுந்தமா தேவி யாரும்
கொன்னவில் அயில்வேல் வென்றிக்
குலச்சிறை யாரும் கூடி
இந்நிலை புகலி வேந்தர்க்
கியம்புமென் றிறைஞ்சி விட்டார். **#2510**
`சமணர்களால் பாண்டிய நாடு தன் நிலைமை அழிந்து, தங்கள் மன்னனும் அவர்களின் அறியாமைக்குட்பட்டு அழுந்த, அதைப் பார்த்து மாதேவியாரும், அச்சம் தரும் கூர்வேலை ஏந்திய வெற்றியுடைய குலச்சிறையாரும் கூடி இந்த நிலைமையைச் சென்று சீகாழி மன்னவருக்குச் சொல்லுங்கள்' எனக் கூறித் தங்களை அனுப்பியவாற்றைக் கூற,

விளக்கவுரை
****

என்றவர்கள் விண்ணப்பஞ் செய்த பின்னை
ஏறுயர்த்த சிவபெருமான் தொண்ட ரெல்லாம்
நன்றுநமை ஆளுடைய நாதன் பாதம்
நண்ணாத எண்ணில் அமண் குண்டர் தம்மை
வென்றருளி வேதநூல் நெறியே யாக்கி
வெண்ணீறு வேந்தனையும் இடுவித் தங்கு
நின்றசெயல் சிவனடியார் செயலே யாக
நினைந்தருள வேண்டும்என நின்று போற்ற. **#2511**
என்று அவர்கள் விண்ணப்பிக்க, விடைக் கொடியை உயர்த்திய சிவபெருமானின் தொண்டரெல்லாம் நன்றாக நம்மை ஆளுடைய இறைவரின் திருவடிகளைச் சாராத அளவற்ற சமணர்களாகிய குண்டர்களை வெற்றி கொண்டு, மறைநெறியே எங்கும் விளங்கச் செய்து, அங்கு நிகழும் ஒழுக்கங்கள் எல்லாம் சிவனடியார்களின் செயல்களே ஆகுமாறு தாங்கள் திருவுள்ளம் பற்ற வேண்டும் என்று வேண்டி நின்று போற்ற,

விளக்கவுரை
****

மற்றவர்கட் கருள்புரிந்து பிள்ளை யாரும்
வாகீச முனிவருடன் கூடச் சென்று
பெற்றமுயர்த் தவர்பாதம் பணிந்து போந்து
பெரியதிருக் கோபுரத்துள் இருந்து தென்னா
டுற்றசெயல் பாண்டிமா தேவி யாரும்

உரிமைஅமைச் சரும்உரைத்து விட்ட வார்த்தை
சொற்றனிமன் னவருக்குப் புகலி மன்னர்
சொல்லியெழுந் தருளுதற்குத் துணிந்த போது. #2512

இவ்வாறு வேண்டிக் கொண்ட அவ்விரு திறத்தவர்களுக்கும் அருள் செய்து, சம்பந்தரும் நாவுக்கரசருடன் சென்று, விடைக் கொடியை உயர்த்திய இறைவரின் திருவடிகளை வணங்கி, வெளியே வந்து, இறைவரின் திருமுன்புள்ள பெரிய கோபு ரத்துள் இருவரும் எழுந்தருளி இருந்து கொண்டு, பாண்டி நாடு அடைந்த நிலையைப் பற்றிப் பாண்டிமாதேவியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் தமக்குக் கூறியனுப்பிய செய்தியை ஒப்பில்லாத நாவுக்கரசருக்குக் கூறி அதன் பொருட்டாகப் பாண்டிய நாட்டிற்குத் தாம் செல்வதற்குத் துணிந்தபோது,

விளக்கவுரை

ஞானசம்பந்தர் நாவரசரோடு இருந்து, எண்ணித் துணிந்த செய்கையைக் கூறுமிடம், திருக்கோயிலின் உள்ளுமாகாது, புறத்துமாகாது திருக்கோபுரத்திலுள்ளாய அளவில் அமைத்துக் கொண் டது எண்ணற்குரியது. கோயிலின் உட்சென்று இறைவனை வணங் கும் பொழுது எவையும் பேசலாகாது; புறத்தே பலரும் காண்டற்குரிய நிலையில் இத்தகைய செய்தியை எண்ணித் துணிதலும் நலம்பயப் பதன்று. இவ்வகையில் எண்ணித்துணிதற்கென கொண்ட இடம் மிகப் பொருத்தமுடையதாகும்.

அரசருளிச் செய்கின்றார் பிள்ளாய் அந்த
அமண்கையர் வஞ்சனைக்கோர் அவதி யில்லை
உரைசெய்வ துளதுறுகோள் தானுந் தீய
எழுந்தருள உடன்படுவ ஒண்ணா தென்னப்
பரசுவது நம்பெருமான் கழல்கள் என்றால்
பழுதணையா தெனப்பகர்ந்து பரமர் செய்ய
விரைசெய்மலர்த் தாள்போற்றிப் புகலி வேந்தார்
வேயுறுதோ ளியை எடுத்து விளம்பினாரே. #2513

அரசர் அருளிச் செய்வாராய். `பிள்ளாய்! சமண வஞ்சரின் வஞ்சகச் செயல்களுக்கு ஓர் அளவில்லை, மேலும் யாம் சொல்வது ஒன்றுண்டு, கோள் நிலைகளும் தீயனவாய் உள்ளன; ஆதலின் அங்கே செல்வதற்கு இசைவளிப்பது தகாது` என்றுரைக்க, சீகாழித் தலைவரான பிள்ளையார், `நாம் வணங்கிப் போற்றுவது பெருமானின் திருவடிகளை` என எண்ணும் பொழுது, தீங்கு எவை யும் அணுகா எனப் பெருமானின் திருவடிகளைப் போற்றி, `வேயுறுதோளி` எனத் தொடங்கும் பதிகம் பாடினார்.

விளக்கவுரை

இந்நிகழ்ச்சியை நோக்கி, நாவரசர் அமணர்க்கும், தீய கோள்கட்கும் அஞ்சியவர், எனக் கருதலாகாது. ஒரு பேரரசின் அழைப்பைத் துச்சமாகக் கருதி, `நாமார்க்கும் குடியல்லோம்` *(தி.6 ப.98)* என முழங்கியவர் அவர். `அல்லல் என்செயும்` *(தி.5 ப.1 பா.4)* `வானந்துளங்கில் என்` *(தி.4 ப.112 பா.8)* `பொய்ம் மாயப் பெருங்கடலில் புலம்பாநின்ற புண்ணியங்காள், தீவினைகாள்`*(தி.6 ப.27 பா.1)* என்ற தொடக்கத்தனவாய அரிய பாடல்களை எல்லாம் அருளியவர் நாவரசர். அத்தகைய பெரியவர் ஈண்டு அஞ்சுவது எல்லாம், பிள்ளையாரின் இளம் பருவமும், சமணரின் மலையனைய வஞ்சனைச் செயல்களும் கருதியே யாம் என்பது கருதத் தக்கதாம். `வேயுறுதோளி` *(தி.2 ப.85)* எனத் தொடங்கும் பதிகம் பியந்தைக் காந்தாரப் பண்ணிலமைந்ததாகும். இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபுடையன.

சிரபுரத்துப் பிள்ளையார் அருளிச் செய்த
திருப்பதிகங் கேட்டதற்பின் திருந்து நாவுக்
கரசும்அதற் குடன்பாடு செய்து தாமும்
அவர்முன்னே எழுந்தருள அமைந்த போது
புரமெரித்தார் திருமகனார் அப்பர் இந்தப்
புனல்நாட்டில் எழுந்தருளி இருப்பீர் என்று
கரகமலங் குவித்திறைஞ்சித் தவிர்ப்ப வாக்கின்
காவலருந் தொழுதரிதாங் கருத்தில் நேர்ந்தார். **#2514**

சீகாழியில் தோன்றிய பிள்ளையார் பாடி அருளிய அப்பதிகத்தைக் கேட்ட பின்னர், அவர்தம் உறைப்பைத் திருவுள்ளம் கொண்ட திருநாவுக்கரசரும், பிள்ளையார் பாண்டிய நாட்டுக்குச் செல்ல உடன்பட்டு முன்னெல்லாம் நிகழ்வதுபோல் தாம் அவர் முன்னாகச் செல்ல ஒருப்பட்டபோது, முப்புரம் எரித்த இறைவரின் மகனாரான பிள்ளையார் `அப்பரே! இந்நீர் நாடான சோழநாட்டில் எழுந்தருளியிருப்பீர்!' எனக் கூறிக் கைம்மலர்களைக் கூப்பி வணங்கி, அவரது செயலைத் தவிருமாறு செய்தார்; நாவுக்கரசர் தாமும் எதிர்வணங்கிப் பிரிதற்கு அரிய திருவுள்ளத்துடன் இசைந்தார்.

விளக்கவுரை

****

வேதம்வளர்க் கவுஞ்சைவம் விளக்கு தற்கும்
வேதவனத் தருமணியை மீண்டும் புக்குப்
பாதமுறப் பணிந்தெழுந்து பாடிப் போற்றிப்
பரசியருள் பெற்றுவிடை கொண்டு போந்து

மாதவத்து வாகீசர் மறாத வண்ணம்
வணங்கியருள் செய்துவிடை கொடுத்து மன்னுங்
காதலினால் அருமையுறக் கலந்து நீங்கிக்
கதிர்ச்சிவிகை மருங்கணைந்தார் காழி நாதர். **#2515**
மறைநெறியை வளரச் செய்வதற்கும், சைவத்தை விளக்கம்
செய்வதற்கும் திருமறைக்காட்டு இறைவரின் திருக்கோயி லுக்குள்
மீண்டும் புகுந்து, நிலத்தில் விழுந்து வணங்கி எழுந்து, பாடியும்
போற்றியும், அவரது அருள் விடையைப் பெற்றுக் கொண்டு புறம்
போந்தவராய், மாதவமுடைய நாவுக்கரசர் மறுக்க ஒண்ணாதபடி
அவரை வணங்கியருளி விடைதந்து, நிலைபெற்ற விருப்பத்துடன்,
அருமை பொருந்த அளவளாவி, நீங்கிச் சென்று ஒளியுடைய முத்துச்
சிவிகையின் அருகே சீகாழித் தலைவர் வந்தார்.

விளக்கவுரை

இது பொழுது பாடிய பதிகம் கிடைத்திலது.

திருநாவுக் கரசரும் அங்கிருந்தார் இப்பால்
திருஞான சம்பந்தர் செழுநீர் முத்தின்
பெருநாமச் சிவிகையின்மீ தேறிப் பெற்றம்
உயர்த்தவர்தாள் சென்னியின்மேற் பேணும் உள்ளத்
தொருநாமத் தஞ்செழுத்தும் ஓதி வெண்ணீ
றொளிவிளங்குந் திருமேனி தொழுதார் நெஞ்சில்
வருநாமத் தன்புருகுங் கடலாம் என்ன
மாதவரார்ப் பொலிவையம் நிறைந்த தன்றே. **#2516**
திருநாவுக்கரசரும் அங்குத் தங்கியிருந்தார். இங்குத் திருஞானசம்பந்தர்
செழுமையான தன்மையுடைய முத்துக்கள் நிறைந்த
பெரும்புகழையுடைய சிவிகையின் மீது ஏறி, விடைக் கொடியை
உயர்த்திய இறைவரின் திருவடிகளைத் தலைமேற் கொண்டு பேணும்
உள்ளத்துடன், இறைவரின் ஒப்பில்லாத பெயரான திருவைந்தெழுத்தை
ஓதி இறைவரின் திருநீற்றுடன் விளங்கும் திருமேனியை எண்ணிக்
கைதொழுதனர். உள்ளத்தில் எப்போதும் வரும் இறைவர் பெயரால்
அன்பு உருகிப் பெருக, கடல் ஓசை போல அடியார்களின் அரகர
ஒலியான மகிழ்வொலி அப்பொழுது உலகம் எங்கும் நிறைந்தது.

விளக்கவுரை

****

பொங்கியெழுந் திருத்தொண்டர்
போற்றிசைப்ப நாற்றிசையும்
மங்கலதூ ரியந்தழங்க

மறைமுழங்க மழைமுழங்கும்
சங்கபட கம்பேரி
தாரைகா ளந்தாளம்
எங்குமெழுந் தெதிரியம்ப
இருவிசும்பு கொடிதூர்ப்ப. #2517
பெருகி எழுகின்ற திருத்தொண்டர்கள் போற்ற வும், நான்கு திசைகளிலும் மங்கல இயங்கள் ஓங்கி இசைக்கவும், மறையொலி பெருகவும், மேகம் போல ஒலிக்கும் சங்கம் முதலிய ஒலிக் கருவிகள் பலவும், எதிரொலி செய்யவும் பெரிய வானவெளி யைக் கொடிகள் மறைக்கவும்,

விளக்கவுரை

படகம், பேரி, தாரை, காளம், தாளம் என்பனவற்றுள், முன்னையது தோற்கருவிகளுள் ஒன்றாகும். ஏனையவை இயங் களின் வகைகளாம்.

மலர்மாரி பொழிந்திழிய
மங்கலவாழ்த் தினிதிசைப்ப
அலர்வாசப் புனற்குடங்கள்
அணிவிளக்குத் தூபமுடன்
நிலைநீடு தோரணங்கள்
நிரைத்தடியார் எதிர்கொள்ளக்
கலைமாலை மதிச்சடையார்
இடம்பலவுங் கைதொழுவார். #2518
மலர்மழையைப் பொழிந்தும், மங்கல வாழ்த்துக்களை இனிதாக இசைத்தும், மலர்களை இட்ட மணமுடைய நீர் நிறைந்த குடங்களையும் அழகிய விளக்குகளையும், நறுமணப் புகைகளுடன் ஏந்தி, நீண்ட தோரணங்களை நிரல்பட அமைத்து, அடியவர்கள் வரவேற்கச் சென்று, ஒரு கலையுடைய மாலைமதி யத்தைச் சூடிய இறைவரின் பதிகள் பலவற்றையும் வணங்குவாராய்,

விளக்கவுரை

****

தெண்டிரைசூழ் கடற்கானல்
திருவகத்தி யான்பள்ளி
அண்டர்பிரான் கழல்வணங்கி
அருந்தமிழ்மா மறைபாடிக்
கொண்டல்பயில் மணற்கோடு
சூழ்கோடிக் குழகர்தமைத்
தொண்டருடன் தொழுதணைந்தார்

தோணிபுரத் தோன்றலார். #2519
தெளிவான அலைகள் சூழ்ந்த கடற்கரையில் உள்ள திருவகத்தியான்பள்ளியில் வீற்றிருக்கும் தேவதேவரான இறைவரின் திருவடிகளை வணங்கி, அரிய தமிழ்ப் பெருமறையின் தேவாரப் பதிகத்தைப் பாடி, மேகங்கள் தங்குவதற்கு இடமான மணற்குன்றுகள் சூழ்ந்த திருக்கோடிக்குழகரை அடியார்கள் சூழத் தொழுதவாறே சீகாழித் தலைவர் மேற்சென்றார்.

விளக்கவுரை

திருஅகத்தியான் பள்ளியில் அருளிய பதிகம் `வாடிய வெண்தலை' *(தி.2 ப.76)* எனத் தொடங்கும் காந்தாரப் பண்ணி லமைந்த பதிகமாகும். கோடிக்குழகரை வணங்கி அருளிய பதிகம் கிடைத்திலது. இம் மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

கண்ணார்ந்த திருநுதலார்
மகிழ்ந்தகடிக் குளம்இறைஞ்சி
எண்ணார்ந்த திருவிடும்பா
வனமேத்தி எழுந்தருளி
மண்ணார்ந்த பதிபிறவும்
மகிழ்தரும்அன் பால்வணங்கிப்
பண்ணார்ந்த தமிழ்பாடிப்
பரவியே செல்கின்றார். #2520

நெற்றிக்கண்ணையுடைய இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கும் `திருக்கடிக்குளம்' என்ற பதியை வணங்கி, மக்களின் மனம்நிறைந்த `திருஇடும்பாவனம்' என்ற பதியையும் ஏத்திச் சென்று, இவ்வுலகத்தில் நிறைந்துள்ள பிறபதிகளையும் மகிழ்வுடன் கூடிய அன் பினால் வணங்கி, அங்கங்கே பண்பொருந்திய தமிழ்ப் பதிகங்களைப் பாடிய வண்ணமே செல்பவராய்,

விளக்கவுரை

இப்பதிகளில் அருளிய பதிகங்கள்*: 1.* திருக்கடிக்குளம் *(தி.2 ப.104) -* பொடிகொள்மேனி - நட்டராகம்*. 2.* திருஇடும்பாவனம் *(தி.1 ப.17) -* மனமார்தரு - நட்டபாடை. `பதிபிறவும்' என்பன தில்லைவளாகம் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். பதிகங்கள் கிடைத்தில.

திருவுசாத் தானத்துத்
தேவர்பிரான் கழல்பணிந்து
மருவியசெந் தமிழ்ப்பதிகம்
மால்போற்றும் படிபாடி
இருவினையும் பற்றறுப்பார்

எண்ணிறந்த தொண்டருடன்
பெருகுவிருப் பினராகிப்
பிறபதியும் பணிந்தணைவார். **#2521**

`திருவுசாத்தானம்' என்ற பதியில் இறைவரின் திருவடிகளைப் பணிந்து, பொருந்திய செந்தமிழ்ப் பதிகத்தை, அப் பதியில் திருமால் வழிபட்டவாற்றை வைத்துப் பாடி, தம்மை வந்த டையும் அடியார்களுக்கு நல்வினை தீவினை என்ற இரண்டின் பற்றுதலை அறுக்கும் ஞானசம்பந்தர், அளவில்லாத திருத்தொண்டர் களுடனே, பெருகும் விருப்பத்தை உடையவராய்ப் பிற பதிகளையும் வணங்கிச் செல்வாராய்,

விளக்கவுரை

திருவுசாத்தானத்தில் அருளிய பதிகம், `நீரிடைத் துயின்றவன்' *(தி.3 ப.33)* எனத் தொடங்கும் கொல்லிப் பண்ணி லமைந்த பதிகம் ஆகும். இப்பதிகத்தில், நீரிடைத் துயின்றவன் தம்பிநீள் சாம்புவான்
போருடைச் சுக்கிரீவன் அனுமான் தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்த எம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே.
(தி.3 ப.33 பா.1) எனவரும் முதல்பாடலைக் கொண்டே, `மால் போற்றும்படி பாடி' என்றருளினார் ஆசிரியர். பிறபதிகள் என்பன திருக்களந்தை, திருக் களர் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். பதிகங்கள் கிடைத்தில.

கருங்கழிவே லைப்பாலைக்
கழிநெய்தல் கடந்தருளித்
திருந்தியசீர்ப் புனல்நாட்டுத்
தென்மேல்பால் திசைநோக்கி
மருங்குமிடை தடஞ்சாலி
மாடுசெறி குலைத்தெங்கு
நெருங்கிவளர் கமுகுடுத்த
நிறைமருத வழிச்சென்றார். **#2522**

கருமையான உப்பங்கழிகளையும் கடலின் பக்கத்தில் உள்ள நெய்தல் நிலத்தையும் கடந்து சென்று, திருந்திய சிறப்புடைய காவிரி நாடான சோழ நாட்டின் தென்மேற்குத் திசையை நோக்கி, அருகில் நெருங்கிய தூறுகொண்டு எழும் பெரிய சாலி என்னும் நெற்பயிர்களையும், எவ்விடத்தும் நெருங்கிய காய்க் குலைகளையுடைய தென்னைகளையும், நெருக்கமாக வளரும் பாக்கு மரங்களையும், சூழக்கொண்ட நிறைந்த மருத நிலத்தின் வழியே சென்றார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

சங்கங்கள் வயலெங்கும்
சாலிகழைக் கரும்பெங்கும்
கொங்கெங்கும் நிறைகமலக்
குளிர்வாசத் தடமெங்கும்
அங்கங்கே உழவர்குழாம்
ஆர்க்கின்ற ஒலியெங்கும்
எங்கெங்கும் மலர்ப்படுகர்
இவைகழிய எழுந்தருளி. **#2523**

சங்குகள் நிரம்பிய வயல்களில் எங்கும் நெல்லும் கரும்பும் உள்ளன. நறுமணம் எங்கும் கமழும் தாமரைகள் நிறைந்த, குளிர்ந்த மணமுடைய பொய்கைகள் எங்கும் உள்ளன. அங்கங்கே உழவர் கூட்டங்களின் மகிழ்வொலி செய்யும் ஒலிகள் எங்கும் நிறைந்துள்ளன. மலர்கள் நிறைந்த பள்ளமான நிலங்கள் எங்கெங்கும் உள்ளன. இவற்றையெல்லாம் ஞானசம்பந்தர் கடந்து,

விளக்கவுரை
****

தடமெங்கும் புனல்குடையும்
தையலார் தொய்யில்நிறம்
இடமெங்கும் அந்தணர்கள்
ஓதுகிடை யாகநிலை
மடமெங்கும் தொண்டர்குழாம்
மனையெங்கும் புனைவதுவை
நடமெங்கும் ஒலியோவா
நற்பதிகள் அவைகடந்து. #2524

பொய்கைகள் எங்கும் நீராடும் மகளிரின் தொய்யில் குழம்பின் நிறம்; நகர்ப் புறத்தின் இடங்கள் எங்கும் அந்த ணர் ஓதும் இசைகளும், வேள்விச் சாலைகளும்; மடங்கள் எங்கும் தொண்டர் கூட்டங்கள்; இல்லங்களில் எங்கும் திருமண நிகழ்வுகள்; ஆடலின் உடன் எங்கும் பாடலின் ஒலிகள்; இவ்வாறுள்ள தன்மைகள் பலவும் நீங்காமல் நிறைந்துள்ள நல்ல ஊர்களையும் ஞானசம்பந்தர் கடந்து,

விளக்கவுரை
****

நீர்நாடு கடந்தருளி
நெடும்புறவிற் குறும்புதல்கள்
கார்நாடு முகைமுல்லைக்
கடிநாறு நிலங்கடந்து
போர்நாடுஞ் சிலைமறவர்
புன்புலவைப் பிடைபோகிச்
சீர்நாடு தென்பாண்டி
நன்னாடு சென்றணைவார். #2525

இங்ஙனம் நீர் நாட்டைக் கடந்து சென்று, அதன்பின்னர், நீண்ட காடுகளில் உள்ள சிறு புதர்களில் கார் காலத்தை நாடும் முல்லையரும்புகளின் மணம் கமழும் முல்லை நிலங்களைக் கடந்து, போரை நாடும் வில் ஏந்திய மறவர் பயின்று வாழுகின்ற புன்புலங்களான பாலை சார்ந்த இடங்களின் நடுவே சென்று, சீரை விரும்பும் தென்பாண்டியின் கண்ணுள்ள நல்ல நாட்டைச் சென்று அடைவாராய்,

விளக்கவுரை
****

மன்றல்மலர்ப் பிறங்கல்மருங்

கெறிந்துவரு நதிகள்பல
சென்றணைந்து கடந்தேறித்
திரிமருப்பின் கலைபுணர்மான்
கன்றுதெறித் தெனவுகைக்கும்
கானஅதர் கடந்தணைந்தார்
கொன்றைநறுஞ் சடைமுடியார்
மகிழ்ந்ததிருக் கொடுங்குன்றம். **#2526**

நறுமணமுடைய பூக்குவியல்களை இருமருங்கி லும் அலைகளால் வீசி வருகின்ற பல ஆறுகளையும் கடந்து சென்று, முறுக்குடைய கொம்புகள் பொருந்திய கலைமான்களும் அவற்றுடன் இணைந்து வரும் பெண்மான்களும் அவற்றின் கன்றுகளும் கூட்ட மாய் துள்ளிப் பாய்கின்ற நாடுகளின் இடையே உள்ள வழிகளைக் கடந்து, கொன்றை மலர்களின் மணமுடைய சடையையுடைய இறைவர் வீற்றிருக்கும் `திருக்கொடுங்குன்றத்தைச்' சேர்ந்தார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

கொடுங்குன்றத் தினிதமர்ந்த
கொழும்பவளச் செழுங்குன்றை
அடுங்குன்றம் உரித்தானை
வணங்கிஅருந் தமிழ்பாடி
நெடுங்குன்றம் படர்கானும்
நிறைநாடுங் கடந்துமதி
தொடுங்குன்ற மதில்மதுரைத்
தொன்னகர்வந் தணைகின்றார். **#2527**

திருக்கொடுங்குன்றத்தில் இனிதாய் விரும்பி வீற்றிருக்கும் செழுமையான பவளமலை போன்றவரான, யானையை உரித்த இறைவரை வணங்கி, அரிய தமிழ் மாலையைப் பாடி, நீண்ட குன்றுகளையும் படர்ந்த காடுகளையும் நிறைந்த நாடுகளையும் கடந்து சென்று, சந்திரனைத் தீண்டுமாறு உயர்ந்த மலை போன்ற மதில்களை உடைய மதுரை மாநகரை ஞானசம்பந்தர் சென்று அடைவாராயினார்.

விளக்கவுரை

திருக்கொடுங்குன்றத்தில் அருளியது, *`வானிற் பொலி' (தி.1 ப.14)* எனத் தொடங்கும் நட்டபாடைப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

இந்நிலை இவர்வந் தெய்த
எண்பெருங் குன்றம் மேவும்
அந்நிலை அமணர் தங்கட்

கழிவுமுன் சாற்ற லுற்றுப்
பன்முறை வெருக்கொண் டுள்ளம்
பதைப்பத்தீக் கனாக்க ளோடும்
துன்னிமித் தங்கள் அங்கு
நிகழ்ந்தன சொல்ல லுற்றாம். **#2528**

இவ்வாறு ஞானசம்பந்தர் எய்துவாராக, ஆனைமலை முதலிய எண்பெருங் குன்றங்களிலும் வாழ்ந்துவரும் சமணர்களுக்கு, உண்டாக இருக்கும் அழிவை முன்னால் அறியுமாறு செய்து, பன்முறையும் காரணம் இன்றி அச்சம் கொண்டு மனம் பதைக் குமாறு தீக்கனவுகளுடன் அங்குத் தீயநிமித்தங்கள் பலவும் நிகழ்வன வற்றை இனி யாம் சொல்வாம்.

விளக்கவுரை

****

பள்ளிகள் மேலும் மாடு
பயில்அமண் பாழி மேலும்
ஒள்ளிதழ் அசோகின் மேலும்
உணவுசெய் கவளங் கையில்
கொள்ளும்மண் டபங்கள் மேலும்
கூகையோ டாந்தை தீய
புள்ளின மான தம்மில்
பூசலிட் டழிவு சாற்றும். **#2529**

சமணரின் கோயில்கள் மேலும், அவற்றின் அருகில் சமணக் குருமார் தங்கும் குகைகளின் மேலும், ஒள்ளிய இதழ்களை யுடைய அசோக மரங்களின் மேலும், உணவு செய்யும் கவளங்களைக் கையில் ஏந்திக் கொள்ளுவதற்குரிய மண்டபங்களின் மேலும், கோட் டான்களுடன் ஆந்தைகளும் பிற தீய பறவைக் கூட்டமும் தமக்குள் போர் செய்து, பின் நேர இருக்கும் கேட்டைப் புலப்படுத்தும்.

விளக்கவுரை

****

பீலியும் தடுக்கும் பாயும்
பிடித்தகை வழுவி வீழக்
கால்களுந் தடுமா றாடிக்
கண்களும் இடமே யாடி
மேல்வரும் அழிவுக் காக
வேறுகா ரணமுங் காணார்
மாலுழந் தறிவு கெட்டு

மயங்கினர் அமண ரெல்லாம். **#2530**

மயிற் பீலியும், தடுக்கும், பாயும், அவற்றைப் பிடித்த கைப்பிடி முதலியவற்றினின்றும் தாமே நழுவி விழுந்திடவும், கால்களும் பின்னித் தடுமாற்றத்தை அடையவும், கண்களும் இடப் பக்கமாய்த் துடிக்கவும், சமணர்கள் எல்லாம் பின்னால் தமக்கு வரும் அழிவை நீக்குவதற்கு வேறு காரணம் ஒன்றையும் அறியாதவர்களாய் மயக்கம் அடைந்தனர்.

விளக்கவுரை

****

கந்தியர் தம்மில் தாமே
கனன்றெழு கலாங்கள் கொள்ள
வந்தவா றமணர் தம்மில்
மாறுகொண் டூறு செய்ய
பொறைமுதல் வைப்பும் விட்டுச்
சிந்தையிற் செற்ற முன்னாந்
தீக்குணந் தலைநின் றார்கள். **#2531**

சமணப் பெண்கள், தமக்குள்தாம் சினந்து எழும் கலகங்களைச் செய்தனர்; தேர்ந்த சமண முனிவர்களும் தம்முள் மாறுபட்டு ஒருவர்க் கொருவர் ஊறு செய்தனர்; தங்கள் பழைய நூல் களில் விதித்த பொறுமை முதலிய நற்பண்புகளையும் கைவிட்டு, உள் ளத்தில் சினம் முதலாய தீய குணங்களில் சிறந்து நின்றனர்.

விளக்கவுரை

கந்தியர் - சமணத் தவமகளிர். ஆரியாங்கனைகள் என்று அழைக்கப்படுவர்.

இப்படி அமணர் வைகும்
எப்பெயர்ப் பதியும் எய்தும்
ஒப்பில்உற் பாத மெல்லாம்
ஒருவரின் ஒருவர் கூறி
மெய்ப்படு தீக்க னாவும்
வேறுவே றாகக் கண்டு
செப்புவான் புறத்து ளோரும்
தென்னவன் மதுரை சேர்ந்தார். **#2532**

இவ்வாறு சமணர்கள் தங்கும் எவ்வகைப்பட்ட பதிகளிலும் பொருந்தி ஒப்பில்லாத தீய நிமித்தங்களையெல்லாம் ஒருவர்க்கொருவர் தங்களுக்குள் சொல்லிக் கொண்டு, தீமை அளிக்கக் கூடிய தீய கனவுகளையும் வெவ்வேறாகக் கண்டு அவற்றையும் சொல் லும் பொருட்டு, வெளியே உள்ளவர்களும் பாண்டியனின் மதுரை யைச்

சேர்ந்தனர்.

விளக்கவுரை

****

அந்நகர் தன்னில் வாழ்வார்
புறம்புநின் றணைவார் கூடி
மன்னவன் தனக்குங் கூறி
மருண்டவுள் ளத்த ராகித்
துன்னிய அழுக்கு மெய்யில்
தூசிலார் பலரும் ஈண்டி
இன்னன கனவு கண்டோம்
எனஎடுத் தியம்ப லுற்றார். **#2533**

இவ்வாறு சமணர்கள் தங்கும் எவ்வகைப்பட்ட பதிகளிலும் பொருந்தி ஒப்பில்லாத தீய நிமித்தங்களையெல்லாம் ஒருவர்க்கொருவர் தங்களுக்குள் சொல்லிக் கொண்டு, தீமை அளிக்கக் கூடிய தீய கனவுகளையும் வெவ்வேறாகக் கண்டு அவற்றையும் சொல் லும் பொருட்டு, வெளியே உள்ளவர்களும் பாண்டியனின் மதுரை யைச் சேர்ந்தனர்.

விளக்கவுரை

****

சீர்மலி அசோகு தன்கீழ்
இருந்தநந் தேவர் மேலே
வேரொடு சாய்ந்து வீழக்
கண்டனம் அதன்பின் னாக
ஏர்கொள்முக் குடையுந் தாமும்
எழுந்துகை நாற்றிப் போக
ஊருளோர் ஓடிக் காணக்
கண்டனம் என்று ரைப்பார். **#2534**

`சிறந்த அசோக மரத்தின் கீழ் அமர்ந்தருளிய நம் அருகக் கடவுளின் மீது அம்மரம் வேரொடு சாய்ந்து வீழப் பார்த்தோம். அதன்பின்பு, அழகிய முக்குடையும் தாமுமாக அத்தேவர் எழுந்து கைகளைத் தொங்க விட்டுப் போக ஊரவர் ஓடிச் சென்று காணவும் கண்டோம்' என்று உரைப்பவர்கள்,

விளக்கவுரை

நாற்றிப்போக - தொங்கவிட்டுச் செல்ல.

குண்டிகை தகர்த்துப் பாயும்
பீறியோர் குரத்தி யோடப்

பண்டிதர் பாழி நின்றுங்
கழுதைமேற் படர்வார் தம்பின்
ஒண்டொடி இயக்கி யாரும்
உளையிட்டுப் புலம்பி யோடக்
கண்டனம் என்று சொன்னார்
கையறு கவலை யுற்றார். **#2535**

`கமண்டலத்தை உடைத்துப் பாயையும் கிழித்து ஒரு பெண் குரு ஓட, புலமை பெற்ற சமண முனிவர்கள் தம் குகைகளி லிருந்து கழுதைகள் மேல் ஏறிச் செல்வாராக, அவர்களின் பின்னால் ஒளியுடைய வளையலை அணிந்த தவப் பெண்களும் ஊளையிட்டு அழுது கொண்டு ஓடக் கண்டோம்!' என்று கவலை கொண்டவர் களாய் உரைத்தனர்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

கானிடை நட்ட மாடும்
கண்ணுதல் தொண்ட ரெல்லாம்
மீனவன் மதுரை தன்னில்
விரவிடக் கண்டோ மென்பார்
கோனவன் தானும் வெய்ய
கொழுந்தழல் மூழ்கக் கண்டோம்
ஆனபி னெழவுங் கண்டோம்
அதிசய மிதுவாம் என்பார். **#2536**

`சுடுகாட்டில் நடனம் ஆடும் நெற்றிக்கண்ணை உடைய சிவபெருமானின் அடியார் எல்லாம், மீன்கொடியையுடைய பாண்டி யனின் மதுரையில் வந்திடக் கண்டோம்' என்றனர் சிலர். `மதுரையின் மன்னனும் வெவ்விய கொழுந்து விடும் தீயில் முழுகக் கண்டோம். முழுகிய அவன், பின்பு அதனின்று மேல் எழுவதையும் பார்த்தோம், ஈதோர் அதிசயம்' என்பார்,

விளக்கவுரை

****

மழவிடை இளங்கன் றொன்று
வந்துநங் கழகந் தன்னை
உழறிடச் சிதறி யோடி
ஒருவருந் தடுக்க அஞ்சி
விழவொரு புகலு மின்றி
மேதினி தன்னை விட்டு
நிழலிலா மரங்கள் ஏறி

நின்றிடக் கண்டோம் என்பார். #2537
`இளமையுடைய ஆன்கன்று ஒன்று வந்து, நம் சங்கத்தைச் சுழல மிதித்துக் கலக்க, அதனால் சிதறுண்டு ஓடி, யாரும் அதைத் தடுக்க அஞ்சி, அடைக்கலமாய் விழுந்து ஒளிக்க, வேறு ஒரு புகலிடமும் இல்லாது, பூமியை விட்டு, நிழல் இல்லாத மரங்களின் மீது ஏறி நிற்கவும் பார்த்தோம்' என்பார்,

விளக்கவுரை

****

ஆவதென் பாவி காள்இக்
கனாத்திறம் அடிகள் மார்க்கு
மேவிய தீங்கு தன்னை
விளைப்பது திடமே என்று
நோவுறு மனத்த ராகி
நுகர்பெரும் பதமும் கொள்ளார்
யாவது செயலென் றெண்ணி
இடர்உழன் றழுங்கி னார்கள். #2538

`பாவிகளே! இக்கனவின் விளைவுதான் யாதோ? எண்ணிப் பார்க்கின், இந்தக் கனவின் விளைவு நம் அடியார்களுக்குப் பொருந்திய தீமையை விளைவிப்பது உறுதியாகும்!' எனத் துணிந்து சொல்லி, துன்பம் உடைய மனம் கொண்டவராய், உண்ணத் தக்க உணவுகளையும் உண்ணாதவர்களாய், என்ன செய்வது? என்று நினைத்துத் துன்பமடைந்து இவற்றைக் கேட்பவர்கள் வருந்தினார்கள்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

அவ்வகை அவர்க ளெல்லாம்
அந்நிலை மையர்க ளாகச்
சைவநன் மரபில் வந்த
தடமயில் மடமென் சாயல்
பைவளர் அரவுஏர் அல்குல்
பாண்டிமா தேவி யார்க்கும்
மெய்வகை அமைச்ச னார்க்கும்
விளங்குநன் னிமித்தம் மேன்மேல். #2539

அவ்வாறு அமணர்கள் எல்லாம் அத்தகைய வருத்தமுற்றவர்களாக, சைவ நன்மரபில் தோன்றிய மாமயில் போன்ற இளமையாகிய மெல்லிய சாயலையும், பாம்பின் படத்தைப் போன்ற அல்குலையும் உடைய பாண்டிமா தேவியரான மங்கையர்க்கரசியா ருக்கும், உண்மை நெறியில்

நிற்கும் குலச்சிறையாருக்கும் நல்ல நிமித்தங்கள் மேன் மேலும் நிகழ்வனவாயின.

விளக்கவுரை

****

அளவிலா மகிழ்ச்சி காட்டும்
அரும்பெரு நிமித்தம் எய்த
உளமகிழ் வுணருங் காலை
உலகெலாம் உய்ய வந்த
வளரொளி ஞானம் உண்டார்
வந்தணைந் தருளும் வார்த்தை
கிளர்வுறும் ஓகை கூறி
வந்தவர் மொழியக் கேட்டார். **#2540**

அளவற்ற மகிழ்ச்சியை யுண்டாக்கும் அத்தகைய அரிய பெரிய நல்ல நிமித்தங்கள் வந்து பெருக, மனதில் மகிழ்ச்சியை உணரும் அவ்வமையத்தில், உலகம் உய்யும் பொருட்டாக வந்து தோன்றிய, வளரும் ஒளியையுடைய, ஞான அமுதுண்ட ஞானசம் பந்தர் வந்து கொண்டிருக்கிறார் எனும் சொல்லை, கிளர்ச்சி பொருந் திய உவகைச் செய்தியை, அறிந்தவர்களாய் ஆண்டு வந்தவர்கள் கூற, அம்மையாரும் குலச்சிறையாரும் கேட்டனர்.

விளக்கவுரை

****

அம்மொழி விளம்பி னோர்க்கு
வேண்டுவ அடைய நல்கி
மெய்ம்மையில் விளங்கு காதல்
விருப்புறு வெள்ளம் ஓங்கத்
தம்மையும் அறியா வண்ணம்
கைமிக்குத் தழைத்துப் பொங்கி
விம்மிய மகிழ்ச்சி கூர
மேவிய சிறப்பின் மிக்கார். **#2541**

அத்தகைய நற்சொல்லைக் கூறியவர்களுக்கு வேண்டுவனவற்றை நிறைய வழங்கி, மெய்ம்மையில் விளங்கும் விருப்பம் பொருந்திய அன்பு வெள்ளமானது பெருகிட, தம்மையும் அறியாத நிலையில் எல்லை கடந்து பொங்கித் திரண்ட மகிழ்ச்சி பெருக, இவ்வாறு பொருந்திய சிறப்புமிக்கவர் ஆயினர்.

விளக்கவுரை

****

மங்கையர்க் கரசி யார்பால்
வந்தடி வணங்கி நின்ற
கொங்கலர் தெரிய லாராம்
குலச்சிறை யாரை நோக்கி
நங்கள்தம் பிரானா ராய
ஞானபோ னகர்முன் பெய்தி
இங்கெழுந் தருள உய்ந்தோம்
எனஎதிர் கொள்ளும் என்றார். **#2542**
மங்கையர்க்கரசியார் தம்மிடம் வந்து அடி வணங்கிய குலச்சிறையாரை நோக்கி, `நம் பெருமானாரான ஞான அமுது உண்டவர் திருமுன்பு சென்று சேர்ந்து `இங்குத் தாங்கள் எழுந்தருளியமையால் யாங்கள் உய்வு பெற்றோம்' எனக் கூறி வரவேற்பீராக! என மொழிந்தார்.

விளக்கவுரை

****

மன்றலங் குழலி னாரை
வணங்கிப் போந் தமைச்சனாரும்
வென்றிவே லரச னுக்கும்
உறுதியே எனநி னைந்து
பொன்திகழ் மாட வீதி
மதுரையின் புறத்துப் போகி
இன்தமிழ் மறைதந் தாரை
எதிர்கொள எய்துங் காலை. **#2543**
அமைச்சரான குலச்சிறையாரும், மணம் பொருந் திய கூந்தலையுடைய மங்கையர்க்கரசியாரை வணங்கி, வெளியே வந்து, `வெற்றியையுடைய மன்னருக்கும் இச்செயல் உறுதியை அளிப்பதே ஆகும்' என்று மனத்தில் எண்ணி, பொன் வேலைப் பாடுகள் பொருந்தி விளங்கும் மாடங்களையுடைய திருவீதிகளை உடைய மதுரையின் புறத்தே விரைவாகச் சென்று, இனிய தமிழால் மறைகளை அருளிச் செய்துவரும் சம்பந்தரை வரவேற்கும் பொருட் டாய்ச் செல்லும் பொழுது,

விளக்கவுரை

அரசியாரின் ஆணைவழியே செல்லினும், அச்செயல் அரசருக்கும் உய்திபயத்தற் சிறப்புடையதாதலின் அவ்வாறு சென்றார் என்பதாம். உறுதி உழையிருந்தான் கூறல் கடனாதலின் இச்செயற்பா டும் அன்னதாதல் வேண்டுமன்றோ? எனவே அச்செயல் ஏற்புடைத் தேயாம்.

அம்புய மலராள் போல்வாள்
ஆலவாய் அமர்ந்தார் தம்மைக்

கும்பிட வேண்டு மென்று
கொற்றவன் தனக்கும் கூறித்
தம்பரி சனங்கள் சூழத்
தனித்தடை யோடும் சென்று
நம்பரை வணங்கித் தாமும்
நல்வர வேற்று நின்றார். **#2544**

தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளைப் போன்ற மங்கையர்க்கரசியார், திருவாலவாயில் வீற்றிருக்கும் பெருமானைத் தாம் சென்று கும்பிட வேண்டும் என்று மன்னனுக்குக் கூறி, தம்பணியாளர்கள் சூழ்ந்து வர, தனித்த காவலுடன் சென்று தாமும் ஞானசம்பந்தரை வரவேற்க நின்றார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

திருநிலவு மணிமுத்தின்
சிவிகையின்மேல் சேவித்து
வருநிலவு தருமதிபோல்
வளரொளிவெண் குடைநிழற்றப்
பெருகொளிய திருநீற்றுத்
தொண்டர்குழாம் பெருகிவர
அருள்பெருக வருஞானத்
தமுதுண்டார் அணைகின்றார். **#2545**

சிவபெருமானின் அருட்செல்வம் பொருந்திய அழகிய முத்துச் சிவிகையின் மேலே வணங்கியவாறு வருகின்ற நிலவு பொழியும் மதிபோல் வளரும் ஒளி பொருந்திய முத்து வெண் குடை நிழலைச் செய்யவும், பெருகும் ஒளியுடைய திருநீறணிந்த திருத் தொண்டர்களின் கூட்டம் சூழ்ந்து வரவும், திருவருள் பெருக வந்து தோன்றிய சிவஞானஅமுது உண்ட சம்பந்தர் மதுரையை வந்தடைவா ராயினர்.

விளக்கவுரை

****

துந்துபிகள் முதலாய
தூரியங்கள் கிளராமே
அந்தணராம் மாதவர்கள்
ஆயிரமா மறையெடுப்ப
வந்தெழும்மங் கலநாதம்
மாதிரம்உட் படமுழங்கச்
செந்தமிழ்மா ருதம்எதிர்கொண்

டெம்மருங்குஞ் சேவிப்ப. #2546
துந்துபி முதலான இயங்களின் ஓசை மேல் எழாமல், அந்தணர்களான மறைமுனிவர்கள் பலமறைகளை எடுத்துச் சொல்ல வும், வந்து எழுகின்ற மங்கல ஒலிகள் எல்லாத் திசைகளிலும் ஒலிக்க வும், செந்தமிழுடன் வரும் தென்றற் காற்று எதிர்கொண்டு வரவேற்று எம்மருங்கும் வழிபடவும்,

விளக்கவுரை

****

பண்ணியவஞ் சனைத்தவத்தால்
பஞ்சவன்நாட் டிடைப்பரந்த
எண்ணில்அமண் எனும்பாவ
இருஞ்சேனை இரிந்தோட
மண்ணுலக மேயன்றி
வானுலகம் செய்தபெரும்
புண்ணியத்தின் படையெழுச்சி
போலெய்தும் பொலிவெய்த. #2547
செய்த வஞ்சனை பொருந்திய தவத்தை நிலைக்களனாகக் கொண்டு, பாண்டி நாட்டில் பரவிய எண்ணற்ற சமணம் என்ற பாவமான பெரிய படை உடைந்து ஓடும்படியாக, இவ்வுலகம் அல்லாமல் வான் உலகமும் கூடிச் செய்ததான பெரும் புண்ணியமான படைஎழுச்சியைப் போலப் பொருந்திய பொலிவு உண்டாகவும்,

விளக்கவுரை

எண்ணில் சேனை எனக் கூட்டுக.

துன்னும்முழு வுடல்துகளால்
சூழும்உணர் வினில்துகளால்
அன்னெறியிற் செறிந்தடைந்த
அமண்மாசு கழுவுதற்கு
மன்னியொளிர் வெண்மையினால்
தூய்மையினால் வழுதியர்தம்
கன்னிநாட் டிடைக்கங்கை
அணைந்ததெனுங் கவின்காட்ட. #2548
நெருங்கிப் பொருந்தியுள்ள உடல் அழுக்கி னாலும், தீய சூழ்ச்சியையுடைய உணர்வின் மாசினாலும், நெறியல் லாத நெறியில் முழுதும் சேர்ந்த சமணம் என்ற அழுக்கைக் கழுவித் தூய்மை ஆக்குவதற்காக, நிலைபெற்று விளங்கும் வெண்மையாலும், தூய தன்மையாலும், கங்கையாறே பாண்டியரின் கன்னிநாட்டில் வந்து சேர்ந்ததைப் போன்ற அழகை எடுத்துக் காட்டவும்,

விளக்கவுரை

கங்கை வெண்மையும் தூய்மையும் உடையது. ஞான சம்பந்தரும் வெண்ணீற்று ஒளியும், திருவைந்தெழுத்தை இடையறாது நினைந்து வருவதாலாய உள்ளத் தூய்மையும் உடையவர். ஆதலின் இவர் வருகை, கங்கையாற்றின் வருகையை ஒப்பதாயிற்று.

பானல்வயல் தமிழ்நாடு
பழிநாடும் படிபரந்த
மானமிலா அமண்என்னும்
வல்லிருள்போய் மாய்வதனுக்
கானபெரு கொளிப்பரப்பால்
அண்டமெலாம் கொண்டதொரு
ஞானமணி விளக்கெழுந்து
வருவதென நலம்படைப்ப. **#2549**

குவளை மலர்களையுடைய வயல்கள் சூழ்ந்த தமிழ்நாடானது பழியை அடையுமாறு, அங்குப் பரந்து சூழ்ந்த மானம் இல்லாத சமணம் என்னும் வன்மையான இருளானது கெட்டு மாய்வ தற்காகப் பெருகிய ஒளியின் ஆய பரப்பினால், எல்லா அண்டங் களையும் தன் நிறைவுள் அடக்கிக் கொண்டதான ஒப்பில்லாத ஞான விளக்கு ஒன்று, எழுந்து வருவதைப் போன்ற நன்மையைச் செய்யவும்,

விளக்கவுரை

****

புரசைவயக் கடகளிற்றுப்
பூழியர்வண் டமிழ்நாட்டுத்
தரைசெய்தவப் பயன்விளங்கச்
சைவநெறி தழைத்தோங்க
உரைசெய்திருப் பேர்பலவும்
ஊதுமணிச் சின்னமெலாம்
பரசமய கோளரிவந்
தான்என்றுபணிமாற. **#2550**

கழுத்தில் கயிற்றையும், வெற்றியையும், மதத்தையும் கொண்ட யானையையுமுடைய பாண்டியரின் தமிழ் நிலம் செய்த தவத்தின் பயன் விளங்கவும், சைவநெறி தழைத்தோங் கவும், போற்றிக் கூறத்தகும் எல்லாப் பெயர்களையும் எடுத்து ஒலிக்கும் முத்துச் சின்னங்கள் யாவும் `பரசமய கோளரி வந்தான்' என இயம்பவும்,

விளக்கவுரை

பணிமாற - இயம்பவும்

இப்பரி சணையும் சண்பையர் பெருமான்
எழுந்தரு ளும்பொழு திசைக்கும்
ஒப்பில்நித் திலப்பொன் தனிப்பெருங் காளம்
உலகுய்ய ஒலித்தெழும் ஓசை
செப்பரும் பெருமைக் குலச்சிறை யார்தம்
செவிநிறை அமுதெனத் தேக்க
அப்பொழு தறிந்து தலத்தின்மேற் பணிந்தே
அளப்பருங் களிப்பின ரானார். **#2551**

இவ்வாறாய இயல்புடன் அணைகின்ற சீகாழித் தலைவர் வரும்பொழுது, இசைக்கின்ற ஒப்பில்லாத முத்துக்களாலான அழகிய தனிக் காளமானவை உலகம் உய்ய எடுத்துச் சொல்வதால் எழும் ஓசையானது, சொலற்கரிய பெருமையுடைய குலச்சிறையா ரின் திருச்செவிகளில் நிறையும் அமுதம் போல் பெருகிட, அப் பொழுதே அறிந்து, நிலத்தின்மீது உடல்பட விழுந்து, பணிந்து, அளப் பதற்கு அரிய மகிழ்ச்சியுடையவர் ஆயினார்.

விளக்கவுரை

இவ் ஆறு பாடல்களும் ஒருமுடிபின.

அஞ்சலி குவித்த கரங்களும் தலைமேல்
அணைந்திடக் கடிதுசென் றணைவார்
நஞ்சணி கண்டர் தந்திரு மகனா
ருடன்வரு நற்றவக் கடலை
நெஞ்சினில் நிறைந்த ஆர்வமுன் செல்லக்
கண்டு நீள் நிலத்திடைத் தாழ்ந்து
பஞ்சவர் பெருமான் மந்திரித் தலைவர்
பாங்குற அணைந்துமுன் பணிந்தார். **#2552**

வணங்கிக் கூப்பிய கைகளும் தலையின் மேலே சேர விரைந்து சென்று அணைவாராகி, நஞ்சையுண்ட கண்டரான இறைவரின் மகனாருடன் வரும் நல்ல தவமுடைய அடியவர்களின் கடல் போன்ற திருக்கூட்டத்தை, உள்ளத்தில் நிரம்பிய ஆசை முன் செல்ல அகநோக்கில் அறிந்தாராதலால், பாண்டிய மன்னரின் அமைச்சருள் தலைவராகிய குலச்சிறையார் பாங்குறச் சென்று, நீண்ட நிலத்தின்மீது திருமேனி பொருந்த விழுந்து வணங்கினார்.

விளக்கவுரை

****

நிலமிசைப் பணிந்த குலச்சிறை யாரை
நீடிய பெருந்தவத் தொண்டர்

பலரும்முன் னணைந்து வணங்கிமற் றவர்தாம்
படியின்நின் றெழாவகை கண்டு
மலர்மிசைப் புத்தேள் வழிபடும் புகலி
வைதிகச் சேகரர் பாதம்
குலவிஅங் கணைந்தார் தென்னவ னமைச்சர்
குலச்சிறை யார்எனக் கூற. **#2553**

நிலத்தின் மீது விழுந்து வணங்கிய குலச்சிறை யாரை, நீண்ட பெருந்தவத்தவரான தொண்டர்கள் பலரும் முன் வந்து சேர்ந்து வணங்கி, மற்று அவர் நிலத்தில் விழுந்தவர் எழாமல் இருந்த வகையினைப் பார்த்து, நான்முகன் வழிபட்ட சீகாழித் தலைவரான சம்பந்தரின் திருவடிகளை வணங்கி, `அங்குப் பாண்டிய மன்னரின் அமைச்சரான குலச்சிறையார் வந்துள்ளார்' எனக்கூற,

விளக்கவுரை

****

சிரபுரச் செல்வர் அவருரை கேட்டுத்
திருமுகத் தாமரை மலர்ந்து
விரவொளி முத்தின் சிவிகைநின் றிழிந்து
விரைந்து சென் றவர்தமை அணைந்து
கைதொழு தவரும்முன் நிற்ப
வரமிகு தவத்தால் அவரையே நோக்கி
வள்ளலார் மதுரவாக் களிப்பார். **#2554**

சீகாழிச் செல்வரான பிள்ளையார், அவர்கள் கூறக் கேட்டு, முகமான தாமரை மலர்ந்து, பொருந்திய ஒளியை யுடைய முத்துச் சிவிகையினின்றும் இறங்கி விரைவாகச் சென்று, அக்குலச்சிறையாரை அடைந்து பற்றி மேல்எடுப்ப, அக்குலச்சிறை யாரும் கைதொழுது திருமுன்பு நிற்க, வரம்மிகும் செவ்விய தன்மை யுடன் நின்ற அவரது தவம் காரணமாக அவரையே பார்த்து, ஞான சம்பந்தர் இனிய திருவாக்கை அளிப்பவராய்,

விளக்கவுரை

****

செம்பியர் பெருமான் குலமக ளார்க்குந்
திருந்திய சிந்தையீர் உமக்கும்
நம்பெரு மான்தன் திருவருள் பெருகும்
நன்மைதான் வாலிதே என்ன
வம்பலர் அலங்கல் மந்திரி யாரும்
மண்மிசைத் தாழ்ந்தடி வணங்கித்

தம்பெருந் தவத்தின் பயனனை யார்க்குத்
தன்மையாம் நிலையுரைக் கின்றார். **#2555**

`சோழமன்னரின் மகளாரான மங்கையர்க்கரசி அம்மையாருக்கும், திருந்திய சிந்தையுடைய உமக்கும் சிவபெரு மானின் திருவருள்பெருகும் நலம் தான் சிறந்துள்ளதே!' எனக் கூற, மணம் கமழும் மாலைசூடிய அமைச்சரும் நிலமுற வணங்கி நின்று, தம் பெருந்தவத்தின் பயனைப் போன்ற ஞானசம்பந்தருக்கு, அந்நாட்டில் நிகழ்ந்த நிலைமையை எடுத்துச் சொல்வாராய்,

விளக்கவுரை

சிறந்துள்ளதே என்றது, சிறந்துள்ளதன்றோ என வினவும் குறிப்புப்பட நின்றது.

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும்
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால்
எற்றைக்குந் திருவருள் உடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார். **#2556**

`சென்ற காலத்தில் பழுது இன்றி நின்ற இயல்பும், எதிர்காலத்தில் வரும் சிறப்புடைய திறமும், இன்று இங்குத் தாங்கள் எழுந்தருளப் பெற்றதால் விளங்கும். இதனால் முக்காலத்திலும் திரு வருள் உடையோம். நன்மையில்லாத சமண சமயத்தில் அழுந்திய இந்த நாடும் நற்றமிழ் மன்னனும் உய்வு பெற்று வெற்றிகொள்ளும் திரு நீற்று ஒளியினில் விளங்கும் மேன்மையையும் பெற்றோம்.' என்பாராய்,

விளக்கவுரை

பிள்ளையார் முன் வினாவிய வினாவிற்கு விடையாய் இப்பாடல் அமைந்துள்ளது. கடந்த காலத்தில் யாங்கள் செய்த தவத் தால் தாங்கள் இதுபொழுது எழுந்தருள, இந்நற்பேற்றால் எதிர்காலமும் நன்மை பெருக அருள் நெறியே மிகுவதாகும் என்பது விடையாகும்.

இங்கெழுந் தருளும் பெருமைகேட் டருளி
எய்துதற் கரியபே றெய்தி
மங்கையர்க் கரசி யாரும்நம் முடைய
வாழ்வெழுந் தருளிய தென்றே
அங்குநீர் எதிர்சென் றடிபணி வீர்என்
றருள்செய்தார் எனத்தொழு தார்வம்

பொங்கிய களிப்பால் மீளவும் பணிந்து
போற்றினார் புரவலன் அமைச்சர். **#2557**
இங்குத் தாங்கள் எழுந்தருளியதைக் கேட்ட உடனே,
மங்கையர்க்கரசியாரும் `நம்முடைய வாழ்வு எழுந்தருளி வருகின்றது'
என இயம்பி `அங்கு நீவிர் எதிர்சென்று வரவேற்றுத் திரு வடிகளைப்
பணிவீர்' என அருள் செய்தார் என்று அன்பு பொருந்திய களிப்பினால்
வணங்கி அரசனின் அமைச்சரான குலச்சிறையார் போற்றினார்.

விளக்கவுரை

இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

ஆங்ஙனம் போற்றி அடிபணிந் தவர்மேல்
அளவிலா அருள்புரி கருணை
தாங்கிய மொழியால் தகுவன விளம்பித்
தலையளித் தருளும்அப் பொழுதில்
ஓங்கெயில் புடைசூழ் மதுரைதோன் றுதலும்
உயர்தவத் தொண்டரை நோக்கி
ஈங்குநம் பெருமான் திருவால வாய்மற்
றெம்மருங் கினதென வினவ. **#2558**
அவ்வாறு சொல்லித் திருவடியை வணங்க, ஞானசம்பந்தர் அளவற்ற
கருணைமிக்க சொற்களால் பொருந்திய வற்றைச் சொல்லி, அருள்
செய்தபோது, உயர்ந்த மதில்கள் நாற்புறத் தும் சூழ்ந்த மதுரையம்பதி
கண்ணில் புலப்படக் கண்டு, உயர்ந்த தவத் தையுடைய தொண்டரைப்
பார்த்து `இவ்விடத்து நம் இறைவர் எழுந் தருளுகின்ற
திருவாலவாயானது எம்மருங்கில் உள்ளது?' என வினவ,

விளக்கவுரை

****

அன்பராய் அவர்முன் பணிந்தசீ ரடியார்
அண்ணலார் அடியிணை வணங்கி
முன்புநின் றெடுத்த கைகளாற் காட்டி
முருகலர் சோலைகள் சூழ்ந்து
மின்பொலி விசும்பை அளக்குநீள் கொடிசூழ்
வியனெடுங் கோபுரந் தோன்றும்
என்பணி அணிவார் இனிதமர்ந் தருளுந்
திருவால வாய்இது வென்றார். **#2559**
அங்ஙனம் வினவப் பெற்ற சிறப்புடைய அடி யவரான குலச்சிறையார்,
ஞானசம்பந்தரின் இருதிருவடிகளையும் வணங்கித் திருமுன்பு நின்று,
எடுத்த கைகளால் சுட்டிக்காட்டி, `மணம் கமழும் சோலைகளால்

சூழப்பட்டு, ஒளிவிளங்கும் வானை அளக் கும்படி நீண்ட கொடிகள் சூழ்ந்த பெரிய நெடிய கோபுரங்கள் தோன் றும் இடமே, எலும்பின் அணிகளை அணிந்த இறைவர் இனிதாய் விரும்பி, வீற்றிருக்கும் திருவாலவாய் ஆகும்' என உரைத்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

தொண்டர்தாம் போற்றிக் காட்டிடக் கண்டு
துணைமலர்க் கரங்குவித் தருளி
மண்டுபே ரன்பால் மண்மிசைப் பணிந்து
மங்கையர்க் கரசிஎன் றெடுத்தே
எண்டிசை பரவும் ஆலவாய் ஆவ
திதுவேஎன் றிருவர்தம் பணியும்
கொண்டமை சிறப்பித் தருளிநற் பதிகம்
பாடினார் குவலயம் போற்ற. **#2560**

பெருந்தொண்டரான குலச்சிறையார் தாமே இவ்வாறு போற்றிக் காட்டக் கண்டு, மலர் போன்ற கைகளைத் தலை மீது குவித்து, மீதூர்ந்த அன்பினால், தரையின் மீது விழுந்து, பணிந்து, எழுந்து நின்று, `மங்கையர்க்கரசி' எனத் தொடங்கி, எண்திசையில் உள்ளவர்களும் போற்றும் திருஆலவாய் ஆவது இதுவே என்ற நிறை வுடன் கூடிய, அம்மையாரும் அமைச்சருமாகிய இருவரின் தொண்டு களையும் சிறப்பித்தருளிய திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

விளக்கவுரை

*`மங்கையர்க்கரசி' (தி.3 ப.120)* எனத் தொடங்கும் பதிகம் புறநீர்மைப் பண்ணிலமைந்ததாகும். இப்பதிகத்தில் *1, 3, 5, 7, 9* ஆகிய பாடல்களில் மங்கையர்க்கரசியாரையும், *2, 4, 6, 8, 10* ஆகிய பாடல்களில் குலச்சிறையாரையும் சிறப்பித்தருளிய பிள்ளையார், திருக்கடைக்காப்பில் `பன்னலம் புணரும் பாண்டிமாதேவி குலச்சிறை எனும் இவர் பணியும் அந்நலம் பெறுசீர் ஆலவாய்' என இருவரையும் ஒருங்கு சிறப்பித்து அருளியுள்ளார். இதனை உளங் கொண்டே ஆசி ரியர், `இருவர் தம் பணியும் கொண்டமை சிறப்பித்தருளி நற்பதிகம் பாடினார்' என்றார்.

பாடிய பதிகம் பரவியே வந்து
தேடுமால் அயனுக் கரியவர் மகிழ்ந்த
திருவால வாய்மருங் கணைந்து
நீடுயர் செல்வக் கோபுரம் இறைஞ்சி
நிறைபெரு விருப்புடன் புக்கு

மாடுசூழ் வலங்கொண் டுடையவர் கோயில்
மந்திரி யாருடன் புகுந்தார். #2561
அவ்வாறு பாடிய திருப்பதிகத்தில் போற்றியவாறே வந்து, அரியபண்புடைய அடியவரோடும், தேடும் திருமாலுக்கும் நான்முகனுக்கும் அரிய இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கும் திருவால வாய்க் கோயிலின் அருகே அடைந்து, நீண்ட உயர்ந்த கோபுரத்தின் உள்ளே புகுந்து, அருகேயுள்ள மாளிகையை வலமாகச் சூழ்ந்து வந்து, இறைவரின் கோயிலுள் அமைச்சர் குலச்சிறையாருடன் புகுந்தார்.

விளக்கவுரை

****

ஆளும் அங்கணர் ஆலவாய்
அமர்ந்தினி திருந்த
காள கண்டரைக் கண்களின்
பயன்பெறக் கண்டு
நீள வந்தெழும் அன்பினால்
பணிந்தெழ நிறையார்
மீள வும்பல முறைநில
முறவிழுந் தெழுவார். #2562

உயிர்களை ஆட்கொண்டருளுகின்ற அழகிய கண்ணை உடையவராய் ஆலவாயில் விரும்பி இனிதாக வீற்றிருக்கும் கரிய கழுத்தை உடைய இறைவரை, கண்கள் பெற்ற இனிய பயனை அடையுமாறு வழிபட்டும், நீள நினைந்து எழும் அன்பினால் பணிந்து எழுந்தும், அமைதி பெறாதவராய், திரும்பவும் நிலமிசைப் பலமுறை விழுந்து வணங்கி எழுவார் ஆனார்.

விளக்கவுரை

****

அங்கம் எட்டினும் ஐந்தினும்
அளவின்றி வணங்கிப்
பொங்கு காதலின் மெய்ம்மயிர்ப்
புளகமும் பொழியும்
செங்கண் நீர்தரும் அருவியுந்
திகழ்திரு மேனி
எங்கு மாகிநின் றேத்தினார்
புகலியர் இறைவர். #2563

எட்டு உறுப்புகளாலும், ஐந்து உறுப்புகளாலும் அளவுபடாத வணக்கங்கள் செய்து, உள்ளத்தில் நிறைவு பொங்கி எழும் அன்பின்

மிகுதியால் உடலில் மயிர்க்கூச்செறிதலும், சிவந்த கண்கள் பொழிகின்ற நீர் அருவிபோன்று பெருகுதலும், திருநீற்றின் ஒளி விளங்கும் திருமேனி முழுவதும் பொருந்துமாறு நின்று, சீகாழித் தலைவர் வணங்கிப் போற்றினார்.

விளக்கவுரை

****

நீல மாமிடற் றாலவா
யான்என நிலவும்
மூல மாகிய திருவிருக்
குக்குறள் மொழிந்து
சீல மாதவத் திருத்தொண்டர்
தம்மொடும் திளைத்தார்
சாலு மேன்மையில் தலைச்சங்கப்
புலவனார் தம்முன். **#2564**

`நீலமாமிடற்று ஆலவாயிலான்' எனத் தொடங்கி, நிலவும் மூலமான `திரு இருக்குக் குறள்' பதிகத்தைப் பாடிப் பொருந் திய மேன்மையுடைய தலைச் சங்கப் புலவரான சோமசுந்தரப் பெருமான் திருமுன்பு, ஒழுக்கத்தால் மிக்க மாதவமுடைய தொண்டர் ஆன குலச்சிறையாருடன் கூடி அன்பினுள் மகிழ்ந்தார்.

விளக்கவுரை

அளவில் அமைந்த ஈரடிகளைக் கொண்ட பாவகை திருவிருக்குக்குறள் ஆகும். இவ்வகையில் அமைந்த இத்தொடக்கமுடைய பதிகம், குறிஞ்சிப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.1 ப.94).*

சேர்த்தும் இன்னிசைப் பதிகமுந்
திருக்கடைக் காப்புச்
சார்த்தி நல்லிசைத் தண்தமிழ்ச்
சொல்மலர் மாலை
பேர்த்தும் இன்புறப் பாடிவெண்
பிறையணி சென்னி
மூர்த்தி யார்கழல் பரவியே
திருமுன்றில் அணைய. **#2565**

கருதிய பயனைச் சேர்க்கின்ற இனிய இசையை உடைய இப்பதிகத்தையும் திருக்கடைக்காப்புடன் சாத்தி நிறைவாக்கி, நல்ல இசையுடைய தமிழ்ச் சொல்லால் ஆன மலர் மாலையைத் திரும் பவும் இன்பம் பொருந்தப் பாடி, வெண்மையான பிறைச்சந்திரனை அணிந்த முடியையுடையவரின் திருவடிகளைப் போற்றி, திருமுன் றிலை வந்து

அணையும் பொழுதில்,

விளக்கவுரை

பேர்த்தும் இன்புறப் பாடிய பதிகம் கிடைத்திலது.

பிள்ளையார் எழுந் தருளிமுன்
புகுதும்அப் பொழுது
வெள்ள நீர்பொதி வேணியார்
தமைத்தொழும் விருப்பால்
உள்ள ணைந்திட எதிர்செலா
தொருமருங் கொதுங்கும்
தெள்ளு நீர்விழித் தெரிவையார்
சென்றுமுன் பெய்த. **#2566**

முன்னர்ப் பிள்ளையார், திருக்கோயிலினுள் புகுந்த அப்பொழுது, கங்கை தாங்கும் திருச்சடையையுடைய இறைவரைத் தொழும் விருப்பால் உட்செல்ல தெளிந்த நீர் பொருந்திய கண்களை யுடைய மங்கையர்க்கரசியாரும், அப்பிள்ளையாரின் எதிர்செல்லாது ஒதுங்கியிருந்து, இதுபொழுது அவர் திருமுன்பு எய்த,

விளக்கவுரை

****

மருங்கின் மந்திரி யார்பிள்ளை
யார்கழல் வணங்கிக்
கருங்கு ழற்கற்றை மேற்குவி
கைத்தளிர் உடையார்
பருங்கை யானைவாழ் வளவர்கோன்
பாவையார் என்னப்
பெருங்க ளிப்புடன் விரைந்தெதிர்
பிள்ளையார் அணைந்தார். **#2567**

உடன் வந்த குலச்சிறையார் சம்பந்தப் பெருமானின் திருவடிகளை வணங்கி நின்று, கரிய கூந்தலின் மீது கூப்பிய கைத் தளிர்களையுடைய அம்மையார், பருத்த கைகளை யுடைய யானைகள் வாழ்கின்ற சோழமன்னரின் மகளார் என்று சொல்லப் பெருமகிழ்ச்சியுடன் விரைந்து, அவ்வம்மையார் எதிரே அவர் சேர்ந்திட,

விளக்கவுரை

****

தென்ன வன்பெருந் தேவியார்
சிவக்கன்றின் செய்ய
பொன்ன டிக்கம லங்களிற்

பொருந்தமுன் வீழ்ந்தார்
மன்னு சண்பையர் வள்ளலார்
மகிழ்சிறந் தளிக்கும்
இன்ன ருட்பெருஞ் சிறப்பொடுந்
திருக்கையால் எடுத்தார். **#2568**

பாண்டிய மன்னனின் மனைவியாரான மங்கையர்க்கரசியார், சிவக்கன்றான ஞானசம்பந்தரின் திருவடித் தாமரைகளில் பொருந்த முன் விழுந்தார். நிலைபெற்ற சீகாழிப் பதியினரின் தலைவரான பிள்ளையார், மகிழ்ச்சி மிகஅளிக்கும் இனிய அருள் உடைய பெருஞ்சிறப்பினோடும் திருக்கைகளால் அவரை எடுத்து அருளினார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

ஞான போனகர் எதிர்தொழு
தெழுந்தநற் றவத்து
மானி யார்மனக் கருத்துமுற்
றியதென மதித்தே
பான லங்கண்கள் நீர்மல்கப்
பவளவாய் குழறி
யானும் என்பதி யுஞ்செய்த
தவமென்கொல் என்றார். **#2569**

ஞான அமுது உண்ட ஞானசம்பந்தரின் எதிரில் வணங்கி எழுந்த அரிய தவத்தையுடைய அம்மையாரான மங்கை யர்க்கரசியார், தம்மனத்துள் கொண்ட கருத்தான சைவ சமய நிலை பேறும், பாண்டி நாட்டின் மீட்சியும் நிறைவு பெற்றன என்றே துணிவு கொண்டு, நீலமலர் போன்ற கண்களில் நீர் பொருந்தப் பவளம் போன்ற வாய்குழறி `யானும் எனது பதியும் தாங்கள் இங்கு எழுந்தருளும் இப் பேற்றைப் பெறும் பொருட்டு முன் செய்த பெருந்தவம்தான் என்னோ!' எனக் கூறினார்.

விளக்கவுரை

****

யாழின் மென்மொழி யார்மொழிந்
தெதிர்கழல் வணங்கக்
காழி வாழவந் தருளிய
கவுணியர் பிரானும்
சூழு மாகிய பரசம
யத்திடைத் தொண்டு
வாழு நீர்மையீர் உமைக்காண

வந்தனம் என்றார். **#2570**
யாழ் போன்ற இனிய மென்மையான மொழியை உடைய அம்மையார், இவ்வாறு கூறி மீண்டும் தம் திருவடிகளை வணங்கிடச் சீகாழி வாழுமாறு வந்து தோன்றிய கவுணியர் தலை வரும், அவர் சொன்னதைக் கேட்டு, `சுற்றிலும் பரவிய பிற சமயச் சூழலிடையே திருத்தொண்டின் நெறியை விடாது பற்றி வாழ்கின்ற தன்மையுடையவர்களே! உங்களைக் காணும் பொருட்டு வந்தோம்!' என்று அருளிச் செய்தார்.

விளக்கவுரை
****

இன்ன வாறருள் செய்திடத்
தொழுதடி வீழ்ந்தார்
மன்னு மந்திரி யார்வரு
திறமெலாம் மொழிய
அன்ன மென்னடை யார்தமக்
கருள்செய்து போக்கித்
துன்னு மெய்த்தொண்டர் சூழவந்
தருளும்அப் பொழுது. **#2571**

இங்ஙனம் ஞானசம்பந்தர் அருள் செய்திட, மங்கையர்க்கரசியார் அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கி னார். நிலை பெற்ற சீர்மையுடையஅமைச்சரான குலச்சிறையார், பாண்டி நாட்டில் நேர்ந்த துன்பமான நிலைகளை எல்லாம் எடுத்துச் சொல்ல, அவற்றை யெல்லாம் கேட்டு, ஞானசம்பந்தர், அன்னம் போன்ற நடையுடைய மங்கையர்க்கரசியாருக்கு அருள்செய்து விடைதந்து அனுப்பினார். பின் நெருங்கிய மெய்த் தொண்டர்கள் சூழ்ந்து வர அவர் எழுந்தருளி வரும்பொழுது,

விளக்கவுரை
****

செல்வம் மல்கியதிரு வால
வாயினிற் பணிசெய்
தல்கு தொண்டர்கள் பிள்ளையார்
மருங்கணைந் திறைஞ்சி
மல்கு கார்அமண் இருள்கெட
ஈங்குவந் தருள
எல்லை யில்தவஞ் செய்தனம்
எனஎடுத் திசைத்தார். **#2572**

செல்வம் பெருகிய திருஆலவாய்த் திருக்கோயி லில் பணி செய்யும் தொண்டர்கள், பிள்ளையார் அருகில் வந்து சேர்ந்து வணங்கி, நிரம்பிய கரிய சமணமான இருள் கெட, இங்குத் தாங்கள் முழுமதிபோல் எழுந்தருளியதற்கு எல்லையில்லாத பெருந் தவம் செய்தோம் எனக் கூறி வணங்கினர்.

விளக்கவுரை

****

அத்தி ருத்தொண்டர் தங்களுக்
கருள்முகம் அளித்து
மெய்த்த காதலின் அவரொடும்
புறத்தினில் மேவிச்
சித்தம் இன்புறும் அமைச்சனார்
திருமடம் காட்டப்
பத்தர் போற்றிடப் பரிசனத்
தொடும்இனி தமர்ந்தார். **#2573**

அவ்வாறு கூறிய அத்தொண்டர்களுக்கு அருள் முகத்துடன் விடை தந்து, உண்மை பொருந்திய விருப்புடன் அவர்க ளோடு கோயிலின் வெளியே வந்து, உள்ளத்தில் இன்பம் பொருந்திய அமைச்சரான குலச்சிறையார், ஞானசம்பந்தர் இருத்தற்குரிய திரு மடத்தைக் காட்ட, அடியார்கள் சூழ்ந்து போற்றத் தம் பரிவாரங் களுடன் அவர் அங்குத் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

பரவு காதலில் பாண்டிமா
தேவியார் அருளால்
விரவு நண்பொடு குலச்சிறை
யார்விருந் தளிப்பச்
சிரபு ரத்துவந் தருளிய
செல்வர்அங் கிருந்தார்
இரவி மேற்கடல் அணைந்தனன்
எல்லிவந் தணைய. **#2574**

போற்றும் மங்கையர்க்கரசியாரது அருளால், பொருந்தும் அன்புடனே குலச்சிறையார் விருந்து அமைத்து அளிக்க, சீகாழியில் தோன்றியருளிய செல்வரான ஞானப்பிள்ளையார் அத்திருமடத்தில் வீற்றிருந்தருளினர். அதுபொழுது, கதிரவன் மேலைக் கடலில் சென்று அடைய, இரவு வந்த அளவில்,

விளக்கவுரை

****

வழுதி மாநகர் அதனிடை
மாமறைத் தலைவர்
பழுதில் சீரடி யாருடன்
பகல்வரக் கண்ட
கழுது போல்வருங் காரமண்
குண்டர்கள் கலங்கி
இழுது மையிருட் கிருளென
ஈண்டினர் ஒருபால். **#2575**

பாண்டியரின் பெருநகரத்தில், சிறந்த அந்தணர் தலைவரான ஞானசம்பந்தர், குற்றம் இல்லாத சிறப்புடைய அடியார் களுடனே பகலில் வரக் கண்ட, பேய் போன்று வரும் கரிய அமணர் கள், கலக்கத்தை அடைந்து, குழம்பான மை போன்ற இருளுக்கும் மேம்பட்ட இருள்போல ஒருமருங்கில் கூடினார்கள்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அங்கண் மேவிய சமணர்கள்
பிள்ளையார் அமர்ந்த
துங்க மாமடந் தன்னிடைத்
தொண்டர்தங் குழாங்கள்
எங்கும் ஓதிய திருப்பதி
கத்திசை எடுத்த
பொங்கு பேரொலி செவிப்புலம்
புக்கிடப் பொறாராய். **#2576**

அவ்விடத்தில் கூடிய சமணர்கள், ஞானசம்பந்தர் எழுந்தருளிய பெருந்திரு மடத்தில், திருத்தொண்டர் கூட்டங்கள் எங்கும் கூடிப் பெருகி, ஓதிய திருப்பதிகத்து இசை ஓங்கி, மேலெழும் பேரொலியானது தம் செவிகளில் புக, அதைப் பொறுக்க மாட்டா தவர்களாய்,

விளக்கவுரை

****

மற்றிவ் வான்பழி மன்னவன்
மாறனை எய்திச்
சொற்றும் என்றுதம் சூழ்ச்சியும்
ஒருபடி துணிவார்
கொற்ற வன்கடை காவலர்
முன்சென்று குறுகி

வெற்றி வேலவற்கு எங்களை
விளம்புவீர் என்றார். #2577

`மற்று, இப்பெரும் பழியினைப் பாண்டியனை அடைந்து சொல்வோம்,' என்று எண்ணித் தம் சூழ்ச்சி முடிவையும் ஒருபடியாக மனத்துட் கொண்டு, மன்னனின் வாயில் காப்போர் முன் சென்று, `வெற்றியுடைய வேல் ஏந்திய மன்னனுக்கு யாங்கள் வந்த செய்தியைத் தெரிவியுங்கள்!' என இயம்பினர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வாயில் காவலர் மன்னவன்
தனைஎதிர் வணங்கி
ஆய மாகிவந் தடிகள்மார்
அணைந்தனர் என்ன
ஏயி னான்அணை வாரென
அவருஞ்சென் றிசைத்தார்
பாயி னால்உடல் மூடுவார்
பதைப்புடன் புக்கார். #2578

வாயில் காவலர் உள்ளே சென்று, அரசன் முன்பு வணங்கிச் `சமண அடிகள்மார் எல்லாரும் கூட்டமாய் வந்துள்ளனர்!' என்று கூற, அந்தச் சமணத் துறவியருடன் ஒத்த கருத்துடையவனான மன்னனும் `அவர்கள் வருவார்களாக!' என்ன, அக்காவலர்களும் புறத்தே சென்று, சமணத் துறவிகளிடம் அதனை உரைத்தனர். பாய் உடுக்கையால் உடலை மூடும் அவர்களும் பதற்றத்துடன் உள்ளே வந்தனர்.

விளக்கவுரை

ஏயினான் - ஒத்தவன்: சமணர்களொடு ஒத்த கருத்துடை யவன்.

புக்க போதவர் அழிவுறு
மனத்திடைப் புலர்ச்சி
மிக்க தன்மையை வேந்தனும்
கண்டெதிர் வினவி
ஒக்க நீர்திரண் டணைவதற்
குற்றதென் என்னத்
தக்க தல்லதீங் கடுத்தது
சாற்றுதற் கென்றார். #2579

அவர்கள், அவ்வாறு புகுந்த அளவில், அவர்களின் உள்ளத்தில் வாட்டம் மிக்கிருந்த தன்மையினை மன்னன் கண்டு, `நீங்கள் யாவரும் ஒன்றாகத் திரண்டு இங்கு வருவதற்குக் காரணம் யாது?' என்று வினவ,

அம்முனிவர்கள், `சொல்லத்தகாத தீமை வந்தது' என மொழிந்தனர்.

விளக்கவுரை

****

ஆவ தேல்நுமக் கடுத்தது
கூறுவீர் என்று
காவ லன்பரிந் துரைத்தலும்
கார்அமண் கையர்
மாவ லாய்உன்றன் மதுரையிற்
சைவவே தியர்தாம்
மேவ லால்இன்று கண்டுமுட்
டியாமென்று விளம்ப. **#2580**

`அங்ஙனமாயின் உமக்கு நேர்ந்ததை எடுத்துக் கூறுங்கள்!' என்று பாண்டியன் அன்புடன் உரைக்க, கரிய சமண வஞ்சகர்கள், `யானை வீரனான மன்ன! உம் மதுரை மாநகரத்தில் சைவ வேதியர்கள் வந்து பொருந்தியதைக் கண்டதால் இன்று யாங்கள் `கண்டு முட்டு' ஆனோம்' என்று கூற,

விளக்கவுரை

கண்டு முட்டு - இவ்வகையாரைக் காண்பதால் வரும் தொடக்கு, தீட்டு. பிறசமயத்தவரைக் கண்டால் அதைத் தீட்டாய் எண்ணிக் கழுவாய் தேடிக் கொள்ளுவர் சமணர்கள்.

என்று கூறலும் கேட்டுமுட்
டியானும்என் றியம்பி
நன்று நல்லறம் புரிந்தவா
நானென்று நகுவான்
கன்றும் உள்ளத்த னாகிஅக்
கண்ணுதல் அடியார்
இன்றுஇம் மாநகர் அணைந்ததென்
அவர்கள்யார் என்றான். **#2581**

என்று சமண முனிவர்கள் உரைக்கவும், `யானும் அதனைக் கேட்டமையால் `கேட்டு முட்டு' ஆயினேன்' என்று கூறி `நான் நல்லறம் புரிந்தவாறு நன்றாக இருந்தது!' எனத் தன்னையே இகழ்ந்து, நகைத்துக் கறுவு கொண்ட உள்ளத்துடன், அந்நெற்றிக் கண்ணை உடைய சிவனடியார்கள் இன்று இப்பெருநகரத்தை அடைந்த காரணம் தான் யாது? அவர்கள் யாவர்? என வினவினான்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மாலை வெண்குடை வளவர்சோ
ணாட்டுவண் புகலிச்
சூல பாணிபால் ஞானம்பெற்
றானென்று சுருதிப்
பாலன் அன்பர்தங் குழாத்தொடும்
பனிமுத்தின் சிவிகை
மேல ணைந்தனன் எங்களை
வாதினில் வெல்ல. **#2582**

`ஆத்தி மாலையையும் வெண்கொற்றக் குடையையும் கொண்ட சோழரின் வளம் மிக்க சீகாழியில், சூலத்தைக் கையில் கொண்ட சிவனிடத்தில் ஞானம் பெற்றான் என்று, அந்தணச் சிறுவன் அடியார் கூட்டத்துடன் குளிர்ந்த முத்துச் சிவிகையின் மேல் ஏறி, எங்களை வாதில் வெல்ல வந்துள்ளான்',

விளக்கவுரை

****

என்று கூறுவார் இத்திற
முன்புதா மறிந்த
தொன்றும் அங்கொழி யாவகை
உரைத்தலும் தென்னன்
மன்ற லம்பொழிற் சண்பையார்
வள்ளலார் நாமம்
சென்று தன்செவி நிறைத்தலும்
செயிர்த்துமுன் சொல்வான். **#2583**

என்று இவ்வாறு கூறுவாராய், இத்திறங்களைத் தாம் முன்னம் அறிந்த செய்திகள் ஒன்றையும் விடாமல் கூறவும், மணமுடைய அழகிய சோலைகள் சூழ்ந்த சீகாழி வள்ளலாரின் திருப்பெயர் சென்று செவியில் சேரவும், சினம் கொண்டு முற்படக் கூறுவானாகி,

விளக்கவுரை

****

மற்ற மாமறை மைந்தன்இம்
மருங்கணைந் தானேல்
உற்ற செய்தொழில் யாதுசெய்
கோம்என உரைப்பச்
செற்ற மீக்கொண்ட சிந்தையும்
செய்கையும் உடையோர்
கொற்ற மன்னவன் மொழிக்கெதிர்

குறித்துரை செய்வார். **#2584**

`மற்று அவ்வந்தணச் சிறுவன் அங்ஙனம் இங்கு வந்தானாகில், செயத்தக்க தொழிலாய் யாது செய்வோம்?' என மன்னன் வினவ, மேன்மேலும் பொங்கி எழும் சினமுடைய மனமும், தொழிலும் கொண்ட அச்சமணர், வெற்றித் திருவுடைய மன்னன் மொழிகளுக்கு விடையாகக் குறித்துக் கூறுவாராய்,

விளக்கவுரை

****

வந்த அந்தணன் தன்னைநாம்
வலிசெய்து போக்கும்
சிந்தை யன்றிஅச் சிறுமறை
யோனுறை மடத்தில்
வெந்த ழற்பட விஞ்சைமந்
திரத்தொழில் விளைத்தால்
இந்த மாநகர் இடத்திரான்
ஏகும்என் றிசைத்தார். **#2585**

`இங்கு அவ்வந்தணனை, வன்முறை செய்து போக்கும் எண்ணம் இன்றி, அவ்வந்தணச் சிறுவன் தங்கியுள்ள மடத்தில், வெம்மையான அழல் சேருமாறு, வித்தையாகும் மந்திரச் செயல் செய்வோமானால், இப்பெருநகரத்தில் இல்லாது போய் விடுவான்!' எனக் கூறினர்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

ஆவதொன் றிதுவே யாகில்
அதனையே விரைந்து செய்யப்
போவதென் றவரைப் போக்கிப்
பொய்ப்பொரு ளாகக்கொண்டான்
யாவது உரையா டாதே
எண்ணத்திற் கவலை யோடும்
பூவணை அமளி புக்கான்
பொங்கெழில் தேவி சேர்ந்தாள். **#2586**

`செயத்தகுவது ஈதொன்றேயாயின், அதனையே விரைந்து செய்யச் செல்வீராக!' எனக் கூறி அவர்களைச் செல்லுமாறு அனுப்பிய, பொய்யினைப் பொருள் என்று கொண்ட மன்னன், யாதும் எவரிடமும் பேசாமல் உளம் நிறைந்த கவலையுடன், மலர்கள் பரப்பிய படுக்கையில் சேர்ந்தான்; பேரெழிலையுடைய பாண்டிமா தேவியாரும் அங்குச் சேர்ந்தார்.

விளக்கவுரை

****

மன்னவன் உரைப்ப தின்றி
இருக்கமா தேவி யார்தாம்
என்னுயிர்க் குயிராய் உள்ள
இறைவநீ உற்ற தென்னோ
முன்னுள மகிழ்ச்சி இன்றி
முகம்புலர்ந் திருந்தாய் இன்று
பன்னிய உள்ளத் தெய்தும்
பருவரல் அருள்செய் என்றார். **#2587**

அரசன் இங்ஙனம் உரையாடாமல் இருத்தலைக் கண்டு, அப்பேரரசியார், `என் உயிர்க்கு உயிராய் உள்ள இறைவரே! நீவிர் என்ன துன்பத்தை அடைந்தீர்? முன் உள்ள மகிழ்ச்சியின்றி முகம் வாடியுள்ளீர்! இன்று இவ்வாறு எண்ணத்தகும் தம் உள்ளத்தில் பொருந்திய வருத்தத்தை உரைப்பீராக!' என்றார்.

விளக்கவுரை

****

தேவியார் தம்மை நோக்கித்
தென்னவன் கூறு கின்றான்
காவிநீள் கண்ணி னாய்கேள்
காவிரி நாட்டின் மன்னும்
தாவில்சீர்க் கழும லத்தான்
சங்கர னருள்பெற் றிங்கு
மேவினான் அடிகள் மாரை
வாதினில் வெல்ல என்று. **#2588**

தன் துணைவியாரை நோக்கிப் பாண்டிய மன் னன் கூறுவானாய், `குவளை மலர் போன்ற நீண்ட விழியை உடை யாய்! கேட்பாயாக. காவிரி பாயும் நாட்டில் நிலை பெற்றுள்ள குற்றம் அற்ற சிறப்பையுடைய சீகாழிப் பதியினன், சங்கரனின் அருள் பெற்று இங்கு நம் சமண அடிகள்மார்களை, வாதில் வெல்வதன் பொருட்டாக வந்துள்ளான்' என்று கூறி, மேலும் கூறுவானாய்,

விளக்கவுரை

****

வெண்பொடி பூசுந் தொண்டர்
விரவினார் அவரை யெல்லாம்
கண்டுமுட் டடிகள் மார்கள்

கேட்டுமுட் டியானுங் காதல்
வண்டுணத் துதைந்த கோதை
மானியே இங்கு வந்த
பண்புமற் றிதுவே யாகும்
பரிசுவே றில்லை என்றான். **#2589**

`வெண்மையான திருநீற்றைப் பூசும் சிவன் அடியார்கள் இங்கு வந்துள்ளனர். அவர்களையெல்லாம் கண்டதால் அடிகண்மார் `கண்டு முட்டு'. அச்செய்தியைக் கேட்டதால் நானும் `கேட்டு முட்டு'. என் அன்புக்குரிய, வண்டுகள் தேன் உண்ணுதற்குரிய நெருங்கிச் சேர்த்த மாலை சூடிய மானியே, இங்கு நிகழ்ந்த தன்மை இதுவாகும்! வேறு ஒன்றும் இல்லை!' என்றான்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மன்னவன் உரைப்பக் கேட்டு
மங்கையர்க் கரசி யார்தாம்
நின்னிலை யிதுவே யாகில்
நீடிய தெய்வத் தன்மை
அன்னவர் வாது செய்தால்
வென்றவர் பக்கஞ் சேர்ந்து
துன்னுவ துறுதி யாகும்
சுழிவுறேல் மன்ன என்றார். **#2590**

இங்ஙனம் பாண்டியன் உரைக்க அதனைக் கேட்ட மங்கையர்க்கரசியார், `உம் நிலைமை இதுவே யானால் வருந்தாமல், நீடிய தெய்வத் தன்மை விளங்கும்படி அவர்கள் வந்து வாதம் செய்தால், அதில் வென்றவரின் பக்கம் சேர்ந்து பொருந்துவதே நன்மை தருவதாகும்! ஆதலின் வருந்த வேண்டாம்' என்றார்.

விளக்கவுரை

****

சிந்தையிற் களிப்பு மிக்குத்
திருக்கழு மலத்தார் வேந்தன்
வந்தவா றெம்மை யாள
எனவரு மகிழ்ச்சி யோடும்
கொந்தலர் குழலார் போதக்
குலச்சிறை யார்அங் கெய்த
இந்தநன் மாற்றம் எல்லாம்
அவர்க்குரைத் திருந்த பின்னர். **#2591**

உள்ளத்தில் மகிழ்ச்சி மிகுந்து, `திருக்கழுமலத் தவரின் தலைவர் எம்மை ஆளும் பொருட்டு வந்த விதந்தான் என்னே!' என்று எண்ணுவதால் உண்டாகும் மகிழ்ச்சியுடன், மலரும் மலர்களைச் சூடிய கூந்தலையுடைய மங்கையர்க்கரசியார் வந்த போது, அமைச்சர் குலச்சிறையாரும் அங்கு வந்து சேர, இந்த நல்ல சொற்களை எல்லாம் அவரிடம் சொல்லிய பின்னர்,

விளக்கவுரை

****

கொற்றவன் அமைச்ச னாரும்
கைதலை குவித்து நின்று
பெற்றனம் பிள்ளை யாரிங்
கணைந்திடப் பெறும்பே றென்பார்
இற்றைநாள் ஈசன் அன்பர்
தம்மைநாம் இறைஞ்சப் பெற்றோம்
மற்றினிச் சமணர் செய்யும்
வஞ்சனை அறியோம் என்றார். **#2592**

மன்னவரின் அமைச்சரான குலச்சிறையாரும் கைகளைத் தலைமீது குவித்து வணங்கி நின்று, `பிள்ளையார் இங்கு வந்து சேர்வதற்குப் பெரும் பேறுதான் பெற்றோம்!' எனக் கூறத் தொடங்கி, `இன்று இறைவரின் அடியாரை நாம் கண்டு வணங்கப் பெற்றோம்! இனிச் சமணர் செய்யக் கூடிய வஞ்சனை எதுவோ, அறியோம்!' எனக் கூறினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மானியார் தாமும் அஞ்சி
வஞ்சகப் புலையர் தாங்கள்
ஈனமே புரிய வல்லார்
செய்வதென் நாம்என் றெண்ணி
ஞானசம் பந்தர் தம்பால்
நன்மையல் லாத செய்ய
ஊனம்வந் தடையில் யாமும்
உயிர்துறந் தொழிவ தென்றார். **#2593**

அரசமாதேவியாரும் அச்சம் கொண்டு `வஞ்சகர் களாகிய அப்புலையர்கள் ஈனமான செயல்களையே செய்யவல்லார்! அதற்கு நாம் என்ன செய்வது?' என எண்ணி, `ஞானசம்பந்தருக்கு நன்மையல்லாத செயல்களை இவர்கள் செய்து அதன் மூலம் கேடு வருமானால் நாமும்

உயிர் துறப்போம்!' என்று இயம்பினார்.

விளக்கவுரை

****

இவர்நிலை இதுவே யாக
இலங்குவேல் தென்ன னான
அவன்நிலை யதுவாம் அந்நாள்
அருகர்தம் நிலையா தென்னில்
தவமறைந் தல்ல செய்வார்
தங்கள்மந் திரத்தால் செந்தீ
சிவநெறி வளர்க்க வந்தார்
திருமடஞ் சேரச் செய்தார். **#2594**

இவ்விருவர்தம் நிலை இவ்வண்ணமாகவும், விளங்கும் வேல் ஏந்திய பாண்டியனான அவன் நிலை அதுவே யாகவும், அன்றைய நாளில் சமணர்களின் நிலையாது என்றால், தவ வேடத்துள் மறைந்து நின்று தீய செயல்களைச் செய்பவர்களான அவர்கள், தம் மந்திரத்தால், சிவநெறி வளர்க்கத் தோன்றியுள்ள ஞான சம்பந்தரின் திருமடத்தில் செந்தீ சேர்தற்குரிய செயலைச் செய்தனர்.

விளக்கவுரை

`தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று' *(குறள், 274)* எனும் திருக்குறள் நினைவு கூருமாறு `தவம் மறைந்து அல்லவை செய்வார்' எனும் தொடர் அமைந்துள்ளது.

ஆதி மந்திரம் அஞ்செழுத்
தோதுவார் நோக்கும்
மாதி ரத்தினும் மற்றைமந்
திரவிதி வருமே
பூதி சாதனர் மடத்தில்தாம்
புனைந்தசா தனைகள்
சாதி யாவகை கண்டமண்
குண்டர்கள் தளர்ந்தார். **#2595**

ஆதி மந்திரமான திருவைந்தெழுத்தை ஓதுகின் றவர்கள், நோக்கும் திசையிலும், மற்ற மந்திரச் செயல்கள் சென்று சேருமோ? சேரா. திருநீற்றுச் சாதனம் பூண்ட ஞானசம்பந்தரின் திரு மடத்தில் தாம் புனைந்த சாதனைகள், ஏவியவாறு குறித்த பயனைத் தாராது ஒழிந்ததைப் பார்த்து, அச்சமணர்களாகிய கீழ் மக்கள் தளர்ச்சி யடைந்தனர்.

விளக்கவுரை

ஏகாரம் எதிர்மறைக்கண்வந்தது. `கண்ணுதலான் திரு நீற்றுச் சார்பினோர்க்கும் கவலை வருமோ?' என்றவிடத்து ஓகாரம் எதிர்மறைக் கூற்றில் வருமாறும் நினைவு கூர்க. படைக்கலமாகப் பெருமானின் திருவைந்தெழுத்தையும், கவசமாக இறைவரின் திரு நீற்றையும் கொண்டார்க்கு என்றும், எவ்விடத்தும், எவ்விதத் தீங்கும் வாராது என்பதாம்.

தளர்ந்து மற்றவர் தாஞ்செய்த
தீத்தொழில் சரியக்
கிளர்ந்த அச்சம்முன் கெழுமிய
கீழ்மையோர் கூடி
விளங்கு நீள்முடி வேந்தன்
ஈதறியின்நம் மேன்மை
உளங்கொ ளான்நமர் விருத்தியும்
ஒழிக்குமென் றுணர்வார். **#2596**

மற்று, அவர்கள் தாம் செய்த அத் தீத் தொழில், பயன் அளிக்காமல் விழுவதைக் கண்டு, மனம் தளர்ந்து, எழுந்த அச்சமானது முன்னே மிகுந்ததால், கீழான அவ்வமணர்கள் ஒன்றாகக் கூடி, விளங் கும் நீண்ட முடிமன்னனான பாண்டியன் இதை அறியின் நம் வளர்ச்சி யில் மனம் கொள்ளமாட்டான், நாம் பிழைக்கும் வழியையும் ஒழித்து விடுவான் என்று உணர்ந்தாராய்,

விளக்கவுரை

****

மந்தி ரச்செயல் வாய்த்தில
மற்றினிச் செய்யும்
புந்தி யாவதிங் கிதுஎனப்
பொதிதழல் கொடுபுக்
கந்தண் மாதவர் திருமடப்
புறத்தயல் இருள்போல்
வந்து தந்தொழில் புரிந்தனர்
வஞ்சனை மனத்தோர். **#2597**

`மந்திரச் செயல், குறித்த பயனைத் தரவில்லை! இனிச் செயத்தகும் செயல் இதுவேயாகும்!' எனத் துணிந்து, பொதியும் தழலினை எடுத்துக் கொண்டு புகுந்து, அழகிய குளிர்ச்சியுடைய மாத வர்களாகிய சிவனடியார்கள் உறங்கும் திருமடத்தின் வெளிப்பக் கத்தில், வஞ்சனை நிறைந்த மனத்தையுடைய அச்சமணர்கள் இருள் என வந்து தம் செயலைச் செய்தனர்.

விளக்கவுரை
****

திரும டப்புறச் சுற்றினில்
தீயபா தகத்தோர்
மருவு வித்தஅத் தொழில்வெளிப்
படுதலும் மறுகிப்
பரிச னத்தவர் பதைப்பொடும்
சிதைத்தது நீக்கி
அருகர் இத்திறம் புரிந்தமை
தெளிந்துசென் றணைவார். **#2598**

அம்மடத்தின் புறச்சுற்றில் தீய பாதகர்களான சமணர்கள் செய்த அத்தீத் தொழில் வெளிப்படுதலும், பரிவாரங்கள் கலக்கம் கொண்டு சுழன்று, பதைப்புடனே அத்தீயை அணைத்துப் போக்கிச் சமணர்களே இத்தீயசெயலைச் செய்தனர் எனத் தெளிந்து அடைவாராய்,

விளக்கவுரை
****

கழும லப்பதிக் கவுணியர்
கற்பகக் கன்றைத்
தொழுது நின்றமண் குண்டர்செய்
தீங்கினைச் சொன்ன
பொழுது மாதவர் துயிலும்இத்
திருமடப் புறம்பு
பழுது செய்வதோ பாவிகாள்
எனப்பரிந் தருளி. **#2599**

சீகாழிப் பதியில் கவுணியர் குடியில் தோன்றிய கற்பகக் கன்றான பிள்ளையாரை, அவர்கள் வணங்கித் தொழுது நின்று, சமணர் செய்த கீழான செயலைச் சொன்ன போது, `சிவனடியார்கள் ஆகிய மாதவர் உறங்கும் இத்திருமடத்தின் வெளிப் பக்கத்தில் தீமை செய்வதோ! பாவிகளே!' என்று பரிவு கொண்டருள,

விளக்கவுரை
****

என்பொ ருட்டவர் செய்ததீங்
காயினும் இறையோன்
அன்ப ருக்கெய்து மோஎன்று
பின்னையும் அச்சம்
முன்பு றப்பின்பு முனிவுற

முத்தமிழ் விரகர்
மன்பு ரக்குமெய்ம் முறைவழு
எனமனங் கொண்டார். #2600

இச்செயல் என்பொருட்டாக அவர்கள் செய்த தீங்கு எனினும், சிவபெருமானின் அடியவர்க்குப் பொருந்துமோ? என உட்கொண்டு, மேலும் அச்சம் முன் வரப் பின் சினமும் வர, முத்தமிழ் வல்லலுநரான அப்பிள்ளையார், `அரசன் காவல் செய்யும் நீதிமுறை தவறியது' என்று மனத்தில் எண்ணம் கொண்டவராய்,

விளக்கவுரை

****

வெய்ய தீங்கிது வேந்தன்மேற்
றெனும்விதி முறையால்
செய்ய னேதிரு வாலவாய்
எனுந்திருப் பதிகம்
சைவர் வாழ்மடத் தமணர்கள்
இட்டதீத் தழல்போய்ப்
பைய வேசென்று பாண்டியற்
காகெனப் பணித்தார். #2601

எனவே `வெம்மையான இத்தீங்கு வேந்தன் மேல் ஆகும்' என்ற விதிமுறையால், `செய்யனே! திருஆலவாய்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தில் `சிவனடியார் வாழும் மடத்தில் சமணர் வைத்த தீ மெல்லச் சென்று பாண்டியனுக்கு ஆகுக' என்றுபாடி ஆணையிட்டருளினார்.

விளக்கவுரை

இம்முதற் குறிப்புடைய பாடல் கௌசிகப் பண்ணில் அமைந்ததாகும்*(தி.3 ப.51).* `செய்யனேதிரு ஆலவாய் மேவிய, ஐயனே அஞ்சல் என்று அருள் செய்யெனைப் பொய்யராம் அமணர் கொளுவும் சுடர், பைய வேசென்று பாண்டியற்கு ஆகவே' எனவரும் முதற் பாடற் கருத்தை முகந்து ஆசிரியர் இங்ஙனம் அருளுவார் ஆயினர். `ஆகஎன' என்பது அகரம் தொக்கு `ஆகென' நின்றது. ஆக - பொருந்துக. அந்நிலையிலன்றி அது ஆக்கச் சொல்லாய், அம்மன் னன் பின்பெறும் பேறுகளுக்கு நிலைக்களனாகவும் உள்ளமை அறிதற்குரியது.

பாண்டிமா தேவியார் தமது பொற்பிற்
பயிலுநெடு மங்கலநாண் பாது காத்தும்
ஆண்தகையார் குலச்சிறையார் அன்பி னாலும்
அரசன்பால் அபராதம் உறுத லாலும்

மீண்டுசிவ நெறியடையும் விதியினாலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடைய னாத லாலும்
தீப்பிணியைப் பையவே செல்க என்றார். **#2602**

பாண்டிமாதேவியாரின் அழகிய நீண்ட திருமங்கல நாண் பாதுகாக்கப்பட வேண்டியதாலும், ஆண்தகைமை உடைய குலச்சிறையாரது அன்பினாலும், அரசனிடம் சிவஅபராதம் நேர்ந்திருத்தலாலும், மீண்டும் சிவநெறி அடையும் நியதி இருத்த லாலும் வெப்பு நோய் தீருமாறு மன்னனின் மேனியைத் தீண்டித் திரு வெண்ணீற்றைச் சீகாழி மன்னவர் இடும் பேறு, அரசனுக்கு உடைமை யாலும், அத்தீய நோயைப் `பையவே செல்க' என்று பணித்தார்.

விளக்கவுரை

இப்பாடல் இடைச்செருகலாக இருக்கலாம் எனச் சிவக்கவிமணியார் கருதுவர். இப்பாடலுக்கு அவர் தந்திருக்கும் விளக்கக் குறிப்பைக் காண்க. எனினும் இது ஆசிரியர் திருவாக்கு என்றே கருதத் தக்கதாக உள்ளது. இப்பாடற்கு முன்னும் பின்னும் உள்ள சந்த இசைக்கு இப்பாடல் மாறியிருப்பினும், இப்பாடற் பொருண்மை இதற்கு முன்னும் பின்னும் உள்ள பாடல்களில் பெறப் படாமையானும், ஆசிரியர் சேக்கிழார் தேவாரத் திருமுறைகளுக்கு ஆங்காங்கு விளக்கம் தந்து செல்லும் இயல்பைக் கடப்பாடாகக் கொண்டிருத்தலானும், இங்குக் காழிப் பிள்ளையார் `பையவே செல்க' என்றருளியமைக்குக் கூறிய காரணத்தைக் கூறுதல் அவர்தம் திருவுள் ளமாகவே இருத்தல் இயல்பு ஆதலானும், இப்பாடல் ஆசிரியர் திருவாக்காகவே கொள்ளத் தோன்றுகிறது. காழிப் பிள்ளையார் `பையவே செல்க' என்றது தீயையேனும், பாண்டியரிடத்துப் பற்றப் பட்டது பிணியே ஆதலால் ஈண்டுத் தீப்பிணியை என்றார்.

திருந்தி சைப்பதி கத்தொடை
திருவால வாயில்
மருந்தி னைச்சண்பை மன்னவர்
புனைந்திட அருளால்
விரிந்த வெந்தழல் வெம்மைபோய்த்
தென்னனை மேவிப்
பெருந்த ழற்பொதி வெதுப்பெனப்
பெயர்பெற்ற தன்றே. **#2603**

சீகாழியில் தோன்றிய தலைவரான ஞான சம்பந்தர் திருஆலவாய் என்ற கோயிலில் வீற்றிருக்கின்ற அருமருந் தாம் இறைவரை, திருந்தும் இசையையுடைய திருப்பதிகம் புனைந்து போற்றிட, அவரது

திருவருளால் விரிந்து செலுத்தப்பட்ட செவ்விய தீத்தொழில் முழுவதும் கூடிய வெம்மையின் தொகுதி சென்று, பாண்டியனை அடைந்து, பெரிய தீயின் பொதியான வெப்பு நோய் எனப் பெயர் பெற்றது.

விளக்கவுரை

****

செய்ய மேனியர் திருமக
னார்உறை மடத்தில்
நையும் உள்ளத்த ராய்அமண்
கையர்தாம் நணுகிக்
கையி னால்எரி இடவுடன்
படும்எல்லி கரப்ப
வெய்ய வன்குண கடலிடை
எழுந்தனன் மீது. **#2604**

சிவந்த திருமேனியையுடைய சிவபெருமானின் மகனாரான ஞானப் பிள்ளையார் வீற்றிருக்கும் திருமடத்தில், கவலை யினால் வாடும் மனம் உடையவர்களாய்ச் சமணரான கீழ்மக்கள் அருகில் வந்து, கையினால் கொண்டு சென்று தீயை இட, உடனிருந்து உடன்பட்ட இரவுப் போது மறையக் கதிரவன் கிழக்குக் கடலின் மீது தோன்றினான்.

விளக்கவுரை

நீங்கக் கதிரவன் தோன்றினன் என்பது கருத்து. அதற்குச் சமணர்கள் கையில் கொண்டு சென்று, சைவர்வாழ் மடத்தில் இட்ட தீயைக் கண்டும் இராப் பொழுது வாளாதிருக்க, இதுபொழுது அது தானும் நீங்கியது என ஆசிரியர் தற்குறிப்பேற்றம்பட அருளி யுள்ளார்.

இரவு பாதகர் செய்ததீங்
கிரவிதன் மரபில்
குரவ ஓதியார் குலச்சிறை
யாருடன் கேட்டுச்
சிரபு ரப்பிள்ளை யாரைஇத்
தீயவர் நாட்டு
வரவ ழைத்தநாம் மாய்வதே
எனமனம் மயங்கி. **#2605**

முந்நாள் இரவில் பாதகரான சமணர்செய்த இத்தீங்கைக் கதிரவன் மரபில் தோன்றிய குரா மலரை அணிந்த கூந்தலையுடைய மங்கையர்க்கரசியார் குலச்சிறையாருடன் கேட்டுச் `சீகாழிப் பிள்ளையாரை, இத்தீயவர் நாட்டில் வருமாறு அழைத்த நாம் உயிர் துறந்து விடுவதே இதற்குக் கழுவாயாகும்' என உள்ளம் மயங்கி,

விளக்கவுரை

****

பெருகும் அச்சமோ டாருயிர்
பதைப்பவர் பின்பு
திரும டப்புற மருங்குதீ
தின்மையில் தெளிந்து
கருமு ருட்டமண் கையர்செய்
தீங்கிது கடைக்கால்
வருவ தெப்படி யாமென
மனங்கொளும் பொழுது. **#2606**

மேன்மேலும் பெருகும் அச்சத்துடன், அரிய உயிர் பதைக்கும் அவர்கள் இருவரும், அதன் பின்பு திருமடத்தின் வெளியில் தீமை இல்லாமையைக் கேட்டதால் தெளிவடைந்து, `கரிய முருட்டுடல் உடைய சமணர்கள் செய்த இத்தீங்கு இதன் மூலமாக விளைவது எப்படியாகுமோ?' என்று உளங்கொண்டபொழுது,

விளக்கவுரை

****

அரச னுக்குவெப் படுத்ததென்
றருகுகஞ் சுகிகள்
உரைசெ யப்பதைத் தொருதனித்
தேவியார் புகுத
விரைவும் அச்சமும் மேற்கொளக்
குலச்சிறை யாரும்
வரைசெய் பொற்புய மன்னவன்
மருங்குவந் தணைந்தார். **#2607**

`மன்னனுக்கு வெப்புநோய் உண்டாயிற்று' என்று அவன் அருகில் இருக்கும் கஞ்சுகி மாக்கள் வந்து சொல்லத் துடித்து, ஒப்பில்லாத அரசமாதேவியார் அரசனது இருப்பிடத்தில் புக, விரைந்த செலவும் அச்சமும் பொருந்தக் குலச்சிறையாரும், மலை போன்ற அழகிய தோள்களையுடைய மன்னனின் அருகே வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

கஞ்சுகி மாக்கள் - சட்டை அணிந்த காவலர்கள். இம் மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

வேந்த னுக்குமெய் விதிர்ப்புற
வெதுப்புறு வெம்மை
காந்து வெந்தழற் கதுமென

மெய்யெலாங் கவர்ந்து
போந்து மாளிகைப் புறத்துநின்
றார்களும் புலர்ந்து
தீந்து போம்படி எழுந்தது
விழுந்துடல் திரங்க. #2608

மன்னனுக்கு உடல் நடுக்கம் வர வெதுப்புறும் நோயின் வெம்மை எரிதலால், வெப்பத்தை வீசும் தீப்போல விரைவாய் உடல் உள்ளும் புறமும் பரவி, அரண்மனையின் புறத்தே நின்றவர்களும் வாடித் தீய்ந்து போகுமாறு உடல் உலர்ந்து கருக மேலே எழுந்தது.

விளக்கவுரை

****

உணர்வும் ஆவியும் ஒழிவதற்
கொருபுடை ஒதுங்க
அணையல் உற்றவர் அருகுதூ
ரத்திடை அகலப்
புணர்இ ளங்கத லிக்குருத்
தொடுதளிர் புடையே
கொணரி னுஞ்சுருக் கொண்டவை
நுண்துக ளாக. #2609

உணர்வும் உயிரும் ஒழிவதற்காக ஒருபக்கமாய் நிற்கவும், அருகில் வருபவர் தொலைவில் சென்று அகலவும், பொருந்தும் வாழையின் இளங்குருத்தையும் தளிரையும் அருகில் கொண்டுவரினும் வெப்பத்தால் அவை காய்ந்து சுருங்கி நுண்ணிய துகளாக ஆகவும்,

விளக்கவுரை

உடலில் வெப்பம் மிகும் பொழுது, வாழைக் குருத்தில் கிடப்பித்தல் பண்டைய முறை. அதனால் அவ்வெப்பம் குறையும். இக்காலத்துப் பனிக்கட்டியை வைத்துக் கட்டுதல் இயல்பாகவுள்ளது.

மருத்து நூலவர் தங்கள்பல்
கலைகளில் வகுத்த
திருத்த குந்தொழில் யாவையும்
செய்யவும் மேன்மேல்
உருத்தெ ழுந்தவெப் புயிரையும்
உருக்குவ தாகக்
கருத்தொ ழிந்துரை மறந்தனன்
கௌரியர் தலைவன். #2610

மருத்துவ நூலில் வல்லவர், தாம் கற்றபல கலைகளிலும் வகுத்துக்

கூறப்பட்ட சிறந்த தக்க மருத்துவத் தொழில்கள் எல்லாவற்றையும் செய்யவும், அந்நோய் மேலும் முடுகி எழுந்து, உயிரையும் உருக்குவதாய் ஆக, நினைவு ஒழிந்து உரை யொழிந்து மன்னன் கிடந்தான்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஆன வன்பிணி நிகழ்வுழி
அமணர்க ளெல்லாம்
மீன வன்செயல் கேட்டலும்
வெய்துயிர்த் தழிந்து
போன கங்குலிற் புகுந்ததின்
விளைவுகொல் என்பார்
மானம் முன்தெரி யாவகை
மன்னன்மாட் டணைந்தார். **#2611**

இங்ஙனம் வன்மையாக அந்நோய் மூண்டு கிடந்த போழ்து, சமணர்கள் அனைவரும் மன்னனின் நிலைமையைக் கேட்டலும், பெருமூச்சு விட்டு, வருத்தம் அடைந்தனர். அச்சமணர் கள், `கடந்த இரவில் செய்த செயலால் வந்த விளைவுதானோ இது?' என்று ஐயம் கொண்டு, தமக்கு நேர்ந்த கீழ்நிலை (அவமானம்) முன் தெரியாதவாறு மறைத்து, அரசனிடம் வந்து சேர்ந்தனர்.

விளக்கவுரை

****

மால்பெருக்குஞ் சமண்கையர் மருங்கு சூழ்ந்து
வழுதிநிலை கண்டழிந்து வந்த நோயின்
மூலநெறி அறியாதே தங்கள் தெய்வ
மொழிநவில்மந் திரங்கொண்டு முன்னும் பின்னும்
பீலிகொடு தைவருதற் கெடுத்த போது
பிடித்தபீ லிகள்பிரம்பி னோடுந் தீந்து
மேலெரியும் பொறிசிதறி வீழக் கண்டு
வெப்பினதி சயம்நோக்கி வெருவின் மிக்கார். **#2612**

மயக்கத்தைப் பெருக்கும் சமணரான வஞ்சகர் அருகில் வந்து சூழ்ந்து, பாண்டியனின் வெப்பு நோய் முற்றிய நிலை யைப் பார்த்து, உள்ளம் அழிந்து, அவனுக்கு நேர்ந்த நோயின் மூலத்தை அறியாமலேயே தங்கள் இறைவனின் மொழியை எடுத்துச் சொல்லிக் கொண்டு, மயில் இறகால் முன்னும் பின்னுமாகத் தடவுவ தற்கு எடுத்த போது, கையில் பிடித்த பீலிகள் அவற்றுடன் சேர்ந்த பிரம்போடும் தீப்பற்றி எரிதலால் தீப்பொறிகள் சிதறி விழக்கண்டு, வெப்பத்தின் வியக்கத்தக்க நிலையை

நோக்கி மிகவும் அஞ்சினர்.

விளக்கவுரை

****

கருகியமா சுடையாக்கைத் தீயோர் தங்கள்
கைத்தூங்கு குண்டிகைநீர் தெளித்துக் காவாய்
அருகனே அருகனே என்றென் றோதி
அடல்வழுதி மேல்தெளிக்க அந்நீர் பொங்கிப்
பெருகும்எரி தழற்சொரிந்த நெய்போ லாகிப்
பேர்த்துமொரு தழல்அதன்மேற் பெய்தாற் போல
ஒருவரும்இங் கிருமருங்கும் இராது போமென்
றமணரைப்பார்த் துரைத்தரசன் உணர்வு சோர்ந்தான். **#2613**

கருகிய அழுக்குடைய யாக்கையை உடைய தீயவரான சமணர் தம்கையில் தொங்குகின்ற குண்டிகையின் நீரை மேலே தெளித்து `அருகனே! காப்பாயாக! காப்பாயாக!' என்று கூறிப் பாண்டியனின் மேல் தெளிக்க, அந்நீர் பொங்கிப் பெருகி எரியும் தீயின் மேல் சொரிந்த நெய்போல் ஆகி, அதன்மேலும் ஒரு நெருப் பினை வாரித் தூவியதுபோல் ஆக, `நீங்கள் எவரும் இங்கு இல்லாது அகன்று செல்லுங்கள்' என்று மன்னன் அவர்களைப் பார்த்துச் சொல்லி, உணர்வு தளர்ந்து தன்னிலை மறந்தனன்.

விளக்கவுரை

இப்பாடலையும் இதற்கு முன்னுள்ள பாடலையும் இடைச்செருகலாக இருக்கலாம் என்று ஐயுறுவர் சிவக்கவிமணியார். அதற்கு அவர் கூறும் காரணங்கள் இரண்டாம்:- *1.* யாப்பு வேறுபாடு. *2.* இவ்வரலாற்றில் வரும் *713*ஆம் பாடலில் அரசன் நோய் மிகுதியால் `கருத்தொழிந்து உரை மறைந் தனன்*'* எனக் கூறியிருப்ப*,* இப்பாடலில் `ஒருவருமிங்கு இருமருங்கும் இராது போம்*'* எனக் கூறியிருப்பது முரணாகும் என்பது. *2. 714*ஆம் பாடல் அமணர்கள் மன்னன் மாட்டணைந்தமை யைக் கூறுகின்றது. அவர்கள் பாண்டியன் மாட்டுச் செய்த செய்கை இவ்விரு பாடல்களில் கூறப்படுகின்றன. ஆதலின் சந்த இசை மாறுவது கூடத் தவறில்லை எனக்கருதலாம். *714*ஆம் பாடலில் மன்னன் மாட்டு அணைந்தார் எனக் கூறப்பெற்ற அமணர்கள் மன்னனின் துயர் நோக்கி வாளா இருத்தற்கு இடனில்லை. ஆதலின் அவர்தம் செய்கை களாக இவ்விரு பாடல்களும் இருத்தல் பொருத்தம் என்றே தோன்றுகிறது.

பாண்டிமா தேவி யாரும்
பயமெய்தி அமைச்சர் பாரம்
பூண்டவர் தம்மை நோக்கிப்

புகலியில் வந்து நம்மை
ஆண்டுகொண் டவர்பாற் கங்குல்
அமணர்தாம் செய்த தீங்கு
மூண்டவா றினைய தாகி
முடிந்ததோ என்று கூற. **#2614**

அரசமாதேவியாரும் அச்சத்தை அடைந்து, அமைச்சர் பணியை மேற்கொண்டிருக்கும் குலச்சிறையாரைப் பார்த் துச் `சீகாழியில் தோன்றி நம்மை ஆளாகக் கொண்ட சம்பந்தரிடத்து இரவில் சமணர்கள் செய்த தீங்குதான் இங்ஙனம் முடிந்ததோ!' என்று சொல்ல,

விளக்கவுரை

****

கொற்றவன் அமைச்ச னாராம்
குலச்சிறை யாருந் தாழ்ந்து
மற்றிதன் கொடுமை இந்த
வஞ்சகர் மதில்கள் மூன்றும்
செற்றவர் அன்பர் தம்பாற்
செய்ததீங் கரசன் பாங்கு
முற்றிய திவர்கள் தீர்க்கின்
முதிர்வதே யாவ தென்பார். **#2615**

இதனைக் கேட்ட மன்னனின் அமைச்சரான குலச்சிறையாரும் பணிந்து, இவ்வெப்புத் தானும், இச்சமண வஞ்சர் கள் மதில்கள் மூன்றையும் எரித்து அழித்த இறைவரின் அன்பரான ஞானசம்பந்தரிடம் செய்த ஒவ்வாச் செயலால் இங்கு அரசரிடம் இவ்வாறு வந்து நிரம்பியது! இவர்கள் தீர்க்க முயன்றால் இதுமேலும் பெருகி, முடுகியே நிற்கும் என்று உரைத்தனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

இருதிறத் தவரும் மன்னன்
எதிர்பணிந்து இந்த வெப்பு
வருதிறம் புகலி வந்த
வள்ளலார் மதுரை நண்ண
அருகர்கள் செய்த தீய
அநுசித மதனால் வந்து
பெருகிய திதற்குத் தீர்வு
பிள்ளையார் அருளே என்று. **#2616**

அம்மையாரும், அமைச்சரும் ஆகிய இருதிறத் தவர்களும், மன்னனை

எதிர்நின்று வணங்கி, இவ் வெப்புநோய் வரும் திறமாவது, சீகாழி என்ற பதியில் தோன்றிய வள்ளலாரான ஞானசம்பந்தர் மதுரையில் வந்து தங்க, அதைப் பொறாமல் சமணர் செய்த தீங்கேயாம் என்றுகூறி, இதற்குத் தீர்வு செய்யவல்லது ஞான சம்பந்தரின் அருளேயாகும்! என்று எடுத்துச் சொல்லி,

விளக்கவுரை

சைவநெறி நிற்றலில் இருவரும் ஒன்றுபட்டவர் எனினும், மன்னருக்கு வாழ்க்கைத் துணை நலமாகவும், அமைச்ச ராகவும் அமைந்திருக்கும் முறையில் அம்மையாரும் குலச்சிறை யாரும் `இருதிறத்தவர்' ஆயினர்.

காயமும் மனமும் மாசு
கழுவுதல் செய்யார் செய்யும்
மாயமும் இந்த நோயை
வளர்ப்பதே வளர்வெண் திங்கள்
மேயவே ணியர்பால் ஞானம்
பெற்றவர் விரும்பி நோக்கில்
தீயஇப் பிணியே அன்றிப்
பிறவியுந் தீரு மென்றார். #2617

`உடலிலும் மனத்திலும் பொருந்திய அழுக்கைக் கழுவாத சமணர்கள் செய்யும் இம் மாயத்திறங்களெல்லாம், இந் நோயை மேலும் வளர்க்குமேயன்றிக் குறைத்தல் செய்யா. வளரும் பிறைச் சந்திரனை அணிந்த சடையையுடைய இறைவரிடம் ஞானத் தைப் பெற்ற அப்பிள்ளையார் விரும்பி நோக்குவாராயின், தீய இந்நோயே அன்றிப் பிறவிநோயும் நீங்கும்' என்று கூறினார்.

விளக்கவுரை

இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

மீனவன் செவியி னூடு
மெய்யுணர் வளிப்போர் கூற
ஞானசம் பந்த ரென்னும்
நாமமந் திரமுஞ் செல்ல
ஆனபோ தயர்வு தன்னை
அகன்றிட அமண ராகும்
மானமில் லவரைப் பார்த்து
மாற்றமொன் றுரைக்க லுற்றான். #2618

பாண்டி மன்னனின் செவியிலே, மெய்யுணர்வு அளிப்பவரான மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் மேற் கூறியவாறு கூற, அதனுள் `ஞானசம்பந்தர்' என்னும் திருப்பெயரான மந்திரமும் உடன்

செல்ல, அதுபொழுது தளர்ச்சி நீங்குதலால், சமணர் கள் என்னும் மானம் இல்லாத மக்களைப் பார்த்து, அம்மன்னவன் சொல்லத் தொடங்கினான்.

விளக்கவுரை

இறைவரின் திருப்பெயராய திருவைந்தெழுத்தே ஆதிமந்திரமாகும், அருந்தமிழ் மந்திரமுமாகும். அதுபோன்றே, ஏகனாகி இறைபணி நிற்கும் அடியவர்களின் திருப்பெயர்களும் மந்திரமாகும். அதுபற்றியே `ஞானசம்பந்தர்' என்னும் நாம மந்திரமும் சொல்ல என்றார் ஆசிரியர். `திருநாவுக்கரசு' எனும் திருமந்திரத்தைச் சொல்லியே அப்பூதியடிகளார் உய்திபெற்றதும், நம்பியாரூரர் எனும் திருப்பெயரைச் சொல்லியே சடங்கவி சிவாசாரியார் திருமகளார், பெருமிழலைக் குறும்பர், சோமாசிமாறர் ஆகியோர் உய்தி பெற்றதும் நினைவு கூர்க. ஞானசம்பந்தர், நாவுக்கரசர், நம்பியாரூரர், மணி வாசகர் ஆகிய நால்வர் பெருமக்களின் திருப்பெயர்களிலும் உள்ள ஒற்றுகளை நீக்க, அவை ஒவ்வொன்றும் ஐந்தெழுத்தாக அமைதல் காணலாம்.

மன்னவன் அவரை நோக்கி
மற்றிவர் செய்கை எல்லாம்
இன்னவா றெய்தும் நோய்க்கே
ஏதுவா யினஎன் றெண்ணி
மன்னிய சைவ நீதி
மாமறைச் சிறுவர் வந்தால்
அன்னவர் அருளால் இந்நோய்
அகலுமேல் அறிவேன் என்றான். **#2619**

மற்று இவர் செயல்கள் எல்லாம் இத்தகைய நோய்க்கே காரணமாயின என்று மனத்தில் எண்ணி அரசன் அவர் களைப் பார்த்து, `நிலைபெற்ற சைவ ஒழுக்கம் சான்ற பெருமறைச் செல்வரான பிள்ளையார் இங்குவர, அவரது அருளால் இந்தநோய் நீங்குமாயின் தெளிவுபெறுவேன்!' என மன்னன் இயம்பினன்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின. முன்னைய பாட்டில் சமணர்களைப் பார்த்துச் சொல்லலானான் என்பது கொண்டு, இப்பாடற் கருத்தை அவர்களிடம் கூறினான் என்றல் சாலாது. அவர் களைப் பார்த்து இவர் செய்தவையெல்லாம் நோய்க்கே ஏதுவாயின என்று கூறியவன் பின்னுரைக்கும் கருத்துக்களை யெல்லாம் அம்மை யாரையும் அமைச்சரையும் நோக்கிக் கூறியனவேயாம். வரும் பாடல் தொடர்பு கொண்டும் இவ்வுண்மை யறியலாம்.

என்றுமுன் கூறிப் பின்னும்

யானுற்ற பிணியைத் தீர்த்து
வென்றவர் பக்கம் சேர்வன்
விரகுண்டேல் அழையும் என்ன
அன்றவர் உவகை பொங்கி
ஆர்வத்தால் அணையை நூக்கிச்
சென்றநீர் வெள்ளம் போலுங்
காதல்வெள் ளத்தில் செல்வார் **#2620**

என்று முன் கூறிய மன்னன், பின்னும் அங்கிருந்த அம்மையாரையும் அமைச்சரையும் பார்த்து `யான் அடைந்த நோயைப் போக்கி வெற்றி கொள்பவரின் பக்கம் சேர்வேன். என் நோய் நீங்கும் வழியுண்டாயின் அவரை அழையுங்கள்!' என்று அவர் களிடம் கூற, அவர்களும், அணையை உடைத்துச் சென்ற வெள்ளம் போல், காழியார்பால் பேரன்பு கொண்ட மகிழ்ச்சி வெள்ளத்துடன் செல்பவராய்,

விளக்கவுரை

விரகுண்டேல் - அச்சிறுவரை அழைத்தற்குரிய வழி யுண்டேல் என்பாரும் உளர். விரகு - வழி *(உபாயம்).*

பாயுடைப் பாத கத்தோர்
திருமடப் பாங்கு செய்த
தீவினைத் தொழிலை நோக்கி
உள்ளழி திருவுள் ளத்தால்
மேயஅத் துயரம் நீங்க
விருப்புறு விரைவி னோடு
நாயகப் பிள்ளை யார்தம்
நற்பதம் பணிவா ராகி. **#2621**

பாயை உடையாய்க் கொண்ட சமணர்களாகிய பாதகர்கள் திருமடத்தில் செய்த தீவினைச் செயலை எண்ணி, உள் அழியும் திருவுள்ளத்தில் பொருந்திய அத்துன்பம் நீங்குமாறு, விருப் பம் மிக்க விரைவுடன் தம் தலைவரான பிள்ளையாரின் சீரிய திருவடி களைப் பணிவார்களாய்,

விளக்கவுரை

****

மன்னவன் இடும்பை தீர
மற்றவன் பணிமேற் கொண்டே
அன்னமென் டையி னாரும்
அணிமணிச் சிவிகை யேறி
மின்னிடை மடவார் சூழ
வேற்படை அமைச்ச னாரும்

முன்னணைந் தேகச் சண்பை
முதல்வனார் மடத்தைச் சார்ந்தார். #2622
அரசனின் துன்பம் நீங்குமாறு அவனது பணியை மேற்கொண்டு, அன்னம் போன்ற மென்மையான நடையுடைய மங்கையர்க்கரசியாரும், அழகிய மணிகள் பதித்த சிவிகையின் மேல் அமர்ந்து மின்போன்ற இடையையுடைய பெண்கள் சூழ்ந்து வர, வேற்படையை யுடைய அமைச்சரான குலச்சிறையார் முன்னால் செல்லச் சீகாழித் தலைவர் இருக்கும் திருமடத்தைச் சேர்ந்தனர்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

திருமடஞ் சாரச் சென்று
சேயரிக் கண்ணி னார்முன்
வருபரி இழிந்து நின்ற
அமைச்சனார் வந்த பான்மை
சிரபுரப் பிள்ளை யார்க்கு
விண்ணப்பஞ் செய்வீர் என்னப்
பரிசனத் தவரும் புக்குப்
பதமறிந் துணர்த்து கின்றார். #2623

திருமடத்தைச் சேர நெருங்கிச் சென்றபின், சிவந்த வரிகள் படர்ந்த கண்களையுடைய அம்மையாரின் முன்பு ஏறி வந்த குதிரையினின்றும் இறங்கி நின்ற அமைச்சர் தாமும், `நாங்கள் இங்கு வந்துள்ளதைச் சீகாழிப் பிள்ளையாரிடம் கூறுங்கள்!' என அங்குள்ள பணியாளர்களிடம் கூற, அவர்களும் உள்ளே சென்று விண்ணப்பிக்கத் தக்கதோர் அமையம் அறிந்து கூறுவாராய்,

விளக்கவுரை

****

பாண்டிமா தேவி யாரும்
பரிவுடை அமைச்ச னாரும்
ஈண்டுவந் தணைந்தா ரென்று
விண்ணப்பஞ் செய்யச் சண்பை
ஆண்டகை யாரும் ஈண்ட
அழையுமென் றருளிச் செய்ய
மீண்டுபோந் தழைக்கப் புக்கார்
விரைவுறு விருப்பின் மிக்கார். #2624

`பாண்டிமாதேவியாரும், அன்புடைய அமைச்ச ரும் ஈண்டு வந்துள்ளனர்' என்று பணியாளர்கள் உரைக்க, சீகாழித் தலைவரும் `அவர்களை உடன்

அழையுங்கள்' என்று அருள, பணியா ளர்களும் அழைப்பப்
பெருவிருப்பத்துடன் அவர்கள் உட்புகுந்தனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி
மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்கமலர்க் கொன்றைச்
செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள். **#2625**

சிவஞானமே உருவாய் அமைந்த திருவுரு உடையாரை, நான்மறைகளின் ஒப்பற்ற துணையாயினவரை, வானத்தின் மீதன்றி மண்உலகத்தில் வளரும் பிறைச்சந்திரன் போன்ற வரை, தேன்ஊறி வழியும் கொன்றை மலரையணிந்த சிவந்த சடை யுடைய சிவபெருமானின் சீர்மைகளை இடையறாது தொடுத்து இசைக்கும் கானத்தின் ஏழு பிறப்புக்கு இடமான பிள்ளையாரைக் கண்கள் களிப்படையப் பார்த்தனர்.

விளக்கவுரை

சிவஞானம் கலந்த திருமுலைப் பாலை உமாதேவியார் ஊட்ட, உண்ட பிள்ளையார், அப்போதே கலைஞானமும் மெய்ஞ் ஞானமும் பெற்றுச் சிவஞானசம்பந்தராயினார் என்று சேக்கிழார் குறிப்பிடுகிறார். மேலும் திருத்துருத்தித் தேவாரத்தில், `திருந்தடி மறக்குமாறிலாத என்னை மையல் செய்து மண்ணின்மேல் பிறக்குமாறு காட்டினாய்' என்று ஞானசம்பந்தரே குறிப்பிடுகிறார். எப்போதும் திருவடி மறக்குமாறிலாத பிள்ளையார், ஞானவடிவாகவே திகழ்கிறார். எனவே மங்கையற்கரசியாரும் குலச்சிறையாரும் அத்திருவுருவத் தைச் சிவஞானத்தின் திருவுருவாகவே கண்டு போற்றினர். உள்ளும் புறமும் ஒரு தன்மைக் காட்சியர் என்பது கருத்து. வேதம் நான்கினும் மெய்ப்பொருளாய நாதன் நாமத்தையே என்றும் ஓதியும் உணர்த்தி யும் வருதலின் `நான்மறையின் தனித்துணை' என்றார். மதி இரவில் காணவல்லது, விண்ணகத்தது, சாபத்தால் வளர்ந்தும் தேய்ந்தும் வருவது. ஆனால் இம்மதியோ எப்பொழுதும் காண்டற் குரியது, மண்ணகத்தது, ஞானத்தால் வளர்ந்து கொண்டே வருவது, என்றும் அழகியது, இளமையானது, இனையபல வேற்றுமைகள் தோன்ற,

`வானத்தின் மிசை யன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்து' என்றார். கானம் - இசை, அது எழுவகைப்பட்ட சுரங்களில் பிறந்து விரிவது. பிள்ளையாரும் எழுவகைக் கானங்களும் ஒன்றி எழும் இசைப் பாடலை, `நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்' எனப் போற்றி மகிழுமாறு பாடிமகிழ்ந்து வருபவர். ஆதலின் அவரைக் `கானத்தின் எழுபிறப்பு' என்றார். பாண்டியரின் உடற்பிணியையன்றி உயிர்ப்பிணியையும் நீக்க வரும் குருமூர்த்திகளாயிருத்தலின், ஆசிரி யர் சேக்கிழார், `தெளிவு குருவின் திருமேனி காண்டல்'*(தி.10 பா.138)* என்பது பற்றி, அவர்தம் திருவுருவை இவ்வாறு காட்டுவாராயினர்,

கண்டபொழு தமண்கொடியோர்
செய்தகடுந் தொழில்நினைந்தே
மண்டியகண் ணருவிநீர்
பாயமலர்க் கைகுவித்துப்
புண்டரிகச் சேவடிக்கீழ்ப்
பொருந்தநில முறவிழுந்தார்
கொண்டகுறிப் போடுநெடி
துயிர்த்தழிந்த கொள்கையராய். **#2626**

அங்ஙனம் பார்த்த பொழுது, சமணரான கொடிய வர்கள் செய்த கொடுந் தொழிலை எண்ணி, கண்களினின்றும் அருவி போல மிகுந்த நீர் சொரிய, மலர் போன்ற கைகளைக் கூப்பி, பிள்ளை யாரின் தாமரை மலர் அனைய சிவந்த திருவடிகளின் கீழே பொருந்தும் படி நிலத்தில் பொருந்த விழுந்து வணங்கியவர்களாய், உட்கொண்ட குறிப்புடன் பெருமூச்செறிந்து, உள்ளம் அழிந்த நிலைமையராய்,

விளக்கவுரை

உட்கொண்ட குறிப்பு - பிள்ளையாருக்கு அமணர்கள் செய்த கொடுஞ்செயல்பற்றிய குறிப்பு.

உரைகுழறி மெய்ந்நடுங்கி
ஒன்றும்அறிந் திலராகித்
தரையின்மிசைப் புரண்டயர்ந்து
சரணகம லம்பற்றிக்
கரையில்கவ லைக்கடற்கோர்
கரைபற்றி னார்போன்று
விரைவுறுமெய் அன்பினால்
விடாதொழிவார் தமைக்கண்டு. **#2627**

சொல் தடுமாறி உடல் நடுங்கி உள்ளம் கலங்கிய தால் ஒன்றும் அறியாதவர்களாகி, நிலத்தின்மீது புரண்டு, தளர்ச்சி கொண்டு, பிள்ளையாரின் திருவடித் தாமரைகளைப் பற்றிக் கொண்டு, எல்லை

இல்லாத கவலைக் கடலில் விழுந்து தளர்பவர்கள், அதனின்றும் ஏறுதற்கு உரிய கரையைப் பற்றிக் கொண்டவர் போல், விரைகின்ற உள்ளத்து அன்பு காரணமாக, விடாமல் பற்றிய படியே கிடந்த அவர்களைப் பார்த்து,

விளக்கவுரை

****

அருமறைவாழ் பூம்புகலி
அண்ணலார் அடிபூண்ட
இருவரையுந் திருக்கையால்
எடுத்தருளித் தேற்றிடவும்
தெருமந்து தெளியாதார்
தமைநோக்கிச் சிறப்பருளித்
திருவுடையீர் உங்கள்பால்
தீங்குளதோ எனவினவ. **#2628**

அரிய மறைகள் வாழ்வதற்காகச் சீகாழியில் வந்து தோன்றிய அண்ணலாரான பிள்ளையார், தம் திருவடிகளைப் பற்றிக் கொண்டு கிடந்த அவ்விருவரையும், தம் கைகளால் எடுத்துத் தேறுதல் செய்யவும், உள்ளச் சுழற்சியில் தெளிவடையாமல் கலங்கிய அவர் களைப் பார்த்தருளிச் சிறப்பு செய்து, `திருவுடையவர்களே! உங்க ளிடம் ஏதேனும் தீமை நேர்ந்துளதோ?' என வினவ,

விளக்கவுரை

****

வெஞ்சமணர் முன்செய்த
வஞ்சனைக்கு மிகஅழிந்தே
அஞ்சினோம் திருமேனிக்
கடாதென்றே அதுதீர்ந்தோம்
வஞ்சகர்மற் றவர்செய்த
தீத்தொழில்போய் மன்னவன்பால்
எஞ்சலிலாக் கொடுவெதுப்பாய்
எழாநின்ற தெனத்தொழுது. **#2629**

`கொடிய சமணர்கள் முன்பு செய்த வஞ்சனை களைப் பற்றி மிகவும் கலங்கி அச்சம் கொண்டோம். தங்கள் திருமேனி யிடத்து அவை ஒன்றும் தீங்கு செய்ய இயலாது எனத் துணிந்து, அவ்வச்சம் தவிர்ந்தோம். வஞ்சகர்களாகிய அவர்கள் செய்த தீய செயலே மன்னனிடத்து அளவில்லாத கொடிய வெப்பு நோயாய் உருக்கொண்டு நிற்கின்றது' எனக் கூறி வணங்கி,

விளக்கவுரை
****

வெய்யதொழில் அமண்குண்டர்
விளைக்கவரும் வெதுப்பவர்தாஞ்
செய்யுமதி மாயைகளால்
தீராமைத் தீப்பிணியால்
மையலுறு மன்னவன்முன்
மற்றவரை வென்றருளில்
உய்யும்எம துயிரும் அவன்
உயிருமென உரைத்தார்கள். **#2630**

`கொடிய செயல் செய்துவரும் சமணர்களான கீழ்மக்கள் செய்த தவற்றால் உண்டான வெப்பு நோயானது, அவர்கள் செய்யும் மாயத் தீர்வுத் தொழில்களாலே நீங்காமையின், தீய நோயால் மயக்கம் அடைந்த அரசன் முன்பு, அவர்களை வென்று அருளிச் செய்யின், எம் உயிரும் மன்னவர் உயிரும் உய்யும்!` என்று உரைத்தனர்.

விளக்கவுரை

இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

என்றவர் உரைத்த போதில்
எழில்கொள்பூம் புகலி வேந்தர்
ஒன்றும்நீர் அஞ்ச வேண்டா
உணர்விலா அமணர் தம்மை
இன்றுநீர் உவகை எய்த
யாவருங் காண வாதில்
வென்றுமீ னவனை வெண்ணீ
றணிவிப்பன் விதியால் என்றார். **#2631**

என இங்ஙனம் அவர்கள் உரைத்தபோது, அழகு பொருந்திய பொலிவுமிக்க தலைவரான பிள்ளையார், `நீவிர் ஒன்றற்கும் அஞ்சவேண்டா! உணர்வற்ற சமணர்களை இன்று நீவிர் மகிழ்ச்சியடையுமாறு எல்லோரும் காணுமாறு வென்று, பாண்டிய னைத் திருநீறு அணியும்படி இறைவன் ஆணையினால் செய்வன்!' என மொழிந்தருளினார்.

விளக்கவுரை
****

மொழிந்தருள அதுகேட்டு
முன்னிறைஞ்சி முகமலர்வார்
அழுந்தும்இடர்க் கடலிடைநின்

றடியோமை எடுத்தருளச்
செழுந்தரளச் சிவிகையின்மேல்
தென்னாடு செய்தவத்தால்
எழுந்தருளப் பேறுடையோம்
என்பெறோம் எனத்தொழலும். **#2632**

இவ்வாறு ஞானசம்பந்தர் உரைத்ததை அவர்கள் கேட்டுத் திருமுன்பு வணங்கி, முகம் மலர்ச்சி கொண்டு, `ஆழ்ந்து கிடந்த துன்பக் கடலினின்றும் அடியோமை மேலே எடுத்தருளும் பொருட்டுச் செழுமையான முத்துச் சிவிகையின் மீது தென்னாடு செய்த பெருந்தவப் பயனால் எழுந்தருளும் பெரும்பேறு பெற்றோம், எனவே இனி என்ன பேறுதான் பெறமாட்டோம்' என்று சொல்லி வணங்கியதும்,

விளக்கவுரை

இதனையும் இதற்குமுன்னுள்ள பாடலையும் இடைச்செருகலாக இருக்கலாமோ என்று ஐயுறுவர் சிவக்கவிமணி யார். அதற்கு அவர் கூறும் காரணங்கள் இரண்டாம்*: (1)* யாப்பு வேறு பாடுடைமை *(2) 736*ஆவது பாடலில் ஆவதும் அழிவும் எல்லாம் அவர் செயல் எனக் கூறும் பிள்ளையார் `சேவுயர் கொடியினார்தம் திருவுள்ளம் அறிவேன்*'* என்றும் கூறுகின்றமை. அவ்வாறு கூறுமவர் *734*ஆம் பாடலில் `யாவரும் காண வாதில் வென்று மீனவனை வெண் ணீறு அணிவிப்பன்*'* எனக் கூறுவதாக இருப்பது பொருந்துவதாகத் தோன்றவில்லை என்பது அவர் கருத்து. எனவே சிவக்கவிமணி யாரின் கருத்துப்படி இவ்விரு பாடல்களும் இடைச்செருகலாக இருக்கலாமோ*?* எனும் ஐயமே வலுப்பெறுகின்றது.

ஆவதும் அழிவும் எல்லாம்
அவர்செயல் அமண ராகும்
பாவகா ரிகளை நோக்கும்
பழுதுடன் நீங்க வெல்லச்
சேவுயர் கொடியி னார்தந்
திருவுள்ளம் அறிவே னென்று
பூவலர் பொழில்சூழ் சண்பைப்
புரவலர் போது கின்றார். **#2633**

ஆக்கம் அழிவு ஆகிய அவையெல்லாம் `அவர் செயல்' என்று மறைகள் சுட்டிக் கூறும் இறைவரின் செயலே ஆகும். சமணராய பாவம் செய்பவர்களைப் பார்க்கவும், பேசவும், மற்றும் சிலசெயல்கள் செய்யவும் நேர்தலால் வரும் குற்றங்கள் எல்லாம் அவ்வச் செயல்களுடன் நீங்கவும், அவர்களை வெல்லவும், விடைக் கொடியை உயர்த்திய சிவபெருமானின் திருவுள்ளக் குறிப்பை அறிவேன்' எனக் கூறி, மலர்கள்

மலர்கின்ற சோலைகள் சூழ்ந்த சீகாழித் தலைவரான பிள்ளையார் செல்பவராய்,

விளக்கவுரை

தீயவர்களைக் காண்டலும், அவரொடு பேசுதலும், தீய செயல்கள் செய்ய நேர்தலும் தீங்கேயாகும். ஆதலின் இவ்வனைத்துச் செயல்களுக்கும் நேரும் குற்றம் நீங்க இறையருளை வேண்டுவன் என்றார். `பிரட்டரைக் காணாகண், வாய்பேசாது அப்பேய்களோடே' `வெண்ணீறணி கிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே' *(தி.8 அச்சப். 5)* எனவரும் திருவாக்குகளும் காண்க.

வையகம் உய்ய வந்த
வள்ளலார் மடத்தி னின்று
மெய்யணி நீற்றுத் தொண்டர்
வெள்ளமும் தாமும் போந்து
கையிணை தலையின் மீது
குவியக்கண் மலர்ச்சி காட்டச்
செய்யவார் சடையார் மன்னும்
திருவால வாயுள் புக்கார். **#2634**

இவ்வுலகுய்ய வந்த ஞானசம்பந்தர், தாம் இருந்த மடத்தினின்றும் உடலில் திருநீற்றை அணிந்து கொண்டுள்ள தொண் டர்களின் வெள்ளமும் தாமுமாகச் சென்று இருகைகளும் தலைமீது குவியவும், கண்கள் மலர்ச்சியைக் காட்டவும், சிவந்த சடையை யுடைய இறைவர் நிலைபெற எழுந்தருளியிருக்கின்ற திருவாலவாய்க் கோயிலுக்குள் புகுந்தனர்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

நோக்கிட விதியி லாரை
நோக்கியான் வாது செய்யத்
தீக்கனல் மேனி யானே
திருவுள மேஎன் றெண்ணில்
பாக்கியப் பயனாய் உள்ள
பாலறா வாயர் மெய்ம்மை
நோக்கிவண் டமிழ்செய் மாலைப்
பதிகந்தான் நுவல லுற்றார். **#2635**

`தீயைப் போன்ற திருமேனியையுடையவரே! நோக்குதற்குத் தகுதியில்லாத சமணரை நோக்கி யான் வாது செய் தற்குத் தங்களுக்குத் திருவுள்ளமே?' என்று எண்ணற்ற நற்பேற்றின் பயனாய் உள்ள

பாலறாவாயரான ஞானசம்பந்தர், திருவருளின் உண்மைத் திறத்தை நோக்கி, வளமை பொருந்திய தமிழால் ஆய மாலையான திருப்பதிகத்தைப் பாடியருள்வாராய்,

விளக்கவுரை

****

கானிடை ஆடு வாரைக்
காட்டுமா வுரிமுன் பாடித்
தேனலர் கொன்றை யார்தம்
திருவுளம் நோக்கிப் பின்னும்
ஊனமில் வேத வேள்வி
என்றெடுத் துரையின் மாலை
மானமில் அமணர் தம்மை
வாதில்வென் றழிக்கப் பாடி. **#2636**

சுடுகாட்டில் ஆடல் செய்பவரான இறைவரைக் `காட்டு மாவுரி' எனத் தொடங்கிப் பாடி, தேன் சிந்துகின்ற கொன்றை மலர் சூடிய இறைவரின் திருவுள்ளக் குறிப்பை அறிந்து கொண்டு , மேலும் ஊனத்தை இல்லையாகச் செய்யும் `வேத வேள்வி' எனத் தொடங்கி, நற்சொற்களாலாய பதிகத்தை மானம் இல்லாத சமணர் களை வாதத்தில் வென்று அழிக்கப் பாடி,

விளக்கவுரை

`காட்டுமாவதுரித்து' (தி.3 ப.47)* எனத் தொடங்கும் பதிகம் கௌசிகப் பண்ணிலமைந்ததாகும். *`வேத வேள்வியை' (தி.3 ப.108) எனத் தொடங்கும் பதிகம் பழம்பஞ்சுரப் பண்ணிலமைந்த பதிகமாகும். இவ்விரு பதிகங்களிலும் *`வாது செய்யத் திருவுள்ளமே'* என்பதோடு, *`அவர்களை அழிக்கத் திருவுள்ளமே'* எனவரும் குறிப்பும் அமைந்துள்ளன. இவற்றுள் முன்னைய பதிகத்தில் வரும் திருக்கடைக்காப்பு, *`தெந்தெனாமுரலும் திருஆலவாய், மைந்தனே என்று வல்லமண் ஆசறச் சந்தமார் தமிழ் கேட்ட மெய்ஞ் ஞானசம், பந்தன் சொற்பகரும் பழி நீங்கவே'* என்பதாகும். பின்னைய பதிகத்தில் வரும் திருக்கடைக்காப்பு, *`கூடல் ஆலவாய்க் கோனை விடை கொண்டு, வாடல் மேனி அமணரை வாட்டிட, மாடக் காழிச்சம் பந்தன் மதித்த இப், பாடல் வல்லவர் பாக்கியவாளரே'* என்பதாகும். இவ்வரிய குறிப்புகளை உளங்கொண்டே, *736*ஆவது பாடலில், சமணர்களைப் பார்த்தும், பேசியும், சில வாதங்களைச் செய்தும் கொண்ட பழிகளைப் போக்கவும், அவர்களை அழிக்கவும் இறை வனின் திருவுளக்குறிப்பை அறிகுவன் எனப் பிள்ளையார் திருக் கோயிலுக்குள் சென்றார் என ஆசிரியர்

அருளுவாராயினர்.

ஆலமே அமுத மாக
உண்டுவா னவர்க்க ளித்துக்
காலனை மார்க்கண் டர்க்காக்
காய்ந்தனை அடியேற் கின்று
ஞாலம்நின் புகழே யாக
வேண்டும்நான் மறைக ளேத்துஞ்
சீலமே ஆல வாயில்
சிவபெரு மானே என்றார். **#2637**

நான்மறைகளும் போற்றும் சீலமானவரே! திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் பெருமானாரே! தாங்கள் நஞ்சினையே அமுதமாய் உண்டு தேவர்க்கு அருள் செய்ததுடன், மார்க்கண்டேயருக்காகக் காலனையும் உதைத்து அருளினீர்! இன்று அடியேனுக்கு அருள் சுரந்தீர். இந்நிலவுலகம் முழுதும் தங்களது புகழே ஆகப் பரவவேண்டும் என வேண்டிக் கொண்டார்.

விளக்கவுரை

`ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென் ஆலவாயி லுறை எம் ஆதியே' எனப் பதிகப் பாடல்தொறும் வரும் பொன் மொழிகளை ஆசிரியர் இப்பாடலில் கொண்டெடுத்து மொழிகின்றார். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

நாதர்தம் அருள்முன் பெற்று
நாடிய மகிழ்ச்சி பொங்கப்
போதுவார் பணிந்து போற்றி
விடைகொண்டு புனித நீற்று
மேதகு கோலத் தோடும்
விருப்புறு தொண்டர் சூழ
மூதெயில் கபாடம் நீடு
முதல்திரு வாயில் சார்ந்தார். **#2638**

இறைவரின் திருவருளை முன்னே பெற்றுக் கொண்டு, நாடிய அருள் உணரப் பெற்றமையால், பெற்ற மகிழ்ச்சி பொங்கச் செல்பவராய், வணங்கிப் போற்றி, வாதில் வெல்ல இறைவர் அருள் பெற்றுக் கொண்டு, தூய திருநீற்றின் திருக்கோலப் பொலி வுடன் அன்புடைய தொண்டர்கள் சூழ்ந்துவரப் பழமையான மதில் பொருந்திய முதல் திருவாயிலை அடைந்தார்.

விளக்கவுரை

`வாது செய்யத் திருவுள்ளமே' `அமணரை அழிக்கத் திருவுள்ளமே'

என்றெல்லாம் விண்ணப்பித்துக் கொண்டமைக்கு, இறைவன் அருள் சுரந்தமை தோன்ற, `நாதர்தம் அருள் முன் பெற்று' என்றார்.

அம்மலர்க் குழலி னார்க்கும்
அமைச்சர்க்கும் அருள வேண்டிச்
செம்மணிப் பலகை முத்தின்
சிவிகைமேற் கொண்ட போதில்
எம்மருங் கினிலும் தொண்டர்
எடுத்தஆர்ப் பெல்லை இன்றி
மும்மைநீ டுலக மெல்லாம்
முழுதுடன் நிறைந்த தன்றே. **#2639**

அழகிய மலர்களைச் சூடிய கூந்தலையுடைய மங்கையர்க்கரசியாருக்கும் குலச்சிறையாருக்கும் அருள்செய்ய வேண்டி, சிவந்த மணிகள் பொருந்திய பலகையுடைய முத்துச் சிவிகை மீது சம்பந்தர் ஏறியருளியபோது, எம்மருங்கிலும் இருந்த தொண்டர் கள் எழுப்பிய மகிழ்வொலி அப்பொழுதே அளவில்லாது பெருகி, மூன்றாயுள்ள உலகங்களிலும் நிறைந்தது.

விளக்கவுரை

****

பல்லிய நாதம் பொங்கப்
படர்திரு நீற்றின் சோதி
நல்லொளி வட்ட மாகி
நண்ணிமேல் வருவ தென்ன
வில்வளர் தரளக் கோவை
வெண்குடை நிழற்றி வெவ்வே
றெல்லையில் முத்தின் காளம்
தாரைசங் கெங்கும் ஊத. **#2640**

பலவகையான இயங்களின் ஒலிமிகுந்து ஒலிக்க, எங்கும் படர்ந்து பெருகும் திருநீற்றின் ஒளியானது ஒரு நல்ல ஒளிவட்டமாய் உருக்கொண்டு பொருந்தி மேலே வருவது போல, ஒளி பெருகும் முத்துக் கோவைகளையுடைய வெண்குடையானது நிழலைச் செய்ய, வேறு வேறாக அளவில்லாத முத்துக் காளமும் தாரை யும் சங்குகளும் எங்கும் ஒலிக்க,

விளக்கவுரை

****

கண்ணினுக் கணியாய் உள்ளார்
எழுச்சியிற் காட்சி பெற்றார்

நண்ணிய சமயம் வேறு
நம்பினர் எனினும் முன்பு
பண்ணிய தவங்கள் என்கொல்
பஞ்சவன் தஞ்சம் மேவிப்
புண்ணிய மூர்த்தி வந்து
மதுரையில் புகுத என்றார். #2641

கண்ணினுக்கு அணியாக விளங்கும் பிள்ளை யாரின் திருவெழுச்சியின் காட்சியைப் பெற்ற அந்நகர மக்கள், தாங்கள் சார்ந்த சமண சமயத்தை நம்பினராயினும், `பாண்டிய மன் னன் அடைக்கலம் புகும் பொருளாய்ப் பொருந்திப் புண்ணிய வடிவி னரான இவர், மதுரையில் வருதற்கு இந்தப் பாண்டியன் முன் செய்த தவங்கள்தாம் எவையோ?' என உரைத்தனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

தென்னவன் தேவி யாரும்
திருமணிச் சிவிகை மீது
பின்வர அமைச்சர் முன்பு
பெருந்தொண்டர் குழாத்துச் செல்லப்
பொன்னணி மாட வீதி
யூடெழுந் தருளிப் புக்கார்
கன்னிநா டுடையான் கோயில்
காழிநா டுடைய பிள்ளை. #2642

பாண்டியனின் மனைவியாரும் அழகிய மணி களையுடைய சிவிகையில் அமர்ந்து பின்வர, அமைச்சரான குலச் சிறையார், தம் திருமுன்பு செல்லும் தொண்டர் கூட்டத்துடன் கலந்து செல்ல, இவ்வாறு பொன் அணிகளையுடைய மாடவீதியின் வழியாய் எழுந்தருளிச் சென்று, சீகாழி நாட்டுத் தலைவரான ஞானசம்பந்தர், கன்னிநாட்டரசனான பாண்டியனின் அரண்மனைக்குள் புகுந்தார்.

விளக்கவுரை

****

கொற்றவன் தன்பால் முன்பு
குலச்சிறை யார்வந் தெய்திப்
பொற்றட மதில்சூழ் சண்பைப்
புரவலர் வரவு கூற
முற்றுயர் சிறிது நீங்கி
முழுமணி அணிப்பொற் பீடம்

மற்றவன் முடியின் பக்கத்
திடுகென வல்ல னானான். #2643

பாண்டியன் முன்னால் குலச்சிறையார் வந்து சேர்ந்து, பொன்னால் ஆன மதில் சூழ்ந்த சீகாழித் தலைவரான ஞான சம்பந்தரின் வருகையை அறிவிக்க, முன்னிருந்த துன்பம் சிறிது நீங்கப் பெற்ற அப் பாண்டியன் `முழுதும் மணிகள் பதித்த பொற் பீடத்தைத் தன் தலைப் பக்கத்தில் இடுவீராக!' என்று சொல்லவல்ல ஆற்றல் உடை யவன் ஆயினன்.

விளக்கவுரை

பீடத்தைத் தலைப் பக்கம் இடுக என்று சொல்லுவதற்கு வல்லன் ஆயினான் எனவே, சமண சமயச் சார்பால் அதுகாறும் அத் துணையளவு பிணியோடிருந்த பான்மை தெரிய நின்றது.

மந்திரி யாரைப் பின்னும்
எதிர்செல மன்னன் ஏவச்
சிந்தையுள் மகிழ்ந்து போந்தார்
செயலையான் சமயத் துள்ளோர்
பைந்துணர் அலங்கல் மன்னன்
பரிசுகண் டிதுவோ பண்பால்
நந்தனிச் சமயந் தன்னை
நாட்டுமா றென்று பின்னும். #2644

மேலும், தன் அமைச்சரைச் சென்று ஞானசம் பந்தரை அழைத்து வருமாறு ஏவிட, அவரும் மனத்தில் மகிழ்ச்சி உடை யவராய்ச் சென்றார். அசோக மரத்தினடியில் இருக்கும் அருகனது சமயத்தில் உள்ள சமணர்கள், பசிய பூங்கொத்துகளால் ஆன வேப்ப மாலையை அணிந்த மார்பையுடைய பாண்டிய மன்னனின் தன்மை யைப் பார்த்து `நம் ஒப்பற்ற சமயத்தைப் பண்பாய் நாட்டும் வழி இதுவோ!' எனக் கூறி மேலும் சொல்வார்களாய்,

விளக்கவுரை

செயலை - அசோகமரம். அதன் அடியில் இருத்தலின் அருகனைச் `செயலையான்' என்றார்.

நின்அற நெறியை நீயே
காத்தருள் செய்தி யாகில்
அன்னவர் தம்மை இங்கே
அழைத்தனை அவரும் யாமும்
முன்னுற ஒக்கத் தீர்க்க
மொழிந்துமற் றவரால் தீர்ந்த
தென்னினும் யாமும் தீர்த்தோ

மாகவும் இசைவா யென்றார். **#2645**

`நின் அறநெறியான சமயத்தை நீயே காத்தருள் செய்வாயானால், அவரை இங்கே வருமாறு அழைப்பினும், அவரும் நாங்களும் உன் முன்னே ஒருங்கு கூடி, இந்நோயைத் தீர்க்கும்படி சொல்லி, மற்று அவரால் நோய் தீர்ந்தாலும் நாங்களும் தீர்த்தோம் என்று கூற, உடன்படுவாயாக!' எனக் கூறினர்.

விளக்கவுரை

இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

பொய்தவ மாகக் கொண்ட
புன்தலைச் சமணர் கூறச்
செய்தவப் பயன்வந் தெய்தும்
செவ்விமுன் னுறுத லாலே
எய்திய தெய்வச் சார்வால்
இருதிறத் தீருந் தீரும்
கைதவம் பேச மாட்டேன்
என்றுகை தவனுஞ் சொன்னான். **#2646**

பொய்யை மெய்த்தவமாகக் கொண்ட புன்மை யான தலையையுடைய சமணர்கள் இவ்வாறு சொல்ல, `முன்செய்த தவத்தின் பயன் வந்து நன்மை அளிக்கும் காலம் பொருந்துவதனால், சேர்ந்த உங்கள் தெய்வங்களின் சார்பினால் இருபக்கத்தவரும் தீருங்கள்! நான் நடுவு நிலையினின்று தவறி வஞ்சம் பேசமாட்டேன்!' எனப் பாண்டியன் கூறினான்.

விளக்கவுரை

கைதவம் - வஞ்சனை ; அஃதாவது நடுவின்றிச் சொல்லு தல், கைதவன் - பாண்டியரின் மரபுப்பெயர்; கைவந்த தவத்தினை யுடையவன் எனினும் ஆம்.

என்றவன் உரைப்பக் குண்டர்
எண்ணங்கெட் டிருந்த எல்லைத்
தென்தமிழ் நாடு செய்த
செய்தவக் கொழுந்து போல்வார்
வன்தனிப் பவனம் முன்னர்
வாயிலுள் அணைந்து மாடு
பொன்திகழ் தரளப் பத்திச்
சிவிகைநின் றிழிந்து புக்கார். **#2647**

என்று அப்பாண்டியன் உரைக்க, அமணர்கள் தம் கருத்தழிய மனம் குன்றியிருந்தநிலையில், தென்தமிழ் நாடான பாண்டிய நாடு முன்செய்த

தவத்தின் கொழுந்து அனைய ஞான சம்பந்தர், வலிய ஒப்பில்லாத அரண்மனையின் முன் உள்ள வாயிலை அடைந்து, எம்மருங்கும் பொன் அணிந்து விளங்கும் முத்துக்களை உடைய சிவிகையினின்றும் இறங்கி உள்ளே புகுந்தார்.

விளக்கவுரை

****

குலச்சிறை யார்முன் பெய்தக்
கொற்றவன் தேவி யாரும்
தலத்திடை இழிந்து சென்றார்
தண்டமிழ் நாட்டு மன்னன்
நிலத்திடை வானி னின்று
நீளிருள் நீங்க வந்த
கலைச்செழுந் திங்கள் போலும்
கவுணியர் தம்மைக் கண்டான். **#2648**

மன்னனிடம் அறிவித்த பின்பு, குலச்சிறையார் ஞானசம்பந்தரின் திருமுன்பு சேர, அரசமாதேவியாரும் அரண்மனை வந்து தம் சிவிகையினின்றும் இறங்கி வந்தனர். குளிர்ந்த தமிழ் நாட்டின் மன்னனான பாண்டியன், வானத்தினின்றும் நீண்ட இருள் நீங்குமாறு, நிலத்தில் வந்து நிறைந்த, நிறை நிலவு எனவரும் கவுணியர் பெருமானைக் கண்டான்.

விளக்கவுரை

****

கண்டஅப் பொழுதே வேந்தன்
கையெடுத் தெய்த நோக்கித்
தண்துணர் முடியின் பாங்கர்த்
தமனியப் பீடங் காட்ட
வண்டமிழ் விரகர் மேவி
அதன்மிசை இருந்தார் மாயை
கொண்டவல் லமணர் எல்லாம்
குறிப்பினுள் அச்சங் கொண்டார். **#2649**

பார்த்த அப்பொழுதே மன்னன் கைகளைத் தூக்கி வழிபடும் பண்பினை நோக்கி, குளிர்ந்த மலர்களையுடைய தன் முடியின் பக்கத்தில் இடப்பட்ட பீடத்தில் அமருமாறு கைகளைக் காட்டிட, வளம் மிக்க தமிழ் வல்லுநரான ஞானசம்பந்தர் அப்பீடத்தின் மீது அமர்ந்தருளினர். மாயங்களைக் கொண்ட அமணர்கள் எல்லோ ரும் தம் மனத்துள் எழுந்த குறிப்பால் அச்சம் கொண்டனர்.

விளக்கவுரை

****

செழியனும் பிள்ளை யார்தம்
திருமேனி காணப் பெற்று
விழியுற நோக்க லாலே
வெம்மைநோய் சிறிது நீங்கி
அழிவுறும் மனம் நேர்நிற்க
அந்தணர் வாழ்வை நோக்கிக்
கெழுவுறு பதியா தென்று
விருப்புடன் கேட்ட போது. **#2650**

பாண்டியனும் ஞானசம்பந்தரின் திருமேனியைக் காணப் பெற்றவனாய், விழி பொருந்த நோக்கியதால், வெப்பு நோய் மேலும் சிறிது நீங்கப் பெற்று, ஒருநிலையில் நில்லாத தன் மனம் ஒருமையுற்று நிற்ப, அந்தணர் தம் பெருவாழ்வெனத் தோன்றிய ஞானசம்பந்தரைப் பார்த்து, `உமது

ஊர் யாது?' என்று விருப்புடன் வினவ,

விளக்கவுரை

முன்னர் *(பா.720)* மீனவன் செவியினூடு ஞானசம்பந் தர் என்னும் நாமமந்திரம் சொல்ல அவன், அயர்வு நீங்கியது என்றார். பின்னர் அவர் தம் திருவுருக் கண்டபோது, வெப்பு நோய் சிறிது நீங்கவும் மனம் ஒரு நெறிப்படவுமானது என்றார். இதுபொழுது அவரைப் பார்த்த அளவில் அவரது ஊர் யாது எனக் கேட்க, அவரும் தம் திருவாயாலேயே சொல்ல, அதனைக் கேட்கவும் நேருகிறது. படிப்படியாக நிகழ்வுறும் இந்நிகழ்ச்சி, `முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள், பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்' எனவரும் அருள் வாக்கை நினைவு கூரவைக்கும். இது பெண்ணின் அநுபவம், பெருமானின் பெயரும் வண்ணமும் ஊரும் கேட்கும் அளவில் அமைகிறது. இப்பாண்டிய னின் அநுபவமோ காணும் பேற்றையும் பெறுமாறு அமைந்துள்ளது. இனி, அவள்தன் தலைவனின் ஆரூரைப் பிறர் சொல்லக் கேட்க, பாண்டியனோ ஊரின் பெயரை உரியவரே சொல்லக் கேட்கின்றான். அவள் பெற்ற அநுபவம் அகவழியது. பாண்டியன் பெறும் அநுபவம் புறவழியது; குருவருள் அநுபவமாக அமைவது, இனி ஞானச் செல்வரின் திருக்கைகளால் திருநீறு பூசப்பெறும் பேறும், அவர்தம் உரையளவானும், பதிக அளவானும் கேட்கப் பெறும் உபதேசப் பேறும் பெறவுள்ளமையும் நினைவு கூரத்தக்கன. இவ்வாறெல்லாம் ஒப்பிட்டுக் காண உவகை தரும்.

பொன்னிவளந் தருநாட்டுப்
புனற்பழனப் புறம்பணைசூழ்
கன்னிமதிற் கழுமலம்நாம்
கருதுமூர் எனச்சிறந்த
பன்னிரண்டு பெயர்பற்றும்
பரவியசொல் திருப்பதிகம்
தென்னவன்முன் பருள்செய்தார்
திருஞான சம்பந்தர். **#2651**

காவிரியாறு பாய்ந்து வளத்தை அளிக்கும் சோழ நாட்டில் நீர் நிறைந்த வயல்களையுடைய மருத நிலம் சூழ்ந்த அழியாத மதிலால் சூழப்பெற்ற `திருக்கழுமலம்' (சீகாழி) என்பது எமது ஊரா கும் என்று சிறப்புடைய பன்னிரண்டு பெயர்களையும் போற்றிய கருத் துடைய திருப்பதிகத்தை ஆளுடைய பிள்ளையார் அம்மன்னனின் முன்பு பாடியருளினார்.

விளக்கவுரை

`பிரமனூர்' *(தி.2 ப.70)* எனத் தொடங்கும் காந்தாரப் பண்ணில் அமைந்த

பதிகத்தில் காழிக்குரிய பன்னிரண்டு பெயர்களுள.

பிள்ளையார் செம்பொன்மணிப்
பீடத்தில் இருந்தபொழு
துள்ளநிறை பொறாமையினால்
உழையிருந்த காரமணர்
கொள்ளுமனத் திடையச்சம்
மறைத்துமுகங் கோபத்தீத்
துள்ளியெழும் அனற்கண்கள்
சிவந்துபல சொல்லுவார். **#2652**

ஞானசம்பந்தர் பொன் பீடத்தில் அமர்ந்திருந்த போது, உள்ளத்தில் உண்டான பொறாமையினால், அருகிருந்த கருநிற முடைய சமணர்கள் தம் மனத்திடைக் கொண்ட அச்சத்தை மறைத்து, முகத்தில் சினத் தீயானது துள்ளி எழுவதுபோல் கண்கள் நெருப்பெனச் சிவந்து பலவாறு சொல்பவராய்,

விளக்கவுரை

****

காலையெழுங் கதிரவனைப்
புடைசூழுங் கருமுகில்போல்
பீலிசேர் சமண்கையர்
பிள்ளையார் தமைச்சூழ்வார்
ஏலவே வாதினால்
வெல்வதனுக் கெண்ணித்தாம்
கோலுநூ லெடுத்தோதித்
தலைதிமிர்ப்பக் குரைத்தார்கள். **#2653**

ஞானசம்பந்தர் பொன் பீடத்தில் அமர்ந்திருந்த போது, உள்ளத்தில் உண்டான பொறாமையினால், அருகிருந்த கருநிற முடைய சமணர்கள் தம் மனத்திடைக் கொண்ட அச்சத்தை மறைத்து, முகத்தில் சினத் தீயானது துள்ளி எழுவதுபோல் கண்கள் நெருப்பெனச் சிவந்து பலவாறு சொல்பவராய்,

விளக்கவுரை

தலைதிமிர்ப்ப - தலையசைய.

பிள்ளையார் அதுகேளாப்
பேசுகநும் பொருளெல்லை
உள்ளவா றென்றருள
ஊத்தைவாய்ப் பறிதலையர்
துள்ளிஎழுந் தநேகராய்ச்

சூழ்ந்துபத றிக்கதற
ஒள்ளிழையார் அதுகண்டு
பொறாராகி உள்நடுங்கி. **#2654**

ஞானசம்பந்தர் அதனைக் கேட்டு, `உங்கள் கொள்கையின்படியுள்ள பொருள் முடிவுகளை உள்ளபடி கூறுங்கள்' என்று அருள, ஊத்தை வாயையும் பறித்த தலையையும் உடைய சமணர்கள், துள்ளிப் பலராக எழுந்து, பிள்ளையாரைச் சூழ்ந்து, பதறிக் கதறவே, ஒளியுடைய அணிகளை அணிந்த மங்கையர்க்கரசியார் அதைக் கண்டு பொறாமல் உள்ளம் நடுங்கி,

விளக்கவுரை

****

தென்னவன் தன்னை நோக்கித்
திருமேனி எளியர் போலும்
இன்னருட் பிள்ளை யார்மற்
றிவர் எண்ணி லார்கள்
மன்னநின் மயக்க மெங்கள்
வள்ளலார் தீர நல்கும்
பின்னையிவ் வமணர் மூள்வார்
வல்லரேல் பேச என்றார். **#2655**

பாண்டிய மன்னனைப் பார்த்து, `இனிய அருளை யுடைய பிள்ளையாரான இவர் சிறுவர், ஆனால் சமணர்கள் ஆகிய இவர்கள் எண்ணற்றவர்கள். மன்ன! உம் வெப்பு நோயின் மயக்கத்தை எங்கள் பிள்ளையார் நீங்குமாறு அருள் செய்வார். அதன் பின் இவ் அமணர்கள் வாது செய்ய வல்லவரானால் பேசுவாராக!' என்று கூறினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மாறனும் அவரை நோக்கி
வருந்தல்நீ என்று மற்று
வேறுவா தென்கொல் என்மேல்
வெப்பொழித் தருகர் நீரும்
ஆறணி சடையி னாருக்
கன்பராம் இவரும் நீங்கள்
தேறிய தெய்வத் தன்மை
என்னிடைத் தெரிப்பீர் என்றான். **#2656**

பாண்டியனும் மங்கையர்கரசியாரைப் பார்த்து `நீ வருந்தற்க!' என்று கூறிப் பின் `பிற வாது என்ன வேண்டும்? அருகர் களாகிய நீங்களும்,

கங்கையை அணிந்த சடையை உடையவர்க்கு அடியவரான இவரும், என்னிடத்ததான இவ்வெப்பு நோயை ஒழியச் செய்து, பின், நீங்கள் அவ்வவர் தெளிந்த தெய்வங்களின் உண்மைத் தன்மையை என்னிடத்தில் விளக்குக' எனக் கூறினான்.

விளக்கவுரை

****

ஞானஆ ரமுத முண்டார்
நற்றவத் திருவை நோக்கி
மானினேர் விழியி னாய்கேள்
மற்றெனைப் பால னென்று
நீநனி அஞ்சவேண்டா
நிலையிலா அமணர்க் கென்றும்
யான்எளி யேன லேன்என்
றெழுந்திருப் பதிகம் பாடி. **#2657**

ஞான அமுதை உண்ட ஞானசம்பந்தர் நற்றவம் உடைய மங்கையர்க்கரசியாரை நோக்கி, `மானின் நேர் விழியினாய்! கேட்பாயாக! என்னைச் சிறுவன் என்று எண்ணி அச்சம் கொள்ள வேண்டுவதின்று, நல்ல நிலையில் ஒருமையுறாத சமணர்களுக்கு என்றும் நான் எளியன் அல்லேன்' எனும் கருத்துப்பட எழுகின்ற திருப்பதிகத்தைப் பாடி,

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகம்,

மானி னேர்விழி மாத ராய்வழு
திக்கு மாபெருந் தேவிகேள்
பானல் வாயொரு பாலன் ஈங்கிவன்
என்று நீபரி வெய்திடேல்
இடங்க ளிற்பல அல்லல் சேர்
ஈனர் கட்கெளி யேன லேன்திரு
ஆல வாயரன் நிற்கவே.

எனவரும் கொல்லிப் பண்ணிலமைந்த பதிகமாகும் *(தி.3 ப.39)*. இப்பாடற் பொருண்மையை விளக்கி நிற்பது இப்பாடலாகும்.

பெற்றியால் அருளிச் செய்த
பிள்ளையார் தமக்கும் முன்னம்
சுற்றுநின் றழைத்தல் ஓவா
அருகர்க்கும் தென்னர் கோமான்

இற்றைநாள் என்னை உற்ற
பிணியைநீர் இகலித் தீரும்
தெற்றெனத் தீர்த்தார் வாதில்
வென்றனர் என்று செப்ப. **#2658**

திருவருளைப் பற்றிய தன்மையால் அவ்வாறு திருப்பதிகம் பாடியருளிய பிள்ளையாருக்கும், தன் முன்பு சூழ்ந்து நின்று உரைப்பதைக் கைவிடாத சமணர்களுக்கும், ஒன்று போலவே, `இன்று என்னை அடைந்த இவ்வெப்பு நோயை நீவிர் இருவரும் தனித்தனி வேறாகி இகல் வைத்து ஓட்டித் தீருங்கள்! தெளிவுபெறத் தீர்த்தவர்களே வெற்றியுற்றவர் ஆவர்!' என்று பாண்டிய மன்னன் உரைக்க,

விளக்கவுரை

****

மன்னவன் மாற்றங் கேட்டு
வடிவுபோல் மனத்து மாசு
துன்னிய அமணர் தென்னர்
தோன்றலை நோக்கி நாங்கள்
உன்னுடம்பு அதனில் வெப்பை
ஒருபுடை வாம பாகம்
முன்னம்மந் திரித்துத் தெய்வ
முயற்சியால் தீர்த்து மென்றார். **#2659**

பாண்டிய மன்னன் சொல்லைக் கேட்டு, வடிவத்தைப் போன்றே மனமும் மாசுடையராய அமணர்கள், பாண்டிய மன்னனைப் பார்த்து, `நாங்கள் உம் உடலில் ஒரு பக்கமா கிய இடப்பாகத்து வெப்பு நோயை மந்திரித்துத் தெய்வ முயற்சியால் நீக்குவோம்.' என்றனர்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

யாதும்ஒன் றறிவி லாதார்
இருளென அணையச் சென்று
வாதினில் மன்ன வன்தன்
வாமபா கத்தைத் தீர்ப்பார்
மீதுதம் பீலி கொண்டு
தடவிட மேன்மேல் வெப்புத்
தீதுறப் பொறாது மன்னன்
சிரபுரத் தவரைப் பார்த்தான். **#2660**

சற்றும் உண்மை நிலையை அறியாதவரான சமணர்கள், இருளைப் போல மன்னனை நெருங்கிச் சென்று, வாதத்தின் பொருட்டு முற்பட்டு,

மன்னனின் இடமருங்குள்ள நோயைத் தீர்க்கத் தொடங்கி, அவனது உடலின் மீது தம் மயிற்பீலிக் கற்றையை மந்திரித்துத் தடவ, வெப்பு நோய் மேன்மேலும் மிகுந்து தீமை செய்ததால், அதை ஆற்றமாட்டாதவனாகி, மன்னன், சீகாழித் தலைவரைத் தன் பிணியைப் போக்க வேண்டும் என்ற குறிப்புடன் நோக்கினான்.

விளக்கவுரை

****

தென்னவன் நோக்கங் கண்டு
திருக்கழு மலத்தார் செல்வர்
அன்னவன் வலப்பால் வெப்பை
ஆலவாய் அண்ணல் நீறே
மன்னும்மந் திரமு மாகி
மருந்துமாய்த் தீர்ப்ப தென்று
பன்னிய மறைக ளேத்திப்
பகர்திருப் பதிகம் பாடி. **#2661**

பாண்டியனின் பார்வையின் கருத்தை உணர்ந்த சீகாழிச் செல்வரான ஞானசம்பந்தர், அவனது வலப்பக்க நோயைத் `திருவாலவாய் இறைவரின் திருநீறே நிலையான மந்திரமும் மருந்துமாகித் தீர்ப்பதாகும்!' என்று மனத்துள் கொண்டு கூறிய மறைகளின் கருத்தைப் போற்றி எடுத்துக் கூறுகின்ற `மந்திரமாவது நீறு' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடி,

விளக்கவுரை

இத்தொடக்கமுடைய திருப்பதிகம் *(தி.2 ப.66)* காந்தா ரப் பண்ணில் அமைந்ததாகும். இப்பதிகத்தில், `மந்திரமாவது நீறு' `வேதத்திலுள்ளது நீறு' என வருவன கொண்டு, திருவாலவாயான் திருநீறே `மந்திரமும்' ஆவது என்றார். `வருத்தந் தணிப்பது நீறு' `ஏலவுடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு' என வருவன கொண்டு, `மருந்துமாகித் தீர்ப்பது' என்றார்.

திருவளர் நீறு கொண்டு
திருக்கையால் தடவத் தென்னன்
பொருவரு வெப்பு நீங்கிப்
பொய்கையிற் குளிர்ந்த தப்பால்
மருவிய இடப்பால் மிக்க
அழலெழ மண்டு தீப்போல்
இருபுடை வெப்புங் கூடி
இடங்கொளா தென்னப் பொங்க. **#2662**

திருவளரும் திருநீற்றைக் கொண்டு ஞானசம்பந்தர், தம் திருக்கையினால் மன்னவன் உடலில் தடவிட, அப்பாண்டியன் ஒப்பில்லாத வெப்பு நோயினின்றும் நீங்கியதால், வலப் பக்கம் தண்ணீர்ப் பொய்கை போல் குளிர்ந்தது. பொருந்திய இடப் பக்கம், மேலும் மிகுந்த அனலின் தன்மை எழுந்ததால், செறிந்த தீயைப் போல இரு பக்கத்து வெப்பும் கூடி, இடம் கொள்ள மாட்டாது பெருகிட,

விளக்கவுரை

****

உறியுடைக் கையர் பாயின்
உடுக்கையர் நடுக்க மெய்திச்
செறிமயிற் பீலி தீயத்
தென்னன்வெப் புறுதீத் தம்மை
எறியமா சுடலுங் கன்றி
அருகுவிட் டேற நிற்பார்
அறிவுடை யாரை ஒத்தார்
அறிவிலா நெறியில் நின்றார். **#2663**

உறியைக் கையில் கொண்ட, பாயினை உடைய சமணர்கள், நடுக்கம் அடைந்து, செறிந்த மயில்பீலி தீய்ந்து போக, மன்னனின் வெப்பு நோயின் வெப்பம் தம்மைத் தாக்குதலால், மாசு கொண்ட உடல் மேலும் கருகி வெதும்பியதால், மன்னனிடமிருந்து அகன்று, தொலைவில் சென்று நிற்பவர்களாய் அறிவில்லாத நெறியில் நின்றவராயினும், அறிவுடையாரைப் போன்று விளங்கினர்.

விளக்கவுரை

இம் மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

பலர்தொழும் புகலி மன்னர்
ஒருபுடை வெப்பைப் பாற்ற
மலர்தலை யுலகின் மிக்கார்
வந்ததி சயித்துச் சூழ
இலகுவேல் தென்னன் மேனி
வலமிடம் எய்தி நீடும்
உலகினில் தண்மை வெம்மை
ஒதுங்கினால் ஒத்த தன்றே. **#2664**

பலராலும் வணங்கப்படும் சீகாழித் தலைவர் ஆன பிள்ளையார், அரசனின் வலப்பக்கத்து வெப்பத்தைப் போக்க, மலர்தலையுடைய உலகில் அறிவால் சிறந்தவர் அதிசயித்து வந்து சூழ, வேல் ஏந்தும் பாண்டியனின் உடல், வலப்பக்கத்தில் தண்மையும் இடப்பக்கத்தில்

வெம்மையும் கூடியதால், நீண்ட உலகில், தண்மையும் வெம்மையும் இணைந்து ஓரிடத்து ஒதுங்கினாற் போல் அப்போது விளங்கியது.

விளக்கவுரை

****

மன்னவன் மொழிவான் என்னே
மதித்தஇக் காலம் ஒன்றில்
வெந்நர கொருபா லாகும்
வீட்டின்பம் ஒருபா லாகும்
துன்னுநஞ் சொருபா லாகும்
சுவையமு தொருபா லாகும்
என்வடி வொன்றி லுற்றேன்
இருதிறத் தியல்பும் என்பான். **#2665**

பாண்டிய வேந்தன், `என்னே வியப்பு' எனக் குறிப்பிட்டு, ஒரே காலத்தில் கொடிய நரகம் ஒரு பக்கத்தில் உளதாகும், முத்தியின்பம் ஒருபக்கத்தில் உளதாகும், மிக்க நஞ்சின் நுகர்ச்சி ஒருபக்கத்தில் உளதாகும், சுவையுடைய அமுதின் நுகர்ச்சி மற்றொரு பக்கத்தில் உளதாகும், `என் உடல் ஒன்றிலேயே இங்ஙனம் மாறுபட்ட இருவேறு தன்மைகளையும் நான் அடையப்பெற்றேன்' என்பவனாய்,

விளக்கவுரை

நுகர்ச்சியும், நுகரும் பொருள்களும் வெவ்வேறான காலத்திலும் வெவ்வேறான இடத்திலும் நிகழ்வதே இயற்கை. ஆனால் என்னளவிலோ ஒரே உடம்பில் ஒரே காலத்தில் வேறுவேறாகிய இரு தன்மைகளும் ஒருங்கு நிகழ்கின்றனவே என்று வருந்தினன் மன்னன்.

வெந்தொழில் அருகர் தோற்றீர்
என்னைவிட் டகல நீங்கும்
வந்தெனை உய்யக் கொண்ட
மறைக்குல வள்ள லாரே
இந்தவெப்பு அடைய நீங்க
எனக்கருள் புரிவீ ரென்று
சிந்தையால் தொழுது சொன்னான்
செல்கதிக் கணிய னானான். **#2666**

`கொடிய தொழிலையுடைய அமணர்களே! நீங்கள் தோற்றீர்கள்! என்னை விட்டு நீங்கிச் செல்லுங்கள்! இங்கு வந்து என்னை உய்யுமாறு ஆட்கொண்டருளிய அந்தணர் குலத்து வள்ள லாரே! இவ்வெப்பு நோய் முழுமையாக நீங்குமாறு எனக்கு அருள் செய்வீராக!' என மனத்தால் வணங்கி, நற்கதிக்கு நெருங்கியவனான பாண்டியன் உரைத்தான்.

விளக்கவுரை

அடைய - முழுமையாக. இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

திருமுகங் கருணை காட்டத்
திருக்கையால் நீறு காட்டிப்
பெருமறை துதிக்கு மாற்றால்
பிள்ளையார் போற்றிப் பின்னும்
ஒருமுறை தடவ அங்கண்
ஒழிந்துவெப் பகன்று பாகம்
மருவுதீப் பிணியும் நீங்கி வழுதியும்
முழுதும் உய்ந்தான். **#2667**

திருமுகத்தின் பொலிவு, உள்ளத்தில் நிறைந்த கருணையினைப் புறத்தே புலப்படுத்த, திருக்கையினால் திருநீற்றைக் காட்டி, அரிய மறைகளும் போற்றும் வகையால், ஞானசம்பந்தர் போற்றிப் பின்னும் ஒருமுறை பாண்டியன் உடலில் தடவிட, வெப்பு நோயானது அப்போதே உடலை விட்டு முழுமையாக நீங்கியமையால் இடப்பக்கத்தில் முன்பொருந்திய வெப்புநோயும் நீங்கப் பாண்டிய னும் முழுதும் உய்தி அடைந்தான்.

விளக்கவுரை

****

கொற்றவன் தேவி யாரும்
குலச்சிறை யாரும் தீங்கு
செற்றவர் செய்ய பாதத்
தாமரை சென்னி சேர்த்துப்
பெற்றனம் பெருமை யின்று
பிறந்தனம் பிறவா மேன்மை
உற்றனன் மன்னன் என்றே
உளங்களித் துவகை மிக்கார். **#2668**

பாண்டியன் மனைவியாரும், குலச்சிறையாரும், தீங்கினை அழித்த பிள்ளையாரின் சிவந்த திருவடித் தாமரைகளைத் தம்முடி மீது சேர்த்து வணங்கி, `நாங்கள் பெருமை பெற்றோம், இன்றே உய்திபெறப் பிறந்தவர் ஆனோம். மன்னன் இனிப் பிறவியில்லாத மேன்மையை அடைந்தான்!' என்று கூறி, மனம் களிப்பு அடைந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

விளக்கவுரை

****

மீனவன் தன்மேல் உள்ள
வெப்பெலாம் உடனே மாற

ஆனபே ரின்ப மெய்தி
உச்சிமே லங்கை கூப்பி
மானமொன் றில்லார் முன்பு
வன்பிணி நீக்க வந்த
ஞானசம் பந்தர் பாதம்
நண்ணிநான் உய்ந்தேன் என்றான். **#2669**

பாண்டிய மன்னன், தன்னிடத்துள்ள வெம்மை முழுவதும் நீங்கியதனால் உண்டான பெரிய இன்பத்தை அடைந்து, தலையின்மீது கைகளைக் குவித்துக் கொண்டு `மானம் ஒன்றுமில்லாத சமணர்கள் முன்னே, வலிய நோய் நீங்குமாறு வந்தருளிய ஞான சம்பந்தரின் திருவடிகளைச் சேர்ந்து நான் உய்ந்தேன்!' எனக் கூறிப் போற்றினன்.

விளக்கவுரை

****

கந்துசீறு மாலியானை
மீனவன் கருத்துநேர்
வந்துவாய்மை கூறமற்று
மாசுமேனி நீசர்தாம்
முந்தைமந் திரத்துவிஞ்சை
முற்றம்எஞ்ச அஞ்சியே
சிந்தைசெய்து கைவருந்
திறந்தெரிந்து தேடுவார். **#2670**

கட்டுத்தறியைச் சீறிவரும் மதயானைபோலப் பாண்டியனும், சமணர்பால் அமைந்த கருத்துப் பிணிப்பினின்றும் நீங்கி, நேர்பட வந்து உண்மை நிலையைக் கூற, அழுக்குப் படிந்த உடலை உடைய இழிந்தவர்களான சமணர்கள், தாம் முன்னால் கைக் கொண்ட மந்திரத்தின் வித்தை முழுதும் வலியில்லாததாகி ஒழியக் கண்டு, அச்சம்கொண்டு, சிந்தித்துத் தாம் வெற்றியடையும் திறத்தை எண்ணி ஆராய்பவராய்,

விளக்கவுரை

****

சைவமைந்தர் சொல்லின்வென்றி
சந்தஇன்சொல் மாலையால்
கைதவன்தன் வெப்பொழித்த
தன்மைகண் டறிந்தனம்
மெய்தெரிந்த தர்க்கவாதம்
வெல்லல்ஆவ தன்றுவே

றெய்துதீயின் நீரில்வெல்வ
தென்றுதம்மில் எண்ணினார். **#2671**
`சைவ மகனாரான பிள்ளையாருடைய சொற்க ளின் வெற்றிச் சிறப்பை, அவருடைய சொல் மாலைப் பதிகத்தால் பாண்டியனின் வெப்பு நோய் முழுவதும் நீங்கின தன்மையைக் கண்ட னம், ஆதலால் உண்மை தெரிந்த தருக்க வாதத்தில் வெற்றி பெறுவது இயல்வதன்று, பொருந்திய தீயிலும் நீரிலும் வெற்றி பெற முயல்வோ மாக!' எனத் தங்களுக்குள் எண்ணினார்கள்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பிள்ளையாரும் உங்கள்வாய்மை
பேசுமின்கள் என்றலும்
தள்ளுநீர்மை யார்கள்வேறு
தர்க்கவாதி னுத்தரம்
கொள்ளும் வென்றிஅன்றியே
குறித்தகொள்கை உண்மைதான்
உள்ளவாறு கட்புலத்தில்
உய்ப்பதென்ன ஒட்டினார். **#2672**
ஞானசம்பந்தரும், சமணர்களைப் பார்த்து `உங்கள் சமய உண்மையினைப் பேசுங்கள்' என்று சொல்ல, அதைக் கேட்டு, ஏற்பட்ட இரு நிலைகளிலும் (மடத்தையும், மன்னனின் வெப்பையும் மந்திர விதியால் தாம் எண்ணியவாறு செய்தலில்) தவறிய அந்தச் சமணர்கள், `வேறு தருக்க வடிவான கடா விடைகளால் வரும் வெற்றி பெறுதலையும் விடுத்து, அவரவர்களும் தாம்தாமும் கொண்டிருக்கும் கொள்கையின் உண்மைத் தன்மையை உள்ளவாறு கண் முன் நிறுத்திக் காட்டுதலே இப்போது செய்யத் தக்கது' எனச் சூளுரைத்தனர்.

விளக்கவுரை

****

என்றுவாது கூறலும்
இருந்ததென்னர் மன்னனும்
கன்றிஎன் உடம்பொடுங்க
வெப்புநோய் கவர்ந்தபோ
தொன்றும்அங் கொழித்திலீர்கள்
என்னவா துமக்குஎனச்
சென்றுபின்னும் முன்னும்நின்று
சில்லிவாயர் சொல்லுவார். **#2673**

என்று சமணர் தங்கள் வாதத்தைக் கூற, நோய் நீங்கப் பெற்ற பாண்டியனும், அவர்களைப் பார்த்து, `என் உடல் முழு தும் வெதும்பி வெப்பு நோய் என்னை உள்ளாக்கியபோது, ஒரு சிறிதும் அந்நோயைத் தீர்க்காது தோற்றீர்கள். ஆதலால் இனி உங்க ளுக்கு வாது என்ன இருக்கின்றது?' எனக் கூற, மன்னனுக்கு முன்னும் பின்னுமாகச் சென்று அணுகி நின்று கொண்டு, ஓட்டை வாயர்களான சமணர்கள் கூறுவார்களாய்,

விளக்கவுரை

****

என்னவாது செய்வதென்
றுரைத்ததே வினாவெனாச்
சொன்னவா சகந்தொடங்கி
ஏடுகொண்டு சூழ்ச்சியால்
மன்னுதம் பொருட்கருத்தின்
வாய்மைதீட்டி மாட்டினால்
வெந்நெருப்பின் வேவுறாமை
வெற்றியாவ தென்றனர். **#2674**

`நீங்கள் செய்வதற்கு என்ன வாது இருக்கின்றது' என்று, தோல்வியுற்ற உமக்கு வாதம் ஒன்றுமில்லை என்ற குறிப்புப் படச் சொன்னதையே, தம்மை என்ன வாது செய்வது? என்று வினவியதாகக் கொண்டு, முன் தாம் சொன்ன வாசகத்தையே தொடர்ந்து கொண்டு, `ஏட்டைக் கையில் கொண்டு அறிவால் சூழ்ந்து நிலைபெறும் தம் தம் சமய உண்மைப் பொருட் கருத்தினை எழுதி, நெருப்பில் இட்டால் வேகாது இருப்பதுவே வெற்றியாம்' என்று கூறினார்.

விளக்கவுரை

இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

என்றபோது மன்னன்ஒன்
றியம்புமுன்பு பிள்ளையார்
நன்றுநீ ருரைத்தவாறு
நாடுதீயி லேடுதான்
வென்றிடிற் பொருட்கருத்து
மெய்ம்மையாவ தென்றிரேல்
வன்றனிக்கை யானைமன்னன்
முன்புவம்மின் என்றனர். **#2675**

என்று சமணர் உரைத்தபோது, அதற்கு விடையாய் மன்னன் ஒன்று சொல்வதன் முன்பே, ஞானசம்பந்தர் `நீங்கள் கூறிய வழிநன்று! தீயில்

இட்ட ஏடு, தான் வேகாது இருக்கின்றமை காட்டி வென்றால், அதில் எழுதிய பொருட் கருத்து உண்மை யுடையதாகும்' எனக் கூறுவீராயின், வலிய ஒற்றைக் கையையுடைய யானையை யுடைய மன்னன் முன்னர், `அவ்வாறே வாதம் செய்து முடிவு கொள்ள வாருங்கள்' என்றுரைத்தார்.

விளக்கவுரை

****

அப்ப டிக்கெதிர் அமணரும்
அணைந்துறும் அளவில்
ஒப்பில் வண்புகழ்ச் சண்பையர்
காவலர் உரையால்
செப்ப ருந்திறல் மன்னனும்
திருந்தவை முன்னர்
வெப்பு றுந்தழல் அமைக்கென
வினைஞரை விடுத்தான். **#2676**

அங்ஙனமே எதிர் ஏற்றுச் சமணர்களும் வந்து பொருந்திய அளவில், ஒப்பில்லாத உண்மையையும் புகழையும் உடைய சீகாழித் தலைவரின் சொல்லால், சொலற்கரிய வன்மை உடைய மன்னனும் `திருந்தும் அரசவையின் முன்பு வெம்மை உடைய தீயை அமைப்பீராக!' என்று ஏவி, அதற்கான ஏவலர்களையும் அனுப்பினன்.

விளக்கவுரை

****

ஏய மாந்தரும் இந்தனங்
குறைத்துடன் அடுக்கித்
தீய மைத்தலும் சிகைவிடு
புகைஒழிந்து எழுந்து
காயும் வெவ்வழற் கடவுளும்
படரொளி காட்ட
ஆயும் முத்தமிழ் விரகரும்
அணையவந் தருளி. **#2677**

தீயை அமைக்க, ஏவப்பட்ட பணியாளர்களும் விறகை வெட்டி உடனே அடுக்கித் தீயினை அமைக்கவும், கொழுந்து விட்டு எரிதலால் புகையானது எழுந்து, பின் அது மாறப் பெற்று, சுடும் வெம்மையான தீக் கடவுளும் படரும் ஒளியினைக் காட்ட, உயர்ந் தோர் ஆய்கின்ற முத்தமிழ் வல்லுநரான பிள்ளையாரும், அத் தீயினுக்கு அருகே நெருங்கி வந்து,

விளக்கவுரை

****

செங்கண் ஏற்றவ ரேபொருள்
என்றுதாம் தெரித்த
பொங்கி சைத்திருப் பதிகநன்
முறையினைப் போற்றி
எங்கள் நாதனே பரம்பொருள்
எனத்தொழு தெடுத்தே
அங்கை யால்முடி மிசைக்கொண்டு
காப்புநாண் அவிழ்த்தார். **#2678**

சிவந்த கண்களையுடைய ஆனேற்று ஊர்தியை உடைய சிவபெருமானே உண்மைப் பொருளாவார் என, உலகம் அறிய உபதேசித்தருளிய, பொங்கும் இசையுடன் கூடிய திருப்பதிகங் களை எழுதிய நல்ல திருமுறைச் சுவடியைப் போற்றி, எங்கள் தலைவரான சிவபெருமானே முழுமுதற் கடவுளாய் எல்லோர்க்கும் மேலான பரம்பொருளாவார் என்று வணங்கி, கையால் எடுத்துத் திரு முடிமேற்கொண்ட பின்பு, அதன் காப்பான கயிற்றை அவிழ்த்தனர்.

விளக்கவுரை

இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

சாற்று மெய்ப்பொருள் தருந்திரு
முறையினைத் தாமே
நீற்று வண்கையால் மறித்தலும்
வந்துநேர்ந் துளதால்
நாற்ற டம்புயத் தண்ணலார்
மருவுநள் ளாறு
போற்றும் அப்பதிகம் போக
மார்த்தபூண் முலையாள். **#2679**

வணங்கும் மெய்ப்பொருளைத் தரும் திருமுறையினைத் தாமே திருநீறு பொருந்திய வள்ளன்மையுடைய கையினால் பிரித்த பொழுது, நான்கு பெரிய தோள்களையுடைய இறைவர் எழுந்தருளிய திருநள்ளாற்றினைப் போற்றிய பதிகம் நேர்பட வந்தது, அப்பதிகம் `போகமார்த்த பூண்முலையாள்' (தி.1 ப.49) எனத் தொடங்கும் திருப்பதிகமாக அமைந்திருந்தது.

விளக்கவுரை

****

அத்தி ருப்பதி கத்தினை
அமர்ந்துகொண் டருளி

மைத்த வெங்கடு மிடற்றுநள்
ளாறரை வணங்கி
மெய்த்த நற்றிரு ஏட்டினைக்
கழற்றிமெய்ம் மகிழ்ந்து
கைத்த லத்திடைக் கொண்டனர்
கவுணியர் தலைவர். **#2680**

அந்தத் திருப்பதிகத்தை விரும்பி மேற்கொண்டு, இருண்ட வெவ்விய நஞ்சு பொருந்திய கழுத்தையுடைய திருநள் ளாற்று இறைவரைப் போற்றி, உண்மை பொருந்திய நல்ல அவ்வேட் டைத் திருமுறைச் சுவடியினின்றும் பிரித்து எடுத்து, மெய்ம் மகிழ்ந்து ஞானசம்பந்தர் கையில் வைத்துக் கொண்டார்.

விளக்கவுரை

****

நன்மை உய்க்கும்மெய்ப் பதிகத்தின்
நாதனென் றெடுத்தும்
என்னை ஆளுடை ஈசன்தன்
நாமமே என்றும்
மன்னும் மெய்ப்பொரு ளாமெனக்
காட்டிட வன்னி
தன்னி லாகெனத் தளிரிள
வளரொளி பாடி. **#2681**

நன்மையில் செலுத்தும் மெய்யான அப்பதிகத் தால் போற்றப்பட்ட இறைவன் என்று எடுத்துக் கொண்டு, என்னை ஆளாக உடைய இறைவரின் நாமமே எப்போதும் நிலைபெறும் பொருளாம் எனக் காட்டும்படி, `தீயில் வேகாது இருப்பதாகுக!' என்று `தளரிள வளரொளி' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடி,

விளக்கவுரை

`தளரிள வளரொளி' (தி.3 ப.87) எனத் தொடங்கும் பதிகம் சாதாரிப் பண்ணிலமைந்ததாகும்.

செய்ய தாமரை அகவித
ழினும்மிகச் சிவந்த
கையி லேட்டினைக் கைதவன்
பேரவை காண
வெய்ய தீயினில் வெற்றரை
யவர்சிந்தை வேவ
வையம் உய்ந்திட வந்தவர்

மகிழ்ந்துமுன் னிட்டார். **#2682**

செந்தாமரை மலரின் அக இதழை விட மிகச் சிவந்த கையில் கொண்ட அந்த ஏட்டை, பாண்டியனின் அவையினர் காணுமாறு, ஆடையில்லாத அரையை உடைய சமணர்களின் மனங் கள் வெந்து அழியுமாறு, உலகுய்ய, கவுணியர் தலைவர் வெம்மை மிக்க தீயிடத்தில் மகிழ்ச்சியுடன் முன்னர் இட்டார்.

விளக்கவுரை

`போகம் ஆர்த்த' எனும் தொடக்கமுடைய திருப்பதிகத் தைத் தழலிலிட்டபொழுது அருளிய திருப்பதிகம், `தளிரிளவளர்ஒளி' எனத் தொடங்கும் சாதாரிப் பண்ணிலமைந்த திருப்பதிகமாகும்.

இட்ட ஏட்டினில் எழுதிய
செந்தமிழ்ப் பதிகம்
மட்டு லாங்குழல் வனமுலை
மலைமகள் பாகத்
தட்டமூர்த்தியைப் பொருளென
உடைமையால் அமர்ந்து
பட்ட தீயிடைப் பச்சையாய்
விளங்கிய தன்றே. **#2683**

மேற்கூறியவாறு ஞானசம்பந்தர் தம் கையால், தீயில் இட்ட ஏட்டில் எழுதப்பட்ட திருநள்ளாற்றுப் பதிகம், மணம் வீசும் கூந்தலையும் அழகிய மார்பகங்களையும் உடைய மலைமகளான உமையம்மையாரை ஒருமருங்கில் கொண்டவராகவும், எண்வகைப் பொருளாகவும் விளங்கும் சிவபெருமானையே பொருளாகக் கொண்டமையால், பொருந்திக் கிடந்த தீயிடையே வேகாமல் இருந்த துடன் பச்சையாயும் விளங்கியது.

விளக்கவுரை

போகமார்த்த பூண்முலையாள் தன்னொடும் பொன்னகலம்
பாகம்ஆர்த்த பைங்கண் வெள்ளேற் றண்ணல் பரமேட்டி
ஆகம்ஆர்த்த தோலுடையன் கோவண ஆடையின்மேல்
நாகம்ஆர்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

(தி.1 ப.49 பா.1) எனவரும் முதற்பாடலையுடைய பதிகமே தீயினில் இட்டதாகும். இதில் உமையம்மையாரைப் `போகமார்த்த பூண்முலை யாள்' என்றும், பெருமானை `நாகம் ஆர்த்த நம்பெருமான்' என்றும் குறிக்கப் பெறுகின்றது. இவ்வமைவு பதிகப் பாடல் தொறும் அமைந் துள்ளது. இப்பதிகம் பாடல்தொறும் உமையம்மையாரை மார்பக உறுப்பொடுபடுத்துக் கூறற்குக் காரணம், அம்மையாரிடத்துள்ள

அவ்வுறுப்பு உடற்குற்ற போகத்தைக் கொடுத்து வினையை வீட்டு தலன்றி, உயிர்க்குற்ற போகத்தைக் கொடுத்துச் சிவஞானத்தையும் வழங்கி உய்விக்கும் தகையதாலேயாம். இவ்வநுபவம்தானும், தாம் பெற்றமை தோன்றத் திருக்கடைக்காப்பில், `சிற்றிடை அரிவைதன் வனமுலை இணையொடு செறிதரும், நற்றிறம் உறுகழுமலநகர் ஞான சம்பந்தன்' என்றார். நற்றிறம் - சிவஞானம். `துணைமுலைகள், பொழி கின்ற பால் அடிசில் பொன்வள்ளத்து ஊட்டுக' என இறைவன் அருளி யதும், அம்மையார் `வார்இணங்கு திருமுலைப்பால் வள்ளத்துக் கறந்தருளி எண்ணரிய சிவஞானத்து இன்னமுதமும் குழைத்தருளி உண்அடிசில்' என ஊட்டியதும் பிள்ளையாரின் திருஉள்ளத்தில் அழுந்தி நின்றதால் அவ் அருள்திறனே இப்பதிகத்தில் கமழ்கின்றது.
திருநள்ளாற்றிற்குத் தாம் சென்ற பொழுது `போகமார்த்த பூண் முலையாள்' எனத் தொடங்கிப் பாட நேர்ந்ததும், இதுபொழுது திருமுறைத் தொகுப்பில் கயிறு சார்த்திப் பார்க்க இப்பதிகம் வர நேர்ந்ததும் ஆகியன திருவருள் தந்த அநுபவமேயாகும். இப்பதிகத்தில் `நம்பெருமான்' எனப் பாடல் தொறும் வரும் குறிப்பும் `தளிர் இள வளர்ஒளி' எனத் தொடங்கி வரும் பதிகத்துப் பாடல்தொறும் பெருமானின் நாமமே எரியிடில் பழுதில என அரு ளும் நெறியும் ஒப்பிட்டுக் காண, அப்பெருமானின் திருநாமம் நம் பெருமான் என்பதே ஆகும் என்பது தெளிவு. இதுவன்றித் தற் பொழுது தர்ப்பாரண்யேசுவரர் என அழைத்து வருவது பின்வந் தோரின் புனைவேயாகும்.

மையல் நெஞ்சுடை அமணரும்
தம்பொருள் வரைந்த
கையில் ஏட்டினைக் கதுவுசெந்
தீயினில் இடுவார்
உய்யு மோஇது வெனஉறும்
கவலையாம் உணர்வால்
நையும் நெஞ்சின ராகியே
நடுங்கிநின் றிட்டார். **#2684**

மயக்கம் கொண்ட மனமுடையவர்களான சமணர்களும், தம் சமய உண்மைப் பொருளை எழுதிய தம் கையில் கொண்ட ஏட்டை, வெப்பம் மிகுந்து காய்கின்ற தீயில் இடுபவராய் `இது தீயிலே வேகாது எஞ்சியிருக்குமோ?' என்ற கவலை கொண்ட உணர்வால், அழிகின்ற உள்ளத்தை உடையவராய், நடுங்கியவாறு தீயில் இட்டனர்.

விளக்கவுரை

****

அஞ்சும் உள்ளத்த ராகியும்

அறிவிலா அமணர்
வெஞ்சு டர்ப்பெருந் தீயினில்
விழுத்திய ஏடு
பஞ்சு தீயிடைப் பட்டது
படக்கண்டு பயத்தால்
நெஞ்சு சோரவும் பீலிகை
சோர்ந்திலர் நின்றார். **#2685**

அச்சம் கொண்ட உள்ளம் உடையவர் ஆயினும் அதனால் அறிவு பெறாத சமணர்கள், வெம்மையான தீயில் இட்ட ஏடு நெருப்பிலிட்ட பஞ்செனஅழிந்ததைக் கண்டு, அச்சத்தினால் மனம் தளர்வடைந்த பின்பும், கையில் ஏந்திய மயிற்பீலியை விடாதவராய் நின்றனர்.

விளக்கவுரை

****

மான மன்னவன் அவையின்முன்
வளர்த்தசெந் தீயின்
ஞானம் உண்டவர் இட்டஏ
டிசைத்தநா ழிகையில்
ஈனம் இன்மைகண் டியாவரும்
வியப்புற எடுத்தார்
பான்மை முன்னையிற் பசுமையும்
புதுமையும் பயப்ப. **#2686**

பெருமை உடைய பாண்டியனின் அவை முன்பு வளர்க்கப்பட்ட தீயினில் இட்ட ஏடு, குறிப்பிட்ட நாழிகையளவில் அழிவு பெறாமல் இருந்ததைப் பார்த்து, முன்னைவிடப் பசுமையான தன்மையும் புதிய தன்மையும் உள்ளதாய் இருக்க, அனைவரும் வியப்படைந்த நிலையில், தீயினின்றும் ஞான அமுது உண்டவரான சம்பந்தர் எடுத்தார்.

விளக்கவுரை

****

எடுத்த ஏட்டினை அவையின்
முன் காட்டிஅம் முறையில்
அடுத்த வண்ணமே கோத்தலும்
அதிசயித் தரசன்
தொடுத்த பீலிமுன் தூக்கிய
கையரை நோக்கிக்
கடுத்து நீரிட்ட ஏட்டினைக்
காட்டுமின் என்றான். **#2687**

அங்ஙனம் அத்தீயினின்றும் எடுக்கப்பட்ட அவ்வேட்டை, அவையின் முன்காட்டி, முன்பிரித்து எடுத்த முறை யிலே மீளப் பொருந்தும்படி சுவடியுள் கோத்தலும், பாண்டியன் வியப்பு அடைந்து, கற்றையாய்க் கட்டிய மயிற்பீலியைக் கையில் கொண்ட அமணர்களைப் பார்த்துச் சினந்து, `நீவிர் தீயில் இட்ட ஏட்டைக் காட்டுங்கள்!' என்றான்.

விளக்கவுரை

****

அருகர்தாம் இட்ட ஏடு
வாங்கச்சென் றணையும் போதில்
பெருகுதீக் கதுவ வெந்து
போந்தமை கண்ட மன்னன்
தருபுனல் கொண்டு செந்தீத்
தணிப்பித்தான் சமணர் அங்குக்
கருகிய சாம்ப ரோடும்
கரியலால் மற்றென் காண்பார். **#2688**

சமணர்தாம் இட்ட ஏட்டைத் தீயினின்றும் எடுக்க அணுகியபோது, பெருகிய தீச் சுட்டமையால், உடல் வெந்து புடை பெயர்ந்து சென்றதைப் பார்த்த மன்னன், கொண்டு தரப்படும் நீரைக் கொண்டு தீயைத் தணிக்கச் செய்தான். சமணர்கள் அங்கே சாம்பலும் கரியுமல்லாமல் வேறு எதனைக் காண்பார்?

விளக்கவுரை

****

செய்வதொன் றறிகி லாதார்
திகைப்பினால் திரண்ட சாம்பல்
கையினாற் பிசைந்து தூற்றிப்
பார்ப்பது கண்ட மன்னன்
எய்திய நகையி னோடும்
ஏடின்னம் அரித்துக் காணும்
பொய்யினால் மெய்யை யாக்கப்
புகுந்தநீர் போமின் என்றான். **#2689**

மேல் செயத்தக்கது ஒன்றும் அறிய மாட்டாத அச்சமணர்கள், திகைப்பால் அங்கே திரண்ட சாம்பலைக் கையால் பிசைந்து தூற்றி ஏட்டைத் தேடிப் பார்த்தலைக் கண்ட மன்னன், பொருந்திய புன்சிரிப்புடன் `இன்னும் ஏட்டை அரித்துப் பாருங்கள், பொய்ம்மை நெறியைத் துணையாய்க்கொண்டு அதனை மெய்ப் பொருளாக விளக்கப் புகுந்த நீங்கள் அகன்று செல்லுங்கள்' என்று சொன்னான்.

விளக்கவுரை
****

வெப்பெனுந் தீயில் யான்முன்
வீடுபெற் றுய்ய நீங்கள்
அப்பொழுது அழிந்து தோற்றீர்
ஆதலால் அதுஆ றாக
இப்பொழு தெரியில் இட்ட
ஏடுய்ந்த தில்லை என்றால்
துப்புர வுடையீர் நீங்கள்
தோற்றிலீர் போலு மென்றான். **#2690**

`வெப்பு நோயான தீயினின்றும் நான், முன் சம்பந்தரால் வீடுபெற்று உய்ந்திட, நீங்கள் வாதில் அழிந்து தோற்றீர்கள், ஆகையால், அதனைத் தொடர்ந்து இப்போது தீயில் இட்ட ஏடு, நிலை பெறாமல் ஒழிந்து விட்டது என்றால், வல்லமை மிக்கவர்களே! நீங்கள் தோற்கவில்லைப் போலும்', எனக் கூறினான்.

விளக்கவுரை
****

தென்னவன் நகையுட் கொண்டு
செப்பிய மாற்றந் தேரார்
சொன்னது பயனாக் கொண்டு
சொல்லுவார் தொடர்ந்த வாது
முன்னுற இருகாற் செய்தோம்
முக்காலில் ஒருகால் வெற்றி
என்னினும் உடையோம் மெய்ம்மை
இனியொன்று காண்ப தென்றார். **#2691**

பாண்டியன் இகழ்ச்சியான புன்சிரிப்பையும், சொல்லிய மாற்றங்களையும் உள்ளத்துள் தெளிந்து கொள்ளாதவ ராய், சொன்ன சொல்லளவில் அதன் பொருள் இது எனத் தெளியாது, அச்சொல்லையே மேற்கொண்டு கூறுபவர்களாய்த் தொடர்ந்த வாத மாக, `முன்பு இரு முறை செய்தோம், மும்முறையில் ஒருமுறை யேனும் வெற்றியடைவோம்! ஆதலால் உண்மைத் திறம் இனியும் ஒரு முறை காணத் தக்கதாகும்!' என்றனர்.

விளக்கவுரை
****

தோற்கவும் ஆசை நீங்காத்
துணிவிலார் சொல்லக் கேட்டிம்

மாற்றமென் னாவ தென்று
மன்னவன் மறுத்த பின்னும்
நீற்றணி விளங்கு மேனி
நிறைபுகழ்ச் சண்பை மன்னர்
வேற்றுவா தினியென் செய்வ
தென்றலும் மேற்கோள் ஏற்பார். **#2692**

ஒருமுறைக்கு இருமுறை தோற்கவும் ஆசை நீங்கப் பெறாத உண்மைத் தெளிவிலாத சமணர்கள், இவ்வாறு கூறக் கேட்ட, மன்னன் `இம் மாற்றத்தால் ஆவதென்ன?' என்று கூறி மறுத்த பின்பும், திருநீற்றின் அழகு விளங்கும் திருமேனியையும், நிறைந்த புகழையுடைய சீகாழித் தலைவர், `இனிச் செய்யக் கூடிய வேறு வாது யாது?' என வினவவும், வாதம் செய்வதை மேற்கொண்ட அச் சமணர்கள்,

விளக்கவுரை

****

நீடுமெய்ப் பொருளின் உண்மை
ஏடுற எழுதி மற்றவ்
நிலைபெறுந் தன்மை எல்லாம்
நிலைபெறுந் தன்மை எல்லாம்
வேட்டினை யாமும் நீரும்
ஓடுநீர் ஆற்றில் இட்டால்
ஒழுகுதல் செய்யா தங்கு
நாடிமுன் தங்கும் ஏடு
நற்பொருள் பரிப்ப தென்றார். **#2693**

`நிலையான மெய்ப்பொருளின் வாய்மையா னது நிலைபெறும் தன்மையில் தொடுத்து, ஏட்டில் பொருந்த எழுதி, அவ்வேடுகளை யாமும் நீரும், ஓடிக் கொண்டிருக்கின்ற நீரினை உடைய ஆற்றில் இடுவோமானால், நீருடனே ஓடுவதின்றி, இட்ட அந்த இடத்தைப் பற்றி முன்னர்த் தங்கும் ஏடுளதுவோ அதுவே நல்ல பொருளை உடையதாகும்!' என்று உரைத்தனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

என்றமண் கையர் கூற
ஏறுசீர்ப் புகலி வேந்தர்
நன்றது செய்வோம் என்றங்
கருள்செய நணுக வந்து
வென்றிவேல் அமைச்ச னார்தாம்

வேறினிச் செய்யும் இவ்வா
தொன்றினுந்தோற்றார் செய்வ
தொட்டியே செய்வ தென்றார். **#2694**

என்று அச்சமணர்கள் சொல்ல, மேன் மேலும் பெருகும் சிறப்பையுடைய சீகாழித் தலைவர், `நல்லது! அதுவே செய்வோம்!' என்று அருளிச் செய்தார். வெற்றியுடைய வேல் ஏந்திய அமைச்சரான குலச்சிறையார் அருகில் வந்து, `வேறு இனிச் செய்யப் புகும் இந்த வாதம் ஒன்றிலும் தோற்பவர், அதன்பின் செய்வது இது என்று ஒட்டுதல் வேண்டும்' என்று இயம்பினார்.

விளக்கவுரை

ஒட்டுதல் - தோற்றவர் இழக்க நேர்வதையும், வென்றவர் பெற நேர்வதையும் முற்கூறித் தொடங்குவதாகும். இதனை உலகிய லில் பந்தயம் என்பர்.

அங்கது கேட்டு நின்ற
அமணரும் அவர்மேற் சென்று
பொங்கிய வெகுளி கூரப்
பொறாமைகா ரணமே யாகத்
தங்கள்வாய் சோர்ந்து தாமே
தனிவாதில் அழிந்தோ மாகில்
வெங்கழு ஏற்று வான்இவ்
வேந்தனே யென்று சொன்னார். **#2695**

அங்கு அவர் உரைத்ததைக் கேட்ட சமணர்கள், அவ்விடத்து மேற்கொண்டு பொங்கிய சினம் மிகுதியால், பொறா மைக் குணமும் மீதூர, தம் வாய் சோர்ந்து, `இந்த ஒரு வாதத்திலும் தோற்றோம் எனில், இம்மன்னனே எங்களைக் கொடிய கழுவில் ஏற்றுவானாக!'என்று தாங்களே கூறினர்.

விளக்கவுரை

****

மற்றவர் சொன்ன வார்த்தை
கேட்டலும் மலய மன்னன்
செற்றத்தால் உரைத்தீர் உங்கள்
செய்கையும் மறந்தீ ரென்று
பற்றிய பொருளின் ஏடு
படர்புனல் வைகை யாற்றில்
பொற்புற விடுவ தற்குப்
போதுக என்று கூற. **#2696**

அவர்கள், அங்ஙனம் உரைத்ததைக் கேட்ட பொதியமலையின் அரசனான பாண்டிய மன்னன், `நீங்கள் சினம் மிகுதியினால் இங்ஙனம் கூறி விட்டீர்கள். உங்கள் செய்கைகளையும் மறந்துவிட்டீர்கள்!' என்று சொல்லிப்பின், `உண்மை பற்றிய பொருளை உட்கொண்ட உம் ஓலைகளை ஓடும் நீரையுடைய வைகையாற்றில் அழகுபொருந்த விடுவதற்குச் செல்லுங்கள்' என்று கூற,

விளக்கவுரை

உங்கள் செய்கை, இதுகாறும் ஒவ்வொன்றாக வாதம் செய்து வருவதும், அவையனைத்திலும் தோல்வியுற்று வருவதுமாய செய்கை.

பிள்ளையார் முன்னம் பைம்பொற்
பீடத்தின் இழிந்து போந்து
தெள்ளுநீர்த் தரளப் பத்திச்
சிவிகைமே லேறிச் சென்றார்
வள்ளலார் அவர்தம் பின்பு
மன்னன்மா ஏறிச் சென்றான்
உள்ளவாறு உணர்கி லாதார்
உணர்வுமால் ஏறிச் சென்றார். **#2697**

ஞானசம்பந்தர் பசும் பொன்னால் ஆன பீடத் தினின்றும் முன்னம் எழுந்து, வெளியில் வந்து, தெளிந்த நீர்மையு டைய முத்துக்கள் நிரல்படப் பதித்த சிவிகையின் மீது ஏறி வைகைக் கரைக்குச் சென்றார். வள்ளலாரான அவர் பின்பு, மன்னன் குதிரை மீது ஏறிச் சென்றான். உண்மையை உள்ளபடி உணர்ந்து ஒழுகுகின்ற ஆற்றல் அற்ற சமணர்கள், தம் உணர்வெனும் மயக்கத்தை மேற் கொண்டு சென்றனர்.

விளக்கவுரை

வள்ளலாரும், மன்னனும் தத்தமக்கு ஏற்ற ஊர்தியின் மேல் ஏறிச் செல்ல, அமணர்கள் மட்டும் ஊர்தியின்றிச் செல்லல் தகாது எனத் திருவுளம் கொண்ட ஆசிரியர் சேக்கிழார், தத்தம் மனத்துட் கொண்ட மயக்கமாகிய ஊர்தியில் ஏறிச் சென்றார்கள் என நகைச் சுவைபடக் கூறியிருக்கும் திறம் அறிந்து இன்புறற்குரியதாம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

தென்னவன் வெப்புத் தீர்ந்து
செழுமணிக் கோயில் நீங்கிப்
பின்னுற அணைந்த போது
பிள்ளையார் பெருகுஞ் செல்வம்
மன்னிய மதுரை மூதூர்
மறுகில்வந் தருளக் கண்டு
துன்னிய மாதர் மைந்தர்

தொழுதுவே றினைய சொன்னார். #2698
பாண்டியன் வெப்பு நோய் நீங்கிச் செழுமையான அரண்மனையினின்றும் புறப்பட்டுத் தம் பின்னே நெருங்கிவர, பெருகும் செல்வம் நிலையாக நிறைந்த மதுரையான பழம் பதியின் தெருவில் பிள்ளையார் வந்தருளுவதைக் கண்டு, வந்து நெருங்கிய மங்கையரும் மைந்தர்களும் வணங்கி, தத்தமக்குத் தோன்றியவாறே தம்மனத்துட் பட்ட கருத்துக்களைச் சொல்வாராயினர்.

விளக்கவுரை

****

மீனவன் கொண்ட வெப்பை
நீக்கிநம் விழுமந் தீர்த்த
ஞானசம் பந்தர் இந்த
நாயனார் காணும் என்பார்
பானறுங் குதலைச் செய்ய
பவளவாய்ப் பிள்ளை யார்தாம்
மானசீர்த் தென்னன் நாடு
வாழவந் தணைந்தார் என்பார். #2699

`பாண்டியன் அடைந்த வெப்புநோயை நீக்கி, நம் வருத்தத்தை நீக்கியருளிய திருஞானசம்பந்தர் இந் நாயனார்! பாருங் கள்!' என்பார்கள், `பால் மணம் கமழும் குதலைச் சொல் எழும் பவளம் போன்ற வாயையுடைய பிள்ளையார் பெருஞ் சிறப்புடைய பாண்டிய நாடு வாழும் பொருட்டு இங்கு வந்து சேர்ந்தார்' என்பார்கள்.

விளக்கவுரை

****

எரியிடை வாதில் தோற்ற
திவர்க்குநம் அருகர் என்பார்
புரிசடை அண்ணல் நீறே
பொருளெனக் கண்டோம் என்பார்
பெருகொளி முத்தின் பைம்பொற்
சிவிகைமேற் பிள்ளை யார்தாம்
வருமழ கென்னே என்பார்v வாழ்ந்தன கண்கள் என்பார். #2700

`நெருப்பில் செய்த வாதத்தில் நம் சமணக் குருமார்கள் தோற்றது இவருக்கு என்பார், புரிந்த சடையையுடைய சிவபெருமானின் திருநீறே மெய்ப்பொருளாவது என்பதைக் கண் ணாரக் கண்டோம் என்பார், பெருகும் ஒளியுடைய முத்துகள் பதித்த பசும் பொன்னால் இயன்ற சிவிகையில் மேலே பிள்ளையார் வரும் அழகுதான் என்னே! என்பார்,

`இக்காட்சியைக் கண்டு நம்கண்கள் வாழ்ந்தன' என்பார்.

விளக்கவுரை

****

ஏதமே விளைந்த திந்த
அடிகள்மார் இயல்பா லென்பார்
நாதனும் ஆல வாயில்
நம்பனே காணு மென்பார்
போதமா வதுவும் முக்கட்
புராணனை அறிவ தென்பார்
வேதமும் நீறு மாகி
விரவிடும் எங்கும் என்பார். **#2701**

`இச் சமணக் குருமார்கள் இயல்பால் தீமையே விளைந்தது என்பார். `முழுமுதற் கடவுளாவார் ஆலவாயில் வீற்றி ருக்கும் இறைவனே எனக் கண்டு மகிழுங்கள்' என்பார். `மூன்று கண் களையுடை பழமையான சிவபெருமானை அறிவதே ஞானமாகும்' என்பார். `மறைகளும் திருநீறுமே எங்கும் நிறைந்தனவாகிப் பரவி டும்!' என்பார்.

விளக்கவுரை

****

அடிகள்மார் முகங்கள் எல்லாம்
அழிந்தன பாரீர் என்பார்
கொடியவஞ் சனைகள் எல்லாம்
குலைந்தன போலும் என்பார்
வடிகொள்வேல் மாறன் காதல்
மாறின வண்ணம் என்பார்
விடிவதாய் முடிந்த திந்த
வெஞ்சமண் இருளும் என்பார். **#2702**

`சமண முனிவர்களின் முகங்கள் எல்லாம் வாடிவிட்டன பாருங்கள்' என்பார். `கொடிய வஞ்சனைகள் எல்லாம் அழிந்தன போலும்' என்பார். `கூர்மையான வேலையுடைய பாண்டி யன் சமணக் குருமார்கள் மீது வைத்திருந்த பற்று மாறிவிட்ட வண் ணம்தான் என்னே' என்பார். `இக் கொடிய சமணமாகும் இருளும் நீங்கி இன்று புலர்ந்து விடிவதாய் முடிந்தது' என்பார்.

விளக்கவுரை

****

நெருப்பினில் தோற்றார் தாங்கள்
நீரில்வெல் வர்களோ என்பார்

இருப்புநெஞ் சுடைய ரேனும்
பிள்ளையார்க் கெதிரோ என்பார்
பருப்பொரு ளுணர்ந்தார் தாங்கள்
படுவன பாரீர் என்பார்
மருப்புடைக் கழுக்கோல் செய்தார்
மந்திரி யார்தா மென்பார். #2703

`அனல் வாதத்தில் தோற்றவர், புனல் வாதத்தில் வெல்வார்களோ!' என்பார். `இரும்பு மனம் உடையவராயினும் இப்பிள்ளையாருக்கு எதிராக நிற்க வல்லரோ?' என்பார். `நுண்பொ ருளை விடுத்துப் பருப்பொருளை மட்டும் உணர்ந்த அவ்வளவில் அடங்கிய சமணர்கள்பட இருக்கும் முடிவினைப் பாருங்கள்' என்பார் `கொம்புகளைப் போன்ற கூர்மையான கழுமரங்களை அமைச்சரான குலச்சிறையார் தாம் செய்வித்துள்ளார்' என்பார்.

விளக்கவுரை

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. *(குறள், 355)* என்பர் திருவள்ளுவர். உணர்வில் நேர்பெறக் காணத்தக்க மெய்ப் பொருளை, உடலானும், உரையானும் முறையே கொண்ட வேடத் தானும், மனத்தின் அமையாது சொல்லும் சொற்களாலும் மட்டுமே காண்டற்கு முற்படின் காணத் தகுமோ*?* தகாது. ஆதலின் சமணர்களைப் `பருப்பொருள் உணர்ந்தார்' என்ற அளவிலேயே வைத்துப் பேசு கிறார் ஆசிரியர்.

ஏடுகள் வைகை தன்னில்
இடுவதற் கணைந்தார் என்பார்
ஓடுநீ ருடன்செ லாது
நிற்குமோ ஓலை என்பார்
நீடிய ஞானம் பெற்றார்
நிறுத்தவும் வல்லர் என்பார்
நாடெலாங் காண இங்கு
நண்ணுவர் காணீர் என்பார். #2704

`சமணர்கள் வைகை ஆற்றில் ஏடுகளை இடுவதற்காக வந்தார்கள்' என்பார். `ஓடுகின்ற நீரில் இடப்பட்ட ஓலை, ஓடாது ஓரிடத்தில் நிற்குமோ?' என்பார். `சீரிய ஞானம் கைவரப்பெற்ற பிள்ளையார், அவ்வேடுகளை நிறுத்தவும் வல்லார்' என்பார். `நாடெல் லாம் காணத்தக்க பிள்ளையார் இதுபொழுது வருவர், நேரில் பாருங்கள்!' என்பார்.

விளக்கவுரை

****

தோற்றவர் கழுவி லேறத்
துணிவதே அருகர் என்பார்
ஆற்றிய அருளின் மேன்மைப்
பிள்ளையார்க்கு அழகி தென்பார்
நீற்றினால் தென்னன் தீங்கு
நீங்கிய வண்ணங் கண்டார்
போற்றுவா ரெல்லாஞ் சைவ
நெறியினைப் போற்று மென்பார். **#2705**

`தோல்வியுற்றவர் கழுவில் ஏறச் சமணர் துணியலாமோ?' என்பார். `இதுகாறும் செய்து காட்டி அருளின் மேம் பாட்டினையுடைய பிள்ளையாருக்கு இஃது அழகேயாகும்' என்பார். `திருநீற்றினால் பாண்டியர் தீங்கினின்றும் நீங்கிய தன்மையைக் கண்டவர் யாவரும் சைவத் திறத்தைப் போற்றுவர், ஆதலால், எல்லோரும் சைவ நெறியினையே போற்றுங்கள்' என்பார்.

விளக்கவுரை

மடத்தில் மந்திர விதியினால் தீயிடத் துணிந்தது, பாண்டி யருக்குற்ற வெப்புத் தீயை நீக்க முற்பட்டது, அனல் வாதம் செய்யத் துணிந்தது ஆகிய மூன்றினுமே தோல்வியுற்றவர்கள் சமணர்கள். இங்ஙனம் தொடர்ந்து தோல்வியுற்று வருபவர்களை வெங்கழு ஏற்று வான் வேந்தனேயாக என்றல் தகுமோ எனில் தகும். சைவரோடு தாம் வாழ்ந்திருந்த திருமடத்தில் தீயிட்ட போதும், அதனைப் `பையவே சென்று பாண்டியற்காகவே' என்று கூறிப் பாண்டியற்கு ஆக்கம் கண்டவர் பிள்ளையார். அச்சமணர்களை வெல்லவும் அவர்கள் குற்றம் நீங்க ஒறுக்கவும் இறைவனின் திருவருட்குறிப்பை ஒரு முறைக்கு இருமுறை அறிந்து வந்தவர். அவர்கள் கூறிய வாதங்களை எல்லாம் தொடர்ந்து ஏற்றுக் கொண்டவர். இவ்வாறு அமைதியும் அருளும் கொண்டு நிற்கும் பிள்ளையார், இறுதியாக அவர்கள் தாமே ஒட்டி நின்ற வாதிற்கு இசைதல் ஏலாதாயின், சைவ மெய்ப் பொருள் உண்மையை நிலைநாட்ட இயலாமல் போகும். அன்றியும் அவ்வம ணர் தாமே ஒட்டிச் செய்யும் வாதில் அரசன் முறை செய்யுங்கால் தாம் தடுப்பது முறையும் அன்று. ஆதலின் பிள்ளையாரின் அருட்செயல் அழகிது என்றார். இவ்வகையான் எல்லாம் அறியத்தக்கது சைவ மெய்ச் சார்பே ஆதலின் அதனை அனைவரும் போற்றும் கடப்பா டுடையர் என்றனர். இக்கூற்றுக்கள் இனி நிகழப் போகும் நிலையினை உட்கொண்டனவாயும் கண்டோரின் கூற்றுக்களின் நிறைவானவை யாயும் அமைந்திருப்பது அறிந்து மகிழ்தற்குரியதாம். இவ்வேழு

பாடல்களும் பொருள் வகையால் ஒருமுடிபின.

இன்னன இரண்டு பாலும்
ஈண்டினர் எடுத்துச் சொல்ல
மின்னொளி மணிப்பொற் காம்பின்
வெண்குடை மீது போதப்
பன்மணிச் சிவிகை தன்மேற்
பஞ்சவ னாட்டு ளோர்க்கு
நன்னெறி காட்ட வந்தார்
நான்மறை வாழ வந்தார். **#2706**

தெருவின் இருமருங்கிலும் நின்றவர்கள் இன்னோரன்னவற்றை எடுத்துக் கூற, மின் போன்ற ஒளியையுடைய அழகான பொற்காம்பையுடைய வெண்குடைமேலே நிழற்றப் பல மணிகள் பதித்த சிவிகையின் மீது நான்மறைகளும் வாழும் பொருட்டு வந்தருளிய பிள்ளையார், பாண்டிய நாட்டில் உள்ளவர்களுக்கு நன்னெறியைக் காட்டும் பொருட்டு வந்தருளினார்.

விளக்கவுரை

****

தென்றமிழ் விளங்க வந்த
திருக்கழு மலத்தான் வந்தான்
மன்றுளார் அளித்த ஞான
வட்டில்வண் கையன் வந்தான்
வென்றுல குய்ய மீள
வைகையில் வெல்வான் வந்தான்
என்றுபன் மணிச்சின் னங்கள்
எண்டிசை நெருங்கி ஓங்க. **#2707**

அழகிய தமிழ் மேலும் விளங்குமாறு தோன்றிய திருக்கழுமலத்தோரான பிள்ளையார் வந்தருளினார், தில்லைக்கூத்தர் அளித்த சிவஞானப் பாலையுடைய பொற்கிண்ணத்தைப் பெற்ற அருட்கொடை வளரும் திருக்கைகளையுடைய பிள்ளையார் வந்த ருளினார், முன்னுற்ற வாதங்களில் வென்ற பிள்ளையார், இனிவரும் புனல் வாதத்திலும் வெல்ல வந்தருளினார் என்று இவ்வாறு பல அழ கிய முத்துச் சின்னங்கள் எண் திசைகளிலும் நெருங்கி ஒலிக்க.

விளக்கவுரை

****

பன்மணி முரசம் சூழ்ந்த
பல்லியம் இயம்பப் பின்னே

தென்னனும் தேவி யாரும்
உடன்செலத் திரண்டு செல்லும்
புன்னெறி அமணர் வேறோர்
புடைவரப் புகலி வேந்தர்
மன்னிய வைகை யாற்றின்
கரைமிசை மருவ வந்தார். **#2708**

அழகிய முரசுகள் பலவுடன் இணைந்த பலவகை இயங்களும் ஒலிக்க, தம் பின்பு அரசனும் அரசமாதேவியாரும் சேர்ந்து வரக் கூட்டமாய்த் திரண்டு வரும் புல்லிய நெறியில் நின்ற சமணர்கள் வேறு ஒரு பக்கத்தில் வரச் சீகாழி வேந்தரான ஞான சம்பந்தர், நிலை பெற்ற வைகையாற்றின் கரைமீது பொருந்தும்படி எழுந்தருளி வந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

கார்கெழு பருவம் வாய்ப்பக்
காமுறு மகளிர் உள்ளம்
சீர்கெழு கணவன் தன்பால்
விரைவுறச் செல்லு மாபோல்
நீர்கெழு பௌவம் நோக்கி
நிரைதிரை இரைத்துச் செல்லும்
பார்கெழு புகழின் மிக்க
பண்புடை வைகை யாறு. **#2709**

கார்காலம் வந்ததும் விருப்பம் மிக்க மகளிரின் மனம் சிறப்புடைய தம் கணவரிடம் விரைந்து செல்வதைப் போல உலகில் புகழால் மிக்க அன்புடைய வைகை ஆறு, நீர் மிக்க கடலை நோக்கி வரிசையான அலைகளால் ஒலி மிக்குச் செல்லும்.

விளக்கவுரை

இப்பாடல் எல்லாப் பதிப்புக்களிலும் உள்ளது. எனி னும் பொருளியைபுபட்டு நிற்கும் வரலாற்றுத் தொடர்போடு இப்பாடல் இயையாமையானும், வைகையாறு கடலோடு கலக்கும் தகையது அன்றாதலானும், இஃது இடைச் செருகலாக இருக்குமெனச் சிவக் கவிமணியார் கருதுவார். `கடல் ஒருவர்க்கும் உதவாத உவரியென மடுத்தறியாப் புனல் வைகை' *(பா.2)* எனப் பரஞ்சோதியாரும் கூறுவர் *(வாதவூரர்- உபதேசப் படலம்)*. இதற்கேற்ப, வைகை இன்றும் இராம நாதபுரம் மாவட்டம் இராஜசிங்கமங்கலம் என்னும் கண்மாயிலேயே பாய்ந்து வருகிறது என்ப. எனினும் *814, 816*ஆவது பாடல்களில் வைகை கடலில் கலக்குமாற்றை ஆசிரியர் கூறுதலானும், மேலும் எண்ணித்

துணிதல் தக்கதாதலானும் இப்பதிப்பில் இப்பாடல் கொள் ளப்பட்டது.

ஆற்றில்நீர் கடுக வோடும்
மருங்குற அரசன் நோக்கி
நீற்றணி திகழ்ந்த மேனி
நிறைமதிப் பிள்ளை யாரும்
வேற்றுரு அருகர் நீரும்
விதித்தஏ டிடுக என்றான்
தோற்றவர் தோலா ரென்று
முன்னுறத் துணிந்திட் டார்கள். **#2710**

மேற்கூறியவாறு ஞானசம்பந்தரும் மற்றும் உள்ளவரும் ஆற்றின் நீர் விரைந்து செல்லும் வைகையாற்றின் கரையைச் சேர, `திருநீற்றின் அழகு விளங்கிய நிறைமதி போன்ற ஞானசம்பந்தரும், அதற்கு மாறான உருவு கொண்ட அருகர்களாகிய நீங்களும் முன் இசைந்தவாறு உங்கள் ஏடுகளை இவ்வாற்றில் இடுங்கள்' என்று பாண்டியன் கூறச் சமணர்கள் முதலில் தோற்றவர்கள் பின்னும் தோற்கமாட்டார்கள் என்ற உலகியல் வழக்கை உளங் கொண்டு, முற்பட ஏட்டை ஆற்றில் இடத் துணிந்தனர்.

விளக்கவுரை

இன்ப துன்பங்கள் மாறி மாறி வருதல் இயற்கை என்றும், தோல்வி வெற்றிக்கு அறிகுறி என்றும் உலகியலில் கூறப் படும் வழக்கை நோக்கிச் சமணர்களும் இங்ஙனம் கருதினர். `துன்ப முற்றவர்க்கலால் இன்பமில்லையாதலால்' *(சீவக. 579)* எனத் திருத் தக்கதேவரும், `துன்பம் துன்பம் துன்பம், துன்பத்திற்கோர் எல்லை காணின் இன்பம் இன்பம் இன்பம்' பாரதியாரும் கூறுவன காண்க.

படுபொரு ளின்றி நெல்லிற்
பதடிபோல் உள்ளி லார்மெய்
அடுபவர் பொருளை அத்தி
நாத்திஎன் றெழுதி ஆற்றில்
கடுகிய புனலைக் கண்டும்
அவாவினாற் கையிலேடு
விடுதலும் விரைந்து கொண்டு
வேலைமேற் படர்ந்த தன்றே. **#2711**

உள்ளீடு இல்லாத நெற்பதர் போன்ற மெய்ம்மையான உள்ஈடு இல்லாத அமணர்கள், மெய்ப்பொருளைப் பொய்ப் பொருள் எனக் கூறுவோராய், ஆருகத நூலில் கூறும் பொருள் தொகுதியான `அத்தி நாத்தி' என்பதை ஏட்டில் எழுதி, ஆற்றில் விரைந்தோடும் நீரைக் கண்டும், கையில் கொண்ட ஏட்டைப் பேராசை யால் விடுத்திட, அவ்வாற்றின் வெள்ளம் அப்போதே அதைக் கொண்டு கடலை நோக்கி விரைந்து சென்றது.

விளக்கவுரை

அத்தி நாத்தி என்பது சமணர்களின் மந்திரம். அத்தி - உண்டு. நாத்தி - இல்லை. எனவே இது `உண்டு' என்பதைத் தாமே மறுத்துக் கூறுவதாகும்.

ஆறுகொண் டோடும் ஏட்டைத்
தொடர்ந்தெதி ரணைப்பார் போலத்
தேறுமெய் யுணர்வி லாதார்
கரைமிசை ஓடிச் சென்றார்
பாறுமப் பொருள்மேற் கொண்ட
பட்டிகை எட்டா தங்கு
நூறுவிற் கிடைக்கு முன்னே
போனது நோக்கிக் காணார். **#2712**

இழுத்துக் கொண்டு ஓடுகின்ற ஏட்டைத் தொடர்ந்து சென்று, எதிரே ஓடாமல் அணைப்பவர் போலத் தெளியும் உண்மை அறிவு இல்லாத சமணர்கள் ஆற்றின் கரைமேல் ஓடிச் சென்ற னர். அழியும் பொருளை மேற்கொண்ட அவ்வேடு கிட்டாது அங்குக் கீழ் நோக்கி நூறு விற்கிடை தொலைவு எல்லைக்கு மேல் போய்விடக் கண்ணால் அதனைக் காணவும் இயலாதவர் ஆயினர்.

விளக்கவுரை

பட்டிகை - ஓலை. விற்கிடை -ஒருவில் கிடக்கும் தொலைவு.

காணவும் எய்தா வண்ணம்
கடலின்மேற் செல்லும் ஏடு
நாணிலா அமணர் தம்மை
நட்டாற்றில் விட்டுப் போகச்
சேணிடைச் சென்று நின்றார்
சிதறினார் திகைத்தார் மன்னன்
ஆணையில் வழுவ மாட்டாது
அஞ்சுவார் அணைய மீண்டார். **#2713**

காணவும் இயலாதவாறு கடலை நோக்கிச் செல்லும் அவ்வேடு, நாணம் என்பது ஒன்று இல்லாத சமணரை நட்டாற்றில் கைவிட்டு அகன்று போய்விட, அவ்வமணர்கள் தாமும், தொலைவில் சென்றவர்களும், பலவாறு சிதறுண்டவர்களும், திகைப்பு அடைந்தவர்களுமாகி, மன்னனின் ஆணையில் தப்ப மாட்டாது அஞ்சுபவராய், அவன் அருகில் திரும்பவும் வந்தனர்.

விளக்கவுரை

`யாண்டுச்சென்று யாண்டும் உளராகார் வெந்துப்பின் வேந்து செறப்பட்

டவர்' *(குறள், 895)* என்பர் திருவள்ளுவர். ஆதலின் தொலைவில் சென்றவர்களும் சிதறியவர்களும் மீண்டும் வரலாயினர்.

வேறொரு செயலி லாதார்
வெருவுற்று நடுங்கித் தம்பால்
ஈறுவந் தெய்திற் றென்றே
மன்னவன் எதிர்வந் தெய்தி
ஊறுடை நெஞ்சில் அச்சம்
வெளிப்பட வொளிப்பார் போன்று
மாறுகொண்ட வரும் இட்டால்
வந்தது காண்டும் என்றார். **#2714**

வேறு செய்யத்தக்கது ஏதும் இல்லாதவரான சமணர்கள், அச்சம் கொண்டு நடுங்கித் தங்களுக்கு இறுதி வந்து சேர்ந்து விட்டது என்றே துணிந்து, மன்னன் முன்வந்து சேர்ந்து, புண் பட்ட தம் உள்ளத்தில் அச்சம் வெளிப்பட்டு வரவும், அதனை மறைப் பவர் போல, `எங்களுடன் மாறுபட்ட பிள்ளையாரும் ஏட்டினை ஆற்றில் இட்டால் அதன் பின்பு வரும் முடிவைக் காணலாம்' என்று கூறினர்.

விளக்கவுரை

****

மாசுசேர் அமணர் எல்லாம்
மதியினில் மயங்கிக் கூற
ஆசிலா நெறியிற் சேர்ந்த
அரசனும் அவரை விட்டுத்
தேசுடைப் பிள்ளை யார்தந்
திருக்குறிப் பதனை நோக்கப்
பாசுரம் பாட லுற்றார்
பரசம யங்கள் பாற. **#2715**

அகத்தும் புறத்தும் அழுக்கு மிக்க அமணர்கள் அனைவரும் இங்ஙனம் அறிவு மயங்கிக் கூறக் குற்றத்தை நீக்கும் நெறியில் நிற்கும் பாண்டிய மன்னனும், அச்சமணர்களை விட்டுச் சிவ ஞான ஒளியுடைய ஞானசம்பந்தரின் திருவுள்ளக் குறிப்பு யாதோ? என அறிந்து கொள்ளுமாறு அவரைப் பார்க்க, அவர் பிற சமயங் களால் நேர்ந்த மயக்கம் நீங்குமாறு திருப்பதிகத்தைப் பாடி அருள லுற்றார்.

விளக்கவுரை

****

தென்னவன் மாறன் தானுஞ்
சிவபுரத் தலைவர் தீண்டிப்

பொன்னவில் கொன்றை யார்தந்
திருநீறு பூசப் பெற்று
முன்னைவல் வினையும் நீங்கி
முதல்வனை யறியுந் தன்மை
துன்னினான் வினைக ளொத்துத்
துலையென நிற்ற லாலே. #2716

தென்னவனான பாண்டியனும், சீகாழித் தலைவரான ஞானசம்பந்தரின் திருக்கரங்களால் தீண்டப்பெற்றுப் பொன் போன்ற கொன்றையைச் சூடிய சிவபெருமானின் திருநீற்றைப் பூசப் பெற்றதால், இருவினைகளும் ஒத்துப் பொருளைச் சமன்செய்து காட்டும் துலாக்கோலைப் போல நின்றதால், முன்னைய கொடிய வினையினின்றும் நீங்கியவனாய், முதல்வனான இறைவனை அறிந்து கொள்ளும் இயல்பைப் பெற்றவன் ஆனான்.

விளக்கவுரை

இருவினை ஒப்பு - இன்பத்துள் இன்பம் விழையா மலும், துன்பத்துள் துன்பமுறாமலும் இருக்கும் மனநிலை. `நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' எனத் திரு வருளில் அழுந்தி நிற்கும் உறைப்பால் உளதாகும் நிலை இது. இந் நிலையால் யான் எனது என்னும் செருக்கற்றுநிற்கும் நிலையும் வந்து றும். இதனையே `மலபரிபாகம்' என்பர்.

உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும்
நிலவுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்
கலதிவாய் அமணர்காண் கிலார்க ளாயினும்
பலர்புகழ் தென்னவன் அறியும் பான்மையால். #2717

உலகியல் ஒழுக்கம் மறைநூல்களில் விதித்த ஒழுக்கமே என்பதையும், அழியாமல் நிலைபெறுகின்ற வீடுபேற்றை அடைதற்குரிய உண்மைநெறி சிவநெறியேயாகும். என்பதையும், அழிவு பெறும் சமணர்கள் அறிய மாட்டாராயினும், பலராலும் புகழப் படுகின்ற பாண்டியன் அறியும் பான்மையால்,

விளக்கவுரை

கலதி - தீமை, கேடு. வாய் - வாய்ப்பு.

அந்தணர் தேவர்ஆ னினங்கள் வாழ்கஎன்
றிந்தமெய்ம் மொழிப்பயன் உலகம் இன்புறச்
சந்தவேள் விகள்முதல் சங்க ரர்க்குமுன்
வந்தஅர்ச் சனைவழி பாடு மன்னவாம். #2718

`அந்தணர்களும் அமரர்களும் பசுக்களும் வாழ்க' என்று சொன்ன இந்த

மெய்ம்மொழியின் பயனாவது, உலகத்து உயிர்கள் துன்பம் நீங்கி இன்பத்தை எய்தும் பொருட்டு ஒலியுடன் கூடிய மந்திரங்களையுடைய சிவவேள்விகள் முதலாகச் சிவபெருமா னுக்குச் சொல்லப்பட்ட அர்ச்சனைகளும் வழிபாடுகளும் ஆகியவை நிலைபெறுதலாகும்.

விளக்கவுரை

மறைவழிச் செய்வோர் வைதிகர்களாவர். ஆகமவழிச் செய்யும் சிவவேதியர்கள் அந்தணராவர். மறைவழிச் செய்யும் வேள்விகளில் நின்று ஏற்போர் தேவர்கள் ஆவர். ஆகமவழி, குறிப் பாக நம் திருமுறை வழிச்செய்யும் வேள்விகளில், அவ்வேள்விப் பொருளை ஏற்போன் இறைவனேயாவன். இதுவே சிவவேள்வி எனப்படும். பிள்ளையார் ஈண்டுக் குறிப்பதும் இச்சிவ வேள்வியேயாம். வேள்விக்கென இறைவன் வழங்கிய பொருளைத் தந்தையாரிடம் கொடுத்தபொழுது பிள்ளையார் அருளிய திருவாக்கால் இவ்வுண்மை அறியப்படும். இறைவற்குரிய திருமுழுக்கிற்குத் தன்னிடத்தினின்றும் ஐந்துபொருள்களைத் தருதலின் வேள்வி செய்யும் இவர்களோடு பசுவையும் கூட்டி வாழ்க என்றார்.

வேள்வி நற்பயன் வீழ்புன லாவது
நாளு மர்ச்சனை நல்லுறுப் பாதலால்
ஆளும் மன்னனை வாழ்த்திய தர்ச்சனை
மூளும் மற்றிவை காக்கு முறைமையால். **#2719**

நல்ல வேள்விகளின் பயன், மழை தவறாமல் பெய்தலாகும் என்று அருள் செய்தது, அதுநாள் தோறும் இறைவரின் அருச்சனைக்கு உறுப்பாதலால் ஆம். உலகை ஆளும் வேந்தனை `ஓங்குக' என்று வாழ்த்தியது. அருச்சனை முதலாக வரும் இவற்றைக் காக்கின்ற முறையினால் ஆகும்.

விளக்கவுரை

`புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு' என்ப வாகலின் இறைவழிபாட்டிற்கு வேண்டும் நீரின் முதன்மையும் இன்றி யமையாமையும் விளங்கும். `சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்கு மேல் வானோர்க்கும் ஈண்டு' *(குறள், 18)* என்னும் திருக்குற ளும். மன்னனின் ஆட்சி, உயிரினங்கள் வாழ்வாங்கு வாழ்தற்கும், அவை இறைவழிபாடாற்றி இம்மை, மறுமை, அம்மை ஆகிய மும்மை நலங்களையும் அடைதற்கு ஏதுவாகவும் இருத்தல் வேண்டும். `மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய' எனத் தொடங்கும் தொல்காப் பிய நூற்பாவானும் *(தொல். அகத்.28)* இவ்வுண்மை அறியப்படும். இது பற்றியே மன்னனை வாழ்த்தினர்.

அரசர்க்குற்ற கடன்களில் இக்கடமை முதன்மையுடைய தாதலை, நாடோறும் மன்னவன் நாட்டில் தவநெறி

நாடோறும் நாடி அரன்நெறி நாடானேல்
நாடோறும் நாடு கெடும்மூடம் நண்ணுமால்
நாடோறுஞ் செல்வம் நரபதி குன்றுமே.
(தி.10 பா.238) ஞானமி லாதார் சடைசிகை நூல்நண்ணி
ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே.
(தி.10 பா.241) ஆவையும் பாவையும் மற்றற வோரையுந்
தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையுங்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே.
(தி.10 பா.242) கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப்
பால்கொண்டு சோமன் முகம்பற்றி உண்ணாதோர்
மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை
மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே.
(தி.10 பா.245) தத்தஞ் சமயத் தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண் டமுஞ்செயும் அம்மையில் இம்மைக்கே
மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே.
(தி.10 பா.246) எனவரும் திருமூலர் திருவாக்கானும் அறியலாம்.

ஆழ்க தீயதென் றோதிற் றயல்நெறி
வீழ்க என்றது வேறெல்லாம் அரன்பெயர்
சூழ்க என்றது தொல்லுயிர் யாவையும்
வாழி அஞ்செழுத் தோதி வளர்கவே. **#2720**

`ஆழ்க தீயது' என்று அருளியதன் பொருள், மறைகள் ஆகமங்கள் ஆகியவற்றிற்குப் புறம்பான நெறிகள் வன்மை யில்லாது ஒழிக என்பதாகும். வேறாக எல்லாம் `அரன் நாமமே சூழ்க' என்றது, இவ்வயல் நெறிக்கு வேறான சிவநெறித் தொடர்பில் நின்று, பழங்காலம் முதலாக வாழ்ந்து வரும் உயிர்கள் எல்லாம், பெரு வாழ்வைத் தருகின்ற திருவைந்தெழுத்தை ஓதி வளர்க என்னும் பொருட்டாம்.

விளக்கவுரை

சமயவாதிகள் தத்தம் மதங்களே அமைவதாக அரற்றுவர் ஆதலின், அவற்றின் மெய்ம்மையுணர்ந்து உண்மை நெறியைப் போற்றக் காலம் நீட்டிக்குமாகலின் ஆழ்க தீயது என்றார். வேறு எல்லாம் - அயல்நெறிக்கு வேறான சிவச்சார்புடைய உயிர்கள் எல்லாம். அரன்பெயர் திருவைந்தெழுத்தேயாதலின் அதனையே ஓதி வளர்க என்றார்.

சொன்ன வையக முந்துயர் தீர்கவே

என்னும் நீர்மை இகபரத் தில்துயர்
மன்னி வாழுல கத்தவர் மாற்றிட
முன்னர் ஞானசம் பந்தர் மொழிந்தனர். **#2721**

கூறிய `வையகமும் துயர் தீர்கவே' என்றதன் கருத் தாவது, `இம்மையிலும் மறுமையிலும் நிலைத்து நிற்கும் இவ்வுலகத்து வாழும் உயிர்கள் துன்பம் நீங்கியிடவாகும். இக்கருத்துக்கள் எல்லாம் முதல் பாடலில் அமையத் திருஞானசம்பந்தர் உரைத்தருளினார்.

விளக்கவுரை

சொன்ன வையகம் - பதிகத்துள் சொல்லப்பட்ட இந்நில வுலகம். துயர் - துன்பம் : இம்மை, மறுமை ஆகிய இரண்டிலும் வரும் துயர். `இம்மைக்கும் மறுமைக்கும் வருத்தம் வந்தடையாவே' எனவரும் திருமுறைத் திருவாக்கும் *(தி.2 ப.106 பா.11)* காண்க.

அரிய காட்சியர் என்பதவ் வாதியைத்
தெரிய லாநிலை யால்தெரி யாரென
உரிய அன்பினிற் காண்பவர்க் குண்மையாம்
பெரிய நல்லடை யாளங்கள் பேசினார். **#2722**

முன்செய்யுளில் `அரன்' என்று உரைத்த ஆதியை, உயிர் தன்னறிவானும் தளையறிவானும் (பசு, பாச, ஞானம்) அறியப்படாத நிலைமையது ஆதலின், `அரிய காட்சியர்' என்று அருளினர். அங்ஙனம் அவ்விருவகையறிவுகளானும் அறிய மாட்டாமையை அறிந்து, காண்டற்குரிய அன்பின் திறத்தால் காண முயலும் முதிர்ச்சி உடைய அடியவர்களுக்குக் காணுமாறு உள்ளன வாய நல்ல அடையாளங்களையும் எடுத்துரைத்தனர்.

விளக்கவுரை

அடையாளங்களாவன `அங்கைசேர் எரியர், ஏறுகந் தேறுவர், கண்டமும் கரியர், காடுறை வாழ்க்கையர்' என்பனவாம்.

ஆயி னும்பெரி யாரவர் என்பது
மேய இவ்வியல் பேயன்றி விண்முதற்
பாய பூதங்கள் பல்லுயிர் அண்டங்கள்
ஏயும் யாவும் இவர்வடி வென்றதாம். **#2723**

மேற்கூறிய அடையாளங்களைக் கொண்டு இருப்பினும் அக்காட்சியளவுட்பட்டே நிற்பவர் அல்லர். விண் முதலா கப் பரந்த ஐம்பெரும் பூதங்களும், பல உயிர்களும், அண்டங்களும், மற்றுமுள்ளவையும் ஆக யாவும், பேசப்படும் இவர் பெருவடிவைக் கொண்டிருப்பனவேயாம்.

விளக்கவுரை

`அப்பெருவடிவை யார் அறிவார் பேசு' *(திருக்களிற். 5)* எனவரும் திருவாக்கும் காண்க.

பின்பும் ஆரறி வாரவர் பெற்றியே
என்ப தியாருணர் வானும்சென் றெட்டொணா
மன்பெ ருந்தன்மை யாரென வாழ்த்தினார்
அன்பு சூழ்சண்பை ஆண்டகை யாரவர். **#2724**

மேலும் அவரது இயல்பை யார் அறிவார்? என்று கூறியருளும் இயல்பாவது, அவர் எவரது உணர்வினாலும் சென்று எட்டுவதற்கு இயலாத நிலைமையுடைய தன்மையை உடையவர் ஆவர் என்று அன்புடைய சண்பையை ஆளும் தகையாரான சம்பந்தர் உரைத்தருளினார்.

விளக்கவுரை

`தன்னறிவதனால் காணும் தன்மையன் அல்லன் ஈசன்' *(சித்தியார் 6 ஆம் சூத். 8)* எனவரும் ஞானமெய்ந்நூற் கூற்றும் காண்க.

வெந்த சாம்பல் விரையென் பதுதம
தந்த மில்லொளி யல்லா வொளியெலாம்
வந்து வெந்தற மற்றப் பொடியணி
சந்த மாக்கொண்ட வண்ணமும் சாற்றினார். **#2725**

வெந்த சாம்பல் விரை எனப் பூசியே என்றது, தம் அழிவற்ற, நிலையான சிவஒளி அல்லாத மற்ற ஒளிப் பொருள்கள் யாவும், படைப்பு முதலாக அழித்தல் ஈறாக வரும் படிநிலையில், ஒருகால எல்லையில் இருந்து, வெந்து, நீறாகி அழிய, வேறான அச்சாம்பலை, இறைவர் அழகிய சந்தனமாய்க் கொண்ட இயல்பினை விளக்கவாம்.

விளக்கவுரை

`ஈறிலாதவன் ஈசன் ஒருவனே' *(தி.5 ப.100 பா.3)* என்பது தெளிய அறிவித்த குறிப்பாம்.

தமக்குத் தந்தையர் தாயிலர் என்பதும்
அமைத்திங் கியாவையும் ஆங்கவை வீந்தபோ
திமைத்த சோதி அடக்கிப்பின் ஈதலால்
எமக்கு நாதர் பிறப்பிலர் என்றதாம். **#2726**

இறைவர், `தந்தையாரொடு தாய் இலர்' என்று அருளியதன் கருத்து, தம் ஒளியன்றி ஏனைய பொருள்கள் எல்லா வற்றையும் ஒருகால எல்லையில் அழித்தபின் தமக்குள்ளே ஒடுக்கிப் பின்னரும் அவற்றைத் தோற்றுவித்தருளும் குறிப்புடைமையாம்.

விளக்கவுரை

இறைவன் தாயும் தந்தையும் இன்றித் தான் தனியன் ஆயிடினும்,

இவ்வுலகைக் காத்தும் படைத்தும் கரந்தும் நின்று உய்வித் தருள்பவன் ஆவன். இவ்வாற்றான் உயிர்கட்கெல்லாம் தான் தாயும் தந்தையுமாய் நின்று அருளியதல்லது, தனக்கு ஒரு தந்தை தாயிலன் என்பது கருத்து.

தம்மையே சிந்தி யாவெனுந் தன்மைதான்
மெய்ம்மை யாகி விளங்கொளி தாமென
இம்மை யேநினை வார்தம் இருவினைப்
பொய்ம்மை வல்லிருள் போக்குவர் என்றதாம். **#2727**

`தம்மையே சிந்தியா எழுவார் வினை தீர்ப்பரால்' என்பது, உண்மையாக நிலைத்து நிற்கும் பொருள் தாமே (இறை வனே) என்று தெளிந்து, அப்பெருமானையே இடையறாது நினைப் பவர்களது இருவினைகளையும், பொய்ம்மையை விளைத்து நிற்கும் பல இருளையும் இம்மையிலேயே நீக்கியருளுவர் என்பது தெளியவாம்.

விளக்கவுரை

பொய்ம்மை அறியப்படாமையும், வன்மை உயிரை முழுமையாக மறைத்து நிற்பதுமாகும். `இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு' *(குறள், 5)* என்பது கருத்து.

எந்தை யாரவர் எவ்வகை யார்கொலென்
றிந்த வாய்மைமற் றெப்பொருட் கூற்றினும்
முந்தை யோரைஎக் கூற்றின் மொழிவதென்
றந்தண் பூந்தராய் வேந்த ரருளினார். **#2728**

`எந்தையார் அவர் எவ்வகையார் கொலோ' என்றது உலகில் எவ்வகைப்பட்ட பொருட் கூற்றினும், சொற் கூற் றினும் வைத்துச் சொல்ல இயலாதவாறு அவ்வனைத்திற்கும் முன்னே தோன்றி முனைத்தவராய் இருத்தலின், அவனை எக் கூற்றில் வைத்துச் சொல்வது? என்று அழகிய குளிர்ந்த சீகாழித் தலைவர் அருளிச் செய்தனர்.

விளக்கவுரை

இன்னதன்மையன் என்று அறிய வொண்ணாதவன் என்பது கருத்து.

ஆதி ஆட்பா லவர்க்கரு ளுந்திறம்
நாதன் மாட்சிமை கேட்க நவிலுங்கால்
ஓது மெல்லை உலப்பில வாதலின்
யாதும் ஆராய்ச்சி இல்லையாம் என்றதாம். **#2729**

ஆளாகி நிற்கும் தொண்டர்களுக்கு அப்பெரு மான் அருள்செய்கின்ற திறங்களையும், இறைவரின் மாண்பையும் பற்றிக் கேட்பின், அதற்கு விடை சொல்லும் எல்லை அளவின்றி விரியும். எனவே, எவ்வகையானும் அவை ஆராய்ச்சிக்குரியவை அல்ல என்று

கூறியவாறாம்.

விளக்கவுரை

உயிர்களின் பண்பும் செய்கைகளும் நூறு நூறாயிரம் இயல்பினவாம். அத்தகைய பல்வேறு உயிர்களையும் ஆட்கொள் ளும் இறைவனும், ஆட்கொள்ளும் இயல்பில் ஒரு நிலையனாய் நின்று ஆட்கொள்ளல் இயலாது. ஆதலின், அவ்விறைவனின் இயல்பும் எண்ணற்ற இயல்பினவாய் அமைதலின், அவற்றை எவ்வாற்றானும் ஆராய்தற்கியலாது என்பது கருத்து.

அன்ன ஆதலில் ஆதியார் தாளடைந்
தின்ன கேட்கவே ஏற்றகோட் பாலவும்
முன்னை வல்வினை யும்முடி வெய்துமத்
தன்மை யார்க்கென் றனர்சண்பை காவலர். **#2730**

உயிரியல்பும் இறையியல்பும் இவ்வகையவை யாகவே, இவைபற்றி நீள எண்ணாது, இறைவரின் திருவடிகளை உளங்கொண்டு, அப்பெருமானின் அருங்குணங்களையும், அருட் செயல்களையும் கேட்கலாயின், அத்தன்மையுடைய அடியவர்க ளுக்கு இயல்பாகப் பொருந்திய மலமும் அதன்வழிவரும் பழைய வினைவலிகளும் முடிவு பெறும் என்று சீகாழித் தலைவரான சம்பந்தர் கூறியருளினார்.

விளக்கவுரை

இறைவரின் திருவடிகளையே நினைந்து, அப்பெரு மானின் பொருள்சேர் புகழ்களைக் கேட்டு மகிழ்ந்த வண்ணம் இருப் பின், உயிர்களுக்குத் துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் உளவாகும் என்பது கருத்து. கோட்பால் - தோற்றமில் காலத்ததாய இருள் மலம்.

மன்னும் ஏதுக்க ளாலெனும் வாய்மைதான்
தன்ன தொப்புவே றின்மையில் சங்கரன்
இன்ன தன்மையை ஏது எடுத்துக்காட்
டன்ன வாற்றால் அளப்பில னென்றதாம். **#2731**

நிலைபெற்ற ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா என்றதன் உண்மையாவது, இறைவனுக்கு உவமையாகக் காட்டத்தகும் பொருள், வேறு ஏதும் இல்லை ஆகை யால், அப்பெருமானின் தன்மை அவ்வேதுக்களானும், எடுத்துக் காட்டுகளாலும் அவை போன்ற மற்ற அளவைகளாலும் அளந்து கூறற்கரியது என்று விளக்கியபடியாம்.

விளக்கவுரை

இறைவன் தனக்கு உவமையில்லாதவன். உயிர்களோ சிற்றறிவும் சிற்றுணர்வும் உடையன. இந்நிலையில் அவ்வுயிர்கள் அப்பெருமானை

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிப்பது எங்ஙனம்? இயலாது என்பது கருத்து. எடுத்தமொழி - எடுத்துக் காட்டு.

தோன்று காட்சி சுடர்விட் டுளன்என்ப
தான்ற அங்கிப் புறத்தொளி யாய்அன்பில்
ஊன்ற உள்ளெழும் சோதியாய் நின்றனன்
ஏன்று காண்பார்க் கிதுபொரு ளென்றதாம். **#2732**

தோன்று காட்சி `சுடர்விட்டுளன்' என்பதன் பொருளாவது, அமைந்த நெருப்பின் ஒளியாய்ப் புறத்தே காணப் பட்டு, அன்பின் உறைப்பால் அழுந்திக் காண்பார்க்கு, அவன் உள் எழும் ஒளியாயும் விளங்குதல் கண்டு, அவ்வொளிவழி நின்று காண் பவர்க்கு இது பொருளாகும் என்று அவர் விளக்கியபடியாம்.

விளக்கவுரை

`மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே' *(தி.8 சிவ புரா.வரி.62)* எனவரும் திருவாசகத்துள் மாசற்ற சோதி என்றது `தோன்று காட்சி' என்பதனோடும், `மலர்ந்த மலர்ச் சுடரே' என்றது `சுடர்விட்டுளன்' என்றதனோடும் ஒப்பிட்டுணர்தற்குரியவாம். ஒளி விட்டு விளங்குவது அகத்தும் புறத்துமாம் என விளக்கியிருப்பதும் அறிதற்குரியதாம்.

மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றும் என்ப
தாதிச் சுடர்ச்சோ தியைஅன்பி னகத்துள் ளாக்கிப்
போதித்த நோக்குற் றொழியாமற் பொருந்தி வாழ்ந்து
பேதித்த பந்தப் பிறப்பின் நெறி பேர்மின் என்றாம். **#2733**

`மாதுக்கம் நீங்கல் உறுவீர் மனம் பற்றும்' என்ற தொடரின் பொருள், மூலமான சுடர் ஒளியை அன்பால் உயிருணர் வில் கண்டு, ஐந்தெழுத்தால் அகவழிபாடு செய்து, ஞானாசிரியரால் அருளப்பெற்ற திருவருள் வயப்பட்ட உள்நோக்கில் கண்டு, கூடிய சிவபோகத்தினால் இடையறாமல் கூடி, சிவஞான வாழ்க்கையிலே வாழ்ந்து, தோற்றமில் காலத்தேயே (அநாதியே) தொடர்ந்து அறிவை மறைத்து வேறுபடுத்தி வரும் ஆணவத்தால் ஆன பிறவியில் வரும் நெறியினின்றும் நீங்கள் நீங்குவீர் ஆவீர் என்று விளக்கியதாம்.

விளக்கவுரை

மாதுக்கம் என்பது பிறவித் துன்பம் என்றும், குருவரு ளும் திருவருளும் முன்னின்றும் உள்நின்றும் உணர்த்த உணர்ந்து வரும் பயிற்சியால் உயிரில் நேர்பெற நிற்கும் சிவபோகத்தைத் துய்ப்பதுவே `மனம் பற்றி வாழ்தல்' என்றும் விளக்கியவாறாம்.

ஈண்டுச் சாதுக்கள் என்றெடுத் தோதிற்று
வேண்டும் வேட்கைய வெல்லாம் விமலர்தாள்

பூண்ட அன்பினிற் போற்றுவீர் சார்மின்என்
றாண்ட சண்பை அரச ரருளினார். **#2734**

`சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே' என்று இங்குக் கூறப்படுவது, விரும்பும் வேட்கைகள் ஆவன எல்லாம், இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கிய இறைவரின் திருவடிகளை உளங்கொண்ட அன்பினால் வணங்குவதேயாம் எனக் கொண்ட உள்ளம் உடையவர்களே! வந்து சாருங்கள்! என்று சண்பையின் மன்னர் விளக்கியருள் செய்தார்.

விளக்கவுரை

விரும்பும் வேட்கைகள் எல்லாம் இறைவரை வணங்கி வாழ்வதே என்பதை உளங்கொண்டவர்களே, அதனை மறவாது இறைவனின் திருவடியே சார்பாகக் கொண்டு வாழுங்கள் என்பது கருத்து. `சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகும் நிலையினர்' சாதுக்கள் ஆவர்.

ஆடும் எனவருந் திருப்பாட்டில் அமைத்த மூன்றும்
நீடும் புகழோ பிறர்துன்ப நீத்தற்கோ என்று
தேடும் உணர்வீர் உலகுக்கிவை செய்த தீசர்
கூடுங் கருணைத் திறமென்றனர் கொள்கை மேலோர். **#2735**

ஆடும் எனத் தொடங்கும் திருப்பாட்டில் அமைந் திருக்கும் இறைவனின் அருட்செயல்கள் மூன்றும் அப்பெருமானின் புகழுக்காகவோ, அல்லது உயிர்கட்குற்ற துன்பத்தை நீக்குதற்காகவோ என்று ஆராயும் உணர்வுடையவர்களே! இச்செயல்களெல்லாம் இறைவன் உயிர்கள் மீது வைத்த கருணைத் திறத்தினாலேயே ஆகும் என உரைத்தனர் கொள்கையின் மிக்க காழிப் பிள்ளையார்.

விளக்கவுரை

இப்பாட்டில் குறித்த அருட்செயல்கள் மூன்றாம். அவை: *1)* இறைவன் இடையறாது திருக்கூத்து இயற்றுவது, *2)* இய மனை உதைத்தது, *3)* மறைகளை அருளியது, ஆகியவையாம். இவற்றுள் முன்னையது உயிர்கள் படிப்படியாக வினை நீக்கம் பெற்றுத் தம்மை அடையவாம். இரண்டாவது சார்ந்தாரைக் காக்கும் கருணைத் திறமாம். மூன்றாவது உலகினர் செயத் தகுவனவும் தவிரத் தகுவனவும் அறிந்து உய்திபெறவாம்.

கருதுங் கடிசேர்ந்த எனுந்திருப் பாட்டில் ஈசர்
மருவும் பெரும்பூசை மறுத்தவர்க் கோறல் முத்தி
தருதன் மையதாதல் சண்டீசர் தஞ்செய்கை தக்கோர்
பெரிதுஞ் சொலக்கேட் டனம்என்றனர் பிள்ளை யார்தாம். **#2736**

`கருதத்தகும் கடிசேர்ந்த' எனவரும் திருப்பாட்டில், இறைவன் விரும்பி

ஏற்றருளும் சிறந்த பூசையினைச் சிதைவு செய் தவர்களைக் கொல்லுதல்
அறச்செயலும் வீடுபேறு அடையத்தகும் அருட் செயலும் ஆகும்
என்பதைச் சண்டீசர் வரலாற்றால் அறியத் தகும் எனத் தக்கவர்கள்
சொல்லக் கேட்டனம் என்றார் பிள்ளையார்.

விளக்கவுரை

`பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்' *(தி.8 ப.15 பா.7)* `பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே' *(தி.9 ப.29 பா.10)* எனவரும் திருமுறைக் கூற்றுகளையும்,

பாதக மென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டும் - சேதிப்பக்
கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
கண்டீசர் தஞ்செயலால் தான்.

-திருக்களிற்றுப்படியார் *19*

அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறம தாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி
நரரினில் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே.

-சிவஞானசித்தியார் *29* எனவரும் மெய்ந்நூற் கூற்றுக்களையும் காண்க.

வேத முதல்வன் எனும் மெய்த் திருப்பாட்டினில்நேர்
ஆதி உலகோர் இடர்நீங்கிட ஏத்த ஆடும்
பாத முதலாம் பதினெண் புராணங்கள் என்றே
ஓதென் றுரைசெய் தனர்யாவும் ஓதா துணர்ந்தார். **#2737**

`பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்' (தி.8 ப.15 பா.7) `பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே' (தி.9 ப.29 பா.10)
எனவரும் திருமுறைக் கூற்றுகளையும்,

பாதக மென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டும் - சேதிப்பக்
கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
கண்டீசர் தஞ்செயலால் தான்.

-திருக்களிற்றுப்படியார் 19

அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறம தாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி
நரரினில் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே.

-சிவஞானசித்தியார் 29 எனவரும் மெய்ந்நூற் கூற்றுக்களையும் காண்க.

விளக்கவுரை

பதினெண் புராணங்களில் மச்சம், கூர்மம், வராகம் வாமனம், சிவமகாபுராணம், இலிங்கம், பவிடியம், காந்தம், மார்க்கண் டேயம், பிரமாண்டம் என்ற இவை சிவ புராணங்கள். விஷ்ணு புராணம், பாகவதம், கருடம், நாரதீயம் என்ற நான் கும் திருமாலுக்குரிய புராணங்களாம். பிரமம், பதுமம் என்ற இரண் டும் நான்முகனுக்குரிய புராணங்களாம். ஆக்கினேயம் தீக்கடவுளைப் பற்றியும், பிரமகைவர்த்தம் கதிரவனைப் பற்றியும் கூறுவனவாம். சூதன் - புராணங்களைக் கூறிய முனிவர். ஒலிமாலை - உண்மைக் கருத்துக்களைக் கூறும் நூல் வரி சைகள். கலிக்கோவை - கலிவிருத்தம் என்னும் யாப்பு வகையில் அமைந்த புராணங்கள்.

பாவுற்ற பாராழி வட்டத் திருப்பாட்டி னுண்மை
காவல் தொழிலான் எனும் கண்ணனும் காவல்பெற்ற
தியாவர்க்கு மேலாய ஈசன் அருள்ஆழி பெற்று
மேவுற்ற சீருற் றதுவென்றனர் வேத வாயர். **#2738**

திருப்பதிகத்தில் பொருந்திய `பாராழி வட்டம்' எனத் தொடங்கும் பாடலின் உண்மையாவது, உலகம் காக்கும் தொழிலை மேற்கொண்ட திருமால், அக்காவல் தொழிலைப் பெற்ற தற்குக் காரணம் `எல்லோருக்கும் மேலானவரான சிவபெருமானின் அருளும் உருளும் (சக்கரமும்) பெற்ற சிறப்பினாலாகும்' என்று மறைகள் வெளிப்படும் திருவாக்கையுடைய ஞானசம்பந்தர் அருள் செய்தார்.

விளக்கவுரை

வண்டமரும் தண்டுழாய் மாயோன் இறுமாப்பும், புண்ட ரிகப் போதுறையும் புத்தேன் இறுமாப்பும், அண்டர் தொழவாழும் நின் இறுமாப்பும், `ஆலாலம் உண்டவனைப் பூசித்த பேறு என்றுணர்ந் திலையால்' (திருவிளை. வெள்ளை யானைச். *14)* எனவரும் பரஞ்சோதியார் வாக்கும் காண்க.

மாலா யவன்என்ன வருந்திருப் பாட்டில் மாலுந்
தோலா மறைநான் முகனுந் தொடர்வாம் அமரர்
ஏலா வகைசுட்ட நஞ்சுண் டிறவாமை காத்த
மேலாங் கருணைத்திறம் வெங்குரு வேந்தர் வைத்தார். **#2739**

`மாலாயவன்' எனத் தொடங்கும் திருப்பாட்டில், திருமாலும், மறைகளில்வல்ல நான்முகனும், அவர்களைத் தொடர்ந்த தேவர்களும் தாங்க இயலாதவாறு சுட்ட நஞ்சினைத் தாம் உண்டு, அவர்கள் இறவாத வண்ணம் காத்த மேலான பெருங்கருணையின் வெற்றிப் பாட்டினை `வெங்குரு' என்ற சீகாழிப் பதியினரான பிள்ளையார் அறியவைத்தார்.

விளக்கவுரை

தோலாமறை - எந்நூல்களானும் மறுக்கப்படாத மறை. இறவாமை காத்த - ஒரு கால எல்லைவரை இறவாது காத்த. ஈறிலா தவன் ஈசன் ஒருவனே யாதலின், இக்கால எல்லை குறிக்க வேண்டுவ தாயிற்று.

ஆனஅற் றன்றி என்ற அத்திருப் பாட்டில் கூடல்
மாநக ரத்துச் சங்கம் வைத்தவன் தேறத் தேறா
ஈனர்க ளெல்லைக் கிட்ட ஏடுநீர் எதிர்ந்து செல்லில்
ஞானம்ஈ சன்பால் அன்பே என்றனர் ஞானம் உண்டார். **#2740**

பதிகத்தின் நிறைவான `அற்றன்றி அந்தண்' எனத் தொடங்கும் திருப்பாட்டில், நான்மாடக் கூடல் என்ற மதுரையில் முச்சங்கங்களையும் நிறுவிய பாண்டியன் தெளிவுபெறவும், தெளிவு பெறாத கீழ்மக்களான சமணர்கள் வாதில் தாம் சொன்ன எல்லையில் முடிவு காணுமாறு இட்ட ஏடு, நீரில் எதிர்த்து மேலே செல்ல நேருமா யின் அதனால் உறுதியாய்க் கொள்ளப்படும் உண்மையாவது, `ஈசனிடத்துக் கொள்ளத்தகுவது அன்பே யாகும்' என்று சிவஞான அமுது உண்ட சம்பந்தப் பிள்ளையார் விளக்கியருளினார்.

விளக்கவுரை

பதிகத்தின் நிறைவான `அற்றன்றி அந்தண்' எனத் தொடங்கும் திருப்பாட்டில், நான்மாடக் கூடல் என்ற மதுரையில் முச்சங்கங்களையும் நிறுவிய பாண்டியன் தெளிவுபெறவும், தெளிவு பெறாத கீழ்மக்களான சமணர்கள் வாதில் தாம் சொன்ன எல்லையில் முடிவு காணுமாறு இட்ட ஏடு, நீரில் எதிர்த்து மேலே செல்ல நேருமா யின் அதனால் உறுதியாய்க் கொள்ளப்படும் உண்மையாவது, `ஈசனிடத்துக் கொள்ளத்தகுவது அன்பே யாகும்' என்று சிவஞான அமுது உண்ட சம்பந்தப் பிள்ளையார் விளக்கியருளினார்.

வெறியார் பொழிற்சண் பையர்வேந்தர்
மெய்ப்பா சுரத்தைக்
குறியே றியஎல்லை அறிந்துகும்
பிட்டேன் அல்லேன்
சிறியேன் அறிவுக்கவர் தந்திருப்
பாதந் தந்த
நெறியே சிறிதியான் அறிநீர்மைகும்
பிட்டேன் அன்பால். **#2741**

மணம் வீசுகின்ற சோலைகள் சூழ்ந்த சீகாழியின் மன்னவரான ஞானசம்பந்தர் அருளிய மெய்ப்பொருள் விரித்த பதிகத்தை, அதன் அருட் குறிப்புச் செல்லும் அளவு அறிந்து போற்றி னேன் அல்லேன், ஆயினும் இதுவரை போற்றி உரைத்தது என்னை எனில்? சிறியவனான என் சிற்றறிவுக்கு அவர்தம் திருவடிகள் உணர்த்திய வழியே நின்று,

சிறிய அளவில் நான் அறிந்த தன்மை பற்றுக் கோடாகக் கொண்டு, அதன்பால் அன்பு காரணமாகக் கும்பிட்டு வணங்கினேன்.

விளக்கவுரை

இவ்வரிய திருப்பாசுரத்திற்கு மேல் *822*ஆவது பாடல் முதல் *844*ஆவது பாடல்வரை *23* பாடல்களில் விளக்கங் கூறி இருப்பி னும் ஆசிரியர் சேக்கிழார், `இப்பாசுரத்தை இதுகாறும் அன்பின் வழி நின்று போற்றினேன் என்பதன்றி விளக்கம் தந்தேன் அல்லேன்' என்றருளியிருப்பது, இப்பாசுரத்தின் அருமையும் ஆசிரியரின் அடக் கமும் உணர நின்றது.

அலரும் விரைசூழ் பொழிற்காழியுள் ஆதி ஞானம்
மலருந் திருவாக் குடைவள்ளலார் உள்ள வண்ணம்
பலரும் உணர்ந் துய்யப்பகர்ந்து வரைந்தி யாற்றில்
நிலவுந் திருவேடு திருக்கையால் நீட்டி யிட்டார்**. #2742**

மலர்கள் மலர்தலால் உண்டாகும் மணம் சூழ்ந்த சோலைகளையுடைய சீகாழிப் பதியில் தோன்றிய சிவஞானம் கமழும் திருவாக்கினையுடைய வள்ளலாரான ஞானசம்பந்தர், உண்மைப் பொருள் நிலையினைப் பலரும் அறிந்து உய்யுமாறு அருளிச் செய்து, எழுதுவித்து, என்றும் அழியாத மெய்ப்பொருளை உடைய அத்திரு வேட்டினை வைகையாற்றில் தம் திருக்கையினால் நீட்டி இட்டார்.

விளக்கவுரை

ஆற்றில் இட்ட பதிகம் `வாழ்க அந்தணர்' *(தி.3 ப.54)* எனத் தொடங்கும் கௌசிகப் பண்ணிலமைந்த பதிகமாகும். இதனைத் திருப்பாசுரம் என்பர். *23* பாடல்களையுடையது. சிவஞான போத நூற்பாக்களோடு ஒப்பிட்டுக் காண்டற்குரியது. இத் திருப்பாசுரத் திற்கு மேல் வரும் *23* பாடல்களால் ஆசிரியர் சேக்கிழார் விளக்கம் தருகிறார். மிக நுணுகியதும் அமைவுடையதுமான இவ்விளக்கம் அறிந்து இன்புறுதற்குரியதாம். இவ்வரிய பாக்களின் பொருளைச் சமணர்கள் அறியமாட்டாராயினும், இருவினைஒப்பும் மலபரிபாக மும் உற்ற நிலையில் பாண்டியன் கேட்டு உய்தற்குரியனாகுவன் என எண்ணி இதனை அருளினார். பக்குவம் உற்ற மன்னன் முன் *(பா.819)* இவ்வாறு வினைகளொத்து துலையென நின்றதை உளங்கொண்டே அருணந்தி சிவாசாரியாரும் `மன்னவன் கேட்பக் கிளந்த மெய்ஞ் ஞானம்' என இதனை அருளுவாராயினர். இச்செய்யுள் சில பதிப்புகளில் *820*ஆம் பாடலுக்கு அடுத்த பாடலாக வருவதும் காண்க.

திருவுடைப் பிள்ளை யார்தந்
திருக்கையால் இட்ட ஏடு

மருவிய பிறவி யாற்றில்
மாதவர் மனஞ்சென் றாற்போல்
பொருபுனல் வைகை யாற்றில்
எதிர்ந்துநீர் கிழித்துப் போகும்
இருநிலத் தோர்கட் கெல்லாம்
இதுபொரு ளென்று காட்டி. **#2743**

சைவ மெய்த்திருவுடைய ஞானசம்பந்தர் தம் திருக்கையினால் ஆற்று நீரில் செலுத்திய அவ்வேடு, பொருந்திய பிறவியான ஆற்றிலே மாதவரின் உள்ளமானது எதிர்த்துச் செல்வ தைப் போன்று, பெருகி ஓடும் நீரையுடைய வைகையாற்றில் பெரிய இவ்வுலகில் வாழ்பவர்களுக்குக் கெல்லாம், `இதுவே உண்மைப் பொருள் உடையது' என்று எடுத்துக் காட்டிக் கீழ்நோக்கி ஓடும் ஓட்டத்தை எதிர்த்து நீரின் நடுவில் அதைக் கிழித்துக் கொண்டு மேல்நோக்கிச் செல்லலாயிற்று.

விளக்கவுரை

ஆற்றில் எதிர்த்துச் சென்ற ஏட்டிற்கு, மாதவர் மனத்தை உவமை காட்டியிருக்கும் அருமை அறிதற்குரியது. `உரன் என்னும் தோட்டியான் ஓரைந்துங்காப்பான் வரன் என்னும் வைப்பிற்கு' *(குறள், 24)* வித்தாவர் அல்லரோ*?*

எம்பிரான் சிவனே எல்லாப்
பொருளும்என் றெழுதும் ஏட்டில்
தம்பிரா னருளால் வேந்தன்
தன்னைமுன் ஓங்கப் பாட
அம்புய மலராள் மார்பன்
அநபாயன் என்னுஞ் சீர்த்திச்
செம்பியன் செங்கோ லென்னத்
தென்னன்கூன்நிமிர்ந்த தன்றே. **#2744**

`எம் இறைவரான சிவபெருமானே முழுமுதற் பொருளாவர்' என்று எழுதிய அவ்வேட்டில், தம் இறைவரின் அருளாலே `வேந்தனும் ஓங்குக' என்று மன்னனை ஓங்குமாறு பாடிய காரணத்தால், திருமகளை மார்பில் உடைய அனபாயன் என்னும் சிறப்புப் பொருந்திய சோழ மன்னனின் செங்கோலைப் போல் பாண்டியனின் கூனும் அப்போதே நிமிர்ந்தது.

விளக்கவுரை

நிமிர்ந்து நிற்கும் உடலிற்கு, என்றும் நிமிர்ந்து நிற்கும் *(நிற்கவேண்டிய)* செங்கோலை உவமை கூறிய அருமையும் அறிதற் குரியதாம். `வளையாத செங்கோல்' என இளங்கோவடிகள் குறிப்ப தும் நினைதற்குரியது.

ஏடுநீ ரெதிர்ந்து செல்லும்
பொழுதிமை யோர்கள் எல்லாம்
நீடிய வாழ்த்திற் போற்றி
நிறைந்தபூ மாரி தூர்த்தார்
ஆடியல் யானை மன்னன்
அற்புத மெய்தி நின்றான்
பாடுசேர் அமண ரஞ்சிப்
பதைப்புடன் பணிந்து நின்றார். **#2745**

ஞானசம்பந்தர் இட்ட ஏடு வையையாற்றின் நீரில் முன் கூறியபடி எதிர்த்துச் செல்லும் போது, வானவர்கள் எல்லாம் நீண்ட வாழ்த்து மொழிகளால் வாழ்த்தி மிக்க மலர்மழை பொழிந்து நிலத்தை மறைத்தனர். வெற்றிபெறும் இயல்புடைய யானைப் படை உடைய பாண்டிய மன்னன் வியப்படைந்து நின்றான். அறிவழிய நின்ற சமணரெல்லாம் பயந்து பதைப்புடன் தலைகுனிந்து நின்றனர்.

விளக்கவுரை

****

ஆற்றின்மேற் செல்லும்ஏடு
தொடர்ந்தெடுப் பதற்கு வேண்டிக்
காற்றென விசையிற் செல்லும்
கடும்பரி ஏறிக் கொண்டு
கோற்றொழில் திருத்த வல்ல
குலச்சிறை யார்பின் சென்றார்
ஏற்றுயர் கொடியி னாரைப்
பாடினார் ஏடு தங்க. **#2746**

ஆற்றின் நடுவில் நீரை எதிர்த்து மேல் நோக்கிச் சென்ற அவ்வேட்டைத் தொடர்ந்து போய் எடுப்பதற்காக, ஆட்சியைத் திருந்தச் செய்யவல்ல குலச்சிறையார் என்ற அமைச்சர் காற்றைப் போல் விரைவாய்ச் செல்லும் குதிரைமீது ஏறி அவ்வேட்டின் பின் சென்றார். ஞானசம்பந்தர் விடைக் கொடியை யுடைய சிவபெரு மானை, அந்த ஏடு மேற்கொண்டு செல்லாது ஓரிடத்தில் தங்கி நிற்குமாறு பாடினார்.

விளக்கவுரை

****

ஏடகம் பிள்ளை யார்தாம்
வன்னிஎன் றெடுத்துப் பாடக்
கூடிய நீரில் ஏடு
குலச்சிறை யாருங் கூடிக்

காடிட மாக ஆடும்
கண்ணுதல் கோயில் மாடு
நீடுநீர் நடுவுட் புக்கு
நின்றஏ டெடுத்துக் கொண்டார். **#2747**

பிள்ளையார் தாமும் அவ்வேடகத் திருப்பதி கத்தை `வன்னியு மத்தமும்' எனத் தொடங்கிப் பாடியருளவும், ஆற்று நீரொடு சேர்ந்து வந்த ஏட்டினிடத்துக் குலச்சிறையாரும் சென்று அடைந்து, பெருஞ் சுடுகாடே இடமாய் ஆடுகின்ற நெற்றிக்கண்ணை உடைய சிவபெருமானது கோயிலின் அருகில் நிலைபெற ஓடிக் கொண்டிருக்கும் வைகை ஆற்றின் நடுவில் புகுந்து, மேற்செல்லாமல் நின்ற ஏட்டை எடுத்துக் கொண்டார்.

விளக்கவுரை

`வன்னியும் மத்தமும்' *(தி.3 ப.32)* எனத் தொடங்குவது கொல்லிப் பண்ணிலமைந்த பதிகமாகும். இப்பதிகத் திருக்கடைக் காப்பில் `வைகைநீர் ஏடுசென்று அணைதரும் ஏடகம்' எனவருவது இவ்வரலாற்றிற்குரிய அகச் சான்றாகும்.

தலைமிசை வைத்துக் கொண்டு
தாங்கரும் மகிழ்ச்சி பொங்க
அலைபுனற் கரையில் ஏறி
அங்கினி தமர்ந்த மேருச்
சிலையுடை யவர்தாள் போற்றி
மீண்டுசென் றணைவார் தெய்வ
மலைமகள் குழைத்த ஞானம்
உண்டவர் தம்பால் வந்தார். **#2748**

குலச்சிறையார் எடுத்த ஏட்டைத் தம் தலைமீது வைத்துக்கொண்டு, தாங்கற்கரிய மகிழ்ச்சி மீதூர, அலைகளையுடைய நீர் நிறைந்த வையை ஆற்றின் கரையில் ஏறி, அவ்விடத்து அமர்ந்திருக் கும் மேருவை வில்லாக வளைத்த இறைவரை வணங்கி, மீண்டு மலைமகளாம் உமையம்மையார் குழைத்து ஊட்டிய ஞானத்தை உண்டவரான ஞானசம்பந்தரிடத்து வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

****

மற்றவர் பிள்ளை யார்தம்
மலரடி வணங்கிப் போற்றிக்
கொற்றவன் முதலா யுள்ளோர்
காணமுன் கொணர்ந்த ஏடு
பற்றிய கையி லேந்திப்

பண்பினால் யார்க்குங் காட்ட
அற்றருள் பெற்ற தொண்டர்
அரவொலி எழுந்த தன்றே. #2749
வந்த குலச்சிறையார், பிள்ளையாரின் தாமரை மலர்போன்ற திருவடிகளைப் போற்றி நின்று, அரசன் முதலாக அங் கிருந்தோர்அனைவரும் காணுமாறு, முற்படத் தம் தலைமீது எடுத்துக் கொண்டுவந்த ஏட்டைக் கையில் ஏந்திப் பண்பால் அனைவர்க்கும் காட்ட, இம்மையும் மறுமையுமாய பற்றுக்களை அறுத்துத் திருவரு ளைப் பெற்ற தொண்டர்கள் செய்யும் `அரகர' என்ற ஒலி முழக்கம், அதுபொழுது எங்கும் எழுந்தது.

விளக்கவுரை

****

மன்னவன் மாறன் கண்டு
மந்திரி யாரை நோக்கித்
துன்னிய வாதில் ஒட்டித்
தோற்றஇச் சமணர் தாங்கள்
முன்னமே பிள்ளை யார்பால்
அநுசிதம் முற்றச் செய்தார்
கொன்னுனைக் கழுவில் ஏற
முறைசெய்க என்று கூற. #2750
பாண்டிய மன்னன் அமைச்சரை நோக்கிப் பொருந்திய வாதத்தில் தாமே சூளுரைத்துத் தோற்ற இச்சமணர்கள், அச்சூளுரையில் தோற்றதால், ஒறுத்தற்குரியராகின்றனர். அன்றியும் முன்பே ஞானசம்பந்தரிடத்தில் செய்யத்தகாத தீய செயலை முழுமை யாகச் செய்துள்ளனர். ஆதலால் அவர்களைக் கழுவிலேற்றி முறை செய்து ஒறுக்க எனக் கூற,

விளக்கவுரை

****

புகலியில் வந்த ஞானப்
புங்கவர் அதனைக் கேட்டும்
இகலிலர் எனினும் சைவர்
இருந்துவாழ் மடத்தில் தீங்கு
தகவிலாச் சமணர் செய்த
தன்மையாற் சாலு மென்றே
மிகையிலா வேந்தன் செய்கை
விலக்கிடா திருந்தவேலை. #2751
சீகாழியில் தோன்றிய ஞானசம்பந்தர், அங்ஙனம் பாண்டியமன்னன்

ஆணையிட்டதைக் கேட்டும், சமணரி டத்துப் பகைமை இல்லாதவராயினும், சைவத்தொண்டர்கள் இருந்து வாழும் மடத்தில் தீங்கைச் செய்த சமணர்களின் தகுதியற்ற தன்மை யினால் இவ்வொறுப்பு மிகவும் பொருத்தமானதேயாகும் என்று எண்ணி, நேர்மையில் திறம்பாத மன்னரின் ஆணைச் செய்தியை விலக்காமலிருந்தார். அப்போது,

விளக்கவுரை

`கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட் டதனொடு நேர்' *(குறள், 550)* `குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல் வடுவன்று வேந்தன் தொழில்' *(குறள், 549)* எனவரும் குறட் பாக்களையும் காண்க.

பண்புடை அமைச்ச னாரும்
பாருளோர் அறியு மாற்றால்
கண்புடை பட்டு நீண்ட
கழுத்தறி நிரையி லேற்ற
நண்புடை ஞானம் உண்டார்
மடத்துத்தீ நாடி யிட்ட
எண்பெருங் குன்றத் தெண்ணா
யிரவரும் ஏறி னார்கள். **#2752**

நற்பண்புடைய அமைச்சரும், உலகில் உள்ளவர் அறியும்படியாகக் கணுக்களைப் பக்கங்களில் வெட்டிக் கூர்மையான கழுக்களை நிரல்பட அமைத்திட, அன்புடைய ஞானசம்பந்தர் எழுந்தருளிய மடத்தில் தீயைக் கொளுத்த வேண்டும் எனச் சூழ்ச்சி செய்து கொளுத்திய எண் பெருங்குன்றுகளிலும் இருந்து வந்த எண்ணாயிரம் சமணக் குருமார்களும் கழுவில் ஏறினர்.

விளக்கவுரை

எண்பெருங்குன்றங்கள் - மதுரையைச் சூழ்ந்துள்ள ஆனைமாமலை, ஆதியாய குன்றுகள். அவை பரங்குன்று, ஒருவகம் பப்பாரம்பள்ளி, அருங்குன்றம், பேராந்தை, யானை, இருங்குன்றம் என்பன. ஏற்ற என்றது அரசன் ஆணையை முறைப்படி செயற்படுத் தியமையைக் குறித்தது. அரசனின் ஆணை என அறிவித்ததும் அவர்களே கழுவில் ஏறினார்கள். சமணர்கள் வாதத்தின் பொழுது தாமே கூறிய கூற்றினாலன்றிப் பிறிதில்லை இச்செயல் என்பதும் கருதத்தக்கது.

தோற்றவர் கழுவில் ஏறித்
தோற்றிடத் தோற்றுந் தம்பம்
ஆற்றிடை அமணர் ஓலை

அழிவினால் ஆர்ந்த தம்பம்
வேற்றொரு தெய்வம் இன்மை
விளக்கிய பதாகைத் தம்பம்
போற்றுசீர்ப் பிள்ளை யார்தம்
புகழ்ச்சயத் தம்ப மாகும். #2753

வாதத்தில் தோற்றவர்களான சமணர்கள் எண்ணாயிரம் பேரும் கழுவில் ஏறிட யாவரும் காணும்படி நின்ற அக்கழுமரங்கள், ஆற்றில் சமணர்கள் இட்ட ஓலை அழிந்து போன காரணத்தால் நிறுத்திய வெற்றித் தூண்களாகவும், சிவபெருமானை யன்றி வேறு ஒரு கடவுள் இல்லை என்ற உண்மையினை உலகத்திற்கு விளக்கிக் காட்டி உயர்த்திய கொடித் தூண்களாகவும் விளங்கின. உலகம் போற்றும் சிறப்பையுடைய காழிப் பிள்ளையாரின் புகழைப் புலப்படுத்திய வெற்றித் தூண்களாகவும் அவை விளங்கின.

விளக்கவுரை

பதாகை - வெற்றிக்கொடி.

தென்னவன் தனக்கு நீறு
சிரபுரச் செல்வர் ஈந்தார்
முன்னவன் பணிந்து வாங்கி
முழுவதும் அணிந்து நின்றான்
மன்னன்நீ றணிந்தான் என்று
மற்றவண் மதுரை வாழ்வார்
துன்னிநின் றார்கள் எல்லாம்
தூயநீ றணிந்து கொண்டார். #2754

பாண்டிய மன்னனுக்குச் சீகாழிச் செல்வரான பிள்ளையார் திருநீறு அளித்தார். அவன், அதனை வணங்கி ஏற்றுத் தன் உடல் முழுவதும் முறைப்படி அணிந்து கொண்டான். மன்னன் திருநீறு அணிந்து கொண்டான் என்பதால், அம் மதுரையில் வாழும் நெருங்கிய மக்கள் எல்லாரும் தூய திருநீற்றை அணிந்து கொண்டனர்.

விளக்கவுரை

****

பூதிமெய்க் கணிந்து வேந்தன்
புனிதனாய் உய்ந்த போது
நீதியும் வேத நீதி
யாகியே நிகழ்ந்த தெங்கும்
மேதினி புனித மாக
வெண்ணீற்றின் விரிந்த சோதி

மாதிரந் தூய்மை செய்ய
அமணிருள் மாய்ந்த தன்றே. **#2755**
ஞானப் பிள்ளையார் அளித்தருளிய திருநீற்றை உடலுக்கு மருந்தாக அணிந்து கொண்டு, மன்னன் தூயவனாகப் பெற்று உய்வுபெற்ற அப்போது, அரசியலறங்களும் மறைகளில் விதித்த நீதியேயாக நாடு எங்கும் நிகழலாயின. உலகம் தூய்மை யாகுமாறு திருவெண்ணீற்றினின்றும் விரிந்த பேரொளியானது, எண் திசைகளிலும் தூய்மை செய்தலால், அப்போதே உயிர்களைச் சூழ்ந் திருந்த சமண் இருளும் அழிந்தது.

விளக்கவுரை

****

மீனவற் குயிரை நல்கி
மெய்ந்நெறி காட்டி மிக்க
ஊனமாஞ் சமணை நீக்கி
உலகெலாம் உய்யக் கொண்ட
ஞானசம் பந்தர் வாய்மை
ஞாலத்திற் பெருகி ஓங்கத்
தேனலர் கொன்றை யார்தந்
திருநெறி நடந்த தன்றே. **#2756**
மன்னவனுக்கு உயிரைத் தந்ததுமன்றி உண்மை நெறியையும் காட்டி, மிக்க கேட்டை விளைவிக்கும் சமண சமயத்தைப் போக்கி, உலகம் எல்லாம் உய்யுமாறு ஆட்கொண்டருளும் திரு ஞானசம்பந்தரின் மெய்ந்நெறி, உலகில் பெருகி ஓங்குவதால், வண்டு கள் ஒலிப்பதற்கு இடமான கொன்றை மலர்மாலையைச் சூடிய சிவ பெருமானது திருநெறி அப்பொழுதே பரவுவதாயிற்று.

விளக்கவுரை

****

மறையவர் வேள்வி செய்ய
வானவர் மாரி நல்க
இறைவன் நன்னெறியின் ஓங்க
இகத்தினில் அவனி இன்பம்
குறைவில தெனினும் கூற்றை
உதைத்தவர் நாமம் கூறி
நிறைகடற் பிறவித் துன்பம்
நீங்கிடப் பெற்ற தன்றே. **#2757**
அந்தணர்கள் வேள்விகளைச் செய்ய, அதுகார ணமாகத் தேவர்கள்

மழைபெய்யச் செய்ய, மன்னன் நன்னெறியில் நிற்க, இவ்வாறாக இவ்வுலகம் இம்மை இன்பங்களைக் குறைவின்றித் துய்த்தது. ஆயினும் அதன் துய்ப்பு, பிறவித்துன்பத்துக்கு ஏதுவாத லன்றி, வீட்டின்பத்திற்கு ஏதுவாக அமையாமை கண்ட நகர மாந்தர் கூற்றுவனைக் காலால் உதைத்தவரான சிவபெருமான் திருநாமத்தைக் கூறிவர, நிறைந்த கடல் அலைபோல மேன்மேலும் தொடர்ந்து வரும் பிறவியான துன்பத்தினின்று நீங்கவும் ஏதுவாயிற்று.

விளக்கவுரை

****

அங்கயற் கண்ணி தன்னோ
டாலவாய் அமர்ந்த அண்ணல்
பங்கயச் செய்ய பாதம்
பணிவன்என் றெழுந்து சென்று
பொங்கொளிச் சிவிகை ஏறிப்
புகலியர் வேந்தர் போந்தார்
மங்கையர்க் கரசி யாரும்
மன்னனும் போற்றி வந்தார். **#2758**

`வாழ்க அந்தணர்' எனும் திருப்பாடலை மீண்டும் நினைவு கூரும் வகையில் இப்பாடற் கருத்து அமைந்துள்ளது. `அங் கயற்கண்ணியுடனாகத் திருவாலவாயில் விரும்பி வீற்றிருந்தருளும் பேரருளாளரான இறைவரின் தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்குவன்' என்று, வைகைக் கரையினின்றும் எழுந்து சென்று, மேன்மேலும் ஒளிமிகுந்து நிற்கும் முத்துச் சிவிகையில் இவர்ந்து, சீகாழி மன்னவர் வந்தருளினர். மங்கையர்க்கரசியாரும், நின்றசீர் நெடுமாறனாரும் அவரைப் போற்றியவாறு அவர்பின் வந்தனர்.

விளக்கவுரை

****

எண்ணரும் பெருமைத் தொண்டர்
யாவரும் மகிழ்ச்சி எய்திப்
புண்ணியப் பிள்ளை யாரைப்
புகழ்ந்துடன் போற்றிப் போத
மண்ணெலாம் உய்ய வந்த
வள்ளலார் தம்மைக் கண்டு
கண்ணினாற் பயன்கொண் டார்கள்
கன்னிநாட் டவர்க ளெல்லாம். **#2759**

எண்ணுதற்கரிய பெருமையுடைய தொண்டர்கள் எல்லோரும் மகிழ்ந்து

சிவபுண்ணியப் பிழம்பாகும் பிள்ளையாரைப் புகழ்ந்து, அவருடைய திருவடிகளை வணங்கிப் போற்றிவர, பாண்டிய நாட்டவர் அனைவரும் உலகுய்தற்கென்றே தோன்றிய ஞானசம்பந்தரை நேரே காணப் பெற்றதால் கண்கள் படைத்த பயன் களை அடைந்தவர் ஆயினர்.

விளக்கவுரை

****

ஆலவாய் அண்ணல் கோயில்
அங்கண்முன் தோன்றக் கண்டு
பாலறா வாயர் மிக்க
பண்பினால் தொழுது சென்று
மாலுநான் முகனும் போற்ற
மன்னினார் கோயில் வாயில்
சீலமா தவத்தோர் முன்பு
சிவிகைநின் றிழிந்து புக்கார். **#2760**

இறைவரின் `ஆலவாய்' என்னும் கோயிலானது அங்குத் தோன்றக் கண்டு பிள்ளையார், மிக்க அடிமைப் பண்பினால் வணங்கிச் சென்று, திருமாலும் நான்முகனும் போற்ற நிலைபெற எழுந்தருளிய இறைவரின் கோயிலின் திருவாயில் முன்பு, ஒழுக்க முடைய அடியார்களின் முன்னம், முத்துச் சிவிகையினின்றும் இறங்கி உள்ளே புகுந்தார்.

விளக்கவுரை

****

தென்னவன் தானும் எங்கள்
செம்பியன் மகளார் தாமும்
நன்னெறி அமைச்ச னாரும்
ஞானசம் பந்தர் செய்ய
பொன்னடிக் கமலம் போற்றி
உடன் புகப் புனிதர்கோயில்
தன்னைமுன் வலங்கொண் டுள்ளால்
சண்பையர் தலைவர் புக்கார். **#2761**

பாண்டிய மன்னனும், எங்கள் சோழமன்னரின் மகளாரான மங்கையர்க்கரசியாரும், உலகை நன்னெறிப் படுத்தி வருகின்ற குலச்சிறைநாயனாரும் திருஞானசம்பந்தரின் செம்மை யான அழகிய திருவடிகளைப் போற்றியவாறு உட்புக, திருஞானசம் பந்தர், புனிதரான இறைவரின் திருக்கோயிலை வலமாக வந்து உள்ளே சென்றார்.

விளக்கவுரை

****

கைகளுந் தலைமீ தேறக்
கண்ணில்ஆ னந்த வெள்ளம்
மெய்யெலாம் பொழிய வேத
முதல்வரைப் பணிந்து போற்றி
ஐயனே அடிய னேனை
அஞ்சலென் றருள வல்ல
மெய்யனே என்று வீட
லாலவாய் விளம்ப லுற்றார். **#2762**

இரு கைகளும் தலைமீது குவிந்திடவும், கண் களினின்றும் பெருகும் நீர்வெள்ளம் திருமேனி முழுவதும் பொழிய வும், மறைமுதல்வரான இறைவரைப் பணிந்து போற்றி, `ஐயனே! அடி யவனையும் அஞ்சேல் என்று அருளிச் செய்து ஆட்கொள்ளவல்ல மெய்ப் பொருளானவரே' என்று `வீடலாலவாய்' (தி.3 ப.52) எனத் தொடங்கும் திருப்பதிகத்தை அருளிச் செய்தார்.

விளக்கவுரை

இம்முதற் குறிப்புடைய பதிகம் கௌசிகப் பண்ணில் அமைந்ததாகும். `ஐயனே! அஞ்சல் என்று அருள் செய் எனை' என முன்வேண்டியதற்கேற்ப, `ஆட் கொண்டருளினீர்' என அவர் தம் கருணையை எண்ணி மகிழ்ந்தவராய், இப்பதிகத்தை அருளினார்.

ஒன்றுவே றுணர்வு மில்லேன்
ஒழிவற நிறைந்த கோலம்
மன்றிலான் மறைக ளேத்த
மானுடர் உய்ய வேண்டி
நின்றுநீ ஆடல் செய்கை
நினைப்பதே நியம மாகும்
என்றுபூம் புகலி மன்னர்
இன்தமிழ்ப் பதிகம் பாட. **#2763**

`பற்றற்குரிய வேறு உணர்வு ஒன்றும் இல்லாத வனாய, யான் நீக்கம் இல்லாது எங்கும் நிறைந்த அழகிய சிற்றம்பலத் தில், நான்மறைகளும் போற்றுமாறு மக்கள் உய்யும் பொருட்டாய் நீ அருட்கூத்து ஆடுவதை இடைவிடாமல் எண்ணுவதே என் நியமமா கும்' என்ற கருத்துடன், அழகிய சீகாழியின் தலைவர் ஆன ஞான சம்பந்தர் இனிய தமிழ்ப் பதிகத்தைப் பாடி அருள,

விளக்கவுரை

மேற்கூறிய `வீடலாலவாய்' எனவரும் திருப்பதிகத்தில் ஆறாவது பாடலில், `கூடலாலவாயிலாய் நின்றயங்கி யாடலே நினைப்பதே

நியமமே' எனவரும் கருத்தை முகந்து இங்ஙனம் ஆசிரியர் அருளினர். `நினைப்பதே நியமமே' எனவரும் தொடர், இப்பதிகத்தில் 8ஆவது பாடலிலும் வருகின்றது.

தென்னவன் பணிந்து நின்று
திருவால வாயில் மேவும்
மன்னனே அமணர் தங்கள்
மாயையால் மயங்கி யாதும்
உன்னையான் அறிந்தி லேனை
உறுபிணி தீர்த்தாட் கொள்ள
இன்னருட் பிள்ளை யாரைத்
தந்தனை இறைவ என்றான். **#2764**

பாண்டியன் வணங்கி எழுந்து நின்று `திரு ஆலவாயில் எழுந்தருளிய அரசே! சமணர்களின் வஞ்சனைக்கு ஆளாகி மயங்கி உன்அருட் பெருமையினை ஒருசிறிதும் அறியாத என்னை, இறைவனே! உற்ற நோயைத் தீர்த்து ஆட்கொள்ள இனிய அருள் உருவான திருஞானசம்பந்தரை எனக்கு அளித்து அருள் செய்தனை!' என வணங்கினான்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

சீருடைப் பிள்ளை யாரும்
சிறப்புடை அடியா ரோடும்
காரினிற் பொலிந்த கண்டத்
திறைவர்தாள் வணங்கிக் காதல்
ஆரருள் பெற்றுப் போற்றி
அங்குநின் றரிது நீங்கி
ஏரியல் மடத்தின் உள்ளால்
இனிதெழுந் தருளிப் புக்கார். **#2765**

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

விளக்கவுரை

****

நீடுசீர்த் தென்னர் கோனும்
நேரியன் பாவை யாரும்
மாடுசென் றிறைஞ்சிநோக்கி
மாளிகை தன்னிற் போகக்
கூடிய மகிழ்ச்சி பொங்கக்
கும்பிடும் விருப்பி னாலே

நாடியங் கிருந்து தங்கள்
நாதரைப் பாட லுற்றார். **#2766**
மிகுபுகழுடைய பாண்டிய அரசரும், சோழரின் மகளாரான மங்கையர்க்கரசியாரும், அருகிற் சென்று வணங்கிப் பின், தம் அரண்மனைக்குள் சென்றனர். மீதூர்ந்த மகிழ்ச்சிமிக வழிபடும் விருப்பினால் நாடி அங்கிருந்து தம் இறைவரைப் பாடுபவராகி,

விளக்கவுரை

****

திருஇய மகத்தி னுள்ளும்
திருநீல கண்டப் பாணர்க்
கருளிய திறமும் போற்றி
அவரொடும் அளவ ளாவித்
தெருளுடைத் தொண்டர் சூழத்
திருத்தொண்டின் உண்மை நோக்கி
இருள்கெட மண்ணில் வந்தார்
இனிதமர்ந் திருந்தா ரன்றே. **#2767**
திருநீலகண்டயாழ்ப்பாணருக்கு இறைவர் அருள் செய்த திறத்தைத் `திருவியமகத் திருப்பதிகத்துள்' வைத்துப் போற்றி, அவருடனே உரையாடியிருந்து, தெளிவுடைய அறிவினராய திருத்தொண்டர்கள் பலரும் சூழ இருப்ப, திருத்தொண்டின் அழியாத உண்மைத் திறத்தை நோக்கி மகிழ்ந்து, இருள் கெடுமாறு மண்ணுலகில் தோன்றியருளிய பிள்ளையார் அங்கு இனிதாய்த் தங்கியிருந் தருளினார்.

விளக்கவுரை

பிள்ளையார் அருளிய திருஇயமகப் பதிகம் `ஆலநீழல்' *(தி.3 ப.115)* எனத் தொடங்கும் பழம்பஞ்சுரப் பண்ணில் அமைந்த பதிகமாகும். ஒரு பாடலில் ஓரடியில் வரும் சொல்லோ அல்லது சொற்றொடரோ மீண்டும் அவ்வடியில் வரப்பெறின் அது இயமகம் ஆகும். அவ்வகையில் இப்பதிகம் முழுவதும் வருதலின் இவ்வியமக வகையதாயிற்று. இதன்கண் `தாரம் உய்த்தது பாணர்க் கருளோடே' *(தி.3 ப.115 பா.6)* எனவரும் தொடரை நினைவு கூர்ந்தே, `பாணர்க்கருளும் திறம் போற்றி' என்றார் ஆசிரியர். தாரம் - பண்பாடும் திறம். நாளும் பண்ணின் திறங்கொள யாழிசைத்துவரும் பாணருக்கு, இறைவன் தன் திருமுன்பழைத்துப் பலகையிடச் செய்து, அதன்மீதிருந்து பாடுக என அருளியது இங்குக் குறிக்கப் பெறும் கருத்தாகும்.

பூழியன் மதுரை யுள்ளார்
புறத்துளார் அமணர் சேரும்

பாழியும் அருகர் மேவும்
பள்ளியு மான எல்லாம்
கீழுறப் பறித்துப் போக்கிக்
கிளரொளித் தூய்மை செய்தே
வாழியப் பதிக ளெல்லாம்
மங்கலம் பொலியச் செய்தார். **#2768**

பாண்டிய மன்னனின் மதுரை நகரத்து மக்களும், மதுரையின் புறத்துப் பல இடங்களிலும் உள்ளவர்களும், சமணத் துற வியர் தங்கியிருந்த பாழிகளையும், அவர்தம் இறைவர் இடம் கொண்ட பள்ளிகளையும் முழுமையாகக் கீழ்நிலம் காண அகழ்ந்து போக்கி, ஒளி பெருகத் தூய்மை செய்து, வாழ்வுபெறும் அப்பதிகள் எல்லாவற் றிலும் சிவச் சின்னங்களை விளங்கச் செய்தார்கள்.

விளக்கவுரை

மேற்கூறிய இடங்களில் எல்லாம் விடைக்கொடி, விடை இலச்சினை, சூலம் ஆகிய சிவச்சின்னங்களை அமைத்தனர் என்பதாம்.

மீனவன் தேவி யாரும்
குலச்சிறை யாரும் மிக்க
ஞானசம் பந்தர் பாதம்
நாள்தொறும் பணிந்து போற்ற
ஆனசண் பையர்கோ னாரும்
ஆலவாய் அமர்ந்தார் பாதம்
ஊனமர்ந் துருக ஏத்தி
உளங்களித் துறையும் நாளில். **#2769**

பாண்டியனின் மனைவியாரான மங்கையர்க் கரசியாரும் குலச்சிறை நாயனாரும் மிகு சைவத்துறை நிற்கும் ஞானசம்பந்தரின் திருவடிகளை நாள்தோறும் வணங்கிப் போற்றிவர, சீகாழித் தலைவரான பிள்ளையாரும் திருவாலவாயில் விரும்பி வீற்றிருக்கும் இறைவரின் திருவடிகளை ஊனும் உருகுமாறு போற்றி உள்ளம் மகிழ அங்கு வீற்றிருந்தருளிய நாள்களில்,

விளக்கவுரை

****

செய்தவத்தாற் சிவபாத
இருதயர்தாம் பெற்றெடுத்த
வைதிகசூ ளாமணியை
மாதவத்தோர் பெருவாழ்வை
மைதிகழுந் திருமிடற்றார்

அருள்பெற்ற வான்பொருளை
எய்தியபூம் புகலியிலே
இருந்தநாள் மிகநினைந்தார். **#2770**

முன் செய்த தவத்தால் பெற்றெடுத்த சிவபாத இருதயரும், தம் திருமகனாராய் மறைவழிப் பட்டவர்களின் மணி முடியாய் நிற்பவரை, மாதவத்தோர்களாகிய சிவஞானியர்களின் பெருவாழ்வாக இருந்தருளுபவரை, நஞ்சுடைய திருக்கழுத்தை உடைய இறைவரின் திருவருள் பெற்று மெய்ப் பொருளாய் விளங்கு பவரைச் சீகாழியில் தங்கியிருந்த அந்நாள்களில் மிகவும் நினைந்தார்.

விளக்கவுரை

இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

ஆனபுகழ்த் திருநாவுக்
கரசர்பால் அவஞ்செய்த
மானமிலா அமணருடன்
வாதுசெய்து வெல்வதற்கும்
மீனவன்தன் நாடுய்ய
வெண்ணீறு பெருக்குதற்கும்
போனவர்பாற் புகுந்தபடி
அறிவனெனப் புறப்படுவார். **#2771**

`திருவருளாலாய புகழையுடைய திருநாவுக் கரசரிடம் பிழை செய்த, மானம் இல்லாத சமணர்களுடன் வாதம் செய்து, அவரை வெற்றி கொள்வதற்கும், பாண்டிய நாடு உய்யும் வண்ணம் திருநீற்று நெறியைப் பெருக்குதற்கும் சென்றருளிய பிள்ளையாரிடம் நிகழ்ந்தவற்றை அறிவேன்' என்று சிவபாத இருதயர் புறப்படுவாராகி,

விளக்கவுரை

நாவரசரை நினைவு கூர்ந்தது முன்னம் அவர்தம் வரலாற்றை யறிந்தமையாலாம்.

துடியிடையாள் தன்னோடும்
தோணியில் வீற்றிருந்தபிரான்
அடிவணங்கி அலர்சண்பை
அதனின்றும்வழிக்கொண்டு
படியின்மிசை மிக்குளவாம்
பரன்கோயில் பணிந்தேத்தி
வடிநெடுவேல் மீனவன்தன்
வளநாடு வந்தணைந்தார். **#2772**

துடியைப் போன்ற இடையுடைய திருநிலை நாயகியம்மையாருடனாகத்

திருத்தோணியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, அழகிய சீகாழியினின்றும் புறப்பட்டு வரும் வழியில் இம்மண்ணுலகில் மேம்பட்டு விளங்கும் சிவபெருமானின் கோயில்கள் பலவற்றையும் வணங்கிப் போற்றிக் கூரிய வேல் ஏந்திய பாண்டியனின் வளம்மிக்க நாட்டில் வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மாமறை யோர் வளம்பதிகள்
இடைத்தங்கி வழிச்செல்வார்
தேமருவு நறும்பைந்தார்த்
தென்னவன்தன் திருமதுரை
தாமணைந்து திருவால
வாயமர்ந்த தனிநாதன்
பூமருவுஞ் சேவடிக்கீழ்ப்
புக்கார்வத் தொடுபணிந்தார். **#2773**

சிறந்த அந்தணரான சிவபாத இருதயர், வளம் மிக்க பாண்டிய நாட்டுப் பதிகளுள் தங்கிச் செல்வாராய்த் தேன் பொருந்திய மணம் கமழும் பசுமையான வேப்ப மாலையையுடைய பாண்டியனின் தலைநகரமான மதுரையை அடைந்து, திருஆலவாயில் விரும்பி வீற்றிருக்கும் ஒப்பற்ற முதல்வரான சொக்கநாதப் பெருமா னின் மலர்கள் பொருந்திய சிவந்த திருவடிகளின் கீழ்ச் சென்று மிக்க ஆர்வத்துடன் வணங்கினார்.

விளக்கவுரை

****

அங்கணரைப் பணிந்துபோந்
தருகணைந்தார் தமைவினவ
இங்கெம்மைக் கண்விடுத்த
காழியார் இளவேறு
தங்குமிடம் திருநீற்றுத்
தொண்டர்குழாஞ் சாருமிடம்
செங்கமலத் திருமடம்மற்
றிதுவென்றே தெரிந்துரைத்தார். **#2774**

இறைவரை வணங்கி வெளியே வந்து அருகில் வந்து சேர்ந்த நகர மக்களான அடியார்களை, ஞானசம்பந்தர் தங்கி யுள்ள மடம்பற்றி வினவ, இங்குக் குருடராய் இருந்த எம்மைக் கண் திறக்கச் செய்து ஒளிநெறிகாட்டிய சீகாழிப் பதியினரின் இளஞ்சிங்க மான ஞானசம்பந்தர் தங்கும் இடமாவது, திருநீற்றுத் தொண்டர் கூட்டம் சூழும் இடமாய்ச் செந்தாமரை போன்ற திருமடம் இதுவேயாகும் என அவர்கள் அறிந்து கூறினர்.

விளக்கவுரை

****

செப்புதலும் அதுகேட்டுத்
திருமடத்தைச் சென்றெய்த
அப்பர்எழுந் தருளினார்
எனக்கண்டோர் அடிவணங்கி
ஒப்பில்புகழ்ப் பிள்ளையார்
தமக்கோகை உரைசெய்ய
எப்பொழுது வந்தருளிற்
றென்றெதிரே எழுந்தருள. **#2775**

அவர்கள் அங்ஙனம் கூறக் கேட்ட சிவபாத இருதயர், அம்மடத்தில் சென்று சேர, அங்கு அவரைக் கண்டவர்கள் அடிவணங்கி, ஒப்பில்லாத புகழையுடைய ஞானசம்பந்தருக்கு, அந்த மகிழ்ச்சிக்குரிய செய்தியைக்

கூறவே, அவர் `எப்பொழுது வந்தருளி யது' என வினவிக் கொண்டு எதிரே எழுந்தருள,

விளக்கவுரை

****

சிவபாத இருதயர்தாம்
முன்தொழுது சென்றணையத்
தவமான நெறியணையுந்
தாதையார் எதிர்தொழுவார்
அவர் சார்வு கண்டருளித்
திருத்தோணி அமர்ந்தருளிப்
பவபாசம் அறுத்தவர்தம்
பாதங்கள் நினைவுற்றார். **#2776**

சிவபாத இருதயர் தாம் அப்பிள்ளையார் முன்பு தொழுது சென்றருளத் தவநெறியில் நின்றருளும் தந்தையார் எதிரில், தாமும் தொழுவாராகி, பிள்ளையார், அவரைக் கண்ட அளவில் திருத்தோணியில் எழுந்தருளியிருக்கும் பிறவிப் பிணிப்பை அறுத் தருளியவரான தோணியப்பரின் திருவடியினை நினைவு கூர்ந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

இருந்தவத்தோர் அவர்முன்னே
இணைமலர்க்கை குவித்தருளி
அருந்தவத்தீர் எனையறியாப்
பருவத்தே எடுத்தாண்ட
பெருந்தகையெம் பெருமாட்டி
உடனிருந்த தேயென்று
பொருந்துபுகழ்ப் புகலியின்மேல்
திருப்பதிகம் போற்றிசைத்தார். **#2777**

பெரிய தவத்தினரான அச்சிவபாத இருதயர் முன்னே, மலர் அனைய இரண்டு கைகளையும் கூப்பியருளி, `அரிய தவத்தையுடையவரே! என்னை அறியாப் பருவத்தில் எடுத்தாண்ட பெருந்தகையாரான தோணியப்பர் எம் பெரியநாயகி அம்மையா ருடன் நன்கு எழுந்தருளியிருந்ததே!' என்ற கருத்துடன் பொருந்தும் புகழுடைய சீகாழியின் மேல் திருப்பதிகத்தினைப் பாடுபவராய்,

விளக்கவுரை

****

மண்ணில்நல்ல என்றெடுத்து

மனத்தெழுந்த பெருமகிழ்ச்சி
உண்ணிறைந்த காதலினால்
கண்ணருவி பாய்ந்தொழுக
அண்ணலார் தமைவினவித்
திருப்பதிகம் அருள்செய்தார்
தண்ணறும்பூஞ் செங்கமலத்
தாரணிந்த தமிழ்விரகர். **#2778**

`மண்ணில் நல்ல' என்று தொடங்கித் திருவுள் ளத்தில் எழுந்த பெருமகிழ்ச்சியுடன் உளம் நிறைந்த ஆசைப் பெருக் கால், கண்களிலிருந்து அருவி எனக் கண்ணீர் பாய்ந்து வழிய, தோணி யப்பர் இனிதாய் இருந்தமை பற்றித் தம் தந்தையை வினவிக் குளிர்ந்த மணமுடைய அழகிய செந்தாமரை மாலையை அணிந்த தமிழ் வல்லுந ரான பிள்ளையார் திருப்பதிகத்தைத் திருவாய் மலர்ந்தருளினார்.

விளக்கவுரை

இத்தொடக்கமுடைய திருப்பதிகம் கொல்லிப் பண்ணில் அமைந்ததாகும்*(தி.3 ப.24)*. ஒருவர் தம் பதியை விடுத்துப் பிற பதிக்குச் சென்று அங்குத் தங்கியிருக்கும்பொழுது, தம் பதியிலிருந்து ஒருவர் வரக் காணின், நம்மவர் நலமாக இருக்கின்றார்களா? என வினவுதல் இயற்கை. உலகியல் வயப்பட்ட இவ்வழக்கு, அருளியல் வயப்பட்ட பிள்ளையாரிடமும் அமைந்திருந்தது. எனினும் இவ்வினா அருளியல் வயப்பட்டதாய்த் தம் உடல் தந்தையாரைக் கண்ட பொழுதே உயிர்த் தந்தையாரும், தாயாரும் திருவுள்ளத்திற்கு வர அருளப்பட்டதாகும். தோணிபுரத்து வீற்றிருக்கும் அம்மையப்பரிடம் அவருக்கிருந்த உணர்வுதானும் அரியதும் பெரியதுமாயதை இந் நிகழ்ச்சி விளக்குவதாகும்.

திருப்பதிகந் திருக்கடைக்காப்
புச்சாத்திச் சிறப்பின்மிகு
விருப்பினால் அவர்தமக்கு
அருப்புறுமெய்க் காதல்புரி
அடியவர்கள் தம்மோடும்
பொருப்புறுகைச் சிலையார்சேர்
பதிபிறவும் தொழப்போவார். **#2779**

அப்பதிகத்தின் திருக்கடைக்காப்பையும் அருளி நிறைவித்து, மிக்க விருப்பத்துடன் அத்தந்தையார் தமக்கு விருந்து அளித்து, மகிழ்ச்சிப் பெருக்குடன் இருக்கும் நாளில், அரும்பு எனப் புதியதாய் மலர்ந்த உண்மையன்பின் மிகுதியால், திருத்தொண்டை இடையறாது நினைந்து செய்யும் அடியவர்கள் வீற்றிருக்கும் மற்றப் பதிகளையும் சென்று

வணங்குதற் பொருட்டுச் செல்வாராய்,

விளக்கவுரை

****

ஆலின்கீழ் நால்வர்க்கன்
றறமுரைத்த அங்கணனை
நூலின்கட் பொருள்பாடி
நூலறிவார்க் கீந்தானைக்
காலம்பெற் றினிதிறைஞ்சிக்
கைதொழுது புறம்போந்தார்
சீலங்கொள் தென்னவனும்
தேவியரும் உடன்போத. **#2780**

கல்லால மரத்தின்கீழ் அமர்ந்து அக்காலத்தில் நான்கு முனிவர்கட்கு அறம் உரைத்த இறைவரை, தமிழ் நூல்களுள் சிறந்த பொருள் இலக்கணத்தைப் பாடி நூலறியும் சங்கப் புலவர் களுக்குத் தந்தருளியவரை, உரியகாலம் அறிந்து சேரப்பெற்று இனி தாக வணங்கிக் கையால் தொழுது, சைவ ஒழுக்கத்தை மேற்கொண்ட பாண்டியனும், அவரது தேவியாரும் உடன்வர, ஞானசம்பந்தர் வெளியே வந்தருளினார்.

விளக்கவுரை

நூலின்கண் - தமிழ்நூல்களுள். பொருள் பாடி - இறை யனார் அகப்பொருள் எனும் அகப்பொருள் இலக்கணத்தைப் பாடி. நூலறிவார் - சங்கப் புலவர்கள். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

தேன்நிலவு பொழில் மதுரைப் புறத்துப் போந்த
தென்னவனார் தேவியார் அமைச்சர் சிந்தை
ஊன்நெகிழும் படியழிந்தங் கொழுகு கண்ணீர்
பாய்ந்திழிய உணர்வின்றி வீழக் கண்டே
யான்உம்மைப் பிரியாத வண்ணம் இந்நாட்
டிறைவர்பதி யெனைப்பலவும் பணிவீ ரென்று
ஞானமுணர் வார்அருள அவரும் போத
நம்பர்திருப் பரங்குன்றை நண்ணி னாரே. **#2781**

தேன் பொருந்திய மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த மதுரை மாநகரின் வெளியே வந்து பாண்டியரும், தேவியா ரான மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் தம் ஊன் உருகும் வண்ணம் உள்ளம் அழிந்து, அதனால் பெருகிவரும் கண்ணீர் இடையறாது ஒழுகிவிழ, உணர்வு இழந்து விழுந்ததைக் கண்டு `நான் உங்களைப் பிரியாதவாறு இந்நாட்டின் இறைவரது பதிகள் பலவற்

றையும் வணங்குவீர்களாக!' எனச் சிவஞான உணர்வினரான பிள்ளையார் உரைத்தருள, அவ்வாறே அதற்கு இசைந்து அவர்களும் உடன்வர, இறைவரின் திருப்பரங்குன்றத்தைச் சென்று அடைந்தனர்.

விளக்கவுரை

ஊன் நெகிழ, ஒழுகு கண்ணீர்வழிய, உணர்விழந்து மூவரும் விழுதற்குக் காரணம் பிள்ளையாரின் பிரிவாற்றாமையே யாகும். அதனை யுணர்ந்த பிள்ளையாரும் தம்முடன் அவர்கள் மூவ ரும் போதர இணங்கினர். `யான் உம்மைப் பிரியாத வண்ணம்' என் றது நனிநாகரிகம் பட நின்றது.

ஆறணிந்தார் தமைவணங்கி அங்குப் போற்றி
அணிஆப்ப னூரணைந்து பணிந்து பாடி
நீறணிந்த செல்வர்பதி பிறவுஞ் சேர்ந்து
நிலவுதிருப் பதிகங்கள் நிகழப் பாடிச்
சேறணிந்த வயற்பழனக் கழனி சூழ்ந்த
சிரபுரத்து வந்தருளுஞ் செல்வர் செங்கண்
ஏறணிந்த வெல்கொடியார் திருப்புத் தூரை
எய்திஇறைஞ் சிச்சிலநாள்அங் கிருந்தா ரன்றே. **#2782**

கங்கையாற்றைத் திருமுடியிற் கொண்ட சிவபெருமானை அப்பதியில் போற்றி, அழகிய ஆப்பனூரை அடைந்து வணங்கிப் பாடி, திருநீறு பூசிய இறைவரின் பதிகள் பல வற்றையும் சேர்ந்து, பொருந்திய பதிகங்கள் நிகழுமாறு பாடி, சேறு பொருந்திய வயல்கள் சூழ்ந்த சீகாழியில் தோன்றிய செல்வரான பிள்ளையார், சிவந்த கண்களை உடைய விடையைக் கொடியாய் உடைய இறைவரின் திருப்புத்தூரை இனிதாய் அடைந்து, வணங்கிச் சிலநாள்கள் அங்குத் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

கங்கையாற்றைத் திருமுடியிற் கொண்ட சிவபெருமானை அப்பதியில் போற்றி, அழகிய ஆப்பனூரை அடைந்து வணங்கிப் பாடி, திருநீறு பூசிய இறைவரின் பதிகள் பல வற்றையும் சேர்ந்து, பொருந்திய பதிகங்கள் நிகழுமாறு பாடி, சேறு பொருந்திய வயல்கள் சூழ்ந்த சீகாழியில் தோன்றிய செல்வரான பிள்ளையார், சிவந்த கண்களை உடைய விடையைக் கொடியாய் உடைய இறைவரின் திருப்புத்தூரை இனிதாய் அடைந்து, வணங்கிச் சிலநாள்கள் அங்குத் தங்கியிருந்தார்.

பற்றார்தம் புறங்கள்மலைச் சிலையால் செற்ற
பரமனார் திருப்புத்தூர் பணிந்து போந்து
புற்றாரும் பணிபூண்ட புனித னார்தம்
பூவணத்தைப் புக்கிறைஞ்சிப் புகழ்ந்து பாடிக்
கற்றார்கள் தொழுதேத்துங் கானப் பேரும்

கைதொழுது தமிழ்பாடிச் சுழியல் போற்றிக்
குற்றாலங் குறும்பலாக் கும்பிட் டேத்திக்
கூற்றுதைத்தார் நெல்வேலி குறுகினாரே. **#2783**

பகைவரின் முப்புரங்களை, மலையாகிய வில்லினால் அழித்த இறைவரின் திருப்புத்தூரைப் பணிந்து சென்று, புற்றில் வாழும் இயல்புடைய பாம்பை அணிந்த தூயவரின் `திருப் பூவணம்' என்ற திருப்பதிக்குச் சென்று இறைவரை வணங்கிப் புகழ்ந்து பாடி, கற்றவர் வணங்கிப் போற்றும் `திருக்கானப்பேர்' என்ற பதியை யும் வணங்கித் தமிழ்ப் பதிகம்பாடி, `திருச்சுழியலைப்' போற்றி, அதன்பின் `திருக்குற்றாலத்தையும்' வணங்கிக் கூற்றுவனை உதைத்து அருளிய இறைவரின் திருநெல்வேலியை அடைந்தார்.

விளக்கவுரை

இப்பதிகளில் அருளிய பதிகங்கள்*: 1.* திருப்புத்தூர்*:* வெங்கள் விம்மு *(*தி*.1* ப*.26) -* தக்கராகம் *2.* திருப்பூவணம்*: 1.* அறையார் புனலும் *(*தி*.1* ப*.64) -* தக்கேசி *2.* மாதமர் மேனியன் *(*தி*.3* ப*.20) -* காந்தாரபஞ்சமம் *3.* திருக்கானப்பேர்*:* பிடியெலாம் *(*தி*.3* ப*.26) -* கொல்லி*. (*காளையார் கோயில்*). 4.* திருக்குற்றாலம்*:* வம்பார்குன்றம் *(*தி*.1* ப*.99) -* குறிஞ்சி*. (*குறும்பலா*) :* திருந்தமதிசூடி *(*தி*.2* ப*.71) -* காந்தாரம்*.* திருச்சுழியலில் அருளிய பதிகம் கிடைத்திலது*.*

புண்ணியனார் நெல்வேலி பணிந்து போற்றிப்
புரிசடையார் திருப்பதிகள் பிறவும் சென்று
நண்ணியினி தமர்ந்தங்கு நயந்துபாடி
நற்றொண்ட ருடன்நாளும் போற்றிச் செல்வார்
விண்ணவரைச் செற்றுகந்தான் இலங்கை செற்ற
மிக்கபெரும் பாதகத்தை நீக்க வேண்டித்
திண்ணியபொற் சிலைத்தடக்கை இராமன் செய்த
திருவிரா மேச்சரத்தைச் சென்று சேர்ந்தார். **#2784**

புண்ணியரான சிவபெருமானின் திருநெல்வே லியை வணங்கிப் பணிந்து, போற்றி, முறுக்கிய சடையையுடைய இறைவரின் திருப்பதிகள் பலவற்றிற்கும் சென்று, விரும்பி அங்கங்கும் பாடி, நல்ல தொண்டர்களுடனே நாளும் போற்றிச் செல்பவரான பிள்ளையார், தேவர்களை அழித்து மகிழ்ந்த இராவணனின் இலங் கையை அழித்த மிகப் பெரும் பாதகத்தைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு வலிய அழகிய வில்லை ஏந்திய பெரிய கையையுடைய இராமன் நிறுவிய திருஇராமேச்சுரத்தைச் சென்றடைந்தார்.

விளக்கவுரை

திருநெல்வேலியில் அருளிய பதிகம் `மருந்தவை' *(தி.3 ப.92)* எனத் தொடங்கும் சாதாரிப் பண்ணிலமைந்த பதிகமாகும். திருப் பதிகள் பிறவும் சென்று என்பன திருப்புடைமருதூர் *(திருப்பிடவூர்),* திருஅகத்தீச்சுரம், திருவுத்தரகோசமங்கை முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். பதிகங்கள் கிடைத்தில.

செங்கண்மால் வழிபட்ட கோயில் நண்ணித்
திருமுன்பு தாழ்ந்தெழுந்து தென்ன னோடும்
மங்கையர்க்கு நாயகியார் தாமும் மெய்ம்மை
மந்திரியா ரும்சூழ மணிநீள் வாயில்
பொங்கியெழும் விருப்பினால் உடனே புக்குப்
புடைவலங்கொண் டுள்ளணைவார் போற்றி செய்து
பங்கயச் செங் கைகுவித்துப் பணிந்து நின்று
பாடினார் மன்னவனும் பரவி யேத்த. **#2785**

சிவந்த கண்களையுடைய திருமால் வழிபட்ட இராமேச்சுரத்தை அடைந்து, அதன் திருமுன்பு வீழ்ந்து எழுந்து, பாண்டியனோடும் மங்கையர்க்கரசியாரும் உண்மை ஒழுக்கத்துடன் நிற்கும் அமைச்சரான குலச்சிறையாரும் தம்மைச் சூழ்ந்து தொடர்ந்து வர, அவர்களுடனே அழகிய நீண்ட வாயிலுள் மேன்மேலும் எழு கின்ற விருப்பத்தினால் புகுந்து, உள்ளே சேர்பவராய், மன்னனும் வணங்கிப் போற்றத் தாமரை போன்ற கைகளைக் கூப்பி வணங்கி நின்று பாடியருளினார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகங்கள்*: 1.* அலைவளர் - *(தி.3 ப.10)* காந்தார பஞ்சமம். *2.* திரிதருமாமணி - *(தி.3 ப.101)* பழம் பஞ்சுரம்.

சேதுவின்கண் செங்கண்மால் பூசை செய்த
சிவபெருமான் தனைப்பாடிப் பணிந்து போந்து
காதலுடன் அந்நகரில் இனிது மேவிக்
கண்ணுதலான் திருத்தொண்டர் ஆனார்க் கெல்லாம்
கோதில்புகழ்ப் பாண்டிமா தேவி யார்மெய்க்
குலச்சிறையார் குறைவறுத்துப் போற்றிச் செல்ல
நாதர்தமை நாள்தோறும் வணங்கி ஏத்தி
நளிர்வேலைக் கரையில்நயந் திருந்தா ரன்றே. **#2786**

சேதுவிடத்தில் சிவந்த கண்களையுடைய திருமால் வணங்கிய சிவபெருமானை வணங்கிப் பாடி, புறத்தே வந்து, விருப்பத்துடன் அந்நகரத்தில் தங்கியிருந்து நெற்றிக்கண்ணை உடைய சிவபெருமானின் தொண்டர்களுக்கெல்லாம், குற்றமற்ற புகழை யுடைய பாண்டிமாதேவியாரும் உண்மை நெறி நிற்கும் குலச்சிறை நாயனாரும் குறைவின்றி வேண்டுவனவற்றை யெல்லாம் தந்து போற்றிவர,

இராமநாதரான இறைவரை நாள்தோறும் வணங்கிப் போற்றியவாறு, குளிர்ந்த கடற்கரை நகரில் விருப்புடன் ஞானசம் பந்தர் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

உடன்வரும் மாறனாரின் விருப்பினை நிறைவேற்றி வரும் கடப்பாடுடைமை பற்றி அரசியாரையும் அமைச்சரையும் கூறி னார். சேது - அணை. அதனையுடைமைபற்றி அப்பெயராலேயே அப்பதியும் அழைக்கப் பெறுவதாயிற்று.

அந்நகரில் அமர்ந்தங்கண் இனிது மேவி
ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந் தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்த செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
திருக்கேதீச் சரத்தண்ணல் செய்ய பாதம்
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்பரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகை யுற்றார். **#2787**

அத்திருப்பதியில் பிள்ளையார் இனிதாக இருந்தருளும் பொழுது, கடல் சூழ்ந்த இலங்கையில் பொருந்தியுள்ள திருக்கோணமலையில் மகிழ்ந்து வீற்றிருக்கும் சிவந்த கண்களை உடைய இளைய ஆனேற்றை ஊர்தியாகக் கொண்ட இறைவரை வணங்கிப் பாடி, பிறைச் சந்திரன் தவழுமாறு உயர்ந்த மாடங்களை உடைய மாதோட்ட நகரத்திலிருக்கும் `திருக்கேதீச்சரம்' என்ற கோயிலில் வீற்றிருக்கும் இறைவரின் செம்மையான திருவடிகளை மிகவும் நினைந்து போற்றிப் பணிந்து, இறைவரிடம் பொற்கிழி பெற்ற ஞானப்பிள்ளையார் அன்பர்களுடன் கூடியிருந்து மகிழ்ந்தார்.

விளக்கவுரை

இத்திருப்பதிகளை நினைந்து அருளிய பதிகங்கள்: *1.* திருக்கோணமலை*:* நிரைகழல் *(*தி*.3* ப*.123) -* புறநீர்மை *2.* திருக்கேதீச்சுரம்*:* விருதுகுன்ற *(*தி*.2* ப*.107) -*நட்டராகம்*.*

அப்பதியைத் தொழுதுவட திசைமேற் செல்வார்
அங்கையனல் தரித்தபிரான் அமருங் கோயில்
புக்கிறைஞ்சிப் பலபதியும் தொழுது போற்றிப்
புணரிபொரு தலைகரைவாய் ஒழியப் போந்தே
செப்பரிய புகழ்த்திருவா டானை சேர்ந்து
செந்தமிழ்மா லைகள்சாத்திச் சிவனார் மன்னும்
ஒப்பரிய புனவாயில் போற்றி செய்து
வணங்கினார் உலகுய்ய ஞானம் உண்டார். **#2788**

அப் பதியை வணங்கி, வடதிசைநோக்கிச் செல்ப வராய், அழகிய கையில் தீயை ஏந்திய இறைவர் விரும்பி வீற்றிருக்கும் கோயிலுள் புகுந்து வணங்கிப் பல பதிகளையும் வணங்கிச் சென்று, கடல் அலைகள் புரண்டு வரும் அவ் எல்லைகள் பிற்படக் கடந்து சென்று, சொலற்கரிய புகழையுடைய திருவாடானை என்னும் பதியை அடைந்து, செந்தமிழ் மாலைகளைச் சாத்தி, உலகம் உய்யும் பொருட்டுச் சிவஞானம் உண்ட பிள்ளையார் ஒப்பில்லாத திருப் புனவாயிலைத் தாழ்ந்து வணங்கினார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகங்கள்*: 1.* திருவாடானை*:* மாதோர் கூறு *(*தி*.2* ப*.112)* - நட்டராகம்*. 2.* திருப்புனவாயில்*:* மின்னியல் *(*தி*.3* ப*.11)* - காந்தார பஞ்சமம். அப்பதி என்றது திருக்கேதீச்சுரத்தையும், கோயிலுள் புகுந்து என்றது இராமேசுவரத்திலுள்ள திருக்கோயிலுள் புகுந்து என்றும் பொருள்படும். பலபதியும் தொழுது என்றது உப்பூர், திருவெற்றியூர் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். இத்திருப்பதிகளில் அருளிய பதிகங்கள் கிடைத்தில.

பதிநிலவு பாண்டிநா டதனில் முக்கட்
பரமனார் மகிழ்விடங்கள் பலவும் போற்றி
விதிநிலவு வேதநூல் நெறியே ஆக்கி
வெண்ணீற்றின் சார்வினால் மிக்குயர்ந்த
கதியருளிக் காழிநகர் வாழவந்தார் கண்ணுதலான்
திருத்தொண்டர் பலருஞ் சூழ
மதிநிலவு குலவேந்தன் போற்றிச் செல்ல
மந்திரியார் பதிமணமேற் குடியில் வந்தார். **#2789**

பலபதிகளும் விளங்கும் பாண்டியநாட்டில் முக்கண்களையுடைய சிவபெருமான் மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் இடங்கள் பலவற்றையும் வணங்கி, ஒழுகலாறுகள் பலவற்றையும் விளங்க உணர்த்துகின்ற மறைநூல்களின் நெறியையே எங்கும் எவரும் பின்பற்றும்படி செய்து, வெண்மையான திருநீற்றின் சார்பு பெற்றதால் உயர்ந்த நற்பேற்றை யாவரும் பெறும்படி அருள்செய்து, சீகாழிப் பதிவாழ வந்தருளிய சம்பந்தப் பெருமான், இறைவரின் திருத் தொண்டர் பலரும் சூழ்ந்துவரச் சந்திரகுல மரபில் வந்த பாண்டியனார் போற்றி உடன் வரவும் சென்று, அமைச்சர் குலச்சிறையாரின் பதியான `திருமணமேற்குடிக்கு' வந்தருளினார்.

விளக்கவுரை

பரமனார் மகிழ்விடங்கள் ஒலியூர் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். பதிகங்கள் கிடைத்தில.

அந்நகரில் இனிதமர்வார் அருகு சூழ்ந்த
பதிகளில்நீ டங்கணர்தங் கோயில் தாழ்ந்து
மன்னுதிருத் தொண்டருடன் மீண்டு சேர்ந்து
மன்னவனும் மங்கையருக் கரசி யாரும்
கொன்னவில்வேற் குலச்சிறையார் தாமுங் கூடிக்
குறைகழல்கள் பணிந்துகுறை கொண்டு போற்றச்
சென்னிவளர் மதியணிந்தார் பாதம் போற்றிச்
சிரபுரத்துச் செல்வர்இனி திருந்த நாளில். **#2790**

அம்மணமேற்குடியில் இனிது விரும்பி எழுந்தருளும் பிள்ளையார், அருகிலுள்ள பதிகளில் உள்ள இறை வரின் திருக்கோயில்களுக்குச் சென்று வணங்கிச் சூழவரும் தொண் டர்கள் உடனே மீண்டும் வந்து சேர்ந்து, பாண்டியரும் மங்கையர்க்கரசி அம்மையாரும், வடித்த கூர்மையான வேலையுடைய குலச்சிறை யாரும் சேர்ந்து, ஒலிக்கும் வீரக்கழல் அணிந்த திருவடிகளைப் பணிந்து போற்ற, சீகாழிச் செல்வரான ஞானசம்பந்தர், தலையில் பிறையைச் சூடிய இறைவரின் திருவடிகளைப் போற்றி, இனிதாக அமர்ந்திருக்கும் அந்நாள்களில்,

விளக்கவுரை

அருகு சூழ்ந்த பதிகள் என்பன திருப்பெருந்துறை முதலிய பதிகளாகலாம். பதிகங்கள் எவையும் கிடைத்தில.

பொங்குபுனற் காவிரிநா டதனின் மீண்டு
போதுதற்குத் திருவுள்ள மாகப் பெற்று
மங்கையருக் கரசியார் தாமும் தென்னர்
மன்னவனும் மந்திரியார் தாமுங் கூட
அங்கவர்தந் திருப்பாதம் பிரிய லாற்றா
துடன்போக ஒருப்படும்அவ் வளவுநோக்கி
இங்குநான் மொழிந்ததனுக் கிசைந்தீ ராகில்
ஈசர்சிவ நெறிபோற்றி இருப்பீ ரென்று. **#2791**

பெருகிவரும் நீர்ப்பெருக்கையுடைய காவிரி பாய்கின்ற நாடான சோழ நாட்டிற்குத் திரும்பிச் செல்வதற்குத் திரு வுள்ளம் கொண்டு, மங்கையர்க்கரசியம்மையாரும் பாண்டிய மன்ன ரும் அமைச்சரும் கூட அவர்தம் திருவடிகளைப் பிரிய மாட்டாதவர் களாகி உடன்வருதற்கு மனம் துணியும் அந்நிலையினைப் பார்த்து, `இங்கு நான் கூறுதற்கு இசைந்தீராயின் இந்நாட்டிலிருந்து இறைவரின் சிவநெறியைப் பாதுகாத்து வருவீராக' என்று உரைத்து,

விளக்கவுரை

****

சாலமிகத் தளர்வாரைத் தளரா வண்ணம்
தகுவனமற் றவர்க்கருளிச் செய்த பின்பு
மேலவர்தம் பணிமறுக்க அவரும்அஞ்சி
மீள்வதனுக் கிசைந்துதிரு வடியில் வீழ்ந்து
ஞாலமுய்ய வந்தருளும் பிள்ளை யாரைப்
பிரியாத நண்பினொடும் தொழுது நின்றார்
ஆலவிட முண்டவரை அடிகள் போற்றி
அந்நாட்டை அகன்றுமீண் டணையச் செல்வார். **#2792**

பிரிவாற்றாமல் மிகவும் மனம் தளர்பவர்களைத் தளர்ச்சியடையாதவாறு தக்க இன்சொற்களைச் சொல்லித் தேற்றினர். அவர்களும் மேன்மையான அவர்தம் ஏவலை மறுக்க அஞ்சி, சோழ நாட்டிற்குப் பிரிந்து செல்வதற்கு ஒருப்பட்டு, அவரிடம் விடைபெற்றுக் கொள்ளும் வகையால், அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கி, உலகுய்யத் தோன்றிய அப்பெருமகனாரைப் பிரியமாட்டாத நண்பு டன் வணங்கி நின்றனர். அப்பிள்ளையாரும் விடைபெற்றுக் கொண்டு, நஞ்சை உண்ட இறைவரை வணங்கிப் போற்றி அந்நாட்டை விட்டு நீங்கித் தம் நாட்டிற்குத் திரும்பவும் செல்பவராய்,

விளக்கவுரை

****

பொன்னிவளந் தருநாடு புகுந்து மிக்க
பொருவில்சீர்த் திருத்தொண்டர் குழாத்தி னோடும்
பன்னகப்பூ ணணிந்தவர்தங் கோயில் தோறும்
பத்தருடன் பதியுள்ளோர் போற்றச் சென்று
கன்னிமதில் திருக்களரும் போற்றிக் கண்டங்
கறையணிந்தார் பாதாளீச் சுரமும் பாடி
முன்னணைந்த பதிபிறவும் பணிந்து போற்றி
முள்ளிவாய்க் கரையணைந்தார் முந்நூல் மார்பர். **#2793**

காவிரியாறு வளம் பெருக்குகின்ற சோழநாட்டில் புகுந்து, ஒப்பில்லாத மிகுந்த சிறப்புகளையுடைய தொண்டர் கூட்டத் துடன், பாம்பை அணியாய்ப் பூண்ட இறைவரின் திருக்கோயில்கள் தோறும் இருந்தருளும் அன்பர்களுடன், அப்பதியில் உள்ளவர்களும் எதிர்கொண்டு போற்றச் சென்று, பகைவரால் அழித்தற்கரிய மதிற் சிறப்புடைய `திருக்களர்' என்ற பதியையும் போற்றிப் பின்பு, கழுத்தில் நஞ்சுடைய இறைவரின் `பாதாளீச்சுரத்தினையும்' பாடி வணங்கி, முன்னே வழிபட்டுச் சென்ற மற்றப் பதிகளையும் வணங்கிப் போற்றி, முந்நூல் அணிந்த மார்பையுடைய ஞானசம்பந்தர் முள்ளிவாய்க் கரையைச் சேர்ந்தனர்.

விளக்கவுரை

திருக்களரில் இதுபொழுது பாடிய பதிகம் கிடைத்திலது. திருப்பாதாளீச்சுரத்தில் அருளியது, `மின்னியல்' *(தி.1 ப.108)* எனத் தொடங்கும் வியாழக்குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகமாகும். கோயில் தொறும் என்றது திருவெண்ணியூர், திருவிரும்பூளை முதலாயின வாகலாம் என்பர் சிவக்கவிமணியார். முள்ளிவாய்க்கரை என்பது இப்பொழுது ஓடம்போக்கியாறு என வழங்குகிறது. இது காவிரியின் கிளையே. இதனருகே உள்ள ஊர் திருக்கொள்ளம்பூதூராகும். இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

மலைவளர்சந் தனம்அகிலும் தேக்கு முந்தி
மலர்ப்பிறங்கல் வண்டிரைப்பச் சுமந்து பொங்கி
அலைபெருகி ஆள்இயங்கா வண்ணம் ஆறு
பெருகுதலால் அத்துறையில் அணையும் ஓடம்
நிலைபுரியும் ஓடக்கோல் நிலையி லாமை
நீர்வாழ்நர் கரையின் கண் நிறுத்திப் போகக்
கலைபயிலுங் கவுணியர்கோன் அதனைக் கண்டக்
கரையின்கண் எழுந்தருளி நின்ற காலை. **#2794**

மலையில் வளர்கின்ற சந்தனம், அகில், தேக்கு முதலிய மரங்களை உந்தி அலைத்துக் கொண்டு, மலைபோன்ற மலர்க்குவியல்களை வண்டுகள் ஒலிக்கச் சுமந்து பெருகி, ஆள்கள் இயங்காதபடி ஆறு பெருகிவருவதால், அத்துறையில் அணையும் ஓடத்தை, நீரில் நிலை கொண்டு செலுத்தும் ஓடக்கோல் நிலைக்க மாட்டாமையால், நீர்வாழ் மக்களான இனத்தவர் கரையில் நிறுத்தி விட்டுச் சென்றுவிடவே, கலைகள் பலவற்றானும் புகழப் பெறும் கவுணியர் தலைவரான பிள்ளையார் அதைப் பார்த்து அக்கரையில் எழுந்தருளி நின்றபோது,

விளக்கவுரை

****

தேவர்பிரான் அமர்ந்ததிருக் கொள்ளம் பூதூர்
எதிர்தோன்றத் திருவுள்ளம் பணியச் சென்று
மேவுதலால் ஓடங்கள் விடுவா ரின்றி
ஒழிந்திடவும் மிக்கதோர் விரைவால் சண்பைக்
காவலனார் ஓடத்தின் கட்ட விழ்த்துக்
கண்ணுதலான் திருத்தொண்டர் தம்மை ஏற்றி
நாவலமே கோலாக அதன்மே னின்று
நம்பர் தமைக் கொட்டமென நவின்று பாட. **#2795**

தேவர்களின் தலைவரான இறைவர் வீற்றிருக் கும்

`திருக்கொள்ளம்பூதூர்' என்ற திருப்பதி எதிரில் தோன்ற, அதைப் பார்த்து, அங்குச் சென்று பணிவதற்கு உள்ளம் எண்ணியதால் ஓடம் செலுத்துபவர்கள் அங்கே இல்லாத நிலையில், மிகு விரைவாகச் சீகாழித் தலைவரான பிள்ளையார், ஓடத்தின் கட்டை அவிழ்த்து, நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானின் தொண்டர்களை அவ் வோடத்தில் ஏற்றித் தன் நாவின் வல்லமையையே கோலாகக் கொண்டு அவ்வோடத்தின் மீது நின்று, இறைவரைப் பணிந்து `கொட்டமே' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாட,

விளக்கவுரை

`கொட்டமே' எனத் தொடங்கும் திருப்பதிகம் காந்தார பஞ்சமப் பண்ணிலமைந்ததாகும் *(தி.3 ப.6).*

உம்பருய்ய நஞ்சுண்டார் அருளால் ஓடம்
செலச்செல்ல உந்துதலால் ஊடு சென்று
செம்பொனேர் சடையார்தங் கொள்ளம் பூதூர்
தனைச்சேர அக்கரையிற் சேர்ந்த பின்பு
நம்பரவர் தமைவணங்க ஞான முண்ட
பிள்ளையார் நற்றொண்ட ருடனி ழிந்து
வம்பலரும் நறுங்கொன்றை நயந்தார் கோயில்
வாயிலின் முன் மகிழ்ச்சியொடு வந்து சார்ந்தார். **#2796**

வானவர் உய்யுமாறு நஞ்சை உண்டருளிய இறை வரின் திருவருளினால், அவ்வோடம் செல்லும்படி உந்தப்படுதலால், செம்பொன் போன்ற சடையுடைய இறைவரின் திருக்கொள்ளம் பூதூரினைச் சேரும் வண்ணம் அக்கரையில் சேர்ந்த பின்பு, நம்பரான சிவபெருமானை வணங்குதற்கு ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தர் நல்ல திருத்தொண்டர்களுடனே ஓடத்திலிருந்து கீழே இறங்கிச் சென்று, மணம் கமழ்கின்ற கொன்றை மலரை விரும்பிச் சூடிய சிவ பெருமானின் திருக்கோயில் வாயிலின் முன் மகிழ்ச்சியுடன் வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

மேற்கூறிய பதிகத்தில் பாடல்தொறும் `செல்ல உந்துக சிந்தையார் தொழ, நல்குமாறு அருள் நம்பனே' என அருளப் பெறுதலின் ஓடம் கரையைச் சேருவதாயிற்று. `ஓடம் செலச் செல்ல உந்துதலால்' என ஆசிரியர் அருளியதைக் காண்க. இம் மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

நீள்நிலைக்கோ புரமதனை இறைஞ்சிப் புக்கு
நிகரிலாத் தொண்டருடன் நெருங்கச் சென்று
வாள்நிலவு கோயிலினை வலங்கொண் டெய்தி
மதிச்சடையார் திருமுன்பு வணங்கி நின்று

தாணுவே ஆற்றின்கண் ஓடம் உய்க்குந்
தன்மையால் அருள்தந்த தலைவா நாகப்
பூணினாய் களிற்றுரிவை போர்த்த முக்கட்
புனிதனே எனப்பணிந்து போற்றி செய்தார். **#2797**

நீண்ட நிலைகளைக் கொண்ட திருக்கோபுரத்தை வணங்கி வாயிலுள் புகுந்து, ஒப்பில்லாத தொண்டர்கள் சூழ நெருங் கிச் சென்று, ஒளியுடைய திருக்கோயிலை வலங்கொண்டு, பிறைச் சந்திரனைச் சூடிய சடையையுடைய இறைவரின் திருமுன்பு வணங்கி நின்று, `அனைத்துயிர்களையும் தாங்குபவரே! ஆற்றிடையே ஓடம் செலுத்தி வர அருள் சுரந்த தலைவரே! பாம்புகளை அணியாய் அணிந் தவரே! யானையின் தோலைப் போர்த்திக் கொண்ட முக்கண்களை யுடைய தூயவரே!' எனப் பணிந்து போற்றினார்.

விளக்கவுரை

தாணு - தாங்குபவர். `சடையவனே தளர்ந்தேன் எம்பி ரான் என்னைத் தாங்கிக் கொள்ளே' *(தி.8 நீத்தல். 1)* எனவரும் திருவாசகத் திருவாக்கும் காண்க.

போற்றிசைத்துப் புறம்போந்தங் குறையும் நாளில்
பூழியன்முன் புன்சமயத் தமணர் தம்மோ
டேற்றபெரு வாதின்கண் எரியின் வேவாப்
பதிகமுடை இறையவரை இறைஞ்ச வேண்டி
ஆற்றவும்அங் கருள்பெற்றுப் போந்து முன்னம்
அணைந்தபதி களும்இறைஞ்சி அன்பர் சூழ
நாற்றிசையும் பரவுதிரு நள்ளா றெய்தி
நாடுடைநா யகர்கோயில் நண்ணினாரே. **#2798**

இங்ஙனம் இறைவரைப் போற்றி, வெளியில் வந்து, அப்பதியில் தங்கியிருந்த நாள்களில், பாண்டியனின் முன்னிலையில், புன்மையான சமயத்தவரான சமணர்களுடன் மேற்கொண்ட பெரிய வாதத்தில், தீயில் வேகாமல் இருந்து வெற்றி தந்த திருப்பதிகத்தின் தலைவரான திருநள்ளாற்றின் இறைவரை வணங்க வேண்டி, வழியில் முன்சென்று வணங்கிய பதிகளையும் திரும்பவும் வணங்கி, அன்பர் கூட்டம் சூழ்ந்துவரச் சென்று, நாற்றிசையும் போற்ற வரும் திரு நள்ளாற்றைச் சார்ந்து, நாடுடை நாயகரின் கோயிலை ஞானசம்பந்தர் அடைந்தார்.

விளக்கவுரை

முன்னணைந்த பதிகளாவன: திருக்குடவாயில், திருவாஞ்சியம், திருவம்பர், திருப்புகலூர் முதலாயினவாகலாம். நாடுடை நாயகர் - இறைவரின் பெயர் என்பர் சிவக்கவிமணியார். பதிகங்கள் எவையும்

கிடைத்தில.

நீடுதிருத் தொண்டர்புடை சூழ அங்கண்
நித்திலயா னத்திடைநின் றிழிந்து சென்று
பீடுடைய திருவாயில் பணிந்து புக்குப்
பிறையணிந்த சென்னியார் மன்னுங் கோயில்
மாடுவலங் கொண்டுள்ளால் மகிழ்ந்து புக்கு
மலர்க்கரங்கள் குவித்திறைஞ்சி வள்ள லாரைப்
பாடகமெல் லடியெடுத்துப் பாடி நின்று
பரவினார்கண்ணருவி பரந்து பாய. **#2799**

பெருகவரும் தொண்டர்கள் அருகில் சூழ்ந்து வர, அங்கு முத்துச் சிவிகையினின்றும் இழிந்தருளிச் சென்று, பெருமை உடைய வாயிலை வணங்கி உள்ளே புகுந்து, பிறைச் சந்திரனைச் சூடிய இறைவர் நிலைபெற்று வீற்றிருக்கும் கோயிலின் உள்பக்கத்தேயுள்ள திருச்சுற்றுக்களில் வலமாக வந்து, மகிழ்வுடன் உள்ளே புகுந்து, வள்ளலாரான இறைவரைப் `பாடகமெல்லடி' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடி நின்று, கண்களினின்றும் நீர் அருவி பெருகப் போற்றினார்.

விளக்கவுரை

`பாடகமெல்லடி' எனத் தொடங்கும் பதிகம் நட்ட பாடைப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.1 ப.6)*. வினாவுரையாக வரும் இப்பதிகப் பாடல் தொறும் வரும் கருத்தை உளங்கொண்டே வரும் பாடலை அருளுகின்றார் சேக்கிழார்.

தென்னவர்கோன் முன்அமணர் செய்த வாதில்
தீயின்கண் இடுமேடு பச்சை யாக்கி
என்னுள்ளத் துணையாகி ஆல வாயில்
அமர்ந்திருந்த வாறென்கொல் எந்தாய் என்று
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பரவிப் போந்து
பண்பினிய தொண்டருடன் அங்கு வைகி
மன்னுபுகழ்ப் பதிபிறவும் வணங்கச் சண்பை
வள்ளலார் நள்ளாறு வணங்கிச் செல்வார். **#2800**

பாண்டிய மன்னன் முன்பு, சமணர் செய்த வாதில் தீயில் இட்ட ஏடு பச்சையாக இருக்கச் செய்தும், என் மனத்தின்கண் துணையாகியும், ஆலவாயிலில் வெளிப்பட வீற்றிருந்த தன்மைதான் என்ன அதிசயம்! எந்தையே! என நயம் பெறப் போற்றி, நலம் குலாவிப் பன்முறையும் எடுத்துக் கூறும் தமிழ்த் தொடையான திருப் பதிகத்தைப் பாடிப் போற்றி, வெளியே வந்து, அடிமைப் பண்பினால் இனிமை தருகின்ற தொண்டர்களுடன் கூடி அத்திருப்பதியில் தங்கி யருளி, நிலையான

புகழையுடைய திருப்பதிகள் பலவற்றையும் வணங்குதற்காகச் சம்பந்தர் திருநள்ளாற்றினை வணங்கி விடை பெற்றுச் செல்வார்,

விளக்கவுரை

இதுபொழுது அருளப் பெற்ற பதிகம் `ஏடுமலி' *(தி.2 ப.33)* எனத் தொடங்கும் இந்தளப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

சீர்நிலவு திருத்தெளிச்சே ரியினைச் சேர்ந்து
சிவபெருமான் தனைப்பரவிச் செல்லும் போது
சார்வறியாச் சாக்கியர்தம் போதி மங்கை
சார்தலும்மற் றதுஅறிந்த சைவ ரெல்லாம்
ஆர்கலியின் கிளர்ச்சியெனச் சங்கு தாரை
அளவிறந்த பல்லியங்கள் முழக்கி ஆர்த்துப்
பார்குலவு தனிக்காளஞ் சின்ன மெல்லாம்
பரசமய கோளரிவந் தானென் றூத. **#2801**

சிறப்புக்கள் பொருந்திய `திருத்தெளிச்சேரி' யைச் சேர்ந்து இறைவரைப் போற்றி மேற்செல்லுபோது, நற்சார்பு இல்லாத புத்தர்கள் தங்கும் `போதிமங்கை' என்ற ஊரின் அணித்தாக வருதலும், அச்செய்தியை அறிந்த சைவர் எல்லாரும் கடல் கிளர்ந்து எழுந்தது போல் தாரை சங்கு முதலான அளவற்ற பல இயங்களையும் ஒலித்து, உலகம் விளங்கும்படி எக்காளம் திருச்சின்னம் ஆகிய எல்லாவற்றிலும் பரசமய கோளரி வந்தார் என்று சொல்லி ஊத,

விளக்கவுரை

கோளரி - சிங்கம். பரசமயம் - பிறசமயங்கள்; பிறசம யங்களாகிய யானைகளைச் சிங்கம் என நின்று வெற்றிகொள்பவர். யானை வடிவாற் பெரியதாயினும் ஊக்க மிகுதியிலாதது : ஆதலின் சிங்கம் அதனை வெல்லும் என்பதாம். திருத்தெளிச்சேரியில் அருளிய பதிகம் `பூவலர்ந்தன' *(தி.2 ப.3)* எனத் தொடங்கும் இந்தளப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

புல்லறிவிற் சாக்கியர்கள் அறிந்தார் கூடிப்
புகலியர்தம் புரவலனார் புகுந்து தங்கள்
எல்லையினில் எழுந்தருளும் பொழுது தொண்டர்
எடுத்தஆர்ப் பொலியாலும் எதிர்முன் சென்று
மல்கியெழுந் திருச்சின்ன ஒலிக ளாலும்
மனங்கொண்ட பொறாமையினால் மருண்டு தங்கள்
கல்வியினில் மேம்பட்ட புத்த நந்தி
முதலான தேரர்க்குங் கனன்று சொன்னார். **#2802**

இதனைப் புல்லிய அறிவுடைய சாக்கியர்களுள் அறிந்தவர்கள் ஒன்று

சேர்ந்து, சீகாழியினரின் காவலரான ஞானசம் பந்தர் ஊரின் எல்லையுள் புகுந்தபோது, திருத்தொண்டர்கள் எடுத்த சிவ ஒலிகளின் முழுக்கத்தாலும், அவர்களின் எதிரே முன் அணியில் திரண்டு எழுந்து ஒலிக்கும் திருச்சின்னம் எக்காளம் என்ற இவற்றின் ஒலிகளாலும், தம் உள்ளத்துள் கொண்ட பொறாமையால், மயக்கம் அடைந்து, தம் கல்வியிலே மேம்பட்ட புத்தநந்தி முதலானவர்களுக்குச் சினத்துடன் கூறினர்.

விளக்கவுரை

இம் மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

மற்றவர்கள் வெவ்வுரையும் பிள்ளை யார்முன்
வருசின்னப் பெருகொலியும் மன்னுந் தொண்டர்
பொற்புடைய ஆர்ப்பொலியுஞ் செவியினூடு
புடைத்தநா ராசமெனப் புக்க போது
செற்றமிகு முள்ளத்துப் புத்த நந்தி
செயிர்த் தெழுந்து தேரர்குழாஞ் சூழச்சென்று
வெற்றிபுனை சின்னங்கள் வாதி லெம்மை
வென்றன்றோ பிடிப்பதென வெகுண்டு சொன்னான். **#2803**

மற்று அவர்களின் கொடிய சொற்களும், அதுபொழுது ஞானசம்பந்தர் முன்வரும் சின்னங்களின் பெருகிய ஒலியும், நிலைபெற்ற தொண்டர்களின் மகிழ்வொலியும் கூடி ஒருசேர வந்து தம் காதினுள் காய்ச்சி அடித்த வேல்நுனிபோல் புகுந்த போது, சினம் மிகுந்த புத்த நந்தி மேலும் சினந்து, தம் கூட்டம் சூழ்ந்துவரத் திருக்கூட்டத்தினிடையேபோய் `வெற்றிக்கறிகுறியாக முழக்கப்படும் சின்னங்கள் எம்மை வாதில் வென்ற பின்னன்றோ பிடித்தல் வேண் டும்!' எனக் கடுமையாகச் சினந்து சொன்னான்.

விளக்கவுரை

அவர்கள் - புத்த நந்தியிடம் சொன்ன சாக்கியர்கள். புடைத்த - காய்ச்சி அடித்த, நாராசம் - அம்பின் நுனி, `நெருப்பு நுனை யுறீஇக் கருநாராசம் செவிசெறித்தாங்கு' எனவரும் பெருங்கதையும் காண்க.

புத்தரினம் புடைசூழப் புத்த நந்தி
பொருவில்ஞா னப்புனிதர் திருமுன் பூதும்
மெய்த்தவிறற் சின்னங்கள் விலக்குங் காலை
வெகுண்டெழுந்த திருத்தொண்டர் வெறுத்து நோக்கி
இத்தகைய செயற்கிவரைத் தடிதல் செய்யா
திதுபொறுக்கில் தங்கணிலை ஏற்ப ரென்று
முத்துநிரைச் சிவிகையின் மேல் மணியை வந்து

முறைபணிந்து புகுந்தபடி மொழிந்து நின்றார். #2804
புத்தர் கூட்டம் தன்னைச் சூழ்ந்து வரப் புத்த நந்தி ஒப்பற்ற ஞானமுடைய தூய பிள்ளையாரின் திருமுன்பு, ஊதப்பட்ட உண்மைத்திறம் உடைய திருச்சின்னங்களை விலக்கிய போது, சினத்துடன் எழுந்த திருத்தொண்டர்கள், அவனது செய்கையை வெறுத்துப் பார்த்து இவ்வாறு செய்யும் கொடிய செயலுக்கு இவர்களை ஒறுக்காது பொறுத்துக் கொண்டு போயின், தங்கள் நிலையையே மேலும் மேற்கொண்டொழுகுவர் என எண்ணி, முத்துக்கள் நிரல்படப் பதித்த சிவிகையில் அமர்ந்துள்ள முடிமணியான பிள்ளையாரிடம் வந்து அவரை முறையாய்த் தொழுது, நேர்ந்த செயலைக் கூறி நின்றனர்.

விளக்கவுரை

****

வருமிடத்தில் அழகிதாம் நமக்கு வாதில்
மற்றிவர்தம் பொருள்நிலைமை மறாத வண்ணம்
பொருமிடத்தில் அறிகின்றோம் புத்த நந்தி
பொய்ம்மேற்கோள் எனப்புகலி வேந்தர் கூற
அருமுறைசொல் திருப்பதிகம் எழுது மன்பர்
ஆளுடைய பிள்ளையார் திருவாக் காலே
உருமிடித்து விழப்புத்தன் உத்த மாங்கம்
உருண்டுவீழ் கெனப்பொறா உரைமுன் விட்டார். #2805

`வரும் இடத்தில் இது நேர்தல் நமக்கு அழகியதே! மாறுபாடு கொண்ட இவர்களது பொருளுண்மை மறுக்க இயலாதபடி வாதிடும் இடத்தில், புத்த நந்தியின் பொய் மேற்கொண்டு வரும் கொள்கையின் நிலையை உள்ளபடி காட்டுவோம்' என்று சீகாழித் தலைவர் உரைக்க, அரிய திருமுறைகளாகிய திருப்பதிகங்களை எழு தும் வழக்கத்தையுடைய சம்பந்த சரணாலயர் என்பார், ஆளுடைய பிள்ளையாரின் திருவாக்கின் ஆணையால், `புத்த நந்தியின் தலை, இடிவிழ உருண்டு வீழக் கடவது' எனத் தாங்கற்கரிய சொல்லை முன்கூறிச் செல்ல விட்டார்.

விளக்கவுரை

பிள்ளையாரின் திருப்பதிகங்களை எழுதிவரும் அன்பர் சம்பந்த சரணாலயர் என்றும், அவர் பிள்ளையாரின் அம்மான் முறையினர் என்றும் கூறுவர். அவர் தாம் தொகுத்திருக்கும் சுவடித் திரளில் கயிறு சார்த்திப் பார்த்ததில், `புத்தர் சமண் கழுக்கையர் பொய் கொளாச் சித்தத் தவர்கள் தெளிந்து தேறின, வித்தக நீறணிவார் வினைப் பகைக்கு, அத்திர மாவன அஞ்செழுத்துமே' *(தி.3 ப.22 பா.10)* எனவரும் திருப்பாட்டுவர, அதனையே அத்திரமாகக் கூற, அப் புத்தன் தலை

வீழ்ந்தது.

ஏறுயர்த்தார் சைவநெறி ஆணை உய்க்க
எதிர்விலக்கும் இடையூற்றை எறிந்து நீக்கும்
மாறில்வலி மந்திரமாம் அசனி போல
வாய்மைஉரைத் திருத்தொண்டர் வாக்கி னாலே
வேறுமொழிப் போர் ஏற்பான் வந்த புத்தன்
மேனியையும் தலையினையும் வெவ்வே றாகக்
கூறுபட நூறியிடப் புத்தர் கூட்டம்
குலைந்தோடி விழுந்துவெருக் கொண்ட தன்றே. **#2806**

விடைக்கொடியையுயர்த்திய சிவபெருமானின் சைவ நெறியின் ஆணையை உலகெங்கும் நடத்த, எதிரே வந்து அடையும் இடையூறுகளை வேர் அறக் களைந்து நீக்கும் ஒப்பில்லாத வலிமையுடைய மந்திரமான இடிபோன்ற உண்மைத் திருவாக்கான சமபந்தரின் திருவாக்கு, வேறுபட்ட மொழிகளால் செய்யும் போரை மேற்கொண்டு வந்த புத்த நந்தியின் உடம்பையும் தலையையும் வெவ்வேறு கூறுபடச் சிதைவு படுத்தியது. அதுபொழுது புத்தர்களின் கூட்டம் விரைந்து அஞ்சி ஓடி நடுங்கியது.

விளக்கவுரை

****

மற்றவர்கள் நிலைமையையும் புத்த நந்தி
வாக்கின்போர் ஏற்றவன்தன் தலையும் மெய்யும்
அற்றுவிழ அத்திரவாக் கதனால் அன்பர்
அறுத்ததுவுங் கண்டஅர னடியார் எல்லாம்
வெற்றிதரும் பிள்ளையார் தமக்குச் சென்று
விண்ணப்பஞ் செயவெதிர்ந்த விலக்கு நீங்க
உற்றவிதி அதுவேயாம் அரஎன் றெல்லாம்
ஓதுகென அவ்வொலிவான் உற்ற தன்றே. **#2807**

அப் புத்தர்களின் நிலையையும், வாக்கால் போர் செய்ய வந்த புத்த நந்தியின் தலையும் உடலும் வேறாய் அறுபட்டு விழுமாறு அம்பு போன்ற வாக்கினால் தொண்டர் செய்த செயலையும் கண்ட சிவனடியார்கள் எல்லாம், அவ்வெற்றியை அளிக்கும் ஞான சம்பந்தரிடத்துச் சென்று கூறினர், `எதிர்ப்பட்ட இடையூறு நீங்கும்படி பொருந்திய இறைவரின் அருள் ஆணை அதுவாகும்; ஆதலால் சிவ பெருமானை வணங்கி `அரகர' என்று எல்லாரும் சிவன் நாமத்தை ஓதி முழக்கம் செய்க!' என்று பிள்ளையார் உரைத்தருள, அங்ஙனமே அனைவரும் `அரகர' என்று முழங்கினர். அப்பேரொலியானது வானத்தில் அப்பொழுதே சென்று பொருந்தியது.

விளக்கவுரை
****

அஞ்சிஅகன் றோடியஅப் புத்த ரெல்லாம்
அதிசயித்து மீண்டுமுடன் அணைந்து கூடி
வஞ்சனையோ இதுதான்மற் றவர்தஞ்சைவ
வாய்மையோ எனமருண்டு மனத்திற் கொள்வார்
எஞ்சலின்மந் திரவாத மன்றி எம்மோ
டெதிர்ந்து பொருள் பேசுவதற் கிசைவ தென்று
தஞ்செயலின் மிக்குள்ள சாரிபுத்தன்
தன்னையே முன்கொண்டு பின்னுஞ் சார்ந்தார். **#2808**

அச்சம் கொண்டு ஓடிய அப்புத்தர் எல்லாம் வியப்படைந்து, மீண்டும் தம்முள் ஒன்று கூடி, `அந்நிகழ்ச்சிதான் வஞ்சனையால் உண்டானதோ அல்லது அவர்களது சைவ சமயத்தின் உண்மைத் திறத்தால் விளைந்ததோ' என்று மயக்கம் கொண்டு, மனத்தில் அதை எண்ணிக் `குறைவில்லாத மந்திர வாதத்தாலன்றி எம்முடன் எதிர்த்து உண்மைப் பொருள் இது என்று பொருள் உண்மை பேசி வாதம் செய்வதற்கு இசைவீராக!' என்று தம் சமய நிலையில் மிக்க வலிமையுடைய சாரி புத்தன் என்பவனையே தலை வனாகக் கொண்டு பின்னும் வந்து சார்ந்தனர்.

விளக்கவுரை
****

அத்தன்மை கேட்டருளிச் சண்பை வந்த
அடலேறு திருவுள்ளத் தழகி தென்று
மெத்தமகிழ்ச் சியினோடும் விரைந்து சென்று
வெண்தரளச் சிவிகையினின் றிழிந்து வேறோர்
சத்திரமண் டபத்தின் மிசை ஏறி நீடு
சைவருடன் எழுந்தருளி இருந்து சாரும்
புத்தர்களை அழைக்கவெனத் திருமுன் நின்றார்
புகலிகா வலர்ஏவல் போற்றிச் சென்றார். **#2809**

அவர்கள் கூறிய அதனைச் சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தர் திருவுள்ளத்தில் `இது அழகிது!' என்று கொண்டு, மிக்க மகிழ்ச்சியோடும் விரைவாகச் சென்று, வெண்மை யான முத்துச் சிவிகையினின்று இறங்கி, வேறு ஒரு சத்திரத்தின் மண்டபத்தில் ஏறி, பெருகிய சைவர்களுடனே அமர்ந்து `முற்கூறிய வண்ணம் எதிர்த்துப் பொருள் பேசச் சார்கின்ற புத்தர்களை அழை யுங்கள்!' என்று சொல்ல, அவரது திருமுன்பு நின்ற தொண்டர்கள், சீகா ழித் தலைவரின் ஆணையை ஏற்று,

அவ்வாறே புத்தரை அழைக்கச் சென்றனர்.

விளக்கவுரை

****

சென்றவர்கள் தேரர்குழாம் அணைந்து நீங்கள்
செப்பிவரும் பொருள் நிலைமை தெரிக்க எங்கள்
வென்றிமழ இளங்களிறு சண்பை யாளி
வேதபா லகன்மும்மைத் தமிழின் வேந்தன்
நன்றுமகிழ்ந் தழைக்கின்றான் ஈண்ட நீரும்
நண்ணுமெனக் கூறுதலும் நன்மை சாராத்
தன்தகைமைப் புத்தருடன் சாரி புத்தன்
சத்திரமண் டபமுன்பு சார வந்தான். **#2810**

ஞானசம்பந்தரின் ஆணையின்வண்ணம் சென்ற அடியவர்கள், புத்தர் கூட்டத்தை அடைந்து, `நீங்கள் கூறி வருகின்ற பொருளின் உண்மை நிலையைத் தெரிவிக்குமாறு, எங்களின் வெற்றி பொருந்திய இளங்களிறும் சண்பை நகரத்தவரும் மறைத்தலைவரும் முத்தமிழ் மன்னருமான ஞானசம்பந்தப் பெருமான் மகிழ்ந்து அழைக் கின்றார்; நீங்கள் வாருங்கள்!' எனக் கூறவும், அதைக்கேட்டு, நன்னெ றியை இதுவரை சாராத புத்தர்களுடனே கூடிச் சாரி புத்தன் சத்திர மண்டபத்தின் முன்னே வந்தான்.

விளக்கவுரை

தேரர் - புத்தர்.

அங்கணைந்து மண்டபத்துப் புத்த ரோடும்
பிள்ளையார் அருகணைய நின்ற போதில்
எங்குநிகழ் திருச்சின்னந் தடுத்த புத்தன்
இருஞ்சிரத்தைப் பொடியாக்கும் எதிரில் அன்பர்
பொங்குபுகழ்ப் புகலிகா வலர்தம் பாதம்
போற்றிஅரு ளாற்சாரி புத்தன் தன்னை
உங்கள்தலை வனும்பொருளும் உரைக்க என்ன
உற்றவா தினைமேற்கொண் டுரைசெய் கின்றான். **#2811**

அங்குச் சென்ற சாரிபுத்தன், மண்டபத்தில் புத்தர்களுடன் கூடிப் பிள்ளையார் அருகில் நெருங்கி நின்ற அமை யத்து, எங்கள் ஆணை செலுத்துகின்ற திருச்சின்னத்தைத் தடுத்த புத்த நந்தியின் பெரிய தலையை அழிவு செய்த ஒப்பில்லாத அன்பரான சம்பந்த சரணாலயர், மேன்மேலும் பெருகும் புகழையுடைய சீகாழித் தலைவரான ஞானசம்பந்தரின் திருவடிகளைப் போற்றி, அவரது அருளைப் பெற்று, வாதத்தில் புகுவாராய்ச் சாரி புத்தனைப் பார்த்து, `உங்கள் தலைவனான

கடவுளையும் அவன் கூறும் பொருளான வீடுபேற்றையும் இன்ன தன்மைய எனப் பேசுவாயாக!' என்று சொல்ல, பொருந்திய சமயவாதத்தை மேற்கொண்டு அச் சாரி புத்தன் சொல்கின்றவனாய்,

விளக்கவுரை

****

கற்பங்கள் அனைத்தினிலும் பிறந்து வீந்து
கதிமாறுங் கணபங்க இயல்பு தன்னில்
பொற்புடைய தானமே தவமே நன்மை
புரிந்தநிலை யோகமே பொருந்தச் செய்ய
உற்பவிக்கும் ஒழிவின்றி உரைத்த ஞானத்
தொழியாத பேரின்ப முத்தி பெற்றான்
பற்பலரும் பிழைத்துய்ய அறமுன் சொன்ன
பான்மையான் யாங்கள்தொழும் பரமன் என்றான். **#2812**

எல்லாக் கற்பங்களிலும் அளவற்ற பிறப்பு வகைகளில் பிறந்தும் இறந்தும் அந்நிலையினின்றும் மாறி வீடு பெறுகின்ற கணபங்க இயல்பு கூறம் புத்த சமயத்தில், அழகு உடைய தானம், தவம், பண்பு, மிகுந்த யோகம் என்னும் இவற்றைத் தான் பொருந்தும்படி செய்யவே, அதனால் உண்டாகும் நீங்குதல் இல்லாத நிலையில், சொன்ன ஞானத்தால், அழியாத பேரின்பம் தரும் கந்தவீடு பெற்றவன். பலரும் பிறவித் துன்பத்தினின்றும் நீங்கி உய்யும் பொருட் டாக அறங்கள் பலவற்றை முன்னே சொன்ன அருள் உடையவன், அவனே, நாங்கள் தொழும் கடவுளாவான்' எனச் சொன்னான்.

விளக்கவுரை

கற்பங்கள் - *432* கோடி ஆண்டுகள் கொண்ட கால எல்லை. பிறப்புவகை - வினைக்கீடாக வரும் மக்கள், தேவ, பிரம, நாக, விலங்கு, பேய் எனவரும் அறுவகைப் பிறப்புக்கள். கணபங்கம் - கணந்தொறும் அழிவது. ஈண்டுக் கணம் என்பது ஷணம் என்பதன் திரிபாகும். இதற்குரிய கால அளவாவது நூறு தாமரை இதழ்களை அடுக்கி, ஊசியினால் குத்த, அவற்றுள் எட்டு இதழ்கள் அறும் காலமாம். இவ்வியல்பைக் கூறுவது புத்த சமயமாகும். புத்தர் இருபத்து நால்வர் என்றும், இவர்களுள் இறுதியாக நின்ற கௌதம புத்தனே இங்குக் கூறப்படும் ஆதி புத்தன் என்றும் கூறுவர். இப்புத்தனைப் பற்றிய வரலாறு:- இவன் தன் தாயின் வலது இடையில் பிறந்து, பின் ஆறு நாள்களில் அத் தாயை உயிர்துறக்கச் செய்தவன். உயிர்கள் உய்தற்கென எண்ணற்ற கற்பங்களில், எண்ணற்ற பிறப்புக்களில் பிறந்தும் இறந்தும் உயிர்கட்கு உறுதி செய்து, பின் அந்நிலை மாறி, வீடு

பெற்றவன். *(புத்த சரித்திரக் குறிப்பு).*

என்றுரைத்த சாரிபுத்தன் எதிர்வந் தேற்ற
இருந்தவத்துப் பெருந்தன்மை அன்பர் தாமும்
நன்றுமது தலைவன்தான் பெற்றா னென்று
நாட்டுகின்ற முத்திதான் யாவ தென்றார்
நின்றவுரு வேதனையே குறிப்புச் செய்கை
நேர்நின்ற ஞானமென நிகழ்ந்து ஐந்தும்
ஒன்றியகந் தத்தழிவே முத்தி யென்ன
உரைசெய்தான் பிடகத்தின் உணர்வு மிக்கான். **#2813**

இவ்வாறு கூறிய தன் தலைவன் தன்மை பற்றி விடை சொன்ன சாரி புத்தன் முன்னம், வாதத்தை ஏற்று நின்ற பெரிய தவத்தையும், பெருந்தன்மையையும் உடைய அன்பரும், `உங்கள் தலைவன் பெற்ற பேறு என உங்கள் சமயம் உறுதிப்படக் கூறும் வீடு பேற்றின் இயல்புதான் யாது?' என வினவினார். நின்ற உரு, வேதனை, குறிப்பு, செய்கை, நேரே நின்ற ஞானம் என நிகழும் ஐந்தும் கூடிய பஞ்ச கந்தத்தின் அழிவே முத்தியாவது எனத் திரிபிடகம் என்ற புத்த சமய நூலில் அறிவுமிக்க சாரி புத்தன் கூறினான்.

விளக்கவுரை

பஞ்ச கந்தங்கள் *: 1.* உரு - காணப்படும் பெயரின் கருக் கெல்லாம் காரணமாகிய பொருளை யுணர்வது அது. ஐவகையான் வரும் உணர்வுகள். அவை*:* நிலம், நீர், தீ, வளி ஆகிய நான்கும் அவற் றிற்குக் காரணமான வன்மை, சுவை, நிறம், மணம் எனும் நான்கும் ஆக எண்வகைப் பொருள்வழி வரும் உணர்வு. *2.* வேதனை மூன்று*:* அவை*:* சுக அறிவு, துக்க அறிவு, சுகதுக்க அறிவு என்பன. *3.* குறிப்பு ஆறு*:* வாய், கண், மூக்கு, செவி, மனம் என்பனவற்றான் வரும் பொதுவும் சிறப்புமாகிய உணர்வு. *4.* பாவனை*:* மனம், மொழி, மெய்களால் வரும் பக்குவம். இதற்கு ஏதுவாக அமைவன. தீக்குணம் பத்தும் நற்குணம் பத்துமாம். தீக்குணங்களாவன*:* பொய்சொல்லல், கோட்சொல்லல், சினந்து சொல்லல், பயனில சொல்லல் எனச் சொல் லின் வழிவரும் குணம் நான்கு*;* களவுக்குப் போதல், வறிதே தொழில் செய்தல், கொலை செய்தல் என உடம்பின் வழிவரும் குணம் மூன்று *;* கொலை நினைத்தல், காமப்பற்று, ஆசை என மனத்தின் வழிவரும் குணம் மூன்று*;* ஆகப் பத்து. நற்குணங்களாவன*:* மெய்யுரை, நல்வார்த்தை, இனியவை கூறல், பயன்படுசொல் எனச் சொல் குணம் நான்கு*;* பள்ளி வலம் வரல், தவம் புரிதல், தானஞ்செய்தல், என உடற்குணம் மூன்று*;* அருள்நினைவு, ஆசையறுத்தல், தவப்பற்று என மனத்தின் குணம் மூன்று*;* ஆகப் பத்து செய்கை மூன்று *;* இவை மனம் மொழி மெய்களால் வருவன.

விஞ்ஞானம் 5. அறிவுடையாரிடத்து நின்று அதன் வழிப்படும் உணர்வு. அவை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், சித்தம் என்பன.

ஆங்கவன்தான் உரைத்தமொழி கேட்ட அன்பர்
அதனைஅனு வாதஞ்செய் தவனை நோக்கித்
தாங்கியஞா னத்துடனாம் கந்தம் ஐந்தும்
தாம்வீந்து கெட்டனவேல் தலைவன் தானும்
ஈங்குளன் என் றவனுக்கு விடயமாக
யாவையுமுன் இயற்றுதற்கு விகார மேசெய்
தோங்குவடி வமைத்துவிழ வெடுக்கும் பூசை
கொள்வார்ஆர் உரைக்கவென உரைக்க லுற்றான். **#2814**

அப்போது அந்தச் சாரி புத்தன் உரைத்ததைக் கேட்ட அன்பரான சம்பந்த சரணாலயர், அவன் கூறிய மொழியைத் தாம் எடுத்து மொழிந்து, அவனைப் பார்த்து, அவன் (புத்தன்) முன் தங்கியிருந்த ஞானம் முதலான ஐந்து கந்தங்களும் தாம் ஒருங்கே அழிந்து கெட்டவனானால், அத்தலைவன்தானே அங்கு வீற்றிருக்கின் றான் என்று கொண்டு, அவன் கொள்ளும்படி எல்லாவற்றையும் செய்வதற்காக, விகாரம் என்னும் கோயில் எடுப்பித்து, அதனுள் அவனது பெரிய வடிவத்தையும் வைத்து, விழாச்செய்யும் பூசையை ஏற்றுக்கொள்பவர் யார் கூறுக? என்று வினவ, சாரிபுத்தன் சொல்லத் தொடங்கினானாக,

விளக்கவுரை

****

கந்தமாம் வினையுடம்பு நீங்கி எங்கோன்
கலந்துளன்முத் தியில்என்றான் என்னக் காணும்
இந்திரியங் கண்முதலாம் கரணந் தானும்
இல்லையேல் அவனுணர்ச்சி யில்லை யென்றார்
முந்தையறி விலனாகி உறங்கி னானை
நிந்தித்து மொழிந் துடல்மீ தாடினார்க்கு
வந்தவினைப் பயன்போல வழிபட் டார்க்கும்
வருமன்றோ நன்மையென மறுத்துச் சொன்னான். **#2815**

இருவினை காரணமாக வந்த ஐவகை உணர்வு கொண்ட உடம்பு கெட, எம் தலைவன் முத்தியில் சேர்ந்திருக்கின்றான், அதனால் கோயிலும் விழாவும் எடுப்பது பொருந்தும் என்று சாரி புத்தன் உரைத்திட, அவன் அங்ஙனம் முத்தியில் சேர்ந்திருக்கும் உன் தலைவனுக்குப் பொருள்களை உணரும் கருவிகளான கண் முதலாய கருவிகள் இல்லாது ஒழிந்ததால், அவனுக்கு உணர்வு தோன்றல் இல்லையாகும் என்று சம்பந்த சரணாலயர் மறுத்துச் சொன்னார் `முற்பட்ட உணர்வு கெட்டு உறங்குபவனை கழித்துத் தூற்றி அவன் உடலின் மீது மிதித்தாடிய

ஒருவனுக்கு, அதனால் தீவினைப் பயன் வருவதைப் போல், ஐந்து கந்தமும் கெட்டு முத்தியடைந்த எம் முதல் வனை வணங்கியவர்க்கும் அந்த நல்வினைப் பயன் வரும் அன்றோ!' எனச் சாரிபுத்தன் மறுத்துச் சொன்னான்.

விளக்கவுரை

இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

சொன்னவுரை கேட்டருளி அன்பர் தாமும்
தொடர்ந்தவழி பாடுபல கொள்கின் றானுக்
கன்னவற்றி னுடன்பாடும் எதிர்வு மில்லை
ஆனபோ தவன்பெறுதல் இல்லை யென்றார்
முன்னவற்றி னுடன்பாடும் எதிர்வுமின்றி
முறுகுதுயில் உற்றானை முனிந்து கொன்றால்
இன்னுயிர்போய்க் கொலையாகி முடிந்த தன்றோ
இப்படியால் எம்மிறைவற் கெய்தும் என்றார். **#2816**

சாரிபுத்தனின் இம்மறு மொழியைக் கேட்ட அன்பரான சம்பந்த சரணாலயரும், நீ தொடர்ந்து வழிபாட்டை ஏற்றுக் கொள்ளும் உன் தலைவனுக்கு, உணர்ந்து கொள்வதற்குரிய கருவிகள் இல்லாமையால் அவற்றில் விருப்பும் வெறுப்பும் இல்லை. அங்ஙனமா யின் அவ்வாறான வழிபாட்டை ஏற்றுக்கொள்வதும் இல்லை!' என்று சொன்னார். தன் முன்புள்ள பொருள்களில் விருப்பும் வெறுப்பும் இன்றி நல்ல உறக்கத்தை உடைய ஒருவனைச் சினந்து கொன்றால், அங்ஙனம் கொல்லப்பட்டவனுக்கு உயிர் போகும். கொன்றவனுக்கு கொலைப் பழியும் வந்து சேரும் அன்றோ? இவ்வாறே எம் இறைவ னுக்கும் எம் வழிபாடு சென்று பொருந்தும் என்று சாரி புத்தன் உரைத்தான்.

விளக்கவுரை

முறுகு துயில் - மிகுதியான தூக்கம்.

இப்படியால் எய்துமென இசைத்துநீ இங்கு
எடுத்துக்காட் டியதுயிலும்இயல்பி னான்போல்
மெய்ப்படிய கரணங்கள் உயிர்தா மிங்கு
வேண்டுதியா னும்மிறைவற் கான போது
செப்பியஅக் கந்தத்தின் விளைவின் றாகித்
திரிவில்லா முத்தியிற்சென் றிலனும் ஆனான்
அப்படியக் கந்தத்துள் அறிவுங் கெட்டால்
அம்முத்தி யுடன்இன்ப மணையா தென்றார். **#2817**

இங்ஙனம் வழிபாட்டில் பயன் தருதல் எம் தலைவன்பாலும் பொருந்தும் என்று நீ இங்கு மேற்கோளாக எடுத்துக் காட்டிய, உடன்பாடும் மறுப்பும்

இல்லாது உறங்குபவனின் தன்மை போல், உடம்பில் உள்ள கரணங்களும் உயிரும் ஈண்டு இச்செயலுக்கு வழிபாடு கொண்டு பயன்படும் நிலைக்கு உன் தலைவனுக்கு இருக்க வேண்டும் அன்றோ! அங்ஙனம் உடலும் கரணமும் உயிரும் வழிபாடு கொள்ளும் நிலையில் உள்ளவன் ஆனபோது, உன்னால் முன்பு கூறப்பட்ட ஐந்து கந்தத்தின் விளைவும் இல்லாது போகவே, உம் தலைவனான அவன் முத்தியில் சேர்ந்தவன் அல்லன் ஆகின்றான். அங்ஙனம் அக்கந்தத்தின் அறிவும் கெடுமே ஆனால் அந்த முத்தியுடன் இன்பம் சேராது என்று சம்பந்த சரணாலயர் மொழிந்தார்.

விளக்கவுரை

****

அவ்வுரைகேட் டெதிர்மாற்றம் அறைவ தின்றி
அணைந்துளன் அம் முத்தியெனும் அதுவும் பாழாம்
கவ்வையில்நின் றவனையெதிர் நோக்கி ஞானக்
கடலமுதம் அனையவர்தங் காத லன்பர்
பொய்வகையே முத்தியினிற் போனான் முன்பே
பொருளெல்லாம் உணர்ந்துரைத்துப் போனான் என்றாய்
எவ்வகையால் அவனெல்லாம் உணர்ந்த தீதும்
இல்லதுரைப் பாய்எனினும் ஏற்போ மென்றார். **#2818**

அம்மொழியைக் கேட்டு அதற்கு எதிராக ஒன்றும் கூறுவதற்கின்றி, அம் முத்தியில் தலைவன் சேர்ந்துள்ளான் எனச் சொல்லப்பட்டதும் பாழாய் முடிந்த சிறுமையுடன், வருத்தத்தோடு சாரி புத்தன் நின்றான். அத்தகையவனை மீண்டும் பார்த்து, ஞானம் என்ற கடலில் கடைந்தெடுத்த அமுதம் போன்ற ஆளுடைய பிள்ளையாரின் அன்பரான சம்பந்த சரணாலயர், கந்தங்கள் அவிந்து பொய்யாய் முடிந்தபின் முத்தியில் சேர்பவனான உன் தலைவன் அதற்கு முன்பே, எல்லாப் பொருள்களையும் உணர்ந்து அறம் உரைத்துச் சென்றான் என்று கூறினாய்! அவன் அவ்வாறு எல்லாவற்றையும் எங்ஙனம் முழுதும் உணர்ந்து கொண்டவன் ஆனான்? எனவே அனைத்தையும் உணர்ந்து கொண்டான் என்பதும் இல்லையாகின்றது! இதற்கு மறுமொழி கூறுவாயாயின் அதனை யாம் ஏற்றுக் கொள்வோம் என்று சொன்னார்.

விளக்கவுரை

எவையும் கணம் தொறும் அழியும் என்று கொண்ட உம் தலைவனுக்கு ஒன்றுணர ஒன்றழிய இவ்வாறே முழுதும் அழியுமே யன்றி, எல்லாப் பொருள்களையும் முற்ற உணர்ந்தவன் என்றல் எங்ஙனம்? என்பது வினா.

உணர்வுபொதுச் சிறப்பென்ன இரண்டின் முன்ன
துளவான மரப்பொதுமை உணர்தல் ஏனைப்
புணர்சிறப்பு மரங்களில்வைத் தின்ன தென்றல்
இப்படியால் வரம்பில்லாப் பொருள்கள் எல்லாம்
கொணரும்விற கினைக்குவைசெய் திடினும் வேறு
குறைத்தவற்றைத் தனித்ததனியே இடினும் வெந்தீத்
துணர்கதுவிச் சுடவல்ல வாறு போலத்
தொகுத்தும்விரித் துந்தெரிக்குந் தொல்லோன் என்றான். **#2819**

உணர்வு என்பது `பொது', `சிறப்பு' என இரு வகைப்படும். அவற்றுள் பொதுவுணர்வு, ஒரு காட்டில் உள்ள மரங் களை மரம் எனப் பொதுவாய் உணர்வது. மற்ற சிறப்பு உணர்வாவது, அக்காட்டில் உள்ள மரங்களை இன்னவகை என்று பிரித்து உணர்வது. இங்ஙனமே எல்லாப் பொருள்களின் உணர்வும் ஆகும். கொண்டு வரும் விறகுகளைக் கூட்டித் தீயில் மொத்தமாக இட்டாலும், அங்ஙன மில்லாது வெவ்வேறாக வெட்டித் தனித்தனியே தீயில் இட்டாலும் வெப்பமுடைய தீயின் கொழுந்து அதைச்சுட்டு நாசமாக்க வல்லவாறு போல், தொகையாய்க் கூட்டியும் தனித்தனியே விரித்தும் பழைய வனான எம் இறைவன் தெரிவிப்பான் எனச் சாரி புத்தன் கூறினான்.

விளக்கவுரை

மரக்காட்டினைப் பொதுவும் சிறப்புமாக உணர்தல் போல, உலகியலுண்மையையும் பொதுவும் சிறப்புமாக உணரவும் உரைக்கவும் வல்லானாய எம் முதல்வன், முத்தியடையும் முன்னும் பின்னுமாக அவற்றை உரைத்துச் சொன்னான். அவ்விருவகை உணர் வும் ஒன்றேயாதல், விறகுக் கட்டைச் சேர்த்து எரிப்பினும், தனித்து எரிப் பினும் ஒன்றேயாதல் போலவாம் என உவமைப் பொருட்படுத் துக் கூறினான் புத்தன்.

எடுத்துரைத்த புத்தனெதிர் இயம்பு மன்பர்
எரியுணர்வுக் கெடுத்துக்காட் டாகச் சொன்னாய்
அடுத்தவுணர் உருவுடைய தன்று சொன்ன
அனல்வடிவிற் றாம் அதுவும் அறிதி நுங்கோன்
தொடுத்தநிகழ் காலமே யன்றி ஏனைத்
தொடர்ந்தஇரு காலமுந்தொக் கறியுமாகில்
கடுத்தளரி நிகழ்காலத் திட்ட தல்லால்
காணாத காலத்துக் கதுவா தென்றார். **#2820**

இங்ஙனம் எடுத்துக்காட்டி விடை கூறிய சாரி புத்தன் எதிரில், வாதம் கூறும் அன்பர், `நீ, தீயின் செயலுக்குக் காட்டாக உணர்வின் செயலைக் கூறினாய். ஆனால் பொருள்களை அடுத்து நின்ற உணர்வு,

வடிவுடையதன்று. அந்த உணர்வுக்குக் காட்டாகக் கூறிய தீயோ வடிவுடையது. அதையும் நீ அறிவாயாக! அன்றியும் உம் இறைவன், நிகழ்காலமன்றி மற்ற இறந்த காலமும் எதிர்காலமும் அறிபவனாயின், அவன் அவ்வாறு அறியும் முக்கால உணர்வுக்கு நீ எடுத்துக் காட்டிய பொருளான எரிக்குந் தீ காட்டாகாது. காரணம் அது நிகழ்காலத்தில் இட்டபோது சுடுவதே அல்லாது, மற்ற ஏனை இரு காலங்களிலும் சுடாதாகும்' என்றார்.

விளக்கவுரை
****

ஆதலினால் உன்னிறைவன் பொருள்கள் எல்லாம்
அறிந்ததுநும் முத்திபோல் ஆயிற் றன்றே
ஏதமாம் இவ்வறிவால் உரைத்த நூலும்
என்றவனுக் கேற்குமா றருளிச் செய்ய
வாதமா றொன்றின்றித் தோற்றான் புத்தன்
மற்றவனை வென்றருளிப் புகலி மன்னர்
பாததா மரைபணிந்தார் அன்பர் தங்கள்
பான்மையழி புத்தர்களும் பணிந்து வீழ்ந்தார். **#2821**

ஆதலால், நீ காட்டிய பொருள் பொருத்தமா னதாக இல்லாததால் உம் தலைவன் எல்லாப் பொருள்களையும் முழுவதும் ஒருங்கே உணர்ந்த செய்தியும், நீ கூறிய முத்தி இலக்க ணமும் பாழாய் முடிந்தவாறுபோல், இதுவும் பாழாய் முடிந்தது. இத்தகைய நிரம்பாத அறிவால் அவன் உரைத்த உம் பிடக நூலும் குற்றமுடையதாகும் என்று அந்தச் சாரி புத்தனுக்கு ஏற்கும் வகையில் உண்மையை உணர்த்தச் சாரி புத்தன் அதன்மேல் வாதிடுவதற்கு ஒன்றுமின்றித் தோல்வியுற்றான். அன்பரான சம்பந்த சரணாலயரும், மாறுபட்ட அவனை இங்ஙனம் வென்று அருளி, சீகாழி மன்னரான பிள்ளை யாரின் திருவடித் தாமரைகளை வணங்கினார். தங்கள் சமயத் தன்மை அழிந்த புத்தர்களும் ஞானசம்பந்தரின் திருவடிகளில் பணிந்து விழுந்தனர்.

விளக்கவுரை
****

புந்தியினால் அவருரைத்த பொருளின் தன்மை
பொருளன்றாம் படியன்பர் பொருந்தக் கூற
மந்தவுணர் வுடையவரை நோக்கிச் சைவம்
அல்லாது மற்றொன்றும் இல்லை யென்றே
அந்தமில்சீர் மறைகள்ஆ கமங்கள் ஏனை
அகிலகலைப் பொருளுணர்ந்தார் அருளிச் செய்யச்

சிந்தையினில் அதுதெளிந்து புத்தர் சண்பைத்
திருமறையோர் சேவடிக்கீழ்ச் சென்று தாழ்ந்தார். **#2822**

அறிவையே பற்றுக்கோடாகக் கொண்டு, அப் புத்தர்கள் கூறிய பொருள் உண்மைகள் உண்மை அல்லவாகி முடியும் இயல்பைச் சம்பந்த சரணாலயர் பொருத்தமாக எடுத்துச் சொல்ல, மந்தமான அறிவுடைய அப் புத்தர்களைப் பார்த்துச் `சைவத் திறமே அல்லாது மற்றொன்றும் இல்லை' என்று அழிவற்ற சிறப்புடைய மறைகளையும் ஆகமங்களையும் அவற்றின் வழிவரும் மற்ற அள வற்ற கலைப் பொருள்களையும் உணர்ந்த ஞானசம்பந்தர் அருளிச் செய்ய, அவ்வுண்மை உணர்ந்த புத்தர்கள், சீகாழியில் தோன்றிய அந்தணராய பிள்ளையாரின் செம்மையான திருவடிகளைச் சென்று வணங்கினர்.

விளக்கவுரை

****

அன்றவர்க்குக் கவுணியர்கோன் கருணை நோக்கம்
அணை தலினால் அறிவின்மை அகன்று நீங்கி
முன்தொழுது விழுந்தெழுந்து சைவ ரானார்
முகைமலர்மா ரியின்வெள்ளம் பொழிந்த தெங்கும்
நின்றனவும்சரிப்பனவும் சைவ மேயாம்
நிலைமையவர்க் கருள்செய்து சண்பை வேந்தர்
சென்றுசிவ னார்பதிகள் பணிய வேண்டித்
திருக்கடவூர் அதன்மருங்கு சேர வந்தார். **#2823**

அன்று அப்புத்தர்களுக்குச் சீகாழித் தலைவரான குருமூர்த்திகளின் அருட்பார்வை பட்டதால், அறிவை மறைக்கும் தன்மையுடைய ஆணவம் தம்மை விட்டு நீங்கிய நிலையில், அப் புத்தர்கள், ஞானசம்பந்தரின் திருமுன்பு விழுந்து வணங்கி எழுந்து அவரால் திருநீறு தரப்பெற்று, அணிந்து சைவர் ஆயினர். தேவர்களின் மலர் மழை எங்கும் பொழிந்தது. `நிற்பனவும் நடப்பனவுமான எல்லா உயிர் வகைகளும் சைவமே யாகும்' என்ற நிலைமையை அப்புத்தர் கள் அறிந்து உய்யுமாறு அருளிச் செய்து, சீகாழித் தலைவரான ஞான சம்பந்தர் சிவபெருமான் எழுந்தருளிய மற்றப் பதிகளுக்கும் சென்று வணங்கும் பொருட்டுத் திருக்கடவூரின் அருகே வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

`நிற்பனவும் நடப்பனவும் சைவமே' என்றது, உயிர்த் தொகை யனைத்தும் சிவபெருமானோடு சம்பந்தமுடையவாய், அப்பெருமானின் ஐந்தொழில்களில் ஆட்பட்டு ஒரு கால எல்லையில் அழியத் தக்கனவாய் அமைந்தமையைக் காட்டுகிறது.

அந்நகரில் அடியார்கள்
எதிர்கொள்ள புக்கருளிக்
கொன்னவிலுங் கூற்றுதைத்தார்
குரைகழல்கள் பணிந்தேத்தி
மன்னியமர்ந் துறையுநாள்
வாகீச மாமுனிவர்
எந்நகரில் எழுந்தருளிற்
றென்றடியார் தமைவினவ. **#2824**

அத்திருக்கடவூரில், தொண்டர்கள் தம்மை வரவேற்க, ஞானசம்பந்தர் திருக்கோயிலினுள்ளே எழுந்தருளி, உயிரைப் பிரிக்கவரும் இயமனை உதைத்த இறைவரின் ஒலிக்கும் கழல் அணிந்த திருவடிகளை வணங்கிப் போற்றி, விரும்பி அங்குத் தங்யிருக்கும் நாள்களில், `திருநாவுக்கரசு நாயனார் எந்தத் திருநகரில் எழுந்தருளியுள்ளார்?' என்று அடியவர்களைக் கேட்டருள.

விளக்கவுரை

****

அங்கவரும் அடிபோற்றி
ஆண்டஅர செழுந்தருளிப்
பொங்குபுனற் பூந்துருத்தி
நகரின்கண் போற்றிசைத்துத்
தங்குதிருத் தொண்டுசெயும்
மகிழ்ச்சியினாற் சார்ந்தருளி
எங்குநிகழ்ந் திடஇருந்த
படியெல்லாம் இயம்பினார். **#2825**

அப்பொழுது அவ்வடியவர்களும் ஞானசம்பந் தரின் திருவடிகளை வணங்கிப்போற்றி நின்று, ஆண்ட அரசு, பெரு கும் நீர் வளம் உடைய காவிரி சூழ்ந்த திருப்பூந்துருத்தியில் எழுந் தருளி, இறைவரைப் போற்றி, அங்குத் தங்கித் திருத்தொண்டு செய்யும் மகிழ்ச்சியால் எங்கும் தம்பண்பு நிலவுமாறு இருந்தருளும் பாங்கை யெல்லாம் எடுத்து மொழிந்தனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

அப்பரிசங் கவர்மொழிய
ஆண்டஅர சினைக்காணும்
ஒப்பரிய பெருவிருப்பு
மிக்கோங்க ஒளிபெருகும்
மைப்பொருவு கறைக்கண்டர்

கழல்வணங்கி அருள்பெற்றுச்
செப்பரிய புகழ்ப்புகலிப்
பிள்ளையார் செல்கின்றார். **#2826**

அவ்வாறு கூற, நாவுக்கரசரைக் கண்டு மகிழ வேண்டும் என்ற ஒப்பில்லாத அரிய பெருவிருப்பம் மிக்கு, ஒளிமிகும் கருமை பொருந்திய கழுத்தையுடைய சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, அவரது அருள் விடையைப் பெற்றுச் சொலற்கரிய புகழு டைய சீகாழியில் தோன்றிய ஞானசம்பந்தர் செல்கின்றாராகி,

விளக்கவுரை

****

பூவிரியுந் தடஞ்சோலை
புடைபரப்பப் புனல்பரக்கும்
காவிரியின் தென்கரைபோய்க்
கண்ணுதலார் மகிழ்ந்தஇடம்
மேவிஇனி தமர்ந்திறைஞ்சி
விருப்புறுமெய்த் தொண்டரொடு
நாவரசர் உழைச்சண்பை
நகரரசர் நண்ணுவார். **#2827**

மலர்கள் மலரும் பெரிய சோலைகள் நிலவ, நீர் பரந்து ஓடுகின்ற காவிரி ஆற்றின் தென்கரை வழியாய்ச் சென்று, நெற் றிக் கண்ணையுடைய இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கும் திருப்பதிகளை அடைந்து, இனிதாய் விரும்பி வணங்கிச் சென்று, விருப்பம் பொருந் திய உண்மை வாய்ந்த அடியவர்களுடன் நாவுக்கரசரிடம் ஞானசம் பந்தப் பெருமான் நண்ணுவாராகி,

விளக்கவுரை

திருக்கடவூருக்கும் திருப்பூந்துருத்திக்கும் இடைப்பட்ட திருப்பதிகள் பலவற்றையும் வணங்கிச் சென்றுள்ளார் பிள்ளையார். அப்பதிகள் இவை என அறிதற்கு இயன்றிலது.

அந்தணர்சூ ளாமணியார்
பூந்துருத்திக் கணித்தாக
வந்தருளும் பெருவார்த்தை
வாகீசர் கேட்டருளி
நந்தமையா ளுடையவரை
நாம்எதிர்சென் றிறைஞ்சுவது
முந்தைவினைப் பயனென்று
முகமலர அகமலர்வார் **#2828**

மறையவர்களின் மணிமுடியாய் விளங்கும் ஞானசம்பந்தர் திருப்பூந்துருத்திக்கு அண்மையாய் வந்தருளுகின்ற பெருமொழியைக் கேட்ட, நாவரசுப் பெருந்தகையாரும் `நம்மை ஆளாகவுடைய பிள்ளையாரை நாம் எதிர் கொண்டு வணங்குவது முற் பிறவியில் செய்த நல்வினையின் பயனாகப் பெறக் கூடியதாகும்' என எண்ணி அகமும் முகமும் மலர,

விளக்கவுரை

****

எதிர்சென்று பணிவனென
எழுகின்ற பெருவிருப்பால்
நதிதங்கு சடைமுடியார்
நற்பதங்கள் தொழுதந்தப்
பதிநின்றும் புறப்பட்டுப்
பரசமயஞ் சிதைத்தவர்பால்
முதிர்கின்ற பெருந்தவத்தோர்
முன்னெய்த வந்தணைந்தார். **#2829**

`எதிர் கொண்டு வணங்குவன்' என்று, தம் உள் ளத்தில் மேன்மேலும் எழும் பெருவிருப்பத்தால், கங்கை சூடிய சடை யாரின் நல்ல திருவடிகளைத் தொழுது, அத்திருப்பதியினின்றும் புறப் பட்டுச் சென்று, பிறசமயங்களின் தீங்கை அழித்த பிள்ளையார் இடத்து, முதிரும் பெருந்தவத்தவர்களான அடியவர்களின் முன் வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

திருச்சின்னம் பணிமாறக்
கேட்டநாற் றிசையுள்ளோர்
பெருக்கின்ற ஆர்வத்தால்
பிள்ளையார் தமைச்சூழ்ந்த
நெருக்கினிடை யவர்காணா
வகைநிலத்துப் பணிந்துள்ளம்
உருக்கியெழு மனம்பொங்கத்
தொண்டர்குழாத் துடன்அணைந்தார். **#2830**

திருச்சின்னம் பிள்ளையாரின் புகழ்களை எடுத்து முழங்கக் கேட்டவர்களான நாற்றிசைகளிலிருந்தும் வந்த அன்பர்கள், பெருகும் ஆசையால் ஞானசம்பந்தரைச் சூழ்ந்து வரும் நெருக்கத்தில், ஞானசம்பந்தர் காணாத வகையில் நிலத்தில் விழுந்து பணிந்து, உள்ளத்தை உருக்கி எழும் மனம் ஓங்கத் திருத்தொண்டர் கூட்டத் துடன்

சேர்ந்தார்.

விளக்கவுரை

இப்பாடல் சில பதிப்புகளில் இல்லை.

வந்தணைந்த வாகீசர்
வண்புகலி வாழ்வேந்தர்
சந்தமணித் திருமுத்தின்
சிவிகையினைத் தாங்கியே
சிந்தைகளிப் புறவருவார்
திருஞான சம்பந்தர்
புந்தியினில் வேறொன்று
நிகழ்ந்திடமுன் புகல்கின்றார். **#2831**

அங்ஙனம் தொண்டர் கூட்டத்துள் வந்து சேர்ந்த திருநாவுக்கரசர், கொடைத்தன்மை வாய்ந்த சீகாழிப் பதியை வாழ் விக்க வந்தருளிய பிள்ளையாரது அழகிய முத்துச் சிவிகையைத் தாங்குகின்றவர்களுடன் கூடி, தாமும் தாங்கி உள்ளக் களிப்புடனே வருவாராக, திருஞானசம்பந்தர் தம் உள்ளத்தில் திருவருட் குறிப்பாற் வேறொரு உணர்ச்சி உண்டானதால் முற்படக் கூறுவாராய்,

விளக்கவுரை

வேறொரு உணர்ச்சி - அப்பரைப்பற்றிய நினைவு ணர்ச்சி.

அப்பர்தாம் எங்குற்றார்
இப்பொழுதென் றருள்செய்யச்
செப்பரிய புகழ்த்திருநா
வுக்கரசர் செப்புவார்
ஒப்பரிய தவஞ்செய்தேன்
ஆதலினால் உம்மடிகள்
இப்பொழுது தாங்கிவரப்
பெற்றுய்ந்தேன் யான்என்றார். **#2832**

`அப்பர் தாம் இப்போது எங்கு எழுந்தருளினார்?' என்று வினவியருள, சொலற்கரிய புகழையுடைய திருநாவுக்கரசரும் விடை தருபவராய் `ஒப்பற்ற தவத்தை முன்னே செய்தேனாதலின் இப்போது உம் திருவடிகளைத் தாங்கிவரும் பெரும்பேற்றை அடைந்து உய்ந்தேன்' என்று அருளிச் செய்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அவ்வார்த்தை கேட்டஞ்சி
அவனியின்மேல் இழிந்தருளி

இவ்வாறு செய்தருளிற்
றென்னாம்என் றிறைஞ்சுதலும்
செவ்வாறு மொழிநாவர்
திருஞான சம்பந்தர்க்
கெவ்வாறு செயத்தகுவ
தென்றெதிரே இறைஞ்சினார். **#2833**

அத்திருமொழிகளைக் கேட்டு அச்சம் கொண்ட ஞானசம்பந்தர், சிவிகையினின்றும் இறங்கியருளி, `இவ்வாறு தாங் கள் செய்தருளுவது என்னோ?' எனப் பதைப்புடன், வணங்குதலும் செம்மையே மொழியும் நாவுடைய அரசரும் `திருஞானசம்பந்த ருக்கு, வேறு யாது செய்தல் தக்கதாகும்?' எனக் கூறி வணங்கினார்.

விளக்கவுரை

****

சூழ்ந்துமிடைந் தருகணையுந்
தொண்டரெல்லாம் அதுகண்டு
தாழ்ந்துநில முறவணங்கி
எழுந்துஅங்கை தலைகுவித்து
வாழ்ந்துமனக் களிப்பினராய்
மற்றிவரை வணங்கப்பெற்
றாழ்ந்தபிறப் புய்ந்தோம்என்
றண்டமெலாம் உறஆர்த்தார். **#2834**

சூழ்ந்து நெருங்கி வரும் உண்மைத் தொண்டர் கள் எல்லாம் அதைப்பார்த்துத் தாழ்ந்து நிலத்தில் பொருந்த வணங்கி எழுந்து அழகிய கைகளைத் தலைமீது குவித்து உள்ளக் களிப்புடைய வராய், `இவ்விரு பெருமக்களையும் வணங்கப் பெற்றதால் நாம் ஆழ்ந்துள்ள பிறவிக் கடலினின்றும் ஈடேறி உய்யப் பெற்றோம்' என மொழிந்து அண்டங்கள் எல்லாம் பொருந்த மகிழ்வொலி செய்தனர்.

விளக்கவுரை

****

திருஞான சம்பந்தர்
திருநாவுக் கரசர்தமைப்
பெருகார்வத் தொடும்அணைந்து
தழீஇக்கொள்ளப் பிள்ளையார்
மருவாரும் மலரடிகள்
வணங்கியுடன் வந்தணைந்தார்
பொருவாரும் புனற்சடையார்

மகிழ்ந்ததிருப் பூந்துருத்தி. **#2835**

திருஞானசம்பந்தப் பெருமான், பெருகும் விருப்பத்தோடும் திருநாவுக்கரசரை அணைந்து தழுவிக் கொள்ள, நாவுக்கரசர் மணம் கமழும் மலர் போன்ற பிள்ளையாரின் அடிகளை வணங்கி உடன் வர, அலைகள் மோதுகின்ற கங்கை நீரைச் சடையில் கொண்ட இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கின்ற திருப்பூந்துருத்திக்கு வந்து சேர்ந்தனர்.

விளக்கவுரை

****

அன்பர்குழாத் தொடும்செல்வார்
ஆனேற்றார் மகிழ்கோயில்
முன்பணித்தா கச்சென்று
கோபுரத்தை முன்னிறைஞ்சித்
துன்பமிலாத் திருத்தொண்ட
ருடன்தொழுது புக்கருளி
என்புருக வலங்கொண்டு
பணிந்தேத்தி இறைஞ்சினார். **#2836**

அடியார் கூட்டத்துடன் செல்பவரான ஞானசம் பந்தர், விடைக்கொடியை யுடைய இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கும் திருக்கோயில் முன்பு அருகில் சென்று, கோபுரத்தை முன் வணங்கித் துன்பம் இல்லாத தொண்டருடன் தொழுத வண்ணமே உள்ளே சென்று எலும்பும் உருகுமாறு கோயிலுள் வலமாக வந்து பணிந்து வணங்கிப் போற்றினார்.

விளக்கவுரை

****

பொய்யிலியா ரைப்பணிந்து
போற்றியே புறத்தணைவார்
செய்யசடை யார்கோயில்
திருவாயில் முன்னாக
மையறுசீர்த் தொண்டர்குழாம்
வந்துபுடை சூழஉல
குய்யவரு வார்தங்க
ளுடன்மகிழ்ந்தங் கினிதிருந்தார். **#2837**

திருப்பூந்துருத்தியில் வீற்றிருக்கும் பொய்யிலி யப்பரை வணங்கிப் போற்றிப் பின்னர், புற முற்றத்தில் சேர்பவரான ஞானசம்பந்தர், சிவந்த சடையையுடைய இறைவரின் கோயிலின் வாயில் முன்பு குற்றமறும் சிறப்புடைய தொண்டர் கூட்டம் வந்து, தம்மைச் சுற்றிச் சூழ்ந்து வர, உலகம் உய்யும் பொருட்டு வருகின்ற நாயன்மார்கள் இருவரும் அடியார்கள் சூழ அவர்களுடன் மகிழ்ந்து அங்கு இனிதாய் விரும்பித் தங்கியிருந்தனர்.

விளக்கவுரை

பூந்துருத்தியில் பொய்யிலியப்பரைப் போற்றிப் பணிந்த பதிகம் கிடைத்திலது.

வாக்கின் தனிமன்னர்

வண்புகலி வேந்தர்தமைப்
போக்கும் வரவும்
வினவப் புகுந்ததெல்லாம்
தூக்கின் தமிழ்விரகர்
சொல்லிறந்த ஞானமறை
தேக்குந் திருவாயால்
செப்பி யருள்செய்தார். **#2838**

சொற்குறுதிக்கு ஒப்பில்லாத அரசரான திருநாவுக் கரசர், வளமையுடைய சீகாழி மன்னரான ஞானசம்பந்தரை அவர் பாண்டி நாட்டுக்குச் சென்றருளியதும் அங்கு நின்று மீண்டதும் ஆகிய வரலாறுகளை வினவ, அங்கு நிகழ்ந்த வரலாறு முழுவதையும், தமிழ்ப் பாட்டின் தலைவரான பிள்ளையார், சொலற்கு அரிய ஞானமறை களைத் தேக்கும் தம் திருவாக்கால் உரைத்தருளினார்.

விளக்கவுரை

திருமறைக்காட்டினின்றும் பிரிந்த இருபெருமக்களும், திருப்பூந்துருத்தியில் மீண்டும் கூடுகின்றனர். ஒருவர் ஒருவரைப் பார்த்தவுடனேயே பாண்டிய நாட்டு நிகழ்ச்சிகளைப் பரிமாறிக் கொள் ளாது, பெருமானை வழிபட்டு, அதன்பின்னரே அதுபற்றி அளவளா விக் கொள்வது அறிந்து கடைப்பிடித்தற்குரியதாம். அதுவும் திருக்கோ யிலினுள் அளவளாவுதலின்றிப் புறத்தணைந்தபின் நிகழ்த்துவதும் குறிக்கொள்ளதக்கதாம்.

காழியினில் வந்த
கவுணியர்தம் போரேற்றை
ஆழிமிசைக் கல்மிதப்பில்
வந்தார் அடிவணங்கி
வாழிதிருத் தொண்டென்னும்
வான்பயிர்தான் ஓங்குதற்குச்
சூழும் பெருவேலி
யானீர்எனத் தொழுதார். **#2839**

சீகாழியில் தோன்றிய கவுணியர் குலத்தவரின் போர் ஏறு என விளங்கும் ஞானசம்பந்தரை, கடல்மீது கல்லையே மிதப்பாகக் கொண்டு வந்தருளிய திருநாவுக்கரசர் வணங்கி, `வாழ்வை வழங்கும் திருத்தொண்டு என்னும் பெரிய பயிர் ஓங்கி வளர்ந்து பயன்தரச் செய்வதற்கு உரியதாய்ச் சூழும் பெரிய வேலிபோல் நீவிர் ஆயினீர்' எனக் கூறித் தொழுதனர்.

விளக்கவுரை

வாதம் செய்து வென்றமை தோன்றப் `போர் ஏறு' என்றார். நாவரசர் தமக்கே உரிய பாங்கில் பிள்ளையாரைத் திருத் தொண்டாம் பயிர்காக்கும் வேலி எனப் புகழ்ந்தது, அவருக்கும் பொருந்துவதாகும். எனவே நம்மளவில் சூழும் பெருவேலியானவர் கள் இவ்விருவருமே யாவர் என்பது அறியத்தக்கதாம்.

பிள்ளையார் தாமும்அவர்
முன்தொழுது பேரன்பின்
வெள்ள மனையபுகழ்
மானியார் மேன்மையையும்
கொள்ளும் பெருமைக்
குலச்சிறையார் தொண்டினையும்
உள்ள பரிசெல்லாம்
மொழிந்தங் குவந்திருந்தார். **#2840**

ஞானசம்பந்தப் பெருமானார் நாவுக்கரசர் முன் தொழுது, பெரிய அன்பின் வெள்ளத்தைப் போன்ற புகழையுடைய மங்கையர்க்கரசியாரின் மேம்பாட்டையும், பெருமையுடைய குலச் சிறையாரின் திருத்தொண்டின் சிறப்பையும் உள்ளவாறு கூறியருளி அங்கு மகிழ்ந்திருந்தார்.

விளக்கவுரை

****

தென்னற் குயிரோடு
நீறளித்துச் செங்கமலத்
தன்னம் அனையார்க்கும்
அமைச்சர்க்கும் அன்பருளித்
துன்னுநெறி வைதிகத்தின்
தூநெறியே ஆக்குதலான்
மன்னுபுகழ் வாகீசர்
கேட்டு மனமகிழ்ந்தார். **#2841**

பாண்டிய மன்னருக்கு உயிருடனே திருநீற்றை அளித்தும், செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் அன்னப் பறவை போன்ற மங்கையர்க்கரசி அம்மையாருக்கும் குலச்சிறையாருக்கும் அன்பைச் சுரந்தருளியும், தூய மறைவழிவரும் சைவ நெறியையே பொருந்தும் நெறியாக ஆக்கியதால், நிலைபெற்ற புகழையுடைய திருநாவுக்கரசர் அதனைக் கேட்டு மகிழ்ந்தார்.

விளக்கவுரை

****

சொல்லின் பெருவேந்தர்
தொண்டைவள நாடெய்தி
மல்கு புகழ்க்காஞ்சி
ஏகாம் பரமன்னும்
செல்வர் கழல்பணிந்து
சென்றதெல்லாஞ் செப்புதலும்
புல்குநூன் மார்பரும்போய்ப்
போற்றுந்திறம் புரிந்தார். **#2842**

சொல்லரசரான திருநாவுக்கரசர் திருத்தொண்டை வளநாட்டைச் சேர்ந்து, மிகுபுகழுடைய காஞ்சிபுரத்தில் நிலைபெற வீற்றிருக்கின்ற செல்வரான ஏகம்பநாதரின் திருவடிகளை வணங்கி வந்த வரலாற்றையெல்லாம் கூறியருளவும், பொருந்திய நூலையு டைய மார்பரான பிள்ளையாரும் அங்குச் சென்று வணங்கத் திருவுள் ளம் பற்றினார்.

விளக்கவுரை

தலைமை பற்றிக் காஞ்சித் திருப்பதியில் வணங்கியதை விதந்து கூறினாரேனும் `சென்றதெல்லாம் செப்புதலும்' என்றமை யால், தொண்டைநாட்டில் அமைந்த பல திருப்பதிகளையும் வணங்கி வந்தமையைக் கூறினார் என்பது பெறுதும்.

அங்கணரைப் போற்றியெழுந்
தாண்ட அரசமர்ந்த
பொங்கு திருமடத்திற்
புக்கங் கினிதமர்ந்து
திங்கட் பகவணியும்
சென்னியார் சேவடிக்கீழ்த்
தங்கு மனத்தோடு
தாம்பரவிச் செல்லுநாள். **#2843**

ஞானசம்பந்தர் இறைவரை வணங்கி எழுந்து, ஆளுடைய அரசர் விரும்பி எழுந்தருளியிருக்கும் அன்புமிக்க திரு மடத்தில் சேர்ந்து, அங்கு விரும்பி வீற்றிருந்தருளி, திங்களின் பிளவு அனைய பிறையைச் சூடிய திருமுடியையுடைய இறைவரின் சேவடி யின் கீழ்த் தங்கும் திருவுள்ளத்துடன் தாமும் போற்றி எழுந்தருளி யிருந்த காலத்தில்,

விளக்கவுரை

****

வாகீச மாமுனிவர்
மன்னுதிரு வாலவாய்

நாகம் அரைக்கசைத்த
நம்பர் கழல் வணங்கப்
போகும் பெருவிருப்புப்
பொங்கப் புகலியின்மேல்
ஏகும் பெருங்காதல்
பிள்ளையார் ஏற்றெழுவார். **#2844**

வாகீச முனிவரான நாவுக்கரசருக்கு, நிலைபெற்ற திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் பாம்பை அரையில் கட்டிய இறைவரின் திருவடிகளை வணங்குவதற்காகச் செல்ல வேண்டும் என்ற பெரிய விருப்பம் மேன்மேலும் எழவும், ஞானசம்பந்தரும் சீகாழியில் சென்று சேரும் பெருகிய காதலை மேற்கொண்டவராய்,

விளக்கவுரை

****

பூந்துருத்தி மேவும்
புனிதர்தமைப் புக்கிறைஞ்சிப்
போந்து திருவாயில்
புறத்தணைந்து நாவினுக்கு
வேந்தர் திருவுள்ளம்
மேவவிடை கொண்டருளி
ஏந்தலார் எண்ணிறந்த
தொண்டருடன் ஏகினார். **#2845**

திருப்பூந்துருத்தியில் வீற்றிருக்கும் இறைவரைத் திருக்கோயிலுள் புகுந்து வணங்கிப் போந்து, வாயில் பக்கத்தை அடைந்து, திருநாவுக்கரசரின் உள்ளம் பொருந்த அவரிடம் விடை பெற்றுக் கொண்டு, பெருமையுடைய பிள்ளையார் அளவில்லாத தொண்டர்களுடன் தம் செலவினை மேற்கொண்டார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

மாடுபுனற் பொன்னி
இழிந்து வடகரையில்
நீடுதிரு நெய்த்தானம்
ஐயாறு நேர்ந்திறைஞ்சிப்
பாடுதமிழ் மாலைகளும்
சாத்திப் பரவிப்போய்
ஆடல் புரிந்தார்திருப்
பழனம் சென்றணைந்தார். **#2846**

அருகில் உள்ள காவிரியில் இறங்கிச் சென்று, ஆற்றின் வடகரையில் நிலைபெற்றிருக்கும் திருநெய்த்தானத்தையும், திருவையாற்றையும் சேர்ந்து பணிந்து, பெருமையுள்ள தமிழ் மாலைக ளையும் அருளிப் போற்றிச் சென்று, திருக்கூத்து இயற்றும் இறைவரின் திருப்பழனத்தைப் போய்ச் சேர்ந்தார்.

விளக்கவுரை

திருநெய்த்தானத்திலும், திருஐயாற்றிலும், திருப்பழ னத்திலும் இதுபோது அருளிய பதிகங்கள் கிடைத்தில.

செங்கண் விடையார்
திருப்பழனஞ் சேர்ந்திறைஞ்சிப்
பொங்கிய காதலின்முன்
போற்றும் பதிபிறவும்
தங்கிப்போய்ச் சண்பைநகர்
சார்ந்தார் தனிப்பொருப்பின்
மங்கை திருமுலைப்பால்
உண்டருளும் வள்ளலார். **#2847**

சிவந்த கண்களையுடைய ஆனேற்றை ஊர்தி யாகக் கொண்ட இறைவரின் திருப்பழனத்தை அடைந்து வணங்கி, பொங்கிய காதலின் முன்போற்றிய திருப்பதிகள் பலவற்றிலும் தங்கிச் சென்று, ஒப்பில்லாத பொன்மலை வல்லியான அம்மையாரின் திரு முலைப் பாலையுண்டருளிய வள்ளலாரான பிள்ளையார், சீகாழிப் பதியினை அணைவாராயினர்.

விளக்கவுரை

முன்பு வணங்கிய பதிபலவும் என்றது திருக்குடந்தை, திருவடகுரங்காடுதுறை, திருப்பனந்தாள், திருப்புள்ளிருக்குவேளூர் முதலாயினவாகலாம் என்பார் சிவக்கவிமணியார்.

தென்னாட் டமண்மா
சறுத்துத் திருநீறே
அந்நாடு போற்றுவித்தார்
வந்தணையும் வார்த்தைகேட்
டெந்நாள் பணிவதென
ஏற்றெழுந்த மாமறையோர்
முன்னாக வேதம்
முழங்க எதிர்கொண்டார். **#2848**

பாண்டிய நாட்டில் சமண் சார்பாய குற்றங்களை அழித்துத் திருநீற்றினை அந்நாடு முழுதும் அணியும்படி செய்தருளிய ஞானசம்பந்தர் வருகின்ற

திருமொழியைக் கேட்டு, எந்நாளில் அவ ரைப் பணியப் பெறுவோம்? என்று ஆர்வம் கொண்டிருந்த மறைய வர்கள், மறைகள் முழங்க அவர்முன் சென்று எதிர் கொண்டனர்.

விளக்கவுரை

****

போத நீடுமா மறையவர்
எதிர்கொளப் புகலிகா வலருந்தம்
சீத முத்தணிச் சிவிகைநின்
றிழிந்தெதிர் செல்பவர் திருத்தோணி
நாதர் கோயில்முன் தோன்றிட
நகைமலர்க் கரங்குவித் திறைஞ்சிப்போய்
ஓத நீரின்மேல் ஓங்குகோ
யிலின்மணிக் கோபுரஞ் சென்றுற்றார். **#2849**

ஞானம் மிக்க மாமறையவர்கள் தம்மை எதிர் கொண்டு வரவேற்கச் சீகாழித் தலைவரான பிள்ளையாரும், குளிர்ந்த முத்துகளால் இயன்ற சிவிகையினின்றும் இறங்கி, அவர்களின் எதிரே செல்பவர், அதுபொழுது திருத்தோணியில் வீற்றிருக்கும் திருக்கோ யில் முன்னே தோன்ற, புதியதாய் மலர்ந்த தாமரை மலரனைய கைகளைக் கூப்பி, இறைஞ்சிச் சென்று, ஊழி வெள்ளத்தில் மேலே மிதந்த அக்கோயிலின் அழகிய கோபுர வாயிலைச் சென்றடைந்தார்.

விளக்கவுரை

****

அங்கம் மாநிலத் தெட்டுற
வணங்கிப்புக் கஞ்சலி முடியேறப்
பொங்கு காதலிற் புடைவலங்
கொண்டுமுன் பணிந்துபோற் றெடுத்தோதித்
துங்க நீள்பெருந் தோணியாம்
கோயிலை அருளினால் தொழுதேறி
மங்கை யோடுடன் வீற்றிருந்
தருளினார் மலர்க்கழல் பணிவுற்றார். **#2850**

தரையில் எட்டு உறுப்புக்களும் பொருந்த வணங்கிக் கோயிலுக்குள் புகுந்து, கைகள் குவித்தவாறு திருமுடியின் மீது பொருந்த, மேன் மேலும் மீதூர்ந்து எழும் அன்புடன் திருக்கோயி லைச் சூழ்ந்து வலமாக வந்து, திருமுன்னர்ப் பணிந்து, பெரிய நீண்ட பெருந்தோணியான கோயிலை அருளால் தொழுது, மலையின் மீது ஏறி, அம்மையாருடன் எழுந்தருளிய இறைவரின் தாமரை மலர் அனைய திருவடிகளை வணங்கியவராய்,

விளக்கவுரை

****

முற்றும் மெய்யெலாம் புளகங்கள்
முகிழ்த்தெழ முகந்துகண் களிகூரப்
பற்றும் உள்ளம்உள் ளலைத்தெழும்
ஆனந்தம் பொழிதரப் பணிந்தேத்தி
உற்றுமை சேர்வ தெனுந்திரு
வியமகம் உவகையால் எடுத்துஏத்தி
வெற்றி யாகமீ னவன்அவை
எதிர்நதி மிசைவரு கரனென்பார். **#2851**

திருமேனி முழுவதும் மயிர்க்கூச்செழவும், முன் னுறக் காணும் கண்கள் களிப்புக் கொள்ளவும், அம்மெய்ப்பாடுகளைக் கொண்ட திருவுள்ளத்தில் ஆனந்தம் பொங்கி வழியவும், வணங்கி `உற்றுமை சேர்வது' எனத் தொடங்கும் `திருஇயமகத் திருப்பதிகத்தை' மகிழ்வுடன் எடுத்துப் போற்றி, வெற்றிஆகுமாறு பாண்டியனின் அவையிலும், நீர் எதிர்த்துச் செல்ல வைகையாற்றிலும் வரும் திருவருள் செயல் கொண்டவர் எனப் போற்றுபவராய்,

விளக்கவுரை

`உற்றுமை சேர்வது' *(தி.3 ப.113)* எனத் தொடங்கும் திருப்பதிகம் பழம்பஞ்சுரப் பண்ணிலமைந்ததாகும். `பருமதில் மதுரையின்மன் அவையெதிரே பதிகம தெழுதிலை அவையெதிரே வருநதியிடைமிசை வருகரனே வகையொடும் அலர்கெட வருகரனே' என வரும் இத்திருப்பதிகத் திருக்கடைக் காப்பினையுளங் கொண்ட வகையில் ஆசிரியர் சேக்கிழார் இவ்வாறு அருளுகின்றார்.

சீரின் மல்கிய திருப்பதி
கத்தினில் திருக்கடைக் காப்பேற்றி
வாரின் மல்கிய வனமுலை
யாளுடன் மன்னினார் தமைப்போற்றி
ஆரும் இன்னருள் பெற்றுமீண்
டணைபவர் அங்கையால் தொழுதேத்தி
ஏரின் மல்கிய கோயில்முன்
பணிந்துபோந் திறைஞ்சினர் மணிவாயில். **#2852**

சீர்மை பொருந்திய திருப்பதிகத்தில் திருக்கடைக் காப்பும் சாத்திக் கச்சணிந்த அழகிய மார்பகங்களையுடைய திருநிலை நாயகியம்மையாருடன் நிலைபெற்ற தோணியப்பரை வணங்கி, நிறைந்த அவரது இனிய அருளைப் பெற்று, மீண்டு அணைபவராகி,

அங்கைகள் கூப்பித் தொழுது போற்றி அழகால் நிறைந்த திருக்கோயி
லின் முன் வணங்கிச் சென்று திருவாயிலை அடைந்து தொழுதார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

தாதை யாரும்அங் குடன்பணிந்து
அணைந்திடச் சண்பையார் தனியேறு
மூதெ யில்திரு வாயிலைத்
தொழுதுபோய் முகைமலர்க் குழலார்கள்
ஆதரித்துவாழ்த் துரையிரு
மருங்கெழ அணிமறு கிடைச்சென்று
காத லித்தவர்க் கருள்செய்து
தந்திரு மாளிகைக் கடைசார்ந்தார். **#2853**

அப்பொழுது அவருடைய தந்தையார் சிவபாத இருதயரும் பணிந்து
உடன் அணைந்திடச் சீகாழிப் பதியினரின் சிங்க ஏற்றைப் போன்ற
பிள்ளையார், பழமையான மதிலுடன் கூடிய வாயிலை வணங்கிச்
சென்று, மலர்களை அணிந்த கூந்தலையுடைய மங்கையர் அன்புடனே
வாழ்த்தும் உரைகள் இரு மருங்கிலும் திரண் டெழ, அழகிய வீதியில்
சென்று, அன்புடனே வந்தவர்க்கு அருள் செய்து, திருமாளிகையின் முன்
வாயிலைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

****

நறவம் ஆர்பொழிற் புகலியில்
நண்ணிய திருஞான சம்பந்தர்
விறலி யாருடன் நீலகண்
டப்பெரும் பாணர்க்கு மிகநல்கி
உறையு ளாம்அவர் மாளிகை
செலவிடுத் துள்ளணை தரும்போதில்
அறலி னேர்குழ லார்மணி
விளக்கெடுத் தெதிர்கொள அணைவுற்றார். **#2854**

தேன்பொருந்திய மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த சீகாழியை
அடைந்தருளிய திருஞானசம்பந்தர், பாடினியார் உடன் வரும்
திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கு மிகவும் அருள் சுரந்து, அவர்தம்
இருக்கையான திருமாளிகைக்குச் செல்லுமாறு விடை அளித்து, தம்
திருமாளிகைக்கு எழுந்தருளும் பொழுது, கரிய மணல் போன்ற
கூந்தலையுடைய பெண்கள் அழகான விளக்குகளை ஏந்தி வரவேற்க,
அவர் உள்ளே சென்றருளினார்.

விளக்கவுரை

****

அங்க ணைந்தரு மறைக்குலத்
தாயர்வந் தடிவணங் கிடத்தாமும்
துங்க நீள்பெருந் தோணியில்
தாயர்தாள் மனங்கொளத் தொழுவாராய்த்
தங்கு காதலின் அங்கமர்ந்
தருளுநாள் தம்பிரான் கழல்போற்றிப்
பொங்கும் இன்னிசைத் திருப்பதி
கம்பல பாடினார் புகழ்ந்தேத்தி. **#2855**

அங்குச் சேர்ந்து, அரிய மறையவர் மரபில் வந்த தாயாரான பகவதியார் வந்து அடிவணங்க, தாமும் தூய்மையான நீண்ட பெரிய திருத்தோணியில் எழுந்தருளிய தாயாரான பெரிய நாயகியம்மையாரின் திருவடிகளை உள்ளத்தில் கொண்டு, எதிர் தொழுவார், அங்கே தங்கியிருக்கும் விருப்பால் எழுந்தருளியிருக் கின்ற நாள்களில், தம் இறைவரின் திருவடிகளைப் போற்றி, பெருகும் இனிய இசையுடைய பல திருப்பதிகங்களையும் பாடினார்.

விளக்கவுரை

சீகாழியில் அருளிய பதிகங்களாக முன் குறித்தனவற்றுள் சில இங்குப் பாடியனவாய் இருக்கலாம். அன்றி மேலும் சில பதிகங்களையும் அருளியிருக்கலாம். அவை இவை எனத் தெளிவாக அறிய முடியவில்லை.

நீல மாவிடந் திருமிடற்
றடக்கிய நிமலரை நேரெய்தும்
கால மானவை அனைத்தினும்
பணிந்துடன் கலந்தஅன் பர்களோடும்
சால நாள்கள்அங் குறைபவர்
தையலாள் தழுவிடக் குழைகம்பர்
கோல மார்தரக் கும்பிடும்
ஆசைகொண் டெழுங்குறிப் பினர்ஆனார். **#2856**

நீலநிறமான பெரிய நஞ்சைத் திருக்கழுத்தில் அடக்கிய குற்றமற்றவரான தோணியப்பரை நேரே சென்று வணங்கு தற்குரிய காலங்களில் எல்லாம் சென்று வணங்கி, உடன் கலந்த அடி யார்களோடும் கூடிப் பலநாள்கள், அச் சீகாழிப் பதியில் தங்கியருளிய ஞானசம்பந்தர், காமாட்சி அம்மையார் தழுவிடத் திருமேனி குழைந்து காட்டிய ஏகம்பநாதரின் திருக்கோலத்தைச் சென்று மணம் நிறைவு பெற வழிபடவேண்டும்

என்னும் ஆசை மேற்கொண்டு எழும் உள்ளக் குறிப்பு உடையவரானார்.

விளக்கவுரை

****

தண்ட கத்திரு நாட்டினைச்
சார்ந்துவந்து எம்பிரான் மகிழ்கோயில்
கண்டு போற்றிநாம் பணிவதென்
றன்பருக் கருள்செய்வார் காலம்பெற்
றண்ட ருக்கறி வரும்பெருந்
தோணியில் இருந்தவர் அருள்பெற்றுத்
தொண்டர் சூழ்ந்துடன் புறப்படத்
தொடர்ந்தெழுந் தாதையார்க் குரைசெய்வார். **#2857**

தொண்டை நாட்டைச் சேர்ந்து சென்று நம் இறைவர் வீற்றிருக்கும் திருக்கோயில்களைக் கண்டு போற்றி வணங்கு வோம்! என அடியார்களுக்கு அருள் செய்பவராய், உரிய காலத்தில் நேர்பட்டுத் தேவர்களுக்கும் அரிய பெரிய திருத்தோணியில் வீற்றி ருக்கும் இறைவர்பால் விடைபெற்றுத் திருத்தொண்டர் தம்முடன் சூழ்ந்து வரப் புறப்படத் தாமும் உடன்வரும் பொருட்டாகப் புறப்பட்ட தந்தையாருக்கு உரை செய்பவராய்,

விளக்கவுரை

தொண்டைநாடு, தண்டகன் என்ற அரசனால் ஆளப் பெற்ற காலத்துத் தண்டக நாடு என்றும், பின் துண்டீரன் எனும் அரசனால் ஆளப் பெற்ற காலத்துத் துண்டீர நாடு என்றும் பெயர் பெற்று வந்து. பின் தொண்டைமானால் ஆளப்பெற்ற காலத்திலிருந்து தொண்டை நாடு எனப் பெயர் பெறுவதாயிற்று.

அப்பர் நீர்இனி இங்கொழிந்
தருமறை அங்கிவேட் டன்போடுந்
துப்பு நேர்சடை யார்தமைப்
பரவியே தொழுதிரு மெனச்சொல்லி
மெய்ப்பெருந் தொண்டர் மீள்பவர்
தமக்கெலாம் விடைகொடுத் தருளிப்போய்
ஒப்பி லாதவர் தமைவழி
யிடைப்பணிந் துருகுமன் பொடுசெல்வார். **#2858**

அப்பரே! நீங்கள் இனி எம்முடன் வருவதைக் கைவிட்டு, இங்கு அருமறை விதிப்படி தீவளர்த்து வேள்விசெய்து கொண்டு, அன்புடன் பவளம் போன்ற சடையையுடைய இறைவரைப் போற்றித் தங்கியிருப்பீராக! எனக் கூறி, பெருமையுடைய மெய்த் தொண்டர்களுள்

தம்முடன் வாராது தங்குகிறவர்க்கெல்லாம் விடை தந்து, தமக்கு ஒப்பில்லாத இறைவரை வழியில் கண்டு வணங்கிக் கொண்டு, உருகும் அன்புடனே மேற் செல்பவராய்,

விளக்கவுரை

சீகாழியிலிருந்து தில்லைவரையுள்ள இடைப்பட்ட பதிகளை வணங்கினர் என்பார் `வழியிடைப் பணிந்து' என்றார்

செல்வம் மல்கிய தில்லைமூ
தூரினில் திருநடம் பணிந்தேத்திப்
பல்பெ ருந்தொண்ட ரெதிர்கொளப்
பரமர்தந் திருத்தினை நகர்பாடி
அல்கு தொண்டர்கள் தம்முடன்
திருமாணி குழியினை அணைந்தேத்தி
மல்கு வார்சடை யார்திருப்
பாதிரிப் புலியூரை வந்துற்றார். **#2859**

செல்வம் நிறைந்த `தில்லை' என்ற பழம் பெரும் பதியில் இறைவரின் திருக்கூத்தை வணங்கிப் போற்றிப் பெருந் தொண்டர்கள் பலரும் வரவேற்கச் சென்று, இறைவரின் `திருத்தினை' நகரை அடைந்து பாடிச்சென்று, அத்தொண்டர்களுடன் `திருமாணி குழியினை' அடைந்து போற்றி, செறிந்து பொருந்திய நீண்ட சடையை உடைய இறைவரின் `திருப்பாதிரிப்புலியூரை' வந்து அடைந்தார்.

விளக்கவுரை

இத்திருப்பதிகளில் திருமாணிகுழிக்கமைந்த பதிகம் மட்டுமே கிடைத்துளது. அப்பதிகம் `பொன்னியல்' *(தி.3 ப.77)*: பண்:சாதாரி. இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

கன்னி மாவனங் காப்பென
இருந்தவர் கழலிணை பணிந்தங்கு
முன்ன மாமுடக் கால்முயற்
கருள்செய்த வண்ணமும் மொழிந்தேத்தி
மன்னு வார்பொழில் திருவடு
கூரினை வந்தெய்தி வணங்கிப்போய்ப்
பின்னு வார்சடை யார்திரு
வக்கரை பிள்ளையார் அணைவுற்றார். **#2860**

ஞானசம்பந்தர் பெரிய `கன்னிவனத்தைத்' தம் காவலிடமாகக் கொண்டு எழுந்தருளிய சிவபெருமானின் இரண்டு திருவடிகளையும் பணிந்து, அப்பதியில் முன் நாளில் முடங்கிய காலுடன் முயலாய் ஒறுக்கப்பட்ட மங்கண முனிவர் சாபநீக்கம் பெற அருள் செய்த தன்மையையும்

பதிகத்தில் மொழிந்து போற்றிச் சென்று, நீண்ட சோலைகள் சூழ்ந்த திருவடுகூரினை அடைந்து, நீண்ட சடை யுடைய இறைவரின் `திருவக்கரை' என்ற பதியை அடைந்தார்.

விளக்கவுரை

உமையம்மையார் தவம் செய்து அருள்பெற்ற இடம் ஆதலின், இவ்வூர் கன்னியாவனம் என்றும் அழைக்கப்பெற்றது. திருப்பாதிரிப்புலியூரில் அருளிய பதிகம் `முன்னம் நின்ற' *(தி.2 ப.121)* எனத் தொடங்கும் செவ்வழிப் பண்ணிலமைந்த பதிகமாகும். இப் பதிகத்தின் முதற் பாடலில், `முன்னம் நின்ற முடக்கால் முயற்கருள் செய்து, நீள் புன்னை நின்று கமழ்பாதிரிப் புலியூருளான்' எனவருவது கொண்டு, ஆசிரியர் இவ்வரலாற்றை எடுத்து மொழிகின்றார். திருவடுகூரில் அருளிய பதிகம் `சுடுகூர்எரிமாலை' *(தி.1 ப.86)* எனத் தொடங்கும் குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

வக்க ரைப்பெரு மான்தனை
வணங்கிஅங் கமருநாள் அருளாலே
செக்கர் வேணியார் இரும்பைமா
காளமும் சென்றுதாழ்ந் துடன்மீண்டு
மிக்க சீர்வளர் அதிகைவீ
ரட்டமும் மேவுவார் தம்முன்பு
தொக்க மெய்த்திருத் தொண்டர்வந்
தெதிர்கொளத் தொழுதெழுந் தணைவுற்றார். **#2861**

அத் திருவக்கரையில் ஞானசம்பந்தர் இறைவ னைத் தொழுது வணங்கித் தங்கியிருந்த நாள்களில், திருவருட் குறிப் பினால் சிவந்த வானம் போன்ற சடையையுடைய இறைவரின் `திரு விரும்பைமாகாளத்தை'யும் சென்று வணங்கி, உடனே திரும்பி, மிக்க சிறப்புகள் வளர்கின்ற `திருவதிகைவீரட்டானத்தைச்' சென்று சேர்பவரான அவர், தமக்கு, முன்கூடிய உண்மைத் தொண்டர்கள் வந்து எதிர் கொள்ளத் தொழுது அங்கு அணைந்தார்.

விளக்கவுரை

இரும்பைமாகாளமும் என்ற உம்மையால் திருஅரசிலி யையும் கொள்ளத்தக்கதாம் என்பர் சிவக்கவிமணியார். இப்பதிகளில் அருளிய பதிகங்கள்*: 1.* திருவக்கரை*:* `கறையணி' *(தி.3 ப.60)* - பஞ்சமம்*. 2.* திருவிரும்பைமாகாளம்*:* `மண்டுகங்கை' *(தி.2 ப.117)* -செவ்வழி*. 3.* திருஅரசிலி*:* `வண்டறை' *(தி. 2 ப.95)* - பியந்தைக் காந்தாரம்.

ஆதி தேவர்அங் கமர்ந்தவீ
ரட்டானஞ் சென்றணை பவர்முன்னே

பூதம் பாடநின் றாடுவார்
திருநடம் புலப்படும் படிகாட்ட
வேத பாரகர் பணிந்துமெய்
உணர்வுடன் உருகிய விருப்போடும்
கோதி லாஇசை குலவுகுண்
டைக்குறட் பூதம்என் றெடுத்துஏத்தி. **#2862**

முதன்மையுடைய தேவராய சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் திருவீரட்டானத்தைச் சென்று அடைபவ ரான சம்பந்தர் முன்பு, பூத கணங்கள் பாட நின்றாடும் இறைவர், தம் திருக்கூத்தைக் கண்ணுக்குப் புலனாகும்படி காட்டவே, மறைகளில் வல்லுநரான அவர் வணங்கி, மெய்யுணர்வுடன் உள்ளம் உருகி விருப்பத்துடன் குற்றம் அற்ற இசையுடன் கூடிய `குண்டைக் குறட் பூதம்' என்று தொடங்கிப் போற்றி,

விளக்கவுரை

வேதபாரகர்: பாரம் - கரை, கர் - கண்டவர். மறைகளின் கரையைக் கண்டவர். `குண்டைக் குறட் பூதம்' எனத் தொடங்கும் பதிகம் குறிஞ்சிப் பண்ணிலமைந்ததாகும் *(தி.1 ப 46)*. இப்பதிகப் பாடல் தொறும், வீரட்டானத்தில் பெருமான் கூத்தியற்றும் சிறப்பைக் குறித்துப் போற்றும் பிள்ளையார், `ஆடும்வீரட்டானத்தே' என நிறைவுபடவும் அருளுகின்றார். ஆதலின் ஆசிரியர் சேக்கிழார் `பூதப் படை நின்றாடுவார் திருநடம் புலப்படும்படி காட்ட' என அதனை வரலாற்று இயைபுபடுத்திக் காட்டுவாராயினர்.

பரவி ஏத்திய திருப்பதி
கத்திசை பாடினார் பணிந்தங்கு
விரவும் அன்பொடு மகிழ்ந்தினி
துறைபவர் விமலரை வணங்கிப்போய்
அரவ நீர்ச்சடை அங்கணர்
தாம்மகிழ்ந் துறைதிரு வாமாத்தூர்
சிரபு ரத்துவந் தருளிய
திருமறைச் சிறுவர்சென் றணைவுற்றார். **#2863**

போற்றி வழிபட்ட அப்பதிகத்தின் இசையினை நிறைவுறப் பாடிப் பணிந்து, அத் திருப்பதியில், அன்புடன் மகிழ்ந்து இனிதாகத் தங்கியவரான சீகாழியில் தோன்றிய அந்தணர் குலத்துப் பிள்ளையார், பாம்பும் கங்கையும் தங்கிய சடையையுடைய இறைவர் மிக்க மகிழ்ச்சியுடன் எழுந்தருளிய திருஆமாத்தூரினைச் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

சென்ற ணைந்துசிந் தையின்மகிழ்
விருப்பொடு திகழ்திரு வாமாத்தூர்ப்
பொன்ற யங்குபூங் கொன்றையும்
வன்னியும் புனைந்தவர் அடிபோற்றிக்
குன்ற வார்சிலை யெனுந்திருப்
பதிகமெய் குலவிய இசைபாடி
நன்று மின்புறப் பணிந்துசெல்
வார்திருக் கோவலூர் நகர்சேர்ந்தார். **#2864**

சென்றடைந்து, உள்ளத்தில் மகிழ்ச்சி மீதூரக் கொண்ட விருப்பத்துடனே, விளங்கும் திருஆமாத்தூரில் பொன் போல் விளங்கும் கொன்றையையும் வன்னியையும் அணிந்து வீற்றிருக்கும் இறைவரின் திருவடிகளைப் போற்றிக் `குன்றவார் சிலை' எனத் தொடங்கும் திருப்பதிகத்தை, மெய்ம்மை விளங்கும் இசை யுடன் பாடி, இன்பம் மிகப் பொருந்த வணங்கிச் செல்பவரான ஞான சம்பந்தர், திருக்கோவலூரை அடைந்தார்.

விளக்கவுரை

இத்திருப்பதிக்கு இத் தொடக்கமுடையதொரு பதிகம் அன்றிப் பிறிதொரு பதிகமும் உளது. முன்னர்ப் பாடியது: `குன்றவார் சிலை' *(தி.2 ப.50)* - சீகாமரம். பின்னர்ப் பாடியது: `துன்னம்பெய்' - *(தி.2 ப.44)* - *சீகாமரம்.*

கோவல் நீடிய வீரட்டம்
அமர்ந்தவர் குரைகழல் பணிந்தேத்தி
ஆவின் ஐந்துகந் தாடுவார்
அறையணி நல்லூரை அணைந்தேத்திப்
மேவு மன்புறு மேன்மையாம்
தன்மையை விளங்கிட அருள்செய்தார். **#2865**

திருக்கோவலூரில் திருவீரட்டக் கோயிலில் விரும்பி எழுந்தருளியிருக்கும் இறைவரின், ஒலிக்கும் கழல் அணிந்த திருவடிகளை வணங்கிப் போற்றி, ஆனினிடமாகத் தோன்றும் ஐந்து பொருள்களையும் விரும்பியாடுபவரான இறைவரின் திருஅறை யணி நல்லூரைச் சென்றடைந்து போற்றிப் பாவாக மலர்ந்த தமிழ்ப் பதிகத் தினால் போற்றுபவரான பிள்ளையார், இறைவரின் பொருள் சேர் புகழ்களையே போற்றி வாழும் தொண்டர்களுக்கு, அன்பினால் உள வாகும் மேம்பாடான தன்மைகளை உலகம் அறிந்து உய்யுமாறு அருளிச் செய்தார்.

விளக்கவுரை

இத்திருப்பதிகளில் அருளிய பதிகங்கள்: *1. திருக்கோவலூர்: `படைகொள்' (தி.2 ப.100)* - நட்டராகம். *2. திருஅறையணிநல்லூர்: `பீடினால்' (தி.2 ப.77)* - காந்தாரம். திருஅறையணிநல்லூரில் வீற்றிருந்தருளும் பெருமானை வணங்குவோர்க்கு உளவாகும் நலன்களை இப்பதிகப் பாடல் தொறும் பிள்ளையார் அருளுவதை உளங்கொண்டு ஆசிரியர் இங்ஙனம் அருளுவாராயினர்.

சீரின் மன்னிய பதிகம்முன்
பாடிஅத் திருவறை யணிநல்லூர்
வாரின் மல்கிய கொங்கையாள்
பங்கர்தம் மலைமிசை வலங்கொள்வார்
பாரின் மல்கிய தொண்டர்கள்
இமையவர் நாடொறும் பணிந்தேத்துங்
காரின் மல்கிய சோலைஅண்
ணாமலை அன்பர்காட் டிடக்கண்டார். **#2866**

இத்திருப்பதிகளில் அருளிய பதிகங்கள்: 1. திருக்கோவலூர்: `படைகொள்' (தி.2 ப.100) - நட்டராகம். 2. திருஅறையணிநல்லூர்: `பீடினால்' (தி.2 ப.77) - காந்தாரம். திருஅறையணிநல்லூரில் வீற்றிருந்தருளும் பெருமானை வணங்குவோர்க்கு உளவாகும் நலன்களை இப்பதிகப் பாடல் தொறும் பிள்ளையார் அருளுவதை உளங்கொண்டு ஆசிரியர் இங்ஙனம் அருளுவாராயினர்.

விளக்கவுரை

****

அண்ணா மலைஅங் கமரர்பிரான்
வடிவு போன்று தோன்றுதலும்
கண்ணால் பருகிக் கைதொழுது
கலந்து போற்றுங் காதலினால்
உண்ணா முலையாள் எனும்பதிகம்
பாடித் தொண்ட ருடன்போந்து
தெண்ணீர் முடியார் திருவண்ணா
மலையைச் சென்று சேர்வுற்றார். **#2867**

அவ்விடத்தினின்றும் திருவண்ணாமலை தோன்றும் காட்சி, தேவர் தலைவரான சிவபெருமானின் வடிவம் போல் தோன்றவும், கண்ணால் கண்டு, பருகுவார் அன்ன ஆர்வத் தராகி, கைகளால் தொழுது, போற்றுதற்குரிய பெருவிருப்பத்தால் `உண்ணா முலையாள்' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடித் தொண்டருடன் சென்று, தெளிந்த கங்கையைத் தலையிற்கொண்ட இறைவரின் திருவண்ணாமலையைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

திருஅறையணிநல்லூரின் மலையிலிருந்தவாறே திருவண்ணாமலையை அன்பர்கள் காட்டக் கண்ட பிள்ளையார், அவ் வண்ணாமலையை நோக்கியருளிய பதிகம் இத்தொடக்கம் உடைய பதிகம் ஆகும். இது நட்டபாடைப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.1 ப.10)*. அலரவனும் மாலவனும் காணாமே அழலுருவாய் நின்ற மலை ஆதலின், பெருமானின் வடிவு போல்வதாயிற்று.

அங்கண் அணைவார் பணிந்தெழுந்து
போற்றி செய்தம் மலைமீது
தங்கு விருப்பில் வீற்றிருந்தார்
தாள்தா மரைகள் தம்முடிமேல்
பொங்கும் ஆர்வத் தொடும்புனைந்து
புளகம் மலர்ந்த திருமேனி
எங்கு மாகிக் கண்பொழியும்
இன்ப அருவி பெருக்கினார். **#2868**

அண்ணாமலையை அடைபவரான ஞானசம் பந்தர், நிலத்தில் விழுந்து வணங்கி, அம்மலையின் மீது தங்கும் விருப் புடன் வீற்றிருக்கின்ற இறைவரின் திருவடிகளாகிய தாமரைகளைத் தம்முடியின் மீது மேல் எழுகின்ற ஆசையுடன் சூடி, திருமேனி முழு தும் மயிர்க் கூச்செறியக் கண்களில் பொழியும் ஆனந்தக் கண்ணீரை அருவி எனப் பெருக்கினார்.

விளக்கவுரை

****

ஆதி மூர்த்தி கழல்வணங்கி
அங்கண் இனிதின் அமருநாள்
பூத நாத ரவர் தம்மைப்
பூவார் மலராற் போற்றிசைத்துக்
காத லால்அத் திருமலையிற்
சிலநாள் வைகிக் கமழ்கொன்றை
வேத கீதர் திருப்பதிகள்
பிறவும் பணியும் விருப்புறுவார். **#2869**

ஆதி மூர்த்தியான அண்ணாமலையாரின் திரு வடிகளை வணங்கி, அங்கு இனிதாய் விரும்பித் தங்கியிருக்கும் நாள் களில், பூதங்களுக்குத் தலைவரான அவரைப் `பூவார் மலர்' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடிப் போற்றி, விருப்புடன் அம்மலையில் சில நாள்கள் தங்கி, மறைகளை இசையுடன் பாடுபவரான ஞான சம்பந்தர், இறைவரின் திருப்பதிகள் பிறவற்றையும் சென்று வணங்கும் விருப்பத்தை

மேற்கொள்பவராய்,

விளக்கவுரை

`பூவார் மலர்' எனத் தொடங்கும் திருப்பதிகம் தக்கேசிப் பண்ணிலமைந்ததாகும் *(தி.1 ப.69).*

மங்கை பாகர் திருவருளால்
வணங்கிப் போந்து வடதிசையில்
செங்கண் விடையார் பதிபலவும்
பணிந்து புகலிச் செம்மலார்
துங்க வரைகள் கான்பலவும்
கடந்து தொண்டைத் திருநாட்டில்
திங்கள் முடியார் இனிதமரும்
திருவோத் தூரைச் சேர்வுற்றார். **#2870**

ஞாசம்பந்தர் உமையம்மையை ஒரு கூற்றில் கொண்ட இறைவரின் திருவருளால் வணங்கி விடைபெற்றுச் சென்று, சிவந்த கண்களையுடைய விடையை ஊர்தியாகக் கொண்ட இறைவ ரின், வடக்கில் உள்ள பதிகள் பலவற்றையும் வணங்கிச் சென்று, பெரிய மலைகளையும் காடுகள் பலவற்றையும் கடந்து, திருத் தொண்டை நாட்டில் பிறைச் சந்திரனைத் தலையில் சூடிய இறைவர் இனிதாய் விரும்பி வீற்றிருக்கின்ற `திருவோத்தூரைச்' சேர்ந்தார்.

விளக்கவுரை

வடதிசையில் பதிபலவும் பணிந்து என்றது, திருத் தெள்ளாறு, திருவெண்குன்றம், புரிசை நாட்டுப் புரிசை முதலாயின வாகலாம் என்பர் சிவக்கவிமணியார். `துங்கவரைகள் கான்பலவும் கடந்து' என்றது பல்குன்றம், இளங்காடு, திண்டிவனம், புலிவனம், புறவார் பனங்காட்டூர் முதலிய ஊர்ப் பெயர்களை உளங்கொண்டு கூறியிருக்கலாம் என்பர் அவர். இவற்றில் புறவார் பனங்காட்டூரில் அருளிய பதிகம், `விண்ணமர்ந்தன' *(தி.2 ப.53)* எனத் தொடங்கும் சீகாமரப் பண்ணில் அமைந்ததாகும்.

தேவர் முனிவர்க்கு ஓத்தளித்த
திருவோத் தூரில் திருத்தொண்டர்
தாவில் சண்பைத் தமிழ்விரகர்
தாம்அங் கணையக் களிசிறந்து
மேவுங் கதலி தோரணங்கள்
விளக்கு நிரைத்து நிறைகுடமும்
பூவும் பொரியுஞ் சுண்ணமும்முன்
கொண்டு போற்றி எதிர்கொண்டார். **#2871**

தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மறைகளை ஓதுவித்து அருள் செய்த திருவோத்தூரில் வாழும் திருத்தொண்டர் கள், குற்றம் அற்ற சீகாழிப் பதியில் தோன்றிய தமிழ்வல்லுநரான ஞானசம்பந்தர் அங்கு வரவே, மிகவும் மகிழ்ந்து, வாழைகளையும் தோரணங்களையும் விளக்குகளையும் நிரல்பட அமைத்து, நிறை குடங்களையும் பூவும் பொரியும் சுண்ணமும் என்ற இவற்றையும் முன்னே ஏந்திப் போற்றிசெய்து எதிர் கொண்டனர்.

விளக்கவுரை

ஓத்து - மறைகள். `உயர்ந்தோர்க்கு உரிய ஓத்தினான' *(தொல். அகத். 31)* என்னும் தொல்காப்பியமும். அவற்றை இறைவன் உபதேசித்த அருளிய இடமாதலின் ஓத்தூர் எனப்பட்டது.

சண்பை வேந்தர் தண்தரளச்
சிவிகை நின்றும் இழிந்தருளி
நண்பின் மிக்க சீரடியார்
சூழ நம்பர் கோபுரஞ்சூழ்
விண்பின் னாகமுன் னோங்கும்
வியன்பொற் புரிசை வலங்கொண்டு
பண்பு நீடிப் பணிந்தெழுந்து
பரமர் கோயில் உள்ளடைந்தார். **#2872**

சீகாழியில் தோன்றிய பிள்ளையார், முத்துச் சிவிகையினின்றும் இழிந்து, அன்பின் சிறப்புடைய அடியவர்கள் தம்மைச் சூழ்ந்துவர, இறைவரின் கோபுரத்தைச் சூழ்ந்து, வானமும் கீழ்ப்படும் வண்ணம் முன்னால் உயர்ந்து விளங்கும் பெரிய பொன் மதிலை வலமாக வந்து வணங்கிப் பண்பில் நீடிப் பணிந்து, எழுந்து, இறைவரின் திருக்கோயிலினுள் சென்றார்.

விளக்கவுரை

****

வார ணத்தின் உரிபோர்த்த
மைந்தர் உமையாள் மணவாளர்
ஆர ணத்தின் உட்பொருளாய்
நின்றார் தம்முன் அணைந்திறைஞ்சி
நார ணற்கும் பிரமற்கும்
நண்ணற் கரிய கழல்போற்றும்
கார ணத்தின் வரும்இன்பக்
கண்ணீர் பொழியக் கைதொழுதார். **#2873**

சீகாழியில் தோன்றிய பிள்ளையார், முத்துச் சிவிகையினின்றும் இழிந்து,

அன்பின் சிறப்புடைய அடியவர்கள் தம்மைச் சூழ்ந்துவர, இறைவரின் கோபுரத்தைச் சூழ்ந்து, வானமும் கீழ்ப்படும் வண்ணம் முன்னால் உயர்ந்து விளங்கும் பெரிய பொன் மதிலை வலமாக வந்து வணங்கிப் பண்பில் நீடிப் பணிந்து, எழுந்து, இறைவரின் திருக்கோயிலினுள் சென்றார்.

விளக்கவுரை

****

தொழுது விழுந்து பணிந்தெழுந்து
சொல்மா லைகளால் துதிசெய்து
முழுது மானார் அருள்பெற்றுப்
போந்து வைகி முதல்வர்தமைப்
பொழுது தோறும் புக்கிறைஞ்சிப்
போற்றி செய்தங் கமர்வார்முன்
அழுது வணங்கி ஒரு தொண்டர்
அமணர் திறத்தொன் றறிவிப்பார். **#2874**

தொழுது நிலத்தில் விழுந்து பணிந்து எழுந்து, சொல் மாலைகளால் போற்றி, எல்லாமாய் நின்ற இறைவரின் திரு வருள் பெற்று, வெளியே வந்து தங்கியிருந்தவராய், இறைவரைக் காலங்கள் தோறும் சென்று வணங்கிப் போற்றி, அங்கு விரும்பி இருப்பவரான அப்பிள்ளையாரின் திருமுன்பு, ஒரு தொண்டர் அழுது நின்று, சமணர்களின் தன்மை பற்றிய ஒரு செய்தியை அறிவிக்கத் தொடங்கி,

விளக்கவுரை

****

அங்கை அனலேற் றவர்க்கடியேன்
ஆக்கும் பனைக ளானவெலாம்
மங்கு லுறநீண் டாண்பனையாய்க்
காயா வாகக் கண்டமணர்
இங்கு நீரிட் டாக்குவன
காய்த்தற் கடைவுண் டோவென்று
பொங்கு நகைசெய் திழித்துரைத்தார்
அருள வேண்டு மெனப்புகல. **#2875**

`உள்ளங்கையில் தீயினைக் கொண்ட இறைவற்கு அடியவனாகிய யான், வளர்க்கும் பனை மரங்கள் எல்லாம் மேக மண் டலம் பொருந்த நீண்டு வளர்ந்தும், ஆண் பனைகளாய்க் காய்க்காது இருப்பதைக் கண்ட சமணர்கள், `இங்கு நீவிர் வைத்து வளர்க்கும் பனை மரங்கள் காய்ப்பதற்கு வழியுண்டோ?' என்று எள்ளி மிகவும் நகைத்து, இழிவாய்ப்

பேசுகின்றனர்; தாங்கள் அவ்விழிவைப் போக்கி அப் பனைகள் காய்க்குமாறு அருள் செய்ய வேண்டும்' என விண் ணப்பிக்க,

விளக்கவுரை

****

பரம னார்தந் திருத்தொண்டர்
பண்பு நோக்கிப் பரிவெய்தி
விரவு காத லொடும்விரைந்து
விமலர் கோயில் புக்கருளி
அரவும் மதியும் பகைதீர
அணிந்தார் தம்மை அடிவணங்கி
இரவு போற்றித் திருப்பதிகம்
இசையிற் பெருக எடுத்தருளி. **#2876**

சிவபெருமானது திருத்தொண்டரின் அடிமைத் திறத்தைத் திருவுளங்கொண்ட திருஞானசம்பந்தர், மிகவும் இரங்கி, பொருந்திய பெருவிருப்பத்துடன் விரைந்து சென்று, இறைவரின் திருக்கோயிலுக்குள் புகுந்து, பாம்பையும் பிறைச்சந்திரனையும் பகை தவிர்த்துத் தலையில் சூடிய சிவபெருமானின் திருவடிகளில் விழுந்து வணங்கித் திருவருளை இரந்து `பூத்தேர்ந்தாயன' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பண் இசை பெருகப் போற்றியருள,

விளக்கவுரை

`பூத்தேர்ந்தாயன' எனத் தொடங்கும் பதிகம் பழந்தக் கராகப் பண்ணிலமைந்ததாகும் *(தி.1. ப.54).*

விரும்பு மேன்மைத் திருக்கடைக்காப்
பதனில் விமல ரருளாலே
குரும்பை ஆண் பனைஈனும்
என்னும் வாய்மை குலவுதலால்
நெருங்கும் ஏற்றுப் பனையெல்லாம்
நிறைந்த குலைக ளாய்க்குரும்பை
யரும்பு பெண்ணை யாகியிடக்
கண்டா ரெல்லாம் அதிசயித்தார். **#2877**

விரும்பத்தக்க மேன்மை பொருந்திய திருக்கடைக்காப்பில், இறைவரின் திருவருளால் `குரும்பைகளை ஆண் பனைகள் ஈனும்' என்னும் வாய்மை பொருந்தி விளங்குதலால், நெருங்கிய அவ்வாண்பனைகள் எல்லாம், நிறைந்த குலைகளை உடையனவாய்க் குரும்பையுடைய பெண்பனைகளாக மாறிவிடவே, கண்டவர் அனைவரும் வியப்படைந்தனர்.

விளக்கவுரை

குரும்பை ஆண்பனை ஈன்குலை ஓத்தூர்
அரும்பு கொன்றை அடிகளைப்
பெரும்பு கலியுண் ஞானசம் பந்தன்சொல்
விரும்பு வார்வினை வீடே.
(தி.1 ப.54 பா.11) என்பது திருக்கடைக்காப்புப் பாடலாகும்.
`ஆண்பனைக் குரும்பைக் குலைஈன் ஓத்தூர்` என மாறுக. திருவருள் வயப்பட்ட இத்திருவாக்கு மெய்ம்மை பொருந்தி நிற்பதால் ஆண்பனை குலை ஈன்றது. ஆதனால் பெண்பனையாயிற்று. இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

சீரின் மன்னும் திருக்கடைக்காப்
பேற்றிச் சிவனா ரருள்பெற்றுப்
பாரில் நீடும் ஆண்பனைமுன்
காய்த்துப் பழுக்கும் பண்பினால்
நேரும் அன்பர் தங்கருத்து
நேரே முடித்துக் கொடுத்தருளி
ஆரும் உவகைத் திருத்தொண்டர்
போற்ற அங்கண் இனிதமர்ந்தார். **#2878**

சிறப்பால் நிலைபெற்ற திருக்கடைக்காப்புச் சாத்திப் பதிகத்தை நிறைவாக்கி, இறைவரின் திருவருளைப் பெற்று, உலகத்தில் நீடிய ஆண்பனைகள் முன்னே காய்த்துப் பழுக்கும் தன்மை வர, விரும்பும் அன்பரின் கருத்தை நேர்பட முடித்துத் தந்து நிறைவான மகிழ்ச்சியடைய, திருத்தொண்டர் போற்ற, அந்நகரத்தில் இனிதாய் எழுந்தருளியிருந்தார் ஞானசம்பந்தர்.

விளக்கவுரை

****

தென்னாட் டமண்மா சறுத்தார்தம்
செய்கை கண்டு திகைத்தமணர்
அந்நாட் டதனை விட்டகல்வார்
சிலர்தங் கையிற் குண்டிகைகள்
என்னா வனமற் றிவையென்று
தகர்ப்பார் இறைவன் ஏறுயர்த்த
பொன்னார் மேனிப் புரிசடையான்
அன்றே என்று போற்றினார். **#2879**

பாண்டிய நாட்டில் சமணமான குற்றத்தை நீக்கிய ஞானசம்பந்தரின் இச் செயலைக் கண்டு, திகைத்த சமணர்களிற் சிலர், அந்நாட்டை நீங்கிச்

செல்பவர்களாகி, சிலர் தம் கையில் ஏந்திய தம் சமயச் சின்னங்களுள் ஒன்றான நீர்க் குண்டிகைகளை இவற்றால் என்ன பயன் என்று கூறி உடைத்தெறிந்து, `முழுமுதல் கடவுளாவார் விடைக்கொடியை யுயர்த்திய பொன்போன்ற மேனியையுடைய புரிந்த சடையையுடைய சிவபெருமானே!' என்று போற்றினர்.

விளக்கவுரை

****

பிள்ளை யார்தந் திருவாக்கில்
பிறத்தலால்அத் தாலம்முன்
புள்ள பாசம் விட்டகல
ஒழியாப் பிறவி தனையொழித்துக்
கொள்ளு நீர்மைக் காலங்கள்
கழித்துச் சிவமே கூடினவால்
வள்ள லார்மற் றவரருளின்
வாய்மை கூறின் வரம்பென்னாம். **#2880**

திருஞானசம்பந்தரின் உண்மைத் திருவாக்கி னால் பெண்பனையாய அப்பனைமரங்களுள், பனையாய்ப் பிறப் பதற்குரியதான வினைநீங்க, ஓயாமல் தொடர்ந்து வருகின்ற பிறவிப் பிணி நீங்கி, உடம்பு இருப்பதற்குக் காரணமான ஏன்ற வினையை நுகரும் கால அளவு நீங்கியபின், சிவப்பேற்றை அடைந்தன. இந் நிலையைக் காண, வள்ளலாரான பிள்ளையாரின் அருளிப் பாட்டை எடுத்துக் கூறுவது என்பது ஒரு வரம்புக்கு உள்ளாகுமோ? ஆகாது.

விளக்கவுரை

இவ்வாற்றான் ஓரறிவு முதல் ஆறறிவு ஈறாக உள்ள அனைத்துயிர்களுமே வினைவயத்தால் தோன்றின என்பதும், அவ் வினைநீங்கியபின் அவை வீடுபெறற்குரியன என்பதும் விளங்கும். உமாபதிசிவம் முள்ளிச் செடிக்கு முத்தி கொடுத்த வரலாற்றையும் நினைவு கூர்க.

அங்கண் அமரர் பெருமானைப்
பணிந்து போந்தா டரவினுடன்
பொங்கு கங்கை முடிக்கணிந்தார்
மகிழும் பதிகள் பலபோற்றி
மங்கை பாகர் அமர்ந்தருளும்
வயல்மா கறலை வழுத்திப்போய்க்
கொங்கு மலர்நீர்க் குரங்கணில்முட்
டத்தைச் சென்று குறுகினார். **#2881**

அவ்விடத்துத் தேவதேவரான இறைவரை வணங்கிச் சென்று, ஆடும் பாம்புடன் பெருகும் நீரையுடைய கங் கையை முடியில் சூடிய இறைவர் மகிழும் பதிகள் பலவற்றையும் போற்றி, உமையம்மையை ஒரு கூற்றில் கொண்ட இறைவர் வீற்றி ருக்கும் வயல்கள் சூழ்ந்த திருமாகறலைப் போற்றிச் சென்று, மணம் கமழும் மலர்களையுடைய நீர் சூழ்ந்த திருக்குரங்கணில்முட்டத்தின் அருகில் செல்வாராயினர்.

விளக்கவுரை

பதிகள் பல என்றது, திருவன்பார்த்தான் பனங்காட்டூர் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். திருமாகறலில் அருளிய பதிகம் `விங்கு விளை' *(தி.3 ப.72)* எனத் தொடங்கும் சாதாரிப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

ஆதி முதல்வர் குரங்கணில்முட்
டத்தை அணைந்து பணிந்தேத்தி
நீதி வழுவாத் திருத்தொண்டர்
போற்ற நிகரில் சண்பையினில்
வேத மோடு சைவநெறி
விளங்க வந்த கவுணியனார்
மாதொர் பாகர் தாம்மன்னும்
மதில்சூழ் காஞ்சி மருங்கணைந்தார். **#2882**

ஆதிமுதல்வரான சிவபெருமானின் திருக்குரங்கணில்முட்டத்தைச் சேர்ந்து வணங்கிப் போற்றிச் சைவநெறியில் வழுவாத ஒழுக்கமுடைய திருத்தொண்டர் போற்றச் சென்று, ஒப்பில்லாத சீகாழிப் பதியில் மறைநெறியுடனே சைவநெறியும் விளங்குமாறு தோன்றியருளிய கவுணியரான ஞானசம்பந்தர், உமையம்மையை ஒரு கூற்றில் கொண்ட ஏகம்பவாணர் நிலையாக எழுந்தருளியுள்ள மதில் சூழ்ந்த காஞ்சிப் பதியின் அருகில் அடைந்தார்.

விளக்கவுரை

முட்டம் - காகம். குரங்கு, அணில், காகம் ஆகிய மூன்றும் வழிபட்ட திருப்பதியாதலின் இப்பெயர் பெற்றது. இப்பதியில் அருளிய பதிகம் `விழுநீர்` *(தி.1 ப.31)* எனத் தொடங்கும் தக்கராகப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

நீடுகாஞ்சி வாழ்நரும்
நிலாவுமெய்ம்மை அன்பரும்
மாடுசண்பை வள்ளலார்
வந்தணைந்த ஓகையால்
கூடுகின்ற இன்பநேர்

குலவுவீதி கோலினார்
காடுகொண்ட பூகம்வாழை
காமர்தோ ரணங்களால். **#2883**
பெருமைமிக்க காஞ்சிமாநகரத்தில் வாழும் மக்களும், மெய்ம்மை நெறி நிலைபெற்ற திருத்தொண்டர்களும், நகரத்தின் அருகே திருஞானசம்பந்தர் வந்து சேர்ந்த மகிழ்ச்சியினால் உண்டான இன்பம் காரணமாக, காடு எனச் செறிந்த பாக்கு மரங் களையும், வாழைகளையும், அழகிய தோரணங்களையும் நிரல்பட அமைத்து வீதிகளை அணிசெய்தனர்.

விளக்கவுரை
****

கொடிநிரைத்த வீதியில்
கோலவே திகைப்புறங்
கடி கொள்மாலை மொய்த்தபந்தர்
கந்தநீர்த் தசும்புடன்
மடிவில்பொன் விளக்கெடுத்து
மாதர்மைந்தர் மல்குவார்
படிவிளக்கும் அன்பரும்பரந்த
பண்பில் ஈண்டுவார். **#2884**
கொடிகளை நிரல்படக் கட்டிய வீதியில், அழகிய திண்ணையின் பக்கத்தில் மணமுடைய பந்தலில், மணநீர் நிறைந்த நிறைகுடங்களுடன், கெடுதல் இல்லாத பொன் விளக்குகளை ஏந்திப் பெண்களும் ஆண்களுமாய் நிறைந்து கூடுவார்களும், உலகில் அன்பு நெறியை விளக்கம் செய்யும் அன்பர்களும் பரவிப் போற்றும் இயல்புடன் வந்து நெருங்குபவர்களாகி,

விளக்கவுரை
****

கோதைமாதர் ஆடலுங்
குலாவுதொண்டர் பாடலும்
வேதகீத நாதமும்
மிக்கெழுந்து விம்மவே
காதல்நீடு காஞ்சிவாழ்நர்
கம்பலைத் தெழுந்துபோய்
மூதெயிற் புறம்புசென்
றணைந்துமுன் வணங்கினார். **#2885**
மாலை சூடிய பெண்களின் ஆடல் ஓசையும், மறை ஒலியும் கூடி மிக்கு

எழுந்து பெருகப் பெருவிருப்பினால் காஞ்சி வாழும் மக்கள் மகிழ்வொலி செய்து, எழுந்து சென்று, பழைமை உடைய மதிலின் வெளியில் சென்று கூடி முன்னம் வணங்கினர்.

விளக்கவுரை

இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

சண்பையாளும் மன்னர்முன்பு
தொண்டர்வந்து சார்தலும்
பண்புநீடி யானமுன்
பிழிந்திறைஞ்சு பான்மைகண்
டெண்பெருக்கு மிக்கதொண்டர்
அஞ்சலித்து எடுத்தசொல்
மண்பரக்க வீழ்ந்தெழுந்து
வானம்முட்ட ஆர்த்தனர். **#2886**

சீகாழியில் தோன்றிய ஞானசம்பந்தர் முன்பு, அந்தத் தொண்டர்கள் வந்து சேர்ந்தபோது அவர் அடிமைப் பண்பில் தலைநின்று, முத்துச் சிவிகையினின்றும் இறங்கி, வணங்கும் இயல் பைப் பார்த்து, எண்ணம் பெருக்கிய தொண்டர்கள் `அரகர' என்று எழுப்பிய ஒலி உலகத்தில் பரவ, நிலத்தில் விழுந்து எழுந்து, வானம் அளாவ மகிழ்வொலி செய்தனர்.

விளக்கவுரை

****

சேணுயர்ந்த வாயில்நீடு
சீர்சொள்சண்பை மன்னனார்
வாண்நிலாவு நீற்றணி
விளங்கிட மனத்தினில்
பூணுமன்பர் தம்முடன்
புகுந்திடப் புறத்துளோர்
காணும்ஆசை யிற்குவித்த
கைந்நிரை யெடுத்தனர். **#2887**

பெருகும் சிறப்புக் கொண்ட சீகாழித் தலைவரான ஞானசம்பந்தர், ஒளி பொருந்திய திருநீற்றுக் கோலம் திருமேனியினில் விளங்கிட, உள்ளத்தில் சிவபெருமான் மீது கொண்ட அன்பையே அணிகலனாகவுடைய அடியவருடன், வான் அளாவ உயர்ந்த நக ரத்து மதில் புறவாயிலுள் புகுந்தபோது, நகர்ப் புறத்தினின்றும் வந்து கூடிய மக்கள், பிள்ளையாரைக் காண்கின்ற ஆசையினால் வரிசை யாய்க் கைகளைத் தலைமீது குவித்தவாறு வணங்கினர்.

விளக்கவுரை

****

வியல்நெடுந் தெருவினூடு
மிக்கதொண்டர் ஆர்ப்பெழக்
கயல்நெடுங்கண் மாதரும்
காதல்நீடு மாந்தரும்
புயல்பொழிந்த தாமெனப்
பூவினொடு பொற்சுணம்
இயலுமாறு வாழ்த்தெடுத்
திருமருங்கும் வீசினார். **#2888**

அகன்ற நீண்ட தெருவினிடையே கூடிய தொண் டர்களின் முழக்கம் எழ, கயல்மீன் போன்ற நீண்ட கண்களை உடைய பெண்களும் காதலால் மிக்க மக்களும், மேகம் மழைபெய்தது போல் பூக்களுடன் பொன் சுண்ணப் பொடியைத் திருமேனியில் ஒவ்வுமாறு தூவி வாழ்த்துக் கூறி இருமருங்கிலும் நின்று கவரி வீசினர்.

விளக்கவுரை

****

இன்னவண்ணம் யாவரும்
இன்பமெய்த எய்துவார்
பின்னுவார் சடைமுடிப்
பிரான்மகிழ்ந்த கோயில்கள்
முன்னுறப் பணிந்துபோய்
மொய்வரைத் திருமகள்
மன்னுபூ சனைமகிழ்ந்த
மன்னர்கோயில் முன்னினார். **#2889**

இங்ஙனம் எல்லோரும் இன்பம் அடையுமாறு சேர்பவரான ஞானசம்பந்தர், சுருண்ட நீண்ட சடையையுடைய சிவ பெருமான் மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் பலகோயில்களுள் இடைப் பட்ட கோயில்களை வணங்கிச் சென்று, மலையரசன் மகளான உமையம்மையாரின் நிலைபெற்ற பூசனையை என்றும் மகிழ்ந்து ஏற்றருளும் ஏகம்பரான இறைவரின் திருக்கோயில் முன்பு சேர்ந்தனர்.

விளக்கவுரை

காஞ்சி நகரில் கோயில்கள் பல உளவாதலை முன்னரும் *(பா.1153)* ஆசிரியர் குறித்துள்ளார். அக்கோயில்களுள் தம் வழியிடைப்பட்ட கோயில்களை வணங்கிச் சென்றனர் பிள்ளையார்.

கம்பவாணர் கோயில்வாயில்

கண்டுகை குவித்தெடுத்
தும்பர்ஓங்கு கோபுரத்தின்
முன்னிறைஞ்சி உள்ளணைந்
தம்பொன்மா ளிகைப்புறத்தில்
அன்பரோடு சூழவந்
திம்பர்ஞாலம் உய்யவந்த
பிள்ளையார் இறைஞ்சுவார். **#2890**

ஏகம்பவாணரான இறைவரின் திருக்கோயில் வாயிலை நோக்கி, கைகளைக் குவித்துத் தலைமேற் கொண்டு வணங்கி, வானளாவ ஓங்கி நிற்கும் கோபுரத்தின் முன் வணங்கி, கோயிலுள் சென்று சேர்ந்து, அழகிய பொன் மாளிகையின் புறச் சுற்றில் அன்பர்களுடன் வலமாக வந்து, உலகம் உய்யுமாறு தோன்றி யருளிய ஞானசம்பந்தர் வணங்குவாராய்,

விளக்கவுரை

****

செம்பொன்மலைக் கொடிதழுவக்
குழைந்தருளுந் திருமேனிக்
கம்பரைவந் தெதிர்வணங்கும்
கவுணியர்தங் காவலனார்
பம்புதுளிக் கண்ணருவி
பாய்ந்துமயிர்ப் புளகம்வரத்
தம்பெருகு மனக்காதல்
தள்ளநில மிசைத்தாழ்ந்தார். **#2891**

சிவந்த பொன்மயமான மலையரசனின் மகளா ரான கொடிபோன்ற காமாட்சியம்மையார் தழுவக்குழைந்த மேனியை யுடைய ஏகம்பரநாதரை, திருமுன்பு சென்று வணங்கும் கவுணியர் தலைவரான ஞானசம்பந்தர், துளிக்கும் துளிகளாகி அருவி எனக் கண்ணீர் பெருகத் திருமேனியில் மயிர்க்கூச்செறிந்து, தம் உள் ளத்தில் நிறைந்து பெருகும் பெருவிருப்பம் உந்த, நிலத்தின்மீது விழுந்து வணங்கியவராய்,

விளக்கவுரை

****

பலமுறையும் பணிந்தெழுந்து
பங்கயச்செங் கைமுகிழ்ப்ப
மலருமுக மளித்ததிரு
மணிவாயால் மறையான்என்
றுலகுய்ய எடுத்தருளி

உருகியஅன் பென்புருக்க
நிலவுமிசை முதற்றாளம்
நிரம்பியநீர் மையில்நிகழ. **#2892**

பலமுறையும் வணங்கி எழுந்து, தாமரையனைய சிவந்த கைகள் குவிய, மலர்கின்ற திருமுகத்தில் தோன்றிய அழகிய ஒளி விளங்கும் வாக்கினால் `மறையானை' என உலகம் உய்யுமாறு தொடங்கி, உள்ளம் உருகிய அன்பு எலும்பையும் உருக்குவதால் பொருந்திய பண்ணும் தாளமும் கூட நிரம்பிய தன்மையில்,

விளக்கவுரை

இவ்வாறாய மெய்ப்பாடுகள் நிகழ அருளிய பதிகம் `மறையானை' *(தி.2 ப.12)* எனத் தொடங்கும் இந்தளப் பண்ணில் அமைந்த திருப்பதிகமாகும்.

பாடினார் பணிவுற்றார்
பரிவுறுஆ னந்தக்கூத்
தாடினார் அகங்குழைந்தார்
அஞ்சலிதஞ் சென்னியின்மேல்
சூடினார் மெய்ம்முகிழ்த்தார்
சூகரமும் அன்னமுமாய்த்
தேடினார் இருவர்க்கும்
தெரிவரியார் திருமகனார். **#2893**

பன்றியும் அன்னமுமாய் உருவெடுத்து முறையே அடியும் முடியும் தேடியவர்களான இருபெருந் தேவர்களும் அறிதற்கு அரியராய் நிமிர்ந்த இறைவரின் திருமகனாரான பிள்ளையார், பாடி னார், பணிந்தார், அன்பினால் நிறைந்த ஆனந்தக் கூத்து ஆடினார் மனம் குழைந்து உருகினார், கைகளைக் குவித்த அஞ்சலியைத் தலை மேல் கொண்டார், உடல் எங்கும் மயிர்கூச் செறியப் பெற்றார்.

விளக்கவுரை

சூகரம் - பன்றி.

மருவியஏ ழிசைபொழிய
மனம்பொழியும் பேரன்பால்
பெருகியகண் மழைபொழியப்
பெரும்புகலிப் பெருந்தகையார்
உருகியஅன் புள்ளலைப்ப
உமைதழுவக் குழைந்தவரைப்
பருகியமெய் உணர்வினொடும்
பரவியே புறத்தணைந்தார். **#2894**

பொருந்திய ஏழிசைகளையும் வாக்கானது பொழிய, மனத்தினின்றும்

மேலிட்டு எழும் அன்பினால் கண்களில் நீர் ஊற்றெடுத்துப் பெருகப் பெருமையுடைய சீகாழியில் தோன்றிய ருளிய பெருந்தகையாரான பிள்ளையார், உள்ளம் உருகுவதற்குக் காரணமான அன்பு மனத்தை அலையச் செய்ய, காமாட்சியம்மையார் தழுவக் குழைந்த ஏகாம்பரநாதரை அநுபவித்த மெய் உணர்ச்சியோ டும் போற்றிசெய்து, கோயில் வெளிப்பக்கத்தை அடைந்தார்.

விளக்கவுரை

இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

புறத்தணைந்த தொண்டருடன்
போந்தமைந்த திருமடத்தில்
பெறற்கரும்பே றுலகுய்யப்
பெற்றருளும் பிள்ளையார்
மறப்பரிய காதலுடன்
வந்தெய்தி மகிழ்ந்துறைவார்
அறப்பெருஞ்செல் வக்காமக்
கோட்டம்அணைந் திறைஞ்சினார். **#2895**

தம்முடன் வந்தருளிய திருத்தொண்டர்களுடன் சென்று, தாம் எழுந்தருளும் பேறுபெற்ற திருமடத்தில், பெறற்கரிய பேறான சிஞானத்தை உலகம் உய்யும் பொருட்டாய்ப் பெற்று, அவ் வாறே உலகுக்கு அருளும் ஞானசம்பந்தர், இறைவரை மறவாத பெரு விருப்புடன் வந்து மகிழ்ச்சியுடன் தங்கியருள்வார், அறங்கள் எல்லா வற்றையும் வளர்த்து வரும் உமையம்மையார் எழுந்தருளியுள்ள பெரிய செல்வம் பொருந்திய காமக் கோட்டத்தை அடைந்து வணங் கினார்.

விளக்கவுரை

இறைவனையன்றித் தனித்து அம்மையாரையும் வணங்கியதாகக் குறிக்கும் இடம் இஃது. சுந்தரரும் இவ்வாறு வணங் கியமையைப் பின் *(தி.12 பு.29 பா.84)* காண்க.

திருவேகம் பத்தமர்ந்த
செழுஞ்சுடரைச் சேவடியில்
ஒருபோதும் தப்பாதே
உள்ளுருகிப் பணிகின்றார்
மருவுதிரு இயமகமும்
வளர்இருக்குக் குறள்மற்றும்
பெருகும்இசைத் திருப்பதிகத்
தொடைபுனைந்தார் பிள்ளையார். **#2896**

திருஏகம்பத்தில் விரும்பி வீற்றிருந்தருளும் செழுமை பொருந்திய ஞானச்

சுடரான இறைவரின் திருவடிகளை வழிபட வேண்டிய காலங்களில், ஒரு பொழுதும் தவறாது உள்ளம் உருகிப் பணிகின்றவராய், ஞானசம்பந்தர், அணிபொருந்திய `திரு இயமகமும்', பொருளால் வளர்கின்ற `திருவிருக்குக்குறளும்', மேலும் பெருகுகின்ற இசை பொருந்திய திருப்பதிக மாலையையும் இறை வருக்கு அணிவித்தார்.

விளக்கவுரை

திருஏகம்பத்தில் பாடிய பதிகங்கள்: *1.* திருஇயமகம்: பாயும் மால்விடை *(தி.3 ப.114)* - பழம்பஞ்சுரம். *2.* திருவிருக்குக்குறள்: கருவார் கச்சி *(தி.3 ப.41))* - கொல்லி. *3.* மேலும் பாடிய பதிகமாலை: வெந்த வெண்பொடி *(தி.1 ப.133)* - மேகராகக் குறிஞ்சி.

அகில்நறுந் தூபம் விம்மி
அணிகிளர் மணியால் வேய்ந்த
துகில்புனை விதான நீழல்
தூமலர்த் தவிசின் மீது
நகிலணி முத்து மாலை
நகைமுக மடவார் வாழ்த்த
இகலின்சீர் மறையோர் சூழ
இனிதின்அங் கிருந்த வேலை. **#2897**

மணம் மிகுந்த அகிற் புகை மிகவும் மணம் வீச, அழகு விளங்கும் மணிகளால் இயன்ற நல்ல பட்டினால் ஆன மேற் கட்டியின் கீழ்த் தூய்மையான மலர்கள் தூவப்பட்ட இருக்கையின் மீது, கொங்கைகளின் மேல் முத்துமாலைகளை அணிந்து மலர்ந்த முகத்தையுடைய மங்கையர் வாழ்த்த, சினம் முதலான பகை இல்லாத சிறப்புக் கொண்ட அந்தணர்கள் சூழ, இனிதாய் அங்கு ஞானசம்பந்தர் எழுந்தருளியிருந்தபொழுது,

விளக்கவுரை

****

ஏயர்கோன்கலிக்காம நாயனார் புராணம்

நீடு வண்புகழ்ச் சோழர்நீர் நாட்டிடை நிலவும்
மாடு பொன்கொழி காவிரி வடகரைக் கீழ்பால்
ஆடு பூங்கொடி மாடம்நீ டியஅணி நகர்தான்
பீடு தங்கிய திருப்பெரு மங்கலப் பெயர்த்தால். **#2898**

நீடிய கொடையின் சிறப்பால் புகழ்கொண்ட சோழ அரசர்களது, நீர்வளம் குன்றாத நாட்டில் நிலவுகின்ற தனது கரையின் இருமருங்கும் பொன் கொழித்திடும் காவிரி ஆற்றின் வடகரையின் கிழக்குப் பக்கத்தே, பூங்கொடிகள் ஆடப், பொருந்திய மாடங்கள் நீண்டவரிசையாக இருப்ப, அதனால் அழகு பொருந்திய நகர் ஒன்று ளது. அந்நகர் பெருமை தங்கிய திருப்பெருமங்கலம் என்னும் பெயருடையது.

விளக்கவுரை

தான், ஆல் என்பன அசை.

இஞ்சி சூழ்வன எந்திரப் பந்திசூழ் ஞாயில்
மஞ்சு சூழ்வன வரையென வுயர்மணி மாடம்
நஞ்சு சூழ்வன நயனியர் நளினமெல் லடிச்செம்
பஞ்சு சூழ்வன காளையர் குஞ்சியின் பரப்பு. **#2899**

அந்நகரின் உட்புற மதில்களில், பகைவரைத் தாக்குவதற்கு என நாட்டப் பெற்ற எந்திரங்கள் நிரல்படச் சூழ்ந்து இருக்கும். மேகங்கள் வந்து படிந்து சூழ்ந்த வண்ணம் இருப்பன மலை என உயர்ந்த அழகிய மாடங்கள். நஞ்சின் தன்மையை உடைய அழகிய கண்களை உடைய இளம் பெண்களின் தாமரை மலர்போன்ற அடிகளில் ஊட்டிய செம்பஞ்சின் குழம்பு, தம்மைக் காதலால் அணைத்திட வேண்டிநிற்கும் காதலர்களின் முடியில் சூழ்ந்திருக்கும்.

விளக்கவுரை

இஞ்சி - மதில். ஞாயில் - மதில் உறுப்பு. `பிணியின்மை, செல்வம், விளைவு இன்பம், ஏமம், அணி என்ப நாட்டிற்கு இவ்வைந்து' *(குறள், 738)* என்பர் திருவள்ளுவர். `இஞ்சி சூழ்வன எந்திரம்' என்பதால் ஏமமும், `மஞ்சு சூழ்வன மாடம்' என்பதால் செல்வமும் விளைவும், `நயனியர் அடிப்பஞ்சு காளையர் குஞ்சி சூழ்வன' என்பதால் பிணியின்மையும் இன்பமும் குறித்துக் காட்டியிருக்கும் அழகு காணத்தக்கது.

விழவ றாதன விளங்கொளி மணிநெடு வீதி
முழவ றாதன மொய்குழ லியர்நட வரங்கம்
மழவ றாதன மங்கலம் பொலிமணி முன்றில்
உழவ றாதநல் வளத்தன ஓங்கிருங் குடிகள். **#2900**

விளங்கும் அழகிய நெடிய வீதிகள் எங்கும், விழாக் கோலங்கள்

நீங்காதன. வண்டினம் மொய்க்கும் `கூந்தலையுடைய பெண்கள் நடமாடும் அரங்குகள் எங்கும், முழவின் ஓசைகள் நீங்காதன. மங்கலம் பொலியும் அழகிய முற்றங்கள் எங்கும், மழலைச் சொல் ஓவாத குழந்தைகள் நீங்காதன. பெருமை பொருந்திய பெருங் குடிகளிடத்து உழவின் வளமான உணவின் செல்வம் என்றும் அறாது நிரம்ப உள்ளன.

விளக்கவுரை

வீதிகளில் விழவும், அரங்குகளில் முழவும், முன்றில் களில் மழவும் அடுத்தடுத்து இருத்தற்குக் குடிகளிடத்து உழுவறாத நல்வளங்கள் இருத்தலே காரணம் என்பது உய்த்துணர நின்றது. `உழுவார் உலகத்தார்க்கு ஆணி' *(குறள், 1032)* என்றலும் காண்க.

நீரி னிற்பொலி சடைமுடி நெற்றிநாட் டத்துக்
காரி னில்திகழ் கண்டர்தங் காதலோர் குழுமிப்
பாரின் மிக்கதோர் பெருமையால் பரமர்தாள் பரவும்
சீரின் மிக்கது சிவபுரி யெனத்தகுஞ் சிறப்பால். **#2901**

அந்நகரம், கங்கை பொலியும் சடைமுடியையும், நெற்றிக் கண்ணையும், மேகம் போலக் கருமையின் அழகு பொலியும் கரிய கழுத்தையும் உடைய, தேவர்களின் தலைவனான சிவபெரு மானின் அன்பர்கள் கூடி, உலகில் சிறந்ததாய பெருமையால், பரம் பொருளாய ஈசன் திருவடிகளை வணங்கி வரும் சிறப்பின் மிக்கது. அதனால் அது சிவபுரி எனத்தகும் சிறப்பினது.

விளக்கவுரை

நீர் - ஈண்டுக் கங்கையைக் குறித்தது. பரமர் தாள் பரவி வருவதே பாரின் மிக்க சிறப்பாகும். அச்சிறப்புடைமையான் அது சிவபுரி எனத்தகும்.

இன்ன வாழ்பதி யதனிடை
ஏயர்கோக் குடிதான்
மன்னி நீடிய வளவர்சே
னாபதிக் குடியாம்
தொன்மை மேவிய தொடர்ச்சியால்
நிகழ்வது தூய
பொன்னி நாட்டுவே ளாண்மையில்
உயர்ந்தபொற் பினதால். **#2902**

இத்தகைய பெருவாழ்வுடைய அத்திருப்பெரு மங்கலமாய பதியிடத்து இருக்கும் ஏயர்கோக்குடி என்பது, வழிவழி யாகச் சிறந்து வரும் சோழ அரசர்களிடத்துத் தானைத் தலைமை பூண்டு நிற்கும் வரலாறு பெற்றதாய் என்றும் நிறைந்து இருப்பது. இந்த ஏயர் கோக்குடி என்னும் இனம், தூயதான சோழநாட்டு வேளாண்குலத்தில் மிக்குவிளங்கும்

பொற்புடையதாகும்.

விளக்கவுரை

ஹேஹயர் என்பது கேகயர் எனக் குறிக்கப்பெற்று அதுவே ஈண்டு ஏயர் என மருவிற்று என்று கூறுப.

அங்கண் மிக்கஅக் குடியினில் அவதரித் துள்ளார்
கங்கை வாழ்முடி யார்தொண்டர் கலிக்காமர் என்பார்
தங்கள் நாயகர் அடிபணி வார்அடிச் சார்ந்து
பொங்கு காதலி னவர்பணி போற்றுதல் புரிந்தார். **#2903**

அத் திருப்பெருமங்கலப் பதியில் மிக்க பெரும் புகழுக்குரிய ஏயர்கோக்குடியில் வந்து தோன்றியவர் கங்கை வாழும் சடையையுடைய பெருமானின் தொண்டராய கலிக்காமர் என்பார். இவர், தங்கள் தலைவரான சிவபெருமானின் திருவடிகளைப் பெரும் பேறாகக் கொண்டு வாழும் அடியார்களுக்குச் செயத்தக்க பணிகளைச் செய்து வந்தார்.

விளக்கவுரை

****

புதிய நாள்மதிச் சடைமுடி யார்திருப் புன்கூர்க்
கதிக மாயின திருப்பணி அநேகமுஞ் செய்து
நிதிய மாவன நீறுகந் தார்கழ லென்று
துதியி னாற்பர வித்தொழு தின்புறு கின்றார். **#2904**

அவர், நாளும் புதியதாய்த் தோன்றும் ஒற்றைக் கலையுடைய பிறையினைச் சூடும் சடை முடியையுடைய பெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்புன்கூருக்குத் திருப்பணிகள் பலவும் செய்து, அடியவர்களுக்கு உற்ற செல்வமாவன திருநீற்றை உகந்து அணியும் பெருமானின் திருவடிகளே என நாளும் போற்றித் தொழுது, அவ்வழிபாட்டால் வரும் இன்பத்தில் திளைத்து வாழ்பவராய இவர்,

விளக்கவுரை

பெருமானின் திருச்சடையில் இருக்கும் பொலிவாலும் அழகாலும் நாளும் புதிதாய்த் தோன்றுதலின் `புதிய நாள் மதி' என் றார். மழையின்மையால் நாடு வருந்த மழை வேண்டி, இறைவற்குப் பன்னிருவேலி நிலம் தந்தும், அதனால் மிகு மழை பொழிய, அதனை நிறுத்த வேண்டி மீண்டும் இறைவற்குப் பன்னிருவேலி நிலம் தந்தும் அப்பகுதியை வாழ்வித்த அருமையால் `அதிகமாயின திருப்பணி அனேகமும் செய்து' என்றார்.

`வையகம் முற்றும் மாமழை மறந்து
வயலில் நீரிலை மாநிலம் தருகோம்

உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன
ஒளிகொள் வெண் முகிலாய்ப் பரந் தெங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிருவேலி கொண்டருளும்
செய்கை'
(தி.7 ப.55 பா.2) எனச் சுந்தரர் அருளுவதுங் காண்க.

நாவ லூர்மன்னர் நாதனைத் தூதுவிட் டதனுக்
கியாவ ரிச்செயல் புரிந்தன ரென்றவ ரிழிப்பத்
தேவர் தம்பிரா னவர்திறந் திருத்திய வதற்கு
மேவ வந்தஅச் செயலினை விளம்புவா னுற்றேன். **#2905**

திருநாவலூர்த் தலைவராகிய நம்பியாரூரர், பெருமானைப் பரவையாரிடத்துத் தூதராக அனுப்பியதற்கு, யாவர் இச்செயல் புரிவார்? என இகழ்ந்துரைப்ப, தேவர்கட்கும் தலைவரான பெருமான் கலிக்காமருடைய தன்மையைத் திருத்தி, தாம் அடியார்க்கு எளியன் என்பதை உணர வைத்த அவ்வருஞ்செயலின் வரலாற் றினை, இனி அடியேன் எடுத்துச் சொல்லல் உற்றேன்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

திருத்தொண்டத் தொகையருளித்
திருநாவ லூராளி
கருத்தொன்று காதலினால்
கனகமதில் திருவாரூர்
ஒருத்தர்கழல் முப்பொழுதும்
உருகியஅன் பொடுபணிந்து
பெருத்தெழுமெய் யன்பினாற்
பிரியாதங் குறையுநாள். **#2906**

திருநாவலூரை ஆட்சி கொள்ளும் அருளாளராய சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவாரூரில் தங்கியிருந்து திருத்தொண்டத் தொகையை அருளிய பின்னர், ஒருமைப்பாடுற்ற பெருவிருப்பால், அழகிய மதில் சூழ்ந்த திருவாரூரில் வாழும் ஒப்பற்ற பெருமானின் திருவடிகளை முப்போதும் சென்று உருகிய அன்பொடும் பணிந்து, உள்ளத்து எழுகின்ற மெய்யன்பினால் திருவாரூரை விட்டுப் பிரியாது அங்கு வாழும் நாள்களில்,

விளக்கவுரை

****

தாளாண்மை உழவுதொழில்

தன்மைவளந் தலைசிறந்த
வேளாளர் குண்டையூர்க்
கிழவரெனும் மேதக்கோர்
வாளார்வெண் மதியணிந்தார்
மறையவராய் வழக்கினில்வென்று
ஆளாகக் கொண்டவர்தாள்
அடைந்தன்பா லொழுகுவார். #2907

முயற்சிக்கேற்ற முழுப்பயனை நல்கும் உழவுத் தொழிலின் இயல்பால், வளம் தலைக்கொண்ட வேளாண் குடியின ராய குண்டையூர்க் கிழார் என்னும் பெயருடைய பெரியவர், ஒளி நிறைந்து விளங்கும் வெண்மதியைச் சூடிய பெருமான் இவ்வுலகில் அந்தணராய் வடிவு கொண்டு வந்தருளி, வழக்கினில் வென்று ஆண் டருளப் பெற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவடிகளையே பற்றாகக் கொண்டு, அன்பினால் அவருக்குத் தொண்டுகள் செய்து வருவாராய்,

விளக்கவுரை

****

செந்நெல்லும் பொன்னன்ன
செழும்பருப்பும் தீங்கரும்பின்
இன்னல்ல வமுதும்முதல்
எண்ணில்பெரும் பலவளங்கள்
மன்னியசீர் வன்றொண்டர்க்
கமுதாக வழுவாமல்
பன்னெடுநாள் பரவையார்
மாளிகைக்குப் படிசமைத்தார். #2908

செந்நெல்லும், பொன் போன்ற செழுமையான பருப்பும், தித்திப்பாய கரும்பின் நல்ல அமுதும், முதலாக எண்ணற்ற பலவகையான வளங்கள் யாவற்றையும் நிலைபெற்ற சிறப்பினையுடைய சுந்தரமூர்த்தி சுவாமிகட்குத் திருவமுதாக அமைத்திட, இடையீடின்றிப் பன்னெடு நாள்கள், தமது இடத்திலிருந்து பரவையார் மாளிகைக்குப் படித்தரமாகத் தந்து வந்தார்.

விளக்கவுரை

படித்தரம் - நாளும் அளித்து வரும் அறக்கட்டளை. இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

ஆனசெயல் அன்பின்வரும்
ஆர்வத்தால் மகிழ்ந்தாற்ற
வானமுறை வழங்காமல்

மாநிலத்து வளஞ்சுருங்கப்
போனகநெற் படிநிரம்ப
எடுப்பதற்குப் போதாமை
மானமழி கொள்கையினால்
மனமயங்கி வருந்துவார். #2909

இவ்வாறாக அன்பினால் வரும் ஆர்வத்தால் மகிழ்ந்து, அவருக்குச் செய்துவரும் காலத்து, ஒருசமயம் மழை பொழியாது ஒழிய, நிலத்தின் வளம் சுருங்கிடலால், திருவமுதிற்கு வேண்டிய நெல் அனுப்புதற்கு இயலாமையால், மானம் அழிந்த கொள்கையால், மனம் மயங்கிக் குண்டையூர்க் கிழார் வருந்துவாராகி,

விளக்கவுரை

செயத்தக்கதொன்றைச் செய்ய இயலாமையின் `மானம் அழிகொள்கை' என்றார்.

வன்றொண்டர் திருவாரூர்
மாளிகைக்கு நெல்லெடுக்க
இன்றுகுறை யாகின்ற
தென்செய்கேன் எனநினைந்து
துன்றுபெருங் கவலையினால்
துயரெய்தி உண்ணாதே
அன்றிரவு துயில்கொள்ள
அங்கணர்வந் தருள்புரிவார். #2910

வன்றொண்டராய சுந்தரரின் திருவாரூர் மாளி கைக்கு நெல்லை எடுத்துச் சென்றிட இன்று குறை நேர்ந்ததே! என்செய்கேன்? என நினைந்து, பெருகும் கவலை மிகுதியால் துயர் அடைந்து, உணவும் அருந்துதலின்றி, அன்றிரவு துயில்கொள்ள, அது பொறாத அரிய தண்ணளியை யுடையவராய இறைவர், அவர் கனவில் தோன்றி அருள் செய்வாராய்,

விளக்கவுரை

****

ஆரூரன் தனக்குன்பால்
நெல்தந்தோம் என்றருளி
நீரூருஞ் சடைமுடியார்
நிதிக்கோமான் தனையேவப்
பேரூர்மற் றதனெல்லை
அடங்கவும்நென் மலைப்பிறங்கல்
காரூரும் நெடுவிசும்புங்

கரக்கநிறைந் தோங்கியதால். #2911
`நம்பியாரூரனுக்கு அளித்தற்காக உன்பால் நெல்லினைக் கொடுத்துள்ளோம்' என்று குண்டையூர்க் கிழாருக்கு அருள் செய்து, கங்கைநீர் உலவும் சடைமுடியை உடைய சிவபெரு மான், நிதியின் தலைவனான குபேரனை ஏவுதலும் அச்செயலால், அப்பேரூராய குண்டையூரின் எல்லை அடங்கவும் நெல்லின் மலை யாகவே பொலிந்து, மேகம் தவழும் நெடிய வானமும் மறைய, எங் கும் அந்நெல்மலை ஓங்கியது.

விளக்கவுரை

ஆல் - அசை. இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

அவ்விரவு புலர்காலை
உணர்ந்தெழுவார் அதுகண்டே
எவ்வுலகில் நெல்மலைதா
னிதுவென்றே யதிசயித்துச்
செவ்வியபொன் மலைவளைத்தார்
திருவருளின் செயல் போற்றிக்
கொவ்வைவாய்ப் பரவையார்
கொழுநரையே தொழுதெழுவார். #2912

அன்றைய இரவு விடியும் காலத்து, உறக்கத்தி னின்றும் நீங்கி உணர்ந்து எழும் குண்டையூர்க் கிழார், எவ்வுலகின் நெல்மலைதான் இஃது! என்று வியந்து, செவ்விய பொன்மலையாம் மேருவை வில்லாக வளைத்த பெருமானின் திருவருளின் செயலைப் போற்றி செய்து, கொவ்வைப் பழம் போலும் வாயினையுடைய பரவையாரின் கணவரான சுந்தரரையே நினைந்து தொழுவாராய்,

விளக்கவுரை

****

நாவலூர் மன்ன னார்க்கு
நாயனார் அளித்த நெல்இங்
கியாவரா லெடுக்க லாகும்
இச்செய லவர்க்குச் சொல்லப்
போவன்யா னென்று போந்தார்
புகுந்தவா றருளிச் செய்து
தேவர்தம் பெருமான் ஏவ
நம்பியும் எதிரே சென்றார். #2913

திருநாவலூர் அரசர்க்கு இறைவனால் தரப்பட்ட நெல்மலையை, இங்கு யாவரால் அவ்விடத்திற்கு எடுத்துச் செல்ல முடியும்? ஆதலால்,

அவ்வற்புதச் செயலை நேரில் அவருக்குச் சொல்ல யான் போவன் எனத் திருவாரூருக்குச் சென்றார்; தேவர்கட்கும் தேவராய பெருமானாரும் நம்பியாரூரருக்கு அங்கு நிகழ்ந்த தன் மையை அருள, அவரும் அவ்வாணையைச் சிரமேற்கொண்டு எதிர் சென்றார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

குண்டையூர்க் கிழவர் தாமும்
எதிர்கொண்டு கோதில் வாய்மைத்
தொண்டனார் பாதந் தன்னில்
தொழுதுவீழ்ந் தெழுந்து நின்று
பண்டெலாம் அடியேன் செய்த
பணியெனக் கின்று முட்ட
அண்டர்தம் பிரானார் தாமே
நெல்மலைஅளித்தா ரென்று. **#2914**

தம் பதியை நோக்கி எதிர்வரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் குண்டையூர்க் கிழாரும் எதிர்கொண்டு, குற்றமற்ற வாய்மையை உடைய அத்தொண்டரைத் தொழுது, வீழ்ந்து எழுந்து நின்று, பெருமானே! முன்பெல்லாம் அடியேன் உமக்குச் செய்துவந்த பணிக்கு இன்று முட்டுப்பாடுற்ற நிலையில், தேவாதி தேவனாய பெருமானார் தாமே, வேண்டிய நெல் மலையைத் தந்துள்ளார் என மொழிந்து, பின்னரும்,

விளக்கவுரை

****

மனிதரால் எடுக்கு மெல்லைத்
தன்றுநெல் மலையின் ஆக்கம்
இனியெனால் செய்ய லாகும்
பணியன்றி தென்னக் கேட்டுப்
பனிமதி முடியா ரன்றே
பரிந்துமக் களித்தார் நெல்லென்
றினியன மொழிந்து தாமும்
குண்டையூர் எய்த வந்தார். **#2915**

`இந்நெல்மலையின் பெருக்கம் மனிதரால் எடுத் திடும் எல்லையில் அடங்குவதன்று. அது என்னால் செய்யத்தகும் பணியும் அன்று' என்று மொழிந்திடச் சுந்தரரும் அவரை நோக்கி, `குளிர்ந்த இளம்பிறையைச் சூடிய சிவபெருமான் உம்பால் பரிந்து இந் நெல்மலையைக் கொடுத்தார்' என இனியவாய சொற்களைக் கூறித் தாமும் அவருடன் கூடிக் குண்டையூர்ப் பதியை அணைய வந்தரு ளினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

விண்ணினை அளக்கு நெல்லின்
வெற்பினை நம்பி நோக்கி
அண்ணலைத் தொழுது போற்றி
அதிசயம் மிகவு மெய்தி
எண்ணில்சீர்ப் பரவை யில்லத்
திந்நெல்லை யெடுக்க ஆளும்
தண்ணில வணிந்தார் தாமே
தரிலன்றி ஒண்ணா தென்று. **#2916**

வானளாவ உயர்ந்து நிற்கும் நெல்மலையை நோக்கியருளி, நம்பியாரூரர் பெருமானைத் தொழுது போற்றி, வியப்புற்ற நிலையில், அளவற்ற நீர்மையை உடைய பரவையின் மாளிகைக்கு இந்நெல்மலையைஎடுத்துச் செல்ல, ஆளினைக் குளிர்ந்த பிறையணிந்த பெருமானே தந்தால் அன்றி, இது எம்மால் எடுக்க முடியாது என மொழிந்து,

விளக்கவுரை

****

ஆளிடவேண் டிக்கொள்வார்
அருகுதிருப் பதியான
கோளிலியில் தம்பெருமான்
கோயிலினை வந்தெய்தி
வாளனகண் மடவாள்
வருந்தாமே எனும்பதிகம்
மூளவருங் காதலுடன்
முன்தொழுது பாடுதலும். **#2917**

நெல்மலையை எடுத்திட ஆள்களைத் தருமாறு வேண்டிக் கொள்வாராய், அதற்கு அருகிலுள்ள திருப்பதியான திருக்கோளிலியில் எழுந்தருளியிருக்கும் பெருமானை அடைந்து, திருமுன் நின்று வணங்கி, `வாள்போலும் நீண்ட வரிவிழியை உடைய பரவை வருந்தாதவாறு இந்நெல் மலையை அவள் மனையில் கொண்டு சேர்க்க நல்ல ஆள்களைத் தந்தருளும்' என்னும் கருத்தமைந்த திருப் பதிகத்தை, மேன்மேலும் பெருகி வளர்கின்ற அன்பினால் தொழுது பாடுதலும்,

விளக்கவுரை

இக்கருத்தமைவுடைய பதிகம், `நீள நினைந்தடியேன்' *(தி.7 ப.20)* எனத் தொடங்கும் நட்டராகப் பண்ணிலமைந்த பதிகமாகும். நீள

நினைந்தடியேன் உனை நித்தலுங் கைதொழுவேன் வாளன கண்மடவா ளவள் வாடி வருந்தாமே கோளிலி எம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப் பெற்றேன் ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே. என இப்பதிகத்து வரும் முதற் பாடலிலும், `நெல்லிட ஆள்கள் வேண்டி நினைந்து ஏத்திய பத்தும்' எனவரும் பத்தாவது பாடலிலும் கூறப் பெறும் பொருண்மையை முகந்தே ஆசிரியர் இவ்வரலாற்று அமைவைத் தருகின்றார். `அவள் வாடி வருந்தாமே' என்றது பரவையார் இறைவற் கும், அடியவர்களுக்கும், நாளும் சிறப்பொடு பூசனை செய்துவரும் செயற்பாட்டிற்கன்றி வேறு காரணத்தால் அன்றாம்.

பகற்பொழுது கழிந்ததற்பின்
பரவைமனை யளவன்றி
மிகப்பெருகு நெல்லுலகில்
விளங்கியஆ ரூர்நிறையப்
புகப்பெய்து தருவனநம்
பூதங்க ளெனவிசும்பில்
நிகர்ப்பரிய தொருவாக்கு
நிகழ்ந்ததுநின் மலனருளால். **#2918**

பகற்பொழுது கழிந்ததற்பின், பரவையின் மனை அளவில் அல்லது, மிகப் பெருக விளங்கிடும் இந்நெல், உலகில் விளங் கிய சிறப்புடைய திருவாரூர் நிறைய வந்து சேரும்படி கொண்டு சேர்ப் பன நம் பூதங்கள் எனப் பெருமானின் திருவருளினால், விண்வழி யாக ஒப்பற்றதொரு வாக்கு நிகழ்ந்தது.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின

தம்பிரான் அருள்போற்றித்
தரையின்மிசை விழுந்தெழுந்தே
உம்பரா லுணர்வரிய
திருப்பாதந் தொழுதேத்திச்
செம்பொன்நேர் சடையாரைப்
பிறபதியுந் தொழுதுபோய்
நம்பரா ரூரணைந்தார்
நாவலூர் நாவலனார். **#2919**

தமது பெருமானின் இத்திருவருள் நிகழ்வைக் கேட்ட திருநாவலூரர், அவ்வருளிப்பாட்டை நினைந்து, தொழுது போற்றி, நிலம்மீது விழுந்து எழுந்து, தேவராலும் உணர ஒண்ணாத திருவடிகளைத் தொழுது வணங்கி, அங்கிருந்து நீங்கிச் செம் பொன்னை ஒத்த சடைமுடியையுடைய பெருமானைப் பிற பதிகளி லும் சென்று

வணங்கித் திருவாரூர் வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

பிற பதிகளாவன திருவலிவலம், திருநெல்லிக்கா, திருக்காறாயில், திருஏமப்பேறூர் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார் (பெரிய. பு. உரை).
இவற்றிற்குரிய திருப்பதிகங்கள் எவையும் கிடைத்தில.

பூங்கோயில் மகிழ்ந்தருளும்
புராதனரைப் புக்கிறைஞ்சி
நீங்காத பெருமகிழ்ச்சி
யுடனேத்திப் புறம்போந்து
பாங்கானார் புடைசூழ்ந்து
போற்றிசைக்கப் பரவையார்
ஓங்குதிரு மாளிகையின்
உள்ளணைந்தார் ஆரூரர். **#2920**

திருவாரூரிலுள்ள கோயிலில் அமர்ந்தருளி யிருக்கும் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய பெருமானை முன்சென்று வணங்கிப் பெருமகிழ்ச்சியுடன் போற்றி, வெளியே போந்து, பாங்குடைய அடியார்கள்தம் பக்கலில் சூழ்ந்து போற்றிப் புகழ்ந்து வரப் பரவையாரின் மேலோங்கிய திருவுடைய மாளிகையின் உள்ளாக வந்து சேர்ந்தருளினார்.

விளக்கவுரை

இதுபோது இறைவன் திருமுன்பு போற்றிய திருப்பதிகம் கிடைத்திலது.

கோவைவாய்ப் பரவையார்
தாம்மகிழும் படிகூறி
மேவியவர் தம்மோடு
மிகஇன்புற் றிருந்ததற்பின்
சேவின்மே லுமையோடும்
வருவார்தந் திருவருளின்
ஏவலினால் அவ்விரவு
பூதங்கள் மிக்கெழுந்து. **#2921**

கொவ்வைப் பழம் போலும் வாயினை உடைய பரவையார் மகிழுமாறு நிகழ்ந்த செயல்களைக் கூறி, அவருடன் கூடி மிக இன்புற்று இருக்க, ஆனேற்றின் மீது உமையம்மையாருடன் இருந்தருளும் இறைவனின் அருளால், அன்றிரவு பூதங்கள் மிக எழுந்து,

விளக்கவுரை

****

குண்டையூர் நென்மலையைக்
குறட்பூதப் படைகவர்ந்து
வண்டுலாங் குழற்பரவை
மாளிகையை நிறைவித்தே
அண்டர்பிரான் திருவாரூர்
அடங்கவும்நெல் மலையாக்கிக்
கண்டவர்அற் புதமெய்துங்
காட்சிபெற அமைத்தனவால். #2922

குண்டையூரிலிருந்த நெல்மலையைக் குறுகிய வடிவான அப்பூதப் படைகள், ஒருவருக்கும் தெரியாமே, முகந்து எடுத்து வந்து, வண்டுகள் உலாவி விளங்கிடும் கூந்தலையுடைய பரவையாரின் மாளிகை முழுவதும் சேர நிறைவித்தே, அதனுடன் அமையாது, தேவாதி தேவருடைய திருவாரூர் முழுவதும் நெல்லின் மலையேயாக்கி, கண்டவர்கள் வியக்குமாறு காட்சி பெற எங்கும் அமைத்தன.

விளக்கவுரை

ஆல் - அசை. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின

அவ்விரவு புலர்காலை
ஆரூரில் வாழ்வார்கண்டு
எவ்வுலகில் விளைந்தனநெல்
மலையிவையென் றதிசயித்து
நவ்விமதர்த் திருநோக்கின்
நங்கைபுகழ்ப் பரவையார்க்
கிவ்வுலகு வாழவரு
நம்பியளித் தனவென்பார். #2923

அன்று இரவு விடியும் அமையத்தே, திருவாரூரில் வாழ்வார் அந்நெல் மலையைப் பார்த்து, இந்நெல் மலைகள் எவ் வுலகில் விளைந்தன? என நினைந்து, வியப்புற்று, இவைதாம் மான் போலும் சிறந்த திருநோக்கினையுடைய நங்கை பரவை நாச்சி யாருக்கு இவ்வுலகம் வாழ வருகின்ற சுந்தரர் கொடுத்தனவாகும் என்று பலபடச் சொல்வார்களாகி,

விளக்கவுரை

****

நீக்கரிய நெற்குன்று
தனைநோக்கி நெறிபலவும்
போக்கரிதா யிடக்கண்டு
மீண்டுந்தம் மில்புகுவார்

பாக்கியத்தின் திருவடிவாம்
பரவையார்க் கிந்நெல்லுப்
போக்குமிட மரிதாகும்
எனப்பலவும் புகல்கின்றார். **#2924**

தம் முயற்சியால் அகற்றுதற்கு அரிய நெல் மலைகளை அவர்கள் பார்த்து, அதனால் தம்மூரில் பலவழிகளானும் வெளிப்போக அரிதாய்த் திரும்பித் தம் இல்லங்களில் செல்வார்களாய், `நாம் செய்த புண்ணியத்தின் திருவடிவாகிய பரவை அம்மையா ருக்கும், இவ்வளவும் கொண்டு சேர்க்க அவரது மாளிகையில் இடம் அரிதாகும்' எனப் பலவாறாகப் பேசிக் கொள்வாராய்,

விளக்கவுரை

****

வன்றொண்டர் தமக்களித்த
நெற்கண்டு மகிழ்சிறப்பார்
இன்றுங்கள் மனையெல்லைக்
குட்படுநெற் குன்றெல்லாம்
பொன்தங்கு மாளிகையிற்
புகப்பெய்து கொள்கவென
வென்றிமுர சறைவித்தார்
மிக்கபுகழ்ப் பரவையார். **#2925**

வன்றொண்டர் எனப்பெறும் சுந்தரமூர்த்தி சுவாமி கள் தமக்கு வழங்கிய நெல்மலையை, மிக்க புகழுடைய பரவையார் கண்டு, மனம் களிகூர்ந்து, `இன்று தத்தம் மனைகளின் எல்லைக்குட் பட்ட நெற்குவியலை, அவரவர்களும் தத்தம் மாளிகைகளில் சேரும் படி எடுத்துக் கொள்ளுங்கள்' என்று வெற்றி முரசினை அறையுமாறு செய்தார்.

விளக்கவுரை

`நின் நயந்துறைநர்க்கும் நீ நயந்துறைநர்க்கும், பன்மாண் கற்பின் நின்கிளை முதலோர்க்கும், கடும்பின் கடும்பசி தீர யாழ நின், நெடுங்குறி எதிர்ப்பை நல்கியோர்க்கும், இன்னோர்க்கும் என்னாது என்னொடும் சூழாது, வல்லாங்கு வாழ்தும் என்னாது, எல்லோர்க்கும், கொடுமதி மனைகிழ வோயே' *(புறம். 163)* என மனையாளுக்குக் கூறினர் பெருஞ்சித்திரனார். இங்கு மனையாள் திருவாரூர் வாழ்வார் பலர்க்கும் வழங்குமாறு நிகழ்ந்த அருள்திறம் காண்டற்குரியது. இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

அணியாரூர் மறுகதனில்
ஆளியங்கப் பறையறைந்த

பணியாலே மனைநிறைத்துப்
பாங்கெங்கும் நெற்கூடு
கணியாமற் கட்டிநகர்
களிகூரப் பரவையார்
மணியாரம் புனைமார்பின்
வன்றொண்டர் தமைப்பணிந்தார். **#2926**

அழகிய திருவாரூர் வீதிகளில் ஆள்கள் இயங் குதற்கு ஏற்ப, பறை அறைவித்த அப்பணியால், தத்தம் மனைகளிலும் நெல் நிறைவித்து, மேலும் மிக்கிருந்த நெற்குவியலை அவரவர்களும் தத்தமக்கு அருகில் உள்ள இடங்களிலும் நெற் கூடுகளிலும் குறை விலாது வைத்துத் தமக்குக் கிடைத்த பெரும்பேற்றை நினைந்து, திருவா ரூர் நகரமே களி கூர்ந்திடலும், அது கண்ட பரவையாரும், அழகிய முத்து மாலையை அணிந்தவராய மார்பினையுடைய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவடிகளைப் பணிந்தார்.

விளக்கவுரை

பரவையார் தம் கணவரைப் பணிந்தது, இத்துணைப் பேற்றிற்கும் அவரே மூலமாய் நிற்றலைத் தாம் உணர்ந்ததனோடு நம்மனோர்க்கு உணர்த்தவுமாம். இதனால் முரசறைவித்து அவரவர்க் கும் தத்தம் எல்லைக்குட்பட்ட நெல்லை எடுத்துக் கொள்க எனக் கூறியதும், தம் கணவர் திருவுள்ளக் குறிப்புணர்ந்து செய்ததேயாம் என்பதும் உணரக் கிடக்கின்றது.

நம்பியா ரூரர்திரு
வாரூரில் நயந்துறைநாள்
செம்பொற்புற் றிடங்கொண்டு
வீற்றிருந்த செழுந்தேனைத்
தம்பெரிய விருப்பினொடுந்
தாழ்ந்துணர்வி னாற்பருகி
இம்பருடன் உம்பர்களும்
அதிசயிப்ப ஏத்தினார். **#2927**

இவ்வாறாக நம்பியாரூரர் திருவாரூரில் விரும்பி வாழும் காலத்து, நாளும், செம்பொன்மயமான புற்றில் இடங்கொண்டு வீற்றிருக்கும் செழுமை மிக்க தேனாய பெருமானாரைத் தமது உள்ளத்துப் பெருகிய விருப்பினோடும் தாழ்ந்து பணிந்து, அறிதற் கரிய அம்மூர்த்தியைத் தமது உணர்வினால் பருகி, இவ்வுலகில் உள்ள மனிதர்களுடன் தேவர்களும் அவர் வணங்கிப் பெறுகின்ற பேரின்ப நிலையைக் கண்டு, வியந்து நிற்பப் போற்றி வருவாராயினர்.

விளக்கவுரை
****

குலபுகழ்க் கோட்புலியார்
குறையிரந்து தம்பதிக்கண்
அலகில்புக ழாரூரர்
எழுந்தருள அடிவணங்கி
நிலவியவன் தொண்டர்அஃ
திசைந்ததற்பி னேரிறைஞ்சிப்
பலர்புகழும் பண்பினார்
மீண்டுந்தம் பதியணைந்தார். **#2928**

இவ்வாறாய அருள் நிறைவுடன் இவர் இருப்பப் புகழ் விளங்கும் கோட்புலியார் என்னும் நாயனார், திருவாரூர் வந்து, தமது ஊராகிய நாட்டியத்தான்குடிக்கு எழுந்தருளி வருமாறு, குறைவிலாத புகழுடைய சுந்தரரை வேண்டி அவர் திருவடிகளைப் பணிதலும், அதற்கு அவரும் இசைய, அவரை வணங்கிப் பலரும் புகழும் பண்புடைய கோட்புலி நாயனார் அவர் வருகையை எதிர் நோக்கி மீண்டும் தம் பதிக்குச் சென்றார்.

விளக்கவுரை
****

தேவ ரொதுங்கத் திருத்தொண்டர்
மிடையுஞ் செல்வத் திருவாரூர்
காவல் கொண்டு தனியாளுங்
கடவுட் பெருமான் கழல்வணங்கி
நாவ லூர ரருள் பெற்று
நம்பர் பதிகள் பிறநண்ணிப்
பாவை பாகர் தமைப்பணிந்து
பாடும் விருப்பிற் சென்றணைவார். **#2929**

தேவர்களும் வழிவிட்டு ஒதுங்கிடச் சீலமுடைய திருத்தொண்டர்கள் நெருங்கிச் சூழும் அருட் செல்வமுடைய திரு வாரூர் நகரினைக் காவல் கொண்டு தனியரசு செலுத்திவரும் பெருமானின் திருவடிகளை வணங்கி, பெருமான் எழுந்தருளி யிருக்கும் பிற பதிகளையும் சென்றடைந்து அங்குப் பெருமானைப் பணிந்து பாடும் விருப்பினுடன் செல்வாராய்,

விளக்கவுரை
****

மாலும் அயனும் உணர்வரியார்
மகிழும் பதிகள் பலவணங்கி

ஞால நிகழ்கோட் புலியார்தம்
நாட்டி யத்தான் குடிநண்ண
ஏலும் வகையால் அலங்கரித்தங்
கவரு மெதிர்கொண் டினிதிறைஞ்சிக்
கோல மணிமா ளிகையின்கண்
ஆர்வம் பெருகக் கொடுபுக்கார். **#2930**

திருமாலும் அயனும் உணர்வரிய சிவபெருமான் இனிதுறையும் பதிகள் பலவற்றையும் வணங்கிப் பின், இந்நிலவுலகில் சிறப்புற்றிலங்கும் கோட்புலி நாயனாரது நாட்டியத்தான்குடி என்னும் நற்பதியை நண்ணுதலும், அவர் வருகை உணர்ந்த கோட்புலியார் தமது நகரைப் பொருந்தும் வகையால் அழகுபடுத்தி, நகர் வாயிலில் வந்து நம்பியாரூரரை எதிர்கொண்டு, இனிது வணங்கித் தமது அழகு மிக்க மணி மாளிகையினிடத்து அழைத்துக் கொண்டு சென்றார்.

விளக்கவுரை

பிற பதிகளாவன திருவிளமர், திருஏமப்பேறூர், மாவூர் முதலியனவாகலாம் என்பர் சிவக்கவிமணியார் *(பெரிய. பு. உரை).*

தூய மணிப்பொன் தவிசிலெழுந்
தருளி யிருக்கத் தூநீரால்
சேய மலர்ச்சே வடிவிளக்கித்
தெளித்துக் கொண்டச் செழும்புனலால்
மேய சுடர்மா ளிகையெங்கும்
விளங்க வீசி யுளங்களிப்ப
ஏய சிறப்பில் அர்ச்சனைகள்
எல்லாம் இயல்பின் முறைபுரிவார். **#2931**

மாளிகையை அடைந்தபின், தூய முத்துக்களால் ஆன அரியணையில் அவர் இருந்திடக் கோட்புலியார், செம்மை பொருந்திய நம்பி ஆரூரரின் மலரணைய திருவடிகளை நீரால் விளக்கி, அந்நீரைத் தம்மீதும் அழகின் ஒளிவீசும் மாளிகையிடத்தும் எங்கும் விளங்கிடத் தெளித்துத் தம் உள்ளம் களிப்புற, நன்மை பொருந்திய சிறப்பினால் போற்றியுரைகள் பலவற்றையும் இயல்பான முறையினால் புரிவாராய்,

விளக்கவுரை

****

பூந்தண் பனிநீர் கொடுசமைத்த
பொருவில் விரைச்சந் தனக்கலவை
வாய்ந்த அகிலி னறுஞ்சாந்து
வாச நிறைமான் மதச்சேறு

தோய்ந்த புகைநா வியின்நறுநெய்
தூய பசுங்கர்ப் பூரமுதல்
ஏய்ந்த அடைக்கா யமுதினைய
எண்ணில் மணிப்பா சனத்தேந்தி. **#2932**

அழகிய மலர்களினின்றும் எடுத்த பன்னீரால் அமைந்த நறுமணம் மிக்க சந்தனக் கலவையையும், பொருந்திய அகிலின் கட்டையைத் தேய்த்தலால் வந்த சாந்தினையும், மணம் நிறைந்த மானின் கத்தூரிக் குழம்பினையும், மணம் மிக்க நறும் புகையையும், வாசனை உடைய புனுகு, பசுங்கற்பூரம் முதலாகிய இவற்றுடன் நன்மை தரும் பாக்கு, வெற்றிலைத் திருவமுது ஆகிய இவற்றையும் எண்ணற்ற பொற்கலங்களில் எடுத்து ஏந்தி வந்து,

விளக்கவுரை

****

வேறு வேறு திருப்பள்ளித்
தாமப் பணிகள் மிகவெடுத்து
மாறி லாத மணித்திருவா
பரண வருக்கம் பலதாங்கி
ஈறில் விதத்துப் பரிவட்டம்
ஊழி னிரைத்தே யெதிரிறைஞ்சி
ஆறு புனைந்தா ரடித்தொண்டர்
அளவில் பூசை கொளவளித்தார். **#2933**

வேறு வேறு வகையாக அணிந்திடக் கொள்ளும் மலர் மாலைகளை மிகச் சிறப்பாக அமைவதாக, ஒப்பற்ற அணி வகைகளையும், ஒப்பற்ற அழகான ஆடைகளையும் முறையாக வைத்து வணங்கி, கங்கையாறு அணிந்த பெருமானின் திருவடித் தொண்டராய ஆரூரருக்கு, அளவற்ற இப்பூசைகளைக் கொள்ளுமாறு செய்து அருளினார் கோட்புலி நாயனார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

செங்கோல் அரசன் அருளுரிமைச்
சேனா பதியாங் கோட்புலியார்
நங்கோ மானை நாவலூர்
நகரார் வேந்தை நண்பினால்
தங்கோ மனையில் திருவமுது
செய்வித் திறைஞ்சித் தலைசிறந்த
பொங்கோ தம்போற் பெருங்காதல்

புரிந்தார் பின்னும் போற்றுவார். #2934
செவ்விதாக ஆட்சிபுரியும் சோழ அரசனின் அருளிற்கு உரிமையுடைய தானைத் தலைவராய கோட்புலி நாய னார், நம் தலைவரும் திருநாவலூரின் அரசருமான நம்பியாரூரரை நட்பு முறையால், தமது தலைமைப்பாடான திருவுடைய மனையில் திருவமுது செய்வித்து, வணங்கித் தலைசிறந்த பொங்கும் கடல்போல் உளம்பெருகும் காதல் கொண்டு, மேலும் போற்றுவாராய்,

விளக்கவுரை
****

ஆனா விருப்பின் மற்றவர்தாம்
அருமை யால்முன் பெற்றெடுத்த
தேனார் கோதைச் சிங்கடியார்
தமையும் அவர்பின் கருவுயிர்த்த
மானார் நோக்கின் வனப்பகையார்
தமையும் கொணர்ந்து வன்றொண்டர்
தூநாண் மலர்த்தாள் பணிவித்துத்
தாமுந் தொழுது சொல்லுவார். #2935
குறைவு படாத நல்ல விருப்பத்தால், தாம் முன்னர்ப் பெற்றெடுத்த தேன் சொரியும் மலர்சூடிய கூந்தலையுடைய சிங்கடியார் என்னும் மகளாரையும், அவளுக்குப் பின் பெற்றெடுத்த மான்போலும் பார்வையால் சிறந்த வனப்பகையார் என்னும் மகளாரையும் நம்பியாரூரரின் திருமுன்பு கொணர்ந்து, அவருடைய தூய அன்றலர்ந்த மலர்போலும் திருவடிகளைப் பணியச் செய்து, தாமும் அவரைத் தொழுது சொல்வாராகி,

விளக்கவுரை
****

அடியேன் பெற்ற மக்களிவர்
அடிமை யாகக் கொண்டருளிக்
கடிசேர் மலர்த்தாள் தொழுதுய்யக்
கருணை யளிக்க வேண்டுமெனக்
தொடிசேர் தளிர்க்கை இவரெனக்குத்
தூய மக்க ளெனக்கொண்டப்
படியே மகண்மை யாக்கொண்டார்
பரவை யார்தங் கொழுநனார். #2936
`பெருமானே! அடியேன் பெற்ற மக்களிவர்கள். உமக்குப் பணிவிடை செய்யும் உரிமைப் பொருளாகக் கொண்டருளி, தங்களின் நறுமணம்

மிக்க மலர்த் தாள்களைத் தொழுது உய்ந்திடக் கருணை செய்திடல் வேண்டும்' என்றலும், அதுகேட்ட பரவையாரின் கணவரான சுந்தரரும், வளையல் அணிந்த தளிர்போலும் மென்மை யான கைகளுடைய இம்மகளிர் தாமும், எனக்குத் தூய மக்களாவர் என மொழிந்து, அவர்களைத் தமது மக்களாக ஏற்றார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

கோதை சூழ்ந்த குழலாரைக்
குறங்கின் வைத்துக் கொண்டிருந்து
காதல் நிறைந்த புதல்வியராம்
கருத்துட் கசிவால் அணைத்துச்சி
மீது கண்ணீர் விழமோந்து
வேண்டு வனவுங் கொடுத்தருளி
நாதர் கோயில் சென்றடைந்தார்
நம்பிதம்பி ரான்தோழர். **#2937**

மலர்சூடிய கூந்தலையுடைய அம்மக்களைத் தம்மடி மீது வைத்து, அவர்களைத் தம் காதல் நிறைந்த மக்களாய்க் கருத்துட் கொண்டு, கசிவால் அணைத்து, உச்சியின் மீது கண்ணீர் விழ மோந்து அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்தருளிய பின்னர்த் தம் தலைவராய சிவபெருமானின் திருக்கோயிலைச் சென்றடைந்தார்.

விளக்கவுரை

****

வென்றி வெள்ளே றுயர்த்தருளும்
விமலர் திருக்கோ புரம்இறைஞ்சி
ஒன்றும் உள்ளத் தொடும்அன்பால்
உச்சி குவித்த கரத்தோடும்
சென்று புக்குப் பணிந்துதிருப்
பதிகம் பூணா னென்றெடுத்துக்
கொன்றை முடியா ரருளுரிமை
சிறப்பித் தார்கோட் புலியாரை. **#2938**

வெற்றியைத் தரும் வெண்மையான ஆனேற்றுக் கொடியை உயர்த்தி அருளும் பெருமானாரின் திருக்கோயிலின் அழகிய கோபுரத்தை வணங்கி, ஒருமைப்பட்ட உள்ளத்தோடும் அன்பினால் உச்சியில் சூடிய திருக்கரத்தோடும், கோயிலினுள் சென்று, பெருமானைப் பணிந்து, அங்குப் `பூணாண்' எனத் தொடங் கித் திருப்பதிகம் பாடியருளிக் கொன்றை மலரை முடிமேலுடைய பெருமானின் அருளுக்கு

உரிமையால் கோட்புலியாரை அப்பதிகத் துள் சிறப்பித்தருளினார்.

விளக்கவுரை

: `பூணாண்' எனத் தொடக்கமுடைய பதிகம் தக்கராகப் பண்ணில் அமைந்த பதிகமாகும். *(தி.7 ப.15).*

சிறப்பித் தருளுந் திருக்கடைக்காப்
பதனி னிடைச்சிங் கடியாரைப்
பிறப்பித்தெடுத்த பிதாவாகத்
தம்மை நினைந்த பெற்றியினால்
மறப்பில் வகைச்சிங் கடியப்ப
னென்றே தம்மை வைத்தருளி
நிறப்பொற் புடைய இசைபாடி
நிறைந்த அருள்பெற் றிறைஞ்சுவார். **#2939**

அவ்வாறு கோட்புலி நாயனாரைச் சிறப்பித் தருளும் திருப்பதிகத் திருக்கடைக்காப்பில், சிங்கடியாரைப் பெற்று எடுத்த தந்தையாராகத் தம்மை நினைந்த அத்தன்மையினால், அப் பதிகத்தில் மறவாது `சிங்கடி அப்பன்' என்றே தம்மை வைத்தருளி, பல வகையானும் நிறைவுடைய பண் இசை பாடிப் பெருமானின் நிறைந்த அருளைப் பெற்று வணங்குவாராய்,

விளக்கவுரை

கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற
கொடிறன் கோட்புலி சென்னி
நாடார் தொல்புகழ் நாட்டியத் தான்குடி
நம்பியை நாளும் மறவாச் சேடார் பூங்கழல் சிங்கடி யப்பன்
திருவா ரூரன் உரைத்த
பாடீ ராகிலும் பாடுமின் தொண்டீர் பாடநும் பாவம் பற்றறுமே.

என்பது இப்பதிகத்து வரும் பத்தாவது பாடலாகும். இதன்கண் கோட் புலியாரைச் சிறப்பித்திருப்பதுடன், அவர்தம் மகளாருக்குத் தந்தை என்ற முறையில் ஆரூரர், தம்மைச் சிங்கடியப்பன் என்று குறித்து இருப்பதும் காண்க.

அங்கு நின்றும் எழுந்தருளி
அளவி லன்பில் உள்மகிழச்
செங்க ணுதலார் மேவுதிரு
வலிவ லத்தைச் சேர்ந்திறைஞ்சி
மங்கை பாகர் தமைப்பதிகம்
வலிவ லத்துக் கண்டேனென்
றெங்கும் நிகழ்ந்த தமிழ்மாலை

எடுத்துத் தொடுத்த விசைபுனைவார். #2940

அவ்விடத்தினின்றும் எழுந்தருளி, அளவற்ற அன்பினால் உள்ளம் மகிழ்ந்திட, சிவந்த நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் மேவியிருக்கும் திருவலிவலம் என்னும் திருப்பதி யினைச் சேர்ந்து, வணங்கி, உமையொரு கூறனாய பெருமானை `வலிவலத்துக் கண்டேன்' என்று எங்கும் பெருமை பொருந்த விளங்கும் திருப்பதிகத் தமிழ்மாலையை எடுத்துத் தொடுத்துப் பாடி மகிழ்வார்.

விளக்கவுரை

இந்நிறைவுடைய பாடல், `ஊன் அங்கத்து' *(தி.7 ப.67)* எனத் தொடங்கும் தக்கேசிப் பண்ணிலமைந்ததாகும். இப்பதிகப் பாடல் முழுதினும் `வலிவலந்தனில் வந்து கண்டேனே' என்னும் தொடர் அமைந்திருத்தலின் அதனை ஆசிரியர் எடுத்து மொழிந்தார்.

நன்று மகிழுஞ் சம்பந்தர்
நாவுக் கரசர் பாட்டுகந்தீர்
என்று சிறப்பித் திறைஞ்சிமகிழ்ந்
தேத்தி யருள்பெற் றெழுந்தருளி
மன்றி னிடையே நடம்புரிவார்
மருவு பெருமைத் திருவாரூர்
சென்று குறுகிப் பூங்கோயிற்
பெருமான் செம்பொற் கழல்பணிந்து. #2941

அத்திருப்பதிகத்தில் பெரிதும் உம்மைப் பரவி மகிழும் திருஞானசம்பந்தப் பெருமானும் திருநாவுக்கரசரும் விண் ணப்பிக்கும் பாடல்களைக் கேட்டு உகந்தீர் என்று மொழிந்து, வணங்கி, அருள்பெற்று, எழுந்தருளி மேற்சென்று, திருவம்பலத்தினிடமாகக் கூத்தியற்றும் பெருமான் வீற்றிருக்கும் பெருமையுடைய திருவாரூருக்குச் சென்று அணைந்து, அங்குப் பூங்கோயிலின்கண் அமர்ந்த பெருமானின் செம்பொன்னின் சிலம்பணிந்த சேவடிகளைப் பணிந்து,

விளக்கவுரை

`நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக் கரையனும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானை' *(தி.7 ப.67 பா.5)* என வரும் அருள்மொழியை நினைவு கூர்ந்து இப் பாடலில் அருளுகின்றார் ஆசிரியர். இவ்விரு பெருமக்களும் அரு ளிய பதிகங்களையே தொடர்ந்து கூறினும், பெருமானார் கூறிய தையே கூறுகின்றார் எனும் உவர்ப்பின்றி அருள்செய்வான் என்ப தால், நம் அருளாளர் பெருமக்கள் அருளியனவற்றையே நாம் கூறி உய்யலாம் என்பது தெளிவாகின்றது. காரணம் அவர்கள் அனை வரும் அருளாளர்கள். இறைவனை உயிரினும்

மேலாக உணர்ந்து போற்றிவந்த தன்மையால் அப்பெருமானைத் தம்மகத்துக் கொண்ட வர்கள். ஆதலின் அவர்கள் திருவாக்கைச் சலிப்பின்றி ஏற்கின்றான் இறைவன்.

இறைஞ்சிப் போந்து பரவையார்
திருமா ளிகையில் எழுந்தருளி
நிறைந்த விருப்பின் மேவுநாள்
நீடு செல்வத் திருவாரூர்ப்
புறம்பு நணிய கோயில்களும்
பணிந்து போற்றிப் புற்றிடமாய்
உறைந்த பெருமான் கழல்பிரியா
தோவா இன்பம் உற்றிருந்தார். **#2942**

வணங்கியவர், அக்கோயிலினின்றும் மீண்டருளி, பரவையார் திருமாளிகைக்குச் சென்று, அங்குத் தங்கி, உளம் நிறைந்த விருப்புடன் வாழ்ந்து வரும் காலத்தில், நீடிய செல்வமுடைய திருவா ரூரின் புறத்தே அணிமையாக உள்ள கோயில்களையும் சென்று பணிந்து போற்றிப் புற்றின் இடமாக உறைந்தருளும் பெருமானின் திருவடிகளையும் பிரியாது வணங்கி என்றும் ஒழியாத இன்பத்தைப் பெற்றிருந்தார்.

விளக்கவுரை

நண்ணிய கோயில்கள் என்பன திருவிளமர், திருமாலு மங்கை, திருச்சாத்தமங்கை, திருப்பள்ளியின் முக்கூடல் முதலாயின வாகலாம் என்பர் சிவக்கவிமணியார் (பெரிய. பு. உரை). இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

செறிபுன் சடையார் திருவாரூர்த்
திருப்பங் குனிஉத் திரத்திருநாள்
குறுக வரலும் பரவையார்
கொடைக்கு விழாவிற் குறைவறுக்க
நிறையும் பொன்கொண் டணைவதற்கு
நினைந்து நம்பி திருப்புகலூர்
இறைவர் பாதம் பணியவெழுந்
தருளிச் சென்றங் கெய்தினார். **#2943**

இவ்வாறு ஆரூரர் இன்புற்று வாழும் நாளில், நிறைந்த திருச்சடையையுடைய பெருமான் அமர்ந்தருளும் திருவா ரூர்த் திருப்பங்குனி உத்திரத் திருநாள் அணுக, அப்பங்குனி உத்திரத் திருநாளில் பரவையார் நிகழ்த்திவரும் அருந்தொண்டிற்குப் பொருட் குறைவு வாராதவாறு, நிறைந்த பொன் கொண்டணைவதற்குத் திருவுளம் பற்றிய நம்பியாரூரர், திருப்புகலூரில் எழுந்தருளியிருக்கும் இறைவர் திருவடிகளைப் பணிய அங்குச் சென்றார்.

விளக்கவுரை

****

சென்று விரும்பித் திருப்புகலூர்த்
தேவர் பெருமான் கோயில்மணி
முன்றில் பணிந்து வலங்கொண்டு
முதல்வர் முன்பு வீழ்ந்திறைஞ்சித்
தொன்று மரபி னடித்தொண்டு
தோய்ந்த வன்பிற் றுதித்தெழுந்து
நின்று பதிக விசைபாடி
நினைந்த கருத்து நிகழ்விப்பார். #2944

சென்று அத்திருப்புகலூரில் அமர்ந்தருளும் தேவர் களின் தலைவனாய பெருமான் எழுந்தருளியிருக்கும் கோயிலின் அழகிய திருமுற்றத்தை அடைந்து, பணிந்து வலங்கொண்டு, தம் முதல் வர் முன்பாக வீழ்ந்து வணங்கி, வழிவழியாக நீளநினைந்து வரும் மரபில் அடிமையாகித் திருவடித் தொண்டு செய்து வரும் சிறப்பினால், முழுவதும் மூழ்கிய அன்பினால் போற்றிசெய்து, எழுந்து திருமுன்பு நின்று, திருப்பதிக இசை பாடித் தாம் நினைந்த கருத்தைப் பெருமா னிடம் விண்ணப்பித்துக் கொள்வாராய்,

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகம் கிடைத்திலது.

சிறிது பொழுது கும்பிட்டுச்
சிந்தை முன்னம் அங்கொழிய
வறிது புறம்போந் தருளியயல்
மடத்தி லணையார் வன்றொண்டர்
அறிவு கூர்ந்த வன்பருடன்
அணிமுன் றிலினோ ரருகிருப்ப
மறிவண் கையா ரருளேயோ
மலர்க்கண் துயில்வந் தெய்தியதால். #2945

சிறிதுநேரம் கும்பிட்டு, சிந்தையில் பெருமானின் நினைப்பைத் தவிரப் பிறிதொழிந்து நிற்ப, வேண்டியவாறு பொருள் பெறாது வறிதே வெளியில் வந்தருளி, அருகில் உள்ள திருமடத்தில் அறிவுமிக்க அன்பர்களுடன் செல்லாது, திருக்கோயிலின் அழகிய திருமுற்றத்தின் அருகே இருந்திட, அதுபொழுது மான்கன்றை ஏந்திய இறைவனின் அருளாலேயோ, என்னவோ, அறியோம். அவருடைய மலர்போன்ற கண்களில் துயில்வந்து பொருந்தியது.

விளக்கவுரை

இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

துயில்வந் தெய்தத் தம்பிரான்
றோழ ரங்குத் திருப்பணிக்குப்
பயிலும் சுருமட் பலகைபல
கொணர்வித் துயரம் பண்ணித்தேன்
அயிலும் சுரும்பார் மலர்ச்சிகழி
முடிமேல் அணியா உத்தரிய
வெயிலுந் தியவெண் பட்டதன்மேல்
விரித்துப் பள்ளி மேவினார். **#2946**

அவ்வாறு துயில்வந்த அளவில், தம்பிரான் தோழராய சுந்தரர், அங்குத் திருக்கோயில் திருப்பணிக்கு இருந்த சுட்ட மண்கட்டிகளான செங்கற்கள் பலவற்றைக் கொண்டுவரச் செய்து, உயரமாக அடுக்கி, தேன்விரும்பும் வண்டினங்கள் மொய்த்திடும் மலர்களையுடைய திருமுடிக்குமேல் அணையாக மேலாடையாய ஒளி பொருந்திய வெண்பட்டாடையை அதன்மீது விரித்துத் துயில் கொண் டார்.

விளக்கவுரை

****

சுற்று மிருந்த தொண்டர்களுந்
துயிலு மளவில் துணைமலர்க்கண்
பற்றுந் துயில்நீங் கிடப்பள்ளி
யுணர்ந்தார் பரவை கேள்வனார்
வெற்றி விடையா ரருளாலே
வேமண் கல்லே விரிசுடர்ச்செம்
பொன்திண் கல்லா யினகண்டு
புகலூ ரிறைவ ரருள்போற்றி. **#2947**

அதுபொழுது உடனிருந்த தொண்டர்களும் துயில்கின்ற அளவில், ஆரூரரின் தாமரை மலரனைய இரு கண்களை யும் பற்றிய உறக்கம் நீங்கிட, வெற்றி பொருந்திய ஆனேற்றை ஊர்தி யாக உடைய பெருமானின் திருவருளால், வெந்திடச் சுட்ட கற்கள், விரிந்த ஒளியுடைய செம்பொன் கற்களாய் இருந்தமை கண்டு, திருப்புகலூர் இறைவரின் அருளை நினைந்து, தொழுது, வணங்கி,

விளக்கவுரை

****

தொண்ட ருணர மகிழ்ந்தெழுந்து
துணைக்கைக் கமல முகைதலைமேல்
கொண்டு கோயி லுட்புக்குக்

குறிப்பி லடங்காப் பேரன்பு
மண்டு காத லுறவணங்கி
வாய்த்த மதுர மொழிமாலை
பண்தங் கிசையில் தம்மையே
புகழ்ந்தென் றெடுத்துப் பாடினார். **#2948**

: அதுபொழுது அடியவர்களும் துயில் உணரத் தாமும் மகிழ்ந்து எழுந்து, துணையான திருவுடைய செந்தாமரையின் முகைபோலத் திருக்கைகளைத் தலைமேல் குவித்துக்கொண்டு கோயிலுட் புகுந்து, தம்அளவில் அடங்காத பேரன்பு மிகும் காதல் கொள்ள வணங்கித், தமக்கு அந்நிலையில் வாய்த்த இனிய பண்ணமைந்த இசையால் `தம்மையே புகழ்ந்து' என்று தொடங்கும் பதிகத்தை எடுத்துப் பாடியருளினார்.

விளக்கவுரை

`தம்மையே புகழ்ந்து' என்று தொடங்கும் பதிகம் கொல்லிப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.34)*. திருவருளால் செங்கல் பொன்னாக, அப்பேரருள்திறத்தை நினைந்து புலவராற்றுப் படையாக இப்பதிகத்தை அருளிச் செய்துள்ளார் ஆரூரர். திருக்கடைக்காப்பில், வனப்பகையப்பன், சடையன் தன் சிறுவன் என அருளியிருப்பன இவர்தம் வரலாற்றிற்குத் துணையா கின்றன.

பதிகம் பாடித் திருக்கடைக்காப்
பணிந்து பரவிப் புறம்போந்தே
எதிரி லின்பம் இம்மையே
தருவா ரருள்பெற் றெழுந்தருளி
நிதியின் குவையும் உடன்கொண்டு
நிறையும் நதியுங் குறைமதியும்
பொதியுஞ் சடையார் திருப்பனையூர்
புகுவார் புரிநூல் மணிமார்பர். **#2949**

இத்திருப்பதிகம் பாடி அப்பதிகத்திற்குத் திருக் கடைக்காப்பும் அணிந்து போற்றி, வெளியே போந்து, ஒப்பற்ற இன்பத்தை இப்பிறவியிலேயே தரும் பெருமானின் அருள் பெற்று, அப்பெருமானின் அருளால் பெற்ற பொன் குவியலையும் உடன் கொண்டு, நீர் நிறைந்த கங்கை நதியையும், இளம் பிறையையும், திருச்சடையையும் உடைய பெருமானின் திருப்பனையூர் என்னும் திருப்பதிக்குச் சென்று சேர்ந்தார் முந்நூலணிந்த அழகிய மார்புடன் விளங்கும் சுந்தரர்.

விளக்கவுரை

எதிரில் - ஒப்பற்ற. `இம்மை யேதருஞ் சோறுங் கூறையும் ஏத்த

லாம்இடர் கெடலுமாம், அம்மை யேசிவ லோகம் ஆள்வதற் கியாதும் ஐயுற வில்லையே' என வரும் இப்பதிக முதற் பாடல் கருத்தை உளங்கொண்டே `எதிரி லின்பம் இம்மையே தருவா ரருள்பெற்று' என ஆசிரியர் அருளுவாராயினர்.

செய்ய சடையார் திருப்பனையூர்ப்
புறத்துத் திருக்கூத் தொடுங்காட்சி
எய்த அருள எதிர்சென்றங்
கெழுந்த விருப்பால் விழுந்திறைஞ்சி
ஐயர் தம்மை அரங்காட
வல்லார் அவரே யழகியரென்
றுய்ய வுலகு பெறும்பதிகம்
பாடி யருள்பெற் றுடன்போந்தார். **#2950**

திருப்பனையூர்த் திருக்கோயிலுக்குச் சுந்தரர் வந்து கொண்டிருக்க, அவர் முன்பாகச் சிவந்த சடையையுடைய சிவபெருமான், தம் கோயிலின் வெளிப்புறத்து, திருக்கூத்தாடும் காட்சியைக் காணுமாறு அருள் செய்திடலும், அங்கு எழுந்த பெரு விருப்பால் விழுந்து வணங்கிப் பெருமானை `அரங்காட வல்லார் அவரே அழகியர்' என்று இவ்வுலகம் உய்யத் திருப்பதிகம் பாடி, அருள் பெற்று, உடன் திருப்பனையூரினின்றும் சென்றார்.

விளக்கவுரை

: `மாடமாளிகை' *(தி.7 ப.87)* எனத் தொடங்கும் இத் திருப்பதிகம் சீகாமரப் பண்ணிலமைந்ததாகும். இப்பதிகத்தில் வரும் ஒன்பது பாடல்களிலும் பெருமானின் திருநடனத்தைப் பலவாறாகச் சிறப்பித்து, அவ்வாறு ஆடல் வல்லார் அவரே அழகியரே என நிறைவு படுத்தியருளுகின்றார் ஆரூரர். அதனை யுளங்கொண்ட குறிப்பிலேயே ஆசிரியர் இப்பாடலை அருளியுள்ளார். திருக்கடைக்காப்பில், `வன்றொண்டன் செஞ்சொற் கேட்டுகப்பா ரவ ரேய ழகியரே' என நிறைவு செய்திருப்பதும் அறிந்தின்புறத் தக்கதாம். இவ்விரு பாடல் களும் ஒருமுடிபின.

வளமல் கியசீர்த் திருப்பனையூர்
வாழ்வா ரேத்த எழுந்தருளி
அளவில் செம்பொன் இட்டிகை
களால்மேல் நெருங்கி யணியாரூர்த்
தளவ முறுவற் பரவையார்
தம்மா ளிகையிற் புகத்தாமும்
உளமன் னியதம் பெருமானார்
தம்மை வணங்கி உவந்தணைந்தார். **#2951**

வளம் நிறைந்த சிறப்புடைய திருப்பனையூரில் வாழ்வார் வழிக்கொண்டு வணங்கிட, எழுந்தருளிச் சென்று, அளவற்ற செம்பொன் கட்டிகள் யாவற்றையும் ஆள்கள் எடுத்துவர, நெருங்கி வந்து, அழகிய திருவாரூரில் முல்லையரும்பு போலும் புன்முறுவ லுடைய பரவையார் மாளிகையில் அவர்கள் புகுந்திட, தாமும் தம் உள்ளத்துப் பொருந்திய திருவாரூர்ப் பெருமானை வணங்கிப் பெருமகிழ்வுடன் சேர்வாராகி,

விளக்கவுரை

இட்டிகை செய்தல் - அவை பொன்னாலாயவாய் அமைந்திருந்தன.

வந்து பரவைப் பிராட்டியார்
மகிழ வைகி மருவுநாள்
அந்த ணாரூர் மருங்கணிய
கோயில் பலவும் அணைந்திறைஞ்சிச்
சிந்தை மகிழ விருப்பினொடும்
தெய்வப் பெருமாள் திருவாரூர்
முந்தி வணங்கி யினிதிருந்தார்
முனைப்பா டியர்தங் காவலனார். **#2952**

இவ்வாறு திருவாரூருக்கு மீண்டு வந்து பரவைப் பெருமாட்டியார் மகிழத் தங்கி இருந்து, அவருடன் கூடி மகிழும் நாள்களில், அழகிய திருவாரூரின் அருகில் உள்ள கோயில்கள் பல வற்றிற்கும் சென்று வணங்கி, தம் சிந்தை மகிழும் விருப்பினோடும் தேவ தேவனாம் மகாதேவனாகிய திருவாரூர்ப் பெருமானை நாளும் முன்னதாகச் சென்று வணங்கித் திருவாரூரில் இனிதிருந்தருளினார், திருமுனைப்பாடி நாட்டின் அருட் காவலராகிய ஆரூரர்.

விளக்கவுரை

`கோயில் பலவும் அணைந்திறைஞ்சி' என்றது முன்னர்க் குறித்தனவும், ஆங்காங்குள்ள பிற திருக்கோயில்களும் ஆம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பலநாள் அமர்வார் பரமர்திரு
வருளால் அங்கு நின்றும்போய்ச்
சிலைமா மேரு வீரனார்
திருநன் னிலத்துச் சென்றெய்தி
வலமா வந்து கோயிலினுள்
வணங்கி மகிழ்ந்து பாடினார்
தலமார் கின்ற தண்ணியல்வெம்
மையினான் என்னுந் தமிழ்மாலை. **#2953**

பல நாள்கள் திருவாரூரில் இவ்வாறு இருந்தருளிய நம்பிகள்,

பெருமானின் திருவருளால் அங்கிருந்து, பெருமலையான மேருவை வில்லாகக் கொண்டு திரிபுரத்தை எரியச் செய்த வீரராகிய சிவபெருமான் அமர்ந்தருளும் திருநன்னிலப் பதியை அடைந்து, அக்கோயிலை வலம் கொண்டு, உட்புகுந்து, பெருமானை வணங்கி மகிழ்ந்து, `தண்ணியல் வெம்மையினான்' எனத் தொடங்கும் தமிழ் மாலையைப் பாடினார்.

விளக்கவுரை

`தண்ணியல் வெம்மையினான்' எனத் தொடங்கும் பதிகம் பஞ்சமப் பண்ணிலமைந்ததாகும். *(தி.7 ப.98)*

பாடி யங்கு வைகியபின்
பரமர் வீழி மிழலையினில்
நீடு மறையான் மேம்பட்ட
அந்த ணாளர் நிறைந்தீண்டி
நாடு மகிழ அவ்வளவும்
நடைக்கா வணம்பா வாடையுடன்
மாடு கதலி பூகநிரை
மல்க மணித்தோ ரணநிரைத்து. **#2954**

பாடி, அத்திருப்பதியில் தங்கியிருந்த பின், திரு வீழிமிழலை என்னும் திருப்பதியில் வாழும் நீடிய மறைவழி ஒழுகிடும் அந்தணர்கள் திரண்டு வந்து நாடெல்லாம் மகிழத் திருவீழிமிழலையி லிருந்து திருநன்னிலம் வரையுள்ள வழி எங்கும், நிலத்தில் நீள விரிக்கின்ற பாவாடையிட்டு, வழியின் இருமருங்கும் கதலி, வாழை, கமுகு ஆகியவைகளை நிரை நிரையாக விளங்க நாட்டி, அங்காங்கே அழகிய தோரண முகப்புகளும் நிரைத்து,

விளக்கவுரை

****

வந்து நம்பி தம்மைஎதிர்
கொண்டு புக்கார் மற்றவருஞ்
சிந்தை மலர்ந்து திருவீழி
மிழலை யிறைஞ்சிச் சேண்விசும்பின்
முந்தை யிழிந்த மொய்யொளிசேர்
கோயில் தன்னை முன்வணங்கிப்
பந்த மறுக்குந் தம்பெருமான்
பாதம் பரவிப் பணிகின்றார். **#2955**

திருநன்னிலம் வந்து, நம்பிகளை எதிர்கொண்டு அழைத்து, தமது திருவீழிமிழலையை அடைந்தார்கள். அதுபொழுது அப்பெருமகனாரும்

தமது சிந்தை மலர்ந்து, திருவீழிமிழலை என்னும் திருப்பதியை வணங்கி, மிக உயர்ந்த வானினின்றும் முன்பொருகால் இறங்கி வந்த மிக்க வியத்தகு ஒளியையுடைய கோயிலை முன்னாக வணங்கிப், பாசக்கட்டினை அறுத்திடும் பெருமானின் திருவடிகளைப் பரவிப் பணிவாராய்,

விளக்கவுரை

****

படங்கொள் அரவில் துயில்வோனும்
பதுமத் தோனும் பரவரிய
விடங்கன் விண்ணோர் பெருமானை
விரவும் புளக முடன்பரவி
அடங்கல் வீழி கொண்டிருந்தீர்
அடியேனுக்கும் அருளுமெனத்
தடங்கொள் செஞ்சொல் தமிழ்மாலை
சாத்தி யங்குச் சாருநாள். **#2956**

படங்கொண்ட பாம்பில் துயில்கின்ற திருமாலும், செந்தாமரை மலரில் இருந்திடும் அயனும் வணங்கிடற்கு அரியனாய, தேவர்கட்கும் தேவனாய பெருமானை, உடம்பெல்லாம் மயிர் முகிழ்க்க வணங்கி, `அழகில் அடங்காத திருவீழிமிழலையில் கோயில் கொண்டிருந்தீர்! உம் அடியேனுக்கும் அருளும்' என மிகவும் பொருள் விரிந்த செஞ்சொல்லின் தமிழ் மாலையைச் சாத்தி அங்கு இருந்தருளுகின்ற நாள்களில்,

விளக்கவுரை

இப்பொருண்மை அமைந்த பதிகம் `நம்பினார்க்கு அருள் செய்யும்' *(தி.7 ப.88)* என்னும் தொடக்கமுடைய சீகாமரப் பண்ணில் அமைந்ததாகும். இப்பதிகப் பாடல்தொறும் `வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே' என வரும் தொடர் அமைந்துள்ளது. வீழியில், சம்பந்தருக்கும், அப்பர் பெருமானுக்கும் பஞ்சம் தீரும் வரை ஒரு பெருந்தொகை தந்து, துயர்கூர் வறுமை தொலைக்குமாறு அருளி யிருக்கலாம். அவ்வாறன்றி நித்தமும் ஒரு காசு நல்கியமைக்குரிய காரணத்தைத் சுந்தரர் நயமாக அருளும் பதிகம் இதுவாம். `திருமிழலையிருந்து நீர் தமிழோடிசை கேட்கும் இச்சையால் காசு நித்தல் நல்கினீர்' என்பது இப்பதிகத்து வரும் எட்டாவது பாடலாகும்.

வாசி யறிந்து காசளிக்க
வல்ல மிழலை வாணர்பால்
தேசு மிக்க திருவருள்முன்
பெற்றுத் திருவாஞ் சியத்தடிகள்

பாச மறுத்தாட் கொள்ளுந்தாள்
பணிந்து பொருவ னார்என்னும்
மாசில் பதிகம் பாடியமர்ந்
தரிசிற் கரைப்புத் தூரணைந்தார். **#2957**

தாம் வழங்கிய பொற்காசுகளில் குற்றமும், குற்றம் இன்மையுமாகக் கொடுத்திட வல்ல திருவீழிமிழலையில் அமர்ந்து அருளும் பெருமானிடம், உயிர் விளக்கம் பெறுதற்கான அருள் பெற்றுத் திருவாஞ்சியத்தில் அமர்ந்தருளும் சிவபெருமானின், பாசம் அறுத்து ஆட்கொள்ளும் திருவடி மலர்களைப் பணிந்து, `பொருவ னார்' எனத் தொடங்கும் மாசில்லாத, புகழுடைய திருப்பதிகத்தினைப் பாடி அங்குத் தங்கிப் பின் திருஅரிசில்கரைப்புத்தூரை அணுகச் சென்றார்.

விளக்கவுரை

`பொருவனார்' எனத் தொடங்கும் பதிகம், பியந்தைக் காந்தாரப் பண்ணிலமைந்ததாகும் *(தி.7 ப.76)*. இந்நான்கு பாடல் களும் ஒருமுடிபின.

செழுநீர் நறையூர் நிலவுதிருச்
சித்தீச் சரமும் பணிந்தேத்தி
விழுநீர் மையினிற் பெருந்தொண்டர்
விருப்பி னோடும் எதிர்கொள்ள
மழுவோ டிளமான் கரதலத்தில்
உடையார் திருப்புத் தூர்வணங்கித்
தொழுநீர் மையினில் துதித்தேத்தித்
தொண்டர் சூழ வுறையுநாள். **#2958**

அரிசிற்கரைப்புத்தூருக்கு வந்தணையும் அவர், இடையில் அரிசில் என்னும் ஆற்றின் செழுமை மிக்க நீர்வளமுடைய திருநறையூர் என்னும் ஊரில் நிலவிடும் சித்தீச்சரம் என்னும் திருக்கோயிலையும் வணங்கி, ஒழுக்கத்தாலும், பத்திமையாலும் விழுமிய அடியார்கள் விருப்பத்துடன் எதிர்கொள்ள, மழுவுடன் இளைய மானையும் திருக்கைகளில் கொண்ட பெருமான் எழுந்தருளி யிருக்கும் திருஅரிசிற்கரைப்புத்தூர் என்னும் திருப்பதியையும் பணிந்து, போற்றி, அடியார்கள் சூழ அத்திருப்பதியில் இருந்தருளும் காலத்து,

விளக்கவுரை

திருநறையூர் ஊர்ப்பெயர். சித்தீச்சரம் திருக்கோயிலின் பெயர். இவ்விடத்து அருளிய பதிகம் `நீரும் மலரும்'*(தி.7 ப.93)* எனத் தொடங்கும் குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

புனித னார்முன் புகழ்த்துணையார்க்கு

அருளுந் திறமும் போற்றிசைத்து
முனிவர் போற்ற எழுந்தருளி
மூரி வெள்ளக் கங்கையினில்
பனிவெண் திங்கள் அணிசடையார்
பதிகள் பலவும் பணிந்துபோந்
தினிய நினைவி லெய்தினார்
இறைவர் திருவா வடுதுறையில். **#2959**

திருஅரிசிற்கரைப்புத்தூரில் இருந்தருளும் பெரு மானார் முன்னர்ப் புகழ்த்துணை என்னும் நாயனாருக்கு அருள் புரிந்த வரலாற்றையும் அப்பதிகத்து வைத்துச் சிறப்பித்துப் போற்றிப் பாடி, அங்குள்ள முனிவர்கள் போற்றிட எழுந்தருளி, கங்கையாற்றினையும் குளிர்ந்த வெண்பிறையையும் அணிந்த சடையையுடைய பெருமான் எழுந்தருளியிருக்கும் பதிகள் பலவும் பணிந்து, இனிமை கூர்ந்த நினைவாய்த் திருவாவடுதுறையை அடைந்தார்.

விளக்கவுரை

அரிசில்கரைப்புத்தூரில், `மலைக்கு மகள்' எனத் தொடங்கும் இந்தளப் பண்ணில் அமைந்த பதிகத்துள், புகழ்த்துணை யாரைச் சிறப்பித்தருளும் பாடல் ஆறாவது பாடலாகும் *(தி.7 ப.9 பா.6).*

அகத்தடி மைசெய்யும் அந்தணன்றான்
அரிசிற்புனல் கொண்டுவந் தாட்டுகின்றான்
மிகத்தளர் வெய்திக் குடத்தையும்நும்
முடிமேல்விழுத் திட்டு நடுங்குதலும்
வகுத்தவ னுக்குநித் தற்படியும்
வரும்என்றொரு காசினை நின்றநன்றிப்
புகழ்த்துணை கைப்புகச் செய்துகந்தீர்
பொழிலார்திருப் புத்தூர்ப் புனிதனீரே.

எனவரும் இப்பாடல் புகழ்த்துணையாரின் வரலாற்றைச் சித்தரித்துக் காட்டுதல் காணலாம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

விளங்குந் திருவா வடுதுறையில்
மேயார் கோயில் புடைவலங்கொண்டு
உளங்கொண் டுருகு மன்பினுடன்
உள்புக் கிறைஞ்சி யேத்துவார்
வளங்கொள் பதிக மறையவன்என்று
எடுத்து வளவன் செங்கணான்
தளங்கொள் பிறப்புஞ் சிறப்பித்துத்
தமிழ்ச்சொல் மாலை சாத்தினார். **#2960**

அருள்விளங்கும் திருவாவடுதுறையில் வீற்றிருந் தருளும் பெருமானின்

திருக்கோயிலினை வலங்கொண்டு, இறைவனை உளங்கொண்டு, உருகும் அன்பினுடன் திருக்கோயில் உள்ளே சென்று வணங்கும் சுந்தரர், `மறையவன்' எனத் தொடங்கும் வளங்கொண்ட திருப்பதிகத்தைப் பாடி, அதன்கண் கோச்செங்கட்சோழ அரசரின் பிறப் பையும் சிறப்பித்து அத்தமிழ்ச்சொல் மாலையைச் சாத்தினார்.

விளக்கவுரை

இத்திருப்பதிகம் தக்கேசிப் பண்ணில் அமைந்ததாகும். இப்பதிகத்து வரும் இரண்டாவது பாடலில் *(தி.7 ப.66 பா.2),* `தெருண்ட வாயிடை
நூல்கொண்டு சிலந்தி
சித்திரப் பந்தர் சிக்கென இயற்றச்
சுருண்ட செஞ்சடை யாய்அது தன்னைச்
சோழ னாக்கிய தொடர்ச்சி கண்டு'
எனக் கோச்செங்கட்சோழப் பெருமானாரின் பிறப்பின் சிறப்பினை எடுத்து மொழிகின்றார் ஆரூரர். இதனை உளங்கொண்டே சேக்கிழார் இவ்வாறு அருளுவாராயினர். இப்பதிகத்தில் ஐந்து திருப்பாடல்களே கிடைத்துள்ளன. ஒவ்வொன்றிலும் ஒருவரலாற்றுச் செய்தி காணக் கிடக்கின்றது.

சாத்தி யங்கு வைகுநாள்
தயங்கு மன்ப ருடன்கூடப்
பேர்த்து மிறைஞ்சி யருள்பெற்றுப்
பெண்ணோர் பாகத் தண்ணலார்
தீர்த்தப் பொன்னித் தென்கரைமேல்
திகழும் பதிகள் பலபணிந்து
மூர்த்தி யார்தம் இடைமருதை
யடைந்தார் முனைப்பா டித்தலைவர். **#2961**

திருப்பதிக மாலையைச் சாத்தி அங்கிருந்தருளும் நாள்களில், அருள் விளங்கும் அன்பர்களுடன் கூடி மீண்டும் பெரு மானை வணங்கி, அருள்பெற்று, உமையொரு கூறராய அண்ணலா ரின் புண்ணிய நன்னீர் மிகுந்த காவிரியாற்றின் தென்கரையின் மேல் திகழும் திருப்பதிகள் பலவற்றையும் பணிந்து, திருவிடைமருதூரைச் சென்று அடைந்தார், திருமுனைப்பாடியின் தலைவரான சுந்தரர் பெருமான்.

விளக்கவுரை

பதிகள் பல பணிந்து என்பன, திருக்கோழம்பம், திருச்சாத்தனூர், தென்குரங்காடுதுறை முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார் *(பெரிய. பு. உரை).*

மன்னும் மருதி னமர்ந்தவரை

வணங்கி மதுரச் சொல்மலர்கள்
பன்னிப் புனைந்து பணிந்தேத்திப்
பரவிப் போந்து தொண்டருடன்
அந்நற் பதியி லிருந்தகல்வார்
அரனார் திருநா கேச்சுரத்தை
முன்னிப் புக்கு வலங்கொண்டு
முதல்வர் திருத்தாள் வணங்கினார். **#2962**

நிலைபெற்ற மருதமர நிழலில் அமர்ந்தருளும் பெருமானாரை வணங்கி, இனிமை மிக்க சொல்மலர்களைக் கொண்டு புனைந்த திருப்பதிகம் பாடிப் போற்றி வணங்கி, அப்பால் அடியார்கள் உடன் அந்நற்பதியினின்றும் நீங்கிச் செல்வார், பெருமானாருடைய திருநாகேச்சுரம் என்னும் திருப்பதியை நினைந்து, அங்குச் சென்று, கோயிலை வலங்கொண்டு பெருமானாரின் திருவடிகளை வணங் கினார்.

விளக்கவுரை

திருவிடைமருதூரில் அருளிய பதிகம், `கழுதை குங்குமம்' *(தி.7 ப.60)* எனத் தொடங்கும் தக்கேசிப் பண்ணில் அமைந்ததாகும்.

பெருகும் பதிகம் பிறையணிவாள்
நுதலாள் பாடிப் பெயர்ந்துநிறை
திருவின் மலியுஞ் சிவபுரத்துத்
தேவர் பெருமான் கழல்வணங்கி
உருகுஞ் சிந்தை யுடன்போந்தே
யுமையோர் பாகர் தாமகிழ்ந்து
மருவும் பதிகள் பிறபணிந்து
கலைய நல்லூர் மருங்கணைந் தார் **#2963**

வணங்கி அருள்பெருகும், `பிறையணி வாள் நுதலாள்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடிப்போற்றி, அங்கிருந்து நீங்கிக் குறைவற்ற செல்வமாய சிவம் நிறைந்து விளங்கும் சிவபுரம் என்னும் திருப்பதியில் இருந்தருளும் தேவர் தலைவனாய சிவபெருமானின் திருவடிகளையும் வணங்கி, உருகிய சிந்தையுடன் வந்து, உமையொரு கூறராய பெருமான் மகிழ்ந்து உறையும் பதிகள் பிறவும் பணிந்து, திருக்கலயநல்லூர் என்னும் திருப்பதியின் அருகாக வந்தருளினர்.

விளக்கவுரை

`பிறையணி வாள் நுதலாள்' எனத் தொடங்கும் பதிகம் பஞ்சமப் பண்ணிலமைந்ததாகும் *(தி.7 ப.99)*. சிவபுரத்தில் அருளிய பதிகம் கிடைத் திலது. சிவபுரத்திற்கும் கலயநல்லூருக்கும் இடைப்பட்ட பதிகள்

எவையெனத் தெரிந்தில.

செம்மை மறையோர் திருக்கலைய
நல்லூ ரிறைவர் சேவடிக்கீழ்
மும்மை வணக்கம் பெறவிறைஞ்சி
முன்பு பரவித் தொழுதெழுவார்
கொம்மை மருவு குரும்பைமுலை
யுமையாள் என்னுந் திருப்பதிகம்
மெய்ம்மைப் புராணம் பலவுமிகச்
சிறப்பித் திசையின் விளம்பினார். **#2964**

செம்மை வாய்ந்த அந்தணர்கள் வாழும் திருக்கலய நல்லூரில் அமர்ந்தருளிய பெருமானின் சேவடிக் கீழ் மனம், மொழி, மெய் ஆகிய முக்கருவிகளானும் வணங்கி, பெருமானின் திரு முன்பு நின்று போற்றித் தொழுதெழும் அவர், தலைமை பொருந்திய `குரும்பை முலை மலர்க்குழலி' எனத் தொடங்கும் திருப்பதிகத்தில் மெய்ம்மை யான வரலாறுகள் பலவும் வைத்து, இறைவனைச் சிறப்பித்து இசை மிக்க அப்பதிகத்தைப் பாடியருளினார்.

விளக்கவுரை

`குரும்பைமுலை மலர்க்குழலி' எனத் தொடங்கும் பதிகம் தக்கராகப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.16)*. இப்பதிகத்தில் இறைவன் உமையம்மையாரை மணந்ததும், சலந்தரன், அந்தகாசுரன், முப்புரத்தவர், தக்கன், இராவணன், தாருகன் முதலியோரை அழித்ததும் ஆகிய செய்திகளை அருளியுள்ளார். இதனால், `மெய்ம் மைப் புராணம் பலவும் மிகச் சிறப்பித்து' என்றார்.

அங்கு நின்று திருக்குடமூக்
கணைந்து பணிந்து பாடிப்போய்
மங்கை பாகர் வலஞ்சுழியை
மருவிப் பெருகு மன்புருகத்
தங்கு காத லுடன்வணங்கித்
தமிழாற் பரசி அரசினுக்குத்
திங்கள் முடியா ரடியளித்த
திருநல் லூரைச் சென்றணைந்தார். **#2965**

அப்பதியினின்று நீங்கித் திருக்குடமூக்கினைச் சேர்ந்து, பெருமானைப் பணிந்து பாடி, பின் உமையொரு கூறராய பெருமான் அமர்ந்தருளும் திருவலஞ்சுழியைச் சேர்ந்து, பெருகும் அன்பு உருகப் பெருமானிடத்து நிறைந்த காதலுடன் வணங்கித் தமிழாற் போற்றிப் புகழ்ந்து, அப்பால் திருநாவுக்கரசர் பெருமானுக்குத் திங்களைச் சடைமீதணிந்த இறைவர் திருவடி சூட்டி அருள்புரிந்த திருநல்லூரைச் சென்றணைந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பதிகளிலும் அருளிய பதிகங்கள் கிடைத்தில.

நல்லூர் இறைவர் கழல்போற்றி
நவின்று நடுவு நம்பர்பதி
எல்லா மிறைஞ்சி ஏத்திப்போய்
இசையாற் பரவுந் தம்முடைய
சொல்லூ தியமா வணிந்தவர்தஞ்
சோற்றுத் துறையின் மருங்கெய்தி
அல்லூர் கண்டர் கோயிலினுள்
அடைந்து வலங்கொண் டடிபணிவார். **#2966**

திருநல்லூரில் வீற்றிருக்கும் இறைவரின் திருவடிகளைப் பணிந்து பாடி, இடையிலுள்ள இறைவருடைய திருப் பதிகள் பலவற்றையும் வணங்கிப் போற்றிச் சென்று, இசையோடு பாடிடும் தம் சொற்களைப் பயனாகக் கொண்டருளும் இறைவரின் திருச்சோற்றுத்துறைக்குச் சென்று, நஞ்சைக் கழுத்தில் கொண்ட பெரு மான் கோயிலினை வலங்கொண்டு திருவடிகளைப் பணிவாராய்,

விளக்கவுரை

திருநல்லூரில் அருளிய பதிகம் கிடைத்திலது. ஊதியம் - பயன்; கேட்டு மகிழும் பயன்.

அழனீ ரொழுகி யனையவெனும்
அஞ்சொற் பதிக மெடுத்தருளிக்
கழனீ டியவன் பினிற்போற்றுங்
காதல் கூரப் பரவியபின்
கெழுநீர் மையினி லருள்பெற்றுப்
போந்து பரவை யார்கேள்வர்
முழுநீ றணிவா ரமர்ந்தபதி
பலவும் பணிந்து முன்னுவார். **#2967**

`அழல்நீர் ஒழுகி அனைய' எனும் அழகிய சொற்களையுடைய பதிகத்தைப் பாடி எடுத்தருளி, பெருமானின் திருவடிகளிடத்துக் கொண்ட நீடிய அன்பினால் காதல் மீதூர வணங்கிய பின், பொருந்திய திருவருள் பெற்று மேற்சென்று, பரவை கேள்வராய நம்பிகள், முழுமையாக ஒளி நீறணிந்து விளங்கும் சிவபெருமான் அமர்ந்தருளியிருக்கும் திருப்பதிகள் பலவற்றையும் பணிந்து செல்கின்றவர்,

விளக்கவுரை

`அழல்நீர் ஒழுகி அனைய' எனத் தொடங்கும் திருப்பதிகம் கௌசிகப்

பண்ணிலமைந்ததாகும் *(தி.7 ப.94)*. பதி பலவும் என்பன - தண்டங்குறை, திருவேதிகுடி முத லியனவாகலாம் என்பார் சிவக்கவிமணியார் *(பெரிய. பு. உரை)*.

தேவர் பெருமான் கண்டியூர்
பணிந்து திருவை யாறதனை
மேவி வணங்கிப் பூந்துருத்தி
விமலர் பாதந் தொழுதிறைஞ்சிச்
சேவில் வருவார் திருவாலம்
பொழிலிற் சேர்ந்து தாழ்ந்திரவு
பாவு சயனத் தமர்ந்தருளிப்
பள்ளி கொள்ளக் கனவின்கண். **#2968**

தேவர்களின் தலைவனாய பெருமானின் திருக் கண்டியூரைப் பணிந்து, திருவையாற்றிற்குச் சென்று வணங்கி, திருப் பூந்துருத்தியில் எழுந்தருளியிருக்கும் பெருமானின் திருவடிகளைத் தொழுது போற்றிய பின்னர், ஆனேற்றின் மீது இவர்ந்தருளும் பெருமானின் திருவாலம்பொழிலை அடைந்து வணங்கி, அன்றிரவு அங்குத் தங்கித் துயில்கொள்ளும்பொழுது, அவர் கனவில்,

விளக்கவுரை

இப்பதிகளில் அருளிய பதிகங்கள் எவையும் கிடைத்தில.

மழபா டியினில் வருவதற்கு
நினைக்க மறந்தா யோவென்று
குழகா கியதம் கோலமெதிர்
காட்டி யருளக் குறித்துணர்ந்து
நிழலார் சோலைக் கரைப்பொன்னி
வடபா லேறி நெடுமாடம்
அழகார் வீதி மழபாடி
யணைந்தார் நம்பி யாரூரர். **#2969**

`திருமழபாடி வருதற்கு மட்டுமின்றி நினைக்கவும் மறந்தனையோ?' என்று தோடணிந்த திருக்காதுடன் விளங்கும் பெரு மானார் காட்சி தந்து உணர்த்தியருளலும், துயில் நீங்கிய சுந்தரர், நிழல் மிகும் சோலைகள் சூழ்ந்த காவிரியாற்றின் வடகரையில் ஏறிச் சென்று, நெடிய மாடங்களுடன் அழகிய வீதிகளையும் உடைய திருமழபா டியை அணைந்தார்.

விளக்கவுரை

`நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலே யொர்நால்விரல்' *(தி.7 ப.45 பா.9)* என்பது நம்பிகளின் அநுபவமாதலின், நினைக்கவும் மறந்தனையோ?

என்றார். இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

அணைந்து திருக்கோ புரமிறைஞ்சி
அன்பர் சூழ வுடன்புகுந்து
பணங்கொ ளரவ மணிந்தார்முன்
பணிந்து வீழ்ந்து பரங்கருணைக்
குணங்கொ ளருளின் திறம்போற்றிக்
கொண்ட புளகத் துடனுருகிப்
புணர்ந்த விசையாற் றிருப்பதிகம்
பொன்னார் மேனி என்றெடுத்து. **#2970**

அணைந்தவர், கோயிலின் திருக்கோபுரத்தை வணங்கி, அன்பர்கள் சூழ உள்ளே சென்று, படங்கொண்ட பாம்பை அணிந்த பெருமானின் திருமுன்னிலையில் பணிந்து வீழ்ந்து, மேலாய கருணையையே குணமாகக் கொண்ட பெருமானின் அருட்டிறத்தைப் போற்றி, மயிர்சிலிர்க்க உருகிப் பணிந்து, பொருந்திய இசையில் `பொன்னார் மேனியனே' எனத் தொடங்கும் திருப்பதிகத்தை எடுத்து,

விளக்கவுரை

****

அன்னே யுன்னை யல்லால்யான்
ஆரை நினைக்கேன் எனவேத்தித்
தன்னே ரில்லாப் பதிகமலர்
சாத்தித் தொழுது புறம்பணைந்து
மன்னும் பதியில் சிலநாள்கள்
வைகித் தொண்ட ருடன்மகிழ்ந்து
பொன்னிக் கரையி னிருமருங்கும்
பணிந்து மேல்பாற் போதுவார். **#2971**

`அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக் கேனே?' எனப் பாடிப் போற்றி, தனக்கு ஒப்பில்லாத அப்பதிகமாய மாலையைச் சாத்தித் தொழுது, வெளிவந்து, நிலைபெற்ற அப்பதியில் சில நாள்கள் தங்கி, அடியார்களுடன் மகிழ்ந்து, காவிரியின் இரு புறமும் உள்ள திருப்பதிகள் பலவற்றையும் பணிந்து, மேற்றிசையாகச் செல்பவர்,

விளக்கவுரை

`பொன்னார் மேனியனே'*(தி.7 ப.24)* எனத் தொடங் கும் திருப்பதிகம் நட்டராகப் பண்ணில் அமைந்ததாகும். `அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே' என்பது முதற் பாடலில் வரும் நான்காவது அடியாகும். இப்பதிகம் முழுவதும் இத்தொடர் நிறைவுத் தொடராக வந்துள்ளது. `பொன்னிக் கரையின் இருமருங் கும் போதுவார்' என்றது,

வடகரையில் திருஅன்பிலாலந்துறை, திருத்தவத்துறை, திருக்கானூர், வடகரைத் திருமாந்துறை முதலியன வும், தென்கரையில் திருநியமம், திருவேங்கூர் முதலியனவும் ஆகலாம் எனக் குறிப்பிடுவர் சிவக்கவிமணியார் (பெரிய. பு. உரை). பதிகங்கள் எவையும் கிடைத்தில.

செய்ய சடையார் திருவானைக்
காவி லணைந்து திருத்தொண்டர்
எய்த முன்வந் தெதிர்கொள்ள
இறைஞ்சிக் கோயி லுள்புகுந்தே
ஐயர் கமலச் சேவடிக்கீழ்
ஆர்வம் பெருக வீழ்ந்தெழுந்து
மெய்யு முகிழ்ப்பக் கண்பொழிநீர்
வெள்ளம் பரப்ப விம்முவார். **#2972**

சிவந்த சடையையுடைய பெருமான் அமர்ந்தரு ளும் திருவானைக்காவை அடைய, அங்கு வாழும் அடியவர்கள், இவர் வருகையறிந்து, களிகூர்ந்து, எதிர்கொள்ளத் தாமும் வணங்கி, அவர்களுடன் பெருமானது கோயிலுள் சென்று, சேவடிக் கீழ் ஆர்வம் பெருக வீழ்ந்து எழுந்து, மேனியில் மயிர் முகிழ்த்திட, கண்ணிலிருந்து பொழியும் ஆனந்த வெள்ளம் திருமேனி எங்கும் பரந்து வழியுமாறு திளைப்பவர்,

விளக்கவுரை

****

மறைக ளாய நான்கும்என
மலர்ந்த செஞ்சொல் தமிழ்ப்பதிகம்
நிறையுங் காத லுடனெடுத்து
நிலவு மன்பர் தமைநோக்கி
இறையும் பணிவா ரெம்மையுமா
ளுடையா ரென்றென் றேத்துவார்
உறையூர்ச் சோழன் மணியாரஞ்
சாத்துந் திறத்தை யுணர்ந்தருளி. **#2973**

`மறைகளாயின நான்கும்' என மலர்ந்து வரும் செஞ்சொல் கொண்ட தமிழ்ப் பதிகத்தை உள்ளம் நிறைகின்ற காத லுடன் பாட எடுத்துத், தம்முடன் நின்று வழிபடும் அன்பர்களை நோக்கி, `எம்பெருமானை நாளும் பணிவார்கள் எம்மையும் அடிமை யாக உடையவராவர்' என்று மகிழ்வுடன் போற்றுவார், அத்திருப்பதி யில் முன் வழிபாடாற்றிய உறையூர்ச் சோழ அரசனின் முத்து மாலையை இறைவன் அணிந்தருளிய திருவருட்டிறத்தை உணர்ந் தருளி,

விளக்கவுரை

`மறைகளாயின நான்கும்' எனத் தொடங்கும் பதிகம் காந்தாரப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.75)*. `இறைவன் என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே' எனும் கருத்துப் பாடல்தொறும் வரும் நிறைவுத் தொடராக அமைந்துள்ளது.

வளவர் பெருமான் மணியாரம்
சாத்திக் கொண்டு வரும்பொன்னிக்
கிளருந் திரைநீர் மூழ்குதலும்
வழுவிப் போகக் கேதமுற
அளவில் திருமஞ் சனக்குடத்துள்
அதுபுக் காட்ட அணிந்தருளித்
தளரு மவனுக் கருள்புரிந்த
தன்மை சிறக்கச் சாற்றினார். **#2974**

சோழ மன்னன், அழகிய மணிமாலையை அணிந்து கொண்டு, விரைவாக வரும் காவிரியாற்றில் பெருகும் நீரில் மூழ்குதலும், அவர்தம் முத்து மாலை கழுத்தினின்றும் வழுவிப் போகத் துன்பமுற்று, `ஐயனே! அம்முத்து மாலையை ஏற்றருள்க' என வேண்ட, பெருமானாரும் திருமுழுக்காட்டும் நீரொடு குடத்தில் அது சேருமாறு செய்வித்துத் தமக்குத் திருமுழுக்காட்டக் கொணர்ந்த காவிரி நீருடன் அம்மாலையையும் அணிந்தருளித் தளர்ச்சியுற்ற சோழ அரசனுக்கு அருள்புரிந்த தன்மையையும் அப்பதிகத்துள் சிறப்பித்து அருளினார்.

விளக்கவுரை

இப்பொருளமைந்த பாடல், தாரமாகிய பொன்னித் தண்டுறை ஆடி விழுத்து நீரில் நின்றடி போற்றி நின்மலா கொள்ளென ஆங்கே ஆரம் கொண்டஎம் ஆனைக் காவுடை ஆதியை நாளும் ஈரம் உள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடை யாரே. எனவரும் *(தி.7 ப.75 பா.7)* திருப்பாடலாகும். இவ்வைந்து பாடல் களும் ஒருமுடிபின.

சாற்றி யங்குத் தங்குநாள்
தயங்கும் பவளத் திருமேனி
நீற்றர் கோயில் எம்மருங்கும்
சென்று தாழ்ந்து நிறைவிருப்பால்
போற்றி யங்கு நின்றும்போய்ப்
பொருவி லன்பர் மருவியதொண்டு
ஆற்றும் பெருமைத் திருப்பாச்சில் ஆச்சி ராமம் சென்றடைந்தார். **#2975**

இப்பதிகத்தைப் பாடி அங்குத் தங்கியிருக்கும் நாள்களில், அதன் அருகிலுள்ள ஒளிவளர் பவளமேனியில் ஒளி நீறணிந்து விளங்கும் சிறப்பையுடைய சிவபெருமானின் கோயில்கள் பலவற்றிற்கும் சென்று வணங்கி, நிறைந்த விருப்பால் போற்றி, அங்கி ருந்து ஒப்பற்ற

அன்பர்கள் அருகிலிருந்து இறைவற்குத் தொண்டு செய்யும்
பெருமையுடைய திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் பதிக்குச்
சென்றடைந்தார்.

விளக்கவுரை

கோயில் எம் மருங்கும் என்றது திருச்சிராப்பள்ளி, உறையூர், திருக்கற்குடி முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணி யார் (பெரிய. பு. உரை). பதிகங்கள் எவையும் கிடைத்தில.

சென்று திருக்கோ புரம்இறைஞ்சித்
தேவர் மலிந்த திருந்துமணி
முன்றில் வலங்கொண்டு உள்ளணைந்து
முதல்வர் முன்பு வீழ்ந்திறைஞ்சி
நன்று பெருகும் பொருட்காதல்
நயப்புப் பெருக நாதரெதிர்
நின்று பரவி நினைந்தபொருள்
அருளா தொழிய நேர்நின்று. **#2976**

சென்று திருக்கோபுரத்தை வணங்கித் தேவர்கள் பெருகக் கூடும் திருந்திய மணிகள் பதித்த கோயிலின் திருமுற்றத் தினை வலங்கொண்டு, உட்சென்று, முதல்வராய பெருமானின் திரு முன்பு வீழ்ந்து வணங்கி, பெரிதாகத் தம் உள்ளத்துப் பெருகும் பொருளின் விருப்புப் பெருகிட, அப்பொருளைப் பெற வேண்டிப் பெருமானின் திருமுன் நின்று வணங்கிட, இறைவர் தாம் நினைந்த பொருளை அருளாது ஒழிய, அவர் முன் நின்று,

விளக்கவுரை

****

அன்பு நீங்கா அச்சமுட னடுத்த
திருத்தோழமைப் பணியாற்
பொன்பெ றாத திருவுள்ளம்
புழுங்க அழுங்கிப் புறம்பொருபால்
முன்பு நின்ற திருத்தொண்டர்
முகப்பே முறைப்பா டுடையார்போல்
என்பு கரைந்து பிரானார்மற்
றிலையோ யென்ன வெடுக்கின்றார். **#2977**

அன்பு நீங்காத அச்சமுடன் பெருமானுக்கு உற்ற தோழமையினால், தாம் வேண்டிய பொன்னை விரும்பியவாறு பெறாத அவரது திருவுள்ளம், புழுங்கி, புறம்பாக நின்ற திருத்தொண் டர்களை முன்னிலைப் படுத்தி, அவர்களிடமே தமது முறைப்பாட்டைச் சொல்லிக் கொள்வார்போல,

எலும்பும் கரைந்துருகப், `பிரானார் மற்று இல்லையோ' என்று பாடத் தொடங்குவாராய்,

விளக்கவுரை

****

நித்தமும் நீங்கா நிலைமையின் நீங்கி
நிலத்திடைப் புலங்கெழும் பிறப்பால்
உய்த்தகா ரணத்தை யுணர்ந்துநொந் தடிமை
யொருமையா மெழுமையு முணர்த்தி
எத்தனை யருளா தொழியினும் பிரானார்
இவரலா தில்லையோ யென்பார்
வைத்தனன் தனக்கே தலையுமென் னாவும்
எனவழுத் தினார்வழித் தொண்டர். **#2978**

ஒருநாளும் திருக்கயிலாய மலையை விட்டு நீங்காத பேரின்ப நிலையினின்றும் நீங்குமாறு செய்து, இந்நிலவுல கத்தில் ஐம்புல இன்பங்களால் ஆரத் துய்த்தற்குரிய பிறப்பினைக் கொடுத்த காரணத்தை உணர்ந்து வருந்தி, அடிமைத் திறத்தில் இப்பிறப்பிலன்றி எழுமைக்கும் நான் அடிமை என்பதை விண்ணப் பித்து, எவ்வளவும் இவர் அருளா தொழிந்தாலும் இவரலாது பிரானார் எனக்கு இல்லை என நினைவு கூர்ந்து `வைத்தனன் தனக்கே தலையும்என் நாவும்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியரு ளினர், வழிவழியாக அடிமை செய்துவரும் நம்பியாரூரர்.

விளக்கவுரை

`வைத்தனன் தனக்கே தலையும்என் நாவும்' எனத் தொடங்கும் திருப்பதிகம் தக்கராகப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.14).* `ஒருமையே யல்லேன் எழுமையும் அடியேன் அடியவர்க் கடியனு மானேன்' எனப் பதினோராவது பாடலில் வரும் தொடரையும், பாடல்தொறும் `இவரலா தில்லையோ பிரானார்' என வரும் தொடர்களையும் நினைந்து இவ்வரிய கருத்தினை இப் பாடலில் ஆசிரியர் அருளுவாராயினார். இறைவன்பால் பொன் வேண்ட, அவர் தாராது ஒழிந்த நிலை யில் பாடியது என அருளற்குக் காரணம், நான்காவது பாடலில், `பரிந்து ஓர் பேச்சிலர் ஒன்றைத் தரவிலர் ஆகில்' என்றும், ஒன்பதாவது பாடலில் `பிழைத்தது பொறுத் தொன்று ஈகிலராகில்' என்றும் அருளுவனவேயாம். `இவரலாது இல்லையோ பிரானார்' எனும் தொடர் மேலாக நோக்கின் வெகுளற் குறிப்புடையதாய் இருப்பினும், `ஒருமையே யல்லேன் எழுமையும் அடியேன் அடியவர்க் கடியனு மானேன்' எனவும், `ஏசின வல்ல

இகழ்ந்தன வல்ல' எனவும் அருளும் நம்பியாரூரரின் திருவுள்ளக் கிடக்கையை ஆழ்ந்து கண்ட சேக்கிழார் பெருமான், இறைவன், அருளினும் அருளாதொழியினும், `இவரலாது பிரானார் எனக்கில்லை' என்பதே அவர்தம் திருவுள்ளம் என மொழி மாற்றிப் பொருள் அமைவு காணச் செய்திருப்பது ஆழ எண்ணற் குரியதாம். வழிவழித் தொண்டர் என இவ்விடத்து அவரைக் குறிப் பதும் எண்ணற்குரியதாம். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

இவ்வகை பரவித் திருக்கடைக் காப்பும்
ஏசின வல்லஎன் றிசைப்ப
மெய்வகை விரும்பு தம்பெரு மானார்
விழுநிதிக் குவையளித் தருள
மைவளர் கண்டர் கருணையே பரவி
வணங்கியப் பதியிடை வைகி
எவ்வகை மருங்கு மிறைவர்தம் பதிகள்
இறைஞ்சியங் கிருந்தனர் சில நாள். **#2979**

இவ்வாறு போற்றி, `ஏசின வல்ல' என்று இசைத்த திருக்கடைக்காப்பையும் சேர்த்துப் பாட, உண்மை அன்பையே விரும்பியருளும் பெருமானும், பெரும் பொருள் குவையைக் கொடுத்து அருளலும், நஞ்சு வளரும் கழுத்தினையுடைய பெருமானின் திருக் கருணையையே போற்றித் தொழுது வணங்கி, அப்பதியின் இடத்துத் தங்கி, அவ்விடத்து அருகிலுள்ள இறைவர்தம் கோயில்கள் பலவற்றிற் கும் சென்று வணங்கி, மீளவும் வந்து சிலநாள்கள் அங்கு இருந்தனர்.

விளக்கவுரை

எவ்வகை மருங்கும் உள்ள இறைவர்தம் பதிகளை வணங்கி என்றதற்கேற்ப அறியத்தகும் பதிகள் எவை எனத் தெரிந்தில.

அப்பதி நீங்கி யருளினாற் போகி
ஆவின்அஞ் சாடுவார் நீடும்
எப்பெயர்ப் பதியு மிருமருங் கிறைஞ்சி
இறைவர்பைஞ் ஞீலியை யெய்திப்
பைப்பணி யணிவார் கோபுர மிறைஞ்சிப்
பாங்கமர் புடைவலங் கொண்டு
துப்புறழ் வேணி யார்கழல் தொழுவார்
தோன்றுகங் காளரைக் கண்டார். **#2980**

அப்பதியினின்றும் நீங்கித் திருவருட் சார்பாய்ச் சென்று, பசுவினிடத்துப் பெறும் ஐந்து பொருள்களையும் விரும்பித் திருமுழுக்காடிடும் பெருமான் எழுந்தருளி இருக்கும் காவிரியின் இரு மருங்கிலுமுள்ள எல்லாப் பதிகளையும் வணங்கி, சிவபெருமான் உறைகின்ற திருப்பைஞ்ஞீலியை

அடைந்து, அங்குப் பாம்பினை அணிந்த இறைவரின் கோயில் கோபுரத்தை வணங்கி, உட்புறமுள்ள திருச்சுற்றில் வலமாக வந்து, பவளம்போலும் செஞ்சடையைக் கொண்ட இறைவரைத் தொழுது, அவர் தமக்கு முன்னதாகத் தோன்றும் கங்காள வேடமுடைய பெருமானாரைக் கண்டார்.

விளக்கவுரை

எப்பெயர்ப் பதியும் என்றது திருச்செந்துறை, திருவாலந்துறை, திருத்துடையூர், திருப்பராய்த்துறை முதலியனவாக லாம் என்பர் சிவக்கவிமணியார் *(பெரிய. பு. உரை).*

கண்டவர் கண்கள் காதல்நீர் வெள்ளம்
பொழிதரக் கைகுவித் திறைஞ்சி
வண்டறை குழலார் மனங்கவர் பலிக்கு
வருந்திரு வடிவுகண் டவர்கள்
கொண்டதோர் மயலால் வினவுகூற் றாகக்
குலவுசொற் காருலா வியவென்று
அண்டர்நா யகரைப் பரவிஆ ரணிய
விடங்கராம் அருந்தமிழ் புனைந்தார். **#2981**

கண்ட அளவில் அவர் கண்கள் காதலினால் நீர் வெள்ளம் பொழிந்திடக் கைகளைக் கூப்பி, வண்டுகள் பாடும் மலர்களைச் சூடிய பெண்களின் மனம் கவரும்படி அவர்பால் பிச்சை ஏற்கின்ற பெருமானாருடைய அவ்வடிவைக்கண்டு அவர்கள் அப் பெருமானாரிடம் கொண்டதொரு மயக்க மிகுதியால், வினாவிடும் கூற்றாக விளங்கும் சொற்களையுடைய `காருலாவிய நஞ்சை' எனத் தொடங்கும் பதிகத்தால், தேவாதி தேவர்க்கெல்லாம் தலைவர் ஆன இறைவரைப் போற்றிப் பாடல்தொறும், `ஆரணிய விடங்கராம் இவர்' என அமையும் அப்பதிகத்தைப் பாடி நிறைவு செய்தார்.

விளக்கவுரை

இம்முதற் குறிப்புடைய பதிகம் கொல்லிப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.36).* ஆரணிய விடங்கர் - காட்டை இடமாகக் கொண்டு தாமே தோன்றிய திருவடிவை உடையவர். இத்தொடர் பாடல் தொறும் நின்று, பெருமானை விளிக்கும் தொடராக அமைந்துள்ளது.

பரவியப் பதிகத் திருக்கடைக் காப்புச்
சாத்திமுன் பணிந்தருள் பெற்றுக்
கரவிலன் பர்கள்தங் கூட்டமுந் தொழுது
கலந்தினி திருந்துபோந் தருளி
விரவிய ஈங்கோய் மலைமுத லாக

விமலர்தம் பதிபல வணங்கிக்
குரவலர் சோலை யணிதிருப் பாண்டிக்
கொடுமுடி யணைந்தனர் கொங்கில். #2982

அவ்வாறு போற்றியருளிய அப்பதிகத்திற்குத் திருக்கடைக்காப்பும் சாத்தித் திருமுன்பே பணிந்து, அருள்பெற்று, வஞ்சனையற்ற அன்பர்களது கூட்டத்தையும் முன்னாக வணங்கி அவர்களுடன் கலந்து இனிதிருந்து, அப்பால் சென்று, அருள் பொருந்திய திருஈங்கோய்மலை முதலாகப் பெருமானுடைய பதிகள் பலவும் பணிந்து, குரா மரங்கள் மலரும் சோலைகளையுடைய அழகில் சிறந்த கொங்கு நாட்டில் உள்ள திருப்பாண்டிக்கொடுமுடி என்னும் கோயிலைச் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

ஈங்கோய் மலையிலிருந்து திருப்பாண்டிக்கொடுமுடி வரையிலான பதிகள் பல உள. அவற்றுள் எட்டாம் நூற்றாண்டிற்கு முன் இருந்த கோயில்களை ஆய்ந்து அவற்றை ஈண்டுக் குறித்தல் தகும்.

கொங்கினிற் பொன்னித் தென்கரைக் கறையூர்க்
கொடுமுடிக் கோயில் முன்குறுகிச்
சங்கவெண் குழையா ருழைவலஞ் செய்து
சார்ந்தடி யிணையினில் தாழ்ந்து
பொங்கிய வேட்கை பெருகிடத்தொழுது
புனிதர்பொன் மேனியை நோக்கி
இங்கிவர் தம்மை மறக்கவொண் ணாதென்
றெழுந்தமெய்க் குறிப்பினி லெடுப்ப. #2983

கொங்குநாட்டில் காவிரியாற்றின் தென்கரையில் உள்ள கறையூரில் திருப்பாண்டிக்கொடுமுடி என்னும் கோயில் முன்னாகச் சென்று, சங்கினால் ஆய வெண்தோடணிந்த பெருமானது கோயிலை வலமாக வந்து, பெருமானைச் சார்ந்து, திருவடிகளை அன்பால் தாழ்ந்து வணங்கி, பொங்கிடும் வேட்கை பெருகிடத் தொழுது, புனிதனாய அம்மூர்த்தியின் பொன்மேனியை நோக்கி, இங்கு இவர்தம்மை மறக்க முடியாது என்று எழுந்த உண்மைக் குறிப்பால் திருப்பதிகம் பாடி எடுத்திட்டு,

விளக்கவுரை

****

அண்ணலா ரடிகள் மறக்கினுநாம
அஞ்செழுத் தறியவெப் பொழுதும்
எண்ணிய நாவே யின்சுவை பெருக
இடையறா தியம்புமென் றிதனைத்
திண்ணிய வுணர்விற் கொள்பவர் மற்றுப்

பற்றிலேன் எனச்செழுந் தமிழால்
நண்ணிய அன்பிற் பிணிப்புற நவின்றார்
நமச்சிவா யத்திருப் பதிகம். **#2984**

`தலைமை சான்ற பெருமானுடைய திருவடிகளை என் மனம் மறந்தாலும், அவருடைய நாமமாகிய ஐந்தெழுத்தினை எப்பொழுதும் எண்ணிய என் நாவே இனிய சுவை பெருக இடை யறாது சொல்லிடும்' என்ற இதனைத் தமது திண்மையான உணர்வி னிற் கொள்பவர், `மற்றுப் பற்றெனக்கின்றி' என்று தொடங்கும் செழு மையாய தமிழால் பொருந்திய நமச்சிவாயப் பதிகத்தை அன்பினால் பெருமானாரைப் பற்றிய வாறு பாடி அருளினார்.

விளக்கவுரை

`மற்றுப் பற்றெனக்கின்றி' என்று தொடங்கும் பதிகம் பழம்பஞ்சுரப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.48)*. பாடல்தொறும், இறைவனே! நின்னை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே எனும் கருத்தால் நிறையும் தொடர் வருதலின், இப்பதிகத்தை நமச்சிவாயப் பதிகம் என்பர். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

உலகெ லாம்உய்ய உறுதியாம் பதிகம்
உரைத்துமெய் யுணர்வறா வொருமை
நிலவிய சிந்தை யுடன்திரு வருளால்
நீங்குவார் பாங்குநற் பதிகள்
பலவுமுன் பணிந்து பரமர்தாள் போற்றிப்
போந்துதண் பனிமலர்ப் படப்பைக்
குலவுமக் கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர்
குறுகினார் முறுகுமா தரவால். **#2985**

உலகெலாம் ஓதி உய்ய உறுதியாய அப்பதிகத்தைப் பாடியருளி, உண்மையாம் உணர்வினில் ஒருமைப்பாடு நிலவிய சிந்தையுடன், திருவருட் பேற்றினால் நிறைந்து, பெருமானது திரு முன்னின்றும் நீங்கிச் சென்றிடும் அவர், அத்திருக்கோயிலின் புறத்தாக உள்ள பல திருப்பதிகளுக்கும் சென்று பணிந்து, பெருமானுடைய திருவடிகளைப் போற்றி அப்பால் சென்று, குளிர்ந்த நல்ல மலர்கள் நெருங்கிச் செறிந்த மேல் கொங்கு நாட்டில் உள்ள காஞ்சிவாய்ப் பேரூர் என்னும் திருப்பதிக்குச் சென்று, மீதூர்ந்த அன்பின் எழுச்சி யோடு சேர்வுற்றார்.

விளக்கவுரை

`மீகொங்கில் அணி காஞ்சிவாய்' என்பது ஆரூரர் திருவாக்காகும். ஆதலின் ஆசிரியர் சேக்கிழாரும் `மீகொங்கில்' எனும் தொடரை எடுத்தாளுவாராயினர். காஞ்சி - ஆறு. இது பேரூருக்கு மேற்கே

வெள்ளிமலைச் சாரலில் வன்னி மூலத்தில் தோன்றிப் பேரூர் வரும்வரைக் காஞ்சி நதி என அழைக்கப்பட்டு வருகிறது. பின் இவ்வாறு காவிரியில் கூடும் வரை நொய்யல் ஆறு என அழைப்பர்.மீகொங்கு - மேற்குப் பகுதியிலுள்ள கொங்கு. கொங்கு நாடா னது, கீழ்க்கொங்கு, மேல் கொங்கு, வட கொங்கு என்னும் முப்பிரிவு களைஉடையது. பாங்கு நற்பதிகள் என்பன மேல்கொங்கு நாட்டிலும், காவிரிக் கரையிலுமாக உள்ள திருக்கோயில்களாகலாம் என்பர் சிவக்கவிமணியார் (பெரிய. பு. உரை). சிவன்மலை, சென்னிமலை, ஊதியூர்மலை, பெருந்தலையூர், குரக்குத்தளி முதலிய குன்றின் கண்ணுள்ள கோயில்களாகலாம் என்றும் அவர் கூறுவர்.

அத்திருப் பதியை யணைந்துமுன் தம்மை
யாண்டவர் கோயிலுள் புகுந்து
மெய்த்தவர் சூழ வலங்கொண்டு திருமுன்
மேவுவார் தம்மெதிர் விளங்க
நித்தனார் தில்லை மன்றுள்நின் றாடல்
நீடிய கோலம்நேர் காட்டக்
கைத்தலங் குவித்துக் கண்களா னந்தக்
கலுழிநீர் பொழிதரக் கண்டார். **#2986**

அக்காஞ்சிப் பேரூருக்குச் சென்று, தம்மை ஆட்கொண்டருளிய பெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயிலை அணைந்து, உண்மை நிறைந்த அடியவர் கூட்டம் சூழ்ந்திட, வலங் கொண்டு, இறைவனின் திருமுன்பு சென்றிடும் அவர், தம் முன்னி லையில், விளக்கமுற என்றும் நிலைபெற்ற பொருளாய இறைவன், தில்லையில் நின்று ஆடிடும் நீடிய கோலத்தை நேராகக் காட்டியருளத் தம் கைகளை உச்சி மீது குவித்துக் கண்களினின்றும் பெருகிவரும் நீர் சொரிந்திடக் கண்டருளினார்.

விளக்கவுரை

பேரூர் முற்காலத்தே பெரிய நகராக விளங்கியதாதலை இதனால் அறியலாம். மேலைச் சிதம்பரம், ஆதிபுரி, பிறவாநெறி என அழைக்கப் பெற்றமை கொண்டு, இது புண்ணியப் பதியாதலையும் அறியலாம். பெருமானின் தில்லைக் காட்சியை இங்குக் கண்டதாகச் சேக்கிழார் கூறுகின்றார். தில்லையில் சுந்தரர் தாம் வழிபட்ட பொழுது `பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்றா மன்றே' *(தி.7 ப.90 பா.10)* எனச் சுந்தரர் கூறுகின்றார் `ஒருவன் என்னும் ஒருவன் காண்க' *(தி.8 ப.4 வரி.43)* எனவரும் திருவாக்கை நினைவு கூர்க.

காண்டலும் தொழுது வீழ்ந்துஉட னெழுந்து
கரையிலன் பென்பினை யுருக்கப்
பூண்டஐம் புலனிற் புலப்படா இன்பம்

புணர்ந்துமெய் யுணர்வினிற் பொங்கத்
தாண்டவம் புரியுந் தம்பிரா னாரைத்
தலைப்படக் கிடைத்தபின் சைவ
ஆண்டகை யாருக் கடுத்தஅந் நிலைமை
விளைவையார் அளவறிந் துரைப்பார். **#2987**

காண்டலும் தொழுது வீழ்ந்து, உடன் எழுந்து, கரையிலாது எழும் அன்பு என்பினையும் உருக்கிடத் தம்மிடத்துக் கொண்ட ஐம்புலன்களுக்கும் புலப்படாத இன்பத்தை அடைந்து, அவ்வின்பம் உண்மை உணர்வில் பொங்கிடக் கூத்தியற்றுதலில் வல்ல பெருமானைத் தலைப்படுமாறு கிடைத்தபின், சைவ ஆண்டகையரா‌ய நம்பிகளுக்கு, அடுத்து நேர்ந்த அவ்வருட் பேற்றின் நிலையை ஆர்அளவறிந்து உரைப்பார்கள்? எவருமிலர் என்பதாம்.

விளக்கவுரை

****

அந்நிலை நிகழ்ந்த ஆரருள் பெற்ற
அன்பனார் இன்பவெள் ளத்து
மன்னிய பாடல் மகிழ்ந்துடன் பரவி
வளம்பதி யதனிடை மருவிப்
பொன்மணி மன்றுள் எடுத்தசே வடியார்
புரிநடங் கும்பிடப் பெற்றால்
என்னினிப் புறம்போய் எய்துவ தென்று
மீண்டெழுந் தருளுதற் கெழுவார். **#2988**

அவ்வாறாக நிகழ்ந்த பேரருளைப் பெற்ற அன்பராகிய நம்பிகள், தம் இன்ப வெள்ளத்துள் மலர்ந்த பாடலை மகிழ்ந்து உடன் போற்றி, வளம் நிறைந்த அப்பதியிடைப் பொருந்தி, பொன் மணியாலாய அடைதற்கரிய சபையில் எடுத்து நின்றாடிய திருவடிகளைக் கும்பிடப் பெற்றால், இனிப் புறம்பு சென்று போற்றுவது என்? (ஏதும் இன்று) எனும் கருத்துடன் அவ்விடத்தினின்றும் எழுந் தருளிச் செல்வதற்கு முற்படுவாராகி,

விளக்கவுரை

இப்பதிகம் கிடைத்திலது.

ஆயிடை நீங்கி அருளினால் செல்வார்
அருவரைச் சுரங்களும் பிறவும்
பாயுநீர் நதியும் பலபல கடந்து
பரமர்தம் பதிபல பணிந்து
மேயவண் தமிழால் விருப்பொடும் பரவி
வெஞ்சமாக் கூடலும் பணிந்து

சேயிடை கழியப் போந்துவந் தடைந்தார்
தென்திசைக் கற்குடி மலையில். **#2989**

அவ்விடத்தினின்றும் நீங்கிப் பெருமானாரின் அருளைப் பெற்றுச் சென்றிடும் நம்பிகள், அரிய மலைச் சுரங்களை யும், பிற நிலப்பகுதிகளையும், நீருடைய ஆறுகளையும் கடந்து, இடைப்பட்ட பெருமானுடைய பதிகள் பலவும் பணிந்து, பொருந்திய வளம் மிக்க தமிழால் விருப்புடன் போற்றித் திருவெஞ்சமாக் கூடலையும் வணங்கி, நெடுந்தொலைவு கடந்து, தென்திசையில் உள்ள திருக்கற்குடி மலைக்கு வந்தார்.

விளக்கவுரை

நதிகள் பல கடந்து என்றது, அமராவதி, நன்காஞ்சி, சிற்றாறு, குழகனாறு முதலாயினவாகலாம் என்றும், பதிகள் பல என்றது மூலனூர், தென்னிலை, கருவூர் முதலியனவாகலாம் என்றும் கருதுவர் சிவக்கவிமணியார் (பெரிய. பு. உரை). திருவெஞ்சமாக்கூடலில் அருளிய பதிகம், `எறிக்கும்' (தி.7 ப.42) எனத்தொடங்கும் கொல்லிக் கௌவாணப் பண்ணில் அமைந்த பதிகமாகும். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வீடு தரும்இக் கற்குடியில்
விழுமி யாரைப் பணிந்திறைஞ்சி
நீடு விருப்பில் திருப்பதிகம்
நிறைந்த சிந்தை யுடன்பாடிப்
பாடும் விருப்பில் தொண்டருடன்
பதிகள் பலவும் அணைந்திறைஞ்சித்
தேடு மிருவர் காண்பரியார்
திருவா றைமேற் றளிசென்றார். **#2990**

வீடுபேற்றை வழங்கிடும் இக்கற்குடிமலையில், நினைத்தற்கரிய மிகு இனிமையுடைய பெருமானைப் பணிந்து, போற்றி, மீதூர்ந்த விருப்பில், நிறைந்த சிந்தையுடன் திருப்பதிகம் பாடி யருளி, மேலும் பெருமானாரைப் பாடும் விருப்பில், அடியார்களுடன் பல பதிகளும் சென்று வணங்கி, தேடிநின்ற அயன், திருமால் ஆகிய இருவருக்கும் காண்டற்கரிய கடவுளின் திருஆறைமேற்றளி என்னும் திருப்பதிக்குச் சென்றார்.

விளக்கவுரை

திருக்கற்குடியில் அருளிய பதிகம் `விடையார்' எனத் தொடங்கும் நட்டராகப் பண்ணில் அமைந்த பதிகமாகும் (தி.7 ப.27).

செம்பொன் மேருச் சிலைவளைத்த
சிவனார் ஆறை மேற்றளியில்

நம்பர் பாதம் பணிந்திறைஞ்சி
நாளு மகிழ்வார்க் கருள்கூட
உம்பர் போற்றுந் தானங்கள்
பலவும் பணிந்து போந்தணைவார்
இம்பர் வாழ இன்னம்பர்
நகரைச் சேர வெய்தினார். #2991

சிவந்த பொன்னான மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமான் உறையும் திருஆறைமேற்றளி என்னும் பதியில் பெருமானுடைய திருவடிகளைப் பணிந்து வணங்கி, நாளும் மகிழ்கின்ற நம்பிகளுக்குத் திருவருள் கூடிட, அப்பாலும் சென்று தேவர்கள் போற்றும் கோயில்கள் பலவும் சென்று பணிந்து வருவார், இவ்வுலகு வாழத் திருஇன்னம்பர் என்னும் நகரைச் சென்றடைந்தார்.

விளக்கவுரை

திருஆறை மேற்றளியில் அருளிய பதிகம் கிடைத்திலது. பதிகள் பலவும் என்பன திருச்சத்திமுற்றம், திருப்பட்டீச்சுரம், திருப்பழையாறை, பழையாறைவடதளி, திருவலஞ்சுழி முதலாயின வாகலாம் என்பர் சிவக்கவிமணியார் (பெரிய. பு. உரை).

ஏரின் மருவும் இன்னம்பர்
மகிழ்ந்த ஈசர் கழல்வணங்கி
ஆரு மன்பிற் பணிந்தேத்தி
ஆரா அருளால் அங்கமர்வார்
போரின் மலியுங் கரியுரித்தார்
மருவும் புறம்ப யம்போற்றச்
சேரும் உள்ளம் மிக்கெழமெய்ப்
பதிகம் பாடிச் செல்கின்றார். #2992

அழகு பொருந்திய திருஇன்னம்பரில் மகிழ்ந்தருளி இருக்கும் இறைவனின் திருவடிகளைப் பணிந்து, உள்ளம் நிறையும் அன்பினால் போற்றி செய்து, தெவிட்டாத அருளின் பெருக்கால் இன்புற்று, அங்கு அமர்ந்தருளும் நம்பிகள், போர்த்தொழிலில் மிகு விருப்பங்கொண்டு திரியும் கயாசுரன் என்னும் யானையை உரித்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருப்புறம்பயம் என்னும் திருப் பதிக்கும் சென்று, போற்றுதற்குப் பொருந்திய உள்ளம் மிகவும் வேட்கை எய்த, அங்குச் செல்பவர், செல்லும்போது திருப்பதிகம் பாடியவாறே செல்வாராய்,

விளக்கவுரை

****

அங்க மோதியோ ராறை மேற்றளி

யென்றெ டுத்தமர் காதலில்
பொங்கு செந்தமி ழால்வி ரும்பு
புறம்ப யந்தொழப் போதும்என்
றெங்கும் மன்னிய இன்னி சைப்பதி
கம்பு னைந்துட னெய்தினார்
திங்கள் சூடிய செல்வர் மேவு
திருப்பு றம்பயஞ் சேரவே. **#2993**

`அங்கம் ஓதி ஓர் ஆறை மேற்றளி' எனத் தொடங் கிப் பெருமானிடம் பொருந்திய காதலால் பொங்கி எழும் செந்தமிழால், தாம் விரும்பிய `புறம்பயம் தொழப்போதும்' என்று, எங்கும் பரவிய இன்னிசையுடைய தேவாரப் பதிகத்தைப் பாடிக் கொண்டு, திங்களைச் சூடிய இறைவர் வீற்றிருந்தருளும் திருப்புறம் பயம் என்னும் பதிக்குச் சென்றார்.

விளக்கவுரை

இத்தொடக்கமுடைய பதிகம் கொல்லிப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.35).* இப்பதிகத்தின் முதற் பாடலில் வரும் `அங்கம் ஓதி ஓர் ஆறை மேற்றளி நின்றும் போந்து வந்து இன்னம்பர்த், தங்கினோமையும் இன்னதென்றிலர் ஈசனார் எழுநெஞ்சம்' எனவரும் பகுதி, நம்பிகள் தொடர்ந்து போந்தருளும் திருப்பதிச் (தல யாத்திரை) செலவினை அறியவும் வாயிலாயுள்ளது. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அப்ப திக்கண் அமர்ந்த தொண்டரும்
அன்று வெண்ணெய்நல் லூரினில்
ஒப்ப ருந்தனி வேதி யன்பழ
வோலை காட்டிநின் றாண்டவர்
இப்ப திக்கண்வந் தெய்த என்ன
தவங்கள் என்றெதிர் கொள்ளவே
முப்பு ரங்கள் எரித்த சேவகர்
கோயில் வாயிலில் முன்னினார். **#2994**

அத்திருப்பதிக்கண் வாழும் தொண்டர்களும், இவர்தம் வருகையறிந்து, அன்று திருவெண்ணெய்நல்லூரில் ஒப்பற்ற சிறந்த அந்தணனாய் வந்து பழமையான ஓலை ஒன்றினைக் காட்டி ஆண்டு கொண்டருளப் பெற்ற பேரருளாளராய நம்பிகள், இத்திருப்பதிக்கு வந்து சேர்ந்திட, `என்ன தவங்கள் நாம் செய்தனம்' எனப் போற்றிச் சென்று, அவரை எதிர்கொண்டிட, அவர்களுடன் கூடி முப்புரங்களையும் எரிசெய்த சிவபெருமான் அமர்ந்தருளும் அக்கோயிலின் திருவாயிலைச் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

****

நீடு கோபுர முன்பி றைஞ்சி
நிலாவு தொண்டரொ டுள்ளணைந்து
ஆடன் மேவிய வண்ண லாரடி
போற்றி யஞ்சலி கோலிநின்று
ஏடு லாமலர் தூவி எட்டினொ
டைந்து மாகும் உறுப்பினாற்
பீடு நீடு நிலத்தின் மேற்பெரு
கப்ப ணிந்து வணங்கினார். **#2995**

நீண்ட கோபுரத்தின் முன்பாக வணங்கித், தம்முடன் கூடிய அடியாருடன் உட்சென்று, அங்கு உலகெலாம் உய்ய நடமாடும் பெருமானின் திருவடிகளையும் வணங்கிக் கைகள் கூப்பி நின்று, மணம் கமழும் இதழ்கள் விரிந்த மலர்களைத் தூவி, உறுப்புக்கள் எட்டுடனும் ஐந்துடனுமாய பெருமை நீடிய நிலமிசைப் பொருந்திய வணக்கங்களைச் செய்தார்.

விளக்கவுரை

****

அங்கு நீடருள் பெற்றுஉள் ஆர்வம்
மிகப்பொ ழிந்தெழு மன்பினால்
பொங்கு நாண்மலர்ப் பாத முன்பணிந்
தேத்தி மீண்டு புறத்தணைந்
தெங்கு மாகி நிறைந்து நின்றவர்
தாம கிழ்ந்த விடங்களில்
தங்கு கோல மிறைஞ்சு வாரருள்
தாவி லன்பரோ டெய்தினார். **#2996**

அங்கு இறைவனின் பேரருளைப் பெற்று, உள்ளத்தில் ஆர்வம் மிகப் பொழிந்து எழுகின்ற அன்பினால் பொங்கி மலர்ந்திடும் பூப்போன்ற அழகிய திருவடிகளை முன்பாகப் பணிந்து போற்றி, மீண்டு வெளியே வந்து, எங்குமாகி நிறைந்து விளங்குகின்ற பெருமான் மகிழ்ந்து உறைகின்ற கோயில்களில் ஆங்காங்கு அவர் கொண்டிருக்கும் திருக்கோலங்களைக் கண்டு பணிவாராகிய நம்பிகள், அருள் நிறைந்த குறைவில்லாத அன்பர்களுடன் சென்றார்.

விளக்கவுரை

திருப்புறம்பயத்தில் பெருமான் முன்பு நின்று போற்றிய பதிகம் கிடைத்திலது.

வம்புநீ டலங்கல் மார்பின்

வன்றொண்டர் வன்னி கொன்றை
தும்பைவெள் ளடம்பு திங்க
டூயநீ ரணிந்த சென்னித்
தம்பிரா னமர்ந்த தானம்
பலபல சார்ந்து தாழ்ந்து
கொம்பனா ராடல் நீடு
கூடலை யாற்றூர் சார. #2997

நறுமணம் மிக்க மாலை அணிந்த மார்பினை உடைய ஆரூரர், வன்னி, கொன்றை, தும்பை, வெள்ளெருக்கு, இளம் பிறை, தூய கங்கைநீர் ஆகியவற்றை அணிந்த சடையையுடைய சிவ பெருமான் இருந்தருளும் திருப்பதிகள் பலவற்றையும் வணங்கிப் பூங்கொடியின் வனப்புடைய பெண்கள் ஆடல் மிகுந்த கூடலை ஆற்றூரை அணுக,

விளக்கவுரை

தானம் பல பல என்பன, கோவந்த புத்தூர், பழுவூர், கடம்பூர்கரக் கோயில், கடம்பை இளங்கோயில் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார்.

செப்பரும் பதியிற் சேரார்
திருமுது குன்றை நோக்கி
ஒப்பரும் புகழார் செல்லும்
ஒருவழி யுமையா ளோடும்
மெய்ப்பரம் பொருளா யுள்ளார்
வேதிய ராகி நின்றார்
முப்புரி நூலுந் தாங்கி
நம்பியா ரூரர் முன்பு. #2998

ஆயினும், ஒப்பற்ற புகழுடைய சுந்தரர் பெருமான் சொலற்கரிய பெருமையுடைய திருக்கூடலையாற்றூருக்குச் சேராதவ ராய்த் திருமுதுகுன்றை நோக்கிச் செல்லலும், அவ்வழியில் உமையம் மையாரோடு வீற்றிருந்தருளும் உண்மையான மேலான பொருளாக விளங்கும் சிவபெருமான், ஓர் அந்தணர் வடிவு கொண்டு, முப்புரி நூல் அணிந்து அவர் முன்பு நின்றார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

நின்றவர் தம்மை நோக்கி
நெகிழ்ந்தசிந் தையராய்த் தாழ்வார்
இன்றியாம் முதுகுன் றெய்த
வழியெமக் கியம்பும் என்னக்

குன்றவில் லாளி யாரும்
கூடலை யாற்றூர் ஏறச்
சென்றதிவ் வழிதானென்று
செல்வழித் துணையாய்ச் செல்ல. **#2999**

அவ்வழியில் நின்ற அந்தணர் பெருமானை, நம்பிகள் நோக்கி, நெகிழ்ந்த சிந்தை உடையவராகித் தாழ்ந்து வணங்கி, `இன்று யாம் திருமுதுகுன்றத்தைச் சேர்தற்குரிய வழியைச் சொல்லும்' என்னலும், அதுபொழுது மேருமலையை வில்லாக உடைய சிவ பெருமான் அவரை நோக்கிக் `கூடலையாற்றூரை அடைதற்குரிய வழி இதுவாகும்' என்று கூறியருளித் தாமும் அவருக்கு வழித்துணையாகச் சென்றிடலும்,

விளக்கவுரை

****

கண்டவர் கைகள் கூப்பித்
தொழுதுபின் தொடர்வார்க் காணார்
வண்டலர் கொன்றை யாரை
வடிவுடை மழுவென் றேத்தி
அண்டர்தம் பெருமான் போந்த
அதிசயம் அறியே னென்று
கொண்டெழு விருப்பி னோடும்
கூடலை யாற்றூர் புக்கார். **#3000**

அந்தணனாய எம்பிரான் வழித்துணையாக முன் போகக் கண்டு, கைகள் கூப்பித் தொழுது, பின்னாகச் செல்பவர், முன் போன அந்தணனாரைக் காணாதவராகி, வண்டுகள் மொய்க்க இதழ் விரிந்து விளங்கும் மலர் சூடிய சிவபெருமானை உடன் நினைந்து தொழுது, `வடிவுடை மழு' எனத் தொடங்கும் பதிகம் பாடிப் போற்றித் தேவர்கள் தலைவனாம் சிவபெருமானார் `இவ்வழிப் போந்த அதி சயம் அறியேன் யான் ' என அப்பதிகத்து மொழிந்து, எம்பிரான் மீது கொண்டெழுகின்ற பெருவிருப்பத்துடன் திருக்கூடலையாற்றூருக்குச் சென்றருளினார்.

விளக்கவுரை

`வடிவுடை மழு' எனத் தொடங்கும் பதிகம் புறநீர்மைப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.85)*. `இவ்வழி போந்த அதிசயம் அறியேனே' எனப் பாடல்தொறும் வரும் நிறைவுத் தொடர் ஆசிரியர் சேக்கிழார் அருளும் இவ்வரலாற்றிற்கு அரணாய் அமைந்துள்ளமை அறியத்தக்கது. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

கூடலை யாற்றூர் மேவும்
கொன்றைவார் சடையி னார்தம்
பீடுயர் கோயில் புக்குப்
பெருகிய ஆர்வம் பொங்க
ஆபுகப் பொதுவி லாடும்
அறைகழல் வணங்கிப் போற்றி
நீடருள் பெற்றுப் போந்து
திருமுது குன்றி னேர்ந்தார். **#3001**

அத்திருநகரில் வீற்றிருந்தருளும், கொன்றை மலர் சூடிய சடையையுடைய, பெருமானது பெருமை மிகுந்த கோயிலி னுள் புகுந்து, உள்ளத்துப் பெருகிய ஆர்வம் பொங்கிட, பொன்னா லாய திருச்சபையில் திருக்கூத்தியற்றும் பெருமானின் வீரக்கழலை யணிந்த திருவடிகளை வணங்கிப் போற்றிப் பேரருள் பெற்றுப் பின் திருமுதுகுன்றத்தைச் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

திருமுன்பு நின்று அருளிய பதிகம் கிடைத்திலது.

தடநிலைக் கோபு ரத்தைத்
தாழ்ந்துமுன் னிறைஞ்சிக் கோயில்
புடைவலங் கொண்டு புக்குப்
போற்றினர் தொழுது வீழ்ந்து
நடநவில் வாரை நஞ்சி
யிடை எனுஞ் செஞ்சொன் மாலைத்

தொடைநிகழ் பதிகம் பாடித்
தொழுதுகை சுமந்து நின்று. **#3002**

பெருகிய நிலைகளையுடைய கோபுரத்தை முன் வணங்கிக் கோயிலைச் சூழ வலம் வந்து புகுந்து, எஞ்ஞான்றும் மாறாது கூத்தியற்றிவரும் பெருமானைக் கண்ட அளவிலேயே கை தொழுது வீழ்ந்து, `நஞ்சியிடை' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடித் தொழுது, தலைமேல் கூப்பிய கையராய் நின்று,

விளக்கவுரை

`நஞ்சியிடை' எனத் தொடங்கும் திருப்பதிகம் கொல்லிக் கௌவாணப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.43).*

நாதர்பாற் பொருள் தாம் வேண்டி
நண்ணிய வண்ண மெல்லாம்
கோதறு மனத்துட் கொண்ட
குறிப்பொடும் பரவும் போது
தாதவிழ் கொன்றை வேய்ந்தார்
தரஅருள் பெறுவார் சைவ
வேதியர் தலைவர் மீண்டும்
மெய்யில்வெண் பொடியும் பாட. **#3003**

குற்றமற்ற தம் மனத்தில், தம் தலைவர்பால் பொருள் வேண்டிவந்த குறிப்போடும் வணங்கும் பொழுது, இதழ்கள் விரிந்த கொன்றை மலரைச் சூடிய பெருமான் பொருள் தர, அருள் பெறுவாராய நம்பிகள், மீண்டும் திருமுதுகுன்றத்து இறைவரை `மெய் யில் வெண்பொடி' எனத் தொடங்கும் பதிகம் பாடிடலும்,

விளக்கவுரை

`மெய்யை முற்றப் பொடிபூசி' *(தி.7 ப.63)* எனத் தொடங் கும் திருப்பதிகம் தக்கேசிப் பண்ணில் அமைந்ததாகும். பாடலில் வரும் சொற்கிடக்கையைச் சிறிது மாற்றி, மெய்யில் வெண்பொடியும் பாட என்றருளினார்.

பனிமதிச் சடையார் தாமும்
பன்னிரண் டாயி ரம்பொன்
நனியருள் கொடுக்கு மாற்றால்
நல்கிட உடைய நம்பி
தனிவரு மகிழ்ச்சி பொங்கத்
தாழ்ந்தெழுந் தருகு சென்று
கனிவிட மிடற்றி னார்முன்
பின்னொன்று கழற லுற்றார். **#3004**

குளிர்ந்த பிறையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமானும், அவருக்குப் பன்னிரண்டாயிரம் பொன்னினை மிகவும் அருள் செய்யும் வகையில் கொடுத்திடலும், ஆளுடைய நம்பிகளுக்குத் தனித்துத் தமது உள்ளத்து எழும் மகிழ்ச்சி பொங்கிட, பெருமானைத் தாழ்ந்து வணங்கி, எழுந்து, அருகாகச் சென்று, கனிந்த நஞ்சை உண்டருளிய கழுத்தினை உடைய பெருமான் திருமுன்பு நின்று, மேலும் விண்ணப்பிப்பாராய்,

விளக்கவுரை

****

அருளும்இக் கனக மெல்லாம்
அடியனேற் காரூ ருள்ளோர்
மருளுற வியப்ப அங்கே
வரப்பெற வேண்டு மென்னத்
தெருளுற வெழுந்த வாக்கால்
செழுமணி முத்தாற் றிட்டிப்
பொருளினை முழுதும் ஆரூர்க்
குளத்திற்போய்க் கொள்க வென்றார். **#3005**

பெருமான் எனக்குத் தந்தருளிய இப்பொன் எல்லாம், திருவாரூரில் உள்ளார் கண்டு மருட்சியுறவும், அதிசயித் திடும்படியாகவும் அங்கு வரும்படி செய்தல் வேண்டுமென்று வேண்டி டலும், அதுபொழுது அவர் தெளிவு கொள்ளும்படி, வானில் எழுந்த திருவாக்கால், `ஆரூரனே! செழுமையான மணிமுத்தாற்றில் இட்டு, இப்பொருளை எல்லாம் திருவாரூர்க் குளத்தில் போய்ப் பெற்றுக் கொள்வாய்!' என்றருளினார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

என்றுதம் பிரானார் நல்கும்
இன்னருள் பெற்ற பின்னர்
வன்றொண்டர் மச்சம் வெட்டிக்
கைக்கொண்டு மணிமுத் தாற்றில்
பொன்றிரள் எடுத்து நீருள்
புகவிட்டுப் போது கின்றார்
அன்றெனை வலிந்தாட் கொண்ட
அருளிதில் அறிவே னென்று. **#3006**

தம் பெருமானார் அருளிய வானொலியைக் கேட்ட பின்னர், வன்றொண்டராய நம்பிகள், அப்பொன்னின் அடை யாளம் தெரிதற்காக ஒரு துண்டினை வெட்டி, அதனைக் கையிற் கொண்டு, ஏனைய பொன்னின் திரளை அழகிய மணிமுத்தாற்றில் சேருமாறு விடுத்துத்

திருவாரூர் நோக்கிப் போகின்றவர், `அன்று எனைத் தாமே வலிய வந்து ஆட்கொண்டருளிய இறைவனின் திரு வருளை, இச்செயலில் மீளவும் அறிவேன்' என்று,

விளக்கவுரை

****

மேவிய காதல் தொண்டு
விரவுமெய் விருத்தி பெற்றார்
ஆவியின் விருத்தி யான
அந்தணர் புலியூர் மன்றில்
காவியங் கண்டர் கூத்துக்
கண்டுகும் பிடுவன் என்று
வாவிசூழ் தில்லை மூதூர்
வழிக்கொள்வான் வணங்கிப் போந்தார். **#3007**

பெருமானிடத்துப் பொருந்திய பெருவிருப்பால் தொண்டு செய்து, உடற்கு வளர்ச்சி தரும் பொன்னைப் பெற்றவர், உயிர்க்கு வளர்ச்சி தரும் (நிலையான இன்பம்) அந்தணர்கள் போற் றும், புலியூரெனும் தில்லைப்பகுதியின் கண்ணுள்ள கனகசபையில் நீல கண்டப் பெருமானின் திருக்கூத்தைக் கண்டு கும்பிடுவன் என்று கருதி, குளங்கள் சூழ்ந்த தில்லை என்னும் ஊரை நோக்கிச் செல்லும் நோக்கத்தில், திருமுதுகுன்றப் பெருமானை வணங்கிப் போயினார்.

விளக்கவுரை

****

மாடுள பதிகள் சென்று
வணங்கிப்போய் மங்கை பாகர்
நீடிய கடம்பூர் போற்றி
நிறைந்தஆ னந்தக் கூத்தர்
ஆடிய தில்லை மூதூர்
அணைந்தணி வாயில் புக்குச்
சேடுயர் மாட மன்னுஞ்
செழுந்திரு வீதி சார்ந்தார். **#3008**

செல்லும் வழியில் இடைப்பட்ட பதிகள் பலவும் வணங்கிச் சென்று, உமையொரு கூறராய சிவபெருமான் வீற்றிருக் கும் திருக்கடம்பூரை அடைந்து, பெருமானைப் போற்றி, உள்ளம் நிறைந்த பெருமகிழ்வை வழங்கி அருளும் கூத்துடைய பெருமான் ஆடி அருளும் தில்லை என்னும் மூதூரை (பழைய நகரை) அணைந்து, அழகிய திருவாயிலின் ஊடாக உட்புகுந்து, மிகவும் உயர்ந்த மாடங்கள் விளங்கும் செழுமையான

திருவீதியைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

மாடுள பதிகள் என்பன, திருமுதுகுன்றத்திற்கும், திருத் தில்லைக்கும் இடையிலுள்ள பதிகளாய திருஎருக்கத்தம்புலியூர் முதலாயினவாகலாம். கடம்பூரில் அருளிய பதிகம் கிடைத்திலது.

பொற்றிரு வீதி தாழ்ந்து
புண்ணிய விளைவாய் ஓங்கும்
நற்றிரு வாயில் நண்ணி
நறைமலி யலங்கல் மார்பர்
மற்றதன் முன்பு மண்மேல்
வணங்கியுட் புகுந்து பைம்பொன்
சுற்றுமா ளிசைழ் வந்து
தொழுதுகை தலைமேற் கொள்வார். **#3009**

பொலிவு மிக்க அவ்வீதியைத் தாழ்ந்து வணங்கி, புண்ணியத்தின் விளைவாய் ஓங்கிய நல்ல திருவுடைய கோயிலின் வாயிலை அடைந்து, மணம் நிறைந்த மாலையைச் சூடும் மார்புடைய நம்பிகள், மற்று அத்திருவாயிலின் முன்பாக மண்மேல் விழுந்து வணங்கி, உட்புகுந்து, பசிய பொன்னால் அமைந்த திருச்சுற்றுத் திரு மாளிகைகளையும் வலமாகச் சூழ்ந்து, உச்சிக் கூப்பிய கையினராய்,

விளக்கவுரை

****

ஆடிய திருமுன் பான
அம்பொனின் கோபு ரத்தின்
ஊடுபுக் கிறைஞ்சி ஓங்கும்
ஒளிவளர் கனக மன்றில்
நாடகச் செய்ய தாளை
நண்ணுற வுண்ணி றைந்து
நீடும்ஆ னந்த வெள்ளக்
கண்கள்நீர் நிரந்து பாய. **#3010**

தில்லைக் கூத்தியற்றும் பெருமானின் திருமுன்பாக விளங்கும் அழகிய பொற் கோபுரத்தின் ஊடாக உள்புகுந்து வணங்கி, ஒளி ஓங்கி வளரும் பொற்பொதுவில் நடனமாடும் பெருமானுடைய செவ்விய திருவடிகளை அணுக வந்தடைய, உள்ளத்து நிறைந்து நீடஓங்கும் ஆனந்த வெள்ளமாக, கண்கள் நீரினை இடையறாது வெளிப்படுத்த,

விளக்கவுரை

****

பரவுவாய் குளறிக் காதல்
படிதிருப் படியைத் தாழ்ந்து
விரவுமெய் அங்கம் ஐந்தும்
எட்டினும் வணங்கி வேட்கை
உரனுறு திருக்கூத் துள்ளம்
ஆர்தரப் பெருகி நெஞ்சில்
கரவிலா தவரைக் கண்ட
நிறைவுதங் கருத்திற் கொள்ள. **#3011**

போற்ற எடுத்திடும் வாய் குளறிப், பெருமான் இடத்துக் காதல் பெருக உள்ள திருக்களிற்றுப்படியைத் தாழ்ந்து, பொருந்திய வகையால் உடலின் ஐந்து உறுப்புகளும் எட்டு உறுப்புக ளுமாக நிலமிசைப் பொருந்த வணங்கி, உயிர்கள் எல்லாம் உய்தற் குரிய வலிமை மிகுந்த திருக்கூத்து, உள்ளத்துப் பெருகிய இன்பத்தை விடாத தமது உள்ளத்தே, வஞ்சியாது நீள நிறைந்து நிற்கும் பேரொ ளியைக் கண்டு கொண்ட நிறைவு தம் மனத்தில் பெருக்கெடுப்ப,

விளக்கவுரை

****

மடித்தாடும் அடிமைக்கண் என்றெடுத்து
மன்னுயிர்கட் கருளு மாற்றால்
அடுத்தாற்று நன்னெறிக்கண் நின்றார்கள்
வழுவிநர கணையா வண்ணம்
தடுப்பானைப் பேரூரிற் கண்டநிலை
சிறப்பித்துத் தனிக்கூத் தென்றும்
நடிப்பானை நாம்மனமே பெற்றவா
றெனுங்களிப்பால் நயந்து பாடி. **#3012**

`மடித்தாடும் அடிமைக் கண்' எனத் தொடங்கி, நிலைபெற்ற உயிர்கட்கு அருள் புரிந்திடும் அத்தகவால், அடுத்துச் செய்திடும் நல்ல நெறியில் ஒழுகி நிற்பார்கள், தவறியும் இயமன் கைப்பட்டு நரகத்துச் சேராதவாறு தடுக்கின்ற பெருமானைத் திருக் காஞ்சிவாய்ப்பேரூரில் கண்ட திருக்கூத்தைச் சிறப்பித்து, ஒப்பற்ற அத் திருக்கூத்தை என்றும் செய்தருள்பவனை, `மனமே! நான் பெற்ற பேறு தான் என்னே!' என்று மிக நயப்புடன் பாடியருளி,

விளக்கவுரை

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே
மனனேநீ வாழு நாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி

லிடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடுங் கரதலத்தில் தமருகமும்
எரிஅகலும் கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச் சிற்றம்பலத்து
எம்பெருமானைப் பெற்றா மன்றே. *(தி.7 ப.90 பா.1)* என்பது இப்பதிகத்து வரும் முதற் பாடலாகும். இப்பதிகம் குறிஞ்சிப் பண்ணில் அமைந்ததாம் *(தி.7 ப.90)*. `தருமனார் தமர் செக்கில் இடும் போது தடுத்தாட் கொள்வான்' எனும் பகுதிக்கு வரும் விளக்கமே, `நன்னெறிக்கண் நின்றவர்கள் வழுவி நரகு அடையா வண்ணம் தடுப் பான்' என்பதாகும்.

மீளாத அருள்பெற்றுப் புறம்போந்து
திருவீதி மேவித் தாழ்ந்தே
ஆளான வன்றொண்டர் அந்தணர்கள்
தாம்போற்ற அமர்ந்து வைகி
மாளாத பேரன்பால் பொற்பதியை
வணங்கிப்போய் மறலி வீழத்
தாளாண்மை கொண்டவர்தங் கருப்பறிய
லூர்வணங்கிச் சென்று சார்ந்தார். **#3013**

பிரியாத அருள் பெற்று, வெளியே சென்று, கோயி லின் திருவீதியை அணைந்து தாழ்ந்து வணங்கி, பெருமானுக்கு ஆளான நம்பிகள், தில்லையில் வாழும் அந்தணர்கள் தம்மைப் போற்ற, அவர்களுடன் அங்கு அமர்ந்து இருந்து, பின்பும் நீங்காத பேரன்பினால் பொற்பதியாம் தில்லையை வணங்கி, அப்பால் சென்று, இயமன் வீழ்ந்திடத் திருவடியை ஓச்சி அருளிய பெருமானது திருக் கருப்பறியலூரை வணங்கி அப்பால் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

இயமன் வீழ இறைவன் தாளாண்மை கொண்ட இடம் திருக்கடவூர் ஆயினும் அச்செயல் திறம் ஆற்றிய இறைவன் யாண்டும் நீக்கமற நிற்றலின் ஈண்டும் இயைபுபடுத்திக் கூறினார். பிறபிற இடங்களில் இங்ஙனம் வருமாற்றிற்கும் இது ஒக்கும். இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

கூற்றுதைத்தார் திருக்கொகுடிக் கோயில் நண்ணிக்
கோபுரத்தைத் தொழுதுபுகுந் தன்பர் சூழ
ஏற்றபெருங் காதலினால் இறைஞ்சி யேத்தி
எல்லையிலாப் பெருமகிழ்ச்சி மனத்தி லெய்தப்
போற்றிசைத்துப் புறத்தணைந்தப் பதியின் வைகிப்
புனிதரவர் தமைநினையு மின்பங் கூறிச்
சாற்றியமெய்த் திருப்பதிகஞ் சிம்மாந் தென்னுந்

தமிழ்மாலை புனைந்தங்குச் சாரு நாளில். **#3014**
இயமனை உதைத்தருளிய பெருமான் எழுந்தருளி யிருக்கும் திருக்கொகுடிக் கோயிலை அடைந்து, முதற்கண் கோபுரத் தைத் தொழுது, உட்சென்று அன்பர்கள் சூழ்ந்துவரப் பெருவிருப்பால் இறைவனைப் போற்றி, எல்லையில்லாத பெருமகிழ்ச்சி மனத்தில் பொருந்தப் பெருமானைப் போற்றிப் பாடிப் புறமே போந்து, அத் திப்பதியில் வதிந்திடும் நாள்களில், அப்புனிதராய பெருமானை நினைவதால் வரும் இன்பப் பெருக்கினை எடுத்து மொழிந்தருளும் திருப்பதிகமான `சிம்மாந்து' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி, அத்தமிழ் மாலையை, இறைவற்குச் சார்த்தி, அங்கு இருந்திடுங் காலத்தில்,

விளக்கவுரை

திருக்கருப்பறியலூர் - ஊர்ப் பெயர். கொகுடிக் கோயில் - கோயிலின் பெயர். கொகுடி - முல்லை. முல்லையினை உடைய கோயில். இப்பெருமானின் திருமுன்பு அருளிய பதிகம் கிடைத்திலது. அங்குத் தங்கியிருந்த நாள்களில் அருளிய பதிகம் `சிம்மாந்து' எனத் தொடங்கும் நட்டராகப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.30)*. `எம்மானை மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு இனிய வாறே' எனவரும் பதிகக் குறிப்பே ஈண்டு விளக்கப் பெறுகின்றது.

கண்ணுதலார் விரும்புகருப் பறிய லூரைக்
கைதொழுது நீங்கிப் போய்க் கயல்கள் பாயும்
மண்ணிவளம் படிக்கரையை நண்ணி யங்கு
மாதொருபா கத்தவர்தாள் வணங்கிப் போற்றி
எண்ணில்புகழ்ப் பதிகமுமுன் னவன்என் றேத்தி
யேகுவார் வாழ்கொளிபுத் தூரெய் தாது
புண்ணியனார் போம்பொழுது நினைந்து மீண்டு
புகுகின்றார் தலைக்கலன்என் றெடுத்துப்போற்றி. **#3015**

நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் விரும்பி உறைகின்ற திருக்கருப்பறியலூரைத் தொழுது, வணங்கிப் பின்னர் அங்கிருந்து நீங்கிச் சென்று, மீன்கள் பாய்ந்து திரியும் மண்ணி ஆற்றின் வளமுடைய திருப்பழமண்ணிப் படிக்கரையை அடைந்து, உமையொரு கூறராய் பெருமானின் திருவடிகளைப் பணிந்து போற்றுபவர், எண்ணற்கரிய புகழமைந்த பதிகமாய `முன்னவன்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றிப் பின்னர் திருவாழ்கொளிப்புத்தூர் என்னும் கோயிற்குச் செல்லாது செல்கின் றவர், அத்திருப்பதியை நினைந்தளவில், மீண்டு அங்குச் சென்று, `தலைக்கலன்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் போற்றியவாறு உட்சென்றார்.

விளக்கவுரை

\`முன்னவன்' எனத் தொடங்கும் திருப்பதிகம் நட்டராகப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப. 22).* \`தலைக்கலன்' எனத் தொடங் கும் திருப்பதிகம் தக்கேசிப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப. 57).*

திருப்பதிகம் பாடியே சென்றங் கெய்தித்
தேவர்பெரு மானார்தங் கோயில் வாயில்
உருப்பொலியும் மயிர்ப்புளகம் விரவத் தாழ்ந்தே
உள்ளணைந்து பணிந்தேத்தி உருகு மன்பால்
பொருப்பரையன் மடப்பாவை இடப்பா லானைப்
போற்றிசைத்துப் புறம்போந்து தங்கிப் பூமென்
கருப்புவயல் வாழ்கொளிபுத் தூரை நீங்கிக்
கானாட்டு முள்ளூரைக் கலந்த போது. **#3016**

சென்றவர் திருவாழ்கொளிப்புத்தூரில் வீற்றிருக் கும் தேவர் பெருமானாரின் திருக்கோயில் வாயிலைச் சார்ந்து, உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறியத் தாழ்ந்து, உள்ளாகச் சென்று, பணிந்து, அன்பினால் மலையரசன் மகளாராய உமையம்மையாரை இடமருங்கில் கொண்ட சிவபெருமானை வணங்கிப் போற்றிப் பாடி வெளியே போந்து, அங்குத் தங்கி, பின்னர் அழகும் மென்மையும் உடைய கரும்பின் வயல் நிறைந்த வாழ்கொளிப்புத்தூரை விடுத்து நீங்கி, திருக்கானாட்டு முள்ளூரைச் சேர்ந்த பொழுது,

விளக்கவுரை

இறைவனின் திருமுன்பு அருளிய பதிகம் கிடைத்திலது.

கானாட்டு முள்ளூரைச் சாரும் போது
கண்ணுதலார் எதிர்காட்சி கொடுப்பக் கண்டு
தூநாள்மென் மலர்க்கொன்றைச் சடையார் செய்ய
துணைப்பாத மலர்கண்டு தொழுதே னென்று
வானாளுந் திருப்பதிகம் வள்வாய் என்னும்
வண்டமிழின் தொடைமாலை மலரச் சாத்தித்
தேனாரு மலர்ச்சோலை மருங்கு சூழ்ந்த
திருவெதிர்கொள் பாடியினை யெய்தச் செல்வார். **#3017**

திருக்கானாட்டு முள்ளூரைச் சாரும்பொழுது கண்ணுதற் பெருமான் அவர் எதிரே தோன்றிக் காட்சி கொடுத்தருளக் கண்டு போற்றுவார், தூயதாய அன்றலர்ந்த மெல்லிய மலராகும் கொன்றை மாலையைச் சடைமீது அணிந்த பெருமானாரது இரு திருவடி மலர்களையும் நேரில் கண்டு தொழுதேன் எனும் கருத் தமைந்த, விண்ணுலகத்தையும் ஆட்படுத்தும் \`வள்வாய்' எனத் தொடங்கும் திருப்பதிகத்

தமிழ்மாலையை உள்ளம் உருகப்பாடி, பெருமானுக்கு அணிவித்து, அப்பால் தேன்நிறைந்த மலர்களை யுடைய சோலைகள் சூழ்ந்த திருஎதிர்கொள்பாடியைச் சென்று சேர்வாராய்,

விளக்கவுரை

`வள்வாய்' எனத் தொடங்கும் பதிகம் கொல்லிக் கௌவாணப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.40).*

எத்திசையுந் தொழுதேத்த மத்த யானை
எடுத்தெதிர்கொள் பாடியினை அடைவோம் என்னும்
சித்தநிலைத் திருப்பதிகம் பாடிவந்து
செல்வமிகு செழுங்கோயி லிறைஞ்சி நண்ணி
அத்தர்தமை அடிவணங்கி அங்கு வைகி
அருள்பெற்றுத் திருவேள்விக் குடியி லெய்தி
முத்திதரும் பெருமானைத் துருத்தி கூட
மூப்பதிலை எனும்பதிகம் மொழிந்து வாழ்ந்தார். **#3018**

சேர்ந்திடும்பொழுது, எத்திசையும் தொழுது போற்றி `மத்தயானை' எனத் தொடங்கி, திருஎதிர்கொள்பாடியை அடைவோம் என்னும் கருத்தினை நிலைகொள்ளுமாறு வைத்திடும் திருவுடைய பதிகத்தைப் பாடி வந்து, செல்வமிகுந்த செழுமையான கோயிலினை வணங்கி, அங்குச் சில நாள்கள் தங்கி அருள்பெற்று, திருவேள்விக்குடியைச் சென்றடைந்து, வீடுபேற்றைத் தருகின்ற பெருமானைத் திருத்துருத்தி என்னும் பதியும் சேர்ந்திட `மூப்ப தில்லை' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளி அங்கிருந் தருளினார்.

விளக்கவுரை

இப்பதிகளில் அருளிய பதிகங்கள்*: 1.* திருஎதிர்கொள்பாடி*:* மத்தயானை - இந்தளம் *(தி.7 ப.7) 2.* திருவேள்விக்குடியும் திருத்துருத்தியும்*:* மூப்பதுமில்லை - நட்டராகம் *(தி.7 ப.18)* `திருவேள்விக்குடியில் எய்தி ...... துருத்திகூடி மூப்பதிலை' எனும் பதிகம் மொழிந்து என்பதால்*,* இவ்விரு பதிகளையும் இணைத் துப் பாடியமை புலனாகும். இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

காட்டுநல் வேள்விக் கோலங்
கருத்துற வணங்கிக் காதல்
நாட்டிய உள்ளத் தோடு
நம்பிஆ ரூரர் போற்றி
ஈட்டிய தவத்தோர் சூழ
அங்குநின் றேகி அன்பு
பூட்டிஆட் கொண்டார் மன்னுந்

தானங்கள் இறைஞ்சிப் போந்து. #3019

அவ்விடத்து, இறைவன் தன் திருமணக் கோலத் தைக் காட்டியருளியதை நம்பியாரூரர் வணங்கி, மிக்கெழும் உள்ளத் துடன் போற்றி செய்து, தவத்தைப் பெருக்கிக் கொண்ட தொண்டர்கள் தம்மைச் சூழ்ந்து வர, அங்கிருந்தும் நீங்கியருளி, தம்மிடத்து அன்பு கொள்ள வைத்து ஆட்கொண்டருளிய பெருமான் வீற்றிருக்கும் கோயில்கள் பலவற்றையும் வணங்கிச் சென்று,

விளக்கவுரை

மன்னும் தானங்கள் என்பன திருத்துருத்திக்கும் திருவா ரூருக்கும் இடைப்பட்ட பதிகள்: வரும் பாடலிற் காண்க. இப்பாடலின் முன்னிரண்டு அடிகளின் கருத்து இதன் முதற்பாடலாலும், பின்னி ரண்டு அடிகளின் கருத்து வரும் பாடலாலும் நன்கு விளங்குதலின் இப் பாடல் இடைச்செருகல் ஆகலாம் என ஐயுறுவர் சிவக்கவிமணியார்.

எஞ்சாத பேரன்பில்
திருத்தொண்ட ருடனெய்தி
நஞ்சாருங் கறைமிடற்றார்
இடம்பலவு நயந்தேத்தி
மஞ்சாரும் பொழிலுடுத்த
மலர்த்தடங்கள் புடைசூழுஞ்
செஞ்சாலி வயன்மருதத்
திருவாரூர் சென்றடைந்தார். #3020

குறைவுபடாத பேரன்பு கொண்ட திருத்தொண்டர் களுடன் கூடிச் சென்று நஞ்சு விளங்கும் கறையுடைய கழுத்துடன் பொலியும் சிவபெருமானின் இடங்கள் பலவும் நயப்புடன் போற்றி, மேகங்கள் மேவும் சோலைகள் சூழ்ந்ததும், மலர்ப் பொய்கைகள் பல புறத்தே சூழந்ததும், செஞ்சாலி நெல் விளையும் வயல்கள் பல சிறந் திருப்பதுமான மருத நில வளம் மிக்க திருவாரூரைச் சென்றடைந்தார்.

விளக்கவுரை

இடம் பலவும் என்பன திருவழுந்தூர், திருவழுவூர், மயிலாடுதுறை, திருத்திலதைப்பதிமுற்றம், திருமீயச்சூர், பேரளம், திருஅம்பர்மாகாளம், அம்பர்பெருந்திருக்கோயில், திருக்கொண்டீச் சரம், திருவிற்குடி, திருப்பள்ளியின் முக்கூடல் முதலாயினவாகலாம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

செல்வமலி திருவாரூர்த்
தேவரொடு முனிவர்களும்
மல்குதிருக் கோபுரத்து

வந்திறைஞ்சி உள்புக்கங்
கெல்லையிலாக் காதன்மிக
எடுத்தமலர்க் கைகுவித்துப்
பல்குபெருந் தொண்டருடன்
பரமர்திரு முன்னணைந்தார். #3021

செல்வம் மிக்கு விளங்கும் திருவாரூரில், தேவர் களும் முனிவர்களும் நெருங்கிச் சூழும் கோபுரத்தைப் பணிந்து, வணங்கி, உட்புகுந்து, அங்கு அமர்ந்தருளும் பெருமானிடத்து, எல்லையில்லாத காதல் மிகுந்திட, கும்பிட எடுத்த மலர்க் கையினைக் குவித்து, பெருகும் திருத்தொண்டருடன் சிவபிரான் திருமுன்பாகச் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

****

மூவாத முதலாகி
நடுவாகி முடியாத
சேவாருங் கொடியாரைத்
திருமூலட் டானத்துள்
ஓவாத பெருங்காதல்
உடனிறைஞ்சிப் புறம்போந்து
தாவாத புகழ்ப்பரவை
யார்திருமா ளிகைசார்ந்தார். #3022

என்ஞான்றும் அழியாத முதலாகி, நடுவாகி, முடிதலும் இல்லாத ஆனேற்றுக் கொடியையுடைய சிவபெருமானைத் திருமூலட்டானத்தில் எழுந்தருளி இருக்கும் பெருமானை, ஒழியாத பெருங்காதலுடன் வணங்கி, அருள்பெற்று, வெளியே வந்தருளிக் குறைவிலாத புகழுடைய பரவையாரது திருமாளிகையைச் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

முதலும் நடுவும் முடிவும் இல்லாதது இறைவயத்ததாய நிலை. `முந்திய முதல் நடு இறுதியுமானாய்` என்பது உலகைச் செயல் படுத்தும் நிலையது. ஆதலின், இவ்வாறு வரும் திருவாக்குக்கள் முரணாகாமை காண்க.

பொங்குபெரு விருப்பினொடு
புரிகுழலார் பலர்போற்றப்
பங்கயக்கண் செங்கனிவாய்ப்
பரவையார் அடிவணங்கி
எங்களையும் நினைந்தருளிற்
றெனஇயம்ப இனிதளித்து

மங்கைநல்லா ரவரோடும்
மகிழ்ந்துறைந்து வைகுநாள். **#3023**

நம்பிகள் மாளிகை வருதலும், மிக்க பெரு விருப்புடன் அழகிய கூந்தலையுடைய பெண்கள் பலரும் போற்ற, தாமரை மலர் போன்ற கண்களையும், செங்கனி போன்ற வாயினை யும் உடைய பரவையார் எதிர்வந்து, திருவடிகளில் பணிந்தருளி, `எங்களையும் நினைந்து அருளிற்று' என மொழிந்திடலும், நம்பியாரூ ரரும் அவர்களுக்கு இனிய அருள் புரிந்து, பெண்களில் நல்லாராய பரவையாருடன் மகிழ்ந்து தங்கியிருக்கும் நாள்களில்,

விளக்கவுரை

இறைவனையும், அடியவர்களையும் இடையறாது நினைந்தருளும் திருவுள்ளத்தில், எங்களையும் நினைந்தருளிற்று என அருளியது, நீண்ட கால எல்லை தம்மைப் பிரிந்திருந்த குறிப்புத் தோன்றவாம். இக்கால எல்லைதாமும் பெரிதும் நீட்டித்ததன்று. ஒருநாள் எழுநாள்போல் செல்லும் சேண்சென்றார் வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு. -குறள், *1269* எனும் மனநிலையில் நீட்டித்ததாகும். உம்மை இழிவு சிறப்பும்மை.

நாயனார் முதுகுன்றர்
நமக்களித்த நன்னிதியம்
தூயமணி முத்தாற்றில்
புகவிட்டேம் துணைவரவர்
கோயிலின்மா ளிகைமேல்பால்
குளத்தில்அவ ரருளாலே
போய்எடுத்துக் கொடுபோதப்
போதுவாய் எனப்புகல. **#3024**

ஒருநாள் பரவையாரை நம்பிகள் நோக்கியருளி, உயிர்கட்குத் தலைவராய திருமுதுகுன்றத்துப் பெருமானார், நமக்கு வழங்கிய நல்ல நிதியமாகிய பொன்னின் குவியலை எல்லாம் அவர்தம் திருவருளின்படி மணிமுத்தாற்றில் புக விடுத்தோம், நம் துணைவராய திருவாரூர்ப் பெருமானின் கோயிலின் மேற்குப் புறத்தே உள்ள கமலாலயக் குளத்தில் அவரது அருளால் அதனை எடுத்து உனக்குத் தருவதற்கு, நீ என்னுடன் வருவாய் எனப் புகலுதலும்,

விளக்கவுரை

புக - அவ்வாற்றிலிருந்து நம் குளத்திற் புக.

என்னஅதி சயம்இதுதான்
என்சொன்ன வாறென்று
மின்னிடையார் சிறுமுறுவ

லுடன்விளம்ப மெய்யுணர்ந்தார்
நன்னுதலாய் என்னுடைய
நாதனரு ளாற்குளத்தில்
பொன்னடைய எடுத்துனக்குத்
தருவதுபொய் யாதென்று. **#3025**

அதுகேட்டுப் புன்சிரிப்புடன் மின்னலையொத்த இடையையுடைய பரவையார், ஈதென்ன அதிசயம்! என்றலும், உண் மைப் பொருளினை உணர்ந்த நம்பிகளும், `நல்ல நெற்றியையுடைய பரவையே! என்னுடைய பெருமானின் அருளால் அக்குளத்தில் பொன் முழுவதையும் எடுத்துத் தருவது பொய்யாகாது! என்று கூறியருளுதலும்,

விளக்கவுரை

****

ஆங்கவரும் உடன்போத
வளவிறந்த விருப்பினுடன்
பூங்கோயி லுண்மகிழ்ந்த
புராதனரைப் புக்கிறைஞ்சி
ஓங்குதிரு மாளிகையை
வலம்வந்தங் குடன்மேலைப்
பாங்குதிருக் குளத்தணைந்தார்
பரவையார் தனித்துணைவர். **#3026**

அதுகேட்ட பரவையாரும் அவருடன் வர, அவ்வம்மையின் ஒப்பற்ற துணைவராகிய நம்பிகள், அளவுகடந்த விருப்பத்துடன் திருவாரூர்ப் பூங்கோயிலில் அமர்ந்தருளும் முன் னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய பெருமானை உட்புகுந்து வணங்கி, மேலோங்கிய கோயில் மாளிகையை வலமாக வந்து, உடனாக மேற்குப் புறத்ததாக விளங்கிடும் திருக்குளத்திற்கு வந்துற்றார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

மற்றதனின் வடகீழ்பால்
கரைமீது வந்தருளி
முற்றிழையார் தமைநிறுத்தி
முனைப்பாடித் திருநாடர்
கற்றைவார் சடையாரைக்
கைதொழுது குளத்தில்இழிந்து
அற்றைநாள் இட்டெடுப்பார்
போல்அங்குத் தடவுதலும். **#3027**

பின்பு அந்தக் குளத்தின் வடகிழக்குக் கரையின் மேலாக வந்தருளி, முழுமையான நல்ல பல அணிகளை அணிந்த பரவையாரை அங்கு நிறுத்திப் பின்னர் திருமுனைப்பாடி என்னும் நாட்டைத் தமக்குப் பிறப்பிடமாக உடைய நம்பிகள், தொகுதியாக நீண்டு விளங்கும் சடையையுடைய பெருமானைக் கைதொழுது, குளத்துள் இறங்கி, அன்றைய நாளில் பொன்னைப் போட்டு எடுப்பார் போன்று, அங்குப் பொற்குவியலைப் பெறத் தண்ணீரில் தடவுதலும்,

விளக்கவுரை

****

நீற்றழகர் பாட்டுவந்து
திருவிளையாட் டில்நின்று
மாற்றுறுசெம் பொன்குளத்து
வருவியா தொழிந்தருள
ஆற்றினிலிட் டுக்குளத்தில்
தேடுவீர் அருளிதுவோ
சாற்றுமெனக் கோற்றொடியார்
மொழிந்தருளத் தனித்தொண்டர். **#3028**

நீற்றினால் அழகு பொலியும் திருமேனியையுடைய பெருமானும், அதுபொழுது சுந்தரரது திருப்பாட்டை விரும்பிக் கேட்பதொரு திருவிளையாட்டைச் செய்வாராய், சிறந்த மாற்றுடைய செம்பொன்னைக் குளத்தில் வருவியாது மறைத்து அருளலும், அது கண்டு கரையில் நின்ற வளையல் அணிந்த பரவையாரும், நம்பிகளை நோக்கி, `ஆற்றில் இட்டுக் குளத்தில் தேடும் தலைவரே! இறைவனின் இன்னருள் இதுதானோ?' எனக் கூறலும், தனித்தொண்டராம் நம்பிகள்,

விளக்கவுரை

ஆற்றில் இட்டுக் குளத்தில் தேடுவீர் என்றது நகைக் குறிப்புப்பட நின்றது. அருளிதுவோ என்றது உம் அருளிதுவோ என்பதன்றி இறைவன் உமக்கு நல்கிய அருள் இதுவோ என்னும் குறிப்பும்பட நின்றது.

முன்செய்த அருள்வழியே
முருகலர்பூங் குழற்பரவை
தன்செய்ய வாயில்நகை
தாராமே தாருமென
மின்செய்த நூன்மார்பின்
வேதியர்தாம் முதுகுன்றில்
பொன்செய்த மேனியினீர்

எனப்பதிகம் போற்றிசைத்து. **#3029**

பெருமானே! முன்னர் வானொலி வழி வழங்கியவாறே, அழகு விளங்கும் மலர்களைச் சூடிய கூந்தலுடைய பரவையினது சிவந்த வாயில் இகழ்ச்சிக் குறிப்புத் தோன்றாதவாறு பொன்னினைத் தந்தருளும் என்று, மின்னலையொத்த ஒளியை யுடைய நூல் அணிந்த மார்பினையுடைய சுந்தரரும், முதுகுன்றில் அமர்ந்த இறைவரை உளங்கொண்டு `பொன்செய்த மேனியினீர்' எனத் தொடங்கும் பதிகத்தைப் போற்றிப் பாடி,

விளக்கவுரை

`பொன்செய்த மேனியினீர்' எனத் தொடங்கும் பதிகம் நட்டராகப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.25).*

முட்டஇமை யோரறிய
முதுகுன்றில் தந்தபொருள்
சட்டநான் பெறாதொழிந்த
தளர்வினால் கையறவாம்
இட்டளத்தை இவளெதிரே
கெடுத்தருளும் எனுந்திருப்பாட்
டெட்டளவும் பொன்காட்டா
தொழிந்தருள ஏத்துவார். **#3030**

முழுவதும் தேவர் அறிய, நீர் திருமுதுகுன்றில் தந்தபொருளை, மிகவும் உடன்பெறாது போன தளர்ச்சியினால் வரும் துன்பமாம் அக் கொடுமையை, இப் பரவை முன்னாகக் கொடுத்தருளும் என மொழிகின்ற அத்திருப்பாட்டைப் பாடியருளலும் பெருமான் எட்டாவது திருப்பாட்டுப் பாடும்வரை பொன் காட்டாது ஒழிந்தருளப் பின்னும் போற்றுவாராய்,

விளக்கவுரை

முட்ட - முழுமையாக. சட்ட - செவ்விதாக. இட்டளம் - துன்பம்.

ஏத்தாதே இருந்தறியேன்
எனுந்திருப்பாட் டெவ்வுலகும்
காத்தாடும் அம்பலத்துக்
கண்ணுளனாங் கண்ணுதலைக்
கூத்தாதந் தருளாய்இக்
கோமளத்தின் முன்னென்று
நீத்தாருந் தொடர்வரிய
நெறிநின்றார் பரவுதலும். **#3031**

எம்பெருமானே! `உம்மை எக்காலமும் ஏத்தாது இருந்தறியேன்' எனும்

கருத்தமைவுடைய திருப்பாட்டில், எவ்வுலகி னையும் துன்புறாது அம்பலத்துள் நிறைந்து காத்து ஆடுகின்ற கண் ணுதற் பெருமானையே நினைந்து உருகி, கூத்தா! பொன்னினைத் தந்தருள்வாய்! இப்பரவை முன்பாக என்று, பற்றுக்களை எல்லாம் அறுத்தெரிந்த பெரியோர்களும் தொடர்ந்து பற்றுதற்கரிய நெறி நின்ற ஆரூரர் போற்றுதலும்,

விளக்கவுரை

`ஏத்தாதிருந்தறியேன்' எனும் பாடல் இப்பதிகத்து வரும் ஒன்பதாவது பாடலாகும். இப்பாடலை எடுத்துமொழிந்தார், பொன்வரப் பெற்ற அருட்குறிப்புடைமையின்.

கொந்தவிழ்பூங் கொன்றைமுடிக்
கூத்தனார் திருவருளால்
வந்தெழுபொன் திரளெடுத்து
வரன்முறையாற் கரையேற்ற
அந்தரத்து மலர்மாரி
பொழிந்திழிந்த தவனியுளோர்
இந்தஅதி சயமென்னே
யார்பெறுவார் எனத்தொழுதார். **#3032**

கொத்துக்களாய் விரிந்த கொன்றைமாலையை முடிமீது சூடியவரும், எஞ்ஞான்றும் திருக்கூத்தியற்றுபவருமான இறைவனின் திருவருளால், அப்பொழுது குளத்தின்கண் வந்த பொன்னின் திரளினை எடுத்து, வரன்முறையால் கரையில் சேர்த் திடலும், விண்ணிலிருந்து மலர்மழை பொழிந்து தரையில் வழிந்ததும், இதனைக் கண்ட நிலவுலகில் உள்ளோர் யாவரும் இவ்வதிசயம் இருந்தவாறு என்னே! இறைவனின் வியத்தகு கருணைப் பெருக்கை யார் பெறுவார்? எனப் போற்றித் தொழுதார்கள்.

விளக்கவுரை

இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

ஞாலம்வியப் பெய்தவரு
நற்கனகம் இடையெடுத்து
மூலமெனக் கொடுபோந்த
ஆணியின்முன் னுரைப்பிக்க
நீலமிடற் றவரருளால்
உரைதாழப் பின்னும் நெடு
மாலயனுக் கரியகழல்
வழுத்தினார் வன்றொண்டர். **#3033**

உலகவர் வியக்குமாறு வந்த நல்ல பொற்குவியலில் ஒரு துண்டை

எடுத்துக் கொண்டு முன்னர் முத்தாற்றில் இட்டபோது மூலமான பொன் இதுவெனக் கொண்டு வந்த அவ்வாணிப் பொன் னின் இணையாக இப்பொன்னினையும் உரைத்துப் பார்த்த பொழுது, நீலகண்டப் பெருமானின் அருளால் மாற்றுக் குறைந்து இருக்கப் பின்னரும், நெடிய திருமாலும் நான்முகனும் காணமுடியாத திருவடி களை வன்றொண்டர் போற்றினார்.

விளக்கவுரை

ஆணி - உரைத்துப் பார்த்தற்காக வெட்டிக் கொண்ட துண்டு.
இதுபொழுது வழுத்திய பதிகம் கிடைத்திலது.

மீட்டுமவர் பரவுதலும்
மெய்யன்ப ரன்பில்வரும்
பாட்டுவந்து கூத்துவந்தார்
படுவாசி முடிவெய்தும்
ஓட்டறுசெம் பொன்னொக்க
ஒருமாவுங் குறையாமல்
காட்டுதலும் மகிழ்ந்தெடுத்துக்
கொண்டுகரை யேறினார். **#3034**

மீண்டும் அவர் போற்றி வணங்குதலும், மெய்யான அன்பர்களது அன்பில் வருகின்ற பாட்டினை மகிழ்வுடன் ஏற்றுக் கூத்தினையும் மகிழ்ந்து புரிகின்ற பெருமான், தாம் கொடுத்த பொன் னில் குறைவெய்திய அக்குறைபாடுகள் முழுமையாக நீங்க ஒப்பற்ற செம்பொன் முழுவதையும் ஒருமா எடையும் குறையாமல் காட்டுத லும், அதனை மகிழ்ந்து எடுத்துக் கொண்டு கரை ஏறினார்.

விளக்கவுரை

ஒருமா - மிகச் சிறிய அளவு; இருபதில் ஒருபங்கு *(1/20 = 0.05)* கொண்ட அளவென்பர்.

கரையேறிப் பரவையா
ருடன்கனக மானதெலாம்
நிரையேஆ ளிற்சுமத்தி
நெடுநிலைமா ளிகைபோக்கித்
திரையேறும் புனற்சடிலத்
திருமூலட் டானத்தார்
விரையேறு மலர்ப்பாதந்
தொழுதணைந்தார் வீதியினில். **#3035**

கரையில் ஏறிப் பரவையாருடன் அப்பொன் முழுமையையும் நிரல்பட ஆள்களின் தலைமேல் ஏற்றி நெடுநிலை களையுடைய மாளிகையில்

போகுமாறு செல்லவிடுத்து, அலைகள் மிகும் நீருடைய கங்கையைச் சடைமேல் உடைய திருமூலட்டானத்துப் பெருமானின் நறுமணம் பொருந்திய மலரடிகளைத் தொழுது பின் திருவீதியினில் எழுந்தருளி வந்தனர்.

விளக்கவுரை

****

கரையேறிப் பரவையா
ருடன்கனக மானதெலாம்
நிரையேஆ ளிற்சுமத்தி
நெடுநிலைமா ளிகைபோக்கித்
திரையேறும் புனற்சடிலத்
திருமூலட் டானத்தார்
விரையேறு மலர்ப்பாதந்
தொழுதணைந்தார் வீதியினில். **#3036**

திருவீதியில் வந்த நறுமணமுடைய மலர்கள் நிறைந்த சோலைகளையுடைய நாவலூர்த் தலைவராய நாவன்மை யையுடைய நம்பிகளும், திருவுடைய தம் மாளிகையில் உட்புக, நிறையுடைய மங்கல வாழ்த்தினைப் போற்றி செய்யும் அளவிறந்த பெருமக்களின் ஓசை சிறந்தெழ, சிந்தை நிறைந்த மகிழ்ச்சியுடன் அழ கிய அணிகளை அணிந்த அம்மையாருடன் அங்கு இருந்தருளினார்.

விளக்கவுரை

****

அணியாரூர் மணிப்புற்றில்
அமர்ந்தருளும் பரம்பொருளைப்
பணிவார்அங் கொருநாளில்
பாராட்டுந் திருப்பதிகம்
தணியாத ஆனந்தம்
தலைசிறப்பத் தொண்டருடன்
துணிவாய பேரருள்வினவித்
தொழுதாடிப் பாடுவார். **#3037**

அழகிய திருவாரூரில், முத்துமணி போலும் திரண் டிருக்கும் கறையான் புற்றின்மீது அமர்ந்தருளும் பரம்பொருளாய பெருமானைப் பணிந்துவரும் நம்பிகள், ஒருநாள், பெருமானின் கருணையைப் பாராட்டும் திருப்பதிகம் ஒன்றைத் தமது உள்ளத்துத் தணியாது எழுகின்ற மகிழ்ச்சி தலைசிறந்து மேற்பட, அடியாருடன் மகிழ்ந்து, உயிர்கள் முடிவாகத் துணிந்து தெளிதற்குரிய பெருமானின் திருவருள்

திறத்தினைத் தனித்தனியாக வினவும் முகமாகத் தொழுதும் ஆடியும் பாடிடுவார்,

விளக்கவுரை

****

பண்ணிறையும் வகைபாறு
தாங்கியென வெடுத்தருளி
உண்ணிறையும் மனக்களிப்பால்
உறுபுளகம் மயிர்முகிழ்ப்பக்
கண்ணிறையும் புனல்பொழியக்
கரையிகந்த ஆனந்தம்
எண்ணிறைந்த படிதோன்ற
ஏத்திமதிழ்ந் தின்புற்றார். **#3038**

பண்ணிறைந்த வகையால், `பாறுதாங்கி' என எடுத் தருளி, உள்நிறைந்த மனக்களிப்பால் உடல் மேல் மயிர்க்கூச் செறிய வும், கண்களில் நிறைகின்ற நீர் பொழிந்திடவும் கரைகடந்த ஆனந்தம் கருத்தில் நிறைந்தவாறு ஏத்தி மகிழ்ந்து இன்புற்றார்.

விளக்கவுரை

வினாவுரையாகப் பாடியருளிய `பாறுதாங்கிய' *(தி.7 ப.33)* எனத் தொடங்கும் பதிகம் கொல்லிப் பண்ணில் அமைந்த பதிகமாகும். திருக்கடைக்காப்பில் இதுகாறும் தாம் கேட்ட வினாக் களுக்கு விடை தருமாறு `பத்தர்காள்! பணிந்தேத்தினேன் பணியீர்' என வேண்டி நிறைவு செய்துள்ளார். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

இன்புற்றங் கமர்நாளில்
ஈறிலரு மறைபரவும்
வன்புற்றில் அரவணிந்த
மன்னவனா ரருள்பெற்றே
அன்புற்ற காதலுடன்
அளவிறந்த பிறபதியும்
பொன்புற்கென் றிடவொளிருஞ்
சடையாரைத் தொழப்போவார். **#3039**

இன்புற்று அங்கு அமர்கின்ற காலத்தில், முடிவிலாத அரிய நான்மறைகளும் போற்றும் வலிமையாய புற்றின் மீதுள்ள பாம்பணிந்த அரசனார் திருவடிகளைப் பணிந்து, அருள்பெற்று, அன்பு கொண்ட காதலுடன் அளவிறந்த பிற பதிகளுக்கும் பொன் னின் ஒளி தாழ்ந்திட மிளிரும் சடையுடைய பெருமானைத் தொழுதி டப் போவார்,

விளக்கவுரை

****

பரிசனமும் உடன்போதப்
பாங்கமைந்த பதிகள்தொறும்
கரியுரிவை புனைந்தார்தம்
கழல்தொழுது மகிழ்ந்தேத்தித்
துரிசறுநற் பெருந்தொண்டர்
நள்ளாறு தொழுவதற்குப்
புரிவுறுமெய்த் திருத்தொண்டர்
எதிர்கொள்ளப் புக்கணைந்தார். **#3040**

தமக்குப் பணிபுரிகின்ற ஏவலர்களும் உடன் வந்திட, அருகில் அமைந்திருக்கின்ற கோயில்கள் தோறும் சென்று, அத்திருப்பதிகளில் எல்லாம் யானைத் தோலினைப் போர்த்த பெருமா னின் திருவடிகளைத் தொழுது, மகிழ்ந்து, கும்பிட்டு, குற்றம் அற்ற பெருந்தொண்டராய சுந்தரர், திருநள்ளாறு என்னும் கோயிலினை வணங்குதற்கு, இவர்பால் அன்புற்ற அடியார்கள் அங்கிருப்பார் வந்து எதிர்கொள்ள, உள்ளே புகுந்து சென்றார்.

விளக்கவுரை

பாங்கு அமைந்த பதிகள் என்பன திருவிளமர், திருப்பள் ளியின்முக்கடல் முதலாயின வாகலாம் என்பர் சிவக்கவிமணியார்.

விண்தடவு கோபுரத்தைப்
பணிந்துகர மேல்குவித்துக்
கொண்டுபுகுந் தண்ணலார்
கோயிலினை வலஞ்செய்து
மண்டியபே ரன்பினொடு
மன்னுதிரு நள்ளாறர்
புண்டரிகச் சேவடிக்கீழ்ப்
பொருந்தநில மிசைப்பணிந்தார். **#3041**

வானளாவிய அக்கோபுரத்தைப் பணிந்து, கைகளை உச்சிமேற் குவித்து, உட்புகுந்தருளி, பெருமானுடைய கோயிலினை வலம்செய்து, உள்ளத்துப் பெருகும் பேரன்புடன் என்றும் அங்கு அமர்ந்தருளும் திருநள்ளாற்றுப் பெருமானின் செந்தாமரை மலர் போலும் சேவடியின் கீழாக, நிலத்தில் விழுந்து வணங்கினார்.

விளக்கவுரை

****

அங்கணரைப் பணிந்தேத்தி
அருளினால் தொழுதுபோய்

மங்குலணி மணிமாடத்
திருக்கடவூர் வந்தெய்தித்
திங்கள்வளர் முடியார்தந்
திருமயா னமும்பணிந்து
பொங்குமிசைப் பதிகம்மரு
வார்கொன்றை யெனப்போற்றி. **#3042**

அழகிய நெற்றிக்கண்ணையுடைய இறைவனை அத்திருப்பதியில் பணிந்து போற்றித் திருவருள் முன்னிற்கத் தொழுது நீங்கிப் போய், மேகங்கள் தவழும் அழகிய மாடங்கள் நிரம்பிய திருக்கடவூர் என்னும் திருப்பதியை வந்தடைந்து, பணிந்து, இளம் பிறை மலரும் சடைமுடியையுடைய பெருமானது திருமயானம் என்னும் திருப்பதியையும் பணிந்து, பொங்கும் இசையுடைய பதிக மான `மருவார் கொன்றை' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடிப் போற்றி செய்து,

விளக்கவுரை

இத்திருப்பதிகளில் அருளிய பதிகங்கள்*: 1.* திருநள்ளாறு*:* செம்பொன்மேனி - தக்கேசி *(*தி*.7* ப*.68) 2.* திருக்கடவூர் மயானம்*:* மருவார் கொன்றை - பழம்பஞ்சுரம் *(*தி*.7* ப*.53)*

திருவீரட் டானத்துத்
தேவர்பிரான் சினக்கூற்றின்
பொருவீரந் தொலைத்தகழல்
பணிந்துபொடி யார்மேனி
மருவீரத் தமிழ்மாலை
புனைந்தேத்தி மலைவளைத்த
பெருவீரர் வலம்புரத்துப்
பெருகார்வத் தொடுஞ்சென்றார். **#3043**

திருக்கடவூர் வீரட்டானத்து அமர்ந்தருளும் தேவாதி தேவனது சினம் மிக்க இயமனின் வீரத்தைத் தொலைத்த திருவடிகளைப் பணிந்து, `பொடியார் மேனியனே' எனத் தொடங்கும் கசிந்துருகும் தமிழ் மாலையைப் பாடிப் போற்றி வணங்கி, அப்பால் மேரு மலையை வளைத்த பெரு வீரராய சிவபெருமான் அமர்ந்து அருளும் திருவலம்புரம் என்னும் திருப்பதிக்குப் பெருகிய ஆர்வத் தோடும் சென்றார்.

விளக்கவுரை

`பொடியார் மேனியனே*'* எனத் தொடங்கும் பதிகம் நட்டராகப் பண்ணில் அமைந்ததாகும் *(*தி*.7* ப*.28).*

வரையோடு நிகர்புரிசை
வலம்புரத்தார் கழல்வணங்கி

உரையோசைப் பதிகம்எனக்
கினியோதிப் போய்ச்சங்க
நிரையோடு துமித்தூப
மணித்தீப நித்திலப்பூந்
திரையோதங் கொண்டிறைஞ்சுந்
திருச்சாய்க்கா டெய்தினார். **#3044**

மலையை ஒத்த மதில் சூழ்ந்த திருவலம்புரம் என்னும் திருப்பதியில் அமர்ந்தருளும் பெருமானது திருவடிகளை வணங்கிச் சிறந்த ஓசையுடைய திருப்பதிகமான `எனக்கினி' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடிப் போற்றி, அப்பால் சென்று, சங்குகளின் நிரையான இயங்களோடு, அலைத்துளிகளான நறுமணப் புகை யையும், ஒன்பான் மணிகளான ஒளியையும், முத்துக்களாகிய வெண் மையான மலர்களையும் ஏற்று, அலைகளாகிய திருக்கைகளால் போற்றி வணங்கும் கடல் சூழ்ந்த திருச்சாய்க்காடு என்னும் திருப் பதிக்கு வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

`எனக்கினி*' எனத் தொடங்கும் பதிகம் காந்தாரப் பண் ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.72)*. துமித் தூலம் - அனைத்துளிகளால் ஆன தூபம்.

தேவர்பெரு மான்தன்னைத்
திருச்சாய்க்காட் டினிற்பணிந்து
பாவலர்செந் தமிழ்மாலைத்
திருப்பதிகம் பாடிப்போய்
மேவலர்தம் புரமெரித்தார்
வெண்காடு பணிந்தேத்தி
நாவலர்கா வலரடைந்தார்
நனிபள்ளித் திருநகரில். **#3045**

திருச்சாய்க்காடு என்னும் திருப்பதிக்குச் சென்று சேர்ந்து, தேவர் தலைவரான பெருமானைப் பணிந்து, பாடலாக அலரும் செந்தமிழ் மாலைத் திருப்பதிகத்தைப் பாடி, அப்பால் சென்று, பகைவருடைய முப்புரங்களையும் எரித்த பெருமானின் திருவெண் காடு என்னும் திருப்பதிக்குச் சென்று பணிந்து போற்றி, நாவன்மை யுடைய புலவர்களுக்கு என்றும் காவலராய நாவலூரார் திருநனிபள் ளித் திருநகரிடத்துச் சென்றார்.

விளக்கவுரை

திருவெண்காட்டில் அருளிய `படங்கொள் நாகம்*' (தி.7 ப.6)* எனத்

தொடங்கும் திருப்பதிகம் இந்தளப் பண்ணில் அமைந்த தாகும்.
திருச்சாய்க்காட்டில் அருளிய பதிகம் கிடைத்திலது.

நனிபள்ளி யமர்ந்தபிரான்
கழல்வணங்கி நற்றமிழின்
புனிதநறுந் தொடைபுனைந்து
திருச்செம்பொன் பள்ளிமுதல்
பனிமதிசேர் சடையார்தம்
பதிபலவும் பணிந்துபோய்த்
தனிவிடைமேல் வருவார்தம்
திருநின்றி யூர்சார்ந்தார். **#3046**

திருநனிபள்ளியில் அமர்ந்தருளும் சிவபெருமா னின் திருவடிகளை வணங்கி நல்ல தமிழினால் தூய்மையும், இனிமை யும் விரவிய தமிழ்மாலை தொடுத்து அணிவித்துத் திருச்செம்பொன் பள்ளி முதலாக உள்ள குளிர்ந்த இளம் பிறையை அணிந்த சடையை யுடைய பெருமானது திருப்பதிகள் பலவும் பணிந்து சென்று, ஒப்பற்ற ஆனேற்றின் மீது இவர்ந்தருளும் பெருமானது திருநின்றியூர் என் னும் திருப்பதியைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

திருநனிபள்ளியில் அருளிய பதிகம் `ஆதியன்'*(தி.7 ப.97)* எனத் தொடங்கும் பஞ்சமப் பண்ணில் அமைந்த பதிகமாகும்.
திருச்செம்பொன்பள்ளி முதலான பதிபலவும் என்பன, திருப்பறியலூர், திருவிளநகர், திருமயிலாடுதுறை, திருக்கஞ்சாறு முதலாயினவாக லாம் என்பர் சிவக்கவிமணியார். பதிகங்கள் எவையும் கிடைத்தில.

நின்றியூர் மேயாரை
நேயத்தால் புக்கிறைஞ்சி
ஒன்றியஅன் புள்ளுருகப்
பாடுவார் உடையஅர
சென்றுமுல கிடர்நீங்கப்
பாடியஏ ழெழுநூறும்
அன்றுசிறப் பித்தஞ்சொல்
திருப்பதிகம் அருள்செய்தார். **#3047**

திருநின்றியூரில் வீற்றிருந்தருளும் பெருமானாரை உட்புகுந்து அன்பினால் வணங்கி, இறைவனுடன் ஒன்றிய அன்பு உள்ளத்தை உருக்கத் தமிழ் மறையைப் பாடும் அவர், ஆளுடைய அரசர், என்றும் உலகம் இடர் நீங்கப் பாடியருளியன நாலாயிரத்துத் தொள்ளாயிரம் (4,900) பதிகங்களாகும் எனும் வரலாற்றை, அன்று தம்முடைய பதிகத்தில் வைத்துச் சிறப்பித்து அருள் நிறைந்த சொல்லு டைய

திருப்பதிகம் பாடினார்.

விளக்கவுரை

திருநின்றியூரில் அருளிய பதிகம் `திருவும் வண்மை யும்'(தி.7 ப.65) எனத் தொடங்கும் தக்கேசிப் பண்ணில் அமைந்த பதிகமாகும். இப்பதிகத்தில் வரும் இரண்டாவது பாடலில், `இணை கொள் ஏழெழு நூறு இரும்பனுவல் ஈன்றவன் திருநாவினுக் கரையன்' என அருளப் பெற்ற குறிப்பே சேக்கிழார் பெருமானால் ஈண்டுக் குறிக்கப்பட்டுள்ளது. 7 x 700 = 4,900 பதிகங்கள். `பதிகம் ஏழெழு நூறு பகரு மாகவியோகி' (தி.11 திருநாவுக். பா.7) என நம்பியாண் டார் நம்பிகளும் இது குறித்துப் போற்றுவர்.

அப்பதியில் அன்பருடன்
அமர்ந்தகல்வார் அகலிடத்தில்
செப்பரிய புகழ்நீடூர்
பணியாது செல்பொழுதில்
ஒப்பரிய வுணர்வினால்
நினைந்தருளித் தொழலுறுவார்
மெய்ப்பொருள்வண் தமிழ்மாலை
விளம்பியே மீண்டணைந்தார். **#3048**

அப்பதியில் அன்பர்களுடன் தங்கி அப்பால் செல்பவர், அகன்ற இந்நிலவுலகில் சொலற்கரிய புகழுடைய திருநீடூர் என்னும் திருப்பதியைப் பணியாது செல்கின்ற அமையத்தில், தம்மிடத் துள்ள ஒப்பரிய அருள்வயப்பட்ட உணர்வினால் அத்திருப்பதியை நினைந்தருளித் தொழுகின்றவர், உண்மைப் பொருள் நிறைந்த வண்மையான தமிழ்மாலைத் திருப்பதிகம் பாடி மேலும் செல்லாது, மீண்டும் திருநீடூர் வருவாராயினர்.

விளக்கவுரை

திருநின்றியூரில் தங்கியிருந்த பொழுது அருளிய பதிகம் `அற்றவனார்' (தி.7 ப.19) எனத் தொடங்கும் நட்டராகப் பண்ணில் அமைந்த பதிகமாகும்.

மடலாரும் புனல்நீடூர்
மருவினர்தாள் வணங்காது
விடலாமே எனுங்காதல்
விருப்புறும்அத் திருப்பதிகம்
அடலார்சூ லப்படையார்
தமைப்பாடி அடிவணங்கி
உடலாரும் மயிர்ப்புளகம்

மிகப்பணிந்தங் குறைகின்றார். **#3049**
`மலர்கள் நிறைந்த நீர்ப் பெருக்குடைய திருநீடூரில் இருந்தருளும் பெருமானின் திருவடிகளைப் பணியாது விடலாமே' என்னும் கருத்துடைய `ஊர்வதோர் விடை' எனத் தொடங்கும் அத் திருப்பதிகத்தைப் போர் விளங்கிய சூலப் படையை உடைய பெரு மான்மீது பாடியருளித் திருவடி பணிந்து, பணியும்தொறும் மெய் நிறைந்து சிலிர்க்கும் மயிர்க்கூச்சம் மேன்மேல் எழுந்திடப் பணிந்து அங்குத் தங்கியிருந்தருளுவார்,

விளக்கவுரை

`ஊர்வதோர் விடை' எனத் தொடங்கும் பதிகம் தக்கேசிப் பண்ணில் அமைந்ததாகும் (தி.7 ப.56).

அங்கண்இனி தமர்ந்தருளால்
திருப்புன்கூ ரணைத்திறைஞ்சிக்
கொங்கலரும் மலர்ச்சோலைத்
திருக்கோலக் காஅணையக்
கங்கைசடைக் கரந்தவர்தாம்
எதிர்காட்சி கொடுத்தருளப்
பொங்குவிருப் பால்தொழுது
திருப்பதிகம் போற்றிசைப்பார். **#3050**

`ஊர்வதோர் விடை' எனத் தொடங்கும் பதிகம் தக்கேசிப் பண்ணில் அமைந்ததாகும் (தி.7 ப.56).

விளக்கவுரை

திருக்கோலக்காவில் அருளிய பதிகம் `புற்றில்வாள் அரவு' (தி.7 ப.62) எனத் தொடங்கும் தக்கேசிப் பண்ணில் அமைந்த தாகும். பதிகப் பாடல் தோறும் `கோலக்காவினில் கண்டு கொண் டேனே' என வருவது கண்டு, `எதிர்காட்சி கொடுத்தருள' என்ற வர லாற்றுப் பின்னணியை அமைத்துக் கொண்டார்.

திருஞான சம்பந்தர்
திருக்கைக ளால் ஒற்றிப்
பெருகார்வத் துடன்பாடப்
பிஞ்ஞகனார் கண்டிரங்கி
அருளாலே திருத்தாளம்
அளித்தபடி சிறப்பித்துப்
பொருள்மாலைத் திருப்பதிகம்
பாடியே போற்றிசைத்தார். **#3051**

திருஞானசம்பந்தர் தமது திருக்கைகளால் தாளமிட்டுப் பெருகும்

ஆர்வத்துடன் அத்திருப்பதியை முன்னால் பாடிட, அதுகண்டு பெருமானார் திருவுள்ளமிரங்கி அவருக்குத் திருத்தாளம் வழங்கிய வரலாற்றைத் தாம் பாடிய பதிகத்து வைத்துச் சிறப்பித்துப் பொருள் சிறந்த மாலையாகும் அத்திருப்பதிகத்தை இசையுடன் பாடிப் போற்றி செய்தார்.

விளக்கவுரை

மேற்கூறிய பதிகத்துள் வரும் எட்டாவது பாடலில், `நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்கு உலகவர் முன் தாளம் ஈந்து அவன் பாடலுக்கு இரங்கும் தன்மை யாளனை' என வரும் குறிப்பை முகந்தெடுத்துக் கூறும் குறிப்பு இதுவாம். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

மூவாத முழுமுதலார்
முதற்கோலக் காஅகன்று
தாவாத புகழ்ச்சண்பை
வலங்கொண்டு தாழ்ந்திறைஞ்சி
நாவார்முத் தமிழ்விரகர்
நற்பதங்கள் பரவிப்போய்
மேவார்தம் புரஞ்செற்றார்
குருகாவூர் மேவுவார். **#3052**

எக்காலத்தும் மூப்படையாத முழுமுதல்வராய சிவபெருமான் அமர்ந்த முதன்மையான அத்திருக்கோலக்காவை நீங்கிக் குறைவிலாத புகழுடைய சீகாழி நகரையும் வலங்கொண்டு, விழுந்து வணங்கி, அங்குத் தோன்றிய நாவார்ந்த முத்தமிழில் வல்லுனரான திருஞானசம்பந்தரின் திருவடிகளைப் போற்றி, அப்பால் சென்று, பகைவர்களாகிய முப்புரத்தவரை எரித்த பெருமா னது திருக்குருகாவூரை அணைவார்,

விளக்கவுரை

****

உண்ணீரின் வேட்கையுடன்
உறுபசியால் மிகவருந்திப்
பண்ணீர்மை மொழிப்பரவை
யார்கொழுநர் வரும்பாங்கர்க்
கண்ணீடு திருநுதலார்
காதலவர் கருத்தறிந்து
தண்ணீரும் பொதிசோறும்
கொண்டுவழிச் சார்கின்றார். **#3053**

உண்ணும் வேட்கையோடு தமக்குற்ற பசியாலும் மிகவும் வருந்திப் பண்ணிசை போல இனிமையாகப் பேசும் பரவை யாரின் கணவரான நம்பியாரூரர் வரும் அமையத்தில், நீண்ட கண்ணை நெற்றியில் கொண்ட சிவபெருமான், தம் அன்பர்பால் உற்ற அன்பு சிறந்திட. அவர்தம் வேட்கையை அறிந்து, தண்ணீரும் பொதிசோறும் திருக்கையில் கொண்டு அவர் வரும் வழியாகத் தாமும் சேர்பவராய்,

விளக்கவுரை

****

வேனிலுறு வெயில்வெம்மை
தணிப்பதற்கு விரைக்குளிர்மென்
பானல்மலர்த் தடம்போலும்
பந்தரொரு பாலமைத்தே
ஆனமறை வேதியராய்
அருள்வேடங் கொண்டிருந்தார்
மானமருந் திருக்கரத்தார்
வன்தொண்டர் தமைப்பார்த்து. **#3054**

வேனிற்காலத்து வெயிலின் வெப்பத்தை நீக்குதற் காக, நறுமணம் மிக்க குளிர்ந்த மெல்லிய பாலின் சுவையையுடைய செங்கழுநீர் மலர்கள் நிறைந்த குளம்போலும் குளிர்ந்த தண்ணீர்ப் பந்தரை ஒருமருங்கு அமைத்து, மான் ஏந்திய கையுடன் விளங்கும் இறைவர், தாம் ஒரு மறைபயின்ற அந்தணராய் அருள் வேடங் கொண்டு, நம்பியாரூரர் வரும் வழியைப் பார்த்திருந்தார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

குருகாவூர் அமர்ந்தருளும்
குழகர்வழி பார்த்திருப்பத்
திருவாரூர்த் தம்பிரான்
தோழர்திருத் தொண்டருடன்
வருவார்அப் பந்தரிடைப்
புகுந்துதிரு மறையவர்பால்
பெருகார்வஞ் செலவிருந்தார்
சிவாயநம வெனப்பேசி. **#3055**

திருக்குருகாவூர் அமர்ந்தருளும் மிக இளையவராகிய பெருமான், அவர் வரும் வழியைப் பார்த்திருப்ப, திருவாரூரில் இருக்கும் தம்பிரான் தோழராகிய நம்பியாரூரர், அடியவர்களுடன் அவ்வழி வருவார், அத்தண்ணீர்ப் பந்தரிடை வந்து, அங்கிருந்த அழகுடைய அந்தணர்

பெருமான்பால் தம் கருத்துச் செல்லும்படி நோக்கிச் `சிவாயநம' எனக் கூறி அமர்ந்தார்.

விளக்கவுரை

****

ஆலநிழற் கீழிருந்தார்
அவர்தம்மை எதிர்நோக்கிச்
சாலமிகப் பசித்தீர்இப்
பொதிசோறு தருகின்றேன்
காலமினித் தாழாமே
கைக்கொண்டிங் கினிதருந்தி
ஏலநறுங் குளிர்தண்ணீர்
குடித்திளைப்புத் தீரஎன. **#3056**

அதுபொழுது கல்லால மரத்தின் கீழிருந்தருளும் இறைவர் அவரைப் பார்த்து, `நீர் மிகவும் பசித்திருக்கின்றீர்' என்னிட முள்ள இப்பொதிசோற்றினைத் தருகின்றேன், காலந் தாழ்த்தலின்றி இதனை இனிதுண்டு, மணம்மிக்க குளிர்ந்த தண்ணீரும் பருகி, இளைப் புத் தீரும்' என்னலும்,

விளக்கவுரை

****

வன்தொண்டர் அதுகேட்டு
மறைமுனிவர் தரும்பொதிசோறு
இன்றுநமக் கெதிர்விலக்க
லாகாதென் றிசைந்தருளிப்
பொன்றயங்கு நூல்மார்பர்
தரும்பொதிசோ றதுவாங்கிச்
சென்றுதிருத் தொண்டருடன்
திருவமுது செய்தருளி. **#3057**

அதுகேட்ட வன்தொண்டர்,`இம்மறை முனிவர் தரும் பொதிசோற்றை மறுத்தல் தகாது' என்று எண்ணி, அதற்கு இசைந்து பொன்னனைய நூல் அணிந்த மார்பையுடைய அவ்வந் தணர் கொடுக்கும் பொதிசோற்றினை வாங்கிச் சென்று, அடியவர்களு டன் திருவமுது செய்தருள,

விளக்கவுரை

****

எண்ணிறந்த பரிசனங்கள்
எல்லாரும் இனிதருந்தப்
பண்ணியபின் அம்மருங்கு

பசித்தணைந்தார் களும்அருந்த
உண்ணிறைந்த ஆரமுதாய்
ஒருகாலும் உலவாதே
புண்ணியனார் தாமளித்த
பொதிசோறு பொலிந்ததால். **#3058**

தம்முடன் வந்த எண்ணற்ற ஏவலர் முதலிய அனைவரையும் இனிது உண்ணச் செய்து, பின் அதன் அயலே பசித்து அணைந்தார்களும் அருந்திட, உள்ளத்து நிறைந்த அரிய அமுதாகி, ஒரு காலமும் குறைவிலாது, புண்ணியப் பொருளாகும் அந்தணனார் கொடுத்த அப்பொதிசோறு பொலிந்தது. இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

விளக்கவுரை

****

சங்கரனார் திருவருள்போல்
தண்ணீரின் சுவையார்ந்து
பொங்கிவரும் ஆதரவால்
அவர் நாமம் புகழ்ந்தேத்தி
அங்கயர்வால் பள்ளியமர்ந்
தருகணைந்தார் களுந்துயிலக்
கங்கைசடைக் கரந்தார்அப்
பந்தரொடுந் தாங்கரந்தார். **#3059**

எண்ணற்ற உயிர்கட்கெல்லாம் இன்பம் தந்தருளும் இறைவனாரின் இன்னருள் என விளங்கும் தண்ணீரினையும் குடித்துத் திளைத்து, உள்ளத்துப் பொங்கி வரும் மீதூர்ந்த அன்பால் பெரு மானின் திருப்பெயராய திருவைந்தெழுத்தைப் புகழ்ந்து போற்றி, அவ்விடத்து அமுதுண்ட களைப்பால் துயில்கொள்ள, அவருடன் அருகில் இருந்தவர் தாமும் உறங்கிட, கங்கையாற்றைச் சடைமீது மறைத்திருக்கும் சிவபெருமான் தாமும் தம் தோற்றத்தைத் தண்ணீர்ப் பந்தருடன் மறைந்து அருளினார்.

விளக்கவுரை

****

சித்தநிலை திரியாத
திருநாவ லூர்மன்னர்
அத்தகுதி யினிற்பள்ளி
யுணர்ந்தவரைக் காணாமை
இத்தனையா மாற்றை
அறிந்திலேன் எனவெடுத்து

மெய்த்தகைய திருப்பதிகம்
விளம்பியே சென்றடைந்தார். #3060

சிவபெருமானிடத்து வைத்த சித்தநிலை மாறாத திருநாவலூரின் அருள் அரசரான சுந்தரர், அவ்வளவில் விழித்துத் தமக்குப் பொதிசோறு கொடுத்து அருளிய அந்தணர் பெருமானைக் காணாது, அது இறைவன் செயலாக இருந்தமையுணர்ந்து, `இத்தனை யாமாற்றை அறிந்திலேன் எம்பெருமான்' எனப் பாட எடுத்து மெய்ம்மை விளங்கிய அத்திருப்பதிகத்தைப் பாடியவாறே திருக்குருகாவூரினைச் சென்று அடைந்தார்.

விளக்கவுரை

`இத்தனை யாமாற்றை' எனத் தொடங்கும் பதிகம் நட்ட ராகப் பண்ணில் அமைந்ததாகும்*(தி.7 ப.29)* `ஆவியைப் போகாமே தவிர்த்து என்னை ஆட்கொண்டாய்' `பாடுவார் பசி தீர்ப்பாய்' என இப்பதிகத்து வரும் தொடர்கள், இவ்வரலாற்றுக்கு அரணாகின்றன.

குருகாவூர் அமர்ந்தருளும்
குழகனார் கோயிலினுக்
கருகார்பொற் கோபுரத்தை
யணைந்திறைஞ்சி யுள்புக்கு
வருகாதல் கூரவலங்
கொண்டுதிரு முன்வணங்கிப்
பருகாவின் னமுதத்தைக்
கண்களாற் பருகினார். #3061

திருக்குருகாவூரில் அமர்ந்தருளும் பெருமானின் திருக்கோயிலுக்கு அருகே சென்று பொற்கோபுரத்தை வணங்கி, உட்புகுந்து உள்ளத்தெழுகின்ற காதல் பெருக, வலங்கொண்டு, திரு முன்பு வணங்கி, பருகத் தெவிட்டாத இன்னமுதான பெருமானைத் தம் கண்களால் கண்டு மகிழ்ந்தார்.

விளக்கவுரை

****

கண்ணார்ந்த இன்னமுதைக்
கையாரத் தொழுதிறைஞ்சிப்
பண்ணார்ந்த திருப்பதிகம்
பாடியே பணிந்தேத்தி
உள்நாடும் பெருங்காதல்
உடையவர்தாம் புறத்தெய்தி
நண்ணார்வத் தொண்டருடன்

அங்கினிது நயந்திருந்தார். **#3062**

கண்ணிற்கு இனிமை தரும் அமுதத்தைக் கையாரக் கும்பிட்டு வணங்கி, பண்ணிசை தவழும் திருப்பதிகத்தைப் பாடிப் பணிந்து போற்றி, பெருமானைத் தம் உள்ளத்தே நாடும் பெருங் காதலையுடைய சுந்தரர் வெளியே வந்து, அங்கிருந்த ஆர்வமுடைய அடியவருடன் அத்திருப்பதியில் இனிது விருப்புற்று இருந்தார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகம் கிடைத்திலது.

அந்நாளில் தம்பெருமான்
அருள்கூடப் பணிந்தகன்று
மின்னார்செஞ் சடைமுடியார்
விரும்புமிடம் பலவணங்கிக்
கன்னாடும் எயில்புடைசூழ்
கழிப்பாலை தொழுதேத்தித்
தென்னாவ லூர்மன்னர்
திருத்தில்லை வந்தடைந்தார். **#3063**

அந்நாள்களில், தம் பெருமானின் அருள்கூடப் பணிந்து, விடைபெற்று, அங்கிருந்து அகன்று, மின்போல் மிளிரும் செஞ்சடை முடியையுடைய பெருமான் விரும்பி அமர்ந்தருளும் இடங்கள் பலவும் வணங்கி, கற்களால் அமைந்த மதில் சூழ்ந்த திருக் கழிப்பாலைக்குச் சென்று வணங்கிப் போற்றி, அப்பால் தென்னாட்டில் சிறந்த திருநாவலூர் அரசர், திருவமைந்த திருத்தில்லைக்கு வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

விரும்பும் இடம்பல வணங்கி என்பன திருமுல்லை வாயில், திருமயேந்திரப்பள்ளி, திருநல்லூர்ப்பெருமணம் முதலாயின வாகலாம் என்பர் சிவக்கவிமணியார். திருக்கழிப்பாலையில் அருளிய பதிகம் `செடியேன்' *(தி.7 ப.23)* எனும் தொடக்கமுடைய நட்டராகப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

சீர்வளருந் திருத்தில்லைத்
திருவீதி பணிந்துபுகுந்
தேர்வளர்பொன் திருமன்றுள்
எடுத்தசே வடியிறைஞ்சிப்
பார்வளர மறைவளர்க்கும்
பதியதனில் பணிந்துறைவார்
போர்வளர்மே ருச்சிலையார்
திருத்தினைமா நகர்புகுந்தார். **#3064**

மேன்மேலும் சிறப்புகள் பலவும் வளர்கின்ற திருவு டைய தில்லை நகரின் திருவீதியைப் பணிந்து, உட்புகுந்து, அழகு வள ரும் பொன்னாலாய திருச்சபையில் ஆட எடுத்த திருவடிகளை வணங்கி, இந்நிலவுலகு வளர மறைகளை வளர்க்கும் தில்லை என்னும் அப்பதியதனில் பணிந்து தங்குபவர், முப்புரத்தை அழிக்கும் போரில் தலைநின்ற மேருமலையை வில்லாக உடைய பெருமானின் திருத் தினை மாநகரினைச் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

இதுபொழுது தில்லையில் அருளிய பதிகங்கள் கிடைத்தில.

திருத்தினைமா நகர்மேவும்
சிவக்கொழுந்தைப் பணிந்துபோய்
நிருத்தனார் அமர்ந்தருளும்
நிறைபதிகள் பலவணங்கிப்
பொருத்தமிகுந் திருத்தொண்டர்
போற்றுதிரு நாவலூர்
கருத்தில்வரு மாதரவால்
கைதொழச்சென் றெய்தினார். **#3065**

திருத்தினை மாநகரில் வீற்றிருந்தருளும் சிவக் கொழுந்தைப் பணிந்து, அங்கிருந்தும் கூத்தியற்றும் பெருமானார் அமர்ந்தருளும் திருப்பதிகள் பலவும் வணங்கிச் சென்று, திருவருள் உறைப்பு மிகும் திருத்தொண்டர்கள் போற்றுகின்ற திருநாவலூருக்கு வரும் ஆதரவால், அப்பதியில் வீற்றிருக்கும் இறைவனைக் கை தொழச் சென்றார்.

விளக்கவுரை

திருத்தினை நகரில் அருளிய பதிகம் கிடைத்திலது. நிறை பதிகள் பலவணங்கி என்பன திருச்சோபுரம், திருமாணிகுழி, திருப் பல்லவனகரம், திருமுண்டீச்சுரம், திருக்குணபரஈச்சுரம், திருஅதிகை வீரட்டம், திருவாமூர், சித்தவடம், திருமணம் வந்த புத்தூர் முதலாயின வாகலாம் என்பர் சிவக்கவிமணியார்.

திருநாவ லூர்மன்னர்
சேர்கின்றார் எனக்கேட்டுப்
பெருநாமப் பதியோரும்
தொண்டர்களும் பெருவாழ்வு
வருநாள்என் றலங்கரித்து
வந்தெதிர்கொண் டுள்ளணையச்
செருநாகத் துரிபுனைந்தார்
செழுங்கோயி லுள்ளணைந்தார். **#3066**

திருநாவலூரின் அருள் அரசராய சுந்தரர், அங்கு எழுந்தருளுவதைக் கேட்டுப் பெரும் புகழுடைய அப்பதியில் உள்ளார்களும், தொண்டர்களும், `தங்களுக்கு இன்று பெருவாழ்வு வருநாள்' என்று நகரம் முழுவதும் அணி செய்து, அவரை எதிர் கொண்டு அழைத்துச் சென்றிட, அவரும் சென்று, வலி மிகுந்த யானை யின் தோலைப் போர்த்த பெருமானின் திருவமைந்த திருக்கோயிலின் உள்ளாகச் சென்றருளினார்.

விளக்கவுரை

****

மேவியஅத் தொண்டர்குழாம்
மிடைந்தரவென் றெழுமோசை
மூவுலகும் போயொலிப்ப
முதல்வனார் முன்பெய்தி
ஆவியினு மடைவுடையா
ரடிக்கமலத் தருள்போற்றிக்
கோவலனான் முகனெடுத்துப்
பாடியே கும்பிட்டார். **#3067**

தம்முடன் வந்த அடியவர் கூட்டம் நெருங்கி, அரகர என மொழிந்திட எழுகின்ற ஓசை மூவுலகும் சென்று ஒலித்திட, முதல்வனாரின் திருமுன்பு எய்தி, உயிரினும் சிறந்தாராய பெருமா னின் திருவடித் தாமரை வழங்கியருளும் பேரருளின் திறம் போற்றி, `கோவலன் நான்முகன்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தை எடுத்துப் பாடிக் கும்பிட்டார்.

விளக்கவுரை

`கோவலன் நான்முகன்' எனத் தொடங்கும் பதிகம் நட்டராகப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.17)*. இறைவன் ஆவ ணம் கொண்டு ஆட்கொள்ளவரத் தாம் வன்மைகள் பேசி வன்தொண் டர் என்பதோர் வாழ்வு பெற்றமையை இத்திருப்பதிகத்தில் பாடக் குறித்து அருளுகின்றார். நரசிங்க முனையரையர் பற்றிய குறிப்பும் இதன் உள் காணக்கிடக்கின்றது.

நலம்பெருகும் அப்பதியில்
நாடியஅன் பொடுநயந்து
குலம்பெருகுந் திருத்தொண்டர்
குழாத்தோடு மினிதமர்ந்து
சலம்பெருகுஞ் சடைமுடியார்
தாள்வணங்கி யருள்பெற்றுப்
பொலம்புரிநூல் மணிமார்பர்

பிறபதியுந் தொழப்போவார். #3068
நலம் என்றும் பெருகிய அப்பதியில் பெருமானை விரும்பிக் கொண்ட அன்போடும் பணிந்து, குலம் பெருகும் திருத்தொண்டர் கூட்டத்தோடும் இனிதே அங்குத் தங்கி, கங்கை தங்கும் சடைமுடியையுடைய பெருமானின் திருவடிகளை வணங்கி, அருள்பெற்று, அழகு பொருந்திய முப்புரி நூலை அணிந்த மார்பினராய சுந்தரர், அப்பதியினின்றும் நீங்கிப் பிறபதிகளையும் தொழுதிடப் போவார்,

விளக்கவுரை

****

தண்டகமாந் திருநாட்டுத்
தனிவிடையார் மகிழ்விடங்கள்
தொண்டர்எதிர் கொண்டணையத்
தொழுதுபோய்த் தூயநதி
வண்டறைபூம் புறவுமலை
வளமருதம் பலகடந்தே
எண்திசையோர் பரவுதிருக்
கழுக்குன்றை யெய்தினார். #3069

குளிர்ந்த நீர்வளமுடைய திருநாட்டில் ஒப்பற்ற ஆனேற்று ஊர்தியையுடைய பெருமான் மகிழ்ந்தருளும் இடங்களில் அடியவர்கள் அங்கங்கும் எதிர்கொண்டு வணங்கிடத் தொழுது சென்று, தூய ஆறுகளும், வண்டுகள் பாடும் சோலைகள் சூழ்ந்த முல்லை நிலங்களும், மலைவளம் தரும் குறிஞ்சி நிலங்களும், மருத நிலங்களுமாய பல இடங்களைக் கடந்து, எண்திசையினில் உள்ளா கியவரும் வணங்கிடும் திருக்கழுக்குன்றத்தை அடைந்தார்.

விளக்கவுரை

மகிழ்விடங்கள் தொழுது என்பன, திருப்புறவார்பனங் காட்டூர், திண்டீச்சுரம், திருஅச்சிறுபாக்கம், உருத்திரகோடி முதலாயின வாகலாம் என்பர் சிவக்கவிமணியார். நதிகள் - வராக நதி, பாலாறு, பெண்ணையாறு முதலியன. புறவு - இடைப்பட்ட காடுகள். திண்டிவ னம், அச்சிறுபாக்கம், செஞ்சி முதலாயின என்பர் சிவக்கவிமணியார். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

தேனார்ந்த மலர்ச்சோலை
திருக்கழுக்குன் றத்தடியார்
ஆனாத விருப்பினொடு
மெதிர்கொள்ள அடைந்தருளித்
தூநாள்வெண் மதியணிந்த

சுடர்க்கொழுந்தைத் தொழுதிறைஞ்சிப்
பாநாடு மின்னிசையின்
திருப்பதிகம் பாடினார். **#3070**

மகிழ்விடங்கள் தொழுது என்பன, திருப்புறவார்பனங் காட்டூர், திண்டீச்சுரம், திருஅச்சிறுபாக்கம், உருத்திரகோடி முதலாயின வாகலாம் என்பர் சிவக்கவிமணியார். நதிகள் - வராக நதி, பாலாறு, பெண்ணையாறு முதலியன. புறவு - இடைப்பட்ட காடுகள். திண்டிவ னம், அச்சிறுபாக்கம், செஞ்சி முதலாயின என்பர் சிவக்கவிமணியார். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

விளக்கவுரை

இங்கு அருளிய பதிகம் `கொன்று செய்த'*(தி.7 ப.8)* என்னும் தொடக்கமுடைய நட்டபாடைப் பண்ணில் அமைந்த பதிக மாகும். தூ நாள் வெண்மதி - தூ - தூய்மை *:* சாபம் நீங்கி இறையருள் பெற்ற தூய்மை. நாள் - புதிய *:* அன்றலர்ந்த.

பாடியஅப் பதியின்கண்
இனிதமர்ந்து பணிந்துபோய்
நாடியநல் லுணர்வினொடும்
திருக்கச்சூர் தனைநண்ணி
ஆடகமா மதில்புடைசூழ்
ஆலக்கோ யிலின்அமுதைக்
கூடியமெய் யன்புருகக்
கும்பிட்டுப் புறத்தணைந்தார். **#3071**

இவ்வாறு பாடிய அத்திருப்பதியில் இனிது தங்கி, பணிந்து, அப்பால் சென்று, பெருமானை நாடிய நல்லுணர்வோடும் திருக்கச்சூரை அடைந்து, அங்குப் பொன்னாலான பெரிய மதில்கள் சூழப்பெற்ற ஆலக்கோயிலில் அமர்ந்தருளும் அமுதாய பெருமானை உள்ளத்தில் பெருகும் உண்மையான அன்பு உருகக் கும்பிட்டு வெளியே வந்தருளினார்.

விளக்கவுரை

****

அணைந்தருளும் அவ்வேலை
அமுதுசெயும் பொழுதாகக்
கொணர்ந்தமுது சமைத்தளிக்கும்
பரிசனமும் குறுகாமைத்
தணந்தபசி வருத்தத்தால்
தம்பிரான் திருவாயில்

புணர்ந்தமதில் புறத்திருந்தார்
முனைப்பாடிப் புரவலனார். #3072

வெளியே வந்தருளிய அப்பொழுது, திருவமுது செய்யும் பொழுதாகிட, உணவுப் பொருள்களைக் கொண்டு வந்து அமுதினைச் சமைத்துக் கொடுத்திடும் ஏவலர் அவ்விடம் வந்து சேராமையால், பெருகிய பசியின் வருத்தத்தினால், திருமுனைப்பாடி நாட்டின் பேரருளாளராய சுந்தரர், கோயில் திருவாயிலினைச் சேர்ந்த மதிலின் அருகே இருந்தருளினார்.

விளக்கவுரை

****

வன்தொண்டர் பசிதீர்க்க
மலையின்மேல் மருந்தானார்
மின்தங்கு வெண்டலையோ
டொழிந்தொருவெற் றோடேந்தி
அன்றங்கு வாழ்வாரோர்
அந்தணராய்ப் புறப்பட்டுச்
சென்றன்பர் முகநோக்கி
அருள்கூரச் செப்புவார். #3073

அவ்வாறு பசியுடன் இருந்த வன்தொண்டரின் பசியைத் தீர்த்திட, கச்சூர்மலைமேல் வீற்றிருக்கும், கொடிய பசிப் பிணியைத் தீர்த்தருளும் மருந்தாகிய சிவபெருமான், தமது திருக்கரத்து ஏந்திய மின்னல் போலும் ஒளிபொருந்திய வெண்தலை ஓட்டினை நீக்கி வேறு ஒரு மண் ஓட்டினைத் திருக்கையில் ஏந்தி, அவ்விடத்து வாழும் ஓர் அந்தணர் வடிவில் சென்று, அவர் திருமுகத்தை நோக்கி, அருள் கூர்ந்திடச் சொல்வாராய்,

விளக்கவுரை

****

மெய்ப்பசியால் மிகவருந்தி
இளைத்திருந்தீர் வேட்கைவிட
இப்பொழுதே சோறிரந்திங்
கியானுமக்குக் கொணர்கின்றேன்
அப்புறநீர் அகலாதே
சிறிதுபொழு தமருமெனச்
செப்பியவர் திருக்கச்சூர்
மனைதோறும் சென்றிரப்பார். #3074

`உடலில் ஏற்பட்ட பசியால் மிக வருந்தி, நீவிர் இளைத்திருக்கின்றீர்; உம் பசிவருத்தம் நீங்கிட, இப்பொழுதே நான் சோற்றினை இரந்து

உமக்குக் கொண்டு வருவேன்; நீவிர் அப்புறம் போகாமல் சிறிது நேரம் இங்கு அமரும்' எனச் சொல்லி, அவர் திருக்கச்சூர் என்னும் அந்நகரில் உள்ள மனைதோறும் சென்று சோறு இரப்பாராய்,

விளக்கவுரை

****

வெண்திருநீற் றணிதிகழ
விளங்குநூல் ஒளிதுளங்கக்
கண்டவர்கள் மனமுருகக்
கடும்பகற்போ திடும்பலிக்குப்
புண்டரிகக் கழல்புவிமேல்
பொருந்தமனை தொறும்புக்குக்
கொண்டுதாம் விரும்பியாட்
கொண்டவர்முன் கொடுவந்தார். **#3075**

வெண்மையான திருநீற்றின் அழகு திகழ, மார்பில் விளங்கிய நூல், ஒளியுடன் விளங்கக் கண்டவர்கள் மனம் காதலால் உருகிட, கடுமையான வெயில் மிக்க நண்பகல் பொழுதில் இடுகின்ற பிச்சைக்காகத் தாமரை யனைய திருவடிகள் நிலத்தில் பொருந்திட, வீடுகள்தொறும் புகுந்து சோறு பெற்றுக் கொண்டு வந்தவர்,

விளக்கவுரை

****

இரந்துதாங் கொடுவந்த
இன்னடிசி லுங்கறியும்
அரந்தைதரும் பசீதீர
அருந்துவீ ரெனவளிப்பப்
பெருந்தகையார் மறையவர்தம்
பேரருளின் திறம்பேணி
நிரந்தபெருங் காதலினால்
நேர்தொழுது வாங்கினார். **#3076**

இரந்து தாம் கொண்டு வந்த இனிய சோற்றையும், கறிவகைகளையும் எடுத்துத் `துயர்தரும்நும் பசிதீர உண்டிடுவீர்' எனக் கொடுத்திடலும், பெருந்தகையாராய சுந்தரர் அந்தணராக வந்து அருளியவரின் பேரருளைப் போற்றி உள்ளம் நிறைகின்ற பெருங் காதலினால் எதிரே தொழுது அச்சோற்றை வாங்கியவர்,

விளக்கவுரை

****

வாங்கிஅத் திருவமுது

வன்தொண்டர் மருங்கணைந்த
ஓங்குதவத் தொண்டருடன்
உண்டருளி யுவந்திருப்ப
ஆங்கருகு நின்றார்போல்
அவர்தம்மை யறியாமே
நீங்கினா ரெப்பொருளும்
நீங்காத நிலைமையினார். #3077

வாங்கிய அத்திருவமுதைச் சுந்தரர் தம் மேலாய தவமுடைய அடியார்களுடன் உண்டருளிப் பெருமகிழ்ச்சி கொண்டு இருப்ப, எப்பொருளினும் நீங்குதலரிய தேவராய பெருமானும், அவர் அருகே நின்றாற்போல் நின்று, அவரை அறியாது மறைந் தருளினார்.

விளக்கவுரை

இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

திருநாவ லூராளி
சிவயோகி யார்நீங்க
வருநாம மறையவனார்
இறையவனா ரெனமதித்தே
பெருநாதச் சிலம்பணிசே
வடிவருந்தப் பெரும்பகற்கண்
உருநாடி எழுந்தருளிற்
றென்பொருட்டாம் எனவுருகி. #3078

அதுகண்டு திருநாவலூரின் மன்னராய சுந்தரரும், சிவயோகியாய அவ்வந்தணர் பெருமான் மறைந்திடத் தம் முன்பு வந்தருளிய அந்த அந்தணர், எல்லாம் வல்ல ஈசனாகும் என எண்ணிப் பேரொலியையுடைய சிலம்பு ஒலித்திட அணிந்த திருவடிகள் இந்நிலவுலகில் வருத்தமடைய, இக்கொடிய பெரும் பகற்பொழுதில் நாடி வந்தருளியது என் பொருட்டாகவன்றோ? என உள்ளம் உருகி,

விளக்கவுரை

****

முதுவா யோரி என்றெடுத்து
முதல்வ னார்தம் பெருங்கருணை
அதுவா மிதுவென் றதிசயம்வந்
தெய்தக் கண்ணீர் மழையருவிப்
புதுவார் புனலின் மயிர்ப்புளகம்
புதையப் பதிகம் போற்றிசைத்து
மதுவார் இதழி முடியாரைப்

பாடி மகிழ்ந்து வணங்கினார். **#3079**

`முதுவாய் ஓரி' எனத் தொடங்கி எப்பொருட்கும் மூலமான சிவபெருமானது பெருங்கருணை அதுவாம் இது எனும் கருத்தமைய, கண்களில் நீர் மழை அருவியென மேனியில் புது நீராகிப் பொழிய, உடல் முழுதும் மயிர்க் கூச்செறிய, அப்பதிகத்தை இசையு டன் பாடிப் போற்றி, தேனார்ந்த கொன்றை மலரை முடிமேல் சூடிய பெருமானை மகிழ்ந்து வணங்கினார்.

விளக்கவுரை

`முதுவாய் ஓரி' எனத் தொடங்கும் பதிகம் கொல்லிக் கௌவாணத்தில் அமைந்த பதிகமாகும் *(தி.7 ப.41)*. இவ்வரலாற் றிற்கு இப்பதிகம் அகச்சான்றாக அமைந்துள்ளது. தமக்காக உச்சிப் பொழுதில் வீடுதொறும் சென்றிரந்து வந்த பெருங்கருணையைச் சுந்தரர் பலபடக் குறித்து நன்றியுணர்வோடு போற்றி மகிழ்கின்றார். இரண்டாவது பாடலில் `கச்சேர் அரவு ஒன்று அரையில் அசைத்துக் கழலும் கிலம்பு ஒலிக்க பலிக்கென்று உச்சம் போதா ஊர் ஊர்திரியக் கண்டால் அடியார் உருகாரே' எனவரும் பகுதி எண்ணற்குரியது.

வந்தித் திறைவ ரருளாற்போய்
மங்கை பாகர் மகிழ்ந்தவிடம்
முந்தித் தொண்ட ரெதிர்கொள்ளப்
புக்கு முக்கட்பெருமானைச்
சிந்தித் திடவந் தருள்செய்கழல்
பணிந்து செஞ்சொல் தொடைபுனைந்தே
அந்திச் செக்கர்ப் பெருகொளியார்
அமருங் காஞ்சி மருங்கணைந்தார். **#3080**

இவ்வாறு இறைவனாரைப் போற்றி, அவர் அருள்பெற்று, உமையம்மையாரை ஒரு கூற்றில் உடைய பெருமான் மகிழ்ந்தருளும் திருப்பதிகள் பலவற்றிற்கும் ஆங்காங்குள்ள அடிய வர்கள் எதிர்கொளச் சென்று அத்திருப்பதிகளில் கோயில் கொண்டிருக் கும் முக்கட் செல்வரை நினைந்த வண்ணம் திருவடிகளை வணங்கிச் செஞ்சொற்களாலாய தமிழ்ப் பதிக மாலைகளைச் சூட்டி, மாலைப் பொழுதில் தோன்றும் செக்கர் வானம் போலும் சிவப்பு மிக்க ஒளியை யுடைய பெருமான் வீற்றிருக்கும் காஞ்சிபுரத்தின் அருகாக வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

மங்கைபாகர் மகிழ்ந்த இடங்கள் என்பன திருக்கச்சூருக் கும், காஞ்சிபுரத்திற்கும் இடையேயுள்ள பதிகளாம். அவை திருமுக் கூடல்,

திருவில்வலம், திருமாகறல், திருக்குரங்கணில்முட்டம் முதலா யினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார்.

அன்று வெண்ணெய் நல்லூரில்
அரியும் அயனுந் தொடர்வரிய
வென்றி மழவெள் விடையுயர்த்தார்
வேத முதல்வ ராய்வந்து
நின்று சபைமுன் வழக்குரைத்து
நேரே தொடர்ந்தாட் கொண்டவர்தாம்
இன்றிங் கெய்தப் பெற்றோமென்று
எயில்சூழ் காஞ்சிநகர் வாழ்வார். **#3081**

அதுபொழுது மதில் சூழ்ந்த காஞ்சிநகரில், வாழும் அடியவர்கள் பலரும், அன்றொரு நாள் திருவெண்ணெய் நல்லூரில், மாலும் அயனும் தொடர்வரியாராகும், வெற்றி தரும் இளைய ஆனேற் றுக் கொடியைக் கொண்டிருக்கும் பெருமானார், தாம் ஒரு வேத முதல்வராய அந்தணராய் வடிவுகொண்டு வந்து, அவையிடத்து நேர் நின்று தொடர்ந்து வழக்குரைத்துத் தடுத்தாட் கொள்ளப்பட்டவரான சுந்தரர், இன்று இங்கு வந்திடப் பேறு பெற்றோம் என்று கூறி,

விளக்கவுரை

****

மல்கு மகிழ்ச்சி மிகப்பெருக
மறுகு மணித்தோ ரணம்நாட்டி
அல்கு தீபம் நிறைகுடங்கள்
அகிலின் தூபங் கொடியெடுத்துச்
செல்வ மனைகள் அலங்கரித்துத்
தெற்றி யாடன் முழவதிரப்
பல்கு தொண்ட ருடன்கூடிப்
பதியின் புறம்போய் எதிர்கொண்டார். **#3082**

உள்ளத்துப் பொருந்திய மகிழ்ச்சி மிகப் பெருகிட, வீதிகள் தோறும் அழகிய முத்துத் தோரணங்களை நாட்டி, ஒளிவளர் விளக்குக்கள், நிறை குடங்கள், அகிலின் நறும்புகை, கொடிகள் ஆகியவற்றை எடுத்து, செல்வம் மிகும் தம் மனைகள் தோறும் அணி செய்து, தத்தம் முன்றில்தோறும் நடனமாடுதற்கேற்ற முழவுகள் முழங்கிடத் திரளும் அடியவர்களுடன் கூடி, தம் பதியின் புறம்போந்து அவரை எதிர் கொண்டார்கள்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஆண்ட நம்பி யெதிர்கொண்ட
அடியார் வணங்க எதிர்வணங்கி
நீண்ட மதிற்கோ புரங்கடந்து
நிறைமா ளிகைவீ தியிற்போந்து
பூண்ட காதல் வாழ்த்தினுடன்
புனைமங் கலதூ ரியம்ஒலிப்ப
ஈண்டு தொண்டர் பெருகுதிரு
ஏகாம் பரஞ்சென் றெய்தினார். **#3083**

இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற சுந்தரர், தம்மை எதிர்கொண்ட அடியவர்கள் வணங்கத் தாமும் வணங்கி, நீண்ட மதில்களையுடைய கோபுரத்தைக் கடந்து, நிரல்பட அமைந்த மாளிகைகளின் வீதிவழியே சென்று, தம்பால் பூண்ட அன்பினால் பெருகிய வாழ்த்தொலிகளுடன் சிறந்த மங்கல இயங்களும் ஒலித்திட, நெருங்கிய தொண்டர்கள் சூழத் திருவேகாம்பரம் என்னும் கோயி லைச் சென்றடைந்தார்.

விளக்கவுரை

****

ஆழிநெடுமா லயன்முதலாம்
அமரர் நெருங்கு கோபுரமுன்
பூமி யுறமண் மிசைமேனி
பொருந்த வணங்கிப் புகுந்தருளிச்
சூழு மணிமா ளிகைபலவுந்
தொழுது வணங்கி வலங்கொண்டு
வாழி மணிபொற் கோயிலினுள்
வந்தார் அணுக்க வன்தொண்டர். **#3084**

இறைவனின் அணுக்கத் தொண்டராய சுந்தரர், சக்கரப் படையை உடைய நெடிய திருமால், நான்முகன் முதலாய தேவர்களும் சூழ நிற்கும் கோபுரம் முன்பாக, நிலத்தில் உடல் படிந்திட வணங்கி, உட்சென்று, பெருமானின் இருப்பிடத்தைச் சூழ்ந்த அழகிய பல மாளிகைகளையும் தொழுது வணங்கி, வலங்கொண்டு அழகிய பொற்கோயில் உள்ளாக வந்தார்.

விளக்கவுரை

****

கைகள் கூப்பி முன்னணைவார்
கம்பை யாறு பெருகிவர
ஐயர் தமக்கு மிகஅஞ்சி
ஆரத் தழுவிக் கொண்டிருந்த

மையு லாவுங் கருநெடுங்கண்
மலையா ளென்றும் வழிபடுபூஞ்
செய்ய கமலச் சேவடிக்கீழ்த்
திருந்து காத லுடன் வீழ்ந்தார். **#3085**

கைகளைக் கூப்பியவாறு பெருமானின் திருமுன்பு செல்பவராய ஆரூரர், கம்பையாறு பெருகிவரக் கண்டு, பெருமானின் திருமேனியின் பொருட்டு மிகப் பயந்து, நன்றாக அவரை இறுகத் தழுவிக்கொண்டிருந்த மைதீட்டி விளங்கும் நீண்ட கண்களை உடைய மலையரசன் மகளாரான ஏலவார் குழலார், என்றும் வழிபட்டு வருகின்ற செந்தாமரை மலர் போன்ற மென்மையும், நிறமும், மணமும் கொண்ட பெருமானின் திருவடிகளின் கீழாகத் திருந்திய காதலுடன் வணங்கினார்.

விளக்கவுரை

****

வீழ்ந்து போற்றிப் பரவசமாய்
விம்மி யெழுந்து மெய்யன்பால்
வாழ்ந்த சிந்தை யுடன்பாடி
மாறா விருப்பிற் புறம்போந்து
சூழ்ந்த தொண்ட ருடன்மருவும்
நாளில் தொல்லைக் கச்சிநகர்த்
தாழ்ந்த சடையா ராலயங்கள்
பலவுஞ் சார்ந்து வணங்குவார். **#3086**

கால்உற வணங்கிப் போற்றி செய்து, தன்வயம் இழந்து, விம்மி அழுது எழுந்து மெய்யன்பினால் வாழ்வு பெற்ற சிந்தையால், பெருமானைப் பாடி, மாறாத விருப்பத்துடன் வெளியே வந்து, தம்மைச் சூழ்ந்த அடியவர்களுடன் ஆரூரர் அங்குத் தங்கியிருக் கும் நாள்களில், பழமையான காஞ்சி நகரைச் சூழ்ந்து விளங்கிடும் சடையையுடைய பெருமான் திருக்கோயில்கள் பலவற்றையும் சென்று வணங்குவாராய்,

விளக்கவுரை

திருக்கச்சி ஏகம்பத்தில் இதுபொழுது அருளிய பதிகம் கிடைத்திலது.

சீரார் காஞ்சி மன்னுதிருக்
காமக் கோட்டம் சென்றிறைஞ்சி
நீரார் சடையா ரமர்ந்தருளும்
நீடு திருமேற் றளிமேவி
ஆரா அன்பிற் பணிந்தேத்து
மளவில்நுந்தா வொண்சுடராம்
பாரார் பெருமைத் திருப்பதிகம்

பாடி மகிழ்ந்து பரவினார். **#3087**

சிறப்பு மிக்க காஞ்சிப் பதியில் விளங்கும் திருக்காமக் கோட்டத்திற்குச் சென்று வணங்கி, கங்கையைச் சடையில் உடைய பெருமான் நிலைபெற்று வாழும் திருக்கச்சிமேற்றளி என்னும் கோயிலை அடைந்து ஆராத அன்பினால், பெருமானைப் பணிந்து போற் றும் வகையில் இந்நிலவுலகில் அளவற்ற பெருமையுடைய `நுந்தா வொண் சுடரே' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடி மகிழ்ந்து போற்றினார்.

விளக்கவுரை

`நொந்தா வொண்சுடரே' எனத் தொடங்கும் பதிகம் நட்ட ராகப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.21)*. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஓண காந்தன் தளிமேவும்
ஒருவர் தம்மை யுரிமையுடன்
பேணி யமைந்த தோழமையால்
பெருகும் அடிமைத் திறம்பேசிக்
காண மோடு பொன்வேண்டி
நெய்யும் பாலும் கலைவிளங்கும்
யாணர்ப் பதிகம் எடுத்தேத்தி
யெண்ணில் நிதிபெற் றினிதிருந்தார். **#3088**

திருவோணகாந்தன்தளியில் எழுந்தருளி இருக் கும் இறைவரை, உரிமையோடு விரும்பி ஏற்ற தோழமைத் திறம் பற்றிப் பெருகிவரும் அடிமைத் திறத்தினைக் கூறி, காசுடன் பொன்னை விரும்பி, `நெய்யும் பாலும்' எனத் தொடங்கும் இசைக் கலைகளின் தன்மை விளங்குகின்ற அழகிய திருப்பதிகத்தினை எடுத்துப் போற்றி அளவற்ற செல்வங்களைப் பெற்று இனிதாக இருந்தார்.

விளக்கவுரை

ஓணன், காந்தன் என்ற இரு அசுரர்களாலும் வழிபடப் பெற்றதால் ஓணகாந்தன்தளி எனப் பெயர் பெற்றது. `நெய்யும் பாலும்' எனத் தொடங்கும் பதிகம், *(தி.7 ப.5)* இந்தளப் பண்ணில் அமைந்த தாகும். `கையில் ஒன்றும் காணம் இல்லை'என வரும் குறிப்பால், இது பொன் வேண்டியருளிய பதிகமாதல் தெரியலாம். `உங்களுக்கு ஆட் செய்ய மாட்டோம்; இல்லை என்னீர் உண்டும் என்னீர்; ஓடிப் போகீர் பற்றுந் தாரீர்; வாரமாகித் திருவடிக்குப் பணிசெய் தொண்டர் பெறுவ தென்னே' என வரும் முறைப்பாடுகள் இவர்தம் தோழமைத் திறத்தை விளக்கலின், `உரிமையுடன் பேணியமைந்த தோழமையால்' பாடி அருளியது எனச் சேக்கிழார் குறித்தருளுவாராயினர்.

அங்கண் அமர்வார் அனேகதங்கா
வதத்தை யெய்தி யுள்ளணைந்து
செங்கண் விடையார் தமைப்பணிந்து
தேனெய் புரிந்தென் றெடுத்ததமிழ்
தங்கு மிடமா மெனப்பாடித்
தாழ்ந்து பிறவுந் தானங்கள்
பொங்கு காத லுடன்போற்றிப்
புரிந்தப் பதியிற் பொருந்துநாள். **#3089**

அப்பதியில் விரும்பித் தங்கியிருந்தவராய நம்பிகள், திருக்கச்சி அனேகதங்காவதத்தினைச் சேர்ந்து, திருக்கோயி லின் உள்ளே அணைந்து, சிவந்த கண்களையுடைய ஆனேற்றை உடையாராகிய இறைவரை வணங்கித் `தேன்நெய் புரிந்து' எனத் தொடங்கும் திருப்பதிகத்தினைப் பாடியருளி, வணங்கி, இறைவன் எழுந்தருளியிருக்கும் பிற பதிகளையும் மேன்மேலும் மிகும் பெரு விருப்புடன் சென்று போற்றி, இடைவிடாத நினைவுடனே அக்கச்சித் திருப்பதியில் பொருந்தவிருக்கும் நாள்களில்,

விளக்கவுரை

`தேன்நெய்' *(தி.7 ப.5)* எனத் தொடங்கும் பதிகம், இந் தளப் பண்ணில் அமைந்ததாகும். பிற தானங்கள் என்பன, காஞ்சியில் உள்ளனவும், அதனைச் சூழ்ந்து உள்ளனவுமாய திருக்கோயில்க ளாம். திருக்குறிப்புத்தொண்டர் புராணத்து *(தி.12 பு.19)*, இக் கோயில்கள் பலவும் குறித்துக் காட்டப் பெற்றுள்ளன. ஆண்டுக் காண்க.

பாட இசையும் பணியினால்
பாவை தழுவக் குழைகம்பர்
ஆடல் மருவுஞ் சேவடிகள்
பரவிப் பிரியா தமர்கின்றார்
நீட மூதூர்ப் புறத்திறைவர்
நிலவும் பதிகள் தொழவிருப்பால்
மாட நெருங்கு வன்பார்த்தான்
பனங்காட் டூரில் வந்தடைந்தார். **#3090**

பாடுதற்கு இசைகின்ற பணிசெய்யப் பெற்றதனால், அம்மையார் தழுவக் குழைந்து காட்டிய திருவேகம்பரது அருட் கூத்தாடும் திருவடிகளைப் போற்றிப் பிரியாது விரும்பி எழுந்தருளி இருக்கின்ற நம்பியாரூரர், மிகப் பழமையான அக்கச்சிமூதூரின் புறத் திலே நிலவுகின்ற பதிகள் பலவற்றையும் தொழுது விருப்பத்தினால் சென்று, மாடங்கள் நெருங்கி விளங்கும் வன்பார்த்தான்பனங்காட் டூரை வந்து அடைந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

செல்வ மல்கு திருப்பனங்காட்
டூரிற் செம்பொற் செழுஞ்சுடரை
அல்லல் அறுக்கும் அருமருந்தை
வணங்கி யன்பு பொழிகண்ணீர்
மல்கநின்று விடையின்மேல்
வருவார் எனும்வண் டமிழ்ப்பதிகம்
நல்ல இசையி னுடன்பாடிப்
போந்து புறம்பு நண்ணுவார். **#3091**

செல்வம் நிறைந்த திருப்பனங்காட்டூரில் எழுந் தருளியிருக்கும் சிவந்த பொன்போன்ற ஒளியையுடைய செழுஞ்சுட ராயும், பிறவித் துன்பத்தினை அறுக்கும் அரிய மருந்தாயும் இருக்கும் இறைவரைப் பணிந்து, அன்பு மேலீட்டால் பொழியும் கண்ணீர் பெருக நின்று, `விடையின் மேல் வருவானை' எனத் தொடங்கும் வளப்பம் உடைய பதிகத்தை நல்ல இசை பொருந்தப் பாடிப் புறம் போந்து சேர்வாராய்,

விளக்கவுரை

`விடையின் மேல் வருவானை' எனத் தொடங்கும் பதிகம் சீகாமரப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.86).*

மன்னு திருமாற் பேறணைந்து
வணங்கிப் பரவித் திருவல்லம்
தன்னுள் எய்தி இறைஞ்சிப்போய்ச்
சாரும் மேல்பாற் சடைக்கற்றைப்
பின்னல் முடியா ரிடம்பலவும்
பேணி வணங்கிப் பெருந்தொண்டர்
சென்னி முகில்தோய் தடங்குவட்டுத்
திருக்கா ளத்தி மலைசேர்ந்தார். **#3092**

அதன்பின், நிலைபெற்ற திருமாற்பேறு என்னும் திருப்பதியை அடைந்து வணங்கிப் போற்றி, திருவல்லம் அடைந்து வணங்கிப் போய், மேற்குப் புறமாக உள்ள கற்றையாய சடைமுடியை யுடைய பெருமான் வீற்றிருக்கும் இடங்கள் பலவற்றையும் விருப் புடன் வணங்கிச் சென்ற பெரிய தொண்டரான நம்பிகள், முடியின் மீது முகில் படியும் அகன்ற சிகரங்களுடைய திருக்காளத்தி மலையினைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

இப்பதிகளில் அருளிய பதிகங்கள் கிடைத்தில. திருவல் லத்திற்கு மேற்குப்புறமாக உள்ள பதிகள், திருக்கரபுரம் முதலாயின வாகலாம்.

தடுக்க லாகாப் பெருங்காதல்
தலைநின் றருளுங் கண்ணப்பர்
இடுக்கண் களைந்தாட் கொண்டருளும்
இறைவர் மகிழ்ந்த காளத்தி
அடுக்கல் சேர அணைந்துபணிந்
தருளா லேறி அன்பாறு
மடுப்பத் திருமுன் சென்றெய்தி
மலைமேல் மருந்தை வணங்கினார். **#3093**

தடுத்தற்கரிய பெருங்காதல் தலைநின்று விளங்கும் கண்ணப்ப நாயனாரது துன்பத்தைக் களைந்து ஆட்கொண்டருளும் இறைவர், மகிழ்ந்து வீற்றிருக்கும் திருக்காளத்தி மலையினைச் சேரச் சென்று பணிந்து, அப்பெருமான் திருவருள் மீதூர அம்மலை மீது ஏறி, அன்பெனும் ஆறு கரையது புரளக் காளத்தி அப்பரின் திருமுன்பாகச் சென்று, அம்மலைமேல் என்றும் பிறவிப் பிணிக்கு மருந்தாக இருந் தருளும் பெருமானை வணங்கினார்.

விளக்கவுரை

****

வணங்கி உள்ளங் களிகூர
மகிழ்ந்து போற்றி மதுரஇசை
அணங்கு செண்டா டெனும்பதிகம்
பாடி யன்பாற் கண்ணப்பர்
மணங்கொள் மலர்ச்சே வடிபணிந்து
வாழ்ந்து போந்து மன்னுபதி
இணங்கு தொண்ட ருடன்கெழுமி
இன்புற் றிருக்கும் அந்நாளில். **#3094**

வணங்கி, உள்ளம் களிகூர்ந்திட மகிழ்ந்து போற்றி, இனிமை மிகுந்த இசையால், `செண்டாடும் விடையாய்' எனத் தொடங் கிடும் திருப்பதிகத்தைப் பாடி, அன்பினால் கண்ணப்ப நாயனாரது மணம் நிறைந்து விளங்கும் தாமரை மலர் போலும் சிவந்த திருவடிகளைப் பணிந்து, பெரும்பேறு பெற்று, வெளியே வந்து விளங்கும் அத்திருக் காளத்தியில் தம்முடன் இணங்கிய அடியாருடன் பொருந்தி இன்புற்று இருக்கும் அந்நாள்களில்,

விளக்கவுரை

`செண்டாடும் விடையாய்' எனத் தொடங்கும் பதிகம் நட்டராகப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.26).*

வடமா திரத்துப் பருப்பதமும்

திருக்கே தார மலையுமுதல்
இடமா அரனார் தாமுவந்த
வெல்லா மிங்கே இருந்திறைஞ்சி
நடமா டியசே வடியாரை
நண்ணி னார்போ லுண்ணிறைந்து
திடமாங் கருத்தில் திருப்பதிகம்
பாடிக் காதல் சிறந்திருந்தார். **#3095**

வடபுலத்துள்ள நிலைபெற்ற திருப்பருப்பதம், திருக் கேதாரம் ஆகிய மலைப் பதிகளையும், இவை முதலாக உள்ள சிவ பெருமான் உவந்து உறைகின்ற பிற இடங்களையும், திருக்காளத் தியில் இருந்தவாறே வணங்கி, அத்திருப்பதிகளில் சென்று கூத்தியற் றும் திருவடிகளை உடைய பெருமானை நேரில் சென்று வணங்கினாற் போல் உள்ளம் மகிழ்ந்து, உறைப்புடைய திருவுள்ளத்தால், அப்பதி களை உளம் கொண்ட நிலையில் திருப்பதிகங்கள் பாடியருளினார்.

விளக்கவுரை

திருக்கேதாரம் முதலாகவுள்ள திருப்பதிகளாவன, திருக்கயிலாயம், திருஅனேகதங்காவதம், திருஇந்திர நீலப்பருப்பதம் முதலாயினவாகலாம். ஆளுடைய பிள்ளையார் திருக்காளத்தியில் இருந்தவாறே, இப்பதிகளையெல்லாம் வணங்கிப் போற்றியதைப் போல, இவரும் இங்கிருந்தவாறே பணிந்து போற்றியுள்ளார். இத்திருப்பதிகளில் இரு திருப்பதிகளில் அருளிய திருப்பதிகங்களே கிடைத்துள்ளன. 1. திருப்பருப்பதம்: மானும்மரை - நட்டபாடை (தி.7 ப.79) 2. திருக்கேதாரம்: வாழ்வாவது - நட்டபாடை (தி.7 ப.78) இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அங்குச் சிலநாள் வைகியபின்
அருளாற் போந்து பொருவிடையார்
தங்கும் இடங்க ளெனைப்பலவுஞ்
சார்ந்து தாழ்ந்து தமிழ்பாடிப்
பொங்கு புணரிக் கரைமருங்கு
புவியுட் சிவலோகம் போலத்
திங்கள் முடியா ரமர்ந்ததிரு
வொற்றியூரைச் சென்றடைந்தார். **#3096**

இந்நிலையில் அங்குச் சில நாள்கள் இருந்தருளிய பின், பெருமானின் திருவருள் பெற்றுப் பொருதலில் வல்ல ஆனேற்று ஊர்தியையுடைய பெருமான் எழுந்தருளியிருக்கும் ஏனைய பதிகள் பலவும் சென்று வணங்கித் தமிழ்ப் பதிகங்கள் பாடிப் போற்றிப் பொங்கும் அலைகளையுடைய கடற்கரையோரத்தில் விளங்கும் இந் நிலவுலகில்

சிவலோகம் எனச் சிறந்து விளங்கும் இளம்பிறையினை முடிமேற் சூடிய சிவபெருமான் அமர்ந்தருளும் திருவொற்றியூரைச் சென்றடைந்தார்.

விளக்கவுரை

இடங்கள் எனைப் பலவும் என்றது, திருக்காளத்தியி லிருந்து திருவொற்றியூர் செல்லும் வரையில் உள்ள இடைப்பட்ட பதி களாம். அவை திருக்காரிக்கரை, திருக்கள்ளில், புண்ணிய கோடீசுவரர் கோயில் முதலாயினவாகலாம்.

அண்ணல் தொடர்ந்தா வணங்காட்டி
ஆண்ட நம்பி யெழுந்தருள
எண்ணில் பெருமை ஆதிபுரி
இறைவ ரடியா ரெதிர்கொள்வார்
வண்ண வீதி வாயில்தொறும்
வாழை கமுகு தோரணங்கள்
சுண்ண நிறைபொற் குடந்தூப
தீப மெடுத்துத் தொழவெழுங்கால். **#3097**

பெருமனார் தாமே தொடர்ந்து வந்து ஆவணம் காட்டி ஆட்கொள்ளப்பெற்ற நம்பியாரூரர் எழுந்தருளலும், எண் ணற்ற பெருமையுடைய தோற்றமில் காலத்தே தோன்றிய திரு வொற்றியூர்ப் பெருமான்பால் அன்பு கொண்ட அடியார்கள் வந்து எதிர்கொள்பவர்கள், அழகு பொருந்திய தம் வீதிகளின் வாயில்கள் தோறும் வாழை, கமுகு, தோரணங்கள், பொற்சுண்ணம் நிறைந்த பொற்குடங்கள், நறும்புகை, ஒளிவிளக்கு முதலியவற்றை எடுத்து நகரை அணிசெய்து, நம்பிகளைத் தொழ வந்தபொழுது,

விளக்கவுரை

****

வரமங் கலநல் லியம்முழங்க
வாச மாலை யணியரங்கில்
புரமங் கையர்கள் நடமாடப்
பொழியும் வெள்ளப் பூமாரி
அரமங் கையரும் அமரர்களும்
வீச அன்ப ருடன்புகுந்தார்
பிரமன் தலையிற் பலியுகந்த
பிரானார் விரும்பு பெருந் தொண்டர். **#3098**

சிறந்த மங்கலமுடைய நல்ல இயங்கள் முழங்கிட, நறுமணமுடைய மாலைகள் அணிசெய்யும் நாட்டிய அரங்குகளில், சிலம்பணிந்த பெண்கள் நடனமாடிட, எங்கும் பொழியும் மழை வெள்ளம் போல் பூ

மழையைத் தேவப் பெண்களும் தேவர்களும் பொழிந்திட, நான்முகனது தலையில் பலியை உவந்து ஏற்றருளும் சிவபெருமான் விரும்பும் பெருந்தொண்டராம் நம்பிகள், அன்பர்களு டன் அந்நகரில் புகுந்தனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஒற்றியூரி னுமையோடுங்
கூட நின்றா ருயர்தவத்தின்
பற்று மிக்க திருத்தொண்டர்
பரந்த கடல்போல் வந்தீண்டிச்
சுற்றம் அணைந்து துதிசெய்யத்
தொழுது தம்பி ரானன்பர்
கொற்ற மழவே றுடையவர்தங்
கோயில் வாயி லெய்தினார். **#3099**

திருவொற்றியூரில் உமையம்மையாரோடும் கூட நின்றருளும் சிவபெருமானது உயர்ந்த தவத்தில் பற்றுமிக்க திருத் தொண்டர்கள், பரந்த பெருங் கடல்போலப் பெருக வந்துகூடி, அவரது சுற்றம் போல அணைந்து போற்ற, தாமும் அவர்களைத் தொழுது, பெருமானின் அன்பராம் நம்பிகள், வெற்றி பொருந்திய இளைய விடையை ஊர்தியாகவுடைய பெருமானது கோயில் வாயில் முன்பாக வந்தடைந்தார்.

விளக்கவுரை

****

வானை அளக்குங் கோபுரத்தை
மகிழ்ந்து பணிந்து புகுந்துவளர்
கூனல் இளவெண் பிறைச்சடையார்
கோயில் வலங்கொண் டெதிர்குறுகி
ஊனும் உயிருங் கரைந்துருக
உச்சி குவித்த கையினுடன்
ஆன காத லுடன் வீழ்ந்தார்
ஆரா வன்பி னாரூரர். **#3100**

வானினை அளப்பது போலும் கோபுரத்தை மகிழ்ந்து பணிந்து உள்ளே புகுந்து, வளர்ந்துவரும் வளைந்த இளமை ஆன வெண்பிறையைச் சடைமேல் உடைய பெருமானது கோயிலை வலங்கொண்டு, திருமுன்பு சேர்ந்து, ஊனும் உயிரும் கரைந்து உருகிட உச்சிமீது குவித்த கையுடன் உள்ளத்துப் பெருகிய காதலுடன், ஆராத அன்பினையுடைய நம்பியாரூரர் வீழ்ந்து வணங்கினார்.

விளக்கவுரை

****

ஏட்டு வரியில் ஒற்றியூர்
நீங்கல் என்ன எழுத்தறியும்
நாட்ட மலருந் திருநுதலார்
நறும்பொற் கமலச் சேவடியிற்
கூட்டு முணர்வு கொண்டெழுந்து
கோதி லமுத இசைகூடப்
பாட்டும் பாடிப் பரவிஎனும்
பதிக மெடுத்துப் பாடினார். **#3101**

வானினை அளப்பது போலும் கோபுரத்தை மகிழ்ந்து பணிந்து உள்ளே புகுந்து, வளர்ந்துவரும் வளைந்த இளமை ஆன வெண்பிறையைச் சடைமேல் உடைய பெருமானது கோயிலை வலங்கொண்டு, திருமுன்பு சேர்ந்து, ஊனும் உயிரும் கரைந்து உருகிட உச்சிமீது குவித்த கையுடன் உள்ளத்துப் பெருகிய காதலுடன், ஆராத அன்பினையுடைய நம்பியாரூரர் வீழ்ந்து வணங்கினார்.

விளக்கவுரை

`பாட்டும் பாடிப் பரவி எனத் தொடங்கும் பதிகம் குறிஞ் சிப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.91).*

பாடி அறிவு பரவசமாம்
பரிவு பற்றப் புறம்போந்து
நீடு விருப்பிற் பெருங்காதல்
நிறைந்த அன்பர் பலர்போற்றத்
தேடும் அயனும் திருமாலும்
அறிதற் கரிய திருப்பாதங்
கூடுங் காலங் களில்அணைந்து
பரவிக் கும்பிட் டினிதிருந்தார். **#3102**

இப்பதிகம் பாடியருளி அறிவு தன்வயமிழந்து சிவமயமாகிப் பரிவு கொண்டிட வெளியே வந்து, நீடிய விருப்புடைய பெருங்காதல் நிறைந்த அன்பர் பலர் போற்றிட, தேடுகின்ற பிரமனும் திருமாலும் அறிதற்கு அரிய சிவபெருமானின் திருப்பாதத்தைப் பரிவொடுங் கூடிக் கும்பிடும் காலங்களில் சென்றடைந்து போற்றிக் கும்பிட்டு அங்கு இனிதே இருந்தார் ஆரூரர்.

விளக்கவுரை

****

இந்த நிலைமை யாரிவரிங்
கிருந்தார் முன்பே இவர்க்காக
அந்தண் கயிலை மலைநீங்கி
அருளாற் போந்த அநிந்திதையார்
வந்து புவிமேல் அவதரித்து
வளர்ந்து பின்பு வன்தொண்டர்
சந்த விரைசூழ் புயஞ்சேர்ந்த
பரிசு தெரியச் சாற்றுவாம். **#3103**

இந்நிலையில் ஆரூரர் இங்கு இருந்தார். நம்பிகள் இவ்வாறு வருதற்கு முன்னே, இவருக்காக அழகிய திருக்கயிலாய மலையை விடுத்து நீங்கி, திருவருட் செயலால் இவ்வுலகில் வந்த அநிந்திதையார் அவதரித்து வளர்ந்து, பின்னாகச் சுந்தரமூர்த்தி நாயனாரது வாசனை கமழ்ந்திடும் மாலை சூடும் தோளினைச் சேர்ந்த அவ்வருட் செயலை அறிந்தவாறு சொல்லுவோம்.

விளக்கவுரை

****

நாலாங் குலத்திற் பெருகுநல
முடையார் வாழும் ஞாயிற்றின்
மேலாங் கொள்கை வேளாண்மை
மிக்க திருஞா யிறுகிழவர்
பாலா தரவு தருமகளார்
ஆகிப் பார்மேல் அவதரித்தார்
ஆலா லஞ்சேர் கறைமிடற்றார்
அருளால் முன்னை அநிந்திதையார். **#3104**

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனப்படும் நான்கு வகையான குலத்தில், நான்காவதாகச் சொல்லப்படும் வேளா ளர் குலத்தில், பெருகும் நலமுடையவராய், உலகிற்கு ஒளிதந்து உதவு கின்ற கதிரவனினும் மேலான கொள்கை உடையவராய், உழவுத் தொழிலில் தலைசிறந்தவராய் வாழ்ந்துவரும் ஞாயிறுகிழார் என்பார் ஒருவருக்கு, அன்புமிகும் மகளாராகி, முன்பு அநிந்திதை எனப் பெயர் பெற்ற அம்மையார், நீலமணிமிடற்று ஒருவனாய பெருமானின் திருவருளால் இவ்வுலகில் தோன்றினார்,

விளக்கவுரை

முன்பு - ஞாயிறு என்னும் பதியில் தோன்றும் முன்பு. திருக்கயிலையில்

அநிந்திதை எனும் பெயருடையராய் வாழ்ந்த நிலையைக் குறிக்க இவ்வாறு கூறினார்.

மலையான் மடந்தை மலர்ப்பாதம்
மறவா அன்பால் வந்தநெறி
தலையா முணர்வு வந்தணையத்
தாமே யறிந்த சங்கிலியார்
அலையார் வேற்கண் சிறுமகளி
ராயத் தோடும் விளையாட்டு
நிலையா யினஅப் பருவங்கள்
தோறும் நிகழ நிரம்புவார். **#3105**

மலையரசன் மகளாராய உமையம்மையாரின் மலர் அனைய திருவடிகளை மறவாத அன்பினால், அதுவே உள்ளத் துத் தலையாய அன்பின் உணர்ச்சியாக வந்து சேர, தமது நிலையைத் தாமே அறிந்த சங்கிலியார், கூரிய வேல் போன்ற நீண்ட வரிவிழிகளை யுடைய சிறு பெண்கள் கூட்டத்துடன் விளையாடி வரும் நிலைகளாய கழங்காடல், அம்மானை. பந்தாடல் முதலிய பருவங்கள் முறையே வர, வயது நிரம்பிவரும் நிலையில்,

விளக்கவுரை

****

சீர்கொள் மரபில் வருஞ்செயலே
யன்றித் தெய்வ நிகழ்தன்மை
பாரில் எவரும் அதிசயிக்கும்
பண்பில் வளரும் பைந்தொடியார்
வாரும் அணிய அணியவாம்
வளர்மென் முலைகள் இடைவருத்தச்
சாரும் பதத்தில் தந்தையார்
தங்கள் மனைவி யார்க்குரைப்பார். **#3106**

சீர்மை பொருந்திய குலமரபில் வருகின்ற செயலே யன்றி, உள்ளத்தில் தெய்வத் தன்மை நிகழும் பண்பும் விளங்க, உலக வர் வியக்கும் பண்பில் வளர்ந்துவரும் பசிய வளையல் அணிந்த சங்கிலியார், கச்சு அணிதற்கான காலம் நெருங்க, வளரும் முலைகள் இடையினை வருத்திட, வளர்ந்து, எழில் திகழும் பருவத்தில் அவரது நிலைகண்டு தந்தையாரான ஞாயிறு கிழார் தம் மனைவியாருக்குச் சொல்லுவாராய்,

விளக்கவுரை

****

வடிவும் குணமும் நம்முடைய

மகட்கு மண்ணு ளோர்க்கிசையும்
படிவ மன்றி மேற்பட்ட
பரிசாம் பான்மை அறிகிலோம்
கடிசேர் மணமும் இனிநிகழுங்
கால மென்னக் கற்புவளர்
கொடியே அனைய மனைவியார்
ஏற்கு மாற்றால் கொடுமென்றார். **#3107**

நம் மகளுக்கு வடிவும் குணமும் இந்நிலவுலகில் உள்ள ஏனைய பெண்கட்குப் பொருந்துவனவாக அன்றி, மிகமேம் பட்ட நிலையில் விளங்குவது நாம் எவ்வாறென அறிகிலோம்! மகளிர்க்கு நிறை காக்கும் காப்பாக விளங்கும் திருமணமும் இனி நிகழ்தற்குரிய காலமாகும் என்றிடலும், அது கேட்டுக் கற்பு வளரும் பூங்கொடி போலும் மனைவியார், கணவனாரை நோக்கி, நம் மக ளாரை ஏற்கும் முறையாகத் திருமணம் செய்து கொடுப்பீராக என்றார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

தாய ரோடும் தந்தையார்
பேசக் கேட்ட சங்கிலியார்
ஏயும் மாற்றம் அன்றிதுஎம்
பெருமா னீசன் திருவருளே
மேய வொருவர்க் குரிய தியான்
வேறென் விளையும் எனவெருவுற்று
ஆய வுணர்வு மயங்கிமிக
அயர்ந்தே அவனி மிசைவிழுந்தார். **#3108**

தாயாரும் தந்தையாரும் தமது திருமணம் பற்றிய பேச்சினைப் பேசக் கேட்ட சங்கிலியார், இத்திருமண வார்த்தை எனக் குப் பொருந்துவது அன்று; எம்பெருமானின் திருவருள் முழுமை யாகப் பொருந்திய ஒருவருக்கே என் வாழ்க்கை உரியது. இவ்வாறாக, இவர்தம் எண்ணங்களால் இதனின் வேறாய் விளைந்திடுமோ? என அஞ்சிய அச்ச நினைவால், உணர்வு மயங்கி, மிகச் சோர்ந்து நிலத்தில் விழுந்தார்.

விளக்கவுரை

`உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம் உன்னடி யார் தாள் பணிவோம், ஆங்கவர்க்கே பாங்காவோம், அன்னவரே எம் கணவராவார்', `எம் கொங்கைநின் அன்பர் அல்லார் தோள் சேரற்க' (தி.8 ப.7 பா.19) என உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வைத்துக் கூறும் மகளிர் நினைவு ஈண்டு மறக்கப்போமோ?

பாங்கு நின்ற தந்தையார்
தாயார் பதைத்துப் பரிந்தெடுத்தே
ஏங்கும் உள்ளத் தினராகி
இவளுக் கென்னோ உற்றதெனத்
தாங்கிச் சீத விரைப்பனிநீர்
தெளித்துத் தைவந் ததுநீங்க
வாங்கு சிலைநன் னுதலாரை
வந்த துனக்கிங் கென்னென்றார். #3109

அருகில் நின்ற தந்தையாரும் தாயாரும் மகளார் வீழ்ந்தமை கண்டு பதைத்துப் பரிவுடன் அவரை எடுத்து, ஏங்குகின்ற உள்ளமுடையராகி, இவளுக்கு என்ன நேர்ந்தது? என்று கைகளில் அணைத்துத் தாங்கி, குளிர்ந்த நறுமணமுடைய பன்னீரைத் தெளித்து, உடம்பில் தடவிட, அவர்தம் மயக்கமும் அயர்ச்சியும் நீங்க, வளைந்த வில்போலும் நெற்றியையுடைய அவரை நோக்கி, `உனக்கு இங்கு என்ன நேர்ந்தது?' எனக் கேட்டனர்.

விளக்கவுரை

****

என்று தம்மை ஈன்றெடுத்தார்
வினவ மறைவிட் டியம்புவார்
இன்றென் திறத்து நீர்மொழிந்த
திதுஎன் பரிசுக் கிசையாது
வென்றி விடையா ரருள் செய்தார்
ஒருவர்க் குரியேன் யானினிமேல்
சென்று திருவொற்றி யூரணைந்து
சிவனார் அருளிற் செல்வனென. #3110

அருகில் நின்ற தந்தையாரும் தாயாரும் மகளார் வீழ்ந்தமை கண்டு பதைத்துப் பரிவுடன் அவரை எடுத்து, ஏங்குகின்ற உள்ளமுடையராகி, இவளுக்கு என்ன நேர்ந்தது? என்று கைகளில் அணைத்துத் தாங்கி, குளிர்ந்த நறுமணமுடைய பன்னீரைத் தெளித்து, உடம்பில் தடவிட, அவர்தம் மயக்கமும் அயர்ச்சியும் நீங்க, வளைந்த வில்போலும் நெற்றியையுடைய அவரை நோக்கி, `உனக்கு இங்கு என்ன நேர்ந்தது?' எனக் கேட்டனர்.

விளக்கவுரை

****

அந்த மாற்றங் கேட்டவர்தாம்
அயர்வும் பயமும் அதிசயமும்

வந்த வுள்ளத் தினராகி
மற்ற மாற்றம் மறைத்தொழுகப்
பந்தம் நீடும் இவர்குலத்து
நிகராம் ஒருவன் பரிசறியான்
சிந்தை விரும்பி மகட்பேச
விடுத்தான் சிலருஞ் சென்றிசைத்தார். **#3111**

அச் சொற்களைக் கேட்ட முதுகுரவர் இருவரும் மனத்தில் சோர்வும் அச்சமும் அதிசயமும் கொண்டவராகி, தம்மிடம் சொல்லிய அச்சொற்களை ஒருவருக்கும் தெரியாதவாறு மறைத்து ஒழுக, இவர் தமக்குக் குடிப்பிறப்பானும், பிற பண்புகளானும் ஒத்தான் ஒருவன், இவ்வுண்மை அறியானாய், சங்கிலியாரை விரும்பி மணம் பேசச் சிலரை விடுப்ப, அவரும் ஞாயிறு கிழாரிடம் வந்து கேட்டனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

தாதை யாரும் அதுகேட்டுத்
தன்மை விளம்பத் தகாமையினால்
ஏத மெய்தா வகைமொழிந்து
போக்க அவராங் கெய்தாமுன்
தீதங் கிழைத்தே யிறந்தான்போற்
செல்ல விடுத்தா ருடன் சென்றான்
மாத ராரைப் பெற்றார்மற்று
அதனைக் கேட்டு மனமருண்டார். **#3112**

தந்தையாரும் அவ்வார்த்தையைக் கேட்டு, உண்மை நிலையை உணர்த்தத் தகாமையினால், அவர்கள் மனம் வருந்தா வகையில் சில வார்த்தைகளைச் சொல்லி, அவர்களைப் போக்கலும், அவர்களும் தம்மை விடுத்த அவனிடம் செல்லும் முன்பே, பெருந்தீங்கைச் செய்தான் ஒருவன் அதன்பயனாக உடன் இறந்தாற்போல, மணம் பேச விடுத்த அவர்கள், அவனிடத்தினின்றும் புறப்பட்ட அளவிலேயே அவனும் இறந்தொழிந்தான். இச்செய்தி கேட்டதும் சங்கிலியாரைப் பெற்ற தந்தை தாயர் பெரிதும் மனம் கலங்கினார்கள்.

விளக்கவுரை

பெண் கேட்க வந்தாருக்குத் தம்மகளைக் கொடுக்கும் விருப்பம் இல்லையாயினும், அதனை அவ்வாறே சொல்லல் மர பன்று, வந்தாருக்கு மனம் வருந்தாதவாறு சொல்லலே மரபாகும். இவ் வகையிலேயே இங்கும் `ஏதம் எய்தாவகை மொழிந்து' என்றார். ஆனால் அவ் ஏதம் தானும், அவர்கள் அளவிலன்றித் தம் குடும்ப அளவிலும்

எய்தாவகை கூறல்வேண்டும். பெண்ணளவிலோ அன்றித் தம் குடும்ப அளவிலோ ஏதோ குறைபாடு உள்ளது; அதனால்தான் மணம் நேர்தலைத் தவிர்க்கிறார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாகிவிடக்கூடாது. எனவே தங்குலத்திற்கும் மகளின் பெண் தன்மைக்கும் ஏதம் எய்தா வகையானும் மொழிதல் வேண்டும். இத்தகைய உலகியல் உணர்வுகள் எல்லாம் அடங்கவே `ஏதம் எய்தாவகை மொழிந்து' என்றார். நல்லதன் நலனும் தீயதன் தீங்கும் உடன் நிகழ்வனவல்ல; பெரும்பாலும் `தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை வீயாது அடியுறைந் தற்று' *(குறள்,208)* என்புழிப் போல அவ்வக்கால எல்லை வந்துழியே வருத்தும். மாறாக மிகப் பெரிய நன்மையே அல்லது மிகப்பெரிய தீமையோ செய்யின் `பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும் *(குறள், 319)* என்றற்கு இணங்க, உடன் வருதலும் உண்டு. அவ்வகையிலேயே மிகப் பெரிய தீங்கு செய்தவன் அதன் பயனை உடன் அடைந்தாற் போல, மணம் பேச விடுத்த அவனும் அதற்குரியவரை விடுத்த அளவி லேயே இறந்தனன் என்றார். `செல்ல விடுத்தாருடன் சென்றான்' என்றது, `கற்புடைய மடவாரும் கணவனாருடன் சென்றார் *(தி.12 பு. 27 பா.28)* என்றாற்போல வரும் தொடராயிருப்பினும் அங்குக் கணவனார் இறப்ப, அவ்வம்மையாரும் உடன் இறந்தார் என்ற அமைப்பில் பொருள் கொள நின்றது. ஆனால் இங்கே மணம் பேச விடுத்தான்; அவர்கள் அவ்வினைக்குச் சென்ற அளவிலேயே தானும் சென்றான் *(இறந்தான்)* எனும் கருத்தமைய நிற்கின்றது. சென்ற அள வில் அவர்களுக்கும், அவனுக்கும் உடனிகழ்ச்சிப் பொருள்கொள நிற்பினும் அவர்கள் மணம்பேசச் சென்றனர்; இவன் உயிர் செலச் சென்றனன் என்பது கருத்தாகும்.

தைய லார்சங் கிலியார்தம்
திறத்துப் பேசத் தகாவார்த்தை
உய்ய வேண்டும் நினைவுடையார்
உரையா ரென்றங் குலகறியச்
செய்த விதிபோல் இதுநிகழச்
சிறந்தார்க் குள்ள படிசெப்பி
நையும் உள்ளத் துடன்அஞ்சி
நங்கை செயலே உடன்படுவார். **#3113**

தையலாரான சங்கிலியார் திறத்துப் பேசத் தகாத வார்த்தையை, இவ்வுலகில் வாழ வேண்டும் எனும் நினைவுடையார் சொல்லார் என்பதை இங்கு உலகறியச் செய்து வைத்த விதியின் திறம்போல, இச்செயல் நிகழ, தம்மூரில் உள்ள பெரியோர்களுக்குச் சங்கிலியார்

தன்மையை உள்ளவாறு வெளிப்படுத்தி, வருந்திடும் உள்ளத்துடன் அச்சம் கொண்டு, சங்கிலியார் விரும்பிய அச்செய் கைக்கே உடன்படுவாராய்,

விளக்கவுரை
****

அணங்கே யாகும் இவள்செய்கை
அறிந்தோர் பேச அஞ்சுவரால்
வணங்கும் ஈசர் திறமன்றி
வார்த்தை யறியாள் மற்றொன்றும்
குணங்க ளிவையா மினியிவள் தான்
குறித்த படியே ஒற்றிநகர்ப்
பணங்கொ ளரவச் சடையார்தம்
பாற்கொண் டணைவோம் எனப்பகர்வார். **#3114**

பெண்களுக்குள் தெய்வமே யாகும் இவளது செய்கை இதனை அறிந்தோர், இவள் பற்றிய வேறு திறம் பேச அஞ்சுவார்கள் என்றும், தாம் வணங்கும் ஈசனுடைய பெருமை யல்லாது மற்றொரு வார்த்தை பேசவும் அறியாள் என்றும், இவளது செயல் இது என்றும், பெற்றோரும் உற்றோரும் தெளிந்து, இனி இப்பெண் நம்மிடம் தெரிவித்தபடியே திருவொற்றியூர் நகரிடத்துப் படம் கொண்ட பாம்பினைச் சடைமேலுடைய நாயகன் பால் சேர்த்திடலே தக்கது எனத் துணிவார்களாகி,

விளக்கவுரை
****

பண்ணார் மொழிச்சங் கிலியாரை
நோக்கிப் பயந்தா ரொடுங்கிளைஞர்
தெண்ணீர் முடியார் திருவொற்றி
யூரிற் சேர்ந்து செல்கதியும்
கண்ணார் நுதலார் திருவருளால்
ஆகக் கன்னி மாடத்துத்
தண்ணார் தடஞ்சூ ழந்நகரிற்
றங்கிப் புரிவீர் தவமென்று. **#3115**

பண் போலும் இனிய மொழியுடைய சங்கிலி யாரை நோக்கி, பெற்ற தாய் தந்தையருடன் சுற்றத்தவரும் சொல்லு வார்களாகி, `அம்மையே! நீர், தெளிந்த கங்கை நீரை முடியில் கொண்ட சிவபெருமானின் திருவொற்றியூர் நகரைச் சேர்ந்து, இனி உமக்குச் செல்கின்ற கதியும் கண்ணார்ந்த நெற்றியுடைய கடவுளின் திருவருளேயாக, குளிர்ந்த

குளங்கள் சூழ்ந்த நகரிடத்து ஒரு கன்னி மாடத்து தங்கி, தவத்தினைச் செய்திடுவீர்' என்று கூறி,

விளக்கவுரை

****

பெற்ற தாதை சுற்றத்தார்
பிறைசேர் முடியார் விதியாலே
மற்றுச் செயலொன் றறியாது
மங்கை யார்சங் கிலியார் தாம்
சொற்ற வண்ணஞ் செயத்துணிந்து
துதைந்த செல்வத் தொடும்புரங்கள்
செற்ற சிலையார் திருவொற்றி
யூரிற் கொண்டு சென்றணைந்தார். **#3116**

பெற்ற தந்தையர் உள்ளிட்ட சுற்றத்தார், பிறை யணிந்த சடைமுடியையுடைய திருவொற்றியூர்ப் பெருமான் திருவரு ளாலே, மற்றச் செயல் ஒன்றும் அறியாது, பெண்ணில் நல்லாராகிய சங்கிலியார் சொல்லிய வண்ணம் செய்திடத் துணிந்து, பெருகிய செல்வத்தோடும், முப்புரங்களையும் எரித்த வில்லையுடைய பெரு மான் அமர்ந்த திருவொற்றியூருக்கு அழைத்துச் சென்றார்கள்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

சென்னி வளர்வெண் பிறையணிந்த
சிவனார் கோயி லுள்புகுந்து
துன்னுஞ் சுற்றத் தொடும்பணிந்து
தொல்லைப் பதியோர் இசைவினால்
கன்னி மாட மருங்கமைத்துக்
கடிசேர் முறைமைக் காப்பியற்றி
மன்னுஞ் செல்வந் தகவகுத்துத்
தந்தை யார்வந் தடிவணங்கி. **#3117**

திருமுடிமீது வளர்கின்ற வெண்பிறையை அணிந்த பெருமான் அமர்ந்தருளும் திருவொற்றியூர்க் கோயிலுக்குள் புகுந்து நெருங்கிவரும் சுற்றத்தோடும் பணிந்து, உலகத் தோற்றத்தில் மிக முந்திய அத்திருப்பதியில் ஆண்டுள்ளோரின் இசைவுடன் பெருமா னின் திருக்கோயிலின் அருகே, ஒரு கன்னி மாடம் அமைத்து, அங்கு ஒருவரும் புகமுடியாத முறைமையால் காவலும் செய்து வைத்து, அச்சூழற்கு வேண்டும் செல்வத்தைத் தகுதியுடன் அமைத்துத் தாதை யாரான ஞாயிறு கிழார் வந்து தமது மகளார் சங்கிலியாரின் திருவடி களை

வணங்கி,

விளக்கவுரை

****

யாங்கள் உமக்குப் பணிசெய்ய
ஈசற் கேற்ற பணிவிரும்பி
ஓங்கு கன்னி மாடத்தில்
உறைகின் றீரென் றுரைக்கின்றார்
தாங்கற் கரிய கண்கள்நீர்த்
தாரை ஒழுகத் தரியாதே
ஏங்கு சுற்றத் தொடும்இறைஞ்சிப்
போனார் எயில்சூழ் தம்பதியில். **#3118**

`யாங்கள் உமக்குப் பணிசெய்திட நீர் ஈசனுக் கேற்ற பணியினை விரும்பிச் செய்து மேலோங்கிய கன்னிமாடத்தில் உறைவீராக' என்று மொழிகின்றவர், தாங்கற்கரிய கண்ணீர் தாரை தாரையாக ஒழுகப் பிரிவாற்றாது, சுற்றத்தோடும் வணங்கி, எழுந்து, மதில் சூழ்ந்த தமது ஊருக்குச் சென்றார்.

விளக்கவுரை

****

காதல் புரிந்து தவம்புரியுங்
கன்னி யாரங் கமர்கின்றார்
பூத நாதர் கோயிலினிற்
காலந் தோறும் புக்கிறைஞ்சி
நீதி முறைமை வழுவாது
தமக்கு நேர்ந்த பணி செய்யச்
சீத மலர்ப்பூ மண்டபத்துத்
திரைசூழ் ஒருபாற் சென்றிருந்து. **#3119**

பெருமான்பால் பேரன்பு பூண்டு, தவம்புரியும் கன்னியாராம் சங்கிலியார், பூதங்கட்கு எல்லாம் தலைவனாய சிவ பெருமானின் திருக்கோயிலில், காலம் தோறும் சென்று வணங்கி, நீதி முறைமையில் ஏதும் தவறாது, தமக்கு உற்ற பணியினைச் செய்திடற்கு மாலை கட்டும் அத்திருமண்டபத்துத் திரை சூழ்ந்த ஒருபுறத்துத் தாம் இருந்து,

விளக்கவுரை

****

பண்டு கயிலைத் திருமலையில்
செய்யும் பணியின் பான்மைமனம்
கொண்ட உணர்வு தலைநிற்பக்

குலவு மலர்மென் கொடியனையார்
வண்டு மருவுந் திருமலர்மென்
மாலை காலங் களுக்கேற்ப
அண்டர் பெருமான் முடிச்சாத்த
அமைத்து வணங்கி யமருநாள். **#3120**

முன்பு திருக்கயிலையில் செய்துவந்த பணியினை, அப் பான்மையால் மனம்கொண்ட உணர்வே தலைநிற்ப, விளங்கிடும் மெல்லிய பூங்கொடி போலும் வனப்புடைய சங்கிலியார், வண்டுகள் மொய்த்திடும் திருவுடைய மலர்கோத்த மிருதுவாய நல்ல மாலை களை, அவ்வக் காலங்களின் விதிமுறைக்கு ஏற்ற பண்பினால், தேவர்களுக்குத் தலைவனாய சிவபெருமானின் திருமுடிமேல் சாத் திடத் தொடுத்துக் கொடுத்து, வணங்கி, அங்குக் கன்னிமாடத்து வாழ்ந்து வரும் நாள்களில்,

விளக்கவுரை

****

அந்தி வண்ணத் தொருவர்திரு
வருளால் வந்த ஆரூரர்
கந்த மாலைச் சங்கிலியார்
தம்மைக் காதல் மணம்புணர
வந்த பருவ மாதலால்
வகுத்த தன்மை வழுவாத
முந்தை விதியால் வந்தொருநாள்
முதல்வர் கோயி லுட்புகுந்தார். **#3121**

மாலைக் காலத்துச் செக்கர் வானத்தின் நிறத்தினை ஒத்த, ஒப்பற்றவராய பெருமானாரின் திருவருளால் இவ்வுலகில் வந்த நம்பிகள், நறுமணம் மிக்க மாலையைத் தொடுக்கும் சங்கிலியாரைக் காதல் மணஞ் செய்திட வந்த பருவம் இதுபொழுதாக அமைதலினால், வகுத்தான் வகுத்த வழி அமையும் முன்னைய விதியின் பயனாக ஒருநாள், சிவபெருமானின் திருக்கோயிலுள் புகுந்தார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

அண்டர் பெருமான் அந்தணராய்
ஆண்ட நம்பி யங்கணரைப்
பண்டை முறைமை யாற்பணிந்து
பாடிப் பரவிப் புறம்போந்து
தொண்டு செய்வார் திருத்தொழில்கள்
கண்டு தொழுது செல்கின்றார்

புண்ட ரீகத் தடம்நிகர்பூந்
திருமண் டபத்தி னுட்புகுந்தார். #3122
தேவாதி தேவராய பெருமானார், அந்தணராய வடிவுகொண்டு ஆட்கொள்ளப் பெற்ற நம்பியாரூரர், நெற்றியில் கண்கொண்ட அப் பெருமானை, முன்னைய நாளெல்லாம் வணங்கி டும் முறைமையால் வணங்கி, வெளியே வந்து, ஆங்குத் தொண்டு செய்து வரும் அடியார்களது திருவுடைய தொழில்கண்டு பணிந்து செல்கின் றவர், தாமரை மலர் நிறைந்த பொய்கையை ஒத்த, வனப்புடைய மலர்களைத் தொடுக்கும் திருமண்டபத்தின் உள்ளாகச் சென்றார்.

விளக்கவுரை

****

அன்பு நாரா அஞ்செழுத்து
நெஞ்சு தொடுக்க அலர்தொடுத்தே
என்புள் ளுருகும் அடியாரைத்
தொழுது நீங்கி வேறிடத்து
முன்பு போலத் திரைநீக்கி
முதல்வர் சாத்தும் பணிகொடுத்து
மின்போல் மறையுஞ் சங்கிலியார்
தம்மை விதியாற் கண்ணுற்றார். #3123
அன்பே நாராக ஐந்தெழுத்தை நெஞ்சம் தொடுக்க வும், அத்தன்மையால் தம் கைகளால் மலர்களைத் தொடுத்தே, என்பும் உள் உருக மனமுருகி வரும் அடியவர்களை நம்பிகள் கண்டு தொழுது நீங்கும்பொழுது, முன்பு போலத் திரையினை நீக்கித் தம் பணியில் நின்று, தொடுத்த பூமாலைகளைக் கொடுத்து மின்னல் எனத் தோன்றி மறையும் சங்கிலியாரைப் பண்டை விதியால் கண்ணுற்றார்.

விளக்கவுரை

அகத்தும் புறத்தும் இறைவற்கென மாலை தொடுத்து, என்பும் உருக வழிபட்டுவரும் அடியவர்களைச் சுந்தரர், தொழுது நீங்கும் அளவில், தாம் இருந்த இடத்திலுள்ள திரையை நீக்கிக் கொண்டு, கட்டிய மாலைகளை இறைவற்குக் கொடுத்து, மின்னல் என மறையும் சங்கிலியாரைக் கண்ணுற்றார் என்பது கருத்து.

கோவா முத்தும் சுரும்பேறாக்
கொழுமென் முகையு மனையாரைச்
சேவார் கொடியார் திருத்தொண்டர்
கண்ட போது சிந்தைநிறை
காவா தவர்பால் போய்வீழத்

தம்பாற் காம னார் துரந்த
பூவா ளிகள்வந் துறவீழத்
தரியார் புறமே போந்துரைப்பார். **#3124**
கோக்கப்படாத முத்தும், வண்டுகள் மொய்த்திடாத நல்ல மிருதுவாய
அரும்பும் ஒத்த சங்கிலியாரை, விடைக் கொடியை உடைய
சிவபெருமானின் திருத்தொண்டரான நம்பிகள் கண்டபோது, தமது
நிறையைக் காக்க இயலாது அம்மையார்பால் காமஉணர்வின்
வயப்பட்டுச் சிந்தை சென்றிட, அதுபொழுது மன்மதன் சொரிந்த மலர்
அம்புகள் மேன்மேல் வந்து வீழ்ந்திடத் தரியாது வெளியே வந்து
சொல்வாராகி,

விளக்கவுரை

****

இன்ன பரிசென் றறிவரிதால்
ஈங்கோர் மருங்கு திரைக்குள்ளால்
பொன்னும் மணியும் மலர்ந்தவொளி
யமுதில் அளாவிப் புதியமதி
தன்னுள் நீர்மை யால்குழைத்துச்
சமைத்த மின்னுக் கொடிபோல்வாள்
என்னை யுள்ளந் திரிவித்தாள்
யார்கொல் என்றங் கியம்புதலும். **#3125**
இஃது இன்ன தன்மை என்று சொல்ல முடிய வில்லை; இவ்விடத்து
ஒருபக்கத்துத் திரைக்குள்ளாகப் பொன்னும் முத்தும் மலர்ந்த ஒளி,
அமுதில் அளைந்து சேர்த்துப் பின்னர் அவ் வொளியமுதினைப் புதிய
சந்திரனில் உள்ள நிலவாய அமுதின் தன் மையிற் குழைத்து,
உருச்செய்த மின்னுக் கொடிபோலும் அப்பெண், என் மனத்தை
மாற்றினள். இப்பெண்தான் யார் எனக் கூறலும்,

விளக்கவுரை

இயம்பல் - தம் வாய்விட்டுக் கூறல். அவ்வளவில் அருளு கின்றார்
அவரைப்பற்றிக் கூறலாயினர். நயத்தக்க நாகரிகம் இது.

அருகு நின்றார் விளம்புவார்
அவர்தாம் நங்கை சங்கிலியார்
பெருகு தவத்தால் ஈசர்பணி
பேணுங் கன்னி யாரென்ன
இருவ ராலிப் பிறவியைஎம்
பெருமான் அருளால் எய்துவித்தார்
மருவும் பரவை ஒருத்திஇவள்

மற்றை யவளாம் எனமருண்டார். #3126
அருகே நின்றவர்கள் சொல்லுவார்களாய், அவர் தான் நங்கையாகிய சங்கிலியார் என்பவர், பெருகும் தவமுடையவர், ஈசர் பணி பேணும் கன்னியர் என்னலும், அது கேட்டருளிய நம்பிகள், இருவரால் இப்பிறவியை எம்பெருமான் அடைய வைத்தார், அவர்க ளுள் முன் அணைந்த பரவை ஒருத்தி, சங்கிலியாய இவள் மற்றைய வளாம் என எண்ணி மனம் மருட்சியடைந்தனர்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

மின்னார் சடையார் தமக்காளாம்
விதியால் வாழும் எனைவருத்தித்
தன்னா ரருளால் வரும்பேறு
தவத்தால் அணையா வகைதடுத்தே
என்னா ருயிரும் எழின்மலரும்
கூடப் பிணைக்கும் இவள்தன்னைப்
பொன்னார் இதழி முடியார்பால்
பெறுவே னென்று போய்ப்புக்கார். #3127

மின் அனைய சடையையுடைய பெருமானுக்கு ஆளாகும் விதியால் வாழும் எனை வருத்தி, இறைவனது அருளால் வரும் பேற்றைத் தனது தவத்தால் என்பால் அணையாவகை தடுத்து, எனது அரிய உயிரையும் அழகிய மலரையும் சேரப் பிணைக்கும் இவள் தன்னை, பொன்னார்ந்த மலர்க் கொன்றை முடியுடைய பெரு மான்பால் விண்ணப்பித்துப் பெறுவேன் என நினைந்து இறைவன் கோயிலினுட் சென்று புகுந்தார்.

விளக்கவுரை

****

மலர்மே லயனும் நெடுமாலும்
வானும் நிலனுங் கிளைத்தறியா
நிலவு மலருந் திருமுடியும்
நீடுங் கழலும் உடையாரை
உலக மெல்லாந் தாமுடையார்
ஆயும் ஒற்றி யூரமர்ந்த
இலகு சோதிப் பரம்பொருளை
இறைஞ்சி முன்னின் றேத்துவார். #3128

தாமரை மலர்மேல் இருந்த அயனும், நெடிய உருவுடைய திருமாலும் வானத்திலும் நிலத்தினுள்ளும் ஊடுருவிச் சென்றும் அறிய முடியாத இளம்பிறை சூடிய திருமுடியையும் நீண்ட திருவடிகளையும் உடைய

சிவபிரானை, உலகம் யாவையும் தாமே உடையவராகி இருந்தும், திருவொற்றியூர்த் திருப்பதியில் அமர்ந்து என்றும் உறைகின்ற ஒளிப்பிழம்பாய சோதியாம் முதல்பொருளை வணங்கித் திருமுன்பு நின்று போற்றுவாராய்,

விளக்கவுரை

****

மங்கை யொருபால் மகிழந்ததுவும்
அன்றி மணிநீண் முடியின்கண்
கங்கை தன்னைக் கரந்தருளும்
காதலுடையீர் அடியேனுக்
கிங்கு நுமக்குத் திருமாலை
தொடுத் தெனுள்ளத் தொடையவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத்
தந்தென் வருத்தந் தீருமென. **#3129**

மலைமகளை ஒருபாகத்து வைத்து மகிழ்ந்ததும் அல்லாமல், உமது அழகிய நீண்ட திருமுடியினிடத்துக் கங்கை என் னும் பெண்ணையும் மறைத்து வைத்திருக்கும் காதல் உடையீர்! இங்கு உமக்குத் திருவுடைய பூமாலை தொடுத்து என் உள்ளத்தின் நிறை யையும் அவிழச் செய்த முழுமதியென விளங்கும் சங்கிலியாரைத் தந்தருளி, எனக்குற்ற வருத்தத்தை நீக்குவீராக என்னலும்,

விளக்கவுரை

முன் ஒரு பெண்ணை மணந்திருக்கும் நீ, பின் ஒரு பெண்ணை வேண்டுவது ஏன்? என்னும் வினா எழாதவாறு பெரு மானை விளித்துக் கூறியருளியது எண்ணி மகிழ்தற்குரியது. வெல்லும் சொல் இன்மையறிந்து கூறிய விளியழகே அழகாம்.

அண்ண லார்முன் பலவும்அவர்
அறிய வுணர்த்திப் புறத்தணைந்தே
எண்ண மெல்லாம் உமக்கடிமை
யாமா றெண்ணும் என்னெஞ்சில்
திண்ண மெல்லா முடைவித்தாள்
செய்வ தொன்று மறியேன் யான்
தண்ணி லாமின் னொளிர்பவளச்
சடையீர் அருளும் எனத்தளர்வார். **#3130**

இறைவனின் திருமுன்பு நின்று இனிய பல கூற்று களால் அவர் அறியும்படி உணர்த்தி, வெளியே வந்து, என் எண்ணம் எல்லாம் உமக்கு அடிமையாமாறு எண்ணும் எனது நெஞ்சினில் அதன் திண்மை

எல்லாவற்றையும் உடையச் செய்தாள். இனிச் செய்வதொன்றும் அறியேன் நான், குளிர்ந்த நிலவு ஒளிரும் பவளம் போலும் சடையை உடையீர்! நும் அடியேற்கு அருளும் எனக் கூறித் தளர்வாராய்,

விளக்கவுரை

****

மதிவாள் முடியார் மகிழ்கோயிற்
புறத்தோர் மருங்கு வந்திருப்பக்
கதிரோன் மேலைக் கடல்காண
மாலைக் கடலைக் கண்டயர்வார்
முதிரா முலையார் தம்மைமணம்
புணர்க்க வேண்டி முளரிவளை
நிதியா னண்பர் தமக்கருளும்
நண்பால் நினைந்து நினைந்தழிய. **#3131**

இளம்பிறை தவழும் திருச்சடையை உடைய பெருமான் மகிழ்கின்ற கோயிலின் வெளியே ஒருபுறமாக நம்பிகள் இருப்பக் கதிரவன் மேலைக் கடலிற் செல்லும் காலமாகிய மாலைக் காலம் வந்துற, அதுகண்டு மயங்குவார், முதிராத முலையையுடைய சங்கிலியாரைத் தமக்குத் திருமணம் செய்ய வேண்டிப் பதுமநிதி சங்கநிதி எனும் இரண்டையும் உடைமையாகக் கொண்டு நிற்கும் குபேரனை நட்பாகக் கொண்டிருக்கும் பெருமான் தமக்குத் தோழன் என்பதை நினைந்து நினைந்து மனம் அழிய,

விளக்கவுரை

இறைவன் குபேரனையன்றித் தம்மையும் தோழனாகக் கொண்டிருக்கும் நட்பு உரிமையால் தமக்கு உதவ வேண்டி மனம் அழிந்தவராயினர். `நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு உப்பாதல் சான்றோர் கடன்' *(குறள், 802)* என்பர் திருவள்ளுவர். அத்தகைய உரிமையும் தகுதியும் பற்றியே இவ்வகையானும் உதவ வேண்டுகின்றார் நம்பிகள்.

உம்ப ருய்ய உலகுய்ய
ஓல வேலை விடமுண்ட
தம்பி ரானார் வன்தொண்டர்
தம்பா லெய்திச் சங்கிலியை
இம்ப ருலகில் யாவருக்கும்
எய்த வொண்ணா இருந்தவத்துக்
கொம்பை உனக்குத் தருகின்றோம்
கொண்ட கவலை ஒழிகென்ன. **#3132**

தேவர் உலகும் இவ்வுலகும் உய்ய நஞ்சுண்டருளிய இறைவர்

நம்பிகள்பால் வந்தருளி, அவரை நோக்கி, இந்த உலகில் யாவரும் அடைய முடியாத பெருந் தவத்தின் பூங்கொடியாம் சங்கி லியை உனக்குத் தருகின்றோம்; நீ மனத்தில் கொண்ட கவலையை ஒழிவாயாக! என்னலும்,

விளக்கவுரை

****

அன்று வெண்ணெய் நல்லூரில்
வலிய ஆண்டு கொண்டருளி
ஒன்று மறியா நாயேனுக்
குறுதி யளித்தீர் உயிர்காக்க
இன்றும் இவளை மணம்புணர்க்க
ஏன்று நின்றீர் எனப்போற்றி
மன்றல் மலர்ச்சே வடியிணைக்கீழ்
வணங்கி மகிழ்ந்தார் வன்தொண்டர். **#3133**

அன்று திருவெண்ணெய்நல்லூரில் வலியவந்து ஆட்கொண்டருளி ஒன்றும் அறியாத நாயேனுக்கு உறுதி வழங்கி யருளினீர்! எனது உயிரைக் காத்திட இன்றும் இச்சங்கிலியைத் திரு மணம் செய்து வைத்தற்கு ஏற்றருளினீர்! என்று பெருமானைப் போற்றி அவர்தம் மணம் கமழும் மலர்ச் சேவடிகளை வணங்கி மகிழ்வுற்றார்.

விளக்கவுரை

இவ் ஆறு பாடல்களும் ஒருமுடிபின.

ஆண்டு கொண்ட அந்தணனார்
அவருக் கருளிக் கருணையினால்
நீண்ட கங்குல் யாமத்து
நீங்கி வானில் நிறைமதியந்
தீண்டு கன்னி மாடத்துச்
சென்று திகழ்சங் கிலியாராம்
தூண்டு சோதி விளக்கனையார்
தம்பால் கனவில் தோன்றினார். **#3134**

நம்பிகளை ஆண்டு கொண்ட அறவாழி அந்தண னாராகிய இறைவரும் அவருக்கு அருள் புரிந்து, கருணையுடன், நீண்டு பெருகிய இரவின் யாமத்து அவ்விடத்தினின்றும் நீங்கி, வானில் நிறைந்த திங்களஞ் செல்வனும் தீண்டும் உயர்வுடைய கன்னிமாடத் துச் சென்றருளி, அவ்விடத்துத் திகழும் சங்கிலியார் எனப்படும் தூண்டும் ஒளி விளக்கினை ஒத்த அம்மையார் பாலாகக் கனவில் தோன்றினார்.

விளக்கவுரை

தூண்டுசோதி விளக்கு அனையார் - இறையருளால் உந்தப்பட்டு ஒளிவிளங்க வாழ்தலின் இனியும் வாழ இருத்தலின், இங்ஙனம் கூறினார்.

தோற்றும் பொழுதிற் சங்கிலியார்
தொழுது விழுந்து பரவசமாய்
ஆற்ற அன்பு பொங்கியெழுந்
தடியே னுய்ய எழுந் தருளும்
பேற்றுக் கென்யான் செய்வதெனப்
பெரிய கருணை பொழிந்தனைய
நீற்றுக் கோல வேதியரும்
நேர்நின் றருளிச் செய்கின்றார். **#3135**

இறைவர், சங்கிலியார் கனவில் தோன்றிய பொழுது, சங்கிலியார் தொழுது விழுந்து தம்வயமிழந்து மிகவும் அன்பு பொங்கி எழுந்து, `ஐயனே! அடியேன் உய்ய எழுந்தருளி வந்த பேற்றிற்கு என்ன கைம்மாறு செய்வது' என்னலும், அதுபொழுது பெரிய கருணையையே மேலே பொழிந்தாற்போல் விளங்கும் திரு நீற்றின் திருமேனியைக் கொண்ட சிறந்த அந்தணரும் நேராக நின்று அருள் புரிவாராய்,

விளக்கவுரை

திருநீறு கருணையின் வண்ணமாதல், `பராவணமாவது நீறு' என்பதாலும் அறியப்படும்.

சாருந் தவத்துச் சங்கிலிகேள்
சால என்பா லன்புடையான்
மேரு வரையின் மேம்பட்ட
தவத்தான் வெண்ணெய் நல்லூரில்
யாரு மறிய யான்ஆள
உரியான் உன்னை யெனையிரந்தான்
வார்கொள் முலையாய் நீயவனை
மணத்தால் அணைவாய் மகிழ்ந்தென்றார். **#3136**

`எம்பால் சாரும் தவமுடைய சங்கிலியே! கேள். மிகவும் என்பால் அன்புடையன். மேருமலையிலும் மேம்பட்ட தவமுடையவன். திருவெண்ணெய்நல்லூரில் யாரும் அறிய யான் ஆண்டுகொள்ள உரிமையுடையவன். உன்னை வேண்டி என்னை இரந்தான். கச்சணிந்த மார்பகத்தை உடையவளே! நீ அவனைத் திருமணம் புரிந்து மகிழ்ந்து வாழ்வாயாக! என்றருளிச் செய்தனர்.

விளக்கவுரை

தவம் பெற்ற பெருவாழ்வைச் சங்கிலியாருக்கும், நம்பி களுக்கும்

இயைத்துக் கூறியது, கயிலையில் தன்பாலும், நிலவுலகில் அடியவர்பாலும் பூண்டு நிற்கும் தவம்பற்றியாம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஆதி தேவர் முன்னின்றங்
கருளிச் செய்த பொழுதின்கண்
மாத ரார்சங் கிலியாரும்
மாலும் மயனு மறிவரிய
சீத மலர்த்தா மரையடிக்கீழ்ச்
சேர்ந்து வீழ்ந்து செந்நின்று
வேத முதல்வர் முன்னடுக்கம்
எய்தித் தொழுது விளம்புவார். **#3137**

மூலகாரணமாய் நிற்கும் முதல்வனார் அருளிச் செய்த அளவில், சங்கிலியாரும், மாலும் அயனும் அறிதற்கரிய குளிர்ந்த மலராய தாமரை போலும் திருவடிக்கீழ்ப் பொருந்த வீழ்ந்து, நேர் நின்று, வேதமுதல்வராய அவர் முன்பு நடுக்கமடைந்து தொழுது சொல்வாராகி,

விளக்கவுரை

****

எம்பி ரானே நீரருளிச்
செய்தார்க் குரியேன் யான்இமையோர்
தம்பி ரானே அருள்தலைமேற்
கொண்டேன் தக்க விதிமணத்தால்
நம்பி யாரூ ரருக்கென்னை
நல்கி யருளும் பொழுதிமயக்
கொம்பி னாகங் கொண்டீர்க்குக்
கூறுந் திறமொன் றுளதென்பார். **#3138**

எம்பெருமானே! நீர் அருளிச் செய்த அவருக்கே உரியவள் நான். தேவர்களின் தலைவனே! உமது அருளிப்பாட்டை என் தலைமேற் கொண்டேன். தக்க விதியுடைய திருமணத்தால் நம்பிகளுக்கு என்னைக் கொடுத்தருளும்பொழுது, மலையரையன் மகளாராய உமையம்மையாரை ஒருபாலாகக் கொண்டிருக்கும் பெருமானுக்கு விண்ணப்பித்துக் கொள்வதும் ஒன்று உண்டு என்பாராய்,

விளக்கவுரை

****

பின்னும் பின்னல் முடியார்முன்
பெருக நாணித் தொழுரைப்பார்
மன்னுந் திருவா ரூரின்கண்

அவர்தாம் மிகவும் மகிழ்ந்துறைவ
தென்னுந் தன்மை யறிந்தருளும்
எம்பி ராட்டி திருமுலைதோய்
மின்னும் புரிநூல் அணிமார்பீர்
என்றார் குன்றா விளக்கனையார். #3139
இணைந்துவிளங்கும் புரிபுன் சடையையுடைய இறைவனை முன்னாகப் பெரிதும் நாணம் பெருகத் தொழுது சொல்வா ராய், விளங்கும் திருவாரூரின்கண் அவர் மிகவும் மகிழ்ந்து தங்குவது என்னும் தன்மையைத் திருவுளங் கொண்டு, எம்பெருமாட்டியின் திரு முலை தோய்ந்த, மின்னும் முப்புரி நூலணிந்த மார்புடையீரே! அதற் கேற்ப அருள் புரிதல் வேண்டும் என்றார், விளக்கினை ஒத்த சங்கிலியார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

மற்றவர்தம் உரைகொண்டு
வன்தொண்டர் நிலைமையினை
ஒற்றிநகர் அமர்ந்தபிரான்
உணர்ந்தருளி யுரைசெய்வார்
பொற்றொடியா யுனையிகந்து
போகாமைக் கொருசபதம்
அற்றமுறு நிலைமையினால்
அவன்செய்வா னெனவருளி. #3140
மற்று அச்சங்கிலியார்தம் விண்ணப்பத்தை ஏற்றருளி, நம்பிகளின் நிலையைத் திருவொற்றியூர் நகர் அமர்ந்த பெருமான் உணர்ந்தருளி உரைப்பாராய், பொன்னாலாய வளையல் அணிந்தவளே! உன்னை விடுத்துப் போகாமைக்குரியதொரு சூளு ரையை மறைவாகப் பொருந்திய நிலையில் அவனும் செய்து தரு வான் என அருள் புரிந்து,

விளக்கவுரை

****

வேயனைய தோளியார்
பால்நின்று மீண்டருளித்
தூயமனம் மகிழ்ந்திருந்த
தோழனார் பால்அணைந்து
நீஅவளை மணம்புணரும்
நிலையுரைத்தோம் அதற்கவள்பால்
ஆயதொரு குறைஉன்னால்
அமைப்பதுள தென்றருள. #3141

மூங்கிலின் வனப்பினை ஒத்த தோளுடைய சங்கிலி யாரிடத்தினின்றும் மீண்டருளித் திரும்பவும் தூயதான தனது மனத் தகத்து மகிழ்ந்திருக்கின்ற தோழர் சுந்தரனார்பால் சென்று, அவரை நோக்கி அவளை மணஞ் செய்திடும் நிலைமையை நாம் சொன் னோம், அதற்கு அவள்பாலாக நின்றதொரு குறையுளது, அது உன்னால் முடித்துக் கொடுக்க வேண்டியதாகும் எனப் பெருமான் மொழிதலும்,

விளக்கவுரை

****

வன்தொண்டர் மனங்களித்து
வணங்கிஅடி யேன்செய்ய
நின்றகுறை யாதென்ன
நீயவளை மணம்புணர்தற்
கொன்றியுட னேநிகழ
ஒருசபத மவள்முன்பு
சென்றுகிடைத் திவ்விரவே
செய்கவென வருள்செய்தார். **#3142**

அதுகேட்ட வன்தொண்டராய நம்பிகளும் பெரிதும் மனம் மகிழ்ந்து பணிந்து, அடியேன் செயத்தக்கதொரு குறை யாது? எனலும், பெருமானும் அவரை நோக்கி, நீ அவளைத் திரு மணம் செய்தற்கு, அவளுடன் என்றும் பிரியாது உடன் உறைதற்கான சூளுரையொன்றை இன்றிரவே அவள் முன்பு செய்திடுவாய் என்று அருள் புரிந்தார்.

விளக்கவுரை

சென்று கிடைத்து என்பது விரைந்து சென்று அவளை யடைந்து எனும் பொருள்பட நின்றது. இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

என்செய்தால் இதுமுடியும்
ஆதுசெய்வன் யானிதற்கு
மின்செய்த புரிசடையீர்
அருள்பெறுதல் வேண்டுமென
முன்செய்த முறுவலுடன்
முதல்வரவர் முகநோக்கி
உன்செய்கை தனக்கினியென்
வேண்டுவதென் றுரைத்தருள. **#3143**

எம்பெருமானே! என்செய்தால் இத்திருமணம் இனிது நிகழ்வுறுமோ அதனைச் செய்வேன் யான், ஆனால் அவ்வண் ணம் செய்திடற்கு மின் ஒளிரும் புரிபுன் சடையீர்! உமது அருள் பெறு தல் வேண்டும் எனலும், அதனைத் திருவுளம் கொண்டு, புன்முறுவ லுடன் அவரது முகத்தை

நோக்கி உனது செயலுக்கு இனி நாம் என் செய்திடல் வேண்டும்? எனப் பெருமான் கேட்டருளலும்,

விளக்கவுரை

****

வம்பணிமென் முலையவர்க்கு
மனங்கொடுத்த வன்தொண்டர்
நம்பரிவர் பிறபதியும்
நயந்தகோ லஞ்சென்று
கும்பிடவே கடவேனுக்
கிதுவிலக்கா மெனுங்குறிப்பால்
தம்பெருமான் றிருமுன்பு
தாம்வேண்டுங் குறையிரப்பார். **#3144**

அதுபொழுது கச்சணிந்த மார்பகத்தையுடைய சங்கிலியாரிடத்து மனங்கொடுத்த நம்பிகள், இங்கிருக்கும் எம்பெரு மானின் இத்திருப்பதியல்லாது, பிற பிற திருப்பதிகளிலும் இத்திருக் கோலத்தை வழிபட வேண்டும் எனும் உளங்கொண்ட அடியேனுக்கு இச்சூளுரை தடையாகும் என நினைந்த குறிப்பினால், தம்மை ஆளாகவுடைய பெருமானின் திருமுன்பு தாம் வேண்டுதற்குரிய குறையினைக் கூறி இரந்திடுவாராகி,

விளக்கவுரை

****

சங்கரர்தாள் பணிந்திருந்து
தமிழ்வேந்தர் மொழிகின்றார்
மங்கையவள் தனைப்பிரியா
வகைசபதஞ் செய்வதனுக்
கங்கவளோ டியான்வந்தால்
அப்பொழுது கோயில்விடத்
தங்குமிடந் திருமகிழ்க்கீழ்க்
கொளவேண்டு மெனத்தாழ்ந்தார். **#3145**

இன்பத்தை வழங்கிவரும் பெருமானுடைய திருவடிகளைப் பணிந்து, அவர் திருமுன்பிருந்து, தமிழ் வேந்தராய சுந்தரர் மொழிவாராய், எம்பிரானே! சங்கிலியாகிய அவள்தனை நான் திருமணம் செய்து பிரியாதிருத்தற்குரிய சூளுரையைச் செய்வ தற்கு அங்கு அவளுடன் திருமுன்பு வந்தால், அதுபொழுது தாங்கள் கோயிலை விடுத்து நீங்கித் தங்குகின்ற இடம் திருவுடைய மகிழ மரத்தின் கீழாக அமையவேண்டும் என வேண்டி விண்ணப்பித்துக் கொண்டார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

தம்பிரான் தோழரவர்
தாம்வேண்டிக் கொண்டருள
உம்பர்நா யகருமதற்
குடன்பாடு செய்வாராய்
நம்பிநீ சொன்னபடி
நாஞ்செய்தும் என்றருள
எம்பிரா னேயரிய
தினியெனக்கென் னெனவேத்தி. **#3146**

தம்பிரான் தோழராகிய சுந்தரர் இவ்வண்ணம் இரந்து வேண்டிக் கொண்டருளலும், தேவர்கட்குத் தலைவராய சிவ பெருமானும் அதற்கு உடன்பட்டுச் சுந்தரனே! நீ சொன்னபடி நாம் செய்வோம் என்று அருளலும், அதனைக் கேட்டருளிய சுந்தரரும், எம்பிரானே! இனி எனக்கு அரியதொரு செயல் எதுவாகும்? (எதுவுமின்று) எனப் போற்றி செய்து,

விளக்கவுரை

****

அஞ்சலிசென் னியில்மன்ன
அருள்பெற்றுப் புறம்போதச்
செஞ்சடையார் அவர்மாட்டுத்
திருவிளையாட் டினைமகிழ்ந்தோ
வஞ்சியிடைச் சங்கிலியார்
வழியடிமைப் பெருமையோ
துஞ்சிருள்மீ ளவும்அணைந்தார்
அவர்க்குறுதி சொல்லுவார். **#3147**

இரு கைகளும் கூப்பியவாறு உச்சியில் விளங்க எம்பிரானிடம் இவ்வாறாக அருள்பெற்று வெளியே வந்திடலும், அது பொழுது செஞ்சடையையுடைய சிவபெருமானும், தம் தோழரிடத்து ஒரு திருவிளையாடல் புரிதற்கு மகிழ்ந்தோ! அல்லது வஞ்சிக்கொடி போன்ற சிற்றிடையினையுடைய சங்கிலியார் வழிவழியாகச் செய்து வரும் அடிமையின் பெருமையை எண்ணியோ! நாம் அறியோம்! உயிர்கள் அனைத்தும் துயில்கொள்ளும் இரவிலே, மீண்டும் உறுதி சொல்வதற்குச் சங்கிலியார்பால் சென்றார்.

விளக்கவுரை

மன்னுயிரெல்லாம் துயில அருள் செய்யும் பெருமான் தான் துயிலாது

அவ்வுயிர்களுக்கு அருள் செய்தலிலேயே திருவுளம் கொண்டிருத்தலை அறிவிக்கவே, `துஞ்சிருள் மீளவும் அணைந்தார்' என்றார். `உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி' *(தி.6 ப.55 பா.11)* என நினைந்துருகுவதல்லது அப்பெருமானுக்கு உயிர்களா கிய நாம் என் செய்ய வல்லோம்? இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

சங்கிலியார் தம்மருங்கு
முன்புபோற் சார்ந்தருளி
நங்கையுனக் காரூரன்
நயந்துசூ ளுறக்கடவன்
அங்கு நமக் கெதிர்செய்யும்
அதற்குநீ யிசையாதே
கொங்கலர்பூ மகிழின்கீழ்க்
கொள்கவெனக் குறித்தருள. **#3148**

சங்கிலியாரிடத்து முன்பு போலச் சென்றருளி, பெருமான் அவரை நோக்கிப், பெண்ணே! உனக்குச் சுந்தரன் சூளுரை செய்வன், அச்சூளுரையை நம் முன்பு செய்திடற்கு இசைவு கொள் ளாது, நறுமணம் மிக்க மலர்களையுடைய மகிழ மரத்தின்கீழ்ச் செய் தற்கு ஏற்பாயாக' எனக் குறித்தருளலும்,

விளக்கவுரை

`பொன்னவிலும் கொன்றையினாய், போய் மகிழ்க்கீழ் இரு என்று, சொன்ன எனைக் காணாமே சூளுறவு மகிழ்க்கீழே, என்ன வல்ல பெருமானே' எனவரும் நம்பிகள் கூற்றே இந்நிகழ்விற்கு அடித்தளமாகும்.

மற்றவருங் கைகுவித்து
மாலயனுக் கறிவரியீர்
அற்றமெனக் கருள்புரிந்த
அதனில்அடி யேனாகப்
பெற்றதியான் எனக்கண்கள்
பெருந்தாரை பொழிந்திழிய
வெற்றிமழ விடையார்தம்
சேவடிக்கீழ் வீழ்ந்தெழுந்தார். **#3149**

: அதுகேட்ட சங்கிலியாரும் வணங்கி, எம்பெருமா னைக் கைகூப்பித் தொழுது, மாலும் அயனும் அறிதற்கரியீர்! பிறர்க்குக் கூறற்கரிய உண்மை நிலையை எனக்கு அருள்புரிந்த அத்தன்மையால், பெருமானுக்கு அடியேனாகப் பெற்றேன் யான் என்று கூறிக் கண்க ளில் பெருந் தாரையாக நீர்வழிந்திழிய, வெற்றி பொருந்திய இளைய விடையையுடைய பெருமான் திருவடிக் கீழ்ப் பணிந்து வீழ்ந்து எழுந்

தார்.

விளக்கவுரை

அற்றம் - பிறர்க்குக் கூறற்கரிய மறைவான செய்தி: அந்தரங்கம், இரகசியம் என்பனவும் அன்ன. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

தையலார் தமக்கருளிச்
சடாமகுடர் எழுந்தருள
எய்தியபோ ததிசயத்தால்
உணர்ந்தெழுந்தவ் விரவின்கண்
செய்யசடை யாரருளின்
திறம்நினைந்தே கண்துயிலார்
ஐயமுடன் அருகுதுயில்
சேடியரை அணைந்தெழுப்பி. **#3150**

சங்கிலியாருக்கு அருள்புரிந்து சடைமுடியுடைய பெருமான் எழுந்தருளிச் சென்றிடலும், இந்நிகழ்ச்சி கனவில் நிகழப் பெற்றபோதும் நனவுபோல் உணர்ந்தெழுந்த சங்கிலியார் அவ்விர வின்கண்ணே செம்மையான சடையுடைய பெருமானது திருவருளின் திறத்தை நினைந்து, மேலும் கண் துயிலாராகி, மனத்தில் பெரும் ஐயப்பாட்டுடன், அருகே துயின்ற தோழியரை அணைந்து அவரை எழுப்பிடலும்,

விளக்கவுரை

ஐயம் - தாம் கண்ட கனவு நிகழ்ச்சியின்கண் கொண்ட ஐயம். இறைவன் தன்பொருட்டாக ஒருமுறைக்கு இருமுறை எழுந்த ருளி வந்ததும், தனக்கு உற்றதுறைத்தும், உறுவது கூறியும் செய்த அருளிப்பாடு எவரும் பெறுதற்கரிது ஆதலின், அதன்கண் ஐயம் எழலாயிற்று.

நீங்குதுயிற் பாங்கியர்க்கு
நீங்கல்எழுத் தறியுமவர்
தாங்கனவில் எழுந்தருளித்
தமக்கருளிச் செய்ததெலாம்
பாங்கறிய மொழியஅவர்
பயத்தினுடன் அதிசயமும்
தாங்குமகிழ்ச் சியும்எய்தச்
சங்கிலியார் தமைப்பணிந்தார். **#3151**

துயில் நீங்கிய தோழியர்க்கெல்லாம் ஏட்டில் உள்ள வரியைநீக்கி எழுத்தறிய வல்ல திருவொற்றியூர்ப் பெருமான், தமது கனவில் அருளிச் செய்த இவ்வருளிப் பாட்டை யெல்லாம் அவர்கள் பாங்குடன் அறியுமாறு மொழிந்திடலும், அதுகேட்ட தோழியர்கள் அச்சமும் வியப்பும் கொண்டு தம்மை அறியாது பெற்ற மகிழ்ச்சியால்

சங்கிலியாரைப் பணிந்தார்கள்.

விளக்கவுரை

இறைவர் அருளிய மறைவாகக் கொள்ளத்தக்க செய்தி யைத் தோழியரிடம் கூறியது பொருந்துமோ? எனில், பொருந்தும். தோழியரும் தானும் உடல் வகையால் பலராக இருப்பினும், உணர்வு வகையால் ஒன்றிய மனமுடையர்களாகவே இருந்தலினா லாம்.
`இருவரே மெய்வடிவில் ஏந்திகழ் நல்லார், ஒருவரே தம்மில் உயிர்' எனவரும் கூற்றும் காண்க. (தண்டியலங்காரம் - மேற்கோள்).
இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

சேயிழையார் திருப்பள்ளி
யெழுச்சிக்கு மலர்தொடுக்கும்
தூயபணிப் பொழுதாகத்
தொழில்புரிவா ருடன்போதத்
கோயிலின்முன் காலமது
வாகவே குறித்தணைந்தார்
ஆயசப தஞ்செய்ய
வரவுபார்த் தாரூரர். **#3152**

அதுபொழுது சங்கிலியாருக்குப் பெருமானுடைய திருப்பள்ளி எழுச்சிக்கு மலர் தொடுக்கும் பொழுதாகிட, அவர் எழுந்து அத்தொழில் செய்திடும் பெண்களுடன் தாம் கோயில் சென்றிட, கோயிலின் முன்பாகச் சங்கிலியார் வரும் காலத்தை உணர்ந்து, தமது சூளுரையை நிறைவேற்றும் காலம் அதுவாகவே அமைத்துக் கொண்டு, பெருமான் அருளியவாறு சூளுரை செய்திட, நம்பிகள் வருவாராயினர்.

விளக்கவுரை

****

நின்றவர்அங் கெதிர்வந்த
நேரிழையார் தம்மருங்கு
சென்றணைந்து தம்பெருமான்
திருவருளின் திறங்கூற
மின்தயங்கு நுண்ணிடையார்
விதியுடன்பட் டெதிர்விளம்பார்
ஒன்றியநா ணொடுமடவார்
உடனொதுங்கி உட்புகுந்தார். **#3153**

நின்ற நம்பிகள், அங்கு எதிர்வந்த சங்கிலியா ரிடத்துச் சென்று சேர்ந்து, பெருமானின் திருவருள் திறங்களை எடுத்து மொழிய, மின்னல் என ஒளிரும் நுண்ணிய இடையையுடைய சங்கிலி யார், சூளுரை

செய்தற்குரிய நீர்மையை நேராக எதிர்நின்று சொல்லா ராகி, உள்ளத்துக்கொண்ட நாணமுடன் ஒதுங்கித், தம்முடன் வந்த தோழியருடன் கோயிலுட் புகுந்தார்.

விளக்கவுரை

****

அங்கவர்தம் பின்சென்ற
ஆரூரர் ஆயிழையீர்
இங்குநான் பிரியாமை
உமக்கிசையும் படியியம்பத்
திங்கள்முடி யார்திருமுன்
போதுவீர் எனச்செப்பச்
சங்கிலியார் கனவுரைப்பக்
கேட்டதா தியர்மொழிவார். **#3154**

அங்கு அவர்பின் சென்ற நம்பிகள் அவரை நோக்கி, அழகிய அணிகளை அணிந்தீர்! இங்கு நான் உம்மைப் பிரியாமைக்கு இசைந்து சூளுரை செய்திட, இளம்பிறை அணிந்த திருச்சடையை யுடைய பெருமான் முன்பு போதுவீராக என மொழியலும், அது கண்டு சங்கிலியார் தம் கனவைச் சொல்லக் கேட்ட அவர்தம் தோழி யர்கள் சுந்தரருக்குச் சொல்வார்களாய்,

விளக்கவுரை

முன்பாடலில், சுந்தரர் திருவருளின் திறம்கூறச் சங்கிலி யார் எதிர் மொழியாது தோழியருடன் ஒதுங்கி உட்புகுந்ததும், இப் பாடலில் இறைவன் திருமுன் வர அழைப்பத் தோழியர் வழித் தம் கருத்தை யுணர்த்துவதும் அவர்தம் பெண்மைத் தன்மையைக் காட்டி நிற்கின்றன `அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்தல் நிச்சமும் பெண்பாற் குரியவென்ப' *(தொல். களவு. 8)* எனத் தொல்காப்பியர் கூறும் பெண்மையை இவர்வழி கண்டு மகிழ ஏதுவாகின்றது.

எம்பெருமான் இதற்காக
எழுந்தருளி யிமையவர்கள்
தம்பெருமான் திருமுன்பு
சாற்றுவது தகாதென்ன
நம்பெருமான் வன்தொண்டர்
நாதர்செயல் அறியாதே
கொம்பனையீர் யான்செய்வ
தெங்கென்று கூறுதலும். **#3155**

எம்பெருமானே! இச்சூளுரைக்காகத் தாங்கள் எழுந்தருளி வந்து

இறைவரின் திருமுன்பு சொல்வது தகாது என்றலும், அது கேட்டருளிய நம்பிகள் தம் பெருமானது செய்கையை அறியாத வராய்ப் பூங்கொடி போல்வீர்! பின்னர் யான் சூளுரை செய்வது எங்கே? என்று கூறுதலும்,

விளக்கவுரை

****

மாதரவர் மகிழ்க்கீழே
அமையுமென மனமருள்வார்
ஈதலரா கிலும்ஆகும்
இவர்சொன்ன படிமறுக்கில்
ஆதலினால் உடன்படலே
அமையுமெனத் துணிந்தாகில்
போதுவீ ரெனமகிழ்க்கீழ்
அவர்போதப் போயணைந்தார். **#3156**

அதற்கு அப்பெண்கள், மகிழ மரத்தின் கீழே செய்ய அமையும் என்றதும், அதுகேட்டு மனம் மயங்கியவராய், யான் இவர் சொன்னபடி செய்ய மறுத்தால், முற்கூறிய உறுதிப்பாட்டிற்கு மாறாகும் ஆதலின் நான் உடன்படலே பொருந்திய செயலாகும் என்று துணிந்து, அங்ஙனமாயின் நீர் மகிழ மரத்தடியிற் போதுவீர் என்ன, அவர்கள் போதலும் தாமும் அங்குச் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

தாவாத பெருந்தவத்துச்
சங்கிலியா ருங்காண
மூவாத திருமகிழை
முக்காலும் வலம்வந்து
மேவாதிங் கியானகலேன்
எனநின்று விளம்பினார்
பூவார்தண் புனற்பொய்கை
முனைப்பாடிப் புரவலனார். **#3157**

குறைவிலாத பெருந் தவமுடைய சங்கிலியாரும் காண, என்றும் அழியாத மகிழ மரத்தை மும்முறையாக வலம் வந்து, நான் இங்கிராது அகன்று போகேன் என நின்று விளம்பினார், மலர்கள் மலர்ந்திடத் தோன்றும் குளிர்ந்த நீர்ப் பொய்கையுடைய திருமுனைப் பாடி நாட்டின் தலைவரான நம்பிகள்.

விளக்கவுரை

****

மேவியசீ ராரூரர்
மெய்ச்சபத வினைமுடிப்பக்
காவியினேர் கண்ணாருங்
கண்டுமிக மனங்கலங்கிப்
பாவியேன் இதுகண்டேன்
தம்பிரான் பணியால்என்
றாவிசோர்ந் தழிவார்அங்
கொருமருங்கு மறைந்தயர்ந்தார். **#3158**

என்றும் பொருந்திய சிறப்பினையுடைய நம்பிகள் உண்மையாகச் சூளுரை செய்திடும் அச்செயலை முடித்திடக் குவளை மலரை ஒத்த கண்களையுடைய சங்கிலியாரும், அதுகண்டு மிகவும் மனம் கலங்கிப் பாவியேன் இந்நிகழ்வினை எம்பெருமான் பணியால் கண்டேன் என்று உயிர் சோர்ந்து மனம் அழிபவர், அங்கு ஒருபுறம் மறைந்து நின்றனர்.

விளக்கவுரை

நம்பிகள், தம்மை மணந்தபின் பிரியாது தம்மோடு இருத்தல் வேண்டும் என்பது கருத்தெனினும், இடையில் நிகழ்ந்த இந்நிகழ்வுகள் அவரை வருத்தின. இதுவும் அப்பெண்தன்மையை விளக்குவதாகும்.

திருநாவ லூராளி
தம்முடைய செயல்முற்றிப்
பொருநாகத் துரிபுனைந்தார்
கோயிலினுட் புகுந்திறைஞ்சி
அருள்நாளுந் தரவிருந்தீர்
செய்தவா றழகிதெனப்
பெருநாமம் எடுத்தேத்திப்
பெருமகிழ்ச்சி யுடன்போந்தார். **#3159**

திருநாவலூரினுக்கு அரசராய சுந்தரர், தமது செயல் முடித்துப் போர்செய்யும் யானைத் தோலைப் போர்த்த சிவபெருமான் கோயிலினுள் புகுந்து, ஐயனே! நின் அருளை நாளும் வழங்க இங்கிருந்தீர்! இச்செயல் செய்தவாறு அழகியது, என்று பெருமானுடைய பெரும்பெயரான திருவைந்தெழுத்தைப் போற்றி, மகிழ்ந்து, பெருமகிழ்ச்சியுடன் வெளியே வந்தருளினர்.

விளக்கவுரை

சுந்தரர் தாம் இறைவன் திருமுன்பு சூளுரைக்குங்கால், அவர் மகிழ மரத்தடியில் எழுந்தருளியிருக்க வேண்டியது அவருக்கும் இறைவற்கும் மட்டுமே தெரியும். அங்ஙனமிருக்க அவர் திருமுன்பு சூளுரைக்க முற்பட்ட பொழுது, தோழியர்கள் மகிழ மரத்தடியே அமையும் என்றது,

இறைவன் உணர்த்த உணர்ந்ததன்றிப் பிறிதன்று என்பதை யுணர்ந்த நம்பிகள், குறிப்பு மொழியால் `இச்செயல் அழகிது' என்றார். அங்ஙனமாயினும் அவ்வருள் இதற்கு முன்னின்று அருளியது போலப் பின்னும் அருளும் என்ற உறுதிப்பாடும், தோழமையாம் உரிமையுணர்வும் நிலைபெற உள்ளத்திருத்தலின், சலியாது பெருமகிழ்வுடன் வந்தருளினார்.

வார்புனையும் வனமுலையார்
வன்தொண்டர் போனதற்பின்
தார்புனையும் மண்டபத்துத்
தம்முடைய பணிசெய்து
கார்புனையும் மணிகண்டர்
செயல்கருத்திற் கொண்டிறைஞ்சி
ஏர்புனையுங் கன்னிமா
டம்புகுந்தார் இருள்புலர. **#3160**

கச்சணிந்த மார்பகங்களையுடைய சங்கிலியார், நம்பிகள் போனபின்பு, மாலைகட்டும் மண்டபம் சென்று தம் பணி களை முடித்துக் கருமையான மேகம் போலும் அழகிய திருக்கழுத் தினையுடைய சிவபெருமானின் செயலினைக் கருத்தில் கொண்டு, வணங்கி, இருள் நீங்கிப் பொழுது விடிந்திட அழகு பொருந்தும் கன்னி மாடத்துள் புகுந்தார்.

விளக்கவுரை

****

அன்றிரவே ஆதிபுரி
ஒற்றிகொண்டார் ஆட்கொண்ட
பொன்றிகழ்பூண் வன்தொண்டர்
புரிந்தவினை முடித்தருள
நின்றபுகழ்த் திருவொற்றி
யூர்நிலவு தொண்டருக்கு
மன்றல்வினை செய்வதற்கு
மனங்கொள்ள வுணர்த்துவார். **#3161**

அன்றைய இரவிலேயே தொன்மைமிகு மூதூராய திருவொற்றியூரை உடையவராகிய பெருமானும், தாம் ஆட்கொண் டிருக்கும் பொன்னாலாய அணிகலன்களை அணிந்த நம்பிகளின் விருப்பிற் கிணங்கப் புகழ் விளங்கி நிற்கும் திருவொற்றியூரில் வாழும் தொண்டர்கட்குச் சுந்தரருக்குச் சங்கிலியாரைத் திருமணம் செய்திடற்கு மனம் கொள்ளும்படி கனவில் அருள் செய்வாராய்,

விளக்கவுரை

****

நம்பியா ரூரனுக்கு
நங்கைசங் கிலிதன்னை
இம்பர்ஞா லத்திடைநம்
ஏவலினால் மணவினைசெய்
தும்பர்வா ழுலகறிய
அளிப்பீரென் றுணர்த்துதலும்
தம்பிரான் திருத்தொண்டர்
அருள்தலைமேற் கொண்டெழுவார். #3162

`சுந்தரனுக்குச் சங்கிலியை இவ்வுலகில் நமது ஏவலின்படி மணவினை செய்து, விண்ணவரும் அறியுமாறு திரு மணம் செய்து கொடுப்பீர்களாக' என்று அவர்கள் அறிந்திடக் கனவில் உணர்த்துதலும், பெருமானிடத்து அன்பு பூண்டிருக்கும் திருத்தொண் டர்களும் அப்பணியைத் தலைமேற் கொண்டு எழுவார்களாய்,

விளக்கவுரை

****

மண்ணிறைந்த பெருஞ்செல்வத்
திருவொற்றி யூர்மன்னும்
எண்ணிறைந்த திருத்தொண்டர்
எழிற்பதியோ ருடனீண்டி
உண்ணிறைந்த மகிழ்ச்சியுடன்
உம்பர்பூ மழைபொழியக்
கண்ணிறைந்த பெருஞ்சிறப்பிற்
கலியாணஞ் செய்தளித்தார். #3163

திருவருள் நிறைந்த திருவொற்றியூரில் இருக்கும் அத்திருத்தொண்டர்களுடன் அழகிய அப்பதியில் உள்ளோரும் சேர்ந்து, மகிழ்ச்சியுடன் தேவர்கள் பூமழை பொழிந்திட, காண்பார்தம் கண்கள் களிகொள்ளப் பெருஞ்சிறப்புடன் கலியாணம் செய்து கொடுத்தார்கள்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

பண்டுநிகழ் பான்மையினால்
பசுபதிதன் னருளாலே
வண்டமர்பூங் குழலாரை
மணம்புணர்ந்த வன்தொண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப்
புறங்கண்ட தூநலத்தைக்

கண்டுகேட் டுண்டுயிர்த்துற்
றமர்ந்திருந்தார் காதலினால். **#3164**
முன் திருக்கயிலாய மலையில் நிகழ்ந்த நியதியால், உயிர்கட்கெல்லாம் தலைவனான சிவபெருமானின் அருளாலே, வண்டுகள் மொய்த்திடும் கூந்தலையுடைய சங்கிலியாரைத் திருமணம் செய்த நம்பிகள், தாமரை மலர்மேல் இருக்கும் திருமகளின் வனப் பையும் புறங்கண்ட அத்துணை அழகுடைய தூய நலமுடைய சங்கிலி யாரைக் கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் விருப்பம் மீதூரத் துய்த்திருந்தார்.

விளக்கவுரை

`நற்பெரும் பான்மை கூட்ட', `பண்டைவிதி கடைக் கூட்ட' என முன்னர்ப் பரவையார் திறத்துக் கூறியவாறே இங்கும் கூறப்பட்டது. `கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள' *(குறள், 1101)* எனும் திருக்குறளை இப்பாடலில் முகந்தெடுத்து மொழிந்துள்ளார் ஆசிரியர். இவ்வாறே, கழறிற்றறிவாரும் தம் திருக்கயிலாய ஞானவுலாவில் இவ்வருங் குறளை முகந்தெடுத்துள்ளமையும் அறியத்தக்கதாகும். உலகியல் வழித்தாய் இங்ஙனம் கூறினும், சுந்தரர் தம் அருளியல் வாழ்வில் பன்னாளும் பயில் யோகமாய் அமைந்தவாற்றை ஆசிரியர் முன்னர்க் *(பா.327)* கூறியவாறு ஈண்டும் உணர்ந்து மகிழல் வேண்டும்.

யாழின்மொழி எழின்முறுவல்
இருகுழைமேற் கடைபிறழும்
மாழைவிழி வனமுலையார்
மணியல்குல் துறைபடிந்து
வீழுமவர்க் கிடைதோன்றி
மிகும்புலவிப் புணர்ச்சிக்கண்
ஊழியா மொருகணந்தான்
அவ்வூழி யொருகணமாம். **#3165**
யாழினும் இனிய மொழியும் , அழகிய முறுவலும், இரு குழைக் காதின்பாலாகப் பார்வை புரளும் மாவடு போன்ற கண்களும், பருத்த மார்பகங்களும் உடைய பெறுதற்கரிய சங்கிலி யாரை, அவருடைய அல்குலாகிய பொய்கையில் படிந்து துய்த்து வரும் நம்பிகளுக்கும், சங்கிலியாருக்கும் இடைப்பட்ட புலத்தலும் புணர்தலும் நிகழும் பொழுதெல்லாம், அக்காலங்கள் முறையே ஒரு கணப்பொழுது ஊழியாகவும், ஊழிதானும் ஒரு கணமாகவும் நீட்டித் தும் சுருங்கியும் நிற்கும்.

விளக்கவுரை

`புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ' *(குறள், 1323)*, `ஊடுக மன்னோ ஒளியிழை' *(குறள்,1329)*, `ஊடுதல் காமத்திற்கு இன்பம்' *(குறள்,1330)* என வருவனவற்றால் ஊடலின் இன்றியமை யாமை விளங்கும். அப்புலவி தானும் உப்பமைந்தற்றாய் இருத்தல் வேண்டுமேயன்றிச் சிறிது மிகினும் சுவை குன்றுமாதலின் அக்காலம் கணப்பொழுதாயினும், இவர்களுக்கு ஊழியாகுமாம். தாம் வீழ்வார் மென்தோளைத் துய்த்தலினும் தாமரைக் கண்ணனானுலகும் வேண் டப் படுவதொன்று அன்றாதலின் அக்காலந்தானும் மிகப் பெரிதாயி னும் இவர்களுக்கு ஒரு கணமாகும். அகப்பொருட் சுவையைத் திருக்குறள் வழியாகக் குழைத்து இழைத்திடும் ஆசிரியர் சேக்கிழாரின் கவிநலன் அறிந்து இன்புறற்குரியதாகும்.

இந்நிலையில் பேரின்பம்
இனிதமர்வார் இறையுறையும்
மன்னுபுகழ் ஒற்றியூர்
அதனில்மகிழ் சிறப்பினால்
சென்னிமதி புனைவார்தந்
திருப்பாதந் தொழுதிருந்தார்
முன்னியகா லங்கள்பல
முறைமையினால் வந்தகல. **#3166**

இந்நிலையில் பேரின்பத் துறையில் சங்கிலியா ருடன் இனிதமர்ந்தருளும் நம்பிகள், பெருமான் உறைந்தருளும் புகழ் விளங்கும் திருவொற்றியூர்தனில் மகிழ்ந்து உறைகின்ற சிறப்பினால் முறைமையாக வரும் காலங்கள் பலவும் தத்தம் எல்லையில் வந்து கழிந்திடத் திருச்சடையின்மீது இளம்பிறையை அணிந்து விளங்கும் பெருமானின் திருவடிகளைத் தொழுது அங்கிருந்தார்.

விளக்கவுரை

****

பொங்குதமிழ்ப் பொதியமலைப்
பிறந்துபூஞ் சந்தனத்தின்
கொங்கணைந்து குளிர்சாரல்
இடைவளர்ந்த கொழுந்தென்றல்
அங்கணையத் திருவாரூர்
அணிவீதி அழகரவர்
மங்கலநாள் வசந்தமெதிர்
கொண்டருளும் வகைநினைந்தார். **#3167**

தமிழ் மேன்மேலும் தழைத்து வளருகின்ற பொதிய மலையில் தோன்றி, பூக்கள் மலரும் சந்தன மரங்களின் அடுக்கலில் அணைந்து, குளிர்ந்த

மரச்சாரலிடையாக வளர்ந்து வரும் மிருதுவாய தென்றல் காற்று அங்கு வீசிடவும், அக்காற்றின் நலம் கண்ட நம்பிகள், திருவாரூரின் அழகிய வீதிகளில் வசந்த விழாப்பெருநாள்களில் எழுந் தருளி உலாப்போகும் பெருமான் எதிராக வசந்தக் காற்று எதிர் கொண்டு வணங்கும் தன்மையை நினைந்தருளினார்.

விளக்கவுரை

திருவொற்றியூரில் வீசிய கடற் காற்று, திருவாரூர்ப் பெருமானின் முன்னாக வீசும் வசந்த காலக் காற்றை நினைவு கூர வைத்தது.

வெண்மதியின் கொழுந்தணிந்த
வீதிவிடங் கப்பெருமான்
ஒண்ணுதலார் புடைபரந்த
ஓலக்க மதனிடையே
பண்ணமரும் மொழிப்பரவை
யார்பாட லாடல்தனைக்
கண்ணுறமுன் கண்டுகேட்
டார்போலக் கருதினார். **#3168**

(அதுபொழுது) நம்பிகள், வெண்பிறையின் கொழுந்து அணிந்த வீதிவிடங்கப் பெருமானது, அழகிய நெற்றியை யுடைய பெண்கள் சூழ்ந்திடக் கொலு வீற்றிருக்கும் திருமண்டபத்துப் பண் பொருந்தும் மொழியையுடைய பரவையாரது பாடல் ஆடல் ஆகிய இவைகளைத் தம் கண்முன்னாகக் கண்டு கேட்கப்பெற்றாற் போலவே கருதினார்.

விளக்கவுரை

ஆரூர்ப்பெருமானின் திருமுன்னாக வரும் காற்று நினைவு வரவே அதனைத் தொடர்ந்து, அவர் அமர்ந்திருக்கும் திரு வோலக்கத்தினில் பரவையார் ஆடும் ஆடலும் பாடலும் காணும் காட்சியும் நினைவிற்கு வந்தது. இம்மூன்று பாடல்களானும் நம்பிகள் திருவொற்றியூரில் இருந்தருளிய காலமும், இதுபொழுது நிகழ்ந்து வரும் காலமும் உணர முடிகின்றது. முன் *(பா.269)* முன்னிய காலங்கள் பலமுறைமையினால் வந்தகல எனப் பன்மைப்படக் கூறவே, இரண்டு மூன்று பருவ காலங்களாவது நம்பிகள் சங்கிலியா ரோடு ஒற்றியூரில் உறைந்திருக்கவேண்டும் எனக் கருதலாம். பின் னர்ப் பங்குனித் திருநாளுக்குப் பண்டுபோல் வருவாராகி எனக் குறிப்பதால், இவர் இந்நினைவோடு சங்கிலியாரைப் பிரிந்து செல்லும் காலம் இளவேனிற் காலம் எனத் தெரிகிறது. இளவேனிற் காலத்துப் பிரியும் இவர் இதற்கு முந்திய காலங்கள் பல செல்ல இங்கிருந்தார் எனவே, கார் காலத்தில் சங்கிலியாரைத் திருமணம் செய்துகொண்டு இருக்கலாம் எனக் கருத

இடனுண்டு. எனவே கார் காலத்தில் சங்கிலி யாரை மணந்த நம்பிகள் கூதிர், முன்பனி, பின்பனி ஆகிய காலங்களில் அப்பெருமாட்டியாரோடு உடனுறைந்து, பின் வேனிற் காலமாகிய பங்குனி மாதத்தில் பிரிந்து சென்றுள்ளார் என்பது விளங்குகிறது. சிவக்கவிமணியார் உரையும் காண்க.

பூங்கோயில் அமர்ந்தாரைப்
புற்றிடங்கொண் டிருந்தாரை
நீங்காத காதலினால்
நினைந்தாரை நினைவாரைப்
பாங்காகத் தாமுன்பு
பணியவரும் பயனுணர்வார்
ஈங்குநான் மறந்தேனென்
றேசறவால் மிகவழிவார். **#3169**

பூங்கோயிலில் வீற்றிருக்கும் புற்றிடங் கொண்ட பெருமானாரை, நீங்காத காதலினால் தம்மை நினைத்திருப்பவரை தாமும் நினைந்து அருளுவாரைத் தாம் முன்னைய நாள்களில் பணிய, அதனால் வருகின்ற இன்பப் பயனை உணர்வாராகிய அவர், இங்கே நான் மறந்தேனே என எண்ணிப் பதைப்பால் மிகவும் மனம் அயர் வாராய்,

விளக்கவுரை

தம்மை நினைத்திருப்பவர்களை, இறைவர் தாமும் நினைந்தருளுவார். `தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்ப போற்றி' எனவரும் திருவாக்கும் காண்க.

மின்னொளிர்செஞ் சடையானை
வேதமுத லானானை
மன்னுபுகழ்த் திருவாரூர்
மகிழ்ந்தானை மிகநினைந்து
பன்னியசொற் பத்திமையும்
அடிமையையுங் கைவிடுவான்
என்னுமிசைத் திருப்பதிகம்
எடுத்தியம்பி யிரங்கினார். **#3170**

மின்போல் ஒளிரும் செஞ்சடையையுடைய பெருமானை, மறைகட்கெல்லாம் முதற்பொருளாயினானை, சீர் மன்னிய புகழுடைய திருவாரூரில் மகிழ்ந்திருப்பவனை, மிகவும் நீள நினைந்து, பலபடப் புகழ்ந்த சொற்களாலாய `பத்திமையும் அடிமை யையும் கைவிடுவான்' எனத் தொடங்கும் இசையுடைய பதிகத்தால் பாடி, மிகவும் இரங்கினார்.

விளக்கவுரை

`பத்திமையும் அடிமையையும் கைவிடுவான்' எனத் தொடங்கும் பதிகம், பழம்பஞ்சுரப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.51).*

பின்னொருநாள் திருவாரூர்
தனைப்பெருக நினைந்தருளி
உன்னஇனி யார்கோயில்
புகுந்திறைஞ்சி ஒற்றிநகர்
தன்னையக லப்புக்கார்
தாஞ்செய்த சபதத்தால்
முன்னடிகள் தோன்றாது
கண்மறைய மூர்ச்சித்தார். **#3171**

பின்பொரு நாள், திருவாரூரினை மிகவும் நினைந் தருளி, நினைக்க இனிமைதரும் பெருமானாரது திருவொற்றியூர்க் கோயிலுக்குள் சென்று பணிந்து, தாம் திருவாரூருக்குப் போக ஒருப் பட்டுத் திருவொற்றியூர் நகரினின்றும் அகன்றிடத் தாம் முன்செய்த சூளுரையால், தம் அடி பெயர்ந்திடும் நிலையறியாது கண் ஒளி மறைய மயங்கினார்.

விளக்கவுரை

****

செய்வதனை யறியாது
திகைத்தருளி நெடிதுயிர்ப்பார்
மைவிரவு கண்ணார்பால்
சூளுறவு மறுத்ததனால்
இவ்வினைவந் தெய்தியதாம்
எனநினைந்தெம் பெருமானை
வெவ்வியஇத் துயர்நீங்கப்
பாடுவேன் எனநினைந்து. **#3172**

மேற்செய்வதறியாது திகைத்தருளி, நெடிது பெருமூச்செறிபவர், மைபூசிய கண்களையுடைய சங்கிலியார்பாலா கச் செய்த சூளுரையை மறுத்தலால், இவ்விளைவு நேர்ந்தது என எண்ணி எம் பெருமானைக் கொடிய இத்துயர் நீங்கிடப் பாடுவேன் என நினைந்து,

விளக்கவுரை

****

அழுக்கு மெய்கொடென் றெடுத்தசொற் பதிகம்
ஆதி நீள்புரி யண்ணலை யோதி
வழுத்து நெஞ்சொடு தாழ்ந்துநின் றுரைப்பார்
மாதொர் பாகனார் மலர்ப்பதம் உன்னி
இழுக்கு நீக்கிட வேண்டும்என் றிரந்தே

எய்து வெந்துயர்க் கையற வினுக்கும்
பழிக்கும் வெள்கிநல் லிசைகொடு பரவிப்
பணிந்து சாலவும் பலபல நினைவார். **#3173**

`அழுக்கு மெய் கொடு' எனத் தொடங்கும் செஞ் சொல் திருப்பதிகத்தை, ஆதியாய திருவொற்றியூர் இறைவனாரைப் போற்றி வணங்கும் நெஞ்சோடு தாழ்ந்து, அங்கு நின்று பாடும் அவர், உமையொரு கூறராய பெருமானாரின் மலரனைய திருவடிகளை நினைந்து, தமக்கு நேர்ந்த இழுக்கு நீங்கிட வேண்டும் என்று இரந்து துயர் தரும் செயலற்ற நிலைக்கும் தமக்குக் கண்பார்வை இழந்ததால் வந்த பழிக்கும் நாணி, நல்ல இசை கொண்டு எம்பெருமானைப் போற்றிப் பணிந்து பல பல நினைவாராய்,

விளக்கவுரை

`அழுக்கு மெய் கொடு' எனத் தொடங்கும் பதிகம் தக்கே சிப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.54).*

அங்கு நாதர்செய் அருளது வாக
அங்கை கூப்பியா ரூர்தொழ நினைந்தே
பொங்கு காதன்மீ ளாநிலை மையினால்
போது வார்வழி காட்டமுன் போந்து
திங்கள் வேணியார் திருமுல்லை வாயில்
சென்றி றைஞ்சிநீ டிய திருப் பதிகம்
சங்கிலிக் காகஎன் கண்களை மறைத்தீர்
என்று சாற்றிய தன்மையிற் பாடி. **#3174**

அங்குத் திருவொற்றியூர் இறைவர் செய்த அருள் அதுவேயாகத் தம் அழகிய கைகளைக் கூப்பி வணங்கித் திருவாரூர்ச் சென்று தொழ விரும்பிப் பொங்கும் காதலால், வழிக்கொள்ளும் அவர், முன்போவார் வழிகாட்டிடச் சென்று, இளம்பிறையைச் சடையிலுடைய பெருமானின் வடதிருமுல்லைவாயில் என்னும் திருப்பதிக்குச் சென்று வணங்கி, பெருமை மிகுந்த திருப்பதிகம் பாடு வார், `சங்கிலிக்காக என் கண்களை மறைத்தீர்' எனப் பாடியருளினார்.

விளக்கவுரை

வடதிருமுல்லைவாயிலில் அருளிய `திருவும் மெய்ப் பொருளும்' *(தி.7 ப.69)* எனத் தொடங்கும் தக்கேசிப் பண்ணில் அமைந்த பதிகத்தின் இரண்டாவது பாடலில் வரும் `சங்கிலிக்கா என் கண் கொண்ட பண்ப' எனவருவதை ஆசிரியர் இங்குச் சொல்கிறார்.

தொண்டை மானுக்கன் றருள்கொடுத் தருளுந்
தொல்லை வண்புகழ் முல்லை நாயகரைக்

கொண்ட வெந்துயர் களைகெனப் பரவிக்
குறித்த காதலின் நெறிக்கொள வருவார்
வண்டுலா மலர்ச் சோலைகள் சூழ்ந்து
மாட மாளிகை நீடுவெண் பாக்கம்
கண்ட தொண்டர்கள் எதிர்கொள வணங்கி
காயும்நா கத்தர் கோயிலை யடைந்தார். **#3175**

தொண்டைமான் என்னும் அரசனுக்கு முன்னைய நாளில் அருள் புரிந்திடும், வடதிருமுல்லைவாயிலில் அமர்ந்தருளும் தலைவனை நினைந்து, `அடியனேன் கொண்ட கொடும் துயர் களைந் திடுவாய்' எனப் போற்றித் திருவாரூர் மேல் குறித்த காதலால் வழிக் கொண்டு வருபவர், வண்டுகள் மொய்த்திடும் சோலைகள் சூழ்ந்து, மாட மாளிகைகள் நிரல்பட அமைந்து விளங்கிடும் திருவெண்பாக்கத்தில் உள்ள அடியவர்கள் நகர எல்லையில் எதிர்கொண்டிடத் தாம் அவரை வணங்கிக் கொலை புரியும் யானையை உரித்த சிவபெருமானது அக்கோயிலைச் சென்றடைந்தார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

அணைந்த தொண்டர்க ளுடன்வல மாக
அங்கண் நாயகர் கோயில்முன் னெய்திக்
குணங்க ளேத்தியே பரவியஞ் சலியால்
குவித்த கைதலை மேற்கொண்டு நின்று
வணங்கி நீர்மகிழ் கோயிலு ளீரே
என்ற வன்தொண்டர்க் கூன்றுகோ லருளி
இணங்கி லாமொழி யால்உ ளோம் போகீர்
என்றி யம்பினார் ஏதிலார் போல. **#3176**

தம்முடன் வந்த தொண்டர்களுடன் வலமாக வந்து, திருமுன்பு சென்று, பெருமானது குணங்களைப் போற்றி வணங்கி, அஞ்சலியால் கூப்பிய கரங்களைத் தலைமேற் கொண்டு வணங்கிக் கண் தெரியாத கையறவால், `எம்பிரானே! நீர் கோயிலில் உள்ளீரோ?' என்று கேட்ட நம்பிகளுக்கு, எம்பிரான் ஓர் ஊன்றுகோல் கொடுத் தருளி, இதமுடன் எடுத்துச் சொல்லாத ஒரு வார்த்தையாக `உளோம் போகீர்' என்று மொழிந்தார்; தாம் ஒரு தொடர்பிலார் போல.

விளக்கவுரை

குழைவிரவு வடிகாதா என்றலும், கோயிலில் உள் ளாயோ என்றதும் கடுஞ்சொற்களேயாகும். எனினும் அவற்றை அவர்தம் வருத்த மிகுதியால் கூற, பெருமானும் `உளோம்' என்ற அளவில் கூட நில்லாது

`போகீர்' என்றும் கூறிப் போகச் செய்தமை நம்பிகளுக்குப் பெருவருத்தத்தைத் தந்துள்ளது. இதனைப் பாடல் தொறும் கூறுவதோடமையாது, *9*ஆவது பாடலில், `ஒன்னலரைக் கண்டார் போல்' என்று, அருளியது அவர்தம் வருத்த மிகுதியை மேலும் காட்டுவதாகும். *10*ஆவது பாடலில் `ஊன்றுவதோர் கோல் அருளி' என்றது அச்செயல்தானும் தமக்கு ஓராற்றான் ஆறுதல் தந்தமையைக் குறித்தருளியதாகும். இவ்வகையில் இப்பாடற்குறிப்பு கள், ஆசிரியர் தம் வரலாற்று அமைவிற்கு எடுத்துக்காட்டுகளா கின்றன.

அணைந்த தொண்டர்க ளுடன்வல மாக
அங்கண் நாயகர் கோயில்முன் னெய்திக்
குணங்க ளேத்தியே பரவியஞ் சலியால்
குவித்த கைதலை மேற்கொண்டு நின்று
வணங்கி நீர்மகிழ் கோயிலு ளீரே
என்ற வன்தொண்டர்க் கூன்றுகோ லருளி
இணங்கி லாமொழி யால்உளோம் போகீர்
என்றி யம்பினார் ஏதிலார் போல. **#3177**

குழைவிரவு வடிகாதா என்றலும், கோயிலில் உள் ளாயோ என்றதும் கடுஞ்சொற்களேயாகும். எனினும் அவற்றை அவர்தம் வருத்த மிகுதியால் கூற, பெருமானும் `உளோம்' என்ற அளவில் கூட நில்லாது

`போகீர்' என்றும் கூறிப் போகச் செய்தமை நம்பிகளுக்குப் பெருவருத்தத்தைத் தந்துள்ளது. இதனைப் பாடல் தொறும் கூறுவதோடமையாது, 9ஆவது பாடலில், `ஒன்னலரைக் கண்டார் போல்' என்று, அருளியது அவர்தம் வருத்த மிகுதியை மேலும் காட்டுவதாகும். 10ஆவது பாடலில் `ஊன்றுவதோர் கோல் அருளி' என்றது அச்செயல்தானும் தமக்கு ஓராற்றான் ஆறுதல் தந்தமையைக் குறித்தருளியதாகும். இவ்வகையில் இப்பாடற்குறிப்பு கள், ஆசிரியர் தம் வரலாற்று அமைவிற்கு எடுத்துக்காட்டுகளா கின்றன.

விளக்கவுரை

`பிழையுளன பொறுத்திடுவர்' எனத் தொடங்கும் பதிகம் சீகாமரப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.89).*

முன்னின்று முறைப்பாடு
போல்மொழிந்த மொழிமாலைப்
பன்னும்இசைத் திருப்பதிகம்
பாடியபின் பற்றாய
என்னுடைய பிரானருள்இங்
கித்தனைகொ லாமென்று
மன்னுபெருந் தொண்டருடன்

வணங்கியே வழிக்கொள்வார். **#3178**
பெருமான் கோயிலின் திருமுன்பு நின்று, தமது முறைப்பாடு உரைப்பார்போலப் பாடிய தமிழ் மாலையாய இசை யுடைய திருப்பதிகத்தைப் பாடிய பின்பு, `எனக்குப் பற்றுக்கோடாய பெருமானது அருள் `இவ்வளவினதே போலும்' என மொழிந்து, தம்முடன் வந்த பெருமைமிக்க அடியவர்களுடன் வணங்கி, அப்பால் திருவாரூர் நோக்கி வழிக்கொள்வாராய்,

விளக்கவுரை

****

அங்கணர்தம் பதியதனை
அகன்றுபோய் அன்பருடன்
பங்கயப்பூந் தடம்பணைசூழ்
பழையனூர் உழையெய்தித்
தங்குவார் அம்மைதிருத்
தலையாலே வலங்கொள்ளும்
திங்கண்முடி யாராடுந்
திருவாலங் காட்டினயல். **#3179**

நெற்றிக்கண்ணை உடைய இறைவரின் திருப்பதி யினின்றும் நீங்கிப்போய், அன்பர்களுடன் தாமரை மலர்கள் நிறைந்த குளங்கள் புறமே சூழ இருக்கும் வயல்களை உடைய பழையனூர் வந்து சேர்ந்து, காரைக்கால் அம்மையார் தலையாலே வலங்கொள நின்ற, இளம்பிறையை முடியில் அணிந்த பெருமான் திருக்கூத்தியற்றி வரும் திருவாலங்காடு என்னும் பதியின் அயலாக,

விளக்கவுரை

நம்பிகள் திருவாலங்காட்டின் உட்செல்லாது அயலே நின்று, இறைவரின் திருக்கோயிலை நோக்கியவாறே தொழுதற்குக் காரணம், அம்மையார் அக்கோயிலை வலங்கொண்டும் வணங்கியும் இருந்தருளும் காரணத்தாலாம். ஆளுடைய பிள்ளையார் இத்திருப்பதிக்குச் சென்றபொழுதும் இந்நியமமே கொண்டு வழிபட்டமையும் நினைவுகூரத் தக்கதாம்.

முன்னின்று தொழுதேத்தி
முத்தாஎன் றெடுத்தருளிப்
பன்னும்இசைத் திருப்பதிகம்
பாடிமகிழ்ந் தேத்துவார்
அந்நின்று வணங்கிப்போய்த்
திருவூறல் அமர்ந்திறைஞ்சிக்

கன்னிமதில் மணிமாடக்
காஞ்சிமா நகரணைந்தார். **#3180**
முன்பாக நின்று தொழுது போற்றி, `முத்தா முத்தி, என்று தொடங்கும் இசையமைந்த திருப்பதிகத்தைப் பாடி மகிழ்ந்து, அவ்விடத்தினின்றும் நீங்கிச் சென்று, திருவூறல் என்னும் பதியில் தங்கி, வணங்கி, அப்பால் சென்று, அழியாத மதில் சூழ்ந்த அழகிய மாடங்களையுடைய திருக்காஞ்சி மாநகரினை அடைந்தார்.

விளக்கவுரை

`முத்தா முத்தி, என்று தொடங்கும் பதிகம், பழம்பஞ்சுரப் பண்ணில் அமைந்ததாகும் (தி.7 ப.52). இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

தேனிலவு பொழிற்கச்சித்
திருக்காமக் கோட்டத்தில்
ஊனில்வளர் உயிர்க்கெல்லாம்
ஒழியாத கருணையினால்
ஆனதிரு வறம்புரக்கும்
அம்மைதிருக் கோயிலின்முன்
வானில்வளர் திருவாயில்
வணங்கினார் வன்தொண்டர். **#3181**
தேன் உண்ணும் வண்டுகள் உலவிடும் சோலை களை உடைய காஞ்சி மாநகரில், திருக்காமக்கோட்டத்தில், உடம்பு டைய உயிர்க்கெல்லாம் ஒழியாத கருணையினால் ஆன அறத்தினை விரும்பிப் புரிந்தருளும் பெருமாட்டியின் திருக்கோயிலின் முன்பாக, வான் நோக்கி உயரும் திருவாயிலினை வணங்கினார் நம்பிகள்.

விளக்கவுரை

****

தொழுது விழுந் தெழுந்தருளாற்
துதித்துப்போய்த் தொல்லுலகம்
முழுதும்அளித் தழித்தாக்கும்
முதல்வர்திரு வேகம்பம்
பழுதில்அடி யார்முன்பு
புகப்புக்குப் பணிகின்றார்
இழுதையேன் திருமுன்பே
என்மொழிவேன் என்றிறைஞ்சி. **#3182**
தொழுது விழுந்து, எழுந்து, அருளால் போற்றி, அப்பால் சென்று, முன்னான இவ்வுலகம் முழுதும் காத்தும் படைத்தும் அழித்தும் விளையாடும் முதல்வருடைய திருவேகம்பம் என்னும் திருப்பதியில்,

பழுதிலாத அடியவர்கள் முன் செல்லத் தாம் பின்னாகப் புகுந்து,
பெருமானைப் பணிகின்றவராகிப் பேயனாகிய யான், பெரு மானின்
திருமுன் நின்று யாதென்று மொழிவேன் என மொழிந்து,
வணங்கியருளி,

விளக்கவுரை

****

விண்ணாள்வார் அமுதுண்ண
மிக்கபெரு விடமுண்ட
கண்ணாளா கச்சியே
கம்பனே கடையானேன்
எண்ணாத பிழைபொறுத்திங்
கியான்காண எழிற்பவள
வண்ணாகண் ணளித்தருளாய்
எனவீழ்ந்து வணங்கினார். #3183

விண்ணுலகத்தை ஆளுகின்ற தேவர்கள் அமுது உண்டு இறவாதிருப்ப,
மிக்க பெரு நஞ்சுண்ட கருணையாளனே! கச்சி ஏகம்பம் உறைவானே!
கடைப்பட்ட நாயேன் நினைந்து செய்யாத பிழையைப் பொறுத்து இங்கு
யான் காண, எழில் திகழும் பவள வண்ணா! கண் தந்தருள்வாய்! என
வேண்டி நிலத்தில் வீழ்ந்து வணங் கினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பங்கயச்செங் கைத்தளிரால்
பனிமலர்கொண் டருச்சித்துச்
செங்கயற்கண் மலைவல்லி
பணிந்தசே வடிநினைந்து
பொங்கியஅன் பொடுபரவிப்
போற்றியஆ ரூரருக்கு
மங்கைதழு வக்குழைந்தார்
மறைந்தஇடக் கண்கொடுத்தார். #3184

தாமரைமலர்போலும் செங்கைத் தளிரால் எடுத்து குளிர்ந்த
மலர்கொண்டு போற்றி செய்து, சிவந்த கயல் மீனை ஒத்த கண்ணுடைய
மலைக்கொடியாம் உமையம்மையார் பணிந்த சேவடி களை மிகவும்
நினைந்து, பொங்கிடும் அன்புடன் வணங்கிப் போற்றி டும்
நம்பிகளுக்கு, எம்பிராட்டி தழுவிடக் குழைந்து காட்டிய இறைவர்
மறைந்த கண்களில், இடக்கண் பார்வையைக் கொடுத்தருளினார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகம் கிடைத்திலது. பிராட்டி தழுவக் குழைந்த இடத்துப் பெற்ற கண்ணாதலின், இடக்கண் கொடுத் தார் என அருளினார் போலும். கண் மறைந்த இடம் திருவொற்றியூரும், இடக் கண் பெற்ற இடம் காஞ்சிபுரமும், வலக் கண் பெற்ற இடம் ஆரூருமாகும். இம்மூன்றும் நிலத் திருப்பதிகளாதலின், *(பிருதிவித் தலங்கள்)* யாது யாண்டு ஒடுங்கியது, அஃது ஆண்டுநின்றே மீள உளதாம் என்னும் நியதியை அறிவிப்பதாக அமைந்துளது என நயம் காண்பர் சிவக்கவிமணியார்.

ஞாலந்தான் இடந்தவனும்
நளிர்விசும்பு கடந்தவனும்
மூலந்தான் அறிவரியார்
கண்ணளித்து முலைச்சுவட்டுக்
கோலந்தான் காட்டுதலும்
குறுகிவிழுந் தெழுந்துகளித்
தாலந்தா னுகந்தவன் என்
றெடுத்தாடிப் பாடினார். **#3185**

இந்நிலவுலகைக் கீண்டு தேடிய மாலும், அழகிய வானத்தைக் கடந்து சென்ற அயனும் முறையே திருவடியையும், முடியையும் காண இயலாத சிவபெருமான், இடக் கண் கொடுத்து, எம்பிராட்டியின் முலைச் சுவடு அணிந்த கோலத்தைக் காட்டலும், பெருமானை அணுக விழுந்து எழுந்து மனம் மகிழ்ந்து, `ஆலந்தான் உகந்தவன்' என்று தொடங்கிப் பதிகம் பாடி, ஆடிப் பரவினார்.

விளக்கவுரை

`ஆலந்தான் உகந்தவன்' என்று தொடங்கும் பதிகம் தக்கேசிப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.61)*. இப்பதிகப் பாடல் தொறும் அம்மையார் வழிபடப் பெற்ற அரிய புண்ணியச் செயலையும், `காணக் கண் அடியேன் பெற்றவாறே' என்ற அருளிப்பாட்டையும் நம்பிகள் அருளுகின்றார். இக்குறிப்புகள் வரலாற்றிற்கு அரணாவதுடன், இடக் கண் பெற்றமையை உய்த்துணர்தற்கும் ஏதுவாகின்றன.

பாடிமிகப் பரவசமாய்ப்
பணிவார்க்குப் பாவையுடன்
நீடியகோ லங்காட்ட
நிறைந்தவிருப் புடனிறைஞ்சிச்
சூடியஅஞ் சலியினராய்த்
தொழுதுபுறம் போந்தன்பு
கூடியமெய்த் தொண்டருடன்
கும்பிட்டங் கினிதமர்வார். **#3186**

திருப்பதிகம் பாடித் தம்வயம் இழந்து பணிகின்ற நம்பிகட்கு, உமையம்மையாருடன் பெரிதும் பொருந்தியிருக்கும் திருக்கோலம் காண்பித்திடத் தாம் கண்டு, நிறைகின்ற விருப்பத்துடன் பணிந்து உச்சியில் கூப்பிய கையினராய்த் தொழுது வெளியே வந்து, அன்பு பொருந்திய மெய்யடியாருடன் கும்பிட்டுக் காஞ்சிப் பதியில் இனிதே தங்கியிருப்பவர்,

விளக்கவுரை
****

மாமலையாள் முலைச்சுவடும்
வளைத்தழும்பும் அணிந்தமதிப்
பூமலிவார் சடையாரைப்
போற்றியரு ளதுவாகத்
தேமலர்வார் பொழிற்காஞ்சித்
திருநகரங் கடந்தகல்வார்
பாமலர்மா லைப்பதிகம்
திருவாரூர் மேற்பரவி. **#3187**

உயர்ந்த இமயமலையில் தோன்றிய உமை அம் மையாரின் முலைச்சுவடும் வளையல்களின் தழும்பும் அணிந்த, இளம்பிறை சூடிய, கொன்றைப் பூவணிந்த சடையையுடைய பெருமா னைப் போற்றி செய்து, தமக்கு இடக் கண் பெற்ற அருள் அதுவேயாகக் கொண்டு தேன் பொருந்திய மலர்கள் பெருகிய சோலைகளையுடைய காஞ்சித் திருநகரத்தைக் கடந்து, மேற்செல்லும் நம்பிகள், பாடல்கள் மலரும் திருப்பதிகத்தைத் திருவாரூர் மேலாகப் பாடிப் போற்றி செய்து,

விளக்கவுரை
****

அந்தியும்நண் பகலும்என
எடுத்தார்வத் துடனசையால்
எந்தைபிரான் திருவாரூர்
என்றுகொல்எய் துவதென்று
சந்தஇசை பாடிப்போய்த்
தாங்கரிய ஆதரவு
வந்தணைய அன்பருடன்
மகிழ்ந்துவழிக் கொள்கின்றார். **#3188**

`அந்தியும் நண்பகலும்' எனப் பாட எடுத்து, உள் ளத்துத் திருவாரூருக்குச் செல்ல வேண்டும் என்னும் ஆர்வம் மிக, அப் பெரும்பதிக்கு என்று சேருவது எனும் குறிப்புடைய சந்தம் உடைய இசை யினைப் பாடி

அன்பர்களுடன் மகிழ்ந்து வழிக்கொள்ளும் ஆரூரர்,

விளக்கவுரை

`அந்தியும் நண்பகலும்' எனத் தொடங்கும் பதிகம் புறநீர் மைப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப. 83)*. பதிகப் பாடல்தொறும் `திருவாரூர்புக்கு .... என்று கொல் எய்துவதோ' என நிறைவுறுவதை உளங்கொண்டு ஆசிரியர் இப்பாடலையும் அக்குறிப்பையும் எடுத்து மொழிவாராயினர்.

மன்னுதிருப் பதிகள்தொறும்
வன்னியொடு கூவிளமும்
சென்னிமிசை வைத்துவந்தார்
கோயிலின்முன் சென்றிறைஞ்சிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப்
பரவியே போந்தணைந்தார்
அன்னமலி வயற்றடங்கள் சூழ்ந்ததிரு வாமாத்தூர். **#3189**

`அந்தியும் நண்பகலும்' எனத் தொடங்கும் பதிகம் புறநீர் மைப் பண்ணில் அமைந்ததாகும் (தி.7 ப. 83). பதிகப் பாடல்தொறும் `திருவாரூர்புக்கு .... என்று கொல் எய்துவதோ' என நிறைவுறுவதை உளங்கொண்டு ஆசிரியர் இப்பாடலையும் அக்குறிப்பையும் எடுத்து மொழிவாராயினர்.

விளக்கவுரை

மன்னு திருப்பதிகள்தொறும் என்பன காஞ்சியிலிருந்து ஆரூர் செல்வதற்கு இடைப்பட்ட பதிகளாம். அவை திருவில்வலம், திருக்குரங்கணில்முட்டம், புரிசை நாட்டுப் புரிசை, திருவெண்குன்றம், திருப்புறவார் பனங்காட்டூர், திண்டீச்சுரம் முதலாயினவாகலாம் என் பர் சிவக்கவிமணியார். பதிகங்கள் எவையும் கிடைத்தில. நம்பிகளின் பதிகங்களில் இவற்றில் சில வைப்புப் பதிகளாய் உள்ளன. இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

அங்கணரை ஆமாத்தூர்
அழகர்தமை யடிவணங்கித்
தங்கும்இசைத் திருப்பதிகம்
பாடிப்போய்த் தாரணிக்கு
மங்கலமாம் பெருந்தொண்டை
வளநாடு கடந்தணைந்தார்
செங்கண்வள வன்பிறந்த
சீர்நாடு நீர்நாடு. **#3190**

உயிர்களுக்கு அருள் வழங்கியருளும் அழகிய பெருமானாரைத் திருஆமாத்தூரில் எழுந்தருளியிருக்கும் அழகரை வணங்கி, இசை பொருந்திய திருப்பதிகம் பாடி, அப்பாற்சென்று, இந்நிலவுலகிற்கு

மங்கலமாக விளங்கும் தொண்டைநாடு என்னும் வளமுடைய நாட்டினைக் கடந்து, கோச்செங்கட் சோழன் தோன்றிய சீர்மைமிகுந்த நாடாய நீர்வளமுடைய சோழ நாட்டினை அடைந்தார்.

விளக்கவுரை

திருஆமாத்தூரில் அருளிய பதிகம் `காண்டனன்' *(தி.7 ப.45)* எனத் தொடங்கும் கொல்லிக் கௌவாணப் பண்ணில் அமைந்த பதிகம் ஆகும். இப்பதிகத்தில் வரும் நான்காவது பாடலும், ஒன்பதாவது பாட லும் நம்பிகள் யோகநெறியில் தலைநின்றவராதலை விளக்கி நிற்கின்றன. தொண்டை நாட்டின் சிறப்பினைத் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்து ஆசிரியர் விளங்கக் கூறியுள்ளார். அத்தகைய சிறப்புகளை உடைமையின் `மங்கலமாம் பெருந் தொண்டை வளநாடு' என்றார். செங்கண் வளவன் - கோச்செங்கட் சோழர்.

அந்நாட்டின் மருங்குதிரு வரத்துறையைச் சென்றெய்தி
மின்னாரும் படைமழுவார்
விரைமலர்த்தாள் பணிந்தெழுந்து
சொன்மாலை மலர்க்கல்வா
யகில்என்னுந் தொடைசாத்தி
மன்னார்வத் திருத்தொண்ட
ருடன்மகிழ்ந்து வைகினார். **#3191**

அச் சோழநாட்டின் அருகே விளங்கிய திருநெல் வாயில்அரத்துறை என்னும் கோயிலைச் சென்று சேர்ந்து, மின்ஒளி விளங் கும் மழுப்படையை உடைய பெருமானின் நறுமணமுடைய மலர னைய திருவடிகளைப் பணிந்து, எழுந்து, சொல்லாக மலரும் மாலை யாய, `கல்வாய் அகில்' எனத் தொடங்கும் பாமாலை பாடிச் சாத்தி, மேலான ஆர்வமுடைய திருத்தொண்டருடன் மகிழ்ந்திருந்தார்.

விளக்கவுரை

`கல்வாய் அகில்' எனத் தொடங்கும் இந்தளப் பண்ணில் அமைந்த *(தி.7 ப.3)* இப்பதிகத்தில் `எற்றே ஒரு கண்ணிலன்' என *3*ஆவது பாடலில் வரும் குறிப்பு, நம்பிகளின் வரலாற்றிற்கு அரணாகும்.

பரமர்திரு வரத்துறையைப்
பணிந்துபோய்ப் பலபதிகள்
விரவிமழ விடையுயர்த்தார்
விரைமலர்த்தாள் தொழுதேத்தி
உரவுநீர்த் தடம்பொன்னி
அடைந்தன்ப ருடனாடி
அரவணிந்தார் அமர்ந்ததிரு

வாவடுதண் டுறைஅணைந்தார். #3192
சிவபெருமானுடைய திருவரத்துறை என்னும் திருப்பதியைப் பணிந்து, அப்பால் சென்று, அவ்வவ் விடங்களிலு முள்ள பல திருப்பதிகளையடைந்து விடைக் கொடியையுடைய சிவபெருமானது மணமிக்க மலரனைய திருவடிகளைத் தொழுது போற்றி, பெருகிய நீருடைய குளிர்ந்த காவிரியாற்றைச் சேர்ந்து, அன்பருடன் நீராடி எழுந்து, அப்பால் சென்று, பாம்பணிந்த பெருமா னின் திருஆவடுதண்டுறையை அணைந்தார்.

விளக்கவுரை

****

அங்கணைவார் தமையடியார்
எதிர்கொள்ளப் புக்கருளிப்
பொங்குதிருக் கோயிலினைப்
புடைவலங்கொண்டு உள்ளணைந்து
கங்கைவாழ் சடையாய்ஓர்
கண்ணிலேன் எனக்கவல்வார்
இங்கெனக்கா றுறவென்னுந்
திருப்பதிக மெடுத்திசைத்தார். #3193

அத்திருப்பதியை அணைய வரும் நம்பிகளை, அடியவர்கள் வந்து எதிர்கொண்டிட, அவர்களுடன் புகுந்தருளி, பெருகிநிற்கும் அருளின் சிறப்புடைய திருக்கோயிலினை வலம் வந்து, உள்ளே சென்று, எம்பிரானை நினைந்து, `கங்கை வார் சடையாய் ஓர் கண்ணிலேன்' எனக் கவல்பவர், `இங்கு எனக்கு ஆர் உறவு' என்று சிறந்ததொரு திருப்பதிகத்தை எடுத்துப் பாடி அருளினார்.

விளக்கவுரை

`கங்கைவார் சடையாய்' *(தி.7 ப. 70)* எனும் முதற் குறிப்புடைய பதிகம் தக்கேசிப் பண்ணில் அமைந்ததாகும். பதிகப் பாடல் தொறும் `யார் எனக்கு உறவு அமரர்கள் ஏறே' எனவரும் நிறை வுத் தொடரை ஆசிரியர் முகந்தெடுத்து மொழிந்துள்ளார். திருக்கடைக் காப்பில் `சிங்கடியப்பன்' எனத் தம்மைக் குறித்திருப்பது, வரலாற் றிற்கு அரணாயுள்ளது. இப்பதிகத்து வரும் இரண்டாவது பாடலில், `கண்ணிலேன் உடம்பில் அடுநோயால் கருத்தழிந்து உனக்கே பொறையானேன்' எனவரும் முறைப்பாட்டால், கண்ணிழந்ததோடு உடம்பை வருத்தும் மேக நோயும் நம்பிகளுக்கு இருந்தமை விளங்குகின்றது.

திருப்பதிகங் கொடுபரவிப்
பணிந்துதிரு வருளாற்போய்

விருப்பினொடுந் திருத்துருத்தி
தனைமேவி விமலர்கழல்
அருத்தியினாற் புக்கிறைஞ்சி
யடியேன்மே லுற்றபிணி
வருத்தமெனை ஒழித்தருள
வேண்டுமென வணங்குவார். **#3194**

திருப்பதிகம் கொண்டு போற்றி செய்து, பணிந்து, திருவருளால் விருப்பத்துடன் திருத்துருத்தி என்னும் கோயிலை அடைந்து, பெருமானின் திருவடிகளை அன்பினால் வணங்கி, `எம்பிரானே! அடியேனுக்குற்ற மேக நோயினை நீக்கியருள வேண் டும்' என வணங்குவாராய்,

விளக்கவுரை

பிணி நீங்க வேண்டிப் பாடிய திருப்பதிகம் கிடைத்திலது.

பரவியே பணிந்தவர்க்குப்
பரமர் திரு வருள்புரிவார்
விரவியஇப் பிணியடையத்
தவிர்ப்பதற்கு வேறாக
வரமலர்வண் டறைதீர்த்த
வடகுளத்துக் குளிஎன்னக்
கரவில்திருத் தொண்டர்தாங்
கைதொழுது புறப்பட்டார். **#3195**

இவ்வாறு வேண்டிப் போற்றிய நம்பிகளுக்குப் பெருமான் திருவருள் புரிவாராய், `பொருந்திய இப்பிணி முழுவதும் தீர்தற்கு இக்கோயிலின் அருகேயுள்ள நல்ல மலர்களில் வண்டுகள் மொய்த்துப்பாட விளங்கும் புனித நீரையுடைய வடகுளத்தில் குளிப் பாயாக' என அருளிட, அதுகேட்ட வஞ்சனையற்ற நம்பிகள் கை தொழுது, புறப்பட்டுச் சென்றார்.

விளக்கவுரை

வடகுளம் - திருக்கோயிலின் வடபுறத்தே உள்ளது. இதன் கரையில், ஒற்றைக்கண்ணுடைய திருவடிவில் நம்பிகளின் திருவுரு அமைந்துள்ளது. தீது நீங்கக் கடல், ஆறு, குளம் முதலியவற்றில் ஆடுவது பண்டு தொட்டு வரும் மரபாகும். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மிக்கபுனல் தீர்த்தத்தின்
முன்னணைந்து வேதமெலாந்
தொக்கவடி வாயிருந்த
துருத்தியார் தமைத்தொழுது

புக்கதனில் மூழ்குதலும்
புதியபிணி யதுநீங்கி
அக்கணமே மணியொளிசேர்
திருமேனி யாயினார். **#3196**

பெருகிய நீருடைய வடகுளத்துப் புனித நீர் முன் அணுகி நான்மறைகளும் திரண்டதொரு வடிவென இருந்தருளும் திருத்துருத்திப் பெருமானாரைத் தொழுது, மூழ்குதலும், அக்கணமே அவர் உடம்பில் இருந்ததொரு புதிய நோய் நீங்க, முத்தின் ஒளியை யுடைய திருமேனியை உடையராயினார்.

விளக்கவுரை

புதிய பிணி என்றார், கண்ணிழந்த பிணியினின்றும் வேறாதல் பற்றி. எனவே உடல் பற்றிய பிணி; மேக நோய் என்பர்.

கண்டவர்கள் அதிசயிப்பக்
கரையேறி உடைபுனைந்து
மண்டுபெருங் காதலினால்
கோயிலினை வந்தடைந்து
தொண்டரெதிர் மின்னுமா
மேகம்எனுஞ் சொற்பதிகம்
எண்திசையு மறிந்துய்ய
ஏழிசையால் எடுத்திசைத்தார். **#3197**

கண்டவர்கள் வியந்திடக் கரையேறி, உடை அணிந்து, உள்ளத்துப் பெருகும் காதலினால் கோயிலை அடைந்து, அடியவர்கள் திருமுன்பாக நின்று, `மின்னுமா மேகம்' எனத் தொடங்கி எடுத்த திருப்பதிகத்தை எட்டுத் திக்கில் உள்ளாரும் இறைவனது அற்புதத்தை அறிந்து உய்ய, ஏழிசையும் பொருந்தப் பாடினார்.

விளக்கவுரை

`மின்னுமா மேகம்' எனத் தொடங்கும் பதிகம், காந்தாரப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.74)*. `என்னை நான் மறக்குமாறு எம்பெரு மானை என்னுடம்பு அடும்பிணி இடர்கெடுத்தானை' என இப்பதிக முதற்பாடலில் வரும் தொடர், இவ்வரலாற்றிற்கு அரணா கின்றது. எம் பெருமானை, இடர்கெடுத்தானை மறக்குமாறு என்னை? எனக் கூட்டுக.

பண்ணிறைந்த தமிழ்பாடிப்
பரமர்திரு வருள்மறவா
தெண்ணிறைந்த தொண்டருடன்
பணிந்தங்கண் உறைந்தேகி
உண்ணிறைந்த பதிபிறவும்

உடையவர்தாள் வணங்கிப்போய்க்
கண்ணிறைந்த திருவாரூர்
முன்தோன்றக் காண்கின்றார். **#3198**

பண்ணின் இசைநிறைந்த இத்திருப்பதிகத்தைப் பாடிப் பெருமானுடைய திருவருள் மறவாது, அளவிறந்த அடியவர் களுடன் பணிந்து, அங்குத் தங்கி, அப்பால் சென்று, உளம் நிறைவான திருப்பதிகள் பலவற்றிற்கும் சென்று இறைவரின் திருவடிகளை வணங்கிச் சென்று, கண்ணிற்கு விருந்தாகும் நிறைவுடைய திருவாரூர் முன்னாகத் தோன்றக் காண்கின்றவர்,

விளக்கவுரை

பதிபிறவும் என்பன திருமயிலாடுதுறை, திருப்பேரளம் முதலாயினவாகலாம்.

அன்றுதிரு நோக்கொன்றால்
ஆரக்கண் டின்புறார்
நின்றுநில மிசைவீழ்ந்து
நெடிதுயிர்த்து நேரிறைஞ்சி
வன்தொண்டர் திருவாரூர்
மயங்குமா லையிற்புகுந்து
துன்றுசடைத் தூவாயார்
தமைமுன்னந் தொழவணைந்தார். **#3199**

அன்று தமது ஒரு கண்ணால் கொள்ளும் திருப் பார்வையால், திருவாரூரின் அற்புதம் முழுவதும் ஆரக் கண்டு இன்புற இயலாதவராய் நின்று, நிலத்தின் மீது வீழ்ந்து, நெடிதே மூச்செறிந்து, நேராக வணங்கி, எழுந்து, நம்பிகள், பொழுது மயங்கும் மாலைக் காலத்தில் திருவாரூர் சென்று, அங்குப் பரந்த சடையை உடைய தூவாயராகிய பெருமானை முன்னாகப் பணிதற்கு அணைந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பொங்குதிருத் தொண்டருடன்
உள்ளணைந்து புக்கிறைஞ்சி
துங்கவிசைத் திருப்பதிகம்
தூவாயா என்றெடுத்தே
இங்கெமது துயர்களைந்து
கண்காணக் காட்டாயென்
றங்கணர்தம் முன்னின்று
பாடியருந் தமிழ்புனைந்தார். **#3200**

அன்புமிகும் அடியவர்களுடன் உள்ளே சென்று வணங்கி, மேலான இசையையுடைய திருப்பதிகமாய, `தூவாயா' எனப் பாட எடுத்தே, ` இங்கு எனது துயர்களைந்து கண்காணக் காட்டாய்' என்னும் பொருளியையப் போற்றி மகிழ்ந்து, கண்ணுதற் பெருமான் திருமுன்பு நின்று, அரிய தமிழ்மாலையைச் சூட்டினார்.

விளக்கவுரை

`தூவாயா' எனத் தொடங்கும் பதிகம் பஞ்சமப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.96)*. இடைதெரிந்து - தம்வேண்டுகோளை விரும்பி ஏற்றற்குரியகாலத்தே. `இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக' *(குறள்., 712)* என வரும் திருக்குறளானும் இப் பொருண்மை அறியப்படும். தூவாயார் - பரவையுண் மண்டளியில் எழுந்தருளியிருக்கும் இறைவர் பெயர். தூ - உண்ணுகின்ற; வாயார் - திருவாயினை உடை யவர். ஒருகால் வந்த ஊழிப்பெருவெள்ளத்தால் திருவாரூர் அழியா திருக்கக் காத்தவர் என்னும் குறிப்பினது. பரவை - கடல், உண் - உண்ணுகின்ற; மண்டளி - பெருமான் எழுந்தருளியிருக்கும் இடம். தூவாயர் என்பதற்கு தூ - பற்றுக்கோடு; ஆயார் - ஆயவர் எனப் பொருள்கண்டு எவ்வுயிர்க்கும் பற்றுக் கோடாயவர் எனப் பொருள் விரித்துத் தூ பற்றுக் கோடாதற்கு `இனந்தூய்மை தூவா வரும்' *(குறள்., 455)* எனும் திருக்குறளையும் மேற்கோள் காட்டுவர் சிவக்கவி மணியார்.

ஆறணியுஞ் சடையாரைத்
தொழுதுபுறம் போந்தங்கண்
வேறிருந்து திருத்தொண்டர்
விரவுவா ருடன்கூடி
ஏறுயர்த்தார் திருமூலட்
டானத்துள் இடைதெரிந்து
மாறில்திரு அத்தயா
மத்திறைஞ்ச வந்தணைந்தார். **#3201**

கங்கை அணிந்த திருச்சடையையுடைய இறைவரை வணங்கி, அருள்பெற்று, வெளிப்போந்து, அவ்விடத்தே வேறாக இருந்து வந்த சிவனடியார்கள் பலருடன் கூடி விடைக் கொடியை உயர்த்திய பெருமானது பெருங்கோயிலாய திருமூலட் டானத்தைச் சேர்வதற்கு தக்க அருளுடைய காலத்தை உணர்ந்து, மாறிலாத திருவருள் நிறைந்த நடுயாமத்து வணங்கிட அங்கு வந்தணைந்தார்.

விளக்கவுரை

****

ஆதிதிரு அன்பரெதிர்

அணையஅவர் முகநோக்கிக்
கோதிலிசை யாற்குருகு
பாயவெனக் கோத்தெடுத்தே
ஏதிலார் போல்வினவி
ஏசறவால் திருப்பதிகம்
காதல்புரி கைக்கிளையாற்
பாடியே கலந்தணைவார். #3202

ஆதியாய பெருமானின் அன்பர்கள், இவர் எதிரில் வரக்கண்டு, அவர்கள் முகம் நோக்கிக் கோதிலாத இசையையுடைய பதிகத்தால், `குருகு பாய' எனத் தொடங்கி எடுத்து, அவர்களை வினவுமுகமாகத் தாம் அயலவர்போல அவர்களைக் கேட்டுத் தமது கவலை மிகுதியினால் பாடிய பதிகம், எம்பிரான்பால் காதல் புரியும், கைக்கிளை என்னும் திணையில் அமைய, அத்தொண்டர்களுடன் கலந்து வந்தருளுவார்,

விளக்கவுரை

இம்முதற் குறிப்புடைய பதிகம் கொல்லிப் பண்ணில் அமைந்ததாகும்*(தி.7 ப.37)*. காமப் பகுதி கடவுளும் வரையார் ஏனோர் பாங்கினும் என்மனார்புலவர் -தொல்.புறத்.*28* என்பது தொல்காப்பியம். இதன்கண் வரும் காமப் பகுதி என்பதற்கு, நச்சினார்க்கினியர், கடவுள் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயப்பனவும், கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயப்பனவும், கடவுள் மானிடப் பெண்டிரை நயப்பனவும் பிறவுமாம் என விளக்கம் கண்டனர். அவ்வகையில் இக்கைக்கிளை கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பகுதியாகும். பொருண்மை இதுவாயினும், அடியவர் முகநோக்கி அருளியதாக ஆசிரியர் சேக்கிழார் அருளியிருக்கும் திறம் ஆழமுடையதாகும்.

சீர்பெருகுந் திருத்தேவா
சிரியன்முன் சென்றிறைஞ்சிக்
கார்விரவு கோபுரத்தைக்
கைதொழுதே உட்புகுந்து
தார்பெருகு பூங்கோயில்
தனைவணங்கிச் சார்ந்தணைவார்
ஆர்வமிகு பெருங்காத
லால்அவனி மேல்வீழ்ந்தார். #3203

சீர்மை மிகுந்த தேவாசிரியத் திருமண்டபத்தை முன்சென்று வணங்கி, மேகங்கள் படிந்த பெருங் கோபுரத்தைக் கை தொழுது, உள்ளே சென்று, மாலைகள் மிக விளங்குகின்ற பூங்கோயில் என்னும் பெயர் பூண்ட பெருமானது திருமாளிகையினை வணங்கிச் சேருகின்ற நம்பிகள், இறைவன் திருமுன்பு வருபவராய், ஆர்வம் மிகுந்த பெருங்காதலால்

நிலத்தின்மேல் தம்வயமிழந்து வீழ்ந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின

வீழ்ந்தெழுந்து கைதொழுது
முன்னின்று விம்மியே
வாழ்ந்தமலர்க் கண்ணொன்றால்
ஆராமல் மனமழிவார்
ஆழ்ந்ததுயர்க் கடலிடைநின்
றடியேனை யெடுத்தருளித்
தாழ்ந்தகருத் தினைநிரப்பிக்
கண்தாரும் எனத்தாழ்ந்தார். **#3204**

வீழ்ந்து எழுந்து கைதொழுது முன்னின்று விம்மி வாழ்வுடைய கண் ஒன்றால் கண்டு நிறைவு கொள்ளாது மனம் அயர்வார், ஆழ்ந்த துயர்க் கடலிடை நின்று அடியேனை எடுத்தருளி, தாழ்ந்து வேண்டிக் குறையிரக்கும் எனது கருத்தை நிரப்பிக் கண்ணி னைத் தாரீர் என வேண்டினார்.

விளக்கவுரை

****

திருநாவ லூர்மன்னர்
திருவாரூர் வீற்றிருந்த
பெருமானைத் திருமூலட்
டானஞ்சேர் பிஞ்ஞகனைப்
பருகாஇன் னமுதத்தைக்
கண்களாற் பருகுதற்கு
மருவார்வத் துடன்மற்றைக்
கண்தாரீ ரெனவணங்கி. #3205

திருநாவலூர் அரசரான நம்பிகள், திருவாரூரில் வீற்றிருந்த பெருமானை, திருமூலட்டானத்தே கோயில் கொண் டிருக்கும் பரம்பொருளை, உண்ணற்கரிய அமுதத்தைக் கண்களால் கண்டு மகிழ்தற்கு உள்ளத்துக் கொண்ட ஆர்வத்துடன், மற்றைக் கண்தாரீர் என வேண்டி வணங்கி,

விளக்கவுரை

****

மீளா வடிமை எனவெடுத்து
மிக்க தேவர் குலமெல்லம்
மாளா மேநஞ் சுண்டருளி
மன்னி யிருந்த பெருமானைத்
தாளா தரிக்கும் மெய்யடியார்
தமக்கா மிடர்நீர் தரியீரென்
ஆளாந் திருத்தோ ழமைத்திறத்தால்
அஞ்சொற் பதிகம் பாடினார். #3206

`மீளா அடிமை' எனத் தொடங்கி, மிக்க மேலான தேவர்குலம் எல்லாம் மாளாதவாறு அன்றெழுந்த நஞ்சுண்டருளித் திருவாரூரில் இருந்தருளும் பெருமானை, நின் திருவடிகளை விரும்பி வணங்கி வரும் மெய்யடியார்களுக்கு வருகின்ற இடரை நீர் பார்த் திருந்து தரிக்க மாட்டீரே! எனும் குறிப்புடன் தோழமையும் ஆகிய திறத்தால் அழகிய சொற்களையுடைய அத்திருப்பதிகத்தைப் பாடினார்.

விளக்கவுரை

ஆளாதல் - அடிமையாதல். `மீளா அடிமை' எனத் தொடங்கும் பதிகம், செந்துருத்திப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.95)*. அல்லல் சொன்னக்கால் வாளா அங்கிருப்பீர் என்பதை வினவு முகமாகக் கொண்டு காணில், வறிதே அங்கு இருப்பீர்*?* இருக்க மாட்டீரே*!* என்ற பொருளைச் சொற்குறிப்பால் அறியுமாற்றான், ஆசிரியர் இவ்வகையில் அமைப்பார் ஆயினார். அங்ஙனம் வாளா இருக்க மாட்டாதீர்,

இதுபொழுது மறுதலையாகிய இருப்பின் வாழ்ந்து போதீரே எனும் கருத்துடையதாக அருளுகின்றார் ஆசிரியர்.

பூத முதல்வர் புற்றிடங்கொண்
டிருந்த புனிதர் வன்தொண்டர்
காதல் புரிவே தனைக்கிரங்கிக்
கருணைத் திருநோக் களித்தருளிச்
சீத மலர்க்கண் கொடுத்தருளச்
செவ்வே விழித்து முகமலர்ந்து
பாத மலர்கள் மேற்பணிந்து
வீழ்ந்தார் உள்ளம் பரவசமாய். **#3207**

உயிர்கட்கெல்லாம் முதல்வராய புற்றிடங் கொண்ட பெருமானார், நம்பிகள் அன்பினால் எடுத்து மொழியும் இத்துன்பங் களுக்கு இரங்கிக் கருணையால் குளிர்ந்த மலர்க்கண்ணைக் கொடுத் தருளலும், உடன் செப்பமாகப் பார்த்து, முக மலர்ந்து, தம்வயமிழந்த வராய், இறைவரின் திருவடிமலர்களில் பணிந்து வீழ்ந்தார்.

விளக்கவுரை

****

விழுந்தும் எழுந்தும் பலமுறையால்
மேவிப் பணிந்து மிகப்பரவி
எழுந்த களிப்பி னாலாடிப்
பாடி இன்ப வெள்ளத்தில்
அழுந்தி யிரண்டு கண்ணாலும்
அம்பொற் புற்றி னிடையெழுந்த
செழுந்தண் பவளச் சிவக்கொழுந்தின்
அருளைப் பருகித் திளைக்கின்றார். **#3208**

விழுந்தும் எழுந்தும் பலமுறையால் பணிந்து மிக வும் போற்றி, மனத்தில் எழுந்த மகிழ்வால் ஆடிப்பாடி இன்பவெள்ளத் தில் அழுந்தி, இரு கண்களாலும் அழகிய பொன் புற்றின் இடனாக முளைத்தெழுந்த செழுமையாய தண்ணளியையுடைய பவள ஒளி பரந்த சிவக்கொழுந்தின் அருளைப் பருகித் திளைத்து இன்புறுமவர்.

விளக்கவுரை

****

காலம் நிரம்பத் தொழுதேத்திக்
கனக மணிமா ளிகைக்கோயில்
ஞால முய்ய வரும்நம்பி
நலங்கொள் விருப்பால் வலங்கொண்டு

மாலும் அயனு முறையிருக்கும்
வாயில் கழியப் புறம்போந்து
சீல முடைய அன்பருடன்
தேவா சிரியன் மருங்கணைந்தார். #3209

அவ்வழிபாட்டுக் காலம் நிரம்பும் வரையிலும் தொழுது போற்றிப் பொன்மயமாய் மிளிர்கின்ற அழகிய மாளிகை களை உடைய கோயிலினை, இவ்வுலகு உய்ந்திட வரும் நம்பிகள், நலம்கொள்ளும் விருப்பால் வலம் கொண்டு வந்து திருமாலும் நான் முகனும் முறையே வழிபாட்டிற்காகக் காத்திருக்கும் திருவாயிலைக் கடந்து, சீலமுடைய அன்பர்களுடன் தேவாசிரிய மண்டபம் அருகாக வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

நங்கை பரவை யார்தம்மை
நம்பி பிரிந்து போனதற்பின்
தங்கு மணிமா ளிகையின்கண்
தனிமை கூரத் தளர்வார்க்குக்
கங்குல் பகலாய்ப் பகல்கங்கு
லாகிக் கழியா நாளெல்லாம்
பொங்கு காதல் மீதூரப்
புலர்வார் சிலநாள் போனதற்பின். #3210

இவ்வாறு இவர் இங்கிருப்ப, பரவையார், தம்மைச் சுந்தரர் பிரிந்து சென்றது முதல், தம் அழகிய மாளிகையினிடத்துத் தனிமை கூர்ந்திடத் தளர்ந்திடுவார், இரவு பகலாகவும், பகல் இரவாக வும் கால வேறுபாடு உணராதவாறு தனிமையின் துயரால் கழிகின்ற நாள்கள் எல்லாம் பொங்கு காதல் மிகப் பெருக வாட்டம் மிக, அக்கால எல்லை கழிய,

விளக்கவுரை

****

செம்மை நெறிசேர் திருநாவ
லூரர் ஒற்றி யூர்சேர்ந்து
கொம்மை முலையார் சங்கிலியார்
தம்மைக் குலவு மணம்புணர்ந்த
மெய்ம்மை வார்த்தை தாம்அவர்பால்
விட்டார் வந்து கட்டுரைப்பத்
தம்மை யறியா வெகுளியினால்
தரியா நெஞ்சி னொடுந்தளர்வார். #3211

செம்மை நெறியாம் சிவநெறியைச் சேர்ந்த திரு நாவலூர்த் தலைவராய

நம்பிகள், திருவொற்றியூர் சேர்ந்து பெருத்த மார்பகங்களையுடைய சங்கிலியாரைச் சிறப்பாகத் திருமணம் செய்து கொண்ட மெய்ம்மையை, அவர்தம் நிலையை அறிந்திடத் தாம் அவர்பால் விட்ட மக்கள் வந்து சொல்ல, அதுகேட்டலும், தம்மையும் அறியாது எழுந்த சினமிகுதியால் தாங்கொணாத நெஞ்சமொடும் தளர்ச்சியுறுவார்

விளக்கவுரை

****

மென்பூஞ் சயனத் திடைத்துயிலும்
மேவார் விழித்தும் இனிதமரார்
பொன்பூந் தவிசின் மிசையினிரார்
நில்லார் செல்லார் புறம்பொழியார்
மன்பூ வாளி மழைகழியார்
மறவார் நினையார் என்செய்வார்
என்பூ டுருக்கும் புலவியோ
பிரிவோ இரண்டின் இடைப்பட்டார். **#3212**

மெல்லிய மலர்ப்படுக்கையில் துயில் கொள்ளார். கண்விழித்து ஆறுதலாக இருக்கவும் அறியார். பொன்பதித்த பூந்தவி சின் மேலும் இருக்க மாட்டார். நில்லார். நடந்திடார். வேறிடம் போகார். மன்மதனுடைய மலராய மழையிலும் நீங்கார். சுந்தரரை மறக்கவும் மாட்டார். சினம் மிகுதியால் அவரை நினைக்கவும் மாட் டார். இந்நிலையில் என் செய்வார்? என்பினையும் ஊடுருக்கும் புல வியோ! பிரிவோ! இவ்விரண்டானும் வரும் துயரின் இடைப்பட்டார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

ஆன கவலைக் கையறவால்
அழியும் நாளில் ஆரூரர்
கூனல் இளவெண் பிறைக்கண்ணி
முடியார் கோயில் முன்குறுகப்
பானல் விழியார் மாளிகையில்
பண்டு செல்லும் பரிசினால்
போன பெருமைப் பரிசனங்கள்
புகுதப் பெறாது புறநின்றார். **#3213**

இவ்வாறான கவலையின் துயரால் அழிகின்ற நாள்களில், வளைந்த இளைய வெண்ணிறமுடைய பிறைக்கொழுந் தைச் சூடிய முடியையுடைய திருவாரூர்ப் பெருமான் கோயில் முன் நம்பியாரூர் வந்து சேரலும், குவளையனைய கண்களையுடைய பரவையாரது

மாளிகையில் முன்போலச் சென்றிடும் ஏவலர்கள், யாவரும் உள்ளே சென்றிடற்கு அனுமதி இல்லாதாக வெளியே நின்றார்கள்.

விளக்கவுரை

****

நின்ற நிலைமை அவர்கள் சிலர்
நிலவு திருவா ரூரர்எதிர்
சென்று மொழிவார் திருவொற்றி
யூரில் நிகழ்ந்த செய்கையெலாம்
ஒன்று மொழியா வகையறிந்தங்
குள்ளார் தள்ள மாளிகையில்
இன்று புறமுஞ் சென்றெய்தப்
பெற்றி லோம்என் றிறைஞ்சினார். **#3214**

அவ்வாறு நின்றவர்களில் சிலர், திருவாரூரர் எதிர்சென்று சொல்லுவார், `திருவொற்றியூரில் நிகழ்ந்த செய்கை எல் லாம் ஒன்றும் ஒழியாத வகை அறிந்து, அங்குள்ளார் எங்களை உட் புகாதபடி வெளியே தள்ளிடப் பரவையாரது மாளிகை முற்றத்தின் வெளி யில்கூடி நாம் போகமுடியாது போனோம்' என்று கூறி வணங்கினர்.

விளக்கவுரை

****

மற்ற மாற்றங் கேட்டழிந்த
மனத்த ராகி வன்தொண்டர்
உற்ற இதனுக் கினியென்னோ
செயலேன் றுயர்வார் உலகியல்பு
கற்ற மாந்தர் சிலர் தம்மைக்
காதற் பரவை யார்கொண்ட
செற்ற நிலைமை யறிந்தவர்க்குத்
தீர்வு சொல்லச் செலவிட்டார். **#3215**

மற்று அம்மாற்றம் கேட்டு அழிந்த மனமுடைய ராகிய நம்பிகள், `இனி இதனுக்கு என்னோ செயல்?' என்று உணர்ப வர், அதற்காக உலகின் நீதி இயல்பைக் கற்ற மாந்தர் சிலர் தம்மை அழைத் துத் தமது காதலியார் பரவையார் கொண்ட சினத்தைத் தெரிந்து, அதுதீர்தற்கேற்ப நன்மை கூறித் தெருட்டுமாறு செல்லவிட்டார்.

விளக்கவுரை

****

நம்பி யருளால் சென்றவரும்
நங்கை பரவை யார்தமது

பைம்பொன் மணிமா ளிகையணைந்து
பண்பு புரியும் பாங்கினால்
வெம்பு புலவிக் கடலழுந்தும்
மின்னே ரிடையார் முன்னெய்தி
எம்பி ராட்டிக் கிதுதகுமோ
என்று பலவும் எடுத்துரைப்பார். #3216

நம்பிகளின் அருளாணைவழிச் சென்ற அப் பெரியோர்களும், பெண்மணியாம் பரவையார் தம் மாளிகையினை அணைந்து, அவர்தம் செற்றத்தைத் தணிக்கும் தன்மையால், வெம் பிடும் கவலையாய புலவியெனும் கடலில் வீழ்ந்து அழுந்திக் கரை காணாது தவித்திடும் மின்னலை ஒத்த சிற்றிடையை உடைய பரவை யார் திருமுன்பு சென்று, `எம்பிராட்டிக்கு இத்தன்மை தகுதியாமோ?' என்று பலவும் எடுத்துச் சொன்னார்கள்.

விளக்கவுரை

பண்பு புரியும் பாங்கினால் என்பதற்குக் கற்பை அவா விய நிலமையால் புலவி என்னும் கடலில் அழுந்தி நிற்கும் பரவையார் எனப் பொருள் கொள்வாரும் உளர்.

பேத நிலைமை நீதியினாற்
பின்னும் பலவுஞ் சொன்னவர்முன்
மாத ரவரும் மறுத்துமனங்
கொண்ட செற்றம் மாற்றாராய்
ஏதம் மருவு மவர்திறத்தில்
இந்த மாற்றம் இயம்பில்உயிர்
போத லொழியா தெனவுரைத்தார்
அவரும் அஞ்சிப் புறம்போந்தார். #3217

முன்னர் இனியவாகக் (சாமமாக) கூறிப் புலவி நீக்க முயன்றவர்கள், மேற்கொண்டு புலவி கொள்வதாலாய இன்னாமை யையும், அது நீங்கி வாழ்தலாகிய இனிமையையும் ஆக வேறுபடுத்திக் (பேதமாக) கூற, பரவையாரும் அவர் உரையை மறுத்து, மனத்தில் கொண்ட சினம் ஆறாதவராய்க் `குற்றம் பொருந்திய அவர் திறத்ததாக இனியும் நீர் சொல்ல முற்படின், எனது உயிர் நீங்கிடும்' என்று கூற, அதுகேட்ட அப்பெரியோரும் அஞ்சி வெளியே போந்தார்கள்.

விளக்கவுரை

இப்பாடலில் பேத நிலைமை *(வேற்றுமைப்பட)* கூற என்றதால், இதுகாறும் கூறியது சாம நிலைமை *(இன்சொல்லாக)* என்பது பெற்றாம். இன்சொற் கூறல் *(சாமம்),* வேறுபடுத்திக் கூறல் *(பேதம்),* கொடுத்தல்

(தானம்), ஒறுத்தல் *(தண்டம்)* என ஒருவர் ஒருவரை ஆற்றுப்படுத்தும் நிலை நான்காம். இவற்றுள் புலவி நீக்கத்திற் கெனக் கொளற்குரியன முன்னைய இரண்டுமேயாதலின், இவ்விரு வகையானும் கூறினார்கள். பிள்ளைத் தமிழில் அம்புலிப் பருவத்தில் இந்நால்வகையானும் ஆற்றப்படுத்தும் மரபைக் காணலாம்.

போந்து புகுந்த படியெல்லாம்
பூந்தண் பழன முனைப்பாடி
வேந்தர் தமக்கு விளம்புதலும்
வெருவுற் றயர்வார் துயர்வேலை
நீந்தும் புணையாந் துணைகாணார்
நிகழ்ந்த சிந்தா குலம்நெஞ்சில்
காந்த அழிந்து தோய்ந்தெழார்
கங்குல் இடையா மக்கடலுள். **#3218**

வெளிப்போந்த பெரியவர்கள், அங்கு நிகழ்ந்தன வற்றை மலர்கள் நிறைந்த குளிர்ந்த வயல்களை உடைய திருமுனைப் பாடி நாட்டின் தலைவராய நம்பிகளுக்கு எடுத்துச் சொல்லுதலும், அது கேட்ட அவர் அஞ்சி அயர்ச்சி கொள்வாராய்த் தம்மிடத்துக் கொண்ட கவலைக் கடற்குக் கரைகாணும் துணையைக் காணாராய்ப் பெருந் துன்பத்தால் மனமழிந்து, சோர்ந்து, அன்றைய இரவின் இடையாம மாய கடலில் அழுந்தி நிற்பாராயினர்.

விளக்கவுரை

இடையாமம் - யாமத்தின் இடை; பாதியிரவு - நள்ளிரவு.

அருகு சூழ்ந்தார் துயின்றுதிரு
அத்த யாமம் பணிமடங்கிப்
பெருகு புவனஞ் சலிப்பின்றிப்
பேயும் உறங்கும் பிறங்கிருள்வாய்
முருகு விரியு மலர்க்கொன்றை
முடிமேல் அரவும் இளமதியுஞ்
செருகு மொருவர் தோழர்தனி
வருந்தி இருந்து சிந்திப்பார். **#3219**

அருகில் இருந்த ஏவலர்களும் துயில, நடுயாமத்து நிகழும் வழிபாடும் அடங்கிப் பெருகிய இவ்வுலகில் உள்ளாரும் தமது செயல் ஒழிந்து உறங்கப் பேயும் உறங்கிக் கிடக்கும் இருளிடத்து, மணம் கமழும் மலர்க் கொன்றையைச் சூடிய திருமுடிமேல் பாம்பை யும் இளம்பிறையையும் கொண்ட ஒப்பற்ற இறைவரின் தோழரான நம்பிகள் தனியே இருந்து வருந்திச் சிந்திப்பாராய்,

விளக்கவுரை

இப்பாடலில் வரும் முன்னிரண்டடிகள், `மன்னுயி ரெல் லாம் துயிற்றி அளித்திரா என்னல்லது இல்லைத் துணை' *(குறள்., 1168),* `நனந்தலை உலகமும் துஞ்சும் ஓர்யான்மன்ற துஞ்சாதேனே' எனவரும் சங்கச் செய்யுள்களை நினைவு கூரச் செய்கின்றன.

அருகு சூழ்ந்தார் துயின்றுதிரு
அத்த யாமம் பணிமடங்கிப்
பெருகு புவனஞ் சலிப்பின்றிப்
பேயும் உறங்கும் பிறங்கிருள்வாய்
முருகு விரியு மலர்க்கொன்றை
முடிமேல் அரவும் இளமதியுஞ்
செருகு மொருவர் தோழர்தனி
வருந்தி இருந்து சிந்திப்பார். **#3220**

அருகில் இருந்த ஏவலர்களும் துயில, நடுயாமத்து நிகழும் வழிபாடும் அடங்கிப் பெருகிய இவ்வுலகில் உள்ளாரும் தமது செயல் ஒழிந்து உறங்கப் பேயும் உறங்கிக் கிடக்கும் இருளிடத்து, மணம் கமழும் மலர்க் கொன்றையைச் சூடிய திருமுடிமேல் பாம்பை யும் இளம்பிறையையும் கொண்ட ஒப்பற்ற இறைவரின் தோழரான நம்பிகள் தனியே இருந்து வருந்திச் சிந்திப்பாராய்,

விளக்கவுரை

இப்பாடலில் வரும் முன்னிரண்டடிகள், `மன்னுயி ரெல் லாம் துயிற்றி அளித்திரா என்னல்லது இல்லைத் துணை' *(குறள்., 1168),* `நனந்தலை உலகமும் துஞ்சும் ஓர்யான்மன்ற துஞ்சாதேனே' எனவரும் சங்கச் செய்யுள்களை நினைவு கூரச் செய்கின்றன.

அடியார் இடுக்கண் தரியாதார்
ஆண்டு கொண்ட தோழர்குறை
முடியா திருக்க வல்லரே
முற்று மளித்தாள் பொற்றளிர்க்கைத்
தொடியார் தழும்பும் முலைச்சுவடும்
உடையார் தொண்டர் தாங்காணும்
படியால் அணைந்தார் நெடியோனுங்
காணா அடிகள் படிதோய. **#3221**

அடியவர்களின் துன்பங்களைக் கண்டு பொறுக்க லாற்றாத இறைவர், தாம் விரும்பி ஆண்டுகொண்ட தோழராய நம்பிகளின் குறையினை முடிக்காமல் மனம் வலித்திருக்க வல்லமை உடையரோ? (அல்லர். ஆதலின்,) உலகம் முழுதும் பெற்ற உமையம் மையாரின் அழகிய

தளிரனைய கைகளின் வளையல் தழும்பும், முலைச் சுவடும் கொண்ட இறைவர், திருமாலும் பன்றியாய்ச் சென் றுணர முடியாத திருவடிகள் இந்நிலவுலகில் தோய்த்திடத் தம்தொண் டர் தம்மை நேராகக் காணும்படியாக வந்தருளினார்.

விளக்கவுரை

****

தம்பி ரானார் எழுந்தருளத்
தாங்கற் கரிய மகிழ்ச்சியினால்
கம்பி யாநின் றவயவங்கள்
கலந்த புளகம் மயிர்முகிழ்ப்ப
நம்பி யாரூ ரரும்எதிரே
நளின மலர்க்கை தலைகுவிய
அம்பி காவல் லவர்செய்ய
அடித்தா மரையின் கீழ்வீழ்ந்தார். **#3222**

தம் பெருமான் எழுந்தருளி வந்திடலும், அவரைக் கண்டு தாங்கற்கரிய மகிழ்ச்சியினால் உடல் உறுப்புக்கள் அனைத்தும் நடுக்கம் கொண்டிட, மயிர்க்கூச்செறிந்திட, நம்பிகளும் அவர் திரு முன்பாக எழுந்து, தாமரை மலர் அனைய கைகள் உச்சிமேற்குவிய வணங்கி, உமையொரு கூறராய சிவபெருமானின் சிவந்த தாமரை போலும் திருவடியின் கீழ் வீழ்ந்தார்.

விளக்கவுரை

****

விழுந்து பரவி மிக்கபெரு
விருப்பி னோடும் எதிர் போற்றி
எழுந்த நண்பர் தமைநோக்கி
யென்நீ யுற்ற தென்றருளத்
தொழுந்தங் குறையை விளம்புவார்
யானே தொடங்குந் துரிசிடைப்பட்
டழுந்து மென்னை யின்னமெடுத்
தாள வேண்டு முமக்கென்று. **#3223**

வீழ்ந்து வணங்கி எழுந்து, மிக்க விருப்பினுடன் போற்றி முன்நின்ற தோழரை நோக்கி, `உனக்கு நேர்ந்தது என்ன?' என்று வினவ, நம்பிகளும் தொழுது தமது குறையைச் சொல்வாராய், `யானே தொடங்கிய குற்றத்தின் உட்பட்டு அழுந்தி வேதனையுறும் என்னை இன்னமும் எடுத்தாள வேண்டும், அது உமக்காய செயல் ஆகும்' என்று கூறி,

விளக்கவுரை

****

அடியே னங்குத் திருவொற்றி
யூரில் நீரே யருள்செய்ய
வடிவே லொண்கண் சங்கிலியை
மணஞ்செய் தணைந்த திறமெல்லாம்
கொடியே ரிடையாள் பரவைதா
னறிந்து தன்பால் யான்குறுகின்
முடிவே னென்று துணிந்திருந்தா
ளென்னான் செய்வ தெனமொழிந்து. **#3224**

`அடியேன் அங்குத் திருவொற்றியூரில் நீரே அருள்புரிந்திட, வடித்த வேல்போலும் கூரிய கண்களையுடைய சங்கிலியாரைத் திருமணம் செய்து கூடிய தன்மை எல்லாவற்றையும், கொடிபோலும் சிறிய இடையையுடைய பரவை தான் கேள்வியுற்றுச் சினம் கொண்டு, தன்பால் யான் செல்லின் தான் மடிவேன் என்று துணிந்துள்ளாள்; இதற்கு நான் என் செய்வேன்?' என்று கூறியருளி,

விளக்கவுரை

****

நாய னீரே நான்உமக்கிங்
கடியே னாகில் நீர்எனக்குத்
தாயி னல்ல தோழருமாந்
தம்பி ரானா ரேயாகில்
ஆய வறிவும் இழந்தழிவேன்
அயர்வு நோக்கி அவ்வளவும்
போயிவ் விரவே பரவையுறு
புலவி தீர்த்துத் தாருமென. **#3225**

`என் தலைவனே! நான் உமக்கு இங்கு அடியேன் என்பதனால், அத்துடன் நீர் எனக்குத் தாயினும் இனிய கருணை உடைய நல்ல தோழருமாய தலைவருமாகுவீரானால், எனக்குற்ற அறிவெல்லாம் பரவைபால் கொண்ட காதலால் அழிந்திடும் வருத்தத் தைக் கண்டு, அவ்வளவில் நீர் இவ்விரவே பரவைபால் சென்று, அவள் கொண்டிருக்கும் புலவியை நீக்கியருள வேண்டும்' என்று கூறலும்,

விளக்கவுரை

****

அன்பு வேண்டும் தம்பெருமான்
அடியார் வேண்டிற் றேவேண்டி
முன்பு நின்று விண்ணப்பம்

செய்த நம்பி முகம்நோக்கித்
துன்பம் ஒழிநீ யாம்உனக்கோர்
தூத னாகி இப்பொழுதே
பொன்செய் மணிப்பூண் பரவைபால்
போகின் றோம்என் றருள்செய்தார். **#3226**

அடியாரது அன்பினையே வேண்டி நிற்கின்ற பெருமான், தனது அடியவராய நம்பிகள் வேண்டியதையே தாம் செய்திட விரும்பி, முன்பாக நின்று விண்ணப்பம் செய்த அவர்தம் முகத்தை நோக்கியருளி, `சுந்தரனே! உனது துன்பத்தை ஒழித்திடு வாய், யாம் உனக்கு ஒரு தூதனாக இப்பொழுதே, பொன்னால் செய்த அழகிய அணிகளை அணிந்த பரவைபால் செல்கின்றோம்' என்று அருள் செய்தார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

எல்லை யில்லாக் களிப்பின ராய்
இறைவர் தாளில் வீழ்ந்தெழுந்து
வல்ல பரிசெல் லாந்துதித்து
வாழ்ந்து நின்ற வன்தொண்டர்
முல்லை முகைவெண் ணகைப்பரவை
முகில்சேர் மாடத் திடைச்செல்ல
நில்லா தீண்ட எழுந்தருளி
நீக்கும் புலவி யெனத்தொழுதார். **#3227**

எல்லை இல்லாத களிப்புடையராகி இறைவரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்து, தம்மால் இயன்ற வகையால் எல்லாம் வாழ்த்தி, வாழ்வு பெற்ற நம்பிகள், தமது தலைவரை நோக்கி, `முல்லை மலர்போலும் முறுவலுடைய பரவையின் முகில்கள் படிந்த மாடத்திடைச் சென்றிட, இங்கு நில்லாது இப்பொழுதே எழுந்தருளிச் சென்று, அவள் புலவியை நீக்கியருள்வீராக' எனத் தொழுதார்.

விளக்கவுரை

ஈண்ட - விரைவாக. `நில்லாது ஈண்ட எழுந்தருளி நீக்கும்' என வேண்டியது நம்பிகளின் தோழமைத் திறம் பற்றியாம்.

அண்டர் வாழக் கருணையினால்
ஆல காலம் அமுதாக
உண்ட நீலக் கோலமிடற்
றொருவர் இருவர்க் கறிவரியார்
வண்டு வாழும் மலர்க்கூந்தல்
பரவை யார்மா ளிகைநோக்கித்

தொண்ட னார்தம் துயர்நீக்கத்
தூத னாராய் எழுந்தருள. #3228
தேவர்கள் வாழ்ந்திடக் கருணையால் நஞ்சினை அமுதமாக உண்ட நீலநிறமுடைய அழகிய திருக்கழுத்தையுடைய ஒப்பற்றவரும், அயன் திருமால் என்னும் இருவரும் காண அரிய வரும் ஆகிய இறைவர், வண்டுகள் மொய்த்திடும் மலர்களைச் சூடிய கூந்தலையுடைய பரவையாரது திருமாளிகையினை நோக்கிப் புறப்பட்டுத் தமது தொண்டனாரின் துயர் தீர்த்திடத் தாம் ஒரு தூதுவராக எழுந் தருளிச் செல்ல,

விளக்கவுரை

****

தேவா சிரியன் முறையிருக்குந்
தேவ ரெல்லாஞ் சேவித்துப்
போவார் தம்மில் வேண்டுவார்
போத ஒழிந்தார் புறத்தொழிய
ஓவா அணுக்கச் சேவகத்தில்
உள்ளோர் பூத கணநாதர்
மூவா முனிவர் யோகிகளின்
முதலா னார்கள் முன்போக. #3229
தேவாசிரிய மண்டபத்தில் முறையாகத் தங்கி இருக்கும் தேவர்கள் பலரும் எழுந்து பெருமானை வணங்கிச் செல்ப வர்கள் செல்ல உடன்வருபவர்கள் வர, ஒழிந்தவர்கள் புறத்தாய்ப் போக! ஒளிமுதலாம் சிவபெருமானுக்கு ஒழியாது அணித்தாக நெருங்கித் தொண்டுபுரியும் தொழில் உள்ளோர்களும், பூதரும், கண நாதரும், மூப்பினை நீங்கிச் சாவா உடம்பெய்திய தவமுனிவர்களும், யோகியர்களும் ஆகிய அனைவரும் முன்னாகச் சென்றிடவும்.

விளக்கவுரை

****

அருகு பெரிய தேவருடன்
அணைந்து வரும்அவ் விருடிகளும்
மருவு நண்பின் நிதிக்கோனும்
முதலா யுள்ளோர் மகிழ்ந்தேத்தத்
தெருவும் விசும்பும் நிறைந்துவிரைச்
செழும்பூ மாரி பொழிந்தலையப்
பொருவி லன்பர் விடுந்தூதர்
புனித வீதி யினிற்போத. #3230

அருகே பெருமானாய பெரிய தேவருடன் அணைந்து வருகின்ற அந்த இருடிகளும், எம்பிரான்பால் பொருந்திய நண்புடைய நிதியின் தலைவனாய குபேரனும் முதலாக உள்ளோர் மகிழ்ந்து போற்றிடத் தெருவும் வானும் நிறைந்த நறுமணம்மிக்க மலர் மழையைப் பொழிந்து வணங்கிட, ஒப்பற்ற அன்பர் ஆகிய சுந்தரர் விடுகின்ற பெருமானாராய தூதர், தூய திருவீதியில் போதரவும்.

விளக்கவுரை

****

மாலும் அயனுங் காணாதார்
மலர்த்தாள் பூண்டு வந்திறைஞ்சும்
காலம் இதுவென் றங்கவரை
அழைத்தா லென்னக் கடல்விளைத்த
ஆல மிருண்ட கண்டத்தான்
அடித்தா மரைமேற் சிலம்பொலிப்ப
நீல மலர்க்கட் பரவையார்
திருமா ளிகையை நேர்நோக்கி. **#3231**

திருவடியை முன்தேடிக் காணாதாரான திருமாலும் அயனும் இப்பொழுது நேராகக் கண்டு கண் குளிர வணங்கிடும் காலம் இதுவென்று அவரை வாருங்கள் என அழைத்தாற் போலக் கடலினின் றும் தோன்றிய நஞ்சை உண்டு இருண்ட திருக்கழுத்தினை உடைய இறைவரின் திருவடித் தாமரை மலர்மேல் அணிந்த சிலம்புகள் ஒலித் திட, குவளை மலர்போலும் அழகிய கண்களையுடைய பரவையார் திருமாளிகையை நேராக நோக்கி,

விளக்கவுரை

****

இறைவர் விரைவில் எழுந்தருள
எய்து மவர்கள் பின்தொடர
அறைகொள் திரைநீர் தொடர்சடையில்
அரவு தொடர அரியஇளம்
பிறைகொள் அருகு நறைஇதழிப்
பிணையல் சுரும்பு தொடரவுடன்
மறைகள் தொடர வன்தொண்டர்
மனமுந் தொடர வரும்பொழுது. **#3232**

பெருமான் விரைவாக எழுந்தருள, அவருடன் முன்கூறப்பெற்றவர்கள் பலரும் பின்தொடர, ஒலிக்கும் அலைகள் சூழ்ந்த கங்கைநீரைப் பாம்பு தொடர, அரிய இளம்பிறையின் அருகே வாசனையுடைய கொன்றை

மலர் மாலையின்மீது வண்டினம் தொடர, உடன் மறைகளும் தொடர, நம்பிகளின் மனமும் தொடர, வரும்பொழுது,

விளக்கவுரை

****

பெருவீ ரையினும் மிகமுழங்கிப்
பிறங்கு மதகுஞ் சரம்உரித்து
மரவீ ருரிவை புனைந்தவர்தம்
மருங்கு சூழ்வார் நெருங்குதலால்
திருவீ தியினில் அழகரவர்
மகிழுஞ் செல்வத் திருவாரூர்
ஒருவீ தியிலே சிவலோகம்
முழுதுங் காண வுளதாமால். **#3233**

பெரிய கடலினும் மிக முழங்கிப் பேரொலி புரியும் மதயானையை உரித்து, அதன் தோலைப் போர்த்த சிவபெருமானது இருமருங்கும் சூழ்வார் இவ்வண்ணம் திருவீதியில் நெருங்குதலால் அழகிய கோலமுடைய வீதிவிடங்கராய பெருமான் மகிழ்ந்துறையும் செல்வமுடைய திருவாருரின் இந்த ஒரு வீதியிலேயே சிவலோகம் முழுவதும் காணக் கூடியதாக உள்ளது.

விளக்கவுரை

பெருவீரை - பெரிய கடல்; இவ்வாறு பாடல்களும் ஒருமுடிபின

ஞாலம் உய்ய எழுந்தருளும்
நம்பி தூதர் பரவையார்
கோல மணிமா ளிகைவாயில்
குறுகு வார்முன் கூடத்தம்
பால்அங் கணைந்தார் புறநிற்பப்
பண்டே தம்மை யர்ச்சிக்கும்
சீல முடைய மறைமுனிவர்
ஆகித் தனியே சென்றணைந்தார். **#3234**

இந்நிலவுலகம் உய்ந்திட எழுந்தருளிவரும் சுந்தர ரின் தூதுவர், பரவையாரது அழகிய நல்ல திருமாளிகை வாயிலில் சேர்வாராகி, முன்னாகத் தம்மைச் சூழ்ந்து வந்தார்கள் அனைவரை யும் வெளியே நிற்கப் பணித்து தொடர்ந்து தம்மை வழிபாடு செய்துவரும் சீலமுடைய சிவவேதியராய வடிவு கொண்டு, அந்த மாளிகை வாயிலைத் தனியே சென்றடைந்தார்.

விளக்கவுரை

****

சென்று மணிவா யிற்கதவம்
செறிய அடைத்த அதன்முன்பு
நின்று பாவாய் திறவாய்என்று
அழைப்ப நெறிமென் குழலாரும்
ஒன்றுந் துயிலா துணர்ந்தயர்வார்
உடைய பெருமான் பூசனைசெய்
துன்றும் புரிநூல் மணிமார்பர்
போலும் அழைத்தார் எனத்துணிந்து. **#3235**

சென்று, கதவம் நன்கு அடைக்கப்பெற்ற அழகிய அவ்வாயிலில் நின்று, `பரவையே! கதவைத் திறந்திடுவாய்' என்று அழைத்திடச் செறிந்த, சிறந்த, மெல்லிய கூந்தலையுடைய பரவையா ரும், ஒரு சிறிதும் துயிலாது புலவியால் வாடி அயர்பவர், என்னை அடிமையாக உடைய திருவாரூர்ப் பெருமானுக்குப் பூசனை புரிந் திடும் நெருங்கிய முப்புரி நூலையணிந்த மார்பையுடைய சிவவேதி யர் போலும் அழைத்தார் எனத் துணிவு கொண்டு,

விளக்கவுரை

****

பாதி மதிவாழ் முடியாரைப்
பயில்பூ சனையின் பணிபுரிவார்
பாதி யிரவில் இங்கணைந்த
தென்னோ என்று பயமெய்திப்
பாதி உமையாள் திருவடிவிற்
பரம ராவ தறியாதே
பாதி மதிவாள் நுதலாரும்
பதைத்து வந்து கடைதிறந்தார். **#3236**

இளம்பிறை வாழ்தற்குரிய திருச்சடையையுடைய சிவபெருமானுக்குப் பணிகளைச் செய்துவரும் சிவவேதியர், நடு யாமத்து இவ்விருளில் இங்கு வந்தது என்ன காரணமோ என்று பெரிதும் அச்சம் கொண்டு எழுந்து, வாயில் வந்து அழைத்தவர், உமை யொரு கூறராய சிவபெருமானாராவது அறியாதே, பாதியாய பிறை போலும் அழகிய நெற்றியையுடைய பரவையாரும், பதைப்புடன் வந்து தமது வாயிலின் கதவைத் திறந்தார்.

விளக்கவுரை

பாதி என அடிதோறும் வரும் சொல், முதல் அடியிலும் நான்காவது அடியிலும் மதி என்பதனோடும், இரண்டாவது அடியில் இரவோடும், மூன்றாவது அடியில் உமையம்மையாரோடும் இயைந்து சொற்பொருள்

பின்வருநிலயணி அமைய அமைந் திருப்பது அழகு தருகிறது. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மன்னும் உரிமை வன்தொண்டர்
வாயில் தூதர் வாயிலிடை
முன்னின் றாரைக் கண்டிறைஞ்சி
முழுது முறங்கும் பொழுதின்கண்
என்னை யாளும் பெருமானிங்
கெய்தி யருளி னாரென்ன
மின்னு மணிநூ லணிமார்பீர்
எய்த வேண்டிற் றென்என்றார். **#3237**

நிலைபெற்ற தோழராகும் உரிமையுடைய சுந்தர ரின் தூதர், தமது மாளிகை வாயில் முன்னாக நின்றாரைக் கண்டு வணங்கிப் பரவையார் உலகம் எல்லாம் உறங்குகின்ற பெரு யாமத்திடை, என்னை யாளும் பெருமான் இங்கு எழுந்தருளினார் என்னும்படி, மின்னும் அழகிய நூலணிந்த மார்பினையுடையீர்! நீர் இங்கு வருதல் வேண்டும் செயல் யாதோ? என்று வினவினார்.

விளக்கவுரை

****

கங்கைநீர் கரந்த வேணி
கரந்தவர் அருளிச் செய்வார்
நங்கைநீ மறாது செய்யின்
நான்வந்த துரைப்ப தென்ன
அங்கயல் விழியி னாரும்
அதனைநீ ரருளிச் செய்தால்
இங்கெனக் கிசையு மாகில்
இசையலாம் என்று சொல்லி. **#3238**

கங்கையாற்றை மறைத்து வைத்த பெருமான் அருளிச் செய்கின்றார், `பெண்ணே! நான் சொல்வதை நீ மறுத்திடாது செய்யின் நான் வந்த காரணத்தைச் சொல்வேன்' என்றலும், அது கேட்டு அழகிய கயல்மீன் போலும் நீண்ட விழியையுடைய பரவையா ரும், `அக்காரணத்தை நீர் சொல்லியருளினால் அது இங்கு எனக்கு இசையுமாகில் நான் இசைய இயலும்' என்றலும்,

விளக்கவுரை

****

என்னினைந் தணைந்த தென்பால்
இன்னதென் றருளிச் செய்தால்

பின்னைய தியலு மாகில்
ஆம்எனப் பிரானார் தாமும்
மின்னிடை மடவாய் நம்பி
வரஇங்கு வேண்டு மென்ன
நன்னுத லாருஞ் சால
நன்றுநம் பெருமை யென்பார். **#3239**

நீர் என்ன நினைந்து என்பால் வந்தது? அதனை இன்னதென்று சொல்லியருளிச் செய்தால், பின்னர் அஃது என்னால் முடியுமாகில் நான் செய்திட முடியும் எனக் கூறிடலும், அதுகேட்ட எம்பெருமானார் தாமும், `மின்னலை ஒத்த சிற்றிடையையுடைய பெண்ணே! சுந்தரன் இங்கு வரப்பெறல் வேண்டும்' என்றலும், அதுகேட்ட நல்ல நெற்றியையுடைய பரவையாரும், `மிகவும் நன்று, நம்முடைய பெருமை' என்று சொல்வாராய்,

விளக்கவுரை

****

பங்குனித் திருநா ளுக்குப்
பண்டுபோல் வருவா ராகி
இங்கெனைப் பிரிந்து போகி
ஒற்றியூர் எய்தி யங்கே
சங்கிலித் தொடக்குண் டாருக்
கிங்கொரு சார்வுண் டோநீர்
கங்குலின் வந்து சொன்ன
காரியம் அழகி தென்றார். **#3240**

பங்குனி உத்தரத் திருநாளுக்கு வழக்கம்போல மீண்டு என்னிடம் வருவார்போல இங்கு என்னைத் தனியே விடுத் துப் பிரிந்து சென்று, திருவொற்றியூர் சேர்ந்து, அங்கே சங்கிலியாரு டன் தொடர்பு கொண்ட அவருக்கு, இங்கு ஒரு சார்வும் உண்டோ? இந்த இரவிலே நீர் வந்து சொன்ன இச்செயல்தானும் நன்றாக இருக்கின்றது என்றார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

நாதரும் அதனைக் கேட்டு
நங்கைநீ நம்பி செய்த
ஏதங்கள் மனத்துக் கொள்ளா
தெய்திய வெகுளி நீங்கி
நோதகவு ஒழித்தற் கன்றோ
நுன்னையான் வேண்டிக் கொண்ட

தாதலின் மறுத்தல் செய்ய
அடாதென அருளிச் செய்தார். **#3241**

இறைவரும் அதனைக் கேட்டு, `பெண்ணே! நீ உனது தலைவனான சுந்தரன் செய்த குற்றங்களை மனத்தில் கொள்ளாது, அதனால் விளைந்த புலவியினின்றும் நீங்கி, நின் துன்பத்தை ஒழித் திடவன்றோ யான் வேண்டிக் கொண்டது, ஆதலால் நீ மறுத்து இருப்பது தகாது' என்று சொல்லியருளினார்

விளக்கவுரை

நோ- துன்பம் *:* தகவு - தன்மை. `நோநொந்து அறனல்ல செய்யாமை நன்று*' (*குறள்.*, 157)* எனவரும் திருவாக்கும் காண்க.

அருமறை முனிவ ரான
ஐயரைத் தைய லார்தாம்
கருமம்ஈ தாக நீர்
கடைத்தலை வருதல் நுந்தம்
பெருமைக்குத் தகுவ தன்றால்
ஒற்றியூர் உறுதி பெற்றார்
வருவதற் கிசையேன் நீரும்
போம்என மறுத்துச் சொன்னார். **#3242**

அந்தணராய் வடிவுகொண்ட பெருமானாரை நோக்கிப் பரவையாரும், `குறித்த இச்செயலுக்காக நீர் இங்கு வருதல், நும் பெருமைக்குத் தகுவதன்றாம்; திருவொற்றியூரில் சங்கிலியாரிடம் அப்பதியிலேயே இருத்தற்கு உறுதிபூண்டார். அவர் இங்கு வருவதற்கு இசையேன்; நீரும் போமின்!' என்று மறுத்துச் சொன்னார்.

விளக்கவுரை

உறுதி - அப்பதியிலேயே இருத்தற்காம் உறுதிமொழி. *(சங்கிலியாரிடம் செய்த சபதம்).*

நம்பர்தாம் அதனைக் கேட்டு
நகையும்உட் கொண்டு மெய்ம்மைத்
தம்பரி சறியக் காட்டார்
தனிப்பெருந் தோழ னார்தம்
வெம்புறு வேட்கை காணும்
திருவிளை யாட்டின் மேவி
வம்பலர் குழலி னார்தாம்
மறுத்ததே கொண்டு மீண்டார். **#3243**

அந்தணராக வந்த இறைவர், அதுகேட்டு உள்நகை யுடையராய், உண்மையாய தம் தன்மையை வெளிப்படக் காட்டாரா கித் தம்

தனிப்பெருந் தோழனார், பரவைபால் கொண்ட வேட்கையின் விளைவைக் கண்டு மகிழ்ந்தருளும் திருவிளையாட்டினைத் திருவுளங்கொண்டு, மணம் கமழும் கூந்தலையுடைய பரவையார் மறுத்த அச்சொல்லையே ஏற்றுக்கொண்டு, மீண்டு அருளினார்.

விளக்கவுரை

யாவர்க்கும் முன்னவனே முன்னிற்கும் பொழுது முடி யாத பொருள் உளதோ? இன்று; எனினும் சுந்தரருக்குப் பரவையார் பால் இருக்கும் பெருவேட்கையைக் காணும் திருவிளையாட்டால் மீண்டு சென்றார், என்றார்.

தூதரைப் போக விட்டு
வரவுபார்த் திருந்த தொண்டர்
நாதரைஅறிவி லாதேன்
நன்னுதல் புலவி நீக்கப்
போதரத் தொழுதேன் என்று
புலம்புவார் பரவை யாரைக்
காதலில் இசைவு கொண்டு
வருவதே கருத்துட் கொள்வார். **#3244**

இறைவரைத் தூதுவராகப் போகவிட்டு வரவு பார்த்திருந்த தொண்டர் சுந்தரரும், `நல்ல அழகிய நெற்றியுடைய பர வையின் புலவியை நீக்கப் போதருமாறு, அறிவிலாதே நான், நாதரைத் தொழுதேனே! என் செய்தேன்?' என்று புலம்புவார்; எவ்வாறாயினும் பரவையாரைத் தம்பால் கொண்ட காதல் பெருக இசைவித்துக் கொண்டே வருவர் என்று தம் கருத்தினில் கொள்வாராய்,

விளக்கவுரை

****

போயவள் மனையில் நண்ணும்
புண்ணியர் என்செய் தாரோ
நாயனார் தம்மைக் கண்டால்
நன்னுதல் மறுக்கு மோதான்
ஆயஎன் அயர்வு தன்னை
அறிந்தெழுந் தருளி னார்தாம்
சேயிழை துனிதீர்த் தன்றி
மீள்வதும் செய்யார் என்று. **#3245**

இங்கு நின்றும் பரவையின் மனைக்குச் சென்ற புண்ணியர் என் செய்தாரோ? நம் தலைவரைக் கண்டால் பரவையும் மறுப்பாளோ? எவ்வாறாயினும் எனது அயர்ச்சி அறிந்து எழுந்தரு ளிச் சென்ற

பெருமான், பரவையது கலக்கத்தை நீக்கி ஆறுதல் செய் தன்றி மீண்டு வரமாட்டார் என நினைந்து,

விளக்கவுரை

****

வழியெதிர் கொள்ளச் செல்வர்
வரவுகா ணாது மீள்வர்
அழிவுற மயங்கி நிற்பர்
அசைவுடன் இருப்பர் நெற்றி
விழியவர் தாழ்த்தா ரென்று
மீளவு மெழுவர் மாரன் பொழிமலர் மாரி வீழ
ஒதுங்குவார் புன்க ணுற்றார். **#3246**

மீண்டு வரும் பெருமானை வழியில் எதிர் கொள்ளத் தாம் எழுந்து செல்வார்; ஆனால் அவர் வரவைக் காணாது மீள்வார்; மனம் அழிவுற மயங்கி நிற்பார்; அச்சோர்வுடன் ஒருபுறம் இருப்பார்; நெற்றியில் கண் உடைய பெருமான் வரத் தாழ்த்தார் என்று மீளவும் எழுவர்; மன்மதன் பொழிகின்ற மலர்மாரி வீழ ஒதுங்குவார்; இவ்வாறு பெருந் துயரமுற்றார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

பரவையார் தம்பால் நம்பி
தூதராம் பாங்கிற் போன
அரவணி சடையார் மீண்டே
அறியுமாறு அணையும் போதில்
இரவுதான் பகலாய்த் தோன்ற
எதிரெழுந் தணையை விட்ட
உரவுநீர் வெள்ளம் போல
ஓங்கிய களிப்பிற் சென்றார். **#3247**

பரவையாரிடத்துச் சுந்தரருடைய தூதுவராகச் சென்ற பாம்பணிந்த சடையையுடைய பெருமான், மீண்டு, தம்மை அறியுமாறு சுந்தரர்பால் வரும்பொழுது, பெருமானது ஒளியால் இரவின்றிப் பகல் என ஒளி தோன்றிட, நம்பிகள் அதுகண்டு எதிர் எழுந்து, பெருமானது முன்பாக அணையை உடைத்தெழும் விரை வான நீர் வெள்ளம் போன்று, மனத்தில் பெரு மகிழ்வுடன் சென்றார்.

விளக்கவுரை

****

சென்றுதம் பிரானைத் தாழ்ந்து

திருமுகம் முறுவல் செய்ய
ஒன்றிய விளையாட் டோரார்
உறுதிசெய் தணைந்தா ரென்றே
அன்றுநீ ராண்டு கொண்ட
அதனுக்குத் தகவே செய்தீர்
இன்றிவள் வெகுளி யெல்லாந்
தீர்த்தெழுந் தருளி என்றார். **#3248**

திருமுன்பு சென்று, தம் பெருமானைத் தாழ்ந்து, அவரது திருமுக மலர்வினால் முறுவல் செய்திடப் பெருமான் கொண்ட திருவிளையாட்டினை உணராராகித் தமக்காகப் பரவையின் புலவியை நீக்கி வந்தார் என்று நினைந்து, பெருமானை நோக்கி, `ஐயனே! அன்று நீர் என்னை அடிமையாக ஆண்டு கொண்டருளிய செயலிற்குத் தகவாகவே, இன்றும் பரவையினது புலவியைத் தீர்த்து இங்கு வந்தருளினீர்' என மொழிந்தார்.

விளக்கவுரை

****

அம்மொழி விளம்பு நம்பிக்
கையர்தா மருளிச் செய்வார்
நம்மைநீ சொல்ல நாம்போய்ப்
பரவைதன் இல்லம் நண்ணிக்
கொம்மைவெம் முலையி னாட்குன்
திறமெலாங் கூறக் கொள்ளாள்
வெம்மைதான் சொல்லி நாமே
வேண்டவும் மறுத்தா ளென்றார். **#3249**

அவ்வாறு விளம்பிய சுந்தரருக்கு, இறைவர் அருளிச் செய்வாராய், `நம்மை நீ தூதுபோம்படி சொல்ல, நாம் போய் பரவையாரது இல்லத்தை அடைந்து, பருத்த மார்பகங்களையுடைய அவளுக்கு உன் தன்மை எல்லாம் கூறியும், அவள் ஏற்றுக்கொண் டாள் இல்லை; நாம் பலகால் வேண்டி நின்றும் கடிய மொழிகளைக் கூறி மறுத்து விட்டாள்' என்றார்.

விளக்கவுரை

****

அண்ணலார் அருளிச் செய்யக்
கேட்டஆ ரூரர் தாமும்
துண்ணென நடுக்க முற்றே
தொழுதுநீ ரருளிச் செய்த
வண்ணமும் அடியா ளான

பரவையோ மறுப்பாள் நாங்கள்
எண்ணஆர் அடிமைக் கென்ப
தின்றறி வித்தீ ரென்று. **#3250**

பெருமான் இவ்வாறு அருளக் கேட்ட சுந்தரரும், திடீரென மெய்நடுக்கம் கொண்டு, தொழுது, நீர் அருளிச் செய்யவும் உமது அடியாளான பரவையோ மறுத்திடுவாள்? (மறுக்க வல்லள் அல்லள்) நாங்கள் உம் அடிமைத் திறத்தில் வைத்து எண்ணற்குரிய ரல்லோம் என்பதை இன்று அறிவித்தீர் என்று கூறி,

விளக்கவுரை

பரவையின் புலவி நீக்காமையின் அவளையும், தம் மோடு அவளை இயைவிக்காமையின் தம்மையும் அடிமைத் திறத்தில் வைத்து எண்ணவில்லை என்றார். நாங்கள் என்றது பரவையாரையும் உளப்படுத்தி நிற்பதாகும்.

வானவர் உய்ய வேண்டி
மறிகடல் நஞ்சை யுண்டீர்
தானவர் புரங்கள் வேவ
மூவரைத் தவிர்த்தாட் கொண்டீர்
நான்மறைச் சிறுவர்க் காகக்
காலனைக் காய்ந்து நட்டீர்
யான்மிகை யுமக்கின் றானால்
என்செய்வீர் போதா தென்றார். **#3251**

தேவர்கள் உய்ய வேண்டிக் கடலில் தோன்றிய நஞ்சை உண்டீர்; அசுரரது முப்புரங்களும் எரிந்து அவிய, அவற்றுள் இருந்த மூன்று அசுரர்களுக்கு மட்டும் ஊறு வாராது தவிர்த்தருளினீர்; நான்மறைவழி ஒழுகிடும் அந்தணச் சிறுவர் மார்க்கண்டேயருக்காக இயமனை உதைத்து, அவரை அடிமை கொண்டீர்; இவ்வாறாய அளவிலா ஆற்றலும் பேரருட் கருணையும் உடைய உமக்கு, நான் மிகையாய போது மீண்டு வாராது என் செய்வீர்? என்று கூறியவர்,

விளக்கவுரை

****

ஆவதே செய்தீர் இன்றென்
அடிமைநீர் வேண்டா விட்டால்
பாவியேன் தன்னை அன்று
வலியஆட் கொண்ட பற்றென்
நோவும்என் னழிவுங் கண்டீர்
நுடங்கிடை யவள்பால் இன்று

மேவுதல் செய்யீ ராகில்
விடுமுயிர் என்று வீழ்ந்தார். **#3252**

எங்களுக்கு ஆகவேண்டிய செயலையே செய்தீர்; இன்று எனது அடிமைத் தன்மையை வேண்டாது விடுப்பின், பாவி யேனைஅன்று வலிய வந்து ஆட்கொண்ட பற்று எற்றிற்கு? எனது வருத்த மிகுதியையும் மன அழிவையும் கண்டும் திருவுள்ளம் பற்றுகிலீர்! மீண்டும் சிறிய இடையையுடைய பரவைபால் சென்று, நீர் இன்று என்னைக் கூட்டி வைத்திடாவிடில் என் உயிர் நீங்கும் என்று கூறிப் பெருமானின் திருவடியில் வீழ்ந்தார்.

விளக்கவுரை

ஆகவே செய்தீர் என்பது, குறிப்பு மொழியாக மறுதலைப் பொருள் கொள நின்றது. இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

தம்பிரான் அதனைக் கண்டு
தரியாது தளர்ந்து வீழ்ந்த
நம்பியை அருளால் நோக்கி
நாம்இன்னம் அவள்பாற் போய்அக்
கொம்பினை இப்போ தேநீ
குறுகுமா கூறு கின்றோம்
வெம்புறு துயர்நீங் கென்றார்
வினையெலாம் விளைக்க வல்லார். **#3253**

பெருமான் அதனைக் கண்டு பொறுக்கலாற்றாது, தம்முன் தளர்ந்து வீழ்ந்த நம்பிகளை அருளால் நோக்கி, `நாம் இன்னமும் ஒருகால் பரவைபால் சென்று பூங்கொடிபோலும் அவளை இப்பொழுதே நீ சேருமாறு கூறுகின்றோம், வெதும்பும் நின் துயரத்தி னின்றும் நீங்குவாய்' என்று உயிர்கட்குற்ற வினைப்பயன்களை எல்லாம் தவறாது கூட்ட வல்ல பெருமானார் கூறியருளினார்.

விளக்கவுரை

****

மயங்கிய நண்பர் உய்ய
வாக்கெனும் மதுர வாய்மை
நயங்கிள ரமுதம் நல்க
நாவலூர் மன்னர் தாமும்
உயங்கிய கலக்கம் நீக்கி
யும்மடித் தொழும்ப னேனைப்
பயங்கெடுத்து இவ்வா றன்றோ
பணிகொள்வ தென்று போற்ற. **#3254**

திருமுன்பு வீழ்ந்து மயங்கிய நண்பர் சுந்தரர் உய்ந்திட, தமது திருவாக்கு என்னும் இனிய வாய்மொழியாகும் அமுதினைக் கொடுத்திடலும், திருநாவலூர் அரசராய அவரும் தம்மை வருத்திய கலக்கம் நீங்கி, எழுந்து, எம்பிரானே! உம் திருவடி பணியும் தொண்டனேனை அச்சத்தினினின்றும் நீக்கி, இவ்வண்ணமாக அன்றோ பணிகொள்வது எனக் கூறிப் போற்றுதலும்,

விளக்கவுரை

****

அன்பர்மேற் கருணை கூர
ஆண்டவர் மீண்டுஞ் செல்லப்
பின்புசென்றிறைஞ்சி நம்பி
பேதுற வோடு மீண்டார்
முன்புடன் போதா தாரும்
முறைமையிற் சேவித் தேகப்
பொன்புரி சடையார் மாதர்
புனிதமா ளிகையிற் சென்றார். **#3255**

அன்பர்மேல் திருக்கருணை கூர்ந்திட ஆண்டு கொண்ட பெருமானும், மீண்டும் தூதாகச் சென்றிடப் பின் சென்று அவரை வணங்கிய சுந்தரரும், உள்ளம் மயங்கிட மீண்டு வந்தார். முன்னர்ப் போற்றிசெய்து செல்லாத மற்றையவர்களும் முறைமை யாகப் பெருமானை வணங்கி உடன் போதரப் பொன்போல் மிளிரும் சடையையுடைய பெருமானாரும் பரவையாருடைய தூய மாளிகைக் குச் சென்றருளினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மதிநுதற் பரவை யார்தாம்
மறையவர் போன பின்பு
முதிர்மறை முனியாய் வந்தார்
அருளுடை முதல்வ ராகும்
.அதிசயம் பலவும் தோன்ற
அறிவுற்றே அஞ்சிக் கெட்டேன்
எதிர்மொழி எம்பி ரான்முன்
என்செய மறுத்தேன் என்பார். **#3256**

பிறைபோலும் நெற்றியையுடைய பரவையார், அந்தணர் வடிவுடன் முதன்முறை தூது வந்து சென்றபின்பு, முதிய முறைவழி ஒழுகும் முனிவராய் வந்த பெருமான் அருள் சிறந்த சிவபெருமானேயாகும் என்னும் அதிசயம் பலவும் மனத்தில் தோன்றிட, அந்நினைவால் அஞ்சி,

அந்தோ! கெட்டேன். எம்பிரான் முன்னராக எதிர்மொழி மறுத்துப் பேசி என்ன செயல் செய்தேன் என்று வருந்துவாராய்,

விளக்கவுரை

****

கண்துயில் எய்தார் வெய்ய
கையறு வெய்தி ஈங்குஇன்று
அண்டர்தம் பிரானார் தோழர்க்
காகஅர்ச் சிப்பார் கோலம்
கொண்டணைந் தவரை யானுட்
கொண்டிலேன் பாவி யேன்என்
றொண்சுடர் வாயி லேபார்த்
துழையரோ டழியும் போதில். **#3257**

கண்துயில் கொள்ளாராய், கொடுந் துயரம் அடைந்து, ஈங்கு இன்றிரவு தேவர்தம் பெருமான் தம் தோழருக்காகத் தம் திருமேனி தீண்டி வழிபடும் முனிவர் கோலம் கொண்டு வந்தரு ளினார். நான் பாவியேன் அதனை நினைந்து கருத்துட் கொண்டிலா திருந்தேனே! எனக் கூறித் தனது ஒளிபொருந்திய அழகிய திருவாயி லையே நோக்கியவாறு தன் தோழியருடன் பெரும் மனத்துயரால் மயங்கியிருந்தபொழுது.

விளக்கவுரை

****

வெறியுறு கொன்றை வேணி
விமலருந் தாமாந் தன்மை
அறிவுறு கோலத் தோடும்
மளவில்பல் பூத நாதர்
செறிவுறு தேவர் யோகர்
முனிவர்கள் சூழ்ந்து செல்ல
மறுவில்சீர்ப் பரவை யார்தம்
மாளிகை புகுந்தார் வந்து. **#3258**

மணம் மிக்க தேன்சொரியும் கொன்றை மாலையைத் திருச்சடையிலுடைய இறைவரும், தாமே வருகின்றார் என்னும் தன்மையை அறியக் கொள்ளும் உண்மை வடிவில் அளவில் லாத பல்பூதகணங்களும் புடைசூழத் தேவர்கள், யோகிகள், முனிவர் கள் முதலிய யாவரும் பின் வரக் குற்றம் எதுவுமில்லாத சீருடைய பரவையாரது மாளிகையில் வந்து புகுந்தருளினார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

பாரிடத் தலைவர் முன்னாம்
பல்கண நாதர் தேவர்
நேர்வுறு முனிவர் சித்தர்
இயக்கர்கள் நிறைத லாலே
பேரரு ளாள ரெய்தப்
பெற்றமா ளிகைதான் தென்பால்
சீர்வளர் கயிலை வெள்ளித்
திருமலை போன்ற தன்றே. **#3259**

பூதகணங்களின் தலைவரும், கணநாதரும், தேவர்களும், சிவபெருமானையன்றி எண்ணாத ஒழுகலாறு உடைய முனிவர்களும், சித்தர்களும், இயக்கர்களும், யாவரும் வந்து நிறைத லால், பேரருளாளராய எம் பெருமானார் சென்று அடைந்திடப் பெற்ற அம்மாளிகை தான், தென்னாட்டில் விளங்கிடும் சீர்வளரும் திருக் கயிலாயத் திருமலை போன்றிருந்தது.

விளக்கவுரை

****

ஐயர்அங் கணைந்த போதில்
அகிலலோ கத்துள் ளாரும்
எய்தியே செறிந்து சூழ
எதிர்கொண்ட பரவை யார்தாம்
மெய்யுறு நடுக்கத் தோடு
மிக்கெழும் மகிழ்ச்சி பொங்கச்
செய்யதா ளிணைமுன் சேர
விரைவினாற் சென்று வீழ்ந்தார். **#3260**

அனைத்துலகத்துள்ளாரும் வந்து நெருங்கிச் சூழப் பெருமானார் அங்கு எழுந்தருளியபொழுது, அப்பெருமானாரை எதிர்கொண்ட பரவையாரும், உடல் நடுக்கத்துடன் உள்ளத்து மிகுந்து எழும் மகிழ்ச்சி பொங்கிடச் செம்மையாய திருவடிகளைப் பொருந்த மிகு விரைவில் சென்று வீழ்ந்தார்.

விளக்கவுரை

****

அரிஅயற் கரியார் தாமும்
ஆயிழை யாரை நோக்கி
உரிமையால் ஊரன் ஏவ
மீளவும் உன்பால் வந்தோம்
முருகலர் குழலாய் இன்னம்

முன்புபோல் மறாதே நின்பால்
பிரிவுற வருந்து கின்றான்
வரப்பெற வேண்டும் என்றார். #3261

மால், அயனுக்கு அரிய பெருமானும், பரவை யாரைப் பார்த்தருளி, தோழன் என்ற உரிமையால் சுந்தரன் நம்மை ஏவ மீளவும் யாம் உன்பால் வந்தோம்; மணம் கமழும் கூந்தலை யுடைய பரவையே! முன்போல நீ மறுத்திடாது, பிரிவாற்றாது பெரிதும் வருந்தும் சுந்தரன், இங்கு வரப் பெறுதல் வேண்டும் என்றார்.

விளக்கவுரை

****

பெருந்தடங் கண்ணி னாரும்
பிரான்முன்பு மிகவும் அஞ்சி
வருந்திய வுள்ளத் தோடு
மலர்க்கரங் குழல்மேற் கொண்டே
அருந்திரு மறையோ ராகி
அணைந்தீர்முன் னடியேன் செய்த
இருந்தவப் பயனாம் என்ன
எய்திய நீரோ என்பார். #3262

நீண்டு அகன்ற கண்களையுடைய பரவையாரும், பெருமானிடத்துப் பெரிதும் அஞ்சி, வருந்திய உள்ளத்தோடு, மலர் போன்ற தமது கைகளை உச்சியிற் குவித்து, அரிய திருவுடைய அந்த ணராகி முன்வந்தவர், அடியேன் செய்த பெருந் தவத்தின் பயனாக இதுபொழுது வந்தருளிய நீரோ? என்று வினவியவாறு,

விளக்கவுரை

****

துளிவளர் கண்ணீர் வாரத்
தொழுதுவிண் ணப்பஞ் செய்வார்
ஒளிவளர் செய்ய பாதம்
வருந்தஓர் இரவு மாறா
தளிவரும் அன்பர்க் காக
அங்கொடிங் குழல்வீ ராகி
எளிவரு வீரு மானால்
என்செய்கேன் இசையா தென்றார். #3263

துளிகளாகக் கண்களில் நீர் வாரப் பெருமானாரை தொழுது விண்ணப்பஞ் செய்வார், `ஒளிவளரும் செவ்விய இத்திருவடிகள் வருந்திட இன்று ஓர் இரவு முழுதும் உமது அன்பருக்காக அங்கும்

இங்குமாக உழன்று அடியவருக்கு எளியராகி வருவீராயின், நான் இசையாது வேறு என் செய்ய வல்லேன்? என்றார்.

விளக்கவுரை

****

நங்கைநின் தன்மைக் கேற்கும்
நன்மையே மொழிந்தா யென்று
மங்கையோர் பாகம் வைத்த
வள்ளலார் விரைந்து போகத்
திங்கள் வாணுதலி னாருஞ்
சென்றுபின் னிறைஞ்சி மீண்டார்
எங்களை யாளும் நம்பி
தூதர்மீண் டேகு கின்றார். #3264

`பெண்ணே! நினது பெருமையாம் தகவிற்கேற்ப, நன்மையே மொழிந்தாய்' என்று பாராட்டி, உமையம்மையாரை ஒருகூற்றில் கொண்ட வள்ளலாரான பெருமான், விரைந்து போதலும், அதுகண்டு இளம்பிறை போலும் அழகிய நெற்றியினை உடைய பரவையாரும் எப்பெருமான் பின்சென்று வணங்கி மீள, எம்மையெல்லாம் உய்யக்கொள்ளும் சுந்தரரின் தூதர் மீண்டு செல்ல,

விளக்கவுரை

****

ஆதியும் மேலும் மால்அயன்
நாடற் கருளாதார்
தூதினில் ஏகித் தொண்டரை
யாளுந் தொழில்கண்டே
வீதியில் ஆடிப் பாடி
மகிழ்ந்தே மிடைகின்றார்
பூதியில் நீடும் பல்கண
நாதர் புகழ்வீரர். #3265

அடியையும், முடியையும் நாடிக் காண்டற்கு இயலாத பரம்பொருளாம் சிவபெருமான், தாமே தூதாகச் சென்று தமது தொண்டர் சுந்தரர் பெருமானை ஆட்கொண்டிடும் அருட் செய லைக் கண்டு, நீற்றின் ஒளியால் பெருகிய கோலமுடைய கணநாதர் களும், புகழுடைய பூத வீரர்களும் அவர் சென்றருளும் திருவீதியில் ஆடியும், பாடியும் மிக மகிழ்ந்தே நெருங்குகின்றார்களாய்,

விளக்கவுரை

****

அன்னவர் முன்னும் பின்னும்
மருங்கும் அணைவெய்த
மின்னிடை யார்பால் அன்பரை
உய்க்கும் விரைவோடும்
சென்னியில் நீடுங் கங்கை
ததும்பத் திருவாரூர்
மன்னவ னார்அம் மறையவ
னார்பால் வந்துற்றார். **#3266**

இவ்வாறாக அவர்கள் முன்னும், பின்னும், அயலேயும் வந்து சூழ்தர, மின்னல் போன்ற இடையையுடைய பரவையார் பாலாகத் தம் அன்பர் சுந்தரரைச் சேர்த்திடும் பொருட்டுக் கொண்ட விரைவுடன், திருமுடிமேல் கொண்டு விளங்கும் கங்கை ததும்பிட, ஆதி சைவராய சுந்தரரிடத்து வந்துசேர்ந்தார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

அன்பரும் என்பால் ஆவி
யளிக்கும் படிபோனார்
என்செய்து மீள்வார் இன்னமும்
என்றே யிடர்கூரப்
பொன்புரி முந்நூல் மார்பினர்
செல்லப் பொலிவீதி
முன்புற நேருங் கண்ணிணை
தானும் முகிழாரால். **#3267**

அன்பராய சுந்தரரும், என்னிடத்து உயிரைத் தந்தருளுதற்கெனச் சென்ற பெருமான், இனியும் என் செய்து மீள்வாரோ? என்ற இடர் பெருகப் பொன்போன்ற முப்புரிநூல் அணிந்த இறைவர் சென்றிடப் பொலிவுமிகும் வீதியினை முன்னாக நோக்கிக் கண் இமையாது நின்றார்.

விளக்கவுரை

முகிழ்த்தல் - இமைத்தல். மூடுதல்.

அந்நிலை மைக்கண் மன்மதன்
வாளிக் கழிவார்தம்
மன்னுயிர் நல்குந் தம்பெரு
மானார் வந்தெய்த
முன்னெதிர் சென்றே மூவுல
குஞ்சென் றடையுந்தாள்

சென்னியில் வைத்தென் சொல்லுவ
ரென்றே தெளியாதார். #3268
அதுபொழுது மன்மதன் ஓய்வின்றிச் சொரியும் மலர் அம்புகட்கு அழிபவராய சுந்தரருக்கு, உயிரைத் தந்தருளும் தம் இறைவர் வந்துசேர, அவர்திருமுன்பு சென்று, மூவுலகங்களும் பணியும் பெருமானது திருவடிகளை உச்சியிற்கொண்டு வணங்கி, என்ன சொல்லுவாரோ என்று தெளியாராகி,

விளக்கவுரை

****

எம்பெரு மானீர் என்னுயிர்
காவா திடர்செய்யும்
கொம்பனை யாள்பால் என்கொடு
வந்தீர் குறையென்னத்
தம்பெரு மானும் தாழ்குழல்
செற்றந் தணிவித்தோம்
நம்பி யினிப்போய் மற்றவள்
தன்பால் நணுகென்ன. #3269
`எம்பெருமானே! என் உயிர் காவாது இடர்செய்திடும் பூங்கொடிபோலும் பரவையிடமிருந்து என்ன மாற்றம் கொண்டு வந்தீர்? என்னலும், எம்பெருமானும் அவரை நோக்கித் `தாழ்ந்த கூந்தலையுடைய பரவையின் சினத்தைத் தணிவித்தோம்; சுந்தரனே! நீ இனிச் சென்று பரவையிடம் சேர்வாய்! என்னலும்,

விளக்கவுரை

****

நந்தி பிரானார் வந்தருள்
செய்ய நலமெய்தும்
சிந்தையு ளார்வங் கூர்களி
யெய்தித் திகழ்கின்றார்
பந்தமும் வீடும் தீரருள்
செய்யும் படிசெய்தீர்
எந்தைபி ரானே என்னினி
யென்பால் இடரென்றார். #3270
பெருமானார் இவ்வண்ணம் அருள் செய்திட, நலம் பெருகும் தமது சிந்தையில் மீதூர்ந்த மகிழ்ச்சி பொங்கத் திகழ்கின்ற சுந்தரர், எம்பெருமானே! உயிர்கட்குப் பாசக் கட்டையும் வீட்டையும் அருள் செய்துவரும் அத்தகவால், இதுவும் செய்தீர்! இனி அடியே னுக்கு என்ன

இடருளது? என்று போற்றினார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

என்றடி வீழும் நண்பர்தம்
அன்புக் கெளிவந்தார்
சென்றணை நீஅச் சேயிழை
பாலென் றருள்செய்து
வென்றுயர் சேமேல் வீதி
விடங்கப் பெருமாள் தம்
பொன்றிகழ் வாயிற் கோயில்
புகுந்தார் புவிவாழ. **#3271**

என்றுகூறித் திருவடிகளில் வீழும் தோழர்தம் அன்பிற்கு எளிவந்த பெருமானாரும் அவரை நோக்கி, இப்போதே `நீ அப்பரவைபால் சென்று சேர்க' என்று அருள்புரிந்து உயர்ந்த விடைமேல் வரும் ஆரூர் அமர்ந்த தியாகேசர், தமது பொன்திகழும் வாயிலுடைய கோயிலுள் உலகுய்யப் புகுந்தருளினார்.

விளக்கவுரை

****

தம்பிரா னார்பின் சென்று
தாழ்ந்தெழுந் தருளால் மீள்வார்
எம்பிரான் வல்ல வாறென்
எய்திய மகிழ்ச்சி யோடும்
வம்பலர் குழலார் செம்பொன்
மாளிகை வாயில் நோக்கி
நம்பியா ரூரர் காதல்
நயந்தெழுந் தருளும் போது. **#3272**

தமது பெருமான் பின்சென்று தாழ்ந்து எழுந்து அருளால் மீள்பவர், எம்பெருமானுடைய வல்லமை இருந்தவாறு என்? என்று தம்மிடத்துக் கொண்ட மகிழ்ச்சியோடும், மணம் கமழும் கூந்தலையுடைய பரவையாரின் செம்பொன்னின் மாளிகை வாயிலை நோக்கி, நம்பிகள் காதலுடன் நயந்து எழுந்தருளும் பொழுது,

விளக்கவுரை

****

முன்துயில் உணர்ந்து சூழ்ந்த
பரிசனம் மருங்கு மொய்ப்ப
மின்திகழ் பொலம்பூ மாரி

விண்ணவர் பொழிந்து வாழ்த்த
மன்றல்செய் மதுர சீத
சீகரங் கொண்டு மந்தத்
தென்றலும் எதிர்கொண் டெய்துஞ்
சேவகம் முன்பு காட்ட. **#3273**

முன்னமேயே துயில்நீங்கி எழுந்து சூழ்ந்த ஏவலர்கள் நெருங்கிவர, மின்னின் ஒளி திகழும் அழகிய பூமழையை வானவர் பொழிந்து வாழ்த்தெடுப்ப, நறுமணமும் இனிமையும் தவழும் இனிய குளிர்ந்த நீர்த்திவலைகளுடன் கூடி மெல்லிதாய் வீசிடும் தென்றற் காற்று எதிர்கொண்டு பணிசெய்யும் சேவகத் தன்மையை முன்புகாட்ட,

விளக்கவுரை

****

மாலைதண் கலவைச் சேறு
மான்மதச் சாந்து பொங்கும்
கோலநற் பசுங்கர்ப் பூரம்
குங்குமம் முதலா யுள்ள
சாலுமெய்க் கலன்கள் கூடச்
சாத்தும்பூ ணாடை வர்க்கம்
பாலனம் பிறவும் ஏந்தும்
பரிசனம் முன்பு செல்ல. **#3274**

பூமாலையும், குளிர்ந்த சந்தனக் கலவைச் சாந்தும், கத்தூரிக் குழம்பும், பசிய கற்பூரமும், குங்குமமும் முதலாக உள்ள திருமேனியில் கொள்ளுதற்குரிய, பொருந்திய அணி வகைகளும், அழகிய பட்டாடை வகைகளும், தகுதியுடைய பிறவும் தாங்கிவரும் ஏவலர் முன்சென்றிட,

விளக்கவுரை

****

இவ்வகை இவர்வந் தெய்த
எய்திய விருப்பி னோடும்
மைவளர் நெடுங்கண் ணாரும்
மாளிகை அடைய மன்னும்
செய்வினை அலங்கா ரத்துச்
சிறப்பணி பலவுஞ் செய்து
நெய்வளர் விளக்குத் தூபம்
நிறைகுடம் நிரைத்துப் பின்னும். **#3275**

இவ்வகையாய சிறப்புக்கள் பொருந்த எம்பிரான் சுந்தரர் வந்து சேர, இதற்கிடையில் சுந்தரரை அடைந்திடும் விருப்பத் துடன் மை பூசப்

பெற்ற நீண்ட வரிவிழிகளை உடைய பரவையாரும், தமது மாளிகை முழுவதும் விளங்கிடச் செய்திடும் அழகிய அணிவகைகள் பலவும் செய்து, நெய் வார்த்து வளர்ந்தெரியும் விளக்கு, நறுமணப்புகை, நிறைகுடம் ஆகிய இவைகள் நிரை நிரையாக வைத்து, மேலும்,

விளக்கவுரை

****

பூமலி நறும்பொன் தாமம்
புனைமணிக் கோவை நாற்றிக்
காமர்பொற் சுண்ணம் வீசிக்
கமழ்நறுஞ் சாந்து நீவித்
தூமலர் வீதி சூழ்ந்த
தோகையர் வாழ்த்தத் தாமும்
மாமணி வாயில் முன்பு
வந்தெதி ரேற்று நின்றார். **#3276**

பூக்கள் மலர்ந்த பொன்நிற மாலைகள், நன்கு அழகு பெறக் கட்டிய மணிமாலைகள் ஆகியவற்றைத் தூக்கி, அழகிய பொற்சுண்ணம் எங்கும் வீசி, வாசனை உடைய சந்தனத்தால் மெழுகி, தூய மலர்நிறைந்த அத்திருவீதியில் தோழிப் பெண்கள் வாழ்த்துக்கள் பலவும் மொழியத் தாமும் பேரழகுடன் சிறந்த முத்து மணிவாயில் முன்பாக வந்து, சுந்தரரை எதிர் வரவேற்று நின்றார் பரவையார்.

விளக்கவுரை

இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

வண்டுலாங் குழலார் முன்பு
வன்தொண்டர் வந்து கூடக்
கண்டபோ துள்ளங் காதல்
வெள்ளத்தின் கரைகா ணாது
கொண்டநாண் அச்சங் கூர
வணங்கஅக் குரிசி லாரும்
தண்டளிர்ச் செங்கை பற்றிக்
கொண்டுமா ளிகையுள் சார்ந்தார். **#3277**

இங்ஙனம் எதிர்கொள்ளும் பரவையார் திருமுன்பு, சுந்தரர் வந்து சேரக் கண்டபோது, தமது உள்ளத்து எழுந்த காதல் வெள்ளம் கரை காணாதவாறு பெருகிட, நாணமும், அச்சமும் மீதூர வணங்கிடலும், பெருமைமிக்க நம்பியாரூரரும் அவர்தம் குளிர்ந்த தளிர் போலும் சிவந்த கைகளைப் பற்றிக்கொண்டு மாளிகையின் உள்ளே புகுந்தார்.

விளக்கவுரை

****

இருவருந் தம்பி ரானார்
தாமிடை யாடிச் செய்த
திருவருட் கருணை வெள்ளத்
திறத்தினைப் போற்றிச் சிந்தை
மருவிய வின்ப வெள்ளத்
தழுந்திய புணர்ச்சி வாய்ப்ப
ஒருவரு ளொருவர் மேவு
நிலைமையி லுயிரொன் றானார். **#3278**

பரவையாரும் சுந்தரரும் தங்கள் பெருமானார், தம்மிடத்துச் செய்தருளிய திருவருளின் கருணை வெள்ளத் திறத்தினைப் போற்றித் தத்தம் சிந்தையுள் பொருந்திய இன்ப வெள்ளத்துள் அழுந்தி ஒருமையுற்ற அன்பினால் ஒருவரில் ஒருவர் மேவிய நிலையில் உயிர் ஒன்றானார்.

விளக்கவுரை

****

ஆரணக் கமலக் கோயின்
மேவிப்புற் றிடங்கொண் டாண்ட
நீரணி வேணி யாரை
. நிரந்தரம் பணிந்து போற்றிப்
பாரணி விளக்குஞ் செஞ்சொற்
பதிகமா லைகளுஞ் சாத்தித்
தாரணி மணிப்பூண் மார்பர்
தாமகிழ்ந் திருந்த நாளில். **#3279**

மறைகளாய பூங்கோயிலுள் பொருந்திப் புற்றிடங் கொண்டு ஆண்டருளிய கங்கைநீர் அணிந்த சடையையுடைய பெரு மானாரை நாளும் பணிந்து போற்றி, இந்நிலவுலகைக் திருவருள் நீழலாம் அழகில் விளங்கிடச் செய்யும் செஞ்சொல் பாமாலைகளைப் பாடிச் சாத்தி, மாலையணிந்த அழகிய முந்நூல் மார்பராய சுந்தரர் திருவாரூரில் மகிழ்ந்திருந்த நாள்களில்,

விளக்கவுரை

இதுபோது அருளிய பதிகங்கள் இன்னதெனத் தெரிய வில்லை.

நம்பியா ரூரர் நெஞ்சில்
நடுக்கம்ஒன் றின்றி நின்று
தம்பிரா னாரைத் தூது
தையல்பால் விட்டார் என்னும்
இம்பரின் மிக்க வார்த்தை

ஏயர்கோ னார்தாங் கேட்டு
வெம்பினார் அதிச யித்தார்
வெருவினார் விளம்ப லுற்றார். #3280

சுந்தரர், தமது நெஞ்சில் கொஞ்சமும் நடுக்கம் ஒன் றும் இல்லாது, எம்பெருமானை ஒரு பெண்ணிடம் தூதாக விட்டார் என்ற, இவ்வுலகில் மிகுமேம்பாட்டுடன் பேசப்படும் வார்த்தையை, ஏயர்கோன் கலிக்காமர் கேட்டு வெம்பினார்; அதிசயம் கொண்டார்; அச்சமுற்றார்; இதனைச் சொல்லலுமானார்.

விளக்கவுரை

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடைய பெரு மானை, யாவர்க்கும் கீழாயதொரு உலகியல் வயப்பட்ட செய்திக்கா கத் தூது விடுக்கின்றோமே என்று அஞ்சியிருக்க வேண்டும்; நடுக் கமும் கொண்டிருக்க வேண்டும்; அவ்வாறன்றித் துணிந்து தூதுவிட் டார் என்பார், `நடுக்கம் ஒன்று இன்றி' என்றார்.

நாயனை அடியான் ஏவும்
காரியம் நன்று சாலம்
ஏயுமென் றிதனைச் செய்வான்
தொண்டனாம் என்னே பாவம்
பேயனேன் பொறுக்க வொண்ணாப்
பிழையினைச் செவியால் கேட்ப
தாயின பின்னும் மாயா
திருந்ததென் னாவி யென்பார். #3281

`யாவர்க்கும் மேலாய தலைவனை ஒரு அடியனாய சுந்தரன் ஏவிய செயல் நன்றாயிருக்கிறது! மிகவும் இது பொருந்தும் என இச்செயலைச் செய்தான் ஒரு தொண்டனாம்! இது என்ன செயல்! பெரும் பாவமே! பொறுக்க முடியாத இப்பிழையினைப் பேயனே னான என் செவியால் கேட்க நேர்ந்தும், நீங்காதிருந்தது என் உயிர்! என்று சொல்லுவார்,

விளக்கவுரை

****

காரிகை தன்பால் செல்லும்
காதலால் ஒருவன் ஏவப்
பாரிடை நடந்து செய்ய
பாததா மரைகள் நோவத்
தேரணி வீதியூடு செல்வது
வருவ தாகி
ஓரிர வெல்லாம் தூதுக்

குழல்வராம் ஒருவ ரென்று. #3282
ஒரு பெண்ணிடத்துச் செல்லும் காதலால் ஒருவன் ஏவ, இவ்வுலகிடை நடந்து, செம்மையாய திருவடித் தாமரைகள் நோ வுறத் தேர் ஓடும் அழகிய வீதியில் செல்வதும் வருவதுமாக ஓர் இரவு முழுவதும் தூதிற்கு உழன்று திரிவாராம் எம் பெருமானார் என மொழிந்து, பின்னும்,

விளக்கவுரை
****

நம்பர்தாம் அடியார் ஆற்றாராகியே
நண்ணி னாரேல்
உம்பரார் கோனும் மாலும்அயனுநேர்
உணர வொண்ணா
எம்பிரா னிசைந்தார் ஏவப்
பெறுவதே இதனுக் குள்ளம்
கம்பியா தவளை யான்முன்
காணுநாள் எந்நா ளென்று. #3283
எம்பெருமான் தமது அடியவரின் துயரம் தாங் கொணாது முன் வந்தார் என்றாலும், அத்துடன் தேவர்களின் அரச னாய இந்திரனும், அயனும், திருமாலும் அறிய ஒண்ணாத எம்பிரான் தூது போதற்கு இசைந்தார் என்றாலும் அவரை அவ்வாறு தூது செல்ல விடுத்திடவுமாமோ? இக்கொடுஞ் செயற்குச் சிறிதும் உள்ளம் நடுக்க முறாதவனை, யான் காணும் நாளும் எந்நாளோ? என எண்ணிய வராய்,

விளக்கவுரை
****

அரிவைகா ரணத்தி னாலே
ஆளுடைப் பரமர் தம்மை
இரவினில் தூது போக
ஏவியங் கிருந்தான் தன்னை
வரவெதிர் காண்பே னாகில்
வருவதென் னாங்கொல் என்று
விரவிய செற்றம் பற்றி
விள்ளும்உள் ளத்த ராகி. #3284
பெண் ஒருத்தியின் காரணத்தினால் ஆளுடைய பெருமானார் தம்மை இரவிலே தூது போம்படி விடுத்து, அங்கு இருந்தவனை, என் எதிரே வரக் காணின் என்ன விளைவு நேருமோ? என்று பெருகிய சினம் வெடிப்பது போன்ற உள்ளத்தராகி,

விளக்கவுரை

****

ஈறிலாப் புகழின் ஓங்கும்
ஏயர்கோ னார்தாம் எண்ணப்
பேறிது பெற்றார் கேட்டுப்
பிழையுடன் படுவா ராகி
வேறினி யிதற்குத் தீர்வு
வேண்டுவார் விரிபூங் கொன்றை
ஆறிடு சடைய னாருக்
கதனைவிண் ணப்பஞ் செய்து. **#3285**

ஈறில்லாத புகழோடு ஓங்கும் ஏயர்கோன் கலிக்காம நாயனார் மேற்கூறியவாறு எண்ணும் பேற்றைப் பெற்ற சுந்தரர் கேட்டுத் தாம் செய்தது தவறு என்று உடன்பட்டவராய், இப்பிழைக்குத் தீர்வினை வேண்டிக் கொள்வாராகிய அவர், விரிந்த பூங்கொன்றை யுடன் கங்கையும் விளங்கி நிற்கும் சடையராய சிவபெருமானாரிடம் அதனை விண்ணப்பம் செய்து,

விளக்கவுரை

தாம் செய்தது தவறு என்பதை முழுமையாக உணர்ந்தமை யும், அத்தவறு காரணமாக ஏயர்கோன் நாயனார் தம்மைச் சினந்தது ஏற்றுக் கொள்ளுதற்குரியதே என்பதையும் திருவுளம் கொண்டார். ஆதலின், அவர்தம் எண்ணமே தமக்குப் பேறாகும் என்று கருதினார் சுந்தரர். அவர்கொண்ட சினம், தாம் தம் தவற்றினின்றும் நீங்கக் காரண மாயினமையின், அதுவே அவர் பெற்ற பேறுமாயிற்று.

நாள்தொறும் பணிந்து போற்ற
நாதரும் அதனை நோக்கி
நீடிய தொண்டர் தம்முள்
இருவரும் மேவும் நீர்மை
கூடுதல் புரிவார் ஏயர்
குரிசிலார் தம்பால் மேனி
வாடுறு சூலை தன்னை
அருளினார் வருந்து மாற்றால். **#3286**

நாள்தோறும் தமது தவற்றை நினைந்து போற்றிட, இறைவர், நீளநினைந்து வழிபட்டுவரும் இருபெருந் தொண்டர்களும் கூடி மகிழவேண்டும் எனும் திருவுளம் கொண்டவராய், ஏயர்கோன் கலிக்காமரிடத்து வாடுறும் சூலை நோயினைச் சேருமாறு அருள் செய்தார்.

விளக்கவுரை

இவ்வெட்டுப் பாடல்களும் ஒருமுடிபின.

ஏதமில் பெருமைச் செய்கை
ஏயர்தம் பெருமான் பக்கல்
ஆதியார் ஏவும் சூலை
அனல்செய்வேல் குடைவ தென்ன
வேதனை மேன்மேற் செய்ய
மிகஅதற் குடைந்து வீழ்ந்து
பூதநா யகர்தம் பொற்றாள்
பற்றியே போற்று கின்றார். **#3287**

குற்றம் ஏதும் இல்லாத பெருமையின் செய்கை யுடைய ஏயர்கோன் கலிக்காம நாயனாரிடத்து, இறைவர் அருளிய சூலைநோய், நெருப்பாலாகிய வேல் வயிற்றைக் குடைவது போன்ற வேதனையை மேன்மேல் செய்திட, அதனைப் பொறுக்கலாற்றாது அவர் மிக வருந்திச் சோர்வுற்று வீழ்ந்து, உயிர்கட்கெல்லாம் தலைவர் ஆன சிவபெருமானின் திருவடிகளைப் பற்றியவாறு போற்றுவாராய்,

விளக்கவுரை

சூலைநோயின் துன்பத்தை நாவரசர் அருளுமாற்றான் நன்கறியலாம். `புண்ணிலாம் பெரும் புழையில் கனல் நுழைந்தால்' (கம்பராமா. கையடைப் படலம், 12) என உவமை காட்டிய துயரினும், `அனல் செய்வேல் குடைவதென்ன' என்ற உவமை காட்டும் துயரம் மிக்கதாகின்றது. அனல்செய்வேல் - அனலில் காய்ச்சிய வேல் என்றே பலரும் விளக்கினர். நெருப்பால் ஆகிய வேல் எனில் மேலும் சிறக்கு மன்றோ? இஃது இல்பொருள் உவமையாம்.

சிந்தையால் வாக்கால் அன்பர்
திருந்தடி போற்றி செய்ய
எந்தமை யாளும் ஏயர்
காவலர் தம்பால் ஈசர்
வந்துனை வருத்துஞ் சூலை
வன்தொண்டன் தீர்க்கி லன்றி
முந்துற வொழியா தென்று
மொழிந்தருள் செய்யக் கேட்டு. **#3288**

மனத்தாலும் மொழியாலும் பெருமானாருடைய திருந்திய திருவடிகளைப் போற்றி வரும் எம்மையாளும் ஏயர்கோன் கலிக்காமனார் பாடல் இறைவர் தோன்றி, `உன்னை வருத்திடும் சூலைநோய் சுந்தரன் தீர்த்தார் அன்றி, வேறு எவ்வாற்றானும் நீங்காது' என்று மொழிந்து அருள் செய்திட, அதுகேட்டு,

விளக்கவுரை

****

எம்பிரான் எந்தை தந்தை
தந்தைஎங் கூட்ட மெல்லாம்
தம்பிரான் நீரே யென்று
வழிவழி சார்ந்து வாழும்
இம்பரின் மிக்க வாழ்க்கை
யென்னைநின் றீருஞ் சூலை
வம்பென ஆண்டு கொண்டான்
ஒருவனோ தீர்ப்பான் வந்து. **#3289**

`எம்பெருமானே! எம் தந்தை, அவர் தந்தை, இவர் முதலாய கூட்டமெல்லம் நம் தலைவர் நீரேயென்று வழிவழிச் சார்ந்து வாழும் இந்த உலகில், மிக மேலான வாழ்க்கை உடைய என்னை நின்று அறுத்திடும் இச் சூலைநோயை, வல்வழக்கு இட்டு ஆட்கொள்ளப் பெற்றான் ஒருவனோ வந்து தீர்ப்பான்?'

விளக்கவுரை

எம்பிரான் நீரே என்றவிடத்து வந்த ஏகாரம் தேற்றப் பொருளது. `உற்றவரும் உறுதுணையும் நீயே' என்புழிப் போல. இனிப் பிரிநிலையுமாம். `உன்னையல்லால் பிறதெய்வம் உள்கேன்' என்புழிப்போல. வம்பு - புதுமை; மையல் - மானுடமாய் மயங்கும் வழி. ஐயனே தடுத்தாட் கொண்டு அருள் செய்ய வேண்டும் என விண்ணப்பித்துக்கொண்ட விண்ணப்பத்தைத் தானே மறந்தவிடத்தும், பெருமான் தம் கருணையால் ஓலைகொண்டு வந்தருளி உணர்த்தியும் உணராது, அவரைப் பித்தன் என மொழிந்தும், திருக்கரத்திலிருந்த ஆவணத்தைக் கிழித்தெறிந்தும் செய்த துரிசுகளையெல்லாம் இறை வன் பொறுத்தருளி ஆட்கொள்ளப்பெற்ற நிலை சுந்தரருக்குக் கிடைத் தது. இவ்வாறு வலிய வந்து ஆட்கொள்ளப் பெற்றமையாலேயே `வன்தொண்டன்' எனப் பெயர்பெற்றமையும் கருதுக. தாம் முன்பின் நினையாத நிலையில் இறைவன் குருந்த மரத்தடியில் குருமூர்த்தியாக வந்து ஆட்கொண்டருளினமையின் `வம்பெனப்பழுத்து' என்றார் வாதவூர் அடிகள்; இறைவன் வம்பென (புதுமையாக) வந்தும், தாம் `புவனியிற் சேவடி தீண்டினன் காண்க, அவன் எனை ஆட்கொண்டு அருளினன் காண்க, சிவன் என யானும் தேறினன் காண்க' என அருளுகின்றார். இத்தகைய குழைந்த மனப் பக்குவத்தால் அவர் `வம்பெனப்பழுத்து' என்றார். சுந்தரர்பால் அமைந்த சூழ்நிலை வேறாதலின் `வம்பென ஆண்டு கொண்டான்' என்றார் சேக்கிழார்.

மற்றவன் தீர்க்கில் தீரா
தொழிந்தெனை வருத்தல் நன்றால்
பெற்றம்மே லுயர்த்தீர் செய்யும்
பெருமையை அறிந்தார் யாரே
உற்றவன் தொண்டற் கேயாம்
உறுதியே செய்தீர் என்னக்
கற்றைவார் சடையார் தாமும்
அவர்முன்பு கரந்தா ரன்றே. **#3290**

`விடைக்கொடியை உடைய பெருமானே! மற்று அந்தச் சுந்தரன் தீர்ப்பதினும் இச்சூலைநோய் தீராதொழிந்து எனைவருத்துதல் நன்றாம்; நீர் செய்திடும் பெருமைகளை உயர்ந்தவர் யாவரே? உம்பால் உற்ற சுந்தரனுக்கே மேன்மையான உறுதியும் செய் தீர்!' என்னலும், அவ்வளவில் தொகுதியாக நீண்ட சடையையுடைய பெருமானும் அவர் முன்பு நின்று மறைந்தருளினார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

வன்தொண்டர் தம்பால் சென்று
வள்ளலா ரருளிச் செய்வார்
இன்றுநம் ஏவ லாலே
ஏயர்கோ னுற்ற சூலை
சென்றுநீ தீர்ப்பா யாகென்
றருள்செயச் சிந்தை யோடு
நன்றுமெய்ம் மகிழ்ந்து போற்றி
வணங்கினார் நாவ லூரர். **#3291**

சுந்தரரிடத்துச் சென்று, இறைவர் அருளிச் செய் வாராய், சுந்தரனே! இன்று நமது ஏவலால் ஏயர்கோன் கலிக்காமனா ரிடத்துப் பொருந்திய சூலை நோயை நீ சென்று தீர்ப்பாயாக என்று அருள் புரிந்திட, மனமும் உடலும் ஒருங்கு மகிழ்ந்து போற்றி வணங் கினார் திருநாவலூரர்.

விளக்கவுரை

****

அண்ணலார் அருளிச் செய்து
நீங்கஆரூரர் தாமும்
விண்ணவர் தம்பி ரானார்
ஏவலால் விரைந்து செல்வார்
கண்ணிய மனத்தின் மேவுங்
காதலாற் கலிக்கா மர்க்குத்

திண்ணிய சூலை தீர்க்க
வருந்திறஞ் செப்பி விட்டார். #3292

இவ்வாறு பெருமான் அருள்புரிந்து மறைந்திடச் சுந்தரரும் தேவர்க்கெல்லாம் தேவனாய பெருமானின் அருளாணை யின் வண்ணம் விரைந்து சென்று ஏயர்கோனார்பால் கொண்ட காத லால் அவருக்கு உற்ற கொடுமை பயந்திடும் சூலைநோயைத் தாம் தீர்த் திட வரும் தன்மையை முன்சென்று அறிவித்திடத் தூதுவரை அனுப்பினார்.

விளக்கவுரை

****

நாதர்தம் அருளால் நண்ணும்
சூலையும் அவர்பாற் கேட்ட
கேதமும் வருத்த மீண்டும்
வன்தொண்டர் வரவு கேட்டுத்
தூதனாய் எம்பி ரானை
ஏவினான் சூலை தீர்க்கும்
ஏதமிங் கெய்த வெய்தில்
யான்செய்வது என்னாம் என்பார். #3293

பெருமானது அருளால் வந்திடும் சூலையும் அவர் பால் கேட்ட துன்புறுசொல்லும் தம்மை வருத்திட, அதன்மேலும், சுந்தரர் சூலைநோயைத் தீர்த்திட வருகின்றார் என்ற வார்த்தையும் கேட்டு தூதனாக எம்பெருமானைச் செலுத்திய சுந்தரன் எனக்குற்ற சூலைநோயைத் தீர்த்திட வரும் துன்பமும் நேர்ந்தால் யான் என் செய்வது? எனக் கருதியவராய்,

விளக்கவுரை

கேதம் - துன்பம்; ஈண்டுக் கேட்ட என்பதால் துன்புறுதற் குரிய சொல்லாயிற்று. `சூலை வன்தொண்டன் தீர்க்கிலன்றி முற்றுற ஒழியாது' என்பதே கேதப்பட வரும் மொழியாம்.

மற்றவன் இங்கு வந்து
தீர்ப்பதன் முன்நான் மாயப்
பற்றிநின் றென்னை நீங்காப்
பாதகச் சூலை தன்னை
உற்றஇவ் வயிற்றி னோடும்
கிழிப்பன்என் றுடைவாள் தன்னால்
செற்றிட வுயிரி னோடும்
சூலையுந் தீர்ந்த தன்றே. #3294

மற்று அந்தச் சுந்தரன் வந்து இச்சூலை நோயைத் தீர்ப்பதன்முன், நான்

மாய்ந்திடும் அளவு என்னைப் பற்றி நின்று வருத்தும் இச்சூலை நோயை அஃது அடைந்த இவ் வயிற்றோடும் கிழிப்பேன் என்று கூறி, உடை வாளினால் வயிற்றில் கீறிட, அவரது உயிருடன் சூலை நோயும் தீர்ந்தது.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

கருதரும் பெருமை நீர்மைக்
கலிக்காமர் தேவி யாரும்
பொருவருங் கணவ ரோடு
போவது புரியுங் காலை
மருவிஇங் கணைந்தார் நம்பி
என்றுமுன் வந்தார் கூற
ஒருவரும் அழுதல் செய்யா
தொழிகவென் றுரைத்துப் பின்னும். **#3295**

நினைத்தற்கரிய பெருமையும் பண்பும் மிக்க கலிக்காம நாயனார் மனைவியாரும், அதுகண்டு, தமது ஒப்பற்ற கணவரோடு தம் உயிரை நீக்கி, அவருடன் போவது துணிந்து, அதற்கென ஆயத்தம் செய்திடும் வேளை, நம்பிகள் விரைவில் அங்கு வரவிருக்கும் செய்தியை, அவர் முன்னாக வந்த சிலர்கூற, அதுகேட்ட அம்மனைவியாரும் ஒருவரும் இங்கு அழுதல் செய்யாது இருத்தல் வேண்டும் என்று கூறிப் பின்னரும்,

விளக்கவுரை

****

கணவர்தஞ் செய்கை தன்னைக்
கரந்துகா வலரை நம்பி
அணைவுறும் பொழுது சால
அலங்கரித் தெதிர்போம் என்னப்
புணர்நிலை வாயில் தீபம்
பூரண கும்பம் வைத்துத்
துணர்மலர் மாலை தூக்கித்
தொழுதெதிர் கொள்ளச் சென்றார். **#3296**

கணவனார்தம் செயலை மறைத்துச் சுந்தரர் தம் மாளிகைக்கு வர அணையும்பொழுது, அதனை நன்கு அணிசெய்து வரவேற்றிடுவோம் என்று ஏவலரிடம் கூறிட, அவர்களும் அவர் விரும்பியவாறே, அழகு சிறந்த அம்மாளிகை வாயிலில் நல்விளக்கும் நிறை குடமும் வைத்துப் பசிய மகரந்தப் பொடி பரக்கும் மலர்மாலை களைத் தொங்கவிட்டு வணங்கி எதிர்கொண்டிட முன்சென்றார்கள்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

செம்மைசேர் சிந்தை மாந்தர்
சென்றெதிர் கொண்டு போற்ற
நம்மையா ளுடைய நம்பி
நகைமுகம் அவர்க்கு நல்கி
மெய்ம்மையாம் விருப்பி னோடும்
மேவியுட் புகுந்து மிக்க
மொய்ம்மலர்த் தவிசின் மீது
முகம்மலர்ந் திருந்த போது. **#3297**

செம்மை சேர்ந்த சிந்தை உடைய அப்பணியாளர் களும் பிறரும் சென்று சுந்தரரை எதிர்கொண்டு போற்றிட, அவரும் புன்முறுவல் செய்து மகிழ்வித்து, உண்மையாம் விருப்பினோடும் சென்று மாளிகை உள்ளே புகுந்து, மலர்பரப்பிய இருக்கையில் முக மலர்ச்சியுடன் இருந்தபொழுது,

விளக்கவுரை

****

பான்மைஅர்ச் சனைக ளெல்லாம்
பண்பினில் வழாமை ஏய்ந்த
நான்மறை தொடர்ந்த வாய்மை
நம்பியா ரூரர் கொண்டிங்
கியான்மிக வருந்து கின்றேன்
ஏயர்கோ னார்தாம் உற்ற
ஊனவெஞ் சூலை நீக்கி
யுடனிருப் பதனுக் கென்றார். **#3298**

முறையாகவும் பண்பு மேம்பாட்டுடனும் வழிபா டாற்றிப் போற்றிடப் பொருந்திய நான்மறைகளின் பிழிவாகத் தொடர்ந்து தமிழ்ப் பதிகங்களை அருளிவரும் சுந்தரர் அதனை ஏற்றுக் கொண்டு, ஏயர்கோனாருக்கு உற்ற மிகக் கொடுமையாய சூலை நோயை நீக்கி அவருடன் இருந்திடலன்றி, இங்கு இனித் தனித்திருக்க வருந்துகிறேன் என்றருளினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மாதர்தம் ஏவ லாலே
மனைத்தொழில் மாக்கள் மற்றிங்
கேதமொன் றில்லை யுள்ளே
பள்ளிகொள் கின்றார் என்னத்

தீதணை வில்லை யேனும்
என்மனந் தெருளா தின்னம்
ஆதலால் அவரைக் காண
வேண்டுமென் றருளிச் செய்தார். **#3299**

ஏயர்கோனார்தம் மனைவியாரின் ஏவலால், மனையில் பணிபுரிந்திடும் மக்கள், `மற்று இங்கு ஏதும் குறை ஒன்றும் இல்லை; அவர் உள்ளே பள்ளி கொள்கின்றார், என்றிடலும், நம்பிகள் அவருக்குத் தீங்கு ஒன்றும் இல்லையெனினும், மனம் தெளிவுற வில்லை, ஆதலால் நான் அவரை உடன் காணவேண்டும் என்று அருளிச் செய்தார்.

விளக்கவுரை

****

வன்தொண்டர் பின்னுங் கூற
மற்றவர் தம்மைக் காட்டத்
துன்றிய குருதி சோரத்
தொடர்குடர் சொரிந்துள் ளாவி
பொன்றியே கிடந்தார் தம்மைக்
கண்டபின் புகுந்த வாறு
நன்றென மொழிந்து நானும்
நண்ணுவேன் இவர்முன் பென்பார். **#3300**

சுந்தரர் பெருமான் பின்னரும் அவரைக் காண வேண்டுமென மொழிந்திட, அப்பணியாளர்கள், அவரை அழைத்துச் சென்று காட்டிட, வடிந்திட்ட குருதி சோர்ந்திடத் தொடர்ந்த குடல், அறுபட்டு வெளிப்போந்திட, உயிர்நீங்கிக் கிடக்கும் ஏயர்கோனாரைக் கண்ட அளவில், `இங்கு நேர்ந்தவாறு நன்று' என்று மொழிந்து, நானும் இவர்முன் செல்வேன் என்பார்,

விளக்கவுரை

****

கோளுறு மனத்த ராகிக்
குற்றுடை வாளைப் பற்ற
ஆளுடைத் தம்பி ரானார்
அருளினால் அவரும் உய்ந்து
கேளிரே யாகிக் கெட்டேன்
எனவிரைந் தெழுந்து கையில்
வாளினைப் பிடித்துக் கொள்ள
வன்தொண்டர் வணங்கி வீழ்ந்தார். **#3301**

தாம் மனம் கொண்ட குறிக்கோளின்றும் பிழையாத வராய், உயிரை

நீக்குதற்கென உடைவாளைப் பற்றிட, அவ்வளவில்
உயிர்களையெல்லாம் அடிமையாகக் கொண்டருளும் பெருமானார்
அருளினால் உயிர்பெற்ற ஏயர்கோனார், சுந்தரரைக் கண்ட அளவில்
`என் நட்புடையவரேயாகவும் நான் கெட்டேன்' என்று விரைந்து எழுந்து,
அவர் திருக்கையில் கொண்ட வாளினைப் பிடித்திட, அவரும்
ஏயர்கோன் பெருமானாரை வணங்கி அவர்முன்பு வீழ்ந்தார்.

விளக்கவுரை

இறைவரிடத்தேயன்றி அவர்தம் அடியவர்களிடத்தும் இத்தகைய கேண்மையும் கிழமையும் கொண்ட சுந்தரரை, யான் அறியாது கெட்டேன் என்பார், கெட்டேன் என்றார். தூது சென்ற இறைவரே, அவரைப் பற்றி அருளவும், தாம் மனங்கொள்ளாதிருந் தமையும், உயிர் துறக்க நினைந்தமையும் மிகக்கொடியது என்ப தையும் `கெட்டேன்' என்றார். எனவே உணர்வாலும் உயிராலும் கெட நேர்ந்தமை கூறினாராயிற்று.இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மற்றவர் வணங்கி வீழ
வாளினை மாற்றி ஏயர்
கொற்றவ னாரும் நம்பி
குரைகழல் பணிந்து வீழ்ந்தார்
அற்றைநாள் நிகழ்ந்த இந்த
அதிசயங் கண்டு வானோர்
பொற்றட மலரின் மாரி
பொழிந்தனர் புவனம் போற்ற. **#3302**

சுந்தரர் பெருமான் வணங்க, ஏயர்கோன் பெருமா னாரும் தாம் பற்றிய
வாளினை அகற்றிச் சுந்தரர் பெருமானின் மெல் லென இசைத்திடும்
சிலம்பணிந்த திருவடி மலர்களில் பணிந்து வீழ்ந் தார். அன்றைய நாளில்
நடந்த இவ்வியத்தகு செயலைக் கண்ட தேவர்கள், இவ்வுலகம்
போற்றிடக் கற்பக மலர்களை மழையெனப் பொழிந்தனர்.

விளக்கவுரை

****

இருவரும் எழுந்து புல்லி
இடைவிடா நண்பி னாலே
பொருவரு மகிழ்ச்சி பொங்கத்
திருப்புன்கூர்ப் புனிதர் பாதம்
மருவினர் போற்றி நின்று
வன்தொண்டர் தம்பி ரானார்
அருளினை நினைந்தே அந்த

ணாளன்என் றெடுத்துப் பாடி. **#3303**

இருவருமெழுந்து ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக் கொண்டு, இடைவிடாத நட்பினால் ஒப்பற்ற மகிழ்ச்சி பொங் கிடத் திருப்புன்கூர்க் கோயிலைச் சேர்ந்து, அங்கு வீற்றிருந்தருளும் பெருமானாரின் திருவடிகளைப் போற்றி நின்றனர். வன்தொண்டராம் சுந்தரர் பெருமான், சிவபெருமானாரது திருவருளினை நினைந்து `அந்தணாளன்' என எடுத்துப் பாடியருளி,

விளக்கவுரை

`அந்தணாளன்' எனத்தொடக்கமுடைய திருப்பதிகம் தக்கேசிப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.55)*. இப்பதிகத்தில் மார்க் கண்டேயர், இயக்கர், கின்னரர், வருணன், அருச்சுனன், பகீரதன், முப் புரத்தவரில் மூவர், இராவணன் முதலானோருக்கு அருள் புரிந்ததைக் குறிப்பித்தருளுவதோடு, ஏயர்கோன்கலிக்காம நாயனாருக்கு அருள் புரிந்தமையையும் கூறி, அவ்வருட் கருணை தமக்குமாக வேண்டுகின் றார். நான்காவது பாடலில், ஞானசம்பந்தர், நாவுக்கரசர், நாளைப் போவார், சிலந்தி, சூதர், சாக்கியர், கண்ணப்பர், கணம்புல்லர் ஆகி யோர் குற்றம் செய்யினும் குணம் எனக் கருதும் கொள்கை கண்டு பெருமானை அடைந்ததாக அருளுகின்றார். அக்குறிப்புத் தாம் செய்த குற்றத்தையும் குணமாகக் கொண்டருளும் பெருமானாரின் திறத்தை ஏயர்கோன்கலிக்காம நாயனாரும் திருவுள்ளம் பற்றுமாறு அமைந் துள்ளது.

சிலபகல் கழிந்த பின்பு
திருமுனைப் பாடி நாடர்
மலர்புகழ்த் திருவா ரூரின்
மகிழ்ந்துடன் வந்த ஏயர்
குலமுதற் றலைவ னாருங்
கூடவே குளிர்பூங் கோயில்
நிலவினார் தம்மைக் கும்பிட்
டுறைந்தனர் நிறைந்த அன்பால். **#3304**

வணங்கி அருள்பெற்றுச் சிலநாள்கள் ஏயர்கோன் கலிக்காம நாயனாரோடு அங்கிருந்தருளிய பின்பு, திருமுனைப்பாடி நாடுடையை சுந்தரர், திருவாரூர் மீண்டிட, அவருடன் மகிழ்ந்து உடன் வந்த ஏயர்குலத்தாரின் முதல் தலைவராய கலிக்காமருடன் கூடிச் சென்று, முதிர்ந்த பூங்கோயிலில் புற்றின்மீது அமர்ந்தருளும் பெரு மானாரைக் கும்பிட்டு, அங்குச் சுந்தரருடன் நிறைந்த அன்பால் தங்கி யிருந்தார்.

விளக்கவுரை

****

அங்கினி தமர்ந்து நம்பி
அருளினான் மீண்டு போந்து
பொங்கிய திருவின் மிக்க
தம்பதி புகுந்து பொற்பில்
தங்குநாள் ஏயர் கோனார்
தமக்கேற்ற தொண்டு செய்தே
செங்கண்மால் விடையார் பாதம்
சேர்ந்தனர் சிறப்பி னோடும். **#3305**

அங்கு இனிதிருந்து, சுந்தரரது அருளால் கலிக்காமர் மீண்டு சென்று, பொங்கிய செல்வத்தின் மிக்க தம் பதியாய திருப்பெருமங்கலத்திற்குச் சென்று பொற்பினுடன் அங்குத் தங்கி இருக்கும் காலத்தில், தமக்கு ஏற்ற தொண்டினைச் செய்து வந்தவர், பின் சிவந்த கண்களையுடைய ஆனேற்றின்மீது இவர்ந்தருளும் சிவபெருமானின் திருவடிகளைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

****

நள்ளிருள் நாய னாரைத்
தூதுவிட் டவர்க்கே நண்பாம்
வள்ளலார் ஏயர் கோனார்
மலரடி வணங்கிப் புக்கேன்
உள்ளுணர் வான ஞானம்
முதலிய வொருநான் குண்மை
தெள்ளுதீந் தமிழாற் கூறுந்
திருமூலர் பெருமை செப்ப. **#3306**

நடுவிருள் யாமத்திலே தம் தலைவரைத் தூதுவிட்ட சுந்தரருக்கே நண்பராம் வள்ளலாரான ஏயர்கோன் கலிக்காம நாயனா ருடைய மலரடிகளை வணங்கி, உள்ளத்து உணர்வினால் பெறத்தக்க ஞானம் முதலாய நான்கின் உண்மையைத் தெள்ளிய தீந்தமிழால் கூறுகின்றவராய திருமூல நாயனாரின் பெருமையை இனிச் சொல்லப் புகுகின்றேன்.

விளக்கவுரை

சரியை முதலாய மூன்றானும் பெறத்தக்கது ஞானமே யாதலின், அதனை முன்வைத்து ஏனைய மூன்றையும் அதன்பின் அடைவாகக் கூறினார். திருமூலர்தம் வரலாற்று நிறைவிலும், `நலம்' என இவ்வாறே அடைவு படுத்தியருள்வர். ஆசிரியர் தொல்காப்பியர் `இன்பமும் பொருளும்

அறனும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை' *(தொல்.களவு -1)* என அருளியிருப்பதும் ஈண்டு நினைவு கூரலாம். ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம் முற்றிற்று.

திருமூலதேவ நாயனார் புராணம்

அந்தியிளம் பிறைக்கண்ணி
அண்ணலார் கயிலையினில்
முந்தைநிகழ் கோயிலுக்கு
முதற்பெருநா யகமாகி
இந்திரன்மால் அயன்முதலாம்
இமையவர்க்கு நெறியருளும்
நந்திதிரு வருள்பெற்ற
நான்மறையோ கிகளொருவர். **#3307**

மாலைக்காலத்தில் தோன்றும் இளம்பிறைக் கண்ணி யைச் சூடிய சிவமூர்த்தியினது திருக்கயிலாய மலையினில் உள்ள பழமையான கோயிலுக்கு முதற்பெருந் தலைவராகத் தலைமை பெற்று, இந்திரன் மால் அயன் முதலாய தேவர்கட்கு இறைவனை அடைகின்ற நெறியினை அருள் செய்கின்ற குருமூர்த்தியாகிய நந்தியெம் பெரு மான் திருவருள் பெற்ற, நான்கு மறைகளையும் உணர்ந்த, யோகியர் களில் ஒருவர்.

விளக்கவுரை

முந்தை நிகழ் கோயில் - முன்னைப் பழமைக்கும் பழமை யாகத் திகழ்ந்து வரும் கோயில். முதன்மை பெற்ற கோயில் என்றலும் ஒன்று. நெறி - இறைவனை அடைவதற்குரிய நெறி. சிவபெருமா னிடத்து அருளுபதேசம் பெற்றவராதலின், அதனைத் தம்பால் வந்து கேட்போர்க்கும் அருளும் குருமூர்த்தியாக விளங்கினர் நந்திதேவர்.
திருமூலர் நந்தியெம்பெருமானிடத்து அருள் பெற்றவராதலை,

நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்று இவர் என்னோடு எண்மரும் ஆமே.
(தி.10 பாயி. பா.6)

என வரும் அவர்தம் திருவாக்கால் அறியலாம்.
நந்தி என்பது சிவபெருமானுடைய திருப்பெயர்களுள் ஒன்றா கும். அஃது அவர்பால் முதலுபதேசம் பெற்ற நந்தியெம் பெருமானுக் கும் ஆயிற்று.
யோகியார் பெயரை யாண்டும் குறியாது, மேல்வரும் பதினான் காவது பாடலில் `திருமூலராய் எழலும்' என ஆசிரியர் குறித்தருளுவ தால், அந்நிகழ்ச்சியின் பின்பே திருமூலர் என்னும் பெயர் இவருக்கு வழங்குவதாயிற்று என அறிய இயலுகின்றது.
இவர்தம் இயற்பெயர் சுந்தரநாதன் என்றும், `மந்திரம் கொண்டு

வழிபடுவோருக்குச் சுந்தரநாதன் சொல்லிய மந்திரம்', `சுந்தரன் ஆகமச் சொல் மொழிந்தானே' என வரும் திருமந்திரச் சிறப்புப் பாயிரச் செய்யுள்களால் *(தி.10 பாயி. பா.38)* இவ்வுண்மை அறியப் படும் என்றும் கூறுவர்.

இவ்வரலாறு `அந்தி' என அகரத்தில் தொடங்கிச் `சாற்றுவாம்' என மகர ஒற்றில் நிறைவுறுதலின் பிரணவ வடிவான ஞானத்தை வழங்குவோரின் வரலாறு இது எனக் குறிப்பால் அறிய முடிகின்றது என்பர் சிவக்கவிமணியார் *(பெரிய. பு. உரை).*

மற்றவர்தாம் அணிமாதி
வருஞ்சித்தி பெற்றுடையார்
கொற்றவனார் திருக்கயிலை
மலைநின்றுங் குறுமுனிபால்
உற்றதொரு கேண்மையினால்
உடன்சிலநாள் உறைவதற்கு
நற்றமிழின் பொதியமலை
நண்ணுதற்கு வழிக்கொண்டார். **#3308**

அச்சிவயோகியார் தாமும், அணிமா முதலாக வரும் எண் வகைச் சித்திகளையும் பெற்றவர். அவர் நம் முதல்வரது திருக் கயிலாய மலையினின்றும் புறப்பட்டுத் தென்திசையில் பொதிய மலையில் இருந்த அகத்திய முனிவரிடத்துக் கொண்டதொரு நட்பு உரிமையால், அவருடன் சில நாள் தங்குதற்கு விரும்பி, நல்ல தமிழின் பிறப்பிடமாய பொதிய மலையில் சேர்வதற்கு வழிக்கொண்டு வந்தார்.

விளக்கவுரை

அணிமா முதலிய எண்வகைச் சித்திகள்:

1. அணிமா - அணுவினும் சிறிய வடிவம் கொள்ளுதல்.
2. மகிமா - எங்கும் நிறைந்து நிற்கும் பெருவடிவம் கொள்ளுதல்.
3. லகிமா - மலையனைய பொருள்களும் எடுக்கும்பொழுது எளியவாய் இருத்தல்.
4. கரிமா - அணுவனைய வடிவில் இருந்தும், எடுக்கும் பொழுது மலையனைய பளுவாய் இருத்தல்.
5. பிராத்தி - யாண்டும் செல்லும் ஆற்றல் உடைமை.
6. பிராகாமியம் - ஓர் உடலை விட்டுப் பிறிதோர் உடலுக்குச் செல்லுதல், விண்ணில் இயங்குதல், தாம் நினைந்தவற்றை எல்லாம் தம்மிடத்திருந்தே வரச் செய்தல், தாம் இருந்தவிடத்திருந்தே விண்ணிலும் மண்ணிலும் நிகழ்வனவற்றை அறிதல், முக்காலமும் அறிதல் முதலாயின. 7. ஈசத்துவம் - ஈசன் என முத்தொழிலும் செய்து, விண்ணவரும் தம்பணி கேட்க இருத்தல்.

8. வசித்துவம் - எவ்வுயிர்களையும் தம்வயப்படுத்தும் பெருமை கொள்ளுதல்.

மன்னுதிருக் கேதாரம்
வழிபட்டு மாமுனிவர்
பன்னுபுகழ்ப் பசுபதிநே
பாளத்தைப் பணிந்தேத்தித்
துன்னுசடைச் சங்கரனார்
ஏற்றதூ நீர்க்கங்கை
அன்னமலி யகன்றுறைநீர்
அருங்கரையின் மருங்கணைந்தார். **#3309**

பொதிய மலை நோக்கி வழிக்கொண்டு வரும் சிவயோகியார், நிலைபெற்ற திருக்கேதாரம் எனும் பதியை வழிபட்டு, அப்பால் வந்து, பெருமுனிவர்கள் தங்கிய பெரும் புகழ் வாய்ந்த பசுபதி நேபாளம் என்னும் பதியைப் பணிந்து போற்றி, அதன்பின் புறப்பட்டு வந்து சிறந்த தமது திருச்சடையில் சிவபெருமான் ஏற்ற புனிதமாய கங்கையாற்றின், அன்னப் பறவைகள் மலிந்த அகன்ற நீர்த்துறைகளை உடைய அரிய கரையின் அருகே வந்தார்.

விளக்கவுரை

திருக்கேதாரம் இமயமலைச் சாரலிலுள்ள ஒரு பதியா கும். திருஞானசம்பந்தரும், சுந்தரரும் திருக்காளத்தியில் இருந்தவாறே அருளிய பதிகங்களையுடையது. மிகத்தொன்மையான பன்னிரண்டு சிவலிங்கங்களில் இங்குள்ள திருமேனியும் ஒன்றாகும். பசுபதி நேபாளம் - உயிர்கட்குத் தலைவனாகிய பெருமான் எழுந்தருளி யிருக்கும் நேபாளம். அவன் யாண்டும் நீக்கமற நிற்பினும் இப்பகுதி யில் பசுபதிநாதர் எனும் திருப்பெயரோடு வீற்றிருந்தருள்வது பற்றி அத்திருமேனியோடு திருப்பதியையும் இணைத்துக் கூறினார். நேபாளத்தின் தலைநகரான காத்மண்டு என்னும் நகருக்கு வடக்கே இருகல் தொலைவில் இத்திருக்கோயில் உள்ளது. சிவபத்தி மீதூர்ந்த தனியரசர்களால் வழிவழியாக ஆளப் பெறுவது. உருத்திராக்கம் மிகுதியாகக் கிடைக்கும் இடம் இஃதாம்.

கங்கைநீள் துறையாடிக்
கருத்துறைநீள் கடலேற்றும்
அங்கணர்தாம் மகிழ்ந்தருளும்
அவிமுத்தம் பணிந்தேத்தி
மங்குல்வளர் வரைவிந்த
மன்னுபருப் பதம்இறைஞ்சித்
திங்களணி சடையர்திருக்

காளத்தி மலைசேர்ந்தார். #3310

வந்தவர், கங்கையாற்றின் நீர்த் துறையில் நீராடிப் பின்னர், நீண்ட பிறவிக் கடலில் புகுவாரை அக் கடலினின்றும் கரை யேற்றும் கண்ணுதற்பெருமான் அமர்ந்தருளும் காசி என்னும் திருப் பதியைப் பணிந்து போற்றி, அப்பால் சென்று மேகங்கள் படியும் விந்திய மலையினையும், நிலைபெற்ற திருப்பருப்பத மலையையும் பணிந்து, அதன் பின்னாகத் தொடர்ந்து, பிறையணிந்த சடையை யுடைய பெருமானது திருக்காளத்தி மலையினைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

கரு - பிறவி. பிறத்தற்குரிய துறைகள் பலவும் கொண்டது பிறவி ஆதலின் அதனைக் கடல் என்றார். ஓரறிவு முதலாக ஆறறிவு ஈறாகவுள்ள உயிர்கள் பலவும் தத்தம் வினைக்கேற்பப் பிறவியுட் பட்டுச் சுழன்று வருதல் கண்கூடு. ஆதலின் அதனைக் கடல் என்றார். முத்தம் - நீங்குதல். வி - சிறப்பாக; உறுதியாக. அகரம் எதிர்மறைப் பொருளது. அஃதாவது சிறப்பாக நீங்குதற்குரிய ஒன்று நீங்காதிருப் பது. பிறவிப் பெருங்கடலுள் புகும் நீங்குதலை இல்லாமை செய்வது என்பார் சிவக்கவிமணியார். அப்பதி காசியாம். அயனிடத்துத் தவஞ் செய்து காசியில் அரசு உரிமை பெற்ற திவோதானன் என்னும் அரசன், அப்பதியில் தேவர்கள் வதிதல் கூடாது என்று வரம் பெற்று, ஆண்டு கொண்டிருக்கும் பொழுது, தேவர்கட்கும் தேவனாகிய இறைவனும் அவ்வரம் பொய்யாதவாறு, அங்கு அருவுருவாய் எழுந்தருளியிருந் தனன் என்பது வரலாறு. ஆதலின் காசி அவி முத்தமாயிற்று. திருப் பருப்பத மலை - மிகத் தொன்மையான சிவலிங்கம் பன்னிரண்டனுள், இங்குள்ள திருமேனியும் ஒன்றாகும்.

நீடுதிருக் காளத்தி
நிலவுதா ணுவைவணங்கி
ஆடுதிரு வரங்கான
ஆலவனந் தொழுதேத்தித்
தேடும்இரு வர்க்கரியார்
திருஏகாம் பரம்பணிந்து
மாடுயர்மா மதிற்காஞ்சி
வளநகரின் வைகினார். #3311

பெருமை பொருந்திய திருக்காளத்தி மலையில் என்றும் நிலைபெற்று விளங்கும் சிவபெருமானை வணங்கிக், கூத்தப் பெருமான் ஆடியருளும் திருமன்றங்களுள் ஒன்றாகிய திருவாலங் காடு எனும் திருப்பதியைத் தொழுது ஏத்தி, அயனும் மாலும் ஆகிய இருவர்க்கும் காணுதற்கரியராய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருவேகாம்பரத்தினையும் பணிந்து,

உயர்ந்த பெரிய பொன் மதில் களையுடைய திருக்காஞ்சிபுரம் என்னும் வளம்மிக்க திருநகரில் தங்கினார்.

விளக்கவுரை

தாணு - தூண் போல உயிர்களைத் தாங்குபவர்; சிவ பெருமான்.
ஆலவனம் - திருவாலங்காடு.

நற்பதியங் கமர்யோக
முனிவர்களை நயந்துபோய்க்
கற்புரிசைத் திருவதிகை
கலந்திறைஞ்சிக் கறைக்கண்டர்
அற்புதக்கூத் தாடுகின்ற
அம்பலஞ்சூழ் திருவீதிப்
பொற்பதியாம் பெரும்பற்றப்
புலியூரில் வந்தணைந்தார். **#3312**

நற்பதியாய காஞ்சி நகரில் வாழ்கின்ற யோகியர் களாகிய முனிவர்களை நயந்து, அவர்களுடன் அன்பாய்க் கலந்து, அப்பால் சென்று, கற்செறிவு மிக்க மதிலையுடைய திருவதிகைப் பதியைச் சேர்ந்து இறைவனைக் கண்டு வழிபட்டு, நஞ்சுண்ட கழுத்தை யுடைய பெருமான் அற்புதத் தனிக் கூத்தாடுகின்ற கனகசபையைச் சூழ்ந்த திருவீதியையுடைய பொற்பதியாகும் பெரும்பற்றப் புலியூ ரென்னும் தில்லைப்பதியை வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

`அமர்தல் மேவல்' (விரும்பல்) என்னும் தொல்காப்பி யம் *(உரியியல் 82).* யோகம் - கூடுதல். உயிர் இறைவனோடு கூடி அப்பரம்பொருளையே சிந்தித்திருப்பது, இந்நிலையில் இருந்தரு ளுவதை விரும்பிச் செய்வர் யோகியர். காஞ்சியில், சிவயோகியர்கள் வாழிடங்கள் பல உள எனத் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்து *(தி.12 பு.19)* ஆசிரியர் முன்னர் அருளியதும் காண்க. பற்றற்றார் பலரும் பெரும்பற்றுக் கொண்டு கூத்தப்பெருமானை வழிபாடாற்றி வருதலின் பெரும்பற்றப்புலியூர் எனப் பெயர் பெறுவதாயிற்று.

எவ்வுலகும் உய்யவெடுத்
தாடியசே வடியாரைச்
செவ்வியஅன் புறவணங்கிச்
சிந்தைகளி வரத்திளைத்து
வவ்வியமெய் யுணர்வின்கண்
வருமானந் தக்கூத்தை
அவ்வியல்பில் கும்பிட்டங்

காராமை அமர்ந்திருந்தார். **#3313**

அத்திருப்பதியில், எவ்வுலகும் உய்ய எடுத்து ஆடி யருளிய சேவடியையுடைய பெருமானைச் செவ்விய அன்பு மீதூர வணங்கிச், சிந்தையில் பெருகிய பேரின்பம் தழையத் திளைத்துப், பெருமானையே நினைந்து நிற்பார், அன்பர்களின் மெய் உணர்வில் தாமே தோன்றி ஆடும் ஆனந்தத் திருக்கூத்தைச் சிவயோகியார் அவ்வாறு தாம் பெறுகின்ற அப்பேரின்ப இயல்பில் கும்பிட்டு, அவ் வின்ப விளைவின் ஆராமையால் அங்குத் தங்கி இருந்தார்.

விளக்கவுரை

செப்பும் சிவாகமம் என்னும் அப்பேர் பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள் பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக் கூத்துக் கண்டபின்
ஒப்பில் ஒருகோடி யுகம் இருந்தேனே. *(தி.10 பா.13)*

எனத் திருமூலர் அருளிய திருவாக்கு, இதற்கு அரணாகின்றது. எனி னும், திருமூலர் தில்லைக்கு இருமுறை வந்து வழிபட்டுள்ளார் என் றும், இவ்வநுபவம் முதன்முறையாகும் என்றும் துடிசைக்கிழார் அ. சிதம்பரனார் கூறுவர்.

தடநிலைமா ளிகைப்புலியூர்
தன்னிலுறைந் திறைஞ்சிப்போய்
அடல்விடையின் மேல்வருவா
ரமுதுசெய வஞ்சாதே
விடமளித்த தெனக்கருதி
மேதினிக்கு வளநிறைத்தே
கடல்வயிறு நிறையாத
காவிரியின் கரையணைந்தார். **#3314**

பெருமை பொருந்திய மாடங்களையுடைய தில்லைப் பதியில் சிவயோகியார் தங்கி இருந்து வணங்கி, அப்பால் சென்று வலிமையான ஆனேற்றின் மேலாக வருகின்ற பெருமான், அமுது செயக் கொஞ்சமும் அச்சமின்றி, நஞ்சினைக் கொடுத்தது இக்கடல் எனக் கருதி, அக்கடலிடை ஓடிச் சென்று சேராது, இவ்வுலகிற்கு நீர் வளத்தை நிறையக் கொடுத்துக் கடலின் வயிற்றை நிறைக்காத காவிரி ஆற்றின் கரையினை அணைந்தார்.

விளக்கவுரை

`தடவும் கயிவும் நளியும் பெருமை' என்னும் தொல்காப்பியம் *(?? பு.? பா.?)*. புனல் பரந்து பொன் கொழிக்கும் காவிரி, வயல் வளத்திற்கே பெரிதும் உதவி, இறுதியில் சிறிதாக எஞ்சிய நீரே கடல் முகத்துக்

கொண்டு செல்கின்றது. அவ்வாறு நீர் சிறியதாய் இருத்தலின் கடலின் நுழை முகத்தேயே தங்கி விடுகின்றது. அதனுட் செல்ல வில்லை. இதனையே தற்குறிப்பேற்றமாக ஆசிரியர், இறைவனுக்கு நஞ்சினைக் கொடுத்தமையால் அதனுட் செல்லவில்லை எனக் கூறுகின்றார். `இனி, இயற்பகை நாயனார் புராணத்தினுள், `வயல் வளந்தர வியல்பினிலளித்துப், பொன்னி நன்னதி மிக்க நீர்பாய்ந்து புணரி தன்னையும் புனிதமாக்குவதோர், நன்னெடும் பெருந் தீர்த்தம்' *(தி.12 பு.3 பா.3)* என்றது இக்கருத்துடன் மாறுபடுமோ*?* எனின், மாறுபடாது*;* இது முன்னரே ஆண்டு விளக்கப் பட்டது காண்க. `மிக்கநீர்' என்றது வெள்ளக் காலத்திற் பெருகி மிகுந்த நீர் என்ற குறிப்புடைமையாலும், ஈண்டு `வயிறு நிறையாத' என்றமையால் நிறைவுபட வழங்காது சுருங்கிய அளவில் மட்டும் தருவது என்ற குறிப்புடைமையானும் அமையு மென்க', என விளக்கியிருக்கும் சிவக்கவிமணியார் கூற்றும் *(ஆறாவது தொகுதி: பக். 472)* ஈண்டுக் கருதத் தக்கதாம். இதுபோன்றே வைகை கடலோடு கலக்காமைக்குப் பரஞ் சோதியார் கூறும் காரணமும் நினைந்து மகிழ்தற்குரியதாம்.

தொடுத்தவறு மையும் பயனுந் தூக்கிவழங் குநர்போல
அடுத்த வயல் குளநிரப்பி யறம்பெருக்கி யவனியெலாம்
உடுத்தகட லொருவர்க்கு முதவாத வுவரியென
மடுத்தறியாப் புனல்வைகைக் கரையுளது வாதவூர்.

என்பது *(திருவிளை.பு. படலம்.58 பா.2)* அவர் திருவாக்காகும். அருளியல்பும், அறவியல்புமாக அமைந்திருக்கும் இவ்விருவர்தம் தற்குறிப்பேற்றக் கருத்துகளை ஒப்பிட்டு மகிழலாம்.

காவிரிநீர்ப் பெருந் தீர்த்தங்
கலந்தாடிக் கடந்தேறி
ஆவின்அருங் கன்றுறையும்
ஆவடுதண் டுறையணைந்து
சேவில்வரும் பசுபதியார்
செழுங்கோயில் வலம்வந்து
மேவுபெருங் காதலினால்
பணிந்தங்கு விருப்புறுவார். **#3315**

: காவிரி நீராகப் பெருகும் தீர்த்தத்தில் கலந்து நீராடி, அதனைக் கடந்து மறுகரை ஏறி, பசுவின் கன்றாக உமையம்மையார் சென்று தவம் செய்து பெருமானை வழிபட்ட ஆவடுதண்டுறை என்னும் திருப்பதியைச் சேர்ந்து, ஆனேற்றில் எழுந்தருளி உயிர்களுக் கெல்லாம் அருள் சுரக்கும் தலைவராய பெருமானது அழகிய அக் கோயிலை வலம் வந்து, இயல்பாகவே தோன்றும் பெருங் காதற் பெருக்கால், அங்கு

உறைந்தருளும் பெருமானைப் பணிந்து, அங்குத் தங்கியிருக்க விரும்புவார்,

விளக்கவுரை

தீர்த்தம் - தூய்மை செய்வது. புறத்தூய்மை நீரானும், அகத் தூய்மை அதன் புனிதத்தானும் அமைதலின், உடல், உணர்வு ஆகிய இவ்விரண்டும் கலக்க நீராடினார் என்பார், `பெருந்தீர்த்தம் கலந்தாடி' என்றார். `கங்கை யாடிலென் காவிரி யாடிலென்' *(தி.5 ப.99 பா.2)* என்பதால், இவ்விரண்டும் கலக்கத் திருவருள் சிந்தனை யுடன் நீராடல் வேண்டும் என்பது பெற்றாம். `ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்' *(தி.8 திருவெம். 12)*, `களித்துக் கலந்ததோர் காதல் கசிவொடு காவிரிவாய்க் குளித்து' *(தி.4 ப.92 பா.7)* என வரும் திருவாக்குக்களையும் காண்க. கயிலையில் இறைவனோடு சொக்கட்டான் ஆடிக்களித்தமை யால், உமையம்மை ஆவின் வடிவம் பெற்றனர் என்றும், அது நீங்க வழிபட்ட திருப்பதியாதலின், *(ஆ அடுதுறை - பசுவடிவம் நீங்கப் பெற்ற இடம்)* இப்பெயர் பெற்றதென்றும் கூறுப. வினை வயத்ததன்றி அருள் வயத்ததாதலின், `ஆவின் நறும் கன்று' என்றார்.

அந்நிலைமைத் தானத்தை
அகலாத தொருகருத்து
முன்னியெழுங் குறிப்பினால்
மூளும் ஆதரவெய்தப்
பின்னுமகன் றேகுவார்
பேணவருங் கோக்குலங்கள்
பொன்னிநதிக் கரைப்புறவிற்
புலம்புவன எதிர்கண்டார். **#3316**

அந்நிலையில் ஆவடுதண்டுறையை விட்டு நீங்காத தொரு கருத்து உள்ளத்துத் தானாகத் தோன்றி எழும் எண்ணத்தால், எழுந்த பேராதரவு உள்நின்று விளங்கினும், பின்னரும் பொதியமலை சேரும் விருப்பால் அத்திருப்பதியை நீங்கிப் போகும் சிவயோகியார், மேய்த்துக் காத்திடற்குரிய பசுவினங்கள் காவிரியாற்றின் கரையி லுள்ள ஒரு சோலையில் புலம்புவதைத் தாம் கண்டருளினார்.

விளக்கவுரை

மூளும் ஆதரவு - மேன்மேல் பெருகி எழும் அன்பு. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அந்தணர்தஞ் சாத்தனூர்
ஆமேய்ப்பார் குடித்தோன்றி

முந்தைமுறை நிரைமேய்ப்பான்
மூலனெனும் பெயருடையான்
வந்துதனி மேய்க்கின்றான்
வினைமாள வாழ்நாளை
வெந்தொழில்வன் கூற்றுண்ண
வீடிநிலத் திடைவீழ்ந்தான். #3317

அந்தணர்கள் வாழுகின்ற சாத்தனூர் என்னும் இடத்தில், பசு மேய்ப்பவரின் குடியில் வந்து பிறந்து, முன்புள்ள முறை யில் பசு இனங்களை மேய்க்கின்ற மூலன் என்னும் பெயருடையவன் ஒருவன், காவிரிக் கரையில் வந்து தன் பசுக்களை மேய்ப்பவன், தனது வினைப்பகுதி மாண்டிட, அவன் வாழ்நாளைக் கொடுந்தொழில் உடைய கூற்றுவன் உண்டிட, அத்தன்மையால் இறந்து நிலத்திடை வீழ்ந்தான்.

விளக்கவுரை

சாத்தனூர் - திருவாவடுதுறையின் தென்பால் *7* கிமீ. தொலைவில் உள்ளது. எனினும் இஃது ஊர்ப்பெயர் என்றும், ஆவடு துறை என்பது கோவில் பெயர் என்றும் இவ்வூர்க் கல்வெட்டால் அறிய இயலுகின்றது என டாக்டர். மா. இராசமாணிக்கனார் கூறுவர். இதற்கு ஏற்பச் சேந்தனார் திருவிசைப்பாவிலும் சாத்தனூரொடு ஆவடுதுறை யையும் இணைத்துக் கூறப் பெற்றுள்ளமையும் காணமுடிகின்றது. `பொய்யாத வேதியர் சாந்தை மெய்ப் புகழாள ராயிரம் பூசுரர் மெய்யே திருப்பணி செய்சீர்'*(தி.9 ப.6 பா.1)*, `சோதி மதிலணி சாந்தை மெய்ச் சுருதி விதிவழி யோர்தொழும், ஆதி யமரர் புராணன்' *(தி.9 ப.6 பா.2)*, `மொழிவொன்றி லாப்பொன்னித் தீர்த்தமும் முனிகோடி கோடியா மூர்த்தியும், அழிவொன்றி லாச்செல்வச் சாந்தையூர் அணிஆ வடுதுறை ஆடினாள்' *(தி.9 ப.6 பா.8)* எனவரும் திருவாக்குகளைக் காண்க.

மற்றவன்றன் உடம்பினைஅக்
கோக்குலங்கள் வந்தணைந்து
சுற்றிமிகக் கதறுவன
சுழல்வனமோப் பனவாக
நற்றவயோ கிகள்காணா
நம்பரரு ளாலேயா
உற்றதுய ரிவைநீங்க
ஒழிப்பன்என வுணர்கின்றார். #3318

அவ்விடத்து இறந்து வீழ்ந்த மூலனின் உடம்பினை அப்பசுக் கூட்டங்கள் வந்து அணைந்து, சுற்றி, அன்பினால் மிகக் கதறுவனவாயும், உடலைச் சூழ்வனவாயும், மோந்தனவாயும் நிற்ப, அதனை நல்ல தவ முனிவரான யோகியார் கண்டு, `பெருமானுடைய

அருளாலே இப்பசுக்கள் உற்ற துயர்களாகிய இவை நீங்க நான் ஒழித்திடுவேன்' என்று எண்ணியவராய்,

விளக்கவுரை

****

இவன்உயிர்பெற் றெழில்அன்றி
ஆக்களிடர் நீங்காவென்று
அவனுடலில் தம்முயிரை
அடைவிக்க அருள்புரியும்
தவமுனிவர் தம்முடம்புக்
கரண்செய்து தாம்முயன்ற
பவனவழி அவனுடலில்
தம்முயிரைப் பாய்த்தினார். **#3319**

`இந்த இடையன் உயிர்பெற்றெழுந்தால் அன்றி இப்பசுக்கள் தம் துயர் நீங்கி எழா' என்று, மூலனுடைய உடலில் தம் உயிரைச் சேர்ப்பிக்க அருள் கொண்ட சிவயோகியார், தம் உடல் தீங்குறாத வகையில் ஓரிடத்தில் காவல்செய்து வைத்துத், தாம் பழகியிருந்த யோக சாதனையின் வழியால் அம்மூலனுடைய உடலில் தமது உயிரைச் சேர்த்தினார்.

விளக்கவுரை

தாம் பயின்ற பவனவழி - தாம் பயிற்சி பெற்ற மூச்சுக் காற்றை அடக்கும்வழியில். `காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக், கூற்றை உதைக்கும் குறியது வாமே' *(தி.10 பா.559)* என்றும், `காயாதி பூதம் கலைகாலம் மாயையில், ஆயாதகல அறிவொன்றனாதியே, ஓயாப்பதியதன் உண்மையைக் கூடினால், வீயாப் பரகாயம் மேவலு மாமே' *(தி.10 பா.628)* என்றும் அவர்தாமே கூறுவாராதலின், இந்நிலை திருமூலருக்கு வாய்த்தது எளிதேயாம். `நந்தியருளாலே மூலனை நாடினேன்'*(தி.10 பாயி. பா.7)*, `நந்தியருளாலே மூலனை நாடிப்பின், நந்தியருளாலே சதாசிவன் ஆயினேன்' *(தி.10 பாயி. பா.29)* என ஆசிரியர் திருமூலர் தாமே அருளும் திருவாக்குகளும் இதற்கு அகச்சான்றுகளாகின்றன.

பாய்த்தியபின் திருமூல
ராய்எழலும் பசுக்களெல்லாம்
நாத்தழும்ப நக்கிமோந்
தணைந்துகனைப் பொடுநயந்து
வாய்த்தெழுந்த களிப்பினால்
வாலெடுத்துத் துள்ளிப்பின்

நீத்ததுய ரினவாகி
நிரந்துபோய் மேய்ந்தனவால். **#3320**

தம் உயிரை மூலன் உடலில் பாய்ச்சிய பின்பு, சிவயோகியார் மூலனது உடலில் திருமூலராய் எழலும், பசுக்கள் எல்லாம் அதுகண்டு நாத்தழும்பேற அவரை நக்கி முகந்து, அணைந்து கனைப்பொடு நயந்து, வாய்க்கப்பெற்றெழுந்த மகிழ்ச்சியால் வால் எடுத்துத் துள்ளிப் பின் நீங்கிய துயருடையனவாகித் திரும்ப நிரையாகச் சென்று மேய்ந்தன.

விளக்கவுரை

****

ஆவினிரை மகிழ்வுறக்கண்
டளிகூர்ந்த அருளினராய்
மேவியவை மேய்விடத்துப்
பின்சென்று மேய்ந்தவைதாம்
காவிரிமுன் துறைத்தண்ணீர்
கலந்துண்டு கரையேறப்
பூவிரிதண் புறவின்நிழல்
இனிதாகப் புறங்காத்தார். **#3321**

பசுக்களின் கூட்டம் மகிழ்வுற்றது கண்டு அன்பு கூர்ந்த கருணை உடையவராய், அப்பசுக்கள் சென்று மேயும் இடத்துப் பின்னாகச் சென்று, மேய்ந்த அப்பசுக்கள் எல்லாம், காவிரியாற்றின் துறையில் சென்று தண்ணீர் விரும்பி உண்டு, களைப்புத் தீர்ந்து கரை ஏறிப் பின், மலர்கள் விரிந்த சோலையின் நிழலில் இனிதாகத் தங்கிடத், தாம் காவல் செய்தார்.

விளக்கவுரை

****

வெய்யசுடர்க் கதிரவனும்
மேல்பாலை மலையணையச்
சைவநெறி மெய்யுணர்ந்தோர்
ஆன்இனங்கள் தாமேமுன்
பையநடப் பனகன்றை
நினைந்துபடர் வனவாகி
வையநிகழ் சாத்தனூர்
வந்தெய்தப் பின்போனார். **#3322**

வெப்பமாய சுடருடைய கதிரவனும் மேற்குப் புறத்துள்ள மலையிடத்துச் சேர்தலும், அதுபொழுது சைவப்பெரு நெறியின் மெய்ம்மையை உணர்ந்த திருமூலநாயனாரும், அப்பசுக் கள் தாமாகவே முன் எழுந்து

பையப் பைய நடப்பனவாகியும் கன்றை நினைந்து போவனவாகியும் இந்நிலவுலகில் விளங்கும் சாத்தனூரைப் போய்ச் சேர்ந்திடத் தாமும் அவற்றின் பின்னாகச் சென்றார்.

விளக்கவுரை

****

போனவர்தாம் பசுக்களெலாம்
மனைதோறும் புகநின்றார்
மானமுடை மனையாளும்
வைகியபின் தாழ்த்தார்என்று
ஆனபயத் துடன்சென்றே
அவர்நின்ற வழிகண்டாள்
ஈனம்இவர்க் கடுத்ததென
மெய்தீண்ட அதற்கிசையார். **#3323**

பின் சென்ற திருமூல நாயனார், பசுக்கள் எல்லாம் தத்தமது மனைகளிற் சேரும்வரை நிற்பப், பெருமையுடைய மூலன் மனைவியும், மூலன் வரக் காணாமையால், `பொழுது போன பின்பும் தன் கணவர் வரத் தாழ்த்தாரே' என்று மனத்திலான அச்சத்துடன் தேடிச் சென்று, திருவருட் சிந்தனையுடன் நிற்கும் அவரைக் கண்டாள்; கண்டதும், அவர் தன்மை உணராத அவள், `இவருக்கு நேர்ந்த தென்ன?' என்று அவர் திருமேனியைத் தீண்ட முற்படுதலும், அவர் அதற்கு இசையாரானார்.

விளக்கவுரை

****

அங்கவளும் மக்களுடன்
அருஞ்சுற்றம் இல்லாதாள்
தங்கிவெரு வுறமயங்கி
என்செய்தீர் எனத்தளர
இங்குனக்கென் னுடன்அணைவொன்
றில்லையென எதிர்மறுத்துப்
பொங்குதவத் தோர்ஆங்கோர்
பொதுமடத்தின் உட்புக்கார். **#3324**

பிள்ளைகளுடன் நெருங்கிய சுற்றத்தவருமில்லாத வளாய அவ்விடத்து நின்ற மூலன் மனைவியும், அவர் நிலை கண்டு அஞ்சியவளாக மிக மயங்கி, `என்ன செய்தீர்?' என்று உண்மை யறியாது தளர்ந்திடலும், அதுபொழுது திருமூலரும் அவளை நோக்கி, `ஈங்கு உனக்கு என்னுடன் சேர்தற்குரிய தொடர்பு ஒன்றுமில்லை' என்று மறுத்துப், பெருகும் தவமுடைய அவர், அங்குள்ள அவ்வூர்ப் பொதுமடத்தின் உள்ளே

சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

****

இல்லாளன் இயல்புவே
றானமைகண் டிரவெல்லாம்
சொல்லாடா திருந்தவர்பால்
அணையாது துயிலாதாள்
பல்லார்முன் பிற்றைநாள்
இவர்க்கடுத்த பரிசுரைப்ப
நல்லார்கள் அவர்திறத்து
நாடியே நயந்துரைப்பார். #3325

தனது கணவனின் மனநிலை இவ்வாறு வேறானமை கண்டு எவ்வளவோ அவருடன் உரையாட முயன்றும், ஒரு வார்த்தை யும் பேசாதிருக்கும் நிலை கண்டு, அவருடன் அணையாது, துயிலும் கொள்ளாதிருந்த அவள், மறுநாள் காலை அவ்வூரிலுள்ள நன்மக்கள் பலர் முன்னிலையில், அவருக்கு நேர்ந்த மனமாற்றத்தை எடுத்துச் சொல்ல, அது கேட்ட பெரியோர் வந்து, அவர் தன்மையை ஆய்ந்து, அவளுக்குச் சொல்வாராய்,

விளக்கவுரை

****

பித்துற்ற மயல்அன்று
பிறிதொருசார் புளதன்று
சித்தவிகற் பங்களைந்து
தெளிந்தசிவ யோகத்தில்
வைத்தகருத் தினராகி
வரம்பில்பெரு மையிலிருந்தார்
இத்தகைமை யளப்பரிதால்
யாராலும் எனவுரைப்பார். #3326

`பெண்ணே! நீ நினைந்தவாறு இவர் பித்துடைய ரல்லர்; பேய் முதலியவற்றால் மனமாற்றம் அடைந்தாரும் அல்லர்' பொருள் அல்லவற்றைப் பொருளாகக் கருதும் மன வேறுபாடுகளி னின்றும் நீங்கித் தெளிந்த மனநிலை யுடையவராய், இறைவன் மீது கொண்ட பேரன்பினால் அப்பெருமானிடம் ஒன்றுபட்ட உள்ளத்தால் மீதூர்ந்த பெருமை யுடையவராயுள்ளார். இச்சிவயோக நிலையின் தன்மை, யாராலும் அளத்தற்கரிதாகும் என்று அவளிடம் கூறுவாராகி,

விளக்கவுரை

****

பற்றறுத்த வுபதேசப்
பரமர்பதம் பெற்றார்போல்
முற்றுமுணர்ந் தனராகும்
முன்னைநிலை மையில்உங்கள்
சுற்றவியல் பினுக்கெய்தார்
என்றுரைப்பத் துயரெய்தி
மற்றவளும் மையலுற
மருங்குள்ளார் கொண்டகன்றார். #3327

`இருவகைப் பற்றுக்களையும் நீக்கிய மேலான உபதேசத்தினால் ஈசன் திருவடிகளைப் பெற்றிருப்பவராகிய ஞானிகளைப் போன்று, அவர் முழுவதும் உணர்ந்த முனிவரா யுள்ளார், முன்னை நிலைமையில் உங்களது சுற்றத்தொடர்பிற்கு உரியவர் ஆகார்' என்று அவர்கள் எடுத்துக் கூறிட, அதுகேட்டுப் பெருந் துயரடைந்த மூலன் மனைவியும் மயங்கிச்சோர, அருகில் உள்ளார் அவளைக் கொண்டு அவ்விடம் நீங்கிப் போயினார்கள்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

இந்தநிலை மையிலிருந்தார்
எழுந்திருந்தங் கானிரைகள்
வந்தநெறி யேசென்று
வைத்தகாப் பினிலுய்த்த
முந்தையுடல் பொறைகாணார்
முழுதுணர்ந்த மெய்ஞ்ஞானச்
சிந்தையினில் வந்தசெயல்
ஆராய்ந்து தெளிகின்றார். #3328

இந்த நிலைமையில் சாத்தனூர்ப் பொதுமடத்தில் இருந்த திருமூலர், எழுந்திருந்து, அங்குப் பசு நிரைகள் வந்தவழியே திரும்பிச் சென்று, தாம் காவலாக வைத்த முன்னைய உடலைத் தேடிப் பார்த்தபோது, அவ்வுடற் பொறையைக் காணாராகி, எல்லாம் உணர்ந்த மெய்ஞ்ஞானமாய் நிற்கும் தம் சிந்தையில், அச்செயலை ஆராய்ந்து தெளிவாராய்,

விளக்கவுரை

****

தண்ணிலவார் சடையார்தாம்
தந்தஆ கமப்பொருளை
மண்ணின்மிசைத் திருமூலர்

வாக்கினால் தமிழ்வகுப்பக்
கண்ணியஅத் திருவருளால்
அவ்வுடலைக் கரப்பிக்க
எண்ணிறைந்த வுணர்வுடையார்
ஈசர்அரு ளெனவுணர்ந்தார். **#3329**

குளிர்ந்த நிலவணிந்த திருச்சடையையுடைய சிவபெருமான், தாம் தந்தருளிய ஆகமப் பொருளை இந்நிலவுலகில் திருமூலர் வாக்கால் தமிழால் சொல்லுதற்கு ஏற்ப, ஒப்பற்ற கருணை யால், சிவயோகியாராக இருந்தார்தம்உடலை மறைப்பிக்க, பேரறிவு உடையராய திருமூலர், அது `ஈசர் அருளாகும்' என உணர்ந்தார்.

விளக்கவுரை

`சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே' *(தி.10 பா.12)*
`சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே' *(தி.10 பா.16)*
`என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' *(தி.10 பா.20)*
என அவரே திருமந்திரத்தில் அருளிய திருவாக்குகளையும் காண்க.
இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

சுற்றியஅக் குலத்துள்ளார்
தொடர்ந்தார்க்குத் தொடர்வின்மை
முற்றவே மொழிந்தருள
அவர்மீண்டு போனதற்பின்
பெற்றம்மீ துயர்த்தவர்தாள்
சிந்தித்துப் பெருகார்வச்
செற்றமுதல் கடிந்தவர்தாம்
ஆவடுதண் டுறைசேர்ந்தார். **#3330**

ஈசர் அருளென உணர்ந்த திருமூலர், தமக்கு அருகே, உடல் அளவில் முன் தொடர்புடைய இடையர் குலத்துள்ளார் சூழ்ந்து நிற்ப, தம்முடன் அவர்களுக்கு எத்தொடர்பும் இல்லை யென்ற தன்மையை முழுமையாகக் கூறினாராக, கேட்ட அவர்களும் அங்கிருந்து போனபின்பு, ஆனேற்றைக் கொடியாகக் கொண்ட பெருமானின் திருவடிகளைச் சிந்தித்து, அதனால், பெருகிய காமம் வெகுளி மயக்கம் முதலாய குற்றங்களை அறவே நீக்கி, திருஆவடு தண்டுறை என்னும் திருக்கோயிலை அடைந்தார்.

விளக்கவுரை

****

ஆவடுதண் டுறையணைந்தங்

கரும்பொருளை யுறவணங்கி
மேவுவார் புறக்குடபால்
மிக்குயர்ந்த அரசின்கீழ்த்
தேவிருக்கை அமர்ந்தருளிச்
சிவயோகந் தலைநின்று
பூவலரும் இதயத்துப்
பொருளோடும் புணர்ந்திருந்தார். **#3331**

திருஆவடுதண்டுறை என்னும் கோயிலை அடைந்து, அங்கு அரும்பொருளாய் உள்ள சிவபெருமானைச் சிந்தையுற வணங்கி, அப்பெருமான் எழுந்தருளியிருக்கும் அக்கோயி லின் புறத்தே மேற்குத் திசையில் நின்ற மிக உயர்ந்த அரசமரத்தின்கீழ்த் தெய்வத்தன்மை மேவுதற்கு ஏதுவாய யோகாசனத்தில் வீற்றிருந் தருளிச் சிவயோகந் தலைநின்று, பூப்போல மலரும் தமது இதயத் துள்ள அரும்பொருளாய சிவத்துடன் ஒன்றி இருந்தார்.

விளக்கவுரை

`சிவன் ஆவடுதண்டுறை சீருடையான் பதம் சேர்ந் திருந்தேனே' (தி.10 பா.17)

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவன் ஆவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே. *(தி.10 பா.18)*

என அவர் தாமே அருளுவதும் காண்க.

ஊனுடம்பில் பிறவிவிடம்
தீர்ந்துலகத் தோருய்ய
ஞானமுதல் நான்குமலர்
நல்திருமந் திரமாலை
பான்மைமுறை ஓராண்டுக்
கொன்றாகப் பரம்பொருளாம்
ஏனஎயி றணிந்தாரை
ஒன்றவன்தா னெனஎடுத்து. **#3332**

அங்கிருந்து ஊன் பொருந்திய உடம்பினை எடுத்துவரும் பிறவி என்னும் தீயவிடத்தினின்றும் நீங்கி, உலகவர் உய்ந்திட, ஞானம் யோகம் கிரியை சரியை என்னும் நான்கும் மலர்கின்ற நல்ல திருமந்திர மாலையைப் பெருமானுக்குப் பாடி அணிகின்ற அத்தொண்டில், ஆண்டிற்கு ஒரு பாடலாகப் பன்றியின் கொம்பணிந்த பரம்பொருளாகிய சிவபெருமானை, `ஒன்றவன் தானே' எனப் பாட எடுத்து,

விளக்கவுரை

`ஒன்றவன் தானே எடுத்து' என்பதால் இதுவே திருமந் திரத்தின் முதற் பாடலாகும். `ஐந்துகரத்தனை' எனத் தொடங்கும் மூத்த பிள்ளையாரின் வணக்கப் பாடல் ஆசிரியரின் திருவாக்கன்று என்பது விளங்கும்.

முன்னியஅப் பொருள்மாலைத்
தமிழ்மூவா யிரஞ்சாத்தி
மன்னியமூ வாயிரத்தாண்
டிப்புவிமேல் மகிழ்ந்திருந்து
சென்னிமதி யணிந்தார்தந்
திருவருளால் திருக்கயிலை
தன்னிலணைந் தொருகாலும்
பிரியாமைத் தாளடைந்தார். **#3333**

பாடிய அப்பாமாலையில், தாம் நினைந்தருளிய ஞானம் முதலாகவுள்ள நான்கு பொருளும் சிறக்குமாறு, தமிழால் மூவாயிரம் பாடல்கொண்ட அம்மாலையைச் சாத்தி, விளங்கிய மூவாயிரம் ஆண்டுகள் இந்நிலவுலகில் வாழ்ந்து மகிழ்ந்திருந்து, அதன்பின் திருச்சடையின்மீது பிறையையணிந்த பெருமானின் திருவருளால், திருக்கயிலாய மலையினிடத்துச் சென்று, ஒருகாலும் பெருமானைப் பிரியாதிருக்கும் பேரின்பமாம் திருவடி நீழலைச் சார்ந்தார்.

விளக்கவுரை

பாடிய அப்பாமாலையில், தாம் நினைந்தருளிய ஞானம் முதலாகவுள்ள நான்கு பொருளும் சிறக்குமாறு, தமிழால் மூவாயிரம் பாடல்கொண்ட அம்மாலையைச் சாத்தி, விளங்கிய மூவாயிரம் ஆண்டுகள் இந்நிலவுலகில் வாழ்ந்து மகிழ்ந்திருந்து, அதன்பின் திருச்சடையின்மீது பிறையையணிந்த பெருமானின் திருவருளால், திருக்கயிலாய மலையினிடத்துச் சென்று, ஒருகாலும் பெருமானைப் பிரியாதிருக்கும் பேரின்பமாம் திருவடி நீழலைச் சார்ந்தார்.

நலஞ்சிறந்த ஞானயோ
கக்கிரியா சரியையெலாம்
மலர்ந்தமொழித் திருமூல
தேவர்மலர்க் கழல்வணங்கி
அலர்ந்தபுகழ்த் திருவாரூர்
அமணர்கலக் கங்கண்ட
தலங்குலவு விறல்தண்டி
யடிகள்திறஞ் சாற்றுவாம். **#3334**

நலம் சிறந்த ஞான, யோக, கிரியை, சரியை ஆகிய நெறிகள் எல்லாம்

மலர்ந்த திருவாய் மொழியை அருளிய திருமூல தேவ நாயனாரின் மலரனைய திருவடிகளை வணங்கி, உலகெங்கும் பரவ விளங்கிய புகழுடைய திருவாரூரில் சமணர்கள் கலங்குமாறு செய்த இந்நிலவுலகில் என்றும் சிறந்த வலிமையுடைய தண்டி யடிகளின் அடிமைத் திறத்தைச் சொல்லுவாம். திருமூலதேவ நாயனார் புராணம் முற்றிற்று.

விளக்கவுரை

****

தண்டியடிகள் நாயனார் புராணம்

தண்டி யடிகள் திருவாரூர்ப்
பிறக்கும் பெருமைத் தவமுடையார்
அண்ட வாணர் மறைபாட
ஆடுஞ் செம்பொற் கழன்மனத்துக்
கொண்ட கருத்தின் அகனோக்கும்
குறிப்பே யன்றிப் புறநோக்கும்
கண்ட வுணர்வு துறந்தார்போற்
பிறந்த பொழுதே கண்காணார். **#3335**

தண்டியடிகள் என்பார் திருவாரூரில் பிறந்திடும் பெருமையாம் தவமுடையார். தேவர்கள் நான்மறைகளைப் பாட ஆடிடும் சிவந்த பொன்மயமான இறைவரின் திருவடிகளை மனத்தில் கொண்ட கருத்தில், உள்ளத்தே நோக்கி மகிழும் குறிப்பேயல்லாது வெளியே நோக்கிக் காணும் உணர்ச்சிகளை நீக்கினார் போன்று, தாம் தோன்றிய பொழுதே கண்பார்வை யிலரானார்.

விளக்கவுரை

திருவாரூரில் பிறக்க முத்தி என்பர். திருவாரூர்ப் பிறந்தார் கள் எல்லாருக்கும் அடியேன் என்பர் சுந்தரரும் *(தி.7 ப.39 பா.10),* `திருவாரூர்த் தோற்றமுடை உயிர் கொன்றான் ஆதலினால், ஆற்றவும் மற்றவற் கொல்லும் அதுவேயாம் என நினைமின்' என்பது மனு வேந்தர் கூற்றாகும் *(தி.12 திருமலைச் சரு. பா.126).* `ஆரூர்ப் பிறத்தல் நேர்படின் அல்லது, செயற்கையின் எய்தும் இயற்கைத் தன்றே' என்பர் குமரகுருபர அடிகள் *(குமர. சிதம்பர மும். பா.1).* இத்தகைய அருமை யும் பெருமையும் நோக்கியே திருவாரூர்ப் பிறக்கும் பெருமைத் தவமுடையார் என்றார். புற நோக்கினும் இவர் பெருமானைக் கண்டு மகிழும் அகநோக்குச் சிறப்புடைத்தாதல் பற்றியே சுந்தரர் பெருமானும் `நாட்டம்மிகு தண்டி' *(தி.7 ப.39 பா.5)* என்றார். `அகத்திற்கண் கொண்டு காண்பதே ஆனந்தம்' *(தி.10 த.9 ப.25 பா.10)* என்பர் திருமூலரும்.

காணுங் கண்ணால் காண்பதுமெய்த்
தொண்டே யான கருத்துடையார்
பேணும் செல்வத் திருவாரூர்ப்
பெருமான் அடிகள் திருவடிக்கே
பூணும் அன்பி னால்பரவிப்
போற்றும் நிலைமை புரிந்தமரர்
சேணு மறிய வரியதிருத்
தொண்டிற் செறியச் சிறந்துள்ளார். **#3336**

காணுகின்ற கண்ணால் காண்டற்குரியது இறைவனது உண்மையான தொண்டே எனும் கருத்து உடையவர்; அவர் பேணு கின்ற பெருஞ் செல்வமாம் தியாகராசப் பெருமானின் திருவடிக்காகப் பூணுகின்ற அன்பினால் போற்றி வணங்கும் நிலைமையில் நின்றவர்; வானவர்கள் தொலை தூரத்திலேனும் இத்தொண்டின் பெருமை இத்தன்மைத்து என அறிதற்கரிய திருத்தொண்டில் மிகவும் பற்றுடைய வராய், அப்பற்றில் சிறப்பு மிக்கவராய் வாழ்வாராயினர்.

விளக்கவுரை

`தொண்டலால் துணையுமில்லை' *(தி.4 ப.40 பா.4)* என்பர் நாவரசர். அத்திருத்தொண்டே இவர் மேற்கொண்ட அரிய திருத்தொண்டாம்.

பூவார் சடிலத் திருமுடியார்
மகிழ்ந்த தெய்வப் பூங்கோயில்
தேவா சிரியன் முன்னிறைஞ்சி
வலஞ்செய் வாராய்ச் செம்மைபுரி
நாவால் இன்ப முறுங்காதல்
நமச்சி வாய நற்பதமே
ஓவா அன்பில் எடுத்தோதி
ஒருநாள் போல வருநாளில். **#3337**

பூவார்ந்த கொன்றை மலரையுடைய சடைமுடியை உடைய சிவபெருமான் மகிழ்ந்து உறைகின்ற பூங்கோயிலின் திருமுன்புள்ள தேவாசிரிய மண்டபத்தின் முன்பு வணங்கி, கோயிலை வலம் செய்வாராய்த் தமது நாவால் இன்பமுறுகின்ற காதலால் `நமச்சிவாய' என்ற நல்ல அரிய மந்திரத்தையே அயர்த்தல் இல்லாத அன்பினால் எடுத்து ஓதி, ஒருநாள் போலப் பலநாளும் அவ் வண்ணமே அவர் செய்து வரும் நாள்களில்.

விளக்கவுரை

****

செங்கண் விடையார் திருக்கோயில்
குடபால் தீர்த்தக் குளத்தின்பாங்
கெங்கும் அமணர் பாழிகளாய்
இடத்தாற் குறைபா டெய்துதலால்
அங்கந் நிலைமை தனைத்தண்டி
யடிகள் அறிந்தே ஆதரவால்
இங்கு நான்இக் குளம்பெருகக்
கல்ல வேண்டும் என்றெழுந்தார். **#3338**

சிவந்த கண்களையுடைய, ஆனேற்றில் எழுந்தரு ளும் பெருமானாரின்

திருக்கோயிலின் மேற்குப்புறத்து உள்ள தீர்த்தக் குளத்தின் அருகில், சமணர்களின் மடங்களும் இருப்பிடங்களுமாகி, இதனால் அக்குளத்தின் இடப் பரப்பிற்குக் குறைபாடு வந்தடைதலால், அந்நிலையை அறிந்த தண்டியடிகள் உள்ளத்துக் கொண்ட அன்பி னால், `இங்கு நான் இக்குளத்தின் பரப்பு மிக, இதனைத் தோண்டியிடல் வேண்டும்' என்ற துணிவு கொண்டு, அப்பணிக்கு முற்பட்டார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

குழிவா யதனில் குறிநட்டுக்
கட்டுங் கயிறு குளக்கரையில்
இழிவாய்ப் புறத்து நடுதறியோடு
இசையக் கட்டி இடைதடவி
வழியால் வந்து மண்கல்லி
எடுத்து மறித்துந் தடவிப்போய்
ஒழியா முயற்சி யால்உய்த்தார்
ஓதும் எழுத்தஞ் சுடன்உய்ப்பார். **#3339**

தாம் நினைந்தவாறு குளத்தை அகழ்வதற்குக் கண் பார்வை இல்லாமையால், அதனைத் தேர்ந்து கொள்வதற்கு, அகழு மிடத்து ஒரு கோலை நட்டு, குளக்கரையில் மண்கொண்டு சென்று கொட்டுகின்ற இடமாய அவ்விடத்து மற்றொரு கோலை நட்டு, இரு கோல்களையும் ஒரு கயிற்றால் தொடுத்துக்கட்டி, அக்கயிற்றைப் பிடித்துத் தடவியவாறு, அதன் குறிவழியால் வந்து, மண்ணைத் தோண்டி எடுத்து, திரும்பவும் அக்கயிற்றைத் தடவிப்போய் வெளியில் கொட்டி, இவ்வாறு ஓய்வில்லாத முயற்சியால் குளத்தை அகழ்ந்து மண் எடுப்பவர், அதைச் செய்திடும் போது ஐந்தெழுத்தோதுதலையும் அப்பணியுடன் செய்து வருவாராய்,

விளக்கவுரை

இழிவாய்ப் புறத்து நடுதறி - தணிவான இறக்கத்தில் ஒரு கோல் நட்டு.

நண்ணி நாளும் நற்றொண்டர்
நயந்த விருப்பால் மிகப்பெருகி
அண்ணல் தீர்த்தக் குளங்கல்லக்
கண்ட அமணர் பொறாராகி
எண்ணித் தண்டி யடிகள்பால்
எய்தி முன்னின் றியம்புவார்
மண்ணைக் கல்லிற் பிராணிபடும்
வருத்த வேண்டா வென்றுரைத்தார். **#3340**

இவ்வாறாக நாள்தோறும் சென்று, தண்டியடிகள் நயந்த விருப்பினாலே, அவ்வாசை மிகப் பெருகி, பெருமானுடைய தீர்த்தக் குளத்தை அகழக் கண்ட சமணர்கள் பொறுக்க மாட்டாராய், மனத்தில் வஞ்சனை கொண்டு தண்டியடிகள்பால் சென்று, இதனைச் சொல்வாராய், `நீர் மண்ணை அகழ்ந்தெடுத்தால் அதனுள் வாழும் உயிரினங்கள் இறந்தும் காயமுற்றும் வருந்தும், எனவே அகழ வேண்டா' என்று சொன்னார்கள்.

விளக்கவுரை

இவ்வாறாக நாள்தோறும் சென்று, தண்டியடிகள் நயந்த விருப்பினாலே, அவ்வாசை மிகப் பெருகி, பெருமானுடைய தீர்த்தக் குளத்தை அகழக் கண்ட சமணர்கள் பொறுக்க மாட்டாராய், மனத்தில் வஞ்சனை கொண்டு தண்டியடிகள்பால் சென்று, இதனைச் சொல்வாராய், `நீர் மண்ணை அகழ்ந்தெடுத்தால் அதனுள் வாழும் உயிரினங்கள் இறந்தும் காயமுற்றும் வருந்தும், எனவே அகழ வேண்டா' என்று சொன்னார்கள்.

மாசு சேர்ந்த முடையுடலார்
மாற்றங் கேட்டு மறுமாற்றம்
தேசு பெருகுந் திருத்தொண்டர்
செப்பு கின்றார் திருவிலிகாள்
பூசு நீறு சாந்தமெனப்
புனைந்த பிரானுக் கானபணி
ஆசி லாநல் லறமாவது
அறிய வருமோ உமக்கென்றார். **#3341**

அழுக்குப் பொருந்திய மேனியை உடைய சமணர்கள் கூறிய கூற்றைக் கேட்ட அடிகள், அதற்கு மறுமாற்றம் கூறுவாராய், `திருவில்லாதவர்களே! பூசும் நீற்றினை நறுமணமுடைய சந்தனம் என அணியும் சிவபெருமானுக்கு ஆன அத்தொண்டு எதுவாயினும் அது நல்ல அறமேயாம் என்பது அறிய வருமோ உமக்கு' என்றார்.

விளக்கவுரை

திரு-சிவத்திரு; அதனை உளங்கொளாமையின் திரு விலிகாள் என்றார். `உருவிலான் பெருமையை உளங்கொளாத அத் திருவிலார்' *(தி.3 ப.14 பா.2)* எனவரும் திருவாக்கும் காண்க.

அந்தம் இல்லா அறிவுடையார்
உரைப்பக் கேட்ட அறிவில்லார்
சிந்தித் திந்த அறங்கேளாய்
செவியும் இழந்தா யோஎன்ன
மந்த வுணர்வும் விழிக்குருடும்
கேளாச் செவியும் மற்றுமக்கே

இந்த வுலகத் துள்ளனஎன்
றன்பர் பின்னும் இயம்புவார். #3342
முடிவிலாத பேரறிவின் திறமுடைய தண்டியடிகள் இவ்வாறு அருளக் கேட்ட அறிவிலாத சமணர்கள், `நாங்கள் சிந்தித்து ஓதிய இவ்வறத்தைக் கேளாயாயினை, உன் கண் இழந்ததோடு காதும் இழந்தனையோ?' என்று கூறிட, அதுகேட்ட தண்டியடிகள், சமணரை நோக்கி, `மந்தமான மூடவுணர்வும் குருட்டுக் கண்ணும், கேளாத காதும் மற்று உமக்கே இவ்வுலகத்தில் உள்ளன' என்று கூறிப் பின்னரும் சொல்வார்,

விளக்கவுரை

****

வில்லால் எயில்மூன் றெரித்தபிரான்
விரையார் கமலச் சேவடிகள்
அல்லால் வேறு காணேன்யான்
அதுநீர் அறிதற் காரென்பார்
நில்லா நிலையீர் உணர்வின்றி
நுங்கண் குருடாய் என்கண்உல
கெல்லாங் காண யான்கண்டால்
என்செய் வீர்என் றெடுத்துரைத்தார். #3343
`மேருமலையை வில்லாகக் கொண்டு புரங்கள் மூன்றினையும் எரித்த பெருமானது நறுமணம் பொருந்திய தாமரை மலர்போலும் திருவடிகளை அல்லாது வேறொன்றும் என் கண்ணால் நான் காணேன்! அப்பேரின்பத்தைப் பெறுதற்கு நீங்கள் ஆர்?' என்று கூறுவாராய், மேலும் அவரிடம், நில்லாதவற்றை நிலையின என்றுண ரும் புல்லறிவாளர்களே! புறத்தே பார்க்கும் பார்வை உணர்வின்றி உங்கள் கண்கள் குருடாகவும், எம் கண்கள் உலகெல்லாம் காணுமாறு ஒளிபெறவும் நேரின், நீர் என் செய்வீர்? என்று கேட்டார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அருகர் அதுகேட் டுன்தெய்வத்
தருளால் கண்நீ பெற்றாயேல்
பெருகும் இவ்வூ ரினில்நாங்கள்
பின்னை யிருக்கி லோமென்று
கருகு முருட்டுக் கைகளால்
கொட்டை வாங்கிக் கருத்தின்வழித்
தருகைக் கயிறுந் தறியுமுடன்
பறித்தார் தங்கள் தலைபறித்தார். #3344

அதுகேட்ட, சமணர்கள், `உன் இறையருளால் கண்ணினை நீ பெற்றாயாயின் பெருகிய இத்திருவாரூரில் நாங்கள் பின்னர் இருக்கில்லோம்' என்று கூறி, கறுத்த தங்கள் முரட்டுக் கையால் தண்டியடிகளது மண்வெட்டியையும் பறித்துக்கொண்டு, அவர் தாம் தடவிப் போதற்கெனக் கட்டிவைத்த கயிற்றையும் நட்ட கோல்களையும் பிடுங்கி உடன் எறிந்தார்கள்.

விளக்கவுரை

கொட்டு - மண்வெட்டி

வெய்ய தொழிலார் செய்கையின்மேல்
வெகுண்ட தண்டி யடிகள்தாம்
மைகொள் கண்டர் பூங்கோயில்
மணிவா யிலின்முன் வந்திறைஞ்சி
ஐய னேஇன்று அமணர்கள்தாம்
என்னை யவமா னஞ்செய்ய
நைவ தானேன் இதுதீர
நல்கு மடியேற் கெனவீழ்ந்தார். **#3345**

: பிறர்க்கு ஊறு செய்தும் வரும் கொடிய தொழிலின ரான சமணர்கள் செய்த இச்செயலை அறிந்த தண்டியடிகள் வெகுண்டு, வேதனையடைந்து, நஞ்சுண்டு கருமையாய கழுத்தினையுடைய சிவபெருமானின் பூங்கோயிலின் முன்பு வந்து வணங்கி, `என் ஐயனே! இன்று சமணர்கள் என்னை இழிவு செய்திட நான் மனவேதனையுறுவ தானேன், அடியேற்கு இதனைத் தீர்த்திட அருள் புரிதல் வேண்டும்' என விண்ணப்பித்துக் கொண்ட நிலையில், நிலம் உற வணங்கினார்.

விளக்கவுரை

****

பழுது தீர்ப்பார் திருத்தொண்டர்
பரவி விண்ணப் பஞ்செய்து
தொழுது போந்து மடம்புகுந்து
தூய பணிசெய் யப்பெறா
தழுது கங்கு லவர்துயிலக்
கனவி லகில லோகங்கள்
முழுது மளித்த முதல்வனார்
முன்னின் றருளிச் செய்கின்றார். **#3346**

: பிறர்க்கு ஊறு செய்தும் வரும் கொடிய தொழிலின ரான சமணர்கள் செய்த இச்செயலை அறிந்த தண்டியடிகள் வெகுண்டு, வேதனையடைந்து, நஞ்சுண்டு கருமையாய கழுத்தினையுடைய

சிவபெருமானின் பூங்கோயிலின் முன்பு வந்து வணங்கி, `என் ஐயனே! இன்று சமணர்கள் என்னை இழிவு செய்திட நான் மனவேதனையுறுவ தானேன், அடியேற்கு இதனைத் தீர்த்திட அருள் புரிதல் வேண்டும்' என விண்ணப்பித்துக் கொண்ட நிலையில், நிலம் உற வணங்கினார்.

விளக்கவுரை

****

நெஞ்சின் மருவும் கவலையினை
ஒழிநீ நின்கண் விழித்துஅந்த
வஞ்ச அமணர் தங்கள்கண்
மறையு மாறு காண்கின்றாய்
அஞ்ச வேண்டா வென்றருளி
அவர்பால் நீங்கி அவ்விரவே
துஞ்சும் இருளின் அரசன்பாற்
தோன்றிக் கனவி லருள் புரிவார். **#3347**

தண்டியே! `நின் நெஞ்சில் கொண்ட கவலையை ஒழிவாய்! உன் கண்ணை நீ விழித்துப் பார்வை பெறவும், அவ்வஞ்சக ராய சமணர்களின் கண்கள் மறையவும் நீ காணப்போகின்றாய்! அஞ்ச வேண்டா' என அருளி, அவரிடம் நீங்கி, அவ்விரவிலேயே அனைவ ரும் துயிலும் இருளில், அரசனிடத்துத் தோன்றி, அவன் கனவில் அருள் செய்வாராகிய பெருமான்,

விளக்கவுரை

****

தண்டி நமக்குக் குளங்கல்லக்
கண்ட அமணர் தரியாராய்
மிண்டு செய்து பணிவிலக்க
வெகுண்டான் அவன்பால் நீமேவிக்
கொண்ட குறிப்பால் அவன்கருத்தை
முடிப்பா யென்று கொளவருளித்
தொண்டர் இடுக்கண் நீங்களழுந்
தருளி னார்அத் தொழிலுவப்பார். **#3348**

` தண்டி நமக்குக் குளம் தோண்டக் கண்ட சமணர்கள் தாங்காது, பொறாமையால் வன்மை செய்து, அவன் பணியினை விலக்கிட, அவன் வெகுட்சியால் வேதனைப்பட்டான். அவனிடம் நீ சென்று அவன் மனத்தில் கொண்ட குறிப்பின்வழி அவன் எண்ணத்தை முடிப்பாய்' என அருள் புரிந்து, தண்டியடிகளது இடுக்கண் நீங்க அருள்செய்து மறைந்தருளினார் அவர்தம் தொழிலை மகிழ்வாராகிய இறைவர்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

வேந்தன் அதுகண் டப்பொழுதே
விழித்து மெய்யில் மயிர் முகிழ்ப்பப்
பூந்தண் கொன்றை வேய்ந்தவரைப்
போற்றிப் புலரத் தொண்டர்பால்
சார்ந்து புகுந்த படிவிளம்பத்
தம்பி ரானர் அருள் நினைந்தே
ஏய்ந்த மன்னன் கேட்பஇது
புகுந்த வண்ணம் இயம்புவார். **#3349**

அரசன் அக்கனாக் கண்ட அப்பொழுதே விழித்து, உடலில் மயிர் சிலிர்த்திடக் குளிர்ந்த மலராய கொன்றை மாலையைச் சூடினாரைப் போற்றி, இருள் நீங்கியவுடன், தொண்டராய தண்டியடிக ளிடம் சென்று, தனக்குப் பெருமான் அருளிய பாங்கைச் சொல்லிட, அதுகேட்டுத் தம்பெருமான் அருள் நினைந்து, திருவருளின் வாய்ப்புடைய அரசன் கேட்ப, இவ்வண்ணமாகச் சொல்வாராய்,

விளக்கவுரை

****

மன்ன கேள்யான் மழவிடையார்
மகிழுந் தீர்த்தக் குளங்கல்லத்
துன்னும் அமணர் அங்கணைந்தீ
தறமன் றென்று பலசொல்லிப்
பின்னுங் கயிறு தடவுதற்கியான்
பிணித்த தறிக ளவைவாங்கி
என்னை வலிசெய் தியான்கல்லுங்
கொட்டைப் பறித்தா என்றியம்பி. **#3350**

`அரசே! கேள்; இளைய ஆனேற்றினையுடைய பெருமான் மகிழ்கின்ற தீர்த்தக் குளத்தை யான் தோண்டிட, அதனைக் கண்டு அங்கு இருந்த சமணர்கள், வந்து என்னை நோக்கி, ஈது அறமன்று என்று பல சொல்லிப் பின்னர், யான் குருடானமையின், தடவிச் செல்லக் கட்டிய கயிறு, அதனைப் பிணைத்திருக்கும் கோல்கள் ஆகியவற்றைப் பிடுங்கி, எனக்கு வன்மைசெய்து, யான் வைத்திருந்த மண்வெட்டியையும் பறித்தார்கள்' என்று சொல்லிப் பின்னரும்.

விளக்கவுரை

****

அந்த னான வுனக்கறிவும்

இல்லை யென்றா ரியானதனுக்
கெந்தை பெருமா னருளால்யான்
விழிக்கி லென்செய் வீரென்ன
இந்த வூரில் இருக்கிலோம்
என்றே ஒட்டி னார்இதுமேல்
வந்த வாறு கண்டிந்த
வழக்கை முடிப்ப தெனமொழிந்தார். **#3351**

`குருடனான உனக்கு அறிவும் இல்லை என்றார்கள். யான் அதற்கு எந்தை பெருமான் அருளால் கண்பார்வை பெற்று விழிப்பின் என் செய்வீர்கள்? என்ன, அவ்வாறு நிகழின் நாங்கள் இவ்வூரில் இருக்கமாட்டோம் என ஒட்டிக் (சபதம்) கூறினார்கள். நிகழ்ந்தது இது, இனி இவ்வழக்கில் காணும் உண்மை கண்டு தேர்வாய்' என்று தண்டியடிகள் மொழிந்தார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

அருகர் தம்மை அரசனும்அங்
கழைத்துக் கேட்க அதற்கிசைந்தார்
மருவுந் தொண்டர் முன்போக
மன்னன் பின்போய் மலர்வாவி
அருகு நின்று விறல்தண்டி
யடிகள் தம்மை முகநோக்கிப்
பெருகுந் தவத்தீர் கண்ணருளாற்
பெறுமா காட்டும் எனப்பெரியோர். **#3352**

அதுகேட்ட அரசன், சமணர்களை அங்கு அழைத்து இதனைக் கூற, அவர்களும் அதற்கு இசைந்தவர்களாய், இறைவன் அருளால் சிறந்திடும் தண்டியடிகள் முன்னாக அரசன் பின்னாகச் சென்று மலர்கள் சிறந்திடும் குளத்தினருகே நின்று வலியுடைய தண்டியடிகளின் முகநோக்கிப் பெருகும் தவமுடையீர்! உமது கண்ணினை அருளால் பெறுமாறு இங்குக் காட்டும் என்ன, அதுகேட்ட பெரியோராகிய தண்டியடிகளும்,

விளக்கவுரை

****

ஏய்ந்த வடிமை சிவனுக்கியான்
என்னில் இன்றென் கண்பெற்று
வேந்த னெதிரே திருவாரூர்
விரவுஞ் சமணர் கண்ணிழப்பார்
ஆய்ந்த பொருளுஞ் சிவபதமே

யாவ தென்றே அஞ்செழுத்தை
வாய்ந்த தொண்டர் எடுத்தோதி
மணிநீர் வாவி மூழ்கினார். **#3353**

உண்மையில் சிவபெருமானுக்குப் பொருந்திய அடிமையான் என்னில் இன்று யான் கண் பெற்றிட, இவ்வரசன் முன்னாகத் திருவாரூரில் வாழ்ந்துவரும் இச்சமணர்கள் கண்ணிழப்பர், செவ்விய நூல்களால் ஆராய்ந்து தெளிந்த மெய்ப்பொருளும் சிவபெருமானுடைய திருவடிகளே எனக் கூறி திருவருள் வாய்ப்புற்ற தண்டியடிகள் திருவைந்தெழுத்தை ஓதியவாறு அழகிய நீர்க் குளத்தில் மூழ்கினார்.

விளக்கவுரை

சிவபதம் - சிவபெருமானின் திருவடி. சிவபெருமானின் திருப்பெயராய சொல்; திருவைந்தெழுத்து என்றலும் ஒன்று. பதம் - சொல்லாதல், `அஞ்சு பதம் சொல்லி' *(தி.7 ப.83 பா.1)* என்ற திருவாக்காலும் அறியலாம்.

தொழுது புனல்மேல் எழுந்தொண்டர்
தூய மலர்க்கண் பெற்றெழுந்தார்
பொழுது தெரியா வகையிமையோர்
பொழிந்தார் செழுந்தண் பூமாரி
இழுதை அமணர் விழித்தேகண்
ணிழந்து தடுமா றக்கண்டு
பழுது செய்த அமண்கெட்ட
தென்று மன்னன் பகர்கின்றான். **#3354**

குளத்தில் மூழ்கித் தொழுது நீர்மேலாக எழுந்த தண்டியடிகள், தமது தூயதான மலர்க் கண்களைப் பெற்று எழுந்தார். அதுபொழுது வானவெளியே இதுவென அறியாவாறு தேவர்கள் செழுமையான பூமழை பொழிந்தார்கள். இந்நிலையில் பேய்களாகும் சமணர்கள் கண் விழித்தவாறே, பார்வை இழந்து தடுமாறக் கண்ட அர சன், பழுதுசெய்த சமணம் இனிக் கெட்டழிந்தது என மொழிவானாய்,

விளக்கவுரை

****

தண்டி யடிகள் தம்முடனே
ஒட்டிக் கெட்ட சமண்குண்டர்
அண்டர் போற்றுந் திருவாரூர்
நின்றும் அகன்று போய்க்கழியக்
கண்ட அமணர் தமையெங்கும்
காணா வண்ணந் துரக்கவென

மண்டி வயவர் சாடுதலும் கண்கள் காணார் மனங்கலங்கி. #3355
தண்டியடிகள் தம்முடன் ஒட்டிக் கெட்டழிந்த வஞ்சகச் சமணர்கள், தேவர்கள் போற்றும் திருவாரூரினின்றும் அகன்றுபோய் ஒழிந்திட, நீங்கள் அவர்களைக் கண்டவிடத்தே இனி இங்குக் காணாவண்ணம் களைக எனக் கட்டளை செய்தலும், அதன்படி அரசனது படைவீரர்கள் சமணர்களை அடித்துத் துரத்துதலும், கண் காண முடியாத அவர்கள் மனக்கலக்கம் கொண்டு,

விளக்கவுரை
****

குழியில் விழுவார் நிலைதளர்வார்
கோலும் இல்லை எனவுரைப்பரார்
வழியீ தென்று தூறடைவார்
மாண்டோம் என்பார் மதிகெட்டீர்
அழியும் பொருளை வழிபட்டுஇங்கு
அழிந்தோம் என்பார் அரசனுக்குப்
பழியீ தாமோ என்றுரைப்பார்
பாய்க ளிழப்பார் பறிதலையர். #3356

குழியில் தடுக்கி வீழ்வார்களும், செல்லும் நிலை தளர்வார்களும், அந்தோ எமக்கு ஊன்றுகோலும் இல்லையே எனச் சொல்வார்களும், வழி இஃதெனச் சென்று செடிப் புதர்களைச் சார்வார் களும், அழிந்தோம் என்பார்களும், இவ்வாறு செய்யும் அரசனுக்கு இதுவும் பழியாய் ஆகுமோ? ஆகாது என்பார்களும், தமக்குரிய பாய்களை இழப்பார்களுமாகிய அச்சமணர்கள்.

விளக்கவுரை
****

பீலி தடவிக் காணாது
பெயர்வார் நின்று பேதுறுவார்
காலி னோடு கைமுறியக்
கல்மேல் இடறி வீழ்வார்கள்
சால நெருங்கி எதிரெதிரே
தம்மில் தாமே முட்டிடுவார்
மாலு மனமும் அழிந்தோடி
வழிக ளறியார் மயங்குவார். #3357

மயிற்பீலியைக் கீழே வீழ்த்தி அதனைக் காணாது செல்வார்களும், செல்லாது நின்று நடுங்குவார்களும், மிகவும் நெருங்கிச் செல்லும் நிலையில் தாம்தாமும் முட்டிக்கொள்வார்களும், மனம் உடைந்த

நிலையில் மயங்குவார்களுமாயினார்.

விளக்கவுரை

****

அன்ன வண்ணம் ஆரூரில்
அமணர் கலக்கங் கண்டவர்தாம்
சொன்ன வண்ண மேஅவரை
ஓடத் தொடர்ந்து துரந்ததற்பின்
பன்னும் பாழி பள்ளிகளும்
பறித்துக் குளஞ்சூழ் கரைபடுத்து
மன்ன னவனும் மனமகிழ்ந்து
வந்து தொண்டர் அடிபணிந்தான். **#3358**

அவ்வாறாய நிலையில், அச்சமணர்களைத் தாங்கள் முன்னர் சொன்னவாறே அவர்களைத் தொடர்ந்து துரத்தியபின், சமணப் பள்ளிகளையும் இடித்துக், குளத்தைச் சூழந்த கரையையும் அகலமாகச் செய்து, அரசனும் மனமகிழ்ந்து வந்து தண்டியடிகள் திருவடிகளை வணங்கினான்.

விளக்கவுரை

இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

மன்னன் வணங்கிப் போயினபின்
மாலு மயனும் அறியாத
பொன்னங் கழல்கள் போற்றிசைத்துப்
புரிந்த பணியுங் குறைமுடித்தே
உன்னும் மனத்தால் அஞ்செழுத்தும்
ஓதி வழுவா தொழுகியே
மின்னுஞ் சடையார் அடிநீழல்
மிக்க சிறப்பின் மேவினார். **#3359**

அரசன் வணங்கிப்போன பின், திருமாலும் அறிந்திடாத பெருமானின் பொன்வண்ணமாய அழகிய திருவடிகளைப் போற்றித், தாம் செய்த திருப்பணியின் துறையினையும் முடித்து, சிந்திக்கும் மனத்தால் திருவைந்தெழுத்தையும் ஓதித் தமது பணியில் வழுவின்றி ஒழுகிவந்து, மின்னும் சடையையுடைய பெருமான் திருவடி நிழற்கீழ் மிக்க சிறப்பில் பொருந்தினார் தண்டியடிகள்.

விளக்கவுரை

****

கண்ணின் மணிக ளவையின்றிக்
கயிறு தடவிக் குளந்தொட்ட

எண்ணில் பெருமைத் திருத்தொண்டர்
பாத மிறைஞ்சி யிடர்நீங்கி
விண்ணில் வாழ்வார் தாம்வேண்டப்
புரங்கள் வெகுண்டார் வேற்காட்டூர்
உண்ணி லாவும் புகழ்த்தொண்டர் மூர்க்கர் செய்கை யுரைக்கின்றாம்.

#3360

கண்ணின் மணிகளாய ஒளியின்றிக் கயிற்றைத் தடவிக் கொண்டே ஏறியும் இழிந்தும் பொருந்திய திருத்தொண்டாற் றிய தண்டியடிகளின் திருவடிகளை வணங்கித் துன்பங்கள் பலவும் நீங்கப்பெற்று, வானில் வாழும் தேவர்கள் வேண்ட முப்புரங்களையும் எரித்த பெருமான் விரும்பி உறையும் திருவேற்காட்டில் வாழும் நிலவிய புகழுடைய தொண்டர் மூர்க்க நாயனாரது செயலினை இனி எடுத்து மொழிவாம். தண்டியடிகள் நாயனார் புராணம் முற்றிற்று.

விளக்கவுரை

****

மூர்க்க நாயனார் புராணம்

மன்னிப் பெருகும் பெருந்தொண்டை
வளநா டதனில் வயல் பரப்பும்
நன்னித் திலவெண் திரைப்பாலி
நதியின் வடபால் நலங்கொள்பதி
அன்னப் பெடைகள் குடைவாவி
யலர்புக் காட அரங்கினிடை
மின்னுக் கொடிகள் துகிற்கொடிகள்
விழவிற் காடு வேற்காடு. **#3361**

என்றும் விளக்கம் பெற்றிருக்கும் பெருந் தொண்டை நாட்டிடத்தே, வயலில் நீர்பரப்பிடும் நல்ல முத்துப்போலும் திரைகளை யுடைய பாலி நதியின் வடபுறத்தில் நலம்கொள்ளும் ஒரு நகரம்; அது, அங்குள்ள பெடை அன்னங்கள் தாம் குடைந்தாடும் குளங்களில் உள்ள தாமரைப் பூக்களில் புகுந்து நின்று ஆடவும் நாட்டிய அரங்குக ளிடையே மின்னிடும் இடையையுடைய பெண்களும், துகிலின் கொடிகளும் விழாக் காலத்தே ஆடுகின்ற சிறப்புடையதுமான வேற்காடு என்னும் பெயருடையது.

விளக்கவுரை

வேலமரங்கள் நிறைந்திருத்தல் பற்றியும், முருகப் பெரு மானின் திருக்கைவேல் பற்றியும் இவ்வூர் இப்பெயர் பெற்றதென்பர்.

செம்பொற் புரிசைத் திருவேற்கா
டமர்ந்த செய்ய சடைக்கற்றை
நம்பர்க் கும்பர்க் கமுதளித்து
நஞ்சை யமுது செய்தவருக்
கிம்பர்த் தலத்தில் வழியடிமை
யென்றுங் குன்றா வியல்பில்வரும்
தம்பற் றுடைய நிலைவேளாண்
குலத்தல் தலைமை சார்ந்துள்ளார். **#3362**

செம்பொன்னினாய மதில்சூழ்ந்த திருவேற்காடாய அத்திருப்பதியில், அமர்ந்தருளும் செம்மையாய கற்றைச் சடையை யுடைய பெருமானாரும், தேவர்க்கு அமுது கொடுத்துத் தாம் நஞ்சை யுண்டவருமான இறையவருக்கு, இவ்வுலகில் வழிவழியாக அடிமைத் திறம் குன்றாத இயல்பில் வளர்ந்து வரும் நிலையுடைய வேளாளரது குலத்தில் தோன்றித் தலைமை பெற்றவர்.

விளக்கவுரை

****

கோதின் மரபில் பிறந்துவளர்ந்
தறிவு கொண்ட நாள்தொடங்கி
ஆதி முதல்வர் திருநீற்றின்
அடைவே பொருளென் றறிந்தரனார்
காத லடியார்க் கமுதாக்கி
அமுது செய்யக் கண்டுண்ணும்
நீதி முறைமை வழுவாத
நியதி பூண்ட நிலைமையார். **#3363**

குற்றம் இல்லாத வழிவழியாகச் சிறந்துவரும் நல்ல மரபில் தோன்றி வளர்ந்து வரும் அவர், பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் ஆதி முதல்வனாய சிவபெருமானது திருநீற்றின் சார்பே மெய்ம்மைப் பொருள் என்று அறிந்து, அப்பெருமான்மீது பெருகும் அன்புடைய அடியார்கட்கு அமுதாக்கி, அவர் அமுது செய்திடத் தாம் அதனைக் கண்டு மகிழ்ந்த பின், தாம் உண்கின்ற நீதி முறைமை தவறாத ஓர் நியதி பூண்டு வாழ்பவர்.

விளக்கவுரை
****

தூய அடிசில் நெய்கன்னல்
சுவையின் கறிக ளவையமைத்து
மேய வடியார் தமைப்போற்றி
விருப்பால் அமுது செய்வித்தே
ஆய பொருளும் அவர்வேண்டும்
படியால் உதவி அன்புமிக
ஏயு மாறு நாடோறும்
இனைய பணிசெய் தின்புற்றார். **#3364**

தூய சோறு, நெய், கரும்பின்கட்டி, சுவையுடைய கறிகள் ஆகியவற்றை அமைத்துத் தம்பால் எழுந்தருளிவரும் அடியார் களை வணங்கி, விருப்பினால் அவர்களுக்கு அமுது செய்வித்துத், தம்மிடமுள்ள பொருள்களை அடியார்கள் வேண்டும்படி கொடுத்து, அன்பு மிகப் பொருந்துமாறு, நாள்தோறும் இத்தகைய பணியைச் செய்து இன்புற்று வருபவர்.

விளக்கவுரை
****

இன்ன செயலின் ஒழுகுநாள்
அடியார் மிகவும் எழுந்தருள
முன்ன முடைமை யானபொருள்

முழுதும் மாள அடிமையுடன்
மன்னு காணி யானநிலம்
மற்று முள்ள திறம்விற்றே
அன்னம் அளித்து மேன்மேலும்
ஆரா மனத்தா ராயினார். **#3365**

இவ்வாறாய செயல்களைச் செய்து ஒழுகிவரும் நாளில், அடியார்கள் மிகுதியாக எழுந்தருளி வந்திட, அவர்களுக்கு ஏற்ற பணி புரிந்திடலால், தமது முன்னைய உடைமைகளாய பொருள் கள் முழுதும் நீங்கத் தம்மிடத்து விளங்கிய அடிமையுடன், காணியான நிலம், மற்றுமுள்ள அணிகலன்கள் முதலாய உடைமைப் பொருள்கள் யாவற்றையும் விற்று அடியார்க்கு உணவு கொடுத்து, அதனால் மேன்மேலும் அத்தொண்டில் ஆசை நிறையாத மனத்தராயினார்.

விளக்கவுரை
****

அங்கண் அவ்வூர் தமக்கொருபற்று
அடியார் தங்கட் கமுதாக்க
எங்குங் காணா வகைதோன்ற
இலம்பா டெய்தி யிருந்தயர்வார்
தங்கும் வகையால் தாமுன்பு
கற்ற தன்மை நற்சூதால்
பொங்கு பொருளாக் கவுமங்குப்
பொருவா ரின்மை யினிற்போவார். **#3366**

அந்நாளில், அவ்வூரில், இனி ஒருபொருளும் அடி யார் தமக்கு அமுதாக்க எங்கும் பெற இயலாத நிலையில், வறுமைப் பாடு மிகக் கொண்டு, தொண்டு செய்வதற்கு வழிகாணாது இருந்து அயர்பவர், தம்மிடத்து மறவாது கொண்டிடும் வகையில், தாம் பழகிக் கற்றுக் கொண்டதாய நல்ல சூதினால் பொருள் தேடிக் கொள்வதற்குச் சூதில் தம்முடன் பணயமாக எதிர் ஏற்பார் யாரும் அந்நாட்டில் இல்லா மையால் வேற்றிடத்திற்குச் செல்வாராய்,

விளக்கவுரை
****

பெற்றம் ஏறிப் பலிக்குவரும்
பெருமான் அமருந் தானங்கள்
உற்றன் அன்பாற் சென்றெய்
உருகு முள்ளத் தொடும்பணிந்து
கற்ற சூதால் நியதியாங்

கடனு முடித்தே கருதாரூர்
செற்ற சிலையார் திருக்குடந்தை
யடைந்தார் வந்து சிலநாளில். **#3367**

ஆனேற்றின் மீதமர்ந்து, பிச்சையேற்றுவரும், பெருமான் வீற்றிருக்கின்ற பல பதிகளையும் தமக்கு உற்ற அன்பினால் சென்றடைந்து, உருகும் உள்ளத்தொடும் பணிந்து, தாம்கற்ற சூதினால் பெறும் பொருளால், தமது நியமமாக அடியார்க்கு அமுதூட்டும் செயலை முடித்து வருபவர், தம்மை நினையாத அசுரர்களின் முப்புரங் களையும் அழித்த வில்லையுடைய பெருமானின் திருக்குடந்தை என்னும் திருப்பதியைச் சிலநாள்களில் வந்து அடைந்தார்.

விளக்கவுரை

குடந்தை என்பது இக்காலத்துக் கும்பகோணம் என அழைக்கப்பெற்று வருகிறது. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

இருளாரும் மணிகண்டர்
அடியார்க்கின் னமுதளிக்கப்
பொருளாயம் எய்துதற்குப்
புகழ்க்குடந்தை அம்பலத்தே
உருளாயச் சூதாடி
யுறுபொருள்வென் றனநம்பர்
அருளாக வேகொண்டங்
கமுதுசெய்வித் தின்புறுவார். **#3368**

இருள் விளங்கும் அழகிய திருக்கழுத்தினையுடைய பெருமானின் அடியவர்களுக்கு, இனிய திருவமுதாக்க வேண்டிய பொருளைத் திரட்டுதற்குப் புகழ்நிறைந்த திருக்குடந்தை நகரினில் பெயர் பெற்ற பொதுமடம் ஒன்றினில், காய் உருட்டும் சூதாடி, அதனால் பெரும் பொருள் பெருகுமளவில் வென்று, அதனைப் பெரு மான் அருளாகவே கொண்டு, அங்கு அப்பொருளால் அடியவர்க ளுக்கு அமுது செய்வித்து இன்புறுவாராகி,

விளக்கவுரை

பொருள் ஆயம் - பொருட் பெருக்கம். ஆதாயம் என்ப தன் திரிபென்பர் பரிமேலழகர். உருளாயம் - உருள்கின்ற காய்; சூதா டும் கருவி. `உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம் போஒய்ப் புறமே படும்' *(திருக்குறள், 933)* எனவரும் சொல்லாட்சிகளை இப் பாடல் முகந்து நிற்கிறது.

முற்சூது தாந்தோற்று
முதற்பணையம் அவர்கொள்ளப்

பிற்சூது பலமுறையும்
வென்றுபெரும் பொருளாக்கிச்
சொற்சூதுதான் மறுத்தாரைச்
சுரிகையுரு விக்குத்தி
நற்சூதர் மூர்க்கரெனும்
பெயர்பெற்றார் நானிலத்தில். **#3369**

இவ்வாறு சூதாடும்பொழுது, முதற் சூதாட்டத்தில் வைத்த பந்தயப் பொருளைத் தாம் தோற்று, எதிர் வைத்தார் அதைப் பெறும்படி செய்து, பின்னர்த் தமது திறமையால் அவர் முன்பெற்ற பணத்தின் மகிழ்வால் மேலும் பணயமாக வைக்கும் எல்லாப் பொருள்களையும் பலமுறையும் வென்று, பெரும் பொருளை ஈட்டி, இவ்வாறு சூதாடும்பொழுது பேச்சுமாறி மறுத்தும் வாதிடுவாரைத் தமது வாளால் குத்தி, இத்தன்மையால் நல்ல சூதராய அவர், மூர்க்கர் என்னும் பெயரைப் பெற்றார்.

விளக்கவுரை

பெறுவது ஒன்றாய் இழப்பது பலவாயினும், இழக்கும் தொறும் அச்சூதில் காதல் மிகும் *(குறள், 932)* என்றார் திருவள்ளுவர். இவ்வாறு பாங்கையெல்லாம் நினைவு கூருமாறு இப்பாடல் அமைந் துள்ளது. நற்சூதர் - நன்கு சூதாடுபவர்; சூதாடுவதிலும், பொருள் பெறுவதிலும் நேர்மை தவறாதவர். `கற்றசூதன்' எனத் தொகையும், `நற்சூதன்' என வகையும் கூறியதற்கு ஏற்ப, ஆசிரியர் சேக்கிழாரும், `நற்சூதர்' என்றார். தம்மொடு சூதாடுவார் நேர்மை தவறின் அவரை வன்மையாக ஒறுத்தல்பற்றி மூக்கர் எனப்பட்டார். எனவே இது காரணப்பெயர் என்பது பெற்றாம். இதுகாறும் பெயர் கூறாது வந்த ஆசிரியர், காரணம் வரும்வழி, இப்பெயரைக் கூறவே, அவர்தம் இயற்பெயர் அறியவாராமையும் பெறுதும். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

சூதினில்வென் றெய்துபொருள்
துரிசற்ற நல்லுணர்வில்
தீதகல அமுதாக்கு
வார்கொள்ளத் தாந்தீண்டார்
காதலுடன் அடியார்கள்
அமுதுசெயக் கடைப்பந்தி
ஏதமிலா வகைதாமும்
அமுதுசெய்தங் கிருக்குநாள். **#3370**

அவர், சூதினால் வென்று பெற்ற பொருள் முழுவ தையும், பழுதற்ற தமது நல்லுணர்வினால், அத்தீங்கெலாம் நீங்க அப்பொருளைத் தம் கையாலும் தீண்டாது, அடியார்கட்கு அமுதாக்கு வார் கையில்

பெறும்படியாகக் கொடுத்து, அவர் கொடுக்கும் திருவ முதை அன்பினால் அடியார்கள் அமுது செய்திடப், பின்னர் தாம் கடைப்பந்தியில் இருந்து, யாதொரு குற்றமும் இன்றி உண்டு, அங்கு இருக்கும் நாள்களில்,

விளக்கவுரை

****

நாதன்தன் அடியார்க்கு
நல்லடிசில் நாடோறும்
ஆதரவி னால்அமுது
செய்வித்தங் கருளாலே
ஏதங்கள் போயகல
இவ்வுலகை விட்டதற்பின்
பூதங்கள் இசைபாட
வாடுவார் புரம்புக்கார். **#3371**

தலைமை பொருந்திய பெருமானின் அடியார்க்கு நல்ல அமுதை நாள்தோறும் அன்பினால் அமுது செய்வித்துப் பின்னர், அங்குப் பெருமானது திருவருளாலே தமது குற்றங்கள் யாவும் நீங்க, இவ்வுலகை விட்டுப் பூதகணங்கள் இசை பாடப் பொற்பொதுவில் நடனம் ஆடும் பெருமானது உலகினைச் சென்றடைந்தார்.

விளக்கவுரை

ஏதங்கள் - குற்றங்கள். இவை தம்மிடத்தினின்றும் விலகினால் மட்டும் அமையாது; அவை இல்லாவாகவும் வேண்டும் என்பார் `ஏதங்கள் போய் அகல' என்றார்; `பொய்யாயின வெல்லாம் போய் அகல' என்புழிப் போல.

வல்லார்கள் தமைவென்று
சூதினால் வந்தபொருள்
அல்லாருங் கறைக்கண்டர்
அடியவர்கள் தமக்காக்கும்
நல்லார்நற் சூதராம்
மூர்க்கர்கழல் நாம்வணங்கிச்
சொல்லார்சீர்ச் சோமாசி
மாறர்திறஞ் சொல்லுவாம். **#3372**

சூதில் வல்லமை உடையார்களை வென்று, அதனால் வந்த பொருள் முழுமையையும், கருமை விளங்கும் கழுத்தினையுடைய பெருமானின் அடியவர்கட்கு அமுதாக்கிடும் நல்லவராய மூர்க்க நாயனாருடைய மலர்க்கழல்களை வணங்கி, உலகில் பெரிதும் புகழ்ந்து பேசப்படும்

சீர்மையுடைய சோமாசிமாற நாயனார் திறத்தை இனிச் சொல்லுவாம்.
மூர்க்க நாயனார் புராணம் முற்றிற்று.

விளக்கவுரை

****

சோமாசிமாற நாயனார் புராணம்

சூதம் பயிலும் பொழில்அம்பரில் தூய வாய்மை
வேதம் பயிலும் மறையாளர் குலத்தின் மேலோர்
ஏதம் புரியும் எயில்செற்றவர்க் கன்பர் வந்தால்
பாதம் பணிந்தா ரமுதூட்டுநற் பண்பின் மிக்கார். **#3373**

மாமரங்கள் மிகுதியாக விளங்கி நிற்கும் சோலை களையுடைய திரு அம்பர் என்னும் ஊரில், மனத்தைத் தூய்மை செய் யும் வாய்மையுடைய நான்மறைகளையும் பயில்கின்ற மறையவர்தம் குலத்தில், மேம்பட விளங்கித் தோன்றியவர். அவர், துன்பம் புரியும் முப்புரங்களையும் எரிசெய்த சிவபெருமானுக்கு அன்பராய அடிய வர்கள் தம்மிடம் வந்தால், அவர்களின் திருவடிகளைப் பணிந்து, மிகுந்த அன்புடன் அமுதூட்டுகின்ற நற்பண்பில் மிகுந்தவர்.

விளக்கவுரை

அம்பர் என்பது திருஇன்னம்பர் என்னும் பதியாகும்.

யாழின் மொழியாள் தனிப்பாகரைப் போற்றும் யாகம்
ஊழின் முறைமை வழுவாதுல கங்க ளான
ஏழும் உவப்பப் புரிந்தின்புறச் செய்த பேற்றால்
வாழுந் திறம்ஈசர் மலர்க்கழல் வாழ்த்தல் என்பார். **#3374**

: யாழின் இனிமை போலும் மொழியையுடைய உமையம்மையாரை ஒருகூற்றில் கொண்ட சிவபெருமானைப் போற் றும் சிவவேள்விகளைப் பண்டு தொட்டுச் செய்துவரும் முறைமை பிழையாது, மேலாய உலகங்களான ஏழும் உவந்திடப் புரிந்து, அனைத்துயிர்களையும் இன்புறச் செய்திடும் பேற்றால், சிவபெரு மானுடைய திருவடி மலர்களை வாழ்த்தி வணங்குதலே உயிர்கள் நல்வாழ்வு அடைதற்குரிய வழியாகும் எனும் கருத்து உடையவர்.

விளக்கவுரை

பாகரைப் (சிவபெருமானை) போற்றும் யாகம் என்றார், உலகியலின்பங்களைப் பெறக் கருதிப் பிறபிற தெய்வங்களைப் போற் றும் யாகங்களும் உளவாதல்பற்றி. அவை காமியத் தழுந்தி இளைக் கவும், காலர் கைப்படிந்து மடியவும் காரணமாகுமே யன்றி, இறுதியில் இன்பத்தைப் பெற ஏதுவாகா. சிவபாதஇருதயர் செய்துவந்த வேள்வி யும், ஆறுசூழ் வேணிநாதனாரை முன்னாக வைத்துச் செய்த வேள்வி யேயாகும். அரன் நாமமே கூறவும், வையகம் துயர் தீரவும் இவ்வேள் வியே உதவும். இவ்வேள்வியை ஆற்றுவதனாலேயே, இறைவர் கழலை வாழ்த்துதலே உயிர்க்கு உறுதி பயக்கும் எனக் கொண்டார்.

எத்தன் மையரா யினும்ஈசனுக் கன்பர் என்றால்

அத்தன் மையர் தாம்நமையாள்பவர் என்று கொள்வார்
சித்தந் தெளியச் சிவன்அஞ்செழுத் தோது வாய்மை
நித்தம் நியமம் எனப்போற்றும் நெறியில் நின்றார். **#3375**
`எத்தன்மையராயினும் அவர் சிவபெருமானுக்கு அன்பர் என்றால், அத்தன்மை உடையவர்தாம், நம்மை ஆள்பவர்' என்று கொண்டிடும் திறமுடையார், தம்முடைய சித்தம் தெளிவு கொண்டிடச் சிவபெருமானின் நாமமாம் `நமச்சிவாய' எனும் திருவைந்தெழுத்தை ஓதும் வாய்மை ஒழுக்கத்தை, நாளும் தவறாமல் செய்வதைக் கடமையாகப் போற்றும் நெறியில் தலை நின்றார்.

விளக்கவுரை

****

சீருந் திருவும் பொலியுந்திரு வாரூர் எய்தி
ஆரந் திகழ்மார்பின் அணுக்கவன் தொண்டர்க் கன்பால்
சாரும் பெருநண்பு சிறப்ப அடைந்து தங்கிப்
பாரும் விசும்பும் பணியும்பதம் பற்றி யுள்ளார். **#3376**
அவர், சீரும் திருவும் பொலியும் திருவாரூர்க் கோயிலை அடைந்து, அங்கு வாழும் மாலை திகழும் மார்புடைய சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டராய சுந்தரமூர்த்தி சுவாமி களுக்கு அன்பால் சேரும் பெரு நண்பு சிறக்கப் பெற்று, அதனால் திருவாரூரில் தங்கி, இவ்வுலகும் வான் உலகும் பணிகின்ற அப்பெருமக னார்தம் திருவடிகளையே தமது பெரும் பற்றாகப் பற்றிக் கொண்டிருப்பார்.

விளக்கவுரை

சீர் - சைவச் சீர்மை. திரு - முத்தித்திரு. பொலிதல் - எளிதில் கைவரப் பெறுதல், தேசம் உய்ய.

துன்றும் புலன்ஐந் துடன்ஆறு தொகுத்த குற்றம்
வென்றிங் கிதுநன் னெறிசேரும் விளக்க மென்றே
வன்றொண்டர் பாதந் தொழுதான சிறப்பு வாய்ப்ப
வென்றும் நிலவுஞ் சிவலோகத்தில் இன்ப முற்றார். **#3377**
உயிர்களிடத்துப் பொருந்திய ஐம்புலன்களுடன், காமம் முதலாக உள்ள அறுவகைக் குற்றங்களையும் வென்று, இவ் வுலகில் நன்னெறி சேர்தற்காம் விளக்கம் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவடிகளைத் தொழுதலே எனக்கருதி அப்பணி தலைநின்ற அத னால் வருவதான சிறப்பு வாய்ந்திட, அப்பேற்றால் என்றும் நிலவிய அழிவிலாத சிவலோகத்துச் சென்று இன்புற்றார். அவர் பெயர் சோமாசிமாற நாயனார் என்பதாகும்.

விளக்கவுரை

இவர்தம் பெயரை ஆசிரியர் சேக்கிழார் கூறிற்றிலரேனும் தொகை நூலானும், வகை நூலானும் `மாறன்' என்பது இவர் இயற்பெயர் எனத் தெரிகிறது. சிவ வேள்விகளை இடையறாது செய்து வந்தமையின் சோமயாசி (சோமாசி) எனும் பட்டப்பெயருடன் அழைக்கப் பெற்றார்.

பணையும் தடமும் புடைசூழும்
ஒற்றி யூரிற் பாகத்தோர்
துணையுந் தாமும் பிரியாதார்
தோழத் தம்பி ரானாரை
இணையுங் கொங்கைச் சங்கிலியார்
எழின்மென் பணைத்தோ ளெய்துவிக்க
அணையு மொருவர் சரணமே
அரண மாக அடைந்தோமே. **#3378**

வயற் பண்ணைகளும், குளமும் புறத்தே சூழ இனிது விளங்கும் திருவொற்றியூரில் ஒருகூற்றில், வைத்த துணைவியாரான உமையம்மையாரைச் சிறிதும் பிரியாதிருக்கின்ற பெருமான், தமக்கு ஒப்பற்ற தோழராக விளங்கும் சுந்தரரை இணையான பருத்த மார் பகங்களையுடைய சங்கிலியாரின் அழகிய மெல்லிய தோள்களை அணைந்து சேருமாறு அருள் செய்ய, அதனால் சென்றணைந்த ஒப்பற்றவராகிய சுந்தரரின் திருவடிகளே நமக்குக் காப்பாக அவரை அடைந்தோம்.

விளக்கவுரை

அரணம் - காப்பு. சோமாசிமாற நாயனார் புராணம் முற்றிற்று
வம்பறாவண்டுச் சருக்கம் முற்றிற்று

சாக்கிய நாயனார் புராணம்

அறுசமயத் தலைவராய்
நின்றவருக் கன்பராய்
மறுசமயச் சாக்கியர்தம்
வடிவினால் வருந்தொண்டர்
உறுதிவரச் சிவலிங்கங்
கண்டுவந்து கல்லெறிந்து
மறுவில்சரண் பெற்றதிறம்
அறிந்தபடி வழுத்துவாம். **#3379**

அறுவகைப்பட்ட சமயங்களுக்கும் தலைவராய சிவபெருமானுக்கு அன்பராகிப், புறச்சமய நெறியினரான சாக்கியர் களின் (புத்தர்களின்) வடிவுடன் விளங்கும் தொண்டர், சைவ சமயமே மெய்ச்சமயம் என்ற துணிவு கொண்டதால், சிவலிங்கத் திருமேனி யைப் பார்த்து மகிழ்ந்து, அதன்மீது கல்லெறிந்து, குற்றம் நீக்கும் திருவடியைப் பெற்ற பெரும்பேற்றை நாம் அறிந்த அளவினால் வணங்குவோம்.

விளக்கவுரை

அறுசமயம் - அறுவகைப்பட்ட சமயம். மறைநெறியை மையமாகக் கொண்டு, அதற்கு அகம், அகப்புறம், புறம், புறப்புறம், என நால்வகைப்படுத்தினர். அவை ஒவ்வொன்றிற்கும் ஏற்ப ஆறு சமயங்களாக விளங்கும் சமயங்கள் இருபத்து நான்காம். உயிர்கள் பலவாதலின், அவை உளங்கொளும் சமயங்களும் பலவகைப்பட் டன. அவ்வவ் உயிர்கட்கேற்ற பக்குவ நிலையில் தோன்றிய இச்சமயங் கட்கெல்லாம் தலைவனாவன் இறைவன் ஒருவனேயாவன். `ஒத்தாறு சமயங்கட் கொரு தலைவன்' `ஆறுசமயத்தவர் அவரை தேற்றும் தகையன' `அறுவகைச் சமயத்தோருக்கும் அவ்வவர் பொருளாய்' எனவரும் திருவாக்குகளும் காண்க.

புறப்புறம் - உலகாயதமும், நால்வகைப் புத்தமும் ஆருகதமும் (சமணமும்) என அறுவகைப்படும். புறம் - தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என அறுவகைப் படும். அகப்புறம் - பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம் என அறுவகைப்படும். அகம் - பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுவர அவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் என அறுவகைப்படும். இவற்றின் விளக்கங்களை சிவஞான மாபடியத்தில் காண்க.

மறுவில் சரண் - தம்மை வணங்கும் உயிர்கட்குக் குற்றம் (மல மறைப்பு) இல்லையாகச் செய்யும் திருவடி. `மதனுடை நோன்றாள்' எனவரும்

திருமுருகாற்றுப்படையும் *(தி.11 ப.17 வரி.4)* காண்க. மறுசமயம் - புறப்புறச் சமயம். இங்குப் புத்தத்தை குறித்து நின்றது.

தாளாளர் திருச்சங்க
மங்கையினில் தகவுடைய
வேளாளர் குலத்துதித்தார்
மிக்கபொருள் தெரிந்துணர்ந்து
கேளாகிப் பல்லுயிர்க்கும்
அருளுடைய ராய்க்கெழுமி
நீளாது பிறந்திறக்கும்
நிலைஒழிவேன் எனநிற்பார். **#3380**

சாக்கிய நாயனார் திருச்சங்கமங்கை என்னும் பதியில் முயற்சியுடையவர்களாக வாழ்கின்ற வேளாளர் மரபில் தோன்றிய வர். உண்மைப் பொருளைத் தெரிந்து, அதன் பயனை உணர்ந்து, அதன்கண் அன்புடையவராயும், எவ்வுயிர்களிடத்தும் அருள் உடை யவராயும் ஒழுகிப் `பிறந்தும் இறந்தும் வரும் நிலையினை மேலும் பெறாதவாறு இப்பிறப்பிலேயே அதனின்றும் நீங்குவேன்' என்ற கருத்துடனே அவ்வொழுக்கத்தில் நிற்பாரானார்.

விளக்கவுரை

தாளாளர் தகவுடைய வேளாளர் எனக் கூட்டியுரைக்க திருச்சங்கமங்கை - தொண்டைநாட்டில் காஞ்சி மாநகரத்தை அடுத்துள் ளதோர் ஊர். மிக்க பொருள் - எப்பொருள்களினும் மேலாய பொருள்; மெய்ப் பொருள்: இறைவன். பிறந்து இறக்கும் நிலை நீளாது ஒழிவேன் எனக்கூட்டுக. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப் பென்னும் செம்பொருள் காணும் பெற்றியர் என்றவாறு.

அந்நாளில் எயிற்காஞ்சி
அணிநகரம் சென்றடைந்து
நல்ஞானம் அடைவதற்குப்
பலவழியும் நாடுவார்
முன்னாகச் சாக்கியர்தாம்
மொழியறத்தின் வழிச்சார்ந்து
மன்னாத பிறப்பறுக்குந் தத்துவத்தின் வழிஉணர்வார். **#3381**

அவ்வாறு அவர் ஒழுகி வரும் நாள்களில் ஒருநாள், தம் ஊரைவிட்டு மதிலையுடைய காஞ்சி நகருக்குச் சென்றடைந்து, மெய்ப்பொருளை அடைதற்குரிய பலவழிகளையும் ஆராய்பவராய், முதற்கண் புத்தர்கள் தம் அறவழியில் சேர்ந்து, நிலைபேறு அற்ற பிறப்பை அறுக்கும் உறுதிப்பாட்டின் வழியினை ஆராய்பவராய்,

விளக்கவுரை

மன்னாத - நிலைபேறு அற்ற.

அந்நிலைமைச் சாக்கியர்தம்
அருங்கலைநூல் ஓதிஅது
தன்னிலையும் புறச்சமயச்
சார்வுகளும் பொருளல்ல
என்னுமது தெளிந்தீச
ரருள்கூட ஈறில்சிவ
நன்னெறியே பொருளாவ
தெனவுணர்வு நாட்டுவார். **#3382**

அந்நிலையில் அவர் புத்தர்களின் அரிய திரிபிடகம் என்ற கலை நூலைக் கற்று, அதன் துணிபாகப் பெறப்பட்ட முடிபும், மேலும் மற்றப் புறச்சமயங்களின் சார்பாகக் கூறும் முடிபுகளும் உண்மைப் பொருள் அல்ல எனத் தெளிந்த நிலையில், சிவபெருமா னது திருவருள் கூடப் பெற்றமையால் அழிவற்ற நல்ல சிவநெறியே உண்மைப் பொருளாவது என்ற உணர்வை மனத்தில் நிலைபெற நிறுத்துவாராய்,

விளக்கவுரை

அருங்கலை நூல் - திரிபிடகம்; இது புத்தர்களின் பிரமாண நூல். நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினால் நாவரசர் சமண் சமயம் சேர்ந்தார். ஈசர் அருள் கூடியதால் இவர் ஈறில் சிவ நன்னெறியே பொருளாவது என உணர்ந்தார். `காண்பார் யார்? கண்ணுதலாய்க் காட்டாக்காலே' என்பது அநுபவமாய் வாய்த்தது.

செய்வினையுஞ் செய்வானும்
அதன்பயனுங் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும்
விதித்தபொரு ளெனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
அல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள்
சிவனென்றருளாலே யுணர்ந்தறிந்தார். **#3383**

செய்யும் வினை, செய்பவனான வினை முதல், அதன் பயன், இவைகளைத் தந்து ஊட்டுபவனான இறைவன் ஆக உண்மை வகையால், பொருள்கள் நான்காகும் என்னும் தெளிவு கொண்டு, இச்சிறப்பியல்பு சைவநெறி அல்லாத மற்ற நெறிகளுக்கு இல்லை என்ற துணிவையும், உய்தி பெற அடைதற்குரிய பொருள் சிவமே என்னும் உண்மையையும், அப்பெருமானின் திருவருளால் உணர்ந்து

கொண்டார்.

விளக்கவுரை

வினையென்பது ஒன்றில்லை என்பாரும், வினைமுதல் என்பது ஒன்றில்லை என்பாரும், வினைப்பயன் என்பது ஒன்றில்லை என்பாரும், அதனை ஊட்டுவான் ஒருவன் இல்லை என்பாருமாகச் சமயவாதிகள் பல திறத்தார். இந்நான்கும் உண்டு என்று கொண்ட சமயமே நம் சைவ சமயமாகும். `செய்வானும் செய்வினையும் சேர் பயனும் சேர்ப்பவனும் உய்வான் உளன் என்று உணர்' என்னும் திரு வருட்பயனும் *(அறியுநெறி, 3)*. இதுவே உண்மையான நிலை: முழு மையான நிலை. இவ்வுண்மையைத் தெளியவும், சிவபெருமானே முழுமுதற் பொருள் என உணரவும் இயன்றது முன்னைய தவத்தாலும் இறையருளாலுமேயாம். `சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறல் அரிது'*(சித்தியார், 2 சூத்.91)*, `பரசமயங்கள் செல்லாப் பாக்கியம் பண் ணொணாதே' *(சித்தியார், 2 சூத்.90)* எனவரும் திருவாக்குகளும் காண்க.

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

எந்நிலையில் நின்றாலும்
எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள்
மறவாமை பொருளென்றே
துன்னியவே டந்தன்னைத்
துறவாதே தூயசிவம்
தன்னைமிகும் அன்பினால்
மறவாமை தலைநிற்பார். **#3384**

எந்த நிலையில் நின்றாலும், எந்தக் கோலத்தைக் கொண்டாலும், நிலையான சிறப்பை உடைய சிவபெருமானின் திருவடிகளை மறவாமையே உண்மையான உறுதிப்பொருளாகும் எனத் துணிந்து தாம் மேற்கொண்டு ஏற்ற அப்புத்தக் கோலத்தினின் றும் நீங்காமலேயே தூயதாய சிவலிங்கத் திருமேனியை மிக்க அன்புடன் மறவாத நிலையில் போற்றி வருவாராய்,

விளக்கவுரை

`வேட நெறிநில்லார் வேடம் பூண்டு என் பயன்? வேட நெறி நிற்போர் வேடம் மெய்வேடமே' என்பர் திருமூலர் *(தி.10 த.1 ப.16 பா.3)*. ஆதலின் அக ஒழுக்கமும், திருவருள் உணர்வும் இன்றிப், புறவேடம் மட்டுமே கொண்டு நிற்றலில் பயனில்லை என்பது தெளிவு.

அத்தெளிவினாலேயே புறவேடம் பற்றி இவர் கருதாராயினார். `மழித் தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்து விடின்' *(குறள், 280)*

என்பர் திருவள்ளுவனாரும். இங்ஙனம் கூறுவது பற்றி வேடமே வேண்டா என்பது கருத்தன்று. ஒழுக்கமும் உணர்வும் கொண்டு, உயர்தவ வேடமும் இருப்பின் அது பொன்மலர் நாற்றமுடைத்தாம். இப்பாடலை அடுத்து `எல்லாம் உடைய ஈசனே' எனத் தொடங் கும் பாடல் ஒன்று சில பதிப்புக்களில் காணப்படுகின்றது. அப்பாடல் ஆசிரிய விருத்தத்தால் ஆயது. இவ்வரலாறு முழுமையும் கொச்சகக் கலிப்பா யாப்பிலேயே அமைந்துள்ளது. அவ்வகையில் ஆசிரிய விருத்தத்தால் ஆய பாடல் ஒன்று இடை நிற்கக் காரணம் இல்லை. அன்றியும், அப்பாடலின் கருத்து இப்பாடற்கண்ணேயே அமைந்திருத் தலின் அப்பாடல் வேண்டுவதின்றாம். ஆதலின் அப் பாடல் இடைச் செருகல் என்று கருதி விலக்கப்பட்டுள்ளது. சிவக்கவிமணியார் உரையையும் காண்க.

காணாத அருவினுக்கும்
உருவினுக்குங் காரணமாய்
நீணாக மணிந்தார்க்கு
நிகழ்குறியாஞ் சிவலிங்கம்
நாணாது நேடியமால்
நான்முகனுங் காணநடுச்
சேணாருந் தழற்பிழம்பாய்த்
தோன்றியது தெளிந்தாராய். **#3385**

கண்ணுக்குப் புலப்படாத அருவத் திருமேனிக்கும், கண்ணுக்குப் புலப்படும் உருவத் திருமேனிக்கும் மூலமான இருப்பிட மாய், நீண்ட பாம்பை அணிந்த சிவபெருமானை அறிந்து வழிபடுவ தற்குச் சிறந்த அடையாளமாய குறியாய் விளங்கும் சிவலிங்கம், நாணமில்லாது தேடிய திருமாலும் நான்முகனும் காணுமாறு, அரு ளால் அவர்கள் நடுவே விண்ணையும் கீழ் உலகத்தையும் அளாவும், அனல் பிழம்புத் தூணாகித் தோன்றும் வடிவமே வடிவம் ஆகும் எனும் தெளிவு கொண்டவராய்,

விளக்கவுரை

கண்ணுக்குக் காணாத அருவினின்றும் கண்ணுக்குக் காட்சியாகும் ஓர் உருவாய், ஆனால் முகம், கை, கால் முதலிய உறுப்புகள் இலவாய்த் தோன்றி நிற்பதே சிவலிங்கத் திருமேனி யாகும். இந்நிலைக்கு முன்னுள்ள அருவமும் இதற்குப் பின்னுள்ள உருவமும் இத்திருவுருவை இடனாகக் கொண்டிருத்தலின், `காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்' என்றார். `உருமேனி தரித்துக் கொண்டது என்றலும் உருவிறந்த அருமேனியதுவும், அருவுருவான போது திருமேனி உபயம் பெற்றோம்' என வரும் சித்தியாரும் இதனை விளக்கி நிற்கும். மாலும் அயனும்

காணவியலாதவாறு நின்ற அனல் பிழம்பே இவ்வடிவாயது.
இவ்வுண்மையை,

செங்கணானும் பிரமனும் தம்முளே
எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற்றேன் என்று லிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே. *(தி.5 ப.95 பா.11)*

எனவரும் நாவரசர் திருவாக்கிலும் காணலாம்.

நாடோறும் சிவலிங்கங்
கண்டுண்ணு மதுநயந்து
மாடோர்வெள் ளிடைமன்னும்
சிவலிங்கங் கண்டுமனம்
நீடோடு களியுவகை
நிலைமைவரச் செயலறியார்
பாடோர்கல் கண்டதனைப்
பதைப்போடும் எடுத்தெறிந்தார். **#3386**

நாள்தோறும் சிவலிங்கத்தைக் கண்டு வணங்கிய பின்பே, உணவு உண்ணவேண்டும் என்னும் கடப்பாடு உடையவ ராய், விரும்பி அருகிருந்த ஒரு வெளியிடத்தில் நிலைபெற்ற சிவலிங் கத்தைப் பார்த்து, உள்ளத்தில் மிகுகின்ற மகிழ்ச்சி கைவரப் பெற்ற நிலையில் இன்னது செய்வது என்று அறியாதவராகி, அருகே ஒரு கல் கிடப்ப, அதையே மலராய் அன்பின் உண்டான பதைப்புடன் எடுத்து அச்சிவலிங்கத் திருமேனியில் எறிந்தார்.

விளக்கவுரை

அன்பு மீதூர்ந்த நிலையில் நிற்கும் அவர் அருகில் ஒரு கல் கிடப்ப, அதனையே மலராய்க் கொண்டு வழிபடும் எண்ணம் தோன்றியது. இச் செயலும், இதுநிகழ உள்ளத்தெழுந்ததோர் பதைப் பும் திருவருள்வழிப்பட்ட குறிப்புகளாம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அகநிறைந்த பேருவகை
அடங்காத ஆதரவால்
மகவுமகிழ்ந் துவப்பார்கள்
வன்மைபுரி செயலினால்
இகழ்வனவே செய்தாலும்
இளம்புதல்வர்க் கின்பமே
நிகழுமது போலதற்கு
நீள்சடையார் தாம்மகிழ்வார். **#3387**

மனம் நிறைந்து பெருகிய பெருமகிழ்ச்சியால் வந்த அளவற்ற அன்பினால், தம் குழந்தையை மகிழ்ந்து களிப்பவர்கள், அக்குழந்தை

வன்மை செய்யும் செயல்களின் மூலம் பிறர் இகழ்வன வற்றைச் செய்தாலும், அவ்விளம் புதல்வர்மாட்டு இன்பம் உண்டா குமேயல்லாது துன்பம் உண்டாகாது. அதுபோல, நாயனார் தம் அன்பு மீதூர கல்லெறிந்த பொழுதும், அச்செயலுக்கு நீண்ட சடையையுடைய சிவபெருமான் மகிழ்ச்சியே கொள்வாராயினர்.

விளக்கவுரை

இவ்வாறன்றிக் குழந்தைகளிடத்து அன்புடைய பெற் றோர்கள் தம் அன்புமிகுதியால், குழந்தைகளிடத்துப் பிறர் இகழத்தக்க வன்மையான செயல்களைச் செய்யினும் அக்குழந்தைகள் மகிழுமாறு போல என விளக்கம் தந்து பொருளொடு பொருத்திக்காட்டுவர் சிவக்கவிமணியார். அத்தகைய வன்செயல்கள் ஆவன: தம் தலைக்கு மேலே தூக்கி எறிந்து பிடித்தல், கன்னத்தைக் கிள்ளுதல், சிறிதே அடித்தல், இறுக அணைத்தல் ஆயினவாம் என விளக்கமும் காண்பர். இவ்வகை ஆராயத் தக்கதாம்.

அன்றுபோய்ப் பிற்றைநாள்
அந்நியதிக் கணையுங்கால்
கொன்றைமுடி யார்மேற்றாங்
கல்லெறிந்த குறிப்பதனை
நின்றுணர்வா ரெனக்கப்போ
திதுநிகழ்ந்த தவரருளே
என்றதுவே தொண்டாக
வென்றுமது செயநினைந்தார். **#3388**

அன்று தொடங்கிப் பின்வரும் நாள்களில், சிவலிங்கத்தைக் கண்ட பின்பே உண்ணுவது எனத் தாம் கொண்ட அந் நியமத்தின்படி செய்வதற்காகச் சென்றபோது, கொன்றை மாலையைச் சூடிய சடையுடைய சிவபெருமானின் திருமேனியின் மீது, தாம் முன்னைய நாளில் கல் வீசிய திருக்குறிப்பினையே பின்பற்றி அவ் வுணர்வில் தலைப்பட்டவராய், `அப்போது, எனக்கு இத்தகைய எண்ணம் உண்டானது இறையவர் அருளால் ஆகும்' என்று துணிந்து அதுவே தாம்செய்யும் தொண்டாய் மேற்கொண்டு நாள்தோறும் அச்செயலையே செய்யலானார்.

விளக்கவுரை

****

தொடங்கியநா ளருளியவத்
தொழிலொழியா வழிதொடரும்
கடன்புரிவா ரதுகண்டு
கல்லெறிவார் துவராடைப்

படம்புனைவே டந்தவிரார்
பசுபதியார் தஞ்செயலே
அடங்கவுமென் பதுதெளிந்தா
ராதலினால் மாதவர்தாம். **#3389**
தொடங்கிய நாளில் இறையருளால் செய்த அச்செயலை இடையறாது தொடர்ந்து செய்யும் கடமையை எண்ணு பவராய்க், கல்லைச் சிவலிங்கத்தின் மீது எறிவாராய்த், துவராடையை அணிகின்ற புத்த வேடத்தையும் விடாது கொண்டிருப்பாராய அவர், அனைத்தும் சிவபெருமானின் அருட் செயல்களேயாம் என்ற உணர்வுடையவராய் விளங்கினார் ஆதலின், அம்மாதவரும்

விளக்கவுரை

****

இந்நியதி பரிவோடு
வழுவாம லிவர்செய்ய
முன்னுதிருத் தொண்டாகி
முடிந்தபடி தான்மொழியில்
துன்னியமெய் யன்புடனே
யெழுந்தவினை தூயவர்க்கு
மன்னுமிகு பூசனையாம்
அன்புநெறி வழக்கினால். **#3390**
இத்தகைய நியமமான செயலை அன்புடன் செய்து வர, அச்செயல்தானும் மதிக்கப்படும் திருத்தொண்டேயாகி முடிந்த தன்மையைச் சொல்வோமாயின், அன்பு நெறியின் செயற்பாடே இஃதாதலின், பொருந்திய மெய்யன்பு காரணமாகத் தொடங்கிச் செய்த அச்செயல் தூயவரான இறைவற்கு நிலைபெற்ற சிறப்புமிக்க பூசனையே ஆகும்.

விளக்கவுரை

****

கல்லாலே யெறிந்ததுவு
மன்பான படிகாணில்
வில்வேடர் செருப்படியும்
திருமுடியின் மேவிற்றால்
நல்லார்மற் றவர்செய்கை
யன்பாலே நயந்ததனை
அல்லா தார் கல்லென்பா
ரரனார்க்கஃ தலராமால். **#3391**

கல்லால் எறிந்த செயலும் அன்பால் செய்யும் தொண்டே ஆன தன்மையை ஆராயின், வில்வேடரான கண்ணப்ப ரின் செருப்படியும் இறைவரின் திருமுடியில் பொருந்தப் பெற்றதாயின தன்மையைப் பார்த்தோமாதலின், நல்லவரான சாக்கியர் செய்கையை அல்லாதவர்கள் `கல்' என்பார், ஆனால் அது சிவபெருமானுக்கு மலரேயாகும்.

விளக்கவுரை

இதனால் இறைவற்கு எதனை இடுகின்றோம் என்பது கருத்தன்று; எத்தகைய உணர்வால், எத்தகைய அன்பின் திறத்தால் இடுகின்றோம் என்பதே கருதத் தக்கதாகின்றது. `புத்தன் மறவா தோடி எறிசல்லி புதுமலர்க ளாக்கினான் காண்'*(தி. 6 ப.52 பா.8)* எனவரும் நாவரசர் திருவாக்கும், இவ்வுணர்வின் பிழிவாக `அரனடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமதாகும், பரனடிக்கு அன்பிலாதார் புண்ணியம் பாவமாகும், வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி, நரரினில் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே' *(சித்தியார், 2 சூத். பா.29)* எனவரும் ஞானநூற் கூற்றும் காண்க.

அங்கொருநாள் அருளாலே
அயர்ந்துண்ணப் புகுகின்றார்
எங்கள்பிரான் றனையெறியா
தயர்த்தேன்யா னெனவெழுந்து
பொங்கியதோர் காதலுடன்
மிகவிரைந்து புறப்பட்டு
வெங்கரியி னுரிபுனைந்தார்
திருமுன்பு மேவினார். **#3392**

இதனால் இறைவற்கு எதனை இடுகின்றோம் என்பது கருத்தன்று; எத்தகைய உணர்வால், எத்தகைய அன்பின் திறத்தால் இடுகின்றோம் என்பதே கருதத் தக்கதாகின்றது. `புத்தன் மறவா தோடி எறிசல்லி புதுமலர்க ளாக்கினான் காண்'(தி. 6 ப.52 பா.8) எனவரும் நாவரசர் திருவாக்கும், இவ்வுணர்வின் பிழிவாக `அரனடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமதாகும், பரனடிக்கு அன்பிலாதார் புண்ணியம் பாவமாகும், வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி, நரரினில் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே' (சித்தியார், 2 சூத். பா.29) எனவரும் ஞானநூற் கூற்றும் காண்க.

விளக்கவுரை

****

கொண்டதொரு கல்லெடுத்துக்
குறிகூடும் வகையெறிய

உண்டிவினை யொழித்தஞ்சி
யோடிவரும் வேட்கையொடும்
கண்டருளுங் கண்ணுதலார்
கருணைபொழி திருநோக்கால்
தொண்டரெதிர் நெடுவிசும்பில்
துணைவியொடுந் தோன்றுவார். **#3393**

அங்குக் கிடந்து எடுத்துக் கொண்டதொரு கல்லை, வழிபாட்டின் இலக்குக் கூடும் (குறிக்கோள் நிறைவேறும்) வகையி னால், அவர் எறிய, உணவு உண்ணும் செயலையும் கைவிட்டு அச்சத் துடன் ஓடிவரும் பெருவிருப்புடைய அவரைக் கண்டு அருள் செய் கின்ற நெற்றிக் கண்ணரான இறைவர், அருள் பொழியும் நோக்குடன், அத்தொண்டரின் எதிரே பெரிய வானில் தம் துணைவியாரான உமையம்மையாருடன் தோன்றுவாராகி,

விளக்கவுரை

****

மழவிடைமே லெழுந்தருளி
வந்ததொரு செயலாலே
கழலடைந்த திருத்தொண்டர்
கண்டுகரங் குவித்திறைஞ்சி
விழவருணோக் களித்தருளி
மிக்கசிவ லோகத்தில்
பழவடிமைப் பாங்கருளிப்
பரமரெழுந் தருளினார். **#3394**

இளமை பொருந்திய ஆனேற்றின் மீது எழுந்தருளி வந்த ஒப்பில்லாத செய்கையால், இறைவரின் திருவடியை அடைந்த திருத்தொண்டரான சாக்கிய நாயனார் கண்டு, கைகள் கூப்பி, நிலத்தில் விழுந்து பணிந்து எழ, அருள்நோக்குக் கொண்டருளிச் சிறப்பு மிக்க சிவலோகத்தில் பழைய அடியாராக இருந்து செய்யும் அடிமைத் திறத்தை இறைவர் அளித்தருளி மறைந்தருளினார்.

விளக்கவுரை

`பழ அடியாரொடும் கூடி எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே' *(தி.9 ப.29 பா.11)*, `பழ அடியார் கூட்டம் அத்தா காண ஆசைப்பட்டேன்' *(தி.8 ப.25 பா.9)*, `தம்மை விடுத்து ஆயும் பழைய அடியாருடன் கூட்டித் தோயும் பரபோகம் துய்ப்பித்து' *(குமர. கந்தர் கலி. 121)* எனவரும் திருவாக்குக்களைக் காண்க.

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஆதியார் தம்மை நாளுங்
கல்லெறிந் தணுகப் பெற்ற
கோதில்சீர்த் தொண்டர் கொண்ட
குறிப்பினை யவர்க்கு நல்கும்
சோதியா ரறித லன்றித்
துணிவதென் அவர்தாள் சூடித்
தீதினை நீக்க லுற்றேன்
சிறப்புலி யாரைச் செப்பி. **#3395**

பழம்பொருளாய சிவபெருமானை நாள்தோறும் கல் எறிந்து வழிபட்டு அதனால் தம்மை அடைந்த குற்றம் இல்லாத சிறப்புடைய தொண்டரான சாக்கிய நாயனார் திறத்தை, அவருக்கு அருள் செய்யும் சோதியாரான சிவபெருமான் அறிதலல்லாது நாம் துணிவது எவ்வாறு? அவர்தம் திருவடிகளைத் தலைமேற்கொண்டு, சிறப்புலியாரின் வரலாற்றை இனிச் சொல்லத் தொடங்கித் தீமையை நீக்கலுற்றேன்.

விளக்கவுரை

அன்பின் மீதூர்வால் நிகழும் இத்தகைய அருஞ்செயல் உடையார் திறனையும், அதற்கு அருட் கருணை தாமாக நிற்கும் எம் பெருமானின் அருட்செயலையும் அவ்விருவரும் அறிதலன்றி, ஒன்றற்கும் பற்றாத நம்மனோரால் எண்ணவோ அல்லது சொல்லவோ இயலுமோ? இயலாது என்றவாறு. `யாம் அறியும் அன்பன்று அது' (திருக்களிற். 52) எனவரும் ஞானநூற் கூற்றும் காண்க.
சாக்கிய நாயனார் புராணம் முற்றிற்று.

சிறப்புலி நாயனார் புராணம்

பொன்னிநீர் நாட்டின் நீடும்
பொற்பதி புவனத் துள்ளோர்
இன்மையால் இரந்து சென்றார்க்
கில்லையென் னாதே ஈயும்
தன்மையார் என்று நன்மை
சார்ந்தவே தியரைச் சண்பை
மன்னனார் அருளிச் செய்த
மறைத்திரு வாக்கூர் ஆக்கூர். **#3396**

காவிரியாறு பாய்ந்து செழிப்புச் செய்யும் சோழ நாட்டின் பழமையான அழகிய பதி, உலகத்துள்ளோர் வறுமையினால் இரந்து சென்றால் அவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் வேண்டியவற்றை வரையாது அளிக்கும் குணம் உடையவர்கள் என்று சீகாழித் தலைவரான ஆளுடைய பிள்ளையார், நன்மை பொருந்திய வேதியர்களைப் பற்றி அருள் செய்த மறை வாக்கினைப் பெறும் ஊரானது `திருவாக்கூர்' என்பதாகும்.

விளக்கவுரை

பிள்ளையார் அருளிய ஆக்கூர்ப் பதிகத்தில், அவ்வூர வரின் வள்ளன்மை குறித்து ஈரிடங்களில் வருகின்றன. அவை, *1.* `வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும், தாளாளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே' *(தி.2 ப.42 பா.3) 2.* `இன்மையால் சென்றிரந்தார்க்கு இல்லை என்னாது ஈத்துவக்கும், தன்மையார் ஆக்கூரில் தான் தோன்றிமாடமே' *(தி.2 ப.42 பா.9)* என்பனவாம். இவற்றுள் முன்னையது வேளாளரின் வள்ளன்மை பற்றியது. பின்னையது இன்னார் என விதந்து கூறாராயினும் வேதியர்தம் வள்ளன்மை கூறுவதாம் என்பது சேக்கிழார் திருவுள்ளமாகிறது.

திருவாக்கூர் - பிள்ளையாரின் திருவாக்கினைப் பெற்ற ஊர். ஆக்கூர் எனப்பின் வருவது அவ்வூரின் திருப்பெயராகும். திருவாக்கூர் ஆக்கூர் என்றது சொல்லணி தவழ நிற்பதாகும்; திருவாரூர் திருவாரூர் என்புழிப்போல.

தூமலர்ச் சோலை தோறும்
சுடர்நெடு மாடந் தோறும்
மாமழை முழக்கந் தாழ
மறையொலி முழக்கம் ஓங்கும்
பூமலி மறுகில் இட்ட
புகையகில் தூபந் தாழ

ஓமநல் வேள்விச் சாலை
ஆகுதித் தூப மோங்கும். #3397

அப்பதியில் விளங்கும் தூய்மையான மலர்ச் சோலைகள் தோறும், ஒளி பொருந்திய பெரிய மாளிகைகள் தோறும், பெருமேக முழக்கங்களும் கீழ்ப்படுமாறு மறை ஒலிகளின் முழக்கங் கள் ஓங்கிநிற்கும், அழகு பொருந்திய வீதிகளில் இட்ட அகிற் புகை யின் நறுமணமும் கீழ்ப்படுமாறு, வேட்கப்படும் வேள்விச் சாலைக ளின் நெய்ப்புகைமேல் ஓங்கி நிற்கும்.

விளக்கவுரை

மறை ஒலிகளும், வேள்விப் புகையும் இவ்வகையில் வியக்குமாறுள்ளன.

ஆலை சூழ் பூகவேலி
அத்திரு வாக்கூர் தன்னில்
ஞாலமார் புகழின் மிக்கார்
நான்மறைக் குலத்தி னுள்ளார்
நீலமார் கண்டத் தெண்டோள்
நிருத்தர்தந் திருத்தொண்டு ஏற்ற
சீலராய்ச் சாலும் ஈகைத்
திறத்தினிற் சிறந்த நீரார். #3398

கரும்பு ஆலைகளைச் சூழ்ந்திருக்கும் பாக்கு மரங்கள் வேலி என அமைந்திருக்கின்ற அத்திருவாக்கூரில், உலகில் நிறைந்த புகழால் மிக்கவரும், நான்மறைகளையும் ஓதும் குலத்தில் தோன்றிய வரும், நஞ்சுண்ட கழுத்தையும் எட்டுத் தோள்களையும் உடைய கூத்தப் பெருமானின் தொண்டினை மேற்கொண்டு ஒழுகி வருபவரும் ஆக வாழ்பவர் சிறப்புலி நாயனார் ஆவர்.

விளக்கவுரை

****

ஆளும்அங் கணருக் கன்பர்
அணைந்தபோ தடியில் தாழ்ந்து
மூளுமா தரவு பொங்க
முன்புநின் றினிய கூறி
நாளும்நல் லமுதம் ஊட்டி
நயந்தன வெல்லாம் நல்கி
நீளும்இன் பத்துள் தங்கி
நிதிமழை மாரி போன்றார். #3399

அவர், உலகங்கள் எல்லாவற்றையும் ஆளுகின்ற சிவபெருமானின் அன்பர்கள் தம்பால் வந்து அணையின், அவர்கள் அடியில் தாழ்ந்து

வணங்கி, மூண்டெழும் அன்பு மேன்மேல் பொங்க, அவர்களுக்கு இனிய சொற்களைக் கூறி, நாடோறும் நல்ல உணவு களை அளித்து, உண்பித்து, அவர்கள் விரும்பிய எல்லாவற்றையும் அளித்து, அதனால் மேன்மேலும் பெருகி வளர்கின்ற இன்பத்துள் வாழ்ந்து, செல்வத்தை மழைபோல் சொரிகின்ற மேகம் என விளங்கி வந்தார்.

விளக்கவுரை

****

அஞ்செழுத் தோதி அங்கி
வேட்டுநல் வேள்வியெல்லாம்
நஞ்சணி கண்டர் பாதம்
நண்ணிடச் செய்து ஞாலத்
தெஞ்சலில் அடியார்க் கென்றும்
இடையறா அன்பால் வள்ளல்
தஞ்செயல் வாய்ப்ப ஈசர்
தாள்நிழல் தங்கி னாரே. **#3400**

திருவைந்தெழுத்தை ஓதி, முத்தீ வளர்த்து, நஞ்சு விளங்கும் கழுத்தரான சிவபெருமானின் திருவடிகளில் பொருந்த நல்ல வேள்விகளைச் செய்து, உலகில் யாதும் குறைவிலராய் வாழும் சிவனடியார்களுக்கு எக்காலத்தும் இடையறாது செய்யும் அன்பி னால், வள்ளல்களினும் வரையாது அளித்து வாழ்ந்து, இறைவரின் திருவடி நிழலில் நிலை பெறும் பேற்றைப் பெற்றார்.

விளக்கவுரை

****

அறத்தினின் மிக்க மேன்மை
அந்தணர் ஆக்கூர் தன்னில்
மறைப்பெரு வள்ள லார்வண்
சிறப்புலி யார்தாள் வாழ்த்திச்
சிறப்புடைத் திருச்செங் காட்டங்
குடியினிற் செம்மை வாய்த்த
விறற்சிறுத் தொண்டர் செய்த
திருத்தொழில் விளம்பல் உற்றேன். **#3401**

சிவ அறங்களில் மேன்மை மிக்க அந்தணர் வாழும் திருவாக்கூரில் தோன்றிய வேதியரான வண்மையுடைய அச்சிறப்புலி யாரை வாழ்த்தி, திருச்செங்காட்டங்குடியில் செம்மையால் திளைக்கும் சிறுத்தொண்ட நாயனாரின் திருச்செயலைக் கூறப் புகுகின்றேன்.

விளக்கவுரை

செம்மை வாய்த்த விறல் - சிவபெருமானின் திருவடிக்கே பதித்த நெஞ்சுடன் வாழும் பெற்றி. `அன்பு உள்ள மடையாய்' என அவர் வரலாற்றில் ஆசிரியர் குறிக்குமாற்றைக் காண்க. சிறப்புலி நாயனார் புராணம் முற்றிற்று.

சிறுத்தொண்ட நாயனார் புராணம்

உருநாட்டும் செயல்காமன்
ஒழியவிழி பொழிசெந்தீ
வருநாட்டத் திருநுதலார்
மகிழ்ந்தருளும் பதிவயலில்
கருநாட்டக் கடைசியர்தங்
களிகாட்டுங் காவேரித்
திருநாட்டு வளங்காட்டுஞ்
செங்காட்டங் குடியாகும். #3402

உருக்கொண்டிருந்து, உயிர்கள் மீது செலுத்தும் தன் ஆணைச் செயலை மன்மதன் ஒழியுமாறு, விழியினின்றும் வெளிப் படுத்தும் செந்தீத் தோன்றும் நாட்டத்தையுடைய சிவபெருமான் மகிழ்வுடன் வீற்றிருக்கும் திருப்பதி, வயல்களில் கருங்கண்களை யுடைய உழத்தியர் தம் களியாடல்களைக் காட்டுவதற்கு இடமான `காவேரித் திருநாடு' என்று சொல்லப்படுகின்ற சோழ நாட்டில், வளம் வாய்ந்த திருச்செங்காட்டங்குடி என்பதாகும்.

விளக்கவுரை

****

நிலவியஅத் திருப்பதியில்
நெடுஞ்சடையார் நீற்றடைவால்
உலகில்வள ருயிர்க்கெல்லாம்
உயர்காவல் தொழில்பூண்டு
மலர்புகழ்மா மாத்திரர்தங்
குலம்பெருக வந்துள்ளார்
பலர்புகழுந் திருநாமம்
பரஞ்சோதி யாரென்பார். #3403

நிலவும் அப்பதியில் நீண்ட சடையையுடைய சிவ பெருமானின் திருநீற்றுச் சார்பினால் உலகத்தில் தோன்றி வளர்கின்ற எல்லா உயிர்களுக்கும் உயர்வான மருத்துவத் தொழிலை மேற் கொண்டு, பெருகும் புகழையுடைய அம்மருத்துவர் குலத்தின் சீலம் பெருகுமாறு வந்து தோன்றியவர், பலரும் புகழ்கின்ற பரஞ்சோதியார் என்று அழைக்கப்படும் திருப்பெயரை உடையவர்.

விளக்கவுரை

: காவல் தொழில் - மருத்துவத் தொழில். அடுத்து வரும் `ஆயுள் வேதக் கலையும்' எனவரும் திருப்பாடலால் இத் தொழிலு டைமை பெறப்படும். படைக்கலத் தொழிலிலும் வல்லுநராயினும், அதன் பயன் ஓரொருகால்

நேர்ந்த தொன்றாதலின், இஃது அதனினும் சிறப்பாகக் குறிக்கப் பெறுவதாயிற்று. மாமாத்திரர் குலம் - வழிவழியாக மருத்துவம் செய்துவரும் மரபு. இம்மரபினர்க்கு முந்நூல் அணியும் மரபும் உண்டு. இவ்வர லாற்றில் வரும் *23*ஆவது பாடலால் இவ்வுண்மை அறியப்படும்.

ஆயுள்வே தக்கலையும்
அலகில்வட நூற்கலையும்
தூயபடைக் கலத்தொழிலும்
துறைநிரம்பப் பயின்றுள்ளார்
பாயுமதக் குஞ்சரமும்
பரியுமுகைக் கும்பண்பு
மேயதொழில் விஞ்சையினும்
மேதினியில் மேலானார். **#3404**

ஆயுள் வேதம் என்று கூறப்படுகின்ற மருத்துவ நூற் கலையும், எல்லை இல்லாத வடநூல்களில் உள்ள பல்வேறான கலை களும், தூய படைக்கலத் தொழிற்கலைகளும் ஆகிய இவற்றை யெல்லாம், அவ்வவற்றில் எல்லை காண்பளவும் பயின்றவர். அவற் றுடன் பாய்கின்ற மதம் பொழியும் யானைகளையும் குதிரைகளையும் செலுத்தும் தன்மை பொருந்திய வீரம் செறிந்த கலையிலும், உலகத்தில் மேம்பட்டவராக விளங்கினார்.

விளக்கவுரை

உயிர்கள் நோயின்றி வாழவும், நெடிது வாழவும் கூறும் நூல்கள் ஆயுள் வேதமாகும். தமிழில் உள்ள சித்தர் மருத்துவ நூல்கள் இவையாம். இவை போகர் முதலியவர்களால் செய்யப் பெற்றவை யாம். மருத்துவன் தாமோதரனார் என்பார் சங்கப் புலவர்களில் ஒருவாராய் இருந்துள்ளமையும் எண்ணத்தக்கது. மறைகளின் சங்கங்களுள் இம்மருத்துவக் கலையும் ஒன்றுதல் பற்றி இதனை ஆயுள் வேதம் என்றனர். தமக்கினி தென்று பிறர்க்கின்னா செய்தல் நன்றன்று. எந்நாட்டிற்கும் எந்நிலையிலும் தீங்குவாராமல் காக்கும் நோக்கில் இக்கலையைப் பயின்றும், பயன்படுத்தியும் வந்தார். ஆதலின், `தூய படைக்கலத் தொழில்' என்றார்.

உள்ளநிறை கலைத்துறைகள்
ஒழிவின்றிப் பயின்றவற்றால்
தெள்ளிவடித் தறிந்தபொருள்
சிவன்கழலிற் செறிவென்றே
கொள்ளும்உணர் வினின்முன்னே
கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமடை யாய்என்றும்

பயின்றுவரும் பண்புடையார். #3405
தம் உள்ளம் நிறைவு பெறச் செய்யும் கலைத் துறைகளை எல்லாம் இடைவிடாது கற்று, `அவை எல்லாவற்றாலும் தெளிவு பெற வடித்து எடுத்த பொருளாவது, சிவனடிகளில் பொருந் திய அன்புடைமையான ஒழுக்கமேயாகும்' என்று கொள்ளும் உணர் வினால் முதன்மை பெற, இயமனை உதைத்த திருவடியிடத்தே அன்பு கொண்ட ஒழுக்கம், பள்ள மடையில் நீர் ஓடுவது போல், தடையில்லாது விரைவாக என்றும் பயின்றுவரும் பண்பை உடையவரானார்.

விளக்கவுரை

இடையீடின்மைக்கும், விரைவிற்கும் பள்ளத்தில் பாயும் வெள்ள நீரைக் காட்டல் இயல்பு. அவ்வகையிலேயே ஆசிரியர் சேக்கி ழாரும் `அன்பு பள்ளமடை யாய்' என்றார். `பள்ளந்தாழ் உறுபுனலில்' *(தி.8 ப.5 பா.21)* என மணிவாசகர் அருளுவதும் நினைவு கூர்தற் குரியதாம்.

ஈசன்அடி யார்க்கென்றும்
இயல்பான பணிசெய்தே
ஆசில்புகழ் மன்னவன்பால்
அணுக்கராய் அவற்காகப்
பூசல்முனைக் களிறுகைத்துப்
போர்வென்று பொருமரசர்
தேசங்கள் பலகொண்டு
தேர்வேந்தன் பாற்சிறந்தார். #3406

சிவனடியார்களுக்கு எந்நாளும் இயல்பால் பொருந்திய தொண்டுகளைச் செய்தே, குற்றம் அற்ற புகழையுடைய மன்னனிடத்து அன்பினால் பக்கத் துணையாயிருந்து, அவனுக்காகப் போரில் செலுத்தப்படுகின்ற யானைப் படையைச் செலுத்திப் பல போர்களில் வெற்றி கொண்டு, போரில் எதிர்த்து நின்ற மன்னர்களின் நாடுகள் பலவற்றையும் கைக்கொண்டு, தேர்ப்படையையுடைய தம் மன்னனிடம் சிறப்பைப் பெற்றார்.

விளக்கவுரை

மன்னவன் - மகேந்திரவர்மனின் மகன் நரசிம்மவர்மன். இவன் காலம் கி. பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

மன்னவற்குத் தண்டுபோய்
வடபுலத்து வாதாவித்
தொன்னகரம் துகளாகத்
துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும்

பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தே
இகலரசன் முன்கொணர்ந்தார். #3407

அம் மன்னனுக்காகப் படையெடுத்துச் சென்று வடநாட்டில் `வாதாபி' என்ற பழைய நகரம் தூளாக ஆகும்படி, யானைப் படையைச் செலுத்தி வென்று, பல மணிகளையும், பொருட் குவைகளையும், யானைக் கூட்டங்களையும், குதிரைத் தொகுதிகளை யும், இன்னும் இத்தகைய எண்ணில்லாதவற்றையும் கைக்கொண்டு, போர்செய்தலில் விருப்புடைய தம் மன்னன் முன் கொணர்ந்தார்.

விளக்கவுரை

வாதாபி - மும்பை மாகாணத்தின் பெல்காம் மாவட்டத்தில் பதாமி என அழைக்கப் பெறும் நகரமாகும். இது சாளுக்கிய அரசனான புலிகேசிக்குத் தலைநகரமாயிருந்ததென்றும், அவனுக்கும் நரசிம்மவர்மனுக்கும் நிகழ்ந்த போரில், பல்லவனுக்குத் தானைத் தலைவராக இருந்த பரஞ்சோதியார் போர்முகத்துட் சென்று வென்று கொண்டு வந்த பொருள்கள் பல என்றும் வரலாற்றாசிரியர்கள் கூறுவர். திருத்தொண்டர்களின் கால ஆய்விற்கு, இனைய பல இடங்கள் பெரிதும் துணை செய்கின்றன. `எண்ணில கவர்ந்தே' என்பதால் இங்குக் கூறப்படும் பொருள்களுடன் வேறு பல பொருள்களும் கவர்ந்து வந்தமை புலனாம். அவற்றுள் மூத்த பிள்ளையாரின் திருவுருவம் ஒன்று என்றும், அப்பெருமானே, திருச்செங்காட்டங்குடியில் இன்று காணப்பெறும் `வாதாபி கணபதி' என வணங்கப் பெற்று வருகிறார் என்றும் கூறுவர். இதனால் மூத்த பிள்ளையார் வணக்கமே ஆறாம் நூற்றாண்டு முதல்தான் வந்தது என்பது எவ்வாற்றானும் பொருந்துவதன்றாம். `கஞ்ச வேட்கையில் காந்தமன் வேண்ட அமரமுனிவன் அகத்தியன் தனாது கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை' (மணிமேகலை பதிகம் *10 - 12)* என வரும் கூற்றாலும், சுமத்திராவிலுள்ள `லாரா யோங்ராங்' என்னும் இடத்தில், மூத்த பிள்ளையாரின் படிமங்கள் பல காணப்படுகின்றன என ந. சி. கந்தையா தரும் குறிப்பாலும் (சிவன். பக்.*87)* மூத்த பிள்ளையாரின் வணக்கம் தொன்மையானது என அறியலாம்

கதிர்முடிமன் னனுமிவர்தங்
களிற்றுரிமை யாண்மையினை
அதிசயித்துப் புகழ்ந்துரைப்ப
அறிந்தவமைச் சர்களுரைப்பார்
மதியணிந்தார் திருத்தொண்டு
வாய்த்தவலி யுடைமையினால்

எதிரிவருக் கிவ்வுலகி
லில்லையென வெடுத்துரைத்தார். **#3408**
ஒளி பொருந்திய முடியுடைய மன்னனும் இவர்தம் யானைப் படை
செலுத்துவதற்குரிய வல்லமையைப் பார்த்து, வியந்து, புகழ்ந்து கூற,
அவரை அறிந்த அமைச்சர்கள் எடுத்துக் கூறுவாராய்ப்,
`பிறைச்சந்திரனைச் சூடிய சிவபெருமானின் திருத்தொண்டு வாய்க்கப்
பெற்ற வல்லமையினால், இவரை எதிர்த்து நிற்பவர் எவரும் இவ்
வுலகத்தில் இல்லை' என்று உரைத்தார்கள்.

விளக்கவுரை

****

தம்பெருமான் திருத்தொண்டர்
எனக்கேட்ட தார்வேந்தன்
உம்பர்பிரான் அடியாரை
உணராதே கெட்டொழிந்தேன்
வெம்புகொடும் போர்முனையில்
விட்டிருந்தேன் எனவெருவுற்று
எம்பெருமான் இதுபொறுக்க
வேண்டுமென இறைஞ்சினான். **#3409**
`தம் இறைவரின் திருத்தொண்டர் இவர்' என்று அமைச்சர்கள் கூறக்
கேட்ட மாலைசூடிய மன்னன், `எம்பெருமானின் அடியவரான இவரை
இத்தகையவர் என்று அறியாது கெட்டேன்! மிக்க கொடிய
போர்முனையில் சென்று போர் செய்யுமாறு விட்டிருந்தேனே!' என்று
நினைத்து, நடுக்கம் அடைந்து, அவரை நோக்கி, `எம்பெருமானே!
இப்பிழையைப் பொறுத்தருள வேண்டும்!' என்று இறைஞ்சினான்.

விளக்கவுரை

****

இறைஞ்சுதலும் முன்னிறைஞ்சி
என்னுரிமைத் தொழிற்கடுத்த
திறம்புரிவேன் அதற்கென்னோ
தீங்கென்ன ஆங்கவர்க்கு
நிறைந்தநிதிக் குவைகளுடன்
நீடுவிருத் திகளளித்தே
அறம்புரிசெங் கோலரசன்
அஞ்சலிசெய் துரைக்கின்றான். **#3410**
அங்ஙனம் மன்னன் வணங்கவும், அதன் முன்பு தாம் இறைஞ்சி, `என்
உரிமையான படைத்தொழிலுக்கு ஏற்றதான பொருந்திய திறத்தை யான்

செய்தேன். அதனால் ஒரு தீங்கும் இன்று' என்று பரஞ்சோதியார் உரைக்க, அறவழிச் செங்கோல் செலுத்தும் மன்னன், அப்போது அவருக்கு நிறைந்த செல்வக் குவியல்களுடன், நெடிது துய்த்தற்குரிய நிலங்களையும் அளித்து அவரை வணங்கி உரைப்பானாகி,

விளக்கவுரை

நீடுவிருத்திகள் அளித்தல் - தம் வாழ்விற்கெனப் பிறர் பால் பொருள்வேண்டாதிருக்க இறையிலியாக நிலங்கள் பலவற்றை அளித்தல்.

உம்முடைய நிலைமையினை
அறியாமை கொண்டுய்த்தீர்
எம்முடைய மனக்கருத்துக்
கினிதாக விசைந்துஉமது

மெய்ம்மைபுரி செயல்விளங்க வேண்டியவா றேசரித்துச்
செம்மைநெறித் திருத்தொண்டு
செய்யுமென விடைகொடுத்தான். **#3411**

`உம் உண்மை நிலையான திருத்தொண்டை, யாம் இதுகாறும் அறியாதவாறு செய்து வந்தீர்! எம் மனக் கருத்திற்கு இனிமை பெற இசைந்த, உம் மெய்ம்மைத் திருத்தொண்டின் வழி ஒழுகி, இனி நீர் வேண்டியவாறே, செம்மை தரும் நெறியான சிவ நெறித் தொண்டு செய்வீராக!' என்று சொல்லித், தம் கீழ் அவர் ஆற்றிவரும் பணியினின்றும் விடுவித்து விடைதந்தான்.

விளக்கவுரை

சரித்தல் - வேண்டியவாறு ஒழுகல். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மன்னவனை விடைகொண்டு
தம்பதியில் வந்தடைந்து
பன்னுபுகழ்ப் பரஞ்சோதி
யார்தாமும் பனிமதிவாழ்
சென்னியரைக் கணபதீச்
சரத்திறைஞ்சித் திருத்தொண்டு
முன்னை நிலைமை யில்வழுவா
முறையன்பிற் செய்கின்றார். **#3412**

புகழ்ந்து கூறப்படும் பரஞ்சோதியாரும் அம் மன்னனிடம் விடைபெற்றுக்கொண்டு, தம் பதியான செங்காட்டங் குடியை அடைந்து, குளிர்ந்த பிறைச் சந்திரன் வாழ்வதற்கு இடமான திருமுடியையுடைய சிவபெருமானைக் `கணபதீச்சரம்' என்ற கோயி லில் வணங்கித்,

திருத்தொண்டினை முன்னைய நிலைமையி னின்று வழுவாது முறையாக அன்புடன் செய்து வருவாராயினார்,

விளக்கவுரை

அரசன் அரசுபுரிந்து வந்த இடம் காஞ்சிமா நகராகும். திருச்செங்காட்டங்குடியிலுள்ள திருக்கோவிலின் பெயர் கணபதியீச் சரம் ஆகும். கயமுகாசுரனைக் கொன்ற பாவம் நீங்கத் திருச்செங்காட் டங்குடியில் கணபதி சிவலிங்கத் திருமேனியை எழுந்தருளுவித்து வழிபாடாற்றிய திருக்கோயில் கணபதியீச்சரம் எனப் பெயர் பெறுவ தாயிற்று. எனவே மூத்த பிள்ளையார் (கணபதி) வழிபாடாற்றிய இடமும், அவரைப் பற்றிய வழிபாடும் அக்காலத்திற்கு முன்னமேயே இருந்திருத்தல் வேண்டும் என இதன்வழி அறியலாம்.

வேதகா ரணர்அடியார்
வேண்டியமெய்ப் பணிசெய்யத்
தீதில்குடிப் பிறந்ததிரு
வெண்காட்டு நங்கையெனும்
காதன்மனைக் கிழத்தியார்
கருத்தொன்ற வரும்பெருமை
நீதிமனை யறம்புரியும்
நீர்மையினில் நிலைநிற்பார். **#3413**

மறைகள் தோன்றற்குக் காரணரான சிவபெருமா னின் அடியவர்களுக்கு வேண்டிய உண்மைப் பணிகளை யெல்லாம் செய்வாராய், குற்றம் அற்ற குடியில் பிறந்த திருவெண்காட்டு நங்கை என்ற காதலையுடைய இல்லக் கிழத்தியாருடன், இருவர் கருத்தும் ஒன்றாய்ப் பொருந்த வரும் பெருமையுடையதாய், நீதியின் வழியே வரும் இல்லறம் நடத்தி வாழும் தன்மையில் நிலை நிற்பாராய்,

விளக்கவுரை

இயற்பெயர் அறிய இயலாமையின் ஊர்ப்பெயரோடு கூட்டித் திருவெண்காட்டுநங்கை என்றே அழைத்து வந்தனர் எனத் தெரிகிறது. `தீதில் குடி - குற்றமற்ற தம் கணவர் குடியிலேயே தாமும் பிறந்தவர். `இருவர்ச் சுட்டிய பல் வேறு தொல்குடி' என்னும் திருமுரு காற்றுப்படையும் *(தி.11 ப.17 வரி.181).*

நறையிதழித் திருமுடியார்
அடியாரை நாள்தோறும்
முறைமையினில் திருவமுது
முன்னூட்டிப் பின்னுண்ணும்
நிறையுடைய பெருவிருப்பால்

நியதியா கக்கொள்ளும்
துறைவழுவா வகையொழுகுந்
தூயதொழில் தலைநின்றார். **#3414**

தேனையுடைய கொன்றை மலர் மாலையைச் சூடிய சடையையுடைய சிவபெருமானின் அடியவர்களை நூல் விதிப்படி நாள்தோறும், முறையாக முன்னமேயே உணவு உண்ணச் செய்து, அதன் பின்னர்த் தாம் உண்ணுதலான பெருவிருப்பத்தால் அதனை வழக்கமாகக் கொண்டு ஒழுகும் நிலையில், தவறாது ஒழுகுதலான தூய்மையான தொழிலில் சிறந்து விளங்கினார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

தூயதிரு வமுதுகனி
கன்னல்அறு சுவைக்கறிநெய்
பாயதயிர் பால்இனிய
பண்ணியம்முண் ணீரமுதம்
மேயபடி யாலமுது
செய்விக்க இசைந்தடியார்
மாயிருஞா லம்போற்ற
வருமிவர்பால் மனமகிழ்ந்தார். **#3415**

தூய திருவமுதும், பழவகைகளும், அறு சுவைகளை யுடைய கறிவகைகளும், நெய்யும், உறைந்த தயிரும், பாலும், இனிய பலகாரங்களும், அமுது போன்ற உண்ணீரும் என்ற இவற்றைப் பொருந்தியவாற்றால், திருவமுது செய்விக்க, அதற்கு இசைந்து அடியார்கள் வந்து அமுதுண்டு, பெரிய உலகம் போற்ற வரும் இவரிடம், உள்ளம் மகிழ்ச்சி கொண்டனர்.

விளக்கவுரை

பண்ணியம் - இனிப்பொடும் காரத்தொடும் கூட்டிச் செய்யப்பட்ட பலகாரங்கள். உண்ணீர் அமுதம் - அருந்துதற்கெனத் தூய்மையும் மணமும் பெற்ற நீர். `அமிழ்தம் என்று உணரற்பாற்று' *(குறள், 11)* என்பர் திருவள்ளுவனாரும்.

சீதமதி அரவினுடன்
செஞ்சடைமேற் செறிவித்த
நாதன்அடி யார்தம்மை
நயப்பாட்டு வழிபாட்டால்
மேதகையார் அவர்முன்பு
மிகச்சிறிய ராய்அடைந்தார்

ஆதலினால் சிறுத்தொண்டர்
எனநிகழ்ந்தார் அவனியின்மேல். #3416

குளிர்ந்த பிறைச் சந்திரனுடன், பாம்பையும் செஞ் சடைமீது அணிந்து கொண்டுள்ள இறைவரின் அடியவர்களுக்கு விருப்புடன் செய்யும் வழிபாட்டு வகையால், மேன்மையுடைய அவ்வடியவர்களின் முன்பு, தம்மை மிகவும் சிறியவராய்க் கருதி ஒழுகி வந்தமையின், அவர், சிறுத்தொண்டர் என்ற பெயருடன் உலகில் விளங்கலானார்.

விளக்கவுரை

தாழ்வெனும் தன்மை கொண்டு அவர் வாழ்ந்துவரினும், அவர்தம் பண்பாலும் செய்கையாலும் மிகப்பெரிய தொண்டராவர். `நீரோ பெரிய சிறுத்தொண்டர்' என இறைவரால் பின்னர் அழைக் கப்படுதலும் காண்க. நயப்பாட்டு வழிபாட்டால் - விருப்பத்துடன் கூடிய வழிபாட்டால்.

கண்ணுதலார் கணபதீச்
சரத்தின்கண் கருத்தமர
உண்ணிறைஅன் பினிற்பணிசெய்
தொழுகுவார் வழுவின்றி
எண்ணில்பெருஞ் சீரடியார்
இடைவிடா தமுதுசெய
நண்ணியபே ருவகையுடன்
நயந்துறையும் நாளின்கண். #3417

நெற்றியில் கண்ணையுடைய இறைவரின் கணபதீச் சரத்தில் கருத்துப் பதிய, உள்ளம் நிறையும் அன்பினால் தொண்டுகள் பலவும் செய்து ஒழுகுபவரான அவர், குறைவின்றி அளவில்லாத பெருமையுடைய சிறந்த அடியார்கள் இடைவிடாது வந்து உணவு உண்டருளப் பொருந்திய மகிழ்ச்சியுடன் விரும்பி வாழ்ந்திருக்கும் நாள்களில்,

விளக்கவுரை

****

நீராருஞ் சடைமுடியார்
அருளினால் நிறைதவத்துப்
பேராளர் அவர்தமக்குப்
பெருகுதிரு மனையறத்தின்
வேராகி விளங்குதிரு
வெண்காட்டு நங்கைபால்
சீராள தேவரெனும்
திருமைந்தர் அவதரித்தார். #3418

கங்கைநீர் பொருந்திய சடையையுடைய சிவபெரு மானின் திருவருளால், நிறைந்த தவத்தையுடைய அவருக்குப் பெரு கும் சிறந்த இல்லறத்தின் வேராகி விளங்கும் திருவெண்காட்டு நங்கையாரின் மணிவயிற்றில் `சீராள தேவர்' என்னும் திருமகனார் தோன்றினார்.

விளக்கவுரை

மனையறத்திற்கு வேராக விளங்குபவர், வீட்டிலிருக்கும் மனைக்கிழத்தியர்களேயாவர். `இல்லதென் இல்லவள் மாண்பானால்' *(குறள், 53), `மனைக்கு விளக்கம் மடவார்' (தண்டி. மேற்கோள்)* என்றெல்லாம் பண்டைப் பனுவல்கள் கூறுதல் காண்க. இவ்விரு பாடல் களும் ஒருமுடிபின.

அருமையினில் தனிப்புதல்வர்
பிறந்தபொழு தலங்கரித்த
பெருமையினிற் கிளைகளிப்ப
பெறற்கரிய மணிபெற்று
வருமகிழ்ச்சி தாதையார்
மனத்தடங்கா வகைவளரத்
திருமலிநெய் யாடல்விழாச்
செங்காட்டங் குடியெடுப்ப. **#3419**

பிறர் எவரும் பெறுதற்கரிய அருமையான ஒப்பற்ற நன்மகவு தோன்றியபொழுது, மனையை அழகுபடுத்தி, மகவு தோன் றிய பெருமையால் சுற்றத்தார்கள் மகிழ, பெறற்கரிய அம்மகவைப் பெற்றமையால் பெருகிவரும் மனமகிழ்ச்சி, தந்தையாரின் மனத்தில் அடங்குதற்கரிய நிலையில் வளர்ந்து வரச் சிறப்புமிக்க நெய்யாடல் விழாவினைத் திருச்செங்காட்டங் குடியிலுள்ளார் கொண்டாட,

விளக்கவுரை

நெய்யாடல் - எண்ணெய் தேய்த்துக் குழந்தையைக் குளிக்கப் படுத்துதல்.

மங்கலநல் லியம்முழக்கம்
மறைமுழக்கம் வானளப்ப
அங்கணர்தஞ் சீரடியார்க்
களவிறந்த நிதியளித்துத்
தங்கள்மர பினில்உரிமைச்
சடங்குதச தினத்தினிலும்
பொங்குபெரு மகிழ்ச்சியுடன்
புரிந்துகாப் பணிபுனைந்தார். **#3420**

மங்கலமான நல்ல இயங்களின் ஒலியும், மறை களின் ஒலியும் வானத்தில் ஓங்க, இறைவரின் சிறப்புடைய அடியார் களுக்கு

அளவில்லாத பொருள்களைத் தந்து, தங்கள் குல மரபிற்கு உரிய செயற்பாடுகளைப் பத்து நாள்களிலும் மேன்மேலும் மிக மகிழ்ச்சியுடன் செய்து, காப்பு அணிவித்தனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஆர்வநிறை பெருஞ்சுற்றம்
அகம்மலர வளித்தவர்தாம்
பார்பெருகு மகிழ்ச்சியுடன்
பருவமுறைப் பாராட்டுச்
சீர்பெருகச் செய்யவளர்
திருமகனார் சீரடியில்
தார்வளர்கிண் கிணியசையத்
தளர்நடையின் பதஞ்சார்ந்தார். **#3421**

மிக்க விருப்பமுடைய சுற்றத்தவர்கட்கு எல்லாம் உள்ளம் மகிழக் கொடுத்து, உலகத்தில் பெருகும் மகிழ்ச்சியுடன் அவ் வப் பருவங்கள் தோறும் செய்யப்பெறும் செயற்பாடுகளை எல்லாம் சிறப்பாகச் செய்ய, வளரும் திருமகனாரான சீராளதேவர், தம் சிறப்பு மிகுந்த அடிகளில் மாலையாகக் கோத்த கிண்கிணிச் சதங்கை அசை யும்படி தளர்நடைப் பருவத்தை அடைந்தார்.

விளக்கவுரை

பருவமுறைப் பாராட்டு - செங்கீரை முதலாகச் சொல்லப் படும் பருவங்களில் செய்யப்பெறும் சிறப்புக்கள்.

சுருளுமயிர் நுதற்சுட்டி
துணைக்காதின் மணிக்குதம்பை
மருவுதிருக் கண்டநாண்
மார்பினில்ஐம் படைகையில்
பொருவில்வயி ரச்சரிகள்
பொன்னரைஞாண் புனைசதங்கை
தெருவிலொளி விளங்கவளர்
திருவிளையாட் டினிலமர்ந்தார். **#3422**

சுருண்ட மயிர் நிறைந்த நெற்றியில் சுட்டியும், இரண்டு காதுகளில் குதம்பைகளும், திருக்கழுத்தில் பொருந்தும் கண்டசரமும், மார்பில் ஐம்படைத் தாலியும், கைகளில் ஒப்பில்லாத வயிரத்தால் ஆன சரிகளும், இடையில் பொன் அரைஞாணும், திரு வடிகளில் சதங்கைகளும் விளங்கத் தெருவில் ஒளிவிளங்க, வளரும் பிள்ளைத் திருவிளையாட்டினைச் சீராளதேவர் செய்து வந்தார்.

விளக்கவுரை

கண்ட சரம் - கழுத்தொடு விளங்கும் நாண். இது பொன் னாலாயது. ஐம்படைத் தாலி - திருமாலின் சங்கு, சக்கரம், வாள், தண்டு, வில் என்பன. சரிகள் - கை வளையல்கள்.

வந்துவளர் மூவாண்டில்
மயிர்வினைமங் கலஞ்செய்து
தந்தையா ரும்பயந்த
தாயாருந் தனிச்சிறுவர்
சிந்தைமலர் சொல்தெளிவில்
செழுங்கலைகள் பயிலத்தம்
பந்தமற வந்தவரைப்
பள்ளியினில் இருத்தினார். **#3423**

முறைமையாக வளர்கின்ற அவரின் மூன்றாம் ஆண்டில் மயிர் நீக்கும் மணவினையைச் செய்வித்துத், தந்தையாரும் தாயாரும் ஒப்பில்லாத சிறிய தோன்றலான மகனாருக்கு, மனம் மலர் வதற்குக் காரணமான சொற்களின் தெளிவையுடைய செழுங்கலை களைப் பயில்வதற்காகத் தம் பிறவிப் பிணிப்பு நீங்க வந்த அவரை ஐந்தாம் ஆண்டில் பள்ளியில் சேர்த்தனர்.

விளக்கவுரை

ஐந்தாம் ஆண்டில் பள்ளியிற் சேர்க்கும் மரபு, சண்டேசுவர நாயனார் வரலாற்றாலும் அறியப்படும்.

அந்நாளில் சண்பைநகர்
ஆண்டகையார் எழுந்தருள
முன்னாக எதிர்கொண்டு
கொடுபுகுந்து முந்நூல்சேர்
பொன்மார்பிற் சிறுத்தொண்டர்
புகலிகா வலனார்தம்
நன்னாமச் சேவடிகள்
போற்றிசைத்து நலஞ்சிறந்தார். **#3424**

அந்நாளில் சீகாழித் தலைவரான ஞானசம்பந்தர் அங்கு வந்தருள, முப்புரி நூல் அணிந்த மார்பையுடைய சிறுத்தொண் டர் முன்னாகச் சென்று எதிர்கொண்டு வரவேற்று, அழைத்து வந்து, நகருள் புகுந்து, தம் மனையில் இருக்கச் செய்து, அச்சீகாழித் தலைவ ரின் நலமும் பெருமையும் மிக்க திருவடிகளைப் போற்றி நலம் பெற்றார்.

விளக்கவுரை

****

சண்பையர்தம் பெருமானும்
தாங்கரிய பெருங்காதல்
பண்புடைய சிறுத்தொண்ட
ருடன்பயின்று மற்றவரை
மண்பரவுந் திருப்பதிகத்
தினில்வைத்துச் சிறப்பித்து
நண்பருளி எழுந்தருளத்
தாமினிது நயப்புற்றார். **#3425**

சீகாழியினரின் தலைவரான ஞானசம்பந்தரும் அளவிடற்கரியதாய், மேன்மேலும் வளரும் அரிய பத்திமைப் பண் புடைய சிறுத்தொண்டருடன் பயின்று, அவரை உலகம் போற்றும் திருப்பதிகத்தால் பாராட்டிச் சிறப்புச் செய்து, தம் நட்பினராகும் பேற் றையும் வழங்கியருளி, இன்பமும் விருப்பமும் மிக அங்கு அமர்ந் திருந்தார்.

விளக்கவுரை

திருச்செங்காட்டங்குடிக்குப் பாலறாவாயர் அருளிய பதிகங்கள் இரண்டுள்ளன *(தி.1 ப.61, தி.3 ப.63)*. இவற்றுள்ளும் பின்னைய திருப்பதிகத்தில் மூன்றாவது செய்யுள் காணக் கிடைத் திலது. *தி.1 ப.61 10* ஆவது பாடலில், `பொடிநுகரும் சிறுத் தொண்டர்க்கருள் செய்யும் பொருட்டாகக் கடி நகராய் வீற்றிருந்தான் கணபதியீச்சுரத்தானே' என்று சிறப்பிக்கிறார். *தி.3 ப.63*இல் பாடல் தொறும் சிறுத்தொண்டரைச் சிறப்பிக்கும் ஞானசம்பந்தர், அப்பதிகத் தின் முதற் பாடலில், `செங்காட்டங்குடி மேய சிறுத்தொண்டன் பணி செய்ய' என்று குறிப்பிடுகின்றார். மற்ற இடங்களில் எல்லாம் அவர்தம் சீர்மையும் நீர்மையும் விளங்கப் பலபடக் குறிக்கப் பெற்றுள்ளன. `கன்னவில் தோள் சிறுத்தொண்டன்' *(தி.3 ப.63 பா.2)*, `சீருலாம் சிறுத் தொண்டன்' *(தி.3 ப.63 பா.5)*, `செருவடி தோள் சிறுத்தொண்டன்' *(தி.3 ப.63 பா.7)*, `சிறப்புலவாச் சிறுத் தொண்டன்'*(தி.3 ப.63 பா.9)* என்பன அவற்றுட்சில.

இத்தன்மை நிகழுநாள்
இவர்திருத்தொண் டிருங்கயிலை
அத்தர்திரு வடியிணைக்கீழ்ச்
சென்றணைய அவருடைய
மெய்த்தன்மை அன்புநுகர்ந்
தருளுதற்கு விடையவர்தாம்
சித்தமகிழ் வயிரவராய்த்
திருமலைநின் றணைகின்றார். **#3426**

இவ்வாறாக நிகழ்ந்துவரும் சிறுத்தொண்டரின் திருத்தொண்டானது,

உயர்ந்த திருக்கயிலாய மலையில் வீற்றிருக் கின்ற இறைவரின் திருவடிக் கீழ்ப் போய்ச்சேர, ஆனேற்றூர்தியை யுடைய இறைவர், தாமே அவர்தம் மெய்யார்ந்த அன்பை நுகர்ந்து அருள் புரிவதன் பொருட்டு, உள்ளம் மகிழும் வயிரவக் கோலத் துடனே திருமலையினின்று நீங்கி எழுந்தருளி வருவாராய்,

விளக்கவுரை

****

மடல்கொண்ட மலரிதழி
நெடுஞ்சடையை வனப்பெய்தக்
கடல்மண்டி முகந்தெழுந்த
காளமேகச் சுருள்போல்
தொடர்பங்கி சுருண்டிருண்டு
தூறிநெறித் தசைந்துசெறி
படர்துஞ்சின் கருங்குஞ்சி
கொந்தளமா கப்பரப்பி. **#3427**

இதழ்களையுடைய கொன்றை மலரைச் சூடிய நீண்ட சடையையே அழகுபொருந்த, கருநீலக் கடலில் சேர்ந்து நீரை யுண்டு மேலே எழுந்த கரிய மேகத்தின் சுருள் போலத் தொடர்ந்து, நீண்ட தலைமயிராகக் காடு என அடர்ந்து, நெறிப்பும் அசைவும் உடையதாகச் செறித்துப் படரும் வரிசை கொண்ட கருங்குஞ்சிக் கொத்தைப் போல் ஆக்கி அழகுடையதாய்ப் பரப்பி முடித்து,

விளக்கவுரை

திருச்சடையை மயிர்க்கொத்தாக ஆக்கி என்பதே இதன் கருத்தாகும். இதன் கருமை, நீரை முகந்த மேகத்தின் கருமையதாம். இம்மயிர் முடி சுருண்டு, இருண்டு, காடென அடர்ந்து, கருமணலின் நிரல் எனச் செறிந்து, அசைவுடையதாகி இருந்தது என ஆசிரியர் குறித்தருளுகின்றார். ஒரு மயிர் முடிக்கு இதனினும் அழகு அமைய இயலாதவாறு குறித்திருக்கும் நுண்மை அறிந்து இன்புறத்தக்கதாம். தொடர்பங்கி - தொடர்ந்து நீண்ட மயிர். குஞ்சி - ஆண்களின் தலை மயிர். கொந்தளம் - கொத்து.

அஞ்சனம்மஞ் சனஞ்செய்த
தனையவணி கிளர்பம்பை
மஞ்சினிடை யிடையெழுந்த
வானமீன் பரப்பென்னப்
புஞ்சநிரை வண்டுதேன்
சுரும்புபுடை படர்ந்தார்ப்பத்

துஞ்சினுனித் தனிப்பரப்புந்
தும்பைநறு மலர்தோன்ற. #3428

மைக்குழம்பை மூழ்கச் செய்ததைப்போல், அழகு மிகும் கரிய மயிரான மேகத்திடையே எழுந்து தோன்றும் விண்மீன் களின் பரப்பைப் போன்று திரட்சியாய், வரிசையாய்ப் பல வண்டின் கூட்டங்கள் அருகே சூழ்ந்து ஒலிக்க நிலைபெறும் வரிசைகளில் தும்பை மலர்கள் விளங்க,

விளக்கவுரை

மேற்கூறியவாறமைந்த திருமுடியில் தும்பை மலர்கள் விளங்குவன, மேகத்தினிடையே விண்மீன்கள் தோன்றுவனபோல் இருந்தனவாம். பம்பை - சுருண்டு விரிந்த மயிர். புஞ்சம் - திரட்சி. துஞ்சின் நுனி - நிலைபெறும் மயிர்ச்செறிவின் நுனி.

அருகுதிரு முடிச்செருகும்
அந்தியிளம் பிறைதன்னைப்
பெருகுசிறு மதியாக்கிப்
பெயர்த்துச்சாத் தியதென்ன
விரிசுடர்ச்செம் பவளவொளி
வெயில்விரிக்கும் விளங்குசுடர்த்
திருநுதல்மேல் திருநீற்றுத்
தனிப்பொட்டுத் திகழ்ந்திலங்க. #3429

திருமுடியின் ஒரு மருங்கில், செருகும் மாலையில் தோன்றும் பிறைச் சந்திரனையே ஒளி பெருகும் சிறிய முழுமதி போலே ஆக்கி, மீண்டும் நெற்றியில் அணிந்ததைப்போல் விரியும் ஒளி பொருந்திய சிவந்த பவளக் கதிர்களை விரித்து வீசும் விளக்கமுடைய சுடர்த்திரு நெற்றியின்மீது, திருநீற்றின் ஒற்றைப் பொட்டு ஒளி வீசி விளங்க,

விளக்கவுரை

இளம்பிறையை முழுமதியாக்கி வைத்தது போன்று, நெற்றியில் திருநீற்றின் பொட்டு விளங்கியது என்பது கருத்து. `நீற்றின் பேரொளி போன்றது நீள்நிலா' *(தி.12* திருமலைச் சரு. தடுத்தாட். பா.*162)* என ஆசிரியர், தாமே கூறியிருத்தலின் நிலவின் ஒளி, நீற்றின் ஒளிக்கு உவமையாயிற்று என அறியலாம். `பெரியோன் தருக திருநுதலாகென' என வரும் பகுதிக்குச் சிவபெருமான் சூடிய பிறை இரண்டுகலை யுடையதாதலின், அதனை எட்டாம் பிறையாக்கித் தருக என அடியார்க்கு நல்லார் உரைத்த உரையும் ஈண்டு நினைவு கூரத் தக்கதாம்.

வெவ்வருக்கன் மண்டலமும்
விளங்குமதி மண்டலமும்
அவ்வனற்செய் மண்டலமும்

உடன்அணைந்த தெனவழகை
வவ்வுதிருக் காதின்மணிக்
குழைச்சங்கு வளைத்ததனுள்
செவ்வரத்த மலர்செறித்த
திருத்தோடு புடைசிறக்க. **#3430**

வெம்மையுடைய கதிரவன், விளக்கமான சந்திரன், நெருப்பு ஆகிய மூன்றும் தாம்தாமும் விளக்கமுறும் இடங்களுடன் ஒன்றாகக் கூடினாற் போல, அழகைத் தன் வயமாக்கும் செவியில், அழகான சங்குக் குழையை வளைத்து அணிந்து, அதனுள் செவ்வரத்தம்பூவைச் செறித்த தோடு, இருமருங்கும் சிறந்து விளங்க,

விளக்கவுரை

கதிரவன், சந்திரன், தீ ஆகிய முச்சுடர்களும் இறைவற்கு முக்கண்களாக விளங்க, அவற்றின் ஒளிப்பரப்பு முறையே காதிலும், குழையிலும், மலரிலும் விளங்கலாயின என்பது கருத்து. மண்டலம் - வளைவு. `பருதி பலவும் எடுத்து சுடர் பாலித்தாற் போலக் குலவும் மகரக் குழையும்' எனவரும் குமர குருபர அடிகளின் திருவாக்கும் நினைவுகூர்தற்குரியதாம்.

களங்கொள்விடம் மறைத்தருளக்
கடலமுதக் குமிழிநிரைத்
துளங்கொளிவெண் திரள்கோவைத்
தூயவடம் அணிந்ததென
உளங்கொள்பவர் கரைந்துடலும்
உயிரும்உரு கப்பெருக
விளங்குதிருக் கழுத்தினிடை
வெண்பளிங்கின் வடந்திகழ. **#3431**

திருக்கழுத்தில் கொண்ட நஞ்சை மறைத்தருளும் பொருட்டுப் பாற்கடலில் தோன்றிய அமுதத்தின் குமிழிகளின் வரிசையாய் வாய்ந்த ஒளியுடைய வெள்ளிய திரட்சிகளின் தூய வடத்தை அணிந்ததுபோல, உள்ளத்துள் நினைப்பவரின் உடலும் உயிரும் உருகும்படி மிக விளங்கும் திருக்கழுத்திலே வெண்மையான பளிங்கு மாலை விளங்க,

விளக்கவுரை

அமுதம் வெண்மையானது. ஆதலின் அமுதக் குமிழி எனப் பளிங்கின் வடம் இருந்தது என்றார். நஞ்சு - கறுப்பு. வெண்மை அதனை மறைத்தது.

செம்பரிதி கடலளித்த
செக்கரொளி யினைஅந்திப்
பம்புமிருள் செறிபொழுது

படர்ந்தணைந்து சூழ்வதெனத்
தம்பழைய கரியுரிவை
கொண்டுசமைத் ததுசாத்தும்
அம்பவளத் திருமேனிக்
கஞ்சுகத்தின் அணிவிளங்க. #3432

சிவந்த கதிரவன் கடலில் குளிக்கும் சமயத்தில் தோன்றும் செவ்வான ஒளியை, அந்தி முதிர வரும் இருள் அடர்ந்த இராப்போது படர்ந்து வந்து சூழ்வதைப்போல், அழகிய பவளம் போன்ற மேனியின் மீது தம் பழைய யானைத் தோலைக் கொண்டு ஆக்கிய சட்டையின் அழகு விளங்க,

விளக்கவுரை

சிவந்த கதிரவன் கடலில் குளிக்கும் சமயத்தில் தோன்றும் செவ்வான ஒளியை, அந்தி முதிர வரும் இருள் அடர்ந்த இராப்போது படர்ந்து வந்து சூழ்வதைப்போல், அழகிய பவளம் போன்ற மேனியின் மீது தம் பழைய யானைத் தோலைக் கொண்டு ஆக்கிய சட்டையின் அழகு விளங்க,

மிக்கெழும்அன் பர்கள்அன்பு
திருமேனி விளைந்ததென
அக்குமணி யாற்சன்ன
வீரமும்ஆ ரமும்வடமும்
கைக்கணிதோள் வளைச்சரியும்
அரைக்கடிசூத் திரச்சரியும்
தக்கதிருக் காற்சரியுஞ்
சாத்தியவொண் சுடர்தயங்க. #3433

அடியாரிடத்தில் மேல் ஓங்கி எழும் அன்பானது தம் திருமேனியின் மீது அங்கங்கும் வடிவு கொண்டு வளைந்தாற் போல, எலும்பு மணிகளால் அமைந்த வெற்றி மாலையும், கோவை களும், கைகளுக்கு அணியும் கங்கணங்களும், இடுப்பில் அணியும் அரைஞாணும், கால்களில் அணியும் காலணிகளும் அணிந்த ஒன்றிய பேரொளி விளங்க,

விளக்கவுரை

சன்னவீரம் - வெற்றிமாலை. சன்னவீரம், ஆரம், வடம் ஆகியவை மார்பில் அணியத்தக்கன. வளைச்சரி - வளை விளங்க : சரித்தல் - சலிப்பது; விளங்குவது. கடிசூத்திரம் - அரைஞாண். இவ் வணிகளனைத்தும் அடியவர்களின் அன்பு என வளைந்து இலங்கின.

பொருவில்திருத் தொண்டர்க்குப்
புவிமேல்வந் தருள்புரியும்
பெருகருளின் திறங்கண்டு
பிரானருளே பேணுவீர்

வரும்அன்பின் வழிநிற்பீர்
எனமறைபூண் டறைவனபோல்
திருவடிமேல் திருச்சிலம்பு
திசைமுழுதுஞ் செலவொலிப்ப. **#3434**

ஒப்பில்லாத தொண்டரான சிறுத்தொண்டருக்கு, இவ்வுலகத்தில் வந்து அருள் செய்யும் பெருகிய அருளின் தன்மை யைக் கண்டு இறைவரின் திருவருளையே விரும்பிப் போற்றுவீர்! வளர்கின்ற அன்பின் வழியில் நிற்கக் கடவீர்! என்று மறைகள் குறிக் கொண்டு கூறுவன போலத், திருவடிகளின் மீதுள்ள சிலம்புகளின் ஒலி எல்லாத் திசைகளிலும் செல்லுமாறு ஒலிக்க,

விளக்கவுரை

மறைஒலி எனச் சிலம்பொலிகள் இசைத்தன என்பதாம்.

அயன்கபா லந்தரித்த
விடத்திருக்கை யாலணைத்த
வயங்கொளிமூ விலைச்சூல
மணித்திருத்தோள் மிசைப்பொலியத்
தயங்குசுடர் வலத்திருக்கைத்
தமருகத்தின் ஒலிதழைப்பப்
பயன்தவத்தாற் பெறும்புவியும்
பாததா மரைசூட. **#3435**

நான்முகனின் மண்டையோட்டை எடுத்த இடக் கையினால், அணைத்த விளங்கும் ஒளியையுடைய மூவிலைச் சூலமா னது அழகிய தோள்களில் விளங்க, விளங்கி வீசும் ஒளியையுடைய வலத்திருக்கையிலே பிடித்த தமருகத்தின் ஒலி ஒலிக்க, முன்னைத் தவத்தால் பயன் பெறும் நிலமும் அடித் தாமரைகளைத் தாங்க,

விளக்கவுரை

இடத்திருக்கையில் சூலமும், வலத் திருக்கையில் துடியும் விளங்க, நடந்தருளி வர என்பதாம்.

அருள்பொழியுந் திருமுகத்தில்
அணிமுறுவல் நிலவெறிப்ப
மருள்மொழியும் மலஞ்சிதைக்கும்
வடிச்சூலம் வெயிலெறிப்பப்
பொருள்பொழியும் பெருகன்பு
தழைத்தோங்கிப் புவியேத்தத்
தெருள்பொழிவண் தமிழ்நாட்டுச்
செங்காட்டங் குடிசேர்ந்தார். **#3436**

அருள் பொழியும் திருமுகத்தில் புன்முறுவலானது நிலவைப் போன்று குளிர்ந்த ஒளி வீச, மயக்கத்தை மிகச் செய்யும் மும் மலங்களின் வலியையும் போக்கும் கூரிய சூலம் வெயில் ஒளி வீச, உண்மைப் பொருளை விளக்கும் பெருகும் அன்பு மேலும் மேலும் தழைத்து ஓங்கி இவ்வுலகம் போற்ற, அறிவு விளக்கம் செய்யும் வளமையுடைய தமிழ்நாட்டில் உள்ள திருச்செங்காட்டங்குடியை அடைந்தார்.

விளக்கவுரை

இப்பதினொரு பாடல்களும் ஒருமுடிபின.

தண்டாத தொருவேட்கைப்
பசியுடையார் தமைப்போலக்
கண்டாரைச் சிறுத்தொண்டர்
மனைவினவிக் கடிதணைந்து
தொண்டானார்க் கெந்நாளும்
சோறளிக்குந் திருத்தொண்டர்
வண்டார்பூந் தாரார்இம்
மனைக்குள்ளா ரோவென்ன. **#3437**

குறையாத பசியை உடையவரைப் போலத், தம்முன் வருபவர்களைப் பார்த்துச் `சிறுத்தொண்டரின் இல்லம் எங்குள்ளது?' என்று கேட்டு அறிந்து, விரைவில் அங்கு வந்து, `சிவபெருமானது தொண்டருக்கு எந்நாளும் சோற்றை அளிக்கின்ற தொண்டரான, வண்டுகள் மொய்க்கும் மலர் மாலையைச் சூடிய சிறுத்தொண்டர் இந்த இல்லத்தில் உள்ளாரோ?' என்று வினவ,

விளக்கவுரை

****

வந்தணைந்து வினவுவார்
மாதவரே யாம்என்று
சந்தனமாந் தையலார்
முன்வந்து தாள்வணங்கி
அந்தமில்சீ ரடியாரைத்
தேடியவர் புறத்தணைந்தார்
எந்தமையா ளுடையவரே
அகத்துள்எழுந் தருளுமென. **#3438**

வந்து சேர்ந்து வினவுகின்றவர் மாதவரான அடியவரே என்று எண்ணிச் சந்தனத்தாதியார் என்ற அம்மையார், முன் வந்து, அவர்தம் திருவடிகளை வணங்கி, `எல்லையில்லாத சிறப் புடைய அடியவரைத் தேடும் பொருட்டு அவர் வெளியே சென்றுள் ளார்; எம்மை ஆள்பவரான

முதல்வரே! மனையகத்து எழுந்தருளுக!' என்று கூற,

விளக்கவுரை

****

மடவரலை முகநோக்கி
மாதரார் தாம்இருந்த
இடவகையில் தனிபுகுதோம்
என்றருள அதுகேட்டு
விடவகல்வார் போலிருந்தார்
எனவெருவி விரைந்துமனைக்
கடனுடைய திருவெண்காட்
டம்மைகடைத் தலையெய்தி. #3439

(இறைவர்) அந்த அம்மையாரைப் பார்த்துப், `பெண்கள் தனித்திருக்கும் இடத்தில் நாம் தனியே புகமாட்டோம்!' என்று உரைப்ப, அதைக்கேட்டு, அவர் அங்கிருந்து நீங்கிச் சென்று விடுவார் போல் தோன்றுகின்றார் என்று அச்சம் கொண்டு, விரைந்து, மனைத்தக்க மாண்பு உடையவரான திருவெண்காட்டு அம்மையார், உள்ளிருந்து மனையின் முன்வந்து,

விளக்கவுரை

அற்றேல் காரைக்காலம்மையார் தனித்திருப்ப, அடியவ ராக வந்த இறைவர் அவரிடத்தில் சென்று உணவருந்தியது என்னை யெனில், அங்குத் தமிழ் நாட்டவராகவும், எளிய இனிய வயது முதிர்ந்த அடியவராயும் வந்தமையானும், தம் தீப்பசி நீங்க உணவு ஒன்றே தேவையாம் நிலையில் திருவுள்ளம் பற்றியமையாலும், அதனைத் தீர்த்தற்கு அம்மையார் ஒருவரே இருப்பினும் அமையுமாத லானும், அங்கு அவர் தனித்திருப்ப எழுந்தருளியது தகவாயிற்று. இங்கு அந்நிலைமைக்கு முற்றிலும் மாறானதாய் இருத்தலின், இவ் வாறு திருவுள்ளம் கொண்டாராயிற்று.

அம்பலவ ரடியாரை
யமுதுசெய்விப் பாரிற்றைக்
கெம்பெருமான் யாவரையுங்
கண்டிலர்தே டிப்போனார்
வம்பெனநீ ரெழுந்தருளி
வருந்திருவே டங்கண்டால்
தம்பெரிய பேறென்றே
மிகமகிழ்வர் இனித்தாழார். #3440

பேரவையை இடனாகக் கொண்டிருக்கும் இறைவ ரின் அடியவர்களைத் திருவமுது செய்விக்கின்ற நியமம் உடையவர், அச்செயலை

முடிப்பதற்கு, `எம்பெருமானே! இன்று அடியார் எவரை யும்
காணாமையால் தேடிச் சென்றுள்ளார், புதிதாய் நீங்கள் எழுந் தருளி
வரும் இத்திருக்கோலத்தைக் கண்டால் தம் பேறே என்று மிக வும்
மகிழ்ச்சி அடைவார், இனிக்காலம் தாழ்க்க மாட்டார்',

விளக்கவுரை

****

இப்பொழுதே வந்தணைவர்
எழுந்தருளி யிரும்என்ன
ஒப்பின் மனை யறம்புரப்பீர்
உத்தரா பதியுள்ளோம்
செப்பருஞ்சீர்ச் சிறுத்தொண்டர்
தமைக்காணச் சேர்ந்தனம்யாம்
எப்பரிசும் அவரொழிய
இங்கிரோம் என்றருளி. **#3441**

`இப்பொழுதே வந்து சேர்வார். இங்குத் தங்கி யிரும்' என்று சொல்ல,
`ஒப்பற்ற இல்லறத்தைத் தவறாது நடத்துபவரே! யாம் வடநாட்டில்
உள்ளோம். சொல்வதற்குரிய சிறப்புடைய சிறுத் தொண்டரைக்
காணும்பொருட்டு இங்கு வந்து அடைந்தோம், எவ்வகையாலும் அவர்
இல்லாதபோது இங்கே நாம் இருக்க மாட்டோம்!' என்று கூறியருளி,

விளக்கவுரை

முன்னிருந்த தோழியரின் மொழிக்கு அடியவர் இணங்காமை கேட்ட நங்கையார், உள்ளிருந்து முன்வந்து, தாமே அவருக்கு முழுமையாகவும், இனிமையாகவும் விடை பகர்ந்தது அவர்தம் பொறுப்புணர்வையும், விருப்புணர்வையும் காட்டி நிற்கின் றன. இந்நிலையில் வந்தருளிய வயிரவரும், வரலாற்றின் எதிர் நிகழ்வை உளங்கொண்ட நிலையில் வழங்கிய விடையும் உளங் கொளத்தக்கதாய் அமைந்துள்ளது.

கண்ணுதலிற் காட்டாதார்
கணபதீச் சரத்தின்கண்
வண்ணமலர் ஆத்தியின்கீழ்
இருக்கின்றோம் மற்றவர் தாம்
நண்ணினால் நாமிருந்த
பரிசுரைப்பீர் என்றருளி
அண்ணலார் திருவாத்தி
யணைந்தருளி அமர்ந்திருந்தார். **#3442**

நெற்றிக்கண்ணை மறைத்தவாறு வந்த அவர், `கணபதியீச்சரத்தில்
அழகிய மலர்களையுடைய திருவாத்தி மரத்தின் கீழ்ச் சென்று அமர்ந்து

இருப்போம், அவர் மீண்டு இங்கு வரும் பொழுது, அங்கு நாம் இருக்கும் தன்மையினைச் சொல்வீராக!' என்று கூறி, இறைவர் திருவாத்தி மரத்தின் அடியைச் சேர்ந்து, அங்கு விரும்பி எழுந்தருளியிருந்தார்.

விளக்கவுரை

இவ்வாறு பாடல்களும் ஒருமுடிபின.

நீரார் சடையான் அடியாரை
நேடி யெங்குங் காணாது
சீரார் தவத்துச் சிறுத்தொண்டர்
மீண்டுஞ் செல்வ மனையெய்தி
ஆரா அன்பின் மனைவியார்க்கு
இயம்பி அழிவெய் திடஅவரும்
பார்ஆ தரிக்குந் திருவேடத்
தொருவர் வந்த படிபகர்ந்தார். **#3443**

சிறப்பு மிகுந்த தவத்தையுடைய சிறுத்தொண்டர், கங்கையாற்றைத் திருச்சடையிலுடைய சிவபெருமானின் அடியவரை எங்கும் தேடிக் காணாது, மீண்டும் இல்லத்தை அடைந்து, அளவு கடந்த அன்பினையுடைய மனைவியாருக்கு அதைச் சொல்லி வருந்த, அவரும் உலகம் அன்புகூரும் கோலம் கொண்ட ஒருவர் அங்கு வந்து சென்றவாற்றை அவருக்குச் சொன்னார்.

விளக்கவுரை

****

அடியேன் உய்ந்தேன் எங்குற்றார்
உரையா யென்ன அவர்மொழிவார்
வடிசேர் சூல கபாலத்தர்
வடதே சத்தோம் என்றார்வண்
துடிசேர் கரத்துப் பயிரவர்யாம்
சொல்ல இங்கும் இராதேபோய்க்
கடிசேர் திருவாத் தியினிழற்கீழ்
இருந்தார் கணப தீச்சரத்து. **#3444**

`அடியேன் வாழ்ந்தேன்! அவர் எங்கு இருக்கின் றார்? சொல்வாயாக!' என்று வினவ, அவ்வம்மையாரும் கூறுவா ராய்க் ` கூர்மையுடைய சூலத்தையும், மண்டை ஓட்டையும் கையிற் கொண்ட அவர், நாம் வடநாட்டில் உள்ளோம்' என்றார்: அவர் வள மான துடியை ஒரு கையில் பிடித்த வயிரவக் கோலத்தவர்: நாங்கள் இல்லத்தில் எழுந்தருளி இருக்குமாறு சொல்லி வேண்டவும், இங்குத் தங்கி இராமல் சென்று கணபதியீச்சரத்தில் மணம் பொருந்திய திருவாத்தி மரத்தின் நிழலில்

தங்கி உள்ளார்.

விளக்கவுரை

****

என்று மனைவி யார்இயம்ப
எழுந்த விருப்பால் விரைந்தெய்திச்
சென்று கண்டு திருப்பாதம்
பணிந்து நின்றார் சிறுத்தொண்டர்
நின்ற தொண்டர் தமைநோக்கி
நீரோ பெரிய சிறுத்தொண்டர்
என்று திருவாய் மலர்ந்தருள
இறைவர் தம்மைத் தொழுதுரைப்பார். **#3445**

என்று மனைவியார் கூற, அதைக் கேட்ட சிறுத் தொண்டர், மேன்மேல் எழுந்த விருப்பினால் விரைவாகச் சென்று, அவருடைய திருவடிகளை வணங்கி நின்றார். வணங்கி நின்ற சிறுத் தொண்டரைப் பார்த்து, `நீர் தாமோ பெரியவராய்ச் சொல்லப்படுகின்ற சிறுத்தொண்டர்' எனத் திருவாய் மலர்ந்தருள, அவர் இறைவரை வணங்கிச் சொல்வாராய்,

விளக்கவுரை

****

பூதி யணிசா தனத்தவர்முன்
போற்றப் போதேன் ஆயிடினும்
நாதன் அடியார் கருணையினால்
அருளிச் செய்வர் நானென்று
கோதில் அன்பர் தமையமுது
செய்விப் பதற்குக் குலப்பதியில்
காத லாலே தேடியுமுன்
காணேன் தவத்தால் உமைக்கண்டேன். **#3446**

`திருநீற்றுத் திருத்தொண்டர்களின் முன் சென்று போற்றி வழிபடவும் தகுதியற்றவனாயினும், அடியேன் அடியவர்க ளின் அருளால் அப்பெயருடையவன்' எனக் கூறுவர், குற்றம் தீர்ந்த அடியவரை அமுது செய்விப்பதற்காகப் பழமை வாய்ந்த இப்பதியில், பெருவிருப்பத்தால் எங்கும் தேடியும் கண்டிலேன், முன்பு செய்த தவப்பயனால் உம்மைக் கண்டேன்,

விளக்கவுரை

****

அடியேன் மனையில் எழுந்தருளி
அமுதுசெய்ய வேண்டுமென

நெடியோ னறியா வடியார்தாம்
நிகழுந் தவத்தீர் உமைக்காணும்
படியால் வந்தோம் உத்தரா
பதியோம் எம்மைப் பரிந்தூட்ட
முடியா துமக்குச் செய்கையரி
தொண்ணா தென்று மொழிந்தருள. **#3447**
`அடியவனின் இல்லத்தில் தாங்கள் எழுந்தருளி வந்து திருவமுது செய்தல் வேண்டும்!' என்று சிறுத்தொண்டர் வேண்ட, நீண்ட திருமாலும் அறிய மாட்டாத அவ்வடியவர் தாமும், `விளங்கும் தவத்தை உடையவரே! உம்மைக் காண்பதற்காக வந்தோம்! வடநாட்டில் உள்ளோம், எம்மை அன்புடன் உண்ணச் செய்ய இயலாது, அஃது அரியதாகும்! ஆதலால் உம்மால் செய்ய ஒண்ணாது' என்று கூறியருள,

விளக்கவுரை

****

எண்ணா தடியேன் மொழியேன்நீர்
அமுது செய்யும் இயல்பதனைக்
கண்ணார் வேட நிறைதவத்தீர்
அருளிச் செய்யுங் கடிதமைக்கத்
தண்ணார் இதழி முடியார்தம்
அடியார் தலைப்பட் டால்தேட
ஒண்ணா தனவும் உளவாகும்
அருமை யில்லை யெனவுரைத்தார். **#3448**
`அடியேன் எண்ணிப் பாராது கூறமாட்டேன். கண் நிறைந்த அழகையுடைய நிறை தவத்தவரே! தாங்கள் திருவமுது செய்யும் இயல்பை, விரைவாக அமைப்பதன் பொருட்டுக் கூறியருள் செய்வீராக! குளிர்ந்த கொன்றை மாலையைச் சூடிய இறைவரின் அடி யார்கள் கிடைக்கப் பெற்றால், தேடினும் கிடைக்காதனவும் கிடைக்க உள்ளனவாகும், எனக்கு அருமை இல்லை' என்று சொன்னார்.

விளக்கவுரை

இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

அரிய தில்லை எனக் கேட்ட
பொழுதில் அழகு பொழிகின்ற
பெரிய பயிர வக்கோலப்
பிரானார் அருளிச் செய்வார்யாம்
பரியுந் தொண்டீர் மூவிருது
கழித்தாற் பசுவீழ்த் திடவுண்ப

துரிய நாளு மதற்கின்றால்
ஊட்ட அரிதாம் உமக்கென்றார். #3449

`அரியது இல்லை' என்று சிறுத்தொண்டர் கூறக் கேட்ட அமையத்தில், அழகைச் சொரிகின்ற பெரிய வயிரவக் கோலத்துடன் வந்துள்ள இறைவர், `அன்புத் தொண்டரே! நாம் ஆறு திங்களுக்கு ஒருமுறை, பசுவை வீழ்த்தி அமுது இட உண்பது வழக்க மாகும். அங்ஙனம் உண்பதற்குரிய நாளும் இன்றே யாம். ஆனால் அவ்வாறு உண்பித்தல் உமக்கு அருமையுடையதாகும்!' என அருள் செய்தார்.

விளக்கவுரை

ஓர் இருது, இரு திங்களை நிலைக்களனாகக் கொண்டது. மூவிருது ஆறு திங்கள். ஈண்டுப் பசு என்றது உயிர் என்ற பொதுப் பொருளில் வந்துள்ளது.

சால நன்று முந்நிரையும்
உடையேன் தாழ்விங் கெனக்கில்லை
ஆலம் உண்டா ரன்பர்உமக்
கமுதாம் பசுத்தான் இன்னதென
ஏல வருளிச் செயப்பெற்றால்
யான்போய் அமுது கடிதமைத்துக்
காலந் தப்பா மேவருவேன்
என்று மொழிந்து கைதொழுதார். #3450

அதுகேட்ட சிறுத்தொண்டர், `மிகவும் நல்லது. அடியேன், ஆடு, எருமை, பசு என்ற மூன்று நிரைகளையும் பெற்றி ருக்கின்றேன், எனக்கு இங்குக் குறைவில்லை. நஞ்சை உண்ட சிவ பெருமானின் அன்பராம் தாங்கள், உண்டற்குரிய அப்பசுதான் இன் னது என்றருளின், அடியேன் விரைவாகச் சென்று உணவு சமைத்து அதற்குரிய காலம் தவறாது வருவேன்!' எனக் கூறிக் கை தொழுதார்.

விளக்கவுரை

முந்நிரை - பசு, ஆடு, எருமை ஆகியன.

பண்பு மிக்க சிறுத்தொண்டர்
பரிவு கண்டு பயிரவரும்
நண்பு மிக்கீர் நாம்உண்ணப்
படுக்கும் பசுவும் நரப்பசுவாம்
உண்ப தஞ்சு பிராயத்தில்
உறுப்பின் மறுவின் றேல்இன்னம்
புண்செய் நோவில் வேலெறிந்தாற்
போலும் புகல்வ தொன்றென்றார். #3451

அடிமைப் பண்பு மிகுந்த சிறுத்தொண்டரின் அன்பைக் கண்டு, பயிரவக் கோலத்தராய் வந்த சிவபெருமானும், `அடியாரிடம் அன்பு உடையவரே! நாம் உண்பதற்குக் கொல்லப் படுகின்ற பசுவும் மானிடப் பசுவாகும். ஐந்து வயதாயும், உடற் குறையற்றதாயும் இருத்தல் வேண்டும். அதுவே யாம் உண்பதாகும்; நோய் செய்யும் புண்ணிலே வேலைப் பாய்ச்சியதைப் போல், மேலும் கூறத்தக்கது ஒன்றுண்டு!' என்று உரைப்பவர்,

விளக்கவுரை

`புண்ணுலாம் பெரும்புழையிற் கனல்நுழைந்தால் எனப்புகுத லோடும்' *(கம்ப. கையடை. 12)* எனக் கம்பர் கூறும் இடனும் ஈண்டு எண்ணற்குரியதாகும்.

யாதும் அரிய தில்லைஇனி
ஈண்ட அருளிச் செய்யுமென
நாதன் தானும் ஒருகுடிக்கு
நல்ல சிறுவன் ஒருமகனைத்
தாதை அரியத் தாய்பிடிக்கும்
பொழுது தம்மில் மனமுவந்தே
ஏத மின்றி யமைத்தகறி
யாம்இட் டுண்ப தெனமொழிந்தார். **#3452**

அதைக் கேட்ட சிறுத்தொண்டர் `எனக்கு ஏதும் அரியது இல்லை, விரைவாய்க் கூறியருளுக' என்று உரைக்க, இறை வரும், `ஒரு குடிக்கு ஒரே மகனாக உள்ள அவனைத் தந்தை அரிய வும், தாய் பிடிக்கவும், அந்நிலையில் அவர்கள் இருவரும் உளம் உவந்து அமைத்த கறியே நாம் உண்பதாகும்' என உரைத்தருளினார்.

விளக்கவுரை

****

அதுவும் முனைவர் மொழிந்தருளக்
கேட்ட தொண்டர் அடியேனுக்
கிதுவும் அரிதன் றெம்பெருமான்
அமுது செய்யப் பெறிலென்று
கதுமென் விரைவில் அவரிசையப்
பெற்றுக் களிப்பாற் காதலொடு
மதுமென் கமல மலர்ப்பாதம்
பணிந்து மனையின் வந்தணைந்தார். **#3453**

அவ்வுரையையும் முதல்வர் உரைத்தருளக் கேட்ட சிறுத்தொண்டர், `எம் இறைவரான தாங்கள் திருவமுது செய்யும் பேற்றைப் பெற்றால் எனக்கு

இதுவும் அரியதன்று' எனக்கூறி, விரைவாக அவரிடம் விடை பெற்று, மிக்க மகிழ்ச்சியால் ஆசை யோடும் அவரது தேன்பொருந்திய மென்மையான தாமரையனைய திருவடிகளை வணங்கிச் சென்று, தம் வீட்டை வந்தடைந்தார்.

விளக்கவுரை

****

அன்பு மிக்க பெருங்கற்பின்
அணங்கு திருவெண் காட்டம்மை
முன்பு வந்து சிறுத்தொண்டர்
வரவு நோக்கி முன்னின்றே
இன்பம் பெருக மலர்ந்தமுகங்
கண்டு பாத மிசையிறைஞ்சிப்
பின்பு கணவர் முகம்நோக்கிப்
பெருகுந் தவத்தோர் செயல்வினவ. **#3454**

அன்புமிக்க பெருங்கற்பையுடைய பெண்ணான திருவெண்காட்டு நங்கையார், சிறுத்தொண்டரின் வரவை எதிர்நோக்கி வாயிலின் முன் நின்று இன்பம் மிக மலர்ந்திருந்த அவரது முகத்தைப் பார்த்து, அவருடைய திருவடிகளில் வணங்கிப் பின்பு, தம் கணவரான அவரை முகம் நோக்கி, அத்தவ முனிவரைப் பற்றி வினவ,

விளக்கவுரை

****

வள்ள லாரும் மனையாரை
நோக்கி வந்த மாதவர்தாம்
உள்ள மகிழ அமுதுசெய
இசைந்தார் குடிக்கோர் சிறுவனுமாய்க்
கொள்ளும் பிராயம் ஐந்துளனாய்
உறுப்பிற் குறைபா டின்றித்தாய்
பிள்ளை பிடிக்க வுவந்துபிதா
அரிந்து சமைக்கப் பெறினென்றார். **#3455**

வள்ளல் தன்மையுடைய சிறுத்தொண்டரும், மனைவியாரான திருவெண்காட்டு நங்கையைப் பார்த்து, `வந்திருக்கும் மாதவர், ஒரு குடும்பத்துக்கு ஒரு மகனாக, ஐந்து வயது உள்ளவனாக, உறுப்புகளில் குறைவு ஒன்றும் இல்லாதவனாக இருக்கும் மைந்தனைத் தாய் பிடிக்கத் தந்தை மகிழ்வுடன் அரிந்து அமுது சமைக்கப் பெற்றால், உள்ளம் மகிழும்படி உணவு உண்டருளலாம் என இசைந்துள்ளார்' என்று இயம்பினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அரிய கற்பின் மனைவியார்
அவரை நோக்கி யுரைசெய்வார்
பெரிய பயிர வத்தொண்டர்
அமுது செய்யப் பெறுமதற்கிங்
குரியவகையால் அமுதமைப்போம்
ஒருவ னாகி ஒருகுடிக்கு
வருமச் சிறுவன் தனைப்பெறுமாறு
எவ்வா றென்று வணங்குதலும். **#3456**

அரிய கற்பையுடைய மனைவியார் அங்ஙனம் உரைத்த அவரைப் பார்த்து, மேலும் உரைப்பாராய்ப் `பெருமை யுடைய வயிரவத் தொண்டர் உணவு உண்ணப் பெறுவதற்கு இங்கு உரிய வகையினால் அமுது அமைப்போமானால் ஒரு குடும்பத்துக்கு ஒரு மகனாகிவரும் அந்தச் சிறுவனை நாம் பெறுவது எங்ஙனம்?' எனக் கூறி வணங்கவும்,

விளக்கவுரை

****

மனைவி யார்தம் முகநோக்கி
மற்றித் திறத்து மைந்தர் தமை
நினைவு நிரம்ப நிதிகொடுத்தால்
தருவா ருளரே நேர்நின்று
தனையன் தன்னைத் தந்தைதாய்
அரிவா ரில்லைத் தாழாமே
எனையிங் குய்ய நீபயந்தான்
தன்னை அழைப்போம் யாம்என்றார். **#3457**

அதைக்கேட்ட சிறுத்தொண்டர் மனைவியாரின் முகத்தைப் பார்த்து, `இத்தகைய தன்மை பொருந்திய மைந்தர்தமை, அவ்வவர் எண்ணம் நிரம்பும் அளவு நிதியம் அளித்தால் கொடுப்பவர் களும் இருப்பர்; ஆனால் நேர் நின்று, தம் மைந்தனைத் தந்தையும் தாயுமாக அரிபவர் இவ்வுலகத்தில் இல்லை! எனவே, இனியும் காலம் தாழ்த்தாது இங்கு என்னை உய்யச் செய்வதற்கு நீ பெற்ற மகனை நாம் இதன் பொருட்டு அழைப்போம்!' என உரைத்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

என்று கணவர் கூறுதலும்
அதனுக் கிசைந்தெம் பிரான்தொண்டர்

இன்று தாழா தமுதுசெய்யப்
பெற்றிங் கவர்தம் மலர்ந்தமுகம்
நன்று காண்ப தெனநயந்து
நம்மைக் காக்க வருமணியைச்
சென்று பள்ளி யினிற்கொண்டு
வாரும் என்றார் திருவனையார். **#3458**

என்று கணவர் உரைக்கவும், அதற்கு அவ்வம் மையாரும் இசைந்து, `எம் இறைவரின் தொண்டர் இன்று காலம் தாழ்க்காது அமுது செய்யப்பெற்று அவர்தம் மகிழ்ச்சி பொலியும் திருமுகத்தை நாம் காண்பது இங்கு செய்யத்தக்கதாகும்!' என விரும்பி, கணவரைப் பார்த்து `நம்மைக் காக்க வரும் மணி போன்ற மகனைப் பள்ளியில் போய் அழைத்துக் கொண்டு வாருங்கள்' என்று உரைத்தார்.

விளக்கவுரை

`இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர் இன்முகங் காணும் அளவு' *(குறள்,224)*, `ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்' *(குறள்,228)* என்பனவாய குறட் பாக்கள் நினைவுகூர்தற்குரியன.

காதல் மனையார் தாங்கூறக்
கணவ னாருங் காதலனை
ஏதம் அகலப் பெற்றபே
றெல்லா மெய்தி னார்போல
நாதர் தமக்கங் கமுதாக்க
நறுமென் குதலை மொழிப்புதல்வன்
ஓத வணைந்த பள்ளியினில்
உடன்கொண் டெய்தக் கடிதகன்றார். **#3459**

அன்பையுடைய மனைவியார் மேற்கூறியபடி உரைக்க, கணவனாரான சிறுத்தொண்டரும் குற்றம் நீங்கப் பெற்ற எல்லாப்பேறும் அப்போதே பெற்று விட்டவரைப் போல் மகிழ்ந்து, இறைவருக்கு அங்குத் திருஅமுதாக ஆக்குதற்கு, நல்ல மென்மையான மழலை மொழி பயிலும் மைந்தர், கல்வி பயிலச் சேர்ந்துள்ள பள்ளியி னின்றும் உடன் கூட அழைத்து வருவதற்கு விரைவாகச் சென்றார்.

விளக்கவுரை

****

பள்ளி யினிற்சென் றெய்துதலும்
பாத சதங்கை மணியொலிப்பப்
பிள்ளை யோடி வந்தெதிரே
தழுவ எடுத்துப் பியலின்மேல்

கொள்ள அணைத்துக் கொண்டுமீண்டு
இல்லம் புகுதக் குலமாதர்
வள்ள லார்தம் முன்சென்று
மைந்தன் தன்னை யெதிர்வாங்கி. **#3460**

சிறுத்தொண்டர் பள்ளியை அடையவும், காலில் அணிந்த சதங்கை மணிகள் ஒலிக்கப் பிள்ளை அவர் எதிரே ஓடி வந்து தழுவிக் கொள்ள, அவனை எடுத்துத் தோள்மீது வைத்துப் பொருந் தும் படி அணைத்துக்கொண்டு, மீண்டு வந்து தம் இல்லத்துக்குள் புகுந்திடவும், நற்குலத்தில் தோன்றிய திருவெண்காட்டுநங்கையார், வள்ளலார் சிறுத்தொண்டரின் முன்பு போய், அம்மைந்தனை எதிரில் தாம் வாங்கிக் கொண்டு,

விளக்கவுரை

****

குஞ்சி திருத்தி முகந்துடைத்துக்
கொட்டை யரைநாண் துகள்நீக்கி
மஞ்சள் அழிந்த அதற்கிரங்கி
மையுங் கண்ணின் மருங்கொதுக்கிப்
பஞ்சி யஞ்சு மெல்லடியார்
பரிந்து திருமஞ் சனமாட்டி
எஞ்ச லில்லாக் கோலஞ்செய்
தெடுத்துக் கணவர் கைக்கொடுத்தார். **#3461**

அம்மைந்தனின் தலைமயிரைத் திருத்தி, முகத்தைத் துடைத்துக், காதணியிலும், அரைஞாணிலும் படிந்த தூசியைப் போக்கி, அணிந்த கலவைச் சாந்து அழிந்ததற்கு வருந்திக், கண்ணில் அணிந்த மையினையும் கண்ணில் படாமல் ஒழுங்காகப் பக்கத்தில் அமைய ஒதுக்கிப், பஞ்சும் அஞ்சத்தக்க மென்மையுடைய அடியையுடைய அம்மையார், அன்புடன் எடுத்து நீராட்டிக், குறையாத கோலத்தைச் செய்து, கணவரான சிறுத்தொண்டரின் கையிலே அம்மைந்தனை அளித்தார்.

விளக்கவுரை

கொட்டை - காதணி. `அரைநாண்' எனப்பின் வருதலின் கொட்டை என்பது பஞ்சைக் குறித்தலும் ஆம்.

அச்சம் எய்திக் கறியமுதாம்
என்னு மதனால் அரும்புதல்வன்
உச்சி மோவார் மார்பின்கண்
அணைத்தே முத்தந் தாமுண்ணார்

பொச்ச மில்லாத் திருத்தொண்டர்
புனிதர் தமக்குக் கறியமைக்க
மெச்சு மனத்தார் அடுக்களையின்
மேவார் வேறு கொண்டணைவார். **#3462**

திருத்தொண்டருக்கு ஆக்கும் அமுதுக்கு உதவும் பொருள் என்பதால் அச்சம் கொண்டு அரிய மைந்தனை உச்சிமோவா ராய், மார்பில் அணைத்து முத்தம் தாராராய்க், குற்றம் இல்லாத திருத் தொண்டராம் புனிதரான அடியவருக்குக் கறியை ஆக்குதற்கு விரும் பும் உள்ளத்தால், அடுக்களையில் மேவாராகி வேறு தனியிடத்திலே கொண்டு செல்பவராய்,

விளக்கவுரை

பொச்சம் - குற்றம். அடுக்களை - சமையல் செய்யும் இடம்; அது மாதவருக்கு அமுதாக்குதற்குரிய இடம் ஆதலின், அங்கு அச்செயலைச் செய்யலாகாது என வேறிடம் கொண்டனர். இந்நிகழ் வுகள் கண்களில் நீர் மல்கச் செய்யும்.

ஒன்று மனத்தார் இருவர்களும்
உலகர் அறியா ரெனமறைவில்
சென்று புக்குப் பிள்ளைதனைப்
பெற்ற தாயார் செழுங்கலங்கள்
நன்று கழுவிக் கொடுசெல்ல
நல்ல மகனை யெடுத்துலகை
வென்ற தாதை யார்தலையைப்
பிடிக்க விரைந்து மெய்த்தாயர். **#3463**

ஒன்றுபட்ட உள்ளம் கொண்டு அவ்விருவரும் உலகத்தவர் இதன் உண்மை இயல்பை அறியமாட்டார் என்று நினைத்து, மறைவான இடத்தை எய்திப் பிள்ளையைப் பெற்ற தாயார் திருவெண்காட்டு நங்கையார் செழுமையான கொள்கலங்களை நன்றாய்க் கழுவி எடுத்துக்கொண்டு செல்ல, நல்ல மைந்தனாரை எடுத்து, உலகியலை முற்றும் வென்ற தந்தையாரான சிறுத்தொண்டர் தலையைப் பிடித்துக் கொள்ள, மெய்த் தாயாரான அம்மையார் விரைந்து,

விளக்கவுரை

****

இனிய மழலைக் கிண்கிணிக்கால்
இரண்டும் மடியின் புடையிடுக்கிக்
கனிவாய் மைந்தன் கையிரண்டுங்
கையாற் பிடிக்கக் காதலனும்

நனிநீ டுவகை யுறுகின்றார்
என்று மகிழ்ந்து நகைசெய்யத்
தனிமா மகனைத் தாதையார்
கருவி கொண்டு தலையரிவார். #3464

குழந்தையின் இனிய ஒலிதரும் கிண்கிணி அணிந்த கால்கள் இரண்டையும் மடியின் இடையே பிறழாமல் அமிழ்த்தி வைத்துக்கொண்டு, கொவ்வைக் கனியைப் போன்ற வாயையுடைய மகனின் கைகள் இரண்டையும் தம் கையால் பிடிக்க, அவ்வன்பின் சிறுவனும் தம் பெற்றோர் தம்மை மிகவும் அணைத்து மகிழ்ச்சி கொள்கின்றார்கள் என்று மகிழ்ந்து நகைக்க, ஒப்பில்லாத பெருமை யுடைய மகனாரைத் தந்தையாரான சிறுத்தொண்டர் வாள் கொண்டு தலையை அரிவார்,

விளக்கவுரை

****

பொருவில் பெருமைப் புத்திரன்மெய்த்
தன்மை யளித்தான் எனப்பொலிந்து
மருவு மகிழ்ச்சி யெய்தஅவர்
மனைவி யாருங் கணவனார்
அருமை யுயிரை யெனக்களித்தான்
என்று மிகவும் அகம்மலர
இருவர் மனமும் பேருவகை
யெய்தி அரிய வினைசெய்தார். #3465

அத்தந்தையார், `ஒப்பில்லாத பெருமை மிகுந்த மகன், மெய்யாம் தன்மையை எனக்கு அளித்தான்' என்று பொருந்திய மகிழ்ச்சியடைய, அவருடைய மனைவியாரான அம்மையாரும், `கணவனாரின் அரிய உயிரை எனக்கு இம்மைந்தன் அளித்தான்' என்று மிகவும் மனம் மகிழ, இங்ஙனம் இருவருள்ளமும் பெரு மகிழ்ச்சி பொருந்த இவ்வரிய செயலைச் செய்தனர்.

விளக்கவுரை

மெய்யாம் தன்மை - மெய்ம்மை பெறுந்தன்மை : மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிதரும் அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தலாதலின் அன்னதாயிற்று. இச் செயற்கு ஊறுநேரின் கணவர் உயிர் வாழார். அவ்வூறுநேராமை காத்தவன் மைந்தன் ஆதலின், `கணவனார் அருமையுயிரை எனக் களித்தான்' என்றார் அம்மையார். இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

அறுத்த தலையின் இறைச்சிதிரு

வமுதுக் காகா தெனக்கழித்து
மறைத்து நீக்கச் சந்தனத்தார்
கையிற் கொடுத்து மற்றையுறுப்
பிறைச்சி யெல்லாங் கொத்தியறுத்
தெலும்பு மூளை திறந்திட்டுக்
கறிக்கு வேண்டும் பலகாயம்
மரைத்துக் கூட்டிக் கடிதமைப்பார். #3466

அறுத்து எடுத்த தலையின் இறைச்சி, உணவுக்கு ஆகாது எனக் கழித்து, அதை மறைத்து ஒதுக்கும் பொருட்டுச் சந்தனத் தாதியார் என்ற மங்கையின் கையிலே அளித்து, மற்ற உறுப்புகளின் இறைச்சி எல்லாவற்றையும் கொத்தியும், அறுத்தும், எலும்பினுள்ளே உள்ள மூளைப் பகுதியைத் திறந்து எடுத்து இட்டும், கறியாக்குதற்கு வேண்டும் பலவகையான காய வகைகளை அமைத்துக் கூட்டியும் விரைவில் அமுது சமைப்பாராய்,

விளக்கவுரை

கறிக்கு வேண்டும் பலகாயம் - கறிக்குக் கூட்டப்படும் பெருங்காயம், சோம்பு, இலவங்கப்பட்டை முதலியன என்பர்.

மட்டு விரிபூங் குழன்மடவார்
அடுப்பில் ஏற்றி மனமகிழ்ந்தே
அட்ட கறியின் பதம்அறிந்தங்
கிழிச்சி வேறோர் அருங்கலத்துப்
பட்ட நறையால் தாளித்துப்
பலவும் மற்றுங் கறிசமைத்துச்
சட்ட விரைந்து போனகமும்
சமைத்துக் கணவர் தமக்குரைத்தார். #3467

மணம் கமழும் மலர்களை அணிந்த கூந்தலை யுடைய அம்மையார், அவற்றை ஒரு கலத்தில் வைத்து அடுப்பிலே ஏற்றி, உள்ளம் மகிழ்ந்து சமைத்த கறியைப் பக்குவம் அறிந்து அடுப்பினின்றும் இறக்கி வைத்து, வேறு பல கறிகளையும் சமைத்து, நன்றாகச் சோற்றையும் விரைவில் சமைத்து, தாம் சமைத்து முடித்ததைத் தம் கணவனாருக்கு உரைத்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

உடைய நாதர் அமுதுசெய
வுரைத்த படியே அமைத்தஅதற்
கடையு மின்ப முன்னையிலும்
ஆர்வம் பெருகிக் களிகூர

விடையில் வருவார் தொண்டர்தாம்
விரைந்து சென்று மென்மலரின்
புடைவண் டறையும் ஆத்தியின்கீழ்
இருந்த புனிதர் முன்சென்றார். **#3468**

தம்மை அடிமையாக உடைய இறைவர் திருவமுது செய்வதற்கு, அவர் அருளியவாறே அமைத்தமைக்குப் பெரிதும் மகிழ்ச்சியுற்று, அம்மகிழ்ச்சி மீதூர்வால், விடைமீது வருபவரான சிவ பெருமானின் தொண்டரான சிறுத்தொண்டர் விரைந்து சென்று, மென்மையான மலர்களில் வண்டுகள் ஒலித்தற்கு இடமான திரு வாத்தியின் கீழ் வீற்றிருந்தருளிய தூயவரான வயிரவரிடம் சென்றார்.

விளக்கவுரை

****

அண்ணல் திருமுன் பணைந்திறைஞ்சி
அன்பர் மொழிவார் அடியேன்பால்
நண்ணி நீரிங் கமுதுசெய
வேண்டு மென்று நான்பரிவு
பண்ணி னேனாய்ப் பசித்தருளத்
தாழ்த்த தெனினும் பணிசமைத்தேன்
எண்ணம் வாய்ப்ப எழுந்தருள
வேண்டும் என்றுஅங்கு எடுத்துரைப்பார். **#3469**

இறைவரின் திருமுன்பு சென்று வணங்கி, அன்ப ரான சிறுத்தொண்டர் சொல்லத் தொடங்கியவர், `அடியேனிடத்து எழுந்தருளித் தாங்கள் அமுது செய்தருள வேண்டும்; அடியவனின் அன்பிற்கு இணங்கிப் பசித்திருந்து, இதுவரைக் காலம் தாழ்க்க நேர்ந்தது என்றாலும், தங்கள் ஆணையின்படி சமைத்துள்ளேன். அடியவனின் விருப்பப்படி எழுந்தருள வேண்டும்' என்று சொல்லி, மேலும் கூறுபவராய்,

விளக்கவுரை

****

இறையுந் தாழா தெழுந்தருளி
அமுது செய்யும் என்றிறைஞ்சக்
கறையுங் கண்டத் தினின்மறைத்துக்
கண்ணும் நுதலிற் காட்டாதார்
நிறையும் பெருமைச் சிறுத்தொண்டீர்
போதும் என்ன நிதியிரண்டும்
குறைவ னொருவன் பெற்றுவந்தாற்
போலக் கொண்டு மனைபுகுந்தார். **#3470**

`இனிச் சிறிதும் காலம் தாழ்க்காது எழுந்தருளி உணவு உண்டருளல் வேண்டும்!' எனக் கூறி வணங்கக் கழுத்தில் உள்ள நஞ்சினை மறைத்தும், நெற்றியில் உள்ள கண்ணை மறைத்தும் வந்தவரான இறைவர், `நிறைந்த பெருமையுடைய சிறுத்தொண்டரே! செல்வோம்!' என்று அருள, வறியவனான ஒருவன் சங்கநிதி, பதுமநிதி என்ற இரண்டையும் பெற்று மகிழ்ந்தாற்போல, உடன் அழைத்துக்கொண்டு தம் இல்லத்துள் புகுந்தார்.

விளக்கவுரை

****

வந்து புகுந்து திருமனையின்
மனைவி யார்தாம் மாதவரை
முந்த எதிர்சென் றடிவணங்கி
முழுதும் அழகு செய்தமனைச்
சந்த மலர்மா லைகள்முத்தின்
தாம நாற்றித் தவிசடுத்த
கந்த மலரா சனங்காட்டிக்
கமழ்நீர்க் கரகம் எடுத்தேந்த. **#3471**

அங்ஙனம் இல்லத்துள் புகுந்தருளிய அளவில் மனைவியார் அம்மாதவத்தவரின் முன்வந்து எதிர்கொண்டு அழைத் துச் சென்று, திருவடிகளில் விழுந்து வணங்கி, மணம் கமழும் மலர் மாலைகளும், முத்தால் இயன்ற மாலைகளும் தொங்கவிடப்பெற்ற தால் முற்றும் அழகுபடுத்திய அந்த இல்லத்தில், மணமுடைய மலர் மாலைகள் பரப்பிய இருக்கையில் அமர்ந்தருளுமாறு வேண்டி, மணமுடைய நீர் நிறைந்த கரகத்தை எடுத்து ஏந்தி நின்று நீரை வார்க்க,

விளக்கவுரை

****

தூய நீரால் சிறுத்தொண்டர்
சோதி யார்தங் கழல்விளக்கி
ஆய புனிதப் புனல்தங்கள்
தலைமேல் ஆரத் தெளித்தின்பம்
மேய இல்லம் எம்மருங்கும்
வீசி விரைமென் மலர்சாந்தம்
ஏயுந் தூப தீபங்கள்
முதற்பூ சனைசெய் திறைஞ்சுவார். **#3472**

தூய்மையான அந்நீரால், சிறுத்தொண்டர், இறைவ ரின் திருவடிகளை விளக்கி, அங்ஙனம் விளக்குவதால் பெற்ற நீரைத் தலைமீது நிறையத்

தெளித்துக்கொண்டு, இன்பம் பொருந்திய மனை யின் எப்பக்கத்தினும் வீசி இறைத்து, மணமுடைய மெல்லிய மலர்கள் கொண்டு போற்றியுரை செய்து, சந்தனக் கலவை சாத்திப், பொருந்திய வாறு நறுமணமும் ஒளிவிளக்கும் காட்டி, அடியவருக்கு ஆற்றத்தக்க வழிபாட்டு முறைகளை எல்லாம் செய்து வணங்குவாராய்,

விளக்கவுரை

****

பனிவெண் திங்கள் சடைவிரித்த
பயில்பூங் குஞ்சிப் பயிரவராம்
புனிதர் தம்மைப் போனகமும்
கறியும் படைக்கும் படிபொற்பின்
வனிதை யாருங் கணவரும்முன்
வணங்கிக் கேட்ப மற்றவர்தாம்
இனிய அன்ன முடன்கறிகள்
எல்லாம் ஒக்கப் படைக்கவென. **#3473**

குளிர்ந்த பிறைச் சந்திரனைச் சூடிய சடையை விரித்த, மலர்களைச் சூடிய, தலைமயிரை உடைய வயிரவராம் தூய பெருமானைச் சோற்றையும் கறிவகைகளையும் படைக்கும் வகையை அழகிய மாதராரும் கணவனாரும் வணங்கி, `இன்னவாறு என்று அருள் செய்ய வேண்டும்' என்று வேண்ட, அவர் தாமும் `இனிய சோறு உடன் கறி வகைகளையும் ஒருசேரப் படைப்பீராக!' என்று சொல்ல,

விளக்கவுரை

****

பரிசு விளங்கப் பரிகலமும்
திருத்திப் பாவா டையில்ஏற்றித்
தெரியும் வண்ணஞ் செஞ்சாலிச்
செழுபோ னகமுங் கறியமுதும்
வரிசை யினின்முன் படைத்தெடுத்து
மன்னும் பரிக லக்கான்மேல்
விரிவெண் டுகிலின் மிசைவைக்க
விமலர் பார்த்தங் கருள்செய்வார். **#3474**

பண்பு விளங்குமாறு உண்கலத்தை விளக்கி, அதனைப் பாவாடையின் மேல் வைத்து, அமுது வகைகள் வெவ் வேறாக நன்கு தெரியும்படி செந்நெல்லரிசியான செழுஞ் சோற்றையும் கறிவகைகளையும் நிரல்பட முன்னே வைத்து, அந்தப் பரிகலத்தை எடுத்து நிலையான முக்காலியின்மேல் விரித்த வெண்மையான ஆடைமீது வைக்க, குற்றம்

அற்றவரான இறைவர் பார்த்து, அப்போது கூறியருளுவாராய்,

விளக்கவுரை

****

சொன்ன முறையிற் படுத்தபசுத்
தொடர்ந்த வுறுப்பெல் லாங்கொண்டு
மன்னு சுவையிற் கறியாக்கி
மாண அமைத்தீ ரேஎன்ன
அன்ன மனையார் தலையிறைச்சி
யமுதுக் காகா தெனக்கழித்தோம்
என்ன வதுவுங் கூடநாம்
உண்ப தென்றா ரிடர்தீர்ப்பார். **#3475**

`யாம் சொன்ன முறையில், பசுவினது தொடர்ந்த உறுப்புக்கள் எல்லாவற்றையும் கொண்டு சுவைபெறச் சிறப்பாக அமைத்தீர்களோ?' என்று வினவ, அன்னம் போன்ற அம்மையார், `தலை இறைச்சி திருவமுதுக்கு ஆகாது எனக் கருதி அதனை நீக்கி னோம்' எனக் கூற, அடியார்களின் இடர்களை எல்லாம் முற்ற நீக்கு பவராய இறைவர் `அதனையும் நாம் உண்பது ஆம்' என்றருளினார்.

விளக்கவுரை

இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

சிந்தை கலங்கிச் சிறுத்தொண்டர்
மனையா ரோடுந் திகைத்தயரச்
சந்த னத்தா ரெனுந்தாதி
யார்தாம் அந்தத் தலையிறைச்சி
வந்த தொண்டர் அமுதுசெயும்
பொழுது நினைக்க வருமென்றே
முந்த வமைத்தேன் கறியமுதென்று
எடுத்துக் கொடுக்க முகமலர்ந்தார். **#3476**

உள்ளம் கலங்கிய சிறுத்தொண்டர், மனைவி யாருடன் சேர்ந்து மனம் தடுமாறச் சந்தனத் தாதியார், `அந்தத் தலையின் இறைச்சியானது அருள் செய்ய வந்த திருத்தொண்டர் உணவு உண்ணும் பொழுது நினைக்க நேரிடும் என்று எண்ணியே முன் உணர்வால் முன்னமேயே அதனைக் கறியமுதாக அமைத்துள் ளேன்!' எனக் கூறி எடுத்துக் கொடுக்க, அவர்கள் முகம் மலர்ந்தனர்.

விளக்கவுரை

****

வாங்கி மகிழ்ந்து படைத்ததற்பின்

வணங்குஞ் சிறுத்தொண் டரைநோக்கி
ஈங்கு நமக்குத் தனியுண்ண
ஒண்ணா தீசன் அடியாரிப்
பாங்கு நின்றார் தமைக்கொணர்வீர்
என்று பரமர் பணித்தருள
ஏங்கிக் கெட்டேன் அமுதுசெய
இடையூ றிதுவோ வெனநினைவார். **#3477**

சந்தனத் தாதியார் தந்த தலை இறைச்சியைப் பெற்று, மகிழ்ந்து, படைத்தபின்பு, வணங்கி நின்ற தொண்டரைப் பார்த்து, மாதவர்தாமும், `இப்போது தனித்து உண்ண எமக்கு இய லாது, சிவனடியார் எவரேனும் இப்பக்கத்தில் இருக்கக் கூடியவரை அழைத்து வருவீராக!' என்று அருளச், சிறுத்தொண்டர் மனம் வருந்திக், `கெட்டேன். இவர் உணவு உண்பதற்கு இதுவோ இடையூறாய் வருவது?' என நினைவாராகி,

விளக்கவுரை

****

அகத்தின் புறத்துப் போயருளால்
எங்குங் காணார் அழிந்தணைந்து
முகத்தில் வாட்டம் மிகப்பெருகப்
பணிந்து முதல்வர்க் குரைசெய்வார்
இகத்தும் பரத்தும் இனியாரைக்
காணேன் யானுந் திருநீறு
சகத்தி லிடுவார் தமைக்கண்டே
யிடுவே னென்று தாழ்ந்திறைஞ்ச. **#3478**

இல்லத்திற்கு வெளியே சென்று தேடியும் இறைவன் திருவருட் செயலால் எங்கும் அடியவரைக் காணாராய், முகத்தில் மிகவும் வாட்டம் கொண்டு திரும்பி வந்து, முதல்வருக்குச் சொல்லுப வராய், `இகத்தினும் பரத்தினும் இனியவரான சிவனடியார்களைத் தேடியும் காணேன், அடியேன் அறியேனாயினும் உலகத்தில் திருநீறு இடுவார்களைப் பார்த்து நானும் திருநீற்றை இடுவேன்!' எனத் தாழ்ந்து வணங்க,

விளக்கவுரை

சிறுத்தொண்டர், தம்மை யடியார் என எண்ணாது, திருநீறிடுவார் தமைக் கண்டு யானும் இடுவேன் என்றது அவர்தம் பணிவுடைமையைக் காட்டுகிறது. சிவனடியார்கள் எவரையும் காணாமையின், தாமே அந்நிலையிலிருந்து உண்ணலாமோ என அவர்தம் குறிப்புணரவும் நின்றது.

உம்மைப் போல நீறிட்டார்

உளரோ வுண்பீர் நீரென்று
செம்மைக் கற்பில் திருவெண்காட்
டம்மை தம்மைக் கலந்திருத்தி
வெம்மை இறைச்சி சோறிதனின்
மீட்டுப் படையு மெனப்படைத்தார்
தம்மை யூட்ட வேண்டியவர்
உண்ணப் புகலுந் தடுத்தருளி. **#3479**

அதைக் கேட்ட அம்மாதவர், `உம்மைப் போல் திருநீற்றைச் சிறப்பாய் இட்ட அடியவரும் உளரோ? நீவிர், எம்முடன் இருந்து உண்பீராக!' என்று சொல்லி, செம்மை பொருந்திய கற்பை யுடைய திருவெண்காட்டு நங்கையை நோக்கிப் `பரிகலம் திருத்தி விரும்பத்தக்க இறைச்சியும் சோறும் ஆகிய இவற்றின் மற்றப் பகுதியையும் இவருக்குப் படைப்பீராக' என்று இறைவர் ஆணையிட, அவரும் அவ்வாறே படைத்தனர். இறைவரை உண்பிக்க வேண்டி அவர் விரைந்து உண்ணத் தொடங்க, அப்போது தடுத்தருளி,

விளக்கவுரை

****

ஆறு திங்கள் ஒழித்துண்போம்
உண்ணு மளவுந் தரியாது
சோறு நாளு முண்பீர்முன்
னுண்ப தென்நம் முடன்றுய்ப்ப
மாறின் மகவு பெற்றீரேல்
மைந்தன் தன்னை யழையுமென
ஈறு முதலு மில்லா தார்க்
கிப்போ துதவான் அவனென்றார். **#3480**

`ஆறு திங்கள் கழிய நாம் ஒருமுறை உண்போம், நீவிர் ஒவ்வொரு நாளும் உண்பீர்! அங்ஙனமாக நாம் உண்பதற்கு முன் நீவிர் உண்ணப் புகுந்தது ஏன்? நம்முடன் இருந்து உண்பதற்கு ஒப்பில்லாத மகனைப் பெற்றீரானால் அவனையும் இப்போது அழையும்!' என்று அம்மாதவர் கூற, அங்ஙனம் கூறிய முதலும் இறுதியும் இல்லாத இறைவருக்குச் சிறுத்தொண்டர், `அவன் இப்போது இங்கு உதவான்' என்று விடையளித்தனர்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

நாம்இங் குண்ப தவன்வந்தால்
நாடி யழையு மெனநம்பர்

தாமங் கருளிச் செயத்தரியார்
தலைவ ரமுது செய்தருள
யாமிங் கென்செய் தாலாகும்
என்பார் விரைவுற் றெழுந்தருளால்
பூமென் குழலார் தம்மோடும்
புறம்போ யழைக்கப் புகும்பொழுது. **#3481**

`அவன் இங்கு வரின் நாம் உண்ண முடியும். ஆதலால் அவன் வருகையை நாடி அழையும்!' என்று இறைவர் அருள, சிறுத்தொண்டர் அதைத் தவிர்க்க இயலாதவராகித் தலைவ ரான இவ்வடியார் உணவு உண்டருள இங்கு நாம் என்ன செய்தால் முடியும்? என்று ஏங்கியவாறு, விரைவாய் எழுந்து, இறைவரின் அருளா ணையின் வழியில் நின்று, மலர்சூடிய கூந்தலையுடைய அம்மையா ருடனே, வீட்டின் புறத்தே சென்று, அழைக்கத் தொடங்கும் பொழுது,

விளக்கவுரை

****

வையம் நிகழுஞ் சிறுத்தொண்டர்
மைந்தா வருவா யெனவழைத்தார்
தைய லாருந் தலைவர்பணி
தலைநிற் பாராய்த் தாமழைப்பார்
செய்ய மணியே சீராளா
வாராய் சிவனா ரடியார்யாம்
உய்யும் வகையால் உடன்உண்ண
அழைக்கின் றார்என்று ஓலமிட. **#3482**

உலகத்தில் என்றும் நிலைபெறும் புகழையுடைய சிறுத்தொண்டர், `மகனே! வருவாய்' எனக் கூவி அழைத்தார். தலைவர்தம் ஆணைவழி நிற்கும் அம்மையாரும், தாமும் அழைப் பாராய், `சிவந்த மணியே! சீராளா! சிவனடியார் நாம் உய்யும்படி உடன் உண்பதற்கு அழைக்கின்றார். வா!' என்று அழைத்து ஓலமிட,

விளக்கவுரை

****

பரம ரருளாற் பள்ளியினின்
றோடி வருவான் போல்வந்த
தரமில் வனப்பிற் றனிப்புதல்வன்
தன்னை யெடுத்துத் தழுவித்தம்
கரமுன் னணைத்துக் கணவனார்
கையிற் கொடுப்பக் களிகூர்ந்தார்

புரமூன் றெரித்தார் திருத்தொண்டர்
உண்ணப் பெற்றோ மெனும்பொலிவால். #3483
இறைவர் அருளால், அழைக்கும் ஒலிகேட்டுப் பள்ளியினின்றும் ஓடி வருபவனைப் போல எதிரே ஓடிவந்த ஒப்பில் லாத அழகுடன் விளங்கிய, தன் மகனை அம்மையார் எடுத்துத் தழுவிக் கொண்டு, கையால் அணைத்துக் கணவனின் கையில் தர, `முப்புரங்க ளையும் எரித்த இறைவனின் தொண்டர் உணவு உண்ணப்பெறும் பேற்றைப் பெற்றோம்' என்று மகிழ்ச்சியுடன் விளங்கினார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

வந்த மகனைக் கடிதிற்கொண்
டமுது செய்விப் பான்வந்தார்
முந்த வேஅப் பயிரவராம்
முதல்வர் அங்கண் மறைந்தருளச்
சிந்தை கலங்கிக் காணாது
திகைத்தார் வீழ்ந்தார் தெருமந்தார்
வெந்த இறைச்சிக் கறியமுதுங்
கலத்திற் காணார் வெருவுற்றார். #3484

அங்ஙனம் வந்த மகனை அழைத்துக் கொண்டு இறைவரை உண்ணச் செய்யும்பொருட்டு விரைந்து வந்தவர், அதற்கு முன்னமேயே வயிரவராக வந்த முதல்வர் அவ்விடத்தினின்றும் மறைந்தருள, அவரைக் காணாமல் உள்ளம் கலங்கித் திகைப்படைந் தார்; விழுந்தார்; எழுந்தார், அச்சமுற்றார். வெந்த இறைச்சிக் கறியை யும் பரிகலத்தில் காணாதவராய்த் திடுக்கிட்டார்.

விளக்கவுரை

****

செய்ய மேனிக் கருங்குஞ்சிச்
செழுங்கஞ் சுகத்துப் பயிரவர்யாம்
உய்ய அமுது செய்யாதே
ஒளித்த தெங்கே யெனத்தேடி
மையல் கொண்டு புறத்தணைய
மறைந்த அவர்தாம் மலைபயந்த
தைய லோடுஞ் சரவணத்துத்
தனய ரோடுந் தாமணைவார். #3485

`சிவந்த மேனியும் கரியமுடியும் செழிய போர்வை யும் கொண்ட வயிரவர், நாம் உய்யும்படி உணவு உண்ணாமல் எங்கு ஒளிந்தார்?'

என்று தேடியவராகி, மயங்கி வெளியே வர, மறைந் தருளிய அவ்வயிரவர் தாமே, மலைமகளாரான உமையம்மையா ருடனும் சரவணப் பொய்கையில் வளர்ந்த திருமகனாரான முருகப் பெருமானொடும் அணைவாராகி,

விளக்கவுரை

****

தனிவெள் விடைமேல் நெடுவிசும்பில்
தலைவர் பூத கணநாதர்
முனிவ ரமரர் விஞ்சையர்கள்
முதலா யுள்ளோர் போற்றிசைப்ப
இனிய கறியுந் திருவமுதும்
அமைத்தார் காண எழுந்தருளிப்
பனிவெண் திங்கள் முடிதுளங்கப்
பரந்த கருணை நோக்களித்தார். **#3486**

சிவபூதக் கணத்தலைவரும், முனிவரும், தேவரும், வித்தியாதரரும் முதலாக உள்ளவர்கள் போற்றி செய்ய, இனிய கறியையும் உணவையும் அமைத்த அவர்கள் காணும்படி, நீண்ட விண்வெளியில் ஒப்பில்லாத வெண்மையான விடையின்மீது வெளிப் பட்டு எழுந்தருளிக் குளிர்ந்த வெண்மையான சந்திரனைச் சூடிய திருமுடி அசைய, பரந்த அருள் நோக்கத்தை அருளினார்.

விளக்கவுரை

தாய் தந்தையரொடு தனயரும் சேர, இவ்வரிய செயல் நிகழ்ந்திருத்தலின், இறைவரும் தையலோடும் சரவணத்துத் தனயரோ டும் காட்சியருளினார். யார் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் என எண்ணுமாறு நிகழ்ந்த இவ்வரிய அருளிப்பாடும், இவ்வருந்தொண்டர் குடும்பத்திற்கே வாய்த்தது. குடி முழுதாண்டு வாழ்வற வாழ்வித்த கருணைப் பெருக்கு ஈதாம்.

அன்பின் வென்ற தொண்டரவர்க்கு
அமைந்த மனைவி யார்மைந்தர்
முன்பு தோன்றும் பெருவாழ்வை
முழுதுங் கண்டு பரவசமாய்
என்பு மனமுங் கரைந்துருக
விழுந்தார் எழுந்தார் ஏத்தினார்
பின்பு பரமர் தகுதியினால்
பெரியோ ரவருக் கருள்புரிவார். **#3487**

அன்பின் உறைப்பினால் உலகியல் வழிப்பட்ட உணர்வை வென்ற

சிறுத்தொண்டரும், அவர் தம் நெஞ்சொத்த மனைவியாரும், மைந்தரும் தம்முன்பு வெளிப்பட்டுத் தோன்றிய பெருவாழ்வான சிவபெருமானின் காட்சியை முற்றும் கண்டு, தம் வயமிழந்து, அக்காட்சியின் அருள்வயமாய் நின்று, எலும்பும் உள்ளமும் கரைந்து உருக விழுந்தனர்; எழுந்தனர்; போற்றினர். இறைவர் அப்பெருமக்களுக்கேற்ற தகுதிப்பாட்டால் அருள் செய்வாராய்,

விளக்கவுரை

****

கொன்றை வேணி யார் தாமும்
பாகங் கொண்ட குலக்கொடியும்
வென்றி நெடுவேல் மைந்தரும்தம்
விரைப்பூங் கமலச் சேவடிக்கீழ்
நின்ற தொண்டர் மனைவியார்
நீடு மகனார் தாதியார்
என்றும் பிரியா தேயிறைஞ்சி
யிருக்க வுடன்கொண் டேகினார். **#3488**

கொன்றை மலரைச் சூடிய சடையை உடைய சிவபெருமானும், அவர்தம் இடமருங்கை இடமாகக் கொண்ட உமை யம்மையாரும், வெற்றி பொருந்திய நீண்ட வேல் ஏந்திய மைந்தரான முருகப் பெருமானும், தம் மணமுடைய தாமரை மலர் போன்ற சேவடி களின் கீழ் விழுந்து எழுந்து போற்றி நிற்கும் சிறுத்தொண்டரையும் திருவெண்காட்டு நங்கையாரையும் மகனாரான சீராள தேவரையும் சந்தனத் தாதியாரையும் என்றும் தம்மைப் பிரியாமல் வணங்கி மகிழுமாறு, தம் சிவலோகத்துள் தம்முடன் அழைத்துச் சென்றனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஆறு முடிமேல் அணிந்தவருக்
அடியா ரென்று கறியமுதா
ஊறி லாத தனிப்புதல்வன்
தன்னை யரிந்தங் கமுதூட்டப்
பேறு பெற்றார் சேவடிகள்
தலைமேற் கொண்டு பிறவுயிர்கள்
வேறு கழறிற் றறிவார் தம்
பெருமை தொழுது விளம்புவாம். **#3489**

கங்கையாற்றைச் சடையில் ஏற்ற இறைவருக்கு அடியவர் என்று கறியமுதாகத் தம் களங்கமற்ற சிறந்த மகனாரை அரிந்து, அங்கு அமுது

ஊட்ட வரும் அப்பெரும் பேற்றைப் பெற்றவ ரான சிறுத்தொண்ட நாயனார்தம் திருவடிகளை எம் தலையின் மீது தாங்கிக் கொண்டு வணங்கி, அத்துணையால், மற்ற உயிர்கள் எல்லாம் வெவ்வேறாகப் பேசும் மொழிகளை எல்லாம் அறியும் தன்மையி னால் `கழறிற்றறிவார்' என்ற பெயரைப் பெற்ற நாயனாரின் பெருமையைக் கூறுவாம்.

சிறுத்தொண்டநாயனார் புராணம் முற்றிற்று.

விளக்கவுரை

****

கழறிற்றறிவார் நாயனார் புராணம்

மாவீற் றிருந்த பெருஞ்சிறப்பின்
மன்னுந் தொன்மை மலைநாட்டுப்
பாவீற் றிருந்த பல்புகழில்
பயிலு மியல்பிற் பழம்பதிதான்
சேவீற் றிருந்தார் திருவஞ்சைக்
களமும் நிலவிச் சேரர்குலக்
கோவீற் றிருந்து முறைபுரியுங்
குலக்கோ மூதூர் கொடுங்கோளூர். **#3490**

திருமகள் வீற்றிருக்கும் பெருஞ்சிறப்பும், நிலையான பழமையுமுடைய மலைநாட்டில், பழந்தமிழ்ப் பாட்டுக்களில் விளங் கிய பல வகையான புகழையுடைய சேர மரபினரும், குடிகளும், தொன்று தொட்டுப் பயின்று வருகின்ற தன்மையுடைய பழைய பதியா வது, விடையூர்தியில் எழுந்தருளும் சிவபெருமானின் திருவஞ்சைக் களத்தில், நிலவப் பெற்றுச், சேர மரபின் மன்னர்கள் அரசு கட்டில் ஏறி, வழி வழி ஆட்சி செய்து வரும் பெரிய தலைநகரமானது கொடுங் கோளூர் ஆகும்.

விளக்கவுரை

*சீலமும் கொடையும் மிக்கிருத்தலின், `மாவீற்றிருந்த ...... மலைநாடு'* என்றார். `அகனமர்ந்து செய்யாள் உறையும்' *(குறள், 84)* என்னும் திருவாக்கினையும் நினைவு கூர்க. `உரையும் பாட்டும் உடையோர் சிலரே' *(புறம். 27)* என்புழிப்போல, உரையும் பாட்டும் உடைய நாடுகளும் சிலவே. அவற்றுள் சேரநாடு ஒன்றாகும். பதிற்றுப் பத்தும், புறநானூறும், சிலம்பும் காண்க. கொடுங்கோளூர் - சேர மன் னர்களின் தலைநகரம். இதனொடு அஞ்சைக்களத்தையும் சேர்த்துக் கொடுங்கோளூர் அஞ்சைக்களம் என்று அழைப்பர். இது மகோதை என்றும் அழைக்கப்பெறும். தேவார வைப்புப் பதியாகும். சிவன் கோயிலும், கண்ணகி கோயிலும், பகவதி கோயிலும் உள்ளன.

காலை யெழும்பல் கலையின்ஒலி
களிற்றுக் கன்று வடிக்கும்ஒலி
சோலை யெழுமென் சுரும்பின்ஒலி
துரகச் செருக்காற் சுலவும்ஒலி
பாலை விபஞ்சி பயிலும்ஒலி
பாட லாடல் முழவின்ஒலி
வேலை ஒலியை விழுங்கியெழ
விளங்கி யோங்கும் வியப்பினதால். **#3491**

அந்நகரமானது, காலையில் ஓதப்படும் மறை முதலான கலைகளின்

ஒலியும், யானைக் கன்றுகளின் பிளிற்றொலி யும்,
பூஞ்சோலைகளினின்று எழும் வண்டுகள் பண்பாடும் ஒலியும்,
குதிரைகளின் செருக்கினால் மிகும் ஒலியும், பாலை, விபஞ்சி, யாழ்
முதலியவற்றான் வரும் ஒலியும், பாடல் ஆடல்களுக்கு ஏற்ப இசைக்
கப்படும் முழவு ஒலியும் ஆகிய ஒலிகள், அங்குக் கடலில் எழும்
ஒலியையும் கீழ்ப்படுத்தி மேல் எழுந்து விளங்கும் வியப்பினது.

விளக்கவுரை

காலை எழும் பல கலையினொலி என்றார், அக்காலமே அவ்வக் கலைகளையும் பயிலுதற்குரிய காலமாதலின். துரகம் - குதிரை. சுலவும் ஒலி - சுழலும் ஒலி. பாலை, விபஞ்சி என்பன இசைக் கருவிகள்.

மிக்க செல்வ மனைகள்தொறும்
விழையும் இன்பம் விளங்குவன
பக்கம் நெருங்கு சாலைதொறும்
பயில்சட் டறங்கள் பல்குவன
தக்க அணிகொள் மடங்கள்தொறும்
சைவ மேன்மை சாற்றுவன
தொக்க வளங்கொள் இடங்கள்தொறும்
அடங்க நிதியந் துவன்றுவன. **#3492**

அந்நகரத்தில், செல்வம் மிக்க வீடுகள் தோறும் விரும்பும் இல்லற
இன்பங்கள் பொருந்தி விளங்குவன, அவற்றின் அருகில் விளங்கும்
அறச்சாலைகள் தோறும் செய்யப்படும் நல்ல அறங்கள் பெருகுவன,
தக்க அணிகளால் அழகூட்டிய திருமடங்கள் தோறும் சைவ சமயத்தின்
மேன்மைப் பொருள்கள் எடுத்துக் கூறப்படுவன, தொகுதியாக சேர்ந்த
வளங்களைத் தம்மிடம் கொண்ட இடங்கள் தோறும் நிறைந்த
செல்வங்கள் விளங்குவன.

விளக்கவுரை

அறத்தால் பொருளாக்கி, அப்பொருளால் இன்பம் பெறுதல் இல்லற மாண்பதாதலின் `விழையும் இன்பம் விளங்குவன' என்றார். எல்லா உயிர்களும் இன்பம் விழைதல் இயல்பாதலின் `விழையும் இன்பம்' என்றார். சாலை - அறச்சாலைகள். சைவ மெய்ம்மை - இறை, உயிர், தளை பற்றிய சிந்தனைகளும், தளையை நீக்கி உயிர் இறையை அடையத் தகும் செயற்பாடுகள் பற்றிய சிந் தனைகளும் ஆம். `ஆய்வார் பதிபசுபாசங்களின் உண்மை ..... கமலை யில் ஞானப் பிரகாசன் மெய்த் தொண்டர்களே' *(சிவபோகசாரம்)* எனவரும் குருஞானசம்பந்தர் திருவாக்கும் காண்க.

வேத நெறியின் முறைபிறழா

மிக்க ஒழுக்கந் தலைநின்ற
சாதி நான்கும் நிலைதழைக்கும்
தன்மைத் தாகித் தடமதில்சூழ்
சூத வகுள சரளநிரை
துதையுஞ் சோலை வளநகர்தான்
கோதை யரசர் மகோதையெனக்
குலவு பெயரும் உடைத்துலகில். **#3493**

மறைகளில் விதித்துச் சொல்லப்பட்ட நெறிமுறை களினின்றும் வழுவாத மிக்க நல்லொழுக்கத்தில் சிறந்த நால்வகை மரபினரும், தத்தம் நிலைகளில் தழைத்துச் செழித்து விளங்கும் தன்மையுடையதாய், பெரிய மதில் சூழ்ந்ததாய், மாமரம், மகிழமரம், சரளமரம் முதலியவற்றின் வரிசை நெருங்கிய சோலைகள் சூழ்ந்த வளமையுடைதாய் விளங்கும் அந்நகரானது, உலகத்தில் `கோதை' என்று அழைக்கப்படுகின்ற, சேர மன்னர் ஆளும் தலைநகரான `மகோதை' என்ற பெயருடையது.

விளக்கவுரை

நாட்டின் நலம் கருதி, தாம் தாமும் செயத்தகும் கடமை களை வகுத்துக் கொண்ட நிலையில் வந்தனவே நால்வகை மரபுக ளும். அவைபற்றித் தொல்காப்பியம், திருக்குறள் முதலிய நூல்கள் பலவும் சொல்லுகின்றன. இவற்றால் உயர்வு தாழ்வு கருதி உருக் குலைந்தமை நம்மனோரின் போகூழே. சரளம் - நீண்ட இலைகளை யுடையது; தேவதாரு வகையுட்பட்டது. கோதை அரசர் - சேரமரபினர்.

முருகு விரியும் மலர்ச்சோலை
மூதூ ரதன்கண் முறைமரபின்
அருகி யழியுங் கலிநீக்கி
அறங்கொள் சைவத் திறந்தழைப்பத்
திருகு சினவெங் களியானைச்
சேரர் குலமும் உலகுஞ்செய்
பெருகு தவத்தால் அரனருளால்
பிறந்தார் பெருமாக் கோதையார். **#3494**

மணம் கமழும் மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த பழமையான அந்நகரத்தில், அருகி அழிவு செய்யும் கலியை மரபு வழி வரும் ஒழுக்கத்தினால் நீக்கி, அறத்தை நாட்டும் சைவத் திறம் தழைத்து ஓங்குமாறு, மாறுபட்ட சினம் மிக்க யானைப் படையை யுடைய சேரர் குலமும் உலகமும் செய்த பெரிய தவத்தால், சிவனரு ளால் பெருமாக்கோதையார் என்பவர் தோன்றியருளினார்.

விளக்கவுரை

அருகுதல் - குறைதல். அழிதல் - இல்லையாதல்.

திருமா நகரந் திருவவதா
ரஞ்செய் விழவின் சிறப்பினால்
வருமா களிகூர் நெய்யாடல்
எடுப்ப வான மலர்மாரி
தருமா விசும்பின் மிகநெருங்கத்
தழங்கும் மொலிமங் கலந்தழைப்பப்
பெருமா நிலத்தில் எவ்வுயிரும்
பெருகு மகிழ்ச்சி பிறங்கினவால். **#3495**

செல்வம் நிறைந்த அப்பெரிய நகரத்தில் உள்ளவர் கள், பெருமாக் கோதையார் தோன்றலால் கொள்ளும் விழாவின் சிறப்பினால் வரும் பெருமகிழ்ச்சி மிக்கு, நெய்யாடல் விழாவைக் கொண்டாட, கற்பக மலர்கள் மழை எனப் பொழியும் வானத்தில், மிக நெருங்க ஒலிக்கும் மங்கல ஒலிகள் ஓங்கி முழங்கப் பெரிய இவ்வுகில் உள்ள உயிர்கள் எல்லாம் மேன்மேலும் பெருகும் மகிழ்ச்சி மீதூர்ந்து விளங்கின.

விளக்கவுரை

****

மண்மேற் சைவ நெறிவாழ
வளர்ந்து முன்னை வழியன்பால்
கண்மேல் விளங்கு நெற்றியினார்
கழலே பேணுங் கருத்தினராய்
உண்மே வியஅன் பினராகி
யுரிமை யரசர் தொழில்புரியார்
தெண்ணீர் முடியார் திருவஞ்சைக்
களத்தில் திருத்தொண் டேபுரிவார். **#3496**

இம் மண்ணுலகத்தில் சைவநெறி வாழ வளர்ந்து, முன் செய்த தவத்தின் வழியே தொடர்ந்து வந்த அன்பினால், நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானின் திருவடிகளையே பேணும் கருத்தை உடையவராகி, உள்ளத்தில் பொருந்திய அன்பு கொண்டவ ராய்த், தம் உரிமையான அரசாட்சியை மேற்கொள்ளாது, தெளிந்த கங்கை நீரைத் தரித்த சடையையுடைய இறைவரின் திருவஞ்சைக் களத்தில் திருத்தொண்டைச் செய்து வருவாராய்,

விளக்கவுரை

****

உலகின் இயல்பும் அரசியல்பும்
உறுதி யல்ல எனவுணர்வார்

புலரி யெழுந்து புனல்மூழ்கிப்
புனித வெண்ணீற் றினும்மூழ்கி
நிலவு திருநந் தனவனத்து
நீடும் பணிகள் பலசெய்து
மலரு முகையுங் கொணர்ந்துதிரு
மாலை சாத்த மகிழ்ந்தமைத்து. #3497

`உலகியல் வாழ்வும் அரசியல் வாழ்வும் நிலையில் லாதவை' என்று உணர்ந்து, வைகறையில் எழுந்து நீராடித் தூய்மை தரும் வெண்ணீற்றிலும் ஆடி, நிலைபெற்ற நந்தனவனத்திலே நீடும் திருப் பணிகள் பலவற்றையும் ஆற்றி, மலர்களையும் அரும்புகளையும் கொணர்ந்து மாலைகளைச் சாத்துவதற்கு மகிழ்ச்சியுடனே தொடுத்து,

விளக்கவுரை

புலரி - விடியற்காலம். மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியராய் விளங்குதல் பற்றிப் `புனித வெண்ணீற்றினும் மூழ்கி' என்றார்.

திருமஞ் சனமும் கொணர்ந்துதிரு
வலகும் இட்டுத் திருமெழுக்கு
வருமன் புடன்இன் புறச்சாத்தி
மற்று முள்ள திருப்பணிகள்
பெருமை பிறங்கச் செய்தமைத்துப்
பேணும் விருப்பில் திருப்பாட்டும்
ஒருமை நெறியி னுணர்வுவர
ஓதிப் பணிந்தே யொழுகுநாள். #3498

திருமுழுக்கிற்குரிய நீரும் கொண்டு வந்து, திரு வலகும் இட்டுத் திருமெழுக்கும் பொருந்தவரும் அன்புடன் இன்பம் பொருந்த மெழுகி, மேலும் உள்ள திருப்பணிகளையும் பெருமை விளங்கச் செய்து அமைத்துப் போற்றும் விருப்பத்தினால் ஒருமையுற வரும் ஒழுக்கத்தின் உணர்வு வரத் திருப்பாடல்களையும் பாடிப், பணிந்து, இவ்வாறு ஒழுகி வருகின்ற நாள்களில்,

விளக்கவுரை

இவ்விரு பாடல்களால் புறவழிபாடாற்றி வரும் பாங்கு விளங்கும்.

நீரில் மலிந்த கடல்அகழி
நெடுமால் வரையின் கொடிமதில்சூழ்
சீரின் மலிந்த திருநகரம்
அதனிற் செங்கோற் பொறையனெனும்
காரின் மலிந்த கொடைநிழன்மேற்

கவிக்குங் கொற்றக் குடைநிழற்கீழ்த்
தாரின் மலிந்த புயத்தரசன்
தரணி நீத்துத் தவஞ்சார்ந்தான். **#3499**

நீரால் நிறைந்த கடலைப்போன்ற அகழியும், நீண்ட பெரிய மலையைப் போன்ற கொடியையுடைய மதிலும் சூழ்ந்த சிறப்பு மிக்க அந்நகரத்தில், மேகத்தைவிட மிக்க கொடை நிழல் மேலும், வெண்கொற்றக் குடை நிழல் அதன் கீழுமாய் நிழற்றச் செங்கோல் பொறையன் என்ற பெயரையுடைய மாலை யணிந்த தோள்களை யுடைய சேர மன்னன், இவ்வுலகத்தை ஆள்கின்ற செயலை விடுத்துத் தவ ஒழுக்கத்தை மேற்கொண்டான்.

விளக்கவுரை

கடலும் மலையும் முறையே அகழிக்கும், மதிலுக்கும் உவமையாயின. சேர நாடு கடல்சூழ்ந்தும் மலைசூழ்ந்தும் விளங்க லின், அவையே அகழியும் மதிலுமாக விளங்கின என்றலும் ஒன்று. கொடைநிழல் மேலும், வெண்கொற்றக் குடையின் நிழல் கீழுமாய் நிழற்ற என்றது, கொடைத்திறனையும் ஆட்சித்திறனையும் விளக்கவாம். தரணி நீத்துத் தவம் சார்ந்தது, உலக ஆட்சியினும் உயிர் ஆட்சி சிறப்புடைமை பற்றியாம். உயிர்ஆட்சி பெறுதலாவது கட்டுநீங்கி வீடுபேறடைதலாம். இவ்வகையில் ஆட்பட்ட ஐயடிகள் காடவர் கோன் வரலாறும் ஈண்டு எண்ணத்தகும். `மன்னுயிர்க் குறுவதே செய்து வைகினேன் இனி என்னுயிர்க்குறுவதும் செய்ய எண்ணினேன்' *(கம்ப - அயோத். மந்திரம் 14)* என்ற தசரதன் கூற்றும் காண்க. செங்கோல் பொறையன் - நம் சேர மன்னருக்கு முன் ஆட்சி புரிந்த அரசன். பெருஞ்சேரலிரும்பொறை இளஞ்சேரலிரும்பொறை என அம்மரபினர் பெயர் விளங்குதலும் காண்க. இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

வந்த மரபின் அரசளிப்பான்
வனஞ்சார் தவத்தின் மருவியபின்
சிந்தை மதிநூல் தேரமைச்சர்
சிலநாள் ஆய்ந்து தெளிந்தநெறி
முந்தை மரபின் முதல்வர்திருத்
தொண்டு முயல்வார் முதற்றாக
இந்து முடியார் திருவஞ்சைக்
களத்தில் அவர்பால் எய்தினார். **#3500**

வழிவழியாகத் தொடர்ந்து வந்த மன்னர் மரபில் ஆட்சி செய்பவனான மன்னன், முன் சொன்ன வண்ணம் தவ வனத்தில் சாரும் தவநெறியை அடைந்த பின்னர், சிந்தை செய்யும் கூர்த்த அறிவுடையவராய்த் தாய உரிமை அறிவதற்கு உரிய நூல் களை ஆராய்ந்த அமைச்சர்கள், சில

நாள்கள் ஆராய்ந்து தெளிந்த நிலையில், முந்தை மரபினால் சிவபெருமானுக்குத் தொண்டு செய்பவரான பெருமாக்கோதையாரிடம் அம்முதன்மை நின்றதாகப் பிறைசூடிய முடியையுடைய இறைவரின் திருவஞ்சைக்களத்தில் பணிசெய்துவரும் அவரிடம் சென்று அடைந்தனர்.

விளக்கவுரை

மதிநூல் தேர் அமைச்சர் - மதிநுட்பம் நூலோடுடைய அமைச்சர்கள். சோழ பாண்டியர்களின் ஆட்சி வழி, மகன் அவன் மகன் என வரும் முறைமையதாம். சேரரின் ஆட்சி வழி, ஆளும் அரசன், அவன் தங்கை மகன் என்ற முறையில் (மருமக்கள் தாயம்) வருவதாம். இந்நிலையில் இதுகாறும் ஆண்டு வந்த செங்கோற் பொறையனாரின் நேரிடையான தங்கையின் திருமகனாராக இவர் இருந்திருப்பின், அந்நாட்டு மரபுவழி அமைச்சர்கள் இத்துணை ஆய்வு செய்து முடிவு எடுக்க வேண்டுவதில்லை. நம் மாக்கோதை யாரின் தாயார் செங்கோற் பொறையனாருக்கு ஒன்றுவிட்ட தங்கை போன்ற சிறிது சேய்மைப் பட்ட நிலையிலிருக்க, இவ்வாய்வு தேவைப் பட்டது போலும். இது மேலும் எண்ணத்தக்கதாம்.

எய்தி யவர்தம் எதிரிறைஞ்சி
இருந்தண் சாரல் மலைநாட்டுச்
செய்தி முறைமை யால்உரிமைச்
செங்கோல் அரசு புரிவதற்கு
மைதீர் நெறியின் முடிசூடி
யருளு மரபால் வந்ததெனப்
பொய்தீர் வாய்மை மந்திரிகள்
போற்றிப் புகன்ற பொழுதின்கண். **#3501**

பொய்மை தவிர்ந்த மெய்ம்மையுடைய அவ் வமைச்சர்கள் திருவஞ்சைக்களத்தைச் சேர்ந்து, பெருமாக்கோதை யார் திருமுன்பு வணங்கிப், `பெரிய குளிர்ந்த சாரலையுடைய மலை நாட்டின் மன்னர் மரபு, வழிவழிவரும் முறைமையினால், உரிமைச் செங்கோல் அரசு செலுத்துதற்குக் குற்றம் இல்லாத தூய மரபால் தங்களிடம் வந்தது!' என்று கூறிய அளவில்,

விளக்கவுரை

புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனில், `பொய்ம்மையும் வாய்மை யிடத்த' (குறள், 292) என்பர். அவ்வகையான் அமைந்த தன்றி, இவர் கூறும் வாய்மை, வாய்மையாகவே அமைந்தது என்பார் `பொய்தீர் வாய்மை' என்றார்.

இன்பம் பெருகுந் திருத்தொண்டுக்
கிடையூ றாக இவர்மொழிந்தார்
அன்பு நிலைமை வழுவாமை
அரசு புரக்கும் அருளுண்டேல்
என்பும் அரவும் புனைந்தாரை
இடைபெற் றறிவே னெனப்புக்கு
முன்பு தொழுது விண்ணப்பம்
செய்தார் முதல்வர் அருளினால். **#3502**

`மேன்மேலும் இன்பம் பெருகுவதற்கு ஏதுவாகச் செய்துவரும் திருத்தொண்டிற்கு இடையூறாக இவ்வமைச்சர்கள் உரைத்தனர்; சிவபெருமானிடத்துச் செலுத்திவரும் அன்பினின்றும் வழுவாத நிலைமையினால் அரசு செய்வதற்குத் திருவருள் கிட்டு மாயின், எலும்பும் பாம்பும் அணிந்த இறைவரைக் காலம் பார்த்து அவரின் திருவுள்ளத்தை அறிவேன்!' என்று எண்ணிக் கோயிலுள் புகுந்து, திருமுன்பு வணங்கி, விண்ணப்பித்துக் கொண்டார். அது பொழுது இறைவரின் திருவருளினால்,

விளக்கவுரை

இடைபெற்று - காலம் அறிந்து *:* `இடைதெரிந்து நன் குணர்ந்து சொல்லுக' *(குறள்,712)* எனவரும் திருக்குறளும் காண்க. `இடைதெரிந்து அருளல் வேண்டும்' என ஆசிரியர் முன்மொழிந்துள் ளமையும் நினைவு கூரத்தகும். இறைவன் திருவுள்ளம் அறிந்து, ஏற்பன் என்றது, அவர்தம் பத்திமை மீதூர்வையும், கடன் இது என அறிந்த கடமையுணர்வையும் காட்டுகின்றன.

மேவும் உரிமை அரசளித்தே
விரும்பு காதல் வழிபாடும்
யாவும் யாருங் கழறினவும்
அறியும் உணர்வும் ஈறில்லாத்
தாவில் விறலுந் தண்டாத
கொடையும் படைவா கனம்முதலாம்
காவல் மன்னர்க் குரியனவும்
எல்லாங் கைவந் துறப்பெற்றார். **#3503**

பொருந்தும் உரிமையுடைய ஆட்சியை மேற்கொண்டவாறே, தாம் விரும்பியவாறு அன்பு மீதூரும் சிவபெருமானின் வழிபாடும், அஃறிணை, உயர்திணை என்ற இரு வகையுயிர்களும் கூறுவனவற்றையெல்லாம் அறியும் உணர்வும், அளவில்லாத வெற்றி யும் ஒப்பில்லாத தடையற்ற ஈகையும், படை ஊர்தி முதலான நாடு காவல் செய்யும் மன்னர்க்கு உரிய சூழல்களும் ஆகிய இவையெல்லாம்

தம்மைச் சேர்ந்து பொருந்தும்படி அருள்பெற்றார்.

விளக்கவுரை

அரசனாவான் எவ்வுயிர்களையும் புரந்து வரும் கடப்பாடுடையன். ஆதலின் அவனுக்கு உயர்திணை அஃறிணை என்ற பாகுபாடின்றி அனைத்துயிர்களையும் காத்தற்கு அவ்வவற்றின் கருத் தறிதல் இன்றியமையாதாதலின், இறைவன் அக்கருத்தறியும் உணர் வையும் தந்தருளினான். இதனால் கழறிற்றறிவார் எனும் பெயரும் பெற்றார். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

ஆன அருள்கொண் டஞ்சலிசெய்
திறைஞ்சிப் புறம்போந் தரசளித்தல்
ஊன மாகுந் திருத்தொண்டுக்
கெனினும் உடையா னருளாலே
மேன்மை மகுடந் தாங்குதற்கு
வேண்டும் அமைச்சர்க் குடன்படலும்
மான அமைச்சர் தாம்பணிந்துஅவ்
வினைமேற் கொண்டு மகிழ்ந்தெழுந்தார். **#3504**

இத்தகையவற்றைப் பெறலான இறையருளைக் கைக்கொண்டு, கும்பிட்டு வணங்கி, கோயிலினின்றும் புறப்பட்டு வெளியே வந்து, ஆட்சி செய்தல் சிவத்தொண்டுக்கு இடையூறு செய் வதே ஆயினும், இறைவரின் திருவருள் பெற்றதால் மேன்மையுடைய அரச முடியைத் தாங்குதற்கு விண்ணப்பித்து நின்ற அமைச்சர்களுக்குத் தம் இசைவைக் கூறலும், பெருமையுடைய அந்த அமைச்சர்கள், நாயனாரின் திருவடியில் வணங்கி, அதற்கு வேண்டிய செயல்களை மேற்கொள்ள மகிழ்வுடன் சென்றனர்.

விளக்கவுரை

****

உரிமை நாளில் ஓரைநலன்
எய்த மிக்க வுபகரணம்
பெருமை சிறக்க வேண்டுவன
வெல்லாம் பிறங்க மங்கலஞ்செய்
திருமை யுலகுக் கொருமைமுடி
கவித்தார் எல்லா வுயிருமகிழ்
தரும நிலைமை யறிந்துபுவி
தாங்குங் கழறிற் றறிவார்தாம். **#3505**

முடிசூட்டுதற்குரிய நாளில் ஓரையின் நலமும் பொருந்த, உரிய துணைப் பொருள்களையெல்லாம் சிறப்புடன் அமையுமாறு, அதற்கு வேண்டிய

எல்லாப் பொருள்களையும் விளங்க அமைத்து, உரிய நன்மை மிகுந்த செயற்பாடுகளைச் (சடங்குகளை) செய்து, உயர்திணை அஃறிணை ஆகிய எல்லா உயிர்களும் மகிழ் வதற்குக் காரணமான அறத்தின் தன்மையை அறிந்து, உலகை ஆளும் கழறிற்றறிவார், இம்மை வீடுபேறு எனும் ஈருலகிற்கும் பொருந்திய ஒரே முடியை அணிந்து கொண்டார்.

விளக்கவுரை

ஒருமைமுடி - உலகியலுணர்வோடு அருளியல் உணர் வும் ஒருங்கு கொண்டு ஆட்சிசெய்யும்.

தம்பி ரானார் கோயில்வலங்
கொண்டு திருமுன் தாழ்ந்தெழுந்து
கும்ப யானை மேல்கொண்டு
கொற்றக் குடையும் சாமரையும்
நம்பும் உரிமை யவர்தாங்க
நலங்கொள் நகர்சூழ் வலங்கொள்வார்
மொய்ம்பில் உவரின் பொதிசுமந்தோர்
வண்ணான் முன்னே வரக்கண்டார். **#3506**

இறைவரின் திருக்கோயிலை வலம் வந்து நிலமுற வணங்கி எழுந்து, மத்தகத்தையுடைய யானைமேல், வெண் கொற்றக் குடையையும் சாமரையையும் விரும்புதற்குரிய உரிமையுடைய ஏவலர்கள் தாங்கி ஏற்றவாறு ஏவல் செய்துவரத், தம் நகரத்தை வலம் வருபவரான நாயனார், தோளில் உவர்மண் மூட்டையைச் சுமந்து கொண்டு, ஒரு வண்ணான் வருவதைப் பார்த்தார்.

விளக்கவுரை

நம்பும் - விரும்புதற்குரிய; *`நம்பும் மேவும் நசையா கும்மே'(தொல். உரி. 31)* என்பது தொல்காப்பியம்.

மழையிற் கரைந்தங் குவரூறி
மேனி வெளுத்த வடிவினால்
உழையிற் பொலிந்த திருக்கரத்தார்
அடியார் வேடம் என்றுணர்ந்தே
இழையிற் சிறந்த வோடைநுதல்
யானைக் கழுத்தி னின்றிழிந்து
விழைவிற் பெருகுங்காதலினால்
விரைந்து சென்று கைதொழுதார். **#3507**

மழையால் உவர்மண் கரைந்து ஊறியதால் அவன் மேனி வெளுத்து இருந்த வடிவத்தால் `மானைக் கையில் உடைய சிவபெருமானின் அடியவர் திருக்கோலம் இது' என்னும் உணர்ச்சி பெற்று, அணிகளில்

சிறந்த பட்டத்தை அணிந்த யானையின் கழுத்தி னின்றும் இறங்கி, ஆசை மீதூர்ந்த காதலுடன் விரைவாய்ச் சென்று, அவ்வண்ணானைக் கைகூப்பி வணங்கினார்.

விளக்கவுரை

****

சேரர் பெருமான் தொழக்கண்டு
சிந்தை கலங்கி முன்வணங்கி
யார்என் றடியே னைக்கொண்ட
தடியேன் அடிவண் ணானென்னச்
சேரர் பிரானு மடிச்சேரன்
அடியேன் என்று திருநீற்றின்
வார வேடம் நினைப்பித்தீர்
வருந்தா தேகும் எனமொழிந்தார். #3508

சேரர் பெருமான் கைதொழக் கண்டு, அவ்வண் ணான் உள்ளம் கலங்கி, அவர் முன் தானும் வணங்கித் `தாங்கள் என்னை யாவர் என்று எண்ணி இவ்வாறு செய்தருளியது? அடியேன் தங்களின் அடிமைத்தொண்டு செய்யும் பணியாளனான வண்ணான் ஆவேன்!' என்று சொல்ல, சேரர் பெருமானாகிய நாயனாரும், `அடியேன் அடிச் சேரன்' என்று சொல்லித் திருநீற்றின் பொலிவுடைய இனிய அன்பிற்கிடமான திருவேடத்தினை அடியேனுக்கு நினைவூட் டினீர், ஆதலால் வருந்தாது செல்வீராக, என்று மொழிந்தருளினார்.

விளக்கவுரை

****

மன்னர் பெருமான் திருத்தொண்டு
கண்டு மதிநீடு அமைச்சரெலாம்
சென்னி மிசைஅஞ் சலிசெய்து
போற்றச் சினமால் களிறேறி
மின்னு மணிப்பூண் கொடிமாட
வீதி மூதூர் வலங்கொண்டு
பொன்னின் மணிமா ளிகைவாயில்
புக்கார் புனைமங் கலம்பொலிய. #3509

மன்னரின் திருத்தொண்டைப் பார்த்து அறிவுடைய அமைச்சர் எல்லாரும் தலைமீது கைகூப்பி வணங்கிப் போற்ற, சினம் கொள்ளக்கூடிய பெரிய யானையின் மேல் ஏறி, ஒளிவீசும் மணிக ளால் ஆன கொடிகள் கட்டிய மாளிகைகள் நிறைந்த தெருக்களை யுடைய பழைய நகரத்தை வலமாக வந்து, புனையப்பட்ட மங்கலம் விளங்க,

பொன் பூண்ட மணிகளையுடைய மாளிகையின் வாயிலில் புகுந்தார்.

விளக்கவுரை

மூதூர் - கொடுங்கோளூர்.

யானை மிசைநின் றிழிந்தருளி
இலங்கும் மணிமண் டபத்தின்கண்
மேன்மை அரியா சனத்தேறி
விளங்குங் கொற்றக் குடைநிழற்றப்
பானல் விழியார் சாமரைமுன்
பணிமா றப்பன் மலர்தூவி
மான அரசர் போற்றிடவீற்
றிருந்தார் மன்னர் பெருமானார். **#3510**

தாம் யானையின் மேலிருந்து இறங்கி, விளங்கும் மணிகளையுடைய மண்டபத்தில், மேன்மை மிகுந்த அரியணையின் மீது அமர்ந்தருளி, விளங்கும் வெண்கொற்றக் குடை நிழல் செய்ய, குவளை போன்ற விழிகளையுடைய நங்கையர் சாமரை வீச, மலர்கள் பலவும் தூவிப் பெருமையுடைய மன்னர்கள் போற்ற, மன்னர்க்கு மன்னரான நாயனார் வீற்றிருந்தார்.

விளக்கவுரை

****

உலகு புரக்கும் குடைவளவர்
உரிமைச் செழிய ருடன்கூட
நிலவு பெருமுக் கோக்களாய்
நீதி மனுநூல் நெறிநடத்தி
அலகில் அரசர் திறைகொணர
அகத்தும் புறத்தும் பகையறுத்து
மலருந் திருநீற் றொளிவளர
மறைகள் வளர மண்ணளிப்பார். **#3511**

உலகைக் காக்கின்ற கொடையையுடைய சோழ மன்னரும், உரிமையுடைய பாண்டிய மன்னரும் என்ற இவருடனே கூட நிலவும் மூவேந்தர்களாகி, நீதியை மனுநூல் வழியே நடை பெறுமாறு செய்து, அளவில்லாத மன்னர்கள் திறை கொணர்ந்து செலுத்த, உள்ளும் புறமும் பகையை அறுத்து நீக்கி, விளங்கும் திரு நீற்று நெறி வளரவும், மறைகள் வளரவும் மண்ணுலகத்தைக் காப்பவ ரானார்.

விளக்கவுரை

முக்கோக்கள் - மூவேந்தர்: `வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு' *(தொல். செய். 78)* என்பர் தொல்காப்பியரும். அகப்பகை - உட்பகை:

தம்மால் தம் பரிசனங்களால், கள்வரால், உயிர்கள் தம்மால் வருவது. புறப்பகை - எதிர்ந்த மன்னர்களால் வருவது. இனி அகப்பகை காமம், வெகுளி, மயக்கம் முதலியன என் றும், புறப்பகை அறிவுக் கருவிகளானும், தொழிற் கருவிகளானும் வரு வன என்றும் கூறுவாரும் உளர். இவற்றுள், முன்னையவை தம்மளவி லும், பின்னையவை நாட்டளவிலுமாகக் காக்கத் தக்கனவேயாம்.

நீடும் உரிமைப் பேரரசால்
நிகழும் பயனும் நிறைதவமும்
தேடும் பொருளும் பெருந்துணையும்
தில்லைத் திருச்சிற் றம்பலத்துள்
ஆடுங் கழலே எனத்தெளிந்த
அறிவால் எடுத்த திருப்பாதம்
கூடும் அன்பில் அர்ச்சனைமேல்
கொண்டார் சேரர் குலப்பெருமாள். **#3512**

முக்கோக்கள் - மூவேந்தர்: `வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு' (தொல். செய். 78) என்பர் தொல்காப்பியரும். அகப்பகை - உட்பகை: தம்மால் தம் பரிசனங்களால், கள்வரால், உயிர்கள் தம்மால் வருவது. புறப்பகை - எதிர்ந்த மன்னர்களால் வருவது. இனி அகப்பகை காமம், வெகுளி, மயக்கம் முதலியன என் றும், புறப்பகை அறிவுக் கருவிகளானும், தொழிற் கருவிகளானும் வரு வன என்றும் கூறுவாரும் உளர். இவற்றுள், முன்னையவை தம்மளவி லும், பின்னையவை நாட்டளவிலுமாகக் காக்கத் தக்கனவேயாம்.

விளக்கவுரை

தமிழக மூவேந்தர்தம் ஆட்சி மிகத் தொன்மையானது. இதனை `வழங்குவதுஉள் வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி பண்பில் தலைப்பிரிதல் இன்று' *(குறள், 955)* எனவரும் குறட் பாவிற்குப் பரிமேலழகர், தொன்று தொட்டு வருதல், சேர சோழ பாண்டியர் என் றாற் போலப் படைப்புக் காலம் தொடங்கி மேம்பட்டு வருதல் என உரைக்கும் உரையாலும் அறியலாம்.

வாசத் திருமஞ் சனம்பள்ளித்
தாமஞ் சாந்த மணித்தூபம்
தேசிற் பெருகுஞ் செழுந்தீபம்
முதலா யினவும் திருவமுதும்
ஈசற் கேற்ற பரிசினால்
அருச்சித் தருள எந்நாளும்
பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர்
பொற்பார் சிலம்பின் ஒலியளித்தார். **#3513**

நறுமணம் மிக்க திருமுழுக்கிற்கான நீரும், திருப்பள்ளித் தாமமும், சாந்தமும், அழகிய நறும் புகையும், ஒளி விளக்குகளும் முதலான பொருள்களும், திருவமுதும் அமைத்து, இறைவருக்கு வழிபாடாற்றும் வகைமையில் குன்றாது பூசனையாற்றி வர, நாளும் அவ்வழிபாட்டை விரும்பி எழுந்தருளி ஏற்றுவரும் பெருங் கூத்தரான இறைவரும், அழகான தம் திருவடிச் சிலம்பின் ஒலியை, அந்நாயனார் கேட்குமாறு அளித்தருளினார்.

விளக்கவுரை

சிவயோகிகளுக்குத் திருவருளுணர்வோடு ஒன்றி இருக்கும் நிலையில் திருச்சிலம்போசை கேட்டல் இயல்பேயாகும்.

`திருச்சிலம் போசை ஒலிவழியே சென்று
நிருத்தனைக் கும்பிடென்று உந்தீபற
நேர்பட அங்கே நின்று உந்தீபற'
(திருவுந்தி - 17)

எனவரும் ஞானநூற் கூற்றும் காண்க. `வாத வூரினில் வந்தினிதருளிப் பாதச் சிலம் பொலி காட்டிய பண்பும்' *(தி.8 ப.2 வரி.52, 53)* எனவரும் மணிவாசகரின் அநுபவக் கூற்றும் காண்க.

நம்பர் தாளின் வழிபாட்டால்
நாளும் இன்புற்று அமர்கின்றார்
இம்பர் உலகில் இரவலர்க்கும்
வறியோ ரெவர்க்கும் ஈகையினால்
செம்பொன் மழையாம் எனப்பொழிந்து
திருந்து வென்றி யுடன்பொருந்தி
உம்பர் போற்றத் தம்பெருமாற்
குரிய வேள்வி பலசெய்தார். **#3514**

இறைவரின் திருவடிக்கண் செய்யும் வழிபாட்டால் நாள்தோறும் இன்பம் அடைந்து எழுந்தருளி இருப்பவரான நாய னார், இவ்வுலகத்தில் தம்மிடம் வந்து இரந்தவர்களுக்கும், வறியவர் களுக்கும், எல்லோருக்கும் வேண்டியவாறே கொடுக்கின்ற தன்மை யினால் செம்பொன்னை மழைபோல் பொழிந்து, திருந்தும் வெற்றியு டன் கூடித் தேவர் போற்றத் தம் இறைவர்க்குரிய வேள்விகள் பலவற் றையும் ஆற்றி வந்தார்.

விளக்கவுரை

`கார்கொண்ட கொடைக் கழறிற்றறிவார்' என வரும் தொகைநூற் கூற்றை நினைவு கூர்ந்தவாறு அருளிய பாங்கு இதுவாம் `இரப்பவர்க்கு ஈய வைத்தார் ஈபவர்க்கு அருளும் வைத்தார்' *(தி.4 ப.38 பா.10)*, `வேள்வி நற்பயன் வீழ்புனலாவது' *(தி.12 பு.28 பா.822)* எனவரும் திருமுறைக்

கூற்றுக்களை நினைவு கூருமாறு, இவர்தம் ஆட்சியமைந்திருப்பதைக் காணலாம். இவ்வாற்றான் கழறிற்றறிவார் தாமும் பிற உயிர்களும் பயன்பட வாழ்ந்தமை புலனாகும்.

இன்ன வண்ணம் இவரொழுக
எழில்கொள் பாண்டி நன்னாட்டு
மன்னும் மதுரைத் திருவால
வாயில் இறைவர் வருமன்பால்
பன்னும் இசைப்பா டலிற்பரவும்
பாண னார்பத் திரனார்க்கு
நன்மை நீடு பெருஞ்செல்வம்
நல்க வேண்டி அருள்புரிவார். **#3515**

இவ்வாறு இவர் ஒழுகிவரும் நாள்களில், அழகு வாய்ந்த பாண்டிய நாட்டில் நிலைபெற்ற மதுரையில் திருவாலவாய்த் கோயிலில் வீற்றிருந்தருளும் இறைவரான சிவபெருமான், மேன் மேலும் மிகுகின்ற அன்போடு இசைக்கின்ற இசைப் பாட்டுகளால் போற்றிவரும் பாணரான பத்திரனாருக்கு, நன்மை பொருந்திய பெருஞ்செல்வம் வழங்கத் திருவுள்ளம் பற்றுவார்,

விளக்கவுரை

****

இரவு கனவில் எழுந்தருளி
என்பால் அன்பால் எப்பொழுதும்
பரவு சேரன் தனக்குனக்குப்
பைம்பொன் காணம் பட்டாடை
விரவு கதிர்செய் நவமணிப்பூண்
வேண்டிற்று எல்லாங் குறைவின்றித்
தரநம் மோலை தருகின்றோம்
தாழா தேகி வருகென்று. **#3516**

இரவில் அப் பாணபத்திரனாரின் கனவில் எழுந்த ருளி, `நம்மை எப்பொழுதும் போற்றிவரும் சேர மானுக்கு, பசுமை யான பொன்னும் காசும் பட்டாடையும் ஒளிக்கதிரையுடைய மணிகள் பதித்த அணிகளும் இன்னும் வேண்டிய எல்லாவற்றையும், குறைவில் லாமல் உனக்குத் தருமாறு, நாம் ஓலையைக் கொடுக் கின்றோம், காலம் தாழ்க்காமல் சென்று வருக!' என்று,

விளக்கவுரை

****

அதிர்கழல் உதியர் வேந்தற்

கருள்செய்த பெருமை யாலே
எதிரில்செல் வத்துக்கு ஏற்ற
இருநிதி கொடுக்க வென்று
மதிமலி புரிசை என்னும்
வாசகம் வரைந்த வாய்மைக்
கதிரொளி விரிந்த தோட்டுத்
திருமுகங் கொடுத்தார் காண. **#3517**

ஒலிக்கும் கழலை அணிந்த சேரமானுக்கு, அருள் செய்த பெருமையால், `ஒப்பில்லாத செல்வத்துக்கு ஏற்றவாறு பெருஞ் செல்வத்தைக் கொடுக்க!' என்று அவன் காணும்படி, `மதிமலி புரிசை' எனத் தொடங்கும் வாய்மை பொருந்திய திருப்பாடலை ஒளி விரிந்த ஏட்டில் எழுதி அவ்வோலையை இறைவர் தந்தருளினார்.

விளக்கவுரை

இத்தொடக்கமுடைய திருப்பாடல் திருமுகப் பாசுரம் என அழைக்கப் பெறும். பதினொன்றாம் திருமுறையில் முதற் பதிகமாக வைத்துப் போற்றப் பெறுவதாகும்.

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.
(தி.11 ப.1 திருமுகப் பாசுரம்)

என்பது அவ்வரிய பாடல் ஆகும். திருவிளையாடற் புராணத்தில் இவ்வரலாறு சிறிது வேறுபட உள்ளது. இவ்வரிய திருமுகம் அருமையினும் அருமையானது. இன்றைய நிலையில் கடிதம் எழுதுவதில் அனுப்புநர், பெறுநர் செய்தி என அமைத்துக் கொண்டிருக்கும் பாங்கு இத்திருமுகத்தில் முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய் அமைந்துள்ளது. *1* முதல் *4* அடிகள், அனுப்புநர் பற்றியன. *5* முதல் *8* அடிகள் பெறுநர் பற்றியன. *9* முதல் *12* அடிகள், பரிந்துரையாக அமைந்துள் ளன. நிறைவாக அமைந்துள்ள

இப்பரிந்துரைச் செய்தியில் *9*ஆவது அடி, பாணபத்திரர் பற்றிய அறிமுகம்; *10*ஆவது அடி, அப்பத்திரர் யார் என்பது பற்றிய குறிப்பு; *11*ஆவது அடி, பொதுவாக உலகியலில் கூறு வது போல `நின்னைக் காண்பது கருதிப் போந்தனன்' என்ற குறிப்பு; *12*ஆவது அடியில் பாணபத்திரரை அனுப்புதற்குரிய காரணம். இத்தகைய பரிந்துரை நம் தமிழ் இலக்கிய உலகிலேயே ஈதொன்றே யாம். இவ்வகையில் `அடியார்க்கு எளியன் சிற்றம்பலவன்' எனப் பெருமான் அருளியிருக்கும் பரிந்துரை பிறிதொன்றாம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

சங்கப் புலவர் திருமுகத்தைத்
தலைமேற் கொண்டு பத்திரனார்
அங்கப் பொழுதே புறப்பட்டு
மலைநா டணைய வந்தெய்தித்
துங்கப் புரிசைக் கொடுங்கோளூர்
தன்னிற் புகுந்து துன்னுகொடி
மங்குல் தொடக்கும் மாளிகைமுன்
வந்து மன்னர்க் கறிவித்தார். **#3518**

சங்கப் புலவரின் தலைவரான சோமசுந்தரக் கடவுள் அளித்த திருமுகத்தைத் தலைமீது தாங்கிக் கொண்டு, பாணபத்திரர், அங்கிருந்து அப்பொழுதே புறப்பட்டுச் சென்று, மலை நாட்டை அடைந்து, உயர்ந்த மதிலையுடைய கொடுங்கோளூரில் புகுந்து, நெருங்கிய கொடிகள் மேகங்களைத் தொடுமாறு உயர்ந்துள்ள அரண்மனை முன்வந்து, மன்னருக்கு அங்கிருந்த ஏவலர்வழி தமது வருகையை அறிவித்துக் கொண்டார்.

விளக்கவுரை

****

கேட்ட பொழுதே கைதலைமேல்
கொண்டு கிளர்ந்த பேரன்பால்
நாட்டம் பொழிநீர் வழிந்திழிய
எழுந்து நடுக்கம் மிகவெய்தி
ஓட்டத் தம்பொன் மாளிகையின்
புறத்தி லுருகுஞ் சிந்தையுடன்
பாட்டின் தலைமைப் பாணனார்
பாதம் பலகாற் பணிகின்றார். **#3519**

அவரின் வருகையைக் கேட்ட அளவில், கைகளைத் தலைமேல் கூப்பி, மீதூர்ந்த அன்பினால், கண்களினின்றும் நீர் வழிந்து பெருக, எழுந்து நடுங்கி, உருக்கி ஓடவிட்ட பொன்மாளிகையின் புறத்தே போந்து, உருகும் உள்ளத்துடன், பாட்டின் தவைரான பாண பத்திரரின்

திருவடிகளைப் பலமுறையும் வணங்குபவர்,

விளக்கவுரை

****

அடியேன் பொருளாத் திருமுகங்கொண்
டணைந்த தென்ன அவர் தாமும்
கொடிசேர் விடையார் திருமுகங்கைக்
கொடுத்து வணங்கக் கொற்றவனார்
முடிமேற் கொண்டு கூத்தாடி
மொழியுங் குழறிப் பொழிகண்ணீர்
பொடியார் மார்பிற் பரந்துவிழப்
புவிமேற் பலகால் வீழ்ந்தெழுந்தார். **#3520**

`அடியேனையும் ஒரு பொருளாகக் கொண்டு திருமுகத்தைக் கொண்டு இங்கு அணைந்தது என்னே' என்று சொல்ல, அப் பாணபத்திரரும் விடைக் கொடியையுடைய சிவபெருமானின் `திருமுகத்தை' அவரது கையில் தந்து வணங்கவும், மன்னரும் அத் திருமுகத்தைப் பெற்றுத், தம் முடிமீது கொண்டு, ஆனந்தக் கூத்தாடிச் சொல் தடுமாறிக், கண்களினின்றும் பொழியும் ஆனந்தக் கண்ணீர் பெருகித் திருநீறு பூசிய மார்பில் வார்ந்து பரவி விழ, நிலத்தில் பல முறையும் வீழ்ந்து எழுந்து வணங்கினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பரிவில் போற்றித் திருமுகத்தைப்
பலகால் தொழுது படியெடுக்க
உரிய வகையா லெடுத்தோதி
யும்பர் பெருமா னருள்போற்றி
விரிபொற் சுடர்மா ளிகைபுக்கு
மேவும் உரிமைச் சுற்றமெலாம்
பெரிது விரைவிற் கொடுபோந்து
பேணும் அமைச்சர்க் கருள்செய்வார். **#3521**

அன்பினால் போற்றி, திருமுகத்தைப் பலமுறையும் வணங்கி, அதன் சுருளை நீக்கி எடுப்பதற்குரிய வகையினால் எடுத்து, விரித்துப் படித்து, இறைவரின் திருவருளை வழுத்தி, ஒளிவீசும் பொன் மாளிகையுள் புகுந்து, தம் உரிமைச் சுற்றத்தார் எல்லோரையும் விரை வில் கொண்டு சார்ந்து நாடு காக்கும் அமைச்சருக்கு அருளிச் செய் வாராய்,

விளக்கவுரை

****

நங்கள் குலமா ளிகையதனுள்
நலத்தின் மிக்க நிதிக்குவையாய்ப்
பொங்கி நிறைந்த பலவேறு
வகையிற் பொலிந்த பண்டாரம்
அங்க ணொன்று மொழியாமே
அடையக் கொண்டு புறப்பட்டுத்
தங்கும் பொதிசெய் தாளின்மேற்
சமைய வேற்றிக் கொணருமென. **#3522**

`நம் மாளிகையினுள் நன்மை யுடைய செல்வக் குவியல்களாய் மேன்மேல் வளர்ந்து நிறைந்த பலவேறு வகைகளில் விளங்கிய களஞ்சியத்துள் ஒன்றும் எஞ்சாதவாறு எடுத்துத் தக்கவாறு அமைத்துக் கட்டி, தக்க பணியாட்களின் வழி எடுத்துக் கொண்டு வாருங்கள்!' என்று,

விளக்கவுரை

****

சேரர் பெருமான் அருள்செய்யத்
திருந்து மதிநூல் மந்திரிகள்
சாரு மணிமா ளிகையுள்ளால்
தனங்கள் எல்லாம் நிறைந்தபெரும்
சீர்கொள் நிதிய மெண்ணிறந்த
வெல்லாம் பொதிசெய் தாளின்மேல்
பாரில் நெருங்க மிசையேற்றிக்
கொண்டு வந்து பணிந்தார்கள். **#3523**

சேரர் பெருமானார் ஆணையிட, திருந்திய அறிவும் நூலறிவும் கொண்ட அமைச்சர்கள், அழகிய மாளிகையில் உள்ள செல்வங்கள் எல்லாவற்றாலும் நிறைந்த பெருஞ்சிறப்புடைய அள வில்லாத நிதியங்களை எல்லாம் பாதுகாப்பாகக் கட்டி, தக்க ஆள்கள்வழி, நிலம் நெருங்க ஏற்றிக்கொண்டு தம் மன்னரிடம் வந்து வணங்கினர்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

பரந்த நிதியின் பரப்பெல்லாம்
பாண னார்பத் திரனார்க்கு
நிரந்த தனங்கள் வெவ்வேறு
நிரைத்துக் காட்டி மற்றிவையும்
உரந்தங் கியவெங் கரிபரிகள்
முதலாம் உயிருள் ளனதனமும்
புரந்த அரசுங் கொள்ளுமென

மொழிந்தார் பொறையர் புரவலனார். #3524
வெவ்வேறு வகையாய்ப் பெருகிய செல்வப் பரப்பையெல்லாம் பாணபத்திரருக்கு நிரல்படக் காட்டி, `இவற்றையும், மற்றும் வன்மை பொருந்திய கொடிய யானைகள் குதிரைகள் முதலான உயிர்ச் செல்வங்களையும், அடியேன் காவல் செய்யும் ஆட்சியினை யும் கொள்ளுங்கள்!' என்று சேரர் பெருமானார் உரைத்தார்.

விளக்கவுரை

****

பாண னார்பத் திரனாரும்
பைம்பொன் மௌலிச் சேரலனார்
காணக் கொடுத்த நிதியெல்லாம்
கண்டு மகிழ்வுற் றதிசயித்துப்
பேண எனக்கு வேண்டுவன
அடியேன் கொள்ளப் பிஞ்ஞகனார்
ஆணை யரசும் அரசுறுப்பும்
கைக்கொண் டருளும் எனஇறைஞ்ச. #3525

பாணபத்திரரும், பசுமையான பொன்முடி சூடிய சேரமானார் முன் சொன்னவாறு தாம் காணும்படி காட்டித் தந்த நிதிகள் எல்லாவற்றையும் பார்த்து மகிழ்ந்து, வியந்து, `எனக்குப் பேணுதற்கு வேண்டியவற்றை மட்டும் யான் கைக்கொள்ள, அரசாட்சியும் அதற்குரிய அரசுறுப்புக்களையும் நீங்களே கைக்கொள்ளுங்கள், இஃது இறைவரின் ஆணை!' எனக் கூறி வணங்க,

விளக்கவுரை

****

இறைவ ராணை மறுப்பதனுக்கு
அஞ்சி யிசைந்தார் இகல்வேந்தர்
நிறையு நிதியின் பரப்பையெல்லாம்
நிலத்தை நெளிய வுடன்கொண்டே
உறைமும் மதத்துக் களிறுபரி
யுள்ளிட் டனவேண் டுவகொண்டோர்
பிறைவெண் கோட்டு களிற்றுமேல்
கொண்டு போந்தார் பெரும்பாணர். #3526

வலிமைமிக்க மன்னரான சேரர், இறைவரின் ஆணையை மறுப்பதற்கு அஞ்சி, அதற்கு இசைந்தனர், நிறைவான செல்வப் பெருக்கங்களையெல்லாம் நிலம் நெளியும்படி உடனே கொண்டு, துளிக்கின்ற மும்மதங்களையுடைய யானை, குதிரை

உள்ளிட்டவற்றுள்ளும் வேண்டுவனவற்றைக் கைக்கொண்டு, பாணபத்திரர் தாம் ஒரு வெண்மையான பிறை போன்ற கொம்பை யுடைய யானையின் மீது ஏறிச் சென்றார்.

விளக்கவுரை

இகல் - வலிமை : படை, குடி முதலிய அறுவகை யானும், அருள் வயத்தானும் பெற்ற வலிமை. நிலம் நெளிய - பொருள் மிகுதியைத் தாங்கற் கருமையின் நிலமும் நெளிய: *(சிலம்பு - புகார்க் மங்கல. 36 -39)* மண் தேய்த்த புகழினான் என்புழிப்போல. சேரர் தம் மளவில் அனைத்துப் பொருள்களைக் கொடுப்பினும், பாணபத்திரர் தம்மளவிற்கு வேண்டுவனவற்றையே கொண்டது, இருவர்தம் உள்ளப் பண்பை காட்டுகின்றது.

பண்பு பெருகும் பெருமாளும்
பாண னார்பத் திரனார்பின்
கண்கள் பொழிந்த காதல்நீர்
வழியக் கையால் தொழுதணைய
நண்பு சிறக்கு மவர் தம்மை
நகரின் புறத்து விடைகொண்டு
திண்பொற் புரிசைத் திருமதுரை
புக்கார் திருந்தும் இசைப்பாணர். **#3527**

அடிமைத் திறத்தின் பண்புமீதூர ஒழுகும் சேரமான் பெருமாளும், பாணபத்திரர் பின்னே மார்பாரப் பொழிகண்ணீர் மழை வாரும் திருவடிவுடன் கைகளைக் கூப்பித் தொழுத வண்ணமே வர, நட்பில் சிறந்த அவரும், நகரின் புறம் போதர விடை பெற்றுக் கொண்டு, திருந்தும் இசையுடைய பாணபத்திரர், திண்மையான பொன்மதில் சூழ்ந்த மதுரை நகரத்தின் உள்ளே புகுந்தார்.

விளக்கவுரை

****

வான வரம்பர் குலம்பெருக்கும்
மன்ன னாரும் அறித்தேகிக்
கூனல் இளவெண் பிறைக்கண்ணி
முடியா ரடிமை கொண்டருளும்
பான்மை யருளின் பெருமையினை
நினைந்து பலகாற் பணிந்தேத்தி
மேன்மை விளங்கு மாளிகைமண்
டபத்துள் அரசு வீற்றிருந்தார். **#3528**

சேரர் குலத்தை விளங்கச் செய்யும் மன்னரான நாயனாரும் திரும்பச்

சென்று, வளைந்த இளைய பிறையான கண் ணியை முடித்த சிவபெருமான், அடியவர்களை ஆட்கொண்டு அரு ளும் திறத்தின் அருட்பெருமையை நினைந்து நினைந்து பன்முறையும் வணங்கிப், போற்றி, மேன்மையுடன் விளங்கும் தம் மாளிகையின் அரசவையில் வீற்றிருந்தார்.

விளக்கவுரை

****

அளவில் பெருமை அகிலயோ
னிகளும் கழறிற் றறிந்தவற்றின்
உளமன் னியமெய் யுறுதுயர்கள்
ஒன்று மொழியா வகையகற்றிக்
களவு கொலைகள் முதலான
கடிந்து கழறிற் றறிவார்தாம்
வளவர் பெருமா னுடன்செழியர்
மகிழும் கலப்பில் வைகு நாள். **#3529**

அளவற்ற பெருமையையுடைய பிறப்பு வகைகள் அனைத்திலும் தோன்றிய உயிர்கள் யாவும் பேசுவனவற்றையெல் லாம் அறிந்து, அவற்றின் உள்ளத்தில் உள்ள துன்பங்களை முழுமை யாக நீக்கிக், களவு கொலை முதலான தீமைகளை விலக்கி கழறிற்றறி வாரான இப்பேரரசர், சோழ மன்னருடன் பாண்டிய மன்னரும் கூடி மகிழ்கின்ற வகையில் மனமியைந்து மகிழ்ந்து வாழும் நாள்களில்,

விளக்கவுரை

பிறப்பு வகைகள் அனைத்தின் கருத்தையும் அறியும் அரிய வாய்ப்பு இவருக்குத் திருவருளால் கிடைத்ததாகும். ஆதலின் ஓரறிவுயிர்களும் உவப்ப ஆட்சி செய்யும் பேறு இவருக்கு அமைவ தாயிற்று. மன்னுயிர் ஓம்பி அருளாளும் ஆட்சியே ஆட்சியாம். மூவேந்தர்களும் தம்முள் பகைமையின்றி வாழ்ந்து வருமாற்றையும் கூறினார், அந்நிலை அரிதாதல் நோக்கி. `இன்றே போல்க நும் புணர்ச்சி' என்றதும் இது பற்றியேயாம்.

வானக் கங்கை நதிபொதிந்த
மல்கு சடையார் வழிபாட்டுத்
தூநற் சிறப்பின் அர்ச்சனையாம்
தொண்டு புரிவார் தமக்கொருநாள்
தேனக் கலர்ந்த கொன்றையினார்
ஆடற் சிலம்பின் ஒலி முன்போல்
மானப் பூசை முடிவின்கண்

கேளா தொழிய மதிமயங்கி. **#3530**
இவ்வருளாட்சியோ, வானின்றிழிந்த கங்கையாற் றைத் தாங்கிய சடையையுடைய இறைவரின் வழிபாடான தூய நல்ல சிறந்த பூசனையான திருத்தொண்டையும் நாளும் செய்து வருபவரான அந்நாயனாருக்கு ஒருநாள், தேன் சிந்துமாறு மலர்ந்த கொன்றை மாலையைச் சூடிய சிவபெருமானின் ஆடற் சிலம்பின் ஒலியானது, பெருமையுடைய பூசையின் முடிவில் முன்போன்று கேளாது ஒழிய, மனம் கலங்கி,

பூசை கடிது முடித்தடியேன்
என்னோ பிழைத்த தெனப் பொருமி
ஆசை உடம்பால் மற்றினிவே
றடையும் இன்பம் யாதென்று
தேசின் விளங்கும் உடைவாளை
யுருவித் திருமார் பினில்நாட்ட
ஈசர் விரைந்து திருச்சிலம்பின்
ஓசை மிகவும் இசைப்பித்தார். **#3531**

: பூசையை விரைந்து முடித்து, `அடியேன் என்ன பிழை செய்தேனோ?' என்று அழுது, விருப்புற்றுத் தாங்கும் இவ் வுடம்பினால் இனி அடையும் இன்பம் வேறு யாதுளது எனத் துணிந்து, ஒளியுடன் விளங்கும் உடைவாளை எடுத்துத் தம் மார்பிலே பாய்ச்ச முனைந்த போது இறைவர் விரைவுடன் திருச்சிலம்பின் ஒலியை மிகுதியாக ஒலிக்குமாறு செய்தார்.

விளக்கவுரை

ஊன் அடைந்த உடம்பின் பிறவியே, தான் அடைந்த உறுதியைச் சார்தல் வேண்டும். அந்நிலைவாயாதாயின் உடம்பின் பயன் தான் யாது? ஒன்றுமில்லை. இக்கருத்தால் தம் உடலைத் துறக்கத் துணிந்தார் இவ்வரிய பேரரசர். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

ஆடல் சிலம்பின் ஒலிகேளா
வுடைவா ளகற்றி யங்கைமலர்
கூடத் தலைமேற் குவித்தருளிக்
கொண்டு விழுந்து தொழுதெழுந்து
நீடப் பரவி மொழிகின்றார்
நெடுமால் பிரமன் அருமறைமுன்
தேடற் கரியாய் திருவருள்முன்
செய்யா தொழிந்த தென்னென்றார். **#3532**

திருக்கூத்தின் சிலம்பு ஒலியைக் கேட்டு, உடைவாளை அகற்றி, அழகிய கைம்மலர்களைச் சேரத் தலைமீது குவித்து நிலத்தில் விழுந்து, தொழுது,

எழுந்து, பரவிப் போற்றி, `நெடிய திருமாலும் நான்முகனும் அரிய மறைகளும் முன்பு தேடுதற்கு அரிய பெருமானே! முன்னமேயே அடியேற்குத் திருவருள் செய்யாது ஒழிந்த காரணம் யாது?' என வினவினார்.

விளக்கவுரை

காரணம் வினவியது, தம்பிழையறிந்து அதனை நீக்கிக் கொள்ளவாம்.

என்ற பொழுதில் இறைவர்தாம்
எதிர்நின் றருளா தெழுமொலியால்
மன்றி னிடைநங் கூத்தாடல்
வந்து வணங்கி வன்றொண்டன்
ஒன்று முணர்வால் நமைப்போற்றி
யுரைசேர் பதிகம் பாடுதலால்
நின்று கேட்டு வரத்தாழ்த்தோம்
என்றார் அவரை நினைப்பிப்பார். **#3533**

இங்ஙனம் சேரமான் பெருமாள் வினவ, இறைவர் தாம் நேரே தம் வடிவைக் காணக் காட்டியருளாது, வானொலி வழியே, `தில்லையில், நம் ஆனந்தக் கூத்தை வன்றொண்டனாய சுந்தரன் வணங்கி, நம்மிடம் ஒன்றிய உணர்வால், நம்மைப் போற்றி செய்து வணங்கி, உரை சேரும் பதிகத்தைப் பாடிட, அதனை நின்று கேட்டதால், இங்கு வருதற்குக் காலம் தாழ்த்தினோம்!' என்று, இவ் வருள் வழி அவரை இவருக்கு நினைவூட்டுவராய்க் கூறி அருள் செய்தார்.

விளக்கவுரை

உயிர்கள் தாம் தாமும் உள்ளவிடத்தேயுள்ள நிகழ்ச்சிக ளையே அறியத்தக்கன. இறைவனோ அன்ன தன்மையினல்லன். யாண்டும் நீக்கமற நிற்பவன். எனவே ஒரு காலத்திலேயே அவ்வவ் விடத்தும் உள்ள உயிர்களை உய்யக் கொள்வன். அன்னோனுக்கு ஆரூரர்தம் பாடலைக் கேட்டு மகிழும் பொழுதே, கழறிற்றறிவாருக்கும் கழற்சிலம்பொலியைக் கேட்பிக்க இயலும். அங்ஙனமாகவும் அப் பாடலைக் கேட்டு மகிழ்ந்த வண்ணம் இருந்தமையின், கழற்சிலம் பொலி கேட்பிக்கக் காலம் தாழ்த்தது என்றது, கழறிற்றறிவாருக்கு ஆரூரரை நினைவுகூரச் செய்து, அதன்வழி அவ்விருவர்தம் நட்பும் சால்பும் பெருகவாம் எனத் திருவருள் திறத்திற்குக் காரணம் கூறியது, ஆசிரியர் சேக்கிழார் தாம்பெற்ற அருள் நலத்தாலேயேயாம்.

என்னே அடியார்க் கிவரருளும்
கருணை யிருந்த வாறென்று
பொன்னேர் சடையார் திருநடஞ்செய்

புலியூர்ப் பொன்னம் பலம்இறைஞ்சித்
தன்னே ரில்லா வன்றொண்டர்
தமையுங் காண்பன் எனவிரும்பி
நன்னீர் நாட்டுச் செலநயந்தார்
நாமச் சேரர் கோமானார். **#3534**

`இறைவர் அடியார்க்கு அருளும் திறம் இருந்தவா றென்னே!' என்று போற்றிப், `பொன் போன்ற சடையையுடைய பெரு மான் கூத்தியற்றுகின்ற பெரும்பற்றப் புலியூருக்குச் சென்று பொன்னம் பலத்தை வணங்கித், தமக்கு எவரும் ஒப்பில்லாதவரான ஆரூரரையும் கண்டு வணங்குவேன்!' என்ற விருப்பம் கொண்டு, நல்ல நீர்நாடு எனப்படும் சோழ நாட்டிற்கு எழுந்தருளப் பெருமையுடைய சேர அரசர் திருவுளம் கொண்டார்.

பொன்னார் மௌலிச் சேரலனார்
போற்றும் அமைச்சர்க் கஃதியம்பி
நன்னாள் கொண்டு பெரும்பயணம்
எழுக வென்று நலஞ்சாற்ற
மின்னா ரயில்வேற் குலமறவர்
வென்றி நிலவுஞ் சிலைவீரர்
அந்நாட் டுள்ளார் அடையநிரந்
தணைந்தார் வஞ்சிஅக நகர்வாய். **#3535**

பொன்முடியைச் சூடிய சேரமான்பெருமாள் நாயனார், தத்தம் கடமையைப் பெரிதும் போற்றிச் செய்துவரும் அமைச்சர்களுக்குத் தம் விருப்பத்தைச் சொல்லி, நன்னாளில் செலவு மேற்கொள்ள வேண்டும் என, ஒளியுடைய கூர்மையான வேலை ஏந்திய வீரர்களும், வெற்றியுடைய வில் வீரர்களும், மற்றும் அந்நாட் டில் உள்ளவர்களும் நெருங்க வஞ்சியின் அகநகரத்திலே கூடினர்.

விளக்கவுரை

வஞ்சி - கொடுங்கோளூர். வஞ்சியை இந்நகராக ஆசிரி யர் கருதுகிறார். கருவூராகக் கொண்டு ஆய்வு செய்வாருமுளர்.

இட்ட நன்னாள் ஓரையினில்
இறைவர் திருவஞ் சைக்களத்து
மட்டு விரிபூங் கொன்றையினார்
தம்மை வலங்கொண் டிறைஞ்சிப்போய்ப்
பட்ட நுதல்வெங் களியானைப்
பிடர்மேற் கொண்டு பனிமதியந்
தொட்ட கொடிமா ளிகைமூதூர்
கடந்தார் உதியர் தோன்றலார். **#3536**

நாளும் ஓரையும் தமக்கு ஏற்பக் கொண்டு செல்லும் நன்னாளில், திருவஞ்சைக் களத்தில் வீற்றிருக்கின்ற மணங் கமழும் கொன்றை மலர்களைச் சூடிய பெருமானாரை வலம் கொண்டு போற்றி, நெற்றிப் பட்டத்தை அணிந்த யானையின் பிடரியில் ஏறி, குளிர்ந்த சந்திரனைத் தீண்டும் கொடிகளையுடைய மாளிகைகள் நிறைந்த பழம்பெரும் நகரான கொடுங்கோளூரைக் சேரமான் கடந்து சென்றார்.

யானை யணிகள் பரந்துவழி
யெங்கும் நிரந்து செல்லுவன
மான மலைநாட் டினின்மலிந்த
மலைக ளுடன்போ துவபோன்ற
சேனை வீரர் புடைபரந்து
செல்வ தங்கண் மலைசூழ்ந்த
கான மடைய வுடன்படர்வ
போலுங் காட்சி மேவின தால். **#3537**

யானைகளின் அணிகள் பரவி வழியெங்கும் செல் வன, பெரிய மலைநாட்டில் மலிந்த பொருளாகிய மலைகள் தம் மன்னருடனே செல்வனபோல் விளங்கின. படைவீரர்கள் இரு மருங் கும் பரந்து செல்லும் நிலை, அந்நாட்டில் அம்மலைகளைச் சூழ்ந்த காடுகள் எல்லாம் உடன் செல்வன போன்ற காட்சியை அளித்தது.

விளக்கவுரை

யானைகள் மலை எனக் காட்சியளித்தது. படைவீரர்கள் காடெனக் காட்சியளித்தனர். உயர்வும் அகலமும் குறித்தவாறு. அடைய - முழுமையாக. ஆல் - அசை.

புரவித் திரள்கள் ஆயோகப்
பொலிவி னசைவிற் போதுவன
அரவச் சேனைக் கடற்றரங்க
மடுத்து மேன்மே லடர்வனபோல்
விரவிப் பரந்து சென்றனவான்
மிசையு மவலு மொன்றாக
நிரவிப் பரந்த நெடுஞ்சேனை
நேமி நெளியச் சென்றனவால். **#3538**

குதிரையணிகள் கரையில் சேரும் அலை என அசைவுடன் செல்பவை, ஒலிக்கும் படையான கடலின் அலைகள் மேன் மேல் உயர்ந்து தாக்குவனபோல் பொருந்திப் பரந்து சென்றன. வானளாவிய மேடும் பள்ளமும் ஒன்றாய் அங்ஙனம் நிரல்படப் பரவிய பெரும்படை பூமி நெளியுமாறு சென்றது.

விளக்கவுரை

அலைகள் அசைவுடனும் மேன்மேலும் பெருகியும் வரும் இயல்பின. குதிரைத் திரள்களின் செலவும் அன்னதாகலின் அவற்றின் செலவிற்கு உவமையாயின. மிசை - மேடு; அவல் - பள்ளம். `அவலா கொன்றோ மிசையா கொன்றோ'(புறம் *-187)* என வருவதும் காண்க. இக்குதிரைச் செலவு, அடர்ந்தும் தொடர்ந்தும் இருத்தலின் மண்ணகம் நெளிவதாயிற்று. மேடு பள்ளமும் தெரியா வாயின. `அவல என்னாள் அவலித்து இழிதலின், மிசைய என்னாள் மிசை வைத்து ஏறலின்' எனவரும் சிலம்பும் காண்க. ஆயோகம் - கரை. நேமி - உலகு.

அந்நாட் டெல்லை கடந்தணைய
அமைச்சர்க் கெல்லாம் விடையருளி
மின்னார் மணிப்பூண் மன்னவனார்
வேண்டு வாரை யுடன்கொண்டு
கொன்னார் அயில்வேல் மறவர்பயில்
கொங்கு நாடு கடந்தருளிப்
பொன்னாட் டவரும் அணைந்தாடும் பொன்னி நீர்நாட்
டிடைப்போவார். **#3539**

அம்மலை நாட்டின் எல்லையைக் கடந்த அளவில், தம் அமைச்சர்களுக் கெல்லாம் விடை தந்தருளி, ஒளியுடைய மணி களை அணிந்த சேரர்பெருமான் தம் வழிச்செலவிற்கு உதவும் பணி யாளர்களை மட்டும் உடன் அழைத்துக் கொண்டு, அச்சமூட்டும் கூர்மையான வேல் ஏந்திய மறவர்கள் வாழும் கொங்கு நாட்டைக் கடந்து சென்று, விண்ணவரும் வந்து படிந்து ஆடும் காவிரியின் வளத்தையுடைய சோழநாட்டிடைச் செல்வாராய்,

விளக்கவுரை

கொங்கு நாடு - இக்காலத்தே கோயம்புத்தூர் மாவட்டம், சேலம், ஈரோடு மாவட்டங்களில் சிற்சில பகுதிகளும் சேர்ந்து விளங்கும் பகுதி. கொங்கர் என அழைக்கப்பெறும் சிற்றரசர்களின் மரபினர் ஆண்டுவந்தமையின் இப்பகுதி கொங்கு நாடு எனப் பெயர் பெறுவதாயிற்று. இவர்கள் சோழ, பாண்டிய, சேரப் பேரரசர்களுக்கு ஒரொருகால் அடங்கியும் ஆட்சிபுரிந்தனர்; தனித்தும் ஆட்சி புரிந் தனர். இந்நாட்டில் வாழ்வோர் வலிமை மிகுதியால் வன்கண்மை புரியும் இயல்பினராயிருந்தனர். வழிச் செல்வோரைத் துன்புறுத்திப் பொருள் கொண்டனர். `கொடுகு வெஞ்சிலை வடுகவேடுவர் விரவ லாமை சொல்லித் திடுகு மொட்டெனக் குத்தி கூறை கொண்டு ஆறலைக்கும் இடம் ' (தி.*7* ப.*49* பா.*1*), `கொங்கே புகினும் கூறை கொண்டு அலைப்பார் இலை' (தி.*7*

ப.*92-3)* எனவரும் நம்பிகள் திருவாக்காலும் இவ்வுண்மை அறியப்படும். ஆனால் இந்நிலை இது பொழுது யாண்டும் நீக்கமற நிற்பதும், கொங்குப் பகுதியில் உள்ளார் பலரும் அன்பும் பண்பும் உடையராய்த் திருவருள் நாட்டம் உடையராய்த் திகழ்வதும் இக்கால உண்மையாகும்.

சென்ற திசையில் சிவனடியார்
சிறப்பி னோடும் எதிர்கொள்ளக்
குன்றும் கானும் உடைக்குறும்பர்
இடங்கள் தோறுங் குறைவறுப்பத்
துன்று முரம்புங் கான்யாறுந்
துறுகற் சுரமும் பலகடந்து
வென்றி விடையார் இடம்பலவும்
மேவிப் பணிந்து செல்கின்றார். **#3540**

தாம் செல்லும் இடத்திலெல்லாம் சிவனடியார்கள் எதிர்கொண்டு வரவேற்க, குன்றுகளையும் காடுகளையும் தத்தம் இடமாகக் கொண்டு ஆளுகின்ற குறுநில மன்னர்கள் தத்தம் இடங் களில் அவருக்கு வேண்டும் பொருள்களைத் தந்துதவப் பருக்கைகள் நெருங்கிய பாலை நிலங்களும் காட்டாறுகளும் துன்பம் தரும் கற்கள் பொருந்திய வழிகளும் என்னும் இவை பலவற்றையும் கடந்து சென்று, வெற்றி பொருந்திய விடையையுடைய இறைவர் வெளிப்பட எழுந்த ருளிய இடங்கள் பலவற்றையும் சென்று வணங்கிச் செல்வாராய்,

விளக்கவுரை

துன்று முரம்பு - செறிந்த பாலை. துறுகல் சுரம் பரற்கற்கள் செறிந்த பாலை நிலம்.

பொருவில் பொன்னித் திருநதியின்
கரைவந் தெய்திப் புனிதநீர்
மருவும் தீர்த்தம் மகிழ்ந்தாடி
மருங்கு வடபாற் கரையேறித்
திருவிற் பொலியுந் திருப்புலியூர்ச்
செம்பொன் மன்றுள் நடம்போற்ற
உருகி மனத்தி னுடன்சென்றார்
ஒழியா அன்பின் வழிவந்தார். **#3541**

ஒப்பில்லாத காவிரி ஆற்றின் தென்கரையில் வந்து, வடகரையில் ஏறித், தூய நீர் பொருந்திய அந்நீரில் நீராடி மகிழ்ந்து, நீங்காத அன்பின் வழிவந்த அந்நாயனார், பெரும்பற்றப் புலியூரில் பொன்னம்பலத்தில் ஆடும் திருக்கூத்தைப் போற்றும் பொருட்டு, உருகும் உள்ளத்துடன் சென்றார். கு-ரை: இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

விளக்கவுரை

****

வந்து தில்லை மூதூரின்
எல்லை வணங்கி மகிழ்ச்சியினால்
அந்த ணாளர் தொண்டர்குழாம்
அணைந்த போதில் எதிர்வணங்கிச்
சந்த விரைப்பூந் திருவீதி
இறைஞ்சித் தலைமேற் கரமுகிழ்ப்பச்
சிந்தை மகிழ எழுநிலைக்கோ
புரத்தை யணைந்தார் சேரலனார். **#3542**

வந்து தில்லைமூதூரின் எல்லையைச் சேர்ந்து, வணங்கி, மகிழ்ச்சிமிக எதிர்கொள்ளும் பொருட்டுத் தில்லைவாழ் அந்தணர்களும் திருத்தொண்டர் கூட்டங்களும் வந்து சேர, அவர்க ளைத் தாம் எதிர் வணங்கி, நகரத்துள் புகுந்து, அழகிய மணமுடைய மலர்களால் அழகுபடுத்தப்பட்ட திருவீதியை வணங்கித், தலையின் மீது கைகள் குவிய, மனம் மகிழ, எழுநிலைக் கோபுரத்தைச் சென் றடைந்தார்.

விளக்கவுரை

****

நிலவும் பெருமை எழுநிலைக்கோ
புரத்தின் முன்னர் நிலத்திறைஞ்சி
மலருங் கண்ணீர்த் துளிததும்பப்
புகுந்து மணிமா ளிகைவலங்கொண்டு
உலகு விளக்குந் திருப்பேரம்
பலத்தை வணங்கி யுள்ளணைந்தார்
அலகில் அண்டம் அளித்தவர்நின்று
ஆடுந் திருச்சிற் றம்பலமுன். **#3543**

பொருந்திய பெருமையுடைய எழுநிலைக் கோபு ரத்தை முன்னர் நிலத்தில் விழுந்து வணங்கி, மலர்கின்ற கண்களில் நீர்த்துளிகள் பெருக, உட்புகுந்து, மாளிகையை வலமாகச் சுற்றிவந்து, உலகத்தை விளக்கம் செய்கின்ற பேரம்பலத்தை வணங்கி, அளவில் லாத அண்டங்களை எல்லாம் அளித்த கூத்தப்பிரான் நின்று அற்புதக் கூத்தாடுகின்ற சிற்றம்பலத்தின் முன், சேரமான் உள்ளே அணைந்தார்.

விளக்கவுரை

பொருந்திய பெருமையுடைய எழுநிலைக் கோபு ரத்தை முன்னர் நிலத்தில் விழுந்து வணங்கி, மலர்கின்ற கண்களில் நீர்த்துளிகள் பெருக, உட்புகுந்து, மாளிகையை வலமாகச் சுற்றிவந்து, உலகத்தை விளக்கம்

செய்கின்ற பேரம்பலத்தை வணங்கி, அளவில் லாத அண்டங்களை எல்லாம் அளித்த கூத்தப்பிரான் நின்று அற்புதக் கூத்தாடுகின்ற சிற்றம்பலத்தின் முன், சேரமான் உள்ளே அணைந்தார்.

அளவில் இன்பப் பெருங்கூத்தர்
ஆட எடுத்த கழல்காட்ட
உளமும் புலமும் ஒருவழிச்சென்று
உருகப் போற்றி யுய்கின்றார்
களனில் விடம்வைத் தளித்தவமு
தன்றி மன்றிற் கழல்வைத்
வளருந் திருக்கூத் தமுதுலகுக்கு
அளித்த கருணை வழுத்தினார். **#3544**

அளவில்லாத இன்பத்தை வழங்குகின்ற பெருங் கூத்தர் ஆடுதற்குத் தூக்கிய திருவடியைக் காட்டியருள, உள்ளமும் புலன்களும் ஒருங்கு உருகப் போற்றி, உய்தி பெறுகின்றவராய்க், கழுத்தில் நஞ்சை வைத்துத் தேவர்களுக்கு அளித்துக் காத்த அமுதமே அன்றித், திருவம்பலத்தில் ஒரு திருவடியை ஊன்ற வைத்து, எடுத்த தொரு திருவடியில் திருக்கூத்தான அமுதத்தை அளித்தருளும் கருணையைப் போற்றினார்.

விளக்கவுரை

நஞ்சு கருமையானது; பெருமானின் திருக்கழுத்தின் நிறத்தை மறைத்து நிற்கின்றது. அங்ஙனம் அது மறைத்து நிற்பவே தேவர்களுக்கு அமுதத்தை வழங்கியருளினன் இறைவன். அது போன்றே, மறைப்பினை ஊன்று மலர்ப்பதத்தால் வைத்தே, எடுத்த திருப்பாதத்தால் அமுதத்தை வழங்குகின்றான் என்பதை உணர வைக்கின்றார் ஆசிரியர். `முத்தி நான்ற மலர்ப்பதத்தே நாடு' *(திருவருட்பயன்,)* என்பதால் அது அமுதமாயிற்று.

ஆரா ஆசை ஆனந்தக்
கடலுள் திளைத்தே யமர்ந்தருளால்
சீரார் வண்ணப் பொன்வண்ணத்
திருவந் தாதி திருப்படிக்கீழ்ப்
பார்ஆ தரிக்க எடுத்தேத்திப்
பணிந்தார் பருவ மழைபொழியும்
காரால் நிகர்க்க அரிய கொடைக்
கையார் கழறிற் றறிவார் தாம். **#3545**

: நிறைவு பெறாத ஆசை மிகுதியால், ஆனந்தமான கடலுள் முழுகி அதில் விரும்பியிருந்து, இறைவர் திருவருளால் பருவம் தவறாது, வேண்டும் மழையைப் பொழியும் மேகமும் ஒப்பா காத கைகளையுடைய கழறிற்றறிவார், சிறப்பு நிறைந்த வண்ணத்தை யுடைய

பொன்வண்ணத்தந்தாதியினைத் திருப்படியின் கீழ், உலகம் அன்புடன் ஏத்தி இன்பம் அடையுமாறு பாடிப் போற்றிப் பரவினார் (தி.11 ப.6).

விளக்கவுரை

வண்ணம் - யாப்புறுப்பு. `பொன் வண்ணம்' என இவ்வந்தாதி தொடங்குதலின் பொன்வண்ணத்தந்தாதி எனப் பெயர் பெறுவதாயிற்று. முதற்குறிப்பால் பெற்ற பெயர். `பருவ மழை பொழி யும், காரால் நிகர்க்க அரிய கொடைக் கையார்' என்பது `பருவக் கொண் மூப்படி எனப் பாவலர்க்கு, உரிமையின் உரிமையின் உதவி' என வரும் அரிய திருமுகப்பாசுரப் பகுதியை முகந்தெடுத்து நிற்ப தாகும்.

தம்பி ரானார்க் கெதிர்நின்று
தமிழ்ச்சொல் மாலை கேட்பிக்க
உம்பர் வாழ நடமாடும்
ஒருவ ரதற்குப் பரிசிலெனச்
செம்பொன் மணிமன் றினில்எடுத்த
செய்ய பாதத் திருச்சிலம்பின்
இம்பர் நீட எழுந்தவொலி
தாமும் எதிரே கேட்பித்தார். **#3546**

தம் இறைவரான கூத்தப் பெருமானுக்கு முன் நின்று செந்தமிழின் சொல்மாலையான அந்தாதியைச் சேரமான் பெருமான் நாயனார் விண்ணப்பிக்க, வானவரும் வாழும்படி கூத்தாடுகின்ற இறைவர், அப்பாட்டிற்கு ஏற்ற பரிசிலாகச் செம்பொன்னால் ஆன அழகிய அம்பலத்துள் எடுத்தருளிய செம்மை தருவதான திருவடிச் சிலம்பினின்றும், இவ்வுலகத்தவர் வாழ எழுந்த ஒலியைத் தாமும் அவருக்கு எதிரே கேட்குமாறு செய்தார்.

விளக்கவுரை

சேரர் பெருமான் பாமாலை கேட்பிக்கக் கூத்தப் பெரு மான் அவருக்குத் திருச்சிலம்போசையைக் கேட்பித்தார். பண் சுமந்த பாடற்குப் பரிசு படைத்தருளும் திறம் இது.

ஆடற் சிலம்பின் ஒலிகேட்பார்
அளவில் இன்ப ஆனந்தம்
கூடப் பெற்ற பெரும்பேற்றின்
கொள்கை வாய்ப்பக் கும்பிடுவார்
நீடப் பணியுங் காலமெலாம்
நின்று தொழுது புறம்போந்து
மாடத் திருமா ளிகைவீதி
வணங்கிப் புறத்து வைகினார். **#3547**

: இவ்வாறு இறைவரின் ஆடும் சிலம்பின் ஒலியைக் கேட்ட சேரர்
பெருமான், அளவில்லாத இன்பம் மிக்க ஆனந்தம் சேரப் பெற்ற
பெரும்பேற்றின் கொள்கை வாய்ப்ப, வணங்குவாராகி, நெடிது பணியும்
காலங்களில் எல்லாம் நின்று தொழுது, பின்பு வெளியே வந்து,
மாடங்களையுடைய மாளிகை வீதியை வணங்கிச் சென்று அதன்
வெளியே தங்கினார்.

விளக்கவுரை

பணியும் காலமெல்லாம் - பூசனைக்குரிய காலங்களில் எல்லாம்.

பரவுந் தில்லை வட்டத்துப்
பயில்வார் பைம்பொன் அம்பலத்துள்
அரவும் புனலுஞ் சடையாட
ஆடு வார்கூத் தாராமை
விரவுங் காதல் மிக்கோங்க
வேதம் படியும் திருப்படிக்கீழ்
இரவும் பகலும் பணிந்தேத்தி
இன்பம் சிறக்கும் அந்நாளில். **#3548**

போற்றற்குரிய தில்லையின் எல்லையுள் தங்குபவ ரான சேரர்
பெருமான், பசுமையான பொன்னால் ஆன அம்பலத்துள், பாம்பையும்
கங்கையையும் சடையுள் ஏற்று ஆடும் இறைவரின் திருக் கூத்தை,
ஆராமையால் பொருந்தும் பெருவிருப்பம் மேன்மேலும் எழ,
நான்மறைகளும் போற்றிப் பணியும் திருக்களிற்றுப்படியின் கீழே,
இரவும் பகலும் பணிந்து போற்றி அதனால் மிக்க இன்பம் பெருகப்
பெற்ற அந்நாள்களில்,

விளக்கவுரை

****

ஆடும் பெருமான் பாடல்கேட்
டருளித் தாழ்த்த படிதமக்குக்
கூடும் பரிசால் முன்பருளிச்
செய்த நாவ லூர்க்கோவை
நீடும் பெருங்கா தலிற்காண
நிறைந்த நினைவு நிரம்பமால்
தேடும் பாதர் அருளினால்
திருவா ரூர்மேற் செலவெழுந்தார். **#3549**

ஆடுகின்ற கூத்தப் பெருமான், பாட்டைக் கேட்ட வண்ணம்
இருந்தமையால் சிலம்பொலியைக் கேட்பிக்கத் தாழ்த் தோம்! என்று
தமக்கு அவரது நட்புக் கூடும் இயல்பினால் முன்நாளில் அருளிச் செய்து,

நினைவூட்டிய நாவலூர் மன்னரான சுந்தரரை, நீண்ட விருப்போடு காணவேண்டும் என்று உள்ளத்துள் எழுந்த நினைவின் மிகுதியால், சேரமானார், திருமால் தேடும் திருவடியையுடைய இறை வரின் திருவருள் பெற்றுத் திருவாரூரை நோக்கிச் செல்வதற்குப் புறப்பட்டார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அறிவின் எல்லை யாயதிருத்
தில்லை யெல்லை யமர்ந்திறைஞ்சிப்
பிறிவி லாத திருவடியைப்
பெருகும் உள்ளத் தினிற்பெற்றுச்
செறியு ஞான போனகர்வந்து
அருளும் புகலி சென்றிறைஞ்சி
மறிசேர் கரத்தார் கோயில்பல
வணங்கி மகிழ்ந்து வழிக்கொள்வார். **#3550**

ஞானத்தின் நிறைவாக விளங்கும் தில்லையின் எல்லையை, விரும்பி வணங்கி, என்றும் பிரியாத மேன்மேலும் பெருகும் அன்பே உள்ளத்தில் நிரம்ப, நிறைந்த ஞானமுடைய ஆளு டைய பிள்ளையாரான ஞானசம்பந்தர் தோன்றியருளிய சீகாழிப் பதியைச் சென்று வணங்கி, மானைக் கையிலுடைய சிவபெருமானின் கோயில்கள் பலவற்றையும் வணங்கி மகிழ்ந்து வழிச் செல்பவர்,

விளக்கவுரை

கோயில்கள் பல என்பன புள்ளிருக்கு வேளூர், திரு நின்றியூர் முதலாயினவாகலாம்.

வழியில் குழியில் செழுவயலில்
மதகில் மலர்வா விகளில்மடுச்
சுழியில் தரளந் திரைசொரியுந்
துறைநீர்ப் பொன்னி கடந்தேறி
விழியில் திகழுந் திருநுதலார்
விரும்பும் இடங்கள் இறைஞ்சியுகக்
கழிவில் பெருவெள் ளமுங்கொள்ளாக்
கழனி யாரூர் கண்ணுற்றார். **#3551**

வழியிலும், குழியிலும், செழுமையான வயல்களி லும், மலர்கள் நிறைந்த நீர்நிலைகளிலும், மடுக்களின் சுழியிலும் முத்து களை ஒதுக்குகின்ற துறைகளையுடைய நீர் நிரம்பிய காவிரியாற்றைக் கடந்து, தென்கரையில் ஏறி, நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் விரும்பி வீற்றிருக்கின்ற திருப்பதிகள் பலவற்றையும் வணங்கிச் சென்று, ஊழி

முடிவில் வரும் பெரிய வெள்ளத்தாலும் கொள்ளப் படாத நிலைபெற்ற திருவாரூரைக் கண்டார்.

விளக்கவுரை

விழியில் திகழும் திருநுதலார் விரும்பும் இடங்கள் என்பன, சீகாழிக்கும் திருவாரூருக்கும் இடைப்பட்ட திருப்பதிகள் பலவுமாம். அவை திருவழுவூர், வீரட்டம், திருமீயச்சூர், திருஅம்பர் மாகாளம், திருவிற்கரை முதலாயினவாம். ஊழிப்பெரு வெள்ளத் தாலும் அழியாத திருவாரூர் என்றது, பரவையுள்மண்டளி எனும் திருக்கோயில் இருத்தல் பற்றியாம்.

நம்பி தாமும் அந்நாள்போய்
நாகைக் காரோ ணம்பாடி
அம்பொன் மணிப்பூண் நவமணிகள்
ஆடை சாந்தம் அடற்பரிமா
பைம்பொற் சுரிகை முதலான
பெற்று மற்றும் பலபதியில்
தம்பி ரானைப் பணிந்தேத்தித்
திருவா ரூரில் சார்ந்திருந்தார். **#3552**

நம்பியாரூரரும் அந்நாளில் திருநாகைக்காரோணத் திற்குச் சென்று திருப்பதிகம் பாடி, அழகிய பொன்னாலும் மணிகளா லும் ஆன அணிவகைகளையும், நவமணிகளையும், ஆடை, சாந்து, வலிய குதிரைகள், பசும் பொன்னால் ஆன வாள் முதலானவற்றையும் இறைவர் தரத் தாம் பெற்று, மேலும் இடைப்பட்ட பல பதிகளிலும் வீற்றிருக்கும் இறைவரை வணங்கி, மீண்டும் திருவாரூரைச் சேர்ந்து அங்குத் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

இப்பாடல் சில படிகளில் இல்லை. கழறிற்றறிவாருடன் நம்பியாரூர் திருநாகைக்காரோணம் சென்றார் எனப் பின்னர் இவ்வரலாற்றுள் (பா.85) வருகின்றது. அதுபற்றியே இப்பாடல் சில படிகளில் இல்லை போலும்! எனினும் அடியவர்கள் ஒருமுறையே யன்றிக், காலமும் இடனும் வாய்த்துழியெல்லாம் மீளவும் சென்றிருப் பது ஆங்காங்கும் அறிய வருதலின், ஆரூரர் இதுபொழுதும் சென்று வழிபாடாற்றியிருக்கலாம். ஆதலின் இப்பாடல் இருத்தலில் இழுக்கில் லையாம்.

வந்து சேரர் பெருமானார்
மன்னும் திருவா ரூர்எய்த
அந்த ணாளர் பெருமானும்
அரசர் பெருமான் வரப்பெற்றுச்

சிந்தை மகிழ எதிர்கொண்டு
சென்று கிடைத்தார் சேரலனார்
சந்த விரைத்தார் வன்றொண்டர்
முன்பு விருப்பி னுடன்தாழ்ந்தார். #3553

சேரமான், நிலைபெற்ற திருவாரூரைச் சேர, அந்தணரின் தலைவரான நம்பியாரூரரும் மன்னவர் தலைவரான சேரமான் வரப்பெற்ற நிலையில், உள்ளம் மகிழ எதிர்கொண்டு, அவரை அணுகினார்; சேரமானும் அழகிய மணமுடைய மாலை சூடிய சுந்தரர் முன்பு, விருப்புடனே தாழ்ந்து வணங்கினார்.

விளக்கவுரை

****

முன்பு பணிந்த பெருமாளைத்
தாமும் பணிந்து முகந்தெடுத்தே
அன்பு பெருகத் தழுவவிரைந்
தவரும் ஆர்வத் தொடுதழுவ
இன்ப வெள்ளத் திடைநீந்தி
ஏற மாட்டா தலைவார்போல்
என்பும் உருக வுயிரொன்றி
யுடம்பும் ஒன்றாம் எனஇசைந்தார். #3554

தமக்கு முன்னர்த் தம்மை வணங்கிய சேரமான் பெருமாள் நாயனாரை நம்பியாரூரர் தாமும் வணங்கி, அவரை அணைத்து எடுத்து, அன்பு பெருகத் தழுவிக்கொள்ள, இன்பமான வெள்ளத்துள் முழுகிக் கரையேற மாட்டாது அலைபவரைப் போல், எலும்பும் உருக உயிர்களும் ஒன்றாக உள்ளே கலக்க, அதுபோலப் புறத்தும் இரு உடல்களும் ஒன்றாயின எனக்கூறும்படி பொருந்தினர்.

விளக்கவுரை

உயிரும் உடம்பும் ஒன்றாகப் பொருந்தினர் என்பதாம்.

ஆன நிலைமை கண்டதிருத்
தொண்டர் அளவில் மகிழ்வெய்த
மானச் சேரர் பெருமானார்
தாமும் வன்றொண் டருங்கலந்த
பான்மை நண்பால் சேரமான்
தோழர் என்று பார்பரவும்
மேன்மை நாமம் முனைப்பாடி
வேந்தர்க் காகி விளங்கியதால். #3555

இங்ஙனமாக அவ்விருவரின் தன்மையைக் கண்ட திருத்தொண்டர்கள்,

அளவற்ற மகிழ்ச்சி அடையப் பெருமையுடைய தோழர் பெருமானான சேரமானும், வன்றொண்டரான நம்பியாரூர ரும் ஒருவருள் ஒருவர் கலந்த பான்மையால் போந்த நட்பின் காரணமாய்ச் `சேரமான் தோழர்' எனும் உலகு புகழும் மேன்மை பொருந்திய திருப்பெயர், முனைப்பாடி நாட்டின் மன்னரான நம்பியாரூரருக்கு உலகத்தில் வழங்கலாயிற்று.

விளக்கவுரை

****

ஒருவர் ஒருவ ரிற்கலந்த
வுணர்வால் இன்ப மொழியுரைத்து
மருவ இனியார் பாற்செய்வ
தென்னா மென்னு மகிழ்ச்சியினால்
பருவ மழைச்செங் கைபற்றிக்
கொண்டு பரமர் தாள்பணியத்
தெருவு நீங்கிக் கோயிலினுள்
புகுந்தார் சேர மான்தோழர். **#3556**

ஒருவரில் ஒருவர் கலந்த உணர்ச்சியால் இன்பம் தரும் மகிழ்வான சொற்களைக் கூறியவாறு, பொருந்திப் பயிலுந் தோறும் இனிமை தருவாராகி, இருவரையும் கூட்டி வைத்த இறைவர் பால், மேல் நாம் செய்யக் கூடிய கைம்மாறு என்னே? என்று உள்ளத் தில் உண்டான மகிழ்ச்சியால் நம்பியாரூரர் சேரமானின் பருவகால மழை போன்ற கொடைத் தன்மை கொண்ட செங்கையைப் பற்றிக் கொண்டு, இறைவரின் திருவடிகளைப் பணிவதற்கு நினைந்து, திரு வீதியைக் கடந்து கோயிலுக்குள் சென்றனர்.

விளக்கவுரை

****

சென்று தேவா சிரியனைமுன்
இறைஞ்சித் திருமா ளிகைவலங்கொண்டு
ஒன்றும் உள்ளத் தொடும்புகுவார்

உடைய நம்பி முன்னாக
நின்று தொழுது கண்ணருவி
வீழ நிலத்தின் மிசைவீழ்ந்தே
என்றும் இனிய தம்பெருமான்
பாதம் இறைஞ்சி ஏத்தினார். **#3557**

அங்ஙனம் சென்றவர்கள், முதற்கண் தேவாசிரிய மண்டபத்தைத் தொழுது, பின் இறைவரின் திருமாளிகையை வலம் கொண்டு,

ஒன்றுபட்ட மனத்துடனும் உள்ளே புகுந்து, ஆரூரர் முன்னே நின்று வழிபடச் சேரர்தாமும் அவர் பின்னே நின்று வணங்கிக் கண்ணீர் அருவி என விழ, நிலத்தில் விழுந்து வணங்கி, என்றும் இனிய தம் பெருமானாரான புற்றிடம் கொண்ட இறைவரின் திருவடி களைத் தொழுது போற்றினார்.

விளக்கவுரை

****

தேவர் முனிவர் வந்திறைஞ்சுந்
தெய்வப் பெருமாள் கழல்வணங்கி
மூவர் தமக்கு முதலாகும்
அவரைத் திருமும் மணிக்கோவை
நாவ லூரர் தம்முன்பு
நன்மை விளங்கக் கேட்பித்தார்
தாவில் பெருமைச் சேரலனார்
தம்பி ரானார் தாம்கொண்டார். **#3558**

தேவரும் முனிவரும் வந்து வணங்குகின்ற தெய்வப் பெருமானாரான தியாகேசரின் திருவடிகளை வணங்கிக் கெடுதல் இல்லாத சேரமான் பெருமானார், மூவர்க்கும் முதல்வரான அப்பெரு மானை, நாவலூர் நம்பியின் திருமுன்பு நின்று, `மும்மணிக்கோவை' (தி.11 ப.7) பாடி, நன்மை விளங்குமாறு கேட்பித்தார். அதை இறைவரும் ஏற்று அருள் செய்தார்.

விளக்கவுரை

இக்கோவை, திருவாரூர் மும்மணிக்கோவை என அழைக்கப்பெறுவது. பதினொன்றாம் திருமுறையில் காணப்பெறுவது. ஆசிரியம், வெண்பா, கலித்துறை ஆகிய மூவகைப்பா மணிகளால் இயன்றது ஆதலின் `மும்மணிக்கோவை' என வழங்கலாயிற்று.

அங்கண் அருள்பெற் றெழுவாரைக்
கொண்டு புறம்போந் தாரூரர்
நங்கை பரவை யார்திருமா
ளிகையில் நண்ண நன்னுதலார்
பொங்கு விளக்கும் நிறைகுடமும்
பூமா லைகளும் புகையகிலும்
எங்கும் மடவார் எடுத்தேத்த
அணைந்து தாமும் எதிர்கொண்டார். **#3559**

சுந்தரர், அங்கு இறைவரின் திருவருளைப் பெற்று எழுந்த கழறிற்றறிவாரை உடன் அழைத்துக் கொண்டு வெளியே வந்து,

பரவையாரின் மாளிகையைச் சேர்ந்திட, ஒளிமிகும் விளக்கு களையும், நிறை குடங்களையும், பூமாலைகளையும் எங்கும் மங்கை யர் ஏந்தி வர, அப்பரவையார் மாளிகையின் வாயிலில் வந்து தாமும் எதிர்கொண்டு வரவேற்றார்.

விளக்கவுரை

****

சோதி மணிமா ளிகையின்கண்
சுடரும் பசும்பொற் கால்அமளி
மீது பெருமாள் தமையிருத்தி
நம்பி மேவி யுடனிருப்பக்
கோதில் குணத்துப் பரவையார்
கொழுந னார்க்குந் தோழர்க்கும்
நீதி வழுவா ஒழுக்கத்து
நிறைபூ சனைகள் முறையளித்தார். **#3560**

ஒளிரும் மணிகள் பொருந்திய மாளிகையுள் புகுந்து, விளங்கும் பசும்பொன்னால் ஆன கால்களையுடைய இருக்கை மீது சேரமானை அமரச் செய்து, நம்பிகளும் உடன் இருக்கக் குற்றம் இல்லாத குணத்தையுடைய பரவையார், தம் கணவரான நம்பியாரூரருக்கும் அவருடைய நண்பரான சேரமானுக்கும், நூல் முறைப்படி நீதியினின்றும் வழுவாத ஒழுக்கத்தில் நின்று பூசையை முறைப்படி செய்தார்.

விளக்கவுரை

****

தாண்டு புரவிச் சேரர்குலப்
பெருமாள் தமக்குத் திருவமுது
தூண்டு சோதி விளக்கனையார்
அமைக்கத் துணைவர் சொல்லுதலும்
வேண்டும் பரிசு வெவ்வேறு
விதத்துக் கறியும் போனகமும்
ஈண்டச் சமைப்பித் துடன்வந்தார்க்
கெல்லாம் இயல்பின் விருந்தமைத்தார். **#3561**

தாவிச் செல்லும் குதிரைப் படையையுடைய சேரமான் பெருமாளுக்குத் தூண்டு சோதி விளக்கைப் போன்ற பரவையாரைத் திருவமுது அமைக்கும்படி, துணைவரான நம்பியா ரூரர் கூறவும், அவர் விரும்பும் தன்மையினால், வெவ்வேறான பல கறிகளும் உணவும் விரைவாகச் சமைக்கச் செய்து, அவருடன் வந்தவர்க்கெல்லாம் விருந்தினை அமைத்தனர்.

விளக்கவுரை

****

அரசர்க் கமைத்த சிறப்பினும்மேல்
அடியார்க் கேற்கும் படியாக
விரவிப் பெருகும் அன்பினுடன்
விரும்பும் அமுது சமைத்ததற்பின்
புரசைக் களிற்றுச் சேரலனார்
புடைசூழ்ந் தவரோ டமுதுசெயப்
பரவைப் பிறந்த திருவனைய
பரவை யார்வந் தறிவித்தார். **#3562**

மன்னர் என்ற தன்மைக்குத் தக்கவாறு அமைத்ததை விடச் சிறப்புமிக்க அடியார் என்ற தன்மைக்கு ஏற்குமாறு பொருந்திப் பெருகும் அன்புடன் விரும்புகின்ற அமுதைச் சமைத்த பின்னர்க் கழுத்துக் கயிற்றை அணிந்த யானைகளையுடைய சேரமானார் தம்முடன் வந்தவருடன் உணவு உண்ணப் பாற்கடலில் தோன்றிய திரு மகளைப் போன்ற பரவையார் வந்து நம்பியாரூரர்க்கு அறிவித்தார்.

விளக்கவுரை

சேரமானார் அரசருமாவர், அடியவருமாவர். பரவை யார் அவரை அரசர் என்ற முறைமையைவிட அடியவர் என்ற முறையிலேயே பெரிதும் உபசரித்தார். அரசரின் நிலை துன்பம் அல்லது தொழுதகவு இன்று. அடியவர் நிலையோ இத்தகைய வெற்றரசை விடுத்து வீட்டரசை எய்தும் நிலையாகும். ஆதலின் பரவையார் உபசரிப்பு அன்னதாயிற்று.

சேரர் பெருமான் எழுந்தருளி
அமுது செய்யச் செய்தவத்தால்
தாரின் மலிபூங் குழல்மடவாய்
தாழா தமுது செய்வியெனப்
பாரின் மலிசீர் வன்றொண்டர்
அருளிச் செய்யப் பரிகலங்கள்
ஏரின் விளங்கத் திருக்கரத்தில்
இரண்டு படியா ஏற்றுதலும். **#3563**

`மலர்மாலை சூடிய குழலையுடைய பரவையே! முன் செய்த தவப்பயனாய்ச் சேரமான் இங்கு எழுந்தருளித் திருவமுது செய்யுமாறு திருவருள் கூட்டியதால், காலம் தாழ்த்தாது உணவு செய்விப்பாயாக!' என்று உலகில் நிறைந்த சிறப்புடைய சுந்தரர் கூறியருள, பரவையாரும் அழகுடன் விளங்கும் தம் திருக்கரத்தால்

விளக்கவுரை

அரசரும் சிவவேதியருமாய மரபினால், இரு வேறிடங் களில் உண்கலங்களை அமைத்தனர் அம்மையார். மரபு கருதிய காலம் அதுவாதலின் அவ்வண்ணம் அமைத்தார். இரண்டுபடியா - இருவேறிடங்களில் அமைவதாக.

ஆண்ட நம்பி பெருமாளை
யுடனே யமுது செய்தருள
வேண்டு மென்ன ஆங்கவரும்
விரைந்து வணங்கி வெருவுறலும்
நீண்ட தடக்கை பிடித்தருளி
மீண்டும் நேரே குறைகொள்ள
ஈண்ட அமுது செய்வதனுக்
கிசைந்தார் பொறையர்க் கிறையவனார். **#3564**

சுந்தரர் சேரமானைத் தம்முடன் அமர்ந்து உணவு உண்ண வேண்டும் என்று சொல்ல, அங்கு அவரும் விரைவாகப் பணிந்து அஞ்சித் திடுக்கிடவும், நீண்ட பெரிய கைகளைப் பிடித்துக் கொண்டு நம்பியாரூரர் மீண்டும் வேண்டிக் கொள்ளவும், அவருடன் ஒன்றாய் அமர்ந்து உணவு உண்ணச் சேரமான் இசைந்தார்.

விளக்கவுரை

சுந்தரர் சேரமானைத் தம்முடன் அமர்ந்து உணவு உண்ண வேண்டும் என்று சொல்ல, அங்கு அவரும் விரைவாகப் பணிந்து அஞ்சித் திடுக்கிடவும், நீண்ட பெரிய கைகளைப் பிடித்துக் கொண்டு நம்பியாரூரர் மீண்டும் வேண்டிக் கொள்ளவும், அவருடன் ஒன்றாய் அமர்ந்து உணவு உண்ணச் சேரமான் இசைந்தார்.

ஒக்க அமுது செய்தருள
வுயர்ந்த தவத்துப் பரவையார்
மிக்க விருப்பால் அமுது செய்வித்
தருளி மேவும் பரிசனங்கள்
தக்க வகையால் அறுசுவையுந்
தாம்வேண் டியவா றினிதருந்தத்
தொக்க மகிழ்ச்சி களிசிறப்பத்
தூயவிருந்தின் கடன்முடித்தார். **#3565**

நம்பியாரூரரும் சேரமானும் ஒக்க உடன் இருந்து உணவு உண்ண, உயர்வான தவத்தையுடைய பரவையார் மிக்க விருப்பத்தினால் உண்ணச்செய்து, பொருந்திய பணியாளர்கள் தக்க வகையினால் அறுவகைப்பட்ட உணவைத் தாம் தாம் வேண்டியவாறே இனிதாக உண்ணவும், கூடிய மிக்க மகிழ்ச்சி சிறக்கத், தூய்மையான விருந்து அளிக்கும் கடமையை இனிது ஆற்றி நிறைவு செய்தார்.

விளக்கவுரை
****

பனிநீர் விரவு சந்தனத்தின்
பசுங்கர்ப் பூர விரைக்கலவை
வனிதை யவர்கள் சமைத்தெடுப்பக்
கொடுத்து மகிழ்மான் மதச்சாந்தும்
புனித நறும்பூ மாலைகளும்
போற்றிக் கொடுத்துப் பொற்கொடியார்
இனிய பஞ்ச வாசமுடன்
அடைக்காய் அமுது மேந்தினார். **#3566**

பனி நீருடன் கலந்த சந்தனத்துடன் பச்சைக் கற்பூரம் சேர்ந்த மணக்கலவைக் குழம்பை, உரிய பெண்கள் அரைத்துச் சேர்த் துத் தர, அதைக் கொடுத்து, மகிழ்வு தரும் கத்தூரிச் சாந்தையும் தூய்மை யான மலர்களையும் தந்து, பொன்கொடி போன்ற பரவையார் இனிய ஐவகை நறுமணப் பொருள்களுடன் வெற்றிலை, பாக்கையும் ஏந்தினார்.

விளக்கவுரை

பனி நீருடன் கலந்த சந்தனத்துடன் பச்சைக் கற்பூரம் சேர்ந்த மணக்கலவைக் குழம்பை, உரிய பெண்கள் அரைத்துச் சேர்த் துத் தர, அதைக் கொடுத்து, மகிழ்வு தரும் கத்தூரிச் சாந்தையும் தூய்மை யான மலர்களையும் தந்து, பொன்கொடி போன்ற பரவையார் இனிய ஐவகை நறுமணப் பொருள்களுடன் வெற்றிலை, பாக்கையும் ஏந்தினார்.

ஆய சிறப்பிற் பூசனைகள்
அளித்த வெல்லாம் அமர்ந்தருளித்
தூய நீறு தங்கள்திரு
முடியில் வாங்கித் தொழுதணிந்து
மேய விருப்பி னுடனிருப்பக்
கழறிற் றறிவார் மெய்த்தொண்டின்
சேய நீர்மை யடைந்தாராய்
நம்பி செம்பொற் கழல்பணிந்தார். **#3567**

அத்தகைய சிறப்பால் செய்யப்பட்ட பூசனைகளை எல்லாம் விரும்பி ஏற்றுக்கொண்டு, தூய்மை செய்யும் திருநீற்றை வாங்கி வணங்கித் தம் திருமுடியில் அணிந்து, பொருந்திய விருப்பத்தி னோடு உடன் இருக்கப் பெற்றமையால், கழறிற்றறிவார், உண்மை யான திருத்தொண்டின் செம்மை தரும் தன்மையை உள்ளபடியே பெற்றவராய்ச் சுந்தரரின் திருவடிகளில் விழுந்து வணங்கினார்.

விளக்கவுரை

****

மலைநாட் டரசர் பெருமானார்
வணங்க வணங்கி எதிர்தழுவிக்
கலைநாட் பெருகு மதிமுகத்துப்
பரவை யார்தங் கணவனார்
சிலைநாட் டியவெல் கொடியாரைச்
சேரத் தந்தார் எனக்கங்கை
அலைநாட் கொன்றை முடிச்சடையார்
அருளே போற்றி யுடனமர்ந்தார். **#3568**

மலைநாட்டு மன்னர் பெருமானான சேரமான் வணங்கத் தாமும் எதிர் வணங்கித் தழுவிக்கொண்டு, கலைகள் நிறையப் பெற்ற முழுமதி போன்ற முகத்தையுடைய பரவையாரின் கணவரான நம்பியாரூரர், விற்குறியைப் பொறித்த வெற்றியுடைய சேரமானைச் சேருமாறு தந்தார் என்று, கங்கையாறு அலையும் புதுப்பூங்கொன்றை மலர் சூடிய சடையையுடைய இறைவரின் திருவருளைப் போற்றி உடனமர்ந்தருளினார்.

விளக்கவுரை

சேரமானை நம்பியாரூரர் காணும்தொறும், அவரைத் தோழமையாகப் பெறும்படி கருணை செய்த பெருமானையும் நினைவு கூர்வாராயினர். கங்கைஅலை - கங்கையாறு. நாட்கொன்றை - அன்ற லர்ந்த கொன்றை.

செல்வத் திருவா ரூர்மேவும்
செம்பொற் புற்றில் இனிதமர்ந்த
வில்வெற் புடையார் கழல்வணங்கி
வீதி விடங்கப் பெருமானை
மல்லற் பவனி சேவித்து
வாழ்ந்து நாளும் மனமகிழ்ந்து
சொல்வித் தகர்தாம் இருவர்களுந்
தொடர்ந்த காத லுடன்சிறந்தார். **#3569**

செல்வம் நிறைந்த திருவாரூரில் உள்ள செம்பொன் புற்றை இடம் கொண்டு இனிது விரும்பி வீற்றிருக்கும் வில்லாய மேருமலையையுடைய பெருமானின் திருவடிகளை வணங்கியும், வீதி விடங்கப் பெருமானான தியாகேசரைச் செழுமையான திரு விழாக் காலங்களில் வழிபட்டும், பெருவாழ்வு பெற்றவராய், நாள் தோறும் மனம் மகிழ்ந்து யாவரும் எடுத்துச் சொல்லும் பேரறிவாளர் களான இரு பெரு மக்களும் தொடர்ந்து வந்த பெரு விருப்பத்துடன் வீற்றிருந்தனர்.

விளக்கவுரை

பவனி - வீதிகண் தோறும் பெருமான் எழுந்தருளிவரல். மல்லல் - வளம். இவ்வளப்பத்தை அப்பர் பெருமான் அருளிய `முத்து விதானம்' *(தி.4 ப.21 பா.1)* எனத் தொடங்கும் அரிய பதிகத்தால் அறியலாம். இருவரும் சொல்வித்த கருத்துகளை அவரவரும் அருளிய திருவாக்குக்களால் அறியலாம்.

இவ்வா றொழுகும் நாளின்கண்
இலங்கு மணிப்பூண் வன்றொண்டர்
மைவாழ் களத்து மறையவனார்
மருவும் இடங்கள் பலவணங்கிச்
செய்வார் கன்னித் தமிழ்நாட்டுத்
திருமா மதுரை முதலான
மொய்வார் சடையார் மூதூர்கள்
இறைஞ்ச முறைமை யால்நினைந்தார். **#3570**

இங்ஙனம் இன்பம் பெருக இருவரும் மகிழ்ந்து வரும் நாளில், விளங்கும் மணிப் பூண்களை அணிந்த வன்றொண்டர், நஞ்சுபொருந்தும் கழுத்தையுடைய வேதியரான இறைவர் வீற்றிருக் கும் இடங்கள் பலவற்றையும் வணங்கிச் சென்று, வயல்கள் நிறைந்த `கன்னி நாடு' எனவும் `தமிழ் நாடு' எனவும் கூறப்படும் பாண்டிய நாட்டில் மாமதுரை முதலாக நீண்ட நெருங்கிய சடையையுடைய இறைவரின் பல பதிகளையும் வணங்குவதற்குத் திருவருள் கூட்ட நினைந்தார்.

விளக்கவுரை

****

சேரர் பிரானும் ஆரூரர்
தம்மைப் பிரியாச் சிறப்பாலும்
வாரம் பெருகத் தமக்கன்று
மதுரை யால வாயமர்ந்த
வீரர் அளித்த திருமுகத்தால்
விரும்பும் அன்பில் வணங்குதற்குச்
சார வெழுந்த குறிப்பாலுந்
தாமும் உடனே செலத்துணிந்தார். **#3571**

சேரமானும், சுந்தரரைப் பிரியாது உடன் உறைய விரும்பிய சிறப்புடைய எண்ணத்தாலும், அன்பு பெருகுமாறு அன்று தமக்கு மதுரைத் திருவாலவாயில் விரும்பி எழுந்தருளிய வீரரான சோமசுந்தரப் பெருமான் அளித்த திருமுகத்தை நினைவு கூர்ந்து, விரும்பிய அன்பால் சென்று அவரை வணங்குவதற்கு உள்ளத்தில் எழுந்த குறிப்பினாலும், தாமும் அவருடன் செல்வதற்குத் துணிந்தார்.

விளக்கவுரை

****

இருவர் திருவுள் ளமும்இசைந்த
பொழுதில் எழுந்து திருவாரூர்
ஒருவர் மலர்த்தாள் புக்கிறைஞ்சி
யுடன்பாட் டருளாற் போந்தருளி
மருவும் உரிமைப் பெருஞ் சுற்றம்
வரம்பில் பணிகள் வாகனங்கள்
பொருவில் பண்டா ரங்கொண்டு
போது வார்கள் உடன்போத. #3572

இருவர்தம் உள்ளமும் இசைந்தபோது, மாளிகை யினின்றும் புறப்பட்டு எழுந்து, திருவாரூரில் புற்றிடம் கொண்ட இறைவரின் மலர்போன்ற அழகிய திருவடிகளைப் பூங்கோயிலுள் புகுந்து வணங்கி, அவரது திருவருளைப் பெற்றுப் புறம் போந்து, உடன்வரப் பெறும் உரிமையுடைய பெருஞ் சுற்றங்களும், எல்லை யில்லாத அணிகளையும் ஊர்திகளையும் ஒப்பில்லாத சேம நிதிகளை யும் கொண்டு செல்பவர்களும் தம்முடன் வர,

விளக்கவுரை

****

சேவித் தணையும் பரிசனங்கள்
சூழத் திருவா ரூர்இறைஞ்சிக்
காவிற் பயிலும் புறம்பணையைக்
கடந்து போந்து கீழ்வேளூர்
மேவிப் பரமர் கழல்வணங்கிப்
போந்து வேலைக் கழிக்கானல்
பூவில் திகழும் பொழில்நாகை
புகுந்து காரோ ணம்பணிந்தார். #3573

தம்மை வழிபட்டு வரும் ஏவலர்கள் சூழ, அத்திரு வாரூரை வணங்கிச் சோலைகள் மிக்க புறம்பணையைக் கடந்து போய்த், `திருக்கீழ்வேளூரைச்' சேர்ந்து, அங்கு இறைவரின் திருவடி களை வணங்கி, மேற்சென்று, கடல்கழிக் கானல் சூழ்ந்து மலர்கள் நிறைந்து விளங்கும் சோலைகளையுடைய நாகப்பட்டினத்திற்குச் சென்று திருக்காரோணத்தை வணங்கினர்.

விளக்கவுரை

தம்மை வழிபட்டு வரும் ஏவலர்கள் சூழ, அத்திரு வாரூரை வணங்கிச் சோலைகள் மிக்க புறம்பணையைக் கடந்து போய்த்,

`திருக்கீழ்வேளூரைச்' சேர்ந்து, அங்கு இறைவரின் திருவடி களை வணங்கி, மேற்சென்று, கடல்கழிக் கானல் சூழ்ந்து மலர்கள் நிறைந்து விளங்கும் சோலைகளையுடைய நாகப்பட்டினத்திற்குச் சென்று திருக்காரோணத்தை வணங்கினர்.

திருக்கா ரோணச் சிவக்கொழுந்தைச்
சென்று பணிந்து சிந்தையினை
உருக்கார் வச்செந் தமிழ்மாலை
சாத்திச் சிலநாள் உறைந்துபோய்ப்
பெருக்கா றுலவு சடைமுடியார்
இடங்கள் பலவும் பணிந்தேத்தி
அருட்கா ரணர்தந் திருமறைக்கா
டணைந்தார் சேர ராரூரர். **#3574**

திருநாகைக்காரோணத்தில் வீற்றிருக்கும் சிவக்கொழுந்தாய இறைவரைப் பணிந்து, சிந்தையை உருக்குகின்ற ஆர்வத்தினால், பரந்த செந்தமிழ் மாலையான திருப்பதிகத்தை அருளிச் செய்து சாத்தி, சில நாள்கள் அங்குத் தங்கியிருந்து, மேற் சென்று, பெருகும் கங்கை பொருந்துவதற்கு இடமான சடையை யுடைய பெருமானார் வீற்றிருக்கும் பதிகள் பலவற்றையும் வணங்கிப் போற்றிச் சென்று, அருளுடைய மூல முதல்வரான இறைவரின் திரு மறைக்காட்டைச் சேரமானும் சுந்தரரும் அடைந்தனர்.

விளக்கவுரை

திருநாகைக் காரோணத்தில் அருளிய பதிகம் `பத்தூர்புக் கிரந்துண்டு' *(தி.7 ப.46)* எனத்தொடங்கும் கொல்லிக்கௌவாணப் பதிகமாகும். இடங்கள் பலவும் என்பன பொய்கைநல்லூர், திருவரிஞ் சையூர், திருக்கள்ளிக்குடி, திருக்கோளிலி, திருவாய்மூர், திருமுகத் தலை முதலாயினவாகலாம். பதிகங்கள் கிடைத்தில.

முந்நீர் வலங்கொள் மறைக்காட்டு
முதல்வர் கோயில் சென்றெய்திச்
செந்நீர் வாய்மைத் திருநாவுக்
கரசும் புகலிச் சிவக்கன்றும்
அந்நேர் திறக்க அடைக்கவெனப்
பாடுந் திருவா யிலையணைந்து
நன்னீர் பொழியும் விழியினராய்
நாயன் மாரை நினைந்திறைஞ்சி. **#3575**

கடலானது சூழ்ந்து வலம்கொளும் திருமறைக் காட்டில் வீற்றிருக்கின்ற திருக்கோயிலை அடைந்து, திருநின்ற செம் மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரசரும், சீகாழிப்பதியில் தோன்றிய சிவக்கன்றான

திருஞானசம்பந்தரும் நேர்முகமாய்த் திறக்கவும் அடைக்கவுமாகப் பாடப் பெற்ற வாயிலை அடைந்து, அருள்கண்ணீர் வழியும் விழிகளையுடையவர்களாகி அப்பெருமக் களையும் மனத்தகத்து எண்ணி வணங்கி,

விளக்கவுரை

****

நிறைந்த மறைகள் அர்ச்சித்த
நீடு மறைக்காட் டருமணியை
இறைஞ்சி வீழ்ந்து பணிந்தெழுந்து
போற்றி யாழைப் பழித்தென்னும்
அறைந்த பதிகத் தமிழ்மாலை
நம்பி சாத்த அருட்சேரர்
சிறந்த அந்தா தியிற்சிறப்பித்
தனவே யோதித் திளைத்தெழுந்தார். **#3576**

எங்கும் நிறைந்த ஒளிவடிவான மறைகள் வழிபாடு செய்த திருமறைக்காட்டில் வீற்றிருக்கின்ற அருமணி போன்றவரான இறைவரைப் பணிந்து, நிலம் பொருந்த விழுந்து வணங்கி, எழுந்து, போற்றி, `யாழைப் பழித்து' எனத் தொடங்கும் திருப்பதிகத்தை நம்பியாரூர் பாடிச் சாத்த, அருள் பொருந்திய சேரர் பெருமான் தாம் தில்லையில் பாடிய சிறப்புடைய பொன்வண்ணத்தந்தாயில் இறைவரைச் சிறப்பித்துப் பாடியவற்றையே மீளவும் ஓதி இன்புற்றனர்.

விளக்கவுரை

`யாழைப் பழித்தன்ன' *(தி.7 ப.71)* என்னும் முதற் குறிப்புடைய பதிகம் காந்தாரப் பண்ணில் அமைந்த பதிகமாகும். சேரர் பெருமான் அருளிய பொன்வண்ணத்தந்தாதியில் *(தி.11 ப.6)* திரு மறைக்காட்டிறைவரைப் போற்றும் நிலையில் அமைந்தன இரு பாடல் களாகும். அவை: `துயரும் தொழும்', `கொட்டும்' எனத் தொடங்கு வன. எனவே முன்னர் அருளிய பாடல்களை மீண்டும் ஓதி வணங்க லும் மரபு எனத் தெரிகிறது. `சொல்லியனவே சொல்லி ஏத்துகப் பானை' *(தி.? ப.? பா.?)* எனவரும் சுந்தரரின் திருவாக்கையும் நினைவு கூர்க. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

எழுந்து பணிந்து புறத்தெய்தி
இருவர் பெருந்தொண் டருஞ்சிலநாள்
செழுந்தண் பழனப் பதியதனுள்
அமர்ந்து தென்பால் திரைக்கடனஞ்
சழுந்து மிடற்றார் அகத்தியான்
பள்ளி யிறைஞ்சி அவிர்மதியக்
கொழுந்து வளர்செஞ் சடைக்குழகர்
கோடிக் கோயில் குறுகினார். **#3577**

மேற்கூறியவாறு, திருமுன்பில் நின்று திளைத்தெ ழுந்து வணங்கி வெளியில் வந்து, இருவரும் சில நாள்கள் செழுமை யான குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த அத்திருப்பதியில் விரும்பி வீற்றிருந் தருளி, அங்கு

இருந்தவாறே, அதன் தெற்கில் உள்ள அலை பொருந் திய கடல் நஞ்சை உட்கொண்ட கழுத்தினையுடைய இறைவரின் திரு அகத்தியான்பள்ளிக்குச் சென்று வணங்கி கலைகள் வளரும் திருக் கோடிக்குழகர் கோயிலைச் சேர்ந்தனர்.

விளக்கவுரை

திருஅகத்தியான்பள்ளியில் அருளிய பதிகம் கிடைத்திலது.

கோடிக் குழகர் கோயில்அயல்
குடிக ளொன்றும் புறத்தெங்கும்
நாடிக் காணா துள்புக்கு
நம்பர் பாதந் தொழுதுள்ளம்
வாடிக் கடிதாய்க் கடற்காற்றென்று
எடுத்து மலர்க்கண் ணீர்வாரப்
பாடிக் காடு காள்புணர்ந்த
பரிசும் பதிகத் திடைவைத்தார். **#3578**

கோடிக்குழகர் கோயிலின் அயலிலும் அதன் புறத்திலும் எங்கும் தேடியும் ஒரு குடியும் காணாத நிலையில், கோயி லுள் புகுந்து இறைவரின் திருவடியைத் தொழுது உள்ளம் வருந்தி மலர் போன்ற கண்களில் நீர் வரக் `கடிதாய்க் காற்று' எனத் தொடங்கும் பதிகம் பாடிக், கொற்றவையுடன் இறைவர் வீற்றிருக்கின்ற தன்மையை யும் அப்பதிகத்துள் வைத்துப் போற்றினர்.

விளக்கவுரை

`கடிதாய்க் காற்று' *(தி.7 ப.32)* எனும் முதற் குறிப்புடைய பதிகம் கொல்லிப் பண்ணில் அமைந்ததாகும். இப்பதிகத்தில் `குடிதான் அயலே இருந்தாற் குற்றம் ஆமோ' என முதற்பாடலிலும், தனியே யிருந்தாய் என *2, 3, 6, 7, 8* ஆகிய பாடல்களிலும், `அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே', `இரவே துணையாயிருந்தாய் எம் பிரானே' என முறையே *1, 6* ஆகிய பாடல்களிலும் நம்பிகள் அருளும் திருவாக்குகளின் பிழிவாகவே, `கோடிக்குழகர் கோயில் அயல் குடிகள் ஒன்றும் புறத்தெங்கும் நாடிக் காணாது உள்புக்கு' என ஆசிரியர் அருளுவாராயினார். காடுகாள் - கொற்றவை. காடுகிழாள் என்பதன் மரூஉ. வனதுர்க்கை என இக்காலத்து அழைப்பர். இப்பதி கத்து வரும் ஐந்தாவது பாடலில் `கையார்வளைக் காடுகாளோடும் உடனாய்' எனவரும் பொருளுண்மை கொண்டே, `காடுகாள் புணர்ந்தவராய்' என ஆசிரியர் அருளுவாராயினர்.

அங்கு வைகிப் பணிந்தருளால்
போவார் அகன்சோ ணாட்டரனார்

தங்குமிடங்கள் வணங்கிப் போய்ப்
பாண்டி நாடு தனைச்சார்ந்து
திங்கண் முடியார் திருப்புத்தூர்
இறைஞ்சிப் போந்து சேண்விளங்கு
மங்குல் தவழும் மணிமாட
மதுரை மூதூர் வந்தணைந்தார். **#3579**

திருக்கோடிக்குழகர் உறையும் காட்டில் தங்கி, வணங்கி, விடைபெற்றுச் செல்வாராய்ச் சோழநாட்டில் சிவபெருமான் விளங்க வீற்றிருக்கும் திருப்பதிகளையும் வணங்கிச் சென்று, பாண் டிய நாட்டைச் சேர்ந்து, பிறைச் சந்திரனைச் சூடிய முடியையுடைய இறைவரின் திருப்புத்தூரினை வணங்கிச் சென்று, வானில் விளங்கும் முகில்கள் தவழ்கின்ற அழகான மாடங்கள் நிறைந்த மதுரை மூதூரை வந்தடைந்தார்.

விளக்கவுரை

சோழநாட்டில் வணங்கிச் சென்ற பதிகள் திருக்கடிக் குளம், திருஇடும்பாவனம், திருவுசாத்தானம் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். இப்பதிகளுக்கும் பாண்டிநாட்டுத் திருப்புத்தூருக்கும் நம்பிகள் அருளிய பதிகங்கள் கிடைத்தில.

சேரமான் தோழரும்அச்
சேரர்பிரா னும்பணிப்பூண்
ஆரமார் பரைமதுரை
ஆலவா யினில்வணங்க
வாரமா வந்தணைய
வழுதியார் மனக்காதல்
கூரமா நகர்கோடித்
தெதிர்கொண்டு கொடுபுக்கார். **#3580**

சேரமான் தோழரான நம்பியாரூரரும் சேரர் பெருமானும், பாம்பை அணியாய் அணிந்த மார்பினரான சிவ பெரு மானை மதுரைத் திருவாலவாயில் வணங்கும் பொருட்டு அன்புடன் வந்து சேர, பாண்டிய மன்னர் மன விருப்பம் மிக மாநகரத்தை அணி செய்து, எதிர்கொண்டு வரவேற்க, நகரின் உள் புகுந்தனர்.

விளக்கவுரை

வாரமா - மிகுந்த அன்போடு. கோடித்து - அணிசெய்து.

தென்னவர்கோன் மகளாரைத்
திருவேட்டு முன்னரே
தொன்மதுரை நகரின்கண்

இனிதிருந்த சோழனார்
அன்னவர்க ளுடன்கூட
அணையஅவ ருங்கூடி
மன்னுதிரு வாலவாய்
மணிக்கோயில் வந்தணைந்தார். #3581
வாரமா - மிகுந்த அன்போடு. கோடித்து - அணிசெய்து.

விளக்கவுரை

****

திருவால வாய்அமர்ந்த
செஞ்சடையார் கோயில்வலம்
வருவார்முன் வீழ்ந்திறைஞ்சி
வன்றொண்டர் வழித்தொண்டு
தருவாரைப் போற்றிசைத்துத்
தாழ்ந்தெழுந்து வாழ்ந்ததமிழ்ப்
பெருவாய்மை மலர்புனைந்து
பெருமகிழ்ச்சி பிறங்கினார். #3582
வாரமா - மிகுந்த அன்போடு. கோடித்து - அணிசெய்து.

விளக்கவுரை

வாரமா - மிகுந்த அன்போடு. கோடித்து - அணிசெய்து.

படியேறு புகழ்ச்சேரர்
பெருமானும் பார்மிசைவீழ்ந்
தடியேனைப் பொருளாக
அளித்ததிரு முகக்கருணை
முடிவுஏதென் றறிந்திலேன்
எனமொழிகள் தடுமாறக்
கடியேறு கொன்றையார்
முன்பரவிக் களிகூர்ந்தார். #3583
உலகம் ஏற்றம் அடைதற்கேதுவான புகழையுடைய சேரமானும், திருமுன்பு நிலத்தில் விழுந்து, `அடியேனையும் ஒரு பொருளாகக்கொண்டு திருமுகத்தைத் தந்தருளிய அருட் பெருக்கின் எல்லையை அளவிட அறியேன்!' என்று கூறிப் போற்றிச் சொற்கள் எழமாட்டாமல் நாத்தழுதழுக்க, மணம் விரிந்த கொன்றை மாலையை அணிந்த சிவபெருமானின் திருமுன்பு பணிந்து மகிழ்ந்தார்.

விளக்கவுரை

****

செம்பியனா ருடன்செழியர்

தாம்பணிந்து சேரருடன்
நம்பியும்முன் புறத்தணைய
நண்ணியபே ருவகையால்
உம்பர்பிரான் கோயிலினின்
றுடன்கொடுபோ யிருவர்க்கும்
பைம்பொன்மணி மாளிகையிற்
குறைவறுத்தார் பஞ்சவனார். **#3584**

உலகம் ஏற்றம் அடைதற்கேதுவான புகழையுடைய சேரமானும், திருமுன்பு நிலத்தில் விழுந்து, `அடியேனையும் ஒரு பொருளாகக்கொண்டு திருமுகத்தைத் தந்தருளிய அருட் பெருக்கின் எல்லையை அளவிட அறியேன்!' என்று கூறிப் போற்றிச் சொற்கள் எழமாட்டாமல் நாத்தழுதழுக்க, மணம் விரிந்த கொன்றை மாலையை அணிந்த சிவபெருமானின் திருமுன்பு பணிந்து மகிழ்ந்தார்.

விளக்கவுரை

****

உளம்மகிழக் கும்பிட்டங்
குறையுநாள் உதியருடன்
கிளரொளிப்பூண் வன்றொண்டர்
தாமிருந்த இடங்கெழுமி
வளவனார் மீனவனார்
வளம்பெருக மற்றவரோ
டளவளா வியவிருப்பால்
அமர்ந்துகலந் தினிதிருந்தார். **#3585**

உள்ளம் மகிழச் சிவபெருமானை வணங்கி, அத்திருப்பதியில் தங்கிய நாள்களில், சேரமானுடன் சுந்தரர் தாம் தங்கி யிருந்த இடத்தை அடைந்து, சோழரும் பாண்டியரும் வளம் பெருகும் படிச் சார்ந்து, அவர்களுடன் உரையாடிக் கலந்த விருப்பத்தால் அமர்ந்து கூடி இனிதாய் இருந்தனர்.

விளக்கவுரை

உதியர் - சேரர்.

அந்நாளில் மதுரைநகர்
மருங்கரனார் அமர்பதிகள்
பொன்னாரம் மணிமார்பிற்
புரவலர்மூ வரும்போதச்
செந்நாவின் முனைப்பாடித்
திருநாடர் சென்றிறைஞ்சிச்

சொன்மாலை களுஞ்சாத்தித்
தொழத்திருப்பூ வணத்தணைவார். #3586

அந்த நாள்களில் மதுரைப்பதியின் அருகில் இறைவர் விளங்க எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளைப் பொன் மாலைகளையும் மணிகளையும் பூண்ட மார்பையுடைய முடி மன்னர் கள் மூவரும் உடன்வர, செம்மை விளங்கும் நாவையுடைய திரு முனைப்பாடித் திருநாட்டின் தலைவரான நம்பிகள், சென்று வணங் கித், திருப்பதிகங்களைப் பாடி, மேலும் வணங்குவதற்கு எழுந்து, திருப்பூவணத்தை அடைந்தார்.

விளக்கவுரை

மூவருடனும் மதுரை நகரில் நம்பிகள் வணங்கிய பதிகள் எவையெனத் தெரிந்தில.

நீடுதிருப் பூவணத்துக்
கணித்தாக நேர்செல்ல
மாடுவருந் திருத்தொண்டர்
மன்னியஅப் பதிகாட்டத்
தேடுமறைக் கரியாரைத்
திருவுடையார் என்றெடுத்துப்
பாடிசையிற் பூவணமீ
தோவென்று பணிந்தணைவார். #3587

நிலைத்த திருப்பூவணம் என்ற திருப்பதிக்கு அண்மையில் நேரே செல்லும்பொழுது, பக்கத்தே வரும் தொண்டர் கள், நிலைபெற்ற அப்பதியைக் காட்டத் தேடும் மறைகளுக்கும் எட்டுதற்கு அரிய இறைவரைத் `திருவுடையார்' எனத் தொடங்கிப், பாடும் இசை பொருந்திய திருப்பதிகத்தில் `பூவணம் ஈதோ!' என்று போற்றி வணங்கிச் சேர்வாராகி,

விளக்கவுரை

`திருவுடையார்'* எனத் தொடங்கும் பதிகம் இந்தளப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.11)*. இப்பதிகப் பாடல்தொறும் `பூவணம் ஈதோ!'* என வருதலின், அத்தொடர் வழி இவ்வரலாற் றமைப்பை அருளுவாராயினர்.

சென்றுதிருப் பூவணத்துத்
தேவர்பிரான் மகிழ்கோயில்
முன்றில்வலங் கொண்டிறைவர்
முன்வீழ்ந்து பணிந்தெழுந்து
நின்றுபர விப்பாடி

நேர்நீங்கி யுடன்பணிந்த
வென்றிமுடி வேந்தருடன்
போந்தங்கண் மேவினார். **#3588**

`திருவுடையார்' எனத் தொடங்கும் பதிகம் இந்தளப் பண்ணில் அமைந்ததாகும் (தி.7 ப.11). இப்பதிகப் பாடல்தொறும் `பூவணம் ஈதோ!' என வருதலின், அத்தொடர் வழி இவ்வரலாற் றமைப்பை அருளுவாராயினர்.

விளக்கவுரை

`திருவுடையார்'* எனத் தொடங்கும் பதிகம் இந்தளப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.11)*. இப்பதிகப் பாடல்தொறும் `பூவணம் ஈதோ!'* என வருதலின்*,* அத்தொடர் வழி இவ்வரலாற் றமைப்பை அருளுவாராயினர்.

அப்பதியில் அமர்ந்திறைஞ்சிச்
சிலநாளில் ஆரூரர்
முப்பெருவேந் தர்களோடு
முதன்மதுரை நகரெய்தி
மெய்ப்பரிவில் திருவால
வாயுடையார் விரைமலர்த்தாள்
எப்பொழுதும் பணிந்தேத்தி
இன்புற்றங் கமர்கின்றார். **#3589**

`திருப்பூவணம்' என்ற அத்திருப்பதியில் விரும்பித் தங்கியிருந்து இறைவரை வணங்கியிருந்து, பின் சில நாள்களில், நம்பியாரூரர் பெருவேந்தர் மூவருடனே முதன்மையுடைய மதுரை யைச் சேர்ந்து, உண்மை கூர்ந்த பேரன்பால் ஆலவாயுடைய இறைவ னின் மணம் கமழும் மலர் போன்ற திருவடிகளை எப்போதும் வணங் கிப் போற்றி இன்பம் எய்தி, அங்கு விரும்பி எழுந்தருளியிருந்தார்.

விளக்கவுரை

****

செஞ்சடையார் திருவாப்ப
னூர்திருவே டகம்முதலாம்
நஞ்சணியுங் கண்டரவர்
நயந்தபதி நண்ணியே
எஞ்சலிலாக் காதலினால்
இனிதிறைஞ்சி மீண்டணைந்து
மஞ்சணையும் மதில்மதுரை
மாநகரின் மகிழ்ந்திருந்தார். **#3590**

பின்பு சிவந்த சடையையுடைய இறைவரின் `திரு ஆப்பனூர்', `திருவேடகம்' முதலான நஞ்சை உண்ட கழுத்தையுடைய சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் பதிகளுக்குச் சென்று குறைவற்ற பெருவிருப்புடன் இனிதாக வணங்கி, மீண்டும் முகில் தோயும் மதிலையுடைய மதுரை நகரில் சேர்ந்து மகிழ்ந்திருந்தார்.

விளக்கவுரை

இப்பதிகளில் அருளிய பதிகங்கள் கிடைத்தில. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பரமர்திருப் பரங்குன்றில்
சென்றுபார்த் திபரோடும்
புரமெரித்தார் கோயில்வலங்
கொண்டுபுகுந் துள்ளிறைஞ்சிச்
சிரமலிமா லைச்சடையார்
திருவடிக்கீழ் ஆட்செய்யும்
அருமைநினைந் தஞ்சுதும்என்
றாரூரர் பாடுவார். **#3591**

இப்பதிகளில் அருளிய பதிகங்கள் கிடைத்தில. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

கோத்திட்டை எனஎடுத்துக்
கோதில்திருப் பதிகவிசை
மூர்த்தியார் தமைவணங்கி
முக்கோக்கள் தம்முன்பே
ஏத்தியவண் டமிழ்மாலை
இன்னிசைபா டிப்பரவிச்
சாத்தினார் சங்கரனார்
தங்குதிருப் பரங்குன்றில். **#3592**

`கோத்திட்டையும்' எனத் தொடங்கிக் குற்றம் இல்லாத திருப்பதிக இசையினால் இறைவரை வணங்கி, மூவேந்தரின் முன்பு, வளப்பம் மிக்க தமிழ் மாலையை இனிய இசையால் பாடிப் போற்றிச் சங்கரர் தங்கியிருக்கும் திருப்பரங்குன்றத்தின் இறைவருக்கு ஆரூரர் சாத்தினார்.

விளக்கவுரை

இம்முதற் குறிப்புடைய பதிகம் இந்தளப்பண்ணில் அமைந்ததாகும்(*தி.7 ப.2*). இப்பதிகப் பாடல்தொறும் பெருமானின் சீலமும், கோலமும் சுட்டி, `அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதும்' என நிறைவு படுத்துகின்றார். அதனை உளங்கொண்டே ஆசிரியர் இதற்கு முன்னைய பாட்டில், `திருவடிக்கீழ் ஆட்செய்யும் அருளை நினைந்து அஞ்சுதும் என்றார்'

என்றருளுவாராயினர். இப்பதிகத் திருக்கடைக்காப்பில் மூவேந்தர் முன்னே மொழிந்தமையை கூறியிருத் தலின், அதனையும் இப்பாடற் கண், சேக்கிழார் குறிப்பாராயினர். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

இறைவர்திருத் தொண்டுபுரி
யருமையினை இருநிலத்து
முறைபுரியும் முதல்வேந்தர்
மூவர்களும் கேட்டஞ்சி
மறைமுந்நூல் மணிமார்பின்
வன்றொண்டர் தமைப்பணிந்தார்
நிறைதவத்தோர் அப்பாலும்
நிருத்தர்பதி தொழநினைந்தார். **#3593**

சிவபெருமானிடத்துத் திருத்தொண்டு செய்யும் அருமைப்பாட்டை, இப்பேருலகை ஆளும் முதன்மைவாய்ந்த முடி மன்னரான மன்னர் மூவரும் கேட்டுத் தாமும் அஞ்சி, மறைகளில் விதித்த முந்நூல் அணிந்த அழகிய மார்பையுடைய சுந்தரரை வணங் கினர். நிறைந்த தவத்தையுடைய சுந்தரர் அப்பாலும் இருக்கின்ற இறைவரின் பதிகளுக்கும் சென்று வணங்குதற்கு எண்ணினார்.

அந்நாட்டுத் திருப்பதிகள்
பலவும்அணைந்து இறைஞ்சமலை
நன்னாட்டு வேந்தருடன்
நம்பிதாம் எழுந்தருள
மின்னாட்டும் பன்மணிப்பூண்
வேந்தர்இரு வருமீள்வார்
தென்னாட்டு வேண்டுவன
செய்தமைப்பார் தமைவிடுத்தார். **#3594**

அந்நாட்டின் அருகில் உள்ள பதிகள் பலவற்றை யும் சென்று வணங்க நன்மையுடைய மலைநாட்டு மன்னரான சேரமானுடனே சுந்தரர் எழுந்தருள, ஒளி விளங்கும் பல மணிகள் இழைத்த அணிகளை அணிந்த சோழ பாண்டியராகிய இருபெருவேந் தரும், மதுரைக்கு மீள்வார், தென்நாட்டில் அவர்களுக்கு வேண்டு வனவற்றைச் செய்தமைத்தற்குரிய பணியாளர்களை உடன் செல்ல அனுப்பினர்.

விளக்கவுரை

வேந்தர் இருவர் - சோழரும், பாண்டியரும். தாம் மீளினும், ஆரூரருக்கும் சேரர் பெருமானுக்கும் செல்லும் இடங்களில் எல்லாம் வேண்டுவனவற்றை அமைத்தற்கெனப் பணியாளர்களை அவர்களுடன் அனுப்பி வைத்தமை, அவ்விருவர் தம் பத்திமை யையும், கடமையுணர்வையும் வெளிப்படுத்துகின்றன.

இருபெருவேந் தரும்இயல்பின்
மீண்டதற்பின் எழுந்தருளும்
பொருவருஞ்சீர் வன்றொண்டர்
புகழ்ச்சேர ருடன்புனிதர்
மருவியதா னம்பலவும்
பணிந்துபோய் மலைச்சாரல்
குருமணிகள் வெயிலெறிக்கும்
குற்றாலஞ் சென்றடைந்தார். **#3595**

முன் சொன்ன வண்ணம், சோழ பாண்டியரான இரு பெரு மன்னர்களும் மீண்டு சென்றபின்பு, எழுந்தருளிச் செல்கின்ற சுந்தரர், புகழையுடைய சேரமானுடனே, இறைவர் வெளிப்பட எழுந் தருளியிருக்கும் திருப்பதிகள் பலவற்றையும் வணங்கிச் சென்று, மலை யின் சாரலில், நிறமுடைய மணிகள் கதிரவன் ஒளி என விளங்கும் திருக்குற்றாலத்தைச் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

தானம் பலவாவன, பாண்டி நாட்டின் தென்பகுதியில் உளவாய திருப்பதிகளாம்.

குற்றாலத் தினிதமர்ந்த
கூத்தர்குரை கழல்வணங்கிச்
சொல்தாம மலர்புனைந்து
குறும்பலாத் தொழுதிப்பால்
முற்றாவெண் மதிமுடியார்
பதிபணிந்து மூவெயில்கள்
செற்றார்மன் னியசெல்வத்
திருநெல்வே லியையணைந்தார். **#3596**

திருக்குற்றாலத்தில் இனிதாய் எழுந்தருளியுள்ள கூத்தரின் ஒலிக்கும் கழலை அணிந்த திருவடிகளை வணங்கிச் சொல் மாலை புனைந்து போற்றி, திருக்குறும்பலா என்னும் கோயிலின் இறைவரை வணங்கி, மேலும் இப்பகுதியிலுள்ள முதிராத வெண்மை யான பிறைச் சந்திரனைச் சூடிய இறைவரின் திருப்பதிகளையும் வணங்கிச் சென்று, முப்புரங்களையும் அழித்த பெருமான் நிலைபெற எழுந்தருளிய செல்வத் திருநெல்வேலியைச் சென்றடைந்தார்.

விளக்கவுரை

கூத்தர் கோயிலும், குறும்பலாக் கோயிலும் வெவ் வேறானவை. இவ்விரண்டிலும் ஆரூரர் அருளிய பதிகங்கள் கிடைத் தில. \`குற்றாலத்தினிதமர்ந்த கூத்தர்' எனும் தொடர், \`குற்றாலத்தமர்ந்து

உறையும் கூத்தா' எனவரும் திருவாசகத் தொடரை நினைவு கூரச் செய்யும்.

நெல்வேலி நீற்றழகர்
தமைப்பணிந்து பாடிநிகழ்
பல்வேறு பதிபிறவும்
பணிந்தன்பால் வந்தணைந்தார்
வில்வேட ராய்வென்றி
விசயன்எதிர் பன்றிப்பின்
செல்வேத முதல்வரமர்
திருவிரா மேச்சரத்து. **#3597**

திருநெல்வேலியில் வீற்றிருந்தருளும் திருநீற்று அழகரான இறைவரை வணங்கிப் பாடி, அப்பகுதிகளில் உள்ள பல் வேறு பதிகளையும், ஆங்காங்குள்ள திருக்கோயில்களையும் அன்பால் பணிந்து சென்று, வில்லை ஏந்திய வேடர் உருவுடன் வெற்றியினை யுடைய அருச்சுனனுக்கு முன், பன்றியின் பின் சென்ற மறை முதல்வ ரான இறைவர் விரும்பி வீற்றிருக்கின்ற இராமேச்சுரத்திற்கு வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

பதிபிறவும் என்பன திருச்செந்தூர், திருஉத்தர கோசமங்கை முதலாய திருப்பதிகளாகும். திருச்சுழியல், கானப்பேர் முதலாய பதிகளைப் பின்னர் வழிபட்டார் என வருதலின், திருநெல் வேலியிலிருந்து இராமேச்சுரத்திற்கு வந்தது கடற்கரை வழிவந்த பதிகளாகவே கருதத் தக்கனவாம்.

மன்னும்இரா மேச்சரத்து
மாமணியை முன்வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப்
பயில்கின்றார் பாம்பணிந்த
சென்னியர்மா தோட்டத்துத்
திருக்கேதீச் சரஞ்சார்ந்து
சொன்மலர்மா லைகள்சாத்தித்
தூரத்தே தொழுதமர்ந்தார். **#3598**

நிலைபெற்ற இராமேச்சரத்தில் எழுந்தருளியிருக் கும் பெரிய சிந்தாமணி போன்ற இறைவரை முன் வணங்கிப் போற்றி, தமிழ்மாலையான திருப்பதிகத்தைப் பாடிச் சாத்தி, பாம்புகளை அணிந்த முடியையுடைய இறைவர் வீற்றிருந்தருளும் ஈழநாட்டில் உள்ள மாதோட்டத்துத் திருக்கேதீச்சுரத்தைச் சிந்தித்து, அழகிய சொல்மாலைகளான திருப்பதிகத்தைப் பாடிச் சாத்திக், கடல் இடையில் உள்ளதால், தொலைவில் நின்றபடியே தொழுது, அங்குத் தங்கி இருந்தார்.

விளக்கவுரை

திருக்கேதீச்சரப் பதிக்குரிய திருப்பதிகமே கிடைத்துள் ளது. அது, `நத்தார் படை' *(தி.7 ப.80)* எனத் தொடங்கும் நட்டபாடைப் பண்ணில் அமைந்ததாம். மாதோட்டம் - ஊர்ப் பெயர். கேதீச்சரம் - கோயிலின் பெயர்.

திருஇரா மேச்சரத்துச்
செழும்பவளச் சுடர்க்கொழுந்தைப்
பரிவினால் தொழுதகன்று
பரமர்பதி பிறபணிந்து
பெருவிமா னத்திமையோர்
வணங்குபெருந் திருச்சுழியல்
மருவினார் வன்றொண்டர்
மலைவேந்த ருடன்கூட. **#3599**

திருஇராமேச்சரத்தில் சிவந்த பவளம் போன்ற சுடர்க்கொழுந்தாகவுள்ள இறைவரை வணங்கித் தொழுது, அங்கி ருந்து இறைவரின் பதிகள் பலவற்றையும் பணிந்து சென்று, வன் றொண்டர் மலைநாட்டு மன்னரான சேரமானுடனாகப் பெரிய வானூர்திகளில் வந்து தேவரும் வணங்கிவரும் பெரிய `திருச்சுழி யலை' வந்து அடைந்தார்.

விளக்கவுரை

பரமர் பதிபிற என்பன இளையான்குடி, தஞ்சாக்கை முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார்.

திருச்சுழியல் இடங்கொண்ட
செம்பொன்மலைச் சிலையாரைக்
கருச்சுழியின் வீழாமைக்
காப்பாரைக் கடல்விடத்தின்
இருட்சுழியு மிடற்றாரை
யிறைஞ்சியெதி ரிதழிமலர்ப்
பருச்சுழியத் துடனூனா
யுயிரெனும் பாமலர்புனைந்தார். **#3600**

திருச்சுழியலை இடனாகக் கொண்டு வீற்றிருக் கின்றவரை, செம்பொன் மலையையே வில்லாய் ஏந்தியவரை, கருப்பமான சுழியில் விழாமல் காப்பவரை, கடலில் எழுந்த நஞ்சின் கருமைதங்கிய கழுத்தினையுடையவரை, திருமுன்பு விழுந்து வணங் கிக் கொன்றை மலர்மாலையால் ஆன பருத்த சுழியத்துடன் கூட, `ஊனாய் உயிர்' எனத் தொடங்கும் சொல்மாலையைச் சூட்டினார்.

விளக்கவுரை

சுழியம் - திருச்சடையின்கண் அணியத்தகும் பருத்த மாலை. இம்மாலையுடன் சொல்மாலையையும் சூட்டினார். இச் சொல்மாலை `ஊனாய் உயிராய்' *(தி.7 ப.82)* எனத் தொடங்கும் நட்டராகப் பண்ணிலமைந்த பதிகமாகும். நட்டபாடைப் பண் எனக் குறிக்கத்தக்கது, நட்டராகம் என இதுபொழுதுள்ள பதிப்புகளில் தவறிக் குறித்தனர் போலும் என ஐயுறுவர் சிவக்கவிமணியார். அவர்தம் ஆய்வையும் காண்க. கருச்சுழி - கருப்பமாகிய மடு. இருட்சுழியும் - இருள்தங்கும் கழுத்து.

அங்கணரைப் பணிந்துறையும்
ஆரூரர்க் கவ்வூரில்
கங்குலிடைக் கனவின்கண்
காளையாந் திருவடிவால்
செங்கையினிற் பொற்செண்டுந்
திருமுடியிற் சுழியமுடன்
எங்குமிலாத் திருவேடம்
என்புருக முன்காட்டி. **#3601**

இறைவரைத் தொழுது அங்குத் தங்கியிருந்த நம்பியாரூரருக்கு இரவில், கனவில் வெளிப்பட்டுக் காளை வடிவத் துடன் தோன்றிச், சிவந்த கையில் பொற்செண்டும், முடியில் சுழியமும் கொண்டு, எங்கும் காணமுடியாத இத்திருக்கோலத்தை எலும்பும் உருகுமாறு காட்டி,

விளக்கவுரை

பொற்செண்டு - வளைவுகளுடன் பிளந்து, நீண்ட நுனி யையுடைய பிரம்பு. சுழியம் - ஆண்மக்களுள் சிறந்தார்க்குரிய தலைய ணிகளுள் ஒன்று.

கானப்பேர் யாம்இருப்ப
தெனக்கழறிக் கங்கையெனும்
வானப்பே ராறுலவும்
மாமுடியார் தாம்அகல
ஞானப்பே ராளர்உணர்ந்
ததிசயித்து நாகமுடன்
ஏனப்பே ரெயிறணிந்தார்
அருளிருந்த பரிசென்பார். **#3602**

`யாம் இருப்பது கானப்பேர்' என்று கூறி, வானின்றிழிந்துவரும் கங்கைப் பேராறு தங்குதற்கு இடமான பெரு முடியையுடைய பெருமான் மறைந்தருள, ஞானத்தின் பேராட்சியை யுடைய நம்பியாரூரர் விழித்து உணர்ந்து, அதிசயம் கொண்டு, பாம்புடன் பன்றியின் கொம்பையும் அணிந்த இறைவரின் திருவருள் என்னிடம் இருந்தவாறுதான் என்னே!

என்பாராய்,

விளக்கவுரை
****

கண்டருளும் படிகழறிற்
றறிவார்க்கு மொழிந்தருளிப்
புண்டரிகப் புனற்சுழியல்
புனிதர்கழல் வணங்கிப்போய்
அண்டர்பிரான் திருக்கானப்
பேரணைவார் ஆரூரர்
தொண்டரடித் தொழலும்எனுஞ்
சொற்பதிகத் தொடைபுனைவார். **#3603**

தாம் கண்ட தன்மையையும் சிவபெருமானின் அருள் தன்மையையும் சேரமானாருக்கு எடுத்துக் கூறித், தாமரை மலர்கள் நிறைந்த நீர் நிலைகளையுடைய திருச்சுழியலில் இறைவரை வணங்கி, விடை பெற்றுச் சென்று, தேவர் தலைவரான இறைவரின் திருக்கானப்பேர் என்ற பதியை அடைபவரான நம்பியாரூரர், `தொண்ட ரடித் தொழலும்' எனத் தொடங்கும் திருப்பதிகத் தமிழ்மாலையைச் சாத்துவாராய்,

விளக்கவுரை

`தொண்டரடித் தொழலும்' எனத் தொடங்கும் திருப்பதி கம் புறநீர்மைப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.84)*. இப் பதிகப் பாடல்தொறும் `கானப்பேர் உறை காளை' என்றும் அப்பெரு மானைக் `கைதொழப் பெறுவது என்று கொலோ' என்றும் அருளப் பெறுகின்றன. அவையே ஆசிரியரின் இவ்வரலாற்றிற்கு அரணாயின.

காளையார் தமைக்கண்டு
தொழப்பெறுவ தென்றென்று
தாளைநா ளும்பரவத்
தருவார்பாற் சார்கின்றார்
ஆளைநீ ளிடைக்காண
வஞ்சியநீர் நாயயலே
வாளைபாய் நுழைப்பழன
முனைப்பாடி வளநாடர். **#3604**

காளையாரான இறைவரைக் கண்டு வணங்குவது என்றோ? எனப் பாடி, மனிதரைத் தொலைவில் காண அஞ்சிய நீர் நாயின் பக்கத்தில், வாளை மீன்கள் பாயும் இளகிய சேற்றையுடைய வயல் சூழ்ந்த திருமுனைப்பாடி நாட்டின் தலைவரான நம்பியாரூரர், தம் திருவடிகளை நாளும் பரவுமாறு அருளும் பரமரிடத்துச் சேர்வாராய்,

விளக்கவுரை

****

மன்னுதிருக் கானப்பேர்
வளம்பதியில் வந்தெய்திச்
சென்னிவளர் மதியணிந்தார்
செழுங்கோயில் வலங்கொண்டு
முன்னிறைஞ்சி யுள்ளணைந்து
முதல்வர்சே வடிதாழ்ந்து
பன்னுசெழுந் தமிழ்மாலை
பாடினார் பரவினார். **#3605**

நிலைபெற்ற `கானப்பேர்' என்னும் வளம் பொருந் திய பதியினை வந்து அடைந்து, திருச்சடையில் வளருகின்ற பிறைச் சந்திரனைச் சூடிய இறைவரின் கோயிலை வலமாக வந்து, அதன் முன்பு வணங்கி, உள்ளே புகுந்து அணைந்து, முதல்வனாரின் சேவடி களில் விழுந்து வணங்கிப் பலவாறாகப் போற்றி மகிழத்தக்க செழுந் தமிழ் மாலையைப் பாடி வணங்கினார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகம் கிடைத்திலது. இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

ஆராத காதலுட
னப்பதியிற் பணிந்தேத்திச்
சீராருந் திருத்தொண்டர்
சிலநாளங் கமர்ந்தருளிக்
காராரு மலர்ச்சோலைக்
கானப்பேர் கடந்தணைந்தார்
போரானேற் றார்கயிலைப்
பொருப்பர்திருப் புனவாயில். **#3606**

நிறைதல் இல்லாத (எல்லையற்ற) பத்திமையுடன் அப்பதியில் வணங்கிப் போற்றிச், சிறந்த தொண்டர்களான நம்பியா ரூரரும் சேரமானும் அங்குச் சிலநாள்கள் விரும்பித் தங்கியிருந்து, மேகங்கள் தங்குதற்கு இடனான மலர்ச்சோலைகள் சூழ்ந்த திருக் கானப்பேர் என்ற பதியைக் கடந்து சென்று, போரில் வல்ல விடையை யுடையவரும், கயிலை மலையை யுடையவருமான இறைவரின் திருப்புனவாயிலைச் சென்று அடைந்தார்கள்.

விளக்கவுரை

****

புனவாயிற் பதியமர்ந்த
புனிதரா லயம்புக்கு
மனவார்வம் உறச்சித்த
நீநினைஎன் னொடுஎன்று
வினவான தமிழ்பாடி
வீழ்ந்திறைஞ்சி யப்பதியில்
சினவானை யுரித்தணிந்தார்
திருப்பாதந் தொழுதிருந்தார். **#3607**

திருப்புனவாயில் என்ற பதியில் விரும்பி வீற்றி ருக்கும் இறைவரின் திருக்கோயிலுள் புகுந்து, உள்ளத்துள் பெரு விருப்பம் கொள்ளச், `சித்த நீ நினை என்னொடு' எனத் தொடங்கும் வினாவுதல் அமைந்த செந்தமிழ்ப் பதிகத்தைப் பாடி, நிலமுற விழுந்து வணங்கி, மதயானையை உரித்து அணிந்து கொண்ட இறைவரின் திருவடிகளை வணங்கி, அப்பதியில் தங்கியிருந்தனர்.

விளக்கவுரை

`சித்த நீ நினை என்னொடு' எனத் தொடங்கும் பதிகம், பழம்பஞ்சுரப் பண்ணில் அமைந்ததாகும் (தி.7 ப.50). `சித்தம் நீ நினை என்னொடு சூள் அறு - மனமே! இத்திருவருட் சார்பால் என்ன கிட்டும்? என எண்ணுவதை ஒழிவாயாக' என்பது பொருளாம். இப்பதிகப் பாடல்தொறும் வரும் `சூள் அறு' என்னும் தொடருக்குப் பொருள் இதுவாகவே அமைதலின், `வினாவான தமிழ்' எனக் குறித்தார் ஆசிரியர். வினவும் மனத்திற்கு விடைகூறும் தமிழ்ப்பதிகம்.

திருப்புனவா யிற்பதியில்
அமர்ந்தசிவ னார்மகிழும்
விருப்புடைய கோயில்பல
பணிந்தருளால் மேவினார்
பொருப்பினொடு கான்அகன்று
புனற்பொன்னி நாடணைந்து
பருப்பதவார் சிலையார்தம்
பாம்பணிமா நகர்தன்னில். **#3608**

திருப்புனவாயிலில் அமர்ந்திருக்கும் சிவபெரு மான் மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் விருப்புடைய கோயில்கள் பலவற்றையும் வணங்கி, அருள் விடைபெற்றுக், குன்றுகளும் காடு களும் கடந்து நீங்கி, நீர்வளம் சிறந்த காவிரி நாட்டை அடைந்து, மலையான நீண்ட வில்லையுடைய இறைவரின் திருப்பாம்பணி என்று வழங்கும் நகரத்தில் சேரமானுடன் நம்பியாரூரரும் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

பருப்பதம் - மலை. விருப்புடைய கோயில் பல என்பன ஓரியூர், திருமணமேற்குடி, திருப்பெருந்துறை முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். திருப்புனவாயிலில் விரும்பி எழுந்தருளி யிருக்கும் இறைவரின் கோயில்கள் எனக் குறிப்பது, கோயில்கள் பலவாயினும் அங்கங்கும் வீற்றிருக்கும் இறைவன் ஒருவனே என்பது தெளியவாம்.

பாதாளீச் சரமிறைஞ்சி
அதன்மருங்கு பலபதியும்
வேதாதி நாதர்கழல்
வணங்கிமிகு விரைவினுடன்
சூதாருந் துணைமுலையார்
மணிவாய்க்குத் தோற்றிரவு
சேதாம்பல் வாய்திறக்குந்
திருவாரூர் சென்றணைந்தார். **#3609**

திருப்பாதாளீச்சரத்தில் இறைவரை வணங்கிச் சென்று, அதன் அருகில் உள்ள பல திருப்பதிகளிலும் மறை முதல்வ ராய சிவபெருமானின் திருவடியை வணங்கிச் சென்று, மாங்கனி போன்ற இரு மார்பகங்களையுடைய மங்கையரின் அழகிய வாயினுக் குத் தோற்றதால் பகலில் வாய் திறக்க ஆற்றாது இரவு நேரத்தில் வாய் திறக்கும் செவ்வாம்பல் மலர்கள் நிறைந்த திருவாரூருக்கு மிக விரை வாக வந்து அடைந்தார்.

விளக்கவுரை

பாம்பணி - நகரின் பெயர். பாதாளீச்சரம் - கோயிற் பெயர். பாதாளத்திருக்கும் ஆதிசேடன் வழிபடப்பெற்றதால் இப் பெயர் பெற்றது. பலபதியும் என்பன பாம்பணிக்கும் திருவாரூருக்கும் இடைப்பட்ட பதிகள் பலவுமாம். அவை திருப்பூவனூர், திருவிடை வாய், திருப்பேரெயில், திருநாட்டியத்தான்குடி, திருவிளமர் முதலா யினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். செவ்வாம்பல் இரவிலேயே மலர்வது. தற்குறிப்பேற்ற அணிநலம் தவழ ஆசிரியர் இங்ஙனம் கூறினார். சூது - மாங்கனி; சூதாடு கருவியுமாம்.

திருநாவ லூர்வேந்தர்
சேரர்குல வேந்தருடன்
வருவாரைத் திருவாரூர்
வாழ்வார்கள் எதிர்கொள்ளத்
தருகாத லுடன்வணங்கித்
தம்பெருமான் கோயிலினுள்

பெருகார்வத் தொடுவிரும்பும்
பெரும்பேறு பெறப்புகுந்தார். #3610

திருநாவலூர்த் தலைவரான நம்பியாரூரர், சேரர் குல மன்னருடன் வர, திருவாரூரில் வாழ்பவர்கள் எதிர்கொள்ள, மிக்க விருப்பத்துடனே வணங்கி, தம் இறைவரின் திருக் கோயிலுக் குள் பெருகும் விருப்புடனே வணங்கப் பெறும் பேற்றைப் பெறச் சென்றார்.

விளக்கவுரை

****

வாசமலர்க் கொன்றையார்
மகிழ்கோயில் வலங்கொண்டு
நேசமுற முன்னிறைஞ்சி
நெடும்பொழுதெ லாம்பரவி
ஏசறவால் திருப்பதிகம்
எடுத்தேத்தி எழுந்தருளால்
பாசவினைத் தொடக்கறுப்பார்
பயில்கோயில் பணிந்தணைவார். #3611

மணம் பொருந்திய கொன்றை மலரைச் சூடிய இறைவர் மகிழ்ந்திருக்கும் கோயிலை வலமாக வந்து, அன்பு பொருந் தத் திருமுன்பு வணங்கி, நெடிதுநேரமாக நின்று, போற்றி, நீண்டகாலம் பிரிந்திருந்த வருத்தத்தால் திருப்பதிகத்தைப் பாடி வணங்கி, அருள் விடைபெற்று, வெளியே வந்து, பாசவினைப்பற்றை அறுப்பவரான இறைவர் வீற்றிருக்கின்ற கோயிலைப் பணிந்து வருவார்,

விளக்கவுரை

நெடும்பொழுதெலாம் - நீண்ட வழிபாட்டுக் காலங்களில் எல்லாம் என உரைகாண்பர் சிவக்கவிமணியார். இதுபோது அருளிய பதிகம் `இறைகளோடிசைந்த இன்பம்' *(தி.7 ப.8)* என்னும் இந்தளப் பண்ணில் அமைந்த பதிகமாம்.

பரவையார் மாளிகையில்
பரிசனங்கள் முன்னெய்த
விரவுபே ரலங்கார
விழுச்செல்வம் மிகப்பெருக
வரவெதிர்கொண் டடிவணங்க
வன்றொண்டர் மலைநாட்டுப்
புரவலனா ரையுங்கொண்டு
பொன்னணிமா ளிகைபுகுந்தார். #3612

பரவையாரின் மாளிகையில் ஏவலர்கள் முன்சென்று சேர்ந்தனராகப்,

பொருந்தும் பெரிய அணிவகைகளான தூய மங்கலங்களை மிகுதியும் செய்து, பரவையார் எதிரேற்று வணங்க, நம்பியாரூரர் மலைநாட்டரசரான சேரமானையும் உடன் அழைத்துக்கொண்டு, பொன் அணிந்த அழகிய மாளிகையுள் புகுந்தார்.

விளக்கவுரை

பேரலங்கார விழுச்செல்வம் - அரசர் என்ற நிலையில் செய்யப்பெற்ற அணிவகைகளான மங்கலங்கள் : தோரணம், நிறை குடம் விளக்கு நிரைத்தல், நுழைவாயில் அழகுபெற அமைத்தல் முதலாயின. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பரவியே பரவையார்
பரிவுடனே பணிந்தேத்தி
விரவியபோ னகங்கறிகள்
விதம்பலவா கச்சமைத்துப்
பரிகலமும் பாவாடை
பகல்விளக்கும் உடனமைத்துத்
திருவமுது செய்வித்தார்
திருந்தியதேன் மொழியினார். **#3613**

அவர்கள் உள்ளே வந்தவுடன் பரவையார் முகமனுரை கூறிப் பரவி, அன்புடன் பணிந்து போற்றி, பொருந்திய திருவமுதும் கறிகளும் பற்பலவாய் சமைக்கச் செய்து, திருந்திய தேன் போன்ற சொல்லையுடையவராகி, உண்ணும் பரிகலமும் அதன் கீழ் இடும் திருப்பாவாடையும் பகல் விளக்கும் உடனே ஒழுங்குபட அமைத்து, அவ்விருவருக்கும் ஏவலர்களுக்கும் திருவமுது செய் வித்தார்.

விளக்கவுரை

****

மங்கலமாம் பூசனைகள்
பரவையார் செயமகிழ்ந்து
தங்கியினி தமர்கின்றார்
தம்பிரான் கோயிலினுள்
பொங்குபெருங் காலமெலாம்
புக்கிறைஞ்சிப் புறத்தணைந்து
நங்கள்பிரா னருள்மறவா
நல்விளையாட் டினைநயந்தார். **#3614**

இவ்வாறு நாளும் மாகேசுவர வழிபாடாகிய மங்கலமாகிய பூசனைகளைப் பரவையார் செய்துவரக் கண்டு, மகிழ்ந்து, அங்கு வீற்றிருக்கின்ற நம்பியாரூரரும் சேரர் பெருமானும் தமது பெருமான்

அமர்ந்தருளும் திருக்கோயிலுக்குச் சென்று, ஆறு காலங்களிலும் இறை வழிபாடாற்றித் தம் இல்லத்து இருப்பார், பெருமானின் திருவருளை மறவாத நிலையில் நல்ல பல விளையாட்டு களையும் காண விரும்பினர்.

விளக்கவுரை

****

நிலைச்செண்டும் பரிச்செண்டும்
வீசிமிக மகிழ்வெய்தி
விலக்கரும்போர்த் தகர்ப்பாய்ச்சல்
கண்டருளி வென்றிபெற
மலைக்கு நெடு முட்கணைக்கால்
வாரணப்போர் மகிழ்ந்தருளி
அலைக்குமறப் பலபுள்ளின்
அமர்விரும்பி யமர்கின்றார். **#3615**

இவ்வாறு நாளும் மாகேசுவர வழிபாடாகிய மங்கலமாகிய பூசனைகளைப் பரவையார் செய்துவரக் கண்டு, மகிழ்ந்து, அங்கு வீற்றிருக்கின்ற நம்பியாரூரரும் சேரர் பெருமானும் தமது பெருமான் அமர்ந்தருளும் திருக்கோயிலுக்குச் சென்று, ஆறு காலங்களிலும் இறை வழிபாடாற்றித் தம் இல்லத்து இருப்பார், பெருமானின் திருவருளை மறவாத நிலையில் நல்ல பல விளையாட்டு களையும் காண விரும்பினர்.

விளக்கவுரை

செண்டு - பந்து போல்வதோர் விளையாட்டுக் கருவி. அதனை நின்றவாறு இருந்து வீசி ஆடுவது நிலைச்செண்டு ஆடுவ தாம். குதிரைமீது இவர்ந்து இடம் வலமாகச் சுழன்று அக்கருவியை வீசி ஆடுவது பரிச்செண்டு ஆடுவதாகும். தகர் - ஆட்டுக் கடாக்கள். இவை தம்முன்பொரக் காண்பது பண்டிருந்த விளையாட்டு இன்பங்களுள் ஒன்றாகும். `பொருதகர் தாக்கற்குப் பேருந் தகைத்து' *(குறள், 486)* எனவரும் திருக்குறளும் நினைவு கூரலாம். வாரணம் - கோழி. கோழிகள் தம்முள் பொரக் காண்பது.

`வருசெரு ஒன்றின்மையினால் மற்போரும்
சொற்புலவர் வாதப் போரும்
இருசிறை வாரணப் போரும் இகல்மதவா
ரணப் போரும் இனைய கண்டே'

எனவரும் கலிங்கத்துப்பரணியும் *(அவதாரம், 277)* காண்க.

விரவு காதல் மீக்கூர
மேவு நாள்கள் பலசெல்லக்
கரவில் ஈகைக் கேரளனார்

தங்கள் கடல்சூழ் மலைநாட்டுப்
பரவை யார்தங் கொழுநனார்
தம்மைப் பனிந்து கொண்டணைவான்
இரவும் பகலுந் தொழுதிரக்க
இசைந்தார் அவரும் எழுந்தருள. **#3616**

மிக்க பெருவிருப்பம் மீதூர, இவ்வாறு தங்கும் நாள்கள் பல கழியக், கரத்தல் இல்லாத கொடைத் தன்மையுடைய சேரமான், கடல் சூழ்ந்த தங்கள் மலைநாட்டில், பரவையாரின் கணவ ரான நம்பியாரூரரை வணங்கி, உடன் அழைத்துக் கொண்டு செல்லுதற் பொருட்டு, இரவும் பகலும் வேண்ட, அவரும் அதற்கு உடன்பட்டார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

நங்கை பரவை யார்உள்ளத்
திசைவால் நம்பி யெழுந்தருளத்
திங்கள் முடியார் திருவருளைப்
பரவிச் சேர மான்பெருமாள்
எங்கும் உள்ள அடியாருக்
கேற்ற பூசை செய்தருளிப்
பொங்கு முயற்சி இருவரும்போய்ப்
புக்கார் புனிதர் பூங்கோயில். **#3617**

பரவையாரின் உளம்நிறைந்த இசைவைப் பெற்று நம்பியாரூரர் புறப்பட்டாராகப், பிறைச் சந்திரனை அணிந்த இறைவ ரின் திருவருளை இவ்வாறு பெற்றதன் பொருட்டுப் போற்றிச் சேரமான் பெருமாள் நாயனார் அத்திருப்பதியில் உள்ள அனைத்துச் சிவன் அடியார்களுக்கும் தக்கவாறு பூசைகள் செய்து, மேல் எழுகின்ற முயற்சியினால் இருபெருமக்களும் இறைவரின் பூங்கோயிலுக்குள் சென்றனர்.

விளக்கவுரை

****

தம்பி ரானைத் தொழுதருளால்
போந்து தொண்டர் சார்ந்தணைய
நம்பி யாரூ ரருஞ்சேரர்
நன்னாட் டரச னாராகும்
பைம்பொன் மணிநீண் முடிக்கழறிற்
றறிவார் தாமும் பயணமுடன்
செம்பொன் நீடு மதிலாரூர்
தொழுது மேல்பாற் செல்கின்றார். **#3618**

தம் இறைவரைத் தொழுது அருள் விடை பெற்று, வெளியே வந்து, தொண்டர்கள் உடன் போதர, நம்பியாரூரரும் சேர நன்னாட்டின் மன்னரான பசும்பொன் முடி சூடிய கழறிற்றறிவார் நாயனாரும் புறப்பட்டுச் சென்று, செம்பொன் அணிந்த நீடிய மதில் சூழ்ந்த திருவாரூரினை வணங்கி, மேற்றிசையாகச் செல்கின்றவர்கள்,

விளக்கவுரை

****

பொன்பரப்பி மணிவரன்றிப்
புனல்பரக்குங் காவேரித்
தென்கரைபோய்ச் சிவன்மகிழ்ந்த
கோயில்பல சென்றிறைஞ்சி
மின்பரப்புஞ் சடையண்ணல்
விரும்புதிருக் கண்டியூர்
அன்புருக்குஞ் சிந்தையுடன்
பணிந்துபுறத் தணைந்தார்கள். **#3619**

பொன்னைக் கொழித்துப் பரப்பியும், மணிகளை வாரிக் கொழித்தும் நீர் பரவிச் செல்லும் காவேரி ஆற்றின் தென்கரை வழியே சென்று, சிவபெருமான் மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் கோயில்கள் பலவற்றையும் வணங்கி, மின் போன்ற ஒளி வீசுகின்ற சடையையுடைய இறைவர் விருப்புடன் வீற்றிருக்கின்ற `திருக் கண்டியூரை' அன்பால் உருகப் பெறும் மனத்துடன் சென்று பணிந்து வெளியே வந்தனர்.

விளக்கவுரை

இப்பதியில் அருளிய பதிகம் கிடைத்திலது. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வடகரையில் திருவையா
றெதிர்தோன்ற மலர்க்கரங்கள்
உடலுருக வுள்ளுருக
வுச்சியின்மேற் குவித்தருளிக்
கடல்பரந்த தெனப்பெருகுங்
காவிரியைக் கடந்தேறித்
தொடர்வுடைய திருவடியைத்
தொழுவதற்கு நினைவுற்றார். **#3620**

காவிரிக்கு வடகரையில் திருவையாறானது எதிரே தோன்றவும், உடலும் உள்ளமும் உருக, மலர் போன்ற கைகளைத் தலைமீது குவித்துக், கடல் பெருகி வந்தது என்னுமாறு பெருகி வரும் காவேரி ஆற்றைக் கடந்து, வட கரையில் ஏறிச் சென்று, இடையறாத தொடர்பு பூண்ட இறைவரின்

திருவடியை வணங்குதற்குத் திருவுளம் கொண்டனர்.

விளக்கவுரை

****

ஐயா றதனைக் கண்டுதொழு
தருளா ரூரர் தமைநோக்கிச்
செய்யாள் பிரியாச் சேரமான்
பெருமாள் அருளிச் செய்கின்றார்
மையார் கண்டர் மருவுதிரு
வையா றிறைஞ்ச மனமுருகி
நையா நின்ற திவ்வாறு
கடந்து பணிவோம் நாமென்ன. **#3621**

திருமகள் என்றும் பிரியாது உறைகின்ற சேரமான் பெருமாள் நாயனார், திருவையாற்றை நினைந்து நின்றவாறே வணங்கி, திருவருட்பெருக்குடைய நம்பியாரூரரைப் பார்த்து, அருள் செய்பவராய், `நஞ்சுண்ட கழுத்தினை உடைய இறைவர் வீற்றிருக் கின்ற திருவையாற்றிற்குச் சென்று பணிய உள்ளம் உருகிடலாயிற்று, நாம் இவ்வாற்றைக் கடந்து செல்வோம்!' எனக் கூற,

விளக்கவுரை

செய்யாள் - திருமகள் அரசர்கள் திருமாலின் தோற்ற முடையர். ஆதலின் `செய்யாள் பிரியாச் சேரமான் பெருமாள்' என்றார். `திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே' என்னும் திருவாக்கும் காண்க.

ஆறு பெருகி இருகரையும்
பொருது விசும்பில் எழுவதுபோல்
வேறு நாவாய் ஓடங்கள்
மீது செல்லா வகைமிகைப்ப
நீறு விளங்குந் திருமேனி
நிருத்தர் பாதம் பணிந்தன்பின்
ஆறு நெறியாச் செலவுரியார்
தரியா தழைத்துப் பாடுவார். **#3622**

காவிரி ஆறு பெருக்கெடுத்து இரு கரைகளையும் அலைத்து வானத்தில் எழுவதைப் போல், வேறு மரக் கலங்களாவது ஓடங்களாவது மேல் செல்லாதபடி மிகுத்துச் செல்லத், திருநீறு விளங்கும் மேனியையுடைய இறைவரின் திருவடிகளைப் பணிந்து, பெருமான் மீது கொண்டிருக்கும் அன்பின் வழிச் செல்லும் உரிமை கொண்ட நம்பியாரூரர், ஆறுதடுத்து நிற்பதைப் பொறுக்க இயலாது, இறைவரை விளித்துப் பாடத்

தொடங்கி,

விளக்கவுரை

ஆறு - வழி. பெருமான் மீது கொண்டிருக்கும் அன்பின் பெருக்காய ஆற்றின் வழிச் செல்லும் தகுதி உடையராய ஆரூரருக்கு, இவ்வாறு தடையாகுமோ எனும் குறிப்புப்பட நின்றது. அவர் கொண் டிருக்கும் ஆறு அன்பாகிய ஆறு. அது அடைக்கும் தாழ் ஏதும் இல்லா தது. நீரையுடைய இவ்வாறோ, ஆங்காங்கும் அடைக்கப்பட்டுத் தடுக்கப் பட்டுச் செல்லும் இயல்பினது. இவ்வியப்பினதாய ஆறு, அன்பாகிய அவ்ஆற்றைத் தடுக்கவல்லதன்று என்பது பட நின்றது.

பரவும் பரிசொன் றெடுத்தருளிப்
பாடுந் திருப்பாட் டின்முடிவில்
அரவம் புனைவார் தமைஐயா
றுடைய வடிக ளோவென்று
விரவும் வேட்கை யுடனழைத்து
விளங்கும் பெருமைத் திருப்பதிகம்
நிரவு மிசையில் வன்றொண்டர்
நின்று தொழுது பாடுதலும். **#3623**

: `பரவும் பரிசு' எனத் தொடங்கிப் பாடும் பாடல்கள் ஒவ்வொன்றின் நிறைவிலும் பாம்பை அணியும் இறைவரை, `ஐயாறுடைய அடிகேளோ' என்று நிரம்பிய விருப்புடன் அழைத்து, விளக்கம் கொண்ட பெருமையுடைய திருப்பதிகத்தை நிரவும் பண்ணிசையமைய வன்தொண்டப் பெருந்தகையார் நின்று தொழுது பாடவும்,

விளக்கவுரை

`பரவும் பரிசு' எனத் தொடங்கும் பதிகம் காந்தார பஞ்சமப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.77)*. பாடல்கள் தொறும், `திரைக் காவிரிக் கோட்டத்து ஐயாறுடைய அடிகேளோ' எனும் தொடர் அமைந்து, ஆரூரர் தம் ஆர்வ மிகுதியைக் காட்டி நிற்கின்றது. காவிரிக் கோட்டம் - காவிரிக்கரை. அடிகள் என்பது, ஓலப் பொருண் மையும் விளிப் பொருண்மையும் அமைய `அடிகேளோ' என நின்றது.

மன்றில் நிறைந்து நடமாட
வல்லார் தொல்லை ஐயாற்றில்
கன்று தடையுண் டெதிரழைக்கக்
கதறிக் கனைக்கும் புனிற்றாப்போல்
ஒன்று முணர்வால் சராசரங்கள்
எல்லாங் கேட்க வோலமென
நின்று மொழிந்தார் பொன்னிமா

நதியு நீங்கி நெறிகாட்ட. **#3624**
பேரவையுள் நிறைந்து திருக்கூத்து இயற்றுதலில் வல்ல இறைவர், தன் கன்று தடைப்பட்டு எதிர் அழைக்கக் கேட்டுத் தான் கதறிக் கனைக்கும் இளைய பசுவைப் போல், ஒன்றுபட்ட உணர் வால் இயங்கியற் பொருள்கள், நிலையியற் பொருள்கள் ஆகிய அனைத்தும் கேட்கும்படி `ஓலம்' என்று மொழிந்தார். அந்நிலையில் அக்காவிரியாறும் தொடர்ச்சி நீங்கி வழி காட்ட,

விளக்கவுரை

****

விண்ணின் முட்டும் பெருக்காறு
மேல்பாற் பளிக்கு வெற்பென்ன
நண்ணி நிற்கக் கீழ்பால்நீர்
வடிந்த நடுவு நல்லவழி
பண்ணிக் குளிர்ந்த மணற்பரப்பக்
கண்ட தொண்டர் பயில்மாரி
கண்ணிற் பொழிந்து மயிர்ப்புளகங்
கலக்கக் கைஅஞ் சலிகுவித்தார். **#3625**

வானத்தை முட்டுமாறு பெருக்கெடுத்துச் செல்லும் காவிரியாறு மேற் பக்கத்தில் பளிங்கு மலை போல் தாங்கி நிற்க, கீழ்ப் பக்கத்தில் நீர் வடிந்த இடையில், நல்ல வழியினை உண்டாக்கிக் குளிர்ந்த மணல் பரப்பக் கண்ட தொண்டர்கள், மிக்க மழைபோல் கண்ணீர் பொழிந்து திருமேனியில் மயிர்க்கூச்சம் கொள்ளக், கைக ளைத் தலைமீது குவித்து வணங்கினர்.

விளக்கவுரை

தண்ணீர் வெண்மை நிறத்தது ஆதலின், அது தடைப்பட்டு நின்றது பளிங்குமலை போல் இருந்தது என்றார். இவ்வைந்து பாடல் களும் ஒருமுடிபின.

நம்பி பாதஞ் சேரமான்
பெருமாள் பணிய நாவலூர்ச்
செம்பொன் முந்நூன் மணிமார்பர்
சேரர் பெருமான் எதிர்வணங்கி
உம்பர் நாதர் உமக்களித்த
தன்றோ என்ன வுடன்மகிழ்ந்து
தம்பி ரானைப் போற்றிசைத்துத்
தடங்கா வேரி நடுவணைந்தார். **#3626**

நம்பியாரூரரின் திருவடிகளைச் சேரமான் பெருமாள் வணங்க,

நாவலூரில் வந்தருளிய செம்பொன் போன்ற முந்நூல் அணிந்த அழகிய மார்பையுடைய நம்பியாரூரரும் சேரமான் பெருமாளை எதிர் வணங்கி, `இது தேவர்க்குத் தலைவராய இறைவர் உமக்கு அளித்த திருவருள் அன்றோ?' எனக் கூற, இருவரும் கூடி மகிழ்ந்து இறைவரைப் போற்றிப் பரவிப் பெரிய காவிரியின் நடுவே சென்றனர்.

விளக்கவுரை

இருவரும் தாழ்வெனும் தன்மை கொண்டு, தம் பெருமை தாமறியாத் தன்மையராய் வாழ்ந்த தகைமை எண்ணற்குரியது.

செஞ்சொல் தமிழ்நா வலர்கோனும்
சேரர் பிரானும் தம்பெருமான்
எஞ்ச லில்லா நிறைஆற்றின்
இடையே யளித்த மணல்வழியில்
தஞ்ச முடைய பரிசனமும்
தாமும் ஏறித் தலைச்சென்று
பஞ்ச நதிவா ணரைப்பணிந்து
விழுந்தார் எழுந்தார் பரவினார். **#3627**

திருவமைந்த செம்மையான சொற்களை வழங்கி யருளும் தமிழ் நாவலர் பெருமானும், சேரமானும் தம் இறைவர் குறைவில்லாமல் நிறையப் பெருகிய ஆற்றின் நடுவில் அளித்தருளிய மணல் வழியில், தம்மைச்சார்ந்துள்ள ஏவலாளர்களும் தாமுமாக ஏறிச் சென்று, திருவையாற்று இறைவரைப் பணிந்து நிலத்தில் விழுந் தனர்; எழுந்தனர்; போற்றினர்.

விளக்கவுரை

தஞ்சம் உடைய - தம்மைச் சார்ந்துள்ள.

அங்கண் அரனார் கருணையினை
ஆற்றா தாற்றித் திளைத்திறைஞ்சித்
தங்கள் பெருமான் திருவருளால்
தாழ்ந்து மீண்டுந் தடம்பொன்னிப்
பொங்கு நதியின் முன்வந்த
படியே நடுவு போந்தேறத்
துங்க வரைபோல் நின்றநீர்
துரந்து தொடரப் பெருகியதால். **#3628**

அருள் நோக்கமுடைய இறைவரின் திருக்கருணை யில் திளைத்து நிறைவு பெறாத வகையில் அமைதிப் படுத்திக் கொண்டு, அதில் முழுகி வணங்கித் தம் பெருமானின் திரு முன்பு சென்று வணங்கி, அங்கு நின்றும் மீண்டு வந்து, பெரிய காவியாற்றின் நடுவில் முன் வந்த வழியே

சென்று கரையேறப் பெரிய மலை போன்ற நின்ற ஆற்று நீரும் விரைந்து தொடர்ந்து முன் போல் பெருகி ஓடியது.

விளக்கவுரை

ஆல் - அசை.

ஆய செயலின் அதிசயத்தைக்
கண்டக் கரையில் ஐயாறு
மேய பெருமான் அருள்போற்றி
வீழ்ந்து தாழ்ந்து மேல்பாற்போய்த்
தூய மதிவாழ்சடையார்தம்
பதிகள் பிறவுந் தொழுதேத்திச்
சேய கொங்கர் நாடணைந்தார்
திருவா ரூரர் சேரருடன். **#3629**

இத்தகைய அருட் செயலின் பெருநிலையைக் கண்டு, அக்கரையில் நின்று, திருவையாற்றில் வீற்றிருக்கும் இறைவ ரின் திருவருளைப் போற்றி நிலமுற விழுந்து வணங்கி, எழுந்து, மேற்றிசை வழியே சென்று, தூய பிறைச் சந்திரன் வாழ்தற்கு இடனான சடையையுடைய இறைவரின் பிற பதிகள் பலவற்றையும் வணங்கிப் போற்றிச் சென்று, செம்மையுடைய கொங்கர்களின் நாட்டை, நம்பியாரூரர் சேரமானுடன் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

பிற பதிகளாவன, திருஎறும்பியூர், திருநெடுங்களம், திருச் சிராப்பள்ளி, திருமூக்கீச்சரம், திருக்கடம்பந்துறை முதலியவாகலாம்.

கொங்கு நாடு கடந்துபோய்க்
குலவு மலைநாட் டெல்லையுற
நங்கள் பெருமான் தோழனார்
நம்பி தம்பி ரான்தோழர்
அங்க ணுடனே யணையவெழுந்து
அருளா நின்றார் எனும்விருப்பால்
எங்கும் அந்நாட் டுள்ளவர்கள்
எல்லாம் எதிர்கொண் டின்புறுவார். **#3630**

கொங்கர் நாட்டைக் கடந்து சென்று, விளங்கும் மலை நாட்டின் எல்லையை அடைய, `நம் சேரர் பெருமானின் தோழ ரான, தம்பிரான் தோழர், அங்கு ஒருசேர அணைவதற்குப் புறப்பட்டு வருகின்றார்' என்ற விருப்பத்தினால், அந்நாட்டில் உள்ளவர்கள் எல்லாரும், அவர்களை வரவேற்று எதிர்கொண்டு இன்பம் அடைவார் களாகி,

விளக்கவுரை

****

பதிகள் எங்குந் தோரணங்கள்
பாங்கர் எங்கும் பூவனங்கள்
வதிகள் எங்குங் குளிர்பந்தர்
மனைகள் எங்கும் அகிற்புகைக்கார்
நதிகள் எங்கும் மலர்ப்பிறங்கல்
ஞாங்கர் எங்கும் ஓங்குவன
நிதிகள் எங்கும் முழவினொலி
நிலங்கள் எங்கும் பொலஞ்சுடர்ப்பூ. **#3631**

அந்நகரம் எங்கணும் தோரணங்களும், அதன் பக்கங்களில் எங்கும் மலர்ச் சோலைகளும், வழிகளில் எங்கும் குளிர்ந்த பந்தல்களும், வீடுகளில் எங்கும் மேகம் போல் எழும் அகில் புகையும், ஆறுகளில் எங்கும் மலர்க் குவியல்களும், அவற்றின் பக்கங்கள் எங்கும் அவற்றால் ஒதுக்கப்படும் மணி பொன் முதலியன வாய் ஓங்குவனவான நிதியங்களும், எங்கும் முழவின் ஒலிகளும், நிலம் எங்கும் ஒளி கொண்ட பொற் பூவாம் மழையும் என இவ்வாறு அந்நகரை அணிசெய்ய,

விளக்கவுரை

வதிகள் - வழிகள். பொலம் - பொன்.

திசைகள் தோறும் வரும்பெருமை
அமைச்சர் சேனைப் பெருவெள்ளம்
குசைகொள் வாசி நிரைவெள்ளங்
கும்ப யானை யணிவெள்ளம்
மிசைகொள் பண்ணும் பிடிவெள்ளம்
மேவுஞ் சோற்று வெள்ளங்கண்
டசைவி லின்பப் பெருவெள்ளத்
தமர்ந்து கொடுங்கோ ளூர்அணைந்தார். **#3632**

இவ்வாறு எல்லாத் திசைகளிலும் இருந்து வரும் பெருமைகளையும், அமைச்சர்களும் படைகளும் கூடிய பெரு வெள்ளத்தையும், பிடரி மயிரையுடைய குதிரை அணி வகுத்த வெள் ளத்தையும், மத்தகத்தையுடைய யானைப் படையின் வெள்ளத்தை யும், இவர்ந்து வருதற்கான அணிகலம் கொண்ட பெண் யானை களின் வெள்ளத்தையும், விரும்பும் சோற்றுப் பெருக்கங்களான வெள் ளத்தையும் பார்த்துக் கெடாத இன்பமாகிய வெள்ளத்தில் முழுகி, நம்பி யாரூரரும் சேரமான் பெருமாளும் கொடுங்கோளூரை அடைந்தனர்.

விளக்கவுரை

ஆண் யானைகள் ஓரொருகால் மதம் கொள்ளும் இயல்பினவாதலின்

பெண் யானைகளே இவர்ந்து வருதற்குரியன. ஆதலின் `மிசைகொள் பண்ணும் பிடிவெள்ளம்' என்றார். மிசை கொள் - மேல் அமர்ந்து வருதற்கான. பண்ணும் - ஒப்பனை செய்யப் பெற்ற. குசைகொள் வாசி - பிடரிமயிரையுடைய குதிரைகள். குசை - கடிவாளம் எனினுமாம். இம் மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

கொடுங்கோ ளூரின் மதில்வாயில்
அணிகோ டித்து மறுகில்உடுத்
தொடுங்கோ புரங்கள் மாளிகைகள்
சூளி குளிர்சா லைகள்தெற்றி
நெடுங்கோ நகர்கள் ஆடரங்கு
நிரந்த மணித்தா மங்கமுகு
விடுங்கோ தைப்பூந் தாமங்கள்
நிரைத்து வெவ்வே றலங்கரித்து. **#3633**

ஆண் யானைகள் ஓரொருகால் மதம் கொள்ளும் இயல்பினவாதலின் பெண் யானைகளே இவர்ந்து வருதற்குரியன. ஆதலின் `மிசைகொள் பண்ணும் பிடிவெள்ளம்' என்றார். மிசை கொள் - மேல் அமர்ந்து வருதற்கான. பண்ணும் - ஒப்பனை செய்யப் பெற்ற. குசைகொள் வாசி - பிடரிமயிரையுடைய குதிரைகள். குசை - கடிவாளம் எனினுமாம். இம் மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

விளக்கவுரை

கோடித்து - ஒப்பனை செய்து. சூளி - நிலா முற்றம். கோ நகர்கள் - அரசர் தங்குதற்குரிய தனியிடங்கள். (உடு - விண் மீன்கள்).

நகர மாந்தர் எதிர்கொள்ள
நண்ணி எண்ணில் அரங்குதொறும்
மகரக் குழைமா தர்கள்பாடி
ஆட மணிவீ தியிலணைவார்
சிகர நெடுமா ளிகையணையார்
சென்று திருவஞ் சைக்களத்து
நிகரில் தொண்டர் தமைக்கொண்டு
புகுந்தார் உதியர் நெடுந்தகையார். **#3634**

இவ்வாறு அந்நகரமக்கள் எதிர்கொள்ள வந்து, அளவற்ற ஆடரங்குகள் தோறும் மகரக் குழையணிந்த பெண்கள் பாடி, ஆட, அழகான வீதியில் சேர்வாராய்ச், சிகரங்களையுடைய தம் பெரிய மாளிகையில் சேராது, மேற்சென்று திருவஞ்சைக்களத்தில் ஒப்பில்லாத திருத்தொண்டரான நம்பியாரூரரை உடன் அழைத்துக் கொண்டு சேரமான் பெருமாள் புகுந்தார்.

விளக்கவுரை

தம் தலைநகராய கொடுங்கோளூர்க்கு நம்பியாரூரரை அழைத்து வந்த சேரர் பெருமகனார் தம் அரண்மனைக்கு நேரே அழைத்துச் செல்லாது திருவஞ்சைக்களத்து இறைவரை வணங்கு தற்கே முற்பட்டார் காரணம் தம் ஊரை விடுத்துச் செல்லும் பொழுதோ அன்றி வெளியூரிலிருந்து வரும் பொழுதோ இறைவரை முதற்கண் வழிபட்ட பின்னரே எதனையும் செய்துவரும் மரபில் நின்றமை பற்றியாம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிவின.

இறைவர் கோயில் மணிமுன்றில்
வலங்கொண் டிறைஞ்சி எதிர்புக்கு
நிறையுங் காத லுடன்வீழ்ந்து
பணிந்து நேர்நின் றாரூரர்
முறையில் விளம்புந் திருப்பதிகம்
முடிப்பது கங்கை யென்றெடுத்தப்
பிறைகொள் முடியார் தமைப்பாடிப்
பரவிப் பெருமா ளுடன்தொழுதார். **#3635**

தம் தலைநகராய கொடுங்கோளூர்க்கு நம்பியாரூரரை அழைத்து வந்த சேரர் பெருமகனார் தம் அரண்மனைக்கு நேரே அழைத்துச் செல்லாது திருவஞ்சைக்களத்து இறைவரை வணங்கு தற்கே முற்பட்டார் காரணம் தம் ஊரை விடுத்துச் செல்லும் பொழுதோ அன்றி வெளியூரிலிருந்து வரும் பொழுதோ இறைவரை முதற்கண் வழிபட்ட பின்னரே எதனையும் செய்துவரும் மரபில் நின்றமை பற்றியாம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிவின.

விளக்கவுரை

தம் தலைநகராய கொடுங்கோளூர்க்கு நம்பியாரூரரை அழைத்து வந்த சேரர் பெருமகனார் தம் அரண்மனைக்கு நேரே அழைத்துச் செல்லாது திருவஞ்சைக்களத்து இறைவரை வணங்கு தற்கே முற்பட்டார் காரணம் தம் ஊரை விடுத்துச் செல்லும் பொழுதோ அன்றி வெளியூரிலிருந்து வரும் பொழுதோ இறைவரை முதற்கண் வழிபட்ட பின்னரே எதனையும் செய்துவரும் மரபில் நின்றமை பற்றியாம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிவின.

தொழுது திளைத்துப் புறம்போந்து
தோன்றப் பண்ணும் பிடிமேல்பார்
முழுதும் ஏத்த நம்பியைமுன்
பேற்றிப் பின்பு தாம்ஏறிப்
பழுதின் மணிச்சா மரைவீசிப்

பைம்பொன் மணிமா ளிகையில்வரும்
பொழுது மறுகில் இருபுடையும்
மிடைந்தார் வாழ்த்திப் புகல்கின்றார். **#3636**

தம் தலைநகராய கொடுங்கோளூர்க்கு நம்பியாரூரரை அழைத்து வந்த சேரர் பெருமகனார் தம் அரண்மனைக்கு நேரே அழைத்துச் செல்லாது திருவஞ்சைக்களத்து இறைவரை வணங்கு தற்கே முற்பட்டார் காரணம் தம் ஊரை விடுத்துச் செல்லும் பொழுதோ அன்றி வெளியூரிலிருந்து வரும் பொழுதோ இறைவரை முதற்கண் வழிபட்ட பின்னரே எதனையும் செய்துவரும் மரபில் நின்றமை பற்றியாம். இவ்விரு பாடல்களும் ஒருமுடிவின.

விளக்கவுரை

****

நல்ல தோழர் நம்பெருமாள்
தமக்கு நம்பி இவரென்பார்
எல்லை யில்லாத் தவம்முன்பென்
செய்தோம் இவரைத் தொழவென்பார்
செல்வம் இனியென் பெறுவது நம்
சிலம்பு நாட்டுக் கெனவுரைப்பார்
சொல்லுந் தரமோ பெருமாள்செய்
தொழிலைப் பாரீ ர் எனத்தொழுவார். **#3637**

சிலர், நம் மன்னராய பெருமானாருக்கு இவர் நல்ல தோழர்! என்பர். சிலர், இவரைக் கண்டு தொழுவதற்கு நாம் அள வற்ற தவம் முன்பு என்ன செய்தோம்! என்பர். சிலர், நம் மலை நாட் டுக்கு இனிப்பெற வேண்டிய வேறு செல்வம் என்ன உள்ளது? என்பர். சிலர், சொல்லும் அளவில் அடங்குமோ நம் பெருமாள் செய்யும் தொழில்! அதனைப் பாரீர்! என்பர்.

விளக்கவுரை

****

பூவும் பொரியும் பொற்றுகளும்
பொழிந்து பணிவார் பொருவில்இவர்
மேவும் பொன்னித் திருநாடே
புவிக்குத் திலதம் எனவியப்பார்
பாவுந் துதிகள் எம்மருங்கும்
பயில வந்து மாளிகையின்
மாவுங் களிறும் நெருங்குமணி
வாயில் புகுந்து மருங்கிழிந்தார். **#3638**

பூவையும் பொரியையும் பொன் துகளையும் கலந்து வீசி வணங்குவர்

சிலர். தங்கட்கு ஒப்பில்லாத இவர் தோன்றிய காவிரித் திருநாடே உலகுக்குத் திலகம் போன்று விளங்குவதாகும் என்று வியந்து உரைப்பர். இங்ஙனம் போற்றி மகிழும் புகழுரைகள் எம்மருங்கும் மிக, வந்து சேர்ந்து திருமாளிகையின் முன், குதிரை களும் யானைகளும் நெருங்கும் மணி வாயிலுள் புகுந்து, சுந்தரரும் சேரமானும் யானையினின்றும் இறங்கினர்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

கழறிற் றறியுந் திருவடியும்
கலைநா வலர்தம் பெருமானாம்
முழவிற் பொலியுந் திருநெடுந்தோள்
முனைவர் தம்மை யுடன்கொண்டு
விழவிற் பொலியும் மாளிகையில்
விளங்கு சிங்கா சனத்தின்மிசை
நிழல்திக் கொளிரும் பூணாரை
இருத்தித் தாமும் நேர்நின்று. **#3639**

கழறிற்றறிவாராய அடிகளும், கலைகளில் வல்ல நாவலர் பெருமானாம், முழவைப் போன்று விளங்கும் பெருந் தோள் களையுடைய நம்பி ஆரூரரை அழைத்துச் சென்று, விழாப் பொலிவு கொண்டிருக்கும் மாளிகையுள் விளங்கும் அரியணையின் மீது, எண் திசையாலும் ஒளி வீசும் அணிகளை அணிந்த ஆரூரரை அமர்ந் திருக்கச் செய்து, தாமும் அவர் முன்னே நின்று,

விளக்கவுரை

திருவடி - அடிகள் எனும் பொருள்பட நின்றது. `வாகீசத் திருவடி யாம்' என்பர் முன்னும் *(தி.12 பு.21 பா.109)*. மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க நிற்பவர் ஆதலின், `நிழல் திக்கு ஒளிரும் பூணார்' என்றார்.

செம்பொற் கரக வாசநீர்
தேவி மார்கள் எடுத்தேந்த
அம்பொற் பாதந் தாம்விளக்கி
யருளப் புகலும் ஆரூரர்
தம்பொன் தாளை வாங்கியிது
தகாதென் றருளத் தரணியில்வீழ்ந்
தெம்பெற் றிமையாற் செய்தனஈங்
கெல்லாம் இசைய வேண்டுமென. **#3640**

செம்பொன் கரகத்தில் மணமுடைய நல்ல நீரைத் தம் தேவிமார்கள்

எடுத்து ஏந்தி வார்க்க, அழகிய அவர்தம் திருவடி களைத் தாமே விளக்கத் தொடங்கிய போது, நம்பியாரூரர் தம் திருவடி களை உள் வாங்கிக் கொண்டு `இது செய்தல் தகாது' என்று அருளிச் செய்ய, நிலத்தில் விழுந்து வணங்கி, `எம் அன்பின் தகுதிக்கு ஏற்ற வாறு செய்யும் வழிபாடுகள் எல்லாவற்றையும் மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று வேண்டி விண்ணப்பித்துக் கொள்ள,

விளக்கவுரை

****

பெருமாள் வேண்ட எதிர்மறுக்க
மாட்டார் அன்பின் பெருந்தகையார்
திருமா நெடுந்தோள் உதியர்பிரான்
செய்த வெல்லாங் கண்டிருந்தார்
அருமா னங்கொள் பூசனைகள்
அடைவே எல்லாம் அளித்ததற்பின்
ஒருமா மதிவெண் குடைவேந்த
ருடனே அமுது செய்துவந்தார். **#3641**

செம்பொன் கரகத்தில் மணமுடைய நல்ல நீரைத் தம் தேவிமார்கள் எடுத்து ஏந்தி வார்க்க, அழகிய அவர்தம் திருவடி களைத் தாமே விளக்கத் தொடங்கிய போது, நம்பியாரூரர் தம் திருவடி களை உள் வாங்கிக் கொண்டு `இது செய்தல் தகாது' என்று அருளிச் செய்ய, நிலத்தில் விழுந்து வணங்கி, `எம் அன்பின் தகுதிக்கு ஏற்ற வாறு செய்யும் வழிபாடுகள் எல்லாவற்றையும் மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று வேண்டி விண்ணப்பித்துக் கொள்ள,

விளக்கவுரை

மானம் - பெருமை. சந்தனக் கலவை சாத்தல், மலர் வழிபாடு, நறும்புகை காட்டல், ஒளிவிளக்குக் காட்டல் முதலிய பலவும் அடங்க `அரு மானங் கொள் பூசனைகள்' என்றார். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

சேர ருடனே திருவமுது
செய்த பின்பு கைகோட்டி
ஆரம் நறுமென் கலவைமான்
மதச்சாந் தாடை யணிமணிப்பூண்
ஈர விரைமென் மலர்ப்பணிகள்
இனைய முதலா யினவருக்கம்
சார வெடுத்து வன்தொண்டர்ச்
சாத்தி மிக்க தமக்காக்கி. **#3642**

சேர மன்னருடன், உடன் அமர்ந்து உணவு உண்ட பின்பு, மணமுடைய

சந்தனமும், அது கலந்த கத்தூரிச் சாந்தும், ஆடை யும், அணியும், மணிப் பூண்களும் குளிர்ந்த மணம் நிறைந்த மலர் மாலைகளும் என்ற இவை முதலான அணியத்தகும் பொருள் வகைக ளைத் தம் கைகளை வளைத்துச் சாரும்படி எடுத்து வன்தொண்ட ருக்குச் சாத்தியும், எஞ்சியவற்றைத் தமக்குப் பயன் படுத்தியும்,

விளக்கவுரை

கை கோட்டிச் சாத்தி எனக் கூட்டுக. கைகோட்டி - கலவைச் சாந்து அணிவித்தல், ஆடை முதலான வற்றை அணிவித்தல் போன்ற செயல்களுக்கெல்லாம் தம் கைகளை வளைத்துச் செயத்தக்க முறையில் செய்து. கை கோட்டி - உணவருந்திய பின்பு முறைப்படிக் கைகளைத் தூய்மை செய்து என்றுரைப்பாருமுளர். எனினும் முன்னைய பொருளே சிறக்கும். ஆரம் - சந்தனம். வருக்கம் - அணியத்தக்க பொருள் வகை.

பாடல் ஆட ல் இன்னியங்கள்
பயிறன் முதலாம் பண்ணையினில்
நீடும் இனிய விநோதங்கள்
நெருங்கு காலந் தொறும்நிகழ
மாடு விரைப்பூந் தருமணஞ்செய்
ஆரா மங்கள் வைகுவித்ததுக்
கூட முனைப்பா டியர்கோவைக்
கொண்டு மகிழ்ந்தார் கோதையார். **#3643**

பாடலும், ஆடலும், இனிய இசைக் கருவிகள் இசைத்தல் முதலான மகளிர் விளையாட்டில் நீடும் இனிய மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சிகளும் ஆகக் காலங்கள் தோறும் நிகழ்த்தியும், அருகி லுள்ள மணமுடைய மலர்களால் மணம் வீசும் சோலைகளில் அமர் வித்தும், தம்முடன் திருமுனைப்பாடி நாட்டின் தலைவர் பெருமா னான நம்பியாரூரரை மகிழ்வித்திருந்தார் கோதையர் பெருமான்.

விளக்கவுரை

பண்ணையினில் - விளையாட்டு வகைகளில். விநோதங் கள் - மகிழ்ச்சி தரத்தக்க வியத்தகு செயல்கள். ஆராமங்கள் - சோலை கள். திருமாளிகையின் அகத்தும் புறத்தும் அழகுபெற உருவாக்கிய சோலைகள். இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

செண்டாடும் தொழின்மகிழ்வும்
சிறுசோற்றுப் பெருஞ்சிறப்பும்
வண்டாடும் மலர்வாவி
மருவியநீர் விளையாட்டும்
தண்டாமும் மதகும்பத்

தடமலைப்போர் சலமற்போர்
கண்டாரா விருப்பெய்தக்
காவலனார் காதல்செய்நாள். **#3644**

பந்தாடுகின்ற தொழிலின் நிகழ்ச்சியும், சிறு சோறு உண்ணும் பெருஞ்சிறப்பும், வண்டுகள் தங்குவதற்கு இடமான பூக்கள் நிறைந்த பொய்கைகளில் பொருந்திய நீரில் விளையாடுதலும், குறைவற்ற மும்மதங்களையும் மத்தகத்தையும் உடைய பெரிய மலை போன்ற யானைகளின் போரும், சினத்துடன் செய்யும் வீரர்களின் போரும் என்னும் இவற்றைக் காணுமாறு செய்து, நிறைவுறாத பெரும் விருப்பம் பொருந்தச் சேரமான் பெருமாள் நாயனார் நம்பியாரூரர்க்கு மகிழ்வை ஏற்படுத்திவரும் நாளில்,

விளக்கவுரை

சிறு சோறு - பொதிச் சோற்றின் வகைகளாகவுள்ளவை. சர்க்கரைப் பொங்கல், புளிச்சோறு, தேங்காய்ச் சோறு, எலுமிச்சப் பழச் சோறு, தயிர்ச்சோறு முதலியனவாம். தண்டா - குறையாத. சலமற் போர் - சினத்துடன் வீரர்கள் செய்யும் போர்.

நாவலர்தம் பெருமானும்
திருவாரூர் நகராளும்
தேவர்பிரான் கழல்ஒருநாள்
மிகநினைந்த சிந்தையராய்
ஆவியைஆ ரூரானை
மறக்கலுமா மேஎன்னும்
மேவியசொல் திருப்பதிகம்
பாடியே வெருவுற்றார். **#3645**

நாவலர் பெருமானான நம்பி ஆரூரரும் திருவா ரூரை ஆட்சி கொண்டிருக்கும் வானவர் தலைவரான இறைவரின் திருவடிகளை, ஒரு நாள் மிகவும் நினைவிற் கொண்ட உள்ளத்த வராய், என் உயிர் போன்றவரைத் திருவாரூர் இறைவரை `மறக்கலும் ஆமே' என்ற கருத்து நிறைவு கொண்ட திருப் பதிகத்தைப் பாடி, அச்சம் கொண்டார்.

விளக்கவுரை

இக்கருத்தும் நிறைவுமுடைய திருப்பதிகம் `பொன்னும் மெய்பொருளும்' எனத் தொடங்கும் தக்கேசிப் பண்ணில் அமைந்த பதிகமாகும் *(தி.7 ப.59).* `மறக்கலுமாமே' எனும் தொடர் பாடல் தொறும் அமைந்துள்ளது. மறக்கலும் ஆமே*?* ஆகாது என்றும் பொருள்பட நின்றது. ஏகாரம் எதிர்மறைக்கண் வந்தது. எனவே ஆரூருக்குச் செல்லவேண்டும் எனத் திருவுளம் பற்றினர்.

திருவாரூர் தனைநினைந்து
சென்றுதொழு வேன்என்று
மருவுஆர்வத் தொண்டருடன்
வழிக்கொண்டு செல்பொழுதில்
ஒருவாநண் புள்ளுருக
வுடனெழுந்து கைதொழுது
பெருவான வரம்பனார்
பிரிவாற்றார் பின்செல்வார். **#3646**

திருவாரூரை நினைந்தவாறு, `அங்குச் சென்று தொழுவேன்!' என்று மனத்தில் எண்ணி, மேற்கொண்டு, பேரன்பு டைய தொண்டர்களுடன் புறப்பட்டுச் செல்ல எழுந்தபோது, பெரிய சேரமான்பெருமாள் நாயனார், நீங்காத நட்பினால் உள்ளம் உள் உருக அவருடன் எழுந்து கை கூப்பி வணங்கிப் பிரிவாற்றாமல் அவர் பின் செல்வாராகி,

விளக்கவுரை

****

வன்றொண்டர் முன்எய்தி
மனமழிந்த வுணர்வினராய்
இன்றுமது பிரிவாற்றேன்
என்செய்கேன் யான்என்ன
ஒன்றும்நீர் வருந்தாதே
யுமதுபதி யின்கணிருந்
தன்றினார் முனைமுருக்கி
அரசாளும் எனமொழிந்தார். **#3647**

வன்தொண்டரின் முன் சென்று, உள்ளம் அழிந்த உணர்ச்சியினை உடையவராய், `இன்று உம் பிரிவைத் தாங்க இயலாதவன் ஆனேன்! நான் என் செய்வேன்?' எனக் கூற, `நீர் ஒரு சிறிதும் வருந்தாமல் உம் நகரத்தில் இருந்தருளிப் பகைவரைப் புறங்கண்டு ஆட்சி செலுத்துவீராக!' என்று சுந்தரர் உரைத்தருளினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஆரூரர் மொழிந்தருள
அதுகேட்ட அருட்சேரர்
பாரோடு விசும்பாட்சி
எனக்குமது பாதமலர்
தேரூரும் நெடுவீதித்
திருவாரூர்க் கெழுந்தருள

நேரூரு மனக்காதல்
நீக்கவும்அஞ் சுவன்என்றார். **#3648**
நம்பியாரூரர் இவ்வாறருள, அது கேட்ட அருளையுடைய சேரமானார், `எனக்கு இவ்வுலகத்தோடு விண்ணுல கத்தின் அரசாட்சியுமாவது தங்களின் திருவடி மலர்களே ஆகும்; ஆயினும், தேர் ஓடும் நீண்ட பெரு வீதிகளையுடைய திருவாரூருக்குத் தாங்கள் எழுந்தருளுவதற்குக் கொண்டெழுந்த பேரார்வத்தை விலக்கவும் யான் அஞ்சுவேன்!' என்றார்.

விளக்கவுரை

****

மன்னவனார் அதுமொழிய
வன்றொண்டர் எதிர்மொழிவார்
என்னுயிருக் கின்னுயிராம்
எழிலாரூர்ப் பெருமானை
வன்னெஞ்சக் கள்வனேன்
மறந்திரேன் மதியணிந்தார்
இன்னருளால் அரசளிப்பீர்
நீரிருப்பீர் எனவிறைஞ்ச. **#3649**
சேரர் பெருமான் இவ்வாறருளக் கேட்ட நம்பி யாரூரர் மறுமொழி கூறுவாராய், `என் உயிரினும் இனிய அழகிய திருவாரூர் இறைவரை, வன்மையான நெஞ்சுடைய நான் மறந்தி ரேன்; பிறைச் சந்திரனைச் சூடிய இறைவரின் இன்னருள் துணையால் அரசை ஆள்வீர்! நீவிர் இங்கே இருப்பீராக!' என்று வணங்க,

விளக்கவுரை

****

மற்றவரும் பணிந்திசைந்தே
மந்திரிகள் தமையழைத்துப்
பொற்புநிறை தொன்னகரில்
இற்றைக்கு முன்புகுந்த
நற்பெரும்பண் டாரநா
னாவருக்க மானவெலாம்
பற்பலவாம் ஆளின்மிசை
ஏற்றிவரப் பண்ணும்என. **#3650**
அதைக் கேட்ட சேரமானாரும் வணங்கி, இசைந்து, தம் அமைச்சரை அழைத்து, அழகு நிறைந்த பழைமையான இந்நகரின் பண்டாரத்தே இன்று வரை சேர்ந்திருக்கும் நல்ல பெரும் பொருள்களின் வகைகளாக உள்ளவற்றையெல்லாம், எடுத்துச் செல்லத்தகும் ஆள்களின் மீது ஏற்றி

வருமாறு செய்யுங்கள் என்று ஆணையிட,
ஆங்கவரும் அன்றுவரை
ஆயமா கியதனங்கள்
ஓங்கியபொன் நவமணிகள்
ஒளிர்மணிப்பூண் துகில்வருக்கம்
ஞாங்கர்நிறை விரையுறுப்பு
வருக்கமுதல் நலஞ்சிறப்பத்
தாங்குபொதி வினைஞர்மேல்
தலம்மலியக் கொண்டணைந்தார். **#3651**

அவ்வமைச்சர்களும் அவ்வாணையின் வண்ணம், அன்றுவரை இறைப்பொருளாகச் சேர்ந்துள்ள பொருள்களையும், விலையுயர்ந்த பொன், நவமணிகள், ஒளி வீசும் மணிகளைக் கொண்ட அணிவகைகள், ஆடை வகைகள், அவற்றின் அருகிருந்த மணப் பொருள்களின் வகைகள் ஆகிய இவற்றையும் நன்மையால் சிறந்து விளங்கும்படி தாங்கும் பொதிகளாய் அமைத்து அதற்குரிய ஆட்களின் மீது ஏற்றி, நிலம் நிறையக் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

விளக்கவுரை

ஆயம் - இறைப்பொருள். ஞாங்கர் - அவ்விடத்தின் அருகே. விரையுறுப்பு வருக்கம் - நறுமனப்பொருள்களாகக் கூட்டி யுரைப்பன; கத்தூரி, பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ முதலாயின. இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

மற்றவற்றின் பரப்பெல்லாம்
வன்றொண்டர் பரிசனத்தின்
முற்படவே செலவிட்டு
முனைப்பாடித் திருநாடர்
பொற்பதங்கள் பணிந்தவரைத்
தொழுதெடுத்துப் புனையலங்கல்
வெற்பியர்தோ ளுறத்தழுவி
விடையளித்தார் வன்றொண்டர். **#3652**

அச்செல்வங்களில் பரவிய பொதிகள் எல்லா வற்றையும் வன்தொண்டர் தம் ஏவலர்களின் வழி முன்னே செல்லு மாறு விடுத்துத், தம் பொன்னடிகளை வணங்கிய சேரமான் பெருமானைத் திருமுனைப் பாடி நாட்டவரான வன்தொண்டர் தாமும் எதிர் வணங்கி, பணிந்த அவரை முகந்தெடுத்து, அணிந்த மாலையை யுடைய மலைபோல் உயர்ந்த தோள்கள் பொருந்தத் தழுவிக் கொண்டு, பின்பு விடையளித்தார்.

ஆரூரர் அவர்தமக்கு
விடையருளி அங்ககன்று

காரூரும் மலைநாடு
கடந்தருளிக் கற்சுரமும்
நீரூருங் கான்யாறு
நெடுங்கானும் பலகழியச்
சீரூருந் திருமுருகன்
பூண்டிவழிச் செல்கின்றார். #3653
நம்பி ஆரூரர், சேரமான் பெருமானாருக்கு விடை தந்தருளி, அந்நகரத்தினின்றும் நீங்கிச் சென்று, மேகங்கள் தவழும் மலைகளையுடைய அந்நாட்டைக் கடந்து, கற்சுரங்களும் நீர் பெருகும் காட்டாறுகளும் நீண்ட காடுகளும் பல பிற்படச் செல்ல, சிறப்புடைய திருமுருகன்பூண்டி வழியாகச் செல்கின்றவர்,
திருமுருகன் பூண்டிஅயல்
செல்கின்ற போழ்தின்கண்
பொருவிடையார் நம்பிக்குத்
தாமேபொன் கொடுப்பதலால்
ஒருவர்கொடுப் பக்கொள்ள
ஒண்ணாமைக் கதுவாங்கி
பெருகருளால் தாங்கொடுக்கப்
பெறுவதற்கோ அதுஅறியோம். #3654
நம்பி ஆரூரர், சேரமான் பெருமானாருக்கு விடை தந்தருளி, அந்நகரத்தினின்றும் நீங்கிச் சென்று, மேகங்கள் தவழும் மலைகளையுடைய அந்நாட்டைக் கடந்து, கற்சுரங்களும் நீர் பெருகும் காட்டாறுகளும் நீண்ட காடுகளும் பல பிற்படச் செல்ல, சிறப்புடைய திருமுருகன்பூண்டி வழியாகச் செல்கின்றவர்,
வென்றிமிகு பூதங்கள்
வேடர்வடி வாய்ச்சென்று
வன்றொண்டர் பண்டாரங்
கவரஅருள் வைத்தருள
அன்றினார் புரமெரித்தார்
அருளால்வேட் டுவப்படையாய்ச்
சென்றவர்தாம் வரும்வழியில்
இருபாலும் செயிர்த்தெழுந்து. #3655
வெற்றி மிக்க பூதகணங்கள் வேடர் வடிவாய்ச் சென்று, சுந்தரர் கொணரும் நிதியங்களைக் கவர்ந்து கொள்ளும்படித் திருவருள் வைத்தருளவே, பகைத்தவரின் முப்புரங்களையும் எரித்த இறைவரின் திருவருளால், அப்பூதகணங்கள் அவ்வாணைவழி வேடர் உருக்கொண்டு சென்று, அந்நாவலூரார் வரும் வழியின் இருமருங்குமாகச் சினந்து

எழுந்து,
வில்வாங்கி அலகம்பு
விசைநாணில் சந்தித்துக்
கொல்வோம்இங் கிட்டுப்போம்
எனக்கோபத் தாற்குத்தி
எல்லையில்பண் டாரமெலாங்
கவர்ந்துகொள இரிந்தோடி
அல்லலுடன் பறியுண்டார்
ஆரூரர் மருங்கணைந்தார். #3656

வில்லை வளைத்து, கூரிய அம்புகளை விரைவாய்ச் செலுத்தும் நாணில் பூட்டி, `இப்பொதிகளை இங்கு இட்டுச் செல்லுங்கள்! இல்லையெனில் உங்களைக் கொல்வோம்!' என்று சினத்தால் நிலத்திற் குத்தி, அளவற்ற செல்வங்களையெல்லாம் கவர்ந்து கொள்ளப், பறிக்கப்பட்டவர்களாகிய சுமை ஆட்கள் பதறி ஓடி நம்பியாரூரரின் அருகே வந்தனர்.

விளக்கவுரை

விசை - விரைவுபடுத்தற்குரிய நாண். சந்தித்து - தொகுத்து. அலகு - அம்புகளின் ஈர்க்காய பகுதி. கூரியபகுதி. குத்தி - நிலத்திற் குத்தி. இந்நான்கு பாடல்களும் ஒரு முடிபின.

ஆரூரர் தம்பால்அவ்
வேடுவர்சென் றணையாதே
நீரூருஞ் செஞ்சடையார்
அருளினால் நீங்கஅவர்
சேர்ஊராந் திருமுருகன்
பூண்டியினிற் சென்றெய்திப்
போரூரும் மழவிடையார்
கோயிலைநா டிப்புக்கார். #3657

அவ்வேடர்கள் சுந்தரரிடம் செல்லாது, கங்கையைத் தரித்த சிவந்த சடையையுடைய சிவபெருமானின் திருவருளால் நீங்கிச் செல்ல, அவர்கள் சேர்ந்த ஊரான திருமுருகன்பூண்டிக்குச் சென்று, போரில் வல்ல இளமையான விடையை உடையவரான இறைவரின் கோயிலை நாடி ஆரூரர் அடைந்தார்.

அங்கணர்தங் கோயிலினை
அஞ்சலிகூப் பித்தொழுது
மங்குலுற நீண்டதிரு
வாயிலினை வந்திறைஞ்சிப்
பொங்குவிருப் புடன்புக்கு
வலங்கொண்டு புனிதநதி

திங்கள்முடிக் கணிந்தவர்தந்
திருமுன்பு சென்றணைந்தார். #3658
அழகிய அருள் நிறைந்தவராய சிவபெருமானின் திருக்கோயிலைக்
கைகளை அஞ்சலியாய்க் குவித்து வணங்கி, மேகங் களைப்
பொருந்தும்படி உயர்ந்த வாயிலைப் பணிந்து, பெருகும் விருப்பத்துடன்
புகுந்து, வலம் வந்து, தூய்மையான கங்கையாற்றை யும்
பிறைச்சந்திரனையும் முடியில் அணிந்த இறைவரின் திருமுன்பு சென்று
சேர்ந்தார்.

உருகியஅன் பொடுகைகள்
குவித்துவிழுந் துமைபாகம்
மருவியதம் பெருமான்முன்
வன்றொண்டர் பாடினார்
வெருவுறவே டுவர்பறிக்கும்
வெஞ்சுரத்தில் எத்துக்கிங்
கருகிருந்தீர் எனக்கொடுகு
வெஞ்சிலையஞ் சொற்பதிகம். #3659

அழகிய அருள் நிறைந்தவராய சிவபெருமானின் திருக்கோயிலைக்
கைகளை அஞ்சலியாய்க் குவித்து வணங்கி, மேகங் களைப்
பொருந்தும்படி உயர்ந்த வாயிலைப் பணிந்து, பெருகும் விருப்பத்துடன்
புகுந்து, வலம் வந்து, தூய்மையான கங்கையாற்றை யும்
பிறைச்சந்திரனையும் முடியில் அணிந்த இறைவரின் திருமுன்பு சென்று
சேர்ந்தார்.

பாடியவர் பரவுதலும்
பரம்பொருளாம் அவரருளால்
வேடுவர் தாம் பறித்தபொரு
ளவையெல்லாம் விண்ணெருங்க
நீடுதிரு வாயிலின்முன்
குவித்திடலும் நேரிறைஞ்சி
ஆடுமவர் திருவருளால்
அப்படியே கைக்கொண்டார். #3660

நம்பியாரூரர் இவ்வாறு பாடி வணங்கவும், மேலாய பொருளான
அவ்விறைவரின் அருளால், வேடுவர் பறித்துச் சென்ற பொருள்களை
எல்லாம், வான் அளாவ நீடும் வாயிலின் முன் குவித்திடவும், அதைப்
பார்த்து, நேர் வணங்கி, அருட்கூத்தாடும் இறைவரின் திருவருளால்,
பறிக்கப்பட்ட பொருள்களில் சிறிதும் குறைவின்றி முழுமையாகக்
கைவரப்பெற்றார்.

விளக்கவுரை

****

கைக்கொண்டு கொடுபோம்அக்
கைவினைஞர் தமையேவி
மைக்கொண்ட மிடற்றாரை
வணங்கிப்போய்க் கொங்ககன்று
மெய்க்கொண்ட காதலினால்
விரைந்தேகி மென்கரும்பும்
செய்க்கொண்ட சாலியுஞ்சூழ்
திருவாரூர் சென்றணைந்தார். **#3661**

எடுத்துச் செல்கின்ற அச்சுமையாட்களைச் செல்லச் செய்து, நஞ்சையுண்டு விளங்கும் திருக்கழுத்தையுடைய இறைவரை வணங்கி, விடை பெற்றுக் கொங்கு நாட்டை நீங்கிச் சென்று, மெய்ம் மையாகப் பொருந்திய பெருவிருப்பத்துடன் விரைவாகச் சென்று, மென் கரும்பும் வயல்களில் நெருங்கிய செந்நெல்லும் சூழ்ந்து விளங்கும் திருவாரூரைச் சென்று அடைந்தார்.

விளக்கவுரை

****

நாவலர்மன் னவர்அருளால்
விடைகொண்ட நரபதியார்
ஆவியின்ஒன் றாநண்பின்
ஆரூரர் தமைநினைந்து
மாவலரு மலர்ச்சோலை
மகோதையினின் மன்னிமலைப்
பூவலயம் பொதுநீக்கி
அரசுரிமை புரிந்திருந்தார். **#3662**

நாவலர் தலைவரான நம்பியாரூரரின் திருவரு ளால் விடைபெற்றுக் கொண்ட மன்னரான சேரமான் பெருமாள் நாயனாரும், உயிரோடு ஒன்றிய நட்பையுடைய நம்பியாரூரரை இடைவிடாது எண்ணிய வண்ணமே, வண்டுகள் ஒலிப்பதற்கு இட மான மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த மகோதை நகரில் வீற்றிருந்து, மலை நாட்டின் அரசினை மற்றவர்க்கு உரியதாக அன்றித் தமக்கே உரிமையாகக் கொண்டு ஆண்டு வந்தார்.

விளக்கவுரை

****

இந்நிலைமை யுதியர்பிரான்
எம்பிரான் வன்றொண்டர்

பொன்னிவள நாடகன்று
மகோதையினின் மேற்புகுந்து
மன்னுதிருக் கயிலையினின்
மதவரைமேல் எழுந்தருள
முன்னர்வயப் பரியுகைக்குந்
திருத்தொழில்பின் மொழிகின்றாம். **#3663**

இந்நிலையில் ஆட்சி புரிந்தருளும் சேரமான் பெருமானார், எம் தலைவரான வன்றொண்டப் பெருந்தகையார் சோழவளநாட்டை நீங்கி மகோதை நகரிற்கு, மேல் வருங்காலத்து வந்து புகுந்து நிலையான திருக்கயிலைக்கு யானையின் மேல் ஏறி எழுந்தருள, அப்போது, அவர் முன் தம் கொற்றக் குதிரையைச் செலுத்தி அவருடனே தாமும் திருக்கயிலை சேரும் திருச்செயலைப் பின்னர்ச் சொல்வாம்.

விளக்கவுரை

****

மலைமலிந்த திருநாட்டு
மன்னவனார் மாகடல்போல்
சிலைமலிந்த கொடித்தானைச்
சேரலனார் கழல்போற்றி
நிலைமலிந்த மணிமாட
நீண்மறுகு நான்மறைசூழ்
கலைமலிந்த புகழ்க்காழிக்
கணநாதர் திறமுரைப்பாம். **#3664**

மலைகள் மிக்க செல்வமுடைய மலை நாட்டு மன்னவரான, பெரிய கடல் போன்ற வில் எழுதிய கொடியைக் கொண்ட படைகளையுடைய, சேரமானாரின் திருவடிகளைப் போற்றி, நிலையினால் உயர்ந்த அழகிய மாடங்களையுடைய நீண்ட வீதிகள் தோறும், பெரிய மறைகளும் அவற்றை உட்கொண்ட கலைகளும் பயின்றொழுகும் திறம் மிக்க புகழையுடைய சீகாழியில் வாழ்ந்த கணநாத நாயனாரின் இயல்பை இனிக் கூறுவாம்.

விளக்கவுரை

****

கணநாத நாயனார் புராணம்

ஆழி மாநிலத் தகிலம்ஈன்
றளித்தவள் திருமுலை யமுதுண்ட
வாழி ஞானசம் பந்தர்வந்
தருளிய வனப்பின தளப்பில்லா
ஊழி மாகடல் வெள்ளத்து
மிதந்துல கினுக்கொரு முதலாய
காழி மாநகர்த் திருமறை
யவர் குலக் காவலர் கணநாதர். **#3665**

கடல் சூழ்ந்த பெரிய உலகத்தில் எல்லா உயிர்களையும் ஈன்று காக்கின்ற உமையம்மையாரின் கொங்கையில் உண்டான பாலை உண்டதால், சிவஞானச் சீர்மைபெற்ற திருஞானசம்பந்தர் வந்து தோன்றிய அழகிய பெருமையுடையதும், ஊழிக்காலத்தில் பெருகிய பெருங்கடல் வெள்ளத்திலும் ஆழாமல் மிதந்து நின்று, உலகம் உளதாவதற்கு ஒரு முதலானதுமான சீகாழிப் பதியில், மறையவர் தலைவராய் விளங்கியவர் 'கணநாதர்' என்பார்.

விளக்கவுரை

ஆழி - கடல். வாழி - வாழ்வு; சிவஞானச் சீர்மை

ஆய அன்பர்தாம் அணிமதில்
சண்பையி லமர்பெருந் திருத்தோணி
நாய னார்க்குநல் திருப்பணி
யாயின நாளும்அன் பொடுசெய்து
மேய அத்திருத் தொண்டினில்
விளங்குவார் விரும்பிவந் தணைவார்க்குத்
தூய கைத்திருத் தொண்டினில்
அவர்தமைத் துறைதொறும் பயில்விப்பார். **#3666**

அத்தகைய அன்பர் அழகிய மதில் சூழ்ந்த சீகாழிப் பதியில் விரும்பி எழுந்தருளிய திருத்தோணியப்பரின் நல்ல திருப் பணிகளை நாடோறும் செய்து, அவ்வாறு தொண்டு செய்யும் நிலைமையில் சிறந்து விளங்குவாராய், விருப்புடன் தம்பால் வந்து சேர்கின்ற அன்பர்களுக்கு, உயிர்த் தூய்மை பெறுதற்குரிய கைத் தொண்டாகிய சரியை முதலான நிலைகளில், அவர்களை அவ்வத் துறைதொறும் பயிலச் செய்பவராய்,

விளக்கவுரை

கைத்திருத் தொண்டு - கைகளால் செய்யும் சிவத் தொண்டு; இதனைச் சரியை, கிரியை என்பர். இவ்வகையான தொண்டின் வகைகளை வரும் பாட்டால் அறியலாம். `கைத்தொண் டாகும் அடிமையினால்' என்பர்

முன்னும் *(தி.12 பு.21 பா.260).*

நல்ல நந்தன வனப்பணி
செய்பவர் நறுந்துணர் மலர்கொய்வோர்
பல்ம லர்த்தொடை புனைபவர்
கொணர்திரு மஞ்சனப் பணிக்குள்ளோர்
அல்லும் நண்பக லும் திரு
வலகிட்டுத் திருமெழுக் கமைப்போர்கள்
எல்லை யில்விளக் கெரிப்பவர்
திருமுறை எழுதுவோர் வாசிப்போர். **#3667**

நல்ல நந்தனவனத்தில் பணி செய்பவரும், மணம் மிக்க கொத்துக்களில் மலர்ந்த மலர்களைக் கொய்பவரும், பல வகைப்பட்ட மலர்களை மாலைகளாகத் தொடுப்பவரும், இறைவற் கெனத் திருமுழுக்கிற்கான நீரைக் கொணரும் பணிக்கு உரியவரும், இரவும் பகலும் திருவலகும் திருமெழுக்கும் அமைப்பவரும், அள வற்ற விளக்குகளை எரிப்பவரும், திருமுறைகளை எழுதுபவ ரும், அவற்றை வாசிப்பவரும்,

விளக்கவுரை

நந்தனவனம் அமைத்துக் கொடுத்தல் சிவபுண்ணியச் செயலாகும். திலகவதியாரும், நாவரசரும் இவ்வகையான வினைத் துறைகளில் தலைநின்றவர்கள். மலர்கொய்தற்குரிய நியமம் எறிபத்தர் வரலாற்றால் உணரப்படும். மலர் தொடுக்கும் இயல்பு சங்கிலியார் செய்தவாற்றால் அறியப்படும். புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டு *(தி.6 ப.31 பா.3)* என்பதால், அப்பணி செய்தற்குரிய காலம் அறியப்படும். ஈண்டு அல்லும் பகலும் ஆக அமைப்பவர் என்றது, அவ்வலகும் மெழுக்கும் சிதையும் தொறும் செய்யவேண்டுதல் பற்றியாம். `அந்தியும் பகலும் தொண்டர் அலகிடும் குப்பையாக்கும் நந்தியெம் பெருமான்' *(திருவிளையாடல் பு.)* என வரும் பரஞ்சோதி யாரின் திருவாக்கும் காண்க.

`விரும்பி நல்விளக்குத் தூபம்'*(தி.4 ப.31 பா.3),* வேண்டளவு உயரத் தூண்டி'*(தி.4 ப.54 பா.9)* என்றல் தொடக்கத்தனவாய திருவாக்குகளைக் காண்க. விளக்கிடுமாற்றான் வரும் பயனை, `விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞான மாகும்' *(தி.4 ப.77 பா.3)* எனவரும் திருவாக்கால் அறியலாம்.

திருமுறைகள் மந்திரமாதலின், அவற்றை எழுதும் பொழுதும், வாசிக்கும் பொழுதும் பிழையின்றி எழுதவும் ஓதவும் வேண்டும். சைவசீலமும், ஒன்றிய மனமும் ஒருங்கிருத்தல் வேண்டும். ஞான நூல்களை ஓதல், ஓதுவித்தல், நற்பொருளைக் கேட்பித்தல், தான் கேட்டல், நன்றாம். ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும் இறைவனடி

அடைவிக்கும் எழில் ஞானப் பூசையாகும் *(சித்தியார் சூத்.8 பா.23).*

இனைய பல்திருப் பணிகளில்
அணைந்தவர்க் கேற்றவத் திருத்தொண்டின்
வினைவி ளங்கிட வேண்டிய
குறையெலாம் முடித்துமே விடச்செய்தே
அனைய அத்திறம் புரிதலில்
தொண்டரை யாக்கிஅன் புறுவாய்மை
மனைய றம்புரிந் தடியவர்க்
கின்புற வழிபடுந் தொழில்மிக்கார். **#3668**

இத்தகைய பல திருப்பணிகளைச் செய்தற்கு, விரும்பி வரும் அன்பர்களுக்கு, அவரவர்க்கேற்ற அவ்வத் திருத்தொண்டின் செயல்கள் விளங்கும் படியாகக் கூறி, அவர் வேண்டிய குறைகளை எல்லாம் நீக்கி நிறைவாக்கி, அவற்றில் ஈடுபடுமாறு செய்து, அத்தகைய நற்றிறங்களால் தொண்டர்களைப் பெருகும்படி செய்து, அன்பு பொருந்திய வாய்மையுடைய இல்லறத்தை நடத்தி, வாழ்ந்து, சிவனடி யார்களுக்கு இன்பம் பெருகுமாறு செய்யும் தொழிலில் சிறந்து விளங்கினார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

இப்பெ ருஞ்சிறப் பெய்திய
தொண்டர்தாம் ஏறுசீர் வளர்காழி
மெய்ப்பெ ருந்திரு ஞானபோ
னகர்கழல் மேவிய விருப்பாலே
முப்பெ ரும்பொழு தருச்சனை
வழிபாடு மூளும்அன் பொடுநாளும்
ஒப்பில் காதல்கூர் உளங்களி
சிறந்திட வொழுகினார் வழுவாமல். **#3669**

இத்தகைய பெருஞ்சிறப்பையுடைய அத் தொண்டர், அடியவரின் உள்ளங்களில் மேன்மேலும் மீதூர்ந்த சிறப்பு வளருதற்கு ஏதுவான சீகாழியில், தோன்றியருளிய மெய்ப்பெரும் திருஞானம் உண்டவரான பிள்ளையாரின் திருவடிகளைப், பொருந்திய விருப் பினால், நாளும், முப்போதும், போற்றிசெய்து, பெருகும் அன்புடன், ஒப்பில்லாத பத்திமை மிகுவதான உள்ளத்தில் மகிழ்ச்சி மேலோங்கச் செய்து, வழுவாது ஒழுகி வந்தார்.

விளக்கவுரை

ஏறுசீர் - சீர்மை வளர்ந்தமைந்த காலத்தும் வளர்ந்து மாறியதன்றி மேன்மேலும் வளருமாறு அமைந்திருப்பது. மெய்ப் பெருந்திரு ஞானம் -

மெய்ப் பொருள் உள்ளத்தில் தழையுமாறு அமைந்த திருவருள் ஞானம்.

ஆன தொண்டினில் அமர்ந்தபேர்
அன்பரும் அகலிடத் தினில்என்றும்
ஞான முண்டவர் புண்டரீ
கக்கழல் அருச்சனை நலம்பெற்றுத்
தூந றுங்கொன்றை முடியவர்
சுடர்நெடுங் கயிலைமால் வரையெய்தி
மான நற்பெருங் கணங்கட்கு
நாதராம் வழித்தொண்டின் நிலைபெற்றார். **#3670**

இத்தகைய திருத்தொண்டில் விரும்பியிருந்த பேரன்பரான கணநாதரும், பரந்த மண் உலகத்தில் எந்நாளும் ஞானசம்பந்தரின் தாமரை போன்ற திருவடியை வழிபடுதலான நன்மையை அடைந்து, அதன் பயனாய்த், தூய மணமுடைய கொன்றைப் பூக்களைச் சூடிய சடையுடையவரின் ஒளியுடைய நீண்ட திருக்கயிலை மலையை அடைந்து, பெருமையுடைய நல்ல பெருஞ் சிவகணங்களுக்கு நாதராகும் தலைமை பெற்று, அங்கு வழி வழியாகச் செய்து வரும் திருத்தொண்டில் நிலைபெற்று நின்றார்.

விளக்கவுரை

****

உலகம் உய்யநஞ் சுண்டவர்
தொண்டினில் உறுதிமெய் யுணர்வெய்தி
அலகில் தொண்டருக் கறிவளித்
தவர்திற மவனியின் மிசையாக்கும்
மலர்பெ ரும்புகழ்ப் புகலியில்
வருங்கண நாதனார் கழல் வாழ்த்திக்
குலவு நீற்றுவண் கூற்றுவ
னார்திறங் கொள்கையின் மொழிகின்றாம். **#3671**

உலகத்து உயிர்கள் உய்யும் பொருட்டு நஞ்சை யுண்ட சிவபெருமானின் தொண்டின் உண்மைத் திறத்தில் உறுதியான மெய்யுணர்ச்சி பொருந்தப் பெற்று, அளவில்லாத தொண்டர்களுக்கு அவ்வவர் தொண்டிற்கான அறிவை அளித்து, அவர்களின் திறங்களை உலகிலே நிலை நிறுத்தும் விரிந்த பெரும் புகழையுடைய சீகாழியில் தோன்றிய கணநாதரின் திருவடிகளைத் துதித்து, விளங்கும் திருநீற்றுச் சார்பு பூண்ட வண்மையுடைய கூற்றுவ நாயனாரின் இயல்பை உளங் கொண்ட கொள்கையின்படி சொல்லப் புகுகின்றாம். கணநாத நாயனார் புராணம் முற்றிற்று.

விளக்கவுரை

****

கூற்றுவ நாயனார் புராணம்

துன்னார் முனைகள் தோள்வலியால்
வென்று சூலப் படையார்தம்
நன்னா மம்தம் திருநாவில்
நாளும் நவிலும் நலமிக்கார்
பன்னாள் ஈசர் அடியார்தம்
பாதம் பரவிப் பணிந்தேத்தி
முன்னா கியநல் திருத்தொண்டில்
முயன்றார் களந்தை முதல்வனார். **#3672**

பகைவர் எதிர்த்து நின்ற போரில், அவர்களைத் தம் தோளின் வன்மையால் வெற்றி பெற்றுச், சூலப்படையை ஏந்திய சிவபெருமானின் நல்ல திருப்பெயராய திருவைந்தெழுத்தைத் தம் நாவால் நாள் தோறும் சொல்லும் நன்மையில் மிக்கவர், பல நாள்கள் இறைவனின் அடியவர்தம் திருவடிகளைப் பணிந்து போற்றிவரும் முதன்மையான தொண்டில் முயன்றவர், களந்தைத் தலைவரான கூற்றுவ நாயனார் ஆவர்.

விளக்கவுரை

களந்தை - களப்பாள் என வழங்கப்பெறுகிறது. சோழ நாட்டில் திருத்துறைப்பூண்டிக்கு அருகில், முள்ளி ஆற்றின் தென் கரையில் உள்ளது.

அருளின் வலியால் அரசொதுங்க
அவனி யெல்லாம் அடிப்படுப்பார்
பொருளின் முடிவுங் காண்பரிய
வகையால் பொலிவித் திகல்சிறக்க
மருளுங் களிறு பாய்புரவி
மணித்தேர் படைஞர் முதல்மாற்றார்
வெருளுங் கருவி நான்குநிறை
வீரச் செருக்கின் மேலானார். **#3673**

சிவபெருமானின் திருவருள் துணையால் மன்னர் களும் அஞ்சி ஒதுங்கிக் கீழ்ப்படும்படி, நிலம் முழுதும் தம் ஆட்சியின் கீழ்வருமாறு செய்து, பொருள்களின் எல்லை காண இயலாதவாறு சேர்த்துப், போரில் வெற்றிபெறும்படியாக மருட்சி செய்யும் யானை கள், பாய்ந்து செல்லும் குதிரைகள், அழகிய தேர்கள், படை வீரர்கள் ஆகிய நால்வகைப் படைப் பெருக்கமும் கொண்டு, பகைவர்களும் அஞ்சி ஓடத்தக்க வீரத்தைக் கொண்டு பெருமிதத்தால் மேம்பட்டவ ராய் விளங்கினார்.

விளக்கவுரை

கல்வி, தறுகண், இசைமை, கொடை ஆகிய நால்வகை யாலும் பெருமிதம் தோன்றும் என்பர் தொல்காப்பியர். கூற்றுவருக்கு வந்த பெருமிதம் தறுகண்மையால் (வீரத்தால்) வந்ததாகும்.

வென்றி வினையின் மீக்கூர
வேந்தர் முனைகள் பலமுருக்கிச்
சென்று தும்பைத் துறைமுடித்துச்
செருவில் வாகைத் திறங்கெழுமி
மன்றல் மாலை மிலைந்தவர்தம்
வளநா டெல்லாங் கவர்ந்துமுடி
ஒன்றும் ஒழிய அரசர்திரு
வெல்லாம் உடைய ராயினார். **#3674**

வெற்றி பெறும் செயல் மேன்மேல் பெருக, தும்பைப் பூவைச் சூடி, மன்னருடன் செய்யும் போர்கள் பலவற்றையும் கண்டு அப்போர்த் தொழிலின் நிறைவாக வெற்றி அடையும் வகையில் வாகை மாலையோடு பொருந்திய மணமுடைய மலர் மாலைகளையும் சூடி, அவ்வேந்தர்களின் வளநாடுகளை எல்லாம் கையகப்படுத்தி, மன்னர்க்குரிய முடி ஒன்று தவிர, மற்ற செல்வங்கள் எல்லாவற்றையும் அவர் உடையவர் ஆனார்.

விளக்கவுரை

களம் வகுத்துப் போர் செய்யுங்கால் தும்பையும், வெற்றி பெற்றதும் வாகை சூடலும் மரபு.

மல்லல் ஞாலம் புரக்கின்றார்
மணிமா மவுலி புனைவதற்குத்
தில்லை வாழந் தணர்தம்மை
வேண்ட அவருஞ் செம்பியர்தம்
தொல்லை நீடுங் குலமுதலோர்க்
கன்றிச் சூட்டோம் முடியென்று
நல்கா ராகிச் சேரலன்தன் மலைநா
டணைய நண்ணுவார். **#3675**

செழுமையான இவ்வுலகத்தைக் காக்கின்றவராய், நவமணிகளையுடைய பெரிய முடியைச் சூட்டுவதற்காகத் தில்லை வாழ் அந்தணர்களை வேண்ட, அவர்கள் சோழர்களின் தொன்று தொட்டு வரும் குல முதல்வருக்கு அல்லாமல் மற்றவர்க்கு முடி சூட்ட மாட்டோம் என்று கூறி, சேர மன்னரின் மலை நாட்டை அடைவாராய்,

விளக்கவுரை

சோழமன்னர்களின் மணிமுடி தில்லைப் பேரம்பலத்தில் பாதுகாப்பாக

வைக்கப் பெற்று, அவ்வச் சோழ மன்னர்களும் முடி சூடுங்கால் தில்லைவாழ் அந்தணர்களால் அம்முடி சூட்டப்பெற்றுப், பின்னரும் அவ்வம்பலத்திலேயே வைக்கப்பட்டு வந்தது என்பது இதனால் தெரிய வருகின்றது. சோழர்கள் முடி சூடிக் கொள்ளும் பதிகள் காவிரிப்பூம்பட்டினம், திருவாரூர், உறையூர், கருவூர், சேய் ஞலூர் ஆகிய ஐந்துமாம் எனச் சண்டீச நாயனார் வரலாற்றால் அறியப் படுகின்றது. தில்லையில் சூடிக் கொள்ளும் மரபும் உளதாதல் இவ் வரலாற்றால் அறியப்படுகின்றது.

ஒருமை யுரிமைத் தில்லைவாழந்
தணர்கள் தம்மில் ஒருகுடியைப்
பெருமை முடியை யருமைபுரி
காவல் பேணும் படியிருத்தி
இருமை மரபுந் தூயவர்தாம்
சேரர் நாட்டில் எய்தியபின்
வரும்ஐ யுறவால் மனந்தளர்ந்து
மன்று ளாடுங் கழல்பணிவார். **#3676**

கூத்தப்பெருமானிடத்து ஒரு நெறிய மனங் கொண்ட தில்லைவாழ் அந்தணர்கள், பெருமை கொண்ட அம் மணிமுடியைத் தங்களுக்குள் ஒரு குடியினர்பால் அருமையாய்க் காவல் செய்யும்படி வைத்து, இரு மரபும் தூயவரான அவர்கள், சேர நாட்டை அடைந்த பின்பு, கூற்றுவனார் தமக்குற்ற ஐயப்பாட்டினால் உள்ளம் தளர்ந்து, தில்லையம்பலத்தில் ஆடும் இறைவரின் திருவடியைப் பணிவாராய்,

விளக்கவுரை

ஒருமை - கூத்தப்பெருமானிடத்துக் கொண்ட ஒருமை. இருமரபு - தாய், தந்தையர் ஆகிய இருமரபுகள். கூத்தப்பெருமா னுக்கு வழிபாடாற்றி வரும் கடப்பாடு இருத்தலின், தமக்குள் ஒரு குடியினரைமட்டும் தில்லையிலேயே இருக்கச் செய்தனர். அவரிடம் இம்முடியைச் சேமமாக வைத்தனர். வரும் ஐயுறவு - தோன்றிய ஐயப் பாடு. முடிசூட்டுதற்குரிய தில்லைவாழ் அந்தணர்கள் இடம்பெயர்ந் துறைந்த நிலையில், முடிசூடுவதா? தவிர்ப்பதா! அன்றி வேறு வழி காண்பதா என்று ஐயுற்ற நிலை.

அற்றை நாளில் இரவின்கண்
அடியேன் தனக்கு முடியாகப்
பெற்ற பேறு மலர்ப்பாதம்
பெறவே வேண்டும் எனப்பரவும்
பற்று விடாது துயில்வோர்க்குக்
கனவிற் பாத மலரளிக்க

உற்ற வருளால் அவைதாங்கி யுலக
மெல்லாந் தனிப் புரந்தார். #3677

`அடியேன் பெருமானின் மலர் போன்ற அடிகளை மணிமுடியாகப் பெறும் பேறு பெற வேண்டும்,' எனப் போற்றி வாழும் பற்றை விடாது துயில்கின்ற அவருக்கு, அன்றைய இரவில், கனவில் இறைவர் தம் திருவடிகளை முடியாய்ச் சூட்டியருளப், பொருந்திய திருவருளால் அவ்வடிகளையே மணி முடியாய்த் தாங்கிக் கொண்டு உலகம் எல்லாவற்றையும் தனியாட்சி புரிந்து வந்தார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

அம்பொன் நீடும் அம்பலத்துள்
ஆரா வமுதத் திருநடஞ்செய்
தம்பி ரானார் புவியின்மகிழ்
கோயி லெல்லாந் தனித்தனியே
இம்பர் ஞாலங் களிகூர எய்தும்
பெரும்பூ சனை யியற்றி
உம்பர் மகிழ அரசளித்தே
யுமையாள் கணவன் அடிசேர்ந்தார். #3678

அழகிய பொன்னால் இயன்ற அம்பலத்தில், உண் ணத் தெவிட்டாத அமுதெனத் திருக்கூத்தை இயற்றும் இறைவர், இவ்வுலகத்தில் மகிழ்ந்து வீற்றிருக்கின்ற கோயில்களில் எல்லாம், தனித் தனியாய் இவ்வுலகத்து வாழும் உயிர்கள் அனைத்தும் இன்பம் அடையுமாறு, இறைவற்குப் பொருந்தும் பெரிய பூசனைகளைச் செய்வித்துத், தேவர் மகிழும்படி ஆட்சி செய்து, உமையொரு கூறரான சிவபெருமானின் திருவடி நீழலை அடைந்தார்.

விளக்கவுரை

****

காதற் பெருமைத் தொண்டின்நிலைக்
கடல்சூழ் வையங் காத்தளித்துக்
கோதங் ககல முயல்களந்தைக்
கூற்ற னார்தங் கழல்வணங்கி
நாத மறைதந் தளித்தாரை
நடைநூற் பாவில் நவின்றேத்தும்
போத மருவிப் பொய்யடிமை
யில்லாப் புலவர் செயல்புகல்வாம். #3679

மிக்க விருப்பமும், பெருமையுமுடைய தொண்டில் நிலைத்த, கடல்

சூழ்ந்த உலகத்தைக் காத்து ஆட்சிசெய்து, குற்றம் நீங்குமாறு முயன்ற களந்தைக் கூற்றுவ நாயனாரின் திருவடியை வணங்கி, அத்துணையால் ஒலி வடிவான மறைகளைத் தந்து உலகைக் காக்கும் இறைவரை, நெறியின் இயன்ற பாக்களால் போற்றி மகிழும் இறையுணர்வு வாய்ந்த `பொய்யடிமை இல்லாத புலவர்' எனப் போற்றப் பெறும் திருக்கூட்டத்திற் சேர்ந்த அடியவர்களின் செயலைச் சொல்லப் புகுகின்றோம்.

விளக்கவுரை

****

தேனும் குழலும் பிழைத்த திரு
மொழியாள் புலவி தீர்க்க மதி
தானும் பணியும் பகை தீர்க்கும்
சடையார் தூது தருந்திருநாட்
கூனும் குருடுந் தீர்த்தேவல்
கொள்வார் குலவு மலர்ப்பாதம்
யானும் பரவித் தீர்க்கின்றே
னேழு பிறப்பின் முடங்குகூன். **#3680**

தேனும் புல்லாங்குழலும் என்ற இவற்றை வென்ற இனிமை கொண்ட மொழியையுடைய பரவையாரின் ஊடலைத் தீர்க்கும் பொருட்டு, மதியும் பாம்பும் பகை தீர்ந்து வாழ்தற்கு இடமான திருச்சடையையுடைய பெருமான் தூது போந்த நாளில், கூனனது கூனையும் குருடனின் குருட்டுத் தன்மையையும் தீர்த்துப் பணி கொள்பவரான நம்பி ஆரூரரின் ஒளிபொருந்திய திருவடிகளை யானும் போற்றி, எழுவகைப் பிறப்பினும் உட்பட்டு முடங்கிக் கிடக்கும் தன் மையான கூன் தன்மையையும், அவற்றுள் செலுத்தும் அறியாமை யான குருட்டுத் தன்மையையும் போக்கிக் கொள்கின்றேன்.

விளக்கவுரை

வகைநூல் ஆரூரருக்கு மாலையையும் வெற்றிலையை யும் தந்து வந்த கூனனும் குருடனுமாய இருவருக்கும் அவரவருக் குற்ற நோயைத் தீர்த்தருளினார் என்பதொரு வரலாறுகூறி ஆரூரரைப் போற்றி மகிழ்கிறது. விரிநூலில் இந்நிகழ்ச்சி இறைவன் தூதுபோய நன்னாளில் நிகழ்ந்ததாகக் கூறுகின்றது.
இக் கூனும், குருடும் ஆய பணியாளர்கள் பரவையார் மாளிகை யில் பணியாற்றி வந்தவர் என்பர் சிலர். சிவக்கவிமணியார் இதனை மறுத்து, இறைவரால் புலவி தீர்க்கப்பெற்றபின், நம்பி ஆரூரர் மகிழ்வுடன் பரவையார் மாளிகைக்குச் செல்லுகின்ற போது, மங்கலப் பொருள்களை

எடுத்து வந்த பணியாளர்களுடன் அத்திருக்கோயில் அகத்திருந்த கூனும், குருடும் ஆய இருவரும் உடன் வர, அவ்விருவர் தம் உடற்குறைபாடுகளையும் நம்பி ஆரூரர் நீக்கியமையையே இந்நிகழ்ச்சி கட்டுரைக்கின்றது என்பர். இவ்வரலாறு சுந்தரர் வரலாற்றில் இயைபு பட்டிலாமையே இவ்வாறெல்லாம் என்னற்கு இடனாயிற்று. ஆசிரியர் சேக்கிழார் ஆண்டு இச்செய்தியைக் குறியா மைக்குக் காரணம் தெரிந்திலது.

இனி இவ்விரு நோய்களையும் சுந்தரருக்கு உற்றதாகக் கூறி அவற்றை இறைவன் தீர்த்தருளினார் என்பாருமுளர். கூன் உற்றது, சுந்தரர் கண் நீங்கிய நிலையில் கோல் ஊன்றி நடப்ப அதனால் ஆய தென்பர் அவர்.

கூற்றுவ நாயனார் புராணம் முற்றிற்று. வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் முற்றிற்று.

பொய்யடிமையில்லாத புலவர் புராணம்

செய்யுள்நிகழ் சொல்தெளிவும்
செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே
எனத்துணிந்து விளங்கியொளிர்
மையணியுங் கண்டத்தார்
மலரடிக்கே ஆளானார்
பொய்யடிமை யில்லாத புலவர்எனப் புகழ்மிக்கார். **#3681**

செய்யுட்கண் வரும் சொற்களின் அமைவைத் தெளிதலும் சிறந்த நூல்கள் பலவற்றையும் நுணுகி ஆராய்தலும் ஆகிய எல்லாம், மெய்யுணர்வின் பயனாக விளங்கும் செம்பொருளின் அடைவேயாம் எனத் துணிந்து, விளங்கி ஒளிவீசுகின்ற நஞ்சினை யுண்ட கழுத்தினையுடைய சிவபெருமானின் மலர் அனைய திருவடிக்கு ஆளானவர்களே, பொய்யடிமையில்லாத புலவர்கள் எனக் குறித்துப்போற்றப் பெற்று விவரிகளாவர்.

விளக்கவுரை

செவ்வியநூல் - இலக்கண வரம்பாலும், நுவலப்படும் பொருட்சிறப்பாலும் செவ்விதாய நூல். கற்றதனால் ஆய பயன் வாலறிவன் நற்றாள் தொழுவ தேயாம். ஆதலின் சொற்பொருள் தெளிதலும், அவற்றின் மெய்ம்மை உணர்தலுமான பயன், மலரடிக்கே ஆளாதல் எனத் துணிந்தனர் புலவர்கள். `மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்' எனவே பொது நீக்கித் தனை உணரும் பான்மை தெரிய வருகிறது. ஏகாரம் பிரிநிலை. இவர்கள் கபிலர் `பரணர்' நக்கீரர் முதலான *49* புலவர்கள் என வகை நூல் கூறுகின்றது.

பொற்பமைந்த அரவாரும்
புரிசடையார் தமையல்லால்
சொற்பதங்கள் வாய்திறவாத்
தொண்டுநெறி தலைநின்ற
பெற்றியினில் மெய்யடிமை
யுடையாராம் பெரும்புலவர்
மற்றவர் தம்பெருமையார்
அறிந்துரைக்க வல்லார்கள். **#3682**

இவர்கள் அழகிய பாம்புகளை அணிந்த முறுக் குண்ட சடையையுடைய சிவபெருமானையே அல்லாமல், மற்றவ ரைப் பற்றிச் சொற்பொருள்களை அமைத்துச் செல்லாத இயல்பில், திருத்தொண்டின் நெறியில் முதன்மை பெற்ற பண்பினால், மெய்யடி மையுடையவராகும்

பெரும் புலவர்கள் ஆவார்கள். இவர்களின் பெரு மையை அறிந்து உரைக்க வல்லவர் யார்? எவரும் இலர் என்பதாம்.

விளக்கவுரை

தலை நிற்றல் - முதன்மை பெறுதல். மெய்ப்பொருள் - நிலையுடையதும் தலைமையுடையதுமான பொருள்; அப்பொருள், சிவபெருமான் ஒருவரேயாவர் என உணர்ந்து போற்றி வரும் பான்மையில் முதன்மை பெற்றவர்கள் இவர்கள் என்பதாம்.

ஆங்கவர்தம் அடியிணைகள்
தலைமேற்கொண் டவனியெலாம்
தாங்கியவெண் குடைவளவர்
குலஞ்செய்த தவம்அனையார்
ஓங்கிவளர் திருத்தொண்டின்
உண்மையுணர் செயல்புரிந்த
பூங்கழலார் புகழ்ச்சோழர்
திருத்தொண்டு புகல்கின்றாம். **#3683**

அத் தன்மையுடைய பொய் அடிமை இல்லாத புலவர்களின் திருவடிகளை எம் தலைமீது கொண்டு வணங்கி, இந் நிலவுலகினைத் தாங்கி அரசளித்த வெண்கொற்றக் குடையை உடைய சோழ மரபினர் செய்த தவப்பயனைப் போன்றவரும், மேலோங்கி வளர்கின்ற தொண்டின் உண்மைத் தன்மையினை உணர்ந்த செயலைச் செய்தவரும், கழல் அணிந்த வெற்றியையுடையவரும் ஆகிய புகழ்ச் சோழ நாயனாரின் திருத்தொண்டைச் சொல்லப் புகுகின்றோம்.

விளக்கவுரை

ஆங்கு - அத்தன்மை; மேல் இரு பாடல்களும் குறித்த தன்மை.
பொய்யடிமையில்லாத புலவர் புராணம் முற்றிற்று.

புகழ்ச்சோழ நாயனார் புராணம்

குலகிரியின் கொடுமுடிமேல்
கொடிவேங்கைக் குறியெழுதி
நிலவுதரு மதிக்குடைக்கீழ்
நெடுநிலங்காத் தினிதளிக்கும்
மலர்புகழ்வண் தமிழ்ச்சோழர்
வளநாட்டு மாமூதூர்
உலகில்வளர் அணிக்கெல்லாம்
உள்ளுறையு ராம்உறையூர். **#3684**

இமயமலையின் உச்சியின் மேல் தம் வேங்கைப் புலிக் கொடியின் குறியைப் பொறித்து, வெண்மையான ஒளி வீசு கின்ற முழுமதி போன்ற வெண்கொற்றக் குடை நிழலின் கீழ் நீண்ட இந்நிலவுலகத்தைக் காத்து, இன்பம் பெருக அரசை அளிக்கும் புகழை யும், கொடையையும் உடைய தமிழ்ச் சோழர்களால் ஆளப்பட்ட சோழ வளநாட்டில், உலகில் வளர்ந்து ஓங்கும் அழகுகள் எல்லாம் தங்குதற்குரிய இடம் இதுவே எனத் தக்க பதி உறையூர் என்னும் மிகுந்த பழைமையுடைய நகரமாகும்.

விளக்கவுரை

குலகிரி - இமயமலை. கொடுமுடி - வளைந்த உச்சி. உள்ளுறை - உள்ளே தங்குதற்குரிய. உலகில் உள்ள அழகுகள் எல்லாம் ஒருங்கு உறையும் ஊர், உறையூர் என்பதாம். திருவாம்ஊர் திருவாமூர் என்புழிப் போல. அவ்வணிகளாவன, பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம் ஆகியனவாம். `ஊர் எனப்படு வது உறையூர் ' என வரும் வழக்கும் காண்க.

அளவில்பெரும் புகழ்நகரம்
அதனில்அணி மணிவிளக்கும்
இளவெயிலின் சுடர்ப்படலை
இரவொழிய எறிப்பனவாய்க்
கிளரொளிசேர் நெடுவானப்
பேர்யாற்றுக் கொடிகெழுவும்
வளரொளிமா ளிகைநிரைகள்
மருங்குடைய மறுகெல்லாம். **#3685**

அளவற்ற பெரும்புகழையுடைய அந்நகரத்தில் அழகிய மணிகளால் விளக்கம் பெறும் இளவெயிலின் ஒளித் தொகுதி கள், இரவுப் பொழுதை இல்லாமல் செய்து ஒளி வீசுவனவாயும், வீதிகளில் விளங்கும் ஒளியையுடைய மாளிகைகளில் விளங்கும் கொடி வரிசைகள், வானில் விளங்கும் கங்கைப் பேரியாற்றில் தோய்வனவாயும் அமைந்துள்ளன.

விளக்கவுரை

மணிகளின் ஒளி இருளை நீக்கும்; மாளிகைகளின் கொடிகள் விண்ணில் உள்ள கங்கையாற்றில் தோய்வனவாய் நிற்கும். மணிகளின் ஒளியும், கொடிகளின் உயர்வும் குறிக்கப்பெறுகின்றன. சுடர்ப்படலை - ஒளித்தொகுதி. மறுகிலுள்ள மாளிகைகளில் கட்டப் பெற்றிருக்கும் கொடிகள் வானப் பேரியாற்றில் கெழுவும் எனக் கூட்டுக.

நாகதலத் தும்பிலத்தும்
நானிலத்தும் நலஞ்சிறந்த
போகமனைத் தினுக்குறுப்பாம்
பொருவிறந்த வளத்தினவாய்
மாகம்நிறைந் திடமலிந்த
வரம்பில்பல பொருள்பிறங்கும்
ஆகரமொத் துளஅளவில்
ஆவணவீ திகளெல்லாம். **#3686**

மேல் உலகான விண் உலகத்திலும், கீழ் உலகான பாதலத்திலும், மண் உலகத்திலும் உளவான நன்மையால் சிறந்த போகங்கள் அனைத்தினுக்கும் உறுப்பான ஒப்பற்ற வளங்களையுடை யனவாய், வானளாவக் குவிந்த எல்லையற்ற பலவகைப்பட்ட பொருள்களும் ஒருங்கு விளங்கும் கடைவீதிகள் எல்லாம் கடல் என விளங்கின.

விளக்கவுரை

நாகதலம் - விண்ணுலகம்; பிலம் - கீழ் உலகம். ஆகரம் - கடல். போகத்திற்குரிய உறுப்பாவன - அணிகலன்கள், பட்டாடைகள், யாறு கா முதலியனவாம்.

பார்நனைய மதம்பொழிந்து
பனிவிசும்பு கொளமுழங்கும்
போர்முகவெங் கறையடியும்
புடையினம்என் றடையவரும்
சோர்மழையின் விடுமதத்துச்
சுடரும்நெடு மின்னோடைக்
கார்முகிலும் பலதெரியா
களிற்றுநிரைக் களமெல்லாம். **#3687**

தரை நனையும்படியாக மதநீரைப் பொழிந்து குளிர்ந்த வானம் இடம் கொள்ளும்படி முழங்குகின்ற போர்த்தொழில் வாய்ந்த, உரல் போன்ற அடிகளையுடைய யானைகளும், அருகே அவற்றின் இனம் என வந்து கூடிப் பொழியும் மழையான மதத்தை யும் மின்னலான நெற்றிப்பட்டத்தையும் உடைய கரிய மேகங்களும், யானைகளை

வரிசைபெறக் கட்டுகின்ற யானைக் கூடங்களில் எங்கும் பலவாய் வேறு பிரித்தறியப்படாதவாறு விளங்கின.

விளக்கவுரை

யானைக் கூடங்களில் தம் இனம் எனக் கருதி மேகக் கூட்டங்கள் படிந்தன. படிந்த நிலையில் யானைகள் இவை, மேகங்கள் இவை எனப் பிரித்தறிய இயலாதாயின என்பது கருத்து. கறை - உரல். யானைகள் மதமும், நெற்றிப்பட்டமும், கருமை நிறமும் உடையன. அவற்றைப் போலவே மேகங்கள், மழையாகிய மதமும், மின்ன லாகிய நெற்றிப்பட்டமும், கருமை நிறமும் உடையன. எனவே அவற்றிற்கு அவை இனமாயின.

படுமணியும் பரிச்செருக்கும்
ஒலிகிளரப் பயில்புரவி
நெடுநிரைமுன் புல்லுண்வாய்
நீர்த்தரங்க நுரைநிவப்ப
விடுசுடர்மெய் யுறையடுக்கல்
முகில்படிய விளங்குதலால்
தொடுகடல்கள் அனையபல
துரங்கசா லைகளெல்லாம். **#3688**

ஒலிக்கும் மணிகளும், குதிரைகளின் கனைப்பும் மிகவும் ஒலிக்க, விளக்கமுடைய குதிரைகளின் நீண்ட வரிசையில் புல்லை உண்ணும் அவற்றின் வாய் நீரில் வரும் நுரை, அலை விளிம்பில் உள்ள நுரைபோல் படியவும், ஒளிவிடுகின்ற கவசங்கள் மலைமீது முகில் எனப் படியவும் விளங்குதலால், பற்பல குதிரைச் சாலைகள் எல்லாம் தோண்டப்பட்ட கடல்களைப் போல் உள்ளன.

விளக்கவுரை

மேலே யானைக் கூடங்களின் சிறப்புக்கூறிய ஆசிரியர், இப்பாடலின் குதிரைக் கூடங்களின் சிறப்பை விவரிக்கிறார். கடலி னிடத்து அலைகளும், நுரையும், மேகம் படிதலும் உள. குதிரைக் கூடத்தில், குதிரைகளின் ஒலியும், அவற்றின் வாயிலிருந்து வரும் நீர் நுரையும், மேலிடு கவசமும் உள்ளன. குதிரைக் கூடங்களுக்கு கடல் உவமையாயிற்று. பரிச்செருக்கும் ஒலி - குதிரைகள் கனைக்கும் ஒலி. மெய்யுறை: குதிரைகளின் மேலிடு கவசம்; சேணம். அடுக்கல் முகில் - மலைகளில் படியும் மேகங்கள். துரங்கசாலை - குதிரைக் கூடங்கள்.

துளைக்கைஅயிரா வதக்களிறும்
துரங்கஅர சுந்திருவும்
விளைத்தஅமு துந்தருவும்

விழுமணியுங் கொடுபோத
உளைத்தகடல் இவற்றொன்று
பெறவேண்டி உம்பரூர்
வளைத்ததுபோன் றுஉளதங்கண்
மதில்சூழ்ந்த மலர்க்கிடங்கு. **#3689**

துளைபொருந்திய துதிக்கையையுடைய ஐராவதம் என்னும் யானையும், உச்சைச் சிரவம் என்னும் குதிரையும், திருமக ளும், கடைந்த அமுதமும், கற்பகத் தருவும், சிந்தாமணியும் என்ற இவற்றை எல்லாம் தேவர்கள் எடுத்துக் கொண்டு சென்றமையால், வருந்திய பாற்கடலானது, இவற்றுள் ஒன்றையேனும் மீளப்பெறுவது விரும்பித் தேவரின் உலகத்தை வளைத்தது போல், அங்கு மதிலைச் சூழ்ந்த மலர்கள் நிறைந்த அகழிகள் விளங்கின.

விளக்கவுரை

துரங்க அரசு - குதிரைகளில் மேம்பட்ட அரச குதிரை. இதனை உச்சைச் சிரவம் என்றழைப்பர். கடல், தன்பால் தோன்றிய பொருள்களை எல்லாம் தேவர்கள் கொள்ள, அவற்றுள் ஒன்றை யேனும் மீண்டும் கைப்பற்ற வேண்டும் என்று கருதித் தேவருலகைச் சூழ்ந்ததுபோல, அவ்வூரிலுள்ள அகழி இருந்தது என்றார். இதனால் உறையூர் தேவருலகை ஒத்தது என்பதும், அங்குள்ள அகழி பாற் கடலை ஒத்தது என்பதும் அறியத்தக்கன.

காரேறுங் கோபுரங்கள்
கதிரேறும் மலர்ச்சோலை
தேரேறும் மணிவீதி
திசையேறும் வசையிலணி
வாரேறு முலைமடவார்
மருங்கேறு மலர்க்கணைஒண்
பாரேறும் புகழ்உறந்தைப்
பதியின்வளம் பகர்வரிதால். **#3690**

மேகங்கள் தவழ்கின்ற கோபுரங்களையும், ஞாயிறும் திங்களுமாய இரு கதிர்களும் ஏறும் மலர்கள் நிறைந்த பூஞ்சோலை களையும், தேர்கள் உலவுகின்ற அழகிய வீதிகளையும், எத்திசையும் புகழ் பரந்து செல்கின்ற வசையற்ற அழகுகளையும் உடைமையால், கச்சணிந்த கொங்கைகளையுடைய பெண்களிடை ஏறும் மலர் அம்புகளின் செயல் பொருந்திய, சிறந்த உலகம் முழுவதும் பரவுகின்ற புகழ்கொண்ட உறையூர் என்ற நகரத்தின் வளமையைச் சொல்வது அரிதாகும்.

விளக்கவுரை

உறந்தை - உறையூர் என்பதன் மரூஉ. மன்மதனின் மல ரம்புகள் ஏறும் மடவார் எனவே அவர்தம் இன்பச் சிறப்புப் பெறுதும். இதன்கண் ஏறும் எனும் சொல் பலவாகப் பலபொருள்களில் அமையச் சொற்பின் வருநிலையணியாக அமைந்துற்றது.

அந்நகரில் பாரளிக்கும்
அடலரச ராகின்றார்
மன்னுதிருத் தில்லைநகர்
மணிவீதி யணிவிளக்கும்
சென்னிநீ டநபாயன்
திருக்குலத்து வழிமுதலோர்
பொன்னிநதிப் புரவலனார்
புகழ்ச்சோழர் எனப்பொலிவார். **#3691**

அந்நகரைத் தலை நகராகக் கொண்டு உலகத்தைக் காவல் செய்யும் உரிமை பொருந்திய அரசர் ஆனவர், நிலை பெற்ற திருத்தில்லைப் பதியின் அழகிய வீதிகளில் அழகு விளங்கத் திருப் பணிகள் செய்த சோழரான நீடு விளங்கும் அனபாயச் சோழர்தம் திருக்குலத்தின் மரபு வழியில் முன்தோன்றிய முதல்வராய் விளங்கு பவர்; அவர் காவிரியாறு வளம் செய்யும் சோழநாட்டைக் காக்கும் மன்னரான `புகழ்ச் சோழர்' என்னும் பெயர் பெற்ற பெருமகனாராவர்.

விளக்கவுரை

அந்நகரைத் தலை நகராகக் கொண்டு உலகத்தைக் காவல் செய்யும் உரிமை பொருந்திய அரசர் ஆனவர், நிலை பெற்ற திருத்தில்லைப் பதியின் அழகிய வீதிகளில் அழகு விளங்கத் திருப் பணிகள் செய்த சோழரான நீடு விளங்கும் அனபாயச் சோழர்தம் திருக்குலத்தின் மரபு வழியில் முன்தோன்றிய முதல்வராய் விளங்கு பவர்; அவர் காவிரியாறு வளம் செய்யும் சோழநாட்டைக் காக்கும் மன்னரான `புகழ்ச் சோழர்' என்னும் பெயர் பெற்ற பெருமகனாராவர்.

ஒருகுடைக்கீழ் மண்மகளை
உரிமையினில் மணம்புணர்ந்து
பருவரைத்தோள் வென்றியினால்
பார்மன்னர் பணிகேட்ப
திருமலர்த்தும் பேருலகும்
செங்கோலின் முறைநிற்ப
அருமறைச்சை வந்தழைப்ப
அரசளிக்கும் அந்நாளில். **#3692**

அந்நகரைத் தலை நகராகக் கொண்டு உலகத்தைக் காவல் செய்யும் உரிமை பொருந்திய அரசர் ஆனவர், நிலை பெற்ற திருத்தில்லைப்

பதியின் அழகிய வீதிகளில் அழகு விளங்கத் திருப் பணிகள் செய்த சோழரான நீடு விளங்கும் அனபாயச் சோழர்தம் திருக்குலத்தின் மரபு வழியில் முன்தோன்றிய முதல்வராய் விளங்கு பவர்; அவர் காவிரியாறு வளம் செய்யும் சோழநாட்டைக் காக்கும் மன்னரான `புகழ்ச் சோழர்' என்னும் பெயர் பெற்ற பெருமகனாராவர்.

விளக்கவுரை

குளிர்தூங்க - தண்ணளி சிறக்க.

பிறைவளரும் செஞ்சடையார்
பேணுசிவா லயமெல்லாம்
நிறைபெரும்பூ சனைவிளங்க
நீடுதிருத் தொண்டர்தமைக்
குறையிரந்து வேண்டுவன
குறிப்பின்வழி கொடுத்தருளி
முறைபுரிந்து திருநீற்று
முதல்நெறியே பாலிப்பார். **#3693**

பிறைச்சந்திரன் வளர்தற்கு இடமான சிவந்த சடையையுடைய சிவபெருமான், விரும்பி வீற்றிருக்கும் சிவன் கோயில் கள் எல்லாவற்றிலும், நிறைவான சிறப்பு வழிபாடுகள் பலவும் நிகழச் செய்து, திருத்தொண்டில் சிறந்து விளங்கும் தொண்டர் களைக் குறையிரந்து, தம் அரண்மனைக்கு அழைத்து முகமன் கூறி, அவர்களுக்கு வேண்டியவற்றைக் குறிப்பு அறிந்து தந்து ஆட்சி செய்து முதன்மை பெற்ற திருநீற்று நெறியையே பாதுகாத்து வருவாராய்,

விளக்கவுரை

****

அங்கண்இனி துறையுநாள்
அரசிறைஞ்ச வீற்றிருந்து
கொங்கரொடு குடபுலத்துக்
கோமன்னர் திறைகொணரத்
தங்கள் குல மரபின்முதல்
தனிநகராங் கருவூரின்
மங்கலநா ளரசுரிமைச்
சுற்றமுடன் வந்தணைந்தார். **#3694**

இவ்வாறு உறையூரில் இனிமையுடன் இருக்கும் நாளில், மன்னர்கள் அடிவணங்க அரசு வீற்றிருக்கக் கொங்கு நாட்ட வரும், மேற்குத் திசையின் முதல்வர்களான சிற்றரசர்களும் திறை கொணர்ந்து செலுத்தும் பொருட்டுத், தம் குலத்துக்குரிய ஒப்பில்லாத பெருநகரமான

கருவூரிலே மங்கல நாளில் அரசுரிமைச் சுற்றமான அமைச்சர்கள் முதலானவருடன் வந்து அணைந்தார்.

விளக்கவுரை

அரசுரிமைச் சுற்றம் - அமைச்சர்கள், தானைத்தலைவர், ஐம்பெருங்குழு, எண் பேராயம் முதலியோர். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

வந்துமணி மதிற்கருவூர்
மருங்கணைவார் வானவர்சூழ்
இந்திரன்வந் தமரர்புரி
எய்துவான் எனஎய்திச்
சிந்தைகளி கூர்ந்தரனார்
மகிழ்திருவா னிலைக்கோயில்
முந்துறவந் தணைந்திறைஞ்சி
மொய்யொளிமா ளிகைபுகுந்தார். **#3695**

வந்து அழகான மதிலையுடைய கருவூரின் அருகே சேர்வாராகிய புகழ்ச்சோழர், வானவர் சூழ இந்திரன் வந்து அமரா பதியைச் சேர்வதைப் போல் சேர்ந்து, உள்ளம் மிகவும் களித்துச், சிவ பெருமான் மகிழ்வுடன் வீற்றிருக்கும் திருவானிலைத் திருக்கோயிலை முன்னாக வலம் வந்து வணங்கிச், செறிந்து விளங்கும் ஒளியுடைய மாளிகையுள் புகுந்தார்.

விளக்கவுரை

****

மாளிகைமுன் அத்தாணி
மண்டபத்தில் மணிபுனைபொன்
கோளரிஆ சனத்திருந்து
குடபுலமன் னவர்கொணர்ந்த
ஓளிநெடுங் களிற்றின்அணி
உலப்பில்பரி துலைக்கனகம்
நீளிடைவில் விலகுமணி
முதனிறையுந் திறைகண்டார். **#3696**

அரண்மனையின்கண் உள்ள அரசிருக்கை மண்டபத்தில், மணிகளால் இயற்றப்பட்ட பொன் அரியணையின் மீது வீற்றிருந்து, மேற்குத் திசையின்கண் உள்ள நாடுகளின் மன்னர்கள் கொண்டு வந்து செலுத்தி நிரல்பட நிறுத்தப்பட்ட பெரிய யானைக் கூட்டமும், அளவற்ற குதிரை வரிசைகளும், எடைகுறையாத பொன் குவியலும், நெடுந்தொலைவிலும் ஒளி வீசும் மணிகளும் என்னும் இவை முதலான பொருள்கள் அனைத்தும் நிறைந்த திறைப் பொருள் களையும் பார்த்தருளினார்.

விளக்கவுரை

****

திறைகொணர்ந்த அரசர்க்குச்
செயலுரிமைத் தொழிலருளி
முறைபுரியுந் தனித்திகிரி
முறைநில்லா முரண்அரசர்
உறையரணம் உளவாகில்
தெரிந்துரைப்பீர் எனவுணர்வு
நிறைமதிநீ டமைச்சர்க்கு
மொழிந்தயுளி நிகழுநாள். **#3697**

திறையைக் கொணர்ந்த மன்னர்க்கு, அவரவர்க ளும் தத்தம் அரசாணையைச் செலுத்திவரும் உரிமைத் தொழில் நிகழ்த்திவரும் படி ஆணையிட்டருளியும், நம் அரசாணையின் ஒப்பற்ற ஆட்சியின் வழி அடங்கி நிற்காது மாறுபட்டவர்கள் ஒதுங்கி நிற்கும் காவல் இடங்கள் உள்ளன என்றால் அவற்றை அறிந்து சொல்வீராக! என்று அரசியல் அறம் தெரிந்த மதியால் நீடிய அமைச் சர்க்குக் கட்டளையிட்டு அருளியும், இங்ஙனம் அரசியற்றும் நாளில்,

விளக்கவுரை

****

சென்றுசிவ காமியார்
கொணர்திருப்பள் ளித்தாமம்
அன்றுசித றுங்களிற்றை
அறஎறித்து பாகரையுங்
கொன்றஎறி பத்தர்எதிர்
என்னையுங்கொன் றருளுமென
வென்றிவடி வாள்கொடுத்துத்
திருத்தொண்டில் மிகச்சிறந்தார். **#3698**

`சிவகாமி ஆண்டார்` என்ற அடியார் சென்று கொணர்ந்த திருப்பள்ளித் தாமத்தை, அன்று அவர் கையில் இருந்து பறித்துச் சிதறிய பட்டத்து யானையைக் கொன்று வீழ்த்திப் பாகர்களையும் கொன்ற `எறிபத்தர்` எதிரே, யானை செய்த இத்தீச் செயலுக்கு `இவ்வொறுப்பு மட்டும் போதாது, என்னையும் கொன்றருளும்` என்று இரந்து, வெற்றித் திருவுடைய தம் வடிவாளை நீட்டி, இத்தொண்டின் திறத்திலே மிகச் சிறந்து விளங்கினார்.

விளக்கவுரை

இந்நிகழ்ச்சியின் விரிவு எறிபத்த நாயனார் புராணத்தில்

அறியப்பட்டதொன்று. இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

விளங்குதிரு மதிக்குடைக்கீழ்
வீற்றிருந்து பாரளிக்கும்
துளங்கொளிநீண் முடியார்க்குத்
தொன்முறைமை நெறியமைச்சர்
அளந்ததிறை முறைகொணரா
அரசனுளன் ஒருவனென
உளங்கொள்ளும் வகையுரைப்ப
வுறுவியப்பால் முறுவலிப்பார். **#3699**

: விளங்குகின்ற அழகிய சந்திரன் போன்ற வெண் கொற்றக் குடையின் கீழ் வீற்றிருந்து, உலகத்தைக் காவல் செய்யவும் விளங்கும் ஒளியுடைய முடியையுடைய அவ்வரசருக்கு, வழிவழி யாக வரும் நீதி முறையில் நின்று அறநெறிகளை விளக்கும் அமைச்சர் கள், தங்கள் ஆணைவழி அளவுபடுத்திய திறைப் பொருளை முறைப்படிக் கொணர்ந்து செலுத்தாத மன்னன் ஒருவன் உள்ளான்! என்று அவர் மனங்கொள உரைப்பக் கேட்ட அரசரும், மிக்க வியப்புடன் புன்முறுவல் கொண்டு,

விளக்கவுரை

****

ஆங்கவன்யார் என்றருள
அதிகன்அவன் அணித்தாக
ஓங்கெயில்சூழ் மலையரணத்
துள்ளுறைவான் எனவுரைப்ப
ஈங்குநுமக் கெதிர்நிற்கும்
அரணுளதோ படையெழுந்தப்
பாங்கரணந் துகளாகப்
பற்றுப்பீர் எனப்பகர்ந்தார் **#3700**

: விளங்குகின்ற அழகிய சந்திரன் போன்ற வெண் கொற்றக் குடையின் கீழ் வீற்றிருந்து, உலகத்தைக் காவல் செய்யவும் விளங்கும் ஒளியுடைய முடியையுடைய அவ்வரசருக்கு, வழிவழி யாக வரும் நீதி முறையில் நின்று அறநெறிகளை விளக்கும் அமைச்சர் கள், தங்கள் ஆணைவழி அளவுபடுத்திய திறைப் பொருளை முறைப்படிக் கொணர்ந்து செலுத்தாத மன்னன் ஒருவன் உள்ளான்! என்று அவர் மனங்கொள உரைப்பக் கேட்ட அரசரும், மிக்க வியப்புடன் புன்முறுவல் கொண்டு,

விளக்கவுரை

அதிகன் - அதிகமான் நெடுமானாஞ்சி என்று அழைக்கப் பெறுபவன் என்பர். அன்னவன் ஆயின், புறநானூற்றில் *87-95, 97-101,103, 158, 206,*

228 - 231 முதலான பல பாடல்கள் வழி இனைய பல செய்திகளை அறிய வாய்ப்புண்டு. அத்தகைய வாய்ப் பின்மையிள், இப்பதிகள், இவனின் வேறானவன் என எண்ண இடனுண்டு. கொங்குநாட்டின் கீழ்ப்பகுதியை ஆண்ட இம்மரபினருக்கு மலையரணாக அமைந்தவை கொல்லி மலையும் *(சேலம் மாவட்டம்)* குதிரைமலையும் *(கோயம்புத்தூர் மாவட்டம்)* ஆம்.

அடல்வளவர்ஆணையினால்
அமைச்சர்களும் புறம்போந்து
கடலனைய நெடும்படையைக்
கைவகுத்து மேற்செல்வார்
படர்வனமும் நெடுங்கிரியும்
பயிலரணும் பொடியாக
மிடலுடைநாற் கருவியுற
வெஞ்சமரம் மிகவிளைத்தார். **#3701**

வலிமை பொருந்திய சோழமன்னரின் ஆணையின் வண்ணம் அமைச்சர்களும் வெளிப் போந்து, கடலைப் போன்ற பெரிய படைகளை அணிவகுத்துப் போர் மேல் செல்பவர்களாய்ப் படர்ந்து, நெருங்கிய காடுகளும், உயர்ந்த மலைகளும், பொருந்திய அரணங் களும் பொடியாகுமாறு வலிய நாற்பெரும் படைகளும் பொருந்தக் கொடிய போரை மிகுவலிமையுடன் செய்தனர்.

விளக்கவுரை

கைவகுத்து - அணிவகுத்து

வளவனார் பெருஞ்சேனை
வஞ்சிமலர் மிலைந்தேற்ப
அளவில்அர ணக்குறும்பில்
அதிகர்கோன் அடற்படையும்
உளநிறைவெஞ் சினந்திருகி
யுயர்காஞ்சி மலைந்தேற்ப
கிளர்கடல்கள் இரண்டென்ன
இருபடையுங் கிடைத்தனவால். **#3702**

சோழ அரசரின் பெரும்படைகள் வஞ்சி மலர் மாலை சூடிப் போருக்குச் செல்ல, அளவில்லாத அரண்களையுடைய குறுநில மன்னனான அதிகனுடைய வலிய படையும் உள்ளம் நிறைந்த கொடிய சினத்தால் முடுக்கப்பட்டு உயர்ந்த காஞ்சிப் பூச்சூடிப் போர்க்கு வர, ஒலிக்கும் பெருங்கடல்கள் இரண்டு தம்முள் கிளர்ந்து எழுந்தது போல் இருதிறப் படைகளும் போர் செய்தன.

விளக்கவுரை

வட்கார் மேல் செல்வது வஞ்சியாம் உட்காது எதிர் ஊன்றல் காஞ்சியாம் என்பர் பன்னிருபாடல் ஆசிரியர் அதற்கேற்ப மேற் செல்வார் வஞ்சியும், எதிர் ஊன்றிக் காப்பார் காஞ்சியும் அணிந்தனர் என்றார்.

கயமொடு கயம்எதிர் குத்தின
அயமுடன் அயமுனை முட்டின
வயவரும் வயவரும் உற்றனர்
வியனமர் வியலிட மிக்கதே. **#3703**

யானைகளுடன் யானைகள் எதிர்த்துக் குத்தின. குதிரைகளுடன் குதிரைகள் எதிர்த்து முட்டின. வீரருடன் வீரர் எதிர்த் துப் பொருதனர். இங்ஙனம் விரிந்த போர்க்களம் முழுமையாகப் போர் நிகழ்ந்தது.

விளக்கவுரை

கயம் -யானை. அயம் - குதிரை. தேர்ப்படை கூறாரா யினார், பொருமிடம் மலையிடமாதலின். `தானை, யானை, குதிரை என்ற நோனார் உட்கும் மூவகை நிலையும்' என ஆசிரியர் தொல் காப்பியர் *(தொல்.புறத். 17)* இம் மூவகைப் படைகளையே சிறப்பித் துக் கூறுவதும் காண்க.

மலையொடு மலைகள் மலைந்தென
அலைமத அருவி கொழிப்பொடு
சிலையினர் விசையின் மிசைத்தெறு
கொலைமத கரிகொலை யுற்றவே. **#3704**

மலைகளுடனே மலைகள் எதிர்த்தாற் போல் அலைபோல் பாயும் மதமான அருவிநீர் ஒலிக்க, மேல் இவர்ந்து வரும் வில் வீரர்கள் செலுத்தும் வேகத்தைவிட மிக்கு, அழிவு செய்யும் தன்மையுடைய கொலை செய்யும் யானைகளும் கொலையுண்டன.

விளக்கவுரை

யானைகள் ஒன்றுடன் ஒன்று மோதிப் போர் செய்ய, இரு யானைகளும் அழிந்தன என்பதாம்.

சூறை மாருதம் ஒத்தெதிர்
ஏறு பாய்பரி வித்தகர்
வேறு வேறு தலைப்பெய்து
சீறி யாவி செகுத்தனர். **#3705**

சூறைக் காற்று என, எதிர் எதிராக ஏறுதலைக் கொண்டு பாய்கின்ற குதிரை வீரர்கள் வெவ்வேறாய் எதிர்த்துச் சினந்து ஒருவரை ஒருவர் கொன்றார்கள்.

விளக்கவுரை

போர் மேற்கொண்ட குதிரை வீரர்கள், தம்மில்தாம் பொருத அளவில், குதிரைகளுடன் அவ்விரு திறத்தாரும் மாய்ந்தனர் என்பதாம்.

மண்டு போரின் மலைப்பவர்
துண்ட மாயிட வுற்றுஎதிர்
கண்ட ராவி கழித்தனர்
உண்ட சோறு கழிக்கவே. **#3706**

நெருங்கி மேற் செல்லும் போரில் எதிர்த்துத் துண்டம் ஆகுமாறு செய்பவர்கள், எதிர்கூறும் வீரர்களைக் கொல்ல செஞ்சோற்றுக் கடனைக் கழிக்க எதிர்த்த பகைவர்களும், தம் மீது வந்த எதிரிகளின் செயலால் உயிர் விட்டனர்.

விளக்கவுரை

மேல் பொதுவகையால் மூவகைப் போர்களைக் குறித்தவாறே, சிறப்பு வகையானும் இம்மூன்று பாடல்களில் *(பா.21, 22, 23)* விரித்துக் கூறினார்.

வீடி னாருட லிற்பொழி
நீடு வார்குரு திப்புனல்
ஓடும் யாறென வொத்தது
கோடு போல்வ பிணக்குவை. **#3707**

மேல் பொதுவகையால் மூவகைப் போர்களைக் குறித்தவாறே, சிறப்பு வகையானும் இம்மூன்று பாடல்களில் (பா.21, 22, 23) விரித்துக் கூறினார்.

விளக்கவுரை

வீடினார் - இறந்தவர்.

வானி லாவு கருங்கொடி
மேனி லாவு பருந்தினம்
ஏனை நீள்கழு கின்குலம்
ஆன வூனொ டெழுந்தவே. **#3708**

விண்ணில் பறக்கின்ற கரிய காக்கைகளும், அவற்றின் மேல் திரியும் பருந்தின் கூட்டமும், மற்றும் நீண்ட கழுகு களின் வகைகளும், தமக்குச் சிறந்த உணவான இறைச்சித் துண்டங் களைப்பற்றிக் கொண்டு மேல் எழுந்தன.

விளக்கவுரை

கருங்கொடி - கரிய காக்கை

வரிவிற் கதைசக் கரமுற் கரம்வாள்
சுரிகைப் படைசத் திகழுக் கடைவேல்
எரிமுத் தலைகப் பணம்எல் பயில்கோல்

முரிவுற் றனதுற் றனமொய்க் களமே. #3709

அப் போர்க்களத்தில், இழுத்துக் கட்டப்பட்ட வில், கதை, சக்கரம், முற்கரம், வாள், சுரிகைப் படை, சத்தி, கழுக்கடை, வேல், எரிமுத்தலை, கப்பணம், ஒளிமிக்க அம்பு என்னும் இவை ஒன்றுடன் ஒன்று தாக்கி முறிவுற்றன.

விளக்கவுரை

முற்கரம் - முன்கையில் கொள்ளும் சம்மட்டி. சுரிகைப் படை - உடைவாள். சத்தி - சிறுசூலம். கழுக்கடை - ஈட்டி. எரிமுத்தலை - நெருப்புப் போன்று பாயும் சூலம். கப்பணம் - யானை நெருஞ்சில் வடிவாக இரும்பினால் செய்யப்பட்ட படை. எல்பயில் கோல் - ஒளி பொருந்திய அம்பு.

வடிவேல் அதிகன் படைமா ளவரைக்
கடிசூ ழரணக் கணவாய் நிரவிக்
கொடிமா மரில்நீ டுகுறும் பொறையூர்
முடிநே ரியனார் படைமுற் றியதே. #3710

தீட்டிய வேலை ஏந்திய அதிகனின் படைகள் மடிய, முடி சூடிய மன்னரான புகழ்ச் சோழரின் படைகள், இயற்கையாகச் சூழ்ந்த மலையரண்களையும், அவற்றைச் சூழ்ந்த செயற்கையான காப்பிடங்களுடன் கணவாய்களையும் இடித்துச் சமதரையாக்கிக், கொடிகளையுடைய மதிலையுடைய குறிஞ்சி நிலத்து ஊரையும் வளைத்துக் கொண்டன.

விளக்கவுரை

வரைக்கடி - மலையாகிய காவல், சூழ் அரணம் - அதனைச் சூழ்ந்து நிற்கும் செயற்கையான காப்பிடங்கள். குறும் பொறையூர் - மலை நிலத்து ஊர்.

முற்றும் பொருசே னைமுனைத் தலையில்
கல்திண் புரிசைப் பதிகட் டழியப்
பற்றுந் துறைநொச் சிபரிந் துடையச்
சுற்றும் படைவீ ரர்துணித் தனரே. #3711

முற்றுகை செய்த புகழ்ச் சோழரின் படை செய் யும் போரின் முன்னே, மலையாகிய திண்மையுடைய மதிலைச் சூழ்ந்த ஊரின் காவல் அழிவு பெறவே, பற்றாகக் கொண்ட நொச்சித் துறை யான மதில் காவலானது சிதைவுபட்டு உடைந்து அழியுமாறு அதனைச் சுற்றிய வீரர்கள் துண்டித்தனர்.

விளக்கவுரை

நொச்சி - இப்பூவை, மதிலகத் திருந்துகாவல் செய்வார் சூடுவர்.

`எயில்காத்தல் நொச்சி' என்னும் பன்னிரு படலம்.

மாறுற் றவிறற் படைவாள் அதிகன்
ஊறுற் றபெரும் படைநூ ழில்படப்
பாறுற் றஎயிற் பதிபற் றறவிட்டு
ஏறுற் றனன்ஓ டியிருஞ் சுரமே. **#3712**

மாறு கொண்ட வலிய படையையுடைய வாள் ஏந்திய அதிகன், தன் அழிந்து பட்ட பெரும் படைகள் பெருமலைத் தொகுதிகளாகக் காணப்பட்டதால், சிதறுண்ட மதில்களையுடைய தன் ஊரில் வாழ்தலை விட்டுப் பெரிய காடுகளில் ஓடிப் போய் ஒளிந்து கொண்டான்.

விளக்கவுரை

நூறுற்ற - அழிவுற்ற, நூழில் - கொன்று குவித்தல், `மற்றவன் ஒளிவாள் வீசிய நூழிலும்' *(தொல். புறம். 17)* எனத் தொல்காப்பியமும் கூறும். வேழப்பழனத்து `நுழிலாட்டு' *(வரி- 257)* என்னும் மதுரைக் காஞ்சியும்.

அதிகன் படைபோர் பொருதற் றதலைப்
பொதியின் குவையெண் ணிலபோ யினபின்
நிதியின் குவைமங் கையர்நீள் பரிமா
எதிருங் கரிபற் றினர்எண் ணிலரே. **#3713**

அதிகனின் படையில், போர்ச் செயலில் வெட்டுப் பட்ட வீரர்களின் தலைக் குவியல்களின் எண்ணற்ற தொகுதி அரச ரிடத்து அனுப்பப்பட்ட பின்பு, நிதிக் குவியல்களும், பெண்களும், பெரிய குதிரைகளும், போரில் சீறி எதிர்க்கும் யானைகளுமாகிய இவற்றையும் அளவற்ற படைவீரர்கள் கைக்கொண்டனர்.

விளக்கவுரை

போரில் வெற்றி கொண்டவர்கள், இறந்த பகைவரின் தலைகளைத் தம் அரசன் முன் கொணர்ந்து காட்டுதலும் மரபு. பகைவர் நாட்டுப் பொருட்களைக் கொள்ளுதலும் அறமேயாம்: காரணம் அவை புரப்பாரின்றிச் சிதைதலின். மகளிரைக் கொணர்தல் அவர்தம் நிறைகாக்கவாம்.

அரண்முற் றியெறிந் தஅமைச் சர்கள் தாம்
இரணத் தொழில்விட் டெயில்சூழ் கருவூர்
முரணுற் றசிறப் பொடுமுன் னினர்நீள்
தரணித் தலைவன் கழல்சார் வுறவே. **#3714**

பாதுகாப்பான இடங்களை முற்றுகையிட்டு அழித்த அமைச்சர்கள், அப்போர்த்தொழிலை விட்டு நீங்கி, இந்நிலவுல கின் பேரரசரான புகழ்ச்சோழரின் திருவடிகளைச் சேரும் பொருட்டுப், பகைவென்று கொண்ட சிறப்புடனே மதில் சூழந்த கருவூர்ப் பதியை அடைந்தனர்.

விளக்கவுரை

இரணத் தொழில் - போர்த் தொழில்.

மன்னுங் கருவூர் நகர்வா யிலின்வாய்
முன்வந் தகருந் தலைமொய்க் குவைதான்
மின்னுஞ் சுடர்மா முடிவேல் வளவன்
தன்முன் புகொணர்ந் தனர்தா னையுளோர். **#3715**

நிலைபெற்ற கருவூர் நகரத்தின் வாயில் முன்னே கொணரப்பட்ட கருந்தலைகளின் பெருகிய குவியலைப் படை வீரர்கள், விளங்கும் ஒளியையுடைய பெருமுடி சூடிய வேல் ஏந்திய புகழ்ச்சோழரின் முன் கொணர்ந்தனர்.

விளக்கவுரை

****

மண்ணுக் குயிராம் எனுமன் னவனார்
எண்ணிற் பெருகுந் தலையா வையினும்
நண்ணிக் கொணருந் தலையொன் றில்நடுக்
கண்ணுற் றதொர்புன் சடைகண் டனரே. **#3716**

மண் உலகத்துக்கு உயிர் போன்றவர் எனக் கூறத்தக்க அம் மன்னர், காணும் பொருட்டுக் கொண்டு வந்த அளவில், எண்ணிக்கைப் பெருகிய அத்தலைகள் எல்லாவற்றுள்ளும், நடுவில் ஒன்றிலே குறிப்பிடத் தக்கதொரு சிறிய சடையைக் கண்டார்.

விளக்கவுரை

`மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' *(புறம் - 186)* என்பவாதலின் `மண்ணுக்குயிராம் எனும் மன்னவனார்' என்றார். சடை, அடியார் திருக்கோலங்களுள் ஒன்றாதலின் `கண்ணுற்ற தோர் சடை' என்றார்.

. கண்டபொழு தேநடுங்கி
மனங்கலங்கிக் கைதொழுது
கொண்டபெரும் பயத்துடன்
குறித்தெதிர்சென் றதுகொணர்ந்த
திண்டிறலோன் கைத்தலையிற்
சடைதெரியப் பார்த்தருளிப்
புண்டரிகத் திருக்கண்ணீர்
பொழிந்திழியப் புரவலனார். **#3717**

அத்திருச்சடையினைக் கண்ட அளவில், உடல் நடுக்கம் கொண்டு, உள்ளம் கலங்கிக், கைகூப்பித் தொழுது, மேற் கொண்டு எழுந்த பேரச்சத்துடனே, அதுவே குறியாக எதிரே சென்று, அதைத் தம்மிடம் எடுத்துக் கொண்டுவந்த திண்மையுடைய வலிய வீரன் கைக்கொண்ட

அத்தலையில், சடையானது நன்கு விளங்கித் தெரியப் பார்த்தருளிய மன்னரான புகழ்ச்சோழர், தாமரை போன்ற தம் கண்களினின்றும் கண்ணீர் பெருகி வழிய நின்று.

விளக்கவுரை

****

முரசுடைத்திண் படைகொடுபோய்
முதலமைச்சர் முனைமுருக்கி
உரைசிறக்கும் புகழ்வென்றி
ஒன்றொழிய வொன்றாமல்
திரைசரித்த கடலுலகில்
திருநீற்றி நெறிபுரந்தியான்
அரசளித்த படிசால
அழகிதென அழிந்தயர்வார். **#3718**

முரசுகளையுடைய வலிய படைகளைக் கொண்டு சென்று, முதன்மை பெற்ற அமைச்சர்கள் போரில் பகைவரை அழித்துப் பிறரால் மேலாகப் பேசப்படும் புகழ்கொண்ட வெற்றி பெற்றது தவிர, நன்மையினின்றும் நீங்கிய அலைதவழும் கடலால் சூழப்பட்ட உலகத் தில், திருநீற்று நெறியை நான் பாதுகாத்து அரசு செய்தது நன்றாக வுள்ளது என்று கூறி மனம் தளர்வாராகி,

விளக்கவுரை

ஒன்றாமல் - நன்மை பொருந்தாமல், பகைவரைக் கோறல் அரசியலறம் எனினும், சடையுடைய அடியவரைக் கோறல் அறமன்றாதலின் அச்செயல் நன்மையொடு ஒன்றாததாயிற்று.

தார்தாங்கிக் கடன்முடித்த
சடைதாங்குந் திருமுடியார்
நீர்தாங்குஞ் சடைப்பெருமான்
நெறிதாங்கண் டவரானார்
சீர்தாங்கும் இவர்வேணிச்
சிரந்தாங்கி வரக்கண்டும்
பார் தாங்க இருந்தேனோ
பழிதாங்கு வேன்என்றார். **#3719**

போர்க்களத்தில் பொரும் பொழுது, அவ்வச் செயலுக்கும் உரிய மாலையைச் சூடி, மன்னருக்கு உரிய கடமையைச் செய்து முடித்த சடையையுடைய இவர், கங்கை தாங்கிய சடையை யுடைய சிவபெருமானின் திருநெறியில் நின்றவராவர். மேதகு சிறப் புடைய இவரது சடையைத் தாங்கிவரப் பார்த்தும், இந்நில உலகத்தைத் தாங்க

இருந்தேனோ! (அன்று) பழியையே தாங்குவேன் ஆனேன்! என்று உரைத்தார்.

விளக்கவுரை

ஓகாரம் எதிர்மறை. பார்தாங்க அன்று; பழிதாங்க அன்றோ இருந்தனன் என்பது கருத்து. எனவே இதனைக் கண்ட அளவில் உயிர் துறந்திருத்தல் வேண்டும் என்பது கருத்தாயிற்று. இம் மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

என்றருளிச் செய்தருளி
இதற்கிசையும் படிதுணிவார்
நின்றநெறி யமைச்சர்க்கு
நீள்நிலங்காத் தரசளித்து
மன்றில்நடம் புரிவார்தம்
வழித்தொண்டின் வழிநிற்ப
வென்றிமுடி என்குமரன்
தனைப்புனைவீர் எனவிதித்தார். **#3720**

இவ்வாறு கூறியருளியவர், இதற்குத் தீர்வாகப் பொருந்தும் செயலைத் துணிந்தவராய், தம் ஆணைவழி நிற்கும் அமைச்சர்களுக்கு, நெடிய இந்நிலவுலகத்தைக் காவல் புரிந்து அரசு செய்து, அம்பலக் கூத்தராய இறைவரின் தொண்டின் வழிவழி நிற்கு மாறு, வெற்றி பொருந்திய முடியினை என் மகனுக்குச் சூட்டுங்கள் என ஆணையிட்டார்.

விளக்கவுரை

****

அம்மாற்றங் கேட்டழியும்
அமைச்சரையும் இடரகற்றிக்
கைம்மாற்றுஞ் செயல்தாமே
கடனாற்றுங் கருத்துடையார்
செம்மார்க்கந் தலைநின்று
செந்தீமுன் வளர்ப்பித்துப்
பொய்ம்மாற்றுந் திருநீற்றுப்
புனைகோலத் தினிற்பொலிந்தார். **#3721**

அச்சொல்லைக் கேட்டு மனம் கலங்கும் அமைச்சர் களையும், தக்க அமைதி கூறித் தேற்றி, அவர்களின் துன்பத்தை நீக்கித் தம் சிறுமையால் செய்த பழியைப் போக்கும் செயலைத் தாமே வகுத்துச் செய்யும் கருத்தினராய்ச் சிவபெருமானின் திருநெறியில் நிலைபெற்றுச் செந்தீயை மூட்டி வளர்க்கச் செய்து, பொய்ந் நெறியை மாற்றவல்ல திருநீற்றினைப் புனைந்த கோலத்தில் சிறந்து விளங்கினார்.

விளக்கவுரை

கைமாற்றும் செயல் - தம் சிறுமையால் செய்த செயல்; பழிச்செயல். செம்மார்க்கம் - செம் பொருளாய சிவபெருமானின் திருத்தொண்டின் நெறி. பொய் மாற்றும் - பொய்ப் பொருளின் வழிச்சென்ற துன்பத்தை மாற்றும்.

கண்டசடைச் சிரத்தினையோர்
கனகமணிக் கலத்தேந்திக்
கொண்டுதிரு முடிதாங்கிக்
குலவும்எரி வலங்கொள்வார்
அண்டர்பிரான் திருநாமத்
தஞ்செழுத்து மெடுத்தோதி
மண்டுதழற் பிழம்பினிடை
மகிழ்ந்தருளி யுள்புக்கார். **#3722**

தாம் கண்ட அச்சடைத் தலையினை, மணிகள் பதிக்கப்பட்ட பொற்கலத்தில் ஏந்தித் திருமுடியில் தாங்கி, ஒளிரும் தீயை வலம் வருவாராகி, வானவர் தலைவரான சிவபெருமானின் திருப்பெயரான திருவைந்தெழுத்தை ஓதியவாறு, செறிந்து எழுகின்ற தீப்பிழம்பினுள் மகிழ்ச்சியுடன் உட் புகுந்தருளினார்.

விளக்கவுரை

****

புக்கபொழு தலர்மாரி
புவிநிறையப் பொழிந்திழிய
மிக்கபெரு மங்கலதூ
ரியம்விசும்பில் முழக்கெடுப்பச்
செக்கர்நெடுஞ் சடைமுடியார்
சிலம்பலம்பு சேவடியின்
அக்கருணைத் திருநிழற்கீழ்
ஆராமை யமர்ந்திருந்தார். **#3723**

புகழ்ச் சோழர் இவ்வகையில் தீயுள் புகுந்த போது, தெய்வத் தன்மை வாய்ந்த மலர்மழையானது மண்ணுலகம் முழுவதும் நிறையப் பொழிய, பெரிய மங்கல இயங்கள் பலவும் வானத்தில் முழங்கின. அந்தியில் தோன்றும் செவ்வானம் போன்ற நீண்ட சடையினையுடைய சிவபெருமானின் அத்தகைய பெங்கருணை யான திருவடி நீழலில் நீங்காத நிலையில் புகழ்ச் சோழர் அமர்ந் திருந்தார்.

விளக்கவுரை

இவ்வழகிய திருப்பாடலால், நாயனார், இறைவனின் திருவடி நீழலில் இனிது அமர்ந்துள்ளமை விளங்கும். இதனால் `பொழிற் கருவூர்த்

துஞ்சிய புகழ்ச்சோழர்க்கு அடியேன்' எனவரும் தொடரில் துஞ்சிய என்பதற்கு இறந்த எனப் பொருள் காண்டல் எத்துணையும் பொருந்துவதன்று எனத் தெளியலாம். துஞ்சிய புகழ் - நிலை பெற்ற புகழ்; அதனையுடைய சோழர் புகழ்ச்சோழர் என்றலே பொருந்துவதாம்.

முரசங்கொள் கடற்றானை
மூவேந்தர் தங்களின்முன்
பிரசங்கொள் நறுந்தொடையல்
புகழ்ச்சோழர் பெருமையினைப்
பரசுங்குற் றேவலினால்
அவர்பாதம் பணிந்தேத்தி
நரசிங்க முனையர்திறம்
நாமறிந்த படியுரைப்பாம். **#3724**

வெற்றி முரசங்கள் பலவும் ஒலிக்கின்ற கடல் போன்ற படையையுடைய முடிகெழுவேந்தர் மூவருள்ளும் முதன்மை யரான தேன் பொருந்திய மணம் நிறைந்த மாலைகளைச் சூடிய புகழ்ச்சோழரின் பெருமையைப் போற்றிவரும் குற்றேவல் வகையால், அவர் திருவடிகளை வணங்கி வழிபட்டு, அத்துணையாலே நரசிங்க முனையரைய நாயனாரின் அடிமைப் பண்பையாம் அறிந்த வகையி னாலே இனி உரைப்பாம்.

புகழ்ச்சோழ நாயனார் புராணம் முற்றிற்று.

விளக்கவுரை

****

நரசிங்கமுனையரைய நாயனார் புராணம்

கோடாத நெறிவிளங்கும்
குடிமரபின் அரசளித்து
மாடாக மணிகண்டர்
திருநீறே மனங்கொள்வார்
தேடாத பெருவளத்தில்
சிறந்ததிரு முனைப்பாடி
நாடாளும் காவலனார்
நரசிங்க முனையரையர். #3725

செங்கோல் செலுத்தும் நீதியினின்றும் தவறாத நெறியில் விளங்கும் குறுநில மன்னர் மரபில் வந்து, ஆண்டு, பெருஞ் செல்வமாகக் கழுத்தில் கருமையுடைய சிவபெருமானின் திருநீற் றையே மனத்தில் கொள்பவர். அவர், எப்பொருள்களையும் தேடிப் பெறவேண்டாது இயல்பாகவே அனைத்துப் பெருவளங்களும் சிறந்த திருமுனைப் பாடி நாட்டைஆளும் மன்னர், `நரசிங்க முனையரையர்' என்ற பெயர் உடையவர் ஆவர்.

விளக்கவுரை

: மாடாக செல்வமாக, தேடாத - எந்த ஒரு பொருளுக்கும் பிற நாட்டை நாட வேண்டாத; நாடா வளத்தது நாடு என்பது கருத்து. இந்நாயனார் சுந்தரரை அவர்தம் இளமைக் காலத்திலேயே மகன்மை கொண்டு வளர்த்து வந்த பெரும்பேறு உடையவர் ஆவர். எனினும் திருத்தொண்டர் திருவந்தாதியில் இவரைப் பற்றிய பாடலில் இக் குறிப்பு இடம் பெற்றிலது. இது கருதியே ஆசிரியர் சேக்கிழார் பெருமா னும், இக்குறிப்பினை இவர் வரலாற்றில் இயையுபடுத்திலர் போலும்! தடுத்தாட்கொண்ட புராணத்தில் சுந்தரரை மகன்மை கொண்டவர் இவரே ஆவர் என்பது ஆய்தற்குரியது என்று கூறிய சிவக்கவிமணி யார், இவ்வரலாற்றில் நம்பிகளை மகன்மை கொண்டவர் இவர் என்ப தும் கருதப்படும் எனக் கூறுவதே ஐயமின்றிக் கொள்ளத் தக்கதாம்.

இம்முனையர் பெருந்தகையார்
இருந்தரசு புரந்துபோய்த்
தெம்முனைகள் பலகடந்து
தீங்குநெறிப் பாங்ககல
மும்முனைநீள் இலைச்சூல
முதற்படையார் தொண்டுபுரி
அம்முனைவர் அடியடைவே
அரும்பெரும்பேறு எனஅடைவார். #3726

இம் முனையர் மரபின் பெருந்தகையாரான நரசிங்க முனையரையர், தம்

நகரத்தில் இருந்து அரசளித்துப் பகைவர்களைப் போர்முனையில் வென்று, தீமையான நெறிகளின் செயல்கள் யாவும் நீங்க, மூன்று தலைகளையுடைய நீண்ட இலைவடிவான சூலமான முதன்மை பெற்ற படையையுடைய இறைவரின் தொண்டைச் செய்கின்ற அம்முதல்வர்களாகும் அடியவர்களின் திருவடிகளை அடைவதே தாம் பெறும் பேறு எனக் கருதுவாராய்,

விளக்கவுரை

****

சினவிடையார் கோயில்தொறும்
திருச்செல்வம் பெருக்குநெறி
அனவிடையார் உயிர்துறக்க
வருமெனினும் அவைகாத்து
மனவிடையா மைத்தொடையல்
அணிமார்பர் வழித்தொண்டு
கனவிடையா கிலும்வழுவாக்
கடனாற்றிச் செல்கின்றார். **#3727**

சினம்மிக்க ஆனேற்றையுடைய இறைவரின் கோயில்கள் தோறும், பொருள் வருவாய் பெருகச் செய்யும் நெறியில், அரிய உயிரைவிட வந்தாலும், அந்நெறிகளைத் தவறாது காவல் செய்து, பாசிமணி வடங்களினிடையே ஆமை யோட்டை அணிந்த மார்பை யுடைய இறைவரின் வழித்தொண்டைக் கனவிலும் தவறாது கடமை மேற்கொண்டு செய்து வருபவராய்,

விளக்கவுரை

- பாசிமணி. அக்குமணி என்றலும் ஒன்று.

ஆறணிந்த சடைமுடியார்க்
காதிரைநாள் தொறும்என்றும்
வேறுநிறை வழிபாடு
விளங்கியபூ சனைமேவி
நீறணியும் தொண்டர்அணைந்
தார்க்கெல்லாம் நிகழ்பசும்பொன்
நூறுகுறை யாமல்அளித்
தின்னமுதும் நுகர்விப்பார். **#3728**

கங்கைப் பேரியாற்றைத் தாங்கிய முடியினரான இறைவற்குத் திருவாதிரை நாள்தோறும் சிறப்பாகவும் நிறைவாகவும் வழிபாட்டைச் செய்து, திருநீறு அணிந்த தொண்டராய் அன்று வந்து சேர்ந்தவர்க்கெல்லாம் குறையாமல் நூறு பசும் பொன்னைத் தந்து

இனிய திருவமுதும் ஊட்டுவாராகி,

விளக்கவுரை

****

ஆனசெயல் முறைபுரிவார்
ஒருதிருவா திரைநாளில்
மேன்மைநெறித் தொண்டர்க்கு
விளங்கியபொன் னிடும்பொழுதில்
மானநிலை யழிதன்மை
வருங்காமக் குறிமலர்ந்த
ஊனநிகழ் மேனியராய்
ஒருவர்நீ றணிந்தணைந்தார். #3729

அந்நற்செயலை மேற்கொண்டு முறையாக ஆற்றி வருபவரான நாயனார், திருவாதிரை நாளில் மேன்மை பொருந்திய சைவ நெறியில் சிறந்து ஒழுகும் அடியார்களுக்குப் பொன்னைக் கொடுக்கும் பொழுது, மானநிலை அழியும் தன்மையுடைய காமக் குறிகள் தெரியும் குற்றம் பொருந்திய உடலையுடையவராய ஒருவர் திருநீற்றை அணிந்து வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

மானநிலை அழிதன்மை வரும் காமக்குறி - பெருமை குன்றுவதற்கு ஏதுவாய சிற்றின்பத்தால் உடலில் காணும் அடையா ளங்கள்; அவை பற்குறி நகக்குறி முதலாயினவும் உடல் நோய் முதலி யனவுமாம். இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

மற்றவர்தம் வடிவிருந்த
படிகண்டு மருங்குள்ளார்
உற்றகஇழ்ச் சியராகி
ஒதுங்குவார் தமைக்கண்டு
கொற்றவனார் எதிர்சென்று
கைகுவித்துக் கொடுபோந்தப்
பெற்றியினார் தமைமிகவுங்
கொண்டாடிப் பேணுவார். #3730

அவ்வாறு வந்தவரின் உடல்நிலையைப் பார்த்து, அருகில் இருந்தவர்கள் இகழ்ச்சியோடு அவரை அணுகாது அருவ ருத்து ஒதுக்க, அதைக் கண்டு, அரசர் அவர் எதிரே போய்க் கை குவித்து வணங்கி, அழைத்து வந்து, அத்தன்மையுடைய அவரை மிகவும் பாராட்டிப் போற்றி,

விளக்கவுரை

****

சீலமில ரேயெனினும்
திருநீறு சேர்ந்தாரை
ஞாலம்இகழ்ந் தருநரகம்
நண்ணாமல் எண்ணுவார்
பாலணைந்தார் தமக்களித்த
படியிரட்டிப் பொன்கொடுத்து
மேலவரைத் தொழுதினிய
மொழிவிளம்பி விடைகொடுத்தார். **#3731**

உலகியல் நிலையில் காணத்தக்க சிறந்த ஒழுக்கம் இல்லாதவரானாலும், திருநீறணிந்த அடியவரை உலகத்தவர் இகழ்ந்து அதனால் கொடிய நரகத்தை அடையாமல் உய்யவேண்டும் எனச் சிந்திப்பவராய், அங்கு வந்தவர்களுக்குக் கொடுத்ததைவிட இரு மடங்காகப் (இருநூறு) பொற்காசுகளைத் தந்து, இன்சொற் கூறி, முகமனுரை பகர்ந்து, விடைதந்து அனுப்பினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

இவ்வகையே திருத்தொண்டின்
அருமைநெறி எந்நாளும்
செவ்வியஅன் பினல்ஆற்றித்
திருந்தியசிந் தையராகிப்
பைவளர்வாள் அரவணிந்தார்
பாதமலர் நிழல்சேர்ந்து
மெய்வகைய வழியன்பின்
மீளாத நிலைபெற்றார். **#3732**

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

விளக்கவுரை

****

விடநாகம் அணிந்தபிரான்
மெய்த்தொண்டு விளைந்தநிலை
உடனாகும் நரசிங்க
முனையர்பிரான் கழலேத்தித்
தடநாக மதஞ்சொரியத்
தனஞ்சொரியுங் கலஞ்சேரும்
கடல்நாகை அதிபத்தர்
கடல்நாகைக் கவினுரைப்பாம். **#3733**

நஞ்சையுடைய பாம்பை அணிந்த சிவபெருமானின் மெய்த்தன்மை

பொருந்திய தொண்டு நெறியில் வழுவாது நின்று, அப்பயன் விளைந்த நிலையில் பெருமானின் உடனாக நின்று மகிழும் வாழ்வுடைய நரசிங்கமுனையரையரின் கழல்களை வணங்கிப் பெரிய யானைகள் மதநீரைச் சொரியச் செல்வங்களைப் பொழியும் மரக்கலங்கள் சேரும் கடல்துறைப் பட்டினமான நாகை நகர் வாழ் `அதிபத்த நாயனாரின்' நியமமான கடமையின் இயல்பைச் சொல்லப் புகுகின்றாம்.

நரசிங்கமுனையரைய நாயனார் புராணம் முற்றிற்று.

விளக்கவுரை

****

அதிபத்த நாயனார் புராணம்

மன்னி நீடிய செங்கதி
ரவன்வழி மரபில்
தொன்மை யாம்முதற் சோழர்தந்
திருக்குலத் துரிமைப்
பொன்னி நாடெனுங் கற்பகப்
பூங்கொடி மலர்போல்
நன்மை சான்றது நாகைப்பட்
டினத்திரு நகரம். **#3734**

உரிமை நிலைபெற்று வாழ்ந்து வருகின்ற கதிரவன் வழியில் வந்த மரபான, பழமையும் முதன்மையும் பெற்ற சோழர்க ளின் குலத்திற்கு உரிமையுடைய காவிரிநாடு என்னும் கற்பகப் பூங் கொடியில் மலர்ந்த மலரைப் போன்று நாகைப்பட்டினம் என்ற நகரம் நலம் சிறந்து விளங்கும் மேன்மை உடையதாம்.

விளக்கவுரை

****

தாம நித்திலக் கோவைகள்
சரிந்திடச் சரிந்த
தேம லர்க்குழல் மாதர்பந்
தாடுதெற் றிகள்சூழ்
காமர் பொற்சுடர் மாளிகைக்
கருங்கடல் முகந்த
மாமு கிற்குலம் மலையென
ஏறுவ மருங்கு. **#3735**

முத்து மாலைகளின் கோவைகள் சரியத் தேன் பொருந்திய மலர்களைச் சூடிய தாழ்ந்த கூந்தலையுடைய பெண்கள் பந்தாடும் மேடைகளைக் கொண்ட விரும்பத்தக்க பொன் ஒளி மின்னும் மாளிகைகளை, இவை மலை என்று மயங்கி, அவற்றின் அருகே, கரிய கடல் நீரை முகந்து நிற்கும் கரிய மேகக் கூட்டங்கள் நெருங்குவன.

விளக்கவுரை

தெற்றி - பந்தாடுதற்குரிய மேடை.

பெருமை யில்செறி பேரொலி
பிறங்கலின் நிறைந்து
திரும கட்குவாழ் சேர்விட
மாதலின் யாவும்
தருத லில்கடல் தன்னினும்

பெரிதெனத் திரைபோல்
கரிப ரித்தொகை மணிதுகில்
சொரிவதாங் கலத்தால். **#3736**

பெருமை மிக்க பேரோசை நிறைதலாலும், அழகு நிறைந்த திருமகள் வாழும் உறைவிடமாதலாலும், வேண்டும் பொருள்களை எல்லாம் அளித்தலாலும், கடலை விடப் பெரியது என்று சொல்லுமாறு விளங்கி, அலை என யானைத் தொகைகள், குதிரைத் தொகைகள், மணிகள், ஆடைகள் ஆகிய இவை முதலான பொருள்களை எல்லாம் மரக்கலங்களில் கொணர்ந்து தர, அந்நகரம் சிறந்து விளங்கும்.

விளக்கவுரை

பேரொலி, திருமகள் உறைவது, யாவையும் தருவது ஆகிய செயல்களினால் அந்நகரம் கடலினும் பெரிதாய் விளங்கிற்று.

நீடு தொல்புகழ் நிலம்பதி
னெட்டினும் நிறைந்த
பீடு தங்கிய பலபொருள்
மாந்தர்கள் பெருகிக்
கோடி நீள்தனக் குடியுடன்
குவலயங் காணும்
ஆடி மண்டலம் போல்வதவ்
வணிகிளர் மூதூர். **#3737**

பெரும் புகழுடைய பதினெண் நிலங்களிலும் நிறைந்த பெருமையுடைய பல பொருள்களைக் கொண்ட மக்களும் சேர்ந்து பெருகி வாழ்வதாலும், கோடியளவினும் பெருகிய செல்வக் குடி மக்களுடன் விளங்குவதாலும், அவ்வழகுடைய பழைய நகரம், இவ்வுலகம் முழுவதும் தனக்குள் நிழலாக அடங்கக் காணப்படுகின்ற கண்ணாடி மண்டலம் போன்றதாகும்.

விளக்கவுரை

பதினெண் நிலங்களாவன:- சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கவுடம், கோசலம், தமிழகம் என்பன. இந்நாடுகளில் வழங்கும் மொழிகள் அவ்வத் தேயப் பெயரைப் பெற்றே நிற்கும். `பண்டிதர் தங்கள் பதினெண் பாடையும்' என்னும் திருமந்திரம்.

அந்நெ டுந்திரு நகர்மருங்
கலைகடல் விளிம்பில்
பன்னெ டுந்திரை நுரைதவழ்

பாங்கரின் ஞாங்கர்
மன்னு தொன்மையின் வலைவளத்
துணவினில் மலிந்த
தன்மை வாழ்குடி மிடைந்தது
தடநுளைப் பாடி. **#3738**

அத்தகைய பெருநகரத்தின் அருகில் அலைகளை உடைய கடல் விளிம்பில், நீண்டு அலைகளின் நுரை வந்து தவழ்வ தற்கு இடமான பகுதிகளை அடுத்து, நிலையானதும் பழைமையான துமான பரதவர் மரபில், வலைவீசி மீன் பிடிக்கும் தொழிலால் பெறும் வளமையுடைய மீன் உணவு பெருகிய இயல்பினால் வாழ்வு பெற்ற பரதவர் குடிகள் நெருங்கியுள்ளன.

விளக்கவுரை

கடல் விளிம்பு - கடற்கரை. நுளைப்பாடி - பரதவர் வாழும் இடம்.

புயல ளப்பில வெனவலை
புறம்பணை குரம்பை
அயல ளப்பன மீன்விலைப்
பசும்பொனி னடுக்கல்
வியல ளக்கரில் விடுந்திமில்
வாழ்நர்கள் கொணர்ந்த
கயல ளப்பன பரத்தியர்
கருநெடுங் கண்கள். **#3739**

அளவற்ற மேகங்கள் கிடந்தாற்போல் வலைகள் பெருகிய குடிகளின் அருகே, மீன் விலைக்குக் கொள்வோர் கொண்டு வந்த பசும்பொற்குவியல்கள் அளவிடப்படுவன. பரந்த கடலில் செலுத்தும் மீன்பிடிப் படகுகளின் வழி, பரதவர் கொணர்ந்த கயல் மீன்களை அவரிடம் பெற்றுக் கொள்ளும் பரத்தியரின் கரிய கண்கள் அவை இவ்வளவு விலை பெறும் என்பதைக் கண்ட அளவில் அளந்து விடுவன.

விளக்கவுரை

மீனைக் கொடுத்துப் பொன்னைப் பெற்ற பரதவர்கள், அப்பொற்குவியலை அளந்தே அறுதியிடுகின்றனராம், அங்குள்ள பரத்தியர்களோ, தம் பரதவர்கள்பால் பெற்ற மீன் குவியலைக் கண்ட அளவிலேயே, இத்துணைப் பொற்காசுகளைப் பெற்றுவிடலாம் என அறுதியிட்டுவிடுவராம், பெண்களின் அறிவையும் பெருமையையும் நமக்குச் சேக்கிழார் காட்டி மகிழ்விக்கும் திறன் அரிது அரிதுகாண் எனக் கூறி மகிழலாம். திமில் - படகு.

உணங்கல் மீன்கவர் வுறுநசைக்

குருகுடன் அணைந்த
கணங்கொள் ஓதிமங் கருஞ்சினைப்
புன்னையங் கானல்
அணங்கு நுண்ணிடை நுளைச்சியர்
அணிநடைக் கழிந்து
மணங்கொள் கொம்பரின் மருங்குநின்று
இழியல மருளும். **#3740**

உலர்ந்த மீன்களைக் கவர்தற்கு ஆசையுடைய பறவைகளுடன் வந்த கூட்டமான அன்னப் பறவைகள், வருந்துகின்ற நுண்ணிய இடையையுடைய நுளைச்சியரின் அழகிய நடைக்குத் தோற்று , உயர்ந்த கிளைகளையுடைய புன்னைக் காட்டில், மணம் மிக்க அப்புன்னைக் கொம்புகளினின்றும் இறங்காமல் மருட்சி கொண்டிருக்கும்.

விளக்கவுரை

புன்னையங் கானல் - புன்னைக் காடு. `மட்டிட்ட புன்னையங் கானல்' என வரும் திருவாக்கும் காண்க. `அன்னம்நன் னுதல் மென்னடைக் கழிந்து, நன்னீர்ப் பண்ணை நளிமலர்ச் செறி யவும்' என்னும் சிலம்பும்.

வலைநெ டுந்தொடர் வடம்புடை
வலிப்பவர் ஒலியும்
விலைப கர்ந்துமீன் குவைகொடுப்
பவர்விளி ஒலியும்
தலைசி றந்தவெள் வளைசொரி
பவர்தழங் கொலியும்
அலைநெ டுங்கடல் அதிரொலிக்
கெதிரொலி யனைய. **#3741**

வலைகளில் பிணிக்கப்பட்டிருக்கும் நீண்ட தொடர் களையுடைய வடங்களை இழுத்துச் செம்மை செய்பவர்களின் ஒலியும், விலையை எடுத்துக் கூறி மீன் குவியலைக் கொடுப்பவர் வாங்குவோரை அழைக்கின்ற ஒலியும், மிகச் சிறந்த வெண்மையான சங்குகளை எடுத்துக் குவிப்பவர்களின் ஒலியும், பெரிய கடல் ஒலிக்கு எதிர் ஒலி போன்று விளங்குவன.

விளக்கவுரை

****

அனைய தாகிய அந்நுளைப்
பாடியில் அமர்ந்து
மனைவ ளம்பொலி நுளையர்தங்

குலத்தினில் வந்தார்
புனையி ளம்பிறை முடியவர்
அடித்தொண்டு புரியும்
வினைவி ளங்கிய அதிபத்தர்
எனநிகழ் மேலோர். #3742

வலைகளில் பிணிக்கப்பட்டிருக்கும் நீண்ட தொடர் களையுடைய வடங்களை இழுத்துச் செம்மை செய்பவர்களின் ஒலியும், விலையை எடுத்துக் கூறி மீன் குவியலைக் கொடுப்பவர் வாங்குவோரை அழைக்கின்ற ஒலியும், மிகச் சிறந்த வெண்மையான சங்குகளை எடுத்துக் குவிப்பவர்களின் ஒலியும், பெரிய கடல் ஒலிக்கு எதிர் ஒலி போன்று விளங்குவன.

விளக்கவுரை

****

ஆங்கு அன்பர்தாம் நுளையர்தந்
தலைவராய் அவர்கள்
ஏங்கு தெண்டிரைக் கடலிடைப்
பலபட இயக்கிப்
பாங்கு சூழ்வலை வளைத்துமீன்
படுத்துமுன் குவிக்கும்
ஓங்கு பல்குவை யுலப்பில
வுடையராய் உயர்வார். #3743

அவ்வதிபத்தர் என்னும் அன்பர், நுளையரின் தலைவராகி, ஒலிக்கின்ற தெளிந்த அலைகளையுடைய கடலில் பலவாறு தொழில் செய்து, பக்கங்களில் சூழும் வலைகளை வளைத்து வீசி, மீன்களைப் பிடித்துக் கொண்டு வந்து குவிக்கும் உயர்ந்த பலவகை மீன் குவைகள் பலவாக, அவற்றை உடையவராய் அதனால் உயர்ந்தவராய் விளங்கினார்.

விளக்கவுரை

****

முட்டில் மீன்கொலைத் தொழில்வளத்
தவர்வலை முகந்து
பட்ட மீன்களில் ஒருதலை
மீன்படுந் தோறும்
நட்ட மாடிய நம்பருக்
கெனநளிர் முந்நீர்
விட்டு வந்தனர் விடாதஅன்
புடன்என்றும் விருப்பால். #3744

குறைவில்லாத மீன்களைப் பிடித்து, அக்கொலைத் தொழிலின் வளத்தையுடைய பரதவர், வலைகளால் வாரி எடுக்க, அதனுள் அகப்பட்ட மீன்களில், ஒரு தலைமையான மீன் கிட்டும் தோறும், `இஃது ஐந்தொழில் செய்து அருட்கூத்தாடுகின்ற ஐயருக்காகுக!' என்று, இடையறாத அன்பினால் விருப்புடன், குளிர்ந்த கடலிடத்தில் நாடோறும் விட்டு வந்தார்.

விளக்கவுரை

****

வாகு சேர்வலை நாள்ஒன்றில்
மீனொன்று வரினும்
ஏக நாயகர் தங்கழற்
கெனவிடும் இயல்பால்
ஆகு நாள்களில் அனேகநாள்
அடுத்தொரு மீனே
மேக நீர்படி வேலையில்
படவிட்டு வந்தார். **#3745**

ஒழுங்காக மீன்களைப் பிடித்து வரும் வலையில், ஒரு நாளில் ஒரு மீனே வரினும் `முழுமுதல்வரான இறைவரின் திருவடிக்கே' ஆகும் என விடுத்துவரும் நாள்களில், பல நாள்கள் தொடர்ந்து ஒரு மீனே, மேகம் படியும் கடலில் கிடைக்க, அதனை, அவர், இறைவருக்காக என்றே கடலின்கண் விட்டு வந்தார்.

விளக்கவுரை

****

மீன்வி லைப்பெரு குணவினில்
மிகுபெருஞ் செல்வம்
தான்ம றுத்தலின் உணவின்றி
அருங்கிளை சாம்பும்
பான்மை பற்றியும் வருந்திலர்
பட்டமீன் ஒன்று
மான்ம றிக்கரத் தவர்கழற்
கெனவிட்டு மகிழ்ந்தார். **#3746**

மீனை விற்பதனால் பெருகும் உணவுப் பண்டங்க ளால் மிக்க பெருஞ்செல்வம் இவ்வகையில் சுருங்கியமையால், தம் அரிய உறவினர்கள் உணவில்லாமல் பசியால் வருந்துவது பற்றியும், அவர் வருந்தவில்லை. வலையில் அகப்படுவது ஒரு மீனே யாயினும் அதனையும் தொடர்ந்து, மான் கன்றைக் கையில் ஏந்திய இறைவரின்

திருவடிக்கு என விட்டு மகிழ்ந்து வந்தார்.

விளக்கவுரை

****

சால நாள்கள்இப் படிவரத்
தாம்உண வயர்த்துக்
கோல மேனியுந் தளரவுந்
தந்தொழில் குறையாச்
சீல மேதலை நின்றவர்
தந்திறந் தெரிந்தே
ஆல முண்டவர் தொண்டர்அன்
பெனும்அமு துண்பார். **#3747**

பல நாள்கள் இவ்வாறே நிகழத் தாம் உணவு மறந்து வாடித் தம் அழகிய திருமேனியும் தளர்ச்சியடையத் தம் தொண்டினின் றும் குறைவுபடாத அவ்வொழுக்கத்தில் சலியாமல் ஒழுகியவரின் இயல்பை அறிந்து, நஞ்சுண்ட இறைவர் இத் தொண்டரின் அன்பு எனும் அமுதத்தை உண்பாராய்,

விளக்கவுரை

****

ஆன நாள்ஒன்றில் அவ்வொரு
மீனுமங் கொழித்துத்
தூநி றப்பசுங் கனகநற்
சுடர்நவ மணியால்
மீனு றுப்புற அமைத்துல
கடங்கலும் விலையாம்
பான்மை அற்புதப் படியதொன்
றிடுவலைப் படுத்தார். **#3748**

முற்கூறியவாறே நிகழ்ந்த நாள் ஒன்றில், அவ்வொரு மீனும் அங்கு வலையில் அகப்படாது போகச் செய்து, தூய நிறமுடைய பசும் பொன்னாலும் ஒளியுடைய மணிகளாலும் மீன் உறுப்புக்கள் பொருந்தும்படி அமைத்து, உலகனைத்துமே அதற்குரிய விலை என மதிக்கத்தக்க அற்புதத் தன்மை கொண்ட ஒரு மீன், வீசிய வலையில் அகப்படுமாறு இறைவர் செய்தனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வாங்கு நீள்வலை அலைகடற்
கரையில்வந் தேற

ஓங்கு செஞ்சுடர் உதித்தென
வுலகெலாம் வியப்பத்
தாங்கு பேரொளி தழைத்திடக்
காண்டலும் எடுத்துப்
பாங்கு நின்றவர் மீன்ஒன்று
படுத்தனம் என்றார். **#3749**
இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

விளக்கவுரை

****

என்று மற்றுளோர் இயம்பவும்
ஏறுசீர்த் தொண்டர்
பொன் திரட்சுடர் நவமணி
பொலிந்தமீ னுறுப்பால்
ஒன்று மற்றிது என்னையா
ளுடையவர்க் காகும்
சென்று பொற்கழல் சேர்கெனத்
திரையொடுந் திரித்தார். **#3750**

என்று பரதவர் உரைக்கவும், அதுகேட்ட மிகுகின்ற சிறப்பையுடைய தொண்டரான அதிபத்தர் `பொன்னும் தொகுதியான ஒளியுடைய நவமணிகளும் விளங்கும், மீன் உறுப்புகளினால் பொருந்தும் உலகியலில் காணக் கூடாத இம்மீன், என்னை ஆட்கொள் கின்ற இறைவருக்கே ஆகும்: அவரது பொற்கழலை இது சேர்வதா கும்!' என்று கடலில் விடுத்தார்.

விளக்கவுரை

****

அகில லோகமும் பொருள்முதற்
றாம்எனும் அளவில்
புகலு மப்பெரும் பற்றினைப்
புரையற எறிந்த
இகலில் மெய்த்திருத் தொண்டர்முன்
இறைவர்தாம் விடைமேல்
முகில்வி சும்பிடை யணைந்தனர்
பொழிந்தனர் முகைப்பூ. **#3751**

எவ்வுலகும் பொருளையே முதன்மையாக வுடையது என்று கூறும் அப்பெரிய வலிய பொன்னாசை என்னும் பெரும் பற்றை முழுமையாக நீக்கிய ஒப்பில்லாத மெய்த்தொண்டர் முன்னே, இறைவர்

விடையூர்தியின் மேல், மேகம் தவழும் வானத்தில் எழுந்தருளினார். அதுபொழுது தேவர்கள் கற்பகப் பூமழை சொரிந்தனர்.

விளக்கவுரை

`பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு' *(குறள், 247)* என்ற திருவள்ளுவனாரும். `பொருள்ளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார் அற்றார்மற் றாதல் அரிது' *(குறள்., 248)* என்பர். அவ்வருட்செல்வமே அதிபத்தரின் செல்வமாயிற்று.

பஞ்ச நாதமும் எழுந்தன
அதிபத்தர் பணிந்தே
அஞ்ச லிக்கரம் சிரமிசை
யணைத்துநின் றவரை
நஞ்சு வாண்மணி மிடற்றவர்
சிவலோகம் நண்ணித்
தஞ்சி றப்புடை அடியர்பாங்
குறத்தலை யளித்தார். **#3752**

`பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு' (குறள், 247) என்ற திருவள்ளுவனாரும். `பொருள்ளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார் அற்றார்மற் றாதல் அரிது' (குறள்., 248) என்பர். அவ்வருட்செல்வமே அதிபத்தரின் செல்வமாயிற்று.

விளக்கவுரை

****

தம்ம றம்புரி மரபினில்
தகும்பெருந் தொண்டு
மெய்ம்மை யேபுரி அதிபத்தர்
விளங்குதாள் வணங்கி
மும்மை யாகிய புவனங்கள்
முறைமையிற் போற்றும்
செம்மை நீதியார் கலிக்கம்பர்
திருத்தொண்டு பகர்வாம். **#3753**

மீன்பிடிக்கும் தம் மரபிற்கு ஏற்றவாறே, தகுதியான பெருந் திருத்தொண்டை உண்மையில் தவறாது செய்து அருள் பெற்ற அதிபத்த நாயனாரின் விளக்கம் செய்யும் திருவடிகளை வணங்கி, இனி உலகங்கள் மூன்றும் முறையாகப் போற்றுகின்ற செம்மையும் நீதியும் உடைய கலிக்கம்ப நாயனாரின்' திருத்தொண்டைக் கூறுவாம். அதிபத்த நாயனார் புராணம் முற்றிற்று.

விளக்கவுரை

****

கலிக்கம்ப நாயனார் புராணம்

உரிமை யொழுக்கந் தலைநின்ற
வுயர்தொல் மரபின் நீடுமனைத்
தரும நெறியால் வாழ்குடிகள்
தழைத்து வளருந் தன்மையதாய்
வரும்மஞ் சுறையும் மலர்ச்சோலை
மருங்கு சூழ்ந்த வளம்புறவில்
பெருமை யுலகு பெறவிளங்கும்
மேல்பால் பெண்ணா கடமூதூர். **#3754**

தமக்கு உரிய நல்லொழுக்கத்தில் சிறந்த உயர்ந்த பழைமையான மரபில், நிலைபெறுகின்ற இல்லற நெறியில் வாழ்கின்ற குடிகள் தழைத்தோங்கும் இயல்புடையதாகி, வானில் நிலவும் மேகங் கள் தங்குதற்கு இடனான அழகிய சோலைகள் பக்கங்களில் சூழ்ந்து நிற்கும் வளமுடைய புறம் பணைகளுடன், உலகம் பெருமை பொருந்த விளங்குவது, நடுநாட்டின் மேற்குத் திசையில் உள்ள `பெண்ணாகடம்' என்னும் பழைய ஊர் ஆகும்.

விளக்கவுரை

புறவு - முல்லை நிலம். பெண்ணாகடம் - திருமுது குன்றத்திற்கு (விருத்தாசலம்) அண்மையிலுள்ளது. புறச்சந்தான குரவரில் முதல்வராய மெய்கண்டார் தோன்றிய திருப்பதியாகும். நாவரசருக்கு விடையும் சூலமும் பொறிக்கப்பெற்ற வரலாற்றுச் சிறப்பு உடையது.

மற்றப் பதியின் இடைவாழும்
வணிகர் குலத்து வந்துதித்தார்
கற்றைச் சடையார் கழற்காத
லுடனே வளர்ந்த கருத்துடையார்
அற்றைக் கன்று தூங்கானை
மாடத்து அமர்ந்தார் அடித்தொண்டு
பற்றிப் பணிசெய் கலிக்கம்பர்
என்பார் மற்றோர் பற்றில்லார். **#3755**

அப்பதியில் வாழ்கின்ற வணிகர் குலத்தில் வந்து தோன்றியவர்; தொகுதியான சடையையுடைய சிவபெருமானின் திருவடிகளில் கொண்ட பெருவிருப்பம் தம் உள்ளத்தே தோன்றி வளரும் வளர்ச்சியுடன் வாழ்பவர்; அவர் அவ்வந்நாளும் அப்பதியில் `திருத்தூங்கானை' மாடத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருவடித் தொண்டில் ஈடுபட்டுப் பணிசெய்து வருபவர். `கலிக்கம்பர்' என்னும் பெயர் உடையவர். அவர் இறைவனின் திருவடிப்பற்று அன்றி

வேறொரு பற்றும் இல்லாதவர்.

விளக்கவுரை

பெண்ணாகடம் - ஊர்ப்பெயர். திருத்தூங்கானைமாடம் - திருக்கோயிலின் பெயர்.

ஆன அன்பர் தாம்என்றும்
அரனார் அன்பர்க் கமுதுசெய
மேன்மை விளங்கு போனகமும்
விரும்பு கறிநெய் தயிர்தீம்பால்
தேனின் இனிய கனிகட்டி
திருந்த அமுது செய்வித்தே
ஏனை நிதியம் வேண்டுவன
எல்லாம் இன்ப முறவளிப்பார். **#3756**

அத்தகைய அன்பர், என்றும் சிவனடியார்களுக்கு அமுது செய்தற்குரிய மேலாய திருவமுதுடன், விரும்பும் கறி வகைக ளும், நெய்யும், தயிரும், இனிய கட்டியாகக் காய்ச்சிய பாலும், தேனை விட இனிய பழங்களும், கரும்புக் கட்டியும் என்னும் இவை முதலானவற்றைப் படைத்து, நிறைவாக அவர்கள் உண்ணும் படியாய்ச் செய்வித்து, மேலும் வேண்டிய பிற நிதியங்கள் எல்லாவற்றையும் இன்பம் பொருந்த அளித்து வருவார்.

விளக்கவுரை

போனகம் - திருவமுது; உணவு.

அன்ன வகையால் திருத்தொண்டு
புரியும் நாளில் அங்கொருநாள்
மன்னு மனையில் அமுதுசெய
வந்த தொண்டர் தமையெல்லாம்
தொன்மை முறையே அமுதுசெயத்
தொடங்கு விப்பார் அவர்தம்மை
முன்னர் அழைத்துத் திருவடிகள்
எல்லாம் விளக்க முயல்கின்றார். **#3757**

அவ்வகையில் தொண்டு செய்து வரும் நாள்களில், ஒரு நாள், நிலைபெற்ற தம் திருமனையில் அமுது செய்யவந்த தொண்டர்களை எல்லாம் வழிவழியாகச் செய்துவரும் முறையில் அமுது செய்யத் தொடங்குவிப்பாராகி, அவர்களை முன் அழைத்து, அவர்களின் திருவடிகளை எல்லாம் விளக்க முயல்வாராய்,

விளக்கவுரை

****

திருந்து மனையார் மனையெல்லாம்
திகழ விளக்கிப் போனகமும்
பொருந்து சுவையில் கறியமுதும்
புனிதத் தண்ணீ ருடன்மற்றும்
அருந்தும் இயல்பில் உள்ளனவும்
அமைத்துக் கரக நீரளிக்க
விரும்பு கணவர் பெருந்தவர்தாள்
எல்லாம் விளக்கும் பொழுதின்கண். **#3758**

மனைவியார் அவ்வில்லம் முழுதும் விளக்கம் பெறச்செய்து திருவமுதும், பொருந்தும் முறைமையில் கறியமுதும், தூய்மையான நீரும் என்றும் இவற்றுடனே உண்பார்க்கேற்ற வகையில் உளவாகும் பிற பொருள்களையும் செம்மை பெற அமைத்துக் கரகத்தில் நீரை வார்க்க, விரும்பும் நிலையில் கணவர் தம்மில்லத்தில் வரும் அடியவர்களின் திருவடிகளையெல்லாம் விளக்கி வரும் போது,

விளக்கவுரை

****

முன்பு தமக்குத் தொழில்செய்யும்
தமராய் ஏவல் முனிந்துபோய்
என்பும் அரவும் அணிந்தபிரான்
அடியா ராகி அங்கெய்தும்
அன்ப ருடனே திருவேடந்
தாங்கி யணைந்தா ரொருவர்தாம்
பின்பு வந்து தோன்றஅவர்
பாதம் விளக்கும் பெருந்தகையார். **#3759**

முன்னைய நாள்களில் தமக்குத் தொண்டு செய்யும் சுற்றமாக இருந்த ஒருவர், பின் ஏவற்பணியை வெறுத்துச் சென்று, எலும்பையும் பாம்பையும் அணிந்த பெருமானின் அடியாராகி, அங்கு வரும் அடியார்களுடன் ஒருவராக வந்து தோன்ற, அவர் அடிகளை விளக்கும் பெருந்தகையாரான கலிக்கம்பரும்,

விளக்கவுரை

****

கையால் அவர்தம் அடிபிடிக்கக்
காதல் மனையார் முன்பேவல்
செய்யா தகன்ற தமர்போலும்
என்று தேரும் பொழுதுமலர்
மொய்யார் வாசக் கரகநீர்

வார்க்க முட்ட முதல்தொண்டர்
மையார் கூந்தல் மனையாரைப்
பார்த்து மனத்துட் கருதுவார். #3760

கைகளால் அவர்தம் அடிகளைப் பிடிக்க `முன்பு நம் ஏவலைச் செய்யாது விட்டுச் சென்ற சுற்றம் இவர் போலும்!' என்று அன்பு மனைவியார் நினைத்த அளவில், மலர்கின்ற மலர்களை யுடைய கரக நீரை வார்க்கக் காலம் தாழ்க்க, முதன்மை பெற்ற திருத்தொண்டரான அவர், கரிய கூந்தலையுடைய மனைவியின் செயலைப் பார்த்துத், தம் மனத்தில் கருதுவாராய்,

விளக்கவுரை

****

வெறித்த கொன்றை முடியார்தம்
அடியார் இவர்முன் மேவுநிலை
குறித்து வெள்கி நீர்வாரா
தொழிந்தாள் என்று மனங்கொண்டு
மறித்து நோக்கார் வடிவாளை
வாங்கிக் கரகம் வாங்கிக்கை
தறித்துக் கரக நீரெடுத்துத்
தாமே அவர்தாள் விளக்கினார். #3761

மணம் கமழும் கொன்றை மலரை அணிந்த திருச் சடையையுடைய இறைவரின் அடியவரான இவர், முன்பு இருந்த நிலைகுறித்து, அவர் திருவடியை விளக்க நாணி நீர் வார்க்காது விட்டார் என்று மனத்தில் எண்ணி, மீண்டும் அவர் முகத்தையும் பார்க்காமல், கூர்மையான வாளை உருவி, அவர் கையிலிருந்த கரகத்தை வாங்கிப் பின், அவரது கையை வெட்டித் துண்டாக்கி, கரகத்தை எடுத்து நீர் வார்த்துத் தாமே அவருடைய கால்களை விளக்கினார்.

விளக்கவுரை

இவ்வைந்து பாடல்களும் ஒரு முடிபின.

விளக்கி அமுது செய்வதற்கு
வேண்டு வனதா மேசெய்து
துளக்கில் சிந்தை யுடன்தொண்டர்
தம்மை அமுது செய்வித்தார்
அளப்பில் பெருமை யவர்பின்னு
மடுத்த தொண்டின் வழிநின்று
களத்தி னஞ்ச மணிந்தவர்தா
ணிழற்கீ ழடியா ருடன்கலந்தார். #3762

அங்ஙனம் விளக்கிய பின்பு, அவர் உணவு உண்பதற்கு வேண்டிய ஏனைய செயல்களை எல்லாம் தாமே செய்து, அசைவற்ற மனநிலையுடன் அத்தொண்டரை அமுது செய்வித்தார். அளவற்ற பெருமையுடைய அவர், பின்பும் தமக்குப் பொருந்திய அத் திருத்தொண்டின் வழியில் வழுவாது ஒழுகிக், கழுத்தில் நஞ்சை யுடைய இறைவரின் திருவடி நீழலின்கீழ்க் குலவி நிற்கும் அடியாரு டன் கலந்து பேரின்பம் பெற்றார்.

விளக்கவுரை

****

ஓத மலிநீர் விடமுண்டார்
அடியார் வேடம் என்றுணரா
மாத ரார்கை தடிந்தகலிக்
கம்பர் மலர்ச்சே வடிவணங்கிப்
பூத நாதர் திருத்தொண்டு
புரிந்து புவனங் களிற்பொலிந்த
காதல் அன்பர் கலிநீதி
யார்தம் பெருமை கட்டுரைப்பாம். **#3763**

குளிர்ந்த பெருகிய நீர் பொருந்திய கடலில் எழுந்த நஞ்சையுண்ட இறைவரின் அடியவரது திருவேடத்திற்குரிய பெருமை இதுவென்று உணராத மனைவியாரின் கையை வெட்டிய கலிக்கம்ப நாயனாரின் மலர் போன்ற அடிகளை வணங்கி, சிவகணங்களின் தலைவரான சிவபெருமானுக்குத் திருத்தொண்டு செய்து எவ் வுலகத்தும் விளங்கும் பெரும் பத்திமையுடைய அன்பரான `கலிய நாயனாரின்' பெருமையை உரைப்பாம். கலிக்கம்ப நாயனார் புராணம் முற்றிற்று.

விளக்கவுரை

****

கலிய நாயனார் புராணம்

பேருலகில் ஓங்குபுகழ்ப்
பெருந்தொண்டை நன்னாட்டு
நீருலவுஞ் சடைக்கற்றை
நிருத்தர்திருப் பதியாகும்
காருலவு மலர்ச்சோலைக்
கன்னிமதில் புடைசூழ்ந்து
தேருலவு நெடுவீதி
சிறந்ததிரு வொற்றியூர். **#3764**

இப்பேருலகில் புகழினால் ஓங்கிய பெருமை பொருந்திய தொண்டை நாட்டில், கங்கை பொருந்திய சடைத் தொகுதி யையுடைய கூத்தப்பெருமான் எழுந்தருளியுள்ள பதி, மேகங்கள் தவழும், மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த மதில் பக்கம் எல்லாம், தேர் உலவுவதற்கு இடமான நீண்ட வீதிகளையுடைய திருவொற்றியூர் என்ற பதியாகும்.

விளக்கவுரை

கன்னி மதில் - அழியாத மதில். காருலவும் மதில் எனக் கூட்டுக.

பீடுகெழு பெருந்தெருவும்
புத்தருடன் பீலிஅமண்
வேடமுடை யவர்பொருள்போல்
ஆகாச வெளிமறைக்கும்
ஆடிகொடி மணிநெடுமா
ளிகைநிரைகள் அலைகமுகின்
காடனைய கடல்படப்பை
யெனவிளங்குங் கவின்காட்டும். **#3765**

கன்னி மதில் - அழியாத மதில். காருலவும் மதில் எனக் கூட்டுக.

விளக்கவுரை

கன்னி மதில் - அழியாத மதில். காருலவும் மதில் எனக் கூட்டுக.

பன்னுதிருப் பதிகஇசைப்
பாட்டுஓவா மண்டபங்கள்
அன்னநடை மடவார்கள்
ஆட்டு ஓவா அணியரங்கு
பன்முறைதூ ரியமுழங்கும்
விழவுஓவா பயில்வீதி
செந்நெல்லடி சிற்பிறங்கல்
உணவுஓவா திருமடங்கள். **#3766**

யாவராலும் பலமுறையும் ஓதப்பெறும் திருமுறைப் பதிகங்களின் இசைப்

பாட்டுக்கள் மண்டபங்கள் தொறும் நீங்காமல் ஒலிப்பன. அன்னம் போன்ற நடையையுடைய பெண்களின் ஆடல்கள் அரங்குகளில் நீங்காமல் நிகழ்வன. மக்கள் பழகும் வீதிகள் முறையாக ஒலிக்கும் இயங்களின் ஒலியுடன் கூடிய விழாக்களை நீங்காது உடையனவாய்த் தோன்றின. திருமடங்கள் செந்நெல் அரிசியால் சமைக்கப்பட்டு மலைபோல் குவியல் ஆக்கிய உணவுப் பெருக்கத்தினை நீங்காமல் உடையனவாய் விளங்கின.

விளக்கவுரை

ஓவா என வருவன நீங்காதிருந்தமையைக் குறித்து நின்றன. தூரியம் - இசைக்கருவிகள்; இதனால் இங்குள்ள மக்களின் பத்திமையும் மகிழ்ச்சியும் விளங்குகின்றன. உணவு ஓவா திரு மடங்கள் `சோறு மணக்கும் மடங்கள் எல்லாம்' *(சேக்கிழார் பிள்ளைத் தமிழ்)* எனப் பிள்ளையவர்கள் கூறியதும் இதுபற்றியேயாம்.

கெழுமலர்மா தவிபுன்னை
கிளைஞாழல் தளையவிழும்
கொழுமுகைய சண்பகங்கள்
குளிர்செருந்தி வளர்கைதை
முழுமணமே முந்நீரும்
கமழமலர் முருகுயிர்க்கும்
செழுநிலவின் துகளனைய
மணற்பரப்புந் திருப்பரப்பு. **#3767**

நிறைந்த மலர்களையுடைய மாதவியும் புன்னையும், கிளைத்து வளரும் குங்கும மரங்களும், இதழ்கள் விரியும் செழுமை யான முகைகளையுடைய சண்பக மரங்களும், குளிர்ந்த செருந்தியும், தாழையும் ஆகிய மரங்கள், கடல் நீரும் மணக்கத் தத்தம் மலர்களின் மணத்தைத் தருவன. செழுமையான நிலவின் ஒளியே துகளாக விளங்குவதைப் போல, ஆங்குள்ள மணற்பரப்பு, தூய்மையும் வெண்மையும் கொண்டு விளங்கியது.

விளக்கவுரை

****

எயிலணையும் முகில்முழக்கும்
எறிதிரைவே லையின்முழக்கும்
பயில்தருபல் லியமுழக்கும்
முறைதெரியாப் பதியதனுள்
வெயில்அணிபல் மணிமுதலாம்
விழுப்பொருளா வனவிளக்கும்

தயிலவினைத் தொழின்மரபில்
சக்கரப்பா டித்தெருவு. #3768

மதில்களைச் சூழ நிற்கும் மேகங்களின் ஒலியும், வீசும் அலைகளையுடைய கடலின் ஒலியும், பயிலப்படும் இசை பொருந்திய பல இயங்களின் ஒலியும் ஆகிய இவ்வொலிகள், இன்ன இன்னதன் ஒலி எனப் பிரித்து அறியஇயலாதவாறு ஒலிக்கின்ற அந்நகரத்தில், எண்ணெய் ஆட்டும் செக்குத் தொழிலையுடைய மரபினர் வாழ்கின்ற `சக்கரபாடித் தெரு' என்பது ஒன்றாகும். அது ஒளிவீசும் பலவகை மணிகள் முதலான தூய்மையான பொருள்கள் பலவற்றையும் கொண்டு விளங்கும்.

விளக்கவுரை

தயிலவினைத் தொழில் - எண்ணெய் எடுக்கும் செக்குத் தொழில். சக்கரம் - செக்கு; அது கொண்டு தொழில் புரிவார் செக்கார் எனப் பெறுவார்.

அக்குலத்தின் செய்தவத்தால்
அவனிமிசை அவதரித்தார்
மிக்கபெருஞ் செல்வத்து
மீக்கூர விளங்கினார்
தக்கபுகழ்க் கலியனார்
எனும்நாமந் தலைநின்றார்
முக்கண்இறை வர்க்குஉரிமைத்
திருத்தொண்டின் நெறிமுயல்வார். #3769

அக்குலம் செய்த முன்னைத் தவத்தினால் உலகத்தில் தோன்றியவர், மிகப்பெருஞ் சைவ சமயநெறி மேலோங்க விளங்கிய வர், அவர் `கலியனார்' எனும் பெயர் கொண்டு சிறந்து நின்றவர். அவர், மூவிழிகளையுடைய சிவபெருமானுக்கு உரிமையான திருத் தொண்டு நெறியில் ஒழுகி வரலானார்.

விளக்கவுரை

****

எல்லையில்பல் கோடிதனத்
திறைவராய் இப்படித்தாம்
செல்வநெறிப் பயனறிந்து
திருவொற்றி யூரமர்ந்த
கொல்லைமழ விடையார்தம்
கோயிலின்உள் ளும்புறம்பும்
அல்லும்நெடும் பகலுமிடும்
திருவிளக்கின் அணிவிளைத்தார். #3770

அளவற்ற பல கோடி செல்வத்துக்குத் தலைவராகிய அவர், அச்செல்வம் வந்த வழியின் பயனை அறிந்து, திருவொற்றி யூரில் விரும்பி வீற்றிருக்கின்ற ஆனேற்றை ஊர்தியாகவுடைய இறை வர் தம் கோயிலின் உள்ளேயும் வெளியேயும், இரவிலும் விரிந்த பகற்போதிலும், இடும் திருவிளக்குப் பணியினை மேற்கொண்டார்.

விளக்கவுரை

கொல்லை - முல்லை நிலம்; விடை வளர்தற்குரிய இடன் அஃது ஆதலின் அவ்வுரிமை தோன்றக் `கொல்லை மழவிடை' என்றார்.

எண்ணில்திரு விளக்குநெடு
நாளெல்லாம் எரித்துவரப்
புண்ணியமெய்த் தொண்டர்செயல்
புலப்படுப்பார் அருளாலே
உண்ணிறையும் பெருஞ்செல்வம்
உயர்த்தும்வினைச் செயல்ஓவி
மண்ணிலவர் இருவினைபோல்
மாண்டதுமாட் சிமைத்தாக. **#3771**

எண்ணற்ற திருவிளக்கிடுதலை நீண்ட நாள்கள் முழுமையாகச் செய்து வரவே, அச்சிவ புண்ணியத்தின் உறைப்பு டைய அம்மெய்த்தொண்டரின் செயலை உலகறியுமாறு செய்பவரான இறைவரின் திருவருளினால், வீடு நிறைந்த மிகப் பெரிய செல்வமா னது, மேன் மேலும் பெருகுதற்குரிய தொழில் வளம் குறையவே, உலகில் அவருடைய இருவினைகளும் மாண்டன போல, அவர்தம் செல்வமும் அவர் மாட்சிமையடையுமாறு நீங்கியது.

விளக்கவுரை

செல்வம் நீங்கப் பலரும் தாழ்வர்; இது உலகியல். ஆனால் செல்வம் நீங்க இவ்வடியவர் உயர்ந்தனர் என்றார். இஃது அருளியலாதலின், ஓடும் கவந்தியுமே உறவாகத் தேடும் பொருளும் சிவமேயாக வாழும் வாழ்விற்குப் பொருளும் வேண்டுமோ வேண் டாததன்றோ?

திருமலிசெல் வத்துழனி
தேய்ந்தழிந்த பின்னையுந்தம்
பெருமைநிலைத் திருப்பணியில்
பேராத பேராளர்
வருமரபில் உள்ளோர்பால்
எண்ணெய்மா றிக்கொணர்ந்து
தருமியல்பில் கூலியினால்
தமதுதிருப் பணிசெய்வார். **#3772**

பல்வகையானும் பெருகிவந்த தம் செல்வப் பெருக்குத் தேய்ந்து அழிந்த பின்பும், தம் பெருமை பொருந்திய நிலைத்த அத்திருத்தொண்டினின்றும் மாறுபடாத தன்மையுடைய அவர், தம் மரபில் வந்த செல்வம் உள்ளவரிடத்தில் எண்ணெய் பெற்று, அதனை விற்றுத் தந்து, அதனால் அவர் அளிக்கும் கூலியைக் கொண்டு தம் திருத்தொண்டைச் செய்து வந்தார்.

விளக்கவுரை

செல்வத்துழனி - செல்வப்பெருக்கு.

வளமுடையார் பால்எண்ணெய்
கொடுபோய்மா றிக்கூலி
கொளமுயலும் செய்கையும்மற்
றவர்கொடா மையின்மாறத்
தளருமனம் உடையவர்தாம்
சக்கரஎந் திரம்புரியும்
களனில்வரும் பணிசெய்து
பெறுங்கூலி காதலித்தார். **#3773**

செல்வ வளம் உடையவரிடத்தில் எண்ணெய் பெற்று விற்று, அதனால் பெறும் கூலியைக் கொண்டு செய்து வந்த அச் செயலும், அவர்கள் எண்ணெய் கொடாமையினால் இல்லையாகி யது. அதனால் தாம் ஆற்றும் பணிக்குத் தடை வருதலால், தளரும் மனம் உடைய அவர், செக்கு ஆடும் இடத்தில் வரும் பணியைச் செய்து அதனால் பெறும் கூலியைப் பெற விரும்பியவராய்,

விளக்கவுரை

****

செக்குநிறை எள்ளாட்டிப்
பதமறிந்து திலதயிலம்
பக்கமெழ மிகவுழந்தும்
பாண்டில்வரும் எருதுய்த்தும்
தக்கதொழிற் பெறுங்கூலி
தாங்கொண்டு தாழாமை
மிக்கதிரு விளக்கிட்டார்
விழுத்தொண்டு விளக்கிட்டார். **#3774**

செக்கு நிறையும் அளவில் எள் இட்டு ஆட்டிப், பதம் தெரிந்து, எள்ளினின்றும் எண்ணெய் பக்கங்களில் சிந்தாது, விழிப்பொடு உழைத்தும், செக்கை வட்டமாய்ச் சுற்றி வரும் எருது களைச் செலுத்தியும், உரிய முயற்சியால் செய்யும் அத்தொழில்களால் பெறும்

கூலியைத் தாம் கொண்டு, தவறாது நிறைந்த விளக்குகளை எரித்தார்; அதனால் `தூய திருத்தொண்டின் திறம் இது' என உலகிற்கு விளக்கலானார்.

விளக்கவுரை

திலம் - எள். தைலம் - நெய். எள்ளிலிருந்து எடுக்கப் பெறும் நெய் எண்ணெய் ஆயிற்று. இச்சொல் காலப் போக்கில் வேறு பல பொருள்களிலிருந்து எடுக்கும் நெய்க்கும் பொதுப் பெயராயிற்று. இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

அப்பணியால் வரும்பேறும்
அவ்வினைஞர் பலருளராய்
எப்பரிசுங் கிடையாத
வகைமுட்ட இடருழந்தே
ஒப்பில்மனை விற்றெரிக்கு
முறுபொருளும் மாண்டதற்பின்
செப்பருஞ்சீர் மனையாரை
விற்பதற்குத் தேடுவார். **#3775**

திலம் - எள். தைலம் - நெய். எள்ளிலிருந்து எடுக்கப் பெறும் நெய் எண்ணெய் ஆயிற்று. இச்சொல் காலப் போக்கில் வேறு பல பொருள்களிலிருந்து எடுக்கும் நெய்க்கும் பொதுப் பெயராயிற்று. இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

விளக்கவுரை

****

மனமகிழ்ந்து மனைவியார்
தமைக்கொண்டு வளநகரில்
தனமளிப்பார் தமையெங்கும்
கிடையாமல் தளர்வெய்திச்
சினவிடையார் திருக்கோயில்
திருவிளக்குப் பணிமுட்டக்
கனவினும்முன் பறியாதார்
கையறவால் எய்தினார். **#3776**

உள மகிழ்வுடன் மனைவியாரைக் கைக்கொண்டு, வளம் வாய்ந்த அந்நகரத்தில் பொருள் கொடுப்பவர் எவரும் இல்லாமையால் தளர்வடைந்து, சினமுடைய காளையையுடைய இறைவரின் கோயிலில் திருவிளக்கு இடும்பணி முட்டுதலை இதற்கு முன்பு கனவிலும் அறியாத நாயனார், வேறு செயலற்ற தன்மையால் திருக்கோயிலின்கண் வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பணிகொள்ளும் படம்பக்க
நாயகர்தங் கோயிலினுள்
அணிகொள்ளுந் திருவிளக்குப்
பணிமாறும் அமையத்தில்
மணிவண்ணச் சுடர்விளக்கு
மாளில்யான் மாள்வனெனத்
துணிவுள்ளங் கொளநினைந்தவ்
வினைமுடிக்கத் தொடங்குவார். **#3777**

தம்மை ஆட்கொண்டு தம் பணியை ஏற்கும் `படம் பக்க' நாதரின் கோயிலுள், அழகு நிறைந்த விளக்கிடும் திருப்பணி யைச் செய்ய நின்ற அவ்வமயத்தில், `மணி போன்ற சுடர்களை யுடைய விளக்கு எரிக்கப்படாமல் தடைப்படுமாயின், நான் இறந்து விடுவதே செய்யத்தக்கது' என்ற துணிவை மனம் பொருந்த எண்ணி, அச்செயலை முடிக்கத் தொடங்குவராகி,

விளக்கவுரை

****

திருவிளக்குத் திரியிட்டங்கு
அகல்பரப்பிச் செயல்நிரம்ப
ஒருவியஎண் ணெய்க்குஈடா
உடல்உதிரங் கொடுநிறைக்கக்
கருவியினால் மிடறரிய
அக்கையைக் கண்ணுதலார்
பெருகுதிருக் கருணையுடன்
நேர்வந்து பிடித்தருளி. **#3778**

திருவிளக்குகளுக்கு எல்லாம் திரியை இட்டு அங்கு அகல்களை முறையாகப் பரப்பி, அச்செயல் நிரம்பத் தடையாகும் எண்ணெய்க்கு ஈடாய்த், தம் உடலில் நிறைந்த குருதியைக் கொண்டு நிறைக்க எண்ணிக் கருவி கொண்டு தம் கழுத்தை அரியமுற்பட, அங் ஙனம் அவர் அரிகின்ற கையை, நெற்றிக் கண்ணையுடைய இறைவர், பெருகும் கருணையுடனே வெளிப்பட்டுத் தோன்றி, அச் செயலைச் செய்யவிடாமல் பற்றிப்பிடித்து,

விளக்கவுரை

****

மற்றவர்தம் முன்னாக

மழவிடைமேல் எழுந்தருள
உற்றவூ றதுநீங்கி
ஒளிவிளங்க வுச்சியின்மேல்
பற்றியஞ் சலியினராய்
நின்றவரைப் பரமர்தாம்
பொற்புடைய சிவபுரியில்
பொலிந்திருக்க அருள்புரிந்தார். **#3779**

அவ்வடியவர் முன்பாக, இளமையுடைய ஆனேற் றூர்தியின் மேல் எழுந்தருளி, அரிந்ததால் ஆய அப்புண் நீங்கி ஒளி பெற்று விளங்க, உச்சியின் மேல் கைகுவித்து நின்றஅந்நாயனாரை சிவபெருமான் அழகிய சிவலோகத்தில் விளங்க வீற்றிருக்குமாறு அருள் புரிந்தார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

தேவர்பிரான் திருவிளக்குச்
செயல்முட்ட மிடறரிந்து
மேவரிய வினைமுடித்தார்
கழல்வணங்கி வியனுலகில்
யாவரெனாது அரனடியார்
தமையிகழ்ந்து பேசினரை
நாவரியுஞ் சத்தியார்
திருத்தொண்டின் நலமுரைப்பாம். **#3780**

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

விளக்கவுரை

****

சத்தி நாயனார் புராணம்

களமர் கட்ட கமலம் பொழிந்ததேன்
குளநி றைப்பது கோலொன்றில் எண்திசை
அளவும் ஆணைச் சயத்தம்பம் நாட்டிய
வளவர் காவிரி நாட்டு வரிஞ்சையூர். **#3781**

உழவர்கள், களை என எடுத்த தாமரை மலர்களிலிருந்து பெருகிய தேனானது குளத்தை நிறைக்க உள்ளதும், ஒப்பற்ற செங்கோல் சிறப்பால் எண் திசையிலும் தம் வெற்றித் தூண்களை நாட்டி அரசு செய்யும் சோழ மன்னரின் காவிரியாறு பாயும் நாட்டில் உள்ளதும் வரிஞ்சையூர் என்பதாகும்.

விளக்கவுரை

வரிஞ்சையூர் - தஞ்சை மாவட்டத்தில் கீழ்வேளூர் என்னும் ஊருக்குத் தெற்கில் ஏறத்தாழ *7* கிமீ. தொலைவில் உள்ளது. இவ்வூர்த் திருக்கோயிலில் இந்நாயனாரின், திருவுருவம் எழுந்தருளு விக்கப் பெற்று வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.

வரிஞ்சை யூரினில் வாய்மைவே ளாண்குலம்
பெருஞ்சி றப்புப் பெறப்பிறப்பு எய்தினார்
விரிஞ்சன் மால்முதல் விண்ணவர் எண்ணவும்
அருஞ்சி லம்பணி சேவடிக் காட்செய்வார். **#3782**

இவ்வரிஞ்சையூரில் வாய்மைப் பண்பையுடைய வேளாளர் குலமானது பெருஞ்சிறப்படையது; அக்குலத்துள் வந்து தோன்றியவரும், நான்முகன் முதலான தேவர்களும் நினைத்தற்கரிய சிலம்பை அணிந்த சிவபெருமானின் திருவடிக்கு ஆட்செய்பவரு மான ஒருவர் வாழ்ந்து வந்தார்.

விளக்கவுரை

****

அத்த ராகிய வங்கணர் அன்பரை
இத்த லத்தில் இகழ்ந்தியம் பும்முரை
வைத்த நாவை வலித்தரி சத்தியால்
சத்தி யார்எனும் நாமந் தரித்துளார். **#3783**

அவர் தலைவரான சிவபெருமானின் அடியவரை இவ்வுலகத்தில் இகழ்ந்து பேசுபவரின் நாவை வலிந்து அரியும் ஆற்றலால் \`சத்தியார்' எனும் பெயரை உடையவர்.

விளக்கவுரை

****

தீங்கு சொற்ற திருவிலர் நாவினை
வாங்க வாங்குதண் டாயத்தி னால்வலித்
தாங்க யிற்கத்தி யால்அரிந் தன்புடன்
ஓங்கு சீர்த்திருத் தொண்டின் உயர்ந்தனர். **#3784**

சிவனடியாரைத் தீங்கு கூறி இகழ்ந்த நன்மை இல்லாரின் நாவைத் துண்டித்தற்கு ஏற்ப, வளைந்த `தண்டாயம்' என்ற கருவிகொண்டு இழுத்து, அவ்விடத்தேயே கூர்மையான கத்தியால் அரிந்து, அன்பு பெருகும் சிறப்புடைய தொண்டில் உயர்ந்து விளங்கினார்.

விளக்கவுரை

தண்டாயம் - பற்றி இழுக்கும் குறடு போன்றதொரு கருவி. வலித்து - இழுத்து. ஆயில் - கூர்மை.

அன்ன தாகிய ஆண்மைத் திருப்பணி
மன்னு பேரு லகத்தில் வலியுடன்
பன்னெ டும்பெரு நாள்பரி வால்செய்து
சென்னி யாற்றினர் செந்நெறி யாற்றினர். **#3785**

அத்தகைய ஆண்மையுடைய திருத்தொண்டில் நிலைபெற்ற வலிமையுடன் பல ஆண்டுகள் அன்புடன் செய்து வந்தவர், திருச்சடையில் கங்கை யாற்றைச் சூடிய இறைவரின் செம்மை நெறித்தொண்டினைத் தொடர்ந்தும் செய்து வந்தவராவார்.

விளக்கவுரை

****

ஐய மின்றி யரிய திருப்பணி
மெய்யி னாற்செய்த வீரத் திருத்தொண்டர்
வைய்யம் உய்ய மணிமன்று ளாடுவார்
செய்ய பாதத் திருநிழல் சேர்ந்தனர். **#3786**

ஐயம் இல்லாமல் அரியதான இத்திருப்பணியை மெய்ம்மையாகச் செய்து வந்த வீரத்தன்மையுடைய தொண்டரான சத்தியார், உலகு உய்ய அழகிய அம்பலத்தில் ஆடுபவரின் செம்மை தரும் திருவடிநிழலைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

ஐயம் - இச்செயல் செயத்தகுமோ எனும் ஐயம். இறை வனை இகழ்தலினும், அடியாரை இகழ்தல் பெருங்குற்றமாதலின் அச்செயல் செய்வாரின் நாவை அரிதல் கொடிதன்று என்ற துணிவும் உறைப்பும் உடையவர்.

நாய னார்தொண் டரைநலங் கூறலார்
சாய நாவரி சத்தியார் தாள்பணிந்து

ஆய மாதவத் தையடி கள்ளெனும்
தூய காடவர் தந்திறஞ் சொல்லுவாம். #3787

சிவபெருமானின் தொண்டர்களைப் போற்றாதார் வீழ, அவர்களின் நாவை அரியும் சத்தி நாயனாரின் திருவடிகளை வணங்கிச் சிவநெறியான மாதவத்தை யுடைய ஐயடிகள் என்னும் தூய `காடவரின்' அடிமைத் திறத்தைச் சொல்வாம்.

விளக்கவுரை

சாய - வீழ இனி அச்செயலைச் செய்யாது ஒழிய. சத்தி நாயனார் புராணம் முற்றிற்று.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் புராணம்

வையம்நிகழ் பல்லவர்தம்
குலமரபின் வழித்தோன்றி
வெய்யகலி யும்பகையும்
மிகையொழியும் வகையடக்கிச்
செய்யசடை யார்சைவத்
திருநெறியால் அரசளிப்பார்
ஐயடிகள் நீதியால்
அடிப்படுத்துஞ் செங்கோலார். **#3788**

உலகில் சிறந்து விளங்குகின்ற பல்லவரின் மரபில் முறைமையாய்த் தோன்றிக், கொடிய வறுமையும் பகையும் அவற்றால் வரும் துன்பங்களும் நீங்குமாறு, சிவந்த சடையினை உடைய சிவபெருமானின் சைவ நெறியின் வழியே நின்று, ஆட்சி புரிவாராகிய `ஐயடிகள் காடவர் கோன்' என்னும் மன்னர், நீதி வழுவா நெறி முறையால் உலகம் எல்லாம் தம் அடியின் கீழ்த்தங்குமாறு செய்கின்ற ஆட்சிச் சிறப்பை உடையவராக விளங்கினார்.

விளக்கவுரை

கலி - வறுமை. மிகை - குற்றம்.

திருமலியும் புகழ்விளங்கச்
சேணிலத்தில் எவ்வுயிரும்
பெருமையுடன் இனிதுஅமரப்
பிறபுலங்கள் அடிப்படுத்துத்
தருமநெறி தழைத்தோங்கத்
தாரணிமேற் சைவமுடன்
அருமறையின் துறைவிளங்க
அரசளிக்கும் அந்நாளில். **#3789**

கலி - வறுமை. மிகை - குற்றம்.

விளக்கவுரை

****

மன்னவரும் பணிசெய்ய
வடநூல்தென் தமிழ்முதலாம்
பன்னுகலை பணிசெய்யப்
பார்அளிப்பார் அரசாட்சி
இன்னல்என இகழ்ந்ததனை
எழிற்குமரன் மேல்இழிச்சி
நன்மைநெறித் திருத்தொண்டு

நயந்தளிப்பார் ஆயினார். #3790
கலி - வறுமை. மிகை - குற்றம்.

விளக்கவுரை

`மாரிபொய்ப்பினும் வாரிகுன்றினும், இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும், காவலர்ப் பழிக்கும் இக்கண்ணகன் ஞாலம்', `மழைவளம் கரப்பின் வான் பேரச்சம், பிழை உயிர் எய்தின் பெரும் பேரச்சம், குடிபுர வுண்டு கொடுங்கோல் அஞ்சி, மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல், துன்பம் அல்லது தொழுதகவில்' (சிலம்பு - வஞ்சிக். காட்சிக். *100 - 104)* என வருவனவும் காண்க. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

தொண்டுரிமை புரக்கின்றார்
சூழ்வேலை யுலகின்கண்
அண்டர்பிரான் அமர்ந்தருளும்
ஆலயங்க ளானவெலாம்
கண்டிறைஞ்சித் திருத்தொண்டின்
கடனேற்ற பணிசெய்தே
வண்தமிழின் மொழிவெண்பா
ஓர்ஒன்றா வழுத்துவார். #3791

திருத்தொண்டிற்குரிய செயல்களை வழுவாது செய்து வரும் அந்நாயனார், கடல் சூழ்ந்த இவ்வுலகில் தேவர் பெருமா னான இறைவர் விரும்பி எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்கள் எல்லாவற்றிற்கும் சென்று, கண்டு வணங்கித் தாம் மேற்கொண்ட திருத்தொண்டிற் கேற்ற முறையான பணி விடைகள் எல்லாவற்றையும் செய்து, ஒவ்வொரு பதியிலும் வளமையுடைய தமிழில் வெண்பா ஒவ்வொன்றால் போற்றி வழிபடுவாராய்,

விளக்கவுரை

****

பெருத்தெழுகா தலில்வணங்கிப்
பெரும்பற்றத் தண்புலியூர்த்
திருச்சிற்றம் பலத்தாடல்
புரிந்தருளுஞ் செய்யசடை
நிருத்தனார் திருக்கூத்து
நேர்ந்திறைஞ்சி நெடுந்தகையார்
விருப்பினுடன் செந்தமிழின்
வெண்பாமென் மலர்புனைந்தார். #3792

பெருகி எழும் பத்திமையால் வணங்கிக் குளிர்ந்த பெரும்பற்றப் புலியூரின்கண் உள்ள சிற்றம்பலத்தில் ஆடல் இயற்றும் சிவந்த

சடையையுடைய கூத்தப் பெருமானின் கூத்தை நேர்பட வணங்கிய பெருந்தகையாராகிய நாயனார், தாம் விருப்புடன் பாடி வந்த இனிய செந்தமிழ் வெண்பாவாகிய மென்மையான மலர் மாலையைச் சூட்டினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

அவ்வகையால் அருள்பெற்றங்கு
அமர்ந்துசில நாள்வைகி
இவ்வுலகில் தம்பெருமான்
கோயில்களெல் லாம்எய்திச்
செவ்வியஅன் பொடுபணிந்து
திருப்பணிஏற் றனசெய்தே
எவ்வுலகும் புகழ்ந்தேத்தும்
இன்தமிழ்வெண் பாமொழிந்தார். **#3793**

அவ்வகையில் அருளைப் பெற்று அப்பதியில் அமர்ந்து, சில நாள்கள் தங்கி, இவ்வுலகில் தம் பெருமானார் வீற்றிருந்தருளும் கோயில்கள் எல்லாவற்றிற்கும் சென்று, தம் ஒரு நெறிய மனம் கொண்ட அன்பினால் வணங்கி, ஏற்ற பிற திருப்பணி களையும் செய்து, எவ்வுலகும் புகழ்ந்து ஏத்தும் இனிய தமிழ் வெண்பாக்களைப் பாடி வழிபட்டார்.

விளக்கவுரை

இவர் அருளிய நூல் திருப்பதிக வெண்பாக்கள் க்ஷேத்திரத் திருவெண்பா என அழைக்கப் பெறுகிறது. அவ்வாறு அருளிய பாடல்கள் மிகப் பலவாய் இருத்தல் வேண்டும். எனினும் இது பொழுது *24* வெண்பாக்களே உள்ளன. அவற்றில் இருபத்திரண்டு பாடல்கள் இன்ன இன்ன திருப்பதியில் அருளப்பெற்றன எனத் தெரிகின்றது.
இருபாடல்கள் அருளப் பெற்ற இடம் தெரியாமையின் அவை *(10 , 23)* பொது எனக் கூறப் பெறுகின்றன.
அப்பதிகள் *1.* திருத்தில்லைச் சிற்றம்பலம் *2.* திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் *3.* திருஐயாறு *4.* திரு ஆரூர் *5.* திருத்துருத்தி *6.*திருக்கோடிகா *7.* திருவிடைவாய் *8.* திருநெடுங்களம் *9.* திருக்குழித் தண்டலை (திருக்கடம்பந்துறை*) 11.* திரு ஆனைக்கா *12.* திரு மயிலை *13.* திருஉஞ்சேனை மாகாளம் *14.* திருவளைகுளம் *15.* திருச்சாய்க்காடு *16.* திருப்பாச்சிலாச்சிராமம் *17.* திருச்சிராப்பள்ளி *18.*திருமழபாடி *19.* திருஆப்பாடி *20.* கச்சித் திருஏகம்பம் *21.*திருப்பனந்தாள் - தாடகையீச்சரம் *22.* திருஓற்றியூர். *24.* திருமயானம் (திருக்கடவூர் மயானம்*). 10, 23* ஆகிய இரு பாடல்களும் பொதுவெண்பாக்களாம்.

இந்நெறியால் அரனடியார்
இன்பமுற இசைந்தபணி
பன்னெடுநாள் ஆற்றியபின்
பரமர்திரு வடிநிழற்கீழ்
மன்னுசிவ லோகத்து
வழியன்பர் மருங்கணைந்தார்
கன்னிமதில் சூழ்காஞ்சிக்
காடவர் ஐடிகளார். **#3794**

பிறரால் வென்று அழிக்கப்படாத மதிலையுடைய காஞ்சி நகரில் அரசியற்றிய ஐயடிகள் காடவர்கோன், இந்நெறியினால் சிவனடியார்கள் இன்பம் அடையத் தமக்கு இயைந்த தொண்டுகளைப் பல காலமாகச் செய்திருந்து, பின்னர் இறைவரின் திருவடியின் கீழ்ச் சிவவுலகில் வழிவழியாக வாழ்ந்து வரும் அடியவர்களுடன் சேர்ந்தார்.

விளக்கவுரை

****

பையரவ மணியாரம்
அணிந்தார்க்குப் பாவணிந்த
ஐயடிகள் காடவனார்
அடியிணைத்தா மரைவணங்கிக்
கையணிமான் மழுவுடையார்
கழல்பணிசிந் தனையுடைய
செய்தவத்துக் கணம்புல்லர்
திருத்தொண்டு விரித்துரைப்பாம். **#3795**

நச்சுப் பையையுடைய பாம்பை மணி மாலையாய் அணிந்த இறைவற்கு வெண்பாப் பாடிச் சாத்திய ஐயடிகள் காடவர் கோன் நாயனாரின் திருவடிகளை வணங்கி, கையில் மழுவையுடைய இறைவரின் திருவடிகளைப் பணியும் சிந்தனையைச் செய்தவத்தால் பெற்றுவிளங்கும் கணம் புல்ல நாயனாரின் திருத்தொண்டினை இனி விரித்துச் சொல்வாம்.

விளக்கவுரை

****

உளத்திலொரு துளக்கம் இலோம்
உலகுய்ய இருண்ட திருக்
களத்து முது குன்றர்தரு
கனகம் ஆற்றினிலிட்டு
வளத்தின் மலிந்தேழ் உலகும்

வணங்குபெருந் திருவாரூர்க்
குளத்தில்எடுத் தார்வினையின்
குழிவாய்நின்று எனையெடுத்தார். #3796
உலகம் உய்யும் பொருட்டு நஞ்சு உண்டதால் கருமையுடைய கழுத்தையுடைய திருமுதுகுன்றவாணர் அளித்த பொன்னை மணிமுத்தாற்றில் இட்டுப்பின் வளத்தினால் மிக்க ஏழ் உலகங்களும் வணங்கும் பெரிய திருவாரூர்க் கமலாலயத் திருக்குளத்தில் எடுத்தருளியவரான நம்பியாரூரர், வினையான பெருங்குழியின் வாயினின்றும் எம்மை மேல் எடுத்தவர்; ஆதலால், உள்ளத்தில் யாம் சிறிதும் நடுக்கம் இல்லோம்.

விளக்கவுரை

வகைநூல் புகலூரில் பொன் பெற்றதும் நாட்டியத்தான் குடியில் எழுந்தருளியிருக்கும் இறைவனுக்கு நல்லவன் என்பதும் கூறி ஆரூரரை வணங்கிற்று. விரிநூல் திருமுதுகுன்றத்தில் ஆற்றிலிட்ட பொன்னைத் திருவாரூர்க் குளத்தில் எடுத்த நிகழ்ச்சியை உளங் கொண்டு போற்றிற்று. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் புராணம் முற்றிற்று.

கணம்புல்ல நாயனார் புராணம்

திருக்கிளர்சீர் மாடங்கள்
திருந்துபெருங் குடிநெருங்கிப்
பெருக்குவட வெள்ளாற்றுத்
தென்கரைப்பால் பிறங்குபொழில்
வருக்கைநெடுஞ் சுளைபொழிதேன்
மடுநிறைத்து வயல்விளைக்கும்
இருக்குவே ளூரென்ப
திவ்வுலகில் விளங்குபதி. **#3797**

செல்வம் பெருகும் சிறப்பையுடைய மாடங்களில், எங்கும் திருந்திய பண்புடைய பெருங்குடிகள் நெருங்கியிருப்பதும், வளம் பெருக்கும் வட வெள்ளாற்றின் தென்கரையில் அழகு பொருந் திய சோலைகளில் உள்ள பலாக் கனிகளினின்றும் வடிந்த தேன், நீர் மடுவினை நிறைத்தலால், வயல்களை விளையச் செய்து விளங்குவ தும் `இருக்குவேளூர்' என்ற பெயரைக் கொண்ட பதியாம்; அது இவ்வுலகத்தில் சிறந்து விளங்கும் பதியாகும்.

விளக்கவுரை

இருக்குவேளூர் - சேலம் மாவட்டம் ஆற்றூருக்கு வடக்கே *4* நாழிகை அளவில் பச்சை மலையின் வடசாரலில் உள்ளது. இதுபொழுது பேளூர் என வழங்குகிறது.

அப்பதியில் குடிமுதல்வர்க்
கதிபராய் அளவிறந்த
எப்பொருளும் முடிவறியா
எய்துபெருஞ் செல்வத்தார்
ஒப்பில்பெருங் குணத்தினால்
உலகின்மேற் படவெழுந்தார்
மெய்ப்பொருளா வனஈசர்
கழல்என்னும் விருப்புடையார். **#3798**

அந்நகரில் வாழும் குடித் தலைவர்களுக்கெல்லாம் தலைவராய், அளவில்லாத பொருள்கள் பலவும் நிறைந்து, அவற்றின் எல்லை காண இயலாதவாறு நிறைந்த பெருஞ்செல்வத்தை உடைய வராய், ஒப்பில்லாத பெருங்குணங்களால் உலகத்தில் மேன்மையுடன் வாழ்ந்து வருபவர். உண்மைப் பொருளாவன, இறைவரின் திருவடி களே ஆகும் எனும் மெய்ம்மையை அவர் உணர்ந்தவர்.

விளக்கவுரை

ஒவ்வொரு குடிக்கும் ஒவ்வொரு தலைவர் இருப்பர்.

அத்தலைவர்களுக்கெல்லாம் தலைவராய் விளங்குபவர் இவர் என்பார் `குடிமுதல்வர்' என்றார்.

தாவாத பெருஞ்செல்வம்
தலைநின்ற பயன்இதுவென்
றோவாத ஒளிவிளக்குச்
சிவன்கோயில் உள்ளெரித்து
நாவாரப் பரவுவார்
நல்குரவு வந்தெய்தத்
தேவாதி தேவர்பிரான்
திருத்தில்லை சென்றடைந்தார். **#3799**

பெருஞ் செல்வத்தால் பெறும் சிறந்த கெடாத பயன் இதுவே! எனும் உள்ளத்தராய், நீங்காது ஒளிதரும் விளக்குகளைச் சிவபெருமான் கோயிலுக்குள் ஏற்றி வைத்து, நாவாரப் போற்றுபவ ரான இந்நாயனார், வறுமை வந்து அடையவே, அந்த வறுமையுடன் இங்கு இருத்தல் தகாது என்று எண்ணித், தேவர்களுக்கெல்லாம் தலைவரான சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் தில்லையைச் சென்று சேர்ந்தார்.

விளக்கவுரை

****

தில்லைநகர் மணிமன்றுள்
ஆடுகின்ற சேவடிகள்
அல்கியஅன் புடன்இறைஞ்சி
அமர்கின்றார் புரமெரித்த
வில்லியார் திருப்புலீச்
சரத்தின்கண் விளக்கெரிக்க
இல்லிடையுள் ளனமாறி
எரித்துவரும் அந்நாளில். **#3800**

தில்லையம்பதியில் அழகிய அம்பலத்தில் ஆடும் சிவந்த திருவடிகளைப், பொருந்திய அன்புடன் வணங்கி, அங்கு விரும்பியிருப்பவரான நாயனார், முப்புரங்களையும் எரித்த வில்லை ஏந்திய இறைவரின் `திருப்புலீச்சரம்' என்னும் கோயிலில், விளக்கு எரிக்கும் பணி செய்வதற்குத் தம் இல்லத்தில் உள்ள பொருள்களை யெல்லாம் விற்று எரித்து வந்தார். அந்நாளில்,

விளக்கவுரை

தில்லையம்பதியில் அழகிய அம்பலத்தில் ஆடும் சிவந்த திருவடிகளைப், பொருந்திய அன்புடன் வணங்கி, அங்கு விரும்பியிருப்பவரான நாயனார், முப்புரங்களையும் எரித்த வில்லை ஏந்திய இறைவரின்

`திருப்புலீச்சரம்' என்னும் கோயிலில், விளக்கு எரிக்கும் பணி செய்வதற்குத் தம் இல்லத்தில் உள்ள பொருள்களை யெல்லாம் விற்று எரித்து வந்தார். அந்நாளில்,

ஆயசெயல் மாண்டதற்பின்
அயலவர்பால் இரப்பஞ்சிக்
காயமுயற் சியில்அரிந்த
கணம்புல்லுக் கொடுவந்து
மேய விலைக் குக்கொடுத்து
விலைப்பொருளால் நெய்மாறித்
தூயதிரு விளக்கெரித்தார்
துளக்கறுமெய்த் தொண்டனார். **#3801**

அத்தகைய செயலைச் செய்வதற்கும் மனையில் விற்றற்கென ஏதும் பொருள் இலதாக, மற்றவரிடம் இரந்து செய்தற்கு அஞ்சி, தம் உடலின் முயற்சியால் அரிந்த கணம்புல்லைத் தொகுத்து எடுத்துக் கொண்டுவந்து, கிடைத்த விலைக்கு விற்று, அதனால் பெற்ற பொருளால் நெய் வாங்கி, அசைவற்ற மெய்ம்மையான தொண்டினைச் செய்பவரான நாயனார், தூய விளக்கை ஏற்றி எரித்தார்.

விளக்கவுரை

கணம்புல் - இது புல்வகையைச் சார்ந்தது; மென்மை யானது. வீடுவேய்தற்கும் பயன்படுவது. மலைச் சாரலின் அருகே பெரிதும் வளர்வது. நாயனார் தோன்றிய இருக்குவேளூர் அருகே இப்புல் மிகுதியாய் இருக்க, வறுமையுற்ற நிலையில் அங்கு அதனை விற்று விளக்கு எரித்த நாயனார், தில்லைக்கு வந்த பின்னும் அதனைப் பயன்படுத்தி வரமுற்பட்டார். இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

இவ்வகையால் திருந்துவிளக்
கெரித்துவர அங்கொருநாள்
மெய்வருந்தி அரிந்தெடுத்துக்
கொடுவந்து விற்கும்புல்
எவ்விடத்தும் விலைபோகாது
ஒழியவும்அப் பணியொழியார்
அவ்வரிபுல் லினைமாட்டி
அணிவிளக்கா யிடஎரிப்பார். **#3802**

இவ்வாறு அந்நாயனார் ஒளிவிளங்குதற்குரிய விளக்கை எரித்து வர, ஒருநாள், உடல் வருந்தி அரிந்து எடுத்துக் கொண்டு வந்து விற்கின்ற புல் எங்கும் விலையாகாதவாறு கண்டும், விளக்குத் திருப்பணியைக் கைவிடாதவராய், அரிந்த அப்புல்லையே தீக்கொளுத்தி அழகிய விளக்கை எரிப்பவர் ஆனார்.

விளக்கவுரை

****

முன்புதிரு விளக்கெரிக்கும்
முறையாமங் குறையாமல்
மென்புல்லும் விளக்கெரிக்கப்
போதாமை மெய்யான
அன்புபுரி வார்அடுத்த
விளக்குத்தந் திருமுடியை
என்புருக மடுத்தெரித்தார்
இருவினையின் தொடக்கெரித்தார். **#3803**

இறைவரின் திருமுன்பு விளக்கு எரிக்கும் முறைப் படி தாம் கருதிய யாமங்களில் குறையாமல் விளக்கை எரிப்பதற்கு அப்புல் போதாமையால், மெய்ம்மை அன்பினால் திருத்தொண்டு செய்பவரான அந்நாயனார், அடுத்த விளக்காகத் தம் திருமுடியி னையே எலும்பும் கரைந்து உருகுமாறு தீயை மூட்டி எரித்தார். அதனால் இருவினைகளான தொடக்கை எரிப்பவர் ஆனார்.

விளக்கவுரை

`விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞான மாகும்' *(தி.4 ப.77 பா.3)* என்பதால், இத்திருத்தொண்டின் பயனாக ஞானமும், அதன் பயனாக வீடுபேறும் நாயனார் அடைதல் ஒருதலை ஆதலின், இங்குத் தம் முடியையே விளக்காக எரித்ததோடு, இரு வினைகளின் தொடக்கையும் எரித்தார் என்றார் ஆசிரியர்.

தங்கள்பிரான் திருவுள்ளம்
செய்துதலைத் திருவிளக்குப்
பொங்கியஅன் புடன்எரித்த
பொருவில்திருத் தொண்டருக்கு
மங்கலமாம் பெருங்கருணை
வைத்தருளச் சிவலோகத்
தெங்கள்பிரான் கணம்புல்லர்
இனிதிறைஞ்சி அமர்ந்திருந்தார். **#3804**

இப்பணியைத் தம் இறைவர் திருவுள்ளத்தில் ஏற்றுத் திருவிளக்கை மிக்க அன்புடன் எரித்த ஒப்பில்லாத தொண்டருக்கு, இறைவனார் நன்மை பெருகும் பெருங்கருணையினை வைத்தருளச், சிவலோகத்தில் எங்கள் பெருமானாரான கணம்புல்ல நாயனார் சேர்ந்து இனிதாக வணங்கி அங்கு அமர்ந்தருளினார்.

விளக்கவுரை

இப்பணியைத் தம் இறைவர் திருவுள்ளத்தில் ஏற்றுத் திருவிளக்கை மிக்க அன்புடன் எரித்த ஒப்பில்லாத தொண்டருக்கு, இறைவனார் நன்மை பெருகும் பெருங்கருணையினை வைத்தருளச், சிவலோகத்தில் எங்கள் பெருமானாரான கணம்புல்ல நாயனார் சேர்ந்து இனிதாக வணங்கி அங்கு அமர்ந்தருளினார்.

மூரியார் கலியுலகில்
முடியிட்ட திருவிளக்குப்
பேரியா றணிந்தாருக்
கெரித்தார்தங் கழல்பேணி
வேரியார் மலர்ச்சோலை
விளங்குதிருக் கடவூரில்
காரியார் தாஞ்செய்த
திருத்தொண்டு கட்டுரைப்பாம். **#3805**

வலிமை பொருந்திய கடல் சூழ்ந்த உலகத்தில், தம்முடியையே திருமுன்பு இடும் விளக்காகக், கங்கை எனும் பேராற்றை அணிந்த சிவபெருமானுக்கு எரித்த கணம்புல்ல நாயனாரின் திருவடிகளைப் போற்றித், தேன் பொருந்திய மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்து விளங்கும் `திருக்கடவூரில்' தோன்றி யருளிய `காரி நாயனார்' செய்த திருத்தொண்டினைச் சொல்வாம்.

விளக்கவுரை

மூரியார் கலி - வலிமை பொருந்திய கடல்; படைத்தும் காத்தும் அழித்தும் வரும் வலிமை. முந்நீர் என அழைக்கப்பெறுதலும் காண்க.
கணம்புல்ல நாயனார் புராணம் முற்றிற்று.

காரி நாயனார் புராணம்

மறையாளர் திருக்கடவூர்
வந்துதித்து வண்தமிழின்
துறையான பயன்தெரிந்து
சொல்விளங்கிப் பொருள்மறையக்
குறையாத தமிழ்க்கோவை
தம்பெயரால் குலவும்வகை
முறையாலே தொகுத்தமைத்து
மூவேந்தர் பால்பயில்வார். **#3806**

மறையவர் மிக்கு வாழ்கின்ற திருக்கடவூரில் வந்து தோன்றி, வளம் பலவும் நிறைந்த தமிழின் இனிய துறைகளின் பயனைத் தெரிந்து, சொல் விளங்க அதன் உட்கிடையான பொருளா னது மறைந்து நிற்குமாறு, குறைவற்ற தமிழ்க் கோவையைத் தம் பெயரால் விளங்குமாறு முறைப்படத் தொகுத்து இயற்றித் தமிழ்கூறும் நல்லுலகத்தவரான மூவேந்தரிடத்தும் பழகிய நட்பினராய்,

விளக்கவுரை

தமிழில் உள்ள துறைகள் பலவேனும் அவை அகம் புறம் எனும் இரண்டினுள் அடங்கும். கோவை என்பது அகப்பொருள் பற்றியதாகும். இந்நூல் இன்று கிடைத்திலது.

தம் பெயரால் கோவையை இயற்றினார் என்ற ஆசிரியர், அவர் பெயர் காரி என்பதை ஐந்தாம் பாடலிலேயே குறித் தருளுகின்றார். காரி - கருமை நிறம் பொருந்தி நஞ்சு. அதனை உண்டமையால் சிவபெருமான் காரி என்றும் அழைக்கப் பெற்றார். `காரி உண்டிக் கடவுள திருக்கையும்' *(மலைபடு. - 83)* என வருவதால் இவ்வுண்மை அறியலாம். இதனால் இப்பெயர் இறைவரின் பெய ரென அறியலாம். காரி - மேகம் எனப் பொருள் கொண்டு, இந்நாயனார் அடியவர்களுக்கு வேண்டியவாறு கொடுத்தும், திருக்கோயில் திருப்பணிகள் பல செய்தும், கோவை எனும் அரிய நூலை வழங்கியும் உலகிற்கு உதவியமை பற்றி இப்பெயர் பெற்றார் என்றலும் ஒன்று.

அங்கவர்தாம் மகிழும்வகை
அடுத்தவுரை நயமாக்கிக்
கொங்கலர்தார் மன்னவர்பால்
பெற்றநிதிக் குவைகொண்டு
வெங்கண்அரா வொடுகிடந்து
விளங்கும்இளம் பிறைச்சென்னிச்
சங்கரனார் இனிதமரும்

தானங்கள் பலசமைத்தார். #3807

அம்மூவேந்தர்களிடத்தும் மனம் மகிழுமாறு தாங்கருதிய பொருட்கு ஏற்ற சொற்களை நயம் பெறக் கூறி, நறுமணம் மிக்க பூமாலைகளை அணிந்திருக்கும் மன்னர்களிடம் பெற்ற செல்வக் குவியலைக் கொண்டு, கொடிய கண்ணையுடைய பாம்புடனே இயைந்து விளங்கும் பிறைச் சந்திரனை அணிந்த சடையையுடைய சிவபெருமான் இனிதாக வீற்றிருக்கும் திருக்கோயில்கள் பலவற்றை அமைத்தார்.

விளக்கவுரை

இவர் அமைத்த திருக்கோயில்கள் பற்றிய விவரம் ஏதும் இது பொழுது தெரிந்திலது.

யாவர்க்கும் மனமுவக்கும்
இன்பமொழிப் பயனியம்பித்
தேவர்க்கு முதல்தேவர்
சீரடியார் எல்லார்க்கும்
மேவுற்ற இருநிதியம்
மிகஅளித்து விடையவர்தம்
காவுற்ற திருக்கயிலை
மறவாத கருத்தினராய். #3808

யாவர்க்கும் மனம் மகிழும் படியான இன்பம் தரும் சொற்பயன்களையே கூறித், தேவர்களுக்கெல்லாம் தேவரான சிவ பெருமானின் சிறப்புடைய அடியார்கள் எல்லார்க்கும் அவர் விரும்புமாறு பெரும் பொருள்களை மிகவும் அளித்து, ஆனேற்று ஊர்தியையுடைய இறைவரின் சோலைகளையுடைய திருக்கயிலா யத்தை எப்போதும் மறவாத எண்ணமுடையவராகி,

விளக்கவுரை

இம் மூன்று பாடல்களாலும் நாயனார் புலவர்க்குப் புலவராயும், தொண்டர்க்குத் தொண்டராயும், திருப்பணிச் செல்வர்க் குத் திருப்பணிச் செல்வராயும் இருந்தமை விளங்குகின்றது.

ஏய்ந்தகடல் சூழுலகில்
எங்குந்தம் இசைநிறுத்தி
ஆய்ந்தவுணர்வு இடையறா
அன்பினராய் அணிகங்கை
தோய்ந்தநெடுஞ் சடையார்தம்
அருள்பெற்ற தொடர்பினால்
வாய்ந்தமனம் போல்உடம்பும்
வடகயிலை மலைசேர்ந்தார். #3809

பொருந்திய கடல் சூழ்ந்த உலகத்தில் எல்லா இடங்களிலும் தம் புகழினை நிலை நிறுத்தி, ஆராய்ந்து தெளிந்த உணர்விலே இடையறாத அன்பு உடையவராய் இருந்து, அழகிய கங்கையாறு பொருந்திய நீண்ட சடையையுடைய இறைவரின் அருளைப் பெற்ற தொடர்பினால், அப்பெருமானைப் பொருந்திய மனத்தால் சேர்ந்தது போலவே, உடலாலும் வடகயிலை மலையைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வேரியார் மலர்க்கொன்றை
வேணியார் அடிபேணும்
காரியார் கழல்வணங்கி
அவரளித்த கருணையினால்
வாரியார் மதயானை
வழுதியர்தம் மதிமரபில்
சீரியார் நெடுமாறர்
திருத்தொண்டு செப்புவாம். **#3810**

தேன் பொருந்திய மலர்க்கொன்றையை அணிந்த சடையையுடைய இறைவரின் திருவடியைப் பேணும் காரி நாயனா ரின் அடிகளை வணங்கிக் கடல் போல் நிறைந்து வழியும் மதம் பொருந்திய யானைப் படையையுடைய பாண்டியர்களுக்குரிய சந்திர மரபில் தோன்றிய `நின்றசீர் நெடுமாற நாயனாரின்' திருத்தொண்டி னைக் கூறுவாம்.

விளக்கவுரை

வேரி - தேன். காரி நாயனார் புராணம் முற்றிற்று.

நின்றசீர்நெடுமாற நாயனார் புராணம்

தடுமாறும் நெறியதனைத்
தவம்என்று தம்முடலை
அடுமாறு செய்தொழுகும்
அமண்வலையில் அகப்பட்டு
விடுமாறு தமிழ்விரகர்
வினைமாறுங் கழலடைந்த
நெடுமாற னார்பெருமை
உலகேழும் நிகழ்ந்ததால். **#3811**

தடுமாற்றத்தை உண்டாக்கும் குற்றமுடைய நெறி யையே தவம் என்று கொண்டு, தம் உடம்பை வருத்தும் செயல்களைச் செய்து, தீ நெறி ஒழுகும் சமணரின் சூழ்ச்சிக்குள் அகப்பட்டு, அதனின்றும் விடும்படி, தமிழ் வல்லுநரான திருஞானசம்பந்தரின், வினையகற்றிப் பிறவி அறுக்கும், திருவடிகளை அடைந்த நெடுமாற னாரின் பெருமை, ஏழ் உலகங்களிலும் நிறைந்து விளங்குவதாம்.

விளக்கவுரை

ஆல் - அசைநிலை.

அந்நாளில் ஆளுடைய
பிள்ளையார் அருளாலே
தென்னாடு சிவம்பெருகச்
செங்கோலுய்த்து அறம்அளித்துச்
சொல்நாம நெறிபோற்றிச்
சுரர்நகர்க்கோன் தனைக்கொண்ட
பொன்னார மணிமார்பில்
புரவலனார் பொலிகின்றார். **#3812**

அக்காலத்தில் ஆளுடைய பிள்ளையாரின் திருவருளால், பாண்டி நாட்டில் சைவத்திறம் பெருகச், செங்கோல் செலுத்தி, அறநெறி வழுவாது காத்தும், புகழ்ந்து சொல்லப்படுகின்ற சிவபெருமானின் திருப்பெயராய திருவைந்தெழுத்தின் நெறியான சைவ நெறியைக் காத்தும், இந்திரனிடத்துக் கொண்ட பொன் மாலை சூடிய அப்பாண்டியர் விளங்குவாராகி,

விளக்கவுரை

சுரர்நகர்க்கோன் - இந்திரன். தமிழகத்தில் மழை பெய்யா திருக்க, அகத்திய முனிவரின் அறவுரைப்படி சோமவாரம் விரதம் இருந்து புண்ணியம் பெற்ற உக்கிரகுமார பாண்டியர், ஏனைய, சேர, சோழ, மன்னர்களோடு மழை வேண்டி, இந்திரனிடம் சென்றனர். அவன்

காட்டிய இருக்கைகளில் சேர, சோழ மன்னர்கள் அமர, பாண்டியர் மட்டும் இந்திரனோடு ஒப்ப இருந்த இருக்கையில் அமர்ந் தனர். அது கண்ட இந்திரன், பொறானாய் அதனை வெளிப்படுத்தாது, எவரும் தாங்கற்கரிய ஒரு பெருமாலையை அப் பாண்டியருக்கு அணிவிக்க, அவரும் அதனை மகிழ்வுடன் ஏற்றனர் என்பது வரலாறு. இவ்வரிய செயற்கு உரியவர், இவ்வரலாற்றுக்குரிய நெடுமாறனா ருக்கு முன்னோரான உக்கிரகுமார பாண்டியர் ஆவர்.

ஆயஅர சளிப்பார்பால்
அமர்வேண்டி வந்தேற்ற
சேயபுலத் தெவ்வரெதிர்
நெல்வேலிச் செருக்களத்துப்
பாயபடைக் கடல்முடுகும்
பரிமாவின் பெருவெள்ளம்
காயுமதக் களிற்றினிரை
பரப்பியமர் கடக்கின்றார். **#3813**

சுரர்நகர்க்கோன் - இந்திரன். தமிழகத்தில் மழை பெய்யா திருக்க, அகத்திய முனிவரின் அறவுரைப்படி சோமவாரம் விரதம் இருந்து புண்ணியம் பெற்ற உக்கிரகுமார பாண்டியர், ஏனைய, சேர, சோழ, மன்னர்களோடு மழை வேண்டி, இந்திரனிடம் சென்றனர். அவன் காட்டிய இருக்கைகளில் சேர, சோழ மன்னர்கள் அமர, பாண்டியர் மட்டும் இந்திரனோடு ஒப்ப இருந்த இருக்கையில் அமர்ந் தனர். அது கண்ட இந்திரன், பொறானாய் அதனை வெளிப்படுத்தாது, எவரும் தாங்கற்கரிய ஒரு பெருமாலையை அப் பாண்டியருக்கு அணிவிக்க, அவரும் அதனை மகிழ்வுடன் ஏற்றனர் என்பது வரலாறு. இவ்வரிய செயற்கு உரியவர், இவ்வரலாற்றுக்குரிய நெடுமாறனா ருக்கு முன்னோரான உக்கிரகுமார பாண்டியர் ஆவர்.

விளக்கவுரை

இப்பாடல் முதல் *5* பாடல்கள் வரை இப்பாண்டியர் பெற்ற வெற்றிச் சிறப்புக் கூறப் பெறுகின்றது. இப்பாண்டியரின் பெயர் மாறவர்மன் அரிகேசரி என்றும் இவர், சேரர்களையும் குறுநில மன்னர்கள் சிலரையும், பாழி, நெல்வேலி, செந்நிலம் முதலான இடங்களில் வென்றனர் என்னும் வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன. இவ்வெற்றிகளை இறையனார் அகப்பொருளில் உள்ள மேற்கோள் பாடல்களும் *(22, 106, 235, 309)* குறிக்கும். இவற்றுள் நெல்வேலிப் போர்வெற்றியை, `நிறைக் கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன்' எனத் தொகை நூலும் வகை நூலும் குறித்துப் பாராட்டியுள்ளமை அறியத்தக்கதாம். இப்போர் சாளுக்கிய

மன்னனாகிய விக்கிரமாதித்தனுக்கும் இவருக்கும் நடந்த பெரும் போர் என்றும், நெல்வேலி வரை வந்த விக்கிரமாதித்தனைக் கடும்போரால் இவர் வென்றமை பற்றியே சுந்தரர் இதனைச் சிறப்பிப் பாராயினர் என்றும் வரலாற்றாசிரியர்கள் கூறுவர். *(பல்லவர் வரலாறு பக். 140.)*

எடுத்துடன்ற முனைஞாட்பின்
இருபடையிற் பொருபடைஞர்
படுத்தநெடுங் கரித்துணியும்
பாய்மாவின் அறுகுறையும்
அடுத்தமர்செய் வயவர்கருந்
தலைமலையும் அலைசெந்நீர்
மடுத்தகடல் மீளவுந்தாம்
வடிவேல்வாங் கிடப்பெருக. **#3814**

படைகொண்டு போரிட்ட போர்க்களத்தில் இரு பக்கத்துப் படை வீரர்களும், வீழ்த்திய பெரிய யானைகளின் உடல் துண்டங்களும், குதிரைகளின் உடல் துண்டங்களும், எதிர்த்துப் போர் செய்யும் படை வீரர்களின் கரிய தலையாகிய மலைகளும் என்ற இவற்றினின்றும் வரும் குருதியின் பெருக்குக் கலக்கப் பெற்ற கட லானது, முற்காலத்தில் உக்கிரகுமார பாண்டியர் கடல் சுவறவேல் வாங்கியதைப் போல் மீண்டும் இவர் வேல் வாங்கும் படிபெருக,

விளக்கவுரை

முனைஞாட்பு - போர்க்களம்; இரு பெயரொட்டு. அறுகுறை - உடலினின்றும் அறுபட்ட துண்டங்கள். பெருகிவந்த கடல் சுவற வேல்விட்ட பெரியவர் உக்கிரகுமார பாண்டியர் ஆவர். இவ் வரலாறு திருவிளையாடற் புராணத்துக் காணப்படுவதாம்.

வயப்பரியின் களிப்பொலியும்
மறவர்படைக் கலஒலியும்
கயப்பொருப்பின் முழக்கொலியும்
கலந்தெழுபல் லியஒலியும்
வியக்குமுகக் கடைநாளின்
மேகமுழக் கெனமீளச்
சயத்தொடர்வல் லியுமின்று
தாம்விடுக்கும் படிதயங்க. **#3815**

வலிமை பொருந்திய குதிரைகளின் களிப்பால் உண்டாகும் ஒலியும், வீரர்தம் படைகளின் ஒலியும், யானைகளான மலைகளின் பிளிற்று ஒலியும், `பல இயங்களின் ஒலியும், வியக்கத் தக்க ஊழியின் முடிவுக் காலத்தில் பெருகும் மேகங்களின் ஒலியே எனச் சிந்தித்து, முன்பு உக்கிரகுமார பாண்டியர் விட்டது போல் வீரத் தொடர்பையுடைய

விளங்கின திரும்பவும் இன்று தாம் விடுக்கும் படி ஒலிக்க,

விளக்கவுரை

சயத்தொடர் வல்லி - வெற்றியினால் பகைவரைப் பிணிக்கும் விலங்கு.

தீயுமிழும் படைவழங்கும்
செருக்களத்து முருக்குமுடல்
தோயுநெடுங் குருதிமடுக்
குளித்துநிணந் துய்த்தாடிப்
போயபரு வம்பணிகொள்
பூதங்க ளேயன்றிப்
பேயும்அரும் பணிசெய்ய
உணவளித்த தெனப்பிறங்க. **#3816**

தீயை உமிழும் படைகளை வீசியும் எறிந்தும் போர் செய்யும் களத்தில், வெட்டுப்பட்ட உடல்கள் தோய்ந்து கிடக்கும் குருதி நிறைந்த மடுவில் குளித்துப் பிணங்களை உண்டு கூத்தாடி முன் நாளில் ஏவல் கொண்ட பூதங்களே அல்லாது, பேயும் அரிய பணி செய்யும் படி அவற்றுக்கு உணவு அளித்ததாகும் எனக் கூறும்படி விளங்க,

விளக்கவுரை

திருநெல்வேலிப் போரில் வடவரசர் தம் வெற்றி மேலோங்கக் கண்டு, பாண்டியன் சிவபெருமானை நினைய, நெல்லை யப்பர் ஆணையால் சிவபூதகணங்கள் வந்து அவர்களை அழித்தன என்பது தலவரலாறு. அதனை நினைவு கூர்ந்தவாறு இப்பாடல் அமைகின்றது.

இனையகடுஞ் சமர்விளைய
இகலுழந்த பறந்தலையில்
பனைநெடுங்கை மதயானைப்
பஞ்சவனார் படைக்குடைந்து
முனையழிந்த வடபுலத்து
முதன்மன்னர் படைசரியப்
புனையுநறுந் தொடைவாகை
பூழியர்வேம் புடன்புனைந்து. **#3817**

இத்தகைய கொடிய போர் மூளும்படி பொருந்திய போர்க்களத்தில், பனைபோல் நீண்ட துதிக்கையையுடைய மத யானைகளையுடைய பாண்டியரின் படைகளுக்குத் தோற்றுப் போரில் அழிந்த தலைமையையுடைய வடநாட்டு அரசரின் படைகள் சிதைந்து ஓடிப்போக, வெற்றி பெற்ற முறையில், அணியும் மணமுடைய வாகை மாலையைப் பாண்டியர்க்குரிய வேம்பு மாலையுடனே அணிந்து.

விளக்கவுரை

****

வளவர்பிரான் திருமகளார்
மங்கையருக் கரசியார்
களபமணி முலைதிளைக்குந்
தடமார்பிற் கவுரியனார்
இளஅரவெண் பிறையணிந்தார்க்
கேற்றதிருத் தொண்டெல்லாம்
அளவில்புகழ் பெறவிளக்கி
அருள்பெருக அரசளித்தார். **#3818**

சோழ மன்னரின் மகளாரான மங்கையர்க்கரசி யாரின் கலவைச் சாந்து அணிந்த கொங்கைகள் மூழ்கப் பெற்ற அகன்ற மார்பையுடைய பாண்டியரான `நின்றசீர்நெடுமாறனார்' இளைய பாம்பையும் வெண்மையான பிறையையும் சூடிய சிவபெருமானுக்கு, ஏற்ற திருத்தொண்டுகளை எல்லாம் அளவில்லாத புகழ் பெரும்படிச் செய்து, சிவனருள் பெருகுமாறு ஆட்சி செய்தார்.

விளக்கவுரை

இவ்வேழு பாடல்களும் ஒரு முடிபின.

திரைசெய்கட லுலகின்கண்
திருநீற்றின் நெறிவிளங்க
உரைசெய்பெரும் புகழ்விளக்கி
ஓங்குநெடு மாறனார்
அரசுரிமை நெடுங்காலம்
அளித்திறைவர் அருளாலே
பரசுபெருஞ் சிவலோகத்
தின்புற்றுப் பணிந்திருந்தார். **#3819**

அலைகளையுடைய கடல் சூழ்ந்த உலகில், திருநீற்று நெறியான சிவநெறி விளக்கம் பெறுமாறு சான்றோர்களால் எடுத்துச் சொல்லப்படுகின்ற பெரும் புகழ் விளங்க வைத்ததால், மேன்மை யுடைய நின்றசீர் நெடுமாறனார், நீண்ட காலம் ஆட்சி செய்திருந்து, சிவபெருமானின் திருவருளால் எல்லோராலும் போற்றப்படுகின்ற பெருமையுடைய சிவலோகத்தைச் சேர்ந்து, இன்பம் பொருந்தப் பணிந்து அமர்ந்திருந்தார்.

விளக்கவுரை

****

பொன்மதில்சூழ் புகலிகா
வலர்அடிக்கீழ்ப் புனிதராம்

தென்மதுரை மாறனார்
செங்கமலக் கழல்வணங்கிப்
பன்மணிகள் திரையோதம்
பரப்புநெடுங் கடற்பரப்பைத்
தொன்மயிலை வாயிலார்
திருத்தொண்டின் நிலைதொழுவாம். #3820
அலைகளையுடைய கடல் சூழ்ந்த உலகில், திருநீற்று நெறியான சிவநெறி விளக்கம் பெறுமாறு சான்றோர்களால் எடுத்துச் சொல்லப்படுகின்ற பெரும் புகழ் விளங்க வைத்ததால், மேன்மை யுடைய நின்றசீர் நெடுமாறனார், நீண்ட காலம் ஆட்சி செய்திருந்து, சிவபெருமானின் திருவருளால் எல்லோராலும் போற்றப்படுகின்ற பெருமையுடைய சிவலோகத்தைச் சேர்ந்து, இன்பம் பொருந்தப் பணிந்து அமர்ந்திருந்தார்.

விளக்கவுரை

அலைகளையுடைய கடல் சூழ்ந்த உலகில், திருநீற்று நெறியான சிவநெறி விளக்கம் பெறுமாறு சான்றோர்களால் எடுத்துச் சொல்லப்படுகின்ற பெரும் புகழ் விளங்க வைத்ததால், மேன்மை யுடைய நின்றசீர் நெடுமாறனார், நீண்ட காலம் ஆட்சி செய்திருந்து, சிவபெருமானின் திருவருளால் எல்லோராலும் போற்றப்படுகின்ற பெருமையுடைய சிவலோகத்தைச் சேர்ந்து, இன்பம் பொருந்தப் பணிந்து அமர்ந்திருந்தார்.

வாயிலார் நாயனார் புராணம்

சொல்வி ளங்குசீர்த் தொண்டைநன் னாட்டிடை
மல்லல் நீடிய வாய்மை வளம்பதி
பல்பெ ருங்குடி நீடு பரம்பரைச்
செல்வம் மல்கு திருமயி லாபுரி. **#3821**

புகழ் விளங்கும் சிறப்புடைய தொண்டை நன்னாட் டில், வளமை மிக்க வாய்மையால் சிறந்த வளமுடைய பதியாக விளங் குவது, பற்பல பெருங்குடி மக்களும் வழிவழியாகத் தொடர்ந்து வதிந்து வரும் செல்வம் நிறைந்த திருமயிலாபுரியாகும்.

விளக்கவுரை

சொல் - புகழ். மயிலாபுரி - மயில்களின் ஒலி மிக்க ஊர் ஆதலின் இப்பெயர் பெற்றது. மயில் ஆர்ப்பு ஊர் - மயிலாப்பூர் என்றாயிற்று. நாவரசர் திருவாக்கில் `மயிலாப்பு' என்றும், ஞானசம் பந்தர் திருவாக்கில் `மயிலை' என்றும் சுருங்க அழைக்கப்பெற்றுள்ளது. இத்திருநகர் இன்று சென்னைக் கடற்கரையில் திருவொற்றியூருக்கும் திருவான்மியூருக்கும் நடுவாக விளங்குகின்றது.

நீடு வேலைதன் பால்நிதி வைத்திடத்
தேடும் அப்பெருஞ் சேமவைப் பாமென
ஆடு பூங்கொடி மாளிகை யப்பதி
மாடு தள்ளு மரக்கலச் செப்பினால். **#3822**

பெருங்கடல், தன்னிடம் உள்ள மணிமுதலான நிதிகளைத் தேடிவைப்பதற்குரிய பண்டாரம் இதுவாகும் எனக் கூறு மாறு, அழகிய ஆடும் கொடிகளையுடைய அந்நகரத்தின் பக்கங்கள் எல்லாம் மரக்கலங்களாகிய சிமிழினால் தள்ளும்,

விளக்கவுரை

சேம வைப்பு - வேண்டும் பொழுது எடுத்துக் கொள் ளுதற்குரிய பொருள் வைப்பிடம். மணி முதலாயினவும், நீர்வாழ் உயிரினங்கள் பலவும் பல்கி இருத்தலினாலும், நாளும் பல்வேறு நாடுகளிலிருந்து பல்வேறு பொருள்கள் கப்பல் வழிவந்து கொண்டு இருத்தலாலும் கடலைப் பெரு நிதி உடையதாகக் கூறினார். செப்பு - சிமிழ்; மணிமுதலிய பொருள்களைச் சிமிழில் வைப்பர். அது பற்றி மரக்கலங்களைச் செப்பு (சிமிழ்) என்றார். கடல் இந்நாட்டைத் தனக்குரிய பொருள்களின் வைப்பிடமாகக் கருதி, பல்பொருள்களை யும் மரக்கலங்களின் வழித்தள்ளும் என்பது கருத்து.

கலஞ்சொ ரிந்த கரிக்கருங் கன்றும்முத்
தலம்பு முந்நீர் படிந்தணை மேகமும்

நலங்கொள் மேதிநன் னாகுந் தெரிக்கொணா
சிலம்பு தெண்டிரைக் கானலின் சேணெலாம். **#3823**

சேம வைப்பு - வேண்டும் பொழுது எடுத்துக் கொள் ளுதற்குரிய பொருள் வைப்பிடம். மணி முதலாயினவும், நீர்வாழ் உயிரினங்கள் பலவும் பல்கி இருத்தலினாலும், நாளும் பல்வேறு நாடுகளிலிருந்து பல்வேறு பொருள்கள் கப்பல் வழிவந்து கொண்டு இருத்தலாலும் கடலைப் பெரு நிதி உடையதாகக் கூறினார். செப்பு - சிமிழ்; மணிமுதலிய பொருள்களைச் சிமிழில் வைப்பர். அது பற்றி மரக்கலங்களைச் செப்பு (சிமிழ்) என்றார். கடல் இந்நாட்டைத் தனக்குரிய பொருள்களின் வைப்பிடமாகக் கருதி, பல்பொருள்களை யும் மரக்கலங்களின் வழித்தள்ளும் என்பது கருத்து.

விளக்கவுரை

முத்தலம்பு முந்நீர் - தன்பால் உள்ள முத்துக்களைக் கொழித்துக் கரைக்கண் சேர்க்கும் கடல். கடலிடத்துக் காணும் சிப்பி களில், மழை பொழிவதால், தோன்றும் மணிகளும் உளவாதலின் முத்தலம்பு .. மேகமும் எனக் கூட்டி உரைத்தலும் ஒன்று. நாகு - பெண் கன்று (நாம்பன் - ஆண் கன்றுக்கு வருவது போல).

தவள மாளிகைச் சாலை மருங்கிறைத்
துவள்ப தாகை நுழைந்துஅணை தூமதி
பவள வாய்மட வார்முகம் பார்த்தஞ்சி
உவள கஞ்சேர்ந் தொதுங்குவ தொக்குமால். **#3824**

வெண்ணிறமுடைய மாளிகைகளையுடைய வீதிக ளின் பக்கங்களில் உள்ள இறப்புக்களில், அசையும் கொடிகளின் வரிசையுள் நுழைந்து சேர்கின்ற தூய்மையான வெண்மை நிறமுடைய மதி, பவளம் போன்ற வாயையுடைய பெண்களின் முகங்களைப் பார்த்து அஞ்சி மறைவிடத்தைச் சேர்ந்து ஒதுங்குவது போல் விளங்கும்.

விளக்கவுரை

வெண்ணிறமுடைய மாளிகைகளையுடைய வீதிக ளின் பக்கங்களில் உள்ள இறப்புக்களில், அசையும் கொடிகளின் வரிசையுள் நுழைந்து சேர்கின்ற தூய்மையான வெண்மை நிறமுடைய மதி, பவளம் போன்ற வாயையுடைய பெண்களின் முகங்களைப் பார்த்து அஞ்சி மறைவிடத்தைச் சேர்ந்து ஒதுங்குவது போல் விளங்கும்.

வீதியெங்கும் விழாவணி காளையர்
தூதுஇ யங்குஞ் சுரும்பணி தோகையர்
ஓதி யெங்கும் ஒழியா அணிநிதி
பூதி யெங்கும் புனைமணி மாடங்கள். **#3825**

தெருக்கள் எங்கும் திருவிழாக்களின் அழகு மேம்பாடுகள் விளங்கும். பருவம் வாய்ந்த இளைஞர்களின் தூதாக இயங்குவன போல் வண்டுகள் பெண்களின் கூந்தல்கள் எங்கும் விளங்கும். சுண்ணச் சாந்து பூசி ஒப்பனை செய்யப்பட்ட மாடங்கள் எங்கும், அழகிய நிதிகளும் அணிகளும் நீங்காமல் விளங்கும்.

விளக்கவுரை

தெருக்கள் எங்கும் திருவிழாக்களின் அழகு மேம்பாடுகள் விளங்கும். பருவம் வாய்ந்த இளைஞர்களின் தூதாக இயங்குவன போல் வண்டுகள் பெண்களின் கூந்தல்கள் எங்கும் விளங்கும். சுண்ணச் சாந்து பூசி ஒப்பனை செய்யப்பட்ட மாடங்கள் எங்கும், அழகிய நிதிகளும் அணிகளும் நீங்காமல் விளங்கும்.

மன்னு சீர்மயி லைத்திரு மாநகர்த்
தொன்மை நீடிய சூத்திரத் தொல்குலம்
நன்மை சான்ற நலம்பெறத் தோன்றினார்
தன்மை வாயிலார் என்னுந் தபோதனர். **#3826**

நிலை பெற்ற சிறப்புடைய திருமயிலாபுரி என்னும் பெரு நகரத்தில், இத்தகைய பழைமையால் நீண்ட சூத்திரர் என்னும் வேளாளரின் பழங்குலமானது, நன்மைகள் எல்லாவற்றுள்ளும் சிறந்த நன்மை அடையுமாறு, உயர்ந்த சீலமும் புண்ணியமும் உடைய வாயி லார் என்னும் பெயரையுடைய தவப் பேற்றினர் வந்து தோன்றினார்.

விளக்கவுரை

சூத்திரர் என்பது பற்றி முன் *440*ஆவது பாடலில் கூறப்பட்டதை ஈண்டும் கடைப்பிடிக்க. நன்மைகள் எல்லாவற்றுள் ளும் சிறந்த நன்மை வீடுபேறாம். அதனை வழங்குவதற்குரியவனும் உடையவனும் இறைவன் ஒருவனே ஆவன். அப்பெருமானை அடைதற்குரிய சீலமும் புண்ணியமும் உடையவர் வாயிலார் என்பதாம். தபோதனர் - தவத்தையே செல்வமாக உடையவர்.

வாயி லாரென நீடிய மாக்குடித்
தூய மாமர பின்முதல் தோன்றியே
நாய னார்திருத் தொண்டில் நயப்புறு
மேய காதல் விருப்பின் விளங்குவார். **#3827**

சூத்திரர் என்பது பற்றி முன் 440ஆவது பாடலில் கூறப்பட்டதை ஈண்டும் கடைப்பிடிக்க. நன்மைகள் எல்லாவற்றுள் ளும் சிறந்த நன்மை வீடுபேறாம். அதனை வழங்குவதற்குரியவனும் உடையவனும் இறைவன் ஒருவனே ஆவன். அப்பெருமானை அடைதற்குரிய சீலமும் புண்ணியமும் உடையவர் வாயிலார் என்பதாம். தபோதனர் -

தவத்தையே செல்வமாக உடையவர்.

விளக்கவுரை

****

மறவாமை யால்அமைத்த
மனக்கோயில் உள்ளிருத்தி
உறவாதி தனையுணரும்
ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம்
எனுந்திருமஞ் சனமாட்டி
அறவாணர்க் கன்பென்னும்
அமுதமைத்துஅர்ச் சனைசெய்வார். **#3828**

இறைவரை, மறவாமை எனும் கருவினால் அமைத்த மனமான கோயிலுள் எழுந்தருளச் செய்து, நிலை பெறுமாறு இருத்தி, அவ்விடத்திலேயே பொருந்துமாறு அப்பெருமானை உணரும் ஞானம் என்கின்ற ஒளிவீசும் சுடர் விளக்கை ஏற்றி, அழிவற்ற பேரானந்தமான நீரினால் திருமஞ்சன மாட்டி, அறவாணனக்கு அன்பு என்னும் அமுதை அமைத்து வழிபடுவாராய்.

விளக்கவுரை

இறைவரை, மறவாமை எனும் கருவினால் அமைத்த மனமான கோயிலுள் எழுந்தருளச் செய்து, நிலை பெறுமாறு இருத்தி, அவ்விடத்திலேயே பொருந்துமாறு அப்பெருமானை உணரும் ஞானம் என்கின்ற ஒளிவீசும் சுடர் விளக்கை ஏற்றி, அழிவற்ற பேரானந்தமான நீரினால் திருமஞ்சன மாட்டி, அறவாணனக்கு அன்பு என்னும் அமுதை அமைத்து வழிபடுவாராய்.

அகமலர்ந்த அர்ச்சனையில்
அண்ணலார் தமைநாளும்
நிகழவரும் அன்பினால்
நிறைவழிபா டொழியாமே
திகழநெடு நாட்செய்து
சிவபெருமான் அடிநிழற்கீழ்ப்
புகலமைத்துத் தொழுதிருந்தார்
புண்ணியமெய்த் தொண்டனார். **#3829**

இறைவரை, மறவாமை எனும் கருவினால் அமைத்த மனமான கோயிலுள் எழுந்தருளச் செய்து, நிலை பெறுமாறு இருத்தி, அவ்விடத்திலேயே பொருந்துமாறு அப்பெருமானை உணரும் ஞானம் என்கின்ற ஒளிவீசும் சுடர் விளக்கை ஏற்றி, அழிவற்ற பேரானந்தமான

நீரினால் திருமஞ்சன மாட்டி, அறவாணனக்கு அன்பு என்னும் அமுதை அமைத்து வழிபடுவாராய்.

விளக்கவுரை

`சிவனடியைச் சேரும் முத்தி செப்புவதிங்குயாமே' என்பதால் வீடுபேறு அடைந்தார் என்பது கருத்து.

நீராருஞ் சடையாரை
நீடுமன ஆலயத்துள்
ஆராத அன்பினால்
அருச்சனைசெய் தடியவர்பால்
பேராத நெறிபெற்ற
பெருந்தகையார் தமைப்போற்றிச்
சீராருந் திருநீடூர்
முனையடுவார் திறம்உரைப்பாம். **#3830**

கங்கை பொருந்திய சடையையுடைய சிவபெருமா னைத் தம் நீடிய மனக் கோயிலில் நிறுவி, மிகுந்த அன்புடன் வழிபட்டு, அடியவர்களுடன் இருந்து, நீங்காத வீட்டு நெறியினைப் பெற்ற பெருந்தகையாரான வாயிலார் நாயனாரைப் போற்றி, சிறப்புடைய திருநீடூரில் வாழ்ந்த `முனையடுவாரின்' இயல்பை இனிக் கூறுவாம்.

விளக்கவுரை

கங்கை பொருந்திய சடையையுடைய சிவபெருமா னைத் தம் நீடிய மனக் கோயிலில் நிறுவி, மிகுந்த அன்புடன் வழிபட்டு, அடியவர்களுடன் இருந்து, நீங்காத வீட்டு நெறியினைப் பெற்ற பெருந்தகையாரான வாயிலார் நாயனாரைப் போற்றி, சிறப்புடைய திருநீடூரில் வாழ்ந்த `முனையடுவாரின்' இயல்பை இனிக் கூறுவாம்.

முனையடுவார் நாயனார் புராணம்

மாறு கடிந்து மண்காத்த
வளவர் பொன்னித் திருநாட்டு
நாறு விரைப்பூஞ் சோலைகளில்
நனைவாய் திறந்து பொழிசெழுந்தேன்
ஆறு பெறுகி வெள்ளமிடு
மள்ளல் வயலின் மள்ளருழும்
சேறு நறுவா சங்கமழுஞ்
செல்வ நீடூர் திருநீடூர். **#3831**

பகைமையை வென்று உலகைக் காக்கும் சோழ மன்னரின் காவிரியாறு பாய்கின்ற நாட்டில், நறுமணமுடைய சோலை களில் மலர் அரும்புகள் விரிய, அவற்றின்றும் வடியும் தேனும் ஆற் றின் வழியே பெருக்கெடுத்து ஓடி, அவ்வெள்ளத்தால் சேறான வய லுள், உழவர்கள் உழுகின்ற சேறும் மணம் வீசுகின்ற, செல்வம் பெருகியுள்ள ஊர் திருநீடூர் ஆகும்.

விளக்கவுரை

ஆற்றுப் பெருக்கால் வரும் சேறும், உழவர்கள் உழுத லான் வரும் சேறும் பொருந்திய நீடூர் என்பதாம். செல்வம், நீடு, ஊர் = திருநீடூர் ஆகும். நீடூர் எனவரும் இரண்டனுள் முன்னையது செல்வ நீட்சியையும் பின்னையது ஊர்ப் பெயரையும் குறித்தன. நீடூர் - சோழ நாட்டில் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள ஊராகும். ஊழிக் காலத்தும் அழியாது நிலைபெற்று இருத்தலின் நீடூர் எனப் பெயர் பெற்றது என்ப.

விளங்கும் வண்மைத் திருநீடூர்
வேளாண் தலைமைக் குடிமுதல்வர்
களங்கொள் மிடற்றுக் கண்ணுதலார்
கழலிற் செறிந்த காதல்மிகும்
உளங்கொள் திருத்தொண் டுரிமையினில்
உள்ளார் நள்ளார் முனையெறிந்த
வளங்கொ டிறைவர் அடியார்க்கு
மாறா தளிக்கும் வாய்மையார். **#3832**

யாவராலும் புகழத்தக்க வள்ளன்மையுடைய திருநீடூரில் வேளாளர் மரபில், தலைமையான குடி முதல்வராய், நஞ்சையுடைய கழுத்தினரும் நெற்றிக் கண்ணருமான சிவபெருமா னின் திருவடியில், செறிந்த பெருவிருப்பத்தை மனத்துள் கொண்ட திருத்தொண்டில் உரிமை பூண்டவராய், பகைவரைப் போரில் வென்றதால் வரும் பொருளைக் கொண்டு இறைவரின் அடியார்க்கு மாறா மல் சிறந்த உணவளிக்கும் வாய்மை யுடையவராய் விளங்கினார்.

விளக்கவுரை

விளங்கும் - புகழ் விளங்கும். `இரப்பார்க்கு ஒன்று ஈவார் மேல் நிற்கும் புகழ்' *(குறள், 232)* என்பர் திருவள்ளுவனாரும்; நள்ளார் - பகைவர்.

மாற்றார்க்கு அமரில் அழிந்துள்ளோர்
வந்து தம்பால் மாநிதியம்
ஆற்றும் பரிசு பேசினால்
அதனை நடுவு நிலைவைத்துக்
கூற்றும் ஒதுங்கும் ஆள்வினையால்
கூலி யேற்றுச் சென்றெறிந்து
போற்றும் வென்றி கொண்டிசைந்த
பொன்னுங் கொண்டு மன்னுவார். **#3833**

போரில் பகைவர்க்குத் தோற்றவர் வந்து பெருஞ் செல்வம் தந்து தமது துணையைக் கொள்ளவேண்டில், அப்பகைமைக் குரிய காரணத்தை நடுநிலையில் நின்று அறநெறிவழாது ஆராய்ந்து, ஏற்று இயமனும் அஞ்சி ஒதுங்கும் போர் முயற்சியால் கூலியை ஏற்றுப் போரை வென்று, யாவரும் விரும்பும் வெற்றியைப் பெற்று, இசைந்த கூலியான பொன்னைக் கொண்டு வாழ்வாரானார்.

விளக்கவுரை

இதனால் இவ்வடியவர், தோற்றவர் பக்கம் நின்று அவர் கொடுக்கும் பொருளுக்காக மட்டும் துணைப் போகவில்லை. அறநெறி தவறாது இருக்குமவர்க்கே துணை செய்து பொருள் பெறுவர் என்பது கருத்தாகின்றது.

இன்ன வகையால் பெற்றநிதி
எல்லாம் ஈச னடியார்கள்
சொன்ன சொன்ன படிநிரம்பக்
கொடுத்துத் தூய போனகமும்
கன்னல் நறுநெய் கறிதயிர்பால்
கனியுள் ளுறுத்த கலந்தளித்து
மன்னும் அன்பின் நெறிபிறழா
வழித்தொண் டாற்றி வைகினார் **#3834**

இவ்வகையால் பெறும் செல்வம் எல்லாவற்றையும், சிவனடியார்கள் தாம் கேட்டவாறு கொடுத்துத், தூய சர்ச்சரை, நறுமணம் பொருந்திய நெய், கறி, தயிர், பால், கனி என்ற இவை எல்லாவற்றையும் கலந்து திருவமுது அளித்து, நிலைபெறும் அன்பு நெறியில் பிறழாத வழித்தொண்டைச் செய்து வந்தார்.

விளக்கவுரை

உண்டி நாலு விதத்தில், ஆறு சுவைத் திறத்தினில் அடிய வர்க்கு உணவு வழங்க வேண்டும் என ஆசிரியர் முன்னர்க் குறித்ததை, ஈண்டு ஒரு வகையால் விளக்கினாராயிற்று. சொன்ன சொன்னபடி - அடியவர்கள் வேண்டுவதை வேண்டியவாறே கொடுத்து, என்றார், அவர் தம்மினும் உயர்ந்தவராதல் பற்றி.

மற்றிந் நிலைமை பன்னெடுநாள்
வையம் நிகழச் செய்துவழி
உற்ற அன்பின் செந்நெறியால்
உமையாள் கணவன் திருவருளால்
பெற்ற சிவலோ கத்தமர்ந்து
பிரியா வுரிமை மருவினார்
முற்ற வுழந்த முனையடுவார்
என்னு நாமம் முன்னுடையார். **#3835**

இவ்வாறாய நிலையில் அவர் இத்திருத்தொண்டைப் பல காலம் செய்து, வழிவழி வந்த அன்பால் ஆன நல்ல நெறியில், உமை யொரு கூறராய சிவபெருமானின் திருவருளால், தாம் பெற்ற சிவ லோகத்தில் அமர்ந்து, அதனின்றும் மீளாத உரிமையை அடைந்தார். வெற்றி பொருந்தப் போரைச் செய்த காரணத்தால் முனையாடுவார் என்ற திருப்பெயரைச் சிறப்பாக உடையவர் ஆனார்.

விளக்கவுரை

முன் - சிறப்பாக. நாயன்மார்களின் திருப்பெயர்களை முதற்கண் கூறிப்பின் அவர்தம் திருத்தொண்டுகளை விவரித்தலே யன்றி, அவர் தொண்டுகளை விரிவாகக் கூறிப்பின் அவர் பெயரைக் கூறலும் இவர்தம் மரபாக உள்ளது. இக்காலத்துப் பயிற்று முறையாளர் இதனைச் சிறப்பான உத்திமுறையாகக் கொள்வர்.

யாவர் எனினும் இகலெறிந்தே
ஈசனடியார் தமக்கின்பம்
மேவ அளிக்கும் முனையடுவார்
விரைப்பூங் கமலக் கழல்வணங்கித்
தேவர் பெருமான் சைவநெறி
விளங்கச் செங்கோல் முறைபுரியும்
காவல் பூண்ட கழற்சிங்கர்
தொண்டின் நிலைமை கட்டுரைப்பாம். **#3836**

எதிர்ப்பவர் யாவராயினும் அவரைப் போரில் வெற்றி கொண்டு, அதனால் பெற்ற அச்செல்வங்களை, இறைவன் அடியார்க்கு அளித்த முனையடுவார் நாயனாரின் மணம் பொருந்திய தாமரை போன்ற திருவடிகளை வணங்கி, இனித் தேவர் தலைவரான சிவபெருமானின்

சைவநெறி விளங்கச் செங்கோன்மை செய்யும் காவல் பூண்ட `கழற்சிங்க நாயனார்' தொண்டின் நிலையைச் சொல்வாம்.

விளக்கவுரை

****

செறிவுண்டென்று திருத்தொண்டில்
சிந்தை செல்லும் பயனுக்குக் குறியுண்டு ஒன்றாகிலும் குறையொன்
றில்லோம் நிரையும் கருணையினால் வெறியுண் சோலைத்
திருமுருகன் பூண்டி வேடர் வழி பறிக்கப் பறியுண்டவர்எம் பழவினை
வேர் பறிப்பார் என்னும் பற்றாலே. **#3837**

இறைவரின் நிறைந்த அருட்பெருக்கினால் மணமுடைய சோலைகள் சூழ்ந்த திருமுருகன் பூண்டியின் வழியில் தாம் கொண்டு வந்த பொருட்கள் வேடுவரால் கவரப்பட நம்பியாரூர், எம் பழவினையின் வேரை அடியுடன் பறித்து விடுவர் என்ற ஆதரவினால் அவர்பால் செறிதல் உளதாகும் என்று அவரிடத்தும் செயத்தகும் திருத்தொண்டின் பயனால் பெறத்தக்கதொரு குறிக்கோள் உண்டு. அதுவன்றி ஒன்றாலும் குறைவும் இல்லோம். வகை நூல் ஆசிரியர் அவிநாசியில் முதலையுண்ட சிறுவன் உயிர் பிழைக்கச் செய்ததும் திருமுருகன் பூண்டியில் வேடுவர் கொண்ட பொன்னை மீண்டும் பெற்றதுமாய நிகழ்ச்சிகளை நினைந்து வணக்கங் கூறினர். முனையடுவார் நாயனார் புராணம் முற்றிற்று.
கறைக்கண்டன் சருக்கம் முற்றிற்று.

விளக்கவுரை

****

கழற்சிங்க நாயனார் புராணம்

படிமிசை நிகழ்ந்த தொல்லைப்
பல்லவர் குலத்து வந்தார்
கடிமதில் மூன்றும் செற்ற
கங்கைவார் சடையார் செய்ய
அடிமலர் அன்றி வேறொன்
றறிவினில் குறியா நீர்மைக்
கொடிநெடுந் தானை மன்னர்
கோக்கழற் சிங்கர் என்பார். **#3838**

இந்நிலவுலகில் விளங்கும் பழமையான பல்லவர் குலத்தில் தோன்றியவர். காப்புமிக்க மதில்களையுடைய முப்புரங்க ளையும் எரித்த கங்கை பொருந்திய நீண்ட சடையையுடைய சிவ பெருமானின் செவ்விய திருவடிகளையே அல்லாது வேறொன்றை யும் தம் அறிவினில் பொருளாகக் கொள்ளாத தன்மையர். அவர் வெற்றிக் கொடியை ஏந்திய நெடிய படைகளையுடைய மன்னர் மன்னரான `கழற்சிங்கர்' என அழைக்கப்படுபவர்.

விளக்கவுரை

படி- நிலவுலகம். மன்னர் கோக்கழற்சிங்கர் - மன்னர் மன்னராகிய கழற்சிங்கர். கழல் - காலில் அணியும் சிலம்பு; மேற் கொண்ட போர்கள் பலவற்றிலும் வெற்றியே பெற்றமையின் அச் சிறப்பிற்கு அறிகுறியாகச் சிலம்பணிந்து கழற்சிங்கர் எனச் சிறப்பிக்கப் பெற்றார். இவர் மூன்றாம் நந்திவர்மன் என்னும் பல்லவ மன்னர் ஆவர். கி. பி. *825-850* வரை ஆண்ட இவர், தெள்ளாற்றுப் போரில் மிகச் சீரிய முறையில் வென்றார். இவரைப் பற்றி, நந்திக் கலம்பகத்தில் இப்போர்ச் சிறப்பாக *28, 29, 33, 38, 42, 52, 53, 64, 71, 75, 77, 79, 80, 85, 86* ஆகிய பாடல்களில் விவரிக்கப்படுகின்றது. இவரது காலத்தில் வாழ்ந்த பெருந்தேவனாரும் தம் பாரத வெண்பாவில்,

`வண்மையால் கல்வியால் மாபலத்தால் ஆள்வினையால்
உண்மையால் பாராள் உரிமையால் - திண்மையால்
தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானோ*(*டு*)*
யார்வேந்தர் ஏற்பார் எதிர்*!'*

என இவரைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

காடவர் குரிசி லாராம்
கழற்பெருஞ் சிங்க னார்தாம்
ஆடக மேரு வில்லார்
அருளினால் அமரில் சென்று

கூடலர் முனைகள் சாய
வடபுலங் கவர்ந்து கொண்டு
நாடற நெறியில் வைக
நன்னெறி வளர்க்கும் நாளில். **#3839**

பல்லவர் குலத்தில் தோன்றிய பெரியவரான இக் கழற்சிங்கர், பொன்மயமாய மேருமலையை வில்லாக உடைய இறை வரின் திருவருளால், போரில் சென்று, பகைவர் அழிய, வட புலத்து நாடுகளைக்கைக் கொண்டு, தம் நாடானது நீதி நெறியில் தங்கு மாறு நன்னெறியை வளர்த்து, ஆட்சி செய்கின்ற காலத்தில்,

விளக்கவுரை

இராட்டிர கூட அரசருள் ஒருவரான முதலாம் அமோக வர்ஷன் என்பான் கி.பி. *814 -880* வரை ஆண்டவன். பெருவீரனான அவனை, அவன் இருந்த வடபுலத்திற்குச் சென்று வென்ற வெற்றியே இங்குச் சிறப்பிக்கப் பெறுகின்றது என்பர் வரலாற்றாசிரியர்கள். *(பல் லவர் வரலாறு பக்கம் 201).*

குவலயத் தரனார் மேவும்
கோயில்கள் பலவும் சென்று
தவலரும் அன்பில் தாழ்ந்து
தக்கமெய்த் தொண்டு செய்வார்
சிவபுரி என்ன மன்னும்
தென்திரு வாரூர் எய்திப்
பவமறுத் தாட்கொள் வார்தங்
கோயிலுள் பணியப் புக்கார். **#3840**

இவ்வுலகில் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கோயில்கள் பலவும் சென்று, பிறழாத அன்பினால் வணங்கி, உண்மை யான தொண்டுகளைச் செய்வாராய்ச் `சிவநகர்' எனும்படி நிலை பெற்ற தென் திருவாரூரை அடைந்து, பிறவியை அறுத்து அடிமை கொள்ளும் இறைவரின் திருக்கோயிலுக்குள் புகுந்தார்.

விளக்கவுரை

ஆரூரில் பிறக்க முத்தி என்பர். அது கருதியே அந்நகரைச் `சிவன் நகர்' என்றார். தென் திருவாரூர் - அழகிய திருவாரூர். இவ் விரு பாடல்களும் ஒரு முடிபின.

அரசியல் ஆயத் தோடும்
அங்கணர் கோயி லுள்ளால்
முரசுடைத் தானை மன்னர்
முதல்வரை வணங்கும் போதில்

விரைசெறி மலர்மென் கூந்தல்
உரிமைமெல் லியலார் தம்முள்
உரைசிறந் துயர்ந்த பட்டத்
தொருதனித் தேவி மேவி. **#3841**

முரசுகளையுடைய படைமன்னர், ஐவகைக் குழுக்கள் சூழ இறைவரின் கோயிலுக்குள் சென்று முதல்வரான புற்றிடம் கொண்டவரை வணங்கும் பொழுது, தம்முடன் வந்த மணம் பொருந்திய மலர்களை அணிந்த மென்மையான கூந்தலையுடைய உரிமைத் தேவியர்களுள் புகழால் தனித்துச் சிறந்து உயர்ந்த பட்டத் தரசி வந்து,

விளக்கவுரை

இப்பட்டத்தரசி இராட்டிரகூட அரசனான அமோக வர்ஷ நிருபதுங்கன் மகள் சங்கா என்றும், இவள் சமண சமயத்தைச் சார்ந்த வள் என்றும், பேரழகும் பேரறிவும் படைத்தவள் என்றும் கூறுவர். *(பல் லவர் வரலாறு, பக்கம் 206).*

கோயிலை வலங்கொண்டு அங்கண்
குலவிய பெருமை யெல்லாம்
சாயல்மா மயிலே போல்வாள்
தனித்தனி கண்டு வந்து
தூயமென் பள்ளித் தாமம்
தொடுக்குமண் டபத்தின் பாங்கர்
மேயதோர் புதுப்பூ அங்கு
விழுந்ததொன் றெடுத்து மோந்தாள். **#3842**

சாயலால் மயிலைப் போன்ற அத்தேவியார் கோயிலை வலமாக வந்து, அங்குள்ள வளங்களை எல்லாம் தனித் தனியே பார்த்து மகிழ்ந்தவள், தூய மென்மையான பள்ளித் தாமம் தொடுக்கும் மண்டபத்தின் பக்கத்தில் புதிய பூ ஒன்று விழுந்து கிடப் பதைக் கண்டு எடுத்து மோந்தாள்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

புதுமலர் மோந்த போதில்
செருத்துணைப் புனிதத் தொண்டர்
இதுமலர் திருமுற் றத்துள்
எடுத்துமோந் தனளாம் என்று
கதுமென ஓடிச் சென்று
கருவிகைக் கொண்டு பற்றி
மதுமலர்த் திருவொப் பாள்தன்

மூக்கினைப் பிடித்து வார்ந்தார். **#3843**

புதிய மலரை மோந்த போதில், செருத்துணையார் என்னும் தூய தொண்டனார், இம் மலரை மலர் மண்டபத் திருமுற்றத் தில் எடுத்து மோந்தனள் என்று எண்ணித், துணிந்து, தேன் பொருந் திய தாமரையில் வீற்றிருக்கும் திருமகள் போன்ற அவள் மூக்கைப் பிடித்து அரிந்தார்.

விளக்கவுரை

செருத்துணையார் - இவர் வரலாற்றை இச்சருக்கத்தில் இனி வரும் பகுதியால் *(தி.12 பு.55)* அறியலாம்.

வார்ந்திழி குருதி சோர
மலர்க்கருங் குழலும் சோரச்
சோர்ந்துவீழ்ந் தரற்றுந் தோகை
மயிலெனத் துளங்கி மண்ணில்
சேர்ந்தயர்ந் துரிமைத் தேவி
புலம்பிடச் செம்பொன் புற்றுள்
ஆர்ந்தபே ரொளியைக் கும்பிட்டு
அரசரும் அணையவந்தார். **#3844**

மூக்கை அரிந்த அளவில் குருதி வழியவும், மலர் சூடிய கூந்தல் அவிழ்ந்து குலையவும், சோர்வடைந்து விழுந்து, தோகையையுடைய மயில் போல் நடுங்கித், தரை மீது அயர்ந்து, பட்டத்துத் தேவியார் புலம்ப, செம்பொன் வடிவாய புற்றிடத்தில் நிறைந்த பேரொளியாகிய சிவபெருமானை வணங்கிய அரசரும், அங்கு வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

வார்ந்த - அரிந்த.

வந்தணை வுற்ற மன்னர்
மலர்ந்தகற் பகத்தின் வாசப்
பைந்தளிர்ப் பூங்கொம் பொன்று
பார்மிசை வீழ்ந்த தென்ன
நொந்தழிந் தரற்று வாளை
நோக்கிஇவ் வண்டத் துள்ளோர்
இந்தவெவ் வினையஞ் சாதே
யார்செய்தார் என்னும் எல்லை. **#3845**

வந்து அவ்விடத்தை அணைந்த மன்னர், மலர்கள் மலரப் பெற்ற கற்பகத்தின் மணமுடைய பசிய தளிர்களையுடைய பூங்கொம்பு ஒன்று நிலத்தின் மீது விழுந்தது போல வருந்தி, அழிந்து, அரற்றுவாளான தேவியைப் பார்த்து, இவ்வுலகத்தில் உள்ளவர்களுள் இக்கொடிய செயலை அச்சம் இன்றிச் செய்தவர் யார்? என வினவ,

விளக்கவுரை
****

அந்நிலை யணைய வந்து
செருத்துணை யாராம் அன்பர்
முன்னுறு நிலைமை யங்குப்
புகுந்தது மொழிந்த போது
மன்னரும் அவரை நோக்கி
மற்றிதற் குற்ற தண்டம்
தன்னைஅவ் வடைவே யன்றோ
தடிந்திடத் தகுவ தென்று. **#3846**

அந்நிலையில் அருகிருந்த செருத்துணையாரான அன்பர், முந் நிகழ்ந்த நிலைமையை அங்கு நிகழ்ந்தவாறே சொல்ல, அப்போது மன்னரும், அச்செருத்துணையாரைப் பார்த்து, `இச் செயல்களுக்குப் பொருந்திய தண்டனையை அக்குற்றங்கள் புகுந்த முறைப் படியன்றோ விழுங்கத் தக்கது!' என்று சொல்லி,

விளக்கவுரை
****

கட்டிய வுடைவாள் தன்னை
உருவிஅக் கமழ்வா சப்பூத்
தொட்டு முன்னெடுத்த கையாம்
முற்படத் துணிப்ப தென்று
பட்டமும் அணிந்து காதல்
பயில்பெருந் தேவி யான
மட்டவிழ் குழலாள் செங்கை
வளையொடுந் துணித்தா ரன்றே. **#3847**

தம் இடையில் கட்டியிருந்த உடைவாளை உருவி, அம் மணம் கமழும் மலரைத் தொட்டு, முன்பு எடுத்த கைதான் முதலில் துண்டிக்கத் தகுவது என்று கூறி, தம் அரசுரிமைப் பட்டம் பூண்டு, தம் அன்பையும் பூண்டு விளங்கும் பெருந்தேவியான மணம் கமழும் கூந்தலையுடைய அவளது கையை, அணிந்த வளையலுடன் அப் போதே துண்டித்தார்.

விளக்கவுரை

தரையில் விழுந்த மலரைக் கை எடுத்த பின்பே, மூக்கு நுகர்ந்தது; ஆதலில் முறைப்படி முன்னர் ஒறுக்கத் தக்கது கையே ஆதலின் அதனைத் தடிந்தார் அரசர். இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

ஒருதனித் தேவி செங்கை
உடைவாளால் துணித்த போது

பெருகிய தொண்டர் ஆர்ப்பின்
பிறங்கொலி புவிமேற் பொங்க
இருவிசும் படைய ஓங்கும்
இமையவர் ஆர்ப்பும் விம்மி
மருவிய தெய்வ வாச
மலர்மழை பொழிந்த தன்றே. **#3848**

தரையில் விழுந்த மலரைத் கை எடுத்த பின்பே, மூக்கு நுகர்ந்தது; ஆதலில் முறைப்படி முன்னர் ஒறுக்கத் தக்கது கையே ஆதலின் அதனைத் தடிந்தார் அரசர். இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

விளக்கவுரை

****

அரியஅத் திருத்தொண் டாற்றும்
அரசனார் அளவில் காலம்
மருவிய வுரிமை தாங்கி
மாலயற் கரியார் மன்னும்
திருவருட் சிறப்பி னாலே
செய்யசே வடியி னீழல்
பெருகிய வுரிமை யாகும்
பேரருள் எய்தி னாரே. **#3849**

அரிய அத்திருத் தொண்டைச் செய்த அரசர், பொருந்திய அளவில்லாத காலம், தம் உரிமையான அரசாட்சியையும் திருத்தொண்டையும் ஆற்றியிருந்து, மால், அயனுக்கும் அரியவரான இறைவரின் நிலை பெற்ற திருவருட் சிறப்பால், செம்மை தரும் சிவந்த திருவடி நீழலின் கண், பெருகிய உரிமையான திருவருள் நிறைவைப் பொருந்தப் பெற்றார்.

விளக்கவுரை

****

வையகம் நிகழக் காதல்
மாதேவி தனது செய்ய
கையினைத் தடிந்த சிங்கர்
கழலிணை தொழுது போற்றி
எய்திய பெருமை அன்பர்
இடங்கழி யார்என் றேத்தும்
மெய்யரு ளுடைய தொண்டர்
செய்வினை விளம்ப லுற்றாம். **#3850**

உலகம் விளங்கத், தம் காதலுடைய பட்டத்தரசியின் கையினைத் தடிந்த

கழற்சிங்கரின் திருவடிகளைத் தொழுது, போற்றிப், பொருந்திய பெருமையுடைய அன்பரான `இடங்கழியார்' என்று போற்றப்படும் மெய்யருளுடைய திருத்தொண்டர் செய்த திருத் தொண்டை இனிச் சொல்லலானோம். கழற்சிங்க நாயனார் புராணம் முற்றிற்று.

விளக்கவுரை

****

இடங்கழி நாயனார் புராணம்

எழுந்திரைமா கடலாடை
இருநிலமாம் மகள்மார்பில்
அழுந்துபட எழுதும்இலைத்
தொழில்தொய்யில் அணியினவாம்
செழுந்தளிரின் புடைமறைந்த
பெடைகளிப்பத் தேமாவின்
கொழுந்துணர்கோ திக்கொண்டு
குயில்நாடுங் கோனாடு. **#3851**

மேன்மேல் எழுந்து வரும் அலைகளையுடைய பெருங்கடலை ஆடையாக உடைய பெரிய நிலமகளின் மார்பில் அழுந்துமாறு எழுதும் இலைகள் போல் ஒப்பனை செய்யப்பட்ட தொய்யிலாயுள்ளது, செழுமையான தளிர்களின் கீழ் மறைந்திருக்கும் பெடை மகிழுமாறு தேமாவின் தளிர்களைக் கோதியபடி குயில்கள் பயில்கின்ற கோனாடு என்பதாகும்.

விளக்கவுரை

நில மகளின் தொய்யிலாக அமையும் சிறப்புடையது கோனாடு ஆகும். தொய்யில் - நறுமணம் குழைத்த சந்தனக் குழம்பி னால் பெண்களின் மார்பகத்தில் , இலை, மலர் போன்ற வடிவங்களாக எழுதுவது. கோனாடு என்பது இன்றைய புதுக்கோட்டை மாவட்டத் தின் ஒரு பகுதியாகும்.

முருகுறுசெங் கமலமது
மலர்துதைந்த மொய்யளிகள்
பருகுறுதெண் திரைவாவிப்
பயில்பெடையோடு இரையருந்தி
வருகுறுதண்து ளிவாடை
மறையமா தவிச்சூழல்
குருகுறங்குங் கோனாட்டுக்
கொடிநகரங் கொடும்பாளூர். **#3852**

மணம் கமழும் செந்தாமரை மலரில் உள்ள தேனை மொய்த்து நிற்கும் வண்டுகள், அதன்கண் உள்ள தேனைப் பருகு வதற்கு இடமான தெளிந்த அலைகளையுடைய குளத்தில், பொருந்திய பெண் பறவைகளுடன் இரையை அருந்தி, மோதி வரும் குளிர்ந்த வாடைக்கு ஆற்றாது மறைந்து வாழுதற்கு ஏற்ற குருக்கத்திச் சோலை யில் அக்குருகுப் பறவைகள் உறங்குகின்ற கோனாட்டின் தலைநகரம், கொடும்பாளூர் என்பதாகும்.

விளக்கவுரை

கொடும்பாளூர் - இது கோனாட்டின் தலைநகராகும். புதுக்கோட்டைக்கும் மணப்பாறைக்கும் இடையில் உள்ளது. கொடி நகரம் - தலைநகரம்.

அந் நகரத் தினில்இருக்கு
வேளிர்குலத் தரசளித்து
மன்னியபொன் னம்பலத்து
மணிமுகட்டில் பாக்கொங்கில்
பன்னுதுலைப் பசும்பொன்னால்
பயில்பிழம்பாம் மிசையணிந்த
பொன்னெடுந்தோள் ஆதித்தன்
புகழ்மரபிற் குடிமுதலோர். **#3853**

அக்கொடும்பாளூர் நகரத்தில், இருக்குவேளிர் குலத்தில் தோன்றி ஆட்சி செய்து, நிலை பெற்ற பொன்னம்பலத்தின் அழகிய உச்சியில், பொன்னிலமாய கொங்கு நாட்டின் புகழ் பெற்ற தும், எடைமிக்கதும், தூயதுமான பசும் பொன்னினால் விளங்கும் ஒளியுருவின் மேல் வேய்ந்து, பொன்னணிகள் அணிந்த தோளை உடைய ஆதித்த சோழனின் புகழ் தங்கிய மரபின் குடி முதல்வராய்,

விளக்கவுரை

பா கொங்கின் - பொன் மணல் பரவப் பெற்ற கொங்கு நாடு. பா - பரவப் பெற்ற. கொங்கு நாட்டின் மண்பகுதி பொன் மணல் துகள்கள் மிக்கு இருப்பது ஆதலின் `பாக் கொங்கின்' என்றார். துலைப் பசும்பொன் - எடை மிக்க அழகிய பொன். இருக்கு வேளிர் குலத்தவர், பொன்னம்பலத்தைப் பொன் வேய்ந்த ஆதித்த சோழரின் குடி முன்னோர் மரபில் தோன்றியவர் இடங்கழியார் என்பார்.

இடங்கழியார் எனவுலகில்
ஏறுபெரு நாமத்தார்
அடங்கலர்முப் புரமெரித்தார்
அடித்தொண்டின் நெறியன்றி
முடங்குநெறி கனவினிலும்
உன்னாதார் எந்நாளும்
தொடர்ந்தபெருங் காதலினால்
தொண்டர்வேண் டியசெய்வார். **#3854**

`இடங்கழியார்' என்று அழைக்கப் பெற்று வந்த இந்நில உலகில் புகழ் பெற்ற பெரிய பெயரை உடையவர்; பகைவரின் முப்புரங்களையும் எரித்த இறைவரின் திருவடிக்குத் தொண்டு செய்யும் நெறியையே

அன்றி, ஏனைய குற்றம் பொருந்திய அயல் நெறிகளைக் கனவிலும் நினையாதவர்; எக்காலத்திலும் தொடர்ந்து, பெருகிய காதலால், தொண்டர்கட்கு வேண்டிய பணிகளைத் தாம் செய்து வருவாராய்,

விளக்கவுரை

இடம் கழியார் - இப்பெயர் இயற்பெயரோ அன்றி காரணப் பெயரோ அறியோம். இடம் - உயிர்க்குப் புகலிடமாகக் கொள்ளத் தக்க இடம்; அது இறைவனின் திருவடியே ஆகும். தம் நெஞ்சை அவ்விடத்தேயே பதித்து அதனின்றும் கழியாது (விலகாது) இருத்தலின் இவர் இப்பெயர் பெற்றிருக்கலாம். இங்ஙனம் கருதின் இது காரணப் பெயராகும். `சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும்' எனவரும் திருவாக்கும் காண்க. முடங்கு நெறி - வளைவான நெறி. அஃதாவது குற்றம் உடைய நெறி; பிற சமய நெறிகள்.

சைவநெறி வைதிகத்தின்
தருமநெறி யொடுந்தழைப்ப
மைவளருந் திருமிடற்றார்
மன்னியகோ யில்களெங்கும்
மெய்வழிபாட்டு அர்ச்சனைகள்
விதிவழிமேன் மேல்விளங்க
மொய்வளர்வண் புகழ்பெருக
முறைபுரியும் அந்நாளில். **#3855**

சைவ நெறியானது வைதிக நெறியுடன் தழைக்கவும், நஞ்சுண்ட திருமிடற்றையுடைய இறைவர் எழுந்தருளியிருக்கும் திருக் கோயில்கள் எங்கும் நிகழத்தக்க உண்மை வழிபாடான அருச்சனை கள் சிவாகம விதிவழியே மேன்மேலும் பெருகவும், செழித்து வளர்கின்ற வளமை பொருந்திய புகழ் பெருகவும், அரசு செலுத்தி வரும் நாள்களில்,

விளக்கவுரை

சைவநெறி வீடு பேற்றிற்கு உதவுவது. வைதிக நெறி இம்மை மறுமைகட்கு உதவுவது. இவ்விரு நெறிகளும் தழைக்க அரசு செய்தவர் இடங்கழியார் ஆவர். `வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க' என்றார் முன்னும் (தி.*12* பு.*28* பா.*1*). எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும் உண்மையா வது பூசனையேயாம். ஆதலின், திருக்கோயில்களில் அப்பூசனை வழுவாது நடக்கத் தம் ஆட்சியை முறையாகச் செய்துவந்தார்.

சங்கரன்தன்அடி யாருக்கு
அமுதளிக்கும் தவமுடையார்
அங்கொருவர் அடியவருக்கு

அமுதொருநாள் ஆக்கவுடன்
எங்குமொரு செயல்காணாது
எய்தியசெய் தொழின்முட்டப்
பொங்கியெழும் பெருவிருப்பாற்
புரியும்வினை தெரியாது. #3856
அதுபோது, சிவபெருமானின் அடியவர்க்கு அமுது அளித்து வரும் தவமுடையார் ஒருவர், ஒருநாள் அடியவருக்குத் திருவமுது ஆக்குதற்குரிய பண்டங்கள் பெற, எங்கும் யாதொரு செயலும் காணாமையால், தாம் செய்து வரும் தொழில் தடைப்பட, மேன்மேலும் பொங்கி எழும் மிக்க விருப்பத்தினால், தாம் செய்யத் தகும் செயல் தெரியாமல்,

விளக்கவுரை

****

அரசரவர் பண்டாரத்
தந்நாட்டின் நெற்கூட்டில்
நிரைசெறிந்த புரிபலவா
நிலைக்கொட்ட காரத்தில்
புரைசெறிநள் ளிருளின்கண்
புக்குமுகந்து எடுப்பவரை
முரசெறிகா வலர்கண்டு
பிடித்தரசன் முன்கொணர்ந்தார். #3857
அரசராய இடங்கழியாரின் களஞ்சியத்தில், அந் நாட்டின் நெற்கூடுகள் ஏனைய பண்டங்கள் பலவும் நிறைந்து இருப் பதும், மதில்காவல் பலவும் அமைந்திருப்பதுமாய பெருவீட்டில், எங்கும் இருள் நிறைந்திருக்கும் நள்ளிரவில் புகுந்து, நெல்லை முகந்து எடுக்க, அவரை, இரவு முழுதும் காவல் முரசினை அறைந்து பாது காத்து வரும் காவலர்கள் பிடித்து, அரசர்முன் கொண்டு நிறுத்தினர்.

விளக்கவுரை

அரசராய இடங்கழியாரின் களஞ்சியத்தில், அந் நாட்டின் நெற்கூடுகள் ஏனைய பண்டங்கள் பலவும் நிறைந்து இருப் பதும், மதில்காவல் பலவும் அமைந்திருப்பதுமாய பெருவீட்டில், எங்கும் இருள் நிறைந்திருக்கும் நள்ளிரவில் புகுந்து, நெல்லை முகந்து எடுக்க, அவரை, இரவு முழுதும் காவல் முரசினை அறைந்து பாது காத்து வரும் காவலர்கள் பிடித்து, அரசர்முன் கொண்டு நிறுத்தினர்.

மெய்த்தவரைக் கண்டிருக்கும்
வேல்மன்னர் வினவுதலும்

அத்தன்அடி யாரையான்
அமுதுசெய்விப் பதுமுட்ட
இத்தகைமை செய்தேனென்று
இயம்புதலு மிகவிரங்கிப்
பத்தரைவிட்டு இவரன்றோ
பண்டாரம் எனக்கென்பார். **#3858**

காவலர் பிடித்து வந்த அந்த அடியவரைக் கொலு வீற்றிருக்கும் வேல் ஏந்திய மன்னர் கண்டு வினவவும், `சிவனடியார்க ளுக்கு யான் அமுது செய்வித்துவரும் தொழில் முட்டுப் பட்டதால் இவ்வாறு செய்தேன்' என்ற உண்மையை அவர் உரைக்க, அது கேட்ட அரசர் மிகவும் இரங்கி, அவரைக் காவலினின்றும் விடுவித்து, `இவரன்றோ எனக்கு வைப்பு நிதி யாவர்' என்று உரைத்து,

விளக்கவுரை

பண்டாரம் - நெல் முதலிய பொருள்கள் வைத்திருக்கும் பாதுகாப்பு மிக்க இடம்.

நிறையழிந்த வுள்ளத்தால்
நெற்பண்டா ரமும்அன்றிக்
குறைவில்நிதிப் பண்டார
மானவெலாங் கொள்ளைமுகந்
திறைவனடி யார்கவர்ந்து
கொள்கவென எம்மருங்கும்
பறையறையப் பண்ணுவித்தார்
படைத்தநிதிப் பயன்கொள்வார். **#3859**

நிலையழிந்த உள்ளத்தால், நெற்களஞ்சியம் மட்டுமே அல்லாமல், குறைவில்லாத செல்வங்களின் வைப்பாகவுள்ள எல்லா விடங்களிலும் உள்ள பொருள்களையும் திரளாக முகந்து, இறைவன் அடியார்கள் கவர்ந்து கொள்க எனத் தாம் பெற்ற நிதியின் பயனைக் கொள்பவரான இடங்கழியார், எல்லாப் பக்கங்களிலும் பறையறையுமாறு செய்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

எண்ணில்பெரும் பண்டாரம்
ஈசனடி யார்கொள்ள
உண்ணிறைந்த அன்பினால்
உறுகொள்ளை மிகவூட்டித்
தண்ணளியால் நெடுங்காலந்
திருநீற்றின் நெறிதழைப்ப

மண்ணில்அருள் புரிந்திறைவர்
மலரடியின் நிழல்சேர்ந்தார். **#3860**

அளவில்லாத பெரிய வைப்பு நிதிகளை எல்லாம் இறைவனின் அடியார்கள் எடுத்துக் கொள்ளுமாறு, உள்ளத்தின் உள்ளே நிறைந்த அன்பினால், தாம் தாமும் தமக்கு வேண்டிய பொருளை வேண்டியாங்கு எடுத்துக் கொள்ளுமாறு செய்வித்துக் (கொள்ளை கொள்ளுமாறு செய்து) குளிர்ந்த கருணையினால் நெடுங்காலம் திருநீற்றின் நெறி தழையுமாறு உலகில் ஆட்சி புரிந்து, சிவபெருமானின் திருவடி நீழலை அடைந்தார்.

விளக்கவுரை

****

மைதழையும் மணிமிடற்றார்
வழித்தொண்டின் வழிபாட்டில்
எய்துபெருஞ் சிறப்புடைய
இடங்கழியார் கழல்வணங்கி
மெய்தருவார் நெறியன்றி
வேறொன்றும் மேலறியாச்
செய்தவராம் செருத்துணையார்
திருத்தொண்டின் செயல் மொழிவாம். **#3861**

நஞ்சு பொருந்திய அழகிய கழுத்தையுடைய சிவபெருமானுக்கு வழிவழியாகச் செய்து வரும் வழிபாட்டுத் தொண்டில் பொருந்திய பெருஞ்சிறப்பையுடைய இடங்கழி நாயனா ரின் திருவடிகளை வணங்கி, மெய்ஞ்ஞானத்தை வழங்குபவரான சிவபெருமானின் நெறியையன்றிப் பிறிதொன்றையும் மேலானது என அறியாத செருத்துணையாரின் செயலைச் சொல்வாம். இடங்கழி நாயனார் புராணம் முற்றிற்று.

விளக்கவுரை

****

செருத்துணை நாயனார் புராணம்

உள்ளும் புறம்பும் குலமரபின்
ஒழுக்கம் வழுவா ஒருமைநெறி
கொள்ளும் இயல்பிற் குடிமுதலோர்
மலிந்த செல்வக் குலப்பதியாம்
தெள்ளுந் திரைகள் மதகுதொறும்
சேலும் கயலும் செழுமணியும்
தள்ளும் பொன்னி நீர்நாட்டு
மருகல் நாட்டுத் தஞ்சாவூர். **#3862**

அகத்தும் புறத்தும் தத்தம் குலமரபில் வரும் ஒழுக்கத்தினின்றும் தவறாது, ஒரு நெறிய மனம் கொண்ட, பண்பு டைய பழங்குடி மக்கள் பலரும் நிறைந்த, செல்வமும் பெருமையு முடைய பதியாவது, தெளிவான அலைகள், மதகுகள் தோறும் சேல் மீன்களையும் கயல் மீன்களையும் செழுமையான மணிகளையும் சேர்க்கின்ற காவிரி பாயும் நீர் நாடுஆய சோழ நாட்டின் `மருகல்' நாட்டில் உள்ள `தஞ்சாவூர்' என்பதாம்.

விளக்கவுரை

மருகல் நாடு - தஞ்சை மாவட்டத்தின் கீழ்ப்பகுதியி லுள்ள திருமருகல் என்னும் ஊரைச் சார்ந்த பகுதியாகும். எனவே இது கீழைத் தஞ்சாவூராகும். இப்பொழுது தஞ்சாவூர் என அழைக்கப் பெறும் பெருநகர் மேலைத் தஞ்சாவூராகும்.

சீரின் விளங்கும் அப்பதியில்
திருந்து வேளாண் குடிமுதல்வர்
நீரின் மலிந்த செய்யசடை
நீற்றர் கூற்றின் நெஞ்சிடித்த
வேரி மலர்ந்த பூங்கழல்சூழ்
மெய்யன் புடைய சைவரெனப்
பாரில் நிகழ்ந்த செருத்துணையார்
பரவுந் தொண்டின் நெறிநின்றார். **#3863**

சிறப்புடன் விளங்கும் அத்திருப்பதியில், உலகம் திருந்துதற்கு ஏதுவாய வேளாளர் குடியின் முதல்வராயும், கங்கையை அணிந்த சிவந்த சடையையும் திருநீற்றையும் உடைய இறைவன் கூற்றுவனை மார்பிலே உதைத்த தேன் பொருந்திய மலர் போன்ற திருவடிகளையே, நினைக்கின்ற மெய்யன்புடைய சைவராயும் வாழ்ந்து வந்தவர், இவ்வுலகில் புகழ் விளங்கும் `செருத்துணையார்' என்பவராவர். இவர், யாவரும் போற்றும் திருத்தொண்டின் நெறியில் நின்று ஒழுகி வந்தார்.

விளக்கவுரை

செருத்துணையார்: சிவநெறித் தொண்டிற்கு மாறாய வரை ஒறுப்பதற்குத் துணை நிற்பவர் ஆதலின், இப்பெயர் பெற்றார். இதனை இவ்வரலாற்றால் அறியலாம்.

ஆன அன்பர் திருவாரூர்
ஆழித் தேர்வித் தகர்கோயில்
ஞான முனிவர் இமையவர்கள்
நெருங்கு நலஞ்சேர் முன்றிலினுள்
மான நிலவு திருப்பணிகள்
செய்து காலங் களின்வணங்கிக்
கூனல் இளவெண் பிறைமுடியார்
தொண்டு பொலியக் குலவுநாள். **#3864**

இவ்வாறான அன்பர், திருவாரூரில் ஆழித் தேரில் இவர்ந்து வந்து ஆட்கொள்ளுதலில் வல்லுநரான இறைவரின் கோயிலுள், ஞான முனிவர்களும், தேவர்களும் நெருங்கியிருக்கின்ற நன்மை பொருந்திய திருமுன்றிலினுள்ளே, பெருமையுடைய திருப் பணிகளைச் செய்து, உரிய காலங்களில் வழிபட்டு வணங்கி, வளைந்த இளம்பிறையைச் சூடிய சடையுடைய சிவபெருமானின் திருத் தொண்டு விளங்கச் செய்து வந்த நாள்களில்,

விளக்கவுரை

ஆழி - உருள் *(சக்கரம்)*. பெருந்தேர் ஆதலின் அதன் ஆழியும் பெரிதாய் இருக்கும். `உருள் பெருந்தேர்' *(குறள், 667)* என் பர் வள்ளுவனாரும், ஆழித்தேரில் வீற்றிருந்து இல்லங்கள் தோறும் எழுந்தருளிக் பொங்கு மலர்ப் பாதம் தந்தருளும் சேவகனாய்ப் பெருமான் இருந்தனர் என்பதால், `ஆழித்தேர் வித்தகர்' என்றார்.

உலகு நிகழ்ந்த பல்லவர்கோச்
சிங்கர் உரிமைப் பெருந்தேவி
நிலவு திருப்பூ மண்டபத்து
மருங்கு நீங்கிக் கிடந்ததொரு
மலரை யெடுத்து மோந்ததற்கு
வந்து பொறாமை வழித்தொண்டர்
இலகு சுடர்வாய்க் கருவியெடுத்
தெழுந்த வேகத் தாலெய்தி. **#3865**

உலகில் ஆட்சி செய்யும் பல்லவ மன்னரான கழற்சிங்கர் என்னும் கோச்சிங்கரின் பட்டத்து அரசியான பெருந்தேவி, அங்குள்ள மலர் மண்டபத்தின் அருகில், கிடந்த ஒரு மலரை எடுத்து மோந்து விட்டதற்காக, உள்ளம் பொறுக்க மாட்டாது, சிவனெறியில் நின்று வழுவாது தொண்டு செய்து வரும் தொண்டராதலால், விளங் கும்

ஒளிபொருந்திய கூரிய வாயையுடைய வாளினை எடுத்து, விரைவாக வந்து சேர்ந்து,

விளக்கவுரை

உலகில் ஆட்சி செய்யும் பல்லவ மன்னரான கழற்சிங்கர் என்னும் கோச்சிங்கரின் பட்டத்து அரசியான பெருந்தேவி, அங்குள்ள மலர் மண்டபத்தின் அருகில், கிடந்த ஒரு மலரை எடுத்து மோந்து விட்டதற்காக, உள்ளம் பொறுக்க மாட்டாது, சிவனெறியில் நின்று வழுவாது தொண்டு செய்து வரும் தொண்டராதலால், விளங் கும் ஒளிபொருந்திய கூரிய வாயையுடைய வாளினை எடுத்து, விரைவாக வந்து சேர்ந்து,

கடிது முட்டி மற்றவள்தன்
கருமென் கூந்தல் பிடித்தீர்த்துப்
படியில் வீழ்த்தி மணிமூக்கைப்
பற்றிப் பரமர் செய்யசடை
முடியில் ஏறுந் திருப்பூமண்
டபத்து மலர்மோந் திடும்மூக்கைத்
தடிவ னென்று கருவியினால்
அரிந்தார் தலைமைத் தனித்தொண்டர். **#3866**

உலகில் ஆட்சி செய்யும் பல்லவ மன்னரான கழற்சிங்கர் என்னும் கோச்சிங்கரின் பட்டத்து அரசியான பெருந்தேவி, அங்குள்ள மலர் மண்டபத்தின் அருகில், கிடந்த ஒரு மலரை எடுத்து மோந்து விட்டதற்காக, உள்ளம் பொறுக்க மாட்டாது, சிவனெறியில் நின்று வழுவாது தொண்டு செய்து வரும் தொண்டராதலால், விளங் கும் ஒளிபொருந்திய கூரிய வாயையுடைய வாளினை எடுத்து, விரைவாக வந்து சேர்ந்து,

விளக்கவுரை

உலகில் ஆட்சி செய்யும் பல்லவ மன்னரான கழற்சிங்கர் என்னும் கோச்சிங்கரின் பட்டத்து அரசியான பெருந்தேவி, அங்குள்ள மலர் மண்டபத்தின் அருகில், கிடந்த ஒரு மலரை எடுத்து மோந்து விட்டதற்காக, உள்ளம் பொறுக்க மாட்டாது, சிவனெறியில் நின்று வழுவாது தொண்டு செய்து வரும் தொண்டராதலால், விளங் கும் ஒளிபொருந்திய கூரிய வாயையுடைய வாளினை எடுத்து, விரைவாக வந்து சேர்ந்து,

அடுத்த திருத்தொண் டுலகறியச்
செய்த அடலே றனையவர்தாம்
தொடுத்த தாம மலரிதழி

முடியார் அடிமைத் தொண்டுகடல்
உடுத்த உலகின் நிகழச்செய்
துய்யச் செய்ய பொன்மன்றுள்
எடுத்த பாத நிழலடைந்தே
இறவா வின்பம் எய்தினார். **#3867**

உலகில் ஆட்சி செய்யும் பல்லவ மன்னரான கழற்சிங்கர் என்னும் கோச்சிங்கரின் பட்டத்து அரசியான பெருந்தேவி, அங்குள்ள மலர் மண்டபத்தின் அருகில், கிடந்த ஒரு மலரை எடுத்து மோந்து விட்டதற்காக, உள்ளம் பொறுக்க மாட்டாது, சிவனெறியில் நின்று வழுவாது தொண்டு செய்து வரும் தொண்டராதலால், விளங் கும் ஒளிபொருந்திய கூரிய வாயையுடைய வாளினை எடுத்து, விரைவாக வந்து சேர்ந்து,

விளக்கவுரை

அடியவர் திறமும், திருத்தொண்டின் திறமும் ஒருங்கு விளங்கியமையை ஆசிரியர் குறித்தருள்கின்றார்.

செங்கண் விடையார் திருமுன்றில்
விழுந்த திருப்பள் ளித்தாமம்
அங்கண் எடுத்து மோந்ததற்கு
அரசன் உரிமைப் பெருந்தேவி
துங்க மணிமூக் கரிந்தசெருத்
துணையார் தூய கழல்இறைஞ்சி
எங்கும் நிகழ்ந்த புகழ்த்துணையார்
உரிமை அடிமை யெடுத்துரைப்பாம். **#3868**

சிவந்த கண்களையுடைய ஆனேற்றூர்தியையுடைய இறைவரின் திருமுற்றத்தில் விழுந்த பள்ளித் தாமத்துக்குரிய மலரை எடுத்து மோந்ததற்காக, மன்னரின் பட்டத்துக்குரிய பெருந்தேவியா ரின் பெருமையுடைய அழகிய மூக்கை அரிந்த செருத்துனையாரின் தூய திருவடிகளை வணங்கி, யாண்டும் விளங்கும் புகழையுடைய `புகழ்த்துணையாரின்' உரிமையான அடிமைத் திறத்தின் இயல்பை இனி இயம்புவாம்.

விளக்கவுரை

துங்கம் - பெருமை; உயர்வு. உரிமையடிமை - சிவ வேதியற்கு என்றே உரிய அடிமைத் திருத்தொண்டு: திருக் கோயிலின் கருவறையில் வழிபாடாற்றும் தொண்டு. செருத்துணை நாயனார் புராணம் முற்றிற்று.

புகழ்த்துணை நாயனார் புராணம்

செருவிலிபுத் தூர்மன்னும்
சிவமறையோர் திருக்குலத்தார்
அருவரைவில் ஆளிதனக்கு
அகத்தடிமை யாம்அதனுக்கு
ஒருவர்தமை நிகரில்லார்
உலகத்துப் பரந்தோங்கிப்
பொருவரிய புகழ்நீடு
புகழ்த்துணையார் எனும்பெயரார். **#3869**

`செருவிலிபுத்தூர்' என்ற பதியில் நிலைபெற்று வாழும் சிவ வேதியர் குலத்தில் தோன்றியவர், அரிய மலையை வில்லாக வளைத்தவரான சிவபெருமானின் அகம்படிமைத் தொழில் பூண்டு ஒழுகும் அத்தன்மையில் தமக்கு ஒப்பாக ஒருவரும் இல்லாதவர், இவ்வுலகில், பரந்தும் சிறந்தும் விளங்கும் ஒப்பற்ற புகழ் நீடிய `புகழ்த்துணையார்' எனும் பெயருடையார்.

விளக்கவுரை

அருவரை - மேருமலை. பொரு - ஒப்பு. செருவிலிபுத்தூர் - இது கும்பகோணத்தில் இருந்து குடவாயிலுக்குச் (குடவாசல்) செல்லும் இடைவழியில் உள்ளது. அரிசில் கரைப்புத்தூர் எனத் திருமுறைகளில் அழைக்கப்பெறுவது. இக்காலத்து அழகாபுத்தூர் என மருவி வழங்குகிறது.

தங்கோனைத் தவத்தாலே
தத்துவத்தின் வழிபடுநாள்
பொங்கோத ஞாலத்து
வற்கடமாய்ப் பசிபுரிந்தும்
எங்கோமான் தனைவிடுவேன்
அல்லேன்என் றுஇராப்பகலும்
கொங்கார்பன் மலர்கொண்டு
குளிர்புனல்கொண்டு அருச்சிப்பார். **#3870**

தம் பெருமானைத் தவத்தால், சிவாகம நெறியில் நின்று வழிபட்டு வரும் நாளில், பொங்கும் கடல் சூழ்ந்தவுலகத்தில் பஞ்சம் வந்து தமக்கு உணவில்லாமல் பசி மிக்கிருந்தும் `எம் இறைவனை நான் விடுவேன் அல்லேன்' என்று இரவும் பகலுமாக, மணம் கமழும் பல மலர்களைக் கொண்டும் குளிர்நீரைக் கொண்டும் வழிபடுவாராகி,

விளக்கவுரை

வற்கடம் - பஞ்சம்.

மாலயனுக் கரியானை
மஞ்சனமாட் டும்பொழுது
சாலவுறு பசிப்பிணியால்
வருந்திநிலை தளர்வெய்திக்
கோலநிறை புனல்தாங்கு
குடந்தாங்க மாட்டாமை
ஆலமணி கண்டத்தார்
முடிமீது வீழ்த்தயர்வார். **#3871**

அவர் (ஒருநாள்) திருமாலும் நான்முகனும் தேடுதற்கரிய பெருமானை, நீராட்டும் பொழுது, மிகவும் பெருகிய பசியினால் வருந்தி நிலை தளர்ந்து அழகிய நிறைந்த நீரையுடைய குடத்தைத் தாங்கமாட்டாமையால், நஞ்சு அணிந்த கழுத்தையுடைய சிவபெருமானின் முடிமீது அது வீழ்ந்துவிடத் தளர்வாராகி,

விளக்கவுரை

****

சங்கரன்றன் அருளாலோர்
துயில்வந்து தமையடைய
அங்கணனுங் கனவின்கண்
அருள்புரிவான் அருந்துணவு
மங்கியநாட் கழிவளவும்
வைப்பதுநித் தமும்மொருகா
சிங்குனக்கு நாமென்ன
இடர்நீங்கி யெழுந்திருந்தார். **#3872**

சிவபெருமானின் திருவருளால் அதுபோது உறக்கம் வந்து தம்மைச் சேர, இறைவரும் கனவில் அவருக்கு அருள் செய்வா ராய், உண்ணும் உணவு குறைந்த காலம் (பஞ்சம்) தீருமளவும், இங்கு உனக்கு நாம் நாள்தோறும் ஒரு காசு வைப்போம்! என்று கூறியருள, நாயனாரும் துன்பம் நீங்கித் துயில் உணர்ந்து எழுந்தார்.

விளக்கவுரை

இம் மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

சங்கரன்றன் அருளாலோர்
துயில்வந்து தமையடைய
அங்கணனுங் கனவின்கண்
அருள்புரிவான் அருந்துணவு
மங்கியநாட் கழிவளவும்
வைப்பதுநித் தமும்மொருகா

சிங்குனக்கு நாமென்ன
இடர்நீங்கி யெழுந்திருந்தார். #3873

ஆனேற்றை ஊர்தியாகக் கொண்டு எழுந்தருளும் சிவபெருமான், பீடத்தின் கீழே, துன்பம் நீங்க நாளும் ஒரு பொற் காசை இட்டு அளித்திட, அன்பரும் அதைக் கைக்கொண்டு, பொருந் திய பசியினால் வாட்டம் கொண்ட உடலுடன் அதற்குப் பெரிதும் மகிழ்ந்து அகமும் முகமும் மலரும் உணர்வுடையரானார்.

விளக்கவுரை

அற்றம் - சோர்வு; பசியினாலாய சோர்வு.

அந்நாள்போல் எந்நாளும்
அளித்தகா சதுகொண்டே
இன்னாத பசிப்பிணிவந்
திறுத்தநாள் நீங்கியபின்
மின்னார்செஞ் சடையார்க்கு
மெய்யடிமைத் தொழில்செய்து
பொன்னாட்டில் அமரர்தொழப்
புனிதர்அடி நிழற்சேர்ந்தார். #3874

அந்நாளைப் போலவே, பின்வரும் நாள்களிலும் இறைவர் நாள்தோறும் தந்த பொற்காசினைக் கைக்கொண்டு துன்ப முடைய பசி மிகுதியால் நேர்ந்த வற்கடம் நீங்கிய பின்பு, ஒளியுடைய இறைவரின் மெய்யடிமைத் தொழிலான அகம்படித் தொண்டைத் தொடர்ந்து செய்து வாழ்ந்த, பின்பு, பொன் உலகில் உள்ள வானவர் தொழும்படி சிவபெருமானின் திருவடிகளைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

நீங்கியபின் என்பதைப் பசிப்பிணி என்பதனோடும், நாள் என்பதனோடும் தனித்தனியே கூட்டுக. நாள்தொறும் வருத்திய பசிப்பிணியும் நீங்கியது. பஞ்சமும் நீங்கியது. நீங்கியபின், அடியவர் தாம் ஆற்றிவந்த திருத்தொண்டினைத் தொடர்ந்து செய்து வந்த நாள் களில், ஒரு நாள் இறையடியடைந்தார்.

பந்தணையும் மெல்விரலாள்
பாகத்தர் திருப்பாதம்
வந்தணையும் மனத்துணையார்
புகழ்த்துணையார் கழல்வாழ்த்திச்
சந்தணியும் மணிப்புயத்துத்
தனிவீர ராந்தலைவர்
கொந்தணையும் மலர்அலங்கல்

கோட்புலியார் செயல்உரைப்பாம். **#3875**

பந்தைச் சேரும் மென்மையான விரல்களையுடைய உமையம்மையாரை ஒரு கூற்றில் உடைய இறைவரின் திருவடிகளில் வந்து சேர்கின்ற மனத்துணை பெற்றவரான `புகழ்த்துணையாரின்' திருவடிகளை வாழ்த்திச், சந்தனக் கலவை அணிந்த அழகிய தோள் களையுடைய ஒப்பில்லாதவரும், தலைவருமான மணம் கமழும் மாலை சூடிய `கோட்புலியாரின்' திருத்தொண்டினை உரைப்பாம்.

விளக்கவுரை

புகழ்த்துணையாரின் தொண்டின் நெறியினை, `அலந்த அடியான் அற்றைக்கு அன்று ஓர்காசு எய்திப், புலர்ந்த காலை மாலை போற்றும் புத்தூரே' *(தி.2 ப.63 பா.7)* என ஆளுடைய பிள்ளை யாரும்,

அகத்தடிமை செய்யும் அந்தணன்தான்
அரிசில்புனல் கொண்டு வந்து ஆட்டுகின்றான்
மிகத்தளர் வெய்திக் குடத்தையும்
நும்முடிமேல் விழுத்திட்டு நடுங்குதலும்
வகுத்து அவனுக்கு நித்தற்படியும்
வரும் என்று ஒருகாசினை நின்ற நன்றிப்
புகழ்த்துணை கைபுகச் செய்து உகந்தீர்
பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே.
(தி.7 ப.9 பா.6)

என ஆளுடைய நம்பிகளும் சிறப்பித்துப் போற்றுதலும் ஈண்டு நினைத்தற்குரியதாகும்.

கோட்புலி நாயனார் புராணம்

நலம்பெருகுஞ் சோணாட்டு
நாட்டியத்தான் குடிவேளாண்
குலம்பெருக வந்துதித்தார்
கோட்புலியார் எனும்பெயரார்
தலம்பெருகும் புகழ்வளவர்
தந்திரியா ராய்வேற்றுப்
புலம்பெருகத் துயர்விளைப்பப்
போர்விளைத்துப் புகழ்விளைப்பார். **#3876**

நன்மை பெருகும் சோழ நாட்டில் `திருநாட்டியத் தான்குடியில்' வேளாளர் குலம் புகழால் மிகுமாறு வந்து, அக்குலத்தில் தோன்றியவர், `கோட்புலியார்' என்னும் பெயரையுடையவர். அவர் உலகில் பெருகும் புகழையுடைய சோழ மன்னரின் தானைத் தலைவ ராய், அயலிடத்திலுள்ள பகைமன்னர்க்கு மிக்க துன்பம் உண்டாகு மாறு போரிட்டு புகழ்விளைப்பாராய்,

விளக்கவுரை

தந்திரம் - சேனை; இதன் தலைவர் தந்திரியார். கோட்புலியார் - தாங்கொண்ட கோட்பாட்டில் புலியாக விளங்குபவர். ஆதலின் இப்பெயர் பெற்றார் எனலாம். புலி, தான் கொன்ற பொருள் வலப்புறம் விழுந்தாலன்றி இடப்புறத்துவீழின் உண்ணாது.

`கடுங்கண் கேழல் இடம்பட வீழ்ந்தென
அன்று அவண் உண்ணா தாகி வழிநாள்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்து
இருங்களிற்று ஒருத்தல் நல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்து
உரனுடை யாளர் கேண்மையோடு
இயைந்த வைகல் உளவாகியரோ'

(புறம் - 180)

எனவும்,

`தொடங்கு வினை தவிரா அசைவில் நோன் தாள்
கிடந்துஉயிர் மறுகுவ தாயினும் இடம்படின்
வீழ்களிறு மிசையாப் புலியினும் சிறந்த,
தாழ்வில் உள்ளம்'

(அகம் - 29)

எனவும்

`கடமா தொலைச்சிய கானுறை வேங்கை

இடம் வீழ்ந்தது உண்ணாது இறக்கும்'
(நாலடியார் 340)
எனவும் வரும் கூற்றுகளைக் காண்க. இத்தகைய உரனுடைமை இருந்தமை, இவ்வடியவர் வரலாற்றால் அறிய இயலும்.

மன்னவன்பால் பெறுஞ்சிறப்பின்
வளமெல்லாம் மதிஅணியும்
பிஞ்ஞகர்தங் கோயில்தொறுந்
திருவமுதின் படிபெருகச்
செந்நெல்மலைக் குவடாகச்
செய்துவருந் திருப்பணியே
பன்னெடுநாள் செய்தொழுகும்
பாங்குபுரிந்து ஓங்குநாள். **#3877**

மன்னனிடம் தம்தொழில்வழிப் பெறும் சிறந்த செல்வங்களை எல்லாம், பிறைச்சந்திரனைச் சூடிய இறைவரின் கோயில் தோறும் திருவமுதுக்குரிய கட்டளை பெருகுவதற்காகச் செந்நெல்லை மலைச்சிகரம் போல் குவித்துச் செய்துவரும் தொண் டையே பலகாலங்களும் செய்து, சிறந்து விளங்கும் நாளில்,

விளக்கவுரை
****

வேந்தன் ஏவலிற்பகைஞர்
வெம்முனைமேற் செல்கின்றார்
பாந்தள்பூண் எனஅணிந்தார்
தமக்கமுது படியாக
ஏந்தலார் தாம்எய்தும்
அளவும்வேண் டும்செந்நெல்
வாய்ந்தகூடு அவைகட்டி
வழிக்கொள்வார் மொழிகின்றார். **#3878**

வேந்தனின் ஏவலால், பகைவர்களின் கொடிய போர் மேல் செல்பவரான அந்நாயனார், பாம்பை அணியாய் அணிந்துள்ள இறைவற்குத் திருஅமுதுக்குரிய கட்டளையாக, பெருமையுடைய அவர் வரும் வரையில், வேண்டிய அளவு செந்நெல் பொருந்திய நெல்கூடுகளை அமைத்துப் போர் மேற்செல்பவர், சொல்வாராய்,

விளக்கவுரை
****

தந்தமர்கள் ஆயினார்
தமக்கெல்லாந் தனித்தனியே

எந்தையார்க் கமுதுபடிக்கு
ஏற்றியநெல் இவையழிக்கச்
சிந்தையால் தாம்நினைவார்
திருவிரையாக் கலியென்று
வந்தனையால் உரைத்தகன்றார்
மன்னவன்மாற் றார்முனைமேல். **#3879**

தம் சுற்றத்தவர் எல்லாருக்கும் தனித்தனியே எம் இறைவற்கு அமுது படிக்காகச் சேர்த்துள்ள இந்நெற்கூடுகளைத் தாம் அழிக்குமாறு உள்ளத்தாலும் நினைப்பாராயின், `திருவிரையாக் கலியின் மேல் ஆணை நிகழ்வதாகுக!' என்று கூறி, அனைவர்க்கும் வணக்கம் கூறிப் போர் மேற்சென்றார்.

விளக்கவுரை

திருவிரையாக் கலி - சிவபெருமானின் ஆணை. அழிக்க - நினைவார் திருவிரையாக்கலி - நெற்கட்டை அழிக்க உள்ளத்தால் நினைவாரேனும், அவர் சிவபெருமானின் ஆணையைப் பிழைத்தவ ராவீர் என்பது கருத்து. `பொய்தீர் விரையாக்கலி என்னும் ஆணை யும்' (கோயில் நான்மணி மாலை- *4)* எனவரும் திருவாக்கும் காண்க. இந்நான்கு பாடல்களும் ஒரு முடிபின.

மற்றவர்தாம் போயினபின்
சிலநாளில் வற்காலம்
உற்றலும்அச் சுற்றத்தார்
உணவின்றி இறப்பதனில்
பெற்றமுயர்த் தவர்அமுது
படிகொண்டா கிலும்பிழைத்துக்
குற்றமறப் பின்கொடுப்போம்
எனக்கூடு குலைத்தழிந்தார். **#3880**

அவர் சென்ற பின்பு சில நாள்களில், பஞ்சம் வரவும், முற்கூறியவாறு அறிவுறுத்தப்பட்ட அச்சுற்றத்தார்கள், `உணவில்லாது இறப்பதைவிட, ஆனேற்றுக் கொடியையுடைய இறைவரின் அமுதுக் குரிய படியான நெல்லை எடுத்துச் கொண்டேனும் உயிர் பிழைத்துக் குற்றம் இல்லாது பின்பு அந்நெல்லைத் திரும்ப, கொடுத்து விடலாம்!' என்று எண்ணித் துணிந்து நெற்கூடுகளை அழித்தனர்.

விளக்கவுரை

இந்நாயனார் காலம் கி. பி. *9*ஆம் நூற்றாண்டு என்றும், அக்காலத்தில் பல்லவ மன்னராய மூன்றாம் நந்திவர்மர் பேரரசராக, அவர் ஆட்சியின் கீழ்க் குமாராங்குசன் என்றொரு சோழ மன்னன் சிற்றரசனாய்

இருந்தான் என்றும், அக்காலத்தேயே வடபுலத்தும், தென்புலத்தும் பஞ்சம் நேர்ந்தது என்றும் வரலாற்று ஆசிரியர் கூறுவர். பிற்காலச் சோழர் சரித்திரம் *(பக்கம் 9 , 10)*, பல்லவர் வரலாறு *(பக்கம் 207)*. அக்காலத்தில் நேர்ந்த வறுமையை நீக்கினான் நந்திவர்மன் என நந்திக்கலம்பகம் *11*ஆவது பாடலும் கூறுகின்றது. எனவே இக்காலத் துப் பஞ்சம் நேர்ந்தமை வரலாற்றாசிரியர்களாலும் உறுதி செய்யப் பட்ட தொன்றாகும்.

மன்னவன்தன் தெம்முனையில்
வினைவாய்த்து மற்றவன்பால்
நன்னிதியின் குவைபெற்ற
நாட்டியத்தான் குடித்தலைவர்
அந்நகரில் தமர்செய்த
பிழையறிந்த தறியாமே
துன்னினார் சுற்றமெலாம்
துணிப்பனெனுந் துணிவினராய். **#3881**

அரசனின் போர்முனையில் வெற்றி பெற்றுத் திரும்பி வந்து, அவ்வரசனிடம் நிதியின் குவியலைப் பெற்ற நாட்டியத்தான் குடித்தலைவரான கோட்புலியார், அந்நகரத்தில் தம் சுற்றத்தார் செய்த பிழையை அறிந்து, `எம் சுற்றத்தார் அனைவரையும் துணிப்பேன்' எனத் துணிவு கொண்டு, அதனை அவர்கள் அறியாதவாறு செயற்படுத்து வாராகி,

விளக்கவுரை

****

எதிர்கொண்ட தமர்க்கெல்லாம்
இனியமொழி பலமொழிந்து
மதிதங்கு சுடர்மணிமா
ளிகையின்கண் வந்தணைந்து
பதிகொண்ட சுற்றத்தார்க்
கெல்லாம்பைந் துகில்நிதியம்
அதிகந்தந் தளிப்பதனுக்
கழைமின்கள் என்றுரைத்தார். **#3882**

தம்மை எதிர்கொண்டு வரவேற்ற சுற்றத்தார் அனைவர்க்கும் இனிய சொற்களைச் சொல்லி, திங்கள் தங்கும் ஒளியும் அழகும் உடைய தம் மாளிகையை அடைந்து `அந்நகரத்தில் உள்ள சுற்றத்தார்க்கு எல்லாம் பசுமையான ஆடையும் பெரும் பொருளும் கொடுப்பதற்கு அழையுங்கள்!' எனச் சொல்லி,

விளக்கவுரை

****

எல்லோரும் புகுந்ததற்பின்
இருநிதியம் அளிப்பார்போல்
நல்லார்தம் பேரோன்முன்
கடைகாக்க நாதன்தன்
வல்லாணை மறுத்தமுது
படியழித்த மறக்கிளையைக்
கொல்லாதே விடுவேனோ
எனக்கனன்று கொலைபுரிவார். **#3883**

அந்நிலையில் உறவினர் எல்லாரும் வந்து சேர்ந்த பின்பு, பெரும் பொருள் தருபவர் போல் காட்டி, நல்லவரான கோட் புலியார், தம் பெயரினையுடைய காவலன், முன் வாயிலைக் காவலாக நின்று காக்க, இறைவரின் வலிய ஆணையையும் மறுத்துத் திரு வமுதுக்காக இருந்த நெல்லை அழித்து உண்ட பாவம் செய்த உறவினரையெல்லாம் கொல்லாமல் விடுவேனோ! என்று சினம் கொண்டு கொலை செய்வாராகி.

விளக்கவுரை

இறைவற்குரிய உணவையுண்ட தீமையை நீக்கச் செய்தார் ஆதலின், நல்லார் என்றார். `தீவினையின் பயன் துணிப்பார்' என வரும் அடுத்த பாடலும் காண்க.

தந்தையார் தாயார்மற்
றுடன்பிறந்தார் தாரங்கள்
பந்தமார் சுற்றத்தார்
பதியடியார் மதியணியும்
எந்தையார் திருப்படிமற்று
உண்ணவிசைந் தார்களையும்
சிந்தவாள் கொடுதுணித்தார்
தீவினையின்பயன் துணிப்பார். **#3884**

தந்தையார், தாயார், உடன் பிறந்தவர், மனைவியர், பிணிப்புடைய சுற்றத்தார், அவ்வூரில் வாழும் அடிமைகள் என்ற இவர்கள் அனைவரையும், எம் தந்தையான இறைவரின் திருவமுதுக் குரிய படி நெல்லை உண்ணுதற்கு எண்ணி இசைந்த தீவினையின் பயனை அழிப்பவரான நாயனார், உடல் அழியும்படி வாளைக் கொண்டு வெட்டினார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒரு முடிபின.

பின்னங்குப் பிழைத்ததொரு
பிள்ளையைத்தம் பெயரோன்அவ்
அன்னந்துய்த் திலதுகுடிக்
கொருபுதல்வ னருளுமென
இந்நெல்லுண் டாள்முலைப்பால்
உண்டதுஎன எடுத்தெறிந்து
மின்னல்ல வடிவாளால்
இருதுணியாய் விழவேற்றார். **#3885**

அதன் பின் அங்கு அவரது வாளுக்குத் தப்பி உயிர் பிழைத்திருந்த ஒரு குழந்தையை அப்பணியாளன் காட்டி, `இஃது அச்சோற்றை உண்ணவில்லை, அன்றியும் ஒரு குடிக்கு ஒரு மகனாகும், ஆதலால் இதனை வெட்டாமல் அருள வேண்டும்!' எனச் சொல்ல, `இக்குழந்தை அச்சோற்றை உண்ணவில்லையாயினும், அச் சோற்றை உண்ட தாயரின் முலைப்பாலை யுண்டது' என்று நாயனார் சொல்லி, எடுத்து மேலே வீசி எறிந்து, மின்னும் நல்ல கூரிய வாளால் இரண்டு துண்டாகி விழுமாறு அக்குழந்தையையும் வெட்டினார்.

விளக்கவுரை

****

அந்நிலையே சிவபெருமான்
அன்பர்எதிர் வெளியேநின்று
உன்னுடைய கைவாளால்
உறுபாசம் அறுத்தகிளை
பொன்னுலகின் மேலுலகம்
புக்கணையப் புகழோய்நீ
இந்நிலைநம் முடன்அணைகஎன்
றுஏவியெழுந் தருளினார். **#3886**

தந்தையும், தாயும், அரிய உயிரும், அமிர்தமும் ஆய வினையின் நீங்கிய இறைவனின் திருவடிகளை உட் கொண்டதால், சுற்றத்தாரின் பாசத்தை, வேர் அறத் தடிந்த, கொத்தான மலர்களைக் கொண்ட மாலையையுடைய கோட்புலி நாயனாரின் திருவடியை வணங்கிக் கூட்டத்தவரான (தொகை) அடியார்களுள் பத்தராய்ப் பணிபவரின் இயல்பை இனி இயம்புவாம்.

விளக்கவுரை

****

அத்தனாய் அன்னையாய்

ஆருயிராய் அமிர்தாகி
முத்தனாம் முதல்வன்தாள்
அடைந்துகிளை முதல்தடிந்த
கொத்தலர் தார்க் கோட்புலியார்
அடிவணங்கிக் கூட்டத்தில்
பத்தராய்ப் பணிவார்தம்
பரிசினையாம் பகருவாம். **#3887**

தந்தையும், தாயும், அரிய உயிரும், அமிர்தமும் ஆய வினையின் நீங்கிய இறைவனின் திருவடிகளை உட் கொண்டதால், சுற்றத்தாரின் பாசத்தை, வேர் அறத் தடிந்த, கொத்தான மலர்களைக் கொண்ட மாலையையுடைய கோட்புலி நாயனாரின் திருவடியை வணங்கிக் கூட்டத்தவரான (தொகை) அடியார்களுள் பத்தராய்ப் பணிபவரின் இயல்பை இனி இயம்புவாம்.

விளக்கவுரை

****

மேவரிய பெருந்தவம் யான்
முன்பு விளைத் தன வென்னோ
யாவது மோர் பெருளல்லா
என் மனத்து மன்றியே
நாவலர் காவலர் பெருகு
நதி கிழிய வழி நடந்த
சேவடிப் போது எப்போது
செனனியினுள் மலர்ந்தனவால். **#3888**

ஒன்றுக்கும் பற்றாத எளியேனின் உள்ளத்தில் மட்டு மன்றிப் பெருக்கெடுத்து ஓடிய காவிரியாறு, இடையீடுபட்டுப் பின், வழிவிட்ட வழியில், நடந்தருளிய திருநாவலூர்த் தலைவரின் சேவடி மலர்கள் எப்போதும் என் தலையின் மேலும் மலர்ந்தன.இப்பேறு பெறுவதற்குப் பொருந்துதற்கரிய பெருந்தவம் நான் முன்னே செய்தன எவையோ? அறியேன்?

விளக்கவுரை

ஒன்றுக்கும் பற்றாத எளியேனின் உள்ளத்தில் மட்டு மன்றிப் பெருக்கெடுத்து ஓடிய காவிரியாறு, இடையீடுபட்டுப் பின், வழிவிட்ட வழியில், நடந்தருளிய திருநாவலூர்த் தலைவரின் சேவடி மலர்கள் எப்போதும் என் தலையின் மேலும் மலர்ந்தன.இப்பேறு பெறுவதற்குப் பொருந்துதற்கரிய பெருந்தவம் நான் முன்னே செய்தன எவையோ? அறியேன்?

பத்தராய்ப் பணிவார் புராணம்

ஈசருக்கே அன்பானார்
யாவரையுந் தாங்கண்டால்
கூசிமிகக் குதுகுதுத்துக்
கொண்டாடி மனமகிழ்வுற்
றாசையினால் ஆவின்பின்
கன்றணைந்தாற் போலணைந்து
பேசுவன பணிந்தமொழி
இனியனவே பேசுவார். **#3889**

சிவபெருமானுக்கே அன்பு செலுத்துபவர்கள், அடியவர்கள் எவரையும்தாம் கண்டால் கூசி, மிகவும் உள்ளத்தில் விருப்புற்று மகிழ்ந்து, ஆசையால், தாய்ப்பசுவின் பின்பு கன்று அணைவதைப் போல் சேர்ந்து, அவர்களிடம் பேசுபவை எல்லாம் இனிய சொற்களாகவே பேசுவர்.

விளக்கவுரை

கூசுதல் - அஞ்சுதல்: அவர்கள் பெருமையும் தம் சிறுமை யும் கண்டு அஞ்சுதல். குதுகுதுத்தல் - மீதூர்ந்த விருப்பம் கொள்ளுதல்.

தாவரிய அன்பினால்
சம்புவினை எவ்விடத்தும்
யாவர்களும் அர்ச்சிக்கும்
படிகண்டால் இனிதுவந்து
பாவனையால் நோக்கினால்
பலர்காணப் பயன்பெறுவார்
மேவரிய அன்பினால்
மேலவர்க்கும் மேலானார். **#3890**

கெடுதல் இல்லாத அன்பால், சிவபெருமானை எங்கும் எவராயினும் வழிபடுவதைக் கண்டால், இனிதாய் மகிழ்ந்து, அதனால் அவர்களின் நல்ல பாவனையினாலும் அருள் நோக்கத்தினாலும் பலரும் கண்டு மகிழுமாறு பயனைப் பெறுவர். பொருந்துதற்கு அரிய அன்பின் திறத்தால் மேம்பாடு உடையவர்களுக்கெல்லாம் மேம்பாடு உடையவராய் விளங்குவர்.

விளக்கவுரை

தா - கெடுதல்; `தாவில் கொள்கை' எனவரும் தொல்காப்பியமும் காண்க. பாவனை - நலம் பெறுக என எண்ணும் எண்ணம். இப்பாவனையையும் அருள் நோக்கத்தையும் பலரும் காணப்பெறுவது இவர்களுக்குற்ற தவப்பயனாகும். `பல்லோரும் காண என்தன் பசுபாசம் அறுத்தருளி' *(தி.8*

ப.*31* பா.*4)* எனவரும் திருவாசகமும் காண்க.

அங்கணனை அடியாரை
ஆராத காதலினால்
பொங்கிவரும் உவகையுடன்
தாம்விரும்பிப் பூசிப்பார்
பங்கயமா மலர்மேலான்
பாம்பணையான் என்றிவர்கள்
தங்களுக்கும் சார்வரிய
சரண்சாருந் தவமுடையார். **#3891**

இறைவனையும், அப்பெருமானின் அடியவர்களையும், நிறைவுறாத பெரு விருப்பத்தினால் மேன்மேலும் பொங்கி வரும் மகிழ்ச்சியுடன் விரும்பி வழிபடுவர். தாமரை மலரின் மேல் இருக்கும் நான்முகனும் பாம்பணையின் மீது இருக்கும் திருமாலும் என்ற இவர்களுக்கும் அடைதற்கரிய திருவடிகளை அடையும் தவத்தை உடையவர்கள்.

விளக்கவுரை

குறிப்புரை எழுதவில்லை

யாதானும் இவ்வுடம்பால்
செய்வினைகள் ஏறுயர்த்தார்
பாதார விந்தத்தின்
பாலாக எனும்பரிவால்
காதார்வெண் குழையவர்க்காம்
பணிசெய்வார் கருக்குழியில்
போதார்கள் அவர்புகழ்க்குப்
புவனமெலாம் போதாவால். **#3892**

`இவ்வுடம்பினால் செயத்தகும் செயல்கள் எவையானாலும், அவை எல்லாம் ஆனேற்றுக் கொடியை உயர்த்தி நிற்கும் பெருமானின் திருவடித் தாமரைகளின் அருகில் சேரும் தகுதி உடை யன ஆகுக` என்ற அன்பினால், காதில் வெண்குழையை அணிந்த சிவபெருமானுக்குரிய பணிகளைச் செய்பவர்கள்; மீண்டும் பிறவியில் செல்ல மாட்டார்கள்; அவர்களின் புகழுக்கு இவ்வுலகும் ஒப்பாகாது.

விளக்கவுரை

பாத அரவிந்தம் = பாதாரவிந்தம் - திருவடியாகிய தாமரை. கருக்குழி - பிறவியாகிய குழி.

சங்கரனைச் சார்ந்தகதை
தான்கேட்குந் தன்மையராய்
அங்கணனை மிகவிரும்பி

அயலறியா அன்பினால்
கங்கைநதி மதியிதழி
காதலிக்குந் திருமுடியார்
செங்கமல மலர்ப்பாதஞ்
சேர்வதனுக் குரியார்கள். **#3893**

சிவபெருமானைச் சார்பாக உடைய வரலாறுகளையே கேட்கும் தன்மை உடையவர்கள். அழகிய கண்களையுடைய இறைவரை மிகவும் விரும்பி, பிறர் அறியாத, நிலையில் செய்யும் அன்புத் திறத்தினால், கங்கையாற்றையும், பிறைச் சந்திரனையும், கொன்றை மலரையும் விரும்பி அணியும் முடியையுடைய இறைவரின் செந்தாமரை மலர் போன்ற திருவடிகளைச் சேர்வதற்கு உரியவர்களாவர்.

விளக்கவுரை

அயலறியா அன்பு - பிறர் அறியாத அன்பு. `ஆர்வத்தை உள்ளே வைத்து` *(தி.4 ப.31 பா.4)* எனவரும் திருமுறைத் திருவாக்கும் காண்க.

ஈசனையே பணிந்துருகி
இன்பமிகக் களிப்பெய்திப்
பேசினவாய் தழுதழுப்பக்
கண்ணீரின் பெருந்தாரை
மாசிலா நீறழித்தங்
கருவிதர மயிர்சிலிர்ப்பக்
கூசியே யுடல்கம்பித்
திடுவார்மெய்க் குணமிக்கார். **#3894**

சிவபெருமானையே வணங்கி, உள்ளம் உருகி, அதனால் உள்ளத்து எழும் இன்பம் மிகுதலால் மகிழ்ச்சி அடைந்து, சொல் குழறி, மார்பில் விளங்கும் திருநீற்றைக் கண்களிலிருந்து இழிந்து வரும் நீரானது அழித்து அருவியென வழியவும், மயிர்க் கூச்செறியவும், கூசி உடல் நடுங்குவார்கள்; மெய்ம்மைக் குணம் நிறைந்த பத்தர்கள் ஆவர்.

விளக்கவுரை

உடல் நடுங்குதல்- அன்பு மிகுதியால் ஏற்படும் மெய்ப்பாடுகளுள் ஒன்று. `மெய்தான் அரும்பி` எனவரும் திருவாசகமும் காண்க.

நின்றாலும் இருந்தாலும்
கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும்
விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம்
ஒருகாலும் மறவாமை

குன்றாத வுணர்வுடையார்
தொண்டராம் குணமிக்கார். #3895
நின்றாலும், அமர்ந்திருந்தாலும், படுத்திருந்தாலும், நடந்தாலும், உண்டாலும், உறங்கினாலும், இமைத்தாலும், பேரவையில் ஆடும் கூத்தப்பெருமானின் மலர் போன்ற திருவடிகளை மனத்தால் வணங்கி ஒருபோதும் மறவாத பேரன்பால், குறைவில்லாத உணர்வை உடையவர்கள்; திருத்தொண்டர்கள் எனப்படும் குணத்தால் சிறந்தவர்கள்.

விளக்கவுரை

`தொண்டர் அடித் தொழல்பூசைத் தொழில் மகிழ்தல் அழகார்
துளங்கிய அர்ச்சனைபுரிதல் தொகுதி நியமங்கள்
கொண்ட பணி திருவடிக்கே கொடுத்தல் ஈசன்
குணம் மருவும் அருங்கதையைக் குலவிக் கேட்டு
மண்டி விழி துளும்பல்மயிர் சிறும்பல் உன்னல்
மருவுதல் பணிகாட்டி வருப வாங்கி
உண்டி கொளாது ஒழிதல்என இவையோர் எட்டும்
உடையர் அவர் பத்தர்என உரைத் துளோரே`
எனவரும் திருத்தொண்டர் புராண சாரத்தால் *(பா.83),* இவ்வெண் குணங்களும் இப்பத்தர்கள் பால் உளவாதலை இவ்வேழு பாடல்களானும் அறியலாம். இவ்வேழு பாடல்களும் பழைய ஏடுகளில் இல்லை என்பர் சிவக்கவிமணியார்.

சங்கரனுக் காளான
தவங்காட்டித் தாமதனால்
பங்கமறப் பயன்துய்ப்பார்
படிவிளக்கும் பெருமையினார்
அங்கணனைத் திருவாரூர்
ஆள்வானை அடிவணங்கிப்
பொங்கிஎழுஞ் சித்தமுடன்
பத்தராய்ப் போற்றுவார். #3896
சிவபெருமானுக்கே அடிமையாகிய தவத்தை மேற்கொண்டு, உலகிற்கு அதனை விளக்கித், தாம் அதனால் குற்றம் நீங்கிய பயனைப் பெறுவர்; உலகை விளங்கச் செய்யும் பெருமையை உடையவர்; அங்கணராய சிவபெருமானைத், திருவாரூர் ஆளும் இறைவரின் திருவடிகளை வணங்கி, மேன்மேலும் எழும் பத்திமை உறைப்புடைய பத்தராய் விளங்குவர்.

விளக்கவுரை

தவம் காட்டி - சிவப்பொலிவும், சிவவழிபாடும் உடையவராய் விளங்குதலால் அவ்வன்பினை வெளிப்படுத்தும் திறம்மிக விளங்குதல்.
பயன்துய்ப்பார் - சிவானுபவத்தைப் பெற்றவாறிருப்பர்.

பரமனையே பாடுவார் புராணம்

புரமூன்றும் செற்றானைப்
பூணாகம் அணிந்தானை
உரனில்வரும் ஒருபொருளை
உலகனைத்தும் ஆனானைக்
கரணங்கள் காணாமல்
கண்ணார்ந்து நின்றானைப்
பரமனையே பாடுவார்
தம்பெருமை பாடுவாம். **#3897**

அசுரர்களின் முப்புரங்களையும் எரித்தவரும், அணி கலனாகப் பாம்புகளை அணிந்தவரும், ஞானம் முதிர்ந்த விடத்து வெளிப்படும் ஒப்பற்ற பொருளானவரும், அனைத்துலகங்களையும் தம் மாயையால் தோற்றுவித்திருப்பவரும், உயிர்களின் அகப் புறக் கருவிகளால் காணப்படாதவராயினும் அவ்வுயிர்களிடத்து நிலைத்து நின்று காட்டுபவருமான பரமனையே பாடுவாரின் பெருமையைப் பாடுவாம்.

விளக்கவுரை

: உரன் - திண்மை; ஈண்டு ஞானத் திண்மை. கரணங்கள் காணா உயிர்குற்ற அகப்புறக் கருவிகளால் அறியப்படாமை. அத்தகை யோனாய் இருப்பினும், தன்னருளால் உயிர்களிடத்து நிறைந்து நிற்ப வன் என்பார், - `கண்ணார்ந்து நிற்பானை' என்றார்.
இப்பாட்டு, பல ஏடுகளில் இல்லை என்பார் சிவக்கவிமணியார்.
பரமனையே என்ற விடத்து வரும் ஏகாரம் பிரிநிலையாம்; பொது நீக்கித் தனைநினைய வல்லார் என்பது கருத்து.

தென்றமிழும் வடகலையும்
தேசிகமும் பேசுவன
மன்றினிடை நடம்புரியும்
வள்ளலையே பொருளாக
ஒன்றியமெய் யுணர்வோடும்
உள்ளுருகிப் பாடுவார்
பன்றியுடன் புட்காணாப்
பரமனையே பாடுவார். **#3898**

தென் தமிழ், வடமொழி, பிறநாட்டு மொழிகள் ஆகிய மொழிகளுள் யாதொன்றில் தமக்குப் பயிற்சியிருப்பினும் அவற்றுள், அம்பலத்தில் கூத்தியற்றும் அருள் வடிவினனாகிய கூத்தப் பெருமானேயே நன்குணர்ந்து உயர்ந்த குறிக்கோளாகிய அவ்வொரு பொருளிலேயே பொருந்திய மனவுணர்வுடன் உள்ளம் உருகிப் பாடுவார்கள், பன்றியான

திருமாலுடன் அன்னப்பறவையான நான் முகனும் தேடி அறிய இயலாதவாறு விளங்கும் பரமனையே பாடுவார் ஆவார்.

விளக்கவுரை

`அலகின் கலையின் பொருட்கு எல்லை ஆடுங்கழலே' என்பர் முன்னும். எனவே எம் மொழிக்கும் முடிந்த பொருளாகவும் உயிர்கள் சென்று அடையத்தக்க பொருளாகவும் இருப்பது இறைவ னின் திருவடியேயாம். திருவடிச்சார்பாகிய ஈதொன்றையே குறிக் கோளாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் பரமனையே பாடுவார் ஆவார்.

பண்டிதராவார் பதினெட்டுப் பாடையும்
கண்டவர் கூறும் கருத் தறிவார் என்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலான் அறம்சொன்ன வாறே. *(தி.9 பா.111)*

என்பர் திருமூலர். இதனால் பதினெண் மொழிகளும் இறையருளைப் பெறுதலையே குறிக்கோளாகக் கொண்டுள்ளமை அறியவாம். இவற்றுள் தமிழும் வடமொழியும் முதன்மையும் முழுமையும் கொண்டனவாம்.

`ஆரியமும் தமிழும் உடனே சொலிக்
காரிகையார்க்குக் கருணை செய்தானே' *(தி.9 பா.109)*
`தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ்விரண்டும்
உணர்த்தும், அவனை உணரலும் ஆமே' *(தி.9 பா.110)*
`தமிழ்ச் சொல்லும் வடசொல்லும் தாள்நிழல் சேர'
`வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன் காண்' *(தி.6 ப.87 பா.1)*

எனவரும் திருமுறைத் திருவாக்குகளால் இவ்வுண்மை அறியலாம். பரமனையே பாடுவார் புராணம் முற்றிற்று.

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் புராணம்

காரணபங் கயம்ஐந்தின்
கடவுளர்தம் பதங்கடந்து
பூரணமெய்ப் பரஞ்சோதி
பொலிந்திலங்கு நாதாந்தத்
தாரணையால் சிவத்தடைந்த
சித்தத்தார் தனிமன்றுள்
ஆரணகா ரணக்கூத்தர்
அடித்தொண்டின் வழியடைந்தார். **#3899**

நான்முகன் முதலான காரணக் கடவுளர் ஐவர்க்கும் உரிய ஐந்து தாமரைகளுடன் இருக்கும் இடங்களைக் கடந்து, மேற்சென்று, அப்பால் நிறைவுடையதாய், உள் பொருளாய், தூண்டப்படாத பேரொளியாய் உள்ள சிவம், ஞான ஒளிவீசி விளங்கும் நாதமுடிவில் உள்ளத்தைச் செலுத்த, அவ்விடத்தில் காணப்பெறும் சிவபரம் பொருளிடத்தில் நிறுத்திய சித்தத்தைக் கொண்டிருப்பவர் `சித்ததைச் சிவன்பால் வைத்தார்' என்பார்; இவர் தமக்கு உவமையில்லாத அம்பலத்துள் விளங்கும் நான்மறையின் முதல்வராய கூத்தப் பெருமானாரின் திருவடித் தொண்டின் வழியில் நின்று அவரை அடைந்தவர் ஆவர்.

விளக்கவுரை

ஐந்தின் காரணக் கடவுளர், பங்கயக் கடவுளர் எனத் தனித் தனியே கூட்டுக. படைத்தல் முதலிய ஐந்தொழில்களையும், அயன் முதலிய ஐவரையும் கொண்டு இறைவன் இயற்றுவித்தலின் இவ்வைவரும் `காரணக் கடவுளர்` எனப்பட்டனர். இவர்கள் ஐவ கைத் தாமரைப் பீடங்களில் வீற்றிருப்பவர் என்பர். இவர்களை இதயம் முதலாக உச்சித்துளை ஈறாகவுள்ள இடங்களில் வைத்து வழிபடல் வேண்டும். இவர்களுக்குரிய இடமும் பிறவும் முன்பக்கத்தில் உள்ள நிரல்கட்டத்தில் காண்க.:

1 அயன் இதயம் ல மண் நாற்கோணம் பொன்னிறம்
2 மால் கழுத்து வ நீர் அரைவட்ட வெண்ணிறம்
3 உருத் உள் ர தீ முக்கோணம் செந்நிறம் திரன் நாக்கு
4 மகேசன் புருவநடு ய வளி அறுகோணம் கருநிறம்
5 சதா உச்சித் ஹ வெளி வட்டம் புகைநிறம் சிவம் துளை

இவ்வகையில் வைத்துப் படிப்படியாக வழிபட, அதன் பயனாக உச்சித்துளை திறக்கும். திறக்க அதன்மீது *12* அங்குல உயரத்தில் உள்ள துவாத சாந்தப் பெருவெளியில் நாதவடிவாக இருந்தருளும் சிவத்தை எண்ணியவாறு அசைவற்றிருப்பதுவே சித்தத்தைச் சிவன்பாலே

வைத்தலாம். இந்நிலையில் இருந்தவர்களே இப்பெருமக்களாவர்.
பூரண மைய்ப்பரஞ்சோதி - எங்கும் நிறைந்தும், நிலையான தும், மேலானதுமான பேரொளி: சிவம். தாரணை - இவ்வாறு நிற்றலால் வரும் நிலை.

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் புராணம் முற்றிற்று.

திருவாரூர்ப் பிறந்தார் புராணம்

அருவாகி உருவாகி
அனைத்துமாய் நின்றபிரான்
மருவாரும் குழலுமையாள்
மணவாளன் மகிழ்ந்தருளும்
திருவாரூர்ப் பிறந்தார்கள்
திருத்தொண்டு தெரிந்துரைக்க
ஒருவாயால் சிறியேனால்
உரைக்கலாந் தகைமையதோ. **#3900**

அருவாயும், எல்லாப் பொருள்களுமாயும் விளங்கு கின்ற பெருமானாரும், மணம் பொருந்திய கூந்தலையுடைய உமை யம்மையாரின் கணவனாருமான, இறைவர், மகிழ்ந்து வீற்றிருக்கும் திருவாரூரில் பிறந்தவர்களின் திருத்தொண்டைச் சிறியேனால் ஒருவாயால் ஆராய்ந்து உரைக்க இயலும் தன்மைய தாகுமோ? ஆகாது! என்பதாம்.

விளக்கவுரை

`ஒரு நாவுக்குரை செய்ய ஒண்ணாமை உணராதேன்' என ஆசிரியர் முன்னர்க் கூறியதையும் *(தி.12 பு.21)* நினைவு கூர்க. இப்பாட்டு, பல ஏடுகளில் இல்லை என்பார் சிவக்கவிமணியார்.

திருக்கயிலை வீற்றிருந்த
சிவபெருமான் திருக்கணத்தார்
பெருக்கியசீர்த் திருவாரூர்ப்
பிறந்தார்கள் ஆதலினால்
தருக்கியஐம் பொறியடக்கி
மற்றவர்தந் தாள் வணங்கி
ஒருக்கியநெஞ் சுடையவர்க்கே
அணித்தாகும் உயர்நெறியே. **#3901**

மேன்மேலும் பெருகுதற்குரிய சிறப்பையுடைய திருவாரூரிடத்துப் பிறந்தவர்கள், திருக்கயிலையில் வீற்றிருக்கும் சிவபெருமானின் சிவகணங்களே ஆவர். எனவே, செருக்குடன் எழும் ஐம்பொறிகளையும் அடக்கி, அவர்களின் திருவடிகளை வணங்கி, ஒன்றித்த உள்ளம் உடையவர்க்கே உயர்நெறியானது அணியதாகும்.

விளக்கவுரை

பெருக்கிய சீர் - திருவாரூரின் சிறப்பு நாளும் பெருக நிற்பது, மேன்மேலும் வளர்தற்குரியது என்பார். `பெருக்கிய சீர்' என்றார். திருவாரூரில் பிறந்தவர்கள் அனைவரும் சிவகணங்களா தலை, `ஆரூரில்

பிறந்தார் எல்லாம் நம் கணங்கள் ஆன பரிசு காண்பாய்' *(தி.12 பு.27 பா.27)* எனப் பெருமான் நமிநந்தியடிகளுக்கு முன் அருளியவாற்றானும் அறியலாம். தருக்கி - செருக்குற்று. பொறிகள் தருக்குற்று உயிர்களை அலைக்குமாற்றை `மூள்வாய தொழில் பஞ்சேந்திரிய வஞ்ச முகரிகாள் முழுதும் இவ்வுலகை ஓடி நால்வாயும் நும்முடைய மம்மர் ஆணை நடத்துகின்றீர்க்கு ...... அலையேன் மின்னே' *(தி.6 ப.27 பா.9)* என ஆளுடைய அரசர் அறிவுறுத்து மாற்றானும் அறியலாம். உயர்நெறி - சிவப்பேறு.

திருவாரூர்ப் பிறந்தார் புராணம் முற்றிற்று.

முப்போதும்திருமேனி தீண்டுவார் புராணம்

எப்போதும் இனியபிரான்
இன்னருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த
விதிமுறைமை வழுவாமே
அப்போதைக் கப்போதும்
ஆர்வமிகும் அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார்
முதற்சைவ ராமுனிவர். #3902

எஞ்ஞான்றும் உயிர்களுக்கும் இனியவரான சிவபெருமானின் இனிய திருவருளால் பெருகி, உண்மையான சிவாகம ஞான நெறியில் நின்று, தவறாமல் அவ்வக் காலத்தோறும் ஆசை மிகும் அன்புடையவராகி, முக்காலத்தும் இறைவழிபாடாற்றி வருபவர்கள் ஆதிசைவரான முனிவர்கள் ஆவர்.

விளக்கவுரை

அதிகரித்து - பெருகி. இறைவனின் ஐம்முகங்களின் வழியாகத் தோன்றிய அகத்தியர், கௌதமர், பரத்துவாசர், காசிபர், கௌசிகர் ஆகிய ஐவர் வழி வந்து பெருகியவர்கள் ஆதலின் `இன்ன ருளால் அதிகரித்து' என்றார். மெய்ப்போதம் - உண்மை ஞானம். இதனைப் பெறுதற்குச் சிவாகமங்கள் உதவும். அந்நெறிவழி ஒழுகுப வர்களே இவ்வடியவர்கள் ஆவர். ஆறுகாலங்களிலும் வழிபாடு செய்விக்கும் இவர்கள், அவ்வக் காலத்தும் முற்காலத்தில் ஆற்றிய வழிபாட்டிற்கும் மேலாக அன்பும் ஆர்வமும் கொண்டு வழிபட்டும் வழிபாடு செய்வித்தும் வருபவர்கள் ஆவர். முதற் சைவர் - ஆதி சைவர்.

தெரிந்துணரின் முப்போதும்
செல்காலம் நிகழ்காலம்
வருங்கால மானவற்றின்
வழிவழியே திருத்தொண்டின்
விரும்பிஅர்ச் சனைகள்சிவ
வேதியர்க்கே யுரியனஅப்
பெருந்தகையார் குலப்பெருமை
யாம்புகழும் பெற்றியதோ. #3903

ஆராய்ந்து காணின், இறப்பு நிகழ்வு எதிர்வு என்று மூன்றாய்ப் பகுக்கப்படும் எக்காலத்திலும், வழிவழியாய்ச் சிவபெரு மானது அகம்படித் தொண்டில் விரும்பிய உள்ளத்தினராய் வழி பட்டும், போற்றியுரை செய்தும் வரும் மரபு சிவமறையோர்களுக்கே உரித்தாகும்.

அப் பெருந்தகையார்தம் குலத்தின் பெருமை, எம்மால் புகழப்படும் தன்மையதோ? அன்று என்பதாம்.

விளக்கவுரை

பெற்றியதோ - தன்மையதோ? அன்று என்பதாம். ஓகா ரம் எதிர்மறைப் பொருளது. முன்னைய பாடலில், நாளின் உட்பிரிவ ாகிய காலை, நண்பகல், மாலை ஆகிய முக்காலங்களிலும் வழிபா டாற்றுவோர் என்றார். இப்பாடலில் காலத்தின் உட்பிரிவாகிய, சில இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய எப்பொழுதும் வழிபாடாற்றுவோர் என்றார். இக் காலம் நாளின் உட்பிரிவாகிய பொழுதளவில் முக்காலங்களாய் அமையினும், வழிபாடாற்றும் காலம் நோக்கின் ஆறு காலங்களாய் அமையும். அவை விடியல், காலை, நண்பகல், மாலை, யாமம், (முன்னிரவு) நள்ளிரவு (அர்த்த யாமம்) எனும் ஆறுகாலங்களாம்.

நாரணற்கும் நான்முகற்கும் அறிய வொண்ணா
நாதனைஎம் பெருமானை ஞான மான
ஆரணத்தின் உட்பொருள்கள் அனைத்தும் மாகும்
அண்ணலைஎண் ணியகாலம் மூன்றும் அன்பின்
காரணத்தால் அர்ச்சிக்கும் மறையோர் தங்கள்
கமலமலர்க் கழல்வணங்கிக் கசிந்து சிந்தைப்
பூரணத்தான் முழுநீறுபூசி வாழும்
புனிதர்செயல் அறிந்தவா புகல லுற்றேன். **#3904**

திருமாலும் நான்முகனும் அறிய இயலாத இறை வனை, எம்பெருமானை, ஞானவயத்ததாய ஆகமங்களின் உட் கிடைப் பொருளாக விளங்கும் பெருமையுடைய பிரானை, மூன்று காலங்களிலும் அன்பு காரணமாக வழிபட்டுவரும், சிவ மறையோ ரின் தாமரை போன்ற திருவடிகளை வணங்கி, உள்ளம் கசிந்த நிறைவு டைமையால், முழுதும் திருநீற்றைப் பூசி வாழும் தூயவரின் செயலை அறிந்வாறு சொல்லப்புகுவாம். முப்போதும் திருமேனி தீண்டுவார் புராணம் முற்றிற்று.

விளக்கவுரை

****

முழுநீறு பூசிய முனிவர் புராணம்

சாதியினில் தலையான தரும சீலர்
தத்துவத்தின் நெறியுணர்ந்தோர் தங்கள் கொள்கை
நீதியினில் பிழையாது நெறியில் நிற்போர்
நித்தநிய மத்துநிகழ்அங்கி தன்னில்
பூதியினைப் புதியபா சனத்துக் கொண்டு
புலியதளின் உடையானைப் போற்றி நீற்றை
ஆதிவரும் மும்மலமும் அறுத்த வாய்மை
அருமுனிவர் முழுவதும்மெய் யணிவா ரன்றே. **#3905**

பிறப்பொழுக்கத்தில் தலைமையான அற ஒழுக் கத்தை உடையவர்களாய், மெய்யுணர்வு உடையவர்களாய், தாம் கொண்ட அறநெறியில் தவறாது நிற்பவர்களாய்த் தொன்று தொட்டு வரும் மும்மலங்களையும் அறுத்த வாய்மையுடைய அரிய முனிவர்கள், முறையாகச் செய்துவரும் நாள்வேள்வியில் விளைத்து எடுத்த திருநீற்றைப் புதிய கலத்தில் வைத்துக் கொண்டு, புலித் தோலை உடுத்த இறைவரை வணங்கி, அத்திருநீற்றை மேனி முழுவதும் பூசிக் கொள்வர். இவர்களே முழுநீறு பூசிய முனிவர் எனப்படுவார்.

விளக்கவுரை

புதிய பாசனம் - புதிய கலம்; பாத்திரம். இப்பாடற்கு முன்னர் ஐந்து பாடல்கள் அச்சிட்ட பல படிகளிலும் உள்ளன. எனினும் இவை பழைமையான ஏடுகள் பலவற்றிலும் காணப்படவில்லை ஆத லாலும், திருநீற்றின் வகையினையும் செய்முறைகளையும், அணியும் முறைகளையும் இங்குக் கூறுவது ஆசிரியர் திருவுள்ளமாயின், பத்த ராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் முதலிய தொகையடியார் வரலாறுகளிலும் அவ்வந் நெறி களையும் நீர்மைகளையும் விளங்கக் கூறியிருப்பர் ஆதலானும், இச் செய்யுட்களின் நடை, ஆசிரியரின் ஏனைய செய்யுள்களின் நடையி னும் முற்றிலும் மாறானவையாய் உள்ளன ஆதலாலும் இவை இடைச் செருகலாக இருக்க வேண்டும் என்றே துணிவர் சிவக்கவிமணியார். அத்துணிவே வன்மையும் உண்மையும் உடையது எனக் கருதி அவை இப்பதிப்பில் விடுக்கப்பட்டுள்ளன. முழுநீறு பூசிய முனிவர் புராணம் முற்றிற்று.

அப்பாலும் அடிச் சார்ந்தார் புராணம்

மூவேந்தர் தமிழ்வழங்கும் நாட்டுக்கு அப்பால்
முதல்வனார் அடிச்சார்ந்த முறைமை யோரும்
நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையில் கூறும்
நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்
பூவேய்ந்த நெடுஞ்சடைமேல் அடம்பு தும்பை
புதியமதி நதியிதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல்கொடியான் அடிச்சார்ந் தாரும்
செப்பியஅப் பாலும்அடிச் சார்ந்தார் தாமே. **#3906**

மூவேந்தர்களின் ஆளுகைக்குட்பட்ட தமிழ் வழங்கும் நாடுகளுக்கு அப்பால், சிவபெருமானின் அடியைச் சார்ந்து முறைமை வழுவாது நிற்பவர்களும், நம்பியாரூரரின் தெய்வ நலம் பொருந்திய திருநாவால் அருளிச் செய்யப்பட்ட திருத்தொண்டத் தொகையின்கண் அவரால் போற்றி வழிபடப் பெற்ற தொண்டர்களான தனியடியார் களின் காலத்துக்கு முன்னும் அதன் பின்னும், மலர்கள் பொருந்திய நீண்ட சடையின் மேல் அடம்பு மலரும் தும்பை மலரும் கங்கையும் கொன்றையும் பொருந்தச் சூடியவரும், விடையைப் பொறித்த கொடியையுடையவருமான சிவபெருமானின் அடியைச் சார்ந்தவர் களும், சொல்லப்பட்ட அப்பாலும் அடிச் சார்ந்தார் எனக் கூறப் பெற்றவர் ஆவர்.

விளக்கவுரை

அப்பாலும் அடிச்சார்ந்தார் எனும் தொடர் தொகை நூலிலும், வகைநூலிலும் உள்ள தொடராகும். இத்தொடரில் உள்ள அப்பால் என்பதற்கு இடத்தாலும் காலத்தாலும் அப்பால் என உரை கண்ட ஆசிரியரின் திறம் அறிதற்குரியது. சுந்தரர் வணக்கம்

செற்றார்தம் புரம்எரித்த சிலையார் செல்வத்
திருமுருகன் பூண்டியினில் செல்லும் போதில்
சுற்றாரும் சிலை வேடர் கவர்ந்து கொண்ட
தொகு நிதியின் பரப்பெல்லாம் சுமந்து கொண்டு
முற்றாத முலைஉமையாள் பாகன் பூத
முதற் கணமேயுடன் செல்ல முடியாப் பேறு
பெற்றார்தங் கழல்பரவ அடியேன் முன்னைப்
பிறவியினிற் செய்ததவம் பெரிய வாமே. **#3907**

பகைவரின் முப்புரங்களையும் எரித்த மலை வில்லை ஏந்திய சிவபெருமானின் செல்வம் நிறைந்த திருமுருகன் பூண்டியின் வழியாகச் செல்லும்போது, தம்மைச் சுற்றி வளைத்த, பெருகிய வில் வேடர்கள்

வந்து மிக்க நிதியின் சுமைகளை எல்லாம் பறித்துக் கொள்ள, என்றும் முதிராத இளங் கொங்கைகளையுடைய உமை யொரு கூறராய இறைவரின் முதன்மையுடைய பூதகணங்கள், தாமே, பின் அப்பெரும் பொருளைச் சுமந்து கொண்டு உடன் வருமாறு அளவற்ற பெரும் பேற்றைப் பெற்ற நம்பியாரூரரின் திருவடிகளைப் போற்ற அடியேன் முன்னைப் பிறவியில் செய்த தவங்கள் மிகப் பலவாகும்.

விளக்கவுரை

பகைவரின் முப்புரங்களையும் எரித்த மலை வில்லை ஏந்திய சிவபெருமானின் செல்வம் நிறைந்த திருமுருகன் பூண்டியின் வழியாகச் செல்லும்போது, தம்மைச் சுற்றி வளைத்த, பெருகிய வில் வேடர்கள் வந்து மிக்க நிதியின் சுமைகளை எல்லாம் பறித்துக் கொள்ள, என்றும் முதிராத இளங் கொங்கைகளையுடைய உமை யொரு கூறராய இறைவரின் முதன்மையுடைய பூதகணங்கள், தாமே, பின் அப்பெரும் பொருளைச் சுமந்து கொண்டு உடன் வருமாறு அளவற்ற பெரும் பேற்றைப் பெற்ற நம்பியாரூரரின் திருவடிகளைப் போற்ற அடியேன் முன்னைப் பிறவியில் செய்த தவங்கள் மிகப் பலவாகும்.

பூசலார் நாயனார் புராணம்

அன்றினார் புரம் எரித்தார்க்
காலயம் எடுக்க எண்ணி
ஒன்றுமங் குதவா தாக
உணர்வினால் எடுக்கும் தன்மை
நன்றென மனத்தி னாலே
நல்லஆ லயந்தான் செய்த
நின்றவூர்ப் பூசலார்தம் நினை
வினை யுரைக்க லுற்றாம். **#3908**

பகைவரின் முப்புரங்களையும் எரித்த சிவபெருமானுக்கு ஒரு திருக்கோயில் அமைக்க நினைந்து, அதற்கு வேண்டும் நிதி ஒரு சிறிதும் அங்குக் கிடைக்காமல் போக, தம் நினைவளவில் அமைத்தலே தக்க பணியாகும் என்று கருதி, மனத்தில் நல்ல கோயிலை அமைத்த திருநின்றவூரில் தோன்றிய பூசலாரின் நினைவினாலாய வரலாற்றைக் கூறுவாம்.

விளக்கவுரை

அன்றினார் - பகைவர்; முப்புரத்தவர். பல ஏடுகளில் இப்பாட்டு இல்லை.

உலகினில் ஒழுக்கம் என்றும்
உயர்பெருந் தொண்டை நாட்டு
நலமிகு சிறப்பின் மிக்க
நான்மறை விளங்கும் மூதூர்
குலமுதற் சீலமென்றுங் குறை
விலா மறையோர் கொள்கை
நிலவிய செல்வம் மல்கி
நிகழ்திரு நின்ற வூராம். **#3909**

இவ்வுலகில் நல்லொழுக்கம் எக்காலத்தும் உயர்ந்து விளங்கும் பெருமையுடைய தொண்டை நாட்டில், நலம் மிக்க சிறப்பு களைக் கொண்டு நான்மறைகளும் விளங்குவதற்கு இடமான பழைய ஊர், குலத்திற்கு முதன்மையான ஒழுக்கத்தை எந்நாளும் கொண்டு ஒழுகுகின்ற குறைவற்ற மறையவர்கள் தம் கொள்கையில் நிலை நின்ற விளங்குதலாகிய செல்வம் பொருந்திய திரு நின்றவூராகும்.

விளக்கவுரை

குலம் முதற்சீலம் - குலத்திற்கு முதன்மையானது அரிய ஒழுக்கம் ஆகும். `ஒழுக்கம் உடைமை குடிமை', `பார்ப்பான் பிறப் பொழுக்கம் குன்றக் கெடும்' *(குறள், 134)* என்பனவாய திருக்குறளும் காண்க. கொள்கை நிலவிய செல்வம் - தாம் கொண்ட உயர்ந்த கோட்பாடுகளையே

செல்வமாகக் கொண்டு விளங்கும் தன்மை.

அருமறை மரபு வாழ
அப்பதி வந்து சிந்தை
தரும்உணர் வான வெல்லாந்
தம்பிரான் கழல்மேற் சார
வருநெறி மாறா அன்பு
வளர்ந்து எழ வாய்மைப்
பொருள்பெறு வேத நீதிக்
கலையுணர் பொலிவின் மிக்கார். **#3910**

அரிய மறைவழிவரும் மரபு வாழ, அப்பதியில் தோன்றிச் சித்தத்தில் வரும் உணர்வுகள் எல்லாம் சிவபெருமான் திருவடியில் சேருமாறு அமையும் நெறியினின்றும் பிறழாது, அன்பு வளர்ந்தோங்கத் தாமும் வளர்ந்து, மெய்ப் பொருளை அடைதற்கு ஏதுவான மறைக் கலைகளை உணரும் விளக்கத்தின் மிக்கார்.

விளக்கவுரை

இறைவன் திருவடிகளைச் சாரும் உணர்வுடன், அதனை அறிந்து போற்றுதற்குரிய கலைகளையும் பயின்றார் என்பது கருத்து.

அடுப்பது சிவன்பால் அன்பர்க்
காம்பணி செய்தல் என்றே
கொடுப்பதெவ் வகையுந் தேடி
அவர்கொளக் கொடுத்துக் கங்கை
மடுப்பொதி வேணி ஐயர்
மகிழ்ந்துறை வதற்கோர் கோயில்
எடுப்பது மனத்துக் கொண்டார்
இருநிதி இன்மை யெண்ணார். **#3911**

சிவபெருமானுக்கும் அவருடைய அன்பர்களுக்கும் ஆகும் பணிகளைச் செய்தலே தக்கது என்று துணிந்து, அடியவர்க ளுக்குக் கொடுப்பதற்கென எவ்வகையாலும் பொருளைத் தேடி, அவர்கள் கொள்ளும்படி தந்து, திருக்கோயில் அமைப்பதற்குப் பெருந்திரளான செல்வம் தம்மிடம் இல்லாமையை எண்ணாதவராய்க் கங்கை தங்கிய சடையையுடைய இறைவர் மகிழ்ந்து எழுந்தருளி இருப்பதற்கு என ஒரு கோயிலைக் கட்டும் செயலையும் தம் உள்ளத் தில் கொண்டார்.

விளக்கவுரை

அடுப்பது - செயத்தகுவது. இருநிதி - பெருஞ் செல்வம்.

மனத்தினால் கருதி எங்கும்
மாநிதி வருந்தித் தேடி

எனைத்துமோர் பொருட்பே றின்றி
என்செய்கேன் என்று நைவார்
நினைப்பினால் எடுக்க நேர்ந்து
நிகழ்வுறு நிதிய மெல்லாம்
தினைத்துணை முதலாத் தேடிச்
சிந்தையால் திரட்டிக் கொண்டார். **#3912**

திருக்கோயில் அமைத்தற்கென வேண்டும் பொரு ளைத் தேடிப், பெறும் இடங்களை உள்ளத்தால் நினைத்து, எங்கும் அப்பெருஞ் செல்வத்தை வருந்தித் தேடியும், ஒரு சிறிதும் அதனைப் பெறும் பேறு கிட்டாதவராய், இனி என் செய்வேன் என்று வருந்தி, நினைவால் கோயில் எடுக்க எண்ணித் துணிந்து, அச் செயல் நிகழ்வதற்குரிய செல்வங்களையெல்லாம் தினையளவு கிடைப்பினும் அதனையும் சிறிதுசிறிதாக உள்ளத்தால் சேர்த்துக் கொண்டனர்.

விளக்கவுரை

குறிப்புரை இல்லை

சாதனத் தோடு தச்சர்
தம்மையும் மனத்தால் தேடி
நாதனுக் கால யஞ்செய்
நலம்பெறும் நன்னாள் கொண்டே
ஆதரித்து ஆக மத்தால்
அடிநிலை பாரித் தன்பால்
காதலில் கங்குற் போதுங்
கண்படா தெடுக்க லுற்றார். **#3913**

திருக்கோயிலைக் கட்டுவதற்குரிய சாதனங்களுடன் தச்சர்களையும் மனத்தால் தேடிக் கொண்டு, இறைவற்குக் கோயில் எடுப்பிப்பதற்குரிய நலம்மிக்க நல்ல நாளையும் பொழுதையும் குறிக்கொண்டு, விரும்பி, ஆகம நெறியின் படி, அடிநிலை எடுத்து, அன்பின் நிறைவினால் ஆசை மிகுந்து, இரவிலும் பகலிலும் உறங்காது கோயில் எடுக்கலானார்.

விளக்கவுரை

சாதனம் - திருக்கோயிலை எடுப்பித்தற்குரிய கல், மண், மரவகைகள் முதலாயின. தச்சர் - ஈண்டு மரவேலை செய்வாரே யன்றி, மண், கல் முதலியன கொண்டு ஏனைய பணிகள் செய்வாரை யும் குறித்து நின்றது. அடிநிலை - மேல் எடுக்கப்படும் கட்டடம், நிலைபெறுவதற்காகக் கற்களால் மண்ணின் கீழ் எடுக்கப்படுவது; இதனை அத்திவாரம் என்பர். பாரித்தல் - கால் கொள்ளுதல்.

அடிமுதல் உபான மாதி

யாகிய படைக ளெல்லாம்
வடிவுறுந் தொழில்கள் முற்ற
மனத்தினால் வகுத்து மான
முடிவுறு சிகரந் தானும்
முன்னிய முழத்திற் கொண்டு
நெடிதுநாள் கூடக் கோயில்
நிரம்பிட நினைவால் செய்தார். **#3914**

திருக்கோயிலின் அடிநிலை முதல், திருக் கோபுரத்தின் அடிப்பகுதி வரையிலான அடுக்குகள் எல்லாவற்றையும் ஓவிய வேலைப்பாடுகள் பொருந்த மனத்தால் அமைத்து, விமானத் தின் முடிவில் அமையும் சிகரமும், ஆகமத்தில் விதிக்கப்பட்ட முழு அளவில் கொண்டு, நீண்ட நாள்கள் செல்ல, கோயில் நிறைவுபட அனைத்தையும் நினைவால் செய்தார்.

விளக்கவுரை

உபானம் - திருக்கோபுரத்தின் அடிக்கீழ் அமைக்கப் பெறும் முதல் சித்திர வரி. படை - அடுக்கு, இக்காலத்தும் சுவர் எடுக்கும் பொழுது குறிப்பிட்டதொரு அளவுடையதாக மேன்மேல் எடுத்துச் செல்லும் அடுக்குகளைப் படை என்பர். முன்னிய முழும் - விதித்த முழு அளவு.

தூபியும் நட்டு மிக்க
சுதையும்நல் வினையுஞ் செய்து
கூவலும் அமைத்து மாடு
கோயில்சூழ் மதிலும் போக்கி
வாவியுந் தொட்டு மற்றும்
வேண்டுவ வகுத்து மன்னும்
தாபனம் சிவனுக் கேற்க
விதித்தநாள் சாரும் நாளில். **#3915**

தூபியையும் பொருத்தி, நிறம் பொருந்திய கலவை பூசி, மேல் சிற்பங்களுக்குரிய ஒப்பனை வகைகளையும் செய்து, திருமுழுக்கிற்கெனத் தூயநீர் அமைந்த கிணறும் அமைத்துப், பக்கத் திலும் கோயில் சுற்றிலும் மதில்களை எடுத்துக், குளம் அமைத்து, மேலும் வேண்டுவனவற்றையும் வகைபடச் செய்து, நிலைபெற்ற இலிங்கத்திருமேனியில் சிவபெருமான் எழுந்தருளுமாறு உறுதிப் படுத்திய நாள் நெருங்கும்பொழுது,

விளக்கவுரை

தூபியும் நட்டு - திருக்கோவிலின் விமானத்து உச்சியில் கூரிய சிகரம் அமைதற்கெனத் தறியை அமைத்து. கூவல் - கிணறு. தொட்டு -

அகழ்ந்து. மன்னுதாபரம் - சிவபரம்பொருளைச் சிவலிங்கத் திருமேனியில் எழுந்தருளுதற்கெனச் செய்யப்படும் செயற்பாடுகள்: குடமுழுக்கு விழாச் செய்தல்.

காடவர் கோமான் கச்சிக்
கற்றளி எடுத்து முற்ற
மாடெலாஞ் சிவனுக் காகப்
பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்
நாடமால் அறியா தாரைத்
தாபிக்கும் அந்நாள் முன்னால்
ஏடலர் கொன்றை வேய்ந்தார்
இரவிடைக் கனவில் எய்தி. **#3916**

பல்லவ மன்னனாய இராசசிம்மன் காஞ்சி மாநகரத் தில் கற்கோயில் எடுப்பித்து, முழுமையாக அதன் பக்கங்களில் எல்லாம் சிவனுக்காகப் பெருஞ் செல்வங்களை நியமிப்பவன், திருமாலும் தேடற்கு அரியவரான இறைவரைத் திருக்கோயிலில் எழுந்தருளு வித்தற்கென நியமித்த அந்நாளுக்கு முன்னைய நாளில், இதழ்கள் விரிகின்ற கொன்றை மலர்களைச் சூடிய இறைவர், இரவில் அவனது கனவில் தோன்றி,

விளக்கவுரை

இராசசிம்மன்: இவன் பரமேசுவர வர்மனின் மகன். கி.பி. *666 - 705* வரை ஆண்டவன். மாபெரும் வீரன். சிறந்த சிவ பத்தன். சைவசித்தாந்தத்தில் பேரறிவுடையவன். இசைப்புலவன். இவன் கட்டிய கோயில் காஞ்சிக் கயிலாய நாதர் கோயில் ஆகும்.

நின்றவூர்ப் பூசல் அன்பன்
நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ டால யத்து
நாளைநாம் புகுவோம் நீயிங்கு
ஒன்றிய செயலை நாளை
ஒழிந்துபின் கொள்வாய் என்று
கொன்றைவார் சடையார் தொண்டர்
கோயில் கொண்டருளப் போந்தார். **#3917**

'திருநின்றவூரில் உள்ள பூசல் என்ற அன்பன் நீண்ட நாட்களாக நினைவளவில் செய்த நன்மையால் நீடும் கோயிலில், நாளை நாம் புகுவோம்: எனவே, இங்குக் கனவில் பொருந்திய செய்கையை (குடமுழுக்கின்) நாளை வைத்துள்ளமையை மாற்றிக் கொள்க' என்று கூறிக், கொன்றை சூடிய நீண்ட சடையுடைய இறைவர் பூசலாரின் கோயிலின் எழுந்தருளுவித்திருக்கும் திருமேனியைக் கொண்டருள எழுந்தருளினார்.

விளக்கவுரை

இராசசிம்மன் கட்டிய கயிலாசநாதர் கோயில் கல்வெட்டில், 'துஷ்யந்தன் முதலானோர் வான் ஒலி கேட்டதில் வியப்பில்லை. நற்குணம் பறந்தோடிப் போன இக்காலத்தில் அவ்வான் ஒலியை ஸ்ரீபரன் (இராசசிம்மன்) கேட்டது வியப்பே' என வரும் பகுதி, இவ்வரலாற்றிற்கு அரண் செய்யும், நன்று நீடு - நலங்கள் பலவும் நீடிய.

தொண்டரை விளக்கத் தூயோன்
அருள்செயத் துயிலை நீங்கித்
திண்டிறல் மன்னன் அந்தத்
திருப்பணி செய்தார் தம்மைக்
கண்டுதான் வணங்க வேண்டும்
என்றெழுங் காத லோடும்
தண்டலைச் சூழல் சூழ்ந்த
நின்றவூர் வந்து சார்ந்தான். **#3918**

தொண்டரான பூசலாரை இந்நிலவுலகத்தவர் அறி யும் பொருட்டுத் தூய சிவபெருமான் இங்ஙனம் கூறியருள, உறக் கத்தை விட்டு எழுந்த, திண்ணிய ஆற்றலையுடைய அம் மன்னன், `அத்தகைய திருப்பணி செய்தவரைக் கண்டு நான் வணங்க வேண்டும்!' என்று மேன்மேலும் எழுகின்ற பெருவிருப்பத்தோடும் சோலைகள் சூழ்ந்த திருநின்றவூரை அடைந்தான்.

விளக்கவுரை

தண்டலை - சோலைகள்.

அப்பதி யணைந்து பூசல்
அன்பரிங் கமைத்த கோயில்
எப்புடை யதுஎன் றுஅங்கண்
எய்தினார் தம்மைக் கேட்கச்
செப்பிய பூசல் கோயில்
செய்ததொன் றில்லை யென்றார்
மெய்ப்பெரு மறையோர் எல்லாம்
வருகஎன் றுரைத்தான் வேந்தன். **#3919**

மன்னன், அத் திருநின்றவூரை அடைந்து பூசலார் என்ற அடியவர் கட்டிய கோயில் எம் மருங்கில் உள்ளது? என்று அங்கு இருந்தவர்களைக் கேட்க, நீங்கள் கூறுமாறு பூசலார் கோயில் ஏதும் கட்டியது இல்லை! என்று உரைத்தனர். அது கேட்ட அரசன், மெய்யுணர்வு தலைப்பட்ட அந்தணர்கள் எல்லாம் ஒருங்கு வருக! என்று ஆணையிட்டான்.

விளக்கவுரை

குறிப்புரை இல்லை

பூசுர ரெல்லாம் வந்து
புரவலன் தன்னைக் காண
மாசிலாப் பூச லார்தாம்
ஆரென மறையோ ரெல்லாம்
ஆசில்வே தியன்இவ் வூரான்
என்றவ ரழைக்க வொட்டா
தீசனார் அன்பர் தம்பால்
எய்தினான் வெய்ய வேலான். **#3920**

(அவ்வாணையின் வண்ணம்) அப்பதியிலுள்ள அந்தணர்கள் எல்லாம் வந்து பல்லவ மன்னனைக் காணக், `குற்றம் இல்லாத பூசலார் என்பவர் யார்?' என்று மன்னன் வினவ, அம் மறையவர் எல்லாம் `அவர் குற்றமற்ற அந்தணர்! இவ்வூரினர்' என்று கூறினர். அவ்வாறு கூறிய அவர்களைப் பூசலாரை அழைத்து வருமாறு அனுப்பாது, இறைவரின் அன்பரான அப்பூசலாரிடத்தில் கொடிய வேலையுடைய மன்னன் தானே சென்று அடைந்தான்.

விளக்கவுரை

அடியவரைத் தம்பால் அழையாது, அடியவரிடத்துத் தான் சென்றான் எனவே, அவ்வடியவரிடத்து அரசனுக்கு இருந்த பத்திமை புலனாகின்றது.

தொண்டரைச் சென்று கண்ட
மன்னவன் தொழுது நீர்இங்கு
எண்திசை யோரும் ஏத்த
எடுத்தஆ லயந்தான் யாதிங்கு
அண்டர்நா யகரைத் தாபித்
தருளும்நாள் இன்றென்று உம்மைக்
கண்டடி பணிய வந்தேன்
கண்ணுதல் அருள்பெற் றென்றான். **#3921**

அத்தொண்டரை சென்று கண்ட மன்னன், அவரை வணங்கித் தாங்கள் இவ்விடத்துத் தேவர் பெருமானான சிவபெருமா னைத் தங்கள் கோயிலில் எழுந்தருளுவிக்கும் நாள் இன்று எனத் தெரிந்து, கண்ணுதல் பெருமானின் திருவருளால், உங்களைக் கண்டு, திருவடிகளை வணங்குவதற்கு வந்தேன் எனக் கூறினன்.

விளக்கவுரை

குறிப்புரை இல்லை

மன்னவன் உரைப்பக் கேட்ட

அன்பர்தாம் மருண்டு நோக்கி
என்னையோர் பொருளாக் கொண்டே
எம்பிரான் அருள்செய் தாரேல்
முன்வரு நிதியி லாமை
மனத்தினால் முயன்று கோயில்
இன்னதாம் என்று சிந்தித்
தெடுத்தவா றெடுத்துச் சொன்னார். **#3922**

இங்ஙனம் பல்லவ மன்னன் சொல்லக் கேட்ட பூசலார் நாயனார், வியப்படைந்து அவரைப் பார்த்து, `என்னையும் ஒரு பொருளாகக் கொண்டு எம் பெருமானார் இவ்வாறு அருளிச் செய்தாராயின், முன்னதாக வேண்டும் நிதி கிடையாமையால், உள்ளத்தினால் முயன்று நினைவளவில் செய்த கோயில் இதுவாகும்' என்று தம் சிந்தனையின் செயலாகச் செய்த கோயிலைத் தாம் விளங்க எடுத்துச் சொன்னார்.

விளக்கவுரை

என்னையும் என்புழி உம்மை இழிவு சிறப்பின்கண் வந்தது. இதனால் அடியவரின் அடக்க வுணர்வு புலனாகின்றது.

அரசனும் அதனைக் கேட்டங்
கதிசய மெய்தி என்னே
புரையறு சிந்தை யன்பர்
பெருமையென் றவரைப் போற்றி
விரைசெறி மாலை தாழ
நிலமிசை வீழ்ந்து தாழ்ந்து
முரசெறி தானை யோடு
மீண்டுதன் மூதூர் புக்கான். **#3923**

அரசனும் அவ்வடியார் கூறியதைக் கேட்டு, மிக்க வியப்படைந்து 'குற்றமில்லாத அன்பரின் பெருமை இருந்தவாறு என்னே!' என்று அவரைப் போற்றி, வணங்கி, நறுமணம் மிக்க மாலை கீழே படியுமாறு நிலத்தில் விழுந்து வணங்கி, முரசுகள் ஒலிக்கும் படைகளுடன் திரும்பித் தன் பழைய ஊரை அடைந்தான்.

விளக்கவுரை

மூதூர் - காஞ்சி மாநகரம்.

அன்பரும் அமைத்த சிந்தை
ஆலயத் தரனார் தம்மை
நன்பெரும் பொழுது சாரத்
தாபித்து நலத்தி னோடும்
பின்புபூ சனைக ளெல்லாம்

பெருமையிற் பலநாள் பேணிப்
பொன்புனை மன்று ளாடும்
பொற்கழல் நீழல் புக்கார். #3924

அன்பரான பூசலாரும், தம் உள்ளத்தில் அமைத்த திருக்கோயிலில் சிவபெருமானை, நாளும் ஓரையும் நலம் மிகவந்த அமையத்து எழுந்தருளுவித்து, நன்மைமிக அதன் பின்பு செய்ய வேண்டிய வழிபாடுகளை எல்லாம் பல நாள்கள் விரும்பிச் செய்து, வாழ்ந்து கொண்டிருந்த நிலையில், பொன்னால் ஆய அம்பலத்தில் ஆடும் கூத்தப்பெருமானின் அழகிய திருவடி நீழலைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

நல்ல பெரும் பொழுது - நல்ல நேரம்; குடமுழுக்குச் செய்தற்குரிய நேரம்.

நீண்டசெஞ் சடையி னார்க்கு
நினைப்பினாற் கோயி லாக்கிப்
பூண்டஅன்பு இடைய றாத
பூசலார் பொற்றாள் போற்றி
ஆண்டகை வளவர் கோமான்
உலகுய்ய அளித்த செல்வப்
பாண்டிமா தேவி யார்தம்
பாதங்கள் பரவ லுற்றேன். #3925

மிக நீண்ட சிவந்த சடையையுடைய இறைவற்கு உள்ளத்திலேயே கோயில் அமைத்துத் தாம் கொண்ட அன்பினை இடையறாது செலுத்திய பூசலாரின் பொன்னடிகளைப் போற்றி, ஆண்மைமிக்க சோழர் பெருமான் உலகம் உய்யப் பெற்றுக் கொடுத்த செல்வப் பாண்டி மாதேவியரான மங்கையர்க்கரசி அம்மையாரின் திருவடிகளைப் போற்றப் புகுகின்றேன்.

விளக்கவுரை

குறிப்புரை இல்லை

மங்கையர்க்கரசி அம்மையார் புராணம்

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நாடு உற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழலெம்மாற் போற்ற லாமே. **#3926**

மங்கையர்க்கு எல்லாம் ஒப்பில்லாத பேரரசியும், எம் தெய்வமும், சோழரின் குலக்கொழுந்தாக விளங்குபவரும், வளை யலை அணிந்த பெருமையுடையவரும், செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற திருமகளைப் போன்றவரும், பாண்டி நாட்டை ஆளும் பாண்டியரின் குலத்திற்கு உண்டான பழியைப் போக்கிய தெய்வத் தன்மையுடைய பாவை போல்பவரும், எங்களுடைய பெருமானா ரான சீகாழித் தலைவரின் அருளால் பெரிய தமிழ் நாட்டிற்கு நேர்ந்த துன்பத்தைப் போக்கி, மேலோங்கிய ஒளியைத் தரும் நீருநீற்றைப் பரவச் செய்தவருமான மங்கையர்க்கரசியாரைப் போற்றுபவரின் திருவடிகள் எம்மால் போற்றத்தகுவதாகும்.

விளக்கவுரை

வளவர் - சோழர்; மங்கையர்க்கரசியாரின் தந்தை. இவர் பெயர் மணிமுடிச்சோழன் எனத் திருஞானசம்பந்தர் திருவாக் கால் தெரியவருகிறது. உறையூரில் இருந்து அரசாண்ட இவரை, நின்றசீர்நெடுமாறன் ஆய மாறவர்மன் அரிகேசரி ஒரு போரில் வென்று, உறையூரைக் கைப்பற்றினார் என வேள்விக்குடிச் செப்பேடு கள் கூறுகின்றன. எனவே மாறவர்மனார் முதலில் இச் சோழமன் னனை வென்று, பின் அவ்வளவன் வேண்ட, அவர் மகள் மங்கை யர்க்கரசியாரை மணந்து உறவு கொண்டனர் என உய்த்துணரலாம் என்பர் பண்டாரத்தார். *(பாண்டியர் வரலாறு : பக்கம் - 40)* மானம் - பெருமை; அதனை உடையவர் மானி. இப்பெரு மாட்டியார் திரு ஞானசம்பந்தர் அருளிய `மங்கையர்க்கரசி' *(தி.3 ப.120)* எனத் தொடங்கும் திருப்பதிகத்தில் *1, 3, 5, 7, 9* ஆகிய பாடல்களில் தனித்தும் பதினொராவது பாடலில் குலச்சிறையாரோடு சேர்த்தும் புகழப் பெற்றவர். இவ்வரிய பதிகத்தை உளங்கொண்டே சேக்கிழார் பெருமான் மங்கையர்க்கரசியார் வரலாற்றை இருபாடல்களில் கூறியருள்கின்றார். அவ்வருமை ஒப்பிட்டு மகிழத்தக்கதாம்.

பூசுரர்சூ ளாமணியாம் புகலி வேந்தர்
போனகஞா னம்பொழிந்த புனித வாக்கால்
தேசுடைய பாடல்பெறும் தவத்தி னாரைச்
செப்புவதியாம் என்னறிந்து தென்னர் கோமான்
மாசில்புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ
வழித்துணையாய் நெடுங்காலம் மன்னிப் பின்னை
ஆசில்நெறி யவரோடுங் கூட ஈசர்
அடிநிழற்கீழ் அமர்ந்திருக்க அருளும் பெற்றார். **#3927**

அந்தணர் தலைவரான சீகாழி வேந்தர் சிவஞான முண்டு அருளிய தூய திருவாக்கினால் ஞான ஒளியுடைய பாடலால் பாராட்டப் பெறுவதற்கு உரிய பெரிய முன்னைத் தவமுடைய அம்மையாரின் பெருமையை நாம் என்னவென்று அறிந்து போற்ற வல்லோம்? பாண்டி மன்னராகவும் குற்றம் நீங்கிய புகழையுடைய வருமான நின்றசீர் நெடுமாறனாருக்குச் சைவத்திறத்தின் வழித் துணையாகி நீண்ட காலம் நிலை பெற்றிருந்து, பின்னர்க் குற்றமற்ற சிவபுண்ணியப் பயனால் அவரொடும் கூட இறைவரின் திருவடியின் கீழே நிலைபெற்றிருக்கும் திருவருளையும் பெற்றார்.

விளக்கவுரை

பூசுரர் - மறையவர். சூளாமணி - முடிமணி.

வருநாளென் றும்பிழையாத் தெய்வப் பொன்னி
வளம்பெருக்க வளவர்குலம் பெருக்கும் தங்கள்
திருநாடு போற்செழியர் தென்னாடு விளக்கும்
சீர்விளக்கின் செய்யசீ றடிகள் போற்றி
ஒருநாளுந் தன்செயலில் வழுவாது அன்பர்க்கு
உடைகீளுங்கோவணமும் நெய்து நல்கும்
பெருநாமச் சாலியர்தங் குலத்தில் வந்த
பெருந்தகையார் நேசர்திறம் பேச லுற்றாம். **#3928**

பூசுரர் - மறையவர். சூளாமணி - முடிமணி.

விளக்கவுரை

****

நேச நாயனார் புராணம்

சீர்வளர் சிறப்பின் மிக்க
செயல்முறை ஒழுக்கம் குன்றா
நார்வளர் சிந்தை வாய்மை
நன்மையார் மன்னி வாழும்
பார்வளர் புகழின் மிக்க
பழம்பதி மதிதோய் நெற்றிக்
கார்வளர் சிகர மாடக்
காம்பீலி என்ப தாகும். **#3929**

பெருமை மிகும் தன்மையுடைய சிறப்பு மிக்க செயல் முறைமைகளில் ஒழுக்கம் குறையாத அன்புமிக்க சிந்தையும், வாய்மையும், நன்மையும் மிக்கவரான நேச நாயனார், நிலை பெற்று வாழ்தற்கு இடனான, உலகத்தில் உயர்ந்த புகழால் மிக்க பழைய பதியாவது, பிறைச் சந்திரன் தவழ்கின்ற முகட்டினையும் மேகங்கள் தவழும் உச்சியையும் கொண்ட மாடங்கள் மிக்க `காம்பீலீ' என்னும் ஊராகும்.

விளக்கவுரை

காம்பீலீ என்னும் ஊர் பல்லாரி மாவட்டத்தில் காம்பீலீ என்னும் வட்டத்தில் உள்ள ஊராகும். இப்பதியில் தோன்றிய நேச நாயனார் தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறைப் பகுதியைச் சார்ந்த கூறை நாட்டில் வாழ்ந்து வந்தார் என்றும், இங்குள்ள சிவபெருமானின் திருக்கோயிலில் தம் பதியிலிருந்து கொணர்ந்த மூத்தபிள்ளையாரையும், இளைய பிள்ளையாரையும் (தண்டபாணி) எழுந்தருளுவித்து வழிபட்டார் என்றும் கூறுவர். கூறைநாட்டில் உள்ள சாலியர்களால் பங்குனித் திங்கள் உரோகிணி நாளில் இவருக்குக் குருபூசை விழா இன்றும் நிகழ்ந்து வருகிறது. *(காம்பீலீ = காம்பிலி)*

அந்நக ரதனில் வாழ்வார்
அறுவையர் குலத்து வந்தார்
மன்னிய தொழிலில் தங்கள்
மரபின் மேம்பாடு பெற்றார்
பன்னாகா பரணற் கன்பர்
பணிதலைக் கொண்டு பாதம்
சென்னியிற் கொண்டு போற்றுந்
தேசினார் நேசர் என்பார். **#3930**

அந்நகரத்தில் வாழ்பவரான நேச நாயனார் அறுவையர் (சாலியர்) குலத்தில் தோன்றியவர். நிலைபெற்ற நெசவுத் தொழிலில் தம் மரபில் உள்ளாரினும் மேன்மை அடைந்தவர். பாம்பை அணியாய் அணிந்த

சிவபெருமானுக்கு அடியவர்களாய் உள்ளவர்களின் பணியினைத் தலைக்கொண்டு போற்றி, அவர்களின் திருவடிகளைத் தலையில் சூடிப் பணிந்து ஏத்தும் இயல்பு உடையவர்.

விளக்கவுரை

சாலியர் - நெசவாளர். அறுவை - ஆடை. தறியினின்றும் அறுத்து எடுப்பதால் அறுவை எனப்பட்டது. இவை வெட்டி எடுப்பதால் வேட்டி என்றும், துணித்து எடுப்பதால் துணி என்றும் அழைக்கப் பெறுவனவாயின. இம் மரபில் தோன்றியவரே மதுரை அறுவை வாணிகர் இளவேட்டனார் என்னும் புலவராவர். இவர் கடைச்சங்க காலத்தவர். பன்னகம் - பாம்பு.

ஆங்கவர் மனத்தின் செய்கை
யரனடிப் போதுக் காக்கி
ஓங்கிய வாக்கின் செய்கை
யுயர்ந்தஅஞ் செழுத்துக் காக்கித்
தாங்குகைத் தொழிலின் செய்கை
தம்பிரான் அடியார்க் காகப்
பாங்குடை யுடையுங் கீளும்
பழுதில்கோ வணமும் நெய்வார். **#3931**

அந்நிலையில், அவர் தம் உள்ளத்தின் நினைவை சிவபெருமானின் திருவடி மலர்களுக்கு ஆக்கி, மேன் மேலும் ஓங்கிய வாக்கின் செயலை உயர்வுடைய ஐந்து எழுத்துக்கு ஆக்கி, மேற்கொண்ட கைத்தொழில் திறனையெல்லாம் தம் இறைவரின் அடியவர்களுக்காக ஆக்கி, நல்ல பான்மையுடைய கீள் உடையும், பழுது இல்லாத கோவணமும் ஆகிய இவற்றை நெய்துவருவாராகி,

விளக்கவுரை

மனத்தின் செய்கை - நினைதல், `நினையாது ஒரு போதும் இருந்தறியேன்` என்ற நாவரசர் திருவாக்கும் காண்க. `சிந்தனை நின்தனக்காக்கி நாயினேன் தன் கண் இணை நின் திருப்பாதப் போதுக் காக்கி, வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி, வாக்கு உன் மணிவார்த்தைக்கு ஆக்கி, ஐம்புலன்கள் ஆரத் தந்தனை` எனும் திருவாசகமும் ஈண்டு நினைவு கூர்தற்குரியதாம்.

உடையொடு நல்ல கீளும்
ஒப்பில்கோ வணமும் நெய்து
விடையவர் அடியார் வந்து
வேண்டுமாறு ஈயு மாற்றால்
இடையறா தளித்து நாளும்

அவர்கழல் இறைஞ்சி யேத்தி
அடைவுறு நலத்த ராகி
அரனடி நீழல் சேர்ந்தார். **#3932**

நல்ல உடையுடன் ஒப்பில்லாத கோவணத்தையும் நெய்து, ஆனேற்றை ஊர்தியாக உடைய சிவபெருமானின் அடியார்கள் வரின், அவர்கள் வேண்டியவாறே கொடுக்கும் முறைப்படி, இடையறாது கொடுத்து, நாளும் அவர்களின் திருவடிகளை வணங்கிப் போற்றி அடையத்தக்க நன்மையைப் பெற்றவராகிச் சிவபெருமானின் திருவடி நீழலைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

குறிப்புரை இல்லை

கற்றை வேணி முடியார்தங்
கழல்சேர் வதற்குக் கலந்தவினை
செற்ற நேசர் கழல்வணங்கிச்
சிறப்பால் முன்னைப் பிறப்புணர்ந்து
பெற்றம் உயர்த்தார்க் காலயங்கள்
பெருக அமைத்து மண்ணாண்ட
கொற்ற வேந்தர் கோச்செங்கட்
சோழர் பெருமை கூறுவாம். **#3933**

தொகுதியான சடையை முடியாக உடைய இறைவரின் திருவடிகளைச் சேர்வதற்கு ஏற்பத் தம்மைச் சார்ந்திருந்த வினைச் சார்புகளை அறுத்த நேச நாயனாரின் திருவடிகளை வணங்கித், தவச் சிறப்பால் தம் முன்னைப் பிறப்பையுணர்ந்து அவ்வுணர்ச்சியுடன் வந்து தோன்றி, விடைக் கொடியை உயர்த்திய இறைவற்குத் திருக்கோயில்கள் பலவற்றை எடுத்து, மண்ணுலகம் காவல் கொண்டு, வெற்றி பொருந்திய மன்னரான கோச்செங்கட்சோழரின் பெருமையை இனிச் சொல்லத் தொடங்குவாம்.

விளக்கவுரை

கற்றை - தொகுதி, கலந்தவினை - உயிரொடு கலந்த வினை.

கோச்செங்கட்சோழ நாயனார் புராணம்

துலையிற் புறவின் நிறையளித்த
சோழர் உரிமைச் சோணாட்டில்
அலையில் தரளம் அகிலொடுசந்
தணிநீர்ப் பொன்னி மணிகொழிக்கும்
குலையில் பெருகுஞ் சந்திரதீர்த்
தத்தின் மருங்கு குளிர்சோலை
நிலையில் பெருகுந் தருமிடைந்த
நெடுந்தண் கானம் ஒன்றுளதால். **#3934**

துலையின் தட்டில் வைத்துப் புறாவின் எடைக்கு ஒப்பத் தன் உடலின் தசையை அறுத்து வைத்து, நிறுத்துக் கொடுத்த, பேரரசர் சிபியின் மரபில் வரும் சோழர்களுக்கு உரிமையாயுள்ள சோழ நாட்டில், அலைகளால் முத்துக்களையும், அகிலுடன் சந்தன மரத்தையும் கொண்டு வரும் அழகான நீரையுடைய காவிரியாற்றின் மணிகளை ஒதுக்கும் கரையில் பெருகும் சந்திர தீர்த்தத்தின் அருகில், குளிர்ச்சியையுடைய சோலைகளில் நிலையாக வளர்கின்ற மரங்கள் நெருங்கிய நீண்ட குளிர்ந்த காடு ஒன்று இருந்தது.

விளக்கவுரை

துலை - தராசு. சிபி என்பார் சோழர் குலத்தில் தோன்றிய பேரரசர் ஆவர். இவர் சீகாழியில் வேள்வி செய்த பொழுது, இறைவர் இவர்தம் பண்பை விளக்குதற்காகத் திருவுளம் கொண்ட வகையில், தீக்கடவுள் ஒருபுறாவாகவும், இந்திரன் அதனைத் துரத்தி வரும் பருந்தாகவும் வரப், புறா தன்பால் அடைக்கலம் புக, அது தன் இரையென உரிமை கொண்டாடிய பருந்துக்கு, அப்புறாவின் எடையளவு தன் உடலை ஈந்து அளித்தனன். இவ்வரலாறே ஈண்டுக் குறிக்கப்படுகிறது. சந்திர தீர்த்தம் - தக்கன் வேள்வியில், சந்திரன் தனக்குற்ற குறையைத் தீர்க்க, தீர்த்தம் உண்டாக்கி, வழிபட்டு நன்மை அடைந்தான். ஆதலில் அவன் பெயர் அமைந்த நீர்நிலை உருவாயிற்று.

அப்பூங் கானில் வெண்ணாவல்
அதன்கீழ் முன்னாள் அரிதேடும்
மெய்ப்பூங் கழலார் வெளிப்படலும்
மிக்க தவத்தோர் வெள்ளானை
கைப்பூம் புனலு முகந்தாட்டிக்
கமழ்பூங் கொத்தும் அணிந்திறைஞ்சி
மைப்பூங் குவளைக் களத்தாரை
நாளும் வழிபட் டொழுகுமால். **#3935**

அப்பூங்காவில், வெண்ணாவல் மரத்தின் கீழ், முற்காலத்தில், திருமால் தேடிய உண்மை வடிவான மலர் போன்ற திருவடிகளையுடைய இறைவர் சிவலிங்கத் திருமேனி கொண்டு வெளிப்பட்டருள, பெருகிய தவத்தையுடைய ஒரு வெண்மையான யானை, ஒருநாள் தன் துதிக்கையால் அழகிய நீரை முகந்து அத் திருமேனிக்குத் திருமுழுக்காட்டி, நறுமணமுடைய மலர்க் கொத்துகளையும் அணிவித்து வழிபட, அவ்வன்பு மீதூர்ந்த நிலையில், கரிய குவளை போன்ற கழுத்தையுடைய இறைவரை நாள்தோறும் வழிபட்டு வந்தது.

விளக்கவுரை

மைப்பூங்குவளை - கருங்குவளை. திருக்கயிலையில் சிவகணத்தவராக வாழ்ந்தவர்களுள் மாலியவான், புட்பதந்தன் என்பார் இருவர். இவர்கள் தாம் மேற்கொண்டிருக்கும் சிவத் தொண்டில் தாம் தாமும் மேம்பட்டவர் என மாறுபட்டு, இறுதியாக மாலியவான் புட்பதந்தனை யானையாகுக என்றும், புட்பதந்தன் மாலியவானைச் சிலந்தியாகுக என்றும் சபித்துக் கொண்டனர். இருவரும் இறைவனின் ஆணையின் வண்ணம் யானையும் சிலந்தியுமாகத் தோன்றி இத் திருப்பதியில் தம்முள் மாறுபட்ட சிவத்தொண்டினை ஆற்றி வந்தனர். அந்நிலையில் அவர்கள் வழிபட்ட இடமே திருவானைக்கா ஆகும். இதனை வரும் பாடலால் அறியலாம். இங்குக் குறிக்கப்பெற்ற யானை புட்பதந்தன் ஆதலின் `மிக்க தவத்தோர் வெள்ளானை' என்றார் ஆசிரியர்.

ஆன செயலால் திருவானைக்
காவென்று அதற்குப் பெயராக
ஞான முடைய ஒருசிலந்தி
நம்பர் செம்பொன் திருமுடிமேல்
கானல் விரவும் சருகுஉதிரா
வண்ணங் கலந்த வாய்நூலால்
மேல்நல் திருமேற் கட்டியென
விரிந்து செறியப் புரிந்துளதால். **#3936**

முற்கூறிய அத்தகைய செயலால் அத்திருப்பதிக்குத் `திருவானைக்கா' எனப் பெயர் வழங்க, ஞானமுடைய சிலந்தி ஒன்று அவ்விறைவரின் சிவந்த பொன் மயமான திருமுடியின் மீது கதிரவ னின் வெம்மையும் உலர்ந்த சருகுகளும் படாதவாறு, தன்னுள் கலந்த வாய் நூலினால், முடிமேல் கட்டும் நல்ல மேற்கட்டி போல விரிவுடைய தாய வலையை நெருங்கச் செய்து அமைத்தது.

விளக்கவுரை

முற்பிறவியில் மாலியவான் என்னும் பெயர் உடைய சிவகணமே

சிலந்தியாய்த் தோன்றி இவ்வழிபாட்டைச் செய்தலின் `ஞானமுடைய சிலந்தி' என்றார் ஆசிரியர். கானல் விரவும் சருகு - வெப்பமும், வெண்நாவலில் பொருந்தி இருக்கும் சருகும். மேல் - திரு முடிமேல். நல் திருமேற்கட்டி - நல்ல அழகிய மேல் விதானம். ஆல் - அசைநிலை.

நன்றும் இழைத்த சிலம்பிவலைப்
பரப்பை நாதன் அடிவணங்கச்
சென்ற யானை அநுசிதம்என்
றதனைச் சிதைக்கச் சிலம்பிதான்
இன்று களிற்றின் கரஞ்சுலவிற்
றென்று மீள இழைத்துஅதனை
அன்று கழித்த பிற்றைநாள்
அடல்வெள் ளானை அழித்ததால். **#3937**

சிலந்தி நன்றாகக் கட்டிய வாய் நூல் வலையின் பரப்பை, இறைவர் திருவடியை வணங்கச் சென்ற யானை, `இது தூய்மையற்றது' என்று அழிக்க, `இன்று யானையின் கை சுழன்றதால் அந்த வலை அழிந்தது' என்று எண்ணிச், சிலந்தி மீண்டும் அந்த வலையை அமைக்க, அதனை மறுநாள் வலிமையுடைய யானை திரும்பவும் அழித்தது.

விளக்கவுரை

அநுசிதம் - தூய்மையற்றது. சிலந்தி தன் வாயால் இழைத்தமையின் அன்னதாயிற்று. கரம் சுலவிற்று - யானையின் துதிக்கை சுழற்றப்பட்டதால் அழிந்தது யானை அதனையும் அழிக்கும் பொழுது தன் துதிக்கையைச் சுழற்றி அழிக்கும். அவ்வியல்பே ஈண்டும் கூறப்பட்டது.

எம்பி ரான்தன் மேனியின்மேல்
சருகு விழாமை யானவருந்தி
உம்பர் இழைத்த நூல்வலயம்
அழிப்ப தேஎன்று உருத்தெழுந்து
வெம்பிச் சிலம்பி துதிக்கையினில்
புக்குக் கடிப்ப வேகத்தால்
கும்ப யானை கைநிலத்தின்
மோதிக் குலைந்து வீழ்ந்ததால். **#3938**

எம்பெருமான் திருமேனியின் மீது இலைச் சருகுகள் விழாது தடுப்பதற்காக, நான் வருந்தி மேற்கட்டியாக அமைத்த நூல் வலையை, இவ் யானை அழிப்பதா? என்று, மிகவும் சினந்து எழுந்து, சிலந்தி மனம் புழுங்கி, யானையின் துதிக்கையினுள்ளே புகுந்து கடிக்க, அச்செயலால் அந்த யானை தன் துதிக்கையைத் தரையில் அடித்து, மோதி, நிலை குலைந்து விழுந்து இறந்தது.

விளக்கவுரை
****

தரையிற் புடைப்பக் கைப்புக்க
சிலம்பி தானும் உயிர்நீங்க
மறையிற் பொருளுந் தருமாற்றான்
மதயா னைக்கும் வரங்கொடுத்து
முறையில் சிலம்பி தனைச்சோழர்
குலத்து வந்து முன்னுதித்து
நிறையிற் புவனங் காத்தளிக்க
அருள்செய் தருள நிலத்தின்கண். **#3939**

அவ்வானை, தன்கையை நிலத்தில் மோதியதால், துதிக்கையினுள் புகுந்த சிலந்தியும் உயிர் நீங்க, நான்மறையின் பொருளாக விளங்கும் இறைவர் அருள் வழங்கும் முறையினால், மதமுடைய அவ்வானைக்கு ஏற்ற வரத்தை அளித்து, முறைப்படி சிலந்தியைச் சோழர் குலத்தில் முற்படப் பிறந்து, இவ்வுலகம் அறநிலையில் நிற்குமாறு அரசு செய்ய அருள, இந்நிலவுலகில்,

விளக்கவுரை
****

தொன்மைதரு சோழர்குலத்
தரசனாம் சுபதேவன்
தன்னுடைய பெருந்தேவி
கமலவதி யுடன்சார்ந்து
மன்னுபுகழ்த் திருத்தில்லை
மன்றாடு மலர்ப்பாதம்
சென்னியுறப் பணிந்தேத்தித்
திருப்படிக்கீழ் வழிபடுநாள். **#3940**

பழம்பெருமையுடைய சோழர் குலத்தில் தோன்றி, சோழ நாட்டை ஆண்ட சுபதேவன் என்பான், தன் உரிமைக் கிழத்தியாம் கமலாவதியாருடன் சேர்ந்து, நிலைபெற்ற புகழையுடைய தில்லை நகரில், பொன்மன்றத்தில் ஆனந்தக் கூத்து இயற்றும் நடராசப் பெருமானின் மென்மையான திருவடியில், தலைதோயப் பணிந்து போற்றி, திருக்களிற்றுப்படியின் கீழிருந்து பணிசெய்துவரும் நாள்களில்.

விளக்கவுரை
****

மக்கட்பே றின்மையினால்
மாதேவி வரம்வேண்டச்

செக்கர்நெடுஞ் சடைக்கூத்தர்
திருவுள்ளஞ் செய்தலினால்
மிக்கதிருப் பணிசெய்த
சிலம்பிகுல வேந்துமகிழ்
அக்கமல வதிவயிற்றின்
அணிமகவாய் வந்தடைய. **#3941**

மக்கட்பேறு இல்லாமையால் அரசமாதேவி, அதனைப் பெறும் வரத்தை வேண்டச், செவ்வானம் போன்ற நீண்ட சடையையுடைய சிவபெருமானும் இரங்கித், திருவுளம் பற்றியதால், மிக்க பணியைச் செய்த சிலந்தியானது குலவேந்தன் மகிழும் தேவியான கமலவதியின் திருவயிற்றில் அழகிய ஆண் குழந்தையாய் வந்து சேர,

விளக்கவுரை

****

கழையார் தோளி கமலவதி
தன்பால் கருப்ப நாள்நிரம்பி
விழையார் மகவு பெறஅடுத்த
வேலை யதனில் காலம்உணர்
பழையார் ஒருநா ழிகைகழித்துப்
பிறக்கு மேல்இப் பசுங்குழவி
உழையார் புவனம் ஒருமூன்றும்
அளிக்கும் என்ன ஒள்ளிழையார். **#3942**

மூங்கிலைப் போன்ற தோளையுடைய கமலவதியின் இடத்தில் கருப்பம் முற்றும் நாள் நிரம்பி, யாவரும் விரும்பி ஏற்கும் குழந்தையைப் பெறுதற்குரிய நேரத்தில், கால நிலைமை அறியும் கணிதர்கள் (சோதிடர்கள்) `ஒரு நாழிகை கழித்துக் குழந்தை பிறக்கு மாயின், இடம் அகன்ற மூவுலகங்களையும் ஆட்சி செய்யும்' என்று கூறிய அளவில், அதனால் ஒளி விளங்கும் அணியை அணிந்த அரசமாதேவியும்,

விளக்கவுரை

விழைவார் மகவு - யாவரும் விரும்பத்தக்க குழந்தை. உழையார் புவனம் ஒரு மூன்றும் - இடம் அகன்ற மூவுலகங்களும்.

பிறவா தொருநா ழிகைகழித்துஎன்
பிள்ளை பிறக்கும் பரிசென்கால்
உறவார்த் தெடுத்துத் தூக்கும்என
வுற்ற செயன்மற் றதுமுற்றி
அறவா ணர்கள்சொல் லியகாலம்
அணையப் பிணிவிட்டு அருமணியை

இறவா தொழிவாள் பெற்றெடுத்துஎன்
கோச்செங் கண்ணா னோஎன்றாள். **#3943**

இப்பொழுது பிறவாமல், ஒரு நாழிகை கழித்து, இந்தப் பிள்ளை பிறந்தால், பிற்காலத்தில் உலகம் எல்லாம் காக்கும் பேறு பெறுவான் என்று அறவோர்கள் சொல்லிய நேரம் கடக்கும்வரை இருந்து, பின்னர் பெற்றெடுத்து, `நீ என் கோச்செங்கண்ணனோ?` என அழைத்தாள் கமலவதி.

விளக்கவுரை

****

தேவி புதல்வன் பெற்றிறக்கச்
செங்கோல் சோழன் சுபதேவன்
ஆவி அனைய அரும்புதல்வன்
தன்னை வளர்த்தங் கணிமகுடம்
மேவும் உரிமை முடிகவித்துத்
தானும் விரும்பு பெருந்தவத்தின்
தாவில் நெறியைச் சென்றடைந்து
தலைவர் சிவலோ கஞ்சார்ந்தான். **#3944**

தன் மனைவியான கமலவதி மகனைப் பெற்றெ டுத்து இறந்துவிடச், செங்கோன்மையுடைய சோழனான `சுபதேவன்', தன் உயிர் போன்ற அம்மகனை வளர்த்து, உரிய வயதில், அழகு பொருந்திய முடியைப் பொருந்திய தனயன் என்னும் உரிமைப்படி, முடிசூட்டி, அரசன் எனும் பட்டம் தந்து, தானும் விரும்புதற்குரிய பெரிய தவம் செய்தல் எனும் குற்றம் இல்லாத நெறியை மேற் கொண்டு, அதன் பயனாக இறைவரின் இருக்கையான சிவலோகத்தை எய்தினன்.

விளக்கவுரை

உரிமை முடி - தந்தை தனயன் என்னும் வழிவழி வரும் உரிமை மரபால் முடிசூட்டி.

கோதை வேலார் கோச்செங்கட்
சோழர் தாம்இக் குவலயத்தில்
ஆதி மூர்த்தி அருளால்முன்
அறிந்து பிறந்து மண்ணாள்வார்
பூத நாதன் தான்மகிழ்ந்து
பொருந்தும் பெருந்தண் சிவாலயங்கள்
காத லோடும் பலவெடுக்குந்
தொண்டு புரியுங் கடன்பூண்டார். **#3945**

மாலை அணிந்த வேலையுடைய கோச்செங்கட் சோழனார்,

இம்மண்ணுலகத்தில் முதன்மை பொருந்திய சிவபெரு மான் திருவருளால், தம்முன்னைப் பிறப்பின் நிலையை உணர்ந்த நினைவுடன் பிறந்து, அரசாள்பவராய், உயிர்கட்குத் தலைவரான இறைவர், தாம் மகிழ்வுடன் பொருந்தி வீற்றிருந்தருளும் பேரருள் நிறைந்த கோயில்கள் பலவற்றையும் பெருவிருப்பத்துடன் எடுப்பிக் கும் திருத்தொண்டை மேற்கொண்டார்.

விளக்கவுரை

கோதைவேல் ஆர் - மாலையையுடைய வேலைப் பொருந்திய. பெருந்தண் சிவாலயம் - மாடக்கோயில். முற்பிறவியில் யானை பகையாய் இருந்தமையின் இப்பிறவியில் அவ்வினங்களில் யாதொன்றும் ஏற இயலாதவாறு கோயில் எடுப்பித்தனன். இவ்வாறு அமைந்த கோயில்களை மாடக்கோயில் என்பர். இவ்வகையில் அமைந்த கோயில்கள் *78* ஆகும். `பெருங்கோயில் எழுபதினோடு எட்டும்`*(தி.6 ப.71 பா.5)* எனவரும் நாவரசர் திருவாக்கால் இவ் வுண்மை அறியப்படும். `எண்தோள் ஈசற்கு எழில் மாடம் எழுபது எடுத்தனன்` என்பர் ஆழ்வாரும்.

ஆனைக் காவில் தாம்முன்னம்
அருள்பெற் றதனை யறிந்தங்கு
மானைத் தரித்த திருக்கரத்தார்
மகிழுங் கோயில் செய்கின்றார்
ஞானச் சார்வாம் வெண்ணாவ
லுடனே கூட நலஞ்சிறக்கப்
பானற் களத்துத் தம்பெருமான்
அமருங் கோயிற் பணிசமைத்தார். **#3946**

திருவானைக்காவில் தாம் முற்பிறப்பில் திருவருள் பெற்றமையை அறிந்தவர் ஆதலால், அத்திருப்பதியில் மானை ஏந்திய கைகளையுடைய இறைவர் மகிழும் கோயிலை எடுப்பிப்பாராகி, மெய்ஞ்ஞானத்தின் சார்புடைய வெண்ணாவல் மரத்துடன் பொருந்த, நன்மை சிறந்தோங்க, நீலமலர் போன்ற கழுத்தையுடைய தம் இறைவர் வீற்றிருக்கும் கோயில் பணியைச் செய்து அமைத்தார்.

விளக்கவுரை

சம்பு முனிவர் உள்ளிட்ட பல முனிவர்களும் இருந்து தவம் செய்ததும், இறைவர் வெளிப்பட்டு அருளியதுமான சிறப்புக்கள் உடைமையின் `ஞானச்சார்பாம் வெண்ணாவல்` என்றார். இனித் தாம் ஞானச்சார்பு பெறுதற்காம் பொருட்டு கோயிற் பணியைச் செய்தார் எனப் பொருள் கோடலுமாம்.

மந்திரிகள் தமைஏவி
வள்ளல்கொடை அநபாயன்
முந்தைவருங் குலமுதலோ
ராயமுதற் செங்கணார்
அந்தமில்சீர்ச் சோணாட்டில்
அகல்நாடு தொறுமணியார்
சந்திரசே கரன்அமருந்
தானங்கள் பலசமைத்தார். **#3947**

கொடைச் சிறப்புடைய அநபாயப் பேரரசரின் முன்னோராக அமையும் குலமுதல்வரான முதன்மையுடைய கோச் செங்கண்ணனார், தம் அமைச்சர்களை அனுப்பி, சிறப்புமிக்க சோழ நாட்டில் அகன்ற பதிகள் தோறும் பிறையை ஏற்றருளும் சிவபெரு மான், விரும்பி எழுந்தருளுதற்கான அழகு நிறைந்த மாடக் கோயில் கள் பலவற்றையும் கட்டச் செய்தார்.

விளக்கவுரை

இச் சோழர் பெருமகனார் எடுப்பித்த கோயில்கள் *78* என நாவரசர் அருளியிருக்கவும், சேக்கிழார் அத்தொகை கூறாது `பல சமைத்தார்` என்றளவிலேயே கூறற்குக் காரணம், செய்த அறங்களைக் கணக்கிடலாகாது என்பது பற்றியும், நிறைவு செய்த கோயில்கள் மேற்கண்ட தொகைக்கு உரியன வேனும், மேலும் எடுப்பிக்க நினைந்த கோயில்கள் பலவாம் என்பது பற்றியும் ஆம் என விளக்கம் காண்பர் சிவக்கவிமணியார்.

அக்கோயில் தொறுஞ்சிவனுக்
கமுதுபடி முதலான
மிக்கபெருஞ் செல்வங்கள்
விருப்பினால் மிகஅமைத்துத்
திக்கனைத்துந் தனிச்செங்கோல்
முறைநிறுத்தித் தேர்வேந்தர்
முக்கண்முதல் நடமாடும்
முதல்தில்லை முன்னினார். **#3948**

அவ்வகையிலான கோயில்கள் தோறும் இறை வற்குத் திருவமுதுக்குரிய படித்தரம் முதலான அனைத்துச் செயல் களுக்கும் வேண்டிய பெருஞ் செல்வங்களைத் தம் விருப்பத்திற் கிணங்கப் பெரிதும் அமைத்து, எல்லாத் திசைகளிலும் ஒப்பில்லாத தம் செங்கோல் ஆணை முறையைச் செலுத்தி நிறுத்தித், தேர்ப்படையை உடைய கோச்செங்கண்ணனார் முக்கண்களையுடைய இறைவர் திருக்கூத்து இயற்றுகின்ற முதன்மையுடைய திருத்தில்லையை நினைந்து அடைந்தார்.

விளக்கவுரை

இறைவற்குரிய திருவமுது முதலாக உள்ள அனைத்துச் செயற்பாடுகளுக்கும் (ஆண்டாண்டு தோறும் தவறாது நிகழ்வதற் கென) நிலங்களாகவோ பணமாகவோ உரிய பொருள்களாகவோ கொடுக்கப்படும் பொருள்கள் `அறக்கட்டளை' எனப்படும். நாள் வழிபாடும் சிறப்பு வழிபாடும் தொடர்ந்து நிகழ இவ்வறக்கட்டளைகள் பயன்பட்டு வரும் என்று நம் முன்னோர் கருதினர்.

திருவார்ந்த செம்பொன்னின்
அம்பலத்தே நடஞ்செய்யும்
பெருமானை அடிவணங்கிப்
பேரன்பு தலைசிறப்ப
உருகாநின் றுளங்களிப்பத்
தொழுதேத்தி உறையும் நாள்
வருவாய்மை மறையவர்க்கு
மாளிகைகள் பலசமைத்தார். **#3949**

தெய்வத் தன்மை உடைய செம்பொன்னால் செய்யப்பெற்ற,பொன்னம்பலத்தில் நடம்புரியும் நடராசப் பெருமான் திருவடிகளை வணங்கி, பேரன்புடன், உள்ளம் உருகி நின்று வழிபட்டுவரும் நாளில், தொன்றுதொட்டுவரும் வாய்மை மறையவர்களாகிய தில்லைவாழந்தணர்களுக்குத் திருமாளிகைகள் பல எடுப்பித்து உதவினான்.

விளக்கவுரை

****

தேவர்பிரான் திருத்தொண்டில்
கோச்செங்கட் செம்பியர்கோன்
பூவலயம் பொதுநீக்கி
யாண்டருளிப் புவனியின்மேல்
ஏவியநல் தொண்டுபுரிந்
திமையவர்கள் அடிபோற்ற
மேவினார் திருத்தில்லை
வேந்தர்திரு வடிநிழற்கீழ். **#3950**

தேவதேவர்களின் தலைவனாகிய சிவபெருமானுக்குப் பல திருப்பணிகள் செய்து மகிழ்ந்த கோச்செங்கட்சோழன், உலகம் முழுவதும் நடுநலையோடு அரசு புரிந்து, நல்ல பல தொண்டுகளை இயற்றி, தேவர்கள் யாவரும் வாழ்த்த, தில்லைச்சிற்றம்பலப் பெருமான் திருவடிக்கீழ் எய்தினார் சிறந்து.

விளக்கவுரை

****

கருநீல மிடற்றார் செய்ய
கழலடி நீழல் சேர
வருநீர்மை யுடைய செங்கட்
சோழர்தம் மலர்த்தாள் வாழ்த்தித்
தருநீர்மை இசைகொள் யாழின்
தலைவராய் உலகம் ஏத்தும்
திருநீல கண்டப் பாணர்
திறம்இனிச் செப்ப லுற்றேன். **#3951**

கரிய நீல மலரைப் போன்ற கழுத்தையுடைய இறைவரின், செம்மை பொருந்திய திருவடி நீழலில் சேர்ந்து இன்புறும் கோச்செங்கட் சோழரின் மலர் போன்ற அடிகளை வாழ்த்தி, இனிய தன்மை பொருந்திய இசையை வழங்கும் யாழினது தலைவராய் உலகம் போற்றும் திருநீல கண்ட யாழ்ப்பாணரின் திறத்தை இனிச் சொல்லத் தொடங்குகின்றேன். கோச்செங்கட்சோழ நாயனார் புராணம் முற்றிற்று.

விளக்கவுரை

****

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் புராணம்

எருக்கத்தம் புலியூர் மன்னி
வாழ்பவர் இறைவன் தன்சீர்
திருத்தகும் யாழி லிட்டுப்
பரவுவார் செழுஞ்சோ ணாட்டில்
விருப்புறு தானம் எல்லாம்
பணிந்துபோய் விளங்கு கூடல்
பருப்பதச் சிலையார் மன்னும்
ஆலவாய் பணியச் சென்றார். **#3952**

திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருஎருக்கத்தம் புலியூரில் நிலைபெற்று வாழ்பவர், அவர் சிவபெருமானின் பொருள் சேர் புகழைச் சிறப்புடைய தமது தக்க யாழில் அமைத்துப் போற்று பவர், செழிப்புமிக்க சோழ நாட்டில் உள்ள பதிகள் அனைத்திற்கும் சென்று வணங்கி வருபவர், திருநான்மாடக்கூடல் என்னும் மதுரை யில் மலையை வில்லாக ஏந்திய சிவபெருமான் நிலைபெற எழுந் தருளியுள்ள திருஆலவாயினைப் பணியச் சென்றார்.

விளக்கவுரை

திருஎருக்கத்தம்புலியூர் - இராசேந்திரப் பட்டணம் என அழைப்பர். நடுநாட்டில் திருமுதுகுன்றத்திற்கு தெற்கே *12* கிமீ. தொலைவில் உள்ளது.

ஆலவாய் அமர்ந்தார் கோயில்
வாயிலை அடைந்து நின்று
பாலையீ ரேழு கோத்த
பண்ணினிற் கருவி வீக்கிக்
காலம் ஆதரித்த பண்ணில்
கைபல முறையும் ஆராய்ந்
தேலவார் குழலாள் பாகர்
பாணிகள் யாழில் இட்டார். **#3953**

திருவாலவாயில் விரும்பி வீற்றிருக்கும் இறை வரின் திருக்கோயிலின் வாயிலை அடைந்து, அங்கு நின்று, பாலையாய் நின்ற பதினான்கு வகையில் அமைந்த பண் பெறும்படி கருவியின் நரம்புகளை முறுக்கிப், பண்கள் பலவற்றுள்ளும் அக்காலத்துக்கு இசைந்த பண்ணில் நரம்புகளை விரலின் தொழிலால் பலமுறையும் அளந்தறிந்து, பண்ணின் அமைதி யாழ்க்கருவியில் வரப்பெற்ற பின் னர், மணம் கமழும் நீண்ட கூந்தலையுடைய உமை அம்மையாரை ஒரு கூற்றில் கொண்ட இறைவரின் இசைப் பாடல்களை யாழில் இசைத்தார்.

விளக்கவுரை

யாழிலிருந்து செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப் பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை என்ற ஏழிசைகளும் பிறக்கும். இவை வரன் முறை, இடமுறை எனத் திரிபு வகையால் இரு திறப்படப் பாலை ஈரேழு ஆகும் என்பர்.

மற்றவர் கருவிப் பாடல்
மதுரைநீ டால வாயில்
கொற்றவன் திருவுள் ளத்துக்
கொண்டுதன் தொண்டர்க் கெல்லாம்
அற்றைநாள் கனவில் ஏவ
அருட்பெரும் பாண னாரைத்
தெற்றினார் புரங்கள் செற்றார்
திருமுன்பு கொண்டு புக்கார். **#3954**

அப்பாணனாரின் யாழ்க்கருவியில் இசைக்கப் பெற்ற பாடலை மதுரையில் திருவாலவாயில் வீற்றிருக்கின்ற பெருமானார் தம் திருவுளத்தில் கொண்டருளி, தம் தொண்டர்களுக்கெல்லாம் அன்றைய கனவிலே தோன்றி ஆணையிட்டருளியவாறு, அவ்வடிய வர்கள், மறுநாள், சிவபெருமானின் அருளைப் பெற்ற பெரும் பாணனாரைப் பகைவரின் முப்புரங்களை எரித்த இறைவரின் திருமுன்பு கொண்டு புகுந்தனர்.

விளக்கவுரை

பெரும்பாணர், சிறுபாணர் என்ற பகுப்பு அவரவரும் கொண்டிருந்த யாழ் பற்றியதாகும். பெரும்பாணாற்றுப் படை, சிறுபாணாற்றுப் படை என வழங்குவதும் இதுபற்றியேயாம். பாணர் கள் அக்காலமரபில் கோயில்களில் உட்சென்று வணங்கத் தகாத வர்களாய் இருந்தனர். நம் பாணர் திருவருட் செல்வராய் விளங்கிய மையின், இறைவன் அருளிப் பாட்டால் அடியவர்களால் உள் அழைத்துச் செல்ல நேர்ந்தது.

அன்பர்கள் கொண்டு புக்க
பொழுதினில் அரிவை பாகன்
மன்பெரும் பாண னாரும்
மாமறை பாட வல்லார்
தன்பெரும் பணியாம் என்று
தமக்குமெய் யுணர்த லாலே
முன்பிருந் தியாழிற் கூடல்
முதல்வரைப் பாடு கின்றார். **#3955**

அடியவர்கள் அழைத்துச் சென்று கோயிலில் புகுந்த போது, `உமை ஒரு

கூறரான இறைவரின் பெரிய ஆணையே யாகும் இது' என்று தம் உணர்வினுள் உண்மை புலப்பட நின்ற பெரும் பாணரும், பெரிய நான்மறைகளை இசைப்பதில் வல்லவரான சோம சுந்தரப் பெருமானது திருமுன்பு இருந்து கொண்டு, அவ்வாலவாய்ப் பெருமானைப் பாடுபவராய்,

விளக்கவுரை

பணி - கட்டளை; ஆணை.

திரிபுரம் எரித்த வாறும்
தேர்மிசை நின்ற வாறும்
கரியினை யுரித்த வாறும்
காமனைக் காய்ந்த வாறும்
அரிஅயற் கரிய வாறும்
அடியவர்க் கெளிய வாறும்
பரிவினாற் பாடக் கேட்டுப்
பரமனார் அருளி னாலே. **#3956**

முப்புரங்களையும் எரித்த பண்பையும், அதன் பொருட்டுத் தேரின் மிசை நின்றருளிய தன்மையையும், யானையை உரித்த வரலாற்றினையும், காமனைக் காய்ந்த தன்மையையும், மாலும் நான்முகனும் அறிவதற்கு அரியவராய் நின்ற பாங்கையும் அடியவர்க்கு எளியவராயின தன்மையையும், அன்பினால் பாடக் கேட்டு, இறைவரின் திருவருளினால்,

விளக்கவுரை

****

அந்தரத் தெழுந்த ஓசை
அன்பினிற் பாணர் பாடும்
சந்தயாழ் தரையிற் சீதந்
தாக்கில்வீக் கழியும் என்று
சுந்தரப் பலகை முன்நீர்
இடுமெனத் தொண்ட ரிட்டார்
செந்தமிழ்ப் பாண னாருந்
திருவருள் பெற்றுச் சேர்ந்தார். **#3957**

விண்ணகத்து எழுந்த ஓசையானது `அன்பினால் பாணர் பாடும் இசையையுடைய யாழானது தரையில் உள்ள குளிர்ச்சி தாக்கினால் நரம்புகளின் இறுக்கம் சிதைந்து அந்த நல்ல இனிய இசை கெடும் ஆதலால், அழகிய பலகையை முன்னால் நீங்கள் இடுங்கள்!' என்று கூற, அடியவர்களும் அவ்வாறே, அழகிய பொற்பலகையை இட்டனர்.

செந்தமிழ்ப் பாணரும் திருவருளைப் பெற்று அதன் மீது அமர்ந்து பாடினர்.

விளக்கவுரை

அந்தரம் - விண்ணகம். இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

தமனியப் பலகை ஏறித்
தந்திரிக் கருவி வாசித்
துமையொரு பாகர் வண்மை
உலகெலாம் அறிய ஏத்தி
இமையவர் போற்ற ஏகி
எண்ணில்தா னங்கள் கும்பிட்
டமரர்நா டாளாது ஆரூர்
ஆண்டவர் ஆரூர் சேர்ந்தார். **#3958**

பொற்பலகையின் மீது ஏறி, யாழை இசைத்து, உமையொரு கூறரான இறைவரின் வள்ளன்மையை உலகெலாம் அறியுமாறு போற்றிப் புகழ, அதனைக் கேட்ட தேவர்களும் ஏத்த, அவ் விடத்தினின்றும் சென்று, அளவில்லாத பல பதிகளையும் வணங்கிச் சென்று, தேவர் உலகையாளும் ஆட்சியை விடுத்து வந்து, திருவா ரூரை ஆட்சி கொள்ளும், தியாகேசப் பெருமான் வீற்றிருந்தருளும் திருவாரூரை அடைந்தார்.

விளக்கவுரை

தமனியம் - பொன். தந்திரி - நரம்பு. \`அமரர் நாடாளாதே ஆரூர் ஆண்ட அயிராவணமே' *(தி.6 ப.25 பா.1)* என நாவரசர் அருளிய திருவாக்கினை இப்பாடலில் வரும் நான்காவது அடி முகந்து நிற்கின்றது.

கோயில் வாயில் முன்னடைந்து
கூற்றன் செற்ற பெருந்திறலும்
தாயின் நல்ல பெருங்கருணை
அடியார்க் களிக்குந் தண்ணளியும்
ஏயுங் கருவி யில்தொடுத்தங்
கிட்டுப் பாடக் கேட்டுஅங்கண்
வாயில் வேறு வடதிசையில்
வகுப்பப் புகுந்து வணங்கினார். **#3959**

கோயிலின் வாயில் முன் நின்று, இயமனை உதைத்தருளிய பெரிய உண்மையையும், தாயினும் மிக்க பெருங் கருணையினையும் அடியவர்களுக்கு வழங்கிவரும் குளிர்ந்த பேரருள் திறத்தையும், பொருந்திய யாழிலே அமைத்துப் பாட, அதைத் திருச்செவியில் ஏற்றருளிய இறைவரும், அவர் வழிபடுதற்கென அவ்விடத்தின் வடக்குத்

திக்கில் வேறு வாயில் ஒன்றை வகுத்தருள, அதன் வழியே உள் புகுந்து வணங்கினார்.

விளக்கவுரை

மதுரையில் ஆலவாயின்கண் இப்பெரும்பாணரை அடியவர்களின் வழி நேர்முகமாக அழைத்து வரச்செய்த இறைவர், இங்கு அவர் வருதற்கெனத் தனிவாயில் அமைத்து வரச் செய்கின் றார். இவ்வருளிச் செயல், `ஆட்பாவலர்க்கருளும் வண்ணமும் ஆதி மாண்பும் கேட்பான்புகில் அளவில்லை கிளக்க வேண்டா' *(தி.3 ப.54 பா.4)* எனவரும் திருவாக்கினையே நினைவுகூரச் செய்கின்றது.

மூலத் தானத் தெழுந்தருளி
இருந்த முதல்வன் தனைவணங்கிச்
சாலக் காலம் அங்கிருந்து
தம்பி ரான்தன் திருவருளால்
சீலத் தார்கள் பிரியாத
திருவா ரூரி னின்றும்போய்
ஆலத் தார்ந்த கண்டத்தார்
அமருந் தானம் பலவணங்கி. **#3960**

கருவறையில் (திருமூலட்டானத்தில்) விளங்க வீற்றிருக்கும் இறைவரை வணங்கி, எஞ்சிய காலம் அங்கிருந்து இறைவரின் திருவருள் குறிப்பைப் பெற்றுச், சிவனடியார்கள் நீங்காது வாழ்கின்ற திருவாரூரினின்றும் சென்று, நஞ்சுண்ட கழுத்தையுடைய இறைவர் விரும்பி வீற்றிருக்கும் பல பதிகளையும் வணங்கி,

விளக்கவுரை

கருவறையில் *(திருமூலட்டானத்தில்)* விளங்க வீற்றிருக்கும் இறைவரை வணங்கி, எஞ்சிய காலம் அங்கிருந்து இறைவரின் திருவருள் குறிப்பைப் பெற்றுச், சிவனடியார்கள் நீங்காது வாழ்கின்ற திருவாரூரினின்றும் சென்று, நஞ்சுண்ட கழுத்தையுடைய இறைவர் விரும்பி வீற்றிருக்கும் பல பதிகளையும் வணங்கி,

ஆழி சூழுந் திருத்தோணி
யமர்ந்த அம்மான் அருளாலே
யாழின் மொழியாள் உமைஞானம்
ஊட்ட உண்ட எம்பெருமான்
காழி நாடன் கவுணியர்கோன்
கமல பாதம் வணங்குதற்கு
வாழி மறையோர் புகலியினில்
வந்தார் சந்த இசைப்பாணர். **#3961**

கருவறையில் (திருமூலட்டானத்தில்) விளங்க வீற்றிருக்கும் இறைவரை வணங்கி, எஞ்சிய காலம் அங்கிருந்து இறைவரின் திருவருள் குறிப்பைப் பெற்றுச், சிவனடியார்கள் நீங்காது வாழ்கின்ற திருவாரூரினின்றும் சென்று, நஞ்சுண்ட கழுத்தையுடைய இறைவர் விரும்பி வீற்றிருக்கும் பல பதிகளையும் வணங்கி,

விளக்கவுரை

ஆழி - கடல். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஞானம் உண்டார் கேட்டருளி
நல்ல இசையாழ்ப் பெரும்பாணர்க்
கான படியால் சிறப்பருளி
அமரு நாளில் அவர்பாடும்
மேன்மைப் பதிகத் திசையாழில்
இடப்பெற் றுடனே மேவியபின்
பானற் களத்தார் பெருமணத்தில்
உடனே பரமர் தாளடைந்தார். **#3962**

யாழ்ப்பாணர் சீகாழிக்கு வந்ததைச் சிவ ஞானம் உண்ட திருஞானசம்பந்தர் கேட்டருளி, நல்ல இசையையுடைய யாழ்ப்பாணருக்கு ஏற்றவாறு சிறப்புச் செய்து, விரும்பி உறையும் நாளில், அவர் பாடுகின்ற மேன்மையுடைய திருப்பதிகத்து இசையை யாழில் இட்டு வாசிக்கும் பேறு பெற்று, அவருடனே கூடத் தங்கிய பின்னர், நீல மலர் போலும் கழுத்தினையுடைய இறைவரின் திரு நல்லூர்ப் பெருமணத்தில், அவருடனே இறைவரின் திருவடிகளை அடைந்தார்.

விளக்கவுரை

****

வரும்பான் மையினில் பெரும்பாணர்
மலர்த்தாள் வணங்கி வயற்சாலிக்
கரும்பார் கழனித் திருநாவ
லூரில் சைவக் கலைமறையோர்
அரும்பா நின்ற வணிநிலவும்
பணியும் அணிந்தா ரருள்பெற்ற
சுரும்பார் தொங்கல் சடையனார்
பெருமை சொல்ல லுறுகின்றாம். **#3963**

அடியவர் வரலாறுகளைத் தொடர்ந்து கூறிவரும் மரபில், திருநீலகண்ட யாழ்ப்பாணரின் மலர் போன்ற திருவடிகளை வணங்கி, நெல்லும் கரும்பும் நிறைந்த வயல்களையுடைய திரு நாவலூரில் வாழ்ந்து வந்த

சிவாகம நெறி நின்று ஒழுகும் சிவ வேதியரும், முளைக்கும் அழகிய பிறையையும், பாம்பையும், சூடிய சிவபெருமானின் திருவருளைப் பெற்றவரும் ஆகிய வண்டுகள் மொய்க்கும் மலர் மாலையுடைய சடையனாரது பெருமையைச் சொல்லப் புகுகின்றாம். திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் புராணம் முற்றிற்று.

விளக்கவுரை

****

சடைய நாயனார் புராணம்

தம்பி ரானைத் தோழமைகொண்
டருளித் தமது தடம்புயஞ்சேர்
கொம்ப னார்பால் ஒருதூது
செல்ல யேவிக் கொண்டருளும்
எம்பி ரானைச் சேரமான்
பெருமாள் இணையில் துணைவராம்
நம்பி யாரூ ரரைப்பயந்தார்
ஞாலம் எல்லாம் குடிவாழ. **#3964**

தம் தலைவரான சிவபெருமானையே தமக்குத் தோழராகக் கொண்டு, அப்பெருமானையே, தம் பெரிய தோள்களைத் தழுவும் பூங்கொம்பர் போன்ற பரவையாரிடத்துத் தூதாகச் செல்லு மாறு அனுப்பிய எம்பெருமானை, சேரமான் பெருமாள் நாயனாரின் ஒப்பற்ற துணைவரான நம்பியாரூரரை, உலகத்தில் எல்லா உயிர் களும் வாழ்வடையும் பொருட்டுப் பெற்ற பேறுடையவர், சடையனார் ஆவர்.

விளக்கவுரை

`பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற' (குறள், 61) என்பர் திருவள்ளுவர். அறிவறிந்த மக்கட் பேறுமட்டுமன்று; அருள்நலம் சான்ற மக்கட் பேறாகவும் அமையச் சடையனாரிடத்து நம்பியாரூரர் தோன்றினார். அப்பேறொன்றே சாலும் என்பதால் இவ்வொரு பாடல் வழிநின்றே சடையனாரை ஆசிரியர் போற்றியருளுவாராயினர். சடைய நாயனார் புராணம் முற்றிற்று.

இசைஞானியார் புராணம்

ஒழியாப் பெருமைச் சடையனார்
உரிமைச் செல்வத் திருமனையார்
அழியாப் புரங்கள் எய்தழித்தார்
ஆண்ட நம்பி தனைப்பயந்தார்
இழியாக் குலத்தின் இசைஞானிப்
பிராட்டி யாரை என்சிறுபுன்
மொழியால் புகழ முடியுமோ
முடியா தெவர்க்கும் முடியாதால். **#3965**

குறைவில்லாத பெருமையுடைய சடையனாரின் செல்வம்பொருந்திய மனைவியாரும், யாரானும் எவ்வாற்றானும் அழிக்க இயலாத வலிமையுடைய முப்புரங்களை அழித்த சிவபெரு மானால் ஆட்கொள்ளப்பெற்ற நம்பியாரூரரைப் பெற்றவருமாகிய, உயர்வுடைய குலமான சிவவேதியரின் குலத்தில் வந்த இசைஞானிப் பிராட்டியாரை, என்னுடைய இழிந்த சொற்களால் புகழமுடியுமோ? எனக்கு முடியாமையே அன்றி மற்று எவர்க்கும் முடியாதாம்.

விளக்கவுரை

குறைவில்லாத பெருமையுடைய சடையனாரின் செல்வம்பொருந்திய மனைவியாரும், யாரானும் எவ்வாற்றானும் அழிக்க இயலாத வலிமையுடைய முப்புரங்களை அழித்த சிவபெரு மானால் ஆட்கொள்ளப்பெற்ற நம்பியாரூரரைப் பெற்றவருமாகிய, உயர்வுடைய குலமான சிவவேதியரின் குலத்தில் வந்த இசைஞானிப் பிராட்டியாரை, என்னுடைய இழிந்த சொற்களால் புகழமுடியுமோ? எனக்கு முடியாமையே அன்றி மற்று எவர்க்கும் முடியாதாம்.

வெள்ளானைச் சருக்கம்

மூல மான திருத்தொண்டத்
தொகைக்கு முதல்வ ராய்இந்த
ஞாலம் உய்ய எழுந்தருளும்
நம்பி தம்பி ரான்தோழர்
காலை மலர்ச்செங் கமலக்கண்
கழறிற் றறிவா ருடன்கூட
ஆல முணடார் திருக்கயிலை
அணைந்தது அறிந்த படியுரைப்பாம். **#3966**

திருத்தொண்டர்களின் வரலாற்றைக் கூறும் இந் நூலுக்கு மூல நூலான திருத்தொண்டத் தொகை அருளிச் செய்வதற்கு உரிமையுடைய முதல்வராக, இந்நிலவுலகம் உய்யும் பொருட்டு எழுந்தருளி வந்த நம்பியாரூரரான தம்பிரான் தோழர், காலைப் பொழுதில் மலரும் தன்மையுடைய செந்தாமரை மலர் போன்ற கண்களையுடைய கழறிற்றறிவார் நாயனாருடன் கூட, நஞ்சை உண்ட இறைவரின் திருக்கயிலை மலையை அடைந்த வரலாற்றை அறிந்த வகையில் கூறுவாம்.

விளக்கவுரை

`மற்றிதற்குப் பதிகம் .... திருத்தொண்டத்தொகை எனப் பெற்ற நற்பதிகம் தொழப் பெற்றதாம்' என முற்கூறியதும் நினைவு கூர்தற்குரியது.

படியில் நீடும் பத்திமுதல்
அன்பு நீரில் பணைத்தோங்கி
வடிவு நம்பி யாரூரர்
செம்பொன் மேனி வனப்பாகக்
கடிய வெய்ய இருவினையின்
களைகட் டெழுந்து கதிர்பரப்பி
முடிவி லாத சிவபோகம்
முதிர்ந்து முறுகி விளைந்ததால். **#3967**

இவ்வுலகில் நீடிய பத்தி என்னும் நாற்றானது, அன் பான நீரினால் பெருத்து, மேல் எழுந்து, நம்பியாரூரின் சிவந்த பொன் னான அழகிய திருமேனியே தம் வடிவாக, வலியதும் கொடியதுமான இருவினைகள் என்னும் களையை விரைந்துஅகற்றி மேல் ஓங்கி எழுந்து, ஞானக் கதிர்களான கிளைகளைப் பரப்பி, அழிவற்ற `சிவபோகம்' என்னும் பழம் முதிர்ச்சி பெற்று மிகவும் விளைந்தது.

விளக்கவுரை

படி - உலகு. பத்தி முதல் - பத்தியான நாற்று. களைகட்டல் - களையைப்

பறித்தல்; `களை கட்டதனொடுநேர்' (குறள், 550) என்னும் திருக்குறளும். கடிய வினை, வெய்ய வினை எனத் தனித் தனியே கூட்டுக; கடுமை- உயிரால் தாமாக அகற்ற முடியாமை; கொடுமை - அதன் பயனைத் தாங்க இயலாமை. முதிர்தல் - விளைதல். முறுகுதல் - உள்ளீடாக செறிந்திருத்தல்; மையல் மானுடமாய் மயங்கி இருந்த நிலையில், இறைவன் தடுத்தாட்கொள்ள, அக்கருணைப் பெருக்கின் வழி வளர்ந்து வாழ்ந்து, அருளுடைய தலைவராய் மீண்டும் திருக்கயிலை சென்று பெருமானின் திருவடிக் கண் நின்று, பணி செய்ய இருக்கும் வரலாற்றைக் கூறும் பகுதியாக இருத்தலின், ஆரூரரை முதிர்ந்து முறுகி விளைந்த சிவபோகமாக ஆசிரியர் உருவகித்துப் போற்றுகின்றார்.

ஆரம் உரகம் அணிந்தபிரான்
அன்பர் அணுக்க வன்தொண்டர்
ஈர மதுவார் மலர்ச்சோலை
எழிலா ரூரில் இருக்குநாள்
சேரர் பெருமாள் தனைநினைந்து
தெய்வப் பெருமான் கழல்வணங்கிச்
சாரல் மலைநா டணைவதற்குத்
தவிரா விருப்பி னுடன்போந்தார். **#3968**

மாலையாகப் பாம்பை அணிந்த சிவபெருமானின் திருவடிக்கண் நெருக்கமாக நிற்கும் வன்தொண்டர், குளிர்ந்த தேன் பொருந்திய மலர்கள் நிறைந்த சோலைககள் சூழ்ந்த அழகிய திருவாரூரில் இருக்கும் நாள்களில், சேரமான் பெருமாள் நாயனாரை நினைந்து, தெய்வப் பெருமானான தியாகராசப் பெருமானை வணங்கி, அருள் விடை பெற்றுச் சாரல்களையுடைய மலைநாட்டை அணைவதற்குத் தடுத்தற்கரிய பெரு விருப்புடன் சென்றார்.

விளக்கவுரை

உரகம் - பாம்பு. அணுக்கப்பணி - திருவடிக்கண்ணேயே இருந்து செய்யும் பணிகள்; திருமுழுக்காட்டுதல், திருமாலை அணி வித்தல் முதலாயின. திருக்கயிலையில் இதற்குமுன்பு ஆற்றியும் இனியும் ஆற்றவும் இருக்கும் திருத்தொண்டை நினைவு கூர்ந்து கூறல் பெற்றது. சாரல் - மழைச் சாரல்கைளை ஏற்று நிற்கும் மலைப்பாங்கான இடங்கள்.

நன்னீர்ப் பொன்னித் திருநாட்டு
நாதர் மகிழுந் திருப்பதிகள்
முன்னி இறைஞ்சி அகன்றுபோய்
முல்லைப் படப்பைக் கொல்லைமான்
துன்னி உகைக்குங் குடக்கொங்கில்
அணைந்து தூய மதிவான்நீர்

சென்னி மிசைவைத் தவர்செல்வத்
திருப்புக் கொளியூர் சென்றடைந்தார். **#3969**

நல்லநீரைப் பொருந்திய காவிரிநாடான சோழ நாட்டில், அவ்வவ்விடத்தும் இறைவர் வீற்றிருந்தருளும் திருப்பதி களை நினைந்தும் வணங்கியும் நீங்கிச் சென்று, முல்லை நிலச் சார்புடைய காடுகளிலும் தோட்டங்களிலும் பயின்று வரும் மான்கள் துள்ளி விளையாடுவதற்கு இடமான மேல் கொங்கு நாட்டை அடைந்து, தூய பிறையையும் கங்கையையும் தலையில் அணிந்த இறைவரின் செல்வம் நிறைந்த திருப்புக்கொளியூர் அவிநாசியைச் சென்று அடைந்தார்.

விளக்கவுரை

முல்லைப் படப்பை - பசும்புற்காடுகளும், அவற்றைச் சார்ந்த இடங்களும். கொல்லைமான் - அவ்விடத்துள்ள தோட்டங் களில் பயின்றுவரும் மான்கள். குடக் கொங்கு - மேற்பாலதாய கொங்கு நாடு; கீழ்க் கொங்கு, மேல் கொங்கு, வட கொங்கு எனக் கொங்கு நாட்டை மூவகையாகப் பிரித்துக் கூறுவர். அவற்றுள் மீகொங்குஎனப்பெறும் மேற்குப் பகுதியில் உள்ள கொங்கு நாடு. `மீகொங்கில் அணிகாஞ்சிவாய்ப் பேரூரர் பெருமானை' என வரும் திருமுறைத் திருவாக்கும் காண்க.

மறையோர் வாழும் அப்பதியின்
மாட வீதி மருங்கணைவார்
நிறையுஞ் செல்வத் தெதிர்மனைகள்
இரண்டில் நிகழ்மங் கலஇயங்கள்
அறையும் ஒலியொன் றினில்ஒன்றில்
அழுகை ஒலிவந் தெழுதலும் ஆங்கு
உறையும் மறையோர் களைஇரண்டும்
உடனே நிகழ்வ தென்னென்றார். **#3970**

அப்பதியில்மறையவர் வாழும் மாடவீதியின் பக்கத்தில் செல்பவரான நம்பியாரூரர், நிறைந்த செல்வத்துடன் எதிர் எதிராய் அமைந்த இரு இல்லங்களில், ஓர் இல்லத்தில் மங்கலத் தொழில்களுக்கான இயங்களின் ஒலியும், மற்றொன்றில் அழுகை ஒலியும் வர, அவற்றைக் கேட்டு, அங்கு வாழும் அந்தணர்களைப் பார்த்து மாறுபட்ட இவ்வீர் ஒலிகளும் ஒரே காலத்தில் நிகவதற்குக் காரணம் யாது? என வினவினார்.

விளக்கவுரை

`ஓரில் நெய்தல் கறங்க ஓரில் ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப .... இன்னாதம்ம இவ்வுலகம்' எனவரும் புறநாநூற்றுப் பாடற் கருத்தை நினைவூட்டும்.

அந்த ணாளர் வணங்கிஅரும்
புதல்வர் இருவர் ஐயாண்டு
வந்த பிராயத் தினர்குளித்த
மடுவில் முதலை ஒருமகவை
முந்த விழுங்கப் பிழைத்தவனை
முந்நூல் அணியுங் கலியாணம்
இந்த மனைமற் றந்தமனை
இழந்தார் அழுகை யென்றுரைத்தார். **#3971**

அவ்வந்தணர்கள் நம்பியாரூரரை வணங்கி, அரிய மைந்தர் இருவர், ஐந்து வயது உடையவர்கள், குளித்த நீர் நிலையில் ஒரு பிள்ளையை முதலை முன் விழுங்கி விடத் தப்பிப் பிழைத்த பிள்ளைக்குப் பூணூல் அணிவிக்கும் மங்கலமான செயல் நிகழ்வது இவ்வில்லத்தில், மற்றொரு பிள்ளையை இழந்தவரின் அழுகை நிகழ்வது அவ்வில்லத்தில் என்று விடை கூறினார்.

விளக்கவுரை

****

இத்தன் மையினைக் கேட்டருளி
இரங்குந் திருவுள் ளத்தினராம்
மொய்த்த முகைத்தார் வன்தொண்டர்
தம்மை முன்னே கண்டிறைஞ்ச
வைத்த சிந்தை மறையோனும்
மனைவி தானும் மகவிழந்த
சித்த சோகந் தெரியாமே
வந்து திருத்தாள் இறைஞ்சினார். **#3972**

இத்தன்மையைக் கேட்டு இரக்கம் உடைய திருவுள்ளத்தைக் கொண்ட, மலர்கள் நிறைந்த மாலையைச் சூடிய சுந்தரரைப் பார்த்து, வணங்க வேண்டும் என்று மனம் கொண்டிருந்த அவ் வேதியரும் அவருடைய மனைவியும், தம் மகவை இழந்த மனவருத்தத்தையும் அறியாராய் வந்து, அவருடைய திருவடிகளை வணங்கினர்.

விளக்கவுரை

****

துன்பம் அகல முகமலர்ந்து
தொழுவார் தம்மை முகநோக்கி
இன்ப மைந்தன் தனையிழந்தீர்
நீரோ என்ன எதிர்வணங்கி
முன்பு புகுந்து போனதது

முன்னே வணங்க முயல்கின்றோம்
அன்பு பழுதா காமல்எழுந்
தருளப் பெற்றோம் எனத்தொழுதார். **#3973**
மகனை இழந்த துன்பம் நீங்க, முகம் மலர்ந்து தொழுபவரான அந்தணரையும் அவர்தம் மனைவியாரையும் சுந்தரர் பார்த்து `இன்ப மகனை இழந்தவர் நீங்களோ?' என்று வினவ அவர்கள் `இந் நிகழ்ச்சி முற்காலத்தில் நிகழ்ந்து கழிந்தது, முற்படத் தங்களைக் கண்டு வணங்க முயல்கின்றோம், எங்களின் அன்பு வீண் போகாது தாங்கள் இங்கு எழுந்தருளும் பேற்றைப் பெற்றோம்' என்று உரைத்தனர்.

விளக்கவுரை

எனவே இவர்கள் நம்பிகளைக் கேள்வி அளவான் அறிந்த அளவிலேயே கண்டும் வணங்கியும் மகிழ நினைந்தனர் என்பது தெரிகிறது.

மைந்தன் தன்னை இழந்ததுயர்
மறந்து நான்வந் தணைந்ததற்கே
சிந்தை மகிழ்ந்தார் மறையோனும்
மனைவி தானுஞ் சிறுவனையான்
அந்த முதலை வாய்நின்றும்
அழைத்துக் கொடுத்தே அவிநாசி
எந்தை பெருமான் கழல்பணிவேன்
என்றார் சென்றார் இடர்களைவார். **#3974**
மைந்தனை இழந்த துன்பத்தையும் மறந்து, நான் வந்த அளவிலேயே அந்தணனும் அவனுடைய மனைவியும் மனம் மகிழ்ந் தனர், `அச்சிறுவனை விழுங்கிய அந்த முதலையின் வாயினின்றும் இறையருளால் அழைத்துக் கொடுத்தபின்புதான், நான் அவிநாசி யாகிய எம்பெருமானின்திருவடிகளை வணங்குவேன்' என்று தம்மிடம் அன்பால் வந்தவர்களின் துன்பத்தை நீக்குபவரான நம்பியாரூரர் கூறினார்.

விளக்கவுரை

நம்பிகள் இங்ஙனம் கூறியதும், அவர்கள் தம்பால் கொண்டிருக்கும் அன்பினால் மட்டுமன்று; அவர்கட்கு அடியவர் மாட்டு இருக்கும் பத்திமையும் கருதியதேயாம். அழைத்துக் கொடுத்தே - திருவருளால் அழைத்துக் கொடுத்த பின்பே. `கரைக்கால் முதலை யைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே' *(தி.7 ப.92 பா.4)* என்ப தால், இறைவனை வேண்டியே பெற்றமை அறியலாம்.
`ஈசனது இயல்பு, அருள் எய்து உயிர் இயற்றல்
பேசுதல் தவறு எனப் பெருமறை அறைய
ஐந்தொழில் உயிரும் தந்திடல் தகுமே

ஆவதன் முன் நாள் நாவலர் பெருமான்
பண்டொரு முதலை உண்ட மைந்தனை
வரவழைத் தனன்என் றாய், பிழைப் பித்தூஊம்,
தந்திட வேண்டும் என்றனர் அன்றே'
எனவரும் சங்கற்ப நிராகரணத்தானும் (சிவசமவாதி - சங்கற்ப நிராகரணம் *30-36)* இவ்வுண்மை அறியலாம்.

இவ்வா றருளிச் செய்தருளி
இவர்கள் புதல்வன் தனைக்கொடிய
வெவ்வாய் முதலை விழுங்கும்மடு
எங்கே என்று வினவிக்கேட்டு
அவ்வாழ் பொய்கைக் கரையில் எழுந்
தருளி அவனை அன்றுகவர்
வைவாள் எயிற்று முதலைகொடு
வருதற் கெடுத்தார் திருப்பதிகம். **#3975**

இங்ஙனம் உரைத்தருளிய சுந்தரர் `இவர்களின் மகனைக் கொடிய கூர்மையான வாயுடைய முதலை விழுங்கிய நீர்நிலை எங்கே உள்ளது?' என்று கேட்டு அறிந்து, அந்த ஆழமான பொய்கையின் கரையில் சென்றருளி, முன்நாளில் விழுங்கிய கூரிய வாள்போன்ற பற்களையுடைய முதலை, அம் மைந்தனை மீளக் கொண்டு வருவதற்குத் திருப்பதிகம் பாடலாயினர்.

விளக்கவுரை

மடு எங்குளது*?* எனக் கேட்டது மற்றவரையாம்*;* காரணம் பெற்றோரைக் கேட்பின் அவர்களின் வருத்தம் மேலிடும் என்பதா லேயாம். மைந்தனை விழுங்கியது முதலையாதலின் அதனிடத்தின்றே மீளக் கொண்டு வருதற்குப் பதிகம் பாடினார். எது எங்கு ஒடுங்கிற்று*?* அது அங்கிருந்தே மீளத் தோன்றும் என்னும் மெய்ந் நூல்களும். இத்திருப்பதிகம் `எற்றான் மறக்கேன்' *(தி.7 ப.92)* எனத் தொடங்கும் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த பதிகமாகும்.

உரைப்பார் உரையென் றெடுத்ததிருப்
பாட்டு முடியா முன்உயர்ந்த
வரைப்பான் மையின்நீள் தடம்புயத்து
மறலி மைந்தன் உயிர்கொணர்ந்து
திரைப்பாய் புனலின் முதலைவயிற்
றுடலிற் சென்ற ஆண்டுகளும்
தரைப்பால் வளர்ந்த தெனநிரம்ப
முதலை வாயில் தருவித்தான். **#3976**

பாடிய அப்பதிகத்தில் `உரைப்பார் உரை' எனத் தொடங்கிய

திருப்பாட்டு நிறைவு பெறுதற்கு முன்பே, உயர்ந்த மலையனைய நீண்ட பெரிய தோள்களையுடைய கூற்றுவன், மகனின் உயிரைக் கொண்டு வந்து அலைகளையுடைய நீரில், முதலையின் வயிற்றில் நிலத்தில் இருந்து வளர்ந்தது போல் கழிந்த இரண்டு ஆண்டுகளின் வளர்ச்சியும் உடலில் நிரம்ப, முதலையின் வாயில் வரச் செய்தான்.

விளக்கவுரை

முந்நூல் அணியும் கலியாணம் ஏழு வயதில் செய்யப் பெறுவதாகும். ஐந்து வயதில் சென்ற அம்மகவு இறந்து இப்பொழுது மீளத் தோன்றுகிறது. எனவே, முதலை வாயுள் இரண்டாண்டுகள் சென்றன என்பதும் பெறுதும். `உரைப்பார் உரை' எனத் தொடங்கும் பாடல், பதிகத்தின் நான்காவது பாடலாகும். *(தி.7 ப.92 பா.4)* உரைப்பார் உரை உகந்து உள்கவல்லார் தங்கள் உச்சியாய் அரைக்கு ஆடு அரவா ஆதியும் அந்தமும் ஆயினாய் புரைக்காடு சோலைப் புக்கொளியூர் அவிநாசியே கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே' என்பது அப் பாடலாகும். முதலை உண்ட பாலனை மீண்டும் தந்துதவ வேண்டும் என்ற வேண்டுகோள், இப்பதிகத்தின் *1, 2, 4, 9* ஆகிய நான்கு பாடல்களில் உள்ளது. அவற்றுள் இந்நான்காவது பாடலை நிறைவு படுத்தற்கு முன்னாகவே முதலை உண்ட பாலன் உரிய வயதும் நிரம்பப் பெற்ற அளவில், மீளத் தோன்றினான் எனச் சேக்கிழார் அருளுகின்றார். அங்ஙனம் தோன்றப் பெற்ற பின்னும் *9*ஆவது பாடலில் `குளத்திடை, உள்ளாடப்புக்க மானி என்னைக் குறி செய்ததே' என அருளக் காரணம் இல்லை. ஆனால் சேக்கிழார் பெருமான் திருவுள்ளம் உண்மை உணராத திருவுள்ளமும் அன்று. ஆதலின் இப்பொழுது *9*ஆவது பாடலாக இருப்பது *4*ஆவது பாடலுக்கு முன்னம் மூன்றாவது பாடலாக இருக்கவேண்டும் என அறியப் படுகின்றது. `சதுரம் மறை' *(தி.2 ப.37)* எனத் தொடங்கும் பாடலி லேயே கதவம் மூடப்பட்டது என்று அருளியதற்குக் காரணம், அப்பாடலின் பின் கதவம் திருக்காப்புக் கொள்ளும் குறிப்பாக ஏதும் இன்மையே ஆகும். இவ்வுண்மையையும் ஈண்டு நினைவு கூர்க.

பெருவாய் முதலை கரையின்கண்
கொடுவந் துமிழ்ந்த பிள்ளைதனை
உருகா நின்ற தாய்ஓடி
எடுத்துக் கொடுவந் துஉயிரளித்த
திருவா ளன்தன் சேவடிக்கீழ்ச்
சீல மறையோ னொடுவீழ்ந்தாள்
மருவார் தருவின் மலர்மாரி
பொழிந்தார் விசும்பில் வானோர்கள். **#3977**

பெரிய வாயினின்றும் முதலை கரையில் கொணர்ந்து உமிழ்ந்த அம் மைந்தனை, மீதூர்ந்த அன்பால் உள்ளம் உருகிய தாய் ஓடிப்போய், எடுத்துக் கொண்டு வந்து உயிரைத் திரும்பத் தந்த திருவாளர் நம்பியாரூரரின் சேவடியின் கீழ்ச் சைவ ஒழுக்கம் மிக்க மறையவனுடன் சேர்ந்து வணங்கினாள். தேவர்கள் விண்வழித் தெய்வ மலர்களைச் சொரிந்தனர்.

விளக்கவுரை

****

மண்ணில் உள்ளார் அதிசயித்தார்
மறையோர் எல்லாம் உத்தரியம்
விண்ணில் ஏற விட்டார்த்தார்
வேத நாதம் மிக்கெழுந்தது
அண்ண லாரும் அவிநாசி
அரனார் தம்மை அருமறையோன்
கண்ணின் மணியாம் புதல்வனையுங்
கொண்டு பணிந்தார் காசினிமேல். **#3978**

மண்ணுலகில் உள்ளவர்கள் அதைக்கண்டு வியப் புக்கொண்டனர். அந்தணர்கள் அனைவரும் தம் மேலாடைகளை விண்ணில் வீசி எறிந்து மகிழ்வொலி செய்தனர். தேவ ஒலி மிக்கு எழுந்தது. நம்பியாரூரரும் அவிநாசியின்கண் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை, அந்தணரின் கண்மணி போன்ற மகனையும் அழைத் துக்கொண்டு சென்று பணிந்தார்.

விளக்கவுரை

உத்தரியம் - மேலாடை

பரவும் பெருமைத் திருப்பதிகம்
பாடிப் பணிந்து போந் தன்பு
விரவு மறையோன் காதலனை
வெண்ணூல் பூட்டி அண்ணலார்
முரசம் இயம்பக் கலியாணம்
முடித்து முடிச்சே ரலர்தம்பால்
குரவ மலர்பூந் தண்சோலை
குலவு மலைநாடு அணைகின்றார். **#3979**

போற்றுதற்கு உரிய பெருமை வாய்ந்த திருப்பதிகத் தைப் பாடித் திருக்கடைக் காப்புச் சாத்தி, வணங்கி, வெளியே போந்த பெருமையுடைய சுந்தரர், தம்மிடம் அன்புடைய வேதியரின் மக னுக்கு முரசுகள் ஒலிக்க முந்நூல் அணியும் கலியாணம் செய்வித்து,

முடிமன்னரான சேரனாரிடத்துச் சேர்வதற்குக் குரா மலர்கள் நிறைந்த குளிர்ந்த சோலைகள் மிக்க மலைநாட்டை நோக்கிச் செல்லலானார்.

விளக்கவுரை

`பரவும் திருப்பதிகம் பாடி' என்பதால், இப்பதிகத்துள் உள்ள முதல் *4* பாடல்களையும் குளக்கரையில் பாடியவர், எஞ்சிய *6* பாடல்களையும் திருக்கோயிலுக்குள் சென்று, இறைவன் திருமுன் நின்று பாடி நிறைவு செய்தார் என்பது விளங்குகிறது.

சென்ற சென்ற குடபுலத்துச்
சிவனார் அடியார் பதிகள் தொறும்
நன்று மகிழ்வுற்று இன்புற்று
நலஞ்சேர் தலமுங் கானகமும்
துன்று மணிநீர்க் கான்யாறும்
துறுகற் சுரமுங் கடந்தருளிக்
குன்ற வளநாட் டகம்புகுந்தார்
குலவும் அடியேன் அகம்புகுந்தார். **#3980**

அடியேனுடைய உள்ளத்தில் குடிபுகுந்தவரான நம்பியாரூரர் , மேற்குத் திசையில் உள்ள நாட்டில், அங்கங்கும் சிவபெருமானை வணங்கி மகிழ்ந்த வண்ணம் அடியவர்களின் பதிகள் தோறும் சென்று, மிகவும் மகிழ்ந்து, இன்பம் அடைந்து, நன்மை யுடைய மேலும் பல திருப்பதிகளையும், நிரம்பிய மணிகளை உடைய நீர் பொருந்திய காட்டாறுகளையும் பெருங்கற்கள் பொருந்திய கானகங்களையும் கடந்து சென்று வளமுடைய மலை நாட்டுக்குள் புகுந்தார்.

விளக்கவுரை

துறுகல் - பெருங்கற்கள்.

முன்னாள் முதலை வாய்ப்புக்க
மைந்தன் முன்போல் வரமீட்டுத்
தென்னா ரூரர் எழுந்தருளா
நின்றார் என்று சேரர்பிராற்கு
அந்நாட் டரனார் அடியார்கள்
முன்னே ஓடி அறிவிப்பப்
பொன்னார் கிழியும் மணிப்பூணும்
காசுந் தூசும் பொழிந்தளித்தார். **#3981**

`முன் நாளில் முதலையால் விழுங்கப்பட்ட மைந் தனை வளர்ந்த நிலையில் உயிர்பெற்று வர மீட்டுத் தந்த தென்திரு ஆரூரர் வருகின்றார்' என்று அறிந்து, அந்நாட்டில் உள்ள சிவனடி யார்கள் ஓடிச் சென்று சேரமான் பெருமாளுக்கு அறிவிக்க, அங்ஙனம்

அறிவித்தவர்களுக்கெல்லாம், சேரமான் பொற்கிழியும், அழகிய அணிகளும் ஆடையும் மழைபோல் மிகுதியாக வழங்கினார்.

விளக்கவுரை

****

செய்வ தொன்றும் அறியாது
சிந்தை மகிழ்ந்து களிகூர்ந்துஎன்
ஐயன் அணைந்தான் எனையாளும்
அண்ணல் அணைந்தான் ஆரூரில்
சைவன் அணைந்தான் என் துணையாம்
தலைவன் அணைந்தான் தரணியெலாம்
உய்ய அணைந்தான் அணைந்தான் என்று
ஓகை முரசம் சாற்றுவித்தார். **#3982**

செய்வது இன்னது என்று ஒன்றும் தோன்றாமல் உள்ளத்தில் மிக்க மகிழ்ச்சி மேலிட்டு, `என் ஐயனான நம்பியாரூரர் வந்தணைந்தார்! என்னை ஆட்கொள்ளும் பெருமையுடையவர் வந்து அணைந்தார்!, திருவாரூரில் மகிழ்ந்தருளும் சைவப் பெருமகனார் வந்து அணைந்தார்! என் துணைவரான தலைவர் வந்து அணைந்தார். உலகம் எல்லாம் உய்யும் பொருட்டு இவ்வுலகில் தோன்றிய நம்பி ஆரூரர் வந்து அணைந்தார்'! எனப் பலவாறு எடுத்துப் போற்றி மகிழ்ச்சியால் முரசத்தை எங்கும் அறையுமாறு செய்வித்தார்.

விளக்கவுரை

****

பெருகும் மதிநூல் அமைச்சர்களை
அழைத்துப் பெரியோ ரெழுந்தருளப்
பொருவில் நகரம் அலங்கரித்துப்
பண்ணிப் பயணம் புறப்படுவித்
தருவி மதமால் யானையினை
அணைந்து மிசைகொண் டரசர்பெருந்
தெருவு கழிய எதிர்வந்தார்
சேரர் குலம்உய்ந் திடவந்தார். **#3983**

பெருகிய மதிநுட்பம் நூலொடு அமைந்த அமைச்சர் களை வரவழைத்து, பெரியவரான நம்பியாரூரர் எழுந்தருளுவ தற்காக அந் நகரத்தை அழகுபெறச் செய்து, செலவு மேற்கொளச் செய்து, அருவிபோல் பாயும் மதத்தையுடைய யானையைச் சேர்ந்து, அதன் மீது சேரர் குலம் உயர்ந்திடத் தோன்றிய சேரலனார் அமர்ந்து, மன்னர்களின் பெருந்தெருவு கழிந்திட, எதிர்கொள்ளும் பொருட்டு வந்தார்.

விளக்கவுரை

****

மலைநாட் டெல்லை யுட்புகுத
வந்த வன்தொண் டரைவரையில்
சிலைநாட் டியவெல் கொடித்தானைச்
சேரர் பெருமான் எதிர்சென்று
தலைநாட் கமலப் போதனைய
சரணம் பணியத் தாவில்பல
கலைநாட் டமுத ஆரூரர்
தாமுந் தொழுது கலந்தனரால். **#3984**

மலை நாட்டு எல்லைக்குள் புகுந்து வரும் சுந்தரரை, மேருமலையின் உச்சியில் தம் விற்கொடியைப் பொறித்த வெற்றிக் கொடியையும் படைகளையும் உடைய சேரமான் எதிர் கொண்டு சென்று, அன்று மலர்ந்த தாமரை மலர் போன்ற அடிகளை வணங்கக் குற்றம் அற்ற அமுதமயமான பலகலைகளையும் தம்அருட்புலமை நலத்தால் நிலைபெறுவிக்கும் சுந்தரரும் எதிர்தொழுது இருவரும் மனம் கலந்தனர்.

விளக்கவுரை

****

சிந்தை மகிழும் சேரலனார்
திருவா ரூரர் எனும்இவர்கள்
தந்தம் அணிமே னிகள்வேறாம்
எனினும் ஒன்றாந் தன்மையராய்
முந்த எழுங்கா தலின்தொழுது
முயங்கி உதியர் முதல்வேந்தர்
எந்தை பெருமான் திருவாரூர்ச்
செல்வம் வினவி யின்புற்றார். **#3985**

மலை நாட்டு எல்லைக்குள் புகுந்து வரும் சுந்தரரை, மேருமலையின் உச்சியில் தம் விற்கொடியைப் பொறித்த வெற்றிக் கொடியையும் படைகளையும் உடைய சேரமான் எதிர் கொண்டு சென்று, அன்று மலர்ந்த தாமரை மலர் போன்ற அடிகளை வணங்கக் குற்றம் அற்ற அமுதமயமான பலகலைகளையும் தம்அருட்புலமை நலத்தால் நிலைபெறுவிக்கும் சுந்தரரும் எதிர்தொழுது இருவரும் மனம் கலந்தனர்.

விளக்கவுரை

திருவாரூர்ச் செல்வம் - திருவாரூரில் எழுந்தருளி இருக்கும் இறைவனின் அருட்டிறங்கள். `திருவாதிரை நிகழ் செல்வம் சொன்னார்' என்றார் முன்னும்.

சிந்தை மகிழும் சேரலனார்
திருவா ரூரர் எனும்இவர்கள்
தந்தம் அணிமே னிகள்வேறாம்
எனினும் ஒன்றாந் தன்மையராய்
முந்த எழுங்கா தலின்தொழுது
முயங்கி உதியர் முதல்வேந்தர்
எந்தை பெருமான் திருவாரூர்ச்
செல்வம் வினவி யின்புற்றார். #3986

ஒருவர் ஒருவருள் உள்ளம் கலக்க எவ்வகையான குறைவும் இல்லாமல் உயர்வான பெருவிருப்பம் உடைய இருவரின் நட்புச் செயலைக் கண்ட இருசார் மக்களும், பெருமகிழ்ச்சி அடைந்து மகிழ்வொலி செய்தனர். சேரமானார் நம்பியைத் தாம் ஏறி வந்த யானையின் மீது ஏற்றித் தாம் அவர் பின் அமர்ந்து, முழுமதி போன்ற வெண்கொற்றக் குடையை ஏந்தினார்.

விளக்கவுரை

****

உதியர் பெருமாள் பெருஞ்சேனை
ஓதங் கிளர்ந்த தெனஆர்ப்பக்
கதிர்வெண் திருநீற் றன்பர்குழாம்
கங்கை கிளர்ந்த தென ஆர்ப்ப
எதிர்வந் திறைஞ்சும் அமைச்சர்குழாம்
ஏறும் இவுளித் துகளார்ப்ப
மதிதங் கியமஞ் சணியிஞ்சி
வஞ்சி மணிவா யிலையணைந்தார். #3987

சேரர் பெருமகனாரின் பெரும்படை, கடல் ஒலிப்பதைப் போல் ஒலிக்க, ஒளிவீசும் வெண்மையான திருநீற்றை அணிந்த அன்பர் கூட்டம் கங்கையாற்றின் முழக்கம் எனப் பேரொலி எழுப்ப, எதிர் வந்து வணங்கும் அமைச்சர் கூட்டங்கள் ஏறிவரும் குதிரைகளின் காலிலிருந்து எழும் மண் துகள் எங்கும் எழுந்து பரவ, சந்திரன் தவழும் மேகங்கள் படியும் மதில்களையுடைய வஞ்சி நகரத் தின் அழகான மணிவாயிலை அவ்விருவரும் அடைந்தனர்.

விளக்கவுரை

கங்கை நீர் வெண்மையானது. ஆதலின் அதனை வெண் திருநீறணிந்த அன்பருக்கு உவமையாக்கினார். மஞ்சு அணி இஞ்சி - மேகம் தவழும் மதில்.

ஆரண மொழிகள் முழங்கிட

ஆடினர் குணலைகள் அந்தணர்
வாரண மதமழை சிந்தின
வாசிகள் கிளரொலி பொங்கின
பூரண கலசம் மலிந்தன
பூமழை மகளிர் பொழிந்திடும்
தோரண மறுகு புகுந்தது
தோழர்கள் நடவிய குஞ்சரம். #3988

மறை மொழிகளைச் சொல்லும் ஒலி முழங்க, மறையவர்கள் பெருமகிழ்வால் கைதட்டிக் கூத்தாடினர். யானைகள் மழைபோல மதநீரைச் சொரிந்தன, குதிரைகள் எழுச்சி மிகுதியால் கனைத்தன. நிறைகுடங்கள் எங்கும் மலிந்து விளங்கின. மங்கலப் பெண்கள் பூமழை பொழிகின்ற தோரணம் நிறைந்த தெருவில் தோழர் கள் ஆகிய சேரமானும் நம்பிஆரூரரும் ஊர்ந்து வந்த யானை புகுந்தது.

விளக்கவுரை

குணலை - கைதட்டி ஒலித்தவாறு ஆடுதல். மகிழ்ச்சியின் விளைவால் நிகழ்வது. தோழர்கள் - ஆரூரரும் சேரர் பெருமானும் குஞ்சரம் புகுந்தது என ஒருமையால் கூறினார், இருவரும் ஊர்ந்து வந்த யானை ஒன்றேயாதலின். பாடல்கள் *21 - 24* காண்க.

அரிவையர் தெருவில் நடம்பயில்
அணிகிளர் தளிரடி தங்கிய
பரிபுர வொலிகள் கிளர்ந்தன
பணைமுர சொலிகள் பரந்தன
சுரிவளை நிரைகள் முரன்றன
துணைவர்கள் இருவரும் வந்தணி
விரிதரு பவன நெடுங்கடை
விறன்மத கரியி னிழிந்தனர். #3989

வீதியில் ஆடற்பெண்கள் நடம் பயில்வதால், அழகு பொருந்திய தளிர் போன்ற கால்களில் பொருந்திய சிலம்புகள் ஒலித்தன. பெரிய முரசுகளின் ஒலிகள் பரந்தன. சுழிந்த சங்குக் கூட்டங்கள் வரிசையாக ஒலித்தன. நண்பர்கள் இருவரும் வந்து அழகு மிகுந்த அரண்மனையின் நீண்ட வாயிலில், தாம் செலுத்தி வந்த வலிமை மிக்க யானையினின்றும் இறங்கினர்.

விளக்கவுரை

பணை முரசு - பெரிய முரசு.

தூநறு மலர்தர ளம்பொரி
தூவிமுன் இருபுடை யின்கணும்

நான்மறை முனிவர்கள் மங்கல
நாமநன் மொழிகள் விளம்பிட
மேனிறை நிழல்செய வெண்குடை
வீசிய கவரி மருங்குற
வானவர் தலைவரும் நண்பரும்
மாளிகை நடுவு புகுந்தனர். #3990

தூய மணமுடைய மலர்களையும், முத்துக்களையும் பொரிகளையும் தூவி, முன் இரு பக்கங்களிலும் நான்மறைகளில் வல்ல முனிவர்கள் மங்கலமுடைய நல்ல சொற்களைச் சொல்ல, மேலே வெண்கொற்றக் குடை, நிறைந்த நிழல் பரப்ப, வெண் சாமரைகள் இருமருங்கும் வீசப்பட, சேரமானும் நம்பியாரூரரும் அரண்மனை யின் நடுவே புகுந்தனர்.

விளக்கவுரை

****

அரியணை யதனில் விளங்கிட
அடன்மழ விடையென நம்பியை
வரிமலர் அமளி அமர்ந்திட
மலையர்கள் தலைவர் பணிந்தபின்
உரிமைநல் வினைகள் புரிந்தன
உரைமுடி விலவென முன்செய்து
பரிசனம் மனமகி ழும்படி
பலபட மணிநிதி சிந்தினர். #3991

நம்பியாரூரரை, அரியணையில், வண்டுகள் மொய்த்த மலர்கள் பரப்பிய பூந்தவிசில், வலிய ஆனேற்றைப் போல் விளக்கம் பொருந்த வீற்றிருக்கும்படி, மலை நாட்டவரின் மன்னரான சேரர் வணங்கி வேண்டிக் கொண்ட பின்பு, விரும்பியனவான நல்ல பூசனைகளைச் சொல் அளவில் அடங்காதவாறு முன்னே செய்து, உடன் வந்தவர்கள் மகிழும்படி பலவாறாக மணிகளை வாரி வழங்கினர்.

விளக்கவுரை

நம்பியாரூரரை, அரியணையில், வண்டுகள் மொய்த்த மலர்கள் பரப்பிய பூந்தவிசில், வலிய ஆனேற்றைப் போல் விளக்கம் பொருந்த வீற்றிருக்கும்படி, மலை நாட்டவரின் மன்னரான சேரர் வணங்கி வேண்டிக் கொண்ட பின்பு, விரும்பியனவான நல்ல பூசனைகளைச் சொல் அளவில் அடங்காதவாறு முன்னே செய்து, உடன் வந்தவர்கள் மகிழும்படி பலவாறாக மணிகளை வாரி வழங்கினர்.

இன்ன தன்மையில் உதியர்கள்
தலைவர்தாம் இடர்கெட முனைப்பாடி

மன்னர் தம்முடன் மகிழ்ந்தினி
துறையுநாள் மலைநெடு நாட்டெங்கும்
பன்ன கம்புனை பரமர்தந்
திருப்பதி பலவுடன் பணிந்தேத்திப்
பொன்னெ டுந்தட மூதெயில்
மகோதையிற் புகுந்தனர் வன்தொண்டர். **#3992**

இவ்வகையில் சேரர்க்குத் தலைவரான கழறிற்றறிவார், உலகிலுள்ள, துன்பம் நீங்கும்படி, திருமுனைப்பாடி நாட்டின் மன்னரான நம்பியாரூரருடன் மகிழ்வுடன் இனிமையாய்க் கூடியிருக்கும் நாளில், வன்தொண்டர், நீண்ட மலை நாட்டில் எங்கும் உள்ள பரமரின் பதிகள் பலவற்றையும் சேரமானுடனே சென்று பணிந்து, வழிபட்டுப் பொன்னால் ஆய நீண்ட பெரிய மதில் சூழ்ந்த மகோதை என்ற நகரினுள் வந்து புகுந்தார்.

விளக்கவுரை

மகோதை - சேர நாட்டின் தலைநகராய திருக்கொடுங் கோளூர். பரமர் தம் திருப்பதிகள் பலவாவன: திருச்சிவப்பேரூர், விடைக்குன்று, நாதேச்சுரம், வைக்கம், திருச்செங்குன்றூர், சுசீந்தரம் திருவிதாங்கூர் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார்.

ஆய செய்கையின் நாள்பல
கழிந்தபின் அரசர்கள் முதற்சேரர்
தூய மஞ்சனத் தொழிலினில்
தொடங்கிடத் துணைவராம் வன்தொண்டர்
பாய கங்கைசூழ் நெடுஞ்சடைப்
பரமரைப் பண்டுதாம் பிரிந்தெய்தும்
சேய நன்னெறி குறுகிடக்
குறுகினார் திருவஞ்சைக் களந்தன்னில். **#3993**

இவ்வாறாய செய்கையால் பல நாள்கள் கழிந்த பின்பு, ஒரு நாள், முடியுடை வேந்தர்களுள் முன் வைத்து எண்ணப் படுகின்ற சேரர் பெருமானார் தூய நீராடுதலைச் செய்தருளும் தொழிலில் முற்பட, அவருடைய தோழரான வன்தொண்டர், பரந்த கங்கையைச் சூழ முடித்த நீண்ட சடையையுடைய சிவபெருமானை, முன்னை நிலையில் தாம் பிரிந்து போந்து, இவ்வுலகத்தில் வந்த சேயதான நல்ல நெறியானது நிறைவுறும் எல்லைவரத் திருவஞ்சைக் களத்தை அடைந்தார்.

விளக்கவுரை

மேல் `அம்மெல்லியலாருடன் காதல் இன்பம் கலந்து அணைவாய்' என இறைவன் அருளிய கால எல்லை குறுகிட, அஞ் சைக்களத்துக்

கோயிலுக்குட் சென்றார்.

கரிய கண்டர்தங் கோயிலை
வலங்கொண்டு காதலால் பெருகன்பு
புரியும் உள்ளத்தர் உள்ளணைந்
திறைவர்தம் பூங்கழல் இணைபோற்றி
அரிய செய்கையில் அவனியில்
வீழ்ந்தெழுந்து அலைப்புறு மனைவாழ்க்கை
சரிய வேதலைக் குத்தலை
மாலையென் றெடுத்தனர் தமிழ்மாலை. **#3994**

கரிய கழுத்தையுடைய சிவபெருமானின் கோயிலை வலமாக வந்து, பெருவிருப்பம் மிக்கு ஓங்குதலால் பெருகிய அன்பே சிந்தை முழுதும் இடங்கொள்ளப் பெற்ற சுந்தரர், உள்ளே சென்று, சிவபெருமானின் மலரனைய திருவடிகள் இரண்டையும் வழிபட்டு, உடம்பிற்குரிய அரிய செயலால் நிலத்தில் விழுந்து எழுந்து, பொருள் இன்பங்களைத் துய்த்தல் வழிவரும் இன்ப துன்பங்கள் அலைத்தல் பொருந்திய இவ்வுலக வாழ்க்கை தம்மைவிட்டு நீங்கத் `தலைக்குத் தலைமாலை' எனத் தொடங்கும் தமிழ் மாலையாம் திருப்பதிகத்தைப் பாடத் தொடங்கினார்.

விளக்கவுரை

`தலைக்குத் தலைமாலை' எனத் தொடங்கும் திருப்பதிகம் இந்தளப்பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.4).*

எடுத்த அத்திருப் பதிகத்தின்
உட்குறிப்பு இவ்வுல கினிற்பாசம்
அடுத்த வாழ்க்கையை அறுத்திட
வேண்டுமென்று அன்பர்அன் பினில்பாடக்
கடுத்த தும்பிய கண்டர்தங்
கயிலையிற் கணத்தவ ருடன்கூடத்
தடுத்த செய்கைதான் முடிந்திடத்
தங்கழற் சார்புதந் தளிக்கின்றார். **#3995**

`தலைக்குத் தலைமாலை' எனத் தொடங்கும் திருப்பதிகம் இந்தளப்பண்ணில் அமைந்ததாகும் (தி.7 ப.4).

விளக்கவுரை

`தலைக்குத் தலைமாலை' எனத் தொடங்கும் திருப் பதிகத்தில் *1, 2, 5, 6* ஆகிய பாடல்கள் வினாவுரையாகவும், ஏனை யவை இறை அருட்செயலைக் குறிப்பனவாகவும் அமைந்து உள்ளன. இவற்றுள் *8*ஆவது பாடலில் `வெறுத்தேன் மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன்.' எனும் குறிப்புளது. இதுவே அத்திருப்பதிகத்தின்

உட்பொருளாகும் என்பது சேக்கிழாரின் திருவுள்ளமாகும்.

மன்ற லந்தரு மிடைந்தபூங்
கயிலையின் மலைவல்லி யுடன்கூட
வென்றி வெள்ள்விடைப் பாகர்தாம்
வீற்றிருந் தருளிய பொழுதின்கண்
ஒன்று சிந்தைநம் மூரனை
உம்பர்வெள் ளானையில் உடன்ஏற்றிச்
சென்று கொண்டிங்கு வாருமென்று
அயன்முதல் தேவர்கட் கருள்செய்தார். **#3996**

நறுமணம் மிக்க அழகிய மரங்கள் நெருங்கிய திருக் கயிலாயத்தில், உமையம்மையாருடன் கூட, வெற்றி பொருந்திய வெண்மையான ஆனேற்று ஊர்தியின்கண் இறைவன் எழுந்தருளி இருந்தபோது `நம்முடன் ஒன்றுபட்ட சிந்தனையுடைய நம் நம்பியா ரூரனைத் தேவருலகத்திலுள்ள வெள்ளை யானையுடன் சென்று அதன் மீது ஏற்றிக் கொண்டு இங்கு வாருங்கள்' என்று அயன் முத லான தேவர்களுக்கு ஆணையிட்டருளினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

வான நாடர்கள் அரிஅயன்
முதலினோர் வணங்கிமுன் விடைகொண்டு
தூந லந்திகழ் சோதிவெள்
ளானையுங் கொண்டுவன் தொண்டர்க்குத்
தேன லம்புதண் சோலைசூழ்
மகோதையில் திருவஞ்சைக் களஞ்சேரக்
கால்நி லங்கொள வலங்கொண்டு
மேவினார் கடிமதில் திருவாயில். **#3997**

அவ்வருளாணையைக் கேட்டதேவர்களும், மால் அயன் முதலியவர்களும் இறைவரை முன் வணங்கி, விடைபெற்று, சுந்தரருக்காகத் தூய நன்மை விளங்கும் ஒளியுடைய வெள்ளை யானையையும் உடன் கொண்டு, தேன் பொழியும் சோலைகள் சூழ்ந்த மகோதை நகரத்தில் திருவஞ்சைக்களத்தைச் சேர அணையும் பொழுது, கால் நிலத்தில் பொருந்த வலமாக வந்து காவலையுடைய மதில் வாயிலை அணுகினார்.

விளக்கவுரை

தேவர்களின் கால்கள் நிலம் தீண்டாதன. இறைவன் ஆணையை மேற்கொண்டு, சுந்தரரை அழைத்துவரச் செல்ல வந்தமையின்

திருவஞ்சைக்களத்தில் அவர்களின் கால்கள் நிலம் தீண்டுவனவாயின.

தேவர் தங்குழாம் நெருங்கிய
வாய்தனில் திருநாவ லூரர்தம்
காவல் மன்னரும் புறப்பட
எதிர்கொண்டு கயிலைவீற் றிருக்கின்ற
பூவ லம்புதண் புனற்சடை
முடியவர் அருளிப்பா டெனப்போற்றி
ஏவல் என்றபின் செய்வதொன்று
இலாதவர் பணிந்தெழுந் தெதிரேற்றார். **#3998**

இங்ஙனம் தேவர் குழுவினர் வந்து நெருங்கிய வாயிலின் வழியே, திருநாவலூர் மன்னரான நம்பியாரூரரும் தம் வழிபாடு நிறைவேறிய அளவில் வெளியே வர, தேவர்கள் எதிர் கொண்டு திருக்கயிலையில் வீற்றிருந்தருளுகின்ற கொன்றையணிந்த சிவபெருமான் தங்களை இவ்வெள்ளை யானை மீது ஏற்றி அழைத்து வரப்பணித்தது ஆணையாகும் என்று கூறிப் போற்ற, இஃது அப்பெருமானின் அருள் ஆணை என்பதையறிந்த நம்பிகள், வேறு செயல் ஒன்றும் இல்லாதவராய் வணங்கி, எழுந்து, எதிராக வந்து அவ்வருளாணையை ஏற்றருளினார்.

விளக்கவுரை

****

ஏற்ற தொண்டரை அண்டர்வெள்
ளானையின் எதிர்வலங் கொண்டேற்ற
நாற்ற டங்கடல் முழுக்கென
ஐவகை நாதமீ தொழுந்தார்ப்பப்
போற்றி வானவர் பூமழை
பொழிந்திடப் போதுவார் உயிரெல்லாம்
சாற்று மாற்றங்கள் உணர்பெருந்
துணைவரை மனத்தினிற் கொடுசார்ந்தார். **#3999**

இறைவரின் ஆணையை ஏற்ற தொண்டரான நம்பியாரூரரை, எதிர் வலம் செய்து, வணங்கித் தாம் கொணர்ந்த வெள்ளை யானையின் மீது ஏற்ற, நாற்றிசைகளிலும் உள்ள பெரிய கடல்களின் ஓசையைப் போன்று ஐவகைத் துந்துபிகளும் எழுந்து நம்பியாரூரர், திருவருளால் எல்லாவுயிர்களும் கழறும்சொற்களை அறிபவரான தம் பெருந்தோழரான சேரமான் பெருமாள் நாயனா ரைத் தம் உள்ளத்துள் எண்ணியவாறே, மேற்சென்றருளினார்.

விளக்கவுரை

****

சேரர் தம்பிரான் தம்பிரான்
தோழர்தஞ் செயலறிந் தப்போதே
சார நின்றதோர் பரியினை
மிசைக்கொண்டு திருவஞ்சைக் களஞ்சார்வார்
வீர வெண்களிறு உகைத்துவிண்
மேற்செலும் மெய்த்தொண்டர் தமைக்கண்டார்
பாரில் நின்றிலர் சென்றதம்
மனத்தொடு பரியும்முன் செலவிட்டார். **#4000**

சேரமான் பெருமானாரும் தம்பிரான் தோழரான சுந்தரரின் செயலை அறிந்து, அது பொழுதே, சார நின்றதான ஒரு குதிரையின் மேற்கொண்டு, திருவஞ்சைக்களத்தைச் சார, வீரமுடைய வெள்ளை யானையைச் செலுத்தி வானத்தின்கண் சென்று கொண் டிருக்கும் உண்மைத் தொண்டரான சுந்தரரைக் கண்டார். நிலத்தில் நிற்கலாற்றாதவராய்த் தமக்கு முன் விரைவாய்ச் செல்லும் தம் உள் ளத்துடன் குதிரையும் வெள்ளையானையின் முன்னால் செல்லும்படி செலுத்தினார்.

விளக்கவுரை

தம் மனத்துடன் குதிரையும் சென்றது என்றது குதிரையின் விருப்பமும் குறித்தவாறு. `உள்ளம் போல உற்றுழி உதவும் புள்ளியற்கலிமா உடைமையான' *(*தொல். கற்பியல் *- 53)* எனத் தொல்காப்பியர் கூறுமாறு, அன்னதோர் உள்ளமும் குதிரையும் சேரர் பெருமாளாருக்கு உற்றுழியுதவும் பெற்றியவாயின.

விட்ட வெம்பரிச் செவியினில்
புவிமுதல் வேந்தர்தாம் விதியாலே
இட்ட மாஞ்சிவ மந்திரம் ஓதலின்
இருவிசும் பெழப் பாய்ந்து
மட்ட லர்ந்தபைந் தெரியல்வன்
தொண்டர்மேல் கொண்டமா தங்கத்தை
முட்ட எய்திமுன் வலங்கொண்டு
சென்றது மற்றதன் முன்னாக. **#4001**

அவ்வாறு செலுத்தப்பட்ட விருப்பமுடைய குதிரை யின் காதில், நில மன்னருள் முதன்மை பெற்ற மன்னரான சேரர், சிவாகம விதிப்படி எண்ணிவரும் தமக்கு விருப்பமான சிவ மந்தி ரத்தை ஓதினாராக, அதன் பயனாக அக்குதிரையும் பெரிய வானத்தில் எழும்பிப் பாய்ந்து சென்று, மணம் பொருந்திய மலர்ந்த மலர்களை யுடைய பசுமையான மாலையை அணிந்த வன்தொண்டர் மேற் கொண்டு சென்று கொண்டிருக்கும்

வெள்ளை யானையை அணுகச் சென்று சேர்ந்து, முதலில் அதனை வலமாக வந்து, பின் அவ் யானை யின் முன் சென்றது.

விளக்கவுரை

சிவமந்திரத்தின் பேராற்றால் இதனாலும் விளங்கும்.

உதியர் மன்னவர் தம்பெரும்
சேனையின் உடன்சென்ற படைவீரர்
கதிகொள் வாசியிற் செல்பவர்
தம்மைத்தங் கட்புலப் படுமெல்லை
எதிர்வி சும்பில் கண்டுபின்
கண்டிலர் ஆதலின் எல்லாரும்
முதிரும் அன்பினில் உருகிய
சுரிகையான் முறைமுறை உடல்வீழ்த்தார். **#4002**

சேரர் பெருமாள் குதிரையின் மீது எழுந்தருளிய பொழுதே, உடன் படையாகச் சென்ற வீரர்கள், மிகவிரைவாக, வானின் மீது செல்கின்ற தம் மன்னரைத் தம் கண்ணிற் புலப்படும் அளவும் வானத்தில் கண்டு, அதன் பின் காணாதவர் ஆயினர். அத னால் மனம் நெகிழ்ந்த படை வீரர்கள் அனைவரும் , அவரிடம் வைத்த பேரன்பினால், உருவிய தம் உடைவாளினாலே முறை முறையாய்த் தம் உடலை வீழ்த்தனர்.

விளக்கவுரை

இதனால் படை வீரர்கள் சேரர் பெருமாளிடத்துக் கொண்ட அன்பும், அவர்தம் வீரமும் புலப்படுகின்றன.

வீர யாக்கையை மேல்கொண்டு
சென்றுபோய் வில்லவர் பெருமானைச்
சார முன்சென்று சேவகம்
ஏற்றனர் தனித்தொண்டர் மேல்கொண்ட
வாரு மும்மதத் தருவிவெள்
ளானைக்கு வயப்பரி முன்வைத்துச்
சேரர் வீரருஞ் சென்றனர்
மன்றவர் திருமலைத் திசைநோக்கி. **#4003**

அவ்வீரர்கள் தம் நுண்ணிய வீரவுடலை மேற் கொண்டு சென்று, சேரர் பெருமாளைச் சார முன்னே சென்று, அவரது பணியை ஏற்றனர். ஒப்பில்லாத பெருந்தொண்டரான சுந்தரர், மேற் கொண்ட மும்மதமும் அருவி எனப் பாய்கின்ற வெள்ளை யானைக் குக் கொற்றக் குதிரை முன்னே செல்ல, வீரர் தலைவரான சேரமானும் மறைவாணரின் கயிலைத் திருமலையினை நோக்கிச் சென்றனர்.

விளக்கவுரை

****

யானை மேல்கொண்டு செல்கின்ற
பொழுதினில் இமையவர் குழாமென்னும்
தானை முன்செலத் தானெனை
முன்படைத் தான்எனும் தமிழ்மாலை
மான வன்தொண்டர் பாடிமுன்
அணைந்தனர் மதிநதி பொதிவேணித்
தேன லம்புதண் கொன்றையார்
திருமலைத் தென்திசைத் திருவாயில். **#4004**

வெள்ளை யானையின் மீது ஏறிச் செல்கின்ற பொழுது, வானவர் கூட்டம் என்னும் படைமுன்னே செல்லத் `தான் எனைமுன் படைத்தான்' எனத் தொடங்கும் தமிழ் மாலையைப் பெருமைமிக்க நம்பிகள் பாடியருளியவாறு, கங்கையையும் கொன் றையையும் சூடிய இறைவரின் திருமலையின் தெற்கு வாயிலின் முன் போய்ச் சேர்ந்தனர்.

விளக்கவுரை

`தான் எனை முன்படைத்தான்' எனத் தொடங்கும் திருப்பதிகம், சுந்தரர் வெள்ளையானை மீது விண்வழிச் செல்லும் பொழுது தொடங்கி, திருக்கயிலையில் இறைவனைக் கண்டு மகிழும் வரையிலும் பாடிச் சென்ற பதிகம் ஆகும். பஞ்சமப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.7 ப.100).* இப்பதிகத்தின் முதல் இரு பாடல்கள் திருவஞ்சைக்களத்தில் வெள்ளையானையில் ஏறிய பொழுது பாடிய னவாம். *3* முதல் *6* வரை உள்ள பாடல்கள் யானையின் மீதிருந்து விண்வழியே செல்லும் பொழுது இறைவனின் பெருங்கருணைத் திறத்தை நினைந்து பாடியனவாகும். *7*ஆவது பாடல் விண்வழிச் செல்லும் விரைவையும், வருணன் வரவேற்ற திறத்தையும் நினைந்து பாடியதாகும். *8*ஆவது பாடல் கயிலையை அணுகிய நிலையில் அங்கு எழும் போற்றியுரைகள் பற்றி அருளியதாம். *9*ஆவது பாடல் திருக் கயிலை சென்றதும், இந்திரன், மால், பிரமன் எழிலார் மிகு தேவ ரெல்லாம் எதிர் கொண்டு அழைத்துச் சென்றமையையும், அங்குள்ள முனிவர்கள் இவன் யார் என்னப் பெருமான், `நம் தமர்; ஊரான்' என்றருளியமையையும் அருளியதாகும். *10*ஆவது பாடல் இறையின் பத்தைச் சுவைத்த வண்ணம் அருளிய சுந்தரர், இப்பதிகத்தைத் திரு வஞ்சைக் களத்து இறைவருக்கு வருணன் வழி அனுப்பியமையை அருளியதாகும். இவ்வொன்பதாவது பாடற் கருத்தோடு, முன்னர்த் திருமலைச் சிறப்பில்கூறிய கருத்து மாறுபடாமல் கொள்ளல் வேண்டும். சுந்தரர் ஒளியுருவாய் வரக் கண்ட மாதவர், ஈதென்ன அதிசயம் என வினவ, உபமன்னியு முனிவர் திருவருளில் அழுந்திச் சிந்திக்க, இறைவன் நம் தமர் ஊரன் என அவருக்கு

அறிவித்தருள, உணர்ந்த நிலையில், அம் மாதவருக்கு அவ்வொளியை வன்தொண்டன் எனவும், எந்தையார் அருளால் அணைவான் எனவும் கூறியருளினார். இது திருமலைச் சருக்கத்துட் கண்டது. இப்பதிகத்து வரும் ஒன்பதாவது பாடலோ, `மந்திர மாமுனிவர் இவன் யார் என எம்பெருமான், நந்தமர் ஊரன் என்றான் நொடித்தான் மலையுத்தமனே' எனக் குறிக்கின்றது. நம் தமர் ஊரன் என்றான் என்பது, ஈதென்ன அதிசயம் எனவியந்த மாதவர் உபமன்னியு முனிவர் வினாவிற்கு விடையளித்தற்கு ஏற்ப இறைவன் உள்நின்றுணர்த்தியதாகும். யோக நெறியில் நின்ற சுந்தரருக்கு இந்நிலையறிய இயன்றமையின், அந்நிகழ்வைத் தம்பாடல் வழி எடுத்து மொழிவாராயினார். இவ்வகையில் அமைத்துக்கொள்ளல் வேண்டும்.

மாசில் வெண்மைசேர் பேரொளி
உலகெலாம் மலர்ந்திட வளர்மெய்ம்மை
ஆசி லன்பர்தம் சிந்தைபோல்
விளங்கிய அணிகிளர் மணிவாயில்
தேசு தங்கிய யானையும்
புரவியும் இழிந்துசே ணிடைச்செல்வார்
ஈசர் வெளள்ளிமா மலைத்தடம்
பலகடந் தெய்தினர் மணிவாயில். **#4005**

குற்றம் அற்ற வெண்ணிறத்துடன் கூடிய திருநீறு போன்ற போரொளி, உலகெலாம் விரிய, வளரும் மெய்ம்மையான குற்றம் அற்ற அன்பரின் உள்ளம் என ஓங்கி விளங்கிய அழகு மிக்க மலையின் அழகிய வாயிலில், ஒளியினையுடைய யானையினின்றும் குதிரையினின்றும் முறையே சுந்தரரும் சேரமானாரும் இறங்கி; நெடுந்தொலைவு செல்பவராகி, இறைவரின் பெரிய வெண்மையான மலையின் இடங்கள் பலவற்றையும் கடந்து, அழகிய மணிவாயிலை வந்து அடைந்தனர்.

விளக்கவுரை

இறைவன் எழுந்தருளி இருப்பதாலும் பெருமையும் தூய்மையும் நிலவுவதாலும் வாயிற்கு அன்பர் சிந்தை உவமை ஆயிற்று.

அங்கண் எய்திய திருவணுக்
கன்திரு வாயிலின் அடற்சேரர்
தங்கள் காவலர் தடையுண்டு
நின்றனர் தம்பிரா னருளாலே
பொங்கு மாமதம் பொழிந்தவெள்
ளானையின் உம்பர்போற் றிடப்போந்த
நங்கள் நாவலூர்க் காவலர்
நண்ணினார் அண்ணலார் திருமுன்பு. **#4006**

அங்குப் பொருந்திய திருஅணுக்கன் திருவாயிலில், வெற்றி பொருந்திய சேரமான் பெருமாள் நாயனார் உட்செல்ல இயலாமல் தடுக்கப்பட்டு நின்றனர். பொங்கும் கரிய மதநீர் பொழிந்த வெள்ளை யானையின் மேல் இறைவரின் திருவருளால் வானவர் சூழந்து போற்றிவர நம் பெருமானாரான நாவலூர்த் தலைவராய சுந்தரர், இறைவரின் திருமுன்பு சேர்ந்தார்.

விளக்கவுரை

திரு அணுக்கன் திருவாயில் - இறைவன் வீற்றிருக்கும் இடத்திற்கு முன்புள்ள திருவாயில்.

சென்று கண்ணுதல் திருமுன்பு
தாழ்ந்துவீழ்ந் தெழுந்துசே ணிடைவிட்ட
கன்று கோவினைக் கண்டணைந்
ததுவெனக் காதலின் விரைந்தெய்தி
நின்று போற்றிய தனிப்பெருந்
தொண்டரை நேரிழை வலப்பாகத்
தொன்றும் மேனியர் ஊரனே
வந்தனை என்றனர் உலகுய்ய. **#4007**

உட்சென்று, இறைவரின் திருமுன்பு தொழுது விழுந்து வணங்கிப் பின் எழுந்து, நீண்ட காலம் நீண்ட தொலைவிடத் தில் விட்ட ஆன்கன்று, தன் தாய்ப் பசுவைக் கண்ட அளவில் ஆர்வம் பொருந்த அணைவதைப் போல, விரைவாகச் சென்று, நேர் நின்று போற்ற, ஒப்பிலாத பெரிய அத்திருத்தொண்டரான நம்பியாரூரரைப் பார்த்து, உமையம்மையுடன் கூடிய சிவபெருமான், `நம்பி ஆரூரனே, உலகுய்ய வத்தனையோ' என்று வினவினர்.

விளக்கவுரை

சேண் - காலமும் இடமும் குறித்தது. `ஈன்ற ஆன் கனைப்புக் கேட்ட கன்று போல்' *(பா.214)*, `கன்றுதடையுண்டு எதிர் அழைக்கக் கதறிக் கனைக்கும் புனிற்றாப் போல்' *(பா.3882)* என நம்பிகளைக் கன்றாகவும் பெருமானைப் பசுவாகவும் முன்னர்க் குறித்திருப்பனவும் காண்க.

அடிய னேன்பிழை பொறுத்தெனை
யாண்டுகொண் டத்தொடக் கினைநீக்கி
முடிவி லாநெறி தருபெருங்
கருணைஎன் தரத்ததோ எனமுன்னர்ப்
படியும் நெஞ்சொடு பன்முறை
பணிந்தெழும் பரம்பரை யானந்த
வடிவு நின்றது போன்றுஇன்ப

வெள்ளத்து மலர்ந்தனர் வன்தொண்டர். **#4008**
`அடியேன் செய்த பிழையைப் பொறுத்து என்னை ஆட்கொண்டு, பிழையால் போந்த அப்பிறப்பின் தொடர்பை நீக்கி, முடிவில் மீளாத நெறியான திருவடிப் பேற்றைத் தரும் பெருமானின் பெருங்கருணையானது என் சிறிய தகுதிக்குத் தக்கதோ?' எனப் போற்றித் திருமுன்பு, அச்சம் பொருந்திய உள்ளத்துடன் பன்முறையும் பணிந்து, மேன்மேலும் தொடர்ச்சியாய்ப் பெருகி வரும் ஆனந்தமே ஒருவடிவு கொண்டால் என்ன நிற்கும் வன்தொண்டர் பெருமான் பெருமகிழ்வுடன் திளைத்து நின்றார்.

விளக்கவுரை

****

நின்ற வன்தொண்டர் நீரணி
வேணியர் நிறைமலர்க் கழல்சாரச்
சென்று சேரலன் திருமணி
வாயிலின் புறத்தினன் எனச்செப்பக்
குன்ற வில்லியார் பெரியதே
வரைச்சென்று கொணர்கென அவரெய்தி
வென்றி வானவர்க் கருளிப்பாடு
எனஅவர் கழல்தொழ விரைந்தெய்தி. **#4009**

இந்நிலையில் நின்றவராகிய நம்பியாரூரர், கங்கையை ஏற்ற சடையினரான இறைவரின் நிறைந்த மலர் போன்ற திருவடிகளின் அருகே சென்று, `சேரமான் தாங்கள் வீற்றிருந்தருளும் இக்கோயிலின் மணியால் ஆன திருவணுக்கன் வாயில் புறத்தில் உள்ளார்' என்று விண்ணப்பித்துக் கொள்ள, மேருமலையை வில்லாக உடைய சிவபெருமான், நந்திதேவரை நோக்கி `அவரைச் சென்று அழைத்து வருக! என்று ஆணையிட, அவரும் சென்று ஞான வெற்றியைப் பொருந்திய சேரரிடத்து `உள்ளே வர ஆணை!' என்று தெரிவிக்க, உடனே அவரும் இறைவரின் திருவடியை வணங்குதற்கு விரைந்து வந்து,

விளக்கவுரை

பெரிய தேவர் - நந்தி தேவர். வென்றி - வெற்றி; ஞானவெற்றி. பதி ஞானத்தாலன்றி இறைவனைக் கண்டு மகிழ இயலாது ஆதலின் இவ்வெற்றி அத்தகைய ஞானத்தால் பெற்ற வெற்றி ஆயிற்று. வானவர்க்கு - சேரமானாருக்கு, வானவரம்பர் எனப்பெயர் வழங்குதல் குறித்தது.

மங்கை பாகர்தந் திருமுன்பு

சேய்த்தாக வந்தித்து மகிழ்வெய்திப்
பொங்கும் அன்பினில் சேரலர்
போற்றிடப் புதுமதி அலைகின்ற
கங்கை வார்கடைக் கயிலைநா
யகர்திரு முறுவலின் கதிர்காட்டி
இங்கு நாம்அழை யாமைநீ
எய்திய தென்னென அருள்செய்தார். #4010

உமைஅம்மையை ஒரு கூற்றில் கொண்ட சிவபெருமானின் திருமுன்பு சென்று, தொலைவில் நின்று தொழுது மகிழ்ந்து, மேன்மேலும் பெருகுகின்ற அன்பினால் போற்றி மகிழ, பிறையையும் கங்கையையும் கொண்ட நீண்ட சடையையுடைய இறைவர், திருப்புன்முறுவலினால் இனிய ஒளியைக் காட்டி, `நாம் அழையாமல் நீ இங்கு வந்த காரணம் யாது?' என வினவியருளினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

அரசர் அஞ்சலி கூப்பிநின்று
அடியனேன் ஆரூரர் கழல்போற்றிப்
புரசை யானைமுன் சேவித்து
வந்தனன் பொழியுநின் கருணைத்தெண்
திரைசெய் வெள்ளமுன் கொடுவந்து
புகுதலின் திருமுன்பு வரப்பெற்றேன்
விரைசெய் கொன்றைசேர் வேணியாய்
இனியொரு விண்ணப்பம் உளதென்று. #4011

சேரர் பெருமானும், தலைமீது கைகளைக் கூப்பி நின்று, `அடியேன் நம்பியாரூரரின் திருவடிகளைப் போற்றியவாறு, அவர் அருளால் வெள்ளை யானையின் முன்னே அவரை வணங்கிய வாறு வந்தேன்; பெருமானின் மிக்குப் பொழியும் அருளாய தெள்ளிய அலையையுடைய கருணைப் பெருவெள்ளமானது அடியேனை உந்திக் கொண்டு வந்து இங்குப் புகுத்தியதால் பெருமானின் திருமுன்பு வந்தடையும் பேற்றைப் பெற்றேன். நறுமணம் மிக்க கொன்றை மாலையை அணிந்த சடையையுடைய பெருமானே! மேலும் ஒரு விண்ணப்பம் உள்ளது எனக் கூறி,

விளக்கவுரை

புரசை - யானையின் கழுத்தில் கட்டும் கயிறு.

பெருகு வேதமும் முனிவரும்
துதிப்பரும் பெருமையாய் உனைஅன்பால்

திருவு லாப்புறம் பாடினேன்
திருச்செவி சாத்திடப் பெறவேண்டும்
மருவு பாசத்தை அகன்றிட
வன்றொண்டர் கூட்டம்வைத் தாய்என்ன
அருளும் ஈசருஞ் சொல்லுக
என்றனர் அன்பருங் கேட்பித்தார். **#4012**
`பெரிய மறைகளாலும் முனிவர்களாலும் போற்றுதற்கரிய பெருமையுடையவரே! உயிர்களொடு பொருந்தி நிற்கும் பாசப்பிணைப்பினின்றும் நீங்கிட, வன்தொண்டரின் கூட்டத் தைச் சார வைத்தவரே!' அன்பினால் பெருமானைப் புறப்பாட்டாலாய திருவுலாச் செய்யுள் ஒன்றைப் பாடினேன்; அதனை அருள் செய்து திருச்செவி சார்த்திக் கேட்டருள வேண்டும்' என்று வேண்டிக் கொள்ள; அருள் வள்ளலாய பெருமானும் `கூறுக' என்றார். அன்பரான சேர மானும் உலாவைப் பாடி அவர் கேட்டருளுமாறு செய்தார்.

விளக்கவுரை

புறத்திணை ஏழனுள் பாடாண் திணை என்பதும் ஒன்று. இதன்கண் மக்களையல்லாது தெய்வத்தைப் பாடி மகிழும் திறனும் கூறப்பெறுகின்றது. அவ்வகையில், மானிடப் பெண்டிர் தெய்வத்தை நயப்பதாகவும் கூறப்படும். இதனைக் `காமப்பகுதி கடவுளும் வரையார் ஏனோர் மருங்கினும் என்றார் புலவர்' என வரும் நூற் பாவும் விளக்கும். இவ்வகையில் பேதை முதலாயப் பேரிளம் பெண் ஈறாக ஏழு வகைப் பருவத்து மகளிரும் இறைவர் உலாவரக் கண்டு காமுறுவதாகக் கூறும் பாடலும் உளதாயிற்று. எனவே இதனை உலா எனக் கூறுவர். `ஊரொடு தோற்றமும் உரத்ததென மொழிப' எனவரும் தொல்காப்பிய நூற்பா*(??)* இதற்குரிய இலக்கணமாகும். இவ்வரிய நூல் திருக்கயிலாய ஞான உலா என அழைக்கப்பெறும். பதினொன்றாம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது. இற்றைக்கும் காணும் உலா நூல்களில் இதுவே முதல் உலாவாகும். இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

சேரர் காவலர் பரிவுடன்
கேட்பித்த திருவுலாப் புறங்கொண்டு
நாரி பாகரும் நலம்மிகு
திருவருள் நயப்புடன் அருள்செய்வார்
ஊர னாகிய ஆலால
சுந்தரன் உடனமர்ந் திருவீரும்
சார நங்கண நாதராம்
தலைமையில் தங்கும் என் றருள்செய்தார். **#4013**
சேரமான் பெருமானார் அன்புடன் பாடிக் கேட்கு மாறு செய்த

திருவுலாப் பாட்டினை ஏற்றுத் திருவுள்ளம் கொண்ட அம்மையப்பரான
இறைவரும், நன்மை மிக்க திருவருளை வழங்கும் விருப்பத்தடன்
அருளுபவராய் `நம்பி ஆரூரனான ஆலால சுந்தர னுடன் இனிதமர்ந்து
நீங்கள் இருவரும், நம்மை அணுக இருக்கும் நம் கணங்களுக்குத்
தலைமை ஏற்று இங்கு உறைவீராக!' என்று அருள் செய்தார்.

விளக்கவுரை

****

அன்ன தன்மையில் இருவரும்
பணிந்தெழுந் தருள்தலை மேற்கொண்டு
மன்னும் வன்தொண்டர் ஆலால
சுந்தர ராகித்தாம் வழுவாத
முன்னை நல்வினைத் தொழில்தலை
நின்றனர் முதற்சேரர் பெருமானும்
நன்மை சேர்கண நாதராய்
அவர்செயும் நயப்புறு தொழில்பூண்டார். **#4014**

அவ்வருளிப் பாட்டை ஏற்ற இவரும், பணிந்து எழுந்து, இறைவரின்
திருவருளைத் தலைமேற் கொண்டு ஏற்று நிலைபெற்ற சுந்தரர்
பெருமான் ஆலால சுந்தரராகி, முன் தாம் தவறாது இயற்றி வந்த
திருத்தொண்டில் தலைநின்றார். முதன்மையுடைய சேர மானாரும்
நன்மையுடைய சிவகண நாதராகி அவர்கள் செய்யும் விருப்பம் மிக்க
திருத்தொண்டை மேற்கொண்டார்.

விளக்கவுரை

****

தலத்து வந்துமுன் னுதயஞ்செய்
பரவையார் சங்கிலி யாரென்னும்
நலத்தின் மிக்கவர் வல்வினைத்
தொடக்கற நாயகி யருளாலே
அலத்த மெல்லடிக் கமலினி
யாருடன் அனிந்திதை யாராகி
மலைத்த னிப்பெரு மான்மகள்
கோயிலில் தந்தொழில் வழிநின்றார். **#4015**

இவ்வுலகத்தில் வந்து தோன்றிய `பரவையார்' `சங்கிலியார்' என்ற
இருமகளிரும், வன்மையான வினைப் பாசம் நீங்க, உமையம்மையாரின்
திருவருளினால், முன்னை நிலையில் மென்மையான அடியையுடைய
கமலினியார் மற்றும் அனிந்திதை யார் என்ற முன்னைப் பெயருடைய
தோழியர் ஆகி, மலைமகளா ரான உமையம்மையாரின் திருக்கோயிலில்,

தாங்கள் முன்பு செய்து வந்த திருத்தொண்டின் வழியே நிலைபெற்றனர்.

விளக்கவுரை

****

வாழி மாதவர் ஆலால
சுந்தரர் வழியிடை அருள்செய்த
ஏழிசைத் திருப் பதிகம்இவ்
வுலகினில் ஏற்றிட எறிமுந்நீர்
ஆழி வேந்தனாம் வருணனுக்கு
அளித்திட அவனும்அவ் வருள்சூடி
ஊழி யில்தனி யொருவர்தம்
திருவஞ்கைக் களத்தில்உய்த் துணர்வித்தான். #4016

இவ்வுலகிற்கு நல்வாழ்வு தரும் மாதவரான ஆலால சுந்ததர் திருக்கயிலையை நோக்கி வரும் வழியில் பாடிய ஏழிசைப் பதிகத்தை இவ்வுலகத்தில் யாவரும் பெற்று உய்யும் பொருட்டு நம்பியாரூரர் அலை எறியும் கடற்குத் தலைவனாய வருணனிடம் தர, அவர் ஆணையின் வண்ணம் வருணனும் அந்த அருளிச் செயலைத் தலை மேற்கொண்டு, ஊழியிலும் அழியாத ஒருவரான சிவபெரு மானின் திருவஞ்சைக்களத்தில் சேர்த்து, அப்பதிகத்தை உணர்வித் தனர்.

விளக்கவுரை

இவ்வுண்மை திருநொடித்தான்மலைப் பதிகத்துவரும் *10*ஆவது பாடலால் தெரியவருவதாகும். `ஆழிகடலரையா அஞ்சை யப்பர்க்கு அறிவிப்பதே' என்பது நம்பியாரூரரின் திருவாக்காகும்.

சேரர் காவலர் விண்ணப்பம்
செய்யஅத் திருவுலாப் புறம்அன்று
சாரல் வெள்ளியங் கயிலையில்
கேட்டமா சாத்தனார் தரித்துஇந்தப்
பாரில் வேதியர் திருப்பிட
வூர்தனில் வெளிப்படப் பகர்ந்தெங்கும்
நார வேலைசூழ உலகினில்
விளங்கிட நாட்டினர் நலத்தாலே. #4017

சேரநாட்டின் பேரரசரான சேரமானார் பாடிய அந்தத் திருவுலாப் புறப்பாட்டை விண்ணப்பித்த அன்று, சாரல்களை யுடைய வெள்ளி மலையில் உடனிருந்து கேட்ட மாசாத்தனார், அதனை ஏற்று இந்நிலவுலகத்திலுள்ள, மறையவர் வாழுகின்ற திருப்பிடவூரில் வெளிப்படுமாறு சொல்லியருள, நீர் மிக்க கடல் சூழ்ந்த இந்நிலவுலகினில் எங்கும் நன்மை மிக அத்திருக்கைலாய ஞான உலாச்

செய்யுளும் விளங்குவதாயிற்று.

விளக்கவுரை

திருப்பிடவூர் - திருச்சிராப்பள்ளியிலிருந்து பெரம்பலூர் சாலையில் உள்ள சிறுகனூருக்கு வடமேற்கே இருநாழிகை அளவி லுள்ளதாகும். இங்குள்ள சாத்தனார் தம் திருக்கையில் திருவுலா ஏடு அமைந்தவாறுள்ளது.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளார்அடி யாரவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம். **#4018**

எக்காலத்தும் எவ்விடத்தும் சிவபெருமானிடத்துக் கொள்ளும் இன்பம் பெருகும் இயல்போடு, அப்பெருமானை ஒன்று பட்ட உணர்வினார் பத்திமை கொள்ள, அவ்வுயிர்தானும் மேன்மே லும் சிறந்து திருவருள் இன்பத்தில் திளைக்குமாறு, தில்லைப் பேர வையில் திருக்கூத்து இயற்றிவரும் பெருமானுடையவும் அப்பெரு மானின் அடியவருடையவும்ஆன, பொருள்சேர்புகழ் நுவலும் இந்நூல், உலகெலாம் நிலவி நிலைபெற்று விளங்கும் என்பதாம்.

விளக்கவுரை

எனவே இந்நூல், உயிர்கள் இறைவனிடத்துக் கொள்ளும் அன்பு பெருகப் பத்திமை கொள்ளும் உணர்வினால், அத்திருவருள் இன்பத்தில் திளைத்து ஓங்க என்றும் நிலைபெற்று விளங்கும் என்ப தாம். முன் இந்நூற்பயன் கூறுங்கால் மாக்கள் சிந்தையுள் சார்ந்து நின்ற பொங்கிய இருள் நீங்கும் என்றார் ஆசிரியர். நிறைவாக இத்திருப் பாடலில் உயிர்கள் இறையருள் இன்பத்தில் திளைக்க இந்நூல் எங்கும் நிலவி நிற்கும் என்று அருளுகின்றார். இவ்விரு திறனையும் ஒருங்கு நோக்கின் பாச நீக்கமும் சிவப்பேறுமே இந்நூற் பயன் என்பது தெளியலாம். ஒன்று காதலித்து - ஒன்றுபட்ட உணர்வோடு பத்திமை கொள்ள. உள்ளம் - உயிர்; `காணும் கண்ணுக்குக் காட்டும் உளம் போல்' *(சிவஞான சூத்.11)* என்புழிப் போல. இனி, ஒன்று என்பது ஒருவனாக விளங்கும் இறைவரை உணர்த்தும் சொல்லாகக் கொண்டு, பெருமானாரிடத்துப் பத்திமை கொள்ள என்று உரைத்தலுமாம். `ஒன்றென்றது ஒன்றே காண் ஒன்றே பதி' எனவரும் ஞானநூற் கூற்றும் காண்க. `உலகம்' என நிறைவுற நிற்கும் இச்சொல், பெருமானால் ஆசிரியருக்கு எடுத்துக் கொடுக்கப்பட்ட முதற் சொல்லாகும். `முந்திய முதல் நடு இறுதியுமானாய்' *(தி.8 ப.20 பா.8)* என இறையுண்மை கூறப் படுமாறு போல, அவ்விறைவனால் அருளப்பட்ட இச்சொல் முந்திய முதலும்

இறுதியுமாக அமைக்கப்பெற்றிருக்கும் திறம் அறிந்து இன்புறத் தக்கதாம். *1, 2114, 4281* ஆகிய பாடல்களில் இவ்வரிய சொல் வருதல் காண்க. இம்மூவிடத்தன்றி, *356, 454, 901, 1124, 1766, 2113, 2540, 2756, 3241, 4005, 4214, 4261, 4274,* ஆகிய எண்ணுடைய பாடல்களிலும் வருதல் அறிந்து இன்புறத் தக்கதாம். இவ்வாறே இந்நூலை அருளிச்செய்யக் காரணமாய் இருந்த அநபாய சோழனின் பெயரையும் பத்து இடங்களில் செய்நன்றி மறவாமல் சேக்கிழார் குறித்துள்ளமையும் அறிந்து மகிழத்தக்கதாம். அப்பாடல்களாவன *8, 22, 85, 98, 404, 552, 1212, 2744, 3947, 4203.* வெள்ளானைச் சருக்கம் முற்றிற்று. இரண்டாம் காண்டம் முற்றிற்று. திருத்தொண்டர் புராணம் முற்றிற்று. ஆகத் திருவிருத்தம் - *4,274* திருச்சிற்றம்பலம்.

நீடுதிருப் பொழில்காஞ்சி
நெறிக்காரைக் காடிறைஞ்சிச்
சூடுமதிக் கண்ணியார்
துணைமலர்ச்சே வடிபாடி
ஆடுமவர் இனிதமரும்
அனேகதங்கா வதம்பரவி
மாடுதிருத் தானங்கள்
பணிந்தேத்தி வைகுநாள். **#4019**

பெருகிய சோலைகள் சூழ்ந்த `திருக்கச்சி நெறிக்காரைக்காடு' என்னும் திருக்கோயிலைச் சென்று வணங்கி, அணியும் பிறையான கண்ணியையுடைய இறைவரின் துணையான மலர் அனைய திருவடிகளைப் பாடி, கூத்தியற்றும் இறைவர் இனிதாய் வீற்றிருக்கும் `திருக்கச்சிஅனேகதங்காவதம்' என்னும் திருப்பதியைப் போற்றி, அருகில் உள்ள பல கோயில்களையும் பணிந்து போற்றி அங்குத் தங்கியிருக்கும் நாள்களில்,

விளக்கவுரை

திருக்கச்சிநெறிக்காரைக்காட்டில் அருளிய பதிகம் `வாரணவு' *(தி.3 ப.65)* எனத் தொடங்கும் பஞ்சமப் பண்ணில் அமைந்த பதிகமாகும். திருக்கச்சிஅனேகதங்காவதத்தில் அருளிய பதிகம் கிடைத்திலது. `மாடு திருத்தானங்கள்' என்பன காஞ்சியிலும் அதற்கு அண்மையிலும் உள்ள பல கோயில்களுமாம்.

எண்திசையும் போற்றிசைக்கும்
திருப்பதிமற் றதன்புறத்துத்
தொண்டருடன் இனிதேகித்
தொல்லைவிடம் உண்டிருண்ட
கண்டர்மகிழ் மேற்றளியும்

முதலான கலந்தேத்தி
மண்டுபெருங் காதலினால்
வணங்கிமீண் டினிதிருந்தார். #4020

எட்டுத் திசைகளில் உள்ளவர்களும் போற்றும் திருப்பதியான காஞ்சிபுரத்தின் புறத்தில், திருத்தொண்டர்களுடன் கூடி இனிதாய்ச் சென்று, முன்நாளில் நஞ்சை உண்டு அதனால் கருநிறம் உடைய கழுத்தையுடைய இறைவர் மகிழ்வுடன் வீற்றிருக்கும் `திரு மேற்றளி' முதலான பதிகளில் சென்று போற்றிச் செறிந்த பெருங் காதலால் வணங்கி, திருக்கச்சி நகரில் மீண்டும் இனிதாய் எழுந்தருளித் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

திருமேற்றளியில் அருளிய பதிகம் கிடைத்திலது.

அப்பதியில் விருப்பினொடும்
அங்கணரைப் பணிந்தமர்வார்
செப்பரிய புகழ்ப்பாலித்
திருநதியின் தென்கரைபோய்
மைப்பொலியுங் கண்டர்திரு
மாற்பேறு மகிழ்ந்திறைஞ்சி
முப்புரஞ்செற் றவர்தம்மை
மொழிமாலை சாத்தினார். #4021

இவ்வாறு காஞ்சி நகரத்தில் மிக்க விருப்புடன் இறைவரை வணங்கியவாறு விரும்பி எழுந்தருளியிருக்கின்ற பிள்ளையார், கூறுதற்கரிய புகழுடன் கூடிய பாலியாற்றின் தெற்குக் கரையின் வழியில் சென்று, நஞ்சு விளங்கும் கழுத்தையுடைய சிவபெருமான் வீற்றிருக்கின்ற `திருமாற்பேற்றை' மகிழ்ச்சியுடன் வணங்கி, முப்புரங்களை எரித்த சிவபெருமானுக்குச் சொல் மாலை ஆன திருப்பதிகம் சாத்தியருளினார்.

விளக்கவுரை

இவ்வாறு காஞ்சி நகரத்தில் மிக்க விருப்புடன் இறைவரை வணங்கியவாறு விரும்பி எழுந்தருளியிருக்கின்ற பிள்ளையார், கூறுதற்கரிய புகழுடன் கூடிய பாலியாற்றின் தெற்குக் கரையின் வழியில் சென்று, நஞ்சு விளங்கும் கழுத்தையுடைய சிவபெருமான் வீற்றிருக்கின்ற `திருமாற்பேற்றை' மகிழ்ச்சியுடன் வணங்கி, முப்புரங்களை எரித்த சிவபெருமானுக்குச் சொல் மாலை ஆன திருப்பதிகம் சாத்தியருளினார்.

திருமாற்பே றுடையவர்தம்

திருவருள்பெற் றெழுந்தருளிக்
கருமாலுங் கருமாவாய்க்
காண்பரிய கழல்தாங்கி
வரும்ஆற்றல் மழவிடையார்
திருவல்லம் வணங்கித்தம்
பெருமாற்குத் திருப்பதிகப்
பெரும்பிணையல் அணிவித்தார். **#4022**

திருமாற்பேற்றில் வீற்றிருக்கும் இறைவரின் திருவருளைப் பெற்று, அங்கிருந்து எழுந்தருளிச் சென்று, கரிய நிறம் கொண்ட திருமால் பன்றி வடிவு எடுத்தும் காண இயலாத திரு அடிகளைச் சுமந்து வரும் வலிமை பெற்றுள்ள இளைய விடையை உடைய இறைவரின், திருவல்லம் என்னும் பதியினை வணங்கித் தம் இறைவர்க்குத் திருப்பதிகமான மாலையைச் சார்த்தியருளினார்.

விளக்கவுரை

இப்பதியில் அருளிய பதிகம் `எரித்தவன் முப்புரம்' *(தி.1 ப.113)* எனத் தொடங்கும் வியாழக்குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகமாகும்.

அங்குள்ள பிறபதியில்
அரிக்கரியார் கழல்வணங்கிப்
பொங்குபுனற் பாலியாற்றின்
புடையில்வட பாலிறைவர்
எங்கும்உறை பதிபணிவார்
இலம்பையங்கோட் டூரிறைஞ்சிச்
செங்கண்விடை உகைத்தவரைத்
திருப்பதிகம் பாடினார். **#4023**

அவ்விடங்களிலுள்ள திருப்பதிகளில் திருமா லுக்கு அரியவரான இறைவரின் திருவடிகளை வணங்கி, பெருகும் நீரைக் கொண்ட பாலியாற்றின் அருகே வடபாலில் இறைவர் எங்கும் எழுந்தருளியுள்ள திருப்பதிகளையெல்லாம் வணங்குவாராகி, திருஇலம்பையங்கோட்டூரினைத் தொழுது, சிவந்த கண்களையுடைய ஆனேற்றை ஊர்தியாகச் செலுத்தி வருபவரைத் திருப்பதிகம் பாடியருளினார்.

விளக்கவுரை

பாலியாற்றின் வடபாலுள்ள திருப்பதிகளாவன திருச்சுரபுரம், விரிஞ்சிபுரம், மகாதேவமலை, தீக்காலி, வள்ளிமலை முதலாயினவாகலாம் என்பார் சிவக்கவிமணியார். பதிகங்கள் எவையும் கிடைத்தில. திருஇலம்பையங்கோட்டூரில் அருளிய பதிகம்

`மலையினார்' *(தி.1 ப.76)* எனத் தொடங்கும் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த பதிகமாகும்.

திருத்தொண்டர் பலர்சூழத்
திருவிற்கோ லமும்பணிந்து
பொருட்பதிகத் தொடைமாலை
புரமெரித்த படிபாடி
அருட்புகலி யாண்டகையார்
தக்கோலம் அணைந்தருளி
விருப்பினொடுந் திருவூறல்
மேவினார் தமைப்பணிந்தார். **#4024**

பாலியாற்றின் வடபாலுள்ள திருப்பதிகளாவன திருச்சுரபுரம், விரிஞ்சிபுரம், மகாதேவமலை, தீக்காலி, வள்ளிமலை முதலாயினவாகலாம் என்பார் சிவக்கவிமணியார். பதிகங்கள் எவையும் கிடைத்தில. திருஇலம்பையங்கோட்டூரில் அருளிய பதிகம் `மலையினார்' (தி.1 ப.76) எனத் தொடங்கும் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த பதிகமாகும்.

விளக்கவுரை

திருவிற்கோலத்தில் அருளிய பதிகம் `உருவினார்' *(தி.3 ப.23)* எனத் தொடங்கும் பஞ்சமப் பண்ணில் அமைந்த திருப் பதிகமாகும். இப்பதிகத்தில் வரும் *2, 4, 6, 7, 9* ஆகிய பாடல்களில் முப்புரம் எரித்தமை அருளப்படுகின்றது. அதனை உளங்கொண்டே ஆசிரியர் சேக்கிழார் இங்ஙனம் அருளுவாராயினர். இங்குள்ள இறை வரின் தீண்டாத் திருமேனியின் நிறம் பருவ காலத்திற்கேற்ப மாறு படுகிறது என்பர். தக்கோலம் எனும் பதி பழங்காலத்தே திருவூறல் எனும் பெயரில் வழங்கப்பட்டது. எனினும் தக்கோலம் ஊர்ப் பெயராகவும், திருவூறல் கோயில் பெயராகவும் கருதத்தக்கதாம்.

தொழுதுபல முறைபோற்றிச்
சுரர்குருவுக் கிளையமுனி
வழுவில்தவம் புரிந்தேத்த
மன்னினார் தமைமலர்ந்த
பழுதில்செழுந் தமிழ்மாலைப்
பதிகஇசை புனைந்தருளி
முழுதும்அளித் தவர்அருளால்
போந்தனர்முத் தமிழ்விரகர். **#4025**

வணங்கிப் பலமுறையும் போற்றித் தேவ குருவான வியாழனின் தம்பி சம்வர்த்த முனிவர், குற்றம் இல்லாத தவத்தைச் செய்து போற்ற எழுந்தருளிய இறைவரைப் போற்றி, அன் பால் மலர்ந்த குற்றம் இல்லாத

செழுந் தமிழ் மாலையான பதிக இசையைப் பாடி, எல்லாவற்றையும் படைத்தளித்த இறைவரிடம் விடைபெற்று முத்தமிழ் வல்லுநர் சென்றார்.

விளக்கவுரை

இப்பதியில் உள்ள கோயிலின் பெயர் திருவூறல் என்பதாகும். இறைவனின் திருவடிகளிலிருந்து நீர் பெருகி வருதலின் இப்பெயர் பெற்றது. இப்பதியில் அருளிய பதிகம் `மாறில் அவுணர்' *(தி.1 ப.106)* எனத் தொடங்கும் வியாழக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த பதிகம் ஆகும்.

குன்றநெடுஞ் சிலையாளர்
குலவியபல் பதிபிறவும்
நின்றவிருப் புடனிறைஞ்சி
நீடுதிருத் தொண்டருடன்
பொன்தயங்கு மணிமாடப்
பூந்தராய்ப் புரவலனார்
சென்றணைந்தார் பழையனூர்த்
திருவாலங் காட்டருகு. **#4026**

இப்பதியில் உள்ள கோயிலின் பெயர் திருவூறல் என்பதாகும். இறைவனின் திருவடிகளிலிருந்து நீர் பெருகி வருதலின் இப்பெயர் பெற்றது. இப்பதியில் அருளிய பதிகம் `மாறில் அவுணர்' (தி.1 ப.106) எனத் தொடங்கும் வியாழக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த பதிகம் ஆகும்.

விளக்கவுரை

`பதிபிறவும்' என்றது மணவூர், திருஎவ்வளூர் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். பதிகங்கள் எவையும் கிடைத்தில.

இம்மையிலே புவியுள்ளோர் யாருங் காண
ஏழுலகும் போற்றிசைப்ப எம்மை யாளும்
அம்மைதிருத் தலையாலே நடந்து போற்றும்
அம்மையப்பர் திருவாலங் காடாம் என்று
தம்மையுடை யவர்மூதூர் மிதிக்க அஞ்சிச்
சண்பைவருஞ் சிகாமணியார் சாரச் சென்று
செம்மைநெறி வழுவாத பதியின் மாடோர்
செழும்பதியில் அன்றிரவு பள்ளி சேர்ந்தார். **#4027**

இப்பிறவியில் இம்மண்ணுலகத்தில் எவரும் நேரில் காணும்படி, ஏழ் உலகத்தவரும் போற்றுமாறு எம்மை ஆளு கின்ற அம்மையாரான காரைக்கால் அம்மையார், தம் திருத்தலையி னால் நடந்து சென்று

போற்றிய அம்மையப்பர் வீற்றிருக்கின்ற பதி இத்திருவாலங்காடாகும் என்று உள்ளத்தில் எண்ணி, தம்மை ஆளு டைய இறைவரின் பழமை பொருந்திய அவ்வூரைக் காலால் மிதித்து உள் செல்ல அச்சம் கொண்டு, சீகாழியில் தோன்றியருளிய பிள்ளை யார், அப் பதியின் அருகில் சாரச் செம்மை நெறியினின்று சற்றும் வழுவாத தூய ஒழுக்கமுடையவர்கள் வாழ்கின்ற ஒரு செழுமையான நகரில் சென்று இரவிலே தங்கி உறங்கலானார்.

விளக்கவுரை

இத்திருப்பதி யாதெனத் தெரிந்திலது.

மாலையிடை யாமத்துப் பள்ளி கொள்ளும்
மறையவனார் தம்முன்பு கனவி லேவந்
தாலவனத் தமர்ந்தருளும் அப்பர் நம்மை
அயர்த்தனையோ பாடுதற்கென் றருளிச் செய்ய
ஞாலமிருள் நீங்கவரும் புகலி வேந்தர்
நடுஇடையா மத்தினிடைத் தொழுது ணர்ந்து
வேலைவிட முண்டவர்தங் கருணை போற்றி
மெய்யுருகித் திருப்பதிகம் விளம்ப லுற்றார். **#4028**

மாலைப் பொழுது கழிய நடுயாமத்தில் பள்ளி கொண்டருளும் வேதியரான பிள்ளையாரின் கனவில் வெளிப்பட்டுத் திருவாலங்காட்டில் வீற்றிருக்கும் இறைவர், `நம்மைப் பாடுவதற்கு மறந்தாயோ?' என்று வினவியருள, உலகம் இருள்நீங்கி உய்யும் பொருட்டுத் தோன்றியருளிய சீகாழித் தலைவர், அந்நள்ளிருள் யாமத் தில் உறக்கத்தினின்று உணர்ந்து எழுந்து, கடலில் உண்டான நஞ்சை உண்டருளிய சிவபெருமானின் திருவருளைப் போற்றி, மெய் உருகித் திருப்பதிகத்தைப் பாடத் தொடங்கினார்.

விளக்கவுரை

****

துஞ்சவரு வார்என்றே எடுத்த வோசைச்
சுருதிமுறை வழுவாமல் தொடுத்த பாடல்
எஞ்சலிலா வகைமுறையே பழைய னூரார்
இயம்புமொழி காத்தகதை சிறப்பித் தேத்தி
அஞ்சனமா கரியுரித்தார் அருளா மென்றே
அருளும்வகை திருக்கடைக்காப் பமையச் சாற்றி
பஞ்சுரமாம் பழைய திறங் கிழமை கொள்ளப்
பாடினார் பாரெலாம் உய்ய வந்தார். **#4029**

`துஞ்ச வருவாரும்` என்று தொடங்கி ஓசையுடைய மறைநெறி

தவறாதவாறு பாடிய பாடலில், குறைவற்ற வகையினால் அறநெறிவழுவாத பழையனூர் வேளாளர், தாங்கள் கூறிய சொல்லைத் தவறாது காத்து, அருள் பெற்ற வரலாற்றைச் சிறப்பித்துப் பாராட்டி, கரிய யானையை உரித்த இறைவரின் திருவருளேயாகும் இது என்று அவர் அருள் செய்யும் தன்மையைத் திருக்கடைக்காப்பில் வைத்து, குறிஞ்சியாழ்ப் பண் அமைதித் திறமும் கிழமையும் பொருந்தப் பாடினார்.

விளக்கவுரை

`துஞ்ச வருவாரும்` எனத் தொடங்கும் திருப்பதிகம் தக்கராகப் பண்ணிலமைந்த பதிகம் எனத் திருமுறையில் குறித்துள்ளனர். *(தி.1 ப.45).* எனினும் ஆசிரியர் சேக்கிழார், பஞ்சுரமாம் பழையதிறம் கிழமை கொள்ள *(அஃதாவது குறிஞ்சியாழ்த்திறன் வகைகளுள் ஒன்றான பழம்பஞ்சுரமாகப்)* பாடினார் என்றருளுகின்றார். தமிழோடு இசைப்பாடல் திறனையும் ஒருங்கு அறிந்த அறிஞர்களால் இஃது ஆராயத் தக்கதாம்.

நீடுமிசைத் திருப்பதிகம் பாடிப் போற்றி
நெடுங்கங்கு லிருணீங்கி நிகழ்ந்த காலை
மாடுதிருத் தொண்டர்குழா மணைந்தபோது
மாலையினில் திருவால வனத்து மன்னி
ஆடுமவ ரருள்செய்த படியை யெல்லாம்
அருளிச்செய் தகமலரப் பாடி யேத்திச்
சேடர்பயில் திருப்பதியைத் தொழுது போந்து
திருப்பாசூர் அதன்மருங்கு செல்ல லுற்றார். **#4030**

எக்காலத்தும் நிலைபெறும் இசையமையந்த திருப்பதிகத்தைப் பாடிப் போற்றி, பின் நீண்ட இரவின் இருள் புலர்ந்த பகற் காலத்தே, திருத்தொண்டர்களின் கூட்டம் வந்து சேர்ந்த போது, இரவில் திருவாலங்காட்டுப் பதியில் ஆடுகின்ற இறைவர், தமக்கு அருள் செய்த பாங்கை எல்லாம் அவர்களுக்குச் சொல்லி, அத்திருப் பதிகத்தைத் திரும்பவும் உள்ளம் மகிழப் பாடிப் போற்றிய பின்பு, பெரியவர்கள் வாழ்கின்ற அப்பதியை வணங்கி அகன்று போய்த் `திருப்பாசூர்' அருகில் செல்வாராய்,

விளக்கவுரை

சேடர் - பெருமை மிக்கோர்.

திருப்பாசூர் அணைந்தருளி யங்கு மற்றச்
செழும்பதியோ ரெதிர்கொள்ளச் சென்று புக்குப்
பொருப்பரையன் மடப்பாவை இடப்பா கத்துப்
புராதனர்வே யிடங்கொண்ட புனிதர் கோயில்

விருப்பினுடன் வலங்கொண்டு புக்குத் தாழ்ந்து
வீழ்ந்தெழுந்து மேனியெலா முகிழ்ப்ப நின்றே
அருட்கருணைத் திருவாளன் நாமஞ் சிந்தை
யிடையாரென் றிசைப்பதிகம் அருளிச் செய்தார். **#4031**

திருப்பாசூரை அணைந்து, அங்கு அச்செழும் பதியார் வந்து எதிர்கொள்ளப் பதியுள் போய்ப் புகுந்து, மலை அரச னின் மகளான பார்வதி அம்மையாரை இடமருங்காகக் கொண்ட பழமை உடையவரும், மூங்கிலை இடமாகக் கொண்டவருமான இறைவரின் திருக்கோயிலுள் விருப்பத்துடன் வலமாக வந்து, உள்ளே புகுந்து, இறைவரின் திருமுன்பு, நிலம் பொருந்த விழுந்து வணங்கி எழுந்து, திருமேனி முழுதும் மயிர்க்கூச்செறிய நின்று, அருட்கருணை என்ற செல்வத்தை உடைய இறைவரின் திருநாமத்தைச் `சிந்தை யிடையார்' எனத் தொடங்கி இசையுடன் கூடிய அத்திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

விளக்கவுரை

`சிந்தை யிடையார்' எனத் தொடங்கும் பதிகம் காந்தாரப் பண்ணில் அமைந்த பதிகமாகும் *(தி.2 ப.60)*. இம்முதற் பாடலில் வரும் தொடர்கள் பலவும் பெருமானின் திருப்பெயர்களாய் அமைந்திருக்கு மாறும் காணலாம்.

மன்னுதிருப் பதிகஇசை பாடிப் போற்றி
வணங்கிப்போந் தப்பதியில் வைகி மாடு
பிஞ்ஞகர்தம் வெண்பாக்கம் முதலா யுள்ள
பிறபதிகள் பணிந்தணைவார் பெருகு மன்பால்
முன்னிறைந்த திருவாய்மஞ் சனநீ ராட்டு
முதல்வேடர் கண்ணப்ப நாய னாரை
உன்னியொளிர் காளத்தி மலை வணங்க
வுற்றபெரு வேட்கையுட னுவந்து சென்றார். **#4032**

பிள்ளையார் நிலைபெறும் இசையையுடைய திருப்பதிகத்தைப் பாடிப் போற்றிச் சென்று, அப்பதியில் எழுந்தருளி யிருந்தவர், பின்பு அத்திருப்பதியின் அருகில் இறைவர் எழுந்தருளி இருக்கும் திருவெண்பாக்கம் முதலான பிற பதிகளையும் வணங்கிச் செல்வாராய், பெருகும் அன்பால் முன் திருவாய் நிறைந்த நீரால் இறைவரைத் திருமுழுக்காட்டும் முதல்வரான கண்ணப்ப நாயனாரை எண்ணி, விளங்கும் திருக்காளத்தி மலையைத் தொழுவதற்குப் பொருந்திய பெருவிருப்புடன் மகிழ்ந்து சென்றருளினார்.

விளக்கவுரை

திருவெண்பாக்கம் முதலாயுள்ள பதிகள் திருக்கள்ளில்

முதலாயினவாகலாம். திருவெண்பாக்கப் பதிகம் கிடைத்திலது. திருக் கள்ளிலில் அருளிய பதிகம் `முள்ளின்மேல் முதுகூகை' *(தி.1 ப.119)* எனத் தொடங்கும் வியாழக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்ததாகும்.

மிக்கபெருங் காதலுடன் தொண்டர் சூழ
மென்புனல்நாட் டினையகன்று வெற்பும் கானும்
தொக்கபெரு வன்புலக்கா னடைந்து போகிச்
சூலகபா லக்கரத்துச் சுடரு மேனி
முக்கண்முதல் தலைவனிட மாகி யுள்ள
முகில்நெருங்கு காரிகரை முன்னர்ச் சென்று
புக்கிறைஞ்சிப் போற்றிசைத்தப் பதியில் வைகிப்
பூதியரோ டுடன்மகிழ்ந்தார் புகலி வேந்தர். **#4033**

மிக்க பெருவிருப்புடனே தொண்டர் சூழ்ந்து வர, மெல்லியதாய்ப் பாய்கின்ற நீர்வளம் கொண்ட பாலியாற்றின் வடகரையில் உள்ள நாட்டின் பகுதியை நீங்கி, மலையும் காடுக ளுமாய்ச் சேர்ந்து நெருங்கிய வலிய காட்டிடங்களை அடைந்து, சூலமும் மண்டை ஓடும் கையில் கொண்டு ஒளி விளங்கும் திருமேனி யையும் மூன்று கண்களையுமுடைய இறைவரின் இடமாகிய மேகம் சூழ்ந்த `திருக்காரிகரையினை' முன்னர்ச் சென்று, இறைவரை வணங் கிப் போற்றி, அப்பதியில் தங்கித் தொண்டருடன் ஞானசம்பந்தர் மகிழ்ந்திருந்தார்.

விளக்கவுரை

இப்பதியில் அருளிய பதிகம் கிடைத்திலது. பாலியாறு ஊற்றுநீர் சுரக்க வருவதாதலின், அதனைச் சூழ்ந்த நாட்டை `மென் புனல் நாடு' என்றார்.

இறைவர்திருக் காரிகரை யிறைஞ்சி அப்பால்
எண்ணில்பெரு வரைகளிரு மருங்கு மெங்கும்
நிறையருவி நிரைபலவாய் மணியும் பொன்னும்
நிறைதுவலை புடைசிதறி நிகழ்ப வாகி
அறைகழல்வா னவர்க்கிறைவன் குலிச வேற்றால்
அற்றசிறை பெற்றவன்மே லெழுவ தற்குச்
சிறகடித்துப் பறக்கமுயன் றுயர்ந்த போலும்
சிலைநிலத்தி லெழுந்தருளிச் செல்லா நின்றார். **#4034**

சிவபெருமானின் திருக்காரிகரையைத் தொழுது, மேற்சென்று அளவில்லாத பெரிய மலைகளின் இருபக்கங்களிலும் எங்கும் நீர் நிறைந்த அருவிகள் பல வரிசையான மணிகளையும் பொன்னையும் நிறைந்த நீர்த்துளிகளையும் பக்கங்களில் நிரம்பச் சிதற, ஒலிக்கின்ற கழலை அணிந்த தேவேந்திரனின் வச்சிரப் படைத் தாக்குதலால் அறுபட்ட இறகுகளைப் பெற்று, அவன் மீது போருக்கு எழுவதற்காகச் சிறகுகளை விரித்துப் பறக்க முயன்று உயர்ந்தன போன்ற காட்சிதரும்

மலைகள் சூழ்ந்த நாட்டின் பகுதியில் எழுந்து அருளிச் செல்பவராய்,

விளக்கவுரை

மலைகள் ஒருகால எல்லையில் சிறகுடையனவாய்ப் பறக்கும் நிலையில் இருந்தன என்றும், அச்சிறகுகளை ஒரு காலத்தில் இந்திரன் அரிந்தனன் என்றும் பண்டைப் பனுவல்கள் கூறுகின்றன. அதனை உளங் கொண்டே சேக்கிழார் அவ்வாறு சிறகை யரிந்த இந்தி ரனை, மலைகள் மீண்டும் சிறகுகள் பெற்று, அவனை அழிக்க முயல் வன போன்று, அம்மலைகளினின்று இழிந்து வரும் அருவிகள் விளங்குகின்றன என்றும் கூறுகின்றார். மலைகள் - பறவைகள். அருவிகள் அவற்றின் சிறகுகள் இது தற்குறிப்பேற்ற அணியாம்.

மாதவர்கள் நெருங்குகுழாம் பரந்து செல்ல
மணிமுத்தின் பரிச்சின்னம் வரம்பின் றாகப்
பூதிநிறை கடல்அணைவ தென்னச் சண்பைப்
புரவலனார் எழுந்தருளும் பொழுது சின்னத்
தீதிலொலி பலமுறையும் பொங்கி யெங்குந்
திருஞான சம்பந்தன் வந்தான் என்னும்
நாதம்நிறை செவியினவாய் மாக்க ளெல்லாம்
நலமருவு நினைவொன்றாய் மருங்கு நண்ண. **#4035**

திருத்தொண்டர்களின் கூட்டம் பரந்து செல்ல, அழகிய முத்துச் சின்னங்கள் உண்டாக்கும் ஓசை அளவில்லாது எழ, திருநீறு நிறைந்த கடல் அணைவதைப் போல் சீகாழித் தலைவரான ஞானசம்பந்தர் வரும்போது, திருச்சின்னங்களின் ஒப்பில்லாத ஒலி பல முறையாலும் மேன்மேல் மிக, எங்கும் `திருஞானசம்பந்தர் வந்தார்' என்று உண்டாகும் ஒலி நிறைந்த காதுகளை உடையன ஆதலால், ஐந்து அறிவுடைய விலங்குச் சாதிகள் எல்லாம் தம் இயல் பான தீமையின்றி நன்மை பொருந்திய நினைவு ஒன்றையே மேற் கொண்டு பக்கங்களில் வந்து பொருந்த,

விளக்கவுரை

ஞானசம்பந்தர் எனும் திருப்பெயரைக் கேட்ட அள வில், பொல்லா விலங்குகளும் புன்மை நீங்கி நன்மை பெருக அவரை எதிர் கொள்வனவாயின.

கானவர்தங் குலம்உலகு போற்ற வந்த
கண்ணப்பர் திருப்பாதச் செருப்புத் தோய
மானவரிச் சிலைவேட்டை ஆடும் கானும்
வானமறை நிலைபெரிய மரமும் தூறும்
ஏனையிமை யோர்தாமும் இறைஞ்சி யேத்தி

எய்தவரும் பெருமையவாம் எண்ணி லாத
தானமும்மற் றவைகடந்து திருக்கா ளத்தி
சாரஎழுந் தருளினார் சண்பை வேந்தர். #4036
வேடுவர் குலத்தை உலகமானது போற்றுமாறு, அக்குலத்தில் வந்து தோன்றிய கண்ணப்ப நாயனாரின் திருவடிகளில் அணிந்த செருப்புத் தேயுமாறு பெரிய கட்டமைந்த வில் வேட்டை ஆடும் காடுகளும், வானத்தை மறைக்குமாறு நீண்ட பெரிய மரச் சோலைகளும், தூறுகளும், தேவர்களும் போற்றும் பெருமையுடைய அளவில்லாத மற்ற இடங்களும் ஆகியவற்றையெல்லாம் கடந்து சென்று, திருக்காளத்தி மலையை அணுகச் சென்றார் சீகாழித் தலைவர்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

அம்பொன்மலைக் கொடிமுலைப்பால் குழைத்த ஞானத்
தமுதுண்ட பிள்ளையார் அணைந்தார் என்று
செம்பொன்மலை வில்லியார் திருக்கா ளத்தி
சேர்ந்ததிருத் தொண்டர் குழாம்அடைய ஈண்டிப்
பம்புசடைத் திருமுனிவர் கபாலக் கையர்
பலவேடச் சைவர்குல வேடர் மற்றும்
உம்பர்தவம் புரிவார்அப் பதியி லுள்ளோர்
உடன்விரும்பி யெதிர்கொள்ள வுழைச்சென் றுற்றார். #4037
அழகிய இமவானின் மகளாரான கொடி போன்ற உமையம்மையாரின் திருமுலைப்பாலில், குழைத்த ஞான அமுதத்தை உண்ட `ஆளுடைய பிள்ளையார் வருகின்றார்' என்று எண்ணி, மேருமலையை வில்லாகக் கொண்ட இறைவரின் திருக் காளத்தியில் உள்ள திருத்தொண்டர் கூட்டம் நெருங்கி வர, நெருங் கிய சடையையுடைய முனிவர்களும், மண்டை ஓட்டை ஏந்தும் காபாலியர்களும், மற்றும் மாவிரதம் முதலான பற்பல வேடங்களை உடைய சைவர்களும், மேன்மையான தவம் செய்தவரும், அப்பதி யில் உள்ளவருடன் கூடி மகிழ்ந்து, எதிர் கொள்ள, அவர் அருகே சேர்ந்தனர்.

விளக்கவுரை

****

திசையனைத்தும் நீற்றினொளி தழைப்ப மண்மேற்
மிசைவிளங்கும் மணிமுத்தின் சிவிகை நின்றும்
வேதபா ரகர்இழிந்து வணங்கி மிக்க
அசைவில்பெருந் தொண்டர்குழாம் தொழுது போற்றி
அரவெனுமோ சையில்அண்டம் நிறைப்ப அன்பால்

இசைவிளங்குந் தமிழ்விரகர் திருக்கா ளத்தித்
திருமலையிம் மலைகளில்யா தென்று கேட்டார். **#4038**
எல்லாத் திசைகளிலும் திருநீற்றின் ஒளி பரவ, `இந்த உலகத்தில் சிவலோகம் வந்து சேர்ந்தது' எனக் கூறுமாறு சென்றபோது, மேலே விளங்கும் அழகிய முத்துச் சிவிகையினின்றும் இறங்கி, மறைகளில் வல்ல ஞானசம்பந்தர், வணங்கி, எதிர் கொண்ட மன அசைவற்ற பெரிய திருத்தொண்டர் கூட்டம் தொழுது வணங்கி `அர அர!' என்ற பேரொலியால் அண்டம் முழுதும் நிறையுமாறு செய் யப் புகழினால் எங்கும் விளங்கும் தமிழ் வல்லுநரான ஞானசம்பந்தர் அவர்களை நோக்கி, `இங்குத் தோன்றும் மலைகளுள் திருக்காளத்தி மலை எது?' என்று வினவினார்.

விளக்கவுரை

****

வந்தணைந்த மாதவத்தோர் வணங்கித் தாழ்ந்து
மறைவாழ்வே சைவசிகா மணியே தோன்றும்
இந்தமலை காளனோ டத்தி தம்மில்
இகலிவழி பாடுசெய இறைவர்மேவும்
அந்தமில்சீர்க் காளத்தி மலையாம் என்ன
அவனிமேற் பணிந்தெழுந்தஞ் சலிமேற் கொண்டு
சிந்தைகளி மகிழ்ச்சிவரத் திருவி ராகம்
வானவர்கள் தானவர்என் றெடுத்துச் செல்வார். **#4039**
எதிர்கொண்டு வரவேற்ற தொண்டர்கள் ஞான சம்பந்தரை வணங்கி `மறையவர்களின் வாழ்வாகியவரே! சைவத் தலைவர்களுள் சிறந்தவரே! நம் எதிரே தோன்றும் இம் மலைதான், முன்நாளில் `காளன்' என்னும் பாம்பும், `அத்தி' என்னும் யானையும், தம்முள் மாறுபட்டுத் தம்மைப் பூசை செய்த இறைவர் எழுந்தருளி யுள்ள கேடில்லாத சிறப்புடைய திருக்காளத்தி மலையாகும்' என உரைப்ப, அப்போது ஞானசம்பந்தர் விழுந்து வணங்கி எழுந்து, கைகளைத் தலைமீது குவித்து, மனத்துள் மிக்க மகிழ்ச்சி எழுதலால் `வானவர்கள் தானவர்கள்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைத் திருவிராக அமைப்பில் பாடியவாறு மேற்செல்வாராய்,

விளக்கவுரை

`வானவர்கள் தானவர்கள்' எனத் தொடங்கும் பதிகம் சாதாரிப் பண்ணில் அமைந்ததாகும் *(தி.3 ப.69)*. `வாய் கலசமாக வழிபாடு செயும் வேடன் மலராகு நயனம், காய்கணையினாலிடந்து ஈசன் அடிகூடு காளத்திமலையே' எனக் கண்ணப்பரைப் பிள்ளையார் போற்றப்பெறும் சிறப்பே இங்கு எடுத்து மொழியப்படுகிறது.

திருந்தியஇன் னிசைவகுப்பத் திருக்கண் ணப்பர்
திருத்தொண்டு சிறப்பித்துத் திகழப் பாடிப்
பொருந்துபெருந் தவர்கூட்டம் போற்ற வந்து
பொன்முகலிக் கரையணைந்து தொழுது போகி
அருந்தவர்கள் எம்மருங்கும் மிடைந்து செல்ல
ஆளுடைய பிள்ளையார் அயன்மால்தேடும்
மருந்துவெளி யேயிருந்த திருக்கா ளத்தி
மலையடிவா ரஞ்சார வந்து தாழ்ந்தார். **#4040**

திருந்திய இனிய பண்ணமைதி பெறத் திருக் கண்ணப்பரின் திருத்தொண்டைச் சிறப்பித்துப் பாடியருளி, பொரு ந்திய பெரிய திருத்தொண்டர் கூட்டம் சூழ்ந்து போற்ற எழுந்தருளி வந்து, பொன்முகலி யாற்றின் கரையை அடைந்து, வணங்கிச் சென்று, அரிய தவத்தவர்களான திருத்தொண்டர்கள் எம்மருங்கும் சூழ்ந்து வர, ஆளுடைய பிள்ளையார், நான்முகனும் திருமாலும் தேடிக் காண இயலாத மருந்தான இறைவர், வெளிப்பட எழுந்தருளியிருந்த திருக் காளத்தி மலையின் அடிவாரத்தினை அணுக வந்து, நிலத்தில் பொருந்த விழுந்து வணங்கினார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

தாழ்ந்தெழுந்து திருமலையைத் தொழுது கொண்டே
தடஞ்சிலா தலசோபா னத்தா லேறி
வாழ்ந்திமையோர் குழாம்நெருங்கு மணிநீள் வாயில்
மருங்கிறைஞ்சி உட்புகுந்து வளர்பொற் கோயில்
சூழ்ந்துவலங் கொண்டிறைவர் திருமுன் பெய்தித்
தொழுதுதலை மேற்கொண்ட செங்கை போற்றி
வீழ்ந்தெழுவார் கும்பிட்ட பயன்காண் பார்போல்
மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார். **#4041**

ஞானசம்பந்தர் தாழ்ந்து எழுந்து அம்மலையை வணங்கியவாறே அகன்ற மலைப்படிகளின் வழியே ஏறிச் சென்று, வாழ்வடைந்த தேவர்களின் கூட்டம் நெருங்கியுள்ள மணிகளை உடைய நீண்ட திருவாயிலின் முன் வணங்கிக் கோயிலுள் புகுந்து, அக்கோயிலை வலமாக வந்து, இறைவரின் திருமுன்பு சார்ந்து, தொழுது, தலையின் மேலே கூப்பிய சிவந்த திருக்கைகளுடன் போற்றி, நிலம் பொருந்த விழுந்து வணங்கி, எழுந்து செல்பவராய், அவ்வாறு கும்பிட்டதன் பயனைக் காண்பவரைப் போல், மெய்ம்மையான வேடர் பெருமானாம் திருக்கண்ணப்ப நாயனாரைக் கண்டு அவரு டைய அடிகளில் வீழ்ந்தார்.

விளக்கவுரை

காளத்தி இறைவரை வணங்கும் பேறு தேவர்களுக்குக் கிடைத்தமையின் `வாழ்வடைந்து' என்றார். உயிர்கட்கு இறைவனை வணங்குதலே பெரும்பயன்; அப்பயனுக்கும் பயன் அவன் அடியார் களை வணங்குதலாம் என்பார் , `கும்பிட்ட பயன் காண்பார் போல் மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார்' என்றார். `பேணலால் எம்மைப் பெற்றார்' என்பதால், அடியவர்தாமும் இறைவனையே தம் மனத்தகத்துப் பெற்றிருத்தலின், அவரை வணங்குதல் பயனுக்குப் பய னாயிற்று. சிலாதலம் - மலை. சோபானம் - படிப்படியாகப் படிகளின் வழியே ஏறிவருதல்.

உள்ளத்தில் தெளிகின்ற அன்பின் மெய்ம்மை
யுருவினையும் அவ்வன்பி னுள்ளே மன்னும்
வெள்ளச்செஞ் சடைக்கற்றை நெற்றிச் செங்கண்
விமலரையும் உடன்கண்ட விருப்பும் பொங்கிப்
பள்ளத்தில் இழிபுனல்போல் பரந்து செல்லப்
பைம்பொன்மலை வல்லிபரிந் தளித்த செம்பொன்
வள்ளத்தில் ஞானஆ ரமுத முண்டார்
மகிழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்கு கின்றார். **#4042**

மனத்தில் தெளிவாய்க் கொள்கின்ற அன்பின் மெய்ம்மையான வடிவத்தையும், அந்த அன்பினுள் நிலையாய் வீற்றிருக்கின்ற கங்கை தாங்கிய சிவந்த சடையையும் நெற்றியில் சிவந்த விழியையும் உடைய குற்றமற்ற இறைவரையும் ஒருசேர ஓரிடத்தில் கண்டதால் ஆன விருப்பமும் மேலிடத்தினின்றும் பள்ளத் தில் இழிந்து ஓடும் நீர்போல் மேன்மேல் மிக பசும்பொன் மலை மன்னன் மகளான கொடிபோன்ற உமையம்மையார் அருளுடன் அளித்த செம்பொன் கிண்ணத்தில் ஞானஅமுதை உண்டருளிய ஞான சம்பந்தர் மகிழ்ந்து வணங்கி எழுந்து பலமுறையும் வணங்குவாராகி,

விளக்கவுரை

****

பங்கயக்கண் ணருவிநீர் பாய நின்று
பரவும்இசைத் திருப்பதிகம் பாடி யாடித்
தங்குபெருங் களிகாதல் தகைந்து தட்பத்
தம்பெருமான் கழல்போற்றுந் தன்மைநீட
அங்கரிதிற் புறம்போந்தங் கயன்மால் போற்ற
அரியார்தந் திருமலைக்கீ ழணைந்தி றைஞ்சிப்
பொங்குதிருத் தொண்டர்மடங் காட்ட அங்குப்
புக்கருளி இனிதமர்ந்தார் புகலி வேந்தர். **#4043**

தாமரை போன்ற கண்களினின்றும் கண்ணீர் வழிந்தோட நின்று, போற்றும் பண் பொருந்திய திருப்பதிகத்தைப் பாடி, ஆனந்தக் கூத்தாடி, தம் உள்ளத்துள் தங்கிக் கிடக்கும் பெருங்களிப்பும் காதலும் வலிந்து தம்மை அங்கேயே தகைத்து நிறுத்த, அதனால் தம் பெருமானின் திருவடிகளைப் போற்றி நிற்கும் இயல்பு நீடித்தலால், அங்கிருந்து அரிதாக வெளியே போந்து, நான்முகனும் திருமாலும் போற்றுதற்கரிய இறைவரின் திருக்காளத்தி மலையின் அடியில் வந்து அணைந்து, வணங்கிச் சென்று, பெருகிய தொண்டர்கள் திருமடத்தைக் காட்டச் சென்று, புகுந்த பிள்ளையார் அங்குத் தங்கியிருந்தார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய திருப்பதிகம் கிடைத்திலது. இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

யாவர்களும் அறிவரிய இறைவன் றன்னை
ஏழுலகும் உடையானை யெண்ணி லாத
தேவர்கள்தம் பெருமானைத் திருக்கா ளத்தி
மலையின்மிசை வீற்றிருந்த செய்ய தேனைப்
பூவலரும் பொழில்புடைசூழ் சண்பை யாளும்
புரவலனார் காலங்கள் தோறும் புக்குப்
பாவலர்கொண் டடிபோற்றிப் பருகி யார்ந்து
பண்பினிய திருப்பதியிற் பயிலும் நாளில். **#4044**

யாவரும் அறிதற்கரிய இறைவரை, ஏழ் உலகங்களையும் உடையவரை, எண்ணிறந்த தேவர்களின் தலை வரை, திருக்காளத்தி மலையின் மீது வீற்றிருக்கும் சிவந்த தேனை, மலர் கள் மலரும் சோலை சூழ்ந்த சீகாழியை ஆளும் வேந்தரான திருஞான சம்பந்தர், உரிய காலங்கள் தோறும் சென்று திருக்கோயிலுள் புகுந்து, பதிகம் என்ற மலர் கொண்டு அருச்சனை செய்து, போற்றிப் பருகி, நிறைவாகத் துய்த்துச் செம்மையான பண்புகளால் இனிய அத்திருப் பதியைப் பொருந்தித் தங்கியிருந்த அந்நாள்களில்,

விளக்கவுரை

உரிய காலங்கள் தொறும் சென்று பாடிய பதிகங்கள் எவையும் கிடைத்தில.

அங்கண்வட திசைமேலுங் குடக்கின் மேலும்
அருந்தமிழின் வழக்கங்கு நிகழா தாகத்
திங்கள்புனை முடியார்தந் தானந் தோறுஞ்
சென்றுதமிழ் இசைபாடுஞ் செய்கை போல
மங்கையுடன் வானவர்கள் போற்றி சைப்ப
வீற்றிருந்தார் வடகயிலை வணங்கிப் பாடிச்
செங்கமல மலர்வாவித் திருக்கே தாரம்
தொழுதுதிருப் பதிகஇசை திருந்தப் பாடி. **#4045**

அவ்விடத்திற்கு, வடக்கிலும் மேற்கிலும் உள்ள நாடுகளில் அரிய தமிழின் வழக்கு நிகழாததால், ஞானசம்பந்தர், பிறைச் சந்திரனைச் சூடிய முடியையுடைய இறைவரின் பிற பதிகள் தோறும் சென்று திருப்பதிகத் தமிழ் இசைபாடும் செயல் போல், தேவர்கள் தொழுது போற்றுமாறு எழுந்தருளியிருக்கும் சிவபெரு மானின் வடகயிலை மலையை இங்கு இருந்தபடியே வணங்கித் திருப்பதிகம் பாடிச் செந்தாமரை மலர்கள் மலர்வதற்கு இடமான நீர் நிலைகளைக் கொண்ட திருக்கேதாரத்தையும் வணங்கித் திருப்பதிகம் இசையுடன் பாடி,

விளக்கவுரை

இப்பதிகளை நோக்கி அருளிய பதிகங்கள்*: 1.* வடகயிலை*:- 1.* பொடிகொள் உருவர் *(*தி*.1* ப*.68) -*தக்கேசி*. 2.* வாளவரி *(*தி*.3* ப*.68) -* சாதாரி*. 2.* திருக்கேதாரம்*:-* தொண்டர் *(*தி*.2* ப*.114) -* செவ்வழி*.*

கூற்றுதைத்தார் மகிழ்ந்தகோ கரணம் பாடிக்
குலவுதிருப் பருப்பதத்தின் கொள்கை பாடி
ஏற்றிமிசை வருவார்இந் திரன்றன் நீல
பருப்பதமும் பாடிமகிழ்ந்து இறைவர் தானம்
போற்றியசொன் மலர்மாலை பிறவும் பாடிப்
புகலியர்தம் பெருந்தகையார் புனித மாகும்
நீற்றின்அணி கோலத்துத் தொண்டர் சூழ
நெடிதுமகிழ்ந் தப்பதியில் நிலவு கின்றார். **#4046**

இயமனைக் காலால் உதைத்த இறைவர் மகிழ்ந் தருளும் கோகரணத்தைப் பாடி, விடையின் மீது எழுந்தருளி வரும் இறைவரின் இந்திரநீலபருப்பதத்தையும் பாடி, மற்றும் போற்றுதற்குரிய செம்மலர்களால் திருப்பதிகள் பிறவற்றையும் பாடி, சீகாழிப் பதியினரின் தலைவரான ஞானசம்பந்தர், தூய திருநீற்றின் விளக்கம்

மிகுகோலமுடைய தொண்டர்கள் சூழ்ந்து வர, மிகவும் மகிழ்ந்து அப்பகுதியில் தங்கி இருப்பவராய்,

விளக்கவுரை

இப்பதிகளை நோக்கியருளிய பதிகங்கள்: *1.*திருக்கோகரணம்: என்றும் அரியான் *(*தி*.3* ப*.79)* - சாதாரி. *2.*திருப்பருப்பதம்: சுடுமணி *(*தி*.1* ப*.118)* - வியாழக் குறிஞ்சி. *3.*திருஇந்திரநீலப் பருப்பதம்: குலவு பாரிடம் *(*தி*.2* ப*.27)* - இந்தளம். மற்று இறைவர் தானம் பிறவும் என்பன: வாரணாசி, அனேக தங்காவதம், கோடீச்சுரம், சோமேசம், பீமேசம், பிரயாகை, மதுரை, காஞ்சி, அவந்திகை முதலியனவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். இவற்றுள் பதிகம் கிடைத்துள்ள பதி ஒன்றே. அது - அனேகதங்கா வதம்: பதிகம்: நீடல் மேவு - பண்: இந்தளம்.

தென்திசையில் கயிலையெனும்திருக்காளத்தி
போற்றிஇனி தமர்கின்றார் திரைசூழ் வேலை
ஒன்றுதிரு வொற்றியூர் உறைவார் தம்மை
இறைஞ்சுவது திருவுள்ளத் துன்னி அங்கண்
இன்தமிழின் விரகரருள் பெற்று மீள்வார்
எந்தையா ரிணையடியென் மனத்த வென்று
பொன்தரளங் கொழித்திழி பொன் முகலிகூடப்
புனைந்ததிருப் பதிகஇசை போற்றிப் போந்தார். **#4047**

தெற்குத் திக்கில் உள்ள திருக்கயிலை எனக் கூறப்படுகின்ற திருக்காளத்தியைப் போற்றி இனிதாக அங்குத் தங்கியிருப்பவர், அலைசூழ்ந்த கடலின் கரைசார்ந்த திருவொற்றி யூரில் வீற்றிருக்கும் இறைவரைச் சென்று வணங்குதலை மனத்தில் கொண்டு, அங்கிருந்து இனிய தமிழ் விரகரான ஞானசம்பந்தர், இறைவரின் திருவருள் விடைபெற்று, மீண்டு வருபவர், `எந்தையார் இணையடி என் மனத்துள்ளவே' என்ற கருத்துடன் பொன்னும் முத் தும் கொழித்து வரும் பொன் முகலியாற்றையும் குறித்துத் திருப்பதிக இசையால் போற்றிவருவாரானார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகம் `சந்தமாரகிலொடு*'* *(*தி*.3* ப*.36)* எனத் தொடங்கும் கொல்லிப் பண்ணில் அமைந்த பதிகமாகும். இப்பதிக முதற்பாடல் முதல் இரண்டு அடிகளில், பொன் முகலியாற் றின் வளம் கூறி, நிறைவாக `எந்தையார் இணையடி என்மனத்துள் ளவே*'* என்றருளுகின்றார் பிள்ளையார். இக்கருத்தை முகந்தே ஆசிரியர் சேக்கிழார், இப்பாடலில் அருளுகின்றார். நிறைவாகவுள்ள இக்கருத்தே, காளத்தியினின்றும் விடைகொண்டு போதருங்கால் பாடியது என

அருளுதற்கேதுவாயிற்று.

மன்னுபுகழ்த் திருத்தொண்டர் குழாத்தி னோடும்
மறைவாழ வந்தவர்தாம் மலையுங் கானும்
முன்னணைந்த பதிபிறவும் கடந்து போந்து
முதல்வனார் உறைபதிகள் பலவும் போற்றிப்
பன்மணிகள் பொன்வரன்றி அகிலுஞ் சாந்தும்
பொருதலைக்கும் பாலிவட கரையில் நீடு
சென்னிமதி யணிவார்தந் திருவேற் காடு
சென்றணைந்தார் திருஞான முண்ட செல்வர். #4048

நிலைபெற்ற புகழையுடைய தொண்டர் கூட்டத்துடன் மறைகள் வாழும் படியாய்த் தோன்றிய ஞானசம்பந்தர், மலைகளையும், காடுகளையும் சேர்ந்த பதிகள் பலவற்றையும் கடந்து வந்து, முழுமுதல்வராகிய சிவபெருமான் வீற்றிருக்கும் திருப்பதிகள் பலவற்றையும் போற்றிச் சென்று, பலமணிகளையும் பொன்னையும் இழுத்துக் கொண்டும், அகில், சந்தனம் முதலான மரங்களை மோதி அடித்துக் கொண்டும் ஓடும் பாலியாற்றின் வடக்குக் கரையில் நிலைபெற்ற திருச்சடையில் பிறைச் சந்திரனைச் சூடிய இறைவரின் திருவேற்காட்டினைச் சிவஞான அமுது உண்ட செல்வரான பிள்ளை யார் சென்று அடைந்தார்.

விளக்கவுரை

நிலைபெற்ற புகழையுடைய தொண்டர் கூட்டத்துடன் மறைகள் வாழும் படியாய்த் தோன்றிய ஞானசம்பந்தர், மலைகளையும், காடுகளையும் சேர்ந்த பதிகள் பலவற்றையும் கடந்து வந்து, முழுமுதல்வராகிய சிவபெருமான் வீற்றிருக்கும் திருப்பதிகள் பலவற்றையும் போற்றிச் சென்று, பலமணிகளையும் பொன்னையும் இழுத்துக் கொண்டும், அகில், சந்தனம் முதலான மரங்களை மோதி அடித்துக் கொண்டும் ஓடும் பாலியாற்றின் வடக்குக் கரையில் நிலைபெற்ற திருச்சடையில் பிறைச் சந்திரனைச் சூடிய இறைவரின் திருவேற்காட்டினைச் சிவஞான அமுது உண்ட செல்வரான பிள்ளை யார் சென்று அடைந்தார்.

திருவேற்கா டமர்ந்தசெழுஞ் சுடர்பொற் கோயில்
சென்றணைந்து பணிந்துதிருப் பதிகம்பாடி
வருவேற்று மனத்தவுணர் புரங்கள் செற்றார்
வலிதாயம் வந்தெய் திவணங்கிப் போற்றி
உருவேற்றார் அமர்ந்துறையும் ஓத வேலை
ஒற்றியூர் கைதொழச்சென் றுற்றபோது
பொருவேட்கை தருவாழ்வு பெற்ற தொண்டர்
பெரும்பதியோர் எதிர்கொள்ளப் பேணி வந்தார். #4049

ஞானசம்பந்தர் திருவேற்காட்டில் விரும்பி வீற்றிருக்கும் செழுஞ்சுடரான

இறைவரின் அழகான கோயிலில் சென்று சேர்ந்து, வணங்கித் திருப்பதிகம் பாடியருளி, செந்நெறிகளை எதிர்த்துவரும் வேறுபட்ட உள்ளமுடைய பகைவரான அவுணரின் முப்புரங்களையும் எரித்த இறைவரின் `திருவலிதாயத்தில்' வந்து போற்றி, அழகான விடையூர்தியையுடைய இறைவர் விரும்பி வீற்றி ருக்கும் குளிர்ந்த கடற்கரையில் உள்ள திருவொற்றியூரை வணங்குவ தற்குச் சென்ற போது, பெருவிருப்பம் கொண்டு வாழ்வு பெற்ற தொண்டர்களும் அப்பதியில் உள்ளவர்களும் அவரை எதிர்கொண்டு வரவேற்க அன்புடன் வந்தனர்.

விளக்கவுரை

இப்பதிகளில் அருளிய பதிகங்கள்: *1. திருவேற்காடு: ஒள்ளிதுள்ள (தி.1 ப.57) - பழந்தக்கராகம். 2. திருவலிதாயம்: பத்தரொடு (தி.1 ப.3) - நட்டபாடை.*

மிக்கதிருத் தொண்டர்தொழு தணையத் தாமும்
தொழுதிழிந்து விடையவனென் றெடுத்துப் பாடி
மைக்குலவு கண்டத்தார் மகிழுங் கோயில்
மன்னுதிருக் கோபுரத்து வந்து தாழ்ந்து
தக்கதிருக் கடைக்காப்புச் சாற்றித் தேவர்
தம்பெருமான் திருவாயி லூடு சென்று
புக்கருளி வலங்கொண்டு புனிதர் முன்பு
போற்றெடுத்துப் படியின்மேற் பொருந்த வீழ்ந்தார். **#4050**

பெருகிய திருத்தொண்டர்கள் தொழுத வண் ணம் வந்து சேர, பிள்ளையார் தாமும் அவர்களை வணங்கிய வண் ணம் முத்துச் சிவிகையினின்றும் இழிந்து, `விடையவன்' என்ற தொடக்கம் உடைய பதிகத்தை எடுத்துப் பாடி, கருமை பொருந்திய திருக்கழுத்தையுடைய சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோயிலின் முன்னுள்ள கோபுரத்தருகில் வந்து, நிலத்தில் விழுந்து வணங்கிப் பொருந்திய திருக்கடைக்காப்பினையும் பாடி, இறைவரின் கோயில் வாயிலின் வழியே உள்ளே புகுந்து, வலம் வந்து, தூயவரான இறைவர் திருமுன்பு போற்றி நிலம் பொருந்த வீழ்ந்து வணங்கினார்.

விளக்கவுரை

`விடையவன்' என்று தொடங்கும் பதிகம் பஞ்சமப் பண்ணிலமைந்ததாகும் *(தி.3 ப.57).* தொண்டர்கள் எதிர்கொள்ளத் தொடங்கிய இத்திருப்பதிகம், திருவீதி கடந்து, திருகோயிலின் முன் திருக்கடைக்காப்பு அமைய நிறைவுற்றுள்ளது. பாடல் தொறும் `உறை யும் இடம் ஒற்றியூரே' என நிறைவு பெறுவதும், திருக்கடைக்காப்பில்

`ஒற்றியூரைச் சொன்ன' என அமையப் பெற்றிருப்பதும் இப்பதிகம் அருளப் பெற்ற இடவகைமையை அறிவதற்கு அரணாகின்றன.

பொற்றிரள்கள் போற்புரிந்த சடையார் தம்பால்
பொங்கியெழுங் காதல்மிகப் பொழிந்து விம்மிப்
பற்றியெழும் மயிர்ப்புளகம் எங்கு மாகிப்
பரந்திழியுங் கண்ணருவி பாய நின்று
சொல்திகழுந் திருப்பதிகம் பாடி ஏத்தித்
தொழுதுபுறத் தணைந்தருளித் தொண்ட ரொடும்
ஒற்றிநகர் காதலித்தங் கினிது றைந்தார்
உலகுய்ய வுலவாத ஞானம் உண்டார். **#4051**

பொன்னின் திரள் என முறுக்கிய சடையை உடைய இறைவர்பால் பெருகி எழுகின்ற பெருவிருப்பம் மிகவும் மேலோங்க விம்மித் திருமேனியைப் பற்றி, மேல் எழுகின்ற மயிர்க் கூச்சு மேனி எங்கும் நிரம்பப் பரவி, வழியும் கண்ணீர்ப் பெருக்குப் பாய்ந்தொழுக நின்று, சொற்பொருள் மிகவும் விளங்கும் திருப்பதிகத் தைப் பாடி, உலகம் உய்யும் பொருட்டுக் கெடுதல் இல்லாத சிவஞான அமுதுண்ட சம்பந்தர், திருவொற்றியூரில் விரும்பி அங்குத் தங்கி யிருந்தார்.

விளக்கவுரை

பொன்னின் திரள் என முறுக்கிய சடையை உடைய இறைவர்பால் பெருகி எழுகின்ற பெருவிருப்பம் மிகவும் மேலோங்க விம்மித் திருமேனியைப் பற்றி, மேல் எழுகின்ற மயிர்க் கூச்சு மேனி எங்கும் நிரம்பப் பரவி, வழியும் கண்ணீர்ப் பெருக்குப் பாய்ந்தொழுக நின்று, சொற்பொருள் மிகவும் விளங்கும் திருப்பதிகத் தைப் பாடி, உலகம் உய்யும் பொருட்டுக் கெடுதல் இல்லாத சிவஞான அமுதுண்ட சம்பந்தர், திருவொற்றியூரில் விரும்பி அங்குத் தங்கி யிருந்தார்.

இன்ன தன்மையிற் பிள்ளையார்
இருந்தனர் இப்பால்
பன்னு தொல்புகழ்த் திருமயி
லாபுரிப் பதியில்
மன்னு சீர்ப்பெரு வணிகர்தந்
தோன்றலார் திறத்து
முன்னம் எய்திய தொன்றினை
நிகழ்ந்தவா மொழிவாம். **#4052**

இங்ஙனம் ஞானசம்பந்தர் எழுந்தருளி இருந் தார். இவ்வுலகில் புகழ்ந்து பேசப்படுகின்ற திருமயிலாப்பூர்ப் பதியில் நிலைபெற்ற புகழையுடைய பெருவணிகர் குடியில் வந்த பெருமை யுடையவரின் வாழ்நாளில் நிகழ்ந்ததொரு வரலாற்றை இனிப் புகல் வாம்.

விளக்கவுரை

****

அருநி தித்திறம் பெருக்குதற்
கருங்கலம் பலவும்
பொருக டற்செலப் போக்கியப்
பொருட்குவை நிரம்ப
வரும ரக்கல மனைப்படப்
பணைக்கரை நிரைக்கும்
இருநி திப்பெருஞ் செல்வத்தின்
எல்லையில் வளத்தார். **#4053**

அரிய செல்வ வகைகளைப் பெருக்கச் செய்வதற் காக பெரிய மரக்கலங்கள் பலவற்றையும் அலைமோதும் கடலின்கண் செலுத்தி, அவ்வணிகத்தால் திரட்டிய செல்வக் குவியல்கள் நிரம்பத் தம் இல்லத்தில் சேரும்படி கொண்டுவரும் மரக்கலன்களின் குவியல், வரிசை பெறக் குவிக்கும் பெருநிதி முதலான பெருஞ்செல்வங்களின் எல்லையில்லாத வளங்களை யுடையவராய்,

விளக்கவுரை

****

தம்மை யுள்ளவா றறிந்தபின்
சங்கரற் கடிமை
மெய்ம்மை யேசெயும் விருப்புடன்
மிக்கதோ ரன்பால்
பொய்மை நீக்கியமெய்ப் பொருளிது
எனக்கொளு முள்ளச்
செம்மை யேபுரி மனத்தினார்
சிவநேசர் என்பார். **#4054**

தம்மை உள்ளவாறு அறிந்து கொண்டமையின் அதன்பின், இன்பந் தருபவரான இறைவரிடத்தில் அடிமைத் திறத்தை மெய்ந்நெறி பிறழாது செய்யும் விருப்பத்துடன் கூடிய அன்பினால், பொய்ம்மையைக் கடிந்த மெய்ப் பொருள் இதுவே எனத் தெரிந்து கொண்ட உள்ளத்தில், செம்மை நெறியையே இடைவிடாது எண்ணி ஒழுகும் திண்மை உடையவர் ஒருவர்; அவர் சிவநேசர் என்று அழைக் கப்படுவர்.

விளக்கவுரை

****

கற்றை வார்சடை முடியினார்
அடியவர் கலப்பில்

உற்ற செய்கையில் ஒழிவி
ன்றி
உருகிய மனமும்
பற்றி லாநெறிப் பரசம
யங்களைப் பாற்றுஞ்
செற்ற மேவிய சீலமும்
உடையராய்த் திகழ்வார். #4055
தொகுதியான நீண்ட சடையையுடைய இறை வரின் அடியவர்கள் வரின், பொருந்திய செய்கையில் இடை விடாது உருகிய உள்ளத்தையும், இறைவரிடத்து அன்பு இல்லாத நெறிகளை யுடைய பிறசமயங்களை நீக்குவதில் சினம் பொருந்திய நல்லொழுக் கத்தையும் உடையராய் விளங்குவர்.

விளக்கவுரை

****

ஆன நாள்செல அருமறைக்
கவுணியர் பெருமான்
ஞான போனகம் நுகர்ந்ததும்
நானிலம் உய்ய
ஏனை வெஞ்சமண் சாக்கியம்
இழித்தழித் ததுவும்
ஊன மில்புகழ் அடியர்பால்
கேட்டுவந் துளராய். #4056
அவ்வாறான நாள்கள் பலசெல்ல, அரிய வேதி யரான கவுணியர் குலத்தில் தோன்றிய தலைவரான ஞானசம்பந்தப் பெருமான் சிவஞானம் உண்டதையும், உலகம் உய்யும் பொருட்டா கப் பிற சமயங்களான கொடிய சமண புத்த சமயங்களின் கீழ் நிலையை விளக்கி, அவை அடைந்திருந்த தலைமையை ஒழித்ததையும், குற்றம் இல்லாத அடியவர்கள் வந்து சொல்லக் கேட்டு மகிழந்தவராய்,

விளக்கவுரை

****

செல்வ மல்கிய சிரபுரத்
தலைவர்சே வடிக்கீழ்
எல்லை யில்லதோர் காதலின்
இடையறா வுணர்வால்
அல்லும் நண்பக லும்புரிந்
தவர்அருட் டிறமே

சொல்ல வுஞ்செயல் கேட்கவும்
தொழிலின ரானார். #4057
அருட்செல்வம் நிறைந்த சீகாழித் தலைவரான ஞானசம்பந்தரின் திருவடிகளின்பால் அளவில்லாத ஒப்பற்ற பெரு விருப்புடன் இடையறாத அன்பு பூண்ட உணர்ச்சியால், இரவும் பகலும் இடைவிடாது அவரையே எண்ணியவராய், அவரது அருள் தன்மையையே தம் வாக்கினால் புகழ்ந்து பாராட்டுதலும் அருட் செயல்களை அன்பர்களிடம் கேட்டலுமாகிய இவையே தம் வாழ்க்கைக்குரிய செயல்களாக மேற்கொண்டவர் ஆனார்.

விளக்கவுரை

****

நிகழும் மாங்கவர் நிதிப்பெருங்
கிழவனின் மேலாய்த்
திகழும் நீடிய திருவினிற்
சிறந்துள ராகிப்
புகழும் மேன்மையில் உலகினில்
பொலிந்துளா ரெனினும்
மகவி லாமையின்ம கிழ்மனை
வாழ்க்கையின் மருண்டு. #4058

அருட்செல்வம் நிறைந்த சீகாழித் தலைவரான ஞானசம்பந்தரின் திருவடிகளின்பால் அளவில்லாத ஒப்பற்ற பெரு விருப்புடன் இடையறாத அன்பு பூண்ட உணர்ச்சியால், இரவும் பகலும் இடைவிடாது அவரையே எண்ணியவராய், அவரது அருள் தன்மையையே தம் வாக்கினால் புகழ்ந்து பாராட்டுதலும் அருட் செயல்களை அன்பர்களிடம் கேட்டலுமாகிய இவையே தம் வாழ்க்கைக்குரிய செயல்களாக மேற்கொண்டவர் ஆனார்.

விளக்கவுரை

****

அரிய நீர்மையில் அருந்தவம்
புரிந்தரன் அடியார்க்கு
உரிய அர்ச்சனை யுலப்பில
செய்தஅந் நலத்தால்
கரிய வாங்குழன் மனைவியார்
வயிறெனுங் கமலத்
துரிய பூமக ளெனவொரு
பெண்கொடி யுதித்தாள். #4059

அரிய தன்மையுடன் அருந்தவம் ஆற்றிவரும் சிவனடியார்களுக்குரிய அளவற்ற அருச்சனைகளைச் செய்துவர, அந் நன்மையால் அவரது கரிய சிறந்த கூந்தலையுடைய மனைவியாரின் வயிறு என்னும் தாமரையில், உரிமை பொருந்திய பூமகள் போன்ற பெண் ஒருத்தி பிறந்தாள்.

விளக்கவுரை

இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

நல்ல நாள்பெற ஓரையில்
நலம்மிக வுதிப்பப்
பல்பெ ருங்கிளை யுடன்பெரு
வணிகர்பார் முழுதும்
எல்லை யில்தன முகந்துகொண்
டியாவரும் உவப்ப
மல்ல லாவண மறுகிடைப்
பொழிந்துளம் மகிழ்ந்தார். **#4060**

நல்லநாளில் நல்ல ஓரையில் நலம் பல பெறுதற் குரிய அக்குழந்தை பிறக்க, பல பெரிய சுற்றத்துடன் பெருவணிகரான சிவநேசர், அளவற்ற செல்வங்களை முகந்து எடுத்து, யாவரும் மகிழச் செழிப்புடைய வீதியில் பொழிந்து உள்ளம் மகிழ்ந்தார்.

விளக்கவுரை

****

ஆறு சூடிய முடியினார்
அடியவர்க் கன்பால்
ஈறி லாதபூ சனைகள்யா
வையுமிகச் செய்து
மாறி லாமறை யவர்க்குவேண்
டினவெலாம் அளித்துப்
பேறு மற்றிதுவே எனும்படி
பெருங்களி சிறந்தார். **#4061**

கங்கையைச் சூடிய சடையையுடைய சிவபெரு மானின் அடியார்களுக்கு, அன்பு மிகுதியினால் எல்லையற்ற பூசை களை மிகவும் செய்தும், ஒப்பில்லாத மறையவர்களுக்கு அவர்கள் வேண்டியவற்றை எல்லாம் தந்தும், இதுவே பெரும் பேறாகும் என்று சொல்லும்படி உள்ளம் மகிழ்ந்தார்.

விளக்கவுரை

****

சூத நல்வினை மங்கலத்

தொழில்முறை தொடங்கி
வேத நீதியின் விதியுளி
வழாவகை விரித்த
சாத கத்தொடு சடங்குகள்
தசதினம் செல்லக்
காதல் மேவிய சிறப்பினில்
கடிவிழா அயர்ந்தார். #4062

குழந்தை பிறந்தவுடன் செயத்தக்க நல்ல செயற் பாடுகளையெல்லாம் முறைப்படி செய்யத் தொடங்கி, மறைவழித் தவறாது விரித்துக் கூறிய சாதகன்மம் முதலாக வரும் செயற்பாடுகளை குழந்தை பிறந்தபின் பத்து நாள்களிலும் செய்து, பெருவிருப்பம் பொருந்திய சிறப்பால் மங்கல விழாவையும் செய்தனர்.

விளக்கவுரை

குழந்தை பிறந்தவுடன் செயத்தக்க நல்ல செயற் பாடுகளையெல்லாம் முறைப்படி செய்யத் தொடங்கி, மறைவழித் தவறாது விரித்துக் கூறிய சாதகன்மம் முதலாக வரும் செயற்பாடுகளை குழந்தை பிறந்தபின் பத்து நாள்களிலும் செய்து, பெருவிருப்பம் பொருந்திய சிறப்பால் மங்கல விழாவையும் செய்தனர்.

யாவ ரும்பெரு மகிழ்ச்சியால்
இன்புறப் பயந்த
பாவை நல்லுறுப் பணிகிளர்
பண்பெலாம் நோக்கிப்
பூவி னாள்என வருதலின்
பூம்பாவை யென்றே
மேவு நாமமும் விளம்பினர்
புவியின்மேல் விளங்க. #4063

யாவரும் பெருமகிழ்ச்சியால் இன்பத்தை அடையப் பெற்றெடுத்த பாவை போன்ற பெண்ணின் அழகு விளங் கும் பண்புகளை எல்லாம் பார்த்து, அவை திருமகளின் திருத்தகவு என விளங்கலின், அப்பெண்ணுக்குப் `பூம்பாவை' என்ற பெயரை உலகத்தில் மேலாய் விளங்குமாறு கூறிச் சூட்டினர்.

விளக்கவுரை

பூப்பாவை - பூம்பாவையாயிற்று.

திங்கள் தோறுமுன் செய்யும்அத்
திருவளர் சிறப்பின்
மங்க லம்புரி நல்வினை

மாட்சியிற் பெருக
அங்கண் மாநகர் அமைத்திட
ஆண்டெதி ரணைந்து
தங்கு பேரொளிச் சீறடி
தளர்நடை பயில. **#4064**
பூப்பாவை - பூம்பாவையாயிற்று.

விளக்கவுரை

ஓராண்டில் தளர்நடை பயின்றாள்.

தளரும் மின்னின்அங் குரமெனத்
தமனியக் கொடியின்
வளரி ளந்தளிர்க் கிளையென
மணிகிள ரொளியின்
அளவி லஞ்சுடர்க் கொழுந்தென
அணைவுறும் பருவத்
திளவ னப்பிணை யனையவர்க்
கேழுயாண் டெய்த. **#4065**
ஓராண்டில் தளர்நடை பயின்றாள்.

விளக்கவுரை

ஏழாண்டுகளில் பூம்பாவையினிடத்துப் பொருந்திய பொற்பு இது.

அழகின் முன்னிளம் பதமென
அணிவிளக் கென்ன
விழவு கொண்டெழும் பேதைய
ருடன்விளை யாட்டில்
கழலொடு அம்மனை கந்துகம்
என்றுமற் றினைய
மழலை மென்கிளிக் குலமென
மனையிடை ஆடி. **#4066**
ஏழாண்டுகளில் பூம்பாவையினிடத்துப் பொருந்திய பொற்பு இது.

விளக்கவுரை

ஏழாண்டுகளில் பூம்பாவையினிடத்துப் பொருந்திய பொற்பு இது.

பொற்றொ டிச்சிறு மகளிர்
ஆயத்தொடும் புணர்ந்து
சிற்றில் முற்றவும் இழைத்துட
னடுந்தொழிற் சிறுசோ
றுற்ற உண்டிகள் பயின்றொளி
மணியூசல் ஆடி

மற்றும்இன்புறு வண்டலாட்
டயர்வுடன் வளர. #4067
பொன்னால் ஆன வளையலை அணிந்த சிறுபெண்களின் கூட்டத்துடன் கூடிச் சிற்றில்களை முற்றக் கட்டியும், அதனுடன் சமைக்கும் தொழிலில் சிறு சோற்றுடன் பொருந்திய உணவு கள் அமைத்தும், உண்டும் பழகியும், ஒளியையுடைய மணிகள் கட்டிய ஊஞ்சல் ஆடியும், இன்னும் இங்ஙனம் இன்பம் பொருந்தும் வண்டல் பயிலும் ஆடல்களை ஆடியும் வளர,

விளக்கவுரை

இறைவனையோ இறைவியையோ அல்லது பெரியவர் களையோ பிள்ளைமைத் தன்மையில் வைத்துப் பாடுவது பிள்ளைத் தமிழாகும். இப்பூம்பாவைக்கோ உண்மையிலேயே பிள்ளைமைத் தன் மையில் இவ்வருஞ் செயல்களை வைத்துக் கூறுகின்றார் ஆசிரியர்.

தந்தை யாரும்அத் தளிரிளம்
கொம்பனாள் தகைமை
இந்த வையகத் தின்மையால்
இன்புறு களிப்பு
வந்த சிந்தையின் மகிழ்ந்துமற்
றிவள்மணம் பெறுவான்
அந்த மில்லென தருநிதிக்
குரியனென்று அறைந்தார். #4068

தந்தையான சிவநேசரும், அந்தத் தளிர்த்த இளங்கொம்பைப் போன்ற பெண்ணுக்கு ஒத்த பண்பு இவ்வுலகத்தில் வேறு எவருக்கும் இல்லாததால், இன்பத்துடன் கூடிய களிப்புப் பொங் கிய உள்ளத்தில் மகிழ்ச்சியடைந்து, பெறற்கரிய பேறாகிய இவளை மணம் செய்து கொள்ளும் மணமகனே என் எல்லையற்ற அரிய செல் வங்களுக்கெல்லாம் உரிமை உடையவன் ஆவன் என்று சொன்னார்.

விளக்கவுரை

இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

ஆய நாள்களில் அமண்பயில்
பாண்டிநா டதனைத்
தூய ஞானமுண் டருளிய
தோன்றலார் அணைந்து
மாய வல்லமண் கையரை
வாதில்வென் றதுவும்
மேய வெப்பிடர் மீனவன்

மேலொழித் ததுவும். #4069
இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

விளக்கவுரை

****

நெருப்பில் அஞ்சினார் தங்களை
நீரில் ஒட்டியபின்
மருப்பு நீள்கழுக் கோலின்மற்
றவர்கள் ஏறியதும்
விருப்பி னால்திரு நீறுமீ
னவற்களித் தருளிப்
பொருப்பு வில்லியார் சாதனம்
போற்றுவித் ததுவும். #4070

அனல் வாதத்தில் தோற்று அஞ்சிய சமணர் களைப் புனல் வாதத்தால் வென்ற பின்பு, கூர்மையான கொம்பைப் போன்ற நீண்ட கழுமரங்களில் அந்தச் சமணர்கள் ஏறியதும் விருப்பத்துடன் பாண்டிய மன்னனுக்குத் திருநீற்றை அளித்து அதன்மூலம் மலையா கிய வில்லையுடைய சிவபெருமானின் திருநீற்றுச் சாதனத்தைப் போற்றுவித்தும்,

விளக்கவுரை

****

இன்ன வாறெலாம் அறிந்துளார்
எய்தியங் கிசைப்பச்
சொன்ன வர்க்கெலாம் இருநிதி
தூசுடன் அளித்து
மன்னு பூந்தராய் வள்ளலார்
தமைத்திசை நோக்கிச்
சென்னி மேற்கரங் குவித்துவீழ்ந்
தெழுந்துசெந் நின்று. #4071

(ஆகிய) இவ்வரிய செயல்களை எல்லாம் அறிந் தவர் அங்குச் சொல்ல, வந்து சொன்னவர்க்கெல்லாம் பெருநிதியங் களை ஆடைகளுடன் அளித்து, நிலைபெற்ற சீகாழிப் பதியின் வள்ள லாரான ஞானசம்பந்தரை, அவர் இருந்த திசையை நோக்கித் தலைமீது கைகுவித்துக் கூப்பிக் கொண்டு நிலமுற விழுந்து, வணங்கி எழுந்து நேர்நின்று,

விளக்கவுரை

****

சுற்றம் நீடிய கிளையெலாம்

சூழ்ந்துடன் கேட்பக்
கற்ற மாந்தர்வாழ் காழிநா
டுடையவர்க் கடியேன்
பெற்றெ டுத்தபூம் பாவையும்
பிறங்கிய நிதியும்
முற்றும் என்னையும் கொடுத்தனன்
யானென்று மொழிந்தார். #4072

சுற்றத்தவரும் நீண்ட கிளைஞர்களும் கேட்கு மாறு, உரத்த குரலில் `கற்றவர்களாகிய மக்கள் வாழ்கின்ற சீகாழிப் பிள்ளையாருக்கு, அடியேன் பெற்ற பூம்பாவையையும், விளக்கமான என்பெருஞ் செல்வத்தையும், முற்றவும் அடிமையாக என்னையும் யான் தந்தேன்!' என உரைத்தார்.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின. சுற்றத்தார் - பெண்ணை மணங்கொள்ள உரிமையுடையவர்கள். கிளைஞர் - ஆண்மகவு இல்லாத நிலையில் தம் உடைமையைத் தமக்குப் பின் பெறுதற்குரியார். *(சிவக்கவிமணியார்).*

எல்லை யில்பெருங் களிப்பினால்
இப்பரி சியம்பி
முல்லை வெண்ணகை முகிழ்முலை
யாருடன் முடியா
மல்கு செல்வத்தின் வளமையும்
மறைவளர் புகலிச்
செல்வ ரேயுடை யாரெனும்
சிந்தையால் மகிழ்ந்தார். #4073

அளவு இல்லாத பெரு மகிழ்ச்சியினால் இவ் வாறு சிவநேசர் சொல்லி, முல்லையரும்பைப் போன்ற கூர்மையும் வெண்மையுமான பல்வரிசையையும், முகிழ்க்கும் மார்பகங்களை யும், உடைய மகளுடன் எல்லையற்ற நிரம்பிய செல்வ வளங்களை யும், மறையவரின் சீகாழிப் பதியில் தோன்றிய செல்வரான ஞானசம் பந்தரே உடையவர் என்று துணிவு கொண்ட உள்ளத்தில் மகிழ்வும் அடைந்தார்.

விளக்கவுரை

****

ஆற்று நாள்களில் அணங்கனார்
கன்னிமா டத்தின்
பால்த டம்பொழில் மருங்கினிற்

பனிமலர் கொய்வான்
போற்று வார்குழற் சேடிய
ருடன்புறம் போந்து
கோற்றொடித் தளிர்க் கையினால்
முகைமலர் கொய்ய. **#4074**
இங்ஙனம் சிவநேசர் செயல் ஆற்றிவரும் நாள்களில், தெய்வப் பெண் போன்ற பூம்பாவையார் கன்னிமாடத் தில், பால் போன்ற தூய நீர் நிறைந்த பொய்கை அருகில், குளிர்ந்த மலர்களைக் கொய்வதற்காகத் தம்மைப் போற்றும் நீண்ட கூந்தலை உடைய தோழியருடனே வெளியே சென்று, திரண்ட வளையலை அணிந்த தளிர் போன்ற கைகளால் முகைக்கும் பருவத்து மலர்களைக் கொய்ய,

விளக்கவுரை

****

அன்பர் இன்புறும் ஆர்வத்தின்
அளித்தபாங் கல்லால்
பொன்பி றங்குநீர்ப் புகலிகா
வலர்க்கிது புணரா
தென்ப துட்கொண்ட பான்மைஓர்
எயிற்றிளம் பணியாய்
முன்ப ணைந்தது போலவோர்
முள்ளெயிற்று அரவம். **#4075**
அன்பரான சிவநேசர் இன்பம் பொருந்துகின்ற விருப்பத்தால் அளித்த அளவிலன்றிப் பொன்கொழிக்கும் நீரை உடைய சீகாழித் தலைவராய ஞானசம்பந்தருக்கு இது சேர்வுறாது என்பதை மனத்துள் கொண்டுள்ள ஊழானது, நச்சுப் பற்களையுடைய ஒரு பாம்பாகி முன்வந்ததைப் போல, முள் போன்ற பற்களையுடைய ஒரு பாம்பு,

விளக்கவுரை

சிவநேசர், சீகாழித் தலைவருக்கெனத் தம் மகளாரை யும், பொருள்களையும் உரிமைப் படுத்திய அளவிலன்றி, அத்திரு மக ளாரோ, அப்பொருள்களோ அவரைச் சார்தற்குரிய ஊழ்இல்லை. ஆத லின் அவ்வூழே ஒருபாம்பாக வந்தது என ஆசிரியர் குறிப்பாராயினர்.

மௌவல் மாதவிப் பந்தரில்
மறைந்துவந் தெய்திச்
செவ்வி நாண்முகை கவர்பொழு
தினில்மலர்ச் செங்கை
நவ்வி வாள்விழி நறுநுதற்

செறிநெறி கூந்தல்
கொவ்வை வாயவள் முகிழ்விரல்
கவர்ந்தது குறித்து. #4076

மல்லிகையும் முல்லையுமாகப் படர்ந்த பந்தலில் மறைந்து வந்து சேர்ந்து, பூம்பாவையார் புதிய அரும்புகளைப் பறிக் கின்றபோது, மான்போன்ற கூர்மையான கண்களையும், நல்ல நெற்றி யையும், செறிவும் நெறிவும் உடைய கூந்தலையும், கோவைக் கனி போன்ற வாயையும் உடைய பூம்பாவையரின் மலர் போன்ற கையில், பூக்கொய்யக் கூப்பிய விரலைக் கடித்தது.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

நாலு தந்தமும் என்புறக்
கவர்ந்துநஞ் சுகுத்து
மேலெ ழும்பணம் விரித்துநின்
றாடிவே றடங்க
நீல வல்விடந் தொடர்ந்தெழ
நேரிழை மென்பூ
மாலை தீயிடைப் பட்டது
போன்றுள மயங்கி. #4077

நச்சுப் பற்கள் நான்கும், எலும்பளவும் அழுந்தக் கடித்து, நஞ்சைச் செலுத்திப் படத்தை விரித்து நின்று ஆடிய அப்பாம்பு, வேறு இடத்தில் மறைந்து விட்டது. அவ்வாறாகவே, கரிய கொடிய நஞ்சு அதனைத் தொடர்ந்து மேலே எழுந்ததால், மென்மை ஆன பூமா லையில் தீப்பட்டதைப் போல, நல்ல அணிகளை அணிந்த பூம்பாவை யார் உள்ளம் மயங்கி,

விளக்கவுரை

`இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்' *(குறள், 308)* என்னும் திருக்குறளும்.

தரையில் வீழ்தரச் சேடியர்
வெருக்கொண்டு தாங்கி
வரைசெய் மாடத்தின் உட்கொடு
புகுந்திட வணிகர்
உரையும் உள்ளமும் நிலையழிந்
துறுதுயர் பெருகக்
கரையில் சுற்றமுந் தாமும்முன்
கலங்கினார் கலுழ்ந்தார். #4078

நிலத்தில் விழ, தோழியர் திடுக்கிட்டு அஞ்சித் தாங்கிச் சென்று, அவருக்கென்று அமைக்கப்பட்ட கன்னிமாடத்தில் கொண்டு புக, அதனால் சிவநேசர் சொல்லும் மனமும் நிலையழிந்து துன்பம் மேலிட, அளவற்ற சுற்றத்தாரும் தாமும் முன்கலங்கி அழுதனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

விடந்தொலைத்திடும் விஞ்சையில்
பெரியராம் மேலோர்
அடர்ந்த தீவிடம் அகற்றுதற்
அணைந்துளார் அனேகர்
திடங்கொள் மந்திரந் தியானபா
வகநிலை முட்டி
தொடர்ந்த செய்வினைத் தொழிலராய்த்
தனித்தனிச் சூழ்வார். **#4079**

நஞ்சைத் தீர்த்திடும் கலையில் கைவந்த பெரி யோரான மேலோர் பலர், கொடிய அந்நஞ்சைப் போக்குதற்குச் சேர்ந் தவர்களாய், வன்மையுடைய மந்திரமும் தியானமும் பாவனையும் முட்டி நிலையுமாய்த் தொடர்ந்த தீர்வுச் செயல்களைத் தனித்தனிச் செய்யச் சூழ்ந்து,

விளக்கவுரை

மந்திரம் - கருடமந்திரம். தியானம் - அம்மந்திரத்திற்கு அதிதெய்வமூர்த்தியை அழுந்தியறிதல், பாவனை - அம்மூர்த்தியாகத் தன்னைப் பாவித்தல். முட்டிநிலை - மந்திரம் செய்வோர், தன் கை விரல்களில் பெருவிரலை விடுத்து ஏனைய நான்கு விரல்களையும் முட்டியாக மடித்துக் கொண்டு நஞ்சின் வேகத்தைத் தடுத்தற்காகத் தலை முதல் கடிவாய் இறுதியாகத் தீண்டப்பட்டோர் உடலைத் தடவுதல்.

விடந்தொலைத்திடும் விஞ்சையில்
பெரியராம் மேலோர்
அடர்ந்த தீவிடம் அகற்றுதற்
அணைந்துளார் அனேகர்
திடங்கொள் மந்திரந் தியானபா
வகநிலை முட்டி
தொடர்ந்த செய்வினைத் தொழிலராய்த்
தனித்தனிச் சூழ்வார். **#4080**

மேற்கூறப்பட்ட நான்குடன், அளவில்லாத இணையற்ற மருந்துகளைக் கொடுத்தும் தடவியும் சிகிச்சை செய்யவும், வன்மையாய்ப் பற்றிக் கொண்ட கொடிய நஞ்சு, ஏழு வேகமும் முறையாய் மேல்ஏறி, அகன்ற

கண்களையுடைய மென்மை ஆன கொடி போன்ற பூம்பாவையாரின் தலையை மேற்கொண்டு விளங்க, திருந்துமாறு செய்த தீர்வினைகள் எல்லாவற்றையும் கடந்து தீராமல் போகவே,

விளக்கவுரை

****

ஆவி தங்குபல் குறிகளும்
அடைவில வாக
மேவு காருட விஞ்சைவித்
தகர்இது விதியென்
றோவும் வேளையில் உறுபெரும்
சுற்றமும் அலறிப்
பாவை மேல்விழுந் தழுதனர்
படரொலிக் கடல்போல். **#4081**

உயிர் உடம்பில் தங்குவதற்கு உரிய பல குறிகளும் பொருந்தாது போக, வந்து சேர்ந்த காருடக் கலையில் வல்லவரும் இது ஊழ் என்று கைவிடும் வேளையில், பொருந்திய பல சுற்றத்தார்களும், கடலைப் போல் அலறிப் பாவை மீது விழுந்து அழுதனர்.

விளக்கவுரை

காருடக் கலை - கருடனாகப் பாவித்து நஞ்சைத் தீர்க்கும் கலை.

சிந்தை வெந்துயர் உறுசிவ
நேசருந் தெளிந்து
வந்த செய்வினை இன்மையில்
வையகத் துள்ளோர்
இந்த வெவ்விடம் ஒழிப்பவர்க்கு
ஈகுவன்என் னுடைய
அந்த மில்நிதிக் குவையெனப்
பறையறை வித்தார். **#4082**

உள்ளத்தில் கொடிய துன்பம் அடைந்த சிவநேசரும், பின்பு தெளிந்து, செய்யக்கூடிய தீர்வினை ஏதும் இல்லா ததால், `உலகத்தில் உள்ளவர்களில் யாவராயினும் இந்தக் கொடிய நஞ்சை ஒழித்தார் அவருக்கு இங்குள்ளன எல்லையில்லாத செல்வத் திரள் அனைத்தையும் அளிப்பேன்' என்று எங்கும் யாரும் அறியுமாறு பறை சாற்றினார்.

விளக்கவுரை

****

முரசி யம்பிய மூன்றுநாள்
அகவயின் முற்ற

அரசர் பாங்குளோர் உட்பட
அவனிமே லுள்ள
கரையில் கல்வியோர் யாவரும்
அணைந்துதங் காட்சிப்
புரையில் செய்கையில் தீர்ந்திடா
தொழிந்திடப் போனார். **#4083**

இங்ஙனம் பறை சாற்றிய பின்னர், மூன்று நாள் எல்லையில், அரச அவையில் உள்ளவர் உட்பட உலகத்தில் உள்ள எல்லை இல்லாத கல்வியுடைய யாவரும் வந்து சேர்ந்து, தாம் தாமும் உறுதியாய்க் கண்ட குற்றமற்ற தீர்தொழில்கள் எவற்றாலும் தீராது ஒழியாமற் போக, நீங்கிச் சென்றனர்.

விளக்கவுரை

****

சீரின் மன்னிய சிவநேசர்
கண்டுளம் மயங்கிக்
காரின் மல்கிய சோலைசூழ்
கழுமலத் தலைவர்
சாரும் அவ்வள வும்முடல்
தழலிடை யடக்கிச்
சேர என்பொடு சாம்பல்சே
மிப்பது தெளிவார். **#4084**

அந்நிலைமையைக் கண்ட சிறப்புப் பொருந்திய சிவநேசர் உள்ளம் மயங்கி, மேகம் பொருந்திய சோலைகளால் சூழப்பட்ட சீகாழித் தலைவர் வந்து சேரும் நாள் வரையிலும், பூம்பாவையாரின் உடலைத் தீயில் இட்டு அடங்கச் செய்து, அதில் சேரும் எலும்புடன் சாம்பலையும் பாதுகாத்து வைப்பது எனும் தெளிவுடையவராய்,

விளக்கவுரை

****

உடைய பிள்ளையார்க் கெனஇவள்
அடைவு துன்புறு வதற்கிலை
யாம்நமக் கென்றே
இடரொ ழிந்தபின் அடக்கிய
என்பொடு சாம்பல்
புடைபெ ருத்தகும் பத்தினிற்
புகப்பெய்து வைப்பார். **#4085**

ஞானசம்பந்தப் பெருமானுக்கு இவளை அளித்தேன் என்று

கூறிவிட்டதால், இதனால் தமக்குத் துன்பம் அடைவதற்கு இயைபு இல்லையாம் என்று துணிந்து, துன்பம் நீங்கிய நிலையில், தீயில் எரிந்த எலும்பையும் சாம்பலையும் வாய் அகன்ற குடத்தில் இட்டு வைப்பார் ஆனார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

கன்னி மாடத்தின் முன்புபோல்
பொன்னு முத்துமே லணிகலன்
பூந்துகில் சூழ்ந்து
பன்னு தூவியின் பஞ்சணை
விரைப்பள்ளி அதன்மேல்
மன்னு பொன்னரி மாலைகள்
அணிந்துவைத் தனரால். **#4086**

கன்னிமாடத்தில் முன்போலவே காவல் பொருந்த அக்குடத்தை வைத்துப் பொன்னும் முத்தும் மேல் அணி கலன்களும், அழகான மேன்மையான துகில்களும் சுற்றிப் புனைந்து, புகழ்ந்து பேசப்படும் அன்னத்தூவியிட்ட படுக்கையான மணம் கம ழும் பஞ்சணையில் வைத்து, அதன்மேல் நிலைபெற்ற பொன்னரி யான கழுத்தணி வகைகளையும் அழகுபெறக் கோலம் செய்து வைத்தார்,

விளக்கவுரை

****

மாலை சாந்தொடு மஞ்சனம்
நாடொறும் வழாமைப்
பாலி னேர்தரும் போனகம்
பகல்விளக்கு இனைய
சாலு நன்மையில் தகுவன
நாள்தொறுஞ் சமைத்தே
ஏலு மாசெய யாவரும்
வியப்பெய்து நாளில். **#4087**

மாலையும், சந்தனத்துடன் திருமுழுக்கும், நாள்தோறும் விடாமல், பால்சோறும், பகல் விளக்கும் என்ற இவையும் இவை போன்றவற்றையும் பொருந்திய நன்மையினால் தக்கவையாக நாள்தோறும் அமைத்துப் பொருந்தும்படி செய்ய, யாவரும் அதைக் கண்டு வியப்படைந்துவரும் நாள்களில்,

விளக்கவுரை

****

சண்பை மன்னவர் திருவொற்றி
யூர்நகர் சார்ந்து
பண்பு பெற்றநற் றொண்டர்க
ளுடன்பணிந் திருந்த
நண்பு மிக்கநல் வார்த்தைஅந்
நற்பதி யுள்ளோர்
வண்பு கழ்ப்பெரு வணிகர்க்கு
வந்துரை செய்தார். **#4088**

சீகாழித் தலைவரான ஞானசம்பந்தர் திருவொற் றியூரில் வந்து சார்ந்து, பண்புமிக்க நல்ல தொண்டர்களுடன் இறை வரைப் பணிந்து அங்கே எழுந்தருளியிருக்கின்றார் என்ற பொருந்து வதற்குரிய நல்ல சொல்லை, அந்நற்பதியில் வாழும் அடியார்கள், வண்மையும் புகழும் உடைய பெருமை சான்ற வணிகர் தோன்றலார் ஆன சிவநேசரிடம் வந்து கூறினர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

சொன்ன வர்க்கெலாந் தூசொடு
இன்ன தன்மையர் எனவொணா
மகிழ்சிறந் தெய்தச்
சென்னி வாழ்மதி யார்திரு
வொற்றியூ ரளவும்
துன்னு நீள்நடைக் காவணந்
துகில்விதா னித்து. **#4089**

அங்ஙனம் ஞானசம்பந்தரைப் பற்றித் தம்மிடம் வந்து கூறியவர்களுக்கெல்லாம் சிவநேசர், ஆடையும், காசும், பொன் னும் அன்புடனே கொடுத்து, இன்ன தன்மைதான் பெற்றார் என்று சொல்ல முடியாத மகிழ்ச்சி மேல் ஓங்க, திருச்சடையில் வாழ்வு பெறும் மதியைத் தாங்கிய இறைவர் எழுந்தருளிய திருவொற்றியூர் அளவும் நெருங்கிய நடைக் காவணம் இட்டுத் துணியால் விதானமும் கட்டி,

விளக்கவுரை

****

மகர தோரணம் வண்குலைக்
கமுகொடு கதலி
நிகரில் பல்கொடித் தாமங்கள்
அணிபெற நிரைத்து
நகர நீள்மறுகு யாவையும்

நலம்புனை அணியால்
புகரில் பொன்னுல கிழிந்ததாம்
எனப்பொலி வித்தார். **#4090**

மகர தோரணங்களும், வளம்மிக்க குலைக் கமுகுகளும், வாழைகளும், ஒப்பில்லாத பலகொடிகளும், மாலை களும் ஆகிய இவற்றை அழகு பொருந்த நிரல்பட அமைத்து, நகரம் முழுமையும் உள்ள நீண்ட தெருக்கள் எல்லாவற்றையும் நன்மை பொருந்த அணிசெய்து, குற்றம் இல்லாத தேவலோகமே கீழ் இறங்கிய தாம் எனக் கூறுமாறு அழகு செய்வித்தார் சிவநேசர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

இன்ன வாறணி செய்துபல்
குறைவறுப் பேவி
முன்னம் ஒற்றியூர் நகரிடை
முத்தமிழ் விரகர்
பொன்ன டித்தலம் தலைமிசைப்
புனைவனென் றெழுவார்
அந்ந கர்ப்பெருந் தொண்டரும்
உடன்செல வணைந்தார். **#4091**

இவ்வாறு பலவாற்றானும் அணி செய்து, குறைகள் எவையும் இல்லாமல் செய்யும் பணியாட்களை ஏவி, `முன்சென்று திருவொற்றியூர் நகரில் முத்தமிழ் விரகரான பிள்ளை யாரின் பொன்னார் திருவடிகளை வணங்கித் தலைமீது சூட்டிக் கொள்வேன்' என்று எழுவாராகி, அம் மயிலையில் வாழும் பெருந் தொண்டர்களும் தம் உடன் வரத் திருவொற்றியூரை நோக்கிச் சென்றார்.

விளக்கவுரை

குறைவு + அறுப்பு = குறைவறுப்பு - குறைகள் எவையும் இல்லையாகச் செய்தல்.

ஆய வேலையில் அருமறைப்
புகலியர் பிரானும்
மேய ஒற்றியூர் பணிபவர்
வியனகர் அகன்று
காயல் சூழ்கரைக் கடல்மயி
லாபுரி நோக்கித்
தூய தொண்டர்தம் குழாத்தொடும்
எதிர்வந்து தோன்ற. **#4092**

அவ்வமையத்தில் சீகாழித் தலைவரான ஞானசம் பந்தப் பெருமானும், தாம் தங்கியிருந்த திருவொற்றியூரைப் பணிந்து, அப் பெருநகரை விட்டு அகன்று, உப்பளங்கள் சூழ்ந்த கடற்கரையின் துறையையுடைய திருமயிலையை நோக்கித் தூய்மையான தொண்டர் களின் திருக்கூட்டத்தோடும் எதிரில் வந்து தோன்ற,

விளக்கவுரை

****

மாறில் வண்பெரு வணிகரும்
தொண்டரும் மலர்ந்த
நீறு சேர்தவக் குழாத்தினை
நீளிடைக் கண்டே
ஆறு சூடினார் திருமக
னார்அணைந் தாரென்
ஈறி லாததோர் மகிழ்ச்சியி
னால்விழுந் திறைஞ்ச. **#4093**

ஒப்பற்ற கொடைத்திறனுடைய பெருவணிக ரான சிவநேசரும், அவருடன் வந்த பெருந் தொண்டர்களும், ஒளி விளங்கும் வெண்ணீறு புனைந்த தவத்தையுடைய அடியார் கூட்டத் தினை நெடுந்தொலைவில் பார்த்து, `கங்கையாற்றைச் சூடிய இறைவரின் மகனார் வந்தனர்' என்று இறுதியில்லாத ஒப்பற்ற மகிழ்ச்சியால் நிலத்தில் விழுந்து போற்ற,

விளக்கவுரை

****

காழி நாடரும் கதிர்மணிச்
சிவிகைநின் றிழிந்து
சூழி ரும்பெருந் தொண்டர்முன்
தொழுதெழுந் தருளி
வாழி மாதவர் வணிகர்செய்
திறஞ்சொலக் கேட்டே
ஆழி சூழ்மயி லாபுரித்
திருநகர் அணைந்தார். **#4094**

சீகாழித் தலைவரான ஞானசம்பந்தரும் ஒளி வீசும் முத்துச் சிவிகையினின்றும் இழிந்து, சூழ்ந்த பெரிய தொண்டர் களின் முன்னே, தொழுது எழுந்தருளி, வாழ்வுடைய மாதவர்களா கிய அடியவர்கள் சிவநேசரின் அடிமைப் பண்பை எடுத்துச் சொல்லக் கேட்டு, கடற்கரை சூழ்ந்த திருமயிலைத் திருநகரைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

அத்தி றத்துமுன் நிகழ்ந்தது
திருவுள்ளத்து அமைத்துச்
சித்தம் இன்புறு சிவநேசர்
தம்செயல் வாய்ப்பப்
பொய்த்த வச்சமண் சாக்கியர்
புறத்துறை அழிய
வைத்த வப்பெருங் கருணைநோக்
கால்மகிழ்ந் தருளி. **#4095**

அத்திறத்தின் முன்னே நிகழ்ந்த நிகழ்ச்சியைத் தம் உள்ளத்தில் ஞானசம்பந்தப் பெருமான் அமைத்துக் கொண்டு, உள்ளத்தில் இன்பமடையும் தொண்டரான சிவநேசரின் செயல் வாய்த்திட, பொய்யான தவத்தை மேற்கொண்ட சமணர் சாக்கியரின் புறத்துறைகள் அழியத் திருவுளங் கொண்ட அப் பெரிய அருள் நோக்கத்தினால் மகிழ்ந்தருளி,

விளக்கவுரை

****

கங்கை வார்சடை யார்கபா
லீச்சரத் தணைந்து
துங்க நீள்சுடர்க் கோபுரம்
தொழுதுபுக் கருளி
மங்கை பாகர்தம் கோயிலை
வலங்கொண்டு வணங்கிச்
செங்கை சென்னிமேல் குவிந்திடத்
திருமுன்பு சேர்ந்தார். **#4096**

கங்கையைச் சூடிய நீண்ட சடையையுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் `திருக்கபாலீச்சரம்' என்னும் திருக்கோயிலைச் சேர்ந்து, உயர்ந்த நீண்ட ஒளியுடைய கோபுரத்தைத் தொழுது, புகுந்தருளி, உமையம்மையாரை ஒரு கூற்றில் கொண்ட இறைவர் கோயிலை வலமாக வந்து வணங்கி, சிவந்த கை தலைமீது குவித்திடத் திருமுன்பு வந்து சேர்ந்தவராய்,

விளக்கவுரை

****

தேவ தேவனைத் திருக்கபா
லீச்சரத் தமுதைப்
பாவை பாகனைப் பரிவுறு

பண்பினால் பரவி
மேவு காதலின் விரும்பிய
விரைவினால் விழுந்து
நாவின் வாய்மையால் போற்றினார்
ஞானசம் பந்தர். **#4097**

தேவரின் தலைவராயுள்ள இறைவரை, திருக் கபாலீச்சரத்தில் அமர்ந்தருளிய அமுதம் போன்றவரை, உமையம் மையை ஒருகூற்றில் கொண்ட முதல்வரை, அன்பு பொருந்திய பண்பி னால் போற்றிப் பொருந்திய காதலால், விரும்பிய விரைவினால் நிலத்தில் பொருந்த விழுந்து, திருநாவில் பொருந்திய உண்மைத் திருவாக்கினால், ஞானசம்பந்தர் போற்றியருளினார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகம் கிடைத்திலது. இம்மூன்று பாடல்களும் ஒரு முடிபின.

போற்றி மெய்யருள் திறம்பெறு
பரிவுடன் வணங்கி
நீற்றின் மேனியில் நிறைமயிர்ப்
புளகங்கள் நெருங்கக்
கூற்ற டர்த்தவர் கோயிலின்
புறம்புபோந் தருளி
ஆற்றும் இன்னருள் வணிகர்மேற்
செலவருள் செய்வார். **#4098**

அங்ஙனம் போற்றி, மெய்யருள் திறத்தைப் பெறும் இடைவிடாத எண்ணத்துடன் வணங்கி, திருநீறு பூசிய மேனி யில் நிறைவாக மயிர்க் கூச்செறிய, இயமனைக் காலினால் உதைத்து உருட்டிய இறைவரின் கோயிலின் வெளிப்புறத்தில் சென்று, செய் கின்ற இனிய அருள், வணிகரின் மீது செல்வதாய் அருளிச் செய்பவராய்,

விளக்கவுரை

****

ஒருமை உய்த்தநல் லுணர்வி
அருமை யால்பெறும் மகள்என்பு
நிறைத்தஅக் குடத்தைப்
பெரும யானத்து நடம்புரி
வார்பெருங் கோயில்
திரும திற்புற வாய்தலில்
கொணர்கென்று செப்ப. **#4099**

`பெருமானின் அடிமைத் திறத்தில் ஒன்றித்து வைத்த உணர்வுடையீர்! உலகத்தவர் எல்லாம் அறியுமாறு, அரிய தவத்தின் பயனாய்ப் பெற்ற மகளுடைய எலும்பு நிறைந்த அக் குடத்தை, பெரிய மயானத்தில் கூத்தாடுகின்ற இறைவரின் கோயிலின் திருமதில் புறத்துத் திருவாயில் முன்னர்க் கொண்டு வருக' எனக் கூறியருள,

விளக்கவுரை

****

அந்த மில்பெரு மகிழ்ச்சியால்
அவனிமேல் பணிந்து
வந்து தந்திரு மனையினில்
மேவிஅம் மருங்கு
கந்த வார்பொழில் கன்னிமா
டத்தினில் புக்கு
வெந்த சாம்பலோ டென்புசேர்
குடத்தைவே றெடுத்து. **#4100**

எல்லையற்ற பெருமகிழ்ச்சியால் நிலத்தின் மீது விழுந்து வணங்கிக் கோயிலினின்றும் வந்து, தம் திரு இல்லத்துள் சேர்ந்து, அங்கு மணம் பொருந்திய நீண்ட சோலையிடையில் உள்ள கன்னி மாடத்தில் புகுந்து, மகளது உடல் வெந்தமையாலாய சாம் பலுடன் எலும்பையும் இட்டு வைத்த குடத்தை, பஞ்சணை முதலியவற் றினின்றும் வேறாய் எடுத்து வந்து,

விளக்கவுரை

****

மூடு பன்மணிச் சிவிகையுள்
பெய்துமுன் போத
மாடு சேடியர் இனம்புடை
சூழ்ந்துவந் தணைய
ஆடல் மேவினார் திருக்கபா
லீச்சரம் அணைந்து
நீடு கோபுரத் தெதிர்மணிச்
சிவிகையை நீக்கி. **#4101**

பலமணிகளால் இழைக்கப்பெற்ற மூடிய சிவிகையுள் அக்குடத்தை இனிதாக வைத்து, அதனை முன்போக விட்டு, இருமருங்கிலும் தோழியர் கூட்டம் சூழ்ந்து வர, ஆடலைச் செய்யும் இறைவரின் திருக்கபாலீச்சரத்தைச் சேர்ந்து, நீண்ட கோபுரத் தின் வெளியே எதிரில், மணிச் சிவிகையின் திரையை விலக்கி,

விளக்கவுரை
****

அங்க ணாளர்தம் அபிமுகத்
தினில்அடி யுறைப்பால்
மங்கை என்புசேர் குடத்தினை
வைத்துமுன் வணங்கப்
பொங்கு நீள்புனற் புகலிகா
வலர்புவ னத்துத்
தங்கி வாழ்பவர்க் குறுதியாம்
நிலைமைசா திப்பார். **#4102**

இறைவரின் திருமுன்பாக, அவரது திருவடியில் பதிந்த அன்பின் உறைப்பால், பெண்ணின் எலும்புடைய குடத்தை எடுத்து வைத்துப் பிள்ளையாரின் திருமுன்பு சிவநேசர் வணங்கி நிற்ப, பொங்கிவரும் பெருநீர்ச் சிறப்புடைய சீகாழித் தலைவரான ஞானசம்பந்தர், இவ்வுலகத்தில் இருந்துவரும் மக்களுக்கு உறுதிப் பொருள் இதுவாம் என நேரே காட்டியருள,

விளக்கவுரை
அபிமுகம் - திருமுன்பு.

மாடம் ஓங்கிய மயிலைமா
நகருளார் மற்றும்
நாடு வாழ்பவர் நன்றியில்
சமயத்தி னுள்ளோர்
மாடு சூழ்ந்துகாண் பதற்குவந்
தெய்தியே மலிய
நீடு தேவர்கள் ஏனையோர்
விசும்பிடை நெருங்க. **#4103**

மாடங்கள் ஓங்கிய மயிலைப் பெருநகரத்தில் உள்ளவர்களும், மற்றும் அந்நாட்டில் உள்ளவர்களும், நன்றி இல்லாத மற்ற சமயத்தில் உள்ளவர்களும், எம்மருங்கிலும் சூழ்ந்து, இதன் விளைவைக் காண்பதற்கு வந்து பெருகவும், நீடிய தேவர்களும் மற்றவர்களும் வானத்தில் நெருங்கவும்,

விளக்கவுரை
****

தொண்டர் தம்பெரும் குழாம்புடை
சூழ்தரத் தொல்லை
அண்டர் நாயகர் கோபுர

வாயில்நேர் அணைந்து
வண்டு வார்குழ லாள்என்பு
நிறைந்தமண் குடத்தைக்
கண்டு தம்பிரான் கருணையின்
பெருமையே கருதி. **#4104**

திருத்தொண்டர்கள் தம் அருகே சூழ்ந்து வரவும், பழமையான தேவரது கோபுர வாயிலின் நேரில் வந்து சேர்ந்து, வண்டுகள் தங்கும் நீண்ட கூந்தலையுடைய பூம்பாவையாரின் எலும்பு நிறைந்த அம் மண்குடத்தை, அருட்பார்வை செய்து, இறைவரின் கருணையின் பெருமையை உள்ளத்துள் பெரிதும் நினைந்து,

விளக்கவுரை

****

இந்த மாநிலத் திறந்துளோர்
என்பினைப் பின்னும்
நந்து நன்னெறிப் படுத்திட
நன்மையாந் தன்மை
அந்த என்பொடு தொடர்ச்சியாம்
எனவருள் நோக்கால்
சிந்தும் அங்கம்அங் குடையபூம்
பாவைபேர் செப்பி. **#4105**

இவ்வுலகத்தில் இறந்தவரின் எலும்பை, மேலும் பெரிய நன்னெறியில் பொருந்தியிட, நன்மையாகின்ற தன்மையா னது அவ்வெலும்புடன் கூடிய தொடர்ச்சியால் ஆவதாகும் என்று எண்ணிய அருள் நோக்கத்தினால், சிந்திய அந்த எலும்பை, முன் உடம்பில் வாழ்ந்த பூம்பாவை என்ற பெயரால் விளித்துச் சொல்லி அருளி,

விளக்கவுரை

என்புக் குடத்தை நோக்கிப் பூம்பாவை என்றது, எலும்பும் அதனொடு கூடிய தசைத் திரளாய உடம்பும், அதனுள் வாழும் உயிருமாய் நின்ற முன் தொடர்ச்சி பற்றியாம். எலும்பை வைத்துச் செய்யும் நற்செயல், அதனொடு தொடர்புற்றிருந்த உடற்கும், அதனோடு இயைந்து வாழ்ந்த உயிர்க்கும் ஆதலினாற்றான் இன்றும் அத்தகைய நற்செயல்கள் நடைபெற்று வருகின்றன. `என்போடி யைந்த தொடர்பு' (குறள், 73) எனத் திருவள்ளுவர் இத்தொடர்ச்சி யைக் கூறுவதும் காண்க. நந்துதல் - பெரிதாதல்; தழைத்தல்.

மண்ணி னில்பிறந் தார்பெறும்
பயன்மதி சூடும்

அண்ண லார்அடி யார்தமை
அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப்
பொலிவுகண்டு ஆர்தல்
உண்மை யாம்எனில் உலகர்முன்
வருகஎன வுரைப்பார். #4106

`இம்மண்ணுலகத்தில் வினைக்கு ஈடாக வந்து பிறந்த உயிர்கள், பெறும் பிறவிப் பயனாகிய உறுதிப் பொருள்களா வன, பிறையை அணியும் பெருமானின் அடியவர் தமக்குத் திரு வமுது செய்வித்தலும், கண்களால் அவ்வடியவர்களின் உள்ளத்து உயிர்க்கு உயிராய் நிற்கும் இறைவரின் திருவிழாக்களின் பெரும் பொலிவைக் கண்டு மகிழ்தலும் ஆய இவ்விரண்டுமே என்பது உண்மையானால், பூம்பாவையே! இவ்வுலகத்தார் முன் உடலும் உயிரும் பொருந்த வருவாயாக! எனச் சூள் செய்து எடுத்துச் சொல்பவராய்,

விளக்கவுரை

`அண்ணலார் அடியார்' என இருசொற்கள் முன் இருத் தலின், பின்வரும் அவர் என்ற சுட்டு இறைவர், அடியவர் ஆகிய இரு வரையும் குறிக்கும். எனினும், பதிகப் பொருண்மை வகையால் இறை வர் என்றே கொள்ளத்தகும். `உருத்திரபல்கணத்தார்க்கு அட்டிட்டல் காணாதே போதியோ' என முதற் பாட்டில் வருதல் கண்டு, அண்ண லார் அடியார் தமை அமுது செய்வித்தலை முன்னர்க் கூறினார். அடுத்து வரும் பாடல்களிலெல்லாம், இறைவற்கு எடுக்கும் விழாக்க ளைக் குறித்துத் தனித்தனியே அவ்வவ் விழாக்களையும் `காணாதே போதியோ' எனக் குறித்தலின், கண்ணினால் அவர்தம் (இறைவர்) நல்விழாக் காண்டலை இரண்டாவதாகக் குறித்தார்.

மன்னு வார்சடை யாரைமுன்
தொழுதுமட் டிட்ட
என்னும் நற்பதி கத்தினில்
போதியோ என்னும்
அன்ன மெய்த்திரு வாக்கெனும்
அமுதமவ் வங்கம்
துன்ன வந்துவந் துருவமாய்த்
தொக்கதக் குடத்துள். #4107

நிலைபெற்ற நீண்ட சடையையுடைய இறைவ ரைத் தொழுது `மட்டிட்ட' எனத் தொடங்கும் அந்தத் திருப்பதிகத்தில் `போதியோ' என்றுகூறும் அந்த மெய்த் திருவாக்கு என்னும் அமுதமா னது, அக்குடத்தினுள் இருந்த எலும்பினுள்ளே வந்துவந்து பொருந் தப் பெண்ணுருவமாகக் கூடியது.

விளக்கவுரை

`மட்டிட்ட' *(தி.2 ப.47)* எனத் தொடங்கும் பதிகம் சீகாமரப் பண்ணிலமைந்ததாகும். `போதியோ' என்றவிடத் தமைந்த ஓகாரம், `போகமாட்டாய், மீண்டும் வந்து விடுவாய்' எனப் பொருள் படுதலின் எதிர்மறைப் பொருளதாம். ஞானத்தின் திருவுருவாய் நின்றருளும் பிள்ளையாரின் திருவாயில், இவ்வரிய சொல் வருத லின், ஆசிரியர் இதனை `மெய்த் திருவாக்கு' என்றார். அன்றியும் ஓகாரம் பிரணவமாதலும் அறியத்தக்கதாகும். பாடல்தொறும் வரும் அவ்வரிய திருவாக்கு எலும்பினுள் வந்து வந்து பொருந்த அரிய பெண்ணுருவாயது.

ஆன தன்மையில் அத்திருப்
பாட்டினில் அடைவே
போன வாயுவும் வடிவமும்
பொலிவொடு நிரம்பி
ஏனை அக்குடத் தடங்கிமுன்
னிருந்தெழு வதன்முன்
ஞான போனகர் பின்சமண்
பாட்டினை நவில்வார். **#4108**

முன் நான்கு பாட்டுகளில் கூறிய அத்தகைய தன்மையால் `மட்டிட்ட' எனத் தொடங்கிய அத்திருப்பாட்டைத் தொடர்ந்து முறையே பாடுந்தோறும், போன உயிரும் உருவம் பெறும் உறுப்புப் பகுதிகளும் அழகுபட முறையாய் நிரம்பி, வேறாகிய அக்குடத்தில் முன்பு தொக்குக் கூடியிருந்து உரியபடி வெளிப்பட்டு எழுவதன் முன்பு ஞானஅமுது உண்ட சம்பந்தப் பெருமான், பின் முறையாய் அருளும் சமண் பாட்டான பத்தாம் திருப்பாட்டை அருளிச் செய்பவராகி,

விளக்கவுரை

****

தேற்ற மில்சமண் சாக்கியத்
திண்ணர்இச் செய்கை
ஏற்ற தன்றென எடுத்துரைப்
பார்என்ற போது
கோற்றொ டிச்செங்கை தோற்றிடக்
குடமுடைந் தெழுவாள்
போற்று தாமரைப் போதவிழ்ந்
தெழுந்தனள் போன்றாள். **#4109**

முன் நான்கு பாட்டுகளில் கூறிய அத்தகைய தன்மையால் `மட்டிட்ட'

எனத் தொடங்கிய அத்திருப்பாட்டைத் தொடர்ந்து முறையே பாடுந்தோறும், போன உயிரும் உருவம் பெறும் உறுப்புப் பகுதிகளும் அழகுபட முறையாய் நிரம்பி, வேறாகிய அக்குடத்தில் முன்பு தொக்குக் கூடியிருந்து உரியபடி வெளிப்பட்டு எழுவதன் முன்பு ஞானஅமுது உண்ட சம்பந்தப் பெருமான், பின் முறையாய் அருளும் சமண் பாட்டான பத்தாம் திருப்பாட்டை அருளிச் செய்பவராகி,

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

எடுத்த பாட்டினில்வடிவுபெற்
றிருநான்கு திருப்பாட்
டடுத்த அம்முறைப் பன்னிரண்
டாண்டள வணைந்து
தொடுத்த வெஞ்சமண் பாட்டினில்
தோன்றிடக் கண்டு
விடுத்த வேட்கையர் திருக்கடைக்
காப்புமேல் விரித்தார். **#4110**

`மட்டிட்ட' எனத் தொடங்கிய பாட்டில் பாவை யார் வடிவத்தைப் பெற்று, அதன்மேல் அருளிய எட்டுத் திருப்பாட்டு களில் அம்முறையே பன்னிரண்டு ஆண்டுகளுக்குரிய வளர்ச்சியைப் பெற்றுத் தொடுத்த கொடிய சமணர் பாட்டை அருளிய அளவில், குட மானது உடைந்து, பூம்பாவை வெளிப்பட்டுத் தோன்றக் கண்டு, பற்றற்ற பான்மை யுடைய பிள்ளையார், அதன்பின் திருக்கடைக் காப்பை விரித்துக் கூறினார்.

விளக்கவுரை

எடுத்த பாட்டு - இப்பதிகத்தின் முதற் பாடல். அதனைப் பாடிய அளவில், அவ்வென்பும் சாம்பலும் உயிருடன் கூடத் தொடங்கி ஒரு வடிவு பெற்றன. அடுத்து அருளப் பெற்ற எட்டுப் பாடல்களையும், ஒவ்வொன்றாய் அருளப் பெற்ற நிலையில், அவ்வடிவும் வளரப்பெற்று பன்னிரண்டாண்டு நிரம்பப் பெற்ற பூம்பாவை யாயினள். பாம்பு தீண்டி இறந்தது ஏழாவது ஆண்டில் ஆகும். இதுபொழுது பன்னிரண்டு ஆண்டாய் நிரம்பினள் எனவே, அப்பெண் இறந்த ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னையது இந்நிகழ்ச்சி என்பதும் அறியத்தக்கதாகும். திருக்கடைக்காப்பில் இப்பதிகம் பூம்பாவைப் பாட்டு என்றே குறிக்கப் பெற்றுள்ளது.

ஆங்கனம் எழுந்து நின்ற
அணங்கினை நோக்கு வார்கள்
ஈங்கிது காணீர் என்னா

அற்புத மெய்தும் வேலைப்
பாங்குசூழ் தொண்ட ரானோர்
அரகர என்னப் பார்மேல்
ஓங்கிய வோசை யும்பர்
நாட்டினை உற்ற தன்றே. **#4111**

அவ்வாறு தோன்றிய தெய்வ நலம் வாய்ந்த பூம்பாவையாரைப் பார்த்தவர் எல்லாம் `இங்கு இதனைப் பாரீர்' என்று எடுத்துச் சொல்லி அற்புதத்தை அடைந்த போது, அருகில் சூழ்ந்திருந்த திருத்தொண்டர்கள் `அரகர' என்று இவ்வுலகத்தில் முழங்கிய பேரொலி, அப்போதே சென்று வானுலகத்தை அடைந்தது.

தேவரும் முனிவர் தாமும்
திருவருட் சிறப்பு நோக்கிப்
பூவரு விரைகொள் மாரி
பொழிந்தனர் ஒழிந்த மண்ணோர்
யாவரும் இருந்த வண்ணம்
எம்பிரான் கருணை என்றே
மேவிய கைகள் உச்சி
மேற்குவித் திறைஞ்சி வீழ்ந்தார். **#4112**

வானத்தில் நெருங்கிய தேவர்கள் முனிவர்கள் முதலானவர்கள் சிவபெருமானின் திருவருட் சிறப்பை நோக்கித் தெய்வ மரங்களின் மலர்களால் ஆன மணமுடைய மலர் மழையைப் பெய்தனர். முன்கூறப்பட்டவர்கள் ஒழிய, மற்றவர்கள் எல்லோரும் `இங்ஙனம் நிகழ்ந்த இவ்விளைவின் வண்ணம் எம்தலைவரான சிவபெருமானின் திருவருட்கருணையே யாகும்' எனச் சொல்லிப் பொருந்திய கைகளை உச்சிமீது குவித்து வணங்கி, நிலத்தில் விழுந்து தொழுதனர்.

தேவரும் முனிவர் தாமும்
திருவருட் சிறப்பு நோக்கிப்
பூவரு விரைகொள் மாரி
பொழிந்தனர் ஒழிந்த மண்ணோர்
யாவரும் இருந்த வண்ணம்
எம்பிரான் கருணை என்றே
மேவிய கைகள் உச்சி
மேற்குவித் திறைஞ்சி வீழ்ந்தார். **#4113**

அங்கு அப்பூம்பாவையின் வடிவத்தைக் காண்பவரான மற்ற சமயத்தில் உள்ளவர்கள், மிக்க அதிசயம் அடைந்து, இச்செய்தியால் தம்தம் சமயங்களும் மறுத்து ஒதுக்கப்பட அவ்வவரும் தோல்வி அடைந்தவர் போல் ஆயினர். இச்செய்கை எங்குத் தான் உள்ளது? எவ்வாறு

செயல்பட்டது? எனத் துணிய மாட்டாமல் ஐயம் கொண்ட சமணர், தள்ளாடி நிலத்தில் தடுமாறி விழுந்தனர்.

கன்னிதன் வனப்புத் தன்னைக்
கண்களால் முடியக் காணார்
முன்னுறக் கண்டார்க் கெல்லாம்
மொய்கருங் குழலின் பாரம்
மன்னிய வதன செந்தா
மரையின்மேல் கரிய வண்டு
துன்னிய ஒழுங்கு துற்ற
சூழல்போ லிருண்டு தோன்ற. **#4114**

பூம்பாவையாரின் அழகு முழுமையும், தம் கண்களால் முற்றும் காணாதவராகி அவ்வளவில் அமைந்தார்க்கு எல்லாம், தோன்றிய நிலையாவது, செறிந்து வளர்ந்த கருமையான கூந்தலான பளுவைப் பொருந்திய முகமான செந்தாமரையில், கரிய வண்டுக் கூட்டம் நெருங்கி மொய்த்து வரிசையாகச் சூழந்திருந்தாற் போன்று கரிய நிறம் அடைந்து காணப்படவும்,

விளக்கவுரை

செந்தாமரையில் வண்டின் கூட்டம் மொய்த்திருந்தாற் போல, முகத்தின் மேலதாகக் கூந்தல் அமைந்திருந்தது.

பாங்கணி சுரும்பு மொய்த்த
பனிமலர் அளகப் பந்தி
தேங்கமழ் ஆரம் சேரும்
திருநுதல் விளக்கம் நோக்கில்
பூங்கொடிக் கழகின் மாரி
பொழிந்திடப் புயற்கீ ழிட்ட
வாங்கிய வான வில்லின்
வளரொளி வனப்பு வாய்ப்ப. **#4115**

பக்கத்தில் அழகிய வண்டுகள் மொய்த்த குளிர்ந்த பூக்களை அணிந்த கூந்தல் ஒழுங்கின் கீழ், மணம் வீசும் திலகம் அணிந்த நெற்றிப் பொலிவைப் பார்க்கில், பூம்பாவையரான பூங்கொடிக்கு அழகின்மழை பொழியும் பொருட்டாக மேகத்தின் கீழே இட்ட வளைந்த வானவில்லின் மிக்க ஒளி பொருந்திய அழகு பொருந்தவும்,

விளக்கவுரை

கூந்தலைச் சேர்ந்து இருந்த நெற்றி, மேகத்தின் கீழிருந்த வானவில்லைப் போன்றது.

புருவமென் கொடிகள் பண்டு

புரமெரித் தவர்தம் நெற்றி
ஒருவிழி எரியில் நீறா
யருள்பெற உளனாம் காமன்
செருவெழும் தனுவ தொன்றும்
சேமவில் லொன்றும் ஆக
இருபெருஞ் சிலைகள் முன்கொண்
டெழுந்தன போல ஏற்ப. **#4116**

புருவம் என்ற இரண்டு கொடிகள், முற்காலத்தில் முப்புரம் எரித்த சிவபெருமானின் நெற்றித் தனிக்கண்ணில் வந்த தீயினால் சாம்பலாகிப் பின், அருள் பெற உள்ளவனான காமனின் போரில் ஏந்திய வில் ஒன்றும் சேமமாய் வைக்கப்படும் வில் ஒன்றுமாக இருபெரு விற்களின் தன்மையை முன்னே கொண்டு தோன்றி எழுந்தாற்போல் அழகு செய்ய,

விளக்கவுரை

நெற்றியின்கீழ் அமைந்த இருபுருவங்களும், மன்மதன் கைக்கொண்டிருந்த இருபெரு விற்கள் என இருந்தன. `அடையார் முனையகத்து அமர்மேம் படுநர்க்குப் படைவழங்குவதோர் பண்பு உண்டாகலின், உருவிலாளன் ஒருபெருங் கருப்புவில், இருகரும் புருவமாக நிற்க' (சிலப்பதி.- புகார்க். மனையறம் *42 - 44)* என இளங்கோவடிகள் கூறியதும் நினைவு கூர்தற்குரியதாம்.

மண்ணிய மணியின் செய்ய
வளரொளி மேனி யாள்தன்
கண்ணிணை வனப்புக் காணில்
காமரு வதனத் திங்கள்
தண்ணளி விரிந்த சோதி
வெள்ளத்தில் தகைவின் நீள
ஒண்ணிறக் கரிய செய்ய
கயலிரண் டொத்து லாவ. **#4117**

கடைந்தெடுத்த மாணிக்கத்தினும் செம்மையாய ஒளிபொருந்திய மேனியைக் கொண்ட பாவையாரின் இரண்டு கண் களின் அழகானது, அழகுமிக்க முகமான சந்திரனின் குளிர்ந்த கதிர்கள் விரிந்த நிலவொளியான வெள்ளத்தில் தடுக்கப்படாத நீளமுடைய ஒள்ளிய நிறமும் கருமையும் செம்மையும் கலந்த இரண்டு கயல் மீன்களைப் போன்று உலாவ,

விளக்கவுரை

கண்கள் இரண்டும், ஒருநிலா வெள்ளத்தில் இரு கயல்கள் உலாவுவன போலிருந்தன.

பணிவளர் அல்குல் பாவை
நாசியும் பவள வாயும்
நணியபே ரொளியில் தோன்றும்
நலத்தினை நாடு வார்க்கு
மணிநிறக் கோபங் கண்டு
மற்றது வவ்வத் தாழும்
அணிநிறக் காம ரூபி
அனையதாம் அழகு காட்ட. **#4118**

கண்கள் இரண்டும், ஒருநிலா வெள்ளத்தில் இரு கயல்கள் உலாவுவன போலிருந்தன.

விளக்கவுரை

காமரூபி - பச்சோந்தி. வேண்டியவாறு நிறம் கொள்ளும் இயல்பினது. வாய் இந்திர கோபப் பூச்சியையும், மூக்குப் பச்சோந்தி யையும் ஒத்தன. நீண்டிருக்கும் மூக்கின் கீழ் வாய் இருப்பது கவரவரும் பச்சோந்தியின் கீழ்க் கோபப் பூச்சிஇருப்பதைப் போன்றது. வடிவும் நிறமும் பற்றி வந்த உவமை.

இளமயில் அனைய சாயல்
ஏந்திழை குழைகொள் காது
வளமிகு வனப்பி னாலும்
வடிந்ததா ளுடைமை யாலும்
கிளரொளி மகர ஏறு
கெழுமிய தன்மை யாலும்
அளவில்சீர் அனங்கன் வென்றிக்
கொடியிரண் டனைய வாக. **#4119**

இளம் மயிலைப் போன்ற சாயலையுடைய ஏந்திய இழை அணிந்த பூம்பாவையின் காதணி அணிந்த காதுகள், வளமான அழகாலும் வடிந்த காதுத்தண்டை உடைமையாலும் மிக்க ஒளியுடைய ஆண் சுறா மீனானது பொருந்திய தன்மையினாலும் அளவில்லாத சிறப்புடைய மன்மதனின் வெற்றிக்கொடியான மீனக் கொடிகளைப் போன்று விளங்க,

விளக்கவுரை

இளம் மயிலைப் போன்ற சாயலையுடைய ஏந்திய இழை அணிந்த பூம்பாவையின் காதணி அணிந்த காதுகள், வளமான அழகாலும் வடிந்த காதுத்தண்டை உடைமையாலும் மிக்க ஒளியுடைய ஆண் சுறா மீனானது பொருந்திய தன்மையினாலும் அளவில்லாத சிறப்புடைய மன்மதனின் வெற்றிக்கொடியான மீனக் கொடிகளைப் போன்று

விளங்க,

விற்பொலி தரளக் கோவை
விளங்கிய கழுத்து மீது
பொற்பமை வதன மாகும்
பதுமநன் னிதியம் பூத்த
நற்பெரும் பணிலம் என்னும்
நன்னிதி போன்று தோன்றி
அற்பொலி கண்டர் தந்த
அருட்கடை யாளங் காட்ட. **#4120**

ஒளி திகழும் முத்துக் கோவைகள் விளங்கும் கழுத்து, நல்ல பெரிய சங்கம் என்னும் நிதியைப் போன்றும், அதன்மீது விளங்கும் அழகமைந்த முகம் பதும நிதியைப் போன்றும் தோன்றி விளங்குவது, இருள்போலும் கரிய நஞ்சு விளங்கிய கழுத்தையுடைய திருநீலகண்டரான இறைவர் தந்த பெருங் கருணைக்கு அடையாளத் தைக் காட்ட,

விளக்கவுரை

தாமரை முகத்திற்கும், சங்கு கழுத்திற்கும் உவமையாம். ஆசிரியர் சேக்கிழார் இவ்விரண்டையும் முறையே பதும நிதி, சங்க நிதி என உருவகித்து, அவை யிரண்டும் அழகுபெற அமைந்தாற் போலப் பாவையாரின் முகமும் கழுத்தும் விளங்கின என்றார். இவ்விரு நிதியினையும் வழங்கத்தக்கவன் இறைவனே. இச்செல்வியா ரும் அப்பெருமானின் அருளால் தோன்றியவராதலின், அதற்குரிய அடையாளங்களைக் காட்டி விளங்குபவராயினார் என ஆசிரியர் கூறுகின்றார்.

எரியவிழ் காந்தள் மென்பூத்
தலைதொடுத் திசைய வைத்துத்
திரள்பெறச் சுருக்குஞ் செச்சை
மாலையோ தெரியின் வேறு
கருநெடுங் கயற்கண் மங்கை
கைகளால் காந்தி வெள்ளம்
அருகிழிந் தனவோ என்னும்
அதிசயம் வடிவில் தோன்ற. **#4121**

கரிய நீண்ட கயல்மீன் போன்ற கண்களை உடைய பாவையாரின் கைகளைக் காணும்போது, தீயைப் போல் மலர்ந்த மெல்லிய செங்காந்தள் பூக்களைத் தலைத்தலை பொருந்தத் தொடுத்துப் பொருந்துமாறு வைத்து அதன் திரட்சி வரவரச் சுருங்கி வருமாறு அமைந்த வெட்சிப் பூ மாலையோ, அதுவன்றி வேறொரு வகையால் ஆராயுமிடத்து உடலில் உள்ள மேனியின் ஒளி மிகுதி இரு பக்கங்களிலும் மிகுந்து வழிந்தனவோ எனும் அதிசயம் தோன்ற அக்கைகள் அமைய,

விளக்கவுரை

தோளினிடமாகத் தோன்றிய இருகைகளும் மேலே பருத்தும், வரவரச் சிறுத்தும் இருக்கும். அதற்குக் காந்தட் பூக்களைத் தலையில் கொண்டு, கீழ் வரவர வெட்சிப் பூவைத் தொடுத்துக் கட்டிய மாலையை உவமை கூறினார். அக்கைகளின் ஒளிக்கு உடலின் ஒளி இரு மருங்கும் வழிந்தொழுகியது போல்வது என்றார். இவ்வுவமை யழகுகள் எல்லாம் தனித்தன்மை வாய்ந்தன.

ஏர்கெழு மார்பிற் பொங்கும்
ஏந்திளங் கொங்கை நாகக்
கார்கெழு விடத்தை நீக்குங்
கவுணியர் தலைவர் நோக்கால்
ஆர்திரு வருளிற் பூரித்
தடங்கிய அமுத கும்பச்
சீர்கெழு முகிழைக் காட்டுஞ்
செவ்வியில் திகழ்ந்து தோன்ற. **#4122**

அழகு பொருந்திய மார்பில் பெருகி எழுகின்ற மார்பகங்கள், பாம்பின் கரிய நஞ்சைப் போக்கும் கவுணியர் தலைவரான ஞானசம்பந்தப் பெருமானின் நோக்கத்தால் பொருந்திய திருவருள் என்னும் அமுதத்தால் நிறையப் பெற்று, அமைந்த கும்பத் தினை மேல் மூடிய முகிழ் போன்ற தன்மையில் விளங்கித் தோன்ற,

விளக்கவுரை

`போகம் ஆர்த்த பூண்முலையாள்' *(தி.1 ப.49 பா.1)* என அன்னையின் மார்பகங்கள் போற்றப்படுதல் போல, இப்பாவையின் மார்பகங்களும் திருவருள் ஆர்த்த பூண் முலையாக விளங்குகின்றன என ஆசிரியர் திருவுள்ளம் பற்றுகின்றார்.

காமவேள் என்னும் வேடன்
உந்தியிற் கரந்து கொங்கை
நேமியம் புட்கள் தம்மை

யகப்பட நேரி தாய
தாமநீள் கண்ணி சேர்த்த
சலாகைதூக் கியதே போலும்
வாமமே கலைசூழ் வல்லி
மருங்கின்மேல் உரோம வல்லி. **#4123**

அழகிய மேகலை என்ற அணியை அணிந்த கொடியைப் போன்ற பூம்பாவையாரின் இடையை அடுத்த கொப்பூழி னின்று தொடங்கி மேல் எழும் மயிர் ஒழுங்கானது, காமன் என்ற வேடன் கொப்பூழுக்குள் மறைந்திருந்து மேலே உள்ள கொங்கைகள் என்ற அழகிய சக்கரவாளப் பறவைகளைப் பிடிப்பதற்கு நேரான கயிற்றில் நீண்ட கண்ணிகளைக் கோத்த ஓர் அம்பினை உயர்த்தியது போல விளங்கிட,

விளக்கவுரை

மார்பகங்களுக்குச் சக்கரவாளப் பறவைகளும், உந்தியிலிருந்து மேற்செல்லும் மயிர் ஒழுங்கிற்கு மன்மதனின் அம்பும் உவமையாயின.

பிணியவிழ் மலர்மென் கூந்தல்
பெண்ணமு தனையாள் செம்பொன்
அணிவளர் அல்குல் தங்கள்
அரவுசெய் பிழையால் அஞ்சி
மணிகிளர் காஞ்சி சூழ்ந்து
வனப்புடை அல்கு லாகிப்
பணியுல காளும் சேடன்
பணம்விரித் தடைதல் காட்ட. **#4124**

கட்டவிழ்ந்த மலர்களைச் சூடிய மென்மையான கூந்தலையுடைய பெண்களுள் அமுதத்தை ஒத்த பூம்பாவையாரது செம்பொன் அணிகளை அணிந்த அல்குலானது, நாக உலகத்தை ஆளும் ஆதிசேடன் தம் உறவாகியதொரு பாம்பு, பூம்பாவையைத் தீண்டிய பிழையின் பொருட்டு, அச்சம் கொண்டு, செம்மணிகள் விளங்கும் காஞ்சி என்னும் எட்டுக் கோவை வடத்தால் சூழப்பெற்று அழகுடைய அல்குலாகிப் படத்தை விரித்துச் சேர்கின்ற தோற்றத்தைக் காட்ட,

விளக்கவுரை

: அல்குலுக்கு ஆதிசேடனின் படத்தை உவமை காட்டிய ஆசிரியர், தற்குறிப்பேற்றமாக அதற்கு ஒரு காரணமும் கூறினர்.

வரிமயில் அனைய சாயல்
மங்கைபொற் குறங்கின் மாமை
கரியிளம் பிடிக்கை வென்று
கதலிமென் தண்டு காட்டத்

தெரிவுறு மவர்க்கு மென்மைச்
செழுமுழந் தாளின் செவ்வி
புரிவுறு பொற்பந் தென்னப்
பொலிந்தொளி விளங்கிப் பொங்க. **#4125**

வரி பொருந்திய மயில் போன்ற சாயலைக் கொண்ட பாவையாரின் பொன் போன்ற தொடைகளின் அழகானது, இளம் பெண் யானையின் துதிக்கையின் அழகை வெற்றி கொண்டு, வாழையின் மெல்லிய தண்டின் அழகையும் புலப்படுத்திக் காட்டக் காண்பவர்க்கு மென்மையுடைய செழுமையான முழந்தாளின் அழகானது கைத்திறம் அமைந்த பொன்னால் ஆன பந்தைப் போல விளங்கி ஒளி பொருந்திப் பெருக,

விளக்கவுரை

தொடைக்குப் பெண்யானையின் துதிக்கையும், வாழைத்தண்டும் உவமையாதல், `ஈர்ந்து நிலம் தோயும் இரும்பிடித் தடக்கையிற், சேர்ந்துடன் செறிந்த குறங்கு, குறங்கென மால்வரை ஒழுகிய வாழை' *(தண்டியலங்காரம்)* எனவரும் வாக்காலும் அறியலாம்.

பூவலர் நறுமென் கூந்தல்
பொற்கொடி கணைக்கால் காமன்
ஆவநா ழிகையே போலும்
அழகினின் மேன்மை எய்த
மேவிய செம்பொன் தட்டின்
வனப்பினை மீதிட் டென்றும்
ஓவியர்க் கெழுத ஒண்ணாப்
பரட்டொளி ஒளிர்வுற் றோங்க. **#4126**

மலர்கள் மலர்வதற்கு இடமான மென்மையான கூந்தலையுடைய பொற்கொடி போன்ற பாவையாரின் கணைக்கால், காமனின் அம்பறாத் துணியே போன்ற அழகால், மேன்மை பொருந்த, பொருந்திய செம்பொன்னால் ஆன துலாத் தட்டின் அழகை வெற்றி கொண்டு, எக்காலத்தும் சித்திரம் தீட்டுவோர்க்கும் எழுத இயலாத கணைக்காலின் ஒளி விளங்கித் தோன்ற,

விளக்கவுரை

கணைக்காலிற்குக் காமனின் அம்புப் புட்டிலும் தராசுத் தட்டும் உவமையாகின்றன.

கற்பகம் ஈன்ற செவ்விக்
காமரு பவளச் சோதிப்
பொற்றிரள் வயிரப் பத்திப்

பூந்துணர் மலர்ந்த போலும்
நற்பதம் பொலிவு காட்ட
ஞாலமும் விசும்பும் எல்லாம்
அற்புதம் எய்தத் தோன்றி
அழகினுக் கணியாய் நின்றாள். **#4127**

கற்பக மரம் தந்த சிவந்த அழகிய பவளத்தின் ஒளி வீசும் பொன் திரளுடன் வயிர வரிசைகளையுடைய மலர்க் கொத் துகள் மலர்ந்தவை போன்ற அழகை நல்ல அடிகள் புலப்படுத்த, இம் மண்ணுலகமும் விண்ணுலகமும் மற்ற எல்லா உலகங்களும் அற்புதம் பொருந்தத் தோன்றி அழகுக்கு அழகு செய்யும் பொருளாக நின்றார்.

விளக்கவுரை

இந்நூலுள் முடிமுதல் அடிவரை வருணிக்கப்பட்ட பாவை இப்பூம்பாவையாரே யாவர். காரணம், கண்ணுதல் கருணை வெள்ளத்தால் தோன்றியமையே யாகும். இப் பதினான்கு பாடல்களும் ஒருமுடிபின.

எண்ணில்ஆண் டெய்தும் வேதாப்
படைத்தவள் எழிலின் வெள்ளம்
நண்ணுநான் முகத்தால் கண்டான்
அவளினும் நல்லாள் தன்பால்
புண்ணியப் பதினா றாண்டு
பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம்
ஆயிர முகத்தாற் கண்டார். **#4128**

அளவற்ற ஆண்டுகள் கழிந்த நான்முகன், தான் படைத்த திலோத்தமை என்ற மங்கையின் அழகின் வண்ணங்களைத் தனக்குள்ள நான்கு முகங்களால் கண்டு மகிழ்ந்தான். அவளை விட மேலான நலங்கள் பலவும் அமைந்த பூம்பாவையாரிடம், பதினாறு ஆண்டு எனக் கணக்கிடத்தகும் சீகாழித் தலைவராம் ஞானசம்பந்தர், நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானின் அருட் பெருக்கையே ஆயிர முகங்களால் காண்பார் ஆயினார்.

விளக்கவுரை

நான்முகனுக்கும் காழிச்செல்வருக்கும் உளவாகும் இடையீடு பெரிதாமாற்றை, ஆசிரியர் சேக்கிழார் இப்பாடலில் காட்டிப் பெரிதும் மகிழ்விக்கின்றார்.
நான்முகன், எண்ணில் ஆண்டு எய்தியவன். வயது முதிர்ந்த வன். தம்மால் படைக்கப்பட்டவள் திலோத்தமை. மகண்மை முறையி னள்.

அத்திலோத்தமையின் அழகைத் தன் நான்முகங்களாலும் கண்டு, அவளை விரும்பினன்.
பிள்ளையார், பதினாறு ஆண்டு வயதை நெருங்கும் மிக இளைஞர். அவர்தம் திருவருள் திறத்தால் தோற்றுவிக்கப்பட்டவர் பூம் பாவையார். சிவநேசர் மகளாயிருந்த நிலையில் இவருக்கென உரிமை யாக்கப் பெற்றவர். திருவருள் வயத்தால் தம்மால் தோற்றுவிக்கப்பட்ட மகண்மை முறையையும், திருவருள் திறத்தையுமே நினைந்து தம் ஆயிரம் திருமுகங்களானும் அத்திருவருள் பொலிவாகவே கண்டார். இதற்குக் காரணம் என்ன? நான்முகன் படைப்புத் தொழிற்கு உரியவனாயினும், கலையறிவையே (வேதா) பெற்றவன். காழிப் பிள்ளையாரோ அம்மையாரின் பாலமுதத்தோடு சிவஞானமும் குழைத்து ஊட்டப் பெற்றவர். ஆதலின் அந்நான்முகன் பார்வை யினும் இவர் பார்வை வேறுபட்டும் உயர்ந்தும் இருப்பதாயிற்று. `நூலுணர்வு உணரா நுண்ணியோன் காண்க' *(தி.8 ப.3 வ.49)*, `நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக' *(தி.11 ப.4 பா.33)* என்றல் தொடக்கத்தனவாய திருவாக்குகள் எள்ளளவும் மறக்கப் போமோ?

இன்னணம் விளங்கிய ஏர்கொள் சாயலாள்
தன்னைமுன் கண்ணுறக் கண்ட தாதையார்
பொன்னணி மாளிகைப் புகலி வேந்தர்தாள்
சென்னியிற் பொருந்தமுன் சென்று வீழ்ந்தனர். **#4129**

இங்ஙனம் விளங்கிய அழகுடைய மென்மை யான சாயலையுடைய பூம்பாவையைக் கண்முன் பார்த்த தந்தையா ராகிய சிவநேசர், பொன்னால் அணியப்பட்ட மாளிகைகளை உடைய சீகாழித் தலைவரான ஞானசம்பந்தரின் திருவடிகளைத் தம் தலையில் பொருந்தும்படி முன்சென்று வீழ்ந்து வணங்கினார்.

விளக்கவுரை

****

அணங்கினும் மேம்படும் அன்னம் அன்னவள்
பணம்புரி யரவரைப் பரமர் முன்பணிந்
திணங்கிய முகில்மதில் சண்பை யேந்தலை
வணங்கியே நின்றனள் மண்ணு ளோர்தொழ. **#4130**

: திருமகளினும் மேன்மையுடையவராய் அன் னம் போன்றவரான பூம்பாவையார், படம் பொருந்திய ஐந்து தலைப் பாம்பை அரையில் அணிந்த கபாலீச்சுரரை முன் வணங்கி, அதைக் கண்ட உலகத்தவர் தொழுமாறு, மேகம் தவழும் மதில்களை உடைய சீகாழித் தலைவரான ஞானசம்பந்தரை வணங்கி நின்றார்.

விளக்கவுரை

பூம்பாவையார், முன்னர் இறைவனை வணங்கிப் பின் னர்ப் பிள்ளையாரை வணங்கி நின்றது உலகத்தவரும் ஏற்றுப் போற்று தற்குரியதாகும்.

சீர்கெழு சிவநேசர் தம்மை முன்னமே
கார்கெழு சோலைசூழ் காழி மன்னவர்
ஏர்கெழு சிறப்பில்நும் மகளைக் கொண்டினிப்
பார்கெழு மனையினிற் படர்மின் என்றலும். **#4131**

சிறப்புப் பொருந்திய சிவநேசரை, முன்னம் மேகம் சூழ்ந்த சோலைகள் பெருகிய சீகாழித் தலைவர், `அழகால் மிகச் சிறப்புடைய உம்மகளை உலகில் ஓங்கி விளங்கும் இல்லத்துக்கு இனி அழைத்துச் செல்வீர்' என்று அருளிச் செய்யவும்,

விளக்கவுரை

****

பெருகிய அருள்பெறும் வணிகர் பிள்ளையார்
மருவுதா மரையடி வணங்கிப் போற்றிநின்
றருமையால் அடியனேன் பெற்ற பாவையைத்
திருமணம் புணர்ந்தருள் செய்யும் என்றலும். **#4132**

பெருகிய திருவருளைப் பெற்ற வணிகரான சிவநேசர், ஞானசம்பந்தரின் தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்கிப் போற்றி நின்று, `அடியேன் அருமையாய்ப் பெற்றெடுத்த இப்பூம்பாவைப் பெண்ணை மணம் கொண்டருளும்' என வேண்டிக் கொள்ளவும்.

விளக்கவுரை

****

மற்றவர் தமக்குவண் புகலி வாணர்நீர்
பெற்றபெண் விடத்தினால் வீந்த பின்னையான்
கற்றைவார் சடையவர் கருணை காண்வர
உற்பவிப் பித்தலால் உரைத காதென. **#4133**

அவ்வாறு வேண்டிக் கொண்ட வணிகரான சிவநேசரைப் பார்த்து, வளம் பொருந்திய சீகாழிச் செல்வரான ஞான சம்பந்தர், `நீவிர் பெற்ற பெண் நஞ்சினால் இறந்த பின்பு, தொகுதியான நீண்ட சடையையுடைய கபாலீச்சுரரின் அருள் விளங்க மீளவும் நான் உயிர் பெறச் செய்தலால், நீவிர் சொல்லும் அச் சொல் பொருந்தாது!' என்று கூறியருள,

விளக்கவுரை

மகளாராகிய நிலையில் மணக்கச் சொல்லுதல் தகாது என்றார். கோட்புலியார் மகளாரைச் சுந்தரர் மகண்மையாகக் கொண் டதையும்

எண்ணுக.

வணிகருஞ் சுற்றமும் மயங்கிப் பிள்ளையார்
அணிமல ரடியில்வீழ்ந் தரற்ற ஆங்கவர்
தணிவில்நீள் பெருந்துயர் தணிய வேதநூல்
துணிவினை யருள்செய்தார் தூய வாய்மையார். **#4134**

வணிகரான சிவநேசரும் அவருடைய சுற்றத் தவரும் அதைக் கேட்டு மயங்கி, ஞானசம்பந்தரின் அழகிய மலரடிக ளில் விழுந்து பலவும் கூறிக் குறையிரந்து அழுது புலம்பக் கண்டு, அப்போது அவர்களின் ஆற்ற இயலாத நீண்ட பெருந்துன்பம் தணியு மாறு, தூய்மையான வாய்மையுடைய ஞானசம்பந்தர், மறை நூல் களில் விதிக்கப்பட்டிருக்கும் முறைமைகளை எடுத்துக் கூறித் தேற்றியருளினார்.

விளக்கவுரை

மறைநூல் முறைமையாவது மகளாராகக் கருதத் தக்கவரை, மனைவியாராக ஏற்றல் முறைமையும் அறனும் அன்று என் பதும், `அன்றே அனாதி அமைத்தபடி யல்லாது ஒன்று, இன்றே புதி தாய் இயையுமோ - என்றும், சலியாது இயற்றுவான் தன்னையே நோக்கி, மெலியாது இருந்து விடு' *(சிவபோகசாரம், 95)* என்பதும் போன்ற நியதிகளாகும்.

தெள்ளுநீ தியின்முறை கேட்ட சீர்கிளை
வெள்ளமும் வணிகரும் வேட்கை நீத்திடப்
பள்ளநீர்ச் செலவெனப் பரமர் கோயிலின்
உள்ளெழுந் தருளினார் உடைய பிள்ளையார். **#4135**

தெளிந்த நீதி நூல்களின் ஒழுகலாற்றைக் கேட்ட சிறப்புடைய சுற்றத்தவரான பெருங்கூட்டமும், சிவநேசரும் தாம் கொண்ட விருப்பம் நீங்கிட, ஞானசம்பந்தரும் மேட்டுநிலத்தினின்றும் பள்ளத்திற்குப் பாயும் நீரென விரைவுடன் கோபுர வாயிலினின்றும் இறைவரின் திருக்கோயிலுக்குள் எழுந்தருளினார்.

விளக்கவுரை

இறைவரை ஆர்வமிகுதியோடு விரைந்து சென்று வணங்குதற்காம் உள்ளமிகுதிக்கு, பள்ளநீர்ச் செலவினை உவமை காட்டியது மரபுவழிவரும் உவமையாகும். `பள்ளந்தாழ் உறுபுனலின்' *(தி.8 ப.5 பா.25)* எனவரும் திருவாசகத் திருவாக்கும் காண்க.

பான்மையால் வணிகரும் பாவை தன்மணம்
ஏனையோர்க் கிசைகிலேன் என்று கொண்டுபோய்
வானுயர் கன்னிமா டத்து வைத்தனர்

தேனமர் கோதையும் சிவத்தை மேவினாள். **#4136**

பழவினை வயத்தால் சிவநேசரும், `பூம்பாவை யாரை மற்றவர் எவர்க்கும் மணம் செய்விக்க நான் சம்மதியேன்' என எண்ணித் துணிந்து, வான் அளாவ உயர்ந்த அவரது கன்னிமாடத்தில் வைத்து, அங்கு வாழச் செய்தார். வண்டுகள் மொய்த்தற்கு இடமான மாலையை அணிந்த பூம்பாவையாரும் சிவபெருமானை அடைந்தார்.

விளக்கவுரை

சடங்கவியார் மகளார், திலகவதியார் ஆகியோர்களின் நிறைவு நிலையும் ஈண்டு ஒப்பிட்டுணர்தற்குரியவாம்.

தேவர்பிரான் அமர்ந்தருளும்
திருக்கபா லீச்சரத்து
மேவியஞா னத்தலைவர்
விரிஞ்சன்முதல் எவ்வுயிர்க்கும்
காவலனார் பெருங்கருணை
கைதந்த படிபோற்றிப்
பாவலர்செந் தமிழ்பாடிப்
பன்முறையும் பணிந்தெழுவார். **#4137**

தேவர்களின் தலைவரான சிவபெருமான் விரும்பி வீற்றிருக்கும் திருக்கபாலீச்சுரத்தினுள் எழுந்தருளிய ஞான சம்பந்தர், நான்முகன் முதலான எல்லா உயிர்களுக்கும் காவலரான இறைவரின் பெருங்கருணை, கைகொடுத்தருளியதைப் போற்றிப் பாக்களாக மலர்ந்த செந்தமிழைப் பாடிப் பன்முறையும் பணிந்து எழுவாராய்,

விளக்கவுரை

முன் அருளிய பதிகம் *(தி.2 ப.47)* கிடைத்தது போல, இதுபொழுது அருளிய பதிகம் கிடைத்திலது; நம்மனோரின் நற்றவக் குறைவே.

தொழுதுபுறம் போந்தருளித்
தொண்டர்குழாம் புடைசூழப்
பழுதில்புகழ்த் திருமயிலைப்
பதியில்அமர்ந் தருளுநாள்
முழுதுலகுந் தருமிறைவர்
முதல்தானம் பலஇறைஞ்ச
அழுதுலகை வாழ்வித்தார்
அப்பதியின் மருங்ககல்வார். **#4138**

ஞானசம்பந்தர் தொழுது வெளியே வந்து, திருத்தொண்டர்களின் கூட்டம் அருகில் சூழ்ந்துவர, குற்றம் இல்லாத புகழையுடைய அம்மயிலைத் திருப்பதியில் விரும்பித் தங்கி இருந் தருளும் நாள்களில்,

எல்லா உலகங்களையும் தந்து காத்தருளும் இறை வர் எழுந்தருளும் முதன்மையுடைய பதிகள் பலவற்றையும் சென்று வணங்குவதற்காக, அழுது உலகை வாழ்வித்தவரான ஞானசம்பந்தர், அப்பதியினின்றும் நீங்கிச் செல்வாராய்,

விளக்கவுரை
****

திருத்தொண்டர் அங்குள்ளார்
விடைகொள்ளச் சிவநேசர்
வருத்தம்அகன் றிடமதுர
மொழியருளி விடைகொடுத்து
நிருத்தர்உறை பிறபதிகள்
வணங்கிப்போய் நிறைகாதல்
அருத்தியொடும் திருவான்மி
யூர்பணிய அணைவுற்றார். **#4139**

அங்கு இருக்கும் திருத்தொண்டர்கள் விடை பெற்றுக் கொள்ளச் சிவநேசரின் வருத்தம் நீங்கும்படி அவருக்கு இனிய சொற்களைச் சொல்லி விடைதந்து, சிவபெருமான் வீற்றிருக் கும் பிறபதிகளையும் வணங்கிச் சென்று, நிறைந்த காதலால் விளைந்த அன்புடனே திருவான்மியூரை வணங்கச் செல்வாரானார்.

விளக்கவுரை
பிறபதிகளாவன திருமயிலைக்கும் திருவான்மியூருக் கும் இடைப்பட்ட புலியூர், கோட(கன்)ம்பாக்கம், வெளிச்சேரி, முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார்.

திருவான்மி யூர்மன்னும்
திருத்தொண்டர் சிறப்பெதிர
வருவார்மங் கலஅணிகள்
மறுகுநிரைத் தெதிர்கொள்ள
அருகாக இழிந்தருளி
அவர்வணங்கத் தொழுதன்பு
தருவார்தங் கோயில்மணித்
தடநெடுங்கோ புரம்சார்ந்தார். **#4140**

திருவான்மியூரில் நிலைபெற்று வாழ்கின்ற தொண்டர்கள் சிறப்பாக வரவேற்க வருபவர்களாய், மங்கலம் பொருந் திய அணிகளைத் தெருவில் நிரல்பட அமைத்து, எதிர்கொண்டு அருகே வந்த பொழுது, முத்துப் பல்லக்கினின்றும் இறங்கி அருளி, அத்தொண்டர்கள் தம்மை வணங்கத் தாமும் அவர்களை வணங்கி, அன்பை அளித்து

ஆட்கொள்கின்ற இறைவரின் திருக்கோயிலின் அழகிய பெரிய நீண்ட கோபுரத்தைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

****

மிக்குயர்ந்த கோபுரத்தை
வணங்கிவியன் திருமுன்றில்
புக்கருளிக் கோயிலினைப்
புடைவலங்கொண் டுள்ளணைந்து
கொக்கிறகு மதிக்கொழுந்தும்
குளிர்புனலும் ஒளிர்கின்ற
செக்கர்நிகர் சடைமுடியார்
சேவடியின் கீழ்த்தாழ்ந்தார். **#4141**

மிகவும் உயர்ந்த கோபுரத்தை வணங்கி, பெரிய முற்றத்தினுள் புகுந்து, கோயிலை வலமாக வந்து, உட்சென்று கொக்கு இறகும் பிறைச் சந்திரனும் கங்கையும் விளங்கும் அந்தி மாலையின் சிவப்புப் போன்ற சடையையுடைய இறைவரின் திருவடிகளில் விழுந்து வணங்கினார்.

விளக்கவுரை

****

தாழ்ந்துபல முறைபணிந்து
தம்பிரான் முன்னின்று
வாழ்ந்துகளி வரப்பிறவி
மருந்தான பெருந்தகையைச்
சூழ்ந்தஇசைத் திருப்பதிகச்
சொன்மாலை வினாவுரையால்
வீழ்ந்தபெருங் காதலுடன்
சாத்திமிக இன்புற்றார். **#4142**

நிலத்தில் விழுந்து பன்முறையும் வணங்கி, முன்நின்று, வாழ்வு பெற்று, மகிழ்ச்சி பொருந்த, பிறவி நோய்க்கு மருந் தான பெருந்தகைமை மிக்க இறைவரை உளங்கொண்டவாறு, பண் பொருந்திய திருப்பதிகமான வினாவுரையாய் வரும் சொல்மாலையை மிக்க விருப்புடனே பாடி இன்பம் அடைந்தார்.

விளக்கவுரை

இப்பதியில் இதுபொழுது அருளியது, `கரையுலாங் கடலில்' *(தி.2 ப.4)* எனத் தொடங்கும் இந்தளப் பண்ணில் அமைந்த பதிகமாகும். இப்பதிகப் பாடல்கள் முழுதும் இறைவனிடத்துக் கேட்கும் வினாவுரையாக அமைந்துள்ளன.

பரவிவரும் ஆனந்தம்
நிறைந்ததுளி கண்பனிப்ப
விரவுமயிர்ப் புளகங்கள்
மிசைவிளங்கப் புறத்தணைவுற்
றரவநெடுந் திரைவேலை
அணிவான்மி யூர்அதனுள்
சிரபுரத்துப் புரவலனார்
சிலநாள்அங் கினிதமர்ந்தார். **#4143**

: சீகாழித் தலைவர், பரவி வருகின்ற ஆனந்தக் கண்ணீர் விழிகளினின்றும் துளித்துப் பெருகவும், மேனி முழுதும் மயிர்க் கூச்செறியவும் பெற்று, கோயிலின் வெளியே வந்து, ஒலி பொருந்திய நீண்ட அலைகளையுடைய கடற்கரையில் அமைந்த அழகிய திருவான்மியூரில், சில நாள்கள் இனிதாய்த் தங்கியருந்தார்.

விளக்கவுரை

****

அங்கண்அமர் வார்உலகா
ளுடையாரை அருந்தமிழின்
பொங்கும்இசைப் பதிகங்கள்
பலபோற்றிப் போந்தருளிக்
கங்கையணி மணிமுடியார்
பதிபலவும் கலந்திறைஞ்சிச்
செங்கண்விடைக் கொடியார்தம்
இடைச்சுரத்தைச் சேர்வுற்றார். **#4144**

அவ்விடத்தில் தங்கியிருப்பவரான ஞானசம் பந்தர், உலகங்களுக்கெல்லாம் தலைவராகிய இறைவரை, அரிய தமிழில் மேன்மேல் வாழும் இசையையுடைய பதிகங்கள் பலவற்றால் போற்றி, அங்கிருந்து நீங்கிக் கங்கையை அணிந்த அழகிய சடையை உடைய இறைவரின் பதிகள் பலவற்றிற்கும் அங்கங்கும் சென்று சேர்ந்து, வணங்கி சிவந்த கண்ணையுடைய விடையைக் கொடியாக உடைய சிவபெருமானின் திருவிடைச்சுரத்தை அடைந்தார்.

விளக்கவுரை

`பதிகங்கள் பலபோற்றி' என்றாரேனும், `விரையார் கொன்றையினாய்' *(தி.3 ப.55)* எனத் தொடங்கும் கௌசிகப் பண்ணிலமைந்த ஒருபதிகமே கிடைத்துள்ளது. பதிபலவும் என்பன, குன்றத்தூர், திருநெடுங்குன்றம், திருக்கச்சூர், ஆலக்கோயில், மாடன் பாக்கம், பல்லவபுரம், திருச்சுரம், திருச்சிவப்பேறூர், கோவூர், மாங்காடு, சோமங்கலம், மணிமங்கலம்,

படூர், பூஞ்சேரி, திருக்கச்சூர், வயலூர், வீராபுரம் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார்.

சென்னியிள மதியணிந்தார்
மருவுதிரு இடைச்சுரத்து
மன்னுதிருத் தொண்டர்குழாம்
எதிர்கொள்ள வந்தருளி
நன்நெடுங்கோ புரம்இறைஞ்சி
உட்புகுந்து நற்கோயில்
தன்னைவலங் கொண்டணைந்தார்
தம்பிரான் திருமுன்பு. **#4145**

திருச்சடையில் பிறையை அணிந்த இறைவர் வீற்றிருக்கின்ற திருவிடைச்சுரத்தில், நிலைபெற வாழ்கின்ற திருத் தொண்டர் கூட்டம் எதிர்கொள்ளச் சென்றருளி, நன்மை தரும் நீண்ட கோபுரத்தை வணங்கி, உள்ளே புகுந்து, கோயிலை வலம் வந்து, தம் இறைவர் திருமுன்பு வந்தணைந்தார்.

விளக்கவுரை

****

கண்டபொழு தேகலந்த
காதலால் கைதலைமேல்
கொண்டுதலம் உறவிழுந்து
குலவுபெரு மகிழ்ச்சியுடன்
மண்டியபே ரன்புருகி
மயிர்முகிழ்ப்ப வணங்கிஎழுந்
தண்டர்பிரான் திருமேனி
வண்ணங்கண்டு அதிசயித்தார். **#4146**

: தம் இறைவரைக் கண்ட பொழுதே, மனம் கலந்து எழுந்த பெருவிருப்பத்தால், கைகளைத் தலைமீது கொண்டு, நிலத்தில் விழுந்து பொருந்திய பெருமகிழ்ச்சியுடன் பெருகிய பேரன்பினால் உள்ளம் உருகி, மெய்ம்மயிர் சிலிர்க்க வணங்கி, எழுந்து, தேவ தேவரான சிவபெருமானின் திருமேனியின் வண்ணத்தைப் பார்த்து வியப்படைந்தார்.

விளக்கவுரை

****

இருந்தஇடைச் சுரம்மேவும்
இவர்வண்ணம் என்னேயென்
றருந்தமிழின் திருப்பதிகத்

தலர்மாலை கொடுபரவித்
திருந்துமனங் கரைந்துருகத்
திருக்கடைக்காப் புச்சாத்திப்
பெருந்தனிவாழ் வினைப்பெற்றார்
பேருலகின் பேறானார். **#4147**

உலகத்தவரின் பெரும்பேறாகத் தோன்றிய ஞானசம்பந்தர், சாரல் விளங்க இருந்த அத் திருவிடைச்சுரத்தில் வீற்றி ருக்கும், `பெருமானின் வண்ணம்தான் என்ன அதிசயம்' என்று அரிய தமிழால் ஆன இனிய திருப்பதிக மலர் மாலையால் போற்றி, உள்ளம் கரைந்து உருகத் திருக்கடைக்காப்புப் பாடியருளி, பெரிய ஒப்பில்லாத சிவானந்தப் பெருவாழ்வினில் திளைத்து நின்றார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகம் `வரிவளர் அவிரொளி'*(தி.1 ப.78)* எனத் தொடங்கும் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த பதிகமாகும். பாடல் தொறும் `இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே' எனவருவதையே ஆசிரியர் இங்குக் குறித்துக் காட்டுகின்றார்.

நிறைந்தாரா வேட்கையினால்
நின்றிறைஞ்சிப் புறம்போந்தங்
குறைந்தருளிப் பணிகின்றார்
உமைபாகர் அருள்பெற்றுச்
சிறந்ததிருத் தொண்டருடன்
எழுந்தருளிச் செந்துருத்தி
அறந்தளிகள் பயில்சாரல்
திருக்கழுக்குன் றினைஅணைந்தார். **#4148**

சிவானந்தப் பெருவாழ்வில் நிறைவுற்று ஆராத வேட்கையினால் நீண்ட நேரம் நின்று வணங்கி, வெளியே வந்து, அப் பதியில் தங்கியிருந்து பணிந்து வரும் பிள்ளையார், அவ்விறைவரின் அருள்விடை பெற்றுக் கொண்டு, சிறந்த திருத்தொண்டர்களுடன் எழுந்தருளிச் சென்று, செந்துருத்தி என்ற பண்ணைப் பாடி, வண்டுகள் மொய்க்கின்ற சாரலையுடைய திருக்கழுக்குன்றத்தை அடைந்தருளினார்.

விளக்கவுரை

செந்துருத்திப் பண்ணில் அமைந்த பதிகத்தைப் பாடிய வாறு, திருக்கழுக்குன்றத்தினை அடைந்துள்ளார். இப்பதிகம் கிடைத் திலது. செந்துருத்திப் பண்ணில் அமைந்த `மீளா அடிமை' *(தி.7 ப.95)* எனத் தொடங்கும் சுந்தரரின் திருப்பதிகம் ஒன்றே இதுபொழுது கிடைத்துள்ளது.

சென்றணையும் பொழுதின்கண்
திருத்தொண்டர் எதிர்கொள்ளப்
பொன்திகழும் மணிச்சிவிகை
இழிந்தருளி உடன்போந்து
மன்றல்விரி நறுஞ்சோலைத்
திருமலையை வலங்கொண்டு
மின்தயங்கும் சடையாரை
விருப்பினுடன் பணிகின்றார். #4149

திருக்கழுக்குன்றத்தில் சென்று அடையும் போதில், அப்பகுதியில் வாழ்கின்ற தொண்டர்கள் வந்து வரவேற்க, பொன் விளங்கும் முத்துச் சிவிகையினின்றும் கீழே இறங்கி, அவர் களுடன் சேர்ந்து, மணம் விரிந்து கமழும் நல்ல மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த அம்மலையை வலமாக வந்து, மின்போல் விளங் கும் சடையையுடைய இறைவரை விருப்பத்தோடு பணிபவராய்,

விளக்கவுரை

****

திருக்கழுக்குன் றத்தமர்ந்த
செங்கனகத் தனிக்குன்றைப்
பெருக்கவளர் காதலினால்
பணிந்தெழுந்து பேராத
கருத்தினுடன் காதல்செயுங்
கோயில்கழுக் குன்றென்று
திருப்பதிகம் புனைந்தருளிச்
சிந்தைநிறை மகிழ்வுற்றார். #4150

அத் திருக்கழுக்குன்றத்தின் மீது விரும்பி வீற்றிருந்தருளும் ஒப்பில்லாத செம்பொன்குன்றம் போன்ற மறைக ளின் தலைவரான சிவபெருமானை, வளரும் விருப்பத்தினால் வணங்கி, எழுந்து, ஒன்றிய கருத்துடன் காதல் செய்யும் கோயில் கழுக் குன்று என்ற நிறைவுடைய திருப்பதிகத்தைப் பாடி, உளம் நிறைந்த மகிழ்வை அடைந்தார்.

விளக்கவுரை

: இதுபொழுது அருளிய பதிகம், `தோடுடையான்' *(தி.1 ப.103)* எனத் தொடங்கும் குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகமாகும். இப்பதிகப் பாடல் பத்தும் `காதல்செய் கோயில் கழுக்குன்றே' என நிறைவு பெறுதலை உளங்கொண்டு ஆசிரியர் இங்ஙனம் கூறுவார் ஆயினர்.
திருக்கடைக்காப்பிலும் இத்தொடர் எடுத்து மொழியப்பட் டுள்ளது.
இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

இன்புற்றங் கமர்ந்தருளி
ஈறில்பெருந் தொண்டருடன்
மின்பெற்ற வேணியினார்
அருள்பெற்றுப் போந்தருளி
என்புற்ற மணிமார்பர்
எல்லையிலா ஆட்சிபுரிந்
தன்புற்று மகிழ்ந்ததிரு
அச்சிறுபாக் கத்தணைந்தார். #4151

இன்புற்ற நிலையில் அப்பதியில் விரும்பி எழுந்தருளியிருந்து, எல்லை இல்லாத பெருந்தொண்டர்களுடனே, மின்போன்ற சடையையுடைய சிவபெருமானின் திருவருள் பெற்று, அங்கிருந்து நீங்கி, எலும்பு மாலைகளை அணிந்த அழகான மார்பை யுடைய இறைவர் எல்லையில்லாத வண்ணம் ஆட்சி செய்து அன்பு பொருந்தி மகிழ்ந்து எழுந்து அருளியுள்ள அச்சிறுபாக்கத்தைச் சேர்ந்தார்.

விளக்கவுரை

****

ஆதிமுதல் வரைவணங்கி
ஆட்சிகொண்டார் எனமொழியும்
கோதில்திருப் பதிகஇசை
குலவியபா டலில்போற்றி
மாதவத்து முனிவருடன்
வணங்கிமகிழ்ந் தின்புற்றுத்
தீதகற்றுஞ் செய்கையினார்
சின்னாள்அங் கமர்ந்தருளி. #4152

பழமையுடைய சிவபெருமானை வணங்கி `ஆட்சி கொண்டார்' எனக் கூறும் நிறைவையுடைய குற்றம் இல்லாத திருப்பதிகத்தைப் பண்பொருந்தி விளங்கும் திருப்பாடல்களால் போற்றி, மாதவமுடைய முனிவர்களுடன் வணங்கி, மகிழ்ந்து, இன்பம் அடைந்து, தீமையை நீக்குவதே தம் செய்கையாகக் கொண்டருளிய ஞானசம்பந்தர், சில நாள்கள் அங்கே தங்கியிருந்து,

விளக்கவுரை

இப்பதியில் அருளிய பதிகம் `பொன் திரண்டன்ன' *(தி.1 ப.77)* எனும் தொடக்கம் உடைய குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகமாகும். பதிகப் பாடல் தொறும், `அச்சிறுபாக்கமது ஆட்சிகொண் டாரே' எனவருதலை ஆசிரியர் கொண்டெடுத்து மொழிந்துள்ளார்.

ஏறணிந்த வெல்கொடியார்

இனிதமர்ந்த பதிபிறவும்
நீறணிந்த திருத்தொண்டர்
எதிர்கொள்ள நேர்ந்திறைஞ்சி
வேறுபல நதிகானம்
கடந்தருளி விரிசடையில்
ஆறணிந்தார் மகிழ்ந்ததிரு
அரசிலியை வந்தடைந்தார். **#4153**

விடையைப் பொறித்த வெற்றி பொருந்திய கொடியையுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ள பிறபதிகள் பல வற்றையும் திருநீறு அணிந்த தொண்டர்கள் அங்கங்கும் எதிர்கொளச் சென்று, விரிந்த சடையில் கங்கையாற்றை அணிந்த இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கின்ற `திருவரசிலிப் பதியினை' வந்தடைந்தார்.

விளக்கவுரை

`பதிபிறவும்' என்பன பெரும்பேறு, திருநெற்குன்றம், உலகூர், உலகாபுரம், கந்தாடு, கிடங்கில், கிளியனூர், தேவனூர், திண்டீச்சுரம், பேராவூர், மரக்காணம், முன்னூர் முதலாயினவாகலாம் என்பர் சிவக்கவிமணியார். இவ்விருபாடல்களும் ஒரு முடிபின.

அரசிலியில் அமர்ந்தருளும்
அங்கண்அர சைப்பணிந்து
பரசியெழு திருப்புறவார்
பனங்காட்டூர் முதலாய
விரைசெய்மலர்க் கொன்றையினார்
மேவுபதி பலவணங்கித்
திரைசெய்நெடுங் கடலுடுத்த
திருத்தில்லை நகரணைந்தார். **#4154**

திருஅரசிலியில் விரும்பி வீற்றிருக்கும் இறை வரைப் பணிந்து போற்றி, திருப்புறவார் பனங்காட்டூர் முதலான, மணம் கமழ்கின்ற கொன்றை மலரைச் சூடிய இறைவர் எழுந்தருளி யிருக்கின்ற பல பதிகளையும் வணங்கிச் சென்று, அலைகளையுடைய நீண்ட கடல் அணிமையாய்ச் சூழ்ந்த திருத்தில்லை நகரை அடைந்தார்.

விளக்கவுரை

திருஅரசிலியில் அருளியது, `பாடல் வண்டறை' (தி.2 ப.95) எனும் முதற்குறிப்புடைய பியந்தைக் காந்தாரப் பண்ணில் அமைந்த பதிகமாகும். திருஅரசிலி மற்றும் திருப்புறவார்பனங் காட்டூரில் இதுபோது அருளியது, `விண் அமர்ந்தன' (தி.2 ப.53) எனும் முதற்குறிப்புடைய சீகாமரப் பண்ணிலமைந்த பதிகமாகும். பதிபலவும்

என்பன திருவக்கரை, திருவடுகூர், திருஇரும்பைமாகா ளம், திருவாமாத்தூர், திருவதிகை, திருச்சோபுரம் முதலாயினவாக லாம் என்பர் சிவக்கவிமணியார். இவற்றுள் திருச்சோபுரத்திற்கு அமைந்தது, `வெங்கண் ஆனை' *(தி.1 ப.51)* எனும் முதற்குறிப்புடைய பழந்தக்கராகப் பண்ணிலமைந்த பதிகமாகும். பிறபதிகளுக்குரிய பதிகங்கள் எவையும் கிடைத்தில.

எல்லையில்ஞா னத்தலைவர்
எழுந்தருள எதிர்கொள்வார்
தில்லையில்வா ழந்தணர்மெய்த்
திருத்தொண்டர் சிறப்பினொடு
மல்கியெதிர் பணிந்திறைஞ்ச
மணிமுத்தின் சிவிகையிழிந்
தல்கு பெருங் காதலுடன்
அஞ்சலிகொண் டணைகின்றார். **#4155**

அளவற்ற சிவஞானத்தைப் பெற்றவரான ஞானசம்பந்தர் வந்தருளுவதை அறிந்து, அவரை எதிர் கொள்பவ ராய்த் தில்லைவாழ் அந்தணர்களும், சைவத் தொண்டர்களும் எதிர் கொள்வதற்குரிய சிறப்புகளுடனே கூடிச் சென்று, அவரை எதிரே வணங்கிட, அழகிய முத்துச் சிவிகையினின்றும் இறங்கிப் பெருங் காதலுடன் அஞ்சலி செய்து ஞானசம்பந்தர் அணைபவராய்,

விளக்கவுரை

****

திருவெல்லை யினைப்பணிந்து
சென்றணைவார் சேண்விசும்பை
மருவிவிளங் கொளிதழைக்கும்
வடதிசைவா யிலைவணங்கி
உருகுபெருங் காதலுடன்
உட்புகுந்து மறையினொலி
பெருகிவளர் மணிமாடப்
பெருந்திருவீ தியைஅணைந்தார். **#4156**

தில்லையின் எல்லையைப் பணிந்து மேற்செல்ப வராகி, நீண்ட வானளவு உயர்ந்து விளங்கும் ஒளிபெருகும் வடதிசை வாயிலை வணங்கி, உள்ளம் உருகும் பெருங்காதலுடன் நகரத்தின் உள்ளே புகுந்து, மறைகளின் ஒலி பெருகி வளர்வதற்கு இடமான அழகிய மாடங்கள் நிறைந்த பெரிய வீதியை அடைந்தார்.

விளக்கவுரை

தில்லைநகரின் வடஎல்லை நிவா நதிக் கரையும், தெற்கெல்லை கொள்ளிடக் கரையும், மேற்கு எல்லை வாய்க்காலும், கிழக்கெல்லை கடற்கரையும் ஆகும் இவ்வகையிலேயே வடதிசை வாயிலைக் கடந்ததும் நகரினுட்புகுந்து என்றார்.இவ்விரு பாடல்க ளும் ஒருமுடிபின.

நலம்மலியும் திருவீதி
பணிந்தெழுந்து நற்றவர்தம்
குலம்நிறைந்த திருவாயில்
குவித்தமலர்ச் செங்கையொடு
தலம்உறமுன் தாழ்ந்தெய்தித்
தமனியமா ளிகைமருங்கு
வலம் உறவந் தோங்கியபே
ரம்பலத்தை வணங்கினார். **#4157**

நன்மை பெருகும் திருவீதியை வணங்கி, நல்ல தவமுடையவர்களின் குழுநிறைந்த திருவாயிலைச் செங்கைகளைத் தலைமீது குவித்துக் கொண்டு நிலத்தில் விழுந்து தாழ்ந்து வணங்கிச் சென்று, பொன்மாளிகையான அம்பலத்தின் அருகே வலமாக வந்து, உயர்ந்த பேரம்பலத்தை வணங்கினார்.

விளக்கவுரை

****

வணங்கிமிக மனம்மகிழ்ந்து
மாலயனும் தொழும்பூத
கணங்கள்மிடை திருவாயில்
பணிந்தெழுந்து கண்களிப்ப
அணங்குதனிக் கண்டருள
அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கடந்த தனிக்கூத்தர்
பெருங்கூத்துக் கும்பிடுவார். **#4158**

வணங்கி, உள்ளம் மகிழ்ந்து, திருமாலும் நான் முகனும் தொழும் சிவகணங்களும் நெருங்கிய திருவணுக்கன் திரு வாயிலை வணங்கி எழுந்து, கண்கள் களிகூர, சிவகாமி அம்மையார் தனித்திருந்து கண்டருளுமாறு அம்பலத்தில் ஆடல் செய்து அருளு கின்ற குணங்களைக் கடந்த மெய்ஞ்ஞான வெளியில், தனிப்பெருங் கூத்தரின் பெருங்கூத்தை வணங்குபவராய்,

விளக்கவுரை

`பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென, நோயுண் மருந்து தாயுண் டாங்கு' (சிதம்பர மும்மணிக் கோவை அ.14, 15) அம்மையார்

இறைவனின் தனிக்கூத்தைத் தாம் தனியே கண்டு, பின் அதன் பயனை உலகுக்கு அருளுவர். ஆதலின் `அணங்கு தனி கண்டருள' என்றார்.

தொண்டர்மனம் பிரியாத
திருப்படியைத் தொழுதிறைஞ்சி
மண்டுபெருங் காதலினால்
நோக்கிமுகம் மலர்ந்தெழுவார்
அண்டமெலாம் நிறைந்தெழுந்த
ஆனந்தத் துள்ளலைந்து
கண்டபே ரின்பத்தின்
கரையில்லா நிலையணைந்தார். **#4159**

தொண்டர்களின் மனத்தினின்றும் பிரியாது விளங்கும் திருக்களிற்றுப் படியை வணங்கி, செறிந்த பெருங் காதலால் நோக்கி முகமலர்ச்சி பெற்று எழுபவராய ஞானசம்பந்தர், அண்டங்கள் எங்கும் நிறைந்து எழுகின்ற சிவானந்தப் பெருக்கினுள் அலைந்து, தம் அநுபவத்துள் கண்ட பேரின்பத்தில் கரையில்லாத நிலையினை அடைந்தார்.

விளக்கவுரை

இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

அந்நிலைமை யடைந்துதிளைத்
தாங்கெய்தாக் காலத்தின்
மன்னுதிரு அம்பலத்தை
வலங்கொண்டு போந்தருளிப்
பொன்னணிமா ளிகைவீதிப்
புறத்தணைந்து போதுதொறும்
இன்னிசைவண் தமிழ்பாடிக்
கும்பிட்டங் கினிதமர்ந்தார். **#4160**

அத்தகைய நிலையை அடைந்து, அந்த அநுப வத்தில் மூழ்கியிருந்து, அங்குத் தங்காத காலத்தில், நிலையான திருச்சிற் றம்பலத்தை வலமாக வந்து வெளியே சென்று, பொன்னால் அழகு பெற்ற மாளிகைகளையுடைய வீதியின் பக்கத்தை அடைந்து, காலந் தோறும் இனிய இசையுடன் கூடிய பாக்களைப் பாடியருளிக் கும்பிட் டுக் கொண்டு அங்கு இனிதாய்த் தங்கியிருந்தனர்.

விளக்கவுரை

அங்குத் தங்காத காலம் வழிபாட்டிற்கு உரியவல்லாத காலம். அவை கதவம் திருக்காப்பிட்டிருக்கும் காலமாகும். இறைவற் குத் திருமுழுக்கு முதலியன நிகழும் காலமும் ஆம். இது பொழுது அருளிய பதிகங்கள் எவையும் கிடைத்தில.

திருந்தியசீர்த் தாதையார்
சிவபாத இருதயரும்
பொருந்துதிரு வளர்புகலிப்
பூசுரரும் மாதவரும்
பெருந்திருமால் அயன்போற்றும்
பெரும்பற்றப் புலியூரில்
இருந்தமிழா கரர்அணைந்தார்
எனக்கேட்டு வந்தணைந்தார். **#4161**

உலகம் திருந்துவதற்குக் காரணமான சிறப் புடைய தந்தையார் சிவபாத இருதயரும், பொருந்திய சைவத் திரு வளர்வதற்கு இடமான சீகாழியில் வாழும் அந்தணர்களும், சிவனடி யார்களும் பெருந்திருவுடைய திருமாலும் நான்முகனும் போற்றி வரும் பெரும்பற்றப் புலியூரில், பெருந் தமிழாகரரான ஞானசம்பந்தர் வந்திருக்கின்றார் எனக்கேட்டு, தாங்கள் அங்கு வந்து அடைந்தனர்.

விளக்கவுரை

****

ஆங்கவரைக் கண்டுசிறப்
பளித்தருளி அவரோடும்
தாங்கரிய காதலினால்
தம்பெருமான் கழல்வணங்க
ஓங்குதிருத் தில்லைவாழ்
அந்தணரும் உடனாகத்
தேங்கமழ்கொன் றைச்சடையார்
திருச்சிற்றம் பலம்பணிந்தார். **#4162**

உலகம் திருந்துவதற்குக் காரணமான சிறப் புடைய தந்தையார் சிவபாத இருதயரும், பொருந்திய சைவத் திரு வளர்வதற்கு இடமான சீகாழியில் வாழும் அந்தணர்களும், சிவனடி யார்களும் பெருந்திருவுடைய திருமாலும் நான்முகனும் போற்றி வரும் பெரும்பற்றப் புலியூரில், பெருந் தமிழாகரரான ஞானசம்பந்தர் வந்திருக்கின்றார் எனக்கேட்டு, தாங்கள் அங்கு வந்து அடைந்தனர்.

விளக்கவுரை

****

தென்புகலி அந்தணரும்
தில்லைவா ழந்தணரும்
அன்புநெறி பெருக்குவித்த
ஆண்தகையார் அடிபோற்றிப்

பொன்புரிசெஞ் சடைக்கூத்தர்
அருள்பெற்றுப் போந்தருளி
இன்புறுதோ ணியில்அமர்ந்தார்
தமைவணங்க எழுந்தருள. **#4163**
அழகிய சீகாழி அந்தணர்களும், தில்லையில் வாழும் அந்தணர்களும், அன்பு நெறியைப் பெருகச் செய்து, இறை வரின் திருவடிகளைப் போற்றிப் பொன்போற் புரிந்த சடையை உடைய கூத்தரின் திருவருள் விடைபெற்று, வெளிவந்து, இன்பம் செய்யும் திருத்தோணியில் வீற்றிருக்கும் தோணியப்பரை வணங்கு வதன் பொருட்டு,

விளக்கவுரை

****

நற்றவர்தங் குழாத்தோடும்
நம்பர்திரு நடம்செய்யும்
பொற்பதியின் திருவெல்லை
பணிந்தருளிப் புறம்போந்து
பெற்றம்உயர்த் தவர்அமர்ந்த
பிறபதியும் புக்கிறைஞ்சிக்
கற்றவர்கள் பரவுதிருக்
கழுமலமே சென்றடைவார். **#4164**
நல்ல தவமுடைய அடியவர்களின் கூட்டத்து டன் கூடி, இறைவர் திருநடனம் செய்கின்ற அழகிய அப்பதியின் திரு எல்லையை வணங்கிப் புறத்தில் சென்று, விடைக் கொடியை உடைய இறைவர் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற பிற பதிகளையும் போய்த் தொழுது, கற்றவர்கள் போற்றுகின்ற சீகாழிப் பதியை அடைபவராய்,

விளக்கவுரை

பிறபதிகள் என்பன, திருமயேந்திரப்பள்ளி, திருநல் லூர்ப் பெருமணம், திருக்குருகாவூர் முதலியனவாகலாம் என்பர் சிவக்கவிமணியார்.

பல்பதிகள் கடந்தருளிப்
பன்னிரண்டு பெயர்படைத்த
தொல்லைவளப் பூந்தராய்
தூரத்தே தோன்றுதலும்
மல்குதிரு மணிமுத்தின்
சிவிகையிழிந் ததிர்வணங்கிச்
செல்வமிகு பதியதன்மேல்
திருப்பதிகம் அருள் செய்வார். **#4165**
பலதிருப்பதிகளையும் கடந்துசென்று, பன்னி ரண்டு பெயர்களையுடைய

பழமையான வளம் வாய்ந்த சீகாழிப் பதியானது தொலைவில் காணப்பட, திருந்திய முத்துச் சிவிகையி னின்றும் இறங்கி, வணங்கி, திருவருட் செல்வம் நிறைந்த அச்சீகாழிப் பதியின் மீது திருப்பதிகத்தை அருள்பவராய்,

விளக்கவுரை

****

மன்னுமிசை மொழிவண்டார்
குழலரிவை என்றெடுத்து
மின்னுசுடர் மாளிகைவிண்
தாங்குவபோல் வேணுபுரம்
என்னும்இசைச் சொன்மாலை
எடுத்தியம்பி எழுந்தருளிப்
புன்னைமணங் கமழ்புறவப்
புறம்பணையில் வந்தணைந்தார். **#4166**

நிலைபெற்ற இசையுடைய `வண்டார் குழல்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தை அருளத் தொடங்கி, ஒளிவீசும் சுடர்களைக் கொண்ட மாளிகைகள் விண்தாங்குவன போல் உள்ளன என்னும் கருத்துக்கொண்ட இசையுடன் கூடிய திருப்பதிகத்தை எடுத் துப் போற்றி, மேற்சென்று, புன்னை மரங்களின் மணம் வீசுவதற்கு இடமான சீகாழியின் புறநகர்ப்பகுதியில் வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை

`வண்டார் குழல்' எனத் தொடங்கும் பதிகம் நட்டபா டைப் பண்ணிலமைந்ததாகும் *(தி.1 ப.9)*. இப்பதிக முதற்பாடலில், `தண்டாமரை மலராளுறை தவளந்நெடுமாடம், விண்தாங்குவ போலும் மிகு வேணு புரம் அதுவே' எனவரும் கருத்தை முகந்தே ஆசி ரியர் இங்ஙனம் அருளிச் செய்வாராயினர். புறம்பணை - புறத்தே உள்ள வயல்கள். புறநகர்ப் பகுதி. இந்நான்கு பாடல்களும் ஒரு முடிபின.

வாழிவளர் புறம்பணையின்
மருங்கணைந்து வரிவண்டு
சூழுமலர் நறுந்தீப
தூபங்க ளுடன்தொழுது
காழிநகர் சேர்மின்எனக்
கடைமுடிந்த திருப்பதிகம்
ஏழிசையி னுடன்பாடி
எயில்மூதூர் உட்புகுந்தார். **#4167**

ஊழிக்காலத்திலும் அழியாது வளர்கின்ற புறம்பணையின் அருகில்

வந்து, வரிவண்டுகள் மொய்க்கின்ற மலர்க ளாலும், நல்ல மணமுடைய நறும்புகை, ஒளி விளக்கு ஆகியவற் றாலும், வழிபட்டுத் தொழுது `சீகாழி நகரினுள் சேர்மின்கள்' எனும் நிறைவுடைய இறுதிச் சீர்களால் அமைந்த திருப்பதிகத்தை ஏழிசை களுடனே பாடியருளியவாறே, மதிலையுடைய அப்பழைய நகரினுள் புகுந்தார்.

விளக்கவுரை

இவ்வருங் குறிப்புக்களையுடைய பதிகம், `நம் பொருள் நம்மக்கள்' *(தி.2 ப.97)* எனத் தொடங்கும் நட்டராகப் பண்ணில் அமைந்ததாகும். `காழிநகர் சேர்மினே' எனவரும் நிறைவுத் தொடர் இப்பதிகப் பாடல்தொறும் வருகின்றது. `தீபமாலை தூபமும் செறிந்தகையராகிச் சேர்மினே' எனும் அருளுரை இரண்டாவது பாடலில் வருகின்றது. இவற்றை யெல்லாம் முகந்து நிற்ப இப்பாடலை அருளியுள்ளார் ஆசிரியர்.

சேணுயர்ந்த திருத்தோணி
வீற்றிருந்த சிவபெருமான்
தாள்நினைந்த ஆதரவின்
தலைப்பாடு தனையுன்னி
நீள்நிலைக்கோ புரம்அணைந்து
நேரிறைஞ்சிப் புக்கருளி
வாள்நிலவு பெருங்கோயில்
வலங்கொண்டு முன்பணிந்தார். **#4168**

வானளாவ உயர்ந்து நிற்கும் திருத்தோணியில் வீற்றிருக்கும் சிவபெருமானின் திருவடிகளை, நினைந்த அன்பின் மேன்மையை எண்ணியவராய், நீண்ட நிலைகளையுடைய கோபு ரத்தை அடைந்து, எதிரில் நிலத்தில் பொருந்த விழுந்து வணங்கி எழுந்து, உள்ளே புகுந்து, ஒளி விளங்கும் பெருந்திருக்கோயிலை வல மாக வந்து, வணங்கி முன்னின்று தொழுதார்.

விளக்கவுரை

****

முன்னிறைஞ்சித் திருவருளின்
முழுநோக்கம் பெற்றேறிப்
பொன்னிமயப் பாவையுடன்
புணர்ந்திருந்த புராதனரைச்
சென்னிமிசைக் குவித்தகரம்
கொடுவிழுந்து திளைத்தெழுந்து
மன்னுபெரு வாழ்வெய்தி

மனங்களிப்ப வணங்குவார். #4169
கோயிலுள் ஞானசம்பந்தர், பிரமபுரீசர் திரு முன்பு வணங்கி, அவரது திருவருளின் முழுநோக்கமும் பெற்று, திருத் தோணியான மலையின் மீது ஏறிச் சென்று, பொன்மலை எனும் இமயமலை அரசனின் மகளாரான திருநிலை நாயகியம்மையாருடன் வீற்றிருந்தருளுகின்ற தோணியப்பரைத் தலைமீது கூப்பிய கைக ளுடன் நிலம் பொருந்த விழுந்து வணங்கித் திளைத்தெழுந்து, நிலை பெற்ற வாழ்வையடைந்து, மனம் மகிழ வணங்குபவராய்,

விளக்கவுரை

****

பரவுதிருப் பதிகங்கள்
பலவும்இசை யினிற்பாடி
விரவியகண் ணருவிநீர்
வெள்ளத்திற் குளித்தருளி
அரவணிந்தார் அருள்பெருகப்
புறம்பெய்தி அன்பருடன்
சிரபுரத்துப் பெருந்தகையார்
தந்திருமா ளிகைசேர்ந்தார். #4170

போற்றுகின்ற திருப்பதிகங்கள் பலவற்றையும் பண்ணுடன் பொருந்தப் பாடி, பொருந்திய கண்ணீர் வெள்ளத்தில் முழுதும் தோய்ந்தருளி, பாம்பை அணியாய் அணிந்த இறைவரின் திருவருள் பெற்று, வெளியே வந்து, அன்பர்களுடன் சீகாழிப் பதியி னரான ஞானசம்பந்தர் தம் திருமாளிகையுள் சேர்ந்தார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகங்கள் எவை எனத் தெரிந் தில. இவ்விரு பாடல்களும் ஒரு முடிபின.

மாளிகையின் உள்ளணைந்து
மறையவர்கட் கருள்புரிந்து
தாள்பணியும் பெருங்கிளைக்குத்
தகுதியினால் தலையளிசெய்
தாளுடைய தம்பெருமான்
அடியவர்க ளுடன்அமர்ந்து
நீளவரும் பேரின்பம்
மிகப்பெருக நிகழுநாள். #4171

சம்பந்தப் பெருமான் தம் மாளிகையுள் புகுந்து, தம்மைக் காண வந்த அந்தணர்களுக்கெல்லாம் அருள்விடை தந்து, தம் திருவடிகளை வணங்கி

நின்ற பெரிய சுற்றத்தவர்களுக்குத் தகுதிக்கு ஏற்றவண்ணம் தலையணி செய்து, விடை தந்து, தம்மை ஆள்கின்ற இறைவரின் அடியாருடனே விரும்பி எழுந்தருளியிருந்து, நீண்டு பெருக வரும் பேரின்பமானது மேன்மேலும் பெருகும்படி நிகழ்ந்து வரும் நாள்களில்,

விளக்கவுரை

****

காழிநா டுடையபிரான்
கழல்வணங்கி மகிழ்வெய்த
ஆழியினும் மிகப்பெருகும்
ஆசையுடன் திருமுருகர்
வாழிதிரு நீலநக்கர்முதல்
தொண்டர் மற்றெனையோர்
சூழுநெடுஞ் சுற்றமுடன்
றோணிபுரந் தொழுதணைந்தார். **#4172**

சீகாழி நாட்டின் தலைவரான ஞானசம்பந்தரின் திருவடிகளை வணங்கி, மகிழ்ச்சி எய்த எண்ணி, கடலை விடப் பெரி தாகப் பெருகும் ஆசையுடன், திருமுருக நாயனார், வாழ்வு பெருகும் திருநீலநக்க நாயனார் முதலிய தொண்டர்களும், மற்றவர்களும் தம்மைச் சூழ்ந்த பெரிய சுற்றத்துடனே வந்து, திருத்தோணிபுரத்தை வணங்கி, பிள்ளையார்பால் வந்தார்கள்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வந்தவரை எதிர்கொண்டு
மனமகிழ்ந்து சண்பையர்கோன்
அந்தமில்சீர் அடியார்க
ளவரோடு மினிதமர்ந்து
சுந்தரவா ரணங்கினுடன்
றோணியில்வீற் றிருந்தாரைச்
செந்தமிழின் பந்தத்தால்
திருப்பதிகம் பலபாடி. **#4173**

அங்ஙனம் வந்தவர்களை எதிரேசென்று அழைத்து, திருவுள்ளம் மகிழ்ந்து, சீகாழிப் பெருமான், அளவில்லாத சிறப்புக்களை உடைய அவ்வடியவர்களுடனே இனிதாக விரும்பி யிருந்து, அழகின் நிலைக்களமான பெரிய நாயகியம்மையாருடன் திருத்தோணியில் வீற்றிருந்தருளும் தோணியப்பரைச் செந்தமிழ் யாப்பால் பல பதிகங்களையும் பாடி,

விளக்கவுரை

இதுபொழுது அருளிய திருப்பதிகங்கள்: *1.* கறையணி *(*தி*.2* ப*.65) -* காந்தாரம்.
2. கரமுனம் மலரால் *(*தி*.3* ப*.37) -* கொல்லி.
3. இறையவன் ஈசன் *(* தி*.3* ப*.56) -* பஞ்சமம்.
4. நிலவும் புனலும் *(*தி*.2* ப*.17) -* இந்தளம்.
5. பூதத்தின் படையினீர் *(* தி*.2* ப*.81) -* காந்தாரம்
6. விதியாய் விளைவாய் *(*தி*.1* ப*.30) -* தக்கராகம்.
7. ஆடல் அரவசைத்தான் *(*தி*.1* ப*.104) -* வியாழக்குறிஞ்சி.
8. உகலியாழ்கடல் *(*தி*. 2* ப*. 25) -* இந்தளம்.
9. உருவார்ந்த *(*தி*.2* ப*.54) -* காந்தாரம்.
10. விடையதேறி *(*தி*.2* ப*.122) -* செவ்வழி.
11. கண்ணுதலானும் *(* தி*.3* ப *.7) -* காந்தார பஞ்சமம்.
12. காலைநன்மாமலர் *(*தி*.1* ப*.75) -* குறிஞ்சி.
13. வண்டரங்க *(*தி*.1* ப*.60) -* பழந்தக்கராகம்.
14. கரும்பமர் *(*தி*.3* ப*.100) -* பழம்பஞ்சுரம்.
15. செந்நெலங்கழனி *(*தி*.2* ப*.1) -* இந்தளம்.
16. பந்துசேர்விரலாள் *(*தி*.3* ப*.2) -* காந்தாரபஞ்சமம்.
17. மின்னன *(*தி*.3* ப*.13) -* காந்தாரபஞ்சமம்.
18. பல்லடைந்த *(*தி*.1* ப*.47) -* பழந்தக்கராகம்.
19. வாருறு *(*தி*.1* ப*.109) -* வியாழக்குறிஞ்சி.
20. எய்யாவென்றி *(*தி*.1* ப*.97) -* குறிஞ்சி.
21. பங்கமேறு *(*தி*.1* ப*.66) -* தக்கேசி.
22. அடலேறமரும் *(*தி*.1* ப*.34) -* தக்கராகம்.
23. நல்லார் தீமேவும் *(*தி*.1* ப*.81) -* குறிஞ்சி.
24. உரவார்கலை *(*தி*.1* ப*.102) -* குறிஞ்சி.
25. நல்லானை *(*தி*.2* ப*.11) -* இந்தளம்.
26. பண்ணின் நேர் *(*தி*.2* ப*.49) -* சீகாமரம்.
27. நலங்கொள் *(*தி*.2* ப*.59) -* காந்தாரம்.
28. விண்ணியங்கு *(*தி*.2* ப*.75) -* காந்தாரம்.
29. பொங்குவெண்புரி *(*தி*.2* ப*.96) -* பியந்தைக் காந்தாரம்.
30. பொடியிலங்கு *(*தி*.2* ப*.113) -* செவ்வழி.
31. சந்தமார் *(*தி*.3* ப*.43) -* கௌசிகம்.
32. நிலநன் *(*தி*.2* ப*.83) -* பியந்தைக் காந்தாரம்.
33. அறையும் *(*தி*.2* ப*.89) -* பியந்தைக் காந்தாரம்.
34. திருந்துமா *(*தி*.3* ப*.89) -* சாதாரி.
35. அயிலுறு படையினர் *(*தி*.1* ப*.79) -* குறிஞ்சி.

36. சேவுயரும் *(தி.1 ப.129)* - மேகராகக் குறிஞ்சி.
37. மடல்மலி *(தி.3 ப.118)* - புறநீர்மை
38. ஆரூர் தில்லை *(தி.2 ப.39)* - இந்தளம்.
39. கல்லால் நீழல் *(தி.3 ப.40)* - கொல்லி.

பெருமகிழ்ச்சி யுடன்செல்லப்
பெருந்தவத்தால் பெற்றவரும்
மருவுபெருங் கிளையான
மறையவரும் உடன்கூடித்
திருவளர்ஞா னத்தலைவர்
திருமணம்செய் தருளுதற்குப்
பருவம்இது என்றெண்ணி
அறிவிக்கப் பாங்கணைந்தார். **#4174**

பெருமகிழ்வுடன் இங்ஙனம் இருக்க, பெரிய தவம் செய்ததன் பயனாக ஞானசம்பந்தரைப் பெற்றெடுத்த தந்தையார் ஆன சிவபாத இருதயரும் பொருந்திய சுற்றத்தவராகிய அந்தணர்களும் கூடி, முத்திச் செல்வம் வளர்வதற்கு ஏதுவான ஞானத்தின் தலைவராம் பிள்ளையார் திருமணம் செய்ருளுதற்கு ஏற்ற பருவம் இதுவாகும் என நினைந்து, தம் எண்ணத்தைப் பிள்ளையாருக்கு அறிவிக்கும் பொருட்டு அவரை அடைந்தனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

நாட்டுமறை முறையொழுக்கம்
ஞானபோ னகருக்கும்
கூட்டுவது மனங்கொள்வார்
கோதில்மறை நெறிச்சடங்கு
காட்டவரும் வேள்விபல
புரிவதற்கோர் கன்னிதனை
வேட்டருள வேண்டுமென
விண்ணப்பம் செய்தார்கள். **#4175**

உலகியல் நிலையில், மறைவழிபட்ட ஒழுக்கத்தை ஞானசம்பந்தருக்கும் இசைவித்தலை உள்ளத்தில் கொண்டு, குற்றமில் லாத மறைநெறியில் சொல்லப்படும் செயற்பாடுகளுடன் (சடங்குகளு டன்) கூடிய வேள்விகளைச் செய்வதற்கு, உரிமையைப் பெறும் பொருட்டுத் தாங்கள் ஓர் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என வேண்டிக் கொண்டார்கள்.

விளக்கவுரை

`போனகருக்கும்' என்றவிடத்துவரும் உம்மை அவர் தம் சிறப்புணர நின்றது. ஞானத்தின் திருவுருவாக விளங்கும் ஞானசம்பந் தருக்கு, மறைவழிப்பட்ட செயற்பாடுகளோ, அவற்றைச் செய்தற்கு என ஓர் இல்வாழ்க்கையோ வேண்டுவதின்று என்பது போதர நின்றது.

மற்றவர்தம் மொழிகேட்டு
மாதவத்தின் கொழுந்தனையார்
சுற்றமுறு பெரும்பாசத்
தொடர்ச்சிவிடு நிலைமையராய்ப்
பெற்றம்உயர்த் தவரருள்முன்
பெற்றதனால் இசையாது
முற்றியதா யினுங்கூடா
தென்றவர்முன் மொழிந்தருள. **#4176**

இங்ஙனம் கூறிய அவர்களின் சொல்லைக் கேட்டு, மாதவத்தின் கொழுந்தென விளங்கும் ஞானசம்பந்தர், சுற்றங்கள் பொருந்திய பெரிய பாசத் தொடக்கினை, விட்டு நீங்குவதற்காக நிலைமை உடையவராகி, விடைக்கொடியை உயர்த்திய சிவபெரு மானின் திருவடி ஞானமான உயர்ந்த சிவஞானத்தை முன்னே பெற்றவர் ஆதலால் அவர்களின் மொழிக்கு இசையாமல் `நீங்கள் கூறுவது பொருந்திய மொழியாயினும், அது என்னளவில் வேண்டாத ஒன்றாகும்' எனக் கூறியருள,

விளக்கவுரை

****

அருமறையோர் அவர்பின்னும்
கைதொழுதங் கறிவிப்பார்
இருநிலத்து மறைவழக்கம்
எடுத்தீர்நீர் ஆதலினால்
வருமுறையால் அறுதொழிலின்
வைதிகமா நெறியொழுகும்
திருமணம்செய் தருளுதற்குத்
திருவுள்ளம் செய்யுமெனா. **#4177**

அம் மறையவர்கள் மேலும் கைகூப்பித் தொழுது, ஞானசம்பந்தரிடம் அறிவிப்பாராய், பெரிய மண்ணுலகில் மறைவழிவரும் வழக்கினை நீர் உயர்த்தியருளினீர் ஆதலின், அவ் வழிவரும் முறையில் அந்தணர்க்குரிய ஆறு தொழில்களுடன் கூடிய அப்பெருநெறியில் ஒழுகும் திருமணத்தைச் செய்தருளுதற்குத் திரு வுள்ளம் கொள்ளல் வேண்டும் என்று கூற,

விளக்கவுரை

****

மறைவாழ அந்தணர்தம்
வாய்மையொழுக் கம்பெருகும்
துறைவாழச் சுற்றத்தார்
தமக்கருளி உடன்படலும்
பிறைவாழுந் திருமுடியில்
பெரும்புனலோ டரவணிந்த
கறைவாழுங் கண்டத்தார்
தமைத்தொழுது மனங்களித்தார். **#4178**

மறைகள் வாழ்வு அடையவும், அந்தணர்களின் மறைவழிப்பட்ட வாய்மையால் வரும் ஒழுக்கம் வாழ்வடையவும், அந்தச் சுற்றத்தார்களுக்கு அருள்செய்து, அவர்களின் வேண்டுகோ ளுக்கு ஞானசம்பந்தர் இசைவு தெரிவிக்கவும், பிறைச் சந்திரன் வாழ் கின்ற திருமுடியில் பெரிய நீர்க் கங்கையுடன் பாம்பையும் அணிந்த நீலகண்டரான இறைவரை வணங்கி, அச்சுற்றத்தார் மகிழ்ந்தனர்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

திருஞான சம்பந்தர்
திருவுள்ளஞ் செய்ததற்குத்
தருவாய்மை மறையவரும்
தாதையரும் தாங்கரிய
பெருவாழ்வு பெற்றாராய்ப்
பிஞ்ஞகனார் அருளென்றே
உருகாநின்று இன்பமுறும்
உளமகிழ்ச்சி எய்துவார். **#4179**

திருஞானசம்பந்தர் இவ்வாறு திருவுள்ளம் பற்ற, (மணம் செய்து கொள்வதற்கு இசைய), வாய்மையுடைய மறையவர் களும், தந்தையாரான சிவபாத இருதயரும் அளவற்ற, தாங்கற்கரிய பெருவாழ்வைப் பெற்றவர் ஆகி, `இஃது இறைவரின் திருவருளே யாகும்' எனத் துணிந்து, உள்ளம் உருகி, இன்பம் பொருந்திய மன மகிழ்ச்சியுடையவராகி,

விளக்கவுரை

****

ஏதமில்சீர் மறையவரில்
ஏற்றகுலத் தோடிசைவால்
நாதர்திருப் பெருமணத்து
நம்பாண்டார் நம்பிபெறும்

காதலியைக் காழிநா
டுடையபிரான் கைப்பிடிக்கப்
போதுமவர் பெருந்தன்மை
எனப்பொருந்த எண்ணினார். **#4180**

குற்றமற்ற மறையவர் மரபில், பொருந்திய குலம் முதலியவற்றுடன் இசைந்ததாகையால், இறைவரின் திருப்பெருமண நல்லூரில் வாழும் நம்பாண்டார் நம்பி பெற்ற திருமகளாரை, சீகாழித் தலைவரான பிள்ளையார் மணம்செய்தருளுதல் தகுதியுடையதாகும் என்று பொருத்தமுற எண்ணினர்.

விளக்கவுரை

இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

திருஞான சம்பந்தர்
சீர்பெருக மணம்புணரும்
பெருவாழ்வு திருத்தொண்டர்
மறையவர்கள் மிகப்பேண
வருவாரும் பெருஞ்சுற்றம்
மகிழ்சிறப்ப மகள்பேசத்
தருவார்தண் பணைநல்லூர்
சார்கின்றார் தாதையார். **#4181**

திருஞானசம்பந்தர் சிறப்புப் பெருகும் திரு மணம் செய்து கொள்ளும் பெருவாழ்வைப் பற்றித் தொண்டர்களும் அந்தணர்களும் மிக விரும்பவும், வருபவர்களாகிய பெருஞ் சுற்றம் மகிழ்ச்சி மிகப் பெறவும், மகட் கொடை நேர்தற் பொருட்டு, மரங்கள் நிறைந்த குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருபெருமணநல்லூரைச் சேர் கின்ற தந்தையார்,

விளக்கவுரை

****

மிக்கதிருத் தொண்டர்களும்
வேதியரும் உடன்ஏகத்
திக்குநிகழ் திருநல்லூர்ப்
பெருமணத்தைச் சென்றெய்தத்
தக்கபுகழ் நம்பாண்டார்
நம்பிதாம் அதுகேட்டுச்
செக்கர்முடிச் சடையார்தம்
திருப்பாதம் தொழுதெழுவார். **#4182**

தொண்டர்களும் அந்தணர்களும் உடன்செல்ல, எண் திசையும் புகழ்கின்ற திருநல்லூர்ப்பெருமணத்தைச் சேரத் தகுந்த புகழுடைய

நம்பாண்டார் நம்பிகளும், அவர்தம் வருகையைக் கேட்டு, மகிழ்ந்து, சிவந்த வானத்தைப் போன்ற சடையை உடைய சிவபெரு மானின் திருவடிகளை வணங்கி எழுபவராய்,

விளக்கவுரை

****

ஒப்பரிய பேருவகை
ஓங்கியெழும் உள்ளத்தால்
அப்புநிறை குடம்விளக்கு
மறுகெல்லாம் அணிபெருக்கிச்
செப்பரிய ஆர்வமிகு
பெருஞ்சுற்றத் தொடுஞ்சென்றே
எப்பொருளும் எய்தினேன்
எனத்தொழுதங் கெதிர்கொண்டார். **#4183**

ஒப்பில்லாத பெருமகிழ்ச்சி ஓங்கி மேல் எழும் மனத்துடன், நன்னீர் நிறைந்த குடமும் விளக்கும் வைத்து, வீதியை எங்கும் அணிசெய்து, சொலற்கரிய ஆசைமிக்க சுற்றத்தாருடன் சென்று, உறுதிப் பொருள் எல்லாவற்றையும் நான் அடைந்தவன் ஆனேன் எனச்சொல்லி அவர்களை வரவேற்றார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

எதிர்கொண்டு மணிமாடத்
தினில்எய்தி இன்பமுறு
மதுரமொழி பலமொழிந்து
வரன்முறையால் சிறப்பளிப்பச்
சதுர்முகனின் மேலாய
சண்பைவரு மறையவரும்
முதிருணர்வின் மாதவரும்
அணைந்ததிறம் மொழிகின்றார். **#4184**

நம்பாண்டார் நம்பி எதிரே போய் வரவேற்று அழைத்துக் கொண்டு சென்று, தம் மணிமாடத்தை அடைந்து, இன்ப முடைய பணிமொழிகள் பலவற்றையும் கூறி, முறையாக வரவேற்று, விருந்து முதலான சிறப்புகளைச் செய்ய, நான்முகனைவிட மேன்மை யுடைய சிவபாத இருதயரும், முதிர்ந்த உணர்வுடைய திருத்தொண்டர் களும் மற்ற அந்தணர்களும், தாங்கள் வந்த திறத்தைத் கூறுபவர்களாகி,

விளக்கவுரை

****

ஞானபோ னகருக்கு
நற்றவத்தின் ஒழுக்கத்தால்
ஊனமில்சீ லத்தும்பால்
மகட்பேச வந்ததென
ஆனபே றந்தணர்பால்
அருளுடைமை யாம்என்று
வானளவு நிறைந்தபெரு
மனமகிழ்ச்சி யொடுமொழிவார். **#4185**

ஞானஅமுதுண்ட ஞானசம்பந்தருக்கு நல்ல தவம் பொருந்திய இனிமையான ஒழுக்கத்தால் குற்றமற்ற சிறப்புடைய உம் மகளை மணம் பேசுவதற்கு நாங்கள் வந்துள்ளோம் என்று எடுத் துச் சொல்லவும், இவ்வாறு வரப்பெறுகின்ற பேறு, அந்தணரான நீங்கள் என்மீது வைத்த கருணையாலாகுவதன்றி என் தகுதிபற்றி யன்று என்று வானளவு நிறைந்த பெரும் மனமகிழ்ச்சியுடன், சிவபாத இருதயரை நோக்கி நம்பாண்டார் நம்பி கூறுபவராகி,

விளக்கவுரை

****

உம்முடைய பெருந்தவத்தால்
உலகனைத்தும் ஈன்றளித்த
அம்மைதிரு முலைப்பாலில்
குழைத்தஆ ரமுதுண்டார்க்
கெம்முடைய குலக்கொழுந்தை
யாமுய்யத் தருகின்றோம்
வம்மின்என உரைசெய்து
மனமகிழ்ந்து செலவிடுத்தார். **#4186**

`உம் பெருந்தவத்தினால் தோன்றிய, உலகங்கள் எல்லாம் பெற்றெடுத்த உமையம்மையாரின் திருமுலைப்பாலில் குழைத்த சிவஞான அமுதத்தை உண்டருளிய பிள்ளையாருக்கு, எம் குலக்கொழுந்தான மகளை, யாங்கள் உய்யும் பொருட்டு திருமணம் செய்து தருகின்றோம். வாருங்கள்' என்று சொல்லி, உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க அவர்களைச் சீகாழிக்குச் செல்லுமாறு அனுப்பினார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

பேருவகை யால்இசைவு
பெற்றவர்தாம் மீண்டணைந்து
காருலவு மலர்ச்சோலைக்

கழுமலத்தை வந்தெய்திச்
சீருடைய பிள்ளையார்க்கு
அவர்நேர்ந்த படிசெப்பிப்
பார்குலவும் திருமணத்தின்
பான்மைவினை தொடங்குவார். #4187

மிக்க மகிழ்ச்சியால் நம்பாண்டாரின் இசைவைப் பெற்ற சிவபாத இருதயர் முதலியவர்கள், மீண்டு சென்று, மேகங்கள் தவழ்கின்ற பூஞ்சோலைகள் சூழ்ந்த சீகாழிப் பகுதியை வந்து அடைந்து, சிறப்புப் பொருந்திய ஞானசம்பந்தரிடம் நம்பாண்டாரின் இசைவு பற்றி விரிவாகச் சொல்லி, உலகம் விளங்குதற்குக் காரணமான திருமணத்தின் செயல்முறைகளைத் தொடங்குவார்களாய்,

விளக்கவுரை

****

திருமணஞ்செய் கலியாணத்
திருநாளும் திகழ்சிறப்பின்
மருவிய ஓரையுங்கணித
மங்கலநூ லவர்வகுப்பப்
பெருகுமண நாள்ஓலை
பெருஞ்சிறப்பி னுடன் போக்கி
அருள்புரிந்து நன்னாளில்
அணிமுளைப்பா லிகைவிதைத்தார். #4188

திருமணம் செய்யநின்ற நாளையும், விளங்கும் சிறப்புடன் கூடிய ஓரையையும், கணித நூல் உணர்ந்த சான்றோர்கள் வகுத்துச் சொல்ல, பெருகும் மண ஓலையைப் பெருஞ் சிறப்புடன் மணமகள் வீட்டாருக்கும் மற்றச் சுற்றத்தவர் முதலானவர்களுக்கும் அனுப்பி, திருவருள் உணர்த்தியவாறு தேர்ந்தெடுத்த நன்னாளில் அழகிய பாலிகைகளில் அழகான முளையை விதைத்தார்கள்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

செல்வம்மலி திருப்புகலிச்
செழுந்திருவீ திகளெல்லாம்
மல்குநிறை குடம்விளக்கு
மகரதோ ரணம் நிரைத்தே
எல்லையிலா வொளிமுத்து
மாலைகளெங் கணும் நாற்றி
அல்கு பெருந் திருவோங்க

அணிசிறக்க அலங்கரித்தார். #4189
செல்வம் நிறைந்த சீகாழிப் பதியின் செழித்த வீதிகளில் நிறைகுடங்களையும், விளக்குகளையும், மகர தோரணங்க ளையும் நிரல்பட அமைத்து, பேரொளியையுடைய முத்துமாலைகளை எங்கும் தொங்கவிட்டு, மிக்க பெருந்திரு ஓங்கும்படி, அழகு விளங்க அணிசெய்தனர்.

விளக்கவுரை

****

அருந்தவத்தோர் அந்தணர்கள்
அயலுள்ளோர் தாம்உய்யப்
பொருந்துதிரு நாள்ஓலை
பொருவிறந்தார் கொண்டணையத்
திருந்துபுகழ் நம்பாண்டார்
நம்பிசிறப் பெதிர்கொண்டு
வருந்தவத்தால் மகட்கொடுப்பார்
வதுவைவினை தொடங்குவார். #4190

அரிய தவத்தவர்களான தொண்டர்களும் மற்ற வர்களும் மற்றும் அயலில் உள்ளவர்களுமாகக் கூடிய ஒப்பற்ற சான்றோர்கள், தாம் உய்யுமாறு பொருந்தும் திருமண நாள் ஓலையை எடுத்துக் கொண்டு வந்து சேர, பெரும் புகழையுடைய நம்பாண்டார் நம்பிகளும், அச்சிறப்பை முறைமையாக ஏற்றுக் கொண்டு, முன்னைய தவத்தின் பயனால் தம் மகளாரைப் பிள்ளையாருக்கு மணமகளாகத் தருபவராகித் திருமணத்திற்கான செயல்களைச் செய்யத் தொடங் குவார்,

விளக்கவுரை

****

மன்னுபெருஞ் சுற்றத்தார்
எல்லாரும் வந்தீண்டி
நன்னிலைமைத் திருநாளுக்
கெழுநாளாம் நன்னாளில்
பன்மணிமங் கலமுரசம்
பல்லியங்கள் நிறைந்தார்ப்ப
பொன்மணிப்பா லிகைமீது
புனிதமுளை பூரித்தார். #4191

நிலைத்த புகழையுடைய சுற்றத்தவர் அனை வரும் சீகாழியில் வந்து கூடி, திருமணம் நிகழவிருக்கும் நாளுக்கு ஏழுநாள்களுக்கு முன், நல்ல நாளிலே, பல அழகிய மங்கல முரசு களும், பலவகை இயங்களும்

நிறைந்து ஒலிக்க, பொன் இட்ட அழகிய பாலிகைகளின் மீது தூய முளையை நிறைத்துத் தெளித்தார்கள்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

சேணுயரும் மாடங்கள்
திருப்பெருகு மண்டபங்கள்
நீணிலைய மாளிகைகள்
நிகரில்அணி பெறவிளக்கிக்
காணவரு கைவண்ணம்
கவின்ஓங்கும் படியெழுதி
வாணிலவு மணிக்கடைக்கண்
மங்கலக்கோ லம்புனைந்து. **#4192**

வானுயர்ந்த மாடங்களையும், செல்வம் மிகும் மண்டபங்களையும், பெரிய நிலைகளை உடைய மாளிகைகளையும் ஒப்பில்லாத அழகு பெறுமாறு அணிசெய்து, காட்சி பொருந்த வரும் ஓவியத்திலும் அழகு மிகுமாறு சித்தரித்துச் சிறந்த உருவங்களை அங்கங்கும் எழுதி, ஒளி பொருந்திய அழகிய மணிகள் பதித்த முதற்கடை வாயிலில் மங்கலக் கோலங்களைச் செய்து,

விளக்கவுரை

****

நீடுநிலைத் தோரணங்கள்
நீள்மறுகு தொறும்நிரைத்து
மாடுயரும் கொடிமாலை
மணிமாலை இடைப்போக்கிச்
சேடுயரும் வேதிகைகள்
செழுஞ்சாந்து கொடுநீவிப்
பீடுகெழு மணிமுத்தின்
பெரும்பந்தர் பலபுனைந்தார். **#4193**

உயர்ந்த தோரணங்களை நீண்ட வீதிகள் தோறும் நிரல்பட அமைத்து, பக்கங்களில் உயர்ந்த பசிய கொடி மாலைகளையும் மணிமாலைகளையும் இடையிடையே அமைத்து, ஒளியுடைய திண்ணைகளைச் செழுமையுடைய சுண்ணச் சாந்துகளால் மெழுகி, பெருமை விளங்கும் மணிமுத்துக்கள் நிறைந்த பெரும் பந்தல்கள் பலவற்றையும் அமைத்தனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

மன்றல்வினைத் திருமுளைநாள்
தொடங்கிவரு நாளெல்லாம்
முன்றில்தொறும் வீதிதொறும்
முகநெடுவா யில்கள்தொறும்
நின்றொளிரும் மணிவிளக்கு
நிறைவாசப் பொற்குடங்கள்
துன்றுசுடர்த் தாமங்கள்
தூபங்கள் துதைவித்தார். **#4194**

திருமணச் செயல்களுள், முளை வளர்ந்து வரும் நாள் தொடங்கி, வரும் நாள்களில் எல்லாம் வீதிகள் தோறும், மாடங் களின் முற்றங்கள் தோறும், நீண்ட முன்வாயில்தோறும் விளக்கம் செய்யும் மணி விளக்குகளும், மணமுடைய தூயநீர் நிறைந்த பொன் குடங்களும், நெருங்கிய ஒளியையுடைய மாலைகளும், நறுமணப் பொருள்களுமாகிய இவற்றை நெருக்கமாக அமைத்தனர்.

விளக்கவுரை
****

எங்கணும்மெய்த் திருத்தொண்டர்
மறையவர்கள் ஏனையோர்
மங்கலநீள் மணவினைநாள்
கேட்டுமிக மகிழ்வெய்திப்
பொங்குதிருப் புகலிதனில்
நாள்தோறும் புகுந்துஈண்ட
அங்கண்அணைந் தவர்க்கெல்லாம்
பெருஞ்சிறப்பு மிகவளித்தார். **#4195**

எல்லா இடங்களிலும் உண்மைத் தொண்டர் களும், அந்தணர்களும், மற்றவர்களும், மங்கலம் பெருகும் மணச் செயல்கள் நிகழும் நாளைக்கேட்டு மிக்க மகிழ்ச்சி அடைந்து, திருப் பெருகும் சீகாழிப் பதியில் நாள்தோறும் வந்து பெருக, அங்ஙனம் அங்கு வந்து சேர்ந்தவர்களுக்கெல்லாம் பெரிய சிறப்பை மிகவும் அளித்தனர்.

விளக்கவுரை
****

மங்கலதூ ரியநாதம்
மறுகுதொறும் நின்றியம்பப்
பொங்கியநான் மறையோசை
கடலோசை மிசைபொலியத்
தங்குநறுங் குறையகிலின்

தழைத்தசெழும் புகையினுடன்
செங்கனல்ஆ குதிப்புகையும்
தெய்வவிரை மணம்பெருக. **#4196**
மங்கலம் பொருந்திய இயங்கள், வீதிகள்தோறும் நின்று ஒலிக்க, மேன்மேல் ஓங்கி எழுந்த நான்மறைகளின் ஒலியா னது கடல் ஒலியைவிட மிக்கு விளங்க, நறுமணம் மிக்க அகில் துண் டங்களின் மிக்க செழும் புகையுடன், வேள்விப் புகையும் சேர்ந்து தெய்வ மணம் பெருக,

விளக்கவுரை

****

மங்கலதூ ரியநாதம்
மறுகுதொறும் நின்றியம்பப்
பொங்கியநான் மறையோசை
கடலோசை மிசைபொலியத்
தங்குநறுங் குறையகிலின்
தழைத்தசெழும் புகையினுடன்
செங்கனல்ஆ குதிப்புகையும்
தெய்வவிரை மணம்பெருக. **#4197**
எண்திசையில் உள்ள மக்களும், அங்கங்குள்ள வளம் மிக்க பொருள்களுடன் நெருங்க, பண்டங்கள் நிறையச் சேமிக் கும் சாலைகளும் பல்வேறு விதமாக விளங்க, மிக்க பெருநிதியின் குவியல்கள் மலை என மலிய, உணவு உண்பார் உணவருந்தும் வகையில் எழும் ஓசைகள் இடையறாது பேரொலியாய்ப் பெருக,

விளக்கவுரை

****

மாமறைநூல் விதிச்சடங்கின்
வகுத்தமுறை நெறிமரபின்
தூமணநல் லுபகரணம்
சமைப்பவர்தந் தொழில்துவன்றத்
தாமரையோன் அனையபெருந்
தவமறையோர் தாம்எடுத்த
பூமருவு பொற்கலசப்
புண்ணியநீர் பொலிவெய்த. **#4198**

சிறந்த மறைநூல்களின் வழிச் செயத்தகும் வேள்விகளில், உரிய பொருள்களை அமைத்து ஒழுங்குபடுத்துபவர் களின் தொழில் நெருங்க, நான்முகனைப் போன்று வேள்வி செய்த லில் வல்ல மறையவர்கள் எடுத்த மலர்கள் பொருந்திய பொற்குடங் களில் நிறைந்த புண்ணிய நீர் திகழ,

விளக்கவுரை

****

குங்குமத்தின் செழுஞ்சேற்றின்
கூட்டமைப்போர் இனங்குழுமப்
பொங்குவிரைப் புதுக்கலவைப்
புகையெடுப்போர் தொகைவிரவத்
துங்கநறுங் கர்ப்பூரச்
சுண்ணம்இடிப் போர்நெருங்க
எங்குமலர்ப் பிணைபுனைவோர்
ஈட்டங்கள் மிகப்பெருக. **#4199**

குங்குமப் பூவின் செழுமையான சேறான சந்தனக் குழம்பை அமைப்பவர்களின் இனங்கள் கூட, மிக்க மணம் உடைய மணப் பொருள்கள் கூட்டிய கலவையின் நறும்புகை எடுப்பவர் கூட்டம் பெருக, உயர்வுடைய நறுமணம் உடைய கற்பூரச் சுண்ணத்தை இடிப்போர் கூட்டம் நெருங்க, எங்கும் மலர்களாலான பிணையல் முதலான பலவகைப்பட்ட மாலைகளைத் தொடுப்பவர் கூட்டம் பெருக,

விளக்கவுரை

****

இனையபல வேறுதொழில்
எம்மருங்கும் நிரைத்தியற்று
மனைவளரு மறுகெல்லாம்
மணவணிசெய் மறைமூதூர்
நினைவரிய பெருவளங்கள்
நெருங்குதலால் நிதிக்கோமான்
தனையிறைவர் தாம்ஏவச்
சமைத்ததுபோல் அமைந்துளதால். **#4200**

இப்படிப் பலவகைப்பட்ட வெவ்வேறு தொழில் களை எல்லாப் பக்கங்களிலும் ஒழுங்குபடச் செய்யும் மனைகள் உள்ள வீதிகளில் எல்லாம், மணவிழாவை விளக்கமாகக் காட்டும் மறையவர்கள் வாழ்கின்ற அவ்வூர், நினைப்பதற்கும் அரிய பெரிய வளங்கள் நெருங்கிய அதனால், குபேரனைச் சிவபெருமான் ஏவிய தால், அவனே வகுத்ததைப்

போல விளங்குகிறது.

விளக்கவுரை

இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

மாறி லாநிறை வளந்தரு
புகலியின் மணமீக்
கூறு நாளின்முன் னாளினில்
வேதியர் குழாமும்
நீறு சேர்திருத் தொண்டரும்
நிகரிலா தவருக்
காறு சூடினார் அருள்திருக்
காப்புநா ணணிவார். **#4201**

மாறுபாடில்லாத நிறைந்த வளத்தை அளிக்கும் சீகாழிப் பதியில், திருமணத்தை மேற்கொள்ளும் திருநாளின் முன் நாளில், அந்தணர்களும், திருநீறு அணிந்த தொண்டர்களும் கூடி, ஒப் பில்லாத பிள்ளையாருக்குக் கங்கையைத் தலையில் சூடிய இறைவரின் அருள் பொருந்திய திருக்காப்பு நாணை அணிவிப்பவராகி,

விளக்கவுரை

****

வேத வாய்மையின் விதியுளி
வினையினால் விளங்க
ஓத நீர்உல கியல்முறை
ஒழுக்கமும் பெருகக்
காதல் நீள்திருத் தொண்டர்கள்
மறையவர் கவினார்
மாதர் மைந்தர்பொற் காப்புநாண்
நகர்வலம் செய்தார். **#4202**

மறைவழிச் செயத்தகும் செயற்பாடுகள் இத னால் விளங்கவும், கடல் சூழ்ந்த உலக நடைமுறை ஒழுக்கங்கள் மிகவும், அன்புமிக்க திருத்தொண்டர்களும் வேதியர்களும் அழகான மங்கையர்களும் ஆடவரும் கூடிப் பொன்னால் ஆன காப்பு நாணை நகர்வலம் வருமாறு செய்தனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

நகர்வ லஞ்செய்து புகுந்தபின்
நவமணி யணிந்த
புகரில் சித்திர விதானமண்

டபத்தினிற் பொலியப்
பகரும் வைதிக விதிச்சமா
வர்த்தனப் பான்மை
திகழ முற்றிய செம்மலார்
திருமுன்பு சேர்ந்தார். **#4203**

அவ்வாறு நகர்வலம் வரச்செய்து, மங்கலமனை புகுந்த பின்பு, நவமணிகளால் ஆன குற்றம் இல்லாத ஓவியங்களால் மேற்கட்டி அமைக்கப்பட்ட மண்டபத்தில், நூல்களால் எடுத்துக் கூறப்படும் மறைவழி சமாவர்த்தனமாகிய தன்மையை மேற்கொள்ளச் சிறந்த ஞானசம்பந்தரின் திருமுன்பு வந்து சேர்ந்தனர்.

விளக்கவுரை

சமாவர்த்தனம் - இதுகாறும் ஒழுகிய பிரமசரிய நிலை யினின்றும் நீங்கி இல்லறம் மேற்கொள்ளுதற்குரிய நிலை. இதற்கென விதிக்கப்பட்டிருக்கும் செயற்பாடுகளைச் செய்ய அனைவரும் பிள் ளையாரின்முன் வந்தனர்.

செம்பொ னின்பரி கலத்தினில்
செந்நெல்வெண் பரப்பின்
வம்ப ணிந்தநீள் மாலைசூழ்
மருங்குற வமைத்த
அம்பொன் வாசநீர்ப் பொற்குடம்
அரசிலை தருப்பை
பம்பு நீள்சுடர் மணிவிளக்
கொளிர்தரும் பரப்பில். **#4204**

செம்பொன்னால் ஆன தட்டில், செந்நெல்லைப் பரப்பி, அதன்மீது மணம் பொருந்திய நீண்ட மாலைகள் இரு மருங் கிலும் சூழ, அமைக்கப்பட்ட மணமுடைய நீர் நிறைந்த பொன்குடமும், அரசிலையும், தருப்பையும், பரவிய நீண்ட ஒளியையுடைய அழகான விளக்குப் பொருந்திய சூழலில்,

விளக்கவுரை

****

நாத மங்கல முழக்கொடு
நற்றவ முனிவர்
வேத கீதமும் விம்மிட
விரைகமழ் வாசப்
போது சாந்தணி பூந்துகில்
புனைந்தபுண் ணியம்போல்

மீது பூஞ்சய னத்திருந்
தவர்முன்பு மேவி. #4205
பல்வேறு இயங்களால் ஆய மங்கல முழக்கத்து டன், நல்ல தவ முனிவர்களின் மறை ஒலியும் நிறைய, நறுமணம் வீசும் மலர்களும், சாந்தும், அணிகளும், அழகான ஆடையும் புனைந்த புண் ணியத்தின் பொலிவென அழகிய மலர் அமளி மீது வீற்றிருந்த பிள்ளையாரின் திருமுன் அடைந்து,

விளக்கவுரை

****

ஆர்வ மிக்கெழும் அன்பினால்
மலர்அயன் அனைய
சீர்ம றைத்தொழிற் சடங்குசெய்
திருந்துநூல் முனிவர்
பார்வ ழிப்பட வரும்இரு
வினைகளின் பந்தச்
சார்பொ ழிப்பவர் திருக்கையில்
காப்புநாண் சாத்த. #4206
ஆர்வம் மிகுந்து எழுவதால் ஆன அன்பால், தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகனைப் போன்ற சிறந்த மறை விதிப்படி செயற்பாடுகளைச் செய்யும் நூல்வல்ல வேதியர்கள், உலகில் பிறவி எடுக்க வரும் இருவினைகளின் சார்பை நீக்குபவரான ஞானசம்பந்தரின், திருக்கையில் காப்புநாணை அணிவிக்க,

விளக்கவுரை

****

கண்ட மாந்தர்கள் கடிமணம்
காணவந் தணைவார்
கொண்ட வல்வினை யாப்பவிழ்
கொள்கைய வான
தொண்டர் சிந்தையும் வதனமும்
மலர்ந்தன சுருதி
மண்டு மாமறைக் குலம்எழுந்
தார்த்தன மகிழ்ந்தே. #4207
அதனைப் பார்த்தவர்களும், மணத்தைக் காண்ப தற்காக வந்து கொண்டிருப்பவர்களும், பற்றிய வலிய வினைக்கட்டை அவிழ்த்து நீக்கும் கொள்கையுடைய தொண்டர்களும் ஆகிய இவர்க ளின் உள்ளங்களும் முகங்களும் மலர்ச்சி பெற்றன; ஓசை நிறைந்த மறைக்

குலங்கள் மகிழ்ச்சி பெற்று மேல் ஓங்கி ஒலித்தன.

விளக்கவுரை

இந்நான்கு பாடல்களும் ஒருமுடிபின.

நிரந்த கங்குலின் நிதிமழை
விதிமுறை யெவர்க்கும்
புரந்த ஞானசம் பந்தர்தாம்
புன்னெறிச் சமய
அரந்தை வல்லிருள் அகலமுன்
னவதரித் தாற்போல்
பரந்த பேரிருள் துரந்துவந்
தெழுந்தனன் பகலோன். **#4208**

பரவிய இரவில் மறைவழி நிதிமழையாகப் பொழிந்து அனைவர்க்கும் அருளிய ஞானசம்பந்தர், முன் புன்மை யான நெறிகளான புறச்சமயங்களின் துன்பம் தரும் வலிய இருள் நீங்க வந்து தோன்றினாற் போல, பரந்த பேரிருளை நீக்கிக் கதிரவன் தோன்றினான்.

விளக்கவுரை

****

அஞ்சி றைச்சுரும் பறைபொழில்
சண்பையாண் டகையார்
தம்சி வத்திரு மணஞ்செயத்
தவஞ்செய்நாள் என்று
மஞ்ச னத்தொழில் புரிந்தென
மாசிருள் கழுவிச்
செஞ்சு டர்கதிர்ப் பேரணி
யணிந்தன திசைகள். **#4209**

அழகான வண்டுகள் இசைபாடும் பொழில்கள் சூழ்ந்த சீகாழியின் ஆண் தகையாரான ஞானசம்பந்தர், சிவத் திரும ணம் செய்வதற்கிடமாகத் தவம் செய்யப் பெறும் நாள்இது என்று எண்ணித் திருமஞ்சனத் தொழிலைச் செய்தல் போல, மாசுடைய இரு ளைக் கழுவி நீக்கிப் பகலோனது செஞ்சுடரான கதிர்களின் பேரணி யினைத் திசைகள் பூண்டு கொண்டன.

விளக்கவுரை

****

பரம்பு தம்வயின் எங்கணும்
உள்ளபல் வளங்கள்
நிரம்ப முன்கொணர்ந் தெண்திசை

யவர்நெருங் குதலால்
தரங்க டந்தவர் தந்திருக்
கல்லியா ணத்தின்
வரம்பில் தன்பயன் காட்டுவ
தொத்தது வையம். **#4210**

பெருகிய தங்களிடத்தில் எவ்வெவ்விடங் களிலும் உள்ள பல வளங்களையும் மிகுதிப்பட முன்கொணர்ந்து, எட்டுத் திசைகளில் உள்ளவர்களும் நெருங்கி வந்து கூடியதால், ஒப்பில்லாதவரான ஞானசம்பந்தரின் திருமணத்தில் அளவற்ற தன் பயனை, நிலம் எடுத்துக் காட்டுவது போல விளங்கியது.

விளக்கவுரை

****

நங்கள் வாழ்வென வருந்திரு
ஞானசம் பந்தர்
மங்க லத்திரு மணவெழுச்
சியின்முழக் கென்னத்
துங்க வெண்திரைச் சுரிவளை
ஆர்ப்பொடு சூழ்ந்து
பொங்கு பேரொலி முழக்குடன்
எழுந்தது புணரி. **#4211**

அடியவரான எங்கள் வாழ்வே உருக்கொண்டு வந்தது போல வரும் திருஞானசம்பந்தரின், மங்கலமான திருமண எழுச்சியில், மங்கல இயங்களின் ஒலி போலப் பெரிய வெண்மை யான அலைகளுடன் சங்குகளின் ஒலியும் சூழ்ந்து, மேன்மேலும் எழும் பெரிய ஒலியான முழக்கத்துடனே கடல் எழுந்தது.

விளக்கவுரை

****

அளக்கர் ஏழும்ஒன் றாமெனும்
பெருமையெவ் வுலகும்
விளக்கு மாமண விழாவுடன்
விரைந்துசெல் வனபோல்
துளக்கில் வேதியர் ஆகுதி
தொடங்கிடா முன்னம்
வளர்க்கும் வேதியில் வலஞ்சுழித்
தெழுந்தது வன்னி. **#4212**

கடல்கள் ஏழும் ஒன்றாய்ச் சேர்ந்து எழுந்தன என்ற பெருமை கொண்டு,

எல்லா உலகங்களையும் விளங்கிடச் செய்கின்ற திருமண நிகழ்ச்சியான விழாவுடனே, தாமும் கூடிப் பயன் பெறும் பொருட்டு, விரைவாகச் செல்ல ஒருப்பட்டு, எழுபவை போன்று, அசைவில்லாத ஒழுக்கத்தையுடைய வேதியர்கள் ஆகுதி யைத் தொடங்குவதற்கு முன்னம், மூன்று தீ வளர்வதற்கிடமான வேதி கைகளில் தீயானது வலம் சுழித்து எழுந்தது.

விளக்கவுரை

****

சந்த மென்மலர்த் தாதணி
நீறுமெய் தரித்துக்
கந்தம் மேவுவண்டு ஒழுங்கெனுங்
கண்டிகை பூண்டு
சிந்தை தூயஅன் பர்களுடன்
திருமணம் போத
மந்த சாரியின் மணங்கொணர்ந்
தெழுந்தது மருத்து. **#4213**

அழகான மெல்லிய பூந்தாதுக்களான திரு நீற்றை மெய்யில் தாங்கிக் கொண்டு, கூட்டமாகப் பொருந்தும் வண்டுகளின் வரிசையான உருத்திராக்க மாலைகளைப் பூண்டு, உள்ளம் தூய்மை யான அன்பர்களுடன் கூடித் திருமண எழுச்சியில் கலந்து செல்ல, மென்மையான வேகத்தினால், பூமணங்களைச் சுமந்த வண்ணம் காற்று வந்தது.

விளக்கவுரை

****

எண்தி சைத்தலத் தியாவரும்
புகலிவந் தெய்தி
மண்டும் அத்திரு மணஎழுச்
சியின்அணி வாய்ப்பக்
கொண்ட வெண்ணிறக் குரூஉச்சுடர்க்
கொண்டல்கள் என்னும்
வெண்து கிற்கொடி நிரைத்தது
போன்றது விசும்பு. **#4214**

எட்டுத் திசைகளின் பகுதிகளில் வாழ்கின்ற எல்லாத் திறத்தவரும் சீகாழியில் வந்துகூடி, நெருங்கி, எழுந்த அத் திருமண நிகழ்ச்சியில், அழகு பொருந்தும்படி மேற்கொண்டு தூக்கி எடுத்த வெண்ணிறம் பொருந்திய ஒளியையுடைய பெருவெண் மேகங்களாகிய

வெண்மையான துணியால் ஆன கொடிகளை, நிரல் பட
அமைத்தாற்போன்று வானம் விளங்கியது.

விளக்கவுரை

****

ஏல இந்நலம் யாவையும்
எழுச்சிமுன் காட்டும்
காலை செய்வினை முற்றிய
கவுணியர் பெருமான்
மூல மாகிய தோணிமேல்
முதல்வரை வணங்கிச்
சீல மார்திரு வருளினால்
மணத்தின்மேற் செல்வார். **#4215**

எட்டுத் திசைகளின் பகுதிகளில் வாழ்கின்ற எல்லாத் திறத்தவரும் சீகாழியில் வந்துகூடி, நெருங்கி, எழுந்த அத் திருமண நிகழ்ச்சியில், அழகு பொருந்தும்படி மேற்கொண்டு தூக்கி எடுத்த வெண்ணிறம் பொருந்திய ஒளியையுடைய பெருவெண் மேகங்களாகிய வெண்மையான துணியால் ஆன கொடிகளை, நிரல் பட அமைத்தாற்போன்று வானம் விளங்கியது.

விளக்கவுரை

****

காழி மாநகர் வேதியர்
குழாத்தொடும் கலந்து
சூழும் அன்பர்கள் ஏனையோர்
துதைந்துமுன் செல்ல
வாழி மாமறை முழங்கிட
வளம்பதி வணங்கி
நீழல் வெண்சுடர் நித்திலச்
சிவிகைமேற் கொண்டார். **#4216**

சீகாழிப் பதியில் அந்தணர்கள் கூட்டத்துடன் கலந்து சூழ்ந்த அன்பர்களும், மற்றவர்களும் நெருங்கி முன்னே செல்லச் சென்று, வாழ்வுதரும் பெருமறைகள் முழங்க, வளம் வாய்ந்த சீகாழிப் பதியினை வணங்கி, ஒளி மிக்க வெண்மையான சுடரை உடைய முத்துச் சிவிகையின் மேல் எழுந்தருளி அமர்ந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

ஆன வாகனம் ஏறுவார்

யாரும்மேற் கொள்ளக்
கான மாகிய தொங்கல்பிச்
சங்குடை கவரி
மேனெ ருங்கிட விசும்பினும்
நிலத்தினும் எழுந்த
வான துந்துபி முழக்குடன்
மங்கல வியங்கள். **#4217**

அவரவர்க்குரிய ஊர்திகளில் அமர்ந்து செல்ப வர்கள், அவ்வவற்றில் ஏறி அமர, காட்டைப் போன்ற தொங்கல் களும், பீலிக் குஞ்சங்களும், குடைகளும், கவரிகளும் மேலே நெருங்க, வானத்திலும் நிலத்திலுமாக முறையே தேவதுந்துபி ஒலியுடன் மங்கல இன்னியங்களின் ஒலியும் ஒருங்கே எழுந்தன.

விளக்கவுரை

****

சங்கொடு தாரை சின்னம்
தனிப்பெருங் காளந் தாளம்
வங்கியம் ஏனை மற்று
மலர்துளைக் கருவி யெல்லாம்
பொங்கிய ஒலியின் ஓங்கிப்
பூசுரர் வேத கீதம்
எங்கணும் எழுந்து மல்கத்
திருமணம் எழுந்த தன்றே. **#4218**

சங்கினொடு தாரை, சின்னம், ஒப்பற்ற பெரிய எக்காளம், தாளம், குழல் என்ற இவை போன்ற ஒலி உண்டாகின்ற கருவிகள் எல்லாமும், மேல் எழுந்த ஒலியினால் ஓங்கி, அந்தணர் களின் மறைப் பாடல்களின் ஒலியுடன் பொருந்தி, எங்கும் பெருகத் திருமணமானது எழுச்சி பெற்றுச் சென்றது.

விளக்கவுரை

****

கோதையர் குழல்சூழ் வண்டின்
குழாத்தொலி யொருபால் கோல
வேதியர் வேத வாய்மை
மிகும்ஒலி யொருபால் மிக்க
ஏதமில் விபஞ்சி வீணை
யாழொலி யொருபால் ஏத்தும்
நாதமங் கலங்கள் கீத

நயப்பொலி ஒருபா லாக. **#4219**

மங்கையரின் கூந்தலைச் சூழ்ந்த வண்டுக் கூட்டங்களின் ஒலி ஒருபக்கத்திலும், அழகிய மறையவர் ஓதும் மறை ஒலி ஒருபக்கத்திலும், குற்றம் இல்லாத மிக்க வீணையும் யாழுமான இவற்றின் ஒலி ஒருபக்கத்திலும், போற்றும் நாதத்துடன் கூடிய மங்க லங்களைப் பாடலாய்ப் பாடும் இனிமையான ஒலி ஒரு பக்கத்திலும்,

விளக்கவுரை

****

விண்ணினை விழுங்க மிக்க
வெண்துகில் பதாகை வெள்ளம்
கண்வெறி படைப்ப மிக்க
கதிர்விரி கவரிக் கானம்
மண்ணிய மணிப்பூண் நீடும்
அரிசனம் மலிந்த பொற்பின்
எண்ணிலா வண்ணத் தூசின்
பொதிப்பரப் பெங்கும் நண்ண. **#4220**

மிக்க வெண் துகில் கொடிகளின் கூட்டம் வானவெளியை மறைக்கவும், மிக்க ஒளிவீசும் சாமரைகளின் கூட்டம் கண்கள் கூசவும், விளங்கும் மணிகளையுடைய அணிகளும் நீடும் மஞ்சள் நிறம் மிக்க அழகிய அளவற்ற துணிப் பொதிகளின் கூட்டமும் எங்கும் பொருந்த,

விளக்கவுரை

****

சிகையொடு மான்தோல் தாங்கும்
கிடையும் ஆசானும் செல்வார்
புகைவிடும் வேள்விச் செந்தீ
இல்லுடன் கொண்டு போவார்
தகைவிலா விருப்பின் மிக்க
பதிகங்கள் விளம்பிச் சார்வார்
வகையறு பகையுஞ் செற்ற
மாதவ ரியல்பின் மல்க. **#4221**

பஞ்சசிகை கொண்ட தோற்றத்துடன், கரியமான் தோலைப் பூணும் நூலில் கொண்ட மறை ஓதும் சிறுவர்களும் ஆசிரிய ரும் ஆகக் கூடிச் செல்லவும், ஓமப் புகைவிடும் வேள்விச் செந்தீயி னைத் தத்தம் மனைவியர்களுடனே கொண்டு அந்தணர் செல்லவும், தடுக்க இயலாத விருப்பத்துடன் பெருமையால் சிறந்த திருப்பதிகங் களை ஓதிக்கொண்டு ஓதுபவர் செல்லவும், ஆறுவகையான பகைகளையும் அறுத்தவர்கள்

தத்தம் இயல்புடனே நெருங்கவும்,

விளக்கவுரை

செருக்கு, சினம், காமம், இவறல், மாண்பிறந்த மானம், மாணா உவகை ஆகியன அறுவகைப் பகையாம்.

அறுவகை விளங்குஞ் சைவத்
தளவிலா விரதஞ் சாரும்
நெறிவழி நின்ற வேடம்
நீடிய தவத்தி னுள்ளோர்
மறுவறு மனத்தி லன்பின்
வழியினால் வந்த யோகக்
குறிநிலை பெற்ற தொண்டர்
குழாங்குழாம் ஆகி ஏக. **#4222**

ஆறுவகையான உட்சமயங்களில் எண்ணற்ற விரதங்களைக் கொண்ட ஒழுக்க வழிகளிலே உரிய வேடங்களால் நீடிய தவத்தில் நின்றவர்களும், குற்றமற்ற மனத்துடன் அன்பின் வழியினால் சிவயோகக் குறியில் நிலைபெற்றவர்களும் கூட்டம் கூட்டமாகச் செல்லவும்,

விளக்கவுரை

உட்சமயம் ஆறாவன, பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சிவசங்கிராந்த வாதம், ஈசுவர அவிகாரவாதம், சிவாத்து விதம் என்பன இக்கொள்கையினர், சைவசித்தாந்தச் செந்நெறியோடு முடிவில் சிலவேறு பாடுகளை உடையரேனும், மேலாய உண்மையை ஒரு மருங்கு ஏற்கும் இயல்புடையர் ஆதலின் இவர்களும் பிள்ளை யார் திருமணத்திற்கு வந்தனர். சிவயோகக் குறியில் நிற்பவர்கள் கிரியையில் நிற்போர்.

விஞ்சையர் இயக்கர் சித்தர்
கின்னரர் மிடைந்த தேவர்
அஞ்சனம் நாட்ட ஈட்டத்
தரம்பைய ருடனா யுள்ளோர்
தஞ்சுடர் விமானம் ஏறித்
தழைத்த ஆதரவி னோடும்
மஞ்சுறை விசும்பின் மீது
மணவணி காணச் சென்றார். **#4223**

வித்தியாதரர்களும் இயக்கர்களும் சித்தர்களும் நெருங்கிய தேவர்களும் மைபூசப் பெற்ற கண்களை உடைய கூட்ட மான அரம்பையர்கள் உடன் உள்ளவர்களும், தங்கள் தங்களுடைய ஒளி பொருந்திய வான விமானங்களில் ஏறிக் கொண்டு, மிகு விருப் புடன் மேகங்கள் தவழும்

வான் வழியாகத் திருமண நிகழ்ச்சியைக் காண்பதற்காக வந்தனர்.

விளக்கவுரை

வித்தியாதரர், இயக்கர், கின்னரர் ஆகிய இவர்கள் தேவரினத்தவர். சித்தர் தாம் வேண்டியவாறு இயங்கும் வல்லமை உடையவர்.

மற்றிவர் மிடைந்து செல்லும்
மங்கல வனப்பின் காட்சி
முற்றஇத் தலத்தி னுள்ளோர்
மொய்த்துடன் படரும் போதில்
அற்புத நிகழ்ச்சி எய்த
அணைதலால் மணமேற் செல்லும்
பொற்பமை மணத்தின் சாயை
போன்றுமுன் பொலியச் செல்ல. **#4224**

வித்தியாதரர், இயக்கர், கின்னரர் ஆகிய இவர்கள் தேவரினத்தவர்.
சித்தர் தாம் வேண்டியவாறு இயங்கும் வல்லமை உடையவர்.

விளக்கவுரை

திருமணஎழுச்சிக்கு விண்ணவர்கள் விண் வழியாகவும், அதே நேரத்தில் மண்ணவர்கள் மண்வழியாகவும் செல்கின்றனர். இவர்களில் மண்ணவர்களின் சாயையே விண்ணவர்களாகக் காட்சி யளிக்கிறதாம். இதனால் மண்ணவர்களின் சிறப்புணரப்படும்.

தவஅர சாள உய்க்கும்
தனிக்குடை நிழற்றச் சாரும்
பவமறுத் தாள வல்லார்
பாதம்உள் ளத்துக் கொண்டு
புவனங்கள் வாழ வந்த
பூந்தராய் வேந்தர் போந்து
சிவனமர்ந் துறையு நல்லூர்த்
திருப்பெரு மணத்தைச் சேர்ந்தார். **#4225**

தவ அரசை ஆட்சி செய்வதற்குப் பிடித்ததைப் போன்று, ஒப்பில்லாத முத்துக் குடைகள் மேலே நிழல் செய்ய, சாரும் பிறவியை அறுத்து ஆட்கொள்ள வல்ல இறைவரின் திருவடிகளைத் தம் திருவுள்ளத்தில் வைத்துக் கொண்டவராய், உலகங்கள் எல்லாம் வாழ்வடையும் பொருட்டு வந்து தோன்றிய சீகாழித் தலைவரான ஞானசம்பந்தர் சென்றருளிச் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருநல்லூர்ப் பெருமணத்தை அடைந்தார்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

பெருமணக் கோயி லுள்ளார்
மங்கலம் பெருகு மாற்றால்
வருமணத் திறத்தின் முன்னர்
வழியெதிர் கொள்ளச் சென்று
திருமணம் புணர எய்தும்
சிரபுரச் செம்ம லார்தாம்
இருள்மறைத்து இலங்கு கண்டத்
திறைவர்தங் கோயில் புக்கார். **#4226**

திருநல்லூர்ப் பெருமணத்தில் உள்ள கோயிலில் உள்ள தொண்டர்கள் மங்கலம் பெருக, இனி நிகழ உள்ள திருமணத்தின் முன், வழியிலே வந்து எதிர்கொள்ள, திருமணம் செய்து கொள்ள வருகின்ற ஞானசம்பந்தர் சென்று, கரிய நஞ்சினைத் தன்னுள் மறைத்து விளங்கும் திருக்கழுத்துடைய இறைவரின் கோயிலுள் புகுந்தார்.

விளக்கவுரை

****

நாதரைப் பணிந்து போற்றி
நற்பொருட் பதிகம் பாடிக்
காதல்மெய் யருள்முன் பெற்றுக்
கவுணியர் தலைவர் போந்து
வேதியர் வதுவைக் கோலம்
புனைந்திட வேண்டும் என்னப்
பூதநா யகர்தங் கோயில்
புறத்தொரு மடத்திற் புக்கார். **#4227**

இறைவரைப் பணிந்து போற்றி, நல்ல பொருள் பொதித்த பதிகத்தைப் பாடி, பெரு விருப்பத்தை விளைக்கின்ற இறை வரின் மெய்யருளை முன் பெற்றவராய்க் கவுணியர் தலைவரான பிள்ளையார் வெளியே போதர, அதுபொழுது மறையவர்கள், திருமணக் கோலத்தைக் கொள்ள வேண்டும் என வேண்டிக் கொள்ள, அதனைச் செவியேற்றுப் பூதகணங்களின் தலைவரான இறைவரின் கோயில் அருகே உள்ளதொரு மடத்தினுள் புகுந்தார்.

விளக்கவுரை

இதுபொழுது அருளியபதிகம் கிடைத்திலது.

பொற்குடம் நிறைந்த வாசப்
புனிதமஞ் சனநீ ராட்டி
விற்பொலி வெண்பட் டாடை
மேதக விளங்கச் சாத்தி

நற்றிரு வுத்த ரீய
நறுந்துகில் சாத்தி நானப்
பற்பல கலவைச் சாந்தம்
பான்மையில் அணிந்த பின்னர். **#4228**
: பொன்குடத்தில் நிறைக்கப் பெற்ற மணமுடைய புனிதமான
திருமுழுக்கிற்குரிய நீரால் ஞானசம்பந்தரை நீராட்டி, ஒளிவிளங்கும்
வெண்மையான பட்டாடையை அழகுபெற உடுத்தி, நல்ல
மேலாடையான நறுமணத் துகிலையும் அணிவித்து, மணம் கமழும்
கத்தூரியுடன் பல பொருள்களைக் கூட்டி அமைத்த சாந்தத் தைப் பண்பு
அமையச் சாத்திய பின்னர்,

விளக்கவுரை

****

திருவடி மலர்மேற் பூத்த
செழுந்தகைச் சோதி யென்ன
மருவிய தரளக் கோவை
மணிச்சரி அணையச் சாத்தி
விரிசுடர்ப் பரட்டின் மீது
விளங்குபொற் சரட்டில் கோத்த
பெருகொளி முத்தின் தாமம்
பிறங்கிய தொங்கல் சாத்தி. **#4229**
: பொன்குடத்தில் நிறைக்கப் பெற்ற மணமுடைய புனிதமான
திருமுழுக்கிற்குரிய நீரால் ஞானசம்பந்தரை நீராட்டி, ஒளிவிளங்கும்
வெண்மையான பட்டாடையை அழகுபெற உடுத்தி, நல்ல
மேலாடையான நறுமணத் துகிலையும் அணிவித்து, மணம் கமழும்
கத்தூரியுடன் பல பொருள்களைக் கூட்டி அமைத்த சாந்தத் தைப் பண்பு
அமையச் சாத்திய பின்னர்,

விளக்கவுரை

இப்பாடல் முதலாவுள்ள ஆறுபாடல்களில், பிள்ளை யாரின் திருவடி
முதல் திருமுடி வரை செய்த அணிநலன்கள் குறிக்கப் பெறுகின்றன.

தண்சுடர்ப் பரிய முத்துத்
தமனிய நாணிற் கோத்த
கண்கவர் கோவைப் பத்திக்
கதிர்க்கடி சூத்தி ரத்தை
வெண்சுடர்த் தரள மாலை
விரிசுடர்க் கொடுக்கின் மீது
வண்திரு அரையில் நீடு

வனப்பொளி வளரச் சாத்தி. **#4230**

குளிர்ந்ததும், ஒளி வீசுகின்றதுமான பெரிய முத்துக்களைப் பொன் கயிற்றில் கோத்துப் பார்ப்பவரின் கண்களைக் கவரத்தக்க கோவை வரிசையுடைய ஒளிகொண்ட அரைஞாணை, வெண்ணிற ஒளி வீசும் முத்துமாலை விரிந்த சுடர்விடும் கச்சத்தின் மீது வளமை வாய்ந்த அரையில் மிக்க அழகுடனே ஒளிவிளங்க அணிந்து,

விளக்கவுரை

கடிசூத்திரம் - அரைஞாண், இது உடையின் மேல் அணி தற்குரியது என்பர்.

ஒளிகதிர்த் தரளக் கோவை
யுதரபந் தனத்தின் மீது
தளிர்ஒளி துளும்பு முத்தின்
சன்னவீ ரத்தைச் சாத்திக்
குளிர்நில வெறிக்கு முத்தின்
பூணநூல் கோவை சாத்தி
நளிர்கதிர் முத்துமாலை
நகுசுடர் ஆரஞ் சாத்தி. **#4231**

ஒளியையுடைய முத்துக் கோவைகளாலான அரைப் பட்டிகையின் மீது தளிர்க்கும் ஒளிமிகும் சன்ன வீரத்தைச் சாத்தி, குளிர்ந்த முத்து ஒளிவீசும் முத்துக் கோவையால் ஆன பூண் நூலை அணிந்து, குளிர்ந்த கதிர்களையுடைய முத்து மாலையான ஒளி பொருந்திய ஆரத்தைச் சாத்தி,

விளக்கவுரை

உதரபந்தனம் - அரையில் ஆடையின் மீது கட்டப்படுவது. சன்னவீரம் - கழுத்திலிருந்து உந்திவரை தொங்குதற்குரிய முத்துமாலை.

வாள்விடு வயிரக் கட்டு
மணிவிரல் ஆழி சாத்தித்
தாளுறு தடக்கை முத்தின்
தண்டையும் சரியும் சாத்தி
நீளொளி முழங்கைப் பொட்டு
நிறைசுடர் வடமும் சாத்தித்
தோள்வளைத் தரளப் பைம்பூண்
சுந்தரத் தோள்மேற் சாத்தி. **#4232**

ஒளிவீசும் வயிரக் கட்டுக் கொண்ட விரலில் மோதிரத்தை அணிந்து, முழந்தாள்வரையும் நீண்ட வன்மையான கையில் முத்தால் ஆன தண்டையையும், கைச்சரியையும் அணிந்து, நீண்ட ஒளி கொண்ட

முழங்கைப் பொட்டுடன் வரிசையாய் ஒளிவீசும் மணிவடங்களையும் சாத்தி, தோள் வளையான முத்தால் ஆன அணியை அழகிய தோள் மீது சாத்தி,

விளக்கவுரை

****

திருக்கழுத் தாரந் தெய்வக்
கண்டிகை மாலை சேரப்
பருத்தமுத் தொழுங்கு கோத்த
படரொளி வடமும் சாத்திப்
பெருக்கிய வனப்பின் செவ்வி
பிறங்கிய திருவார் காதில்
வருக்கவெண் தரளக் கொத்தின்
வடிக்குழை விளங்கச் சாத்தி. **#4233**

தெய்வத்தன்மை வாய்ந்த உருத்திராக்க மாலை யுடன் சேருமாறு கழுத்தில் அணியும் ஆரமாய்ப் பெரிய முத்துக்களை ஒழுங்காய்க் கோத்த படரும் ஒளியுடைய வடத்தையும் சாத்தி, மிக்க அழகோடு உரிய இலக்கணமும் அமைந்த திருப்பொருந்திய காதில் நல்ல சாதி முத்துக்களால் ஆன மகர குண்டலத்தை விளங்கச் சாத்தி,

விளக்கவுரை

****

நீற்றொளி தழைத்துப் பொங்கி
நிறைதிரு நெற்றி மீது
மேற்பட விரிந்த சோதி
வெண்சுட ரெழுந்த தென்னப்
பாற்படு முத்தின் பாரப்
பனிச்சுடர்த் திரணை சாத்தி
ஏற்பவைத் தணிந்த முத்தின்
எழில்வளர் மகுடஞ் சேர்த்தார். **#4234**

: திருநீற்றின் ஒளி தழைத்துப் பெருகும் நெற்றி யின் மீது, விரிந்த ஒளிபொருந்திய வெண்மையான சுடரானது மேல் எழுந்ததைப் போன்ற நல்ல தன்மையுடைய முத்தால் ஆன குளிர்ந்த ஒளிவிடும் திரணையை அணிந்து, பொருந்துமாறு வைத்து அழகு படுத்திய முத்தால் ஆன அழகு மிக்க மகுடத்தைச் சாத்தினர்.

விளக்கவுரை

திரணை- மகுடத்தின் கீழ் அதனைப் பொருந்த வைத்தற் குரிய விளிம்பு. இவ்வேழு பாடல்களும் ஒருமுடிபின.

இவ்வகை நம்மை யாளும்
ஏர்வளர் தெய்வக் கோலம்
கவ்வினை மறையோர் செய்யக்
கடிகொள்செங் கமலத் தாதின்
செவ்விநீள் தாம மார்பர்
திருவடை யாள மாலை
எவ்வுல கோரும் ஏத்தத்
தொழுதுதாம் எடுத்துப் பூண்டார். **#4235**

இவ்வாறு நம்மை ஆட்கொள்கின்ற அழகுமிக்க தெய்வத்தன்மை வாய்ந்த மணக்கோலத்தை, அத்தொழிலில் வல்ல அந்தணர்கள் செய்ய, மணம் பொருந்திய தாதுக்களையுடைய புதிய தாய் மலர்ந்த நீண்ட தாமரை மாலையை அணிந்த மார்பரான ஞான சம்பந்தர், திருஅடையாள மாலையான உருத்திராக்க மாலையை எல்லா உலகத்தவரும் போற்றுமாறு வணங்கி, தாமே எடுத்து அணிந்து கொண்டார்.

விளக்கவுரை

****

அழகினுக் கணியாம் வெண்ணீ
றஞ்செழுத் தோதிச் சாத்திப்
பழகிய அன்பர் சூழப்
படரொளி மறுகி லெய்தி
மழவிடை மேலோர் தம்மை
மனங்கொள வணங்கி வந்து
முழுவொலி யெடுப்ப முத்தின்
சிவிகைமேல் கொண்ட போது. **#4236**

அழகுக்கு அழகு செய்கின்ற திருவெண்ணீற் றைத் திருவைந்தெழுத்தை ஓதி அணிந்து கொண்டு, அழகிய அன்பர் கள் சூழ்ந்துவர, ஒலியும் ஒளியும் பொருந்திய தெருவில் வந்து, இளமையான விடையையுடைய சிவபெருமானை மனமார வணங்கி, முழவுகள் ஒலிக்க, முத்துச் சிவிகை மீது அமர்ந்து எழுந்தருளிய பொழுது,

விளக்கவுரை

****

எழுந்தன சங்க நாதம்
இயம்பின இயங்கள் எங்கும்
பொழிந்தன விசும்பில் விண்ணோர்
கற்பகப் புதுப்பூ மாரி

தொழுந்தகை முனிவர் தொண்டர்
சுருதியின் வாழ்த்துப் பொங்கி
வழிந்தன திசைகள் மீது
மலர்ந்தன உலகம் எல்லாம். **#4237**

சங்குகளின் ஒலி எழுந்தன. இனிய இயங்களின் ஒலி எழுந்தன. விண்ணிலிருந்து தேவர்கள் கற்பகப் பூமழையைப் பொழிந்தனர். தொழத்தகும் முனிவர்களும் தொண்டர்களும் எடுத் தோதும் வாழ்த்தொலிகள் மேன்மேலும் பெருகி எழுந்து, எண்திசை களிலும் பரவின. உலகம் மலர்ந்தது.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

படர்பெருந் தொங்கல் பிச்சம்
பைங்கதிர்ப் பீலிப் பந்தர்
அடர்புனை செம்பொற் பாண்டில்
அணிதுகிற் சதுக்கம் மல்கக்
கடலின்மீ தெழுந்து நிற்கும்
கதிர்நிறை மதியம் போல
வடநிரை யணிந்த முத்தின்
மணிக்குடை நிழற்ற வந்தார். **#4238**

பரந்த பெரிய குஞ்சங்களும், வெண்குடைகளும், பச்சை நிறமுடைய பீலியால் அமைந்த பந்தர்களும், நெருக்க மாய் அழகு செய்யப்பட்ட பொன் தகட்டால் ஆன வட்ட அமைப்பு டைய அழகிய துணிகளால் அமைந்த மேற்கட்டிகளும், நெருங்கக் கடல்மீது வந்து தோன்றும் கலைகள் நிறைந்த சந்திரன் போல, முத்து வடங்களால் அழகு செய்யப்பட்ட முத்துக் குடை மேலே நிழல் செய்ய, ஞானசம்பந்தர் வந்தருளினார்.

விளக்கவுரை

பிச்சம் - வெண்குடை.

சீரணி தெருவி னூடு
திருமணம் செல்ல முத்தின்
ஏரணி காளம் சின்னம்
இலங்கொளித் தாரை யெல்லாம்
பேரொலி பெருக முன்னே
பிடித்தன மறைக ளோடு
தாரணி உய்ய ஞான
சம்பந்தர் வந்தா ரென்று. **#4239**

அழகிய தெருவில் திருமண எழுச்சி இவ்வாறு அமைந்து செல்ல, முத்தால் ஆன அழகுடைய எக்காளமும், திருச்சின் னமும், ஒளியுடைய தாரையும் ஆகிய இவையெல்லாம், நான்மறை களும் உய்யவந்த திருஞானசம்பந்தர் வந்தார் என இயம்பின.

விளக்கவுரை

****

மண்ணினுக் கிடுக்கண் தீர
வந்தவர் திருநா மங்கள்
எண்ணில பலவும் ஏத்திச்
சின்னங்க ளெழுந்த போதவ்
வண்ணலார் வதுவை செய்ய
அலங்கரித் தணையப் பெற்ற
புண்ணிய மறையோர் மாட
மங்கலம் பொழிந்து பொங்க. **#4240**

இவ்வுலகத்தவரின் துன்பம் நீங்கத் தோன்றி அருளிய ஞானசம்பந்தரின் திருப்பெயர்கள் பலவற்றையும், திருச்சின் னங்கள் பலவும் கூறி வாழ்த்திவரும் அமயத்தில், ஞானசம்பந்தர் திரு மணம் செய்தற்காக அணிநலன் பொருந்த எழுந்தருளப் பெறும் பேறு பெற்ற புண்ணிய அந்தணரான நம்பாண்டாரது திருமாளிகையில், மங் கல இயங்கள் பலவும் பேரொலி செய்ய,

விளக்கவுரை

****

முற்றுமெய்ஞ்ஞானம் பெற்ற
மூர்த்தியார் செங்கை பற்ற
நற்பெருந் தவத்தின் நீர்மை
நலம்படைத் தெழுந்த தெய்வக்
கற்பகப் பூங்கொம் பன்னார்
தம்மையும் காப்புச் சேர்த்துப்
பொற்புறு சடங்கு முன்னர்ப்
பரிவுடன் செய்த வேலை. **#4241**

முற்றிய மெய்ஞ்ஞானத்தையுடைய ஞானசம் பந்தரின் சிவந்த திருக்கையைப் பிடிக்க, நல்ல பெரிய தவத்தன்மை யால் ஆன நலன்களை எல்லாம் கொண்டு எழுந்த தெய்வக் கற்பகப் பூங்கொம்பு போன்ற அம்மையாரையும், காப்பு அணிந்து, திருமணம் செய்தற்குரிய செயற்பாடுகள் பலவற்றையும் முன்னர் விருப்பத்துடன் செய்த போது,

விளக்கவுரை

****

செம்பொன்செய் வாசிச் சூட்டுத்
திருமணிப் புனைபூண் செல்வப்
பைம்பொனின் மாலை வேய்ந்த
பவளமென் கொடியொப் பாரை
நம்பன்தன் அருளே வாழ்த்தி
நல்லெழில் விளங்கச் சூட்டி
அம்பொன்செய் தீப மென்ன
அழகலங் கரித்து வைத்தார். **#4242**

செம்பொன்னால் ஆன நெற்றி மாலையையும், அழகிய மணிகள் பதித்த ஒப்பனை செய்த அணிகளையும், செல்வம் பொருந்திய பொன் அரிமாலைகளையும், நிரல்படச் சூட்டிய மெல் லிய பவளக் கொடியைப்போன்ற அம்மையாரை, இறைவரின் அரு ளையே வாழ்த்தி, நல்ல அழகு விளங்க ஒப்பனை செய்து, அழகிய பொன்னால் ஆன விளக்கைப் போன்ற அழகையே அழகு செய்தாற் போன்று அழகு செய்தார்.

விளக்கவுரை

இம்மூன்று பாடல்களும் ஒருமுடிபின.

மாமறை மைந்தர் எல்லாம்
மணத்தெதிர் சென்று மன்னும்
தூமலர்ச் செம்பொற் சுண்ணம்
தொகுநவ மணியும் வீசத்
தாமரை மலரோன் போல்வார்
அரசிலை தருப்பை தோய்ந்த
காமர்பொற் கலச நன்னீர்
இருக்குடன் கலந்து வீச. **#4243**

சிறந்த அந்தண மைந்தர்கள் அனைவரும் திரு மண எழுச்சியின் முன்வந்து, பொருந்திய தூய்மையான மலர்களு டன் பொன் சுண்ணத்தையும், தொகுதியான நவமணிகளையும் வீச, தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன் போன்ற அந்தணர்கள் அர சிலையும் தருப்பையும் தோய்ந்த அழகிய பொற்குடத்தின்கண் உள்ள நல்ல நீரை மந்திரங்களைக் கூறித் தெளிக்க,

விளக்கவுரை

****

மாமறை மைந்தர் எல்லாம்
மணத்தெதிர் சென்று மன்னும்

தூமலர்ச் செம்பொற் சுண்ணம்
தொகுநவ மணியும் வீசத்
தாமரை மலரோன் போல்வார்
அரசிலை தருப்பை தோய்ந்த
காமர்பொற் கலச நன்னீர்
இருக்குடன் கலந்து வீச. **#4244**

தேவர்கள் மலர் மழையை வானத்தே ஒளி மிகுமாறு வீச, நிறைந்த மணத்தையுடைய தென்றல் காற்றை மண்ணுல கம் வீச, நெருங்கிய ஒளிமிக்க அழகிய தோரணங்களிடையே சென்று, புண்ணியத்தின் பயனைப் போன்ற திருஞானசம்பந்தர் பூம்பந்தலின் முன் அணைந்தார்.

விளக்கவுரை

இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

பொன்னணி சங்கின் வெள்ளம்
பொலிவுடன் முழங்கி ஆர்ப்ப
மன்னிய தரளப் பத்தி
வளர்மணிச் சிவிகை நின்றும்
பன்மலர் நறும்பொற் சுண்ணம்
பரந்தபா வாடைமீது
முன்னிழிந் தருளி வந்தார்
மூவுல குய்ய வந்தார். **#4245**

பொன்னை அணிந்த சங்குகளின் கூட்டம் அழகுடன் முழங்கி ஒலிக்க, பொருந்திய முத்து வரிசைகள் பெருகி ஒளி செய்து விளங்கிய சிவிகையினின்றும், பல மலர்களும் மணம் கமழும் பொன் சுண்ணமும் பரவியிருந்த பாவாடையின் மேல் முன்னே இறங்கி, மூவுலகையும் உய்யும் பொருட்டுத் தோன்றிய ஞானசம்பந்தர் வந்தருளினார்.

விளக்கவுரை

****

மறைக்குல மனையின் வாழ்க்கை
மங்கல மகளி ரெல்லாம்
நிறைத்தநீர்ப் பொற்கு டங்கள்
நிறைமணி விளக்குத் தூபம்
நறைக்குல மலர்சூழ் மாலை
நகுசுடர் முளைப்பொற் பாண்டில்
உறைப்பொலி கலவை யேந்தி
உடன்எதி ரேற்று நின்றார். **#4246**

அந்தணர் குலத்தவராய் இல்வாழ்வில் வாழும் மங்கலம் உடைய அந்தண

மங்கையர் எல்லாம், நிறைந்த நீரையுடைய பொற்குடங்களையும், வரிசையான அழகிய விளக்குகளையும், நறு மணப் புகைகளையும், தேன்பொருந்திய நல்ல மலர் மாலைகளையும், நல்ல ஒளியுடைய முளைப் பாலிகைகளை இட்டு வைத்த பொன் தட்டுகளையும், தேய்த்தெடுக்கப்பட்ட விளங்கும் கலவைச் சாந்தை யும் ஏந்தியவாறு ஒன்றுகூடி, மணமகனாரான ஞானசம்பந்தரை வர வேற்று நின்றார்கள்.

விளக்கவுரை

****

ஆங்குமுன் னிட்ட செம்பொன்
அணிமணிப் பீடந் தன்னில்
ஓங்கிய ஞான வெள்ளம்
உண்ணிறைந் தெழுவ தென்னத்
தாங்கிய முத்தின் பைம்பூண்
தண்ணிலவு எறிப்ப ஏறிப்
பாங்கொளி பரப்பி நின்றார்
பரசம யங்கள் வீழ்த்தார். **#4247**

அவ்விடத்தில் முன்னமேயே இட்டுவைத்த செம்பொன்னால் ஆன அழகிய மணிபதித்த பீடத்தில், திருவருள் வயத்தால் பிறசமயங்களை யெல்லாம் வென்றருளிய ஞானசம்பந்தப் பிள்ளையார், எல்லாவற்றுக்கும் மேலாக ஓங்கிய சிவஞானப் பெருக் கானது உள்ளே நிறைந்து மேல் எழுந்து பொழிவதைப் போல, அணி யாய்ப் பூண்ட முத்தால் ஆன நல்ல அணிகள் குளிர்ந்த ஒளியை வீசு மாறு ஏறி, பக்கங்களில் ஒளிபரப்பி நின்றருளினார்.

விளக்கவுரை

****

எதிர்வர வேற்ற சாயல்
இளமயி லனைய மாதர்
மதுரமங் கலமுன் னான
வாழ்த்தொலி யெடுப்ப வந்து
கதிர்மணிக் கரக வாசக்
கமழ்புன லொழுக்கிக் காதல்
விதிமுறை வலங்கொண் டெய்தி
மேவுநல் வினைகள் செய்தார். **#4248**

: எதிர் கொண்டு வரவேற்ற, சாயலால் இளைய மயில் போன்ற மங்கையர், இனிய மங்கலச் சொற்களை முன்னாகப் பாடிய வாழ்த்தொலி எங்கும் நிறைய, ஒளி பொருந்திய அழகான கரத்தில்

உள்ள மணமுடைய நீரைத் திருமுன் வார்த்து, மிக்க விருப் பத்துடன் விதி முறைப்படி வலமாகச் சுற்றி, பொருந்திய நல்ல மண வினைகளைச் செய்தனர்.

விளக்கவுரை

நீரையுடைய வட்டிலை வலமாகச் சுற்றுதல், கண்ணேறு (திருட்டி) நீங்கவாம்.

மங்கலம் பொலிய ஏந்தி
மாதரார் முன்பு செல்லக்
கங்கையின் கொழுந்து செம்பொன்
இமவரை கலந்த தென்ன
அங்கவர் செம்பொன் மாடத்
தாதிபூ மியினுட் புக்கார்
எங்களை வாழ முன்னாள்
ஏடுவை கையினுள் இட்டார். **#4249**

எங்களை வாழ்விப்பதற்காக வந்து முன்னாளில் வைகையில் ஏட்டை இட்ட பிள்ளையார், மங்கலப் பொருள்களை எடுத்துக் கொண்டு அந்தண மங்கையர் முன்செல்ல, கங்கையின் கொழுந்து போன்ற வெள்ள ஒழுக்கு, சிவந்த பொன் மலையான இமயத்தில் சேர்ந்தாற்போல, அங்கு நம்பாண்டார் நம்பிகளின் அழகான பொன்மாடத்தில் ஆதி பூமி என்ற மணவறையுள்புகுந்தார்.

விளக்கவுரை

கங்கையின் கொழுந்து - பிள்ளையார்: திருமேனி வெண் ணீறு அணியப்பெற்றும், முத்தாலாய அணிகள் அணியப்பெற்றும் இருத்தலின் இவ்வுருவகத்தால் விளக்கம் பெற்றார். ஆதிபூமி - மணவறை. ஆதி - சிவன், பூமி - நகர்: சிவனகர்.

திருமகட் கொடுக்கப் பெற்ற
செழுமறை முனிவர் தாமும்
அருமையால் முன்செய் மெய்ம்மை
அருந்தவ மனைவி யாரும்
பெருமகிழ்ச் சியினாற் பாதம்
விளக்குவார் பிள்ளை யார்முன்
உரிமையால் வெண்பால் தூநீர்
உடனெடுத் தேந்தி வந்தார். **#4250**

தம் மகளாரை மணமகளாகக் கொடுக்கும் பேற்றைப் பெற்ற செழுமையான மறை முனிவரான நம்பாண்டார் நம்பி களும், அரிய தவப் பேறுடைய அவர்தம் மனைவியாரும் மிக்க மகிழ் வுடன் பிள்ளையாரின்

திருவடிகளை விளக்குபவராய், ஞானசம்பந் தரின் திருமுன்பு, வெண்மையான பசுவின் பாலையும் தூய்மையான நீரையும் ஒருசேரக் கொண்டு வந்தனர்.

விளக்கவுரை

இவ்விரு பாடல்களும் ஒருமுடிபின.

வந்துமுன் னெய்தித் தாம்முன்
செய்தமா தவத்தின் நன்மை
நந்துநம் பாண்டார் நம்பி
ஞானபோ னகர்பொற் பாதம்
கந்தவார் குழலி னார்பொற்
கரகநீர் எடுத்து வார்ப்பப்
புந்தியால் நினைதி யானம்
புரிசடை யான்என் றுன்னி. **#4251**

ஞானசம்பந்தரின் முன்வந்து, தாம் முன்பு செய்த பெருந்தவத்தால் பெற்ற நன்மை பெருகும் நம்பாண்டார் நம்பிகள், மணம் வீசும் நீண்ட கூந்தலையுடைய மனைவியார் பொற் கமண்டலத்தின் நீரை எடுத்து வார்க்க, உள்ளத்தில் நினைத்து வரும் ஒருமைப்பாட்டால் சடையையுடைய சிவபெருமானே இவர் என்ற எண்ணத்துடன் ஞானப்பால் உண்ட அவர்தம் திருவடிகளை,

விளக்கவுரை

****

விருப்பினால் விளக்கி மிக்க
புனிதநீர் தலைமேற் கொண்டு
பொருப்புறு மாடத் துள்ளும்
புறத்துளுந் தெளித்த பின்னர்
உருப்பொலி உதரத் துள்ளும்
பூரித்தார் உவகை பொங்கி
அருப்புறு கிளைஞர் மேலும்
தெளித்தனர் ஆர்வத் தோடும். **#4252**

விருப்புடன் விளக்கித் தூய நீரைத் தலையின் மேல் தெளித்துக் கொண்டு, அதனை மலைபோன்ற திருமாளிகையின் உள்ளும் வெளியேயும் தெளித்த பின்னர், அழகுமிக்க வயிற்றில் கொள்ளுமாறு மிக்க ஆசையுடன் உட்கொண்டனர். மயிர்க் கூச்செறிய அருகிருந்த உறவினர், மேலும் பெருகும் ஆசையோடு அந்நீரைத் தெளித்தனர்.

விளக்கவுரை

இவ்விருபாடல்களும் ஒருமுடிபின.

பெருகொளி ஞானம் உண்ட
பிள்ளையார் மலர்க்கை தன்னில்
மருவுமங் கலநீர் வாசக்
கரகம்முன் னேந்தி வார்ப்பார்
தருமுறைக் கோத்தி ரத்தின்
தங்குலம் செப்பி என்தன்
அருநிதிப் பாவை யாரைப்
பிள்ளையார்க் களித்தேன் என்றார். **#4253**

பெருகும் ஞானஅமுது உண்ட சம்பந்தரின் தாமரை மலர் போன்ற கையில், பொருந்திய மணமுடைய நீர் நிறைந்த கமண்டலத்தை முன் ஏந்தி அதன் மங்கல நீரை வார்ப்பவராய்த் தரும் முறையில், தம் கோத்திரத்துக்குரிய குலப்பெயரையும் எடுத்துக் கூறி `என் அருமைமிக்க செல்வமான பாவை போன்ற மகளாரைப் பிள்ளையாருக்குத் தந்தேன்' என்று விதிப்படி மும்முறை கூறினார்.

விளக்கவுரை

கோத்திரம் - மரபின் உட்பிரிவு ; குலம் - அக்கோத் திரத்தின் உட்பிரிவு. அருநிதிப்பாவையார் - இவர் பெயரைத் தோத்திர பூரணாம்பிகை என நல்லூர்ப் பெருமணத்தில் உள்ளவர்கள் கூறுவார் கள் என்பர் சிவக்கவிமணியார்.

நற்றவக் கன்னி யார்கை
ஞானசம் பந்தர் செங்கை
பற்றுதற் குரிய பண்பில்
பழுதில்நற் பொழுது நண்ணப்
பெற்றவ ருடன்பி றந்தார்
பெருமணப் பிணையன் னாரைச்
சுற்றமுன் சூழ்ந்து போற்றக்
கொண்டுமுன் துன்னி னார்கள். **#4254**

நல்ல தவத்தையுடைய கன்னியாரின் கையைத் திருஞானசம்பந்தர் தம் செங்கையால் பிடிப்பதற்கு உரிய பண்புடைய குற்றம் இல்லாத நல்லவேளை வந்து சேரக் கன்னியைப் பெற்ற தாய் தந்தையரும் உடன்பிறந்தாரும் பெருமையுடைய மணப் பெண்ணான மான் போன்ற கன்னியை உறவினர்முன் சூழ்ந்து போற்ற, அழைத்துக் கொண்டு மணமகனாரான ஞானசம்பந்தர் முன் கொணர்ந்தனர்.

விளக்கவுரை

****

ஏகமாம் சிவமெய்ஞ் ஞானம்

இசைந்தவர் வலப்பா லெய்தி
நாகமார் பணபே ரல்குல்
நற்றவக் கொழுந்தன் னாரை
மாகமார் சோதி மல்க
மன்னிவீற் றிருந்த வெள்ளை
மேகமோ டிசையும் மின்னுக்
கொடியென விளங்க வைத்தார். **#4255**

ஒருவன் என்னும் ஒருவனாய சிவபெருமா னிடத்திருந்து ஞானத்தை அடைந்த ஞானசம்பந்தரின் வலப் பக்கத்தில் வந்து, பாம்பின் படத்தைப் போன்ற அல்குலையுடைய நல்ல தவத்தின் கொழுந்தைப் போன்ற கன்னியாரை, வானத்தில் நிறைந்த ஒளி பொருந்த நிலைபெற்று வீற்றிருந்த வெள்ளை மேகத்துடன் பொருந் தும் மின்னற்கொடி என விளங்குமாறு அமரச் செய்தனர்.

விளக்கவுரை

****

புனிதமெய்க் கோல நீடு
புகலியார் வேந்தர் தம்மைக்
குனிசிலைப் புருவ மென்பூங்
கொம்பனா ருடனே கூட
நனிமிகக் கண்ட போதில்
நல்லமங் கலங்கள் கூறி
மனிதரும் தேவ ரானார்
கண்ணிமை யாது வாழ்த்தி. **#4256**

தூய்மையான மெய்க்கோலத்துடன் நீடிய சீகாழித் தலைவரான பிள்ளையாரை, வளைந்த வில்போன்ற புருவங் களையுடைய மென்மையான பூங்கொம்பைப் போன்ற தேவியாரு டன் ஒருங்கு கண்ட போது, நல்ல மங்கலங்களைக் கூறி, கண்இமை யாது பார்த்து வாழ்த்திய வகையால், மக்களும் தேவர்கள் ஆயினர்.

விளக்கவுரை

விண்ணவர் கண்ணிமையார். அவ்வகையில் இவர்க ளும் பார்த்து வாழ்த்தியமையின் மண்ணவரும் விண்ணவர் ஆயினர் என்றார்.

பத்தியிற் குயிற்றும் பைம்பொன்
பவளக்கால் பந்தர் நாப்பண்
சித்திர விதானத் தின்கீழ்ச்
செழுந்திரு நீல நக்கர்
முத்தமிழ் விரகர் முன்பு

முதன்மறை முறையி னோடு
மெய்த்தநம் பெருமான் பாதம்
மேவுமுள் ளத்தாற் செய்ய. **#4257**

வரிசை பெற அழகு படுத்தப்பட்ட பசும் பொன்னால் ஆன பவளக் கால்களையுடைய பந்தரின் நடுவில், ஓவியம் அமைந்த மேற்கட்டியின் கீழ், செழுமையுடைய நீலநக்க நாயனார் ஆசிரியராய் இருந்து, முத்தமிழ் வல்லுநரான பிள்ளையா ரின் முன், முதன்மையான மறைவழிச் செய்யும் மணவினையை அம்முறைப்படியே மெய்ப்பொருளான நம் பெருமானின் திருவடிக ளைப் பொருந்தும் உள்ளத்துடன் செய்ய,

விளக்கவுரை

****

மறையொலி பொங்கி யோங்க
மங்கல வாழ்த்து மல்க
நிறைவளைச் செங்கை பற்ற
நேரிழை யவர்முன் அந்தப்
பொறையணி முந்நூல் மார்பர்
புகரில்வெண் பொரிகை அட்டி
இறைவரை ஏத்தும் வேலை
எரிவலங் கொள்ள வேண்டி. **#4258**

மறையொலிகள் மேன்மேலும் பெருகி ஓங்க வும், மங்கல வாழ்த்தொலிகள் மிகவும், நிறைந்த வளையல்களை அணிந்த மணப் பெண்ணின் சிவந்த கையைப் பிள்ளையார், பற்றும் பொருட்டு நேரிய அணிகளை அணிந்த அக் கன்னியாரின் முன், பொறுமையை அணியாகக் கொண்ட முந்நூல் அணிந்த மார்பினரான திருநீலநக்க நாயனார், குற்றம் அற்ற நெல் பொரியைக் கையிலே எடுத்து வேள்வித் தீயில் ஆகுதியாகப் பெய்து, சிவபெருமானை வணங்கும்போது, எரியை வலமாக வருவதற்கு எண்ணி,

விளக்கவுரை

****

அருப்புமென் முலையி னார்தம்
அணிமலர்க் கைப்பி டித்தங்
கொருப்படும் உடைய பிள்ளை
யார்திரு உள்ளந் தன்னில்
விருப்புறும் அங்கி யாவார் விடை
உயர்த் தவரே என்று
திருப்பெரு மணத்தை மேவும்

சிந்தையில் தெளிந்து செல்வார். **#4259**
அரும்பைப் போன்ற மென்மையான கொங்கைகளை உடைய அம்மங்கையின்அழகான மலர் போன்ற கையைப் பிடித்துக் கொண்டு, அங்கு மணவினை செய்தற்கு ஒருப் பட்ட பிள்ளையார், `மனத்தில் விருப்பம் பொருந்தும் வேள்வித் தீயா யானவர் விடைக் கொடியை உயர்த்திய சிவபெருமானே ஆவார்' எனத் திருநல்லூர்ப் பெருமணத்தைப் பொருந்திய உள்ளத்திலே தெளிந்து செல்பவராய்,

விளக்கவுரை

`எரி பெருக்குவர் அவ்வெரி ஈசனது உரு என அறிகி லார்' *(தி.5 ப.100* பா.*7)* எனும் நாவரசரின் திருவாக்கும் காண்க. ஒருப் படும் - எண்ணிய மணவினையைச் செய்தற்குத் தலைப்பட.

மந்திர முறையால் உய்த்த
எரிவல மாக மாதர்
தந்திருக் கையைப் பற்றும்
தாமரைச் செங்கை யாளர்
இந்தஇல் லொழுக்கம் வந்து
சூழ்ந்ததே இவள்தன் னோடும் அந்தமில் சிவன்தாள் சேர்வன்
என்னும்ஆ தரவு பொங்க. **#4260**

மந்திர முறையால் வளர்க்கப்பட்ட எரியை வலம் வரும் பொருட்டு அம்மையாரின் கையைப் பிடிக்கும் தாமரை மலர் போன்ற சிவந்த கைகளையுடைய பிள்ளையார், `இந்த இல்வாழ் வான ஒழுக்க நிலை வந்து வாய்த்ததே! இவளுடன் அழிவில்லாத சிவபெருமானின் திருவடிகளை அடைவேன்' என்ற ஆசை உள்ளத் தில் பெருக,

விளக்கவுரை

****

மலர்பெருங் கிளையும் தொண்டர்
கூட்டமும் மல்கிச் சூழ
அலகில் மெய்ஞ்ஞானத் தொல்லை
அடைவுறுங் குறிப்பால் அங்கண்
உலகில்எம் மருங்கும் நீங்க
உடன்அணைந் தருள வேண்டிக்
குலமணம் புரிவித் தார்தம்
கோயிலை நோக்கி வந்தார். **#4261**

மலர்ச்சியுடைய பெரிய உறவினரும், திருத்தொண்டர் கூட்டமும் ஆகிய இவர்களுடனே கூட, அளவில்லாத மெய்ஞ்ஞானத்தினது எல்லையை அடைய வேண்டும் என்ற உள்ளக் குறிப்பினால், அங்கு உலகப்பற்றுத்

தம்மைச் சாராது நீங்க, இறைவருடன் சேர விரும்பி, அந்தணர் குலத்துக்குரிய மணத்தைச் செய்வித்த இறைவ ரின் திருப்பெருமணம் எனும் திருக்கோயிலை நோக்கி எழுந்தருளி வந்தார்.

விளக்கவுரை

திருப்பெருமணம் - திருக்கோயிலின் பெயர் ஆகும். இவ்வைந்து பாடல்களும் ஒருமுடிபின.

சிவனமர்ந் தருளுஞ் செல்வத்
திருப்பெரு மணத்துள் எய்தித்
தவநெறி வளர்க்க வந்தார்
தலைப்படுஞ் சார்பு நோக்கிப்
பவமற என்னை முன்னாள்
ஆண்டஅப் பண்பு கூட
நவமலர்ப் பாதங் கூட்டும்
என்னும்நல் லுணர்வு நல்க. **#4262**

சிவபெருமான் விரும்பி வீற்றிருந்து, உயிர்க ளுக்கு அருட்செல்வத்தை வழங்கியருளிவரும் திருப்பெருமணக் கோயிலுக்குள் சென்று, தவநெறியை வளர்ப்பதற்கென்றே தோன்றிய வரான ஞானசம்பந்தர், உலகக் காட்சியினின்றும் நீங்கி, வீடுபேற்று நிலையில் சார்வதற்குக் காரணமான அருட்குறிப்பைக் கண்டு, பிறப்பற என்னை முற்பிறவியில் ஆளாகக் கொண்ட அத்தன்மைக்கு ஏற்ப, புதிதாக மலர்ந்த தாமரை மலர் போன்ற திருவடிகளை இதுபொழுது அடைவிக்கும் என்ற மெய் உணர்வானது உள்ளத்தில் பொருந்த,

விளக்கவுரை

****

காதல்மெய்ப் பதிகம் கல்லூர்ப்
பெருமணம் எடுத்துக் கண்டோர்
தீதுற பிறவிப் பாசந்
தீர்த்தல்செம் பொருளாக் கொண்டு
நாதனே நல்லூர் மேவும்
பெருமண நம்பனே உன்
பாதமெய்ந் நீழல் சேரும்
பருவம் ஈதென்று பாட. **#4263**

பெருவிருப்பைப் புலப்படுத்தும் உண்மை உடைய திருப்பதிகத்தைக் `கல்லூர்ப்பெருமணம்' எனத் தொடங்கி, அங்கு அத்திருமணத்தைக் கண்டோர் அனைவரும் தீய பிறவிக்குக் காரண மான வினை நீக்கம் பெற்று வீடடைவர் என்பதைச் செம்பொருளாகக் கொண்டு,

`இறைவரே! திருநல்லூரில் பொருந்திய திருப்பெரு மணக்கோயிலில் எழுந்தருளிய நம்பரே! உம் திருவடிகளாகிய மெய்ம்மை பொருந்திய நிழலை அடையும் பருவம் இதுவாகும்' என்று பாடியருள,

விளக்கவுரை

`கல்லூர்ப்பெருமணம்' எனத் தொடங்கும் திருப்பதிகம் அந்தாளிக் குறிஞ்சி என்னும் பண்ணிலமைந்ததாகும் *(தி.3 ப.125).* இப்பதிகப் பொருளைச் சேக்கிழார் இருவகையால் சுருங்க விளக்குகின்றார். *1* வினைநீக்கம் பெறுவது. *2.* இறையடி அடைவது. பிறவிதீயது. அதுபாசத்தால் வருவது. பாசம் உலகியற் சார்பால் வருவது. எனவே `கல்லூர்ப் பெருமணம் வேண்டா' என்றார். *8*ஆவது பாடலில் `நல்லூர்ப் பெருமணம் புக்கிருந்தீர் எமைப் போக்கு அருளீரே' என்றும், திருக்கடைக்காப்பில் `நல்லூர்ப் பெருமணத் தானை உறும் பொருளாற் சொன்ன ஒண்தமிழ்' என்றும் அருளுகின் றார். எட்டாவது பாடலில் `எனை' என்னாது `எமை' எனப் பன்மை ஆகக் கூறுகின்றார். இவ்வருங் குறிப்புக்களே, `கண்டோர் தீதுறு பிறவிப் பாசம் தீர்த்தல் செம்பொருளாக் கொண்டு `... நம்பனே! உன்பாத மெய்ந்நீழல் சேரும் பருவம் ஈதென்று பாட' எனச் சேக்கிழார் அருளக் காரணமாயிற்று.

தேவர்கள் தேவர் தாமும்
திருவருள் புரிந்து நீயும்
பூவையன் னாளும் இங்குன்
புண்ணிய மணத்தின் வந்தார்
யாவரும் எம்பாற் சோதி
இதனுள்வந் தெய்தும் என்று
மூவுல கொளியால் விம்ம
முழுச்சுடர்த் தாணு வாகி. **#4264**

தேவர்களுக்கெல்லாம் தலைவரான சிவபெரு மானும், திருவருள் செய்து `நீயும் நாகணவாய்ப் பறவை அனைய நின் மனைவியும், இங்கு உன் புண்ணியத் திருமணத்தில் வந்தவர்கள் யாவரும் எம்மிடத்தில் இந்தச் சோதியுள் வந்து அடையுங்கள்' என்று அருளாணையிட்டு, மூன்று உலகங்களும் தம் ஒளியினால் மேலிட்டு விளங்கும்படி, முழுமையான சுடர்விட்டெழும் சோதிலிங்கமாய் நிமிர்ந்து எழுந்து,

விளக்கவுரை

****

கோயிலுட் படமேல் ஓங்குங்
கொள்கையாற் பெருகுஞ் சோதி
வாயிலை வகுத்துக் காட்ட

மன்னுசீர்ப் புகலி மன்னர்
பாயின ஒளியால் நீடு
பரஞ்சுடர்த் தொழுது போற்றி
மாயிரு ஞாலம் உய்ய
வழியினை அருளிச் செய்வார். **#4265**

திருக்கோயில் தன்னகத்துட்பட, மேலே பரந்து பெருகி எழுகின்ற அச் சோதியுள், ஒரு வாயிலையும் அமைத்துக் காட்ட, நிலைபெற்ற புகழையுடைய சீகாழித் தலைவரான ஞானசம் பந்தர், பரந்த பேரொளியால் நீண்டு விளங்கும் பரஞ்சுடரான இறை வரை வணங்கிப் போற்றி, மிகப் பெரிய உலகில் உள்ள உயிர்கள் எல் லாம் உய்யும் வழியை அருள் செய்வாராய்,

விளக்கவுரை

****

ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும்
நமச்சிவா யச்சொ லாம்என்
றானசீர் நமச்சி வாயத்
திருப்பதி கத்தை அங்கண்
வானமும் நிலனும் கேட்க
அருள்செய் திம்மணத்தில் வந்தோர்
ஈனமாம் பிறவி தீர
யாவரும் புகுக என்ன. **#4266**

மெய்ம்மை பொருந்திய ஞான நெறிதான் யாவர்க்கும், `நமச்சிவாய' என்னும் ஐந்தெழுத்தாலாய சொல்லே ஆகும் என்று, ஆக்கம் பொருந்திய சிறப்புக் கொண்ட நமச்சிவாயத் திருப்பதிகத்தை, அங்கு விண்ணோரும் மண்ணோரும் கேட்குமாறு அருள் செய்து, `இம் மணத்தில் வந்தவர் எல்லோரும் இழிவான பிறவி நீங்க யாவரும் இவ்வொளியில் புகுக' என்று ஆணையிட்டருள,

விளக்கவுரை

இதுபொழுது அருளிய பதிகம் `காதலாகி' *(தி.3 ப.49)* எனத் தொடங்கும் கௌசிகப் பண்ணில் அமைந்த பதிகம் ஆகும். இப்பதிகப் பாடல் தொறும் `நமச்சிவாய' எனும் திருவைந்தெழுத்து அருளப் பெற்றிருத்தலின், இதனை நமச்சிவாயத் திருப்பதிகம் என்றழைத்தனர். ஞானத்தைப் பெறவும் அதன்வழி வீடு பேற்றை அடையவும் தக்கதொரு நெறி*(வழி)* திருவைந்தெழுத்தை குருவரு ளால் பெற்று ஓதி வருதலேயாகும். இவ்வருளுரை தானும் யாவர்க்கும் பொருந்தும் என முன்னர்த் தொகுத்துக் கூறிய ஆசிரியர், பின்னர் `வானமும் நிலமும்

கேட்க' என வகுத்தும் கூறினார்.

வருமுறைப் பிறவி வெள்ளம்
வரம்புகா ணாத ழுந்தி
உருவெனுந் துயரக் கூட்டில்
உணர்வின்றி மயங்கு வார்கள்
திருமணத் துடன்சே வித்து
முன்செலுஞ் சிறப்பி னாலே
மருவிய பிறவி நீங்க
மன்னுசோ தியினுள் புக்கார். **#4267**

முறையாய் இடையறாது வரும் பிறவி என்னும் பெருவெள்ளத்தின் எல்லை காணாது அழுந்தி `உடல்' என்ற துன்பம் நிறைந்த கூட்டினுள் இருந்து உணர்வில்லாது மயங்குபவர்களாகிய அம்மக்கள் தாமும், பிள்ளையாரின் திருமணக்கோலத்தை வணங்கி முன்னால் செல்லப் பெற்ற சிறப்பால், பொருந்திய பிறவி நீங்குமாறு நிலையான அப் பேரொளியில் புகுந்தார்கள்.

விளக்கவுரை

இவ்வாறு பாடல்களும் ஒருமுடிபின.

சீர்பெருகு நீலநக்கர்
திருமுருகர் முதல்தொண்டர்
ஏர்கெழுவு சிவபாத
இருதயர்நம் பாண்டார்சீர்
ஆர்திருமெய்ப் பெரும்பாணர்
மற்றேனையோர் அணைந்துளோர்
பார்நிலவு கிளைசூழப்
பன்னிகளோ டுடன்புக்கார். **#4268**

சிறப்பு மிகும் திருநீலநக்க நாயனார், திருமுருக நாயனார், முதலிய தொண்டர்களும், தவ ஒழுக்கத்தின் பொலிவு மிக்க சிவபாத இருதயரும், நம்பாண்டார் நம்பிகளும், சிறப்பு நிறைந்த உண்மை ஒழுக்கத்தையுடைய திருநீலகண்ட யாழ்ப்பாணரும், மற்றும் அங்கு வந்தவர்களும், உலகில் நிலவிய சுற்றத்தார்களும் சூழ்ந்து வரத் தத்தம் மனைவியர்களுடன் புகுந்தனர்.

விளக்கவுரை

முன்னையபாடலில் அனைவரும் சோதியுள் புகுதற்குக் காரணம் கூறினார். இப்பாடலிலும் அடுத்துவரும் இருபாடல்களிலும் அங்ஙனம் புகுந்தவர்களை அடைவுபடுத்திக் கூறியருளுகின்றார்.

அணிமுத்தின் சிவிகைமுதல்

அணிதாங்கிச் சென்றோர்கள்
மணிமுத்த மாலைபுனை
மடவார்மங் கலம்பெருகும்
பணிமுற்றும் எடுத்தார்கள்
பரிசனங்கள் வினைப்பாசந்
துணிவித்த உணர்வினராய்த்
தொழுதுடன்புக் கொடுங்கினார். #4269

அழகிய முத்துச் சிவிகையைத் தாங்கிச் சென்ற வரும், மணிமுத்து மாலைகளைத் தக்கவாறு அழகுசெய்த மங்கை யரும், மங்கலம் பெருக வரும் மணிகளை எல்லாம் எடுத்து வந்தவர் களும், மற்றும் பணி செய்தவர்களும், வினையால் வரும் பிறவிக்குக் காரணமான பாசங்களையெல்லாம் அறுத்து, உணர்வு உடையவராய்ப் பிள்ளையாரை வணங்கியவாறே உடன்புகுந்து அப்பேரொளியுள் ஒடுங்கினர்.

விளக்கவுரை
****

ஆறுவகைச் சமயத்தின்
அருந்தவரும் அடியவரும்
கூறுமறை முனிவர்களும்
கும்பிடவந் தணைந்தாரும்
வேறுதிரு வருளினால்
வீடுபெற வந்தாரும்
ஈறில்பெருஞ் சோதியினுள்
எல்லாரும் புக்கதற்பின். #4270

சைவ சமயத்தில் உட்பிரிவான அறுவகைச் சமய நெறியிலும் நின்ற தவத்தவர்களும், சைவத் தொண்டர்களும், மறை வழி ஒழுகும் முனிவர்களும், கும்பிடும் கரத்துடன் வந்து சேர்ந்தவர் களும், முன்சொன்னவாறன்றி எக்காரணமும் அறிய இயலாது திரு வருள் வயத்தால் வந்தவர்களும், எல்லை இல்லாத பெரிய சிவப் பேரொளியுள் எல்லாருமாகப் புகுந்தபின்,

விளக்கவுரை
****

காதலியைக் கைப்பற்றிக்
கொண்டுவலம் செய்தருளித்
தீதகற்ற வந்தருளும்
திருஞான சம்பந்தர்

நாதன்எழில் வளர்சோதி
நண்ணிஅதன் உட்புகுவார்
போதநிலை முடிந்தவழிப்
புக்கொன்றி உடனானார். **#4271**

மனைவியாரைக் கைப்பிடித்தவாறே அச் சோதியை வலம் வந்து, உலகில் உள்ள தீமைகளைப் போக்கிச் சைவ நெறி தழைத்தற்கென்றே தோன்றியருளிய திருஞானசம்பந்தர், சிவ பெருமானின் அழகினதாய் வளர்ந்து எழுகின்ற பேரொளியை அடைந்து, அதனுள் புகுபவராய், ஓரொருகால் உலகியலைத் தழுவி நிற்கும் ஒருப்பாடு நீங்கியதால், உள்ளே புகுந்து, ஒன்றாய்ச் சேர்ந்து சிவானந்த நிறைவாம் தன்மையில் வீடுபேற்றை எய்தினார்.

விளக்கவுரை

போத நிலை என்பது மூன்றாண்டு வரை உலகியல் வயப்பட்ட குழந்தையாய் வளர்ந்ததும், ஞானம் பெற்ற பின்பும், கொல்லி மழவன் மகளார், வணிகர் இருவரின் மகளார் போன்றவர் களுக்கு அருளுதற் பொருட்டும், உலகியல் வயப்பட்டு வீழிமிழலை யிலும், தாதையார் வயப்பட்டுத் திருவாவடுதுறையிலுமாகப் பொருள் வேண்டப் பெற்றும் வந்தன போன்ற சூழல்களாம்.

பிள்ளையார் எழுந்தருளிப்
புக்கதற்பின் பெருங்கூத்தர்
கொள்ளநீ டியசோதிக்
குறிநிலைஅவ் வழிகரப்ப
வள்ளலார் தம்பழய
மணக்கோயில் தோன்றுதலும்
தெள்ளுநீ ருலகத்துப்
பேறில்லார் தெருமந்தார். **#4272**

ஞானசம்பந்தர் உட்புகுந்து உடனாகிய பின் னர்ப் பேரானந்தக் கூத்தரான இறைவர், இவ்வாறு மணத்தில் வந்தோ ரையும் பிள்ளையாரையும் வீடுபேற்றில் உடனாகக் கொள்ளும் அளவும் நீடியிருந்த பேரொளிப் பெருவடிவையும், அதன் உட்புகக் காட்டிய வாயிலையும் மறையுமாறு செய்ய, சிவலோகத் தியாகரின் பழைய பெருமணக் கோயில் தோன்றவும், தெளிந்த நீருடைய உலகத் தில் இவ்வரிய பேற்றைப் பெறாதவர் பலரும் மயங்கி வருந்தினர்.

விளக்கவுரை

தவமும் தவமுடையார்க்கன்றி ஆகுமோ? ஆகாதன்றே.

கண்ணுதலார் திருமேனி

உடன்கூடக் கவுணியனார்
நண்ணியது தூரத்தே
கண்டுநணு கப்பெறா
விண்ணவரும் முனிவர்களும்
விரிஞ்சனே முதலானார்
எண்ணிலவர் ஏசறவு
தீரஎடுத் தேத்தினார். **#4273**

நெற்றியில் விழியையுடைய சிவபெருமானின் திருமேனியுடன் கூடத் திருஞானசம்பந்தர் சென்று சேர்ந்ததைத் தாம் தாமும் தொலைவான இடத்தில் இருந்தவாறே கண்டும், வந்து அடைகின்ற பேறு பெறாத தேவர்களும் முனிவர்களும் நான்முகன் முதலான பெருந்தேவர்களும் ஆகிய எண்ணில்லாதவர்கள் தம் வருத்தம் நீங்கப் பெருமானைப் போற்றினர்.

விளக்கவுரை
****

அருந்தமிழா கரர்சரிதை
அடியேனுக் கவர்பாதம்
தரும்பரிசால் அறிந்தபடி
துதிசெய்தேன் தாரணிமேல்
பெருங்கொடையுந் திண்ணனவும்
பேருணர்வுந் திருத்தொண்டால்
வருந்தகைமைக் கலிக்காம
னார்செய்கை வழுத்துவேன். **#4274**

அரிய தமிழுக்கு இருப்பிடமான ஆளுடைய பிள்ளையாரின் வரலாற்றை, அடியேனுக்கு அவருடைய திருவடிகள் அறிவித்தருளிய முறையில் வணங்கிக் கூறினேன். இனிப் பெரிய கொடையும், உறுதிப்பாடான வன்மையும், பேருணர்வும் திருத் தொண்டு செய்த காரணத்தால் பெற்ற அடியவராய ஏயர்கோன் கலிக் காம நாயனார் செய்த திருத்தொண்டின் திறங்களைப் போற்றத் தொடங்குவேன். திருஞானசம்பந்தர் புராணம் முற்றிற்று.

விளக்கவுரை
****

பன்னிரண்டாம் திருமுறை - பெரியபுராணம் முற்றும்